7

# பரிசுத்த வேதாகமம்

இது

பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும்

அடங்கிய

விவிலிய நூல்

மூலபாஷைகளிலிருந்து தமிழில்

மொழிபெயர்த்த

முன்னை மொழிபெயர்ப்புகளைப் பரிசோதித்துத்

திருத்தியது

***Revised by: L.P. Larsen & team***

***திருத்தியது: L.P. லார்சன் மற்றும் குழு***

சென்னை

பிரித்தானிய சர்வதேச வேதாகமச் சங்கத்து

சென்னை உதவிச் சங்கம்

1936

## Source of this Bible:

இந்த வேதாகமத்தை பொதுநலன் கருதி எனக்கு கொடுத்த என் அன்பு நண்பர் **சகோ. பினு** அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள். தேவன் அவர்களை ஆசீர்வதித்து தம்முடைய சேவையில் இன்னும் அதிகமாக பயன்படுத்துவாராக! *My heartfelt thanks to my dear friend, **Brother Binu**, who gave me this Bible for the common good. May God bless him and use him more in His service!*

## Given to public freely:

இந்த தமிழ் வேதாகமத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக, மத்தேயு 10:8-ஆம் வசனத்தின்படி இலவசமாக பொதுதளத்திற்கு தந்தவர் **ஏசுதாஸ் சாலொமோன்**. *This Tamil Bible is given to public use completely free of cost based on Matt 10:8 by **Yesudas Solomon**.*

***You can download it from** [www.WordOfGod.in](http://www.WordOfGod.in) **and** [www.Archive.org](http://www.Archive.org) **completely free of cost!***

## பெயர்/Name:

பரிசுத்த வேதாகமம் - திருத்திய பதிப்பு / *The Holy Bible - Tamil - Revised Version (1936).*

## திருத்தியது/Revised By:

***L.P. லார்சன்*** *(formerly principal of the United Theological College), G.S துரைசாமி (SIUC), N. சாமுவேல் (Lutheran), S.G. மதுரம் (Anglican), J.S. சந்த்லர் (SIUC), C.H. மோனகன் (WMMS), அவர்களுடைய குழு. **L.P. Larsen** (formerly principal of the United Theological College), G.S Doraiswamy*

*(SIUC), N. Samuel (Lutheran), S.G. Maduram (Anglican), J.S. Chandler (SIUC), C.H. Monahan (WMMS) and a representative committee.*

## Printed by:

*British and Foreign Bible Society (BFBS) Madras Auxiliary, Madras*

## Printed at:

*The Diocesan Press, Madras*

## வெளியிடப்பட்ட ஆண்டுகள் / Published Years:

- *1925 - மத்தேயு, மாற்கு, யோவான், அப்போஸ்தலருடைய நடபடிகள் (Matthew, Mark, John, Acts) - 1000 பிரதிகள் / Copies*
- *1928 - புதிய ஏற்பாடு முழுவதும் (Whole New Testament) - 5000 பிரதிகள் / Copies*
- *1936 - முழு வேதாகமம் (Whole Bible containing Old & New Testament) - 6000 பிரதிகள் / Copies*

## ஆதாரங்கள் / Evidences:

- *Historical Catalogue of Printed Christian Scriptures in the Languages of the Indian Sub-Continent. Page No: 1936. Published in the year 1977 by British and Foreign Bible Society. Original book was authored by T.H. Darlow and H.F. Moule before this revision.*

1925 ...St. Matthew. Tamil...
BFBS Madras Auxiliary. Madras. 1925. 18 x 11.

'Tentative revised edition', prepared by a Committee consisting of L.P. Larsen, formerly Principal of the United Theological College, Bangalore; G.S. Doraiswamy, SIUC; N. Samuel, Lutheran; S.G. Maduram, Anglican; J.S. Chandler, SIUC; C.H. Monahan, WMMS, and a representative Consultative Committee. 1,000 copies circulated for criticism. Pp. 74.

2395

428

TAMIL

1936 (The Holy Bible.)
*(BFBS Madras Auxiliary. Madras)* 1936. 22.5 x 14.

Revised by L.P. Larsen, G.S. Doraiswamy and a representative committee: see No. 2395.

Double columns. Separate OT and NT titles. Pp. 1060, 312.

2413

- *பரிசுத்த வேதாகமம் - முன்னுரை. Published by Good News Publishers along with Bellwether Inernational by Rev. Arulappan at Srivilliputtur, Tamilnadu.*



தமிழ் மொழியிலும், நெஸ்லே பதிப்பின் ஆதாரத்தின் பிரகாரமாக வேதாகமம் மொழி பெயர்க்கப்படவேண்டுமென்று சென்னை வேதாகம சங்கத்தார் விரும்பினார்கள். இந்தப் பணியைச் செய்வதற்காக ஒரு குழுவை அமைத்தார்கள். இந்தக் குழுவிற்கு லார்சன் என்பவர் தலைமைப் பொறுப்பேற்றார்.

லார்சன் அவர்களின் தலைமையின் கீழ் பரிசுத்த வேதாகமம் மறுபடியும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆண்டுகளின் பிரகாரம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

1925 - மத்தேயு, மாற்கு, யோவான் அப்போஸ்தலருடைய நடபடிகள்

1928 - புதிய ஏற்பாடு முழுவதும்

1936 - முழு வேதாகமம்

லார்சன் 1940-ல் காலமானார்.

- *Pages 75, 76 and 77 from Protestant Translations of the Bible (1714-1995) and Defining a Protestant Tamil Identity by Hephzibah Israel in the year 2004.*

In spite of these reservations, L. P. Larsen and G. S. Doraiswamy, along with a Consultative Committee, were selected to revise the Tamil Bible at the end of 1924. They were appointed after considerable debate about the ratio of European to Indian revisers. While Organe suggested three, with two Indians and one European, Kilgour emphasized the necessity of giving equal weight to both and thus wanted only two, one Indian and one European. This one-to-one ratio was maintained only after some pressure from London. The Consultative Committee was to have Indian representation in the majority. Dr. L. P. Larsen was from the Danish Mission and Principal of United Theological College, Bangalore, when invited to be one of the revisers. G. S.



Doraiswamy, the first Protestant Tamil appointed as one of the revisers, was Tamil Literary Secretary at the YMCA, Madurai.

The chief revisers of the Revision Committee prepared a revision of the Gospel of Matthew, which was circulated for comment in 1925. It was based on the English Revised Version (1885), which followed the new edition of the Greek New Testament by Dr Nestle. In May 1926, Organe mentioned having "sent out a circular widely to ask for comments on the revised St. Matthew." Later, he reported: "some one hundred and fifty copies of his circular letters were sent to Indian ministers and laymen"(Minutes of the Madras Committee meeting, July 5, 1926). Out of the forty-three responses forwarded to London, twenty-eight were in favour of the revision while eight were completely opposed, four stated the pros and cons of both versions and one did not comment either way. However, Organe continued, "[w]e did not think it wise to ask for

Concern over the alteration of the term for 'God' led Kilgour's committee to recommend retaining *tēvaṉ* instead of changing to *kaṭavuḷ* as it was unconvinced that "it was wise to make a change in such an important word after more than a century of its use ...We can quite conceive that such a radical change might wreck what otherwise might be a very acceptable translation"(Letter to Organe Aug 5, 1926). Organe insisted



www.WordOfGod.in

that the majority of those present at the Consultative Committee meeting considered *kaṭavuḷ* better than *tēvaṉ* and that the Lutherans were prepared to give up *parāparaṉ* for *kaṭavuḷ* but not for *tēvaṉ*. In the same letter he also informed of the "cold reception" that the revision was having in Tirunelveli, "partly due to an unscrupulous campaign in which the revision is used as a stick to beat diocesanisation and to frighten people by saying that it is one more example of modernism entering the church"(Letter to Kilgour September 9, 1926).

A resolution was adopted by the Executive Committee regarding the principles by which the Revisers should be guided in their work: "[t]he Tamil of the Revision shall be simple, and intelligible to the common people, such as is ordinarily used in dignified grammatical speech, in harmony with the style of the *Union Version*, and acceptable to the users of the Fabricius Version" ("Appendices" BFBS Tamil file 3, 1923-1926: 7). This, however, was a resolution that asked for the impossible from any set of translators. The minutes of the Consultative Committee meeting held in March 1927, stated that "The first edition of the revised Tamil New Testament would doubtless be 'tentative'... and the Bible Society would welcome suggestions for improvement..." On a point of methodology, there was "a strong desire to avoid voting as the method of deciding questions in regard to which there was difference of opinion." Organe, in his letter to Kilgour, dated August 23 1928, reported that the first edition of the Revised New Testament of five thousand copies was published earlier in the year, of which three thousand had already been sold by then and that "no adverse criticism of this Testament" had reached him so far.

7

# பரிசுத்த வேதாகமம்

இது

பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும்

அடங்கிய

விவிலிய நூல்

மூலபாஷைகளிலிருந்து தமிழில்

மொழிபெயர்த்த

முந்தின மொழிபெயர்ப்புகளைப் பரிசோதித்துத்

திருத்தியது

சென்னை

பிரித்தானிய சர்வதேச வேதாகமச் சங்கத்து

சென்னை உதவிச் சங்கம்

1935

பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் அடக்கிய ஆகமங்களின்
பெயர், முறை, பக்கம்

## பழைய ஏற்பாட்டின் ஆகமங்கள்


| ஆகமம் | பக்கம் |
|---|---|
| ஆதியாகமம் ... ... ... | 1 |
| யாத்திராகமம் ... ... ... | 62 |
| லேவியராகமம் ... ... ... | 113 |
| எண்ணாகமம் .. ... ... | 149 |
| உபாகமம் ... ... ... ... | 200 |
| யோசுவா ... ... ... ... | 244 |
| நியாயாதிபதிகள் .. ... ... | 273 |
| ரூத் ... ... ... ... | 304 |
| I. சாமுவேல் ... ... ... | 308 |
| II. சாமுவேல் ... ... .. | 349 |
| I. இராஜாக்கள் ... ... ... | 383 |
| II. இராஜாக்கள் ... ... ... | 422 |
| I. நினைவுத்தமானம் .. ... ... | 460 |
| II. நினைவுத்தமானம் ... ... | 494 |
| எஸ்ரா ... ... ... | 536 |
| நெகேமியா ... ... | 548 |
| எஸ்தர் ... ... ... | 565 |
| யோபு ... ... ... | 574 |
| சங்கீதங்கள் ... ... ... | 611 |
| நீதிமொழிகள் ... ... ... | 705 |

| ஆகமம் | பக்கம் |
|---|---|
| பிரசங்கி ... ... ... | |
| தே தேம்... ... ... | |
| ஏசாயா ... ... ... | |
| எரேமியா ... ... | |
| பிலாபப்பாடல் ... ... | |
| எசேக்கியேல் ... ... | |
| தானியேல் ... ... | |
| ஓசியா ... ... ... | |
| யோவேல் ... ... | |
| ஆமோஸ் ... ... ... | |
| ஒபதியா ... ... ... | |
| யோனா ... ... ... | |
| மீகா ... ... ... | |
| நாகூம் ... ... ... | |
| ஆபகூக் ... ... ... | |
| செப்பனியா ... ... | |
| ஆகாய் ... ... ... | |
| சகரியா ... ... ... | |
| மலாகி ... ... ... | |


## புதிய ஏற்பாட்டின் ஆகமங்கள்


| ஆகமம் | பக்கம் |
|---|---|
| மத்தேயு ... ... ... | 3 |
| மார்க்கு ... ... ... | 42 |
| லூக்கா ... ... ... | 67 |
| யோவான் ... ... ... | 109 |
| அப்போஸ்தலர் வர்த்தமானம் | 140 |
| ரோமர் ... ... ... | 181 |
| I. கொரிந்தியர் ... ... | 198 |
| II. கொரிந்தியர் ... ... | 214 |
| கலாத்தியர் ... ... ... | 225 |
| எபேசியர் ... ... ... | 231 |
| பிலிப்பியர் ... ... ... | 237 |
| கொலோசேயர் ... ... | 241 |
| I. தெசலோனிக்கேயர் ... | 245 |
| II. தெசலோனிக்கேயர் ... | 248 |

| ஆகமம் | பக்கம் |
|---|---|
| I. தீமோத்தேயு ... ... | |
| II. தீமோத்தேயு ... ... | |
| தீத்து ... ... ... | |
| பிலேமோன் ... ... | |
| எபிரேயர் ... ... ... | |
| யாக்கோபு ... ... ... | |
| I. பேதுரு... ... ... | |
| II. பேதுரு ... ... ... | |
| I. யோவான் ... ... ... | |
| II. யோவான் ... ... ... | |
| III. யோவான் ... ... | |
| யூதா ... ... ... | |
| யோவானின் தரிசனம் ... ... | |

# THE HOLY BIBLE

(Revised Version)

TAMIL

---

6,000 Copies

BRITISH AND FOREIGN BIBLE SOCIETY

MADRAS AUXILIARY

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1936. B1530

THE BOOK OF GENESIS

# ஆதியாகமம்

1 ஆதியில் கடவுள் வானத்தையும் பூமியை
யும் சிருஷ்டித்தார்.
2 பூமி உருவமற்று வெறுமையாயிருந்
தது, ஆழத்தின்மேலே இருள் இருந்தது;
கடவுளின் ஆவியோ தண்ணீர்மீது அசை
3 வாடிக்கொண்டிருந்தது. வெளிச்சமுண்
டாகுகவென்று கடவுள் சொன்னார்; வெளி
4 ச்சமுண்டாயிற்று. வெளிச்சம் நல்லதெ
னக் கடவுள் கண்டார்; வெளிச்சத்தையும்
இருளையும் கடவுள் வெவ்வேறு பிரித்தார்.
5 வெளிச்சத்துக்குக் கடவுள் பகலெனப்
பேரிட்டார். இருளுக்கு இரவு எனப்
பேரிட்டார்; மாலையுங் காலையுமாயிற்று,
இது முதலாம்நாள்.
6 தண்ணீர்கள் நடுவே ஆகாயமண்டல
முண்டாகுக, அது தண்ணீர்களினின்று
தண்ணீர்களைப் பிரிக்கவென்று கடவுள்
7 சொன்னார். கடவுள் ஆகாயமண்டலத்தை
உண்டுபண்ணி ஆகாயமண்டலத்தின்மே
லுள்ள தண்ணீர்களையும் ஆகாயமண்டலத்
தின்கீழுள்ள தண்ணீர்களையும் வெவ்வேறு
8 பிரித்தார்; அப்படியேயாயிற்று. ஆகாய
மண்டலத்துக்குக் கடவுள் வானமென்று
பேரிட்டார். மாலையுங் காலையுமாயிற்று,
இது இரண்டாம்நாள்.
9 வானத்தின்கீழுள்ள தண்ணீர்கள் ஒரி
டம் சேருக, வெட்டாந்தரை காணப்படுக
வென்று கடவுள் சொன்னார்; அப்படியே
10 யாயிற்று. வெட்டாந்தரைக்குப் பூமியென்
றும் தண்ணீர்களின் திரளுக்குச் சமுத்தி
ரங்களென்றும் கடவுள் பேரிட்டார்; இது
11 நல்லதெனக் கடவுள் கண்டார். பூமி
யின்மேல் புல்லையும் விதையைப் பிறப்பிக்
கும் பூண்டுகளையும் தங்களில் தங்கள்
விதைகளையுடைய கனிகளைத் தங்கள் ஜாதி
யின்படியே தரும் கனிமரங்களையும் பூமி
மீளப்பிக்கவென்று கடவுள் சொன்னார்;
12 அப்படியேயாயிற்று. புல்லையும் தங்கள்
தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்
பிக்கும் பூண்டுகளையும் தங்களில் தங்கள்
விதைகளையுடைய கனிகளைத் தங்கள் தங்
கள் ஜாதியின்படியே தரும் மரங்களையும்
பூமி தோன்றச்செய்தது. இது நல்லதெனக் 13
கடவுள் கண்டார். மாலையுங் காலையு
மாயிற்று, இது மூன்றாம்நாள்.
பகலையும் இரவையும் பிரிப்பதற்கு 14
ஆகாயமண்டலத்திலே சுடர்கள் உண்டா
குக, குறித்த காலங்களுக்கும் நாட்களுக்
கும் வருஷங்களுக்கும் அவைகள் அடை
யாளங்களாகுக. பூமியின்மேல் வெளிச்சம் 15
வீசுவதற்கு இவை ஆகாயமண்டலமாகிய
வானத்திலே சுடர்களாகுகவென்று கடவுள்
சொன்னார்; அப்படியேயாயிற்று. பகலை 16
யாளப் பெரிய சுடரொன்றும் இரவை
யாளச் சிறிய சுடரொன்றுமாக இருபெருஞ்
சுடர்களையும் நட்சத்திரங்களையும் கடவுள்
உண்டாக்கினார். பூமியின்மேல் வெளிச் 17
சம் வீசுவதற்கும் பகலையும் இரவையும்
ஆளுவதற்கும் | வெளிச்சத்தையும் இருளை 18
யும் பிரிப்பதற்கும் கடவுள் இவற்றை
ஆகாயமண்டலமாகிய வானத்திலே வைத்
தார், இது நல்லதெனக் கடவுள் கண்டார்.
மாலையுங் காலையுமாயிற்று, இது நாலாம் 19
நாள்.
திரள்திரளான ஜீவஜந்துக்கள் தண்ணீ 20
ரிலே பலுகியிருக்க, பறவைகள் பூமியின்
மேல் ஆகாயமண்டலமாகிய வானத்தின்கீழ்
பறந்து திரிகவென்று கடவுள் சொன்னார்.
கடவுள் மகா பெரிய ஜலசரங்களையும் தண் 21
ணீரிலே திரளாய்ப் பலுகித் திரிவனவாகிய
சகல ஜீவஜந்துக்களையும் ஜாதி ஜாதியாக
வும், இறகுள்ள பறவைகள் யாவற்றையும்
ஜாதி ஜாதியாகவுஞ் சிருஷ்டித்தார். இது
நல்லதெனக் கடவுள் கண்டார். கடவுள் 22
அவற்றை ஆசீர்வதித்துப் பலுகிப் பெருகிச்
சமுத்திர ஜலத்தை நிரப்புங்கள், பறவை
கள் பூமியில் பலுகுவதாக என்று சொன்
னார். மாலையுங் காலையுமாயிற்று, இது 23
ஐந்தாம்நாள்.
பூமி ஜாதி ஜாதியான ஜீவஜந்துக்களை, 24
ஆடுமாடு ஊர்வனவற்
றையும் காட்டு மிருகங்களையும், ஜாதி ஜாதி

யாகத் தோன்றச்செய்கவென்று கடவுள்
25 சொன்னார்; அப்படியேயாயிற்று. கடவுள்
பூமியின் ஜாதி ஜாதியான காட்டுமிருகங்
களையும் ஜாதி ஜாதியான ஜீவஜந்துக்களையும்
வெளியில் கடமாடும் ஜாதி ஜாதியான சகல
ஊர்வனவற்றையும் உண்டாக்கினார். இது
26 நல்லதெனக் கடவுள் கண்டார். நமது சாய
லாகவும் நமக்கொப்பாகவும் மனிதனை உண்
டாக்குவோம்; இவர்கள் சமுத்திர மச்சங்
களையும் ஆகாயத்துப் பறவைகளையும் நாற்
கால் பிராணிகளையும் பூவுலக முழுவதை
யும் பூமியிலுள்ள ஊர்வன யாவற்றையும்
ஆளுகவென்று கடவுள் சொன்னார்.
27 கடவுள் மனிதனைத் தமது சாயலாகச்
சிருஷ்டித்தார், கடவுளின் சாயலாகவே
அவனைச் சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணு
28 மாக அவர்களைச் சிருஷ்டித்தார். கடவுள்
அவர்களை ஆசீர்வதித்துப் பலுகிப் பெருகிப்
பூமியை நிரப்பி அதைக் கீழ்ப்படுத்திச்
சமுத்திர மச்சங்களையும் ஆகாயத்துப் பற
வைகளையும் பூமியில் ஊர்ந்துதிரியும் சகல
பிராணிகளையும் ஆண்டுகொள்ளுங்களென்
29 று அவர்களுக்குச் சொன்னார். இதோ,
பூமியின்மேலுள்ள விதைதரும் சகல பூண்டு
களையும் விதைகளைத் தருங் கனிகளையுடைய
மரங்கள் யாவற்றையும் உங்களுக்கென
30 வைக்கிறேன். அவை உங்களுக்கு ஆகார
மாம்; பூமியின்மேல் ஜீவனுள்ள யாவற்
றுக்கும் சகல காட்டுமிருகங்களுக்கும்
சகல ஆகாயத்துப் பறவைகளுக்கும் பூமி
யின்மேலுள்ள ஊர்வன யாவற்றுக்கும்
சகல பசும்பூண்டுகளையும் ஆகாரமாக வைத்
தேனென்று கடவுள் சொன்னார், அப்படி
31 யேயாயிற்று. கடவுள் தாம் உண்டாக்கின
யாவற்றையும் பார்த்தார்; இதோ, அது
மிகவும் நல்லதெனக் கண்டார். மாலையுங்
காலையுமாயிற்று, இது ஆறாம்நாள்.

**2** இவ்விதமாக வானமும் பூமியும் அவற்
றின் சகல திரளும் உண்டாக்கப்பட்டுத் தீர்ந்
2 தன. தாம் செய்துவந்த வேலையை ஏழாம்
நாளில் முடித்துத் தீர்த்துக் கடவுள் தாம்
செய்துவந்த வேலையையொழித்து ஏழாம்
3 நாளில் ஓய்ந்திருந்தார். கடவுள் தாம்
செய்துவந்த சிருஷ்டிப்புவேலையெல்லாம்
ஒழித்து ஏழாம்நாளில் ஓய்ந்திருந்தபடி
யினால் கடவுள் அந்த நாளை ஆசீர்வதித்து
அதைப் பரிசுத்தமாக்கினார்.
4 கடவுளாகிய யெகோவா பூமியையும்
வானத்தையும் உண்டாக்கினபோது வான
மும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்ட வரலாறு
5 இதுதான். வயல்வெளியின் ஏந்தல் செடி
யும் பூமியில் இன்னும் தோன்றவில்லை,
வயல்வெளியின் எந்தப் பூண்டும் இன்னும்
முளைக்கவில்லை; கடவுளாகிய யெகோவா
பூமியின்மேல் இன்னும் மழைபெய்யச்
செய்யவில்லை. நிலத்தைப் பண்படுத்த மனு
ஷனுமிருந்திலனை. பூமியிலிருந்து மூடு
பனியுண்டாகி நிலமுழுவதையும் நனைத்து
வந்தது. கடவுளாகிய யெகோவா மனுஷ
னைத் தரையினின்றெடுத்த மண்ணிலாலே
உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நா
யிலே ஊதினார்; அப்படியே மனுஷன் உயி
ருள்ள ஆத்துமாவானான்.

கடவுளாகிய யெகோவா கிழக்கிலையில்
ஏதேனில் ஒரு தோட்டத்தை யுண்டாக்கித்
தாம் உருவாக்கின மனுஷனை அங்கே
வைத்தார். கடவுளாகிய யெகோவா பார்
வைக்கு இன்பமும் புசிப்புக்கு நலமுமான
சகலவித விருக்ஷங்களையும், தோட்டத்தின்
நடுவே ஜீவவிருக்ஷத்தையும் நன்மை தீமை
அறிவதற்கேதுவான விருக்ஷத்தையும் நிலத்
தினின்று முளைத்தெழும்பச்செய்தார். ஏதே
னிலிருந்து ஒரு நதி புறப்பட்டுத் தோட்
டத்துக்கு நீர்பாய்ச்சி அங்கிருந்து நான்கு
பெரிய ஆறுகளாகப் பிரிந்துபோனது.
முதல் ஆற்றின்பேர் பீசோன், அது பொன்
னையும் நாடாகிய கவீலாநாடு முழுவதை
யுஞ் சுற்றியோடுகிறது. அந்நாட்டின்
பொன்னே நல்ல பொன். அங்கே பிதோ
லாக்கும் கோமேதகக்கல்லுமுண்டு. இரண்
டாம் ஆற்றின்பேர் கீகோன், அது கூஷ்
நாடுமுழுவதையும் சுற்றி ஓடுகிறது. மூன்
றும் ஆற்றின்பேர் இதெக்கேல். அது அசி
ரியாநாட்டுக்குக் கிழக்கே ஓடுகிறது. நான்
காம் ஆற்றின்பேர் பிராத்து. கடவுளாகிய
யெகோவா மனுஷனை அழைத்துக்கொண்டு
போய் ஏதேனின் தோட்டத்தில் விட்டு
அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்
தார். கடவுளாகிய யெகோவா மனுஷனி
டம்: தோட்டத்திலுள்ள எந்த விருக்ஷத்தின்
கனியையும் நீ தடையின்றிப் புசிக்கலாம்.
நன்மை தீமை அறிவதற்கேதுவான விரு
க்ஷத்தின் கனியையோ புசிக்கக்கூடாது. நீ
அதைப் புசிக்கும் நாளில் சாகவே சாவா
யென்று கட்டளையிட்டார்.

பின்னும் கடவுளாகிய யெகோவா: தனி
யாயிருப்பது மனுஷனுக்கு நல்லதல்ல,
அவனுக்குத் தகுந்த ஒரு துணையை உண்
டாக்குவேனென்று சொல்லிக்கொண்டார்.
கடவுளாகிய யெகோவா நிலத்தின் மண்ணி
லிருந்து வெளியின் சகல மிருகங்களையும்
ஆகாயத்தின் சகல பறவைகளையும் உரு
வாக்கி மனுஷன் அவற்றுக்கு என்ன
பேரிடுவானென்று பார்க்க அவற்றை

அவனிடம் கூட்டிக்கொண்டு வந்தார். மனுஷன் எக்தெந்தப் பேரிட்டாலே அந்தந்தப் பேர்களே ஜீவஜந்துக்களுக்குப்
20 பேராயின. மனுஷன் சகல வகை ஆடு மாடுகளுக்கும் ஆகாயத்துப் பறவைகளுக்கும் சகலவகைக் காட்டுமிருகங்களுக்கும் பேரிட்டான். தனக்குத் தகுந்த துணையை
21 யோ மனுஷன் காணவில்லை. கடவுளாகிய யெகோவா மனுஷனுக்கு அயர்ந்த நித்திரையுண்டாகும்படி செய்யவே அவன் நித்திரை
போனான். அவர் அவன் விலா எலும்பு
1 22 களிலொன்றை யெடுத்து அந்த இடத்தைச் சதையினால் மூடிவிட்டார். கடவுளாகிய யெகோவா மனுஷனிலிருந்தெடுத்த விலா எலும்பை மனுஷியாக அமைத்து உருவாக்கி அவனை மனுஷனிடம் அழைத்துக்
23 கொண்டு வந்தார். அப்பொழுது மனுஷன்: இப்பொழுதோ, இது என் எலும்பில் எலும்பும் தசையில் தசையுமாம், இது மனுஷனிலிருந்தெடுக்கப்பட்டபடியால் மனு
24 ஷியென்று பேர்பெறும் என்றான். இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தாயையும்விட்டுத் தன் மனைவியோடிசைந்திருப்பான், இவர்கள் ஒரே மாமிசமாயிருப்பார்
25 கள். மனுஷனும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும் அவர்கள் வெட்கப்படாதிருந்தார்கள்.

**3** கடவுளாகிய யெகோவா உண்டாக்கின சகல காட்டு ஜந்துக்களிலும் சர்ப்பமே தந்திரமுள்ளது. அது ஸ்திரீயினிடம்: நீங்கள் தோட்டத்திலுள்ள எந்த விருட்சத்தின் கனியையேனும் புசிக்கவேண்டாமென்று
2 கடவுள் சொன்னதுண்டோ என்றது. ஸ்திரீ சர்ப்பத்தினிடம்: நாங்கள் தோட்டத்திலுள்ள மற்ற விருட்சங்களின் கனிகளைப்
3 புசிக்கலாம்; தோட்டத்தின் நடுவிலிருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்தோ, கடவுள்: நீங்கள் அதைப்புசிக்கவும் தொடவும் வேண்டாம்; புசித்தால் சாவீர்களென்று சொன்
4 னார் என்று சொல்லவே, சர்ப்பம் ஸ்திரீயினிடம்: நீங்கள் சாவதேயில்லை;
5 ஞ்கோ ஒன்று தெரியும்: | நீங்கள் இதைப் புசிக்கும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள்
6 என்றது. எனவே ஸ்திரீயானவள் அந்த விருட்சத்தின் கனி புசிக்கிறதற்கு நலமான தென்றும் பார்க்கிறதற்கு இன்பமானதென்றும் விவேகத்தைப் பெறுவதற்கென இச்சிக்கத்தக்கதென்றும் கண்டுகொண்டு அதின் கனியைப் பறித்துத் தானும் புசித்துத் தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான். புசிக்கவே இருவர் கண்களும் 7
திறக்கப்பட்டன; தாங்கள் நிர்வாணிகள் என்று அறியலானார்கள். அத்தி இலை களைத் தைத்துத் தங்களுக்கு அரைக்கச்சை களைச் செய்துகொண்டார்கள்.

சாயரக்ஷை இளங்காற்று வீசும் வேளை 8
யிலே தோட்டத்தில் உலாவுகிற கடவுளாகிய யெகோவாவின் சத்தம் அவர்களுக்குக் கேட்டது. கேட்கவே புருஷனும் மனைவியும் கடவுளாகிய யெகோவாவின் சன்னிதிக்கு விலகித் தோட்டத்தின் விருட்சங்கள் நடுவே ஒளித்துக்கொண்டார்கள். கடவுளாகிய யெகோவாவோ ஆதாமைக் 9
கூப்பிட்டு, நீ எங்கே இருக்கிறாய் என்று கேட்க, அவன்: நான் தேவரீரின் சத்தத் 10
தைத் தோட்டத்திலே கேட்டு நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து ஒளித்துக் கொண்டேன் என்றான். அப்பொழுது 11
அவர்: நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்கவேண்டாம் என்று நான் விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார். அதற்கு ஆதாம்: 12
என்னோடு இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயே அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான். அப்பொழுது கடவுளாகிய யெகோவா 13
ஸ்திரீயினிடம்: நீ செய்த இந்தக் காரியமென்ன என்றார். ஸ்திரீயோ: சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள். கடவுளாகிய யெகோவா சர்ப்பத் 14
தைப் பார்த்து: நீ இதைச்செய்தபடியால் சகல நாட்டுமிருகங்களுக்கும் சகல காட்டு மிருகங்களுக்கும் விலக்கப்பட்டுச் சாபத்திற் குள்ளாவாய். உன் வயிற்றினாலேயே நீ நகர்ந்து உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்; உனக்கும் ஸ்திரீக்கும் 15
உன் சந்ததிக்கும் அவள் சந்ததிக்கும் பகை உண்டாக்கிவைப்பேன். அது உன் தலையை நசுக்கும், நீ அதன் குதிங்காலை நசுக்குவாய் என்றார். ஸ்திரீயினிடமோ அவர்: நீ கர்ப் 16
பவதியாயிருக்கும்போது உன் வாதையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்; என்றாலும் உன் ஆசை உன் புருஷன்மீதே யிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான் என்றார். பின்பு அவர் ஆதாமிடம்: நீ உன் 17
மனைவியின் சொல்லைக்கேட்டு, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே நிலம் உன்னிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; அதில் நீ உன் ஜீவகாலமெல்லாம் பாடுபட்டே புசிப்பாய். அது உனக்கு 18

மூனைப்பிக்கிறது முள்ளும் குருக்குமே. வயல்வெளியின் பூண்டுகளைப் புசித்துப்
19 பிழைப்பாய். உன் முகத்தின் வேர்வையா லன்றி உனக்கு ஆகாரம் கிடையாது. நீ எடுக்கப்பட்ட மண்ணுக்கே மறுபடியும் திரும்புமட்டும் இப்படியே யிருக்கும். நீ மண்ணே, மண்ணுக்கே திரும்புவாய் என்று சொன்னார்.

20 ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று
21 பேரிட்டான்; அவள் ஜீவனுள்ளோருக் கெல்லாம் தாயே. கடவுளாகிய யெகோவா தோல் உடைகளை உண்டுபண்ணி ஆதாமுக் கும் அவன் மனைவிக்கும் உடுத்தினார்.

22 அப்பொழுது கடவுளாகிய யெகோவா: இதோ, மனுஷன் நன்மை தீமை அறிகிற வனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்; இனி அவன் தன் கையை நீட்டி ஜீவ விருட்சத்தின் கனியையும் பறித்துப் புசித்து என்றைக்கும் உயிரோடிராதபடி செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொண்டு |
23 அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண் படுத்தக் கடவுளாகிய யெகோவா அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்
24 டார். அவர் மனுஷனைத் தூரத்திவிட்டு ஜீவ விருட்சத்துக்குப் போம் வழியைக் காவல் செய்ய ஏதேன் தோட்டத்துக்கு எதிரே வீசிக்கொண்டிருக்கிற சுடரொளிப் பட்ட யத்தோடு கேருபுகளை வைத்தார்.

**4** ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை அறிந் தான்; அவள் கர்ப்பவதியாகிக் காயீனைப் பெற்று யெகோவாவின் மூலமாய் ஒரு மனு
2 ஷனைப் பெற்றேன் என்றாள். பின்பு அவன் சகோதரனாகிய ஆபேலைப் பெற்றாள்; ஆபேல் ஆடு மேய்க்கிறவனானான், காயீன்
3 பயிரிடுகிறவனானான். சில நாள் சென்ற பின்பு காயீன் நிலத்தின் கனிகளில் சில வற்றை யெகோவாவுக்குக் காணிக்கை
4 யாகக் கொண்டுவந்தான். ஆபேலோ தன் மந்தையின் தலையீற்றுகளில் கொழுமை யான பாகங்களைக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும்
5 யெகோவா கண்ணோக்கினார். காயீனையும் அவன் காணிக்கையையுமோ அவர் கண் ணோக்கவில்லை. ஆகவே காயீனுக்கு மிக வும் எரிச்சல் உண்டாகி அவன் முகமாடி
6 வேறுபட்டது. யெகோவா காயீனைப் பார்த்து: நீ எரிச்சல் படுவானேன்? தலை
7 குனிந்து கடப்பானேன்? நீ செய்கிறது நல்லதென்றால் உன் தலை நிமிர்ந்திராதோ? நீ செய்கிறது நல்லதல்ல வென்றால் பாவம் உன் வாசலில் பதுங்கியிருக்கும்; அதின் ஆசை உன்மீதே யிருக்கும், நீயோ அதை மேற்கொள்ளவேண்டும் என்றார். காயீன் 8
தன் சகோதரனாகிய ஆபேலோடு பேசினான்; அவர்கள் வயல் வெளியில் இருக்கும்போது, காயீன் தன் சகோதரன் ஆபேலுக்கு விரோ தமாய் எழும்பி அவனைக் கொலைசெய்தான். 9
யெகோவா காயீனிடம்: உன் சகோதரன் ஆபேல் எங்கே என்று கேட்டார்; அவனே: நான் அறியேன்; என் சகோதர னுக்கு நான் காவலாளியோ என்று சொல்ல, அவர்: நீ செய்ததென்ன? உன் 10
சகோதரனின் இரத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிடு கிறது. இப்பொழுதும் உன் சகோதரனின் இரத்தத்தை உன் கையிலே வாங்கிக் கொள்ளத் தன் வாயைத் திறந்த பயி. 11
நிலத்திற்கு நீ விலக்கப்பட்டுச் சாபத்திற் குள்ளானாய். நீ நிலத்தைப் பயிரிடுகையில் அது தன் பலனை இனி உனக்குக் கொடாது; நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாய் என்று சொல்லவே, காயீன் யெகோவாவை 12
நோக்கி: எனக்கு இட்ட தண்டனை என் னால் சகிக்கமுடியாது. இதோ, என்னை நாட்டிலிருந்து துரத்திவிடுகிறீர்; நான் உமது சமுகத்துக்கு விலகி மறைந்து பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பேன்; என் னைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் என் னைக் கொன்றுபோடுவானே என்றான். அப் 13
பொழுது யெகோவா அவனைப் பார்த்து: காயீனைக் கொல்லுகிற எவன் மேலும் ஏழு பழி சுமருமென்று சொல்லி எவனும் காயீ னைக் கண்டுபிடித்து அவனைக் கொன்று போடாதபடி யெகோவா அவன்மேல் ஒரு அடையாளத்தைப் போட்டார். 14

அப்படியே காயீன் யெகோவாவின் 15
சந்நிதியை விட்டுப் புறப்பட்டு ஏதேனுக் குக் கிழக்கே நோத் என்னும் தேசத்தில் குடியிருந்தான். காயீன் தன் மனைவியை 16
அறிந்தான்; அவள் கர்ப்பவதியாகி ஏனோக் கைப் பெற்றாள்; அவன் ஒரு பட்டணத் தைக்கட்டி அந்தப் பட்டணத்துக்குத் தன் குமாரனாகிய ஏனோக்கின் பேரை இட்டான். ஏனோக்குக்கு ஈராத் பிறந்தான்; ஈராத் 17
மெகுயவேலைப் பெற்றான்; மெகுயவேல் மெத்தூசவேலைப் பெற்றான்; மெத்தூச வேல் லாமேக்கைப் பெற்றான். லாமேக்கு 18
இரண்டு பெண்களை விவாகம்பண்ணினான்; ஒருத்தியின் பேர் ஆதாள், மற்றொருத்தியின் பேர் சில்லாள். ஆதாள் யாபாலைப்பெற் றாள்; அவன் கூடாரவாசிகளாய் மந்தை மேய்க்கிறவர்களுக்குத் தகப்பனானான். 19
அவன் சகோதரன் பேர் யூபால்; இவன் கின்னரக்காரர் எல்லாருக்கும்

தகப்பனுனன். சில்லாளுக்கும் ஒரு பிள்ளை
பிறந்தது. அவன்பேர் தூபால் காயீன்;
அவன் செம்பு இரும்பு முதலியவற்றில்
தொழில் செய்யும் கம்மாளனுனன்.
தூபால் காயீனுடைய சகோதரி நாமாள்.
லாபேகு தன் மனைவிகளைப்பார்த்து:
ஆதாளே, சில்லாளே, என் சத்தத்திற்குச்
செவிகொடுங்கள்;
லாமேக்கின் மனைவிகளே, நான் சொல்
வதைக் கேளுங்கள்;
என்னைக் காயப்படுத்துகிற மனுஷனைக்
கொல்லுவேன்,
எனக்குத் தழும்பு விழும்படி செய்கிற
வாலிபனைக் கொலை செய்வேன்,
காயீனுக்காக ஏழுபழி சுமரும்,
லாமேக்குக்காகவோ எழுபத்தேழுபழி சுமரும் என்றான்.

பின்னும் ஆதாம் தன் மனைவியை அறிந்
தான்; அவள் ஒரு குமாரனைப் பெற்று:
காயீன் கொலைசெய்த ஆபேலுக்குப் பதி
லாகக் கடவுள் எனக்கு வேறொரு புத்திர
னைத் தந்தருளினார் என்று சொல்லி அவ
னுக்குச் சேத் என்று பேரிட்டாள்.
சேத்துக்கும் ஒரு குமாரன் பிறந்தான்; அவ
னுக்கு ஏனோஸ் என்று பேரிட்டான்; அக்
காலத்திலேதான் மனுஷர் யெகோவாவின்
நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்
தார்கள்.

5 ஆதாமின் வம்ச வரலாறு: கடவுள் மனு
ஷனைச் சிருஷ்டித்த நாளிலே அவனைத்
2 தெய்வசாயலாக உண்டாக்கினார். அவர்
களை ஆணும் பெண்ணுமாகச் சிருஷ்டித்து
அவர்களை ஆசீர்வதித்து அவர்களைச் சிருஷ்
3 டித்த நாளில் அவர்களுக்கு மனுஷர் என்று
பேரிட்டார். ஆதாம் நூற்று முப்பது வய
தானபோது தன் சாயலாகத் தன் ரூபத்தின்
படியே ஒரு குமாரனைப் பெற்று அவனுக்
4 குச் சேத் என்று பேரிட்டான். ஆதாம்
சேத்தைப் பெற்றபின் எண்ணூறு வருஷம்
உயிரோடிருந்து குமாரரையும் குமாரத்தி
5 களையும் பெற்றான். ஆதாம் உயிரோடிருந்த
நாளெல்லாம் தொளாயிரத்து முப்பது வரு
6 ஷம்; அப்பால் அவன் மரித்தான். சேத் நூற்
றைந்து வயதானபோது ஏனோசைப் பெற்
7 றான். சேத் ஏனோசைப் பெற்றபின் எண்
ணூற்றேழு வருஷம் உயிரோடிருந்து குமா
8 ரரையும் குமாரத்திகளையும் பெற்றான். சேத்
உயிரோடிருந்த நாளெல்லாம் தொளாயிரத்
துப் பன்னிரண்டு வருஷம், அப்பால்
9 அவன் மரித்தான். ஏனோஸ் தொண்ணூறு
வயதானபோது கேனானைப் பெற்றான்.
10 ஏனோஸ் கேனானைப் பெற்றபின் எண்ணூற்
றுப் பதினைந்து வருஷம் உயிரோடிருந்து
குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.
11 ஏனோஸ் உயிரோடிருந்த நாளெல்லாம்
தொளாயிரத்து ஐந்து வருஷம், அப்பால்
12 அவன் மரித்தான். கேனான் எழுபது வய
தானபோது மகலாலெயேலைப் பெற்றான்.
13 கேனான் மகலாலெயேலைப் பெற்றபின்
எண்ணூற்று நாற்பது வருஷம் உயிரோ
டிருந்து குமாரரையும் குமாரத்திகளையும்
14 பெற்றான். கேனான் உயிரோடிருந்த
நாளெல்லாம் தொளாயிரத்துப் பத்து வரு
15 ஷம், அப்பால் அவன் மரித்தான். மகலா
லெயேல் அறுபத்தைந்து வயதானபோது
16 யாரேதைப் பெற்றான். மகலாலெயேல்
யாரேதைப் பெற்றபின் எண்ணூற்று
முப்பது வருஷம் உயிரோடிருந்து குமார
17 ரையும் குமாரத்திகளையும் பெற்றான். மகலா
லெயேல் உயிரோடிருந்த நாளெல்லாம்
எண்ணூற்றுத் தொண்ணூற்றைந்து வரு
18 ஷம், அப்பால் அவன் மரித்தான். யாரேத்
நூற்று அறுபத்திரண்டு வயதானபோது
19 ஏனோக்கைப் பெற்றான். யாரேத் ஏனோக்
கைப் பெற்றபின் எண்ணூறு வருஷம் உயி
ரோடிருந்து குமாரரையும் குமாரத்திகளையும்
20 பெற்றான். யாரேத் உயிரோடிருந்த
நாளெல்லாம் தொளாயிரத்து அறுபத்
திரண்டு வருஷம், அப்பால் அவன் மரித்
21 தான். ஏனோக்கு அறுபத்தைந்து வயதான
போது மெத்தூசலாவைப் பெற்றான்.
22 ஏனோக்கு மெத்தூசலாவைப் பெற்றபின்
மூன்நூறு வருஷம் கடவுளோடு சஞ்சரித்
துக்கொண்டிருந்து குமாரரையும் குமாரத்தி
23 களையும் பெற்றான். ஏனோக்கு உயிரோ
டிருந்த நாளெல்லாம் முன்நூற்று அறுபத்
24 தைந்து வருஷம். ஏனோக்கு கடவுளோடு
சஞ்சரித்துக்கொண்டிருக்கையில் காணப்
டாதவனானன்; கடவுள் அவனை எடுத்துக்
25 கொண்டார். மெத்தூசலா நூற்றெண்பத்
தேழு வயதானபோது லாமேக்கைப்
பெற்றான். மெத்தூசலா லாமேக்கைப்
26 பெற்றபின். எழுநூற்று எண்பத்திரண்டு
வருஷம் உயிரோடிருந்து குமாரரையும்
குமாரத்திகளையும் பெற்றான். மெத்தூசலா
27 உயிரோடிருந்த நாளெல்லாம் தொளா
யிரத்து அறுபத்தொன்பது வருஷம், அப்
பால் அவன் மரித்தான். லாமேக்கு நூற்
28 றெண்பத்திரண்டு வயதானபோது ஒரு குமா
ரனைப் பெற்று,
29 யெகோவா சபித்த நிலத்
திலே நமக்கு உண்டாகும் வேலையிலும்
நமது கைப்பாடுகளிலும் இவன் நம்மைத்
தேற்றுவான் என்று சொல்லி அவனுக்கு
நோவா என்று பேரிட்டான். லாமேக்கு 30

நோவாவைப் பெற்றபின் ஐந்நூற்றுத்
தொண்ணூற்றைந்து வருஷம் உயிரோடிரு
ந்து குமாரரையும் குமாரத்திகளையும் பெற்
31 ருன். லாமேக்கு உயிரோடிருந்த நாளெல்
லாம் எழுநூற்று எழுபத்தேழு வருஷம்,
32 அப்பால் அவன் மரித்தான். நோவா ஐந்
நூறு வயதானபோது சேம் காம் யாப்பேத்
என்பவர்களைப் பெற்ருன்.

**6** மனுஷர் பூமியின்மேல் பெருகத் துவக்கி
2 னர்கள். அவர்களுக்குக் குமாரத்திகள்
பிறந்தபோது, தெய்வகுமாரர் மனுஷ குமா
ரத்திகளைச் சௌந்தரியமுள்ளவர்களென்று
கண்டு அவர்களில் தங்களுக்கு இஷ்டமா
னவர்களைப் பெண்களாகக் கொண்டார்
3 கள். அப்பொழுது யெகோவா: என் ஆவி
என்றென்றைக்கும் மனுஷனில் தங்குவ
தில்லை; அவன் மாம்சந்தானே, அவன் இருக்
கப்போகிற நாட்கள் நூற்றிருபது வருஷந்
4 தான் என்ருர். தெய்வகுமாரர் மனுஷ
குமாரத்திகளோடு கூடி வாழ்ந்து இவர்கள்
அவர்களுக்குப் பிள்ளைகளைப் பெற்றதினால்
அக்காலத்திலும் பிற்காலத்திலும் இராட்சதர்
பூமியிலிருந்தார்கள்; இவர்களே பூர்வத்தில்
5 பேர்பெற்ற பலவான்கள். மனுஷனின்
அக்கிரமம் பூமியிலே பெருகிற்றென்றும்
அவன் இருதயத்து நினைவுகளும் உத்தேசங்
களும் நித்தமும் பொல்லாதவைகளே என்
6 றும் யெகோவா கண்டார். காணவே தாம்
பூமியில் மனுஷனை உண்டாக்கினதைப்
பற்றி யெகோவா மனஸ்தாபப்பட்டார்;
அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்
7 தது. அப்பொழுது யெகோவா: நான்
சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின்மேல்
இருக்கவிடேன், மனுஷன்முதல் மிருகங்
கள் ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பற
வைகள் வரையுமுள்ள யாவற்றையும் நிக்
கிரகம்பண்ணுவேன்; நான் அவர்களை
உண்டாக்கினதுபற்றி மனஸ்தாபப்படுகி
8 றேன் என்ருர். நோவாவுக்கோ யெகோ
வாவின் கண்களில் தயவு கிடைத்தது.

9 நோவாவின் வம்சவரலாறு: நோவா நீதி
மான், தன் காலத்தவர்களுக்குள் குற்றமற்ற
வன்; நோவா கடவுளோடு சஞ்சரித்துக்
10 கொண்டிருந்தான். நோவா சேம் காம்
யாப்பேத் என்னும் மூன்று குமாரரைப்
11 பெற்ருன். பூமி கடவுள் பார்வையில் சீர்
கெட்டதாயிருந்தது; பூமி கொடுமையினால்
12 நிறைந்திருந்தது. கடவுள் பூமியைப்
பார்த்தார்; மாம்சமான யாவரும் பூமியின்
மேல் தங்கள் வழியைக் கெடுத்துத்தொண்
டிருந்தார்கள். இதோ, பூமி சீர்கெட்டே
போயிற்றென்று கடவுள் கண்டு நோவை
வைப் பார்த்து: மாம்சமான யாவையும் 13
அழித்துவிடத் தீர்மானித்தேன். அவர்கள்
செய்யும் கொடுமையினால் பூமி நிறைந்
தது; இதோ, நான் அவர்களைப் பூமியோடுங்
கூட அழித்துப்போடுவேன். நீ கொப்பேர் 14
மரத்தால் ஒரு பேழையைச் செய்துகொள்;
அந்தப் பேழையிலே அறைகளை அமைத்து
அதை உள்ளும் புறம்பும்மாகக் கீல்பூசு.
நீ அதைச் செய்யவேண்டியவிதமாவது: 15
பேழையின் நீளம் முந்நூறு முழம், அதின்
அகலம் ஐம்பது முழம், அதின் உயரம் முப்
பது முழம். பேழையின் மேல்தட்டுக்குக் 16
கீழ் ஒரு முழம் பலகணியாக்கச் செய்து
முடித்துப் பேழையின் ஒரு பக்கத்தில்
கதவை வைத்துக் கீழ் அறைகளையும்
இரண்டாம் தட்டின் அறைகளையும் மூன்
ரும் தட்டின் அறைகளையும் வைக்கவேண்
டும். இதோ, வானத்தின்கீழ் ஜீவசுவாச 17
முள்ள சகல மாம்ச ஜந்துக்களையும் அழிக்க
நான் பூமியின்மேல் ஜலப்பிரளயத்தை
வரப்பண்ணுவேன்; பூமியிலுள்ள யாவும்
மாண்டுபோம். உன்னுடனேயோ என் 18
உடன்படிக்கையை ஏற்படுத்துவேன்; நீயும்
உன்னோடுகூட உன் குமாரரும் உன் மனைவி
யும் உன் குமாரரின் மனைவிகளும் பேழைக்
குள் பிரவேசியுங்கள். சகலவித மாம்ச 19
மான ஜீவ ஜந்துக்களிலும் ஆணும் பெண்
ணுமாக வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடி
உன்னுடன் உயிரோடே காக்கப்படுவதற்
குப் பேழைக்குள் சேர்த்துக்கொள். ஜாதி 20
ஜாதியான பறவைகளிலும் ஜாதி ஜாதியான
மிருகங்களிலும் பூமியிலுள்ள சகல ஜாதி
ஜாதியான ஊரும் பிராணிகளிலும் வகை
ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடி உயிரோடு
காக்கப்படுவதற்கு உன்னிடம் வரக்கடவது.
உனக்கும் அவைகளுக்கும் உணவாகச் 21
சகலவித ஆகாராதிகளையும் சேர்த்து உன்னி
டம் வைத்துக்கொள் என்ருர். நோவா 22
அப்படியே செய்தான்; கடவுள் தனக்குக்
கட்டளையிட்டபடி யெல்லாம் அவன் செய்து
முடித்தான்.

**7** யெகோவா நோவாவினிடம்: நீயும் உன் 7
வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிர
வேசியுங்கள்; இந்தச் சந்ததியாருக்குள்
என் பார்வையில் நீதிமான் நீயே, இதை
நான் கண்டேன். பூமியின் மீதெங்கு 2
முள்ள வர்க்கங்களை உயிரோடே காக்கும்
பொருட்டு நீ சுத்தமான சகல மிருகங்களி
லும் ஆணும் பெண்ணுமாக ஏவ்வேழு
ஜோடும் சுத்தமல்லாத மிருகங்களில் ஆணும்
பெண்ணுமாக ஒவ்வொரு ஜோடும்
ஆகாயத்துப் பறவைகளிலும் சேவலும் 3

பேடுமாக எவ்வேழு ஜோடும் உன்னிடத்
4 தில் சேர்த்துக்கொள். இன்னும் ஏழு நாள் சென்றபின்பு நாற்பதுநாள் இரவும் பகலும் பூமியின்மேல் மழை பெய்யச்செய்வேன். நான் உண்டாக்கின ஜீவஜந்துக்கள் அனைத்தையும் பூமியின்மேல் இராதபடி நிக்கிரகம்
5 பண்ணுவேன் என்றார். யெகோவா தனக்குக் கட்டளையிட்டபடி யெல்லாம் நோவா
6 செய்துமுடித்தான். பூமியின்மேல் ஜலப்பிரளயம் வந்தபோது நோவாவுக்கு அறு
7 நூறு வயது. ஜலப்பிரளயமுண்டாகவே, நோவாவும் அவனோடுகூட அவன் குமாரரும் அவன் மனைவியும் அவன் குமாரரின் மனைவிகளும் பேழைக்குள் பிரவேசித்தார்
8 கள். கடவுள் நோவாவுக்குக் கட்டளையிட்டபடியே சுத்தமான மிருகங்களிலும் சுத்தமல்லாத மிருகங்களிலும் பறவைகளிலும் பூமியின்மேல் ஊரும் பிராணிகள்
9 எல்லாவற்றிலும் | ஆணும் பெண்ணும் ஜோடு ஜோடாக நோவாவினிடம் பேழைக்
10 குட்பட்டன. குறித்த ஏழுநாளும் சென்றபின்பு பூமியின்மேல் ஜலப்பிரளயம் வந்
11 தது. நோவாவுக்கு அறுநூறும் வயதாகும் வருஷம் இரண்டாம் மாதம் பதினேழாம் தேதியாகிய அந்நாளிலே மகா ஆழத்தின் ஊற்றுக்கண்களெல்லாம் உடைபட்டன;
12 வானத்தின் மதகுகளும் திறவுண்டன. நாற்பது நாள் இரவும் பகலும் பூமியின்மேல்
13 பெருமழை பெய்தது. அன்றையதினமே நோவாவும் நோவாவின் குமாரராகிய சேமும் காமும் யாப்பேத்தும் அவர்களோடு கூட நோவாவின் மனைவியும் அவன் குமாரரின் மூன்று மனைவிகளும் பேழைக்குள்
14 பிரவேசித்தார்கள். அவர்களோடு ஜாதி ஜாதியான சகலவித காட்டுமிருகங்களும் ஜாதி ஜாதியான சகலவித நாட்டுமிருகங்களும் பூமியின்மேல் ஊருகிற ஜாதி ஜாதியான சகலவித ஊரும் பிராணிகளும் ஜாதி ஜாதியான சகலவித பறவைகளும் சிறகுகளுள்ள சகலவித பட்சிகளும் பிரவேசித்தன.

15 இப்படியே ஜீவசுவாசமுள்ள மாம்ச ஜந்துக்களெல்லாம் ஜோடுஜோடாக நோவா
16 வினிடம் பேழைக்குட்பட்டன. கடவுள் அவனுக்குக் கட்டளையிட்டபடியே உள்ளே புகுந்த சகலவித மாம்ச ஜந்துக்களும் ஆணும் பெண்ணுமாகவே புகுந்தன. அப்பொழுது யெகோவா அவனை உள்ளே விட்டுக் கதவை யடைத்தார்.
17 நாற்பதுநாளாகப் பூமியின்மேல் ஜலப்பிரளயம் வந்துகொண்டிருந்தது. ஜலம் பெருகிப் பேழையைக் கிளம்பப்பண்ணினதால்; அது பூமிக்குமேல் மிதந்தது. தண்ணீர் 18
பெருவெள்ளமாகிப் பூமியின்மேல் மிகவும் பெருகிற்று; பேழையானது தண்ணீரின் மேல் மிதந்துகொண்டிருந்தது. தண்ணீர் 19
பூமியின்மேல் மிகவும் அதிகமாய்ப் பெருகினதினால் வானத்தின் கீழ் எங்குமுள்ள உயர்ந்த மலைகளெல்லாம் மூடப்பட்டன.
பின்னும் பதினைந்துமுழ உயரத்திற்குத் 20
தண்ணீர் பெருகிற்று. பெருகவே மலைகள் 21
முழுதும் மூடப்பட்டன; அப்பொழுது பூமியின்மேல் சஞ்சரிக்கிற சகல மாம்ச ஜந்துக்களாகிய பறவைகள் நாட்டுமிருகங்கள் காட்டுமிருகங்கள் பூமியின்மேல் ஊரும் பிராணிகள் யாவும் சகல நரஜீவன்களும் மாண்டன. வெட்டாந்தரையிலுள்ள 22
எல்லாவற்றிலும் நாசியிலே ஜீவசுவாசமுள்ளவைகள் எல்லாம் மாண்டுபோயின.
மனுஷர்முதல் மிருகங்கள் ஊரும் பிராணி 23
கள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் பூமியின்மேல் இருந்த உயிருள்ள வஸ்துக்கள் யாவையும் நிக்கிரகம்பண்ணினார். அவைகள் பூமியில் இராதபடி நிக்கிரகமாயின; நோவாவும் அவனோடே பேழையிலிருந்த உயிர்களுமாத்திரம் காக்கப்பட்டன. தண்ணீர் பூமியின்மேல் நூற்றைம் 24
பதுநாள் மிகவும் பெருகியிருந்தது.

8 கடவுள் நோவாவையும் அவனுடனே பேழையிலிருந்த சகல ஜீவஜந்துக்களையும் சகல நாட்டுமிருகங்களையும் நினைத்தருளினார்; கடவுள் பூமியின்மேல் காற்றை வீசப் பண்ணினார், அப்பொழுது தண்ணீர் குறைந்தது. ஆழத்தின் ஊற்றுக்கண்களும் வானத் 2
தின் மதகுகளும் அடைபட்டன; வானத்து மழை நின்றுபோயிற்று. தண்ணீர் பூமியி 3
லிருந்து நாளுக்கு நாள் வற்றிக்கொண்டே வந்தது; நூற்றைம்பது நாளுக்குப் பின்பு தண்ணீர் வடிய ஆரம்பித்தது. ஏழாம் 4
மாதம் பதினேழாம் தேதியிலே பேழை அராராத் என்னும் மலைகளின்மேல் தங்கிற்று. பத்தாம் மாதம் மட்டும் தண்ணீர் 5
வடிந்துகொண்டே வந்தது: பத்தாம் மாதம் முதல் தேதியிலே மலைச்சிகரங்கள் காணப்பட்டன. நாற்பதுநாள் சென்றபின் நோவா 6
தான் பேழையில் செய்திருந்த ஜன்னலைத் திறந்து | ஒரு காகத்தை வெளியே விட் 7
டான்; அது பூமியின்மேலிருந்த தண்ணீர் வற்றிப்போகும்வரைக்கும் போகிதம் வருகிறதுமாயிருந்தது. பின்பு பூமியின்மேல் 8
தண்ணீர் குறைந்துபோயிற்றோ என்று அறிந்துகொள்ளும்படி ஒரு புறாவைத் தன்னிடத்திலிருந்து வெளியேவிட்டான்.
பூமியின்மீதெங்கும் தண்ணீர் இருந்தபடி 9

யால் அந்தப்புரு தன் உள்ளங்கால் வைத்து இளைப்பாற இடங்காணுமல் திரும்பிப் பேழையிலே அவனிடம் வந்தது, அவன் தன் கையை நீட்டி அதைப்பிடித்துத் தன்னிடமாகப் பேழைக்குள் சேர்த்துக்கொண்
10 டான். பின்னும் ஏழுநாள் பொறுத்து மறுபடியும் புருவைப் பேழையிலிருந்து
11 வெளியேவிட்டான். அந்தப் புரு சாயங்காலத்தில் அவனிடத்தில் வந்து சேர்ந்தது; இதோ, அது கொத்திக்கொண்டு வந்த ஒரு ஒலிவ இலை அதின் வாயிலிருந்தது; அதினாலே நோவா பூமியின்மேல் தண்ணீர் குறைந்துபோயிற்றென்று அறியலானான்.
12 பின்னும் ஏழுநாள் பொறுத்து அவன் புருவை வெளியே விட்டான்; அது அவ
13 னிடம் திரும்பிவரவில்லை. அவனுக்கு அறுநூற்றொரு வயதாகும் வருஷத்தில் முதல் மாதம் முதல் தேதியிலே பூமியின் மேலிருந்த தண்ணீர் வற்றிப்போயிற்று; நோவா பேழையின் மேல்தட்டை எடுத்துப் பார்த்தான்; பூமியின்மேல் தண்ணீர் இல்லா
14 திருந்தது. இரண்டாம் மாதம் இருபத்தேழாம் தேதியிலே பூமி காய்ந்திருந்தது.
15 அப்பொழுது கடவுள் நோவாவைப்
16 பார்த்து: நீயும் உன்னோடுகூட, உன் மனைவியும் உன் குமாரரும் உன் குமாரரின் மனைவிகளும் பேழையைவிட்டு வெளிப்படுங்கள்.
17 உன்னிடமிருக்கிற சகலவித மாம்ச ஜந்துக்களாகிய பறவைகளையும் மிருகங்களையும் பூமியின்மேல் ஊருகிற சகல பிராணிகளையும் உன்னோடு வெளியேவரவிடு; அவைகள் பூமியிலே திரளாய் வர்த்தித்துப் பூமியின் மேல் பலுகிப்பெருகவேண்டும் என்றார்.
18 அப்பொழுது நோவாவும் அவன் குமாரரும் அவன் மனைவியும் அவன் குமாரரின் மனைவி
19 களும் வெளியே வந்தார்கள். பூமியின்மேல் நடமாடுகிற சகல மிருகங்களும் ஊருகிற சகல பிராணிகளும் சகல பறவைகளும் ஜாதி ஜாதியாய்ப் பேழையிலிருந்து
20 வெளியே வந்தன. அப்பொழுது நோவா யெகோவாவுக்கு ஒரு பலிபீடம் கட்டிச் சுத்தமான சகல மிருகங்களிலும் சுத்தமான சகல பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்துகொண்டு அவைகளைப் பலிபீடத்தின்மேல்
21 தகனபலிகளாகப் பலியிட்டான் யெகோவா சுகந்தவாசனையை முகர்ந்தவராய்த் தமது உள்ளத்தில்: இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை; மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயது தொடங்கிப் பொல்லாதவைகளே. நான் இப்பொழுது செய்ததுபோல இனிச் சகல ஜீவன்களையும் சங்காரிப்பதில்லை. பூமியுள்ளமட்டும் விதைப்பும் 22
அறுப்பும் சீதளமும் உஷ்ணமும் கோடைகாலமும் மாரிகாலமும் பகலும் இரவும் ஒழிவதில்லை யென்று சொல்லிக்கொண்டார்.

பின்பு கடவுள் நோவாவையும் அவன் 9
குமாரரையும் ஆசீர்வதித்து: நீங்கள் பலுகிப் 2
பெருகிப் பூமியை நிரப்புங்கள். உங்களைப் பற்றிய பயமும் அச்சமும் பூமியிலுள்ள சகல மிருகங்களுக்கும் ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும் இருக்கும்; பூமியிலே சஞ்சரிக்கிற யாவும் சமுத்திரத்தின் மச்சங்கள் யாவும் உங்களுக்குக் கையளிக்கப்பட்டன. நடமாடுகிற ஜீவஜந்துக்கள் 3
யாவும் உங்களுக்கு ஆகாரமாகும். பசும் பூண்டுகளை உங்களுக்குத் தந்ததுபோலவே இவைகள் எல்லாவற்றையும் உங்களுக்குத் தந்தேன். மாம்சத்தை அதின் உயிராகிய 4
இரத்தத்தோடே புசிக்கவேண்டாம். உங் 5
களுக்கு உயிராயிருக்கிற உங்கள் இரத்தத்திற்காகப் பழிவாங்குவேன்; சகல ஜீவ ஜந்துக்களிடத்திலும் பழிவாங்குவேன்; மனுஷனுடைய உயிருக்காக மனுஷனிடத்தில், அவனவன் சகோதரனிடத்திலேயே, பழிவாங்குவேன். கடவுள் தமது சாயலில் 6
மனுஷனை உண்டாக்கின மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ அவனுடைய இரத்தம் மனுஷனாலேயே சிந்தப்படும். நீங்களோ பலுகிப் பெருகிப் பூமி 7
யிலே திரளாய் வர்த்தித்து அதிலே பெருகுங்கள் என்றார்.

பின்னும் கடவுள் நோவாவையும் அவன் 8
குமாரரையும் பார்த்து: நான் உங்களோடும் 9
உங்களுக்குப் பின்வரும் உங்கள் சந்ததியோடும் | உங்களோடிருக்கிற சகல ஜீவ 10
ஜந்துக்களாகிய பறவைகளோடும் நாட்டு மிருகங்களோடும் உங்களிடத்திலுள்ள பூமியின் சகல காட்டுமிருகங்களோடும் என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன். உங்களோடு பேழையிலிருந்து வெளிப்பட்ட சகல ஜீவஜந்துக்களோடும் என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன். இனி மாம்சமானவைகளெல்லாம் ஜலப்பிர 11
ளயத்தினால் சங்காரிக்கப்படுவதில்லையென்றும் பூமியை அழிக்க இனி ஜலப்பிரளயம் உண்டாவதில்லையென்றும் உங்களோடு என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன் என்றார். பின்னும் கடவுள்: எனக்கும் உங் 12
களுக்கும் உங்களிடத்திலிருக்கும் சகல ஜீவஜந்துக்களுக்கும் நித்திய தலைமுறைகளுக்கென்று நான் செய்துள்ள உடன்படிக்கையின் அடையாளமாக் | நான் என் வில்லை 13

மேகத்தில் வைத்தேன்; அது எனக்கும்
பூமிக்கும் உள்ள உடன்படிக்கைக்கு
14 அடையாளமாகும். நான் பூமிக்கு மேலாக
மேகத்தை வருவிக்கும்போது அந்த வில்
15 மேகத்தில் தோன்றும். அப்பொழுது எல்லா
மாம்சமான ஜீவஜந்துக்களையும் அழிக்க
இனி ஜலமானது பிரளயமாய்ப் பெருகாத
படி எனக்கும் உங்களுக்கும் மாம்சமான
சகல ஜீவஜந்துக்களுக்குமுள்ள என் உடன்
16 படிக்கையை நினைத்தருளுவேன். அந்த
வில் மேகத்தில் தோன்றும்போது கடவுளுக்
கும் பூமியின்மேலுள்ள சகலவித மாம்ச
மான ஜீவஜந்துக்களுக்குமுள்ள நித்திய
உடன்படிக்கையை நான் நினைத்தருளும்படி
அதை நோக்கிப்பார்ப்பேன் என்று சொன்
17 னார். இது எனக்கும் பூமியின்மேலுள்ள
மாம்சமான யாவுக்கும் நான் ஏற்படுத்தின
உடன்படிக்கையின் அடையாளமென்று
கடவுள் நோவாவினிடஞ் சொன்னார்.
18 பேழையிலிருந்து வெளிப்பட்ட நோவா
வின் குமாரர் சேம் காம் யாப்பேத் என்ப
19 வர்களே. காம் கானானுக்குத் தகப்பன்;
இம்மூவரும் நோவாவின் குமாரர்; இவர்
களிலிருந்தே பூமி யெங்கும் மனுகுலம்
பரவிற்று.
20 நோவா பயிரிடுகிறவனாகித் திராட்சத்
21 தோட்டத்தை நாட்டினான். அவன் திராட்ச
ரசத்தைக்குடித்து வெறிகொண்டு தன்
கூடாரத்தில் வஸ்திரம் விலகிப் படுத்திருந்
22 தான். அப்பொழுது கானானின் தகப்பனு
கிய காம் தன் தகப்பனுடைய நிர்வாணத்
தைக் கண்டு வெளியிலிருந்த தன் சகோதரர்
23 இருவருக்கும் அறிவித்தான். சேமும் யாப்
பேத்தும் ஒரு வஸ்திரத்தை எடுத்துத் தங்
கள் இருவருடைய தோள்மேலும் போட்
டுக்கொண்டு பின்னிட்டு வந்து தங்கள்
தகப்பனுடைய நிர்வாணத்தை மூடினார்
கள்; அவர்கள் எதிர்முகமாய்ப் போகாத
படியினால் தங்கள் தகப்பனுடைய நிர்
24 வாணத்தைக் காணவில்லை. நோவா திராட்ச
ரசத்தின் வெறி தெளிந்து விழித்தபோது
தன் இளைய குமாரன் தனக்குச் செய்ததை
யறிந்து:
25 கானான் சapபத்திற்குள்ளாகுக,
தன்சகோதரரின் தீழ் அடிமைக் கடிமை
யாவான்
என்று சொல்லிப் பின்னும்,
26 சேமின் கடவுளாகிய யெகோவா ஸ்தோத்
திரத்துக்குரியவர்,
கானான் அவனுக்கு அடிமையாகுக.
27 யாப்பேத்தைக் கடவுள் வியாபிக்கச்
செய்து,
சேமின் கூடாரத்தில் அவன் குடியிருப்
பான்,
கானான் அவனுக்கு அடிமையாவான்
என்றார்.
ஜலப்பிரளயத்தின் பின்னும் நோவா மூன் 28
நூற்றுஐம்பது வருஷம் உயிரோடிருந்தான்.
நோவா உயிரோடிருந்த நாளெல்லாம் 29
தொளாயிரத்து ஐம்பது வருஷம், அப்பால்
அவன் மரித்தான்:

நோவாவின் குமாரராகிய சேம் காம் யாப் 10
பேத் என்பவர்களின் வம்சவரலாறு: ஜலப்
பிரளயத்தின் பின் அவர்களுக்குக் குமாரர்
பிறந்தார்கள். யாப்பேத்தின் குமாரர், 2
கோமேர், மாகோகு, மாதாய், யாவான்,
தூபால், மேசேக்கு, தீராஸ் என்பவர்கள்.
கோமேரின் குமாரர், அஸ்கெனஸ், ரீப் 3
பத்து, தொகர்மா என்பவர்கள். யாவானின் 4
குமாரர், எலீசா, தர்ஷீஸ், இத்தீம், தொதா
னீம் என்பவர்கள். இவர்களிலிருந்து 5
ஜாதிகள் வகித்த சமுத்திர தீரங்கள், அவன
வன் பாஷையின்படியேயும் அவரவர்கள்
கோத்திரத்தின்படியேயும் ஜாதியின்படியே
யும் வேறு வேறு தேசங்களாகப் பகுக்கப்
பட்டன.
காமின் குமாரர், கூஷ், மிஸ்ராயீம், பூத், 6
கானான் என்பவர்கள். கூஷின் குமாரர், 7
சேபா, கவீலா, சப்தா, ராமா, சப்தெகா
என்பவர்கள். ராமாவின் குமாரர், ஷேபா,
தெதான் என்பவர்கள். கூஷ் நிம்ரோதைப் 8
பெற்றான்; இவன் பூமியிலே பராக்கிரம
சாலியானான். இவன் யெகோவாவின் பார் 9
வையில் பலத்த வேட்டைக்காரனாயிருந்
தான்; ஆகவே யெகோவாவின் பார்வையில்
பலத்த வேட்டைக்காரனான நிம்ரோதைப்
போல என்னும் வழக்கச் சொல் உண்டா
யிற்று. ஷிநெயார்தேசத்திலுள்ள பாபேல், 10
ஏரேக், அக்காத், கல்னே என்னும் இடங்
கள் அவன் ஆண்ட ராஜ்யத்திற்கு ஆதி
ஸ்தானங்கள். அந்தத் தேசத்திலிருந்து 11
அவன் அசூருக்குப்போய் நினிவேயையும்,
ரெகொபோத் பட்டணத்தையும் காலாகை
யும் | நினிவேக்கும் காலாகுக்கும் நடுவாக 12
ரெசேனையும் கட்டினான்; நினிவே பெரிய
பட்டணம். மிஸ்ராயீம், லூதியரையும் 13
அனாமியரையும் லெகாபியரையும் நப்தூகி
யரையும் பத்ருசியரையும் | கஸ்லூகியரை 14
யும்—இவர்களிடமிருந்தே பெலிஸ்தியர்
வந்தார்கள்—கப்தோரியரையும் பெற்றான்.
கானான் தன் மூத்தமகனாகிய சீதோனையும் 15
ஏத்தையும் எபூசியரையும் | எமோரியரை 16
யும் கிர்காசியரையும் | ஏவியரையும் அர்கி 17
யரையும் சிநியரையும் | அர்வாதியரையும் 18

செமாரியரையும் காமாத்தியரையும் பெற்
றான்; பின்பு கானானியரின் வம்சத்தார்
19 வெளியே பரவினார்கள். கானானியரின்
எல்லை, சீதோன் முதல் கேரார் வழியாய்க்
காத்சாமட்டும், அதுமுதல் சோதோம்,
கொமோரா, அத்மா, செபோயிம் வழியாய்
20 லாசாமட்டும் எட்டி இருந்தது. இவர்கள்
தங்கள் தேசங்களிலும் தங்கள் ஜாதிகளிலு
முள்ள தங்கள் வம்சங்களின்படியேயும்
தங்கள் பாஷைகளின்படியேயும் காமு
டைய சந்ததியார்.
21 சேமுக்கும் பிள்ளைகள் பிறந்தார்கள்;
அவன் ஏபேருடைய சந்ததியார் எல்லாருக்
கும் தகப்பன், யாப்பேத்துக்குத் தமையன்.
22 சேமுடைய குமாரர், ஏலாம், அசூர், அர்பக்
23 சாத், லூத், ஆராம் என்பவர்கள். ஆரா
முடைய குமாரர், ஊத்ஸ், கூல், கேத்தர்,
24 மாஸ் என்பவர்கள். அர்பக்சாத் சாலா
கைப் பெற்றான்; சாலாகு ஏபேரைப் பெற்
25 றான். ஏபேருக்கு இரண்டு குமாரர், ஒரு
வன் பேர் பேலேகு; ஏனெனில் அவன்
நாட்களில் பூமி பகுக்கப்பட்டது; அவன்
26 சகோதரன் பேர் யொக்தான்; யொக்தான்
அல்மோதாதையும் சாலேப்பையும் அசர்
27 மாவேத்தையும் யேராகையும் | அதோரா
28 மையும் ஊசாலையும் திக்லாவையும் | ஒபா
29 லையும் அபிமாவேலையும் ஷேபாவையும் |
ஒப்பீரையும் கவீலாவையும் யோபாபையும்
பெற்றான்; இவர்கள் அனைவரும் யொக்
30 தானுடைய குமாரர். இவர்கள் குடியிருப்பு
மேசா துவக்கிக் கிழக்கேயுள்ள மலையாகிய
செப்பாருக்குப் போகிற வழிமட்டுமிருந்
31 தது. இவர்களே தங்கள் தேசங்களிலும்
தங்கள் ஜாதிகளிலுமுள்ள தங்கள் வம்சங்
களின்படியேயும் தங்கள் பாஷைகளின்
படியேயும் சேமுடைய சந்ததியார்.
32 தங்கள் ஜாதிகளிலுள்ள தங்கள் சந்ததி
களின்படியே நோவாவுடைய குமாரரின்
வம்சங்கள் இவைகளே; ஜலப்பிரளயத்துக்
குப் பின்பு இவர்களிலிருந்து பூமியிலே
ஜாதிகள் பிரிந்தன.

**11** பூமியெங்கும் ஒரே பாஷையும் ஒரேவித
2 மான பேச்சுமிருந்தது. ஜனங்கள் கிழக்கே
யிருந்து பிரயாணம் பண்ணுகையில் ஷிநெ
யார் தேசத்திலே சமபூமியைக்கண்டு
3 அங்கே குடியிருந்தார்கள். அப்பொழுது
அவர்கள்: நாம் செங்கல் அறுத்து அதை
நன்றாய்ச் சுடுவோம் வாருங்களென்று
ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்;
இவர்களுக்குச் செங்கலைக் கல்லாகவும் நிலக்கீலைச்
4 சாந்தாகவும் உபயோகித்தார்கள். ஆகையால்
அவர்கள்: நாம் பூமியின் மீதெங்கும சிதறிப்
போகாதபடி நமக்கு ஒரு நகரத்தையும்
வானத்தையளாவும் சிகரமுள்ள ஒரு கோபு
ரத்தையுங் கட்டி நமக்குப் பேர் உண்
டாகச் செய்வோம் வாருங்கள் என்று
சொல்லிக்கொண்டார்கள். மனுப்புத்திரர் 5
கட்டுகிற நகரத்தையும் கோபுரத்தையும்
பார்க்கிறதற்கு யெகோவா இறங்கினார்.
அப்பொழுது யெகோவா: இதோ, ஜனங்கள் 6
ஒரே கூட்டமாயிருக்கிறார்கள்; அவர்கள்
அனைவருக்கும் ஒரே பாஷையுமிருக்கிறது;
அவர்கள் இதைச் செய்யத் தொடங்கினார்
கள்; அவர்கள் செய்ய நினைத்தது ஒன்றும்
இனித்தடைப்படமாட்டாது. நாமோ இறங் 7
கிப்போய் ஒருவர் பேசுவதை மற்றவர்
அறியாதபடி அங்கே அவர்கள் பாஷை
யைத் தாறுமாறாக்குவோம், வாருங்கள்
என்றார். அப்படியே யெகோவா அவர்களை 8
அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும்
சிதறிப்போகப்பண்ணினார்; அவர்கள் நகரம்
கட்டுவதை விட்டுவிட்டார்கள். பூமியெங் 9
கும் வழங்கின பாஷையை யெகோவா
அவ்விடத்தில் தாறுமாறாக்கினபடியால்
அதின் பேர் பாபேல் எனப்பட்டது;
யெகோவா அவர்களை அவ்விடத்திலிருந்து
பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணி
னார்.
சேமினுடைய வம்சவரலாறு: ஜலப்பிர 10
ளயம் உண்டாகி இரண்டு வருஷத்திற்குப்
பின்பு சேம் நூறுவயதானபோது அர்பக்
சாத்தைப் பெற்றான். சேம் அர்பக்சாத் 11
தைப் பெற்றபின் ஐந்நூறுவருஷம் உயி
ரோடிருந்து குமாரரையும் குமாரத்திகளையும்
பெற்றான். அர்பக்சாத் முப்பத்தைந்து 12
வயதானபோது சாலாகைப் பெற்றான்.
சாலாகைப் பெற்றபின் அர்பக்சாத் 13
நானூற்று மூன்று வருஷம் உயிரோடிருந்து
குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.
சாலாகு முப்பது வயதானபோது ஏபேரைப் 14
பெற்றான். ஏபேரைப் பெற்றபின் சாலாகு 15
நானூற்று மூன்று வருஷம் உயிரோடிருந்து
குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.
ஏபேர் முப்பத்துநான்கு வயதானபோது 16
பேலேகைப் பெற்றான். பேலேகைப் 17
பெற்றபின் ஏபேர் நானூற்று முப்பது வரு
ஷம் உயிரோடிருந்து குமாரரையும் குமா
ரத்திகளையும் பெற்றான். பேலேகு முப்பது 18
வயதானபோது ரெகூவைப்பெற்றான். ரெகூ 19
வைப்பெற்றபின் பேலேகு இருநூற்றொன்
பது வருஷம் உயிரோடிருந்து குமாரரையும்
குமாரத்திகளையும் பெற்றான். ரெகூ முப்பத் 20
திரண்டு வயதானபோது செரூகைப் பெற்
றான். செரூகைப்பெற்றபின் ரெகூ இரு 21

நூற்றேழு வருஷம் உயிரோடிருந்து குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.
22 செரூகு மூப்பது வயதானபோது நாகோ
23 ரைப் பெற்றான். நாகோரைப் பெற்றபின் செரூகு இருநூறு வருஷம் உயிரோடிருந்து குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.
24 நாகோர் இருபத்தொன்பது வயதானபோது
25 தேராகைப் பெற்றான். தேராகைப் பெற்றபின் நாகோர் நூற்றுப்பத்தொன்பது வருஷம் உயிரோடிருந்து குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.
26 தேராகு எழுபது வயதானபோது ஆபிராம், நாகோர், ஆரான் என்பவர்களைப் பெற்றான்.
27 தேராகினுடைய வம்சவரலாறு: தேராகு ஆபிராம், நாகோர், ஆரான் என்பவர்களைப் பெற்றான்; ஆரான் லோத்தைப் பெற்றான்.
28 ஆரான் தன் ஜென்மபூமியாகிய ஊர் என்கிற கல்தேயர் பட்டணத்திலே தன் தகப்பனாகிய
29 தேராகுக்கு முன்னே மரித்தான். ஆபிராமும் நாகோரும் தங்களுக்குப் பெண் கொண்டார்கள்; ஆபிராம் மனைவியின் பேர் சாராய்; நாகோருடைய மனைவியின் பேர் மில்க்காள்; இவள் ஆரானுடைய மகள்; அந்த ஆரான் மில்க்காளுக்கும் இஸ்காளுக்
30 கும் தகப்பன். சாராய்க்குப் பிள்ளையில்லை;
31 மலடியாயிருந்தாள். தேராகு தன் குமாரனாகிய ஆபிராமையும் ஆரானுடைய குமாரனும் தன் பேரனுமாகிய லோத்தையும் தன் குமாரன் ஆபிராமுடைய மனைவியாகிய தன் மருமகள் சாராயையும் அழைத்துக்கொண்டு அவர்களோடு ஊர் என்கிற கல்தேயர் பட்டணத்தை விட்டுக் கானான் தேசத்துக்குப் போகப்புறப்பட்டான்; அவர்கள் காரான்மட்டும் வந்தபோது அங்கே
32 இருந்துவிட்டார்கள். தேராகினுடைய ஆயுசுநாட்கள் இருநூற்றைந்து வருஷம், தேராகு காரானிலே மரித்தான்.

**12** யெகோவா ஆபிராமினிடம்: நீ உன் தேசத்தையும் உன் இனத்தாரையும் உன் தகப்பன் வீட்டையும் விட்டுப் புறப்பட்டு நான்
2 உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜனமாக்கி உன்னை
3 ஆசீர்வதித்து உன் பேரை மேன்மைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாயிருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியின் வம்சங்களெல்லாம் உன்னில் ஆசீர்வதிக்கப்
4 படும் என்றார். யெகோவா தனக்குச் சொன்னபடியே ஆபிராம் போனான்; லோத்தும் அவனோடு போனான். ஆபிராம் காரானை விட்டுப் புறப்பட்டபோது அவனுக்கு எழுபத்தைந்து வயது. ஆபிராம்
5 தன் மனைவியாகிய சாராயையும் தன் சகோதரன் குமாரனாகிய லோத்தையும் தங்கள் சம்பாதித்திருந்த தங்கள் சம்பத்தெல்லாவற்றையும் காரானிலே சம்பாதித்த வேலைக்காரர்களையும் கூட்டிக்கொண்டு போனான். அவர்கள் கானான் தேசத்துக்குப் போகப் புறப்பட்டுக் கானான் தேசத்தில் சேர்ந்தார்கள். ஆபிராம் அந்தத் தேசத்தில் சுற்றித்
6 திரிந்து சீகேம் என்னும் இடத்து மோரே விருக்ஷமட்டும் வந்தான்; அக்காலத்திலே கானானியர் அத்தேசத்தில் இருந்தார்கள்.
7 யெகோவா ஆபிராமுக்குத் தரிசனமாகி: உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன் என்றார். அப்பொழுது அவன், தனக்குத் தரிசனமான யெகோவாவுக்கு அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டினான்.
8 பின்பு அவன் அவ்விடம் விட்டுப் பெயர்ந்து பேதேலுக்குக் கிழக்கே இருக்கும் மலைக்குப் போய், பேதேல் தனக்கு மேற்காகவும் ஆயி கிழக்காகவும் இருக்கக் கூடாரம் போட்டு அங்கே யெகோவாவுக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி யெகோவாவின் நாமத்தைத் தொழுதுகொண்டான்.
9 அதின் பின் ஆபிராம் அங்கிருந்து பெயர்ந்து தென்னாட்டுக்குப் பிரயாணம் பண்ணிக்கொண்டு போனான்.

10 அத்தேசத்திலே பஞ்சமுண்டாயிற்று; தேசத்திலே பஞ்சம் கொடிதாயிருந்தபடியால் ஆபிராம் எகிப்து தேசத்திலே தங்கும்படி அவ்விடத்துக்குப் போனான்.
11 அவன் எகிப்துக்குச் சமீபமாய் வந்தபோது தன் மனைவி சாராயைப் பார்த்து: நீ பார்வைக்கு அழகுள்ள ஸ்திரீ என்பது எனக்குத் தெரியும்.
12 எகிப்தியர் உன்னைக் காணும்போது இவள் அவனுடைய மனைவி என்று சொல்லி என்னைக் கொன்றுபோட்டு உன்னை உயிரோடே வைப்பார்கள்.
13 ஆகையால் உன் நிமித்தம் எனக்கு நன்மை யுண்டாகும்படிக்கும் உன்னாலே என் உயிர் பிழைக்கும்படிக்கும் நீ உன்னை என் சகோதரி என்று சொல் என்றான்.
14 ஆபிராம் எகிப்திலே வந்தபோது எகிப்தியர் அந்த ஸ்திரீயை மிகுந்த அழகுள்ளவளென்று கண்டார்கள். பார்வோனின் பிரபுக்களும் அவளைக்
15 கண்டு பார்வோனிடத்தில் அவளைப் புகழ்ந்தார்கள். அப்பொழுது அந்த ஸ்திரீ பார்வோனுடைய அரமனைக்குக் கொண்டு போகப்பட்டாள்.
16 அவள் நிமித்தம் அவன் ஆபிராமுக்குத் தயைபாராட்டினான்; அவனுக்கு ஆடுமாடுகளும் கழுதைகளும் வேலைக்காரரும் வேலைக்காரிகளும் பெட்டைக் கழுதைகளும் ஒட்டகங்களும்

17 கிடைத்தன. ஆபிராமுடைய மனைவி சாராயின் நிமித்தம் யெகோவா பார்வோனையும் அவன் வீட்டாரையும் மகா வாதைகளால்
18 வாதித்தார். அப்பொழுது பார்வோன் ஆபிராமை யழைத்து: நீ எனக்குச் செய்ததென்ன? இவள் உன் மனைவியென்று நீ
19 எனக்கு ஏன் அறிவிக்கவில்லை. இவளை உன் சகோதரி என்று ஏன் சொன்னாய்? இவளை நான் எனக்கு மனைவியாகக கொள்ளச் செய்தாயே. இதோ, உன் மனைவி; இவளை அழைத்துக்கொண்டுபோ என்று
20 சொன்னான். பார்வோன் அவனைக் குறித்துத் தன் ஆட்களுக்குக் கட்டளைகொடுத்தான்; அவர்கள் அவனையும் அவன் மனைவியையும் அவனுக்குள்ள யாவற்றையும் அனுப்பிவிட்டார்கள்.

**13** ஆபிராமும் அவன் மனைவியும் அவனுக்குள்ள யாவும் அவனோடு லோத்தும் எகிப்தை விட்டுத் தென்னாட்டுக்கு வந்தார்கள்.
2 ஆபிராம் மிருகங்களும் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்திகளுமுடைய சீமானாயிருந்
3 தான். அவன் தன் பிரயாணங்களிலே தென்னாட்டிலிருந்து பேதேல் மட்டும், பேதேலுக்கும் ஆயிக்கும் நடுவாகத் தான் முன்பு
4 கூடாரம் போட்டதும் | தான் முதல்முதல் ஒரு பலிபீடத்தை உண்டாக்கினதுமான ஸ்தலமட்டும் போய்க்கொண்டே யிருந்தான். அங்கே ஆபிராம் யெகோவாவின்
5 நாமத்தைத் தொழுதுகொண்டான். ஆபிராமோடு வந்த லோத்துக்கும் ஆடுமாடுகளும்
6 கூடாரங்களுமிருந்தன. அவர்கள் ஒருமித்துக் குடியிருக்க அந்நாட்டில் அவர்களுக்குப் போதுமான இடமில்லை; அவர்களுடைய ஆஸ்தி மிகுதியாயிருந்தபடியால் அவர்கள் ஒருமித்து வாசம்பண்ணமுடியா
7 மற்போயிற்று. ஆபிராமின் மந்தைமேய்ப்பருக்கும் லோத்தின் மந்தைமேய்ப்பருக்கும் வாக்குவாதமுண்டாயிற்று. அக்காலத்திலே கானானியரும் பாரசீகரும் அத்தேசத்
8 தில் குடியிருந்தார்கள். ஆபிராம் லோத்தைப்பார்த்து: எனக்கும் உனக்கும் என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் விவா
9 தம் வேண்டாம்; நாம் சகோதரர். இத்தத் தேசமெல்லாம் உனக்குமுன் இருக்கிறதல்லவா? உன்னைக் கேட்டுக்கொள்ளுகிறேன், நீ என்னைவிட்டுப் பிரிந்துபோ. நீ இடதுபுறம் போனால் நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால் நான்
10 இடதுபுறம் போகிறேன் என்றான். அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து, யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக்கண்டான். யெகோவா சோதோமையும் கொமோராவையும் அழிக்குமுன்னே சோவாருக்குப் போகுமட்டும் அது யெகோவாவின் தோட்டத்தைப் போலவும் எகிப்து தேசத்தைப் போலவுமிருந்தது.
11 இதைக் காணவே லோத்து யோர்தானுக்கு அருகான சமபூமி முழுவதையுந் தெரிந்துகொண்டு கிழக்கே பிரயாணமானான்; இப்படியாக அவர்கள் ஒருவரையொருவர்
12 விட்டுப் பிரிந்தார்கள். ஆபிராம் கானான் தேசத்தில் குடியிருந்தான்; லோத்து அந்த யோர்தானுக்கு அருகான சமபூமியிலுள்ள பட்டணங்களில் வாசம்பண்ணிச் சோதோம் வரைக்கும் கூடாரம் போட்டுக்கொண்டே போனான். சோதோமின் ஜனங்
13 கள் மிகப் பொல்லாதவர்களும் யெகோவாவின் பார்வையில் மகா பாவிகளுமாயிருந்தார்கள்.
14 லோத்து ஆபிராமைவிட்டுப் பிரிந்தபின்பு யெகோவா ஆபிராமினிடம்: உன் கண்களை ஏறெடுத்து நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும் தெற்கேயும்
15 கிழக்கேயும் மேற்கேயும் நோக்கிப்பார். நீ பார்க்கிற இந்தத் தேசம் முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் இருக்கும்படி கொடுப்பேன்.
16 உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால் உன் சந்ததியும்
17 எண்ணப்படும். நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ அம்மட்டும் நடந்து திரி; உனக்கே அதைக் கையளிப்பேன் என்றார். அப்பொழுது ஆபிராம்
18 கூடாரத்தைப் பெயர்த்துக்கொண்டேபோய் எப்பெரோனிலிருக்கும் மம்ரேயின் தோப்பண்டையில் குடியிருந்து அங்கே யெகோவாவுக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான்.

**14** ஷினெயாரின் ராஜாவாகிய அம்ராப்பேலும் ஏலாசாரின் ராஜாவாகிய அரியோகும் ஏலாமின் ராஜாவாகிய கெதர்லாகோமேரும் கோவியரின் ராஜாவாகிய திதெயாலும்
2 இருந்த நாட்களில் | அவர்கள் சோதோமின் ராஜாவாகிய பேராவோடும் கொமோராவின் ராஜாவாகிய பிர்சாவோடும் அத்மாவின் ராஜாவாகிய சிநெயாபோடும் செபோயிமின் ராஜாவாகிய செமெபரோடும் சோவார் என்னும் பேலாவின் ராஜாவோடும் யுத்தம்பண்ணினார்கள்.
3 இவர்களெல்லாரும் உப்புக் கடலாகிய சித்தீம் பள்ளத்தாக்கிலே கூடினார்கள்.
4 இவர்கள் பன்னிரண்டு வருஷம் கெதர்லாகோமேரைச் சேவித்துப் பதின்மூன்றாம் வருஷத்திலே கலகம்பண்ணினார்கள்.
5 பதினாலாம் வரு

ஷூத்திலே கெதர்லாகோமேரும் அவனோடே கூடியிருந்த ராஜாக்களும் வந்து ரெப்பாவியரை அஸ்தரோத் கர்னயீமிலும் சூசியரைக் காமிலும் ஏமியரைச் சாவேகிரியத்தாயிமிலும் முறியடித்தார்கள். கோரியரைச் சேயீர் மலைகளில் முறியடித்து வனாந்தரத்துக்கு அருகான எல்பாரான்மட்டும் ஓட்டினார்கள். மறுபக்கமாய்த் திரும்பிக் காதேஸ் என்னும் ஏன்மிஸ்பாத்துக்கு வந்து அமலேக்கியருடைய நாடனைத்தையும் கத்சாத்சோன் தாமாரிலே குடியிருந்த எமோரியரையும்கூடச் சங்கரித்தார்கள். அப்பொழுது சோதோமின் ராஜாவும் கொமோராவின் ராஜாவும் அத்மாவின் ராஜாவும் செபோயிமின் ராஜாவும் சோவார் என்னும் பேலாவின் ராஜாவும் புறப்பட்டுச் சித்தீம் பள்ளத்தாக்கிலே | ஏலாமின் ராஜாவாகிய கெதர்லாகோமேரோடும் கோவியரின் ராஜாவாகிய திதெயாலோடும் ஷினெயாரின் ராஜாவாகிய அம்ராப்பேலோடும் ஏலாசாரின் ராஜாவாகிய அரியோகோடும் யுத்தம் பண்ணப் புறப்பட்டு இந்த நாலு ராஜாக்களோடு அந்த ஐந்து ராஜாக்களும் யுத்தம் பண்ணினார்கள். சித்தீம் பள்ளத்தாக்கு எங்கும் நிலக்கீல் கேணிகளிருந்தன. சோதோம் கொமோராவின் ராஜாக்கள் முறிந்தோடி அங்கே விழுந்தார்கள்; மீந்தவர்கள் மலைகளுக்கு ஓடிப்போனார்கள். அப்பொழுது நாலு ராஜாக்களும் சோதோமிலும் கொமோராவிலுமுள்ள பொருள்கள் எல்லாவற்றையும் ஆகாரிகள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். ஆபிராமின் சகோதரனுடைய குமாரனாகிய லோத்தையும் அவன் பொருட்களையும் கொண்டுபோய்விட்டார்கள். இவன் சோதோமில் குடியிருந்தவன். தப்பியோடின ஒருவன் எபிரெயனாகிய ஆபிராமிடத்தில் வந்து அதை அறிவித்தான்; அக்காலத்தில் ஆபிராம் மம்ரேயின் தோப்பண்டையில் குடியிருந்தான். மம்ரே என்பவன் எமோரியன்; இவன் எஸ்கோலுக்கும் ஆநேருக்கும் சகோதரன். இவர்களோடு ஆபிராம் உடன்படிக்கை செய்திருந்தான். தன் சகோதரன் சிறையாகக் கொண்டுபோகப்பட்டதை ஆபிராம் கேள்விப்பட்டபோது அவன் தன் வீட்டிலே பிறந்த கைபடிந்தவர்களாகிய முந்நூற்றுப் பதினெட்டு ஆட்களுக்கும் ஆயுதம் தரிப்பித்துத் தாண் என்னும் ஊர் மட்டும் அவர்களைத் தொடர்ந்து | இராக்காலத்திலே அவனும் அவன் வேலைக்காரரும் பிரிந்து, பகிஞ்சுகளாய் அவர்கள்மேல் விழுந்து, அவர்களை முறியடித்துத் தமஸ்குவுக்கு வடக்கான கோபாமட்டும் துரத்தினான். சகல பொருட்களையும் திருப்பிக்கொண்டு வந்தான்; தன் சகோதரனாகிய லோத்தையும் அவனுடைய பொருட்களையும் ஸ்திரீகளையும் ஜனங்களையும் திருப்பிக்கொண்டு வந்தான். அவன் கெதர்லாகோமேரையும் அவனோடிருந்த ராஜாக்களையும் முறியடித்துத் திரும்பிவருகிறபோது சோதோமின் ராஜா புறப்பட்டு ராஜாவின் பள்ளத்தாக்கு என்னும் சாவே பள்ளத்தாக்குமட்டும் அவனுக்கு எதிர்கொண்டு போனான்.

அன்றியும் உன்னதமான கடவுளின் ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு ஆகாரமும் திராட்சரசமும் கொண்டுவந்து அவன் ஆசீர்வதித்து:

வானத்தையும் பூமியையும் உடைய வராகிய உன்னதமான கடவுளின் ஆசீர்வாதம் ஆபிராமுக்கு உண்டாவதாக. உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான கடவுளுக்கு ஸ்தோத்திரம்

என்று சொன்னான். இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான். சோதோமின் ராஜா ஆபிராமைப் பார்த்து: ஜனங்களை எனக்குத் தாரும், பொருட்களை நீர் எடுத்துக்கொள்ளும் என்றான். ஆபிராம் சோதோமின் ராஜாவினிடம்: வானத்தையும் பூமியையும் உடைய வராகிய உன்னதமான கடவுளாகிய யெகோவாவுக்கு நேராக என் கையை உயர்த்தி ஆணையிட்டுச் சொல்லுகிறேன். ஆபிராமை ஐசுவரியவானாக்கினேனென்று நீர் சொல்லாதபடி நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும் உமக்கு உரியவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளவே மாட்டேன். வாலிபர் சாப்பிட்டதுபோக என்னோடு வந்த ஆநேர், எஸ்கோல், மம்ரே என்பவர்களின் பங்கு மாத்திரம் வரவேண்டும், இவர்கள் தங்கள் பங்கை எடுத்துக்கொள்ளட்டும் என்றான்.

**15** இவைகள் நடந்த பின்பு யெகோவாவின் வார்த்தை தரிசனத்திலே ஆபிராமுக்கு வந்தது: ஆபிராமே, நீ பயப்படாதே; நானே உனக்குக் கேடகம்; உனக்குக் கிடைக்கும் பலன் மகாபெரிதாம் என்று சொன்னார். ஆபிராமோ: என்னை ஆட்கொண்டவராகிய யெகோவாவே, அடியேனுக்கு நீர் தரக்கூடியது என்ன? நான் பிள்ளையில்லாதிருக்கிறேனே. என் வீட்டுக்கு உரியவனாகிற தற்குத் தமஸ்கு ஊராளாகிய எலியேசர்

தானே யிருக்கிறான் என்று சொன்னாள்.
3 பின்னும் ஆபிராம்: தேவரீர் எனக்குப் புத்திரசந்தானம் அருளவில்லை; இதோ, என் வீட்டிலே பிறந்த அடிமைப்பிள்ளை எனக்குச் சுதந்தரவாளியாகிறானே என்று
4 சொன்னான். அப்பொழுது யெகோவாவின் வார்த்தை அவனுக்கு வந்தது: இவன் உனக்குச் சுதந்தரவாளியாகான், உன் சொந்தப்பிள்ளையாகப் பிறப்பவனே உனக்குச் சுதந்தரவாளியாவான் என்று சொன்
5 னார். அவர் அவனை வெளியே அழைத்துப்போய்: நீ வானத்தை அண்ணாந்து பார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால் அவைகளை எண்ணு என்று சொல்லிப் பின்பு அவனைப் பார்த்து: இப்படியே உன் சந்ததி யிருக்கும் என்றார்.
6 அவன் யெகோவாவில் விசுவாசம்வைத்தான்; அவர் அதை அவனுக்கு நீதியாக
7 எண்ணினார். பின்னும் அவர் அவனிடம்: இந்தத் தேசத்தை உனக்குச் சுதந்தரமாகக் கொடுப்பதற்கு உன்னை ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்திலிருந்து அழைத்
8 து வந்த யெகோவா நானே என்றார். அவனோ: ஆண்டவராகிய யெகோவாவே, நான் அதைச் சுதந்தரித்துக்கொள்வேன் என்பதை எதினால் அறிவேன் என்றான்.
9 அதற்கு அவர்: மூன்று வயதுக்கிடாரியையும்மூன்றுவயது ஆட்டையும் மூன்று வயது ஆட்டுக்கடாவையும் ஒரு காட்டுப் புறாவையும் ஒரு மாடப்புறாவையும் என்னிடங்
10 கொண்டுவா என்றார். அவன் அவைகள் எல்லாவற்றையும் அவரிடங் கொண்டு வந்து அவைகளை நடுவாகத் துண்டித்துத் துண்டங்களை ஒன்றுக்கொன்று எதிராக வைத்தான்; பட்சிகளை அவன் துண்டிக்க
11 வில்லை. பறவைகள் அந்த உடல்களின் மேல் இறங்கின; அவைகளை ஆபிராம் துரத்
12 தினான். சூரியன் அஸ்தமிக்கும்போது ஆபிராமுக்கு நித்திரைமயக்கமுண்டாயிற்று; இதோ, காரிருள் வரவே திகில் அவனை
13 மூடிக்கொண்டது. அப்பொழுது அவர் ஆபிராமினிடம்: இதை நீ நிட்டமாய் அறிந்துகொள்; உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்திய தேசத்திலே பரதேசிகளாயிருப்பார்கள்; அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள்; அவர்களால் நானூறு வருஷம்
14 உபத்திரவப்படுவார்கள். இவர்கள் சேவிக்கும் ஜாதிகளையோ நான் நியாயந்தீர்ப்பேன்; பின்பு மிகுந்த ஆஸ்தியோடு புறப்பட்டு
15 வருவார்கள். நீ சமாதானமாய் உன் பிதாக்களிடம் சேருவாய்; நல்ல முதிர்வயதிலே
16 அடக்கம் பண்ணப்படுவாய். நாலாம் தலைமுறையிலே அவர்கள் இவ்விடத்துக்குத் திரும்புவார்கள்; எமோரியரின் அக்கிரமம் இன்னும் நிறைவாகவில்லை என்றார். சூரியன் அஸ்தமித்து இருட்டானபின்பு,
17 இதோ, புகைகிற சூளையும் அந்தத் தண்டங்களின் நடுவே கடந்துபோகிற எரிபந்தமும் தோன்றின. அக்காலிலே யெகோவா
18 ஆபிராமோடு உடன்படிக்கை பண்ணி எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதி மட்டுமுள்ளதும் | கேனி
19 யரும் கெனிசியரும் கத்மோனியரும் |
20 ஏத்தியரும் பாரிசேயரும் ரெப்பாவியரும் |
21 எமோரியரும் கானானியரும் கிர்காசியரும் : எபூசியரும் இருக்கிறதுமான இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன் என்றார்.

**16** ஆபிராமின் மனைவி சாராய்க்குப் பிள்ளை பிறக்கவில்லை. எகிப்து தேசத்தாளாகிய ஒரு அடிமைப் பெண் அவளுக்கு இருந்தாள்; அவள்பேர் ஆகார். சாராய் ஆபி 2
ராமினிடம்: நான் பிள்ளை பெறுதபடிக்கு யெகோவா என் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார்; என் அடிமைப் பெண்ணோடுசேரும், ஒருவேளை அவளால் எனக்குச் சந்ததியுண்டாகும் என்றாள். சாராயின் வார்த்தைக்கு
ஆபிராம் இணங்கினான். ஆபிராமின் மனைவி 3
சாராய் எகிப்து தேசத்தாளான தன் அடிமைப் பெண் ஆகாரை அழைத்து அவளைத் தன் புருஷன் ஆபிராமுக்கு மனையாட்டியாகக் கொடுத்தாள். ஆபிராம் கானான் தேசத்தில் பத்து வருஷம் குடியிருந்த பின்பு இது நடந்தது. அவன் ஆகாரோடு 4
சேர்ந்தபோது அவள் கர்ப்பந்தரித்தாள்; அவள் தான் கர்ப்பவதியானதைக் கண்டபோது தன் நாச்சியாரை அற்பமாக எண்ணினாள். அப்பொழுது சாராய் ஆபிரா 5
மைப் பார்த்து: எனக்கு நேரிட்ட அநியாயம் உமதுமேல் சுமரும்; என் அடிமைப் பெண்ணை உமக்குப் பெண்டாகக் கொடுத்தேன்; அவள் தான் கர்ப்பவதியானதைக் கண்டு என்னை அற்பமாக எண்ணுகிறாள்; யெகோவா எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயந்தீர்ப்பாராக என்றாள். ஆபிராமோ 6
சாராயினிடம்: இதோ, உன் அடிமைப் பெண் உன் கைக்குள் இருக்கிறாள்; உனக்குச் சரியென்று தோன்றுகிறபடி அவளுக்குச்செய் என்று சொன்னான். சாராய் அவளைக் கடினமாய் நடத்திவந்தாள்; நடத்தவே ஆகார் அவளைவிட்டு ஓடிப் போனாள்.

யெகோவாவின் தூதன் அவளை வனாந்த 7
ரத்திலே நீரூற்றண்டையில், அதாவது

சூருக்குப்போகிற வழியருகே இருக்கிற நீரூற்றண்டையில் கண்டு: சாராயின் அடி
8 மைப் பெண்ணே, ஆகாரே, எங்கேயிருந்த வருகிறாய்? எங்கே போகிறாய்? என்று கேட்டார். அவள்: நான் என் நாச்சியா ராகிய சாராயை விட்டு ஓடிப்போகிறேன் என்று சொல்லவே, யெகோவாவின்
9 தூதன்: நீ உன் நாச்சியாரண்டைக்குத் திரும்பு, அவள் கையின் கீழ் அடங்கியிரு
10 என்றார். பின்னும் யெகோவாவின் தூதன் அவளிடம்: உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன். அது பெருகி எண்ண
11 முடியாததாயிருக்கும் என்றார்; பின்னும் யெகோவாவின் தூதன் அவளைப்பார்த்து: நீ கர்ப்பவதியாயிருக்கிறாய், உனக்கு ஒரு ஆண்பிள்ளை பிறக்கும்; யெகோவா உன் அங்கலாய்ப்பைக் கேட்டபடியினால் அவனுக்கு இஸ்மவேல் என்று பேரிடுவாயாக.
12 அவன் காட்டுக்கழுதைபோல் அடங்காதவனாயிருப்பான்,
அவனுடைய கை எல்லாருக்கும் விரோதமாகவும்
எல்லாருடைய கையும் அவனுக்கு விரோதமாகவுமிருக்கும்,
அவன் தன் எல்லாச் சகோதரருக்கும்
13 எதிரியாகக் குடியிருப்பான் என்றார். அப்பொழுது அவள்: என்னைப் பார்க்கிறவரை நான் இங்கே கண்டுகொண்டேனே என்று சொல்லித் தன்னோடு பேசின யெகோவாவுக்கு நீர் பார்க்கிற கடவுள் என்று பேரிட்
14 டாள். ஆகவே அந்தத்துரவு பெயர்லகாய் ரோயி என்னப்பட்டது; அது காதேசுக்கும் பேரேத்துக்கும் நடுவே இருக்கிறது.
15 ஆகார் ஆபிராமுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்; ஆகார் பெற்ற குமாரனுக்கு இஸ்மவேல் என்று ஆபிராம் பேரிட்டான்.
16 ஆகார் ஆபிராமுக்கு இஸ்மவேலைப் பெற்ற போது ஆபிராமுக்கு எண்பத்தாறு வயது.

**17** ஆபிராம் தொண்ணூற்றொன்பது வயதானபோது யெகோவா ஆபிராமுக்குத் தரிசனமாகி: நான் சர்வவல்லவரான கடவுள்; நீ என் சந்நிதியில் நடந்து குற்றமற்றவனா
2 யிரு. நான் உனக்கும் எனக்கும் நடுவே என் உடன்படிக்கையை ஏற்படுத்தி உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப்பண்
3 ணுவேன் என்றார். அதுகேட்ட ஆபிராம் முகங்குப்புற விழுந்து வணங்கினான்.
4 கடவுளோ அவனோடு பேசி: என் விஷயத்திலே, இதோ, என் உடன்படிக்கை உன்னோடிருக்கிறது. நீ பல ஜாதிகளுக்குத்
5 தகப்பனாவாய். இனி உன் பேர் ஆபிராம் எனப்படாமல் நான் உன்னைத் திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக ஏற்படுத்தினபடியால் உன் பேர் ஆபிரகாம் எனப்படும்.
உன்னை மிகவும் அதிகமாய்ப் பலுகப் 6
பண்ணி அநேக ஜாதிகளாக்குவேன்; உன்னிடத்தினின்று ராஜாக்கள் உதிப்பார்கள்.
உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்த 7
திக்கும் நான் கடவுளாயிருக்கும்படி எனக்கும் உனக்கும் உனக்குப்பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததிக்கும் நடுவே என் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன். நீ 8
பரதேசியாய்த் தங்கிவருகிற கானான்தேச முழுவதையும் உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாகக் கொடுப்பேன்; நானே அவர்களுக்குக் கடவுளாயிருப்பேன் என்று சொன்னார்.

பின்னும் கடவுள் ஆபிரகாமைப் பார்த் 9
து: இதோ, உன் விஷயத்திலோ, நீயும் உனக்குப்பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததியும் என் உடன்படிக்கையைக் கைக்கொள்ளவேண்டும். எனக்கும் 10
உங்களுக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நடுவே உண்டாகிறதும் நீங்கள் கைக்கொள்ள வேண்டியதுமான என் உடன்படிக்கை இதுவே: உங்களுக்குள் பிறக்கும் சகல ஆண்பிள்ளைகளும் விருத்த சேதனம் பண்ணப்படவேண்டும்; உங்கள் 11
தனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம் பண்ணவேண்டும்; அதுவே எனக்கும் உங்களுக்குமுள்ள உடன்படிக்கைக்கு அடையாளம். தலைமுறை தலைமுறையாக 12
உங்களில் பிறக்கும் ஆண்பிள்ளைகளெல்லாம் எட்டாம் நாளிலே விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும்; வீட்டிலே பிறந்த பிள்ளையானாலும் சரி, உன் சந்ததியல்லாத அந்நியனிடத்தில் பணத்திற்குக் கொள்ளப்பட்ட எந்த ஆண்பிள்ளையானாலும் சரி, அப்படியே விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும். உன் வீட்டிலே பிறந்த பிள்ளை 13
யும் உன் பணத்திற்குக் கொள்ளப்பட்டவனும் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டியது அவசியம்; இப்படியே என் உடன்படிக்கை உங்கள் மாம்சத்திலே நித்திய உடன்படிக்கையாக இருக்கும். தனித் 14
தோலின் மாம்சம் சேதனம்பண்ணப்படாத விருத்தசேதனமில்லாத ஆண்பிள்ளையிருந்தால் அவன் ஜனத்திலிருந்து நீக்கப்பட்டுப் போவான்; அவன் என் உடன்படிக்கையை மீறினானே என்றார்.

பின்னும் கடவுள் ஆபிரகாமைப் பார்த் 15
து: உன் மனைவி சாராயை இனிச் சாராய் என்று அழைக்கவேண்டாம்; சாராள் என்

16 பது அவளுக்குப் பேராகும். நான் அவனை
ஆசீர்வதித்து அவளாலே உனக்கு ஒரு
குமாரனையும் தருவேன்; அவள் ஜாதிகளுக்
குத் தாயாகவும் அவளாலே ஜாதிகளின்
ராஜாக்கள் உண்டாகவும் அவனை ஆசீர்
17 வதிப்பேன் என்றார். அது கேட்ட ஆபிர
காம் முகங்குப்புற விழுந்து நகைத்து:
நூறுவயதானவனுக்குப் பிள்ளை பிறக்கு
மோ? தொண்ணூறு வயதான சாராள்
பிள்ளை பெறுவாளோ என்று தன் இருதயத்
18 திலே சொல்லிக்கொண்டு, இஸ்மவேல்
உமது சந்நிதியில் பிழைப்பானாக என்று
19 கடவுளிடம் சொன்னான். கடவுளோ:
உன் மனைவியாகிய சாராள் நிச்சயமாய்
உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவ
னுக்கு ஈசாக்கு என்று பேரிடவேண்டும்.
என் உடன்படிக்கையை அவனுக்கும் அவ
னுக்குப்பின்வரும் அவன் சந்ததிக்கும் நித்
திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்.
20 இஸ்மவேலுக்காகவும் நீ செய்த விண்ணப்
பத்தைக் கேட்டேன்; இதோ, நான் அவனை
ஆசீர்வதித்து அவனை மிகவும் அதிகமாகப்
பலுகவும் பெருகவும் பண்ணுவேன்; அவன்
பன்னிரண்டு பிரபுக்களைப் பெறுவான்; அவ
21 னைப் பெரிய ஜாதியாக்குவேன். என் உடன்
படிக்கையையோ ஈசாக்கோடேயே ஸ்தா
பிப்பேன்; அவனைச் சாராள் வருகிற வரு
ஷம் இதேகாலத்தில் பெறுவாள் என்றார்.
22 கடவுள் ஆபிரகாமோடு பேசி முடிந்தபின்பு
அவர் அவனைவிட்டு உயரப்போய்விட்டார்.
23 அப்பொழுது ஆபிரகாம் தன் குமாரனா
கிய இஸ்மவேலையும் தன் வீட்டிலே பிறந்த
யாவரையும் தான் பணத்திற்குக்கொண்ட
அனைவருமாகிய தன் வீட்டிலுள்ள ஆண்
பிள்ளைகள் எல்லாரையும் சேர்த்துக் கட
வுள் தனக்குச் சொன்னபடியே அவர்கள்
நுனித்தோலின் மாம்சத்தை அந்நாளில்
24 தானே விருத்தசேதனம்பண்ணினான். ஆபிர
காமுடைய நுனித்தோலின் மாம்சம் விருத்
தசேதனம் பண்ணப்பட்டபோது அவனுக்
25 குத் தொண்ணூற்றொன்பது வயது. அவ
னுடைய குமாரன் இஸ்மவேலுடைய
நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம்
பண்ணப்பட்டபோது அவனுக்கு பதின்
26 மூன்றுவயது. ஒரே நாளில் ஆபிரகாமும்
அவன் குமாரன் இஸ்மவேலும் விருத்தசே
27 னம் பண்ணப்பட்டார்கள். வீட்டிலே பிறந்
தவர்களும் அந்நியரிடத்திலே பணந்திற்குக்
கொள்ளப்பட்டவர்களுமாகிய அவன் வீட்
டிலுள்ள ஆண்கள் அனைவரும் அவனோடு
கூட விருத்தசேதனம் பண்ணப்பட்டார்
கள்.

18 பின்பு யெகோவா மம்ரேயின் தோப்
பண்டையில் அவனுக்குத் தரிசனமானார்.
அவன் பகலின் உஷ்ணவேளையில் கூடார
வாசலிலே உட்கார்ந்திருந்து | தன் கண் 2
களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ,
மூன்று புருஷர் அவனுக்கு எதிரே நின்
றார்கள்; அவர்களைக் காணவே அவன்
கூடாரவாசலிலிருந்து அவர்களுக்கு எதிர்
கொண்டு ஓடித் தரைமட்டும் குனிந்து:
சுவாமீ, உமது கண்களில் எனக்குத் தயவு 3
கிடைத்ததானால் நீர் உமது அடியேனை
விட்டுக் கடந்துபோகவேண்டாம். கொஞ் 4
சம் தண்ணீர் கொண்டுவரட்டும், உங்கள்
கால்களைக் கழுவி மரத்தடியில் ஆறிந்து
கொண்டிருங்கள். நீங்கள் அடியேன் 5
இருக்கும் இடத்திற்கு வந்துவிட்டபடியால்
உங்கள் களைப்பையாற்ற நான் சிறிது ஆகா
ரம் கொண்டுவருகிறேன். சாப்பாட்டின்
மேல் நீங்கள் பிரயாணமாகலாம் என
அவர்கள், அப்படியே செய் என்றார்கள்.
அப்பொழுது ஆபிரகாம் கூடாரத்தில் சாரா 6
னிடம் விரைந்துபோய்: நீ சீக்கிரமாய் மூன்
றுபடி மெல்லிய மாவு எடுத்துப் பிசைந்து
அப்பம் சுடு என்று சொல்லிவிட்டு |
அவன் மாட்டு மந்தைக்கு ஓடி ஒரு நல்ல 7
இளங்கன்றைப் பிடித்து வேலைக்காரன்
கையிலே கொடுத்தான்; அவன் அதைச்
சீக்கிரத்தில் சமைத்தான். ஆபிரகாம் தயி 8
ரையும் பாலையும் சமைப்பித்த கன்றையும்
எடுத்துவந்து அவர்கள்முன் வைத்துவிட்டு
அவர்கள் அருகே மரத்தடியில் நின்று
கொண்டிருந்தான்; அவர்கள் புசித்தார்கள்.
அவர்கள் அவனைப்பார்த்து: உன் மனைவி 9
சாராள் எங்கே என்று கேட்க அவன்,
அதோ, கூடாரத்தில் இருக்கிறாள் என்றான்.
அப்பொழுது அவர்: அடுத்தவருஷம் இதே 10
காலத்தில் உன்னிடம் திரும்ப வருவேன்;
அப்பொழுது உன் மனைவியாகிய சாரா
ளுக்கு ஒரு குமாரனிருப்பான் என்றார்.
சாராள் அவருக்குப் பின்புறமாய்க் கூடார
வாசலில் இதைக் கேட்டுக்கொண்டு நின்
றாள். ஆபிரகாமும் சாராளுமோ வயது 11
சென்று முதிர்ந்தவர்கள்; ஸ்திரீகளுக்குள்ள
வழிபாடும் சாராளுக்கு நின்றுபோயிற்று.
ஆகவே சாராள் தன் உள்ளத்திலே நகைத் 12
து: நானும் கிழவி, என் ஆண்டவனும்
முதிர்ந்த வயதுள்ளவர்; எனக்கு இச்சை
யென்பது உண்டாகுமோ என்றாள். அப் 13
பொழுது யெகோவா ஆபிரகாமைப் பார்த்
து: சாராள் நகைத்து, கிழவியாகிய நான்
பிள்ளை பெறுவது மெய்யாமோ என்று
சொல்வானேன்? யெகோவாவினால் ஆகாத 14

காரியம் உண்டோ? குறித்தகாலமாகிய அடுத்த வருஷம் இதேகாலத்தில் நான் உன்னிடம் திரும்ப வருவேன்; அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரனிருப்பான் என்
15 ரார். சாராள் பயந்து நான் சிரிக்கவில்லை என்று மறுத்தாள். அதற்கு அவர்: இல்லை, நீ சிரித்தாய் என்ரார்.
16 பின்பு அந்தப்புருஷர் எழுந்து அவ்விடம் விட்டுச் சோதோம் திசையாய்ப் போனார்கள்; ஆபிரகாமும் அவர்களை வழிவிட்டனுப்பும்படி அவர்களோடு கூடப்போ
17 னான். அப்பொழுது யெகோவா: நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்
18 பேனோ? ஆபிரகாம் பெரிய பலத்த ஜாதியாவான், பூமியிலுள்ள சகல ஜாதிகளும் அவ
19 னுக்குள் ஆசீர்வதிக்கப்படும். அவன் தன் பிள்ளைகளுக்கும் தனக்குப் பின்வரும் தன் சந்ததியாருக்கும் கட்டளையிட்டு அவர்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து யெகோவா காட்டின வழியில் நடக்கும்படி செய்ய வேண்டும் என்பதே நான் அவனைத் தெரிந்தெடுத்த நோக்கம். அப்படிச் செய்தால் யெகோவா அவனுக்குச் சொன்னதை நிறை
20 வேற்றுவார் என்ரார். பின்பு யெகோவா சோதோம் கொமோராவின்பேரில் எழும் கூகுரல் பெரிதாயிருப்பதினாலும் அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருப்பதி
21 னாலும் நான் இறங்கிப்போய் | என்னிடத்தில் வந்து எட்டின அதின் கூக்குரலின்படியே அவர்கள் செய்திருக்கிறார்களோ என்று பார்ப்பேன்; இல்லையானால் அதையும் அறிவேன் என்ரார்.
22 அப்பொழுது அந்தப் புருஷர் அவ்விடம் விட்டுச் சோதோமின் திசையாய்ப் போனார்கள்; ஆபிரகாமோ பின்னும் யெகோவாவுக்கு முன்பாக நின்றுகொண்டிருந்தான்.
23 அப்பொழுது ஆபிரகாம் கிட்டவந்து: துன்
24 மார்க்கனோடே நீதிமானையும் அழிப்பீரோ? பட்டணத்தில் ஒருவேளை ஐம்பது நீதிமான்கள் இருப்பார்கள், அதிலிருக்கும் அந்த ஐம்பது நீதிமான்கள் நிமித்தம் மன்னித்து இரட்சியாமல் அந்த ஸ்தலத்தை அழிப்பீ
25 ரோ? இப்படிச்செய்வது, அதாவது துன்மார்க்கனோடே நீதிமானையும் அதாவது உமக்குத் தூரமாயிருப்பதாக; அப்படிச் செய்தால் நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும் பேதமிராதே, இது உமக்குத் தூரமாயிருப்பதாக; சர்வலோக நியாயாதிபதி நியா
26 யஞ்செய்யாதிருப்பாரோ என்ரான். அதற்கு யெகோவா: நான் சோதோமில் ஐம்பது நீதிமான்களைக் கண்டால் அவர்கள் நிமித்தம் அந்தஸ்தலமுழுவதையும் மன்னித்து இரட்சிப்பேன் என்ரார். அப்பொழுது ஆபிர 27
காம்: இதோ, தூளும் சாம்பலுமாயிருக்கிற அடியேன் ஆண்டவரோடு பேசத்துணிந்தேன். ஒருவேளை ஐம்பது நீதிமான்களுக்கு 28
ஐந்துபேர் குறைந்திருப்பார்கள்; அந்த ஐந்துபேர் குறைந்தனிமித்தம் பட்டணமுழுவதையும் அழிப்பீரோ என அவர்: நான் நாற்பத்தைந்து நீதிமான்களை அங்கே கண்டால் அதை அழிப்பதில்லை என்ரார். பின் 29
னும் அவன் அவரோடு பேசி, நாற்பது நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்ரான். அதற்கு அவர்: நாற்பது நீதிமான்கள் நிமித்தம் அதை அழியாமல் விடுவேன் என்ரார். அதைக் கேட்கவே அவன்: 30
ஆண்டவருக்குக் கோபம் வராமலிருப்பதாக; நான் இன்னும் பேசுகிறேன், முப்பது நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்ரான். அதற்கு அவர்: நான் முப்பது நீதிமான்களை அங்கே கண்டால் அதை அழியாமல் விடுவேன் என்ரார். பின்னும் 31
அவன்: இதோ, ஆண்டவரோடு பேசத் துணிந்தேன்; இருபது நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்ரான். அவர்: இருபது நீதிமான்கள் நிமித்தம் அதை அழியாமல் விடுவேன் என்ரார். அப்பொழுது 32
அவன்: ஆண்டவருக்குக் கோபம் வராதிருப்பதாக, நான் இன்னும் இந்த ஒருவிசை மாத்திரம் பேசுகிறேன்; பத்து நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்ரான். அதற்கு அவர்: பத்து நீதிமான்கள் நிமித்தம் அதை அழியாமல் விடுவேன் என்ரார். ஆபிரகாமோடே பேசி முடித்தபின்பு யெ 33
கோவா போய்விட்டார்; ஆபிரகாமும் தன் இடத்திற்குத் திரும்பினான்.

**19** அந்த இரண்டு தூதரும் சாயங்காலத்திலே சோதோமுக்கு வந்தார்கள்; லோத்து சோதோமின் வாசலிலே உட்கார்ந்திருந்தான். லோத்து அவர்களைக் கண்டு எழுந்து எதிர்கொண்டுபோய்த் தரைமட்டும் குனிந்து: ஐயன்மார்களே, அடியே 2
னுடைய வீட்டு முகமாய் நீங்கள் திரும்பி உங்கள் கால்களைக் கழுவி இராத்தங்கிக் காலையில் எழுந்து பிரயாணப்பட்டுப் போகலாம் என்ரான். அவர்களோ: அப்படியல்ல, வெளியிலே இராத்தங்குவோம் என்ரார்கள். அவன் அவர்களை மிகவும் 3
வருந்திக் கேட்டுக்கொள்ளவே அவர்கள் அவனிடமாய்த் திரும்பி அவன் வீட்டிற்குள் போனார்கள். அவன் புளிப்பில்லாப் அப்பங்களைச் சுட்டு அவர்களுக்கு விருந்து செய்தான், அவர்கள் புசித்தார்கள்.

4 அவர்கள் படுக்குமுன்னே அந்தப்பட்ட
ணத்து மனிதர் சோதோமியராகிய வாலிபர்
முதல் வயோதிகர் மட்டுமுள்ள ஜனங்கள்
அனைவரும் நாலுதிசைகளிலுமிருந்து வந்து
5 வீட்டைச் சூழ்ந்துகொண்டு | லோத்தைக்
கூப்பிட்டு: இந்த இராத்திரி உன்னிடத்
திற்கு வந்த மனுஷர் எங்கே? நாங்கள்
அவர்களை அறியும்படி அவர்களை எங்க
ளிடம் வெளியே கொண்டுவா என்றார்கள்.
6 அப்பொழுது லோத்து வாசலுக்கு வெளியே
வந்து தனக்குப் பின்னாலே கதவைப்
7 பூட்டிவிட்டு அவர்களிடம் போய்: சகோ
தரரே, இந்தத் துன்மார்க்கம் வேண்டாம்.
8 இதோ, புருஷரையறியாத இரண்டு குமா
ரத்திகள் எனக்கு உண்டு; அவர்களை உங்க
ளிடம் வெளியே கொண்டுவருகிறேன்,
அவர்களுக்கு உங்கள் இஷ்டப்படி செய்
யுங்கள்; இந்தப் புருஷருக்கோ ஒன்றும்
செய்யவேண்டாம்; இவர்கள் என் கூரை
யின் நிழலிலே வந்தவர்கள் என்றான்.
9 அதைக் கேட்கவே அவர்கள்: அப்பாலே
போ, இவன் தனித்தவன், பரதேசியாய்
வந்தவன், இவன் நமக்கு நியாயம் போதிக்
கிறான்! இதோ, அவர்களுக்குச் செய்
வதைப்பார்க்கிலும் உனக்கு அதிகத் தீமை
செய்வோமென்று சொல்லி லோத்து என்
பவனை மிகவும் நெருக்கிக் கதவை உடைக்
10 கப்போனார்கள். அப்பொழுது அந்தப்
புருஷர்கள் தங்கள் கைகளை வெளியே
நீட்டி லோத்தைத் தங்கள் அண்டைக்கு
11 வீட்டுக்குள் இழுத்துக்கொண்டு | கதவைத்
தாள்போட்டுவிட்டுத் தெருவாசலிலிருந்த
சிறியோரும் பெரியோருமாகிய மனிதர்
குருடராய்ப் போகப் பண்ணினார்கள்; அப்
பொழுது அவர்கள் வாசலைத் தேடித்தேடி
12 அலுத்துப்போனார்கள். பின்பு அந்தப்
புருஷர் லோத்தினிடம்: இவ்விடத்தில்
இன்னும் உனக்கு யாராவதுண்டா? மருமக
னாவது உன் குமாரராவது உன் குமாரத்தி
களாவது பட்டணத்தில் உன்னைச் சேர்ந்த
எவர்களாவது இருந்தால் அவர்களை இந்த
இடத்தைவிட்டு வெளியே அழைத்துக்
13 கொண்டுபோ. நாங்கள் இந்த இடத்தை
அழிக்கப்போகிறோம். இவர்கள்பேரில்
எழும் கூக்குரல் யெகோவாவின் சந்நிதியில்
பெரிதாயிருக்கிறது; இதை அழிக்க
யெகோவா எங்களை அனுப்பினார் என்றார்
14 கள். அப்பொழுது லோத்து வெளியே
போய்த் தன குமாரத்திகளை விவாகம்
பண்ணப்போகிற தன் மருமக்களோடே
ரோடே பேசி: நீங்கள் எழுந்து இந்த
இடத்தை விட்டுப் புறப்படுங்கள்;
யெகோவா இந்தப் பட்டணத்தை அழிக்
கப்போகிறார் என்றான்; அவனுடைய
மருமக்களுக்கு அவன் பரியாசம்பண்ணு
கிறதாகத் தோன்றினது.

15 விழக்கு வெளுக்கும்போது அந்தத் தூதர்
லோத்தைத் துரிதப்படுத்தி: பட்டணத்தின்
அக்கிரமத்திற்கு வரும் தண்டனையில் நீ
அழியாதபடி எழுந்து உன் மனைவியை
யும் இங்கே இருக்கிற உன் இரண்டு
குமாரத்திகளையும் அழைத்துக்கொண்டுபோ
என்று சொன்னார்கள். 16 அவன் இன்னும்
தாமதிக்கவே அந்தப் புருஷர் அவன்
கையையும் அவன் மனைவியின் கையையும்
அவன் இரண்டு குமாரத்திகளின் கையை
யும் பிடித்து அவனைக் கூட்டிக்கொண்டு
போய்ப் பட்டணத்திற்கு வெளியே விட்டு
விட்டார்கள். யெகோவா அவன்மேல்
இரக்கம் வைத்திருந்தார். 17 அவர்களை
வெளியே கொண்டுபோகையில் அவர்
களில் ஒருவர்: உன் ஜீவன் தப்ப ஓடிப்போ,
பின்னிட்டுப் பாராதே; இந்தச் சமபூமியில்
எங்கும் நில்லாதே; நீ அழியாதபடி மலைக்கு
ஓடிப்போ என்றார். 18 அதற்கு லோத்து:
அப்படியல்ல சுவாமீ, 19 உமது கண்களில்
உமது அடியேனுக்குக் கிருபை கிடைத்
ததே; என் பிராணனைக் காக்கத் தேவரீர்
எனக்குப் பாராட்டின இரக்கம் பெரிது;
மலைக்கு ஓடிப்போக என்னால் முடியாது;
ஓடிப்போனால் எனக்குத் தீங்கு நேரிடும்,
நான் மரித்துப்போவேன். 20 அதோ, அங்கே
தெரிகிற ஊர் கிட்ட இருக்கிறது, அங்கே
நான் எளிதில் ஓடிப்போகலாம்; அந்த
ஊரும் சிறியது, என் பிராணன் பிழைக்க
நான் அங்கே ஓடிப்போகட்டும், அது
சின்ன ஊர்தானே என்றான். 21 அதற்கு
அவர்: இவ்விஷயத்திலும் உனக்கு அனுக்
கிரகம்பண்ணினேன். நீ கேட்டுக்கொண்ட
ஊரை நான் கவிழ்த்துப்போடேன். 22 அங்கே
விரைந்தோடித் தப்பித்துக்கொள்; நீ அங்கே
போய்ச் சேருமட்டும் நான் ஒன்றும் செய்ய
முடியாது என்றார். அதினால் அந்த ஊர்
சோவார் எனப்பட்டது.

23 பூமியின்மேல் சூரியன் உதிக்கவே
லோத்து சோவாருக்குள் வந்தான். 24 அப்
பொழுது யெகோவா சோதோமின் மேலும்
கொமோராவின்மேலும் வானத்திலிருந்து,
யெகோவாவினிடம் நின்றே, கந்தகத்தை
யும் அக்கினியையும்வருஷிக்கப்பண்ணி |
25 அந்தப் பட்டணங்களையும் அந்தச் சமபூமி
யனைத்தையும் அந்தப் பட்டணங்களின்
எல்லாக் குடிகளையும் நிலத்தின் பயிரையும்
அழித்துப்போட்டார். 26 லோத்தின் மனை

வந்த அவன் மனைவியோ பின்னிட்டுப்
27 பார்த்தாள், உப்புத்தூண் ஆனாள். விடி
யற்காலத்தில் ஆபிரகாம் எழுந்து தான்
யெகோவாவுக்கு முன்பாக நின்ற இடத்திற்
28 குப் போய்ச் | சோதோம் கொமோரா
பட்டணங்களின் திசையையும் சமபூமியா
கிய தேசம் முழுவதையும் நோக்கிப் பார்த்
தான்; அந்தப் பூமியின் புகை சூளையின்
புகையைப்போல எழும்பிற்று.
29 கடவுள் அந்தச் சமபூமியின் பட்டணங்
களை அழிக்கும்போது கடவுள் ஆபிரகாமை
நினைத்து லோத்து குடியிருந்த பட்டணங்
களைத் தாம் கவிழ்த்துப்போடுகையில்
லோத்தை அந்த அழிவின் நடுவிலிருந்து
தப்பிப்போகும்படி அனுப்பிவிட்டார்.
30 பின்பு லோத்து சோவாரிலே குடியிருக்
கப் பயந்து சோவாரை விட்டுப்போய் அவ
னும் அவனுடைய இரண்டு குமாரத்திகளும் மலையிலே வாசம்
பண்ணினார்கள்; அங்கே அவன் தன்
இரண்டு குமாரத்திகளோடுங்கூட ஒரு
31 குகையிலே குடியிருந்தான். அப்பொழுது
மூத்தவள் இளையவளைப் பார்த்து: நமது
தகப்பன் முதிர்வயதானார், பூமியெங்கும்
நடக்கிற முறைமையின்படியே நம்மோடு
சேரப் பூமியிலே ஒரு புருஷனுமில்லை.
32 நம்முடைய தகப்பனால் சந்ததி உண்டாகும்
படி அவருக்கு மதுவைக் குடிக்கக்
கொடுத்து அவரோடு சயனிப்போம் வா
33 என்றாள். அப்படியே அன்று இரவிலே
தங்கள் தகப்பனுக்கு மதுவைக் குடிக்கக்
கொடுத்தார்கள். மூத்தவள் போய்த் தன்
தகப்பனோடு சயனித்தாள்; அவள் சயனித்த
தையும் எழுந்திருந்ததையும் அவன் உணரா
34 திருந்தான். மறுநாளிலே மூத்தவள் இளைய
வளைப்பார்த்து: நேற்று ராத்திரி நான் தகப்ப
னோடே சயனித்தேன்; இன்று ராத்திரியும்
மதுவைக் குடிக்கக் கொடுப்போம்;
நம்முடைய தகப்பனால் சந்ததி உண்டா
கும்படி நீ போய் அவரோடு சயனி
35 என்றாள். அப்படியே அன்று ராத்திரி
யிலும் தங்கள் தகப்பனுக்கு மதுவைக்
குடிக்கக் கொடுத்தார்கள். அப்பொழுது
இளையவள் எழுந்துபோய் அவனோடே
சயனித்தாள்; அவள் சயனித்ததையும்
எழுந்திருந்ததையும் அவன் உணரா
36 திருந்தான். இவ்விதமாய் லோத்தின்
குமாரத்திகள் இருவரும் தங்கள் தகப்ப
37 னாலே கர்ப்பவதியானார்கள். மூத்தவள்
ஒரு குமாரனைப்பெற்று அவனுக்கு
மோவாப் என்று பேரிட்டாள்; இந்நாள்
வரைக்கும் இருக்கிற மோவாபியரின் தகப்
பன் அவனே. இளையவளும் ஒரு குமார 38
னைப்பெற்று அவனுக்குப் பென்னம்மி
என்று பேரிட்டாள்; இக்காள்வரைக்கு
மிருக்கிற அம்மோன் புத்திரரின் தகப்பன்
அவனே.

ஆபிரகாம் அவ்விடம்விட்டுத் தென்னாட் **20**
டிற்குப் பிரயாணமாகிக் காதேசுக்கும் சூருக்
கும் நடுவாகக் குடியேறிக் கேராரிலே தங்
கினான். அங்கே ஆபிரகாம் தன் மனைவி 2
யாகிய சாராளைத் தன் சகோதரி என்று
சொன்னதினாலே கேராரின் ராஜாவாகிய
அபிமேலேக்கு ஆள் அனுப்பிச் சாராளை
அழைப்பித்தான். கடவுள் இரவிலே அபி 3
மேலேக்குக்குச் சொப்பனத்திலே தோன்றி:
நீ அந்த ஸ்திரீயை அழைப்பித்துக்கொண்ட
படியினால் சாவுக்குள்ளானாய்; அவள் ஒரு
வனுடைய மனைவி என்றார். அபிமேலேக்கு 4
அவளைச் சேராதிருந்தான். ஆகவே அவன்:
சுவாமீ, நீதியுள்ள ஜனங்களையும் அழிப்பீ
ரோ? இவள் தன் சகோதரி என்று அவன் 5
என்னிடஞ் சொல்லவில்லையா? அவன் தன்
சகோதரன் என்று இவளும் சொன்னாளே;
குற்றமற்ற இருதயத்தோடும் சுத்தமான கை
களோடும் இதைச் செய்தேன் என்று
சொன்னான். சொல்லவே, கடவுள் சொப் 6
பனத்தில் அவனிடம்: குற்றமற்ற இருதயத்
தோடே நீ இதைச் செய்தாயென்பது எனக்
குத் தெரியும்; நீ எனக்கு விரோதமாகப்
பாவம் செய்யாதபடி நானும் உன்னைத்
தடுத்தேன்; ஆகவே நீ அவளை ஸ்பரிசிக்க
நான் உனக்கு இடங்கொடுக்கவில்லை. இப் 7
போதும் அந்த மனுஷனின் மனைவியை
அவனிடம் அனுப்பிவிடு; அவன் ஒரு
தீர்க்கதரிசி; அவன் உனக்காக வேண்டுதல்
செய்தால் நீ பிழைப்பாய்; நீ அவளை
அனுப்பிவிடாதிருந்தால் நீயும் உன்னைச்
சேர்ந்த யாவரும் சாகவே சாவீர்கள் என்று
அறிவாயாக என்று சொன்னார். அபிமே 8
லேக்கு அதிகாலையிலெழுந்து தன் ஊழியக்
காரரையெல்லாம் அழைப்பித்து இந்தச்
சங்கதிகளையெல்லாம் அவர்கள் கேட்கும்
படி சொன்னான்: அதைக் கேட்கவே, அந்த
மனுஷர் மிகவும் பயந்தார்கள். அப்பொ 9
ழுது அபிமேலேக்கு ஆபிரகாமை யழைப்
பித்து: நீ எங்களுக்கு இந்தக் காரியத்தைச்
செய்ததென்ன? நீ என் மேலும் என் ராஜ்
யத்தின்மேலும் கொடிய பாவம் சுமரப்பண்
ணுவதற்கு நான் உனக்குச்செய்த குற்ற
மென்ன? செய்யத்தகாதவற்றை என்னிடஞ்
செய்தாயே என்றார். பின்னும் அபிமே 10
லேக்கு ஆபிரகாமைப் பார்த்து: நீ இந்தக்
காரியத்தைச் செய்ததற்கு முகாந்தரமென்ன

11 என்று கேட்க, ஆபிரகாம்: இவ்விடத்தில் தெய்வபயமில்லையென்றும் என் மனைவியி
னிமித்தம் என்னைக் கொன்றுபோடுவார்கள்
12 என்றும் நான் நினைத்தேன். மேலும் அவள் என் சகோதரி என்பதும் பொய்யல்ல; அவள் என் தகப்பனுக்குக் குமாரத்தி, என் தாய்க்குக் குமாரத்தியல்ல, அவள் எனக்கு
13 மனைவியானாள். என் தகப்பன் வீட்டை விட்டு என்னைத் தேசாந்தரியாய்த் திரியும் படி கடவுள் செய்தபோது நான் அவளிடம்: நாம் போகுமிடமெல்லாம் நீ என்னைச் சகோதரனென்று சொல்வது நீ எனக்குச் செய்யவேண்டிய தயை என்று சொல்லி
14 யிருந்தேன் என்றான். அப்பொழுது அபிமேலேக்கு ஆடுமாடுகளையும் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் ஆபிரகாமுக்குக் கொடுத்து அவன் மனைவி சாராளையும் அவ
15 னிடம் திரும்ப ஒப்புவித்தான். பின்னும் அபிமேலேக்கு: இதோ, என்தேசம் உனக்கு முன்பாக இருக்கிறது; உனக்கு இஷ்டமான இடத்திலே குடியிரு என்று சொன்
16 னான். பின்பு சாராளைப்பார்த்து: இதோ, உன் சகோதரனுக்கு ஆயிரம் வெள்ளிக்காசு கொடுத்தேன்; உன்னோடிருக்கிற எல்லார் முன்பாகவும் இது உனக்கு நேர்ந்தவைகளை மறைக்கும் ஈடாகும்; யாவருக்குமுன்பாகவும் நீ குற்றமற்றவளாகத் தீர்க்கப்பட்டாய்
17 என்றான். ஆபிரகாமுடைய மனைவியாகிய சாராளின் நிமித்தம் யெகோவா அபிமேலேக்குடைய வீட்டாரின் கர்ப்பங்களையெல்
18 லாம் அடைத்திருந்தார். ஆபிரகாம் கடவுளை நோக்கி வேண்டுதல் செய்யவே கடவுள் அபிமேலேக்கையும் அவன் மனைவியையும் அவன் வேலைக்காரிகளையும் குணமாக்கிப் பிள்ளை பெறும்படி அனுக்கிரகஞ் செய்தார்.

**21** யெகோவா முன் சொல்லியிருந்தபடியே சாராள்பேரில் கடாட்சமானார்; தாம் உரைத்தபடியே யெகோவா சாராளுக்குச்
2 செய்தருளினார். ஆபிரகாம் முதிர்வயதாயிருக்கையில் சாராள் கர்ப்பவதியாகிக் கடவுள் குறித்திருந்த காலத்திலே அவனுக்கு
3 ஒரு குமாரனைப் பெற்றாள். ஆபிரகாம் தனக்குச் சாராள் பெற்ற குமாரனுக்கு
4 ஈசாக்கு என்று பேரிட்டான். தன் குமாரனாகிய ஈசாக்கு பிறந்த எட்டாம் நாளிலே ஆபிரகாம் தனக்குக் கடவுள் கட்டளையிட்டிருந்தபடி அவனுக்கு விருத்தசேதனம்
5 பண்ணினான். தன் குமாரனாகிய ஈசாக்கு பிறந்தபோது ஆபிரகாமுக்கு நூறு வயது.
6 சாராள்: கடவுள் எனக்கு நிரப்பாசஞ் செய்தார்; இதைக் கேட்கிறவரும் என்
னைப் பார்த்துச் சிரிப்பார்கள். சாராள் 7
பிள்ளைக்குப் பால் கொடுப்பாள் என்று ஆபிரகாமுக்கு எவன் சொல்லியிருப்பான்? அவருடைய முதிர்வயதிலே அவருக்கு ஒரு குமாரனைப் பெற்றேனே என்றாள்.

பிள்ளை வளர்ந்து பால் மறந்தது; ஈசாக்கு 8
பால்குடி மறந்தநாளிலே ஆபிரகாம் பெரிய விருந்து பண்ணினான். அச்சமயம் 9
எகிப்து தேசத்தாளாகிய ஆகார் ஆபிரகாமுக்குப் பெற்ற குமாரன் சிரித்து விளையாடுகிறதைச் சாராள் கண்டு | ஆபிரகாமைப் 10
பார்த்து: இந்த அடிமைப்பெண்ணையும் அவள் மகனையும் துரத்திவிடும்; இந்த அடிமைப்பெண்ணின் மகன் என் குமாரனாகிய ஈசாக்கோடு சுதந்தரவாளியாவதேயில்லை என்றாள். சாராள் சொன்னதைக் கேட்க 11
வே மகனினிமித்தம் ஆபிரகாமுக்கு மனவருத்தம் உண்டானது. கடவுளோ ஆபிர 12
காமினிடம்: அந்தப் பிள்ளையின்பொருட்டும் உன் அடிமைப்பெண்ணின் பொருட்டும் நீ வருத்தப்படவேண்டாம்; சாராள் உனக்குச் சொல்வதையெல்லாம் கேள்; ஈசாக்கினிடமே உன் சந்ததி விளங்கும்; அடிமைப்பெண்ணின் மகனையும் ஒரு ஜனமாக்குவேன், அவனும் உன் சந்ததியே என்றார்.

ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து ஆகார் 14
மும் ஒரு தருத்தித் தண்ணீரும் எடுத்து ஆகாரிடங் கொடுத்து அவள் தோளின்மேல் வைத்துப பிள்ளையையும் ஒப்புக்கொடுத்து அவளை அனுப்பிவிட்டான்; அவள் புறப்பட்டுப்போய்ப் பெயர்ஷெபாவின் வனாந்தரத்திலே அலைந்து திரிந்தாள். தருத்தியிலி 15
ருந்த தண்ணீர் செலவழியவே அவள் பிள்ளையை ஒரு செடியின் கீழே விட்டுப் | பிள்ளை சாகிறதை நான் பார்க்கச் சகியே 16
னென்று போய் அம்பு பாயும் தூரத்தில் எதிரே உட்கார்ந்தாள், உட்கார்ந்தவள் சத்தமிட்டு அழுதாள். கடவுள் பிள்ளையின் 17
சத்தத்தைக் கேட்டார்; கடவுளின் தூதன் வானத்திலிருந்து ஆகாரைக் கூப்பிட்டு: ஆகாரே, உனக்கு நேரிட்ட குறை என்ன? பயப்படாதே, பிள்ளையிருக்கும் இடத்திலே கடவுள் அவன் சத்தத்தைக் கேட்டார். நீ 18
எழுந்து பிள்ளையை எடுத்து அவனை உன் கையில் பிடித்துக்கொண்டுபோ, அவனைப் பெரிய ஜனமாக்குவேன் என்றான். கடவுள் 19
அவளுடைய கண்களைத் திறந்தார்; திறக்கவே அவள் ஒரு தண்ணீருள்ள தரவைக் கண்டு போய்த் தருத்தியிலே தண்ணீர் நிரப்பிப் பிள்ளைக்குக் குடிக்கக் கொடுத்தாள்.
கடவுள் பிள்ளையோடிருந்தார்; அவன் 20

வளர்ந்து வனாந்தரத்திலே குடியிருந்தான்.
அவன் வளர்வளர வில்வித்தையிலும் தேர்ந்
21 தான். அவன் பாரான் வனாந்தரத்திலே
குடியிருக்கையில் அவனுடைய தாய் எகிப்
ததேசத்துப் பெண் ஒருத்தியை அவனுக்கு
விவாகம் பண்ணுவித்தாள்.
22 அக்காலத்தில் அபிமேலேக்கும் அவன்
சேனாபதியாகிய பிகோலும் ஆபிரகாமினி
டம் வந்து: நீர் செய்கிற காரியங்கள் எல்
லாவற்றிலும் கடவுள் உம்மோடிருக்கிறார்.
23 ஆகையால் நீர் எனக்கு ஒரு வாக்குக்
கொடுக்கவேண்டும். நீர் எனக்காவது என்
குமாரன், பேரன் முதலியவர்களுக்காவது
வஞ்சனை செய்யாமல் நான் உமக்குக் காட்
டிய தயவின்படியே நீர் எனக்கும் நீர் தங்கி
யிருக்கிற இந்தத் தேசத்திற்கும் தயவு காட்
டுவேனென்று இவ்விடத்திலேயே கடவுள்
பேரில் எனக்கு ஆணையிடுமென்று கேட்க
24 வே, ஆபிரகாம், ஆணையிட்டுக் கொடுக்கி
25 றேன் என்றான். அபிமேலேக்கின் வேலைக்
காரர் அபகரித்துக்கொண்ட இணற்றினி
மித்தம் ஆபிரகாம் அபிமேலேக்கைக் கடிந்
26 துபேசினான். அபிமேலேக்கோ: இந்தக்
காரியத்தைச் செய்தவன் இன்னனென்று
எனக்குத் தெரியாது, நீரும் எனக்கு அறி
வித்ததுமில்லை; இன்றுவரையில் அதைப்
பற்றி நான் கேள்விப்பட்டதுமில்லை என்
27 றான். அப்பொழுது ஆபிரகாம் ஆடுமாடு
களைக் கொண்டுவந்து அபிமேலேக்குக்குக்
கொடுத்தான்; அவர்கள் இருவரும் உடன்
28 படிக்கை செய்துகொண்டார்கள். ஆபிர
காம் ஏழு பெண்ணாட்டுக்குட்டிகளைத் தனி
29 யே நிறுத்தினான். அபிமேலேக்கு ஆபிர
காமினிடம்: நீர் தனியே நிறுத்தின இந்த
ஏழு பெண்ணாட்டுக்குட்டிகள் என்னத்
30 திற்கு என்று கேட்டான். அதற்கு அவன்:
இக்கக் கிணற்றை வெட்டினவன் நானே
என்பதற்குச் சாட்சியாக இந்த ஏழு பெண்
ணாட்டுக்குட்டிகளையும் நீர் என் கையில்
வாங்கிக்கொள்ளவேண்டும் என்றான்.
31 அவர்கள் இருவரும் அவ்விடத்தில் ஆணை
யிட்டுக் கொண்டபடியால் அந்த இடம்
32 பெயேர்செபா எனப்பட்டது. அவர்கள்
பெயேர்செபாவிலே உடன்படிக்கை செய்
துகொண்டபின் அபிமேலேக்கும் அவன்
சேனாபதியாகிய பிகோலும் எழுந்து பெலிஸ்
தியருடைய தேசத்திற்குத் திரும்பிப் போ
னார்கள்.
33 ஆபிரகாம் பெயேர்செபாவிலே ஒரு
விருக்ஷத்தை நட்டு நித்திய கடவுளாகிய
யெகோவாவின் நாமத்தை அவ்விடத்
54 திலே தொழுதுகொண்டான். ஆபிரகாம்
பெலிஸ்தியரின் தேசத்தில் கெடுகாள் தங்கி
யிருந்தான்.

22 இவற்றின்பின் கடவுள் ஆபிரகாமைச்
சோதித்துப்பார்க்க அவனிடம்: ஆபிரகாமே
என்றார். அவன்: இதோ, அடியேன் என்
2 றான். அப்பொழுது அவர், உன் புத்திரன்
ஈசாக்கை, உன் ஏக சுதனை நேசகுமாரன்
ஈசாக்கை, நீ இப்பொழுது கூட்டிக்
கொண்டு மோரியா நாட்டுக்குப்போய் அங்
குள்ள மலைகளில் நான் உனக்குக் குறிக்கும்
ஒன்றின்மேல் அவனைத் தகனபலியிடு என்
3 றார். அப்படியே ஆபிரகாம் அதிகாலையி
லெழுந்து தன் கழுதையின்மேல் சேணங்
கட்டித் தன் வேலைக்காரரில் இருவரையும்
தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக்
கொண்டு தகனபலிக்கு வேண்டிய கட்டை
களையும் பிளந்துகொண்டு கடவுள் குறித்த
4 இடத்திற்குப் புறப்பட்டுப்போனான். மூன்
றாம் நாளில் ஆபிரகாம் தன் கண்களை
ஏறெடுத்துப் பார்க்கும்போது தூரத்திலே
5 அந்த இடம் தெரிந்தது. தெரியவே ஆபிர
காம் தன் வேலைக்காரரிடம்: நீங்கள் கழு
தையை நிறுத்திக்கொண்டு இங்கே காத்தி
ருங்கள், நானும் பிள்ளையாண்டானும் அவ்
விடமட்டும் போய்த் தொழுதுகொண்டு
பின் உங்களிடத்திற்குத் திரும்பி வருவோம்
6 என்றான். ஆபிரகாம் தகனபலிக்கு வேண்
டிய கட்டைகளை எடுத்துத் தன் குமாரன்
ஈசாக்கின்மேல் வைத்துத் தன் கையிலே
நெருப்பையும் கத்தியையும் எடுத்துக்
கொண்டான்; இருவரும் ஒன்றாய்ப்போனார்
7 கள். போகும் வழியில் ஈசாக்கு தன் தகப்
பனாகிய ஆபிரகாமைப் பார்த்து: அப்பா
என, அவன்: என் மகனே, இதோ, இருக்
கிறேன் என்றான். அப்பொழுது அவன்:
இதோ, நெருப்பும் கட்டையுமிருக்கிறது,
தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்
8 றான். ஆபிரகாம்: என் மகனே, தமக்குத்
தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைக் கடவு
ளே பார்த்துக்கொள்வார் என்றான். அப்
புறம் இருவரும் ஒன்றாகவே நடந்துபோ
9 னார்கள். கடவுள் ஆபிரகாமுக்குச் சொல்
லியிருந்த இடம் வந்து சேரவே அவன்
ஒரு பலிபீடத்தை யமைத்துக் கட்டைகளை
அடுக்கித் தன் குமாரன் ஈசாக்கைக் கட்டி
அந்தப் பலிபீடத்தில் அடுக்கிய கட்டை
10 களின்மேல் கிடத்தினான். பின்பு ஆபிரகாம்
தன் குமாரனை வெட்டும்படி தன் கையை
நீட்டிக் கத்தியை எடுத்தான். 11 எடுக்கவே
யெகோவாவின் தூதனானவர் வானத்திலி
ருந்து: ஆபிரகாமே, ஆபிரகாமே என்று
கூப்பிட்டார்; அவன்: இதோ, அடியேன்

12 என்றான். அவர்: பிள்ளையாண்டான்மேல் உன் கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே; நீ அவனை உன் புத்திரன் என்றும் உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்ததினால் நீ கடவுளுக்குப் பயப்படுகிறவன் என்று இப்
13 பொழுது அறிந்திருக்கிறேன் என்றார். ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, பின்னுகப் புதரிலே தன் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டான்; கண்டு, ஆபிரகாம் போய்க் கடாவைப் பிடித்து அதைத் தன் குமாரனுக்குப் பதிலாகத் தகனபலியிட்
14 டான். ஆபிரகாம் அந்த இடத்துக்கு யேகோவாயீரே என்று பேரிட்டான்; அதினாலே யெகோவாவின் பர்வதத்திலே பார்த்துக் கொள்ளப்படும் என்று இந்நாள்வரைக்கும்
15 சொல்லப்பட்டு வருகிறது. யெகோவாவின் தூதனுவர் இரண்டாந்தரம் வானத்தி
16 லிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டு: நீ உன் புத்திரன் என்றும் உன் ஏகசுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக்
17 காரியத்தைச் செய்தபடியால் | நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும் உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்
18 என்றும் | நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் உன் சந்ததியின் ஆசீர்வாதத்தைச் சொல்லித் தங்களை ஆசீர்வதித்துக்கொள்வார்கள் என்றும் என்பேரில் ஆணையிட்டேன்; இது தெய்வத்திருவாக்கு என்றார்.
19 அப்பால் ஆபிரகாம் தன் வேலைக்காரரிடத்திற்குத் திரும்பி வந்தான்; அவர்களும் எழுந்து ஒன்றாய்ப் பெயேர்ஷெபாவுக்குப் போனார்கள்; ஆபிரகாம் பெயேர்ஷெபாவிலே குடியிருந்தான்.
20 இவற்றின்பின் ஒருவன் ஆபிரகாமிடம் வந்து: இதோ மில்க்காளும் உன் சகோதரனுகிய நாகோருக்குப் பிள்ளைகளைப்பெற்
21 றாள் என்று அறிவித்தான். அவர்கள், மூதற்பேறான ஊத்ஸ், அவன் தம்பி பூஸ், ஆராமுக்குத் தகப்பனான கேமுவேல்,
22 கேசேத், ஆசோ, பில்தாஸ், இத்லாப், பெத்தூவேல் என்பவர்கள்; பெத்தூவேல் ரெ
23 பெக்காளைப் பெற்றான். அந்த எட்டுப் பேரை மில்க்காள் ஆபிரகாமுடைய சகோ
24 தரனுகிய நாகோருக்குப் பெற்றாள். ரேயுமாள் என்று பேர்கொண்ட அவனுடைய வைப்பாட்டியும் தேபாகு, காகாம், தாகாஷ், மாகா என்பவர்களைப் பெற்றாள்.

சாராள் நூற்று இருபத்தேழுவருஷம் 23
உயிரோடிருந்தாள்; இது சாராளுடைய
வயது. கானான் தேசத்திலுள்ள எப்பெ 2
ரோன் என்னும் கீரியாத் அர்பாவிலே
சாராள் மரித்தாள்; அப்பொழுது ஆபிர
காம் போய்ச் சாராளினிமித்தம் அழுகை
யோடு துக்கங்கொண்டாடினான். பின்பு 3
ஆபிரகாம் பிரேதமிருந்த இடத்தைவிட்டு
எழுந்துபோய் ஏத்தின் புத்திரரோடே பேசி:
நான் உங்கள் நடுவில் அந்நியனும் பரதேசி 4
யுமாய்க் குடியிருக்கிறேன்; என்னிடத்தி
லிருக்கிற இந்தப் பிரேதத்தை எடுத்துப்
போய் அதை அடக்கம்பண்ணுவதற்குச்
சொந்தமாக ஒரு கல்லறைப் பூமியை நீங்
கள் எனக்குத் தரவேண்டும் என்றான்.
அதற்கு ஏத்தின் புத்திரர் ஆபிரகாமினிடம்: 5
ஐயனே, நாங்கள் சொல்வதைக் கேளும்; 6
எங்களுக்குள்ளே நீர் மகா பிரபு; எங்கள்
கல்லறைகளில் முக்கியமானதிலே பிரேதத்
தை அடக்கம் பண்ணும்; நீர் பிரேதத்தை
அடக்கம்பண்ண எங்களில் ஒருவனும்
தன் கல்லறையை உமக்குத் தடைசெய்வ
தில்லை என்றார்கள். அப்பொழுது ஆபிர 7
காம் எழுந்திருந்து ஏத்தின் புத்திரராகிய
அத்தேசத்தாருக்கு வந்தனஞ் செய்து |
அவர்களோடு பேசி: என்னிடத்திலிருக்கிற 8
பிரேதத்தை நான் எடுத்துப்போய் அடக்
கம்பண்ணுவது உங்களுக்குச் சம்மதியானால்
நீங்கள் என் வார்த்தையைக்கேட்டுச் சோ
காருடைய குமாரனுகிய எப்ரோன் | தன் 9
நிலத்தின் கடைசியிலிருக்கிற மக்பேலாவின்
குகையை எனக்குச் சொந்தக் கல்லறைப்
பூமியாகத் தரவேண்டுமென்று என் பொ
ருட்டு அவரைக் கேட்டுக்கொள்ளுங்கள்;
அது பெறுமான விலைக்கு அவர் அதை உங்
கள் முன்னிலையில் எனக்குத் தருவாராக
என்றான்.
எப்ரோன் ஏத்தின் புத்திரர் நடுவிலே 10
உட்கார்ந்திருந்தான்; அப்பொழுது ஏத்திய
னுகிய எப்ரோன் தன் ஊர்வாசிகளான ஏத்
தின் புத்திரர் அனைவரும் கேட்க ஆபிரகா
மைப்பார்த்து: அப்படியல்ல, ஐயனே, நான் 11
சொல்வதைக்கேளும்; அந்த நிலத்தையும்
அதிலிருக்கும் குகையையும் உமக்குத் தரு
கிறேன், உமக்குத் தந்துவிடுகிறேன், என்
னினத்தார் எல்லாரும் பார்க்க அதை உமக்
குத் தருகிறேன், உம்மிடத்திலிருக்கிற பிரே
தத்தை அடக்கம்பண்ணும் என்றான்.
அதைக் கேட்கவே ஆபிரகாம் அத்தேசத் 12
தாருக்கு வந்தனஞ்செய்து | தேசத்து ஜனங் 13

கள் கேட்க எப்ரோனைப்பார்த்து: நீர் தயை செய்து என் வார்த்தையைக்கேளும்; நிலத்தின் விலையைத் தருகிறேன்; என் கையிலிருந்து அதை வாங்கிக்கொள்ளும்; என்னிடத்திலிருக்கிற பிரேதத்தை அங்கே அடக்கம்பண்ணுவேன் என்றான். அதற்கு எப்ரோன் ஆபிரகாமினிடம்: ஐயனே, நான் சொல்வதைக்கேளும்; அந்த நிலம் நானூறு சேக்கல் வெள்ளி பெறும்; எனக்கும் உமக்கும் அது பெரிய காரியமா? உம்மிடத்திலிருக்கிற பிரேதத்தை அடக்கம்பண்ணும் என்றான். ஆபிரகாம் எப்ரோன் சொல்வதையறிந்துகொண்டு ஏத்தின் புத்திரருக்கு முன்பாக அவன் சொன்னபடியே வர்த்தக ரிடத்தில் செல்லும்படியான நானூறு சேக்கல் வெள்ளியை அவனுக்கு நிறுத்துக்கொடுத்தான். இப்படியாக மம்ரேக்கு எதிரே மக்பேலாவிலுள்ள எப்ரோனுடைய நிலம், அந்த நிலமும் அதிலுள்ள குகையும் நிலத்தின் எல்லையெங்கும் சூழ்ந்திருக்கிற மரங்கள் அடங்கலும் | ஏத்தின் புத்திரர் முன்னிலையில் எப்ரோனின் ஊராரான அனைவரும் பார்க்க ஆபிரகாமுக்குச் சொந்தமாக உறுதிப்படுத்தப்பட்டது, அதற்குப்பின் ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராளைக் கானான் தேசத்தில் எப்ரோன் என்னும் மம்ரேக்கு எதிரே இருக்கிற மக்பேலா நிலத்தின் குகையிலே அடக்கம்பண்ணினான். இப்படியாக அந்த நிலமும் அதிலுள்ள குகையும் ஏத்தின் புத்திரரால் ஆபிரகாமுக்குச் சொந்தக் கல்லறைப்பூமியாக உறுதிப்படுத்தப்பட்டது.

**24** ஆபிரகாம் வயதுசென்று முதிர்ந்தவனானான். யெகோவா ஆபிரகாமைச் சகல காரியங்களிலும் ஆசீர்வதித்திருந்தார். இப்படியிருக்கையில் ஆபிரகாம் தன் வீட்டிலுள்ள ஊழியக்காரர் அனைவரிலும் வயதில் மூத்தவனும் தனக்குண்டான எல்லாவற்றிற்கும் அதிகாரியுமாகிய ஊழியக்காரனைப்பார்த்து: நான் குடியிருக்கிற கானான் தேசத்தாரின் குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண்கொள்ளாமல், நீ என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்திற்கும்போய் என் குமாரனாகிய ஈசாக்குக்குப் பெண் கொள்வதாய் வானலோக கர்த்தாவும் பூலோக கர்த்தாவுமாகிய யெகோவாவின்பேரில் எனக்கு ஆணையிட்டுக்கொடுக்கும்படி நீ உன் கையை என் இடுப்பின்கீழ் வை என்றான். அதைக்கேட்ட அந்த ஊழியக்காரன்: அந்தப் பெண் என்னோடி இந்தத் தேசத்திற்கு வர மனதற்றிருந்தால் நீர் விட்டுவந்த தேசத்திற்குத்தானே உமது குமாரனைத் திரும்ப அழைத்துப் போகவேண்டுமோ என்று கேட்டான். அதற்கு ஆபிரகாம்: நீ என் குமாரனை அங்கே திரும்ப அழைத்துக்கொண்டுபோகவே வேண்டாம். என் தகப்பன் வீட்டிலும் என் சொந்த தேசத்திலுமிருந்து என்னை அழைத்துவந்தவரும், உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைத் தருவேனென்று சொல்லி எனக்கு ஆணையிட்டவருமான வானலோக கர்த்தாவாகிய யெகோவா, நீ அங்கிருந்து என் குமாரனுக்கு ஒரு பெண்ணைக் கொண்டுவரும்படி தமது தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார். பெண் உன்னோடிவர மனதற்றிருந்தாளாகில் நீ எனக்கு இட்ட இந்த ஆணைக்கு நீங்கலாயிருப்பாய்; இதை மாத்திரம் பார்த்துக்கொள், என் குமாரனைத் திரும்ப அழைத்துக்கொண்டு போகவே வேண்டாம் என்றான். அப்பொழுது அந்த ஊழியக்காரன் தன் கையைத் தன் எஜமானாகிய ஆபிரகாமுடைய இடுப்பின்கீழ் வைத்து இந்தக் காரியத்தைப்பற்றி அவனுக்கு ஆணையிட்டுக் கொடுத்தான்.

அந்த ஊழியக்காரன் தன் எஜமானுடைய ஒட்டகங்களில் பத்து ஒட்டகங்களைக் கொண்டுவந்து தன் எஜமானுடைய சகலவித உசிதமான பொருட்களையும் தன் வசம் வைத்துக்கொண்டு புறப்பட்டு மெசொப்பொத்தாமியாவுக்கு நாகோரின் ஊரை நோக்கிச் சென்றான். அந்த ஊர்ப்புறத்தில் சேரவே தண்ணீருள்ள ஒரு கிணற்றண்டையில் ஸ்திரீகள் தண்ணீர் மொள்ளப் போகிற சாயங்கால வேளையிலே ஒட்டகங்களை மடக்கித் தனக்குள்ளே: என் எஜமானனாகிய ஆபிரகாமின் கடவுளாகிய யெகோவாவே, இன்றைக்கு நீர் எனக்குக் காரியம் வாய்க்கப்பண்ணி என் எஜமானுகிய ஆபிரகாமுக்குத் தயை செய்தருளும். இதோ, நான் இந்தத் துரவண்டையிலே நிற்கிறேன், இந்த ஊர்ப்பெண்கள் தண்ணீர் மொள்ளப் புறப்பட்டு வருவார்கள். நான் குடிக்க உன் குடத்தைச் சாய்க்கவேண்டுமென்று நான் சொல்லும்போது, குடி என்றும் உன் ஒட்டகங்களும் குடிக்கும்படி வார்ப்பேனென்றும் சொல்லும் பெண் எவளோ அவளே நீர் உமது ஊழியக்காரனுகிய ஈசாக்குக்கு நியமித்தவளாயிருக்க அருள்புரியும். என் எஜமானுக்கு அதுக்கிரசம் செய்தீர் என்று நான் அதினுலேயே அறிவேன் என்று சொல்லிக்கொண்டான்.

அவன் இப்படிச் சொல்லி முடிக்குமுன்னே, இதோ, ரெபெக்காள் குடத்தைத் தோள்மேல் வைத்துக்கொண்டு வந்தாள்.

இவள் பெத்தூவேலின் குமாரத்தி; இந்தப் பெத்தூவேல் ஆபிரகாமின் சகோதரனுகிய நாகோருக்கு மில்க்காளிடம் பிறந்தவன்.
16 ரெபெக்காள் மகாரூபவதி, புருஷனே அறியாத கன்னிகை; இவள் துரவில் இறங்கித் தன் குடத்தை நிரப்பிக்கொண்டு ஏறிவந்
17 தாள். ஏறிவரவே அந்த ஊழியக்காரன் அவளுக்கு எதிரே ஓடி: உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் குடிக்கத் தரு
18 வாயா என்றான். அவள், குடியும் ஐயா என்று சீக்கிரமாய்க் குடத்தைத் தன் கையில் இறக்கிக்கொண்டு அவனுக்குக் குடிக்
19 கக் கொடுத்தாள். கொடுத்தபின் உமது ஒட்டகங்களும் குடித்துத் தீருமட்டும் அவைகளுக்கும் மொண்டு வார்ப்பே
20 னென்று சொல்லிச் | சீக்கிரமாய்த் தன் குடத்துத் தண்ணீரைத் தொட்டியிலே ஊற்றிவிட்டு விரைந்து கிணற்றிலிறங்கி மொண்டு மொண்டு அவன் ஒட்டகங்களுக்கெல்லாம்
21 வார்த்தாள். அந்த மனிதன், யெகோவா தன் பிரயாணத்தை வாய்க்கப்பண்ணினாரோ இல்லையோ என்று அறியவேண்டி மெனப் பார்த்துக்கொண்டே மவுனமாயிருக்
22 தான். ஒட்டகங்கள் குடித்துத் தீர்ந்தபின் அந்த மனிதன் அரைச்சேக்கல் எடையுள்ள மூக்குத்தியையும் அவள் கைகளுக்குப் பத்துச்சேக்கல் எடையுள்ள இரண்டு பொற்கடகங்களையும் எடுத்துக்கொடுத்து:
23 நீ யாருடைய மகள், எனக்குச்சொல்; நாங்கள் உன் தகப்பன்வீட்டில் இராத்தங்க
24 இடமுண்டா என்றான். அதற்கு அவள்: நான் நாகோருக்கு மில்க்காள் பெற்ற குமாரனுகிய பெத்தூவேலின் மகள் என்று
25 சொன்னதுமன்றி | எங்களிடத்தில் வைக்கோலும் தீவனமும் வேண்டியமட்டுமிருக்கிறது; இராத்தங்க இடமுமுண்டு என்றாள்.
26 அதைக்கேட்டபோது அந்த மனிதன் குனிந்து யெகோவாவைப் பணிந்துகொண்
27 டு: என் எஜமானை ஆபிரகாமின் கடவுளாகிய யெகோவாவுக்கு ஸ்தோத்திரம்; அவர் என் எஜமானுக்குப் பாராட்டும் கிருபையையும் உண்மையையும் விலக்கிவிடவில்லே. என்னையும் என் பிரயாணத்தில் யெகோவா என் எஜமானின் சகோதரர் வீட்டுக்கு நடத்திக்கொண்டு வந்தாரே என்
28 றான். அந்தப் பெண் ஓடி இந்தக் காரியங்களைத் தன் தாயின் வீட்டிலுள்ளவர்களுக்கு அறிவித்தாள்.
29 ரெபெக்காளுக்கு ஒரு சகோதரனிருந்தான்; அவன் பேர் லாபான்; அந்த லாபான் வெளியே துரவண்டையிலிருந்த அந்த
30 மனிதனிடத்திற்கு ஓடினான். அவன் தன் சகோதரி தரித்திருந்த அந்த மூக்குத்தியையும் அவள் கைகளில் போட்டிருந்த கடகங்களையும் பார்த்து இன்ன இன்னபடி அந்த மனிதன் என்னோடே பேசினானென்று தன் சகோதரி ரெபெக்காள் சொன்ன வார்த்தைகளையும் கேட்டமாத்திரத்தில் அந்த மனிதனிடத்தில் வந்தான்; அவன் துரவு அருகே ஒட்டகங்கள் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தான். அவனைக் காணவே, லாபான்: 31
யெகோவாவின் ஆசீர்வாதத்தைப் பெற்றவரே, உள்ளே வாரும்; நீர் வெளியே நிற்பானேன்? உமக்கு வீடும் ஒட்டகங்களுக்கு இடமும் ஆயத்தம் பண்ணியிருக்கிறேன் என்றான்.

அப்பொழுது அவன் அந்த வீட்டுக்குப் 32
போய் ஒட்டகங்களைப் பாரமிறக்கி அவிழ்த்துவிட்டான்; லாபான் அவற்றுக்கு வைக்கோலும் தீவனமும் போட்டு அவனும் அவனோடு வந்தவர்களும் தங்கள் கால்களைக் கழுவிக்கொள்ளத் தண்ணீரும் கொடுத்தான். பின்பு அவனுக்குமுன் போஜனம் 33
வைக்கவே அவன்: நான் வந்த காரியத்தைச் சொல்லு முன்னே சாப்பிடமாட்டேன் என்றான். அதற்கு லாபான், சொல்லும் என்றான். அப்பொழுது அவன்: நான் 34
ஆபிரகாமின் ஊழியக்காரன். யெகோவா 35
என் எஜமானை மிகவும் ஆசீர்வதித்திருக்கிறார், அவர் சீமானுயிருக்கிறார்; யெகோவா அவருக்கு ஆடுமாடுகளையும் வெள்ளியையும் பொன்னையும் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் ஒட்டகங்களையும் கழுதைகளையும் கொடுத்திருக்கிறார். என் எஜ 36
மானுடைய மனைவியாகிய சாராள் முதிர் வயதானபோது என் எஜமானுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்; அவர் தமது ஆஸ்திகளையெல்லாம் அவனுக்குக் கொடுத்திருக்கிறார். என் எஜமான் என்னிடம்: நான் 37
குடியிருக்கிற கானுன்தேசத்தாருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண் கொள்ளாமல், என் தகப்பன் வீட்டுக்கும் 38
என் இனத்தாரிடத்திற்கும் போய் என் குமாரனுக்குப் பெண் கொள்ளவேண்டுமென்று ஆணையிட்டுக் கொடுக்கும்படி சொன்னார். அப்பொழுது நான் என் எஜ 39
மானைப்பார்த்து: ஒரு வேளை அந்தப்பெண் என் பின்னே வராதேபோனுலோ என்று கேட்டதற்கு | அவர்: நான் யெகோவாவின் 40
முன்னிலையில் நடக்கிறவன், அவரே உன்னோடே தமது தூதனையனுப்பி உன் பிரயாணத்தை வாய்க்கப்பண்ணுவார்; என் இனத்தாரிடத்திலும் என் தகப்பன் வீட்டிலும் நீ என் குமாரனுக்குப் பெண் கொள்ளவேண்

41 ரும். நீ என் இனத்தாரிடத்திற்குப் போனால் என்
ஆணைக்கு நீங்கலாயிருப்பாய்; அவர்கள் உனக்குப் பெண் கொடாமற்போனாலும் நீ என் ஆணைக்கு நீங்கலாயிருப்பாய்
42 என்றார். அப்படியே நான் இன்று தரவண்டியிலே வந்து: என் எஜமானுடைய ஆபிரகாமின் கடவுளாகிய யெகோவாவே, நான் வந்திருக்கிற பிரயாணத்தை நீர் இப்
43 பொழுது வாய்க்கச்செய்வீராக. இதோ, நான் தரவண்டியிலே நிற்கிறேன், தண்ணீர் மொள்ள வரப்போகிற கன்னிகையொருத்தியை நான் பார்த்து: உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் எனக்குக் குடிக்கத் தரவேண்டுமென்று கேட்கும்
44 போது, நீ குடி என்றும் உன் ஒட்டகங்களுக்கும் மொண்டு வார்ப்பேன் என்றும் சொல்லும் பெண் எவளோ அவளே யெகோவா என் எஜமானுடைய குமாரனுக்கு நியமித்த ஸ்திரீயாகும்படி செய்யும்
45 என்றேன். நான் இதை என் இருதயத்தில் சொல்லி முடிக்குமுன்னே, இதோ, ரெபெக்காள் தன் குடத்தைத் தோள்மேல் வைத்துக்கொண்டு வந்து தரவில் இறங்கிப் போய்த் தண்ணீர் மொண்டாள். அப்பொழுது நான் அவளிடம்: எனக்குக் குடிக்கத்
46 தரவேண்டும் என்று கேட்க | அவள் சீக்கிரமாய்த் தன் தோள்மேலிருந்த குடத்தை இறக்கி, குடியும், உமது ஒட்டகங்களுக்கும் வார்ப்பேன் என்றாள். நானும் குடித்
47 தேன், ஒட்டகங்களுக்கும் வார்த்தாள். அப்பொழுது: நீ யாருடைய மகள் என்று அவளைக் கேட்டேன்; அதற்கு அவள்: நான் மில்க்காள் நாகோருக்குப் பெற்ற குமாரனாகிய பெத்தூவேலின் மகள் என்றாள்; அப்பொழுது அவள் மூக்கிலே மூக்குத்தியையும் அவள் கைகளிலே கடகங்களையும்
48 போட்டுக் | குனிந்து யெகோவாவைப் பணிந்துகொண்டு நான் என் எஜமானுடைய சகோதரன் மகனின் குமாரத்தியை அவர் குமாரனுக்குக்கொள்ள என்னை நேர் வழியாய் நடத்திவந்த என் எஜமானுடைய ஆபிரகாமின் கடவுளான யெகோவாவை
49 ஸ்தோத்திரித்தேன். இப்பொழுதும் நீங்களும் என் எஜமானுக்குத் தயையும் உண்மையுமுடையவர்களாய் நடக்க மனதுள்ளவர்களானால் எனக்குச் சொல்லுங்கள்; இல்லையென்றால் அதையும் எனக்குச் சொல்லிவிடுங்கள், அப்பொழுது நான் வலதுபுறத்தையாகிலும் இடதுபுறத்தையாகிலும் நோக்கிப் போவேன் என்றார்.
50 அதைக்கேட்ட லாபானும் பெத்தூவேலும்: இந்தக் காரியம் யெகோவாவினால் வந்தது, உமக்கு நாங்கள் நலம் பொலம் ஒன்றும் சொல்ல இடமில்லை. இதோ, 51
ரெபெக்காள் உமக்கு முன்பாக இருக்கிறாள்; யெகோவா சொன்னபடியே அவள் உமது எஜமானுடைய குமாரனுக்கு மனைவியாகும்படி அவளை அழைத்துக்கொண்டு போம் என்றார்கள். ஆபிரகாமின் ஊழி 52
யக்காரன் அவர்கள் வார்த்தைகளைக் கேட்டபோது தரைமட்டும் குனிந்து யெகோவாவைப் பணிந்துகொண்டான். பின்பு அந்த 53
ஊழியக்காரன் வெள்ளியாபரணங்களையும் பொன்னாபரணங்களையும் வஸ்திரங்களையும் எடுத்து ரெபெக்காளுக்குக் கொடுத்தது மன்றி அவள் சகோதரனுக்கும் தாய்க்கும் சில உசிதமான பொருட்களையும் கொடுத்தான். பின்பு அவனும் அவனோடிருந்த 54
மனிதரும் போஜனபானம் பண்ணிவிட்டு இராத்தங்கினார்கள்; காலையிலே எழுந்திருந்து அவன்: என் எஜமானிடத்திற்கு என்னை அனுப்பிவிடுங்கள் என்றான். அப் 55
பொழுது அவள் சகோதரனும் அவள் தாயும்: சிலநாள், பத்துநாளாகிலும், பெண் எங்களோடிருக்கட்டும் பிற்பாடு போகலாம் என்றார்கள். அதற்கு அவன்: யெகோவா 56
என் பிரயாணத்தை வாய்க்கப்பண்ணியிருக்கிறபடியால் நீங்கள் எனக்குத் தடைசெய்யாதிருங்கள்; நான் என் எஜமானிடம் போக என்னை அனுப்பிவிடுங்கள் என்றான். அப் 57
பொழுது அவர்கள்: பெண்ணையழைத்து அவள் வாய்ப்பிறப்பைக் கேட்போமென்று சொல்லி | ரெபெக்காளை யழைத்து: நீ இந்த 58
மனிதனோடு கூடப்போகிறாயா என்று கேட்டார்கள். அவள், போகிறேன் என்றாள். அப்படியே அவர்கள் தங்கள் சகோதரியாகிய ரெபெக்காளையும் அவள் தாதியையும் 59
ஆபிரகாமின் ஊழியக்காரனையும் அவன் ஆட்களையும் அனுப்புவித்து | ரெபெக்காளை 60
வாழ்த்தி: எங்கள் சகோதரியே, நீ கோடா கோடியாய்ப் பெருகுவாயாக; உன் சந்ததியார் தங்கள் பகைஞரின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்வார்களாக என்று ஆசீர்வதித்தார்கள். அப்பொழுது ரெபெக்காளும் அவள் வேலைக்காரிகளும் எழுந்து ஒட்டகங்கள்மேலேறி அந்த மனிதனோடு கூடப் 61
போனார்கள். ஊழியக்காரன் ரெபெக்காளை யழைத்துக்கொண்டு போனான்.

ஈசாக்கு தென்னாட்டில் குடியிருந்தான். 62
அவன் கொய்ரோயீ எனப்பட்ட தரவின் வழியாய் வந்துகொண்டிருந்தான். ஈசாக்கு 63
சாயங்கால வேளையிலே தியானம்பண்ண வெளியிலே போயிருந்தான்; அவன் தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்தபோது ஒட்ட

64 கங்கள் வரக்கண்டான். ரெபெக்காளும் தன் கண்களே ஏறெடுத்து ஈசாக்கைக் கண்டபோது ஒட்டகத்தை விட்டிறங்கி ஊழி
65 யக்காரனைப் பார்த்து: அங்கே வெளியிலே நமக்கு எதிராக நடந்துவருகிற அந்த மனிதன் யார் என்று கேட்டாள். அவர்தான் என் எஜமான் என்று ஊழியக்காரன் சொல்லவே அவள் முக்காடிட்டு மூடிக்கொண்
66 டாள். ஊழியக்காரன் தான் செய்த சகல காரியங்களையும் ஈசாக்குக்கு விவரித்துச்
67 சொன்னான். ஈசாக்கு ரெபெக்காளைத் தன் தாய் சாராளுடைய கூடாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய் அவளைத் தனக்கு மனைவியாக்கிக்கொண்டான்; அவளை நேசித்தான். இப்படியாக ஈசாக்கு தன் தாயின் மரணத்தினால் நேர்ந்த துக்கம் நீங்கி ஆறுதலாயிருந்தான்.

**25** ஆபிரகாம் மற்றொரு ஸ்திரீயையும் விவா
2 கம்பண்ணியிருந்தான்; அவள்பேர் கெத்தூராள். அவள் அவனுக்குச் சிம்ரானையும் யக்ஷானையும் மெதானையும் மிதியானையும் இஸ்பாக்கையும் சுவாகையும் பெற்றாள்.
3 யக்ஷான் ஷேபாவையும் தெதானையும் பெற்றான்; தெதான் அசூரியருக்கும் லெத்தூசியருக்கும் லெயூமியருக்கும் தகப்பன்.
4 மிதியானின் குமாரர் ஏப்பா, ஏப்பேர், ஆனோக்கு, அபீதா, எல்தாகா என்பவர்கள்; இவர்கள் எல்லாரும் கெத்தூராளின்
5 பிள்ளைகள். ஆபிரகாம் தனக்குள்ள ஆஸ்திகளையெல்லாம் ஈசாக்குக்குக் கொடுத்
6 தான். ஆபிரகாமுக்கு இருந்த வேறு மனைவாட்டிகளின் பிள்ளைகளுக்கோ ஆபிரகாம் தன்கொடைகளைக்கொடுத்துத் தான் உயிரோடிருக்கும்போதே அவர்களைத் தன் குமாரனாகிய ஈசாக்கைவிட்டுக் கிழக்கே போகக் கீழ்தேசத்துக்கு அனுப்பிவிட்டான்.
7 ஆபிரகாமின் ஆயுசுநாட்கள் நூற்று எழு
8 பத்தைந்து வருஷம். அப்பால் ஆபிரகாம் வயோதிகமான முதிர்பருவத்தில் பூரண ஆசுவாசமுள்ளவனாய்ப் பிராணன்போய் மரித்துத் தன் ஜனத்தாரோடு சேர்க்கப்பட்டான்.
9 அவன் குமாரராகிய ஈசாக்கும் இஸ்மவேலும் மம்ரேக்கு எதிரே எத்தியனான சோகாரின் குமாரனாகிய எப்ரோனின் நிலத்திலுள்ள மக்பேலாவின் குகையிலே அவனை
10 அடக்கம்பண்ணினார்கள். அந்த நிலத்தை ஏத்தின் புத்திரரிடம் ஆபிரகாம் வாங்கியிருந்தான்; அங்கே ஆபிரகாம் அடக்கம்பண்ணப்பட்டான்; அவன் மனைவியாகிய சாராள் அடக்கம்பண்ணப்பட்ட இடமும்
11 அதுவே. ஆபிரகாம் மரித்தபின் தேவன் அவன் குமாரனாகிய ஈசாக்கை ஆசீர்வதித்தார். லகாய்ரோயீ என்னும் கிணற்றின் சமீபத்தில் ஈசாக்கு குடியிருந்தான்.

சாராளின் அடிமைப்பெண்ணாகிய ஆகார் 12
என்னும் எகிப்து தேசத்தாள் ஆபிரகாமுக்குப்பெற்ற குமாரனாகிய இஸ்மவேலின் வம்
சவரலாறும்: இஸ்மவேலின் மக்களுடைய 13
பெயரும் அவரவர் பெயரும் சந்ததியுமாவன: இஸ்மவேலுடைய மூத்த மகன் நெபாயோத், பின்பு கேதார், அத்பியேல், மிப்சாம், மிஷ்மா, தூமா, மாசா, ஆதாத், 14
தேமா, யெத்தூர், நாபீஷ், கேத்மா என்ப 15
வர்களே. இவர்களே இஸ்மவேலின் மக்கள். அவர்களுடைய நாமங்கள் இவைகளே. அவர்கள் வெவ்வேறான கிராமங் 16
களையும் அரண்களையும் உடையவர்கள். தங்கள் தங்கள் ஜாதியாருக்குத் தலைவரான பன்னிரண்டு பிரபுக்கள். இஸ்மவேலின் 17
வயது நூற்று முப்பத்தேழு, அப்பால் அவன் பிராணன்போய் மரித்துத் தன் ஜனத்தாரோடு சேர்க்கப்பட்டான். அவர்கள் 18
கவீலாதுவக்கிச் சூர்மட்டும் வாசம்பண்ணிவந்தார்கள். சூர் எகிப்துக்குக் கிழக்கே அசீரியாவுக்குப்போகிற வழியிலிருக்கிறது. அவன் தன் சகோதரருக்குக் கிழக்கே குடியேறியிருந்தான்.

ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்குடைய 19
வம்சவரலாறு: ஆபிரகாம் ஈசாக்கைப் 20
பெற்றான், ஈசாக்கு ரெபெக்காளை விவாகம்பண்ணுகிறபோது அவனுக்கு நாற்பது வயது. இவள் சீரியா தேசத்திலே பதான் அராமைச்சேர்ந்த பெத்தூவேலின் குமாரத்தி, சீரியா தேசத்தானாகிய லாபானின் சகோதரி. இவள் மலடியாயிருந்த 21
தினால் ஈசாக்கு அவளுக்காக யெகோவாவினிடம் வேண்டுதல்செய்தான். யெகோவா அவன் வேண்டுதலைக் கேட்டருளவே அவன் மனைவி ரெபெக்காள் கர்ப்பந்தரித்தாள். அவள் கர்ப்பத்திலே பிள்ளை 22
கள் ஒன்றோடொன்று முட்டிக்கொண்டிருந்தன; அப்பொழுது அவள்: இப்படியேயானால் இது எனக்குச் சம்பவிப்பானேன் என்று சொல்லி யெகோவாவினிடம் விசாரிக்கப்போனாள். அப்பொழுது யெகோவா: 23

இரண்டு ஜாதிகள் உன் கர்ப்பத்தில் உள்ளன,
பிறப்பிலிருந்தே மாறுபடும் இருஜனங்கள்,
ஒரு ஜனம் மற்றதை மேற்கொண்டுவிடும்,
மூத்தவன் இளையவனைச் சேவிப்பான்
என்றார். பிரசவகாலம் வந்தபோது, இதோ, 24
அவள் கர்ப்பத்தில் இரட்டைப்பிள்ளை

25 கனைனத் தெரியவந்தது. முதல் வெளிப்
பட்டவன் சிவந்த நிறமுள்ளவன், ரோம
அங்கிபோர்த்தது போன்ற சரீரமுடைய
வன். இவனுக்கு ஏசா என்று பேரிட்
26 டார்கள். பின்பு வெளிப்பட்ட சகோதரன்
தன் கையினால் ஏசாவின் குதிங்காலைப்
பிடித்துக்கொண்டே வந்தான்; இவனுக்கு
யாக்கோபு என்று பேரிட்டார்கள். இவர்
களை அவள் பெற்றபோது ஈசாக்குக்கு அறு
27 பது வயதாம். இந்தப் பிள்ளைகள் பெரியவர்
களானார்கள்; ஏசா வேட்டையில் வல்ல
வன், வனசஞ்சாரி. யாக்கோபு அமைதி
28 யுள்ளவன், கூடாரவாசி. ஈசாக்குக்கு ஏசா
வின்மேல் பிரியம்; ஏனெனில் ஏசா வேட்
டையாடிக் கொண்டுவருகிறது ஈசாக்குக்கு
ருசியாயிருந்தது. ரெபெக்காளுக்கோ யாக்
29 கோபின்மேல் பிரியம். ஒருநாள் ஏசா
காட்டிலிருந்து களைத்துவந்தபோது யாக்
கோபு ஒருவிதமான குழம்பைச் சமைத்துக்
30 கொண்டிருந்தான். அதுகண்ட ஏசா யாக்
கோபினிடம்: நான் களைத்திருக்கிறேன்,
இந்தச் சிவப்பான பதார்த்தத்தில் நான் சாப்
பிடக் கொஞ்சம் தா என்றான். இதிலிருந்
தே அவனுக்கு ஏதோம் என்னும் பேர் வந்
31 தது. யாக்கோபோ: உன் சேஷ்டபுத்திர
சிலாக்கியத்தை இன்று எனக்கு விற்றுவிடு
32 என்றான். அதற்கு ஏசா: இதோ, நான்
சாகப்போகிறேனே, இந்தச் சேஷ்டபுத்திர
சிலாக்கியம் எனக்கு என்ன பிரயோஜனம்
33 என்றான். அப்பொழுது யாக்கோபு: முத
லாவது எனக்கு ஆணையிட்டுக்கொடு என்று
சொல்ல ஏசா அவனுக்கு ஆணையிட்டான்.
இவ்விதமாகத் தன் சேஷ்டபுத்திர சிலாக்கி
யத்தை யாக்கோபுக்கு விற்றுப்போட்டான்.
34 அப்பொழுது யாக்கோபு ஏசாவுக்கு அப்
பத்தையும் பருப்புக்கலந்த அந்தக் குழம்
பையும் கொடுத்தான்; இவன் போஜன
பானம்பண்ணி எழுந்திருந்து போய்விட்
டான். ஏசா தன் சேஷ்டபுத்திர சிலாக்கிய
யத்தை இவ்வளவாகத்தான் மதித்திருந்தான்

**26** ஆபிரகாமின் நாட்களில் உண்டான பஞ்
சமே அல்லாமல் பின்னும் ஒரு பஞ்சம்
தேசத்தில் உண்டாயிற்று; அப்பொழுது
ஈசாக்கு பெலிஸ்தியரின் ராஜாவாகிய அபி
மேலேக்கினிடம் கேராருக்குப் போனான்.
2 யெகோவா அவனுக்குத் தரிசனமாகி: நீ
எகிப்துக்குப் போகவேண்டாம், நான் உன
3 க்குச் சொல்லும் தேசத்திலே குடியிரு. இந்
தத் தேசத்திலேயே தங்கியிரு; நான் உன்
னோடே இருந்து உன்னை ஆசீர்வதிப்பேன்;
நான் உனக்கும் உன் சந்ததிக்கும் இந்தத்
தேசங்கள் யாவையும் தருவேன்; உன் தகப்
பனாகிய ஆபிரகாமுக்கு நான் இட்ட ஆணை
யை நிறைவேற்றுவேன். ஆபிரகாம் என் 4
சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நான் விதித்த
தையும் என் கற்பனைகளையும் என் நியமங்
களையும் என் பிரமாணங்களையும் கைக்
கொண்டபடியினால் | நான் உன் சந்ததியை 5
வானத்தின் நட்சத்திரங்களைப் போலப் பெ
ருகப்பண்ணி உன் சந்ததிக்கு இந்தத் தேச
ங்கள் யாவையும் தருவேன்; பூமியிலுள்ள
சகல ஜாதிகளும் உன் சந்ததியின் ஆசீர்வா
தத்தைச் சொல்லித் தங்களை வாழ்த்திக்கொள்
வார்கள் என்றார். ஈசாக்கு கேராரிலே 6
குடியிருந்தான். | அவ்விடத்து மனிதர் 7
அவன் மனைவியைக் குறித்து விசாரித்த
போது: இவள் என் சகோதரி என்றான்.
ரெபெக்காள் பார்வைக்கு அழகுள்ளவளா
னபடியால் அவ்விடத்து மனிதர் அவள்
நிமித்தம் தன்னைக் கொல்லுவார்களென்று
என்னி அவளைத் தன் மனைவி என்று
சொல்லப் பயந்தான். அவன் அங்கே 8
நெடுநாள் தங்கியிருக்கையில் பெலிஸ்திய
ரின் ராஜாவாகிய அபிமேலேக்கு ஜன்னல்
வழியாய்ப் பார்க்கும்போது ஈசாக்கு தன்
மனைவியாகிய ரெபெக்காளோடே சரசமாய்
விளையாடிக்கொண்டிருக்கிறதைக் கண்
டான். அபிமேலேக்கு ஈசாக்கை அழை 9
த்து: அவள் உன் மனைவியாயிருக்கிறாளே,
அவளை உன் சகோதரி என்று சொன்ன
தென்ன வென்று கேட்க ஈசாக்கு: அவள்
நிமித்தம் நான் சாகாதபடி இப்படிச் சொன்
னேன் என்றான். அதற்கு அபிமேலேக்கு: 10
எங்களுக்கு ஏன் இப்படிச் செய்தாய்?
ஜனங்களில் யாராகிலும் உன் மனைவியோடு
சயனிக்கவும் எங்கள்மேல் பழிசுமரவும் நீ
இடமுண்டாக்கினாயே என்றான். பின்பு
அபிமேலேக்கு: இந்தப் புருஷனையாகிலும் 11
இவன் மனைவியையாகிலும் தொடுகிறவன்
நிச்சயமாகவே சாவுக்குள்ளாவானென்று
எல்லா ஜனங்களுக்கும் கட்டளையிட்டுச்
சொன்னான்.

ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத் 12
தான்; யெகோவா அவனை ஆசீர்வதித்தார்;
அந்த வருஷம் நூறு மடங்கு பலன் கிடை
த்தது. அவன் ஐசுவரியவானானான், செல் 13
வம் வளர்ந்துகொண்டு பெருகவே மிகவும்
செல்வாக்குள்ளவனானான். அவனுக்கு ஆட் 14
டுமந்தைகளும் மாட்டுமந்தைகளும் பலபல
பணிவிடைக்காரரும் இருந்தபடியினாலே
பெலிஸ்தியர் அவன்பேரில் பொறுமை
கொண்டு | அவன் தகப்பனாகிய ஆபிரகா 15
மின் நாட்களில் அவனுடைய வேலைக்காரர்
வெட்டின கிணறுகளையெல்லாம் தூர்த்து

16 மண்ணினால் நிரப்பிப்போட்டார்கள். அபி
மேலேக்கு ஈசாக்கைப்பார்த்து: நீர் எங்களை
விட்டுப் போய்விடும், எங்களிலும் மிகவும்
17 பலவானுனீர் என்றான். அப்பொழுது
ஈசாக்கு அவ்விடம் விட்டுப் பெயர்ந்து
கேராரின் பள்ளத்தாக்கிலே கூடாரம்
18 போட்டு அங்கே குடியிருந்தான். அங்கே
தன் தகப்பனுகிய ஆபிரகாமின் நாட்களில்
வெட்டினவைகளும் ஆபிரகாம் மரித்தபின்
பெலிஸ்தியர் தூர்த்துப்போட்டவைகளு
மான கிணறுகளை மறுபடியும் தோண்டித்
தன் தகப்பன் அவைகளுக்கு இட்டிருந்த
19 பேர்களையே இட்டான். ஈசாக்கின் வேலைக்
காரர் பள்ளத்தாக்கிலே வெட்டி அங்கே
20 சுரக்கும் நீரூற்றைக் கண்டார்கள். கேரா
ரூர் மேய்ப்பர் இந்தத் தண்ணீர் தங்களு
டையதென்று சொல்லி ஈசாக்கின் மேய்ப்ப
ரோடு சச்சரவு பண்ணினார்கள்; அவர்கள்
தன்னோடு வாக்குவாதம் பண்ணினபடியால்
அந்தக் கிணற்றுக்கு ஏசெக்கு என்று பேரி
21 ட்டான். வேறொரு கிணற்றை வெட்டி
னார்கள்; அதைப்பற்றியும் சச்சரவு பண்ணி
னார்கள்; ஆகையால் அதற்குச் சித்னா
22 என்று பேரிட்டான். பின்பு அவ்விடம்
விட்டுப் பெயர்ந்துபோய் இன்னொரு கிண
ற்றை வெட்டினான்; அதைப்பற்றி அவர்
கள் சச்சரவு பண்ணவில்லை; அப்பொழுது
அவன்: நாம் தேசத்தில் பலுகும்படி இப்
பொழுது யெகோவா நமக்கு இடமுண்டாக்
கினாரென்று சொல்லி அதற்கு ரெகொபோத்
23 என்று பேரிட்டான். அங்கேயிருந்து பெ
24 யேர்ஷெபாவுக்குப் போனான். அன்று
இரவில் யெகோவா அவனுக்குத் தரிசன
மாகி: நான் உன் தகப்பனுகிய ஆபிரகாமின்
கடவுள்; பயப்படாதே, நான் உன்னோடி
ருந்து என் அடியானுகிய ஆபிரகாமினி
மித்தம் உன்னை ஆசீர்வதித்து உன் சந்ததி
யைப் பெருகப்பண்ணுவேன் என்றார்.
25 அங்கே அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டி
யெகோவாவின் திருநாமத்தைத் தொழுது
கொண்டு அங்கே தன் கூடாரத்தைப் போ
ட்டான்; அவ்விடத்தில் ஈசாக்கின் வேலைக்
காரர் ஒரு கிணற்றை வெட்டினார்கள்.
26 அபிமேலேக்கும் அவன் சிநேகிதனுகிய
அகுசாத்தும் அவன் சேனபதியாகிய பிகோ
ஸும் கேராரிலிருந்து அவனிடத்திற்கு வந்
27 தார்கள். வரவே ஈசாக்கு அவர்களிடம்:
ஏன் என்னிடம் வந்தீர்கள்? நீங்கள் என்
னைப் பகைத்து என்னை உங்களிடத்தில்
இராதபடி துரத்திவிட்டீர்களே என்றான்.
28 அதற்கு அவர்கள்: யெகோவா உம்மோடி
ருக்கிறாரென்பதைத் தெளிவாகக் கண்டு
கொண்டோம்; ஆகவே எங்களுக்கும் உமக்
கும் ஒரு ஆணை ஏற்பாடு உண்டாகவேண்
டும். நாங்கள் உம்மைத் தொடாமல் நன்
29 மையையே உமக்குச் செய்து உம்மைச்
சமாதானமாய் அனுப்பிவிட்டதுபோல
நீரும் எங்களுக்குத் தீங்குசெய்யலாகா
தென உம்மோடு ஒரு உடன்படிக்கை பண்
ணிக்கொள்ள வேண்டுமென்று பேசிக்
கொண்டோம்; நீர் யெகோவாவின் ஆசீர்
வாதத்தைப்பெற்றவராயிற்றே என்றார்கள்.
30 அவன் அவர்களுக்கு விருந்து பண்ணி
னான், அவர்கள் புசித்துக் குடித்தார்கள்.
31 அதிகாலையில் எழுந்து ஒருவருக்கொருவர்
ஆணையிட்டுக்கொடுத்தார்கள். பின்பு
ஈசாக்கு அவர்களையனுப்பிவிட்டான்; அவர்
களும் அவனிடமிருந்து சமாதானமாய்ப்
32 போய்விட்டார்கள். அந்நாளிலே தானே
ஈசாக்கின் வேலைக்காரர் வந்து தாங்கள்
கிணறு வெட்டின செய்தியை அவனுக்கு
அறிவித்துத் தண்ணீர் கண்டுவிட்டதை என்
33 றார்கள். அதற்கு ஷெபா என்று பேரிட்
டான்; ஆகையால் அந்த ஊரின் பேர் இந்
நாள்வரைக்கும் பெயேர்ஷெபா எனப்படு
கிறது.

34 ஏசா நாற்பது வயதானபோது ஏத்திய
ஏனபெயேரியின் மகள் யூதித்தையும் ஏத்தி
யனான ஏலோனின் மகள் பஸ்மாத்தையும்
35 விவாகம் பண்ணினான். இவர்கள் ஈசாக்
குக்கும் ரெபெக்காளுக்கும் மனக்கோவா
யிருந்தார்கள்.

27 ஈசாக்கின் முதிர்வயதில் அவன் கண்கள்
இருளடைந்து பார்வையற்றுப்போகவே
அவன் தன் மூத்த குமாரனுகிய ஏசாவை
யழைத்து: என் மகனே என்றான். அவன்: 2
இதோ, இருக்கிறேன் என்றான். அப்பொ
ழுது அவன்: நான் முதிர்வயதானேன், என்
மரணம் இன்ன நாள் என அறியேன். நீ 3
உன் ஆயுதங்களாகிய உன் அம்பறாத்தூணி
யையும் உன் வில்லையும் எடுத்துக்கொண்டு
வனாந்தரத்துக்குப்போய் வேட்டையாடி | அகப் 4
படுவதை எனக்குப் பிரியமாயிருக்கிற ருசி
யுள்ள பதார்த்தங்களாகச் சமைத்து நான்
புசிக்கவும் நான் மரணமடையுமுன்னே
நான் உன்னை ஆசீர்வதிக்கவும் என்னிடம்
கொண்டுவா என்றான்.

5 ஈசாக்கு தன் குமாரனுகிய ஏசாவோடு
பேசினதை ரெபெக்காள் கேட்டுக்கொண்
டிருந்தாள்; ஏசா வேட்டையாடிக்கொ
ண்டு வரும்படி வனாந்தரத்துக்குப் போயிருக்கை
யில் | ரெபெக்காள் தன் குமாரன் யாக் 6
கோப்பைப்பார்த்து: உன் தகப்பன் உன்
சகோதரனுகிய ஏசாவை யழைத்து: நான் 7

புசித்து எனக்கு மரணம் வருமுன்னே யெகோவாவின் சந்நிதியில் உன்னை ஆசீர் வதிக்கும்படி நீ வேட்டையாடி அகப்படு
8 வதை ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமை த்து எனக்குக் கொண்டுவா என்று சொல்
9 லக்கேட்டேன். ஆகையால் என் மகனே, என் சொல்லைக்கேட்டு நான் உனக்குக் கட் டளையிடுகிறபடி செய். நீ ஆட்டுமந்தைக் குப் போய் இரண்டு நல்ல வெள்ளாட்டுக் குட்டிகளைக் கொண்டுவா; நான் அவை களை உன் தகப்பனுக்குப் பிரியமாயிருக்கிற
10 ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைப்பேன். உன் தகப்பன் தாம் மரணமடையுமுன் உன்னை ஆசீர்வதிக்கும்படி அவர் புசிப்
11 பதற்கு நீ அதை அவரிடங் கொண்டுபோக வேண்டும் என்றாள். அதைக்கேட்ட யாக் கோபு தன் தாயாகிய ரெபெக்காளினிடம்:
12 என் சகோதரனாகிய ஏசா ரோமம் மிகுந்த வன், நான் ரோமமில்லாதவன். ஒருவேளை என் தகப்பன் என்னைத் தடவிப்பார்ப்பார்; அப்பொழுது நான் அவருக்கு எத்தனைக் காணப்பட்டு என்மேல் ஆசீர்வாதத்தையல் ல சாபத்தை வரப்பண்ணிக்கொள்வேனே
13 என்றான். அதற்கு அவன் தாய்: என் மகனே, உன்மேல் வரும் சாபம் என்மேல் வரட்டும்; நீ என் சொல்லை மாத்திரம் கேள்; போய் அவைகளை என்னிடங் கொண்டுவா
14 என்றாள். அவன் போய் அவைகளைக் கொண்டுவந்து தன் தாயினிடங் கொடுத் தான்; அவனுடைய தாய் அவன் தகப்ப
15 னுக்குப் பிரியமாயிருக்கிற ருசியுள்ள பதார் த்தங்களாகச் சமைத்தாள். பின்பு ரெபெக் காள் வீட்டிலே தன்னிடமிருந்த தன் மூத்த மகனாகிய ஏசாவின் நல்ல வஸ்திரங்களை எடுத்து இளைய மகனாகிய யாக்கோபுக்கு
16 உடுத்தி, வெள்ளாட்டுக் குட்டிகளின் தோலை அவன் கைகளிலேயும் ரோமமில்லாத கழு
17 த்திலேயும் போட்டுத் | தான் சமைத்த ருசி யுள்ள பதார்த்தங்களையும் அப்பங்களையும் தன் குமாரனாகிய யாக்கோபின் கையிலே
18 கொடுத்தாள். அவன் தன் தகப்பனிடம் வந்து: என் தகப்பனே என்று கூப்பிட, அவன்: இதோ இருக்கிறேன், நீ யார், என்
19 மகனே என்றான். அப்பொழுது யாக் கோபு தன் தகப்பனிடம்: நான் உமது மூத்த மகன் ஏசா; நீர் எனக்குச் சொன்ன படியே செய்தேன்; நீர் என்னை ஆசீர்வதிக் கும்படி நீர் எழுந்து உட்கார்ந்து நான் வேட்டையாடிக் கொண்டுவந்ததைப் புசி
20 யும் என்றான். அதுகேட்ட ஈசாக்கு தன் மகனிடம்: என் மகனே, இது இத்தனை சீக் கிரம்வர உனக்கு எப்படி அகப்பட்டது என்று கேட்க அவன்: உமது கடவுளாகிய யெகோவா அதை என்னிடம் வரச்செய் தார் என்றான். அப்பொழுது ஈசாக்கு 21
யாக்கோபினிடம்: என் மகனே, நீ என் குமாரனாகிய ஏசாதானே அல்லவோ என் று நான் உன்னைத் தடவிப்பார்க்கும்படி கிட்டவா என்று சொல்ல! யாக்கோபு 22
தன் தகப்பனாகிய ஈசாக்கின் கிட்டப்போ னான்; அவன் இவனைத் தடவிப்பார்த்து: சத்தம் யாக்கோபின் சத்தம் கைகளோ ஏசாவின் கைகள் என்று சொல்லிக்கொண் டான். அவனுடைய கைகள் அவன்சகோ 23
தரனாகிய ஏசாவின் கைகளைப்போல ரோம முள்ளவைகளாயிருந்தமையால் இன்னனென் றறிந்துகொள்ளாமல் | அவனை ஆசீர்வ 24
தித்து: என் குமாரனாகிய ஏசா நீதானே என் று திரும்பவுங்கேட்க அவன்: நான்தான்என் றான். அப்பொழுது அவன்: என் குமா 25
ரனே, வேட்டையாடிக் கொண்டுவந்ததை நான் புசித்து என் ஆத்துமா உன்னை ஆசீர் வதிக்கும்படி அதை என் கிட்டக் கொண் டுவா என்றான்; அவன் அதைக் கிட்டக் கொண்டுபோகவே அவன் புசித்தான்; பிற் பாடு திராட்சரசம் கொண்டுவந்து அவனுக் குக் கொடுத்தான், அவன் குடித்தான். அப் 26
பொழுது அவன் தகப்பனாகிய ஈசாக்கு அவ னிடம்: என் மகனே, நீ கிட்ட வந்து என் னை முத்தஞ்செய் என்றான். அவன் கிட் 27
டப்போய் அவனை முத்தஞ்செய்தான்; அப் பொழுது அவன் வஸ்திரங்களின் வாசனை யை மோந்து:

இதோ, என் குமாரனின் வாசனை
யெகோவா ஆசீர்வதித்த வயல்வெளி
யின் வாசனையைப்போலாயிற்று,
கடவுள் உனக்கு 28
வானத்துப் பனியையும்
பூமியின் கொழுமையையும்
மிகுந்த தானியத்தையும்
திராட்சரசத்தையும் தந்தருளுவாராக;
ஜனங்கள் உன்னைச் சேவிப்பார்களாக; 29
ஜாதிகள் உன்னை வணங்குவார்களாக;
உன் சகோதரருக்கு ஜெமானனாயிருப்பா
யாக;
உன் தாயின் பிள்ளைகள் உன்னை வணங்
குவார்களாக;
உன்னைச் சபிக்கிற எவனும் சாபத்துக்
குள்ளாவானாக;
உன்னை ஆசீர்வதிக்கிற எவனும் ஆசீர்
வாதம் பெறுவானாக

என்று சொல்லி அவனை ஆசீர்வதித்தான்.
ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்து முடி 30
யவும் யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்

கின் சமுகத்தை விட்டுப்போன மாத்திரத்தில் அவன் சகோதரனுகிய ஏசா வேட்டை
31 யாடி வந்து சேர்ந்தான். அவனும் ருசியுள்ள பதார்த்தங்களைச் சமைத்துத் தன் தகப்பனிடங் கொண்டுவந்து தகப்பனைப் பார்த்து: ஈர் என்னை ஆசீர்வதிக்கும்படி என் தகப்பனர் எழுந்திருந்து உமது குமாரன் வேட்டையாடிக் கொண்டுவந்ததைப்
32 புசிப்பாராக என்ருன். அதைக் கேட்டு அவன் தகப்பனுகிய ஈசாக்கு: ஈ யார் என்ருன்; அதற்கு அவன்: நான் உமது மூத்த
33 மகனுகிய ஏசாதான் என்ருன். அதைக் கேட்டமாத்திரத்தில் ஈசாக்கு மிகவும் நடுநடுங்கி: வேட்டையாடி எனக்குக் கொண்டு வந்தானே அவன் யார்? ஈ வருமுன்னே அவையெல்லாவற்றிலும் நான் புசித்து அவனை ஆசீர்வதித்தேனே; அவன் ஆசீர் வதிக்கப்பட்டவனுகவும் இருப்பானே என்
34 ருன். ஏசா தன் தகப்பனின் வார்த்தை களைக் கேட்டவுடனே மிகவும் மனங்கசந்து உரத்த சத்தமிட்டு அலறித் தன்தகப்பனைப் பார்த்து: என் தகப்பனே, என்னையும் ஆசீர்
35 வதியும் என்ருன். அதற்கு அவன்: உன் சகோதரன் தந்திரமாய் வந்து உன் ஆசீர் வாதத்தை அபகரித்துக்கொண்டான் என்
36 ருன். அப்பொழுது அவன்: அவன் பெயர் யாக்கோபு என்னப்படுவது நியாயந்தான். இதோடே இரண்டுதரம் என்னை மோசம் போக்கினன்; என் சேஷ்ட புத்திரசிலாக்கியத்தை அபகரித்துக்கொண்டான்; இதோ, இப்பொழுது என் ஆசீர்வாதத்தையும் அபகரித்துக்கொண்டான் என்று சொல்லி, ஈர் எனக்கு ஒரு ஆசீர்வாதத்தை வைத்துவைக்
37 கவில்லையோ என்ருன். ஈசாக்கோ ஏசாவினிடம்: இதோ, நான் அவனை உனக்கு எஜமானுக வைத்தேன்; அவன் சகோதரர் எல்லாரையும் அவனுக்கு ஊழியக்காரராகக் கொடுத்துத் தானியத்தையும் திராட்சரசத்தையும் அவனுக்கு ஆதரவாகத் தந்தேன். அப்படியிருக்க, என் மகனே, நான் உனக்கு என்ன செய்வேன் என்ருன்.
38 ஏசா தன் தகப்பனிடம்: என் தகப்பனே, இந்த ஒரே ஆசீர்வாதமாத்திரமா உம்மிடத்திலுண்டு? என் தகப்பனே, என்னையும் ஆசீர்வதியுமென்று சொல்லி ஏசா சத்த
39 மிட்டு அழுதான். அப்பொழுது அவன் தகப்பனுகிய ஈசாக்கு அவனிடம்:

பூமியின் கொழுமைக்கும்
உயர வானத்திலிருந்து இறங்கும் பனிக்
[illegible]
உன் வாசஸ்தலம் விலகியிருக்கும்;
40 உன் பட்டயத்தினலே நீ பிழைத்து
உன் சகோதரனைச் சேவிப்பாய்;
ஈ மேற்கொள்ளும் காலம் வரும்போது
உன் கழுத்திலிருக்கிற அவன் நுகத்தடியை
முறித்துப்போடுவாய்
என்ருன்.

41 யாக்கோபைத் தன் தகப்பன் ஆசீர்வதித்தினிமித்தம் ஏசா யாக்கோபைப் பகைத்து: என் தகப்பனுக்காகத் துக்கிக்கும் நாட்கள் சிக்கிரம் வரும், அப்பொழுது என் சகோதரன் யாக்கோபைக் கொன்றுபோடுவேன் என்று ஏசா தனக்குள் சொல்லிக் கொண்டான். 42 மூத்த மகனுகிய ஏசாவின் வார்த்தைகள் ரெபெக்காளுக்குத் தெரிய வந்தபோது அவள் தன் இளைய மகன் யாக்கோபை யழைத்து: உன் சகோதரன் ஏசா உன்னைக் கொன்றுபோட நினைத்துத் தன்னைத் தேற்றிக்கொள்ளுகிருன். 43 ஆதலால், என் மகனே, நான் சொல்வதைக்கேள். எழுந்து காரானிலிருக்கிற என் சகோதரனுகிய லாபானிடத்திற்கு ஓடிப்போய் | 44 உன் சகோதரனின் கோபம் தணியுமட்டும் சில நாள் அவனிடத்திலேயே இரு. 45 உன் சகோதரன் உன்மேல் கொண்ட கோபம் தணிந்து ஈ அவனுக்குச் செய்ததை அவன் மறந்தபின் நான் ஆள் அனுப்பி அவ்விடத்திலிருந்து உன்னை அழைப்பிப்பேன்; நான் ஒரே நாளில் உங்கள் இருவரையும் என் இழந்துபோகவேண்டும் என்ருள்.

46 பின்பு ரெபெக்காள் ஈசாக்கினிடம்: ஏத்தின் குமாரத்திகளினிமித்தம் நான் சலித்துப் போனேன். இந்தத் தேசத்துப் பெண்களாகிய ஏத்தின் குமாரத்திகளில் இவர்களைப் போன்ற ஒரு பெண்ணை யாக்கோபு கொள்வானுனல் நான் உயிரோடிருப்பது எதற்கு என்ருள்.

**28** ஈசாக்கு யாக்கோபை யழைத்து அவனை ஆசீர்வதித்து: ஈ கானனியரின் குமாரத்திகளில் பெண்கொள்ளாமல் | 2 எழுந்து பதான் அராமிலிருக்கிற உன் தாயின் தகப்பனுகிய பெத்துவேலின் வீட்டுக்குப்போய் அவ்விடத்தில் உன் தாயின் சகோதரனுகிய லாபானின் குமாரத்திகளுக்குள் பெண் கொள் என்று அவனுக்குக் கட்டளையிட்டான். 3 சர்வவல்லவரான கடவுள் உன்னை ஆசீர்வதித்து ஈ பல ஜனக்கூட்டமாகும்படி உன்னைப் பலுகவும் பெருகவும் பண்ணிக் | 4 கடவுள் ஆபிரகாமுக்குக் கொடுத்ததும் ஈ பரதேசியாய்த் தங்குகிறதுமான தேசத்தை ஈ சுதந்தரித்துக்கொள்ளும்படி ஆபிரகாமுக்கு அருளிய ஆசீர்வாதத்தை உனக்கும்

ஊன் சந்ததிக்கும் அருளுவாராக என்று
5 சொல்லி | ஈசாக்கு யாக்கோபை அனுப்பி
விட்டான். அப்பொழுது அவன் பதான்
அராமிலிருக்கும்சீரியாதேசத்தானுகிய பெத்
தூவேலின் குமாரனும் தனக்கும் ஏசாவுக்
கும் தாயாகிய ரெபெக்காளின் சகோதரனு
மான லாபானிடம் போகப்புறப்பட்டான்.
6 ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்து ஒரு
பெண்ணைக் கொள்ளும்படி அவனைப்
பதான் அராமுக்கு அனுப்பினதையும்
அவனை ஆசீர்வதிக்கையில்: நீ கானானிய
ரின் குமாரத்திகளில் பெண் கொள்ள
வேண்டாமென்று அவனுக்குக் கட்டளை
7 யிட்டதையும் | யாக்கோபு தன் தகப்ப
னுக்கும் தன் தாய்க்கும் கீழ்ப்படிந்து
பதான் அராமுக்குப் புறப்பட்டுப் போன
8 தையும் ஏசா கண்டான். கானானியரின்
குமாரத்திகள் தன் தகப்பனுகிய ஈசாக்கின்
பார்வைக்கு ஆகாதவர்கள் என்பதையும்
9 ஏசா கண்டறிந்தான். அறியவே, அவன்
இஸ்மவேலிடம் போய்த் தனக்கு முன்னி
ருந்த மனைவிகளோடு ஆபிரகாமின் குமார
னுகிய இஸ்மவேலின் குமாரத்தியும் நெபா
யோத்தின் சகோதரியுமாகிய மகலாத்தை
யும் விவாகம் பண்ணினான்.
10 யாக்கோபு பெயேர்செபாவை விட்டுப்
புறப்பட்டுக் காரானுக்குப் பிரயாணமா
11 னான். சூரியாஸ்தமனத்தின் பின் திருஸ்த
லத்திற்கு வந்து அங்கே ராத்தங்கி அவ்
விடத்துக் கற்களில் ஒன்றையெடுத்துத் தன்
தலையின்கீழ் வைத்து அங்கே நித்திரைசெய்
12 யும்படி படுத்துக்கொண்டான். அங்கே
ஒரு சொப்பனங்கண்டான்: இதோ, ஒரு
ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது,
அதின் தலை வானத்தை எட்டியிருந்தது,
அதிலே தெய்வதூதர் ஏறுகிறவர்களும்
13 இறங்குகிறவர்களுமாயிருந்தார்கள். இதோ,
அதற்குமேல் யெகோவா நின்று: நான்
உன் தகப்பனுகிய ஆபிரகாமின் கடவுளும்
ஈசாக்கின் கடவுளுமாகிய யெகோவா; நீ
படுத்திருக்கிற தேசத்தை உனக்கும் உன்
14 சந்ததிக்கும் தருவேன். உன் சந்ததி பூமி
யின் தூளத்தனையாயிருக்கும்; நீ மேற்கே
யும் கிழக்கேயும் வடக்கேயும் தெற்கேயும்
பரவியிருப்பாய்; உனக்குள்ளும் உன் சந்த
திக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம்
15 ஆசீர்வதிக்கப்படும். இதோ, நான் உன்னே
டிருப்பேன். நீ போகிற இடத்திலெல்லாம்
உன்னைக் காப்பேன்; இந்தத் தேசத்துக்கு
உன்னைத் திரும்பிவரப்பண்ணுவேன்; நான்
உனக்குச் சொன்னதைச்செய்து தீர்க்குமள
வும் உன்னைக் கைவிடுவதில்லை என்று
சொன்னார். யாக்கோபு நித்திரைதெளிந்து 16
விழித்தபோது: மெய்யாகவே யெகோவா
இந்த ஸ்தலத்திலிருக்கிறார்; இதை நான்
அறியாதிருந்தேன் என்றான். அவன் 17
பயந்து: இந்த ஸ்தலம் எவ்வளவு பயங்
கரம்! இது கடவுளின் வீடேயன்றி வே
றல்ல, இது வானத்தின் வாசல் என்றான்.
அதிகாலையில் யாக்கோபு எழுந்து தன் 18
தலையின்கீழ் வைத்திருந்த கல்லையெடுத்து
அதை ஞாபக ஸ்தம்பமாக நிறுத்தி அதின்
மேல் எண்ணெய் வார்த்தான். அந்த ஸ்த 19
லத்திற்குப் பேதேல் என்று பேரிட்டான்;
ஆதியிலே அவ்வூருக்கு லூஸ் என்னும்
பேர் இருந்தது. பின்பு யாக்கோபு ஒரு 20
பொருத்தனைசெய்து: கடவுள் என்னோடி
ருந்து நான் போகிற இந்த வழியிலே
என்னைக் காத்து உண்ண உணவும் உடுக்க
உடையும் எனக்குத் தந்து | என்னை என் 21
தகப்பன் வீட்டுக்குச் சமாதானமாய்த்
திரும்பிவரப்பண்ணுவாரானால் யெகோவா
வே எனக்குக் கடவுளாவார்; நான் ஸ்தம்ப 22
மாக நிறுத்தின இந்தக் கல் கடவுளுக்கு
வீடாகும்; தேவரீர் எனக்குத் தரும் எல்லா
வற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்து
வேன் என்று சொன்னான்.

யாக்கோபு பின்னும் பிரயாணமாகிக் **29**
கீழ்திசையாரின் தேசத்தில் போய்ச்சேர்ந்
தான். அங்கே வயல்வெளியிலே ஒரு 2
கிணற்றையும் அதின் அருகே மடக்கியிருக்
கிற மூன்று ஆட்டுமந்தைகளையும் கண்
டான்; அந்தக் கிணற்றிலிருந்துதான் மந்தை
களுக்குத் தண்ணீர் காட்டுவார்கள்; அந்தக்
கிணற்றின் வாயை மூடியிருந்த கல் மிகவும்
பெரிது. மந்தைகள் எல்லாம் அவ்விடத் 3
தில் வந்து கூடும்; பிற்பாடு கிணற்றின்
வாயிலிருக்கும் கல்லை மேய்ப்பவர் புரட்டி
ஆடுகளுக்குத் தண்ணீர்காட்டி மறுபடியும்
கல்லை முன்னிருந்தபடி கிணற்றின் வாயில்
வைப்பார்கள். யாக்கோபு அவர்களைப் 4
பார்த்து: சகோதரரே, நீங்கள் எவ்விடத்
தார் என்றான்; அவர்கள் நாங்கள் காரான்
ஊரார் என்றார்கள். அப்பொழுது அவன்: 5
நாகோரின் மகன் லாபானை அறிவீர்களா
என்று கேட்க, அறிவோம் என்றார்கள்.
அவர் சுகமாயிருக்கிறாரா என்று விசாரித்
தான்; அதற்கு அவர்கள்: சுகமாயிருக்
கிறார்; அவர் குமாரத்தியாகிய ராகேல்,
அதோ ஆடுகளை ஓட்டிக்கொண்டுவருகிறாள்
என்று சொன்னார்கள். அப்பொழுது
அவன்: இன்னும் பொழுது சாய்ந்துவிட
வில்லையே; இது மந்தைகளைச் சேர்க்கிற
வேளையல்ல, ஆடுகளுக்குத் தண்ணீர்காட்டி

இன்னும் மேயவிடுங்கள் என்றான்.
8 அதற்கு அவர்கள்: எல்லா மந்தைகளும் வந்து கூடினாலொழிய அப்படிச் செய்ய முடியாது; சேர்ந்தபின் கிணற்றின் வாயிலிருந்து கல்லைப் புரட்டுவார்கள்; அப்பொழுதுதான் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டுவோம் என்றார்கள்.
9 அவர்களோடு அவன் பேசிக்கொண்டிருக்கும்போதே ராகேல் தன் தகப்பனின் ஆடுகளை ஓட்டிக்கொண்டு வந்துசேர்ந்தாள். இவள் அவைகளை மேய்த்துக்கொண்டிருந்தவள்.
10 யாக்கோபு தன் தாயின் சகோதரனான லாபானின் குமாரத்தி ராகேலையும் தன் தாயின் சகோதரனான லாபானின் ஆடுகளையும் கண்டபோது போய்க் கிணற்றின் வாயிலிருந்து கல்லைப் புரட்டினான்; தன் தாயின் சகோதரனான லாபானின் ஆடுகளுக்குத் தண்ணீர்
11 காட்டினான். பின்பு யாக்கோபு ராகேலை
12 முத்தஞ்செய்து சத்தமிட்டு அழுது | தான் அவள் தகப்பனின் மருமகனென்றும் ரெபெக்காளின் மகனென்றும் ராகேலுக்கு அறிவித்தான். அவள் ஓடிப்போய்த் தன்
13 தகப்பனுக்கு அறிவித்தாள். லாபான் தன் சகோதரியின் குமாரனாகியயாக்கோபுடைய செய்தியைக் கேட்டபோது அவனுக்கு எதிர்கொண்டோடி அவனைக் கட்டிக்கொண்டு முத்தஞ்செய்து தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோனான்; நடந்தகாரியங்களையெல்லாம் அவன் விவரமாய் லாபா
14 னுக்குச் சொன்னான். அப்பொழுது லாபான்: நீ என் எலும்பும் என் தசையுமானவன் என்று அவனுக்குச் சொன்னான். ஒருமாத காலம் யாக்கோபு அவனிடம் தங்கினான்.
15 பின்பு லாபான் யாக்கோபைப் பார்த்து; நீ என் மருமகனாயிருப்பதினால் சும்மா எனக்கு வேலை செய்கிறதா? சம்பளம் எவ்
16 வளவு கேட்கிறாய் சொல் என்றான். லாபானுக்கு இரண்டு குமாரத்திகள், மூத்தவள் பேர் லேயாள், இளையவள் பேர் ராகேல்.
17 லேயாள் கூச்சக்கண்ணி, ராகேலோ ரூப
18 வதி, பார்வைக்கு அழகானவள். யாக்கோபு ராகேல்பேரில் பிரியப்பட்டு: உமது இளைய குமாரத்தியாகிய ராகேலுக்காக உம்மிடம் ஏழுவருஷம் வேலைசெய்கிறேன்
19 என்றான். அதற்கு லாபான்: நான் அவளை அந்நிய புருஷனுக்குக் கொடுப்பதைப் பார்க்கிலும் அவளை உனக்குக் கொடுக்கிறது உத்தமம், என்னிடத்திலே இரு என்றான்.
20 அந்தப்படியே யாக்கோபு ராகேலுக்காக ஏழுவருஷம் வேலைசெய்தான்; அவள் பேரில் இருந்த பிரியத்தினாலே அந்த வருஷங்கள் அவனுக்குக் கொஞ்சகாலமாகத் தோன்றின.
21 பின்பு யாக்கோபு லாபானைப் பார்த்து: என் நாட்கள் நிறைவேறின, என் மனைவியிடம் நான் சேரும்படி அவளை எனக்குத் தாரும் என்றான்.
22 அப்பொழுது லாபான் அவ்விடத்திலுள்ள எல்லாரையும் கூடிவரச்செய்து விருந்துபண்ணினான்.
23 அன்று இரவிலே அவன் தன் மகள் லேயாளை அழைத்துக்கொண்டுபோய் அவனிடம் விட்டான்; அவளை அவன் சேர்ந்தான். லாபான் தன் வேலைக்காரியாகிய
24 சில்பாளைத் தன் மகள் லேயாளுக்கு வேலைக்காரியாகக் கொடுத்தான்.
25 காலையிலே, இதோ, அவள் லேயாள் என்று யாக்கோபு கண்டு லாபானைப்பார்த்து: என்னை எனக்கு இப்படிச் செய்தீர்? நான் உம்மிடம் வேலைசெய்து ராகேலுக்காக அல்லவா? அப்படியிருக்க என்னை வஞ்சித்
26 தீர் என்றான். அதற்கு லாபான்: மூத்தவளிருக்க இளையவளைக் கொடுப்பது இவ்
27 விடத்து வழக்கமல்ல. இவளுடைய ஏழு நாளை நிறைவேற்று; அவளையும் உனக்குத் தருவேன்; அவளுக்காகவும் நீ இன்னும் ஏழு வருஷம் என்னிடம் வேலைசெய் என்றான்.
28 அந்தப்படியே யாக்கோபு இவளுடைய ஏழுநாளை நிறைவேற்றினான். அப்பொழுது தன் மகள் ராகேலையும் அவனுக்கு மனைவியாகக் கொடுத்தான்.
29 அன்றியும் லாபான் தன் வேலைக்காரியாகிய பில்காளைத் தன் குமாரத்தியாகிய ராகேலுக்கு
30 வேலைக்காரியாகக் கொடுத்தான். யாக்கோபு ராகேலையும் சேர்ந்தான்; லேயாளைப் பார்க்கிலும் ராகேலை அவன் அதிகமாய் நேசித்துப் பின்னும் ஏழுவருஷம் அவனிடம் சேவித்தான்.
31 லேயாள் அற்பமாய் எண்ணப்பட்டாள் என்று யெகோவா கண்டு அவள் கர்ப்பந்தரிக்கும்படிசெய்தார்; ராகேலோ மலடியாயிருந்தாள்.
32 லேயாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று யெகோவா என் தாழ்வைப் பார்த்தருளினார்; இப்பொழுது என் புருஷன் என்மேல் பிரியமாயிருப்பானென்று சொல்லி அவனுக்கு ரூபன் என்று பேரிட்டாள்.
33 மறுபடியும் அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப்பெற்று: நான் அற்பமாய் எண்ணப்பட்டதை யெகோவா கேட்டருளி இவனையும் எனக்குத் தந்தாரென்று சொல்லி அவனுக்குச் சிமியோன் என்று
34 பேரிட்டாள். பின்னும் அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப்பெற்று: என் புருஷனுக்கு மூன்று குமாரரைப் பெற்றேன், அவர் இப்பொழுது என்னோடு இசைந்

திருப்பாரென்று சொல்லி அவனுக்கு லேவி
35 என்று பேரிட்டாள். மறுபடியும் அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று: இப்பொழுது யெகோவாவைத் துதிப்பே னென்று சொல்லி அவனுக்கு யூதா என்று பேரிட்டாள்; பிற்பாடு அவளுக்குப் பிள் ளைபேறு நின்றுபோயிற்று.

**30** ராகேல் தான் யாக்கோபுக்குப் பிள்ளை களைப் பெறாததைக் கண்டு தன் சகோதரி யின்மேல் பொறாமைகொண்டு யாக்கோ பைப் பார்த்து: எனக்கும் பிள்ளைகளைக் கொடும், இல்லாவிட்டால் நான் சாகிறேன் 2 என்றாள். அப்பொழுது யாக்கோபு ராகே லின்மேல் கோபமூண்டவனாகி: உன் கர்ப் பத்தை அடைத்திருக்கிறவர் கடவுளல்லவா, 3 நானோ கடவுள் என்றான். அப்பொழுது அவள்: இதோ, என் அடிமைப்பெண்ணா கிய பில்காள் இருக்கிறாளே; அவள் என் மடியிலிருக்கப் பிள்ளைகளைப் பெறவும் அவ ளால் எனக்குச் சந்ததியுண்டாகவும் அவ 4 ளிடத்தில் சேரும் என்று சொல்லி | அவ னுக்குத் தன் வேலைக்காரியாகிய பில்க் காளை மனைவியாகக் கொடுத்தாள்; அப்படி 5 யே யாக்கோபு அவளைச் சேர்ந்தான். பில்க் காள் கர்ப்பவதியாகி யாக்கோபுக்கு ஒரு 6 குமாரனைப் பெற்றாள். அப்பொழுது ராகேல்: கடவுள் என் வழக்கைத் தீர்த்து என் சத்தத்தையும் கேட்டு எனக்கு ஒரு குமாரனைக் கொடுத்தார் என்று சொல்லி அவனுக்குத் தான் என்று பேரிட்டாள். 7 மறுபடியும் ராகேலின் வேலைக்காரியா கிய பில்காள் கர்ப்பவதியாகி யாக்கோ புக்கு இரண்டாம் குமாரனைப் பெற்றாள். 8 அப்பொழுது ராகேல்: நான் மகா போராட் டமாய் என் சகோதரியோடு போராடி மேற்கொண்டேன் என்று சொல்லி அவ னுக்கு நப்தலி என்று பேரிட்டாள். 9 லேயாள் தனக்குப் பிள்ளைபேறு நின்று போனதைக்கண்டு தன் வேலைக்காரியாகிய சில்பாளை யழைத்து அவளை யாக்கோபுக்கு 10 மனைவியாகக் கொடுத்தாள். லேயாளின் வேலைக்காரியாகிய சில்பாள் யாக்கோ 11 புக்கு ஒரு குமாரனைப் பெற்றாள். அப் பொழுது லேயாள்: அதிஷ்டம் என்று சொல்லி அவனுக்குக் காத் என்று பேரிட் 12 டாள். பின்பு லேயாளின் வேலைக்காரி யாகிய சில்பாள் யாக்கோபுக்கு இரண் 13 டாம் குமாரனைப் பெற்றாள். அப்பொ ழுது லேயாள்: நான் பாக்கியவதி, ஸ்திரீ கள் என்னைப் பாக்கியவதி என்பார்கள் என்று சொல்லி அவனுக்கு ஆசேர் என்று பேரிட்டாள்.

கோதுமை அறுப்பு நாட்களிலே ரூபன் 14 வயல்வெளியிலே போய்க் காதற்பழங்களைக் கண்டெடுத்து அவைகளைக் கொண்டுவந்து தன் தாயாகிய லேயாளிடங்கொடுத்தான். அது கண்ட ராகேல் லேயாளைப்பார்த்து: உன் குமாரனின் காதற்பழத்தில் எனக் குக் கொஞ்சம் தா என்றாள். அதற்கு 15 அவள்: நீ என் புருஷனை எடுத்துக்கொ ண்டது அற்பக்காரியமா? என் குமார னின் காதற்பழங்களையும் எடுத்துக்கொள்ள வேண்டுமோ என்றாள்; அதற்கு ராகேல்: உன் குமாரனின் காதற்பழங்களுக்கு ஈடாக இன்று இரவு அவர் உன்னோடி சயனிக்கட் டும் என்றாள். சாயங்காலத்தில் யாக்கோபு 16 வெளியிலிருந்து வருகையில் லேயாள் புறப் பட்டு அவனுக்கு எதிர்கொண்டுபோய்: என் குமாரனின் காதற்பழங்களால் உம் மைக் கொண்டேன்; ஆகையால் நீர் என் னிடம் வரவேண்டும் என்றாள்; அவன் அன்று இரவு அவளோடு சயனித்தான். கட 17 வுள் லேயாளுக்குச் செவி சாய்த்தருளினார். அவள் கர்ப்பவதியாகி யாக்கோபுக்கு ஐந் தாம் குமாரனைப் பெற்றாள். அப்பொழுது 18 லேயாள்: நான் என் வேலைக்காரியை என் புருஷனுக்குக் கொடுத்த பலனைக் கடவுள் எனக்குத் தந்தார் என்று சொல்லி அவ னுக்கு இசக்கார் என்று பேரிட்டாள். மறுபடியும் லேயாள் கர்ப்பவதியாகி யாக் 19 கோபுக்கு ஆறாம் குமாரனைப் பெற்றாள். அப்பொழுது லேயாள்: கடவுள் எனக்கு 20 நன்கொடையைத் தந்தார்; என் புருஷ னுக்கு நான் ஆறு குமாரரைப் பெற்றபடி யால் இப்பொழுது அவர் என்னோடி வாசம் பண்ணுவார் என்று சொல்லி அவனுக்குச் செபுலோன் என்று பேரிட்டாள். பின்பு 21 அவள் ஒரு குமாரத்தியையும் பெற்று அவ ளுக்குத் தீனாள் என்று பேரிட்டாள். கட 22 வுள் ராகேலை நினைத்தருளினார்; அவளுக் குக் கடவுள் செவிசாய்த்து அவள் கர்ப்பந் தரிக்கும்படி செய்தார். அவள் கர்ப்பவதி 23 யாகி ஒரு குமாரனைப் பெற்று: கடவுள் என் நிந்தையை நீக்கிவிட்டார் என்றும் | இன்னும் ஒரு குமாரனை யெகோவா எனக் 24 குத்தருவார் என்றும் சொல்லி அவனுக்கு யோசேப்பு என்று பேரிட்டாள். ராகேல் 25 யோசேப்பைப் பெற்றபின் யாக்கோபு லாபானைப் பார்த்து: நான் என் இடத்திற் கும் என் தேசத்திற்கும் போக என்னை அனுப்பிவிடும். நான் உமக்கு ஊழியஞ் 26 செய்து சம்பாதித்த என் மனைவிகளையும் என் பிள்ளைகளையும் எனக்குத்தாரும்; என்னைப் போகவிடும்; நான் உம்மிடத்தில் சேவித்த

சேவகம் உமக்குத் தெரியுமே என்றான்.
27 அப்பொழுது லாபான்: உனக்கு என்மேல் தயவு இருக்குமேயானால் நீ இரு; உன் நிமித்தமே யெகோவா என்னை ஆசீர்வதித்து
28 வந்தார் என்று அறியலானேன். உன் சம்பளம் இன்னதென்று எனக்குச்சொல், நான்
29 அதைத் தருவேன் என்றான். அதற்கு அவன்: நான் உம்மைச் சேவித்த விதமும் உமது மந்தை என்னிடத்தில் இருந்தவித
30 மும் உமக்குத் தெரியும். நான் வருமுன் உமக்கு இருந்தது கொஞ்சம்; நான் வந்து கால் வைத்த இடமெல்லாம் யெகோவா உம்மை ஆசீர்வதித்ததினால் அது மிகவும் பெருகியிருக்கிறது; இனிநான் என்குடும்பத்திற்குச் சம்பாத்தியம் பண்ணுவது எப்பொ
31 ழுது என்றான். அதற்கு அவன்: நான் உனக்கு என்ன தரவேண்டும் என்றான்; யாக்கோபு: நீர் எனக்கு ஒன்றும் தரவேண்டியதில்லை; நான் இப்பொழுது சொல்லுகிறபடி நீர் எனக்குச் செய்தால் உமது மந்தையைத்
32 திரும்ப மேய்த்துக் காப்பேன். நான் இன்றைக்குப்போய் உமது மந்தைகளையெல்லாம் பார்வையிட்டு அவைகளில் புள்ளியுள்ளவைகளும் வரியுள்ளவைகளும் கறுப்பான வைகளுமாகிய செம்மறியாடுகளையும் வரியுள்ளவைகளும் புள்ளியுள்ளவைகளுமான வெள்ளாடுகளையும் பிரித்துவிடுகிறேன்; அப்படிப்பட்டவை இனி எனக்
33 குச் சம்பளமாயிருக்கட்டும். அப்படியே இனிமேல் என் சம்பளமாகிய இவற்றை நீர் பார்வையிடும்போது என் நீதி விளங்கும்; புள்ளியும் வரியுமில்லாத வெள்ளாடுகளும் கறுப்பல்லாத செம்மறியாடுகளும் என் வசத்தில் இருந்தால் அவையெல்லாம் நான் திருடிக்கொண்டவைகளாய் எண்ணப்படட்டும் என்றான்.
34 அதற்கு லாபான்: நீ சொன்னபடியே
35 ஆகட்டுமென்று சொல்லி | அந்நாளிலே கலப்பு நிறமும் வரியுமுள்ள வெள்ளாட்டுக்கடாக்களையும் புள்ளியும் வரியுமுள்ள வெள்ளாடுகள் யாவையும் சற்று வெண்மையும் கருமையுமுள்ள செம்மறியாடுகள் யாவையும் பிரித்துத் தன்குமாரரிடம் ஒப்பு
36 வித்துத் | தனக்கும் யாக்கோபுக்கும் இடையிலே மூன்றுநாள் பிரயாண தூரமிருக்கும்படி வைத்தான். லாபானின் மற்ற ஆடு
37 களை யாக்கோபு மேய்த்தான். பின்பு யாக்கோபு பச்சையாயிருக்கிற புன்னை, வாதுமை, அர்மோன் என்னும் மரங்களின் கொப்புகளை வெட்டி இடையிடையே
38 வெண்மை தோன்றும்படி பட்டையை உரித்துத் தான் உரித்த கொப்புகளை ஆடுகளுக்குத் தண்ணீர் வார்க்கும் தொட்டிகளில் ஆடுகளுக்கு எதிராகப் போட்டுவைப்பான்; ஆடுகள் தண்ணீர் குடிக்க வரும்போது
39 பொலிவதுண்டு. ஆடுகள் அந்தக் கொப்பு
40 களுக்கு முன்பாகப் பொலிந்தபடியால் அவைகள் கலப்பு நிறமுள்ளதும் புள்ளியுள்ளதும் வரியுள்ளதுமான குட்டிகளைப் போட்டன. அந்த ஆட்டுக் குட்டிகளை யாக்கோபு பிரித்துக்கொண்டு ஆடுகளை லாபானுடைய மந்தையிலிருக்கும் கலப்பு நிறமானவைகளுக்கும் கறுப்பானவைகளெல்லாவற்றிற்கும் எதிராக நிறுத்தித் தன் ஆடுகளை லாபானின் மந்தையோடு சேரவிடாமல் தனிப்புறமாக வைத்துக்கொள்
41 வான். பலத்த ஆடுகள் பொலியும்போது அந்தக் கொப்புகளுக்கு எதிரே பொலியும்படி யாக்கோபு அவைகளை அந்த ஆடுகளின் கண்களுக்கு முன்பாகத் தண்ணீர்த்
42 தொட்டிகளிலே போட்டுவைப்பான். பலவீனமான ஆடுகள் பொலியும்போது அவைகளைப் போடாமலிருப்பான்; இதனால் பலவீனமானவைகள் லாபானையும் பலமுள்ளவைகள் யாக்கோபையும் சேர்ந்தன. இவ்
43 விதமாய் அந்த மனிதன் மிகவும் விருத்தியடைந்து திரளான ஆடுகளும் வேலைக்காரிகளும் வேலைக்காரரும் ஒட்டகங்களும் கழுதைகளும் உடையவனானான்.

31 அப்படியிருக்கும்போது லாபானின் குமாரர் சொல்லிக்கொண்டுவந்த வார்த்தைகளை யாக்கோபு கேள்விப்பட்டான். அவர்கள்: எங்கள் தகப்பனுடைய சொத்துக்களையெல்லாம் யாக்கோபு எடுத்துக்கொண்டான்; எங்கள் தகப்பனின் பொருளினாலே இந்த ஐஸ்வரியமையெல்லாம் அடைந்தான் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள்.
2 லாபானின் முகத்தையும் யாக்கோபு பார்த்தான். அது நேற்று மூன்றாள் இருந்ததுபோல் இல்லை, வேறுபட்டிருந்தது.
3 யெகோவா யாக்கோபினிடம்: உன்பிதாக்களுடைய தேசத்திற்கும் உன் இனத்தாரிடத்திற்கும் நீ திரும்பிப்போ; நான் உன்னோடிருப்பேன் என்று சொன்னார்.
4 அப்பொழுது யாக்கோபு ராகேலையும் லேயாளையும் வெளியிலே தன் மந்தையிருந்த இடத்திற்கு அழைத்து |
5 அவர்களிடம்: உங்கள் தகப்பனாரின் முகம் நேற்று மூன்றாள் போல இல்லை என்று எனக்குத் தெரிகிறது; என் தகப்பனுடைய தேவனோ என்னோடே இருந்து வந்திருக்கிறார்.
6 நான் என் முழு பலத்தினாலும் உங்கள் தகப்பனுக்கு ஊழியஞ்செய்தேன், அது உங்களுக்குத்தெரியும். உங்கள் தகப்பனாரோ என்னை
7

வஞ்சித்து என் சம்பளத்தைப் பத்துமுறை மாற்றினார்; ஆனால் எனக்குத் தீங்குசெய்யக் கடவுள் அவருக்கு இடங்கொடுக்க 8 வில்லை. புள்ளியுள்ளவைகள் உன் சம்பளமாகும் என்று அவர் சொன்னபோது ஆடுகளெல்லாம் புள்ளியுள்ள குட்டிகளைப் போட்டன; கலப்புநிறமானவைகள் உன் சம்பளமாகும் என்று அவர் சொன்னபோது ஆடுகளெல்லாம் கலப்புநிறக் குட்டிகளைப் போட்டன. இவ்விதமாய்க் கடவுள் உங்கள் தகப்பனாரின் ஆடுகளையெ 10 டுத்து எனக்குத் தந்தார். ஆடுகள் சினைப்படும் காலத்திலே நான் சொப்பனங்கண்டேன். சொப்பனத்தில் என் கண்களை ஏறெடுத்துப் பார்த்தேன். பார்க்கவே, இதோ, ஆடுகளோடே பொலியும் கடாக்கள் கலப்புநிறமும் புள்ளியும் வரியும் 11 உள்ளவைகளாயிருக்கக்கண்டேன். அன்றியும் தெய்வ தூதனானவர் அத்தச் சொப்பனத்தில்: யாக்கோபே என்று கூப்பிட, 12 நான்: இதோ இருக்கிறேன் என்றேன். அப்பொழுது அவர்: உன் கண்களை ஏறெடுத்துப் பார், ஆடுகளோடே பொலியும் கடாக்களெல்லாம் கலப்பு நிறமும் புள்ளியும் வரியுமுள்ளவைகள்; லாபான் உனக் 13 குச் செய்கிற யாவையும் கண்டேன். நீ ஸ்தம்பத்துக்கு அபிஷேகஞ்செய்து எனக்குப் பொருத்தனையைப் பண்ணின பேதேலிலே உனக்குத் தரிசனமான கடவுள் நானே; இப்பொழுது நீ எழுந்து இந்தத் தேசத்தை விட்டுவிட்டு உன் ஜென்ம தேசத்திற்குத் திரும்பிப்போ என்று சொன்னார் என் 14 றான். அதைக்கேட்ட ராகேலும் லேயாளும்: எங்கள் தகப்பன் வீட்டிலே இனி எங்களுக்குப் பங்கும் சுதந்தரமும் உண் 15 டோ? அவர் எங்களை அந்நியராக எண்ணுகிறாரே, அவர் எங்களை விற்று எங்கள் திரவியத்தையும் வாயிலே போட்டுக்கொண் 16 டார். ஆகவே கடவுள் எங்கள் தகப்பனிடமிருந்து எடுத்த ஐசுவரியமெல்லாம் நமக்கும் நமது பிள்ளைகளுக்கும் உரியது; இப்படியிருப்பதால் கடவுள் உமக்குச் சொன்னபடி யெல்லாம் செய்யும் என்றார் 17 கள். அப்பொழுது யாக்கோபு எழுந்து தன் பிள்ளைகளையும் தன் மனைவிகளையும் ஒட் 18 டகங்கள்மேல் ஏற்றித் | தன் மந்தைகளையும் தான் பதான் அராமிலே சம்பாதித்த மந்தைகள் அனைத்தையும் பொருள்கள் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு கானன்தேசத்திற்குத் தன் தகப்பனாகிய ஈசாக்கி 19 னிடம் போகப் புறப்பட்டான். லாபான் தன் ஆடுகளை மயிர் கத்தரிக்கப் போயிருந்தான்; அந்தச் சமயத்தில் ராகேல் தன் தகப்பனுடைய சுரூபங்களைத் திருடிக்கொண்டாள். யாக்கோபு தான் ஓடிப்போகிறதைச் சீரியனாகிய லாபானுக்கு அறிவிக்க வில்லை, திருட்டாளவாய்ப் போய்விட்டான். இப்படியாக அவன் தன் சொத்துக்களையெல்லாம் சேர்த்துக்கொண்டு ஓடிப்போனான், ஆற்றைக் கடந்து கிலெயாத்து மலைக்கு நேரே போனான்.

யாக்கோபு ஓடிப்போனது மூன்றாம் நாளிலே லாபானுக்குத் தெரியவந்தது. அவன் தன் பந்துக்களைக் கூட்டிக்கொண்டு அவனைத் தொடர்ந்து ஏழுநாள் பிரயாணம் பண்ணிக் கிலெயாத் மலையிலே அவனைக் கண்டுபிடித்தான். அன்று இரவு கடவுள் சீரியா தேசத்தானாகிய லாபானுக்குச் சொப்பனத்தில் தோன்றி: நீ யாக்கோபோடு நன்மையோ தீமையோ ஒன்றும் பேச வேண்டாம், எச்சரிக்கை என்றார். லாபான் யாக்கோபு இருந்த இடம் வந்து சேர்ந்தான்; யாக்கோபு மலையிலே கூடாரம் போட்டிருந்தான்; லாபானும் தன் பந்துக்களோடு கிலெயாத் மலையிலே கூடாரம் போட்டான். அப்பொழுது லாபான் யாக்கோபைப் பார்த்து: நீ திருட்டாளவாய் வந்துவிட்டதென்ன? என் குமாரத்திகளை யுத்தத்தில் பிடித்த சிறைகளைப்போலக் கொண்டுவந்ததென்ன? இது என்ன செய்கை? நீ என் மறைந்து ஓடிப்போய்த் திருட்டாளவாய் என்னிடமிருந்து வந்துவிட்டாய்? நீ எனக்கு அறிவித்திருந்தால் நான் உன்னைச் சந்தோஷமாய்ச் சங்கீதம் மேளதாளம் கின்னர முழக்கத்தோடு அனுப்பியிருப்பேனே. என் பேரப்பிள்ளைகளையும் என் குமாரத்திகளையும் நான் முத்தஞ் செய்ய விடாமல் போனதென்ன? நீ இப்படிச் செய்தது மதியீனம். உங்களுக்குத் தீங்கு செய்ய எனக்கு வல்லமையுண்டு; ஆகிலும் உங்கள் தகப்பனுடைய கடவுள்: நீ யாக்கோபோடு நன்மையோ தீமையோ ஒன்றும் பேசவேண்டாம், எச்சரிக்கை என்று நேற்று இரவு என்னிடம் சொன்னார். இப் 30 பொழுதும் உன் தகப்பனுடைய வீட்டிற்கே போய்விடவேண்டுமென்னும் அடக்க முடியா ஆசையினால் போகிறதானால் போய்விடலாம். என் தெய்வங்களை ஏன் திருடிக் கொண்டு போகவேண்டும் என்று கேட்டான். அதைக் கேட்டமாத்திரத்தில் யாக் 31 கோபு லாபானிடம்: உமது குமாரத்திகளைப் பலவந்தமாய்ப் பிடித்து வைத்துக்கொள்வீரென்று நான் அஞ்சினதினாலே இப்படி சொல்லிவிட்டேன். உமது தெய்வங்களையோ 32

யாரிடத்தில் கண்டுபிடிக்கிறீரோ அவனை உயிரோடே விடவேண்டாம்; உமது பொருள்கள் ஏதாவது என் வசமிருந்தால் நீர் அதை நமது சகோதரர்முன் பரிசோதித்தறிந்து அதை எடுத்துக்கொள்ளும் என்றான். ராகேல் அவைகளைத் திருடிக்கொண்டுவந்தது யாக்கோபுக்குத் தெரியாது. அப்பொழுது லாபான் யாக்கோபின் கூடாரத்திலும் லேயாளின் கூடாரத்திலும் இரண்டு வேலைக்காரிகளின் கூடாரத்திலும் புகுந்து பார்த்தும் அவற்றைக் கண்டுபிடிக்கவில்லை; பின்பு லேயாளின் கூடாரத்தைவிட்டு ராகேலின் கூடாரத்துக்குள் போனான். ராகேல் அந்தச் சுரூபங்களை எடுத்து ஒட்டகச் சேணத்தின் கீழ்வைத்து அதின் மேல் உட்கார்ந்திருந்தாள். லாபான் கூடாரம் எங்கும் தடவிப்பார்த்தும் அவைகளைக் கண்டுபிடிக்கவில்லை. அவள் தன் தகப்பனைப்பார்த்து: என் ஆண்டவனுகிய உமக்குமுன் நான் எழுந்திராதகைக் குறித்துக் கோபங்கொள்ளவேண்டாம்; ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு எனக்கு உண்டாயிருக்கிறது என்றாள்; அப்படியே அவன் அந்தச் சுரூபங்களைத் தேடியும் கண்டுபிடிக்கவில்லை.

அப்பொழுது யாக்கோபுக்குக் கோபம் பொங்கி லாபானோடு வாக்குவாதம்பண்ணி: நீர் என்னை இவ்வளவு உக்கிரமாய்த் தொடர்ந்துவரும்படி நான் செய்த தப்பிதமென்ன? நான் செய்த துரோகமென்ன? என் தட்டுமுட்டுகளையெல்லாம் தடவிப் பார்த்தீரே; உமது வீட்டுத் தட்டுமுட்டுகளில் என்னத்தைக் கண்டுபிடித்தீர்? அதை என்னுடைய சகோதரருக்கும் உம்முடைய சகோதரருக்கும் முன்பாக இங்கே வையும்; அவர்கள் எனக்கும் உமக்கும் நடுத்தீர்க்கட்டும். இந்த இருபது வருஷகாலமாய் நான் உம்மிடத்திலிருந்தேன்; உமது செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும் கிணையிலியவில்லை; உமது மந்தையின் கடாக்களை நான் தின்கவில்லை. பீறுண்டதை நான் உம்மிடத்திற்குக் கொண்டுவராமல் அதற்காக நான் உத்தரவாதம் பண்ணினேன்; பகலில் களவு போனதையும் இரவில் களவு போனதையும் என் கையில் கேட்டு வாங்கினீர். பகலிலே வெயிலும் இரவிலே குளிரும் என்னைப் பட்சித்தது; நித்திரை என் கண்களுக்குத் தூரமாயிருந்தது; இவ்விதமாய்ப் பாடுபட்டேன். இந்த இருபது வருஷகாலம் உமது வீட்டிலே இருந்தேன்; பதினாலு வருஷம் உம்முடைய இரண்டு குமாரத்திகளுக்காகவும் ஆறுவருஷம் உமது மந்தைக்காகவும் உம்மிடத்தில் சேவித்தேன்; பத்துமுறை என் சம்பளத்தை மாற்றினீர். என் பிதாவின் கடவுளாகிய ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கு பயந்து நடந்த அவரே, என்னோடிராமற்போனால் நீர் இப்பொழுது என்னை வெறுமையாய் அனுப்பிவிட்டிருப்பீர்; கடவுள் என் தாழ்வையும் என் கைப்பிரயாசத்தையும் பார்த்து நேற்று இரவு உம்மைக் கண்டித்து எச்சரித்தார் என்றான்.

அப்பொழுது லாபான் யாக்கோபினிடம்: இந்தப் பெண்கள் என் குமாரத்திகள், இந்தப் பிள்ளைகள் என் பிள்ளைகள். இந்த மந்தைகள் என் மந்தைகள்; நீ காண்கிறயாவும் என்னுடையவைகள்; என் குமாரத்திகளாகிய இவர்களையும் இவர்கள் பெற்ற பிள்ளைகளையும் இன்று நான் என்ன செய்யமுடியும்? இப்பொழுதும் எனக்கும் உனக்கும் சாட்சியாயிருக்கும் பொருட்டு நீயும் நானும் உடன்படிக்கை பண்ணிக்கொள்வோம் என்றான். அப்பொழுது யாக்கோபு ஒரு கல்லை எடுத்து அதை ஞாபகஸ்தம்பமாக நிறுத்தினான். பின்னும் யாக்கோபு தன் இனங்களைப் பார்த்து, கற்களைச் சேருங்கள் என்றான்; அவர்கள் கற்களைக் கொண்டுவந்து ஒரு குவியலாக்கினார்கள்; அந்தக் குவியலின் பக்கத்தில் போஜனம் பண்ணினார்கள். லாபான் அதற்கு ஜெகர் சகதூதா என்று பேரிட்டான். யாக்கோபு அதற்குக் கலயேத் என்று பேரிட்டான். இந்தக் குவியல் இன்று எனக்கும் உனக்கும் சாட்சி என்று லாபான் சொன்ன படியினாலே அதின்பேர் கலயேத் என்னப்பட்டது. அதற்கு மிஸ்பா என்னும் பேர் வழங்கலாயிற்று. ஏனெனில் லாபான்: நாம் ஒருவரையொருவர் விட்டு மறைந்தபின் யெகோவாவே உனக்கும் எனக்கும் நடுநிற்கிற காவல். நீ என் குமாரத்திகளைத் துயரப்படுத்தி அவர்களோடு வேறு ஸ்திரீகளையும் விவாகஞ் செய்வாயானால் அதைக் காண்பதற்கு மனுஷன்நமக்கில்லையாயினும் கடவுளே உனக்கும் எனக்கும் இடையில் சாட்சியாயிருப்பார் என்றான். பின்னும் லாபான் யாக்கோபை நோக்கி: இதோ, இந்தக் குவியல், இதோ, எனக்கும் உனக்கும் நடுவாக நான் நிறுத்தின ஸ்தம்பம். நீங்கு செய்ய நான் இந்தக் குவியலைக் கடந்து உன்னிடம் வராதபடிக்கும் நீ இந்தக் குவியலையும் இந்த ஸ்தம்பத்தையும் கடந்து என்னிடம் வராதபடிக்கும் இந்தக் குவியலும் சாட்சி இந்த ஸ்தம்பமும்

53 சாட்சி; ஆபிரகாமின் கடவுளும் நாகோ
ரின் கடவுளும் அவர்கள் பிதாவின் கட
வுளுமானவர் நமக்குள்ளே நடுநின்று நியா
யந்தீர்ப்பாராக என்றான். அப்பொழுது
யாக்கோபு தன் தகப்பனுகிய ஈசாக்கு
பயந்து நடந்த கடவுள்மேல் ஆணையிட்
54 டான். பின்பு யாக்கோபு மலையிலே பலி
யிட்டுப் போஜனம் பண்ணும்படி தன்
சகோதரரை யழைத்தான்; அப்படியே
அவர்கள் போஜனம்பண்ணி மலையில்
55 இராத்தங்கினார்கள். அதிகாலமே லாபான்
எழுந்திருந்து தன் குமாரரையும் தன் குமா
ரத்திகளையும் முத்தஞ்செய்து அவர்களை
ஆசீர்வதித்தான். பின்பு லாபான் அவர்
களைவிட்டுத் தன் இடத்திற்குத் திரும்பினான்.

**32** யாக்கோபு பிரயாணம்பண்ணுகையில்
தெய்வதூதர்கள் அவனைச் சந்தித்தார்கள்.
2 யாக்கோபு அவர்களைக் கண்டபோது: இது
கடவுளின் சேனை என்று சொல்லி அந்த
ஸ்தலத்திற்கு மக்னயீம் என்று பேரிட்
டான்.
3 பின்பு யாக்கோபு சேயீர் தேசத்திலுள்ள
ஏதோமியர் நாட்டிலிருந்த தன் சகோதரன்
ஏசாவினிடம் போகும்படி ஆட்களை
4 அழைப்பித்து: நீங்கள் என் ஆண்டவன்
ஏசாவினிடம் போய், நான் இதுவரைக்கும்
லாபானிடம் தங்கியிருந்தேன் என்றும்;
5 எனக்கு எருதுகளும் கழுதைகளும் ஆடுக
ளும் வேலைக்காரரும் வேலைக்காரிகளும்
உண்டென்றும் அவருடைய பார்வையில்
எனக்குத் தயவு கிடைக்கத்தக்கதாக ஆண்
டவனுகிய அவருக்கு இதை அறிவிக்கும்
படி ஆட்களை அனுப்பினேன் என்றும்
உமது அடியான் யாக்கோபு அறிவிக்கச்
சொன்னான் என்று சொல்லும்படி கட்டளை
கொடுத்துத் தனக்கு முன்னுக அவர்களை
6 யனுப்பினான். அந்த ஆட்கள் யாக்கோ
பினிடம் திரும்பிவந்து: நாங்கள் உமது
சகோதரன் ஏசாவினிடம் போய்வந்தோம்;
அவரும் நானூறு பேரோடே உம்மை எதிர்
7 கொள்ள வருகிறார் என்றார்கள். இதைக்
கேட்கவே யாக்கோபு மிகவும் பயந்து
கலக்கமுற்றுத் தன்னிடமிருந்த ஜனங்களை
யும் ஆடுமாடுகளையும் ஒட்டகங்களையும்
8 இரண்டு பகுதியாகப் பிரித்து: ஏசா ஒரு
பகுதியின்மேல் விழுந்து அதை முறிய
டித்தாலும் மற்றப் பகுதி தப்பித்துக்
9 கொள்ள இடமுண்டு என்றான். பின்பு
யாக்கோபு: என் தகப்பனுகிய ஆபிரகா
மின் கடவுளும் என் தகப்பனுகிய ஈசாக்
கின் கடவுளுமானவரே, உன் தேசத்திற்கும்
உன் இனத்தாரிடத்திற்கும் திரும்பிப்போ,
உனக்கு நன்மை செய்வேன் என்று என்னு
டனே சொல்லியிருக்கிற யெகோவாவே,
அடியேனுக்குத் தேவரீர் பாராட்டியிருக் 10
கிற எல்லா இரக்கத்துக்கும் எல்லா உண்
மைக்கும் நான் பாத்திரனல்ல, நான் கோ
லும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்து
போனேன்; இப்பொழுது இவ்விரண்டு பரி
வாரங்களையும் உடையவனுனேன். என் 11
சகோதரனுகிய ஏசாவின் கைக்கு என்னைத்
தப்புவியும்; அவன் வந்து என்னையும் பிள்
ளைகளையும் தாய்மார்களையும் முறியடிப்
பான் என்று அவனுக்கு நான் பயந்
திருக்கிறேன். தேவரீரோ, நான் உனக்கு 12
மெய்யாகவே நன்மை செய்து உன் சந்த
தியை எண்ணமுடியாத கடற்கரை மணல்
போல் மிகவும் பெருகப்பண்ணுவேன்
என்று சொன்னீரே என்றான். அன்று 13
இரவு அவன் அங்கேயே தங்கித் தன் கையி
லிருந்தவைகளிலே தன் சகோதரன் ஏசா
வுக்கு வெகுமானமாக; இருநூறு வெள்ளா 14
டுகளையும் இருபது வெள்ளாட்டுக் கடாக்க
ளையும் இருநூறு செம்மறியாடுகளையும் இரு
பது ஆட்டுக்கடாக்களையும்; பால் கொடுக் 15
கிற முப்பது ஒட்டகங்களையும் அவைக
ளின் குட்டிகளையும் நாற்பது கடாரிகளை
யும் பத்து காளைகளையும் இருபது பெட்
டைக் கழுதைகளையும் பத்து கழுதைக்
குட்டிகளையும் பிரித்தெடுத்து; வேலைக்கா 16
ரர் கையில் ஒவ்வொரு மந்தையைத் தனித்
தனியாக ஒப்புவித்து: நீங்கள் மந்தைக்கு
மந்தை இடம்விட்டு எனக்கு முன்னே ஓட்
டிக்கொண்டு போங்கள் என்று தன் வே
லைக்காரருக்குச் சொல்லி; முதன் முதல் 17
போகிறவனைப் பார்த்து: என் சகோதரன்
ஏசா உனக்கு எதிர்ப்பட்டு நீ யாருடைய
வன்? எங்கே போகிறாய்? உனக்கு முன்
னே கேட்டால்; நீ: இது உமது அடியா 18
னுகிய யாக்கோபுடையது, இது என் ஆண்
டவனுகிய ஏசாவுக்கு அனுப்பப்படுகிற
வெகுமதி; இதோ, அவரும் எங்கள் பின்
னே வருகிறார் என்று சொல் என்றான்.
இரண்டாம் மூன்றாம் வேலைக்காரரையும் 19
மந்தைகளின் பின்னேபோகிற அனைவரை
யும் பார்த்து: ஏசாவைக் காணும்போது நீங்
களும் இந்தப் பிரகாரமாகவே அவரிடஞ்
சொல்லி; இதோ, உமது அடியானுகிய 20
யாக்கோபு எங்கள் பின்னே வருகிறார் என்
றும் சொல்லுங்கள் என்று கட்டளையிட்
டான்; முன்னே வெகுமதியை யனுப்பி
அவனைச் சாந்தப்படுத்திக்கொண்டு பின்பு
அவன் முகத்தைப் பார்ப்பேன், அப்பொ

முது ஒருவேளை என்பேரில் தயவாயிருப்
21 பான் என்றான். அப்படியே வெகுமதி
அவனுக்கு முன் போயிற்று; அவனே
அன்று இரவு பாளயத்திலே தங்கினான்.
22 அவன் அந்த இரவிலேயே எழுந்திருந்து
தன் இரண்டு மனைவிகளையும் தன் இரண்டு
வேலைக்காரிகளையும் தன் பதினெரு குமார
ரையும் கூட்டிக்கொண்டு யாபோக்கு ஆற்
23 றை இறங்கு துறையிலே கடந்தான். அவர்
களையும் சேர்த்து ஆற்றைக் கடக்கப்பண்
ணித் தன்னுடையவைகளையெல்லாம் அக்
24 கரைப்படுத்தினான். யாக்கோபு பிந்தித்
தனித்திருந்தான்; அப்பொழுது ஒரு புரு
ஷன் பொழுது விடியுமளவும் அவனோடு
25 போராடினான். அந்தப் புருஷன் தாம்
யாக்கோபை மேற்கொள்ளமுடியாதது
கண்டு அவன் தொடைச் சந்தைத் தொட்
டான். ஆகவே அவரோடு போராடுகை
யில் யாக்கோபின் தொடைச்சந்து பிச
26 கிற்று. அவர்: நான் போகட்டும், பொழுது
விடிகிறது என்றார். அவனோ: நீர் என்னை
ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போக
27 விடேன் என்றான். அவர்: உன்பேர் என்ன
வென்று கேட்டார்; யாக்கோபு என்றான்.
28 அவரோ: உன்பேர் இனி யாக்கோபு என்
னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும்;
நீ கடவுளோடும் மனிதரோடும் போராடி
29 மேற்கொண்டாயே என்றார். அப்பொழுது
யாக்கோபு: உமது திருநாமத்தை எனக்குத்
தெரிவிக்கவேண்டுமென்று கேட்க, அவர்:
நீ என் நாமத்தைக் கேட்பானேன் என்று
சொல்லி அங்கே அவனை ஆசீர்வதித்தார்.
30 யாக்கோபு: நான் கடவுளை முகமுகமாய்க்
கண்டேன், கண்டும் உயிர்தப்பிப் பிழைத்
தேன் என்று சொல்லி அந்த ஸ்தலத்துக்குப்
31 பெனியேல் என்று பேரிட்டான். அவன்
பெனுவேலைக் கடந்துபோகையில் சூரியன்
உதயமாயிற்று; அவன் தொடைப்பிசகி
னிமித்தம் கொண்டி கொண்டி நடந்தான்.
32 அவர் யாக்கோபின் தொடைச்சந்து நரம்
பைத் தொட்டபடியினால் இஸ்ரவேல் புத்தி
ரர் இந்நாள்வரைக்கும் தொடைச் சந்து
நரம்பைப் புசிக்கிறதில்லை.

**33** யாக்கோபு தன் கண்களை ஏறெடுத்துப்
பார்த்தான். இதோ, ஏசாவும் அவனோடு
கூட நானூறு ஆட்களும் வருகிறதை
அவன் காணவே பிள்ளைகளை லேயாளிடத்
திலும் ராகேலிடத்திலும் இரண்டு வேலைக்
காரிகளிடத்திலும் வெவ்வேறுகப் பிரித்து
2 வைத்து | வேலைக்காரிகளையும் அவர்கள்
பிள்ளைகளையும் முதலிலும் லேயாளையும்
அவள் பிள்ளைகளையும் இடையிலும்

ராகேலையும் யோசேப்பையும் கடை
யிலும் நிறுத்தி | தான் அவர்களுக்கு முன் 3
னே நடந்துபோய் ஏழுவிசை தரைமட்
டும் குனிந்து வணங்கிக் கொண்
டே தன் சகோதரன் கிட்டச்சேர்ந்தான்.
ஏசாவும் எதிர்கொண்டு ஓடிவந்து அவனைத் 4
தழுவி அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு
அவனை முத்தஞ்செய்தான்; இருவரும் அழு
தார்கள். அவன் தன் கண்களை ஏறெடுத்து 5
ஸ்திரீகளையும் பிள்ளைகளையுங் கண்டு: உன்
னோடிருக்கிற இவர்கள் யார் என்று கேட்க
அவன்: கடவுள் உமது அடியானுக்குத்
தந்தருளின பிள்ளைகள் என்றான். அப் 6
பொழுது வேலைக்காரிகளும் அவர்கள்
பிள்ளைகளும் சேர்ந்துவந்து வணங்கினார்
கள். லேயாளும் அவள் பிள்ளைகளும் 7
சேர்ந்துவந்து வணங்கினார்கள்; பின்பு
யோசேப்பும் ராகேலும் சேர்ந்து வந்து
வணங்கினார்கள். அப்பொழுது அவன்: 8
எனக்கு எதிர்கொண்டு வந்த அந்த மந்தை
யெல்லாம் எதற்கு என்று கேட்க, அவன்:
என் ஆண்டவன் பார்வையில் எனக்குத்
தயவு கிடைக்கிறதற்கு என்றான். அதற்கு 9
ஏசா: என் சகோதரனே, எனக்குப் போது
மானதுண்டு; உன்னுடையது உனக்கு
இருக்கட்டும் என்றான். அதற்கு யாக் 10
கோபு: அப்படியல்ல, உமது பார்வையில்
எனக்குத் தயவு கிடைத்ததேயானால் என்
வெகுமதியை என் கையிலிருந்து ஏற்றுக்
கொள்ளும், நீர் என்மேல் பிரியமானீர்;
நான் உமது முகத்தைக்கண்டது கடவுளின்
முகத்தைக் கண்டதுபோலிருக்கிறது. கட 11
வுள் எனக்கு அநுக்கிரகம் செய்திருக்கிறார்;
வேண்டியதெல்லாம் எனக்குண்டு; உமக்
குக் கொண்டுவந்த என் நன்கொடையை
ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லி அவனை
வருந்திக் கேட்டுக்கொண்டான். அவனும்
அதை ஏற்றுக்கொண்டான். பின்பு அவன்: 12
நாம் பிரயாணப்படுவோம் வா, நான்
உனக்கு முன் நடப்பேன் என்றான். அவ 13
னே: பிள்ளைகள் இளம்பிள்ளைகள், கறவை
யான ஆடுமாடுகள் எனினிடம் இருக்
கின்றன. இது என் ஆண்டவனுக்குத்
தெரியும்; அவைகளை ஒருநாளாவது துரி
தமாய் ஓட்டினால் மந்தையெல்லாம் மாண்டு
போம். என் ஆண்டவனாகிய நீர் உமது 14
அடியானுக்கு முன்னேபோம்; நான் சேயீ
ருக்கு என் ஆண்டவனிடம் வருமளவும்
எனக்கு முன் நடக்கிற மந்தைகளின் கால்
நடைக்கும் பிள்ளைகளின் கால் நடைக்கும்
தக்கபடி மெதுவாய் அவைகளை நடத்திக்
கொண்டு வருகிறேன் என்றான். அப்பொ 15

மூது ஏசா: என்னிடத்திலிருக்கிற ஆட்களில் சிலரை நான் உன்னிடத்தில் நிறுத்திவிட்டுப் போகட்டுமா என்று கேட்க அவன்: அது எதற்கு, என் ஆண்டவன் பார்வையில் எனக்குத் தயவு கிடைத்தால் 16 அதுவே போதும் என்றான். அன்றைத்தினமே ஏசா திரும்பித் தான் வந்த வழியே 17 சேயீருக்குப் போனான். யாக்கோபு சுக்கோத்திற்குப் பிரயாணம்பண்ணித் தனக்கு ஒரு வீடு கட்டித் தன் ஆடுமாடு முதலிய மிருகங்களுக்குக் கொட்டகைகளைப் போட்டான்; அதினாலே அந்த ஸ்தலத்துக்குச் சுக்கோத் என்று பேரிட்டான்.

18 யாக்கோபு பதான் அராமிலிருந்து வந்த பின் கானான் தேசத்திலிருக்கிற சீகேமின் ஊருக்குச் சுகமாய் வந்து சேர்ந்து ஊருக்கு 19 எதிரே கூடாரம் போட்டான். தான் கூடாரம் போட்ட வெளியின் நிலத்தைச் சீகேமின் தகப்பனாகிய கமோரின புத்திரர் கையிலே நூறு வெள்ளிக்காசுக்குக் கிரயத்துக்கு 20 வாங்கி, அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டி அதற்கு ஏல் எல்லோகே இஸ்ரவேல் என்று பேரிட்டான்.

**34** யாக்கோபுக்கு லேயாளிடத்தில் பிறந்த குமாரத்தியாகிய தீனாள் தேசத்துப் பெண்க 2 களைப் பார்க்கப்போனாள். அவளை ஏவியனை கமோரின் குமாரனும் அத்தேசத்தின் பிரபுவுமாகிய சீகேம் என்பவன் கண்டு அவளைக் கொண்டுபோய் அவளோடே சய 3 னித்து அவளைக் கற்பழித்தான். அவன் மனம் யாக்கோபின் குமாரத்தியாகிய தீனாள் மேல் பற்றுதலாயிருந்தது; அவன் அந்தப் பெண்ணினிடத்தில் பிரியமாகி அவளோடு 4 பட்சமாய்ப் பேசினான். சீகேம் தன் தகப்பனாகிய கமோரினிடம்: இந்தப் பெண்ணை எனக்குக் கொள்ளவேண்டும் என்று சொன் 5 னான். தன் குமாரத்தியாகிய தீனாளை அவன் அவமானப்படுத்தினதை யாக்கோபு கேள்விப்பட்டபோது அவன் குமாரர் காட்டிலே அவனுடைய மந்தையினிடத்தில் இருந்தார்கள்; அவர்கள் வருமளவும் யாக்கோபு 6 மௌனமாயிருந்தான். அத்தருணத்தில் சீகேமின் தகப்பனாகிய கமோர் யாக்கோபோடு பேசும்படி அவனிடம் வந்தான். 7 யாக்கோபின் குமாரர் இச்செய்தியைக் கேட்டவுடனே காட்டிலிருந்து வந்தார்கள். அவன் யாக்கோபின் குமாரத்தியோடு சயனித்துச் செய்யத்தகாத மதிகெட்ட காரியத்தை இஸ்ரவேலில் செய்ததினாலே அந்த மனிதர் மனங்கொதித்து மிகவும் கோபங் 8 கொண்டார்கள். கமோர் அவர்களோடு பேசி: என் குமாரனாகிய சீகேமின் மனது உங்கள் குமாரத்தியின்மேல் பற்றுதலாயிருக்கிறது; அவளை அவனுக்கு மனைவியாகக் கொடுங்கள். நீங்கள் எங்களோடு சம்பந் 9 தங் கலந்து எங்கள் குமாரத்திகளை உங்களுக்குக் கொண்டு உங்கள் குமாரத்திகளை எங்களுக்குக் கொடுங்கள். இவ்விதமாக 10 எங்களோடு வாசம்பண்ணுங்கள்; தேசம் உங்கள் முன்பாக இருக்கிறது; இதிலே குடியிருங்கள், வியாபாரம்பண்ணிச் சொத்துக்களைச் சம்பாதியுங்கள் என்றான். சீகே 11 மும், அவள் தகப்பனையும் அவள் சகோதரரையும் நோக்கி: உங்கள் பார்வையில் எனக்குத் தயவு கிடைக்கவேண்டும்; நீங்கள் என்னிடத்தில் எதைக் கேட்டாலும் தருகிறேன்; பரிசமும் கன்கொடையும் நீங் 12 கள் எவ்வளவு கேட்டாலும் உங்கள் சொற்படி தருகிறேன்; அந்தப் பெண்ணை மாத்திரம் எனக்கு மனைவியாகக் கொடுக்கவேண்டும் என்றான். அப்பொழுது யாக்கோபின் 13 குமாரர் தங்கள் சகோதரியாகிய தீனாளைச் சீகேம் என்பவன் அவமானப்படுத்தினபடியால் அவனுக்கும் அவன் தகப்பனாகிய கமோருக்கும் வஞ்சகமான மறுமொழியாக: விருத்தசேதனமில்லாத புருஷனுக்கு நாங் 14 கள் எங்கள் சகோதரியைக் கொடுக்கலாகாது; அது எங்களுக்கு நிந்தையாகும். ஒன்று செய்யுங்கள், நீங்களும் உங்களி 15 லிருக்கும் ஆண்மக்கள் யாவரும் விருத்தசேதனம் பண்ணப்பட்டு எங்களைப்போலாகுங்கள். அப்படியானால் மாத்திரம் நாங்கள் சம்மதித்து உங்களுக்கு எங்கள் குமா 16 ரத்திகளைக் கொடுத்து உங்கள் குமாரத்திகளை எங்களுக்குக் கொண்டு உங்களோடே குடியிருந்து ஏகஜனமாயிருப்போம். நீங்கள் 17 எங்கள் சொல்லைக் கேளாமலும் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளாமலும் போனால் நாங்கள் எங்கள் குமாரத்தியை அழைத்துக் கொண்டு போய்விடுவோம் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னது கமோருக் 18 கும் கமோரின் குமாரனாகிய சீகேமுக்கும் நலமாய்த் தோன்றினது. அந்த வாலிபன் 19 யாக்கோபின் குமாரத்தியின்மேல் பிரியமாயிருந்தபடியால் அந்தக் காரியத்தைச் செய்ய அவன் தாமதம்பண்ணவில்லை. அவன் தன் தகப்பன் வீட்டார் அனைவரிலும் மேன்மையுள்ளவனாயிருந்தான். கமோ 20 ரும் அவன் குமாரன் சீகேமும் தங்கள் ஊர் வாசலில் வந்து தங்கள் ஊராரோடு பேசி: இந்த மனிதர் நம்மோடு சமாதானமாயிருக்கிறார்கள்; அவர்கள் இந்தத் தேசத்தில் 21 வாசம்பண்ணி இதிலே வியாபாரம் பண்ணட்டும்; இதோ, தேசம் விஸ்தாரமாயிருக்

கிறது, அவர்களும் வாசம்பண்ணலாம், அவர்கள் குமாரத்திகளே நமக்கு மனைவிகளாகக்கொண்டு நமது குமாரத்திகளே அவர்
22 களுக்குக் கொடுப்போம். அந்த மனிதரோ ஒரு காரியம் கேட்கிறார்கள். அவர்கள் விருத்தசேதனம் பண்ணப்பட்டவர்களாயிருக்கிறதுபோல நம்மிலுள்ள ஆண்மக்கள் யாவரும் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்படியானால்தான் அவர்கள் நம்மோடு
23 வாசம்பண்ணச் சம்மதிப்பார்கள். அவர்களுடைய ஆடுமாடுகள் ஆஸ்திகள் மிருக ஜீவன்கள் எல்லாம் நம்முடையவைகளாகுமல்லவா? நாம் மாத்திரம் சம்மதிப்போம், அவர்கள் நம்மோடு வாசம் பண்ணுவார்
24 கள் என்று சொன்னார்கள். அப்பொழுது கமோரின் ஊரார் அனைவரும் அவன் சொல்லையும் அவன் குமாரனுகிய சீகேமின் சொல்லையும் கேட்டு அவனுடைய ஊராரான ஆண்மக்கள் யாவரும் விருத்தசேதனம் பண்ணிக்கொண்டார்கள்.
25 மூன்றாம் நாளில் அவர்களுக்கு நோவெடுத்துக்கொண்டபோது யாக்கோபின் குமாரரும் தீனுனின் சகோதரருமான சிமியோன் லேவி என்னும் இரண்டுபேரும் தங்கள் பட்டயங்களே எடுத்துக்கொண்டு துணிகரமாய் ஊருக்குள் பாய்ந்து ஆண்மக்கள் யாவரையும் கொன்றுபோட்டார்கள்.
26 கமோரையும் அவன் குமாரன் சீகேமையும் பட்டயக்கருக்காலே கொன்று சீகேமின் வீட்டிலிருந்த தீனுவே அழைத்துக்கொண்டு
27 போய்விட்டார்கள். மேலும் யாக்கோபின் குமாரர் வெட்டுண்டவர்களிடத்தில் வந்து தங்கள் சகோதரியை அவர்கள் அவமானப்படுத்தினதற்காக ஊரைக் கொள்ளையிட்டு;
28 அவர்களுடைய ஆடுமாடுகளையும் கழுதைகளையும் ஊரிலும் வயல்வெளியிலும் இருந்த
29 வைகள் யாவையும் | அவர்களுடைய எல்லாத் தட்டுமுட்டுகளையும் எடுத்துக்கொண்டு அவர்களுடைய எல்லாக் குழந்தைகளையும் ஸ்திரீகளையும் சிறைபிடித்து வீட்டிலிருந்த எல்லாவற்றையும் கொள்ளையிட்டார்கள்.
30 அப்பொழுது யாக்கோபு சிமியோனையும் லேவியையும் பார்த்து: இந்தத் தேசத்தில் குடியிருக்கிற கானனியரிடத்திலும் பாரசீகரிடத்திலும் என் வாசனையை நீங்கள் கெடுத்ததினாலே என்னை அபாயத்துக்குள்ளாக்கினீர்கள். என்னுடிருப்பவர்கள் சொற்பப்பேர்; அவர்கள் எனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடி நானும் என் குடும்பமும் அழியும்படி என்னை வெட்டிப்போடுவார்
31 களே என்றான். அவர்களோ: எங்கள் சகோதரியை அவர்கள் ஒரு வேசியைப் போல் நடத்தலாமோ என்றார்கள்.

35 கடவுள் யாக்கோபினிடம்: நீ எழுந்து பேதேலுக்குப்போய் அங்கே குடியிரு; உன் சகோதரனுகிய ஏசாவின் முகத்திற்கு விலகி நீ ஓடிப்போனபோது உனக்குக் கடவுள் தரிசனமானாரே, அவருக்கு அங்கே ஒரு
2 பலிபீடத்தை அமைப்பாய் என்றார். யாக்கோபு தன் வீட்டாரையும் தன்னுடிருந்த மற்ற அனைவரையும் பார்த்து: உங்களிடத்திலிருக்கிற அந்நிய தெய்வங்களே விலக்கிப்போட்டு உங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டு உங்கள் வஸ்திரங்களே மாற்றுங்
3 கள். நாம் எழுந்து பேதேலுக்குப் போவோம் வாருங்கள். என் ஆபத்துகாலில் என் விண்ணப்பத்திற்கு உத்தரவு அருளிச்செய்து நான் நடந்தவழியிலே என்னுடிருந்த கடவுளுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை யமைப்பேன் என்றான். அப்பொழுது
4 அவர்கள் தங்களிடமிருந்த எல்லா அந்நிய தெய்வங்களையும் தங்கள் காதணிகளையும் யாக்கோபினிடங் கொடுத்தார்கள்; யாக்கோபு அவைகளைச் சீகேம் ஊர் அருகே இருந்த கர்வாலிமரத்தின் கீழே புதைத்துப் போட்டான். பின்பு பிரயாணமானார்கள்;
5 அவர்களைச் சுற்றிலுமிருந்த ஊராருக்குக் கடவுளால் பயங்கரம் உண்டானதினால் அவர்கள் யாக்கோபின் குமாரரைப் பின்தொடராதிருந்தார்கள். யாக்கோபும் அவ
6 னுடிருந்த எல்லா ஜனங்களும் கானான்தேசத்திலுள்ள லூசுக்கு வந்தார்கள்; அதுதான் பேதேல். அங்கே அவன் ஒரு பலிபீடத்
7 தைக் கட்டித் தன் சகோதரனின் முகத்துக்கு விலகியோடினபோது அங்கே தனக்குக் கடவுள் தரிசனமானபடியால் அந்த ஸ்தலத்திற்கு எல்பேதேல் என்று பேரிட்டான். ரெபெக்காளின் தாதியாகிய தெபொ
8 ராள் மரித்துப் பேதேலுக்குச் சமீபமாயிருந்த கர்வாலிமரத்தின்கீழ் அடக்கம்பண்ணப்பட்டாள்; அதற்கு அல்லோன் பாகூத் என்னும் பேர் உண்டாயிற்று.

9 யாக்கோபு பதான் அராமிலிருந்து வந்த பின்பு கடவுள் அவனுக்கு மறுபடியும் தரிசனமாகி | அவனே ஆசீர்வதித்து: உன்பேர்
10 யாக்கோபு என்பது, இனி உன்பேர் யாக்கோபு எனப்படாமல் இஸ்ரவேல் என்று வழங்கும் என்று சொல்லி அவனுக்கு இஸ்ரவேல் என்று பேரிட்டார். பின்னும் கட
11 வுள் அவனைப்பார்த்து: நான் சர்வவல்லவரான கடவுள், நீ பலுகிப் பெருகுவாயாக; ஒரு ஜாதியும் ஜாதிகளின் திரளும் உன்னிலிருந்து உண்டாகும்; ராஜாக்களும் உன் சந்

12 தலியில் தோன்றுவார்கள். நான் ஆபிரகா
முகீகும் ஈசாக்குக்கும் கொடுத்த தேசத்தை
உனக்குக் கொடுப்பேன்; உனக்குப்பின்
உன் சந்ததிக்கும் இந்தத் தேசத்தைக் கொ
13 டுப்பேன் என்று சொல்லிக் | கடவுள் அவ
னுடேபேசின ஸ்தலத்திலிருந்து அவன
14 விட்டு ஏறிப்போனார். அப்பொழுது யாக்
கோபு தன்னுடே அவர் பேசின ஸ்தலத்தி
லே ஒரு ஸ்தம்பத்தை, கல்ஸ்தம்பத்தை,
நிறுத்தி அதின்மேல் பானபலியை ஊற்றி
15 எண்ணெயையும் வார்த்தான். கடவுள்
தன்னுடு பேசின அந்த ஸ்தலத்திற்கு யாக்
கோபு பேத்தேல் என்று பேரிட்டான்.
16 பின்பு பேதேலை விட்டுப் பிரயாணமானார்
கள். எப்பிராத்தாவுக்கு வர இன்னும்
கொஞ்சத் தூரமிருக்கும்போது ராகேலுக்
17 குப் பிரசவகாலம் வந்தது; பிரசவத்தில்
அவள் மிகவும் வாதைப்பட்டாள்; அப்படி
வாதைப்படுகையில் மருத்துவச்சி அவளைப்
பார்த்து: பயப்படாதே, இந்த முறையும்
18 ஒரு ஆண்பிள்ளை பெறுவாய் என்றாள். அவ
ளோ மரித்துப்போனாள்; அவள் ஆத்துமா
பிரியும்போது அவள் அவனுக்கு பெனோனி
என்று பேரிட்டாள்; அவன் தகப்பனோ
அவனுக்குப் பென்யமீன் என்று பேரிட்
19 டான். ராகேல் மரித்தபின் பெத்லகேம்
என்னும் எப்பிராத்தா ஊருக்குப்போகிற
வழியிலே அடக்கம் பண்ணப்பட்டாள்.
20 அவள் கல்லறையின்மேல் யாக்கோபு ஒரு
சிலையை நிறுத்தினான்; அதுவே இந்நாள்
வரைக்கும் ராகேலுடைய கல்லறையின்
21 சிலையென வழங்குகிறது. இஸ்ரவேல் பிர
யாணமாகி ஏதேர் கோபுரத்திற்கு அப்புறத்
22 தில் கூடாரம் போட்டான். இஸ்ரவேல்
அந்தத் தேசத்தில் தங்கிக் குடியிருக்கும்
போது ரூபன் போய்த் தன் தகப்பனுடைய
மறுமனையாட்டியாகிய பில்காளோடே
சயனித்தான்; அதை இஸ்ரவேல் கேள்விப்
பட்டான்.

23 யாக்கோபின் குமாரர் பன்னிரண்டுபேர்:
யாக்கோபின் மூத்தமகனாகிய ரூபன், சிமி
யோன், லேவி, யூதா, இசக்கார், செபு
லோன் என்பவர்கள் லேயாள் பெற்ற
24 குமாரர். யோசேப்பும் பென்யமீனும்
25 ராகேல் பெற்ற குமாரர். தாணும் நப்தலி
யும் ராகேலின் வேலைக்காரியாகிய பில்க்
26 காள் பெற்ற குமாரர். காத்தும் ஆசேரும்
லேயாளின் வேலைக்காரியாகிய சில்பாள்
பெற்ற குமாரர்; இவர்களே யாக்கோபுக்
குப் பதான் அராமிலே பிறந்த குமாரர்.
27 யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கினி
டம் மம்ரேக்கு, எப்பெரோன் என்னும் கீரி
யாத் அர்பாவுக்கு வந்தான்; அதுதான்
ஆபிரகாமும் ஈசாக்கும் தங்கியிருந்த இடம்.
28 ஈசாக்கு நூற்றெண்பது வருஷம் உயிரோடி
29 ருந்து விருத்தாப்பியமும் பூரண ஆயுசு
முள்ளவனாய்ப் | பிராணன்போய் மரித்துத்
தன் ஜனத்தாரோடு சேர்க்கப்பட்டான்.
அவன் குமாரராகிய ஏசாவும் யாக்கோபும்
அவனை அடக்கம் பண்ணினார்கள்.

36 ஏசாவின் வம்சவரலாறு:— இவர்களே
2 ஏதோமியர். ஏசா கானான்தேசத்துப் பெண்
களில் ஏத்தியனான ஏலோனின் குமாரத்தி
யாகிய ஆதாளையும் ஏவியனாகிய சிபியோ
னின் பேத்தியும் ஆனாகின் குமாரத்தியுமா
கிய ஒகோலிபாமாளையும் விவாகம் பண்ணி
3 யிருந்தான். அன்றியும் இஸ்மவேலின்
குமாரத்தியும் நெபாயோத்தின் சகோதரியு
மாகிய பஸ்மாத்தையும் விவாகம் பண்ணி
4 யிருந்தான். ஆதாள் ஏசாவுக்கு எலீப்பா
5 சைப் பெற்றாள்; பஸ்மாத்து ரெகுவேலைப்
பெற்றாள்; ஒகோலிபாமாள் எயூஷையும்
யாலாமையும் கோராகையும் பெற்றாள்;
இவர்களே ஏசாவுக்குக் கானான்தேசத்தில்
6 பிறந்த குமாரர். ஏசா தன் மனைவிகளையும்
தன் குமாரரையும் தன் குமாரத்திகளையும்
தன் வீட்டிலுள்ள யாவரையும் தன் ஆடு
மாடுகளையும் மற்ற மிருகங்கள் யாவையும்
தான் கானான்தேசத்திலே சம்பாதித்த ஆஸ்தி
முழுவதையும் சேர்த்துக்கொண்டு தன்
சகோதரனாகிய யாக்கோபைவிட்டுப் பிரிந்
7 து வேறே தேசத்துக்குப் போனான். அவர்
கள் ஆஸ்தி மிகுதியாயிருந்தபடியினால்
அவர்கள் ஒருமித்து வாசம்பண்ண முடியா
மற்போயிற்று; அவர்கள் மந்தைகளினிமித்
தம் அவர்கள் தங்கியிருந்த பூமி அவர்களைத்
8 தாங்கக்கூடாததாயிருந்தது. அப்படியிருக்
கவே ஏசா சேயீர் மலைநாட்டில் குடியேறி
னான்; ஏசாவுக்கு ஏதோம் என்றும்
பேருண்டு.

9 சேயீர் மலைநாட்டிலிருக்கிற ஏதோ
மியரின் தகப்பனாகிய ஏசாவின் சந்த
10 திகளும் | ஏசாவினுடைய குமாரரின்
நாமங்களுமாவன: ஏசாவின் மனைவியா
கிய ஆதாளின் குமாரன் எலீப்பாஸ்;
ஏசாவின் மனைவியாகிய பஸ்மாத்தின்
குமாரன் ரெகுவேல். எலீப்பாசின் குமா
11 ரர், தேமான், ஓமார், செப்போ, கத்தாம்,
கேனாஸ் என்பவர்கள். திம்னாள் ஏசாவின்
12 குமாரனாகிய எலீப்பாசுக்கு வைப்பாட்டி
யாயிருந்து எலீப்பாசுக்கு அமலேக்கைப்
பெற்றாள்; இவர்களே ஏசாவின் மனைவியா
கிய ஆதாளின் புத்திரர். ரெகுவேலுடைய
13 குமாரர், நகாத், செராகு, சம்மா, மீசா என்

பவர்கள்; இவர்களே ஏசாவின் மனைவியா
14 கிய பஸ்மாத்தின் புத்திரர். சிபியோனின்
பேத்தியும் ஆனாகின் குமாரத்தியுமான
ஒகோலிபாமாள் என்கிற ஏசாவின் மனைவி
எயூஷ், யாலாம், கோராகு என்னும் புத்திர
15 ரை ஏசாவுக்குப் பெற்றாள். ஏசாவின்
குமாரரில் தோன்றிய பிரபுக்கள்: ஏசாவுக்கு
மூத்த மகனாகிய எலீப்பாசினுடைய குமார
ரில் தேமான்பிரபு, ஓமார்பிரபு, செப்போ
16 பிரபு, கேனஸ்பிரபு, கோராகுபிரபு, | கத்
தாம்பிரபு, அமலேக்குபிரபு என்பவர்கள்;
இவர்கள் ஏதோம் தேசத்தில் எலீப்பாசின்
சந்ததியும் ஆதாளின் குமாரருமாயிருந்த பிர
17 புக்கள். ஏசாவின் குமாரனாகிய ரெகுவே
லின் புத்திரரில் நகாத்பிரபு, சேராகுபிரபு,
சம்மாபிரபு, மீசாபிரபு என்பவர்கள்; இவர்
கள் ஏதோம் தேசத்தில் ரெகுவேலின் சந்ததி
யும் ஏசாவின் மனைவியாகிய பஸ்மாத்தின்
18 குமாரருமாயிருந்த பிரபுக்கள். ஏசாவின்
மனைவியாகிய ஒகோலிபாமாளின் குமாரர்,
எயூஷ்பிரபு, யாலாம்பிரபு, கோராகுபிரபு
என்பவர்கள்; இவர்கள் ஆனாகின் குமாரத்
தியும் ஏசாவின் மனைவியுமாகிய ஒகோலிபா
19 மாளின் சந்ததியில் வந்த பிரபுக்கள். இவர்
களே ஏதோம் என்னும் ஏசாவின் சந்ததி
யார்; இவர்களே அவர்களிலிருந்த பிரபுக்
கள்.

20 அந்தத் தேசத்தின் குடிகளாகிய கோரிய
னான சேயீரின் குமாரர் லோத்தான், சோ
21 பால், சிபியோன், ஆனாகு, திஷோன், ஏத்
சேர், தீஷான் என்பவர்கள்; இவர்களே
ஏதோம் தேசத்தில் சேயீரின் புத்திரராகிய
கோரியரின் சந்ததியில் வந்த பிரபுக்கள்.
22 லோத்தானின் குமாரர் கோரி, ஏமாம் என்
பவர்கள்; லோத்தானின் சகோதரி திம்னாள்.
23 சோபாலின் குமாரர், அல்வான், மானகாத்,
ஏபால், ஷெப்போ, ஒனாம் என்பவர்கள்.
24 சிபியோனின் குமாரர், அயா, ஆனாகு என்
பவர்கள்; வனாந்தரத்திலே தன் தகப்பனாகிய
சிபியோனின் கழுதைகளை மேய்க்கையில்
வெந்நீரூற்றுகளைக் கண்டுபிடித்த ஆனாகு
25 இவன்தான். ஆனாகின் பிள்ளைகள்
திஷோன், ஒகோலிபாமாள் என்பவர்கள்;
இந்த ஒகோலிபாமாள் ஆனாகின் குமாரத்தி.
26 திஷோனின் குமாரர் எம்தான், எஸ்பான்,
27 இத்ரான், கெரான் என்பவர்கள். ஏத்
சேருடைய குமாரர் பில்காள், சகவான்,
28 அக்கான் என்பவர்கள். தீஷானின் குமா
29 ரர் ஊத்ஸ், அரான் என்பவர்கள். கோரிய
ரின் சந்ததியில் வந்த பிரபுக்கள் லோத்
தான்பிரபு, சோபால்பிரபு, சிபியோன்பிரபு,
30 ஆனாகுபிரபு, திஷோன்பிரபு, ஏத்சேர்பிரபு,
திஷான்பிரபு என்பவர்கள். இவர்களே
சேயீர்தேசத்திலே தங்கள் தங்கள் இடங்
களிலிருந்த கோரியர் சந்ததிப் பிரபுக்கள்.

இஸ்ரவேல் ராஜாக்கள் அரசாளுமுன்னே 31
ஏதோம் தேசத்திலே அரசாண்ட ராஜாக்
கள்: பேயோரின் குமாரனாகிய பேலா 32
ஏதோமிலே அரசாண்டான், அவன் பட்ட
ணம் தின்காபா. பேலா மரித்தபின் 33
போஸ்ரு ஊராளாகிய சேராகின் குமாரன்
யோபாப் அவன் ஸ்தானத்தில் ராஜாவா
னான். யோபாப் மரித்தபின், தேமானிய 34
தேசத்தானாகிய உஷாம் அவன் ஸ்தானத்
தில் ராஜாவானான். உஷாம் மரித்தபின் 35
மோவாபின் நாட்டிலே மிதியானியரை
முறியடித்த பேதாதின் குமாரன் ஆதாத்
அவன் ஸ்தானத்தில் ராஜாவானான். அவன் 36
பட்டணம் ஆவீத். ஆதாத் மரித்தபின்
மஸ்ரேக்கா ஊராளாகிய சம்லா அவன்
ஸ்தானத்தில் ராஜாவானான். சம்லா மரித்த 37
பின் நதிக்கு அருகான ரெகொபோத் ஊரா
ளாகிய சவுல் அவன் ஸ்தானத்தில் ராஜாவா
னான். சவுல் மரித்தபின் அக்போரின் 38
குமாரன் பாகால்கானான் அவன் ஸ்தானத்
தில் ராஜாவானான். அக்போரின் குமாரன் 39
பாகால்கானான் மரித்தபின் ஆதார் அவன்
ஸ்தானத்தில் ராஜாவானான். அவன் பட்ட
ணம் பாகு; அவன் மனைவியின் பேர்
மெகேதபேல்; அவள் மத்ரேத்தின் குமா
ரத்தி, மேசகாபின் பேத்தி.

தங்கள் பற்பல வம்சங்களின்படியேயும் 40
வாசஸ்தலங்களின்படியேயும் நாமதேயங்க
ளின்படியேயும் ஏசாவின் சந்ததியில் தோன்
றிய பிரபுக்களின் நாமங்களாவன; திம்னா
பிரபு, அல்வாபிரபு, யெதேத்பிரபு, | ஒகோ 41
லிபாமாபிரபு, ஏலாபிரபு, பினோன்பிரபு, |
கேனஸ்பிரபு, தேமான்பிரபு, மிப்சார் 42
பிரபு, | மக்தியேல்பிரபு, ஈராம்பிரபு; இவர் 43
களே தங்கள் சொந்தமான தேசத்திலே பற்
பல இடங்களில் குடியிருந்த ஏதோம் சந்த
திப்பிரபுக்கள்; இந்த ஏதோமியருக்குத்
தகப்பன் ஏசா.

தன் தகப்பன் தங்கிவந்த தேசத்திலேயே 37
யாக்கோபும் குடியேறி வாசம்பண்ணினான்.
அது கானான் தேசம்.

யாக்கோபுடைய சந்ததியின் வரலாறு: 2
யோசேப்பு பதினேழு வயதுள்ளவனாய்த்
தன் சகோதரரோடு ஆடுகளை மேய்த்துக்
கொண்டிருந்தான்; இவனாகிய அவன்
பில்காள் சில்பாள் என்னும் தன் தகப்ப
னுடைய மனையாட்டிகளின் குமாரரோடி
ருந்து அவர்களைப் பற்றிய துர்ச்செய்திகளைத்
தன் தகப்பனுக்குச் சொல்லிவருவான்.

3 இஸ்ரவேலின் முதிர்வயதிலே யோசேப்பு பிறந்தபினால் இஸ்ரவேல் தன் குமாரர் எல்லாரிலும் அவனை அதிகமாய் நேசித்து அவனுக்கு நிலையங்கியொன்றைச் செய்வித்
4 தான். தங்கள் எல்லாரிலும் அவனைத் தங்கள் தகப்பன் அதிகமாய் நேசிக்கிறதை அவன் சகோதரர் கண்டபோது அவனைப் பகைத்தார்கள். அவனோடு பட்சமாய்ப் பேசவும் அவர்களுக்கு வாய்வரவில்லை.
5 அன்றியும் யோசேப்பு ஒரு சொப்பனங் கண்டு அதைச் சகோதரருக்கு அறிவித்தான்; அதினிமித்தமும் அவனை இன்னும்
6 அதிகமாய்ப் பகைத்தார்கள். அவன் அவர்களைப் பார்த்து: நான் கண்ட சொப்பனத்
7 தைக்கேளுங்கள். நாம் வயலில் அறுத்தஅரிகளைக் கட்டிக்கொண்டிருந்தோம்; என்னுடைய அரிக்கட்டு நிமிர்ந்திருந்தது; உங்கள் அரிக்கட்டுகளோ என் அரிக்கட்டைச்
8 சுற்றி வணங்கி நின்றன என்றான். அதைக் கேட்ட அவன் சகோதரர்: நீ எங்கள்மேல் துரைத்தனம் பண்ணத்தான்போகிறாயோ? நீ எங்களை ஆளப்போகிறாயோ என்று சொல்லி அவனை அவன் சொப்பனங்களினிமித்தமும் அவன் வார்த்தைகளினிமித்தமும் இன்னும் அதிகமாய்ப் பகைத்துவந்
9 தார்கள். அவன் மற்றொரு சொப்பனங் கண்டுதன் சகோதரரைப் பார்த்து: நான் இன்னும் ஒரு சொப்பனம் கண்டேன்; சூரியனும் சந்திரனும் பதினொருநட்சத்திரங்களும் என்னை வணங்கி நின்றன என்றான்.
10 இதை அவன் தன் தகப்பனுக்கும் தன் சகோதரருக்கும் சொன்னபோது அவன் தகப்பன் அவனிடம்: நீ கண்ட இந்தச் சொப்பனம் என்ன? நானும் உன் தாயாரும் உன் சகோதரரும் தரைமட்டும் குனிந்து உன்னை வணங்க வருவோமோ என்று அவ
11 னைக் கடிந்துகொண்டான். அவன் சகோதரர் அவன்மேல் பொறுமை கொண்டார்கள்; அவன் தகப்பனோ அவன் சொன்னதை மனதிலே வைத்துக்கொண்டான்.
12 அவன் சகோதரர் சீகேம் அண்டையிலே தங்கள் தகப்பனின் ஆடுகளை மேய்க்கப்
13 போயிருந்தார்கள். அப்பொழுது இஸ்ரவேல் யோசேப்பினிடம்: உன் சகோதரர் சீகேம் பக்கத்திலே ஆடுகளை மேய்க்கிறார்கள் அல்லவா? உன்னை அவர்களிடம் அனுப்பப்போகிறேன், வா என்றான். அவ
14 ன், இதோ, போகிறேன் என்றான். அப்பொழுது தகப்பன்: நீ போய் உன் சகோதரர் எப்படி இருக்கிறார்களென்றும் ஆடுகள் எப்படி இருக்கின்றன என்றும் பார்த்து வந்து எனக்கு அறிவி என்று சொல்லி எப்பெரோன் பள்ளத்தாக்கிலே இருந்து அவனை அனுப்பினான்; அப்படியே அவன் சீகேமுக்குப் போய்ச்சேர்ந்தான்.
15 அவன் வயல்வெளியிலே சுற்றித்திரிந்து கொண்டிருக்கையில் ஒரு மனிதன் அவனைக்கண்டு என்ன தேடுகிறாய் என்று
16 கேட்க அவன்: என் சகோதரரைத் தேடுகிறேன், அவர்கள் எங்கே ஆடுமேய்க்கிறார்கள் சொல்லும் என்றான்.
17 அந்த மனிதன்: அவர்கள் இவ்விடத்திலிருந்து போய்விட்டார்கள். தோத்தானுக்குப் போவோம் என்று அவர்கள் பேசிக்கொண்டதைக் கேட்டேன் என்றான்; அப்பொழுது யோசேப்பு தன் சகோதரரைத் தொடர்ந்து போய் அவர்களைத் தோத்தானிலே கண்டு
18 பிடித்தான். அவர்கள் அவனைத் தூரத்தில் வரக்கண்டு அவன் கிட்ட வருமுன்னேயே அவனைப்பற்றிச் சதியோசனைபண்ணி அவனைக் கொன்றுபோடத் தீர்மானித்து ஒருவரையொருவர் பார்த்து: இதோ,
19 சொப்பனக்காரன் வருகிறான், நாம் அவ
20 னைக்கொன்று இந்தக் குழிகளில் ஒன்றிலே அவனைப் போட்டுவிட்டு ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்துப்போட்டது என்று சொல்லுவோம் வாருங்கள்; அவனுடைய சொப்பனங்கள் எப்படி முடியும் பார்ப்போம் என்றார்கள்.
21 ரூபன் அதைக்கேட்டு அவனை அவர்கள் கைக்குத் தப்புவிக்க விரும்பினவனாய் அவர்களிடம்: நாம் அவன் உயிரை வாங்கவேண்டாம்;
22 நீங்கள் இரத்தம் சிந்தலாகாது; நீங்கள் அவன்மேல் கை போடாமல் அவனை வனாந்தரத்திலுள்ள இந்தக் குழியிலே போட்டுவிடுங்கள் என்று சொன்னான். அவனை அவர்கள் கைக்குத் தப்புவித்து அவன் தகப்பனிடம் அவனைத் திரும்பக் கொண்டுபோய்விட வேண்டுமென்று இப்படிச் சொன்னான்.
23 யோசேப்பு தன் சகோதரரிடம் வந்துசேரவே, அவன் உடுத்திக்கொண்டிருந்த நிலையங்கியை அவர்கள் கழற்றி—அவனை
24 எடுத்து அந்தக்குழியிலே போட்டார்கள்; அது தண்ணீரில்லாத வெறுங்குழி.

25 பின்பு அவர்கள் போஜனஞ்செய்யும்படி உட்கார்ந்தார்கள்; அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, கிலெயாத்திலிருந்து வருகிற இஸ்மவேலர் வியாபாரக் கூட்டமொன்றைக் கண்டார்கள்; அவர்கள் எகிப்துக்குக் கொண்டுபோகும்படி கந்தவர்க்கங்களையும் பிசினையும் லத்தையும் வெள்ளைப்போளத்தையும் ஒட்டகங்கள்மேல் ஏற்றிக்கொண்டுவந்தார்கள்.
26 அப்பொழுது யூதா தன் சகோதரரைப்

பார்த்து: நாம் நமது சகோதரனைக்கொன்று அவன் இரத்தத்தை மறைப்பதினால் லாபம்
27 என்ன? அவனை இந்த இஸ்மவேலருக்கு விற்றுப்போடுவோம், வாருங்கள்; நமது கை அவன்மேல் படாதிருப்பதாக; அவன் நமது சகோதரன், நமது மாம்சம் என்றான். அவன் சகோதரரும் அவன் சொல்லுக்கு
28 இணங்கினார்கள். வர்த்தகரான மிதியானியர் அவ்வழியாய்க் கடந்துபோகையில் அவர்கள் யோசேப்பை அந்தக் குழியிலிருந்து தூக்கியெடுத்து அவனை இஸ்மவேலர் கையில் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப் போட்டார்கள். இவர்கள் யோசேப்பை
29 எகிப்திற்குக் கொண்டுபோனார்கள். பின்பு ரூபன் அந்தக் குழியினிடம் போனபோது யோசேப்பு குழியில் இல்லாததுகண்டு தன்
30 வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு | தன் சகோதரரிடம் திரும்பிவந்து: இளைஞனைக் காணோமே, ஐயோ! நான் எங்கே போ
31 வேன் என்றான். அவர்கள் யோசேப்பின் அங்கியை எடுத்து ஒரு வெள்ளாட்டுக் கடாவை அடித்து அங்கியை இரத்தத்திலே
32 தோய்த்து, கிலியங்கியைத் தங்கள் தகப்பனிடம் அனுப்பி: இதை நாங்கள் கண்டெடுத்தோம், இது உமது குமாரனின் அங்கியோ, அல்லவோ, பாரும் என்று
33 சொல்லச்சொன்னார்கள். யாக்கோபு அதைப்பார்த்து: இது என் குமாரனின் அங்கிதான், ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்துப்போட்டது, யோசேப்பு பீறுண்டேபோனான் என்று புலம்பித் தன் வஸ்தி
34 ரங்களைக் கிழித்துத் | தன் அரையில் இரட்டுக் கட்டிக்கொண்டு அநேகநாள் தன் குமாரனினிமித்தம் துக்கித்துக்கொண்டிருந்
35 தான். அவனுடைய குமாரர் குமாரத்திகள் எல்லாரும் அவனுக்கு ஆறுதல் சொல்லவந்து நின்றார்கள்; அவனோ ஆறுதலுக்கு இடங்கொடாமல் நான் துக்கத்தோடே என் குமாரனிடம் பாதாளத்தில் இறங்குவேன் என்றான். இவ்விதமாக அவனுடைய தகப்பன் அவனிமித்தம் அழுது
36 கொண்டிருந்தான். அந்த மிதியானியர் யோசேப்பை எகிப்திலே பார்வோனின் பிரதானியும் காவற்சேனாதிபதியுமாகிய போத்திப்பார் என்பவனிடம் விற்றார்கள்.

**38** அக்காலத்திலே யூதா தன் சகோதரரை விட்டு அதுல்லாம் ஊராளுகிய ஒருவனிடம் போய்ச்சேர்ந்தான்; அவன்பேர் ஈரா.
2 அங்கே யூதா, சூவா என்னும் ஒரு கானானியனுடைய குமாரத்தியைக்கண்டு அவளை விவாகம்பண்ணி அவளோடே சேர்ந்தான்.
3 அவள் கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெற்றாள்; அவனுக்கு ஏர் என்று பேரிட்டான். அவள் மறுபடியும் கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப்பெற்று அவனுக்கு ஓனான் என்று பேரிட்டாள். அவள் மூன்றுமுறையும் கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப்பெற்று அவனுக்குச் சேலா என்று பேரிட்டாள்; அவள் இவனைப் பெறுகிறபோது யூதா கெசீபிலே இருந்தான். யூதா தன் மூத்த மகனாகிய ஏர் என்பவனுக்குத் தாமார் என்னும் பேருள்ள ஒரு பெண்ணைக் கொண்டான். யூதாவின் மூத்த மகன் ஏர் என்பவன் யெகோவாவின் பார்வையில் பொல்லாதவனாயிருந்ததினால் யெகோவா அவனை அழித்துப்போட்டார். அப்பொழுது யூதா ஓனானைப்பார்த்து: நீ உன் தமையன் மனைவியைச் சேர்ந்து அவனைமைத்துனச் சுதந்தரமாய்ப் படைத்து உன் தமையனுக்குச் சந்ததியை உண்டாக்கு என்றான். அந்தச் சந்ததி தன் சந்ததியாயிராதென்று ஓனான் அறிந்தபடியினாலே அவன் தன் தமையனின் மனைவியைச் சேரும்போது தன் தமையனுக்குச் சந்ததி உண்டாகாதபடி தன் வித்தைத் தரையிலே விழவிட்டுக் கெடுத்தான். அவன் செய்தது யெகோவாவின் பார்வையில் தீயதாயிருந்ததினால் அவனையும் அவர் அழித்துப்போட்டார். அப்பொழுது யூதா தன் குமாரனாகிய சேலாவும் அவன் சகோதரர் செத்ததுபோலச் சாவான் என்று அஞ்சி தன் மருமகளாகிய தாமாரைப் பார்த்து: என் குமாரனாகிய சேலா பெரியவனாகுமட்டும் நீ உன் தகப்பன் வீட்டிலே கைம்பெண்ணாய்த் தங்கியிரு என்று சொன்னான்; அப்படியே தாமார் போய்த் தன் தகப்பன் வீட்டிலே தங்கியிருந்தாள். அநேகநாள் சென்றபின் சூவாவின் குமாரத்தியாகிய யூதாவின்மனைவி மரித்தாள். யூதாவினுடைய துக்கம் ஆறினபின் அவன் அதுல்லாம் ஊராளுகிய தன் சிநேகிதன் ஈராவோடு திம்னாவிலே தன் ஆடுகளை மயிர் கத்தரிக்கிறவர்களிடத்திற்குப் போனான். அப்பொழுது: உன் மாமனார் தமது ஆடுகளை மயிர் கத்தரிக்கத் திம்னாவுக்குப்போகிறார் என்று தாமாருக்கு அறிவிக்கப்பட்டது. சேலா பெரியவனாகியும் தான் அவனுக்கு மனைவியாகக் கொடுக்கப்படவில்லை என்று அவள் கண்டபடியால் தன் கைம்பெண்மைக்குரிய வஸ்திரங்களைக் களைந்துபோட்டு முக்காடிட்டுத் தன்னை மூடிக்கொண்டு திம்னாவுக்குப்போகிற வழியிலே ஏனாயீம் ஊருக்குவெளியே உட்கார்ந்தாள். யூதா அவளைக்கண்டு அவள் தன் முகத்தை மூடியிருந்தபடியால்

16 அவள் ஒரு வேசி என்று நினைத்து | அவள் வழியில் இருந்த இடமாய்த் திரும்பி அவள் தன் மருமகள் என்று அறியாமல்: நான் உன்னோடுசேர இடங்கொடு என்றான். அதற்கு அவள்: நீர் என்னோடு சேருகிறதற்கு எனக்கு என்ன தருவீர் என்றாள்.
17 அதற்கு அவன்: நான் மந்தையிலிருந்து ஒரு வெள்ளாட்டுக்குட்டியை அனுப்புகிறேன் என்று சொல்ல அவள்: நீர் அதை அனுப்புமளவும் ஒரு அடைமானம் கொடுப்பீரா என்றாள்.
18 அப்பொழுது அவன்: நான் உனக்கு அடைமானமாக என்ன கொடுக்க வேண்டுமென்று கேட்க அவள்: உமது முத்திரை மோதிரமும் உமது தாழ்வடமும் உமது கைக்கோலும் கொடுக்க வேண்டும் என்றாள். அவன் அவைகளை அவளுக்குக்கொடுத்து அவளோடு சேர்ந்தான்;
19 அவள் அவனாலே கர்ப்பந்தரித்து | எழுந்துபோய்த் தன் முக்காட்டைக் களைந்து தன் கைம்பெண்மைக்குரிய வஸ்திரங்களை
20 உடுத்திக்கொண்டாள். யூதா அந்த ஸ்திரீயினிடமிருந்த அடைமானத்தை வாங்கிக் கொண்டு வரும்படி அதுல்லாம் ஊராளுகிய தன் சிநேகிதன் கையிலே ஒரு வெள்ளாட்டுக்குட்டியைக் கொடுத்தனுப்பினான், அவளை அவனைக் கண்டுபிடிக்கவில்லை.
21 அப்போது அவன் அங்கிருந்த மனிதரிடம்: வழியிலே ஏனாயீம் ஊருக்கு வெளியேயிருந்த தாசி எங்கே என்று கேட்க அவர்கள்,
22 இங்கே தாசி இல்லை என்றார்கள். அவன் யூதாவினிடம் திரும்பிவந்து: அவளைக் காணேம், அங்கே தாசி இல்லை யென்று அவ்விடத்து மனிதரும் சொல்லுகிறார்கள்
23 என்றான். அப்பொழுது யூதா: இதோ, இந்த ஆட்டுக்குட்டியை அனுப்பினேன், நீயோ அவளைக் கண்டுபிடிக்கவில்லை; நமக்கு அவகீர்த்திவராதபடி அவள் அதைக் கொண்டுபோனால் போகட்டும் என்றான்.
24 ஏறக்குறைய மூன்றுமாதம் சென்றபின்பு: உன் மருமகளாகிய தாமார் வேசித்தனம் பண்ணினாள், அந்த வேசித்தனத்தினால் கர்ப்பவதியுமானாள் என்று யூதாவுக்கு அறிவிக்கப்பட்டது. அப்பொழுது யூதா: அவளை வெளியே கொண்டுவாருங்கள், அவள் சுட்டெரிக்கப்படவேண்டும் என்
25 றான். அவள் வெளியே கொண்டுவரப்பட்டபோது அவள் தன் மாமனிடத்துக்கு அந்த அடைமானத்தை அனுப்பி: இந்தப் பொருட்களுக்கு உரியவன் எவனாலே நான் கர்ப்பந்தரித்தேன்; இந்த முத்திரைமோதிரமும் இந்தத் தாழ்வடமும் இந்தக்கோலும் யாருடையவைகள், பாரும் என்று சொல்லியனுப்பினாள். யூதா அவைகளைப் பார்த்து அறிந்து: அவளைக் குற்றப்படுத்துவதற்கு எனக்கு இடமில்லை; அவளை என் குமாரனுகிய சேலாவுக்குக் கொடாமற்போனேனே என்றான். அப்புறம் அவன் அவளோடு சேரவில்லை. அவளுக்குப் பிரசவகாலம் வந்தபோது அவள் கர்ப்பத்தில் இரட்டைப் பிள்ளைகள் இருந்தன. அவள் பிரசவிக்கும்போது ஒரு பிள்ளை கையை நீட்டினது; அப்பொழுது மருத்துவச்சி அதின் கையைப்பிடித்து அதில் சிவப்பு நூலைக்கட்டி இது முதலாவது வெளிப்பட்டது என்றாள். அது தன் கையை திரும்ப உள்ளே வாங்கிக் கொண்டபோது அதின் சகோதரன் வெளிப்பட்டான். அப்பொழுது அவள்: நீ மீறி வந்ததென்ன என்று சொன்னாள்; அதினாலே அவனுக்குப் பேரேஸ் என்று பேரிடப்பட்டது. பிற்பாடு கையில் சிவப்பு நூல்கட்டியிருந்த அவன் தம்பி வெளிப்பட்டான்; அவனுக்குச் சேரா என்று பேரிடப்பட்டது.

**39** யோசேப்பு எகிப்துக்குக் கொண்டுபோகப்பட்டான். பார்வோனின் பிரதானியும் காவற்சேனைத்தலைவனுமாகிய போத்திப்பார் என்னும் எகிப்து தேசத்தான் அவனை அவ்விடத்திற்குக் கொண்டுவந்த இஸ்மவேலரிடம் விலைக்கு வாங்கினான். யெகோவா யோசேப்போடிருந்தார், அவன் 2
காரியசித்தியுள்ளவனானான்; அவன் எகிப்தியனுகிய தன் எஜமானின் வீட்டிலேயே இருந்தான். யெகோவா அவனோடிருக்கிறார் என்றும் அவன் செய்கிறயாவையும் 3
யெகோவா வாய்க்கப்பண்ணுகிறார் என்றும் அவன் எஜமான் கண்டு, யோசேப்பினிடம் 4
தயவுவைத்து அவனைத் தனக்குச் சொந்தச் சேவகனும்தன் வீட்டுக்குவிசாரணைக்காரனுமாக்கித் தன் பொருட்களையெல்லாம் அவன் கையில் ஒப்புவித்தான். அவனைத் தன் வீட் 5
டுக்கும் தன் சகல பொருட்களுக்கும் மேலதிகாரியாக்கினது முதற்கொண்டு யெகோவா யோசேப்பினிமித்தம் அந்த எகிப்தியன் வீட்டை ஆசீர்வதித்துவந்தார்; வீட்டிலும் வெளியிலும் அவனுக்கு இருந்த யாவற்றின் மேலும் யெகோவாவின் ஆசீர்வாதமிருந்தது. ஆகையால் அவன் தனக் 6
குள்ள யாவற்றையும் யோசேப்பின் கையிலே ஒப்புக்கொடுத்துவிட்டுத் தான் புசிக்கிற போஜனத்தவிர தன்னிடமிருந்த வேறெதைக் குறித்தும் விசாரியாதிருந்தான். யோசேப்பு அழகானஉருவமைந்தவன், பார்வைக்குச் சௌந்தரியமுள்ளவன். சிலநாள் 7

சென்றபின் அவன் எஜமானின் மனைவி யோசேப்பின்மேல் கண்ணுயிருந்து: என்
8 னோடு சயனி என்றாள். அவனோ தன் எஜமானுடைய மனைவியின் சொல்லுக்கு இணங்காமல் அவனைப் பார்த்து: இதோ, வீட்டிலே என்னிடமிருக்கிறவைகளில் யாதொன்றைக் குறித்தும் என் எஜமானன் விசாரிக்கிறதில்லை; தமக்குள்ள யாவற்றை
9 யும் என்வசம் ஒப்பித்திருக்கிறார். இந்த வீட்டில் என்னிலும் பெரியவனில்லை; இந்த வீட்டினுள்ள வேறெதுவும் எனக்கு விலக்கப்படவில்லை, நீரோ அவர் மனைவியாயிருக்கிறீரே, நான் இத்தனை பெரிய பாதகத்தை நடப்பித்துக் கடவுளுக்கு விரோதமாய்ப்
10 பாவம்செய்வது எப்படி என்றான். அவள் நித்தம் நித்தம் யோசேப்போடு இப்படிப் பேசிக்கொண்டுவந்தும் அவன் அவளோடு சயனிக்கவும் அவளோடிருக்கவும் சம்மதிக்
11 கவில்லை. இப்படியிருக்கும்போது ஒரு நாள் அவன் தன் வேலையைச் செய்கிறதற்கு வீட்டுக்குள்போனான்; வீட்டு மனி
12 தரில் ஒருவரும் அங்கு இல்லை. அப்பொழுது அவள் அவன் வஸ்திரத்தைப்பற்றிப் பிடித்து என்னோடு சயனி என்றாள். அவனோ தன் வஸ்திரத்தை அவள் கையிலே விட்டுவிட்டு வெளியே ஓடிப்போனான்.
13 அவன் தன் வஸ்திரத்தை அவள் கையிலே விட்டு வெளியே ஓடிப்போனதை அவள்
14 கண்டபோது | அவள் தன் வீட்டு மனிதரைக்கூப்பிட்டு: பாருங்கள், எபிரேய மனுஷன் நம்மைப் பரியாசம்பண்ணும்படி அவனை நம்மிடத்தில் கொண்டுவந்தார், அவன் என்னோடு சயனிக்கும்படி என்னிடம் வந்தான்; நான் மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்
15 டேன். நான் சத்தமிட்டுக் கூப்பிடுகிறதை அவன் கேட்டுத் தன் வஸ்திரத்தை என்னிடம் விட்டுவெளியே ஓடிப்போய்விட்டான்
16 என்று சொன்னாள். அவன் எஜமான் வீட்டுக்குவருமளவும் அவன் வஸ்திரத்தைத்
17 தன்னிடமே வைத்திருந்தாள். அவன் வரவே அவனிடம்: நீர் நம்மிடத்தில் கொண்டுவந்த அந்த எபிரேய வேலைக்காரன் பரியாசம்பண்ணும்படி என்னிடம்
18 வந்தான். அப்பொழுது நான் சத்தமிட்டுக் கூப்பிட்டேன். அவன் தன் வஸ்திரத்தை என்னிடம் விட்டுவிட்டு வெளியே ஓடிப்
19 போனான் என்றாள். உமது வேலைக்காரன் எனக்கு இப்படிச்செய்தான் என்று தன் மனைவி தன்னோடு சொன்ன வார்த்தைகளை அவன் எஜமான் கேட்டபோது அவனுக்குக்
20 கோபம் மூண்டது. யோசேப்பின் எஜமான் அவனைப்பிடித்துச் சிறைச்சாலையில் ராஜா

வின் கைதிகள் இருக்குமிடத்தில் அவனை வைத்தான். அந்தச் சிறைச்சாலையில் அவன் இருந்தான். யெகோவா யோசேப் 21
போடிருந்து அவன்மேல் கிருபைவைத்துச் சிறைச்சாலைத் தலைவனின் தயவு அவனுக்குக் கிடைக்கும்படி செய்தார். சிறைச்சா 22
லைத் தலைவன் சிறைச்சாலையில் வைக்கப்பட்ட யாவரையும் யோசேப்பின் வசம் ஒப்புவித்தான்; அங்கே செய்யப்பட்டவைகளையெல்லாம் யோசேப்பே செய்துவந்தான். யெகோவா அவனோடிருந்தபடியி 23
னால் அவன் வசமாயிருந்த யாதொன்றைக் குறித்தும் சிறைச்சாலைத்தலைவன் விசாரனை செய்யவில்லை. அவன் செய்வதையெல்லாம் யெகோவா வாய்க்கப்பண்ணினார்.

இந்தக் காரியங்கள் நடந்தபின்பு எகிப்து **40**
ராஜாவுக்குப் பானபாத்திரக்காரனும் பக்ஷணக்காரனும் எகிப்து ராஜாவாகிய தங்கள் ஆண்டவனுக்கு விரோதமாகக் குற்றம்செய்தார்கள். பார்வோன் தன் பானபாத்திரக்கா 2
ரரின் தலைவனும் பக்ஷணக்காரரின் தலைவனுமாகிய இவ்விரண்டு பிரதானிகள் மேலும் கடுங்கோபங்கொண்டு | அவர்களை 3
யோசேப்பு வைக்கப்பட்டிருந்த இடமும் காவற்சேனாதிபதியின் வீடுமாகிய சிறைச்சாலையிலே காவல்பண்ணுவித்தான். காவற் 4
சேனாதிபதி அவர்களை யோசேப்பின்வசம் ஒப்புவித்தான்; அவனே அவர்களைப் பார்த்துவந்தான்; அவர்கள் கொஞ்சநாள் காவலில் இருந்தார்கள். எகிப்து ராஜா 5
வுக்குப் பானபாத்திரக்காரனும் பக்ஷணக்காரனுமாகிய அவ்விருவரும் சிறையிலிருக்கும்போது ஒரே இரவிலே இருவரும் வெவ்வேறு அர்த்தம் தரும் வெவ்வேறான சொப்பனங்களைக் கண்டார்கள். காலமே யோ 6
சேப்பு அவர்களிடம் போய் அவர்களைப் பார்த்தபோது அவர்கள் துக்கமாயிருந்தார்கள். அப்பொழுது அவன் தன் எஜமானின் 7
வீட்டில் தன்னோடு காவல்பண்ணப்பட்டிருந்த பார்வோனின் பிரதானிகளைப்பார்த்து: உங்கள் முகங்கள் இன்று இவ்வளவு துக்கமாயிருக்கிறது என்ன என்று கேட்டான். அவர்கள், சொப்பனங் கண்டோம், அதற் 8
குப் பொருள் சொல்லுகிறவன் ஒருவனுமில்லை என்றார்கள். அதற்கு யோசேப்பு: சொப்பனத்துக்குப் பொருள் சொல்லுதல் கடவுளுக்குரியதல்லவா? அவைகளை என்னிடஞ் சொல்லுங்கள் என்றான். அப் 9
பொழுது பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பினிடம்: என் சொப்பனத்திலே ஒரு திராட்சச்செடி எனக்குமுன் இருக்கக்கண்டேன். அந்தத் கொட்சச் 10

செடியில் மூன்று கொடிகளிருந்தன; அதில் அரும்பு பிடித்திருந்தது; அதில் பூக்கள் மலர்ந்திருந்தன; அதின் குலைகள் பழுத்த 11 பழங்களாயிருந்தன. பார்வோனின் பாத்திரம் என் கையிலிருந்தது; நான் அந்தப் பழங்களைப் பறித்து அவற்றைப் பார்வோனின் பூதத்திரத்தில் பிழிந்து அந்தப் பாத்திரத்தைப் பார்வோன் கையிலே கொடுத்தேன் என்று 12 தன் சொப்பனத்தைச் சொன்னான். அதற்கு யோசேப்பு: அந்த மூன்று கொடிகள் 13 மூன்றுநாளாம். மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உன் தலையை உயர்த்துவார், உன்னை மறுபடியும் உன் உத்தியோகத்திலே வைப்பார். முன் பானபாத்திரக்காரனாயிருந்தபோது செய்துவந்த வழக்கத்தின்படியே திரும்பவும் பார்வோனின் பாத்திரத்தை 14 அவர் கையிலே கொடுப்பாய்; இதுதான் சொப்பனத்தின் அர்த்தம் என்று சொன்னது மன்றி, நீ வாழ்வடைந்திருக்கும்போது, என்னை நினைத்து என்மேல் தயவு வைத்து என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து இந்த இடத்திலிருந்து என்னை விட 15 தலையாக்கவேண்டும். நான் எபிரெயர் தேசத்திலிருந்து களவாய்க் கொண்டுவரப்பட்டேன்; என்னை இந்தக் காவல் கிடங்கில் வைக்கும்படிக்கு நான் இவ்விடத்தில் ஒன்றும் செய்யவுமில்லை என்றும் சொன்னான். 16 நல்ல அர்த்தம் கண்டு சொன்னானென்று பக்ஷணக்காரரின் தலைவன் அறிந்து யோசேப்பைப் பார்த்து: நானும் ஒரு சொப்பனம் கண்டேன். இதோ, சிறந்த பக்ஷண வகைகள் நிறைந்த மூன்று கூடைகள் 17 என் தலைமேலிருந்தன. மேற்கூடையிலே பார்வோனுக்காகப் பக்ஷணக்காரர் செய்யும் சகலவித உணவுப்பொருட்களிலும் கொஞ்சம் கொஞ்சம் இருந்தது; என் தலையின்மேல் கூடையில் இருந்தவைகளைப் பறவைகள் வந்து பட்சித்தன என்றான். 18 அதற்கு யோசேப்பு: அந்த மூன்று கூடை 19 களும் மூன்றுநாளாம். இன்னும் மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உன் தலையையும் உயர்த்துவார், உன்னை மரத்திலே தூக்கிப்போடுவார், பறவைகள் உன் மாம்சத்தைத் தின்னும், இதுவே சொப்பனத்தின் 20 அர்த்தம் என்று சொன்னான். மூன்றாம் நாள் பார்வோனின் ஜென்மநாள். அவன் தன் ஊழியக்காரர் எல்லாருக்கும் விருந்துபண்ணிப் பானபாத்திரக்காரரின் தலைவன் தலையையும் பக்ஷணக்காரர் தலைவன் தலையையும் தன் உத்தியோகஸ்தரின் நடுவே உயர்த்தி: 21 பானபாத்திரக்காரரின் தலைவனைப் பழைய உத்தியோகத்திலே மறுபடியும் வைத்தான்; அந்தப்படியே அவன் பார்வோனுடைய கையிலே பானபாத்திரத்தைக் கொடுத்துவந்தான். பக்ஷணக்காரர் தலைவ 22 னையோ தூக்கிலிட்டான். யோசேப்பு அவர்களுக்குச் சொன்ன அர்த்தத்தின்படியே நடந்தது. பானபாத்திரக்காரரின் 23 தலைவனோ யோசேப்பை நினையாமல் அவனை மறந்துவிட்டான்.

இரண்டு வருஷம் சென்றது; பார்வோ **41** னும் ஒரு சொப்பனங்கண்டான். இதோ, அவன் நதிக்கரையில் நின்றுகொண்டிருந்தான். நிற்கையில் புஷ்டியும் பார்வைக்கு 2 அழகுமான ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறிவந்து கோரைப்புல் மேய்ந்தன. அவற் 3 றின்பின், இதோ, அவலட்சணமும் கேவலமுமானவேறே ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறிவந்து நதி ஓரத்தில் மற்றப் பசுக்களண்டையிலே நின்றன. அவலட்சணமும் கேவ 4 லமுமான பசுக்கள் அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்களையும் பட்சித்துப்போட்டன. பார்வோன் இப்படிக் கண்டு விழித்துக்கொண்டான். மறுபடியும் அவன் நித்திரைசெய் 5 து இரண்டாம்விசை ஒரு சொப்பனங் கண்டான். இதோ, நல்ல செழுமையான ஏழு கதிர்கள் ஒரே தாளிலிருந்து ஓங்கி வளர்ந்தன. பின்பு சாவியானதும் கீழ்காற்றி 6 னால் தீய்ந்ததுமான ஏழு கதிர்கள் முளைத்தன. சாவியான கதிர்கள் செழுமையும் 7 நிறைமேனியுமான அந்த ஏழு கதிர்களையும் விழுங்கிப்போட்டன. பார்வோன் விழித்துக்கொண்டான். தான் கண்டது சொப்பனமென்று உணர்ந்தான். காலையில் அவன் 8 மனங்கலங்கியிருந்து எகிப்திலுள்ள சகல மந்திரவாதிகளையும் சகல சாஸ்திரிகளையும் அவன் அழைப்பித்துத் தன் சொப்பனத்தை அவர்களுக்குச்சொன்னான். அதின் அர்த்தத்தையோ ஒருவராலும் பார்வோனுக்குச் சொல்லமுடியாமற்போயிற்று.

அதுகண்ட பானபாத்திரக்காரரின் தலை 9 வன் பார்வோனைப்பார்த்து: நான் செய்த குற்றங்கள் இன்றுதான் என் நினைவில் வந்தது. பார்வோன் தமது ஊழியக்காரர்மேல் 10 கடுங்கோபங்கொண்டு என்னையும் பக்ஷணக்காரரின் தலைவனையும் காவற்சேனாதிபதி வீட்டிலே சிறையில் வைத்திருந்தபோது | நானும் அவனும் ஒரே இரவிலே வெவ் 11 வேறு அர்த்தம் தரும் வெவ்வேறான சொப்பனங்களைக் கண்டோம். அச்சமயத்தில் 12 காவற்சேனாதிபதியின் வேலைக்காரனான எபிரெய பிள்ளையாண்டான் ஒருவன் அங்கே எங்களோடிருந்தான்; அவனிடம் அவைகளைச் சொன்னோம், அவன் நாங்கள்

கண்ட சொப்பனங்களுக்குரிய வெவ்வேறு அர்த்தத்தின்படியே எங்கள் சொப்பனத்தின்
13 அர்த்தத்தைச் சொன்னான். அவன் எங்களுக்குச் சொல்லிய அர்த்தத்தின்படியே நடந்தது; நான் மறுபடியும் என் உத்தியோகத்தைப் பெற்றேன், அவனே தூக்கிலிடப்பட்டான் என்றான்.
14 அப்பொழுது பார்வோன் யோசேப்பை அழைப்பித்தான்; அவனைத் தீவிரமாய்க் காவல் கிடங்கிலிருந்து கொண்டு வந்தார்கள். அவன் சௌரம் பண்ணிக் கொண்டு வேறு வஸ்திரந்தரித்துப்
15 பார்வோனிடம் வந்தான். உடனே பார்வோன் அவனிடம்: ஒரு சொப்பனங்கண்டேன்; அதின் அர்த்தத்தைச் சொல்வார் எவருமில்லை; நீ ஒரு சொப்பனத்தைக் கேட்டால் அதின் அர்த்தத்தைச் சொல்வாய் என்று உன்னைப்பற்றி நான் கேள்விப்பட்
16 டேன் என்றான். அதுகேட்ட யோசேப்பு பார்வோனிடம்: அர்த்தம் சொல்வது எனக்குரியதல்ல, கடவுளே பார்வோனுக்கு மங்களமான உத்தரவு அருளிச்செய்வார்
17 என்றான். பார்வோன் யோசேப்பைப் பார்த்து: இதோ, என் சொப்பனத்திலே நான் நதியோரத்தில் நின்றுகொண்டிருந்தேன்.
18 புஷ்டியும் பார்வைக்கு அழகுமான ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறிவந்து கோரைப்
19 புல் மேய்ந்தன. அவற்றின்பின் இளைத்ததும் மகா அவலட்சணமும் கேவலமுமான வேறே ஏழு பசுக்கள் ஏறிவந்தன. இவைகளைபோல அவலட்சணமான பசுக்களை எகிப்து தேசமெங்கும் நான் கண்ட
20 தில்லை. கேவலமும் அவலட்சணமுமான பசுக்கள் கொழுமையான முன்ன ஏழு
21 பசுக்களையும் பட்சித்துப்போட்டன. இவைகளை விழுங்கிய பின்பும் இவைகளைத் தின்றுவிட்டது தோன்றவில்லை. முன் இருந்தது போலவே அவலட்சணமாயிருந்தன; இப்
22 படிக்கண்டு விழித்துக்கொண்டேன். பின்னும் சொப்பனங்கண்டேன். இதோ, நிறை மேனியுள்ள நல்ல ஏழு கதிர்கள் ஒரே
23 தாளிலிருந்து ஓங்கிவளர்ந்தன. பின்பு சாவியானவைகளும் கீழ்காற்றினால் தீய்ந்த பதரானவைகளுமான ஏழு கதிர்கள்
24 முளைத்தன. சாவியான கதிர்கள் அந்த ஏழு நல்ல கதிர்களையும் விழுங்கிப்போட்டன. இதை மந்திரவாதிகளிடஞ் சொன்னேன்; இதின் பொருளை எனக்குச்சொல்லுகிறவன்
25 எவனுமில்லை என்றான். அப்பொழுது யோசேப்பு பார்வோனிடம்: பார்வோன் கண்ட சொப்பனம் ஒன்றே; கடவுள் தாம் செய்யப்போகிறது இன்னதென்று பார்வோனுக்குத் தெரிவித்திருக்கிறார். அந்த ஏழு நல்ல பசுக்களும் ஏழு வருஷமாம்; அந்த ஏழு நல்ல கதிர்களும் ஏழு வருஷமாம், சொப்பனம் ஒன்றே; அவைகளின்பின் ஏறிவந்த கேவலமும் அவலட்சணமுமான ஏழு பசுக்களும் ஏழு வருஷமாம்; கீழ்காற்றினால் தீய்ந்து சாவியான ஏழு கதிர்களும் அப்படியே; இவைகள் பஞ்ச முள்ள ஏழு வருஷங்கள். பார்வோனுக்கு நான் சொன்னது இதுவே: கடவுள் தாம் செய்யப்போகிறதைப் பார்வோனுக்குக் காண்பித்திருக்கிறார். இதோ, எகிப்துதேசமெங்கும் பரிபூரணமான விளைவுள்ள ஏழு வருஷம் வரும். அதன்பின் பஞ்சமுள்ள ஏழு வருஷம் வரும்; அப்பொழுது எகிப்து தேசத்தில் அந்தப் பரிபூரணமெல்லாம் மறக்கப்பட்டுப்போம்; அந்தப் பஞ்சம் தேசத்தைப் பாழாக்கும். வரப்போகிற மகா கொடுமையான பஞ்சத்தினால் தேசத்தில் முன்னிருந்த பரிபூரணமெல்லாம் அறியப்படாமற்போம். இந்தக் காரியம் கடவுளால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் கடவுள் இதைச் சீக்கிரத்தில் செய்வார் என்பதையும் குறிக்கும் பொருட்டுப் பார்வோனுக்கு இந்தச் சொப்பனம் இரட்டித்தது. ஆகையால் விவேகமும் ஞானமுமுள்ள ஒரு மனுஷனைத்தேடி அவனை எகிப்துதேசத்தில் அதிகாரியாகப் பார்வோன் ஏற்படுத்த வேண்டும். இப்படிப் பார்வோன் செய்து தேசத்தின்மேல் விசாரணைக்காரரை வைத்துப் பரிபூரணமுள்ள ஏழு வருஷங்களில் எகிப்து தேசத்திலே விளையும் விளைச்சலில் ஐந்தில் ஒரு பங்கை வாங்கும்படி செய்ய வேண்டும். அவர்கள் வரப்போகிற நல்ல வருஷங்களில் விளையும் தானியங்களையெல்லாம் சேர்த்துப் பட்டணங்களிலே ஆகாரமிருக்கும்படி பார்வோனின் அதிகாரத்துக்குள்ளாகத் தானியங்களைப் பத்திரப்படுத்தி வைக்கவேண்டும். தேசம் பஞ்சத்தினால் அழிந்துபோகாதபடி அந்தத் தானியத்தை இனி எகிப்துதேசத்தில் உண்டாகும் பஞ்சமுள்ள ஏழு வருஷங்களுக்கென்று தேசத்திலே கட்டிவைக்கட்டும் என்றான்.
அவன் சொன்னது பார்வோனுக்கும் அவன் ஊழியக்காரர் எல்லாருக்கும் நன்றாய்க் கண்டது. பார்வோன் தன் ஊழியக்காரரைப் பார்த்து: தெய்வ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப்போன்ற வேறொருவன் உண்டோ என்றான். பின்பு பார்வோன் யோசேப்பினிடம்: கடவுள் இவையெல்லாவற்றையும் உனக்கு வெளிப்படுத்தியிருக்கிறபடியால் உன்னைப்போல விவே

கமும் ஞானமுமுள்ளவன் வேறொருவனு
40 மில்லை. நீ என் அரண்மனைக்கு அதிகாரி
யாயிருப்பாய்; என் ஜனங்கள் எல்லாரும்
உன் சொல்லுக்கு அடங்கி நடக்கவேண்
டும்; சிங்காசனத்தில் மாத்திரம் உன்னிலும்
நான் பெரியவனாயிருப்பேன் என்றான்.
41 பின்னும் பார்வோன் யோசேப்பினிடம்:
பார், எகிப்துதேசம் முழுமைக்கும் உன்னை
அதிகாரியாகினேன் என்று சொல்லித் |
42 தன்கையில் போட்டிருந்த முத்திரை மோதி
ரத்தைக் கழற்றி அதை யோசேப்பின் கையி
லே போட்டு மெல்லிய வஸ்திரங்களை அவ
னுக்கு உடுத்திப் பொற்சரப்பணியை
43 அவன் கழுத்திலே போட்டுத் | தன் இரண்
டாம் இரதத்தின்மேல் அவனை ஏற்றி, தெண்
டனிட்டுப் பணியுங்கள் என்று அவ
னுக்கு முன்பாகக்கூறுவித்து எகிப்துதேசம்
முழுமைக்கும் அவனை அதிகாரியாக்கி
44 னான்; பின்னும் பார்வோன் யோசேப்பி
னிடம்: பார்வோன் நானே என்றாலும்
உன் உத்தரவில்லாமல் எகிப்துதேசத்திலுள்
ளவர்களில் ஒருவனும் தன் கையையாவது
தன் காலையாவது அசைக்கக்கூடாது என்
45 றான். மேலும் பார்வோன் யோசேப்புக்கு
சாப்நாத்பன்னேயா என்கிற பெயரையிட்டு
ஓன் பட்டணத்து ஆசாரியனாகிய போத்தி
பிராவின் குமாரத்தியாகிய ஆஸ்நாத்தை
அவனுக்கு விவாகஞ் செய்துவைத்தான்.
யோசேப்பு எகிப்து தேசத்தைச் சுற்றிப்
பார்க்கும்படி புறப்பட்டான்.
46 யோசேப்பு எகிப்தின் ராஜாவாகிய பார்
வோனுக்குமுன் நிற்கும்போது அவனுக்கு
முப்பது வயது; யோசேப்பு பார்வோனின்
சந்நிதியிலிருந்து புறப்பட்டு எகிப்து தேசம்
47 எங்கும் போய்ச் சுற்றிப்பார்த்தான். பரி
பூரணமுள்ள ஏழு வருஷங்களிலும் பூமி
48 மிகுதியான பலனைக் கொடுத்தது. அவ்
வேழு வருஷங்களில் எகிப்து தேசத்தில்
விளைந்த தானியங்களையெல்லாம் அவன்
சேர்த்து அந்தத் தானியங்களைப் பட்ட
ணங்களில் கட்டிவைத்தான்; அந்தந்தப்
பட்டணத்தில் அதினதின் சுற்றுப்புறத்துத்
49 தானியங்களைக் கட்டிவைத்தான். இப்படி
யாக யோசேப்பு கடற்கரை மணலைப்
போல மிகுதியான தானியத்தைச் சேர்த்து
வைத்தான். அதை அளந்து கணக்கிடுவ
தையும் விட்டுவிட்டான்; அது அளவுக்கு
50 அடங்காத அத்தனை ஏராளம்! பஞ்சமுள்ள
வருஷங்கள் வருவதற்குமுன்னே யோசேப்
புக்கு இரண்டு குமாரர் பிறந்தார்கள்;
அவர்களை ஓன்பட்டணத்து ஆசாரியனாகிய
போத்திபிராவின் குமாரத்தியாகிய ஆஸ்

நாத்து அவனுக்குப் பெற்றாள். யோசேப்பு: 51
என் வருத்தம் யாவையும் என் தகப்
பன் குடும்பம் அனைத்தையும் நான் மறக்
கும்படி கடவுள் பண்ணினார் என்று சொல்
லி மூத்தவனுக்கு மனாசே என்று பேரிட்
டான். நான் சிறுமைப்பட்டிருந்த தேசத் 52
தில் கடவுள் என்னைப் பலுகப்பண்ணினார்
என்று சொல்லி இரண்டாவதனுக்கு எப்பிரா
யீம் என்று பேரிட்டான். எகிப்து தேசத் 53
திலே ஏழு வருஷச் செழிப்பு முடிந்தபின்
யோசேப்பு சொல்லியபடியே | ஏழுவரு 54
ஷப் பஞ்சம் தொடங்கினது; சகல தேசங்
களிலும் பஞ்சமுண்டாயிற்று; எகிப்து
தேசமெங்குமோ ஆகாரமிருந்தது. எகிப்து 55
தேசமெங்கும் பஞ்சமுண்டானபோது
ஜனங்கள் உணவுவேண்டிப் பார்வோனைப்
பார்த்து ஓலமிட்டார்கள்; அதற்குப் பார்
வோன்: நீங்கள் யோசேப்பினிடம் போங்
கள், அவர் உங்களுக்குச் சொல்லுகிறபடி
செய்யுங்கள் என்று எகிப்தியர் எல்லாருக்
கும் சொன்னான். தேசமெங்கும் பஞ்சமுண் 56
டானபடியால் யோசேப்பு களஞ்சியங்களை
யெல்லாம் திறந்து எகிப்தியருக்கு விற்றான்;
பஞ்சம் எகிப்து தேசத்தில் வரவரக் கொடி
தாயிற்று. பூமி எங்கும் பஞ்சம் கொடி 57
யதாயிருந்தபடியால் சகல தேசத்தாரும்
தானியங்கொள்ளும்படி யோசேப்பினிடம்
எகிப்துக்கு வந்தார்கள்.

எகிப்திலே தானியமுண்டென்று யாக் **42**
கோபுக்குத் தெரியவந்தபோது அவன் தன்
குமாரரிடம்: நீங்கள் ஒருவரை யொருவர்
பார்த்துக்கொண்டிருக்கிற தென்ன? எகிப் 2
திலே தானியமுண்டென்று கேள்விப்படு
கிறேன்; நாம் சாகாமல் உயிரோடிருக்கும்
படி நீங்கள் அங்கே போய் நமக்குத் தானி
யம் வாங்கி வாருங்கள் என்றான். யோ 3
சேப்பின் சகோதரர் பத்துப்பேர் தானியம்
வாங்கிவர எகிப்துக்குப் போனார்கள். யோ 4
சேப்பின் தம்பியாகிய பென்யமீனையோ
யாக்கோபு அவன் சகோதரரோடு அனுப்ப
வில்லை, அவனுக்கு ஏதோ மோசம் வரு
மென்று பயந்தான். கானான் தேசத்திலே 5
பஞ்சமுண்டா யிருந்தபடியால் தானியங்
கொள்ளப்போனவர்களோடுகூட இஸ்ரவே
லின் குமாரரும் போனார்கள்.

யோசேப்பு அத்தேசத்துக்கு அதிபதியா 6
யிருந்தான். தேசத்தின் ஜனங்கள் யாவருக்
கும் விற்றவனும் அவனே; யோசேப்பின்
சகோதரர் வந்து தரைமட்டும் தாழக் குனிந்
து அவனை வணங்கினார்கள். யோசேப்பு 7
அவர்களைப் பார்த்தவுடன் தன் சகோதரர்
என்று அறிந்துகொண்டான்; அறிந்தும் அறி

யாதவன்போல் கடினமாய் அவர்களோடு
பேசி: நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள் என்
று கேட்டான். அதற்கு அவர்கள்: கா
னான் தேசத்திலிருந்து தானியங்கொள்ள வந்
8 தோம் என்றார்கள். யோசேப்பு அவர்க
ளைத் தன் சகோதரர் என்று அறிந்தும்
அவர்கள் அவனை அறிந்துகொள்ளவில்லை.
9 யோசேப்பு அவர்களைப்பற்றித் தான் கண்ட
சொப்பனங்களை நினைத்துக்கொண்டவனாய்
அவர்களைப் பார்த்து: நீங்கள் வேவுகாரர்,
தேசம் எங்கே திறப்பாயிருக்கிறது என்று
10 பார்க்கவந்தீர்கள் என்றான். அதற்கு
அவர்கள்: அப்படியல்ல, ஐயனே, உமது
11 அடியார் தானியங்கொள்ளவந்தோம். நாங்
கள் எல்லாரும் ஒரு தகப்பன் பிள்ளைகள்;
நாங்கள் நிஜஸ்தர்; உமது அடியார் வேவு
12 காரர் அல்ல என்றார்கள். அவனோ: அப்
படியல்ல, தேசம் எங்கே திறப்பாயிருக்கி
றது என்று பார்க்கவேவுகாரர்கள் என்றான்.
13 அப்பொழுது அவர்கள்: உமது அடியாரா
கிய நாங்கள் பன்னிரண்டு சகோதரர்; ஒரு
தகப்பன் பிள்ளைகள், அவர் கானான் தேசத்
திலிருக்கிறார். இளையவன் எங்கள் தகப்
பனோடிருக்கிறான்; ஒருவன் இப்பொழுது
14 இல்லை என்றார்கள். யோசேப்பு அவர்க
ளைப் பார்த்து: உங்களை வேவுகாரர் என்று
15 நான் சொன்னது சரி. உங்கள் இளைய
சகோதரன் இங்கே வந்தாலொழிய நீங்கள்
இங்கிருந்து புறப்படவதில்லை என்று பார்
வோனின் ஜீவன்மேல் ஆணையாகச் சொல்
16 லுகிறேன். இதினால் உங்கள் உண்மை
வெளிப்படும்; உங்கள் சகோதரனை யழைத்
துவரும்படி உங்களில் ஒருவனையனுப்புங்
கள்; மற்றவர்கள் காவலில் இருக்கவேண்
டும்; நீங்கள் சொல்வது ஒப்போ தப்போ
என்று உங்கள் பேச்சின் உண்மை அப்பொ
ழுது வெளிப்படும். நான் சொல்லுகிறபடி
செய்யாவிட்டால் நீங்கள் வேவுகாரர்தான்,
இதைப் பார்வோனின் ஜீவன்மேல் ஆணையா
17 கச்சொல்லுகிறேன் என்று சொல்லி | அவர்
கள் எல்லாரையும் ஒன்றாய் மூன்றுநாள்
18 காவலில் வைத்தான். மூன்றாம் நாளிலே
யோசேப்பு அவர்களை வரவழைத்து: நான்
கடவுளுக்குப் பயப்படுகிறவன்; நீங்கள்
உயிரோடிருக்கும்படி ஒன்று செய்யுங்கள்.
19 நீங்கள் நிஜஸ்தராயுள் நீங்கள் இருந்த
காவற்கூடத்தில் சகோதரராகிய உங்களில்
ஒருவன் கட்டுண்டிருக்கட்டும்; மற்றவர்
கள் புறப்பட்டுப் பஞ்சத்தினால் வருந்துகிற
உங்கள் குடும்பத்துக்குத் தானியங்கொண்டு
20 போய்க் கொடுத்துவிட்டு | உங்கள் இளைய
சகோதரனை என்னிடம்அழைத்துக்கொண்
டுவாருங்கள்; அப்பொழுது உங்கள் வார்த்
தை மெய்யென்று விளங்கும், நீங்களும் சா
வதில்லை என்று சொன்னான்; அவர்களும்
அதற்கு இசைந்தார்கள். பின்பு அவர்கள்
ஒருவரை யொருவர் பார்த்து: நமது சகோ
தரனுக்கு நாம் செய்த துரோகம் நம்மேல்
சுமந்தது; அவன் நம்மைக் கெஞ்சி வேண்
டிக்கொண்டபோது அவன் மனோவியாகு
லத்தை நாம் கண்டும் அவனுக்குச் செவி
கொடாமற்போனோம்; அதனால்தான் இந்த
வியாகுலம் நமக்கு வந்தது என்று சொல்
லிக்கொண்டார்கள். அப்பொழுது ரூபன்
அவர்களைப்பார்த்து: இளைஞனுக்குத் துரோ
கஞ்செய்து பாவத்திற்கு ஆளாகாதிருங்கள்
என்று நான் உங்களுக்குச் சொன்னேனே;
நீங்கள் கேளாமற்போனீர்கள்; இதோ,
அவன் இரத்தப்பழி நம்மிடம் வாங்கப்படு
கிறது என்றான். மொழிபெயர்ப்பவன்
உதவியால் யோசேப்பு அவர்களோடு பே
சினபடியால் தாங்கள் சொன்னது அவ
னுக்கு விளங்குமென்று அறியாதிருந்தார்
கள். அவன் அவர்களைவிட்டு அப்புறம்
போய்அழுதான், திரும்ப அவர்களிடம்வந்து
அவர்களோடு பேசி அவர்களில் சிமியோ
னைப் பிடித்து அவர்கள் கண்களுக்கு எதி
ரே கட்டுவித்தான். பின்பு அவர்கள் சாக்
குகளில் தானியத்தை நிரப்பவும் அவர்கள்
பணத்தைத் திரும்ப அவனவன் சாக்கிலே
யே போடவும் வழிக்குவேண்டிய ஆகாரத்
தைக் கொடுக்கவும் யோசேப்பு கட்டளை
யிட்டான்; அப்படியே அவாகளுக்குச்
செய்யப்பட்டது. அவர்கள் அந்தத் தானி
யத்தைத் தங்கள் கழுதைகள்மேல் ஏற்றிக்
கொண்டு அங்கிருந்து புறப்பட்டுப்போனார்
கள். இராத்தங்குகிறஇடத்திலே அவர்களில்
ஒருவன் தன் கழுதைக்குத் தீபனம்போடத்
தன் சாக்கைத் திறந்தபோது சாக்கின்வாயி
லே தன் பணம் இருக்கிறதைக் கண்டு |
தன் சகோதரரைப் பார்த்து: என் பணம்
திரும்ப வந்திருக்கிறது; இதோ, அது என்
சாக்கிலே இருக்கிறது என்றான். அப்
பொழுது அவர்கள் இருதயம் சோர்ந்து
போயிற்று. அவர்கள் பயந்தவர்களாய்
ஒருவரை யொருவர் பார்த்து: கடவுள் நமக்
குச்செய்த இது என்ன என்று சொல்லிக்
கொண்டார்கள்.

அவர்கள் கானான்தேசத்திற்குத் தங்கள்
தகப்பனாகிய யாக்கோபினிடம் வந்து
சேர்ந்து தங்களுக்குச் சம்பவித்தவைகளே
யெல்லாம் அவனுக்கு அறிவித்து: தேசத்
துக்கு அதிபதியாயிருக்கிறவன் எங்களைத்
தேசத்தை வேவுபார்க்க வந்தவர்களென்று

எண்ணி எங்களோடு கடினமாய்ப் பேசி
31 னான். நாங்களோ அவனிடம்: நாங்
32 கள் நிஜஸ்தர், வேவுகாரர் அல்ல; நாங்கள் பன்னிரண்டு சகோதரர், ஒரு தகப்பன் பிள்ளைகள், ஒருவன் இப்பொழுது இல்லை; இளையவன் கானான் தேசத்தில் எங்கள் தகப்பனுடனிருக்கிறான் என்று சொன்
33 னோம். அதைக் கேட்டவுடன் தேசாதிபதியான அந்த மனிதன்: நீங்கள் நிஜஸ்தர் என்பதை நான் அறியும்படி உங்கள் சகோதரரில் ஒருவனை நீங்கள் என்னிடத்தில் விட்டுவிட்டுப் பஞ்சத்தினால் வருந்துகிற உங்கள் குடும்பத்துக்குத் தானியம் வாங்கிக்கொண்
34 டுபோய்க் கொடுத்து | உங்கள் இளைய சகோதரனை என்னிடம் அழைத்துக் கொண்டு வாருங்கள்; அதினாலே நீங்கள் வேவுகாரர் அல்ல, நிஜஸ்தர் என்பதை நான் அறிந்துகொள்ளுவேன், உங்கள் சகோதரனையும் விடுதலைசெய்வேன்; நீங்கள் இந்தத் தேசத்திலே வியாபாரமும் பண்ணலாம்
35 என்றான் என்று சொன்னார்கள். அவர்கள் தங்கள் சாக்குகளிலுள்ள தானியத்தைக் கொட்டுகையில், இதோ, அவனவன் சாக்கிலே அவனவன் பணமுடிப்பு இருந்தது; அந்தப் பணமுடிப்புகளை அவர்களும் அவர்கள் தகப்பனும்கண்டு பயந்தார்கள்.
36 அவர்கள் தகப்பனாகிய யாக்கோபு அவர்களைப் பார்த்து: என்னைப் பிள்ளையற்றவனாக்குகிறீர்கள்; யோசேப்பும் இல்லை சிமியோனும் இல்லை; பென்யமீனையும் கொண்டுபோகப் போகிறீர்கள்; இதெல்லாம் என்
37 மேல் வருகிறது என்றான். அப்பொழுது ரூபன் தன் தகப்பனைப்பார்த்து: அவனை என் கையில் ஒப்புவியும், நான் அவனைத் திரும்ப உம்மிடம் கொண்டுவருவேன்; அவனைக் கொண்டுவராவிட்டால் என் இரண்டு குமாரரையும் கொன்றுபோடும்
38 என்று சொன்னான். அதற்கு அவன்: என் மகன் உங்களோடுகூடப் போவதேயில்லை; அவன் தமையன் இறந்துபோனான், இவன் ஒருவனே இப்பொழுது இருக்கிறான்; நீங்கள் போகும் வழியில் இவனுக்கு மோசம் நேரிட்டால் நீங்கள் என் நரையையைச் சஞ்சலத்தோடு பாதாளத்தில் இறங்கப்பண்ணுவீர்களே என்றான்.

**43** தேசத்திலே பஞ்சம் கொடிதாயிற்று.
2 எகிப்திலிருந்து அவர்கள் கொண்டுவந்த தானியம் செலவழிந்தபோது அவர்கள் தகப்பன் அவர்களைப்பார்த்து: நீங்கள் திரும்பப்போய் நமக்குக் கொஞ்சம் தானியம்
3 வாங்கி வாருங்கள் என்றான். அதற்கு யூதா: உங்கள் சகோதரன் உங்களோடு

கூடவராவிட்டால் நீங்கள் என் முகத்தைக் காண்பதேயில்லை என்று அந்த மனிதன் எங்களுக்குக் கண்டிப்பாய்ச் சொன்னான்.
4 எங்கள் சகோதரனை நீர் எங்களோடு அனுப்புவீரானால் நாங்கள்போய் உமக்குத் தானியம் வாங்கிக்கொண்டுவருவோம்.
5 அனுப்பாவிட்டால் நாங்கள் போகமாட்டோம்; உங்கள் சகோதரன் உங்களோடேகூட வராவிட்டால் நீங்கள் என் முகத்தைக் காண்பதேயில்லை என்று அந்த மனிதன் எங்களிடஞ் சொல்லியிருக்கிறானே என்றான்.
6 அதைக்கேட்ட இஸ்ரவேல்: உங்களுக்கு இன்னும் ஒரு சகோதரன் உண்டென்று நீங்கள் அந்த மனிதனுக்குச் சொல்லி என் எனக்கு இத்தன்பத்தை வருவித்தீர்கள் என்றான்.
7 அதற்கு அவர்கள்: அந்த மனிதன் உங்கள் தகப்பன் இன்னும் உயிரோடிருக்கிறாரா? உங்களுக்கு இன்னும் ஒரு சகோதரன் உண்டா? என்று எங்களையும் எங்கள் வம்சத்தையும் குறித்துத் திட்டமாய் விசாரித்தான்; அந்தக் கேள்விகளுக்குத் தக்கதாக உள்ளபடி அவனுக்குச் சொன்னோம்; உங்கள் சகோதரனை உங்களோடு இங்கேகொண்டுவாருங்கள் என்று அவன் சொல்லுவான் என்பதை நாங்கள் அறிந்திருந்தோமா என்றார்கள்.
8 பின்னும் யூதா தன் தகப்பனாகிய இஸ்ரவேலைப்பார்த்து: நீரும் நாங்களும் எங்கள் குழந்தைகளும் சாகாமல் உயிரோடிருக்கும்படி நாங்கள் புறப்பட்டுப்போகிறோம், பிள்ளையாண்டானை என்னோடு அனுப்பும். அவனுக்
9 காக நான் உத்தரவாதம் பண்ணுவேன்; அவனை என்னிடத்தில் கேளும், நான் அவனை உம்மிடங்கொண்டுவந்து உமக்கு முன்பாக நிறுத்தாமற்போனால் எக்காலும்
10 அந்தக்குற்றம் என்மேலிருக்கட்டும். நாங்கள் தாமதியாதிருந்தோமேயானால் இதற்குள் இரண்டாந்தரமும்போய்த் திரும்பிவந்திருப்போமே என்றான்.
11 அதற்கு அவர்கள் தகப்பனாகிய இஸ்ரவேல்: அப்படியானால் ஒன்று செய்யுங்கள். இந்தத் தேசத்தின் உசிதமான வஸ்துக்களில் கொஞ்சம் பிசின்தைலமும் கொஞ்சம் தேனும் கந்தவர்க்கங்களும் வெள்ளைப்போளமும் தெரிந்துகொட்டைகளும் வாதுமைக் கொட்டைகளும் உங்கள் சாக்குகளில் போட்டுக்கொண்டுபோய் அந்த மனிதனுக்கு வெகுமானமாகக் கொடுங்கள்.
12 பணத்தை இரட்டிப்பாய் உங்கள் கைகளில் கொண்டுபோங்கள், சாக்குகளின் வாயிலே திரும்பக் கொண்டுவந்த பணத்தையும் கொண்டுபோங்கள், அது கைப்பிசகாய் வந்திருக்

13 கும். உங்கள் சகோதரனையும் கூட்டிக்
கொண்டு அந்த மனிதனிடத்துக்கு மறு
14 படியும் போங்கள். அந்த மனிதன் அங்
கிருக்கிற உங்கள் மற்றச் சகோதரனை
யும் பென்யமீனையும் உங்களோடு அனுப்பி
விடும்படிக்குச் சர்வவல்லவரான கடவுள்
அவன் சமுகத்தில் உங்களுக்கு இரக்கங்
கிடைக்கப் பண்ணுவாராக; நான் பிள்ளை
யற்றுப் போனவனாக இருக்கவேண்டுமே
யானால் அப்படித்தானே நடக்கும் என்
ரூன்.

15 அப்பொழுது அவர்கள் வெகுமானங்களை
யும் தங்கள் கைகளில் இரட்டிப்பான
பணத்தையும் எடுத்துக்கொண்டு பென்ய
மீனையும் கூட்டிக்கொண்டு பிரயாணப்
பட்டு எகிப்துக்குப்போய் யோசேப்பின்
16 சமுகத்தில் வந்து நின்ரூர்கள். பென்ய
மீன் அவர்களோடுகூட வந்திருக்கிறதை
யோசேப்பு கண்டு தன் வீட்டு விசாரணைக்
காரனைப்பார்த்து: நீ இந்த மனிதரை வீட்
டுக்கு அழைத்துப்போய்ச் சாப்பாட்டுக்கு
வேண்டியவைகளை அடித்து ஆயத்தம்பண்
ணு, மத்தியானம் இந்த மனிதர் என்னோடு
17 சாப்பிடுவார்கள் என்ரூன். அவன் தனக்கு
யோசேப்பு சொன்னபடியே செய்தான்;
அந்த மனிதரை யோசேப்பின் வீட்டுக்கு
18 அழைத்துக்கொண்டு போனான். தாங்கள்
யோசேப்பின் வீட்டுக்குக் கொண்டுபோகப்
படுகிறதை அவர்கள் கண்டு பயந்து முன்
னே நமது சாக்குகளிலிருந்த பணத்தினிமித்
தம் நம்மேல் குற்றஞ்சுமத்தி நம்மைப்பிடித்
து அடிமைகளாக்கிவிட்டு நமது கழுதைக
ளையும் எடுத்துக்கொள்ளும்படி நம்மைக்
கொண்டுபோகிரூர்கள் என்று சொல்லிக்
19 கொண்டு | யோசேப்பின் வீட்டு விசார
ணைக்காரனருகில் வந்து வாசற்படியிலே
20 அவனோடுபேசி: ஐயனே, நாங்கள் தானியங்
கொள்ளும்படி முன்னே வந்துபோனோமே;
21 நாங்கள் தங்குமிடத்தில் போய் எங்கள்
சாக்குகளைத் திறந்தபோது நாங்கள் நிறுத்
துக்கொடுத்த நிறையின்படியே அவனவன்
பணம் அவனவன் சாக்கின்வாயிலே இருக்
கக்கண்டோம்; அதை நாங்கள் திரும்பவும்
22 கையிலே கொண்டுவந்திருக்கிரோம். தானி
யம் கொள்ளும்படி வேறே பணமும் கை
யில் கொண்டுவந்திருக்கிரோம்; நாங்கள்
முன்கொடுத்த பணத்தை எங்கள் சாக்குக
ளில் போட்டது இன்னார் என்று அறி
23 யோம் என்ரூர்கள். அதற்கு அவன்: உங்
களுக்குச் சமாதானம்; பயப்படவேண்
டாம்; உங்கள் கடவுளும் உங்கள் தகப்
னின் கடவுளுமானவர் உங்கள் சாக்குக
ளில் அதை உங்களுக்குப் புதையலாகக்
கட்டளையிட்டார்; நீங்கள் கொடுத்த பணம்
என்னிடம் வந்து சேர்ந்தது என்று சொல்
லிச் சிமியோனை வெளியே அழைத்துவந்து
அவர்களிடம் விட்டான். மேலும் அந்த 24
மனிதன் அவர்களை யோசேப்பின் வீட்டுக்
குள்ளே கூட்டிக்கொண்டுபோய் அவர்கள்
கால்களைக் கழுவும்படி தண்ணீர் கொடுத்து
அவர்கள் கழுதைகளுக்கும் தீப்னம் போட்
டான். தாங்கள் அங்கே போஜனம் செய் 25
யப்போகிறதை அவர்கள் கேள்விப்பட்ட
படியால் மத்தியானம் யோசேப்பு வருமள
வும் வெகுமானத்தை ஆயத்தமாய் வைத்துக்
காத்துக்கொண்டிருந்தார்கள். யோசேப்பு 26
வீட்டுக்கு வந்தபோது அவர்கள் தங்கள்
கையிலிருந்த வெகுமானத்தை வீட்டுக்குள்
அவனிடம் கொண்டுபோய் வைத்துத் தரை
மட்டும் குனிந்து அவனை வணங்கினார்கள்.
அப்பொழுது அவன்: அவர்கள் சுகசெய்தி 27
யை விசாரித்து: நீங்கள் சொன்ன முதிர்
வயதான உங்கள் தகப்பன் சுகமாயிருக்கி
ரூரா? அவர் இன்னும் உயிரோடிருக்கி
ரூரா என்று அவர்களிடம் விசாரித்தான்.
அதற்கு அவர்கள்: எங்கள் தகப்பனாகிய 28
உமது அடியான் சுகமாயிருக்கிரூர், இன்
னும் உயிரோடிருக்கிரூர் என்று சொல்லிக்
குனிந்து வணங்கினார்கள். அவன் தன் 29
கண்களை நிமிர்த்தித் தன் தாய்பெற்ற மகனை
யை சகோதரன் பென்யமீனைக் கண்டு: நீங்
கள் எனக்குச் சொன்ன உங்கள் இளைய
சகோதரன் இவன்தானே என்று கேட்டு,
மகனே, கடவுள் உனக்குக் கிருபைசெய்வா
ராக என்ரூன். தன் சகோதரன்மீதுள்ள 30
வாஞ்சையால் யோசேப்பின் உள்ளம்
பொங்கினபடியால் அவன் அழுகிறதற்கு
இடந்தேடித் துரிதமாய் அறைக்குள்ளே
போய் அங்கே அழுதான். பின்பு அவன் 31
தன் முகத்தைக் கழுவி வெளியே வந்து
தன்னை அடக்கிக்கொண்டு போஜனம் வைக்
கச் சொன்னான். எகிப்தியர் எபிரெயரோடு 32
உட்கார்ந்து சாப்பிடமாட்டார்கள்; அப்ப
டிச்செய்வது எகிப்தியருக்கு அருவருப்பு;
ஆகையால் அவனுக்குத் தனிப்படவும்
அவர்களுக்குத் தனிப்படவும் அவனோடு
சாப்பிடும் எகிப்தியருக்குத் தனிப்படவும்
வைத்தார்கள். அவனுக்கு முன்பாக மூத்த 33
வன் மூப்பு இளையவன் வரைக்கும் அவன
வன் வயதின்படியே அவர்களை உட்கார
வைத்தார்கள். அதைக்கண்டு அவர்கள்
ஒருவரையொருவர் பார்த்து ஆச்சரியப்பட்
டார்கள். அவன் தனக்குமுன் வைக்கப் 34
பட்டிருந்த பதார்த்தங்களில் அவர்களுக்

குப் பங்கிட்டு அனுப்பினான்; அவர்கள் எல்லாருடைய பங்குகளைப் பார்க்கிலும் பென்யமீனின் பங்கு ஐந்துமடங்கு அதிகமாயிருந்தது; அவர்கள் பானம் பண்ணி அவனோடே சந்தோஷமாயிருந்தார்கள்.

**44** பின்பு அவன் தன் வீட்டு விசாரணைக்காரனிடம்: நீ இந்த மனிதர் ஏற்றிக்கொண்டு போகத்தக்க பாரமாய்த் தானியம் சாக்குகளில் நிரப்பி அவனவன் பணத்தை அவனவன் சாக்கின்வாயிலே போடு. இளையவனுடைய சாக்கின்வாயிலே தானியத்துக்கு அவன் கொடுத்த பணத்தோடுகூட வெள்ளிப்பாத்திரமாகிய என் பானபாத்திரத்தையும் போடு என்று கட்டளையிட்டான். யோசேப்பு சொன்னபடியே அவன் செய்தான். விடிந்தபோதோ அந்த மனிதரையும் அவர்கள் கழுதைகளையும் அனுப்பிவிட்டார்கள். அவர்கள் பட்டணத்தைவிட்டு வெகுதூரம் போவதற்கு முன்னே யோசேப்பு தன் வீட்டு விசாரணைக்காரனைக் கூப்பிட்டு: நீ ஓடிப்போய் அந்த மனிதரைப் பின்தொடர்ந்து அவர்களைப் பிடித்து: நீங்கள் நன்மைக்குத் தீமைசெய்தது என்ன? அது என் எஜமான் பானம் பண்ணுகிற பாத்திரமாயிற்றே. அவர் ஞான திருஷ்டி பார்க்கிற பாத்திரமல்லவா? நீங்கள் செய்தது தகாதகாரியம் என்று அவர்களிடஞ் சொல் என்றான். அவன் அவர்களைத் தொடர்ந்து பிடித்து தன்னிடஞ் சொல்லியிருந்த வார்த்தைகளை அவர்களுக்குச் சொன்னான். அவர்களோ அவனிடம்: ஐயனே, நீர் இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லுகிறதென்ன? இப்படிப்பட்ட காரியத்துக்கும் அடியேங்களுக்கும் வெகுதூரம். எங்கள் சாக்குகளின் வாயிலே நாங்கள் கண்ட பணத்தைக் கானான்தேசத்திலிருந்து திரும்ப உம்மிடம் கொண்டுவந்தோமே; அப்படிச் செய்த நாங்கள் உமது எஜமானின் வீட்டிலிருந்து வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் திருடிக்கொண்டு போவோமா? உமது அடியாருக்குள்ளே அது எவனிடங் காணப்படுமோ அவன் சாவுக்காளாகட்டும்; நாங்களும் எங்கள் ஆண்டவனுக்கு அடிமைகளாவோம் என்றார்கள். அதற்கு அவன்: நீங்கள் சொன்னபடியே ஆகட்டும்; எவனிடம் அதைக் கண்டுபிடிக்கிறோமோ அவனே எனக்கு அடிமையாவான்; மற்றவர்கள் குற்றமற்றிருப்பீர்கள் என்றான். அப்பொழுது அவர்கள் துரிதமாய் அவனவன் தன் தன் சாக்கைத் தரையிலே இறக்கித் திறந்துவைத்தார்கள். மூத்தவன் சாக்கு முதல் இளையவன் சாக்குமட்டும் அவன் சோதித்து வந்தபோது அந்தப் பாத்திரம் பென்யமீன் சாக்கிலே கண்டுபிடிக்கப்பட்டது. அதைக்காணவே அவர்கள் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு அவனவன் கழுதையின்மேல் பொதியை ஏற்றிக்கொண்டு பட்டணத்திற்குத் திரும்பினார்கள். யூதாவும் அவன் சகோதரரும் யோசேப்பின் வீட்டுக்குப் போனார்கள். யோசேப்பு அதுவரைக்கும் அங்கேயே இருந்தான். அவனுக்கு முன்பாகத் தரையிலே விழுந்தார்கள். யோசேப்பு அவர்களைப் பார்த்து: நீங்கள் செய்த இந்தக் காரியமென்ன? என்னைப்போலொத்த மனிதனுக்கு ஞானதிருஷ்டியினால் காரியம் வெளியாகிவிடும் என்று உங்களுக்குத் தெரியாதா என்றான். அதற்கு யூதா: என் ஆண்டவனுக்கு உம்மிடம் நாங்கள் என்ன சொல்லுவோம்? என்னத்தைப் பேசுவோம்? நாங்கள் குற்றமற்றவர்கள் என்பதை எப்படிக்காட்டுவோம்? உமது அடியாரின் அக்கிரமத்தைக் கடவுளே வெளிப்படுத்திவிட்டார். பாத்திரத்தை வைத்திருக்கிறவனும் நாங்களும் என் ஆண்டவனுக்கு அடிமைகள் என்றான். அதற்கு அவன்: அப்படியல்ல, அதற்கும் எனக்கும் வெகுதூரம்; எவன் வசத்தில் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டதோ அவனே எனக்கு அடிமையாயிருப்பான். மற்றவர்களோ சமாதானமாய் உங்கள் தகப்பனிடம் போங்கள் என்றான்.

அதைக் கேட்கவே யூதா அவனண்டையிலே சேர்ந்து: ஐயனே, உமது அடியேன் உமது செவிகள் கேட்க ஒரு வார்த்தை சொல்லுகிறேன், கேட்பீராக; அடியேன் மேல் உமது கோபம் மூளாதிருப்பதாக; நீர் பார்வோனுக்கு ஒப்பானவர். உங்களுக்குத் தகப்பனாவது சகோதரனாவது உண்டா என்று என் ஆண்டவன் உமது அடியாரிடம் கேட்டீர். அதற்கு நாங்கள்: எங்களுக்கு முதிர்வயதுள்ள தகப்பனாரும், அவருக்கு முதிர்வயதிலே பிறந்த ஒரு இளைஞனும் உண்டு என்றும் அவன் தமையன் இறந்துபோனான், அவன் தாய் பெற்ற பிள்ளைகளில் அவன் ஒருவனே இருக்கிறானென்றும் தகப்பனார் அவன்மேல் பட்சமாயிருக்கிறார் என்றும் என் ஆண்டவனுக்குச் சொன்னோம். நீரோ அவனை என்னிடங் கொண்டுவாருங்கள்; என் கண்களினால் அவனைப் பார்க்கவேண்டும் என்று அடியேங்களுக்குச் சொன்னீர். நாங்கள் ஆண்டவனிடம்: அந்த இளைஞனைத் தகப்பனிடமிருந்து பிரிக்கக்கூடாது; பிரித்தால் தகப்பனாரின் உயிர் போய்விடும் என்று சொன்

23 ஞும். அதற்கு நீர்: உங்கள் இளைய சகோ
தரனைக் கொண்டுவராவிட்டால் நீங்கள்
இனி என் முகத்தைக் காண்பதேயில்லை
என்று அடியேங்களுக்குச் சொன்னீர்.
24 நாங்கள் உமது அடியாளுகிய என் தகப்ப
னரிடம் திரும்பிப்போனபோது ஆண்டவ
னின் வார்த்தைகளை அவருக்கு அறிவித்
25 தோம். எங்கள் தகப்பனர் எங்களிடம்:
நீங்கள் திரும்பப்போய் நமக்குக் கொஞ்சம்
தானியம் வாங்கிவாருங்கள் என்று சொன்
26 னர். அதற்கு: நாங்கள் போகமுடியாது;
எங்கள் இளைய சகோதரன் எங்களோடு
வந்தால் மாத்திரம் போவோம்; எங்கள்
இளைய சகோதரன் எங்களோடு வராவிட்
டால் நாங்கள் அந்தப் புருஷனின் முகத்
தைக்காண்பதேயில்லை என்று சொன்னோம்.
27 அப்பொழுது உமது அடியாளுகிய என்
தகப்பனர்: என் மனைவி எனக்கு இரண்டு
28 பிள்ளைகளைப் பெற்றாள். அவர்களில் ஒரு
வன் என்னிடமிருந்து போய்விட்டான்,
அவன் பீறுண்டுபோயிருப்பான் என்றிருந்து
விட்டேன். அதுமுதல் அவனைக் காண
வில்லை. இவையெல்லாம் உங்களுக்குத்
29 தெரியும். இவனையும் நீங்கள் என்னை
விட்டுப் பிரித்து அழைத்துப்போகிறீர்கள்;
போகுமிடத்தில் இவனுக்கு மோசம் நேரிட்
டால் என் நரையிலை வியாகுலத்தோடே
பாதாளத்தில் இறங்கப்பண்ணுவீர்கள் என்
30 றார். இப்படியிருக்க இளைஞனை விட்டு
விட்டு நான் என் தகப்பனுகிய உமது அடி
யானிடம் போனால் இளைஞன் வரவில்லை
என்று அவர் அறிந்தமாத்திரமே உயிர் விடு
31 வார். அவர் ஜீவன் இவன் ஜீவனோடு ஒன்
றாய் இணைக்கப்பட்டிருக்கிறது. இவ்வா
றாக உமது அடியாராகிய நாங்கள் உமது
அடியாளுகிய எங்கள் தகப்பனின் நரை
மயிரை வியாகுலத்தோடு பாதாளத்தில்
32 இறங்கப்பண்ணுவோமே. இந்த இளை
ஞனுக்காக உமது அடியாளுகிய நான் என்
தகப்பனுக்கு உத்தரவாதி; நான் இவனை
உம்மிடங் கொண்டுவராவிட்டால், நான்
எந்நாளும் உமக்கு முன்பாகக் குற்றவாளி
யாயிருப்பேன் என்று அவருக்குச் சொல்லி
33 யிருக்கிறேன். ஆகையால் இளைஞனைத்
தன் சகோதரரோடுகூடப் போகவிடும்படி
உம்மை மன்றாடுகிறேன்; உமது அடியாள
கிய நானே இளைஞனுக்குப் பதிலாக இங்கே
என் ஆண்டவனுக்கு அடிமையாயிருக்கி
றேன். இளைஞனைவிட்டு எப்படி என் தகப்
பனிடம் போவேன்? போனால் என் தகப்ப
னுக்கு நேரிடும் தீங்கை நான் ஏற்பிடிப்
பார்ப்பேன் என்றார்.

45 அப்பொழுது யோசேப்பு தன்னைச்சுற்றி
நின்ற எல்லாருக்கும் முன்பாகத் தன்னை
அடக்கிக்கொண்டிருக்க முடியாமல்: யாவ
ரையும் என்னைவிட்டு வெளியே போகப்
பண்ணுங்கள் என்று கட்டளையிட்டான்.
யோசேப்பு தன் சகோதரருக்குத் தன்னை
இன்னுனென்று தெரியப்படுத்துகையில்
ஒருவரும் அவன் பக்கத்தில் நிற்கவில்லை.
அவன் சத்தமிட்டு அழுதான்; அதை எகி 2
நியர் கேட்டார்கள். பார்வோனின் வீட் 3
டாரும் கேட்டார்கள். யோசேப்பு தன்
சகோதரரைப் பார்த்து: நான் யோசேப்பு,
என் தகப்பனர் இன்னும் உயிரோடே
இருக்கிறாரா என்றான். அவன் சகோதரர்
அவனுக்குமுன்பாகத் திகில் கொண்டிருந்த
தனால் அவனுக்கு உத்தரவு சொல்லமுடியா
மற் போனார்கள். அப்பொழுது யோசேப்பு 4
தன் சகோதரரிடம்: என் கிட்டவாருங்கள்
என்றான். அவர்கள் கிட்டப்போனார்கள்;
அப்பொழுது அவன்: எகிப்துக்குப் போகும்
படி நீங்கள் விற்றுப்போட்ட உங்கள்
சகோதரனுகிய யோசேப்பு நான்தான்.
இங்கே வரும்படி நீங்கள் என்னை 5
விற்றுப்போட்டதினால் சஞ்சலப்படவேண்
டாம்; அதற்காக உங்களை நொந்து
கொள்ளவும் வேண்டாம்; ஜீவரட்சணை
செய்யும்படி கடவுள் என்னை உங்களுக்கு
முன்னே அனுப்பினார். தேசத்தில் இப்பொ 6
முது இரண்டு வருஷகாலமாகப் பஞ்சமா
யிருக்கிறது; இன்னும் ஐந்து வருஷம் உழ
வும் அறுப்பும் இல்லாமல் பஞ்சமிருக்கும்.
பூமியிலே உங்களுக்குப்பின் சந்ததியிருக் 7
கும்படி உங்களை ஆதரிக்கிறதற்காகவும் உங்
கள் அத்தனைபேரையும் உயிரோடே காப்
பாற்றுவதற்காகவும் கடவுள் என்னை உங்
களுக்குமுன்னமே அனுப்பினார். ஆதலால் 8
நீங்கள் அல்ல, கடவுளே என்னை இவ்வி
டத்திற்கு அனுப்பினவர். அவர் என்னைப்
பார்வோனுக்குத் தகப்பனுகவும் பார்வோன்
குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனுகவும்
எகிப்துதேசம் முழுமைக்கும் அதிபதியா
கவும் வைத்தார். நீங்கள் என் தகப்பனி 9
டத்திற்கு விரைந்துபோய்: உமது குமார
னுகிய யோசேப்பு உமக்குச் சொல்லி
யனுப்பியிருக்கிறதைக் கேளுமென்று
சொல்லுங்கள். கடவுள் என்னை எகிப்து
தேசம் முழுமைக்கும் அதிபதியாக வைத்
தார்: என்னிடம் வாரும், தாமதிக்கவேண்
டாம். நீரும் உமது பிள்ளைகளும் பிள்ளை 10
களின் பிள்ளைகளும் உமது ஆடுமாடுகளோ
டும் உமக்குள்ள யாவற்றோடும் கோசேன்
நாட்டில் வாசம்பண்ணி என் சமீபத்தில்

11 இருக்கலாம். உமக்கும் உமது குடும்பத்தா
ருக்கும் உமக்கு இருக்கிற யாவற்றிற்கும்
வறுமை வராதபடி அங்கே உம்மைப் பரா
மரிப்பேன்; இன்னும் ஐந்து வருஷம் பஞ்ச
12 மிருக்கும் என்று சொல்லுங்கள். இதோ,
உங்களோடே பேசுகிறவன் நானே என்ப
தை உங்கள் கண்களும் என் தம்பியாகிய
பென்யமீனின் கண்களும் காண்கின்றன
13 வே. எகிப்திலே எனக்கு இருக்கிற சகல
மகிமையையும் நீங்கள் கண்ட யாவையும்
என் தகப்பனுக்கு அறிவித்து அவர் சீக்கிர
மாய் இவ்விடம் வரும்படி செய்யுங்கள்
14 என்று சொல்லித் | தன் தம்பியாகிய
பென்யமீனின் கழுத்தைக் கட்டிக்கொண்டு
அழுதான்: பென்யமீனும் அவன் கழுத்
15 தைக் கட்டிக்கொண்டு அழுதான். பின்பு
தன் சகோதரர் யாவரையும் முத்தஞ்செய்து
அவர்களையும் கட்டிக்கொண்டு அழுதான்.
பிற்பாடு அவன் சகோதரர் அவனோடு சம்
பாஷித்தார்கள்.

16 யோசேப்பின் சகோதரர் வந்தார்கள் என்
கிற சமாசாரம் பார்வோன் அரண்மனையில்
பிரசித்தமானபோது பார்வோனும் அவன்
17 ஊழியக்காரரும் சந்தோஷமானார்கள். பார்
வோன் யோசேப்பைப் பார்த்து: நீ உன்
சகோதரரிடஞ் சொல்லவேண்டியதாவது,
இப்படிச்செய்யுங்கள்: உங்கள் கழுதைக
ளின்மேல் பொதியேற்றிக்கொண்டு புறப்
18 பட்டுக் கானான்தேசத்துக்குப் போய் | உங்
கள் தகப்பனையும் உங்கள் குடும்பத்தாரை
யும் கூட்டிக்கொண்டு என்னிடம் வாருங்
கள், நான் உங்களுக்கு எகிப்துதேசத்தில்
நலமானவற்றைத் தருவேன்; தேசத்தின்
19 கொழுமையைச் சாப்பிடுவீர்கள். நீங்கள்
உங்கள் குழந்தைகளுக்கும் உங்கள் மனைவி
களுக்கும் வண்டிகளை எகிப்துதேசத்திலிருந்
தே கொண்டுபோய் அவர்களையும் உங்கள்
தகப்பனையும் ஏற்றிக்கொண்டு வாருங்கள்.
20 உங்கள் தட்டுமுட்டுகளைப்பற்றிக் கவலைப்
படவேண்டாம்; எகிப்துதேசமுழுவதிலு
முள்ள நலமானவைகள் உங்களுடைய
வைகளாகும் என்று சொல்லி உனக்கு
நான் இட்ட கட்டளைப்படியே செய்வி என்
21 றான். இஸ்ரவேலின் குமாரர் அப்படியே
செய்தார்கள். யோசேப்பு பார்வோனு
டைய கட்டளையின்படியே அவர்களுக்கு
வண்டிகளைக் கொடுத்ததுமன்றி வழிக்கு
22 ஆகாரத்தையும் | அவர்களில் ஒவ்வொரு
வனுக்கும் அலங்காரமான வஸ்திரங்களையும்
கொடுத்தான்; பென்யமீனுக்கோ மூந்நூறு
வெள்ளிக்காசையும் ஐந்து மாற்று வஸ்திரங்
23 களையும் கொடுத்தான். அப்படியே தன்
தகப்பனுக்குப் பத்துக் கழுதைகளின்மேல்
எகிப்தின் உசிதமான பதார்த்தங்களும் பத்
துப் பெட்டைக் கழுதைகளின்மேல் தன்
தகப்பனுக்காக வழிக்குத் தானியமும்
அப்பமாவும் மற்றத் தின்பண்டங்களும்
ஏற்றி அனுப்பினான்; வழியிலே சண்டை 24
பண்ணிக்கொள்ளாதிருங்கள் என்றும்
அவன் தன் சகோதரருக்குச் சொல்லியனுப்
பினான்; அவர்கள் போய்விட்டார்கள்.
அவர்கள் எகிப்திலிருந்து போய்க் கானான் 25
தேசத்திலே தங்கள் தகப்பனாகிய யாக்கோ
பினிடம் வந்து: யோசேப்பு உயிரோடிருக்
கிறான், அவன் எகிப்து தேசத்துக்கெல்லாம் 26
அதிபதியாயிருக்கிறான் என்று அவனுக்கு
அறிவித்தார்கள். அவன் இருதயம் மூர்ச்
சையடைந்தது; அவன் அவர்களை நம்ப
வில்லை. அவர்கள் யோசேப்பு தங்களு 27
டனே சொன்ன வார்த்தைகள் யாவையும்
அவனுக்குச் சொன்னபோதும் தன்னை ஏற்
றிக்கொண்டு போகும்படி யோசேப்பு
அனுப்பின வண்டிகளை அவன் கண்டபோ
தும் அவர்கள் தகப்பனாகிய யாக்கோபுக்குப்
புது உயிர் வந்தது. அப்பொழுது இஸ்ர 28
வேல்: என் குமாரனாகிய யோசேப்பு இன்
னும் உயிரோடிக்கிறானே, இது போதும்;
நான் மரணமடையுமுன்னே போய் அவ
னைப் பார்ப்பேன் என்றான்.

இஸ்ரவேல் தன் பொருட்களையெல்லாம் **46**
சேர்த்துக்கொண்டு புறப்பட்டுப் பெயர்
ஷெபாவுக்கு வந்து தன் தகப்பனாகிய ஈசாக்
கின் கடவுளுக்குப் பலியிட்டான். அன்று 2
இரவிலே கடவுள் இஸ்ரவேலுக்குத் தரிசன
மாகி: யாக்கோபே, யாக்கோபே என்று
கூப்பிட்டார்; அவன் இதோ, அடியேன்
என்றான். அப்பொழுது அவர்: நானே கட 3
வுள், நான் உன் தகப்பனுடைய கட
வுள், நீ எகிப்து தேசத்துக்குப்போகப் பயப்
படவேண்டாம்; அங்கே உன்னைப் பெரிய
ஜனமாக்குவேன். நான் உன்னோடு எகிப் 4
துக்கு வருவேன்; நான் உன்னை நிச்சயமா
கவே திரும்பவும் வரப்பண்ணுவேன்; யோ
சேப்பு தன் கையால் உன் கண்களை மூடு
வான் என்று சொன்னார். அப்பால் யாக் 5
கோபு பெயர்ஷெபாவிலிருந்து பிரயாணப்
பட்டான். இஸ்ரவேலின் குமாரர் தங்
கள் தகப்பனாகிய யாக்கோபையும் தங்
கள் குழந்தைகளையும் தங்கள் மனைவி
களையும் பார்வோன் அனுப்பின வண்டி
களில் ஏற்றிக்கொண்டு | தங்கள் ஆடுமாடு 6
களையும் தாங்கள் கானான் தேசத்தில் சம்பா
தித்த பொருட்களையும் சேர்த்துக்கொண்டு
எகிப்துக்குப் போனார்கள். இப்படியாக

யாக்கோபும் அவனோடுகூட அவன் சந்ததி
7 யார் அனைவரும் போனார்கள். அவன்
தன் குமாரரையும் தன் குமாரரின் குமா
ரரையும் தன் குமாரத்திகளையும் தன் குமார
ரின் குமாரத்திகளையும் தன் சந்ததியார்
அனைவரையும் எகிப்துக்குத் தன்னோடு
அழைத்துக்கொண்டு போனான்.
8 எகிப்துக்குவந்த இஸ்ரவேலரின் நாமங்
களாவன, இவர்கள் யாக்கோபும் அவன்
குடும்பத்தைச் சேர்ந்தவர்களுமே: யாக்
9 கோபின் மூத்த குமாரன் ரூபன். ரூபனின்
குமாரர் ஆனோக்கு, பல்லூ, எஸ்ரோன்,
10 கர்மீ என்பவர்கள். சிமியோனின் குமாரர்
யெமூவேல், யாமீன், ஓகாத், யாகீன்,
சொகார், கானான்தேசத்தாளின் குமாரனாகிய
11 சவுல் என்பவர்கள். லேவியின் குமாரர்
கெர்சோன், கெகாரி, மெராரி என்பவர்கள்.
12 யூதாவின் குமாரர் ஏர், ஓனான், சேலா,
பேரேஸ், சேரா என்பவர்கள்; அவர்களில்
ஏரும் ஓனானும் கானான் தேசத்தில் இறந்து
போனார்கள்; பேரேசின் குமாரர் எஸ்ரோன்,
13 ஆமூல் என்பவர்கள். இசக்காரின் குமாரர்
தோலா, பூவா, யோபு, சிம்ரோன் என்பவர்
14 கள். செபுலோனின் குமாரர் செரேத்,
15 ஏலோன், யக்லேல் என்பவர்கள். இவர்
கள் லேயாளின் பிள்ளைகள்; இவர்களும்
தீனாள் என்னும் ஒரு குமாரத்தியும் பதான்
அராமிலே யாக்கோபுக்கு லேயாளிடத்தில்
பிறந்தவர்கள். இவள் வழியில் அவன்
குமாரரும் அவன் குமாரத்திகளுமாகிய எல்
16 லாரும் முப்பத்துமூன்று பேர். காத்தின்
குமாரர் சிப்பியோன், அகி, சூனி, எஸ்
போன், ஏரி, அரோதி, அரேலி என்பவர்
17 கள். ஆசேரின் குமாரர் யிம்னா, யிஸ்வா,
யிஸ்வி, பெரீயா என்பவர்கள்; இவர்கள்
சகோதரி சேராகு என்பவள்; பெரீயாவின்
குமாரர் ஏபேர், மல்கியேல் என்பவர்கள்.
18 இவர்கள் லாபான் தன் குமாரத்தியாகிய
லேயாளுக்குக்கொடுத்த சில்பாளின் பிள்
ளைகள்; யாக்கோபுக்கு இவளிடத்தில் பிறந்
19 தவர்கள் பதினாறுபேர். யாக்கோபின்
மனைவியாகிய ராகேலுடைய குமாரர் யோ
20 சேப்பு, பென்யமீன் என்பவர்கள். யோ
சேப்புக்கு எகிப்து தேசத்திலே மனாசேயும்
எப்பிராயீமும் பிறந்தார்கள்; அவர்கள்
ஓன் பட்டணத்து ஆசாரியனாகிய போத்தி
பிராவின் குமாரத்தியாகிய ஆஸ்நாத்தினிடம்
21 அவனுக்குப் பிறந்தவர்கள். பென்யமீனின்
குமாரர் பேலா, பேகர், அஸ்பேல், கேரா,
நாகமான், ஏகி, ரோஷ், முப்பிம், உப்பிம்,
22 ஆர்து என்பவர்கள். யாக்கோபுக்கு ராகேலி
னிடம் பிறந்த குமாரராகிய இவர்கள் எல்
லாரும் பதினாலுபேர். தாணின் குமாரன்
23 உசீம்; நப்தலியின் குமாரர் யாசெயேல்,
24 கூனி, ஏத்சேர், சில்லேம் என்பவர்கள்.
இவர்கள் லாபான் தன் குமாரத்தியாகிய
25 ராகேலுக்குக்கொடுத்த பில்காளின் பிள்ளை
கள். இந்த வழியில் யாக்கோபுக்குப்
பிறந்த பிள்ளைகளெல்லாரும் ஏழுபேர்.
26 யாக்கோபுடைய குமாரரின் மனைவிகளைத்
தவிர அவனுடைய புத்திரசந்தானமாய் அவ
னோடு எகிப்துக்குவந்தவர்கள் எல்லாரும்
அறுபத்தாறுபேர். எகிப்திலே யோசேப்
27 புக்குப் பிறந்த குமாரர் இரண்டுபேர்; ஆக
எகிப்தில் வந்த யாக்கோபின் குடும்பத்தார்
எழுபதுபேர்.
28 கோசேனுக்குப் போக வேண்டிய
வழியைத் தனக்குக் காட்டும்படி
செய்ய யூதாவைத் தனக்குமுன்னே யோ
சேப்பினிடம் அனுப்பினான். அவர்கள்
கோசேனிலே சேர்ந்தார்கள். யோசேப்பும்
29 தன் இரதத்தை ஆயத்தம்பண்ணி அதின்
மேல் ஏறித் தன் தகப்பனாகிய இஸ்ரவேலைச்
சந்திக்கும்படி கோசேனுக்குப் போனான்.
தன் தகப்பனிடம் வந்தபோது யோசேப்பு
அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு வெகு
நேரம் அவன் கழுத்தைவிடாமல் அழுதான்.
30 அப்பொழுது இஸ்ரவேல் யோசேப்பைப்
பார்த்து: நீ இன்னும் உயிரோடிருக்கிறாயே,
நான் உன் முகத்தைப் பார்த்துக்கொண்டே
ன், எனக்கு இப்போது மரணம் வந்தாலும்
வரட்டும் என்றான். பின்பு யோசேப்பு
31 தன் சகோதரரையும் தன் தகப்பனுடைய
குடும்பத்தாரையும் பார்த்து: நான் பார்வோ
னிடம் போய்க் கானான்தேசத்திலிருந்து என்
சகோதரரும் என் தகப்பன் குடும்பத்தாரும்
என்னிடத்தில் வந்திருக்கிறார்கள்; அவர்கள்
32 மேய்ப்பர்கள், ஆடுமாடுகளை மேய்க்கிறது
அவர்கள் தொழில்; அவர்கள் தங்கள் ஆடு
மாடுகளையும் தங்கள் சகல பொருட்களையும்
கொண்டுவந்துவிட்டார்கள் என்று அவரு
க்குச் சொல்லுகிறேன். பார்வோன் உங்களை
33 யழைத்து உங்கள் தொழில் என்னவென்று
34 கேட்டால் நீங்கள்: அடியேங்கள் ஆடுமாடு
மேய்க்கிறவர்கள், சிறுவயதுமுதல் இதுவே
எங்கள் தொழில்; எங்கள் முன்னோர் செய்து
வந்த தொழிலும் இதுவே என்று சொல்லுங்
கள். நீங்கள் இப்படிச்சொன்னால் கோசேன்
நாட்டில் குடியிருக்க ஏதுவாகும். மேய்ப்ப
ரென்றால் எகிப்தியருக்கு அருவருப்பு என்
றான்.
47 1 யோசேப்பு பார்வோனிடம்போய்: என்
தகப்பனும் என் சகோதரரும் தங்கள் ஆடு
மாடுக்ளோடும் தங்கள் சகல பொருட்க

ளோடும் கானான்தேசத்திலிருந்து வந்திருக்கி
°றார்கள்; இப்பொழுது கோசேன் நாட்டில்
2 இருக்கிறார்கள் என்று சொல்லித் | தன்
சகோதரரில் ஐந்துபேரையும் பார்வோன்
சந்நிதிக்குக் கூட்டிக்கொண்டு போனான்.
3 பார்வோன் அவன் சகோதரரைப் பார்த்து:
உங்கள் தொழில் என்ன என்று கேட்க
அவர்கள்: அடியேங்கள் ஆடுமாடு மேய்க்
°கிறவர்கள், எங்கள் பிதாக்களும் அப்படி
யே என்று பார்வோனிடம் சொன்னதுமன்
4 றிக்॰| கானான்தேசத்திலே பஞ்சம் கொடிதா
யிருக்கிறது; உமது அடியாரின் மந்தைக
ளுக்கு மேய்ச்சலில்லை, இத்தேசத்திலே தங்க
வந்தோம்; அடியேங்கள் கோசேன் நாட்டி
லே குடியிருக்கும்படி தயவு செய்யவேண்
டும் என்று வேண்டிக்கொண்டார்கள்.
5 அப்பொழுது பார்வோன் யோசேப்பைப்
பார்த்து: உன் தகப்பனும் உன் சகோதர
ரும் உன்னிடத்தில் வந்திருக்கிறார்களே.
6 எகிப்து தேசம் உனக்கு முன்பாக இருக்கி
றது; தேசத்திலுள்ள நல்ல இடத்திலே உன்
தகப்பனும் உன் சகோதரரும் குடியேறும்
படி செய்; அவர்கள் கோசேன் நாட்டிலே
குடியிருக்கலாம்; அவர்களுக்குள் திறமை
யுள்ளவர்கள் உண்டென்று உனக்குத்
தெரிந்திருந்தால், அவர்களை என் ஆடுமாடு
களை விசாரிக்கும் தலைவராக வைக்கலாம்
7 என்றான். பின்பு யோசேப்பு தன் தகப்ப
னாகிய யாக்கோபைப் பார்வோனுக்கு முன்
பாக அழைத்துக்கொண்டுவந்தான். யாக்
8 கோபு பார்வோனை ஆசீர்வதித்தான். பார்
வோன் யாக்கோபினிடம்: உமக்கு வயது
9 என்ன என்று கேட்க, யாக்கோபு: நான்
பரதேசியாய்ச் சஞ்சரித்த நாட்கள் நூற்று
முப்பது வருஷம்; என் ஆயுசுநாட்கள்
கொஞ்சம்; அவைகள் சஞ்சலமுள்ளவை
களுமாம்; பரதேசிகளாய்ச் சஞ்சரித்த என்
பிதாக்களின் ஆயுசுநாட்களுக்கு அவைகள்
வந்து எட்டவில்லை என்று பார்வோனிடஞ்
10 சொன்னான். பின்னும் யாக்கோபு பார்
வோனை ஆசீர்வதித்து அவன் சமுகத்தி
11 லின்று வந்துவிட்டான். பார்வோன் கட்
டளையிட்டபடியே யோசேப்பு தன் தகப்ப
னுக்கும் தன் சகோதரருக்கும் எகிப்து
தேசத்திலே நல்ல நாடாகிய ரம்சேஸ் என்
னும் நாட்டிலே சொந்தமாக இடங்கொ
12 டுத்து அவர்களைக் குடியேற்றினான். யோ
சேப்பு தன் தகப்பனையும் தன் சகோதரரை
யும் தன் தகப்பனின் குடும்பத்தார் அனை
வரையும் அவரவர்கள் குடும்பத்திற்குத் தக்
கபடி ஆகாரம்கொடுத்து ஆதரித்துவந்தான்.
13 பஞ்சம் மிகவும் கொடிதாயிற்று; தேசமெங்
கும் ஆகாரம் கிடைக்கவில்லை. எகிப்து
தேசமும் கானான்தேசமும் பஞ்சத்தினால்
மெலிந்தன. யோசேப்பு எகிப்துதேசத்தி 14
லும் கானான்தேசத்திலுமுள்ள பணத்தை
யெல்லாம் தானியம் கொண்டவர்களிடம்
வாங்கி அதைப் பார்வோன் அரண்மனையி
லே கொண்டுபோய்ச் சேர்த்தான். எகிப்து 15
தேசத்திலும் கானான்தேசத்திலுமுள்ள பணம்
செலவழிந்தபோது எகிப்தியர் எல்லாரும்
யோசேப்பினிடம் வந்து: எங்களுக்கு ஆகா
ரம் தாரும்; பணமில்லை, நாங்கள் உமது
கண்ணுக்கு எதிரே சாகவேண்டியதென்ன
என்றார்கள். அதற்கு யோசேப்பு: உங்க 16
னிடம் பணம் இல்லாமற்போனால் உங்கள்
ஆடுமாடுகளைக் கொடுங்கள், அவைகளை
வாங்கிக்கொண்டு உங்களுக்குத் தானியம்
கொடுக்கிறேன் என்றான். அவர்கள் தங் 17
கள் ஆடுமாடு முதலியவைகளை யோசேப்பி
னிடம் கொண்டுவந்தார்கள்; யோசேப்பு
குதிரைகளையும் ஆடுகளையும் மாடுகளையும்
கழுதைகளையும் வாங்கிக்கொண்டு அந்த
வருஷம் அவர்களுடைய ஆடுமாடு முத
லான எல்லாவற்றிற்கும் பதிலாக அவர்க
ளுக்கு ஆகாரம்கொடுத்து அவர்களை ஆத
ரித்தான். அந்த வருஷம் முடிந்தபின் 18
மறுவருஷத்திலே அவர்கள் அவனிடம்
வந்து: பணமும் செலவழிந்து போயிற்று,
எங்கள் ஆடுமாடு முதலானவைகளும் எங்
கள் ஆண்டவனைச் சேர்ந்தன. எங்கள்
சரீரமும் எங்கள் நிலமுமே ஒழிய எங்கள்
ஆண்டவனுக்குத் தெரிந்திருக்கிறபடி மீதி
யானது ஒன்றுமில்லை; இது எங்கள் ஆண்
டவனுக்கு மறைவான காரியமல்ல. நாங் 19
களும் எங்கள் நிலங்களும் ஏன் பார்த்துக்
கொண்டிருக்கவே அழிந்துபோகலாமா? ஏன்
எங்களையும் எங்கள் நிலங்களையும் வாங்கிக்
கொண்டு ஆகாரம் கொடுக்கவேண்டும்;
நாங்களும் எங்கள் நிலங்களும் பார்வோ
னுக்கு ஆதீனம்; நாங்கள் சாகாமல் உயி
ரோடிருக்கவும் நிலங்கள் பாழாய்ப்போகா
மலிருக்கவும் எங்களுக்கு விதைத் தானியத்
தைத் தாரும் என்றார்கள். அப்படியே 20
எகிப்தியர் தங்களுக்குப் பஞ்சம் மேலிட்ட
படியால் அவரவர் தங்கள் தங்கள் வயல்
நிலங்களை விற்றார்கள்; யோசேப்பு எகிப்
தின் நிலங்கள் யாவையும் பார்வோன்பே
ருக்கு வாங்கினான்; இவ்விதமாய் நிலமெல் 21
லாம் பார்வோனுடையதாயிற்று. அவன்
எகிப்தின் ஒரு எல்லைமுதல் மறு எல்லை
வரைக்குமுள்ள ஜனங்களையோ பட்டணங்
களில் குடிமாறி இருக்கச்செய்தான். ஆசா 22
ரியரின் நிலத்தை மாத்திரம் அவன் கொள்

ளவில்லை; பார்வோனிடமிருந்து ஆசாரிய
ருக்குக் குறிப்பிட்ட வருமானமிருந்தது;
இந்த வருமானத்திலுலே அவர்கள் ஜீவனம்
பண்ணிவந்தார்கள். ஆகவே அவர்கள்
23 தங்கள் நிலங்களே விற்கவில்லை. பின்னும்
யோசேப்பு ஜனங்களைப் பார்த்து: இதோ,
இன்று உங்களையும் உங்கள் நிலங்களையும்
பார்வோன்பேருக்கு வாங்கிக்கொண்டேன்;
இதோ, உங்களுக்கு விதைத்தானியம் கொ
24 டுக்கிறேன். இதை நிலத்தில் விதையுங்கள்.
விளைவில் ஐந்தில் ஒரு பங்கைப் பார்வோ
னுக்குக் கொடுக்கவேண்டும்; மற்ற நாலு
பங்கும் வயலுக்கு விதையாகவும் உங்களுக்
கும் உங்கள் குடும்பத்தாருக்கும் உங்கள்
குழந்தைகளுக்கும் ஆகாரமாகவும் உங்களு
25 டையதாயிருக்கட்டும் என்றான். அதைக்
கேட்ட அவர்கள்: நீர் எங்கள் பிராணனைக்
காப்பாற்றினீர்; ஆண்டவன் எங்களுக்குத்
தயவு பாராட்டவேண்டும்; நாங்கள் பார்
26 வோனுக்கு அடிமைகள் என்றார்கள். ஐந்
தில் ஒன்று பார்வோனுக்குச் சேரும் வாரம்
என்று யோசேப்பு செய்த ஏற்பாட்டின்படி
யே இன்றளவும் நடந்துவருகிறது; ஆசாரி
யரின் நிலமாத்திரம் பார்வோனைச் சேராமல்
27 நீங்கலாயிருந்தது. இஸ்ரவேலர் எகிப்து
தேசத்திலுள்ள கோசேன் நாட்டிலே குடியி
ருந்தார்கள்; அங்கே நிலங்களைக் கையாட்சி
செய்து மிகவும் பலுகிப்பெருகினார்கள்.
28 யாக்கோபு எகிப்து தேசத்திலே பதினேழு
வருஷமிருந்தான்; யாக்கோபின் ஆயுசுநாட்
29 கள் நூற்றுநாற்பத்தேழுவருஷம். இஸ்ர
வேல் மரணமடையுங்காலம் சமீபிக்கவே
அவன் தன் குமாரனாகிய யோசேப்பை வர
வழைத்து அவனிடம்: என்மேல் உனக்குத்
தயவிருந்தால் உன் கையை என் இடுப்பின்
கீழ் வைத்து என் விஷயத்தில் பட்சமும்
உண்மையுமுள்ளவனாய் நடந்துகொள்.
என்னை எகிப்திலே அடக்கம்பண்ணவேண்
30 டாம். நான் என் பிதாக்களோடுகூட நித்
திரையடைந்தபின் நீ என்னை எகிப்திலிருந்து
எடுத்துக்கொண்டுபோய் அவர்களை அடக்
கம்பண்ணியிருக்கிற நிலத்திலேயே என்னை
யும் அடக்கம்பண்ணு என்றான். அதற்கு
அவன்: உமது சொற்படியே செய்வேன்
31 என்றான். அப்பொழுது அவன்: எனக்கு
ஆணையிட்டுக்கொடு என்று கேட்க அவ
னுக்கு ஆணையிட்டுக்கொடுத்தான். அப்
பொழுது இஸ்ரவேல் கட்டிலின் தலைமாட்
டிலே சாய்ந்து தொழுதுகொண்டான்.

**48** அதற்குப் பின்பு உமது தகப்பனாருக்கு
வருத்தமாயிருக்கிறது என்று யோசேப்பினி
டம் வந்து சொன்னார்கள். அவன் மனைசே
எப்பிராயீம் என்னும் தன் இருகுமாரரை
யும் அங்கே கூட்டிக்கொண்டுபோனான்.
இதோ, உமது குமாரன் யோசேப்பு உம்மி 2
டம் வந்திருக்கிறார் என்று யாக்கோபுக்குச்
சொன்னார்கள். சொல்லவே இஸ்ரவேல்
தன் பலத்தை எல்லாம் கூட்டி எழுந்து
கட்டிலின்மேல் உட்கார்ந்தான். யாக் 3
கோபு யோசேப்பைப் பார்த்து: சர்வ வல்ல
வரான கடவுள் கானான்தேசத்திலுள்ள லூஸ்
என்னும் இடத்தில் எனக்குத் தரிசனமாகி
என்னை ஆசீர்வதித்து: நான் உன்னைப் பலுக 4
வும் பெருகவும் பண்ணி உன்னைப் பல
ஜனக்கூட்டமாக்கி உனக்குப் பின்வரும்
உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தை நித்திய
சுதந்தரமாகக் கொடுப்பேன் என்று என்
னோடு சொன்னார். நான் உன்னிடத்தில் 5
எகிப்துக்கு வருமுன்னே உனக்கு எகிப்து
தேசத்தில் பிறந்த உன் இரண்டு குமாரரும்
என் குமாரர்; ரூபனையும் சிமியோனையும்
போலவே எப்பிராயீமும் மனாசேயும் என்
னுடையவர்கள். இவர்களுக்குப் பின்னாக 6
பிள்ளைகள் உன்னுடையவர்கள்; அந்தப்
பிள்ளைகள் தங்கள் சகோதரரின் பேரால்
அவர்களுக்குரிய சுதந்தரத்தில் அழைக்கப்
படுவார்கள். நான் பதானைவிட்டு வருகை 7
யில் எப்பிராத்தாவுக்குக் கொஞ்சதூரம்
இருக்கும்போது வழியிலே கானான்தேசத்
தில் ராகேல் மரித்து என்னைத் தக்கத்துக்கா
ளாக்கினாள்; அவளை அங்கேயே பெத்ல
கேம் என்னும் எப்பிராத்தா ஊருக்குப்போ
கிற வழியில் அடக்கம் பண்ணினேன் என்
றான். இஸ்ரவேல் யோசேப்பின் குமார 8
ரைப் பார்த்து: இவர்கள் யார் என்று
கேட்க யோசேப்பு தன் தகப்பனிடம்:
இவர்கள் இவ்விடத்தில் கடவுள் எனக்கு 9
அருளின குமாரர் என்றான். அப்பொழுது
அவன்: நான் அவர்களை ஆசீர்வதிக்கும்படி
அவர்களை என் கிட்டக்கொண்டுவா என்
றான். முதிர்வயதினால் இஸ்ரவேலின் கண் 10
கள் மங்கலாயிருந்தபடியால் அவன் நன்
றாய்ப் பார்க்கமுடியாதிருந்தது. அவர்களை
அவன் கிட்டக்கொண்டுபோகவே அவன்
அவர்களை முத்தஞ்செய்து அணைத்துக்கொண்
டான். இஸ்ரவேல் யோசேப்பைப் பார்த்து 11
து: உன் முகத்தைக் காண்பேன் என்று
நான் நினைக்கவில்லை; இதோ, உன் சந்ததி
யையும் காணும்படி கடவுள் எனக்கு
அருள்செய்தார் என்றான். அப்பொழுது 12
அவனுடைய முழங்கால்கள் நடுவே இருந்த
பிள்ளைகளை யோசேப்பு பின்னிடப்பண்ணி
அவனுடைய முகத்துக்கு முன்பாகத் தரை
மட்டும் குனிந்து வணங்கினான். பின்பு 13

யோசேப்பு அவ்விருவரையுங் கொண்டு
வந்து எப்பிராயீமைத் தன் வலதுகையினா
லே இஸ்ரவேலின் இடதுகைக்கு நேராக
வும் மனாசேயைத் தன் இடதுகையினாலே
இஸ்ரவேலின் வலதுகைக்கு நேராகவும்
14 விட்டான். அப்பொழுது இஸ்ரவேல் மன
மறியத் தன் வலதுகையை நீட்டி இளைய
னாகிய எப்பிராயீமின் தலைமேலும் மனாசே
மூத்தவனாயிருந்தும் தன் இடதுகையை மனா
15 சேயின் தலைமேலும் வைத்தான். அவன்
யோசேப்பை ஆசீர்வதித்து: என் பிதாக்க
ளாகிய ஆபிரகாமும் ஈசாக்கும் வழிபட்டு
வணங்கிய கடவுளும் நான் பிறந்த நாள்
முதல் இந்நாள்வரைக்கும் என்னை ஆதரித்
16 துவந்த கடவுளும் | எல்லாத் தீமைக்கும்
நீங்கலாக்கி என்னை மீட்ட தூதனுமானவர்
இந்தப் பிள்ளைகளை ஆசீர்வதிப்பாராக, என்
பேரும் என் பிதாக்களாகிய ஆபிரகாம்
ஈசாக்கு என்பவர்களின் பேரும் இவர்க
ளுக்கு இடப்படக்கடவது; பூமியில் இவர்
கள் பலுகிப் பெரிய கூட்டமாவார்களாக
17 என்றான். தகப்பன் தன் வலது கையை
எப்பிராயீமின் தலைமேல் வைத்ததை யோ
சேப்பு கண்டபோது அது அவனுக்குப்
பிரியமில்லை; எப்பிராயீமின் தலைமேலிருந்த
தன் தகப்பனின் கையை மனாசேயின் தலை
18 மேல் வைக்கும்படி | எடுத்து: அப்படியல்
ல, என் தகப்பனே, இவன் மூத்தவன்,
இவன் தலைமேல் உமது வலதுகையை
19 வைக்கவேண்டும் என்றான். அவன் தகப்
பனை நோக்கி: அது எனக்குத்தெரியும்,
என் மகனே, எனக்குத்தெரியும்; இவனும்
ஒரு ஜனக்கூட்டமாவான், இவனும் பெரு
குவான்; இவன் தம்பியோ இவனிலும்
அதிகமாய்ப் பெருகுவான்; அவன் சந்ததி
யார் திரள் ஜனங்களாவார்கள் என்றான்.
20 இவ்விதமாக அவன் அன்றைத்தினம் அவர்
களை ஆசீர்வதித்து: இஸ்ரவேலர் வாழ்த்தும்
போதெல்லாம், கடவுள் உன்னை எப்பிரா
யீமைப்போலவும் மனாசேயைப் போலவு
மாக்குவாராக என்று உன் பேராலேயே
வாழ்த்துவார்களென்று சொன்னான். இப்
படியாக எப்பிராயீமை மனாசேக்குமுன்
21 னே வைத்தான். பின்பு இஸ்ரவேல் யோ
சேப்பைப் பார்த்து: இதோ, நான் மரண
மடையப்போகிறேன்; கடவுள் உங்களோ
டிருப்பார்; உங்கள் பிதாக்களின் தேசத்
துக்கு உங்களைத் திரும்பவும் போகப்பண்
22 ணுவார் என்று சொல்லிப் பின்னும்: உன்
சகோதரருக்குக் கொடுத்ததைப்பார்க்கிலும்
ஒரு நிலத்தை உனக்கு அதிகமாகக் கொடுத்
தேன்; இந்த நிலத்தை நான் பட்டயத்தினா
லும் என் வில்லினாலும் எமோரியர் கையிலி
ருந்து சம்பாதித்தேன் என்றான்.

யாக்கோபு தன் குமாரரையழைத்து: நீங் **49**
கள் கூடிவாருங்கள், இனிவரும் நாட்களில்
உங்களுக்கு நேரிடும் காரியங்களை யறிவிப்
பேன்.

யாக்கோபின் குமாரரே, 2
கூடிவந்து கேளுங்கள்,
உங்கள் தகப்பனாகிய இஸ்ரவேலுக்குச்
செவிகொடுங்கள்.
ரூபனே, நீ என் சேஷ்டபுத்திரன், 3
நீ என் சத்துவம், என் முதற்பலன்,
நீ மேன்மையில் பிரதானம், வல்லமை
யில் பிரதானம்.
தண்ணீரைப்போலப் பொங்கி வடிந்த 4
வனே,
நீ மேன்மை அடையாய்,
உன் தகப்பனின் மஞ்சத்தின்மேல் ஏறித்
தீட்டுப்படுத்தினாய்,
என் படுக்கையின்மேல் ஏறினாயே.
சிமியோனும் லேவியும் ஏகசகோதரர்; 5
அவர்கள் ஆயுதங்கள் கொடுமையின்
கருவிகள்;
என் ஆத்துமாவே, அவர்கள் ஆலோ 6
சனைக்குக் கூடாதே,
என் மேன்மையே, அவர்கள் கூட்டத்
தில் நீ சேராதே;
தங்கள் கோபத்திலே ஒரு ஆளைக்கொன்
றனர்,
தங்கள் அகங்காரத்தில் காளையைக் கால்
தறித்தனர்.
அவர்கள் கோபம் சாபமாகுக, அது உக் 7
கிரமானது.
அவர்கள் மூர்க்கம் சபிக்கப்படுக, அது
கொடுமையானது.
யாக்கோபிலே அவர்கள் ஒன்றுபிரிக்க
விடேன்.
இஸ்ரவேலிலே அவர்களைச் சிதறடிப்
பேன்.
யூதாவே, உன்னைப் புகழ்வார் உன் 8
சகோதரர்.
உன் கரம் உன் சத்துரு பிடரியின்மே
லாம்,
உன் பிதாவின்மக்கள் உன்முன் பணி
வார்.
யூதா பால சிங்கம், 9
என் மகனே, இரை கவர்ந்து நீ ஏறிப்
போனாய்.
சிங்கமே போல, பெண்சிங்கமேபோல,
சாய்ந்துபடுத்தான்,
பார்த்தான் அவனை எழுப்பிவிடுவான்?
செங்கோல் அகலாது யூதாவிட்டு, 10

கோனும் ஒழியாது அவன் பாதத்தை விட்டு,
சீலோவுக்கு அவர் வந்திடமளவும்;
அவருக்கே ஜனங்கள் அடங்குவார்கள்.
11 கழுதைக்குட்டியைக் கட்டுவார் திராட்சச்செடியில்,
பெண் கழுதைக்குட்டியை நற்குலத் திராட்சையில்.
வஸ்திரம் துவைப்பது திராட்ச ரசத்திலே
அங்கியைத் துவைப்பதும் திராட்சை ரத்தத்திலே.
12 திராட்ச ரசத்தால் கண்கள் மங்கும்,
பாலைப் பருகிப் பற்கள் வெளுக்கும்.
13 செபுலோன் உறைவான் கடற்கரை யருகே,
அக்கரையெல்லாம் கப்பல் சேரும்;
அவன் நாடு சீதோன் எல்லையைத் தொடுமே.
14 இசக்கார் மிகவும் பலத்த கழுதை,
தொழுவங்கள் நடுவே படுத்துக்கொள்வான்.
15 இளைப்பாறுமிடம் வசதி எனவும், நாடே இன்பம் எனவும் கண்டான்;
சுமை எடுத்திடவே தோளைச் சாய்த்தான்,
வேல் செய்யவே இசைந்திருந்தான்.
16 தாண் தன் ஜனத்தில் நீதி செலுத்துவான்
இஸ்ரவேலில் மற்ற எக்கோத்திரமும் போன்றே.
17 தாண் பாதையிலே சர்ப்பம்போல்வான்,
வழியிடை வசிக்கும் விரியன்போல்வான்,
சவாரிசெய்பவன் சரிந்து விழும்படி
குதிரையின் காலைக் கொத்தி மாய்த்திடுவான்.
18 யெகோவாவே, நின் இரட்சிப்புக்கென்றே காத்திருக்கின்றேன்.
19 காத் என்பவன்மேல் ஜனதளம் பாயும்,
அவன் பாய்ந்து அவர்கள் புறங்கண்டிடுவான்.
20 ஆசேர் உணவு அதிகக் கொழுப்பாம்,
ராஜ உணவு தந்திடுவானே.
21 நப்தலி கட்டிலாப் பெண்மானுவான்,
இனிமையான வசனம் உரைப்பான்.
22 யோசேப்புதானே கனிதரும் இளமரம்,
நீரூற்றண்டையில் பழந்தரு செடியாம்,
செடியின் கொடிகள் படரும் சுவர் மேல்.
23 அவனை மனஞ்சோரச் செய்தார் வில்வீரர்,
எய்தனர் அவன்மேல், நெருங்கினர் அவனை.
அவனதுவில்லோ நின்றது உறுதியாய்; 24
அவனது புஜங்கள் பலமாயினவே.
யாக்கோபுடைய வல்லவர் கரத்தால்
இஸ்ரவேல் மேய்ப்பரும் கன்மலையுமானவரால்
உன் தந்தையின் கடவுளால்-அவரே 25
நின்துணை,
சர்வவல்லவரால்-அவரே யுன்னை யாசீர்வதிப்பார்.
உயர் வானுள்ள ஆசீர்வாதமும்
கீழே தாழ்விடம் பரவிய ஆழியும்
ஸ்தனங்கள் கர்ப்பங்கள் இவற்றின் ஆசியும்
அவரே யுனக்குத் தந்திடுவாரே.
என் பெற்றோர் தம் ஆசீர்வாதத்திலும் 26
உன் தந்தையார்தம் ஆசியே மேலாம்.
அவைதாம் எட்டும் நித்திய மலைச்சிகரம்,
அவைதாம் வருமே யோசேப்பின் சென்னியில்,
தன் சகோதரருள் சிறந்தான் உச்சியில்.
பென்யமீன்தானே பீறும் ஓநாய் 27
காலையிலே தன் இரை பட்சிப்பான்
மாலையில் பகிர்வான் கொள்ளைப் பொருளை.
இவர்கள் எல்லாரும் இஸ்ரவேலின் 28
பன்னிரண்டு கோத்திரத்தார்; அவர்கள் தகப்பன் அவர்களை ஆசீர்வதிக்கையில் அவர்களுக்குச் சொன்னது இதுதான்; அவனவனுக்குரிய ஆசீர்வாதத்தைச் சொல்லி அவனவனை ஆசீர்வதித்தான். பின்னும் 29
அவன் அவர்களைப்பார்த்து: நான் என் ஜனத்தாரோடு சேர்க்கப்படப்போகிறேன்; ஏத்தியனான எப்ரோனின் நிலத்திலுள்ள குகையிலே என்னை என் பிதாக்களண்டையிலே அடக்கம்பண்ணுங்கள் என்று கட்டளையிட்டு | அந்தக்குகை கானான்தேசத்திலே 30
மம்ரேக்கு எதிராக மக்பேலா நிலத்திலிருக்கிறது; நமக்குச் சொந்தக் கல்லறை பூமியாக ஆபிரகாம் அதை ஏத்தியனுடைய எப்ரோன் கையில் அதற்குரிய நிலத்துடனே வாங்கினார். அங்கே ஆபிரகாமையும் அவர் 31
மனைவியாகிய சாராளையும் அடக்கம்பண்ணினார்கள்; ஈசாக்கையும் அவர் மனைவியாகிய ரெபெக்காளையும் அங்கே அடக்கம்பண்ணினார்கள்; லேயாளையும் அங்கேயே அடக்கம்பண்ணினேன். அந்த நிலமும் அதி 32
லிருக்கிற குகையும் ஏத்தின் புத்திரர் கையில் கொள்ளப்பட்டது என்றான். யாக் 33
கோபு தன் குமாரருக்குக் கட்டளையிட்டு முடிந்தபின்பு அவன் கட்டிலின்மேல் தன் பாதங்களைச் சேர்த்துக்கொண்டு ஜீவித்துப்

போய்த் தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான்.

**50** அப்பொழுது யோசேப்பு தன் தகப்பன் முகத்தின்மேல் விழுந்து அழுது அவனை முத்தஞ்செய்தான். பின்பு தன் தகப்பனுக்குச் சுகந்தவர்க்கமிடும்படி யோசேப்பு தன் ஊழியக்காரராகிய வைத்தியருக்குக் கட்டளையிட்டான்; அப்படியே வைத்தியர் இஸ்ரவேலுக்குச் சுகந்த வர்க்கமிட்டார்கள். சுகந்தவர்க்கமிட நாற்பதுநாள் செல்லும்; அப்படியே அந்த நாட்கள் நிறைவேறின. எகிப்தியர் அவனிமித்தம் எழுபதுநாள் துக்கங்கொண்டாடினார்கள்.

4 துக்கங்கொண்டாடும் நாட்கள் முடிந்தபின் யோசேப்பு பார்வோனின் வீட்டாரைப்பார்த்து: உங்களுக்கு என்னிடம் தயவிருந்தால் நீங்கள் பார்வோனின் காதுகேட்க அவருக்கு இதை அறிவிக்கவேண்டும். என் தகப்பனார் என்னிடம்: இதோ, நான் மரணமடையப்போகிறேன்; கானான் தேசத்திலே நான் எனக்கு வெட்டிவைத்திருக்கிற கல்லறையிலே என்னை அடக்கம்பண்ணுவாயாக என்று சொல்லி ஆணைவாங்கிக்கொண்டார்; நான் அங்கேபோய் என் தகப்பனை அடக்கம்பண்ணி வருவதற்கு உத்தரவு கொடுக்க வேண்டிக்கொள்ளுகிறேன் என்று சொல்லுங்கள் என்றான். 6 அதற்குப் பார்வோன்: உன் தகப்பன் உன்னிடத்தில் ஆணைவாங்கிக்கொண்டபடியே நீ போய் அவரை அடக்கம்பண்ணி வா என்றான். 7 அப்படியே யோசேப்பு தன் தகப்பனை அடக்கம்பண்ணப்போனான். பார்வோனின் அரண்மனையிலிருந்த பெரியவர்களாகிய அவனுடைய சகல உத்தியோகஸ்தரும் எகிப்து தேசத்திலுள்ள சகல 8 பெரியோரும் | யோசேப்பின் வீட்டார் யாவரும் அவன் சகோதரரும் அவன் தகப்பன் வீட்டாரும் அவனோடேகூடப் போனார்கள். தங்கள் குழந்தைகளையும் தங்கள் ஆடுமாடுகளையும் மாத்திரம் கோசேன் நாட்டிலே விட்டுப் போனார் 9 கள். இரதங்களும் குதிரைவீரரும் அவனோடே போனதினால் பரிவாரக் கூட்டம் மிகவும் அதிகமாயிருந்தது. 10 அவர்கள் யோர்தானுக்கு அக்கரையில் இருக்கிற ஆத்தாத்தின் களத்தில் வந்தபோது அவ்விடத்திலே பெரும்புலம்பலாய்ப் புலம்பினார்கள். அங்கே தன் தகப்பனினிமித்தம் ஏழுநாள் துக்கங்கொண்டாடினான். 11 ஆத்தாத்தின் களத்திலே துக்கங்கொண்டாடுகிறதை அத்தேசத்தின் குடிகளாகிய கானானியர் கண்டு: இது எகிப்தியருக்குப் பெரிய துக்கமே என்றார்கள். அதினால் யோர்தானுக்கு அப்பால் இருக்கிற அந்த ஸ்தலத்திற்கு ஆபேல் மிஸ்ராயீம் என்னும் பேர் உண்டாயிற்று. 12 தங்களுக்குக் கட்டளையிட்டிருந்தபடியே யாக்கோபின் குமாரர் | 13 அவனைக் கானான்தேசத்திற்குக் கொண்டுபோய் மம்ரேக்கு எதிரே இருக்கிற மக்பேலா நிலத்துக் குகையிலே அடக்கம் பண்ணினார்கள். அந்த நிலத்தை ஆபிரகாம் தனக்குச் சொந்தக் கல்லறை பூமியாக ஏத்தியனாகிய எப்ரோனிடத்தில் வாங்கியிருந்தான்.

14 யோசேப்பு தன் தகப்பனை அடக்கம் பண்ணின பின்பு அவனும் அவன் சகோதரரும் அவன் தகப்பனை அடக்கம் பண்ணுவதற்கு அவனோடேகூடப் போனவர்கள் யாவரும் எகிப்துக்குத் திரும்பினார்கள். 15 தங்கள் தகப்பன் மரணமடைந்தபின் யோசேப்பின் சகோதரர்: ஒருவேளை யோசேப்பு நம்மை விரோதித்து நாம் அவனுக்குச் செய்த எல்லாப் பொல்லாப்பையும் நினைத்து நமக்குச் சரிக்குச்சரிக் கட்டுவான் என்று சொல்லி யோசேப்பினிடம் ஆள் அனுப்பி | 16 உமது சகோதரர் உமக்குப் பொல்லாப்புச் செய்திருந்தாலும் அவர்கள் செய்த துரோகத்தையும் பாதகத்தையும் நீர் தயவுசெய்து மன்னிக்க வேண்டுமென்று உமது தகப்பனார் மரணமடையுமுன்னே உம்மைக் கேட்கும்படி கட்டளையிட்டார். ஆகையால் உமது தகப்பனாருடைய கடவுளின் அடியாராகிய நாங்கள் செய்த துரோகத்தை மன்னிக்கவேண்டுமென்று அவனுக்குச் சொல்லச் சொன்னார்கள். அவர்கள் 17 அதை யோசேப்புக்குச் சொன்னபோது அவன் அழுதான். பின்பு அவன் சகோதரரும் போய் அவனுக்கு முன்பாகத் தாழ விழுந்து: இதோ, நாங்கள் உமக்கு அடிமைகள் என்றார்கள். 18 யோசேப்பு அவர்களைப் பார்த்து: நீங்கள் பயப்படவேண்டாம்; நான் கடவுளா? 19 நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; கடவுளோ இப்பொழுது நடந்துவருகிறபடியே வெகுஜனங்களை உயிரோடே காக்கும்படி அதை நன்மையாக முடிக்க நினைத்தார். 20 ஆகையால் நீங்கள் பயப்படவேண்டாம்; நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று அவர்களுக்கு ஆறுதல் சொல்லி அவர்களோடு பட்சமாய்ப் பேசினான்.

22 யோசேப்பும் அவன் தகப்பன் குடும்பத்தாரும் எகிப்திலே குடியிருந்தார்கள். யோசேப்பு நூற்றுப்பத்துவருஷம் உயிரோடிருந்

23 தான். யோசேப்பு எப்பிராயீமுக்குப் பிறந்த மூன்றும் தலைமுறைப் பிள்ளைகளையும் கண்டான்; மனாசேயின் குமாரனாகிய மாகீரின் பிள்ளைகள் பிறந்தபோது அவர்களும் யோசேப்பின் மடியிலே வைக்கப்பட்டார்கள்.
24 யோசேப்பு தன் சகோதரரைப் பார்த்து: நான் மரணமடையப்போகிறேன்; கடவுளோ உங்களை நிச்சயமாய்ச் சந்தித்து நீங்கள் இந்தத் தேசத்தைவிட்டுத் தாம் ஆணையிட்டு ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுத்திருக்கிற தேசத்துக்குப் போகப்பண்ணுவார் என்று சொன்னான்.
25 பின்னும் யோசேப்பு அவர்களிடம்: கடவுள் உங்களை நிச்சயமாகவே சந்திப்பார்; சந்திக்கும்போது என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டுபோவீர்களாக என்றும் சொல்லி யோசேப்பு இஸ்ரவேல் புத்திரரிடத்தில் ஆணை வாங்கிக்கொண்டான்.
26 யோசேப்பு நூற்றுப்பத்து வயதுள்ளவனாய் மரித்தான். அவனுக்கு சுகந்தவர்க்கமிட்டு எகிப்து தேசத்திலேயே அவனை ஒரு பெட்டியில் வைத்துவைத்தார்கள்.

---

## THE BOOK OF EXODUS

---

# யாத்திராகமம்

**1** எகிப்துக்குப் போன இஸ்ரவேலின்
2 குமாரருடைய நாமங்களாவன: ரூபன்,
3 சிமியோன், லேவி, யூதா, | இசக்கார், செபு
4 லோன், பென்யமீன், | தான், நப்தலி, காத்,
ஆசேர் என்பவைகளே. இவர்கள் தங்கள் தங்கள் குடும்பத்தையுங் கூட்டிக்கொண்டு யாக்கோபோடு போனார்கள்.
5 யாக்கோபின் புத்திரசந்தானமாகிய யாவரும் எழுபதுபேர்; யோசேப்போ முன்னமே எகிப்திலிருந்தான்.
6 யோசேப்பும் அவன் சகோதரர் யாவரும், அந்தத் தலைமுறையார் அனைவரும் மரித்தார்கள்.
7 இஸ்ரவேல் புத்திரர் மிகுதியும் பலுகி ஏராளமாய்ப் பெருகிப் பலத்த நாட்டில் நிறைந்தார்கள்.
8 புதிய அரசனொருவன் எகிப்திலே அரசாளத்தொடங்கினான். இவன் யோசேப்பை அறியாதவன்.
9 இவன் தன் ஜனங்களிடம்: இதோ, இந்த ஜனங்கள், இஸ்ரவேல் புத்திரர், நம்மிலும் ஏராளமானவர்களும் பலத்தவர்களுமாய் இருக்கிறார்கள். வாருங்கள், அவர்கள் இன்னும் பெருகிவிடாதபடி நாம் அவர்கள் விஷயத்தில் யுக்தியாய் நடந்துகொள்வோம்; யுத்தமுண்டானால் அவர்கள் நமது பகைஞரோடு சேர்ந்து நமக்கு விரோதமாய் யுத்தம்பண்ணி நாட்டிலிருந்து போய்விடாதபடி தடுக்கவேண்டும்
10 என்று சொன்னான்.
11 ஆகவே, சுமை சுமக்கிற வேலையினால் அவர்களை ஒடுக்கும்படி, அவர்கள்மேல் விசாரணைக்காரரை வைத்தார்கள்; அவர்கள் பார்வோனுக்காகப் பித்தோம், ரம்சேஸ் என்னும் பண்டசாலைப் பட்டணங்களைக் கட்டினார்கள்.
12 ஆனாலும் அவர்களை எவ்வளவு ஒடுக்கினார்களோ அவ்வளவு அவர்கள் பலுகிப் பெருகினார்கள். அப்படியிருக்கவே அவர்கள் இஸ்ரவேல்புத்திரரைக் குறித்துப் பயங்கொண்டார்கள்.
13 எகிப்தியர் இஸ்ரவேல் புத்திரரைக் கொடுமையாய் வேலைவாங்கினார்கள்.
14 அவர்கள் ஜீவனும் அவர்களுக்குக் கசந்து போகும்படி, சாந்து அரைக்கும் வேலையையும் செங்கல் அறுக்கும் வேலையையும் வயலில் செய்யும் சகல வேலைகளையும் அவர்களுக்கு இட்டார்கள். இப்படியாக அவர்களுக்கு இட்ட சகலவித வேலைகளினும் அவர்களைக் கொடுமையாய் நடத்தினார்கள்.

15 அதுவுமன்றி எகிப்தின் ராஜா, சிப்பிராள், பூவாள் என்னும் பேருடைய எபிரெய மருத்துவச்சிகளோடே பேசி:
16 நீங்கள் எபிரெய ஸ்திரீகளுக்கு மருத்துவம் பார்க்கும்போது அவர்கள் மணையின்மேல் உட்கார்ந்திருக்கையில் நீங்கள் கவனித்து, ஆண்பிள்ளையானால் கொன்றுபோடுங்கள், பெண்பிள்ளையானால் உயிரோடிருக்கட்டும் என்றான்.
17 மருத்துவச்சிகளோ கடவுளுக்குப் பயந்தவர்களானதினால் எகிப்தின் ராஜா தங்களுக்கு இட்ட கட்டளைப்படி செய்யாமல் ஆண்பிள்ளைகளையும் உயிரோடே காப்பாற்றினார்கள்.
18 ஆகவே எகிப்தின் ராஜா மருத்துவச்சிகளை அழைப்பித்து: நீங்கள் இப்படிச் செய்கிறதென்ன? ஆண்

பிள்ளைகளையும் உயிரோடே காப்பாற்று
19 கிறீர்களே என்று கேட்க | மருத்துவச்சி
கள் பார்வோனிடம்: எபிரேய ஸ்திரீகள்
எகிப்திய ஸ்திரீகளைப்போன்றவர்களல்ல,
அவர்கள் நல்ல பலமுள்ளவர்கள்; மருத்து
வச்சி அவர்களிடம் போகுமுன்னமே
20 அவர்கள் பிரசவித்தாகும் என்றார்கள். இதி
னிமித்தம் தேவன் மருத்துவச்சிகளுக்குத்
தயைபாராட்டினார். ஜனங்களும் பெருகி
21 மிகவும் பலத்தார்கள். | மருத்துவச்சிகள்
தேவனுக்குப் பயந்திருந்ததினால் அவர்கள்
குடும்பங்கள் தழைக்கும்படி செய்தார்.
22 அப்பொழுது பார்வோன், பிறக்கும் ஆண்
பிள்ளைகளையெல்லாம் நதியிலே போட்டுவிட
வும் பெண்பிள்ளைகளையெல்லாம் உயிரோ
டே வைக்கவும் தன் ஜனங்கள் எல்லாருக்
கும் கட்டளையிட்டான்.

**2** லேவியின் குடும்பத்தாரில் ஒருவன்
போய் லேவியின் குமாரத்திகளில் ஒருத்
2 தியை விவாகம்பண்ணினான். அவள் கர்ப்ப
வதியாகி ஒரு ஆண்பிள்ளையைப் பெற்று
அது சவுந்தரியமுள்ள பிள்ளை என்று
கண்டு அதை மூன்று மாதம் ஒளித்துவைத்
3 தாள்; அதற்குமேல் அதை ஒளித்துவைக்க
முடியாமல் அவள் ஒரு நாணற்பெட்டியை
எடுத்து அதற்குக் கீலும் பிசினும் பூசி
அதிலே பிள்ளையை வளர்த்தி நதியோரமாய்
4 நாணலுக்குள்ளே வைத்தாள். அதற்கு
என்ன சம்பவிக்கும் என்று அறியும்படி
அதின் தமக்கை தூரத்திலே நின்றுகொண்
5 டிருக்கையிலேயே | பார்வோனின் குமா
ரத்தி நதியிலே ஸ்நானம்பண்ண வந்தாள்;
அவளுடைய தாதிகள் நதியோரத்தில் உலா
விக்கொண்டிருந்தார்கள்; அவள் நாணலுக்
குள்ளிருந்த பெட்டியைக் கண்டு அதைக்
கொண்டுவரும்படி தன் அடிமைப்பெண்ணை
6 அனுப்பினாள். அதைத் திறக்கவே பிள்ளை
காணப்பட்டது; அது அழுதுகொண்டிருந்
தது; அவள் அதின்மேல் இரக்கமுற்று,
இது எபிரேயப் பிள்ளைகளில் ஒன்று என்
7 றாள். அதுகண்ட அதின் தமக்கை பார்
வோனின் குமாரத்தியினிடம்: உமக்கு
இந்தப் பிள்ளையை வளர்க்கும்படி எபிரேய
ஸ்திரீகளில் பால்கொடுக்கிற ஒருத்தியை
நான் போய் உம்மிடம் அழைத்துக்
8 கொண்டு வரட்டுமா என்றாள். அதற்குப்
பார்வோனின் குமாரத்தி: அழைத்துக்
கொண்டுவா என்றாள். இந்தப் பெண்
போய்ப் பிள்ளையின் தாயையே அழைத்துக்
9 கொண்டு வந்தாள். பார்வோனின் குமா
ரத்தி அவளைப் பார்த்து: நீ இந்தப் பிள்ளையை
எடுத்துக்கொண்டுபோய் அதை எனக்கு
வளர்த்துக்கொடு, நான் உனக்குச் சம்பளம்
கொடுக்கிறேன் என்றாள். அந்த ஸ்திரீ
பிள்ளையை எடுத்துக்கொண்டுபோய்ப் பால்
கொடுத்து வளர்த்தாள். பிள்ளை வளர்ந்த 10
போது, அவள் அதைப் பார்வோன் குமா
ரத்தியினிடம் கொண்டுபோய் விட்டாள்.
அவளுக்கு அவன் குமாரனானான். அவனை
ஜலத்திலின்று எடுத்தேன் என்று சொல்லி
அவள் அவனுக்கு மோசே என்று பேரிட்
டாள்.

மோசே பெரியவனானபோது அவன் 11
தன் சகோதரரிடம் போய் அவர்கள் சுமை
சுமக்கிறதைப் பார்த்துக்கொண்டிருந்தான்.
அப்போது தன் சகோதரராகிய எபிரேய
ரில் ஒருவனை ஒரு எகிப்தியன் அடிக்கிற
தைக் கண்டான். காணவே, அங்கும் 12
இங்கும் பார்த்து ஒருவரும் இல்லையென்று
அறிந்துகொண்டு எகிப்தியனை வெட்டி மண
லிலே புதைத்துப்போட்டான். அவன் மறு 13
நாளிலும் வெளியே போனபோது, இதோ,
எபிரேயரில் இரண்டுபேர் சண்டைபோட்
டுக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது
அவன் அநியாயஞ்செய்கிறவனைப் பார்த்து:
நீ உன் தோழனை அடிக்கிறது என்னவென்று
கேட்க | அவன் எங்கள்மேல் உன்னை அதி 14
காரியாகவும் நியாயாதிபதியாகவும் ஏற்படுத்
தினவன் யார்? நீ எகிப்தியனைக் கொன்று
போட்டதுபோல என்னையும் கொன்று
போட நினைக்கிறாயோ என்றான். அதைக்
கேட்கவே, மோசே காரியம் நிச்சயமாக
வெளியாகிவிட்டது என்று பயந்தான். பார் 15
வோன் அந்தக் காரியத்தைக் கேள்விப்
பட்டபோது மோசேயைக் கொன்றுபோட
வகைதேடினான்.

மோசேயோ பார்வோனிடத்தினின்று
தப்பியோடி மிதியான் தேசத்தில் போய்ச்
சேர்ந்து ஒரு கிணற்றண்டையிலே உட்
கார்ந்திருந்தான். மிதியான் தேசத்திலே 16
ஆசாரியன் ஒருவனிருந்தான்; அவனுக்கு
ஏழு குமாரத்திகள்; இவர்கள் தங்கள் தகப்
பனின் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டும்
படி அங்கே வந்து தண்ணீர் மொண்டு
தொட்டிகளை நிரப்பினார்கள். நிரப்பும் 17
போது மேய்ப்பர்கள் வந்து அவர்களைத்
துரத்தினார்கள்; மோசேயோ எழுந்திருந்து
அவர்களுக்குத் துணைநின்று அவர்கள் ஆடு
களுக்குத் தண்ணீர் காட்டினான். அவர் 18
கள் தங்கள் தகப்பனாகிய ரெகுவேலிடம்
வந்தபோது அவன்: நீங்கள் இன்று இத்தனை
சீக்கிரமாய் வந்துவிட்டது எப்படி என்று
கேட்க | அவர்கள்: எகிப்தியன் ஒருவன் 19
மேய்ப்பரின் கைகளுக்கு எங்களைத் தப்பு

வித்து எங்களுக்குத் தண்ணீர் மொண்டு கொடுத்து ஆடுகளுக்கும் தண்ணீர் காட்டி
20 னான் என்றார்கள். அப்பொழுது அவன் தன் குமாரத்திகளிடம்: அவன் எங்கே? அந்த மனிதனை நீங்கள் விட்டுவந்ததென்ன? போஜனம்பண்ணும்படி அவனை அழைத்
21 துக்கொண்டு வாருங்கள் என்றான். மோசே அந்த மனிதனிடம் தங்கியிருக்கச் சம்மதித்தான். அவன் சிப்போராள் என்னும் தன் குமாரத்தியை மோசேக்குக் கொடுத்தான்.
22 அவளுக்கு ஒரு ஆண்பிள்ளை பிறக்கவே, நான் அந்நியதேசத்தில் பரதேசியாய் இருக்கிறேன் என்று சொல்லி மோசே அவனுக்கு கெர்சோம் என்று பேரிட்டான்.
23 மோசே வெகுநாள் இங்கே இருந்தபின் எகிப்தின் ராஜா மரித்தான். இஸ்ரவேல் புத்திரரோ அடிமைத்தனத்தினால் தவித்து ஓலமிட்டுக்கொண்டிருந்தார்கள்; அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து அபயமிடும் சத்தம்
24 தெய்வசந்நிதியில் எட்டினது. கடவுள் அவர்கள் பெருமூச்சைக் கேட்கவே, தாம் ஆபிரகாமோடும் ஈசாக்கோடும் யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை நினைத்
25 தருளினார். கடவுள் இஸ்ரவேல் புத்திரரைக் கண்ணோக்கினார்; கடவுள் அவர்களைக் கவனிக்கலானார்.

**3** மோசே மிதியான் தேசத்து ஆசாரியனாகிய தன் மாமன் எத்திரோவின் ஆடுகளை மேய்த்துவந்தான். அவன் ஆடுகளை வனாந்தரத்தின் பின்புறத்திலே ஓட்டி தெய்வபர்
2 வதமாகிய ஓரேப்மட்டும் வந்தான். அங்கே யெகோவாவின் தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினிஜ்வாலையினின்று அவனுக்குத் தரிசனமானார். மோசே அதை உற்றுப்பார்த்து முட்செடி அக்கினியால் ஜ்வாலித்து எரிந்தும் அது வெந்துபோகாமல் இருந்தது
3 கண்டு: இந்த முட்செடி வெந்துபோகாதிருக்கிறது என்ன? நான் கிட்டப்போய் இந்த அற்புதக் காட்சியைப் பார்ப்பேன்
4 என்றான். அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதை யெகோவா கண்டார்; முட்செடியின் நடுவிலிருந்து கடவுள் அவனைக் கூப்பிட்டு: மோசே, மோசே, என்று அழைக்க, அவன்: இதோ அடியேன் என்
5 றான். அப்பொழுது அவர்: இங்கே கிட்டிச்சேராதே, உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்று சொல்லி,
6 பின்னும்: நான் ஆபிரகாமின் கடவுளும் ஈசாக்கின் கடவுளும் யாக்கோபின் கடவுளுமாகிய உன் பிதாக்களின் கடவுள் என்றார். மோசே கடவுளை நோக்கிப்பார்க்கப் பயந்து முகத்தை மூடிக்கொண்டான்.

7 அப்பொழுது யெகோவா: எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்தேன்; ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற அபயசத்தத்தைக் கேட்டேன்; அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்துகொண்டேன். 8 அவர்களை எகிப்தியரின் கையினின்று விடுதலையாக்கவும் அவர்களை அந்தத் தேசத்திலிருந்து நீக்கி நலமும் விசாலமுமான தேசத்திலே கொண்டுபோய்ச் சேர்க்கவும் இறங்கினேன்; அது கானானியரும் ஏத்தியரும் எமோரியரும் பரிசீகரும் ஏவியரும் எபூசியரும் இருக்கிற இடமாகிய பாலும் தேனும் ஓடுகிற தேசம். இப்பொழுதும் இஸ்ர 9 வேல் புத்திரரின் அபயசத்தம் என் சந்நிதியில் வந்து எட்டினது; எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்குதலையும் கண்டேன். 10 இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்துவரும்படி உன்னைப் பார்வோனிடத்திற்கு அனுப்புவேன் வா என்றார். 11 மோசே அதைக்கேட்டுக் கடவுளினிடம்: பார்வோனிடத்துக்குப் போகவும் இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்துவரவும் நான் எம்மாத்திரம் என்றான். 12 அதற்கு அவர்: நானும் உன்னோடு இருப்பேனல்லவா, நீ ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்துவந்தபின் நீங்கள் இந்த மலையிலேயே கடவுளுக்கு ஆராதனை செய்வீர்கள், நான் உன்னை அனுப்பினேன் என்பதற்கு இதுவே அடையாளம் என்றார்.

13 இதன்பின்னும் மோசே கடவுளினிடம்: இதோ, நான் இஸ்ரவேல் புத்திரரிடம் போய் உங்கள் பிதாக்களின் கடவுள் என்னை உங்களிடம் அனுப்பினார் என்று சொல்லும்போது அவருடைய திருநாமம் என்ன என்று அவர்கள் என்னிடம் கேட்பார்களே; அவர்களுக்கு நான் என்ன பதிற்சொல்லுவேன் என்று கேட்கக், 14 கடவுள்: இருக்கிறவராகவே இருக்கிறேன் என்று மோசேயினிடம் சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடம் அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடு சொல்வாயாக என்றார்.

15 மேலும் கடவுள் மோசேயினிடம்: ஆபிரகாமின் கடவுளும் ஈசாக்கின் கடவுளும் யாக்கோபின் கடவுளுமாயிருக்கிற உங்கள் பிதாக்களின் கடவுளாகிய யெகோவா என்னை உங்களிடம் அனுப்பினார் என்று நீ இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்வாயாக; என்றென்றும் இதுவே என் நாமம், தலை

முறை தலைமுறைதோறும் இதுவே என்னை
16 நினைப்பதற்குரிய பேர். நீ போய் இஸ்ர
வேலின் பெரியவர்களைக் கூட்டி அவர்க
ளிடம்: ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு
என்பவர்களின் கடவுளாயிருக்கிற உங்கள்
பிதாக்களின் கடவுளாகிய யெகோவா
எனக்குத் தரிசனமானார்; உங்களை நிச்ச
யமாகவே சந்தித்து எகிப்தில் உங்களுக்குச்
செய்யப்பட்டதைக் கண்டேன் என்றும் |
17 உங்களை எகிப்தின் சிறுமையிலிருந்து நீக்கிப்
பாலும் தேனும் ஒடுகிற தேசமாகிய கானா
னியர், ஏத்தியர், எமோரியர், பாரசீகர்,
ஏவியர், எபூசியருடைய தேசத்துக்குக்
கொண்டுபோவேன் என்றும் சொன்னார்
18 என்று சொல். அவர்கள் உன் சொல்லுக்
குச் செவிகொடுப்பார்கள்; நீயும் இஸ்ர
வேலில் பெரியவர்களும் எகிப்தின் ராஜா
வினிடம் போய்: எபிரெயரின் கடவுளாகிய
யெகோவா எங்களைச் சந்தித்தார்; இப்
பொழுதும் நாங்கள் வனாந்தரத்திலே மூன்று
நாள் பிரயாணம்போய் எங்கள் கடவு
ளாகிய யெகோவாவுக்குப் பலியிடும்படி
எங்களைப் போகவிடவேண்டும் என்று
19 சொல்லுங்கள். எகிப்தின் ராஜாவோ என்
புயபலத்தைக் கண்டாலொழிய உங்களைப்
போகவிடான் என்பது எனக்குத் தெரியும்.
20 ஆகையால் நான் என் கையை நீட்டி
எகிப்தின் நடுவிலே சகலவித அற்புதங்களை
யும் செய்து அதை வாதிப்பேன்; அதற்குப்
பின் அவன் உங்களைப் போகவிடுவான்.
21 போகும்போது இந்த ஜனங்களுக்கு எகிப்
தியரின் கண்களில் தயவுகிடைக்கப்பண்ணு
வேன்; நீங்கள் போகையில் வெறுங்கை
22 யாய்ப் போவதில்லை. ஒவ்வொரு ஸ்திரீயும்
தன்தன் அயலகத்தாளிடத்திலும் தன்தன்
வீட்டில் தங்குகிறவளிடத்திலும் பொன்
வெள்ளி ஆபரணங்களையும் வஸ்திரங்களை
யும் கேட்டு வாங்குவாள்; அவைகளை
உங்கள் குமாரருக்கும் உங்கள் குமாரத்தி
களுக்கும் அணிவீர்கள். இப்படியாக எகிப்
தியரைக் கொள்ளையிடுவீர்கள் என்றார்.

4 அது கேட்ட மோசே: அவர்கள் என்னை
நம்புவார்களா? என் சொல்லைக் கேட்பார்
களா? யெகோவா உனக்குத் தரிசனமாக
2 வில்லை என்பார்களே என்றான். யெகோவா
அவனிடம்: உன் கையிலிருக்கிறது என்ன
என்று கேட்க, இது ஒரு கோல் என்றான்.
3 அதைத் தரையிலே போடு என்றார்; அவன்
அதைத் தரையில் போடவே அது பாம்பா
யிற்று; மோசே அதற்கு விலகியோடினான்.
4 அப்பொழுது யெகோவா மோசேயினிடம்:
உன் கையை நீட்டி அதன் வாலைப் பிடி
என்றார்; அவன் தன் கையை நீட்டி
அதைப் பிடிக்கவே, அது அவன் கையிலே
கோலாயிற்று. ஆபிரகாமின் கடவுளும் 5
ஈசாக்கின் கடவுளும் யாக்கோபின் கடவு
ளுமாயிருக்கிற தங்கள் பிதாக்களின் கடவு
ளாகிய யெகோவா உனக்குத் தரிச
மானதை அவர்கள் நம்புவதற்கான அடை
யாளம் இதுவே என்றார். பின்னும் 6
யெகோவா அவனிடம்: உன் கையை
உன் மடியிலே மூடிக்கொள் என்றார்;
அவன் தன் கையை மடியிலே மூடிக்
கொண்டான்; அதைத் திரும்ப வெளியே
எடுக்கும்போது, இதோ, அவன் கை
உறைந்த மழிழையைப்போலாக வெண்குஷ்
டம் பிடித்திருந்தது. அவர்: உன் கையைத் 7
திரும்பவும் மடியிலே இட்டுக்கொள் என்
றார். அவன் தன் கையைத் திரும்பத் தன்
மடியிலே மூடிக்கொண்டான்; அவன்
அதைத் தன் மடியிலிருந்து திரும்ப வெளியே
எடுத்தபோது அது அவன் மற்றச் சதை
யைப்போலாயிற்று. அப்பொழுது அவர்: 8
முந்தின அடையாளத்தை அவர்கள் கண்டு
உன்னை நம்பாமலும் உன் சொல்லைக் கேளா
மலும்போனால் பிந்தின அடையாளத்தைக்
கண்டு நம்புவார்கள். இவ்விரண்டு அடை 9
யாளங்களையும் அவர்கள் நம்பாமலும் உன்
சொல்லைக் கேளாமலும் போவார்களானால்
அப்பொழுது நீ நதியிலே தண்ணீர்மொண்டு
நிலத்தில் ஊற்றுவாயாக; நதியில் மொண்ட
தண்ணீர் வெட்டாந்தரையிலே இரத்த
மாகும் என்றார்.

அப்பொழுது மோசே யெகோவாவினி 10
டம்: ஐயோ, ஆண்டவரே, இதற்கு முன்னே
வது, தேவரீர் உமது அடியானோடே பேசி
னதற்குப் பின்னேவது நான் வாக்குவல்ல
வன் அல்ல; நான் திக்குவாயும் மந்தாவும்
உள்ளவன் என்று சொல்ல | யெகோவா 11
அவனிடம்: மனுஷனுக்கு வாயைக்கொடுத்
தவர் யார்? மனுஷனை ஊமையனாகவும்
செவிடனாகவும் பார்வையுள்ளவனாகவும்
குருடனாகவும் செய்தவர் யார்? யெகோவா
வாகிய நான் அல்லவா? | ஆதலால் நீ 12
போ; நான் உன் நாவிலிருந்து நீ பேச
வேண்டியதை உனக்குப் போதிப்பேன்
என்றார். அதற்கு அவன்: ஆண்டவரே, 13
நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிற யாரையா
கிலும் அனுப்பும் என்றான். யெகோவா 14
மோசேயின்மேல் கோப மூண்டவராகி:
லேவியனாகிய ஆரோன் உன் சகோதரன்
அல்லவா? அவன் நன்றாய்ப் பேசுகிறவன்
என்பது தெரியும்: அவன் உன்னைச் சந்திக்க
வருகிறான்; உன்னைக் காணும்போது அவன்

15 இருதயம் மகிழும். நீ அவனோடு பேசி, வேண்டிய வார்த்தைகளை அவனுக்குச் சொல்லிக்கொடு; நான் உன் நாவினும் அவன் நாவினுமிருந்து நீங்கள் செய்ய வேண்டியதை உங்களுக்குப் போதிப்
16 பேன். உனக்குப் பதிலாக அவன் ஜனங்களோடு பேசுவான்; இவ்விதமாய் அவன் உனக்கு வாயாக இருப்பான்; நீ அவனுக்
17 குத் தெய்வம்போலாவாய். இந்தக் கோலையும் உன் கையிலே பிடித்துக்கொண்டுபோ, இதைக்கொண்டு நீ அடையாளங்களைச் செய்வாய் என்றார்.

18 மோசே தன் மாமனாகிய எத்திரோவினிடம் வந்து: எகிப்திலிருக்கிற என் சகோதரர் இன்னும் உயிரோடு இருக்கிறார்களா என்று பார்க்கும்படி நான் அங்கே திரும்பிப்போக உத்தரவு தரவேண்டும் என்று கேட்க, எத்திரோ மோசேயினிடம்: சமாதானமாய்ப் போய்வாரும் என்றார்.
19 பின்னும் யெகோவா மிதியானிலே மோசேயைப் பார்த்து: நீ எகிப்துக்குத் திரும்பிப் போ. உன் பிராணனை வாங்கத் தேடின மனிதர் யாவரும் இறந்துபோனார்கள் என்
20 றார். அப்பொழுது மோசே தன் மனைவியையும் தன் பிள்ளைகளையும் கழுதையின்மேல் ஏற்றிக்கொண்டு எகிப்து தேசத்துக்குத் திரும்பிப்போனான்; கடவுளின் கோலையும் மோசே தன் கையிலே பிடித்துக்கொண்டு
21 போனான்; அப்பொழுது யெகோவா மோசேயினிடம்: நீ திரும்பிப்போய் எகிப்திலே சேர்ந்தபின் நான் உன் கையில் அளித்திருக்கிற அற்புதங்கள் யாவையும் பார்வோனின் முன்னிலையில் செய்யும்படி பார்த்துக்கொள்; அவன் இருதயத்தையோ நான் கடினப் படுத்துவேன்; ஜனத்தை அவன்
22 போகவிடான். அப்பொழுது நீ பார்வோனிடம்: இஸ்ரவேல் எனது குமாரன், என்
23 சேஷ்ட புத்திரன்; எனக்கு ஆராதனை செய்யும்படி என் குமாரனை அனுப்பிவிடு என்று உனக்குச் சொல்லுகிறேன்; அவனை விட மாட்டேன் என்கிறாய்; ஆகவே, நான் உன்னுடைய குமாரனை, உன் சேஷ்டபுத்திரனை, சங்காரிப்பேன் என்று யெகோவா சொன்னார் என்று சொல் என்றார்.

24 வழியிலே தங்கும் இடத்தில் யெகோவா அவனுக்கு எதிர்ப்பட்டு அவனைக் கொல்
25 லப்பார்த்தார். அப்பொழுது சிப்போராள் கருக்கான ஒரு கல்லை எடுத்துத் தன் புத்திரனின் நுனித்தோலை அறுத்து, அதினால் அவன் காலைத் தொட்டு, நீர் எனக்கு
26 இரத்தபுருஷன் என்றாள். பின்பு அவர் அவனைவிட்டு விலகினார்; அப்பொழுது விருத்தசேதனத்தினிமித்தம் அவள் நீர் எனக்கு இரத்தபுருஷன் என்றாள்.

27 யெகோவா ஆரோனிடம்: நீ வனாந்தரத்தில் மோசேக்கு எதிர்கொண்டுபோ என்று சொல்ல, அவன் போய் தெய்வ பர்வதத்தில் அவனைச் சந்தித்து அவனை முத்தஞ்
28 செய்தான். அப்பொழுது மோசே, யெகோவா தன்னிடம் பேசியனுப்பிய சகல வார்த்தைகளையும் அவர் தனக்குக் கட்டளையிட்ட சகல அடையாளங்களையும் ஆரோனுக்குத் தெரிவித்தான். மோசேயும் ஆரோ
29 னும் போய் இஸ்ரவேல் புத்திரரின் பெரியோர் அனைவரையும் கூடிவரச்செய்தார்கள். யெகோவா மோசேக்குச் சொல்லிய
30 சகல வார்த்தைகளையும் ஆரோன் சொல்லி, ஜனங்கள் பார்க்க அந்த அடையாளங்களையும் செய்தான். ஜனங்கள் நம்பினார்கள்;
31 யெகோவா இஸ்ரவேல் புத்திரரைச் சந்தித்தார் என்றும் அவர்கள் படும் உபத்திரவத்தைக் கண்ணோக்கிப் பார்த்தார் என்றும் அவர்கள் கேட்டபோது குனிந்து தொழுது கொண்டார்கள்.

**5** பின்பு மோசேயும் ஆரோனும் பார்வோனிடம்வந்து வனாந்தரத்திலே எனக்கு உற்சவம் கொண்டாடும்படி என் ஜனங்களைப் போகவிடு என்று இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா சொல்லுகிறார் என்
2 றார்கள். பார்வோன் அதைக் கேட்டு: யெகோவா யார்? நான் ஏன் அவர் சொல்லுக்குச் செவிகொடுத்து இஸ்ரவேலைப் போகவிடவேண்டும்? நான் அந்த யெகோவாவை அறியேன்; நான் இஸ்ரவேலைப்
3 போக விடுவதில்லை என்றான். அப்பொழுது அவர்கள்: எபிரேயரின் கடவுள் எங்களைச் சந்தித்தார்; நாங்கள் வனாந்தரத்தில் மூன்றுநாள் பிரயாணஞ்செய்து எங்கள் கடவுளாகிய யெகோவாவுக்குப் பலியிடும்படி போகவிட்டருளும்; போகாதிருந்தால் அவர் கொள்ளைநோயும் பட்டயமும் எங்
4 கள்மேல் வரும்படி செய்வார் என்றார்கள். எகிப்தின் ராஜா அவர்களைப் பார்த்து: மோசேயும் ஆரோனுமாகிய நீங்கள் ஜனங்களைத் தங்கள் வேலைகளை விட்டுக் கலையப்
5 பண்ணுகிறது என்ன? சுமைபெடுக்கிற வேலைக்குப் போங்கள் என்றான். பின்னும் பார்வோன்: இதோ, தேசத்தில் ஜனங்கள் மிகுதியாய்விட்டார்கள்; அவர்கள் சுமை
6 எடுக்கிறதை விட்டு ஓய்ந்திருக்கும்படி செய்கிறீர்களே என்றான்.

அந்நாளிலே பார்வோன் ஜனங்களின்
7 ஆளோட்டிகளையும் மேஸ்திரிகளையும் பார்த்து: செங்கல்வேலைக்கு நீங்கள் முன்போல

இனி ஜனங்களுக்கு வைக்கோல் கொடுக்க வேண்டாம்; அவர்கள் தாங்களே போய்த் தங்களுக்கு வைக்கோல் சேர்க்கட்டும். 8 அவர்கள் முன் செய்துகொடுத்த கணக்கின் படியே செங்கல் செய்யும்படி சொல்லுங் கள்; நீங்கள் அதிலே ஒன்றும் குறைக்க வேண்டாம். அவர்கள் சோம்பேறிகள்; அதினால்தான், நாங்கள் போய் எங்கள் கடவுளுக்குப் பலியிடுவோம் என்று கூக்குர 9 லிடுகிறார்கள். அந்த மனிதர்மேல் முன்னிலும் அதிக வேலையைச் சுமத்துங்கள்; அவர்கள் வேலைசெய்துகொண்டே யிருக்கட்டும்; வீண் வார்த்தைகளுக்கு அவர்கள் செவிகொடுக்கவேண்டாம் என்று கட்டளை 10 யிட்டான். அப்பொழுது ஜனங்களின் ஆளோட்டிகளும் அவர்கள் மேல்விசாரிகளும் போய் ஜனங்களிடம்: பார்வோன் சொல்வதைக் கேளுங்கள், உங்களுக்கு வைக் 11 கோல் கொடுப்பதில்லை. நீங்களே போய் அகப்படுகிற இடங்களில் வைக்கோல் சம்பாதித்துக்கொள்ளுங்கள்; உங்கள் வேலையிலோ ஒன்றும் குறைக்கப்படுவதில்லை 12 என்றார்கள். அப்பொழுது வைக்கோலுக்குப் பதிலாகத் தாளடிகளைச் சேர்க்கும்படி ஜனங்கள் எகிப்துதேசமெங்கும் சுற்றித் 13 திரிந்தார்கள். ஆளோட்டிகள் அவர்களைப் பார்த்து: வைக்கோலிருந்த நாளில் செய்த படியே உங்கள் வேலைகளை ஒவ்வொரு நாளிலும் செய்துமுடியுங்கள் என்று சொல்லி அவர்களைத் துரிதப்படுத்தினார்கள். 14 பார்வோனின் ஆளோட்டிகள் இஸ்ரவேல் புத்திரர்மேல் வைத்த அவர்கள் மேல்விசாரிகளைப்பார்த்து: செங்கல்வேலையில் நீங்கள் முன் செய்ததுபோல நேற்றும் இன்றும் ஏன் செய்யவில்லையென்று கேட்டு அவர் 15 களை அடித்தார்கள். அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரின் மேல்விசாரிகள் பார்வோனிடம் போய் அபயமிட்டு: உமது அடியாருக்கு நீர் இப்படிச் செய்கிறதென்ன? 16 உமது அடியாருக்கு வைக்கோல் கொடாதிருந்தும் செங்கல் அறுத்துத் தீரவேண்டுமென்று எங்களுக்குச் சொல்லுகிறார்கள், இதோ, உமது அடியாராகிய நாங்கள் அடிக்கப்படுகிறோம்; குற்றமோ உமது ஜனங்களிடத்திலேயே இருக்கிறது 17 என்றார்கள். அதற்கு அவன்: நீங்கள் சோம்பேறிகள், சோம்பேறிகள் தான்; நாங்கள் போய் யெகோவாவுக்குப் பலியிடுவோமென்று நீங்கள் சொல்வதற்கு 18 அதுதான் காரணம். போய் வேலைசெய்யுங்கள்; உங்களுக்கு வைக்கோல் கொடுக்கப்படுவதில்லை; செங்கலையோ நீங்கள் கணக்கின்படியே ஒப்புவிக்கவேண்டும் என்றான்.

19 நீங்கள் ஒவ்வொரு நாளிலும் அறுத்துத் தீரவேண்டிய செங்கலிலே ஒன்றும் குறைக்கப்படாது என்று சொல்லப்பட்டதினாலே இஸ்ரவேல் புத்திரரின் மேல்விசாரிகளுக்கு இக்கட்டு வந்தது என்று அறிந்தார்கள். 20 அவர்கள் பார்வோனின் சமுகத்தை விட்டு வருகையில் வழியிலே தங்களைப் பார்க்கும்படி நின்றுகொண்டிருந்த மோசேயையும் ஆரோனையும் கண்டு: 21 யெகோவாவே உங்களைப் பார்த்து நியாயந்தீர்ப்பாராக, பார்வோனிடத்திலும் அவர் ஊழியரிடத்திலும் எங்கள் வாசனையைக் கெடுத்தீர்களே, எங்களைக் கொல்லும்படி பட்டயத்தை அவர்கள் கையில் கொடுத்தீர்களே என்று சொன்னார்கள். 22 அப்பொழுது மோசே யெகோவாவினிடம் திரும்பிப் போய்: ஆண்டவரே, என் இந்த ஜனங்களுக்குத் தீங்குவரப்பண்ணினீர்? ஏன் என்னை அனுப்பினீர்? 23 நான் உமது திருநாமத்தைக் கொண்டு பேசும்படி பார்வோனிடத்தில் போனதுமுதல் அவன் இந்த ஜனங்களை உபத்திரவப்படுத்துகிறான்; நீர் உமது ஜனத்தை விடுதலையாக்கவில்லையே என்றான்.

**6** அப்பொழுது யெகோவா மோசேயினிடம்: நான் பார்வோனுக்குச் செய்வதை இப்பொழுது காண்பாய்; அவன் என் புஜபலத்தைக்கண்டு அவர்களைப் போகவிடுவான்; என் புஜபலத்தைக்கண்டு அவர்களைத் தன் தேசத்திலிருந்து துரத்திவிடுவானே என்றார்.

2 பின்னும் கடவுள் மோசேயினிடம்: நான் யெகோவா; 3 சர்வவல்லமையுள்ள கடவுள் என்னும் நாமத்தினால் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனமானேன்; யெகோவா என்னும் என் நாமத்தினாலேயோ நான் அவர்களுக்கு அறியப்படவில்லை. 4 அவர்கள் பரதேசிகளாய்த் தங்கின தேசமாகிய கானான்தேசத்தை அவர்களுக்குக் கொடுப்பேன் என்று நான் அவர்களோடே என் உடன்படிக்கையையும் ஏற்படுத்தியிருக்கிறேன். 5 இப்போதும் எகிப்தியர் அடிமைகொள்ளுகிற இஸ்ரவேல் புத்திரரின் பெருமூச்சை நான் கேட்டு என் உடன்படிக்கையை நினைத்தேன். 6 ஆதலால் நீ இஸ்ரவேல் புத்திரரிடம்: நானே யெகோவா; உங்கள்மேல் எகிப்தியர் சுமத்தின சுமைகளை நீக்கி உங்களை விடுவிப்பேன்; உங்களை அவர்கள் அடிமைத்தனத்திற்கு நீங்கலாக்கி நீட்டிய கரத்தினாலும் மகா தண்டனைகளினாலும் உங்களை மீட்

7 பேன். உங்களை எனக்கு ஜனமாகச் சேர்த்துக்கொள்ளுவேன்; உங்களுக்குக் கடவுளாயிருப்பேன்; உங்கள்மேல் எகிப்தியர் சுமத்தின சுமைகளை நீக்கி உங்களை விடுவிக்கிற உங்கள் கடவுளாகிய யெகோவா நான்
8 என்று அறிவீர்கள். ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுப்பேன் என்று நான் ஆணையிட்ட தேசத்திற்குள் உங்களைக் கொண்டுபோய் அதை உங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுப்பேன், நானே யெகோவா என்று அவர்களுக்குச்
9 சொல் என்றார். மோசே இதை இப்படியே இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னான்; அவர்களோ மனமடிவினாலும் கொடுமையான வேலையினாலும் மோசேக்குச் செவிகொடாமற் போனார்கள்.
10 பின்பு யெகோவா மோசேயினிடம்:
11 நீ எகிப்தின் ராஜாவாகிய பார்வோனிடம் போய் அவன் தன் தேசத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரரைப் போகவிடும்படி அவனி
12 டம் சொல் என்றார். மோசே யெகோவாவின் முன்னின்று பேசி: இதோ, இஸ்ரவேல் புத்திரரே எனக்குச் செவிகொடுக்கவில்லை, பார்வோன் எனக்கு எப்படிச் செவிகொடுப்பான்? நான் விருத்தசேதனமில்லாத உதடுக
13 ளுள்ளவன் என்றார். யெகோவா மோசேயோடும் ஆரோனோடும் பேசி இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக்கொண்டு போகவேண்டியதைப்பற்றி இஸ்ரவேல் புத்திரரிடத்துக்கும் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனிடத்துக்கும் கட்டளைகொடுத்து அனுப்பினார்.
14 அவர்களுடைய பிதாக்கள்வீட்டுத் தலைவர் இவர்களே; இஸ்ரவேலுக்கு முதல் பிறந்தவனாகிய ரூபனின் குமாரர் ஆனோக்கு, பல்லூ, எஸ்ரோன், கர்மீ; இவர்கள் ரூபனின் வம்சத்தலைவர். சிமியோனின் குமா
15 ரர் யெமூவேல், யாமின், ஓகாத், யாகீன், சோகார், கானானிய ஸ்திரீயின் குமாரனாகிய சவுல்; இவர்கள் சிமியோனின் வம்சத்தலை
16 வர். வம்சவரலாற்றின்படி லேவியின் குமாரருடைய நாமங்கள் கெர்சோன், கெகாத், மெராரி என்பவைகள். லேவி நூற்றுமுப்
17 பத்தேழு வருஷம் உயிரோடிருந்தான். கெர்சோனின் குமாரர், அவரவர் வம்சங்களின்
18 படி, லிப்னீ, சிமேயீ என்பவர்கள். கெகாத்தின் குமாரர்: அம்ராம், இத்சேயார், யிப்ரோன், ஊசியேல் என்பவர்கள்; கெகாத் நூற்றுமுப்பத்துமூன்று வருஷம் உயிரோடி
19 ருந்தான். மெராரியின் குமாரர் மகேலி, மூசி என்பவர்கள்; வம்சவரலாற்றின்படி லேவி
20 யின் வம்சத்தலைவர் இவர்களே. அம்ராம் தன் அத்தையாகிய யோகெபேத்தை விவாகம்பண்ணினான்; அவள் அவனுக்கு ஆரோனையும் மோசேயையும் பெற்றாள்: அம்ராம் நூற்றுமுப்பத்தேழு வருஷம் உயிரோடிருந்தான். யித்சேயாரின் குமாரர் கோராகு, நெப்பேக், சிக்ரி என்பவர்கள். ஊசியேலின் குமாரர் மீசவேல், எல்சாபான், சித்ரி என்பவர்கள். ஆரோன் அம்மினதாபின் குமாரத்தியும் நகசோனின் சகோதரியுமாகிய எலிசபாவை விவாகம்பண்ணினான்; இவள் அவனுக்கு நாதாபையும் அபியூவையும் எலெயாசாரையும் இத்தாமாரையும் பெற்றாள். கோராகின் குமாரர் ஆசீர், எல்க்கானா, அபியாசாப் என்பவர்கள்; கோராகியரின் வம்சத்தலைவர் இவர்களே. ஆரோனின் குமாரனாகிய எலெயாசார் பூத்தியேலுடைய குமாரத்திகளில் ஒருத்தியை விவாகம்பண்ணினான். அவள் அவனுக்குப் பினெகாசைப் பெற்றாள்; தங்கள் வம்சங்களின்படியே லேவியரின் பிதாக்களின் வீட்டுத்தலைவர் இவர்களே. இஸ்ரவேல் புத்திரரை அணியணியாய் எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுபோவதற்கு யெகோவாவினால் கட்டளைபெற்ற ஆரோனும் மோசேயும் இவர்களே. இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்துக்கொண்டு போவதைப்பற்றி எகிப்தின் ராஜாவாகிய பார்வோனிடம் பேசினது மோசேயும் ஆரோனும் இவர்களே.

யெகோவா எகிப்து தேசத்திலே மோசே 28
யினிடம் பேசினநாளில் | யெகோவா மோ 29
சேயைப் பார்த்து: நானே யெகோவா, நான் உன்னிடம் சொல்லுகிறவைகளையெல்லாம் நீ எகிப்து ராஜாவாகிய பார்வோனுக்குச் சொல் என்று சொன்னபோது | மோசே 30
யெகோவாவின் முன் நின்று: இதோ, நான் விருத்தசேதனமில்லாத உதடுகளுள்ளவன்; பார்வோன் எனக்கு எப்படிச் செவிகொடுப்பான் என்று சொன்னான்;

7 யெகோவா அவனிடம்: பார், உன்னை நான் பார்வோனுக்குத் தெய்வமாக்கினேன்; உன் சகோதரன் ஆரோன் உன் தீர்க்கதரிசியாயிருப்பான். நான் உனக்குக் கட்டளை 2
யிடும் யாவையும் நீ சொல்லவேண்டும்; பார்வோன் இஸ்ரவேல் புத்திரரைத் தன் தேசத்திலிருந்து அனுப்பிவிடும்படி உன் சகோதரன் ஆரோன் அவனிடம் 3
பேசவேண்டும். நான் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தி எகிப்து தேசத்தில் என் அடையாளங்களையும் அற்புதங்களையும் மிகுதியாகச் செய் 4
வேன். பார்வோன் உங்களுக்குச் செவி

கொடுக்கமாட்டான்; ஆகவே நான் எகிப்துக்கு விரோதமாய் என் கையை நீட்டி மகத்தான நியாயத்தீர்ப்புகளைக்கொண்டு என் சேனைகளை, என் ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரரை, எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக்கொண்டு போவேன். நான் எகிப்தின்மேல் என் கையை நீட்டி இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் நடுவிலிருந்து அழைத்துக்கொண்டு போகும் போது, நானே யெகோவா என்று எகிப்தியர் அறிவார்கள் என்றார். மோசேயும் ஆரோனும் அப்படியே செய்தார்கள்; யெகோவா தங்களுக்குக் கட்டளையிட்டவைகளையே செய்தார்கள். அவர்கள் பார்வோனோடு பேசும் போது மோசேக்கு எண்பது வயது, ஆரோனுக்கு எண்பத்துமூன்று வயது.

8 யெகோவா மோசேயையும் ஆரோனையும் பார்த்து: நீங்கள் சொல்வதற்கு அத்தாட்சியாக ஒரு அற்புதம் காட்டுங்கள் என்று பார்வோன் சொன்னால் நீ ஆரோனிடம்: உன் கோலை எடுத்து அதைப் பார்வோனின் முன்னிலையில் போடு என்று சொல், அது பாம்பாகும் என்றார். மோசேயும் ஆரோனும் பார்வோனிடம் சென்று யெகோவா தங்களுக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள். ஆரோன் பார்வோனின் முன்னிலையிலும் அவன் ஊழியரின் முன்னிலையிலும் தன் கோலைப் போட்டான், அது பாம்பாயிற்று. அப்பொழுது பார்வோனும் சாஸ்திரிகளையும் சூனியக்காரரையும் அழைப்பித்தான், எகிப்தின் மந்திரவாதிகளாகிய இவர்களும் தங்கள் மந்திரவித்தையினால் அப்படியே செய்தார்கள். அவர்கள் ஒவ்வொருவனுமே தன் தன் கோலைப் போட்டபோது அவைகளும் பாம்புகளாயின; ஆரோனின் கோலோ அவர்கள் கோல்களை விழுங்கிற்று. யெகோவா சொல்லியிருந்தபடியே பார்வோனின் இருதயம் கடினப்பட்டது, அவர்களுக்குச் செவிகொடாமற்போனான்.

14 அப்பொழுது யெகோவா மோசேயினிடம்: பார்வோனின் இருதயம் உரங்கொண்டது; ஜனங்களை விடமாட்டேன் என்கிறான். காலையில் நீ பார்வோனிடம் போ, இதோ, அவன் நதிக்கு வருவான்; நீ அவனுக்கு எதிர்ப்படும்படி நதியோரத்தில் நின்று பாம்பாக மாறினகோலை உன் கையிலே பிடித்துக்கொண்டு | அவனைப் பார்த்து: வனாந்தரத்தில் எனக்கு ஆராதனை செய்ய என் ஜனத்தை அனுப்பிவிடவேண்டுமென்று சொல்லும்படி எபிரெயரின் கடவுளாகிய யெகோவா என்னை உம்மிடம் அனுப்பினார்; நீரோ இதுவரைக்கும் கேளாமற்போனீர். இதோ, என் கையிலிருக்கிற கோலைக்கொண்டு நதியின் தண்ணீர்மேல் அடிப்பேன், அது இரத்தமாய் மாறும்; நதியிலிருக்கிற மீன்கள் சாகும், நதியும் நாறிப்போம்; நதியின் தண்ணீரை எகிப்தியர் குடிக்கமுடியாமல் அரோசிப்பார்கள்; நானே யெகோவா என்பதை இதினால் அறிந்துகொள்வாய் என்று யெகோவா சொல்லுகிறார் என்று சொல் என்றார். பின்னும் யெகோவா மோசேயினிடம்: நீ ஆரோனிடத்தில், உன் கோலை எடுத்துக்கொண்டு எகிப்தின் நீர் நிலைகளாகிய அவர்கள் நதிகள்மேலும் வாய்க்கால்கள்மேலும் ஏரிகள்மேலும் தண்ணீர் நிற்கிற எல்லா இடங்கள்மேலும் உன் கையை நீட்டு, அவைகள் இரத்தமாகும்; அப்பொழுது எகிப்து தேசமெங்கும் மரப்பாத்திரங்களிலும் கற்பாத்திரங்களிலும் இரத்தம் உண்டாயிருக்கும் என்று சொல் என்றார். யெகோவா கட்டளையிட்டபடியே மோசேயும் ஆரோனும் செய்தார்கள்; பார்வோனின் முன்னிலையிலும் அவன் ஊழியரின் முன்னிலையிலும் கோலை ஓங்கி நதியின் தண்ணீரை அடித்தான்; அடிக்கவே நதியிலுள்ள தண்ணீரெல்லாம் இரத்தமாய் மாறிப்போயிற்று. நதியின் மீன்கள் செத்தன, நதியும் நாறிப்போயிற்று; நதியின் தண்ணீரைக் குடிக்க எகிப்தியருக்கு முடியாமற்போயிற்று. எகிப்து தேசமெங்கும் இரத்தமாயிருந்தது. எகிப்தின் மந்திரவாதிகளும் தங்கள் மந்திரவித்தையினால் அப்படிச் செய்தார்கள்; பார்வோனின் இருதயமோ யெகோவா சொல்லியிருந்தபடியே கடினப்பட்டது; அவர்களுக்குச் செவிகொடாமற்போனான். பார்வோன் இதையும் மனதிற் கொள்ளாமல் தன் வீட்டிற்குத் திரும்பிப் போனான். நதியின் தண்ணீரைக் குடிக்க முடியாதிருந்தபடியால் குடிக்கத்தக்க தண்ணீருக்காக எகிப்தியர் எல்லாரும் நதியின் பக்கமெல்லாம் ஊற்றுத் தோண்டினார்கள். யெகோவா நதியை அடித்தபின் ஏழுநாள் கடந்தது.

**8** அப்பொழுது யெகோவா மோசேயைப் பார்த்து: நீ பார்வோனிடம்போய், எனக்கு ஆராதனைசெய்ய என் ஜனத்தை அனுப்பிவிடு. நீ அவர்களை விடமாட்டேன் என்பாயாகில் உன் எல்லை அடங்கலையும் தவளைகளால் வாதிப்பேன். நதியில் தவளைகள் பலுகி நிறைந்துவிடும். அவைகள் அங்கிருந்து ஏறி உன் வீட்டினுள்ளும் உன் படுக்கை அறையினுள்ளும் உன் கட்டி

லின்மேலும் உன் ஊழியர் வீடுகளினுள்
ளும் உன் ஜனங்களிடத்திலும் உன் அடுப்
புகளிலும் மாப்பிசைகிற உன் தொட்டிக
4 ளிலும் வந்துவிடும். அந்தத் தவளைகள்
உன்மேலும் உன் ஜனத்தின்மேலும் உன்
சகல ஊழியர்மேலும் வந்து ஏறும் என்று
யெகோவா சொல்லுகிறார் என்று சொல்
5 என்றார். பின்னும் யெகோவா மோசேயி
னிடம்: நீ ஆரோனிடத்தில், உன் கையி
லிருக்கிற கோலை நதிகள்மேலும் வாய்க்
கால்கள் மேலும் ஏரிகள்மேலும் நீட்டி
எகிப்து தேசத்தின்மேல் தவளைகளை வரச்
6 செய் என்று சொல் என்றார். அப்படியே
ஆரோன் தன் கையை எகிப்திலுள்ள தண்
ணீர்கள்மேல் நீட்டினான்; நீட்டவே தவளை
கள் வந்து எகிப்துதேசத்தை மூடிக்கொண்
7 டன. மந்திரவாதிகளும் தங்கள் மந்திரவித்
தையினால் அப்படிச்செய்து எகிப்து தேசத்
தின்மேல் தவளைகளை ஏறிவரச்செய்தார்கள்.
8 அப்போது பார்வோன் மோசேயையும்
ஆரோனையும் அழைப்பித்து: அந்தத் தவளை
கள் என்னையும் என் ஜனத்தையும் விட்டு
நீங்கும்படி யெகோவாவினிடம் விண்ணப்
பஞ்செய்யுங்கள்; யெகோவாவுக்குப் பலி
யிடும்படி ஜனங்களைப் போகவிடுவேன்
9 என்றான். அதுகேட்ட மோசே பார்வோ
னிடம்: இது எப்பொழுது நடக்கவேண்டு
மென்று தீர்மானிக்கும் மகிமையம் உமக்கே
உரியது. நீர் குறிக்கும் நேரத்திலே இது
நடக்கும்படி நான் உமக்காகவும் உமது
ஊழியருக்காகவும் உமது ஜனத்துக்காகவும்
விண்ணப்பஞ்செய்து தவளைகள் நதியிலே
மாத்திரம் இருக்கவும் உம்மிடத்திலும் உமது
வீட்டிலும் இல்லாமல் ஒழிந்துபோகவும்
10 வேண்டிக்கொள்ளுவேன் என்றான். அதற்கு
அவன்: நான் குறிக்கும் நேரம் நாளையதினமே என்றான். அதுகேட்ட மோசே: உமது
வார்த்தையின்படியே ஆகட்டும், எங்கள்
கடவுளாகிய யெகோவாவுக்கு நிகரானவர்
இல்லை என்பதை இதனால் நீர் அறிந்து
11 கொள்ளவேண்டும். தவளைகள் உம்மையும்
உமது வீட்டையும் உமது ஊழியரையும்
உமது ஜனத்தையும்விட்டு நீங்கி நதியிலே
12 மாத்திரம் இருக்கும் என்றான். மோசே
யும் ஆரோனும் பார்வோனைவிட்டுப் போ
னார்கள், பார்வோனின்மேல் வரப்பண்
ணின தவளைகள் நிமித்தம் மோசே யெகோ
13 வாவை நோக்கிக் கூப்பிட்டான். யெகோ
வா மோசேயின் சொற்படி செய்தார்; வீடு
களிலும் முற்றங்களிலும் வயல்களிலு
14 மிருந்த தவளைகள் செத்துப்போயின. அவை
களைக் குவியல் குவியலாகச் சேர்த்தார்கள்;
அதினால் தேசமெங்கும் நாற்றமாயிற்று.
15 இலகுவாயிற்றென்று பார்வோன் கண்ட
போதோ தன் இருதயத்தைக் கடினப்படுத்
திக்கொண்டான்; அவர்களுக்குச் செவி
கொடுக்கவில்லை. யெகோவா சொல்லியி
ருந்தபடியே ஆயிற்று.
16 பின்பு யெகோவா மோசேயினிடம்: நீ
ஆரோனிடத்தில், உன் கோலை நீட்டிப் பூமி
யின் புழுதியின்மேல் அடி; அப்பொழுது
அது எகிப்து தேசமெங்கும் கொசுவாகும்
17 என்று சொல் என்றார். அப்படியே செய்
தார்கள்; ஆரோன் தன் கையிலிருந்த தன்
கோலை நீட்டிப் பூமியின் புழுதியின்மேல்
அடித்தான்; அடிக்கவே மனிதர்மேலும்
மிருகங்கள் மேலும் கொசுக்கள் வந்தன.
எகிப்துதேசம் எங்கும் பூமியின் புழுதி
யெல்லாம் கொசுக்களாயிற்று. மந்திரவா
18 திகளும் தங்கள் மந்திரவித்தையினால் கொ
சுக்களை வருவிக்கும்படி பிரயத்தனஞ் செய்
தார்கள்; செய்தும் அவர்களால் முடியா
மற்போயிற்று; கொசுக்கள் மனிதர்மேலும்
19 மிருகங்கள்மேலும் வந்தன. அப்பொழுது
மந்திரவாதிகள் பார்வோனை நோக்கி: இது
கடவுளின் விரல் என்றார்கள்; பார்வோ
னின் இருதயமோ, யெகோவா சொல்லியி
ருந்தபடியே, உரங்கொண்டது. அவர்க
ளுக்குச் செவிகொடுக்கவில்லை.
20 அப்பொழுது யெகோவா மோசேயினி
டம்: அதிகாலையில் நீ எழுந்துபோய்,
இதோ, பார்வோன் நதிக்கு வருகையில்
அவனுக்கு எதிரே நின்று: எனக்கு ஆரா
தனை செய்ய என் ஜனத்தைப் போகவிடு.
21 என் ஜனத்தைப் போகவிடாயாகில் நான்
உன்மேலும் உன் ஊழியர்மேலும் உன்
ஜனத்தின்மேலும் உன் வீடுகள்மேலும்
பெரிய ஈக்களைத் திரளாய் அனுப்புவேன்;
எகிப்தியர் வீடுகளிலும் அவர்கள் இருக்கிற
இடத்திலும் அந்த ஈக்கள் நிறையும்.
22 பூமியின் நடுவில் நானே யெகோவா என்
பதை நீ அறியும்படி என் ஜனம் குடியி
ருக்கிற கோசேன் நாட்டிலே அந்நாளில்
ஈக்கள் வராதபடி அந்த நாட்டை
23 விசேஷப்படுத்தி; என் ஜனத்துக்கும் உன்
ஜனத்துக்கும் வித்தியாசம் உண்டாகும்படி
செய்வேன்; இந்த அடையாளம் நாளைக்
கே உண்டாகும் என்று யெகோவா சொல்
24 லுகிறார் என்று சொல் என்றார். அப்ப
டியே யெகோவா செய்தார்; மகா திரளான
ஈக்கள் பார்வோன் வீட்டிலும் அவன்
ஊழியர் வீடுகளிலும் எகிப்துதேசம் முழு
வதிலும் வந்தன; ஈக்களினாலே தேசம்
25 அழிந்துபோயிற்று. அப்பொழுது பார்

வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து: நீங்கள்போய் உங்கள் கடவுளுக்கு தேசத்திலேயே பலியிடுங்கள் என்
26 ருன். அதற்கு மோசே: அப்படிச் செய்யத்தகாது; எங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு நாங்கள் பலியிடுவது எகிப்தியருக்கு அருவருப்பானது, எகிப்தியருக்கு அருவருப்பானதை நாங்கள் அவர்கள் கண்களுக்கு முன்பாகப் பலியிட்டால்
27 எங்களைக் கல்லெறியார்களா? நாங்கள் வனாந்தரத்தில் மூன்றுநாள் பிரயாணம் போய் எங்கள் கடவுளாகிய யெகோவா எங்களுக்கு விதிக்கப்போகிறபடியே அவ
28 ருக்குப் பலியிடுவோம் என்ருன். பார்வோன் இதைக்கேட்டு: நீங்கள் உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு வனாந்தரத்தில் பலியிடும்படி நான் உங்களைப் போகவிடுவேன்; ஒன்றுமாத்திரம் கவனித்துக் கொள்ளுங்கள், நீங்கள் அதிகத் தூரமாய்ப் போகவேண்டாம்; எனக்காக வேண்டுதல்
29 செய்யுங்கள் என்ருன். அதற்கு மோசே: இதோ, நான் உம்மைவிட்டுப் போகிறேன், யெகோவாவினிடம் விண்ணப்பஞ் செய்வேன்; நாளையதினமே இந்த ஈக்கள் பார்வோனையும் அவர் ஊழியரையும் அவர் ஜனத்தையும்விட்டு நீங்கும். ஒன்றுமாத்திரம் கவனித்துக்கொள்ளும், யெகோவாவுக்குப் பலியிடுகிறதற்கு ஜனங்களைப் போகவிடாதபடி பார்வோன் இனி வஞ்சனை
30 செய்யாதிருப்பாராக என்ருன். மோசே பார்வோனைவிட்டு அகன்று யெகோவாவி
31 னிடம் விண்ணப்பஞ்செய்தான். யெகோவா மோசேயின் சொற்படியே செய்து ஈக்கள் பார்வோனையும் அவன் ஊழியரையும் அவன் ஜனத்தையும் விட்டு நீங்கும்படி செய்தார்; ஒன்றுகிலும் மீந்திருக்கவில்லை.
32 பார்வோனே இந்த முறையும் தன் இருதயத்தைக் கடினப்படுத்தினான்; ஜனத்தைப் போகவிடவில்லை.

**9** பின்பு யெகோவா மோசேயினிடம்: நீ பார்வோனிடத்தில் போய்: எனக்கு ஆராதனைசெய்ய என் ஜனத்தைப் போகவிடு.
2 நீ அவர்களை விடமாட்டேன் என்று இன்
3 னும் நிறுத்திவைப்பாயேயாகில், இதோ, யெகோவாவின் கரம் வெளியிலிருக்கிற உன் மிருகங்களாகிய குதிரைகளின் மேலும் கழுதைகளின்மேலும் ஒட்டகங்களின்மேலும் ஆடுமாடுகளின்மேலும் இருக்கும். மகா கொடிதான கோய் உண்டாகும்.
4 யெகோவா இஸ்ரவேலரின் மிருகங்களுக்கும் எகிப்தியரின் மிருகங்களுக்கும் வித்தியாசம் பண்ணுவார்; இஸ்ரவேலர் புத்திரருக்கு உரியவைகள் அனைத்திலும் ஒன்றுகிலும் சாவதில்லை. நாளையதினமே இந்தக் 5
காரியத்தைத் தேசத்தில் செய்வேனென்று யெகோவா காலத்தைக்குறித்தார், இதை எபிரேயரின் கடவுளாகிய யெகோவா சொல்லுகிறார் என்று அவனிடம் சொல் என்ருர்.
மறுநாளிலேயே யெகோவா அந்தக் காரி 6
யத்தைச் செய்தார். எகிப்தியரின் மிருகங்கள் எல்லாம் செத்துப்போயின; இஸ்ரவேல் புத்திரரின் மிருகங்களிலோ ஒன்றுகிலும் சாகவில்லை. பார்வோன் ஆள் அனுப்பி 7
விசாரித்தான்; இதோ, இஸ்ரவேலரின் மிருகங்களில் ஒன்றுகிலும் சாகவில்லை. பார்வோனின் இருதயமோ உரங்கொண்டது; அவன் ஜனங்களைப் போகவிடவில்லை.

அப்பொழுது யெகோவா மோசேயை 8
யும் ஆரோனையும் பார்த்து: நீங்கள் இரண்டு கைநிறையச் சூளையின் புகையுறையை அள்ளிக்கொள்ளுங்கள். மோசே அதைப் பார்வோன் முன்னிலையில் வானத்திற்கு நேராக இறைக்கவேண்டும். அது எகிப்து தேசமீ 9
தெங்கும் தூசியாகி எகிப்து தேசமெங்கு முள்ள மனிதர்மேலும் மிருகங்கள்மேலும் கொப்புளங்களாக வெடிக்கும் கட்டிகளை உண்டுபண்ணும் என்ருர். அப்படியே 10
அவர்கள் சூளையின் புகையுறையை அள்ளிக்கொண்டு பார்வோனுக்கு எதிரேவந்து நின்ருர்கள்; மோசே அதை வானத்திற்கு நேராக இறைத்தான்; இறைக்கவே, மனிதர்மேலும் மிருகங்கள்மேலும் கொப்புளங்களாக வெடிக்கும் கட்டிகள் உண்டாயின.
அந்தக் கட்டிகள் மந்திரவாதிகள்மேலும் 11
எகிப்தியர் எல்லார்மேலும் உண்டானதினால் அந்தக் கட்டிகளினிமித்தம் மந்திரவாதிகளும் மோசேக்கு எதிரே நிற்கமுடியாமற் போயிற்று. பார்வோனின் இருதயத்தை 12
யோ, யெகோவா தாம் மோசேக்குச் சொல்லியிருந்தபடியே, கடினப்படுத்தினார். அவன் அவர்களுக்குச் செவிகொடுக்கவில்லை.

அதன்பின் யெகோவா மோசேயினிடம்: 13
அதிகாலையில் நீ எழுந்துபோய் பார்வோனுக்கு எதிரே நின்று: எனக்கு ஆராதனை செய்ய என் ஜனத்தை அனுப்பிவிடு; விடாது 14
திருந்தால் இந்தமுறை நான் சகலவித வாதைகளையும் உன் இருதயத்திலும் உன் ஊழியர்மேலும் உன் ஜனத்தின்மேலும் அனுப்புவேன். பூமியெங்கும் எனக்கு நிகரானவரில்லை என்பதை நீ அறியும்படி இப்படிச் செய்வேன். நீ பூமியில் இராமல் 15
நாசமாய்ப் போகும்படி இப்பொழுதே நான் என் கையை நீட்டி உன்னையும் உன்

ஜனத்தையும் கொள்ளைநோயினால் வாதித்தி
16 ருப்பேன். ஆயினும் என் வல்லமையை
உனக்குக் காண்பிக்கும் பொருட்டும் என்
நாமம் பூமியெங்கும் பிரஸ்தாபமாகும்
பொருட்டும், உன்னை நிலைநிறுத்தி வைத்
17 தேன். நீ என் ஜனத்தைப் போகவிடாமல்
இன்னும் அவர்களை நிறுத்திவைப்பாயா
18 னால், எகிப்து உண்டான நாள்முதல் இது
வரைக்கும் அதில் பெய்யாத மிகவும்
கொடிய கல்மழையை நாளை இக்நேரம்
19 பெய்யப்பண்ணுவேன். இப்பொழுதே ஆள்
அனுப்பி உன் மிருகங்களையும் வெளியில்
உனக்கு இருக்கிற யாவையும் சேர்த்துக்
கொள். வீட்டிற்குள்ளே கொண்டுவரப்
படாமல் வெளியிலிருக்கும் ஒவ்வொரு
மனிதன்மேலும் மிருகத்தின்மேலும் கல்
மழை இறங்கி அவற்றை அழித்துவிடு
மென்று எபிரேயரின் கடவுளாகிய யெகோ
வா சொல்லுகிறார் என்று அவனுக்குச்
20 சொல் என்றார். பார்வோனின் ஊழியக்
காரரில் எவன் யெகோவாவின் வார்த்தைக்
குப் பயப்பட்டானோ அவன் தன் வேலைக்
காரரையும் தன் மிருகங்களையும் வீட்டுக்கு
21 ஓடிவரச்செய்தான். எவன் யெகோவாவின்
வார்த்தையை மதியாமற் போனானோ அவன்
தன் வேலைக்காரரையும் தன் மிருகங்களை
யும் வெளியிலே விட்டுவிட்டான்.

22 அப்பொழுது யெகோவா மோசேயினி
டம்: எகிப்து தேசமெங்கும் மனிதர்மேலும்
மிருகங்கள்மேலும் எகிப்து தேசத்திலிருக்
கிற சகல பயிர்வகைகள்மேலும் கல்மழை
பெய்ய உன் கையை வானத்திற்கு நேராக
23 நீட்டு என்றார். அப்படியே மோசே தன்
கோலை வானத்திற்கு நேராக நீட்டினார்.
யெகோவா இடிமுழக்கங்களையும் கல்மழை
யையும் அனுப்பினார்; மின்னல் நெருப்பு
தரைமட்டும் வந்தது. எகிப்து தேசத்தின்
மேல் யெகோவா கல்மழையைப் பெய்யப்
24 பண்ணினார். கல்மழையும் கல்மழையின்
நடுவில் இடைவிடாமல் மின்னின நெருப்
25 பும் உண்டாயின. அது மிகவும் கொடி
யதாயிருந்தது. எகிப்தியர் தோன்றிய நாள்
முதல் எகிப்து தேசமெங்கும் இதைப்போன்
றது ஒருபோதும் உண்டானதில்லை; எகிப்து
தேசமெங்கும் வெளியிலே இருந்தவைகளை
யெல்லாம், மனிதரையும் மிருகங்களையும்,
அந்தக் கல்மழை அழித்துப்போட்டது;
அந்தக் கல்மழை பயிர் வகைகளையெல்
லாம் அழித்து வெளியின் மரங்களை யெல்
26 லாம் முறித்துப்போட்டது. இஸ்ரவேல்
புத்திரர் இருந்த கோசேன் நாட்டிலே மாத்
27 திரம் கல்மழை இல்லை. அப்பொழுது பார்

வோன் மோசேயையும் ஆரோனையும் ஆள்
அனுப்பி அழைப்பித்து: நான் இந்த
முறை பாவஞ்செய்தேன்; யெகோவா செய்
வதே நியாயம், நானும் என் ஜனமும் செய்
வதோ நியாயவிரோதம். நீங்கள் யெகோ 28
வாவை நோக்கி விண்ணப்பம் பண்ணுங்
கள், இந்த மகா இடிமுழக்கங்களும் கல்
மழையும் போதும், போதும்; நான் உங்
களைப் போகவிடுவேன், நீங்கள் இனி
இங்கு நிற்பதில்லை என்றார். மோசே 29
அவனிடம்: நான் பட்டணத்திற்கு வெளி
யே போனவுடனே என் கைகளை யெகோ
வாவுக்கு நேராக விரிப்பேன்; அப்பொ
முது இடிமுழக்கங்கள் ஒய்ந்துபோம், கல்
மழையும் நின்றுபோம்; பூமி யெகோவாவி
னுடையது என்பதை நீர் அறிந்துகொள்
ளும்படியாகவே இப்படியாகும். நீரும் 30
உமது ஊழியருமோ இன்னும் கடவுளா
கிய யெகோவாவுக்குப் பயப்படமாட்டீர்
கள் என்பது எனக்குத் தெரியும் என்றார்.
சணல் பூத்திருந்தபடியாலும் வாற்கோது 31
மை கதிர்விட்டிருந்தபடியாலும் சணலும்
வாற்கோதுமையும் அழிக்கப்பட்டுப்போ
யின. கோதுமையும் கம்புமோ அழிக்கப் 32
பட்டுப் போகவில்லை, அவைகள் பிந்தி
உண்டாகிறவைகள். மோசே பார்வோனை 33
விட்டுப் பட்டணத்திற்கு வெளியே வந்து
தன் கைகளை யெகோவாவுக்கு நேராக விரித்
தான்; விரிக்கவே இடிமுழக்கமும் கல்
மழையும் நின்றுவிட்டன. மழையும் பூமி
யின்மேல் பொழியாமல் நின்றது. மழை 34
யும் கல்மழையும் இடிமுழக்கமும் நின்று
போனதைப் பார்வோன் கண்டபோது
அவன் பின்னும் பாவஞ்செய்து தன் இரு
தயத்தைக் கடினப்படுத்திக்கொண்டான்;
அவன் ஊழியரும் அப்படியே செய்தார்
கள். பார்வோனின் இருதயமோ, யெகோ 35
வா மோசேயைக்கொண்டு சொல்லியிருந்த
படியே, உரங்கொண்டது; அவன் இஸ்ர
வேல் புத்திரரைப் போகவிடவில்லை.

பின்பு யெகோவா மோசேயினிடம்: நீ 10
பார்வோனிடத்தில் போ, நான் அவன் இரு
தயத்தையும் அவன் ஊழியக்காரரின் இரு
தயத்தையும் கடினப்படுத்தினேன்; அவர்
கள் நடுவே நான் என் அடையாளங்களா
கிய இவைகளைக் காண்பிக்கும் படிக்கும் !
நான் எகிப்திலே நடப்பித்ததையும் நான் 2
அவர்களுக்குச் செய்த என் அடையாளங்
களையும் நீ உன் பிள்ளைகளின் செவிகள்
கேட்கவும் உன் பிள்ளைகளுடைய பிள்ளை
களின் செவிகள் கேட்கவும் விவரித்துச்
சொல்லும்படிக்கும், நானே யெகோவா

என்பதை நீங்கள் அறியும்படிக்கும் இப்
3 படிச்செய்தேன் என்றார். அப்படியே மோ
சேயும் ஆரோனும் பார்வோனிடம் வந்து:
எனக்குமுன் உன்னைத் தாழ்த்த நீ மனமற்
றிருப்பது எதுவரைக்குமோ? எனக்கு ஆரா
தனைசெய்ய என் ஜனத்தைப் போகவிடு.
4 நீ என் ஜனத்தைப் போகவிடமாட்டேன்
என்பாயாகில், இதோ, நான் நாளையதினமே
உன் எல்லைகளுக்குள் வெட்டுக்கிளிகளை
5 வரப்பண்ணுவேன். தரை காணப்படாத
படி அவைகள் பூமியின் முகத்தை மூடிக்
கல்மழைக்குத் தப்பி உங்களுக்கு மீதியா
கக் காக்கப்பட்டிருப்பதைப் பட்சித்து
வெளியிலே துளிர்க்கிற மரங்களையெல்லாம்
6 தின்றுபோடும். உன் வீடுகளிலும் உன்
சகல ஊழியக்காரரின் வீடுகளிலும் எல்லா
எகிப்தியரின் வீடுகளிலும் அவைகள் நிறை
யும்; உன் பிதாக்களும் பிதாக்களின் பிதாக்
களும் தாங்கள் பூமியில் தோன்றின நாள்
முதல் இந்நாள்வரைக்கும் அப்படிப்பட்ட
வைகளைக் கண்டதில்லை என்று எபிரேயரின்
கடவுளாகிய யெகோவா சொல்லுகிறார்
என்று சொல்லித் திரும்பிக்கொண்டு பார்
7 வோனைவிட்டு அகன்றான். அப்பொழுது
பார்வோனின் ஊழியர் அவனைப் பார்த்து:
எதுவரைக்கும் இந்த மனிதன் நமக்குக்
கண்ணியாயிருப்பான்? தங்கள் கடவுளா
கிய யெகோவாவுக்கு ஆராதனைசெய்ய அந்த
மனிதரைப் போகவிடும். எகிப்து அழிந்
துபோனதே, இன்னும் உமக்குத் தெரிய
8 வில்லையா என்றார்கள். அப்பொழுது மோ
சேயையும் ஆரோனையும் பார்வோன் திரும்ப
அழைத்து அவர்களிடம்: நீங்கள் போய்
உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு
ஆராதனை செய்யுங்கள் என்று சொல்லி,
யார் யார் போகிறார்கள் என்று கேட்டான்.
9 அதற்கு மோசே: எங்கள் இளைஞரோடும்
எங்கள் மூதியோரோடும் போவோம், எங்
கள் குமாரரையும் எங்கள் குமாரத்திகளை
யும் எங்கள் ஆடுகளையும் எங்கள் மாடு
களையும் எங்களோடு கொண்டு போ
வோம்; நாங்கள் யெகோவாவுக்கு உற்
சவம் கொண்டாடவேண்டுமே என்றான்.
10 அப்பொழுது அவன்: நான் உங்களையும்
உங்கள் குழந்தைகளையும் விடுவேனே?
விடுவேனாகில் யெகோவா உங்களோடிருக்கி
றார் என்றாகட்டும்; பாருங்கள், நீங்கள்
நோக்கியிருப்பது பொல்லாத காரியமே.
11 அப்படி வேண்டாம்; புருஷராகிய நீங்கள்
போய் யெகோவாவுக்கு ஆராதனை செய்யுங்
கள்; இதுதானே நீங்கள் விரும்பிக்கேட்
டது என்று சொன்னான்; அவர்கள் பார்
வோனின் சமுகத்தினின்று துரத்திவிடப்
பட்டார்கள்.

அப்பொழுது யெகோவா மோசேயி 12
னிடம்: வெட்டுக்கிளிகள் எகிப்து தேசத்
தின்மேல் வந்து கல்மழைக்குத் தப்பி மீதி
யாயிருந்த நிலத்தின் பயிர்பச்சைகளை யெல்
லாம் பட்சிக்கும்படி எகிப்து தேசத்தின்மேல்
உன் கையை நீட்டு என்றார். அப்படியே 13
மோசே தன் கோலை எகிப்து தேசத்தின்மேல்
நீட்டினான்; யெகோவா அன்று பகல் முழு
வதும் அன்று இராமுழுவதும் கீழ்காற்
றைத் தேசத்தின்மேல் வீசப்பண்ணினார்;
விடியற்காலத்திலே கீழ்காற்று வெட்டுக்
கிளிகளைக் கொண்டுவந்தது. வெட்டுக்கிளி 14
எகிப்து தேசமெங்கும் பரவி எகிப்தின்
எல்லையில் எங்கும் மிகவும் ஏராளமாய்
இறங்கிற்று; வெட்டுக்கிளிகள் இவ்வண்ண
மாய் அதற்குமுன் வந்ததும் இல்லை, அதற்
குப்பின் வருவதும் இல்லை. அவைகள் 15
பூமியின் முகம் முழுவதையும் மூடிற்று;
தேசம் அந்தகாரப்பட்டது; கல்மழைக்குத்
தப்பியிருந்த நிலத்தின் பயிர்பச்சைகள்
யாவையும் மரங்களின் கனிகள் யாவையும்
அவைகள் பட்சித்துப்போட்டன; எகிப்து
தேசம் எங்குமுள்ள மரங்களிலும் வயல்
வெளியின் பயிர் வகைகளிலும் ஒரு பச்
சிலையும் மீதியாயிருக்கவில்லை. அதுகண்ட 16
பார்வோன் மோசேயையும் ஆரோனையும்
துரிதமாய் அழைப்பித்து: உங்கள் கடவு
ளாகிய யெகோவாவுக்கும் உங்களுக்கும்
விரோதமாகப் பாவஞ்செய்தேன். இந்த 17
ஒரு முறைமாத்திரம் நீ என் பாவத்தை
மன்னிக்கவேண்டும்; உங்கள் கடவுளாகிய
யெகோவா இந்த அழிவை மாத்திரம்
என்னைவிட்டு விலக்க அவரை நோக்கி
விண்ணப்பம் பண்ணுங்கள் என்றான்.
அவன் பார்வோனைவிட்டுப் போய் யெகோ 18
வாவை நோக்கி விண்ணப்பம்பண்ணினான்.
அப்பொழுது யெகோவா மகா பலத்த மேல் 19
காற்றை வீசும்படி செய்தார்; அது வெட்டுக்
கிளிகளை அடித்துக்கொண்டுபோய்ச் செங்
கடற்திரத்திலே போட்டது; எகிப்தின்
எல்லையிலெங்கும் ஒரு வெட்டுக்கிளியாகிலும்
மீதியாயிருக்கவில்லை. பார்வோனின் இரு 20
தயத்தையோ யெகோவா கடினப்படுத்தினார்;
அவன் இஸ்ரவேல் புத்திரரைப் போக விட
வில்லை.

அப்பொழுது யெகோவா மோசேயி 21
னிடம்: ஸ்பரிசிக்கத்தக்கதான இருள்
எகிப்து தேசத்தின்மேல் உண்டாகும்படி
உன் கையை வானத்திற்கு நேராக நீட்டு
என்றார். மோசே தன் கையை வானத் 22

திற்கு நேராக நீட்டினான்; நீட்டவே, எகிப்து தேசமெங்கும் மூன்று நாளாகக்
23 காரிருள் உண்டாயிற்று. மூன்று நாளாக ஒருவரையொருவர் காணவுமில்லை, ஒருவரும் தம்மிடத்தைவிட்டு எழுந்திருக்கவுமில்லை; இஸ்ரவேல் புத்திரர் யாவருக்குமோவெனில் அவர்கள் வாசஸ்தலங்களிலே
24 வெளிச்சமிருந்தது. பார்வோன் மோசேயை அழைப்பித்து: நீங்கள் போய் யெகோவாவுக்கு ஆராதனை செய்யுங்கள்; உங்கள் ஆடுகளும் உங்கள் மாடுகளுமாத்திரம் நிறுத்தப்படவேண்டும்; உங்கள் குழந்தைகள் உங்க
25 ளோடு போகலாமென்றான். அதற்கு மோசே: நாங்கள எங்கள் கடவுளாகிய யெகோவாவுக்குப் படைக்கும் இரத்த பலிகளையும் தகனபலிகளையும் நீர் எங்கள் கை
26 யிலே கொடுக்கவேண்டும். எங்கள் மிருகங்களும் எங்களோடுகூட வரவேண்டும்; ஒரு குளம்பையும் பின்விட்டுப் போவதில்லை; எங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு ஆராதனை செய்கிறதற்கு அவைகள் எங்களுக்குத் தேவை; இன்னதைக் கொண்டு யெகோவாவுக்கு ஆராதனை செய்வோமென்பது நாங்கள் அங்கே போய்ச் சேர்ந்தால்தான் எங்களுக்குத் தெரியவரும்
27 என்றான். யெகோவா பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார்; அவன் அவர்களைப் போகவிட மனதில்லாதிருந்தான்.
28 பார்வோன் அவனைப்பார்த்து: என்னைவிட்டு அப்பாலே போ; நீ இனி என் முகத்தில் விழிக்காதே, எச்சரிக்கை; நீ இனி என் முகத்தில் விழித்தாயோ சாவாய் என்றான்.
29 அது கேட்ட மோசே: நீர் சொன்னது சரி; இனி நான் உமது முகத்தில் விழிப்பதேயில்லை என்றான்.

**11** பின்பு யெகோவா மோசேயினிடம்: இன்னும் ஒரு வாதையைப் பார்வோன்மேலும் எகிப்தின்மேலும் வரப்பண்ணுவேன்; அதற்குப்பின் அவன் உங்களை இவ்விடத்திலிருந்து போகவிடுவான்; உங்களனைவரையும் போக விடும்போது உங்களை இவ்விடத்திலிருந்து
2 தரத்தியும் விடுவான். இப்பொழுது ஒவ்வொருவனும் அவனவன் அயலானிடத்திலும் ஒவ்வொருத்தியும் அவளவள் அயலாளிடத்திலும் வெள்ளி பொன் ஆபரணங்களைக் கேட்கும்படி ஜனங்களுக்குச் சொல் என்றார்.
3 அப்படியே யெகோவா ஜனங்களுக்கு எகிப்தியரின் கண்களில் தயவு கிடைக்கும்படி செய்தார். இந்த மனுஷன், மோசே எகிப்து தேசத்தில் பார்வோனுடைய ஊழியரின் கண்ணுக்கும் ஜனத்தின் கண்ணுக்கும் மிகவும் பெரியவனாயிருந்தான்.

அப்பொழுது மோசே, யெகோவா 4
சொல்லுகிறதைக் கேளும்: நடுராத்திரியிலே நான் எகிப்தின் மத்தியில் வருவேன்.
எகிப்து தேசத்திலிருக்கிற முதற்பேறனைத் 5
தும் சாகும்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் பார்வோனின் தலைப்பிள்ளைமுதல் ஏற்திரம் அரைக்கும் அடிமைப்பெண்ணின் தலைப்பிள்ளைவரைக்கும் மிருகங்களின் தலையீற்றனைத்தும் செத்துப்போகும் என்கிறார்.
அதினால் எகிப்து தேசமெங்கும் முன் 6
னும் பின்னும் ஒருக்காலும் உண்டாகாத பெரிய கூக்குரல் உண்டாகும். இஸ்ர 7
வேல் புத்திரர் அனைவருக்குள்ளுமோ, மனிதர் முதல் மிருகங்கள் வரைக்கும், ஒரு நாயாகிலும் தன் நாவை அசைப்பதில்லை; யெகோவா எகிப்தியருக்கும் இஸ்ரவேலருக்கும் பண்ணுகிற வித்தியாசத்தை இதனால் அறிந்துகொள்வீர்கள். அப்பொழுது உமது 8
ஊழியராகிய இவர்கள் எல்லாரும் என்னிடம் வந்து பணிந்து நீயும் உன்னைச் சேர்ந்தவர்கள் யாவரும் புறப்பட்டுப் போங்கள் என்று சொல்லுவார்கள். அதின்பின் புறப்படுவேன் என்று சொல்லி உக்கிரமான கோபத்தோடே பார்வோனைவிட்டுப் புறப்பட்டான்.

யெகோவா மோசேயினிடம்: பார்வோன் 9
உங்களுக்குச் செவிகொடுக்கமாட்டான், எகிப்துதேசத்தில் என் அற்புதங்கள் அநேகமாகவேண்டுமே என்று சொல்லியிருந்தார்.
மோசேயும் ஆரோனும் இந்த அற்புதங்களை 10
யெல்லாம் பார்வோனுக்கு முன்பாகச் செய்தார்கள். பார்வோனின் இருதயத்தையோ யெகோவா கடினப்படுத்தினதினால் அவன் இஸ்ரவேல் புத்திரரைத் தன் தேசத்திலிருந்து போகவிடவில்லை.

யெகோவா எகிப்துதேசத்தில் மோசேயை **12**
யும் ஆரோனையும் பார்த்து: இந்த மாதம் 2
உங்கள் மாதங்களில் பிரதானமானது, இது உங்களுக்கு வருஷத்தின் முதல் மாதமாகும்.
நீங்கள் இஸ்ரவேல் சபையார் யாவரையும் 3
கூட்டி அவர்களிடம்: இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத் தலைவர்கள் வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைப் பார்த்துக் கொள்ளவேண்டும். ஒரு வீட்டில் இருக்கிறவர்கள் 4
ஒரு ஆட்டுக்குட்டியைப் புசிக்கிறதற்குப் போதுமான பேர்களாயிராமற் போனால், அந்த வீட்டுக்காரனும் அவன் சமீபத்திலிருக்கிற அவனுடைய அயல் வீட்டுக்காரனும் தங்களிடத்திலுள்ள ஆட்களின் இலக்கத்திற்குத்தக்கபடி ஒரு ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்ள

வேண்டும்; அவனவன் புசிக்கக்கூடிய அள
வுக்குத்தக்கபடி ஆட்களின் கணக்குப்
பார்த்து ஆட்டுக்குட்டியைக் கொள்ள
5 வேண்டும். அந்த ஆட்டுக்குட்டி குறை
வற்றதும் ஆணும் ஒரு வயதுள்ளதுமாய்
இருக்கவேண்டும்; செம்மறியாடுகளிலாவது
வெள்ளாடுகளிலாவது அதைப் பார்த்துக்
6 கொள்ளலாம். அதை இந்த மாதம் பதினா
லாம் தேதிவரைக்கும் வைத்திருங்கள்;
இஸ்ரவேல் சபையின் கூட்டத்தாரெல்
லாரும் சாயங்காலத்திலே அதை அடித்து
7 அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து
அதைப் புசிக்கும் வீட்டின் வாசல் நிலைக்
கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்
8 திலும் பூசுங்கள்; அன்று ராத்திரியிலேயே
அதின் மாம்சத்தை நெருப்பிலால் சுட்டுப்
புளிப்பில்லா அப்பத்தோடும் கசப்பான
கீரையோடும் அதைப் புசிக்கவேண்டும்.
9 பச்சையாயும் தண்ணீரில் அவிக்கப்பட்ட
தாயும் அல்ல, அதின் தலையையும் அதின்
கால்களையும் அதற்குள்ள யாவையும் எக
மாய் நெருப்பிலால் சுட்டதாய் அதைப்
10 புசிக்கவேண்டும். அதிலே ஒன்றையும்
விடியற்காலமட்டும் மீதியாக வைக்காமல்
விடியற்காலமட்டும் அதிலே மீதியாய் இருக்
கிறதை நெருப்பிலால் சுட்டெரித்துவிடுங்
11 கள். அதைப் புசிக்கவேண்டியவிதமாவது,
நீங்கள் உங்கள் அரைகளில் கச்சை கட்டிக்
கொண்டும், உங்கள் கால்களில் பாதரட்சை
தொடுத்துக்கொண்டும், உங்கள் கையில்
தடி பிடித்துக்கொண்டும் அதை விரைவாய்ப்
12 புசிக்கவேண்டும்; அது யெகோவாவின்
பஸ்கா. அந்த இரவிலே நான் எகிப்து
தேசமெங்கும் சென்று எகிப்து தேசத்தி
லுள்ள மனிதர்முதல் மிருகங்கள்மட்டும்
முதற்பேறானவைகளையெல்லாம் அதம
பண்ணி எகிப்தின் சகல தேவர்களையும்
நியாயந்தீர்ப்பேன். நானே யெகோவா.
13 நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம்
உங்கள் பொருட்டு அடையாளமாயிருக்
கும்; அந்த இரத்தத்தை நான் காணும்
போது உங்களைவிட்டுக் கடந்துபோவேன்;
நான் எகிப்துதேசத்தை அழிக்கும்போது
சங்காரிக்கும் வாதை உங்களுக்குள்ளே
14 வராது. அந்த நாள் உங்களுக்கு
நினைவுகூருதலுக்கென்று இருக்கும்; அதை
யெகோவாவுக்கு உற்சவநாளாகக் கொண்
டாடவேண்டும்; அதை உங்கள் தலைமுறை
தோறும் நித்திய நியமமாகக் கொண்டாட
15 வேண்டும். புளிப்பில்லா அப்பத்தை ஏழு
நாளளவும் புசித்துவரவேண்டும்; முதல்
நாளிலேயே புளித்தமாவை உங்கள் வீடு
களிலிருந்து நீக்கிவிடவேண்டும்; முதலாம்
நாள் தொடங்கி ஏழாம்நாள்வரைக்கும்
புளித்த அப்பம் புசிக்கிறவன் எவனோ
அவன் இஸ்ரவேலரிலிருந்து நீக்கப்பட்டுப்
போவான். முதலாம்நாளில் சபைத் திருக் 16
கூட்டம் ஏழாம்நாளிலும் சபைத் திருக்
கூட்டம் வேண்டும்; அவைகளில் ஒரு
வேலையும் செய்யப்படலாகாது; அவரவர்
சாப்பாட்டிற்குத் தேவையானது மாத்திரம்
உங்களால் செய்யப்படலாம். புளிப் 17
பில்லா அப்பப்பண்டிகையை ஆசரிபபீர்
களாக; இந்த நாளிலேயே நான் உங்கள்
சேனைகளை எகிப்துதேசத்திலிருந்து வெளியே
கொண்டுவந்தேன்; ஆகையால், உங்கள்
தலைமுறைதோறும் நித்திய நியமமாக இந்த
நாளை ஆசரிக்கவேண்டும். முதலாம் 18
மாதம் பதினாலாம் தேதி சாயங்காலம்
தொடங்கி மாதத்தின் இருபத்தோராம்தேதி
சாயங்காலம்வரைக்கும் புளிப்பில்லா அப்
பம் புசிக்கவேண்டும். ஏழுநாளளவும் 19
உங்கள் வீடுகளில் புளித்தமா காணப்பட
லாகாது; புளிப்பிடப்பட்டதைப் புசிக்கிற
எவனும் பரதேசியானாலும் சுதேசியானாலும்,
இஸ்ரவேல் சபையிலிருந்து நீக்கப்பட்டுப்
போவான். புளிப்பிடப்பட்ட யாதொன் 20
றையும் நீங்கள் புசிக்கவேவேண்டாம். உங்
கள் வாசஸ்தலங்களிலெல்லாம் புளிப்
பில்லா அப்பம் புசிப்பீர்களாக என்று
சொல்லுங்கள் என்றார்.

அப்பொழுது மோசே இஸ்ரவேலின் 21
தலைவர் அனைவரையும் வரவழைத்து: நீங்
கள் உங்கள் குடும்பங்களுக்குத் தக்கபடி
உங்களுக்கு ஆட்டுக்குட்டியைப் பிடித்துப்
பஸ்காவை அடியுங்கள். ஈசோப்புக் கிளை 22
களின் கொத்தை எடுத்துக் கிண்ணத்தில்
இருக்கும் இரத்தத்தில் தோய்த்து, அந்த
இரத்தத்தை வாசலினுடைய நிலைக்கால்
களின் மேல்சட்டத்திலும் வாசலின் நிலைக்
கால்கள் இரண்டிலும் தடவுங்கள்; விடியற்
காலம்வரைக்கும் உங்களில் ஒருவரும்
வீட்டுவாசலைவிட்டு வெளிப்படவேண்டாம்.
யெகோவா எகிப்தியரை அதம்பண்ணுகிற 23
தற்குக் கடந்துபோவார்; நிலையின் மேல்
சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்கள்
இரண்டிலும் அந்த இரத்தத்தைக் காணும்
போது யெகோவா உங்களை அதம்பண்ணு
கிறதற்கு உங்கள் வீடுகளுக்குள் சங்காரக்
காரனை வரவொட்டாமல் வாசற்படியை
விட்டு விலகிக் கடந்துபோவார். இந்தக் 24
காரியத்தை உங்களுக்கும் உங்கள் பிள்ளை
களுக்கும் நித்தியநியமமாகக் கைக்கொள்ள
வேண்டும். தாம் சொன்னபடியே யெகோவா 25

உங்களுக்குக் கொடுக்கப்போகிற தேசத்தில் நீங்கள் போய்ச்சேரும்போது இதை
26 ஆசரிப்பீர்களாக. உங்கள் பிள்ளைகள் இதை ஆசரிப்பதின் கருத்து என்ன என்று
27 உங்களைக் கேட்டால், இது யெகோவாவின் பஸ்காவுக்குரிய பலி; அவர் எகிப்தியரை அதம்பண்ணி நமது வீடுகளைத் தப்பப் பண்ணினபோது எகிப்திலே இஸ்ரவேல் புத்திரரின் வீடுகளைக் கடந்துபோனார் என்று நீங்கள் சொல்லவேண்டும் என்றான். ஜனங்கள் அதைக்கேட்டுக் குனிந்து பணிந்து
28 கொண்டார்கள். இஸ்ரவேல் புத்திரர் போய் அப்படியே செய்தார்கள்; யெகோவா மோசேக்கும் ஆரோனுக்கும் கட்டளையிட்ட படியே செய்தார்கள்.

29 நடுராத்திரியிலே யெகோவா, பார்வோனின் சிங்காசனத்திலே வீற்றிருக்கும் அவன் தலைப்பிள்ளைமுதல் காவல் கிடங்கிலிருக்கும் சிறைப்பட்டவனின் தலைப்பிள்ளைவரைக்கும், எகிப்துதேசத்திலிருந்த முதற்பேறனைத்தையும் மிருகங்களின் தலையீற்றனைத்தை
30 யும் அழித்தார். அப்பொழுது பார்வோனும் அவன் சகல ஊழியரும் எகிப்தியர் யாவரும் இரவிலேயே எழுந்திருந்தார்கள்; மகா கூக்குரல் எகிப்திலே உண்டாயிற்று;
31 சாவில்லாத ஒரு வீடுமில்லை. இரவிலேயே அவன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து: நீங்களும் இஸ்ரவேல் புத்திரரும் எழுந்து என் ஜனத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய் நீங்கள் சொன்னபடியே யெகோவாவுக்கு ஆராதனை செய்யுங்கள்.
32 நீங்கள் சொன்னபடியே உங்கள் ஆடுமாடுகளையும் ஓட்டிக்கொண்டு போங்கள்; என்
33 னையும் ஆசீர்வதியுங்கள் என்றான். எகிப்தியரும், நாங்கள் எல்லாரும் சாகிறோமே என்று சொல்லிச் சீக்கிரமாய் அந்த ஜனங்கள் இந்தத் தேசத்திலிருந்து போய்விடும்படி அவர்களை மிகவும் வருந்திக் கேட்டுக்
34 கொண்டார்கள். பிசைந்த மா புளிக்குமுன் ஜனங்கள் பிசையும் தொட்டியுடனே அதைத் தங்கள் வஸ்திரங்களில் கட்டித் தங்கள் தோள்மேல் எடுத்துக்கொண்டு
35 போனார்கள். மோசே சொல்லியிருந்தபடியே இஸ்ரவேல் புத்திரர் எகிப்தியரிடம் வெள்ளி பொன் ஆபரணங்களையும் வஸ்திரங்
36 களையும் கேட்டார்கள். யெகோவா ஜனங்களுக்கு எகிப்தியரின் கண்களில் தயவு கிடைக்கச் செய்ததினால் கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார்கள்; இவ்விதமாய் அவர்கள் எகிப்தியரைக் கொள்ளையிட்டார்கள்.

37 இஸ்ரவேல் புத்திரர் ரம்சேஸை விட்டுக் கால்நடையாய்ப் பிரயாணம்பண்ணிச் சுக்கோத்துக்குப் போனார்கள்; பிள்ளைகள் தவிர புருஷர் மாத்திரம் ஆறுலட்சம்பேர். 38 அவர்களோடுகூடப் பல ஜாதியாரான திரள் ஜனங்கள் போனதுமன்றி மிகுதியான ஆடு மாடுகள் முதலான மிருகங்களும் போயின. 39 எகிப்திலிருந்து அவர்கள் கொண்டுவந்த பிசைந்தமாவைப் புளிபயில்லா அப்பங்களாகச் சுட்டார்கள்; அவர்கள் எகிப்திலே தாமதிக்கக்கூடாதபடி துரத்திவிடப்பட்டதினால் அது புளியாதிருந்தது; வழிக்கென்று அவர்கள் தங்களுக்கு ஒன்றும் ஆயத்தம் பண்ணவில்லை. 40 இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலே குடியிருந்தகாலம் நானூற்றுமுப்பது வருஷம். 41 நானூற்றுமுப்பதுவருஷம் முடிந்த அந்த நாளிலேயே யெகோவாவின் சேனைகள் எல்லாம் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்டன. 42 யெகோவா அவர்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப் பண்ணினதினால் இது அவருக்கென்று விழித்திருந்து ஆசரிக்கும் இரவாயிற்று; இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் தங்கள் தலைமுறைதோறும் யெகோவாவுக்கென்று விழித்திருந்து ஆசரிக்கும் இரவு இதுவே.

43 மேலும் யெகோவா, மோசே ஆரோன் இவர்களிடம்: இதுவே பஸ்காவின் நியமம்; அந்நியபுத்திரன் ஒருவனும் அதைப் புசிக்கக்கூடாது. 44 பணத்திற்கு வாங்கின அடிமையானவன் எவனும், நீ அவனுக்கு விருத்தசேதனம் பண்ணினபின், அதைப் புசிக்கலாம். 45 அந்நியனும் கூலியாளும் அதிலே புசிக்கலாகாது. 46 அதே வீட்டிற்குள் அதைப் புசிக்கவேண்டும், அந்த மாம்சத்தை வீட்டிற்கு வெளியே கொண்டுபோகக்கூடாது; அதில் ஒரு எலும்பையும் முறிக்கக்கூடாது. 47 இஸ்ரவேல் சபையார் எல்லாரும் இதை ஆசரிப்பார்களாக. 48 அந்நியன் ஒருவன் உன்னிடத்திலே தங்கி, யெகோவாவுக்குப் பஸ்காவை ஆசரிக்க வேண்டுமென்று இருந்தால், அவனைச் சேர்ந்த ஆண்பிள்ளைகள் யாவரும் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும்; அதன்பின்பு அவன் சேர்ந்து அதை ஆசரிக்கலாம்; அவன் சுதேசியைப்போல் இருப்பான்; விருத்தசேதனமில்லாத எவனுமோ அதில் புசிக்கலாகாது. 49 சுதேசிக்கும் உங்கள் நடுவில் தங்கும் பரதேசிக்கும் ஒரே பிரமாணமே என்றார். 50 இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் இப்படியே செய்தார்கள்; யெகோவா மோசேக்கும் ஆரோனுக்கும் கட்டளையிட்டபடியே செய்தார்கள். 51 அந்த நாளிலேயே யெகோவா இஸ்ரவேல்

புத்திரரை அணியணியாய் எகிப்து தேசத்திலிருந்து புறப்படச் செய்தார்.

13 யெகோவா மோசேயினிடம்: | இஸ்ர
2 வேல் புத்திரருக்குள், மனிதரிலும் மிருகங்களிலும், கர்ப்பந்திறந்த பிறக்கிற முதற்பேறனைத்தையும் எனக்கென்று பிரதிஷ்டைசெய்; அது என்னுடையது என்றார்.
3 பின்பு மோசே ஜனங்களிடம்: நீங்கள் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்பட்ட இந்த நாளை நினைத்துக்கொள்ளுங்கள்; யெகோவா தமது புஜபலத்தினால் உங்களை அவ்விடத்திலிருந்து புறப்படச்செய்தார்; ஆகவே நீங்கள் புளித்த அப்பம்
4 புசிக்கவேண்டாம். நீங்கள் புறப்பட்டது ஆபீப்மாதத்தின் இந்த நாளிலேதான்.
5 யெகோவா உனக்குக் கொடுப்பேன் என்று உன் பிதாக்களுக்கு ஆணையிட்டதும் பாலும் தேனும் ஒடுகிறதுமான தேசமாகிய கானானியர், ஏத்தியர், எமோரியர், ஏவியர், எபூசியர் என்பவர்களின் தேசத்துக்குள் உன்னை வரப்பண்ணும் காலத்தில் நீ இந்த மாதத்
6 திலே இதை ஆசரிக்கவேண்டும். புளிப்பில்லா அப்பத்தை ஏழுநாளளவும் புசிக்கவேண்டும்; ஏழாம் நாளிலே யெகோவா
7 வின் உற்சவம். அந்த ஏழுநாளும் புளிப்பில்லா அப்பம் புசிக்கவேண்டும்; புளித்த அப்பமோ உன்னிடத்தில் காணப்படவேண்டாம்; உன் எல்லைக்குள் எங்கும் புளித்த மாவும் உன்னிடம் காணப்படவேண்டாம்.
8 அந்நாளில் நீ உன் புத்திரனிடம்: நான் எகிப்திலிருந்து புறப்படுகையில் யெகோவா எனக்குச் செய்ததை நினைத்து இதைச்
9 செய்கிறேம் என்று சொல். யெகோவாவின் பிரமாணம் உன் வாயிலிருக்கும்படி, இது உன் கையிலே ஒரு அடையாளமாகவும் உன் கண்களின் நடுவே ஞாபகக்குறியாகவும் இருக்கவேண்டும்; தமது புஜபலத்தினால் யெகோவா உன்னை எகிப்திலிருந்து
10 புறப்படப்பண்ணினார். ஆகையால் நீ வருஷாவருஷம் குறித்த காலத்திலே இந்த நியமத்தை ஆசரிக்கவேண்டும்.
11 மேலும், யெகோவா உனக்கும் உன் பிதாக்களுக்கும் ஆணையிட்டபடியே உன்னைக் கானானியரின் தேசத்திற்குள் வரப்பண்ணி அதை உனக்குக் கொடுக்கும்
12 போது | கர்ப்பந்திறந்து பிறக்கும் அனைத்தையும், உனக்கு இருக்கும் மிருகங்களின் தலையீற்றனைத்தையும் யெகோவாவுக்கென்று பிரித்து வைக்கவேண்டும்; அவைகளிலுள்ள ஆண்கள் யெகோவாவினுடையவை
13 கள். கழுதையின் தலையீற்றையெல்லாம் ஒரு ஆட்டுக்குட்டியால் மீட்டுக்கொள்ள வேண்டும்; மீட்டுக்கொள்ளாதிருந்தால் அதின் கழுத்தை முறித்துப்போடு; உன் பிள்ளைகளில் முதற்பேறான சகல நரஜீவனையுமோ வெனில் மீட்டுக்கொள்ளவேண்டும்.
14 பிற்காலத்திலே உன குமாரன், இது என்ன என்று உன்னைக் கேட்டால், நீ அவனிடம்: யெகோவா எங்களைத் தமது புஜபலத்தினால் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்; எங்களைப் போக
15 விடாதபடி பார்வோன் உரங்கொண்டிருந்தபோது யெகோவா எகிப்து தேசத்தில் மனிதரின் தலைப்பிள்ளைகள்முதல் மிருகங்களின் தலையீற்றுகள்வரைக்குமுள்ள முதற்பேறான யாவையும் கொன்றுபோட்டார்; ஆகையால் கர்ப்பந்திறந்து பிறக்கும் ஆண் யெல்லாம் நான் யெகோவாவுக்குப் பலியிடுகிறேன், என் பிள்ளைகளில் முதற்பேறனைத்தையுமோ மீட்டுக்கொள்ளுகிறேன்.
16 யெகோவா எங்களைத் தமது புஜபலத்தினால் எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினபடியால் இது உன் கையில் அடையாளமாகவும் உன் கண்களின் நடுவே ஞாபகக்குறியாகவும் இருக்கவேண்டும் என்று சொல்என்றான்.

17 பார்வோன் ஜனங்களைப் போகவிட்ட பொழுது அவர்கள் பெலிஸ்தியரின் தேச வழியாய்ப்போவது சமீபமானாலும் கடவுள் அந்த வழியாய் அவர்களை நடத்தவில்லை. ஜனங்கள் யுத்தத்தைக் கண்டால் மனம் மாறுபட்டு எகிப்துக்குத் திரும்பிவிடுவார்களென்று | கடவுள் அவர்களைச் சுற்றின
18 சமுத்திரத்தின் வனாந்தரவழியாய்ச் சுற்றிப் போகப்பண்ணினார்; இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து ஆயுதந்தரித்தவர்களாய்ப் புறப்பட்டுப்போனார்கள். மோசே
19 யோசேப்பின் எலும்புகளையும் கூடவே எடுத்துக்கொண்டு போனான். கடவுள் நிச்சயமாய் உங்களைச் சந்திப்பார், அப்பொழுது உங்களோடு என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டுபோங்கள் என்று யோசேப்பு சொல்லி இஸ்ரவேல் புத்திரரிடம்
20 உறுதியான ஆணைவாங்கியிருந்தான். அவர்கள் சுக்கோத்திலிருந்து பிரயாணப்பட்டு, வனாந்தரத்தின் ஓரத்திலிருந்த ஏத்தாமிலே
21 பாளயமிறங்கினார்கள். அவர்கள் இரவும் பகலும் வழிநடக்கக்கூடியதாக யெகோவா பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினி ஸ்தம்பத்திலும், அவர்களுக்குமுன் சென்றார். பகலிலே மேகஸ்தம்பமும்
22 இரவிலே அக்கினிஸ்தம்பமும் ஜனங்களின் பார்வையிலிருந்து விலகிப் போகவில்லை.

14 யெகோவா மோசேயினிடம்: | நீங்கள்
2 திரும்பி மிக்தோலுக்கும் சமுத்திரத்திற்கும்
நடுவே பிகாயிரோத்துக்கு எதிரே பாலிய
மிறங்கவேண்டும்; பாகால் செபோனுக்கு
எதிராகவே சமுத்திர ஓரத்தில் இறங்க
வேண்டும் என்று இஸ்ரவேல் புத்திரருக்
3 குச் சொல்லு. பார்வோன் இஸ்ரவேல் புத்
திரரைக் குறித்து, அவர்கள் தேசத்திலே
வழிதப்பித் திரிகிறார்கள், வனாந்தரம் அவர்
களை அடைத்துப்போட்டது என்று சொல்
4 லுவான். பார்வோனின் இருதயத்தையோ
நான் கடினப்படுத்துவேன்; அவன் அவர்க
ளைப் பிடிக்கத் தொடருவான்; அப்பொழுது
நான் பார்வோன் மூலமாகவும் அவன்
சைனியம் அனைத்தின் மூலமாகவும் எனக்கு
மகிமை வரச்செய்வேன்; நானே யெகோவா
என்று எகிப்தியர் அறிந்துகொள்வார்கள்
என்று சொன்னார். இஸ்ரவேல் புத்திரரும்
யெகோவாவின் கட்டளைப்படியே செய்தார்
கள்.
5 ஜனங்கள் ஓடிப்போய்விட்டார்களென்று
எகிப்தின் ராஜாவுக்கு அறிவிக்கப்பட்ட
போது ஜனங்கள் விஷயமாய்ப் பார்வோ
னுடை அவன் ஊழியரும் மனம் வேறு
பட்டு, நமக்கு அடிமைவேலை செய்யாத
படி நாம் இஸ்ரவேலரைப் போகவிட்டது
6 என்ன காரியம் என்றார்கள். அவன் தன்
இரதத்தைப் பூட்டித் தன் ஜனங்களைக் கூட்
7 டிக்கொண்டு | சிரேஷ்டமான அறுநூறு
இரதங்களையும் எகிப்திலுள்ள மற்றச் சகல
இரதங்களையும் அவைகள் எல்லாவற்றிற்கு
மூரிய யுத்தவீரரையும் கூட்டிக்கொண்டு
8 போனான். யெகோவா எகிப்தின் ராஜா
வாகிய பார்வோனுடைய இருதயத்தைக்
கடினப்படுத்தினார்; அவன் இஸ்ரவேல் புத்
திரரைப் பிடிக்கத்தொடர்ந்தான்; இஸ்ர
வேல் புத்திரரோ பராக்கிரமமான கையின்
சகாயத்தினால் புறப்பட்டுப் போனார்கள்.
9 எகிப்தியர் பார்வோனின் சகல குதிரைக
ளோடும் இரதங்களோடும் அவன் குதிரை
வீரரோடும் சைனியத்தோடும் அவர்களைப்
பிடிக்கத்தொடர்ந்து சமுத்திர ஓரத்திலே
பாகால்செபோனுக்கு எதிரே பிகாயிரோத்தி
னருகே பாளயமிறங்கியிருந்த அவர்களைக்
10 கிட்டினார்கள். பார்வோன் சமீபித்து வரு
கிறபோது இஸ்ரவேல் புத்திரர் தங்கள்
கண்களை ஏறெடுத்துப்பார்க்கவே, இதோ,
எகிப்தியர் தங்களுக்குப் பின்னே வருகிற
தைக்கண்டு மிகவும் பயந்தார்கள்; பயந்து,
இஸ்ரவேல்புத்திரர் யெகோவாவை நோக்கி
11 உரத்த சத்தமாய் அபயமிட்டார்கள். அஞ்
நியும், அவர்கள் மோசேயைப் பார்த்து:
எகிப்திலே பிரேதக்குழிகள் இல்லையென்று
வனாந்தரத்திலே சாகும்படி எங்களைக்
கொண்டுவந்தீர்? நீர் எங்களை எகிப்திலி
ருந்து புறப்படப்பண்ணி எங்களுக்கு இப்
படிச் செய்தது என்ன? எகிப்தில் இருக் 12
கும்போது நாங்கள் எகிப்தியருக்கு அடிமை
வேலைசெய்ய எங்களைச் சும்மா விட்டுவிடும்
என்று சொன்னோமே; நாங்கள் வனாந்தரத்
தில் சாகிறதைப் பார்க்கிலும் எகிப்திய
ருக்கு அடிமைவேலை செய்கிறது எங்க
ளுக்கு நலம் என்றார்கள். அதுகேட்டு 13
மோசே ஜனங்களிடம்: பயப்படாதிருங்கள்;
நீங்கள் சும்மா நின்றுகொண்டு, இன்
றைக்கு யெகோவா உங்களுக்குச் செய்யும்
இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு
நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்
றைக்கும் காணமாட்டீர்கள். யெகோவா 14
உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள்
சும்மாயிருங்கள் என்றார்.
அப்பொழுது யெகோவா மோசேயி 15
னிடம்: நீ என்னை நோக்கிக் கூப்பிடுகிற
தென்ன? புறப்பட்டுப்போங்கள் என்று
இஸ்ரவேல்புத்திரருக்குச் சொல்லு. நீ உன் 16
கோலை ஓங்கி உன் கையைச் சமுத்திரத்
தின்மேல் நீட்டிச் சமுத்திரத்தைப் பிரியச்
செய்; இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின்
நடுவாக வெட்டாந்தரையிலே நடந்து
போவார்கள். இதோ, நான் எகிப்தியரின் 17
இருதயத்தைக் கடினப்படுத்துவேன்; அவர்
கள் இஸ்ரவேலரைத் தொடர்ந்து வருவார்
கள்; அப்பொழுது நான் பார்வோன் மூல
மாகவும் அவன் சைனியம் அனைத்தின்
மூலமாகவும் அவன் இரதங்கள், குதிரை
வீரர் முதலிய சகல சைனியத்தின் மூல
மாகவும் எனக்கு மகிமை வரச்செய்வேன்.
இப்படி நான் பார்வோனாலும் அவன் இர 18
தங்களாலும் அவன் குதிரைவீரராலும்
மகிமைப்படும்போது, நானே யெகோவா
என்று எகிப்தியர் அறிந்துகொள்வார்கள்
என்றார். அப்பொழுது இஸ்ரவேலரின் 19
சேனைக்கு முன்னாக நடந்த தெய்வதூத
னானவர் விலகி அவர்களுக்குப் பின்னாக
நடந்தார், அவர்களுக்குமுன் இருந்த மேக
ஸ்தம்பம் விலகி அவர்கள் பின் நின்றது.
அது எகிப்தியரின் பாளயத்திற்கும் இஸ்ர 20
வேலின் பாளயத்திற்கும் நடுவில் வந்தது.
அது மேகமும் இருளுமாயிற்றென்றாலும்
இரவிலே வெளிச்சத்தையும் தந்தது. இர
வெல்லாம் ஒரு சேனை மறுசேனையைக் கிட்
டிச்சேர முடியாதிருந்தது. மோசே தன் 21
கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டினான்;
யெகோவா இரவெல்லாம் பலத்த கீழ்காற்

நீரால் சமுத்திரம் ஒதுங்கிவிடும்படி செய்தார்; சமுத்திரத்தை வறண்ட தரையாகச் செய்தார்; ஜலம் இருபிரிவாய்ப் போயிற்று.
22 இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோனார்கள்; அவர்கள் வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது;
23 எகிப்தியர் அவர்களைப் பிடிக்கத்தொடர்ந்து பார்வோனின் சகல குதிரைகளோடும் இரதங்களோடும் குதிரைவீரரோடும் அவர்கள் பின்னே சமுத்திரத்தின் நடுவில் போனார்கள். 24 விழக்கு வெளுத்தவரும் காமத்தில் யெகோவா அக்கினியும் மேகமுமான ஸ்தம்பத்திலிருந்து எகிப்தியரின் சேனையைப்பார்த்து அவர்கள் சேனையைக் கலங்
25 கடித்து | அவர்கள் இரதங்களிலிருந்து சக்கரங்கள் கழன்றுபோகச் செய்தார்; அவர்கள் தங்கள் இரதங்களைக் கஷ்டத்தோடே நடத்தினார்கள். அது கண்ட எகிப்தியர், இஸ்ரவேலரை விட்டு ஓடிப் போவோம், யெகோவா அவர்கள் பட்சத்தில் நின்று எகிப்தியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார் என்றார்கள்.
26 யெகோவா மோசேயினிடம்: ஜலம் எகிப்தியர்மேலும் அவர்கள் இரதங்கள்மேலும் அவர்கள் குதிரைவீரர்மேலும் திரும்பும்படி உன் கைபைச் சமுத்திரத்தின்மேல் நீட்டு
27 என்றார். மோசே தன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டினான்; விடியுமுன் சமுத்திரம் பலமாய்த் திரும்பிவந்தது; எகிப்தியர் அதற்கு எதிர்க்க ஓடும்போது யெகோவா அவர்களைக் கடலின் நடுவே கவிழ்த்துப்
28 போட்டார். ஜலம் திரும்பிவந்து இரதங்களையும் குதிரைவீரரையும் அவர்கள் பின்னே சமுத்திரத்திற்குள் சென்றிருந்த பார்வோனின் சைனியம் அனைத்தையும் மூடிக்கொண்டது; அவர்களில் ஒருவனுகிலும் தப்பவில்லை.
29 இஸ்ரவேல் புத்திரரோ சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையின் வழியாய் நடந்துபோனார்கள்; அவர்கள் வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் ஜலம்
30 அவர்களுக்கு மதிலாக நின்றது. இவ்விதமாக யெகோவா அந்நாளில் இஸ்ரவேலரை எகிப்தியரின் கையினின்று தப்புவித்து இரட்சித்தார்; கடற்கரையில் எகிப்தியர் செத்துக்கிடக்கிறதை இஸ்ரவேலர் கண்
31 டார்கள். யெகோவா எகிப்தியரில் செய்த அந்த மகத்தான செயலை இஸ்ரவேலர் கண்டு யெகோவாவுக்குப் பயந்து, யெகோவாவினிடத்திலும் அவருடைய ஊழியனுகிய மோசேயினிடத்திலும் நம்பிக்கை வைத்திருந்தார்கள்.

15 அப்பொழுது மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் யெகோவாவைப் புகழ்ந்து இந்தப் பாட்டைப் பாடினார்கள்:
யெகோவாவைப் பாடுவேன்;
அவர் மகத்துவம் மகா உன்னதமானது;
குதிரையையும் வீரனையும் கடலினுள்ளே போட்டுவிட்டார்.
2 யெகோவா என் பலம், என் கீதம், அவர் எனக்கு இரட்சிப்பானார்;
அவரே என் கடவுள்; நான் அவரை மகிமைப்படுத்துவேன்.
என் பிதாவின் கடவுள் அவர்; அவரை உயர்த்துவேன்.
3 யெகோவா யுத்தவீரர்;
யெகோவா என்பதே அவர் திருநாமம்.
4 பார்வோனின் இரதங்களையும் சைனியத்தையும் சமுத்திரத்திலே போட்டுவிட்டார்;
அவனுடைய சிரேஷ்டமான வீரர் செங்கடல் சமுத்திரத்தில் அமிழ்ந்துபோனார்கள்.
5 ஆழி அவர்களை மூடிக்கொண்டது;
கல்லைப்போல ஆழங்களில் ஆழ்ந்து போனார்கள்.
6 யெகோவாவே, உமது வலதுகரம் வல்லமையில் மகத்துவமுள்ளது;
உமது வலதுகரம், யெகோவாவே, சத்துருவை நொறுக்கிவிட்டது.
7 உமக்கு விரோதமாய் எழும்பினவர்களை உமது பெரிதான மகத்துவத்தினாலே நிர்மூலமாக்கினீர்;
உமது உக்கிரகோபத்தை அனுப்பினீர்; அது அவர்களைத் தாளடியைப் பட்சித்தது.
8 உமது நாசியின் சுவாசத்தினால் ஜலம் குவிந்து நின்றது;
அலைகள் குவிந்து அணைபோல் நின்றது;
ஆழமான ஜலம் நடுக்கடலிலே உறைந்து போயிற்று.
9 தொடருவேன், பிடிப்பேன், கொள்ளை யாடிப் பங்கிடுவேன்,
நான் ஆசிப்பதை அவர்களிடம் செய்து திருப்தியாவேன்;
என் பட்டயத்தை உருவுவேன், என் கை அவர்களைச் சங்கரிக்கும்
என்று சத்துரு சொன்னான்.
10 உமது காற்றை வீசப்பண்ணினீர், கடல் அவர்களை மூடிக்கொண்டது;
மகா வல்லமையான தண்ணீர்களில் ஈயம்போல் அமிழ்ந்தார்கள்.
11 யெகோவாவே, தேவர்களில் உமக்கு நிகரானவர் யார்?

பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரே,
பயத்தோடு துதிக்கப்படத்தக்கவரே,
அற்புதங்களைச் செய்கிறவரே, உமக்கு நிகரானவர் யார்?
12 நீர் உமது வலதுகரத்தை நீட்டினீர்; பூமி அவர்களை விழுங்கிவிட்டது.
13 நீர் மீட்டுக்கொண்ட இந்த ஜனத்தை உமது கிருபையினால் அழைத்துக் கொண்டுவந்தீர்;
உமது பரிசுத்த வாசஸ்தலத்துக்கே அவர்களை உமது பலத்தினால் வழிநடத்தினீர்.
14 அதைக்கேட்ட ஜனங்கள் தத்தளித்தார்கள்;
பெலிஸ்தியாவின் குடிகள் வேதனையுற்றார்கள்.
15 ஏதோமின் பிரபுக்கள் கலங்கினார்கள்;
மோவாபின் பராக்கிரமசாலிகளை நடுக்கம் பிடித்தது;
கானானின் குடிகள் யாவரும் கரைந்து போனார்கள்.
16 பயமும் திகிலும் அவர்கள்மேல் விழுந்தன;
யெகோவாவே, உமது ஜனம் கடந்து போகும் வரையும்,
நீர் உமக்குச் சொந்தமாக்கிக்கொண்ட ஜனமே கடந்துபோகும்வரையும்,
அவர்கள் உமது மிகுந்த புயபலத்தினால் கல்லைப்போல் அசைவற்றிருப்பார்கள்.
17 நீர் அவர்களைக் கொண்டுபோய் உமது சுதந்தரத்தின் பர்வதத்தில் நாட்டுவீர்;
யெகோவாவே, அந்த ஸ்தலத்தையே உமது வாசஸ்தலமாகச் செய்தீர்;
அதுவே ஆண்டவராகிய தேவரீரின் திருக்கரங்கள் ஏற்படுத்தின பரிசுத்தஸ்தலம்.
18 யெகோவா சதாகாலங்களாகிய என்றென்றைக்கும் அரசாட்சிசெய்வார்.
19 பார்வோனின் குதிரைகள் அவன் இரதங்களோடும் குதிரைவீரரோடும் சமுத்திரத்தினுட்சென்றன; யெகோவா சமுத்திரத்தின் ஜலத்தை அவர்கள்மேல் திரும்பப்பண்ணினார்; இஸ்ரவேல் புத்திரரோ சமுத்திரத்தின் நடுவே வெட்டாந்தரையிலே நடந்துபோனார்கள்.
20 ஆரோனின் சகோதரியாகிய மிரியாம் என்னும் தீர்க்கதரிசினி தன் கையிலே தம்புரு எடுத்துக்கொண்டாள்; சகல ஸ்திரீகளும் தம்புருகளோடு நடனமாடிக்கொண்டு
21 அவளுக்குப்பின்னே சென்றார்கள்.

மிரியாம் அவர்கள் கேட்டுப் பாடும்படி இராகமெடுத்து:
யெகோவாவைப் பாடுங்கள்,
அவர் மகத்துவம் மகா உன்னதமானது;
குதிரையையும் வீரனையும் கடலினுள்ளே போட்டுவிட்டார்
என்று பாடினாள்.

22 பின்பு மோசே இஸ்ரவேலரைச் செங்கடல் சமுத்திரத்திலிருந்து புறப்படச்செய்தான். அவர்கள் சூர்வனந்தரத்துக்குப்போய்வனந்தரத்தில் தண்ணீர் இடையாமல் மூன்று
23 நாள் நடந்தார்கள். அவர்கள் மாராவுக்கு வந்தபோது, மாராவின் தண்ணீர் கசப்பாயிருந்ததினால் அதைக் குடிக்க முடியாதிருந்தது. அதினால் அவ்விடத்துக்கு மாரா
24 என்று பேரிடப்பட்டது. அப்பொழுது ஜனங்கள், எதைக் குடிப்போமென்று சொல்லி மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள். அவன் யெகோவாவை நோக்கிக்
25 கூப்பிட்டான்; யெகோவா மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார்; அதை அவன் தண்ணீரில் போட்டவுடனே அந்தத் தண்ணீர் மதுரமாயிற்று. அவ்விடத்திலே அவர் ஒரு நியமத்தையும் நியாயசட்டத்தையும் அவர்களுக்குக் கட்டளையிட்டு,
26 அங்கே அவர்களைப் பரிசோதித்து: நீ உன் கடவுளாகிய யெகோவாவின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு அவர் பார்வையில் நேர்மையானவைகளைச் செய்து அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொள்வாயானால், நான் எகிப்தியர்மேல் வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உன்மேல் வரப்பண்ணேன்; நானே யெகோவா, உன் ஆரோக்கிய கர்த்தா என்று சொன்னார்.
27 பின்பு அவர்கள் ஏலிமுக்கு வந்தார்கள்; அங்கே பன்னிரண்டு நீரூற்றுகளும் எழுபது பேரீச்சமரங்களும் இருந்தன; அங்கே தண்ணீர் அருகே பாளயமிறங்கினார்கள்.

16 இஸ்ரவேல் புத்திரரின் கூட்டத்தார் ஆனவரும் ஏலிமைவிட்டுப் பிரயாணமாகி எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே சீன்
2 வனந்தரம் சேர்ந்தார்கள்; அது ஏலிமுக்கும் சீனுக்கும் நடுவே இருக்கிறது. அந்த வனந்தரத்தில் இஸ்ரவேல் புத்திரரின் கூட்டத்தார் அனைவரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள்.
3 இஸ்ரவேல் புத்திரர் அவர்களிடம்: நாங்கள் எகிப்துதேசத்தில் இறைச்சிப்பாத்திரங்களண்டையில் உட்கார்ந்து திருப்தியாகச்

சாப்பிட்டுவந்த காலத்தில் யெகோவாவின் கையினால் செத்துப்போயிருந்தோமானால் நலமாயிருக்கும்; இந்தக் கூட்டம் முழுவதையும் பட்டினியினால் கொல்லும்படி எங்களை இந்த வனாந்தரத்திற்கு அழைத்து வந்தீர்களே என்று சொன்னார்கள்.

4 அப்பொழுது யெகோவா மோசேயினிடம்: இதோ, நான் உங்களுக்கு வானத்திலிருந்து ஆகாரம் வருஷிக்கப்பண்ணுவேன்; ஜனங்கள்போய் அன்றன்று வேண்டியதை அன்றன்று சேர்த்துக்கொள்ள வேண்டும்; அவர்கள் என் பிரமாணத்தின்படி நடப்பார்களோ நடக்கமாட்டார்களோ என்று அதினால் அவர்களைப் பரி
5 சோதித்தறிவேன். ஆறும் நாளிலோ தாங்கள் கொண்டுவருவதை ஆயத்தஞ்செய்யும்போது அவர்கள் நாள்தோறும் சேர்ப்பதற்கு இரட்டிப்பாயிருக்கும் என்றார்.
6 பின்பு மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரர் யாவரையும் பார்த்து: உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவர் யெகோவாவே என்று சாயங்காலத்தில் அறிவீர்கள்; காலையிலே யெகோவா
7 வின் மகிமையையும் காண்பீர்கள்; நீங்கள் யெகோவாவுக்கு விரோதமாய் முறுமுறுத்தவைகளை அவர் கேட்டார்; நீங்கள் எங்களுக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதென்ன?
8 நாங்கள் எம்மாத்திரம் என்றார்கள். பின்னும் மோசே: யெகோவாவுக்கு விரோதமாக நீங்கள் முறுமுறுத்தவைகளை அவர் கேட்டபடியால் சாயங்காலத்தில் நீங்கள் புசிக்கிறதற்கு இறைச்சியையும் விடியற்காலத்தில் நீங்கள் திருப்தியாய்ச் சாப்பிடுகிறதற்கு அப்பத்தையும் யெகோவா உங்களுக்குக் கொடுப்பார். அதைக் கண்டால் நாங்கள் எம்மாத்திரம் என்றும் நீங்கள் முறுமுறுத்தது எங்களுக்கு விரோதமாக அல்ல யெகோவாவுக்கு விரோதமாகவே என்றும் உங்களுக்கு விளங்கும் என்று
9 சொல்லிப் | பின்பு ஆரோனிடம்: நீ இஸ்ரவேல் புத்திரரின் கூட்டத்தார் அனைவரிடத்திலும், யெகோவாவின் சந்நிதியில் கிட்டிவாருங்கள், அவர் உங்கள் முறுமுறுப்புகளைக் கேட்டார் என்று சொல் என்றார்.
10 ஆரோன் இஸ்ரவேல் புத்திரரின் கூட்டத்தாருக்கெல்லாம் இதைச் சொல்லுகையில் அவர்கள் வனாந்தரத்தையாகத் திரும்பினார்கள், இதோ, யெகோவாவின் மகிமை மேகத்திலே காணப்பட்டது.
11 யெகோவா மோசேயினிடம்: இஸ்ரவேல் புத்திரரின் முறுமுறுப்புகளைக் கேட்
12 டேன். நீ அவர்களோடு பேசி, நீங்கள் மாலையில் இறைச்சியைப் புசித்துக் காலையில் திருப்தியாய் அப்பஞ்சாப்பிடுவீர்கள், நான் உங்கள் கடவுளாகிய யெகோவா என்பதை இதினால் அறிந்துகொள்வீர்கள் என்று சொல் என்றார். மாலையில் காடை 13
கள் வந்து விழுந்து பாளயத்தை மூடிக் கொண்டன. காலையிலே பாளயத்தைச் சுற்றிப் பனி பெய்திருந்தது. பெய்திருந்த 14
பனி நீங்கியபின், இதோ, வனாந்தரத்தின் மீதெங்கும் தட்டையான ஒரு மெல்லிய வஸ்து கிடந்தது, அது தரையின்மேல் உறைந்திருக்கும் பனிபோல் மெல்லியதாயிருந்தது. இஸ்ரவேல்புத்திரர் அதைக் 15
கண்டு, அது இன்னது என்று அறியாமல் ஒருவரை ஒருவர் பார்த்து, இது என்ன என்றார்கள்; மோசே அவர்களிடம்: இது யெகோவா உங்களுக்குப் புசிக்கக்கொடுக்கும் ஆகாரம். யெகோவா கட்டளையிடு 16
கிறதாவது, அவரவர் புசிக்கும் அளவுக்குத் தக்கபடி அதில் எடுத்துச் சேர்த்துக்கொள்ளுங்கள், உங்களிலுள்ள ஆட்களின் இலக்கத்தின்படியே அவனவன் தன்தன் கூடாரத்தில் இருக்கிறவர்களுக்காகத் தலைக்கு ஒரு ஓமர் வீதம் எடுக்கவேண்டும் என்றார். இஸ்ரவேல்புத்திரர் அப்படியே 17
செய்து சிலர் அதிகமாயும் சிலர் கொஞ்சமாயும் சேர்த்தார்கள். அதை ஓமரால் 18
அளந்தபோதோ அதிகமாய்ச் சேர்த்தவனுக்கு மீதியுமில்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவுமில்லை; அவரவர் தாங்கள் புசிக்கும் அளவுக்குத்தக்கபடியே சேர்த்தார்கள். மோசே அவர்களிடம்: 19
ஒருவனும் விடியற்காலமட்டும் அதில் ஒன்றும் வைக்கக்கூடாது என்று அவர்களுக்குச் சொல்லியும் | மோசேயின் சொல்லைக் 20
கேளாமல் சிலர் அதில் விடியற்காலமட்டும் கொஞ்சம் மீதிவைத்தார்கள்; அது பூச்சி பிடித்து நாற்றமெடுத்தது: அவர்கள்மேல் மோசே கோபங்கொண்டான். அதை விடி 21
யற்காலந்தோறும் அவரவர் புசிக்கும் அளவுப்படியே சேர்த்தார்கள், வெயில் ஏறஏற அது உருகிப்போம்.

ஆறும் நாளில் தலைக்கு இரண்டு ஓமர் 22
வீதம் இரட்டிப்பான ஆகாரம் சேர்த்தார்கள்; கூட்டத்தாரில் தலைமையானவர்கள் எல்லாரும் வந்து அதை மோசேக்கு அறிவித்தார்கள். அவன் அவர்களிடம்: 23
யெகோவா சொன்னது இதுவே; நாளை தினம் வேலையை ஒழித்து யெகோவாவுக்கென்று ஆசரிக்கவேண்டிய பரிசுத்த ஓய்வுநாள்; நீங்கள் சுடவேண்டியதைச் சுட்டு வேகவைக்கவேண்டியதை வேகவைத்து

மீதியாயிருக்கிறதையெல்லாம் விடியற்கால மட்டும் உங்களுக்கு வைத்துவையுங்கள்
24 என்றார். மோசே கட்டளையிட்டபடியே அதை விடியற்காலமட்டும் வைத்துவைத்
தார்கள்; அது நாறவுமில்லை, அதிலே பூச்சி
25 பிடிக்கவுமில்லை. அப்பொழுது மோசே: அதை இன்றைக்குப் புசியுங்கள்; இன்
றையதினம் யெகோவாவுக்கென்று ஆசரிக்க வேண்டிய ஒய்வு; இன்று நீங்கள் அதை
26 வெளியிலே காணமாட்டீர்கள். ஆறுநா
ளும் அதைச் சேர்க்கவேண்டும்; ஏழாம்
நாளிலோ ஒய்வு; அந்நாளிலே அது இராது
27 என்றார். ஏழாம் நாளிலும் ஜனங்களில்
சிலர் அதைச் சேர்க்கப்போனார்கள்; அவர்
28 கள் அதைக் காணவில்லை. அப்பொழுது
யெகோவா மோசேயினிடம்: என் கட்டளை
களையும் என் பிரமாணங்களையும் கைக்
29 கொள்ள எந்தமட்டும் மறுப்பீர்கள்? பாருங்
கள்; யெகோவா உங்களுக்கு ஓய்வுநாளை
அருளினபடியால் ஆறாம் நாளிலேயே அவர்
உங்களுக்கு இரண்டுநாளைக்கு வேண்டிய
ஆகாரத்தைக்கொடுக்கிறார், ஏழாம் நாளில்
உங்களில் ஒருவனும் தன் இடத்திலிருந்து
வெளிப்படாமல் அவனவன் தன்தன் இடத்
30 திலேயே இருக்கவேண்டும் என்றார். அப்
படியே ஜனங்கள் ஏழாம்நாளில் வேலையை
விட்டு ஓய்ந்திருந்தார்கள்.
31 இஸ்ரவேலர் அதற்கு மன்னா என்று
பேரிட்டார்கள்; அது வெண்மையாய்க்
கொத்தமல்லி அளவிருந்தது. அதின் ருசி
தேனிட்ட பணிகாரம்போலிருந்தது.
32 மோசே அவர்களிடம்: யெகோவா கட்டளை
யிட்டது இதுவே, நான் உங்களை எகிப்து
தேசத்திலிருந்து கொண்டுவந்தபோது வனாந்
தரத்தில் உங்களுக்குப் புசிக்கக்கொடுத்த
ஆகாரத்தை உங்கள் பின் சந்ததியார் பார்க்
கும்படி அதிலே ஒரு ஓமர் நிறைய எடுத்து
அவர்களுக்காக வைத்துவைக்கவேண்டும்
33 என்றார். பின்பு மோசே ஆரோனிடம்:
நீ ஒரு கலசத்தை எடுத்து அதிலே ஒரு
ஓமர் அளவு மன்னாவைப்போட்டு உங்கள்
பின் சந்ததியாருக்கென்று காக்கப்படும்படி
அதை யெகோவாவின் சந்நிதியிலே வை
34 என்றார். யெகோவா மோசேக்குக் கட்
டளையிட்டபடியே அது காக்கப்படும்படி
ஆரோன் அதைச் சாட்சிய சந்நிதியில் வைத்
35 தான். குடியிருப்புள்ள தேசத்துக்கு இஸ்ர
வேல்புத்திரர் வந்து சேருமட்டும் நாற்பது
வருஷம் மன்னாவைப் புசித்தார்கள்; அவர்
கள் கானான் தேசத்தின் எல்லையில் வந்து
சேருமட்டும் மன்னாவைப் புசித்தார்கள்.
36 ஒரு ஓமர் எப்பாவிலே பத்தில் ஒரு பங்கு.

17 பின்பு இஸ்ரவேல்புத்திரரின் கூட்டத்
தார் அனைவரும் யெகோவா குறித்த பிர
யாண ஒழுங்குப்படியே சீன் வனாந்தரத்தி
லிருந்து பிரயாணமாகி ரெவிதீமிலே வந்து
பாளயமிறங்கினார்கள்; அங்கே ஜனங்க
ளுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லாமற்
2 போகவே | ஜனங்கள் மோசேயோடே
வாதாடி, குடிக்கிறதற்கு எங்களுக்குத்
தண்ணீர் தரவேண்டும் என்று கேட்டார்
கள். மோசே அவர்களிடம்: என்னோடு
நீங்கள் வாதாடுவதென்ன? யெகோவாவை
நீங்கள் பரீக்ஷை பார்ப்பதென்ன என்றார்.
3 அவ்விடத்திலே ஜனங்கள் தண்ணீர்த் தவன
மாயிருந்தபடியால் மோசேக்கு விரோதமாய்
முறுமுறுத்து: நீர் எங்களையும் எங்கள்
பிள்ளைகளையும் எங்கள் ஆடுமாடுகளையும்
தண்ணீர்த் தவனத்தினால் கொன்றுபோட
எங்களை எகிப்திலிருந்து ஏன் கொண்டுவந்
தீர் என்றார்கள். மோசே யெகோவாவை
4 நோக்கிக் கூப்பிட்டு: இந்த ஜனங்களுக்கு
நான் என்ன செய்வேன்? சிறிது நேரத்தில்
இவர்கள் என்மேல் கல்லும் எறிவார்களே
5 என்றார். அப்பொழுது யெகோவா மோசே
யினிடம்: நீ இஸ்ரவேலின் தலைவரில் சில
ரை உன்னோடு கூட்டிக்கொண்டு நீ நதியை
அடித்த உன் கோலைக் கையிலே பிடித்துக்
கொண்டு ஜனங்களின் கண்களுக்கு எதிரே
6 நடந்துபோ; இதோ, அங்கே நான் உனக்கு
முன்பாக ஓரேபிலே கல்மலையின்மேல்
நிற்பேன்; நீ அந்தக் கல்மலையை அடி;
அப்பொழுது ஜனங்கள் குடிக்க அதி
லிருந்து தண்ணீர் ஓடிவரும் என்றார்; அப்
படியே மோசே இஸ்ரவேலரின் தலைவரு
டைய கண்களுக்கு முன்பாகச் செய்தான்.
7 இஸ்ரவேல்புத்திரர் விவாதம்பண்ணினதினி
மித்தமும் யெகோவா தங்கள் நடுவில்
இருக்கிறாரா இல்லையா என்று அவர்கள்
யெகோவாவைப் பரீக்ஷைபார்த்ததினிமித்த
மும் அவன் அந்த ஸ்தலத்திற்கு மாசா
என்றும் மெரீபா என்றும் பேரிட்டான்.
8 இஸ்ரவேலர் ரெவிதீமிலே இருக்கும்
போது அமலேக்கியர் அவர்களோடே யுத்
9 தம்பண்ண வந்தார்கள். அப்பொழுது
மோசே யோசுவாவைப் பார்த்து: நீ நமக்
காக யுத்த புருஷரைத் தெரிந்தெடுத்துக்
கொண்டுபோய் அமலேக்கோடே யுத்தம்
பண்ணு: நாளைக்கு நான் கடவுளின் கோலை
என் கையில் பிடித்துக்கொண்டு மலையுச்சி
10 யில் நிற்பேன் என்றான். யோசுவா அம
லேக்கோடே யுத்தம்பண்ணும் விஷயத்தில்
மோசே தனக்குச் சொல்லியிருந்தபடியே
செய்தான். மோசேயும் ஆரோனும் கூர்

என்பவனும் மலையுச்சியில் ஏறினார்கள்.
11 மோசே தன் கையை உயர்த்திக்கொண்டிருக்
கையில் இஸ்ரவேலர் மேற்கொண்டார்
கள்; அவன் தன் கையைத் தாழவிடுகை
யில் அமலேக்கு மேற்கொண்டான்.
12 மோசேயின் கைகள் அசந்துபோகவே
அவர்கள் ஒரு கல்லை எடுத்து அவன் கீழே
வைத்தார்கள்; அதன்மேல் உட்கார்ந்தான்;
ஆரோனும் கூரும் ஒருவன் ஒரு பக்கத்தி
லும் ஒருவன் மறுபக்கத்திலும் அவன் கை
னைத் தாங்கிக்கொண்டிருந்தார்கள்; இவ்வித
மாய் அவன் கைகள் சூரியன் அஸ்தமிக்
கும் வரைக்கும் அசையாமலேயிருந்தன.
13 யோசுவா அமலேக்கையும் அவன் ஜனங்க
ளையும் வாள் வாய்க்கிரையாக்கி முறியடித்
14 தான். பின்பு யெகோவா மோசேயினிடம்:
இதை நினைவுகூரும்பொருட்டு நீ ஒரு புஸ்
தகத்தில் எழுதி யோசுவாவின் செவி கேட்
கும்படி வாசி. வானத்தின் கீழெங்கும்
அமலேக்கின் ஞாபகமும் இராதபடி அற்
15 றுப்போகப்பண்ணுவேன் என்றார். மோசே
ஒரு பலிபீடத்தைக் கட்டி அதற்கு
16 யெகோவா நிசி | என்று பேரிட்டு அம
லேக்கின் கை யெகோவாவின் சிங்காசனத்
துக்கு விரோதமாயிருந்தபடியால் தலைமுறை
தலைமுறையாக அவனுக்கு விரோதமாய்
யெகோவாவின் யுத்தம் நடக்கும் என்றார்.

**18** கடவுள் மோசேக்கும் தமது ஜனமாகிய
இஸ்ரவேலுக்கும் செய்த யாவையும்
யெகோவா இஸ்ரவேலை எகிப்திலிருந்து
கொண்டுவந்ததையும் மீதியானில் ஆசாரி
யனுமிருந்த மோசேயின் மாமனுகிய எத்
2 திரோ கேள்விப்பட்டபோது | மோசேயின்
மாமனுகிய எத்திரோ முன்னே மோசே
அனுப்பிவிட்ட அவன் மனைவி சிப்போரா
3 ளையும் | அவள் இரண்டுகுமாரரையும் கூட்
டிக்கொண்டுவந்தான். ஒரு மகனுடைய
பேர் கெர்சோம், நான் அந்நியதேசத்திலே
பரதேசியானேன் என்று சொல்லி மோசே
அவனுக்கு அந்தப் பேரிட்டிருந்தான்.
4 மற்றொருவன் பேர் எலியேசர், என் பிதா
வின் கடவுள் எனக்குத் துணைநின்று பார்
வோனின் பட்டயத்துக்கு என்னைத் தப்பு
வித்தார் என்று சொல்லி இவனுக்கு இத்
5 தப் பேரிட்டிருந்தான். மோசேயின் மாம
னுகிய எத்திரோ அவன் குமாரரோடும்
அவன் மனைவியோடும் மோசே தெய்வபர
வதத்தண்டையில் பாளயமிறங்கியிருந்த
6 வனந்தரத்துக்கு வந்து: எத்திரோ
என்னும் உமது மாமனுகிய நானும்
உமது மனைவியும் அவளோடேகூட
அவள் இரண்டு குமாரரும் உம்மிடத்திற்கு
வந்திருக்கிறோம் என்று மோசேக்குச்
சொல்லியனுப்பினான். அப்பொழுது 7
மோசே தன் மாமனுக்கு எதிர்கொண்டு
போய் அவனை வணங்கி முத்தஞ்செய்
தான், ஒருவரோடொருவர் உபசாரமொழி
கள் பேசிக்கொண்டே கூடாரத்தினுட்
சென்றார்கள். பின்பு, யெகோவா இஸ்ர 8
வேலினிமித்தம் பார்வோனுக்கும் எகிப்தி
யருக்கும் செய்த யாவற்றையும் வழியிலே
தங்களுக்கு நேரிட்ட சகல கஷ்டங்களை
யும் மோசே தன் மாமனுக்கு விவரித்து
யெகோவா தங்களை விடுவித்ததையும் அறி
வித்தான். யெகோவா இஸ்ரவேலரை எகிப் 9
தியரின் கையினின்று விடுவித்ததில் அவர்க
ளுக்குச் செய்த சகல நன்மைகளையும்பற்றி
எத்திரோ சந்தோஷப்பட்டு: யெகோவாவு 10
க்கு ஸ்தோத்திரம்; அவர் உங்களை எகிப்திய
ரின் கையினின்றும் பார்வோனின் கை
யினின்றும் விடுவித்தார், எகிப்தியரு
டைய கையின் கீழிருந்த இந்த ஜனத்தை
விடுவித்தார். யெகோவா எல்லா தேவர்களி 11
லும் பெரியவர் என்பது இப்பொழுது
எனக்குத் தெரிகிறது. எகிப்தியர் இந்த
ஜனத்துக்கு விரோதமாய் கர்வம்காட்டிய
காரியத்தில் அவர்கள் செய்ததிலிருந்தே
இது தெரிகிறது என்று சொல்லி | மோசே 12
யின் மாமனுகிய எத்திரோ தகனபலியையும்
மற்ற பலிகளையும் கடவுளுக்குக் கொண்டு
வந்து செலுத்தினான். பின்பு ஆரோனும்
இஸ்ரவேலின் தலைவர் அனைவரும் வந்து
மோசேயின் மாமனோடு தெய்வசமுகத்தில்
போஜனம்பண்ணினார்கள்.

மறுநாள் மோசே ஜனங்களை நியாயம் 13
விசாரிக்க உட்கார்ந்தான், ஜனங்கள்
காலமே துவக்கிச் சாயங்காலமட்டும் மோ
சேயைச் சுற்றி நின்றுகொண்டிருந்தார்கள்.
ஜனங்களுக்கு மோசே செய்த யாவையும் 14
பார்த்துக்கொண்டிருந்த அவன் மாமன்:
நீர் ஜனங்களுக்குச் செய்கிற இந்தக் காரிய
மென்ன? நீர் ஒன்றியாய் உட்கார்ந்திருக்க
இச் சாயங்காலமட்டும் உம்மைச் சுற்றி நிற்
கவும் வேண்டியதென்ன என்று கேட்க |
மோசே தன் மாமனிடம்: கடவுளினிடத் 15
தில் விசாரிக்கவேண்டுமென்று ஜனங்கள்
என்னிடம் வருகிறார்கள். அவர்களுக்கு 16
ஏதாவதொரு காரியமிருந்தால் என்னிடம்
வருகிறார்கள்; நான் ஒருவர்மேல் ஒருவருக்
குள்ள வழக்கைத் தீர்த்துக் கடவுளின் நிய
மங்களையும் அவர் பிரமாணங்களையும் தெரி
விக்கிறேன் என்றார். அதற்கு மோசே 17
யின் மாமன்: நீர் செய்கிறது நல்லதல்ல 18

நீரும் உம்மோடிருக்கிற இந்த ஜனமும் தொய்ந்துபோவீர்களென்பது நிச்சயம்; இது உம்மால் தாங்கமுடியாத பாரம்; நீர் 19 ஒருவராய் அதைச் செய்யமுடியாது. இப்பொழுது நான் சொல்லுவதைக் கேளும், உமக்கு ஒரு ஆலோசனை சொல்லுகிறேன், கடவுள் உம்மோடிருப்பாராக; நீர் ஜனங்களுக்காகக் கடவுளிடம் பேசுகிறவராயிருந்து கடவுளினிடம் கொண்டுபோகவேண்டிய 20 காரியங்களைக் கொண்டுபோம்; நியமங்களையும் பிரமாணங்களையும் அவர்களுக்குப் போதித்து அவர்கள் நடக்கவேண்டிய வழியையும் அவர்கள் செய்யவேண்டிய காரியத்தையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தும். 21 ஜனங்கள் எல்லாருக்குள்ளும் கடவுளுக்குப் பயத்தவர்களும் உண்மையுள்ளவர்களும் அநியாய லாபத்தை வெறுக்கிறவர்களுமான திறமையுள்ள மனிதரைத் தெரிந்தெடுத்து, அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும் நூறுபேருக்கு அதிபதிகளாகவும் ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும் பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் 22 ஏற்படுத்தும். அவர்கள் எக்காலமும் ஜனங்களை நியாயம் விசாரிப்பார்கள், பெரிய காரியங்கள் யாவையும் உம்மிடத்தில் கொண்டுவரட்டும், சிறிய காரியங்கள் யாவையும் தங்களே தீர்க்கட்டும்; இப்படியாக அவர்கள் உம்மோடுகூட இந்தப் பாரத்தைச் சுமந்துவந்தால் உமக்கு இலகுவாயிருக்கும். 23 கடவுள் உமக்கு இப்படிக் கட்டளையிட்டு நீரும் இந்தப்பிரகாரமே செய்துவந்தால் இது உம்மாலே தாங்கமுடியும்; இந்த ஜனங்கள் எல்லாரும் தங்கள் இடங்களுக்குச் சந்தோஷமாய்த் திரும்புவார்கள் என்றான். 24 மோசே தன் மாமன் சொல்லிக்கேட்டு அவன் சொன்னபடியெல்லாம் செய்தான். 25 மோசே இஸ்ரவேலர் எல்லாரிலும் திறமையுள்ள மனிதரைத் தெரிந்தெடுத்து, அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும் நூறுபேருக்கு அதிபதிகளாகவும் ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும் பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் 26 ஏற்படுத்தினான். அவர்கள் எக்காலமும் ஜனங்களை நியாயம் விசாரித்துவந்தார்கள்; கஷ்டமான காரியங்களை மாத்திரம் மோசே 27 யினிடம் கொண்டுவந்தார்கள், சிறிய காரியங்களையெல்லாம் தாங்களே தீர்த்தார்கள். பின்பு மோசே தன் மாமனை அனுப்பிவிட்டான்; அவன் திரும்பத் தன் தேசத்துக்குப் போய்விட்டான்.

**19** இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட மூன்றாம்மாதம் முதலாம்நாளிலே சீனாய் வனாந்தரத்தில் சேர்ந்தார்கள். 2 அவர்கள் ரெவிதீமைவிட்டுப் பிரயாணமாகிச் சீனாய் வனாந்தரத்துக்கு வந்து வனாந்தரத்திலேயே பாளயமிறங்கினார்கள்; இஸ்ரவேலர் அங்கே மலைக்கு எதிராகப் பாளயமிறங்கினார்கள். 3 மோசே கடவுளிடத்திற்கு ஏறிப்போனான்; யெகோவா மலையிலிருந்து அவனைக் கூப்பிட்டு: நீ யாக்கோபு வம்சத்தாருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் சொல்லி அறிவிக்கவேண்டியது: 4 நான் எகிப்தியருக்குச் செய்ததையும் நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும் நீங்கள் கண்டிருக்கிறீர்கள். 5 இப்பொழுது நீங்கள் என் சொல்லை உள்ளபடி கேட்டு என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால் சகல ஜாதிகளிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. 6 நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜியமும் பரிசுத்த ஜாதியுமாயிருப்பீர்கள்; நீ இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லவேண்டிய வார்த்தைகள் இவைகளே என்று சொன்னார். 7 மோசே வந்து ஜனங்களின் மூப்பரை அழைப்பித்து யெகோவா தனக்குக் கட்டளையிட்ட இவ்வார்த்தைகளையெல்லாம் அவர்கள் முன்னிலையில் அறிவித்தான். 8 ஜனங்கள் எல்லாரும் ஏகமாய், யெகோவா சொன்னவைகளையெல்லாம் செய்வோம் என்று பதில் உரைத்தார்கள். ஜனங்கள் சொன்ன மறுமொழியை மோசே யெகோவாவினிடம் கொண்டுவந்தான். 9 ஜனங்கள் சொன்ன வார்த்தைகளை மோசே யெகோவாவுக்கு அறிவிக்கவே யெகோவா மோசேயினிடம்: நான் உன்னோடே பேசும்போது ஜனங்கள் கேட்டு, உன்னை என்றைக்கும் நம்பும்படி, இதோ, நான் கார்மேகத்தில் உன்னிடத்திற்கு வருவேன் என்றார். பின்னும் யெகோவா மோ 10 சேயினிடம்: நீ ஜனங்களிடத்திற்குப்போய் இன்றைக்கும் நாளைக்கும் அவர்களைச் சுத்திகரி; அவர்கள் தங்கள் வஸ்திரங்களைத் துவைத்துக்கொள்ளவேண்டும்; 11 மூன்றாம் நாளில் அவர்கள் ஆயத்தமாயிருக்கவேண்டும்; மூன்றாம் நாளிலே யெகோவா சகல ஜனங்களும் காணச் சீனாய் மலையின்மேல் இறங்குவார். 12 ஜனங்களுக்குச் சுற்றிலும் நீ ஒரு எல்லை குறித்து, அவர்கள் மலையில் ஏறாதபடிக்கும் அதின் எல்லையைக்கூடத் தொடாதபடிக்கும் பார்த்துக்கொள்ளச்சொல்லி: மலையைத் தொடுகிறவன் எவனும் நிச்சயமாகவே

13 கொல்லப்படுவான். ஒரு கையும் அவனைத் தொடக்கூடாது; அவன் கல்லெறியுண்டு, அல்லது ஊடுருவ எய்யுண்டு சாகவே வேண்டும். மிருகமானாலும் சரி, மனிதனானாலும் சரி, உயிரோடிருக்கவிடக்கூடாது; எக்காளம் நெடுந்தொனியாய்த் தொனிக்கையில் அவர்கள் மலையின் அடிவாரத்தண்டை வரவேண்டும் என்று சொல்
14 லீன்ரூர். மோசே மலையிலிருந்து இறங்கி ஜனங்களிடம் வந்து அவர்களைச் சுத்திகரித்தான்; அவர்கள் தங்கள் வஸ்திரங்களைத்
15 துவைத்தார்கள். அவன் ஜனங்களிடம்: மூன்றும் நாளுக்கென்று ஆயத்தப்பட்டிருங்கள், மனைவியினிடம் சேராதிருங்கள் என்றான்.

16 மூன்றும் நாள் விடியற்காலத்தில் இடி முழக்கங்களும் மின்னல்களும் மலையின் மேல் கார்மேகமும் மகா பலத்த எக்காள சத்தமும் உண்டாயின; பாளயத்திலிருந்த
17 ஜனங்கள் எல்லாரும் நடுங்கினார்கள். அப்பொழுது ஜனங்கள் கடவுளுக்கு எதிர்கொண்டுபோகும்படி மோசே அவர்களைப் பாளயத்திலிருந்து கூட்டிக்கொண்டுவந்
18 தான்; அவர்கள் மலையின் அடிவாரத்திலே நின்றார்கள், யெகோவா சீனாய்மலையின்மேல் அக்கினியில் இறங்கினபடியால் அது முழுவதும் புகைக்காடாயிருந்தது; அந்தப்புகை சூளையின் புகையைப்போல எழும்பிற்று; மலைமுழுவதும் மிகவும்
19 அதிர்ந்தது. எக்காளசத்தம் வரவர மிகவும் பலமாய்த் தொனித்தது; மோசே பேசினான்; கடவுள் அவனுக்கு வாக்கினால் மறு
20 மொழி கொடுத்தார். யெகோவா சீனாய் மலையின் சிகரத்தில் இறங்கினபோது யெகோவா மோசேயை மலையின் சிகரத்துக்கு வரவழைத்தார்; மோசே ஏறிப்போ
21 னான். யெகோவா மோசேயினிடம்: நீ ஜனங்களிடத்திற்கு இறங்கிப்போய், பார்க்கிறதற்கென்று அவர்களில் அநேகர் எல்லையைக் கடந்து யெகோவாவினிடம் வந்து அழிந்துபோகாதபடி அவர்களை எச்
22 சரி. யெகோவாவின் சமுகத்தில் வருகிற ஆசாரியர்களும் யெகோவா தங்களுக்குள்ளே சங்காரம்பண்ணுதபடி தங்களைச் சுத்திகரித்துக்கொள்ளவேண்டும் என்றார்.
23 அப்பொழுது மோசே யெகோவாவினிடம்: ஜனங்கள் சீனாய்மலையின்மேல் ஏறிவரமுடியாது; மலையைச் சுற்றிலும் எல்லை குறித்து அதைப் பரிசுத்தமுள்ளதாகப் பாவியுங்கள் என்று தேவரீர் எங்களை எச்சரித்திருக்கி
24 றீரே என்றான். பின்னும் யெகோவா மோசேயைப் பார்த்து: இறங்கிப்போய் ஆரோனையும் மேலே கூட்டிக்கொண்டுவா; ஆசாரியர்களும் ஜனங்களும் யெகோவா தங்களுக்குள் சங்காரம்பண்ணுதபடி எல்லையைக்கடந்து யெகோவாவினிடம் ஏறி
25 வராதிருக்கவேண்டும் என்றார். அப்படியே மோசே இறங்கி ஜனங்களிடத்தில்போய் அதை அவர்களுக்குச் சொன்னான்.

கடவுள் இவ்வார்த்தைகளையெல்லாம் **20** திருவுளம்பற்றினார்:

2 உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்துகொண்டுவந்த உன்கடவுளாகிய யெகோவா நானே. என்னையன்றி வே
3 றே தேவர்கள் உனக்கு இருக்கவேண்டாம்.

4 நீ உனக்கு ஒரு விக்கிரகத்தைச் செய்துகொள்ளவேண்டாம். மேலே வானத்திலும் கீழே பூமியிலும் பூமியின் கீழ் தண்ணீரிலும் உள்ளவைகளுக்கு ஒப்பான எந்தச் சொரூபத்தையும் செய்துகொள்ளவேண்டாம்.
5 நீ அவைகளை வணங்கவும் சேவிக்கவும் வேண்டாம். உன் கடவுளாகிய யெகோவா என்கிற நான் எரிச்சலுள்ள கடவுள். என்னைப் பகைக்கிறவர்கள் விஷயத்தில் பிதாக்களின் அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றும் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்து என்
6 கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோவெனில் ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன்.

7 உன் கடவுளாகிய யெகோவாவின் திருநாமத்தை வீணிலே வழங்காதே. தமது திருநாமத்தை வீணிலே வழங்குகிறவனை யெகோவா தண்டியாமல் விடார்.

8 பரிசுத்தமாய் ஆசரிப்பதற்கென ஓய்வுநாளை நினைத்துக்கொள்ளவேண்டும். ஆறு
9 நாளும் நீ உழைத்து உன் வேலைகளையெல்
10 லாம் செய்துகொள்; ஏழாம்நாளோ உன் கடவுளாகிய யெகோவாவுக்கான ஓய்வுநாள்; அதிலே நீயோ உன் குமாரனோ உன் குமாரத்தியோ உன் வேலைக்காரனோ உன் வேலைக்காரியோ உன் மிருகமோ உன் வாசல்களுக்குள் இருக்கிற அந்நியனோ யாதொரு வேலையும் செய்யவேண்டாம்.
11 யெகோவா ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி ஏழாம்நாளில் ஓய்ந்திருந்தார், ஆகையால் யெகோவா ஓய்வுநாளை ஆசீர்வதித்து அதைப் பரிசுத்தமாக்கினார்.

12 உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணவேண்டும். அப்படிச்செய்தால் உன் கடவுளாகிய யெகோவா

உனக்குக் கொடுக்கிற தேசத்திலே நீ நெடு நாளிருப்பாய்.

13 கொலைசெய்யாதே.

14 விபசாரம்செய்யாதே.

15 களவுசெய்யாதே.

16 அயலானுக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சி சொல்லாதே.

17 அயலான்வீட்டை இச்சியாதே. அயலானின் மனைவியையும் அவன் வேலைக்காரனையும் அவன் வேலைக்காரியையும் அவன் எருதையும் அவன் கழுதையையும் அயலானுக்குள்ள வேறெதையும் இச்சிக்கவேண்டாம்.

18 ஜனங்கள் எல்லாரும் இடிமுழக்கங்களையும் மின்னல்களையும் எக்காளசத்தத்தையும் மலை புகைகிறதையும் கண்டார்கள்; அதைக் கண்டு அவர்கள் நடுநடுங்கித் தூரத்திலே

19 நின்றுகொண்டு | மோசேயைநோக்கி: நீர் எங்களோடே பேசும், நாங்கள் கேட்போம்; கடவுள் எங்களோடே பேசவேண்டாம், பேசினால் நாங்கள் செத்தே போவோம்

20 என்றார்கள். மோசே ஜனங்களைப்பார்த்து: பயப்படாதிருங்கள்; உங்களைப் பரீக்ஷிப்பதற்காகவும் நீங்கள் பாவஞ்செய்யாதபடி தம்மைப்பற்றும் பயம் உங்கள் முகத்திற்கு முன் இருப்பதற்காகவும் கடவுள் எழுந்

21 தருளினார் என்றான். ஜனங்கள் தூரத்திலே நின்றார்கள்; மோசே கடவுள் இருந்த காரிருள் மேகத்தைக் கிட்டிச்சேர்ந்தான்.

22 அப்பொழுது யெகோவா மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது இதுவே: நான் வானத்திலிருந்து உங்களோடே பேசினேன் என்

23 பதை நீங்களே கண்டீர்கள். நீங்கள் எனக்குச் சமானமாகும்படி வெள்ளியினாலே தெய்வங்களையும் பொன்னினாலே தெய்வங்களையும் உங்களுக்குச் செய்து

24 கொள்ளவேண்டாம். மண்ணினாலே எனக்குப் பலிபீடத்தைக்கட்டி அதின்மேல் உன் ஆடுகளையும் உன் மாடுகளையும் தகனபலியாகவும் சமாதானபலியாகவும் செலுத்து, என் நாமத்தை நினைவுகூரச் செய்கிற எந்த ஸ்தானத்திலும் நான் உன்னிடம் வந்து உன்னை

25 ஆசீர்வதிப்பேன். எனக்குக் கல்லினால் பலிபீடத்தைக் கட்டுவாயானால் உளியிட்ட கற்களால் அதைக் கட்டவேண்டாம்; அதின்மேல் உளிபட்டால் அது அசுசியாகிவிடும். படிகளால் என் பலிபீடத்தின்மேல் ஏறவேண்டாம்; ஏறினால் உன்

26 நிர்வாணம் அதின்மேல் காணப்படும்.

**21** மேலும் நீ அவர்களுக்கு அறிவிக்க வேண்டிய நியாயங்களாவன:

ஒரு எபிரெய அடிமையைக் கொண்டாயானால் அவன் ஆறுவருஷம் அடிமைவேலைசெய்து ஏழாம் வருஷத்திலே ஒன்றும் கொடாமல் விடுதலைபெற்றுப் போகவேண்டும். ஒன்றிக்காரனைக் வந்திருந்தால் ஒன்றியாய்ப் போகவேண்டும்; விவாகம்பண்ணினவனைப் வந்திருந்தால் அவன் பெண்சாதியும் அவனோடேகூடப் போகவேண்டும். அவன் எஜமான் அவனுக்கு ஒரு பெண்ணை விவாகஞ்செய்து கொடுத்து அவள் அவனுக்கு ஆண்பிள்ளைகளையாவது பெண்பிள்ளைகளையாவது பெற்றிருந்தால் அந்தப் பெண்ணும் அவள் பிள்ளைகளும் அவள் எஜமானைச் சேரவேண்டும்; அவன் மாத்திரம் ஒன்றியாய்ப் போகவேண்டும். அந்த அடிமை, என் எஜமானும் என் பெண்சாதியும் என் பிள்ளைகளும் எனக்குப் பிரியம்; நான் விடுதலைபெற்றுப்போக மனதில்லை என்று மனப்பூர்வமாய்ச் சொல்வானால் | அவன் எஜமான் அவனைத்தெய்வசந்நிதிக்கு அழைத்துப்போய் அவனைக் கதவின் அருகேயாவது நிலையின் அருகேயாவது வரச்செய்து அங்கே அவன் காதைக் கம்பியினாலே துளைக்கவேண்டும்; பின்பு அவன் எந்நாளும் அவனுக்கு அடிமைவேலை செய்துகொண்டிருக்கவேண்டும்.

ஒருவன் தன் மகளை அடிமைப்பெண்ணாக விற்றுப்போட்டானானால் அடிமையான ஆண்கள் விடுதலைபெற்றுப் போவதுபோல அவள் போவதில்லை. தனக்கென அவளை நியமித்துக்கொண்ட எஜமானின் பார்வைக்கு அவள் ஆகாதவளாய்த் தோன்றினால் அவள் மீட்கப்படலாம்; அவன் அவளுக்குத் துரோகம் பண்ணினபடியால் அவளை அந்திய ஜாதியில் விற்றுப்போட அவனுக்கு அதிகாரமில்லை. அவன் தன் குமாரனுக்கு அவளை நியமித்திருந்தானானால் தன் குமாரத்திகளை நடத்தும் முறையாகவே அவளையும் நடத்தவேண்டும். அவன் வேறொரு பெண்ணைக் கொள்வானானால் இவளுக்குரிய அன்னவஸ்திரம் விவாகக் கடமை ஆகிய இவைகளில் குறைவுசெய்யக்கூடாது. இம்மூன்றும் அவன் அவளுக்குச் செய்யாமற் போனால் அவள் பணங் கொடாமல் விடுதலைபெற்றுப் போகலாம்.

ஒரு மனிதனைச் சாகும்படி அடித்தவன் கொல்லப்படவே வேண்டும். ஒருவன் தான் சொல்லவேண்டுமென்றிராமலே தெய்வச்செயலாய்த் தன் கைக்கு நேரிட்டவனைக் கொன்றால் அவன் ஓடிப்போய்ச் சேரவேண்டிய ஸ்தலத்தை உனக்கு நியமிப்பேன். ஒருவன் தன் அயலான் மேல் தணி

கரமாய் வந்து மோசஞ்செய்து அவனைக் கொன்றுபோட்டால் அவன் கொல்லப்பட வேண்டும். என் பலிபீடத்திலிருந்தும் அவனைப் பிடித்துக்கொண்டு போகலாம்.

15 தன் தகப்பனையாவது தன் தாயையாவது அடிக்கிறவன் கொல்லப்படவேண்டும்.

16 ஒரு மனிதனைத் திருடினவன், திருடப் பட்டவனை விற்றுப்போட்டாலும் அவன் அவனுடைய வசத்திலே கண்டுபிடிக்கப் பட்டாலும், கொல்லப்படவே வேண்டும்

17 தன் தகப்பனையாவது தன் தாயையாவது சபிக்கிறவன் கொல்லப்படவே வேண்டும்.

18 மனிதர் சண்டைசெய்து ஒருவன் மற் றொருவனைக் கல்லால் எறிந்ததினாலாவது கையால் அடித்ததினாலாவது அவன் கட்டில்

19 கிடையாய்க்கிடந்தும் | சாகாமல் திரும்ப எழுந்திருந்து வெளியிலே தன் ஊன்று கோலைப் பிடித்துக்கொண்டு நடமாடினால், அடித்தவன் ஆக்கினைக்கு நீங்கலாயிருப் பான்; என்றாலும் அவனுக்கு வேலை மினக்கெட்ட நஷ்டத்தைக்கொடுத்து அவனை நன்றாய்க் குணமாகச் செய்யவேண் டும்.

20 ஒருவன் தனக்கு அடிமையானவனையா வது தனக்கு அடிமையானவளையாவது கோலால் அடித்ததினாலே அவன் கையால் இறந்துபோனால் அவன் தண்டிக்கப்படவே

21 வேண்டும். ஒருநாளாவது இரண்டுநாளா வது உயிரோடிருந்தால் அவர்கள் அவன் உடைமையாகையால் தண்டிக்கப்பட வேண்டியதில்லை.

22 மனிதர் சண்டையிட்டுக் கொள்ளுகை யில் கர்ப்பவதியான ஒரு ஸ்திரீயின்மேல் அடிபட, அவளுக்கு வேறே சேதமில்லா மல் கர்ப்பம் விழுந்துபோனால் அடித்த வன் தண்டம் கொடுக்கவேவேண்டும். அடி பட்ட ஸ்திரீயின் புருஷன் அடித்தவன்மேல் சுமத்துகிறதற்குத் தக்கதாய் நியாயாதிபதி கள் செய்யும் தீர்ப்பின்படி அதைக் கொ

23 டுக்கவேண்டும். வேறே சேதமுண்டானால்,

24 உயிருக்கு உயிர், | கண்ணுக்குக் கண், பல்

25 லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால் | சூட்டுக்குச் சூடு, காயத்துக்குக் கா யம், தழும்புக்குத் தழும்பு பழிகொடுக்க வேண்டும்.

26 ஒருவன் தன் அடிமையானவனின் கண்ணை யாகிலும் தன் அடிமைப்பெண்ணின் கண் ணையாகிலும் அடித்ததினால் அதைக் கெடுத் தால், அவன் கண்ணுக்கு நடமாக அவனை

27 விடுதலைபண்ணி விடவேண்டும். அவன் தன் அடிமையானவனையாவது தன் அடி மைப்பெண்ணையாவது பல் உதிர அடித்தால் அவன் பல்லுக்கு நடமாக அவனை விடுதலை பண்ணிவிடவேண்டும்.

ஒருமாடு ஒருபுருஷனையாவது ஒரு ஸ்திரீ 28 யையாவது முட்டினதினால் சாவுண்டானால் அந்த மாடு கல்லெறியப்படவே வேண்டும், அதின் மாம்சத்தைப் புசிக்கக்கூடாது; அப் பொழுது மாட்டின் எஜமான் ஆக்கினைக்கு நீங்கலாயிருப்பான். தன் மாடு வழக்க 29 மாய் முட்டுகிற மாடாயிருந்து, அது அதின் எஜமானுக்கு அறிவிக்கப்பட்டும் அவன் அதைக் கட்டிவைக்காததினால் அது ஒரு புருஷனையாவது ஒரு ஸ்திரீயையாவது கொன்றுபோட்டால், மாடும் கல்லெறியப் படவேண்டும், அதின் எஜமானும் கொல் லப்படவேண்டும். உயிருக்கு நடான தண் 30 டம் கொடுக்கும்படி தீர்க்கப்பட்டதானால் அவன் தன் உயிரை மீட்டுக்கொள்ளும் தண்டத்தை விதித்த அளவின்படியே கொ டுக்கவேண்டும். அது ஒருவன் மகனை முட் 31 டினாலும் சரி, ஒருவன் மகளை முட்டினாலும் சரி, இந்தத் தீர்ப்பின்படியே அவனுக்குச் செய்யவேண்டும். அந்த மாடு அடிமை 32 யான ஒருவனையாவது ஒரு அடிமைப் பெண்ணையாவது முட்டினால் அவர்கள் எஜமானுக்கு முப்பது சேக்கல் நிறையான வெள்ளியைக் கொடுக்கவேண்டும், மாடோ கல்லெறியப்படவேண்டும்.

ஒருவன் ஒரு குழியைத் திறந்துவைத்ததி 33 னாலாவது, ஒரு குழியை வெட்டி அதை மூடாதே போனதினாலாவது அதிலே ஒரு மாடாவது ஒரு கழுதையாவது விழுந் தால் | குழிக்கு உடையவன் அதற்கு நட 34 கப் பணத்தை மிருகத்தின் எஜமானுக்குக் கொடுக்கவேண்டும்; செத்ததோ அவனு டையதாகும்.

ஒருவனுடைய மாடு வேறொருவனு 35 டைய மாட்டை முட்டினதினால் அது செத் தால், உயிரோடிருக்கிற மாட்டை அவர் கள் விற்று அதின் கிரயத்தைப் பங்கிட்டுக் செத்ததையும் பங்கிட்டுக்கொள்ளவேண் டும். அந்த மாடு முட்டுகிற மாடென்று 36 அதின் எஜமான் முன்னமே அறிந்திருந்தும் அதைக் கட்டிவைக்காதிருந்தால் அவன் மாட்டுக்கு மாடு கொடுக்கவேண்டும்; செத் ததோ அவனுடையதாகும்.

ஒருவன் ஒரு மாட்டையாவது ஆட்டை **22** யாவது திருடி அதைக் கொன்றால் அல்லது அதை விற்றால் அவன் அந்த மாட்டுக்கு ஐந்துமாடுகளும் அந்த ஆட்டுக்கு நாலு ஆடுகளும் நடுகொடுக்கவேண்டும். திரு 2 டன் கன்னமிடுகையில் கண்டுபிடிக்கப் பட்டு அடியுண்டு செத்தால், அவன் நிமித்

3 தம் இரத்தப்பழி சுமராது. சூரியன் அவன் மேல் உதித்திருந்தால் அவன் நிமித்தம் இரத்தப்பழி சுமரும்; | திருடன் ஈடுகொடுத்துத் தீர்க்கவேண்டும்; அவனுக்கு ஒன்றும் இல்லாதிருந்தால் தான் செய்த களவின்பொருட்டு விலைப்படவேண்டும். அவன் திருடின மாடாவது கழுதையாவது ஆடாவது உயிருடனே அவன் வசம் கண்டுபிடிக்கப்பட்டால் இரட்டிப்பாய் அவன் கொடுக்கவேண்டும்.

5 ஒருவன் மற்றொருவன் வயலிலாவது திராட்சத்தோட்டத்திலாவது தன் மிருகத்தை மேயவிட்டால் அவன் தன் சொந்த வயலிலும் திராட்சத்தோட்டத்திலுமுள்ள பலனில் முதல்தரமானதை எடுத்துப் பதில் கொடுக்கவேண்டும்.

6 நெருப்பு எழும்பி முட்களில் பற்றித் தானியப்போரையாவது விளைந்த பயிரையாவது வயலிலுள்ள வேறே எதையாவது எரித்துப்போட்டதேயானால் நெருப்பைக் கொளுத்தினவன் சேதத்திற்கு ஈடுகொடுத்துத் தீர்க்கவேண்டும்.

7 பத்திரமாய் வைத்திருக்கும்படி ஒருவன் தன் அயலானிடம் கொடுத்திருந்த பணமாவது உடைமைகளாவது திருடப்பட்டுப் போகும்போது திருடினவன் அகப்பட்டால் அவன் இரட்டிப்பாய்க் கொடுக்கவேண்டும். திருடன் அகப்படாதேபோனால் அந்த வீட்டுக்காரன் தானே அயலான் பொருளை அபகரித்தானோ இல்லையோ என்று அறியும்படி அவனைத் தெய்வசந்நிதிக்குக் கொண்டுபோகவேண்டும். வஞ்சனையாய் அபகரிக்கப்பட்டதென்னும் விஷயத்தில், காளைமற்போனது மாடானாலும் கழுதையானாலும் ஆடானாலும் வஸ்திரமானாலும் வேறெதுவானாலும், ஒருவன் வந்து அதைத் தன்னுடையதென்று சொன்னால் இருவரின் வழக்கும் தெய்வசந்நிதியில் வரவேண்டும்; தெய்வசந்நிதியில் குற்றவாளியாய்த் தீர்க்கப்படுகிறவனே அயலானுக்கு இரட்டிப்பாய்க் கொடுக்கவேண்டும்.

10 ஒருவன் தன் கழுதையையாவது மாட்டையாவது ஆட்டையாவது மற்ற யாதொரு மிருகத்தையாவது அயலான் வசம் பத்திரமாயிருக்கும்படி விட்டிருக்கும்போது, அது செத்தாலும் சேதப்பட்டுப்போனாலும் ஒருவரும் காணுதபடி ஓட்டிக்கொண்டு போகப்பட்டாலும் | அயலான் பொருளைத் தான் அபகரிக்கவில்லையென்று அவன் யெகோவாவின்பேரில் இடும் ஆணை அவர்கள் இருவருக்கும் நடுத்தீர்க்கும். உடையவன் அதை அங்கீகரிக்கவேண்டும்; மற்றவன் பதிலளிக்கவேண்டுவதில்லை. அது 12
அவன் வசத்திலிருந்து திருடப்பட்டிப்போயிற்றுஎனில் அவன் அதின் எஜமானுக்கு அதற்காகப் பதிலளிக்கவேண்டும். அது 13
பீறுண்டுபோயிற்றுஎனில், அதைச் சாட்சியாகக் கொண்டுவரவேண்டும். பீறுண்டதற்காக அவன் பதிலளிக்கவேண்டுவதில்லை.

ஒருவன் தன் அயலானிடத்தில் எதை 14
யாகிலும் இரவலாக வாங்கியிருக்கையில், அதற்குடையவன்கூட இராதபோது, அது சேதப்பட்டாலும் செத்துப்போனாலும் அவன் அதற்குஉத்தரவாதம் பண்ணவேண்டும். அதற்குடையவன் கூட இருந்தால், 15
அவன் உத்தரவாதம் பண்ணவேண்டுவதில்லை; அது வாடகைக்கு வாங்கப்பட்டிருந்தால் அந்த வாடகையே ஈடு.

நியமிக்கப்படாத ஒரு கன்னிகையை 16
ஒருவன் மோசம் போக்கி அவளோடே சயனித்தால், அவன் அவளுக்காகப் பரிசம் கொடுத்து அவளை விவாகம்பண்ணிக் கொள்ளவேண்டும். அவள்தகப்பன் அவளை 17
அவனுக்குக் கொடுக்கவேமாட்டேன் என்றால் கன்னிகைகளுக்காக கொடுக்கும் பரிசமுறைமையின்படி அவன் பணத்தை நிறுத்துக் கொடுக்கவேண்டும்.

சூனியைக்காரியை உயிரோடிருக்க 18
விடாதே.

மிருகத்தோடே புணருகிற எவனும் 19
கொல்லப்படவே வேண்டும்.

யெகோவா ஒருவருக்கே ஒழிய வேறே 20
தேவர்களுக்குப் பலியிடுகிறவன் சங்காரிக்கப்படவேண்டும்.

அந்நியனைச் சிறுமைப் படுத்தாமலும் 21
ஒடுக்காமலும் இருங்கள்; நீங்களும் எகிப்து தேசத்தில் அந்நியராயிருந்தீர்களே. விதவையையும் திக்கற்ற பிள்ளையையும் ஒடுக்காமலிருங்கள்; அவர்களை எவ்வளவாகிலும் 22
ஒடுக்கும்போது, அவர்கள் என்னை நோக்கிக் கதறினால் அவர்கள் கதறுதலை நான் கேட்கவே கேட்டு | கோபம் மூண்டவராகி, உங்களை 23
கொலைப்பட்டயத்தினால் கொன்றுபோடுவேன். உங்கள் மனைவிகள் விதவைகளும் உங்கள் பிள்ளைகள் திக்கற்ற பிள்ளைகளுமாவார்கள்.

சிறுமைப்பட்டவனுக்கு உன்னிடம் வசிக் 24
கும் என் ஜனத்தில் ஒருவனுக்கு நீ பணம் கடனாகக் கொடுத்திருந்தால் வட்டிக்குக் கொடுக்கிறவர்கள் போலாகாதே; அவனிடம் வட்டி வாங்கவேண்டாம். அயலான் 25
வஸ்திரத்தை ஈடாக வாங்கினால் பொழுது போகுமுன்னமே அதை அவனுக்குத் திரும்பக் கொடுத்துவிடு. அதுதானே அவன் 26
போர்வை; அதுவே அவன் தன் உடம்பை

மூடிக்கொள்ளுகிற வஸ்திரம்; வேறு எதினாலே அன்னே மூடிப் படுத்துக்கொள்ளுவான்? அவன் என்னே நோக்கிக் கூப்பிடும்போது நான் அவனுக்குச் செவி சாய்ப்பேன்; நான் இரக்கமுள்ளவர்.

28 கடவுளைத் தூஷியாதே, உன் ஜனத்தின்
29 அதிபதியைச் சபியாதே. பழுக்கும் உன் பழத்தினும் ஆலியில் வடியும் உன் ரசத்தினும் காணிக்கை செலுத்தத் தாமதியாதே. உன் குமாரரில் முதற்பேறானவனே எனக்
30 குக் கொடுக்கவேண்டும். உன் மாடுகளினும் உன் ஆடுகளினும் அப்படியே செய்ய வேண்டும்; குட்டியானது ஏழுநாள் தன் தாயோடே இருக்கட்டும்; எட்டாம் நாளிலே அதை எனக்குப் படைக்கவேண்டும்.
31 நீங்கள் எனக்குப் பரிசுத்த மனுஷராயிருக்க வேண்டும்; வெளியிலே பீறுண்ட மாம்சத்தைப் புசிக்கவேண்டாம். அதை நாய்களுக்குப் போட்டுவிடுங்கள்.

**23** நீ கேட்ட அபாண்டமான பேச்சைப்
2 பரவச்செய்யாதே. நீ பொய்ச்சாட்சி சொல்லித் துன்மார்க்கனுக்கு உதவிசெய்யாதே.
அதிகமானவர்களென்று தீமை செய்யும்படி அவர்களோடு கூடிக்கொள்ளாதே. வழக்கிலே கூட்டமானவர்களின் கட்சியில்
3 சாய்ந்து நியாயத்தைப் புரட்டச் சாட்சி சொல்லாதே. சிறுமையானவன் வழக்கில்
4 அவனுக்குப் பக்ஷபாதம் காட்டாதே.
உன் சத்துருவின் மாடோ கழுதையோ தப்பிப்போகக் கண்டால் அதைத் திரும்ப
5 அவனிடம் கொண்டுபோய் விடு. உன்னைப் பகைக்கிறவனின் கழுதை சுமையோடே விழுந்து கிடக்கக்கண்டால் அவனோடு சேர்ந்து அதை விடுவிப்பதேயன்றி அவனுக்காக அதை விடுவிக்காமற்போகாதே.
6 உன்னிடத்திலிருக்கிற ஏழையின் வழக்கில் அவன் நியாயத்தைப் புரட்டாதே.
7 கள்ளக்காரியத்துக்குத் தூரமாயிரு. குற்றமில்லாதவனையும் நீதிமானையும் கொன்று போடாதே; நான் துன்மார்க்கனே நீதிமான்
8 என்று தீர்க்கமாட்டேன். பரிதானம் வாங்காதே; பரிதானம் பார்வையுள்ளவர்களைக் குருடாக்கும், நீதிமான்களின் வார்த்தைகளைப் புரட்டும்.
9 அந்நியனே ஒடுக்காதே; எகிப்து தேசத்தில் அந்நியராயிருந்த நீங்கள் அந்நியனின் மனநிலையை அறிந்திருக்கிறீர்களே.

10 ஆறு வருஷம் நீ உன் நிலத்தில் பயிரிட்டு அதின் பலனைச் சேர்த்துக்கொள்.
11 ஏழாம் வருஷத்திலோ உன் ஜனத்திலுள்ள ஏழைகள் புசிக்கவும் மீதியானதை வெளியின் ஜந்துக்கள் தின்னவும் அந்த நிலத்தைச் சும்மா கிடக்க விட்டுவிடு; உன் திராட்சத்தோட்டத்தையும் உன் ஒலிவத்தோப்பையும் அப்படியே செய். ஆறுநாள் 12
உன் வேலையைச்செய்து ஏழாம்நாளிலே உன் மாடும் உன் கழுதையும் இளைப்பாறவும் உன் அடிமைப் பெண்ணின் மகனும் அந்நியனும் இளைப்பாறவும் ஓய்ந்திரு.
நான் உங்களுக்குச் சொன்னவைகள் 13
யாவற்றிலும் சாவதானமாயிருங்கள். அந்நிய தேவர்களின் பேரை உச்சரிக்கவேண்டாம்; அது உன் வாயிலிருந்து கேட்கப்படவும் வேண்டாம்.

வருஷத்தில் மூன்றுதரம் எனக்கு உற்ச 14
வம் கொண்டாடவேண்டும். புளிப்பில்லா 15
அப்பப்பண்டிகையை ஆசரித்து நான் உனக்குக் கட்டளையிட்டபடியே ஆபீப்மாதத்தின் குறித்த காலத்தில் ஏழுநாள் புளிப்பில்லா அப்பம் புசிக்கவேண்டும், அந்த மாதத்தில் எகிப்திலிருந்து புறப்பட்டு வந்தாயே, ஒருவனும் என் சந்நிதியில் வெறுங்கையாய் வரக்கூடாது; அறுப்புப்பண்டி 16
கையை ஆசரித்து நீ வயலில் விதைத்த உன் பயிர்வேலைகளின் முதற்பலனைச் செலுத்து. வருஷமுடிவிலே நீ வயலில் உன் வேலைகளின் பலனைச் சேர்த்துத் திரும்போது சேர்ப்புப் பண்டிகையையும் ஆசரி.
வருஷத்தில் மூன்றுதரம் உன் ஆண்மக்கள் 17
எல்லாரும் யெகோவாவாகிய ஆண்டவரின் சந்நிதியில் வரவேண்டும்.

எனக்கு இடும் பலியின் இரத்தத்தைப் 18
புளித்தமாவுடன் படைக்கவேண்டாம்; என் உற்சவபலியின் கொழுப்பை விடியற்காலம் வரைக்கும் வைத்திருக்கவும் வேண்டாம்.
உன் நிலத்தின் முதல் விளைச்சல்களில் முதற் 19
கனியை உன் கடவுளாகிய யெகோவாவின் வீட்டுக்குக் கொண்டுவரவேண்டும்; ஆட்டுக்குட்டியை அதின் தாயின் பாலிலே சமைக்கவேண்டாம்.

வழியில் உன்னைக் காப்பதற்கும் நான் 20
ஆயத்தம்பண்ணின இடத்துக்கு உன்னைக் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கும், இதோ, நான் ஒரு தூதனே உனக்கு முன்செல்ல அனுப்புகிறேன். அவர் விஷயத்தில் எச்ச 21
ரிக்கையாயிருந்து அவர் சொல்லுக்குச் செவிகொடு; அவருக்கு எதிர்த்து நிற்காதே; உங்கள் மீறுதலை அவர் பொறுப்பதில்லை; என் திருநாமம் அவரில் இருக்கிறதே. நீ 22
அவர் சொல்வதைக் கவனமாய்க் கேட்டு நான் சொல்வதையெல்லாம் செய்வாயாகில், நான் உன் சத்துருக்களுக்குச் சத்துருவும் உன் விரோதிகளுக்கு விரோதியும் ஆவேன்.
என் தூதனானவர் உனக்குமுன் சென்று, 23

எமோரியரும் ஏத்தியரும் பாரசீகரும் காலனியரும் ஏவியரும் எபூசியரும் இருக்கிற இடத்துக்கு உன்னை நடத்திக்கொண்டு போவார்; அவர்களை நான் அதம்பண்ணுவேன். நீ அவர்கள் தேவர்களைப் பணிந்துகொள்ளாமலும் சேவியாமலும் அவர்கள் செய்கைகளின்படி செய்யாமலும் அவர்களை நிர்மூலமாக்கி அவர்கள் சிலைகளை உடைத்துப் போடவேண்டும். உங்கள் கடவுளாகிய யெகோவாவையே சேவியுங்கள்; அவர் உன் ஆகாரத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன் நடுவிலிருந்து அகற்றிவிடுவேன். கர்ப்பம் விழுகிறதும் மலடும் உன் தேசத்தில் இருப்பதில்லை; உன் ஆயுசுநாட்கள் பூரணமாகும்படி செய்வேன். என்னைப்பற்றிய திகில் உனக்கு முன் செல்லும்படிசெய்வேன். நீ செல்லும் இடமெங்குமுள்ள ஜனங்கள் எல்லாரையும் கலங்கடித்து உன் சத்துருக்கள் எல்லாரையும் முதுகுகாட்டச் செய்வேன். உன் முகத்திற்கு முன்னின்று ஏவியரையும் காலனியரையும் ஏத்தியரையும் துரத்திவிடக் குளவிகளை உனக்கு முன்னே அனுப்புவேன். தேசம் பாழாய்ப்போகாமலும் காட்டுமிருகங்கள் உனக்குத் தீங்கு செய்வதற்கேதுவாய்ப் பெருகாமலும் இருக்கும்படி நான் அவர்களை ஒரே வருஷத்திற்குள் உன் முன்னின்று துரத்திவிடாமல், நீ பலுகிப் பெருகித் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்வரைக்கும் அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் உன் முன்னின்று துரத்திவிடுவேன். செங்கடல் சமுத்திரம் தொடங்கிப் பெலிஸ்தியரின் சமுத்திரம் வரைக்கும் வனாந்தரம் தொடங்கி நதிவரைக்கும் உன் எல்லையாகும்படிசெய்வேன்; நான் அந்தத் தேசத்தின் குடிகளை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன்; நீ அவர்களை உன் முன்னின்று துரத்திவிடவேண்டும். அவர்களோடும் அவர்கள் தேவர்களோடும் நீ உடன்படிக்கை செய்யவேண்டாம். அவர்கள் உன் தேசத்திலே குடியிருக்கவேண்டாம்; இருந்தால், உன்னை எனக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யப்பண்ணுவார்கள்; நீ அவர்கள் தேவர்களைச் சேவித்தால் அது உனக்குக் கண்ணியாகும் என்றார்.

**24** பின்பு அவர் மோசேயினிடம்: நீயும் ஆரோனும் நாதாபும் அபியூவும் இஸ்ரவேலின் தலைவரில் எழுபது பேரும் யெகோவாவினிடம் ஏறிவந்து தூரத்திலே நின்று பணிந்துகொள்ளுங்கள். மோசேமாத்திரம் யெகோவாவின் சமீபத்தில் வரலாம்; மற்றவர்கள் சமீபத்தில் வரலாகாது; ஜனமெல்லாம் அவனோடுகூட ஏறிவரவேண்டாம் என்றார். மோசே வந்து யெகோவாவின் வார்த்தைகள் யாவையும் சட்டங்கள் யாவையும் ஜனத்துக்கு அறிவித்தான்; அறிவிக்கவே ஜனமுழுதும் ஏகசத்தமாய்: யெகோவா அருளிய சகல வார்த்தைகளின் படியும் செய்வோம் என்று பதிலுரைத்தார்கள். மோசே யெகோவாவின் வார்த்தைகளை யெல்லாம் எழுதிவைத்துவிட்டு அதிகாலமே எழுந்து மலையின் அடிவாரத்தில் ஒரு பலிபீடத்தைக்கட்டி இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களின் இலக்கத்துக்கு இசையப் பன்னிரண்டு ஸ்தம்பங்களை நிறுத்தினான். அவன் இஸ்ரவேல் புத்திரரின் வாலிபரை அனுப்பவே, அவர்கள் போய்த் தகனபலிகளைச் செலுத்தி யெகோவாவுக்குச் சமாதானபலிகளாகக் காளைகளைப் பலியிட்டார்கள். அப்பொழுது மோசே அந்த இரத்தத்தை எடுத்துப் பாதியைப் பாத்திரங்களில் வார்த்துப் பாதியைப் பலிபீடத்தின்மேல் தெளித்தான். பின்பு உடன்படிக்கையின் புஸ்தகத்தை எடுத்து ஜனத்தின் காது கேட்க வாசித்தான்; அவர்கள், யெகோவா சொன்னபடி யெல்லாம் செய்து கீழ்ப்படிந்து நடப்போம் என்றார்கள். அப்பொழுது மோசே இரத்தத்தை எடுத்து ஜனங்களின்மேல் தெளித்து, இந்த வார்த்தைகள் யாவற்றின்படியும் யெகோவா உங்களோடு செய்த உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்றான்.

பின்பு மோசேயும் ஆரோனும் நாதாபும் அபியூவும் இஸ்ரவேலரின் தலைவரில் எழுபதுபேரும் ஏறிப்போய், இஸ்ரவேலின் கடவுளைத் தரிசித்தார்கள். அவருடைய பாதங்களின் கீழே நீலக்கல்லிழைத்த தரையைப்போலவும் பிரகாசமுள்ள வானத்தையேபோலவும் இருந்தது. இஸ்ரவேல் புத்திரரின் பிரதானிகளின்மேல் அவர் கை நீட்டவில்லை. அழித்துவிடவில்லை; அவர்கள் கடவுளைத் தரிசித்தபின் போஜனபானஞ் செய்தார்கள்.

அப்பொழுது யெகோவா மோசேயினிடம்: நீ மலையின்மேல் என்னிடத்திற்கு ஏறிவந்து அங்கேயே இரு; நான் உனக்குக் கற்பலகைகளையும் நீ அவர்களுக்கு உபதேசிப்பதற்கென நான் எழுதின நியாயப்பிரமாணத்தையும் கற்பனைகளையும் கொடுப்பேன் என்று சொன்னார். மோசே எழுந்து தனக்குத் துணையாயிருந்த யோசுவாவையும் கூட்டிக்கொண்டு தெய்வபர்வதத்தில் ஏறிப்போனான். போகையில் அவன் தலைவரினிடம்: நாங்கள் உங்களிடம் திரும்பிவருமட்

டும் நீங்கள் இங்கே எங்களுக்காகக் காத்திருங்கள்; இதோ, ஆரோனும் கூரும் உங்களோடிருக்கிறார்கள்; யாருக்காவது காரிய முண்டானால் அவர்களிடம் போகலாம்
15 என்றான். மோசே மலையின்மேல் ஏறிப் போகவே, மேகம் மலையை மூடிற்று.
16 யெகோவாவின் மகிமை சீனாய்மலையின்மேல் தங்கியிருந்தது; மேகம் ஆறுநாள் அதை மூடியிருந்தது; ஏழாம் நாளில் அவர் மேகத்தின் நடுவிலிருந்து மோசேயைக் கூப்பிட்
17 டார். மலையின் சிகரத்திலே தோன்றின யெகோவாவின் மகிமை இஸ்ரவேல்புத்திரரின் கண்களுக்குப் பட்சிக்கிற அக்கினி
18 போல் காணப்பட்டது. மோசே மேகத்தின் நடுவிலே உட்சென்று மலையின்மேல் ஏறி, இரவு பகல் நாற்பதுநாள் மலையிலிருந்தான்.

**25** யெகோவா மோசேயினிடம்: | இஸ்ர
2 வேல்புத்திரர் எனக்குக் காணிக்கையைக் கொண்டுவரும்படி அவர்களுக்குச் சொல்லு; மனப்பூர்வமாய்க் கொடுப்பவன் எவனோ அவனிடம் எனக்குக் காணிக்
3 கையை வாங்கிக்கொள்ளவேண்டும். நீங்கள் அவர்களிடத்தில் வாங்கவேண்டிய
4 காணிக்கை: பொன், வெள்ளி, செம்பு, | இளநீல நூல், இரத்தாம்பரநூல், சிவப்பு நூல், மெல்லிய வெள்ளைநூல், வெள்ளாட்டு
5 மயிர், | சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல், தகசுத்தோல், வாகைமரம், விளக்
6 குக்கு எண்ணெய், | அபிஷேகதைலத்துக்கும் சுகந்ததூபத்துக்கும் பரிமளவர்க்கங்
7 கள், | ஏபோத்துக்கும் மார்ப்பதக்கத்துக்கும் வேண்டிய கோமேதகக்கற்கள், பதிக்கும்
8 இரத்தினங்கள் ஆகிய இவைகளே. அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண எனக்குத் திருஸ்தலம் ஒன்றை அமைக்கவேண்டும்.
9 நான் உனக்குக் காண்பிக்கும் வாசஸ்தலத்தின் மாதிரியின்படியும் அதின் எல்லாத் தட்டுமுட்டுகளின் மாதிரியின் படியும் அதைச் செய்யவேண்டும்.
10 அவர்கள் வாகைமரத்தினால் ஒரு பெட்டகத்தைச் செய்யவேண்டும்; அதின் நீளம் இரண்டரைமுழம், அதின் அகலம் ஒன்றரைமுழம், அதின் உயரம் ஒன்றரைமுழம்.
11 அதை எங்கும் பசும்பொன் தகட்டால் மூடு; நீ அதின் உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் அதினால் மூடி அதின்மேல் சுற்றிலும் பொன்னினால் விளிம்பைச்செய்து |
12 அதற்கு நாலு பொன்வளையங்களை வார்ப்பித்து, அவைகளை அதின் நாலு கால்களுக்கு மேலும்போட்டு, ஒரு பக்கத்தில் இரண்டு வளையங்களும் மறுபக்கத்தில் இரண்டு வளையங்களும் இருக்கும்படி தைக்கவேண்டும்.
13 வாகைமரத்தால் தண்டாயங்களைச் செய்து,
14 அவைகளைப் பொன் தகட்டால் மூடி. அந்தத் தண்டாயங்களால் பெட்டகத்தைச் சுமக்கும்படி அவைகளைப் பெட்டகத்தின் பக்கங்களிலிருக்கும் வளையங்களிலே பாய்ச்ச
15 வேண்டும். அந்தத் தண்டாயங்கள் பெட்டகத்திலிருந்து கழற்றப்படாமல் அதின் வளையங்களிலேயே இருக்கவேண்டும். நான்
16 உனக்குக் கொடுக்கும் சாட்சிப்பிரமாணத்தை அந்தப் பெட்டகத்திலே வைக்க வேண்டும்.
17 பசும்பொன்னினாலே கிருபாசனமென்னும் மூடியைச் செய்யவேண்டும். அதின் நீளம் இரண்டரைமுழம் அகலம் ஒன்றரை முழம். பொன்னினால் இரண்டு கேரூபு
18 களைச் செய்; கிருபாசனத்தின் இரு ஓரங்களிலும் அவைகளை அடிப்புவேலையாகச் செய்யவேண்டும். ஒருபுறத்து ஓரத்தில் ஒரு கேரூபையும் மறுபுறத்து ஓரத்தில் மற்றக் கேரூபையும் செய்துவை; அந்தக் கேரூபுகள் கிருபாசனத்தின் இரண்டு ஓரங்களிலும் அதனோடே ஏகவேலையாயிருக்கும்
19 படி அவைகளைச் செய்யவேண்டும். அந்தக்
20 கேரூபுகள் தங்கள் செட்டைகளை மேலே அகல விரித்துத் தங்கள் செட்டைகளால் கிருபாசனத்தை மூடவேண்டும்; அவைகள் ஒன்றுக்கொன்று எதிர்முகமாய்த் தங்கள் முகங்கள் கிருபாசனத்தை நோக்கும்படி இருக்கவேண்டும். கிருபாசனத்தைப்
21 பெட்டகத்தின்மேல் வைப்பாய். நான் உனக்குக்கொடுக்கும் சாட்சியப் பிரமாணத்தை பெட்டகத்துக்குள்ளே வைப்பாய். அங்கே
22 நான் உனக்குத் தரிசனமாகிக் கிருபாசனத்தின்மேல், சாட்சியப் பெட்டகத்தின்மேல் நிற்கும் இரண்டு கேரூபுகளின் நடுவிலேயே அமர்ந்து, இஸ்ரவேல் புத்திரருக்கென்று நான் உனக்குக் கற்பிக்கப்போகிற யாவற்றையும்பற்றி உன்னோடு பேசுவேன்.
23 வாகைமரத்தினால் ஒரு மேசையையும் செய்யவேண்டும். அதன் நீளம் இரண்டு முழம்; அகலம் ஒரு முழம்; உயரம் ஒன்றரை முழம்.
24 அதைப் பசும்பொன் தகட்டால் மூடிச் சுற்றிலும் அதற்குப் பொன்னினால் விளிம்பைச்செய்து |
25 அதற்கு நாலு விரற்கடையான சுற்றுச் சட்டத்தையும், சட்டத்தைச் சுற்றிலும் பொன்விளிம்பையும் செய்யவேண்டும்; அதற்கு நாலு பொன்
26 வளையங்களைச் செய்து அவைகளை அதின் நாலு கால்களும் இருக்கும் நாலு மூலைகளிலும் தைக்கவேண்டும். அந்த வளையங்கள்
27 மேசையைச் சுமக்கும் தண்டாயங்களுக்கு

இடங்களாகும்படி சட்டத்தின் அருகே
28 இருக்கவேண்டும். அந்தத் தண்டாயங்
களை வாகைமரத்தினால் செய்து அவைகளைப்
பொன்தகட்டால் மூடவேண்டும்; அவை
களால் மேசையைச் சுமக்கவேண்டும்.
29 அதற்குரிய தட்டுகளையும் கரண்டிகளையும்
கிண்ணங்களையும் பானபலி கரகங்களையும்
செய்வாய்; அவைகளைப் பசும்பொன்னினால்
30 செய்யவேண்டும். மேசையின்மேல் என்
சந்நிதியில் எப்பொழுதுமிருக்கும் திருச்
சமுகத்தப்பங்களை வைத்திருக்கவேண்டும்.
31 பசும்பொன்னினால் ஒரு குத்துவிளக்கை
யும் செய். அந்த விளக்கை, அதன் பாதத்
தையும் தண்டையும், அடிப்பு வேலையாய்ச்
செய். அதிலேயுள்ள புஷ்ப பாத்திரங்
களும் பழங்களும் பூக்களும் அதனோடே
32 ஏகவேலையாயிருக்கவேண்டும். அதின் பக்
கங்களில் ஆறு கிளைகள் விடவேண்டும்;
குத்துவிளக்கின் ஒரு பக்கத்தில் மூன்று
கிளைகள், மறுபக்கத்தில் மூன்று கிளைகள்.
33 ஒவ்வொரு கிளையிலும் வாதுமைக்கொட்
டையையொத்த மூன்று புஷ்ப பாத்திரங்
களும் ஒரு பழமும் ஒரு பூவும் இருக்க
வேண்டும். விளக்கிலிருந்துவரும் ஆறு
கிளைகளிலும் அப்படியே இருக்கவேண்டும்.
34 விளக்குத்தண்டிலோ வாதுமைக்கொட்
டையையொத்த நாலு புஷ்ப பாத்திரங்
களும் பழங்களும் பூக்களும் இருக்கவேண்
35 டும். அதிலிருந்துவரும் இரண்டு கிளை
களின்கீழ் அதனோடே ஏகவேலையான
ஒரு பழமும் வேறு இரண்டு கிளைகளின்கீழ்
அதனோடே ஏகவேலையான ஒரு பழமும்
மற்ற இரண்டு கிளைகளின்கீழ் அதனோடே
ஏகவேலையான ஒரு பழமும் இருக்கவேண்
டும்; விளக்குத்தண்டிலிருந்துவரும் ஆறு
கிளைகளுக்கும் அப்படியே இருக்கவேண்
36 டும். அவைகளின் பழங்களும் அவை
களின் கிளைகளும் ஏகவேலையாய் முழுவதும்
பசும்பொன்னினால் செய்த ஒரே அடிப்பு
37 வேலையாயிருக்கவேண்டும். அதிலே ஏழு
அகல்களை அமைத்துவை; அதற்கு நேரெதி
ராய் வெளிச்சந்தரும்படி அவைகள் ஏற்றப்
38 படவேண்டும். அதின் கத்தரிகளும் சாம்
பல் பாத்திரங்களும் பசும்பொன்னினால்
39 செய்யப்படவேண்டும். அதையும் அதற்
குரிய பணிமுட்டுகள் யாவையும் ஒரு
தாலந்து பசும்பொன்னினால் செய்யவேண்
40 டும். மலையிலே உனக்குக் காண்பிக்கப்
பட்டவற்றின் மாதிரிப்படியே அவைகளைச்
செய்ய எச்சரிக்கையாயிரு.

**26** பத்து மூடுதிரைகளால் அமைந்த வாச
ஸ்தலத்தைச் செய்யவேண்டும். திரைகள்
திரித்த மெல்லிய வெள்ளை நூலினாலும் இள
நீலநூலினாலும் இரத்தாம்பர நூலினாலும்
சிவப்புநூலினாலும் நெய்யப்பட்டிருக்
கவேண்டும். அவைகளில் விசித்திர வேலையா
2 கக் கேருபுகளைச் செய். ஒவ்வொரு மூடுதிரை
யும் இருபத்தெட்டுமுழ நீளமும் நாலுமுழ
அகலமுமுள்ளதாய்த் திரைகளெல்லாம்
3 ஒரே அளவாயிருக்கவேண்டும். ஐந்து மூடு
திரைகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்
டிருக்கவேண்டும்; மற்ற ஐந்து மூடுதிரைக
ளும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்
கவேண்டும். இணைக்கப்பட்டிருக்கிற ஒரு
4 பெரிய மூடுதிரையின் கடை ஓரத்தில் இள
நீலநூலால் காதுகளைச் செய்; இணைக்கப்பட்
டிருக்கிறமற்றப்பெரிய மூடுதிரையின் கடை
ஓரத்திலும் அப்படியே செய்வாய். காதுகள்
5 ஒன்றோடொன்று இணையும்படி ஒரு பெரிய
மூடுதிரையில் ஐம்பது காதுகளையும் அடுத்த
பெரிய மூடுதிரையின் ஓரத்தில் ஐம்பது
6 காதுகளையும் செய்யவேண்டும். ஐம்பது
பொன் கொக்கிகளைப்பண்ணி பெரிய மூடு
திரைகள் இரண்டையும் ஒன்றோடொன்று
அந்தக் கொக்கிகளால் இணைத்துவிடு. அப்
பொழுது வாசஸ்தலமொன்றாகும். வாச
7 ஸ்தலத்தின்மேல் கூடாரமாகப் போடும்படி
ஆட்டுமயிரால் பதினொரு மூடுதிரைகளைச்
செய்யவேண்டும். ஒவ்வொரு மூடுதிரையும்
8 முப்பதுமுழ நீளமும் நாலுமுழ அகலமு
முள்ளதாய்ப் பதினொரு மூடுதிரைகளும்
9 ஒரே அளவாயிருக்கவேண்டும். ஐந்து மூடு
திரைகளை ஒன்றாகவும் ஆறு மூடுதிரைகளை
ஒன்றாகவும் இணைக்கவேண்டும்; ஆறாம்
மூடுதிரையைக் கூடாரத்தின் முகப்பிற்கு
முன்னே இரட்டையாய்ப் போடவேண்டும்.
10 இணைக்கப்பட்ட ஒரு பெரிய மூடுதிரையின்
கடை ஓரத்தில் ஐம்பது காதுகளையும்
இணைக்கப்பட்ட மற்றப் பெரிய மூடு
திரையின் ஓரத்தில் ஐம்பது காதுகளையும்
11 செய்து | ஐம்பது செம்புக் கொக்கிகளைப்
பண்ணிக் கொக்கிகளைக் காதுகளில் மாட்டி
ஒரே கூடாரமாகும்படி அதை இணைத்து
12 விடவேண்டும். கூடாரத்தின் மூடுதிரை
களில் மிச்சமான பாதிமூடுதிரை வாசஸ்தலத்
13 தின் பின்புறத்தில் தொங்கவேண்டும். கூடா
ரத்தினுடைய மூடுதிரைகளின் நீளத்திலே
மீதியானதில் இத்தப்புறத்திலே ஒரு முழ
மும் அந்தப்புறத்திலே ஒரு முழமும் வாச
ஸ்தலத்தை மூடும்படி அதின் பக்கங்களில்
14 தொங்கவேண்டும். கூடாரத்தை மூடு
வதைச் சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத்
தோலினாலும் அதற்குமேல் மூடுவதைத்
தகசுத்தோலினாலும் செய்யவேண்டும்.

15 வாசஸ்தலத்துக்குச் சுவர்போல் நிறுத்து
வதற்குப் பலகைகளையும் வாகைமரத்தி
16 னாலே செய். ஒவ்வொரு பலகையின்
நீளம் பத்து முழம், அகலம் ஒன்றரை
17 முழம். பலகைகள் ஒன்றோடொன்று
இசைக்கப்படுவதற்கு ஒவ்வொரு பலகை
யிலும் இரண்டு கழுந்துகள் இருக்கவேண்
டும். வாசஸ்தலத்தின் பலகைகளெல்லாம்
18 இப்படியே செய்யவேண்டும். தென்பாகத்
தில் தெற்குமுகமாய் நிறுத்துவதற்கென
வாசஸ்தலத்துக்கு இருபது பலகைகளைச்
19 செய்வாய். அந்த இருபது பலகைகளின்
கீழே வைப்பதற்கு நாற்பது வெள்ளிப்
பாதங்களையும் செய். ஒவ்வொரு பலகை
யின் கீழும் அதின் இரண்டு கழுந்துகளுக்
கும் இரண்டு பாதங்கள் இருக்கவேண்டும்.
20 வாசஸ்தலத்தின் மறுபக்கமாகிய வடபுறத்தி
21 லும் இருபது பலகைகளையும் | அவை
களின்கீழ் நாற்பது வெள்ளிப்பாதங்களையும்
செய்துவை; ஒவ்வொரு பலகையின் கீழும்
இரண்டுபாதங்கள் இருக்கவேண்டும்.
22 வாசஸ்தலத்தின் பின்பக்கமாகிய மேல்பக்கத்
23 திற்கு ஆறு பலகைகளைச் செய். வாச
ஸ்தலத்தின் பின்பக்கத்திலுள்ள இருமூலை
களுக்கும் இரண்டு பலகைகளைச் செய்.
24 அவைகள் அடியில் இருமுகமாய் இசைக்
கப்பட்டு மேலேயும் முதல்வளையம்வரைக்
கும் அப்படியே ஒன்றாய் இசைக்கப்பட்
டிருக்கவேண்டும்; இரண்டு மூலைகளும் அப்
படியே இருக்கவேண்டும்; அவைகள்
25 இரண்டு மூலைகளாம். இப்படியாக
எட்டுப்பலகைகள் இருக்கும்; ஒவ்வொரு
பலகையின் கீழும் இரண்டு இரண்டு பாதங்
களாகப் பதினாறு வெள்ளிப்பாதங்களும்
26 இருக்கும். வாகைமரத்தினால் தாழ்ப்பாள்
களைச் செய்; வாசஸ்தலத்தின் ஒரு பக்கத்
27 துப் பலகைகளுக்கு ஐந்தும் | வாசஸ்தலத்
தின் மறுபக்கத்துப் பலகைகளுக்கு ஐந்தும்
வாசஸ்தலத்தின் மேற்புறமான பின்பக்கத்
துப் பலகைகளுக்கு ஐந்துமாகச் செய்ய
28 வேண்டும். நடுத்தாழ்ப்பாள் ஒருமூலை
தொடங்கி மறுமூலைமட்டும் பலகைகளின்
மையத்தில் உருவப் பாய்ச்சப்பட்டிருக்க
29 வேண்டும். பலகைகளைப் பொன்தகட்டால்
மூடித் தாழ்ப்பாள்களின் இடங்களாகிய
வளையங்களைப் பொன்னினால் செய்து தாழ்ப்
பாள்களைப் பொன்தகட்டால் மூடவேண்
30 டும். இவ்விதமாக மலையின்மேல் உனக்குக்
காண்பிக்கப்பட்டதன் மாதிரிப்படியே வா
சஸ்தலத்தைக் கட்டிமுடிக்க வேண்டும்.
31 இளநீலநூலும் இரத்தாம்பரநூலும்
சிவப்புநூலும் திரித்த மெல்லிய வெள்ளை
நூலுமான இவற்றால் ஒரு திரைச்சீலையைச்
செய்துமுடி; அதிலே விசித்திரவேலையாய்க்
கேரூபுகள் செய்யப்படவேண்டும். 32 வாகை
மரத்தினால் செய்து பொன்தகட்டால் மூடப்
பட்ட நாலு தூண்களிலே அதைத் தொங்க
விடு; அந்தத் தூண்கள் நிற்பதற்கு நாலு
வெள்ளிப்பாதங்களைச் செய்துவை. தூண்
களில் பொன் வளைவாணிகள் இருக்கவேண்
டும். கொக்கிகளுக்குத் தாழ்வாக அந்தத் 33
திரைச்சீலையை வளைவாணிகளிலே தொங்க
விடு; சாட்சியப்பெட்டகத்தை இந்தத்
திரைக்குள்ளே வை. அந்தத் திரைச்சீலை
பரிசுத்த ஸ்தலத்தையும் மகா பரிசுத்த
ஸ்தலத்தையும் பிரிப்பதாம். மகா பரி 34
சுத்த ஸ்தலத்திலே சாட்சியப்பெட்டகத்தின்
மீதில் கிருபாசனத்தை வைக்கவேண்டும்.
திரைக்கு வெளியே வாசஸ்தலத்தின் வடபக் 35
கத்தில் மேசையையும் மேசைக்கு எதிரே
வாசஸ்தலத்தின் தென்பக்கத்தில் குத்து
விளக்கையும் வைக்கவேண்டும். கூடாரத் 36
தின் வாசலுக்கு ஒரு மறைப்புத்திரையை
யும் செய். இந்தத் திரை இளநீலநூல் இரத்
தாம்பரநூல் சிவப்புநூல் திரித்தமெல்லிய
வெள்ளைநூல் ஆகிய இவற்றால் பலநிற நெச
வுவேலையாகச் செய்யப்படவேண்டும். அந் 37
தத் திரைக்கு வாகைமரத்தால் ஐந்து தூண்
களைச்செய்து அவைகளைப் பொன்தகட்டால்
மூடி; அந்தத் தூண்களில் பொன்னினால்
செய்த வளைவாணிகள் இருக்கவேண்டும்.
அவைகளுக்கு ஐந்து செப்புப்பாதங்களை
வார்ப்பிக்கவேண்டும்.

வாகைமரத்தால் பலிபீடத்தைச் செய்; **27**
அதின் நீளம் ஐந்துமுழம்; அகலம் ஐந்து
முழம், அது சதுரமாயிருக்கவேண்டும்;
அதன் உயரம் மூன்றுமுழம். அதின் நாலு 2
மூலைகளிலும் அதனோடே ஏகமாயிருக்கும்
நாலு கொம்புகளைச் செய்யவேண்டும்;
அதை செப்புத்தகட்டால் மூடவேண்டும்.
அதின் சாம்பலை எடுப்பதற்குச் சட்டிகளை 3
யும் கரண்டிகளையும், கலங்களையும் முள்ளு
களையும் நெருப்புச்சட்டிகளையும் செய்
வாய்; அதின் பணிமுட்டுகளையெல்லாம்
செம்பினால் செய்யவேண்டும். வலைப் 4
பின்னல்போன்ற ஒரு செப்புச் சல்லடை
யைச்செய்து அந்தச் சல்லடையின் நாலு
மூலைகளிலும் நாலு செப்புவளையங்களைப்
போடு. அந்தச் சல்லடை பலிபீடத்தின் 5
பாதியுயரத்திற்கு எட்டும்படி அதைப் பலி
பீடத்தின் சுற்றடைப்புக்குக் கீழாகவை.
பலிபீடத்துக்கு வாகைமரத்தால் தண்டா 6
யங்களைச்செய்து அவைகளைச் செப்புத்
தகட்டால் மூடவேண்டும். பலிபீடத்தைச் 7

சுமந்துபோக வேண்டியபோது அந்தத் தண்டாயங்கள் அதின் இரண்டு பக்கங்களிலும்வளையங்களிலே பாய்ச்சப்படவேண்டும்.
8 பலிபீடத்தை உள்ளே கூடாகப் பலகைகளினாலே செய்யவேண்டும்; மலையில் உனக்குக் காண்பிக்கப்பட்டபடியே அதைச் செய்துமுடி.
9 வாசஸ்தலத்திற்குப் பிராகாரத்தையும் செய்துமுடிக்கவேண்டும்; தென்முகமான தெற்குப் பிராகாரத்துக்குத் தொங்குதிரைகள் இருக்கவேண்டும். இவை திரித்த மெல்லிய வெள்ளாடுநூலால் செய்யப்பட்டு
10 நூறுமுழ நீளமாயிருக்கும். அவைகளுக்குச் செம்பினாலே செய்த இருபது தூண்களும் இருபது பாதங்களும் இருக்கவேண்டும்; தூண்களின் வளைவாணிகளும் அவைகளின் பூண்களும் வெள்ளியினால் செய்யப்
11 படவேண்டும். அப்படியே வடபக்கத்திற்கும் நூறுமுழ நீளமாகத் தொங்குதிரைகள் இருக்கவேண்டும்; அவைகளுக்குச் செம்பினால்செய்த இருபது தூண்களும் இருபது பாதங்களும் இருக்கவேண்டும்; தூண்களின் வளைவாணிகளும் பூண்களும்
12 வெள்ளியினால் செய்யப்படவேண்டும். பிராகாரத்தின் அகலத்திற்கு மேல்பக்கத்தில் ஐம்பதுமுழ நீளமாகத் தொங்குதிரைகள் வேண்டும்; அவைகளுக்குப் பத்துத் தூண்களும் பத்துப் பாதங்களும் வேண்டும்.
13 சூரியன் உதிக்கிற கீழ்பக்கத்தின் பிராகாரத்
14 தின் அகலம் ஐம்பதுமுழம், அங்கே வாசலுக்கு ஒரு புறத்தில் தொங்குதிரைகள் பதினைந்து முழம், அவைகளின் தூண்கள்
15 மூன்று, பாதங்கள் மூன்று. மறுபுறத்துக்குப் பதினைந்துமுழத் தொங்குதிரைகள் வேண்டும்; அவைகளுக்குத் தூண்கள்
16 மூன்று, பாதங்கள் மூன்று. பிராகாரத்தின் வாசலுக்கு இருபதுமுழ மறைப்புத் திரை வேண்டும். அது இளநீலநூல் இரத்தாம்பரநூல் சிவப்புநூல் திரித்த மெல்லியவெள்ளாடுநூல் ஆகிய இவற்றால் பல நிற நெசவு வேலையாகச் செய்யப்படவேண்டும். இந்தத் திரைக்கு நாலு தூண்களும் நாலு
17 பாதங்களும் வேண்டும். சுற்றுப்பிராகாரத்தின் தூண்களெல்லாம் வெள்ளியினால் பூண்கட்டப்பட்டிருக்கவேண்டும், அவைகளின் வளைவாணிகள் வெள்ளியினாலும் அவைகளின் பாதங்கள் செம்பினாலும் செய்யப்
18 பட்டிருக்கவேண்டும். பிராகாரத்தின் நீளம் நூறுமுழமும் அகலம் ஐம்பதுமுழமுமாயிருக்கவேண்டும். திரித்த மெல்லிய வெள்ளாடுநூலினால் செய்யப்பட்ட தொங்குதிரைகளின் உயரம் ஐந்துமுழம், அதின் தூண்களின் பாதங்கள் செம்பாம். வாச 19
ஸ்தலத்துக்குரிய சகல பணிவிடைக்கும் தேவையான எல்லாப் பணிமுட்டுகளும் அதின் எல்லா முளைகளும் பிராகாரத்தின் எல்லா முளைகளும் செம்பினால் செய்யப்பட்டிருக்கவேண்டும்.

இடித்துப் பிழிந்த தெளிவான ஒலிவ 20
எண்ணெயை உன்னிடம் கொண்டுவரும்படி இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிடு. குத்துவிளக்கை எப்பொழுதும் எரியவைப்பதற்கு இது வேண்டும். தரிசனக்கூடாரத் 21
தில் சாட்சிய சந்நிதிக்கு முன்னிருக்கும் திரைச்சீலைக்கு வெளியே ஆரோனும் அவன் குமாரரும் சாயங்காலந்தொடங்கி விடியற்காலமட்டும் யெகோவாவின் சந்நிதானத்தில் அந்த விளக்கை எரியவைக்கவேண்டும்; இது இஸ்ரவேல் புத்திரருக்குத் தலைமுறை தலைமுறையாக நித்திய நியமம்.

உன் சகோதரன் ஆரோன் எனக்கு ஆசா 28
ரிய ஊழியம் செய்யும்படி, நீ ஆரோனையும் அவனோடுகூட நாதாப், அபியூ, எலெயாசார், இத்தாமார் என்னும் ஆரோனின் குமாரரையும் இஸ்ரவேல் புத்திரரிலிருந்து பிரித்து உன்னிடம் சேர்த்துக்கொள். உன் 2
சகோதரனாகிய ஆரோனுக்குத் திரு உடைகளைச்செய்; இவை மகிமைக்கும் அலங்காரத்திற்கும் ஏதுவாம். அறிவின் ஆவி 3
யால் நான் நிரப்பியிருக்கிற சகல அறிவாளிகளோடும் நீ பேசி, எனக்கு ஆசாரிய ஊழியம்செய்யும்படி ஆரோனைப் பிரதிஷ்டைபண்ணுவதற்கென அவனுக்கு உடைகளைச் செய்யவேண்டுமென்று சொல். அவர்கள் செய்யவேண்டிய உடைகள் 4
மார்பதக்கம், ஏபோத்து, அங்கி, விசித்திரமான உள்சட்டை, பாகை, இடைக்கச்சை ஆகிய இவைகளே. உன் சகோதரனாகிய ஆரோன் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்வதற்கென அவனுக்கும் அவன் குமாரருக்கும் திரு உடைகளைச் செய்யவேண்டும். அவர்கள் பொன்னும் இளநீலநூலும் இரத் 5
தாம்பரநூலும் சிவப்புநூலும் மெல்லிய வெள்ளாடுநூலும் சேர்க்கவேண்டும்.

ஏபோத்தைப் பொன், இளநீலநூல், 6
இரத்தாம்பரநூல், சிவப்புநூல், திரித்த மெல்லிய வெள்ளாடுநூல் ஆகிய இவற்றினால் விசித்திர வேலையாய்ச் செய்யவேண்டும். இருபக்கத்து முளைகளும் சேர்க்கப்படுவ 7
தற்கு இரண்டு தோள்துண்டுகள் இருக்கவேண்டும்; இப்படியே அது ஒன்றுபோல் இணைக்கப்படும். அந்த ஏபோத்தைச் 8
சேர்த்துக்கட்ட அதன்மேலிருக்கவேண்டிய விசித்திரக்கச்சை, அதின் வேலைப்பாடு, ஒத்

திருக்கும்படி பொன், இளநீலநூல், இரத்தாம்பரநூல், சிவப்புநூல், நிரித்த மெல்லிய வெள்ளைநூல் ஆகிய இவற்றால் செய்யப்பட்டு அதனோடே ஏகவேலையாயிருக்க
9 வேண்டும். பின்னும் நீ இரண்டு கோமேதகக்கற்களை எடுத்து இஸ்ரவேல் புத்திரரின்
10 நாமங்களை அவைகளிலே வெட்டிவை. அவர்கள் பிறந்த வரிசையின்படியே அவர்கள் நாமங்களில் ஆறு நாமங்கள் ஒரு கல்லிலும் மற்ற ஆறு நாமங்கள் மறுகல்லி
11 லும் இருக்கவேண்டும். இரத்தினங்களில் முத்திரை வெட்டுகிறவர்கள் செய்யும் வேலையை ஒத்திருக்கும்படி அந்த இரண்டு கற்களிலும் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை வெட்டி அவைகளைப் பொன் குவளை
12 களில் பதித்துவை. அந்த இரண்டு கற்களையும் ஏபோத்தின் தோள்துண்டுகளின் மேல் வைக்கவேண்டும். இவைகள் இஸ்ரவேல்புத்திரரை நினைக்கும் ஞாபகக்குறிகள். ஆரோன் யெகோவாவுக்கு முன்பாகத் தன் இரண்டு தோள்களின்மேலும் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை ஞாபகக்குறியாகச்
13 சுமக்கவேண்டும். பொன்னிழை வளையங்களைப் பண்ணித்
14 | நிரித்த நூல்போன்ற இரண்டு பசும்பொன் சங்கிலிகளைச்செய்து, அந்தப் பின்னல் சங்கிலிகளை அந்த வளையங்களில் பூட்டு.

15 தெய்வதீர்ப்பு மார்ப்பதக்கத்தையும் செய்யவேண்டும்; ஏபோத்தின் வேலையை ஒத்திருக்கும்படி அதை விசித்திர வேலையாகச் செய்வாய். பொன், இளநீலநூல், இரத்தாம்பரநூல், சிவப்புநூல், நிரித்த மெல்லிய வெள்ளைநூல் ஆகிய இவற்றினால்
16 அதைச் செய்யவேண்டும். அது மடிக்கப்பட்டதாய் ஒருசாண் நீளமும் ஒருசாண் அகலமுமான சதுரமாய் இருக்கவேண்டும்.
17 அதிலே நாலுபத்தி இரத்தினக்கற்களை நிறையப் பதிக்கவேண்டும்; முதலாம்பத்தி பத்ம
18 ராகம், புஷ்பராகம், மரகதம்; இரண்டாம்
19 பத்தி மாணிக்கம், நீலம், வச்சிரம்; மூன்றாம்
20 பத்தி கெம்பு, வைடூரியம், சுகந்தி; நாலாம் பத்தி சுவர்ணரத்தினம், கோமேதகம், படிகப்பச்சை. இவைகளைப் பதிப்பது பொன்
21 னிழலே ஆகவேண்டும். இந்தக் கற்கள் இஸ்ரவேல் புத்திரருடைய நாமங்களுக்குத் தக்கபடியே ஒவ்வொரு நாமத்திற்கு ஒவ்வொன்றுகப் பன்னிரண்டாயிருக்கவேண்டும்; பன்னிரண்டு கோத்திரங்களின் நாமங்களும் ஒவ்வொன்றிலே ஒவ்வொன்றுக முத்திரை வெட்டாய் வெட்டியிருக்கவேண்டும்.
22 மார்ப்பதக்கத்திற்குத் நிரித்தநூல்போன்ற பின்னல்வேலையான இரண்டு சங்கிலிகளைப் பசும்பொன்னினால் செய். அந்த மார்ப் 23
பதக்கத்திற்கு இரண்டு பொன்வளையங்களையும் பண்ணி அந்த இரண்டு வளையங்களையும் மார்ப்பதக்கத்தின் இரண்டு பக்கங்களிலே வைத்துப் | பொன்னினால் செய்த 24
அந்த இரண்டு பின்னல் வேலையான சங்கிலிகளையும் மார்ப்பதக்கத்தின் பக்கங்களில் இருக்கிற இரண்டு வளையங்களில் மாட்டு; அவ்விரண்டு பின்னல் வேலையான சங்கிலி 25
களின் மற்ற இரண்டு நுனிகளை ஏபோத்துத் தோள்துண்டுகளின்மேல் அதின் முன்புறத்தில் இருக்கிற இரண்டு குவளைகளில் மாட்டு. நீ இரண்டு பொன்வளையங்களைப் 26
பண்ணி அவைகளை ஏபோத்திற்கு எதிரான மார்ப்பதக்கத்தினுடைய மற்ற இரண்டு பக்கங்களிலும் அதினுடைய ஓரத்திலே உட்புறமாக மாட்டு; வேறே இரண்டு 27
பொன்வளையங்களைப் பண்ணி அவைகளை ஏபோத்தின் தோள்துண்டுகளில், முன்பாகத்து உள்பக்கத்தில், அதின் இணைப்புக்குக்கிட்ட ஏபோத்தின் விசித்திரக் கச்சைக்கு மேலே மாட்டு. மார்ப்பதக்கம் ஏபோத் 28
தின் விசித்திரமான கச்சைக்குமேல் இருக்கும்படிக்கும் அது ஏபோத்தைவிட்டு நீங்காதபடிக்கும் அதை அதின் வளையங்களால் ஏபோத்து வளையங்களோடே இளநீல நாடாவினால் சேர்த்துக் கட்டவேண்டும்.
ஆரோன் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவே 29
சிக்கும்போது இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களைத் தன் இருதயத்தின்மேலிருக்கும் தெய்வதீர்ப்பு மார்ப்பதக்கத்திலே யெகோவாவின் சந்நிதானத்தில் ஞாபகக்குறியாக எப்பொழுதும் தரித்துக்கொள்ளவேண்டும்.
தெய்வதீர்ப்பு மார்ப்பதக்கத்திலே ஊரீம் 30
தும்மீம் என்பவைகளை வைக்கவேண்டும்; ஆரோன் யெகோவாவின் சந்நிதானத்தில் பிரவேசிக்கும்போது அவைகள் அவன் இருதயத்தின்மேல் இருக்கவேண்டும்; ஆரோன் தன் இருதயத்தின்மேல் இஸ்ரவேல் புத்திரருக்குரிய தெய்வதீர்ப்பை யெகோவாவின் சந்நிதானத்தில் எப்பொழுதும் தரித்துக்கொள்ளவேண்டும்.

ஏபோத்தின் அங்கியை முழுவதும் இள 31
நீலநூலால் செய். தலை நுழைகிற துவாரம் 32
அதின் நடுவில் இருக்கவேண்டும்; அது கிழியாதபடி அதின் துவாரத்துக்கு நெய்யப்பட்ட வேலையான ஒரு நாடா சுற்றிலும் இருக்கவேண்டும்; அது மார்க்கவசத்தின் துவாரத்துக்கு ஒத்ததாகவே இருக்கவேண்டும். அதின் ஓரங்களில் சுற்றிலும் 33
இளநீலநூல், இரத்தாம்பரநூல், சிவப்புநூல் வேலைபால் செய்யப்பட்ட மாதளம்

பழங்களையும் அவைகளுக்கு இடையிடை
யே பொன்மணிகளையும் செய்துவைக்க
34 வேண்டும். அங்கியின் ஓரங்களில் சுற்றி
லும் ஒரு பொன்மணியும் ஒரு மாதளம்பழ
மும் ஒரு பொன்மணியும் ஒரு மாதளம்பழ
35 முமாக வைக்கவேண்டும். ஆரோன் ஆரா
தனைசெய்ய யெகோவாவின் சந்நிதியில் பரி
சுத்தஸ்தலத்துக்குள் பிரவேசிக்கும்போதும்
வெளியே வரும்போதும் சத்தம் கேட்கும்
படி அதைத் தரித்திருக்கவேண்டும்; அவன்
சாகாதபடி அப்படிச்செய்யவேண்டும்.
36 பசும்பொன்னினால் ஒரு தெற்றிப்பட்
டத்தைச் செய்து, யெகோவாவுக்குப் பிர
திஷ்டை என்று அதிலே முத்திரை வெட்
37 டாக வெட்டு. அது பாகையிலிருக்கும்
படி அதை இளநீலநாடாவினால் பாகை
38 யின் முகப்பிலே கட்டு. அது ஆரோ
னுடைய நெற்றியின்மேல் இருக்கவேண்
டும்; இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்த காணிக்
கைகளாகப் பிரதிஷ்டை செய்கிறவைக
ளில் தோஷமிருந்தாலும் அதை ஆரோன்
இவ்வாறுசுமக்கவேண்டும்; யெகோவா
வின் சந்நிதியில் அவர்கள் அங்கீகரிக்கப்
படும்படி அது எப்பொழுதும் அவன் நெற்
றியின்மேல் இருக்கவேண்டும்.
39 மெல்லிய வெள்ளைநூலால் உள்சட்டை
யைச் சித்திரமாய் நெய்து மெல்லிய வெள்ளை
நூலால் பாகையையும்செய்து இடைக்கச்
சையைப் பலநிற நெசவு வேலையாகச்
40 செய்யவேண்டும். ஆரோனின் குமாரருக்
கும் அங்கிகளையும் இடைக்கச்சைகளையும்
41 குல்லாக்களையும் செய்யவேண்டும்; இவை
மகிமைக்கும் அலங்காரத்துக்கும் ஏதுவாம்.
உன் சகோதரனுகிய ஆரோனும் அவனே
டேகூட அவன் குமாரரும் எனக்கு ஆசா
ரிய ஊழியம் செய்யும்படிக்கு, நீ அந்த
வஸ்திரங்களை அவர்களுக்கு உடுத்தி அவர்
களை அபிஷேகஞ்செய்து கையை நிரப்பி
அவர்களைப் பிரதிஷ்டை செய்யவேண்டும்.
42 அவர்கள் நிர்வாணத்தை மூடுவதற்கு இடுப்
புத்தொடங்கி முழங்கால்வரை எட்டும்
சணல்நூல் சல்லடங்களைச் செய்யவேண்
43 டும். ஆரோனும் அவன் குமாரரும் பரி
சுத்த ஸ்தலத்திலே ஆராதனை செய்யத் தரிச
னக்கூடாரத்தினுள் செல்லும்போதும் பலி
பீடத்தண்டையில் சேரும்போதும் தோஷம்
சுமந்து அவர்கள் சாகாதபடி அவைகளைத்
தரித்திருக்கவேண்டும்; இது அவனுக்கும்
அவனுக்குப் பின்வரும் சந்ததிக்கும் நித்திய
நியமம்.

**29** அவர்கள் எனக்கு ஆசாரிய ஊழியம்
செய்வதற்கென அவர்களைப் பிரதிஷ்டை
செய்யும்படி நீ அவர்களுக்குச் செய்ய
வேண்டியதாவது:

ஒரு காளையையும் பழுதற்ற இரண்டு
ஆட்டுக்கடாக்களையும் தெரிந்துகொள்.
புளிப்பில்லா அப்பத்தையும் எண்ணெ 2
யிலே தோய்த்த புளிப்பில்லாத் தோசை
களையும் எண்ணெய் பூசப்பட்ட புளிப்
பில்லா மெல்லிய அடைகளையும் கோதுமை
மாவினால் பண்ணி | அவைகளை ஒரு கூடை 3
யிலே வைத்துக் கூடையோடே அவை
களையும், காளையையும் இரண்டு ஆட்டுக்
கடாக்களையும் கொண்டுவந்து | ஆரோனை 4
யும் அவன் குமாரரையும் தரிசனக்கூடா
ரத்தின் வாசலண்டை வரச்செய்து அவர்க
ளைத் தண்ணீரினால் கழுவு. அவர்களுக்குச் 5
செய்த வஸ்திரங்களை எடுத்து உள்சட்டை
யையும் ஏபோத்தின் அங்கியையும் ஏபோத்
தையும் மார்ப்பதக்கத்தையும் ஆரோனுக்கு
உடுத்தி, ஏபோத்தின் விசித்திரக்கச்சையை
அவனுக்குக் கட்டி | அவன் தலையிலே 6
பாகையை வைத்துப் பரிசுத்த கிரீடத்தைப்
பாகையின்மேல் தரித்து, அபிஷேக தைல 7
த்தை எடுத்து அவன் தலையின்மேல் வார்த்து
அவனை அபிஷேகம்பண்ணு. பின்பு அவன் 8
குமாரரைக் கிட்டவரச்செய்து அவர்களுக்
கும் சட்டைகளை உடுத்து. ஆரோனுக்கும் 9
அவன் குமாரருக்கும் இடைக்கச்சைகளைக்
கட்டி. அவன் குமாரருக்குக் குல்லாக்களைத்
தரிப்பிக்கவேண்டும். ஆசாரிய ஊழியம்
அவர்களுக்கு நித்திய நியமமாகக் கிடைக்
கும். இவ்வாறுக ஆரோனையும் அவன்
குமாரரையும் பிரதிஷ்டைபண்ணவேண்
டும்.

காளையைத் தரிசனக்கூடாரத்துக்குமுன் 10
கொண்டுவந்து நிறுத்து; நிறுத்தவே, ஆரோ
னும் அவன் குமாரரும் தங்கள் கைகளைக்
காளையின் தலைமேல் வைக்கவேண்டும். அப் 11
பொழுது நீ அந்தக் காளையைத் தரிசனக்
கூடாரத்து வாசலண்டையிலே யெகோவா
வின் சந்நிதானத்தில் அடித்து, அதின் இரத் 12
தத்தில் கொஞ்சம் எடுத்து உன் விரலினால்
பலிபீடத்தின் கொம்புகள்மேல் தடவிவிட்டு
மீதியான இரத்தத்தையெல்லாம் பலிபீடத்
தின் அடியிலே ஊற்றிவிடு; குடல்களை 13
மூடிய கொழுப்பு யாவையும் கல்லீரலின்மே
லுள்ள சவ்வையும் இரண்டு குண்டிக்காய்
களையும் அவைகளின்மேலுள்ள கொழுப்
பையும் எடுத்துப் பலிபீடத்தின்மேல் தகித்
துப்போடு; காளையின் மாம்சத்தையும் அதின் 14
தோலையும் அதின் உதப்பியையும் பாளையத்
துக்குப் புறம்பே அக்கினியால் சுட்டெரிக்க
வேண்டும்; இது பாவநிவாரணபலி.

15 பின்பு அந்த ஆட்டுக்கடாக்களில் ஒன்
றைக் கொண்டுவந்து நிறுத்து; அதின் தலை
மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள்
16 கைகளை வைக்கவேண்டும். அந்தக் கடா
வை அடித்து அதின் இரத்தத்தைப் பிடித்
துப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்து
17 விடு; ஆட்டுக்கடாவைச் சந்துசந்தாகத்
துண்டித்து அதின் குடல்களையும் அதின்
கால்களையும் கழுவி, அவைகளை அந்தத்
துண்டங்களின்மேலும் அதின் தலையின்
18 மேலும் வைத்து | ஆட்டுக்கடா முழுவதை
யும் பலிபீடத்தின்மேல் தகித்துவிடவேண்
டும்; இது, யெகோவாவுக்குச் செலுத்தும்
தகனபலி; இது யெகோவாவுக்குச் சுகந்த
வாசனையும் அக்கினி நிவேதனமுமாகும்.
19 பின்பு மற்ற ஆட்டுக்கடாவையும் கொண்டு
வந்து நிறுத்து; அதின் தலைமேல் ஆரோ
னும் அவன் குமாரரும் தங்கள் கைகளை
20 வைக்கவேண்டும். அப்பொழுது அந்தக்
கடாவை அடித்து அதின் இரத்தத்தில்
கொஞ்சம் எடுத்து ஆரோனின் வலதுகாது
மடலிலும் அவன் குமாரரின் வலதுகாது
மடலிலும் அவர்கள் வலதுகையின் பெரு
விரலிலும் அவர்கள் வலதுகாலின் பெரு
விரலிலும் தடவிவிட்டு மீதியான இரத்தத்
தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்
21 துவிடு. பலிபீடத்தின்மேலிருக்கும் இரத்
தத்திலும் அபிஷேக தைலத்திலும் கொஞ்
சம் எடுத்து ஆரோனும் அவன் வஸ்திரங்க
ளும் அவனுடைய குமாரரும் அவர்கள்
வஸ்திரங்களும் பரிசுத்தமாக்கப்படும்படி,
அவன்மேலும் அவன் வஸ்திரங்கள்மேலும்
அவனுடைய குமாரர்மேலும் அவர்கள் வஸ்
22 திரங்கள்மேலும் தெளிக்கவேண்டும். பின்பு
பிரதிஷ்டைக்கடாவென்னும் அந்த ஆட்
டுக்கடாவின் கொழுப்பையும் கொழுப்பு
வாலையும் குடல்களை மூடிய கொழுப்பை
யும் கல்லீரலின்மேலுள்ள சவ்வையும்
இரண்டு குண்டிக்காய்களையும் அவைக
ளின்மேலுள்ள கொழுப்பையும் வலதுபக்
23 கத்து முன்னங்தொடையையும் | யெகோ
வாவின் சந்நிதானத்தில் வைத்திருக்கிற
புளிப்பில்லா அப்பங்களுள்ள கூடையில்
ஒரு அப்பத்தையும் எண்ணெய் அப்ப
மாகிய ஒரு தோசையையும் ஒரு மெல்லிய
24 அடையையும் எடுத்து, அவைகள் எல்லா
வற்றையும் ஆரோனின் உள்ளங்கைகளி
லும் அவன் குமாரரின் உள்ளங்கைகளிலும்
வைக்கவேண்டும். பின்பு அவைகளை
யெகோவாவின் சந்நிதானத்தில் அசை
வாட்டு காணிக்கையாக அசைவாட்ட
25 வேண்டும்; அசைவாட்டியபின் அவைகளை

அவர்கள் கைகளிலிருந்து எடுத்துப் பலி
பீடத்தில் தகனபலியின்மேல் வைத்து
யெகோவாவின் சந்நிதானத்தில் சுகந்தவாச
னையாகத் தகித்துவிடு; இது யெகோவாவுக்
குச் செலுத்தப்படும் அக்கினி நிவேதனம்.
26 ஆரோனுடைய பிரதிஷ்டைக்கடாவிலே
மார்க்கண்டத்தை எடுத்து அதை யெகோ
வாவின் சந்நிதானத்தில் அசைவாட்டு காணி
க்கையாக அசைவாட்டவேண்டும்; அது
உன் பங்காகும். மேலும் ஆரோனின் பிர
27 திஷ்டைக்கும் அவன் குமாரரின் பிரதிஷ்
டைக்கும் நியமித்த ஆட்டுக்கடாவில் அசை
வாட்டு காணிக்கையாகிய மார்க்கண்ட
தையும் உயர்த்திப் படைக்கும் காணிக்கை
யாகிய முன்னங்தொடையையும், அசை
வாட்டப்படுவதையும் உயர்த்திப்படைக்கப்
படுவதையுமே, பரிசுத்தமாக்கவேண்டும்.
28 இஸ்ரவேல் புத்திரர் பலியிடுகிறவைகளில்
இவைகளே நித்தியநியமமாக ஆரோனையும்
அவன் குமாரரையும் சேரவேண்டும்; இது
உயர்த்திப் படைக்கும் காணிக்கை இஸ்ர
வேல் புத்திரர் யெகோவாவுக்கென உயர்த்
திப் படைக்கும் பலிகளில், அவர்களுடைய
சமாதானபலிகளிலே, இவைகளே உயர்த்
தப்படும் காணிக்கை.

29 ஆரோனின் திருஉடைகள் அவனுக்குப்
பின் அவன் குமாரரைச்சேரும்; அவர்கள்
அவைகளை உடுத்திக்கொண்டு அபிஷேகம்
பெற்றுப் பிரதிஷ்டையாக்கப்படுவார்கள்.
30 அவன் குமாரரில் அவன் பட்டத்திற்கு
வருகிற ஆசாரியன் பரிசுத்தஸ்தலத்தில்
ஆராதனை செய்வதற்குத் தரிசனக்கூடாரத்
தில் பிரவேசிக்கும்போது அவைகளை ஏழு
நாள் உடுத்திக்கொள்ளவேண்டும்.

31 பிரதிஷ்டைக் கடாவைக் கொண்டுவந்து
அதின் மாம்சத்தைப் பரிசுத்தமான இடத்
32 தில் வேகவைக்கவேண்டும். அந்தக் கடா
வின் மாம்சத்தையும் கூடையிலிருக்கிற
அப்பத்தையும் ஆரோனும் அவன் குமார
ரும் தரிசனக் கூடாரத்தின் வாசலிலே
33 புசிக்கவேண்டும். அவர்களைப் பிரதிஷ்டை
பண்ணிப் பரிசுத்தமாக்கும்படி பாவநிவா
ரணபலியாகச் செலுத்தினவைகளை அவர்
களே புசிக்கவேண்டும்; அந்நியனோ அவை
களைப் புசிக்கக்கூடாது; அவைகள் பரிசுத்த
மானவைகள். 34 பிரதிஷ்டை மாம்சத்திலும்
அப்பத்திலும் ஏதாகிலும் விடியற்காலமட்
டும் மீந்திருந்தால் அதை அக்கினியாலே
சுட்டெரிக்கவேண்டும்; அதைப் புசிக்கக்
கூடாது, அது பரிசுத்தமானது.

35 இப்படிப் பிரகாரமாக நான் உனக்குக்
கட்டளையிட்ட எல்லாவற்றின்படியேயும் ஏ

ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் செய்து முடி; ஏழுநாளாக நீ அவர்களைப் பிர
36 திஷ்டைபண்ணு. பாவநிவாரணபலியாகிய காளையை ஒவ்வொரு நாளிலும் பிராயச்சித்தபலியாகச் செலுத்து; பலிபீடத்துக்காகப் பிராயச்சித்தம் செய்கிறபோது அந்தப் பலிபீடத்தைச் சுத்திசெய்வாய்; அது பரிசுத்தமாகும்படி அதை அபிஷேகம் பண்ண
37 வேண்டும். ஏழுநாளாகப் பலிபீடத்திற்கென்று பிராயச்சித்தஞ்செய்து அது பரிசுத்தமாகும்படி செய்யவேண்டும்; பலிபீடம் மகா பரிசுத்தமாயிருக்கும்; பலிபீடத்தைத் தொடுகிறதெல்லாம் பரிசுத்தமாகும்.

38 பலிபீடத்தின்மேல் இடைவிடாமல் ஒவ்வொரு நாளிலும் நீ பலியிடவேண்டியவைகள் ஒருவயதான இரண்டு ஆட்டுக்குட்டி
39 களே. ஒரு ஆட்டுக்குட்டியைக் காலையிலும் ஒரு ஆட்டுக்குட்டியை மாலையிலும்
40 பலியிடவேண்டும். ஒரு மரக்காலிலே பத்திலொரு பங்கானதும் இடித்துப் பிழிந்த காற்படி எண்ணெயிலே பிசைந்ததுமாகிய மெல்லிய மாவையும் பானபலியாகக் காற்படி திராட்சரசத்தையும் ஒரு ஆட்டுக்குட்டி
41 யோடு படைக்கவேண்டும். மற்ற ஆட்டுக்குட்டியை மாலையிலே பலியிட்டுக் காலையிலே செலுத்தின போஜனபலியையும் பான பலியையும்போலவே அதை யெகோவாவுக்குச் சுகந்த நிவேதனமாகப் படைக்கவேண்
42 டும். உன்னோடு பேசும்படி நான் உங்களுக்குத் தரிசனமாகும் இடமாகிய தரிசனக் கூடாரத்தின் வாசலில், யெகோவாவின் சந்நிதியிலே, உங்கள் தலைமுறைதோறும் செலுத்தப்படவேண்டிய நித்திய தகனபலி
43 இதுவே. அவ்விடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்குத் தரிசனமாவேன்; அது என்
44 மகிமையினால் பரிசுத்தமாகும். தரிசனக் கூடாரத்தையும் பலிபீடத்தையும் நான் பரிசுத்தமாக்குவேன்; எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி ஆரோனையும் அவன்
45 குமாரரையும் பரிசுத்தமாக்குவேன்; இஸ்ரவேல்புத்திரரின் நடுவே நான் வாசம்பண்ணுவேன், அவர்களுக்குக் கடவுளாயிருப்பேன்.
46 அவர்கள் நடுவே வாசம்பண்ணும்படி அவர்களை எகிப்துதேசத்திலிருந்து கொண்டு வந்த நானே தங்கள் கடவுளாகிய யெகோவா என்று அவர்கள் அறிந்துகொள்வார்கள்; நானே அவர்கள் கடவுளாகிய யெகோவா.

**30** தூபங்காட்டுகிறதற்கு ஒரு தூபபீடத்தையும் செய்துமுடி; அதை வாகைமரத்தி
2 னாலே செய்யவேண்டும். அதன் நீளம் ஒரு முழம், அதன் அகலம் ஒரு முழம், அது சதுரமாயிருக்கவேண்டும்; அதன் உயரம் இரண்டு முழம். அதின் கொம்புகள் அதனோடே ஏகவேலையாயிருக்கவேண்டும். அதின் மேற்புறத்தையும் சுற்றுப் 3
புறத்தையும் அதின் கொம்புகளையும் பசும்பொன் தகட்டால் மூடிச் சுற்றிலும் அதற்குப் பொன்விளிம்பைச் செய்துவை. அந்த 4
விளிம்பின் கீழே அதின் இரண்டு பக்கங்களிலும், அவைகளிலுள்ள இரண்டு சட்டங்களிலேயும், இரண்டு பொன்வளையங்களைச் செய்துவைக்கவேண்டும்; அதைச் சுமக்கும் தண்டாயங்களுக்கு இவை இடமாகும். அந்தத் தண்டாயங்களையும் வாகைமரத் 5
தினால் செய்து அவைகளையும் பொன்தகட்டால் மூடவேண்டும். சாட்சியப்பெட்ட 6
கத்தின் அருகேயிருக்கும் திரைச்சீலைக்கு எதிரே, நான் உனக்குத் தரிசனமாகும் இடமாகிய சாட்சியப் பெட்டகத்தின்மேலுள்ள கிருபாசனத்துக்கு எதிரிலேயே, அதை வைக்கவேண்டும். ஆரோன் அதின்மேல் 7
சுகந்ததூபங் காட்டவேண்டும்; காலைதோறும் விளக்குகளை விளக்கும்போது அதின்மேல் தூபங்காட்டவேண்டும்; மாலை 8
யில் விளக்கேற்றும்போது தூபங்காட்டவேண்டும். தலைமுறை தலைமுறையாக நீங்கள் யெகோவாவின் சந்நிதியில் காட்டவேண்டிய நித்திய தூபம் இதுவே. அதின் 9
மேல் அந்நிய தூபத்தையாகிலும் தகனபலியையாகிலும் போஜனபலியையாகிலும் படைக்கவேண்டாம்; பானபலியையும் அதின்மேல் ஊற்றவேண்டாம். வருஷத் 10
தில் ஒருமுறை ஆரோன் அதின் கொம்புகளுக்காகப் பிராயச்சித்தம்செய்யவேண்டும், தலைமுறை தலைமுறையாக வருஷத்திற்கு ஒருமுறை பாவநிவாரணபலியின் இரத்தத்தினால் அதற்குப் பிராயச்சித்தம் செய்யவேண்டும்; இது யெகோவாவுக்கு மகா பரிசுத்தமானது.

பின்னும் யெகோவா மோசேயி 11, 12
னிடம்: நீ இஸ்ரவேல்புத்திரரில் கணக்கிலே சேர்க்கப்படுகிறவர்களை எண்ணும்போது, எண்ணுவதினால் அவர்களுக்குள் ஒரு வாதையும் உண்டாகாதபடி, அவர்களில் ஒவ்வொருவனும் எண்ணப்படும் சமயத்தில் தன்தன் உயிருக்காக யெகோவாவுக்கு மீட்கும் காணிக்கையைக் கொடுக்கவேண்டும். எண்ணப்படுகிறவர்களின் 13
தொகையிலே சேருகிற ஒவ்வொருவனும் பரிசுத்தஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படி அரைச்சேக்கல் கொடுக்கவேண்டும்; ஒரு சேக்கலுக்கு இருபது தேரா; யெகோவாவுக்குச் செலுத்தப்படுவது அரைசேக்கல்.

14 எண்ணப்படுகிறவர்களின் தொகையிலே சேருகிற இருபது வயதுமுதற்கொண்டு அதற்கு மேற்பட்ட ஒவ்வொருவனும் அந்தக் காணிக்கையை யெகோவாவுக்குச்
15 செலுத்தவேண்டும். உங்கள் உயிருக்காகப் பிராயச்சித்தம் செய்யும்படி நீங்கள் யெகோவாவுக்குக் காணிக்கை செலுத்தும்போது ஐசுவரியவான் அரைச்சேக்கலுக்கு அதிகமாகவும் தரித்திரன் அதற்குக் குறை
16 வாகவும் கொடுக்கவேண்டாம். அந்தப் பிராயச்சித்த பணத்தை நீ இஸ்ரவேல்புத்திரர் கையில் வாங்கி அதைத் தரிசனக்கூடாரத்தின் திருப்பணிக்கெனக் கொடுக்கவேண்டும்; உங்கள் உயிருக்காகப் பிராயச்சித்தம் செய்வதற்கென இது இஸ்ரவேல் புத்திரருக்கு யெகோவாவின் சந்நிதியில் ஞாபகக் குறியாகும் என்றார்.

17, 18 பின்னும் யெகோவா மோசேயினிடம்: கழுவுகிறதற்குச் செம்பினால் ஒரு தொட்டியையும் செம்பினால் அதன் பாதத்தையும் செய்து அதைத் தரிசனக்கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே வைத்து
19 அதிலே தண்ணீர் வார்த்துவைக்கவேண்டும். அதிலிருந்து மொண்டு ஆரோனும் அவன்
20 குமாரரும் தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் கழுவவேண்டும். அவர்கள் தரிசனக்கூடாரத்தினுள் செல்லும்போதும் யெகோவாவுக்கு அக்கினி நிவேதனஞ் செய்ய பலிபீடத்தினிடத்தில் ஆராதனை செய்ய வரும்போதும், அவர்கள் சாகாத படி தண்ணீரினால் தங்களைக் கழுவிக்
21 கொள்ளவேண்டும். அவர்கள் சாகாதபடி தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் கழுவிக்கொள்ளவேண்டும்; தலைமுறை தலைமுறையாக இது அவர்களுக்கு, அவனுக்கும் அவன் சந்ததியாருக்கும், நித்திய நியமமாகும் என்றார்.

22, 23 யெகோவா மறுபடியும் மோசேயினிடம்: மேன்மையான சுகந்தவர்க்கங்களை எடுத்துக்கொள்; சுத்தமான வெள்ளைப் போளத்தில் பரிசுத்தஸ்தலத்தின் சேக்கலின் படி ஐந்நூறு சேக்கல் எடையும், சுகந்த கருவாப்பட்டையிலே அதில் பாதியாகிய இருநூற்றுஐம்பது சேக்கல் எடையும், சுகந்தவசம்பில் இருநூற்றுஐம்பது சேக்கல்
24 எடையும், இலவங்கப்பட்டையில் ஐந்நூறு சேக்கல் எடையும், ஒலிவ எண்ணெயில்
25 ஒரு குடம் எண்ணெயும் எடுத்து, பரிமள தைலக்காரன் செய்வதுபோல இவற்றைக் கலந்து பரிமள தைலமாகிய பரிசுத்த மான அபிஷேகதைலத்தைக் கூட்டு.
26 அது பரிசுத்த அபிஷேகதைலமாகும்,
அதைக்கொண்டு தரிசனக்கூடாரத்தையும் சாட்சியப்பெட்டகத்தையும் | மேசையை 27
யும் அதின் பணிமுட்டுகள் எல்லாவற்றை யும் குத்துவிளக்கையும் அதின் கருவிகளை யும் தூபபீடத்தையும் | தகனபலிபீடத் 28
தையும் அதின் பணிமுட்டுகள் எல்லாவற் றையும் தொட்டியையும் அதின் பாதத்தை யும் அபிஷேகம் பண்ணவேண்டும். அவை 29
கள் மகா பரிசுத்தமாயிருக்கும்படி அவை களைப் பிரதிஷ்டைபண்ணு; அவற்றைத் தொடுகிறதெல்லாம் பரிசுத்தமாகும். ஆரோ 30
னும் அவன் குமாரரும் எனக்கு ஆசாரிய ஊழியம்செய்யும்படி நீ அவர்களை அபிஷேகம்பண்ணி அவர்களைப் பிரதிஷ்டை செய். இஸ்ரவேல் புத்திரரோடே நீ பேசி: 31
தலைமுறை தலைமுறையாக இது எனக்கே யுரிய பரிசுத்த அபிஷேகதைலமாம். இது 32
மனிதருடைய சரீரத்தின்மேல் வார்க்கப்பட லாகாது; இது செய்யப்பட்ட அதே முறை யின்படி அவர்கள் வேறொரு தைலத்தைச் செய்யவுங்கூடாது; இது பரிசுத்தமானது, இது உங்களுக்குப் பரிசுத்தமாயிருக்க வேண்டும். இந்த முறையின்படியே 33
தைலங்கூட்டுகிறவனும் அதில் எடுத்து அந்நியன்மேல் வார்க்கிறவனும் தன் ஜனத்தி லிருந்து நீக்கப்பட்டுப்போகவேண்டும் என்று சொல் என்றார்.

பின்னும் யெகோவா மோசேயினிடம்: 34
சுத்தவெள்ளைப்போளமும் குங்கிலியமும் கல்பான்பிசினுமாகிய கந்தவர்க்கங்களையும் சுத்தமான சாம்பிராணியையும் நீ சமநிறை யாக எடுத்துத் | தூபவர்க்கஞ்செய்யவேண் 35
டும்; பரிமளக்காரன் செய்வதுபோலப் பரிமளமேற்றித் தூய்புரவும் பரிசுத்தமு மான சுகந்தவர்க்கமாகச் செய்யவேண்டும். அதிலே கொஞ்சம் எடுத்துப் பொடியாக 36
இடித்து நான் உனக்குத் தரிசனமாகும் தரிசனக்கூடாரத்திலிருக்கும் சாட்சிய சந் நிதியில் வைக்கவேண்டும்; அது உங்களுக்கு மகா பரிசுத்தமாயிருக்கும். இந்தத் தூப 37
வர்க்கத்தை நீ செய்யவேண்டிய முறையின் படி உங்களுக்காகச் செய்துகொள்ளலாகாது; இது யெகோவாவுக்கென்றே உனக் குப் பரிசுத்தமாயிருக்கவேண்டும். முகரு 38
கிறதற்காக இதற்கு ஒப்பானதைச் செய் கிறவன் தன் ஜனத்திலிருந்து நீக்கப்பட்டுப் போகவேண்டும் என்றார்.

அதன்பின் யெகோவா மோசேயினிடம்: **31**
இதோ, நான் யூதாவின் கோத்திரத்தில் 2
கூருடைய மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பேர்சொல்லி அழைத்தேன். சகலவித வேலைகளையும் செய்ய 3

தற்கு வேண்டிய அறிவும் விவேகமும் புத்தி
யும் அவனுக்கு உண்டாகும்படி அவனைக்
4 கடவுளின் ஆவியால் நிரப்பினேன். அவன்
விநோதமான வேலைகளை யூகித்துப் பொன்,
வெள்ளி, செம்பு இவைகளில் செய்யும்
5 வேலைகளையும் | இரத்தினங்களை முத்திரை
வெட்டாக வெட்டிப் பதிக்கிற வேலைக
யும் மரத்தில் செய்யும் சித்திரவேலைகளையும்
மற்றும் சகலவித வேலைகளையும் செய்யும்
படி அவனை ஆவியினால் நிரப்பினேன்.
6 மேலும், தாண் கோத்திரத்திலுள்ள அகிசா
மாகின் குமாரனாகிய ஒகோலியாபையும்
அவனோடே நியமித்தேன். அன்றியும்
சகல அறிவாளிகளுடைய இருதயத்திலும்
விவேகத்தை அருளினேன்; நான் உனக்குக்
கட்டளையிட்ட யாவையும் அவர்கள்
7 செய்துமுடிப்பார்கள். தரிசனக்கூடாரம்,
சாட்சியப்பெட்டகம், அதின்மேலுள்ள கிரு
பாசனம், கூடாரத்திலுள்ள சகல பணி
8 முட்டுகள், | மேசை, அதின் பணிமுட்டு
கள், பசும்பொன் குத்துவிளக்கு, அதின்
9 சகல கருவிகள், தூபபீடம், | தகனபலி
பீடம், அதின் சகல பணிமுட்டுகள்,
10 தொட்டி, அதின் பாதம், | அலங்கார
வஸ்திரங்கள், ஆசாரிய ஊழியம் செய்வதற்
கென ஆசாரியனாகிய ஆரோனுக்குத் திரு
உடைகளும் அவன் குமாரருக்கு வஸ்திரங்
11 களும், | அபிஷேகதைலம், பரிசுத்த
ஸ்தலத்துக்குரிய சுகந்தவர்க்கங்களாகிய
தூபவர்க்கம் ஆகிய இவைகளை நான்
உனக்குக் கட்டளையிட்ட யாவற்றின்படியே
யும் அவர்கள் செய்யவேண்டும் என்றார்.
12 மேலும் யெகோவா மோசேயினிடம்: நீ
இஸ்ரவேல் புத்திரரைப் பார்த்து, நீங்கள்
13 என் ஓய்வுநாட்களை ஆசரிக்கவேவேண்டும்;
உங்களைப் பரிசுத்தப்படுத்துகிற யெகோவா
நான் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளும்
படி இது தலைமுறை தலைமுறையாக எனக்
கும் உங்களுக்கும் நடுவே அடையாளமா
14 யிருக்கும். ஆகவே நீங்கள் ஓய்வுநாளை
ஆசரிக்கவேண்டும்; அது உங்களுக்குப்
பரிசுத்தமானது; அதைப் பரிசுத்தமற்றதாக
எண்ணி நடக்கிறவன் கொல்லப்படவேண்
டும். அதிலே வேலைசெய்கிற எவனும்
தன் ஜனத்தின் நடுவிலிருந்து நீக்கப்பட
15 வேண்டும். வேலை செய்வது ஆறுநாளுமே;
ஏழாம்நாளோ வேலை நீங்கி ஓய்ந்திருக்கும்
ஓய்வுநாள்; அது யெகோவாவுக்குப் பரி
சுத்தமானது; ஓய்வுநாளில் வேலைசெய்கிற
எவனும் கொல்லப்படவேண்டும்.
16 ஆகவே இஸ்ரவேல் புத்திரர் தலைமுறை
தலைமுறையாக ஓய்வுநாளை நித்திய உட
படிக்கையாக ஆசரிக்கும்படி அதைக்
கைக்கொள்ளவேண்டும். அது என்றென்
17 றைக்கும் எனக்கும் இஸ்ரவேல் புத்திரருக்
கும் நடுவே அடையாளமாயிருக்கும்; ஆறு
நாளைக்குள்ளே யெகோவா வானத்தையும்
பூமியையும் படைத்து ஏழாம் நாளிலே
ஓய்ந்திருந்து பூரித்தார் என்றார்.
சீனாய்மலையில் அவர் மோசேயோடே
18 பேசிமுடித்தபின், கடவுளின் விரலினால்
எழுதப்பட்ட கற்பலகைகளாகிய சாட்சி
யின் இரண்டு பலகைகளையும் அவனிடம்
கொடுத்தார்.

32 மோசே மலையிலிருந்து இறங்கிவர
தாமதிக்கிறதை ஜனங்கள் கண்டபோது
அவர்கள் ஆரோனிடத்தில் கூட்டங்கூடி
அவனைப் பார்த்து: எகிப்துதேசத்திலிருந்து
எங்களை அழைத்துவந்த மனுஷனுக்கு,
அந்த மோசே என்பவனுக்கு, என்ன சம்ப
விக்கதோ அறியோம்; நீர் எழுந்து எங்க
ளுக்கு, முன்செல்லும் தெய்வம் ஒன்றை எங்
களுக்காக உண்டாக்கும் என்றார்கள். 2
அதற்கு ஆரோன், உங்கள் மனைவிகள் குமா
ரர் குமாரத்திகளின் காதுகளிலிருக்கிற
பொன்னணிகளைக் கழற்றி என்னிடம்
கொண்டுவாருங்கள் என்று சொல்ல | 3
ஜனங்கள் எல்லாரும் தங்கள் காதுகளி
லிருந்த பொன்னணிகளைக் கழற்றி ஆரோ
னிடம் கொண்டுவந்தார்கள். அவன்
அந்தப் பொன்னை அவர்கள் கையி 4
லிருந்து வாங்கிச் சித்தக்கருவியினால் கருப்
பிடித்து ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்
தான். அது கண்ட அவர்கள், இஸ்ர
வேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து
அழைத்துவந்த உங்கள் தெய்வம் இதுவே
என்றார்கள். ஆரோன் அதைப் பார்க் 5
கவே, அதற்கு ஒரு பலிபீடம் கட்டி,
நாளைக்கு யெகோவாவுக்கு உற்சவம் என்று
கூறினான். மறுநாள் அதிகாலையிலே அவர் 6
கள் எழுந்து தகனபலிகளையிட்டுச் சமா
தானபலிகளைச் செலுத்தினார்கள்; பின்பு
ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்
கார்ந்து கூத்தாட எழுந்தார்கள்.
அப்பொழுது யெகோவா மோசேயி 7
னிடம்: நீ இறங்கிப்போ, எகிப்துதேசத்தி
லிருந்து நீ அழைத்துவந்த உன் ஜனங்கள்
தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள். அவர் 8
களுக்கு நான் விதித்த வழியை அவர்கள்
சீக்கிரமாய் விட்டுவிலகினார்கள்; அவர்கள்
தங்களுக்கு ஒரு வார்ப்புக் கன்றுக்குட்டி
யைச் செய்து அதைப் பணிந்துகொண்டு
அதற்குப் பலியிட்டு: இஸ்ரவேலரே, உங்
களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்து

வந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே
9 என்று சொன்னார்கள் என்றார். பின்னும்
யெகோவா மோசேயினிடம்: இந்த
ஜனத்தை நான் பார்த்தேன்; இது வணங்
10 காக் கழுத்துள்ள ஜனம்; | இப்பொழுதும்
நீ என்னை விட்டுவிடு; நான் இதை அழித்
துப்போடும்படி இதன்மேல் என் கோபம்
பற்றி எரியட்டும், உன்னை ஒரு பெரிய ஜாதி
11 யாக்குவேன் என்றார். மோசே தன் கடவு
ளாகிய யெகோவாவை நோக்கிக் கெஞ்சி:
யெகோவாவே, தேவரீர் வல்லமையினாலும்
புஜபலத்தினாலும் எகிப்துதேசத்திலிருந்து
கொண்டுவந்த உமது ஜனத்துக்கு விரோத
12 மாக உமது கோபம் மூளுவதென்ன? மலை
களிலே அவர்களைக் கொன்றுபோடவும்
பூமியின்மேல் இராதபடி அவர்களை நிர்மூல
மாக்கவும் அவர்களுக்குத் தீங்கு செய்யும்
பொருட்டே அவர்களைக் கொண்டுபோனார்
என்று எகிப்தியர் சொல்லுவானேன்? உமது
கோபத்தின் உக்கிரத்தைவிட்டு மாறி மனஸ்
தாபங்கொண்டவராய், உமது ஜனத்திற்கு
விரோதமான தீமையைச் செய்யாதுவிடும்.
13 உமது அடியாராகிய ஆபிரகாமையும் ஈசாக்
கையும் இஸ்ரவேலையும் நினைத்தருளும்;
உங்கள் சந்ததியை வானத்து நக்ஷத்திரங்
களைப்போலப் பெருகப்பண்ணி நான்
சொன்ன இந்தத் தேசம் முழுவதையும்
உங்கள் சந்ததியார் என்றென்றைக்கும்
சுதந்தரித்துக்கொள்ளும்படி அவர்களுக்குக்
கொடுப்பேன் என்று உம்மைக்கொண்டே
அவர்களுக்கு ஆணையிட்டுச் சொன்னீரே
14 என்று பிரார்த்தித்து நின்றார். யெகோவா
அப்படியே மனஸ்தாபப்பட்டுத் தமது
ஜனத்திற்குச் செய்வதாகச் சொன்ன தீமை
யைச் செய்யாதிருந்தார்.

15 பின்பு மோசே திரும்பி மலையிலிருந்து
இறங்கினார்; சாட்சியப்பலகைகள் இரண்
டும் அவன் கையில் இருந்தன; அந்தப்
பலகைகள் அந்தப்பக்கமும் இந்தப்பக்கமு
மாக இருபுறமும் எழுதப்பட்டிருந்தன.
16 அந்தப் பலகைகளைச் செய்தவர் கடவுள்,
அவைகளிலே பதிந்திருந்த எழுத்துக்களை
17 எழுதியவரும் கடவுளே. ஜனங்களின்
ஆரவார இரைச்சலை யோசுவா கேட்டு,
பாளயத்தில் யுத்த இரைச்சல் கேட்கிறதே
என்று மோசேயினிடம் சொன்னான்.
18 மோசேயோ: அது ஜயதொனியின் இரைச்
சலுமல்ல அபஜயதொனியின் இரைச்ச
லுமல்ல, எனக்குக் கேட்பது பாடலின்
19 தொனியே என்றான். மோசே பாளயத்
தைக் கிட்டிவரவே, அந்தக் கன்றுக்குட்டி
யையும் நடனத்தையும் கண்டு கோப
மூண்டவனாகித் தன் கையிலிருந்த பலகை
களை மலையின் அடியிலே எறிந்து உடைத்
துப்போட்டான். அவர்கள் செய்திருந்த 20
கன்றுக்குட்டியை எடுத்து நெருப்பிலே
சுட்டெரித்து அதைப் பொடியாக அரைத்
துத் தண்ணீரின்மேல் தூவி அந்தத் தண்
ணீரை இஸ்ரவேல்புத்திரர் குடிக்கும்படி
செய்தான். இதைச் செய்தபின் மோசே 21
ஆரோனின் முகமாய்த் திரும்பி: நீ இந்த
ஜனங்கள்மேல் இந்தப் பெரும்பாதகத்தைச்
சுமத்துகிறதற்கு இவர்கள் உனக்குச் செய்த
தென்ன என்று கேட்க | ஆரோன் என் 22
ஆண்டவனுக்குக் கோபம் மூளவேண்டாம்,
இது தீமையிலேயே நிலைத்திருக்கிற ஜன
மென்பது உமக்குத் தெரியுமே. இவர்கள் 23
என்னோடு பேசி, எங்களுக்குமுன் செல்
லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டாக்
கும்; எகிப்துதேசத்திலிருந்து எங்களை
அழைத்துவந்த மனுஷனுக்கு, அந்த
மோசே என்பவனுக்கு, என்ன சம்பவித்
ததோ அறியோம் என்று சொன்னார்கள்.
அதற்கு நான், பொன்னை உடையவர்கள் 24
எவர்களோ அவர்கள் அதைக் கழற்றித்
தரவேண்டும் என்றேன்; அவர்கள் அப்
படியே செய்தார்கள், அதை நான் அக்கினி
யிலே போட்டேன், இந்தக் கன்றுக்குட்டி
வந்தது என்றான்.

தங்கள் பகைவர் நடுவில் பரிகாசப்பேச் 25
சுக்கு இடமுண்டாவதற்கேதுவாய் ஆரோன்
ஜனங்களை சுயேச்சையாய் நடக்கவிட்டிருந்
தான். அவர்கள் சுயேச்சையாய் நடப்
பதை மோசே கண்டு | பாளயத்தின் வாச 26
லிலே நின்று: யார் யார் யெகோவாவின்
பட்சம்? வாருங்கள் என்னிடம் என்று
கூப்பிட்டான். லேவியின் புத்திரர் எல்லா
ரும் அவனிடம் கூடிவந்தார்கள். அவன் 27
அவர்களைப் பார்த்து: இஸ்ரவேலின் கடவு
ளாகிய யெகோவா சொல்லுகிறதைக்
கேளுங்கள், உங்களில் ஒவ்வொருவனும்
தன் தன் பட்டயத்தைத் தன் தன் அரை
யிலே கட்டிக்கொண்டு பாளயமெங்கும்
திரிந்து வாசலுக்கு வாசல் போய் ஒவ்வொரு
வனும் தன் தன் சகோதரனையும் ஒவ்வொரு
வனும் தன் தன் சிநேகிதனையும் ஒவ்வொரு
வனும் தன் தன் அயலானையும் கொன்று
போடவேண்டுமென்று சொல்லுகிறார் என்
றான். லேவியின் புத்திரர் மோசே சொன்ன 28
படியே செய்தார்கள்; அந்நாளிலே ஜனங்
களில் ஏறக்குறைய மூவாயிரம்பேர் விழுந்
தார்கள். யெகோவா இன்றைக்கு உங்க 29
ளுக்கு ஆசீர்வாதம் அளிக்கும்படி இன்
றைக்கு நீங்கள் அவனவன் தன் தன் மக

னென்றும் சகோதரனென்றும் பாராமல் நடந்து யெகோவாவுக்கு உங்களைப் பிரதிஷ்டைபண்ணுங்கள் என்று மோசே
30 சொல்லியிருந்தான். மறுநாளில் மோசே ஜனங்களை பார்த்து: நீங்கள் மகா பெரிய பாவம் செய்தீர்கள்; உங்கள் பாவத்தினிமித்தம் பிராயச்சித்தம் செய்யக்கூடுமோ என்று அறிய இப்பொழுதும் நான் யெகோவாவினிடம் ஏறிப்போகிறேன் என்றான்.
31 அப்படியே மோசே யெகோவாவினிடம் திரும்பிப்போய்: ஐயோ, இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங்களை உண்டாக்கி மகா பெரிய பாவம் செய்
32 திருக்கிறார்கள். இப்பொழுதும் தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீராஞல்—; இல்லாவிட்டால் நீர் எழுதின உமது புஸ்தகத்திலிருந்து என் பேரைக்
33 கிறுக்கிப்போடும் என்றான். அதற்கு யெகோவா மோசேயினிடம்: எனக்கு விரோதமாய்ப் பாவம் செய்தவன் எவனை அவன் பேரையே என் புஸ்தகத்திலிருந்து
34 கிறுக்கிப்போடுவேன். இப்பொழுது நீ போய் நான் சொன்ன இடத்துக்கு ஜனங்களை வழிநடத்து; என் தூதனானவர் உனக்கு முன் செல்லுவார்; நான் விசாரிக்கும் நாளிலோ அவர்கள் பாவத்திற்குத் தக்கபடி
35 அவர்களை விசாரிப்பேன் என்றார். ஆரோன் செய்த கன்றுக்குட்டியை ஜனங்கள் பூஜித்த நிமித்தம் யெகோவா அவர்களை உபாதித்தார்.

**33** யெகோவா மோசேயினிடம்: நீயும் எகிப்துதேசத்திலிருந்து நீ அழைத்துவந்த ஜனமும் இவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, உன் சந்ததிக்குக் கொடுப்பேன் என்று நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்
2 கோபுக்கும் ஆணையிட்ட தேசத்துக்குப் போங்கள். நான் ஒரு தூதனை உங்களுக்குமுன்பாக அனுப்பிக் கானானியனையும் எமோரியனையும் ஏத்தியனையும் பரிசேனையும் ஏவியனையும் எபூசியனையும்
3 தரத்திவிடுவேன். அது பாலும் தேனும் ஒடுகிற தேசம். நானே உங்கள்நடுவே செல்லமாட்டேன், சென்றால் வழியிலே உங்களை நிர்மூலமாக்க நேரிடும்; நீங்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள் என்றார்.
4 துர்ச்செய்தியான இவ்வார்த்தைகளை ஜனங்கள் கேட்டபோது அவர்கள் துக்கங்கொண்டாடினார்கள்; ஒருவரும் தங்கள் ஆபரணங்
5 களை அணிந்துகொள்ளவில்லை. இப்படியே யெகோவா மோசேயினிடம் சொல்லியிருந்தார்; நீங்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள், நான் ஒரு நிமிஷம் உங்கள் நடுவில் வருவேனாகில் உங்களைச் சங்கரிக்க நேரிடும்; ஆகவே நீங்கள் போட்டிருக்கிற உங்கள் ஆபரணங்களைக் கழற்றிவிடுங்கள்; நான் உங்களுக்குச் செய்யவேண்டியதை அதினாலே அறிவேன் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச்சொல் என்று சொல்லியிருந்தார். அந்தப்படியே இஸ்ரவேல்புத்திரர் 6
ஓரேப் மலையருகிலிருந்தே தங்கள் ஆபரணங்களைக் கழற்றியிருந்தார்கள்.

மோசே கூடாரத்தை எடுத்து அதைப் 7
பாளையத்துக்கு வெளியே தூரமாகவே போட்டுவருவான்; அதற்கு அவன் இட்ட பேர் தரிசனக்கூடாரம்; யெகோவாவைத் தேடும் யாவரும் பாளையத்துக்கு வெளியே தரிசனக்கூடாரத்துக்குப் போவார்கள்.
மோசே கூடாரத்துக்குப் போகும்போதெல் 8
லாம் ஜனங்கள் எல்லாரும் எழுந்திருந்து தங்கள் தங்கள் கூடாரவாசலிலே நின்று அவன் கூடாரத்தினுள் செல்லுமட்டும் அவனைப் பார்த்துக்கொண்டேயிருப்பார்கள்.
மோசே கூடாரத்தினுள் செல்கையில் மேக 9
ஸ்தம்பம் இறங்கிக் கூடாரவாசலில் நிற்கும்; யெகோவா மோசேயோடு பேசுவார். ஜனங் 10
கள் எல்லாரும் மேகஸ்தம்பம் கூடாரவாசலில் நிற்பதைக் காண்பார்கள்; காணவே, அவர்கள் எல்லாரும் எழுந்திருந்து தங்கள் தங்கள் கூடாரவாசலில் பணிந்துகொள்வார்கள். ஒருவன் தன் தோழனோடு பேசு 11
வதுபோல யெகோவா மோசேயோடு முகமுகமாய்ப் பேசுவார்; பின்பு அவன் பாளையத்துக்குத் திரும்புவான்; தூனின் குமாரனாகிய யோசுவா என்னும் வாலிபன் தரிசனக்கூடாரத்தை விட்டுப் பிரியாதிருப்பான்; இவன் மோசேக்குத் துணையாயிருந்தவன்.

மோசே யெகோவாவினிடம்: தேவரீர் 12
இந்த ஜனங்களை அழைத்துக்கொண்டுபோ என்று சொன்னீர்; என்னோடுகூட இன்னாரை அனுப்புவேன் என்பதையோ நீர் எனக்கு அறிவிக்கவில்லை; உன்னைப்பேர் சொல்லிக் கூப்பிட்டு அறிவேன் என்று சொன்னவரும் நீர்; என் கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது என்றும் தேவரீர் சொல்லியிருக்கிறீரே. இப்படி உமது 13
கண்களில் எனக்குக் கிருபை கிடைத்தேயானால் உமது வழியை எனக்கு அறிவித்தருளும்; உமது கண்களில் கிருபை கிடைப்பதற்கேதுவாய் நான் உம்மை அறிந்து கொள்ளச் செய்யும்; இந்த ஜாதியார் உமது ஜனமென்பதை மனதில் வைத்தருளும் என்றான். அதற்கு அவர்: என் சமுகம் 14
கூடவே வரும். நான் உனக்கு இளைப்

பாறுதல் தருவேன் என்று சொன்னார்.
15 சொல்லவே அவன் அவரிடம்: உம்முடைய
திருச்சமுகம் கூடவே வந்தாலொழிய எங்
களை இவ்விடத்திலிருந்து கொண்டுபோகா
16 திரும். எனக்கும் உமது ஜனங்களுக்கும்
உமது கண்களிலே கிருபை கிடைத்ததென்
பது எப்படி விளங்கும்; நீர் எங்களோடு
வருவதினால் அல்லவா? இப்படியாக நானும்
உமது ஜனமும் பூமியின்மேலுள்ள சகல
ஜனங்களிலிருந்தும் பிரித்தெடுக்கப்பட்ட
வர்கள் என்பது விளங்கும் என்றான்.
17 அப்பொழுது யெகோவா மோசேயி
னிடம்: நீ சொன்ன இந்த வார்த்தையின்
படியும் செய்வேன்: என் கண்களில் உனக்
குக் கிருபை கிடைத்ததே; உன்னைப் பேர்
சொல்லிக் கூப்பிட்டு அறிவேன் என்றார்.
18 அதைக் கேட்கவே அவன்: உமது மகி
மையை எனக்குக் காண்பித்தருளும் என |
19 அவர்: என் தயாளத்தை எல்லாம் நான்
உனக்கு முன்பாகக் கடந்துபோகப் பண்ணி
யெகோவாவின் நாமத்தை உனக்கு முன்
பாகச் சத்தமிட்டுக்கூறுவேன்; எவன்மேல்
இரக்கமாயிருக்கிறேனோ அவன்மேல்
இரக்கமாயிருப்பேன்; எவன்மேல் உருக்க
மாயிருக்கிறேனோ அவன்மேல் உருக்கமா
20 யிருப்பேன் என்று சொல்லி | நீ என்
முகத்தைக் காணமுடியாது, ஒரு மனுஷ
னும் என்னைக் கண்டு உயிரோடிரான் என்
21 றார். பின்னும் யெகோவா: இதோ,
என்னண்டையில் ஒரு இடம் உண்டு;
22 அங்கே நீ கன்மலையில் நில்லு. என் மகிமை
கடந்துபோகும்போது நான் உன்னை அந்தக்
கன்மலையின் குகையிலே வைத்து நான்
கடந்துபோகுமட்டும் என் கரத்தினால்
உன்னை மூடுவேன்; பின்பு என் கரத்தை
23 எடுப்பேன்; எடுக்கவே, என் பின்பக்கத்தை
நீ காண்பாய்; என் முகத்தையோ காண்
பதேயில்லை என்றார்.
**34** யெகோவா மோசேயினிடம்: முந்தின
கற்பலகைகளைப்போன்ற இரண்டு கற்பல
கைகளை வெட்டிக்கொள்; நீ உடைத்துப்
போட்ட முந்தின பலகைகளிலிருந்த வார்த்
2 தைகளை அவைகளில் எழுதுவேன். விடியற்
காலத்தில் நீ ஆயத்தமாகிக் காலையிலேயே
சீனாய்மலையில் ஏறி அங்கே மலையின் உச்சி
3 யில் எனக்கென்று காத்து நில். உன்
னோடே ஒருவனும் அங்கே ஏறிவரக்
கூடாது; மலையிலெங்கும் ஒருவனும் காணப்
படவுங்கூடாது; இந்த மலைக்கு எதிராக
4 ஆடுமாடு மேயவுங்கூடாது என்றார். அப்
படியே மோசே முந்தின கற்பலகைகளைப்
போன்ற இரண்டு கற்பலகைகளை வெட்டிக்
கொண்டு அதிகாலமே எழுந்திருந்து
யெகோவா தனக்குக் கட்டளையிட்டபடியே
அவ்விரண்டு கற்பலகைகளையும் தன் கை
யிலே எடுத்துக்கொண்டு சீனாய்மலையில்
ஏறினான். யெகோவா ஒரு மேகத்தில் 5
இறங்கி அங்கே அவன் அருகே நின்று
யெகோவாவின் நாமத்தைச் சத்தமிட்டுக்
கூறினார். யெகோவா அவனுக்கு முன் 6
பாகக் கடந்துபோகையில் அவர்,
யெகோவா, யெகோவா என்று சத்தமிட்டுக்
கூறி, உருக்கமும் இரக்கமும் நீடிய சாந்த
மும் மிகுந்த கிருபையும் சத்தியமுமுள்ள
கடவுள்; ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக் 7
கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும்
மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்;
குற்றவாளியைக் குற்றமற்றவனாக ஒருக்
காலும் தீர்க்காதவர். பிதாக்களின் அக்கிர
மத்தைப் பிள்ளைகளிடத்திலும் பிள்ளைகளின்
பிள்ளைகளிடத்திலும் மூன்றும் நான்காம்
தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்று
கூறினார். மோசே விரைந்து தரைமட் 8
டும் குனிந்து பணிந்துகொண்டு: ஆண்ட 9
வரே, உமது கண்களில் எனக்குக் கிருபை
கிடைத்ததேயானால் எங்கள் நடுவில் ஆண்
டவர் எங்களோடு வந்தருளவேண்டும்;
இந்த ஜனம் வணங்காக் கழுத்துள்ள
ஜனமே. நீரோ எங்கள் அக்கிரமத்தையும்
எங்கள் பாவத்தையும் மன்னித்து எங்களை
உமக்குச் சுதந்தரமாக ஏற்றுக்கொள்ளும்
என்றான். அதற்கு அவர்: இதோ, நான் 10
ஒரு உடன்படிக்கை செய்கிறேன்; பூமி
யெங்கும் எந்த ஜாதிகளிடத்திலும் நான்
செய்யாத அதிசயங்களை உன் ஜனங்கள்
எல்லாருக்குமுன்பாகவும் செய்வேன்;
உன்னோடிருக்கிற ஜனமுழுவதும் யெகோ
வாவின் செயலைக்காணும்; உன்னோடிருந்து
நான் செய்யப்போகிற காரியம் பயங்கர
மானது என்றார்.
இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற 11
தைக் கைக்கொள். இதோ, எமோரியனை
யும் கானானியனையும் ஏத்தியனையும் பார
சீகனையும் ஏவியனையும் எபூசியனையும்
உனக்குமுன் இராதபடி துரத்திவிடுகிறேன்.
நீ போய்ச்சேருகிற தேசத்தின் குடிகளோடு 12
உடன்படிக்கைபண்ணாதே, எச்சரிக்கையா
யிருந்துகொள்; பண்ணினால் அது உன்
நடுவில் கண்ணியாகும். அவர்கள் பலி 13
பீடங்களை இடித்து அவர்கள் சிலைகளை
உடைத்து அவர்கள் மரச்சிலைகளை வெட்டிப்
போடுங்கள். அந்திய தேவர்களை நீ 14
பணிந்துகொள்ளவேண்டாம்; எரிச்சலுள்ள
வர் என்பது யெகோவாவின் நாமம்; அவர்

15 எரிச்சலுள்ள கடவுளே. அத்தேசத்துக்
குடிகளோடே உடன்படிக்கைபண்ணுதே,
அவர்கள் தங்கள் தேவர்களை வணங்கிச்
சோரம்போகிறவர்கள்; அவர்கள் தங்கள்
தேவர்களுக்குப் பலியிடுகையில் ஒருவன்
உன்னை அழைத்தால் நீ போய் அவன் பலி
16 யிட்டதிலே புசிக்கநேரிடும்; அவர்கள்
குமாரத்திகளில் உன் குமாரருக்குப் பெண்
கொள்ளநேரிடும்; அவர்கள் குமாரத்திகள்
தங்கள் தேவர்களை வணங்கிச் சோரம்
போவதுமல்லாமல் உன் குமாரரும் அவர்
கள் தேவர்களை வணங்கிச் சோரம்
17 போகும்படி செய்வார்கள். வார்ப்பிக்கப்
பட்ட தெய்வங்களை உங்களுக்குச் செய்து
18 கொள்ளவேண்டாம். புளிப்பில்லா அப்
பப்பண்டிகையை நீ ஆசரிக்கவேண்டும்;
நான் உனக்குக் கட்டளையிட்டபடியே,
ஆபீப்மாதத்தில் குறித்த காலத்திலே புளிப்
பில்லா அப்பத்தை ஏழுநாளளவும் புசித்து
வரவேண்டும்; ஆபீப்மாதத்திலே எகிப்தி
19 லிருந்து புறப்பட்டாயே. கர்ப்பந்திறந்து
பிறக்கிற யாவும் என்னுடையவை; உன்
மிருகங்களிலும் அப்படியே, ஆடானாலும்
மாடானாலும் தலையீற்றான ஆண்கள் யாவும்
20 என்னுடையவைகளே. கழுதையின் தலை
யீற்றை ஒரு ஆட்டுக்குட்டியால் மீட்டுக்
கொள்ளவேண்டும்; அதை மீட்டுக்
கொள்ளாதிருந்தால் அதின் கழுத்தை முறித்
துப்போடு; உன் பிள்ளைகளில் சகல முதற்
பேறுளவைகளையுமோவெனில் மீட்டுக்
கொள்ளவேண்டும். ஒருவனும் என்
சந்நிதியில் வெறுங்கையாய் வரக்கூடாது.
21 ஆறுநாளும் நீ வேலைசெய்து ஏழாம்நாளிலே
22 ஓய்ந்திருக்கவேண்டும். உழவு காலமானா
லும் அறுப்புக்காலமானாலும் ஓய்ந்திருக்க
வேண்டும். கோதுமை அறுப்பின் முதற்
பலனைச் செலுத்துகிற ஏழாம்வாரப் பண்டி
கையையும், வருஷமுடிவிலே சேர்ப்புக்
கால பண்டிகையையும் ஆசரிக்கவேண்டும்.
23 வருஷத்தில் மூன்றுதரம் உன் ஆண்மக்கள்
எல்லாரும் இஸ்ரவேலின் கடவுளாயிருக்கிற
யெகோவாவென்னும் ஆண்டவரின் சந்நிதி
24 யில் வரவேண்டும். உனக்கு முன்னிராத
படி புறஜாதிகளை நான் தூரத்திவிட்டு உங்
கள் எல்லைகளை விஸ்தாரமாக்குவேன்; வரு
ஷத்தில் மூன்றுதரம் உங்கள் கடவுளாகிய
யெகோவாவின் சந்நிதிக்கு முன்பாகக்
காணப்படப் போயிருக்கும்போது ஒரு
வரும் உங்கள் தேசத்தை இச்சிப்பதில்லை.
25 எனக்கு இடும் பலியின் இரத்தத்தைப்
புளித்தமாவுடன் செலுத்தவேண்டாம்;
பஸ்காண்டிகையின் பலியை விடியற்
காலம்வரைக்கும் வைத்திருக்கவும் வேண்
டாம். உன் நிலத்தின் முதல் விளைச்சல்
களின் முதற்கனியை உன் கடவுளாகிய
யெகோவாவின் வீட்டுக்குக் கொண்டுவர
வேண்டும். ஆட்டுக்குட்டியை அதின்
தாயின் பாலிலே சமைக்கவேண்டாம் என்
றார்.

27 பின்னும் யெகோவா மோசேயினிடம்:
இந்த வார்த்தைகளை நீ எழுது; இந்த
வார்த்தைகளின்படியே உன்னோடும் இஸ்ர
வேலோடும் உடன்படிக்கை பண்ணினேன்
28 என்றார். அவன் ஆகாரம் புசியாமலும்
தண்ணீர் குடியாமலும் இரவும் பகலும்
நாற்பதுநாள் அங்கே யெகோவாவோடே
இருந்தான்; அவன் பத்து வார்த்தைகளா
கிய உடன்படிக்கையின் வார்த்தைகளைப்
பலகைகளில் எழுதினான்.

29 மோசே சாட்சியப்பலகைகள் இரண்டை
யும் தன் கையில் எடுத்துக்கொண்டு சீனாய்
மலையிலிருந்து இறங்கினபோது தன்னோடே
அவர் பேசினதினாலே தன் முகம் பிரகாச
மாயிருப்பதை அவன் அறியாதிருந்தான்.
30 ஆரோனும் இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும்
மோசேயைப் பார்த்தபோது அவன் முகம்
பிரகாசமாயிருப்பதைக் கண்டு கிட்டவரப்
31 பயந்தார்கள். மோசே அவர்களைக் கூப்
பிடவே, ஆரோனும் சபையின் அதிபதிகள்
யாவரும் அவனிடம் திரும்பிவந்தார்கள்;
மோசே அவர்களோடு பேசினான். பின்பு
32 இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் கிட்டிவந்
தார்கள்; வந்தபோது அவன் சீனாய்மலையில்
யெகோவா தன்னோடே பேசினவைகளை
யெல்லாம் அவர்களுக்குக் கட்டளையிட்
டான். மோசே அவர்களோடே பேசி
33 முடிந்தபின் தன் முகத்தின்மேல் முக்காடு
போட்டுக்கொண்டான். மோசே யெகோ
34 வாவின் சந்நிதியில் அவரோடே பேசும்படி
உட்செல்லும்போதெல்லாம் வெளியே வரு
மளவும் முக்காடுபோடாதிருப்பான்; அவன்
வெளியேவந்து தனக்குக் கட்டளையிடப்
பட்டதை இஸ்ரவேல் புத்திரரோடே சொல்
லுவான். இஸ்ரவேல் புத்திரர் அவன்
35 முகம் பிரகாசமாயிருப்பதைக் காண்பார்
கள்; மோசே அவரோடே பேசும்படி
உள்ளே செல்லுமளவும் முக்காட்டைத்
திரும்பத் தன் முகத்தின்மேல் போட்டுக்
கொள்ளுவான்.

35 மோசே இஸ்ரவேல் புத்திரரின் சபை
யனைத்தையும் கூடிவரச்செய்து அவர்க
ளிடம்: நீங்கள் செய்யும்படி யெகோவா
கட்டளையிட்ட இவ்வார்த்தைகளைக் கேளுங்
2 கள்: ஆறுநாளும் நீங்கள் வேலைசெய்ய

வேண்டும், ஏழாம்நாளோ உங்களுக்குப்
பரிசுத்தமானது; அது யெகோவாவுக்
கென்று ஓய்ந்திருக்கும் ஓய்வுநாள்; அதிலே
வேலைசெய்கிறவன் எவனும் கொல்லப்படு
3 வான். ஓய்வுநாளில் உங்கள் வாசஸ்தலங்
களில் எங்கும் நெருப்பு மூட்டக்கூடாது
4 என்று சொன்னான். பின்னும் மோசே
இஸ்ரவேல் புத்திரரின் சபையோனைத்தையும்
5 பார்த்து: யெகோவா கட்டளையிட்ட இவ்
வார்த்தையையும் கேளுங்கள்: உங்களுக்கு
உள்ளவைகளில் யெகோவாவுக்கென்று
ஒரு காணிக்கையை எடுத்து அதைக்
கொண்டுவந்து படையுங்கள்; மனப்பூர்வ
மாய்க் கொடுப்பவன் எவனோ அவன்
யெகோவாவின் காணிக்கையைக் கொண்டு
வரட்டும்; கொண்டுவரவேண்டியவைகள்,
6 பொன், வெள்ளி, செம்பு, | இளநீலநூல்,
இரத்தாம்பரநூல், சிவப்புநூல், மெல்லிய
7 வெள்ளைநூல், வெள்ளாட்டு மயிர், | சிவப்
புத்தோற்ற ஆட்டுக்கடாத்தோல், தகசுத்
8 தோல், வாகைமரம், | விளக்குக்கு எண்
ணெய், அபிஷேக தைலத்துக்கும் சுகந்த
தூபத்துக்கும் பரிமளவர்க்கங்கள், |
9 ஏபோத்துக்கும் மார்ப்பதக்கத்துக்கும்
வேண்டிய கோமேதகக்கற்கள், பதிக்கும்
10 இரத்தினங்கள் ஆகிய இவைகளே. உங்
களிலுள்ள அறிவாளிகள் அனைவரும் வந்து
யெகோவா கட்டளையிட்டவைகளை யெல்
11 லாம் செய்யவேண்டும். அவையாவன:
வாசஸ்தலம், அதின் கூடாரம், கூடாரத்தை
மூடுகிறவைகள், வாசஸ்தலத்தின் கொக்கி
கள், அதின் பலகைகள், அதின் தாழ்ப்
பாள்கள், அதின் தூண்கள், அதின் பாதங்
12 கள், | பெட்டகம், அதின் தண்டாயங்கள்,
13 கிருபாசனம், மறைக்கும் திரை, | மேசை,
அதின் தண்டாயங்கள், அதின் சகல பணி
மூட்டுகள், திருச்சமுகத்தப்பங்கள், |
14 வெளிச்சங்கொடுக்கக் குத்துவிளக்கு,
அதின் கருவிகள், அதின் அகல்கள், விளக்
15 குக்கு எண்ணெய், | தூபபீடம், அதின்
தண்டாயங்கள், அபிஷேக தைலம், சுகந்த
தூபவர்க்கம், வாசஸ்தலத்தின் வாசலுக்கு
16 மறைப்புத்திரை, | தகனபலிபீடம், அதின்
செப்புச்சல்லடை, அதின் தண்டாயங்கள்,
அவற்றின் சகல பணிமூட்டுகள், தொட்டி,
17 அதின் பாதம், | பிராகாரத்தின் தொங்கு
திரைகள், அதின் தூண்கள், அதின் பாதங்
கள், பிராகாரத்து வாசலின் மறைப்புத்
18 திரை, | வாசஸ்தலத்தின் முளைகள், பிரா
காரத்தின் முளைகள், அவற்றின் கயிறுகள், |
19 பரிசுத்த ஸ்தலத்திலே ஆராதனை செய்ய
தற்குரிய அலங்கார வஸ்திரங்கள், ஆசா
ரிய ஊழியஞ் செய்வதற்கென ஆசாரிய
னாகிய ஆரோனுக்குப் பரிசுத்த வஸ்திரங்
களும் அவன் குமாரருக்கு வஸ்திரங்களும்
ஆகிய இவைகளே என்று சொன்னான்.

அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரின் 20
சபையார் அனைவரும் மோசேயின் சமுகத்
தைவிட்டுப் போய்விட்டார்கள். பின்பு 21
தங்கள் இருதயத்திலுல் ஏவப்பட்டவர்க
ளும் தங்கள் ஆவியிலுல் மனப்பூர்வமாக்
கப்பட்டவர்களுமாகிய அனைவரும் திரும்பி
வந்து தரிசனக்கூடாரத்தின் திருப்பணிக்
கும் அதின் சகல பணிவிடைக்கும் திரு
உடைகளுக்கும் தேவையானவைகளை
யெகோவாவுக்குக் காணிக்கையாகக் கொ
ண்டுவந்தார்கள்; மனப்பூர்வமுள்ள ஸ்திரீ 22
புருஷர் யாவரும் பொன்மாட்டிகள், காத
ணிகள், மோதிரங்கள், ஆரங்கள் முதலான
சகலவித பொன்னுபரணங்களையும் கொண்
டுவந்தார்கள்; யெகோவாவுக்குக்காணிக்கை
படைத்த ஒவ்வொருவனும் பொன்னைப்
படைத்தான். இளநீலநூல், இரத்தாம்பர 23
நூல், சிவப்புநூல், மெல்லிய வெள்ளைநூல்,
வெள்ளாட்டுமயிர், சிவப்புத்தோற்ற ஆட்டுக்
கடாத்தோல், தகசுத்தோல் இவற்றைத்
தங்களிடம் வைத்திருந்த யாவரும் அவை
களைக் கொண்டுவந்தார்கள். வெள்ளியை 24
யும் செம்பையும் கொடுக்கக்கூடிய யாவ
ரும் அவைகளை யெகோவாவுக்குக் காணிக்
கையாகக் கொண்டுவந்தார்கள். திருப்
பணிவேலையில் உதவக்கூடிய வாகைமரத்
தைத் தங்களிடம் வைத்திருந்த யாவரும்
அதைக் கொண்டுவந்தார்கள். அறிவாளிக 25
ளான ஸ்திரீகள் யாவரும் தங்கள் கைகளி
னாலேயே நூற்றுத் தாங்கள் நூற்ற இளநீல
நூலையும் இரத்தாம்பரநூலையும் சிவப்புநூலை
யும் மெல்லிய வெள்ளைநூலையும் கொண்டு
வந்தார்கள். அறிவுள்ளவர்களாகும்படி தங் 26
கள் இருதயத்திலுல் ஏவப்பட்ட ஸ்திரீகள்
அனைவரும் வெள்ளாட்டுமயிரை நூற்றார்
கள். அதிபதிகள் ஏபோத்துக்கும் மார்ப் 27
பதக்கத்துக்கும் வேண்டிய கோமேதகங்
களையும் பதிக்கும் இரத்தினங்களையும் |
விளக்குக்கும் அபிஷேக தைலத்துக்கும் 28
சுகந்த தூபத்துக்கும் வேண்டிய பரிமள
வர்க்கங்களையும் எண்ணெயையும் கொண்டு
வந்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் யாவரும் 29
யெகோவாவுக்கு மனப்பூர்வ காணிக்கை
யைக் கொண்டுவந்தார்கள். செய்யவேண்டு
மென்று யெகோவா மோசேயைக்கொண்டு
கட்டளையிட்ட திருப்பணிக்குரிய யாவை
யும் கொண்டுவரும்படி தங்கள் இருதயத்
திலுல் மனப்பூர்வமாக்கப்பட்ட ஸ்திரீ புரு

ஜனங்கள் யாவரும் கொண்டுவந்தார்கள்.
30 பின்பு மோசே இஸ்ரவேல் புத்திரரிடம்: பாருங்கள், யெகோவா யூதாவின் கோத்திரத்தில் கூரின் மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பேர்சொல்லி அழைத்தார்.
31 சகலவித வேலைகளையும் செய்கிறதற்கு வேண்டிய அறிவும் விவேகமும் புத்தியும் அவனுக்கு உண்டாகும்படி அவனைக் கடவுளின் ஆவியால் நிரப்பினார். அவன்
32 விஞ்ஞதமான வேலைகளை யூகித்துப் பொன், வெள்ளி, செம்பு இவைகளில் செய்யும்
33 வேலைகளையும், | இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதிக்கிற வேலைகளையும் மரத்தில் செய்யும் சித்திரவேலைகளையும் விஞ்ஞதமான சகல வேலைகளையும் செய்யும்
34 படி அவனை ஆவியினால் நிரப்பினார். மற்றவர்களுக்குப் போதிக்கும் வரத்தையும் அவன் இருதயத்திலும் தான் கோத்திரத்து அகிசாமாகின் குமாரனாகிய ஒகோலியாபின்
35 இருதயத்திலும் தந்தருளினார். இவர்கள் இருதயங்களை அறிவினால் நிரப்பியிருக்கிறார்; இவர்கள் சகலவிதத் தொழில்களையும் செய்வார்கள்; சித்திர வேலையையும், விஞ்ஞதமான வேலையையும், பலநிற நெசவு வேலையாக இளநீலநூல், இரத்தாம்பரநூல், சிவப்புநூல், மெல்லிய வெள்ளைநூல் இவற்றினால் செய்யும் நெசவு வேலையையும், எவ்விதமான தொழில்களையும் நடப்பிப்போருடைய வேலையையும், விஞ்ஞதமான வேலைகளை யூகிப்போருடைய தொழில்களையும் செய்வார்கள்.

**36** இப்படியாகப் பெசலெயேலும் ஒகோலியாபும் யெகோவா கட்டளையிட்ட யாவற்றின்படியும் இந்த வேலையைச் செய்வார்கள்; பரிசுத்த ஸ்தலத்தின் திருப்பணிக்கு வேண்டிய சகல வேலைகளையும் செய்வதற்குரிய புத்தியையும் அறிவையும் யெகோவாவினிடமிருந்து பெற்ற அறிவாளிகள் அனைவரும் அவர்களோடு கூடச் சேர்ந்து வேலைசெய்யவேண்டும் என்றார்.
2 பெசலெயேலையும் ஒகோலியாபையும், யெகோவாவினிடமிருந்து அறிவைப்பெற்று அந்த வேலையைச் செய்ய வரும்படி தங்கள் இருதயத்தினால் ஏவப்பட்ட அறிவாளிகள் அனைவரையும் மோசே வரவழைத்தான்.
3 இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்த ஸ்தலத்தின் திருப்பணிக்குரிய சகல வேலைகளையும் செய்து முடிப்பதற்கென்று கொண்டுவந்திருந்த காணிக்கைப் பொருள்களையெல்லாம் அவர்கள் மோசேயினிடம் ஒப்புக்கொண்டார்கள். ஜனங்கள் இன்னும் காலை தோறும் தங்கள் மனப்பூர்வ காணிக்கைகளை அவனிடம் கொடுத்துக்கொண்டே வந்தார்கள். 4 அப்பொழுது பரிசுத்த ஸ்தலத்து வேலைகளைச்செய்கிற அறிவாளிகள் யாவரும் அவரவர் செய்கிற வேலையினின்று வந்து | மோசேயினிடம் போய்: 5 யெகோவா செய்யக் கட்டளையிட்ட வேலைக்குவேண்டிய அளவுக்குமேலாக அதிகமான பொருள்களை ஜனங்கள் கொண்டு வருகிறார்களே என்று சொன்னார்கள். மோசே அதைக்கேட்டுப் பாளயமெங்கும் 6 விளம்பரஞ்செய்து, இனி புருஷராவது ஸ்திரீகளாவது பரிசுத்த ஸ்தலத்தின் காணிக்கைக்கென்று ஒரு வேலையும் செய்யவேண்டாம் என்று கட்டளையிட்டான். அப்படியாக ஜனங்கள் காணிக்கை கொண்டுவருகிறதை நிறுத்திவிட்டான். கொடுக்கப்பட்டிருந்த சாமான் செய்யவேண்டிய எல்லா 7 வேலைகளுக்கும் போதுமானதாகமாத்திரமல்ல அதற்கு அதிகமாகவும் இருந்தது.

வேலை செய்தவர்களாகிய அறிவாளிகள் 8 யாவரும் பத்து மூடுதிரைகளாலமைந்த வாசஸ்தலத்தைச் செய்தார்கள். திரிகளைத் திரித்த மெல்லிய வெள்ளைநூலாலும் இளநீல நூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்பு நூலாலும் நெய்தார்கள்; விசித்திரவேலையாகக் கேரூபுகளைச் செய்தார்கள். ஒவ்வொரு 9 மூடுதிரையும் இருபத்தெட்டு முழநீளமும் நாலுமுழ அகலமுமுள்ளதாய்த் திரைகளெல்லாம் ஒரே அளவாயிருந்தன. ஐந்து 10 மூடுதிரைகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டன, மற்ற ஐந்து மூடுதிரைகளும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டன. இணைக் 11 கப்பட்ட ஒரு பெரிய மூடுதிரையின் கடை ஓரத்தில் இளநீலநூலால் காதுகள் செய்து வைக்கப்பட்டன; அப்படியே இணைக்கப்பட்ட மற்றப் பெரிய மூடுதிரையின் கடை ஓரத்திலும் செய்துவைக்கப்பட்டன. காது 12 கள் ஒன்றோடொன்று இணைக்கப்படக் கூடியவைகளாய் ஒரு பெரிய மூடுதிரையில் ஐம்பது காதுகளையும் அடுத்த பெரிய மூடுதிரையில் ஐம்பது காதுகளையும் செய்து வைத்தார்கள். ஐம்பது பொன் கொக்கி 13 களையும் பண்ணி அந்தப் பெரிய மூடுதிரைகள் இரண்டையும் அந்தக் கொக்கிகளால் ஒன்றோடொன்று இணைத்துவிட்டார்கள். இவ்விதமாக வாசஸ்தலமொன்றாயிற்று. 14 வாசஸ்தலத்தின்மேல் கூடாரமாகப் போடும் படி ஆட்டுமயிரினால் பதினொரு மூடுதிரைகளைச் செய்தார்கள். ஒவ்வொரு மூடுதிரை 15 யும் முப்பதுமுழ நீளமும் நாலுமுழ அகலமுமாயிருந்தது, பதினொரு மூடுதிரைகளும் ஒரே அளவாயிருந்தன. ஐந்து மூடுதிரை 16

னை ஒன்றுகவும் மற்ற ஆறு மூடுதிரைகளை
17 ஒன்றுகவும் இணைத்தார்கள். இணைக்கப்
பட்ட ஒரு பெரிய மூடுதிரையின் கடை
ஓரத்தில் ஐம்பது காதுகளையும் இணைக்கப்
பட்ட மற்றப் பெரிய மூடுதிரையின் கடை
ஓரத்தில் ஐம்பது காதுகளையும் செய்துவைத்
18 தார்கள். ஒரே கூடாரமாகும்படி இணைத்து
விட ஐம்பது செம்புக்கொக்கிகளையும் செய்
19 தார்கள். கூடாரத்தை மூடுவதைச் சிவப்
புத்தீர்ந்த ஆட்டுக்கடாத்தோலினாலும்
அதற்குமேல் மூடுவதைத் தகசுத்தோலி
னாலும் செய்துமுடித்தார்கள்.

20 வாசஸ்தலத்துக்குச் சுவர்போல் நிறுத்து
வதற்குப் பலகைகளையும் வாகைமரத்தி
21 னாலே செய்தார்கள். ஒவ்வொரு பலகை
யின் நீளம் பத்துமுழம், அகலம் ஒன்றரை
22 முழம். பலகைகள் ஒன்றோடொன்று
இசைக்கப்படிவதற்கு ஒவ்வொரு பலகை
யிலும் இரண்டு கழுந்துகளிருந்தன; வாச
ஸ்தலத்தின் பலகைகளெல்லாம் இப்படியே
23 செய்யப்பட்டன. தென்பாகத்தில் தெற்கு
முகமாய் நிறுத்துவதற்கென வாசஸ்தலத்
துக்கு இருபது பலகைகளைச் செய்தார்கள்.
24 இந்த இருபது பலகைகளின் கீழே வைப்
பதற்கு நாற்பது வெள்ளிப்பாதங்களையும்
செய்தார்கள். ஒவ்வொரு பலகையின்
கீழும் அதின் இரண்டு கழுந்துகளுக்கும்
25 இரண்டு பாதங்களிருந்தன. வாசஸ்தலத்
தின் மறுபக்கமாகிய வடபுறத்தில் இருபது
26 பலகைகளையும் | அவைகளின் கீழ் நாற்
பது வெள்ளிப்பாதங்களையும் செய்துவைத்
தார்கள்; ஒவ்வொரு பலகையின்கீழும்
27 இரண்டு பாதங்களிருந்தன. வாசஸ்தலத்
தின் பின்பக்கமாகிய மேல்புறத்திற்கு ஆறு
28 பலகைகளைச் செய்தார்கள். வாசஸ்தலத்
தின் பின்பக்கத்திலுள்ள இருமூலைகளுக்கும்
29 இரண்டு பலகைகளைச் செய்தார்கள். அவை
கள் அடியில் இருமுகமாய் இசைக்கப்
பட்டு மேலேயும் முதல் வளையம்வரைக்
கும் அப்படியே ஒன்றாய் இசைக்கப்பட்
டிருந்தன; இரண்டு மூலைகளிலுமுள்ள
அவ்விரண்டிற்கும் அப்படியே செய்யப்
30 பட்டிருந்தன. அப்படியே எட்டுப்பலகைக
ளிருந்தன; ஒவ்வொரு பலகையின் கீழும்
இரண்டிரண்டு பாதங்களாகப் பதினாறு
31 வெள்ளிப் பாதங்களுமிருந்தன. வாகை
மரத்தினால் தாழ்ப்பாள்களைச் செய்தார்கள்;
வாசஸ்தலத்தின் ஒரு பக்கத்துப் பலகை
32 களுக்கு ஐந்தும் | வாசஸ்தலத்தின் மறுபக்
கத்துப் பலகைகளுக்கு ஐந்தும் வாசஸ்
தலத்தின் மேல்புறமான பின்பக்கத்துப்
பலகைகளுக்கு ஐந்துமாகச் செய்தார்கள்.
நடுத்தாழ்ப்பாள் ஒரு முனைதொடங்கி மறு 33
முனைமட்டும் பலகைகளின் மையத்தில்
உருவப்பாயும்படி செய்தார்கள்; பலகை 34
களைப் பொன்தகட்டால் மூடித் தாழ்ப்
பாள்களுக்கு இடங்களாகும் வளையங்களைப்
பொன்னினால் செய்து தாழ்ப்பாள்களைப்
பொன்தகட்டால் மூடினார்கள்.

இளநீலநூலும் இரத்தாம்பரநூலும் சிவப் 35
புநூலும் நிரித்த மெல்லிய வெள்ளைநூலு
மான இவற்றால் திரைச்சீலையைச் செய்து
முடித்தார்கள். அதிலே விசித்திரவேலையா
கக் கேரூபுகளைச் செய்தார்கள். அதற்கு 36
வாகைமரத்தினால் நாலு தூண்களைச் செய்து
அவைகளைப் பொன்தகட்டால் மூடினார்
கள். அவைகளின் கொக்கிகளைப் பொன்னி
னால் செய்து தூண்களுக்கு நான்கு வெள்
ளிப்பாதங்களையும் வார்ப்பித்தார்கள்.

கூடாரவாசலுக்கு ஒரு தொங்குதிரையை 37
யும் செய்தார்கள்; இந்தத்திரை இளநீல
நூல், இரத்தாம்பரநூல், சிவப்புநூல், நிரித்த
மெல்லிய வெள்ளைநூல் இவற்றினால் பலநிற
நெசவுவேலையாகச் செய்யப்பட்டது. அத் 38
தத்திரைக்கு ஐந்து தூண்களையும் அவை
களின் வளைவாணிகளையும் செய்து தூண்
களின் குமிழ்களையும் பூண்களையும் பொன்
தகட்டால் மூடினார்கள். அவைகளின்
ஐந்து பாதங்களும் செம்பினால் செய்யப்
பட்டன.

பெசலெயேல் வாகைமரத்தினால் பெட் **37**
டகத்தைச் செய்தான், அதின் நீளம் இரண்
டரைமுழம், அதின் அகலம் ஒன்றரை
முழம், அதின் உயரம் ஒன்றரைமுழம்.
அதை உள்ளும் புறம்பும் பசும்பொன் 2
தகட்டால் மூடிச் சுற்றிலும் அதற்குப்
பொன்னினால் விளிம்பைச் செய்தான்.
அதற்கு நான்கு பொன்வளையங்களை வார்ப் 3
பித்து அவைகளை அதின் நாலு கால்களுக்கு
மேலும் போட்டு ஒரு பக்கத்தில் இரண்டு
வளையங்களும் மறு பக்கத்தில் இரண்டு
வளையங்களும் இருக்கும்படி தைத்தான்.
வாகைமரத்தினால் தண்டாயங்களைச் செய்து 4
அவைகளைப் பொன்தகட்டால் மூடினான்.
அந்தத் தண்டாயங்களால் பெட்டகத்தைச் 5
சுமக்கும்படி அவைகளைப் பெட்டகத்தின்
பக்கங்களில் இருக்கும் வளையங்களிலே பா
ய்ச்சினான். கிருபாசனத்தையும்பசும் பொன் 6
னினாலே செய்தான்; அதன் நீளம் இரண்
டரைமுழம், அகலம் ஒன்றரை முழம்.
இரண்டு கேரூபுகளைப் பொன்னினால் செய் 7
தான். கிருபாசனத்தின் இரு ஓரங்களிலும்
அடிப்புவேலையாக அவைகளைச் செய்தான்.
ஒரு புறத்தில் ஒரு கேரூபையும் 8

மறு புறத்து ஓரத்தில் மற்றக் கேரூபையும் செய்தான். அந்தக் கேரூபுகள் கிருபாசனத்தின் இரண்டு ஓரங்களிலும் அதிலேடே ஏகவேலையாயிருக்கும்படி செய்
9 தான். அந்தக் கேரூபுகள் தங்கள் செட்டைகளே மேலே அகல விரித்துத் தங்கள் செட்டைகளால் கிருபாசனத்தை மூடின; அவைகள் ஒன்றுக்கொன்று எதிர்முகமாய்த் தங்கள் முகங்கள் கிருபாசனத்தை நோக்கும்படி இருந்தன.

10 வாகைமரத்தினால் மேசையையும் செய்தான்; அதன் நீளம் இரண்டு முழம், அகலம் ஒரு முழம், உயரம் ஒன்றரை
11 முழம்; அதைப் பசும்பொன் தகட்டால் மூடிச் சுற்றிலும் அதற்குப் பொன்னினால்
12 விளிம்பைச் செய்தான். அதற்கு நாலுவிரற் கடையான சுற்றுச்சட்டத்தையும் சட்டத்தைச் சுற்றிலும் பொன்விளிம்பையும் செய்
13 தான். அதற்கு நாலு பொன்வளையங்களே வார்ப்பித்து அவைகளே அதின் நாலு கால்களுமிருக்கும் நாலு மூலைகளிலும் தைத்
14 தான். அந்த வளையங்கள் மேசையைச் சுமக்கும் தண்டாயங்களுக்கு இடங்களாகும்படி சட்டத்தின் அருகே இருந்தன.
15 மேசையைச் சுமக்கும் தண்டாயங்களே வாகைமரத்தினால் செய்து அவைகளைப்
16 பொன்தகட்டால் மூடினான். மேசையின் மேலிருக்கும் பாத்திரங்களாகிய தட்டுகளையும் கரண்டிகளையும் பானபலி கரகங்களையும் கிண்ணங்களையும் பசும்பொன்னினால் செய்தான்.

17 குத்துவிளக்கைப் பசும்பொன்னினால் செய்தான்; அந்த விளக்கை, அதன் பாதத்தையும் தண்டையும், அடிப்பு வேலையாய்ச் செய்தான். அதிலேயுள்ள புஷ்பபாத்திரங்களும் பழங்களும் பூக்களும் அதனேடு
18 ஏகவேலையாயிருந்தன. அதன் பக்கங்களில் ஆறு கிளைகள் விடப்பட்டன, குத்துவிளக்கின் ஒரு பக்கத்தில் மூன்று கிளைகள், மற
19 பக்கத்தில் மூன்று கிளைகள். ஒவ்வொரு கிளையிலும்வாதுமைக்கொட்டையொத்த மூன்று புஷ்பபாத்திரங்களும் ஒரு பழமும் ஒரு பூவும் இருந்தன; குத்துவிளக்கிலிருந்து வரும் ஆறு கிளைகளிலும் அப்படியே
20 இருந்தன. விளக்குத்தண்டிலோ வாதுமைக்கொட்டையொத்த நாலு புஷ்ப
21 பாத்திரங்களும் பழங்களும் பூக்களும் இருந்தன. அதிலிருந்து வரும் இரண்டு கிளைகளின்கீழ் அதனேடு ஏகவேலையான ஒரு பழமும், வேறு இரண்டு கிளைகளின் கீழ் அதனேடு ஏகவேலையான ஒரு பழமும், மற்ற இரண்டு கிளைகளின்கீழ் அதனேடு ஏகவேலையான ஒரு பழமும் இருந்தன; விளக்குத்தண்டிலிருந்து வரும் ஆறு கிளைகளுக்கும் அப்படியே இருந்தன. அவை 22
களின் பழங்களும் அவைகளின் கிளைகளும் அதனேடு ஏகவேலையாய் முழுவதும் பசும் பொன்னால் செய்த ஒரே அடிப்புவேலையாயிருந்தன. அதின் ஏழு அகல்களையும் 23
அதின் கத்திரிகளையும் சாம்பல் பாத்திரங்களையும் பசும்பொன்னினால் செய்தான். அதையும் அதின் பணிமுட்டுகள் யாவை 24
யும் ஒரு தாலந்து பசும்பொன்னினால் செய்துமுடித்தான்.

தூபபீடத்தை வாகைமரத்தினால் செய் 25
தான்; அதன் நீளம் ஒரு முழம், அதன் அகலம் ஒரு முழம், அது சதுரமாயிருந்தது, அதன் உயரம் இரண்டு முழம்; அதின் கொம்புகள் அதனேடே ஏகவேலையாயிருந்தன. அதின் மேற்புறத்தையும் அதின் 26
சுற்றுப்புறத்தையும் அதின் கொம்புகளையும் பசும்பொன்தகட்டால் மூடிச் சுற்றிலும் அதற்குப் பொன்விளிம்பைச் செய்துவைத்தான். அந்த விளிம்பின் கீழே அதின் 27
இரண்டு பக்கங்களிலும், அவைகளிலிருக்கும் இரண்டு சட்டங்களிலேயும், இரண்டு பொன்வளையங்களைச் செய்துவைத்தான்; அதைச் சுமக்கும் தண்டாயங்களுக்கு இவை இடமாயின. அந்தத் தண்டாயங் 28
களே வாகைமரத்தினால் செய்து அவைகளையும் பொன்தகட்டால் மூடினான். பரிசுத்த 29
அபிஷேகதைலத்தையும் சுகந்தங்களால் செய்யும் தூபப்புரவான தூபவர்க்கத்தையும் பரிமளக்காரன் செய்வதுபோலச் செய்தான்.

தகனபலிபீடத்தையும் வாகைமரத்தி 38
னால் செய்தான்; அதன் நீளம் ஐந்து முழம், அகலம் ஐந்து முழம், அது சதுரமாயிருந்தது; அதன் உயரம் மூன்று முழம்.
அதின் நாலு மூலைகளிலும் அதனேடு ஏக 2
வேலையான நாலு கொம்புகளைச் செய்தான்; அதைச் செப்புத்தகட்டால் மூடினான்.
அந்தப் பீடத்தின் சகல பணிமுட்டுகளாகிய 3
சட்டிகளையும் கரண்டிகளையும் கலங்களையும் முள்ளுகளையும் கொடுப்புச்சட்டிகளையும் செய்தான்; அதின் பணிமுட்டுகளெல்லாம் செம்பினால் செய்தான். வலைப் 4
பின்னல்போன்ற ஒரு செப்புச்சல்லடையையும் பலிபீடத்திற்குச் செய்து அதை அந்தப் பீடத்தின் சுற்றுக்குக்கீழே பாதி உயரத்திற்கு எட்டும்படிவைத்தான்; அந்தச் 5
செப்புச்சல்லடையின் நாலு மூலைகளிலும் தண்டாயங்களுக்கு இடங்களாகும்படி நாலு வளையங்களே வார்ப்பித்தான். ஆனந்தத் 6

தண்டாயங்களே வாகைமரத்தினால் செய்து
அவைகளைச் செப்புத்தகட்டால் மூடினான்.
7 பலிபீடத்தை அவைகளால் சுமக்கும்படி
அதின் பக்கங்களிலுள்ள வளையங்களில்
அவைகளைப் பாய்ச்சினான்; பலிபீடத்தை
உள்ளே கூடாகப் பலகைகளினால் செய்
தான்.
8 தொட்டியையும் அதன் பாதத்தையும்
செம்பினால் செய்தான்; தரிசனக்கூடார
வாசலில் பணிவிடை செய்துவந்த ஸ்திரீ
கள் கொடுத்த கண்ணாடிகளின் செம்பு
இது.
9 பிராகாரத்தையும் செய்துமுடித்தான்.
தென்முகமான தெற்குப் பிராகாரத்துக்குத்
தொங்குதிரைகள் செய்தான்; இவை திரித்த
மெல்லிய வெள்ளைநூலால் செய்யப்பட்டு
10 நூறுமுழ நீளமாயிருந்தன. அவைகளுக்
குச் செம்பினால் செய்த இருபது தூண்க
ளும் இருபது பாதங்களுமிருந்தன; தூண்
களின் வளைவாணிகளும் அவைகளின் பூண்
11 களும் வெள்ளி. வடபக்கத்திற்கும் நூறு
முழ நீளமாகத் தொங்குதிரைகள் செய்
தான்; அவைகளுக்குச் செம்பினால் செய்த
இருபது தூண்களும் இருபது பாதங்களு
மிருந்தன. தூண்களின் வளைவாணிகளும்
12 பூண்களும் வெள்ளி. மேல்பக்கத்துத்
தொங்குதிரைகள் ஐம்பது முழம்; அவை
களின் தூண்கள் பத்து; அவைகளின்
பாதங்கள் பத்து; தூண்களின் வளைவாணி
களும் அவைகளின் பூண்களும் வெள்ளி.
13 கிழக்கிற்கும் கீழ்பக்கத்துக்கு ஐம்பது
14 முழம். வாசலுக்கு ஒருபுறத்தில் தொங்கு
திரைகள் பதினைந்து முழம்; அவைகளின்
தூண்கள் மூன்று, அவைகளின் பாதங்கள்
15 மூன்று. மறுபக்கத்திலும் அப்படியே; பிரா
காரவாசலின் இருபுறத்திலும் தொங்குதிரை
கள் பதினைந்து பதினைந்து முழம்; அவை
களின் தூண்கள் மும்மூன்று, அவைக
16 ளின் பாதங்கள் மும்மூன்று. சுற்றுப்பிரா
காரத்துத் தொங்குதிரைகளெல்லாம் திரித்த
மெல்லிய வெள்ளைநூலால் நெய்யப்பட்
17 டிருந்தன. தூண்களின் பாதங்கள் செம்பு;
தூண்களின் வளைவாணிகளும் பூண்களும்
வெள்ளி, அவைகளின் குமிழ்களை மூடிய
தகடும் வெள்ளி, பிராகாரத்தின் தூண்க
ளெல்லாம் வெள்ளிப்பூண் போட்டவை
18 கள். பிராகாரவாசலின் தொங்குதிரை
இளநீலநூல், இரத்தாம்பரநூல், கபிப்பு
நூல், திரித்த மெல்லிய வெள்ளைநூல் ஆகிய
இவற்றினாலான பலநிற நெசவுவேலையா
யிருந்தது; அதன் நீளம் இருபது முழம்;
அதன் உயரம் திரைகளின் அகலம், பிரா
காரத்தின் தொங்குதிரைகளுக்குச் சரியாய்
ஐந்து முழம். அவைகளுக்குச் செம்பினால் 19
செய்த நாலு தூண்களும் நாலு பாதங்களு
மிருந்தன; அவைகளின் வளைவாணிகள்
வெள்ளி; அவைகளின் குமிழ்களை மூடிய
தகடும் அவைகளின் பூண்களும் வெள்ளி.
வாசஸ்தலத்து முளைகளும் பிராகாரத்துக்குச் 20
சுற்றிலுமிருந்த முளைகளும் செம்பு.
சாட்சியக்கூடார வாசஸ்தலத்திற்குரிய 21
பொருட்களாகிய இவையெல்லாம், மோசே
கட்டளையிட்டபடியே, ஆசாரியனாகிய ஆரோ
னின் குமாரன் இத்தாமாருடைய பார்வை
யின்கீழ், லேவியரால் கணக்கிடப்பட்டன.
யூதாவின் கோத்திரத்தில் கூரின்மகனாகிய 22
ஊரியின் குமாரன் பெசலெயேல், யெகோ
வா மோசேக்குக் கட்டளையிட்டவைகளே
யெல்லாம் செய்துமுடித்தான். அவனோ 23
டேகூடத் தான் கோத்திரத்து அகிசாமா
கின் குமாரனாகிய ஒகோலியாபும் வேலை
செய்தான்; இவன் தச்சுவேலைக்காரன்,
விநோத வேலைச் சமர்த்தன், இளநீலநூல்
இரத்தாம்பரநூல் கபிப்புநூல் மெல்லிய
வெள்ளைநூல் ஆகிய இவற்றினால் செய்யும்
பலநிற நெசவுவேலையில் கெட்டிக்காரன்.
காணிக்கையாகக் கொடுக்கப்பட்டுப் பரி 24
சுத்த ஸ்தலத்தின் திருப்பணிகளையெல்லாம்
செய்வதற்குச் செலவான பொன்னெல்லாம்
பரிசுத்த ஸ்தலத்து சேக்கலின்படி இருபத்
தொன்பது தாலந்து எழுநூற்று மூப்பது
சேக்கல். கணக்கிலே சேர்க்கப்பட்டுச் 25
சபையாரானவர்கள் கொடுத்த வெள்ளி
பரிசுத்தஸ்தலத்தின் சேக்கலின்படி நூறு
தாலந்து ஆயிரத்துஎழுநூற்று எழுபத்
தைந்து சேக்கல். இருபது வயது முதற் 26
கொண்டு அதற்கு மேற்பட்ட ஒவ்வொருவ
ரும் பரிசுத்த ஸ்தலத்து சேக்கலின்படி
அரைச் சேக்கலாகிய பெக்கா வீதம்
கொடுத்தார்கள்; இப்படிக் கொடுத்தவர்கள்
ஆறுலட்சத்து மூவாயிரத்து ஐந்நூற்று ஐம்
பதுபேர்; கணக்கிலே சேர்க்கப்பட்டுச்
சபையாரானவர்களின் தொகை இதுவே.
அந்த வெள்ளியிலே பரிசுத்த ஸ்தலத்தின் 27
பாதங்களையும் திரையின் பாதங்களையும்
வார்ப்பிக்கிறதற்குச் செலவானது நூறு
தாலந்து; பாதத்துக்கு ஒரு தாலந்துவீதம்
நூறு பாதங்களுக்கு நூறு தாலந்து செல
வாயிற்று. அந்த ஆயிரத்து எழுநூற்று 28
எழுபத்தைந்து சேக்கலால் தூண்களுக்கு
வளைவாணிகளைப்பண்ணி அவைகளின்
குமிழ்களைத் தகடுகளால் மூடி அவைகளுக்
குப் பூண்களைச் செய்தான். காணிக்கை 29
யாகக் கொடுக்கப்பட்ட செம்பு எழுபது

தாலத்து இரண்டாயிரத்துநானூறு சேக்
30 கல்; அதைக்கொண்டு தரிசனக்கூடாரவாச
லின் பாதங்களையும் செப்புப்பலிபீடத்தை
யும் அதின் செப்புச்சல்லடையையும் பலி
31 பீடத்தின் சகல பணிமுட்டுகளையும் | பிரா
காரத்துக்குச் சுற்றிலுமிருந்த பாதங்களையும்
பிராகாரவாசலின் பாதங்களையும் வாசஸ்
தலத்தின் சகல முளைகளையும் பிராகாரத்தின்
சுற்றிலுமிருந்த சகல முளைகளையும் செய்
தான்.

**39** அவர்கள் இளநீலநூல், இரத்தாம்பர
நூல், சிவப்புநூல் ஆகிய இவற்றால் பரி
சுத்த ஸ்தலத்திலே ஆராதனை செய்கிறதற்
குரிய அலங்கார வஸ்திரங்களைச் செய்தார்
கள்; ஆரோனுக்குரிய திருஉடைகளையும்
செய்தார்கள். யெகோவா மோசேக்குக்
கட்டளையிட்டபடியே செய்தார்கள்.

2 ஏபோத்தைப் பொன், இளநீலநூல்,
இரத்தாம்பரநூல், சிவப்புநூல், திரித்த
மெல்லிய வெள்ளைநூல் ஆகிய இவற்றினால்
3 செய்வித்தான். அந்தப் பொன்னை மெல்
லிய தகடுகளாய் அடித்து அவைகளைச்
சரிகைகளாக வெட்டி, இவைகளை இளநீல
நூலோடும் இரத்தாம்பரநூலோடும் சிவப்பு
நூலோடும் மெல்லிய வெள்ளைநூலோடும்
சேர்த்து விசித்திரவேலையாய் நெய்தார்கள்.
4 இரண்டு தோள்துண்டுகளைச் செய்து அவற்
றின் இரண்டு முனைகளையும் சேர்த்து ஒன்
5 றாய் இணைத்தார்கள். ஏபோத்தைக் கட்டு
வதற்கு அதன்மேலிருந்த விசித்திரக்கச்சை
அதின் வேலையை ஒத்திருக்கும்படி பொன்,
இளநீலநூல், இரத்தாம்பரநூல், சிவப்பு
நூல், திரித்த மெல்லிய வெள்ளைநூல் ஆகிய
இவற்றினால் ஏகவேலையாய்ச் செய்யப்பட்
டது. யெகோவா மோசேக்குக் கட்டளை
யிட்டபடியே செய்தார்கள்.

6 இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை முத்
திரை வெட்டு வேலையாகக் கோமேதகக்
கற்களில் வெட்டி அவைகளைப் பொன்
7 குவளைகளில் பதித்தார்கள். இஸ்ரவேல்
புத்திரரை நினைக்கும் ஞாபகக்குறிக்கற்க
ளாக இவைகளை ஏபோத்துத் தோள் துண்டு
களின்மேல் வைக்கச்செய்தான்; யெகோவா
மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்
தார்கள்.

8 மார்ப்பதக்கத்தையும் ஏபோத்தின்
வேலையை ஒத்திருக்கும்படி விசித்திரவேலை
யாகப் பொன், இளநீலநூல், இரத்தாம்பர
நூல், சிவப்புநூல், திரித்த மெல்லிய வெள்ளை
நூல் ஆகிய இவற்றினால் செய்வித்தான்.
9 அந்த மார்ப்பதக்கத்தை மடிக்கப்பட்
தாய்ச் சதுரமாகச் செய்தார்கள். மடிக்கப்
பட்டு ஒரு சாண் நீளமும் ஒரு சாண் அக
லமுமாயிருந்தது. அதிலே நாலுபத்தி இரத் 10
தினக்கற்களைப் பதித்தார்கள்; முதலாம்
பத்தி பத்மராகம், புஷ்பராகம், மரகதம்; |
இரண்டாம்பத்தி மாணிக்கம், நீலம், வச் 11
சிரம்; மூன்றும்பத்தி கெம்பு, வைடூரியம், 12
சுகந்தி; நாலாம்பத்தி சுவர்ணரத்தினம், 13
கோமேதகம், படிகப்பச்சை. அவைகளை
அந்தந்த இடங்களிலே பொன் குவளைகளில்
பதித்தார்கள். இந்தக் கற்கள் இஸ்ரவேல் 14
புத்திரரின் நாமங்களுக்குத் தக்கபடியே,
ஒவ்வொரு நாமத்திற்கு ஒவ்வொன்றுகப்
பன்னிரண்டாம். பன்னிரண்டு கோத்திரங்
களின் நாமங்களும் ஒவ்வொன்றிலே ஒவ்
வொன்றுக முத்திரைவெட்டாய் வெட்டி
யிருந்தது. மார்ப்பதக்கத்துக்குப் பின்னல் 15
வேலையான இரண்டு சங்கிலிகளைப் பசும்
பொன்னினால் செய்தார்கள். இரண்டு 16
பொன் குவளைகளையும் இரண்டு பொன்
வளையங்களையும் செய்து அந்த இரண்டு
வளையங்களை மார்ப்பதக்கத்து இரண்டு பக்
கத்திலும் வைத்துப் | பொன்னினால் செய்த 17
பின்னல் வேலையான அந்த இரண்டு சங்கிலி
களையும் மார்ப்பதக்கத்தின் பக்கங்களிலிருக்
கிற இரண்டு வளையங்களிலும் மாட்டினார்
கள். பின்னல்வேலையான அவ்விரண்டு 18
சங்கிலிகளின் மற்ற இரண்டு முனைகளையும்
ஏபோத்துத் தோள்துண்டுகளின்மேல்
அதின் முன்புறத்திலிருக்கிற இரண்டு குவளை
களிலும் மாட்டினார்கள். பின்னும் இரண்டு 19
பொன்வளையங்களைப் பண்ணி அவைகளை
ஏபோத்திற்கு எதிரான மார்ப்பதக்கத்தி
னுடைய மற்ற இரண்டு பக்கங்களிலும்
அதின் ஓரத்திலே உட்புறமாக மாட்டினார்
கள். வேறே இரண்டு பொன்வளையங்களை 20
யும் பண்ணி அவைகளை ஏபோத்தின்
தோள்துண்டுகளில் முன்பாகத்து உள்பக
கத்தில், அதின் இணைப்புக்குக்கிட்ட ஏபோத்
தின் விசித்திரக்கச்சைக்கு மேலே மாட்டி
னார்கள். மார்ப்பதக்கம் ஏபோத்தின் விசித் 21
திரமான கச்சைக்கு மேலாக இருக்கும்
படிக்கும் அது ஏபோத்தைவிட்டு நீங்கிப்
போகாதபடிக்கும் அதை அதின் வளையங்க
ளால் ஏபோத்தின் வளையங்களோடே இள
நீல நாடாவினால் சேர்த்துக் கட்டினார்கள்.
யெகோவா மோசேக்குக் கட்டளையிட்ட
படியே செய்தார்கள்.

ஏபோத்தின் அங்கியை முழுவதும் இள 22
நீலநூலால் நெசவுவேலையாகச் செய்வித்
தான். அங்கியின் நடுவில் மார்க்கவசத் 23
துவாரத்துக்கு ஒத்ததாக ஒரு துவாரமும்,
அது "கிழியாதபடி அந்தத் துவாரத்தைச்

சுற்றிலும் ஒரு நாடாவும் தைத்திருந்தது.
24 அங்கியின் கீழ் ஓரங்களில் இளநீலநூல், இரத்தாம்பரநூல், சிவப்புநூல் ஆகிய இவற்றைத் திரித்து மாதளம்பழங்களைச் செய்
25 தார்கள். பசும்பொன்னிழை மணிகளையும் பண்ணி இந்த மணிகளை அங்கியின் ஓரங்களில் சுற்றிலும் மாதளம்பழங்களின் இடை
26 யிடையே தொங்கவைத்தார்கள். ஆரோனுக்குரிய அங்கியின் ஓரத்தில் சுற்றிலும் ஒரு மணியும் ஒரு மாதளம்பழமும், ஒரு மணியும் ஒரு மாதளம்பழமுமாய் வைத்தார்கள். யெகோவா மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள்.
27 ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் மெல்லிய வெள்ளைநூலால் நெசவுவேலையான
28 உள்சட்டைகளையும், மெல்லிய வெள்ளை நூலால் பாகையையும் அலங்காரமான குல்லாக்களையும் திரித்த மெல்லிய சணல்நூலால்
29 சல்லடங்களையும், திரித்த மெல்லிய வெள்ளைநூலாலும் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் பலநிற நெசவு வேலையான இடைக்கச்சையையும் செய்தார்கள்; யெகோவா மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள்.
30 பரிசுத்த கிரீடத்தின் பட்டத்தையும் பசும்பொன்னிழையே செய்து, யெகோவாவுக்குப் பிரதிஷ்டை என்னும் எழுத்துக்களை அதிலே முத்திரைவெட்டாக எழுதினார்
31 கள். அதை மேலே பாகையில் கட்டும்படி இளநீல நாடாவினால் கட்டினார்கள்; யெகோவா மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள்.
32 இப்படியாகத் தரிசனக்கூடார வாசஸ்தலத்தின் வேலையெல்லாம் முடிந்தது; யெகோவா மோசேக்குக் கட்டளையிட்ட யெல்லாவற்றின்படியும் இஸ்ரவேல் புத்திரர் செய்தார்கள்; அப்படியே செய்துமுடித்தார்கள்.
33 பின்பு வாசஸ்தலத்தை மோசேயினிடம் கொண்டுவந்தார்கள்: கூடாரம், அதற்குரிய சகல பணிமுட்டுகள், அதின் கொக்கிகள், அதின் பலகைகள், அதின் தாழ்ப்பாள்கள், அதின் தூண்கள், அதின் பாதங்கள், |
34 அதின் மேலே மூடும் சிவப்புத் தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல், அதின் மேலே மூடும் தக
35 சுத்தோல், மறைக்கும் திரை, | சாட்சியப் பெட்டகம் அதின் தண்டாயங்கள், கிருபா
36 சனம், | மேசை, அதின் எல்லாப் பணி
37 முட்டுகள், திருச்சமுகத்தப்பங்கள், | பசும் பொன் குத்துவிளக்கு, வரிசையாய் ஒழுங்குபடுத்தும் அதின் அகல்கள், அதின் எல்லாப் பணிமுட்டுகள், விளக்குக்கு எண்ணெய், |
38 பொற்பீடம், அபிஷேகதைலம், சுகந்த தூபவர்க்கம், வாசஸ்தலத்தின் வாசல் மறைப்புத்திரை, | செப்புப் பலிபீடம், 39
அதின் செப்புச்சல்லடை, அதின் தண்டாயங்கள், அதின் சகல பணிமுட்டுகள், தொட்டி, அதின் பாதம், | பிராகாரத்தின் 40
தொங்கு திரைகள், அதின் தூண்கள், அதின் பாதங்கள், பிராகாரத்து வாசல் மறைப்பு, அதின் கயிறுகள், அதின் முளைகள், தரிசனக்கூடார வாசஸ்தலத்தின் பணிவிடைக்கு வேண்டிய சகல கட்டுமுட்டுகள், | பரிசுத்தஸ்தலத்திலே ஆராதனைசெய் 41
வதற்குரிய அலங்கார வஸ்திரங்கள், ஆசாரியனாகிய ஆரோனுக்குரிய திருவுடைகள், அவன் குமாரருக்குரிய வஸ்திரங்கள் ஆகிய இவற்றையெல்லாம் கொண்டுவந்தார்கள். யெகோவா மோசேக்குக் கட்டளையிட்ட 42
எல்லாவற்றின்படியேயும் இஸ்ரவேல் புத்திரர் சகல வேலைகளையும் செய்து முடித்தார்கள். மோசே அந்த வேலைகளெல்லாம் பார்த்தான்; இதோ, அவர்கள் அவற்றையெல்லாம் முடித்திருந்தார்கள்; யெகோவா கட்டளையிட்டபடியே அதைச் செய்திருந்தார்கள். மோசே அவர்களை ஆசீர்வதித்தான்.

யெகோவா மோசேயினிடம்: | நீ 40
முதல் மாதம் முதல்தேதியில் தரிசனக் 2
கூடார வாசஸ்தலத்தை ஸ்தாபனம்பண்ணு.
அதிலே சாட்சியப்பெட்டகத்தை வைத்துப் 3
பெட்டகத்தைத் திரையினால் மறைக்கவேண்டும். மேசையைக் கொண்டுவந்து அதில் 4
வைக்கவேண்டியதை ஒழுங்காய் வைத்துக்
குத்துவிளக்கைக் கொண்டுவந்து அதன்
விளக்குகளையேற்று; பொன் தூபபீடத் 5
தைச் சாட்சியப் பெட்டகத்துக்கு எதிரே
வைத்து வாசஸ்தலத்து வாசலின் தொங்கு
திரையைத் தூக்கிவைக்கவேண்டும். பின்பு, 6
தகனபலிபீடத்தைத் தரிசனக்கூடார வாசஸ்தலத்தின் வாசலுக்கு எதிரே வைத்துத் |
தொட்டியைத் தரிசனக் கூடாரத்துக்கும் 7
பலிபீடத்துக்கும் நடுவே வைத்து அதிலே
தண்ணீர் வார்க்கவேண்டும். சுற்றுப்பிராகா 8
ரத்தை நிறுத்திப் பிராகார வாசல் தொங்கு
திரையைத் தூக்கிவைக்கவேண்டும். அபி 9
ஷேகதைலத்தை எடுத்து வாசஸ்தலத்தை
யும் அதிலுள்ள யாவையும் அபிஷேகஞ்
செய்து, அதையும் அதிலுள்ள சகல பணி
முட்டுகளையும் பிரதிஷ்டைபண்ணு; அது
பரிசுத்தமாகும். தகன பலிபீடத்தையும் 10
அதின் சகல பணிமுட்டுகளையும் அபிஷே
கஞ்செய்து அதைப் பிரதிஷ்டைபண்ணு;
பலிபீடம் மகாபரிசுத்தமானதாகும். தொட் 11
டியையும் அதின் பாதத்தையும் அபிஷேகஞ்

செய்து அதைப் பிரதிஷ்டைபண்ணு.
12 பின்பு ஆரோனையும் அவன் குமாரரையும்
தரிசனக்கூடார வாசலில் வரச்செய்து
அவர்களை ஜலத்தினால் ஸ்நானம்பண்ணுவித்
13 து | ஆரோனுக்குத் திருவுடைகளை உடுத்தி,
எனக்கு ஆசாரிய ஊழியஞ்செய்யும்படி
அவனை அபிஷேகஞ்செய்து பிரதிஷ்டை
14 பண்ணு. அவன் குமாரரையும் வரச்
செய்து அவர்களுக்கு அங்கிகளை உடுத்தி |
15 அவர்கள் எனக்கு ஆசாரிய ஊழியஞ் செய்
யும்படி, அவர்களையும், அவர்கள் தகப்பனை
அபிஷேகம்பண்ணினபடியே அபிஷேகம்
பண்ணு; அவர்கள் பெறும் அந்த அபிஷே
கம் தலைமுறை தலைமுறையாக நித்திய
ஆசாரியபட்டத்துக்கு ஏதுவாகும் என்றார்.
16 மோசே அப்படியே செய்தான். யெகோவா
தனக்குக் கட்டளையிட்ட யாவற்றின்படியே
யும் செய்தான்.
17 இரண்டாம் வருஷம் முதல் மாதத்தில்,
மாதத்தின் முதல்தேதியிலேயே, வாசஸ்தலம்
18 ஸ்தாபனம்பண்ணப்பட்டது. மோசே வாச
ஸ்தலத்தை எடுப்பித்தான்; அவன் அதின்
பாதங்களை வைத்து, அதின் பலகைகளை நிறுத்
தி, அதின் தாழ்ப்பாள்களைப் பாய்ச்சி, அதின்
19 தூண்களை நாட்டி, | வாசஸ்தலத்தின்மேல்
கூடாரத்தை விரித்து, அதின்மேல் கூடாரத்
தை மூடுகிறவைகளை விரித்துப்போட்டான்.
யெகோவா மோசேக்குக் கட்டளையிட்டபடி
யே செய்யப்பட்டது.
20 சாட்சியப் பிரமாணத்தை எடுத்து,
அதைப் பெட்டகத்திலே வைத்து, பெட்ட
கத்தில் தண்டாயங்களைப் பாய்ச்சி, பெட்
21 டகத்தின்மேல் கிருபாசனத்தை வைத்து, |
பெட்டகத்தை வாசஸ்தலத்துக்குள்ளே
கொண்டுபோய், மறைக்கும் திரையைத்
தொங்கவைத்து, சாட்சியப்பெட்டகத்தை
மறைத்து வைத்தான்; யெகோவா மோசேக்
குக் கட்டளையிட்டபடியே செய்யப்பட்டது.
22 மேசையைத் தரிசனக்கூடாரத்தில், வாச
ஸ்தலத்தின் வடபக்கத்திலேயே, திரைக்கு
23 வெளியே வைத்து, அதின்மேல் யெகோவா
வின் சமுகத்தில் அப்பத்தை ஒழுங்காக
வைத்தான்; யெகோவா மோசேக்குக் கட்
டளையிட்டபடியே செய்யப்பட்டது.
24 குத்துவிளக்கைத் தரிசனக்கூடாரத்தில்
மேசைக்கு எதிரே, வாசஸ்தலத்தின் தென்
25 பக்கத்திலேயே, வைத்து | யெகோவாவின்
திருச்சந்நிதியில் விளக்குகளை ஏற்றினான்.
யெகோவா மோசேக்குக் கட்டளையிட்டபடி
யே செய்யப்பட்டது.
26 தரிசனக்கூடாரத்தில் திரைக்கு எதிரே
27 பொற்பீடத்தை வைத்து, அதின்மேல் சுகந்த
வர்க்கத்தினால் தூபங்காட்டினான்; யெகோ
வா மோசேக்குக் கட்டளையிட்டபடியே
செய்யப்பட்டது.
28 வாசஸ்தலத்து வாசலின் தொங்குதிரை
29 யைத் தூக்கிவைத்து, தகனபலிபீடத்தைத்
தரிசனக்கூடார வாசஸ்தலத்தின் வாசலுக்கு
எதிரே வைத்து, அதின்மேல் தகனபலியை
யும் போஜனபலியையும் செலுத்தினான்;
யெகோவா மோசேக்குக் கட்டளையிட்டபடி
யே செய்யப்பட்டது.
30 அவன் தரிசனக்கூடாரத்துக்கும் பலி
பீடத்துக்கும் நடுவே தொட்டியை வைத்
து, கழுவுகிறதற்கென அதிலே தண்ணீர்
31 வார்த்தான். அவ்விடத்திலே மோசேயும்
ஆரோனும் ஆரோனின் குமாரரும் தங்கள்
கைகளையும் கால்களையும் கழுவினார்கள்.
32 அவர்கள் தரிசனக்கூடாரத்தினுள்ளே செல்
லும்போதும், பலிபீடத்தண்டையில் வரும்
போதும், அப்படியே கழுவுவார்கள். யெ
கோவா மோசேக்குக் கட்டளையிட்டபடியே
செய்யப்பட்டது.
33 அவன் வாசஸ்தலத்தையும் பலிபீடத்தை
யும் சுற்றிப் பிராகாரத்தை நிறுத்தி, பிரா
காரவாசலின் திரையைத் தொங்கவைத்
தான்; இவ்விதமாக மோசே வேலையை
முடித்தான்.
34 அப்பொழுது மேகமானது தரிசனக்
கூடாரத்தை மூடினது; யெகோவாவின் மகி
35 மை வாசஸ்தலத்தை நிரப்பிற்று. மேகம்
தரிசனக்கூடாரத்தின்மேல் தங்கி, யெகோ
வாவின் மகிமை வாசஸ்தலத்தை நிரப்பின
தினால், மோசே அதினுள் செல்லமுடியாம
36 லிருந்தது. வாசஸ்தலத்திலிருந்து மேகம்
மேலே எழும்பும்போது இஸ்ரவேல் புத்தி
ரர் பிரயாணப்படுவார்கள்; அவர்கள் பிர
37 யாணப்படுவதெல்லாம் அப்படியே. மேகம்
எழும்பாதிருந்தால், அது எழும்பும் நாள்
வரைக்கும் பிரயாணப்படாதிருப்பார்கள்.
38 பகலிலே யெகோவாவின மேகமும் இரவி
லே அக்கினியும் வாசஸ்தலத்தின்மேல் தங்
கியிருந்தது. இஸ்ரவேல் வம்சத்தாரின்
சகல பிரயாணங்களிலும் இது அவர்க
ளெல்லாருடைய கண்களுக்கும் பிரத்தி
யட்சமாயிருந்தது.

THE BOOK OF LEVITICUS

# லேவியராகமம்

1 யெகோவா மோசேயைக் கூப்பிட்டுத்
தரிசனக்கூடாரத்திலிருந்து அவனோடு பேசி,
2 நீ இஸ்ரவேல் புத்திரரைப் பார்த்து: உங்க
ளில் ஒருவன் யெகோவாவுக்குப் பலி
செலுத்த வந்தால் மாட்டுமந்தையிலாவது
ஆட்டுமந்தையிலாவது ஒரு மிருகத்தைத்
தெரிந்தெடுத்துப் பலிசெலுத்த வேண்டும்.
3 அவன் செலுத்துவது மாட்டுமந்தையி
லிருந்து எடுக்கப்பட்ட தகனபலியானால்
அவன் பழுதற்ற ஒரு காளையைச் செலுத்த
வேண்டும்; தான் அங்கீகரிக்கப்படும்படி
அவன் அதை யெகோவாவின் சந்நிதியில்
தரிசனக்கூடார வாசலில் கொண்டுவந்து |
4 அது தன் பாவத்திற்குப் பிராயச்சித்தமாக
அங்கீகரிக்கப்படும்படி தன் கையை
5 அதின் தலைமேல் வைக்கவேண்டும். யெகோ
வாவின் சந்நிதியில் அந்தக் காளையைக்
கொல்லவேண்டும்; கொல்லவே, ஆரோ
னின் குமாரராகிய ஆசாரியர் அதின் இரத்
தத்தைத் தரிசனக்கூடார வாசலில் இருக்
கிற பலிபடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்க
6 வேண்டும். பின்பு அவன் அந்தத் தகன
பலியைத் தோலுரித்து அதைச் சந்துசந்
7 தாகத் துண்டிக்கவேண்டும். அப்பொழுது
ஆசாரியனாகிய ஆரோனின் குமாரர் பலி
பீடத்தின்மேல் அக்கினியைப்போட்டு, அக்
கினியின்மேல் கட்டைகளை அடுக்கி, |
8 ஆரோனின் குமாரராகிய ஆசாரியர் துண்
டங்களையும் தலையையும் கொழுப்பையும்
பலிபீடத்திலுள்ள அக்கினியில் இருக்கிற
கட்டைகளின்மேல் அடுக்கி வைப்பார்கள்.
9 அதன் குடல்களும் கால்களும் தண்ணீரி
னால் கழுவப்படவேண்டும்; அவற்றையெல்
லாம் ஆசாரியன் பலிபீடத்தில் தகனபலி
யாகத் தகனிக்கவேண்டும். இது யெகோ
வாவுக்குச் சுகந்த நிவேதனம்.
10 அவன் தகனபலியாகச் செலுத்துவதைச்
செம்மறியாட்டு மந்தையிலிருந்தாவது வெள்
ளாட்டுமந்தையிலிருந்தாவது கொண்டுவந்
தால், பழுதற்ற கடாவையே செலுத்த
11 வேண்டும். யெகோவாவின் சந்நிதியில்
பலிபீடத்தின் வடபுறத்தில் அவன் அதைக்
கொல்லவேண்டும். கொல்லவே, ஆரோ
னின் குமாரராகிய ஆசாரியர் அதின் இரத்
தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும்
தெளிக்கவேண்டும். பின்பு அவன் அதைச் 12
சந்துசந்தாகத் துண்டித்துத் துண்டங்க
ளோடு தலையையும் கொழுப்பையும் சேர்த்
துவைக்கவேண்டும்; அவைகளை ஆசாரியன்
பலிபீடத்திலுள்ள அக்கினியில் இருக்கிற
கட்டைகளின்மேல் அடுக்கிவைப்பான்.
குடல்களும் கால்களும் தண்ணீரினால் கழு 13
வப்படவேண்டும்; அவற்றையெல்லாம்
ஆசாரியன் பலிபீடத்தின்மேல் தகனிக்க
வேண்டும்; இது தகனபலி, யெகோவாவுக்
குச் சுகந்த நிவேதனம்.

அவன் யெகோவாவுக்குச் செலுத்துவது 14
பறவைகளிலிருந்து எடுக்கப்பட்ட தகன
பலியானால், காட்டுப்புறாக்களிலாவது
மாடப்புறாக்களிலாவது எடுத்துச் செலுத்த
வேண்டும். அதை ஆசாரியன் பலிபீடத் 15
தண்டையில் கொண்டுவந்து, அதின் தலை
யைக்கிள்ளி எடுத்துப் பலிபீடத்தில் தக
னித்துவிட்டு அதின் இரத்தத்தைப் பலி
பீடத்தின் பக்கத்தில் வடியவிடவேண்டும்;
அதின் இரைப்பையை அதின் மலத்தோடுங் 16
கூட எடுத்து அதைப் பலிபீடத்தண்டை
யில் கீழ் புறமாகச் சாம்பல் கொட்டும்
இடத்திலே எறிந்துவிடவேண்டும்; பின்பு 17
அதின் செட்டைகளைப் பிடித்து அதை
இரண்டாக்காமல் பிளக்கவேண்டும்; பிளக்
கவே ஆசாரியன் அதைப் பலிபீடத்திலுள்ள
அக்கினியில் இருக்கிற கட்டைகளின்மேல்
தகனிப்பான்; இது தகனபலி, யெகோவா
வுக்குச் சுகந்த நிவேதனம்.

ஒருவன் போஜனபலியாகிய காணிக்கை 2
யை யெகோவாவுக்குச் செலுத்தவேண்டுமா
னால் அவன் காணிக்கைக்கு வேண்டியது
மெல்லிய மாவு; அவன் அந்த மாவின்மேல்
எண்ணெய் வார்த்து அதின்மேல் சாம்பிரா
ணி போட்டு | அதை ஆரோனின் குமாரரா 2
கிய ஆசாரியரிடம் கொண்டுவரவேண்டும்;

ஆசாரியன் அந்த மாவிலும் எண்ணெயிலும் ஒரு கைப்பிடி நிறைய எல்லாச் சாம்பிராணியோடும் எடுத்து அந்த காணிக்கையின் ஞாபகக்குறி பாகத்தைப் பலிபீடத்தின் மேல் தகனிப்பான்: அது யெகோவாவுக்குச் 3 சுகந்த நிவேதனம். போஜனபலியில் மீதியாயிருப்பது ஆரோனையும் அவன் குமாரரையும் சேரும்; யெகோவாவுக்குப் படைக்கும் நிவேதனங்களில் இது மகா பரிசுத்தமானது.

4 நீ செலுத்துவது அடுப்பில் பாகம் பண்ணப்பட்ட போஜனபலியானால், அது எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் செய்த புளிப்பில்லாத் தோசைகளாயாவது, எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லா மெல்லிய அடைகளாயாவது இருக்கவேண்டும்.

5 நீ செலுத்துவது தட்டைச் சட்டியில் செய்யப்பட்ட போஜனபலியானால், அது எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லா மெல்லிய மாவினால் செய்யப்பட்டதாயிருக்கவேண்

6 டும். அதைத் துண்டு துண்டாகப்பிட்டு, அதின்மேல் எண்ணெய் வார்க்கவேண்டும்;

7 இது ஒரு போஜனபலி. நீ செலுத்துவது பொரிக்குஞ்சட்டியில் செய்யப்பட்ட போஜனபலியானால், அது எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் செய்யப்பட

8 வேண்டும். இவற்றால் செய்யப்பட்ட போஜனபலியை யெகோவாவுக்குக் கொண்டு வரவேண்டும்; அதை ஆசாரியனிடம் கொடுக்கும்போது அவன் அதைப் பலி

9 பீடத்தண்டையில் கொண்டுவந்து, அதன் ஞாபகக்குறி பாகத்தை எடுத்துப் பலிபீடத்தின்மேல் தகனிப்பான்; இது யெகோ

10 வாவுக்குச் சுகந்த நிவேதனம். போஜனபலியில் மீதியானது ஆரோனையும் அவன் குமாரரையும் சேரும்; யெகோவாவுக்குப் படைக்கும் நிவேதனங்களில் இது

11 மகா பரிசுத்தமானது. நீங்கள் யெகோவாவுக்குச் செலுத்தும் எந்தப் போஜனபலியும் புளித்த மாவினால் செய்யப்படக்கூடாது; புளித்த மாவான எதையும் தேனுள்ள எதையும் யெகோவாவுக்கு நிவேதனமாகப்

12 படைக்கவேண்டாம். முதற்கனிக் காணிக்கையாக இவைகளை யெகோவாவுக்குச் செலுத்தவேண்டும்; பலிபீடத்தின் மேலே அவைகளைச் சுகந்தவாசனையாகப்

13 படைக்கவேண்டாம். நீ செலுத்துகிற எந்தப் போஜனபலியும் உப்பினால் சாரமாக்கப்படவேண்டும்; உன் கடவுளுடைய உடன்படிக்கையின் உப்பை உன் போஜனபலியிலே குறையவிடாதே; நீ படைக்கும் எல்லாவற்றோடும் உப்பையும் படைக்கவேண்டும். முதற்பலன்களைப் போஜனபலியாக நீ யெகோவாவுக்குச் செலுத்தவந்தால் நிறைந்த பச்சையான கதிர்களை நெருப்பிலே வாட்டி உதிர்த்து இடித்து அதை உன் முதற்பலன்களின் போஜனபலியாகப் படைக்கவேண்டும். அதில் எண்ணெய் வார்த்து அதின்மேல் சாம்பிராணியைப் போடு; இது ஒரு போஜனபலி. பின்பு ஆசாரியன், இடித்த தானியத்திலும் எண்ணெயிலும் ஞாபகக்குறி பாகத்தை எடுத்து எல்லாச் சாம்பிராணியோடுங் கூடத் தகனிக்கவேண்டும்; இது யெகோவாவுக்குப் படைக்கும் நிவேதனம்.

14 15 16

சமாதானபலியைப் படைக்கவேண்டு 3
மென்று ஒருவன் மாட்டுமந்தையில் பிடித்துச்செலுத்துவானால், அது காளையானாலும் சரி பசுவானாலும்சரி, பழுதற்றிருப்பதையே யெகோவாவின் சந்நிதியில் செலுத்தவேண்டும். அவன் தன் பலியின் தலைமேல் தன் 2
கையை வைத்துத் தரிசனக் கூடாரவாசலின் அண்டையில் அதைக் கொல்லவேண்டும்; கொல்லவே, ஆரோனின் குமாரராகிய ஆசாரியர் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிப்பார்கள். பின்பு சமாதான பலியிலே, குடல் 3
களை மூடிய கொழுப்பையும் குடல்களோடு ஒட்டியுள்ள கொழுப்பு முழுவதையும் | இரண்டு குண்டிக்காய்களையும் அவைகளின் 4
மேல் விலாப்புறத்திலிருக்கிற கொழுப்பையும் குண்டிக்காய்களோடு கூடக் கல்லீரலின்மேலிருக்கிற சவ்வையும் எடுத்து யெகோவாவுக்கு நிவேதனமாகப் படைக்கவேண்டும். பலிபீடத்து அக்கினியிலுள்ள 5
கட்டைகளின்மேல் போட்டிருக்கும் தகன பலியின்மீதில் ஆரோனின் குமாரர் அதைப் போட்டுத் தகனிப்பார்கள். இது யெகோவாவுக்குச் சுகந்த நிவேதனம்.

யெகோவாவுக்குச் சமாதானபலியைப் 6
படைக்கவேண்டுமென்று அவன் ஆட்டு மந்தையிலிருந்து பிடித்துச் செலுத்துவானால், அது ஆண் ஆனாலும் சரி பெண் ஆனாலும் சரி, பழுதற்றிருப்பதையே செலுத்தவேண்டும். அவன் செலுத்தும் பலி செம்மறி 7
யாட்டுக்குட்டியானால் அதையெகோவாவின் சந்நிதியில் கொண்டுவந்து | தன் பலியின் 8
தலைமேல் தன் கையை வைத்துத் தரிசனக் கூடாரத்தின் எதிரே அதைக் கொல்லவேண்டும்; ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிப்பார்கள். பின்பு அவன் சமாதான பலி 9
யிலே அதின் கொழுப்பையும், நடுவெலும்பிலிருந்து தரித்தெடுத்த முழுக்கொழுப்பு

வாலியும், குடல்களை மூடிய கொழுப்பை
யும், குடல்களோடு ஒட்டியுள்ள கொழுப்பு
10 முழுவதையும், | இரண்டு குண்டிக்காய்
களையும், அவைகளின்மேல் விலாப்புறத்தில்
இருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்
களோடே கூடக் கல்லீரலின்மேல் இருக்
கிற சவ்வையும் எடுத்து யெகோவாவுக்கு
11 நிவேதனமாகப் படைக்கவேண்டும். அதை
ஆசாரியன் பலிபீடத்தின்மேல் தகனிப்
பான்; இது யெகோவாவுக்குப் படைக்கும்
நிவேதன ஆகாரம்.
12 அவன் சென்மத்துவது வெள்ளாடாயிருக்
குமானால் அவன் அதை யெகோவாவின்
13 சந்நிதியில் கொண்டுவந்து | அதின் தலை
மேல் தன் கையை வைத்துத் தரிசனக்
கூடாரத்தின் எதிரே அதைக் கொல்லவேண்
டும்; கொல்லவே ஆரோனின் குமாரர்
அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல்
14 சுற்றிலும் தெளிப்பார்கள். அவன் அதிலே
குடல்களை மூடிய கொழுப்பையும், குடல்
களோடு ஒட்டியுள்ள கொழுப்பு முழு
15 வதையும் | இரண்டு குண்டிக்காய்களையும்,
அவைகளின்மேல் விலாப்புறத்திலிருக்கிற
கொழுப்பையும், குண்டிக்காய்களோடே
கூடக் கல்லீரலின்மேலிருக்கிற சவ்வையும்
எடுத்து யெகோவாவுக்கு நிவேதனமாகப்
16 படைக்கவேண்டும். ஆசாரியன் பலிபீடத்
தின்மேல் அவைகளைத் தகனிப்பான்; இது
சுகந்த நிவேதன ஆகாரம்; கொழுப்பு முழு
17 வதும் யெகோவாவுக்குரியது. எந்தக் கொ
ழுப்பையும் எந்த இரத்தத்தையும் நீங்கள்
புசிக்கவேகூடாது; இது உங்கள் வாசஸ்த
லங்கள் எங்கும் உங்கள் தலைமுறை தலை
முறையாக நித்திய நியமமாகும் என்று
சொல் என்றார்.

**4** பின்னும் யெகோவா மோசேயினிடம்: |
2 நீ இஸ்ரவேல் புத்திரரைப் பார்த்து: செய்
யக்கூடாதென்று யெகோவா விலக்கிய
யாவற்றிலும் ஏதாவதொன்றை ஒருவன்
அறியாமல் செய்து பாவத்துக்குட்பட்டால்
அவன் பின்வருமாறு செய்யவேண்டும்:
3 அபிஷேகம்பெற்ற ஆசாரியன் ஜனத்
தைக் குற்றத்திற்குட்படுத்தும் பாவமொன்
றைச் செய்தால், மாட்டுமந்தையிற் பிடித்த
பழுதற்ற ஒரு காளையைத் தான் செய்த
பாவத்தினிமித்தம் பாவநிவாரணபலியாக
யெகோவாவுக்குப் படைக்கவேண்டும்.
4 அவன் அந்தக் காளையைத் தரிசனக்கூடார
வாசலிலே யெகோவாவின் சந்நிதியில்
கொண்டுவந்து காளையின் தலைமேல் தன்
கையை வைத்து யெகோவாவின் சந்நிதியில்
5 அதைக் கொல்லவேண்டும். கொல்லவே,
அபிஷேகம்பெற்ற ஆசாரியன் காளையின்
இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, அதைத்
தரிசனக்கூடாரத்தில் கொண்டுவந்து | தன் 6
விரலை இரத்தத்தில் தோய்த்துப் பரிசுத்த
ஸ்தலத்தின் திரைக்கு எதிரே யெகோவா
வின் சந்நிதியில் ஏழுதரம் தெளிக்கவேண்
டும். பின்பு ஆசாரியன் அந்த இரத்தத்தில் 7
கொஞ்சம் எடுத்துத் தரிசனக் கூடாரத்திலே
யெகோவாவின் சந்நிதியில் இருக்கும் சுகந்த
தூபபீடத்துக் கொம்புகளின்மேல் பூசி
விட்டுக் காளையினுடைய மற்ற இரத்தமுழு
வதையும் தரிசனக்கூடார வாசலண்டை
யில் இருக்கிற தகனபலிபீடத்தின் அடியிலே
ஊற்றிவிடவேண்டும். பாவநிவாரணபலி 8
யான காளையின் எல்லாக் கொழுப்புமா
கிய குடல்களை மூடிய கொழுப்பையும்,
குடல்களோடு ஒட்டியுள்ள கொழுப்பு
முழுவதையும் | இரண்டு குண்டிக்காய் 9
களையும், அவைகள்மேல் விலாப்புறத்தி
லிருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்க
ளோடேகூடக் கல்லீரலின்மேலிருக்கிற சவ்
வையும் | சமாதான பலியின் காளையி 10
லிருந்து எடுக்கிறதுபோல ஆசாரியன் அதி
லிருந்து எடுத்து அவைகளைத் தகன பலி
பீடத்தின்மேல் தகனிப்பான். காளையின் 11
தோலையும் அதின் மாம்சம் முழுவதையும்
அதின் தலையையும் கால்களையும் அதின்
குடல்களையும் அதின் உதப்பியையும் எடுத்
துக் | காளை முழுவதையும் பாளையத்துக்
குப் புறம்பே சாம்பல் கொட்டுகிற சுத்த
மான இடத்திலே கொண்டுபோய்க் கட்
டைகளின்மேல் போட்டு அக்கினியாலே
சுட்டெரிக்கவேண்டும்; சாம்பல் கொட்டு 12
கிற இடத்திலே அதைச் சுட்டெரிக்க
வேண்டும்.

கூட்டத்தார் அறிவரின் கண்களுக்கும் 13
மறைவாயிருக்கும் ஒரு காரியத்தில் செய்யக்
கூடாதென்று யெகோவா விலக்கிய யாவற்
றிலும் ஏதாவதொன்றை இஸ்ரவேல் சபை
யார் எல்லாரும் அறியாமல் செய்து பாவத்
துக்குட்பட்டுக் குற்றவாளிகளானால் |
அவர்கள் செய்த பாவம் தெரியவரும் 14
போது, சபையார் மாட்டுமந்தையிற் பிடித்த
ஒரு காளையைப் பாவநிவாரணபலியாகப்
படைக்கவேண்டும்; அவர்கள் அதைத்
தரிசனக்கூடாரத்தின் எதிரே கொண்டு
வரவே | சபையின் தலைவர் யெகோவாவின் 15
சந்நிதியில் தங்கள் கைகளைக் காளையின்
தலைமேல் வைக்கவேண்டும்; பின்பு யெகோ
வாவின் சந்நிதியில் அந்தக் காளை கொல்லப்
படும். அப்பொழுது அபிஷேகம்பெற்ற 16
ஆசாரியன் காளையின் இரத்தத்தில் கொஞ்

சம் எடுத்துத் தரிசனக்கூடாரத்தில்
17 கொண்டுவந்து | தன் விரலை இரத்தத்தில்
தோய்த்துத் திரைக்கு எதிரே யெகோவாவின்
18 சந்நிதியில் ஏழுதரம் தெளித்துத் | தரிசனக்
கூடாரத்திலே யெகோவாவின் சந்நிதியில்
இருக்கும் பலிபீடத்தின் கொம்புகளின்
மேல் அந்த இரத்தத்தில் கொஞ்சம் பூசி
விட்டு மற்ற இரத்த முழுவதையும் தரி
சனக்கூடாரவாசலண்டையில் இருக்கிற
தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிட
19 வேண்டும். அதின் கொழுப்பு முழுவதை
யும் அதிலிருந்து எடுத்துப் பலிபீடத்தின்
20 மேல் தகனித்துப் | பாவநிவாரண பலியான
காளையைச் செய்தபிரகாரமே இந்தக் காளை
யையும் செய்வான்; இவ்வண்ணமாக ஆசா
ரியன் அவர்களுக்குப் பிராயச்சித்தம் செய்
யவே, அவர்கள் பாவம் மன்னிக்கப்படும்.
21 பின்பு காளையைப் பாளயத்துக்குப் புறம்
பே கொண்டுபோய் முந்தின காளையைச்
சுட்டெரித்ததுபோலச் சுட்டெரிக்கவேண்
டும்; இது சபைக்காகச் செய்யப்படும் பாவ
நிவாரணபலி.

22 செய்யக்கூடாதென்று தன் கடவுளாகிய
யெகோவா விலக்கிய யாவற்றிலும், ஏதாவ
தொன்றை அறிகிறவனாயிருந்தும் அறியாமல்
செய்து பாவத்துக்குட்பட்டுக் குற்றவாளி
23 யானால், தான் செய்தது பாவம் என்று
தனக்குத் தெரியவரும்போது அவன் பழு
தற்ற வெள்ளாட்டுக்கடா ஒன்றைப் பலியா
24 கக் கொண்டுவந்து, அந்தக் கடாவின் தலை
மேல் தன் கையை வைத்து யெகோவாவின்
சந்நிதியில் தகனபலியைக்கொல்லும் இடத்
25 தில் அதைக் கொல்லவேண்டும்; இது பாவ
நிவாரணபலி. அப்பொழுது ஆசாரியன்
அதின் இரத்தத்தில் கொஞ்சம் தன் விரலால்
எடுத்துத் தகனபலிபீடத்துக் கொம்புகளின்
மேல் பூசிவிட்டு மற்ற இரத்தத்தைத் தகன
பலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிடுவான்;
26 அதின் கொழுப்பு முழுவதையும் சமாதான
பலியின் கொழுப்பைப்போலவே பலிபீடத்
தின்மேல் தகனிப்பான்; இவ்வண்ணமாக
ஆசாரியன் அவன் செய்த பாவத்திற்காக
அவனுக்குப் பிராயச்சித்தம் செய்யவே
அவன் பாவம் மன்னிக்கப்படும்.

27 செய்யக்கூடாதென்று யெகோவா விலக்
கியவற்றில் ஏதாவதொன்றைச் சாதாரண
ஜனங்களில் ஒருவன் அறியாமல் செய்து
பாவத்துக்குட்பட்டுக் குற்றவாளியானால்,
28 தான் செய்தது பாவம் என்று தனக்குத்
தெரியவரும்போது, தான் செய்த பாவத்தி
னிமித்தம் அவன் வெள்ளாடுகளில் பழு
தற்ற ஒரு பெண் ஆட்டைப் பலியாகக்
கொண்டுவந்து, பாவநிவாரணபலியின் தலை 29
மேல் தன் கையை வைத்துத் தகனபலியிடும்
இடத்தில் அந்தப் பாவநிவாரண பலியைக்
கொல்லவேண்டும். கொல்லவே ஆசாரி 30
யன் அதின் இரத்தத்தில் கொஞ்சம் தன்
விரலால் எடுத்துத் தகனபலிபீடத்துக்
கொம்புகளின்மேல் பூசிவிட்டு மற்ற இரத்
தத்தையெல்லாம் பலிபீடத்தின் அடியிலே
ஊற்றிவிடுவான்; சமாதான பலியிலிருந்து 31
கொழுப்பை எடுப்பதுபோலவே அதின்
கொழுப்பு முழுவதையும் எடுத்து ஆசாரி
யன் பலிபீடத்தின்மேல் யெகோவாவுக்குச்
சுகந்த வாசனையாகத் தகனிப்பான்; இவ்
வண்ணமாக ஆசாரியன் அவனுக்குப் பிரா
யச்சித்தம் செய்யவே அவன் பாவம் மன்
னிக்கப்படும்.

அவன் பாவநிவாரணபலியாக ஒரு செம் 32
மறி ஆட்டுக்குட்டியைக் கொண்டுவருவா
னாகில், பழுதற்ற பெண்குட்டியையே
கொண்டுவரவேண்டும்; பாவநிவாரணபலி 33
யின் தலைமேல் தன் கையை வைத்துத்
தகனபலி கொல்லப்படும் இடத்தில் அதைப்
பாவநிவாரணபலியாகக் கொல்லவேண்டும்;
கொல்லவே ஆசாரியன் அந்தப் பாவநிவா 34
ரணபலியின் இரத்தத்தில் கொஞ்சம் தன்
விரலால் எடுத்துத் தகனபலிபீடத்துக்
கொம்புகளின்மேல் பூசிவிட்டு மற்ற இரத்
தத்தை யெல்லாம் பலிபீடத்தின் அடியிலே
ஊற்றிவிடுவான்; சமாதானபலியான ஆட் 35
டுக்குட்டியின் கொழுப்பை எடுப்பது
போலவே இதின் கொழுப்பு முழுவதையும்
எடுத்து, யெகோவாவுக்குப்படைக்கும் நிவே
தனங்களைப்போலவே பலிபீடத்தின்மேல்
ஆசாரியன் அவைகளைத் தகனிக்கவேண்
டும்; இவ்வண்ணமாக அவன் செய்த பாவ
த்துக்காக ஆசாரியன் அவனுக்குப் பிராயச்
சித்தம் செய்யவே அவன் பாவம் மன்னிக்
கப்படும்.

தான் கண்டதுண்டா அறிந்ததுண்டா 5
என்று சாட்சியாகச் சொல்வதற்கு ஆணை
யோடு அழைப்பதை ஒருவன் கேட்டும்
தனக்குத் தெரிந்ததைச் சொல்லாமலிருந்து
பாவத்துக்குட்பட்டால், அவன் தன் அக்கி 2
ரமத்தைச் சுமப்பான். ஒருவன் தீட்டுள்ள
எதையும், தீட்டுள்ள செத்த காட்டு மிரு
கத்தையோ தீட்டுள்ள செத்த நாட்டு மிரு
கத்தையோ தீட்டுள்ள செத்த ஊரும் பிரா
ணியையோ, அவனுக்குத் தெரியாமலே
தொட்டுவிட்டால் அவனும் தீட்டுள்ளவனா
கிறான், அவன் குற்றவாளியே. எந்தத் தீட் 3
டானாலும் தீட்டுப்பட்ட ஒரு மனிதனை
ஒருவன் அறியாமலே தொட்டுப்பின்பு

அதை அறிந்துகொண்டால் அவன் குற்ற
4 வாளியே. மனிதர் புதறி ஆணையிடும் எந்
தக் காரியத்திலாகிலும், ஒருவன் நீமைசெய்
கிறதற்கோ நன்மை செய்கிறதற்கோ, தனக்
குத் தெரியாமலே தன் உதடுகளினால்
பதறி ஆணையிட்டுப் பின்பு அவன் அதைத்
தெரிந்துகொண்டால், அவ்விஷயத்தில்
5 அவன் குற்றவாளியே. இப்படிப்பட்ட
வைகள் ஒன்றில் ஒருவன் குற்றவாளியாகும்
போது அவன் தான் செய்த பாவத்தை
6 அறிக்கையிட்டு | யெகோவாவுக்குத் தன்
குற்றநிவாரணபலியைக் கொண்டுவரவேண்
டும். தான் செய்த பாவத்தினிமித்தம்,
ஆட்டுமந்தையிற் பிடித்த பெண் ஆட்டை,
செம்மறியாட்டுக்குட்டியையோ வெள்ளாட்
டுக்குட்டியையோ, பாவநிவாரணபலியாகக்
கொண்டுவரவேண்டும்; இவ்வண்ணமாக
அவன் பாவம் நீங்குவதற்கு ஆசாரியன்
அவனுக்குப் பிராயச்சித்தம் செய்வான்.
7 ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர அவனுக்
குச் சக்தியில்லாதிருந்தால், அவன் செய்த
குற்றத்தினிமித்தம் இரண்டு காட்டுப்புருக்
களையாவது, இரண்டு மாடப்புருக்
களையாவது, ஒன்றைப் பாவநிவாரணபலி
யாகவும் மற்றொன்றைத் தகனபலியாகவும்
யெகோவாவுக்குக் கொண்டுவரவேண்டும்.
8 அவைகளை ஆசாரியனிடம் கொண்டுவர
வேண்டும்; ஆசாரியன் பாவநிவாரணபலிக்
கானதை முன்னே படைத்து, அதின் தலை
யை அதின் கழுத்தினிடத்திலே கிள்ளி
அதை இரண்டாக்காமல் வைக்கவேண்டும்.
9 பாவநிவாரணபலியின் இரத்தத்தில் கொஞ்
சம் எடுத்துப் பலிபீடத்தின் பக்கத்தில்
தெளித்துவிட்டு மீதியான இரத்தத்தைப்
பலிபீடத்தின் அடியிலே வடிய விடவேண்
10 டும்; இது பாவநிவாரணபலி. மற்றதை
நியமத்தின்படியே அவன் தகனபலியாய்ச்
செலுத்தவேண்டும்; இவ்விதமாக அவன்
செய்த பாவம் நீங்குவதற்கு ஆசாரியன்
பிராயச்சித்தம் செய்யவே அவன் பாவம்
மன்னிக்கப்படும்.
11 இரண்டு காட்டுப்புருக்களையாவது இர
ண்டு மாடப்புருக்களையாவது கொண்டுவர
அவனுக்குச் சக்தியில்லாதிருந்தால், தான்
செய்த பாவத்தினிமித்தம் படைக்கும்
காணிக்கைக்கென்று ஒரு எப்பா அள
வான மெல்லியமாவிலே பத்தில் ஒரு பங்
கைப் பாவநிவாரணபலியாகக் கொண்டு
வரவேண்டும்; அது பாவநிவாரண பலியா
கையால் அதின்மேல் எண்ணெய் வார்க்க
லாகாது, சாம்பிராணி போடலாகாது;
12 அதை ஆசாரியனிடம் கொண்டுவரவேண்
டும். ஆசாரியன் அதிலே ஞாபகக்குறி
பாகத்தை ஒரு கைப்பிடி நிறைய எடுத்து
யெகோவாவுக்குப் படைக்கும் நிவேதனங்
களைப்போலவே பலிபீடத்தின்மேல் தகனிக்
கவேண்டும்; இது பாவநிவாரணபலி. இவ் 13
வண்ணமாக, மேற்சொல்லிய காரியங்கள்
ஒன்றில் அவன் செய்த பாவத்துக்காக
ஆசாரியன் பிராயச்சித்தம்செய்யவே அவன்
பாவம் மன்னிக்கப்படும்; போஜனபலியைப்
போலவே இதுவும் ஆசாரியனைச் சேரும்
என்று சொல் என்றார்.

பின்னும் யெகோவா மோசேயினி 14, 15
டம்: ஒருவன் அறியாமல் பாவத்துக்குட்
பட்டு, யெகோவாவுக்கென்று பிரதிஷ்டை
பண்ணப்பட்டவைகள் விஷயத்தில் துரோ
கமாய் நடந்தால், அவன் ஆட்டுமந்தையிற்
பிடித்த பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவைக்
குற்றநிவாரணபலியாக யெகோவாவினிடம்
கொண்டுவரவேண்டும்; பரிசுத்த ஸ்தலத்
துச் சேக்கல் கணக்கின்படி நீ விதிக்கும்
வெள்ளிச்சேக்கல் விலை பெறும் கடாவே
குற்றநிவாரணபலியாகும். அன்றியும் பிர 16
திஷ்டை பண்ணப்பட்டவைகள் விஷயத்
தில் தான் செய்த தப்பிதத்தினால் விளைந்த
நஷ்டத்துக்கு ஐந்திலொருபங்கு அதிகமா
கவே கூட்டிப் பதில் கொடுக்கவேண்டும்,
ஆசாரியனிடமே அதைக் கொடுக்கவேண்
டும். குற்றநிவாரணபலியாகிய ஆட்டுக்கடா
வைக்கொண்டு ஆசாரியன் அவனுக்குப்
பிராயச்சித்தம் செய்யவே அவன் பாவம்
மன்னிக்கப்படும்.

செய்யக்கூடாதென்று யெகோவா விலக் 17
கிய யாவற்றிலும் ஏதாவதொன்றை ஒரு
வன் செய்து பாவத்துக்குட்பட்டால்,
அவன் அறியாமலே அப்படிச் செய்திருந்
தாலும், அவன் குற்றவாளியே; அவன் தன்
அக்கிரமத்தைச் சுமப்பான். ஆட்டுமந்தை 18
யிற் பிடித்த பழுதற்ற ஒரு கடாவை, உன்
மதிப்புக்குச் சரியான கடாவையே, குற்ற
நிவாரணபலியாக அவன் ஆசாரியனிடம்
கொண்டுவரவேண்டும். அவன் அறியா
மற்செய்த குற்றத்திற்காக ஆசாரியன் அவ
னுக்குப் பிராயச்சித்தம்செய்யவே அவன்
பாவம் மன்னிக்கப்படும். இது குற்றநிவார 19
ணபலி; அவன் யெகோவாவின் பார்வை
யில் குற்றவாளியே என்றார்.

பின்னும் யெகோவா மோசேயினிடம்: | 6
ஒருவன் யெகோவாவுக்கு விரோதமாய்த் 2
துரோகம்பண்ணித் தன்வசம் அயலான்
வைத்துவைத்ததையும் அடைவுவைத்ததை
யும் அவனிடமிருந்து பலாத்காரமாய்ப்
பறித்துக்கொண்டதையும் இல்லையென்று

மறுத்தல், தன் அயலானை ஒடுக்குதல், |
3 காணுமற்போனதைக் கண்டெடுத்தும் பொய்யாணையிட்டு அதை மறுத்தல் ஆகிய இக்காரியங்களில் ஒன்றைச்செய்து பாவத்
4 துக்குட்பட்டால் அவன் குற்றவாளியே. அவன் பாவத்துக்குட்பட்டுக் குற்றவாளியானானென்று தெரியவரும்போது தான் பலாத்காரமாய்ப் பறித்துக்கொண்டதையும் தான் ஒடுக்கி எடுத்துக்கொண்டதையும் தன்னிடம் வைத்துவைக்கப்பட்டதையும் தான்
5 கண்டெடுத்ததையும் | தான் பொய்யாணையிட்டு மறைத்த வேறெதையும் திரும்ப முழுவதும் கொடுப்பதுமன்றி ஐந்திலொருபங்கு அதிகம் சேர்த்துக்கொடுக்கவேண்டும். தான் குற்றவாளியெனத் தெரியவரும் நாளிலேயே அதற்குரியவனிடம் கொடுத்
6 துவிடவேண்டும். ஆட்டுமந்தையிற் பிடித்த பழுதற்ற ஒரு கடாவை, உன் மதிப்புக்குச் சரியான கடாவையே, குற்றநிவாரணபலியாக யெகோவாவுக்குச் செலுத்தும்படி அவன் ஆசாரியனிடம் கொண்டுவர
7 வேண்டும். ஆசாரியன் யெகோவாவின் சந்நிதியில் அவனுக்குப் பிராயச்சித்தம் செய்யவே அவன் பாவம் மன்னிக்கப்படும்; அவன் குற்றவாளியாகும்படி வேறெது செய்திருந்தானும் அப்படியே செய்யவேண்டும் என்றார்.

8 பின்னும் யெகோவா மோசேயினிடம்:
9 நீ ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் கட்டளையிட்டு இவற்றைச் சொல்: தகனபலிக்குரிய பிரமாணத்தைக் கேளுங்கள், தகனபலியானது இராமுழுவதும் விடியற்காலமட்டும் பலிபீடத்து நெருப்பின்மேலே இருக்கவேண்டும்; பலிபீடத்தின்மேலுள்ள நெருப்பை எரித்துக்கொண்டே இருக்க
10 வேண்டும். ஆசாரியன் தன் சணல்நூல் அங்கியைத் தரித்துத் தன் சணல்நூல் சல்லடத்தை போட்டுக்கொண்டு பலிபீடத்தின்மேல் அக்கினியில் எரிந்த தகனபலியின் சாம்பலை எடுத்துப் பலிபீடத்துப் பக்கத்
11 தில் கொட்டிவிடவேண்டும்; பின்பு தன் வஸ்திரங்களைக் கழற்றி வேறு வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு அந்தச் சாம்பலைப் பாளயத்துக்கு வெளியே சுத்தமான ஒரு இடத்திலே கொண்டுபோய்க் கொட்டவேண்டும்.
12 பலிபீடத்தின்மேலிருக்கிற நெருப்பை அவியாமல் எரித்துக்கொண்டேயிருக்கவேண்டும்; ஆசாரியன் காலைதோறும் அதின்மேல் எரியும்படி கட்டைகளைப்போட்டு, அதின்மேல் தகனபலியை அடுக்கி அதின்மேல் சமாதானபலிகளின் கொழுப்பைப்போட்
13 டுத் தகனிக்கவேண்டும். பலிபீடத்தின்மேலிருக்கும் நெருப்பை எப்பொழுதும் எரித்துக்கொண்டேயிருக்கவேண்டும்; அது ஒருபொழுதும் அவிந்துபோகலாகாது:

14 போஜனபலியின் பிரமாணத்தையும் கேளுங்கள், ஆரோனின் குமாரர் அதை யெகோவாவின் சந்நிதியில் பலிபீடத்துக்கு
15 எதிரே படைக்கவேண்டும். அவன் போஜனபலியின் மெல்லியமாவிலும் அதின் எண்ணெயிலும் கைப்பிடி நிறைய எடுத்துப் போஜனபலியின்மேலுள்ள எல்லாச் சாம்பிராணியோடுங்கூட அதன் ஞாபகக் குறிபாகத்தைப் பலிபீடத்தின்மேல் யெகோவாவுக்குச் சுகந்தவாசனையாகத் தகனிக்க
16 வேண்டும். அதில் மீதியானதை ஆரோனும் அவன் குமாரரும் புசிப்பார்கள், அதைப் புளிப்பில்லாததாகப் பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்கவேண்டும்; தரிசனக் கூடாரத்தின் பிராகாரத்திலே அதைப் புசிப்பார்கள்.
17 அதைப் புளித்தமாவுள்ளதாகப் பாகம்பண்ணவேண்டாம்; எனக்குப் படைக்கும் நிவேதனங்களில் அதை நான் அவர்கள் பாகமாகக் கொடுத்தேன்; அது பாவநிவாரணபலியைப்போலவும் குற்றநிவாரணபலியைப்போலவும் மகா பரிசுத்தமானது.
18 ஆரோனின் பிள்ளைகளில் ஆண்மக்கள் யாவரும் அதைப் புசிப்பார்கள்; யெகோவாவுக்குப் படைக்கும் நிவேதனங்களில் அது உங்கள் தலைமுறை தலைமுறையாக நித்திய நியமமான பாகம்; அவற்றைத் தொடுகிறவன் எவனும் பரிசுத்தமாவான் என்று சொன்னார்.

19, 20 பின்னும் யெகோவா மோசேயினிடம்: ஆரோன் அபிஷேகம்பண்ணப்படும் நாளில், அவனும் அவன் குமாரரும் யெகோவாவுக்குப் படைக்கவேண்டிய காணிக்கை இதுவே, ஒரு எப்பா அளவான மெல்லியமாவிலே பத்தில் ஒரு பங்கைக் காலையில் பாதியும் மாலையில் பாதியும் நித்திய போஜன பலியாகச் செலுத்தவேண்டும்; அதைத் தட்டைச் சட்டியிலே எண்ணெய் விட்டுச் செய்ய
21 வேண்டும்; செய்த பின்பு அதைக் கொண்டுவந்து துண்டுதுண்டாக்கிப் போஜனபலியாக யெகோவாவுக்குச் சுகந்தவாசனையாய்ப் படைக்கவேண்டும்.
22 அவன் குமாரரில் அவனுக்குப்பின் பட்டத்துக்குவர அபிஷேகம்பண்ணப்படுகிற ஆசாரியன் அதைப் படைக்கவேண்டும்; இது நித்திய நியமம். இதை யெகோவாவுக்கென்று
23 முழுவதும் தகனிக்கவேண்டும். ஆசாரியனுக்காக இடப்படும் எந்தப் போஜனபலியையும் முழுவதும் தகனித்துவிடவேண்

டும், அதைப் புசிக்கவேகூடாது என்றார்.
24, 25 பின்னும் யெகோவா மோசேயினிடம்: நீ ஆரோனையும் அவன் குமாரரையும் பார்த்து,

பாவநிவாரணபலியின் பிரமாணத்தைக் கேளுங்கள்: தகனபலி கொல்லப்படும் இடத்திலேயே பாவநிவாரணபலியும் யெகோவாவின் சந்நிதியில் கொல்லப்படவேண்
26 டும்; அது மகா பரிசுத்தமானது. பாவநிவாரணபலியாக அதைப் படைக்கும் ஆசாரியன் அதைப் புசிப்பான்; தரிசனக்கூடாரத்தின் பிராகாரமாகிய பரிசுத்த இடத்திலேயே அதைப் புசிக்கவேண்டும்.
27 அதின் மாம்சத்தில் படுகிறது எதுவும் பரிசுத்தமாகும், அதின் இரத்தத்திலே கொஞ்சம் ஒரு வஸ்திரத்தில் தெறித்ததாலும், இரத்
28 தந்தெறித்த வஸ்திரத்தைப் பரிசுத்த இடத்தில் துவைக்கவேண்டும். அதைச் சமைத்த மண்பாண்டம் உடைக்கப்படவேண்டும்; செப்புப்பாத்திரத்தில் சமைக்கப்பட்டதாலும் அதை விளக்கித் தண்ணீரில் கழுவவேண்
29 டும். ஆசாரிய குடும்பங்களில் ஆண்மக்கள் யாவரும் அதைப் புசிப்பார்கள்; அது
30 மகா பரிசுத்தமானது. எந்தப் பாவநிவாரணபலியின் இரத்தத்தில் கொஞ்சம் பரிசுத்த ஸ்தலத்திலே பிராயச்சித்தம் செய்வதற்கென்று தரிசனக்கூடாரத்தினுள் கொண்டு வரப்பட்டதோ, அந்தப் பலி புசிக்கப்படலாகாது, அதை அக்கினியிலே தகனிக்கவேண்டும்.

7 குற்றநிவாரணபலியின் பிரமாணத்தைக்
2 கேளுங்கள்: அது மகா பரிசுத்தமானது. தகனபலி கொல்லப்படும் இடத்திலேயே குற்றநிவாரணபலியும் கொல்லப்படவேண்டும்; அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்
3 மேல் சுற்றிலும் தெளிக்கவேண்டும்; அதினுடைய கொழுப்பு முழுவதையும், அதின் கொழுப்புவால், குடல்களை மூடிய கொழு
4 ப்பு | இரண்டு குண்டிக்காய்கள் அவைகளின்மேல் விலாபுறத்திலிருக்கிற கொழுப்பு, குண்டிக்காய்களோடேகூடக் கல்லீரலின் மேலிருக்கிற சவ்வு ஆகிய இவற்றையெல்
5 லாம் எடுத்துச் செலுத்தவேண்டும். இவைகளை ஆசாரியன் பலிபீடத்தின்மேல் யெகோவாவுக்கு நிவேதனமாகத் தகனிக்கவேண்
6 டும்; அது குற்றநிவாரணபலி. ஆசாரிய குடும்பங்களில் ஆண்மக்கள் யாவரும் அதைப் புசிப்பார்கள்; அதைப் பரிசுத்த இடத்திலே புசிக்கவேண்டும்; அது மகா பரிசுத்தமானது.

7 பாவநிவாரணபலி எப்படியோ குற்றநிவாரணபலியும் அப்படியே; அவ்விரண்டிற்கும் பிரமாணம் ஒன்றே; பிராயச்சித்தத்தைச் செய்கிற ஆசாரியனே அது சேரும். ஒருவனுடைய தகனபலியின் தோல் 8
அந்தத் தகனபலியைச் செலுத்துகிற ஆசாரியனைச் சேரும். அடுப்பிலே பாகம்பண் 9
ணப்பட்டதும், பொரிக்குஞ்சட்டியிலும் தட்டைச் சட்டியிலும் செய்யப்பட்டதுமான போஜனபலி யாவும் அதைச் செலுத்துகிற ஆசாரியனைச் சேரும். எண்ணை 10
யிலே பிசைந்ததும் எண்ணையிலே பிசையாததுமான சகல போஜனபலியும் ஆரோனின் குமாரர் யாவருக்கும் சரிபங்காகச் சேரும்.

யெகோவாவுக்குச் செலுத்தும் சமாதான 11
பலிகளின் பிரமாணத்தைக் கேளுங்கள்: 12
அதை ஸ்தோத்திரமாகச் செலுத்துவாளானால், அவன் ஸ்தோத்திர பலியோடுங்கூட எண்ணெயிலே தோய்த்த புளிப்பில்லாத் தோசைகளையும் எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லா மெல்லிய அடைகளையும் எண்ணெயிலே பிசைந்ததும் வறுக்கப்பட்ட மெல்லிய மாவினால் செய்ததுமான பணிகாரங்களையும் படைக்கவேண்டும். புளித்த 13
மாவினால் செய்த தோசையாகிய அப்பத்தோடே தான் ஸ்தோத்திரமாகப் படைக்கும் சமாதான பலியாகிய காணிக்கையைப் படைக்கவேண்டும். ஒவ்வொரு காணிக் 14
கையிலும் ஒவ்வொன்றை எடுத்து யெகோவாவுக்கு உயர்த்திப்படைக்கும் காணிக்கையாகச் செலுத்தவேண்டும்; அது சமாதான பலியின் இரத்தத்தைத் தெளித்த ஆசாரியனைச் சேரும். ஸ்தோத்திரமாகப் 15
படைக்கும் சமாதானபலியின் மாம்சத்தை அது செலுத்தப்படும் நாளிலேயே புசிக்கவேண்டும்; அதில் ஒன்றையும் விடியற்காலமட்டும் வைத்திருக்கக்கூடாது. அவன் 16
செலுத்தும் இரத்தபலி பொருத்தனையாயாவது மனப்பூர்வ பலியாயாவது இருக்குமானால் அதைச் செலுத்தப்படும் நாளிலும், அதில் மீதியானதை மறுநாளிலும் புசிக்கலாம். பலியின் மாம்சத்தில் மீதியாயிருக் 17
கிறதை மூன்றாம்நாளில் அக்கினியிலே சுட்டெரித்து விடவேண்டும். சமாதானபலி 18
யின் மாம்சத்தில் மீதியானதை மூன்றாம் நாளில் புசித்தால் அது அங்கீகரிக்கப்படமாட்டாது; அதைச் செலுத்தினவனுக்கு அது பலிக்காது; அது அருவருப்பு; அதைப் புசிக்கிறவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான். தீட்டான எந்த வஸ்துவிலா 19
வது அந்த மாம்சம் பட்டதானால் அதைப் புசிக்கக்கூடாது, அதை அக்கினியிலே சுட்டெரிக்கவேண்டும்; மற்ற மாம்சத்தையோ

சுத்தமாயிருக்கிறவனெவனும் புசிக்கலாம்.
20 யெகோவாவுக்குப் படைக்கும் சமாதான
பலியின் மாம்சத்தைப் புசிக்கிறவன் தீட்
டுள்ளவனாயிருந்தால் அவன் தன் ஜனத்தாரி
லிருந்து நீக்கப்பட்டுப்போகவேண்டும்.
21 தீட்டான எதையும், மனுஷரின் தீட்டை
யோ தீட்டான மிருகத்தையோ அருவருக்
கும் தீட்டான வேறெதையோ, ஒருவன்
தொட்டிருந்து யெகோவாவுக்குப் படைக்
கும் சமாதானபலியின் மாம்சத்தைப் புசித்
தால் அவன் தன் ஜனத்திலிருந்து நீக்கப்
பட்டுப்போவான் என்று சொல் என்றார்.
22, 23 பின்னும் யெகோவா மோசேயினி
டம்: நீ இஸ்ரவேல் புத்திரரைப் பார்த்து,
மாடு ஆடு வெள்ளாடு என்பவைகளின்
கொழுப்பை நீங்கள் புசிக்கலாகாது.
24 தானாய்ச் செத்த மிருகத்தின் கொழுப்பை
யும் பீறுண்ட மிருகத்தின் கொழுப்பையும்
பலவித வேலைகளுக்கு வழங்கலாமேயன்றி
நீங்கள் அதை ஒருபோதும் புசிக்கலாகாது.
25 யெகோவாவுக்கு நிவேதனமாகப் படைக்
கும் மிருகத்தின் கொழுப்பைப் புசிக்கிற
எவனும் தன் ஜனத்திலிருந்து நீக்கப்பட்டுப்
26 போவான். உங்கள் வாசஸ்தலங்களில்
எங்கும் எந்த இரத்தத்தையும், பறவையின்
இரத்தமானாலுஞ்சரி மிருகத்தின் இரத்தமா
27 னாலுஞ்சரி, புசிக்கலாகாது. எவ்வித இரத
த்தையாகிலும் புசிக்கிற எவனும் தன்
ஜனத்திலிருந்து நீக்கப்பட்டுப்போவான்
என்று சொல் என்றார்.
28, 29 பின்னும் யெகோவா மோசேயினி
டம்: நீ இஸ்ரவேல் புத்திரரைப்பார்த்து,
யெகோவாவுக்குச் சமாதானபலி செலுத்து
கிறவன் தான் செலுத்தும் சமாதானபலியிலி
ருந்து காணிக்கையை யெகோவாவுக்குக்
30 கொண்டுவரவேண்டும். யெகோவாவுக்குப்
படைக்கும் நிவேதனங்களைத் தன் கைகளா
லேயே கொண்டுவரவேண்டும்; மார்க்கண்
டத்தையும் அதனோடுகூட அதின்மேலுள்ள
கொழுப்பையும் யெகோவாவின் சந்நிதியில்
அசைவாட்டும் பலியாக அசைவாட்டுவதற்
31 குக் கொண்டுவரவேண்டும். ஆசாரியன்
அந்தக் கொழுப்பைப் பலிபீடத்தின்மேல்
தகனிப்பான்; மார்க்கண்டமோ ஆரோன
32 யும் அவன் குமாரரையும் சேரும். உங்
கள் சமாதானபலிகளில் வலது முன்னந்
தொடையை உயர்த்தப்படும் பலியாகும்
படி ஆசாரியனிடம் கொடுக்கவேண்டும்.
33 ஆரோனுடைய குமாரரில் சமாதானபலி
யின் இரத்தத்தையும் கொழுப்பையும்
செலுத்துகிறவனுக்கு வலது முன்னந்தொ
34 டை பங்காகச் சேரும். அசைவாட்டும்
மார்க்கண்டத்தையும் உயர்த்திப் படைக்
கும் முன்னந்தொடையையும் நான் இஸ்ர
வேல் புத்திரரின் சமாதானபலிகளிலிருந்து
எடுத்து அவைகளை ஆசாரியனாகிய ஆரோ
னுக்கும் அவன் குமாரருக்கும் கொடுத்
தேன்; இது இஸ்ரவேல் புத்திரரிடத்திலிரு
ந்து வரும் நித்திய நியமமான பாகமாம்
என்று சொல் என்றார்.
யெகோவாவுக்கு ஆசாரிய ஊழியம் 35
செய்யும்படி ஆரோனும் அவன் குமாரரும்
நியமிக்கப்பட்ட நாளிலேயே இது யெகோ
வாவுக்குப் படைக்கும் நிவேதனங்களில்
அவர்களுக்குரிய ஆசாரிய பங்காக ஏற்பட்
டது. அவர்கள் அபிஷேகம்பண்ணப் 36
பட்ட நாளில் இஸ்ரவேல்புத்திரர் அவர்க
ளுக்குக் கொடுக்கும்படி யெகோவா கட்
டளையிட்டது இதுவே; இது தலைமுறை
தலைமுறையான நித்திய நியமம்.
தகனபலி போஜனபலி பாவநிவாரண 37
பலி குற்றநிவாரணபலி பிரதிஷ்டைபலி
சமாதானபலி ஆகிய பலிகளுக்குரிய பிரமா
ணம் இதுவே. தமக்குப் படைக்கவேண்டிய 38
பலிகளைப்பற்றி யெகோவா இஸ்ரவேல் புத்
திரருக்குச் சீனாய் வனாந்தரத்தில் கட்டளை
யிட்ட நாளில் மோசேக்கு அவர் சீனாய்மலை
யில் கட்டளையிட்டவைகள் இவைகளே.
8 யெகோவா மோசேயினிடம்: | நீ ஆரோ
2 னையும் அவனோடுகூட அவன் குமாரரையும்
வரவழைத்து, வஸ்திரங்களையும் அபிஷேக
தைலத்தையும் பாவநிவாரண பலிக்கு
வேண்டிய காளையையும் இரண்டு ஆட்டுக்
கடாக்களையும் புளிப்பில்லா அப்பங்க
ளுள்ள கூடையையும் கொண்டுவந்து |
3 சபையையெல்லாம் தரிசனக்கூடார வாச
4 லில் கூடிவரச்செய் என்றார். | யெகோவா
தனக்குக் கட்டளையிட்டபடியே மோசே
செய்தான்; சபை தரிசனக் கூடாரவாசலில்
5 கூடினபோது | மோசே சபையைப் பார்த்
து: செய்யவேண்டுமென்று யெகோவா கட்
டளையிட்ட காரியம் இதுவே என்று
6 சொல்லி, | ஆரோனையும் அவன் குமாரரை
யும் கிட்டிவரச்செய்து அவர்களைத் தண்ணீ
7 ரினால் கழுவி, | அவனுக்கு உள் சட்டை
யைப்போட்டு, இடைக்கச்சையைக் கட்டி,
அங்கியை உடுத்தி, ஏபோத்தைத் தரித்து,
அதன்மேல் ஏபோத்தின் விசித்திரக் கச்சை
யைக்கட்டி, | அவனுக்கு மார்ப்பதக்கத்தை 8
அணிந்து, மார்ப்பதக்கத்திலே ஊரீம் தும்
மீம் என்பவைகளையும் வைத்து, | அவன் 9
தலையிலே பாகையைத் தரித்து, பாகையின்
மேல் அவன் நெற்றியிலே பரிசுத்த கிரீடம்
என்னும் பொற்பட்டத்தைக் கட்டினான்.

இப்படியாக, யெகோவா மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்யப்பட்டது.

10 பின்பு மோசே அபிஷேக தைலத்தை எடுத்து வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவற்றையும் அபிஷேகம்பண்ணி அவற்
11 றைப் பரிசுத்தப்படுத்தினான்; அதில் கொஞ்சம் எடுத்துப் பலிபீடத்தின்மேல் ஏழுதரம் தெளித்துப் பலிபீடத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும், தொட்டியையும் அதின் பாதத்தையும் பரிசுத்தப்படுத்தும்படி அபி
12 ஷேகம்பண்ணினான்; அபிஷேக தைலத்திலே கொஞ்சம் எடுத்து ஆரோன் சிரசின் மேல் வார்த்து, அவனைப் பரிசுத்தப்படுத்
13 தும்படி அபிஷேகம்பண்ணினான். பின்பு மோசே ஆரோனின் குமாரரைக் கிட்டி வரச்செய்து, அவர்களுக்கு அங்கிகளை உடுத்தி, இடைக்கச்சைகளைக் கட்டி குல்லாக்களைத் தரிப்பித்தான்; இப்படியாக, யெகோவா மோசேக்குக் கட்டளையிட்ட படியே செய்யப்பட்டது.

14 பின்பு பாவநிவாரணபலிக்கான காளையை அவன் கொண்டுவரவே ஆரோனும் அவன் குமாரரும் அதின் தலைமேல் தங்கள் கைகளை
15 வைத்தார்கள்; அது கொல்லப்பட்டது; கொல்லப்படவே மோசே அதின் இரத்தத்தை எடுத்துத் தன் விரலினால் பலிபீடக் கொம்புகளின்மேல் சுற்றிலும் தடவிப் பலி பீடத்திற்காகப் பாவநிவர்த்தி செய்தான்; மற்ற இரத்தத்தைப் பலிபீடத்தின் அடியில் ஊற்றிவிட்டு, அதற்காகப் பிராயச்சித்தம் செய்து அதைப் பரிசுத்தப்படுத்தினான்.
16 பின்பு மோசே குடல்களின்மேல் இருந்த கொழுப்பு முழுவதையும், கல்லீரலின்மேல் இருந்த சவ்வையும், இரண்டு குண்டிக் காய்களையும், அவைகளின் கொழுப்பையும் எடுத்துப் பலிபீடத்தின்மேல் தகனித்தான்;
17 காளையையும் அதின் தோலையும் மாம்சத்தையும் உதப்பியையும் பாளயத்துக்குப் புறம்பே அக்கினியிலே சுட்டெரித்தான். இப்படியாக, யெகோவா மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்யப்பட்டது.

18 பின்பு அவன் தகனபலிக்கு வேண்டிய ஆட்டுக்கடாவைக் கொண்டுவந்தான்; அதின் தலைமேல் ஆரோனும் அவன் குமார
19 ரும் தங்கள் கைகளை வைத்தார்கள். அது கொல்லப்பட்டது; கொல்லப்படவே மோசே அதின் இரத்தத்தை பலிபீடத்தின்
20 மேல் சுற்றிலும் தெளித்தான். ஆட்டுக்கடா சந்துசந்தாகத் துண்டிக்கப்பட்டது; மோசே அதின் தலையையும் துண்டங்களை
21 யும் கொழுப்பையும் தகனித்தான். குடல்களையும் கால்களையும் தண்ணீரால் கழுவின பின் மோசே ஆட்டுக்கடா முழுவதையும் பலிபீடத்தின்மேல் தகனித்தான். இது சுகந்த தகனபலி, யெகோவாவுக்கு நிவேதனம். இப்படியாக யெகோவா மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்யப்பட்டது.

பின்பு பிரதிஷ்டை செய்வதற்குரிய 22
மற்ற ஆட்டுக்கடாவைக் கொண்டுவரச் செய்தான்; அதின் தலைமேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள். அது கொல்லப்பட்டது; கொல் 23
லப்படவே மோசே அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆரோனுடைய வலது காதின் மடலிலும் வலதுகையின் பெருவிரலிலும் வலது காலின் பெருவிரலிலும் தடவினான். பின்பு ஆரோனுடைய குமாரரை 24
யும் கிட்டிவரச்செய்தான்; மோசே அந்த இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து அவர்கள் வலதுகாதின் மடலிலும் வலதுகையின் பெருவிரலிலும் வலதுகாலின் பெருவிரலிலும் தடவி, மற்ற இரத்தத்தைப் பலிபீடத்தின் மேல் சுற்றிலும் தெளித்துக் | கொழுப்பை 25
யும் கொழுப்பு வாலையும் குடல்களின்மேலிருந்த கொழுப்பு முழுவதையும் கல்லீரலின்மேலிருந்த சவ்வையும் இரண்டு குண்டிக்காய்களையும் அவைகளின் கொழுப்பையும் வலது முன்னந் தொடையையும் எடுத்து | யெகோவாவின் சந்நிதியில் வைத் 26
திருந்த புளிப்பில்லா அப்பக்கூடையிலிருந்த புளிப்பில்லாத் தோசையில் ஒன்றையும், எண்ணெயிட்ட அப்பமாகிய தோசையில் ஒன்றையும், மெல்லிய அடை ஒன்றையும் எடுத்து, அந்தக் கொழுப்பின்மேலும் வலது முன்னந்தொடையின்மேலும் வைத்தான்; அவைகளையெல்லாம் ஆரோனின் உள்ளங் 27
கைகளிலும் அவன் குமாரரின் உள்ளங்கைகளிலும் வைத்து அசைவாட்டும் பலியாக யெகோவாவின் சந்நிதியில் அசைவாட்டினான்; அசைவாட்டினபின் மோசே 28
அவைகளை அவர்கள் உள்ளங்கைகளிலிருந்து எடுத்துப் பலிபீடத்திலிருந்த தகனபலியின்மேல் தகனித்தான்; அவைகள் சுகந்த பிரதிஷ்டைப்பலி; இது யெகோவாவுக்கு நிவேதனம். பின்பு மோசே 29
மார்க்கண்டத்தை எடுத்து அதை யெகோவாவின் சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டினான். இது பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவிலே மோசேயின் பங்காயிற்று; இப்படியாக, யெகோவா மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்யப்பட்டது.

மோசே அபிஷேகதைலத்திலும் பலி 30
பீடத்தின்மேலிருந்த இரத்தத்திலும் கொஞ்

சம் எடுத்து ஆரோன்மேலும் அவன் வஸ்
திரங்கள்மேலும் அவன் குமாரர்மேலும்
அவர்கள் வஸ்திரங்கள்மேலும் தெளித்து,
ஆரோனையும் அவன் வஸ்திரங்களையும்
அவன் குமாரரையும் அவன் குமாரரின்
வஸ்திரங்களையும் பரிசுத்தப்படுத்தினான்.
31 பின்பு மோசே ஆரோனையும் அவன்
குமாரரையும் பார்த்து: நீங்கள் அந்த மாம்
சத்தைத் தரிசனக்கூடார வாசலண்டை
யிலே வேகவைத்து, ஆரோனும் அவன்
குமாரரும் அதைப் புசிப்பார்கள் என்று
கட்டளையிட்டிருக்கிறபடியே, அங்கே அதை
யும் உங்கள் பிரதிஷ்டைக்கூடையில் இருக்
32 கிற அப்பத்தையும் புசியுங்கள்; மாம்சத்தி
லும் அப்பத்திலும் மீதியானதை அக்கினி
33 யாலே சுட்டெரிக்கவேண்டும்; பிரதிஷ்டை
யின் நாட்கள் நிறைவேறும்வரைக்கும், ஏழு
நாளளவும் தரிசனக்கூடாரவாசலை விட்டுப்
புறப்படாதிருங்கள்; ஏழுநாளாகவும் நீங்கள்
34 பிரதிஷ்டை பண்ணப்படுவீர்கள். உங்கள்
பிராயச்சித்தத்திற்கென்று இன்று செய்தது
போலவே செய்யவேண்டும் என்று யெகோ
35 வா கட்டளையிட்டார். நீங்கள் ஏழுநாள்
இரவும் பகலும் தரிசனக்கூடாரவாசலில்
தரித்திருந்து யெகோவா கட்டளையிட்ட
தைக் கைக்கொள்ளவேண்டும்; இப்படிச்
செய்தால் நீங்கள் சாகமாட்டீர்கள். எனக்
குக் கட்டளையிடப்பட்டது இதுவே என்
36 றான். யெகோவா மோசேயைக் கொண்டு
கட்டளையிட்ட எல்லாவற்றையும் ஆரோ
னும் அவன் குமாரரும் செய்தார்கள்.

9 எட்டாம்நாளிலே மோசே ஆரோனையும்
அவன் குமாரரையும் இஸ்ரவேலின் தலை
வரையும் வரவழைத்து ஆரோனைப் பார்த்
2 து: நீ பாவநிவாரணபலியாக மாட்டுமந்தை
யிற் பிடித்த பழுதற்ற ஒரு கன்றுக்குட்டி
யையும் தகனபலியாகப் பழுதற்ற ஒரு
ஆட்டுக்கடாவையும் தெரிந்தெடுத்து யெ
கோவாவின் சந்நிதியில் கொண்டுவரவேண்
3 டும். மேலும் நீ இஸ்ரவேல் புத்திரரிடம்:
நீங்கள் பாவநிவாரணபலியாக ஒரு வய
தான பழுதற்ற ஒரு வெள்ளாட்டுக்கடா
வையும் தகனபலியாக ஒருவயதான பழு
தற்ற ஒரு கன்றுக்குட்டியையும் ஒரு ஆட்
4 டுக்குட்டியையும், சமாதானபலியாக ஒரு
காளையையும் ஒரு ஆட்டுக்கடாவையும் யெ
கோவாவின் சந்நிதியில் பலியிடும்படி தெரிந்
தெடுத்து அவற்றோடுகூட எண்ணெயிலே
தோய்த்த போஜனபலியையும் கொண்டு
வாருங்கள்; இது யெகோவா உங்களுக்குத்
தரிசனமாகும் நாள் என்று சொல் என்
5 றான். மோசே கட்டளையிட்டவைகளை
அவர்கள் தரிசனக்கூடாரத்துக்கு முன்
பாகக் கொண்டுவந்தார்கள். சபையார்
எல்லாரும் கிட்டிச்சேர்ந்து யெகோவாவின்
சந்நிதியில் நின்றார்கள். அப்பொழுது 6
மோசே: நீங்கள் செய்யவேண்டுமென்று
யெகோவா கட்டளையிட்ட காரியம் இதுவே;
யெகோவாவின் மகிமை உங்களுக்குத்
தோன்றும் என்று சொல்லி | ஆரோனைப் 7
பார்த்து: நீ பலிபீடத்தண்டையில் கிட்டிச்
சேர்ந்து உன் பாவநிவாரணபலியையும்
உன் தகனபலியையும் செலுத்தி, உனக்காக
வும் ஜனத்திற்காகவும் பிராயச்சித்தஞ்
செய்து ஜனத்தின் காணிக்கையையும்
செலுத்தி, ஜனத்திற்காகவும் பிராயச்சித்தஞ்
செய். இப்படியே யெகோவா கட்டளை
யிட்டார் என்றான்.

அப்பொழுது ஆரோன் பலிபீடத்தண் 8
டையில் கிட்டிச் சேர்ந்து தன் பாவநிவார
ணபலிக்குரிய கன்றுக்குட்டியைக் கொன்
றான். ஆரோனின் குமாரர் அதின் இரத் 9
தத்தை அவனிடம் கொண்டுவந்தார்கள்;
அவன் தன் விரலை இரத்தத்தில் தோய்த்துப்
பலிபீடத்தின் கொம்புகளின்மேல் தடவி
மற்ற இரத்தத்தைப் பலிபீடத்தின் அடி
யிலே ஊற்றினான்; பாவநிவாரணபலியின் 10
கொழுப்பையும் குண்டிக்காய்களையும் கல்
லீரலில் எடுத்த சவ்வையும் பலிபீடத்தின்
மேல் தகனித்தான். இப்படியாக யெகோ
வா மோசேக்குக் கட்டளையிட்டபடியே
செய்யப்பட்டது. மாம்சத்தையும் தோலை 11
யுமோ பாளயத்துக்குப் புறம்பே அக்கினி
யாலே சுட்டெரித்தான். பின்பு தகனபலி 12
யையும் கொன்றான்; ஆரோனின் குமாரர்
அதின் இரத்தத்தை அவனிடம் கொண்டு
வந்து கொடுத்தார்கள்; அவன் அதைப்
பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்தான்.
தகனபலியின் துண்டங்களையும் தலையையும் 13
அவனிடம் கொண்டுவந்து கொடுத்தார்கள்;
அவன் அவைகளைப் பலிபீடத்தின்மேல்
தகனித்தான்; குடல்களையும் கால்களையும் 14
கழுவிப் பலிபீடத்திலிருந்த தகனபலியின்
மேல் தகனித்தான்.

பின்பு அவன் ஜனத்தின் காணிக்கை 15
யைக் கொண்டுவந்தான். ஜனத்தின் பாவ
நிவாரணபலிக்குரிய வெள்ளாட்டுக்கடா
வைப் பிடித்து அதைக் கொன்று முன்னி
தைப் பலியிட்டதுபோலவே அதைப் பாவ
நிவாரணபலியாகச் செலுத்தினான். தகன 16
பலியையும் கொண்டுவந்து, நியமத்தின்
படியே அதைப் பலியிட்டான்; போஜன 17
பலியையும் கொண்டுவந்து, அதில் கை
நிறைய எடுத்து, காலையில் செலுத்தும்

தகனபலியேயன்றி இதையும் பலிபீடத்தின்
18 மேல் தகனித்தான். பின்பு ஜனத்திற்
கென்று செலுத்தும் சமாதானபலிகளாகிய
காளையையும் ஆட்டுக்கடாவையும் கொன்
றான்; ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்
தை அவனிடம் கொண்டுவந்து கொடுத்
தார்கள்; அவன் அதைப் பலிபீடத்தின்
19 மேல் சுற்றிலும் தெளித்தான்; காளையிலும்
ஆட்டுக்கடாவிலும் எடுத்த கொழுப்பையும்
கொழுப்பு வாலையும் குடல்களை மூடியதை
யும் குண்டிக்காய்களையும் கல்லீரலின் சவ்
20 வையும் கொண்டுவந்து | கொழுப்பை
மார்க்கண்டங்களின்மேல் வைத்தார்கள்;
அவன் அந்தக் கொழுப்பைப் பலிபீடத்
21 தின்மேல் தகனித்தான். மார்க்கண்டங்க
ளையும் வலது முன்னன்தொடையையும்
ஆரோன் யெகோவாவின் சந்நிதியில் அசை
வாட்டும் பலியாக அலசவாட்டினான்.
மோசே கட்டளையிட்டபடியே செய்யப்பட்
22 டது. பின்பு ஆரோன் ஜனத்திற்கு நேராகத்
தன் கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்
தான். பாவநிவாரணபலியையும் சர்வாங்க
தகனபலியையும் சமாதானபலியையும் செ
லுத்திவிட்டு இறங்கி வந்தான்.
23 மோசேயும் ஆரோனும் தரிசனக்கூடா
ரத்தினுள் சென்றார்கள்; பின்பு அவர்கள்
வெளியே வந்து ஜனத்தை ஆசீர்வதித்தார்
கள். அப்பொழுது யெகோவாவின் மகிமை
24 முழுஜனத்திற்கும் காணப்பட்டது. அன்
றியும் யெகோவாவின் சந்நிதியிலிருந்து அக்
கினி புறப்பட்டுப் பலிபீடத்தின்மேல்
இருந்த தகனபலியையும் கொழுப்பையும்
பட்சித்துவிட்டது; ஜனங்களெல்லாரும்
அதைக் கண்டபோது கெம்பீரசத்தமிட்டு
முகங்குப்புற விழுந்து பணிக்தார்கள்.

**10** பின்பு ஆரோனின் குமாரராகிய நாதா
பும் அபியூவும் தன்தன் தூபகலசத்தை
எடுத்து, அவைகளில் அக்கினியைப்போ
ட்டு அதின்மேல் தூபவர்க்கத்தைத் தூவி
யெகோவா தங்களுக்குக் கட்டளையிடாத
அந்திய அக்கினியை அவருடைய சந்நிதி
யில் கொண்டுவந்து படைத்தார்கள்.
2 படைக்கவே அக்கினி யெகோவாவின் சந்
நிதியிலிருந்து புறப்பட்டு அவர்களைப் பட்
சித்தது; அவர்கள் யெகோவாவின் சந்நிதியி
3 லேயே செத்தார்கள். அப்பொழுது மோசே
ஆரோனைப் பார்த்து: என்னிடத்தில் கிட்
டிச்சேருகிறவர்களால் நான் பரிசுத்தமுள்
ளவராக விளங்கி முழு ஜனத்துக்கும் முன்
பாக நான் மகிமைப்படுவேன் என்று
யெகோவா சொன்னது இதுதான் என்றான்;
ஆரோனுக்கோ பேச நாவெழுவில்லை.

பின்பு மோசே ஆரோனின் சிறிய தகப்ப 4
னான ஊசியேலின் குமாரராகிய மீசவேலை
யும் எல்சாபானையும் அழைத்து: நீங்கள்
கிட்டிவந்து உங்கள் சகோதரரைப் பரி
சுத்த ஸ்தலத்தின் முன்னின்று எடுத்துப்
பாளையத்துக்குப் புறம்பே கொண்டுபோங்
கள் என்றான். மோசே சொன்னபடியே 5
அவர்கள் கிட்டிவந்து அவர்களைத் தாங்கள்
அணிந்திருந்த அங்கிகளிலே வைத்து எடுத்
துப் பாளையத்துக்குப் புறம்பே கொண்டு
போனார்கள். மோசே ஆரோனையும் எலெ 6
யாசார் இத்தாமார் என்னும் அவன் குமா
ரரையும் பார்த்து: நீங்கள் உங்கள் தலையை
விரித்துப்போடவேண்டாம், உங்கள் வஸ்தி
ரங்களைக் கிழிக்கவேண்டாம். அப்படிச்
செய்தால் நீங்களும் சாவீர்கள், சபையினத்
தின்மேலும் தெய்வகோபம் வரும்; உங்கள்
சகோதரராகிய இஸ்ரவேல் குடும்பத்தார்
யாவரும் யெகோவா கொளுத்தின இந்த
அக்கினிக்காகப் புலம்புவார்கள். யெகோ 7
வாவின் அபிஷேகதைலம் உங்கள்மேல்
இருக்கிறது. ஆகவே நீங்கள் தரிசனக்
கூடாரவாசலிலிருந்து வெளிப்படவேண்
டாம்; வெளிப்பட்டால் சாவீர்கள் என்று
சொன்னான்; அவர்கள் மோசேயின் சொற்
படியே செய்தார்கள்.

யெகோவா ஆரோனிடம்: நீயும் உன் 8, 9
னோடுகூட உன் குமாரரும் தரிசனக்கூடா
ரத்தினுள் பிரவேசிக்கிறபோது, திராட்சரசத்
தையும் மதுபானம் எதையும்குடிக்கவேண்
டாம்; குடித்தால் சாவீர்கள். இது தலை
முறை தலைமுறையாக உங்களுக்கு நித்திய
கட்டளையாகும். பரிசுத்தமானதையும் சா 10
மானியமானதையும் தீட்டுள்ளதையும் தீட்
டில்லாததையும் நீங்கள் பகுத்தறியவும், |
யெகோவா மோசேயைக்கொண்டு இஸ்ர 11
வேல் புத்திரருக்குச்சொன்ன சகல நியமங்
களையும்நீங்கள் அவர்களுக்குப் போதிக்கவும்
வேண்டுமே என்றார்.

மோசே ஆரோனையும் அவனுக்கு இன் 12
னும் இருந்த குமாரராகிய எலெயாசாரை
யும் இத்தாமாரையும் பார்த்து: நீங்கள்
யெகோவாவின் நிவேதனங்களில் மீதியான
போஜனபலியை எடுத்துப் பலிபீடத்தின்
பக்கத்திலே புளிப்பில்லாததாகப் புசியுங்
கள்; அது மகா பரிசுத்தமானது. பரிசுத்த 13
மான ஸ்தலத்திலே அதைப் புசியுங்கள்;
அது யெகோவாவின் நிவேதனங்களில்
உனக்கும் உன் குமாரருக்கும் நியமிக்கப்
பட்டபடியே; எனக்கு இப்படியே கட்ட
ளையிடப்பட்டது. அசைவாட்டும் மார்க் 14
கண்டத்தையும், உயர்த்திப் படைக்கும்

முன்னங்தொடையையும், நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் குமாரத்திகளும் சுத்தமான இடத்திலே புசிக்கவேண்டும்; இஸ்ரவேல் புத்திரரின் சமாதான பலிகளில் அவைகள் உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் கிடைக்கும்படி நியமிக்கப்பட்ட பங்கு. 15 யெகோவாவின் சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டும்படி உயர்த்திப் படைக்கும் முன்னங்தொடையையும் அசைவாட்டும் மார்க்கண்டத்தையும் அவர்கள் கொழுப்பு நிவேதனங்களோடே கொண்டு வருவார்கள்; அது யெகோவா கட்டளையிட்டபடியே உனக்கும் உன்னோடுகூட உன் பிள்ளைகளுக்கும் நியமிக்கப்பட்ட நித்திய பங்கு என்றார். 16 பாவநிவாரணபலியாகச் செலுத்தப்பட்ட வெள்ளாட்டுக்கடாவை மோசே தேடி விசாரிக்கவே, இதோ, அது தகனிக்கப்பட்டிருந்தது; இதை அறிந்தமாத்திரம் அவன், ஆரோனுக்கு இன்னும் இருந்த குமாரராகிய எலெயாசார் இத்தாமார் என்பவர்கள்மேல் கடுங்கோபங்கொண்டு: 17 பாவநிவாரணபலியை நீங்கள் பரிசுத்தமான ஸ்தலத்திலே புசியாமற் போனதென்ன? அது மகா பரிசுத்தமுள்ளதாயிற்றே, சபையின் அக்கிரமத்தைச் சுமந்து யெகோவாவின் சந்நிதியில் அவர்களுக்காகப் பிராயச்சித்தம் செய்வதற்கு அதை உங்களுக்குக் 18 கொடுத்தாரே. இதோ, அதின் இரத்தம் பரிசுத்த ஸ்தலத்தினுள் கொண்டுவரப்படவில்லையே; நான் கட்டளையிட்டபடியே நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்க 19 வேண்டியதாயிருந்தது என்றார். அது கேட்ட ஆரோன் மோசேயைப் பார்த்து: அவர்கள் தங்கள் பாவநிவாரணபலியையும் தங்கள் தகனபலியையும் யெகோவாவின்சந்நிதியில் செலுத்தின இன்றுதானே, இதோ, இப்படிப்பட்ட காரியம் எனக்கு நேரிட்டதே; பாவநிவாரணபலியை இன்று நான் புசித்தேனுனால், அது யெகோவாவுக்குத் 20 திருப்தியாகுமோ என்றார். மோசே இதைக் கேட்கவே அவனுக்குத் திருப்தியாயிற்று.

**11** யெகோவா மோசே ஆரோன் என்பவர் 2 களிடம்: நீங்கள் இஸ்ரவேல் புத்திரரோடே பேசி, பூமியிலிருக்கிற சகல மிருகங்களிலும் நீங்கள் புசிக்கத்தக்க பிராணிகள் 3 யாவெனில்: விரிகுளம்புள்ளதாய்க் குளம்புகள் இரண்டாகப் பிரிந்திருக்கிறதும் அசைபோடுகிறதுமான எந்த மிருகத்தையும் நீங் 4 கள் புசிக்கலாம். என்றாலும் அசைபோடுகிறவைகளிலும் விரிகுளம்புள்ளவைகளிலும் ஒட்டகமானது அசைபோடுகிறதாயிருந்தாலும் அதற்கு விரிகுளம்பில்லாதபடியால் அது உங்களுக்கு அசுத்தமாயிருக்கும். 5 குழிமுசல் உங்களுக்கு அசுத்தமானது; அசைபோடுகிறதாயிருந்தாலும் அதற்கு விரிகுளம்பில்லை; 6 முயல் உங்களுக்கு அசுத்தமானது. அது அசைபோடுகிறதாயிருந்தும் அதற்கு விரிகுளம்பில்லை; 7 பன்றி உங்களுக்கு அசுத்தமானது; அது விரிகுளம்புள்ளதாய் இரண்டாகப் பிரிந்த குளம்புகளையுடையதாயிருந்தும் அசைபோடுகிறதில்லை. 8 இவைகளின் மாம்சத்தைப் புசிக்கவேண்டாம், இவைகள் செத்தால் தொடவும்வேண்டாம்; இவைகள் உங்களுக்குத் தீட்டானவைகள்.

9 தண்ணீரிலிருக்கிறவைகளில் நீங்கள் புசிக்கத்தக்கவைகள் இவைகளே: கடல்களும் ஆறுகளுமாகிய தண்ணீர்களிலே சிறகுகளையும் செதிள்களையும் உடையவைகள் எவைகளோ அவைகளையெல்லாம் நீங்கள் புசிக்கலாம். 10 எனினும் கடல்களிலோ ஆறுகளிலோ தண்ணீரிலே திரிகிறவைகள் யாவற்றிலும், தண்ணீரிலுள்ள பிராணிகள் யாவற்றிலும் சிறகும் செதிளும் இல்லாதவைகள் யாவும் உங்களுக்கு அருவருப்பாம். 11 அவைகள் உங்களுக்கு அருவருப்பாகவே இருக்கவேண்டும்; அவைகளின் மாம்சத்தைப் புசிக்கவேண்டாம், அவைகளின் செத்த உடல்களை அருவருக்கவேண்டும். 12 தண்ணீர்களிலே சிறகும் செதிளும் இல்லாத யாவும் உங்களுக்கு அருவருப்பாகவே இருக்கவேண்டும்.

13 பறவைகளில் நீங்கள் அருவருக்கவேண்டியவைகள் இவைகளே: கழுகு, கருடன், 14 கடலாராஞ்சி, பருந்து, சகலவித வல்லூறுகள், 15, 16 சகலவித காகங்கள், 17 தீக்கோழி, கூகை, செம்புகம், சகலவித ராஜாளிகள், 18 ஆந்தை, நீர்க்காகம், கோட்டான். 19 கூழக்கடா, நாரை, குருகு, கொக்கு, சகலவித டேகைகள், புழுக்கொத்தி, வௌவால் இவற்றை நீங்கள் புசிக்கலாகாது; இவை அருவருப்பாம்.

20 பறக்கிறவைகளில் நாலு காலால் நடமாடித்திரியும் சிறு பிராணிகள் யாவும் உங்களுக்கு அருவருப்பாம். 21 எனினும் பறக்கிறவைகளில் நாலுகாலால் நடமாடித் திரியும் சிறு பிராணிகள் யாவற்றிலும் தரையிலே தத்துகிறதற்குப் பாதங்களின்மேல் நீண்ட கால்களையுடையவைகளிலே நீங்கள் புசிக்கத்தக்கவைகள் இவைகளே: 22 சகலவித வெட்டுக்கிளிகளையும், சோலியாம், கர்கொல், ககாபு என்னும் வெட்டுக்கிளிகளையெல்லாம் நீங்கள் புசிக்கலாம். 23 பறக்கிற

வைகளில் நாலுகாலால் நடமாடுகிற மற்ற யாவும் உங்களுக்கு அருவருப்பாயிருக்க
24 வேண்டும். அவைகளாலே தீட்டுப்படுவீர்கள்; அவைகளின் செத்த உடலைத் தொடுகிறவன் எவனும் சாயங்காலமட்டும் தீட்டுப்
25 பட்டிருப்பான். அவைகளின் செத்த உடலைச் சுமந்தவன் எவனும் தன் வஸ்திரங்களைத் துவைக்கவேண்டும்; அவன் சாயங்கா
26 லமட்டும் தீட்டுப்பட்டிருப்பான். விரிகுளம்புள்ளவைகளாயிருந்தும் இருபிளவான குளம்பில்லாததும் அசைபோடாததுமான மிருகங்கள் யாவும் உங்களுக்கு அசுத்தமாயிருக்கவேண்டும்; அவைகளைத் தொடுகிறவன் எவனும் தீட்டுப்படுவான்.
27 நாலுகாலால் நடக்கிற சகல பிராணிகளிலும் தங்கள் உள்ளங்கால்களை ஊன்றிநடக்கிற யாவும் உங்களுக்கு அசுத்தமாயிருக்கவேண்டும்; அவைகளின் செத்த உடலைத் தொடுகிறவன் எவனும் சாயங்காலமட்டும்
28 தீட்டுப்பட்டிருப்பான்: அவைகளின் செத்த உடலைச் சுமந்தவன் தன் வஸ்திரங்களைத் துவைக்கவேண்டும்; அவன் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; இவைகள் உங்களுக்குத் தீட்டாம்.
29 தரையில் திரிகிற சிறிய பிராணிகளில் உங்களுக்கு அசுத்தமானவைகள் இவைகளே: கீரிப்பிள்ளை, எலி, சகலவித முதலை
30 கள், | உடும்பு, அழுங்கு, ஒணான், பல்லி,
31 பச்சோந்தி, | சகல சிறு பிராணிகளிலும் இவைகள் உங்களுக்குத் தீட்டாம்; அவைகளில் செத்ததைத் தொடுகிற எவனும் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.
32 அவைகளில் செத்தது ஒன்று யாதொன்றின் மேல் விழுந்தால் அது தீட்டாகும்; அது மரப்பாத்திரமானாலும் வஸ்திரமானாலும் தோலானாலும் கம்பிளியானாலும் வேலை செய்கிற ஆயுதமானாலும் தண்ணீரில் போடப்படவேண்டும்; அது சாயங்காலமட்டும் தீட்டாயிருக்கும்; அப்பொழுது சுத்தமா
33 கும். அவைகளில் ஒன்று மண்பாண்டத்திற்குள் விழுந்தால் அதற்குள் இருக்கிறதெல்லாம் தீட்டுப்படும்; அதை உடைத்
34 துப்போடவேண்டும். புசிக்கத்தக்க போஜன பதார்த்தத்தின்மேல் அந்தத் தண்ணீர் பட்டால் அது தீட்டாகும்; குடிக்கத்தக்க எந்தப் பானமும் அப்படிப்பட்ட பாத்திரத்
35 திலும் தீட்டுப்படும். அவைகளின் செத்த உடலில் யாதொன்று எதின்மேல் விழுமோ அது தீட்டுப்படும்; பொரிய அடுப்பானாலும் சிறிய அடுப்பானாலும் தகர்க்கப்படவேண்டும். அவைகள் தீட்டுப்பட்டிருக்கும்; அவைகள் உங்களுக்குத் தீட்டாகவேயிருக்
கும். எனினும் ஈரூற்றும் மிகுந்த ஜலம் 36
உள்ள கிணறும் சுத்தமாயிருக்கும்; அவைகளிலுள்ள செத்த உடலைத் தொடுகிறவனே தீட்டுப்படுவான். அவைகளின் செத்த 37
உடலில் யாதொன்று விதைத்த தானியத்தின் மேல் விழுந்தால் அது தீட்டுப்படாது. அந்த உடலில் யாதொன்று தண்ணீர் வார்க்கப்பட்டிருக்கிற விதையின்மேல் விழுந்ததா 38
லும் அது உங்களுக்குத் தீட்டாகவேயிருக்கும்.

ஈங்கள் புசிக்கத்தக்க ஒரு மிருகம் செத் 39
தால் அதின் உடலைத் தொடுகிறவன் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான். அ 40
தின் மாம்சத்தைப் புசிக்கிறவன் தன் வஸ்திரங்களைத் துவைக்கவேண்டும்; அவன் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அதின் உடலைத் தூக்கிக்கொண்டு போகிறவனும் தன் வஸ்திரங்களைத் துவைக்கவேண்டும்; அவனும் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

தரையில்திரிகிற சிறியபிராணிகளெல்லாம் 41
உங்களுக்கு அருவருப்பாம்; அவற்றைப் புசிக்கலாகாது. தரையில் திரிகிற சகல 42
சிறிய பிராணிகளிலும், வயிற்றினால் நகருகிற யாவற்றையும் நாலுகாலால் நடமாடுகிற யாவற்றையும் பல கால்களுள்ள யாவற்றையும் புசிக்கவேண்டாம்; அவைகள் அருவருப்பாம். திரிகிற எந்தச் சிறிய 43
பிராணியினாலும் உங்களை அருவருப்பாக்கிக் கொள்ளவேண்டாம்; தீட்டுப்படுத்திக்கொள்ளவும் வேண்டாம்; அவைகளாலே ஈங்கள் தீட்டுப்படுவீர்கள். நான் உங்கள் 44
கடவுளாகிய யெகோவா, நான் பரிசுத்தர்; ஈங்களும் உங்களைச் சுத்திகரித்துக்கொண்டு பரிசுத்தராயிருங்கள். தரையில் நடமாடுகிற எந்தச் சிறிய பிராணியினாலும் உங்களைத் தீட்டுப்படுத்திக்கொள்ளவேண்டாம். உங்களுக்குக் கடவுளாயிருக்கும்படி உங் 45
களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டு வந்த யெகோவா நானே; நான் பரிசுத்தர்; ஆகையால் ஈங்களும் பரிசுத்தராயிருங்கள்.

மிருகத்துக்கும் பறவைகளுக்கும், தண் 46
ணீர்களில் ஈந்துகிற சகல பிராணிகளுக்கும், பூமியின்மேல் திரிகிற சகல சிறிய பிராணிகளுக்கும் உரிய பிரமாணம் இதுவே; சுத்தமானதையும் அசுத்தமானதையும், 47
புசிக்கத்தக்க பிராணிகளையும் புசிக்கத்தகாத பிராணிகளையும் இதினாலேயே பகுத்தறிந்துகொள்வீர்கள் என்று சொல்லுங்கள் என்றார்.

பின்னும் யெகோவா மோசேயினிடம்: | **12**
ஈ இஸ்ரவேல்புத்திரரோடே பேசி, ஒரு 2

ஸ்திரீ பிரசவித்து ஆண் பிள்ளையைப் பெற்
றால், அவள் சூதகஸ்திரீ விலக்கமாயிருக்
கும் நாட்களுக்குச் சரியாக ஏழுநாள்
3 தீட்டாயிருப்பாள். எட்டாம்நாளிலே அந்
தப் பிள்ளையினுடைய தனித்தோலின் மாம்
சம் விருத்தசேதனம் பண்ணப்படவேண்
4 டும். பின்பு அவள் மூப்பத்துமூன்றுநாள்
தன் உதிரச் சுத்திகரிப்பு நிலையிலே இருந்து,
சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறுமளவும்
பரிசுத்தமான யாதொரு வஸ்துவைத்
தொடவும் பரிசுத்த ஸ்தலத்துக்குள் வரவும்
5 கூடாது. பெண்பிள்ளையைப் பெற்றாளா
கில், அவள் இரண்டுவாரம் சூதகஸ்திரீயைப்
போலத் தீட்டாயிருந்து, பின்பு அறுபத்
தாறுநாள் உதிரச்சுத்திகரிப்பு நிலையிலே
6 இருக்கவேண்டும். அவளுடைய சுத்தி
கரிப்பின் நாட்கள் நிறைவேறினபின்பு
தான் பெற்ற ஆண்பிள்ளைக்காகவாவது
பெண்பிள்ளைக்காகவாவது அவள் ஒருவய
தான ஆட்டுக்குட்டியைத் தகனபலியாகவும்
ஒரு மாடப்புறாவையாவது காட்டுப்புறு
வையாவது பாவநிவாரண பலியாகவும் தரி
சனக்கூடாரவாசலில் ஆசாரியனிடம்
7 கொண்டுவரவேண்டும். அதை அவன்
யெகோவாவின் சந்நிதியில் படைத்து அவ
ளுக்காகப் பிராயச்சித்தம் செய்வான்; செய்
யவே அவள் தன் உதிரம் ஊறும் தீட்டு
நீங்கிச் சுத்தமாவாள். ஆண்பிள்ளையையா
வது பெண்பிள்ளையையாவது பெற்றவளுக்
8 குரிய பிரமாணம் இதுவே. ஆட்டுக்குட்டி
யைக் கொண்டுவர அவளுக்குச் சக்தியில்லா
திருந்தால் இரண்டு காட்டுப்புறுக்களையா
வது இரண்டு மாடப்புறுக்களையாவது ஒன்
றைத் தகனபலியாகவும் மற்றொன்றை பாவ
நிவாரணபலியாகவும் கொண்டுவரவேண்
டும்; ஆசாரியன் அவளுக்காகப் பிராய்ச்
சித்தம் செய்வான்; செய்யவே அவள் சுத்த
மாவாள் என்று சொல் என்றார்.

**13** பின்னும் யெகோவா மோசே ஆரோன்
2 என்பவர்களிடம்: ஒரு மனிதனுடைய சரீ
ரத்தின்மேல் ஒரு தடிப்பாவது அசறுவது
வெள்ளைப்படராவது உண்டாகி அது
குஷ்டரோகம் போலாகுமென்றால் அவன்
ஆசாரியனுகிய ஆரோனிடத்திலாகிலும் ஆ
சாரியராகிய அவன் குமாரரில் ஒருவனிடத்
3 திலாகிலும் கொண்டுவரவேண்டும். ஆசாரி
யன் அவன் சரீரத்தின்மேல் இருக்கிற
ரோகத்தைப் பார்க்கவேண்டும்; ரோகம்
இருக்கும் இடத்தில் மயிர் வெள்ளையாயும்,
ரோகமுள்ள இடம் சுற்றிலுமிருக்கிறதற்
குச் சற்றுப்பள்ளமாயும் தோன்றினால் அது
குஷ்டரோகம்; ஆசாரியன் அவனைப்
பார்த்த பின்பு அவனைத் தீட்டுள்ளவனெத்
4 தீர்க்கவேண்டும். அவன் சரீரத்தின்மேல்
வெள்ளை படர்ந்திருப்பதையும் அந்த இடம்
சுற்றிலுமிருக்கிறதற்குச் சற்று பள்ளமாயி
ராமலும் அதிலுள்ள மயிர் வெள்ளையாக
மாறாமலும் இருப்பதையும் கண்டால் ஆசா
ரியன் அவனை ஏழுநாள் அடைத்துவைப்
5 பான். ஏழாம்நாளில் ஆசாரியன் அவனைப்
பார்க்கும்போது அவன் சரீரத்தில் கண்ட
ரோகம் அதிகப்படாமல் ஆசாரியன் கண்
ணுக்கு நின்றிருப்பதாகத் தோன்றினால்
ஆசாரியன் அவனை இன்னும் ஏழுநாள்
அடைத்துவைக்கவேண்டும். அந்த ஏழு
6 நாளும் ஆனபின் ஆசாரியன் அவனை
இரண்டாந்தரம் பார்க்கும்போது அவன்
சரீரத்தில் ரோகம் அதிகப்படாமலும் நிறம்
மங்கிப்போயுமிருந்தால் ஆசாரியன் அவ
னைச் சுத்தமுள்ளவனெத் தீர்க்கவேண்டும்;
அது அசறு; அவன் தன் வஸ்திரங்களைத்
துவைக்கவே சுத்தமாவான். சுத்தமுள்ள
7 வனெத் தீர்க்கப்படுவதற்கு அவன் தன்னை
ஆசாரியனுக்குக் காண்பித்தபின்பு அசறு
சரீரத்தில் பின்னும் பரவிக்கொண்டேவந்
தால் அவன் மறுபடியும் ஆசாரியன் முன்
னிலையில் வரவேண்டும். ஆசாரியன்
8 பார்க்கும்போது அசறு சரீரத்தில் பரவி
வருகிறதென்று கண்டால் ஆசாரியன் அவ
னைத் தீட்டுள்ளவனெத் தீர்க்கவேண்டும்;
அது குஷ்டரோகமே.

குஷ்டரோகம் ஒரு மனிதனுக்கு இருக்
9 தால் அவனை ஆசாரியனிடம் கொண்டுவர
வேண்டும்; ஆசாரியன் அவனைப் பார்க்கும்
10 போது சரீரத்திலே வெள்ளையான தடிப்
பிருக்கிறதென்றும் அது மயிரை வெண்மை
யாக மாறப்பண்ணிற்றென்றும் அந்தத்
தடிப்புள்ள இடத்திலே இரணம் உண்
டென்றும் கண்டால், அது அவன் சரீரத்
திலே நாள்பட்ட குஷ்டம்; ஆசாரியன் 11
அவனை அடைத்துவைக்காமல் தீட்டுள்ள
வனெத் தீர்க்கவேண்டும்; அவன் தீட்டுள்ள
வனே. ஆசாரியன் பார்க்கிற இடங்க 12
ளெங்கும் சரீரத்திலே குஷ்டம் தோன்றி,
ரோகமுள்ளவனின் தலை தொடங்கிக் கால்
மட்டும் சரீரமுழுவதையும் அது மூடியிருக்
கக் கண்டால், ஆசாரியன் அவனைப்
பார்த்து, குஷ்டம் அவன் சரீரம் முழு 13
வதையும் மூடிவிட்டதென்று கண்டால்,
ரோகமுள்ளவனைச் சுத்தமுள்ளவனெத்
தீர்க்கவேண்டும்; முழுவதும் வெண்மை
யாய்ப்போனபடியால் அவன் சுத்தமுள்ள
வனே. எனினும் இரணம் அவனில் 14
காணப்பட்டால் அவன் தீட்டுள்ளவன்

15 இரணத்தை ஆசாரியன் காணும்போது அவனைத் தீட்டுள்ளவனெனத் தீர்க்கவேண்டும். இரணம் தீட்டுள்ளது; அது குஷ்
16 டமே. இரணம் மாறி வெண்மையாகிவிட்
17 டால் அவன் ஆசாரியனிடம் வரவேண்டும். ஆசாரியன் அவனைப் பார்க்கும்போது ரோகமிருந்த இடம் வெண்மையாக மாறிவிட்டதென்றுகண்டால், ஆசாரியன் ரோகமுள்ளவனைச் சுத்தமுள்ளவனெனத் தீர்க்கவேண்டும்; அவன் சுத்தமுள்ளவனே.

18 சரீரத்தின்மேல் புண் உண்டாகி
19 ஆறிப்போக, அந்த இடத்திலே ஒரு வெள்ளைத்தடிப்பாவது சிவப்புக் கலந்த ஒரு வெள்ளைப்படராவது உண்டானால் அதை ஆசாரியனுக்குக் காண்பிக்க வேண்டும்.
20 ஆசாரியன் அதைப் பார்க்கும்போது அந்த இடம் சுற்றிலுமிருக்கிறதற்குச் சற்றுப் பள்ளமாயிருக்கவும் அதின் மயிர் வெள்ளையாக மாறியிருக்கவும் கண்டால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனெனத் தீர்க்கவேண்
21 டும்; அது குஷ்டம்; அது புண்ணில் எழும்பினது. ஆசாரியன் அதைப் பார்க்கும்போது அதிலே வெள்ளைமயிர் இல்லையென்றும் அது சுற்றிலுமிருக்கிறதற்குப் பள்ளமாயிராமல் நிறம் மங்கியிருக்கிறதென்றும் கண்டானால் அவனை ஏழுநாள் அடைத்து
22 வைக்கவேண்டும்; அது சரீரத்தில் திட்டமாகவே பரவியிருக்கக்கண்டால் ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனெனத் தீர்க்கவேண்
23 டும்; அது குஷ்டமே. அந்த வெள்ளைப்படர் அதிகப்படாமல் அவ்வளவிலேயே நின்றிருக்குமானால் அது புண்ணின் தழும்பாம்; ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவனெனத் தீர்க்கவேண்டும்.

24 ஒருவன் சரீரத்தின்மேல் நெருப்புப்பட்ட தினாலே இரணமாக அந்த இரணமிருந்த இடத்திலே வெள்ளைப்படராவது சிவப்புக் கலந்த வெள்ளைப்படராவது உண்டானால்
25 | ஆசாரியன் அதைப் பார்க்கவேண்டும்; பார்க்கும்போது அந்தப் படரிலே மயிர் வெண்மையாக மாறியிருக்கவும் அந்த இடம் சுற்றிலுமிருக்கிறதற்குச் சற்றுப் பள்ளமாயிருக்கவும் கண்டால் அது குஷ்டமே; அது நெருப்புப்பட்ட இடத்தில் உண்டானது; ஆகையால் ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனெனத் தீர்க்கவேண்டும்;
26 அது குஷ்டரோகமே. ஆசாரியன் அதைப் பார்க்கும்போது படரிலே வெள்ளைமயிர் இல்லையென்றும் அந்த இடம் சுற்றிலுமிருக்கிறதற்குப் பள்ளமாயிராமல் நிறம் மங்கியிருக்கிறதென்றும் கண்டானால் அவனை ஏழுநாள் அடைத்துவைக்கவேண்டும்;
ஏழாம்நாளில் ஆசாரியன் அவனைப் பார்க் 27
கும்போது அது சரீரத்தில் திட்டமாகவே பரவியிருக்கக்கண்டால் ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனெனத் தீர்க்கவேண்டும்; அது குஷ்டரோகம். படரானது சரீரத்தில் 28
அதிகப்படாமல் அவ்வளவிலேயே நின்றிறம் மங்கியிருக்குமாகில் அது நெருப்புப்பட்டு உண்டான தடிப்பே; ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவனெனத் தீர்க்கவேண்டும்; அது நெருப்புப்பட்ட புண் தழும்பு.

ஆணுக்காவது பெண்ணுக்காவது தலை 29
யிலே அல்லது தாடியிலே ரோகம் உண்டாகுமானால் | ஆசாரியன் அந்த ரோகத் 30
தைப் பார்க்கவேண்டும்; பார்க்கும்போது அந்த இடம் சுற்றிலுமிருக்கிறதற்குச் சற்றுப் பள்ளமாயிருக்கவும் அதின்மேலுள்ள மயிர் நிறம் வெளுத்து உதிரவும் கண்டால் ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனெனத் தீர்க்கவேண்டும்; அது மோசகரமான சொறி; அது தலையிலும் தாடியிலும் உண்டாகிற குஷ்டம். ஆசாரியன் மோசகர 31
மான அந்தச் சொறியைப் பார்க்கும்போது அந்த இடம் சுற்றிலுமிருக்கிறதற்குப் பள்ளமாயிராதிருந்தும் அதிலே கறுத்தமயிர் இல்லாதிருக்கக்கண்டால், அந்த மோசகரமான சொறியுடையவனை ஏழுநாள் அடைத்து வைக்கவேண்டும்; ஏழாம்நாளில் ஆசாரி 32
யன் அந்த ரோகத்தைப் பார்க்கும்போது அந்தச் சொறி பரவாமலும் அதின் மயிர் நிறம் வெளுக்காமலும் அந்த இடம் சுற்றிலுமிருக்கிறதற்குப் பள்ளமாய்த் தோன்றாமலுமிருந்தால் அந்தச் சொறியுள்ள இடம் 33
தவிர மற்ற யாவையும் அவன் சிரைத்துக் கொள்ளவேண்டும்; பின்பு அந்தச் சொறியுடையவனை ஆசாரியன் இரண்டாந்தரம் ஏழுநாள் அடைத்துவைக்கவேண்டும்.
ஏழாம்நாளில் அந்தச் சொறியைப் பார்க் 34
கும்போது சொறி சரீரத்தில் பரவாமலும் அந்த இடம் சுற்றிலுமிருப்பதற்குப் பள்ளமாகாமலுமிருந்தால் ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவனெனத் தீர்க்கவேண்டும்; அவன் தன் வஸ்திரங்களைத் துவைக்கவேண்டும்; அப்பொழுது சுத்தமாயிருப்பான். 35
அவன் சுத்தமுள்ளவனெனத் தீர்க்கப்பட்ட பின் அந்தச் சொறி சரீரத்தில் திட்டமாகவே பரவினால் | ஆசாரியன் அவனைப் 36
பார்க்கவேண்டும்; பார்க்கும்போது சொறி சரீரத்தில் பரவியிருக்கக்கண்டால் மயிரின் நிறம் வெளுத்திருக்கிறதாவென்று ஆசாரியன் விசாரிக்கவேண்டியதில்லை; அவன் தீட்டுள்ளவனே. அவன் பார்வைக்கு அந்த 37
தச் சொறி நின்றுபோய் அதில் கருத்தமயிர்

முனைத்ததேயாகில் சொறி சொஸ்தமாயிற்று; அவன் சுத்தமுள்ளவனே; ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவனாகத் தீர்ப்பான்.

38 ஒரு ஆணுக்காவது பெண்ணுக்காவது சரீரத்தின்மேல் வெண்ணிறமான படர்கள்
39 உண்டாயிருக்குமானால், ஆசாரியன் அதைப் பார்க்கவேண்டும்; பார்க்கும்போது அவர்கள் சரீரத்தின்மேலிருக்கும் படர்கள் மங்கிய சிவப்பும் வெள்ளையுமாயிருக்குமானால் அது சரீரத்தில் எழும்புகிற வெண்தேமல், அவர்கள் சுத்தமுள்ளவர்களே.

40 ஒருவன் தலைமயிர் உதிர்ந்துபோனால் அவன் மொட்டையனேயன்றி அவன் அசுத்
41 தமானவனல்ல. அவன் முன்னந்தலைமயிர் உதிர்ந்துபோனால் அவன் அரைமொட்டை
42 யனேயன்றி அசுத்தமானவனல்ல. மொட்டைத்தலையிலாவது அரைமொட்டைத்தலையிலாவது சிவப்புக்கலந்த வெண்ணிறமான ரோகம் உண்டாகுமானால் அது அதிலே
43 எழும்புகிற குஷ்டம். ஆசாரியன் அவனைப் பார்க்கும்போது அவன் மொட்டைத்தலையிலாவது அரைமொட்டைத்தலையிலாவது சரீரத்தின் மற்ற இடங்களில் உண்டாகும் குஷ்டத்தைப்போல சிவப்புக்கலந்த வெண்ணிற ரோகத்தடிப்பு இருக்கக்கண்டால்,
44 அவன் குஷ்டரோகியே; அவன் தீட்டுள்ளவன்; ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனாகத் தீர்க்கவேண்டும். அவன் தலையிலேயே அவன் ரோகம் இருக்கிறது.

45 அந்த ரோகம் பிடித்த அந்தக் குஷ்டரோகி தன் வஸ்திரத்தைக் கிழித்துக்கொண்டு தலையை மூடாதவனாய்த் தன் தாடியை மூடிக்கொண்டு, "தீட்டு, தீட்டு" என்று
46 சத்தமிடவேண்டும். அந்த ரோகம் அவனில் இருக்கும்காள் வரைக்கும் அவன் தீட்டுள்ளவனாயிருப்பான்; அவன் தீட்டுள்ளவனே; அவன் தனியே தங்கியிருக்கவேண்டும்; அவன் தங்குமிடம் பாளையத்துக்குப் புறம்பே இருக்கவேண்டும்.

47 ஆடையிலே குஷ்டரோகம் தோன்றினால், அது கம்பிளி ஆடையானாலும் பஞ்சு
48 ஆடையானாலும், நெய்த துணியானாலும் பின்னிய துணியானாலும், பஞ்சுத் துணியானாலும் கம்பிளித்துணியானாலும், தோலானாலும் தோலினால் செய்த எந்தப் பொரு
49 ளானாலும், அதிலே காணும் ரோகம் பச்சை நிறமாயாவது சிவப்பு நிறமாயாவது காணப்பட்டால்—அது ஆடையிலானாலும் தோலிலானாலும் நெய்த துணியிலானாலும் பின்னிய துணியிலானாலும் தோலினால் செய்த எந்தப் பொருளிலானாலும்—அது குஷ்டரோகமே; அதை ஆசாரியனுக்குக் காண்பிக்கவேண்டும். 50 ஆசாரியன் அதைப் பார்த்து ஏழுநாள் அடைத்துவைக்கவேண்டும்; 51 ஏழாம்நாளிலே ரோகமுள்ளதைப் பார்க்கும்போது ஆடையிலோ நெய்த துணியிலோ பின்னிய துணியிலோ தோலிலோ தோலினால் செய்த எந்தப் பொருளிலோ ரோகம் அதிகப்பட்டிருக்கக்கண்டால் அது அரிக்கிற குஷ்டம்; அது அசுத்தமாம். 52 அந்த ரோகமிருக்கிற ஆடையையோ நெய்த துணியையோ பின்னிய துணியையோ, சுட்டெரிக்கவேண்டும்; அது கம்பிளியானாலும் சரி துணியானாலும்சரி தோலினாற்செய்த எந்தப் பொருளானாலும் சரியே. அது 53 அரிக்கிற குஷ்டமாகையால் நெருப்பினாலே அதைச் சுட்டெரிக்கவேண்டும். ஆசாரியன் பார்க்கும்போது ஆடையிலாவது நெய்த துணியிலாவது பின்னிய துணியிலாவது தோலினால் செய்த எந்தப் பொருளிலாவது அந்த ரோகம் அதிகப்படவில்லையென்று கண்டால், ரோகமுள்ளதைத் 54 துவைக்கச்சொல்லி அதை மறுபடியும் ஏழுநாள் அடைத்துவைப்பான். அது துவைக்கப்பட்ட பின் 55 ஆசாரியன் அதைப் பார்க்கவேண்டும். பார்க்கும்போது அந்த ரோகம் பரவாதிருந்தும் அதன் நிறம்மாறாதிருந்தால் அது அசுத்தமே. நெருப்பினாலே அதைச் சுட்டெரிக்கவேண்டும். அது துணியின் உட்புறத்திலிருந்தாலும் வெளிப்புறத்திலிருந்தாலும் அது அரிக்கிற ரோகமே. துவைக்கப்பட்டபின் ரோகம் நிறம் மங்கிப் 56 போயிற்றென்று ஆசாரியன் கண்டானேயானால் அது ஆடையிலாவது தோலிலாவது நெய்த துணியிலாவது பின்னிய துணியிலாவது இராதபடி கிழித்துப்போடவேண்டும். அது இன்னும் ஆடையிலாவது நெய்த 57 துணியிலாவது பின்னிய துணியிலாவது தோலினால் செய்த எந்தப் பொருளிலாவது காணப்பட்டால் அது வெளிப்பட்டுத் தோன்றுகிற ரோகமே; அந்த ரோகம் உள்ளதை நெருப்பினாலே சுட்டெரிக்கவேண்டும். ஆடையாவது நெய்த துணியாவது 58 பின்னிய துணியாவது தோலினால் செய்த எந்தப் பொருளாவது துவைக்கப்பட்டபின் அந்த ரோகம் அதை விட்டுப்போயிற்றேயானால் அதை இரண்டாந்தரமும் துவைக்கவேண்டும்; அப்பொழுது சுத்தமாகும். 59 கம்பிளியாடை, பஞ்சு ஆடை, நெய்த துணி, பின்னிய துணி, தோலினால் செய்த எவ்வகைப் பொருள் ஆகிய இவற்றுக்குரிய குஷ்டரோகப்பிரமாணம் இதுவே. அது சுத்தம் அசுத்தம் என்று இதினாலே தீர்க்கப்படும் என்று சொன்னார்.

14 பின்னும் யெகோவா மோசேயினிடம்: |
2 குஷ்டரோகி சுத்திகரிக்கப்படும் நாளில் அவனுக்குரிய பிரமாணம் இதுவே, அவன் ஆசாரியனிடம் கொண்டுவரவேண்டும்.
3 ஆசாரியன் பாளையத்துக்குப் புறம்பே போய்க் குஷ்டரோகியைப் பார்க்கவேண்டும்; பார்க்கும்போது குஷ்டரோகம் சொஸ்
4 தமாயிற்று என்று கண்டால் | சுத்திகரிக்கப்படவேண்டியவனுக்காக உயிருள்ள சுத்தமான இரண்டு குருவிகளையும் கேதுருக்கட்டையையும் சிவப்புநூலையும் ஈசோப்பையும்
5 வாங்கிவரக் கட்டளையிடவேண்டும். பின்பு ஆசாரியன் அந்தக் குருவிகளில் ஒன்றை ஒரு மண்பாண்டத்திலுள்ள ஊற்றுநீர்மேல்
6 கொல்லச் சொல்லுவான். உயிருள்ள குருவியையும் கேதுருக்கட்டையையும் சிவப்புநூலையும் ஈசோப்பையும் எடுத்து இவைகளையும்உயிருள்ள குருவியையும்ஊற்றுநீர்மேல் கொல்லப்பட்ட குருவியின் இரத்தத்திலே
7 தோய்த்துக் | குஷ்டம் நீங்கச் சுத்திகரிக்கப்படுகிறவன்மேல் ஏழுதரம் தெளித்து அவனைச் சுத்தம்பண்ணி உயிருள்ள குருவியை வயல்வெளியிலே போக விட்டுவிடவேண்
8 டும். சுத்திகரிக்கப்படுகிறவன் தன் வஸ்திரங்களைத் துவைத்துத் தன் மயிர் முழுவதையும் சிரைத்துத் தண்ணீரில் முழுகவே சுத்தமாவான்; பின்பு பாளையத்திற்குள்ளே சென்று தன் கூடாரத்துக்குப் புறம்பே
9 ஏழுநாள் தங்கியிருக்கவேண்டும். ஏழாம் நாளிலே தன் மயிரையெல்லாம் சிரைத்து, தன் தலை தாடி புருவம் ஆகிய தன் மயிர் முழுவதையும் சிரைத்துத் தன் வஸ்திரங்களைத் துவைத்துத் தண்ணீரில் முழுகவேண்
10 டும்; அப்பொழுது சுத்தமாவான். எட்டாம்நாளிலே அவன் பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளையும் ஒரு வயதான பழுதற்ற ஒரு பெண்ணாட்டுக்குட்டியையும் போஜனபலிக்கென்று எண்ணெயிலே பிசைந்த ஒரு மரக்காலில் பத்தில் மூன்று பங்காகிய மெல்லியமாவையும் அரைப்படி எண்ணெயையும் கொண்டுவரவேண்டும்.
11 சுத்திகரிக்கிற ஆசாரியன் சுத்திகரிக்கப்படும் மனிதனையும் அவ்விஷயங்களையும் தரிசனக் கூடாரவாசலில் யெகோவாவின் சந்நிதியிலே
12 நிறுத்தவேண்டும். பின்பு ஆசாரியன் ஒரு ஆட்டுக்குட்டியைப் பிடித்து, அதையும் அந்த அரைப்படி எண்ணெயையும் குற்றநிவாரணபலியாகப் படைத்து யெகோவாவின் சந்நிதியில் அசைவாட்டும்பலியாக
13 அசைவாட்டவேண்டும். பாவநிவாரணபலியையும் தகனபலியையும் கொல்லும் இடத்திலே அந்த ஆட்டுக்குட்டியைப் பரிசுத்த

மான ஸ்தலத்தில் கொல்லவேண்டும்; பாவநிவாரணபலியைப்போலவே குற்றநிவாரணபலி ஆசாரியனுக்கு உரியது; அது மகாபரிசுத்தமானது. அந்தக் குற்றநிவாரண 14
பலியின் இரத்தத்தில் ஆசாரியன் கொஞ்சம் எடுத்துச் சுத்திகரிக்கப்படுகிறவன் வலது காதின்மடலிலும் அவன் வலதுகையின் பெருவிரலிலும் வலதுகாலின் பெருவிரலிலும் தடவவேண்டும். பின்பு ஆசாரியன் 15
அந்த அரைப்படி எண்ணெயிலே கொஞ்சம் தன் இடதுகையில் வார்த்துத் | தன் 16
இடதுகையிலுள்ள எண்ணெயில் தன்வலதுகையின் விரலைத்தோய்த்துத் தன் விரலினால் ஏழுதரம் அந்த எண்ணெயில் எடுத்து யெகோவாவின் சந்நிதியில் தெளிக்கவேண்டும். தன் உள்ளங்கையில் மீதியாயிருக்கிற எண்ணெயிலே கொஞ்சம் எடுத்துச் சுத்திகரிக்கப்படுகிறவன் வலதுகாதின் மடலிலும் அவன் வலதுகையின் பெருவிரலிலும் வலதுகாலின் பெருவிரலிலும் முன்னே தடவியிருக்கிற குற்றநிவாரணபலியினுடைய இரத்தத்தின்மேல் தடவவேண்டும். தன் 18
உள்ளங்கையில் மீதியாயிருக்கிற எண்ணெயைச் சுத்திகரிக்கப்படுகிறவன் தலையிலே ஆசாரியன் தடவி யெகோவாவின் சந்நிதியில் அவனுக்காகப் பிராயச்சித்தம் செய்யவேண்டும். ஆசாரியன் பாவநிவாரணபலி 19
யையும் செலுத்திச் சுத்திகரிக்கப்படுகிறவனின் தீட்டு நீங்க அவனுக்குப் பிராயச்சித்தம் செய்யவேண்டும். பின்பு ஆசாரியன் தகனபலியைக்கொன்று | தகனபலி 20
யையும் போஜனபலியையும் பலிபீடத்தின்மேல் வைத்து அவனுக்காகப் பிராயச்சித்தம் செய்வான்; அப்பொழுது அவன் சுத்தமாவான்.

அவன் இவ்வளவு கொண்டுவரச் சக்தி 21
யற்ற தரித்திரனுமிருந்தால் அவன் தன் பிராயச்சித்தத்திற்கென்று அசைவாட்டும் குற்றநிவாரணபலியாக ஒரு ஆட்டுக்குட்டியையும் போஜனபலிக்கென்று எண்ணெயில் பிசைந்த ஒரு மரக்கால் மெல்லியமாவிலே பத்தில் ஒரு பங்கையும் அரைப்படி எண்ணெயையும் | தன் சக்திக்குத் 22
தக்கபடி இரண்டு காட்டுப் புறாக்களையாவது இரண்டு மாடப்புறாக்களையாவது ஒன்று பாவநிவாரணபலியாகவும் மற்றொன்று தகனபலியாகவும் செலுத்தும்படி வாங்கித் | தான் சுத்திகரிக்கப்படும்படி 23
எட்டாம்நாளில் தரிசனக்கூடாரவாசலிலே யெகோவாவின் சந்நிதியில் ஆசாரியனிடம் கொண்டுவரவேண்டும். அப்பொழுது ஆசா 24
ரியன் குற்றநிவாரணபலிக்குரிய ஆட்டுக்

குட்டியையும் அரைப்படி எண்ணெயையும்
எடுத்து யெகோவாவின் சந்நிதியில் அசை
25 வாட்டும் பலியாக அசைவாட்டிக் | குற்ற
நிவாரணபலிக்குரிய அந்த ஆட்டுக்குட்டி
யைக்கொன்று குற்றநிவாரணபலியின் இரத்
தத்தில் கொஞ்சம் எடுத்து, சுத்திகரிக்கப்படு
கிறவன் வலதுகாதின் மடலிலும், அவன்
வலதுகையின் பெருவிரலிலும், வலதுகா
26 லின் பெருவிரலிலும் தடவவேண்டும். பின்
னும் ஆசாரியன் அந்த எண்ணெயிலே
கொஞ்சம் தன் இடதுகையில் வார்த்துத் |
27 தன் இடதுகையிலுள்ள எண்ணெயிலே
வலதுவிரலைத் தோய்த்து யெகோவாவின்
28 சந்நிதியில் ஏழுதரம் தெளிப்பான். பின்பு
தன் உள்ளங்கையில் இருக்கிற எண்ணெ
யில் கொஞ்சம் எடுத்துச் சுத்திகரிக்கப்படு
கிறவன் வலதுகாதின் மடலிலும் அவன்
வலதுகையின் பெருவிரலிலும் வலதுகாதின்
பெருவிரலிலும் குற்றநிவாரணபலியின்
இரத்தம் தடவியிருக்கிற இடத்தின்மேல்
29 தடவித் | தன் உள்ளங்கையில் மீதியாயிருக்
கிற எண்ணெயைச் சுத்திகரிக்கப்படுகிற
வன் தலையின்மேல் அவனுக்காக யெகோ
வாவின் சந்நிதியில் பிராயச்சித்தம் செய்யும்
30 படி தடவவேண்டும். அந்த மனிதனின்
சக்திக்குத்தக்கதான காட்டுப்புறுக்களிலொ
ன்றையாவது மாடப்புறுக்களிலொன்றையா
31 வது | அவன் சக்திக்குத்தக்கதானதையே,
ஆசாரியன் பாவநிவாரணபலியாக்கி மற்
றொன்றைப் போஜனபலியோடுகூடத் தகன
பலியாக்கி இப்படியே சுத்திகரிக்கப்படுகிற
வனுக்காக யெகோவாவின் சந்நிதியில் பிரா
32யச்சித்தம் செய்யவேண்டும். தன் சுத்தி
கரிப்புக்கு வேண்டியவற்றைக் கொண்டு
வரச் சக்தியற்ற குஷ்டரோகிக்குரிய பிரமா
ணம் இதுவே என்று சொன்னார்.
33 பின்னும் யெகோவா மோசே ஆரோன்
34 என்பவர்களிடம்: நான் உங்களுக்குக் காணி
யாட்சியாகக் கொடுக்கும் கானான் தேசத்
திலே நீங்கள் போய்ச்சேர்ந்தபின்பு, உங்
கள் காணியாட்சியான தேசத்தில் ஒரு வீட்
டிலே குஷ்டரோகத்தை நான் வரப்பண்ணி
35 னால், அந்த வீட்டிற்கு உடையவன் வந்து
வீட்டிலே ரோகம் போன்றதொன்று வந்தி
ருக்கிறதாகத் தோன்றுகிறது என்று ஆசாரி
36 யனுக்கு அறிவிக்கவேண்டும். அப்பொழுது
வீட்டிலுள்ள யாவும் அசுத்தமாய்ப்போகாத
படி, ஆசாரியன் அந்த ரோகத்தைப் பார்க்
கப்போகுமுன்னே வீட்டை ஒழித்துவைக்
கும்படி சொல்லவேண்டும். பின்பு ஆசா
ரியன் போய் அந்த வீட்டைப் பார்க்க
37 வேண்டும். அந்த ரோகம் இருக்கிற இடத்

தைப் பார்க்கும்போது வீட்டுச் சுவர்களிலே
கொஞ்சம் பச்சையும் கொஞ்சம் சிவப்பு
மான கறைகள் உண்டாகியிருக்கவும்
அவைகள் சுற்றிலுமிருக்கிற சுவருக்குப்
பள்ளமாயிருக்கவும் கண்டால், ஆசாரியன் 38
வீட்டைவிட்டு வெளியே வாசற்படியில்
வந்து, வீட்டை ஏழுநாள் அடைத்துவைக்
கவேண்டும். ஏழாம்நாளிலே அவன் திரும் 39
பப்போய்ப் பார்க்கும்போது ரோகம் வீட்
டுச் சுவர்களில் பரவினதென்று கண்டால் |
ரோகம் இருக்கும் கற்களைப் பெயர்த்து 40
ஊருக்குவெளியே அசுத்தமான ஒரு இடத்
திலே போடச்சொல்லவேண்டும். வீட்டை 41
உள்ளே சுற்றிலும் செதுக்கச்சொல்லிச்
செதுக்கிப்போட்ட மண்ணை ஊருக்கு
வெளியே அசுத்தமான ஒரு இடத்திலே
கொட்டவும், வேறே கற்களை எடுத்துவந்து 42
பெயர்த்த கற்களுக்குப் பதிலாக வைத்துக்
கட்டி, வேறே சாந்தைக்கொண்டு வீட்
டைப் பூசவும் கட்டளையிடவேண்டும். கற் 43
களைப் பெயர்த்து வீட்டைச் செதுக்கிப் பூசி
தாய்ப் பூசின பின்பும் ரோகம் மறுபடியும்
வீட்டில் வெளிப்பட்டுத் தோன்றுமானால் |
ஆசாரியன் போய்ப்பார்க்கவேண்டும்; பார் 44
க்கும்போது ரோகம் வீட்டில் பரவியிருக்
கிறதென்று கண்டால் அது வீட்டில் உண்
டாகும் அரிகுஷ்டம்; அது தீட்டாம். ஆக 45
வே வீட்டை இடித்து அதின் கற்களையும்
மரங்களையும் அதின் சாந்து எல்லாவற்றை
யும் ஊருக்கு வெளியே அசுத்தமான இடத்
திலே கொண்டுபோய்ப் போடவேண்டும்.
வீடு அடைபட்டிருக்கும் நாட்களில் அதற் 46
குள் செல்லுகிறவன் சாயங்காலமட்டும்
தீட்டுப்பட்டிருப்பான். அந்த வீட்டிலே 47
படுத்தவன் தன் வஸ்திரங்களைத் துவைக்க
வேண்டும்; அந்த வீட்டிலே சாப்பிட்டவ
னும் தன் வஸ்திரங்களைத் துவைக்கவேண்
டும். ஆசாரியன் திரும்ப வந்து பார்க்கும் 48
போது வீடு பூசப்பட்டபின் வீட்டிலே
ரோகம் பரவவில்லை என்று கண்டானேயா
னால், ரோகம் நிவர்த்தியாகிவிட்டபடியால்
ஆசாரியன் அந்த வீட்டைச் சுத்தமாகத்
தீர்க்கவேண்டும்; அப்பொழுது ஆசாரியன் 49
வீட்டிற்குத் தோஷங்கழிக்க இரண்டு குரு
விகளையும் கேதுருக்கட்டையையும் சிவப்பு
நூலையும் ஈசோப்பையும் எடுத்து, ஒரு குரு 50
வியை ஒரு மண்பாண்டத்திலுள்ள ஊற்று
நீரின்மேல் கொன்று, கேதுருக் கட்டையை 51
யும் ஈசோப்பையும் சிவப்புநூலையும் உயி
ருள்ள குருவியையும் எடுத்து இவைகளைக்
கொல்லப்பட்ட குருவியின் இரத்தத்திலும்
ஊற்றுநீரிலும் தோய்த்து வீட்டின்மேல்

52 ஏழுதரம் தெளிக்கவேண்டும். குருவியின்
இரத்தத்தினாலும் ஊற்றுநீரினாலும் உயி
ருள்ள குருவியினாலும் கேதுருக்கட்டையி
னாலும் ஈசோப்பினாலும் சிவப்புநூலினாலும்
53 வீட்டிற்குத் தோஷங்கழித்து, உயிருள்ள
குருவியை ஊருக்குப் புறம்பே வயல்வெளி
யிலே விட்டுவிடவேண்டும். இப்படியாக
வீட்டிற்குப் பிராயச்சித்தம் செய்யவே
அது சுத்தமாகும்.
54, இது சகலவித குஷ்டரோகத்துக்கும்
55 சொறிக்கும் | வஸ்திரக் குஷ்டத்துக்கும்
56 வீட்டுக் குஷ்டத்துக்கும் | தடிப்புக்கும்
அசறுக்கும் வெள்ளைப்படருக்கும் உரிய
57 பிரமாணம். எப்பொழுது தீட்டுள்ளது
எப்பொழுது தீட்டில்லாதது என்பதை
இதினாலேயே போதிக்கவேண்டும். இதுவே
குஷ்டரோகப் பிரமாணம் என்று சொன்
னார்.

**15** பின்னும் யெகோவா மோசே ஆரோன்
2 என்பவர்களிடம்: நீங்கள் இஸ்ரவேல்புத்தி
ரருக்குச் சொல்லவேண்டியது இதுவே,
ஒருவனுக்குப் பிரமேகம் உண்டானால்,
அவன் தன்பிரமேகத்தினாலே தீட்டானவன்.
3 அவன் பிரமேகத்தினால் உண்டாகும் அசுத்
தம் இவ்வகையே. அவன் சரீரத்திலுள்ள
பிரமேகம் ஊறிக்கொண்டிருந்தாலும்அடை
பட்டிருந்தாலும் அது அவனுக்குத் தீட்
4 டாம். பிரமேகமுள்ளவன் படுக்கிற எந்
5 தப் படுக்கையும் தீட்டாகும்; அவன்
உட்காருகிறதெதுவும் தீட்டாகும். அவன்
படுக்கையைத் தொடுகிறவன் தன் வஸ்திரங்
களைத் துவைத்துத் தண்ணீரில் முழுகவேண்
டும்; சாயங்காலமட்டும் அவன் தீட்டுள்ள
6 வனாயிருப்பான். பிரமேகம் உள்ளவன்
உட்கார்ந்ததின்மேல் உட்காருகிறவன் தன்
வஸ்திரங்களைத் துவைத்துத் தண்ணீரில்
முழுகவேண்டும். அவன் சாயங்காலமட்
7 டும் தீட்டுள்ளவனாயிருப்பான். பிரமேகம்
உள்ளவனின் சரீரத்தைத் தொடுகிறவன்
தன் வஸ்திரங்களைத் துவைத்துத் தண்ணீரில்
முழுகவேண்டும்; அவன் சாயங்காலமட்டும்
8 தீட்டுள்ளவனாயிருப்பான். பிரமேகம் உள்
ளவன் சுத்தமாயிருக்கிற ஒருவன்மேல் துப்
பினால் இவன் தன் வஸ்திரங்களைத் துவைத்
துத் தண்ணீரில் முழுகவேண்டும். அவன்
சாயங்காலமட்டும் தீட்டுள்ளவனாயிருப்
9 பான். பிரமேகம் உள்ளவன் ஏறும் எந்
10 தச்சேணமும் தீட்டாகும். அவனுக்குக்
கீழிருந்த எதையும் தொடுகிறவன் சாயங்
காலமட்டும் தீட்டுள்ளவனாயிருப்பான்;
அதை எடுத்துக்கொண்டு போகிறவன் தன்
வஸ்திரங்களைத் துவைத்துத் தண்ணீரில்
முழுகவேண்டும்; அவன் சாயங்காலமட்டும்
தீட்டுள்ளவனாயிருப்பான். பிரமேகமுள்ள 11
வன் தன் கைகளைத் தண்ணீர் ஊற்றிக் கழு
வாமல் ஒருவனைத் தொட்டால் இவன் தன்
வஸ்திரங்களைத் துவைத்துத் தண்ணீரில்
முழுகவேண்டும், சாயங்காலமட்டும் தீட்
டுள்ளவனாயிருப்பான். பிரமேகம் உள்ள 12
வன் தொட்ட மண்பாண்டம் உடைக்கப்
படவும், மரச்சாமான் எல்லாம் தண்ணீர்
ஊற்றிக் கழுவப்படவும்வேண்டும். பிரமே 13
கம் உள்ளவன் தன் பிரமேகம் நீங்கிச் சுத்த
மாய்விட்டால் தன் சுத்திகரிப்புக்கென்று
ஏழுநாள் எண்ணிக்கொண்டிருந்து தன்
வஸ்திரங்களைத் துவைத்துத் தன் சரீரத்தை
ஓடு தண்ணீரில் கழுவவேண்டும்; அப்பொ
ழுது சுத்தமாவான். எட்டாம்நாளிலே, 14
அவன் இரண்டு காட்டுப்புருக்களையாவது
இரண்டு மாடப்புருக்களையாவது தரிசனக்
கூடாரவாசலிலே யெகோவாவின் சந்நிதி
யில் கொண்டுவந்து ஆசாரியனிடம் கொடுக்
கவேண்டும். ஆசாரியன் அவைகளில் 15
ஒன்றைப் பாவநிவாரணபலியாகவும் மற்
றொன்றைத் தகனபலியாகவும் செலுத்தி
அவனுக்காக யெகோவாவின் சந்நிதியில்
அவன் பிரமேகத்தினிமித்தம் பிராயச்சித்தம்
செய்யவேண்டும்.

ஒருவனிலிருந்து இந்திரியம் கழிந்ததுண் 16
டானால் அவன் தன் சரீரமுழுவதையும்
தண்ணீரில் கழுவவேண்டும்; சாயங்கால
மட்டும் அவன் தீட்டுள்ளவனாயிருப்பான்.
கழிந்த இந்திரியம்பட்ட எந்த வஸ்திரமும் 17
தோலும் தண்ணீரினால் கழுவப்படவேண்
டும், அவை சாயங்காலமட்டும் தீட்டா
யிருக்கும். இந்திரியம் கழிந்தவனோடே 18
ஸ்திரீ படுத்துக்கொண்டிருந்தால் இருவரும்
தண்ணீரில் முழுகவேண்டும்; சாயங்கால
மட்டும் தீட்டுள்ளவர்களாயிருப்பார்கள்.

ஸ்திரீ தன் சரீரத்திலுள்ள உதிர 19
ஊறலினிமித்தம் ஏழுநாள் விலக்கமாயிருக்
கவேண்டும்; அவளைத் தொடுகிறவன் எவ
னும் சாயங்காலமட்டும் தீட்டுள்ளவனா
யிருப்பான். அவள் விலக்கமாயிருக்கை 20
யில் எதின்மேல் படுத்துக்கொள்ளுகிறாளோ
எதின்மேல் உட்காருகிறாளோ அதெல்லாம்
தீட்டாகும். அவள் படுக்கையைத் தொடு 21
கிறவன் எவனும் தன் வஸ்திரங்களைத்
துவைத்துத் தண்ணீரில் முழுகவேண்டும்;
சாயங்காலமட்டும் தீட்டுள்ளவனாயிருப்
பான். அவள் உட்கார்ந்த மணையைத் 22
தொடுகிறவன் எவனும் தன் வஸ்திரங்களைத்
துவைத்துத் தண்ணீரில் முழுகவேண்டும்;
சாயங்காலமட்டும் தீட்டுள்ளவனாயிருப்

23 பான். அவள் படுக்கையின்மேலாகிலும் அவள் உட்கார்ந்த மணையின்மேலாகிலும் இருந்த எதையாகிலும் தொட்டவன் சாயங்காலமட்டும் தீட்டுள்ளவனு
24 யிருப்பான். ஒருவன் அவளோடே படுத்துக்கொண்டதும் அவள் தீட்டு அவன்மேல் பட்டதுமுண்டானால் அவன் ஏழுநாள் தீட்டுள்ளவனாயிருப்பான்; அவன் படுக்கிற
எந்தப் படுக்கையும் தீட்டுப்படும்.
25 ஒரு ஸ்திரீ விலகியிருக்கவேண்டிய காலமேயல்லாமல் அவள் உதிரம் அநேக நாள் ஊறிக்கொண்டிருந்தால் அல்லது அந்தக் காலத்துக்குமிஞ்சி அதிக நாள் ஊறிக்கொண்டிருந்தால் அவள் உதிரம் ஊறும் நாளெல்லாம் தன் விலக்கத்தின் நாட்களிலி
ருந்ததுபோலவே அவள் தீட்டாயிருப்பாள்.
26 அந்த நாட்களெல்லாம் அவள் படுக்கும் எந்தப் படுக்கையும் அவள் விலக்கத்தின் படுக்கையைப்போலவே இருக்கும்; அவள் உட்கார்ந்த மணையும் அவள் விலக்கத்தின்
27 தீட்டைப்போலவே தீட்டாயிருக்கும். அப்படிப்பட்டவைகளைத் தொடுகிறவன் எவனும் தீட்டாவான்; அவன் தன் வஸ்திரங்களைத் துவைத்துத் தண்ணீரில் முழுகவேண்டும். சாயங்காலமட்டும் தீட்டுள்ளவனு
28 யிருப்பான். அவள் தன் உதிர ஊறல் நின்று சுத்தமானபோது ஏழுநாள் எண்ணிக் கொள்ளவேண்டும், அதின் பின்பு சுத்தமா
29 யிருப்பாள். எட்டாம்நாளிலே அவள் இரண்டு காட்டுப்புருக்களையாவது இரண்டு மாடப்புருக்களையாவது தனக்காக வாங்கித் தரிசனக்கூடார வாசலில் ஆசாரியனிடம்
30 கொண்டுவரவேண்டும். ஆசாரியன் அவைகளில் ஒன்றைப் பாவநிவாரணபலியாகவும் மறறொன்றைத் தகனபலியாகவும் செலுத்தி அவளுக்காக யெகோவாவின் சந்நிதியில் அவள் உதிர ஊறலினிமித்தம் பிராயச்சித்தம் செய்யவேண்டும்.
31 இஸ்ரவேல்புத்திரர் தங்கள் நடுவே இருக்கிற என் வாசஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தித் தங்கள் தீட்டுகளினிமித்தம் சாகாதபடி நீங்கள் அவர்களை இப்படியாகத் தீட்டுகளுக்கு விலக்கி வைக்கவேண்டும்.
32 பிரமேகம் உள்ளவனுக்கும் இந்திரியக்
33 கழிவினாலே தீட்டானவனுக்கும் | ஸ்தீரீ பலவீனமுள்ளவனுக்கும் பிரமேகமுள்ள ஸ்திரீ புருஷருக்கும் தீட்டாயிருக்கிறவளோடே படுத்துக்கொண்டவனுக்கும் உரிய பிரமாணம் இதுவே என்று சொன்னார்.

**16** ஆரோனின் இரண்டு குமாரர் யெகோவாவின் சந்நிதியைக் கிட்டி இறந்தபின்பு, அவர்கள் மரணத்தின்பின் யெகோவா மோ
சேயோடு பேசுகிறவராய் | அவனிடம்: நீ 2
உன் சகோதரனாகிய ஆரோனிடத்தில் இவைகளைச் சொல். நான் கிருபாசனத்தின்மேல் மேகத்திலே தரிசனமாவேன், ஆகையால் பரிசுத்த ஸ்தலத்திலே, திரைக்கு உட்புறத்திலிருக்கிற பெட்டகத்தின்மேலுள்ள கிருபாசன மூடிக்கு எதிரே, தான் நினைத்த நேரமெல்லாம் அவன் வரவேண்டாம், வந்தால் சாகாதிருப்பான். ஆரோன் பரிசுத்த 3
ஸ்தலத்தினுள் பிரவேசிக்கப்போகும்போது அவன் மாட்டு மந்தையிற் பிடித்த ஒரு காளையைப் பாவநிவாரணபலியாகவும் ஒரு ஆட்டுக்கடாவைத் தகனபலியாகவும் கொண்டுவரவேண்டும். அவன் பரிசுத்தமான 4
சணல்நூல் அங்கியைத் தரித்துச் சணல்நூல் சல்லடத்தை உடுத்திச் சணல்நூல் இடைக்கச்சையைக் கட்டிச் சணல்நூல் பாகையைத் தரித்துக்கொண்டிருக்கவேண்டும்; அவைகள் திரு உடைகள்; அவன் தண்ணீரிலே முழுகி அவைகளைத் தரித்துக் கொண்டு, இஸ்ரவேல்புத்திரராகிய சபையா 5
ரிடத்திலே பாவநிவாரண பலிக்கென்று இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும் தகன பலிக்கென்று ஒரு ஆட்டுக்கடாவையும் வாங்கிக்கொள்ளவேண்டும். பின்பு ஆரோ 6
ன் தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் பிராயச்சித்தம் செய்யும்படி தனக்குரிய பாவநிவாரணபலிக் காளையைக் கிட்டிவரச் செய்து, அந்த இரண்டு வெள்ளாட்டுக் 7
கடாக்களையும் கொண்டுவந்து தரிசனக்கூடார வாசலில் யெகோவாவின் சந்நிதியிலே நிறுத்தவேண்டும். பின்பு ஆரோன் அந்த 8
இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையுங் குறித்து யெகோவாவுக்கென்று ஒன்றும் அசாசேலுக்கென்று ஒன்றுமாக இரண்டு சீட்டுகளைப் போடவேண்டும். யெகோவாவுக் 9
கென்று சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவைக் கிட்டிவரச்செய்து அதைப் பாவநிவாரணபலியாகச் செலுத்துவான். அசா 10
சேலுக்கென்று சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவின்மேல் பிராயச்சித்தம் செய்துவிட்டு அதை வனாந்தரத்திலே அசாசேலுக்கென்று விட்டுவிடும்படி யெகோவாவின் சந்நிதியில் உயிருள்ளதாய் நிறுத்துவான்.
அப்பால் ஆரோன் தனக்காகவும் தன் வீட் 11
டாருக்காகவும் பாவநிவர்த்திசெய்யும்படி தனக்குரிய பாவநிவாரணபலிக் காளையைக் கிட்டிவரச்செய்து அதைக் கொல்லுவான்.
பின்பு யெகோவாவின் சந்நிதியிலிருக்கும் 12
பலிபீடத்தின்மேலுள்ள நெருப்புத் தணலைத் தூபகலசம் நிறைய எடுத்துப் பொடியாக்கப்பட்ட சுகந்த தூபவர்க்கத்திலே

தன் இரண்டுகை நிறைய வாரித் தூளாக்கு
13 உட்புறமாகக் கொண்டுவந்து, தான் சாகாத படிக்குத் தூபமேகமானது சாட்சியப்பெட் டகத்தின்மேல் இருக்கும் கிருபாசனத்தை மூடத்தக்கதாக யெகோவாவின் சந்நிதியில் அக்கினியின்மேல் தூபவர்க்கத்தைப் போ
14 டவேண்டும். போட்டபின் காளையின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்துக் கீழ்புற மாகு நின்று, தன் விரலினால் கிருபாசனத் தின்மேல் தெளித்து, அந்த இரத்தத்தில் கொஞ்சம் எடுத்துக் கிருபாசனத்துக்குமுன் பாக ஏழுதரம் தன் விரலினால் தெளிக்க
15 வேண்டும். பின்பு ஜனத்திற்குரிய பாவ நிவாரணபலி வெள்ளாட்டுக்கடாவை அவன் கொன்று, அதின் இரத்தத்தைத் திரைக்கு உட்புறமாகக் கொண்டுவந்து காளையின் இரத்தத்தைத் தெளித்ததுபோல அதின் இரத்தத்தையும் கிருபாசனத்தின்மே
16 லும் அதற்கு முன்பாகவும் தெளித்து, இஸ் ரவேல் புத்திரரின் அசுத்தங்கள் மீறுதல்கள் ஆகிய அவர்கள் சகல பாவங்களினிமித்த மும் பரிசுத்த ஸ்தலத்திற்காகப் பிராயச்சித் தம் செய்யவேண்டும். அவர்களோடு அவர் கள் அசுத்தங்களின் நடுவே இருக்கிற தரி சனக்கூடாரத்திற்காகவும் அப்படியே செய்
17 யவேண்டும். பிராயச்சித்தம் செய்யும்படி அவன் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித் தது தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் இஸ்ரவேல் சபையார் அனைவருக்காகவும் பிராயச்சித்தம் செய்துமுடித்து வெளியே வருமளவும் தரிசனக்கூடாரத்தில் ஒருவரும்
18 இருக்கக்கூடாது. பின்பு அவன் யெகோ வாவின் சந்நிதியில் இருக்கிற பலிபீடத் தண்டையில் வெளியே வந்து அதற்காகப் பிராயச்சித்தஞ் செய்து காளையின் இரத்தத் திலும் வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்தி லும் கொஞ்சம் எடுத்துப் பலிபீடத்துக்
19 கொம்புகளின்மேல் சுற்றிலும் தடவி, தன் விரலினால் அந்த இரத்தத்தில் எடுத்து ஏழு தரம் அதின்மேல் தெளித்து, அதை இஸ்ர வேல் புத்திரரின் அசுத்தங்கள் நீங்கச் சுத்தி
20 கரித்துப் பரிசுத்தமாக்கவேண்டும். இப் படியாகப் பரிசுத்தஸ்தலம் தரிசனக்கூடா ரம் பலிபீடம் இவற்றுக்காகப் பிராயச்சித் தஞ்செய்து தீர்த்தபின்பு உயிரோடிருக்கிற வெள்ளாட்டுக்கடாவை ஆரோன் கிட்டி
21 வரச்செய்து | அதின் தலைமேல் தன் இரண் டு கைகளையும் வைத்து அதின்மேலே இஸ்ர வேல் புத்திரரின் சகல அக்கிரமங்கள் மீறு தல்கள் ஆகிய அவர்கள் சகல பாவங்களை யும் அறிக்கையிட்டு அவைகளை வெள்ளா ட்டுக்கடாவின் தலைமேல் வைத்து நியமிக்
கப்பட்ட ஆள்வசம் கடாவை வனாந்தரத் திலே விட்டுவிடவேண்டும். அந்த வெள் 22
ளாட்டுக்கடா அவர்கள் அக்கிரமங்களை யெல்லாம் தன் மேல் சுமந்துகொண்டு மனித சஞ்சாரமில்லாத காட்டுக்குப் போக வேண்டும். அவன் அந்த வெள்ளாட்டுக் கடாவை வனாந்தரத்திலே அனுப்பிவிட வேண்டும். அதன்பின் ஆரோன் தரிசனக் 23
கூடாரத்தினுள் வந்து, தான் பரிசுத்த ஸ்த லத்துக்குள் பிரவேசிக்கும்போது உடுத்தி யிருந்த சணல்நூல் வஸ்திரங்களைக் களைந்து அங்கே வைத்துவிட்டுப், பரிசுத்த இடத் 24
திலே தண்ணீரில் முழுகித் தன் வஸ்திரங் களை உடுத்திக்கொண்டு வெளியே வந்து, தன் தகனபலியையும் ஜனத்தின் தகனபலி யையும் செலுத்தித் தனக்காகவும் ஜனத் திற்காகவும் பிராயச்சித்தம் செய்து, பாவ 25
நிவாரணபலியின் கொழுப்பைப் பலிபீடத் தின்மேல் தகனிப்பான். அசாசேலுக்கென் 26
று வெள்ளாட்டுக்கடாவைக் கொண்டு போய் விட்டுவந்தவன் தன் வஸ்திரங்களைத் துவைத்துத் தண்ணீரில் முழுகிய பின்பே பாளையத்துக்குள் வரலாம். பிராயச்சித்தம் 27
செய்வதற்கென்று பரிசுத்த ஸ்தலத்திற்குள் இரத்தம் கொண்டுவரப்பட்ட பாவநிவார ணபலிக் காளையையும் பாவநிவாரணபலி வெள்ளாட்டுக்கடாவையும் பாளையத்துக்கு வெளியே கொண்டுபோய், அவைகளின் தோலையும் மாம்சத்தையும் உதப்பியையும் அக்கினியால் சுட்டெரிக்கவேண்டும். அ 28
வைகளைச் சுட்டெரித்தவன் தன் வஸ்திரங் களைத் துவைத்துத் தண்ணீரில் முழுகிய பின்பே பாளையத்துக்குள் வரலாம்.

இதுவே உங்களுக்கு நித்திய நியமம்: ஏழா 29
ம் மாதம்பத்தாம் தேதியிலே சுதேசியாளாலும் உங்களுக்குள் தங்கும் பரதேசியாளாலும் தங்களை ஒடுக்குவதுமன்றி யாதொரு வேலை யும் செய்யாமலும் இருக்கவேண்டும். அந் 30
நாளில் உங்களைச் சுத்திகரிக்கும்பொருட்டு உங்களுக்காகப் பிராயச்சித்தம் செய்யப் படும்; உங்கள் சகல பாவங்களும் நீங்கி யெகோவாவின் சந்நிதியிலே நீங்கள் சுத்தி கரிக்கப்படுவீர்கள். அது நீங்கள் வேலை 31
நீங்கி ஓய்ந்திருக்கும் ஓய்வுநாள்; அதிலே உங்கள் ஆத்துமாக்களை ஒடுக்கவேண்டும்; இது நித்திய நியமம். அபிஷேகம் பெற்ற 32
வனும் தன் தகப்பன் பட்டத்திற்கு வந்து ஆசாரிய ஊழியஞ்செய்யப் பிரதிஷ்டை பண்ணப்பட்டவனுமாகிய ஆசாரியனே பிராயச்சித்தம் செய்யவேண்டும். அவன் திருவுடைகளாகிய சணல்நூல் வஸ்திரங் களை உடுத்திக்கொண்டு | பரிசுத்த ஸ்தலத்

துக்காகப் பிராயச்சித்தம் செய்யவேண்டும்; தரிசனக்கூடாரத்துக்காகவும் பலிபீடத்துக்காகவும் பிராயச்சித்தம் செய்யவேண்டும்; ஆசாரியருக்காகவும் முழு ஜனக்கூட்டத்திற்காகவும் பிராயச்சித்தம் செய்யவேண்டும்.
34 இதுவே உங்களுக்கு நித்திய நியமம்; இஸ்ரவேல் புத்திரரின் சகல பாவங்களும் நீங்க வருஷத்தில் ஒரு முறை அவர்களுக்காகப் பிராயச்சித்தம் செய்யவேண்டும் என்று சொன்னார்.

யெகோவா மோசேக்குக் கட்டளையிட்ட படியே செய்யப்பட்டது.

**17** பின்னும் யெகோவா மோசேயினிடம்: நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் இஸ்ரவேல்புத்திரர் அனைவரோடும் பேசி, யெகோவா கட்டளையிடுகிறது இதுவே: இஸ்ரவேல் வீட்டாரில் எவனாகிலும் மாட்டையாவது செம்மறியாட்டையாவது வெள்ளாட்டையாவது தரிசனக்கூடார வாசலாகிய யெகோவாவின் வாசஸ்தலத்துக்கு எதிரே யெகோவாவுக்குக் காணிக்கையாகப் படைக்கும்படி கொண்டுவராமல், பாளையத்துக்குள்ளேயாகிலும் பாளையத்துக்கு வெளியேயாகிலும் அதைக்கொன்றால் அது அந்த மனிதனுக்கு இரத்தப் பழியாக எண்ணப்படும். அந்த மனிதன் இரத்தம் சிந்தினான். அவன் தன் ஜனத்தின் நடுவிலிருந்து நீக்கப்பட்டுப்போவான்.
5 ஆகவே இஸ்ரவேல் புத்திரர் வெளிகளிலே செலுத்துகிற தங்கள் பலிகளைத் தரிசனக்கூடாரவாசலில் ஆசாரியனிடம் யெகோவாவுக்கென்று கொண்டுவந்து அங்கே அவைகளை யெகோவாவுக்குச் சமாதான பலிகளாகச் செலுத்தவேண்டும். இரத்தத்தை ஆசாரியன் தரிசனக்கூடாரவாசலிலிருக்கிற யெகோவாவின் பலிபீடத்தின்மேல் தெளித்துக் கொழுப்பை யெகோவாவுக்குச் சுகந்த வாசனையாகத் தகனிக்கவேண்டும்.
7 தாங்கள் சோரமார்க்கமாய்ப் பின்பற்றுகிற பேய்களுக்குத் தங்கள் பலிகளை இனிச் செலுத்தக்கூடாது; தலைமுறை தலைமுறையாக இது அவர்களுக்கு நித்திய நியமம் என்று சொல் என்றார்.
8 மேலும் நீ அவர்களிடம்: இஸ்ரவேல் வீட்டாரிலும் உங்கள் நடுவே தங்குகிற அந்நியர்களிலும் எவனாகிலும் தகனபலியையாவது வேறெந்த இரத்த பலியையாவது இடும்போது, அதைத் தரிசனக்கூடாரவாசலிலே யெகோவாவுக்கென்று செலுத்தும்படி கொண்டுவராவிட்டால் அவன் தன் ஜனத்திலிருந்து நீக்கப்பட்டுப் போவான் என்று சொல்!

இஸ்ரவேல் வீட்டாரிலும் உங்கள் நடுவே தங்கும் அந்நியர்களிலும் எவனாகிலும் எந்த இரத்தத்தையாகிலும் புசித்தால், இரத்தத்தைப் புசித்த அவனுக்கு விரோதமாக நான் என் முகத்தைத் திருப்பி அவன் தன் ஜனத்தின் நடுவிலிருந்து நீக்கப்பட்டுப் போகச்செய்வேன். மாம்சத்தின் உயிர் இரத்தத்திலே இருக்கிறது; அதைப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பிராயச்சித்தம் செய்வதற்கென்று நான் உங்களுக்கு நியமித்தேன்; இரத்தமே உயிரைக்கொண்டு பிராயச்சித்தம் செய்வது. ஆகவே உங்களில் ஒருவனும் இரத்தம் புசிக்கக்கூடாது, உங்கள் நடுவே தங்குகிற அந்நியனும் இரத்தம் புசிக்கக்கூடாது என்று இஸ்ரவேல்புத்திரருக்குச் சொன்னேன்.

இஸ்ரவேல் புத்திரரிலும் உங்கள் நடுவே தங்குகிற அந்நியர்களில் எவனாகிலும் புசிக்கத்தக்க ஒரு மிருகத்தையாவது ஒரு பட்சியையாவது வேட்டையாடிப் பிடித்தால், அவன் அதின் இரத்தத்தைத் தரையிலே ஊற்றி மண்ணினால் அதை மூடவேண்டும். மாம்சமுள்ள யாவற்றுக்கும் ஜீவனும் இரத்தமும் ஒன்றே; ஆகையால் எந்த மாம்சத்தின் இரத்தத்தையும் புசிக்கக்கூடாது; சகல மாம்சத்தின் உயிரும் அதின் இரத்தந்தானே; அதைப்புசிக்கிற எவனும் நீக்கப்பட்டுபோவான் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னேன். தானாய்ச் செத்துப்போனதையாவது பீறுண்டதையாவது புசித்தவன் எவனும் அவன் சுதேசியானாலும் பரதேசியானாலும் தன் வஸ்திரங்களைத் துவைத்துத் தண்ணீரில் முழுகவேண்டும்; சாயங்காலமட்டும் தீட்டாயிருப்பான்; பின்பு சுத்தமாவான். அவன் தன் வஸ்திரங்களைத் துவைக்காமலும் முழுகாமலும் இருந்தால் தன் அக்கிரமத்தைச் சுமப்பான் என்று சொன்னார்.

**18** பின்பு யெகோவா மோசேயினிடம்: நீ இஸ்ரவேல் புத்திரருக்கு இவற்றைச் சொல்லவேண்டும்: நானே உங்கள் கடவுளாகிய யெகோவா. நீங்கள் இருந்த எகிப்து தேசத்தாருடைய செய்கையின்படியும் நான் உங்களை அழைத்துப்போகிற கானான் தேசத்தாருடைய செய்கையின்படியும் செய்யவேண்டாம்; அவர்கள் முறைமைகளின்படியும் நடக்கவேண்டாம். என்னுடைய பிரமாணங்களின்படியே செய்து என்னுடைய நியமங்களைக் கைக்கொண்டு நடவுங்கள், நானே உங்கள் கடவுளாகிய யெகோவா; நீங்கள் என் நியமங்களையும் என் பிரமாணங்களையும் கைக்கொள்ள

வேண்டும். அவைகளின்படி செய்கிறவன் எவனும் அவைகளால் பிழைப்பான்; நானே யெகோவா.

6 ஒருவனும் தன்னோடு இரத்தக்கலப்புள்ளவளின் நிர்வாணத்தை வெளிப்படுத்திக் கூடலாகாது; நானே யெகோவா. உன்
7 தாயைக் கூடலாகாது. அது உன் தாய்க்கு அவமானம், உன் தகப்பனுக்கும் அவமானம், அவள் உன் தாய்; அவளைக்கூட
8 லாகாதே. உன் தகப்பனுக்கு மனைவியாயிருக்கும் எந்த ஸ்திரீயையும் கூடலாகாது. அது உன் தகப்பனுக்கு அவமானம்.
9 உன் தகப்பனுக்காவது உன் தாய்க்காவது வீட்டிலாகிலும் வெளியிலாகிலும் பிறந்த குமாரத்தியாகிய உன் சகோதரியைக் கூட
10 லாகாது. உன் குமாரனின் மகளையாவது உன் குமாரத்தியின் மகளையாவது கூடலாகாது; அவர்கள் அவமானம் உன் அவமா
11 னமே. உன் தகப்பனின் மனைவியிடத்தில் உன் தகப்பனுக்குப்பிறந்த குமாரத்தியைக் கூடலாகாது; அவள் உனக்குச் சகோதரி.
12 உன் தகப்பனின் சகோதரியைக் கூடலாகாது; அவள் உன் தகப்பனுக்கு இரத்தக்
13 கலப்புள்ளவள். உன் தாயின்சகோதரியைக் கூடலாகாது; அவள் உன் தாய்க்கு இரத்தக்
14 கலப்புள்ளவள். உன் தகப்பனின் சகோதரனுடைய மனைவியைக் கிட்டி அவளைக் கூடலாகாது; அது அவனுக்கு அவமானம்.
15 அவள் உன் தகப்பனின் சகோதரி. உன் மருமகளைக் கூடலாகாது; அவள் உன் குமாரனின் மனைவி, அவளைக் கூடலாகாதே.
16 உன் சகோதரனின் மனைவியைக் கூடலாகாது; அது உன் சகோதரனுக்கு அவமா
17 னம். ஒரு ஸ்திரீயையும் அவள் மகளையும் கூடலாகாது; அவள் குமாரனின் மகளையும் அவள் குமாரத்தியின் மகளையும் கூடும்படி விவாகம்பண்ணலாகாது; இவர்கள் அவளுக்கு இரத்தக்கலப்புள்ளவர்கள்;
18 அது முறைகேடு. உன் மனைவி உயிரோடிருக்கையில் மனவருத்தமுண்டாக அவளோடு அவள் சகோதரியையும் கூடும்பொருட்டு அவளை விவாகம்பண்ணலாகாது.
19 ஸ்திரீயானவள் சுத்திகத்தால் விலக்கத்திலிருக்கையில் அவளைக் கிட்டிக்கூடலாகாது.
20 பிறன் மனைவியோடே சேரும்படி சயனித்து அவளால் உன்னை அசுத்தப்படுத்திக்கொள்
21 ளவேண்டாம். நீ உன் சந்ததியில் யாரையாகிலும் மோலேகுக்கென்று அக்கினிதகனமாகப் படைக்கவேண்டாம்; உன் தேவனின் திருநாமம் பரிசுத்தமற்றதுபோலாகும்.
22 படிசெய்யாதே; நானே யெகோவா. பெண்ணோடு சம்போகம்பண்ணுகிறதுபோல ஆணோடே சம்போகம்பண்ணலாகாது; அது
23 அருவருப்பானது. யாதொரு மிருகத்தோடும் நீ புணர்ச்சி செய்து அதினாலே உன்னை அசுத்தப்படுத்திக்கொள்ளவேண்டாம்; ஸ்திரீயானவள் மிருகத்தோடே புணரும்படி அதற்கு முன்பாக நிற்கலாகாது; அது அசங்கியமான தாறுமாறு.

இவைகளில் ஒன்றினாலும் உங்களை அசுத்
24 தப்படுத்திக்கொள்ளவேண்டாம்; நான் உங்கள் முன்னின்று துரத்திவிடுகிற ஜாதிகள் இவைகளெல்லாவற்றினாலும் தங்களை அசுத்
25 தப்படுத்தியிருக்கிறார்கள்; தேசமும் அசுத்தமாக்கப்பட்டிருக்கிறபடியால் நான் அதின் மேல் வந்து அதின் அக்கிரமத்தை விசாரிப்பேன்; தேசம் தன் குடிகளைக் கக்கிப்போடும். நீங்கள் என் நியமங்களையும் என் பிர
26 மாணங்களையும் கைக்கொள்ளவேண்டும்; சுதேசியானாலும் உங்கள் நடுவே இருக்கிற பரதேசியானாலும் இந்த அருவருப்புகளில் ஒன்றையும் செய்யலாகாது. இந்த அரு
27 வருப்புகளை யெல்லாம் உங்களுக்குமுன் அந்தத் தேசத்திலிருந்த மனிதர் செய்ததினாலே தேசம் அசுத்தமாயிற்று. இப்பொ
28 முதும் நீங்கள் அதை அசுத்தப்படுத்துவீர்களானால் உங்களுக்குமுன் இருந்த ஜாதிகளைத் தேசம் கக்கிப்போட்டதுபோலவே உங்களையும் அது கக்கிப்போடும். இப்
29 படிப்பட்ட அருவருப்பானவைகளில் ஒன்றை யாராவது செய்தால் செய்தவர்கள் ஜனத்தின் நடுவிலிருந்து சிக்கப்பட்டுப்போவார்கள். ஆகவே நான் கட்டளையிட்டதை
30 நீங்கள் கைக்கொள்ளவேண்டும்; உங்களுக்குமுன் செய்யப்பட்ட அருவருப்பான முறைமைகளில் யாதொன்றையும் நீங்கள் செய்து அவைகளால் உங்களை அசுத்தப்படுத்திக்கொள்ளவேண்டாம். நானே உங்கள் கடவுளாகிய யெகோவா என்று சொன்னார்.

**19** பின்னும் யெகோவா மோசேயினிடம்:
2 நீ இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்துக்கும் இவற்றைச் சொல்: யெகோவாவென்னும் உங்கள் கடவுளாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருக்க வேண்டும். உங்களில் ஒவ்வொருவனும்
3 தன்தன் தாயினிடத்திலும் தகப்பனிடத்திலும் பயபக்தியாயிருக்கவேண்டும்; என் ஓய்வுநாட்களை ஆசரிக்கவேண்டும், நானே உங்கள் கடவுளாகிய யெகோவா; விக்
4 கிரகங்களை நோக்கவேண்டாம்; வார்ப்பிக்கப்பட்ட தெய்வங்களை உங்களுக்குச் செய்துகொள்ளவேண்டாம்; நானே உங்கள் கடவுளாகிய யெகோவா.
5 சமாதான பலியை யெகோவாவுக்குச் செலுத்தும்

போது நீங்கள் அங்கீகரிக்கப்படும்படி அதைச் செலுத்துங்கள். அதைச் செலுத்துகிற நாளிலும் மறுநாளிலும் நீங்கள்
6 அதைப் புசிக்கவேண்டும்; மூன்றாம்நாள் மட்டும் மீதியானதை அக்கினியாலே
7 சுட்டெரிக்கவேண்டும். மூன்றாம்நாளில் புசிக்க நேரிட்டால் அது அருவருப்பாம்;
8 அது அங்கீகரிக்கப்படமாட்டாது. அதைப் புசிக்கிறவன் யெகோவாவுக்குப் பரிசுத்த மானதைப் பரிசுத்தமற்றதாகும்படி செய்தால் அவன் தன் அக்கிரமத்தைச் சுமந்து தன் ஜனத்திலிருந்து நீக்கப்பட்டுப்போவான்.

9 உங்கள் தேசத்திலே நீங்கள் பயிரை அறுக்கும்போது வயலின் ஓரத்திலிருக்கிறதை முற்றிலும் அறுக்காமலும் சிந்திக்கிடக்
10 கிற கதிர்களைப் பொறுக்காமலும் | உன் திராட்சத்தோட்டத்திலே பின் அறுப்பை அறுக்காமலும் அதிலே சிந்திக்கிடக்கிற பழங்களைப் பொறுக்காமலும் அவைகளை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டுவிடவேண்டும்; நானே உங்கள் கடவுளாகிய யெகோவா.

11 நீங்கள் களவுசெய்யவேண்டாம், வஞ்சனை பண்ணவேண்டாம், ஒருவருக்கொருவர்
12 பொய் சொல்லவேண்டாம். என் நாமத்தைக்கொண்டு பொய்யாணையிட்டு உங்கள் கடவுளின் திருநாமத்தைப் பரிசுத்தமற்றது போலாகும்படி செய்யவேண்டாம்; நானே
13 யெகோவா. அயலானை ஒடுக்காமலும் கொள்ளையிடாமலும் இருங்கள்; கூலிவேலை செய்தவனுடைய கூலி இரவெல்லாம் விடியற்காலமட்டும் உன்னிடம் இருக்கவேண்
14 டாம். செவிடனைச் சபியாதே, குருடனுக்கு முன்னே தடுக்கலை வையாதே, உன் கடவுளுக்குப் பயந்திரு; நானே யெகோவா.

15 நியாயவிசாரணையில் அநியாயம் செய்யாதிருங்கள்; எளியவனென்று தாட்சணியம் காட்டாமலும் வலியவனென்று எண்ணிக்கை வையாமலும் நீதியாகப் பிறனுக்கு
16 நியாயந்தீர்க்கவேண்டும். உன் ஜனத்துக்குள்ளே அங்குமிங்கும் கோள்சொல்லித் திரியாதே; வழக்கிலே அயலானுடைய இரத்தத்தை வாங்கத் தேடவேண்டாம்;
17 நானே யெகோவா. உன் சகோதரனை உன் உள்ளத்திலே பகையாதே; பிறனிமித்தம் உன்மேல் பாவம் சுமராதபடி அவனைக் கடி
18 ந்துகொள்வதே சரி. பழிக்குப் பழி வாங்காதே, உன் ஜனப்புத்திரர்மேல் கோபத்தில் நிறைந்திராதே; உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் அயலானிடத்திலும் அன்புகூரவேண்டும்; நானே யெகோவா.

என் கட்டளைகளைக் கைக்கொள்ளுங்கள்; 19
உன் மிருகங்களில் வெவ்வேறான இரண்டு வகை மிருகங்களைப் பொலியவிடாதே; உன் வயலிலே இரண்டுவகையான விதைகளைக் கலந்து விதையாதே; இரண்டுவகை நூல்களைக் கலந்து செய்த வஸ்திரத்தை உடுத்திக்கொள்ளாதே. ஒருவனுக்கு அடிமைப்பட்டவனாய் 20
ஒரு புருஷனுக்கு நியமிக்கப்பட்டவளாயிருந்து மீட்கப்படாமலும் சுயாதீனமாய் விடப்படாமலுமிருக்கையிலேயே அவளோடே ஒருவன் சம்போகமாய்ச் சயனம்பண்ணினால் அவர்களைத் தண்டிக்கவேண்டும்; அவள் சுயாதீனமுள்ளவள் அல்லவாகையால் அவர்கள் சாகவேண்டாம். அவன் 21
தன் குற்றநிவாரணபலியாய்த் தரிசனக் கூடாரவாசலில் யெகோவாவின் சந்நிதியிலே ஒரு ஆட்டுக்கடாவைக் கொண்டுவரவேண்டும். குற்றநிவாரணபலிக் கடாவை ஆசா 22
ரியன் அவனுக்காக யெகோவாவின் சந்நிதியில் அவன் செய்த பாவத்தினிமித்தம் பிராயச்சித்தம் செய்யவேண்டும்; அவன் செய்த பாவம் இப்படியாக அவனுக்கு மன்னிக்கப்படும்.

நீங்கள் அந்தத் தேசத்தில் வந்து புசிக் 23
கத்தக்க கனிகளைத் தருகிற பலவித மரங்களை நாட்டினபின்பு, அவைகளின் கனிகளை விருத்தசேதனமில்லாதவைகளென்று எண்ணவேண்டும்; மூன்று வருஷமாக அவைகள் உங்களுக்கு விருத்தசேதனமில்லாதவைகளாயிருக்கும். அதைப் புசிக்கவேண்டாம். நாலாம் வருஷத்திலே அவை 24
களின் கனிகளெல்லாம் யெகோவாவுக்குஸ்தோத்திரமாவதற்குப் பரிசுத்தமாயிருக்கும். ஐந்தாம் வருஷத்திலே நீங்கள் 25
அவைகளின் கனிகளைப் புசிக்கலாம்; இப்படியே அவைகளின் பலன் உங்களுக்குப் பெருகும். நானே உங்கள் கடவுளாகிய யெகோவா.

யாதொன்றையும் இரத்தத்தோடே புசிக் 26
கவேண்டாம், சகுனம் பாராமலும், குறிகே 27
ளாமலும் இருங்கள். உங்கள் தலைமயிரைச் சுற்றியொதுக்காமலும் தாடியின் ஓரங்களைக் கத்தரிக்காமலுமிருங்கள். செத்தவனுக்காக 28
உங்கள் சரீரத்தைக் கீறிக்கொள்ளவேண்டாம்; அடையாள எழுத்துக்களை உங்கள் மேல் குத்திக்கொள்ளவேண்டாம்; நானே 29
யெகோவா. உன் குமாரத்தியை வேசித்தனம் பண்ணவிட்டு அசுத்தத்திற்காளாகச்செய்யாதே. செய்தால் தேசத்தார் வேசித்தனம்பண்ணத் தேசமெங்கும் முறைகேடு நிறையும்.

என் ஓய்வுநாட்களை ஆசரியுங்கள், என் 30
பரிசுத்த ஸ்தலத்தை விஷயத்தில் பயபக்தியா

31 யிருங்கள்; நானே யெகோவா. அஞ்சனம் பார்க்கிறவர்களை நாடாதிருங்கள், குறிசொல்லுகிறவர்களைத் தேடாதிருங்கள்; அவர்களாலே உங்களை அசுத்தப்படுத்திக்கொள்ள வேண்டாம்; நானே உங்கள் கடவுளாகிய யெகோவா.

32 நரைத்தவனுக்கு முன்பாக எழுந்திரு, முதிர்வயதுள்ளவன் முகத்தைக் கனம்பண்ணு, உன் கடவுளுக்குப் பயப்படு; நானே

33 யெகோவா. அந்நியனெருவன் உங்கள் தேசத்திலே உங்களோடு தங்கினால் அவ

34 னைச் சிறுமைப்படுத்தவேண்டாம். உங்களோடு தங்குகிற அந்நியனைச் சுதேசிபோல எண்ணி நீங்கள் உங்களில் அன்புகூருகிறதுபோல அவனிலும் அன்புகூருங்கள்; நீங்களும் எகிப்துதேசத்திலே அந்நியராயிருந்தீர்களே; நானே உங்கள் கடவுளாகிய யெகோவா.

35 நியாயவிசாரணையிலும் அளவிலும் நிறையிலும் படியிலும் அநியாயம் செய்யாதிருங்

36 கள். சுமுத்திரையான தராசும் சுமுத்திரையான நிறைகல்லும் சுமுத்திரையான மரக்காலும் சுமுத்திரையான படியும் உங்களுக்கு இருக்கவேண்டும்; நானே உங்களை எகிப்துதேசத்திலிருந்து கொண்டுவந்த உங்கள் கட

37 வுளாகிய யெகோவா. என் நியமங்கள் யாவையும் என் பிரமாணங்கள் யாவையும் நீங்கள் கைக்கொண்டு நடக்கவேண்டும். நானே யெகோவா என்று சொன்னார்.

**20** யெகோவா மோசேயினிடம்: | மின்

2 னும் நீ இஸ்ரவேல்புத்திரரிடம் இவற்றைச் சொல்: இஸ்ரவேல் புத்திரரிலும் இஸ்ரவேலருக்குள் தங்குகிற அந்நியர்களிலும் எவனாகிலும் தன் சந்ததியில் ஒரு பிள்ளையை மோலேகுக்குக் கொடுத்தால் அவன் கொல்

3 லப்படவேவேண்டும்; தேசத்தின் ஜனங்கள் அவன்மேல் கல்லெறியவேண்டும், நானும் அவனுக்கு விரோதமாக என் முகத்தைத் திருப்பி அவனைத் தன் ஜனத்தின் நடுவிலிருந்து நீக்கப்பட்டுப்போகச் செய்வேன். அவன் என் பரிசுத்த ஸ்தலத்தை அசுத்தமாக்கி என் பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தமற்றது போலாக்கினானே, தன் சந்ததியில் ஒருபிள்ளை

4 யை மோலேகுக்குக் கொடுத்தானே. அவன் தன் சந்ததியில் ஒரு பிள்ளையை மோலேகுக்குக் கொடுக்கும்போது தேசத்தின் ஜனங்கள் அவனைக் கொல்லாமல் கண்சாடை

5 யாய் விட்டுவிட்டால், நான் அந்த மனிதனுக்கும் அவன் குடும்பத்துக்கும் விரோதமாக என் முகத்தைத் திருப்பி அவனையும் அவன் பிறகே மோலேகைச் சோரமார்க்கமாய்ப் பின்பற்றின யாவரையும் தங்கள் ஜனத்தின் நடுவிலிருந்து நீக்கப்பட்டுப்போகச் செய்வேன். எவன் அஞ்சனம் பார்க்

6 கிறவர்களிடமாகவும் குறி சொல்லுகிறவர்களிடமாகவும் திரும்பிச் சோரம்போகப் பின் தொடருகிறானே அவனுக்கு விரோதமாக என் முகத்தைத் திருப்பி அவனைத் தன் ஜனத்தின் நடுவிலிருந்து நீக்கப்பட்டுப்போகச் செய்வேன். ஆகவே நீங்கள் உங்களைப்

7 பரிசுத்தப்படுத்திப் பரிசுத்தராயிருக்கவேண்டும்; நானே உங்கள் கடவுளாகிய யெகோவா.

8 என் நியமங்களைக் கைக்கொண்டு நடக்க வேண்டும்; உங்களைப் பரிசுத்தமாக்குகிற யெகோவா நானே.

9 தன் தகப்பனையாவது தன் தாயையாவது சபிக்கிற எவனும் கொல்லப்படவேண்டும்; அவன் தன் தகப்பனையும் தன் தாயையும் சபித்தான், அவன் இரத்தப்பழி அவன்மேலேயே இருக்கும்.

10 ஒருவன் மற்றொருவன் மனைவியோடே விபசாரம் செய்தால் அயலான் மனைவியோடே விபசாரம் செய்தவன் சாகவேண்டும், அந்த விபசாரனும் அந்த விபசாரியும் கொல்லப்படவேண்டும்.

11 தன் தகப்பன் மனைவியோடே சயனிக்கிறவன் தன் தகப்பனுக்கு அவமானமுண்டாக்கினபடியால் இருவரும் கொல்லப்படவேண்டும்; அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேலேயே இருக்கும்.

12 ஒருவன் தன் மருமகளோடே சயனித்தால் இருவரும் கொல்லப்படவேண்டும்; அவர்கள் செய்தது அசங்கியமான தாறுமாறு; அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேலேயே இருக்கும்.

13 ஒருவன் பெண்ணோடே சம்போகம்பண்ணுகிறதுபோல ஆணோடே சம்போகம்பண்ணினால் அவர்கள் கொல்லப்படவேண்டும்; அவர்கள் இருவரும் செய்தது அருவருப்பான காரியம்; அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேலேயே இருக்கும்.

14 ஒருவன் ஒரு ஸ்திரீயையும் அவள் தாயையும் சேர்த்துக்கொண்டால் அது முறைகேடு; இவ்விதமுறைகேடு உங்கள் நடுவில் இராதபடி அவனையும் அவர்களையும் அக்கினியால் சுட்டெரிக்கவேண்டும்.

15 ஒருவன் மிருகத்தோடே புணர்ந்தால் அவன் கொல்லப்படவேண்டும், அந்த மிருகத்தையும் கொல்லவேண்டும்.

16 ஒரு ஸ்திரீ யாதொரு மிருகத்தோடே சேர்ந்து சயனித்தால் அந்த ஸ்திரீயையும் அந்த மிருகத்தையும் கொல்லவேண்டும்; அவைகளின் இரத்தப்பழி அவைகளின்மேலேயே இருக்கும்.

17 ஒருவன் தன் தகப்பனுக்காவது தன் தாய்க்காவது குமாரத்தியாயிருக்கிற தன் சகோதரியைச் சேர்த்துக்கொண்டு,

அவன் அவளுடைய நிர்வாணத்தையும் அவள் அவனுடைய நிர்வாணத்தையும் பார்த்தால், அது மகா அவமானம். அவர்கள் தங்கள் ஜனங்களின் கண்களுக்கு எதிரிலிருந்தே நீக்கப்பட்டுப்போகவேண்டும்; அவன் தன் சகோதரியை அவமானப்படுத்தினான்; அவன் தன் அக்கிரமத்தைச் சுமப்
18 பான். ஒருவன் சூதகஸ்திரீயோடே சயனித்து அவளைக் கூடினால், அவன் அவளுடைய உதிரஊற்றை நிர்வாணமாக்கினதினாலும் அவளும் தன் உதிரஊற்றை வெளிக்காட்டினபடியினாலும் இருவரும் தங்கள் ஜனத்திலிருந்தே நீக்கப்பட்டுப்போகவேண்
19 டும். உன் தாயின் சகோதரியையும் உன் தகப்பனின் சகோதரியையும் கூடலாகாது; அப்படிப்பட்டவன் தன் இரத்தக்கலப்புள்ளவனை அவமானமாக்கினான்; அவர்கள் தங்
20 கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள். ஒருவன் தன் தகப்பனின் சகோதரனுடைய மனைவியோடே சயனித்தால், அவன் தன் தகப்பனின் சகோதரனை அவமானமாக்கினான். அவர்கள் தங்கள் பாவத்தைச் சுமப்பார்கள், சந்தானமில்லாமல் சாவார்கள்.
21 ஒருவன் தன் சகோதரன் மனைவியை விவாகம்பண்ணினால் அது அசுத்தம்; தன் சகோதரனை அவமானமாக்கினான், அவர்கள் சந்தானமற்றிருப்பார்கள்.
22 ஆகையால் நீங்கள் என் நியமங்கள் யாவையும் என் பிரமாணங்கள் யாவையும் கைக்கொண்டு நடக்கவேண்டும்; கைக்கொள்ளாவிட்டால் நீங்கள் குடியிருப்பதற்கென்று நான் உங்களைக் கொண்டுபோகிற
23 தேசம் உங்களைக் கக்கிப்போடும். நான் உங்களுக்குமுன்பாகத் துரத்திவிடுகிற ஜனத்தினுடைய முறைமைகளில் நீங்கள் நடக்கவேண்டாம்; அவர்கள் இப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் செய்தபடியால் நான்
24 அவர்களை அரோசித்தேன். நீங்கள் அவர்கள் தேசத்தைச் சொந்தமாக்கிக்கொள்வீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; பாலும் தேனும் ஓடுகிற அந்தத் தேசத்தை உங்களுக்குச் சொந்தமாகக் கொடுப்பேன். உங்களுக்கும் மற்ற ஜனங்களுக்கும் வித்தியாசம்பண்ணி உங்களைப் பிரித்தெடுத்த உங்
25 கள் கடவுளாகிய யெகோவா நானே. ஆகவே சுத்தமான மிருகங்களுக்கும் அசுத்தமான மிருகங்களுக்கும், சுத்தமான பறவைகளுக்கும் அசுத்தமான பறவைகளுக்கும் நீங்கள் வித்தியாசம்பண்ணவேண்டும்; நான் வித்தியாசம்பண்ணித் தீட்டென்று உங்களுக்கு விலக்கின் மிருகங்களாலும் பறவைகளாலும் தரையிலே ஊரும் சிறிய பிராணி
களாலும் உங்களை அருவருப்பாக்கிக்கொள்ளவேண்டாம். யெகோவாவாகிய நான் பரி 26
சுத்தராயிருக்கிறபடியினால் நீங்களும் எனக்கென்று பரிசுத்தராயிருக்கவேண்டும். நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படி நான் உங்களுக்கும் மற்ற ஜனங்களுக்கும் வித்தியாசம்பண்ணி உங்களைப் பிரித்தெடுத்தேன்.

அஞ்ஞனம் பார்க்கிறவர்களும் குறிசொல் 27
லுகிறவர்களும் ஆண்களாகிலும் பெண்களாகிலும் சரியே, கொல்லப்படவேண்டும்; அவர்கள்மேல் கல்லெறியவேண்டும்; அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேலேயே இருக்கும் என்று சொன்னார்.

**21** பின்பு யெகோவா மோசேயினிடம், ஆ
ரோனின் குமாரராகிய ஆசாரியரிடம் இவற்றைச் சொல்: ஆசாரியர்களில் ஒருவனும் தன் ஜனத்தாரில் இறந்துபோன யாதொருவருக்காகத் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாது. 2
தனக்கு இரத்தக்கலப்புள்ள தன் தாய், தன் தகப்பன், தன் குமாரன், தன் குமாரத்தி, தன் சகோதரன், 3
புருஷனுக்கு வாழ்க்கைப்படாமல் கன்னிகையாகத் தன்னிடத்திலிருக்கிற தன் சகோதரி ஆகிய இவர்களுக்காகத் தீட்டுப்படலாம். தன் ஜனத்தாரில் 4
பெரியவனுகையால் அவன் பரிசுத்தமற்றவனுவதற்கேதுவாய்த் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாது. அவர்கள் தங்கள் தலையை மொ 5
ட்டையடிக்காமலும் தங்கள் தாடியின் ஓரங்களைச் சிரைத்துப் போடாமலும் தங்கள் சரீரத்தைக் கீறிக்கொள்ளாமலும் இருக்கவேண்டும். தங்கள் கடவுளின் திருநாமத் 6
தைப் பரிசுத்தமற்றதுபோலாகச் செய்யாமல் அவருக்கென்று பரிசுத்தராயிருக்கவேண்டும்; அவர்கள் யெகோவாவின் நிவேதனங்களையும் தங்கள் கடவுளின் அப்பத்தையும் படைக்கிறவர்கள், அவர்கள் பரிசுத்தராயிருக்கவேண்டும். ஆசாரியன் வேசி 7
யையாகிலும் கற்பழிக்கப்பட்டவளையாகிலும் விவாகம் பண்ணலாகாது; தன் புருஷனாலே தள்ளப்பட்ட ஸ்திரீயையும் விவாகம் பண்ணலாகாது; அவன் தன் கடவுளுக்கென்று பரிசுத்தமானவன். அவன் உன் கட 8
வுளுக்கென்று அப்பத்தைப் படைக்கிறபடியால் நீ அவனைப் பரிசுத்தமாய் எண்ணவேண்டும்; உங்களைப் பரிசுத்தமாக்குகிற யெகோவாவாகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியால், அவனும் உன் பார்வையில்பரிசுத்தனாயிருக்கவேண்டும். ஒரு ஆசாரியனின் 9
குமாரத்தி வேசித்தனம்பண்ணித் தன்னைப் பரிசுத்தமற்றவளாகச் செய்தால் அவள் தன் தகப்பனையும் பரிசுத்த மற்றவனுகச்

செய்கிறவள்; அவள் அக்கினியாலே சுட்டெரிக்கப்படவேண்டும்.

10 தன் சகோதரருக்குள்ளே பிரதான ஆசாரியனுக்குத் தன் சிரசில் அபிஷேக தைலம் வார்க்கப்பெற்றவனும், அவனுக்குரிய உடைகளைத் தரித்துக்கொள்ளும்படி பிரதிஷ்டைபண்ணப்பட்டவனுமாயிருக்கிறவன் எவனே அவன் தன் தலையை விரித்துப் போடவும் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்
11 கொள்ளவும் வேண்டாம். பிரேதத்தின் சமீபத்தில் அவன் போகக்கூடாது. தன் தகப்பனுக்காகவும் தன் தாய்க்காகவும் தன்னைத் தீட்டுப்படுத்திக்கொள்ளக்கூடாது;
12 பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வெளிப்படாமல் தன் கடவுளின் பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தமற்றதாகச் செய்யாமலிருக்கவேண்டும்; அவன் கடவுளின் அபிஷேகதைலம் என்னும் கிரீடம் அவன்மேல் இருக்கிறதே;
13 நானே யெகோவா. கன்னிகையாயிருக்கிற பெண்ணை அவன் விவாகம்பண்ணவேண்
14 டும். விதவையையாகிலும் தள்ளப்பட்ட வனையாகிலும் கற்பழிக்கப்பட்டவனையாகிலும் வேசியையாகிலும் விவாகம்பண்ணாமல் தன் ஜனத்தைச்சேர்ந்த ஒரு கன்னிகையை
15 விவாகம்பண்ணவேண்டும். அவன் தன் சந்ததியைத் தன் ஜனங்களுக்குள்ளே பரிசுத்தமற்றதாகச் செய்யவேண்டாம்; நானே அவனைப் பரிசுத்தமாக்குகிற யெகோவா என்று சொன்னார்.

16 பின்னும் யெகோவா மோசேயினி
17 டம்: நீ ஆரோனுடே பேசி இதைச் சொல்: உன் சந்ததியாருக்குள்ளே அங்கவீனமுள்ளவன் தலைமுறைதோறும் கடவுளின் அப்பத்தைப் படைக்கும்படி கிட்டிவரலாகாது.
18 அங்கவீனமுள்ள ஒருவனும் கிட்டிவரலாகாது; குருடன், சப்பாணி, முகத்தில் குறையுள்ளவன், அளவுக்குமிஞ்சி நீண்ட அவ
19 யவமுள்ளவன், | காலொடிந்தவன், கை
20 யொடிந்தவன், | கூனன், அதிகம் மெலிந்தவன், பூ விழுந்த கண்ணன், சொறியன், அசறுள்ளவன், விதை நசுங்கினவன் ஆகிய
21 இவர்கள் கிட்டிவரலாகாது. ஆசாரியனுகிய ஆரோனின் சந்ததியாரில் அங்கவீனமுள்ள ஒருவனும் யெகோவாவின் நிவேதனங்களைப் படைக்கக் கிட்டிவரலாகாது. அவன் அங்கவீனமுள்ளவனுகையால் கடவுளின் அப்பத்தைப் படைக்கக் கிட்டிவர
22 லாகாது. தன் கடவுளுக்குப் படைத்த வைகளாகிய மகா பரிசுத்தமானவைகளையும் மற்றப் பரிசுத்தமானவைகளையும் அவன்
23 புசிக்கலாம். என்றாலும் அங்கவீனமுள்ளவனுகையால் அவன் என் பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தமற்றதாகச் செய்யும்படி திரைக்கு உட்புறம் போகவும் பலிபீடத்தைக் கிட்டிச்சேரவும் கூடாது; அவர்களைப் பரிசுத்தமாக்குகிற யெகோவா நானே என்று சொன்னார்.

24 மோசே இவைகளை ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் இஸ்ரவேல்புத்திரர் அனைவருக்கும் சொன்னான்.

22 1 பின்னும் யெகோவா மோசேயினிடம்: |
2 இஸ்ரவேல் புத்திரர் எனக்கென்று படைக்கிற பரிசுத்தமானவைகள் விஷயத்தில் ஆரோனும் அவன் குமாரரும் என் பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தமற்றதுபோலாகச் செய்யாதபடி எச்சரிக்கையாய் இருக்கவேண்டுமென்றுஅவர்களிடம் சொல்; நானே யெகோவா. அன்றியும் நீ அவர்களிடம்: தலை
3 முறை தோறுமுள்ள உங்கள் சந்ததியாரில் எவனுகிலும் தான் தீட்டுப்பட்டிருக்கும்போது, இஸ்ரவேல்புத்திரர் யெகோவாவுக்கென்று படைக்கிற பரிசுத்தமானவைகளண்டையில் கிட்டிச்சேர்ந்தால் அவன் என் சந்நிதியிலிருந்து நீக்கப்பட்டுப்போவான்; நானே
4 யெகோவா. ஆரோனின் சந்ததியாரில் எவன் குஷ்டரோகியோ, எவன் பிரமேகமுள்ளவனே, அவன் சுத்தமாகுமட்டும் பரிசுத்தமானவைகளில் புசிக்கலாகாது; பிணத்தினுலே தீட்டானவைகளில் எதையாகிலும் தொட்டவனும், இந்திரியங்கழிந்தவனும் |
5 தீட்டுப்படுத்துகிற யாதொரு சிறிய பிராணியையாகிலும் எவ்வகையான தீட்டுள்ள
6 மனிதனையாகிலும் தொட்டவனும், | அவன் தொட்டது இப்படிப்பட்டவைகளில் எதுவானுலுஞ்சரியே, அவன் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அவன் தண்ணீரில் முழுகினுலொழியப் பரிசுத்தமானவைகளில்
7 புசிக்கலாகாது. சூரியன் அஸ்தமிக்கவே அவன் சுத்தமாவான்; அதன் பின்பு அவன் பரிசுத்தமானவைகளில் புசிக்கலாம்; அது அவனுக்குரிய ஆகாரம். தானுய்
8 செத்ததையும் பீறுண்டதையும் அவன் புசிக்கலாகாது, புசித்தால் தன்னைத் தீட்டுப்படுத்திக்கொள்வான்; நானே யெகோவா. அவர்கள் என் கட்டளையைக்
9 கைக்கொள்ளவேண்டும். கைக்கொள்ளாவிட்டால் அவர்கள் அதைப் பரிசுத்தமற்றதாகச்செய்து தங்கள்மேல் பாவத்தைச் சுமத்தி அதினிமித்தம் சாவார்கள். நானே
10 அவர்களைப் பரிசுத்தமாக்குகிற யெகோவா. அந்நியன் ஒருவனும் பரிசுத்தமானவைகளில் புசிக்கலாகாது; ஆசாரியன்வீட்டில் தங்கியிருக்கிறவனும் கூலிவேலைசெய்கிறவனும் பரிசுத்தமானவைகளில் புசிக்கலா

காது. ஆசாரியன் பணங்கொடுத்து வாங்கின ஆள் அதிலே புசிக்கலாம், அவன் வீட்டிலே பிறந்தவர்களும் அவனுக்குரிய ஆகாரத்தில் புசிக்கலாம். ஆசாரியனுடைய குமாரத்தி அந்நியனுக்கு வாழ்க்கைப்பட்டால் அவள், உயர்த்திப்படைக்கும் பரிசுத்தமானவைகளிலே புசிக்கலாகாது. ஆசாரியனுடைய குமாரத்தி விதவையாகி அல்லது தள்ளப்பட்டவளாகிப் பிள்ளையில்லாதவளாய்த் தன் தகப்பன் வீட்டிலே இளவயதில் இருந்ததுபோலவே திரும்ப வந்து இருந்தாளேயானால், அவள் தன் தகப்பனுக்குரிய ஆகாரத்தில் புசிக்கலாம்; அந்நியனுகிய ஒருவனும் அதில் புசிக்கலாகாது. ஒருவன் அறியாமல் பரிசுத்தமானதைப் புசித்ததுண்டானால் அவன் அதிலே ஐந்தில் ஒருபங்கு அதிகமாய்க் கூட்டிப் பரிசுத்தமானதை ஆசாரியனுக்குக் கொடுக்கவேண்டும். யெகோவாவுக்கு உயர்த்திப்படைக்கிற இஸ்ரவேல் புத்திரருடைய பரிசுத்தமானவைகளை அவர்கள் பரிசுத்தமற்றவைகளாகச் செய்யவேண்டாம்; செய்தால், பரிசுத்தமானவைகளைப் புசிக்கிறதினால் குற்றமாகும். அக்கிரமத்தைத் தங்கள்மேல் சுமத்திக்கொள்வார்கள். அவர்களைப் பரிசுத்தமாக்குகிற யெகோவா நானே என்று சொல் என்றார்.

பின்னும் யெகோவா மோசேயினிடம், ஈ ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் இஸ்ரவேல்புத்திரர் அனைவருக்கும் இவற்றைச் சொல்: இஸ்ரவேல் குடும்பத்தாரிலும் இஸ்ரவேலில் தங்குகிற அந்நியரிலும் யாராவது தங்கள் காணிக்கையைப் பொருத்தனையாகவாவது மனப்பூர்வ காணிக்கையாகவாவது தகனபலியாக யெகோவாவுக்குப் படைத்தால் | தாங்கள் அங்கீகரிக்கப்படும்படி மாடுகளிலாகிலும் ஆடுகளிலாகிலும் வெள்ளாடுகளிலாகிலும் பழுதற்ற ஒரு ஆணைப்பிடித்துவந்து செலுத்தவேண்டும். பழுதுள்ள ஒன்றையும் படைக்கவேண்டாம்; நீங்கள் அங்கீகரிக்கப்படுவதற்கு அது ஏதுவாகாது. ஒருவன் தன் பொருத்தனையை நிறைவேற்றவாவது மனப்பூர்வ காணிக்கையாகவாவது யெகோவாவுக்கு மாடுகளிலாகிலும் ஆடுகளிலாகிலும் பிடித்துச் சமாதான பலிகளைச் செலுத்தப்போனால் அங்கீகரிக்கப்படும்படி அது குறைவற்றதாயிருக்கவேண்டும்; அதில் யாதொரு பழுதுமிருக்கலாகாது. குருடு, நெரிசல், முடம், கழலை, சொறி, அசறு முதலிய பழுதுள்ளவைகளை நீங்கள் யெகோவாவுக்குப் படைக்கலாகாது. அப்படிப்பட்டவைகளில் ஒன்றையும் யெகோவாவுக்குப் பலிபீடத்தில் மேல் நிவேதனஞ்செய்யவேண்டாம். ஈண்ட அல்லது குறுகின அவயவமுள்ள மாட்டையும் ஆட்டையும் ஈ மனப்பூர்வ பலியாகப் படைக்கலாம். பொருத்தனைக்காகவோ அது அங்கீகரிக்கப்படமாட்டாது. நசுங்கியோ, நொறுங்கியோ, கிழிபட்டோ, அறுபட்டோ, விதை இழந்ததை நீங்கள் யெகோவாவுக்குப் படைக்கலாகாது. உங்கள் தேசத்திலும் நீங்கள் அதைச் செய்யலாகாது. அந்நியர் கையிலும் இப்படிப்பட்டதைவாங்கிக் கடவுளுக்கு ஆகாரமாகப்படைத்தலாகாது, அவைகளின்கேடு அவைகளிலிருக்கிறது; பழுதும் அவைகளிலிருக்கிறதே. அவைகள் உங்களுக்காக அங்கீகரிக்கப்படுவதில்லை என்று சொன்னார்.

பின்னும் யெகோவா மோசேயினிடம்: ஒரு கன்றுவது செம்மறியாட்டுக்குட்டியாவது வெள்ளாட்டுக்குட்டியாவது பிறந்தால், அது ஏழுநாள் தன் தாயினிடம் இருக்கவேண்டும். எட்டாம் நாள்முதல் அது யெகோவாவுக்கு நிவேதன பலியாக அங்கீகரிக்கப்படும். பசுவையும் அதின் கன்றையும் ஆட்டையும் அதின் குட்டியையும் ஒரேநாளில் கொல்லவேண்டாம். யெகோவாவுக்கு ஸ்தோத்திரபலியைச் செலுத்துவீர்களானால் அங்கீகரிக்கப்படும்வண்ணமாக அதைச் செலுத்தவேண்டும். அந்நாளிலேதான் அதைப் புசிக்கவேண்டும்; விடியற்காலமட்டும் நீங்கள் அதில் கொஞ்சமும் மீதியாக வைக்கவேண்டாம்; நானே யெகோவா. நீங்கள் என் கட்டளைகளைக் கைக்கொண்டு அவைகளின்படியே செய்யவேண்டும், நானே யெகோவா. என்பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தமற்றது போலாகச் செய்யாதிருங்கள்; நான் இஸ்ரவேல்புத்திரர் நடுவே பரிசுத்தராக விளங்குவேன். உங்களைப் பரிசுத்தமாக்குகிற யெகோவா நானே. நான் உங்களுக்குக் கடவுளாயிருப்பதற்கென்று உங்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டுவந்தேன்; நானே யெகோவா என்று சொன்னார்.

பின்னும் யெகோவா மோசேயினிடம்: | ஈ இஸ்ரவேல்புத்திரரிடம் இவற்றைச்சொல்; யெகோவாவின் உற்சவநாட்களில் சபை திருக்கூட்டமாக வரும்படி நீங்கள் அழைக்கவேண்டும்; என் உற்சவநாட்கள் இவைகளே: ஆறுநாளும் வேலைசெய்யலாம். ஏழாம்நாள் திருக்கூட்ட ஓய்வுநாள்; அதிலே ஒருவேலையும் செய்யலாகாது; அது உங்கள் வாஸ்தலங்களிலெங்கும் யெகோவாவுக்கென்று ஆசரிக்கும் ஓய்வுநாள். நியமித்த காலங்களில் சபை திருக்கூட்டமாக வரும்

படி நீங்கள் அழைக்கவேண்டிய யெகோ
5 வாவின் உற்சவங்கள் இவைகளே: முத
லாம் மாதம் பதினாலாம் தேதி சாயங்காலத்
தில் யெகோவாவுக்கென்று பஸ்காபண்டி
6 கை; அந்தமாதம் பதினைந்தாம் தேதியில்
யெகோவாவுக்கென்று புளிப்பில்லா அப்
7 பப்பண்டிகை. ஏழுநாள் புளிப்பில்லா
அப்பங்களைப் புசிக்கவேண்டும். முத
லாம் நாள் உங்களுக்குச் சபைத்திருக்கூட
டம். அதிலே சாதாரணவேலை எதுவும்
8 செய்யவேண்டாம். ஏழுநாளும் யெகோவா
வுக்கு நிவேதனம்பண்ணவேண்டும். ஏழாம்
நாளில் சபைத்திருக்கூட்டம். அதில் சாதா
ரணவேலை எதுவும் செய்யவேண்டாம்
என்று சொன்னார்.

9 பின்னும் யெகோவா மோசேயினி
10 டம், நீ இஸ்ரவேல் புத்திரரிடம் இவற்
றைச்சொல்: நான் உங்களுக்குக் கொடுக்
கும் தேசத்தில் நீங்கள் போய்ச் சேரும்
போது அதின் பயிரை அறுக்குங்காலத்தில்
உங்கள் அறுப்பின் முதற்பலனுகிய ஒரு
கதிர்க்கட்டை ஆசாரியனிடம் கொண்டு
11 வரவேண்டும். நீங்கள் அங்கீகரிக்கப்படும்
படி ஆசாரியன் அந்தக் கதிர்க்கட்டை ஓய்வு
நாளுக்கு மறுநாளில் யெகோவாவின் சந்
12 நிதியில் அசைவாட்டவேண்டும். அந்தக்
கதிர்க்கட்டை அசைவாட்டும் நாளில் நீங்
கள் யெகோவாவுக்குத் தகனபலியாக ஒரு
வயதான பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டியை
13 யும், யெகோவாவுக்குச் சுகந்த நிவேதன
மாக ஒரு எப்பாவிலே பத்தில் இரண்டு பங்
கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான
மெல்லிய மாவாகிய போஜனபலியையும்
திராட்சப்பழரசத்திலே காற்படியாகிய பான
14 பலியையும் செலுத்தவேண்டும். உங்கள்
கடவுளுக்குக் காணிக்கையை நீங்கள்
கொண்டுவரும் அந்நாள்மட்டும் அப்பமும்
வாட்டிய கதிரும் பச்சைக்கதிரும் புசிக்கலா
காது; இது உங்கள் வாசஸ்தலங்களிலெல்
லாம் உங்கள் தலைமுறைதோறும் நித்திய
நியமம்.

15 நீங்கள் அசைவாட்டும் கதிர்க்கட்டைக்
கொண்டுவரும் ஓய்வுநாளுக்கு மறுநாள்
முதற்கொண்டு ஏழுவாரங்கள் முடியுமட்
16 டும் எண்ணவேண்டும்; ஏழாம் ஓய்வுநாளு
க்கு மறுநாளாகிய ஐம்பதாம் நாளாகவே
யெகோவாவுக்குப் புதிய போஜனபலியைச்
17 செலுத்தவேண்டும். நீங்கள் ஒரு எப்பா
விலே பத்தில் இரண்டு பங்காகிய மெல்லிய
மாவிலே புளிப்பாகப் பாகம்பண்ணப்பட்ட
அசைவாட்டும் இரண்டு அப்பங்களை உங்
கள் வாசஸ்தலங்களிலிருந்து யெகோவாவுக்
கென்று முதற்பலனுகக் கொண்டுவரவேண்
டும். அப்பத்தோடேகூட யெகோவாவுக் 18
குத் தகனபலியாக ஒரு வயதான பழுதற்ற
ஏழு ஆட்டுக்குட்டிகளையும் ஒரு காளை
யும் இரண்டு ஆட்டுக்கடாக்களையும், யெ
கோவாவுக்குச் சுகந்த நிவேதனமாக அவை
களுக்குரிய போஜனபலியையும் பானபலி
களையும் படைக்கவேண்டும். வெள்ளாடு 19
களில் ஒரு கடாவைப் பாவநிவாரணபலி
யாகவும், ஒரு வயதான இரண்டு ஆட்டுக்
குட்டிகளைச் சமாதானபலியாகவும் செலுத்த
வேண்டும். அவைகளை ஆசாரியன் முதற் 20
பலனுகிய அப்பத்தோடும் இரண்டு ஆட்டுக்
குட்டிகளோடுங்கூட யெகோவாவின் சந்
நிதியில் அசைவாட்டும் பலியாக அசை
வாட்டவேண்டும். அவைகள் யெகோவா
வுக்குப் பரிசுத்தமானவைகள்; அவை ஆசா
ரியனைச்சேரும். அந்த நாளிலேயே நீங்கள்
சபைகூடிவர அழைக்கவேண்டும். அது 21
உங்களுக்குத் திருக்கூட்டமாம், அந்த நாளி
லே சாதாரணவேலை எதையும் செய்யலா
காது; இது உங்கள் வாசஸ்தலங்களிலெல்
லாம் உங்கள் தலைமுறைதோறும் நித்திய
நியமம்.

உங்கள் தேசத்திலே நீங்கள் பயிரை 22
அறுக்கும்போது வயலின் ஓரத்தில் இருக்கி
றதை முற்றிலும் அறுக்காமலும் சிந்திக்
கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும், எளி
யவனுக்கும் பரதேசிக்கும் அவைகளை
விட்டுவிடவேண்டும்; நானே உங்கள் கடவு
ளாகிய யெகோவா என்று சொன்னார்.

யெகோவா பின்னும் மோசேயினி 23
டம், நீ இஸ்ரவேல் புத்திரரிடம் இவற்றைச்
சொல்: ஏழாம் மாதம் முதலாந்தேதி உங்க 24
ளுக்கு மகா ஓய்வுநாள். எக்காளசத்தம்
அந்த உற்சவத்தைக் குறிக்கும். அது 25
திருக்கூட்டநாள். அதிலே சாதாரணமான
வேலை எதையும் செய்யவேண்டாம்; யெ
கோவாவுக்கு நிவேதனம் படைக்கவேண்
டும் என்று சொன்னார்.

மேலும் யெகோவா மோசேயினிடம்: 26
அந்த ஏழாம் மாதம் பத்தாந்தேதி உங்களுக் 27
குப் பிராயச்சித்தநாள், அது உங்களுக்குத்
திருக்கூட்டநாளாம்; அப்பொழுது நீங்கள்
உங்களை ஒடுக்கி யெகோவாவுக்கு நிவேத
னம்பண்ணவேண்டும். அந்த நாளிலே 28
நீங்கள் எந்தவேலையும் செய்யவேண்டாம்.
அது பிராயச்சித்தநாள். உங்கள் கடவு
ளாகிய யெகோவாவின் சந்நிதியில் அன்று
உங்களுக்காகப் பிராயச்சித்தம் செய்ய
வேண்டும். அந்நாளிலே தன்னை ஒடுக்காத 29
எவனும் தன் ஜனத்திலிருந்து நீக்கப்பட்டுப்

30 போவான். அந்த நாளிலே ஒருவன் யா
தொரு வேலையைச் செய்தால் ஜனத்தின் நடு
விலிருந்து அவனை நீக்கி அழித்துப்போடு
31 வேன். அதிலே நீங்கள் எந்தவேலையும்
செய்யவேண்டாம், இது உங்கள் வாசஸ்
தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறை
32 தோறும் நித்திய நியமம். அது உங்களுக்கு
மகா ஓய்வுநாள்; அதில் உங்களை ஒடுக்க
வேண்டும்; அந்த மாதத்தின் ஒன்பதாந்
தேதி சாயங்காலம் துவக்கி மறுநாள் சாயங்
காலமட்டும் ஓய்வுநாளாக ஆசரிக்க
வேண்டும் என்றார்.
33 யெகோவா பின்னும் மோசேயினிடம்,
34 நீ இஸ்ரவேல் புத்திரரிடம் இவற்றைச்
சொல்: ஏழாம் மாதத்தின் பதினைந்தாம் தேதி
முதல் ஏழுநாளளவும் யெகோவாவுக்
கென்று ஆசரிக்கும் கூடார உற்சவம்.
35 முதல்நாள் திருக்கூட்டம்; அதிலே சாதா
ரணமான வேலை எதையும் செய்யலாகாது.
36 ஏழுநாளும் யெகோவாவுக்கு நிவேதனம்
பண்ணவேண்டும்; எட்டாம் நாள் உங்க
ளுக்குத் திருக்கூட்டநாள்; அதிலே யெகோ
வாவுக்கு நிவேதனம்பண்ணவேண்டும்; அது
விசேஷித்த உற்சவநாள்; அதிலே சாதாரண
மானவேலை எதையும் செய்யலாகாது.
37 இவைகளே யெகோவாவின் உற்சவநாட்
கள், இந்நாட்களில் சபை திருக்கூட்டமாக
வரும்படி நீங்கள் அழைத்து யெகோவாவுக்
கென்று அந்தந்த நாளுக்குரிய நிவேதனம்,
போஜனபலி, இரத்தபலி, பானபலி முதலிய
38 வற்றைச் செலுத்தவேண்டும். நீங்கள்
யெகோவாவின் ஓய்வுநாட்களை ஆசரிப்ப
தன்றியும் யெகோவாவுக்கென்று உங்கள்
காணிக்கைகளையும் சகல பொருத்தனைக
ளும் மனப்பூர்வ பலிகளையும் செலுத்துவதன்றி
யும் இந்த உற்சவநாட்களையும் ஆசரிக்க
வேண்டும்.
39 நிலத்தின் பலனை நீங்கள் சேர்த்துவைக்
கும் ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதிமுதல்
யெகோவாவுக்கென்று ஏழுநாள் உற்சவம்
கொண்டாடவேண்டும்; முதலாம் நாளும்
மகா ஓய்வுநாள், எட்டாம்நாளும் மகா
40 ஓய்வுநாள். முதல் நாளிலே அழகான விருட்
சங்களின் கனிகளையும் பேரீச்சின் ஓலைக
ளையும் தழைத்திருக்கிற விருட்சங்களின் கிளை
களையும் ஆற்றலரிகளையும் கொண்டுவந்து
உங்கள் கடவுளாகிய யெகோவாவின் சந்
நிதியில் ஏழுநாளும் மகிழ்ச்சியாயிருக்க
41 வேண்டும். வருஷந்தோறும் ஏழுநாள்
யெகோவாவுக்கு இந்த உற்சவத்தைக்
கொண்டாடவேண்டும்; இது தலைமுறை
தலைமுறையாக உங்களுக்கு நித்திய நியமம்;
ஏழாம் மாதத்தில் அதை ஆசரிக்கவேண்
டும். நீங்கள் ஏழுநாளளவும் பர்ணசாலை 42
களில் குடியிருக்கவேண்டும். இஸ்ரவே
லில் பிறந்தவர்கள் யாவரும் பர்ணசாலை
களில் குடியிருக்கவேண்டும். நான் இஸ்ர 43
வேல் புத்திரரை எகிப்துதேசத்திலிருந்து
கொண்டுவந்தபோது அவர்களைப் பர்ண
சாலைகளில் குடியிருக்கப்பண்ணினதை உங்
கள் சந்ததியார் தலைமுறை தலைமுறையாக
அறியும்படி இப்படிச் செய்யவேண்டும்.
நானே உங்கள் கடவுளாகிய யெகோவா
என்று சொன்னார்.
அப்படியே மோசே யெகோவாவின் 44
உற்சவ நாட்களை இஸ்ரவேல் புத்திரருக்குத்
தெரிவித்தான்.

24 பின்னும் யெகோவா மோசேயினிடம்: |
இடித்துப் பிழிந்த தெளிவான ஒலிவ எண் 2
ணெயை உன்னிடம் கொண்டுவரும்படி
இஸ்ரவேல்புத்திரருக்குக் கட்டளையிடு;
குத்துவிளக்கை எப்பொழுதும் எரியவைப்
பதற்கு அது வேண்டும். தரிசனக்கூடாரத் 3
தில் சாட்சிய சந்நிதியின் திரைக்கு வெளியே
ஆரோன் அதை எப்பொழுதும் சாயங்காலம்
தொடங்கி விடியற்காலமட்டும் யெகோவா
வின் சந்நிதியில் எரியவைக்கவேண்டும்;
இது தலைமுறை தலைமுறையாக உங்களுக்கு
நித்திய நியமம். அவன் எப்பொழுதும் 4
யெகோவாவின் சந்நிதியில் பசும்பொன்
குத்துவிளக்கின்மேல் இருக்கிற விளக்குகளை
எரியவைக்கவேண்டும்.
அன்றியும் நீ மெல்லியமாவை எடுத்து, 5
அதைப் பன்னிரண்டு தோசைகளாகச்
சுடு; ஒவ்வொரு தோசையையும் எப்பா
விலே பத்தில் இரண்டுபங்குமாவினால் செய்ய
வேண்டும். அவைகளை நீ யெகோவாவின் 6
சந்நிதியில் பரிசுத்த மேசையின்மேல்
இரண்டு வரிசையாக, வரிசைக்கு ஆறு
தோசைவீதம் வைத்து, இரண்டு வரிசையி 7
லும் சுத்தமான சாம்பிராணி போடவேண்
டும்; அது அப்பத்தோடேகூட ஞாபகக்குறி
யாக யெகோவாவுக்கு நிவேதனமாகும்.
எப்போதும் இருக்கும்படி ஓய்வுநாள்தோ 8
றும் யெகோவாவின் சந்நிதியில் அவைகளை
ஒழுங்குபடுத்திவைக்கவேண்டும். அவைகளை
இஸ்ரவேல் புத்திரர் கையில் வாங்கவேண்
டும். இது நித்திய உடன்படிக்கை. அது 9
ஆரோனையும் அவன் குமாரரையும் சேரும்;
அதைச் சுத்தமான இடத்திலே புசிக்க
வேண்டும். நித்திய நியமமாக யெகோவாவுக்
குச் செலுத்தும் நிவேதனங்களில் அது அவ
னுக்கு மகா பரிசுத்தமானது என்று கொன்
னார்.

10 இஸ்ரவேல ஸ்திரீக்கும் எகிப்திய புருஷ
னுக்கும் பிறந்த ஒருவன் ஒருநாள் இஸ்ர
வேல்புத்திரர் நடுவில்போயிருந்தான்; இவ
னும் இஸ்ரவேலனுகிய ஒரு மனிதனும்
பாளயத்திலே சண்டைபண்ணினார்கள்.
11 அப்பொழுது இஸ்ரவேல ஸ்திரீயின் மகன்
நாமதூஷணம்செய்து சபிக்கவே அவனை
மோசேயினிடம் கொண்டுவந்தார்கள்.
அவன் தாயின்பேர் செலோமித்; அவள்
தாண் கோத்திரத்தானுகிய திப்ரியின் குமா
12 ரத்தி. யெகோவாவின் வாக்கினலே தங்க
ளுக்கு உத்தரவு கிடைக்குமட்டும் அவனைக்
13 காவலில் வைத்தார்கள். அப்பொழுது
14 யெகோவா மோசேயினிடம்: சபித்தவனைப்
பாளயத்துக்குவெளியே கொண்டுபோ;
கேட்டவர்கள் எல்லாரும் தங்கள் கைகளை
அவன் தலையின்மேல் வைக்கவேண்டும்;
பின்பு சபையார் எல்லாரும் அவனைக்
15 கல்லெறியவேண்டும். மேலும் நீ இஸ்ரவேல்
புத்திரரிடம் இப்படிச்சொல், எவனுகிலும்
தன் கடவுளைச் சபித்தால் அவன் தன் பாவத்
16 தைச் சுமப்பான். யெகோவாவின் நாமத்
தைத் தூஷிக்கிறவன் கொல்லப்படவே
வேண்டும்; சபையார் எல்லாரும் அவனைக்
கல்லெறியவேண்டும்; அவன் பரதேசியானு
லும் சுதேசியானுலும் சரி, அவன் திருநாம
தூஷணம் செய்தபடியினலே, கொல்லப்பட
17 வேண்டும். ஒருவன் வேறெவனையாவது சாக
அடித்தால் அவன் கொல்லப்படவேவேண்
18 டும். மிருகத்தைக்கொன்றவன் மிருகத்
19 துக்கு மிருகம் கொடுக்கவேண்டும். ஒருவன்
பிறனை ஊனப்படுத்தினுல் அவன் செய்த
படியே அவனுக்கும் செய்யப்படவேண்
20 டும். முறிவுக்கு முறிவு, கண்ணுக்குக்கண்,
பல்லுக்குப்பல்; அவன் ஒரு மனிதனை
ஊனப்படுத்தினதுபோல அவனும் ஊனப்
21 படுத்தப்படவேண்டும். மிருகத்தைக்
கொன்றவன் பதில் கொடுக்கவேண்டும்;
மனிதனைச் சாக அடித்தவனே கொல்லப்பட
22 வேண்டும். உங்களில் பரதேசிக்கும் சுதே
சிக்கும் ஒரே நியாயம் இருக்கவேண்டும்;
நானே உங்கள் கடவுளாகிய யெகோவா
23 என்று சொன்னர். அப்படியே மோசே
இஸ்ரவேல்புத்திரரோடு பேசி, தூஷித்தவ
னைப் பாளயத்துக்குவெளியே கொண்டு
போய்க் கல்லெறியும்படி சொன்னன்.
யெகோவா மோசேக்குக் கட்டளையிட்ட
படியே இஸ்ரவேல்புத்திரர் செய்தார்கள்.

**25** யெகோவா சீனய்மலையிலே மோசேயி
2 னிடம்: நீ இஸ்ரவேல்புத்திரருக்கு இவற்
றைச் சொல்; நான் உங்களுக்குக் கொடுக்
கும் தேசத்திலே நீங்கள் போய்ச் சேர்க்
திருக்கும்போது தேசம் யெகோவாவுக்
கென்று ஓய்வுவருஷத்தைக் கொண்டாட
வேண்டும். ஆறுவருஷம் உன் வயலை 3
விதைத்து ஆறுவருஷம் உன் திராட்சத்
தோட்டத்தைக் கிளைறுக்கி அதின் பலனைச்
சேர்க்கவேண்டும். ஏழாம் வருஷத்திலோ யெ 4
கோவாவுக்கென்று நிலத்திற்கு மகா ஓய்வு;
அதிலே உன் வயலை விதைக்கவேண்டாம்,
உன் திராட்சத்தோட்டத்தைக் கிளைறுக்க
வேண்டாம்; நீங்கள் அறுத்த இடத்திலே 5
தானுய் விளைந்த பயிரை அறுக்கவேண்டாம்.
கிளைறுக்காமல் கடவுளுக்கென்று விட்
டிருந்த திராட்சச்செடியின் பழங்களைச்
சேர்க்கவேண்டாம்; நிலத்துக்கு அது மகா
ஓய்வின் வருஷம். நிலத்தின் ஓய்வில் விளை 6
கிற மற்றவைகளே உங்களுக்கு ஆகாரமா
யிருக்கவேண்டும்; உனக்கும் உன் வேலைக்
காரனுக்கும் உன் வேலைக்காரிக்கும் உன்
கூலிக்காரனுக்கும் உன்னிடம் தங்குகிற
பரதேசிக்கும் | உன் காட்டுமிருகங்களுக் 7
கும் உன் தேசத்திலுள்ள காட்டுமிருகங்
களுக்கும் அதில் விளைந்திருப்பதெல்லாம்
ஆகாரமாகும்.

அன்றியும் ஏழு ஓய்வு வருஷங்கள் வர
ஏழுதடவை ஏழு வருஷங்களை எண்ண
வேண்டும். அந்த ஏழு ஓய்வுவருஷங்
களும் முடிவதற்கு உனக்கு நாற்பத்தொன்
பது வருஷங்களாகும். அதன்பின் ஏழாம்
மாதம் பத்தாம்தேதியில் எக்காளம் தொனிக்8,9
கும்படி செய்யவேண்டும்; பிராயச்சித்த
நாளிலே உங்கள் தேசமெங்கும் எக்காளம்
தொனிக்கும்படிசெய்யவேண்டும். ஐம்பதாம் 10
வருஷத்தைப் பரிசுத்தமாக்கித் தேசமெங்கும்
அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலையைப்
பிரசித்தப்படுத்தவேண்டும்; அது உங்களுக்கு
யூபிலி வருஷம்; அதிலே உங்களில் ஒவ்
வொருவனும் தன் தன் காணியாட்சிக்கும்
தன்தன் குடும்பத்துக்கும் திரும்பிப் போக
லாம். அந்த ஐம்பதாம் வருஷம் உங்களுக்கு 11
யூபிலி வருஷமாம்; அதிலே விதைக்கவேண்
டாம், நீங்கள் அறுத்த இடத்திலே விளைந்த
பயிரை அறுக்கவேண்டாம்; கிளைறுக்கா
மல் கடவுளுக்கென்று விட்டிருந்த திராட்சச்
செடியின் பழங்களைச் சேர்க்கவேண்டாம்.
அது யூபிலி வருஷம்; அது உங்களுக்குப் 12
பரிசுத்தமாம்; அந்த வருஷத்தில் வயல்
வெளியில் தானுய் விளைந்த மற்றவைகளை
நீங்கள் புசிக்கலாம்.

அந்த யூபிலி வருஷத்தில் உங்களில் 13
அவனவன் தன் தன் காணியாட்சிக்குத்
திரும்பிப் போய்விடலாம். பிறனுக்கு 14
ஏதையாவது விற்றலும், அவனிடத்தில்

எதையாவது கொண்டாலும் ஒருவருக் கொருவர் அநியாயம் செய்யாதிருங்கள்.
15 யூபிலி வருஷத்துக்குப் பின்சென்ற வருஷங்களின் தொகைக்கேற்கப் பிறனிடத்தில் கொள்ளவேண்டும்; பலனையனுபவிக்கும் வருஷங்களின் தொகைக்கேற்க அவன்
16 உனக்கு விற்கவேண்டும். பலன் அனுபவிக்கும் வருஷங்களின் இலக்கத்தைப் பார்த்தே அவன் உனக்கு விற்கிறான்; வருஷங்களின் தொகை எறிலால் விலையேறவும், வருஷங்களின் தொகை குறைந்
17 தால் விலை குறையவும் வேண்டும். உங்களில் ஒருவனும் பிறனுக்கு அநியாயம் செய்யவேண்டாம்; உன் கடவுளுக்குப் பயப்படவேண்டும்; நானே உங்கள் கடவுளாகிய யெகோவா.
18 என் நியமங்களின்படி செய்து என் பிரமாணங்களைக் கைக்கொண்டு அவைகளின்படி நடந்துவாருங்கள்; அப்பொழுது தேசத்திலே க்ஷேமமாய்க் குடியிருப்பீர்கள்.
19 பூமி தன் கனியைத் தரும்; நீங்கள் திருப்தியாகச் சாப்பிட்டு அதில் க்ஷேமமாய்க் குடி
20 யிருப்பீர்கள். ஏழாம் வருஷத்தில் எதைப் புசிப்போம்? இதோ, நாங்கள் விதைக்காமலும் வினைந்ததைச் சேர்க்காமலும் இருக்கவேண்டுமே என்று சொல்வீர்களானால்,
21 ஆறும் வருஷத்திலேயே நான் உங்களுக்கு ஆசீர்வாதத்தை அனுக்கிரகம்பண்ணுவேன்; அது உங்களுக்கு மூன்றுவருஷத்திற்குப்
22 போதுமான பலனைத் தரும். நீங்கள் எட்டாம் வருஷத்திலே விதைத்துப் பழைய வினைச்சலிலே சாப்பிடுவீர்கள்; ஒன்பதாம் வருஷத்தில் அதின் வினைச்சல் கிடைக்குமட்டும் பழைய வினைச்சலைச் சாப்பிடுவீர்கள்.
23 நீங்கள் நிலங்களை அறுதியாய் விற்கவேண்டாம்; நிலம் என்னுடையது; நீங்கள் என்னி
24 டத்தில் தங்குகிற பரதேசிகள். உங்கள் காணியாட்சியான தேசமெங்கும் நிலங்களை மீட்டுக்கொள்ளும் பாத்தியம் இருக்கவேண்டும்.
25 உன் சகோதரன் தரித்திரப்பட்டுத் தன் காணியாட்சியிலே எதையாவது விற்றால், அவனை மீட்பதற்குரிய இனத்தான் ஒருவன் வந்து தன் சகோதரன் விற்றதை மீட்க
26 வேண்டும். அதை மீட்க ஒருவனும் அவனுக்கு இல்லாமற்போக அவன்தானே நல் நிலைமைக்கு வந்து அதை மீட்பதற்கு
27 வேண்டியதைச் சம்பாதித்தால், அதை விற்ற பின் சென்ற வருஷங்களின் தொகையைத் தள்ளி, மீந்த தொகையைக் கொண்டவனுக்குக் கொடுத்துத் தன் காணியாட்சிக்குத்
28 திரும்பிப்போகலாம். அப்படிக் கொடுப்பதற்கான நிர்வாகம் அவனுக்கு இல்லாவிட்டால், அவன் விற்றது வாங்கினவன் கையிலே யூபிலி வருஷமட்டும் இருக்கும்; யூபிலி வருஷத்திலே அது விடுதலையாகும்; அப்பொழுது அவன் தன் காணியாட்சிக்குத் திரும்பிப்போவான்.
29 ஒருவன் மதில்சூழ்ந்த ஊரிலுள்ள தான் குடியிருக்கும் வீட்டை விற்றால், அதை விற்று ஒரு வருஷமாவதற்குள் அதை மீட்டுக்கொள்ளலாம்; அந்தக் காலத்திற்கு
30 மேல் அதை மீட்டுக்கொள்ளும் பாத்தியதை இல்லை. ஒரு வருஷத்துக்குள்ளே அதை மீட்டுக்கொள்ளாதிருந்தால் மதில் சூழ்ந்த ஊரிலுள்ள அந்த வீடு தலைமுறை தோறும் சதாகாலமாய் அதை வாங்கினவனுக்கே உரியதாகும்; யூபிலி வருஷத்திலும் அது விடுதலையாகாது.
31 மதில்சூழாத கிராமங்களிலுள்ள வீடுகளோ தேசத்தின் நிலங்கள்போலவே எண்ணப்படும்; அவைகள் மீட்கப்படலாம்; யூபிலி வரு
32 ஷத்தில் அவைகள் விடுதலையாகும். லேவியரின் ஊர்களோ, அவர்கள் காணியாட்சியாகையால் அங்குள்ள வீடுகளை லேவியர் எக்
33 காலத்திலும் மீட்டுக்கொள்ளலாம். லேவியரின் காணியாட்சி ஊரிலே ஒருவன் விற்ற வீட்டை லேவியரில் வேறொருவன் மீட்டுக்கொண்டால், அந்த வீடு யூபிலி வருஷத்தில் விடுதலையாகும்; இஸ்ரவேல் புத்திரருக்குள் லேவியரின் ஊர்களிலுள்ள வீடுகள் அவர்களுக்குரிய காணியாட்சி.
34 அவர்கள் ஊர்களைச்சூழ்ந்த வெளிநிலம் விற்கப்படலாகாது; அது அவர்களுக்கு நித்திய காணியாட்சி.
35 உன் பக்கத்திலுள்ள உன் சகோதரன் தரித்திரப்பட்டுக் கையினைத்துப்போனவனானால் அவனை ஆதரிக்கவேண்டும்; பரதேசியைப்போலும் தங்கவந்தவனைப்போலும் அவன் உன்னோடே பிழைக்கவேண்டும்.
36 நீ அவன் கையில் எதையும் வட்டிவாங்காமலும் கூட்டி வாங்காமலும் இருக்கவேண்டும்; உன் கடவுளுக்குப் பயந்திரு; உன் சகோதரன் உன்னோடே பிழைக்கும்படி
37 அப்படிச் செய். அவனுக்கு உன் பணத்தை வட்டிக்கும் உன் உணவுப் பொருளை பொலிசைக்கும் கொடாதே.
38 உங்களுக்குக் கடவுளாயிருக்கும்படி உங்களை எகிப்துதேசத்திலிருந்து கொண்டுவந்து உங்களுக்குக் கானான்தேசத்தைக் கொடுத்த உங்கள் கடவுளாகிய யெகோவா நானே.
39 உன் பக்கத்திலுள்ள உன் சகோதரன் தரித்திரனாகி உனக்கு விலைப்பட்டுப்போனால் அவனை அடிமையைப்போல வேலை வாங்

40 காதே. அவன் கூலிக்காரனைப்போலவும் தங்கவந்தவனைப்போலவும் உன்னுடனிருந்து யூபிலி வருஷமட்டும் உன்னிடத்தில் சே
41 விக்கவேண்டும். பின்பு அவனும் அவனுடனே அவன் பிள்ளைகளும் உன்னை விட்டு நீங்கலாகித் தன் குடும்பத்தாரிடத்துக்கும் தன் பிதாக்களின் காணியாட்சிக்கும் திரும்
42 பிப்போகலாம். அவர்கள் என் ஊழியர், எகிப்து தேசத்திலிருந்து நான் அவர்களைக் கொண்டுவந்தேன், அவர்களை அடிமைக
43 ளாக விற்கலாகாது. நீ அவனைக் கொடுமையாய் நடத்தாதே, உன் கடவுளுக்குப் பயந்
44 திரு. உனக்கு வேண்டிய அடிமைகள், ஆண்களானாலும் பெண்களானாலும், அவர்களைச் சுற்றிலுமிருக்கிற புறஜாதியாரிட
45 மிருந்தே வாங்கவேண்டும். உங்கள் நடுவில் வாசம்பண்ணுகிற அந்நியரிடமிருந்தும் உங்கள் தேசத்தில் பிறந்த அவர்கள் குடும்பங்களிலிருந்தும் நீங்கள் வாங்கலாம்; அவர்கள் உங்களுக்கு உடைமையாவார்
46 கள். உங்களுக்குப் பின்வரும் உங்கள் சந்ததியாருக்கு அவர்கள் உடைமைகளாகும்படி உங்கள் பிள்ளைகளுக்கு அவர்களைச் சுதந்தரமாக விடுங்கள்; அவர்களாலே நீங்கள் சதாகாலமாக அடிமைகளைக் கொள்ளலாம். உங்கள் சகோதரராகிய இஸ்ரவேல் புத்திரரோவென்றால் ஒருவனையொருவர் கொடுமையாக நடத்தக்கூடாது.
47 உன்னுடனே தங்குகிறவனும் பரதேசியும் செல்வனாயிருக்க, அவனுடனே இருக்கிற உன் சகோதரன் தரித்திரப்பட்டு உன்னுடனே தங்குகிறவனுக்காவது பரதேசிக்காவது பரதேசியின் குடும்பத்தாரில் எவனுக்காவது
48 விலைப்பட்டுப்போனால் | அவன் விலைப்பட்டுப்போனபின் திரும்ப மீட்கப்படும் பாத்தியதை அவனுக்குண்டு; அவன் சகோதரரில்
49 ஒருவன் அவனை மீட்கலாம். அவனுடைய பிதாவின் சகோதரனாவது அந்தச் சகோதரனின் புத்திரனாவது அவன் குடும்பத்திலே இரத்தக்கலப்புள்ள எவனாவது அவனை மீட்கலாம்; தானே செல்வனாகிவிட்டால் தன்னைத்தானே மீட்டுக்கொள்ளலாம்.
50 அவன் தான் விலைப்பட்ட வருஷந்தொடங்கி யூபிலி வருஷம்வரைக்கும் உள்ள காலத்தைத் தன்னை விலைக்குக் கொண்டவனுடன் கணக்குப்பார்க்கவேண்டும்; அவனுடைய விலைக்கிரயம் வருஷத்தொகைக்குத் தக்கபடி இருக்கவேண்டும். இவன் அவனுடனே வேலை செய்த காலத்துக்குரிய கூலியானது கூலிக்காரன் கணக்குப்படியே
51 கணக்கிடப்படவேண்டும். இன்னும் அநேக வருஷங்கள் இருந்தால் அவன் தன் விலைக்கிரயத்திலே அவைகளுக்குத்தக்கதைத் தன்னை மீட்கும்பொருளாகத் திரும்பக் கொடுக்கவேண்டும். யூபிலி வருஷ 52
மட்டும் மீதியாயிருக்கிற வருஷங்கள் கொஞ்சமேயானால் அவைகளை அவனுக்குக் கணக்கிட்டு தன் வருஷங்களுக்குத்தக்கதைத் தன்னை மீட்கும்பொருளாகத் திரும்பக் கொடுக்கவேண்டும். இவன் வருஷத் 53
தோறும் வருஷம் அமர்த்திக்கொள்ளப்பட்ட கூலிக்காரனைப்போல அவனிடம் இருக்கவேண்டும்; இவனை அவன் கொடுமையாய் நடத்துவதை நீ பார்த்துப் பொறுக்கவேண்டாம். இவன் மீட்டுக்கொள்ளப்படா 54
திருந்தால் இவனும் இவனோடே இவன் பிள்ளைகளும் யூபிலி வருஷத்தில் விடுதலையாவார்கள். இஸ்ரவேல் புத்திரர் என் ஊழி 55
யர், நான் எகிப்து தேசத்திலிருந்து கொண்டுவந்த என் ஊழியரே; நானே உங்கள் கடவுளாகிய யெகோவா.

நீங்கள் உங்களுக்கு விக்கிரகங்களைச் **26**
செய்துகொள்ளவேண்டாம்; சுரூபத்தையாவது சிலையையாவது உங்களுக்கு நிறுத்திக்கொள்ளவேண்டாம்; நமஸ்கரிக்கும்பொருட்டு விசித்திரமாய்ச் செதுக்கிய கல்லை உங்கள் தேசத்தில் வைக்கவேண்டாம்; நானே உங்கள் கடவுளாகிய யெகோவா. என் 2
ஓய்வுநாட்களை ஆசரியுங்கள், என் பரிசுத்த ஸ்தலத்து விஷயத்தில் பயபக்தியாயிருங்கள்; நானே யெகோவா.

நீங்கள் என் நியமங்களில் நடந்து என் 3
கட்டளைகளைக் கைக்கொண்டு அவைகளின்படி செய்தால், நான் ஏற்ற காலத்தில் உங்க 4
ளுக்கு மழையைத் தருவேன்; பூமி தன் பலனையும் வெளியிலுள்ள மரங்கள் தங்கள் கனியையும் கொடுக்கும். திராட்சப்பழம் 5
பறிக்குங்காலம் வருமட்டும் போரடிப்புக் காலம் இருக்கும்; விதைப்புக்காலம் வருமட்டும் திராட்சப்பழம் பறிக்குங்காலம் இருக்கும்; நீங்கள் உங்கள் ஆகாரத்தைத் திருப்தியாகச் சாப்பிட்டு உங்கள் தேசத்திலே க்ஷேமமாய்க் குடியிருப்பீர்கள். தேசத் 6
திலே சமாதானம் கட்டளையிடுவேன்; உங்களைப் பயப்படுத்தி உங்கள் நித்திரையைக் குலைத்துப்போடுவார் இரார்; துஷ்டமிருகங்களைத் தேசத்திலிருந்து ஒழியப்பண்ணுவேன், பட்டயம் உங்கள் தேசத்தின் நடுவே வராது. உங்கள் சத்துருக்களைத் துரத்து 7
வீர்கள்; அவர்கள் உங்கள் முன்பாகப் பட்டயத்தால் விழுவார்கள். உங்களில் ஐந்து 8
பேர் நூறுபேரைத் துரத்துவார்கள்; உங்களில் நூறுபேர் பதினாயிரம்பேரைத் துரத்துவீர்கள்; உங்கள் சத்துருக்கள் உங்களுக்கு

முன்பாகப் பட்டயத்தால் விழுவார்கள்.
9 நான் உங்கள்பக்ஷமாய்த் திரும்பி உங்களைப்
பலுகவும் பெருகவும்பண்ணி உங்களோடே
என் உடன்படிக்கையை உறுதிப்படுத்து
10 வேன். போன வருஷத்துப் பழைய தானி
யத்தைச் சாப்பிட்டுப் புதிய தானியத்துக்கு
இடமுண்டாகும்படி பழையதை எடுத்து
11 விடுவீர்கள். உங்கள் நடுவில் என் வாச
ஸ்தலத்தை யருளுவேன்; நான் உங்களை
12 அரோசிப்பதில்லை. நான் உங்கள் நடுவிலே
சஞ்சரித்து உங்கள் கடவுளாயிருப்பேன்,
நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்; நானே
13 உங்கள் கடவுளாகிய யெகோவா. நீங்கள்
எகிப்தியருக்கு அடிமைகளாயிராதபடி நான்
அவர்கள் தேசத்திலிருந்து உங்களைக்
கொண்டுவந்தேன். உங்கள் நுகங்களை
முறித்து உங்களை நிமிர்ந்து நடக்கப்பண்ணி
னேன்.
14 நீங்கள் எனக்குச் செவிகொடாமலும் இந்
தக் கட்டளைகள் எல்லாவற்றின்படியும்
15 செய்யாமலும் | என் உடன்படிக்கையை
மீறும்படி என் நியமங்களை அலட்சியம்
செய்து என் பிரமாணங்களை அரோசித்து
என் கற்பனைகள் எல்லாவற்றின்படியும்
செய்யாதிருப்பீர்களானால் நான் உங்களுக்கு
16 இவற்றைச் செய்வேன்: பயங்கரமான காசத்
தையும் கொடுங்காய்ச்சலையும் உங்கள்மேல்
வரப்பண்ணுவேன். இவற்றினால் கண்கள்
பூத்துப்போகும், இருதயம் தோய்ந்துபோம்.
நீங்கள் விதைக்கும் விதை விருதாவாகும்;
உங்கள் சத்துருக்கள் அதின் பலனைப் புசிப்
17 பார்கள். நான் உங்களுக்கு விரோதமாக
என் முகத்தைத் திருப்புவேன்; உங்கள் சத்
துருக்களுக்கு முன்பாக முறியடிக்கப்படு
வீர்கள்; உங்களைப் பகைக்கிறவர்கள் உங்
கள்மேல் ஆளுகைசெய்வார்கள்; துரத்து
வார் இல்லாதிருந்தும் ஓடுவீர்கள்.
18 இவற்றின்பின்னும் நீங்கள் எனக்குச்
செவிகொடாதிருந்தால் உங்கள் பாவங்களி
னிமித்தம் இதிலும் ஏழத்தனை அதிகமாக
19 உங்களைத் தண்டிப்பேன்; உங்கள் வல்ல
மையின் ஆணவத்தை முறிப்பார்கள், உங்
கள் வானத்தை இரும்புபோலாகச் செய்
வேன், உங்கள் பூமியைச் செம்புபோலாக்கு
20 வேன். உங்கள் பலம் விருதாவிலே செல
வழியும்; உங்கள் தேசம் தன் பலனையும்
தேசத்தின் மரங்கள் தங்கள் கனிகளையும்
கொடாதிருக்கும்.
21 ¶ இவற்றின்பின்னும் நீங்கள் எனக்குச்
செவிகொடுக்க மனதின்றி எனக்கு மாறு
பட்டு நடப்பீர்களானால் நான் உங்கள்
பாவங்களுக்குத் தக்கபடி இன்னும் ஏழத்
தனை வாதையை உங்கள்மேல் வரப்பண்ணு
வேன். வெளியின் துஷ்டமிருகங்களை உங் 22
கள் நடுவில் வரவிடுவேன்; அவைகள் உங்
களைப் பிள்ளையற்றவர்களாக்கி உங்கள் மிரு
கங்களை அழித்து உங்களைக் குறைத்துபோ
கப்பண்ணும்; உங்கள் வழிகள் பாழாய்க்
கிடக்கும்.
இவற்றினால் நீங்கள் எச்சரிப்படைந்து 23
என்னிடம் திரும்பாமல் எனக்கு மாறுபட்டு
நடப்பீர்களானால் | நானும் உங்களுக்கு 24
மாறுபட்டு நடந்து உங்கள் பாவங்களி
னிமித்தம் இன்னும் ஏழத்தனையாக உங்
களை வாதிப்பேன். என் உடன்படிக்கையை 25
மீறினதற்காகப் பழிவாங்கும் பட்டயத்தை
உங்கள்மேல் வரப்பண்ணுவேன்; நீங்கள்
உங்கள் ஊர்களில் சேர்ந்தபின் கொள்ளை
நோயை உங்கள் நடுவிலே அனுப்புவேன்;
சத்துருவின் கையிலே ஒப்புக்கொடுக்கப்படு
வீர்கள். ஆகாரம் என்னும் பிராணதாங்கி 26
யை உங்களுக்கில்லாமல் தகர்த்துப்போடு
வேன்; தகர்த்துப்போடவே பத்து ஸ்திரீகள்
ஒரே அடுப்பில் உங்கள் அப்பத்தைச்சுட்டு
அதை உங்களுக்கு நிறுத்துக்கொடுப்பார்
கள், நீங்கள் சாப்பிட்டுத் திருப்தியடைவ
தில்லை.
இவற்றின்பின்னும் நீங்கள் எனக்குச் 27
செவிகொடாமல் எனக்கு மாறுபட்டு நடப்
பீர்களானால் | நானும் உக்கிரத்தோடே உங் 28
களுக்கு மாறுபட்டு நடந்து உங்கள் பாவங்
களினிமித்தம் உங்களை ஏழத்தனையாய்த்
தண்டிப்பேன். உங்கள் குமாரரின் மாம் 29
சத்தையும் உங்கள் குமாரத்திகளின் மாம்
சத்தையும் புசிப்பீர்கள். நான் உங்கள் 30
பூஜை மேடைகளை அழித்து உங்கள் சூரிய
வணக்கச் சிலைகளை இடித்து விடுவேன்;
இடிந்துவிழுந்த கேவலமான உங்கள் விக்
கிரகங்கள்மேல் உங்கள் சவங்களை எறிந்து
போடுவேன். நான் உங்களை அரோசிப்
பேன். நான் உங்கள் ஊர்களைக் காடாக்கு 31
வேன், உங்கள் பரிசுத்த ஸ்தலங்களைப்
பாழாக்குவேன், உங்கள் சுகந்த வாசனையை
நான் முகரமாட்டேன். நான் தேசத்தைப் 32
பாழாக்குவேன்; அதிலே குடியிருக்கிற உங்
கள் சத்துருக்கள் பிரமிப்பார்கள். நீங்கள் 33
ஜாதிகளுக்குள்ளே சிதறிப்போகும்படி
செய்வேன், பட்டயத்தை உருவி உங்களைத்
தொடருவேன்; உங்கள் தேசம் பாழும் உங்
கள் ஊர்கள் காடுமாகும். நீங்கள் சத்துருக் 34
கள் தேசத்திலிருக்கவே நாளெல்லாம் தேசம்
பாழாய்க்கிடக்கும்; அப்படிக்கிடப்பது நீங்
கள் ஆசரியாதபோது விட்ட ஒய்வுநாட்களுக்
கென்று நிலத்துக்குக் கிடைத்த பலனாகும்.

அப்பொழுது தேசமெல்லாம் ஓய்விருக்கும்; முன் ஆசரியாதுவிட்ட ஓய்வுநாட்களுக்கு
35 அது பதிலாகும். நீங்கள் அதிலே குடியிருந்தபோது உங்கள் ஓய்வுநாட்களில் தேசம் பெறுத ஓய்வை அது பாழாய்க்
கிடக்கும் இந்த நாளெல்லாம் பெற்று ஓய்ந்
36 திருக்கும். உங்களில் மீதியாயிருப்பவர்கள் விஷயத்திலோ சத்துருக்களின் தேசங்களிலே அவர்கள் உள்ளங்கள் சோர்ந்துபோகச் செய்வேன்; காற்றிற்பறக்கும் சருகின் சத்தமும் அவர்களை ஓட்டும்; அவர்கள் பட்டயத்திற்குத் தப்பி ஓடுகிறதுபோல ஓடித்
37 துரத்துவாரின்றியே விழுவார்கள். பட்டயத்தின்முன் விழுவதுபோலத் துரத்துவாரின்றியே ஒருவர்மேல் ஒருவர் இடறிவிழுவார்கள். உங்கள் சத்துருக்களுக்குமுன்
38 நிற்கும் சக்தி உங்களுக்கு இராது. புறஜாதிகளுக்குள்ளே அழிந்துபோவீர்கள், உங்கள் சத்துருக்களின் தேசம் உங்களைப் பட்
39 சிக்கும். உங்களில் மீதியாயிருப்பவர்கள் தங்கள் அக்கிரமங்களினிமித்தம் உங்கள் சத்துருக்களின் தேசங்களில் வாடிப்போவார்கள்; தங்கள் பிதாக்களின் அக்கிரமங்களினிமித்தமும் பிதாக்களோடேயே வாடிப்போவார்கள்.

40 தாங்கள் எனக்கு விரோதமாகத் துரோகம்பண்ணி நடப்பித்த தங்கள் அக்கிரமத்தையும் தங்கள் பிதாக்களின் அக்கிரமத்தையும் அவர்கள் அறிக்கையிடவேண்டும். அவர்கள் எனக்கு மாறுபட்டு நடந்தபடி
41 யினால் | நானும் அவர்களுக்கு மாறுபட்டு நடந்து சத்துருக்களின் தேசத்திலே அவர்களைக் கொண்டுபோய் விட்டேனென்று அறிக்கையிடவேண்டும். விருத்தசேதனமில்லாத தங்கள் இருதயத்தை அவர்கள் அக்காலத்திலே தாழ்த்தித் தங்கள் அக்கிரமத்துக்குப் பதிலாக வரும் தண்டனையை
42 ஏற்றுக்கொண்டால் | நான் யாக்கோபோடு பண்ணின என் உடன்படிக்கையையும் ஈசாக்கோடு பண்ணின என் உடன்படிக்கையையும் ஆபிரகாமோடு பண்ணின என் உடன்படிக்கையையும் நினைப்பேன்; தேசத்
43 தையும் நினைப்பேன். தேசம் அவர்களால் விடப்பட்டு அவர்களில்லாமல் பாழாய்க் கிடப்பதானது ஆசரியாதுவிட்ட ஓய்வுநாளுக்குப்பதிலாகும். அவர்கள் என் பிரமாணங்களை அலட்சியம் செய்தபடியாலும் அவர்கள் ஆத்துமா என் நியமங்களை அருவருத்தபடியினாலும் தங்கள் அக்கிரமத்திற்குப் பதிலாக வரும் தண்டனையைப் பெறு
44 வார்கள். இவை இப்படியிருந்தும், அவர்கள் தங்கள் சத்துருக்களின் தேசத்திலிருக்கையில் நான் அவர்களை அலட்சியம்செய்து அருவருத்து அவர்களை நிர்மூலமாக்கமாட்டேன், அவர்களோடு நான் செய்த என் உடன்படிக்கையை அபத்தமாக்கமாட்டேன்; நானே அவர்கள் கடவுளாகிய
யெகோவா. அவர்களுடைய முன்னோர்க 45
ளோடே நான் பண்ணின உடன்படிக்கையை அவர்கள் நன்மைக்கென்று நினைவுகூருவேன்; நான் அவர்களுக்குக் கடவுளாயிருக்கும்படி புறஜாதிகளின் கண்களுக்கு முன்பாக அந்த முன்னோர்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டுவந்தேன்; நானே யெகோவா என்று சொன்னார்.

தமக்கும்இஸ்ரவேல் புத்திரருக்கும்நடுவே 46
இருக்கும்படி மோசேயைக்கொண்டு சீனாய் மலையில் யெகோவா கொடுத்த நியமங்களும் தீர்ப்புகளும் பிரமாணங்களும் இவைகளே.

பின்னும் யெகோவா மோசேயினிடம்: | 27
நீ இஸ்ரவேல்புத்திரரிடம் இவற்றைச் 2
சொல்: யாதாமொருவர் ஒரு பொருத்தனையை நிறைவேற்ற வரும்போது, யெகோவாவுக்கென்று ஒப்புவிக்கப்பட்ட மனுஷர் விஷயத்தில் தொகையை நீயே மதிக்கவேண்டும்: இருபதுவயது முதல் அறுபதுவய 3
துக்கு உட்பட்ட ஆண்பிள்ளையை நீ பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்கின்படி ஐம்பது வெள்ளிச்சேக்கலாகவும், பெண் 4
பிள்ளையானால் முப்பதுசேக்கலாகவும் மதிப்பிடவேண்டும். ஐந்துவயது முதல் இரு 5
பதுவயதுக்கு உட்பட்ட ஆண்பிள்ளையை இருபதுசேக்கலாகவும் பெண்பிள்ளையானால் பத்துச்சேக்கலாகவும் மதிப்பிடவேண்டும். ஒருமாதம் முதல் ஐந்துவயதுக்கு உட்பட்ட 6
ஆண்பிள்ளையை ஐந்து வெள்ளிச்சேக்கலாகவும் பெண்பிள்ளையானால் மூன்று வெள்ளிச்சேக்கலாகவும் மதிப்பிடவேண்டும். அறு 7
பதுவயது தொடங்கி அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளையைப் பதினைந்து சேக்கலாகவும் பெண்பிள்ளையானால் பத்துச் சேக்கலாகவும் மதிப்பிடவேண்டும். உன் 8
மதிப்பின்படி செலுத்தமுடியாத தரித்திரனாயிருந்தால் அவனை ஆசாரியன்முன் நிறுத்தவேண்டும்; ஆசாரியன் அவனை மதிப்பிடுவான்; பொருத்தனை செய்தவனின் சிநேகிக்கேற்றபடியே ஆசாரியன் அவனை மதிப்பிடவேண்டும்.

ஒருவன் யெகோவாவுக்குக் காணிக்கை 9
யாகப் படைப்பது மிருகமேயானால் அவன் யெகோவாவுக்குக் கொடுக்கிற அப்படிப்பட்டதெல்லாம் பரிசுத்தமாயிருக்கும். அதை மாற்றி வேறொன்றைக் கொடுக்காம 10
லிருக்கவேண்டும்; இளப்பமானதற்குப் பதி

லாக நலமானதையும், நலமானதற்குப் பதி
லாக இளப்பமானதையும் செலுத்தாம
லிருக்கவேண்டும்; அவன் மிருகத்திற்குப்
பதிலாக மிருகத்தை மாற்றிக்கொடுப்பானே
யில், முதல் கொடுத்ததும் அதற்குப் பதி
லாகக் கொடுத்ததும் பரிசுத்தமாயிருக்கும்.
11 அது யெகோவாவுக்குக் காணிக்கையாகப்
படைக்கத்தகாத அசுத்தமான யாதொரு
மிருகமானால் அதை ஆசாரியனுக்குமுன்
12 நிறுத்தவேண்டும். ஆசாரியன் அது நல
மானதா இளப்பமானதா என நிதானித்து
அதை மதிப்பிடுவான்; அவன் மதிப்பின்
13 படியே அது இருக்கும். அதை மீட்டுக்
கொள்ள மனதாயிருப்பானேயாகில், மதித்த
மதிப்போடே ஐந்தில் ஒரு பங்கைச் சேர்த்
துக்கொடுக்கவேண்டும்.
14 ஒருவன் தன் வீட்டை யெகோவாவுக்குப்
பரிசுத்தமென்று நேர்ந்துகொண்டால் ஆசா
ரியன் அது நலமானதா இளப்பமானதா
என நிதானித்து அதை மதிப்பிடவேண்டும்.
15 ஆசாரியனுடைய மதிப்பே நிலைக்கும். தன்
வீட்டைப் பரிசுத்தமென்று நேர்ந்துகொண்
டவன் அதை மீட்டுக்கொள்ள மனதாயிரு
தால், மதித்த தொகையோடு ஐந்தில் ஒரு
பங்கைச் சேர்த்துக்கொடுக்கவேண்டும்;
கொடுக்கவே அது அவனுடையதாகும்.
16 ஒருவன் தன் காணியாட்சியான வயலில்
யாதொரு பங்கை யெகோவாவுக்குப் பரி
சுத்தமென்று நேர்ந்துகொண்டால், மதிப்பு
அதின் விதைப்புக்குத்தக்கபடி இருக்க
வேண்டும்; ஒரு கலம் வாற்கோதுமை
விதைக்கிற வயலை ஐம்பது வெள்ளிச்சேக்க
17 லாக மதிப்பிடவேண்டும். யூபிலி வருஷ
முதல் அவன் தன் வயலைப் பரிசுத்தமென்று
நேர்ந்துகொண்டால், மதித்த மதிப்பே நிலைக்
18 கும். யூபிலி வருஷத்துக்குப்பின் தன் வய
லைப் பரிசுத்தமென்று நேர்ந்துகொண்
டால் யூபிலி வருஷமட்டுமுள்ள வருஷங்
களின்படியே ஆசாரியன் தொகையைக்
கணக்குப்பார்த்து அதற்குத்தக்கபடி மதிப்
19 பைக் குறைக்கவேண்டும். வயலைப் பரி
சுத்தமென்று நேர்ந்துகொண்டவன் அதை
மீட்டுக்கொள்வானேயாகில், மதித்த தொ
கையோடு ஐந்தில் ஒரு பங்கைச் சேர்த்துக்
கொடுக்கவேண்டும்; கொடுக்கவே அது அவ
20 னுக்கு உறுதியாகும். அவன் வயலை மீட்
டுக்கொள்ளாமல் வயலை வேறொருவனுக்கு
விற்றுப்போட்டால் இனி அதை மீட்பதற்
21 கிடமில்லை; யூபிலி வருஷத்தில் விடுதலை
யாகும்போது அது பிரதிஷ்டை வயலைப்
போலவே ஆசாரியனுக்குக் காணியாட்சி
22 யாகும். ஒருவன் யெகோவாவுக்குப் பரி
சுத்தமென்று நேர்ந்துகொண்ட வயல் அவ
னுக்குக் காணியாட்சியாயிராமல் அவன்
விலைக்கு வாங்கினதாயிருந்தால், யூபிலி 23
வருஷமட்டும் அது பெறும்விலை இன்ன
தென்று ஆசாரியன் அவனுடனே கணக்குப்
பார்க்கவேண்டும்; மதித்த தொகையை
அவன் அந்நாளிலேயே கொடுக்கவேண்டும்,
அது யெகோவாவுக்குப் பரிசுத்தம். யார் 24
கையிலே அந்த வயலைக் கொண்டானோ
அந்தக் காணியாட்சிக்காரனுக்கல்லாமல் அது
யூபிலி வருஷத்தில் திரும்பச்சேரும். மதிப் 25
பெல்லாம் பரிசுத்தஸ்தலத்துச் சேக்கல்
கணக்கின்படியே இருக்கவேண்டும்; ஒரு
சேக்கல் இருபது கேரா.
தலையீற்றுமானவைகள் யெகோவாவினுடை 26
யன; ஆகையால் ஒருவரும் தலையீற்றாகிய
மிருகத்தைப் பரிசுத்தமென்று நேர்ந்து
கொள்ளலாகாது; அது மாடானாலும் ஆடா
னாலும் யெகோவாவினுடையது. அசுத்த 27
மான மிருகத்தின் தலையீற்றானால், மதிக்கும்
மதிப்பின்படி அதை மீட்டுக்கொண்டு அத
னோடு ஐந்தில் ஒருபங்கைச் சேர்த்துக் கொ
டுக்கவேண்டும். மீட்கப்படாதிருந்தால்
மதிப்பிடப்பட்டபடியே அது விற்கப்பட
வேண்டும்.
ஒருவன் தன் வசத்திலுள்ள ஆட்களிலா 28
வது மிருகங்களிலாவது காணியாட்சி நிலங்
களிலாவது எதையாகிலும் யெகோவாவுக்
கென்று பிரதிஷ்டை செய்துவிட்டால் அது
விற்கப்படவும் மீட்கப்படவும் கூடாது;
பிரதிஷ்டை செய்துவிட்டவைகளெல்லாம்
யெகோவாவுக்குப் பரிசுத்தம். ஆட்களில் 29
பிரதிஷ்டை செய்துவிடப்பட்டவர்கள் மீட்
கப்படலாகாது, கொல்லப்படவேவேண்டும்.
தேசத்திலே நிலத்தின் வித்திலும் விருட் 30
சங்களின் கனியிலும் தசமபாகமெல்லாம்
யெகோவாவுக்கு உரியது; அது யெகோவா
வுக்குப் பரிசுத்தம். ஒருவன் தன் தசமபாகத் 31
திலே எதையாகிலும் மீட்டுக்கொள்வானே
யாகில் அதனோடு ஐந்தில் ஒருபங்கைச் சேர்த்
துக்கொடுக்கவேண்டும். கோலின் கீழ்ப் 32
பட்ட ஆடுமாடுகளிலே, பத்தில் ஒருபங்கா
கிறதெல்லாம் யெகோவாவுக்குப் பரிசுத்தமா
னது. அது நலமானதோ இளப்பமானதோ 33
என்று அவன் பார்க்கவேண்டாம்; அதை
மாற்றவும்வேண்டாம்; மாற்றுவானேயாகில்
முதற் கொடுத்ததும் அதற்குப்பதிலாகக்
கொடுத்ததும் பரிசுத்தமாயிருக்கும். அது
மீட்கப்படலாகாது என்று சொல்லு.
இஸ்ரவேல்புத்திரரிடம் சொல்லும்படி 34
யெகோவா சீனாய்மலையில் மோசேக்கு
விதித்த கட்டளைகள் இவைகளே.

# THE BOOK OF NUMBERS

# எண்ணாகமம்

1 இஸ்ரவேலர் எகிப்துதேசத்திலிருந்து
புறப்பட்ட இரண்டாம் வருஷம் இரண்
டாம் மாதம் முதல் தேதியில் யெகோவா
சீனாய் வனாந்தரத்தில் தரிசனக்கூடாரத்திலே
2 மோசேயோடு பேசி: நீங்கள் இஸ்ரவேல்
புத்திரரின் முழுச் சபைத் தொகையையும்
கணக்கெடுங்கள். ஆண்கள் யாவரையும்
அவரவர் வம்சத்தின்படியும் குடும்பத்தின்
படியும் தலைதலையாகப் பேர் எண்ணித்
3 தொகையிடுங்கள். இஸ்ரவேலிலே இருபது
வயதுள்ளவர்களும் மேற்பட்டவர்களுமாய்
யுத்தத்துக்குப் போகத்தக்கவர்கள் யாவரை
யும் அவர்கள் சேனைகளின்படி நீயும் ஆரோ
4 னும் எண்ணிக்கையிடவேண்டும். ஒவ்
வொரு கோத்திரத்துக்கு ஒவ்வொரு மனி
தன், தன் பிதாக்களின் வீட்டாருக்குத்
தலைவனாயிருப்பவனே, உங்களுக்குத் துணை
5 யாக நிற்கவேண்டும். உங்களோடு துணை
நிற்கவேண்டிய மனிதரின் நாமங்கள்
இவைகளே: ரூபன்கோத்திரத்தில் செதே
6 யூரின் குமாரன் எலிசூர். சிமியோன்
கோத்திரத்தில் சூரிஷதாயின் குமாரன்
7 செலூமியேல். யூதா கோத்திரத்தில் அம்
8 மினதாபின் குமாரன் நகசோன். இசக்
கார் கோத்திரத்தில் சூவாரின் குமாரன்
9 நெதனெயேல். செபுலோன் கோத்திரத்தில்
10 ஏலோனின் குமாரன் எலியாப். யோசேப்
பின் குமாரரில், எப்பிராயீம் கோத்திரத்
திலே அம்மியூதின் குமாரன் எலிஷாமா,
மனாசே கோத்திரத்திலே பெதாசூரின் குமா
11 ரன் கமாலியேல். பென்யமீன் கோத்திரத்
தில் கிதியோனியின் குமாரன் அபீதான்.
12 தாண் கோத்திரத்தில் அம்மிஷதாயின் குமா
13 ரன் அகியேசேர். ஆசேர் கோத்திரத்தில்
14 ஒக்ரானின் குமாரன் பாகியேல். காத் கோத்
திரத்தில் தெகுவேலின் குமாரன் எலியா
15 சாப். நப்தலி கோத்திரத்தில் ஏனனின் குமா
16 ரன் அகீரா. இவர்களே சபையில் ஆலோ
சனைக் கர்த்தாக்கள், தங்கள் தங்கள் பிதாக்
களின் கோத்திரங்களில் பிரபுக்கள்,
இஸ்ரவேலில் ஆயிரவருக்குத் தலைவர் என்று
சொன்னார். அப்படியே மோசேயும் ஆரோ 17
னும் பேர்பேராகக் குறிக்கப்பட்ட இந்த
மனிதரைக்கூட்டிக்கொண்டு | இரண்டாம் 18
மாதம் முதல்தேதியில் சபையார் அனை
வரையும் கூடிவரச்செய்து இருபது வயதுள்
ளவர்களையும் மேற்பட்டவர்களையும் அவ
ரவர் வம்சத்தின்படியும் குடும்பத்தின்படியும்
பேர்பேராக எண்ணினபடியே அவர்களை
அவரவர் வம்சக்கணக்கில் சேரச்செய்தார்
கள். யெகோவா மோசேக்குக் கட்டளை 19
யிட்டபடியே அவன் இப்படியாக அவர்
களைச் சீனாய் வனாந்தரத்தில் எண்ணிக்கை
யிட்டான்.

இஸ்ரவேலின் மூத்த குமாரனாகிய ரூபன் 20
புத்திர வம்சத்தார், இருபது வயதுள்ளவர்
களும் மேற்பட்டவர்களுமாய் யுத்தத்திற்
குப் போகத்தக்க ஆண்கள் யாவரும், தங்
கள் தங்கள் வம்சத்தின்படியும் குடும்பத்
தின்படியும் தலைதலையாகப் பேர் எண்ணிக்
கணக்கிடப்பட்டபோது, ரூபன் கோத்திரத் 21
தில் பதிவு செய்யப்பட்டவர்கள் நாற்பத்
தாறாயிரத்து ஐந்நூறுபேர்.

சிமியோன்புத்திர வம்சத்தார், இருபது 22
வயதுள்ளவர்களும் மேற்பட்டவர்களுமாய்
யுத்தத்திற்குப் போகத்தக்கவர்களாய் பதிவு
செய்யப்பட்ட ஆண்கள் யாவரும், தங்கள்
தங்கள் வம்சத்தின்படியும் குடும்பத்தின்படி
யும் தலைதலையாகப் பேர் எண்ணிக் கணக்
கிடப்பட்டபோது, சிமியோன் கோத்திரத் 23
தில் பதிவுசெய்யப்பட்டவர்கள் ஐம்பத்
தொன்பதினாயிரத்து முந்நூறுபேர்.

காத்புத்திர வம்சத்தார், இருபது வய 24
துள்ளவர்களும் மேற்பட்டவர்களுமாய் யுத்
தத்திற்குப் போகத்தக்கவர்கள் யாவரும்,
தங்கள் தங்கள் வம்சத்தின்படியும் குடும்பத்
தின்படியும் பேர்பேராக எண்ணப்பட்ட
போது, காத் கோத்திரத்தில் பதிவுசெய்யப் 25
பட்டவர்கள் நாற்பத்தையாயிரத்து அஞ்சு
நூற்று ஐம்பதுபேர்.

யூதாபுத்திர வம்சத்தார், இருபது வய 26
துள்ளவர்களும் மேற்பட்டவர்களுமாய் யுத்

கத்திற்குப் போகத்தக்கவர்கள் யாவரும், தங்கள் தங்கள் வம்சத்தின்படியும் குடும்பத்தின்படியும் பேர்பேராக எண்ணப்பட்ட
27 போது, யூதா கோத்திரத்தில் பதிவுசெய்யப்பட்டவர்கள் எழுபத்து நாலாயிரத்து அறுநூறுபேர்.
28 இசக்கார்புத்திர வம்சத்தார், இருபது வயதுள்ளவர்களும் மேற்பட்டவர்களுமாய் யுத்தத்திற்குப் போகத்தக்கவர்கள் யாவரும், தங்கள் தங்கள் வம்சத்தின்படியும் குடும்பத்தின்படியும் பேர்பேராக எண்ணப்
29 பட்டபோது, இசக்கார் கோத்திரத்தில் பதிவுசெய்யப்பட்டவர்கள் ஐம்பத்து நாலாயிரத்து நானூறுபேர்.
30 செபுலோன்புத்திர வம்சத்தார், இருபது வயதுள்ளவர்களும் மேற்பட்டவர்களுமாய் யுத்தத்திற்குப் போகத்தக்கவர்கள் யாவரும், தங்கள்தங்கள் வம்சத்தின்படியும் குடும்பத்தின்படியும் பேர்பேராக எண்ணப்பட்ட
31 போது, செபுலோன் கோத்திரத்தில் பதிவுசெய்யப்பட்டவர்கள் ஐம்பத்தேழாயிரத்து நானூறுபேர்.
32 யோசேப்பின் குமாரரில், எப்பிராயீம் புத்திர வம்சத்தார், இருபது வயதுள்ளவர்களும் மேற்பட்டவர்களுமாய் யுத்தத்திற்குப் போகத்தக்கவர்கள் யாவரும், தங்கள் தங்கள் வம்சத்தின்படியும் குடும்பத்தின்படியும் பேர்பேராக எண்ணப்பட்டபோது,
33 எப்பிராயீம் கோத்திரத்தில் பதிவுசெய்யப்பட்டவர்கள் நாற்பதினாயிரத்து ஐந்நூறு பேர்.
34 மனாசேபுத்திர வம்சத்தார், இருபது வயதுள்ளவர்களும் மேற்பட்டவர்களுமாய் யுத்தத்திற்குப் போகத்தக்கவர்கள் யாவரும், தங்கள் தங்கள் வம்சத்தின்படியும் குடும்பத்தின்படியும் போபேராக எண்ணப்பட்ட
35 போது, மனாசே கோத்திரத்தில் பதிவுசெய்யப்பட்டவர்கள் மூப்பத்தீராயிரத்து இருநூறு பேர்.
36 பென்யமீன்புத்திர வம்சத்தார், இருபது வயதுள்ளவர்களும் மேற்பட்டவர்களுமாய் யுத்தத்திற்குப் போகத்தக்கவர்கள் யாவரும், தங்கள் தங்கள் வம்சத்தின்படியும் குடும்பத்தின்படியும் பேர்பேராக எண்ணப்பட்ட
37 போது, பென்யமீன் கோத்திரத்தில் பதிவுசெய்யப்பட்டவர்கள் மூப்பத்தையாயிரத்து நானூறு பேர்.
38 தாண்புத்திரவம்சத்தார், இருபது வயதுள்ளவர்களும் மேற்பட்டவர்களுமாய் யுத்தத்திற்குப் போகத்தக்கவர்கள் யாவரும், தங்கள் தங்கள் வம்சத்தின்படியும் குடும்பத்தின்படியும் பேர்பேராக எண்ணப்பட்ட
போது, தாண் கோத்திரத்தில் பதிவுசெய்யப் 39
பட்டவர்கள் அறுபத்தீராயிரத்து எழுநூறு பேர்.
ஆசேர்புத்திர வம்சத்தார், இருபது வய 40
துள்ளவர்களும் மேற்பட்டவர்களுமாய் யுத்தத்திற்குப் போகத்தக்கவர்கள் யாவரும், தங்கள் தங்கள் வம்சத்தின்படியும் குடும்பத்தின்படியும் பேர்பேராக எண்ணப்பட்டபோது, ஆசேர் கோத்திரத்தில் பதிவு 41
செய்யப்பட்டவர்கள் நாற்பத்தோராயிரத்து ஐந்நூறு பேர்.
நப்தலிபுத்திர வம்சத்தார், இருபது வய 42
துள்ளவர்களும் மேற்பட்டவர்களுமாய் யுத்தத்திற்குப் போகத்தக்கவர்கள் யாவரும், தங்கள்தங்கள் வம்சத்தின்படியும் குடும்பத்தின்படியும் பேர்பேராக எண்ணப்பட்ட போது, நப்தலி கோத்திரத்தில் பதிவுசெய் 43
யப்பட்டவர்கள் ஐம்பத்து மூவாயிரத்து நானூறுபேர்.
பதிவுசெய்யப்பட்டவர்கள் இவர்களே; 44
மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் கோத்திரங்களில் கோத்திரத்துக்கு ஒரு பிரபுவாகப் பன்னிரண்டு பிரபுக்களும் பதிவுசெய்தார்கள். இஸ்ரவேல்புத்திரர், இருபது வயதுள் 45
ளவர்களும் மேற்பட்டவர்களுமாய், இஸ்ரவேலில் யுத்தத்திற்குப் போகத்தக்கவர்களாகத் தங்கள் தங்கள் கோத்திரத்தின்படி பதிவு செய்யப்பட்டவர்கள் யாவரும் | ஆறு 46
லட்சத்து மூவாயிரத்து ஐந்நூற்று ஐம்பது பேர்.
லேவியர் தங்கள பிதாக்களின் கோத்தி 47
ரத்தின்படியே மற்றவர்களோடு பதிவுசெய்யப்படவில்லை. யெகோவா மோசேயினிடம்: 48
நீ லேவிகோத்திரத்தாரைமாத்திரம் பதிவு 49
செய்யவேண்டாம், இஸ்ரவேல்புத்திரரோடு அவர்கள் தொகையைச் சேர்க்கவேண்டாம்; சாட்சிய வாசஸ்தலத்தையும் அதின் 50
சகல பணிமுட்டுகளையும் அதிலுள்ள யாவற்றையும் பார்த்துக்கொள்ளுகிறவர்களாக லேவியரை ஏற்படுத்து; வாசஸ்தலத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும் அவர்களே சுமந்துபோகவேண்டும்; அதிலே சேவை செய்யவேண்டியவர்கள் அவர்களே. வாசஸ்தலத்தைச்சுற்றி அவர்கள் பாளையமிறங்கவேண்டும். வாச 51
ஸ்தலம் பிரயாணமாகும்போது லேவியரே அதைக் கழற்றி இறக்குவார்கள், அது ஸ்தாபனம்பண்ணப்படும்போது லேவியரே அதை எடுத்து நிறுத்துவார்கள்; அதைச் சமீபிக்கும் வேறே எவனும் சாகவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் 52
தங்கள் தங்கள் பாளையத்தில் தங்கள்தங்

கள் கொடியின்கீழ்ச் சேனை சேனை
53 யாகக் கூடாரம்போடவேண்டும். இஸ்ர
வேல் புத்திரராகிய சபையின்மேல்
கடுங்கோபம் வராதபடி லேவியர் சாட்சிய
வாசஸ்தலத்தைச் சுற்றிப் பாளயமிறங்கி,
லேவியரே சாட்சிய வாசஸ்தலத்தைக்
காவல்காக்கவேண்டும் என்று சொல்லி
54 யிருந்தார். யெகோவா மோசேக்குக் கட்
டளையிட்டபடியெல்லாம் இஸ்ரவேல் புத்
திரர் செய்தார்கள்; அப்படியே செய்தார்
கள்.

**2** மோசே ஆரோன் என்பவர்களோடு
யெகோவா பேசி:

2 இஸ்ரவேல்புத்திரர் தங்கள் தங்கள் வம்
சத்தின்படியே தங்கள் விருதாகிய கொடி
யண்டையிலே தங்கள் கூடாரங்களைப்
போட்டுத் தரிசனக்கூடாரமுகமாகச் சுற்றி
3 லும் பாளயமிறங்கவேண்டும். யூதாவின்
பாளயத்துக்கொடியையுடையவர்கள் தங்
கள்தங்கள் சேனைகளின்படி சூரியன் உதிக்
கும் கீழ்புறத்திலே பாளயமிறங்கவேண்
டும்; அம்மினதாபின் குமாரனுகிய நகசோன்
4 யூதா புத்திரரின் தலைவன். அவனுடைய
சேனையாகப் பதிவு செய்யப்பட்டவர்கள்
எழுபத்துநாலாயிரத்து அறுநூறு பேர்.
5 அவன் அருகே இசக்கார் கோத்திரத்தார்
பாளயமிறங்கவேண்டும்; சூகாரின்குமாரன்
நெதனெயேல் இசக்கார் புத்திரரின் தலைவன்.
6 அவனுடைய சேனையாகப் பதிவுசெய்யப்
பட்டவர்கள் ஐம்பத்து நாலாயிரத்து
7 நானூறு பேர். அப்புறம் செபுலோன்
கோத்திரத்தார்; எலோனின் குமாரனுகிய
எலியாப் செபுலோன் புத்திரரின்
8 தலைவன். அவனுடைய சேனையாகப்
பதிவுசெய்யப்பட்டவர்கள் ஐம்பத்தேழா
9 யிரத்து நானூறுபேர். தங்கள்தங்கள்
சேனைகளின்படியே யூதாவின் பாளயமாக
பதிவுசெய்யப்பட்டவர்கள் எல்லாரும்
இலட்சத்து எண்பத்து ஆறுயிரத்துநானூறு
பேர்; பிரயாணத்தில் இவர்களே முதற்
பாளயமாகப் போவார்கள்.

10 ரூபனுடைய பாளயத்துக்கொடியை
யுடையவர்கள் தங்கள் தங்கள் சேனைகளின்
படிதென்புறத்தில்பாளயமிறங்கவேண்டும்;
செதேயூரின் குமாரனுகிய எலிசூர் ரூபன்
11 புத்திரரின் தலைவன். அவனுடைய சேனை
யாகப் பதிவுசெய்யப்பட்டவர்கள் நாற்பத்
12 தாறுயிரத்து ஐந்நூறுபேர். அவன் அருகே
பாளயமிறங்குகிறவர்கள் சிமியோன் கோத்
திரத்தார்; சூரிஷதாயின் குமாரனுகிய செலு
மியேல் சிமியோன் புத்திரரின் தலைவன்.
13 அவனுடைய சேனையாகப் பதிவுசெய்
யப்பட்டவர்கள் ஐம்பத்தொன்பதினாயிரத்து
முந்நூறுபேர். அப்புறம் காத் கோத்திரத்
14 தார். ரேகுவேலின் குமாரனுகிய எலியாசாப்
15 காத் புத்திரரின் தலைவன். அவனுடைய
சேனையாகப் பதிவு செய்யப்பட்டவர்கள்
நாற்பத்தையாயிரத்து அறுநூற்று ஐம்பது
16 பேர். தங்கள் தங்கள் சேனைகளின்படியே
ரூபனின் பாளயமாகப் பதிவுசெய்யப்பட்ட
வர்கள் எல்லாரும் இலட்சத்து ஐம்பத்து
ஒராயிரத்து நானூற்று ஐம்பதுபேர்; பிரயா
ணத்தில் இவர்கள் இரண்டாம் பாளயமா
கப் போவார்கள்.

பிரயாணத்தில் தரிசனக்கூடாரம் லேவி
17 யரின் சேனையோடுபாளயங்களின் நடுவே
செல்லும்; எப்படிப் பாளயமிறங்குகிறார்
களோ அப்படியே அவரவர் தங்கள் வரிசை
யிலே தங்கள் கொடிகளோடே பிரயாணம்
செய்யவேண்டும்.

எப்பிராயீமுடைய பாளயத்துக் கொடி
18 யையுடையவர்கள் தங்கள் தங்கள் சேனைக
ளின்படி மேல்புறத்தில் பாளயமிறங்க
வேண்டும்; அம்மியூதின் குமாரனுகிய எலி
ஷாமா எப்பிராயீம் புத்திரரின் தலைவன்.
19 அவனுடைய சேனையாகப் பதிவுசெய்யப்
பட்டவர்கள் நாற்பதினாயிரத்து ஐந்நூறு
20 பேர். அவன் அருகே மனாசே கோத்திரத்
தார் பாளயமிறங்கவேண்டும்; பெதாசூரின்
குமாரனுகிய கமாலியேல் மனாசே புத்திர
21 ரின் தலைவன். அவனுடைய சேனையாகப்
பதிவு செய்யப்பட்டவர்கள் மூப்பத்தீரா
22 யிரத்து இருநூறு பேர். அப்புறம் பென்ய
மீன் கோத்திரத்தார்; கிதியோனியின் குமா
ரனுகிய அபீதான் பென்யமீன் புத்திரரின்
23 தலைவன். அவனுடைய சேனையாகப் பதிவு
செய்யப்பட்டவர்கள் மூப்பத்தையாயிரத்து
24 நானூறுபேர். தங்கள் தங்கள் சேனைகளின்
படியே எப்பிராயீமின் பாளயமாகப் பதிவு
செய்யப்பட்டவர்கள் எல்லாரும் இலட்
சத்து எண்ணுயிரத்து நூறுபேர். பிரயா
ணத்தில் இவர்கள் மூன்றும் பாளயமாய்ப்
போவார்கள்.

தானுடைய பாளயத்துக்கொடியை
25 யுடையவர்கள் தங்கள் தங்கள் சேனைக
ளின்படி வடபுறத்தில் பாளயமிறங்கவேண்
டும்; அம்மிஷதாயின் குமாரனுகிய அகியே
சேர் தான் புத்திரரின் தலைவன். அவனு
26 டைய சேனையாகப் பதிவுசெய்யப்பட்டவர்
கள் அறுபத்தீராயிரத்து எழுநூறு பேர்.
27 அவன்அருகே ஆசேர் கோத்திரத்தார் பாளய
மிறங்கவேண்டும்; ஒக்ரானின் குமாரனுகிய
பாகியேல் ஆசேர் புத்திரரின் தலைவன்.
28 அவனுடைய சேனையாகப் பதிவுசெய்யப்

பட்டவர்கள் நாற்பத்தோராயிரத்து ஐந்
29 நூறு பேர். அப்புறம் நப்தலி கோத்திரத்
தார்; ஏனானின் குமாரனாகிய அகீரா நப்தலி
30 புத்திரரின் தலைவன். அவனுடைய சேனை
யாகப் பதிவுசெய்யப்பட்டவர்கள் ஐம்பத்து
31 மூவாயிரத்து நானூறுபேர். தாணின் பாளை
யமாகப் பதிவுசெய்யப்பட்டவர்கள் எல்
லாரும் இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து
அறுநூறுபேர்; இவர்கள் தங்கள் கொடி
களின்படியே பின்பாளையமாய்ப் போவார்
கள் என்று சொன்னார்.

32 இஸ்ரவேல் புத்திரரில் தங்கள் தங்கள்
கோத்திரங்களின்படி பதிவுசெய்யப்பட்ட
வர்கள் இவர்களே. தங்கள் தங்கள் சேனை
களின்படியே பாளையங்களில் பதிவுசெய்
யப்பட்டவர்கள் எல்லாரும் ஆறு லட்
சத்து மூவாயிரத்து ஐந்நூற்று ஐம்பதுபேர்.
33 லேவியரோ இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே
பதிவுசெய்யப்படவில்லை; யெகோவா
மோசேக்கு அப்படியே கட்டளையிட்டிருந்
34 தார். யெகோவா மோசேக்குக் கட்டளை
யிட்டபடியெல்லாம் இஸ்ரவேல் புத்திரர்
செய்தார்கள், அப்படியே தங்கள் தங்கள்
கொடிகளின்கீழ் பாளையமிறங்கினார்கள்;
அப்படியே தங்கள் தங்கள் வம்சங்களின்
படியே தங்கள் தங்கள் கோத்திரங்களோடு
பிரயாணஞ்செய்து போனார்கள்.

**3** சீனாய்மலையில் யெகோவா மோசே
யோடே பேசின நாளிலே, ஆரோன்
மோசே என்பவர்களுக்கிருந்த சந்ததியின்
2 விவரமாவது: ஆரோனுடைய குமாரரின்
நாமங்கள், முதல் பிறந்தவனாகிய நாதாப்,
அப்பிூ, எலெயாசார், இத்தாமார் என்பவை
3 களே. ஆசாரிய ஊழியம் செய்கிறதற்கு
அவனால் பிரதிஷ்டைசெய்யப்பட்டு அபி
ஷேகம்பெற்ற ஆசாரியரான ஆரோனு
டைய குமாரரின் நாமங்கள் இவைகளே.
4 நாதாபும் அபியூவும் சீனாய் வனாந்தரத்தில்
அந்நிய அக்கினியை யெகோவாவின் சந்
நிதியில் கொண்டுவந்து படைத்தபோது
யெகோவாவின் சந்நிதியில் மாண்டார்கள்;
அவர்களுக்குப் பிள்ளைகள் இல்லை; எலெயா
சாரும் இத்தாமாருமே தங்கள் தகப்பனாகிய
ஆரோனின்கீழ் ஆசாரிய ஊழியம் செய்து
வந்தார்கள்.

5,6 யெகோவா மோசேயினிடம்: நீ லேவிக்
கோத்திரத்தாரைக் கிட்டிவரச்செய்து அவர்
களை ஆசாரியனாகிய ஆரோன் முன்னிலையில்
நிறுத்து; அவர்கள் அவனுக்குப் பணி
7 விடைசெய்வார்கள். ஆரோனும் சபையார்
யாவரும் காத்து அனுசரிக்கவேண்டியவை
களை அவர்கள் தரிசனக்கூடாரத்தண்டை
யில் அனுசரிப்பார்கள்; இப்படியாக அவர்
கள் வாசஸ்தலத்தின் திருப்பணிவிடையைச்
செய்வார்கள். அவர்கள் தரிசனக்கூடாரத் 8
தின் பணிமுட்டுகள் யாவற்றையும் பார்த்து
வந்து இஸ்ரவேல் புத்திரர் அனுசரிக்க
வேண்டியவற்றை அனுசரித்து வாசஸ்தலத்
தின் திருப்பணிவிடையைச் செய்வார்கள்.
ஆகவே லேவியரை ஆரோனிடத்திலும் 9
அவன் குமாரரிடத்திலும் ஒப்புவி; இஸ்ர
வேல் புத்திரரிலிருந்து அவனுக்குரியவர்க
ளாகவே ஒப்புவிக்கப்பட்டவர்கள் இவர்
களே. ஆரோனையும் அவன் குமாரரை 10
யுமோ தங்கள் ஆசாரிய ஊழியத்தைச்
செய்வதற்கென நியமிப்பாய்; கிட்டிச்
சேரும் வேறே எவனும் சாகவேண்டும்
என்று சொன்னார்.

பின்னும் யெகோவா மோசேயினிடம்: 11
இஸ்ரவேல் புத்திரரில் கர்ப்பந்திறந்து பிறக் 12
கிற முதற்பேறான யாவுக்கும் பதிலாக,
இதோ, லேவியரை நான் இஸ்ரவேல் புத்
திரரிலிருந்து எடுத்துக்கொண்டேன்; அவர்
கள் என்னுடையவர்கள். முதற்பேறான 13
வையெல்லாம் என்னுடையன; எகிப்து
தேசத்தில் முதற்பேறான யாவையும் நான்
சங்காரித்த நாளில் இஸ்ரவேலில் மனிதர்
முதல் மிருகம்வரையுமுள்ள முதற்பேறான
யாவையும் எனக்கென்று பிரதிஷ்டைசெய்
தேன், அவைகள் என்னுடையவைகள்;
நானே யெகோவா என்று சொன்னார்.

பின்னும் யெகோவா சீனாய்வனாந்தரத்தில் 14
மோசேயோடு பேசி: லேவிபுத்திரரை அவ 15
ரவர் குடும்பங்களின்படியும் வம்சங்களின்
படியும் பதிவுசெய்; அவர்களில் ஒரு மாத
மும் அதற்கு மேற்பட்ட வயதுமுள்ள
ஆண்கள் யாவரையும் பதிவுசெய் என்று
சொன்னார். யெகோவாவின் சொற்படி, 16
தனக்குக் கட்டளையிடப்பட்ட பிரகாரமே,
மோசே அவர்களைப் பதிவுசெய்தான்; லேவி 17
யின் குமாரர் தங்கள் நாமங்களின்படியே,
கெர்சோன், கெகாத், மெராரி என்பவர்
கள். அவரவர் வம்சங்களின்படியே கெர் 18
சோனுடைய குமாரரின் நாமங்கள் லிப்னீ,
சிமேயி என்பவைகள். அவரவர் வம்சங் 19
களின்படியே கெகாத்துடைய குமாரர், அம்
ராம், யித்சேயார், எப்ரோன், ஊசியேல்
என்பவர்கள். அவரவர் வம்சங்களின் 20
படியே மெராரியின் குமாரர், மகேலி, மூசி
என்பவர்கள். லேவிக்கோத்திர வம்சங்கள்
இவைகளே.

கெர்சோனின் மூத்தாய் லிப்னீயரின் 21
வம்சமும் சிமேயியர் வம்சமும் தோன்றின;
இவைகளே கெர்சோனியரின் வம்சங்கள்.

22 அவர்களில் ஒரு மாதமும் அதற்கு மேற்
பட்ட வயதுமுள்ள ஆண்கள் யாவரும்
எண்ணப்பட்டபோது பதிவுசெய்யப்பட்ட
23 வர்கள் ஏழாயிரத்து ஐந்நூறு பேர். கெர்
சோனியரின் வம்சங்கள் பாளையமிறங்கு
மிடம் வாசஸ்தலத்தின் பின்புறத்தில் மேல்
24 பக்கமே. கெர்சோனியரின் வம்சத்தலை
வன் லாயேலின் குமாரனாகிய எலியாசாப்.
25 தரிசனக்கூடாரத்திலே கெர்சோன் புத்திரர்
பார்த்துவரவேண்டியவை, வாசஸ்தலமும்
கூடாரமும் அதின்மேல் மூடுவதும் தரிசனக்
26 கூடாரவாசல் மறைப்புத்திரையும் | வாசல்
தலத்தண்டையிலும் பலிபீடத்தண்டையி
லும் சுற்றிலும் இருக்கிற பிராகாரத்தின்
தொங்குதிரைகளும் பிராகார வாசல் மறைப்
புத் திரையும் அவற்றின் சகல வேலை
களுக்குமுரிய அவற்றின் கயிறுகளுமே.
27 கொகாத்தின் வழியாய் அம்ராமியரின்
வம்சமும் யித்சேயாரின் வம்சமும் கெப்
ரோனியரின் வம்சமும் ஊசியேலரின் வம்ச
மும் தோன்றின; இவைகளே கொகாத்திய
28 ரின் வம்சங்கள். ஒரு மாதமும் அதற்கு
மேற்பட்ட வயதுமுள்ள ஆண்கள் யாவ
ரும் எண்ணப்பட்டபோது பரிசுத்த ஸ்த
லத்துக்குரியவைகளைப் பார்த்துவரவேண்டி
யவர்களின் தொகை எண்ணாயிரத்து அறு
29 நூறுமது. கொகாத் புத்திரரின் வம்சங்கள்
பாளையமிறங்குமிடம் வாசஸ்தலத்தின் தென்
30 புறமே. கொகாத்தியரின் வம்சத்தலைவன்
ஊசியேலின் குமாரனாகிய எலிசாபான்.
31 அவர்கள் பார்த்துவரவேண்டியவை, பெட்
டகமும் மேசையும் குத்துவிளக்கும்
பீடங்களும் ஆராதனைசெய்யும் பரிசுத்த
ஸ்தலத்தின் பணிமுட்டுகளும் தொங்கு
திரையும் அதின் எல்லா வேலைகளுக்கும்
32 உரியவைகளுமே. ஆசாரியனாகிய ஆரோ
னின் குமாரன் எலெயாசார் என்பவன்
லேவியரின் தலைவருக்குத் தலைவன், பரிசுத்த
ஸ்தலத்தைப் பார்த்துவருகிறவர்களுக்கு
மேற்பட்டவன்.
33 மொராரியின் வழியாய் மகேலியரின் வம்
சமும் மூசியரின் வம்சமும் தோன்றின;
34 இவைகளே மொராரியின் வம்சங்கள். அவர்
களில் ஒரு மாதமும் அதற்கு மேற்பட்ட
வயதுமுள்ள ஆண்பிள்ளைகளெல்லாரும்
எண்ணப்பட்டபோது பதிவுசெய்யப்பட்ட
35 வர்கள் ஆறுயிரத்து இருநூறுபேர். அபியா
யேலின் குமாரனாகிய சூரியேல் அவர்கள்
தலைவன்; இவர்கள் பாளையமிறங்குமிடம்
36 வாசஸ்தலத்தின் வடபுறமே. அவர்கள்
பார்த்துவரும்படி நியமிக்கப்பட்டவைகள்
வாசஸ்தலத்தின் பலகைகளும் தாழ்ப்பாள்
களும் தூண்களும் பாதங்களும் அதினு
டைய எல்லாப் பணிமுட்டுகளும் அதன்
பணிவிடைக்குரியவைகள் அனைத்தும் |
சுற்றுப் பிராகாரத்தின் தூண்களும் அவை 37
களின் பாதங்களும் முளைகளும் கயிறு
களுமே. தரிசனக்கூடாரமாகிய வாசல் 38
தலத்துக்கு முன்பாக சூரியன் உதிக்கும்
கிழ்புறத்தில் கூடாரம்போட்டு இறக்குகிற
வர்கள் மோசேயும் ஆரோனும் அவன்
குமாரருமே. இஸ்ரவேல் புத்திரர் செய்து
வரவேண்டியவைகளை அவர்களுக்காக இவர்
கள் செய்துவருவார்கள்; கிட்டிச் சேரும்
வேறே எவனும் சாகவேண்டியதே.
மோசேயும் ஆரோனும் யெகோவாவின் 39
சொற்படி, லேவியரில் ஒரு மாதமும்
அதற்கு மேற்பட்ட வயதுமுள்ள ஆண்
பிள்ளைகளையெல்லாம் அவரவர் வம்சங்க
ளின்படியே பதிவுசெய்தார்கள்; பதிவுசெய்
யப்பட்டவர்கள் இருபத்தீராயிரம் பேர்.
பின்னும் யெகோவா மோசேயினிடம்: 40
நீ இஸ்ரவேல் புத்திரரில் ஒரு மாதமும்
அதற்கு மேற்பட்ட வயதுமுள்ள முதற்
பேருள ஆண்பிள்ளைகளையெல்லாம் பதிவு
செய்து அவர்கள் நாமங்களைத் தொகையிடு.
இஸ்ரவேல் புத்திரரிலுள்ள முதற்பேருள 41
யாவுக்கும் பதிலாக லேவியரையும் இஸ்ர
வேல் புத்திரரின் மிருகங்களிலுள்ள தலை
யீற்றுள யாவுக்கும் பதிலாக லேவியரின்
மிருகங்களையும் எனக்கென்று பிரித்தெடு;
நானே யெகோவா என்று சொன்னார்.
மோசேயும் யெகோவா தனக்குக் கட்டளை 42
யிட்டபடியே இஸ்ரவேல் புத்திரரிலுள்ள
முதற்பேருள யாவரையும் பதிவுசெய்தான்.
ஒரு மாதமும் அதற்கு மேற்பட்ட வயது 43
முள்ள முதற்பேருள ஆண்பிள்ளைகளெல்
லாரும் பேர் பேராக எண்ணப்பட்டபோது
பதிவுசெய்யப்பட்டவர்கள் இருபத்தீரா
யிரத்து இருநூற்று எழுபத்துமூன்றுபேர்.
பின்னும் யெகோவா மோசேயினிடம்: 44
நீ இஸ்ரவேல் புத்திரரிலுள்ள முதற்பேருள 45
யாவருக்கும் பதிலாக லேவியரையும் அவர்
களுடைய மிருகங்களுக்குப் பதிலாக லேவி
யரின் மிருகங்களையும் பிரித்தெடு; லேவியர்
என்னுடையவர்கள்; நானே யெகோவா.
இஸ்ரவேல் புத்திரரின் முதற்பேருளவர்க 46
ளில், லேவியரின் தொகைக்கு அதிகமாகி
மீட்கப்படவேண்டியவர்கள் இருநூற்று
எழுபத்து மூன்று பேரிடத்திலும் | நீ 47
தலைக்கு ஐந்து சேக்கல் வீதமாகப் பரிசுத்த
ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படி வாங்கு—
அந்தச் சேக்கலானது இருபது கேரா—.
லேவியரின் தொகைக்கு அதிகமானவர்கள் 48

மீட்கப்படும் பணத்தை ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் கொடுத்துவிடு என்று
49 சொன்னார். அப்படியே லேவியரால் மீட்கப்பட்டவர்களின் தொகைக்கு அதிகமாகி இன்னும் மீட்கப்படவேண்டியவர்களுக்காக மோசே இஸ்ரவேல் புத்திரரின்
50 முதற்பேருள்ளவர்களிடத்தில் | ஆயிரத்து முந்நூற்று அறுபத்தைந்து சேக்கல் பணத்தைப் பரிசுத்தஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படி வாங்கினான். மீட்கப்பட்டவர்க
51 ளின் கிரயத்தை யெகோவாவின் சொற்படியே ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் கொடுத்தான்; யெகோவா தனக்குக் கட்டளையிட்டபடியே செய்தான்.

**4** யெகோவா மோசே ஆரோன் என்பவர்களோடு பேசி:

2 லேவியின் புத்திரருக்குள்ளே இருக்கிற
3 கெகாத் புத்திரரில், தரிசனக்கூடாரத்திலே பணிவிடைசெய்யும் சேவை சைனியத்தில் சேரத்தக்கவர்களான முப்பதுவயதுமுதல் ஐம்பதுவயதுவரைக்குமுள்ள யாவரையும் அவரவர் வம்சத்தின்படியும் குடும்பத்தின் படியும் எண்ணித் தொகையிடவேண்டும்.
4 தரிசனக்கூடாரத்திலே கெகாத் புத்திரரின் பணிவிடை மகா பரிசுத்தமானதைப்
5 பார்த்துவருவதே. பாளையம் பிரயாணமாகும்போது ஆரோனும் அவன் குமாரரும் வந்து மறைப்புத்திரையை இறக்கி அதினாலே சாட்சியப் பெட்டகத்தை மூடி |
6 அதன்மேல் தகசுத்தோல் போட்டு மூடி அதின்மேல் முழுநீலத் துப்பட்டியை விரித்து அதின் தண்டுகளைப் பாய்ச்சவேண்
7 டும். சமுகத்தப்ப மேசையின்மேல் நீலத் துப்பட்டியை விரித்துத் தட்டுகளையும் கரண்டிகளையும் கரகங்களையும் பானபலி கிண்ணங்களையும் அதின்மேல் அடுக்கி நித்திய அப்பத்தை அதன்மேல் வைத்து |
8 அவற்றின்மேல் சிவப்புத் துப்பட்டியை விரித்து அதைத் தகசுத்தோல் போட்டு மூடி அதின் தண்டுகளைப் பாய்ச்சவேண்
9 டும். இளநீலத் துப்பட்டியை எடுத்துக் குத்துவிளக்குத் தண்டையும் அதின் அகல்களையும் அதின் கத்தரிகளையும் சாம்பல் பாத்திரங்களையும் அதன் பணிவிடைக்குரிய எண்ணெய்ப் பாத்திரங்களையும் மூடி |
10 அதையும் அதற்குரிய தட்டுமுட்டுகள் யாவையும் தகசுத்தோல் மூடிக்குள்ளே போட்டு அதை ஒரு தட்டைச் சட்டத்தின்
11 மேல் வைக்கவேண்டும். பொற்பீடத்தின் மேல் இளநீலத் துப்பட்டியை விரித்து அதன்மேல் தகசுத்தோல் போட்டு மூடி அதின் தண்டுகளைப் பாய்ச்சவேண்டும்;
பரிசுத்த ஸ்தலத்தில் செய்யும் பணிவிடைக் 12
குரிய சகல தட்டுமுட்டுகளையும் எடுத்து இளநீலத் துப்பட்டியிலே போட்டுத் தகசுத் தோல் போட்டு மூடித் தட்டைச் சட்டத் 13
தின்மேல் வைக்கவேண்டும். பலிபீடத்தைச் சாம்பலற விளக்கி அதின்மேல் இரத்தாம் பரத் துப்பட்டியை விரித்து | அதின்மேல் 14
பணிவிடைக்குரிய சகல பணிமுட்டுகளாகிய நெருப்புச்சட்டிகளையும் முள்ளுகளையும் சாம்பல் எடுக்கும் கரண்டிகளையும் கலங்களையும் பலிபீடத்திற்குரிய எல்லாப் பாத்திரங்களையும் வைத்து அதின்மேல் தகசுத்தோலை விரித்து மூடி அதின் தண்டுகளைப் பாய்ச்சவேண்டும். பாளையம் பிரயா 15
ணப்படுகையில் ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்த ஸ்தலத்தையும் அதினுடைய சகல பணிமுட்டுகளையும் மூடித்தீர்ந்த பின்பு, கெகாத் புத்திரர் அதைத் தூக்கிக் கொண்டுபோகிறதற்கு வரவேண்டும். அவர்கள் சாகாதபடிக்குப் பரிசுத்தமானதைத் தொடாதிருக்கவேண்டும்; தரிசனக்கூடாரத்திலே கெகாத் புத்திரர் சுமக்கவேண்டிய சுமை இதுவே. ஆசாரியனுடைய ஆரோ 16
னின் குமாரன் எலெயாசார் பார்த்துக் கொள்ளவேண்டியவைகள் விளக்குக்கு எண்ணெய், சுகந்த தூபவர்க்கம், நித்திய போஜனபலி, அபிஷேக தைலம், ஆகிய இவைகளே. வாசஸ்தலம் முழுவதையும் அதிலுள்ள யாவற்றையும் பரிசுத்த ஸ்தலத்தையும் அதின் பணிமுட்டுகளையும் அவனே பார்த்துவரவேண்டும் என்று சொன்னார்.

யெகோவா மோசேயோடும் ஆரோனோடும் 17
பேசி: லேவியருக்குள்ளே கெகாத்திய வம் 18
சத்தார் அழிந்துபோகாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். அவர்கள் மகா பரிசுத்த 19
மானவைகளைக் கிட்டிச்சேருகையில் சாகாமல் உயிரோடிருக்கும்படிக்கு நீங்கள் அவர்களுக்கு இதைச் செய்யுங்கள்: ஆரோ 20
னும் அவன் குமாரரும் வந்து, அவர்களில் அவனவன் செய்யும் வேலைக்கும் அவனவன் சுமக்கும் சுமைக்கும் அவனவனை நியமிக்கவேண்டும்; பரிசுத்தமானவைகளை அவர்கள் நிமிஷநேரமும் பார்க்க உள்ளே வரக் கூடாது; வந்தால் சாவார்கள் என்று சொன்னார்.

பின்னும் யெகோவா மோசேயினிடம்: 21
கெர்சோன் புத்திரரிலும் தரிசனக்கூடாரத் 22
திலே பணிவிடைசெய்யும் சேவை சைனியத்தில் சேரத்தக்கவர்களான | முப்பது வயது 23
முதல் ஐம்பது வயதுவரைக்குமுள்ள யாவரையும் அவரவர் குடும்பத்தின்படியும் வம்சத்தின்படியும் எண்ணித் தொகையிட

24 வேண்டும். பணிவிடைசெய்கிற விஷயத்தி
லும் சுமக்கிற விஷயத்திலும் கெர்சோனிய
வம்சத்தார் செய்யவேண்டியது இதுவே:
25 வாசஸ்தலத்துக்கும் தரிசனக்கூடாரத்துக்
கும் உரிய தொங்குதிரைகளையும் மூடுகிறவை
களையும் அவைகளின்மேல் மூடுகிறதற்குப்
போடும் தகசத்தோலையும் தரிசனக்கூடார
26 வாசல் மறைப்பையும் | பிராகாரத்தின்
தொங்குதிரைகளையும் வாசஸ்தலத்தண்டை
யிலும் பலிபீடத்தண்டையிலும் சுற்றிலும்
இருக்கிற பிராகாரவாசல் தொங்குதிரையை
யும் அவைகளின் கயிறுகளையும் அவை
களின் வேலைக்குரிய பணிமுட்டுகள் யாவை
யும் சுமந்து, அவைகள் சம்பந்தமாகச் செய்ய
வேண்டிய யாவையும் செய்து இவ்வாறுகப்
27 பணிவிடைசெய்வதாம். சுமை எடுப்பதிலும்
பணிவிடைசெய்வதிலும் கெர்சோனியர்
செய்யவேண்டியதெல்லாம் ஆரோனும்
அவன் குமாரரும் சொல்லுகிறபடியே செய்
யப்படவேண்டும்; அவர்கள் சுமக்கவேண்
டிய சகல சுமைகளையும் நீங்கள் நியமித்து
28 அவர்களிடம் ஒப்புவியுங்கள். கெர்சோனிய
வம்சத்தார் தரிசனக்கூடாரத்தில் செய்யும்
பணிவிடை இதுதான்; ஆசாரியனாகிய
ஆரோனின் குமாரன் இத்தாமாரின் பார்வை
யின்கீழ் அவர்கள் வேலைசெய்யவேண்டும்.
29 மெராரி புத்திரரில் தரிசனக்கூடாரப்
பணிவிடைசெய்யும் சேவை சரியத்தில்
30 சேரத்தக்கவர்களான | முப்பதுவயதுமுதல்
ஐம்பது வயதுவரைக்குமுள்ள யாவரையும்
அவரவர் குடும்பத்தின்படியும் வம்சத்தின்படி
31 யும் பதிவுசெய்யவேண்டும். தரிசனக்கூடாரத்
தில் அவர்கள் செய்யும் எல்லாப் பணி
விடைக்குமாக அவர்களுக்கு ஒப்புவிக்கப்
படும் சுமைகள் இவைகளே: வாசஸ்தலத்
தின் பலகைகளும் தாழ்ப்பாள்களும் தூண்
32 களும் பாதங்களும் | சுற்றிலும் இருக்கிற
பிராகாரத்தின் தூண்களும் அவைகளின்
பாதங்களும் முளைகளும் கயிறுகளும் அவை
களின் சகல பணிமுட்டுகளும் அவற்றிற்
குரிய மற்றெல்லா வேலையுமே; அவர்கள்
சுமக்கவேண்டியவைகளை நீங்கள் ஒவ்
வொன்றாக அவர்களுக்கு நியமிக்கவேண்
33 டும். மெராரி வம்சத்தார் தரிசனக்கூடா
ரத்திலே செய்யும் பணிவிடைக்குரிய
எல்லா வேலையும் இதுவே; ஆசாரியனாகிய
ஆரோனுடைய குமாரனாகிய இத்தாமா
ருடைய பார்வையின்கீழ் இவைச் செய்ய
வேண்டும் என்று சொன்னார்.
34 அப்படியே மோசேயும் ஆரோனும் சபை
யின் தலைவரும் கெர்சோனியரில், தரிசனக்
கூடாரத்தில் பணிவிடைசெய்யும் சேவை
சரியத்தில் சேரத்தக்கவர்களான | முப் 35
பது வயதுமுதல் ஐம்பது வயதுவரைக்கு
முள்ள யாவரையும் அவரவர் வம்சத்தின்
படியும் குடும்பத்தின்படியும் பதிவு செய்
தார்கள். அவர்கள் வம்சங்களின்படி பதிவு 36
செய்யப்பட்டவர்கள் இரண்டாயிரத்து எழு
நூற்று ஐம்பதுபேர். தரிசனக்கூடாரத்தில் 37
வேலைசெய்வதற்குக் கெர்சோனிய வம்சங்
களில் பதிவுசெய்யப்பட்டவர்கள் அனை
வரும் இவர்களே. மோசேயின் மூலமாய்
யெகோவா கட்டளையிட்டபடியே மோசே
யும் ஆரோனும் அவர்களைப் பதிவுசெய்தார்
கள்.

கெர்சோன் புத்திரரில் தரிசனக்கூடாரத் 38
தில் பணிவிடைசெய்யும் சேவை சரியத்
தில் சேரத்தக்கவர்களான | முப்பது வயது 39
முதல் ஐம்பது வயதுவரைக்குமுள்ள யாவ
ரும் அவரவர் வம்சத்தின்படியும் குடும்பத்
தின்படியும் பதிவு செய்யப்பட்டார்கள்.
அவரவர் குடும்பத்தின்படியும் வம்சத்தின் 40
படியும் அவர்களில் பதிவுசெய்யப்பட்டவர்
கள் இரண்டாயிரத்து அறுநூற்று முப்பது
பேர். தரிசனக் கூடாரத்தில் வேலைசெய் 41
வதற்குக் கெர்சோனிய வம்சங்களில் பதிவு
செய்யப்பட்டவர்கள் அனைவரும் இவர்
களே. யெகோவா கட்டளையிட்டபடியே
மோசேயும் ஆரோனும் அவர்களைப் பதிவு
செய்தார்கள்.

மெராரியர் வம்சங்களில் தரிசனக்கூடா 42
ரத்திலே பணிவிடைசெய்யும் சேவை சரிய
த்தில் சேரத்தக்கவர்களான | முப்பது 43
வயதுமுதல் ஐம்பது வயதுள்ளவர்கள்
அனைவரும் அவரவர் வம்சத்தின்படியும்
குடும்பத்தின்படியும் பதிவு செய்யப்பட்டார்
கள். அவரவர் வம்சத்தின்படி அவர்களில் 44
பதிவுசெய்யப்பட்டவர்கள் மூவாயிரத்து
இருநூறு பேர். மெராரியர் வம்சங்களில் 45
பதிவுசெய்யப்பட்டவர்கள் இவர்களே.
மோசேயின் மூலமாய் யெகோவா கட்டளை
யிட்டபடியே மோசேயும் ஆரோனும் அவர்
களைப் பதிவுசெய்தார்கள்.

லேவியரில் தரிசனக்கூடாரத்திலே 46, 47
செய்யும் பணிவிடை வேலைக்கும் சுமை
வேலைக்கும் உட்படத்தக்கவர்களான முப்
பது வயதுமுதல் ஐம்பது வயதுவரையு
முள்ளவர்கள் மோசேயினாலும் ஆரோனா
லும் இஸ்ரவேலின் தலைவராலும் பதிவுசெய்
யப்பட்டார்கள். அவர்களில் பதிவுசெய்யப் 48
பட்டவர்கள் எண்ணாயிரத்து ஐந்நூற்று
எண்பது பேர். யெகோவா மோசேக்குக் 49
கட்டளையிட்டபடியே அவர்கள் தங்கள்
தங்கள் பணிவிடைக்கென்றும் தங்கள்

தங்கள் சுமைக்கென்றும் மோசேயினால் பதிவுசெய்யப்பட்டார்கள்; யெகோவா மோசேக்குக் கட்டளையிட்டபடியே அவர்கள் இவ்விதமாக அவனால் பதிவுசெய்யப்பட்டார்கள்.

**5** 2 யெகோவா மோசேயினிடம்: | குஷ்டரோகிகள் யாவரையும் பிரமேகமூள்ளவர்கள் யாவரையும் சவத்தினால் தீட்டுப்பட்டவர்கள் யாவரையும் பாளயத்திலிருந்து விலக்கிவிட இஸ்ரவேல் புத்திரருக்குக் 3 கட்டளையிடு. ஆணாலும் பெண்ணாலும் அப்படிப்பட்டவர்களை நீங்கள் விலக்கிவிடவேண்டும்; அவர்களைப் பாளயத்திற்குப் புறம்பே விலக்கவேண்டும்.' தங்கள் பாளயங்களை அவர்கள் தீட்டுப்படுத்தக்கூடாது. அங்கே அவர்கள் நடுவில் நான் வாசம் 4 பண்ணுகிறேனே என்று சொன்னார். இஸ்ரவேல் புத்திரர் அந்தப்படியே செய்து அப்படிப்பட்டவர்களைப் பாளயத்திற்குப் புறம்பே விலக்கிவிட்டார்கள்; யெகோவா மோசேக்குச் சொன்னபடியே இஸ்ரவேல் புத்திரர் செய்தார்கள்.

5 பின்னும் யெகோவா மோசேயினிடம்: 6 நீ இஸ்ரவேல் புத்திரரிடம் பேசி: ஒரு புருஷனாலும் ஸ்திரீயாலும் மனிதர் சாதாரணமாய்ச் செய்யும் பாவங்களில் எதையாவது செய்து யெகோவாவுக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணிக் குற்ற 7 வாளியானால் | அந்த ஆள் தான் செய்த பாவத்தை அறிக்கையிடவேண்டும்; அவன் தான் வினைத்த முழுநஷ்டத்திற்கும் சரியானதையும் அதனோடுகூட்டி ஐந்திலொரு பங்கையும் செலுத்தவேண்டும்; தான் எவனுக்கு விரோதமாகக் குற்றம் செய்தானோ 8 அவனுக்கே கொடுக்கவேண்டும். அதை வாங்குதற்குரிய இனத்தான் ஒருவனும் இல்லாதேபோனால் பதில் கொடுப்பது முழுவதும் அவனுக்காகப் பிராயச்சித்தம் செய்யும் பிராயச்சித்தக் கடாவோடுகூட யெகோவாவுக்குச் செலுத்தப்பட்டு ஆசாரியனுக்கு 9 உரியதாகும். இஸ்ரவேல் புத்திரர் ஆசாரியனிடம் கொண்டுவருகிற பரிசுத்தமான படைப்புகளாவற்றிலும்உயர்த்திப் படைக்கும் காணிக்கை எதுவும் ஆசாரியனுக்கு 10 உரியதாகும். ஒவ்வொருவரும் பிரதிஷ்டை செய்வதெல்லாம் ஆசாரியனுக்குரியதாகும்; ஒருவன் ஆசாரியனுக்குக் கொடுக்கிற எதுவும் அவனுக்கே உரியது என்று சொல் என்றார்.

11 அதன்பின்னும் யெகோவா மோசேயி 12 னிடம்: நீ இஸ்ரவேல் புத்திரரோடு பேசி அவர்களிடம் இதைச் சொல்: ஒருவன் மனைவி வெறிதவறிப் புருஷனுக்குத் துரோகம் பண்ணி | ஒருவன் தன்னோடு சேரும் 13 படி சயனித்து அசுசிப்பட்டால், அவள் புருஷனின் கண்களுக்கு அது மறைக்கப்பட்டு வெளிக்கு வராதிருந்தும் சாட்சியில்லாமலும் அவள் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்படாமலுமிருந்தும் அவன் சமுசயங்கொள்வதுமுண்டு. சமுசயப்பட்டுத் 14 தன் மனைவியின்மேல் குரோதங்கொள்வானாகில், அவள் அசுசிப்பட்டிருந்தாலும் சரி அசுசிப்படாதிருந்தாலும் சரி, அவனே அவன் 15 ஆசாரியனிடம் அழைத்துக்கொண்டுவரவேண்டும். அவளோடுகூட அவனுக்கென்று படைப்பதற்கு ஒரு எப்பாவிலே பத்திலொரு பங்கான வாற்கோதுமை மாவையும் கொண்டுவரவேண்டும். அதன்மேல் எண்ணெய் வார்க்கவும் தூபவர்க்கம்போடவும் வேண்டாம். அது சமுசயக் காணிக்கை, அது அக்கிரமத்தை நினைப்பூட்டும் ஞாபகக் காணிக்கை. அப்பொழுது ஆசாரியன் 16 அவனைக் கிட்டிவரச்செய்து, யெகோவாவின் சந்நிதியில் நிறுத்துவான். ஒரு மண் 17 பாண்டத்திலே பரிசுத்த ஜலம் வார்த்து வாசஸ்தலத்தின் தரையிலே கொஞ்சம் புழுதியை எடுத்து அந்த ஜலத்திலே போடுவான். பின்பு ஆசாரியன் அந்த ஸ்தி 18 ரீயை யெகோவாவின் சந்நிதியில் நிறுத்தி அவள் தலையை விரித்துப்போட்டு சமுசயக் காணிக்கையாகிய ஞாபகக் காணிக்கையை அவள் உள்ளங்கையிலே வைக்கவேண்டும்; ஆசாரியன் கையிலோ சாபம் வருவிக்கும் கசப்பான ஜலம் இருக்கவேண்டும். அப் 19 பொழுது ஆசாரியன் அவளை ஆணையிடச் செய்து, உன் புருஷனோடேயன்றி வேறொருவனோடும் நீ சயனியாமலும் அசுசிப்படுவதற்கேதுவாய் நீ வெறி தவறுமலுமிருந்தால் சாபம் வருவிக்கும் இந்தக் கசப்பான ஜலத்தின் தோஷத்துக்கு நீ நீங்கலாயிருப்பாய். உன் 20 புருஷனல்லாத ஒருவனோடு நீ வெறிதவறிப் போய் உன் புருஷனல்லாத வேறொருவன் உன்னோடு சேரும்படி சயனித்ததால் நீ அசுசிப்பட்டிருப்பாயானால்—சாபம் வரு 21 விக்கிற இந்த ஆணையால் அந்த ஸ்திரீயை ஆணையிடச்செய்து அந்த ஸ்திரீயினிடம்—யெகோவா உன் தொடை சூம்பவும் உன் வயிறு வீங்கவும் செய்து உன் ஜனத்தின் மத்தியில் உன்னைச் சாபமிடுங்குறியும் ஆணையிடுங்குறியுமாக வைப்பார். சாபம் வரு 22 விக்கிற இந்த ஜலம் உன் வயிறு வீங்கவும் தொடை சூம்பவும் செய்யும்படி உன் குடலுக்குள் பிரவேசிக்கட்டும் என்று சொல்வான். அதற்கு அந்த ஸ்திரீ அப்படியே

ஆக, அப்படியே ஆக என்று சொல்ல
23 வேண்டும். பின்பு ஆசாரியன் இந்தச்
சாபவார்த்தைகளை ஒரு சிட்டில் எழுதி
அவைகளைக் கசப்பான ஜலத்திலே கழு
24 வி: | சாபம் வருவிக்கும் கசப்பான
ஜலத்தை அந்த ஸ்திரீ குடிக்கும்படி
செய்யவே சாபம் வருவிக்கும் அந்த ஜலம்
அவளுக்குள் இறங்கிக் கசப்பையுண்டாக்
கும்.
25 பின்பு ஆசாரியன் சமுசயக்காணிக்
கையை ஸ்திரீயின் கையிலிருந்து வாங்கி
அந்த போஜனபலியை யெகோவாவின் சந்
நிதியில் அசைவாட்டிப் பீடத்தினிடங்
26 கொண்டுவந்து | ஞாபகக்குறி பாகமாக
அதிலே ஒரு கைப்பிடி நிறைய எடுத்துப்
பீடத்தின்மேல் தகனித்துப் பின்பு அந்த
ஜலத்தை ஸ்திரீக்குக் குடிக்கக் கொடுப்பான்.
27 அந்த ஜலத்தைக் குடிக்கச்செய்யவே அவள்
அசுசிப்பட்டுத் தன் புருஷனுக்குத் துரோ
கம்பண்ணியிருந்தால் சாபம் வருவிக்கும்
ஜலம் கசப்பையுண்டாக்கும்படி அவளுக்
குள் இறங்கி அவள் வயிறு வீங்கவும் அவள்
தொடை சும்பவும் செய்யும், இப்படியாக
அந்த ஸ்திரீ தன் ஜனங்களுக்குள்ளே சாப
28 மாயிருப்பாள். அந்த ஸ்திரீ அசுசிப்படா
மல் சுத்தமாயிருந்தாலோ அவள் அதற்கு
நீங்கலாகிக் கர்ப்பந்தரிக்கத்தக்கவளா
29 யிருப்பாள். இதுவே காதற் சமுசயத்துக்
குரிய பிரமாணம்; ஒரு ஸ்திரீ தன் புருஷ
னல்லாத ஒருவனோடே நெறிதவறிப்போய்
30 அசுசிப்பட்டாலும் சரி | புருஷன் சமு
சயப்பட்டுத் தன் மனைவியின்மேல் குரோதங்
கொண்டாலும் சரி, அவன் அந்த ஸ்திரீயை
யெகோவாவின் சந்நிதியில் கொண்டுபோய்
நிறுத்தவேண்டும், நிறுத்தவே ஆசாரியன்
இந்தப் பிரமாணத்தின்படியெல்லாம் அவ
31 ளுக்குச் செய்வான். இப்படியாகவே புரு
ஷன் குற்றத்திற்கு நீங்கலாவான், ஸ்திரீயோ
தன் குற்றத்தைச் சுமப்பாள் என்று சொன்
னார்.

**6** யெகோவா மோசேயினிடம்: நீ இஸ்ர
2 வேல் புத்திரரோடு பேசி, அவர்களிடம்
இதைச் சொல்: புருஷனாகிலும் ஸ்திரீயாகி
லும் தன்னை விலக்கிவைத்து யெகோவா
வுக்கென்று பிரதிஷ்டை செய்வதற்கென
விலக்கல் விரதமாகிய நசீரப் பொருத்தனை
3 யைச் செய்துகொண்டால், அப்படிப்பட்ட
வன் திராட்சரசத்துக்கும் மதுபானத்துக்கும்
தன்னை விலக்கிக்கொள்ளவேண்டும். திராட்
சரசங்கலந்த புளிப்பான பானத்தையும்
மதுபானங்கலந்த வேறெந்தப் புளிப்பான
பானத்தையும் திராட்சப்பழத்தின் சாற்றை
யும் பருகலாகாது. திராட்சப்பழத்தையும்
திராட்சை வற்றலையும் தின்னலாகாது. தான் 4
நசீரனாயிருக்கும் நாளெல்லாம் திராட்சச்
செடியின் விதை தளிர் முதலியன சேர்ந்த
வேறெதையாகிலும் புசிக்கலாகாது. அவன் 5
நசீர விரதங்காக்கும் நாளெல்லாம் சவரகன்
கத்தி அவன் தலையின்மேல் படலாகாது;
அவன் யெகோவாவுக்கென்று தன்னை
விலக்கிவைத்திருக்கும் காலம் நிறைவேறித்
திருமளவும் பரிசுத்தமாயிருந்து தன் தலை
மயிரை வளரவிடவேண்டும். அவன் 6
யெகோவாவுக்கென்று தன்னை விலக்கிவைத்
திருக்கும் நாளெல்லாம் யாதொரு பிரேதத்
தின் சமீபத்திலும் போகக்கூடாது. அவன்
தன் கடவுளுக்கென்று செய்த நசீரப் 7
பொருத்தனை அவன் தலைமேல் இருக்கிற
படியால், அவன் தகப்பன், தாய், சகோ
தரன், சகோதரி ஆகிய இவர்கள் மரித்தா
லும் அவன் தன்னைத் தீட்டுப்படுத்தலா
காது. அவன் நசீரனாயிருக்கும் நாளெல் 8
லாம் யெகோவாவுக்குப் பரிசுத்தமாயிருப்
பான். அவனண்டையிலே ஒருவன் சடுதி 9
யில் மரணமடைய நசீர விரதமுள்ள அவன்
தலை தீட்டுப்பட்டதேயாகில் அவன் தன்
சுத்திகரிப்பின் நாளாகிய ஏழாம் நாளில்
தன் தலைமயிரைச் சிரைத்துக்கொண்டு |
எட்டாம் நாளில் இரண்டு காட்டுப்புறுக் 10
கோயாவது இரண்டு மாடப்புறுக்களையா
வது ஆசாரியனிடம் தரிசனக்கூடார வாச
லிலே கொண்டுவரவேண்டும். அப்பொழுது 11
ஆசாரியன் ஒன்றைப் பாவநிவாரணபலி
யாகவும் மற்றொன்றைத் தகனபலியாகவும்
செலுத்திப் பிணத்தினால் அவனுக்கு வந்த
தோஷத்துக்குப் பிராயச்சித்தஞ்செய்வான்;
பிற்பாடு அவன் தன் தலையை அக்காளி
லேயே பிரதிஷ்டை செய்வான். தான் 12
பொருத்தனை செய்திருந்த நாட்களுக்கு
மறுபடியும் தன்னை யெகோவாவுக்கென்று
விலக்கிவைத்து ஒரு வருஷத்து ஆட்டுக்
குட்டியைக் குற்றநிவாரணபலியாகக்
கொண்டுவரவேண்டும்; அவனுடைய நசீர
விரதம் தீட்டுப்பட்டதினால் முன் விரதங்
காத்த நாட்கள் விருதாவாயின.
நசீரனுக்குரிய பிரமாணம் இதுவே: 13
விரதநாட்கள் நிறைவேறித்தீர்ந்த தினத்தி
லேயே அவன் தரிசனக்கூடார வாச
லண்டை கொண்டுவரப்படுவான்; அங்கே 14
அவன் தகனபலியாக ஒரு வயதான பழு
தற்ற ஆட்டுக்குட்டி ஒன்றையும் பாவ
நிவாரணபலியாக ஒரு வயதான பழுதற்ற
பெண்ணாட்டுக்குட்டி ஒன்றையும் சமாதான
பலியாகப் பழுதற்ற ஆட்டுக்கடா ஒன்றை

15 யும், ஒரு கூடையிலேயே புளிப்பில்லாத வகைகளையும் எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் செய்த தோசைகளையும் எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லாத அடைகளையும் அவைகளுக்குரிய போஜன பலியையும் பானபலியையும் யெகோவாவுக்குத் தன் காணிக்கையாகச் செலுத்தவேண்
16 டும். அவைகளை ஆசாரியன் யெகோவாவின் சந்நிதியில் கொண்டுவந்து அவனுடைய பாவநிவாரணபலியையும் அவனு
17 டைய தகனபலியையும் செலுத்தி | ஆட்டுக்கடாவைக் கூடையிலிருக்கும் புளிப்பில்லாதவைகளோடுங்கூட யெகோவாவுக்குச் சமாதானபலியாகச் செலுத்தி, அவனுடைய போஜனபலியையும் பானபலியையும்
18 படைப்பான். அப்பொழுது நசிரன் தரிசனக்கூடாரவாசலிலே, பொருத்தனை செய்திருந்த தன் தலைமயிரைச் சிரைத்து, பொருத்தனைசெய்திருந்த தன் தலைமயிரை எடுத்துச் சமாதானபலியின்கீழ் எரிகிற
19 அக்கினியிலே போடுவான். நசிரன் தன் தலைமயிரைச் சிரைத்துக்கொண்டபின்பு ஆசாரியன் கடாவினுடைய அவித்த முன்னந் தொடையையும் கூடையில் இருக்கிற வைகளிலே புளிப்பில்லாத ஒரு தோசையையும் புளிப்பில்லாத ஒரு அடையையும் எடுத்து அவனுடைய உள்ளங்கைகளில்
20 வைத்து | அவைகளை யெகோவாவின் சந்நிதியில் அசைவாட்டுவான்; அது அசைவாட்டப்படும் மார்க்கண்டத்தோடும் உயர்த்திப் படைக்கும் முன்னந்தொடையோடும் ஆசாரியனுக்குரியதாகும்; அது பரிசுத்தமானது; பின்பு நசிரன் திராட்சரசம் குடிக்க
21 லாம். பொருத்தனைசெய்த நசிரனுக்கும் அவன் தரக்கூடிய வேறெந்தக் காணிக்கைக்குமேயன்றித் தன் நசிரவிரதத்தினிமித்தம் யெகோவாவுக்குச் செலுத்தித் தீரவேண்டிய காணிக்கைக்கும் உரிய பிரமாணம் இதுவே. அவன் செய்துகொண்ட பொருத்தனையின்படியே தன் பொருத்தனையின் பிரமாணத்திற்கேற்கச் செய்துதீரவேண்டும் என்று சொன்னார்.

22 பின்னும் யெகோவா மோசேயினிடம்:
23 நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் பேசி நீங்கள் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கும்போதெல்லாம்,

24 யெகோவா உன்னை ஆசீர்வதித்து
உன்னைக் காப்பாராக;

25 யெகோவா தமது திருமுகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி
உன்மேல் கிருபையாயிருப்பாராக;

26 யெகோவா தமது திருமுகத்தை உன்மேல்
பிரசன்னமாகச் செய்து
உனக்குச் சமாதானம் கட்டளையிடுவாராக
என்று சொல்லுங்கள் என்று கட்டளையிடு.

27 இவ்விதமாய் அவர்கள் என் நாமத்தை இஸ்ரவேல் புத்திரர்மேல் கூறவேண்டும்; அப்பொழுது நான் அவர்களை ஆசீர்வதிப்பேன் என்று சொன்னார்.

7 மோசே வாசஸ்தலத்தை ஸ்தாபனம்பண்ணி அதையும் அதின் எல்லாப்பணிமுட்டுகளையும் பலிபீடத்தையும் அதின் எல்லாப் பணிமுட்டுகளையும் அபிஷேகஞ்செய்து பிரதிஷ்டைபண்ணி முடித்தான். அந்த 2 நாளிலே இஸ்ரவேலின் பிரபுக்கள் காணிக்கைகளைச் செலுத்தினார்கள்; இவர்கள் தங்களின் வீட்டாருக்குத் தலைவர், பதிவு செய்யப்பட்டவர்களின்மேல் விசாரணைக்கென்று நியமிக்கப்பட்ட கோத்திரப் பிரபுக்கள். இவர்கள் யெகோவா 3 வின் சந்நிதியில் காணிக்கையாகச் செலுத்த ஆறு கூண்டுவண்டிகளையும் பன்னிரண்டு மாடுகளையும் இரண்டிரண்டு பிரபுக்களுக்கு ஒவ்வொரு வண்டியும் ஒவ்வொரு பிரபுவுக்கு ஒவ்வொரு மாடுமாக வாசஸ்தலத்தின் முன் கொண்டுவந்தார்கள். அப்பொழுது 4 யெகோவா மோசேயினிடம்: தரிசனக்கூடா 5 ரப்பணிவிடைக்கென்று நீ அவைகளை அவர்களிடம் வாங்கி லேவியருக்கு அவரவர் பணிவிடைக்குத் தக்கபடி கொடுத்துவிடு என்றார். அப்படியே மோசே அந்த வண் 6 டிகளையும் மாடுகளையும் வாங்கி லேவியருக்குக் கொடுத்தான். இரண்டு வண்டிகளை 7 யும் நான்கு மாடுகளையும் கெர்சோன் புத்திரருக்கு அவர்கள் பணிவிடைக்குத்தக்கபடியாகக் கொடுத்தான். நான்கு வண்டிகளை 8 யும் எட்டு மாடுகளையும் மெராரியின் புத்திரருக்கு அவர்களின் பணிவிடைக்குத் தக்கபடியாகக் கொடுத்தான். இவர்கள் ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் இத்தாமாருடைய விசாரணையின்கீழ் பணிவிடை செய்தார்கள். கோகாத்தின் புத்திரருக்கோ 9 ஒன்றும் கொடுக்கவில்லை; பரிசுத்தமானவற்றைச் சுமக்கும் பணிவிடையில் இவர்களுக்கென்று குறிக்கப்பட்டவற்றை இவர்கள் தோள்மேல் சுமந்தே தீரவேண்டும். பலி 10 பீடத்தை அபிஷேகம்பண்ணின நாளிலே பிரபுக்கள் பிரதிஷ்டைக் காணிக்கைகளைக் கொண்டுவந்தார்கள். பலிபீடத்தின்முன் பிரபுக்கள் தங்கள் காணிக்கைகளைக் கொண்டுவந்தார்கள். அப்பொழுது யெகோவா 11 மோசேயினிடம்: பலிபீடப் பிரதிஷ்டைக்கென்று ஒவ்வொரு பிரபுவும் தன்தன் நாளில்

தன்தன் காணிக்கையைக் கொண்டுவர வேண்டும் என்றார்.

12 அப்படியே முதலாம் நாளில் தன் காணிக்கையைச் செலுத்தினவன் யூதா கோத்திரத்தாலுகிய அம்மீனதாபின் குமா
13 ரன் நகசோன். அவன் காணிக்கை: பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படி நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளித்தட்டு, எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலம், இவை நிறைய போஜனபலியாகப் படைக்கும்படி எண்
14 ணெயிலே பிசைந்த மெல்லியமா; பத்துச் சேக்கல் நிறையுள்ள ஒரு பொற்கரண்டி,
15 இது நிறையத் தூபவர்க்கம்; தகனபலியாகப் படைக்கும்படி ஒரு இளங்காளை, ஒரு ஆட்டுக்கடா, ஒரு வயதான ஒரு ஆட்
16 டுக்குட்டி; பாவநிவாரணபலியாகப் படைக்
17 கும்படி ஒரு வெள்ளாட்டுக்கடா; சமாதான பலியாகப் படைக்கும்படி இரண்டு மாடுகள், ஐந்து ஆட்டுக்கடாக்கள், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்கள், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகள்; இவை அம்மீனதாபின் குமாரன் நகசோனுடைய காணிக்கை.

18 இரண்டாம் நாளில் இசக்காரின் பிரபுவாகிய சூகாரின் குமாரன் நெதனெயேல்
19 காணிக்கை செலுத்தினான். அவன் செலுத்தின காணிக்கை: பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படி நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளித்தட்டு, எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலம், இவை நிறைய போஜனபலியாகப் படைக்கும்படி எண்ணெயிலே பிசைந்த மெல்லி
20 யமா; பத்துச் சேக்கல் நிறையுள்ள பொற்
21 கரண்டி, இது நிறையத் தூபவர்க்கம்; தகனபலியாகப் படைக்கும்படி ஒரு இளங்காளை, ஒரு ஆட்டுக்கடா, ஒரு வயதான ஒரு
22 ஆட்டுக்குட்டி; பாவநிவாரணபலியாகப் படைக்கும்படி ஒரு வெள்ளாட்டுக்கடா;
23 சமாதானபலியாகப் படைக்கும்படி இரண்டு மாடுகள், ஐந்து ஆட்டுக்கடாக்கள், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்கள், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகள்; இவை சூகாரின் குமாரன் நெதனெயேலுடைய காணிக்கை.

24 மூன்றாம் நாளில் ஏலோனின் குமாரன் எலியாப் என்னும் செபுலோன் புத்திரரின்
25 பிரபு; அவன் காணிக்கை: பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படி நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளித்தட்டு, எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலம், இவை நிறைய போஜன பலியாகப் படைக்கும்படி எண்ணெயிலே பிசை
26 ந்த மெல்லியமா; பத்துச் சேக்கல் நிறை
யுள்ள பொற்கரண்டி, இது நிறையத் தூப
வர்க்கம்; தகனபலியாகப் படைக்கும்படி 27
ஒரு இளங்காளை, ஒரு ஆட்டுக்கடா, ஒரு
வயதான ஒரு ஆட்டுக்குட்டி; பாவநிவார 28
ணபலியாகப் படைக்கும்படி ஒரு வெள்
ளாட்டுக்கடா; சமாதானபலியாகப் படைக் 29
கும்படி இரண்டு மாடுகள், ஐந்து ஆட்டுக்
கடாக்கள், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்கள்,
ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகள்;
இவை ஏலோனின் குமாரன் எலியாபினுடைய காணிக்கை.

நான்காம் நாளில் செதேயூரின் குமாரன் 30
எலிசூர் என்னும் ரூபன் புத்திரரின் பிரபு;
அவன் காணிக்கை: பரிசுத்த ஸ்தலத்துச் 31
சேக்கல் கணக்கின்படி நூற்றுமுப்பது
சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளித்தட்டு,
எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்
ளிக்கலம், இவை நிறைய போஜனபலியா
கப் படைக்கும்படி எண்ணெயிலே பிசைந்
த மெல்லியமா; பத்துச்சேக்கல் நிறையுள்ள 32
ஒரு பொற்கரண்டி, இது நிறையத் தூப
வர்க்கம்; தகனபலியாகப் படைக்கும்படி 33
ஒரு இளங்காளை, ஒரு ஆட்டுக்கடா, ஒரு
வயதான ஒரு ஆட்டுக்குட்டி; பாவநிவார 34
ணபலியாகப் படைக்கும்படி ஒரு வெள்
ளாட்டுக்கடா; சமாதானபலியாகப் படைக் 35
கும்படி இரண்டு மாடுகள், ஐந்து ஆட்டுக்
கடாக்கள், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்கள்,
ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகள்;
இவை செதேயூரின் குமாரன் எலிசூரினு
டைய காணிக்கை.

ஐந்தாம் நாளில் சூரிஷதாயின் குமாரன் 36
செலூமியேல் என்னும் சிமியோன் புத்திர
ரின் பிரபு; அவன் காணிக்கை: பரிசுத்த 37
ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படி நூற்று
முப்பது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்
ளித்தட்டு, எழுபது சேக்கல் நிறையுள்ள
ஒரு வெள்ளிக்கலம், இவை நிறைய போஜ
னபலியாகப் படைக்கும்படி எண்ணெயிலே
பிசைந்த மெல்லியமா; பத்துச்சேக்கல் 38
நிறையுள்ள ஒரு பொற்கரண்டி, இது நிறை
யத் தூபவர்க்கம்; தகனபலியாகப் படைக் 39
கும்படி ஒரு இளங்காளை, ஒரு ஆட்டுக்
கடா, ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டி;
பாவநிவாரணபலியாகப் படைக்கும்படி 40
ஒரு வெள்ளாட்டுக்கடா; சமாதானபலியா 41
கப் படைக்கும்படி இரண்டு மாடுகள்,
ஐந்து ஆட்டுக்கடாக்கள், ஐந்து வெள்
ளாட்டுக்கடாக்கள், ஒரு வயதான ஐந்து
ஆட்டுக்குட்டிகள்; இவை சூரிஷதாயின்
குமாரன் செலூமியேலினுடைய காணி
க்கை.

42 ஆரும் நாளில் தெகுவேலின் குமாரன்
எலியாசாப் என்னும் காத் புத்திரரின் பிரபு;
43 அவன் காணிக்கை: பரிசுத்த ஸ்தலத்துச்
சேக்கல் கணக்கின்படி நூற்றுமுப்பது சேக்
கல் நிறையுள்ள ஒரு வெள்ளித்தட்டு, எழு
பது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்
கலம், இவை நிறைய போஜனபலியாகப்
படைக்கும்படி எண்ணெயிலே பிசைந்த
44 மெல்லியமா; பத்துச்சேக்கல் நிறையுள்ள
ஒரு பொற்கரண்டி, இது நிறையத் தூப
45 வர்க்கம்; தகனபலியாகப் படைக்கும்படி
ஒரு இளங்காளை, ஒரு ஆட்டுக்கடா, ஒரு
46 வயதான ஒரு ஆட்டுக்குட்டி; பாவநிவார
ணபலியாகப் படைக்கும்படி ஒரு வெள்
47 ளாட்டுக்கடா; சமாதானபலியாகப் படைக்
கும்படி இரண்டு மாடுகள், ஐந்து ஆட்டுக
கடாக்கள், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்கள்,
ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகள்;
இவை தெகுவேலின் குமாரன் எலியாசாபி
னுடைய காணிக்கை.
48 ஏழாம் நாளில் அம்மியூதின் குமாரன்
எலிஷாமா என்னும் எப்பிராயீம் புத்திர
49 ரின் பிரபு; அவன் காணிக்கை: பரிசுத்த
ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படி நூற்று
முப்பது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்
ளித்தட்டு, எழுபது சேக்கல் நிறையுள்ள
ஒரு வெள்ளிக்கலம், இவை நிறைய போஜ
னபலியாகப் படைக்கும்படிஎண்ணெயிலே
50 பிசைந்த மெல்லியமா; பத்துச்சேக்கல்
நிறையுள்ள ஒரு பொற்கரண்டி, இது நிறை
51 யத் தூபவர்க்கம்; தகனபலியாகப் படைக்
கும்படி ஒரு இளங்காளை, ஒரு ஆட்டுக்
கடா, ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டி;
52 பாவநிவாரணபலியாகப் படைக்கும்படி
53 ஒரு வெள்ளாட்டுக்கடா; சமாதானபலியா
கப் படைக்கும்படி இரண்டு மாடுகள்,
ஐந்து ஆட்டுக்கடாக்கள், ஐந்து வெள்ளாட்
டுக்கடாக்கள், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்
குட்டிகள்; இவை அம்மியூதின் குமாரன்
எலிஷாமாவினுடைய காணிக்கை.
54 எட்டாம் நாளில் பெதாசூரின் குமாரன்
கமாலியேல் என்னும் மனாசே புத்திரரின்
55 பிரபு; அவன் காணிக்கை: பரிசுத்த ஸ்தலத்
துச் சேக்கல் கணக்கின்படி நூற்றுமுப்பது
சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளித்தட்டு,
எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்
ளிக்கலம், இவை நிறைய போஜனபலியா
கப் படைக்கும்படி எண்ணெயிலே பிசை
56 ந்த மெல்லியமா; பத்துச்சேக்கல் நிறை
யுள்ள ஒரு பொற்கரண்டி, இது நிறையத்
57 தூபவர்க்கம்; தகனபலியாகப் படைக்கும்
படி ஒரு இளங்காளை, ஒரு ஆட்டுக்கடா,
ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டி; பாவ 58
நிவாரணபலியாகப் படைக்கும்படி ஒரு
வெள்ளாட்டுக்கடா; சமாதானபலியாகப் 59
படைக்கும்படி இரண்டு மாடுகள், ஐந்து
ஆட்டுக்கடாக்கள், ஐந்து வெள்ளாட்டுக்
கடாக்கள்; ஒரு வயதான ஐந்து ஆட்டுக்
குட்டிகள்; இவை பெதாசூரின் குமாரன்
கமாலியேலினுடைய காணிக்கை.
ஒன்பதாம் நாளில் கிதியோனியின் குமா 60
ரன் அபீதான் என்னும் பென்யமீன் புத்திர
ரின் பிரபு; அவன் காணிக்கை: பரிசுத்த 61
ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படி நூற்று
முப்பது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்
ளித்தட்டு, எழுபது சேக்கல் நிறையுள்ள
ஒரு வெள்ளிக்கலம், இவை நிறைய போஜ
னபலியாகப் படைக்கும்படி எண்ணெ
யிலே பிசைந்த மெல்லியமா; பத்துச்சேக் 62
கல் நிறையுள்ள ஒரு பொற்கரண்டி, இது
நிறையத் தூபவர்க்கம்; தகனபலியாகப் 63
படைக்கும்படி ஒரு இளங்காளை, ஒரு ஆட்
டுக்கடா, ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டி;
பாவநிவாரணபலியாகப் படைக்கும்படி 64
ஒரு வெள்ளாட்டுக்கடா; சமாதானபலியா 65
கப் படைக்கும்படி இரண்டு மாடுகள்,
ஐந்து ஆட்டுக்கடாக்கள், ஐந்து வெள்ளாட்
டுக்கடாக்கள், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்
குட்டிகள்; இவை கிதியோனியின் குமாரன்
அபீதானுடைய காணிக்கை.
பத்தாம் நாளில் அம்மிஷதாயின் குமா 66
ரன் அகியேசேர் என்னும் தாண் புத்திரரின்
பிரபு; அவன் காணிக்கை: பரிசுத்த ஸ்த 67
லத்துச் சேக்கல் கணக்கின்படி நூற்றுமுப்
பது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளித்
தட்டு, எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு
வெள்ளிக்கலம், இவை நிறைய போஜன
பலியாகப் படைக்கும்படி எண்ணெயிலே
பிசைந்த மெல்லியமா; பத்துச்சேக்கல் 68
நிறையுள்ள ஒரு பொற்கரண்டி, இது நிறை
யத் தூபவர்க்கம்; தகனபலியாகப் படைக் 69
கும்படி ஒரு இளங்காளை, ஒரு ஆட்டுக்
கடா, ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டி;
பாவநிவாரணபலியாகப் படைக்கும்படி 70
ஒரு வெள்ளாட்டுக்கடா; சமாதானபலியா 71
கப் படைக்கும்படி இரண்டு மாடுகள்,
ஐந்து ஆட்டுக்கடாக்கள், ஐந்து வெள்ளாட்
டுக்கடாக்கள், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்
குட்டிகள்; இவை அம்மிஷதாயின் குமா
ரன் அகியேசேருடைய காணிக்கை.
பதினோராம் நாளில் ஒகிரானின் குமாரன் 72
பாகியேல் என்னும் ஆசேர் புத்திரரின்
பிரபு; அவன் காணிக்கை: பரிசுத்த ஸ்தலத் 73
துச் சேக்கல் கணக்கின்படி நூற்றுமுப்பது

சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளித்தட்டு, எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலம், இவை நிறைய போஜனபலியாகப் படைக்கும்படி எண்ணெயிலே பிசைந்த 74 த மெல்லியமா; பத்துச்சேக்கல் நிறையுள்ள ஒரு பொற்கரண்டி, இது நிறையத் தூப 75 வர்க்கம்; தகனபலியாகப் படைக்கும்படி ஒரு இளங்காளை, ஒரு ஆட்டுக்கடா, ஒரு 76 வயதான ஒரு ஆட்டுக்குட்டி; பாவநிவாரணபலியாகப் படைக்கும்படி ஒரு வெள் 77 ளாட்டுக்கடா; சமாதானபலியாகப் படைக்கும்படி இரண்டு மாடுகள், ஐந்து ஆட்டுக்கடாக்கள், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்கள், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகள்; இவை ஒனிரானின் குமாரன் பாகியேலுடைய காணிக்கை.

78 பன்னிரண்டாம் நாளில் ஏனனின் குமாரன் அரோ என்னும் நப்தலி புத்திரரின் 79 பிரபு; அவன் காணிக்கை: பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படி நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளித்தட்டு, எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலம், இவை நிறைய போஜனபலியாகப் படைக்கும்படி எண்ணெயிலே பிசைந்த 80 மெல்லியமா; பத்துச்சேக்கல் நிறையுள்ள ஒரு பொற்கரண்டி, இது நிறையத் தூபவர்க் 81 கம்; தகனபலியாகப் படைக்கும்படி ஒரு இளங்காளை, ஒரு ஆட்டுக்கடா, ஒரு வயதான 82 ஒரு ஆட்டுக்குட்டி; பாவநிவாரணபலியாகப் படைக்கும்படி ஒரு வெள்ளாட்டுக் 83 கடா; சமாதானபலியாகப் படைக்கும்படி இரண்டு மாடுகள், ஐந்து ஆட்டுக்கடாக்கள், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்கள், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகள்; இவை ஏனனின் குமாரன் அரோவினுடைய காணிக்கை.

84 பலிபீடத்தை அபிஷேகம்பண்ணின போது இஸ்ரவேலின் பிரபுக்கள் கொண்டு வந்த பிரதிஷ்டைக்காணிக்கைகள் இவைகளே: வெள்ளித்தட்டுகள் பன்னிரண்டு, வெள்ளிக்கலங்கள் பன்னிரண்டு, பொற் 85 கரண்டிகள் பன்னிரண்டு. ஒவ்வொரு வெள்ளித்தட்டும் நூற்றுமுப்பது சேக்கல் நிறை, ஒவ்வொரு கலமும் எழுபது சேக்கல் நிறை, இந்தப் பாத்திரங்களின் வெள்ளியெல்லாம் பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படி இரண்டாயிரத்து நானூறு 86 சேக்கல் நிறையானது. தூபவர்க்கம் நிறைந்த பொற்கரண்டிகள் பன்னிரண்டும் ஒவ்வொன்று பரிசுத்த ஸ்தலத்துச் சேகல் கணக்கின்படி பத்துச்சேக்கல் நிறையாகச் 87 ரண்டிகளின் பொன்னெல்லாம் நூற்றிரு பது சேக்கல் நிறையானது. தகனபலியாகப் படைக்கப்பட்ட ஆடுமாடுகளெல்லாம் காளைகள் பன்னிரண்டு, ஆட்டுக்கடாக்கள் பன்னிரண்டு, ஒரு வயதான ஆட்டுக்குட்டிகள் பன்னிரண்டு; அவைகளுக்குரிய போஜனபலிகளும் அவற்றோடுகூடப் படைக்கப்பட்டன; பாவநிவாரணபலியாகப் படைக்கப்பட்ட வெள்ளாட்டுக்கடாக்கள் பன்னிரண்டு; சமாதானபலியாகப் படைக்கப் 88 பட்ட ஆடுமாடுகளெல்லாம் காளைகள் இருபத்து நான்கு, ஆட்டுக்கடாக்கள் அறுபது, வெள்ளாட்டுக்கடாக்கள் அறுபது, ஒரு வயதான ஆட்டுக்குட்டிகள் அறுபது; பலிபீடத்தை அபிஷேகம்பண்ணினபின் படைத்த பிரதிஷ்டைக் காணிக்கை இதுவே.

மோசே கடவுளோடு பேசும்படி தரிச 89 னக்கூடாரத்திற்குள் பிரவேசித்தபோது தன்னோடு பேசுகிறவரின் சத்தம் சாட்சியப் பெட்டகத்தின்மேலுள்ள கிருபாசனமான இரண்டு கேருபுகளின் நடுவிலிருந்து வரக் கேட்டான்; அங்கே இருந்து அவனோடே பேசினார்.

யெகோவா மோசேயினிடம்: | நீ 8
ஆரோனோடு பேசி, அகல்களை வைக் 2
கும்போது ஏழு அகல்களும் விளக்குத்தண்டிற்கு எதிரே ஒளிவீசும்படி வைக்கவேண்டும் என்று சொல் என்றார். யெகோவா 3
மோசேக்குக் கட்டளையிட்டபடியே ஆரோன் செய்து விளக்குத்தண்டின் எதிர்பக்கமுக 4
மாய் ஒளிவீசும்படி அகல்களை வைத்தான். இந்தக் குத்துவிளக்கு பொன்னினால் அடிப்பு வேலையாய்ச் செய்யப்பட்டிருந்தது, பாதமுதல் பூக்கள்வரைக்கும் அடிப்பு வேலையே. யெகோவா மோசேக்குக் காண்பித்த மாதிரியின்படியே அவன் குத்துவிளக்கைச் செய்திருந்தான்.

பின்னும் யெகோவா மோசேயினிடம்: 5
நீ இஸ்ரவேல் புத்திரரின் நடுவினின்று 6
லேவியரைப் பிரித்தெடுத்து அவர்களைச் சுத்திகரிக்கவேண்டும்; அவர்களைச் சுத்தி 7
கரிக்க அவர்களுக்கு இப்படிச் செய்: அவர்கள்மேல் பாவநிவாரண தீர்த்தத்தைத் தெளி; அவர்கள் சர்வாங்க சௌரம்பண்ணித் தங்கள் வஸ்திரங்களைத் துவைத்துத் தங்களைச் சுத்திகரித்துக்கொள்ளவேண்டும். அப்பொழுது அவர்கள் ஒரு இளங்காளை 8
யையும் அதற்குரிய போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவையும் கொண்டுவரவே, நீ பாவநிவாரணபலியாக வேறொரு இளங்காளையையும் கொண்டுவர வேண்டும். லேவியரைத் தரிசனக்கூடாரத் 9
தின் எதிரே கிட்டிவரச்செய்து இஸ்ரவேல்

புத்திரரின் சபை முழுதையும் கூடிவரச்
10 செய். நீ லேவியரை யெகோவாவின் சந்நிதி
யில் இப்படி வரச்செய்யும்போது இஸ்ர
வேல் புத்திரர் தங்கள் கைகளை லேவியர்
11 மேல் வைப்பார்கள். அப்பொழுது ஆரோன்
இஸ்ரவேல் புத்திரர் படைக்கும் அசைவாட்
டும் காணிக்கையாக யெகோவாவின் முன்
னிலையில் அவர்களையே நிறுத்தவேண்டும்;
இப்படிச் செய்யப்படவே லேவியர்
யெகோவாவின் பணிவிடைக்கு உரியவரா
12 வார்கள். அதன்பின் லேவியர் தங்கள்
கைகளைக் காளைகளின் தலைமேல் வைப்பார்
கள்; நீ லேவியருக்காகப் பிராயச்சித்தம்
செய்யும்பொருட்டு அவைகளில் ஒன்றைப்
பாவநிவாரணபலியாகவும் மறறொன்றைத்
தகனபலியாகவும் யெகோவாவுக்குச்
13 செலுத்து. லேவியரை ஆரோனுக்கும்
அவன் குமாரருக்கும் முன்பாக நிறுத்தி
அவர்களை யெகோவாவுக்கு அசைவாட்டும்
14 காணிக்கையாகப் படை. இப்படியாக நீ
லேவியரை இஸ்ரவேல் புத்திரரின் கூடிவி
னின்று பிரித்தெடுப்பாய், லேவியர் எனக்
15 குரியவர்களாவார்கள். இவ்விதமாய் நீ
லேவியரைச் சுத்திகரித்து அவர்களை அசை
வாட்டும் காணிக்கையாகப் படைத்தபின்
அவர்கள் தரிசனக்கூடாரத்திலே பணி
16 விடை செய்யப்போவார்கள். இஸ்ரவேல்
புத்திரரிலிருந்து அவர்கள் எனக்குரியவர்
களாகவே கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்;
இஸ்ரவேல் புத்திரர் எல்லாரிலும் கர்ப்பம்
திறந்து பிறக்கிற முதற்பேறான யாவுக்கும்
பதிலாக அவர்களை எனக்கென்று எடுத்துக்
17 கொண்டேன்; இஸ்ரவேல் புத்திரரில்,
மனிதரிலும் மிருகங்களிலும், முதற்பேறான
வையெல்லாம் என்னுடையன. எகிப்து
தேசத்தில் முதற்பேறான யாவையும் நான்
சங்காரித்தநாளிலே அவைகளை எனக்கென்று
18 பிரதிஷ்டைசெய்தேன். இஸ்ரவேல் புத்தி
ரரிலுள்ள முதற்பேறான யாவுக்கும் பதிலாக
19 லேவியரை எடுத்துக்கொண்டேன்; லேவிய
ரை இஸ்ரவேல் புத்திரரின் கூடுவினின்று
பிரித்தெடுத்து ஆரோனுக்கும் அவன் குமா
ரருக்கும் உரியவர்களாகவே கொடுத்தேன்,
லேவியர் இஸ்ரவேல் புத்திரரின் பணிவிடை
யைத் தரிசனக்கூடாரத்தில் செய்துவந்து
இஸ்ரவேல் புத்திரருக்காகப் பிராயச்சித்தம்
செய்வார்கள். அப்பொழுது தாங்களாகவே
பரிசுத்தமானவற்றைக் கிட்டிச் சேர்வதினால்
உண்டாகக்கூடிய வாதை இஸ்ரவேல் புத்
திரர் கூடுவில் உண்டாகாது என்று சொன்
20 னார். அப்படியே மோசேயும் ஆரோனும்
இஸ்ரவேல் புத்திரரின் சபையார் யாவரும்
லேவியருக்குச் செய்தார்கள்; யெகோவா
லேவியரைக்குறித்து மோசேக்குக் கட்டளை
யிட்டபடியெல்லாம் இஸ்ரவேல் புத்திரர்
அவர்களுக்குச் செய்தார்கள். லேவியர் தங் 21
களைச் சுத்திகரித்துக்கொண்டு தங்கள் வஸ்தி
ரங்களைத் துவைத்தார்கள்; பின்பு ஆரோன்
அவர்களை யெகோவாவின் முன்னிலையில்
அசைவாட்டும் காணிக்கையாக நிறுத்தி
அவர்களைச் சுத்திகரிக்கும்படி அவர்களுக்
காகப்பிராயச்சித்தம்செய்தான். பின்பு லேவி 22
யர், ஆரோனும் அவன் குமாரரும் பார்த்துக்
கொண்டிருக்கத் தரிசனக்கூடாரத்தில் தங்
கள் பணிவிடையைச் செய்யப்போனார்கள்;
யெகோவா லேவியரைக்குறித்து மோசேக்
குக் கட்டளையிட்டபடியே அவர்களுக்குச்
செய்தார்கள்.

பின்னும் யெகோவா மோசேயினி 23
டம்: லேவியருக்குரிய பிரமாணம் இதுவே: 24
இருபத்தைந்து வயதுமுதல் அதற்கு மேற்
பட்ட வயதுள்ள யாவரும் தரிசனக்கூடா
ரத்தின் பணிவிடைசெய்யும் சேவை சைனி
யத்திலே சேவித்து வரவேண்டும். ஐம்பது 25
வயதுக்கு மேற்பட்டவர்கள் வேலை செய்
யாமல் சேவை சைனியத்தை விட்டுவிடுவார்
கள், அவர்கள் திருப்பணிவிடை செய்ய
வேண்டியதில்லை: தரிசனக் கூடாரத்தில் 26
தங்கள் சகோதரர் பார்க்கவேண்டிய திருப்
பணிவிடைகளில் அவர்களுக்கு உதவியாக
வேலை செய்வதேயன்றி வேறே வேலை செய்ய
வேண்டியதில்லை; லேவியர் பார்த்துவர
வேண்டிய வேலைகளைப்பற்றி இப்படியே
திட்டஞ்செய்வாய் என்று சொன்னார்.

அவர்கள் எகிப்து தேசத்திலிருந்து புறப் 9
பட்ட இரண்டாம் வருஷம் முதலாம் மாதத்
தில் சீனாய்வனாந்தரத்திலே யெகோவா
மோசேயோடு பேசி: குறித்த காலத்திலே 2
இஸ்ரவேல் புத்திரர் பஸ்காவை ஆசரிக்க
வேண்டும். குறித்த நேரமாகிய இந்த மாதம் 3
பதினாலாந்தேதி சாயங்காலத்தில் நீங்கள்
அதை ஆசரிக்கவேண்டும். அதற்குரிய
சகல நியமங்களின்படியேயும் முறைமைக
ளின்படியேயும் நீங்கள் அதை ஆசரிக்க
வேண்டும் என்று சொன்னார். பஸ்காவை 4
ஆசரிக்கும்படி மோசே இஸ்ரவேல் புத்திர
ருக்கு அப்படியே கட்டளையிட்டான்.
ஆகவே முதலாம் மாதம் பதினாலாந்தேதி 5
சாயங்காலத்திலே சீனாய் வனாந்தரத்தில் பஸ்
காவை ஆசரித்தார்கள்; யெகோவா மோ
சேக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் இஸ்ர
வேல் புத்திரர் செய்தார்கள். ஒருசில 6
மனிதபிரேதத்தினால் தீட்டுப்பட்டு அந்நா
ளில் பஸ்காவை ஆசரிக்க முடியாதிருந்தார்

கள்; அவர்கள் அங்காளிலே மோசேக்கும் 7 ஆரோனுக்கும் முன்பாக வந்து: மனித பிரேதத்தினால் தீட்டுப்பட்டவர்களான நாங்கள், குறித்த காலத்திலே இஸ்ரவேல் புத்திரரோடுகூட யெகோவாவுக்குக் காணிக்கையைச் செலுத்தாதபடி விலக்கப்பட்டிருக்க வேண்டியது என்ன என்று கேட்க, மோசே: 8 இருங்கள், யெகோவா உங்களைக்குறித்துக் கட்டளையிடுவது என்ன என்று கேட்பேன் என்று அவர்களிடம் சொன்னான்.

9, 10 யெகோவா மோசேயினிடம்: நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி இதைச் சொல்: உங்களிலோ உங்கள் சந்ததியாரிலோ ஒருவன் பிரேதத்தினால் தீட்டுப்பட்டிருந்தாலும் தூரப்பிரயாணம் போயிருந்தாலும் அவனும் யெகோவாவுக்குப் பஸ்காவை ஆசரிக்கவே 11 வேண்டும். அப்படிப்பட்டவர்கள் அதை இரண்டாம் மாதம் பதினான்காந்தேதி சாயங்காலத்தில் ஆசரித்து அதைப் புளிப்பில்லாத அப்பங்களோடும் கசப்பான கீரைகளோ 12 டும் புசிப்பார்கள்; விடியற்காலமட்டும் அதிலே ஒன்றையும் மீதியாக வைக்காமலும் அதிலே ஒரு எலும்பையும் முறிக்காமலும் பஸ்காவினுடைய சகல நியமங்களின்படி 13 யும் அதை ஆசரிக்கவேண்டும். தீட்டுப்படாமலும் பிரயாணம் போகாமலுமிருக்கிறவன் பஸ்காவை ஆசரியாதே போனாலோ அவன் தன் ஜனத்தாரிலிருந்து நீக்கப்பட்டுப் போவான்; குறித்த காலத்திலே அவன் யெகோவாவின் காணிக்கையைச் செலுத்தாதபடியினால் அப்படிப்பட்டவன் தன் 14 தோஷத்தைச் சுமப்பான். அந்நியனாகிறவன் உங்களோடு தங்கி யெகோவாவுக்குப் பஸ்காவை ஆசரிப்பானானால் அவன் அதைப் பஸ்காவின் நியமப்படியும் அதின் முறைமையின்படியும் ஆசரிக்கவேண்டும்; பரதேசிக்கும் சுதேசிக்கும் ஒரே நியமமே என்று சொன்னார்.

15 வாசஸ்தலம் ஸ்தாபனஞ்செய்யப்பட்ட நாளிலே மேகமானது சாட்சியக்கூடாரமாகிய வாசஸ்தலத்தை மூடிற்று; சாயங்காலமானபோது வாசஸ்தலத்தின்மேல் அக்கினி மயம்போன்றது காணப்பட்டு விடியற்காலமட்டும் இருந்தது. நித்தமும் இப்படியே 16 நடந்தது. மேகம்மூடிக்கொண்டிருக்கும், இர 17 விலோ அக்கினிமயம். மேகம் கூடாரத்தை விட்டு மேலே எழும்பும்போது இஸ்ரவேல் புத்திரர் பிரயாணமாவார்கள்; மேகம் தங்கி நிற்குமிடத்திலேயே இஸ்ரவேல் புத்திரர் 18 பாளயமிறங்குவார்கள். யெகோவாவின் கட்டளைப்படியே இஸ்ரவேல்புத்திரர் பிரயாணமாவார்கள், யெகோவாவின் கட்டளைப்படியே பாளயமிறங்குவார்கள்; மேகம் வாச 19 ஸ்தலத்தின்மேல் தங்கிநிற்கும் நாளெல்லாம் அவர்கள் பாளயத்தில் தங்கியிருப்பார்கள். மேகம் நெடுநாள் வாசஸ்தலத்தின்மேல் தங்கிநிற்கும்போது இஸ்ரவேல்புத்திரர் பிரயாணமாகாமல் யெகோவா கட்டளையிட்டவைகளைப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். மேகம் சிலநாள் மாத்திரமே வாசஸ்தலத்தின் 20 மேல் தங்கிநிற்குமானால் யெகோவாவின் கட்டளைப்படியே பாளயத்தில் தங்கியிருந்து யெகோவாவின் கட்டளையின்படியே பிரயாணமாவார்கள். மேகம் சாயங்காலந் 21 தொடங்கி விடியற்காலமட்டும் தங்கிநின்று விடியற்காலத்தில் உயர எழும்புமானால் அக்கணமே பிரயாணமாவார்கள்; பகலிலோ இரவிலோ மேகம் எழும்புவது எப்போதானாலும் அப்போதே பிரயாணமாவார்கள். மேகமானது இரண்டு நாளோ ஒரு 22 மாதமோ அதிக நாளோ வாசஸ்தலத்தின்மேல் தங்கிநிற்குமானால் இஸ்ரவேல் புத்திரரும் பிரயாணம்பண்ணாமல் பாளயத்தில் தங்கியிருப்பார்கள்; அது உயர எழும்பும்போதோ பிரயாணமாவார்கள். யெகோவா 23 வின் கட்டளைப்படியே பாளயமிறங்குவார்கள்; யெகோவாவின் கட்டளைப்படியே பிரயாணமாவார்கள்; யெகோவா மோசேயைக்கொண்டு சொல்லியிருந்தபடியே யெகோவா கட்டளையிட்டவைகளைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

யெகோவா மோசேயினிடம்: | இரண்டு 10
வெள்ளிப் பூரிகைகளைச்செய்து கொள், 2
அடிப்பு வேலையாக அவற்றைச் செய்யவேண்டும். கூடிவரும்படி சபையை அழைப்பதற்கும் பாளயங்களைப் பிரயாணப்படச் செய்வதற்கும் நீ அவற்றை உபயோகிக்கவேண்டும். அவைகளை ஊதும்போது 3 சபையார் எல்லாரும் தரிசனக்கூடார வாசலில் உன்னண்டையிலே கூடிவரவேண்டும். ஒன்றைமாத்திரம் ஊதினால் இஸ்ரவேலில் 4 ஆயிரவர்களுக்குத் தலைவராகிய பிரபுக்கள் உன்னிடம்கூடிவருவார்கள். நீங்கள் அவை 5 களைப் பெருந்தொனியாய் ஊதும்போது கிழக்கே இறங்கியிருக்கிற பாளயங்கள் பிரயாணப்படவேண்டும். அவைகளை 6 நீங்கள் இரண்டாந்தரம் பெருந்தொனியாய் ஊதும்போது தெற்கே இறங்கியிருக்கிற பாளயங்கள் பிரயாணப்படவேண்டும், அவர்கள் பிரயாணப்படவேண்டியபோது பெருந்தொனியாய் ஊதவேண்டும். கூட் 7 டத்தைக் கூட்டுகிறதற்கு நீங்கள் ஊத வேண்டியதேயன்றி பெருந்தொனி செய்ய வேண்டாம். பூரிகைகளை ஊதவேண்டிய 8

வர்கள் ஆரோனின் குமாரராகிய ஆசாரி
யரே, தலைமுறை தலைமுறைதோறும் இது
9 வே உங்களுக்கு நித்திய நியமம். உங்களை
நெருக்குகிற சத்துருவுக்கு விரோதமாக உங்
கள் தேசத்திலே நீங்கள் யுத்தத்துக்குப்
போகும்போது பூரிகைகளைப் பெருந்தொனி
யாய் ஊதவேண்டும்; அப்பொழுது உங்
கள் கடவுளாகிய யெகோவாவின் சந்நிதி
யில் நீங்கள் நினைவுகூரப்பட்டு உங்கள்
பகைஞரினின்று விடுதலையாகி இரட்சிப்
10 படைவீர்கள். உங்கள் மகிழ்ச்சி நாட்
களிலும் உங்கள் உற்சவங்களிலும் மாதப்
பிறப்புகளிலும் நீங்கள் தகனபலிகளும்
சமாதானபலிகளும் செலுத்தும்போது பூரி
கைகளை ஊதுங்கள்; அப்பொழுது அவை
கள் உங்கள் கடவுளின் சந்நிதியில் உங்க
ளுக்கு ஞாபகக்குறியாகும்; நானே உங்கள்
கடவுளாகிய யெகோவா என்று சொன்னார்.
11 இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம்
இருபதாம் தேதியில் மேகம் சாட்சிய வாச
ஸ்தலத்தின்மேலே உயர எழும்பிற்று.
12 எழும்பவே இஸ்ரவேல்புத்திரர் தங்கள்
பிரயாண வரிசையின்படியே சீனாய் வனாந்
தரத்திலிருந்து புறப்பட்டார்கள்; மேகம்
பாரான் வனாந்தரத்தில் தங்கி நின்றது.
13 யெகோவா மோசேயைக்கொண்டு கட்டளை
யிட்ட இந்த வரிசையின்படியே அவர்கள்
முதல்முதல் பிரயாணமானார்கள்.
14 யூதா புத்திரரின் பாளையக்கொடி அவர்
கள் சேனைகளோடே முதல் புறப்பட்டது;
அந்தச் சேனைக்கு அம்மீனதாபின் குமாரன்
15 நகசோன் தலைவன். இசக்கார் புத்திரரின்
கோத்திரச்சேனைக்கு சூகாரின் குமாரன்
16 நெதனெயேல் தலைவன். செபுலோன் புத்
திரரின் கோத்திரச் சேனைக்கு ஏலோனின்
17 குமாரன் எலியாப் தலைவன். வாசஸ்தலம்
கழற்றிவைக்கப்பட்டபின் அதைச் சுமக்
கிறவர்களாகிய கெர்சோன் புத்திரரும்
மெராரி புத்திரரும் புறப்பட்டார்கள்.
18 அதன்பின் ரூபன் புத்திரரின் பாளையக்கொடி
அவர்கள் சேனைகளோடே புறப்பட்டது;
அந்தச் சேனைக்குச் செதேயூரின் குமாரன்
19 எலிசூர் தலைவன். சிமியோன் புத்திரரின்
கோத்திரச்சேனைக்குச் சூரிஷதாயின் குமா
20 ரன் செலூமியேல் தலைவன். காத் புத்திர
ரின் கோத்திரச் சேனைக்குத் தெகுவேலின்
21 குமாரன் எலியாசாப் தலைவன். பரிசுத்த
மானவைகளைச் சுமக்கிறவர்களாகிய கெரா
த்தியர் அதன்பின் புறப்பட்டார்கள்; இவர்
கள் வந்து சேருமுன் வாசஸ்தலம் ஸ்தாப
22 னம் பண்ணப்பட்டிருக்கும். அதன்பின்
எப்பிராயீம் புத்திரரின் பாளையக்கொடி
அவர்கள் சேனைகளோடே புறப்பட்டது;
அந்தச் சேனைக்கு அம்மிகூதின் குமாரன் 23
எலிஷாமா தலைவன். மனாசே புத்திரரின்
கோத்திரச்சேனைக்குப் பெதாசூரின் குமா
ரன் கமாலியேல் தலைவன். பென்யமீன் புத் 24
திரரின் கோத்திரச்சேனைக்குக் கிதியோனின்
குமாரன் அபீதான் தலைவன். அதன்பின் 25
தாண் புத்திரரின் பாளையக்கொடி சகல
பாளையங்களுக்கும் பின்னாக அவர்கள்
சேனைகளோடே புறப்பட்டது; அந்தச்
சேனைக்கு அம்மிஷதாயின் குமாரன் அகி
யேசேர் தலைவன். ஆசேர் புத்திரரின் 26
கோத்திரச்சேனைக்கு ஒக்ரானின் குமா
ரன் பாகியேல் தலைவன். நப்தலி புத் 27
திரரின் கோத்திரச்சேனைக்கு ஏனானின் குமா
ரன் அகீரா தலைவன். இஸ்ரவேல்புத்திரர் 28
புறப்பட்டபோது தங்கள் தங்கள் சேனை
களின்படியே பிரயாணமான ஒழுங்கு இது
வே.

அப்பொழுது மோசே தன் மாமனாகிய 29
ரெகுவேல் என்னும் மிதியானியன் குமா
ரன் ஒபாபினிடம்: உங்களுக்குத் தருவேன்
என்று யெகோவா சொன்ன ஸ்தலத்துக்கு
நாங்கள் பிரயாணம் போகிறோம்; நீயும்
எங்களோடு வா, உனக்கு நன்மை செய்
வோம், யெகோவா இஸ்ரவேலுக்குப்பற்றி நல்
வாக்கு அருளியிருக்கிறார் என்று சொல்ல |
அவன்: நான் வரமாட்டேன், என் தேசத் 30
துக்கும் என் இனத்தாரிடத்துக்கும் போகி
றேன் என்றான். அதை கேட்ட மோசே: நீ 31
எங்களைவிட்டுப் போய்விடாதே, வனாந்தரத்
திலே நாங்கள் பாளையமிறங்கவேண்டிய
இடங்களெல்லாம் உனக்குப் பழக்கமான
இடங்களாகையால் நீ எங்களுக்குக் கண்க
ளாவாய். நீ எங்களோடு வந்தால் 32
யெகோவா எங்களுக்குச் செய்தருளும் நன்
மையின்படியே நாங்கள் உனக்கும் நன்மை
செய்வோம் என்றான்.

அவர்கள் யெகோவாவின் பர்வதத்தை 33
விட்டு மூன்றுநாள் பிரயாணம்போனார்கள்;
அவர்களுக்கு இளைப்பாறும் ஸ்தலத்தைத்
தேடிக்காட்டும்படி அந்த மூன்றுநாள் பிர
யாணத்திலும் யெகோவாவின் உடன்படிக்
கைப்பெட்டகம் அவர்கள் முன் சென்றது.
அவர்கள் பாளையத்தைவிட்டுப் பிரயாண 34
மாகும்போது யெகோவாவின் மேகம் பகலில்
அவர்கள்மேல் தங்கியிருந்தது.
பெட்டகம் புறப்படும்போது மோசே: 35

யெகோவாவே, எழுந்தருளும்,
உமது சத்துருக்கள் சிதறடிக்கப்படுக;
உம்மைப் பகைக்கிறவர்கள் உமது திருச்
சந்நிதியை விட்டு ஓடி அகலுக

36 என்று சொல்லுவான். அது நிற்கும் போது:

பல்லாயிரவராகிய இஸ்ரவேலரிடம்,
யெகோவாவே, திரும்புவீராக
என்று சொல்லுவான்.

**11** பின்பு ஜனங்கள் முறையிடத் தலைப்பட்டார்கள், அது நிமையாகவே யெகோவாவின் செவிகளில் பட்டது; யெகோவா அதைக் கேட்டபோது அவர் கோபம்மூண்டது; யெகோவாவின் அக்கினி அவர்கள் நடுவில் எரியத் தொடங்கிப் பாளயத்தின்
2 எல்லையோரங்களைப் பட்சிக்கவே | ஜனங்கள் மோசேயினிடம் அபயமிட்டார்கள்; மோசே யெகோவாவினிடம் விண்ணப்பஞ் செய்யவே அக்கினி அவிந்துபோயிற்று.
3 யெகோவாவின் அக்கினி அவர்கள் நடுவில் எரிந்தகினால் அவ்விடத்துக்குத் தபேரா என்று பேரிட்டான்.

4 அவர்களை ஒட்டிவந்த அந்திய கூட்டத்தாருக்கு ஆசை பெருகிற்று; இஸ்ரவேல் புத்திரரும் திரும்ப அழுது, இறைச்சியை
5 நமக்குப் புசிக்கக் கொடுப்பவர் யார்? நாம் எகிப்திலே கிரயமில்லாமல் சாப்பிட்ட மச்சங்களையும் வெள்ளரிக்காய்களையும் மிலாம் பழங்களையும் கீரைகளையும் வெங்காயங்களையும் வெள்ளைப்பூடுகளையும் மறக்க முடிய
6 வில்லை. இப்பொழுதோ நமது உள்ளம் வாடிப்போகிறது; இந்த மன்னா ஒன்றைத் தவிர நமக்குக் கிடைப்பது வேறொன்று
7 மில்லையே என்று சொன்னார்கள்.—அந்த மன்னா கொத்தமல்லிபோலவும் முத்துநிற
8 மாகவுமிருந்தது. ஜனங்கள் சுற்றித்திரிந்து அதைச் சேர்த்துக்கொண்டுவந்து எந்திரங்களில் அரைத்தாவது உரல்களில் இடித்தாவது பாணைகளிலே வேகவைத்து அதை அப்பங்களாகச் சுடுவார்கள்; அதின் ருசி எண்ணெயிற்சுட்ட பணிகாரம்போலிருந்
9 தது. இரவிலே பாளயத்தின்மேல் பனி பெய்யும்போது மன்னாவும் அதனோடு
10 விழும்—அந்தந்த வம்சங்களைச் சேர்ந்த ஜனங்கள் தங்கள் தங்கள் கூடாரவாசலில் நின்று அழுகிறதை மோசே கேட்டான்; யெகோவாவுக்கு மிகவும் கோபம்மூண்டது. மோசேயின் பார்வையிலும் அது தீதாயிருந்
11 தது. அப்பொழுது மோசே யெகோவாவினிடம்: உமது அடியேனுக்குத் தீங்கு வரச் செய்தது என்ன? உமது அடியேனுக்கு உமது கண்களில் கிருபை கிடையாமற் போனதென்ன? இந்த முழு ஜனத்தின் பாரத்தையும் என்மேல் சுமத்திவிட்டீரே.
12 இந்த ஜனத்திற்கெல்லாம் நானா தாய்? இவர்களுக்குத் தகப்பன் நானோ? பால் உண்கிற குழந்தையைத் தாதி சுமந்துபோவதுபோல் இவர்களை உன் மார்பிலே அணைத்துக் கொண்டு, நான் ஆணையிட்டு இவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்துக்குக் கொண்டுபோ என்று நீர் என்னோடு சொல்வானேன்? இத்தனை ஜனத்துக்கும் கொடுக்
13 கிறதற்கு இறைச்சி எங்கேயிருந்து எனக்குக் கிடைக்கும்? எங்களுக்கு இறைச்சி கொடு என்று என்னைக் குறைகூறி அழுகிறார்களே. இந்த முழு ஜனத்தையும்
14 நான் ஒருவனாய்த் தாங்கமுடியாது; இது எனக்கு மிஞ்சின பாரம். நீர் இப்படித்
15 தான் எனக்குச் செய்யப்போகிறதென்றிருந்தால் இப்பொழுதே என்னைக் கொன்று போடும்; அதோடு என் உபத்திரவம் தீர்ந்து போம், இதுவே உமது கண்களில் எனக்குக் கிடைத்த தயவாகட்டும் என்று சொல்லிக் கெஞ்சினான்.

16 அப்பொழுது யெகோவா மோசேயினிடம்: இஸ்ரவேலின் மூப்பரிலே ஜனத்தின் மூப்பரும் தலைவருமென்று உனக்குத் தெரிந்திருக்கிற எழுபதுபேரை நீ தரிசனக் கூடாரத்தினண்டை அழைத்துப்போய் உன்னோடு நிற்கச்செய். 17 அப்பொழுது நான் இறங்கிவந்து அங்கே உன்னோடு பேசி, நீ ஒருவன்மாத்திரம் ஜனங்களின் பாரத்தைச் சுமக்காமல் உன்னோடேகூட அவர்களும் அதைச் சுமப்பதற்காக உன்மேல் இருக்கிற ஆவியைப் பகிர்ந்து அவர்கள்மேலும் வைப்பேன்; வைக்கவே, அவர்களும் உன்னோடு சேர்ந்து ஜனத்தின் பாரத்தைச் சுமப்பார்கள், அப்பொழுது நீ ஒருவனாய் அதைச் சுமக்கவேண்டியதிராது. 18 நீ ஜனத்தினிடம்: நாளைத்தினத்திற்கென்று உங்களைப் பரிசுத்தப்படுத்திக்கொள்ளுங்கள்; நாளைக்கே நீங்கள் இறைச்சி சாப்பிடுவீர்கள்; எங்களுக்கு இறைச்சி சாப்பிடக் கொடுப்பவர் யார் என்றும் எகிப்திலே எங்களுக்கு நன்றாயிருந்தது என்றும் யெகோவாவின் செவிகள் கேட்க அழுதீர்கள்; யெகோவாவே உங்களுக்கு இறைச்சி கொடுப்பார், நீங்கள் புசிப்பீர்கள். 19 நீங்கள் புசிப்பது ஒரு நாளல்ல, இரண்டு நாளல்ல, ஐந்து நாளல்ல, பத்து நாளல்ல, இருபது நாளல்ல, | ஒரு மாதமளவும், 20 அது உங்கள் மூக்கின் வழியாய் வெளிப்பட்டு உங்களுக்குத் தெவிட்டிப்போகுமளவும், புசிப்பீர்கள்; உங்கள் நடுவே இருக்கிற யெகோவாவை அசட்டைபண்ணி, நாங்கள் ஏன் எகிப்தைவிட்டு இப்படி வந்தோம் என்று அவருக்கு முன்பாக அழுதீர்களே என்று சொல் என்றார்.

21 அதற்கு மோசே: என்னோடிருக்கிற ஜனத்திரளில் காலாட்படை மாத்திரம் ஆறுலட்சம் பேர்; ஒரு மாதமளவும் அவர்களுக்கு இறைச்சி புசிக்கக்கொடுப்பேன் என்று
22 சொன்னீரே, அவர்களுக்குப் போதுமான அளவுக்கு ஆடுமாடுகளை அடிக்கவேண்டுமோ? சமுத்திரத்து மச்சங்களையெல்லாம் பிடித்துச்சேர்த்தாலும் அவர்களுக்குப்
23 போதுமோ என்றான். அதற்கு யெகோவா: யெகோவாவின் கை குறுகியிருக்கிறதோ? என் வார்த்தையின்படி நடக்குமோ நடவாதோ என்று நீ இப்பொழுது காண்பாய் என்றார்.
24 அப்படியே மோசே போய் யெகோவாவின் வார்த்தைகளை ஜனத்துக்கு அறிவித்து ஜனத்தின் மூப்பரில் எழுபதுபேரைக் கூட்டிக் கூடாரத்தைச் சுற்றி அவர்களை நிறுத்தி
25 னான். யெகோவா மேகத்தில் இறங்கி அவரோடு பேசி, அவன்மேலிருந்த ஆவியை மூப்பராகிய அந்த எழுபதுபேர்மேலும் பகிர்ந்துவைத்தார்; அந்த ஆவி அவர்கள் மேல் வந்து தங்கினமாத்திரத்தில் அவர்கள் பரவசமாகிப் பேசினார்கள். அப்புறம் அவர்களுக்கு அப்படி நேரிடவில்லை.
26 இரண்டுபேரோ பாளையத்தில் இருந்துவிட்டார்கள்; ஒருவன் பேர் எல்தாத், மற்றவன் பேர் மேதாத்; அவர்களும் பேர்வழியில் எழுதப்பட்டிருந்தும் கூடாரத்துக்குப் போகவில்லை. அவர்கள்மேலும் ஆவிவந்து தங்கினது; தங்களே அவர்கள் பாளையத்திலேயே
27 பரவசமாகிப் பேசினார்கள்; ஒரு வாலிபன் ஓடிவந்து எல்தாதும் மேதாதும் பாளையத்தில் பரவசமாகிப் பேசுகிறார்கள் என்று மோசே
28 க்கு அறிவித்தான். அறிவிக்கவே தன் வாலிப காலமுதல் மோசேக்குத் துணையாயிருந்த யோசுவா, நூனின் குமாரன், மோசேயினிடம்: என் ஆண்டவனாகிய மோசேயே, அவனை தடைபண்ணும் என்றான்.
29 அதுகேட்ட மோசே: என்மேலுள்ள பற்றினால் உனக்குப் பொறாமையுண்டாகிறதோ? யெகோவாவின் ஜனங்களனைவரும் தீர்க்கதரிசிகளாகும்படி யெகோவா தமது ஆவியை அவர்கள்மேல் இறங்கப்பண்ணினால் அது எவ்வளவு நன்றாகும் என்று சொன்
30 னான். பின்பு மோசே இஸ்ரவேலின் மூப்பரோடு பாளையத்திலே வந்து சேர்ந்தான்.
31 அப்பொழுது யெகோவாவினிடமிருந்து வந்த ஒரு காற்று சமுத்திரத்திலிருந்து காடைகளைப் பாளையத்தின்மேல் அடித்துக் கொண்டுவந்து பாளையத்தைச் சுற்றி இரு பக்கமும் ஒருநாள் பிரயாணமட்டும் தரையின்மேல் இரண்டு முழ உயரம் விழுந்து கிடக்கச் செய்தது. இது கண்டு ஜனங்கள் 32
எழும்பி அன்று பகல் முழுவதும் இரா முழுவதும் மறுநாள் முழுவதும் காடைகளைச் சேர்த்துக்கொண்டார்கள்; குறைவாய்ச் சேர்த்தவன் பத்து ஓமர் அளவு சேர்த்தான்; அவைகளைப் பாளையத்தைச் சுற்றித் தங்களுக்காகப் பரப்பிப்போட்டார்கள். இறைச்சி அவர்கள் பற்கள் நடுவே 33
இருக்கையில், அவர்கள் அதைத் தின்று தீரு முன்னேயே, யெகோவாவின் கோபம் ஜனங்களுக்கு விரோதமாய் மூண்டது; ஜனங்களை மகா பெரிய வாதையால் யெகோவா வாதித்தார். ஆசைபெருகிய ஜனங்களை 34
அங்கே அடக்கம்பண்ணினதினால் அந்த ஸ்தலத்துக்குக் கிப்ரோத் அத்தாவா என்று பேரிட்டான்.

பின்பு ஜனங்கள் கிப்ரோத் அத்தாவா 35
என்னும் இடத்தைவிட்டு ஆஸரோத்துக்குப் பிரயாணமாகி ஆஸரோத்திலே தங்கினார்கள்.

**12** மோசே விவாகம் செய்திருந்தவள் கூஷ் தேசத்து ஸ்திரீ; அவன் விவாகம்செய்திருந்த கூஷ் தேசத்து ஸ்திரீயினிமித்தம் மிரியாமும் ஆரோனும் அவனுக்கு விரோதமாய்ப்
2 பேசி: யெகோவா பேசினது மோசேயோடு மாத்திரமோ, எங்களோடும் அவர் பேசினதில்லையோ என்றார்கள்? இதை யெகோவா
3 கேட்டார்;—மோசே என்பவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்த
4 குணமுள்ளவன்;—உடனே யெகோவா மோசே, ஆரோன், மிரியாம் என்பவர்களிடம்: நீங்கள் மூவரும் வெளியே தரிசனக் கூடாரத்துக்கு வாருங்கள் என்றார்; மூன்று பேரும் போனார்கள். யெகோவா மேகத்
5 தூணில் இறங்கிக் கூடாரவாசலிலே நின்று ஆரோனையும் மிரியாமையும் கூப்பிட்டார்; இருவரும் போனார்கள். போகவே அவர்:
6 நான் சொல்லுகிறதை நீங்கள் கேட்கவேண்டும்; உங்களிலே ஒரு தீர்க்கதரிசியிருந்தால் யெகோவாவாகிய நான் தரிசனமூலமாய் என்னை அவனுக்கு வெளிப்படுத்துவேன்; சொப்பனத்தின்மூலமாய் அவனோடு பேசுவேன். என் ஊழியனாகிய மோசேயின்
7 விஷயத்திலோ அப்படியல்ல, என் வீட்டில்
8 எங்கும் அவன் உண்மையுள்ளவன். நான் அவனோடு முகமுகமாக, மறைவாக அல்ல பிரத்தியட்சமாகவே, பேசுகிறேன்; அவன் யெகோவாவின் சாயலைக்காண்கிறான்; இப்படியிருக்க, நீங்கள் என் ஊழியனாகிய மோசேக்கு விரோதமாகப்பேச உங்களுக்குப் பயமில்லாமற்போனதென்ன என்றார்.
9 யெகோவாவின் கோபம் அவர்கள்மேல்
10 மூண்டது; அவர் போய்விட்டார். மேகம்

கூடாரத்தின் மேலே போய்விடவே, இதோ, மிரியாம் உறைந்த மழையின் வெண்மை போன்ற குஷ்டரோகமுடையவளானாள்; ஆரோன் மிரியாமைப் பார்த்தபோது அவள் 11 குஷ்டரோகியாயிருக்கக் கண்டான். அது கண்டு ஆரோன் மோசேயினிடம்: என் ஆண்டவனே, ஐயோ, நாங்கள் புத்தியீன மாய் இப்பப் பாவத்தைச் செய்தோம், அதை எங்கள்மேல் சுமத்திவிடவேண்டாம். 12 தன் தாயின் கர்ப்பத்திலிருந்து விழும்போ தே உயிரற்றுப் பாதி மாம்சம் அழுகிப் போன பிள்ளையைப்போல அவள் ஆக 13 வேண்டாம் என்றான். அப்பொழுது மோசே யெகோவாவினிடம்: கடவுளே, அவளைக் குணமாக்கியருளும் என்று அபயமிட்டான். 14 யெகோவா மோசேயினிடம்: அவள் தகப் பன் அவள் முகத்திலே காறித் துப்பினதுண் டானால் அவள் ஏழுநாள் வெட்கத்துக்குள் ளாகி யிருக்கவேண்டாமோ? அதுபோலவே அவள் ஏழுநாள் பாளயத்துக்கு வெளியே விலக்கப்பட்டிருந்து பின்பு சேர்த்துக் 15 கொள்ளப்படலாம் என்றார். அப்படியே மிரியாம் ஏழுநாள் பாளயத்துக்கு வெளியே விலக்கப்பட்டிருந்தாள்; மிரியாம் சேர்த் துக்கொள்ளப்படுமட்டும் ஜனங்கள் பிரயா ணப்படாதிருந்தார்கள்.

16 அப்பால் ஜனங்கள் ஆஸரோத்திலிருந்து பிரயாணமாகிப் பாரான் வனாந்தரத்திலே பாளயமிறங்கினார்கள்.

**13** யெகோவா மோசேயினிடம்: | நான் 2 இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கும் கானான் தேசத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு நீ மனிதரை அனுப்பு; பிதாக்களின் கோத் திரங்களிலே கோத்திரத்துக்கு ஒரு ஆள், கோத்திரத்துக்குத் தலைவனாயிருக்கிறவனை 3 யே, அனுப்பவேண்டும் என்றார். மோசே யெகோவாவின் கட்டளைப்படியே அவர் களைப் பாரான் வனாந்தரத்திலிருந்து அனுப் பினான்; அவர்கள் யாவரும் இஸ்ரவேல் 4 புத்திரரின் தலைவர்கள். அவர்கள் நாமங்க ளாவன: ரூபன் கோத்திரத்தில் சக்கூரின் 5 குமாரன் ஷம்மூவா. சிமியோன் கோத்திரத் 6 தில் கோரியின் குமாரன் ஷாப்பாத். யூதா கோத்திரத்தில் எப்புன்னேயின் குமாரன் 7 காலேப். இசக்கார் கோத்திரத்தில் யோ 8 சேப்பின் குமாரன் இகெயால். எப்பிராயீம் கோத்திரத்தில் நூனின் குமாரன் ஓசேயா. 9 பென்யமீன் கோத்திரத்தில் ரப்பூவின் குமா 10 ரன் பல்த்தி. செபுலோன் கோத்திரத்தில் 11 சோதியின் குமாரன் காதியேல். யோசேப் 12 பின் கோத்திரத்தைச் சேர்ந்த மனாசே கோத் திரத்தில் சூசியின் குமாரன் காதி. தான் கோத்திரத்தில் கெமல்லியின் குமாரன் அம்மீ யேல். ஆசேர் கோத்திரத்தில் மிகாவேலின் 13 குமாரன் சேத்தூர். நப்தலி கோத்திரத் 14 தில் ஒப்பசியின் குமாரன் நாகபி. காத் 15 கோத்திரத்தில் மாகியின் குமாரன் கூவேல். தேசத்தைச் சுற்றிப் பார்க்கும்படி மோசே 16 அனுப்பின மனிதரின் நாமங்கள் இவை களே; நூனின் குமாரனுகிய ஓசேயாவுக்கு யோசுவா என்று மோசே பேரிட்டான். காலான்தேசத்தைச் சுற்றிப் பார்க்கும்படி 17 மோசே அவர்களை அனுப்புகையில் அவர் களிடம்: நீங்கள் இப்படித் தென்னாட்டுக் குப் போய் மலைகளின் வழியாய்ச் சென்று | தேசம் எப்படிப்பட்டதென்றும் அங்கே 18 குடியிருக்கிறவர்கள் பலவான்களோ பலவீ னர்களோ, கொஞ்சப்பேரோ அதிகப்பேரோ என்றும், அவர்கள் குடியிருக்கிற தேசம் 19 எப்படிப்பட்டது, அது நல்லதோ கெட்ட தோ என்றும் அவர்கள் குடியிருக்கிற பட் டணங்கள் எப்படிப்பட்டவைகள், அவை கள் பாளயங்களோ கோட்டைகளோ என் றும் | பூமி எப்படிப்பட்டது, அது வளப்ப 20 மானதோ இளைப்பமானதோ என்றும் அதில் மரங்கள் உண்டோ இல்லையோ என்றும் பாருங்கள்; தைரியமாயிருங்கள், தேசத்தின் கனிகளிலே சிலவற்றைக் கொண்டுவாருங் கள் என்றான். அது திராட்சச்செடி முதற் 21 பழம் பழுக்கிறகாலம். அவர்கள் போய்ச் சீன் வனாந்தரந்தொடங்கி ஆமாத்துக்குப் போகிற வழி பிரியும் ரெகொப் மட்டும் தேசத்தைச் சுற்றிப்பார்த்துத் | தென்னாடு 22 திரும்பி எப்பெரோனுக்கு வந்தார்கள்; அங்கே அனாக்கின் குமாராராகிய அகிமானும் சேசாயும் தல்மாயும் இருந்தார்கள்;—எப் பெரோன் கட்டப்பட்டபோது எகிப்திலுள் ள சோவான் இருநூறில்லை; அது ஏழு 23 வருஷத்திற்கு அப்புறமே கட்டப்பட் டது.—பின்பு அவர்கள் எஸ்கோல் பள்ளத் தாக்குமட்டும் சென்று அங்கே ஒரே குலை யுள்ள ஒரு திராட்சக் கொடியை அறுத்து அதை ஒரு தடியிலே கட்டி இரண்டுபேர் தூக்கிக்கொண்டு வந்தார்கள்; மாதளம்ப ழங்களிலும் அத்திப்பழங்களிலும் கொஞ்சம் கொண்டுவந்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் 24 அங்கே அறுத்த திராட்சக்குலையினிமித்தம் அவ்விடம் எஸ்கோல் பள்ளத்தாக்கு என் னப்பட்டது. அவர்கள் நாற்பதுநாள் 25 தேசத்தைச் சுற்றிப்பார்த்துவிட்டுத் திரும்பி னார்கள். அவர்கள் பாரான் வனாந்தர 26 தில் இருக்கிற காதேசிலே மோசே ஆரோன் என்பவர்களிடத்திலும் இஸ்ரவேல் புத்திரரா கிய சபையார் எல்லாரிடத்திலும் வந்து

சேர்ந்து அவர்களுக்கும் சபையார் அனைவருக்கும் சமாச்சாரத்தை அறிவித்துத் தேசத்தின் கனியை அவர்களுக்
27 குக் காண்பித்தார்கள். அவர்கள் மோசேயினிடம்: நீர் எங்களை அனுப்பின தேசத்துக்குப் போய்வந்தோம்; அது பாலும் தேனும் ஓடுகிற தேசந்தான்; இதோ, அதினுடைய
28 கனி. அந்தத் தேசத்திலே குடியிருக்கிற ஜனங்களோ பலவான்கள்; பட்டணங்கள் அரணிப்பானவைகள், மிகவும் பெரியவைகள், அங்கே அனாக்கின் குமாரரையும் கண்
29 டோம். அமலேக்கியர் தேசத்தின் தென்புறத்திலே குடியிருக்கிறார்கள்; ஏத்தியரும் எபூசியரும் எமோரியரும் மலைநாட்டில் குடியிருக்கிறார்கள்; கானானியர் கடல் அருகேயும் யோர்தானண்டையிலும் குடியிருக்கிறார்கள் என்று விவரித்துச் சொன்னார்கள்.
30 அப்பொழுது காலேப் மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்தி: நாம் உடனே போய் அதை நமக்குச் சொந்தமாக்கிக்கொள்வோம். நாம் அதை ஜெயித்துக்கொள்வதில் தடை
31 யில்லை என்று சொன்னான். அவனோடு போய்வந்தவர்களோ: அந்த ஜனங்களை எதிர்த்துப்போக நமக்குச் சக்தியில்லை; அவர்கள் நம்மிலும் பலவான்கள் என்றார்கள். பின்னும் தாங்கள் சுற்றிப் பார்த்து வந்த தேசத்தைப்பற்றி இஸ்ரவேலருக்குள்
32 துர்ச்செய்தியைப் பரவச்செய்து: நாங்கள் போய்ச் சுற்றிப் பார்த்துவந்த அந்தத் தேசம் தன் குடிகளைப் பட்சிக்கிற தேசம்; நாங்கள் அதிலே கண்ட ஜனங்கள் எல்லாரும்
33 மிகவும் வளர்ந்த ஆட்கள். அங்கே இராட்சதப் பிறவியான அனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப் போல் இருந்தோம், அவர்கள் பார்வைக்கும் அப்படியே இருந்தோம் என்று சொன்னார்கள்.

**14** இவற்றைக்கேட்கவே சபையார் எல்லாரும் கூக்குரலிட்டுப் புலம்பினார்கள்; ஜனங்கள் அன்று இராமுழுதும் அழுதுகொண்டி
2 ருந்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். சபையார் எல்லாரும் அவர்களிடம்: எகிப்து தேசத்திலே செத்திருந்தோமானால் எவ்வளவோ நலமாயிருக்கும், அப்படியில்லாதிருக்க இந்த வனாந்தரத்திலேயே நாங்கள் செத்தாலும்
3 நலம். நாங்கள் பட்டயத்தால் மடியும்படிக்கு யெகோவா எங்களை இந்தத் தேசத்துக்குக் கொண்டுவந்ததென்ன? எங்கள் மனைவிமக்கள் கொள்ளையிடுவார்களே, எகிப்துக்குத் திரும்புவதே எங்களுக்கு உத்தமம் அல்லவோ என்றார்கள். பின்பு அவர்கள் 4
ஒருவரோடொருவர் பேசி: நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு எகிப்துக்குத் திரும்பிப்போவோம், வாருங்கள் என்று சொல்லிக்கொண்டார்கள். அப்பொழுது 5
மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரின் சபையாராகிய எல்லாக்கூட்டத்தாருக்கு முன்பாகவும் முகங்குப்புற விழுந்தார்கள். தேசத்தைச் சுற்றிப் பார்த்தவர்களில் 6
நூனின் குமாரனாகிய யோசுவாவும் எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு | இஸ்ர 7
வேல் புத்திரரின் முழுச்சபையையும் பார்த்து: நாங்கள் போய்ச் சுற்றிப்பார்த்துவந்த தேசம் மகா நல்ல தேசம். யெகோவா 8
நம்மேல் பிரியமாயிருந்தால் அந்தத் தேசத்திற்கு நம்மைக்கொண்டுபோய் அதை நமக்குக் கொடுப்பார்; அது பாலும் தேனும் ஓடுகிற தேசம். யெகோவாவுக்கு விரோத 9
மாகமாத்திரம் கலகம்பண்ணுதிருங்கள்; அந்தத் தேசத்தின் ஜனங்களுக்கு நீங்கள் பயப்படவேண்டியதில்லை; அவர்கள் நமக்கு இரையாவார்கள்; அவர்களுக்கு நிழலும் காவலுமாயிருந்தது அவர்களைவிட்டு விலகிப் போயிற்று; யெகோவா நம்மோடே இருக்கிறார்; அவர்களுக்குப் பயப்படவேண்டியதில்லை என்றார்கள். அதைக் கேட்கவே 10
அவர்கள்மேல் கல்லெறியவேண்டும் என்று சபையார் அனைவரும் சொன்னார்கள். அப்பொழுதே யெகோவாவின் மகிமை தரிசனக்கூடாரத்தில் இஸ்ரவேல் புத்திரர் அனைவருக்கும் காணப்பட்டது.

யெகோவா மோசேயினிடம்: எதுவரைக் 11
கும் இந்த ஜனங்கள் என்னை அலட்சியஞ் செய்வார்கள்? அவர்கள் நடுவில் நான் செய்த சகல அடையாளங்களையும் அவர்கள் கண்டும் எதுவரைக்கும் என்னை நம்பாதிருப்பார்கள்? நான் அவர்களைக் கொள்ளை 12
நோயினால் வாதித்து அழித்துவிட்டு உன்னை அவர்களிலும் பெரிதும் பலத்ததுமான ஜாதியாக்குவேன் என்று சொன்னார். மோசே 13
யோ யெகோவாவினிடம்: இதை எகிப்தியர் கேட்பார்களே, அவர்கள் நடுவிலிருந்து உமது வல்லமையினாலே இந்த ஜனத்தைக் கொண்டுவந்தீரே. யெகோவாவாகிய நீர் 14
இந்த ஜனத்தின் நடுவே இருக்கிறீர் என்பதை அவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். யெகோவாவாகிய நீர் முகமுகமாய் இவர்களுக்குத் தரிசனமானீர், உமது மேகம் இவர்கள்மேல் நிற்கிறது, பகலில் மேகத்தூணிலும் இரவில் அக்கினித்தூணிலும் நீர்

இவர்களுக்குமுன் செல்லுகிறீர், இவற்றை யெல்லாம் இந்தத் தேசத்தின் குடிகளுக்குச்
15 சொல்லுவார்கள். ஒரே அடியில் இந்த ஜனமுழுதையும் நீர் கொல்லுவீரானால் உம்முடைய பிரஸ்தாபத்தைக் கேட்டிருக்கும்
16 புறஜாதியார்: அந்த ஜனத்துக்குக் கொடுப்பேன் என்று யெகோவா ஆணையிட்டிருந்த தேசத்துக்கு அவர்களைக் கொண்டுபோய்ச் சேர்க்கமுடியாமற்போனார், அவர்களை வனாந்தரத்திலே கொன்றுபோட்ட காரணம் இது
17 தான் என்று சொல்வார்களே. நீர் சொல்லியிருக்கிறபடியே என் ஆண்டவரின் வல்ல
18 மை பெரிதாக விளங்கட்டும். யெகோவா நீடிய சாந்தமும்மிகுந்த இருபையுமுள்ளவர், அக்கிரமத்தையும் மீறுதலையும் மன்னிக்கிறவர், குற்றமுள்ளவர்களைக் குற்றமற்றவர்களாகத் தீர்க்காதவர், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர்
19 என்று சொல்லியிருக்கிறீரே. உமது மிகுந்த இருபைக்கு இசையவும் எகிப்தை விட்டது முதல் இந்நாள்வரைக்கும் இந்த ஜனத்துக்கு மன்னித்துவந்ததற்கு இசையவும் இந்த ஜனத்தின் அக்கிரமத்தை மன்னித்தருளும் என்று
20 சொன்னேன். அப்பொழுது யெகோவா: உன் வார்த்தையின்படியே மன்னித்தேன்.
21 ஆயினும் என் மகிமையையும் நான் எகிப்திலும் வனாந்தரத்திலும் செய்த என் அடையாளங்களையும் கண்டிருந்தும் என் சத்தத்துக்குச் செவிகொடாமல் இதனாலே பத்து முறை என்னைப் பரீட்சைபார்த்த மனிதரில்
22 ஒருவரும் | நான் ஆணையிட்டு அவர்கள் பிதாக்களுக்குக்கொடுத்த தேசத்தைக் காணமாட்டார்கள்; என்னை அலட்சியம்செய்தவர்களில் ஒருவனும் அதைக் காணமாட்டான்.
23 நான் ஜீவனுள்ளவர் என்பதும் பூமிமுழுதும் யெகோவாவின் மகிமை நிறைந்திருக்கும் என்பதும் எவ்வளவு நிச்சயமோ அவ்
24 வளவு நிச்சயமே இது; என் தாசனாகிய காலேபோ வேறே ஆவியை உடையவனாயிருக்கிறபடியினாலும் அவன் என்னிடம் பூரணபற்றுடையவனானபடியினாலும் அவன் போய் வந்த தேசத்திலே அவனைக் கொண்டு போய்ச் சேர்ப்பேன்; அவன் சந்ததியார் அதைச் சொந்தமாய்ப் பெறுவார்கள்.
25 அமலேக்கியரும் கானானியரும் சமபூமியிலே குடியிருக்கிறபடியினால் நாளைக்கு நீங்கள் திரும்பிச் சமுத்திரத்துக்குப் போகிறவழியாய் வனாந்தரத்துக்குப் பிரயாணப்பட்டுப் போங்கள் என்று சொன்னார்.
26 பின்னும் யெகோவா மோசே, ஆரோன்
27 என்பவர்களிடம்: எனக்கு விரோதமாய் இந்தப் பொல்லாத சபையார் முறுமுறுப்பது எதுவரைக்குமோ? இஸ்ரவேல் புத்திரரின் முறுமுறுப்பைக் கேட்டேன்; அது எனக்கு விரோதமான முறுமுறுப்பு. நீ 28
அவர்களிடம் இதைச் சொல்: நான் ஜீவனுள்ளவரேயாயின் நீங்கள் என் செவிகள் கேட்கச் சொன்னபடியே உங்களுக்குச் செய்வேன்; இது தெய்வவாக்கு. இந்த 29
வனாந்தரத்தில் உங்கள் பிரேதங்கள் விழுந்துவிடும்; உங்களில் இருபது வயதுள்ளவர்களும் அதற்கு மேற்பட்டவர்களுமாய்ப் பதிவுசெய்யப்பட்டு உங்கள் முழுத்தொகையில் சேர்க்கப்பட்டவர்களாகிய அனைவரின் பிரேதங்களும் விழுந்துவிடும்; அவர்கள் எனக்கு விரோதமாய் முறுமுறுத்தார்களே;
நான் உங்களைக் குடியேற்றுவேன் என்று 30
ஆணையிட்ட தேசத்திற்குள் எப்புன்னேயின் குமாரன் காலேபும் நூனின் குமாரன் யோசுவாவும் தவிர உங்களில் வேறெவரும் போய்ச் சேரவேயில்லை. கொள்ளையா 31
வார்கள் என்று நீங்கள் சொன்ன உங்கள் குழந்தைகளோ அதில் போய்ச் சேரும்படி செய்வேன்; நீங்கள் அசட்டைபண்ணின தேசத்தை அவர்கள் கண்டறிவார்கள்.
உங்கள் பிரேதங்களோ இந்த வனாந்தரத்தில் 32
லேயே விழுந்துபோம். அவைகள் வனாந்த 33
ரத்திலே விழுந்து தீருமட்டும் உங்கள்பிள்ளைகள் நாற்பதுவருஷம் வனாந்தரத்திலே மேய்ப்பர் திரிவதுபோல் திரிந்து நீங்கள் சோரம்போன பாதகத்தைச் சுமப்பார்கள். நீங் 34
கள் தேசத்தைச் சுற்றிப்பார்த்த நாற்பது நாள் இலக்கத்தின்படியே ஒவ்வொருநாள் ஒவ்வொரு வருஷமாக நீங்கள் நாற்பது வருஷம் உங்கள் அக்கிரமங்களைச் சுமந்து நான் உங்களுக்கு விரோதமாயிருப்பது இன்னதென்று உணருவீர்கள். யெகோவா 35
வாகிய நானே இதைச் சொன்னேன்; எனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடின இந்தப் பொல்லாத சபையார் யாவருக்கும் இப்படியே செய்வது நிச்சயம்; இந்த வனாந்தரத்திலே அழிவார்கள், இங்கேயே சாவார்கள் என்று சொன்னார்.

அந்தத் தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி 36
மோசேயினால் அனுப்பப்பட்டுத் திரும்பி வந்து அந்தத் தேசத்தைப்பற்றித் தூற்செய்தி பரப்பினதினால் சபை அனைத்தும் மோசேக்கு விரோதமாய்முறுமுறுக்கச்செய்தவர்கள், | தேசத்தைப்பற்றித் தூற்செய்தி 37
யைப் பரப்பின இவர்களே, யெகோவாவின் சந்நிதியில் வாதையினால் செத்தார்கள்.
தேசத்தைச் சுற்றிப்பார்க்கப்போன அந்த 38
மனிதரில் நூனின் குமாரனாகிய யோசுவா

வும் எப்புன்னேயின் குமாரனுகிய காலேபும் மாத்திரம் பிழைத்திருந்தார்கள்.

39 மோசே அந்த வார்த்தைகளே இஸ்ரவேல் புத்திரர் அனைவருக்கும் சொன்னபோது அவர்கள் மிகவும் துக்கப்பட்டார்கள்.

40 அதிகாலமே அவர்கள் எழுந்திருந்து, இதோ, வந்துவிட்டோம்; யெகோவா பேசிச்சொன்ன இடத்துக்கு நாங்கள் போவோம், நாங்கள் செய்தது பாவமே என்று சொல்லி மலை

41 காட்டினுள் ஏறத்தொடங்கினார்கள். அது கண்ட மோசே: நீங்கள் இப்படி யெகோவாவின் கட்டளையை மீறுகிறதென்ன? அது

42 உங்களுக்கு வாய்க்காது. நீங்கள் ஏறிப் போகாதிருங்கள்; யெகோவா உங்கள் நடுவில் இரார். நீங்கள் போனால் உங்கள் சத்துருக்கள் உங்களே முறியடிப்பார்கள்.

43 அமலேக்கியரும் கானனியரும் அங்கே உங்களுக்கு எதிரே இருக்கிறார்கள்; பட்டயத்தினால் விழுவீர்கள்; நீங்கள் யெகோவாவை விட்டுப் பின்வாங்கினபடியால் யெகோவா உங்களோடே இருக்கமாட்டார் என்றான்.

44 ஆனாலும் அவர்கள் மலைநாட்டினுள் ஏறத் துணிந்தார்கள், யெகோவாவின் உடன்படிக்கைப்பெட்டகமும் மோசேயுமோ பாளை

45 யத்தைவிட்டுப் போகவில்லை. அப்பொழுது மலைநாட்டில் குடியிருந்த அமலேக்கியரும் கானனியரும் இறங்கிவந்து அவர்களை முறியடித்து அவர்களை கொர்மாமட்டும் துரத்தினார்கள்.

15 1 யெகோவா மோசேயினிடம்: நீ இஸ்ர
2 வேல் புத்திரரோடு பேசி இதைச் சொல்: நான் உங்களுக்குக் குடியிருப்பாகக் கொடுக்கும் தேசத்திலே நீங்கள் போய்ச் சேர்ந்த
3 பின்பு, | பொருத்தனையாகவோ மனப்பூர்வ பலியாகவோ உங்கள் உற்சவங்களில் செலுத்தும் பலியாகவோ மாடுகளிலாகிலும் ஆடுகளிலாகிலும் தகனபலியையாவது வேறெந்த இரத்தபலியையாவது யெகோவாவுக்குச் சுகந்த நிவேதனமாகப் பலியிடும்
4 போது | தன் காணிக்கையை யெகோவாவுக்குப் படைக்கிறவன் தகனபலிக்காகிலும் வேறெந்த இரத்தபலிக்காகிலும் செலுத்தும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியோடும் ஒரு மரக்காலிலே பத்தில் ஒரு பங்கும் காற்படி எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவாகிய போஜனபலியைப் படைக்க
5 வேண்டும். பானபலியாகக் காற்படி திராட்சரசத்தையும் படைக்கவேண்டும்.
6 ஆட்டுக்கடாவோடே பத்தில் இரண்டு பங்கானதும் ஒரு பீடியில் மூன்றில் ஒரு பங்கு எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவாகிய போஜனபலியைப் படைக்கவேண்டும். பானபலியாக ஒரு படியில் மூன்றில் 7
ஒரு பங்கு திராட்சரசத்தையும் யெகோவாவுக்குச் சுகந்த காணிக்கையாகப் படைக்க வேண்டும். நீ தகனபலிக்காகிலும் பொருத் 8
தனைக்காகிலும் சமாதான பலிக்காகிலும் ஒரு காளையை யெகோவாவுக்குச் செலுத்தும்போது | அதனோடே பத்தில் மூன்று 9
பங்கானதும் அரைப்படி எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவாகிய போஜனபலியைப் படைக்கவேண்டும். பானபலியாக அரைப்படி திராட்சரசத்தை 10
யும் யெகோவாவுக்குச் சுகந்த நிவேதனமாகப் படைக்கவேண்டும். இத்தப்பிரகார 11
மாகவே ஒவ்வொரு மாட்டுக்கும் ஆட்டுக்கடாவுக்கும் செம்மறியாட்டுக்குட்டிக்கும் வெள்ளாட்டுக்குட்டிக்கும் செய்யப்பட வேண்டும். நீங்கள் படைக்கிறவைகளின் 12
இலக்கத்திற்குச் சரியாய் ஒவ்வொன்றிற்காகவும் இத்தப்பிரகாரமே செய்யவேண்டும். சுதேசிகள் யாவரும் யெகோவாவுக்குச் 13
சுகந்த நிவேதனத்தைச் செலுத்தும்போது இவ்விதமாகவே செய்யவேண்டும். உங்க 14
ளோடு தங்கியிருக்கிற பரதேசியாவது, உங்கள் நடுவிலே உங்கள் தலைமுறை தோறும் குடியிருக்கிறவனாவது யெகோவாவுக்குச் சுகந்த நிவேதனம் செலுத்தவேண்டுமானால் அவனும் நீங்கள் செய்கிறபடியே செய்யவேண்டும். கூட்டமுழுதுக்கும் உங் 15
களுக்கும் உங்களோடு தங்குகிற பரதேசிக்கும், தலைமுறைதோறுமுள்ள நித்திய நியமமாகிய ஒரே நியமம் இது, யெகோவாவின் சந்நிதியில் அந்நியனும் உங்களைப்போலவே இருப்பான். உங்களுக்கும் உங்களோடு 16
தங்குகிற அந்நியனுக்கும் ஒரே பிரமாணமும் ஒரே முறைமையும் இருக்கவேண்டும் என்று சொன்னார்.

பின்னும் யெகோவா மோசேயினிடம்: 17
18 நீ இஸ்ரவேல் புத்திரரோடு பேசி இதைச் சொல்: நான் உங்களை அழைத்துக்கொண்டு போகிற தேசத்தில் நீங்கள் சேர்ந்து | தேசத்தின் ஆகாரத்தைப் புசிக்கும்போது 19
உயர்த்திப்படைக்கும் காணிக்கையை யெகோவாவுக்குச் செலுத்தவேண்டும். உங் 20
கள் பிசைந்த மாவினால் செய்த முதற்பலகுய அடையை உயர்த்திப்படைக்கவேண்டும். போரடிக்கிற களத்தின் காணிக்கையை உயர்த்திப் படைக்கிறதுபோல அதையும் உயர்த்திப் படைக்கவேண்டும். இப் 21
படியாக உங்கள் தலைமுறைதோறும்உங்கள் பிசைந்தமாவின் முதற்பலனிலே யெகோவாவுக்கு உயர்த்திப்படைக்கும் காணிக்கையைச் செலுத்தவேண்டும்.

22 யெகோவா மோசேக்குச் சொன்ன இந்தக் கட்டளைகள் யாவற்றின்படியும்,
23 யெகோவா உங்கள் தலைமுறைக்கெல்லாம் கட்டளை கொடுத்த நாள்முதற்கொண்டு மோசேயைக்கொண்டு அவர் கட்டளையிட்ட
24 யாவற்றின்படியுமே, நீங்கள் செய்யாமல் தவறிநடக்கையில் அறியாமையினாற் செய்த அந்தத் தப்பிதம் சபைக்குத் தெரியாமற் போனால் சபையார் யாவரும் யெகோவாவுக்குச் சுகந்த தகனபலியாக ஒரு இளங்காளையையும் விதிக்கப்பட்டபடி அதற்குரிய போஜனபலியையும் பானபலியையும், பாவ நிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடா
25 வையும் செலுத்தவேண்டும். அப்பொழுது ஆசாரியன் இஸ்ரவேல் புத்திரரின் சபையினத்திற்காகவும் பிராயச்சித்தம் செய்வான்; அது அறியாமையினாற் செய்யப்பட்டபடியாலும் அதினிமித்தம் அவர்கள் தங்கள் காணிக்கையை யெகோவாவுக்கு நிவேதனமாகவும் பாவநிவாரணபலியாகவும் யெகோவாவின் சந்நிதியில் கொண்டுவந்த படியாலும் அது அவர்களுக்கு மன்னிக்கப்
26 படும். அது தெரியாத தப்பிதமாக ஜனங்கள் யாவருக்கும் நேரிட்டதாதலால் அது இஸ்ரவேல் புத்திரரின் சபையினத்திற்கும் அவர்களுக்குள்ளே தங்குகிற அந்நியனுக்
27 கும் மன்னிக்கப்படும். ஒருவன் அறியாமையினால் பாவஞ்செய்தானால் ஒரு வயதான வெள்ளாட்டைப் பாவநிவாரணபலியாகச்
28 செலுத்தவேண்டும். அப்பொழுது அறியாமையினால் பாவஞ்செய்தவனுக்காக, அவன் அறியாமல் யெகோவாவின் சந்நிதியில் பாவஞ்செய்தபடியினால், ஆசாரியன் பிராயச்சித்தம் செய்வான். அவனுக்காகப் பிராயச்சித்தம் செய்யவே அவனுக்கு மன்னிக்
29 கப்படும். அறியாமையினால் பாவம்செய்தவன் விஷயத்தில் உங்களுக்கு, இஸ்ரவேல் புத்திரராகிய உங்களில் பிறந்தவனுக்கும் உங்களுக்குள்ளே தங்கும் அந்நியனுக்கும், ஒரே பிரமாணமே.
30 துணிகரமாய் யாதொன்றைச் செய்கிறவனே, அவன் தேசத்திலே பிறந்தவனானாலும் சரி, அந்நியனானாலும் சரி, அவன் யெகோவாவை நிந்திக்கிறான், அப்படிப்பட்டவன் தன் ஜனத்தின் நடுவிலிருந்து சேர்க்கப்படவேண்டும்.
31 யெகோவாவின் வார்த்தையை அசட்டைபண்ணி அவர் கட்டளையை மீறினபடியால் அப்படிப்பட்டவன் சேர்க்கப்படவேவேண்டும்; அவன் அக்கிரமம் அவன்மேலிருக்கும் என்று சொன்னார்.
32 இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் இருக்கையில் ஓய்வுநாளில் விறகு பொறுக்கிக் கொண்டிருந்த ஒரு இஸ்ரவேலனைக் கண்டு
33 பிடித்தார்கள். விறகு பொறுக்கினவனைக் கண்டுபிடித்தவர்கள் அவனை மோசே ஆரோன் என்பவர்களிடத்துக்கும் சபையார் அனைவரிடத்துக்கும் கொண்டுவந்தார்கள்.
34 அவனுக்குச் செய்யவேண்டியது இன்னதென்று தெளிவான கட்டளை இல்லாதபடியினால் அவனைக் காவலில் வைத்தார்கள்.
35 யெகோவா மோசேயினிடம்: அந்த மனிதன் கொல்லப்படவேவேண்டும்; சபையார் அனைவரும் அவனைப் பாளயத்திற்கு வெளியே கல்லெறியவேண்டும் என்றார்.
36 அப்பொழுது சபையார் அனைவரும் யெகோவா மோசேக்குக் கட்டளையிட்டபடியே அவனைப் பாளயத்திற்கு வெளியே கொண்டுபோய்க் கல்லெறிந்தார்கள்; அவன் செத்தான்.
37 பின்னும் யெகோவா மோசேயினிடம்:
38 நீ இஸ்ரவேல் புத்திரரோடு பேசி, அவர்கள் தங்கள் தலைமுறைதோறும் தங்கள் வஸ்திரங்களின் ஓரங்களிலே தொங்கல்களைச் செய்து, ஒரத்தின் தொங்கலிலே இளநீல நாடாவை வைக்கவேண்டும்.
39 அதைப் பார்க்கும்போதெல்லாம் நீங்கள் யெகோவாவின் சகல கட்டளைகளையும் நினைத்து அவைகளின்படியே செய்வதற்கு அந்தத் தொங்கல் உங்களுக்கு உதவியாகும். உங்கள் இருதயமும் உங்கள் கண்களும் நடத்தின
40 வழியில் நீங்கள் சென்றதுபோல இனிமேலும் சென்று சோரம்போகாமல் | என் கட்டளைகளையெல்லாம் நினைத்து அவைகளின்படி செய்து உங்கள் தேவனுக்குப் பரிசுத்தராயிருக்கவேண்டுமென்பதே இதன் நோக்கம். உங்களுக்குத் தேவனாயிருக்கும்
41 படி எகிப்துதேசத்திலிருந்து உங்களைக் கொண்டுவந்த உங்கள் தேவனாகிய யெகோவா நான்; நானே உங்கள் தேவனாகிய யெகோவா என்று சொல் என்றார்.

16 லேவிக்குப் பிறந்த கோகாத்தின் குமாரனாகிய இத்சேயாரின் மகன் கோராகும், ரூபன் வம்சத்திலுள்ள எலியாபின் குமாரராகிய தாத்தானும் அபிராமும் பேலேத்தின் குமாரனாகிய ஒனும் ஏறைக் கூட்டிக்கொண்டு |
2 மோசேக்கு விரோதமாய் எழும்பினார்கள்; இஸ்ரவேல் புத்திரரில் சபைத்தலைவர்களும் ஆலோசனைக்கர்த்தாக்களும் பேர்பெற்றவர்களுமாகிய இருநூற்று ஐம்பதுபேர் அவர்களோடு சேர்ந்துகொண்டார்கள்.
3 இவர்களனைவரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடி அவர்களைப் பார்த்து: நீங்கள் மிஞ்சிப்போகிறீர்கள்; சபையார் அனைவரும் பரிசுத்தமானவர்கள்;

யெகோவா அவர்கள் நடுவில் இருக்கிறாரே; இப்படியிருக்க யெகோவாவின் சபைக்கு மேலாக உங்களை ஏன் உயர்த்துகிறீர்கள் 4 என்றார்கள். அதைக் கேட்கவே மோசே 5 முகங்குப்புறவிழுந்தான். பின்பு அவன் கோராகையும் அவன் கூட்டத்தார் அனைவரையும் பார்த்து: நாளைக்காலையில் யெகோவா தம்முடையவன் இன்னான் என்றும் தம்மண்டையிலே தாம் கிட்டிச்சேரச் செய்யும் பரிசுத்தவான் இன்னான் என்றும் காண்பிப்பார்; அப்பொழுது எவனைத் தெரிந்தெடுப்பாரோ அவனைத் தம்மிடம் 6 கிட்டிச்சேரச் செய்வார். ஒன்று செய்யுங்கள்; கோராகே, கோராகின் கூட்டத்தாரே, 7 நீங்கள் எல்லாரும் தூபகலசங்களை எடுத்துக்கொண்டு | நாளைக்கு அவைகளில் அக்கினிபோட்டு யெகோவாவின் சந்நிதியில் தூபவர்க்கம் இடுங்கள்; அப்பொழுது யெகோவா தெரிந்தெடுப்பவனே பரிசுத்தமானவன்; லேவியின் புத்திரராகிய நீங்களே 8 மிஞ்சிப்போகிறீர்கள் என்றான். பின்னும் 9 மோசே கோராகினிடம்: லேவியின் புத்திரரே, கேளுங்கள்; யெகோவாவின் வாசஸ்தலத் திருப்பணிவிடையைச் செய்யவும் சபையாரின்முன் நின்று அவர்களுக்குச் சேவைசெய்யவும் தம்மைக் கிட்டிச்சேரும்படி இஸ்ரவேலின் கடவுள் உங்களை இஸ்ரவேல் சபையாரிலிருந்து பிரித்தெடுத்து | 10 உன்னையும் உன்னோடுகூட லேவியின் புத்திரராகிய உன் எல்லாச் சகோதரரையும் கிட்டிச்சேரப்பண்ணினாரே, இது உங்களுக்குப் போதாதோ? இன்னும் ஆசாரியபட்டத்தையும் தேடுகிறீர்களே? 11 இதற்காகத் தானே நீயும் உன் கூட்டத்தார் அனைவரும் யெகோவாவுக்கு விரோதமாகவே கூட்டங்கூடினீர்கள்; ஆரோனுக்கு விரோதமாக நீங்கள் முறுமுறுக்கிறதற்கு அவன் செய்த 12 தென்ன என்றான். பின்பு மோசே எலியாபின் குமாரராகிய தாத்தானையும் அபிராமை 13 யும் அழைத்தனுப்ப, அவர்கள்: நாங்கள் வருகிறதில்லை; இந்த வனாந்தரத்திலே எங்களைக் கொன்றுபோடும்படி பாலும் தேனும் ஓடுகிற தேசத்திலிருந்து எங்களைக் கொண்டு வந்தது அற்பக்காரியமோ, எங்கள்மேல் துரைத்தனம்பண்ணவும் பார்க்கிறாயோ? 14 மேலும் நீ எங்களைப் பாலும் தேனும் ஓடுகிற தேசத்துக்குக் கொண்டுவரவுமில்லை, எங்களுக்கு வயல்களையும் திராட்சத்தோட்டங்களையும் சுதந்தரமாகக் கொடுக்கவுமில்லை; இந்த மனிதருடைய கண்களில் மண்ணைப் போடப் பார்க்கிறாயோ? நாங்கள் வருகிறதில்லை என்றார்கள். 15 அப்பொழுது மோசே கடுங்கோபம் மூளவே அவன் யெகோவாவினிடம்: அவர்கள் செலுத்துங் காணிக்கையை அங்கீகரியாதேயும்; நான் அவர்களிடம் ஒரு கழுதையைக்கூட எடுத்துக் கொள்ளவில்லை; அவர்களில் ஒருவனுக்கும் தீங்கு செய்ததில்லை என்றான். பின்பு 16 மோசே கோராகினிடம்: நீயும் உன் கூட்டத்தார் யாவரும், நீயும் அவர்களும் ஆரோனோடுகூட, நாளைக்கு யெகோவாவின் சந்நிதியில் வந்திருங்கள். உங்களில் ஒவ் 17 வொருவனும் தன்தன் தூபகலசத்தை எடுத்துக்கொள்ளுங்கள்; நீங்கள் அதிலே தூபவர்க்கத்தைப்போட்டு ஆளுக்கு ஒரு கலசமாக இருநூற்று ஐம்பது தூபகலசங்களையும் யெகோவாவின் சந்நிதியில் கொண்டுவாருங்கள்; நீயும் ஆரோனும் உங்கள் தூபகலசங்களைக் கொண்டுவாருங்கள் என்றான். அப்படியே அவர்கள் தங்கள்தங்கள் தூப 18 கலசங்களிலே அக்கினியைப் போட்டுத் தூபவர்க்கத்தைத்தூவி எடுத்துக்கொண்டு தரிசனக்கூடாரவாசலின் எதிரே வந்து நின்றார்கள்; மோசேயும் ஆரோனும் அங்கே வந்து நின்றார்கள். அவர்களுக்கு விரோதமாகக் கோராகு சபையனைத்தையும் தரிசனக்கூடாரவாசலிலே கூடிவரச்செய்தான்; அப்பொழுது யெகோவாவின் மகிமை 19 சபையனைத்துக்கும் காணப்பட்டது.

யெகோவா மோசேயோடும் ஆரோனோடும் 20 பேசி: இந்தச் சபையைவிட்டுப் பிரிந்து 21 போங்கள்; நிமிஷநேரத்திலே அவர்களை அதமாக்குவேன் என்றார். அதைக் கேட் 22 கவே அவர்கள் முகங்குப்புறவிழுந்து: கடவுளே, மாம்சமான யாவரின் ஆவிகளுக்கும் கடவுளே, ஒரு மனிதன் பாவம் செய்திருக்கச் சபையனைத்தின்மீதும் கடுங்கோபங் கொள்வீரோ என்றார்கள். யெகோவா 23 மோசேயினிடம்: கோராகு, தாத்தான், அபி 24 ராம் என்பவர்களுடைய வாசஸ்தலத்தின் பக்கத்திலிருந்து விலகிப்போகும்படி சபைக்குச் சொல் என்று கட்டளையிடவே | மோசே எழுந்திருந்து தாத்தான் அபிராம் 25 என்பவர்களிடம் போனான்; இஸ்ரவேலின் மூப்பரும் அவன் பின்னே போனார்கள். அவன் சபையாரைப் பார்த்து: தெய்வபய 26 மற்ற இந்த மனிதரின் கூடாரங்களை விட்டு விலகிப்போங்கள்; அவர்கள் சகல பாவங்களினாலும் நீங்கள் அடித்துக்கொண்டு போகப்படாதபடி அவர்களுக்குரியவைகளில் எதையும் தொடவேண்டாம் என்றான். அப்படியே அவர்கள் கோராகு, தாத்தான், 27 அபிராம் என்பவர்களுடைய வாசஸ்தலத்தின் பக்கத்திலிருந்து விலகிப்போனார்கள்;

தாத்தானும் அபீராமும் வெளியே வந்து தங்கள் மனைவிமக்கள் குழந்தைகளோடும் தங்கள் கூடாரவாசலிலே நின்றார்கள்.
28 அப்பொழுது மோசே, இந்தக் கிரியைகளெல்லாம் செய்கிறதற்கு யெகோவா என்னை அனுப்பினார் என்றும் அவைகளை நான் என் மனதின்படியே செய்யவில்லை என்றும் நீங்கள் இவைகளினாலே அறிந்துகொள்
29 வீர்கள்: சகல மனிதரும் சாகிறபடியே இவர்கள் செத்துச் சகல மனிதரும் விசாரிக்கப்படுகிறதுபோலவே இவர்களும் விசாரிக்கப்பட்டால் யெகோவா என்னை அனுப்ப
30 வில்லை; யெகோவா ஒரு புதிய காரியத்தை நேரிடச்செய்யவே பூமி தன் வாயைத் திறந்து இவர்களையும் இவர்களுக்குரிய யாவையும் விழுங்கி இவர்கள் உயிரோடே பாதாளத்தில் இறங்கும்படிசெய்யுமானாலோ இந்த மனிதர் யெகோவாவை அலட்சியஞ் செய்தார்கள் என்பதை அறிந்துகொள்வீர்
31 கள் என்றார். அவர் இந்த வார்த்தை களையெல்லாம் சொல்லியமாத்திரமே அவர்
32 கள் நின்றிருந்த நிலம் பிளந்தது; பூமி தன் வாயைத்திறந்து அவர்களையும் அவர்கள் வீட்டாரையும் கோராகுக்குரிய எல்லா மனிதரையும் அவர்களுக்குரிய சகல
33 பொருட்களையும் விழுங்கிவிட்டது. அவர் கள் தங்களுக்குரிய யாவற்றோடும் உயிரோடே பாதாளத்தில் இறங்கினார்கள்; பூமி அவர்களை மூடிக்கொண்டது. இப்படியாகச் சபையின் நடுவிலிருந்து அழிந்து
34 போனார்கள். அவர்களைச் சுற்றியிருந்த இஸ்ரவேலர் யாவரும் அவர்கள் கூக்குரலைக்கேட்டு, பூமி நம்மையும் விழுங்கிப் போடும் என்று சொல்லி ஓடினார்கள்.
35 அக்கினி யெகோவாவின் சந்நிதியிலிருந்து புறப்பட்டுத் தூபங்காட்டின இருநூற்று ஐம்பதுபேரையும் பட்சித்துவிட்டது.
36, 37 பின்பு யெகோவா மோசேயினிடம்: அக்கினிக்குள் அகப்பட்ட தூபகலசங்களை எடுக்கும்படி ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் எலெயாசாருக்குச் சொல். அவை களிலிருக்கிற அக்கினியை அப்பாலே கொட்டிவிடு; அந்தக் கலசங்கள் பரிசுத்த
38 மாயின. இந்தக் கலசங்களை, தங்கள் ஜீவனுக்கே கேடுண்டாக்கிப் பாவஞ்செய்த இந்த மனிதரின் தூபகலசங்களை, பலி பீடத்தை மூடும் தட்டையான தகடுகளாய் அடிக்கவேண்டும்; அவர்கள் யெகோவாவின் சந்நிதியில் அவைகளைக் கொண்டுவந்த தினால் அவைகள் பரிசுத்தமாயின; அவை கள் இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு அடை
39 யாளமாகும் என்றார். அப்படியே ஆசாரிய ,னாகிய எலெயாசார் சுட்டெரிக்கப்பட்டவர்கள் கொண்டுவந்திருந்த செப்புத் தூப கலசங்களை எடுத்து யெகோவா மோசேயைக்கொண்டு தனக்குக் கட்டளையிட்டபடியே அவைகளைப் பலிபீடத்தை மூடும் தகடுகளாக அடிப்பித்தான். ஆரோனின் புத்தி 40
ரரல்லாத அந்நியன் எவனும் யெகோவாவின் சந்நிதியில் தூபங்காட்ட வராத படிக்கும், கோராகைப்போலும் அவன் கூட்டத்தாரைப்போலும் ஆகாதபடிக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கு ஞாபகக்குறியாகும் பொருட்டு இப்படிச் செய்தான்.

மறுநாளில் இஸ்ரவேல் புத்திரரின் சபை 41
யார் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து: நீங்கள் யெகோவாவின் ஜனத்தைக் கொன்றுபோட்டீர்கள் என்றார்கள். சபையார் மோசேக் 42
கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூடித் தரிசனகூடாரத்துக்கு நேரே பார்த்த போது, இதோ, மேகம் அதை மூடிற்று, யெகோவாவின் மகிமை காணப்பட்டது.
மோசேயும் ஆரோனும் தரிசனகூடாரத் 43
துக்கு எதிரே வந்தார்கள். அப்பொழுது 44
யெகோவா மோசேயினிடம்: இந்தச் சபை 45
யாரை விட்டு விலகிப்போங்கள்; நிமிஷ நேரத்திலே அவர்களை அதமாக்குவேன் என்றார். அதைக் கேட்கவே அவர்கள் முகங் 46
குப்புற விழுந்தார்கள். மோசே ஆரோனிடம்: யெகோவாவின் சந்நிதியிலிருந்து கடுங் கோபம் புறப்பட்டது, வாதை தொடங்கிற்று, நீ தூபகலசத்தை எடுத்துப் பலி பீடத்திலிருக்கிற அக்கினியை அதிலே போட்டு அதின்மேல் தூபவர்க்கம் இட்டுச் சீக்கிரமாய்ச் சபையினிடத்தில் ஓடி அவர் களுக்காகப் பிராயச்சித்தம் செய் என்றார்.
மோசே சொன்னபடியே ஆரோன் அதை 47
எடுத்துக்கொண்டு சபையின் நடுவே ஓடினான்; இதோ, ஜனங்களுக்குள்ளே வாதை தொடங்கியிருந்தது; அவன் தூபவர்க்கம் போட்டு ஜனங்களுக்காகப் பிராயச்சித்தம் செய்து, செத்தவர்களுக்கும் உயிரோடிருக் 48
கிறவர்களுக்கும் நடுவே நின்றான்; நிற்கவே வாதை நிறுத்தப்பட்டது. கோராகின் காரி 49
யத்தினிமித்தம் செத்தவர்கள்தவிர அந்த வாதையினால் செத்துப்போனவர்கள் பதினாலாயிரத்து எழுநூறுபேர். வாதை நிறுத் 50
தப்பட்டது, ஆரோன் தரிசனகூடார வாசலிலே மோசேயினிடம் திரும்பிவந்தான்.

பின்பு யெகோவா மோசேயினிடம்: | **17**
நீ இஸ்ரவேல் புத்திரரோடு பேசி, அவர்கள் 2
பிதாக்களின் கோத்திரங்களாகிய ஒவ்வொரு

கோத்திரத்தினுடைய பிரபுவினிடம் ஒவ்வொரு கோலாகப் பன்னிரண்டு கோல்களை வாங்கி அவனவன் கோலில் அவனவன் 3 பேரை எழுது. லேவியினுடைய கோலின் மேல் ஆரோன் பேரை எழுது; அவர்கள் பிதாக்களின் கோத்திரத்தலைவன் ஒவ்வொரு வனுக்காகவும் ஒவ்வொரு கோல் இருக்க 4 வேண்டும். அவைகளைத் தரிசனக்கூடாரத்திலே நான் உங்களுக்குத் தரிசனமளிக்கும் ஸ்தானமாகிய சாட்சியப்பெட்டகத்திற்கு எதி 5 ரேவைக்கவேண்டும். நான் தெரிந்தெடுக்கிற வனுடைய கோல் தளிர்க்கும்; இப்படியாக இஸ்ரவேல் புத்திரர் உங்களுக்கு விரோதமாய் முறுமுறுக்கிற அவர்கள் முறுமுறுப்பை என்னைவிட்டு ஒழியப்பண்ணுவேன் 6 என்று சொன்னார். இதை மோசே இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னான்; சொல்லவே அவர்கள் பிரபுக்கள் எல்லாரும் தங்கள் பிதாக்களுடைய கோத்திரத்தின்படி ஒவ்வொரு பிரபுவுக்கு ஒவ்வொரு கோலாகப் பன்னிரண்டு கோல்களை அவனிடம் கொடுத்தார்கள்; ஆரோனின் கோலும் அவர்கள் கோல்களோடே 7 இருந்தது. அந்தக் கோல்களை மோசே சாட்சியக்கூடாரத்திலே யெகோவாவின் சந் 8 நிதியில் வைத்தான். மறுநாள் மோசே சாட்சியக்கூடாரத்தினுட் சென்றபோது இதோ, லேவிக் கோத்திரத்தாருக்குரிய ஆரோன் கோல் தளிர்த்திருந்தது; அது தளிர்விட்டுப் பூப்பூத்து வாதுமைப்பழங் 9 களைக் கொடுத்தது. அப்பொழுது மோசே யெகோவாவின் சந்நிதியிலிருந்த அந்தக் கோல்களையெல்லாம் எடுத்து வெளியே இஸ்ரவேல் புத்திரர் எல்லாரிடமும் 10 கொண்டு வந்தான்; அவர்கள் கண்டு தங்கள் தங்கள் கோல்களை வாங்கிக்கொண்டார்கள். பின்பு யெகோவா மோசேயினிடம்: ஆரோனின் கோலைத் திரும்பவும் சாட்சியப்பெட்டகத்திற்கு எதிரே கொண்டுபோய்வை. அது அந்தக் கலகக்காரருக்கு அடையாளமாக வைக்கப்பட்டிருக்கும், அவர்கள் சாகாதபடி அவர்களின் முறுமுறுப்பை இவ்விதமாக என்னைவிட்டு ஒழியப்பண்ணுவாய் 11 என்று சொன்னார். மோசே அப்படியே செய்தான், யெகோவா தனக்குக் கட்டளையிட்டபடியே செய்தான்.

12 இஸ்ரவேல் புத்திரர் மோசேயினிடம்: இதோ, மாண்டு அழிந்து போகிறோம்; நாங் 13 கள் எல்லாரும் அழிந்துபோகிறோம்; கிட்டிச்சேருகிற எவனும், யெகோவாவின் வாசஸ்தலத்தைக் கிட்டிச் சேருகிற எவனும், மாண்டுபோகிறான்; நாங்கள் அனைவரும் மாண்டுபோகத்தான் வேண்டுமோ என்று சொன்னார்கள்.

18 பின்பு யெகோவா ஆரோனிடம்: நீயும் உன்னோடுகூட உன் குமாரரும் உன் தகப்பன் குடும்பத்தாரும் பரிசுத்த ஸ்தலத்திலே சுமக்கும் தவறுகளுக்கெல்லாம் உத்தரவாதிகளாகவேண்டும்; நீயும் உன்னோடுகூட உன் குமாரரும் உங்கள் ஆசாரிய ஊழியத்தில் சுமக்கும் தவறுகளுக்கெல்லாம் உத்தரவாதிகளாக வேண்டும். 2 லேவியின் கோத்திரத்தாரும் உன் தகப்பன் குடும்பத்தாருமாகிய உன் சகோதரரும் உன்னோடு கிட்டச் சேரும்படி செய்; அவர்கள் உன்னோடு கூடியிருந்து உனக்கு உதவிசெய்வார்கள்; நீயும் உன் குமாரருமோ சாட்சியக்கூடாரத்தின் எதிரே யே இருப்பீர்கள். 3 நீ பார்த்துக்கொள்ள வேண்டியவைகளையும் கூடார முழுவதிலும் பார்க்கவேண்டியவைகளையும் அவர்கள் பார்த்துக்கொள்ளவேண்டும், எனினும் அவர்கள் பரிசுத்தஸ்தலத்தின் பணிமுட்டுகளுண்டையிலும் பலிபீடத்தண்டையிலும் கிட்டிச்சேரலாகாது, சேர்ந்தால் நீங்களும் அவர்களும் சாவீர்கள். 4 அவர்கள் உன்னோடு சேர்ந்து கூடாரத்துக்குரிய எல்லாப்பணிவிடையையும் செய்து தரிசனக்கூடாரத்தைப் பார்த்துவரவேண்டும். அந்நியன் ஒருவனும் உங்களைக் கிட்டிச்சேரலாகாது. 5 இஸ்ரவேல் புத்திரர்மேல் இனிக் கடுங்கோபம் வராதபடி நீங்களே பரிசுத்தஸ்தலத்திற்குரியவைகளையும் பலிபீடத்திற்குரியவைகளையும் பார்த்துக்கொள்ள வேண்டும். 6 இதோ, நானே உங்கள் சகோதரராகிய லேவியரை இஸ்ரவேல் புத்திரரிலிருந்து பிரித்தெடுத்து உங்களுக்குக் கொடுத்தேன்; இவர்கள் தரிசனக்கூடாரத்திலே பணிவிடைசெய்வதற்கென்று யெகோவாவுக்குத் தத்தம் செய்யப்பட்டவர்கள். 7 நீயும் உன்னோடுகூட உன் குமாரருமோ வெனில் பலிபீடத்துக்கும் திரையின் உட்புறத்துக்கும் உரிய யாவற்றையும் செய்து உங்கள் ஆசாரிய ஊழியத்தைப் பார்த்துப் பணிவிடை செய்யவேண்டும்; நீங்கள் செய்வதற்கென்று ஆசாரிய ஊழியத்தை உங்களுக்கு அனுக்கிரகஞ் செய்தேன்; கிட்டிச் சேருகிற அந்நியன் சாகவேவேண்டும் என்று சொன்னார்.

8 பின்னும் யெகோவா ஆரோனிடம்: உயர்த்திப்படைக்கும் படைப்புகளைப் பார்த்துவரும்படியாக உனக்கு அருளினேன்; இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்தப்படுத்துகிறவைகளிலெல்லாம் அவைகளை உனக்கும்

உன் குமாரருக்குமுரிய பங்காகக் கொடுத்
தேன்; இது நித்திய நியமமாகும். மகா பரி
9 சுத்தமானவைகளிலே, அக்கினியில் த
னிக்கப்படாத இவைகளே உன்னுடைய
வைகள். அவர்கள் போஜனபலியாகவும்
பாவநிவாரணபலியாகவும் குற்றநிவாரண
பலியாகவும் படைக்கிறவைகளெல்லாம்
உனக்கும் உன் குமாரருக்கும் மகா பரிசுத்
10 தமாயிருக்கும். மகா பரிசுத்தமான இடத்
திலே அவைகளைப் புசிக்கவேண்டும்; ஆண்
மக்கள் யாவரும் அவைகளைப் புசிப்பார்
கள். அவைகள் உனக்குப் பரிசுத்தம்.
11 அவர்கள் காணிக்கைகளில் இஸ்ரவேல் புத்
திரர் அசைவாட்டிப் படைப்பவைகளெல்
லாம் உனக்குரிய பங்காகும்; அவைகளை
உனக்கும் உன்னோடுகூட உன் குமாரருக்
கும் உன் குமாரத்திகளுக்கும் நித்திய நியம
மாகக் கொடுத்தேன்; உன் வீட்டிலே தீட்
டில்லாதவர்கள் யாவரும் அவைகளைப் புசிக்
12 கலாம். அவர்கள் யெகோவாவுக்குக்
கொடுக்கும் அவர்களுடைய முதற் பலன்க
ளாகிய உச்சிதமான எண்ணெய் முழுவதை
யும் உச்சிதமான கிராட்சரசமுழுவதையும்
தானியத்தையும் உனக்கு உரியதாகக்கொ
13 டுத்தேன். தங்கள் தேசத்தில் முதற் பழுத்த
பலனிலே அவர்கள் யெகோவாவுக்குக்
கொண்டுவருவதெல்லாம் உனக்கு உரியதா
கும்; உன் வீட்டிலே தீட்டில்லாதவர்கள்
14 யாவரும் அவைகளைப் புசிக்கலாம். இஸ்ர
வேலிலே பிரதிஷ்டை செய்து நேர்ந்துவிடப்
15 பட்டதெல்லாம் உனக்கு உரியதாகும். சகல
பிராணிகளிலும், மனிதரிலும் மிருகங்களி
லும், கர்ப்பத்திறந்து பிறப்பதெல்லாம்
யெகோவாவுக்குக் கொண்டுவரப்படவே,
உன்னுடையதாகும். ஆனாலும் ஒன்றை
மறக்கக்கூடாது, மனிதரின் முதற்பேற்றை
அகத்தியமாய் மீட்கவேண்டும்; தீட்டான
மிருகத்தின்கலியீற்றையும் மீட்கவேண்டும்.
16 மீட்கவேண்டியவைகள் ஒரு மாதத்திற்கு
மேற்பட்டதானால் உன் மதிப்புக்கு இசை
யப் பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்கின்
படி ஐந்து சேக்கல் பணத்தாலே அவைகளை
மீட்கவேண்டும்;—ஒரு சேக்கல் இருபது
17 கேரா. மாட்டின் தலியீற்று, செம்மறியாட்
டின் தலியீற்று, வெள்ளாட்டின் தலியீற்று
இவைகளோ மீட்கப்படவேண்டாம்; அவை
கள் பரிசுத்தமானவைகள்; அவைகளின்
இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் தெளித்து
அவைகளின் கொழுப்பை யெகோவாவுக்
குச் சுகந்த நிவேதனமாகத் தகனிக்கவேண்
18 டும்; அவற்றின் மாம்சம் உன்னுடையதா
கும், அசைவாட்டும் மார்க்கண்டத்தையும்
வலது முன்னங்தொடையையும் போலவே
உன்னுடையதாகும். இஸ்ரவேல் புத்திரர் 19
யெகோவாவுக்கு படைக்கிற பரிசுத்தமான
வைகளில் உயர்த்திப் படைக்கிறவைகளே
யெல்லாம் உனக்கும் உன்னோடுகூட உன்
குமாரருக்கும் உன் குமாரத்திகளுக்கும் நித்
திய கட்டளையாகக் கொடுத்தேன்; யெகோ
வாவின் சந்நிதியில் இது உனக்கும் உன்
னோடுகூட உன் சந்ததிக்கும் என்றைக்கும்
செல்லும் மாறாத உடன்படிக்கை என்று
சொன்னார்.

பின்னும் யெகோவா ஆரோனிடம்: 20
அவர்கள் தேசத்தில் உனக்குச் சுதந்தர
மில்லை. அவர்கள் நடுவில் உனக்குப்
பங்குமில்லை, இஸ்ரவேல் புத்திரர் நடுவில்
உன் பங்கும் உன் சுதந்தரமும் நானே.
இதோ, இஸ்ரவேலரின் தசமபாக முழுவ 21
தையும் லேவியின் புத்திரருக்குச் சுதந்தர
மாகக்கொடுத்தேன்; தரிசனக்கூடாரத்தில்
அவர்கள் செய்யும் பணிவிடைக்குக் கைம
மாறு இதுவே. இஸ்ரவேல் புத்திரர் இனி 22
தரிசனக்கூடாரத்தைக் கிட்டிச்சேரலாகாது,
சேர்ந்தால் சாவதற்கேதுவாய்த் தங்கள்மேல்
குற்றஞ்சுமத்திக்கொள்வார்கள். லேவியரே 23
தரிசனக்கூடாரத்தில் பணிவிடைசெய்ய
வேண்டும்; அதில் நேரிடும் தவறுகளுக்கு
அவர்களே உத்தரவாதிகள்; இஸ்ரவேல்
புத்திரர் நடுவில் அவர்களுக்குச் சுதந்தர
மில்லை என்பது உங்கள் தலைமுறைதோறும்
நித்திய நியமமாம். இஸ்ரவேல் புத்திரர் 24
யெகோவாவுக்கு உயர்த்திப்படைக்கும்
படைப்பாகிய தசமபாகத்தை லேவியருக்
குச் சுதந்தரமாகக் கொடுத்தேன்: அவர்களைப்
பற்றி, இஸ்ரவேல் புத்திரரின் நடுவில் அவர்
களுக்குச் சுதந்தரமில்லை என்று சொன்ன
தற்குக் காரணம் இதுவே என்று சொன்
னார்.

பின்னும் யெகோவா மோசேயினிடம்: 25
நீ லேவியரோடு பேசி, இஸ்ரவேல் புத்திர 26
ரிடமிருந்து வாங்கிக்கொள்ள நான் உங்
களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்த தசம
பாகத்தை நீங்கள் அவர்களிடம் வாங்கும்
போது, தசமபாகத்தில் பத்தில் ஒரு பங்கை
யெகோவாவுக்கு உயர்த்திப் படைக்கும்
படைப்பாகச் செலுத்தவேண்டும். நீங்கள் 27
உயர்த்திப் படைக்கும் இத்தப் படைப்பு
உங்கள் களத்தின் தானியமாகவும் உங்கள்
ஆலையின் இரசமாகவும் எண்ணப்படும்.
இஸ்ரவேல் புத்திரரிடமிருந்து வாங்கும் 28
உங்களுக்குரிய தசமபாகங்களிலெல்லாம்
நீங்களும் இப்படியே யெகோவாவுக்கென்று
ஒரு படைப்பை உயர்த்திப் படைக்க

வேண்டும். யெகோவாவுக்கென்று படைத்த அந்தப் படைப்பை ஆசாரியனாகிய ஆரோனுக்குக் கொடுக்கவேண்டும். 29 உங்களுக்குக் கொடுக்கப்படுகிற யாவற்றிலும் உச்சிதமான பரிசுத்த பங்கையெல்லாம் யெகோவாவுக்கு உயர்த்திப்படைக்கும் படைப்பாகச் செலுத்தவேண்டும் என்று 30 சொல்லிப் | பின்னும் அவர்களிடம், அதில் உச்சிதமானதை நீங்கள் உயர்த்திப் படைக்கும்போது அது லேவியரின் களத்துவரத்தாகவும் லேவியரின் ஆலிவரத்தாகவும் 31 எண்ணப்படும். அதை நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் எவ்விடத்திலும் புசிக்கலாம்; தரிசனக்கூடாரத்திலே நீங்கள் செய்யும் பணிவிடைக்கு இதுவே உங்கள் கைம் 32 மாறு. இப்படிப்பட்டவற்றில் உச்சிதமானதை உயர்த்திப்படைத்தீர்களானால்நீங்கள் அவற்றினிமித்தம் உங்கள்மேல் பாவஞ் சுமத்திக்கொள்ளமாட்டீர்கள்; இஸ்ரவேல் புத்திரரின் பரிசுத்தமானவைகளைத் தீட்டுப்படுத்துவதுமில்லை, நீங்கள் சாவதுமில்லை என்று சொல் என்றார்.

**19** யெகோவா மோசே ஆரோன் என்பவர்க 2 ளிடம்: | யெகோவா கட்டளையிட்ட பிரமாண நியமம் இதுவே. பழுதற்ற ஒரு சிவப்புக்கிடாரியை உன்னிடம் கொண்டு வரும்படி இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்; அது குறைவற்றதும் நுகத்தடிக்கு உட் 3 படாததுமாயிருக்கவேண்டும். அதை எலெயாசார் என்னும் ஆசாரியனிடம் ஒப்புக் கொடுங்கள்; அவன் அதைப் பாளயத்துக்கு வெளியே கொண்டுபோவான்; அங்கே அது அவன் முன்னிலையில் கொல் 4 லப்படவே | ஆசாரியனாகிய எலெயாசார் தன் விரலினால் அதின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்துத் தரிசனக்கூடாரத்தின் முன் பக்கத்து முகமாய்த் திரும்பி ஏழுதரம் 5 தெளிக்கவேண்டும். பின்பு அவன் கண் காணவே கிடாரியை ஒருவன் சுட்டெரிக்க வேண்டும்; அதின் தோலும் அதின் மாம்சமும் அதின் இரத்தமும் அதின் உதப்பியும் 6 சுட்டெரிக்கப்படவேண்டும். அப்பொழுது ஆசாரியன் கேதுருக்கட்டையையும் ஈசோப்பையும் சிவப்புநூலையும் எடுத்துக் கிடாரி எரிக்கப்படுகிற நெருப்பின் நடுவிலே 7 போட்டுவிடவேண்டும். ஆசாரியன் தன் வஸ்திரங்களைத் துவைத்துத் தண்ணீரிலே முழுகியபின்பே பாளயத்துக்குள் செல்லலாம். சாயங்காலமட்டும் அவன் தீட்டுப் 8 பட்டிருப்பான். கிடாரியைச் சுட்டெரித்தவனும் தன் வஸ்திரங்களைத் தண்ணீரில் துவைத்துத் தண்ணீரில் முழுகவேண்டும், சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான். 9 தீட்டுப்படாத ஒருவன் அந்தக் கிடாரியின் சாம்பலை வாரிக்கொண்டுபோய்ப் பாளயத்திற்கு வெளியே சுத்தமான ஒரு இடத்திலே கொட்டிவைத்திருக்க வேண்டும்; தீட்டுக் கழிக்கும் தண்ணீரில் போடுவதற்கென்று அதை இஸ்ரவேல் புத்திரரின் சபைக்காகப் பத்திரப்படுத்தவேண்டும்; அது பாவநிவாரணத்துக்கேதுவாகும். 10 கிடாரியின் சாம்பலை வாரினவன் தன் வஸ்திரங்களைத் துவைக்க வேண்டும்; அவன் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; இது இஸ்ரவேல் புத்திரருக்கும் அவர்கள் நடுவிலே தங்கும் அந்நியனுக்கும் நித்திய நியமம்.

11 மனிதபிரேதம் எதையும் தொடுகிறவன் ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பான். 12 அவன் மூன்றும் நாளிலும் ஏழாம்நாளிலும் தீட்டுக் கழிக்கும் ஜலத்தினால் தன்னைச் சுத்திகரிக்க வேண்டும், அப்பொழுது தீட்டு நீங்கும்; மூன்றும் நாளிலும் ஏழாம் நாளிலும் தன்னைச் சுத்திகரியாதிருப்பானால் தீட்டு நீங்காது. 13 மனிதபிரேதத்தைத் தொட்டும் தன்னைச் சுத்திகரித்துக்கொள்ளாதவன் யெகோவாவின் வாசஸ்தலத்தைத் தீட்டுப்படுத்துகிறான்; அப்படிப்பட்டவன் இஸ்ரவேலிலிருந்து நீக்கப்பட்டுப் போவான்; தீட்டுக் கழிக்கும் தண்ணீர் அவன்மேல் தெளிக்கப்படாதபடியினால் அவன் தீட்டுப்பட்டிருப்பான்; அவன் தீட்டு இன்னும் அவன்மேலிருக்கும். 14 கூடாரத்தில் ஒரு மனிதன் செத்தால் அதற்குரிய நியமம் இதுவே, அந்தக் கூடாரத்தினுட் செல்லுகிற எவனும் கூடாரத்தில் இருக்கிற எவனும் ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பான். 15 மூடிக் கட்டப்படாமல் திறந்திருக்கும் பாத்திரங்கள் எல்லாம் தீட்டுப்பட்டிருக்கும். 16 வெளியிலே பட்டயத்தால் வெட்டுண்டவனையோ செத்தவனையோ மனித எலும்பையோ பிரேதக் குழியையோ தொட்டவன் எவனும் ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பான். 17 பாவநிவாரணத்திற்கென்று சுட்ட சாம்பலிலே கொஞ்சம் எடுத்துத் தீட்டுப்பட்டவனுக்காக ஒரு பாத்திரத்தில் போட்டு அதின்மேல் ஊற்று நீர் வார்க்கவேண்டும். 18 தீட்டுப்படாத ஒருவன் ஈசோப்பை எடுத்து அந்த நீரிலே தோய்த்துக் கூடாரத்தின்மேலும் அதிலுள்ள சகல பணிமுட்டுகளின்மேலும் அங்கே இருக்கிற மனுஷர்களின்மேலும் எலும்பையோ வெட்டுண்டவனையோ செத்தவனையோ பிரேதக்குழியையோ தொட்டவன்மேலும் தெளிக்கவேண்டும்; 19 தீட்டுப்படாதவன் தீட்டுப்பட்டவன்மேல் மூன்றும் நாளிலும்

ஏழாம் நாளிலும் தெளிக்க வேண்டும்; ஏழாம்நாளில் இவன் தன்னைச் சுத்திகரித்துத் தன் வஸ்திரங்களைத் துவைத்துத் தண்ணீ
20 ரில் முழுகவேண்டும். சாயங்காலத்திலே அவன் தீட்டு நீங்கும். தீட்டுப்பட்டவன் தன்னைச் சுத்திகரித்துக்கொள்ளாதிருந்தால் அவன் சபையின் நடுவிலிருந்து நீக்கப்பட்டுப்போவான்; அவன் யெகோவாவின் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினான். தீட்டுக்கழிக்கும் தண்ணீர் அவன்மேல் தெளிக்கப்படாததினால் அவன் தீட்டாகவே
21 யிருக்கிறான். இதுவே அவர்களுக்கு நித்திய நியமம்: தீட்டுக்கழிக்கும் தண்ணீரைத் தெளிக்கிறவனும் தன் வஸ்திரங்களைத் துவைக்கவேண்டும்; தீட்டுக்கழிக்கும் தண்ணீரைத் தொட்டவனும் சாயங்காலமட்டும்
22 தீட்டுப்பட்டிருப்பான். தீட்டுப்பட்டவன் தொடுகிறவைகளெல்லாம் தீட்டுப்படும், அவைகளைத் தொடுகிறவனும் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான் என்று சொன்னார்.

**20** இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் முதல்மாதம் சீன்வனாந்தரத்திற்கு வந்தார்கள்; ஜனங்கள் காதேசிலே தங்கியிருக்கையில் மிரியாம் மரணமடைந்து
2 அங்கே அடக்கம்பண்ணப்பட்டாள். ஜனங்களுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை; அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும்
3 விரோதமாகத் திரண்டு | மோசேயோடே வாதாடி: எங்கள் சகோதரர் யெகோவாவின் சந்நிதியில் மாண்டபோது நாங்களும் மாண்டுபோயிருந்தால் நலமாயிருக்கும்.
4 நாங்களும் எங்கள் மிருகங்களும் இங்கே சாகும்படி நீங்கள் யெகோவாவின் சபையை இந்த வனாந்தரத்திலே கொண்டுவந்தது
5 என்ன? இந்தக் கெட்ட இடத்திற்கு எங்களைக் கொண்டுவரும்படி எகிப்திலிருந்து எங்களை ஏறச்செய்தது என்ன? இந்த இடத்தில் விதைப்பில்லை, அத்தி மரமும் திராட்சச்செடியும் மாதளஞ்செடியுமில்லை, குடிக்கத் தண்ணீருமில்லை என்று சொன்
6 னார்கள். அது கேட்ட மோசேயும் ஆரோனும் சபையாரை விட்டுத் தரிசனக்கூடார வாசலில்போய் முகங்குப்புற விழுந்தார்கள்; யெகோவாவின் மகிமை அவர்களுக்
7 குக் காணப்பட்டது. யெகோவா மோசேயி
8 னிடம்: நீ கோலை எடுத்துக்கொள்; நீயும் உன் சகோதரன் ஆரோனும் சபையைக் கூடிவரச்செய்து அவர்கள் கண்காணக் கன்மலை தன்னிடத்திலுள்ள தண்ணீரைக் கொடுக்கும்படி அதனிடம் பேசுங்கள். இப்படியாக நீ அவர்களுக்குக் கன்மலையி
9 லிருந்து தண்ணீர் வரச்செய்து சபையாருக்கும் அவர்கள் மிருகங்களுக்கும் குடிக்கக் கொடுப்பாய் என்றார். அப்பொழுது மோசே தனக்கு யெகோவா கட்டளையிட்டபடியே யெகோவாவின் சந்நிதியிலிருந்த
10 கோலை எடுத்தான். மோசேயும் ஆரோனும் சபையாரைக் கன்மலைக்கு எதிரே கூடிவரச் செய்தார்கள். மோசே அவர்களிடம்: கலகக்காரரே, கேளுங்கள், இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் உங்களுக்குத் தண்ணீர் வரச்செய்யவேண்டுமோ என்றுசொல்லித்
11 தன் கையை ஓங்கிக் கன்மலையைத் தன் கோலினால் இரண்டுதரம் அடித்தான். அடிக்கவே தண்ணீர் ஏராளமாய் வந்துவிட்டது; சபையார் குடித்தார்கள், மிருகங்களும் குடித்தன. பின்பு யெகோவா,
12 மோசே ஆரோன் என்பவர்களிடம்: நீங்கள் என்னை நம்பவில்லை, ஆகவே இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு எதிரே என்னைப் பரிசுத்தமுள்ளவராகக் காட்டவில்லை. நீங்கள் அப்படிச் செய்தபடியினால், இந்தச் சபையாருக்கு நான் கொடுக்கிற தேசத்துக்குள் நீங்கள் அவர்களைக் கொண்டுபோவதில்லை என்றார். இங்கே இஸ்ரவேல் புத்தி
13 ரர் யெகோவாவோடு விவாதஞ்செய்ததினால் இது மெரீபாவின் தண்ணீர் என்னப்பட்டது, அவர்கள் நடுவில் அவருடைய பரிசுத்தம் விளங்கினது.

பின்பு மோசே காதேசிலிருந்து ஏதோமின்
14 ராஜாவினிடத்துக்குத் தூதரை யனுப்பி: உமது சகோதரனாகிய இஸ்ரவேல் சொல்லி
15 யனுப்புகிறதைக் கேளும்; எங்களுக்கு நேரிட்ட உபத்திரவங்களெல்லாம் உமக்குத் தெரிந்திருக்கும். எங்கள் பிதாக்கள் எகிப்துக்குப்போனார்கள், நெடுநாள் அங்கே தங்கியிருந்தோம்; எகிப்தியர் எங்கள் பிதாக்களுக்கும் எங்களுக்கும் தீமைசெய்தார்கள்.
16 நாங்களோ யெகோவாவினிடம் அபயமிட்டோம், அவர் எங்கள் சத்தத்தைக்கேட்டு ஒரு தூதனையனுப்பி எங்களை எகிப்திலிருந்து கொண்டுவந்தார்; இதோ, நாங்கள்
17 உமது எல்லையிலே காதேஸ் ஊரிலிருக்கிறோம். நாங்கள் உமது தேசத்தின் வழியாய்க் கடந்துபோக இடங்கொடுத்தருளும்; வயல்வெளிகள் வழியாகவும் திராட்சத் தோட்டங்கள் வழியாகவும் நாங்கள் போகமாட்டோம், கிணற்றுத்தண்ணீரைக் குடிக்கமாட்டோம், உமது எல்லையைக் கடந்து போகுமட்டும், வலதுபுறம், இடதுபுறம் விலகாமல் ராஜபாதையாகவே செல்வோம் என்று சொல்லச் சொன்னான்.
18 அதற்கு ஏதோம்: நீ என் தேசத்தின் வழியாய்ப்

போகக்கூடாது; போலுல் பட்டயத்தோடே
உன்னை எதிர்க்கவருவேன் என்று பதில்
19 சொல்லச்சொன்னான். இஸ்ரவேல் புத்தி
ரரோ அவனிடம்: பெரும்பாதையின் வழி
யாய்ப் போவோம், நாங்களும் எங்கள் மிரு
கங்களும் உன் தண்ணீரைக் குடித்தால்
அதற்குக் கிரயங்கொடுப்போம். வேறொன்
றும் செய்யமாட்டோம், கால்நடையாய்
மாத்திரம் கடந்துபோவோம் என்றார்கள்.
20 அதற்கு ஏதோம்: நீ கடந்துபோகக்கூடாது
என்று சொல்லிப் பலமுள்ளவனுய் வெகு
ஜனங்களோடு அவர்மேல் எதிர்க்கப் புறப்
21 பட்டான். இப்படியாக, இஸ்ரவேலர் தன்
எல்லைவழியாய்க் கடந்துபோக ஏதோம்
அவர்களுக்கு உத்தரவு கொடுக்கமாட்டேன்
என்று சொல்லிவிட்டான்; இஸ்ரவேலர்
அவனை விட்டு விலகிப்போனார்கள்.
22 இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் யாவ
ரும் காதேசைவிட்டுப் பிரயாணமாகி ஓர்
என்னும் மலைக்கு வந்து சேர்ந்தார்கள்.
23 ஏதோம் தேசத்தின் எல்லைக்கு அருகான ஓர்
என்னும் அந்த மலையிலே யெகோவா
மோசே ஆரோன் என்பவர்களோடு பேசி:
24 ஆரோன் தன் ஜனத்தாரோடே சேர்க்கப்படு
வான். மெரீபாவின் தண்ணீரைப்பற்றிய
காரியத்தில் நீங்கள் என் சொல்மீறி நடந்த
படியினுல் நான் இஸ்ரவேல் புத்திரருக்குக்
கொடுக்கிற தேசத்திற்குள் அவன் செல்வ
25 தில்லை. நீ ஆரோனையும் அவன் குமாரனு
கிய எலெயாசாரையும் கூட்டிக்கொண்டு
அவர்களை இந்த ஓர் மலையில் ஏறப்
26 பண்ணி | ஆரோன் உடுத்திருக்கிற வஸ்தி
ரங்களைக் கழற்றி அவைகளை அவன் குமார
னுகிய எலெயாசாருக்கு உடுத்திவிடு.
ஆரோன் அங்கே மரித்துத் தன் ஜனத்தா
ரோடே சேர்க்கப்படுவான் என்று சொன்
27 னார். யெகோவா கட்டளையிட்டபடியே
மோசே செய்தான்; சபையனைத்தும் காண
அவர்கள் அந்த ஓர் மலையில் ஏறினார்கள்.
28 அங்கே ஆரோன் உடுத்திருந்த வஸ்திரங்களை
மோசே கழற்றி அவைகளை அவன் குமார
னுகிய எலெயாசாருக்கு உடுத்தினான்;
ஆரோன் அங்கே மலையின் உச்சியிலே
மரித்துப்போனான்; மோசேயும் எலெயா
சாரும் மலையிலிருந்து இறங்கினார்கள்.
29 ஆரோன் இறந்துபோனான் என்று சபை
யனைத்தும் கண்டபோது இஸ்ரவேல் வம்சத்
தார் அனைவரும் ஆரோன் நிமித்தம் முப்
பதுநாள் துக்கங்கொண்டாடினார்கள்.

**21** அத்தாரீம் வழியாக இஸ்ரவேலர் வருகி
ரார்கள் என்று தென்னாட்டு வாசியாகிய
ஆராத் ராஜா கேள்விப்பட்டான், அவன்
கானானியன்; அவன் இஸ்ரவேலருக்கு
விரோதமாக யுத்தஞ்செய்து அவர்களில்
சிலரைச் சிறைபிடித்துக்கொண்டுபோனான்.
2 அப்பொழுது இஸ்ரவேலர் யெகோவாவி
னிடம்: தேவரீர் இந்த ஜனத்தை எங்கள்
கையில் ஒப்புக்கொடுப்பீரானுல் அவர்கள்
ஊர்களைத் தெய்வசாபம் நிறைவேறச் சங்க
ரிப்போம் என்று பொருத்தனை பண்ணி
3 னார்கள். யெகோவா இஸ்ரவேலின் சத்த
துக்குச் செவிகொடுத்துக் கானானியனை
அவர்களுக்கு ஒப்புக்கொடுத்தார்; ஒப்புக்
கொடுக்கவே அவனையும் அவன் ஊர்களை
யும் தெய்வசாபத்திற்குட்படுத்தி அவ்விடத்
திற்கு கொர்மா என்று பேரிட்டார்கள்.
4 அவர்கள் ஏதோம் தேசத்தைச் சுற்றிப்
போகும்படி ஓர் என்னும் மலையைவிட்டுச்
சிவந்த சமுத்திரத்தின் வழியாய்ப் பிரயா
ணம் பண்ணினார்கள்; வழியினிமித்தம்
5 ஜனங்கள் மனமடிவடைந்தார்கள். ஜனங்
கள் கடவுளுக்கும் மோசேக்கும் விரோத
மாகப்பேசி: நாங்கள் வனாந்தரத்திலே
சாகும்படி நீங்கள் எங்களை எகிப்திலிருந்து
வரப்பண்ணினதென்ன? இங்கே சாப்பாடு
மில்லை, தண்ணீருமில்லை; இந்த அற்ப
மான உணவை எங்கள் மனம் வெறுக்கி
6 றது என்றார்கள். அப்பொழுது யெகோவா
ஜனங்களுக்குள்ளே விஷப்பாம்புகளை
அனுப்பினார். அவைகள் ஜனங்களைக் கடித்
தவே இஸ்ரவேலரில் அநேக ஜனங்கள்
மடிந்தார்கள். அதைக்கண்டு ஜனங்கள்
7 மோசேயினிடம்போய்: நாங்கள் யெகோ
வாவுக்கும் உமக்கும் விரோதமாய்ப் பேசிப்
பாவஞ்செய்தோம்; பாம்புகளை யெகோவா
எங்களை விட்டகற்றும்படி விண்ணப்பம்
பண்ணவேண்டும் என்றார்கள்; மோசே
அப்படியே ஜனங்களுக்காக விண்ணப்பம்
8 பண்ணினான். அப்பொழுது யெகோவா
மோசேயினிடம்: நீ விஷப்பாம்பின் உருவ
மொன்றைச் செய்து அதை ஒரு கம்பத்தின்
மேல் தூக்கிவை; கடிபட்டவன் எவனும்
அதை நோக்கிப் பார்த்தால் பிழைப்பான்
என்றார். அப்படியே மோசே செம்பினால்
9 ஒரு சர்ப்பத்தைச்செய்து அதை ஒரு கம்
பத்தின்மேல் தூக்கிவைத்தான்; பாம்பு
ஒருவனைக் கடித்தால் அவன் அந்தச் சர்ப்
பத்தை நோக்கிப் பார்க்கவே பிழைப்பான்.
10 இஸ்ரவேல் புத்திரர் பிரயாணப்பட்டுப்
போய் ஓபோத்தில் பாளயமிறங்கினார்கள்.
11 ஓபோத்திலிருந்து பிரயாணப்பட்டு மோவா
ப்புக்கு எதிரே சூரியன் உதிக்கும் கீழ்திசை
யில் வனாந்தரத்திலுள்ள அபாரீமின் மண்
12 மேடுகளிலே பாளயமிறங்கினார்கள். அங்

இருந்து பிரயாணமாகிச் சேரேத் பள்ளத்
13 தாக்கிலே பாளயமிறங்கினார்கள். அங்
கிருந்து பிரயாணமாகி எமோரியரின் எல்
லையிலிருந்து வருகிறதும் வனாந்தரத்தில் ஓடி
றதுமான அர்னோன் ஆற்றின் அப்புறம்
பாளயமிறங்கினார்கள்; அந்த அர்னோன்
மோவாபின் எல்லையாக மோவாபியருக்கும்
எமோரியருக்கும் நடுவே இருக்கிறது.
14 இப்படியே யெகோவாவின் யுத்த புஸ்தகத்
தில்:

சூப்பாவிலுள்ள வாகேபும்
15 அர்னோன் ஓடும் பள்ளநிலங்களும்
ஆர் என்னும் ஊரை ஒட்டியதும்
மோவாபின் எல்லையைச் சார்ந்ததுமான
பள்ளநிலங்களின் செங்குத்துச் சரிவும்

என்று எழுதியிருக்கிறது.
16 அங்கிருந்து பெயேருக்குப் போனார்கள்;
ஜனத்தைக் கூடிவரச்செய், அவர்களுக்குத்
தண்ணீர் கொடுப்பேன் என்று யெகோவா
மோசேக்குச் சொன்ன கிணறு இருக்கிற
17 இடம் அதுதான். அந்தச் சமயத்தில்
இஸ்ரவேலர்:

ஊற்றுத்தண்ணீரே பொங்கிவா:
அதைப் பாடுங்கள், பாடுங்கள்.
18 ஜனாதிபதிகள் தம் செங்கோலாலும்
ஜனப்பிரதானிகள் தம் தண்டாயுதங்க
ளாலும்
வெட்டிய கிணறு இதுவே

19 என்று பாடினார்கள். அந்த வனாந்தரத்தி
லிருந்து மத்தனாவுக்கும் மத்தனாவிலிருந்து
நகலீயேலுக்கும் நகலீயேலிலிருந்து பாமோத்
20 துக்கும் | பாமோத்திலிருந்து மோவாபின்
வெளியிலுள்ள பள்ளத்தாக்குக்கும் போனார்
கள்; அது பிஸ்கா என்னும் மலைநாட்டின்
மேலுள்ளது. அங்கிருந்து எஷிமோன்
வனாந்தரம் தெரியும்.
21 அப்பொழுது இஸ்ரவேலர் எமோரிய
ரின் ராஜாவாகிய சீகோனிடம் தூதரை
22 யனுப்பி: நாங்கள் உமது தேசத்தின் வழி
யாய்க் கடந்துபோக இடங்கொடும்; நாங்
கள் வழியைவிட்டு வயல்களிலும் திராட்சத்
தோட்டங்களிலும் போகமாட்டோம்; கிண
ற்றுத் தண்ணீரைக் குடிக்கமாட்டோம்;
உமது எல்லையைக் கடந்துபோகுமட்டும்
ராஜபாதையாகவே செல்வோம் என்று
23 சொல்லச்சொன்னார்கள். சீகோன் தன்
எல்லைவழியாய்க் கடந்துபோக இஸ்ரவே
லுக்கு உத்தரவுகொடாமல் தன் ஜனங்க
ளெல்லாரையும் கூட்டிக்கொண்டு இஸ்ர
வேலரை எதிர்க்க வனாந்தரவழியாய்
யாகசாவுக்கு வந்து இஸ்ரவேலரோடே
24 யுத்தம்பண்ணினான். இஸ்ரவேலர் அவ
னைப் பட்டயக்கருக்கினால் வெட்டி அர்
னோன் தொடங்கி அம்மோன் புத்திரரின்
தேசத்தைச் சார்ந்த யாபோக்குவரைக்கு
முள்ள அவன் தேசத்தைப் பிடித்துக்
கொண்டார்கள்; அம்மோன் புத்திரரின் எல்
லை அரணிப்பானது. இஸ்ரவேலர் அந்த 25
ஊர்கள் யாவையும் பிடித்து எமோரியரின்
சகல ஊர்களிலும், எஸ்போனிலும் அதைச்
சார்ந்த சகல கிராமங்களிலும், குடியிருந்
தார்கள். எஸ்போனானது எமோரியரின் 26
ராஜாவாகிய சீகோனின் பட்டணம்;
அவன் மோவாபியரின் முன்னை ராஜாவோடு
யுத்தம்பண்ணி அர்னோன்வரைக்குமுள்ள
அவன் தேசத்தையெல்லாம் அவனிடமி
ருந்து பறித்துக்கொண்டான். அதினாலே 27
பாடகர்கள்:

எஸ்போனுக்கு வாருங்கள்;
சீகோனின் பட்டணம் ஸ்திரமாக்கப்
படுக.
எஸ்போனிலிருந்து அக்கினி வந்தது; 28
சீகோனின் பட்டணத்திலிருந்து ஜுவா
லை புறப்பட்டது.
மோவாபுடைய ஆர் என்னும் ஊரை
யும்
அர்னோன் மேடுகளின் பிரபுக்களையும்
பட்சித்தது.
மோவாபே, ஐயோ, உனக்குக் கேடே! 29
கெமோஷின் ஜனமே, நீ நாசமானாய்;
தன் குமாரரை ஓடிவிடச் செய்தான்;
தன் குமாரத்திகளைச் சிறைகளாக
எமோரிய ராஜாவாகிய சீகோனுக்குக்
கொடுத்துவிட்டான்.
அவர்களை எய்துபோட்டோம்; 30
எஸ்போன் பட்டணம் தீபோன் ஊர்
வரைக்கும் நாசமாயிற்று;
மேதபாவுக்குச் சமீபமான நோப்பாவ
ரைக்கும்
பாழாக்கிப்போட்டோம்,

என்று பழமொழியாகப் பாடுகிறார்கள்.
இப்படியாக இஸ்ரவேலர் எமோரியரின் 31
தேசத்திலே குடியிருந்தார்கள். பின்பு 32
மோசே யாசேர் பட்டணத்துக்கு வேவு
பார்க்க ஆட்களை அனுப்பினான். அவர்கள்
அங்கிருந்த எமோரியரைத் துரத்திவிட்டு
அதைச் சேர்ந்த கிராமங்களைப் பிடித்துக்
கொண்டார்கள்.
பின்பு அவர்கள் திரும்பிப் பாசானுக்குச் 33
செல்லுகிற வழியாய்ப் போய்விட்டார்கள்;
அப்பொழுது பாசான் ராஜாவாகிய ஓகு
என்பவன் அவர்களை எதிர்த்து யுத்தம்
பண்ணத் தன் முழுஜனத்தோடும் புறப்
பட்டு எத்ரேயிக்கு வந்தான். யெகோவா 34

வோ மோசேயினிடம்: அவனுக்குப் பயப்
படவேண்டாம்; அவனையும் அவன் ஜனங்
கள் எல்லாரையும் அவன் தேசத்தையும்
உன் கையில் ஒப்புக்கொடுத்தேன்; எஸ்
போனில் வசித்த எமோரிய ராஜாவாகிய
சீகோனுக்குச் செய்தபடியே இவனுக்கும்
35 செய்வாய் என்றார். அப்படியே ஒருவரும்
மீதியாயிராதபடி அவனையும் அவன் குமார
ரையும் அவன் சகல ஜனங்களையும் வெட்
டிப்போட்டு அவன் தேசத்தைப் பிடித்துக்
கொண்டார்கள்.

**22** பின்பு இஸ்ரவேல் புத்திரர் பிரயாணமாகி
எரிகோவுக்கு எதிரே யோர்தானின் கீழ்
கரையில் மோவாபின் சமவெளிகளிலே
பாளயமிறங்கினார்கள்.

2 இஸ்ரவேலர் எமோரியருக்குச் செய்த
யாவையும் சிப்போரின் குமாரனாகிய
3 பாலாக்கு கண்டான். இஸ்ரவேல் ஜனங்
கள் ஏராளமாயிருந்தபடியினால் மோவாபி
யர் மிகவும் பயந்தார்கள்; இஸ்ரவேல் புத்தி
4 ரரினிமித்தம்மனங்கலங்கினார்கள். அவர்கள்
மிதியானியரின் மூப்பரிடம்: மாடு வெளி
யின் புல்லை மேய்கிறதுபோலத் திரள்கூட்ட
மான இவர்கள் நம்மைச் சுற்றியிருக்கிற
யாவையும் இப்பொழுது மேய்ந்துபோடுவார்
கள் என்று சொன்னார்கள். சிப்போரின்
குமாரனாகிய பாலாக்கு அக்காலத்திலே
5 மோவாபியருக்கு ராஜாவாயிருந்தான். அவ
ன் பெயோரின் குமாரனாகிய பிலெயாமை
அழைத்துவரும்படி, தன் ஜனத்தாரின்
தேசத்திலே நதியருகேயுள்ள பெதோருக்குத்
தூதரை அனுப்பி, இதோ, எகிப்திலிருந்து
ஒரு ஜனக்கூட்டம் வந்திருக்கிறது; அவர்
கள் பரவி பூமி தெரியாதபடி மூடி என
6 க்கு எதிரே இறங்கியிருக்கிறார்கள். இப்
பொழுதே நீர் வந்து எனக்காக இந்த ஜன
த்தைச் சபித்துவிடவேண்டும்; அவர்கள்
என்னிலும் பலவான்களே; நீர் சபித்தால்
ஒருவேளை நான் அவர்களை முறியடித்து
அவர்களை இத்தேசத்திலிருந்து துரத்திவிட
லாகும்; நீர் ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்
பட்டவன் என்றும் நீர் சபிக்கிறவன் சபிக்
கப்பட்டவன் என்றும் எனக்குத் தெரியும்
7 என்று சொல்லச் சொன்னான். அப்படியே
மோவாபின் மூப்பரும் மிதியானின் மூப்ப
ரும் குறிசொல்லுதற்குக் கொடுக்கவேண்
டியதைத் தங்கள் கையில் எடுத்துக்கொண்
டுபோய்ப் பிலெயாமிடம் சேர்ந்து பாலாக்கு
சொன்னவைகளை அவனுக்குச் சொன்னார்
8 கள். அவன் அவர்களிடம்: இரவு இங்கே
தங்கியிருங்கள்; யெகோவா எனக்குச்
சொல்லுகிறபடியே உங்களுக்கு உத்தரவு
கொடுப்பேன் என்றான்; அப்படியே மோவா
பின் பிரபுக்கள் பிலெயாமினிடம் தங்கி
னார்கள். கடவுள் பிலெயாமினிடம் வந்து: 9
உன்னிடத்திலிருக்கிற இந்த மனிதர் யார்
என்று கேட்கப் பிலெயாம் கடவுளிடம்:
இவர்கள் சிப்போரின் குமாரனாகிய பாலா 10
க்கு, மோவாப் ராஜா, என்னிடம் அனுப்
பிய ஆட்கள். இதோ எகிப்திலிருந்து 11
வந்திருக்கிற ஜனக்கூட்டம் பரவி பூமி
தெரியாதபடி மூடியிருக்கிறது; இப்பொ
ழுதே நீர் வரவேண்டும்; எனக்காக அவர்
களைச் சபிக்கவேண்டும்; சபித்தால் நான்
அவர்களோடே யுத்தம்பண்ணி ஒருவேளை
அவர்களைத் துரத்திவிடலாகும் என்று என
க்குச் சொல்ல அனுப்பியிருக்கிறான் என்
றான். கடவுளோ பிலெயாமினிடம்: 12
நீ அவர்களோடே போகவேண்டாம்; அந்த
ஜனங்களைச் சபியாதே, அவர்கள் ஆசீர்வ
திக்கப்பட்டவர்கள் என்றார். பிலெயாம் 13
காலமே எழுந்து பாலாக்கின் பிரபுக்களி
டம்: நீங்கள் உங்கள் தேசத்துக்குப் போய்
விடுங்கள்; நான் உங்களோடு வருவதற்கு
யெகோவா எனக்கு இடங்கொடுக்கமாட்
டேன் என்கிறார் என்று சொன்னான்.
அப்படியே மோவாபிய பிரபுக்கள் எழுந்து 14
பாலாக்கினிடம் போய்: பிலெயாம் எங்க
ளோடே வரமாட்டேன் என்று சொல்லி
விட்டான் என்றார்கள். பாலாக்கு மறு 15
படியும் பிரபுக்களை அனுப்பினான், இவர்
கள் அதிகமானவர்கள், பெருமதிப்புள்ளவர்
கள். இவர்கள் பிலெயாமினிடம் சென்று 16
அவனிடம்: சிப்போரின் குமாரன் பாலா
க்கு எங்களை அனுப்பி, நீர் என்னிடம் வரு
கிறதற்குத் தடைபடவேண்டாம். உம்மை 17
மிகவும் கனம்பண்ணுவேன்; நீர் எனக்குச்
சொல்வதையெல்லாம் செய்வேன்; நீர் வந்
து எனக்காக அந்த ஜனத்தைச் சபித்துவிட
வேண்டும் என்று சொல்லச் சொன்னார்
என்றார்கள். பிலெயாம் பாலாக்கின் ஆட் 18
களிடம்: பாலாக்கு எனக்குத் தமது வீடு
நிறைய வெள்ளியும் பொன்னும் தந்தாலும்
நான் என் கடவுளாகிய யெகோவாவின்
கட்டளையை மீறிச் சிறிய காரியத்தை
யாலும் பெரிய காரியத்தையாலும்
செய்யமுடியாது. ஆகிலும் யெகோவா 19
இனி எனக்கு என்ன சொல்லுவார் என்
பதை நான் அறியும்படி நீங்களும் இரவு
இங்கே தங்கியிருங்கள் என்றான். இரவி 20
லே கடவுள் பிலெயாமிடம் வந்து: அந்த
மனிதர் உன்னைக் கூப்பிட வந்திருந்தால்,
நீ எழுந்து அவர்களோடு போ; ஒன்றை
மாத்திரம் கவனித்துக்கொள்; நான் உனக்

குச் சொல்லுகிற வார்த்தையின்படியே நீ
21 செய்யவேண்டும் என்றார். பிலெயாம்
காலமே எழுந்து தன் கழுதையின்மேல்
சேணங்கட்டி மோவாபின் பிரபுக்களோடு
22 கூடப் போனான். அவன் போனதினாலே
கடவுளுக்குக் கோபம் மூண்டது; யெகோ
வாவின் தூதனானவர் வழியிலே அவனுக்கு
எதிராளியாக நின்றார். அவன் தன் கழு
தையின்மேல் ஏறிப்போனான். அவனு
டைய இரண்டு வேலைக்காரர் அவனோடிருந்
23 தார்கள். யெகோவாவின் தூதனானவர் உரு
வின பட்டயத்தைத் தமது கையிலே பிடித்
துக்கொண்டு வழியிலே நிற்பதைக் கழுதை
கண்டு வழியை விட்டு வயலிலே விலகிப்
போயிற்று; கழுதையை வழியிலே திருப்பும்
படி பிலெயாம் அதை அடித்தான்.
24 யெகோவாவின் தூதனானவர் இருபுறத்தி
லும் சுவர் வைத்திருந்த திராட்சத்தோட்டங்
களின் நடுவேயுள்ள பாதையிலே போய்
25 நின்றார். கழுதை யெகோவாவின் தூத
னைக் கண்டு சுவர் ஓரமாய் ஒதுங்கிப் பிலெ
யாமின் காலைச் சுவரோடே நெருக்கிற்று;
26 திரும்பவும் அதை அடித்தான். அப்பொ
ழுது யெகோவாவின் தூதன் மறுபடியும்
சற்று அப்புறம் போய் வலதுபுறம் இடது
புறம் விலக வழியில்லாத இடுக்கமான
27 ஒரு இடத்திலே நின்றார். கழுதை யெகோ
வாவின் தூதனைக்கண்டு பிலெயாமின்கீழ்
படுத்துக்கொண்டது, பிலெயாம் கோபம்
மூண்டவனாகிக் கழுதையைக் கோலினால்
28 அடித்தான். அப்பொழுதே யெகோவா
கழுதையின் வாயைத்திறந்தார்; அது பிலெ
யாமைப் பார்த்து: நீர் என்னை இப்பொழுது
மூன்றுதரம் அடித்தீரே, நான் உமக்குச்
29 செய்ததென்ன என்றது. அது கேட்ட
பிலெயாம் கழுதையினிடம்: நீ என்னைப்
பரியாசம்பண்ணிக்கொண்டுவருகிறாய்; என்
கையில் ஒரு பட்டயம் இருக்குமானால் இப்
பொழுதே உன்னைக் கொன்றுபோடுவேன்
30 என்று சொல்லக் | கழுதை பிலெயாமினி
டம்: ஆதிமுதல் இதுவரைக்கும் நீர் ஏறின
கழுதை நான் அல்லவா? நான் எப்போதா
கிலும் உமக்கு இப்படிச் செய்த வழக்க
முண்டா என்றது. அதற்கு அவன்,
31 இல்லை என்றான். அப்பொழுது யெகோ
வா பிலெயாமின் கண்களைத் திறந்தார்;
வழியிலே நின்று உருவின பட்டயத்தைத்
தமது கையிலே பிடித்திருந்த யெகோவா
வின் தூதனை அவன் கண்டு தலை குனிந்து
32 முகங்குப்புற விழுந்து பணிந்தான். யெகோ
வாவின் தூதனானவர் அவனிடம்: நீ உன்
கழுதையை இப்படி மூன்றுதரம் அடித்த
தென்ன? உன் வழி எனக்கு மாறுபாடா
யிருக்கிறதினால் நான் உனக்கு எதிராளியாக
வந்தேன். கழுதை என்னைக்கண்டு இந்த 33
மூன்றுதரம் எனக்கு விலகிற்று. எனக்கு
விலகாமல் இருந்திருக்குமேயானால் அப்
பொழுதே நான் உன்னைக் கொன்றுபோட்
டுக் கழுதையை உயிரோடே வைத்திருப்
பேன் என்றார். அது கேட்ட பிலெயாம் 34
யெகோவாவின் தூதனிடம்: நான் தவறிப்
போனேன்; வழியிலே நீர் எனக்கு எதிராக
நிற்கிறதை அறியாமற்போனேன்; இப்பொ
ழுதும் இது உமது பார்வையில் தீதாயிருந்
தால் நான் திரும்பிவிடுகிறேன் என்றான்.
யெகோவாவின் தூதனானவரோ பிலெயாமி 35
னிடம்: அந்த மனிதரோடுகூடப் போ;
ஒன்றை மாத்திரம் கவனித்துக்கொள்,
நான் உனக்குச் சொல்லும் வார்த்தையை
யே நீ சொல்லவேண்டும் என்றார். அப்
படியே பிலெயாம் பாலாக்கின் பிரபுக்க
ளோடே போனான். பிலெயாம் வருகிற 36
தைப் பாலாக்கு கேட்டமாத்திரமே,
அவன் தன் கடைகியெல்லையான அர்னோன்
நதியின் ஓரத்திலுள்ள மோவாபின் பட்டண
மட்டும் அவனுக்கு எதிர்கொண்டுபோனான்.
பாலாக்கு பிலெயாமினிடம்: உம்மை 37
அழைக்கும்படி ஆவலோடே நான் உம்மி
டம் ஆள் அனுப்பினேனே, என்னிடம்
வராமலிருந்ததென்ன? ஒற்ற பிரகாரமாக
உம்மைக் கனம்பண்ண எனக்குச் சக்தியில்
லையா என்றான். அப்பொழுது பிலெயாம்
பாலாக்கினிடம்: இதோ, உம்மிடத்திற்கு 38
வந்துவிட்டேன்; ஆனாலும் நானாகவே
எதையாகிலும் சொல்லமுடியுமா? கடவுள்
என் வாயிலே அளிக்கும் வார்த்தையையே
சொல்லுவேன் என்றான். பிலெயாம் 39
பாலாக்கோடு கூடப்போனான். அவர்கள்
கீரியாத் ஊசோத்தில்வந்து சேர்ந்தார்கள்.
அங்கே பாலாக்கு ஆடுமாடுகளைப் பலியிட் 40
டுப் பிலெயாமுக்கும் அவனோடிருந்த பிர
புக்களுக்கும் அனுப்பினான். மறுநாள் 41
காலையில் பாலாக்கு பிலெயாமைக் கூட்டிக்
கொண்டுபோய் அவனைப் பாகால் மேடு
களில் ஏறப்பண்ணினான்; அவ்விடத்திலி
ருந்து பிலெயாம் இஸ்ரவேலருடைய
பாளயத்தின் கடைசியைப் பார்த்தான்.

பிலெயாம் பாலாக்கினிடம்: நீர் இங்கே **23**
எனக்கு ஏழு பலிபீடங்களைக்கட்டி ஏழு
காளைகளையும் ஏழு ஆட்டுக்கடாக்களையும்
இவ்விடத்திலே எனக்கு ஆயத்தப்படுத்தும்
என்றான். பிலெயாம் சொன்னபடியே 2
பாலாக்கு செய்தான்; பாலாக்கும் பிலெயா
மும் பலிபீடந்தோறும் ஒரு காளையையும்

ஒரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டார்கள்.
3 பின்பு பிலெயாம் பாலாக்கினிடம்: உமது
தகனபலியண்டையிலே நின்றுகொண்டி
ரும்; யெகோவா வந்து என்னைச் சந்திப்பா
ரோ எனப் பார்க்கும்படி போகிறேன்;
அவர் எனக்கு வெளிப்படுத்துவதை உமக்கு
அறிவிப்பேன் என்று சொல்லிவிட்டு மரஞ்
செடியற்ற ஒரு மேட்டின்மேல் ஏறினான்.
4 அங்கே கடவுள் பிலெயாமைச் சந்திக்கவே,
அவன் அவரிடம்: நான் ஏழு பலிபீடங்களை
ஆயத்தம்பண்ணிப் பலிபீடந்தோறும் ஒரு
காளையையும் ஒரு ஆட்டுக் கடாவையும்
5 பலியிட்டேன் என்றான். சொல்லவேண்டி
யதை யெகோவா பிலெயாமின் வாயிலே
அருளி: நீ பாலாக்கினிடம் திரும்பிப்போய்
இவ்விதமாகவே சொல்வாய் என்றார்.
6 பாலாக்கினிடத்துக்கு அவன் திருப்பிப்போ
னான்; இதோ, பாலாக்கு மோவாபின் சகல
பிரபுக்களோடுங்கூடத் தன் தகனபலியண்
7 டையிலே நின்றுகொண்டிருந்தான். அப்
பொழுது பிலெயாம் குரலெடுத்துப்பாடி:

ஆராமிலிருந்து என்னைப் பாலாக்கு
வரவழைத்தான்;
கீழ்மலைகள் நின்று மோவாப் அரசன்
கூப்பிட்டான்;
வந்து எனக்காக யாக்கோபைச் சபித்திடு
வாய்,
இஸ்ரவேலைக் கடிந்துரைப்பாய் என்று
சொன்னான்.

8 கடவுள் சபியாதவனை நான் சபிப்பதெப்
படியோ?
யெகோவா கடிந்துரையார், கடிந்துரைப்
பேனோ நான்?
9 கன்மலைச்சிகரம் நின்று அவனைக் காண்
கின்றேன்,
குன்றுகளிலேயிருந்து அவனைப் பார்க்
கின்றேன்,
இதோ, தனியே வசிக்கும் ஜனம் இதுவே,
புறஜாதிகளில் தங்களை எண்ணுதவரே;
10 யாக்கோபின் தூளை யார்தான் கணக்கிடு
வார்?
காற்பங்கு இஸ்ரவேலைக் கணிப்பவர்
யாரோ?
நேர்மையாளரின் மரணம் எனக்குமாக,
என் முடிவு அவன் முடிவே போலாகுக
என்று சொன்னான்.

11 அது கேட்டுப் பாலாக்கு பிலெயாமி
னிடம்:
இது என்ன! எனக்கு என்ன செய்துவிட்டீர்!
என் சத்துருக்களைச் சபிக்கும்படி உம்மை
அழைத்தேன். இதோ, நீர்
12 உரைத்தது ஆசீர்வாதம்! என்றான். அதற்கு
அவன்: யெகோவா என் வாயில் அருளி
னதையே சொல்லும்படி நான் காக்கிறதை
யாயிருக்கவேண்டாமோ என்றான்.

13 பின்பு பாலாக்கு அவனிடம்: நீர் அவர்க
ளைப் பார்க்கக்கூடிய வேறொரு இடத்திற்கு
என்னோடுகூட வாரும்; அங்கே அவர்கள்
எல்லாரையும் பாராமல் அவர்கள் பாளை
யத்தின் கடைசியை மாத்திரம் பார்ப்பீர்;
அங்கே நின்று எனக்காக அவர்களைச் சபிக்க
வேண்டும் என்று சொல்லி | 14 அவனைப் பிஸ்
காவின் கொடுமுடியில் இருக்கிற சோப்பீ
மின் வெளிக்கு அழைத்துக்கொண்டுபோய்,
ஏழு பலிபீடங்களைக்கட்டிப் பீடந்தோறும்
ஒரு காளையையும் ஒரு ஆட்டுக்கடாவையும்
பலியிட்டான். 15 அப்பொழுது பிலெயாம்
பாலாக்கினிடம்: இங்கே உமது தகனபலி
யண்டையில் நின்றுகொண்டிரும்; யெகோ
வா என்னைச் சந்திக்கும்படி நான் அங்கே
போய்வருகிறேன் என்றான். 16 யெகோவா
பிலெயாமைச் சந்தித்து, சொல்லவேண்டிய
தை அவன் வாயிலே அருளினார்: நீ பாலாக்
கினிடம் திரும்பிப்போய் இவ்விதமாகவே
சொல்வாய் என்றார். 17 பாலாக்கினிடம்
அவன் வருகிறபோது, இதோ, பாலாக்கு
மோவாபின் பிரபுக்களோடு தன் தகனபலி
யண்டையிலே நின்றுகொண்டிருந்தான்.
பாலாக்கு அவனிடம்: யெகோவா என்ன
சொன்னார் என்று கேட்டான். 18 அப்பொ
ழுது அவன் தன் குரலெடுத்துப் பாடி:

பாலாக்கே, எழுந்திருந்து கேள்,
சிப்போரின் குமாரனே, எனக்குச் செவி
கொடு,
பொய் உரைப்பாரோ கடவுள், அவர் 19
ஒரு மனிதனல்லவே,
மனஸ்தாபங்கொள்வாரோ கடவுள்,
அவர் ஒரு மனிதனல்லவே,
சொல்லியபின்பு அவர் செய்யாதிருப்
பாரோ?
பேசியபின் நிறைவேற்றாதிருப்பாரோ?
இதோ, ஆசீர்வதிக்கவே அருளினார், 20
ஆசீர்வதிக்கிறார், மாற்றுவேனோ நான்.
யாக்கோபிலே துன்பம் பார்ப்பாரில்லை, 21
இஸ்ரவேலில் வருத்தம் காண்பாரில்லை.
அவர்கள் கடவுளாம் யெகோவா அவர்க
ளோடேயே,
அவர்கள் நடுவில் ராஜ ஜயகம்பீரம்!
எகிப்திலிருந்து அவர்களைக் கொண்டு 22
வந்த கடவுள் இவர்.
காட்டெருதின் பலம்போல் அவர்களுக்கு
மூண்டு.
யாக்கோபை எதிர்க்கும் மாந்திரமில்லை, 23
இஸ்ரவேலை எதிர்த்துக் குறிசொல்வதில்லை;

கடவுளே எவ்வளவு செய்தனரென்று
யாக்கோபுபற்றியும் இஸ்ரவேல்பற்றியும்
இதுமுதலாகச் சொல்லப்படுமே.
24 பெண்சிங்கம்போல் எழும்பும் அந்த ஜனம்,
பாலசிங்கம்போல் நிமிர்ந்து நிற்கும்,
தான்பிடித்த தன் இரையை உண்டு
வெட்டுண்டவரின் இரத்தம் குடித்தத்
தீருமட்டும் அது படுப்பதில்லை
என்று சொன்னான்.
25 அப்பொழுது பாலாக்கு பிலெயாமினி
டம்: நீர் அவர்களைச் சபிக்கவும் வேண்டாம்;
அவர்களை ஆசீர்வதிக்கவும் வேண்டாம்
26 என்று சொல்லப் | பிலெயாம் பாலாக்
கினிடம்: யெகோவா சொல்லுகிறபடியெல்
லாம் செய்வேன் என்று உம்மிடம்
27 நான் சொல்லவில்லையா என்றான். அப்
பொழுது பாலாக்கு பிலெயாமைப் பார்த்து:
வாரும், வேறொரு இடத்திற்கு உம்மை
அழைத்துக்கொண்டுபோகிறேன்; நீர் அங்கே
யிருந்து எனக்காக அவர்களைச் சபிக்கிறது
கடவுளுக்கு ஒருவேளை பிரியமாயிருக்கலாம்
28 என்று சொல்லி | அவனைப் பெயோரின்
கொடுமுடிக்கு அழைத்துக்கொண்டு போ
னான். அங்கிருந்து எஷிமோன் வனாந்தரம்
தெரியும். அப்பொழுது பிலெயாம் பாலாக்
29 கினிடம்: இங்கே எனக்கு ஏழு பலிபீடங்
களைக் கட்டி இவ்விடத்திலே எனக்கு ஏழு
காளைகளையும் ஏழு ஆட்டுக்கடாக்களையும்
30 ஆயத்தம்பண்ணும் என்றான். பிலெயாம்
சொன்னபடியே பாலாக்கு செய்து பீடத்
தோறும் ஒரு காளையையும் ஒரு ஆட்டுக்
கடாவையும் பலியிட்டான்.

**24** இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே யெகோவா
வுக்குப் பிரியம் என்று பிலெயாம் கண்ட
போது, அவன் முன் செய்து வந்ததுபோல
நிமித்தம் பார்க்கப்போகவில்லை; வனாந்த
ரத்திற்கு நேராக அவன் தன் முகத்தைத்
2 திருப்பித் | தன் கண்களை ஏறெடுத்து, இஸ்ர
வேல் தன் கோத்திரங்களின்படியே பாளைய
மிறங்கியிருக்கிறதைப் பார்த்தான். கடவு
3 ளின் ஆவி அவன்மேல் வந்தது. அப்பொ
ழுது அவன் குரலெடுத்துப்பாடி:
பெயோரின் குமாரன் பிலெயாம் சொல்
வது,
இருண்ட கண்ணன் உரைப்பது,
4 கடவுளின் வார்த்தைகளைக் கேட்டு
சர்வவல்லவரின் தரிசனத்தைக் கண்டு
தாழ விழும்போது கண் திறக்கப்பட்ட
வன் விளம்புவது:
5 யாக்கோபே, உன் கூடாரங்களும்
இஸ்ரவேலே, உன் வாசஸ்தலங்களும்
எவ்வளவு அழகானவைகள்!
அவை அகன்ற பள்ளத்தாக்குகள் 6
போல்வன,
நதியருகுள்ள தோட்டங்கள் போல்வன,
யெகோவா நாட்டின் சந்தன மரங்கள்
போல்வன,
நீர் அருகேயுள்ள கேதுருக்கள் போல்
வன.
அவர்கள் நீர்ச்சால்களிலிருந்து தண்ணீர் 7
பாயும்,
அவர்கள் பயிருக்கு மிகுந்த தண்ணீர்
உண்டு.
அவர்கள் ராஜா ஆகாகிலும் உயர்வான்;
அவர்கள் ராஜ்யம் மேன்மையடையும்.
எகிப்திலிருந்து அவர்களைக் கொண்டு 8
வந்தவர் கடவுள்.
காட்டெருதின் பலம்போல் அவர்களுக்
குண்டு.
தங்கள் சத்துருக்களான ஜாதிகளை அவர்
கள் பட்சிப்பார்கள்;
அவர்கள் எலும்புகளை நொறுக்கிவிடு
வார்கள்,
அவர்கள் அம்புகள் உருவப்பாயும்.
சிங்கம்போல், பெண்சிங்கமேபோல், 9
மடங்கிப் படுத்திருப்பார்கள்,
அவர்களை எழுப்பத் துணிபவன் யார்?
உன்னை ஆசீர்வதிக்கிறவனுக்கே ஆசீர்
வாதம்,
உன்னைச் சபிப்பவனுக்கே சாபம்
என்று சொன்னான்.
அப்பொழுது பாலாக்கு பிலெயாமின் 10
மேல் கோபமூண்டவனாகித் தன் கைகளைத்
தட்டிக்கொண்டு பிலெயாமினிடம்: என்
சத்துருக்களைச் சபிக்க உன்னை வரவழைத்
தேன்; இதோ, இந்த மூன்று முறையும் நீ
அவர்களை ஆசீர்வதித்துவிட்டாய். இப்பொ 11
ழுது உன் இடத்துக்கு ஓடிப்போ; உன்னை
மிகவும் கனம்பண்ணுவேன் என்று சொன்
னேன். யெகோவாவோ நீ கனமடையாத
படி தடுத்துவிட்டார் என்றான். அதுகேட் 12
டுப் பிலெயாம் பாலாக்கினிடம்: நீர் என்
னிடம் அனுப்பின ஆட்களிடம் அப்பொ
ழுதே நான் சொல்லவில்லையா? பாலாக்கு 13
எனக்குத் தமது வீடு நிறைய வெள்ளியும்
பொன்னும் தந்தாலும் நான் யெகோவா
வின் கட்டளையை மீறி என் சுய இஷ்டமாய்
நன்மையாகிலும் தீமையாகிலும் செய்யமாட்
டேன். யெகோவா சொல்வதின்படியே
சொல்வேன் என்று சொன்னேனே. இதோ 14
இப்பொழுதே நான் என் ஜனத்தாரிடம்
போகிறேன்: பிற்காலத்திலே இந்த ஜனங்
கள் உமது ஜனங்களுக்குச் செய்வது இன்ன
தென்று உமக்குத் தெரிவிக்கிறேன் வாரும்

15 என்று சொல்லி, அவன் தன் குரலெடுத்
துப்பாடி:
பெயோரின்குமாரன் பிலெயாம்சொல்வது,
இருண்ட கண்ணன் உரைப்பது,
16 கடவுளின் வார்த்தைகளைக்கேட்டு
உன்னதமானவர்அளித்தஅறிவைஅறிந்து
சர்வவல்லவரின் தரிசனத்தைக்கண்டு
காழவிழும்போது கண் திறக்கப்பட்ட
வன் விளம்புவது:
17 அவரைக் காண்கிறேன், இப்பொழுதே
யல்ல,
அவரைப்பார்க்கிறேன், சமீபமேயல்ல,
ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து
தோன்றும்;
ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து
எழும்பும்;
அது மோவாபின் தலையையும் சேத்புத்தி
ரரின் மண்டையையும் உடைக்கும்.
18 ஏதோமை அவர் சுதந்தரிப்பார்;
சேயீரும் அவர் சுதந்தரமாகும்.
இவர்கள் அவர் சத்துருக்களாயிருந்
தார்கள்;
இஸ்ரவேலோ பராக்கிரமஞ்செய்யும்.
19 ஆளுகைசெய்யும் ஒருவர் யாக்கோபி
லிருந்து தோன்றுவார்;
பட்டணங்களில் மீதியானவர்களைச் சங்
கரிப்பார்
என்று சொன்னான்.
20 மேலும் அவன் அமலேக்கைப் பார்த்
துத் தன் குரலெடுத்துப்பாடி:
அமலேக்கு ஜாதிகளில் முதன்மையான
வன்;
முடிவிலோ அவன் முற்றிலும் நாசமா
வான்
என்று சொன்னான்.
21 அன்றியும் அவன் கேனியனைப்பார்த்துத்
தன் குரலெடுத்துப் பாடி:
உன் வாசஸ்தலம் அரணிப்பானது,
உன் கூடு இருக்குமிடம் கன்மலை;
22 அப்படியிருந்தும் கேனியன் அழிந்து
போவான்.
அசூர் உன்னைச் சிறைபிடித்துப்போக
எத்தனை நாட்செல்லும்
என்று சொன்னான்.
23 அதன்பின்னும் அவன் தன் குரலெடுத்
துப்பாடி:
ஐயோ, கடவுள் இதைச் செய்யும்போது
பிழைப்பவன் யார்?
24 கித்தீமின் கரைதுறையிலிருந்து கப்பல்
கள் வந்து
அசூரைச் சிறுமைப்படுத்தும், ஏபேரை
யுஞ் சிறுமைப்படுத்தும்,
தானே முற்றிலும் நாசமாவான்
என்று சொன்னான்.
25 எல்லாவற்றையும் சொல்லி முடித்தபின் பிலெயாம் எழுந்து தன் இடத்திற்குத் திரும்பிப் போனான்; பாலாக்கும் தன் வழியேபோனான்.

25 இஸ்ரவேலர் சித்தீமிலே தங்கியிருக்கையில் அவர்கள் மோவாபின் குமாரத்திகளோடே விபசாரஞ் செய்யத்தொடங்கினார்கள். 2 மோவாபியர் தங்கள் தேவர்களுக்குப் பலியிடும்போது அவர்களை அழைத்தார்கள்; அவர்கள் போய்ப் புசித்து மோவாபியரின் தேவர்களைப் பணிந்துகொண்டார்கள். 3 இப்படியாக இஸ்ரவேலர் பாகால்பெயோரைச் சார்ந்துகொள்ளவே, அவர்கள்மேல் யெகோவாவின் கோபம்மூண்டது. 4 யெகோவா மோசேயினிடம்: நீ ஜனத்தின் தலைவர் எல்லாரையும் கூட்டிக்கொண்டு அவர்களைச் சூரியவெளிச்சத்தில் யெகோவாவின் சந்நிதியிலே தூக்கிப்போடு, அப்படிச் செய்தால் யெகோவாவின் உக்கிரமான கோபம் இஸ்ரவேலைவிட்டு நீங்கிவிடும் என்றார். 5 மோசே இஸ்ரவேலின் நியாயாதிபதிகளிடம்: உங்களில் ஒவ்வொருவனும் தன்னைச் சேர்ந்தவர்களில் பாகால்பெயோரைச் சார்ந்துகொண்டவர்களைக் கொன்றுவிடவேண்டும் என்றான். 6 அந்தச் சமயத்தில், மோசேயும் இஸ்ரவேல் புத்திரரின் சபையினைத்தும் தரிசனக்கூடார வாசலின் எதிரே அழுதுகொண்டு நிற்கையிலேயே, அவர்கள் கண்காண, இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் ஒரு மிதியானிய ஸ்திரீயைத் தன் சகோதரர் மத்தியில் கொண்டுவந்தான். 7 அதை ஆசாரியனுகிய ஆரோனின் குமாரன் எலெயாசாரின் மகன் பினெகாஸ் கண்டபோது, அவன் சபையிலிருந்து எழுந்துபோய் ஒரு ஈட்டியைத் தன் கையிலே எடுத்துக்கொண்டு | 8 அந்த இஸ்ரவேலன் பின்னே சென்று, படுக்கை அறையில் அந்த இஸ்ரவேல் மனிதனும் அந்த ஸ்திரீயுமாகிய இருவர் வயிற்றிலும் ஈட்டி உருவிப்போக அவர்களைக் குத்திப்போட்டான்; அப்பொழுதே அந்த வாதை இஸ்ரவேல் புத்திரரைவிட்டு நீங்கிற்று. 9 அந்த வாதையால் மாண்டவர்கள் இருபத்து நாலாயிரம்பேர்.

10,11 யெகோவா மோசேயினிடம்: நான் என் எரிச்சலிலே இஸ்ரவேல் புத்திரரை நிர்மூலமாக்கியிருப்பேன்; ஆசாரியனுகிய ஆரோனின் குமாரன் எலெயாசாரின் மகன் பினெகாசோ என்னிமித்தம் அவர்கள் மேல் வைராக்கியம் கொண்பித்து இஸ்ரவேல் புத்திரர்மேல் உண்டான என் உக்கிரத்

12 தைத் திருப்பிவிட்டான்; ஆகவே, இதோ, அவனுக்கு என் சமாதானத்தின் உடன்
13 படிக்கையை அருளுகிறேன்; அவன் தன் கடவுளுக்காக வைராக்கியம் காண்பித்து இஸ்ரவேல் புத்திரருக்காகப் பிராயச்சித்தம் செய்தபடியினால், அந்த உடன்படிக்கையின்படி, அவனுக்கும் அவனுக்குப்பின் அவன் சந்ததிக்கும் நித்திய ஆசாரியபட்ட
14 மிருக்கும் என்று சொன்னார். மிதியானிய ஸ்திரீயோடே குத்துண்டு செத்த இஸ்ரவேலன் பேர் சிம்ரி; அவன் சாலுவின் குமாரன், சிமியோனியரின் வம்சத்தில் ஒரு
15 பிரபு. குத்துண்ட மிதியானிய ஸ்திரீயின் பேர் கஸ்பி; அவள் சூரின் குமாரத்தி, இவன் மிதியானியரின் வம்சம் ஒன்றுக்குத் தலைவன்.

16,17 யெகோவா மோசேயினிடம்: மிதியானியரைத் தாக்கி அவர்களை வெட்டிப்
18 போடுங்கள். அவர்கள் உங்களுக்கு விரோதமாய்ப் பிணைத்த சற்பனைகளினால் உங்களைத் தாக்கினார்களே. பெயோரின் சங்கதியிலும் பெயோரின் நிமித்தம் வாதையுண்டான நாளிலே குத்துண்ட அவர்கள் சகோதரியாகிய கஸ்பி என்னும் மிதியான் பிரபுவினுடைய குமாரத்தியின் சங்கதியிலும் அப்படிச் செய்தார்களே என்று சொன்னார்.

**26** அந்த வாதை தீர்ந்தபின்பு யெகோவா மோசேயோடும் ஆசாரியனாகிய ஆரோனின்
2 குமாரன் எலெயாசாரோடும் பேசி: இஸ்ரவேல் புத்திரரின் சமஸ்த சபையாரையும் அவரவர் குடும்பத்தின்படி இருபதுவயதுள்ளவர்களும் மேற்பட்டவர்களுமாய் இஸ்ரவேலிலே யுத்தத்திற்குப் போகத்தக்கவர்கள் யாவரையும், எண்ணிக் கணக்கிடுங்
3 கள் என்றார். அப்பொழுது மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் எரிகோவுக்கு எதிரே யோர்தானுக்கு அக்கரையில் மோவாபின் சமவெளிகளிலே அவர்களோடு
4 பேசி: யெகோவா மோசேக்கும் எகிப்து தேசத்திலிருந்து வந்த இஸ்ரவேல் புத்திரருக்கும் கட்டளையிட்டிருக்கிறபடியே இருபதுவயதுள்ளவர்களையும் அதற்கு மேற்பட்ட வயதுள்ளவர்களையும் எண்ணிக் கணக்கிடுங்கள் என்றார்கள்.

5 ரூபன் இஸ்ரவேலின் மூத்தகுமாரன்; ரூபனுடைய குமாரர், ஆனோக்கும் அவன் வழிவந்த ஆனோக்கிய வம்சத்தாரும்; பல்லூவும் அவன் வழிவந்த பல்லூவிய வம்சத்தா
6 ரும், | எஸ்ரோனும் அவன் வழிவந்த எஸ்
7 ரோனிய வம்சத்தாரும், கர்மீயும் அவன் வழிவந்த கர்மீய வம்சத்தாருமே. இவைகளே ரூபனியரின் வம்சங்கள்; அவர்களில் பதிவுசெய்யப்பட்டவர்கள் நாற்பத்துமூவாயிரத்து எழுநூற்று முப்பதுபேர். பல்லூ 8
வின் குமாரன் எலியாப், எலியாபின் குமாரர் நெமூவேல், தாத்தான், அபீராம் என்பவர்கள்; இந்தத் தாத்தான் அபீராம் என்ப 9
வர்களே சபையில் ஆலோசனைக்கர்த்தாக்கள், கோராகின் கூட்டத்தார் யெகோவாவுக்கு விரோதமாய் எழும்பியபோது இவர்களும் அவர்களோடு சேர்ந்த மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக எழும்பினார்கள். பூமி தன் வாயைத்திறந்து அவர்களை 10
யும் கோராகையும் விழுங்கிவிட்டது. அந்தக் கூட்டத்தார் மாண்டுபோன சமயத்தில் அக்கினி இருநூற்று ஐம்பதுபேரைப் பட்சித்துவிட்டது; இப்படியாக அவர்கள் ஒரு அடையாளமானார்கள். கோராகின் 11
குமாரரோ சாகவில்லை.

சிமியோனின் குமாரர் அவரவர் வம்சங் 12
களின்படி: நெமூவேலும் அவன் வழிவந்த நெமூவேலிய வம்சத்தாரும்; யாமீனும் அவன் வழிவந்த யாமீனிய வம்சத்தாரும், யாகினும் அவன் வழிவந்த யாகினிய வம்சத்தாரும், | சோராகும் அவன் வழிவந்த 13
சோராகிய வம்சத்தாரும், சவுலும் அவன் வழிவந்த சவுலிய வம்சத்தாருமே. இவை 14
களே சிமியோனியரின் வம்சங்கள்; அவர்கள் இருபத்திரண்டாயிரத்து இருநூறுபேர்.

காத்தின் குமாரர் அவரவர் வம்சங்களின் 15
படி: செபோனும் அவன் வழிவந்த செபோனிய வம்சத்தாரும், ககீயும் அவன் வழிவந்த ககிய வம்சத்தாரும், சூனியும் அவன் வழிவந்த சூனிய வம்சத்தாரும், | ஒஸ்னியும் அவன் வழிவந்த ஒஸ்னிய வம் 16
சத்தாரும், ஏரியும் அவன் வழிவந்த ஏரிய வம்சத்தாரும், | ஆரோதும் அவன் வழிவந்த 17
ஆரோதிய வம்சத்தாரும், அரேலியும் அவன் வழிவந்த அரேலிய வம்சத்தாருமே. இவை 18
களே காத்புத்திரரின் வம்சங்கள்; அவர்களில் பதிவுசெய்யப்பட்டவர்கள் நாற்பதினாயிரத்து ஐந்நூறுபேர்.

யூதாவின் குமாரர் ஏர், ஓனான் என்பவர் 19
கள்; ஏரும் ஓனானும் கானான் தேசத்தில் செத்தார்கள். யூதாவின் மற்றக் குமாரர் 20
அவரவர் வம்சங்களின்படி: சேலாவும் அவன் வழிவந்த சேலானிய வம்சத்தாரும், பேரேசும் அவன் வழிவந்த பேரேசிய வம்சத்தாரும், சேராகும் அவன் வழிவந்த சேராகிய வம்சத்தாருமே. பேரேசின் குமா 21
ரர்: எஸ்ரோனும் அவன் வழிவந்த எஸ்ரோனிய வம்சத்தாரும், காமூலும் அவன் வழிவந்த காமூலிய வம்சத்தாருமே. இவை 22
களே யூதாவின் வம்சங்கள்; அவர்களில்

பதிவுசெய்யப்பட்டவர்கள் எழுபத்தாறு
யிரத்து ஐந்நூறுபேர்.
23 இசக்காரின் குமாரர் அவரவர் வம்சங்
களின்படியே: தோலாவும் அவன் வழிவந்த
தோலாவிய வம்சத்தாரும், பூவாவும் அவன்
24 வழிவந்த பூனிய வம்சத்தாரும், | யாசூபும்
அவன் வழிவந்த யாசூபிய வம்சத்தாரும்,
சிம்ரோனும் அவன் வழிவந்த சிம்ரோனிய
25 வம்சத்தாருமே. இவைகளே இசக்காரின்
வம்சங்கள்; அவர்களில் பதிவுசெய்யப்பட்ட
வர்கள் அறுபத்து நாலாயிரத்து முந்நூறு
பேர்.
26 செபுலோனின் குமாரர் அவரவர் வம்
சங்களின்படி: சேரேதும் அவன் வழிவந்த
சேரேதிய வம்சத்தாரும், ஏலோனும் அவன்
வழிவந்த ஏலோனிய வம்சத்தாரும், யாலே
யேலும் அவன் வழிவந்த யாலேயேலிய வம்
27 சத்தாருமே. இவைகளே செபுலோனியரின்
வம்சங்கள்; அவர்களில் பதிவுசெய்யப்பட்
டவர்கள் அறுபதினாயிரத்து ஐந்நூறு பேர்.
28 யோசேப்பின் குமாரர் அவரவர் வம்சங்
களின்படி மனாசேயும் எப்பிராயீமுமே.
மனாசே புத்திரர் மாகீரும் அவன் வழிவந்த
29 மாகீரிய வம்சத்தாரும். மாகீர் கிலெயா
தைப் பெற்றான்; கிலெயாதின் வழிவந்த
30 வர்களே கிலெயாதியர். கிலெயாதின் குமா
ரர் இவர்களே: ஈயேசேரும் அவன் வழி
வந்த ஈயேசேரிய வம்சத்தாரும், கேலேக்
கும் அவன் வழிவந்த கேலேக்கிய வம்சத்
31 தாரும், | அஸ்ரியேலும் அவன் வழிவந்த
அஸ்ரியேலிய வம்சத்தாரும், சேகேமும்
அவன் வழிவந்த சேகேமிய வம்சத்தா
32 ரும், | செமீதாவும் அவன் வழிவந்த செமீ
தாவிய வம்சத்தாரும், கேபேரும் அவன்
வழிவந்த கேபேரிய வம்சத்தாருமே.
33 கேபேரின் குமாரன் செலோப்பியாத்திற்குக்
குமாரர் இல்லை; குமாரத்திகளே இருந்தார்
கள்; அவர்கள் பேர், மக்லாள், நோகாள்,
கொக்லாள், மில்காள், திர்சாள் என்பது.
34 இவைகளே மனாசேயின் வம்சங்கள்; அவர்
களில் பதிவுசெய்யப்பட்டவர்கள் ஐம்பத்
தீராயிரத்து எழுநூறுபேர்.
35 எப்பிராயீமின் குமாரர் அவரவர் வம்சங்
களின்படி இவர்களே: சுத்தெலாகும் அவன்
வழிவந்த சுத்தெலாகிய வம்சத்தாரும்,
பெகேரும் அவன் வழிவந்த பெகேரிய வம்
சத்தாரும், தாகானும் அவன் வழிவந்த
36 தாகானிய வம்சத்தாருமே. சுத்தெலாகின்
புத்திரர் இவர்களே: ஏரானும் அவன் வழி
37 வந்த ஏரானிய வம்சத்தாருமே. இவை
களே எப்பிராயீம் புத்திரரின் வம்சங்கள்;
அவர்களில் பதிவுசெய்யப்பட்டவர்கள் மூப்
பத்திராயிரத்து ஐந்நூறுபேர்; இவர்கள் அவ
ரவர் வம்சங்களின்படியே யோசேப்பு புத்
திரர்.
பென்யமீனின் குமாரர் அவரவர் வம்சங் 38
களின்படியே: பேலாவும் அவன் வழிவந்த
பேலாவிய வம்சத்தாரும், அஸ்பேலும்
அவன் வழிவந்த அஸ்பேலிய வம்சத்தாரும்,
அகீராமும் அவன் வழிவந்த அகீராமிய
வம்சத்தாரும், | செபூபாமும் அவன் வழி 39
வந்த சூபாமிய வம்சத்தாரும், கூபாமும்
அவன் வழிவந்த கூபாமிய வம்சத்தாருமே.
பேலாவின் புத்திரர் ஆரேதும் நாகமானுமே; 40
அவர்கள் வழிவந்தவர்கள் ஆரேதிய வம்சத்
தாரும் நாகமானிய வம்சத்தாருமாம்: அவ 41
ரவர் வம்சத்தின்படி இவர்களே பென்ய
மீன் புத்திரர். அவர்களில் பதிவுசெய்யப்
பட்டவர்கள் நாற்பத்தையாயிரத்து அறு
நூறுபேர்.
தாண் புத்திரர் அவரவர் வம்சங்களின் 42
படி சூகாமும் அவன் வழிவந்த சூகாமிய
வம்சத்தாருமே. அவரவர் வம்சங்களின்படி
இவர்களே தாணின் வம்சத்தார். சூகாமிய 43
வம்சத்தார் அனைவரிலும் பதிவுசெய்யப்
பட்டவர்கள் அறுபத்து நாலாயிரத்து
நானூறுபேர்.
ஆசேரின் குமாரர் அவரவர் வம்சங்க 44
ளின்படி: யிம்னாவும் அவன் வழிவந்த
யிம்னாவிய வம்சத்தாரும், யிஸ்வியும் அவன்
வழிவந்த யிஸ்வியர் வம்சத்தாரும், பெரீயா
வும் அவன் வழிவந்த பெரீயாவிய வம்சத்
தாருமே. பெரீயாவின் புத்திரர் கேபேரும் 45
அவன் வழிவந்த கேபேரிய வம்சத்தாரும்,
மல்கியேலும் அவன் வழிவந்த மல்கியேலிய
வம்சத்தாருமே. ஆசேருடைய குமாரத்தி 46
யின் பேர் சேராகு. இவைகளே ஆசேர் 47
புத்திரரின் வம்சங்கள்; அவர்களில் பதிவு
செய்யப்பட்டவர்கள் ஐம்பத்துமூவாயிரத்து
நானூறுபேர்.
நப்தலியின் குமாரர் அவரவர் வம்சங் 48
களின்படியே: யாக்செயேலும் அவன் வழி
வந்த யாக்செயேலிய வம்சத்தாரும், கூனி
யும் அவன் வழிவந்த கூனிய வம்சத்தா
ரும், | யேத்சேரும் அவன் வழிவந்த யேத் 49
சேரிய வம்சத்தாரும், சில்லேமும் அவன்
வழிவந்த சில்லேமிய வம்சத்தாருமே. அவ
ரவர் வம்சங்களின்படி இவைகளே நப்தலி
யின் வம்சங்கள்; அவர்களில் பதிவுசெய்யப் 50
பட்டவர்கள் நாற்பத்தையாயிரத்து நானூறு
பேர்.
இஸ்ரவேல் புத்திரரில் பதிவுசெய்யப் 51
பட்டவர்கள் ஆறுலட்சத்தோராயிரத்து எழு
நூற்று மூப்பது பேர்.

52,53 யெகோவா மோசேயினிடம்: ஆட்களின் இலக்கத்திற்குத்தக்கபடி தேசம் இவர்களுக்குச் சுதந்தரமாகப் பங்கிடப்பட
54 வேண்டும். அதிகப்பேருள்ள கோத்திரத்திற்கு அதிக சுதந்தரமும் கொஞ்சப்பேருள்ள கோத்திரத்திற்குக் கொஞ்ச சுதந்தரமும் கொடுக்கவேண்டும். அந்தந்தக் கோத்திரத்தில் பதிவுசெய்யப்பட்டவர்களின் இலக்கத்திற்குத் தக்கபடியே அந்தந்தக் கோத்திரத்திற்குச் சுதந்தரம் கொடுக்கப்படவேண்
55 டும். சீட்டுப்போட்டுத் தேசத்தைப் பங்கிட வேண்டும். தங்கள் பிதாக்களின் கோத்திர நாமங்களின்படியே சுதந்தரித்துக்கொள்
56 வார்கள். அதிகப்பேருள்ள கோத்திரங்களுக்கும் கொஞ்சப்பேருள்ள கோத்திரங்களுக்கும் சுதந்தரம் சீட்டு விழுந்தபடியே பங்கிடப்படவேண்டும்மென்று சொன்னார்.
57 லேவியரில் பதிவுசெய்யப்பட்டவர்கள் அவரவர் வம்சங்களின்படி. இவர்களே: கெர்சோனும் அவன் வழிவந்த கெர்சோனிய வம்சத்தாரும், கொகாத்தும் அவன் வழிவந்த கொகாத்திய வம்சத்தாரும், மெராரியும் அவன் வழிவந்த மெராரிய வம்சத்
58 தாருமே. லிப்னிய வம்சமும் கெப்ரோனிய வம்சமும் மகேலிய வம்சமும் மூசிய வம்சமும் கோராகிய வம்சமும் லேவி கோத்திரத்
59 தில் சேர்ந்தவைகள். கொகாத் அம்ராமைப் பெற்றான்; அம்ராமுடைய மனைவியின் பேர் யோகெபேத்; அவள் லேவியின் குமாரத்தி; எகிப்தில் லேவிக்குப் பிறந்தவள். அவள் அம்ராமுக்கு ஆரோனையும் மோசே
60 யையும் அவர்கள் சகோதரியான மிரியாமையும் பெற்றாள். ஆரோனுக்கு நாதாபும் அபியூவும் எலெயாசாரும் இத்தாமாரும்
61 பிறந்தார்கள். நாதாபும் அபியூவும் யெகோவாவின் சந்நிதியில் அந்திய அக்கினியைக் கொண்டுவந்தபோது மாண்டுபோனார்கள்.
62 அவர்களில் பதிவுசெய்யப்பட்டவர்கள், ஒரு மாதமும் அதற்கு மேற்பட்ட வயதுமுள்ள ஆண்பிள்ளைகள் அனைவரும், இருபத்து மூவாயிரம் பேர்; இஸ்ரவேல் புத்திரரின் நடுவில் அவர்களுக்குச் சுதந்தரம் கொடுக்கப்படாதபடியினால் அவர்கள் இஸ்ரவேல் புத்திரரோடே பதிவுசெய்யப்படவில்லை.
63 மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் எரிகோவுக்கு எதிரே யோர்தானுக்கு அக்கரையில் மோவாபின் சமவெளிகளிலே இஸ்ரவேல் புத்திரரைப் பதிவுசெய்தபோது, அவர்களால் பதிவுசெய்யப்பட்டவர்கள்
64 இவர்களே. முன்பு மோசேயும் ஆசாரியனாகிய ஆரோனும் சீனாய் வனாந்தரத்தில் இஸ்ரவேல் புத்திரரைப் பதிவுசெய்தபோது பதிவுசெய்யப்பட்டவர்களில் ஒருவரும் இவர்களுக்குள் இல்லை. வனாந்தரத்தில் 65
சாகவே சாவார்கள் என்று யெகோவா அவர்களுக்குரைத்துச் சொல்லியிருந்தார்; எப்புன்னேயின் குமாரன் காலேபும் நூனின் குமாரன் யோசுவாவும் தவிர வேறொருவரும் அவர்களில் மீதியாயிருக்கவில்லை.

செலோப்பியாத்தின் குமாரத்திகளாகிய **27**
மக்லாள், நோகாள், கொக்லாள், மில்காள், திர்சாள் என்பவர்கள் விண்ணப்பஞ்செய்ய வந்தார்கள். இந்தச் செலோப்பியாத்து யோசேப்பின் குமாரனாகிய மனாசேயின் கோத்திரத்திலே, மனாசேயின் குமாரனாகிய மாகீருடைய குமாரனான கிலெயாத்துக்குப் பிறந்த கேபேரின் புத்திரன். இந்தப் பெண் 2
கள் தரிசனக்கூடாரவாசலில் மோசேக்கும் ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் பிரபுக்களுக்கும் சபையனைத்திற்கும் முன்பாக நின்று: எங்கள் தகப்பன் வனாந்தரத்திலே 3
மரணமடைந்தார்; அவர் யெகோவாவுக்கு விரோதமாகக் கூடின கோராகின் கூட்டத்தில் சேர்ந்தவரல்ல, தமது சொந்தப்பாவத்தினாலே மரித்தார்; அவருக்குக் குமாரர் இல்லை. எங்கள் தகப்பனுக்குக் குமாரன் 4
இல்லாதபினாலே அவருடைய பேர் அவருடைய வம்சத்தில் இராமல் அற்றுப்போக வேண்டியதென்ன? எங்கள் தகப்பனுடைய சகோதரருக்குள்ளே எங்களுக்குக் காணியாட்சி கொடுக்கவேண்டும் என்று கேட்டார்கள். மோசே அவர்கள் வழக்கை 5
யெகோவாவின் சந்நிதியில் கொண்டு போக | யெகோவா அவனிடம்: செலோப் 6,7
பியாத்தின் குமாரத்திகள் சொல்லுவது சரிதான்; அவர்களுக்கு அவர்கள் தகப்பனுடைய சகோதரருக்குள்ளே சுதந்தரக் காணியாட்சி கொடுத்துவிடவேண்டும்; அவர்கள் தகப்பன் வைத்துப்போன சுதந்தரம் அவர்களுக்கு உரிமையாகும்படி செய்.
மேலும் நீ இஸ்ரவேல் புத்திரரிடம்: ஒருவன் 8
குமாரன் இல்லாமல் மரித்தால் அவனுடைய சுதந்தரம் அவன் குமாரத்திக்கு உரிமையாகச் செய்யவேண்டும். அவனுக் 9
குக் குமாரத்தியும் இல்லாதிருந்தால், அவன் சுதந்தரத்தை அவன் சகோதரருக்குக் கொடுக்கவேண்டும். அவனுக்குச் சகோ 10
தரரும் இல்லாதிருந்தால் அவன் சுதந்தரத்தை அவன் தகப்பனுடைய சகோதரருக்குக் கொடுக்கவேண்டும். அவன் தகப்ப 11
னுக்குச் சகோதரர் இல்லாதிருந்தால் அவன் சுதந்தரத்தை அவன் வம்சத்திலே அவனுக்குச் சமீபமாயிருக்கிற சுதந்தர உறவின் முறையானுக்குக் கொடுக்கவேண்டும்; அது அவன் உடைமை

யாகுமென்று சொல் என்றார். யெகோவா மோசேக்குக் கட்டளையிட்டபடியே இது இஸ்ரவேல் புத்திரருக்கு விதிக்கப்பட்ட நியமமாம்.

12 பின்பு யெகோவா மோசேயினிடம்: நீ இந்த அபாரீம் மலையில் ஏறி, நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்த தேசத்தைப்
13 பார். நீ அதைப் பார்த்தபின்பு உன் சகோதரனுகிய ஆரோன் சேர்க்கப்பட்டது போல நீயும் உன் ஜனத்தாரிடம் சேர்க்கப்
14 படுவாய்; சபையார் விவாதம்பண்ணின சின் வனாந்தரத்திலே தண்ணீர் விஷயத்தில் அவர்கள் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தமுள்ளவராகக் காட்டாமல் என் சொல் மீறி நடந்தீர்களே என்று சொன்னார்—இது சின் வனாந்தரத்தில் காதேஸ் ஊர் அருகே உண்டான மெரீபாவின் தண்ணீரே-
15 அப்பொழுது மோசே யெகோவாவினிடம்:
16 மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் கடவுளாகிய யெகோவா ஒரு புருஷனை அவர்கள்மேல் அதிகாரியாக ஏற்படுத்த வேண்டும்; அவர்கள் போகும்போதும் வரும்போதும் அவன் அவர்கள்முன் செல்ல வேண்டும், அவர்கள் போவதற்கும் வருவதற்கும் அவனே வழி நடத்தவேண்டும்;
17 அப்படியில்லாவிட்டால் யெகோவாவின் சபை மேய்ப்பவனில்லாத மந்தைபோலாய்
18 விடுமே என்று சொன்னான். யெகோவா மோசேயினிடம்: நூனின் குமாரனுகிய யோசுவாவை அழை, அவன் ஆவியையுடையவன்; அவன்மேல் கையை வை;
19 அவனை ஆசாரியனுகிய எலெயாசாருக்கும் சபையனைத்திற்கும் முன்பாக நிறுத்தி அவர்கள் கண்களுக்கு எதிரே அவனுக்கு அதி
20 காரத்தைக் கொடுத்து | இஸ்ரவேல் புத்திராகிய சபையார் எல்லாரும் கீழ்ப்படிதற்கென உன் மகிமை அவனுக்கும் கிடைக்
21 கும்படி செய். அவன் ஆசாரியனுகிய எலெயாசாரின் முன்வந்து நிற்கவே, ஆசாரியன் அவனிமித்தம் யெகோவாவின் சந்நிதியிலே, ஊரீம் என்னும் தெய்வதீர்ப்பைக் கேட்பான்; அவர் கட்டளைப்படியே அவனும் அவனோடே இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் போகவும், அவர்
22 கட்டளைப்படியே வரவும் வேண்டியது என்றார். யெகோவா தனக்குக் கட்டளையிட்டபடியே மோசே செய்து யோசுவாவை அழைத்துக்கொண்டுபோய் அவனை ஆசாரியனுகிய எலெயாசாருக்கும் சபையனைத்திற்
23 கும் எதிரே நிறுத்தி | அவன்மேல் தன் கைகளை வைத்து அவனுக்கு அதிகாரம் கொடுத்தான்; யெகோவா மோசேயைக் கொண்டு சொல்லியிருந்தபடியே நடந்தது.

28 யெகோவா மோசேயினிடம்: | நீ இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிட்டு, என் 2 காணிக்கையை, நிவேதனங்களுக்குரிய என் அப்பத்தை, குறித்தகாலத்தில் சுகந்த வாசனையாகச் செலுத்தும்படி பார்த்துக் கொள்ளவேண்டுமென்று சொல்.

மேலும் நீ அவர்களிடம்: நீங்கள் யெ 3 கோவாவுக்குச் செலுத்தவேண்டிய நிவேதனம் இதுவே, ஒரு வயதான பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளை நித்திய தகனபலியாக நாடோறும் செலுத்தவேண்டும்.
காலையில் ஒரு ஆட்டுக்குட்டியையும் மாலை 4 யில் ஒரு ஆட்டுக்குட்டியையும் பலியிட்டு |
போஜனபலியாக ஒரு மரக்காலிலே பத்தில் 5 ஒரு பங்கானதும் இடித்துப்பிழிந்த காற்படி எண்ணெயிலே பிசைந்ததுமாகிய மெல்லிய மாவையும் படைக்கவேண்டும். இதுவே நித்திய தகனபலி; இதுவே யெகோவாவுக் 6 குச் சுகந்த நிவேதனமாகச் சீனாய்மலையில் கட்டளையிடப்பட்டது. காற்படி திராட்ச 7 ரசம் ஒரு ஆட்டுக்குட்டிக்குரிய பானபலி; பரிசுத்த ஸ்தலத்திலே யெகோவாவுக்கு அந்த ரசம் பானபலியாக வார்க்கப்பட வேண்டும். காலையின் போஜனபலியை 8 யும் அதின் பானபலியையும்போலவே மாலையிலும் மற்ற ஆட்டுக்குட்டியையும் யெகோவாவுக்குச் சுகந்த நிவேதனமாகச் செலுத்தவேண்டும்.

ஓய்வுநாளிலோ போஜனபலிக்காக ஒரு 9 வயதான பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளையும் பத்தில் இரண்டுபங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவையும் அதின் பானபலியையும் செலுத்த வேண்டும். நித்தமும் செலுத்தும் தகன 10 பலியும் அதின் பானபலியுமேயன்றி ஓய்வுநாளில் இந்த ஓய்வுநாள் தகனபலியும் செலுத்தப்படவேண்டும்.

உங்கள் மாதப்பிறப்புகளில் நீங்கள் 11 யெகோவாவுக்கு தகனபலியாக இரண்டு இளங்காளைகளையும் ஒருஆட்டுக்கடாவையும் ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்தவேண்டும். போஜன 12 பலியாக ஒரு காளைக்குப் பத்தில் மூன்று பங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவையும் போஜனபலியாக ஒரு ஆட்டுக்கடாவுக்குப் பத்தில் இரண்டு பங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மாவையும், போஜனபலியாக ஆட்டுக் 13 குட்டிக்குப் பத்தில் ஒருபங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மாவையும்

யெகோவாவுக்குச் சுகந்த தகனபலியை
14 நிவேதனமாகச் செலுத்தவேண்டும், அவை
களுக்குரிய பானபலிகள் காளைக்கு அரைப்
படி திராட்சரசம், ஆட்டுக்கடாவுக்குப் படி
யில் மூன்றில் ஒருபங்கு, ஆட்டுக்குட்டிக்
குக் காற்படி ரசம்; இது வருஷமுழுவதும்
மாதந்தோறும் செலுத்தப்படவேண்டிய
15 மாதப்பிறப்பு தகனபலி. அதோடு நித்த
மும் செலுத்தப்படும் தகனபலியும் அதின்
பானபலியுமேயன்றி பாவநிவாரணபலியாக
யெகோவாவுக்கு ஒரு வெள்ளாட்டுக்கடா
வும் செலுத்தப்படவேண்டும்.
16 முதலாம்மாதம் பதினாலாம்தேதி யெகோ
17 வாவுக்குரிய பஸ்கா. அந்த மாதம் பதினைந்
தாம்தேதி உற்சவநாள்; ஏழுநாளளவும் புளி
ப்பில்லாத அப்பம் புசிக்கவேண்டும். முத
18 லாம்நாளில் சபைத்திருக்கூட்டம்; அன்றை
யதினம் சாதாரணவேலை எதுவும் செய்ய
19 லாகாது. அப்பொழுது நீங்கள் யெகோ
வாவுக்குத் தகனபலி நிவேதனத்தைச் செ
லுத்தவேண்டும்; இரண்டு இளங்காளைகளையும்
ஒரு ஆட்டுக்கடாவையும் ஒரு வயதான
பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும் பலி
யிடவேண்டும்; அவைகள் உங்களுக்குப்
20 பழுதற்றவைகளாயிருக்கவேண்டும். அவை
களுக்குரிய போஜனபலியாக எண்ணெ
யிலே பிசைந்த மெல்லிய மாவிலே காளைக்
காகப் பத்தில் மூன்றுபங்கையும் ஆட்டுக்
கடாவுக்காகப் பத்தில் இரண்டுபங்கையும் |
21 ஏழு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்கா
22 கவும் பத்தில் ஒரு பங்கையும் | உங்களுக்
காகப் பிராயச்சித்தம் செய்வதற்கென்று
பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்
23 கடாவையும் செலுத்தவேண்டும். காலை
யிலே நித்தமும் செலுத்தும் தகனபலியை
யேயன்றி இவைகளையும் செலுத்தவேண்
24 டும். இந்தப் பிரகாரம் ஏழுநாளளவும்
நாடோறும் யெகோவாவுக்குச் சுகந்த நிவே
தனம் செலுத்தவேண்டும்; நித்திய தகனபலி
யையும் அதின் பானபலியையுமேயன்றி
25 இதையும் செலுத்தவேண்டும். ஏழாம்
நாளில் உங்களுக்குச் சபைத் திருக்கூட்டம்;
அதில் சாதாரணவேலை எதுவும் செய்யக்
கூடாது.
26 முதற்கனி படைக்கும் நாளில் யெகோ
வாவுக்கு ஏழாம் வாரத்து உற்சவத்தில்
புதிய போஜனபலியைக் கொண்டுவரும்
போது உங்களுக்குச் சபைத்திருக்கூட்டம்;
27 அதில் சாதாரண வேலை எதுவும் செய்யலா
காது. அப்பொழுது நீங்கள் யெகோவா
வுக்குச் சுகந்த வாசனையாக இரண்டு இளங்
காளைகளையும் ஒரு ஆட்டுக்கடாவையும் ஒரு
வயதான ஏழு ஆட்டுக்குட்டிகளையும் தக
பலியிடவேண்டும். அவைகளின் போஜன 28
பலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்
லிய மாவில் ஒரு காளைக்காகப் பத்தில்
மூன்று பங்கையும் அந்த ஒரு ஆட்டுக்
கடாவுக்காகப் பத்தில் இரண்டு பங்கையும்,
ஏழு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்கா 29
கவும் பத்தில் ஒருபங்கையும், உங்களுக்கா 30
கப் பிராயச்சித்தம் செய்வதற்கென்று ஒரு
வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்
டும். நித்திய தகனபலியையும் அதின் 31
போஜனபலியையும் அதின் பானபலியையு
மேயன்றி இவைகளையும் செலுத்தவேண்டும்;
இவைகள் உங்களுக்குப் பழுதற்றவைகளா
யிருக்கவேண்டும்.

ஏழாம்மாதம் முதல் தேதி உங்களுக்குச் **29**
சபைத் திருக்கூட்டம்; அதில் சாதாரண
வேலை எதுவும் செய்யவேண்டாம்; அது
உங்களுக்கு எக்காளமூழக்க நாளாயிருக்க
வேண்டும். அப்பொழுது நீங்கள் யெகோ 2
வாவுக்குச் சுகந்த வாசனையாக ஒரு இளங்
காளையையும் ஒரு ஆட்டுக்கடாவையும் ஒரு
வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டி
களையும் தகனபலியிடவேண்டும். அவை 3
களுக்குரிய போஜனபலியாக எண்ணெயி
லே பிசைந்த மெல்லிய மாவிலே காளைக்
காகப் பத்தில் மூன்றுபங்கையும் ஆட்டுக்
கடாவுக்காக இரண்டுபங்கையும், ஏழு ஆட் 4
டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்காகவும்
ஒரு பங்கையும் | உங்களுக்காகப் பிராயச் 5
சித்தம் செய்வதற்கென்று பாவநிவாரண
பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும்
செலுத்தவேண்டும். மாதப்பிறப்பின் தக 6
னபலியையும் அதின் போஜனபலியையும்
நித்திய தகனபலியையும் அதின் போஜன
பலியையும் அவைகளுக்கு விதித்த பான
பலிகளையுமேயன்றி இவைகளையும் யெகோ
வாவுக்குச் சுகந்த நிவேதனமாகச் செலுத்த
வேண்டும்.

இந்த ஏழாம்மாதம் பத்தாம் தேதி உங் 7
களுக்குச் சபைத்திருக்கூட்டம்; அந்த
நாளில் உங்கள் ஆத்துமாக்களை ஒடுக்க
வேண்டும், யாதொரு வேலையும் செய்யக்
கூடாது. யெகோவாவுக்குச் சுகந்த வாசனை 8
யாக ஒரு இளங்காளையையும் ஒரு ஆட்டுக்
கடாவையும் ஒரு வயதான பழுதற்ற ஏழு
ஆட்டுக்குட்டிகளையும் தகனபலியிடவேண்
டும். அவைகளின் போஜனபலியாக எண் 9
ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே
காளைக்காகப் பத்தில் மூன்றுபங்கையும்
அந்த ஒரு ஆட்டுக்கடாவுக்காக இரண்டு
பங்கையும் | ஏழு ஆட்டுக்குட்டிகளில் ஒவ் 10

வொன்றிற்காகவும் பத்தில் ஒருபங்கையும் |
11 பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்
கடாவையும் செலுத்தவேண்டும்; பிராயச்
சித்தம் செய்யும் பாவநிவாரணபலியையும்
நித்திய தகனபலியையும் அதின் போஜன
பலியையும் அவைகளின் பானபலிகளையு
மேயன்றி இவைகளையும் செலுத்தவேண்டும்.
12 ஏழாம்மாதம் பதினைந்தாம் தேதி உங்க
ளுக்குச் சபைத் திருக்கூட்டம்; அதில் சாதா
ரண வேலை எதுவும் செய்யக்கூடாது;
ஏழுநாள் யெகோவாவுக்கு உற்சவம் கொ
13 ண்டாடவேண்டும். நீங்கள் யெகோவாவுக்
குச் சுகந்த நிவேதனமாகப் பதின்மூன்று
இளங்காளைகளையும் இரண்டு ஆட்டுக்க
டாக்களையும் ஒரு வயதான பழுதற்ற பதி
னைந்து ஆட்டுக்குட்டிகளையும் தகனபலியிட
14 வேண்டும்; அவைகளின் போஜனபலியாக
எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவி
லே அந்தப் பதின்மூன்று காளைகளில் ஒவ்
வொன்றிற்காகவும் பத்தில் மூன்றுபங்கை
யும் அந்த இரண்டு ஆட்டுக்கடாக்களில் ஒவ்
15 வொன்றிற்காகவும் இரண்டுபங்கையும் |
பதினைந்து ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்
16 றிற்காகவும் ஒரு பங்கையும் படைக்கவே
ண்டும். நித்திய தகனபலியையும் அதின்
போஜனபலியையும் அதின் பானபலியை
மேயன்றிப் பாவநிவாரணபலியாக ஒரு
வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்
டும்.
17 இரண்டாம் நாளிலே பன்னிரண்டு
இளங்காளைகளையும் இரண்டு ஆட்டுக்கடாக்
களையும் ஒரு வயதான பழுதற்ற பதினைந்து
ஆட்டுக்குட்டிகளையும் பலியிடவேண்டும்.
18 காளைகள், ஆட்டுக்கடாக்கள், ஆட்டுக்குட்
டிகள் ஆகிய இவற்றின் இலக்கத்தின்படி
யே விதிக்கப்பட்ட அவைகளின் போஜன
பலியையும் அவைகளின் பானபலிகளையும்
19 படைக்கவேண்டும். நித்திய தகனபலியை
யும் அதின் போஜனபலியையும் அவைக
ளின் பானபலிகளையுமேயன்றிப் பாவநிவார
ணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவை
யும் செலுத்தவேண்டும்.
20 மூன்றாம் நாளிலே பதினொரு இளங்கா
ளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்
களையும் ஒரு வயதான பழுதற்ற பதினைந்து
ஆட்டுக்குட்டிகளையும் பலியிடவேண்டும்.
21 காளைகள், ஆட்டுக்கடாக்கள், ஆட்டுக்குட்
டிகள் ஆகிய இவற்றின் இலக்கத்தின்படி
யே விதிக்கப்பட்ட அவைகளின் போஜன
பலியையும் அவைகளின் பானபலிகளையும்
22 படைக்கவேண்டும். நித்திய தகனபலியை
யும் அதின் போஜனபலியையும் அதின்
பானபலியையுமேயன்றிப் பாவநிவாரண
பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும்
செலுத்தவேண்டும்.
நான்காம் நாளிலே பத்து இளங்காளை 23
களையும் இரண்டு ஆட்டுக்கடாக்களையும்
ஒரு வயதான பழுதற்ற பதினைந்து ஆட்டுக்
குட்டிகளையும் பலியிடவேண்டும். காளை 24
கள், ஆட்டுக்கடாக்கள், ஆட்டுக்குட்டிகள்
ஆகிய இவற்றின் இலக்கத்தின்படியே
விதிக்கப்பட்ட அவைகளின் போஜனபலி
யையும் அவைகளின் பானபலிகளையும்
படைக்கவேண்டும். நித்திய தகனபலியை 25
யும் அதின் போஜனபலியையும் அதின்
பானபலியையுமேயன்றிப் பாவநிவாரண
பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும்
செலுத்தவேண்டும்.
ஐந்தாம் நாளிலே ஒன்பது இளங்காளை 26
களையும் இரண்டு ஆட்டுக்கடாக்களையும்
ஒரு வயதான பழுதற்ற பதினைந்து ஆட்டுக்
குட்டிகளையும் பலியிடவேண்டும். காளை 27
கள், ஆட்டுக்கடாக்கள், ஆட்டுக்குட்டிகள்
ஆகிய இவற்றின் இலக்கத்தின்படியே விதிக்
கப்பட்ட அவைகளின் போஜனபலியையும்
அவைகளின் பானபலிகளையும் படைக்க
வேண்டும். நித்திய தகனபலியையும் அதின் 28
போஜனபலியையும் அதின் பானபலியையு
மேயன்றிப் பாவநிவாரணபலியாக ஒரு வெள்
ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும்.
ஆறாம் நாளிலே எட்டு இளங்காளைகளை 29
யும் இரண்டு ஆட்டுக்கடாக்களையும் ஒரு
வயதான பழுதற்ற பதினைந்து ஆட்டுக்குட்
டிகளையும் படைக்கவேண்டும். காளைகள், 30
ஆட்டுக்கடாக்கள், ஆட்டுக்குட்டிகள் ஆகிய
இவற்றின் இலக்கத்தின்படியே விதிக்கப்
பட்ட அவைகளின் போஜனபலியையும்
அவைகளின் பானபலிகளையும் படைக்க
வேண்டும். நித்திய தகனபலியையும் அதின் 31
போஜனபலியையும் அதின் பானபலிகளையு
மேயன்றிப் பாவநிவாரணபலியாக ஒரு
வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்
டும்.
ஏழாம் நாளிலே ஏழு இளங்காளைகளையும் 32
இரண்டு ஆட்டுக்கடாக்களையும் ஒரு வய
தான பழுதற்ற பதினைந்து ஆட்டுக்குட்டி
களையும் பலியிடவேண்டும். காளைகள், ஆட் 33
டுக்கடாக்கள், ஆட்டுக்குட்டிகள் ஆகிய
இவற்றின் இலக்கத்தின்படியே விதிக்கப்
பட்ட அவைகளின் போஜனபலியையும்
அவைகளின் பானபலிகளையும் படைக்க
வேண்டும். நித்திய தகனபலியையும் அதின் 34
போஜனபலியையும் அதின் பானபலியையு
மேயன்றிப் பாவநிவாரணபலியாக ஒரு

வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும்.

35 எட்டாம் நாள் உங்களுக்கு விசேஷித்த உற்சவநாள்; அதில் சாதாரண வேலை எதும் செய்யக்கூடாது. அந்த நாளில் நீங்கள் 36 யெகோவாவுக்குச் சுகந்த நிவேதனமாக ஒரு காளையையும் ஒரு ஆட்டுக்கடாவையும் ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளை 37 யும் தகனபலியிடவேண்டும். காளை, ஆட்டுக்கடா, ஆட்டுக்குட்டிகள் ஆகிய இவற்றின் இலக்கத்தின்படியே விதிக்கப்பட்ட அவைகளின் போஜனபலியையும் அவைகளின் 38 பானபலிகளையும் படைக்கவேண்டும். நித்திய தகனப்பலியையும் அதின் போஜனபலியையும் அதின் பானபலியையுமேயன்றிப் பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும்.

39 உங்கள் பொருத்தனைகளையும் உங்கள் மனப்பூர்வ பலிகளையும் உங்கள் தகனபலிகளையும் உங்கள் போஜனபலிகளையும் உங்கள் பானபலிகளையும் உங்கள் சமாதான பலிகளையுமேயன்றி இவைகளையும் நீங்கள் உங்கள் உற்சவங்களிலே யெகோவாவுக்குச் செலுத்தவேண்டும் என்று சொல் என்றார்.

40 யெகோவா மோசேக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவன் இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னான்.

**30** மோசே இஸ்ரவேல் புத்திரரின் கோத்திரத் தலைவரிடம்: யெகோவா கட்டளையிட்டது இதுவே, ஒருவன் ஒன்றைச்செய்வதாக 2 யெகோவாவுக்குப் பொருத்தனைபண்ணினாலும் ஒன்றை விலக்குவதாகத் தன்னை ஆணை பந்தனைக் குட்படுத்திக்கொண்டாலும் அவன் சொல் தவறாமல் தன் வாக்கினாலே சொன்னபடியெல்லாம் செய்யவேண்டும்.

3 தன் தகப்பன் வீட்டிலிருக்கிற ஒரு கன்னிகை யெகோவாவுக்குப் பொருத்தனைபண்ணி ஒரு காரியத்தைச் செய்யும்படி தன்னை பந்தனைக்குட்படுத்திக் கொள்ளும்போது, 4 அவள் பொருத்தனையையும் அவள் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்ட பந்தனையையும் அவள் தகப்பன் கேட்டும் அவனுக்கு ஒன்றும் சொல்லாதிருப்பானாலும் அவள் செய்த எல்லாப் பொருத்தனைகளும் நிலைக்கும். அவள் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்ட எந்த பந்தனையும் நிலைக்கும்.

5 அவள் பொருத்தனைகள் அனைத்தையும் அவள் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்ட பந்தனையையும் அவள் தகப்பன் கேட்கிற நாளில் அவன், வேண்டாம் என்று தடுத்தால் அது நிலையாது; அவள் தகப்பன் வேண்டாம் என்று தடுத்தபடியால் யெகோவா அதை அவளுக்கு மன்னிப்பார். 6 அவள் செய்த பொருத்தனைக்கும், யோசனையின்றிப் பேசித் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்ட பந்தனைக்கும் அவள் உட்பட்டிருப்பதை, அவள் விவாகத்தின்பின் | அவள் புருஷன் கேள்விப்பட்டும் அதைக் 7 கேள்விப்படுகிற நாளில் அவளுக்கு ஒன்றும் சொல்லாதிருந்தால் அவள் பொருத்தனைகள் நிலைக்கும், அவள் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்ட பந்தனையும் நிலைக்கும். அவள் புருஷன் அதைக் கேள்விப்படும் 8 நாளில் வேண்டாம் என்று தடுத்தால் அவள் உட்பட்டிருக்கிற பொருத்தனையையும் அவள் யோசனையின்றிப் பேசித் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்ட பந்தனையையும் அவமாய்ப்போகச்செய்வான்; அப்பொழுது யெகோவா அதை அவளுக்கு மன்னிப்பார். ஒரு விதவையாவது தள்ளப்பட் 9 டுப்போன ஒரு ஸ்திரீயாவது செய்த பொருத்தனையும் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்ட எந்த பந்தனையும் அவள்பேரில் நிலைக்கும். அவள் தன் புருஷன் வீட்டில் ஒரு 10 பொருத்தனைபண்ணினாலும் ஆணையிட்டுத் தன்னை ஒரு பந்தனைக்குக் கட்டுப்படுத்திக் கொண்டாலும் | அவள் புருஷன் அதைக் 11 கேள்விப்படும்போது அதை வேண்டாமென்று தடுக்காமல் மவுனமாயிருந்தால் அவள் பொருத்தனைகள் அனைத்தும் நிலைக்கும்; தன்னைக்கட்டுப்படுத்திக்கொண்ட எந்த பந்தனையும் நிலைக்கும். அவள் புருஷன் 12 அவைகளைக்கேட்ட நாளில் அவைகளை அவமாய்ப் போகச்செய்தால், அவள் வாய்விட்டுச் சொன்னதெல்லாம், பொருத்தனைகளும் தன்னைக்கட்டுப்படுத்திக்கொண்ட பந்தனையும், நிலையாது. அவள் புருஷன் அவைகளை அவமாக்கினபடியினால் யெகோவா அதை அவளுக்கு மன்னிப்பார். எந்தப் பொருத்தனையையும் தன்னை ஒடுக்கும்படி 13 ஆணையிட்ட பந்தனையையும் நிலைக்கச் செய்கிறவனும் அவமாய்ப்போகச் செய்கிறவனும் அவள் புருஷனே. அவள் 14 புருஷன் ஒருநாளும் அவளுக்கு ஒன்றும் சொல்லாதிருப்பானேயானால் அவன் எல்லாப் பொருத்தனைகளையும் அவள் பேரிலிருக்கிற அவளுடைய எல்லா பந்தனைகளையும் நிலைக்கச் செய்கிறான். அவன் அதைக் கேட்ட நாளிலே அவளுக்கு ஒன்றும் சொல்லாதிருந்தபடியினால் அவற்றை நிலைக்கச்செய்கிறான். அவன் அவைகளைக் 15 கேட்டும் பசாதிருந்து பின்பு அவைகள் அவமாய்ப் போகச் செய்தால் அவன் அக்கிரமத்தை அவன் சுமப்பான் என்று சொன்னார்.

16 புருஷனையும் ஸ்திரீயையும் தகப்பனையும் தகப்பன் வீட்டிலே கன்னிகையாய் இருக்கிற குமாரத்தியையும் குறித்து யெகோவா மோசேக்குக் கட்டளையிட்ட நியமங்கள் இவைகளே.

**31** 2 யெகோவா மோசேயினிடம்: | இஸ்ரவேல் புத்திரர் நிமித்தம் மிதியானியரிடம் பழிவாங்கவேண்டும்; அதன்பின்பு உன் ஜனத்தாரோடு சேர்க்கப்படுவாய் என்றார். அப்பொழுது மோசே ஜனங்களிடம்: உங்களில் வேண்டியவர்களை யுத்தசன்னத்தராக்குங்கள்; அவர்கள் மிதியானுக்கு விரோதமாய்ச் செல்லவேண்டும்; யெகோவா மிதியானியரிடம் பழிவாங்கப்போகிறார். இஸ்ரவேலின் சகல கோத்திரங்களிலும் கோத்திரத்துக்கு ஆயிரம்பேரை யுத்தத்திற்கு அனுப்பவேண்டும் என்றான். அப்படியே பலபல ஆயிரவர்களாயிருந்த இஸ்ரவேலரில் கோத்திரத்திற்கு ஆயிரம்பேராகப் பன்னீராயிரம்பேர் யுத்தசன்னத்தராய் நிறுத்தப்பட்டார்கள். மோசே அவர்களையும் ஆசாரியனாகிய எலெயாசாரின் குமாரன் பினெகாசையும் யுத்தத்திற்கு அனுப்புகையில், அவன் கையிலே பரிசுத்த தட்டுமுட்டுகளையும் தொனிக்கும் பூரிகைகளையும் கொடுத்து அனுப்பினான். யெகோவா மோசேக்குக் கட்டளையிட்டபடியே அவர்கள் மிதியானியருடன் போர் செய்து சகல ஆண்களையும் கொன்றுபோட்டார்கள். அவர்களைக் கொன்றுபோட்டதுமன்றி, மிதியானியரின் ஐந்து ராஜாக்களாகிய ஏவி, ரேக்கேம், சூர், கூர், ரேபா என்பவர்களையும் கொன்றுபோட்டார்கள். பெயோரின் குமாரனாகிய பிலெயாமையும் கொன்றுபோட்டார்கள். அன்றியும் இஸ்ரவேல் புத்திரர் மிதியானியரின் ஸ்திரீகளையும் குழந்தைகளையும் சிறைபிடித்து அவர்கள் ஆடுமாடுகள் யாவையும் சகல பொருட்களையும் கொள்ளையிட்டு | அவர்கள் குடியிருந்த சகல ஊர்களையும் அவர்கள் பாளயங்கள் அனைத்தையும் அக்கினியால் சுட்டெரித்துத் | தாங்கள் கொள்ளையிட்ட பொருளையும் தாங்கள் பிடித்த ஆட்கள் மிருகங்கள் அனைத்தையும் சேர்த்துச் | சிறைபிடித்தவர்களையும் தாங்கள் பிடித்தவைகளையும் கொள்ளையிட்டவைகளையும் எரிகோவுக்கு எதிரே யோர்தானுக்கு அக்கரையில் மோவாபின் சமவெளிகளிலே பாளயத்திலிருந்த மோசேயினிடத்துக்கும் ஆசாரியனாகிய எலெயாசாரினிடத்துக்கும் இஸ்ரவேல் புத்திரராகிய சபையாரிடத்துக்கும் கொண்டுவந்தார்கள்.

13 மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் சபையின் பிரபுக்கள் எல்லாரும் அவர்களைச் சந்திக்கப் பாளயத்திற்கு வெளியே எதிர்கொண்டு வந்தார்கள். அப்பொழுது மோசே யுத்தத்திலிருந்து வந்த ஆயிரவருக்குத் தலைவரும் நூற்றுவருக்குத் தலைவருமாகிய சேனாபதிகள்மேல் கடுங்கோபங்கொண்டு | அவர்களிடம் பெண்கள் எல்லாரையும் உயிரோடே விட்டுவிட்டீர்களா? பெயோரின் சங்கதியிலே பிலெயாமின் ஆலோசனையினால் இஸ்ரவேல் புத்திரர் யெகோவாவுக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணக் காரணமாயிருந்தவர்கள் இவர்களல்லவோ; அதினால் யெகோவாவின் சபையில் வாதையும் நேரிட்டதே. ஆகையால் குழந்தைகளில் எல்லா ஆண்பிள்ளைகளையும் புருஷசம்போகத்தை அறிந்த எல்லா ஸ்திரீகளையும் கொன்றுபோடுங்கள். ஸ்திரீகளில் புருஷசம்போகத்தை அறியாத எல்லாப் பெண் குழந்தைகளையும் உங்களுக்காக உயிரோடே வையுங்கள். பின்பு நீங்கள் ஏழு நாள் பாளயத்திற்கு வெளியே தங்கியிருங்கள்; நரஜீவனைக் கொன்றவர்களும் வெட்டுண்டவர்களைத் தொட்டவர்களுமாகிய நீங்கள் யாவரும் மூன்றும் நாளிலும் ஏழாம்நாளிலும் உங்களையும் உங்களால் சிறைபிடிக்கப்பட்டவர்களையும் சுத்திகரியுங்கள். அத்தப்படியே எல்லா வஸ்திரங்களையும் தோலால் செய்த கருவிகளையும் வெள்ளாட்டு மயிரினால் செய்தவைகளையும் மரச்சாமான்களையும் சுத்திகரிக்கவேண்டும் என்றான். ஆசாரியனாகிய எலெயாசாரும் யுத்தத்திற்குப் போய்வந்த படைவீரரைப் பார்த்து: யெகோவா மோசேக்குக் கட்டளையிட்ட பிரமாண நியமம் இதுவே, அக்கினிக்கு நிற்கத்தக்கவைகளாகிய பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, வெள்ளீயம், காரீயம் இவைகளெல்லாம் அக்கினியிலே போட்டெடுங்கள்; அப்பொழுது சுத்தமாகும், எனினும் தீட்டுக்கழிக்கும் தண்ணீராலும் அவைகளைச் சுத்திகரிக்கவேண்டும்; அக்கினிக்கு நிற்காதவைகளையெல்லாம் தண்ணீரிலே சுத்தம்பண்ணவேண்டும். ஏழாம் நாளில் உங்கள் வஸ்திரங்களைத் துவைக்கவேண்டும்; அப்பொழுது உங்கள் தீட்டு நீங்கும்; பின்பு நீங்கள் பாளயத்திற்குள் வரலாம் என்று சொன்னான்.

26 யெகோவா மோசேயினிடம்: பிடித்து வந்த மனிதரையும் மிருகங்களையும் நீயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் சபையின் குடும்பத்தலைவரும் தொகை பார்த்துப் | 27 பிடித்து வந்தவைகளை இரண்டாகப் பங்கிட்டு யுத்தத்திற்குப்போன போர்வீரருக்கும் சபையினத்திற்கும் கொடுங்கள். 28 மேலும்

யுத்தத்திற்குப்போன போர்வீரரிடம் யெகோவாவுக்காக மனிதரிலும் மாடுகளிலும் கழுதைகளிலும் ஆடுகளிலும் ஐந்நூற்றிற்கு ஒன்றுவீதம் பகுதி வாங்கவேண்
29 டும். இவற்றை யெகோவாவுக்கு உயர்த்திப்படைக்கும் காணிக்கையாக அவர்கள் பங்கில் எடுத்து ஆசாரியனுகிய எலெயாசா
30 ரிடம் கொடுக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரரின் பங்கிலோ மனிதரிலும், மாடுகள் கழுதைகள் ஆடுகளாகிய சகலவித மிருகங்களிலும், ஐம்பதிற்கு ஒன்றுகப் பிரித்தெடுத்து அவைகளை யெகோவாவின் வாசஸ்தலத்தைப் பார்த்துவருகிற லேவியருக்குக் கொ
31 டுக்கவேண்டும் என்றார். யெகோவா மோசேக்குக் கட்டளையிட்டபடியே மோசேயும் ஆசாரியனுகிய எலெயாசாரும் செய்தார்கள்.

32 போர்வீரர் கொள்ளையிட்ட பொருளில் மீதியானவை ஆறுலட்சத்து எழுபத்தையா
33 யிரம் ஆடுகளும் | எழுபத்தீராயிரம் மாடு
34 களும் | அறுபத்தோராயிரம் கழுதைகளு
35 மாம். புருஷசம்போகத்தை அறியாத ஸ்திரீகளின் மொத்தத்தொகை முப்பத்தீராயிரம்.
36 யுத்தத்திற்குப் போனவர்களுக்குக் கிடைத்த பாதிப்பங்கின் தொகையாவது: ஆடுகள் மூன்றுலட்சத்து முப்பத்தேழாயிரத்து ஐந்
37 நூறு. இந்த ஆடுகளிலே யெகோவாவுக்குப் பகுதியாக வந்தது அறுநூற்று எழுபத்
38 தைந்து. மாடுகள் முப்பத்தாருயிரம்; அவைகளில் யெகோவாவுக்குப் பகுதியாக வந்தது
39 எழுபத்திரண்டு. கழுதைகள் முப்பதினுயிரத்து ஐந்நூறு; அவைகளில் யெகோவாவுக்குப் பகுதியாக வந்தது அறுபத்தொன்று.
40 நரஜீவன்கள் பதினுருயிரம்பேர்; அவர்களில் யெகோவாவுக்குப் பகுதியாக வந்தவர்கள்
41 முப்பத்திரண்டு பேர். யெகோவாவுக்கு உயர்த்திப்படைக்கும் அந்தப் பகுதியை யெகோவா தனக்குக் கட்டளையிட்டபடியே மோசே ஆசாரியனுகிய எலெயாசாரிடம்
42 கொடுத்தான். போருக்குப் போனவர்களின் பங்குபோக மற்ற இஸ்ரவேலருக்கு வந்த
43 பாதிப்பங்காவது: ஆடுகள் மூன்றுலட்சத்து
44 முப்பத்தேழாயிரத்து ஐந்நூறு; | மாடுகள்
45 முப்பத்தாருயிரம்; | கழுதைகள் முப்பதினுயிரத்து ஐந்நூறு; | நரஜீவன்கள் பதினுருயிரம்
46 பேர்; | இஸ்ரவேல் புத்திரரின் பாதிப்பங்காகிய இந்த நரஜீவன்களிலும் மிருகங்களிலும் மோசே ஐம்பதுக்கு ஒன்றுகப் பிரித்தெடுத்து அவைகளை யெகோவா தனக்குக் கட்டளையிட்டபடியே யெகோவாவின் வாசஸ்தலத்தைப் பார்த்துக்கொள்ளுகிற லேவியருக்குக் கொடுத்தான். பின்பு ஆயிரவருக்குத் தலைவரும் நூற்றுவருக்குத் தலைவருமான சேனைபதிகள் மோசேயினிடம் வந்து:
47
48
49 உமது ஊழியராகிய நாங்கள் எங்கள் கையின் கீழிருக்கிற போர்வீரரைத் தொகை பார்த்தோம்; அவர்களுக்குள்ளே ஒரு
50 ஆளும் குறையவில்லை. ஆகவே எங்களில் ஒவ்வொருவருக்கும் கிடைத்த பொற்பணிகளாகிய காப்புகளையும் அஞ்சுகடகங்களையும் மோதிரங்களையும் காதணிகளையும் ஆரங்களையும் யெகோவாவின் சந்நிதியில் எங்களுக்காகப் பிராயச்சித்தம் செய்வதற்கென்று அவருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தோம் என்றார்கள். அப்பொழுது மோசே
51 யும் ஆசாரியனுகிய எலெயாசாரும் பலவித மான அந்தப் பொன்னுபரணங்களை அவர்களிடம் வாங்கிக்கொண்டார்கள். இப்படி
52 யாக ஆயிரவருக்கும் நூற்றுவருக்கும் தலைவரானவர்கள் உயர்த்திப் படைக்கும்படி யெகோவாவுக்குக் கொண்டுவந்த பொன்னின் நிறை மொத்தம் பதினுருயிரத்து எழுநூற்று ஐம்பதுசேக்கல். போர்வீரரில் ஒவ்
53 வொருவரும் தங்கள் தங்களுக்காகக் கொள்ளையிட்டிருந்தார்கள். அந்தப்
54 பொன்னை மோசேயும் ஆசாரியனுகிய எலெயாசாரும் ஆயிரவருக்கும் நூற்றுவருக்கும் தலைவரானவர்களிடம் வாங்கி இஸ்ரவேல் புத்திரர் நினைவுகூருவதற்கென்று அதைத் தரிசனக்கூடாரத்தில் யெகோவாவின் சந்நிதியிலே கொண்டுவந்து வைத்தார்கள்.

**32** ரூபன் புத்திரருக்கும் காத் புத்திரருக்கும் ஆடுமாடுகள் மிகவும் அதிகம்; அவர்கள் யாசேர் தேசத்தையும் கிலெயாத் தேசத்தையும் பார்த்தபோது, அது ஆடுமாடுகளுக்குத் தகுந்த இடமென்று கண்டார்கள். காணவே 2
காத் புத்திரரும் ரூபன் புத்திரரும் வந்து, மோசே ஆசாரியனுகிய எலெயாசார் சபையின் பிரபுக்கள் ஆகிய இவர்களோடு பேசி:
யெகோவா இஸ்ரவேல் சபைக்கு முன்பாக 3
முறியடித்த அதரோத், தீபோன், யாசேர், நிம்ரா, எஸ்போன், எலெயாலே, செபாம், நெபோ, பெயோன் என்னும் பட்டணங்களைச் சேர்ந்த நாடானது ஆடுமாடுகளுக்குத் தகுந்த இடம். உமது அடியார் மந்தைக் 4
காரர் என்று சொல்லி, உமது கண்களில் 5
எங்களுக்குத் தயை கிடைத்ததானுல் இந்த நாட்டையே உமது அடியாருக்குக் காணியாட்சியாகக் கொடுத்துவிடும்; எங்களை யோர்தானுக்கப்புறம் போகப்பண்ணுதிரும் என்றார்கள். அதுகேட்டு மோசே காத் 6
புத்திரரிடமும் ரூபன் புத்திரரிடமும்: உங்கள் சகோதரர் யுத்தத்திற்குப் போகையில் நீங்கள் இங்கேயே இருந்துகொள்வீர்

7 களோ? யெகோவா இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்த தேசத்திற்கு அவர்கள் போகாதபடி நீங்கள் அவர்கள் இருதயத்தைத் தளர்ந்துபோகச் செய்வதென்ன?
8 அத்தகத் தேசத்தைப் பார்த்துவர நான் காதேஸ் பர்னேயாவிலிருந்து ஆட்களை அனுப்பினபோது உங்கள் பிதாக்களும்
9 இப்படியே செய்தார்கள். அவர்கள் எஸ்கோல் பள்ளத்தாக்குமட்டும்போய் அத்தேசத்தைப் பார்த்துவந்தார்கள்; வந்தபின் இஸ்ரவேல் புத்திரர் யெகோவா தங்களுக்குக் கொடுத்த தேசத்திற்குப் போகாதபடி அவர்கள் இருதயத்தைத் தளர்ந்துபோகப்
10 பண்ணினார்கள். ஆகவே யெகோவாவுக்கு அந்நாளிலே கோபமூண்டது; அவர் ஆணை
11 யிட்டு: எகிப்திலிருந்து வந்தவர்களில் இருபது வயதுள்ளவர்களும் அதற்கு மேற்பட்டவர்களும், நான் ஆணையிட்டு ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுத்த தேசத்தைக் காண்பதேயில்லை; அவர்கள் என்னைப் பூரணமாய்ப் பற்றிக்கொள்ள
12 வில்லை. கெனிசியனான எப்புன்னேயின் குமாரன் காலேபும் நூனின் குமாரன் யோசுவாவுமே அதைக் காண்பார்கள்; அவர்கள் என்னிடம் பூரணபற்றுடையவர்கள் என்று
13 சொன்னார். அப்படியே யெகோவா இஸ்ரவேலின்மேல் கோபமூண்டவராய், யெகோவாவின் பார்வையில் தீமையானதைச் செய்த அத்தச் சந்ததிமுழுதும் நிர்மூலமாகுமட்டும் அவர்களை வனாந்தரத்திலே நாற்பது வருஷம் அலைந்து திரியச் செய்
14 தார். இதோ, நீங்கள் உங்கள் பிதாக்களின் ஸ்தானத்திலே பாவப்பெருங்கூட்டமாய் எழும்பிவிட்டீர்கள்; இஸ்ரவேலர்மேலிருக்கும் யெகோவாவின் உக்கிரகோபத்தை இன்னும் அதிகரிக்கச் செய்கிறீர்கள்.
15 நீங்கள் அவரைவிட்டு விலகினால் அவர் இன்னும் இஸ்ரவேலரை வனாந்தரத்திலேயே தங்கச்செய்வார்; இப்படியாக இந்த ஜனமுழுதுக்கும் நீங்களே அழிவை வருவிப்பீர்கள் என்று சொன்னான்.
16 அதைக்கேட்கவே அவர்கள் அவனைக் கிட்டிவந்து: எங்கள் ஆடுமாடுகளுக்காகத் தொழுவங்களையும் எங்கள் பிள்ளைகளுக்காகப் பட்டணங்களையும் இங்கே கட்டு
17 வோம். நாங்களோ இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் ஸ்தானத்தில் கொண்டுபோய்ச் சேர்க்குமளவும் தாமதமின்றி யுத்தசன்னத்தராகி அவர்களுக்கு முன்செல்வோம்; எங்கள் பிள்ளைகளுக்கு இத்தேசத்துக் குடிகளால் ஆபத்து நேரிடாதபடி, அவர்கள் அரணான
18 பட்டணங்களிலே குடியிருப்பார்கள். இஸ்ரவேல் புத்திரர் யாவரும் தங்கள்தங்கள் சுதந்தரத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும் வரைக்கும் நாங்கள் எங்கள் வீடுகளுக்குத் திரும்புவதில்லை. எங்களுக்கு அவர்களோடு 19
யோர்தானுக்கு அக்கரையிலும் அதற்கு அப்பாலும் சுதந்தரம் வேண்டாம்; யோர்தானுக்கு இக்கரையிலேயே கிழக்கே எங்களுக்குச் சுதந்தரம் ஏற்பட்டுவிட்டது என்றார்கள்.

அப்பொழுது மோசே அவர்களிடம்: 20
நீங்கள் இப்போது சொன்னபடியே செய்து யெகோவாவின் சமுகத்தில் யுத்தசன்னத்தராகி | யெகோவா தமது சத்துருக்களைத் 21
தமக்கு முன்னிராதபடி துரத்திவிடுமளவும் உங்களில் ஆயுதமணிந்த ஒவ்வொருவனும் யெகோவாவின் சமுகத்தில் யோர்தானைக் கடந்துபோவதுண்டானால் | அத்தேசம் 22
யெகோவாவுக்கு முன்பாக வசப்படுத்தப்பட்டபின்பு நீங்கள் திரும்பி வந்துவிடலாம்; அப்பொழுது யெகோவாவின் முன்னிலையிலும் இஸ்ரவேலரின் முன்னிலையிலும் குற்றமற்றவர்களாயிருப்பீர்கள்; இந்தத் தேசமும் யெகோவாவின் முன்னிலையில் உங்களுக்குச் சுதந்தரமாகும். 23
நீங்கள் இப்படிச் செய்யாமற்போனால் யெகோவாவுக்கு விரோதமாகப் பாவஞ்செய்தவர்களாயிருப்பீர்கள்; அப்பொழுது உங்கள் பாவத்தை உணர்ந்துகொள்வீர்கள், அது உங்களைப்பற்றிப் பிடிக்கும். நீங்கள் போய் உங்கள் 24
பிள்ளைகளுக்காகப் பட்டணங்களையும் உங்கள் ஆடுமாடுகளுக்காகத் தொழுவங்களையும் கட்டுங்கள்; நீங்கள் சொன்னபடியே செய்துகொள்ளுங்கள் என்றான்.
அது கேட்கவே காத் புத்திரரும் ரூபன் புத்திரரும் மோசேயினிடம்: எங்கள் ஆண்டவன் கட்டளையிட்டபடியே உமது அடியாராகிய நாங்கள் செய்வோம்; எங்கள் 26
மனைவி மக்களும் எங்கள் ஆடுமாடு முதலான எங்களுடைய எல்லா மிருகங்களும் இங்கே கிலெயாத்தின் பட்டணங்களில் இருப்பார்கள். உமது அடியாரில், எங்கள் 27
ஆண்டவன் சொல்லுகிறபடியே, ஆயுதமணிந்த ஒவ்வொருவனும் யெகோவாவின் சமுகத்தில் யுத்தத்திற்குப் போவான் என்றார்கள். அப்பொழுது மோசே அவர்க 2
ளைப்பற்றி ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் நூனின் குமாரனாகிய யோசுவாவுக்கும் இஸ்ரவேல் புத்திரரின் கோத்திரத்தலைவருக்கும் கட்டளையிட்டு: காத் புத்திரரிலும் ரூபன் 29
புத்திரரிலும் ஆயுதமணிந்த ஒவ்வொருவனும் யெகோவாவின் சமுகத்தில் யுத்தத்திற்குப்போக உங்களோடு யோர்தானைக் கடந்து

வந்தால் அத்தேசம் உங்களுக்கு முன்பாக
வசப்படுத்தப்பட்டபின்பு அவர்களுக்குக்
கிலெயாத் தேசத்தைச் சுதந்தரமாகக் கொடு
30 த்துவிடுங்கள். யுத்தசன்னத்தர் உங்க
ளோடு கடந்து வராதிருந்தால், அவர்கள்
உங்கள் நடுவே கானான் தேசத்திலே சுதந்த
31 ரம் பெறவேண்டும் என்றான். காத் புத்திர
ரும் ரூபன் புத்திரரும் அதுகேட்டு: யெகோ
வாவின் சொற்படியே உமது அடியாராகிய
32 நாங்கள் செய்வோம். நாங்கள் யெகோவா
வின் சமுகத்தில் யுத்தசன்னத்தராய்க்
கானான் தேசத்திற்குப் போவோம், எங்கள்
சுதந்தரத்தின் காணியாட்சி யோர்தானின்
கீழ்கரையில் எங்களுக்கு உரியதாகும் என்
றார்கள்.

33 அப்பொழுது மோசே காத் புத்திரருக்கும்
ரூபன் புத்திரருக்கும் யோசேப்பின் குமார
னாகிய மனாசேயின் பாதிக்கோத்திரத்தாருக்
கும் எமோரியரின் ராஜாவாகிய சீகோனின்
ராஜ்யத்தையும் பாசானின் ராஜாவாகிய
ஓகின் ராஜ்யத்தையும், தேசங்கள் அவை
களிலுள்ள பட்டணங்கள், பட்டணங்க
ளின் சுற்றுப்புறங்கள், சுற்றிலுமிருந்த
ஊர்கள் ஆகிய இவற்றையெல்லாம் கொடுத்
34 தான். பின்பு காத் புத்திரர் தீபோன், அத
35 ரோத், அரோவேர், | அத்ரோத் சோபான்,
36 யாசேர், யொக்பெயா | பேத்நிம்ரா, பேத்தா
ரான் என்னும் அரணான பட்டணங்களை
யும் ஆட்டுத்தொழுவங்களையும் கட்டினார்
37 கள். ரூபன் புத்திரர் எஸ்போன், எலெ
38 யாலே, கிரியத்தாயிம் | பேர்கள் மாற்றப்
பட்ட நெபோ, பாகால் மெயோன் என்பவை
களையும் சிப்மாவையும் கட்டித் தாங்கள்
கட்டின பட்டணங்களுக்கு வேறே பேர்
39 களைக் கொடுத்தார்கள். மனாசேயின் குமார
னாகிய மாகீரின் புத்திரர் கிலெயாத்திற்குப்
போய் அதைப்பிடித்து அதிலிருந்த எமோரி
40 யரைத் துரத்திவிட்டார்கள். அப்பொழுது
மோசே கிலெயாத்தை மனாசேயின் குமார
னாகிய மாகீருக்குக் கொடுத்தான்; அவர்கள்
41 அதிலே குடியேறினார்கள். மனாசேயின்
குமாரனாகிய யாவீர் போய், அவர்கள் கிரா
மங்களைப்பிடித்து அவைகளுக்கு யாவீர்ப்
42 பட்டிகள் என்று பேரிட்டான். நோபாக்
போய்க் கெனாத்தையும் அதின் கிராமங்களை
யும் பிடித்து அதற்குத் தன் நாமத்தின்
படியே நோபாக் என்று பேரிட்டான்.

33 மோசே ஆரோன் என்பவர்களுடைய
கையின்கீழ் தங்கள்தங்கள் சேனைகளின்
படியே எகிப்துதேசத்திலிருந்து வந்த இஸ்ர
வேல் புத்திரர் பானையமிறங்கின இடங்க
2 ளின் விவரம்: அவர்கள் பிரயாணமாகும்

போது விட்டுப்போன இடங்களை யெகோ
வாவின் கட்டளைப்படியே மோசே எழுதி
வைத்தான். அவர்கள் விட்டுப்போன
இடங்களும் பானையமிறங்கின இடங்களும்
இவைகளே, முதல்மாதம் பதினைந்தாம்தேதி 3
அவர்கள் ரம்சேஸிலிருந்து பிரயாணமானார்
கள்; பஸ்காவுக்கு மறுநாளிலே, எகிப்தியர்
எல்லாரும் பார்க்க, இஸ்ரவேல் புத்திரர்
பராக்கிரமமான கையின் சகாயத்தினால்
புறப்பட்டார்கள். யெகோவா தங்களுக் 4
குள்ளே சங்கரித்த தலைச்சன் பிள்ளைகளை
யெல்லாம் எகிப்தியர் அடக்கம்பண்ணிக்
கொண்டிருக்கையில் அவர்கள் புறப்பட்
டார்கள்; எகிப்தியரின் தேவர்களையும்
யெகோவா நியாயந்தீர்த்தார். பின்பு இஸ்ர 5
வேல் புத்திரர் ரம்சேஸிலிருந்து பிரயாண
மாகிச் சுக்கோத்திலே பானையமிறங்கினார்
கள். சுக்கோத்திலிருந்து பிரயாணமாகி 6
வனாந்தரத்தின் எல்லையிலிருக்கிற ஏத்தா
மிலே பானையமிறங்கினார்கள். ஏத்தாமி 7
லிருந்து பிரயாணமாகிப் பாகால் செபோ
னுக்கு எதிரே இருக்கிற பிகாயிரோத்து
முகமாய்த் திரும்பி மிக்தோலுக்கு எதிராகப்
பானையமிறங்கினார்கள். காயிரோத்திலிருந்து 8
பிரயாணமாகிச் சமுத்திரத்தை நடுவே
கடந்து வனாந்தரத்திற்குப்போய், ஏத்தாம்
வனாந்தரத்திலே மூன்றுநாள் பிரயாணம்
பண்ணி மாராவிலே பானையமிறங்கினார்கள்.
மாராவிலிருந்து பிரயாணமாகி எலிமுக்கு 9
வந்தார்கள்; எலிமிலே பன்னிரண்டு நீரூற்
றுகளும் எழுபது பேரீச்சமரங்களுமிருக்
கின; அங்கே பானையமிறங்கினார்கள். எலிமி 10
லிருந்து பிரயாணமாகிச் செவ்வாத சமுத்திரத்
தின் அருகே பானையமிறங்கினார்கள். செவ்வாத 11
சமுத்திரத்திலிருந்து பிரயாணமாகிச் சீன்
வனாந்தரத்திலே பானையமிறங்கினார்கள். சீன் 12
வனாந்தரத்திலிருந்து பிரயாணமாகித் தொப்
காவிலே பானையமிறங்கினார்கள். தொப் 13
காவிலிருந்து பிரயாணமாகி ஆலூசிலே
பானையமிறங்கினார்கள். ஆலூசிலிருந்து 14
பிரயாணமாகி ரெவிதீமிலே பானையமிறங்கி
னார்கள்; அங்கே ஜனங்களுக்குக் குடிக்கத்
தண்ணீரில்லை. ரெவிதீமிலிருந்து பிரயாண 15
மாகிச் சீனாய் வனாந்தரத்தில் பானையமிறங்கி
னார்கள். சீனாய் வனாந்தரத்திலிருந்து பிர 16
யாணமாகிக் கிப்ரோத் அத்தாவிலே பானைய
மிறங்கினார்கள். கிப்ரோத் அத்தாவாவி 17
லிருந்து பிரயாணமாகி ஆஸெரோத்திலே
பானையமிறங்கினார்கள். ஆஸெரோத்திலிருந்து 18
பிரயாணமாகி ரித்மாவிலே பானையமிறங்கி
னார்கள். ரித்மாவிலிருந்து பிரயாணமாகி 19
ரிம்மோன் பேரேசிலே பானையமிறங்கினார்

20 கள். ரிம்மோன் பேரேசிலிருந்து பிரயாண
மாகி லிப்னாவிலே பாளயமிறங்கினார்கள்.
21 லிப்னாவிலிருந்து பிரயாணமாகி ரிசாவிலே
22 பாளயமிறங்கினார்கள். ரிசாவிலிருந்து பிர
யாணமாகிக் கேலத்தாவிலே பாளயமிறங்
23 கினார்கள். கேலத்தாவிலிருந்து பிரயாண
மாகிச் சாப்பேர் மலையிலே பாளயமிறங்
24 கினார்கள். சாப்பேர் மலையிலிருந்து பிர
யாணமாகிக் காராதாவிலே பாளயமிறங்கி
25 னார்கள். காராதாவிலிருந்து பிரயாணமாகி
மக்கேலோத்திலே பாளயமிறங்கினார்கள்.
26 மக்கேலோத்திலிருந்து பிரயாணமாகித்
27 தாகாத்திலே பாளயமிறங்கினார்கள். தாகாத்
திலிருந்து பிரயாணமாகித்தாராகிலே பாளய
28 மிறங்கினார்கள். தாராகிலிருந்து பிரயாண
மாகி மித்காவிலே பாளயமிறங்கினார்கள்.
29 மித்காவிலிருந்து பிரயாணமாகிக் கஸ்மோ
30 னாவிலே பாளயமிறங்கினார்கள். கஸ்மோ
னாவிலிருந்து பிரயாணமாகி மோசெரோத்
31 திலே பாளயமிறங்கினார்கள். மோசெரோத்
திலிருந்து பிரயாணமாகிப் பெனெயாக்கா
32 னிலே பாளயமிறங்கினார்கள். பெனெ
யாக்கானிலிருந்து பிரயாணமாகிக் கித்காத்
33 மலையிலே பாளயமிறங்கினார்கள். கித்காத்
மலையிலிருந்து பிரயாணமாகி யோத்பாத்தா
34 விலே பாளயமிறங்கினார்கள். யொத்பாத்
தாவிலிருந்து பிரயாணமாகி அப்ரோனாவிலே
35 பாளயமிறங்கினார்கள். அப்ரோனாவிலிருந்து
பிரயாணமாகி எசியோன் கேபேரிலே
36 பாளயமிறங்கினார்கள். எசியோன் கேபேரி
லிருந்து பிரயாணமாகிக் காதேசி என்னும்
சீன் வனாந்தரத்திலே பாளயமிறங்கினார்கள்.
37 காதேசிலிருந்து பிரயாணமாகி ஏதோம்
தேசத்தின் எல்லையிலிருக்கிற ஓர் என்னும்
38 மலையிலே பாளயமிறங்கினார்கள். ஆசாரிய
னாகிய ஆரோன் யெகோவாவின் கட்டளைப்
படியே ஓர் என்னும் அந்த மலையின்மேல் ஏறி
இஸ்ரவேல் புத்திரர் எகிப்துதேசத்திலிருந்து
புறப்பட்ட நாற்பதாம் வருஷம் ஐந்தாம்
மாதம் முதல் தேதி அங்கே மரணமடைந்
39 தான். ஆரோன் ஓர் என்னும் மலையிலே
மரணமடைந்தபோது அவனுக்கு நூற்றிரு
40 பத்து மூன்று வயது. அக்காட்களிலே
கானான் தேசத்தின் தென்திசையில் குடி
யிருந்த கானானியனாகிய ஆராத் என்னும்
ராஜா இஸ்ரவேல் புத்திரர் வருகிறதைக்
41 கேள்விப்பட்டான். ஓர் என்னும் மலையி
லிருந்து பிரயாணமாகிச் சல்மோனாவிலே
42 பாளயமிறங்கினார்கள். சல்மோனாவிலிருந்து
பிரயாணமாகிப் பூனோனிலே பாளயமிறங்
43 கினார்கள். பூனோனிலிருந்து பிரயாணமாகி
ஓபோத்திலே பாளயமிறங்கினார்கள்.
ஓபோத்திலிருந்து பிரயாணமாகி மோவா 44
பின் எல்லையிலுள்ள அபாரீமின் மண்
மேடுகளிலே பாளயமிறங்கினார்கள். அந்த 45
மண்மேடுகளிலிருந்து பிரயாணமாகித்
தீபோன்காத்திலே பாளயமிறங்கினார்கள்.
தீபோன்காத்திலிருந்து பிரயாணமாகி அல் 46
மோன் திப்லாதாயிமிலே பாளயமிறங்கி
னார்கள். அல்மோன் திப்லாதாயிமிலிருந்து 47
பிரயாணமாகி நெபோவுக்கு எதிரே அபாரீம்
மலைகளிலே பாளயமிறங்கினார்கள். அபா 48
ரீம் மலைகளிலிருந்து பிரயாணமாகி எரிகோ
வுக்கு எதிரே யோர்தானுக்கு அருகான
மோவாபின் சமவெளிகளிலே பாளயமிறங்
கினார்கள். யோர்தானுக்கு அருகான மோவா 49
பின் சமவெளிகளில் அவர்கள் பாளய
மிறங்கியிருந்த இடம் பேத்யெஷிமோத்துத்
தொடங்கி ஆபேல்சித்தீம்மட்டுமிருந்தது.

எரிகோவுக்கு எதிரே யோர்தானுக்கு 50
அருகான மோவாபின் சமவெளிகளிலே
யெகோவா மோசேயோடு பேசி: நீ இஸ்ர 51
வேல் புத்திரரிடம் இதைச்சொல், நீங்கள்
யோர்தானைக் கடந்து கானான்தேசத்தில்
போய்ச்சேரும்போது | அத்தேசத்துக் குடி 52
களையெல்லாம் உங்களுக்குமுன் துரத்திவிடுங்
கள்; அவர்களுடைய எல்லாச் சிலைகளையும்
அவர்களுடைய சகல வார்ப்புச்சொரூபங்
களையும் அழித்துவிடுங்கள். அவர்கள் பூஜை
மேடைகளையெல்லாம் நிர்மூலமாக்கிவிடுங்
கள். தேசத்தை உங்களுக்குச் சொந்தமாக் 53
கிக்கொண்டு அதிலே குடியிருங்கள்; அத்தத்
தேசத்தை உங்களுக்கே சொந்தமாகக்
கொடுத்தேன். சீட்டுப்போட்டு உங்கள் 54
குடும்பங்களுக்குத் தக்கபடியே சுதந்தரமாக்
கிக்கொள்ளுங்கள்; அதிகப்பேருள்ள குடும்
பங்களுக்கு அதிகச் சுதந்தரமும் கொஞ்சப்
பேருள்ள குடும்பங்களுக்குக் கொஞ்சச்
சுதந்தரமும் கொடுக்கவேண்டும்; அவரவர்க்
குச் சீட்டுவிழும் இடமே அவரவர்க்கு
உரியதாகும்; உங்கள் பிதாக்களுடைய
கோத்திரங்களின்படியே சுதந்தரம் பெற்றுக்
கொள்ளவேண்டும். நீங்கள் தேசத்தின் குடி 55
களை உங்களுக்குமுன்பாகத் துரத்திவிடா
திருப்பீர்களானால் அவர்களில் நீங்கள் மீதி
யாக விடுகிறவர்கள் உங்கள் கண்களிலே
முள்ளும் உங்கள் விலாக்களிலே கூருமா
யிருந்து நீங்கள் குடியிருக்கிற தேசத்திலே
உங்களை உபத்திரவப்படுத்துவார்கள். அன்றி 56
யும் நான் அவர்களுக்குச்செய்ய நினைத்
ததை உங்களுக்கே செய்ய நேரிடும் என்று
சொன்னார்.

யெகோவா மோசேயினிடம்: நீ இஸ்ர 34 2
வேல் புத்திரருக்குக் கட்டளையிட்டு இவர்

றைச் சொல்: நீங்கள் கானான் தேசத்திலே சேரும்போது உங்களுக்குச் சுதந்தரமாகக் கிடைக்கும் நாடு தன் முழு எல்லைக்கும்
3 உட்பட்ட கானான் தேசமே. உங்கள் தென்புறம் சீன் வனாந்தரம் தொடங்கி ஏதோம் தேசத்தின் ஓரமாகச் செல்லும்; கிழக்கே இருக்கிற உப்புக்கடலின் கடைசி தொடங்கி உங்கள் தென்எல்லையாகும்.
4 உங்கள் எல்லை அக்ரபீம் கணவாயைத் தெற்கே சுற்றிச் சீனை ஒட்டிச் சென்று காதேஸ்பர்னேயாவுக்குத் தெற்கே போகும்; அங்கிருந்து ஆத்சார் அதாருக்
5 குப்போய் அஸ்மோனை ஒட்டிச்செல்லும். அஸ்மோனிலிருந்து எகிப்தின் நீற்றாறு வரைக்கும் சுற்றிப்போய்க் கடலில்
6 முடியும். மேற்றிசையில் பெருங்கடலே உங்களுக்கு எல்லை; அதுவே உங்களுக்கு
7 மேற்புறத்து எல்லையாகும். உங்களுக்கு வடதிசை எல்லை பெருங்கடல் தொடங்கி ஓர் என்னும் மலையை நோக்கிச் சென்று |
8 அங்கிருந்து ஆமாத்திற்குப் போகிற வழி நிரியும் இடம் நோக்கிப்போய்ச் சேதாத்து
9 வரைபோகும், அங்கேயிருந்து அது சிப்ரோனுக்குப் போய்க் கத்சார் எனானிலே முடியும்; அதுவே உங்களுக்கு வடபுறத்து எல்
10 லையாகும். உங்களுக்குக் கீழ்த்திசை எல்லை கத்சார் எனானிலிருந்து சேப்பாமை
11 நோக்கிச்சென்று | சேப்பாமிலிருந்து எல்லையானது ஆயினுக்குக் கிழக்கிலுள்ள ரிப்லாவுக்குப்போய் அங்கிருந்து கின்னரேத் கடலின் கீழ்கரையிலுள்ள மலைச்சாரிவைத்
12 தொட்டுப் | பின் யோர்தான்வரை சென்று உப்புக்கடலில் முடியும். உங்களுக்குரிய தேசத்தின் சுற்றெல்லைகள் இவைகளே
13 என்று சொன்னார். அப்பொழுது மோசே இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிட்டு: நீங்கள் சீட்டுப்போட்டு இந்தத் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்; ஒன்பதரைக் கோத்திரங்களுக்குக் கொடுக்கும்படி யெகோவா கட்டளையிட்ட தேசம் இதுவே.
14 ரூபன் புத்திரர் தங்கள் குடும்பங்களின்படியும், காத் புத்திரர் தங்கள் குடும்பங்களின் படியும் தங்கள் தங்கள் சுதந்தரத்தைப் பெற்றுக்கொண்டார்கள்; மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரும் தங்கள் சுதந்தரத்தைப்
15 பெற்றுக்கொண்டார்கள், இந்த இரண்டரைக் கோத்திரத்தாரும் சூரியன் உதிக்கும் கீழ்திசையில் எரிகோவுக்கு எதிரே யோர்தானுக்கு அக்கரையில் தங்கள் சுதந்தரத்தைப் பெற்றுக்கொண்டார்கள் என்றுசொன்னார்.
16, 17 பின்பு யெகோவா மோசேயினிடம்: தேசத்தை உங்களுக்குப் பங்கிட்டுக்கொடுக்கும் மனிதரின் நாமங்களாவன: ஆசாரிய னாகிய எலெயாசாரும் நூனின்குமாரனாகிய யோசுவாவுமே. அன்றியும் தேசத்தைப் 18
பங்கிடும்படி கோத்திரத்திற்கு ஒரு தலைவனைத் தெரிந்தெடுங்கள். அந்த மனிதரின் 19
நாமங்கள் இவைகளே: யூதா கோத்திரத்திற்கு எப்புன்னேயின் குமாரன் காலேபு, | சிமியோன் புத்திரரின் கோத்திரத்திற்கு 20
அம்மியூதின் குமாரன் சாமுவேல், | பென்யமீன் கோத்திரத்திற்குக் கிஸ்லோனின் 21
குமாரன் எலீதாது, | தாண் புத்திரரின் 22
கோத்திரத்திற்கு யொக்கிலியின் குமாரன் புக்கி தலைவன்; | யோசேப்பின் புத்திரரில் 23
மனாசே கோத்திரத்திற்கு எபோதின் குமாரன் கன்னியேல் தலைவன்; | எப்பிராயீம் கோத்திரத்திற்குச் சிப்தானின் குமாரன் கேமுவேல் தலைவன்; | செபுலோன் புத்திரரின் 24
கோத்திரத்திற்குப் பர்னாகின் குமாரன் எலிசாபான் தலைவன்; | இசக்கார் புத்திரரின் 25
கோத்திரத்திற்கு ஆசானின் குமாரன் பல்தியேல் தலைவன்; | ஆசேர் புத்திரரின் கோத்திரத்திற்குச் செலோமியின் குமாரன் அகியூத் தலைவன்; | நப்தலி புத்திரரின் கோத்திரத்திற்கு அம்மியூதின் குமாரன் பெதாக்கேல் தலைவன் என்று சொன்னார். கானான் 29
தேசத்திலே இஸ்ரவேல் புத்திரருக்குச் சுதந்தரங்களைப் பங்கிட்டுக்கொடுப்பதற்கு யெகோவா நியமித்தவர்கள் இவர்களே.

எரிகோவுக்கு எதிரே யோர்தானுக்கு **35**
அருகான மோவாபின் சமவெளிகளிலே யெகோவா மோசேயோடு பேசி: இஸ்ர 2
வேல் புத்திரர் தங்கள் காணியாட்சியாகிய சுதந்தரத்திலே லேவியர் குடியிருக்கும்படி அவர்களுக்கு ஊர்களைக்கொடுக்கவேண்டும் என்று இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிடு; அந்த ஊர்களைச் சூழ்ந்திருக்கிற வெளி நிலங்களையும் நீங்கள் லேவியருக்குக் கொடுக்கவேண்டும். அந்த ஊர்களில் 3
அவர்கள் குடியிருப்பார்கள்; அவைகளைச் சூழ்ந்த வெளிநிலங்கள் அவர்களுடைய ஆடுமாடுகளுக்கும் அவர்களுடைய மந்தைகளுக்கும் அவர்களுடைய சகல மிருகங்களுக்கும் விடப்படும். நீங்கள் லேவி 4
யருக்குக் கொடுக்கும் ஊர்களைச் சூழ்ந்த வெளிநிலங்கள் ஊரின் மதில் தொடங்கி வெளியிலே சுற்றிலும் ஆயிரமுழ தூரத்துக்கு எட்டவேண்டும். ஊர் மத்தியில் 5
இருக்க, ஊரின் வெளிப்புறந்தொடங்கி கிழக்கே இரண்டாயிரமுழமும் தெற்கே இரண்டாயிரமுழமும் மேற்கே இரண்டாயிரமுழமும் வடக்கே இரண்டாயிரமுழமும் அளந்துவிடவேண்டும். இது அவர் 6

களுக்கு ஊர் வெளிநிலங்களாகும். நீங்
கள் லேவியருக்குக் கொடுக்கும் ஊர்களில்
ஆறு ஊர்கள் அடைக்கலபுரங்கள் என
இருக்கவேண்டும்; கொலைசெய்தவன் அங்
கே தப்பி ஒடிப்போவதற்கென்று அவை
கொடுக்கப்படவேண்டும்; இவைகளேயே
யன்றி வேறு நாற்பத்திரண்டு ஊர்களையும்
7 அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். நீங்
கள் லேவியருக்குக் கொடுக்கவேண்டிய
வைகளெல்லாம் நாற்பத்தெட்டு ஊர்களும்
அவற்றைச் சூழ்ந்த வெளிநிலங்களுமே.
8 நீங்கள் இஸ்ரவேல் புத்திரரின் காணியாட்சி
யிலிருந்து அந்த ஊர்களைப் பிரித்துக்கொ
டுக்கும்போது அதிகமுள்ளவர்களிடத்திலி
ருந்து அதிகமும் கொஞ்சமுள்ளவர்களி
டத்திலிருந்து கொஞ்சமும் பிரித்துக்கொடுக்
கவேண்டும்; அவரவர் சுதந்தரித்துக்
கொண்ட சுதந்தரத்தின்படியே தங்கள் ஊர்
களில் லேவியருக்குக் கொடுக்கவேண்டும்
என்று சொன்னார்.

9 பின்னும் யெகோவா மோசேயினிடம்:
10 நீ இஸ்ரவேல் புத்திரரிடம் இதைச்சொல்,
நீங்கள் யோர்தானைக்கடந்து கானான் தேசத்
11 தினுட் பிரவேசிக்கும்போது | அடைக்கல
புரங்களாகச் சில ஊர்களை ஏற்படுத்திக்
கொள்ளவேண்டும்; வேண்டுமென்று செய்
யாமல் கைப்பிசகாய் ஒருவனைக் கொன்று
போட்டவன் அங்கே ஓடிப்போயிருக்க
12 லாம். கொலைசெய்தவன் விசாரிக்கப்படும்
படி சபைக்குக் கொண்டுவரப்படுமுன்
சாகாமல், பழிவாங்கவேண்டியவன் கைக்
குத் தப்பிப்போய் இருக்கும்படி அவைகள்
உங்களுக்கு அடைக்கலபுரங்களாகவேண்
13 டும். நீங்கள் கொடுக்கும் ஊர்களில் ஆறு
ஊர்கள் உங்களுக்கு அடைக்கலபுரங்களா
14 யிருக்கவேண்டும். யோர்தானுக்குக் கீழ்
புறத்தில் மூன்று ஊர்களையும் கானான்
தேசத்தில் மூன்று ஊர்களையும் கொடுக்க
வேண்டும்; அவைகள் அடைக்கலபுரங்க
15 ளாம். கைப்பிசகாய் ஒருவனைக் கொன்ற
வன் எவனோ அவன் அங்கே ஓடிப்போ
யிருக்கும்படிக்கு அந்த ஆறு ஊர்களும்
இஸ்ரவேல் புத்திரருக்கும் அந்நியனுக்கும்
உங்கள் நடுவே தங்குகிறவனுக்கும் அடைக்
கலத்திற்கென்றிருக்கும்.

16 ஒருவன் இருப்பு ஆயுதத்தினால் மற்
றொருவனை அடிக்க அவன் செத்துப்போ
னால் அடித்தவன் கொலைபாதகனே; கொலை
17 பாதகன் கொல்லப்படவேவேண்டும். ஆனைக்
கொல்லத்தக்க ஒரு பெருங் கல்லை ஒருவன்
எடுத்து மற்றொருவனை அடிக்க அவன்
செத்துப்போனால் அடித்தவன் கொலைபாதக
னே; கொலைபாதகன் கொல்லப்படவேவே
ண்டும். ஆனைக்கொல்லத்தக்க மர ஆயுதம் 18
ஒன்றை ஒருவன் கையிலெடுத்து மற்றொரு
வனை அடிக்க அவன் செத்துப்போனால்
அடித்தவன் கொலைபாதகனே; கொலைபாத
கன் கொல்லப்படவேவேண்டும். பழி வாங்க 19
வேண்டியவனே கொலைபாதகனைக் கொல்ல
வேண்டும்; அவனைக் கண்டமாத்திரமே அவ
னைக் கொன்றுபோடுவான். ஒருவன் பகை 20
யினால் ஒருவனை விழத்தள்ளியோ பதுங்கி
யிருந்து அவன்மேல் எதையாகிலும் எறிந்
தோ, அவனைப் பகைத்துத் தன் கையினால் 21
அடித்தோ அவன் சாகும்படி செய்தால்
அடித்தவன் கொல்லப்படவேவேண்டும்; அ
வன் கொலைபாதகனே; பழிவாங்கவேண்டிய
வன் கொலைபாதகனைக் கண்டமாத்திரமே
கொன்றுபோடுவான்.

பகையில்லாமலே ஒருவன் மற்றவனைத் 22
தற்செயலாய் விழத்தள்ளியோ, பதுங்கியிரா
மல் ஏதேனும் ஒரு ஆயுதத்தை அவன்
மேல் எறிந்தோ | ஆனைக்கொல்லத்தக்க ஒரு 23
கல்லை ஆள் இருப்பதறியாமல் அவன்மேல்
எறிந்தோ அவன் சாகும்படிசெய்தால் |
அப்படிச் செய்தவன் பகைகாரனுமல்ல,
தீமைசெய்ய நினைத்தவனுமல்ல—கொலை 24
செய்தவனையும் பழி வாங்கவேண்டியவனை
யும் சபையார் இந்த விதிப்படியே விசாரித்
துச் | சாகும்படி செய்தவனைப் பழிவாங்க 25
வேண்டியவன் கைக்குத்தப்புவித்து, அவன்
ஒடிப்போயிருந்த அடைக்கலபுரத்திற்கே
அவனைத் திரும்பவும் போகச் செய்யவேண்
டும். பரிசுத்த தைலத்தினால் அபிஷேகம்
பெற்ற பிரதான ஆசாரியன் மரணமடையு
மட்டும் அவன் அதிலேயே இருக்கவேண்
டும்; ஆனாலும் கொலைசெய்தவன் தான் ஓடிப் 26
போயிருக்கிற அடைக்கலபுரத்தின் எல்லைக்
கு வெளியே வந்திருக்கும்போது, | பழிவாங் 27
குகிறவன் கொலைசெய்தவனை அடைக்கல
புரத்தின் எல்லைக்கு வெளியே கண்டுபிடித்
துக் கொன்றுபோட்டால், அவன்மேல்
இரத்தப்பழியில்லை. கொலைசெய்தவன் பிர 28
தான ஆசாரியன் மரணமடையுமட்டும்
அடைக்கலபுரத்திலிருக்கவேண்டும்; பிர
தான ஆசாரியனுடைய மரணத்தின்பின்
தன் சுதந்தரமான காணியாட்சிக்குத் திரும்
பிப்போகலாம். இவைகள் உங்கள் வாசஸ் 29
தலங்களிலெங்கும் உங்கள் தலைமுறைதோ
றும் உங்களுக்குப் பிரமாண நியமமாம்.

எவனாகிலும், ஒரு மனிதனைக் கொன்று 30
போட்டால், அப்பொழுது சாட்சிகளுடை
ய வாக்குமூலத்தின்படியே அந்தக் கொலை
பாதகனைக் கொன்றுபோடவேண்டும்; ஒரே

சாட்சியைக்கொண்டுமாத்திரம் ஒரு மனி
தன் சாகும்படி தீர்ப்புச்செய்யலாகாது.
31 சாவுக்கேதுவான குற்றஞ்செய்த கொலைபாத
கனின் உயிருக்காக நீங்கள்மீட்கும்பொருளை
32 வாங்கக்கூடாது; அவன் கொல்லப்படவே
வேண்டும். அடைக்கலபுரத்திற்கு ஓடிப்
போனவன் ஆசாரியனுடைய மரணத்தின்
முன்னே தன் காட்டிற்குத் திரும்பிவரும்படி
நீங்கள் அவனுக்காக மீட்கும்பொருளை
33 வாங்கக்கூடாது. நீங்கள் இருக்கும் தேசத்
தைத் தீட்டுப்படுத்தாதிருங்கள்; இரத்தம்
தேசத்தைத் தீட்டுப்படுத்தும்; இரத்தம் சிந்
தினவனுடைய இரத்தத்தினாலேயன்றி வே
றொன்றினாலும் தேசத்திலே சிந்தப்பட்ட இர
த்தத்திற்குப் பிராயச்சித்தமில்லை. நீங்கள்
குடியிருக்கும் தேசத்தைத் தீட்டுப்படுத்த
வேண்டாம்; அதின் நடுவில் நான் வாசமா
யிருக்கிறேனே; யெகோவாவாகிய நான்
இஸ்ரவேல் புத்திரர் நடுவே வாசம்பண்ணுகி
றேன் என்று சொன்னார்.

**36** போசேப்பின் குமாரருடைய வம்சத்தா
ரில் மனாசேயின் குமாரனாகிய மாகீருக்குப்
பிறந்த கிலெயாத்துப் புத்திரரின் குடும்பத்
தலைவர் மோசேயையும் இஸ்ரவேல் புத்திர
ருடைய குடும்பத்தலைவராகிய பிரபுக்களை
2 யும் கிட்டி வந்து அவர்களிடம்: சீட்டுப்
போட்டுத் தேசத்தை இஸ்ரவேல் புத்திரருக்
குச் சுதந்தரமாகக்கொடுக்கும்படி யெகோ
வா எங்கள் ஆண்டவனுக்குக் கட்டளையிட்
டாரே; அன்றியும், எங்கள் சகோதரனாகிய
செலோப்பியாத்தின் சுதந்தரத்தை அவன்
குமாரத்திகளுக்குக் கொடுக்கவேண்டுமென்
றும் யெகோவாவினாலே எங்கள் ஆண்ட
3 வனுக்குக் கட்டளையிடப்பட்டதே. இப்படி
யிருக்க, இவர்கள் இஸ்ரவேல் புத்திரரில் வே
றொரு கோத்திரத்திலே விவாகஞ்செய்துகொ
ண்டால் அந்தக் குமாரத்திகளின் சுதந்தரம்
எங்கள் பிதாக்களுடைய சுதந்தரத்திலிரு
ந்து நீங்கி அவர்கள் உட்படுகிற கோத்திரத்
தின் சுதந்தரத்தோடே சேர்ந்துபோகும்; இப்
படியாக எங்களுக்குச் சுதந்தரமாகச் சீட்டு
விழுந்த பங்கில் இராமல் அற்றுப்போகுமே.
4 இஸ்ரவேல் புத்திரருக்கு யூபிலி வருஷம் வந்
தாலும் அவர்களுடைய சுதந்தரம் அவர்கள்
உட்பட்டுப்போன கோத்திரத்தின் சுதந்தரத்
தோடே சேர்ந்துபோகும்; இப்படியாக இந்
தப் பெண்களின் சுதந்தரம் எங்கள் பிதாக்
களுடைய கோத்திரத்தின் சுதந்தரத்திலிருந்
து நீங்கிப்போகுமே என்றார்கள்.

அப்பொழுது மோசே யெகோவாவின் 5
சொற்படியே இஸ்ரவேல் புத்திரரோடு பேசி:
யோசேப்பு புத்திரரின் கோத்திரத்தார் சொ
ல்லுகிறது சரியே. செலோப்பியாத்தின் 6
குமாரத்திகளைப்பற்றிய காரியத்தில் யெகோ
வா கட்டளையிடுகிறது இதுவே, அவர்கள்
தங்களுக்கு இஷ்டமானபடியே விவாகஞ்
செய்துகொள்ளலாம்; ஆனாலும் அவர்கள்
தங்கள் பிதாவின் கோத்திரவம்சத்திலேயே
விவாகஞ்செய்துகொள்ளவேண்டும். இப் 7
படியாக இஸ்ரவேல் புத்திரரின் சுதந்தரம்
ஒரு கோத்திரத்தைவிட்டு மறுகோத்திரத்துக்
குப் போகாதிருக்கும்; இஸ்ரவேல் புத்திரரில்
அவரவர் பிதாக்களுடைய கோத்திரத்தின்
சுதந்தரம் அவரவர் கோத்திரத்திலேயே
நிலைக்கும். இஸ்ரவேல் புத்திரருடைய 8
ஒரு கோத்திரத்திலே சுதந்தரம் அடைந்தி
ருக்கிற எந்தக் குமாரத்தியும் தன் பிதாவின்
கோத்திரவம்சத்தாரில் ஒருவனுக்கே மனை
யாகவேண்டும்; அப்படியாகவே, இஸ்ரவேல்
புத்திரர் தங்கள் தங்கள் பிதாக்களின் சுதந்
தரத்தை அநுபவிப்பார்கள். சுதந்தரமானது 9
ஒரு கோத்திரத்தைவிட்டு வேறொரு கோத்தி
ரத்தைச் சேரக்கூடாது; இஸ்ரவேல் புத்திர
ரில் ஒவ்வொரு கோத்திரத்திற்குமுரிய சுதந்
தரம் அந்தந்தக் கோத்திரத்திற்கே நிலைக்க
வேண்டும் என்று கட்டளையிட்டான்.
யெகோவா மோசேக்குக் கட்டளையிட்ட 10
படியே செலோப்பியாத்தின் குமாரத்திகள்
செய்தார்கள் செலோப்பியாத்தின் குமாரத் 11
திகளாகிய மக்லாள், திர்சாள், கொக்லாள்,
மில்காள், நோகாள் என்பவர்கள் தங்கள்
பிதாவின் சகோதரருடைய புத்திரரை விவா
கம்செய்தார்கள்; அவர்கள் யோசேப்பின்
குமாரனாகிய மனாசே புத்திரரின் வம்சத்தா
ரை விவாகம் செய்தபடியால் | அவர்களு 12
டைய சுதந்தரம் அவர்கள் பிதாவின் வம்
சக்கோத்திரத்தோடே இருந்தது.

எரிகோவுக்கு எதிரே யோர்தானுக்கு அப் 13
புறத்தில் மோவாபின் சமவெளிகளிலே யெ
கோவா மோசேயைக்கொண்டு இஸ்ரவேல்
புத்திரருக்கு விதித்த கட்டளைகளும் தீர்ப்
புகளும் இவைகளே.

# THE BOOK OF DEUTERONOMY

# உபாகமம்

1 யோர்தானின் கிழ்கரையில் வனந்தரத்திலே மோசே எல்லா இஸ்ரவேலரோடும் பேசத்தொடங்கினன்; அவர்கள் சூப்புக்கு எதிரே, பாரானுக்கும் தோப்பேலுக்கும் லாபானுக்கும் ஆஸரோத்துக்கும் திசாகாபுக்கும் நடுவிலுள்ள அராபாவிலேயிருந்தார்கள். 2 அவர்கள் ஓரேபிலிருந்து சேயீர் மலைவழியாய்ப் பதினெருநாள் பிரயாணஞ்செய்து காதேஸ்பர்னேயாவுக்கு வந்து சேர்ந்தார்கள். 3 ஆனாலும் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றி யெகோவா கட்டளையிட்டிருந்த யாவற்றையும் மோசே அவர்களுக்குச் சொல்லத்தொடங்கினது நாற்பதாம் வருஷம் பதினோராம் 4 மாதம் முதல்தேதியிலேதான். எஸ்போனில் குடியிருந்த எமோரியரின் ராஜாவாகிய சீகோனையும், எத்ரேயின் அருகே அஸ்தரோத்தில் குடியிருந்த பாசானின் ராஜாவாகிய ஓகு என்பவனையும் முறியடித்த பின் 5 பே | யோர்தானின் கிழ்கரையில் மோவாபின் தேசத்திலே மோசே இப்படியாக நியாயப்பிரமாணத்தை விவரிக்கத் தொடங்கினன்: 6 ஓரேபிலே நமது கடவுளாகிய யெகோவா நம்மிடம் சொன்னது இதுவே, நீங்கள் இந்த மலையருகே தங்கியிருந்தது போதும்; 7 நீங்கள் திரும்பிப் பிரயாணப்பட்டு எமோரியரின் மலைகாட்டிற்கும், அதை அடுத்த அராபாவிலும் மலைகாட்டிலும் சமநிலங்களிலும் தென்னாட்டிலும் கடலோரத்திலும் இருக்கிற கானானியரின் தேசமுழுதுக்கும் லீபனோனுக்கும் ஐபிராத்து நதியென்னும் 8 பெரிய நதிவரைக்கும் போங்கள். இதோ, இந்தத் தேசத்தை உங்களுக்கே கொடுத்தேன். நீங்கள் போங்கள், யெகோவா ஆணையிட்டு உங்கள் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் அவர்களுக்குப் பின் வரும் அவர்கள் சந்ததிக்கும் கொடுத்த அந்தத் தேசத்தைச் சொந்தமாக்கிக்கொள் 9 ளுங்கள் என்றார். அக்காலத்திலே நான் உங்களிடம்: நான் ஒருவனாக உங்கள் 10 பாரத்தைத் தாங்கமுடியாது; உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களைப் பெருகப் பண்ணியிருக்கிறார். இப்பொழுது நீங்கள் வானத்து நட்சத்திரங்களைப்போல்த் திரள் திரளாயிருக்கிறீர்கள்; உங்கள் கடவுளாகிய 11 யெகோவா உங்களை இப்பொழுது இருப்பதிலும் ஆயிரமடங்கு அதிகமாகச் செய்வார். உங்களுக்குச் சொல்லியபடியே அவர் உங்களை ஆசீர்வதிப்பார். இப்படியிருக்க, 12 உங்களாலும் உங்கள் வழக்குகளாலும் வரும் கஷ்டங்களையும் பாரங்களையும் நான் ஒருவனுப்த் தாங்குவது எப்படி? புத்தியும் 13 விவேகமும் உள்ளவர்களும் ஜனங்களுக்குத் தெரிந்தவர்களுமானவர்களை உங்கள் கோத்திரங்களின்படியே அழைத்து வாருங்கள்; நான் அவர்களை உங்களுக்கு அதிபதிகளாக நியமிப்பேன் என்று சொன்னேன். நீங்க 14 ளும் என்னிடம், நீர் செய்யச்சொன்ன காரியம் நல்லது என்றீர்கள். ஆகவே ஜனங்க 15 ளுக்குத் தெரிந்தவர்களான புத்தியுள்ளவர்களை உங்கள் கோத்திரத்தலைவராகத் தெரிந்துகொண்டு அவர்களை முறையே ஆயிரவருக்கும் நூற்றுவருக்கும் ஐம்பதின்மருக்கும் பதின்மருக்கும் அதிபதிகளாய் உங்கள் கோத்திரங்களின்படியே உங்கள்மேல் தலைவராகவும் அதிகாரிகளாகவும் நியமித்தேன். அக்காலத்திலே நான் உங்கள் நியாயாதிபதி 16 களிடம்: நீங்கள் உங்கள் சகோதரரின் வழக்குகளைக்கேட்டுச் சகோதரராலுஞ்சரி அன்னியராலுஞ்சரி, இருபக்ஷத்தாருக்கும் நியாயமாய்த் தீர்ப்புச்செய்யுங்கள். நியாயத் 17 தீர்ப்பிலே முகதாட்சணியம் காட்டக்கூடாது. பெரியவனுக்குச் செவிகொடுப்பதுபோலவே சிறியவனுக்கும் செவிகொடுக்கவேண்டும்; மனிதனுக்குப் பயப்படாதிருங்கள்; நியாயத்தீர்ப்பு கடவுளுடையது; உங்கள் திறமைக்கு மிஞ்சின வழக்குகளை என்னிடம் கொண்டுவாருங்கள்; நான் அவற்றைக் கேட்பேன் என்று 18 சொல்லி, நீங்கள் செய்யவேண்டிய காரியங்கள் யாவையும் அக்காலத்திலேயே கட்டளையிட்டேன்.

19 நமது கடவுளாகிய யெகோவா நமக்குக் கட்டளையிட்டபடியே நாம் ஓரேபிலிருந்து பிரயாணமாகி எமோரியரின் மலைநாட்டுக்குப்போகும்படி, நீங்கள் கண்ட அந்த பயங்கரமான பெரிய வனாந்தரவழி முழுவதும் நடந்துவந்து காதேஸ்பர்னேயாவிலே சேர்ந்
20 தோம். அப்பொழுது நான் உங்களிடம்: நமது கடவுளாகிய யெகோவா நமக்குக் கொடுக்கும் எமோரியரின் மலைநாடுமட்டும்
21 வந்தீர்கள். இதோ, உன் கடவுளாகிய யெகோவா அந்தத் தேசத்தை உனக்கே கொடுத்திருக்கிறார்; உன் பிதாக்களின் கடவுளாகிய யெகோவா உனக்குச் சொன்ன படியே, ஏறிப்போய் அதைச் சொந்தமாக்கிக் கொள்; பயப்படாதே, கலங்காதே என்
22 றேன். அப்பொழுது நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வந்து: நமக்காக அந்தத் தேசத்தைப் பார்த்துவரவும், நாம் போகும் வழி இன்னதென்னவும் நாம் கடந்துசெல்லும் ஊர்கள் இன்னவையென்னவும் நமக்குச் செய்தி கொண்டுவரவும், நமக்கு முன்னாக ஆட்களை
23 அனுப்புவோம் என்றீர்கள். அது எனக்கும் நன்றாய்க் கண்டது. கோத்திரத்துக்கு ஒருவராகப் பன்னிரண்டுபேரைத் தெரிந்தெடுத்
24 தேன். அவர்கள் புறப்பட்டு மலைநாட்டு வழியாய்ப் போய் எஸ்கோல் பள்ளத்தாக்கு மட்டும்சென்று இடத்தை வேவு பார்த்தார்
25 கள். பின்பு அத்தேசத்துக் கனிகளில் சிலவற்றைத் தங்கள் கையில் எடுத்துவந்து நமக்குக் காட்டி, நமது கடவுளாகிய யெகோவா நமக்குக் கொடுக்கும் தேசம் நல்ல தேசமே என்று நமக்குச் செய்தி
26 கொண்டுவந்தார்கள். அப்படியிருந்தும் நீங்கள் போக மனமற்று உங்கள் கடவுளாகிய யெகோவாவின் கட்டளையை எதிர்த்து
27 ! உங்கள் கூடாரங்களில் முறுமுறுத்து: நம்மை அழிப்பதற்கென்று எமோரியரின் கையில் ஒப்புக்கொடுக்கவே பகையி
28 லுலே யெகோவா நம்மை எகிப்து தேசத்திலிருந்து கொண்டுவந்தார். நாம் அங்கே போவதெப்படி? அங்குள்ள ஜனங்கள் நம்மிலும் பெரியவர்கள், வளர்ந்தவர்கள்; அவர்கள் பட்டணங்கள் பெரியவைகள், வானத்தையளாவும் மதிலுள்ளவைகள்; அனாக்கியரின் புத்திரரையும் அங்கே கண்டோம் என்று நமது சகோதரர் சொல்லி
29 நமது இருதயத்தைக் கரையப்பண்ணினார்கள் என்று சொன்னீர்கள். அப்பொழுது நான் உங்களிடம்: நீங்கள் கலங்கவேண்டாம், அவர்களுக்குப் பயப்படாதிருங்கள்.
30 உங்களுக்கு முன்செல்லும் உங்கள் கடவுளாகிய யெகோவாவே உங்களுக்காக யுத்தம்
செய்வார்; அவர் எகிப்தில் உங்களோடிருந்து உங்கள் கண்காணச் செய்ததெல்லாவற்றைப்போலவும் வனாந்தரத்தில் செய்துவந்ததைப்போலவும் இப்போதும் செய்வார்.
31 ஒருவன் தன் பிள்ளையைச் சுமந்துகொண்டு போவதுபோல, நீங்கள் இவ்விடத்திற்கு வருகிறவரைக்கும் நடந்துவந்த வழிகளில் எல்லாம் உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களைச் சுமந்துகொண்டு வந்ததைக் கண்டீர்களே. உங்கள் கடவுளாகிய யெகோவா
32 நீங்கள் பானையபிறங்கத்தக்க இடத்தைத் தேடும்படி நீங்கள் போகவேண்டிய வழியை உங்களுக்குக் காட்ட இரவில் அக்கினியிலும் பகலில் மேகத்திலும் உங்களுக்கு
33 முன் சென்றாரே என்று சொன்னேன். காரியம் இப்படியிருந்தும் நீங்கள் அவரை நம்ப மனமற்றுப்போனீர்கள்.
34 நீங்கள் பேசினதை யெகோவா கேட்டுக்
35 கடுங்கோபங்கொண்டு: உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று நான் ஆணையிட்ட அந்த நல்ல தேசத்தை இந்தப்
பொல்லாத சந்ததியாராகிய மனிதரில் ஒருவரும் காண்பதேயில்லை; எப்புன்னேயின்
36 குமாரனாகிய காலேப் மாத்திரம் அதைக் காண்பான்; அவன் யெகோவாவினிடம் பூரண பற்றுடையவனானபடியால் அவன் மிதித்துவந்த தேசத்தை அவனுக்கும் அவன் பிள்ளைகளுக்கும் கொடுப்பேன் என்று ஆணையிட்டார். அன்றியும் உங்கள்நிமித்தம்
37 யெகோவா என்மேலும் கோபங்கொண்டு: நீயும் அதில் பிரவேசிப்பதில்லை; உனக்கு
38 ஊழியஞ்செய்கிற யோசுவா, நூனின் குமாரன், அதில் பிரவேசிப்பான்; அவனைத் தைரியப்படுத்து; அவனே அதை இஸ்ரவேலுக்குச் சுதந்தரமாகப் பங்கிடுவான். கொள்
39 ளையாவார்கள் என்று நீங்கள் சொன்ன உங்கள் குழந்தைகளும், இந்நாளிலே நன்மைதீமையறியாத உங்கள் பிள்ளைகளும் அதில் பிரவேசிப்பார்கள்; அவர்களுக்கு அதைக் கொடுப்பேன்; அவர்கள் அதைச்
சொந்தமாக்கிக்கொள்வார்கள். நீங்களோ
40 திரும்பி ஏவுத சமுத்திரத்தின் வழியாய் வனாந்தரத்திற்குப் பிரயாணப்படுங்கள் என்றார். அது கேட்கவே நீங்கள் என்னிடம்
41 வந்து: யெகோவாவுக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம்; நமது கடவுளாகிய யெகோவா எங்களுக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் நாங்கள்போய் யுத்தம்பண்ணுவோம் என்று சொல்லி, ஒவ்வொருவனும் தன் தன் ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு மலைநாட்டிற்குள் செல்லவிருந்தீர்கள்.
42 யெகோவாவோ என்னிடம்: நீங்கள் போக

வேண்டாம், யுத்தம் செய்யவேண்டாம், போஜல் சத்துருக்கள் உங்களை முறியடிப்பார்கள்; நான் உங்கள் கடவே இரேன் என்று அவர்களுக்குச் சொல் என்றார்.
43 அப்படியே நான் உங்களுக்குச் சொன்னேன்; நீங்களோ செவிகொடுக்கவில்லை, யெகோவாவின் கட்டளையை எதிர்த்துத் துணிகரமாய் மலைநாட்டிற்குள் சென்றீர்
44 கள். அந்த மலைநாட்டில் குடியிருந்த எமோரியர் உங்களை எதிர்க்கும்படி வந்து, தேனீக்கள் துரத்துவதுபோல உங்களைத் துரத்திச் சேயீர்தொடங்கி கொர்மாமட்டும்
45 உங்களை முறியடித்தார்கள். நீங்கள் திரும்பி வந்து யெகோவாவின் சமுகத்தில் அழுதீர்கள்; யெகோவாவோ உங்கள் சத்தத்தைக் கேட்கவில்லை, உங்களுக்குச் செவிகொடுக்கவுமில்லை. அப்படியே காதேசிலே தங்கி அங்கே வெகுகாலிருந்தீர்கள்.

**2** யெகோவா எனக்குச் சொல்லியபடி நாம் திரும்பிச் செவ்த சமுத்திரத்திற்குப் போகிற வழிபாய் வனாந்தரத்திற்குப் பிரயாணம் பண்ணி அநேக நாள் சேயீர் மலைநாட்டை
2 சுற்றித்திரிந்தோம். அப்பொழுது யெகோவா
3 என்னோடு பேசி: நீங்கள் இந்த மலைநாட்டைச் சுற்றித்திரிந்தது போதும்; வடக்கே
4 திரும்பிப்போங்கள். ஜனங்களுக்கு நீ கட்டளையிடவேண்டியது இதுவே, சேயீரிலே குடியிருக்கிற ஏசாவின் புத்திரரான உங்கள் சகோதரரின் எல்லையைக் கடக்கப்போகிறீர்கள்; அவர்கள் உங்களுக்குப் பயப்படு
5 வார்கள்; நீங்களோ அவர்களோடு போர் செய்யாதபடி மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் தேசத்திலே ஒரு அடி நிலமும் உங்களுக்குக் கொடேன்; சேயீர் மலைநாட்டை ஏசாவுக்கே சொந்தமாகக் கொடுத்
6 திருக்கிறேன். ஆகாரதிகளைப் பணங்கொடுத்து அவர்களிடம் வாங்கிச் சாப்பிடுங்கள்; தாகத்திற்கு வேண்டிய தண்ணீரையும் பணங்கொடுத்தே அவர்களிடம் வாங்கிக்
7 கொள்ளுங்கள். உன் கடவுளாகிய யெகோவா நீ செய்த எல்லா வேலைகளிலும் உன்னை ஆசீர்வதித்திருக்கிறார்; இந்தப் பெரிய வனாந்தர வழிபாக நீ நடந்து வந்ததெல்லாம் அவர் கவனித்திருக்கிறார். இந்த நாற்பது வருஷமும் உன் கடவுளாகிய யெகோவா உன்னோடே இருந்தார்; உனக்கு ஒரு குறைவும் இருந்ததில்லை என்று சொன்னார்.
8 நாம் சேயீரிலே குடியிருக்கிற ஏசாவின் புத்திரரான நமது சகோதரரைவிட்டு விலகி அராபாவுக்குச் செல்லும் வழியாய் ஏலாத்தை மேலும் எசியோன்கேபேர்மேலும் போய்ப் அப்புறம் திரும்பி மோவாப் வனாந்தரவழியாய் வந்தோம். அப்பொழுது யெகோவா 3
என்னிடம்: நீ மோவாபைத் தாக்காதே; அவர்களோடு போர்செய்யாதே; அவர்கள் தேசத்தில் எதையும் உனக்குச் சொந்தமாகக் கொடேன்; ஆரூர் காட்டை லோத்தின் புத்திரருக்குச் சொந்தமாகக் கொடுத்திருக்கிறேன்.-முற்காலத்திலே ஏமியர் அதில் குடி 10
யிருந்தார்கள்; அது பலமுள்ள ஜனம், திரள் கூட்டம், அவர்கள் அனாக்கியரைப்போல வளர்ந்தவர்கள். அனாக்கியரைப்போலவே 11
இவர்களும் ரெப்பாவியர் என்று எண்ணப்பட்டார்கள்; மோவாபியரோ அவர்களை ஏமியர் என்று சொல்லுகிறார்கள். மூற் 12
காலத்தில் கோரியர் சேயீரில் குடியிருந்தார்கள். ஏசாவின் புத்திரரோ இஸ்ரவேலர் தங்களுக்கு யெகோவா சொந்தமாகக் கொடுத்த தேசத்தில் செய்ததுபோலவே, அந்தக் கோரியரைத் துரத்தித் தங்கள் முன்னிராதபடி அவர்களை அழித்துவிட்டு அவர்கள் இருந்த இடத்தில் குடியேறினார்கள்.—
நீங்கள் இப்பொழுது எழுந்து சேரேத் பள் 13
ளத்தாக்கைக் கடந்துபோங்கள் என்று சொன்னார். அப்படியே சேரேத் பள்ளத்தாக்கைக் கடந்தோம். நாம் காதேஸ்பர்னே 14
யாவைவிட்டுச் சேரேத் பள்ளத்தாக்குவந்து சேர முப்பத்தெட்டு வருஷமாயிற்று; இதற்குள் அந்தச்சந்ததிமுழுதும், யுத்தத்திற்குப் போகக்கூடியவரெல்லாம், யெகோவா அவர்களுக்கு ஆணையிட்டுச் சொல்லியிருந்தபடியே, பாளையத்தின் நடுவிலிராதபடி மாண்டுபோனார்கள். பாளையத்தின் நடுவி 15
லிராதபடி அவர்களை நிர்மூலமாக்குவதற்கென்று யெகோவாவின் கை அவர்கள் மாண்டு ஒழியுமட்டும் அவர்களுக்கு விரோதமாயிருந்தது.

யுத்தமனிதர் எல்லாரும் ஜனத்தின் நடுவி 16
லிராதபடிமாண்டுபோனபின்பு | யெகோவா 17
என்னோடு பேசி: இன்று நீ மோவாபின் 18
எல்லையில் ஆரூரைக் கடந்துபோவாய்; அம்மோன் புத்திரரைக் கிட்டுகையில் நீ 19
அவர்களைத் தாக்கவேண்டாம்; அவர்களோடு போர்செய்யவும் வேண்டாம்; அம்மோன் புத்திரரின் தேசத்தில் எதையும் உனக்குச் சொந்தமாகக் கொடேன்; அதை லோத்தின் புத்திரருக்குச் சொந்தமாகக் கொடுத்திருக்கிறேன்.—அதுவும் ரெப்பாவியரின் தேசமாக 20
எண்ணப்படுகிறது; முற்காலத்திலே ரெப்பாவியர்அதிலே குடியிருந்தார்கள், அம்மோனியரோ அவர்களைச் சம்சும்மியர் என்று சொல்லுகிறார்கள். அது பலமுள்ள ஜனம், 21
திரள்கூட்டம்; அவர்கள் அனாக்கியரைப்

போல வளர்ந்தவர்கள்; யெகோவா அவர்களை அம்மோனியருக்கு முன்னிராதபடி அழிக்கவே அம்மோனியர் அவர்களைத் துரத்திவிட்டு அவர்கள் இருந்த இடத்தில் 22 குடியேறினார்கள். சேயீரில் குடியிருக்கிற ஏசாவின் புத்திரருக்கு யெகோவா இப்படியே செய்திருந்தார்; அவர் கோரியரை அவர்கள் முன்னிராதபடி அழித்தார், ஏசாவின் புத்திரர் அவர்களைத் துரத்திவிட்டு அவர்கள் இருந்த இடத்திலே இக்காள்வரைக் 23 கும் குடியிருக்கிறார்கள். கப்தோரிலிருந்து வந்த கப்தோரியரும் காத்சாவரைக்கும் கிராமங்களிலே குடியிருந்த அவ்வியரை இப்படியே அழித்து அவர்கள் இருந்த இடத் 24 திலே குடியேறினார்கள்.—நீங்கள் எழுந்து பிரயாணப்பட்டு அர்னோன் ஆற்றைக்கடந்துபோங்கள்; எஸ்போனின் ராஜாவாகிய சீகோன் என்னும் எமோரியனையும் அவன் தேசத்தையும் உன் கையிலே ஒப்புக்கொடுத்தேன், அதைச் சொந்தமாக்கிக்கொள்ளத் தொடங்கு; அவனோடே யுத்தஞ் செய். 25 வானத்தின்கீழ் எங்குமுள்ள ஜனங்களுக்கு உன்னாலே இகிலும் பயமும் உண்டாகும்படி செய்ய இன்று நான் தொடங்குவேன்; அவர்கள் உன்னைப்பற்றிக் கேட்டமாத்திரமே உன்னிமித்தம் நடுங்கி வருந்துவார்கள் என்று சொன்னார்.

26 அப்பொழுது நான் எஸ்போனின் ராஜாவாகிய சீகோனிடம் சமாதான வார்த்தை களைச் சொல்லும்படி கெதேமோத் வனாந் 27 தரத்திலிருந்து ஆட்களை அனுப்பி: நான் உமது தேசத்தின் வழியாய்க் கடந்துபோகும்படி உத்தரவுகொடும்; வலதுபுறம் இடதுபுறம் விலகாமல் பாதை வழியாகவே நடப் 28 பேன். என் சாப்பாட்டிற்கு வேண்டிய ஆகாரதிகளைப் பணம் வாங்கிக்கொண்டு கொடும், என் தாகத்திற்குத் தண்ணீரையும் பணம் வாங்கிக்கொண்டே கொடும். கால் நடையாய்க் கடந்துபோகமாத்திரம் உத்த 29 ரவுகொடும். சேயீரில் குடியிருக்கிற ஏசாவின் புத்திரரும் ஆரூரில் குடியிருக்கிற மோவாபியரும் அப்படியே செய்தார்கள்; நான் யோர்தானைக்கடந்து, எங்கள் கடவுளாகிய யெகோவா எங்களுக்குக் கொடுக்கிற தேசத்தில் சேருமட்டும் நீரும் அப் படியே செய்யும் என்று சொல்லச் சொன் 30 னேன். எஸ்போனின் ராஜாவாகிய சீகோனே நாம் அவன் தேசத்தின் வழியாய்க் கடந்து போவதற்கு உத்தரவுகொடுக்க மறுத்துவிட் டான். உன் கடவுளாகிய யெகோவா இந் நாளிலே இருக்கிறதுபோல அவனை உன் கையில் ஒப்புக்கொடுக்கும்படி அவன் மனதைக் கடினப்படுத்தி அவன் இருதயத்தை உரங்கொள்ளப் பண்ணியிருந்தார். அப் 31 பொழுது யெகோவா என்னிடம்: இதோ, சீகோனையும் அவன் தேசத்தையும் உனக்கு ஒப்புக்கொடுக்கத் தொடங்கிவிட்டேன்; நீயும் அவன் தேசத்தை வசப்படுத்திச் சொந்தமாக்கிக்கொள்ளத் தொடங்கு என் றார். சீகோன் நம்மை எதிர்த்து யுத்தம் 32 பண்ணத் தன் முழு ஜனத்தோடும் புறப் பட்டு யாகசாவுக்கு வந்தான். அவனை நமது 33 கடவுளாகிய யெகோவா நமக்கு ஒப்புக் கொடுத்தார்; நாம் அவனையும் அவன் குமாரரையும் அவன் ஜனமுழுவதையும் முறி யடித்தோம்; அக்காலத்திலேயே அவன் பட் 34 டணங்களையெல்லாம் பிடித்துச் சகல பட் டணங்களிலுமிருந்தவர்களை, ஸ்திரீகளையும் பிள்ளைகளையுங்கூட, தெப்பசமும் நிறை வேறச் சங்காரித்தோம்; ஒருவரையும் மீதி யாக வைக்கவில்லை. மிருகங்களையும் நாம் 35 பிடித்த பட்டணங்களில் கொள்ளையடித்த பொருட்களையுமாத்திரம் நமக்கென்று வைத் துக்கொண்டோம். அர்னோன் பள்ளத் 36 தாக்கை ஒட்டியிருக்கிற அரோவேரும் பள் ளத்தாக்கிலேயே இருக்கிற பட்டணமும் தொடங்கிக் கிலெயாத்வரைக்கும் நமக்கு எதிர்த்து நிற்கத்தக்க உயர்ந்த அரணுள்ள பட்டணம் இருந்ததில்லை; எல்லாவற்றை யும் நமது கடவுளாகிய யெகோவா நமக்கு ஒப்புக்கொடுத்தார். அம்மோன் புத்திரரின் 37 தேசத்துக்கும் யாபோக் ஆற்றின்மேலுள்ள இடங்களுக்கும் மலைகாட்டிலுள்ள பட்டணங்களுக்கும் நமது கடவுளாகிய யெகோவா நமக்கு விலக்கின மற்ற இடங் களுக்கும் சமீபமாய்ச் செல்லாமல் விலகிப் போனோம்.

பின்பு நாம் திரும்பிப் பாசானுக்குப் 3 போகிற வழியாய்ப் போனோம்; பாசானின் ராஜாவாகிய ஓகு நம்மை எதிர்த்து யுத்தம்பண்ணத் தன் முழு ஜனத்தோடும் புறப்பட்டு எத்ரேயிக்கு வந்தான். அப்பொ 2 முது யெகோவா என்னிடம்: அவனுக்குப் பயப்படவேண்டாம்; அவனையும் அவன் ஜனமுழுவதையும் அவன் தேசத்தையும் உன் கையிலே கொடுத்தேன்; எஸ்போனிலே குடியிருந்த எமோரியரின் ராஜாவாகிய சீகோனுக்கு நீ செய்ததுபோல அவனுக்கும் செய்வாய் என்றார். அப்படியே நமது கடவுளாகிய யெகோவா பாசானின் ராஜாவாகிய ஓகையும் அவன் ஜனம் முழுவதை யும் நமது கையிலே கொடுத்தார்; அவனுக்கு ஒருவரும், மீதியாயிராமற் போகுமட்டும் அவனை முறியடித்தோம். அவனு

டைய பட்டணங்களையெல்லாம் அக்காலத்திலே பிடித்தோம்; அவர்களிடத்திலிருந்து நாம் பிடித்துக்கொள்ளாத பட்டணம் இல்லை; பாசானிலிருந்து ஓகின் ராஜ்யமான அறுபது பட்டணங்களுள்ள அர்கோப் நாடு முழுவதையும் பிடித்தோம். அந்தப் பட்டணங்களெல்லாம் அரணுக்கப்பட்டவை, உயர்ந்த மதில்களும் வாசல்களும் தாழ்ப்பாள்களும் உள்ளவை. அவைகளேயன்றி மதிலில்லாத ஊர்களும் ஏராளமானவை. அவைகளையும் தெய்வசாபம் நிறைவேறச் சங்கரித்தோம்; நாம் எஸ்போனின் ராஜாவாகிய சீகோனுக்குச் செய்தது போலவே அந்தப் பட்டணங்கள் எல்லாவற்றிற்கும் செய்து அங்கிருந்தவர்களை, ஸ்திரீகளையும் பிள்ளைகளையும்கூடச் சங்கரித்தோம். பட்டணங்களிலிருந்த பொருட்களையும் சகல மிருகங்களையுமோ நமக்கென்று கொள்ளையிட்டோம். இப்படியாகயோர்தானுக்குக் கிழக்கேயுள்ள அர்னோன் நதிதொடங்கி எர்மோன் மலைவரைக்குமுள்ள தேசத்தை நாம் அக்காலத்திலே எமோரியரின் இரண்டு ராஜாக்களிடத்திலிருந்து பிடித்தோம்.—சீதோனியர் எர்மோனைச் சீரியோன் என்கிறார்கள்; எமோரியரோ அதைச் செனீர் என்கிறார்கள்.—சமவெளிநாட்டுச் சகல பட்டணங்களையும் கிலெயாத் முழுவதையும் சல்கா, எத்ரேயி என்னும் பாசானிலிருந்து ஓகுடைய ராஜ்யத்தின் பட்டணங்கள் வரைக்குமுள்ள பாசான் முழுவதையும் பிடித்தோம்.—மீதிருந்த ரெப்பாவியரில் பாசானின் ராஜாவாகிய ஓகு என்பவன் மாத்திரமே இருந்தான்; அவன் கட்டில் இரும்புக்கட்டில், அதன் நீளம் மனிதருடைய முழத்தின்படியே ஒன்பதுமுழம், அகலம் நாலுமுழம்; அது அம்மோன் புத்திரரின் ராபா பட்டணத்தில் இருக்கிறதல்லவா?—அக்காலத்திலே அந்தத்தேசத்தைச் சொந்தமாக்கிக்கொண்டபின், அர்னோன் பள்ளத்தாக்கை ஒட்டியிருக்கிற அரோவேர் தொடங்கிக் கிலெயாத் மலைநாட்டில் பாதியையும், அதிலிருக்கிற பட்டணங்களையும், ரூபனியருக்கும் காத்தியருக்கும் கொடுத்தேன். கிலெயாத்தின் மீதியான பங்கையும் ஓகின் ராஜ்யமாயிருந்த பாசான் முழுவதையும், அர்கோப் நாடு முழுவதையுமே, மனாசேயின் பாதிக்கோத்திரத்துக்குக் கொடுத்தேன்.—பாசானின் முழுதேசமும் ரெப்பாவிய தேசமென்றே சொல்லப்படுகிறது. மனாசேயின் குமாரனாகிய யாவீர் அர்கோப்நாடு முழுவதையும்கெசூரியர், மாகாத்தியர் என்பவர்களின் எல்லைமட்டும் பிடித்துக்கொண்டு பாசானுக்கு அதற்குத் தன் நாமத்தின்படியே யாவீர்ப்பட்டிகள் என்று பேரிட்டான், அது இக்காள்வரைக்கும் வழங்கிவருகிறது.—மாகீருக்குக் கிலெயாத்தைக் கொடுத்தேன். ரூபனியருக்கும் காத்தியருக்கும் நான் கொடுத்த தேசம்: கிலெயாத்திலிருந்து தெற்கே அர்னோன் நதி பாயும் பள்ளத்தாக்கின் நடுவரைக்குமுள்ளது, வடக்கே அம்மோன் புத்திரரின் எல்லையாகிய யாபோக்கு நதிவரையுள்ளது, யோர்தான்நதி மேற்கே எல்லையாகக் கின்னெரேத் தொடங்கி அராபாவின் கடலாகிய உப்புக்கடலைப் பிஸ்காவின் செங்குத்துச் சரிவு தொடும் இடம்வரைக்குமுள்ளது. அக்காலத்திலே நான் உங்களிடம்: உங்கள் கடவுளாகிய யெகோவா நீங்கள் இந்தத் தேசத்தைச் சொந்தமாக்கிக்கொள்ளவென்று கொடுத்தார்; உங்களிலே யுத்தஞ்செய்யத் தக்கவர்கள் யாவரும் இஸ்ரவேல் புத்திரரான உங்கள் சகோதரருக்குமுன்னே ஆயுதபாணிகளாகக் கடந்துபோங்கள். உங்கள் மனைவிமக்களும் ஆடுமாடுகளும் மாத்திரம்—உங்களுக்குத் திரளான ஆடுமாடுகள் உண்டென்று அறிவேன்—நான் உங்களுக்குக் கொடுத்த பட்டணங்களில் இருப்பார்கள். ஆனாலும் யெகோவா உங்களை இளைப்பாறப்பண்ணினதுபோல உங்கள் சகோதரரையும் இளைப்பாறப்பண்ணி யோர்தானுக்குக் கிழக்கே உங்கள் கடவுளாகிய யெகோவா கொடுக்கிற தேசத்தை அவர்கள் சொந்தமாக்கிக்கொள்ளுமட்டும் நீங்கள் உங்கள் சகோதரரோடேயே இருந்துவிட்டு, பின்பு, நான் உங்களுக்குக் கொடுத்திருக்கிற காணியாட்சிக்குத் திரும்பவேண்டும், அவனவன் தன்தன் சொந்தக் காணியாட்சிக்குத் திரும்பவேண்டும் என்றேன். அக்காலத்திலே நான் யோசுவாவினிடம்: உங்கள் கடவுளாகிய யெகோவா அந்த இரண்டு ராஜாக்களுக்கும் செய்தவைகளையெல்லாம் உன் கண்களினாலேயே கண்டாய்; நீ கடந்து செல்லும் எல்லா ராஜ்யங்களுக்கும் யெகோவா அப்படியே செய்வார். அவர்களுக்குப் பயப்படவேண்டாம்; உங்கள் கடவுளாகிய யெகோவா தாமே உங்களுக்காக யுத்தம்பண்ணுவார் என்று சொன்னேன்.

அக்காலத்திலே நான் யெகோவாவை மன்றாடி: யெகோவாவாகிய ஆண்டவரே, நீர் உமது அடியேனுக்கு உமது மகத்துவத்தையும் உமது புஜபலத்தையும் காண்பிக்கத் தொடங்கினீர்; உமது கிரியைகளையும் உமது

1 2 3 4 5 6 7 8 9 10 11 12 13 14 15 16 17 18 19 20 21 22 23 24

வல்ல செயல்களையும் போன்றவற்றைச்
செய்யும் தெய்வம் வானத்திலும் பூமியிலும்
25 உண்டோ? நான் கடந்துபோய் யோர்தா
னுக்குக் கிழக்கேயுள்ள அந்த நல்ல தேசத்
தையும் அந்த நல்ல மலையையும் லீபனோன
யும் பார்க்கும்படி செய்தருளும் என்று
26 வேண்டிக்கொண்டேன். யெகோவாவோ உங்
கள் நிமித்தம் என்மேல் கோபங்கொண்டு
எனக்குச் செவிகொடாமற்போனார். யெகோ
வா என்னிடம்: போதும், இனி இந்தக்
காரியத்தைப்பற்றி என்னிடம் பேசாதே.
27 நீ பிஸ்காவின் கொடுமுடியில் ஏறி உன்
கண்களை ஏறெடுத்து மேற்கிலும் வடக்கிலும்
தெற்கிலும் கிழக்கிலும் உள்ளவற்றை உன்
கண்களினாலே பார்த்துக்கொள்; இந்த
28 யோர்தானை நீ கடந்துபோவதேயில்லை. நீ
யோசுவாவுக்குக் கட்டளைகொடுத்துத் தைரி
யஞ்சொல்லி அவனைப் பலப்படுத்து; அவன்
இந்த ஜனத்துக்கு முன்பாகக் கடந்துபோ
வான்; நீகாணும் தேசத்தை அவர்களுக்குப்
பங்கிட்டுக் கொடுப்பவனும் அவனே என்
29 னார். பின்பு பேத்பெயோருக்கு எதிரான
பள்ளத்தாக்கில் தங்கியிருந்தோம்.

4 இஸ்ரவேலரே, நீங்கள் கைக்கொள்
வதற்கென்று நான் உங்களுக்குப் போதிக்
கிற நியமங்களையும் நீர்ப்புகளையும் இப்பொ
ழுது கேளுங்கள், அவற்றைக் கைக்கொண்
டால் நீங்கள் பிழைப்பீர்கள், உங்கள்
பிதாக்களின் கடவுளாகிய யெகோவா உங்க
ளுக்குக் கொடுக்கிற தேசத்தில் நீங்கள் பிர
வேசித்து அதைச் சொந்தமாக்கிக்கொள்வீர்
2 கள், கட்டளையாக நான் உங்களுக்குப்
போதிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றை
யும் கூட்டவேண்டாம், அதிலிருந்து ஒன்றை
யும் குறைக்கவேண்டாம். நான் உங்களுக்
குப் போதிக்கிற உங்கள் கடவுளாகிய யெகோ
வாவின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ள
3 வேண்டும். பாகால்பெயோரின் நிமித்தம்
யெகோவா செய்ததை நீங்கள் கண்ணாரக்
கண்டிருக்கிறீர்கள்; பாகால்பெயோரைப்
பின்பற்றின மனிதன் எவனும் உன் நடு
வில் இராதபடி உன் கடவுளாகிய யெகோ
4 வா அவர்களை அழித்துப்போட்டார். உங்
கள் கடவுளாகிய யெகோவாவைப் பற்றிக்
கொண்டேயிருந்த நீங்களனைவருமோ இந்
5 நாள்வரைக்கும் உயிரோடிருக்கிறீர்கள். என்
கடவுளாகிய யெகோவா எனக்குக் கட்
டளையிட்டபடியே கட்டளைகளையும் நீர்ப்பு
களையும், இதோ, உங்களுக்குப் போதித்
தேன்; நீங்கள் சொந்தமாக்கிக்கொள்ளும்
படி பிரவேசிக்கப்போகிற தேசத்திலே நீங்
கள் அவற்றின்படி செய்யவென்றே
போதித்துவிட்டேன்; நீங்கள் அவைகளைக்
கைக்கொண்டு அவற்றின்படி செய்யுங்கள்.
மற்ற ஜாதியாரின் பார்வையில் இதுவே உங் 6
களுக்கு விவேகமும் அறிவுமாகும்; அவர்
கள் இந்த நியமங்களையெல்லாம் கேட்டு,
இந்தப் பெரிய ஜனமே விவேகமும் அறிவு
முள்ள ஜாதி என்பார்கள். நமது கடவு 7
ளாகிய யெகோவாவை நோக்கி நாம் கூப்
பிடும்போதெல்லாம் அவர் நம்மைக் கிட்டி
வருகிறார். அதுபோலவே கடவுள் கிட்
டிச்சேருகிற வேறு எந்தப் பெரிய ஜாதியு
முண்டோ? இன்னாளில் நான் உங்களுக்கு 8
விவரிக்கிற இந்த நியாயப்பிரமாணம் முழு
மைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள நியமங்
களையும் நீர்ப்புகளையும் பெற்றிருக்கிற வேறே
எந்தப் பெரிய ஜாதியுமுண்டோ? ஒன்றை
மாத்திரம் கவனித்துக்கொள்; உன் கண் 9
கண்டவைகளை மறவாதபடிக்கும் உன் ஆயுள்
நாளெல்லாம் அவைகள் உன் இருதயத்தை
விட்டு நீங்காதபடிக்கும் எச்சரிக்கையா
யிருந்து உன்னை ஜாக்கிரதையாய்க் காத்துக்
கொள்; உன் பிள்ளைகளுக்கும் உன் பிள்ளை
களின் பிள்ளைகளுக்கும் அவற்றை அறிவிக்க
வேண்டும். நீ ஓரேப்மலையிலே உன் கடவுளா 10
கிய யெகோவாவின் சந்நிதியில் நின்றபோது
அவற்றைக் கண்டாய். அச்சமயத்தில்
யெகோவா என்னிடம்: ஜனத்தை என்னி
டம் கூடிவரச்செய், என் வார்த்தைகளை
அவர்கள் கேட்கும்படி செய்வேன்.
அவர்கள் பூமியில் உயிரோடிருக்கும்
நாளெல்லாம் எனக்குப் பயந்திருக்கும்
படி அவற்றைக் கற்றுக்கொள்ளவேண்டும்;
தங்கள் பிள்ளைகளுக்கும் அவற்றைக் கற்
பிக்கவேண்டும் என்று சொன்னாரே. நீங் 11
கள் கிட்டிவந்து மலையின் அடிவாரத்தில்
நின்றீர்கள்; அந்த மலையிலே அக்கினி
எரிந்தது; அது வானமளாவிய அக்கினி,
சுற்றி எப்புறமும் இருள், மேகம், அந்த
காரம். அந்த அக்கினியின் நடுவிலிருந்து
யெகோவா உங்களோடே பேசினார்; 12
வார்த்தைகளின் சத்தத்தை நீங்கள் கேட்
டீர்கள்; அந்தச் சத்தத்தை நீங்கள்
கேட்டதேயன்றி ஒரு ரூபத்தையும் காண
வில்லை. நீங்கள் கைக்கொள்ளவேண்டும் 13
என்று அவர் உங்களுக்குக் கட்டளையிட்ட
தம்முடைய உடன்படிக்கையாகிய பத்துச்
சொற்களை அவர் உங்களுக்கு அறிவித்து,
அவைகளை இரண்டு கற்பலகைகளில் எழுதி
னார். நீங்கள் கடந்துபோய்ச் சொந்தமாக் 14
கிக்கொள்ளும் தேசத்திலே நீங்கள் கைக்
கொள்ளவேண்டிய நியமங்களையும் நீர்ப்பு
களையும் உங்களுக்குப் போதிக்கவேண்டு

மென்று அக்காலத்திலேயே யெகோவா
15 எனக்குக் கட்டளையிட்டார். ஆகையால் நீங்கள் உங்களைக்குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்; யெகோவா ஓரேபிலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களோடே பேசினநாளில் நீங்கள் ஒரு ரூபத்தையும் காணவில்லை.
16 ஆகவே நீங்கள் ஆணின் சாயலுக்கும்
17 பெண்ணின் சாயலுக்கும், பூமியிலிருக்கிற எந்த மிருகத்தின் சாயலுக்கும் ஆகாயத்தில் பறக்கிற செட்டையுள்ள எந்தப் பட்சியின்
18 சாயலுக்கும், பூமியில் ஊரும் எந்தப் பிராணியின் சாயலுக்கும் பூமியின்கீழ்த் தண்ணீரிலுள்ள எந்த மச்சத்தின் சாயலுக்கும் ஒப்பான ஏதேனும் ஒரு விக்கிரகத்தை உங்களுக்கு உண்டாக்கி உங்களைக் கெடுத்துக்
19 கொள்ளவேண்டாம்; உங்கள் கண்களை வானத்திற்கு ஏறெடுத்து, வானத்தின் சர்வசேனைகளாகிய சந்திரசூரிய நட்சத்திரங்களைப் பார்த்து மருண்டு, அவைகளைத் தொழுது சேவிக்க இணங்கவேண்டாம்; அவைகளை உங்கள் கடவுளாகிய யெகோவா வானத்தின்கீழ் எங்குமுள்ள சகல
20 ஜனங்களுக்கும் ஏற்படுத்தினார். உங்களையோ யெகோவா சேர்த்துக்கொண்டு எகிப்து என்னும் இருப்புக்காளவாயிலிருந்து கொண்டுவந்தார். இந்நாளில் இருக்கிறது போல நீங்கள் அவருக்குச் சொந்தஜனமாயி
21 ருக்கும்படி அப்படிச் செய்தார். யெகோவா உங்கள்நிமித்தம் என்மேல் கோபங்கொண்டு நான் யோர்தானைக் கடந்துபோவதேயில்லை என்றும் உன் கடவுளாகிய யெகோவா உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கிற அந்த நல்ல தேசத்தில் நான் பிரவேசிப்பதே
22 யில்லை என்றும் ஆணையிட்டார். இந்தத் தேசத்தில் நான் மரணமடையவேண்டும்; நான் யோர்தானைக் கடந்துபோவதில்லை, நீங்களோ கடந்துபோய் அந்த நல்ல தேசத்தைச் சொந்தமாக்கிக்கொள்வீர்கள்.
23 நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்; உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களோடே பண்ணின உடன்படிக்கையை மறந்து விடாதேயுங்கள்; உங்கள் கடவுளாகிய யெகோவா வேண்டாம் என்று விலக்கின எவ்வித சாயலான விக்கிரகத்தையும் உங்க
24 ளுக்குச் செய்துகொள்ளவேண்டாம். உன் கடவுளாகிய யெகோவா பட்சிக்கிற அக்கினி, அவர் எரிச்சலுள்ள கடவுள்.
25 நீங்கள் பிள்ளைகளையும் பிள்ளைகளின் பிள்ளைகளையும் பெற்று தேசத்தோடு பழக்கமாய்ப் போனபின்பு, நீங்கள் உங்களைக் கெடுத்து யாதொன்றின் சாயலான ஒரு விக்கிரகத்தைப்பண்ணி, உன் கடவுளாகிய யெகோவாவுக்குக் கோபம் உண்டாக்க அவர் பார்வைக்குத் தீமையானதைச் செய்தால், நீங்கள் யோர்தானைக் கடந்து சொந்த 26
மாக்கிக் கொள்ளப்போகிற தேசத்தில் இராமல் சீக்கிரமாய் முற்றிலும் அழிந்துபோவீர்கள் என்று இந்நாளில் உங்களுக்கு விரோதமாய் வானத்தையும் பூமியையும் சாட்சி வைக்கிறேன்; நீங்கள் அதிலே நெடுநாள் இருக்கமாட்டீர்கள்; முற்றிலும் அழிக்கப் 27
படுவீர்கள். யெகோவா உங்களைப் புற
ஜாதிகளுக்குள்ளே சிதறடிப்பார்; யெகோவா உங்களைக் கொண்டுபோய் விடப்போகிற ஜாதிகள் நடுவில் சொற்பப் பேரே மீந்திருப்பீர்கள். அங்கே மனுஷர் கைவேலையாகிய 28
தேவர்களைச் சேவிப்பீர்கள்; அவைகள் மரத்தி 29
னாலும் கல்லினாலும் செய்யப்பட்டவைகள்; அவைகள் காணவும் கேட்கவும் புசிக்கவும் முகரவும் மாட்டாதவைகள். அந்த நிலைமையிலிருந்தும் உன் கடவுளாகிய யெகோவாவைத் தேடுவாயானால், உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அவரைத் தேடிக்கொண்டிருப்பாயானால், அவரைக் கண்டடைவாய். இவைகளெல் 30
லாம் உனக்குச் சம்பவிக்கவே நீ வியாகுலப்படுகையில் கடைசி நாட்களிலே உன் கடவுளாகிய யெகோவாவினிடம் திரும்பி அவர் சப்தத்திற்குச் செவிகொடுப்பாய். உன் 31
கடவுளாகிய யெகோவா இரக்கமுள்ள தெய்வம்; அவர் உன்னைக் கைவிடமாட்டார், உன்னை அழிக்கமாட்டார், உன் பிதாக்களோடு அவர் ஆணையிட்டுச் செய்த உடன்படிக்கையை மறக்கவுமாட்டார். வானத்தின் ஒரு முனைதொடங்கி அதின் மறுமுனை 32
மட்டுமுள்ள எல்லா இடங்களிலும் பூர்வநாட்களில், உனக்கு முன்னானகாலங்களிலே கடவுள் மனிதனைப் பூமியிலே சிருஷ்டித்த நாள் முதல், சம்பவித்தவைகளை விசாரித்துப்பார்; இதைப்போன்ற பெரிய காரியம் நடந்ததுண்டோ? இதைப் போன்றதைக் கேள்விப்பட்டதுண்டோ? அக்கினியின் நடு 33
விலிருந்து பேசுகிற கடவுளின் சப்தத்தை நீ கேட்டதுபோல வேறெந்த ஜனமாவது கேட்டதும், கேட்டுப் பிழைத்திருந்ததும் உண்டோ? உங்கள் கடவுளாகிய யெகோவா 34
எகிப்திலே உங்கள் கண்காண உங்களுக்குச் செய்தபடியெல்லாம், சோதனைகளினாலும் அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் யுத்தத்தினாலும் பலத்தினாலும் நீட்டிய கரத்தினாலும் மகாபயங்கரச் செயல்களினாலும் ஒரு ஜனத்தை அந்திய ஜாதிகளின் நடுவிலிருந்து தனக்கென்று தெரிந்தெடுக்கத் தேடிப்போன ஒரு தெய்வமுண்

35 டோ? யெகோவாவே கடவுள்; அவரை
யன்றிவேறொருவருமில்லை என்று நீ அறியும்
படிக்கே இது உனக்குக் காட்டப்பட்டது.
36 உனக்கு உபதேசிக்கும்படி அவர் வானத்தி
லிருந்து தமது சப்தத்தை உனக்குக் கேட்
கப்பண்ணிப் பூமியிலே தமது பெரிய அக்
கினியை நீ காணும்படிசெய்தார்; அக்கினி
யின் நடுவிலிருந்து வந்த அவருடைய வார்த்
37 தைகளை நீ கேட்டாய். அவர் உன் பிதாக்க
ளில் அன்புகூர்ந்தபடியால் அவர்களுடைய
சந்ததியாரைத் தெரிந்தெடுத்துத் தமது
மிகுந்த வல்லமையில் தமது திருச்சமுகத்தி
லேயே உன்னை எகிப்திலிருந்து கொண்டு
38 வந்தார்; உன்னிலும் பெரியவர்களும்
பலத்தவர்களுமான ஜாதிகளை உனக்குமுன்
னிராதபடி துரத்தி உன்னைக் கொண்டுபோய்,
இந்நாளில் இருக்கிறதுபோல, அவர்கள்
தேசத்தை உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்
39 கவே அப்படிச் செய்தார். ஆகையால்
உயர வானத்திலும் தாழ பூமியிலும் யெகோ
வாவே கடவுள், அவரையன்றி ஒருவரு
மில்லையென்று நீ இந்நாளில் அறிந்து உன்
40 மனதிலே பதியவைத்துக்கொள். நான்
இன்று உனக்குப்போதிக்கிற அவருடைய
நியமங்களையும் கட்டளைகளையும் கைக்
கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால்
உனக்கும் உனக்குப்பின் உன் பிள்ளைக
ளுக்கும் க்ஷேமமாம். உன் கடவுளாகிய
யெகோவா உனக்கு எக்காலத்திற்குமெனக்
கொடுக்கிற தேசத்திலே நீ நெடுநாளிருப்
பாய் என்று சொன்னார்.
41 அக்காலத்திலே மோசே யோர்தானுக்குக்
கிழக்கே சூரியன் உதிக்கும் திசையில்
மூன்று ஊர்களை அடைக்கல புரங்களாகப்
42 பிரித்துவைத்தான். முற்பகையின்றிக் கைப்
பிசகாய் ஒருவனைக் கொன்றவன் அவை
களில் ஒன்றுக்குத் தப்பியோடிப்போய்
பிழைக்கும்படி அவற்றை ஏற்படுத்தினான்.
43 ரூபனியரைச் சேர்ந்த சமவெளியிலே வனாந்
தரத்திலுள்ள பேசேரும் காத்தியரைச்சேர்ந்த
கிலெயாத்திலுள்ள ராமோத்தும் மனாசே
யரைச் சேர்ந்த பாசானிலுள்ள கோலானுமே
அந்த மூன்று ஊர்கள்.
44 மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு விவ
45 ரித்த பிரமாணம் இதுவே. இஸ்ரவேல்
புத்திரர் எகிப்திலிருந்து வந்தபின் யோர்
தானுக்குக் கிழக்கே எஸ்போனில் குடி
யிருந்த எமோரிய ராஜாவாகிய சீகோனின்
தேசத்திலுள்ள பேத்பெயோருக்கு எதிரான
பள்ளத்தாக்கிலே அவர்களுக்கு மோசே
சொன்ன சாட்சியங்களும் நியமங்களும்
46 தீர்ப்புகளும் இவைகளே. மோசேயும்
இஸ்ரவேல் புத்திரரும் எகிப்திலிருந்து வந்த
பின்பு அந்த ராஜாவை முறியடித்தார்கள்;
அவன் தேசத்தையும், பாசானின் ராஜா 47
வாகிய ஓகின் தேசத்தையும் பிடித்துச்
சொந்தமாக்கிக்கொண்டார்கள். இவர்களே
எமோரியரின் இரண்டு ராஜாக்கள்; இவர்
கள் தேசங்கள் யோர்தானுக்குக் கிழக்கே
சூரியன் உதிக்கும் திசையிலிருந்தன.
அவை அர்னோன் பள்ளத்தாக்கை ஒட்டி 48
யிருக்கிற அரோவேர்தொடங்கி எர்மோன்
என்னும் இஸீயோன் மலைவரையுள்ள
காடும், யோர்தானின் கீழ்கரையில் சூரி 49
யன் உதிக்கும் திசையில் அராபாவின்
கடலைப் பிஸ்காவின் செங்குத்துச்சரிவு
தொடும் இடம்வரையுமுள்ள அராபாவுமே.
மோசே இஸ்ரவேலர் அனைவரையும் 5
அழைப்பித்து அவர்களைப்பார்த்து: இஸ்ர
வேலரே, இந்த நாளிலே நான் உங்கள்
காதுகள்கேட்கச் சொல்லும் நியமங்களையும்
தீர்ப்புகளையும் கேளுங்கள். நீங்கள் அவை
களைக் கற்றறிந்து கைக்கொண்டு அவை
களின்படியே நடக்கவேண்டும். நமது 2
கடவுளாகிய யெகோவா ஓரேபிலே நம்
மோடே உடன்படிக்கை செய்தார்.
யெகோவா அந்த உடன்படிக்கையை நமது 3
பிதாக்களோடு செய்யவில்லை, இந்தநாளில்
இவ்விடத்திலே உயிரோடிருக்கிற நம்
மெல்லாரோடுமே செய்தார். யெகோவா 4
மலையிலே அக்கினியின் நடுவிலிருந்து முக
முகமாய் உங்களோடே பேசினார். யெகோ 5
வாவின் வார்த்தையை உங்களுக்கு அறிவிக்
கும்படி அக்காலத்திலே நான் யெகோவாவுக்
கும் உங்களுக்கும் நடுவில் நின்றேன். நீங்
கள் அக்கினிக்குப் பயந்தீர்கள், மலையின்
மேல் ஏறவில்லை. அச்சமயத்தில் அவர்
இவ்வார்த்தைகளைத் திருவுளம்பற்றினார்:
உன்னை அடிமைத்தனவீடாகிய எகிப்து 6
தேசத்திலிருந்து கொண்டுவந்த உன் கடவு
ளாகிய யெகோவா நானே. என்னையன்றி 7
வேறே தேவர்கள் உனக்கு இருக்கவேண்
டாம்.
நீ உனக்கு ஒரு விக்கிரகத்தைச் செய்து 8
கொள்ளவேண்டாம்; மேலே வானத்திலும்
கீழே பூமியிலும் பூமியின் கீழ்த் தண்ணீரிலு
முள்ளவைகளுக்கு ஒப்பான எந்தச் சொரு
பத்தையும் செய்துகொள்ளவேண்டாம்.
நீ அவைகளை வணங்கவும் சேவிக்கவும் 9
வேண்டாம்; உன் கடவுளாகிய யெகோவா
என்கிற நான் எரிச்சலுள்ள கடவுள், என்
னைப் பகைக்கிறவர்கள் விஷயத்தில் பிதாக்
களின் அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில்
மூன்றும் நான்காம் தலைமுறைமட்டும்

10 விசாரிக்கிறவராயிருக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்து என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோவெனில் ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ் செய்கிறவராயிருக்கிறேன்.

11 உன் கடவுளாகிய யெகோவாவின் திருநாமத்தை வீணிலே வழங்காதே; தமது திருநாமத்தை வீணிலே வழங்குகிறவனை யெகோவா தண்டியாமல் விடார்.

12 உன் கடவுளாகிய யெகோவா உனக்குக் கட்டளையிட்டபடியே பரிசுத்தமாய் ஆசரிப்பதற்கென ஒய்வுநாளைக் கைக்கொள்ள

13 வேண்டும். ஆறுநாளும் நீ உழைத்து உன்

14 வேலைகளையெல்லாம் செய்துகொள்; ஏழாம் நாளோ உன் கடவுளாகிய யெகோவாவுக்கான ஒய்வுநாள்; அதிலே நீயோ, உன் குமாரனே, உன் குமாரத்தியோ, உன் வேலைக்காரனே, வேலைக்காரியோ, உன் எருதோ, உன் கழுதையோ, உனக்குள்ள வேறெந்த மிருகமோ, உன் வாசல்களுக்குள் இருக்கிற அந்நியனே யாதொரு வேலையும் செய்ய வேண்டாம்; நீ இளைப்பாறுவதுபோலவே உன் வேலைக்காரனும் உன் வேலைக்காரியும்

15 இளைப்பாறவேண்டும்; நீ எகிப்து தேசத்தில் அடிமையாயிருந்தாய் என்றும் உன் கடவுளாகிய யெகோவா புயபலத்தினாலும் நீட்டிய கரத்தினாலும் உன்னை அங்கிருந்து கொண்டுவந்தார் என்றும் நினைத்துக்கொள்; அதினிமித்தமே ஒய்வுநாளை ஆசரிக்க உன் கடவுளாகிய யெகோவா உனக்குக் கட்டளையிட்டார்.

16 உன் கடவுளாகிய யெகோவா உனக்குக் கட்டளையிட்டபடியே நீ உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணவேண்டும்; அப்படிச் செய்தால் உன் கடவுளாகிய யெகோவா உனக்குக் கொடுக்கிற தேசத்திலே நீ நெடுநாளிருப்பாய், க்ஷேமமாயிருப்பாய்.

17 கொலைசெய்யாதே.

18 விபசாரம் செய்யாதே.

19 களவுசெய்யாதே.

20 அயலானுக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சி சொல்லாதே.

21 அயலான் மனைவியை இச்சியாதே; அயலான் வீட்டிலும் அவன் நிலத்திலும் அவன் வேலைக்காரனிலும் அவன் வேலைக்காரியிலும் அவன் எருதிலும் அவன் கழுதையிலும் உன் அயலானுக்குள்ள வேறு எதிலும் ஆசைவையாதே.

22 யெகோவா மலையிலே அக்கினியிலும் மேகத்திலும் காரிருளிலுமிருந்து உங்கள் கூட்டத்தார் அனைவரிடத்திலும் மகா சத்தமாய் இந்த வார்த்தைகளையெல்லாம் சொன்னார்; அவைகளையேயன்றி அதிகம் ஒன்றும் சொல்லவில்லை; அவைகளை இரண்டு கற்பலகைகளில் எழுதி என்னிடம் கொடுத்தார். மலை அக்கினியாய் எரிகை 23
யில் இருளின் நடுவிலிருந்தெழுந்த சத்தத்தை கேட்கவே, நீங்கள் உங்கள் கோத்திரத்தலைவர் அனைவரையும் உங்கள் மூப்பரையும் என்னைக் கிட்டிவரச்செய்து:
இதோ, நமது கடவுளாகிய யெகோவா 24
நமக்குத் தமது மகிமையையும் தமது மகத்துவத்தையும் காண்பித்தார்; அக்கினியின் நடுவிலிருந்து எழுந்த அவருடைய சப்தத்தையும் கேட்டோம்; கடவுள் மனுஷனுடே பேசினதையும், அவர் பேச்சக்கேட்ட மனிதன் பிழைத்திருக்கிறதையும் இந்நாளிலே கண்டோம். இப்பொழுதும் நாங் 25
கள் சாவானேன்? இந்தப் பெரிய அக்கினி எங்களைப் பட்சித்துவிடும்; நாங்கள் இன்னும் நமது கடவுளாகிய யெகோவாவின் சப்தத்தைக் கேட்போமாகில் செத்தே போவோம். நாங்கள் கேட்டதுபோல 26
அக்கினியின் நடுவிலிருந்து பேசுகிற ஜீவனுள்ள கடவுளின் சப்தத்தை மாம்சமான வர்களிலே கேட்டுப் பிழைத்திருக்கிறவன் யார்? நீரே கிட்டிச்சேர்ந்து நமது கடவுளா 27
கிய யெகோவா சொல்வதையெல்லாம்கேட்டு வாரும், நமது கடவுளாகிய யெகோவா சொல்வதையெல்லாம் நீரே எங்களுக்குச் சொல்லவேண்டும்; நாங்கள் செவிகொடுத்து அதின்படியே செய்வோம் என்றீர்கள்.
நீங்கள் என்னுடே பேசுகையில் நீங்கள் 28
சொன்னவைகளை யெகோவா கேட்டார். கேட்கவே அவர் என்னிடம்: இந்த ஜனங்கள் உன்னிடம் சொன்ன வார்த்தைகளைக் கேட்டேன்; அவர்கள் சொன்னதெல்லாம் சரியே. அவர்களும் அவர்கள் பிள்ளை 29
களும் என்றென்றைக்கும் க்ஷேமமாயிருக்கும்படி, அவர்கள் எக்காலும் எனக்குப் பயந்து என் கற்பனைகளையெல்லாம் கைக்கொள்வதற்கேற்ற இருதயம் அவர்களுக்கு இருந்தாலோ—எவ்வளவோ நன்றாயிருக்கும். நீ போய், உங்கள் கூடாரங்களுக்குத் 30
திரும்பிப்போங்கள் என்று அவர்களுக்குச் சொல். நீயோ இங்கே என்னிடம் 31
வந்து இரு. நான் அவர்களுக்குச் சொந்தமாகக் கொடுக்கும் தேசத்திலே அவர்கள் செய்யும்படி நீ அவர்களுக்குப் போதிக்க வேண்டிய சகல கட்டளைகளையும் நியமங்களையும் தீர்ப்புகளையும் உனக்குச் சொல்லுவேன் என்றார். உங்கள் கடவுளாகிய 32
யெகோவா உங்களுக்குக் கட்டளையிட்டபடியே செய்வதற்கு ஜாக்கிரதையாயிருங்

கள்; வலதுபுறம் இடதுபுறம் விலகாதிருங்
33 கள். உங்கள் கடவுளாகிய யெகோவா
உங்களுக்கு விதித்த வழிகளெல்லாவற்றி
லும் நடவுங்கள், அப்படிச் செய்தால் நீங்
கள் பிழைத்திருப்பீர்கள்; உங்களுக்கு
க்ஷேமமுண்டாகும்; நீங்கள் சொந்தமாக்கிக்
கொள்ளும் தேசத்திலே நெடுநாளிருப்பீர்
கள்.

**6** உங்களுக்குப் போதிக்கவேண்டுமென்று
உங்கள் கடவுளாகிய யெகோவா விதித்த
கட்டளைகளும் நியமங்களும் தீர்ப்புகளும்
2 இவைகளே. நீங்கள் கடந்துபோய்ச்
சொந்தமாக்கிக்கொள்ளுகிற தேசத்திலே
இவற்றின்படியே செய்யவேண்டும்.
1 ஜீவனுள்ள நாளெல்லாம் நீயும் உன்
குமாரனும் உன் குமாரனின் குமாரனும்
நான் உனக்குப் போதிக்கிற அவருடைய
சகல நியமங்களையும் கட்டளைகளையும் கைக்
கொள்வதற்கு ஏதுவாய் நீ உன் கடவுளாகிய
யெகோவாவுக்குப் பயப்படும்படியாகவும்
நெடுநாளிருக்கும்படியாகவும் இப்படிச்
3 செய்யவேண்டும். இஸ்ரவேலே, நீ அவை
களுக்குச் செவிகொடுத்து அவைகளின்படி
செய்ய ஜாக்கிரதையாயிரு; அப்படியானால்
நீ க்ஷேமமாயிருப்பாய்; உன் பிதாக்களின்
கடவுளாகிய யெகோவா உனக்குச் சொன்ன
படியே பாலும் தேனும் ஓடுகிற தேசத்தில்
நீங்கள் மிகவும் பெருகுவீர்கள்.

4 இஸ்ரவேலே கேள்: யெகோவாவே நமது
5 கடவுள், யெகோவா ஒருவரே. நீ உன்
கடவுளாகிய யெகோவாவிலே உன் முழு
இருதயத்தோடும் உன் முழு ஆத்துமா
வோடும் உன் முழு பலத்தோடும் அன்பு
6 கூரவேண்டும். இந்த நாளில் நான் உனக்
குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள்
உன் இருதயத்திலே பதிந்திருக்கவேண்டும்.
7 நீ அவைகளை உன் பிள்ளைகளின் மனதில்
படும்படி போதிக்கவேண்டும்; நீ உன் வீட்
டில் உட்கார்ந்திருக்கிறபோதும் வழியில்
நடக்கிறபோதும் படுத்துக்கொள்ளுகிற
போதும் எழுந்திருக்கிறபோதும் அவை
8 களைப்பற்றிப் பேசவேண்டும். அவை
களை உன் கையின்மேல் அடையாள
மாகக் கட்டிக்கொள், அவைகள் உன் கண்
களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்க
9 வேண்டும். அவைகளை உன் வீட்டு நிலை
களிலும் உன் வெளிவாசல்களிலும் எழுது.
10 உன் கடவுளாகிய யெகோவா ஆபிரகாம்
ஈசாக்கு யாக்கோபு என்பவர்களாகிய உன்
பிதாக்களிடத்தில் ஆணையிட்டு உனக்குத்
தருவதாக வாக்குக்கொடுத்த தேசத்திலே
உன்னைக் கொண்டுபோய்ச் சேர்ப்பார். நீ

கட்டாத வசதியான பெரிய பட்டணங்
களும் | நீ நிரப்பாமலே சகல நல்ல வஸ்துக் 11
களும் நிறைந்துள்ள வீடுகளும் நீ வெட்டா
மல் வெட்டப்பட்டுள்ள தண்ணீர்த்தொட்டி
களும் நீ நடாத திராட்சத்தோட்டங்களும்
ஒலிவத் தோப்புகளும் அங்கிருக்கும். நீ
சாப்பிட்டுத் திருப்தியாகும்போது | அடி 12
மைத்தன வீடாகிய எகிப்துதேசத்திலிருந்து
உன்னைக் கொண்டுவந்த யெகோவாவை மற
வாதபடி ஜாக்கிரதையாயிரு. உன் கடவு 13
ளாகிய யெகோவாவுக்குப் பயந்து அவ
ரையே சேவித்து அவருடைய திருநாமத்
தைக்கொண்டே ஆணையிடு. உங்களைச் 14
சுற்றிலுமிருக்கிற ஜனங்களின் தேவர்களா
கிய அந்திய தேவர்களைப் பின்பற்ற
வேண்டாம். உன் நடுவிலிருக்கிற உன் 15
கடவுளாகிய யெகோவா எரிச்சலுள்ள
தெய்வம். உன் கடவுளாகிய யெகோவா
வின் கோபம் உன்மேல் மூண்டு அவர் உன்
னைப் பூமியில் வைக்காமல் அழித்துவிடாத
படி எச்சரிக்கையாயிருந்துகொள்.

நீங்கள் மாசாவிலே செய்ததுபோல உங் 16
கள் கடவுளாகிய யெகோவாவைச் சோதிக்க
வேண்டாம். உங்கள் கடவுளாகிய 17
யெகோவா உங்களுக்கு விதித்த கட்டளை
களையும் சாட்சியங்களையும் நியமங்களையும்
ஜாக்கிரதையாய்க் காத்துக்கொள்ளவேண்
டும். யெகோவாவின் பார்வையிலே நேர் 18
மையும் நலமுமாயிருப்பவற்றைச் செய்ய
வேண்டும்; செய்தால் நீ க்ஷேமமாயிருப்பாய்.
யெகோவா ஆணையிட்டு உன் பிதாக்களுக்
குக் கொடுத்த நல்ல தேசத்திலே நீ சேர்ந்து
அதைச் சொந்தமாக்கிக்கொள்வாய். தாம் 19
சொன்னபடியே யெகோவா உன் சத்துருக்
களை உனக்கு முன் துரத்திவிடுவார்.

பிற்காலத்திலே உன் குமாரன்: நமது 20
கடவுளாகிய யெகோவா உங்களுக்குக் கட்
டளையிட்ட சாட்சியங்கள், நியமங்கள்,
தீர்ப்புகள் ஆகிய இவற்றின் கருத்தென்ன
என்று உன்னிடத்தில் கேட்டால் | நீ உன் 21
குமாரனிடம்: நாங்கள் எகிப்திலே பார்வோ
னுக்கு அடிமைகளாயிருந்தோம்; யெகோவா
புயபலத்தினாலே எங்களை எகிப்திலிருந்து
கொண்டுவந்தார். யெகோவா எங்கள் கண் 22
காண எகிப்தின்மேலும் பார்வோன்மேலும்
அவன் குடும்பம் அனைத்தின்மேலும் அடை
யாளங்களையும் கொடிதான பெரிய அற்
புதங்களையும் விளங்கப்பண்ணினார். எங் 23
களையோ அவ்விடத்திலிருந்து வரவழைத்
தார்; அவர் ஆணையிட்டு நமது பிதாக்களுக்
குக் கொடுத்த தேசத்துக்கு நம்மைக்
கொண்டுவந்து அதை நமக்குக் கொடுக்கும்

24 படியாக இப்படிச் செய்தார். இந்நாளில் இருக்கிறதுபோல நம்மை அவர் உயிரோடே காப்பதற்கும் நாம் எந்நாளும் க்ஷேமமாயிருப்பதற்கும் ஏதுவாய் நமது கடவுளாகிய யெகோவாவுக்குப் பயந்து இந்த எல்லா நியமங்களின்படியேயும் செய்ய யெகோவா 25 நமக்குக் கட்டளையிட்டார். நமது கடவுளாகிய யெகோவா நமக்குக் கட்டளையிட்ட படியே நாம் அவர் திருச்சமுகத்தில் இந்தச் சகல கட்டளைகளின்படியும் செய்ய ஜாக்கிரதையாயிருந்தால் அதுவே நமக்கு நீதியாகும் என்று சொல்லவேண்டும்.

**7** நீ சொந்தமாக்கிக்கொள்ளப்போகிற தேசத்தில் உன் கடவுளாகிய யெகோவா உன்னைக் கொண்டுபோய்ச் சேர்த்துப் பெரிய ஜாதிகளாகிய ஏத்தியர், கிர்காசியர், எமோரியர், கானானியர், பாரசீகர், ஏவியர், எபூசியர் என்பவர்களை, உன்னிலும் பெரியவர்களும் பலத்தவர்களுமான ஏழு ஜாதிகளை, உனக்கு 2 முன்பாகத் துரத்தி | உன் கடவுளாகிய யெகோவா அவர்களை உன்னிடம்ஒப்புக்கொடுக்கும்போது நீ அவர்களை முறியடித்து தெய்வசாபம் நிறைவேற அவர்களைச் சங்காரிக்கவேண்டும்; அவர்களோடே உடன்படிக்கை செய்யவேண்டாம், அவர்களுக்கு இரக்கங் 3 காட்டவும் வேண்டாம்; அவர்களோடே சம்பந்தம் கலவாதே, உன் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாதே, அவர்கள் குமாரத்திகளை உன் குமாரருக்குக் 4 கொள்ளாதே; என்னைப் பின்பற்றாமல் அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி அவர்கள் உன் குமாரரை விலகப்பண்ணுவார்கள். அப்பொழுது யெகோவா உங்கள்மேல் கோபமூண்டவராய் உங்களைச் சிக்கிரத்தில் 5 அழிப்பார். நீங்கள் அவர்களுக்குச் செய்ய வேண்டியது இதுவே: அவர்கள் பலிபீடங்களை இடியுங்கள், அவர்கள் சிலைகளை உடையுங்கள், அவர்கள் மரச்சிலைகளை வெட்டுங்கள், அவர்கள் விக்கிரகங்களை 6 அக்கினியிலே எரித்துவிடுங்கள். நீ உன் கடவுளாகிய யெகோவாவுக்குப் பரிசுத்த ஜனம், உன் கடவுளாகிய யெகோவா பூமியின்மீதுள்ள சகல ஜனங்களிலும் உன்னையே தமக்குச் சொந்த ஜனமாகத் தெரிந் 7 தெடுத்தார். யெகோவா உங்கள்பேரில் பிரியம் வைத்து உங்களைத் தெரிந்தெடுத்தது நீங்கள் சகல ஜாதிகளிலும் திரளானவர்கள் என்றல்ல; நீங்கள் சகல ஜனங்களிலும் சொற்பப் பேராயிருந்தீர்கள். யெகோவா உங்களில் அன்புகூர்ந்ததினாலும் 8 உங்கள் பிதாக்களுக்கு இட்ட ஆணையைக் காக்கவேண்டும் என்றதினாலும் யெகோவா உங்களை அடிமைத்தனமாகிய எகிப்தினின்றும் அதின் ராஜாவான பார்வோனின் கையினின்றும் புயபலத்தினால் மீட்டுக்கொண்டு வந்தார். ஆகவே நீ அறி 9 ந்துகொள், உன் கடவுளாகிய யெகோவாவே கடவுள், தம்மில் அன்புகூர்ந்து தமது கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு ஆயிரம் தலைமுறைமட்டும் தமது உடன்படிக்கையையும் கிருபையையும் நிலைநிற்கச்செய்கிறவரான நம்பத்தக்க கடவுள். தம்மைப் பகைக்கிறவர்கள் விஷயத்திலோ 10 அவர்களுக்கே பதிலளித்து அவர்களை அழிக்கிறவர், தம்மைப் பகைக்கிறவன் விஷயத்தில் அவர் தாமதிப்பதில்லை, அவனுக்கே பதிலளிப்பார். ஆதலால், நீ செய்யும்படி 11 நான் இந்த நாளில் உனக்குப் போதிக்கிற கட்டளைகளையும் நியமங்களையும் நீர்ப்புகளையும் கைக்கொள்ளவேண்டும்.

இந்தத் நீர்ப்புகளை நீங்கள் கேட்டு நிறை 12 வேற்றி அவைகளின்படியே செய்யும்போது, உன் கடவுளாகிய யெகோவா ஆணையிட்டு உன் பிதாக்களுக்கு வாக்குக்கொடுத்த உடன்படிக்கையையும் கிருபையையும் தாமும் நிறைவேற்றுவார்; உன்மேல் அன்பு வைத்து உன்னை ஆசீர்வதிப்பார்; உனக்குக் 13 கொடுப்பேன் என்று உன் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்திலே உன்னைப் பெருகப்பண்ணுவார்; உன் கர்ப்பத்தின் கனியையும் உன் நிலத்தின் கனிகளாகிய உன் தானியத்தையும் உன் திராட்சரசத்தையும் உன் எண்ணெயையும் உன் மாடுகளின் கன்றுகளையும் உன் ஆடுகளின் குட்டிகளையும் ஆசீர்வதிப்பார். சகல ஜாதிகளையும் 14 விட நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்; உங்களிலும் உங்கள் மிருகங்களிலும் ஆணிலாகிலும் பெண்ணிலாகிலும் மலடிருப்பதில்லை. யெகோவா எந்த நோயையும் உன்னை விட்டு 15 விலக்குவார்; எகிப்தியரின் கொடிய ரோகங்கள்—அவைகள் உனக்குத் தெரியாதவைகளல்ல—உன்மேல் வரவொட்டார், உன்னைப் பகைக்கிற யாவர்மேலும் அவைகளை வரச்செய்வார். உன் கடவுளாகிய யெகோ 16 வா உன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கும் சகல ஜனங்களையும் நிர்மூலமாக்குவாய்; உன் கண் அவர்களுக்கு இரங்கவேண்டாம்; அவர்கள் தேவர்களை நீ சேவியாதே; சேவிப்பது உனக்குக் கண்ணியாம். அந்த ஜாதி 17 கள் என்னிலும் இனம் பெருத்தவைகள், நான் அவர்களைத் துரத்திவிடுவது எப்படி என்று உன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளும்போதும் | நீ அவர்களுக்குப் பயப்பட 18 வேண்டாம்; உன் கடவுளாகிய யெகோவா

பார்வோனுக்கும் எகிப்து முழுவதுக்கும்
19 செய்ததையும் | உன் கண்கள்கண்ட பெரி
ய சோதனைகளையும் அடையாளங்களையும்
அற்புதங்களையும், உன் கடவுளாகிய யெ
கோவா உன்னைக் கொண்டுவந்த காலத்தில்
அவர் காண்பித்த புயபலத்தையும் நீட்டிய
கரத்தையும் மறவாமல் நினைத்துக்கொள்.
நீ பயப்படுகிற சகல ஜனங்களுக்கும் உன்
கடவுளாகிய யெகோவா அப்படியே செய்
20 வார். மீதியாயிருந்து உன் கண்ணுக்கு
மறைவாய் ஒளித்துக்கொள்ளுகிறவர்களும்
அழிக்கப்போகுமட்டும் உன் கடவுளாகிய
யெகோவா அவர்கள் நடுவில் குளவிகளை
21 அனுப்புவார். அவர்களுக்குப் பயப்பட
வேண்டாம்; உன் நடுவிலிருக்கிற உன் கட
வுளாகிய யெகோவா பயங்கர மகா தெய்
22 வம். அந்த ஜாதிகளை உன் கடவுளாகிய
யெகோவா கொஞ்சங்கொஞ்சமாய் உன்னை
விட்டுத் துரத்திவிடுவார்; நீ அவர்களை ஒரு
மிக்க அழித்துவிடலாகாது; அழித்துவிட்
டால் காட்டுமிருகங்கள் உன்னிடத்திலே
23 பெருகிப்போம். உன் கடவுளாகிய யெ
கோவா அவர்களை உன்னிடம் ஒப்புக்கொ
டுப்பார்; அவர்கள் அழியுமட்டும் அவர்களை
24 மிகவும் கலங்கடிப்பார். அவர்கள் ராஜாக்
களை உன் கையில் ஒப்புக்கொடுப்பார்;
அவர்கள் பேர் வானத்தின்கீழ் இராதபடி
அவர்களைச் சங்கரிப்பாய்; நீ அவர்களை
அழித்துத் தீருமட்டும் ஒருவரும் உனக்கு
25 எதிர்த்துநிற்பதில்லை. அவர்கள் தேவர்களின்
விக்கிரகங்களை அக்கினியிலே சுட்டெரித்து
விடு, அவைகளின் மேலிருக்கிற வெள்ளியை
யும் பொன்னையும் இச்சியாதே, அதை எடு
த்துக்கொள்ளாதே, எடுத்துக்கொண்டால்
அது உனக்குக் கண்ணியாம். அது உன்
கடவுளாகிய யெகோவாவுக்கு அருவருப்பு;
அருவருப்பானதை உன் வீட்டினுள்
கொண்டுபோகாதே: கொண்டுபோனால்
நீயும் அதைப்போலச் சாபத்திற்குள்ளா
வாய்; அதை முற்றிலும் வெறுத்து அறவே
அருவருக்கவேண்டும்; அது சாபத்திற்குள்
ளானது.

**8** இந்நாளிலே நான் உங்களுக்குப் போதிக்
கிற சகல கட்டளைகளின்படியும் செய்ய
ஜாக்கிரதையாயிருங்கள். அப்படிச் செய்
தால், நீங்கள் பிழைத்துப் பெருகி, யெகோ
வா ஆணையிட்டு உங்கள் பிதாக்களுக்குக்
கொடுத்த தேசத்தினுள் பிரவேசித்து அதைச்
2 சொந்தமாக்கிக்கொள்வீர்கள். உன் கடவு
ளாகிய யெகோவா உன்னைக் கஷ்டத்துக்
குட்படுத்தித் தமது கட்டளைகளை நீ கைக்
கொள்வாயோ கைக்கொள்ளமாட்டாயோ
என்று உன்னைச் சோதித்து உன் இருதயத்தி
லுள்ளதை அறியும்படி இந்த நாற்பது வரு
ஷமாய் உன்னை வனாந்தரத்திலே நடத்திவந்த
வழிமுழுவதையும் நினைத்துக்கொள். அவர் 3
உன்னைக் கஷ்டத்துக்குட்படுத்தி உன்னைப்
பசியினால் வருத்தி நீயும் உன் பிதாக்களும்
அறியாதிருந்த மன்னாவினால் உன்னைப் போ
ஷித்தார். மனுஷன் ஆகாரத்தினால் மாத்திர
மல்ல யெகோவாவின் வாயிலிருந்து புறப்
படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்
பான் என்பதை உனக்கு உணர்த்தும்படிக்
கே அப்படிச் செய்தார். இந்த நாற்பது 4
வருஷமும் உன்மேலிருந்த வஸ்திரம் கந்தை
யாய்க் கிழிந்துபோனதுமில்லை, உன் கால்
வீங்கிப்போனதுமில்லை; ஒருவன் தன் குமா 5
ரனைச் சிட்சிக்கிறதுபோல உன் கடவுளா
கிய யெகோவா உன்னைச் சிட்சிக்கிறார்
என்று நீ உன் இருதயத்திலே உணர்ந்து
கொள். ஆகவே, உன் கடவுளாகிய யெ 6
கோவாவின் வழிகளில் நடந்து அவருக்குப்
பயப்படும்படி அவருடைய கட்டளைகளைக்
கைக்கொள்ளவேண்டும். உன் கடவுளா 7
கிய யெகோவா உன்னை நல்ல தேசத்திலே
கொண்டுவந்து சேர்க்கிறார்; அது பள்ளத்
தாக்குகளிலும் மலைகளிலும் பிறக்கும் நீரோ
ட்டங்களும் ஊற்றுகளும் மடுக்களும்
உள்ள தேசம்; அது கோதுமையும் வாற் 8
கோதுமையும் திராட்சச்செடிகளும் அத்தி
மரங்களும் மாதளஞ்செடிகளுமுள்ள தே
சம்; அது எண்ணெய் தரும் ஒலிவமரங்க
ளும் தேனுமுள்ள தேசம்; அது குறை 9
வின்றி ஆகாரம் புசிக்கத்தக்கதும் ஒன்றும்
உனக்குக் குறைபடாததுமான தேசம்;
அதின் கற்கள் இரும்பு, அதின் மலைகளில் 10
செம்பு வெட்டி எடுப்பாய். நீ புசித்துத்
திருப்தியாயிருக்கையில் உன் கடவுளாகிய
யெகோவா உனக்குக் கொடுத்த அந்த
நல்ல தேசத்துக்காக அவரை ஸ்தோத்திரி.
உன் கடவுளாகிய யெகோவாவை மறவாத 11
படி ஜாக்கிரதையாயிரு; மறந்துவிட்டால்,
இக்காளில் நான் உனக்குப் போதிக்கிற
அவருடைய கட்டளைகளையும் தீர்ப்புகளை
யும் நியமங்களையும் கைக்கொள்ளாமற்
போக நேரிடும். நீ புசித்துத் திருப்தியாகி 12
நல்ல வீடுகளைக்கட்டி அவைகளில் குடி
யிருக்கும்போதும், உன் ஆடுமாடுகள் பலுகி 13
உனக்கு வெள்ளியும் பொன்னும் பெருகி
உனக்குள்ளவைகளெல்லாம் வர்த்திக்கும்
போதும், உன் இருதயத்தில் மேட்டிமை 14
யடையாமலும், அடிமைத்தன வீடாகிய
எகிப்திலிருந்து உன்னைக் கொண்டுவந்த
உன் கடவுளாகிய யெகோவாவை மறவா

15 மலுமிரு; விஷப்பாம்புகளும் தேள்களும்
தண்ணீரற்ற வறட்சியுமுள்ள பயங்கரமான
பெரிய வனாந்தரத்திலே உன்னை வழிநடத்
தினவரும் உனக்காகக் கற்பாறையிலிருந்து
16 தண்ணீர் வரச்செய்தவரும் | உன் பிதாக்
கள் அறியாத மன்னாவினால் வனாந்தரத்தி
லே உன்னைப் போஷித்து வந்தவரும் அவ
ரே; உன்னைக் கஷ்டத்திற்குட்படுத்தி உன்
னைச் சோதித்து உன் பிற்காலத்திலே உன
க்கு நன்மை செய்யவேண்டுமென்றே இப்
17 படிச் செய்துவந்தார். என் சாமர்த்தியமும்
என் கைபலமும் இந்த ஐசுவரியத்தை
எனக்குச் சம்பாதித்தது என்று நீ உன் இரு
தயத்தில் சொல்லிக்கொள்ளாதே; உன் கட
18 வுளாகிய யெகோவாவை மறவாதே. உன்
பிதாக்களுக்கு ஆணையிட்ட தமது உடன்
படிக்கையை உறுதிப்படுத்தும்படி, இக்
காளில் உனக்கு இருக்கிறதுபோல, ஐசுவரி
யத்தைச் சம்பாதிக்கிறதற்கான பலத்தை
19 உனக்குக் கொடுக்கிறவர் அவரே. உன்
கடவுளாகிய யெகோவாவை நீ மறந்து அந்
நியதேவர்களைப் பின்பற்றி அவர்களைச்
சேவித்து வணங்குவாயானால் நிச்சயமாக
வே அழிந்துபோவீர்கள் என்று இந்நாளி
20 லே உங்களை எச்சரிக்கிறேன். உன் கடவு
ளாகிய யெகோவாவின் சப்தத்திற்கு நீங்கள்
செவிகொடாமற்போனதினால் யெகோவா
உங்களுக்கு எதிரே அழித்த ஜாதிகளைப்
போலவே நீங்களும் அழிந்துபோவீர்கள்.

**9** இஸ்ரவேலே, கேள்: நீ இப்பொழுதே
யோர்தானைக் கடந்து, உன்னிலும் பெரிய
வர்களும் பலத்தவர்களுமான ஜாதிகளையும்
வானத்தையளாவிய மதில்சூழ்ந்த பெரிய
2 பட்டணங்களையும் | அனுக்கின் புத்திரரான
பெரியவர்களும் வளர்ந்தவர்களுமான ஜனத்
தையும் அடிப்படுத்தப்போகிறாய்; இவர்
கள் செய்தியை நீ அறிந்து, அனுக்கின் புத்
திரருக்கு முன்பாக நிற்பவன் யார் என்று
சொல்லப்படுவதை நீ கேட்டிருக்கிறாய்.
3 உன் கடவுளாகிய யெகோவா உனக்கு
முன்பாகக் கடந்துபோகிறவர் என்பதை
இந்நாளில் அறிந்துகொள்; அவர் பட்
சிக்கிற அக்கினியைப்போல அவர்களை
அழிப்பார்; அவர்களை உனக்கு முன்பாகத்
தாழ்த்துவார்; இவ்விதமாக, யெகோவா
உனக்குச் சொன்னபடியே, நீ அவர்களைச்
சீக்கிரமாய்த் துரத்தி அவர்களை அழிப்பாய்.
4 உன் கடவுளாகிய யெகோவா அவர்களை
உனக்கு முன்பாகத் துரத்துகையில், என்
நீதியினிமித்தம் இந்தத்தேசத்தைச் சொந்த
மாக்கிக்கொள்ளும்படி யெகோவா என்னை
அழைத்துவந்தார் என்று நீ உன் இருதயத்
தில் சொல்லிக்கொள்ளவேண்டாம். அந்த
ஜாதிகளின் துன்மார்க்கத்தினிமித்தமே
யெகோவா அவர்களை உனக்கு முன்பாகத்
துரத்திவிடுகிறார். 5 நீ அவர்கள் தேசத்தைச்
சொந்தமாக்கிக்கொள்ளப்போவது உன் நீதி
யினிமித்தமும் உன் இருதயத்தின் நேர்மை
யினிமித்தமுமல்ல; அந்த ஜாதிகளுடைய
துன்மார்க்கத்தினிமித்தம் உன் கடவுளாகிய
யெகோவா அவர்களை உனக்கு முன்பாகத்
துரத்திவிடுகிறார்; யெகோவா ஆணையிட்டு
உன் பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு,
யாக்கோபு என்பவர்களுக்குக் கொடுத்த
வாக்கை நிறைவேற்றும்படியாகவும் அப்
படிச் செய்கிறார். 6 ஆகையால், உன் கடவு
ளாகிய யெகோவா அந்த நல்ல தேசத்தை
உனக்குச் சொந்தமாகக் கொடுப்பது உன்
நீதியினிமித்தமல்ல என்பதை நீ உணர்ந்து
கொள்ளவேண்டும்; நீ வணங்காக் கழுத்
துள்ள ஜனம். 7 நீ வனாந்தரத்தில் உன் கடவு
ளாகிய யெகோவாவுக்குக் கடுங்கோபம்
உண்டாக்கினதை நினை, அதை மறவாதே;
நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட நாள்
முதல் இவ்விடத்திலைவந்து சேருமட்டும்
யெகோவாவுக்கு விரோதமாய்க் கலகம்
பண்ணினீர்கள். 8 ஒரேபிலும் நீங்கள் யெகோ
வாவுக்குக் கடுங்கோபம் வரச்செய்தீர்கள்,
உங்களை அழித்துவிடும்படி கடுங்கோபங்
கொண்டார். 9 யெகோவா உங்களோடு
செய்த உடன்படிக்கையின் பலகைகளாகிய
கற்பலகைகளைப் பெற்றுவரும்படி நான்
மலையில் ஏறினபோது இரவு பகல் நாற்
பதுநாள் நான் மலையிலேயே தங்கியிருந்
தேன், அன்னபானங்களை ஒன்றுமில்லா
திருந்தேன். அப்பொழுது யெகோவா திரு 10
விரலினால் எழுதியிருந்த இரண்டு கற்பலகை
களை என்னிடம் கொடுத்தார்; சபையினைத்
தும் கூடிவந்த அந்த நாளிலே யெகோவா
மலையில் அக்கினியின் நடுவிலிருந்து உங்க
ளோடு பேசின சகல வார்த்தைகளின்படியே
யும் அவைகளில் எழுதியிருந்தது. 11 இரவும்
பகலும் நாற்பதுநாள் முடிந்தபின்
யெகோவா எனக்கு அந்த உடன்படிக்கை
யின் இரண்டு கற்பலகைகளையும் கொடுக்
கையில் | யெகோவா என்னிடம்: நீ 12
எழுந்து சீக்கிரமாய் இவ்விடம்விட்டு இறங்
கிப்போ; நீ எகிப்திலிருந்து அழைத்துவந்த
உன் ஜனம் தங்களைக் கெடுத்துக்கொண்டது;
நான் அவர்களுக்கு விதித்த வழியை அவர்
கள் இவ்வளவு சீக்கிரமாக விட்டு விலகி
வார்ப்பு விக்கிரகத்தைத் தங்களுக்குச்
செய்துகொண்டார்கள் என்றார். 13 பின்னும்
யெகோவா என்னிடம்: இந்த ஜனத்தைப்

பார்த்தேன்; அது வணங்காக் கழுத்துள்ள
14 ஜனம். நீ என்னை விட்டுவிடு, நான் அவர்
களை அழித்து வானத்தின்கீழ் இராதபடி
அவர்கள் பேரை அற்றுப்போகப்பண்ணு
வேன்; உன்னையோ அவர்களிலும் பலத்த
15 பெரிய ஜாதியாக்குவேன் என்றார். நான்
திரும்பி மலையிலிருந்து இறங்கினேன்; மலை
யானது அக்கினிபற்றி யெரிந்துகொண்டிருந்
தது; உடன்படிக்கையின் இரண்டு பலகை
களும் என் இரண்டு கைகளிலுமிருந்தன.
16 நான் பார்த்தபோது, இதோ, நீங்கள் உங்கள்
கடவுளாகிய யெகோவாவுக்கு விரோத
மாகப் பாவஞ்செய்திருந்தீர்கள்; வார்ப்புக்
கன்றுக்குட்டியை உங்களுக்குச் செய்து
கொண்டு யெகோவா உங்களுக்கு விதித்த
வழியை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய்
17 விட்டு விலகிப்போனீர்கள். அப்பொழுது
நான் என் இரண்டு கைகளிலுமிருந்த அந்த
இரண்டு பலகைகளையும் என் கையால்
எறிந்து அவைகளை உங்கள் கண்களுக்கு
18 எதிரே உடைத்துப்போட்டேன். யெகோ
வாவைக் கோபமூட்டுவதற்கேதுவாய் நீங்கள்
அவர் பார்வையில் தீமையானதைச் செய்த
தினால் விளைந்த உங்களுடைய சகல பாவங்
களினிமித்தமும் நான் யெகோவாவின்
சந்நிதியில் முன்போலவே இரவு பகல்
நாற்பது நாள் விழுந்துகிடந்தேன்; அன்ன
பானங்கள் ஒன்றுமில்லாதிருந்தேன்.
19 யெகோவா உங்களை அழிக்கும்படி உங்கள்
மேல் கொண்டிருந்த கோபத்திற்கும் உக்
கிரத்திற்கும் பயந்திருந்தேன்; யெகோவா
அந்த முறையும் எனக்குச் செவிசாய்த்
20 தருளினார். ஆரோன்மேலும் யெகோவா
மிகவும் கோபங்கொண்டு அவனை அழிக்க
வேண்டும் என்றிருந்தார்; ஆரோனுக்காக
வும் அச்சமயத்தில் விண்ணப்பம்பண்ணி
21 னேன். நீங்கள் செய்த பாவமாகிய அந்தக்
கன்றுக்குட்டியை நான் எடுத்து அக்கினி
யிலே எரித்து அதை நொறுக்கித் தூளாய்ப்
போகுமட்டும் அரைத்து அந்தத்தூளை மலை
யிலிருந்து வருகிற நீரோடையிலே போட்டு
22 விட்டேன். தபேராவிலும் மாசாவிலும்
கிப்ரோத் அத்தாவாவிலும் யெகோவாவுக்குக்
23 கடிங்கோபம் உண்டாகச்செய்தீர்கள். நீங்
கள் போய், நான் உங்களுக்குக் கொடுத்த
தேசத்தைச் சொந்தமாக்கிக்கொள்ளுங்கள்
என்று யெகோவா காதேஸ்பர்னேயாவி
லிருந்து உங்களை அனுப்பினபோது நீங்கள்
உங்கள் கடவுளாகிய யெகோவாவை நம்
பாமலும் அவருடைய சப்தத்திற்குச் செவி
கொடாமலும் அவர் சொல்லுக்கு விரோத
24 மாய்க் கலகம்பண்ணினீர்கள். நான் உங்
களை அறிந்த நாள் முதற்கொண்டு நீங்கள்
யெகோவாவுக்கு விரோதமாகக் கலகம்
பண்ணுகிறவர்களாகவே யிருந்தீர்கள்.
25 யெகோவா உங்களை அழிப்பேனென்று
சொன்னபடியினால் நான் அந்த நாற்பது
நாட்களாக இரவும் பகலும் யெகோவாவின்
சமுகத்தில் விழுந்துகிடக்கையில், நான்
26 யெகோவாவினிடம் விண்ணப்பஞ்செய்து:
யெகோவாவாகிய ஆண்டவரே, தேவரீர்
உமது மகத்துவத்தினாலே மீட்டு புஜபலத்
தினாலே எகிப்திலிருந்து கொண்டுவந்த உமது
ஜனமும் சுதந்தரமுமாகிய இவர்களை அழித்
துவிடாதேயும்; தேவரீர் இந்த ஜனத்தின்
27 முரட்டு குணத்தையும் இவர்கள் துன்மார்க்
கத்தையும் இவர்கள் பாவத்தையும் பாரா
தேயும், உமது தாசராகிய ஆபிரகாம்
ஈசாக்கு யாக்கோபு என்பவர்களை நினைத்
தருளும்; உமது வல்லமையினால் நாங்கள்
28 விட்டுவந்த தேசத்துக் குடிகள், யெகோவா
அவர்களுக்கு வாக்குப்பண்ணியிருந்ததேசத்
திலே அவர்களைக் கொண்டுபோய்ச் சேர்க்க
முடியாமற்போனார், அவர்களைப் பகைத்து
வெறுத்தார்; ஆதலால் அவர்களை வனாந்த
ரத்தில் கொன்றுபோடும்படிக்கே கொண்டு
போனார் என்று சொல்லாதபடி பார்த்தரு
ளும்; இவர்கள் உமது ஜனம், உமது சுதந்
29 தரம்; இவர்களை நீர் உமது மகா பலத்தினா
லும் நீட்டிய கரத்தினாலும் கொண்டுவந்
தீரே என்று மன்றாடினேன்.

10 அச்சமயத்திலே யெகோவா என்னிடம்: நீ முன்னவைகளைப் போன்ற இரண்டு கற்
பலகைகளை வெட்டிக்கொண்டு மலையின்
மேல் ஏறி என்னிடம் வா; ஒரு மரப்பெட்
2 டகத்தையும் செய்துவை: நீ உடைத்துப்
போட்ட முன்னின பலகைகளில் இருந்த
வார்த்தைகளை நான் இந்தப் பலகைகளில்
எழுதுவேன்; நீ அவைகளைப் பெட்டகத்
3 திலே வைத்துக்கொள் என்றார். அப்படியே
நான் வாகைமரத்தினால் ஒரு பெட்டகத்
தைச் செய்து, முன்னவைகளைப்போன்ற
இரண்டு கற்பலகைகளை வெட்டி அவை
களை என் கையிலே எடுத்துக்கொண்டு மலை
4 யில் ஏறினேன்; சபையினைத்தும் கூடிவந்த
அந்த நாளில் யெகோவா மலையில் அக்கினி
நடுவிலிருந்து உங்களுக்கு விளம்பின பத்துச்
சொற்களையும் அவர் முன் எழுதியிருந்த பிர
காரமே அந்தப் பலகைகளில் எழுதி அவை
களை என்னிடம் தந்தார். நான் திரும்பி மலை
5 யிலிருந்து இறங்கி அந்தப் பலகைகளை நான்
செய்திருந்த பெட்டகத்திலே வைத்தேன்.
யெகோவா எனக்குக் கட்டளையிட்டபடியே
அவைகள் அதிலே இருக்கின்றன.

6 பின்பு இஸ்ரவேல்புத்திரர் பெனெயாக்
காஞுக்கடுத்த பேரோத்திலிருந்து பிரயாண
மாகி மோசெராவுக்குப் போஞர்கள்; அங்கே
ஆரோன் மரித்து அடக்கம்பண்ணப்பட்
டான்; அவன் ஸ்தானத்திலே அவன் குமார
ஞகிய எலெயாசார் ஆசாரியஞஞன்.
7 அங்கேயிருந்து குத்கோதாவுக்கும், குத்கோ
தாவிலிருந்து ஈரோடைகளுள்ள நாடாகிய
யோத்பாத்துக்கும் பிரயாணம்பண்ணினார்
கள்.
8 அக்காலத்திலே யெகோவா லேவியின்
கோத்திரத்தாரைப் பிரித்தெடுத்து, யெகோ
வாவின் உடன்படிக்கைப் பெட்டகத்தைச்
சுமப்பதற்கும், இந்நாள்வரைக்கும் நடந்து
வருகிறதுபோல யெகோவாவின் சந்நிதியி
லே நின்று அவருக்குப் பணிவிடைசெய்
வதற்கும், அவர் திருநாமத்தைக்கொண்டு
ஆசீர்வதிப்பதற்கும் அவர்களை நியமித்தார்.
9 ஆகையால் லேவிக்கு அவன் சகோதரரோ
டே பங்கும் சுதந்தரமும் இல்லை; உன்
கடவுளாகிய யெகோவா அவனுக்குச்
சொன்னபடி யெகோவாவே அவன் சுதந்த
ரம்.
10 நான் முந்தின தடவை இருந்ததுபோ
லவே இப்போதும் இரவு பகல் நாற்பது
நாள் மலையில் இருந்தேன்; யெகோவா
இந்த முறையும் எனக்குச் செவிசாய்த்
தருளி உன்னை அழியாமல் விட்டார்.
11 யெகோவா என்னிடம்: நான் கொடுப்
பேன் என்று அவர்கள் பிதாக்களுக்கு
ஆணையிட்ட தேசத்திலே அவர்கள்போய்ச்
சேர்ந்து அதைச் சொந்தமாக்கிக்கொள்ளும்
படி, நீ எழுந்து, ஜனத்திற்கு முன்பாகப்
பிரயாணப்பட்டுப்போ என்றார்.
12 இப்பொழுதும் இஸ்ரவேலே, உன் கடவு
ளாகிய யெகோவா உன்னிடம் கேட்பது
என்ன? நீ உன் கடவுளாகிய யெகோவா
வுக்குப் பயந்து, அவர் வழிகளிலெல்லாம்
நடந்து அவரிடத்தில் அன்புகூர்ந்து, உன்
முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்து
மாவோடும் உன் கடவுளாகிய யெகோவா
13 வைச் சேவித்து, நான் இந்நாளில் உனக்
குப் போதிக்கிற யெகோவாவின் கட்டளை
களையும் அவருடைய நியமங்களையும்
நீ கேமமாயிருப்பதற்கேதுவாய்க் கைக்
கொள்ளவேண்டும் என்பதுதானே,
14 வேறொன்றுமல்ல. இதோ, வானங்களும்
வானுதி வானங்களும் பூமியும் அதி
லுள்ள யாவும் உன் கடவுளாகிய யெகோ
15 வாவினுடையவைகள். எனினும் யெகோ
வா உன் பிதாக்களில் அன்புகூர்ந்து
பொருட்டு அவர்களை மேல் பிரியம்
வைத்து அவர்களுக்குப் பின் அவர்கள் சந்
ததியைத் தெரிந்தெடுத்தார், இந்நாளில்
இருக்கிறபடியே சகல ஜாதிகளிலும் உங்க
ளையே தமக்கென்று தெரிந்தெடுத்தார்.
16 ஆதலால் நீங்கள் இனி வணங்காக் கழுத்
துடையவர்களாயிராமல் உங்கள் இருதயத்
தில் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளுங்
17 கள். உங்கள் கடவுளாகிய யெகோவா
தேவாதிதேவன், கர்த்தாதி கர்த்தா, வல்ல
மையுமுள்ள பயங்கர மகா தெய்வம்; அவர்
பட்சபாதமுள்ளவரல்ல; பரிதானம் வாங்கு
18 கிறவருமல்ல. அவர் திக்கற்ற பிள்ளைக்கும்
விதவைக்கும் நியாயஞ்செய்கிறவர், அந்நிய
னில் அன்புவைத்து அவனுக்கு அன்னவஸ்
19 திரம் கொடுக்கிறவர். நீங்களும் எகிப்து
தேசத்தில் அந்நியராயிருந்தபடியால் அந்நி
யரில் அன்புகூருங்கள். உன் கடவுளாகிய
20 யெகோவாவுக்குப் பயந்து அவரைச்
சேவித்து அவரைப் பற்றிக்கொண்டிருந்து
அவருடைய திருநாமத்தைக்கொண்டு ஆணை
இடு; அவரே உன் துதி: உன் கண்கண்ட
21 இந்தப் பெரிய பயங்கரமான காரியங்களை
உனக்காகச் செய்த உன் கடவுள் அவரே.
22 உன் பிதாக்கள் எழுபதுபேராய் எகிப்துக்
குப் போஞர்கள்; இப்பொழுதோ உன்
கடவுளாகிய யெகோவா உன்னை வானத்தின்
நட்சத்திரங்களைப்போல வர்த்திக்கச் செய்
திருக்கிறார்.

11 ஆகவே நீ உன் கடவுளாகிய யெகோவா
வில் அன்புகூர்ந்து அவர் விதித்தவைகளா
கிய அவருடைய நியமங்களையும் நீர்ப்பு
களையும் கட்டளைகளையும் எப்பொழுதும்
கைக்கொள்ளவேண்டும்.

2 இந்நாளில் நீங்கள் இதை உணர்ந்து
கொள்ளுங்கள்; நான் பேசுவது உங்கள்
பிள்ளைகளோடல்ல, உங்கள் கடவுளாகிய
யெகோவா செய்த சிட்சையையும் அவரு
டைய மகத்துவத்தையும் அவருடைய புஜ
பலத்தையும் அவருடைய நீட்டிய கரத்
3 தையும் | அவர் எகிப்தின் நடுவிலே எகிப்
தின் ராஜாவாகிய பார்வோனுக்கும் அவன்
தேசமனைத்திற்கும் செய்த அவருடைய
அடையாளங்களையும் அவருடைய செயல்
4 களையும் | எகிப்திய சேனையும் அவர்கள்
குதிரைகளும் இரதங்களும் உங்களைப் பின்
தொடர்ந்து வருகையில் யெகோவா சிவந்த
சமுத்திரத்தின் தண்ணீரை அவர்கள்மேல்
புரளப்பண்ணி, இந்நாள்வரைக்கும் நிற்கும்
நாசத்தை அவர்களுக்கு வருவித்ததையும் |
5 நீங்கள் இவ்விடத்திற்கு வருமளவும் அவர்
உங்களுக்கு வனாந்தரத்திலே செய்ததை
6 யும் | ரூபனின் குமாரஞகிய எலியாவின் மக

களான தாத்தானையும் அபீராமையும் அவர்கள் குடும்பங்களையும் அவர்கள் கூடாரங்களையும் அவர்களோடிருந்த மிருகங்களையும் சகல இஸ்ரவேலரின் நடுவிலும் பூமி தன் வாயைத் திறந்து விழுங்கும்படி செய்ததையும் உங்கள் பிள்ளைகள் அறியவு
7 மில்லை, காணவுமில்லை; உங்கள் கண்களே யெகோவா செய்த மகத்தான செயல்களை
8 யெல்லாம் கண்டன. ஆகையால் நான் உங்களுக்கு இக்காலில் போதிக்கிற கட்டளைகளையெல்லாம் நீங்கள் கைக்கொள்ள வேண்டும்; கைக்கொண்டால் நீங்கள் பலப்படுவீர்கள், நீங்கள் கடந்துபோய்ச் சொந்தமாக்கிக்கொள்ளப்போகிற தேசத்தினுள்சென்று அதைச் சொந்தமாக்கிக்கொள்
9 வீர்கள். யெகோவா உங்கள் பிதாக்களுக்கும் அவர்கள் சந்ததிக்கும் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்டதும் பாலும் தேனும் ஓடுகிறதுமான தேசத்திலே நீங்கள் நெடுநாள் வாழ்ந்திருப்பீர்கள்.
10 நீ சொந்தமாக்கிக்கொள்ளும்படி பிரவேசிக்கப்போகிற தேசம் நீ விட்டுவந்த எகிப்து தேசத்தைப்போன்றதல்ல; அங்கே நீ விதையை விதைத்துக் கீரைத்தோட்டத்திற்கு நீர்ப்பாய்ச்சுகிறதுபோல உன் காலால் நீர்ப்
11 பாய்ச்சிவந்தாய். நீங்கள் சொந்தமாக்கிக் கொள்ளப்போகிற தேசமோ மலைகளும் பள்ளத்தாக்குகளுமுள்ள தேசம்; அது வானத்தின் மழைத்தண்ணீரைக் குடிக்கும் தேசம்;
12 அது உன் கடவுளாகிய யெகோவா விசாரிக்கிற தேசம், வருஷத்தின் துவக்கமுதல் வருஷத்தின் முடிவுமட்டும் எப்பொழுதும் உன் கடவுளாகிய யெகோவாவின் கண்கள் அதின்மேலிருக்கும்.
13 நீங்கள் உங்கள் கடவுளாகிய யெகோவாவில் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூர்ந்து அவரைச் சேவிக்கும்படி நான் இக்காளில் உங்களுக்குப் போதிக்கிற என் கட்டளைகளுக்குத் தவறாமல் செவிகொடுப்பீர்களா
14 னால் | நான் ஏற்றகாலத்திலே உங்கள் தேசத்தின் மழையை, முன்மாரியையும் பின்மாரியையும், தருவேன்; நீ உன் தானியத்தையும் திராட்ச ரசத்தையும் உன் எண்
15 ணெயையும் சேர்ப்பாய். உன் மிருகங்களுக்காக உன் வெளிகளிலே புல் முளைக்கும்படி செய்வேன். நீ சாப்பிட்டுத் திருப்தியடைவாய் என்கிறார். உங்கள் இருதயம்
16 வஞ்சிக்கப்படவேண்டாம்; நீங்கள் வழிவிலகி அந்திய தேவர்களைச் சேவித்து அவர்
17 களை வணங்கவேண்டாம்; தாக்கிரலதையாயிருங்கள். இராவிட்டால் யெகோவாவின் கோபம் உங்கள்மேல் மூளும், அவர் வானத்தை அடைத்துப்போடுவார், மழைபெய்யாது, பூமி தன் பலனைக் கொடாது; யெகோவா உங்களுக்குக் கொடுத்த நல்ல தேசத்திலிராதபடி நீக்கிரமாய் அழிந்துபோவீர்கள். ஆகையால் நான் உங்களுக்குச் 18
சொல்லுகிற இவ்வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும் உங்கள் ஆத்துமாவிலும் பதித்துவைக்கவேண்டும்; அவைகளை உங்கள் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்ளுங்கள்; அவைகள் உங்கள் கண்களின் நடுவே ஞாபகக்குறியாய் இருக்க வேண்டும். அவைகளை உங்கள் பிள்ளைக 19
ளுக்குப் போதியுங்கள்; நீ வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும் வழியில் நடக்கிறபோதும் படுத்துக்கொள்ளுகிறபோதும் எழுந்திருக்கிறபோதும் அவைகளைப்பற்றிப் பேசவேண்டும். அவைகளை உன் வீட்டு 20
நிலைகளிலும் உன் வெளிவாசல்களிலும் எழுது. அப்படிச்செய்தால் யெகோவா 21
உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் நீங்களும் உங்கள் பிள்ளைகளும் பூமியின்மேல் வானம் இருக்கும் காலெல்லாம் வாழ்ந்திருப்பீர்கள்.

நீங்கள் உங்கள் கடவுளாகிய யெகோவா 22
வில் அன்புகூர்ந்து அவர் வழிகளிலெல்லாம் நடந்து அவரைப் பற்றிக்கொண்டிருக்கும்படி, நீங்கள் செய்வதற்கென்று நான் உங்களுக்குப் போதிக்கிற இந்தக் கட்டளைகளையெல்லாம் தாக்கிரதையாய்க் கைக்கொள்வீர்களானால் | யெகோவா உங்களுக்கு 23
முன்பாக அந்த ஜாதிகளையெல்லாம் துரத்திவிடுவார்; உங்களிலும் பெரியவைகளும் பலத்தவைகளுமான ஜாதிகளை நீங்கள் அடிப்படுத்திக்கொள்வீர்கள்; உங்கள் உள்ளங் 24
கால் மிதிக்கும் இடமெல்லாம் உங்களுடையதாகும்; வனாந்தரமும் லீபனோனும் தொடங்கிக் கிழக்கே ஐபிராத்து நதியிலிருந்து மேல்சமுத்திரம் வரைக்கும் உங்கள் எல்லையாகும். உங்களுக்கு எதிரே ஒரு 25
வரும் நிற்பதில்லை; உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்குச் சொன்னபடியே உங்களால் உண்டாகும் பயமும் திகிலும் நீங்கள் மிதிக்கும் பூமியின்மேலெல்லாம் வரும்படி செய்வார்.

இதோ, இன்று நான் உங்களுக்கு முன் 26
பாக ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் வைக்கிறேன். இன்று நான் உங்களுக்குப் 27
போதிக்கிற உங்கள் கடவுளாகிய யெகோவாவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தீர்களானால் ஆசீர்வாதம் கிடைக்கும்; உங்கள் 28

கடவுளாகிய பெகோவாவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல், இன்று நான் உங்களுக்குப் போதிக்கிற வழியை விட்டு விலகி, நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றுவீர்களானால் சாபம் வரும்.

29 நீ சொந்தமாக்கிக்கொள்ளப்போகிற தேசத்தில் உன் கடவுளாகிய பெகோவா உன்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கும்போது, கெரிசீம் மலையின்மேல் ஆசீர்வாதத்தையும் ஏபால் மலையின்மேல் சாபத்தையும் கூறுவாய்.—அவைகள் யோர்தானின் மேல்புறத்திலே சூரியாஸ்தமன வழிக்கப்பால் அராபாவில் குடியிருக்கிற கானானியர் நாட்டில் கில்காலுக்கு எதிரே மோரே தோப்பின் அருகேயல்லவோ இருக்கிறது.—உங்கள் கடவுளாகிய பெகோவா உங்களுக்குக் கொடுக்கிற தேசத்தைச் சொந்தமாக்கிக் கொள்வதற்கு நீங்கள் யோர்தானைக் கடந்து போவீர்கள்; அதைச் சொந்தமாக்கிக் கொண்டு அதிலே குடியிருப்பீர்கள். ஆகையால் உங்களுக்கு இன்று நான் ஏற்படுத்துகிற சகல நியமங்களையும் தீர்ப்புகளையும் கைக்கொண்டு நடக்கவேண்டும்.

**12** உங்கள் பிதாக்களின் கடவுளாகிய பெகோவா நீங்கள் சொந்தமாக்கிக்கொள்ளும்படி கொடுக்கிற தேசத்திலே நீங்கள் பூமியில் உயிரோடிருக்கும் காலெல்லாம் கைக்கொண்டு நடக்கவேண்டிய நியமங்களும் தீர்ப்புகளும் இவைகளே:

2 நீங்கள் துரத்திவிடும் ஜாதிகள் உபரிந்த மலைகளின்மேலும் குன்றுகளின்மேலும் பச்சையான ஒவ்வொரு மரத்தின்கீழும் தங்கள் தேவர்களைச் சேவிக்கிற ஸ்தலங்களையெல்லாம் முற்றிலும் அழித்துவிடுங்கள். 3 அவர்கள் பலிபீடங்களை இடியுங்கள், அவர்கள் சிலைகளை உடையுங்கள், அவர்கள் மரச்சிலைகளை அக்கினியினால் சுட்டெரியுங்கள், அவர்கள் தேவர்களின் விக்கிரகங்களைத் தகர்த்துவிடுங்கள், அவைகளின்பேரும் அவ்விடத்தில் இராதபடி அழித்துவிடுங்கள்.

4 உங்கள் கடவுளாகிய பெகோவாவை நீங்கள் அப்படி வணங்கவேண்டாம்; 5 உங்கள் கடவுளாகிய பெகோவா தமது திருநாமம் விளங்கும்படி உங்கள் சகல கோத்திரங்களிலும் தெரிந்துகொள்ளும் ஸ்தானமாகிய அவருடைய வாசஸ்தலத்தையே தேடி, அங்கே போங்கள். 6 அவ்விடத்திலேயே உங்கள் தகனபலிகளையும் வேறெந்த இரத்தபலிகளையும் தசமபாகங்களையும் உங்கள் கை உயர்த்திப் படைக்கிறவைகளையும் உங்கள் பொருத்தனைகளையும் உங்கள் மனப்பூர்வபலிகளையும் உங்கள் ஆடுமாடுதலையீற்றுகளையும் கொண்டுபோங்கள். 7 அங்கே உங்கள் கடவுளாகிய பெகோவாவின் சந்நிதியிலே புசித்து, நீங்கள் சம்பாதித்த யாவற்றினிமித்தமும் உங்கள் கடவுளாகிய பெகோவா உங்களை ஆசீர்வதித்துக் கொடுத்தருளிய யாவற்றினிமித்தமும் நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் சந்தோஷப்படுங்கள். 8 இங்கே இன்னாளிலே நாம் செய்கிறதுபோல நீங்கள் செய்யலாகாது; இங்கே அவனவன் தன்தன் பார்வைக்குச் சரியானதைச் செய்கிறோம். 9 உங்கள் கடவுளாகிய பெகோவா உங்களுக்குக் கொடுக்கும் இளைப்பாறுதலிலும் சுதந்தரத்திலும் நீங்கள் இன்னும் பிரவேசிக்கவில்லையே. 10 நீங்கள் யோர்தானைக் கடந்துபோய் உங்கள் கடவுளாகிய பெகோவா உங்களுக்குச் சுதந்தரமாகக்கொடுக்கும் தேசத்திலே குடியேறிய பின், சுற்றிலும் இருக்கிற உங்கள் சத்துருக்களையெல்லாம் அவர் விலக்கி உங்களை இளைப்பாறப்பண்ணவே, நீங்கள் சேமமாய் வசித்திருக்கும்போது 11 உங்கள் கடவுளாகிய பெகோவா தமது திருநாமம் நிலைமாக ஒரு ஸ்தலத்தைத் தெரிந்துகொள்ளுவார்; அங்கே நீங்கள் உங்கள் தகனபலிகளையும் வேறெந்த இரத்தபலிகளையும் உங்கள் தசமபாகங்களையும் உங்கள் கை உயர்த்திப் படைக்கிறவைகளையும் நீங்கள் பெகோவாவுக்கு நேர்ந்துகொள்ளும் விசேஷித்த பொருத்தனைகளையும், நான் உங்களுக்குக் கட்டளையிடுகிற யாவற்றையுமே, கொண்டுபோய் 12 உங்கள் கடவுளாகிய பெகோவாவின் சந்நிதியில் நீங்களும் உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் உங்கள் வேலைக்காரரும் உங்கள் வேலைக்காரிகளும் உங்களோடு பங்கும் சுதந்தரமும் இல்லாமல் உங்கள் ஊர்களில் இருக்கிற லேவியனும் சந்தோஷப்படுங்கள். 13 கண்ட இடமெல்லாம் நீ தகனபலி இடாதே, ஜாக்கிரதையாயிரு. 14 உன் கோத்திர நாடுகள் ஒன்றில் பெகோவா தெரிந்துகொள்ளும் ஸ்தலத்திலேமாத்திரம் நீ உன் தகனபலிகளையிட்டு நான் உனக்குக் கட்டளையிடுகிற யாவையும் அங்கே செய். 15 ஆயினும் உன் கடவுளாகிய பெகோவா உனக்கு அருளும் ஆசீர்வாதத்திற்குத்தக்கபடி நீ உன் ஊர்களிலெங்கும் உன் இஷ்டம்போல மிருகங்களை அடித்துச் சாப்பிடலாம்; தீட்டுப்பட்டவனும் தீட்டுப்படாதவனும் அவைகளை, வெளிமானையும் கலைமானையும் சாப்பிடுகிறதுபோல, சாப்பிடலாம். 16 இரத்தத்தைமாத்திரம் சாப்பிடலாகாது; அதைத் தண்ணீரைப்போல் தரையிலே ஊற்றிவிடவேண்டும். 17 உன் தானி

யத்திலும் உன் நிராட்சரசத்திலும் உன் எண்ணெயிலும் தசமபாகத்தையும், உன் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும், நேர்ந்து கொள்ளும் உன்னுடைய சகல பொருத்தனைகளையும், உன் மனப்பூர்வ காணிக்கைகளையும், உன் கை உயர்த்திப் படைக்கிறவைகளையும் நீ உன் வாசல்களுக்குள் 18 புசிக்கவேண்டாம். உன் கடவுளாகிய யெகோவா தெரிந்துகொள்ளும் ஸ்தலத்தில் நீயும் உன் குமாரனும் உன் குமாரத்தியும் உன் வேலைக்காரனும் உன் வேலைக்காரியும் உன் வாசல்களுக்குள் இருக்கிற லேவியனும் உன் கடவுளாகிய யெகோவாவின் சந்நிதியில் அவற்றைப் புசித்து நீ சம்பாதிக்கும் எல்லாவற்றினிமித்தமும் உன் கடவுளாகிய யெகோவாவின் சந்நிதியில் சந்தோஷப்படு. 19 நீ உன் தேசத்திலிருக்கும் நாளெல்லாம் லேவியனைக் கைவிடாதபடி ஜாக்கிரதையாயிரு.

20 உன் கடவுளாகிய யெகோவா உனக்குச் சொன்னபடியே உன் எல்லையை விஸ்தாரமாக்கும்போது, இறைச்சி சாப்பிட ஆசையாயிருக்கிறேன், இறைச்சி சாப்பிடுவேன் என்று நீ சொல்வாயானால், நீ உன் இஷ்
21 டப்படியே சாப்பிடலாம். உன் கடவுளாகிய யெகோவா தமது திருநாம நிலையமாகத் தெரிந்துகொள்ளும் ஸ்தலம் உனக்குத் தூரமானால் யெகோவா உனக்கு அளித்த உன் ஆடுமாடுகளில் எதையாகிலும் நான் உனக்கு விதித்தபடியே நீ அடித்து உன் இஷ்டப்படியே உன் ஊர்களில் சாப்
22 பிடலாம். வெளிமானையும் கலைமானையும் சாப்பிடுகிறதுபோல நீ அதைச் சாப்பிடலாம்; தீட்டுப்பட்டவனும் தீட்டுப்படாதவனும் ஒன்றுபோலவே அதைச் சாப்பிட
23 லாம். இரத்தத்தைமாத்திரம் சாப்பிடாதே; இரத்தமே உயிர்; மாம்சத்தோடே உயிரையும் சாப்பிடலாகாது.
24 அதை நீ சாப்பிடவேண்டாம்; தண்ணீரைப்போல அதைத் தரையிலே ஊற்றிவிடு;
25 நீ அதைச் சாப்பிடாதே. நீ யெகோவாவின் பார்வையில் சரியானதைச் செய்யும்போது நீயும் உனக்குப் பின்வரும் உன் பிள்ளைகளும் க்ஷேமமாயிருப்பீர்கள்.
26 ஆயினும் உன் பரிசுத்த வஸ்துக்களையும் உன் பொருத்தனைகளையுமோ யெகோவா தெரிந்துகொள்ளும் ஸ்தலத்திற்கு நீ கொண்
27 டுபோகவேண்டும். உன் கடவுளாகிய யெகோவாவின் பலிபீடத்தின்மேல் உன் தகனபலிகளை, மாம்சத்தையும் இரத்தத்தையும், படைக்கவேண்டும்; நீ செலுத்தும் இரத்தபலிகளின் இரத்தமும் உன் கடவுளாகிய யெகோவாவின் பலிபீடத்தின்மேல் ஊற்றப்படவேண்டும்; மாம்சத்தையோ நீ
சாப்பிடலாம். நான் உனக்குப் போதிக்கிற 28
இந்த வார்த்தைகளையெல்லாம் நீ கவனித்துக் கேள்; உன் கடவுளாகிய யெகோவாவின் பார்வையில் நலமானதையும் சரியானதையும் நீ செய்யும்போது நீயும் உனக்குப் பின்வரும் உன் பிள்ளைகளும் என்றென்றைக்கும் க்ஷேமமாயிருப்பீர்கள்.

நீ ஜாதிகளை அடிப்படுத்தப்போகுமிடத்தில் உன் கடவுளாகிய யெகோவா அவர்களைச் சங்காரிக்கும்போதும் நீ அவர்களை அடிப்படுத்தி அவர்கள் நாட்டில் குடியிருக்கும்போதும் | ஜாக்கிரதையாயிருந்துகொள்; 30 அவர்கள் உனக்கு முன்பாக அழிக்கப்பட்டபின்பு நீ மோசம்போய் அவர்களைப் பின்பற்றுதே; இந்த ஜாதிகள் தங்கள் தேவர்களை எப்படிச் சேவிக்கிறார்கள், நானும் அப்படியே செய்வேன் என்று சொல்லி அவர்கள் தேவர்களைப்பற்றி விசாரியாதே. அவர்கள் செய்ததுபோல் நீ உன் கடவு 31
ளாகிய யெகோவாவுக்குச் செய்யாதே; யெகோவா பகைக்கிற அருவருப்பான யாவையும் அவர்கள் தங்கள் தேவர்களுக்குச் செய்தார்கள்; தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும்கூடத் தங்கள் தேவர்களுக்கு அக்கினியிலே சுட்டெரித்தார்கள். நான் உனக்குக் கட்டளையிடுகிற 32
யாவையும் செய்ய ஜாக்கிரதையாயிரு; நீ அதலோடு ஒன்றையும் கூட்டவேண்டாம், அதிலிருந்து ஒன்றையும் குறைக்கவேண்டாம்.

உங்களுக்குள்ளே ஒரு தீர்க்கதரிசியோ **13**
சொப்பனக்காண்கிறவனோ எழும்பி: வேறே 2
தேவர்களைப் பின்பற்றி அவர்களைச் சேவிப்போம், வாருங்கள்—அவர்கள் உங்களுக்குத் தெரியாத தேவர்கள்—என்று சொல்லி உங்களுக்கு ஒரு அடையாளத்தையாகிலும் அற்புதத்தையாகிலும் அறிவிக்கவே, அவன் அறிவித்த அடையாளமும் அற்புதமும் நடந்தாலும், அந்தத் தீர்க்கதரிசியோ சொப் 3
பனக்காண்கிற அந்த மனிதனோ சொல்லுகிறவைகளுக்கு நீங்கள் செவிகொடுக்கவேண்டாம்; உங்கள் கடவுளாகிய யெகோவாவில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூருகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படி உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களைச் சோதித்துப்பார்க்கிறார். நீங்கள் 4
உங்கள் கடவுளாகிய யெகோவா காட்டிய வழியில் நடந்து, அவருக்குப் பயந்து அவர் கட்டளைகளைக் கைக்கொண்டு அவர் சப்தத்

நிற்குச் செவிகொடுத்து அவரைச் சேவித்து
5 அவரைப் பற்றிக்கொள்ளவேண்டும். அந்தத்
தீர்க்கதரிசியோ சொப்பனக்காண்கிற அந்த
மனிதனோ கொல்லப்படவேண்டும்; உங்களை
எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்
ணினவரும் உங்களை அடிமைத்தன வீட்டி
லிருந்து மீங்களாக்கி மீட்டுக்கொண்டவரு
மான உங்கள் கடவுளாகிய யெகோவா
வுக்கு விரோதமான துரோகப்பேச்சை
அவன் பேசி நீங்கள் நடப்பதற்கென்று
உங்கள் கடவுளாகிய யெகோவா உங்க
ளுக்கு விதித்த வழியைவிட்டு உங்களை
விலக்கும்படி முயன்றான்; தீமையானதை
இப்படியே உங்கள் நடுவிலிருந்து அகற்றி
விடவேண்டும்.

6 உன் தாய்க்குப்பிறந்த உன் சகோதரனே
உன் குமாரனே உன் குமாரத்தியோ உன்
பிராணப்பிரியையாகிய உன் மனைவியோ
உன் உயிர்போன்ற உன் சிநேகிதனே உன்
னிடம் வந்து: நாம் போய் வேறே தேவர்
களைச் சேவிப்போம் வா என்று சொல்லி |
7 உன்னைச்சுற்றி உனக்குச் சமீபத்திலோ
உனக்குத் தூரத்திலோ, தேசத்தின் ஒரு
முனை தொடங்கி மறுமுனைமட்டுமுள்ள
ஜனங்களின் தேவர்களிலே, நீயும் உன்
பிதாக்களும் அறியாத அந்திய தேவர்களைச்
சேவிக்கும்படி இரகசியமாய் ஏவி உன்னை
8 வஞ்சித்தால் | நீ அவனுக்குச் சம்மதியாதே;
அவனுக்குச் செவிகொடாதே; உன் கண்
அவனுக்கு இரங்கவேண்டாம். அவனைத்
தப்பவிடாமலும் அவனுக்கு அடைக்கலம்
9 கொடாமலும் | அவனைக் கொன்றுபோட
வேண்டும். அவனைக் கொல்வதற்கு முத
லாவது உன் கையும் பின்பு சகல ஜனத்
தின் கையும் அவன்மேலிருக்கவேண்டும்.
10 அடிமைத்தன வீடாகிய எகிப்துதேசத்தி
லிருந்து உன்னைக் கொண்டுவந்த உன்
கடவுளாகிய யெகோவாவைவிட்டு உன்னை
விலக்கப்பார்த்தபடியினால் அவன் சாகும்
படி நீ அவன்மேல் கல்லெறியவேண்டும்.
11 இஸ்ரவேலர் யாவரும் அதைக் கேட்டுப்
பயந்து இனி உன் நடுவே இப்படிப்பட்ட
தீமையான காரியத்தைச் செய்யாதிருப்பார்
கள்.

12 நீ குடியிருக்கும்படி உன் கடவுளாகிய
யெகோவா உனக்குக் கொடுக்கும் பட்ட
ணங்கள் ஒன்றில் பேலியாலின் மக்களாகிய
துஷ்ட மனிதர் உன்னிடத்திலிருந்து
13 கிளம்பி: வேறே தேவர்களைச் சேவிக்கப்
போவோம் வாருங்கள் என்று—அவர்கள்
நீங்கள் அறியாத தேவர்கள்—தங்கள் ஊர்
ஜனங்களை ஏவின செய்தியை நீ கேள்விப்
படும்போது | நீ நன்றாய் விசாரித்துக் கேட் 14
டாராய்ந்து அப்படிப்பட்ட அருவருப்
பான காரியம் உன் நடுவே நடந்தது மெய்
தான், நிச்சயமே என்று காண்பாயானால்,
அந்த ஊர் ஜனங்களைப் பட்டயக்கருக்கினால் 15
வெட்டி அதையும் அதிலுள்ள யாவற்றையும்
அதின் மிருகங்களையும் தெய்வசாபம் நிறை
வேறப் பட்டயக்கருக்கினால் சங்கரித்து
| அதில் கொள்ளையிட்டதை யெல்லாம் 16
ஊர்வெளியின் நடுவிலே கூட்டி, உன் கட
வுளாகிய யெகோவாவுக்கென்று அந்த ஊரை
யும் அதில் கொள்ளையிடப்பட்ட யாவற்
றையும் முழுவதும் அக்கினியில் சுட்டெரிப்
பாய். அது இனிக் கட்டப்படாமல் நித்
திய மண்மேடாயிருக்கும். தெய்வசாபத்திற் 17
குட்பட்ட பொருளில் ஒன்றையும் நீ தொட
வேண்டாம். நான் இன்று உனக்குப்
போதிக்கிற உன் கடவுளாகிய யெகோவா
வின் கட்டளைகளையெல்லாம் நீ கைக்
கொண்டு உன் கடவுளாகிய யெகோவாவின்
பார்வையில் செம்மையானதைச் செய்யும்
படி அவர் சப்தத்திற்குச் செவி கொடுப்பா
யானால் | யெகோவா தமது கோபத்தின் 18
உக்கிரத்தைவிட்டுத் திரும்பி உனக்குத் தயை
காட்டி உனக்கு இரங்கி அவர் உன் பிதாக்
களுக்கு ஆணையிட்டபடியே உன்னை வர்த்
திக்கச்செய்வார்.

நீங்கள் உங்கள் கடவுளாகிய யெகோ 14
வாவின் பிள்ளைகள்; செத்தவனுக்காகக்
கீறிக்கொள்ளாமலும் உங்கள் கண்களுக்கு
இடையிலே சௌரம்பண்ணுமலும் இருக்க
வேண்டும். நீயே உன் கடவுளாகிய 2
யெகோவாவுக்குப் பரிசுத்த ஜனம்; பூமியின்
மீதுள்ள சகல ஜனங்களிலும் உன்னையே
யெகோவா தமக்குச் சொந்தஜனமாகத்
தெரிந்தெடுத்தார்.

அருவருப்பானதொன்றையும் புசிக்க 3
வேண்டாம். நீங்கள் புசிக்கத்தக்க மிரு 4
கங்கள் இவைகளே: மாடு, செம்மறியாடு,
வெள்ளாடு, | கலைமான், வெளிமான், வரை 5
யாடு, காட்டுமான், புள்ளிமான், சருகுமான்,
புல்வாய். மிருகங்களில் விரிகுளம்புள்ள 6
தாய்க் குளம்புகள் இரண்டாகப் பிரிந்திருக்
கிறதும் அசைபோடுகிறதுமான எந்த மிரு
கத்தையும் நீங்கள் புசிக்கலாம். அசை 7
போடுகிறவைகளிலும் விரிகுளம்புள்ளவை
களிலும் நீங்கள் புசிக்கத்தகாதவைகள்
இவைகளே: ஒட்டகம், முசல், குழிமுசல்,
அவைகள் அசைபோட்டும் அவைகளுக்கு
விரிகுளம்பில்லை அவைகள் உங்களுக்கு
அசுத்தமாம். பன்றியும் புசிக்கத்தகாதது; 8
அது விரிகுளம்புள்ளதாயிருந்தும் அசை

போடாது; அது உங்களுக்கு அசுத்தமானது; இவைகளின் மாம்சத்தைப் புசிக்கவேண்டாம்; இவைகள் செத்தால் தொடவும் வேண்டாம்.

9 தண்ணீரிலிருக்கிற யாவற்றிலும் சிறகும் செதிளும் உள்ளவைகளையெல்லாம் நீங்கள்
10 புசிக்கலாம். சிறகும் செதிளுமில்லாத யாதொன்றையும் புசிக்கலாகாது; அது உங்களுக்கு அசுத்தமானது.

11 சுத்தமான பட்சிகளை எல்லாம் நீங்கள்
12 புசிக்கலாம். நீங்கள் புசிக்கத்தகாதவைகள் இவைகளே: கழுகு, கருடன், கடலுராஞ்சி, |
13 பைரி, வல்லூறு, சகலவித பருந்து, |
14,15 சகலவித காகங்கள், | தீக்கோழி, கூகை, செம்புகம், சகலவித ராஜாளிகள், |
16,17 ஆந்தை, கோட்டான், நாரை, | கூழக்
18 கடா, குருகு, நீர்க்காகம், | கொக்கு, சகலவித டேகைகள், புழுக்கொத்தி, வௌவால்.
19 பறக்கிறவைகளில் ஊர்வனயாவும் உங்களுக்கு அசுத்தமாம்; அவைகள் புசிக்கத்
20 தகாதவைகள். சுத்தமான பறவைகள் யாவையும் நீங்கள் புசிக்கலாம்.

21 தானாய்ச் செத்தப்போனதொன்றையும் புசிக்கவேண்டாம்; உங்கள் ஊர்களிலிருக்கிற பரதேசிக்கு அதைப் புசிக்கக்கொடுக்கலாம்; அல்லது அந்நியனுக்கு அதை விற்றுப்போடலாம்; நீங்கள் உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்குப் பரிசுத்த ஜனம். ஆட்டுக்குட்டியை அதின் தாயின் பாலிலே சமைக்கவேண்டாம்.

22 வருஷந்தோறும் நீ விதைக்கிற விதைப்பிளுலே வயலில் விளையும் சகல விளைச்சலிலும் தசமபாகத்தைப் பிரித்துவைத்து |
23 உன் கடவுளாகிய யெகோவா தமது திருநாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தலத்திலே உன் தானியம் உன் திராட்சரசம் உன் எண்ணெய் இவற்றின் தசமபாகத்தையும் உன் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும் அவருடைய சந்நிதியிலே புசிக்கவேண்டும்; இப்படிச் செய்வதால் நீ உன் கடவுளாகிய யெகோவாவுக்கு எப்பொழுதும் பயந்து நடக்கப் பழகுவாய்.
24 உன் கடவுளாகிய யெகோவா தமது திருநாமம் விளங்கும்படி தெரிந்துகொண்ட ஸ்தலம் உனக்கு வெகுதூரமாயிருந்தால் உன் கடவுளாகிய யெகோவா உனக்கு ஆசீர்வதித்து உனக்குக் கொடுத்தவைகளை வழிப்பிரயாணத்தின் வெகு தொலையினிமித்தம்
25 கொண்டுபோக முடியாதிருக்கலாம்; அப்பொழுது அதைப் பணமாக்கிப் பணமுடிப்பை உன் கையிலே பிடித்துக்கொண்டு உன் கடவுளாகிய யெகோவா தெரிந்துகொண்ட ஸ்தலத்திற்குப்போய் | அங்கே 26
உன் இஷ்டப்படி ஆடுமாடு, திராட்சரசம், மதுபானம் முதலிய யாவற்றையும் பணம் கொடுத்து வாங்கி உன் கடவுளாகிய யெகோவாவின் சந்நிதியில் நீயும் உன் குடும்பத்தாரும் புசித்துச் சந்தோஷப்படுங்கள். உன் 27
ஊர்களிலிருக்கிற லேவியனை மறக்காதுவிடாதே; அவனுக்கு உன்னைப்போல் பங்கும் சுதந்தரமும் இல்லையே.

மூன்றாம் வருஷத்தின் முடிவிலே அவ் 28
வருஷத்தில் உனக்குவந்த விளைச்சல் எல்லாவற்றிலும் தசமபாகத்தைப் பிரித்து உன் ஊர்களிலே வைத்துவைக்கவேண்டும். லேவி 29
யனுக்கு உன்னைப்போல் பங்கும் சுதந்தரமும் இல்லாதபடியினால் அவனும் உன் ஊர்களில் இருக்கிற பரதேசியும் திக்கற்றவனும் விதவையும் வந்து திருப்தியாகச் சாப்பிட வேண்டும். அப்பொழுது உன் கை செய்யும் வேலைகளிலெல்லாம் உன் கடவுளாகிய யெகோவா உன்னை ஆசீர்வதிப்பார்.

ஏழாம் வருஷங்களையெல்லாம் விடுதலை **15**
வருஷங்களாக ஆசரிக்கவேண்டும். விடு 2
தலை செய்யும் முறை இதுவே: அயலானுக்குக் கடன் கொடுத்திருக்கிறவன் எவனும் யெகோவா நியமித்த விடுதலை கூறப்பட்டபின், அந்தக் கடனை அயலானிடமிருக்கும் தன் சகோதரனிடமிருந்தும் தண்டாமல் விட்டுவிடவேண்டும். அந்நிய ஜாதியா 3
னிடமிருந்து நீ கடனைத் தண்டலாம்; உன் சகோதரனிடமிருந்து உனக்கு வரவேண்டியதையோ நீ விட்டுவிடு. நீ சொந்தமாக்கிக் 4
கொள்ளும்படி உன் கடவுளாகிய யெகோவா உனக்குச் சுதந்தரமாய்க் கொடுக்கிற தேசத்தில் உன்னை ஆசீர்வதியாமற்போவதில்லை. ஆகவே நான் உனக்கு இக் 5
நாளில் போதிக்கிற சகல கட்டளைகளின்படியும் நீ செய்து உன் கடவுளாகிய யெகோவாவின் சப்தத்திற்குக் கவனமாய்ச் செவிகொடுப்பாயானால் உன் நடுவில் ஏழைகள் இருப்பதேயில்லை. உன் கடவுளாகிய 6
யெகோவா உனக்கு வாக்குப் பண்ணினபடியே உன்னை ஆசீர்வதிப்பார்; நீ பல ஜாதியாருக்குக் கடன் கொடுப்பதேயன்றி நீ கடன் வாங்கப்போவதில்லை. நீ அநேக ஜாதிகளை ஆளுவாய், உன்னையோ அவர்கள் ஆளுவதில்லை.

உன் கடவுளாகிய யெகோவா உனக்குக் 7
கொடுக்கும் தேசத்தின் எந்த ஊரிலும் உன் சகோதரரில் ஏழை ஒருவனிருப்பானானால் ஏழையாகிய உன் சகோதரனுக்கு உன் இருதயத்தை நீ கடினமாக்கி உன் கையை மூடாதே; அவனுக்கு உன் கைபைத் 8

தாராளமாய்த் திறந்து அவனுடைய அவசரத்திலே அவனுக்குத் தேவையானதைக்
9 கடன்கொடு. விடுதலை வருஷமாகிய ஏழாம் வருஷம் கிட்டியிருக்கிறதென்று சொல்லி, உன் இருதயத்திலே அற்பத்தனமான எண்ணங்கொண்டு உன் ஏழைச் சகோதரனுக்குக் கொடாமல் மறுத்து அவன் மேல் வன்கண்ணுயிராதே, ஜாக்கிரதையாயிரு. அவன் உன்னைப்பற்றி யெகோவாவினிடம் அபயமிட்டால் அது உனக்குப்
10 பாவமாகுமே. அவனுக்குக் கொடுக்கவே வேண்டும்; அவனுக்குக் கொடுக்கும்போது உன் இருதயம் விசனப்படவேண்டாம்; அதினிமித்தமாக உன் கடவுளாகிய யெகோவா உன் சகல வேலைகளிலும் நீ கையிட்டுச் செய்யும் சகல காரியங்களிலும்
11 உன்னை ஆசீர்வதிப்பார். தேசத்திலே ஏழைகள் இல்லாமற்போவதில்லை; ஆகவே உன் தேசத்திலே சிறுமைப்பட்டவனும் ஏழையுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் திறக்கவேவேண்டும் என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்.

12 உன் சகோதரனாகிய எபிரேய புருஷனே எபிரேய ஸ்திரீயோ உனக்கு விலைப்பட்டால் ஆறு வருஷம் உன்னிடம் அடிமைவேலை செய்யவேண்டும்; ஏழாம் வருஷத்தில் அவ
13 னைச் சுயாதீனமாக்கி அனுப்பிவிடு. அவனைச் சுயாதீனமாக்கி அனுப்பிவிடும்போது அவனை வெறுங்கையாய் அனுப்பிவிடாதே;
14 உன் கடவுளாகிய யெகோவா உன்னை ஆசீர்வதித்தபடியே உன் ஆட்டுமந்தையிலும் உன் களத்திலும் உன் ஆலையிலும் உள்ளவைகளில் எடுத்து அவனுக்குத் தாராள
15 மாய்க் கொடுத்து அனுப்பிவிடு. நீ எகிப்து தேசத்தில் அடிமையாயிருந்ததையும் உன் கடவுளாகிய யெகோவா உன்னை மீட்டுக் கொண்டதையும் மறந்துவிடாதே; ஆகவே நான் இக்காளில் இக்காரியத்தை உனக்
16 குக் கட்டளையிடுகிறேன். ஆயினும் அவன் உன்னையும் உன் குடும்பத்தையும் நேசித்தினாலும், உன்னோடிருப்பது அவனுக்கு நலமெனத் தோன்றினாலும் உன்னை விட்டுப் போகமாட்டேன் என்று உன்னிடம் சொல்
17 வானேயாகில் | நீ அவனைக் கதவருகே வரச்செய்து, கம்பியை எடுத்து, கம்பி கதவிலேபட அவன் காதைத் தூளைத்துவிடு; பின்பு அவன் எந்நாளும் உனக்கு அடிமையாயிருப்பான்; உன் அடிமைப்பெண்ணுக்
18 கும் அப்படியே செய். உன் அடிமையைச் சுயாதீனமாக்கி அனுப்பிவிடுவது நஷ்டமென விசனப்படவேண்டாம்; அவன் உன்னிடம் ஆறு வருஷம் அடிமை வேலை செய்து இரட்டிப்பாய் உழைத்தானே; இப்படியாகவே உன் கடவுளாகிய யெகோவா நீ செய்யும் எல்லாவற்றிலும் உன்னை ஆசீர்வதிப்பார்.

19 உன் ஆடுமாடுகளில் தலையீற்றாகிய ஆணெல்லாம் உன் கடவுளாகிய யெகோவாவுக்கென்று பிரதிஷ்டை செய்யவேண்டும்; உன் மாட்டின் தலையீற்றை வேலைகொள்ளாதே; உன் ஆட்டின் தலையீற்றை மயிர்கத்தரியாதே. யெகோவா தெரிந்துகொள்
20 ளும் ஸ்தலத்திலே வருஷந்தோறும் நீயும் உன் வீட்டாருமாய் உன் கடவுளாகிய யெகோவாவின் சந்நிதியில் அவைகளைப் புசிக்கவேண்டும். அதற்கு முடம் குருடு
21 முதலான யாதொரு ஊனம் இருந்தால் அதை உன் கடவுளாகிய யெகோவாவுக்குப் பலியிடவேண்டாம். அப்படிப்பட்டதை
22 நீ உன் ஊரிலேயே, கலைமானையும் வெளிமானையும் சாப்பிடுவதுபோலச் சாப்பிடலாம்; தீட்டுப்பட்டவனும் தீட்டுப்படாதவனும் ஒன்றுபோலவே அதைச் சாப்பிடலாம். அதின் இரத்தத்தைமாத்திரம் சாப்
23 பிடாதே, அதைத் தண்ணீரைப்போலத் தரையிலே ஊற்றிவிடவேண்டும்.

**16** ஆபிப்மாதத்திலே உன் கடவுளாகிய யெகோவாவுக்குப் பஸ்காவை ஆசரிக்கவேண்டுமென்பதை மறந்துவிடாதே; ஆபிப்மாதத்திலேயே உன் கடவுளாகிய யெகோவா உன்னை இரவுவேளையில் எகிப்திலிருந்து கொண்டுவந்தார். யெகோவா 2
தமது திருநாம நிலையமாகத் தெரிந்துகொள்ளும் ஸ்தலத்தில், உன் கடவுளாகிய யெகோவாவுக்குப் பஸ்காவின் பலியாகிய ஆடுமாடுகளைப் பலியிடு, அதனோடு புளிப்புள்ள 3
தைப் புசியாதே, நீ எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளை உன் ஆயுள்காலமெல்லாம் நினைவுகூரும்படி, நீ எகிப்து தேசத்தை அவசரமாய் விட்டுவந்தபடியால் சிறுமையின் ஆகாரமாகிய புளிப்பில்லாத அப்பங்களை ஏழுநாளளவும் புசிக்கவேண்டும். ஏழு 4
நாளளவும் உன் எல்லைகளிலெங்கும் புளிப்புள்ள அப்பம் உன்னிடத்தில் இருக்கலாகாது; நீ முதல் நாள் சாயங்காலத்தில் இட்ட பலியின் மாம்சத்தில் எதையாகிலும் விடியுமட்டும் வைத்திருக்கவேண்டாம். உன் 5
கடவுளாகிய யெகோவா உனக்குக் கொடுக்கும் உன்னுடைய ஊர்கள் யாதொன்றிலும் நீ பஸ்காவை அடிக்கவேண்டாம். உன் 6
கடவுளாகிய யெகோவா தமது திருநாம நிலையமாகத் தெரிந்துகொள்ளும் ஸ்தலத்திலே சாயங்காலத்தில் சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில், நீ எகிப்திலிருந்து புறப்

பட்ட கோத்திரலேயே, பல்காவை அடிக்க
7 வேண்டும். உன் கடவுளாகிய யெகோவா
தெரிந்துகொண்ட ஸ்தலத்திலே அதை
வேகவைத்துப் புசித்து விடியற்காலத்திலே
உன் கூடாரங்களுக்குத் திரும்பிப்போவாய்.
8 ஆறு நாளும் நீ புளிப்பில்லாதவற்றைப்
புசிக்கவேண்டும்; ஏழாம் நாள் உன் கடவு
ளாகிய யெகோவாவுக்கென்று ஆசரிக்கப்
படும் விசேஷித்த உற்சவநாள்; அதிலே
யாதொரு வேலையும் செய்யவேண்டாம்.
9 ஏழு வாரங்களை எண்ணவேண்டும்;
பயிரை அறுக்கத் தொடங்கிய நாள்முதல்
அந்த ஏழு வாரங்களையும் எண்ணுவாய்.
10 அவைகள் முடியவே ஏழாம் வாரத்துப்
பண்டிகையை உன் கடவுளாகிய யெகோ
வாவுக்கென்று ஆசரித்து, உன் கடவுளாகிய
யெகோவா உன்னை ஆசீர்வதித்ததின்படியே
நீ கொடுக்கக்கூடிய மனப்பூர்வ காணிக்கை
11 யாகிய பங்கைச் செலுத்தி | உன் கடவுளா
கிய யெகோவா தமது நிருநாமம் விளங்கும்
படி தெரிந்துகொள்ளும் ஸ்தலத்திலே நீயும்
உன் குமாரனும் உன் குமாரத்தியும் உன்
வேலைக்காரனும் உன் வேலைக்காரியும், உன்
ஊரில் இருக்கிற லேவியனும், உன்னிடத்
தில் இருக்கிற பரதேசியும் திக்கற்ற பிள்ளை
யும் விதவையும் உன் கடவுளாகிய யெகோ
வாவின் சந்நிதியில் சந்தோஷங்கொண்டாட
12 வேண்டும். நீ எகிப்தில் அடிமையாயிருந்
ததை நினைத்து இந்தக் கட்டளைகளைக் கைக்
கொண்டு இவைகளின்படியே செய்யவேண்
டும்.
13 நீ உன் களத்தின் வரத்தையும் உன் ஆலை
யின் வரத்தையும் சேர்த்தபின்பு கூடார
உற்சவத்தை ஏழு நாள் ஆசரிக்கவேண்டும்.
14 உற்சவநாளில் நீயும் உன் குமாரனும் உன்
குமாரத்தியும் உன் வேலைக்காரனும் உன்
வேலைக்காரியும், உன் ஊரில் இருக்கிற
லேவியனும் பரதேசியும் திக்கற்ற பிள்ளை
யும் விதவையும் சந்தோஷங்கொண்டாட
15 வேண்டும். உன்னுடைய எல்லா வரத்தி
லும் உன் கைகளின் எல்லா வேலையிலும்
உன் கடவுளாகியயெகோவாவே உன்னை ஆ
சீர்வதிக்கிறபடியினால் யெகோவா தெரிந்து
கொள்ளும் ஸ்தலத்திலே ஏழுநாளாக உன்
கடவுளாகிய யெகோவாவுக்கு உற்சவத்
தைக் கொண்டாடிச் சந்தோஷமாகவே
16 இருக்கவேண்டும். வருஷத்தில் மூன்று
தரம், புளிப்பில்லாத அப்பம் புசிக்கும் உற்
சவத்திலும் ஏழாம்வாரத்து உற்சவத்திலும்
கூடார உற்சவத்திலும் உன் ஆண்மக்கள்
அனைவரும் உன் கடவுளாகிய யெகோவா
தெரிந்தகொள்ளும் ஸ்தலத்திலே அவர் சந்
நிதிக்குமுன்பாக வந்து காணப்படவேண்
டும். அவர்கள் யெகோவாவின் சந்நிதியில் 17
வெறுங்கையாய் வரலாகாது. உன் கடவு
ளாகிய யெகோவா உனக்கு அருளிய ஆசீர்
வாதத்தின்படியே அவனவன் தன்தன் தகு
திக்கு ஏற்றபடி காணிக்கையைக் கொண்டு
வரவேண்டும்.

உன் கடவுளாகிய யெகோவா உனக்குக் 18
கொடுக்கும் ஊர்களிலெல்லாம் உன் கோத்
திரங்கள்தோறும் நியாயாதிபதிகளையும் அதி
காரிகளையும் ஏற்படுத்து; அவர்கள் நீதியாய்
ஜனங்களுக்குத் தீர்ப்புச் செய்யவேண்டும்.
நியாயத்தைப் புரட்டாதே; முகதாட்சணி 19
யம் காட்டாதே; பரிதானம் வாங்காதே;
பரிதானம் ஞானிகளின் கண்களைக் குருடா
க்கும்; நீதிமான்களின் வழக்கைக் கெடுத்து
விடும். நீ நீதியின் வழியிலே நடக்கவேண் 20
டும்; அப்படி நடந்தால் நீ பிழைத்திருந்து
உன் கடவுளாகிய யெகோவா உனக்குக்
கொடுக்கும் தேசத்தைச் சொந்தமாக்கிக்
கொள்ளுவாய்.

உன் கடவுளாகிய யெகோவாவின் பலி 21
பீடத்தின் அருகே எவ்வித மரத்திலுல்
செய்த சிலையையும் நடவேண்டாம்; யா 22
தொரு கற்சிலையையும் நிறுத்தவேண்டாம்;
உன் கடவுளாகிய யெகோவா அதைப்
பகைக்கிறார்.

ஊனமும் அவலட்சணமுமுள்ள யா **17**
தொரு மாட்டையாவது ஆட்டையாவது
உன் கடவுளாகிய யெகோவாவுக்குப் பலி
யிடவேண்டாம்; அது உன் கடவுளாகிய
யெகோவாவுக்கு அருவருப்பு.

உன் கடவுளாகிய யெகோவா உனக்குக் 2
கொடுக்கும் ஊர்கள் ஒன்றில் உன் கடவு
ளாகிய யெகோவாவின் பார்வைக்குத்தீமை
யாயிருப்பதை ஒரு புருஷனாவது ஒரு ஸ்திரீ
யாவது செய்து அவருடைய உடன்படிக்
கையை மீறிப் | போய் வேறே தேவர்களை, 3
சந்திரனையோ சூரியனையோ மற்றுள்ள
வானசேனைகளையோ சேவித்து—இவைகளை
வணங்கும்படி நான் கட்டளையிடவில்லை—
அவைகளை வணங்குகிறதாகக் காணப்பட்
டால் | அது உன் செவிகேட்க உனக்கு 4
அறிவிக்கப்படும்போது நீ அதை நன்றாய்
விசாரிக்கவேண்டும்; அது மெய்தான், அப்ப
டிப்பட்ட அருவருப்பு இஸ்ரவேலில் நடந்
தது நிச்சயமே என்று கண்டாயானால் |
அந்த அவலட்சண காரியத்தைச் செய்த 5
புருஷனையோ ஸ்திரீயையோ உன் ஊர்வா
சலுக்குக் கொண்டுபோய் அவர்கள் சாகும்
படி கல்லெறியவேண்டும். சாகவேண்டிய 6
வன் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கி

ஞல் கொல்லப்படவேண்டும். ஒரே சாட்சியின் வாக்கினுல் அவன் கொல்லப்படலாகாது. அவனைக் கொல்வதற்குச் சாட்சிகளின் கைகள் முந்தியும் சகல ஜனத்தின் கைகளும் பிந்தியும் அவன்மேலிருக்கவேண்டும். தீமையானதை இப்படியே உன் நடுவிலிருந்து அகற்றிவிடவேண்டும்.

8 உன் ஊர் வாசல்களில் இரத்தப்பழிகள், சொத்துகள், காயம்பட்ட சேதங்கள் இவற்றைப்பற்றிய வழக்கு நேரிட்டு நியாயந்தீர்ப்பது உனக்கு அரிதாயிருந்தால் நீ எழுந்து உன் கடவுளாகிய யெகோவா தெரிந்துகொண்ட ஸ்தலத்திற்குப்போய் | லேவியரான ஆசாரியரையும் அக்காலத்து நியாயாதிபதியையும் கிட்டி விசாரிக்கவேண்டும்; நியாயம் இன்னதென்று அவர்கள் உனக்குத் தெரிவிப்பார்கள். யெகோவா தெரிந்துகொண்ட இடத்திலிருந்து அவர்கள் உனக்குத் தெரிவிக்கும் தீர்ப்பின்படி செய்; அவர்கள் உனக்குப் போதிக்கிற யாவற்றின்படியும் செய்ய ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். அவர்கள் உனக்குப் போதிக்கிற பிரமாணத்தின்படியும் உனக்குச் சொல்லும் தீர்ப்பின்படியும் செய்யவேண்டும். அவர்கள் உனக்குத் தெரிவிப்பதைவிட்டு வலதுபுறம் இடதுபுறம் விலகாதே. அங்கே உன் கடவுளாகிய யெகோவாவுக்கு ஆராதனை செய்யும்படி நிற்கிற ஆசாரியனுக்காகிலும் நியாயாதிபதிக்காகிலும் செவிகொடாமல் ஒருவன் இடும்புசெய்தால் அவன் சாகவேண்டும்; தீமையானதை இப்படியே இஸ்ரவேலிலிருந்து அகற்றிவிடவேண்டும். அப்பொழுது ஜனமெல்லாம் அதைக் கேட்டுப் பயந்து இனி இடும்புசெய்யாதிருக்கும்.

14 உன் கடவுளாகிய யெகோவா உனக்குக் கொடுக்கும் தேசத்தில் நீ போய்ச் சேர்ந்து அதைச் சொந்தமாக்கிக்கொண்டு அதில் குடியேறினபின் நீ, என்னைச் சுற்றி இருக்கிற சகல ஜாதிகளையும்போல நானும் எனக்கு ஒரு இராஜாவை ஏற்படுத்தவேண்டும் என்பாயானுல் | உன் கடவுளாகிய யெகோவா தெரிந்துகொள்பவனையே உனக்கு இராஜாவாக ஏற்படுத்து; உன் சகோதரருக்குள்ளிலிருந்தே ஒருவனை உன்மேல் இராஜாவாக ஏற்படுத்தவேண்டும். உன் சகோதரன் அல்லாத அந்நியனை இராஜாவாக வைக்கக்கூடாது. ஒன்றைமாத்திரம் மறந்துவிடக்கூடாது: அவன் அநேக குதிரைகளைச் சம்பாதிக்கவேண்டாம்; அநேக குதிரைகளைத் தனக்குச்சம்பாதிக்கும்படி ஜனத்தைத்திரும்ப எகிப்திற்குப் போகப்பண்ணவேண்டாம். இனி அந்தவழியாய் நீங்கள் திரும்பிப்போகவேண்டாம் என்று யெகோவா உங்களுக்குச் சொல்லியிருக்கிறாரே. அவன் இருதயம் பின்வாங்கிப்போகாதபடி அவன் அநேகம் ஸ்திரீகளைப் படைக்கவேண்டாம்; வெள்ளியும் பொன்னும் தனக்கு மிகுதியாய்ப் பெருகப்பண்ணவும் வேண்டாம். அவன் இராஜாவாகும்போது லேவியரான ஆசாரியரிடத்திலிருக்கிற நியாயப்பிரமாண நூலைப்பார்த்துத் தனக்காக ஒரு பிரதியை எழுதித் | தன்னிடம் வைத்துக்கொண்டு தன் ஜீவனுள்ள நாளெல்லாம் அதை ஆராய்ந்து வாசிக்கவேண்டும். அப்பொழுது இந்த நியாயப்பிரமாணத்தின் எல்லா வார்த்தைகளையும் இந்த நியமங்களையும் கைக்கொண்டு இவைகளின்படி செய்வதற்குத் தன் கடவுளாகிய யெகோவாவுக்குப் பயந்திருக்கும்படி கற்றுக்கொள்ளுவான். கற்றுக்கொள்ளவே அவன் இருதயம் அவன் சகோதரர்பேரில் மேட்டிமைகொள்ளாது, கட்டளையைவிட்டு வலதுபுறம் இடதுபுறம் விலகாது. இப்படிச்செய்தால் தானும் தன் குமாரரும் இஸ்ரவேலின் நடுவே தங்கள் இராஜ்யத்திலே நெடுநாள் வாழுவார்கள்.

லேவியராகிய ஆசாரியருக்கும், லேவி கோத்திரத்தார் அனைவருக்குமே, இஸ்ரவேல் புத்திரரோடு பங்கும் சுதந்தரமும் இல்லை; யெகோவாவின் நிவேதனங்களும் அவருக்கென்று பிரத்தியேகப்படுத்துகிறவைகளுமே அவர்களுக்கு ஜீவாதாரம். அவர்கள் சகோதரருக்குள்ளே அவர்களுக்குச் சுதந்தரமில்லை; யெகோவாவே அவர்கள் சுதந்தரம்; அவர்களுக்கு அவர் அப்படியே சொல்லியிருக்கிறார்.

ஜனங்கள் பலியிடுகிற ஆடுமாடுகளில் 3 முன்னங்தொடை, தாடைகள், இரைப்பை ஆகிய இவைகள் ஆசாரியருக்குப் பாத்தியப்பட்டவைகளாய் ஜனங்களிடமிருந்து ஆசாரியரைச் சேரவேண்டும். உன் தானியம், திராட்சரசம், எண்ணெய், ஆட்டுமயிர் ஆகிய இவைகளின் முதற்பலனையும் ஆசாரியனுக்குக் கொடுக்கவேண்டும். அவனும் 5 அவன் குமாரரும் எந்நாளும் யெகோவாவின் திருநாமத்தை முன்னிட்டுத் திருப்பணிவிடைசெய்து நிற்பதற்கென உன் கடவுளாகிய யெகோவா உன் கோத்திரத்தார் அனைவரிலும் அவனையே தெரிந்தெடுத்தார்.

இஸ்ரவேல் நாடெங்குமுள்ள உன் ஊர் 6 கள் ஒன்றில் தங்கியிருக்கும் லேவியனெருவன் அவ்விடத்தைவிட்டு யெகோவா தெரிந்துகொண்ட ஸ்தலத்திற்குத் தன் இருதயத்தின் முழு வாஞ்சையோடும் வந்தால் | அங்கே யெகோவாவின் சந்நிதியில் நிற்கும் 7

லேவியராகிய தன் எல்லாச் சகோதரரை
யும்போலவே இவனும் தன் கடவுளாகிய
யெகோவாவின் திருநாமத்தை முன்னிட்டுத்
8 திருப்பணிவிடை செய்வான். அப்படிப்
பட்டவர்கள் தங்கள் பிதாக்களுடைய
ஆஸ்தியின் விலைக்கிரயத்தை அனுபவிக்கிறது
மல்லாமல், சாப்பாட்டிற்காகச் சமமான
பாகத்தையும் பெற்றுக்கொள்ளுவார்கள்.
9 உன் கடவுளாகிய யெகோவா உனக்குக்
கொடுக்கும் தேசத்திலே நீ போய்ச் சேரும்
போது, அந்த ஜாதிகள் செய்யும் அருவருப்பு
களின்படி செய்யக் கற்றுக்கொள்ளவேண்
10 டாம். தன் மகனையாவது தன் மகளையாவது
அக்கினியில் இடுகிறவனும் குறிசொல்லு
கிறவனும் சகுனம் பாக்கிறவனும் குறி
11 கேட்கிறவனும் சூனியக்காரனும் | மந்திர
வாதியும் சன்னதக்காரனும் அஞ்சனம்பார்க்
கிறவனும் செத்தவர்களிடத்தில் குறிகேட்
கிறவனும் உங்களுக்குள்ளே இருக்கவேண்
12 டாம். இப்படிப்பட்டவைகளைச் செய்கிற
வன் எவனும் யெகோவாவுக்கு அருவருப்
பானவன்; இப்படிப்பட்ட அருவருப்பு
களின் நிமித்தம் உன் கடவுளாகிய
யெகோவா அந்த ஜாதிகளை உன் முன்னின்று
13 துரத்திவிடுகிறார். உன் கடவுளாகிய யெகோ
வாவின் விஷயத்தில் நீ குற்றமற்றவனா
14 யிருக்கவேண்டும். நீ துரத்திவிடப்போகிற
இந்த ஜாதிகள் சகுனம்பார்க்கிறவர்களுக்
கும் குறிசொல்லுகிறவர்களுக்கும் செவி
கொடுக்கிறார்கள்; உனக்கோவெனில் உன்
கடவுளாகிய யெகோவா அப்படிச் செய்ய
15 இடங்கொடுக்கவில்லை. உன் கடவுளாகிய
யெகோவா என்னைப்போலும் ஒரு தீர்க்க
தரிசியை உன் சகோதரரிலிருந்து உனக்காக
உன் நடுவே எழும்பப்பண்ணுவார்; அவ
16 ருக்குச் செவிகொடுங்கள். ஓரேபிலே சபை
யினத்தும் கூடிவந்த நாளில் நீ உன் கடவு
ளாகிய யெகோவாவினிடம் விண்ணப்பஞ்
செய்து கேட்டபடியெல்லாம் அவர் செய்
திருப்பார்; நான் சாகாதபடி என் கடவுளாகிய
யெகோவாவின் சப்தத்தை இனி நான்
கேளாமலும், இந்தப் பெரிய அக்கினியை
இனி நான் காணமலும் இருப்பேனாக
என்று நீ வேண்டிக்கொள்ளவே யெகோவா
17 என்னிடம்: அவர்கள் சொன்னது சரியே.
18 உன்னைப்போலும் ஒரு தீர்க்கதரிசியை நான்
அவர்களுக்காக அவர்கள் சகோதரர் நடுவி
லிருந்து எழும்பப்பண்ணி என் வார்த்தை
களை அவர் வாயில் அருளுவேன்; நான் அவ
ருக்குக் கட்டளையிடுவதையெல்லாம் அவர்
19 களுக்கு அவர் சொல்லுவார். என் நாமத்
தில் அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்
குச் செவிகொடாதவன் எவனை அவனை
நான் தண்டிப்பேன். சொல்லும்படி நான் 20
கட்டளையிடாத வார்த்தையை என் நாமத்
திலே சொல்லத் துணியும் தீர்க்கதரிசியும்
வேறே தேவர்களின் நாமத்திலே பேசும்
தீர்க்கதரிசியும்சாகவேவேண்டும். யெகோவா 21
சொல்லாத வார்த்தை இன்னதென்று நாங்
கள் எப்படி அறிவோம் என்று நீ உன்
இருதயத்தில் சொல்வாயாகில், ஒரு தீர்க்க 22
தரிசி யெகோவாவின் நாமத்திலே சொல்லும்
காரியம் நடவாமலும் நிறைவேறாமலும்
போனால், அது யெகோவா சொல்லாத
வார்த்தையாம்; துணிகரத்தினாலே அந்தத்
தீர்க்கதரிசி அதைச் சொன்னான்; அவனுக்கு
நீ பயப்படவேண்டாம்.

19 உன் கடவுளாகிய யெகோவா உனக்குக்
கொடுக்கும் தேசத்தின் ஜாதிகளை, உன் கட
வுளாகிய யெகோவா சங்கரித்துவிடவே நீ
அவர்கள் நாட்டைச் சொந்தமாக்கிக்
கொண்டு அவர்கள் ஊர்களிலும் அவர்கள் 2
வீடுகளிலும் குடியேறும்போது, உன் கட
வுளாகிய யெகோவா உனக்குச் சொந்தமாக்
கிக்கொள்ளக்கொடுக்கும் உன் தேசத்தின்
நடுவிலே உனக்கு மூன்று ஊர்களைப் பிரித்து
வைக்கவேண்டும். கொலைசெய்தவன் எவ 3
னும் அங்கே தப்பி ஓடிப்போகும்படி உன்
கடவுளாகிய யெகோவா உனக்குச் சுதந்தர
மாகக் கொடுக்கப்போகிற உன் தேசமுழு
வதையும் நீ மூன்று பங்காகப் பிரித்து அந்த
ஊர்களுக்கு வழியைச் செய்யவேண்டும்.
கொலைசெய்து அங்கே தப்பியோடிப் பிழைக் 4
கத்தக்கவன் யாரென்றால்: முற்பகையின்
றித் தன் அயலானைக் கைப்பிசகாய்க்
கொன்றவனே. ஒருவன் விறகுவெட்டத் 5
தன் அயலானுடே காட்டிற்குப்போய்
மரத்தைவெட்டத் தன் கையிலிருந்த கோட
ரியை ஓங்கும்போது இரும்பானது காம்பை
விட்டுக் கழன்று அயலான்மேல் படவே
அவன் இறந்துபோனால், இவன் அந்த 6
ஊர்கள் ஒன்றில் ஓடிப்போய்ப் பிழைத்
திருப்பான்; வழி தூரமாயிருக்கிறதினாலே
இரத்தப்பழிக்காரன் தன் மனம் எரிகையில்
கொலைசெய்தவனைப் பின்தொடர்ந்து பிடித்து
அவனைக் கொன்றுபோடாதபடி பார்க்க
வேண்டும்; இவனுக்கு அவன்மேல் முற்
பகையில்லாதபடியினால் இவன்மேல் சாவுக்
கேதுவான குற்றம் சுமராது. இதினிமித்த 7
தமே மூன்று ஊர்களை உனக்குப் பிரித்து
வைக்கவேண்டும் என்று நான் உனக்குக்
கட்டளையிடுகிறேன். நீ உன் கடவுளாகிய 8
யெகோவாவில் அன்புகூர்ந்து எந்நாளும்
அவர் வழிகளில் நடப்பதற்கென்று இக்

காலில் நான் உனக்குப் போதிக்கிற இந்தச்
சகல கட்டளைகளையும் கைக்கொண்டு
9 அதின்படி செய்துவந்தால் | உன் கடவுளாகிய யெகோவா உன் பிதாக்களுக்கு
ஆணையிட்டபடியே அவர் உன் எல்லைகளை
அகலமாக்கி உன் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று சொன்ன தேசம் முழுவதையும் உனக்குக் கொடுப்பார், கொடுக்கும்
போது இந்த மூன்று ஊர்களோடு இன்னும்
மூன்று ஊர்களையும் பிரித்துவைத்துக்
10 கொள். உன் கடவுளாகிய யெகோவா
உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் உன்
தேசத்திலே குற்றமில்லாத இரத்தம் சிந்தப்
பட்டு உன்மேல் இரத்தப்பழி சுமராதபடி
11 இப்படிச் செய்யவேண்டும். ஒருவன் தன்
அயலானைப் பகைத்து அவனுக்கு விரோதமாய்ப் பதிவிருந்து எழும்பிச் சாகும்படி
அவனை அடித்துவிட்டு இந்த ஊர்களில்
ஒன்றில் தப்பி ஓடிப்போயிருப்பானானால், |
12 அவனுடைய ஊரிலுள்ள மூப்பர்கள் ஆள்
அனுப்பி அங்கிருந்து அவனைக் கொண்டு
வந்து அவனை இரத்தப்பழி வாங்குகிறவன்
கையில் ஒப்புக்கொடுக்கவேண்டும்; அவன்
13 சாவான். உன் கண் அவனுக்கு இரங்கவேண்டாம்; குற்றமில்லாத இரத்தத்தை
இஸ்ரவேலரின் பூமியிலிருந்து விலக்க
வேண்டும்; அப்பொழுது நீ க்ஷேமமாயிருப்பாய்.
14 நீ சொந்தமாக்கிக்கொள்ளும்படி உன்
கடவுளாகிய யெகோவா உனக்குக் கொடுக்கும் தேசத்தில் உனக்கு வரும் சுதந்தரத்திலே முன்னோர்கள் குறித்திருக்கிற அயலானுடைய எல்லையை ஒற்றிப்போடாதே.
15 ஒருவன் எந்த அக்கிரமத்தையும் எந்தப்
பாவத்தையும் செய்தாலும் ஒரே சாட்சியின்
வாக்கினால் அவனை நியாயந்தீர்க்கக்கூடாது;
இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே
16 காரியம் நிலைவரப்படவேண்டும். ஒருவன்
மேல் துரோகத்தைச் சுமத்தும்படி அவனுக்கு விரோதமாக ஒரு பொய்ச்சாட்சி
17 எழும்பினால் | வழக்காடுகிற இருவரும்
யெகோவாவின் திருச்சந்நிதியில்அக்காலத்து
ஆசாரியருக்கும் நியாயாதிபதிகளுக்கும் முன்
18 பாகவந்து நிற்கவேண்டும். நியாயாதிபதிகள் தீரவிசாரிப்பார்கள்; அவன் பொய்ச்சாட்சி, தன் சகோதரன்மேல் பொய்யாகவே
குற்றஞ்சாட்டினவன் என்று கண்டால்,
19 அவன் தன் சகோதரனுக்குச் செய்ய
நினைத்தபடியே அவனுக்குச் செய்யுங்கள்;
தீமையானதை இப்படியே உன் நடுவிலிருந்து அகற்றிவிடவேண்டும். மற்றவர்
20 களும் அதைக் கேட்டுப் பயந்து இனி உங்களுக்குள்ளே அப்படிப்பட்ட தீமையான
காரியத்தைச் செய்யாதிருப்பார்கள். உன்
கண் இரங்கவேண்டாம்; உயிருக்கு உயிரே,
கண்ணுக்குக் கண்ணே, பல்லுக்குப் பல்லே,
கைக்குக் கையே, காலுக்குக் காலே.

நீ உன் சத்துருக்களோடு யுத்தஞ்செய் 20
யப்போகும்போது குதிரைகளையும் இரதங்களையும் உன்னிலும் பெரிய கூட்டமாகிய
படையையும் கண்டால் அவர்களுக்குப்
பயப்படாதே; உன்னை எகிப்து தேசத்திலிருந்து கொண்டுவந்த உன் கடவுளாகிய
யெகோவா உன்னுடனே இருக்கிறார். நீங்கள் 2
யுத்தஞ்செய்யக் கிட்டிச் சேருகையில் ஆசாரியன் வந்து போர்வீரரிடம் பேசி: இஸ்ர 3
வேலரே, கேளுங்கள்; இன்று உங்கள் சத்துருக்களோடு யுத்தஞ்செய்ய வந்திருக்கிறீர்கள்; உங்கள் இருதயம் துவளவேண்டாம்;
நீங்கள் அவர்களைப் பார்த்துப் பயப்பட
வேண்டாம், தத்தளிக்கவும் திகைக்கவும்
வேண்டாம். உங்கள் கடவுளாகிய யெகோ 4
வாவே உங்களோடுகூடப் போகிறார்; உங்களுக்காக உங்கள் சத்துருக்களோடே யுத்தம்பண்ணுகிறவர் அவரே, உங்களை அவரே
இரட்சிப்பார் என்று சொல்லவேண்டும்.
அன்றியும் தலைவர் போர்வீரரைப் பார்த்து: 5
புதுவீட்டைக் கட்டி அதைப் பிரதிஷ்டை
செய்யாதிருக்கிறவன் எவனோ அவன் தன்
வீட்டுக்குத் திரும்பிப்போகட்டும்; அவன்
யுத்தத்திலே செத்தால் வேறொருவன்
அதைப் பிரதிஷ்டை செய்யவேண்டியதா
குமே. திராட்சத் தோட்டத்தை நாட்டி 6
அதை அநுபவியாதிருக்கிறவன் எவனோ
அவன் தன் வீட்டுக்குத் திரும்பிப்போகட்டும்; அவன் யுத்தத்திலே செத்தால்
வேறொருவன் அதை அநுபவிக்கவேண்டியதாகுமே. தனக்குப் பேசியிருக்கிற பெண்ணை 7
விவாகம் பண்ணுதிருக்கிறவன் எவனோ
அவன் தன் வீட்டுக்குத் திரும்பிப்போகட்டும்; அவன் யுத்தத்திலே செத்தால்
வேறொருவன் அவனை விவாகம்பண்ண
வேண்டியதாகுமே என்று சொல்லவேண்டும். பின்னும் தலைவர் வீரரிடம் பேசி: 8
கோழையானவனும் இரக்கமெஞ்சுள்ளவனும் எவனோ அவன் தன் சகோதரரின்
இருதயத்தைத் தன் இருதயத்தைப்போல
இளகிப்போகப் பண்ணுதபடி தன் வீட்டுக்குத் திரும்பிவிடட்டும் என்று சொல்லவேண்டும். தலைவர் வீரரிடம் பேசி முடிந்த 9
பின்பு வீரருக்குமேல் சேனாபதிகளை நியமிக்கவேண்டும்.

நீ ஒரு ஊருக்கு விரோதமாய் யுத்தம் 10
பண்ண நெருங்கும்போது அந்த ஊராருக்

11 குச் சமாதானம் கூறவேண்டும். அவர்கள் உனக்குச்சமாதானமான உத்தரவுகொடுத்து, வாசலைத் திறந்தால் அதிலுள்ள ஜனங்கள் எல்லாரும் உன் ஏவலாட்களாகி உனக்கு
12 வேலை செய்வார்கள். அவர்கள் உன்னோடே சமாதானப்படாமல் யுத்தம்பண்ணுவார்களானால் நீ அதை முற்றுகை
13 போட்டு | உன் கடவுளாகிய யெகோவா அதை உன் கையில் ஒப்புக்கொடுக்கும் போது அதிலுள்ள புருஷர் யாவரையும் பட்
14 டயக்கருக்கினால் வெட்டி | ஸ்திரீகளையும் குழந்தைகளையும் மிருகங்களையும் ஊரிலுள்ள யாவற்றையும் கொள்ளைப்பொருள் அனைத்தையும் உனக்கே வைத்துக்கொள். உன் கடவுளாகிய யெகோவா உனக்கு ஒப்புக்கொடுக்கும் உன் சத்துருக்களின் கொள்
15 ளைப்பொருளை அநுபவிப்பாய். இந்த ஜாதிகளைச் சேராதவைகளும் உனக்கு வெகு தூரத்திலிருக்கிறவைகளுமான சகல ஊர்
16 களுக்கும் இப்படியே செய்வாய். உன் கடவுளாகிய யெகோவா உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கிற ஏத்தியர், எமோரியர், கானானியர், பாரசீகர், ஏவியர், எபூசியர் என்னும் ஜாதிகளின் ஊர்களிலோ சுவாசமுள்ளதொன்றையும் உயிரோடே வைக்கா
17 தே; அவர்களை உன் கடவுளாகிய யெகோவா உனக்குக் கட்டளையிட்டபடியே தெய்வசாபம் நிறைவேறச் சங்காரிக்கவேண்டும்.
18 இப்படிச் செய்யாவிட்டால் அவர்கள் தங்கள் தேவர்களுக்குச்செய்கிற சகல அருவருப்புகளின்படியேயும் நீங்களும் செய்ய உங்களுக்குக் கற்றுக்கொடுப்பார்கள், இப்படியாக நீங்கள் உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்வீர்கள்.
19 நீ ஒரு ஊரைப்பிடிக்க அதற்கு விரோதமாய் யுத்தம்பண்ணி நெடுநாள் அதை முற்றுகைபோட்டிருக்கும்போது கோடரியை ஓங்கி அதின் மரங்களை வெட்டிச் சேதப்படுத்தாதே; அவைகளின் கனியை நீ சாப்பிடலாமே; ஆகவே அவைகளை வெட்டா
20 தே, காட்டுமரம் மனிதனோ? நீ அதை முற்றுகைபோட்டு அழிக்கத்தகுமோ? சாப்பிடும் கனி கொடாதவைகள் என்று நீ அறிந்திருக்கிற மரங்களை மாத்திரம் வெட்டி உன்னோடு யுத்தம்பண்ணுகிற பட்டணம் பிடிபடுமட்டும் முற்றுகைக்குவேண்டிய தளவாடங்களைச் செய்துகொள்.

**21** நீ சொந்தமாக்கிக்கொள்ளும்படி உன் கடவுளாகிய யெகோவா கொடுக்கும் தேசத்தில் கொலையுண்டு கிடக்கிற ஒருவனை வெளியிலே கண்டு அவனைக் கொன்றவன் இன்
2 னான் என்று தெரியாதிருந்தால், உன் மூப்பரும் உன் நியாயாதிபதிகளும் புறப்பட்டுப்போய்க் கொலையுண்டவன் கிடக்கும் இடத்திற்கும் சுற்றிலுமிருக்கிற ஊர்களுக்குமுள்ள தூரத்தை அளந்துபார்க்கவேண்டும். பிரேதத்திற்கு எந்த ஊர் சமீபமாயிருக்கிறதோ அந்த ஊர் மூப்பர், வேலைக்குட்படாததும் நுகத்தடியில் பிணைக்கப்படாததுமான ஒரு கிடாரியைப் பிடித்து | ஓடுகிறுள்ளதும் உழுது விதையாததுமான பள்ளத்தாக்கிலே அதைக் கொண்டுபோய், அந்தப் பள்ளத்தாக்கிலே அதின் தலையை வெட்டிப்போட வேண்டும். உன் கடவுளாகிய யெகோவா தமக்குத் திருப்பணிவிடை செய்யவும் யெகோவாவின் திருநாமத்திலே ஆசீர்வதிக்கவும் லேவியின் குமாரராகிய ஆசாரியரைத் தெரிந்துகொண்டபடியால் அவர்களும் வந்திருக்கவேண்டும், அவர்கள் சொற்படியே எந்த வழக்கும் எந்தக் காயச் சேதமும் தீர்க்கப்படவேண்டும். பிரேதங்கிடக்கிற இடத்திற்குச் சமீபமான ஊரின் மூப்பர் அனைவரும் பள்ளத்தாக்கிலே தலை வெட்டப்பட்ட கிடாரியின்மேல் தங்கள் கைகளைக் கழுவி: எங்கள் கைகள் அந்த இரத்தத்தைச் சிந்தினதுமில்லை, எங்கள் கண்கள் அதைக் கண்டதுமில்லை; யெகோவாவே, நீர் மீட்டுக்கொண்ட உமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மன்னிப்புத்தாரும், குற்றமில்லாத இரத்தம் உமது ஜனமாகிய இஸ்ரவேலரின் நடுவிலிருக்க வொட்டாதேயும் என்று சொல்லவேண்டும்; அப்பொழுது அந்த இரத்தத்தினால் விளைவது மன்னிக்கப்படும். இப்படியாக யெகோவாவின் பார்வையில் நேர்மையானதை நீ செய்வாயானால் குற்றமில்லாத இரத்தத்தை உன் நடுவிலிருந்து விலக்கிப்போடுவாய்.

நீ உன் சத்துருக்களுக்கு விரோதமாய் யுத்தத்திற்குப் போகையில் உன் கடவுளாகிய யெகோவா அவர்களை உன் கையில் ஒப்புக்கொடுக்கவே, நீ அவர்களைச் சிறைபிடிக்கும்போது | சிறைகளில் ரூபவதியான ஒரு ஸ்திரீயைக்கண்டு அவள்மேல் பிரியமாகி அவளை விவாகம்பண்ண விரும்பி | அவளை உன் வீட்டிற்குள் அழைத்துக்கொண்டு போவாயானால் அவள் தன் தலையைச் சிரைத்துத் தன் நகங்களைக் களைந்து | தன் சிறையிருப்பின் வஸ்திரத்தை நீக்கி உன் வீட்டிலிருந்துகொண்டு ஒருமாதமட்டும் தன் தகப்பனையும் தாயையும் நினைத்துத் துக்கங்கொண்டாடவேண்டும்; அதன்பின்பு நீ அவளோடே சேர்ந்து அவளுக்குப் புருஷனாயிரு; அவள் உனக்கு மனைவியாயிருப்பாள். உனக்கு அவள்மேல் பிரியமற்றுப்போ
14

ஞல் அவனைத் தன் இஷ்டப்படி போகவிட
லாம், நீ அவனைப் பணத்திற்கு விற்கவே
கூடாது. நீ அவனைத் தாழ்மைப்படுத்தினபடி
யினால் அவனை அடிமையைப்போல் கடின
மாய் நடத்தவேண்டாம்.
15 இரண்டு மனைவிகளையுடைய ஒருவன்,
ஒருத்தியின்மேல் விருப்பாயும் மற்றவள்மேல்
வெறுப்பாயுமிருக்க, இருவரும் அவனுக்
குப் பிள்ளைகளைப் பெற்றார்களேயாகில்,
முதற்பிறந்தவன் வெறுக்கப்பட்டவளின்
16 புத்திரனேயானாலும், தகப்பன் தனக்குள்ள
ஆஸ்தியைத் தன் பிள்ளைகளுக்குப் பங்கிடும்
நாளில், வெறுத்தவளிடம் பிறந்த முதற்
பேருனவனிருக்க, விரும்பியவளிடம் பிறந்
தவனுக்குச் சேஷ்டபுத்திர சுதந்தரத்தைக்
17 கொடுக்கக்கூடாது. வெறுக்கப்பட்டவளி
டம் பிறந்தவனையே சேஷ்டபுத்திரனாக அங்
கீகரித்துத் தனக்குள்ள ஆஸ்திகளிலெல்லாம்
இரண்டு பங்கை அவனுக்குக் கொடுக்க
வேண்டும்; அவன் தன் தகப்பனுடைய
பலத்தின் முதற்பலன், சேஷ்டபுத்திர சுதந்
தரம் அவனுக்கே உரியது.
18 தன் தகப்பன் சொல்லையும் தன் தாயின்
சொல்லையும் கேளாமலும் அவர்களால்
சிக்ஷிக்கப்பட்டும் அவர்களுக்குக் கீழ்ப்படி
யாமலும் போகிற அடங்காத மூரட்டுப்
19 பிள்ளை ஒருவனுக்கு இருந்தால், அவன் தகப்
பனும் அவன் தாயும் அவனைப்பிடித்து
அவன் ஊர் மூப்பரிடத்துக்கும் ஊர் வாச
லுக்கும் அவனைக் கொண்டுபோகவேண்டும்.
20 அந்த ஊர் மூப்பரிடம்: இவன் எங்கள்
மகன், அடங்காத மூரடன், எங்கள் சொற்
கேளாதவன், பெருந்தினிக்காரன், குடியன்
21 என்று சொல்லவே | அந்த ஊர் மனிதரெல்
லாரும் அவன் சாகும்படி அவன்மேல் கல்
லெறியவேண்டும்: தீமையானதை இப்படி
யே உன் நடுவிலிருந்து அகற்றிவிடவேண்
டும்; இஸ்ரவேலர் எல்லாரும் அதைக் கேட்
டுப் பயப்படுவார்கள்.
22 ஒருவன் மரணதண்டனைக்கேதுவான குற்
றஞ்செய்து மரணத் தீர்ப்புப்பெற்றால்
அவனை மரத்திலே தூக்கிப்போடவேண்டும்.
23 அவன் உடலை இரவிலே மரத்தில் தொங்க
விடலாகாது. அந்நாளிலேயே அதை
அடக்கம்பண்ணவேண்டும்; தூக்கிலிடப்
பட்டவன் கடவுளின் சாபத்திற்குள்ளான
வன்; உன் கடவுளாகிய யெகோவா உனக்
குச் சுதந்தரமாகக் கொடுக்கும் உன் தேசத்
தைத் தீட்டுப்படுத்தாதே.

**22** உன் சகோதரனுடைய மாடாவது
ஆடாவது வழி தப்பிப்போகிறதைக் கண்
டாயானால் அதைக் காணாதவன்போல்
இருந்துவிடாதே. அதை உன் சகோதர
னிடம் திருப்பிக்கொண்டுபோகவேண்டும்.
உன் சகோதரன் உனக்குச் சமீபமாயிராம 2
லும் அவன் இன்னனென்று உனக்குத் தெரி
யாமலும்போனால் அதை உன் வீட்டிற்குக்
கொண்டுபோய் அதை உன் சகோதரன்
தேடிவருமட்டும் உன்னிடத்திலே வைத்தி
ருந்து அவனுக்குத் திரும்பக்கொடுக்கவேண்
டும்; அவன் கழுதை விஷயத்திலும் அப் 3
படியே, அவன் வஸ்திர விஷயத்திலும் அப்
படியே, உன் சகோதரனிடமிருந்து காணாமற்
போனவற்றில் எதைக் கண்டுபிடித்தாயானா
லும் அப்படியே செய்யவேண்டும்; அவை
களை நீ காணாதவன்போலிருக்கலாகாது.
உன் சகோதரனுடைய கழுதையாவது 4
அவன் மாடாவது வழியிலே விழுந்துகிட
க்கிறதைக் கண்டாயானால் அதைக் காணாத
வன்போல் இருந்துவிடாமல் அவனோடே
கூட அதைத் தூக்கியெடுத்துவிடவேண்டும்.
புருஷரின் உடை ஸ்திரீகள்மேல் இருக் 5
கலாகாது; ஸ்திரீகளின் உடையைப் புருஷர்
தரிக்கலாகாது; அப்படிச் செய்கிறவர்கள்
எல்லாரும் உன் கடவுளாகிய யெகோவா
வுக்கு அருவருப்பானவர்கள்.
வழியருகே ஒரு மரத்திலாவது தரையிலா 6
வது குஞ்சுகளாயினும் முட்டைகளாயினு
முள்ள ஒரு குருவிக்கூட்டை நீ காணும்
போது தாயானது குஞ்சுகளின்மேலாவது
முட்டைகளின் மேலாவது அடைகாத்துக்
கொண்டிருந்தால் நீ அந்தக் குஞ்சுகளோடே
தாயையும் பிடிக்கலாகாது. தாயை விரட்டி 7
விடவேண்டும்; குஞ்சுகளை மாத்திரம் எடுத்
துக்கொள்ளலாம்; அப்பொழுது நீ க்ஷேமமா
யிருப்பாய்; நெடுநாள் வாழ்ந்திருப்பாய்.
நீ புது வீட்டைக் கட்டும்போது ஒருவன் 8
உன் மெத்தையிலிருந்து விழுகிறதினாலே நீ
ரத்தப்பழியை உன் வீட்டின்மேல் சுமத்திக்
கொள்ளாதபடி மெத்தைக்குக் கைப்பிடிச்
சுவரைக் கட்டவேண்டும்.
உன் திராட்சத்தோட்டத்திலே இருவகை 9
யான விதைகளைக் கலந்து விதையாதே.
இப்படிச்செய்தால் நீ விதைத்தவைகளையும்
திராட்சத்தோட்டத்தின் பலனையும் எல்லா
வற்றையுமே பரிசுத்த ஸ்தலத்திற்குக்
கொடுத்துவிடவேண்டியதாகும்.
மாட்டையும் கழுதையையும் ஒன்றாய்ப் 10
பிணைத்து உழாதே. ஆட்டுமயிரும் சணல் 11
நூலும் சலந்த வஸ்திரத்தை உடுத்திக்கொள்
ளாதே.
நீ போர்த்துக்கொள்ளுகிற உன் மேல் 12
டோர்வையின் நான்கு மூலைகளிலும் தொங்
கல்களைச் செய்துவைத்துக்கொள்.

13 ஒரு பெண்ணை விவாகஞ்செய்த ஒருவன் அவளோடு சேர்ந்தபின்பு அவளை வெறுத்து:
14 நான் இந்தப் பெண்ணை விவாகம்செய்து அவளோடு சேர்ந்தபோது கன்னிமையைக் காணவில்லை என்று அவள்மேல் கேவலமான காரியங்களைச் சுமத்தி அவளுக்கு அவ
15 தூறு உண்டாக்கினால், அந்தப்பெண்ணின் தகப்பனும் அவள் தாயும் அவள் கன்னிமையின் அடையாளத்தை ஊர்வாசலிலே
16 மூப்பரிடம் கொண்டுவரவேண்டும். அங்கே அந்தப் பெண்ணின் தகப்பன்: என் மகனை இந்த மனிதனுக்கு மனைவியாகக் கொடுத்
17 தேன்; இவன் அவனை வெறுத்து, நான் உன் மகளிடத்தில் கன்னிமையைக் காணவில்லை யென்று கேவலமான காரியங்களை அவள் மேல் சுமத்துகிறான்; என் மகளுடைய கன்னிமையின் அடையாளம் இங்கேயிருக்கிறது என்று மூப்பரிடம்சொல்லவேண்டும்; பின்பு ஊர்மூப்பர் பார்க்க அந்த வஸ்திரத்
18 தை விரிக்கவேண்டும்; அப்பொழுது அந்த ஊர்மூப்பர் அந்த மனிதனைப்பிடித்து
19 அவனைக் கண்டித்து | அவன் இஸ்ரவேலில் ஒரு கன்னிகையை அவதூறு பண்ணினதினாலே அவனிடம் தூறு வெள்ளிக்காசை அபராதம் வாங்கிப் பெண்ணின் தகப்பனுக்குக் கொடுக்கவேண்டும்; அவளோ அவனுக்கு மனைவியாகவே இருக்கவேண்டும்; அவன் உயிரோடிருக்குமளவும் அவ
20 னைத் தள்ளிவிடக்கூடாது. அந்தப் பெண்ணினிடத்தில் கன்னிமை காணப்படவில்லை யென்னும் சங்கதி மெய்ப்பட்டதேயானால் |
21 அந்தப் பெண்ணை அவள் தகப்பனுடைய வீட்டுவாசலுக்கு முன்பாகக் கொண்டுவந்து, அவள் இஸ்ரவேலில் மதிகெட்ட காரியத்தைச்செய்து தன் தகப்பன் வீட்டிலே வேசித்தனம் பண்ணினபடியினாலே அவளுடைய ஊர் மனிதர் அவளைக் கல்லெறிந்து கொல்லவேண்டும்; தீமையானதை இப்படியே உன் நடுவிலிருந்து அகற்றிவிடவேண்டும்.
22 புருஷனுக்கு விவாகம்பண்ணப்பட்ட ஸ்திரீயோடே வேறொருவன் சயனிக்கக் கண்டுபிடிக்கப்பட்டால், அந்த ஸ்திரீயோடே சயனித்த மனிதனும் அந்த ஸ்திரீயும் இருவரும் சாகவேண்டும்; தீமையானதை இப்படியே இஸ்ரவேலிலிருந்து அகற்றிவிடவேண்டும்.
23. கன்னிகையான ஒருத்தியை ஒருவனுக்குப் பெண்பேசியிருக்கையில் வேறொருவன் அவளை ஊருக்குள்ளே கண்டு அவளோடே
24 சயனித்தால் | அந்தப்பெண் ஊருக்குள்ளிருந்தும் கூக்குரலிடாதபடியினாலும் அந்த மனிதன் அயலான் மனைவியைத் தாழ்வுபடுத்தினபடியினாலும் இருவரையும் அந்த ஊர்வாசலுக்கு வெளியே கொண்டுபோய்க் கல்லெறிந்து கொன்றுவிடுங்கள்; தீமையானதை இப்படியே உன் நடுவிலிருந்து அகற்றிவிடவேண்டும்.
25 ஒருவனுக்குப் பேசியிருந்தவளை வேறொருவன் வெளியிலே கண்டு அவளைப் பலவந்தமாய்ப்பிடித்து அவளோடே சயனித்தானேயாகில் அவளோடே சயனித்த மனிதன் மாத்திரம் சாகவேண்டும்.
26 பெண்ணுக்கு ஒன்றும் செய்யலாகாது; பெண்ணின்மேல் சாவுக்கேதுவான குற்றமில்லை; காரியமானது ஒருவன் தன் அயலான்மேல் எழும்பிச் சாகும்படி அவனை அடிப்பதுபோலிருக்கிறது.
27 வெளியிலே அவன் அவளைக் கண்டு பிடித்தான்: இன்னொருவனுக்குப் பெண் பேசியிருந்தவள் கூக்குரலிட்டும் அவளைக் காப்பாற்றுவாரில்லை.
28 ஒருவனும் பேசியிராத கன்னிகை ஒருத்தியை ஒருவன் கண்டு கையைப் பிடித்து அவளோடே சயனிக்கையில் அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் |
29 அவளோடே சயனித்த மனிதன் பெண்ணின் தகப்பனுக்கு ஐம்பது வெள்ளிக்காசைக் கொடுக்கவேண்டும்; அவன் அவளைக் கற்பழித்தபடியினால் அவள் அவனுக்கு மனைவியாயிருக்கவேண்டும்; அவன் உயிரோடிருக்குமட்டும் அவளைத் தள்ளிவிடக் கூடாது.
30 ஒருவனும் தன் தகப்பனுக்கு மனைவியாயிருந்தவளை விவாகஞ்செய்துகொள்ளலாகாது; அது அவன் தகப்பன் பேருக்கு அவமானத்தை யுண்டாக்கினதாகும்.

**23** விதையடிக்கப்பட்டவனும் கோசமறுபட்டவனும் யெகோவாவின் சபைக்கூட்டத்திற்கு வரலாகாது.
2 விபசாரத்திற் பிறந்த பிள்ளையும் யெகோவாவின் சபைக்கூட்டத்திற்கு வரலாகாது; அவனுக்குப் பத்தாம் தலைமுறையானவனும் யெகோவாவின் சபைக்கூட்டத்திற்கு வரலாகாது.
3 அம்மோனியனும் மோவாபியனும் யெகோவாவின் சபைக்கூட்டத்திற்கு வரலாகாது; பத்தாம் தலைமுறையிலும் என்றைக்கும் அவர்கள் யெகோவாவின் சபைக்கூட்டத்திற்கு வரலாகாது;
4 நீங்கள் எகிப்திலிருந்து வருகிற வழியிலே அவர்கள் எதிர்கொண்டு உங்களுக்கு ஆகாரமும் தண்ணீரும் கொடுக்கவில்லை; உன்னைச் சபிக்கும்படியாய் மெசொப்பொத்தாமியாவின் ஊராகிய பெதோரிலிருந்த பெயோரின் குமாரன் பிலேயாமுக்குக் கூலிபேசி அவனை அழைப்பித்தார்கள்;
5 இவைகளினிமித்தம் அவர்களுக்கு இப்படிச் செய்யவேண்டும். உன்

கடவுளாகிய யெகோவா மீலேயாமுக்குச் செவிசாய்க்க மனமற்றுப்போனார்; உன் கடவுளாகிய யெகோவா உன்னில் அன்பு கூர்ந்தபடியால், அவர் அந்தச் சாபத்தை 6 உனக்கு ஆசீர்வாதமாக மாற்றினார். நீ உன் ஆயுள்காலமெல்லாம் ஒரு நாளும் அவர்கள் சமாதானத்தையும் நன்மையையும் 7 தேடாதே. ஏதோமியனே அருவருக்காதே, அவன் உன் சகோதரன்; எகிப்தியனே அருவருக்காதே, அவன் தேசத்திலே நீ பரதேசி 8 யாயிருந்தாய். மூன்றும் தலைமுறையில் அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் யெகோவாவின் சபைக்கூட்டத்திற்கு வரலாம்.

9 நீ படையெடுத்து உன் சத்துருக்களுக்கு விரோதமாகச் செல்லும்போது நீ தீதான காரியங்கள் எல்லாவற்றிற்கும் விலகியிருக்க 10 வேண்டும். இராக்காலத்தில் சம்பவித்த தீட்டினாலே அசுத்தமாயிருக்கிற ஒருவன் உங்களிலிருந்தால் அவன் பாளயத்திற்கு வெளியே போய்விடவேண்டும்; பாளயத் 11 திற்குள் வரலாகாது; | சாயங்காலம் வரவே தண்ணீரில் முழுகிச் சூரியன் அஸ்தமிக்கும் 12 போது பாளயத்தினுள் வரலாம். நீ வெளிக்குப் போயிருக்கத்தக்க இடம் பாளயத்திற்கு 13 வெளியே இருக்கவேண்டும். உன் ஆயுதங்களோடே ஒரு சிறுகோலும் உன்னிடம் இருக்கவேண்டும். நீ மலஜலாதிக்குப் போகும்போது, அதினால் மண்ணைத்தோண்டி உன்னிலிருந்து கழிந்துபோனதை மூடிப் 14 போடவேண்டும். உன் கடவுளாகிய யெகோவா உன்னை இரட்சிக்கவும் உன் சத்துருக்களை உனக்கு ஒப்புக்கொடுக்கவும் உன் பாளயத்தினுள்ளே உலாவிக்கொண்டிருக்கிறார்; அவர் உன்னிடத்தில் அசுசியான எதையும் கண்டு உன்னை விட்டுப் போய்விடாதபடி உன் பாளயம் சுத்தமாயிருக்கவேண்டும்.

15 தன் எஜமானுக்குத் தப்பி உன்னிடம் வந்த அடிமையை அவன் எஜமான் கையில் 16 ஒப்புக்கொடாதே. அவன் உனக்கு இருக்கிற உன் ஊர்கள் ஒன்றிலே தனக்குப் பிரியமான இடத்தைத் தெரிந்துகொண்டு அதிலே உன்னோடிருக்கட்டும்; அவனை ஒடுக்கவேண்டாம்.

17 இஸ்ரவேலின் குமாரத்திகளில் ஒருத்தியும் தாசியாயிருக்கக்கூடாது; இஸ்ரவேலின் குமாரரில் ஒருவனும் தாசியம்பூண்ட 18 சோரனாய் இருக்கக்கூடாது. தாசியின் பணயத்தையும் நாயின் சம்பத்தையும் எந்தப் பொருத்தனைக்கும் உன் கடவுளாகிய யெகோவாவின் ஆலயத்திலே கொண்டு வராதே; அவைகள் இரண்டும் உன் கடவுளாகிய யெகோவாவுக்கு அருவருப்பானவைகள்.

19 கடனுக்கொடுக்கிற பணத்துக்கும் ஆகாரத்துக்கும் கடனுக்கொடுக்கிற வேறே எந்தப் பொருளுக்கும் உன் சகோதரனிடம் வட்டி வாங்காதே. அந்நியன் 20 கையில் நீ வட்டி வாங்கலாம்; உன் சகோதரனிடம் வட்டி வாங்காதே; அப்படியானால் நீ சொந்தமாக்கிக்கொள்ளப்போகிற தேசத்திலே உன் கடவுளாகிய யெகோவா நீ கையிட்டுச்செய்யும் வேலையிலெல்லாம் உன்னை ஆசீர்வதிப்பார்.

21 நீ உன் கடவுளாகிய யெகோவாவுக்குப் பொருத்தனை செய்திருந்தால் அதைச் செலுத்தத் தாமதியாதே; உன் கடவுளாகிய யெகோவா அதை உன்னிடம் கேட்காமல் விடார்; அது உனக்குப் பாவமாகும். 22 நீ பொருத்தனை செய்யாமற்போனால் உன்மேல் பாவமில்லை. 23 உன் வாயினால் சொன்னதையெல்லாம் நிறைவேற்றித் தீரவேண்டும்; உன் கடவுளாகிய யெகோவாவுக்குப் பொருத்தனை செய்து உன் வாயினாலே சொன்ன மனப்பூர்வ பலியைச் செலுத்தித் தீர்க்கவேண்டும்.

24 நீ அயலானுடைய திராட்சத் தோட்டத்தினுட் சென்றால் உன் விருப்பப்படியே திராட்சப்பழங்களைத் திருப்தியாகச் சாப்பிடலாம்; உன் கூடையிலேயோ ஒன்றும் வைத்துக்கொள்ளாதே. 25 அயலானுடைய வினைக்குட்போனால் உன் கையினால் கதிர்களைக் கொய்யலாம்; உன் அயலான் வினைச்சலில் அரிவாளை இடலாகாது.

24 ஒருவன் ஒரு பெண்ணை விவாகஞ்செய்து கொண்டபின்பு அவளிடம் இலச்சையான காரியத்தைக்கண்டு அவள்மேல் பிரியமற்றவனானால் அவன் தள்ளுதற்சீட்டை எழுதி அவள் கையிலே கொடுத்து அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிடலாம். அவள் அவன் வீட்டைவிட்டுப் போனபின் 2 வேறொருவனுக்கு மனைவியாகலாம். அந்த 3 இரண்டாம் புருஷனும் அவளை வெறுத்துத் தள்ளுதற் சீட்டை எழுதி அவள் கையிலே கொடுத்து அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிட்டானாலும் சரி, அவனை விவாகம் பண்ணின அந்த இரண்டாம் புருஷன் இறந்துபோனானும் சரி, | அவளைத் தள்ளி 4 விட்ட அவளுடைய முன்னை புருஷன் திரும்பவும், அவள் தீட்டுப்பட்டபிறகு, அவளைத் தன் மனைவியாகச் சேர்த்துக்கொள்ளக்கூடாது; அது யெகோவாவின் பார்வையில் அருவருப்பானது; உன் கடவுளாகிய யெகோவா உனக்குச் சுதந்தரமாகக் கொ

டுக்கும் தேசத்தின்மேல் பாவம் வரப்பண்ணுதே.

5 ஒருவன் ஒரு பெண்ணைப் புதிதாய் விவாகம் செய்திருந்தால் அவன் யுத்தத்திற்குப் போகவேண்டியதில்லை; அவன்மேல் கட்டாயமான எந்த வேலையும் சுமத்தவேண்டாம்; அவன் ஒரு வருஷமட்டும் தன் வீட்டிலே தன் இஷ்டப்படியிருந்து, தான் விவாகம்பண்ணின ஸ்திரீயைச் சந்தோஷப்படுத்தட்டும்.

6 திரிகையின் இரு கற்களையுமாவது அதின் மேற்கல்லை மாத்திரமாவது ஒருவரும் அடகாக வாங்கக்கூடாது; அது ஜீவனை அடகு வாங்குவதுபோலாகும்.

7 தன் சகோதரராகிய இஸ்ரவேல் புத்திரரில் ஒருவனைத் திருடி அவனை அடிமையாக்கி விற்றுப்போட்ட ஒருவன் அகப்பட்டால் அந்தத் திருடன் சாகவேண்டும்; தீமையானதை இப்படியே உன் நடுவிலிருந்து அகற்றிவிடவேண்டும்.

8 குஷ்டரோகத்தைப்பற்றி லேவியராகிய ஆசாரியர் உங்களுக்குப் போதிக்கும் யாவற்றையும் மிகவும் ஜாக்கிரதையாய்ச் செய்து வாருங்கள்; நான் அவர்களுக்குக் கட்டளையிட்டபடியே செய்ய ஜாக்கிரதையாயிருங்கள். 9 நீங்கள் எகிப்திலிருந்து வருகிற வழியிலே உங்கள் கடவுளாகிய யெகோவா மிரியாமுக்குச் செய்ததை நினைத்துக்கொள்ளுங்கள்.

10 அயலானுக்கு நீ எதையாகிலும் கடனுகக் கொடுக்கும்போது அவன் கொடுக்கும் அடகை நீ வாங்க அவன் வீட்டிற்குள் 11 செல்லவேண்டாம்; | வெளியே நின்று கொள்; கடன் வாங்கினவன் அந்த அடகை வெளியே உன்னிடம் கொண்டுவரவேண்டும். 12 அவன் ஏழையானால் நீ அவன் அடகை வைத்துக்கொண்டு நித்திரைசெய்யாதே. 13 பொழுது போகும்போது திரும்ப அந்த அடகை அவனுக்குக் கொடுத்துவிடவேண்டும்; அவன் தன் வஸ்திரத்தைப் போட்டுப் படுத்துக்கொண்டு உன்னை ஆசீர்வதிப்பான். அது சரியென உன் கடவுளாகிய யெகோவாவின் சந்நிதியில் உனக்கு எண்ணப்படும்.

14 சிறுமையான ஏழைக்கூலிக்காரனை ஒடுக்காதே; அவன் உன் சகோதரனாலும் சரியே, உன் ஊரில் வசிக்கிற அந்நியனாலும் சரியே அவனை ஒடுக்காதே. 15 அவன் வேலைசெய்த நாளிலேயே பொழுதுபோகுமுன் அவன் கூலியை அவனுக்குக் கொடுத்துவிடவேண்டும்; அவன் ஏழை, அதின்மேல் ஆவலாயிருக்கிறான்; அதைக் கொடாவிட்டால் அவன் உனக்கு விரோதமாய் யெகோவாவினிடம் முறையிடுவான்; அது உனக்குப் பாவமாகும்.

16 பிள்ளைகளினிமித்தம் பிதாக்களும் பிதாக்களினிமித்தம் பிள்ளைகளும் கொல்லப்படவேண்டாம்; அவனவன் செய்த பாவத்தினிமித்தம் அவனவனே கொல்லப்படவேண்டும்.

17 நீ அந்நியனுடைய நியாயத்தையும் திக்கற்றபிள்ளையின் நியாயத்தையும் புரட்டாதே. விதவையின் வஸ்திரத்தை அடகாக வாங்காதே. 18 நீ எகிப்திலே அடிமையாயிருந்ததையும், உன் கடவுளாகிய யெகோவா உன்னை அங்கேயிருந்து மீட்டுக்கொண்டுவந்ததையும் நினைத்துக்கொள். அது காரணமாகவே இப்படிச் செய்யும்படி நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்.

19 நீ உன் பயிரை அறுக்கையில் உன் வயலிலே ஒரு அரிக்கட்டை மறந்து வைத்துவந்தாயானால் அதை எடுத்து வரும்படி திரும்பிப்போகவேண்டாம்; அதைப் பரதேசிக்கும் திக்கற்றபிள்ளைக்கும் விதவைக்கும் விட்டுவிடு; அப்பொழுது உன் கடவுளாகிய யெகோவா உன் கை செய்யும் வேலைகளெல்லாம் உன்னை ஆசீர்வதிப்பார். 20 நீ உன் ஒலிவமரத்தை உதிர்த்துவிட்டபின்பு தப்பியிருக்கிறதைப் பறிக்கும்படி திரும்பிப்போகவேண்டாம்; அதைப் பரதேசிக்கும் திக்கற்றபிள்ளைக்கும் விதவைக்கும் விட்டுவிடு. 21 நீ உன் திராட்சப்பழங்களை அறுத்தபின்பு மறுபடியும் போய் அறுக்கவேண்டாம்; அதைப் பரதேசிக்கும் திக்கற்றபிள்ளைக்கும் விதவைக்கும் விட்டுவிடு. 22 நீ எகிப்து தேசத்தில் அடிமையாயிருந்ததை நினைத்துக்கொள்; அது காரணமாகவே இப்படிச்செய்யும்படி நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்.

**25** மனிதர் வழக்காடி நியாயஸ்தலத்திற்கு வரவே நியாயாதிபதிகள் அவர்களை விசாரிக்கும்போது நீதிமானை நீதிமான் என்றும் குற்றவாளியைக் குற்றவாளி என்றும் தீர்க்கவேண்டும். 2 குற்றவாளியை அடிப்பது நியாயமென்றால் நியாயாதிபதி அவனைக் கீழேகிடத்தி அவன் குற்றத்திற்கு இத்தனை அடிகளென்று தனக்கு எதிரிலேயே அவனை அடிப்பிக்கவேண்டும். 3 அவனை நாற்பது அடிவரைக்கும் அடிக்கலாம்; அதற்குமேல் அடிக்கவேண்டாம். அதற்குமேல் அடித்தால் உன் சகோதரன் உன் கண்களுக்கு எதிரே கீழாய்த் தோற்றுவான்.

4 போரடிக்கிற மாட்டை வாய் கட்டாதே.

5 சகோதரர் ஒன்றாய்க் குடியிருக்கும்போது, அவர்களில் ஒருவன் புத்திரசந்தானமின்றி

மரித்தால் மரித்தவன் மனைவி அந்நியனுக்கு மனைவியாகக்கூடாது; அவள் புருஷனின் சகோதரன் அவளைத் தனக்கு மனைவியாகக் கொண்டு அவளிடத்தில் சேர்ந்து மைத்துனி
6 விவாகம்செய்துகொள்ளவேண்டும். மரித்த சகோதரனுடைய பேர் இஸ்ரவேலில் அற்றுப்போகாதபடி அவன் பேரை அவள் பெறும் தலைப்பிள்ளைக்குத் தரிக்கவேண்டும்.
7 அவன் தன் சகோதரனுடைய மனைவியை விவாகஞ்செய்யத் சம்மதிக்கவில்லையாலும் அவன் சகோதரன் மனை ஊர் வாசலில் கூடிய மூப்பரிடம் போய்: என் புருஷனின் சகோதரன் தன் சகோதரன் பேரை இஸ்ரவேலில் நிலைக்கப்பண்ணமாட்டேன் என்கிறான், மைத்துனிவிவாகம் செய்ய அவனுக்கு இஷ்டமில்லை என்று சொல்ல
8 வேண்டும். சொல்லவே அந்த ஊர் மூப்பர் அவனை அழைப்பித்து அவனோடே பேசியும், அவன் விவாகஞ்செய்துகொள்ளத் தனக்குச் சம்மதமில்லை என்று அவன் பிடிவாதமாய்ச்
9 சொன்னால் | அவன் சகோதரன் மனைவி மூப்பரின் கண்காண அவனிடம்வந்து அவன் காலிலிருக்கிற பாதரட்சையைக் கழற்றி அவன் முகத்திலே துப்பித் தன் சகோதரன் வீட்டைக்கட்டாதவனுக்கு இப்படியே செய்யவேண்டும் என்று பதிற்
10 சொல்லவேண்டும். இஸ்ரவேலில் அப்படிப் பட்டவன் குடும்பம் பாதரட்சை கழற்றின வன் குடும்பம் என்னப்படும்.

11 புருஷர் ஒருவரோடொருவர் சண்டை செய்துகொண்டிருக்கையில் ஒருவனுடைய மனைவி தன் புருஷனை அடிக்கிறவன் கைக்கு அவனைத் தப்புவிக்கும்படி கிட்டி வந்து தன் கையை நீட்டி, அடிக்கிறவன்
12 மானத்தைப் பிடித்ததுண்டாலும் | அவள் கையைத் தறித்துவிடு; உன் கண் அவளுக்கு இரங்கவேண்டாம்.

13 உன் பையிலே பெரிதும் சிறிதுமான இருவகை நிறை கற்களை வைத்திருக்க
14 வேண்டாம்; உன் வீட்டில் பெரிதும் சிறிதுமான இருவகைப் படிகளையும் வைத்திருக்க
15 வேண்டாம். குறையற்ற சுமுத்திரையான நிறை கல்லும் குறையற்ற சுமுத்திரையான படியும் உன்னிடம் இருக்கவேண்டும். அப்படியானால் உன் கடவுளாகிய யெகோவா உனக்குக் கொடுக்கும் தேசத்தில் நீ நெடு
16 நாள் வாழ்ந்திருப்பாய். இவை முதலான அநியாயத்தைச் செய்கிறவன் எவனும் உன் கடவுளாகிய யெகோவாவுக்கு அருவருப்பானவன்.

17 நீங்கள் எகிப்திலிருந்து வருகிறவழியிலே அமலேக்கு உங்களுக்குச் செய்ததை நினைத்துக்கொள்ளுங்கள்; அவன் கடவுளுக்குப் பயப்படாமல் வழியிலே உங்களுக்கு எதிராக வந்து, நீங்கள் இளைத்து விடாய்த்
18 திருக்கையில் படையிலே பின்னாக நடந்து வந்த பலவீனரை யெல்லாம் வெட்டினான்.
19 உன் கடவுளாகிய யெகோவா நீ சுதந்தரித்துக்கொள்வதற்கு உனக்குச் சொந்தமாகக் கொடுக்கும் தேசத்தின் சுற்றுப்புறத்தாராகிய உன் சத்துருக்களையெல்லாம் உன் கடவுளாகிய யெகோவா விலக்கி உன்னை இளைப்பாறப்பண்ணும்போது வானத்தின் கீழெங்கும் அமலேக்கின் ஞாபகமும் இராதபடி அற்றுப்போகப்பண்ண வேண்டும், மறக்கவேண்டாம்.

**26** உன் கடவுளாகிய யெகோவா உனக்குச் சுதந்தரமாகக்கொடுக்கும் தேசத்திலே நீ போய்ச்சேர்ந்து அதைச் சொந்தமாக்கிக் கொண்டு அதில் வாசம்பண்ணும்போது |
2 உன் கடவுளாகிய யெகோவா உனக்குக் கொடுக்கும் உன் தேசத்திலே நீ பயிரிடும் நிலத்தின் கனிகளிலெல்லாம் முதற்பலனை எடுத்து ஒரு கூடையிலேவைத்து, உன் கடவுளாகிய யெகோவா தமது திருநாம நிலையமாகத் தெரிந்துகொள்ளும் ஸ்தலத்திற்குக் கொண்டுபோகவேண்டும். அங்கே அக்
3 காலத்து ஆசாரியனிடம் சென்று அவனிடம்: யெகோவா எங்களுக்குக் கொடுப்பதாய் நமது பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில்வந்து சேர்ந்தேன் என்று இன்னாளிலே உமது கடவுளாகிய யெகோவாவின் திருச்சந்நிதியில் அறிக்கையிடுகிறேன் என்று சொல். நீ அதைச் சொல்லவே, ஆசாரியன்
4 அந்தக் கூடையை உன் கையிலிருந்து வாங்கி அதை உன் கடவுளாகிய யெகோவாவின் பலிபீடத்திற்கு எதிரே வைப்பான்.
5 அப்பொழுது நீ உன் கடவுளாகிய யெகோவின் சந்நிதியில் நின்று வாய்திறந்து பேசி: என் தகப்பன் அலைந்து திரிந்த சீரியாதேசத்தானாயிருந்தான்; அவன் எகிப்துக்குப்போய் அவ்விடத்தில் பரதேசியாய்ச் சஞ்சரித்தான்; வந்தவர்கள் சொற்பப்பேரேயெனினும் அவன் பெரிய பலத்த திரள் ஜாதியானான். எகிப்தியர் எங்களை ஒடுக்கி
6 எங்களைச் சிறுமைப்படுத்திக் கடினமான அடிமைவேலையை எங்கள்மேல் சுமத்தினபோது | எங்கள் பிதாக்களின் கடவுளாகிய
7 யெகோவாவினிடம் அபயமிட்டோம்; யெகோவா எங்கள் அபயக்குரலைக் கேட்டு எங்கள் சிறுமையையும் எங்கள் வருத்தத்தையும் எங்கள் ஒடுக்கத்தையும் பார்த்து | தமது புயபலத்தினாலும் நீட்டிய
8 கரத்தினாலும் மகா பயங்கரச் செயல்

களினுலும் அடையாளங்களினுலும் அற் புதங்களினுலும் எங்களே எகிப்திலிருந்து 9 வரச்செய்து | இவ்விடத்துக்குக் கொண்டு வந்து பாலும் தேனும் ஒடுகிற நாடாகிய இந்தத் தேசத்தை எங்களுக்குக் கொடுத் 10 தார். இப்பொழுதும், இதோ, யெகோ வாவே, தேவரீர் எனக்குக் கொடுத்தருளிய நிலத்தின் கனிகளின் முதற்பலனைக் கொண்டுவந்தேன் என்று சொல்லவேண்டும். பின்பு அதை உன் கடவுளாகிய யெகோவாவின் சந்நிதியில் வைத்து, உன் கடவுளாகிய யெகோவாவின் சந்நிதியில் தொழுது 11 கொண்டு | உன் கடவுளாகிய யெகோவா உனக்கும் உன் வீட்டாருக்கும் அதுக்கிர கம்பண்ணின சகல நன்மைகளினிமித்தமும் நீயும் லேவியனும் உன் நடுவிலிருக்கிற பரதேசியும் சந்தோஷப்படவேண்டும்.

12 தசமபாகம் செலுத்தும் வருஷமாகிய மூன்றும் வருஷத்திலே, நீ உன் வரத்திலெல்லாம் பத்தில் ஒன்றை எடுத்து லேவியனும் பரதேசியும் திக்கற்றபிள்ளையும் விதவையும் உன் ஊரிலே புசித்துத் திருப்தியாகும்படி அவர்களுக்குக் கொடுத்துத் தீர்த்தபின்பு | 13 நீ உன் கடவுளாகிய யெகோவாவின் சந்நிதியில் போய்நின்று: தேவரீர் எனக்கு விதித்த சகல கட்டளைகளின்படியும் நான் கடவுளுக்கென்று பிரத்தியேகமாய்வைக்கும் பொருட்களே என் வீட்டுக்கு அப்புறப்படுத்தி லேவியனுக்கும் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் கொடுத்தேன்; உமது கட்டளைகளில் ஒன்றையும் நான் 14 மீறவுமில்லை, மறக்கவுமில்லை. நான் துக்கங்கொண்டாடும்போது அதில் எடுத்துச் சாப்பிடவில்லை, நான் தீட்டுள்ளவளுயிருக்கையில் அதில் எதையும் அப்புறப்படுத்தவில்லை; செத்தவர்களுக்காக அதில் ஒன்றும் படைக்கவுமில்லை: நான் என் கடவுளாகிய யெகோவாவின் சப்தத்திற்குச் செவிகொடுத்து தேவரீர் எனக்குக் கட்டளையிட்ட 15 யாவற்றின்படியும் செய்தேன். நீர் உமது பரிசுத்தவாசஸ்தலமாகிய பரலோகத்திலிருந்து நோக்கிப்பார்த்து, உமது ஜனமாகிய இஸ்ரவேலையும், நீர் எங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்டபடியே எங்களுக்குக் கொடுத்த பாலும் தேனும் ஒடுகிற தேசமாகிய இந்த நிலத்தையும் ஆசீர்வதித்தருளும் என்று சொல்லவேண்டும்.

16 இந்த நியமங்களின்படியும் தீர்ப்புகளின் படியும் நீ செய்யவேண்டுமென்று இந்நாளில் உன்கடவுளாகிய யெகோவா உனக்குக் கட்டளையிடுகிறார். ஆகையால் நீ உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அவைகளின்படி நடக்க கைக்கொள்ளக் 17 கடவுளாயிருப்பார் என்றும் நீ அவர் வழிகளில் நடந்து அவர் நியமங்களையும் கட்டளைகளையும் தீர்ப்புகளையும் கைக்கொண்டு அவர் சப்தத்திற்குச் செவிகொடுக்க வேண்டுமென்றும் அவர் இந்நாளிலே கூறுவதைக் கேட்டாய். யெகோவா உனக்குச் சொன்ன 18 படியே நீ அவருக்குச் சொந்த ஜனமாயிருந்து அவர் கட்டளைகளைக் கைக்கொள்ளுவதாக நீ இந்நாளில் கொடுத்த வாக்கை யெகோவா கேட்டார். நீ அப்படிச் செய் 19 தால் அவர் தாம் சிருஷ்டித்த சகல ஜாதிகளைப் பார்க்கிலும் உன்னைப் புகழிலும் கீர்த்தியிலும் மகிமையிலும் மேலானவனுக்குவார், நீயும் அவர் சொன்னபடியே உன் கடவுளாகிய யெகோவாவுக்குப் பரிசுத்த ஜனமாயிருப்பாய் என்று சொன்னுர்.

பின்பு மோசேயும் இஸ்ரவேலின் மூப் **27** பரும் ஜனங்களுக்குக் கட்டளையிட்டு: நான் இந்நாளில் உங்களுக்கு விதிக்கிற கட்டளைகளையெல்லாம் கைக்கொள்ளுங்கள். உங் 2 கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்குக் கொடுக்கும் தேசத்திற்குப்போக நீங்கள் யோர்தானைக் கடக்கும் நாளில், நீங்கள் பெரிய கற்களை நாட்டி அவைகளுக்குச் சுண்ணும்பு பூசி | நீ கடந்துபோனபின்பு 3 இந்த நியாயப்பிரமாண வார்த்தைகள் யாவற்றையும் அவைகளின்மேல் எழுத வேண்டும். உங்கள் பிதாக்களின் கடவுளாகிய யெகோவா உங்களுக்குச் சொன்ன படியே, உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்குக் கொடுக்கும் தேசமாகிய பாலும் தேனும் ஒடுகிற தேசத்தினுள் செல்வதற்கென இப்படிச் செய்யவேண்டும். நீங்கள் யோர்தானைக் கடந்தபின் இந்நா 4 ளில் நான் உங்களுக்குக் கட்டளையிட்ட படியே அந்தக் கற்களை ஏபால் மலையிலே நாட்டி, அவைகளுக்குச் சுண்ணும்பு பூசி | அங்கே உங்கள் கடவுளாகிய யெ 5 கோவாவுக்கு ஒரு பலிபீடம் கட்டவேண்டும்; அது இருப்பாயுதம் படாத கற்களான பலிபீடமாம். நீ உன் கடவுளாகிய 6 யெகோவாவின் பலிபீடத்தை உடையாத முழுக் கற்களாலே கட்டி, அதின்மேல் உன் கடவுளாகிய யெகோவாவுக்குத் தகன பலிகளைச் செலுத்தவேண்டும். சமாதான 7 பலிகளையும் படைத்து உன் கடவுளாகிய யெகோவாவின் சந்நிதியில் புசித்துச் சந்தோஷம்கொண்டாடி, அந்தக் கற்களின் 8 மேல் இந்த நியாயப்பிரமாண வார்த்தை

கள் யாவற்றையும் தெளிவாய் ஈன்குக எழுதவேண்டும் என்று சொன்னார்கள்.

9 பின்னும் மோசேயும் லேவியரான ஆசாரியரும் இஸ்ரவேலர் யாவரையும் பார்த்து: இஸ்ரவேலே, அமர்ந்திருந்து கேள்; இந்நாளிலே நீ உன் கடவுளாகிய யெகோவாவுக்கு ஜனமானாய். ஆகையால் நீ உன் கடவுளாகிய யெகோவாவின் சப்தத்திற்குச் செவிகொடுத்து இன்று நான் உனக்கு விதிக்கிற அவருடைய கட்டளைகளின்படியும் அவருடைய நியமங்களின்படியும் செய்யவேண்டும் என்று சொன்னார்கள்.

11 அந்நாளிலே மோசே ஜனங்களிடம்:
12 நீங்கள் யோர்தானைக் கடந்த பின்பு, ஜனங்கள்மேல் ஆசீர்வாதம் கூறும்படி, சிமியோன், லேவி, யூதா, இசக்கார், யோசேப்பு, பென்யமீன் என்னும் கோத்திரங்கள் கெரிசீம் மலையின் மேலும் | சாபங்கூறும்படி ரூபன், காத், ஆசேர், செபுலோன், தாண், நப்தலி என்னும் கோத்திரங்கள் ஏபால்
13 மலையின்மேலும் நிற்கவேண்டும். அப்பொழுது லேவியர் வாய் திறந்து இஸ்ரவேல் மனிதரில் ஒவ்வொருவனும் கேட்க உரத்த சத்தமிட்டு:
15 யெகோவாவுக்கு அருவருப்பானதை, தொழிலாளிகளின் கைவேலையாகச் செய்யப்பட்டதும் வார்ப்பிக்கப்பட்டதுமான யாதொரு விக்கிரகத்தை, செய்து ஒளிப்பிடத்திலே வைக்கிறவன் சாபத்துக்குரியவன் என்று சொல்லவே ஜனங்களெல்லாரும் ஆமேன் என்று பதில் சொல்வார்
16 கள். தன் தகப்பனையும் தன் தாயையும் அசட்டை செய்கிறவன் சாபத்திற்குரியவன் எனவே ஜனங்களெல்லாரும் ஆமேன்
17 என்பார்கள். அயலான் எல்லையை ஒற்றிப் போடுகிறவன் சாபத்திற்குரியவன் எனவே ஜனங்களெல்லாரும் ஆமேன் என்பார்கள்.
18 குருடனை வழிதப்பச்செய்கிறவன் சாபத்திற்குரியவன் எனவே ஜனங்களெல்லாரும்
19 ஆமேன் என்பார்கள். பரதேசி, திக்கற்ற பிள்ளை, விதவை ஆகிய இவர்கள் நியாயத்தைப் புரட்டுகிறவன் சாபத்திற்குரியவன் எனவே ஜனங்களெல்லாரும் ஆமேன் என்
20 பார்கள். தன் தகப்பன் மனைவியோடே சயனிக்கிறவன் தன் தகப்பனுக்கு அவமானத்தை உண்டாக்கினபடியால் அவன் சாபத்திற்குரியவன் எனவே ஜனங்களெல்லா
21 ரும் ஆமேன் என்பார்கள். எந்த மிருகத்தோடாயினும் புணர்ச்சிசெய்கிறவன் சாபத்திற்குரியவன் எனவே ஜனங்களெல்லாரும்
22 ஆமேன் என்பார்கள். தன் சகோதரியோடே, தன் தகப்பனுடைய குமாரத்தியாலும் தன் தாயுடைய குமாரத்தியாலும் சரி அவளோடே சயனிக்கிறவன் சாபத்திற்குரியவன் எனவே ஜனங்களெல்லாரும் ஆமேன் என்பார்கள். தன் மாமியோடே சயனிக்
23 கிறவன் சாபத்திற்குரியவன் எனவே ஜனங்களெல்லாரும் ஆமேன் என்பார்கள். இரக
24 சியமாய்ப் பிறனைக் கொலைசெய்கிறவன் சாபத்திற்குரியவன் எனவே ஜனங்களெல்லாரும் ஆமேன் என்பார்கள். குற்றமில்லாத
25 வனைக் கொலைசெய்யும்படி பரிதானம் வாங்குகிறவன் சாபத்திற்குரியவன் எனவே ஜனங்களெல்லாரும் ஆமேன் என்பார்கள். இந்த
26 நியாயப்பிரமாண வார்த்தைகளையெல்லாம் கைக்கொண்டு நடவாதவன் சாபத்திற்குரியவன் எனவே ஜனங்களெல்லாரும் ஆமேன் என்பார்கள்.

28 இந்நாளில் நான் உனக்குப்போதிக்கிற கட்டளைகளின்படியெல்லாம் கோக்கிரதையாய்ச் செய்யும்படி உன் கடவுளாகிய யெகோவாவின் சப்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால் உன் கடவுளாகிய யெகோவா பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேலானவனுக்குவார். நீ உன் கட 2
ளாகிய யெகோவாவின் சப்தத்திற்குச் செவி கொடுக்கும்போது, இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உனக்குக் கிடைக்கும். உனக்கு ஊரிலும் ஆசீர்வா 3
தம், வெளியிலும் ஆசீர்வாதம். உன் கர்ப்பத் 4
தின் கனிக்கும் நிலத்தின் கனிக்கும் உன் மாட்டுக்கன்றுகளும் ஆட்டுக்குட்டிகளுமாகிய மிருகங்களின் கனிக்கும் ஆசீர்வாதமே.
உன் கூடைக்கும் மாப்பிசைகிற உன் 5
தொட்டிக்கும் ஆசீர்வாதம். நீ உள்வரும் 6
போதும் உனக்கு ஆசீர்வாதம், நீ வெளிப் போம்போதும் உனக்கு ஆசீர்வாதமே.
உனக்கு விரோதமாய் எழும்பும் உன் சத் 7
துருக்களை யெகோவா உனக்கு முன்பாக முறியடிப்பார்; ஒரு வழியாய் உனக்கு எதிரே வருவார்கள்; ஏழு வழியாய் உனக்கு முன் ஓடிப்போவார்கள். உன் களஞ்சியங் 8
களிலும் நீ கையிட்டுச் செய்யும் சகல வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் அருளுவார். உன் கடவுளாகிய யெகோவா உனக்குக் கொடுக்கும் தேசத்திலே உன்னை ஆசீர்வதிப்பார். நீ உன் கடவுளாகிய யெ 9
கோவாவின் கட்டளைகளைக் கைக்கொண்டு அவர் வழிகளில் நடக்கும்போது யெகோவா உனக்கு ஆணையிட்டபடியே உன்னைத் தமக்குப் பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துவார். அப்பொழுதுயெகோவாவின் திருநாமம் 10
தரிக்கப்பெற்றுய் என்று பூமியின் ஜனங்களெல்லாம் கண்டு உனக்குப் பயப்படுவார்

11 கள். உனக்குக் கொடுப்பதாக யெகோவா
உன் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்
திலே யெகோவா உன் கர்ப்பத்தின் கனியை
யும் உன் மிருகங்களின் கனியையும் உன்
நிலத்தின் கனியையும் உன் நன்மைக்கென
12 வர்த்திக்கச் செய்வார். யெகோவா தமது
நல்ல பொக்கிஷசாலியாகிய வானத்தைத்
திறந்து ஏற்றகாலத்திலே உன் தேசத்தில்
மழை பெய்யச்செய்து உன் கையின் வேலை
களையெல்லாம் ஆசீர்வதிப்பார். நீ பல ஜாதி
யாருக்குக் கடன் கொடுப்பதையன்றி கடன்
13 வாங்கப்போவதில்லை. இந்நாளில் நான்
உங்களுக்குப் போதிக்கிற வார்த்தைகள்
யாவையும் விட்டு வலதுபுறம் இடதுபுறம்
விலகி வேறே தேவர்களைப் பின்பற்றி அவர்
14 களைச் சேவியாதே. இந்நாளில் நான்
உனக்குப் போதிக்கிற உன் கடவுளாகிய
யெகோவாவின் கட்டளைகளைக் கைக்கொ
ண்டு அவைகளின்படி நடந்து அவைகளுக்
குச் செவிகொடுக்கவேண்டும்: அப்பொழுது
யெகோவா உன்னை வாலாக்காமல் தலையாக்
குவார்; நீ கீழாவதேயில்லை மேலாவாய்.
15 இந்நாளில் நான் உனக்குப் போதிக்கிற
சகல கட்டளைகளையும் நியமங்களையும் கைக்
கொண்டு நடப்பதற்கென உன் கடவு
ளாகிய யெகோவாவின் சப்தத்திற்குச் செவி
கொடுக்கவேண்டும்; செவிகொடாதே போ
வாயாகில், இப்பொழுது சொல்லப்படும்
சகல சாபங்களும் உன்மேல் வந்து உன்
16 னைப்பற்றிப் பிடிக்கும். ஊரிலும் உன்மேல்
17 சாபம்; வெளியிலும் உன்மேல் சாபம். உன்
கூடையின்மேலும் மாப்பிசைகிற உன்
18 தொட்டியின்மேலும் சாபம். உன் கர்ப்பக்
கனியின்மேலும் உன் நிலத்தின் கனியின்
மேலும் உன் மாட்டுக்கன்றுகளின்மேலும்
உன் ஆட்டுக்குட்டிகளின்மேலும் சாபமே.
19 நீ உள்வரும்போதும் சாபம், நீ வெளிப்
20 போம்போதும் உன்மேல் சாபமே. என்னை
விட்டு விலகி நீ செய்துவருகிற உன் துர்க்
கிரியைகளினிமித்தம் சீக்கிரமாய் அழிந்து
போவாய்; அவர் உன்னை அழிக்குமட்டும் நீ
கையிட்டுச்செய்கிற யாவற்றிலும் யெகோவா
உன்மேல் சாபத்தையும் கலக்கத்தையும்
21 தண்டனையையும் வரப்பண்ணுவார். நீ
சொந்தமாக்கிக்கொள்வதற்கென நீ போய்ச்
சேரும் தேசத்திலே நீ இராதபடி யெகோவா
உன்னை நிர்மூலமாக்குமட்டும் கொள்ளை
நோய் உன்னைப் பிடிக்கச்செய்வார்.
22 யெகோவா உன்னைக் காசத்தினாலும் காய்ச்
சலினாலும் கடும் ஜ்வரத்தினாலும் காந்தலினா
லும் வாளினாலும் கருக்காயினாலும் விஷப்
பனியினாலும் வாதிப்பார்; நீ அழியுமட்டும்
இவைகள் உன்னைப் பின்தொடரும். உன் 23
தலைக்குமேலுள்ள வானம் செம்பும் உனக்
குக் கீழுள்ள பூமி இரும்புமாகும். உன் 24
தேசத்திலே யெகோவா மண்மாரியையும்
மணல்மாரியையும் பெய்யச்செய்வார்; நீ
அழியுமட்டும் அப்படியே வானத்திலிருந்து
உன்மேல் இறங்கி வரும். உன் சத்துருக்க 25
ளுக்கு முன்பாக யெகோவா உன்னை முறி
யடிப்பார்; ஒரு வழியாய் அவர்களுக்கு
எதிரே செல்வாய், ஏழுவழியாய் அவர்க
ளுக்குமுன் ஓடிப்போவாய்; பூமியின் சகல
ராஜ்யங்களுக்கும் பயங்கர காட்சியாவாய்.
உன் பிணம் ஆகாயத்துப் பறவைகளுக்கும் 26
பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும்;
அவைகளை வெருட்டுவாரிராார். நீ குண 27
மாகாதபடி யெகோவா உன்னை எகிப்தின்
கட்டிகளினாலும் மூலவியாதிகளினாலும்
சொறியினாலும் சிரங்கினாலும் வாதிப்பார்.
யெகோவா உன்னைப் புத்திமயக்கத்தினாலும் 28
குருட்டாட்டத்தினாலும் மனத்திகைப்பினா
லும் வாதிப்பார். குருடன் இருளிலே தடவித் 29
திரிகிறதுபோல நீ பட்டப்பகலிலே தடவிக்
கொண்டு திரிவாய்; உன் வழிகளில் ஒன்றும்
உனக்கு வாய்க்காதேபோம்; இரட்சிப்பா
ரின்றி நீ எந்நாளும் ஒடுக்கப்படுகிறவனும்
பறிகொடுக்கிறவனுமாயிருப்பாய். பெண்ணை 30
உனக்குப் பேசுவாய், வேறொருவன் அவ
ளோடே சயனிப்பான்; வீட்டைக்கட்டுவாய்,
அதிலே குடியிருக்கமாட்டாய்; திராட்சத்
தோட்டத்தை நாட்டுவாய், அதின் பலனை
அனுபவிக்கமாட்டாய். உன் மாடுகள் உன் 31
கண்களுக்கு முன்பாக அடிக்கப்படும், நீ
அதில் ஒன்றும் சாப்பிடுவதில்லை; உன்
கழுதை உன் கண்ணுக்குமுன் கொண்
டிடப்படும்; திரும்ப உனக்கு அகப்படாது;
உன் ஆடுகள் உன் சத்துருக்களுக்குக்
கொடுக்கப்படும், விடுவிப்பார் உனக்கு
இரார். உன் குமாரரும் உன் குமாரத்தி 32
களும் அந்நிய ஜனத்துக்கு ஒப்புக்கொடுக்
கப்படுவார்கள்; அவர்களைக் காண உன்
கண்கள் நாடோறும் பார்த்துப்பார்த்துப்
பூத்துப்போம்; உன் கை பலமற்றுப்போம்.
உன் நிலத்தின் கனியையும் உன் பிரயாசத் 33
தின் எல்லாப் பலனையும் நீ அறியாத ஜனங்
கள் புசிப்பார்கள்; நீ எந்நாளும் ஒடுக்கப்
பட்டும் நொறுக்கப்பட்டும் இருப்பாய்.
உன் கண்கள் காணும் காரியங்களினாலே 34
மதிமயங்கிப்போவாய். உன் உள்ளங்கால் 35
தொடங்கி உன் உச்சந்தலைமட்டும்,
யெகோவா உன்னை முழங்காலிலும் தொடை
களிலும் கொடிய கட்டிகளினாலே வாதிப்
பார்; அவை குணமாவதில்லை. யெகோவா 36

உன்னையும் உனக்காக நீ ஏற்படுத்திக்
கொண்ட ராஜாவையும், நீயும் உன் பிதாக்
களும் அறியாத ஜனத்தினிடம் போகப்
பண்ணுவார்; அங்கே நீ மரமும் கல்லுமான
37 அந்திய தேவர்களைச் சேவிப்பாய். யெகோவா
உன்னைக் கொண்டுபோய்விடும் சகல ஜாதி
களுக்குள்ளும், நீ பிரமிப்பும் பழமொழியும்
38 பரியாசச் சொல்லுமாவாய். நீ வயலுக்குக்
கொண்டுபோம் விதை அதிகம், நீ அறுத்
துச் சேர்ப்பது கொஞ்சம்; வெட்டுக்கிளி
39 அதைப் பட்சித்துப்போடும். திராட்சத்
தோட்டங்களை நாட்டி அவற்றிலே உழைப்
பாய்; எனினும் நீ திராட்சரசம் குடிப்பது
மில்லை, திராட்சப் பழங்களைச் சேர்த்துவைப்
பதுமில்லை; புழு அதைத் தின்றுபோடும்.
40 ஒலிவமரங்கள் உன் எல்லைகளிலெங்கும்
இருக்கும், பூசிக்கொள்ளவோ உனக்கு
எண்ணெய் இராது; உன் ஒலிவப்பிஞ்சுகள்
41 உதிர்ந்துபோம். நீ குமாரரையும் குமாரத்தி
களையும் பெறுவாய், அவர்களோ உன்னை
டார்கள், அவர்கள் சிறைப்பட்டுப்போவார்
42 கள். உன் மரங்களனைத்தும் உன் நிலத்தின்
கனிகளும் விட்டிலுக்கு இரையாகிப்போம்.
43 உன் நடுவிலிருக்கிற அந்நியன் உனக்கு
மேற்பட்டு மேன்மேலும் உயருவான்; நீயோ
44 தாழ்ந்துகொண்டே போவாய். அவன்
உனக்குக் கடன்கொடுப்பதேயன்றி நீ அவ
னுக்குக் கடன் கொடுப்பதில்லை; அவன்
தலையாவான் நீ வாலாவாய்.
45 உன் கடவுளாகிய யெகோவா உனக்கு
விதித்த அவருடைய கட்டளைகளையும் நிய
மங்களையும் கைக்கொள்ளாமற்போய் அவர்
சப்தத்திற்குச் செவிகொடாதிருந்தால், இந்
தச் சாபங்கள் எல்லாம் உன்மேல் வந்து,
நீ அழியுமட்டும் உன்னைத் தொடர்ந்து
46 பற்றும். அது உன்னிலும் உன் சந்ததி
யிலும் என்றென்றைக்கும் அடையாளமும்
47 அற்புதமுமாகும். சகலமும் பரிபூரணமா
யிருக்கையில் நீ சந்தோஷத்தோடும் மன
மகிழ்ச்சியோடும் உன் கடவுளாகிய யெகோ
வாவைச் சேவியாமற்போனதினிமித்தம்,
48 சகலமும் குறைவாகியிருக்கையில் நீ பட்
டினியோடும் தாகத்தோடும் நிர்வாணத்
தோடும், யெகோவா உனக்கு விரோதமாய்
அனுப்பும் சத்துருக்களைச் சேவிப்பாய்;
அவர்கள் உன்னை அழித்துத் தீருமட்டும்
இருப்பு முகத்தடியை உன் கழுத்தின்மேல்
49 போடுவார்கள். யெகோவா ஒரு ஜாதியை
வெகு தூரத்திலுள்ள பூமியின் கடையாந்
தரத்திலிருந்து கழுகுபறக்கும் வேகமாய்
வரச்செய்வார்; அந்த ஜாதி உனக்குத் தெரி
50 யாத பாஷையைப் பேசும். அது கட்டின
முகமுள்ள ஜாதி, அது கிழவன் என்று
தாட்சணியம் காட்டாது, வாலிபனென்று
இரக்கங்காட்டாது. நீ அழிந்து தீருமட்டும் 51
அந்த ஜாதி உன் மிருகங்களின் கனி
யையும் உன் நிலத்தின் கனியையும் சாப்
பிடும்; அது உன்னை அழித்துத்தீருமட்டும்
உன் தானியத்திலும் திராட்சரசத்திலும்
எண்ணெயிலும் உன் மாட்டுக்கன்றுகளி
லும் ஆட்டுக்குட்டிகளிலும் ஒன்றையும்
உனக்கு மீதியாக வையாது. உன் தேச 52
மெங்கும் நீ நம்பியிருக்கும் உயரமும்
அரணிப்புமான உன் மதில்கள் விழுமள
வும், அந்த ஜாதி உன் ஊர்கள்தோறும்
உன்னை முற்றுகைபோடும்; உன் கடவு
ளாகிய யெகோவா உனக்குக்கொடுத்த உன்
தேசமெங்குமுள்ள உன் ஊர்கள்தோறும்
உன்னை முற்றுகைபோடும். உன் சத்துருக் 53
கள் உன்னை முற்றுகைபோட்டு நெருக்குங்
காலத்தில் உன் கடவுளாகிய யெகோவா
உனக்குக் கொடுத்த உன் கர்ப்பக்கனியான
உன் புத்திர புத்திரிகளின் மாம்சத்தைத் தின்
பாய். சுகபோகனச் செல்வவள்ளலாயிருந்த 54
மனிதனும் தன் சகோதரன், தன் பிராணப்
பிரியையாகிய மனைவி, தனக்கு மீந்துள்ள
பிள்ளைகள் ஆகிய இவர்கள் விஷயத்தில் வன்
கண்ணனாவான். அவன் யாவற்றையும் 55
இழந்து ஒன்றுமில்லாதவனாகித் தன் பிள்ளை
களின் மாம்சத்தைத் தின்னும்போது அவர்க
ளில் எவருக்கும் கொடான்; உன் சத்துருக்
கள் உன் சகல ஊர்களிலும் உன்னை முற்று
கைபோட்டு நெருக்கும்போது இப்படி நடக்
கும். உன்னிடத்தில் சுகபோகனச் செல்வ 56
சம்பிரமமாய் வாழ்ந்து தன் உள்ளங்காலைத்
தரையின்மேல்வைக்க அஞ்சின சுகபோக
னச்செல்வியாகிய ஸ்திரீ, தன் பிராணப்பிரி
யனாகிய புருஷன், தன் குமாரன், தன்
குமாரத்தி இவர்கள் விஷயத்தில் வன்கண்ணி
யிருப்பாள்; தன் கர்ப்பத்திலிருந்து வரும்
நஞ்சுக்கொடியையும் தான் பெறும் பிள்ளை
களையும் அவர்களுக்குக் கொடாள். அவள் 57
ஒன்றுமில்லாதவளாகி அவைகளைத் தானே
இரகசியத்தில் தின்பாள். உன் சத்துருக்கள்
உன் ஊர்களில் முற்றுகைபோட்டு நெருக்
கும்போது இப்படி நடக்கும். உன் கடவு 58
ளாகிய யெகோவா என்னும் மகிமையும்
பயங்கரமுமான நாமத்திற்குப் பயப்படும்
படி, இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற
இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்
படியெல்லாம் நடக்க நீ காக்கிறதையா
யிருக்கவேண்டும்; இராவிட்டால் நிங்காத 59
பொய்ய வாதைகளாலும் நீங்காத கொடிய
நோய்களாலும் யெகோவா உன்னையும்

உன் சந்ததியையும் அதிசயமாய் வாதிப்பார்;
60 நீ கண்டு பயந்த எகிப்தின் வியாதிகளையெல்
லாம் உன்மேல் வருவிப்பார்; அவைகள்
61 உன்னைவிட்டு ஒட்டிக்கொள்ளும். இந்த நியா
யப்பிரமாணப் புஸ்தகத்தில் எழுதியிராத
எல்லா ரோகங்களையும் வாதைகளையும் நீ
அழிந்தொழியுமளவும் யெகோவா உன்
62 மேல் வரப்பண்ணுவார். வானத்து நட்சத்
திரங்களைப்போலத் திரளாயிருந்த நீங்கள்
உங்கள் கடவுளாகிய யெகோவாவின் சப்
தத்திற்குச் செவிகொடாமற் போவதினால்
63 சொற்பப்பேராய்விடுவீர்கள். உங்களுக்கு
நன்மைசெய்வதும் உங்களைப் பெருகப்பண்
ணுவதும் யெகோவாவுக்கு எப்படிப் பிரி
யமாயிருந்ததோ அப்படியே உங்களை அழிப்
பதும் உங்களை அதம்பண்ணுவதும் யெகோ
வாவுக்குப் பிரியமாயிருக்கும். நீங்கள்
சொந்தமாக்கிக்கொள்ளப்போகிற தேசத்தி
64 லிருந்து நீங்கள் துரத்தப்படுவீர்கள். பூமி
யின் ஒருமுனை துவக்கிப் பூமியின் மறு
முனைமட்டும் இருக்கிற சகல ஜாதிகளுக்
குள்ளும் யெகோவா உன்னைச் சிதறடிப்
பார்; அங்கே மரமும் கல்லுமான அந்ய
தேவர்களைச் சேவிப்பாய்; அந்த தேவர்களை
நீயும் உன் பிதாக்களும் அறிந்ததில்லை.
65 அந்த ஜாதிகளுக்குள்ளே உனக்கு இளைப்
பாறும் இடமிராது; உன் உள்ளங்கால் நிற்
கும் இடமும் இராது; அங்கே யெகோவா
உனக்குத் தத்தளிக்கிற இருதயத்தையும்
மங்கிப்போகிற கண்களையும் மனச்சஞ்சலத்
66 தையும் கொடுப்பார். உயிர்நிலைக்குமோ
நிலையாதோ என்று இரவுபகல் பயந்திருப்
பாய். உன் உயிரைப்பற்றி உனக்கு நம்
67 பிக்கையிராது. உனக்குள்ள இருதய பயத்
தினாலும் உன் கண்கள் காணும் காட்சியினா
லும், விடியற்காலத்தில், எப்பொழுது சாயங்
காலம் வருமோ என்றும் சாயங்காலத்தில்,
எப்பொழுது விடியற்காலம் வருமோ என்
68 றும் சொல்லுவாய்; இனிக் காணாதிருப்
பாய் என்று நான் உனக்குச் சொன்னவழி
யாக யெகோவா உன்னைக் கப்பல்களிலே
எகிப்திற்குத் திரும்பிப்போகச் செய்வார்;
அங்கே உங்களை, ஆண்களையும் பெண்களை
யும், அடிமைகளாக வாங்கிக்கொள்ளும்படி
உங்கள் சத்துருக்களிடம் சொல்லுவீர்கள்,
உங்களை வாங்குவாரோ இரார் என்று
சொன்னான்.

**29** ஓரேபிலே இஸ்ரவேல் புத்திரரோடு
செய்த உடன்படிக்கையேயன்றி மோவா
பின் தேசத்தில் அவர்களோடே உடன்படிக்
கை செய்யும்படி யெகோவா மோசேக்குக்
கட்டளையிட்ட வார்த்தைகள் இவைகளே.

மோசே இஸ்ரவேலர் அனைவரையும் வர 2
வழைத்து அவர்களோடேபேசி: எகிப்து
தேசத்தில் உங்கள் கண்களுக்கு எதிரே பார்
வோனுக்கும் அவனுடைய எல்லா ஊழிய
ருக்கும் அவன் தேசமுழுமைக்கும் யெகோ
வா செய்தவற்றையெல்லாம் நீங்கள் கண்
டீர்கள்; பெரிய சோதனைகளையும் பெரிய 3
அடையாளங்களையும் அற்புதங்களையும் உங்
கள் கண்களே கண்டன. ஆகிலும் உண 4
ரும் இருதயத்தையும் காணும் கண்களையும்
கேட்கும் காதுகளையும் இந்நாள்வரைக்கும்
யெகோவா உங்களுக்குக் கொடுக்கவில்லை.
நான் நாற்பது வருஷமாக உங்களை வனாந்த 5
ரத்திலே நடத்தி வருகையில் உங்கள்மே
லிருந்த வஸ்திரம் கந்தையாய்க் கழிந்து
போகவில்லை, உங்கள் காலிலிருந்த பாத
ரக்ஷைகள் பழையனவாகிப் பிய்ந்துபோகவு
மில்லை; நீங்கள் அப்பம் சாப்பிடவில்லை, 6
திராட்சரசமும் மதுவும் குடிக்கவுமில்லை;
நானே உங்கள் கடவுளாகிய யெகோவா
என்று நீங்கள் அறிந்துகொள்ளும்படி இப்
படிச்செய்தேன் என்கிறார். நீங்கள் இவ் 7
விடத்துக்கு வந்தபோது எஸ்போனின் ராஜா
வாகிய சீகோனும் பாசானின் ராஜாவா
கிய ஓகும் நம்மோடு யுத்தஞ்செய்ய எதிரே
வந்தார்கள்; நாம் அவர்களை முறியடித்
தோம். அவர்கள் தேசத்தைப் பிடித்து 8
அதை ரூபனியருக்கும் காத்தியருக்கும்
மனாசேயின் பாதிக்கோத்திரத்தாருக்கும் சுதந்
தரமாகக் கொடுத்தோம். இப்பொழுதும் 9
நீங்கள் செய்வதெல்லாம் உங்களுக்கு வாய்க்
கும்படி இந்த உடன்படிக்கையின் வார்த்
தைகளைக் கைக்கொண்டு அவைகளின்படி
யே செய்துவாருங்கள்.

இன்று நீங்கள் எல்லாரும், உங்கள் 10
கோத்திரத்தலைவரும் உங்கள் மூப்பரும் உங்
கள் அதிகாரிகளும் இஸ்ரவேலின் ஆண்கள்
அனைவரும் | உங்கள் குழந்தைகளும் உங் 11
கள் மனைவிகளும் உங்கள் பாளயத்தின்
நடுவிலிருக்கிற அந்நியரும், விறகு வெட்டு
கிறவனும் தண்ணீர் எடுக்கிறவனுமாகிய,
உங்கள் கடவுளாகிய யெகோவாவின் சமு
கத்தில் நிற்கிறீர்கள். நீ உன் கடவுளாகிய 12
யெகோவாவின் உடன்படிக்கைக்கும் இக்
நாளில் அவர் உன்னோடே செய்கிற அவரு
டைய ஆணையுறுதிக்கும் உட்படும்படிக்கே
இங்கே நிற்கிறீர்கள். உன் கடவுளாகிய 13
யெகோவா உனக்குச் சொன்னபடியேயும்
உன் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் ஈசாக்
குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டபடியே
யும் உன்னைத் தமக்கு ஜனமாக இந்நாளிலே
ஸ்தாபித்திக்கொள்ளவும் தாம் உனக்குக்

14 கடவுளாயிருக்கவும் விரும்புகிறார். இந்த
உடன்படிக்கையையும் இந்த ஆணை உறுதி
யையும் நான் உங்களோடேமாத்திரம்
15 செய்யவில்லை. இங்கே இந்நாளில் நம்
மோடுகூட, நமது கடவுளாகிய யெகோவா
வின் சமுகத்தில் நிற்கிறவர்களோடேயும்
இங்கே இந்நாளில் நம்மோடு இராதவர்க
ளோடேயும்கூட, அதைச் செய்கிறேன்.
16 நாம் எகிப்துதேசத்தில் குடியிருந்ததும்,
நாம் வந்தவழியிலிருந்த ஜாதிகளின் நடுவில்
கடந்துவந்ததும் உங்களுக்குத் தெரியும்.
17 அவர்களுடைய அருவருப்புகளையும், அவர்
களிடத்திலிருக்கிற மரமும் கல்லும் வெள்ளி
யும் பொன்னுமான அவர்கள் கேவலமான
தேவர்களையும் நீங்கள் கண்டிருக்கிறீர்கள்.
18 ஆகவே ஆக்கிரதையாயிருங்கள்; அந்த
ஜாதிகளின் தேவர்களைச் சேவிக்கப்போவதற்
கென நமது கடவுளாகிய யெகோவாவை
விட்டு அகலுகிற இருதயமுள்ள புருஷனு
கிலும் ஸ்திரீயாகிலும் குடும்பமாகிலும் கோத்
திரமாகிலும் இந்நாளிலே உங்களில் இருக்க
லாகாது; நஞ்சையும் எட்டியையும் முளைப்
பிக்கிறஎந்த வேரும் உங்களில் இருக்கலா
19 காது. இந்த ஆணையுறுதியின் வார்த்தைக
ளைக் கேட்கிறவன், தன் மன இஷ்டப்படி
நடந்தாலும் தனக்குச் சுகமிருக்கும் என்று
தன் உள்ளத்தைத் தேற்றிக்கொண்டால்
பச்சையும் படுகையும் ஒன்றாய் அழிந்து
விடும்; யெகோவா அவனுக்கு மன்னிக்
20 கவேமாட்டார். அப்பொழுது யெகோவா
வின் கோபமும் எரிச்சலும் அந்த மனிதன்
மேல் மூளும்; இந்தப் புஸ்தகத்தில் எழுதி
யிருக்கிற சாபங்களெல்லாம் அவன்மேல்
தங்கும்; யெகோவா அவன் பேரை வானத்
தின்கீழ் இராதபடி குலைத்துப்போடுவார்.
21 இந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதி
யிருக்கிற உடன்படிக்கையினுடைய சகல
சாபங்களின்படியும் அவனை யெகோவா
இஸ்ரவேல் கோத்திரங்கள் அனைத்தினின்
றும் அவனுக்குத் தீங்குண்டாகப் பிரித்து
22 விடுவார். அப்பொழுது உங்களுக்குப்
பின் எழும்பும் தலைமுறையான உங்கள்
பிள்ளைகளும் தூரதேசத்திலிருந்துவரும் அந்
நியரும் யெகோவா இந்தத் தேசத்துக்கு
வருவித்த வாதைகளையும் நோய்களையும்
23 காணும்போதும் | யெகோவா தமது கோபத்
தினும் தமது உக்கிரத்தினும் சோதோமையும்
கொமோராவையும் அத்மாவையும் செபோ
யிமையும் கவிழ்த்துப்போட்டதுபோல இந்
தத் தேசத்தின் மீலங்களையெல்லாம் விதைப்
பும் வினைவும் யாதொரு பூண்டின் முளைப்
பும் இல்லாதபடி கந்தகத்தாலும் உப்பாலும்
எரித்துவிட்டதைக் காணும்போதும் | அந்த 24
ஜாதிகளெல்லாம் யெகோவா இந்தத் தேசத்
திற்கு ஏன் இப்படிச் செய்தார்; இந்த
மகா கோபம் பற்றியெரிந்ததற்குக் காரணம்
என்ன என்று கேட்பார்கள். கேட்கவே 25
அதற்குப் பதிலாக: அவர்கள் பிதாக்களின்
கடவுளாகிய யெகோவா அவர்களை எகிப்து
தேசத்திலிருந்து கொண்டுவந்தபோது அவர்
களோடு செய்த உடன்படிக்கையை அவர்
கள் விட்டுவிட்டுத் | தாங்கள் அறியாமலும் 26
யெகோவா தங்களுக்கு நியமிக்காமலும்
இருந்த அந்திய தேவர்களைச் சேவிக்கச்
சென்று அவர்களை வணங்கினார்கள்.
ஆகவே யெகோவா இந்தத் தேசத்தின்மேல் 27
கோபமூண்டவராகி இந்தப் புஸ்தகத்தில்
எழுதியிருக்கிற சாபங்கள் எல்லாவற்றையும்
இதன்மேல் வரச்செய்தார். அவர்களைக் 28
கோபத்தினாலும் உக்கிரத்தினாலும் மகா எரிச்
சலினாலும் அவர்களுடைய தேசத்திலிருந்து
வேரறக்களைந்து, இந்நாளில் இருக்கிறது
போல, அவர்களை வேறே தேசத்தில் எறிந்து
விட்டார் என்று சொல்லப்படும்.

மறைவானவைகள் நமது கடவுளாகிய 29
யெகோவாவுக்கே உரியவைகள்; வெளிப்
படுத்தப்பட்டவைகளோ நமக்கும் நம்மு
டைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும்
உரியவைகள்; ஆகவே இந்த நியாயப்பிர
மாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம்
நாம் செய்யவேண்டும்.

நான் உனக்கு முன்பாக வைத்த ஆசீர் 30
வாதமும் சாபமுமாகிய இந்தக் காரியங்
களெல்லாம் உன்மேல் வரும்போது நீ
உன் கடவுளாகிய யெகோவாவினால்
துரத்திவிடப்பட்டுப்போயிருக்கிற சகல ஜாதி
கள் நடுவிலும் நீ உன் இருதயத்திலே
அவைகளை நினைத்துக்கொள். நினைத்துக் 2
கொண்டு உன் கடவுளாகிய யெகோவாவி
னிடம் திரும்பி இந்நாளில் நான் உனக்குப்
போதிக்கிறபடியெல்லாம் நீயும் உன் பிள்ளை
களும் உங்கள் முழு இருதயத்தோடும் உங்
கள் முழு ஆத்துமாவோடும் அவருடைய
சப்தத்திற்குச் செவிகொடுத்தால் | உன் 3
கடவுளாகிய யெகோவா உன் துன்பநிலை
மையை மாற்றி உனக்கு இரங்கி உன் கடவு
ளாகிய யெகோவா உன்னைச் சிதறடித்த
சகல ஜனங்கள் நடுவிலுமிருந்து உன்னைத்
திரும்பச் சேர்த்துக்கொள்ளுவார். உன்னு 4
டையவர்கள் வானத்தின் கடையான திசை
மட்டும் தூரத்துண்டிருந்தாலும் உன் கடவு
ளாகிய யெகோவா அங்கே இருக்கிற உன்
னைக் கூட்டிச்சேர்த்து அங்கே இருந்து உன்
னைக் கொண்டுவருவார். உன் பிதாக்கள் 5

சொந்தமாக்கியிருந்த தேசத்தை நீ சொந்த
மாக்கிக்கொள்ளும்படி அதிலே உன் கடவு
ளாகிய யெகோவா உன்னைக் கொண்டுவந்து
உனக்கு நன்மைசெய்து உன் பிதாக்களைப்
பார்க்கிலும் உன்னைப் பெருகப்பண்ணுவார்.
6 உன் கடவுளாகிய யெகோவாவில் நீ உன்
முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமா
வோடும் அன்புகூர்ந்து பிழைக்கும்படி உன்
கடவுளாகிய யெகோவா உன் இரு
தயத்தையும் உன் சந்ததியாரின் இரு
தயத்தையும் விருத்தசேதனம் பண்ணுவார்.
7 இந்தச் சாபங்களையெல்லாம் உன் சத்துருக்
கள்மேலும் உன்னைத் துன்பப்படுத்தின உன்
பகைஞர் மேலும் சுமரப்பண்ணுவார்.
8 நீயோ மனந்திரும்பி யெகோவாவின் சப்தத்
திற்குச் செவிகொடுத்து நான் இந்நாளில்
உனக்குப்போதிக்கிற அவருடைய சகல கட்
9 டளைகளின்படியும் செய்வாய். அப்பொழுது
உன் கடவுளாகிய யெகோவா உன் கையின்
சகல வேலைகளையும் உன் கர்ப்பத்தின் கனி
யையும் உன் மிருகங்களின் கன்றையும்
உன் நிலத்தின் கனியையும் உன் நன்மைக்
10 கென வர்த்திக்கச் செய்வார். உன் கடவு
ளாகிய யெகோவாவின் சப்தத்திற்குச் செவி
கொடுத்து இந்த நியாயப்பிரமாண புஸ்த
கத்தில் எழுதியிருக்கிற அவருடைய கட்
டளைகளையும் அவருடைய நியமங்களையும்
கைக்கொண்டு உன் கடவுளாகிய யெகோ
வாவினிடம் உன் முழு இருதயத்தோடும்
உன் முழு ஆத்துமாவோடும் திரும்பும்போது
யெகோவா உன் பிதாக்கள் விஷயத்தில்
சந்தோஷமாயிருந்ததுபோல உன் விஷயத்தி
லும் உன் நன்மைக்கென்றே திரும்பவும் சந்
தோஷமாயிருப்பார்.
11 நான் இந்நாளில் உனக்குப் போதிக்கிற
கட்டளை உனக்குக் கடினமானதுமல்ல, அது
12 உனக்குத் தூரமானதுமல்ல. அது வானத்தி
லுள்ளதல்ல, நாங்கள் அதைக்கேட்டு
அதின்படி செய்வதற்கு எங்கள் நிமித்தம்
வானத்திற்கு ஏறி அதை எங்களுக்குக்
கொண்டுவருபவன் யார் என்று நீ சொல்ல
13 வேண்டியதில்லை. அது சமுத்திரத்திற்கு
அப்புறத்திலுள்ளதுமல்ல, நாங்கள் அதைக்
கேட்டு அதின்படி செய்வதற்கு எங்கள்
நிமித்தம் சமுத்திரத்தைக் கடந்து அதைக்
கொண்டுவருபவன் யார் என்றும் நீ சொல்ல
14 வேண்டியதில்லை. நீ அந்த வார்த்தையின்
படியே செய்வதற்கு அது உனக்கு மிகவும்
சமீபமாய் உன் வாயிலும் உன் இருத
யத்திலும் இருக்கிறது.
15 இதோ, ஜீவனையும் நன்மையையும், மரண
த்தையும் தீமையையும் இந்நாளில் உனக்கு
முன்னே வைத்தேன். நீ உன் கடவுளாகிய 16
யெகோவாவில் அன்புகூர்ந்து அவர் வழி
களில் நடக்கவும் அவர் கட்டளைகளையும்
நியமங்களையும் நீர்ப்புகளையும் கைக்
கொள்ளவும் இந்நாளில் நான் உனக்குப்
போதிக்கிறேன்; நீ அவைகளைக் கைக்
கொண்டால் பிழைத்துப் பெருகுவாய், நீ
சொந்தமாக்கிக்கொள்ளப்போகிற தேசத்தி
லே உன் கடவுளாகிய யெகோவா உன்னை
ஆசீர்வதிப்பார். நீ களாதபடி மனம் 17
பேதித்து இழுப்புண்டுபோக இடங்
கொடுத்து வேறே தேவர்களை வணங்கி அவர்
களைச் சேவிப்பாயானால் | நீங்கள் சொந்த 18
மாக்கிக்கொள்வதற்கு யோர்தானைக் கடந்து
போகிற தேசத்திலே நெடுநாள் வாழ்வ
தில்லை, அழிந்தே போவீர்கள்; இதை இந்
நாளில் உங்களுக்குத் தெரிவித்துச் சொல்
லுகிறேன். நான் ஜீவனையும் மரணத்தையும், 19
ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்கு
முன் வைத்தேன் என்று வானத்தையும்
பூமியையும் இந்நாளில் சாட்சிவைக்
கிறேன். ஆகையால் நீயும் உன் சந்ததியும்
பிழைப்பதற்கு நீ ஜீவனைத் தெரிந்துகொள்.
யெகோவா உன் பிதாக்களாகிய ஆபிரகா 20
முக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும்
கொடுப்பதாக அவர்களுக்கு ஆணையிட்டுக்
கொடுத்த தேசத்திலே குடியிருக்கும்படி
உன் கடவுளாகிய யெகோவாவில் அன்பு
கூர்ந்து அவர் சப்தத்திற்குச் செவிகொ
டுத்து அவரைப் பற்றிக்கொள்; அப்படிச்
செய்வதே உனக்கு ஜீவன், தீர்க்காயுசு
என்று சொன்னான்.

பின்னும் மோசே போய் இஸ்ரவேலர் **31**
யாவரிடத்திலும் பேசி: இப்பொழுது எனக்கு 2
நூற்றிருபது வயது; இனி நான் நடமாடத்
தியமுடியாது; இந்த யோர்தானை நீ கடந்து
போவதில்லை என்று யெகோவா என்னிடம்
சொல்லியிருக்கிறார். உன் கடவுளாகிய 3
யெகோவா தாமே உனக்கு முன்பாகக்
கடந்துபோவார்; அந்த தேசத்தார் உனக்கு
முன்னிராதபடி அவரே அவர்களை அழிப்
பார்; நீ அவர்கள் தேசத்தைச் சொந்தமாக்
கிக்கொள்ளுவாய்; யெகோவா சொன்னபடி
யோசுவாவே உனக்கு முன்பாகக் கடந்து
போவான். யெகோவா அழித்த எமோரிய 4
ரின் ராஜாக்களாகிய சீகோன், ஓகு என்
பவர்களுக்கும் அவர்கள் தேசத்திற்கும்
அவர் செய்ததுபோலவே இவர்களுக்கும்
செய்வார். நான் உங்களுக்குப் போதித்த 5
சகல கட்டளைகளின்படியும் அவர்களுக்குச்
செய்வதற்கு யெகோவா அவர்களை உங்
களுக்கு ஒப்புக்கொடுப்பார். நீங்கள் மனே 6

பலங்கொண்டு தைரியமாயிருங்கள், அவர்களுக்குப் பயப்படவும் திகைக்கவும் வேண்டாம்; உன் கடவுளாகிய யெகோவாதாமே உன்னோடு வருகிறார்; அவர் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று சொன்னான். பின்பு மோசே யோசுவாவை அழைத்து இஸ்ரவேலர் அனைவரும் பார்த்திருக்க அவனோடு பேசி: நீ பலங்கொண்டு தைரியமாயிரு; யெகோவா இவர்களுக்குக் கொடுப்பதாக இவர்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்துக்கு நீ இந்த ஜனத்தை அழைத்துக்கொண்டுபோவாய், அதை இவர்கள் சுதந்தரிக்கும்படி செய்வாய். யெகோவாதாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடிருப்பார்; அவர் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்றான்.

மோசே இந்த நியாயப்பிரமாணத்தை எழுதி அதை யெகோவாவின் உடன்படிக்கைப் பெட்டகத்தைச் சுமக்கிற லேவி புத்திரரான ஆசாரியரிடத்திலும் இஸ்ரவேலின் மூப்பரனைவரிடத்திலும் ஒப்புவித்து | அவர்களோடு பேசி: விடுதலை வருஷமாகிய ஏழாம் வருஷ முடிவுதோறும் கூடார உற்சவத்தில் | உன் கடவுளாகிய யெகோவா தெரிந்துகொள்ளும் ஸ்தலத்திலே இஸ்ரவேலரனைவரும் அவருடைய சந்நிதியில் காணப்பட வந்திருக்கும்போது இந்த நியாயப்பிரமாணத்தை இஸ்ரவேலர் அனைவரும் கேட்க அவர்களுக்கு முன்பாக வாசிக்கவேண்டும். முழு ஜனத்தையும் கூடிவரச்செய்யவேண்டும்; புருஷரும் ஸ்திரீகளும் பிள்ளைகளும் உன் ஊர்களிலிருக்கும் அந்நியரும் அதைக் கேட்டுக் கற்றுக்கொண்டு, உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்குப் பயந்து இந்த நியாயப்பிரமாணவாக்கியங்களின்படியெல்லாம் செய்துவரக் கற்றுக்கொள்ளவேண்டும்; அதை அறியாத அவர்கள் பிள்ளைகளும் கேட்டு, நீங்கள் யோர்தானைக் கடந்து சொந்தமாக்கிக்கொள்ளப்போகிற பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்குப் பயந்திருக்கக் கற்றுக்கொள்ளவேண்டுமே என்று சட்டனையிட்டான்.

பின்பு யெகோவா மோசேயினிடம்: இதோ, நீ மரிக்கும் காலம் கிட்டிவிட்டது; நீ யோசுவாவை அழைத்துக்கொண்டு இருவரும் தரிசனக்கூடாரத்தில் வந்து நில்லுங்கள், நான் அவனுக்குக் கட்டனை கொடுப்பேன் என்று சொன்னார். அப்படியே மோசேயும் யோசுவாவும் போய்த் தரிசனக் கூடாரத்தில் நின்றார்கள்; நிற்கவே, யெகோவா கூடாரத்திலே மேகஸ்தம்பத்தில் தரிசனமானார். மேகஸ்தம்பம் கூடார வாசலின்மேல் நின்றது. யெகோவா மோசேயினிடம்: நீ உன் பிதாக்களோடே நித்திரைகுட்படப்போகிறாய்; இந்த ஜனங்கள் எழுந்துபோய்த் தாங்கள் குடியிருக்கும் தேசத்திலுள்ள அந்நிய தேவர்களைச் சோரமார்க்கமாய்ப் பின்பற்றி என்னைவிட்டு விலகித் தங்களோடு நான் செய்த உடன்படிக்கையை மீறுவார்கள். அந்நாளிலே என் கோபம் அவர்கள்மேல் மூளும், அவர்களைக் கைவிடுவேன், என் முகத்தை அவர்களுக்கு மறைப்பேன்; அவர்கள் நிர்மூலமாவார்கள்; பலபல தீங்குகளும் இக்கட்டுகளும் அவர்களைத் தொடர்ந்துபிடிக்கும்; அந்நாளிலே அவர்கள்: நமது கடவுள் நமது நடுவே இராதலினாலே அல்லவா இந்தத் தீங்குகள் நம்மைத் தொடர்ந்தன என்பார்கள். அவர்கள் வேறே தேவர்களிடமாகத் திரும்பிப்போய்ச் செய்த சகல தீமைகளினிமித்தமும் நான் அந்நாளிலே என் முகத்தை மறைக்கவே மறைப்பேன். இப்பொழுதும் நீங்கள் இந்தப் பாட்டை எழுதிக்கொள்ளுங்கள், இதை இஸ்ரவேல் புத்திரருக்குப் படிப்பித்து அவர்கள் பாடும்படி செய்யுங்கள்; எனக்கு இந்தப் பாட்டு இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமான சாட்சியாக இருக்கும். நான் அவர்கள் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்ததும் பாலும் தேனும் ஓடுகிறதுமான பூமியிலே அவர்களைப் பிரவேசிக்கச்செய்தபின்பு, அவர்கள் வயிறார உண்டு கொழுத்திருக்கும்போது வேறே தேவர்களிடமாகத் திரும்பி அவர்களைச் சேவித்து, என்னை அலட்சியஞ்செய்து என் உடன்படிக்கையை மீறுவார்கள். பலபல தீங்குகளும் இக்கட்டுகளும் அவர்களைத் தொடர்ந்து பிடிக்கும் வேளையிலே இந்தப் பாட்டே அவர்களுக்கு விரோதமான சாட்சிபகரும்; இந்தப் பாட்டைப்பாட அவர்கள் மறப்பதேயில்லை. அவர்கள் கொண்டிருக்கும் நினைவு இன்னது என்பது இப்பொழுதே, நான் ஆணையிட்டுக் கொடுத்த தேசத்திலே அவர்களைக் கொண்டுபோய்ச் சேர்க்குமுன்னேயே, எனக்குத் தெரியும் என்று சொன்னார். அன்றையதினமே மோசே அந்தப் பாட்டை எழுதி, அதை இஸ்ரவேல் புத்திரருக்குப் படிப்பித்தான். அவர் நூனின்குமாரனாகிய யோசுவாவினிடம்: நீ மனோபலங்கொண்டு தைரியமாயிரு, இஸ்ரவேல் புத்திரருக்கு நான் ஆணையிட்டுக்

கொடுத்த தேசத்திற்குள் நீயே அவர்களைக்
கொண்டுபோவாய்; நான் உன்னோடிருப்
பேன் என்று கட்டளையிட்டார்.
24 மோசே இந்த நியாயப்பிரமாண வார்த்
தைகளையெல்லாம் ஒரு புஸ்தகத்தில் எழுதி
25 முடித்தபோது | மோசே யெகோவாவின்
உடன்படிக்கைப் பெட்டகத்தைச் சுமக்கிற
26 லேவியருக்குக் கட்டளையிட்டு: நீங்கள்
இந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தை
எடுத்து அதை உங்கள் தேவனாகிய யெகோ
வாவின் உடன்படிக்கைப் பெட்டகத்தோடு
வையுங்கள்; அங்கே அது உனக்கு விரோத
27 மாகச் சாட்சியாயிருக்கும். நான் உன்
கலகக்குணத்தையும் உன் வணங்காக் கழுத்
தையும் அறிந்திருக்கிறேன். நான், இதோ,
இங்காளில், இன்னும் உங்களோடு இருக்
கையிலேயே, யெகோவாவுக்கு விரோதமாகக்
கலகம்பண்ணினீர்களே; என் மரணத்தின்
28 பின் கலகம் எவ்வளவாகும்! உங்கள்
கோத்திரங்களின் மூப்பரையும் உங்கள் தலை
வரையும் என்னிடம் கூடிவரச்செய்யுங்கள்.
அவர்கள் காதுகேட்க நான் இந்த வார்த்தை
களைச் சொல்லி வானத்தையும் பூமியையும்
அவர்களுக்கு விரோதமாகச் சாட்சிவைப்
29 பேன். என் மரணத்தின்பின் நீங்கள் நிச்சய
மாகவே உங்களைக் கெடுத்துக்கொள்வீர்
கள்; நான் உங்களுக்குக் கட்டளையிட்ட
வழியைவிட்டு விலகிப்போவீர்கள்; ஆகவே
கடைசி காட்களில் உங்களுக்குத் தீங்கு
நேரிடும்; யெகோவாவின் பார்வைக்குத்
தீமையானதைச் செய்து உங்கள் கையின்
செய்கையினாலே யெகோவாவுக்குக் கோப
மூட்டுவீர்கள்; இது எனக்குத் தெரியும்
என்று சொன்னான்.
30 இஸ்ரவேலின் ஜனக்கூட்டம் அனைத்தும
கேட்க மோசே இந்தப் பாட்டின் வார்த்தை
களையெல்லாம் சொல்லி முடித்தான்.

**32** வானங்களே, செவிகொடுங்கள், நான்
பேசுவேன்;
பூமி என் வாய்மொழிகளைக் கேட்
கட்டும்.
2 என் உபதேசம்மழைபோல் இறங்கும்,
என் வார்த்தை பனிபோற் பெய்யும்;
இளந்தளிர்மேல் தூறலிப்போலும்
புல்லின்மேலே பெருமழைபோலுமாம்.
3 யெகோவா திருநாமம் பிரசித்தம்பண்
ணுவேன்;
நமது கடவுளுக்கு மகத்துவம் செலுத்
துக.
4 அவரே கன்மலை, அவர் செயல் உத்த
மம்;
அவர் வழிகளெல்லாம் நியாயம்.
நம்பத்தக்க கடவுள் அவரே; மோசஞ்
செய்யார்.
அவர் நீதியும் நேர்மையுமுள்ளவர்.
அவர்களோ தூரோகிகள், பிள்ளை 5
கள் அல்ல;
இதுவே அவர்கள் குற்றமாம்.
அவர்கள் கோணலும் மாறுபாடு
முள்ள சந்ததியார்.
விவேகமில்லாத மதிகெட்ட ஜனமே, 6
இப்படியா யெகோவாவுக்குப் பதி
லளிக்கிறீர்கள்?
அவரல்லவா உன் பிதா, உன்னை ஆட்
கொண்டவர்.
உன்னைப் படைத்து உன்னை நிலைப்
படுத்தினவர் அவரே.
பூர்வ நாட்களை நினை; 7
தலைமுறைதலைமுறையாய்ச் சென்ற
வருஷங்களைக் கவனித்துப்பார்;
உன் தகப்பனைக் கேள், உனக்கு அறி
விப்பான்.
உன் மூதியோரைக் கேள், உனக்குச்
சொல்லுவார்கள்.
உன்னதமானவர் ஜாதிகளின் சுதந்தரங் 8
களைப் பகிர்ந்து,
மனுபுத்திரரை வெவ்வேறாய்ப் பிரித்த
காலத்தில்,
இஸ்ரவேல் புத்திரர் தொகையின்
படியே
சர்வஜனங்களின் எல்லைகளையும் ஏற்
படுத்தினார்.
யெகோவாவின் ஜனமே அவர் பங்கு; 9
யாக்கோபு அவருடைய சுதந்தரவீதம்.
அவர் அவனைக்கண்ட இடம் பாழ்
நிலம்;
அது ஊளை நிறைந்த வெறும் வனாந்
தரம்.
அவனுக்கு எப்பக்கமும் காவலாகி 10
அவனைத் தமது கண்மணியைப்போ
லக் காத்தருளினார்.
கழுகு தன் குஞ்சுகளை வெளியே வரச் 11
செய்து
அவைகளின்மேல் அசைவாடித்
தன் சிறகுகளை விரித்து அவைகளை
எடுத்து
அவைகளைத் தன் செட்டைகளின்
மேல் சுமந்துகொண்டுபோகிறதுபோல
யெகோவா ஒருவரே அவனை வழி 12
நடத்தினார்.
அந்நியதெய்வம் அவரோடே இருந்த
தில்லை.
பூமியின் உயர்ந்த ஸ்தலங்களின்மேல் 13
அவனை ஏறிவரச்செய்தார்;

வயலின் விளைச்சலை அவனுக்குப் புசிக்கக்கொடுத்தார்;
கன்மலையின் தேனையும், கற்பாறையிலிருந்து வரும் எண்ணெயையும்
அவனுக்கு உண்ணக்கொடுத்தார்.
14 பசுவின் வெண்ணெயையும் ஆட்டின் பாலையும்
ஆட்டுக்குட்டிகளின் கொழுப்பையும்
பாசான்வர்க்க ஆட்டுக்கடாக்களையும்
வெள்ளாட்டுக்கடாக்களையும்
உசிதமான கோதுமையையும்
திராட்சை இரத்தமாகிய சுயமான
ரசத்தையும்
உண்ணும்படி செய்தார்.
15 யெஷுரூனே கொழுத்துப்போய்
உதைத்தான்;
கொழுத்து ஸ்துலித்து நிணம் துன்னிப்போனாய்;
தன்னைப் படைத்தவராகிய கடவுளை
விட்டு விலகித், தன் இரட்சிப்பின்
கன்மலையை அசட்டைசெய்தான்.
16 அந்திய தேவர்களைத் தொழுது அவருக்கு எரிச்சலை மூட்டினார்கள்;
அருவருப்பானவைகளைப் பற்றிக்கொண்டு அவரைக் கோபப்படுத்தினார்கள்.
17 தெய்வமல்லாத பேய்களுக்குப் பலியிட்டார்கள்;
அவைகள் அவர்களுக்குத் தெரியாத தேவர்கள்,
புதிதாய் வந்த தூதன தேவர்கள்,
பிதாக்கள் பயந்தறியாத தேவர்கள்.
18 உன்னை ஜநிப்பித்த கன்மலையை நீ
நினையாமற்போனாய்;
உன்னைப் பெற்றவராகிய கடவுளை
மறந்துவிட்டாய்;
யெகோவா அதைக் கண்டார்;
19 தமது குமாரர்மீதும் தமது குமாரத்திகள்மீதும் அவர் கோபங்கொண்டு
அவர்களை வெறுத்துத் தம் திருவாய்
திறந்து:
20 என் முகத்தை அவர்களுக்கு மறைப்பேன்;
அவர்கள் முடிவு எப்படியிருக்கும்
என்று பார்ப்பேன்,
அவர்கள் மகா மாறுபாடுள்ள சந்ததி,
நம்பிக்கைகெட்ட பிள்ளைகள்,
21 தெய்வமல்லாதவற்றினாலே எனக்கு
எரிச்சலை மூட்டினார்கள்;
தங்கள் வீண் விக்கிரகங்களினால் என்னைக் கோபப்படுத்தினார்கள்.
நானும், ஜனமல்லாதவர்களினால் அவர்களுக்கு எரிச்சலை மூட்டுவேன்.

விவேகமில்லாத ஜாதியினால் அவர்களைக் கோபப்படுத்துவேன்;
என் கோபம் பற்றிக்கொண்டது, 22
அது பாதாளத்தின் ஆழமட்டும் எரியும்;
அது பூமியையும் அதின் விளைச்சலையும் பட்சித்துப் பர்வதங்களின் அஸ்திபாரங்களைக் கொளுத்திவிடும்.
தீங்குகளை அவர்கள்மேல் குவிப்பேன்; 23
என் அம்புகள் அவைகளையும் அவர்கள்மேல் எய்துவிடுவேன்.
அவர்கள் பசியினால் வாடுவார்கள், 24
கடுங்காய்ச்சலினாலும் கொடிய சங்காரத்தினாலும் மாளுவார்கள்;
பயங்கரமான பல்லுள்ள மிருகங்களையும்
தரையில் ஊரும் விஷப்பாம்புகளையும்
அவர்களுக்குள் அனுப்புவேன்.
வெளியே பட்டயமும் உள்ளே பயங்கரமும் சங்காரஞ் செய்யும்; 25
வாலிபனையும் கன்னிகையையும் கைக்குழந்தையையும் நரைத்த இழவனையும் சங்காரிக்கும்.
நான் அவர்களைப் பறக்கடிப்பேன், 26
மனிதருக்குள்ளே அவர்கள் பெயர்
அற்றுப்போகப் பண்ணுவேன்
என்று சொல்லியிருப்பேன்.
ஆயினும், அவர்கள் சத்துருக்கள் 27
என்னை எளனஞ்செய்வார்களே என்றும்
அவர்கள் பகைஞர் தப்பபிப்பிராயங்கொண்டு:
உயர்ந்தது எங்கள் கையே,
இவற்றையெல்லாம் செய்தவர்
யெகோவா அல்ல
என்பார்களே என்றும் பயந்து
அப்படிச் சொல்லாதிருந்தேன்.
அவர்கள் யோசனைகெட்ட ஜாதி, 28
அவர்களுக்கு உணர்வில்லை,
அவர்கள் விவேகிகளாகி இதை 29
உணர்ந்து
தங்கள் முடிவைச் சிந்தித்தால் நன்றும்
என்று சொன்னார்.
ஒருவன் ஆயிரம் பேரைத் துரத்துவதும் 30
இருவர் லக்ஷக்கணக்கானவரை ஓட்டுவதும் எப்படியாகும்?
அவர்கள் கன்மலை அவர்களை விற்காமலும்
யெகோவா அவர்களை ஒப்புக்கொடாமலும்
இருந்தால் அப்படியாகாது.

31 அவர்கள் கன்மலை நமது கன்மலை போன்றதல்ல,
இதை நமது சத்துருக்களே சொல்லுகிறார்கள்.
32 அவர்கள் திராட்சக்செடி சோதோமின் செடி;
கொமோரா நிலங்களிலே உண்டாகும் ஜாதி,
அவைகளின் பழங்கள் விஷமுள்ளவைகள்,
அவைகளின் குலைகள் கசப்பானவைகள்.
33 அவர்கள் திராட்சரசம் வலுசர்ப்ப விஷம்,
விரியன் பாம்பின் கொடிய விஷம்.
34 இதை என்னிடம் வைத்து வைக்கவில்லையோ?
இதை என் பொக்கிஷங்களில் வைத்து முத்திரையிடவில்லையோ?
35 பழிவாங்குவதும் பதில்செய்வதும் எனக்கு உரியது;
அவர்கள் கால் தள்ளாடும்போது இது காணப்படும்,
அவர்களுடைய ஆபத்துநாள் கிட்டியிருக்கிறது;
அவர்களுக்கு நேரிடவேண்டிய காரியங்கள் விரைந்துவரும்.
36 யெகோவா தமது ஜனத்தை நியாயந்தீர்ப்பார்;
தமது ஊழியரின் பலம் போயிற்றென்றும்
அடைபட்டவனுவது அடைபடாதவனுவது ஒருவனும் இல்லையென்றும்
காணும்போது அவர்களுக்காகப் பரிதபிப்பார்.
37 அவர்தம் திருவாய் திறந்து:
அவர்கள் பலிகளின் கொழுப்பைத் தின்று,
பானபலிகளின் திராட்சரசத்தைக் குடித்த
அவர்கள் தெய்வங்களும் அவர்கள் நம்பின கன்மலையும் எங்கே?
38 அவைகள் எழுந்து உங்களுக்கு உதவி செய்யட்டும்,
அவைகளே உங்களைப் பாதுகாக்கட்டும்.
39 இதோ, பாருங்கள், நானே அவர், நான்தானே;
என்னோடே வேறே தெய்வம் இல்லை.
உயிரை எடுக்கிறவர் நான், உயிரைக் கொடுக்கிறவரும் நானே;
காயப்படுத்துகிறவர் நான், காயம் ஆற்றுகிறவரும் நானே.
என் கையினின்று தப்புவிப்பார் இல்லை.
40 நான் என் கரத்தை வானத்திற்கு நேராக உயர்த்தி ஆணையிட்டு:
நான் நித்தியஜீவி என்பது உண்மையேயாயின்
41 மின்னும் என் பட்டயத்தை நான் கருக்காக்குவேன்,
என் கையானது நியாயத்தீர்ப்பை வழங்க எழும்,
என் சத்துருக்களிடம் பழிவாங்குவேன்,
என்னைப் பகைக்கிறவர்களுக்குப் பதில் செய்வேன்.
42 அம்புகள் வெறிகொள்ளும்படி இரத்தம் கொடுப்பேன்,
வெட்டுண்டோர் பிடிபட்டோர் இவர்களது இரத்தமே;
பட்டயம் புசிக்கும்படி மாம்சம் கொடுப்பேன்,
சத்துருக்களின் அதிபதிகள் தலைகளே என்று கூறுகிறேன்.
43 ஜாதிகளே அவர் ஜனங்களோடுகூடக் களிகூருங்கள்:
அவர் தமது ஊழியர் இரத்தத்திற்குப் பழிவாங்குவார்;
தமது விரோதிகளுக்குப் பதில்செய்வார்,
தமது தேசத்திற்காகவும் தமது ஜனத்திற்காகவும் பிராயச்சித்தம்செய்வார்.
44 மோசே நூனின் குமாரனுகிய ஓசேயாவோடுவந்து இந்தப் பாட்டின் வார்த்தைகளையெல்லாம் ஜனங்கள் கேட்கச் சொன்னுன். 45 மோசே இந்த வார்த்தைகளையெல்லாம் இஸ்ரவேலர் யாவருக்கும் சொல்லி முடித்தபின்பு 46 அவர்களிடம்: நான் இந்நாளில் உங்களுக்கு விரோதமாகச் சாட்சியிட்டுச் சொல்லுகிற வார்த்தைகளையெல்லாம் உங்கள் மனதிலே வையுங்கள். இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் உங்கள் பிள்ளைகள் செய்ய ஜாக்கிரதையாயிருக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிடுங்கள். 47 இது உங்களுக்குச் சம்பந்தமில்லா வீண் காரியம் அல்லவே; இது உங்களுக்கு ஜீவன், நீங்கள் சொந்தமாக்கிக் கொள்ளும்படி யோர்தானைக் கடந்துபோய்ச்சேரும் தேசத்திலே நீங்கள் நெடுநாள் வாழ்ந்திருப்பதற்கு இது காரணமாம் என்றுன்.

48 அதே நாளில்தானே யெகோவா மோசே
49 யினிடம்: நீ எரிகோவுக்கு எதிரே மோவாப்
தேசத்திலுள்ள இந்த அபாரீம் மலைகாட்டி
லிருக்கிற நேபோ மலையில் ஏறி, நான் இஸ்ர
வேல் சந்ததியாருக்குக் காணியாட்சியாகக்
50 கொடுக்கும் கானான் தேசத்தைப் பார். நீ
அந்த மலையிலே ஏறிப்போனபின் அங்கே மரி
த்து உன் ஜனத்தாரோடு சேர்க்கப்படுவாய்;
அப்படியே உன் சகோதரனாகிய ஆரோ
னும் ஓர் என்னும் மலையிலே மரித்துத் தன்
51 ஜனத்தாரோடு சேர்க்கப்பட்டான். நீங்
கள் சீன் வனாந்தரத்திலுள்ள காதேசிலே
மெரீபாவின் தண்ணீர் அண்டையில் இஸ்ர
வேல் புத்திரர் நடுவில் எனக்குத் துரோகஞ்
செய்தீர்கள்; இஸ்ரவேல் புத்திரர் நடுவில்
என்னைப் பரிசுத்தமுள்ளவராகக் காட்ட
52 வில்லை. நீங்கள் இப்படி மரிப்பதற்கு
இதுவே காரணம். நான் இஸ்ரவேல் புத்
திரருக்குக் கொடுக்கப்போகிற தேசத்தை
நீ உன் கண் எதிரே பார்ப்பதேயன்றி அத
னுள் பிரவேசிப்பதில்லை என்று சொன்னார்.

**33** கடவுளின் மனிதனாகிய மோசே தான்
மரணமடையுமுன்னே இஸ்ரவேல் புத்தி
ரரை ஆசீர்வதித்துச் சொன்னது இதுவே;
2 யெகோவா சீனாயிலிருந்து எழுந்தரு
ளினார்;
சேயீரிலிருந்து அவர்களுக்கு உதய
மானார்;
பாரான் மலையிலிருந்து பிரகாசமாய்த்
தோன்றினார்;
ஆயிரங்களான பரிசுத்தவான்கள் நடு
விலிருந்து பிரசன்னமானார்.
3 அவர் வலதுபுறத்தில் அக்கினிமய
மான பிரமாணம் அவர்களுக்குக் கா
ணப்பட்டது,
அவர் உண்மையில் ஜனப்பிரியுள்ள
வர்,
அவர் பரிசுத்தவான்களனைவரும் உ
மது கையில் இருக்கிறார்கள்;
அவர்கள் உமது பாதத்தில் விழுந்து
உமது வார்த்தைகளைக் கேட்டுப் போ
தனை பெறுவார்கள்.
4 மோசே நமக்கு ஒரு நியாயப்பிரமாணத்
தைக் கட்டளையிட்டான்; அது யாக்கோ
5 பின் சபைக்குச் சுதந்தரமாயிற்று. ஜனத்
தின் தலைவர் கூட்டங்கூடினபோது, இஸ்ர
வேலின் கோத்திரங்கள் ஒன்றுபட்டு வருகையி
லேயே, அவன் யெஷுரூனுக்கு ராஜாவா
யிருந்தான்.
6 ரூபன் பிழைக்க, அவன் சாகாதிருக்க;
ஆயினும் அவன் ஜனம் சொற்பப்
பேரே.

அவன் யூதாவை ஆசீர்வதித்து: 7
யெகோவாவே யூதாவின் குரலைக்கேட்
டருளும்;
அவனைத் தன் ஜனத்தாரிடம் வரச்
செய்யும்;
அவன் தன் கைகளால் அவர்களுக்கா
கப் போராடினான்.
அவன் எதிருக்களுக்கு அவனே நீங்
கலாக்கும்,
துணையாயிருந்தருளும் என்றான்.

லேவியை ஆசீர்வதித்து: 8
நீ மாசாவிலே சோதித்து
மெரீபாவின் நீரண்டையில் வாதம்
பண்ணினவர்
திருபையுள்ளவர், அவர் வசமே
உனது
தும்மீம் ஊரீம் இருப்பதாக.
லேவி கோத்திரத்தார், தாய் தகப்பனி 9
டம்,
நான் உங்களைப் பார்க்கவில்லை என்
கிறார்கள்;
சகோதரரை அங்கீகரியார்கள்,
சொந்தப்பிள்ளைகளையும் அறியமாட்
டார்கள்,
உமது வார்த்தையையே கைக்கொள்
ளுவார்கள்,
உமது உடன்படிக்கையைக் காத்துக்
கொள்வார்கள்.
அவர்கள் யாக்கோபுக்கு உமது தீர்ப் 10
புகளையும்
இஸ்ரவேலுக்கு உமது நியாயப்பிரமா
ணத்தையும் கற்றுக்கொடுப்பார்கள்.
உமது சந்நிதானத்திலே வந்துசேரச்
சுகந்தவர்க்கத்தையும்
உமது பலிபீடத்தின்மேல் சமூல தக
னபலிகளையும் இடுவார்கள்.
யெகோவாவே, அவன் பலத்தை 11
ஆசீர்வதியும்,
அவன் கைசெய்பவற்றை அங்கீகரி
யும்,
அவனைப் பகைத்து அவனுக்கு விரோ
தமாய் எழும்புவோரின்
இடுப்புகளை ஒடித்தருளும்,
திரும்ப எழுந்திராதபடி செய்தருளும்
என்றான்.

பென்யமீனை ஆசீர்வதித்து: 12
இவன் யெகோவாவுக்குப் பிரியமா
னவன்,
அவரோடு க்ஷேமமாய் வசிப்பான்;
அவரை எந்நாளும் அவர் காப்பார்,
அவன் மலைகளிலே வாசமாயிருப்பார்
என்றான்.

13 யோசேப்பை ஆசீர்வதித்து:
யெகோவாவின் ஆசீர்வாதம் அவன் தேசத்தின்மேல் வருக,
வானத்தின் அருமையான பனியையும்
14 கீழிருக்கும் ஆழத்தின் தண்ணீரையும்
சூரியன் பக்குவப்படுத்தும் அருமையான பலன்களையும்
மாதந்தோறும் விளையும் அருமையானவைகளையும்
15 ஆதிபர்வதங்களில் உண்டாகும் விசேஷித்தவைகளையும்
நித்திய மலைகளில் கிடைக்கும் அரும் பொருட்களையும்
16 பூமியின் அருமையான விளைச்சலையும்
அதன் நிறைவையும்
முட்செடியில் வசித்தவரின் தயவையும் தந்தருளுவாராக.
இவை யாவும் யோசேப்பின் சிரசில்,
தன் சகோதரருள் சிறந்தவன் உச்சியிலே, வருக.
17 அவன் சிறப்பு அவன் தலையீற்றுக்காளையின் சிறப்பே போலாம்,
அவன் கொம்புகள் காட்டெருதின் கொம்புகள் போலாம்;
அவைகளாலே ஜனங்கள் யாவரையும்
பூமியின் கடையாந்தரங்களிலுள்ளவர்களையும் முட்டித் தரத்துவான்.
அக்கொம்புகள் இரண்டும்
எப்பிராயீமின் பதினாயிரங்களும் மனாசேயின் ஆயிரங்களுமே என்றான்.
18 செபுலோனை ஆசீர்வதித்து:
செபுலோனே, நீ வெளியேறும்போது சந்தோஷப்படு;
இசக்காரே, நீ கூடாரங்களிலே சந்தோஷமாயிரு,
19 தங்கள் மலையின்மேல் ஜாதிகளை வரவழைத்து
அங்கே நீதிக்குரிய பலிகளைச் செலுத்துவார்கள்.
கடல்களின் நிறைவளத்தையும்
மணலில் மறைந்துள்ள புதையல்களையும்
அநுபவித்து வாழ்வார்கள் என்றான்.
20 காத்தை ஆசீர்வதித்து:
காத்துக்கு விசால பூமியைத் தந்தவர் ஸ்தோத்திரத்துக்குரியவர்.
அவன் பெண்சிங்கம்போல் பதுங்கியிருந்து
புயத்தையும் உச்சந்தலையையும் பீறிப் போடுவான்;
அவன் தனக்காகச் சிறந்த இடம் 21
பார்த்துக்கொண்டான்;
நியாதிபதிக்குரிய பங்கு ஒன்று அவனுக்கு அங்கே காக்கப்பட்டது.
அவனே ஜனத்தின் தலைவரோடு சென்று
மற்ற இஸ்ரவேலரோடு சேர்ந்து
யெகோவாவின் நீதியையும் நியாயத்தையும் நிறைவேற்றினான் என்றான்.
தாணை ஆசீர்வதித்து: 22
தாண் பால சிங்கம்,
அவன் பாசானிலிருந்து பாய்வான் என்றான்.
நப்தலியை ஆசீர்வதித்து: 23
நப்தலி யெகோவாவின் தயை பெற்றுத் திருப்தியடைந்தவன்,
அவருடைய ஆசீர்வாதம் நிறைந்தவன்;
நீ மேற்றிசையையும் தென்திசையையும் சொந்தமாக்கிக்கொள் என்றான்.
ஆசேரை ஆசீர்வதித்து: 24
புத்திரரில் பாக்கியவான் ஆசேர்,
தன் சகோதரருக்குப் பிரியமானவன்,
தன் காலை எண்ணெயிலே தோய்ப்பான்;
உன் தாழ்ப்பாள் இரும்பும் செம்பு 25
மாக;
உன் நாட்களுக்குத் தக்கபடி உன் பலமிருக்கும் என்றான்.
யெஷுரூனே உன் கடவுளுக்கு நிக 26
ரானவரில்லை, அவர் உனக்குச் சகாயமாக வானங்கள்மேல் ஏறிவருகிறார்;
தமது மகத்துவம் விளங்க மேகமண்டலங்கள்மேல் ஏறிவருகிறார்.
அநாதிகடவுளே அடைக்கலம், 27
அவர் நித்திய புயங்கள் ஆதாரம்;
சத்துருக்களை உன் முன்னிராதபடி துரத்தினார்;
அவர்களை அழித்துவிடு என்றார்.
ஆகவே தானியமும் திராட்சரசமும் 28
உள்ள தேசத்திலே
இஸ்ரவேல் க்ஷேமமாய் வசித்துவந்தான்.
யாக்கோபின் ஊற்றுக்குத் தொந்தரவு செய்வாரில்லை;
அவனுடைய வானமும் பனியைப் பொழியும்.
இஸ்ரவேலே, நீ பாக்கியவான்; 29
யெகோவாவினால் இரட்சிக்கப்பட்ட ஜனமே,
உனக்கு நிகரானவன் யார்?

உனக்குத் துணையாம் கேடகமும்
உனக்கு மகிமையாம் பட்டயமும்
அவரே
உன் சத்துருக்கள் உனக்கு அடங்கு
வதுபோல் நடிக்கிறார்கள்;
அவர்கள் உயர்ந்த ஸ்தலங்களை மிதித்
துப்போவான் என்று சொன்னான்.

**34** பின்பு மோசே மோவாபின் சமவெளி
களிலிருந்து எரிகோவுக்கு எதிரே நேபோ
மலையிலேறிப் பிஸ்காவின் கொடுமுடிக்குப்
போனான். அங்கே யெகோவா அவனுக்
குத் தாண்மட்டுமுள்ள கிலெயாத் தேசம்
2 அனைத்தையும் | நப்தலியின் நாடு அனைத்
தையும் எப்பிராயீம் மனாசே என்பவர்களின்
தேசத்தையும், மேல்புறத்தில் சமுத்திரம்
வரைக்குமுள்ள யூதா தேசம் அனைத்தை
3 யும் | தென்னாட்டையும் பேரீச்சமரங்க
ளின் ஊராகிய எரிகோவின் பள்ளத்தாக்
கிலே சோவார் வரைக்குமுள்ள சமபூமி
4 யையும் காண்பித்தார். அப்பொழுது
யெகோவா அவனிடம்: நான் உன் சந்ததிக்
குக் கொடுப்பதாக ஆபிரகாமுக்கும் ஈசாக்
குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்ட
தேசம் இதுதான், இதை உன் கண் காணும்
படி செய்தேன்; அத்தேசத்தினுள்ளே யோ
5 நீ கடந்துபோவதில்லை என்றார். அப்படி
யே யெகோவாவின் ஊழியனாகிய மோசே
அவ்விடத்தில், மோவாப்தேசத்திலே, யெ
கோவா சொல்லியபடியே மரித்தான்.
அவனை மோவாப் தேசத்திலே பேத்பெயோ
ருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக்கம்
பண்ணினார். அவனை அடக்கம்பண்ணின 6
இடத்தை இன்னாள்வரைக்கும் ஒருவனும்
அறியான். மோசே மரிக்கிறபோது அவ 7
னுக்கு நூற்றிருபது வயது; அவன் கண்
இருளடையவுமில்லை, அவன் பலம் குறைய
வுமில்லை. இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் 8
சமவெளிகளில் மோசேயினிமித்தம் முப்
பது நாள் அழுதுகொண்டிருந்தார்கள்;
மோசேயினிமித்தம் அழுது துக்கங்கொண்
டாடின நாட்கள் முடிந்தன.

நூனின் குமாரனாகிய யோசுவாவின் 9
மேல் மோசே தன் கைகளை வைத்தபடியி
னால் அவனில் விவேகத்தின் ஆவி நிறைந்
தது. இஸ்ரவேல் புத்திரர் அவனுக்குச்
செவிகொடுத்து யெகோவா மோசேக்குக்
கட்டளையிட்டபடியே செய்தார்கள்.

மோசேக்கு நிகரான தீர்க்கதரிசி ஒருவ 10
னும் இஸ்ரவேலில் அப்புறம் எழும்பின
தில்லை; அவனை யெகோவாவை முகமுக
மாய் அறிந்து பழகினவன். எகிப்துதேசத் 11
தில் பார்வோனுக்கும் அவன் சகல ஊழிய
ருக்கும் அவனுடைய தேசம் அனைத்திற்
கும் செய்யும்படி யெகோவா மோசேயை
அனுப்பி நடப்பித்த சகல அடையாளங்
களையும் அற்புதங்களையும் | இஸ்ரவேலர் 12
அனைவரும் காண அவனில் விளங்கிய புஜ
பலத்தையும் சகல பயங்கரமானவற்றை
யும் பார்த்தால் மோசேக்கு நிகரானவன்
இல்லை என்று விளங்கும்.

## JOSHUA

# யோசுவாவின் புஸ்தகம்

**1** யெகோவாவின் ஊழியனாகிய மோசே
மரித்தபின்பு யெகோவா மோசேக்குத்
துணையாயிருந்தவனான நூனின் குமாரன்
2 யோசுவாவினிடம்: என் ஊழியனாகிய
மோசே மரித்துப்போனான்; இப்பொழுது
நீயும் இந்த ஜனங்களனைவரும் எழுந்து
இந்த யோர்தானைக் கடந்து, இஸ்ரவேல்
புத்திரராகிய இவர்களுக்கு நான் கொடுக்
3 கும் தேசத்துக்குள் போங்கள். நான்
மோசேக்குச் சொன்னபடியே உங்கள் உள்
ளங்கால் மிதிக்கும் எவ்விடத்தையும் உங்க
4 ளுக்குக் கொடுத்துவிட்டேன். வனாந்தரமும்
இந்த லீபனோனும் தொடங்கி ஐபிராத்து
நதியான பெரிய நதிமட்டுமுள்ள ஏத்தி
யரின் தேசம் அனைத்தும், சூரியன் அஸ்தமிக்
கிற திசையான பெரிய சமுத்திரம்வரையுள்
ளதும் உங்கள் எல்லையாகும். உன் உயி 5
ருள்ளளவும் ஒருவனும் உனக்கு எதிரே
நிற்பதில்லை; நான் மோசேயோடிருந்தது
போல உன்னோடும் இருப்பேன்; நான்
உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக்
கைவிடுவதுமில்லை. மனோபலங்கொண்டு 6
தைரியமாயிரு; இந்த ஜனத்தின் பிதாக்க
ளுக்கு நான் கொடுப்பேன் என்று ஆணை
யிட்ட தேசத்தை இவர்கள் சுதந்தரிக்கும்
படி செய்வாய். நீ மனோபலங்கொண்டு 7
மிகவும் தைரியமாயிரு; என் ஊழியனாகிய
மோசே உனக்குக் கட்டளையிட்ட நியாயப்

பிரமாணத்தின்படியெல்லாம் செய்ய ஜாக்கிரதையாயிரு; நீ அதைவிட்டு வலது இடது புறம் விலகாதே; அப்படிச்செய்தால் நீ போகும் இடமெல்லாம் சித்திபெறுவாய்.
8 இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டு அகலவேண்டாம்; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்ய ஜாக்கிரதையாயிருக்கும்படி இரவு பகல் அதைத் தியானித்துக்கொண்டிரு; அப்பொழுது உன் வழி அனுகூலமாகும்
9 படிசெய்து சித்திபெறுவாய். நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? மனோபலங் கொண்டு தைரியமாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகுமிடமெல்லாம் உன் கடவுளாகிய யெகோவா உன்னோடிருக்கிறார் என்றார்.
10 அப்பொழுது யோசுவா ஜனங்களின் தலை
11 வருக்குக் கட்டளையிட்டு: நீங்கள் பாளயத்தை உருவடங்துபோய் ஜனங்களைப் பார்த்து: வழிக்குவேண்டிய உணவுகளை உங்களுக்கு ஆயத்தம்பண்ணுங்கள்; உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்குச் சொந்தமாகக் கொடுக்கும் தேசத்தை நீங்கள் சொந்தமாக்கிக்கொள்ளும்படி இன்னும் மூன்றுநாளைக்குள்ளே இந்த யோர்தானைக் கடந்துபோவீர்கள் என்று சொல்லுங்கள் என்றான்.
12 பின்பு யோசுவா ரூபனியர் காத்தியர் மனாசேயின் பாதிக்கோத்திரத்தார் ஆகிய
13 இவர்களிடம் பேசி: யெகோவாவின் ஊழியனாகிய மோசே உங்களுக்குக் கட்டளையிட்டதை நினைத்துக்கொள்ளுங்கள்; உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களை இளைப்பாறச்செய்து இந்தத் தேசத்தை உங்களுக்
14 குக் கொடுத்தாரே. உங்கள் மனைவிமக்களும் மிருகங்களும் மோசே உங்களுக்கு யோர்தானின் கிழ்புறத்திலே கொடுத்த நாட்டில் இருப்பார்கள்; உங்களிலுள்ள யுத்தவீரர் யாவருமோவெனில் ஆயுதமணிந்தவர்களாய் உங்கள் சகோதரருக்குமுன்
15 பாகக் கடந்துபோகவேண்டும். யெகோவா உங்களைப்போல உங்கள் சகோதரரையும் இளைப்பாறச் செய்யுமட்டும், அவர்களும் உங்கள் கடவுளாகிய யெகோவா தங்களுக்குக்கொடுக்கும் தேசத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளுமட்டும், அவர்களுக்கு உதவி செய்யவேண்டும்; பின்பு நீங்கள் உங்களுக்குச் சொந்தமாகும் நாட்டுக்குத் திரும்பி யெகோவாவின் ஊழியனாகிய மோசே யோர்தானின் கிழ்புறத்தில் சூரியன் உதிக்கும் திசையிலே உங்களுக்குக் கொடுத்த அந்த நாட்டைச் சொந்தமாக்கிக்கொள்வீர்கள் என்று சொன்னான். அதைக் கேட்கவே 16
அவர்கள் யோசுவாவினிடம்: நீர் எங்களுக்குக் கட்டளையிட்டதையெல்லாம் செய்வோம்; நீர் எங்களை அனுப்பும் இடத்திற்கெல்லாம் போவோம். நாங்கள் மோசேக் 17
குச் செவிகொடுத்ததுபோல உமக்கும் செவிகொடுப்போம்; உமது கடவுளாகிய யெகோவா மோசேயோடே இருந்ததுபோல உம்மோடும் இருந்தால் போதும். நீர் எங்க 18
ளுக்குக் கட்டளையிடும் சகல காரியங்களிலும் நீர் சொல்லுகிறவற்றைக் கேளாமல் உமது வார்த்தையை மீறி முரட்டாட்டம் பண்ணுகிற எவனும் கொல்லப்படுவான்; நீரோ மனோபலங்கொண்டு தைரியமாகவே இருரும் என்றார்கள்.

நூனின் குமாரனாகிய யோசுவா சித்தீமி 2
லிருந்து வேவுகாரராகிய இரண்டு மனுஷரை இரகசியமாய் அனுப்பி: நீங்கள் போய்த் தேசத்தையும் எரிகோவையும் வேவுபார்த்து வாருங்கள் என்றான். அவர்கள் அப்படியே போனார்கள்; போனவர்கள் ராகாப் என்னும் பெயர்கொண்ட ஒரு வேசியின் வீட்டிற்குச் சென்று அங்கே தங்கினார்கள். தேசத்தை வேவுபார்க்கும்படி 2
இஸ்ரவேல் புத்திரரில் சில மனுஷர், இதோ, இந்த இராத்திரியிலே இங்கே வந்தார்கள் என்று எரிகோவின் ராஜாவுக்குச் சொல்லப்பட்டது. அதைக் கேட்கவே எரிகோ 3
வின்ராஜா ராகாபண்டைக்கு ஆள் அனுப்பி: உன்னிடத்திலே உன் வீட்டுக்குள் வந்த மனுஷரை வெளியே கொண்டுவா; அவர்கள் தேசமுழுவதையும் வேவுபார்க்க வந்திருக்கிறார்கள் என்று சொல்லச் சொன்னான். அந்த ஸ்திரீயோ அவ்விரண்டு மனு 4
ஷரையும் ஒளித்திருக்கச் செய்துவிட்டு, மெய்தான், என்னிடத்தில் மனுஷர் வந்திருந்தார்கள்; அவர்கள் எவ்விடத்தாரோ எனக்குத் தெரியாது; வாசலை அடைக்கும் 5
நேரத்தில் இருட்டுவேளையிலே அந்த மனுஷர் போய்விட்டார்கள்: அவர்கள் எங்கே போனார்களோ எனக்குத் தெரியாது; சீக்கிரமாய் அவர்களைத் தொடர்ந்துபோங்கள், அவர்களைப் பிடித்துக்கொள்வீர்கள் என்றாள். அவள் அவர்களை வீட்டின்மேல் 6
ஏறப்பண்ணி வீட்டின்மேல் பரப்பியிருந்த சணல் தட்டைகளுக்குள்ளே மறைத்து வைத்திருந்தாள். ராஜாவின் ஆட்கள் 7
யோர்தானுக்குப் போகிற வழியில் இறங்கு துறைமட்டும் அவர்களைத் தேடப்போனார்கள்; அவர்களைத் தேடுகிறவர்கள் புறப்பட்டவுடனே வாசல் அடைக்கப்பட்டது.
இஸ்ரவேல் மனுஷர் படுத்துக்கொள்ளு 8

முன்னே அவள் வீட்டின்மேல் அவர்க
9 ளிடம் ஏறிப்போய் | அவர்களோடு பேசி: யெகோவா இந்தத் தேசத்தை உங்களுக்கு கொடுத்துவிட்டார்; உங்களால் வந்த திகில் எங்களைப் பிடித்தது; உங்களைப்பற்றிக் கேள்விப்பட்டுத் தேசத்துக் குடிகள் எல்லாரும் தைரியமற்றுப்போனார்கள்; இது எனக்குத்
10 தெரியும். நீங்கள் எகிப்தைவிட்டு வந்த போது யெகோவா உங்களுக்கு முன்பாகச் செங்கடல் சமுத்திரத்தின் தண்ணீரை வற்றிப் போகப்பண்ணினதையும் நீங்கள் யோர்தானின் கீழ்புறத்தில் சங்காரித்த எமோரியரின் இரண்டு ராஜாக்களாகிய சிகோனுக்கும்
11 ஓகுக்கும் செய்ததையும் கேள்விப்பட்டோம். கேள்விப்படவே எங்கள் இருதயம் கரைந்துபோயிற்று; உங்களாலே எல்லாருடைய தைரியமும் அற்றுப்போயிற்று;
12 உயர வானத்திலும் கீழே பூமியிலும் உங்கள் கடவுளாகிய யெகோவாவே கடவுள். இப்போதும், நான் உங்களுக்குத் தயைபாராட்டினபடியினாலே நீங்களும் என் தகப்பன் வீட்டாருக்குத் தயைபாராட்டுவீர்கள் என்
13 றும், நீங்கள் என் தகப்பனையும் தாயையும் என் சகோதரரையும் என் சகோதரிகளையும் அவர்களைச் சேர்ந்த யாவரையும் உயிரோடேவைத்து எங்களைச் சாவுக்குத் தப்புவிப்பீர்கள் என்றும் எனக்கு ஆணையிட்டு நிச்சயமான அடையாளமொன்றை எனக்குக் கொடுக்கவேண்டும் என்று சொன்னாள்.
14 அப்பொழுது அந்த மனுஷர் அவளிடம்: எங்கள் ஜீவனே உங்கள் ஜீவனுக்கு ஈடு; நாங்கள் வந்த காரியத்தை நீங்கள் வெளிப்படுத்தாதிருந்தால், யெகோவா எங்களுக்குத் தேசத்தைக் கொடுக்கும்போது நாங்கள் தயைபாராட்டி உண்மையாய் நடந்துகொள்
15 வோம் என்றார்கள். பின்பு அவள் அவர்களைக் கயிற்றினாலே ஜன்னல் வழியாய் இறக்கிவிட்டாள்; அவள் வீடு ஊரின் மதிலே ஒட்டியிருந்தது; ஊர் மதிலிலே
16 அவள் குடியிருந்தாள். அவள் அவர்களிடம்: தேடுகிறவர்கள் உங்களைக் கண்டுகொள்ளாதபடி நீங்கள் மலைநாட்டுக்குள் போய் அவர்கள் திரும்பிவருமட்டும் அங்கே மூன்று நாள் ஒளித்திருந்து பின்பு உங்கள்
17 வழியே போங்கள் என்றாள். அந்த மனுஷர் அவளிடம்: நாங்கள் உனக்கு ஆணையிட்டுக்கொடுத்த வாக்கை நிறைவேற்றிக் குற்றமற்றவர்களாயிருப்பதற்கு நீ ஒன்று
18 செய்யவேண்டும். இதோ, நாங்கள் தேசத்துக்குள் பிரவேசிக்கும்போது நீ இந்தச் சிவப்புநூல் கயிற்றை எங்களை இறக்கிவிட்ட ஜன்னலிலே கட்டி உன் தகப்பனையும் உன் தாயையும் உன் சகோதரரையும் உன் தகப்பன் வீட்டார் அனைவரையும் உன்னிடத்தில் உன் வீட்டிலே சேர்த்துக்
19 கொள்ளவேண்டும். எவனாகிலும் உன் வீட்டு வாசலிலிட்டு வெளியேபோனால், அவனுடைய இரத்தப்பழி அவன் தலையின் மேல் இருக்கும், எங்கள்மேல் குற்றமில்லை; உன்னோடே வீட்டில் இருக்கிற எவன்மேலாகிலும் கைபோடப்பட்டதேயாகில் அவனுடைய இரத்தப்பழி எங்கள் தலையின்
20 மேல் இருக்கும். நாங்கள் வந்த காரியத்தை நீ வெளிப்படுத்தினதேயானால் நாங்கள் உனக்கு இட்ட ஆணைக்கு நீங்கிக் குற்றமற்றவர்களாயிருப்போம் என்றார்கள்.
21 அதற்கு அவள்: உங்கள் சொற்படியே ஆகட்டும் என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டாள்; அவர்கள் போய்விட்டார்கள்; பின்பு அவள் அந்தச் சிவப்புக் கயிற்றை ஜன்னலிலே கட்டிவைத்தாள்.
22 அவர்கள்போய் மலைநாடு சேர்ந்து, தேடுகிறவர்கள் திரும்பிவருமட்டும் மூன்று நாள் அங்கே தரித்திருந்தார்கள்; தேடுகிறவர்கள் வழியெல்லாம் அவர்களைத் தேடியும் காணாதே போனார்கள். அந்த இரண்டு மனு
23 ஷரும் திரும்பி மலைநாட்டிலிருந்து இறங்கி ஆற்றைக்கடந்து நூனின் குமாரனாகிய யோசுவாவினிடம் வந்து, தங்களுக்குச் சம்பவித்த யாவையும் அவனுக்குத் தெரிவித்து:
24 யெகோவா தேசத்தையெல்லாம் நமது கையில் கொடுத்துவிட்டார்; தேசத்தின் குடிகளெல்லாரும் நம்மைப்பற்றிக் கேள்விப்பட்டுச் சோர்ந்துபோயிருக்கிறார்கள் என்று அவனிடம் சொன்னார்கள்.

**3** அதிகாலமே யோசுவா எழுந்திருந்த பின்பு, அவனும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் சித்தீமிலிருந்து பிரயாணப்பட்டு யோர்தான்மட்டும் வந்து, அதைக் கடந்து போகுமுன்னே அங்கே இராத்தங்கினார்கள்.
2 மூன்று நாள் சென்றபின்பு தலைவர்
3 பாளயம் எங்கும் போய் | ஜனங்களுக்குக் கட்டளையிட்டு: நீங்கள் உங்கள் கடவுளாகிய யெகோவாவின் உடன்படிக்கைப்பெட்டகத்தையும் அதைச் சுமக்கிற லேவிய ராகிய ஆசாரியரையும் காணும்போதே நீங்களும் உங்கள் இடத்தைவிட்டுப் பிரயாணப்பட்டு அதற்குப் பின்செல்லுங்கள்; ஒன்றைமாத்திரம்கவனித்துக்கொள்ளவேண்டும்.—உங்களுக்கும் அதற்கும் கிட்டத்
4 தட்ட இரண்டாயிரம் முழத்தூரம் இருக்கவேண்டும்;—நீங்கள் நடக்கவேண்டிய வழி உங்களுக்குத் தெரியும்படி நீங்கள் அதன் பின் செல்லவேண்டும்; இதற்குமுன் நீங்கள்

ஒருபோதும் இந்த வழியாய் நடந்துபோன
தில்லையே என்று சொன்னார்கள்.
5 யோசுவா ஜனங்களைப் பார்த்து: உங்க
ளைச் சுத்திகரித்துக்கொள்ளுங்கள்; நாளைக்கு
யெகோவா உங்கள் நடுவிலே அற்புதங்
6 களைச் செய்வார் என்றான். பின்பு யோசுவா
ஆசாரியரிடம்: நீங்கள் உடன்படிக்கைப்
பெட்டகத்தை எடுத்துக்கொண்டு ஜனங்க
ளுக்கு முன்னே நடந்துபோங்கள் என்
றான்; அப்படியே அவர்கள் உடன்படிக்
கைப்பெட்டகத்தை எடுத்துக்கொண்டு
ஜனங்களுக்கு முன்னே போனார்கள்.
7 யெகோவா யோசுவாவினிடம்: நான்
மோசேயோடே இருந்ததுபோல உன்னோ
டும் இருக்கிறேன் என்பதை இஸ்ரவேல்
எல்லாரும் அறியும்படிக்கு இன்றே அவர்
கள் கண்களுக்கு முன்பாக உன்னை மேன்
8 மைப்படுத்தத் தொடங்குவேன். நீ போய்
உடன்படிக்கைப்பெட்டகத்தைச் சுமக்கிற
ஆசாரியரிடம்: நீங்கள் யோர்தான் தண்ணீர்
ஓரத்தில் சேரும்போது யோர்தானில் நின்று
விடுங்கள் என்று கட்டளையிடு என்று
சொன்னார்.
9 யோசுவா இஸ்ரவேல் புத்திரரிடம்: நீங்
கள் இங்கே வாருங்கள், உங்கள் கடவு
ளாகிய யெகோவாவின் வார்த்தைகளைக்
10 கேளுங்கள் என்றான். அப்பொழுது யோசு
வா: ஜீவனுள்ள கடவுள் உங்கள் நடுவே
இருக்கிறார் என்றும், கானானியர், ஏத்தியர்,
ஏவியர், பாரசீகர், கிர்காசியர், எமோரியர்,
எபூசியர் ஆகிய இவர்களை அவர் உங்க
ளுக்கு முன்பாகத் துரத்திவிடுவது நிச்சயம்
என்றும் நீங்கள் நிச்சயித்துக்கொள்வதற்கு
11 இதுவே அடையாளம். இதோ, சர்வபூமிக்
கும் ஆண்டவராயிருக்கிறவருடைய உடன்
படிக்கைப்பெட்டகம் கடந்து செல்வதற்கு
உங்களுக்குமுன்னே யோர்தானிலே போகி
12 றது. இப்பொழுதும் கோத்திரத்துக்கு ஒரு
வராக இஸ்ரவேல் கோத்திரங்களிலே பன்
13 னிருவரைப் பிரித்தெடுங்கள். சர்வபூமிக்
கும் ஆண்டவராகிய யெகோவாவின் பெட்ட
கத்தைச் சுமக்கிற ஆசாரியரின் உள்ளங்கால்
கள் யோர்தானின் தண்ணீரிலே பட்டமாத்
திரத்தில், மேலேயிருந்து ஓடிவருகிற யோர்
தானின் தண்ணீர் ஓடாமல் ஒரு குவியலாக
14 நிற்கும் என்றான். ஜனங்கள் யோர்தானைக்
கடந்துபோகத் தங்கள் கூடாரங்களிலிருந்து
புறப்பட்டபோது உடன்படிக்கைப் பெட்
டகத்தைச் சுமந்த ஆசாரியர் ஜனங்களுக்கு
15 முன்னே போனார்கள். பெட்டகத்தைச்
சுமந்த ஆசாரியர் யோர்தான்மட்டும்
வரவே, பெட்டகத்தைச் சுமந்தவர்களின்
கால்கள் தண்ணீரின் ஓரத்தில் பட்டமாத்
திரத்தில்—அறுப்புக்காலமெல்லாம் யோர்
தான் கரைபுரண்டுபோம்—மேலேயிருந்து 16
ஓடிவருகிற தண்ணீர் நின்றுவிட்டது, அது
வெகுதூரத்தில் சாரதானுக்கடுத்த ஆதாம்
என்னும் ஊரிலே ஒரு குவியலாகத் குவிந்
தது. அராபாவின் கடலாகிய உப்புக்
கடலுக்கு ஓடுகிற தண்ணீர் பிரிந்து ஓடிவிட்
டது; ஜனங்கள் எரிகோவுக்கு எதிரே
கடந்துபோனார்கள். யெகோவாவின் உடன் 17
படிக்கைப் பெட்டகத்தைச் சுமந்த ஆசாரி
யர்கள் யோர்தானின் நடுவே வறண்ட
தரையில் நின்றுகொண்டிருந்தார்கள். ஜன
முழுதும் யோர்தானைக் கடந்துதீருமட்டும்
இஸ்ரவேலரனைவரும் வறண்ட தரைவழி
யாய்க் கடந்துபோனார்கள்.

ஜனமுழுதும்யோர்தானைக்கடந்துதீர்ந்த
போது யெகோவா யோசுவாவினிடம்: கோத் 2
திரத்திற்கு ஒருவராக ஜனங்களில் பன்னிரு
வரை நீங்கள் தெரிந்தெடுத்து | இங்கே 3
யோர்தானின் நடுவிலே ஆசாரியர் நின்று
கொண்டிருக்கிற இடத்திலே பன்னிரண்டு
கற்களை எடுத்து அவைகளை உங்களோடு
அக்கரைக்குக் கொண்டுபோய், நீங்கள்
இன்று இரவில் தங்கும் இடத்திலே அவை
களை வையுங்கள் என்று கட்டளையிடவேண்
டும் என்றார். அப்பொழுது யோசுவா இஸ்ர 4
வேல் புத்திரரில் கோத்திரத்திற்கு ஒருவராக
ஆயத்தப்படுத்தியிருந்த பன்னிருவரையும்
அழைத்து | அவர்களிடம்: நீங்கள் யோர் 5
தானின் மத்தியிலே உங்கள் கடவுளாகிய
யெகோவாவின் பெட்டகத்துக்கு முன்பாகக்
கடந்துபோய், இஸ்ரவேல் புத்திரருடைய
கோத்திரங்களின் இலக்கத்திற்குச் சரியாக
உங்களில் ஒவ்வொருவன் ஒவ்வொரு கல்
லைத் தன் தோளின்மேல் எடுத்துக்கொண்டு
போங்கள்; இவை உங்கள் நடுவில் ஒரு
அடையாளமாகும். இந்தக் கற்களின் 6
விசேஷம் என்னவென்று நாளை உங்கள்
பிள்ளைகள் உங்களைக் கேட்கும்போது | நீங் 7
கள்: யெகோவாவின் உடன்படிக்கை பெட்
டகத்துக்கு முன்பாக யோர்தானின் தண்ணீர்
பிரிந்துபோனதே; யோர்தானைக் கடந்துபோ
கிறபோது யோர்தானின் தண்ணீர் பிரிக்கப்
பட்டதே; இந்தக் கற்கள் இஸ்ரவேல் புத்
திரருக்கு என்றும் ஞாபகக்குறியாம் என்று
சொல்லுங்கள் என்றான். யோசுவா கட் 8
டளையிட்டபடியே இஸ்ரவேல் புத்திரர்
செய்தார்கள், யெகோவா யோசுவாவுக்குச்
சொன்னபடி இஸ்ரவேல் புத்திரருடைய
கோத்திரங்களின் இலக்கத்திற்குச் சரியாகப்
பன்னிரண்டு கற்களை யோர்தானின் நடுவி

லிருந்து எடுத்து அவைகளைத் தங்களோடே அக்கரைக்குக் கொண்டுபோய்த் தாங்கள் 9 தங்கின இடத்திலே வைத்தார்கள். பின்னும் யோசுவா பன்னிரண்டு கற்களை எடுத்து அவைகளை யோர்தானின் நடுவில் உடன் படிக்கைப்பெட்டகத்தைச் சுமந்த ஆசாரி யர் நின்றுகொண்டிருந்த இடத்திலே நாட் டினான்; அவைகள் இந்நாள்மட்டும் அங்கே 10 இருக்கின்றன. மோசே யோசுவாவுக்குக் கட்டளையிட்டிருந்த யாவற்றிற்கும் இசைய, ஜனங்களுக்குச் சொல்லும்படி யெகோவா யோசுவாவுக்குக் கட்டளையிட்டவையெல் லாம் செய்துதீருமட்டும், பெட்டகத்தைச் சுமந்த ஆசாரியர் யோர்தானின் நடுவே நின் றார்கள்; ஜனங்கள் தாமதமின்றிக் கடந்து 11 போனார்கள். ஜனமெல்லாம் கடந்துபோன பின்பு யெகோவாவின் பெட்டகமும் ஆசாரி யரோடு கடந்து ஜனத்துக்கு முன்போய் நின் 12 றது. ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரும் மோசே தங்களுக்குச் சொன்னபடியே ஆயுதமணிந்த வர்களாய் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பா 13 கக் கடந்துபோனார்கள். இவர்களில் யுத்த சன்னத்தராய் யுத்தம்பண்ணும்படி யெகோ வாவின் சந்நிதியில் எரிகோவின் சமவெளிக ளுக்குக் கடந்துபோனவர்கள் ஏறக்குறைய 14 நாற்பதினாயிரம்பேர். அந்நாளிலே யெகோ வா யோசுவாவைச் சகல இஸ்ரவேலரின் பார்வையிலும் மேன்மைப்படுத்தினார்; அவர் கள் மோசேக்குப் பயந்து நடந்ததுபோல அவனுக்கும் அவன் உயிரோடிருந்த நாளெல்லாம் பயந்து நடந்தார்கள்.

15 யெகோவா யோசுவாவினிடம்: 16 சாட்சியப்பெட்டகத்தைச் சுமக்கிற ஆசாரி யர் யோர்தானிலிருந்து கரையேறும்படி அவர்களுக்குக் கட்டளையிடு என்று சொன் 17 னார். யோசுவா ஆசாரியருக்குக் கட்டளை யிட்டு, யோர்தானிலிருந்து கரையேறி 18 வாருங்கள் என்றான். அப்பொழுது யெகோவாவின் உடன்படிக்கைப்பெட்ட கத்தைச் சுமந்த ஆசாரியர் யோர்தான் நடுவி லிருந்து ஏறினபோது தங்கள் கால்களைத் தூக்கிக் கரையில்வைக்கவே யோர்தானின் தண்ணீர் தன் இடத்துக்குத் திரும்பி முன் போல அதன் கரைபுரண்டு ஓடிற்று. 19 இந்தப் பிரகாரமாக முதல்மாதம் பத்தாம் தேதியிலே ஜனங்கள் யோர்தானைக்கடந்து கரையேறி எரிகோவின் சுற்றுப்புறத்துக்குக் கிழக்கே கில்காலில் பாளயமிறங்கினார்கள். 20 அவர்கள் யோர்தானில் எடுத்துவந்த அந் தப் பன்னிரண்டு கற்களையும் யோசுவா கில் 21 காலிலே நாட்டி: இஸ்ரவேல் புத்திரரைப் பார்த்து: இந்தக் கற்களின் விசேஷம் என்ன வென்று நாளை உங்கள் பிள்ளைகள் தங்கள் பிதாக்களைக்கேட்டால் | நீங்கள் உங்கள் 22 பிள்ளைகளிடம்: இஸ்ரவேலர் வெட்டாந் தரைவழியாய் இந்த யோர்தானைக் கடந்து வந்தார்கள். உங்கள் கடவுளாகிய யெகோ 23 வா சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரை நாங் கள் கடந்துதீருமட்டும் எங்களுக்கு முன்பாக வற்றிப்போகப்பண்ணினதுபோல யோர்தானின் தண்ணீரை நீங்கள் கடந்து தீருமட்டும் உங்கள் கடவுளாகிய யெகோ வா அதை உங்களுக்குமுன்பாக வற்றிப் போகப்பண்ணினார். பூமியின் சகல ஜாதி 24 களும் யெகோவாவின் கரம் பலத்ததென்று அறிந்து எந்நாளும் அவர்களும் உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்குப் பயப்பட வேண்டுமென்று இப்படிச் செய்தார் என்று சொல்லுங்கள் என்றான்.

இஸ்ரவேல் புத்திரர் கடந்து தீருமளவும் **5** யெகோவா யோர்தானின் தண்ணீரை அவர் களுக்கு முன்பாக வற்றிப்போகப்பண்ணின தை யோர்தானின் மேல்கரையில் குடி யிருந்த எமோரியரின் சகல ராஜாக்களும் கடலோரத்தில் குடியிருந்த கானானியரின் சகல ராஜாக்களும் கேட்டபோது அவர்கள் இருதயம் கரைந்துபோனது; இஸ்ரவேல் புத்திரராலே அவர்களுடைய தைரியம் அற் றுப்போயிற்று.

அக்காலத்திலே யெகோவா யோசுவாவி 2 னிடம்: நீ கல்லிலுலே கத்திகளைச்செய்து திரும்பவும் இரண்டாம்விசை இஸ்ரவேல் புத்திரரை விருத்தசேதனம்பண்ணு என்றார். அப்படியே யோசுவா கல் கத்திகளைச்செய்து 3 நுனித்தோல் மேடு எனவழங்கும் இடத்தில் இஸ்ரவேல் புத்திரரை விருத்தசேதனம்பண் ணினான். யோசுவா இப்படி விருத்தசேத 4 னம் பண்ணவேண்டிய காரணம் இதுவே, எகிப்தை விட்டுவந்த யாவரும், ஆண்மக்க ளாகிய யுத்த புருஷர் அனைவரும், எகிப்தை விட்டுவந்தபின்பு வழியில் வனாந்தரத்திலே மாண்டுபோனார்கள். எகிப்தை விட்டு 5 வந்த எல்லா ஜனங்களும் விருத்தசேதனம் பண்ணப்பட்டவர்கள்; அவர்கள் எகிப்தை விட்டு வந்தபின்பு வழியில் வனாந்தரத்திலே பிறந்த சகல ஜனங்களுமோ விருத்தசேதனம் பண்ணப்படாதவர்கள். எகிப்தைவிட்டு 6 வந்த யுத்த புருஷர் யாவரும் யெகோவா வின் சப்தத்திற்குச் செவிகொடாமற் போன படியினால் அவர்கள் மாண்டு அழியுமட்டும் இஸ்ரவேல் புத்திரர் நாற்பது வருஷம் வனாந் தரத்திலே நடந்து திரிந்தார்கள்; யெகோவா எங்களுக்குக் கொடுப்பதாக அவர்கள்

பிதாக்களுக்கு ஆணையிட்டிருந்ததும் பாலும் தேனும் ஓடுகிறதுமான தேசத்தை அவர்கள் காண்பதில்லை என்று யெகோவா அவர்க 7 ளுக்கு ஆணையிட்டிருந்தார். அவர்கள் ஸ்தானத்தில் அவர் எழும்பப்பண்ணின அவர்கள் பிள்ளைகளையே யோசுவா விருத்த சேதனம்பண்ணினான். வழியில் அவர்களை விருத்தசேதனம்பண்ணுதலினால் அவர்கள் அவித்தோலுடையவர்களாயிருந்தார்கள். 8 ஜனங்களெல்லாரும் விருத்தசேதனம்பண் ணப்பட்டுத் தீர்ந்த பின்பு அவர்கள் குண மாகுமட்டும் தங்கள் தங்கள் இடத்திலே 9 பாளயத்தில் தரித்திருந்தார்கள். யெகோவா யோசுவாவினிடம்: எகிப்தின் நிந்தை உங் கள்மேல் இராதபடி இன்று அதைப்புரட் டித் தள்ளிப்போட்டேன் என்றார்; அதினால் அந்த ஸ்தலம் இந்நாள்வரைக்கும் கில்கால் என்னப்படுகிறது.

10 இஸ்ரவேல் புத்திரர் கில்காலில் பாளய மிறங்கியிருந்து மாதத்தின் பதினாலாந்தேதி சாயங்காலத்திலே எரிகோவின் சமவெளிக 11 ளிலே பஸ்காவை ஆசரித்தார்கள். பஸ்கா வின் மறுநாளாகிய அன்றையதினம் அவர் கள் தேசத்தின் தானியத்தால் செய்த புளிப் பில்லாத அப்பங்களையும் சுட்ட தானியக் 12 கதிர்களையும் புசித்தார்கள். அவர்கள் தேசத் தின் தானியத்தைப் புசித்த அதே நாளிலே மன்னாபெய்யாமல் நின்றுவிட்டது; அது முதல் இஸ்ரவேல் புத்திரருக்கு மன்னா இல் லாமற்போக அவர்கள் கானான் தேசத்துப் பலனை அந்த வருஷத்திலேயே புசித்தார்கள்.

13 பின்னும் யோசுவா எரிகோவின் வெளியி லிருந்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்க் கும்போது, இதோ, ஒருவர் அவனுக்கு எதிரே நின்றார். அவர் கையிலே உருவின பட்டயமிருந்தது. யோசுவா அவரிடம் போய்: நீர் எங்கள் பட்சமோ, எங்கள் சத்துருக்கள் பட்சமோ என்று கேட்க | 14 அவர்: அப்படியல்ல, நான் யெகோவாவின் சேனபதியாகவே இப்பொழுது வந்தேன் என்று சொல்லவே யோசுவா தரையில் முகங்குப்புற விழுந்து பணிந்துகொண்டு, என் ஆண்டவர் அடியேனுக்குச் சொல்லு கிறது என்ன என்று கேட்டான். யெகோ வாவின் சேனபதி யோசுவாவினிடம்: உன் கால்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப்போடு, நீ நிற்கிற இடம் பரிசுத்த மானது என்றார்; யோசுவா அப்படியே செய்தான்.

**6** எரிகோ இஸ்ரவேல் புத்திரரினிமித்தம் முற்றிலும் அடைபட்டிருந்தது; வெளியே வருவாருமில்லை, உள்ளே போவாருமில்லை. யெகோவா யோசுவாவினிடம்: இதோ, எரி கோவை அதின் ராஜாவோடும் யுத்த வீரரோ 2 டுங்கூட உன்கையில் ஒப்புக்கொடுத்தேன். 3 யுத்த புருஷராகிய நீங்கள் அனைவரும் பட் டணத்தைச்சுற்றி ஒருதரம் சுற்றிவாருங்கள், இப்படி ஆறு நாள் செய்யவேண்டும். ஏழு ஆசாரியர் ஏழு கொம்பு எக்காளங் 4 களைப் பிடித்துக்கொண்டு பெட்டகத்துக்கு முன்பாகப் போகவேண்டும்; ஏழாம்நாளில் பட்டணத்தை ஏழுதரம் சுற்றிவரவேண்டும், ஆசாரியர் எக்காளங்களை ஊதவேண்டும். அவர்கள் அந்தக் கொம்புகளினால் நெடுந் 5 தொனி இடவே நீங்கள் எக்காள சத்தத் தைக் கேட்கும்போது ஜனங்களெல்லாரும் மகா ஆரவாரமாக ஆர்ப்பரிக்கவேண்டும்; ஆர்ப்பரித்தமாத்திரமே பட்டணத்தின்மதில் இடிந்துவிழும்; உடனே ஜனங்கள் அவர வர் தங்களுக்கு நேராக முன்செல்லவேண் டும் என்றார். அந்தப்படியே நூனின் குமா 6 ரனாகிய யோசுவா ஆசாரியரை அழைத்து: உடன்படிக்கைப்பெட்டகத்தை எடுத்துச் சுமந்துபோங்கள்; ஏழு கொம்பு எக்காளங் களை ஏழு ஆசாரியர் யெகோவாவின் பெட் டகத்துக்குமுன்பாகப் பிடித்துக்கொண்டு போகவேண்டும் என்று சொல்லி | ஜனங் 7 களைப் பார்த்து: நீங்கள் முன்சென்று பட் டணத்தைச் சுற்றிவாருங்கள், யுத்தசன்னத் தரானவர்கள் யெகோவாவின் பெட்டகத் துக்குமுன் நடக்கவேண்டும் என்றார். யோசுவா ஜனங்களிடம் பேசினபின், ஏழு 8 கொம்பு எக்காளங்களைப் பிடித்திருந்த ஏழு ஆசாரியர் யெகோவாவுக்கு முன்னே நட ந்து எக்காளங்களை ஊதினார்கள். யெகோ வாவின் உடன்படிக்கைப்பெட்டகம் அவர் களுக்குப் பின்வந்தது. எக்காளங்களை 9 ஊதிவந்த ஆசாரியருக்குமுன் யுத்தசன்னத் தரானவர்கள் நடந்தார்கள். எக்காளங்கள் ஊதப்படுகையில் பின்தண்டு பெட்டகத் துக்குப் பின்னே சென்றது. யோசுவா ஜனங் 10 களுக்குக் கட்டளையிட்டு: ஆர்ப்பரியுங்கள் என்று நான் சொல்லும்நாள்மட்டும் நீங்கள் ஆர்ப்பரியாமலும் உங்கள் வாயினால் சத் தங்காட்டாமலும் இருங்கள்; உங்கள் வாயி லிருந்து ஒரு பேச்சும் வரவேண்டாம், நான் சொல்லும் நாளிலே ஆர்ப்பரியுங்கள் என்று சொன்னான். அப்படியே யெகோ 11 வாவின் பெட்டகத்தைப் பட்டணத்தைச் சுற்றி ஒருசுற்று வரச்செய்தான். பின்பு அவர்கள் பாளயத்திற்குவந்து பாளயத் திலே இராத்தங்கினார்கள்.

யோசுவா அதிகாலையில் எழுந்திருக்கவே 12 ஆசாரியர்கள் யெகோவாவின் பெட்டகத்

13 தை எடுத்துச் சமஸ்துபோனுர்கள். ஏழு கொம்பு எக்காளங்களேப் பிடித்திருந்த ஏழு ஆசாரியர்களும் எக்காளங்களே ஊதிக்கொண்டே யெகோவாவின் பெட்டகத்துக்கு முன் நடந்தார்கள்; யுத்தசன்னத்தரானவர்கள் அவர்களுக்குமுன்னே நடந்தார்கள்; எக்காளங்கள் ஊதப்படுகையில் பின்தண்டும் யெகோவாவின் பெட்டகத்துக்குப்
14 பின்னே சென்றது. இரண்டாம்நாளிலும் பட்டணத்தை ஒருதரம் சுற்றிவந்து பாளையத்திற்குத் திரும்பினுர்கள்; இப்படியே ஆறுநாளும் செய்தார்கள்.
15 ஏழாம்நாளில் அதிகாலமே கிழக்கு வெளுக்கும்போது எழுந்திருந்து அந்தப் பிரகாரமே பட்டணத்தை ஏழுதரம் சுற்றிவந்தார்கள்; அன்றையதினத்தில் மாத்திரம் பட்டணத்தை ஏழுதரம் சுற்றிவந்தார்கள்.
16 ஏழாந்தரம் ஆசாரியர் எக்காளங்களே ஊதுகையில் யோசுவா ஜனங்களேப் பார்த்து: ஆர்ப்பரியுங்கள், யெகோவா உங்களுக்குப் பட்டணத்தை ஒப்புக்கொடுத்துவிட்டார்.
17 ஆனுலும் இந்தப் பட்டணமும் இதிலுள்ள யாவும் யெகோவாவின் சாபத்திற்குட்பட்டனவாம். ராகாப் என்னும் வேசிமாத்திரம், அவளும் அவளோடே வீட்டுக்குள் இருக்கும் அனேவரும், உயிரோடு காக்கப்படவேண்டும்; நான் அனுப்பின ஆட்களே
18 அவள் மறைத்து வைத்திருந்தாள். ஒரு காரியம், சாபத்திற்குட்பட்டவைகள் விஷயத்தில் நீங்கள் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். நீங்கள் சாபத்திற்குட்படுத்தினவற்றில் எதையாகிலும் எடுத்துக்கொண்டால், இஸ்ரவேல் பாளையத்தைச் சாபத்திற்குட்படுத்தி அதை அபாயத்துக்குள்ளாக்கு
19 வீர்கள். சகல வெள்ளியும் பொன்னும், செம்பினுலும் இரும்பினுலும் செய்யப்பட்ட பாத்திரங்களும், யெகோவாவுக்கு விடப்பட்டவைகள்; அவைகள் யெகோவாவின் பொக்கிஷத்தில் சேரும் என்ருன்.
20 எக்காளங்கள் ஊதப்படுகையில் ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள்; எக்காளசத்தத்தை ஜனங்கள் கேட்டு மகா ஆரவாரமாக ஆர்ப்பரிக்கையிலேயே மதில் இடிந்துவிழுந்தது; உடனே ஜனங்கள் அவரவருக்குநேராகப் பட்டணத்தினுட்சென்று அதைப் பிடித்
21 தார்கள். பட்டணத்திலிருந்த புருஷரையும் ஸ்திரீகளேயும் வாலிபரையும் கிழவரையும் ஆடுமாடுகளேயும் கழுதைகளேயும் எல்லாவற்றையும் வாள்வாய்க்கு இரையாக்கி
22 னுர்கள். தேசத்தை வேவுபார்த்துவந்த இருவரையும் யோசுவா அழைத்து: நீங்கள் அந்த வேசியின் வீட்டுக்குப் போய், நீங்கள் அவளுக்கு ஆணேயிட்டபடியே, அந்த ஸ்திரீயையும் அவளேச்சேர்ந்த யாவரையும் அங்கேயிருந்து வெளியே கொண்டுவாருங்கள் என்ருன். வேவுகாரரான அந்த வாலி 23
பர்போய், ராகாபையும் அவள் தகப்பனேயும் அவள் தாயையும் சகோதரரையும் அவளுக்குரிய யாவையும் வெளியே கொண்டுவந்தார்கள்; அவள் குடும்பத்தார் யாவரையுங்கூட வெளியே அழைத்துவந்து அவர்களெல்லாரையும் இஸ்ரவேல் பாளையத்துக்கு வெளியே இருக்கச் செய்தார்கள்.
பட்டணத்தையும் அதிலுள்ள யாவற்றை 24
யும் அக்கினியால் சுட்டெரித்தார்கள்; வெள்ளியையும் பொன்னையும், செம்பினுலும் இரும்பினுலும் செய்த பாத்திரங்களேயுமாத்திரம் யெகோவாவின் ஆலயப்பொக்கிஷத்திற்குக் கொடுத்துவிட்டார்கள். ராகாப் 25
என்னும் வேசியையும் அவள் தகப்பன் வீட்டாரையும் அவளுக்குள்ள யாவற்றையும் யோசுவா உயிரோடே வைத்தான்; அவள் இந்நாள்வரைக்கும் இஸ்ரவேலின் நடுவிலே குடியிருக்கிருள்; எரிகோவை வேவுபார்க்க யோசுவா அனுப்பின ஆட்களே அவள் மறைத்துவைத்திருந்தபடியால் இப்படி நடந்தது.

அக்காலத்திலே யோசுவா: 26

இந்த எரிகோ பட்டணத்தைக்கட்ட
எழும்பும் மனுஷன்
யெகோவாவின் சந்நிதியில் சாபத்திற்
குரியவன்;
அஸ்திபாரமிடுகையில் மூத்தமகனே
இழப்பான்;
வாசலேவைக்கையில் இளேயமகனே
இழப்பான்

என்று ஜனங்களேப் பிரமாணஞ்செய்யப் பண்ணினுன்.

யெகோவா யோசுவாவோடே இருந்தார்; 27
அவன் பிரஸ்தாபம் தேசமெங்கும் பரவிற்று.

இஸ்ரவேல்புத்திரர் சாபத்திற்குட்பட்ட 7
வைகளின் விஷயத்தில் துரோகமாய் நடந்தார்கள்; யூதா கோத்திரத்துச் சேராவின் குமாரனுகிய சப்தியின் மகன் கர்மீக்குப் பிறந்த ஆகான் என்பவன் சாபத்திற்குட்பட்டவைகளில் சிலவற்றை எடுத்துக்கொண்டான்; அதினுலே இஸ்ரவேல் புத்திரர்மேல் யெகோவாவின் கோபம் மூண்டது.

யோசுவா எரிகோவிலிருந்து பேதே 2
லுக்குக் கிழக்கே பெத்தாவேன் சமீபத்திலிருக்கிற ஆயி என்னும் ஊருக்குப் போகும்படி ஆட்களே அனுப்பி, நீங்கள் போய் அந்த நாட்டை வேவுபார்த்து வாருங்கள் என்ருன்; அந்த மனுஷர்போய் ஆயியை

3 வேவுபார்த்து | யோசுவாவினிடம் திரும்பி வந்து: ஜனங்களெல்லாரும் போகவேண்டியதில்லை, ஏறக்குறைய இரண்டாயிரம் மூவாயிரம்பேர் போய் ஆயியை முறியடிக்கலாம்; அங்கே போவதற்கு எல்லாரையும் கஷ்டப்படுத்தவேண்டியதில்லை; அவர்கள் கொஞ்சப்பேர்தான் என்று சொன்னார்கள்.
4 அப்படியே ஜனங்களில் ஏறக்குறைய மூவாயிரம்பேரே அங்கே போனார்கள்; ஆனாலும் அவர்கள் ஆயி ஊராருக்குமுன்பாக முதிர்
5 தோடினார்கள்; ஆயி ஊரார் அவர்களில் ஏறக்குறைய முப்பத்தாறுபேரை வெட்டிப் போட்டார்கள்; ஊர்வாசலிலிருந்து சல் வெட்டுகிற இடமட்டும் அவர்களைத் துரத்தி இறக்கத்திலே அவர்களை வெட்டினார்கள்; ஜனங்களின் இருதயம் கரைந்து தண்ணீ
6 ராய்ப் போயிற்று. யோசுவா தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டான்; அவனும் இஸ்ரவேலின் மூப்பரும் யெகோவாவின் பெட்டகத்துக்குமுன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து தங்கள் தலைகளின் மேல் புழுதியைப் போட்டுக்கொண்டு
7 சாயங்காலமட்டும் கிடந்தார்கள். யோசுவா: யெகோவாவே, ஆண்டவரே, தேவரீர் இந்த ஜனத்தை ஏன் யோர்தானைக் கடக்கப்பண்ணினீர், ஐயோ, எங்களை அழித்துவிடும்படி எமோரியர் கைகளில் ஒப்புக்கொடுப்பதற்காகவா; நாங்கள் போர்தானுக்கு அப்புறத்திலேயே இருக்கத் தீர்மானித்திருந்தோமானால் நலமாயிருக்கும்.
8 ஐயோ, ஆண்டவரே, இஸ்ரவேலர் தங்கள் சத்துருக்களுக்கு முதுகைக் காட்டினார்கள்:
9 இனி நான் என்ன சொல்லுவேன். கானானியரும் தேசத்துக்குடிகள் யாவரும் இதைக்கேட்டு எங்களை வளைத்துகொண்டு பூமியிலே எங்கள்பேர் அற்றுப்போகச் செய்வார்களே; அப்பொழுது உமது மகத்தான நாமத்திற்கு என்ன செய்வீர் என்
10 றான். அப்பொழுது யெகோவா யோசுவாவினிடம்: எழுந்திரு, நீ இப்படி முகங்குப்
11 புற விழுந்திருக்கிறதென்ன? இஸ்ரவேலர் பாவஞ்செய்தார்கள்; நான் அவர்களுக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையை மீறிச் சாபத்திற்குட்பட்ட பொருட்களில் சிலவற்றை எடுத்துத் திருடித் தங்கள் பண்டம்பாடிகளுக்குள்ளே ஒளித்துவைத்து
12 வஞ்சித்தார்கள்; இதினாலேதான் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சத்துருக்களை எதிர்த்து நிற்க முடியவில்லை. அவர்கள் சாபத்திற்குட்பட்டதினாலே தங்கள் சத்துருக்களுக்கு முதுகைக் காட்டுகிறார்கள்; சாபத்திற்குட்பட்டவற்றை நீங்கள் உங்கள் நடுவிலிருந்து அழித்துவிடாவிட்டால் இனி உங்களோடு இரேன்; எழுந்திரு, நீ ஜனங்களைச் சுத்திகரித்து அவர்களோடு பேசி: நாளையதினத்திற்கென்று உங்களைச் சுத்திகரித்துக்கொள்ளுங்கள். இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா சொல்வதைக் கேளுங்கள், இஸ்ரவேலரே, சாபத்திற்குட்பட்டது உங்கள் நடுவே இருக்கிறது; சாபத்திற்குட்பட்டதை உங்கள் நடுவிலிருந்து நீங்கள் விலக்காதிருக்குமளவும் நீங்கள் உங்கள் சத்துருக்களை எதிர்த்துநிற்க முடியாது; காலையிலே நீங்கள் கோத்திரம்கோத்திரமாகக் கிட்டிச்சேருங்கள்; யெகோவா குறிக்கிற கோத்திரம் வம்சம்வம்சமாகக் கிட்டிச்சேரவேண்டும்; யெகோவா குறிக்கிற வம்சம் குடும்பம்குடும்பமாகக் கிட்டிச்சேரவேண்டும்; யெகோவா குறிக்கிற குடும்பம் பேர்பேராகக் கிட்டிச்சேரவேண்டும்.
13 14
15 அப்பொழுது சாபத்திற்குட்பட்டதை எடுத்தவனுக்குக் குறிக்கப்படுகிறவனும் அவனுக்குரிய யாவும் அக்கினியால் சுட்டெரிக்கப்படவேண்டும்; அவன் யெகோவாவின் உடன்படிக்கையை மீறி இஸ்ரவேலிலே மதிகேடான காரியத்தைச் செய்தானே என்று சொல் என்றார்.
16 யோசுவா அதிகாலமே எழுந்திருந்து இஸ்ரவேலரைக் கோத்திரம் கோத்திரமாகக் கிட்டிச்சேரப்பண்ணினான்; யூதாவின் கோத்திரம் குறிக்கப்பட்டது.
17 அவன் யூதாவின் வம்சங்களைக் கிட்டிச்சேரப்பண்ணினபோது சேராகியரின் வம்சம் குறிக்கப்பட்டது; அவன் சேராகியரின் வம்சத்தைப் பேர்பேராகக் கிட்டிச்சேரப்பண்ணினபோது சப்தி குறிக்கப்பட்டான்.
18 சப்தியின் குடும்பத்தாரைப் பேர்பேராகக் கிட்டிச்சேரப்பண்ணினபோது, யூதா கோத்திரத்துச் சேராகின் குமாரனுகிய சப்திக்குப்பிறந்த கர்மீயின் மகன் ஆகான் குறிக்கப்பட்டான். யோசு
19 வா ஆகானைப் பார்த்து: மகனே, நீ இப்பொழுது இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவுக்குரிய மகிமையை அவருக்குச் செலுத்தி உன் குற்றத்தை அவருக்கு அறிக்கைபண்ணி நீ செய்ததை எனக்குச்சொல்லு; அதை எனக்கு ஒளிக்காதே என்றான்.
20 அப்பொழுது ஆகான் யோசுவாவினிடம்: நான் இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவுக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேன், இது மெய்தான்; இவ்விதமாகவே செய்தேன்: கொள்ளையிலே நேர்த்தியான பாபி
21 லோனிய அங்கியொன்றையும் இருநூறு சேக்கல் வெள்ளியையும் ஐம்பது சேக்கல் நிறையான ஒரு பொற்பாளத்தையும் நான்

கண்டு அவைகளை இச்சித்து எடுத்துக்கொண்டேன்; இதோ, அவைகள் என் கூடாரத்தின் மத்தியில் பூமிக்குள் புதைத்திருக்கிறது, வெள்ளி அதின் அடியிலிருக்கிறது என்று சொன்ன 22 னேன். உடனே யோசுவா ஆட்களை அனுப்பினான்; அவர்கள் கூடாரத்துக்கு ஓடினார்கள்; அவன் சொன்னபடியே அவைகள் கூடாரத்தில் புதைக்கப்பட்டிருந்தன; வெ 23 ள்ளியும் அவற்றின்கீழ் இருந்தது. அவற்றைக் கூடாரத்தின் மத்தியிலிருந்து எடுத்து யோசுவாவினிடத்திலும் இஸ்ரவேல் புத்திரர் யாவரிடத்திலும் கொண்டுவந்து யெகோவாவின் சந்நிதியில் பரப்பிவிட்டார்கள். 24 அதைக் காணவே யோசுவாவும் இஸ்ரவேலரனைவருங்கூட சேராகின் புத்திரனாகிய ஆகானையும் அந்த வெள்ளியையும் அங்கியையும் பொற்பாளத்தையும், அவன் குமாரரையும் குமாரத்திகளையும், அவன் மாடுகளையும் கழுதைகளையும் ஆடுகளையும், அவன் கூடாரத்தையும் அவனுக்குரிய யாவற்றையும் எடுத்து ஆகோர் பள்ளத்தாக்குக்குக் கொண்டுபோனார்கள். அங்கே 25 யோசுவா: நீ எங்களை அபாயத்துக்குட்படுத்தினதென்ன? இன்றைத்தினமே யெகோவா உன்னை அபாயத்துக்குட்படச் செய்வார் என்று சொன்னான். சொன்னமாத்திரமே இஸ்ரவேலர் அனைவரும் அவன்மேல் கல்லெறிந்தார்கள்; அவைகளை அக்கினியால் சுட்டெரித்து அவர்கள்மேலும் 26 கல்லெறிந்தார்கள்; அவன்மேல் இந்நாள்வரைக்கும் இருக்கிற பெரிய கற்குவியலைக் குவித்தார்கள்; இப்படியே யெகோவா தமது கோபத்தின் உக்கிரத்தைவிட்டுத் திரும்பினார்; ஆதலால்தான் இந்நாள்வரைக்கும் அவ்விடத்திற்கு ஆகோர் பள்ளத்தாக்கு என்று பேர் வழங்குகிறது.

8 அப்பொழுது யெகோவா யோசுவாவினிடம்: நீ பயப்படாதே, கலங்காதே; நீ படைமுழுவதையும் கூட்டிக்கொண்டு புறப்பட்டு ஆயி ஊருக்குப்போ, இதோ, ஆயியின் ராஜாவையும் அவன் ஜனத்தையும் அவன் ஊரையும் அவன் நாட்டையும் உன் 2 கையிலே ஒப்புக்கொடுத்தேன். நீ எரிகோவுக்கும் அதின் ராஜாவுக்கும் செய்ததுபோல ஆயிக்கும் அதின் ராஜாவுக்கும் செய்வாய்; ஆனாலும் இதில் கொள்ளையிடும் பொருட்களையும் மிருகங்களையும் உங்களுக்கே வைத்துக்கொள்ளுங்கள்; ஊருக்குப் பின்னாலே பதிவிருக்கும் ஆட்களை வை என் 3 னார். அப்பொழுது ஆயிக்குப்போக யோசுவாவும் படைமுழுதும் புறப்பட்டார்கள்; யோசுவா யுத்தவீரரான முப்பதினாயிரம்பேரைத் தெரிந்தெடுத்து இராவிலே அவர்களை அனுப்பி | அவர்களுக்குக் கட்டளை 4 யிட்டு: கேளுங்கள், நீங்கள் ஊருக்குப்பின்னாலே பதிவிருக்கவேண்டும்; ஊருக்கு வெகு தூரமாய்ப் போய்விடாமல் எல்லாரும் ஆயத்தமாயிருங்கள். நானும் என்னோடிருக்கிற படைமுழுதும் ஊரண்டையில் செல்வோம்; அவர்கள் எங்களை எதிர்த்து 5 வரும்போது நாங்கள் முன்போலவே அவர்களுக்கு முன்னாக ஓடிப்போவோம். ஓடிப் 6 போகவே அவர்கள், முன்போலவே நமக்கு முன்னாக ஓடிப்போகிறார்கள் என்று சொல்லி எங்களைத் துரத்த வெளியே வருவார்கள்; நாங்களோ அவர்களை ஊரை விட்டு இப்பாலே வரப்பண்ணுமட்டும் அவர்களுக்கு முன்னாக ஓடிப்போவோம். அப்பொழுது நீங்கள் பதிவிருக்குமிடத்தி 7 லிருந்து கிளம்பி வந்து ஊரைப் பிடித்துக் கொள்ளவேண்டும்; உங்கள் கடவுளாகிய யெகோவா அதை உங்கள் கைகளில் ஒப்புக்கொடுப்பார். நீங்கள் ஊரைப் பிடித்த 8 வுடன் அதைத் தீக்கொளுத்திவிடுங்கள்; யெகோவாவின் சொற்படியே செய்யுங்கள்; இதோ, நான் உங்களுக்குக் கட்டளையிட்டாயிற்று என்று சொன்னான். யோசுவா 9 அவர்களை அனுப்பவே அவர்கள் போய் பேதேலுக்கும் ஆயிக்கும் நடுவே, ஆயிக்கு மேற்கே, பதிவிருந்தார்கள்; யோசுவா அன்று இரவு படைவீரர் நடுவில் தங்கினான்.

அதிகாலமே யோசுவா எழுந்திருந்து 10 படையைச் சரிபார்த்துவிட்டு இஸ்ரவேலின் மூப்பரோடுங்கூட படைக்கு முன்னாலே நடந்து ஆயிக்குப் போனான். அவ 11 னோடிருந்த படைமுழுதும் கூடவே நடந்து ஊருக்கு எதிரே வந்து சேர்ந்து ஆயிக்கு வடக்கே பாளயமிறங்கினார்கள்; அவர்களுக்கும் ஆயிக்கும் நடுவே பள்ளமிருந்தது. அவன் ஏறக்குறைய ஐயாயிரம் 12 பேரைப் பிரித்தெடுத்து, அவர்களைப் பேதேலுக்கும் ஆயிக்கும் நடுவே ஊருக்கு மேற்கே பதிவிருக்கச் செய்தான். ஊருக்கு 13 வடக்கே இருந்த முழுச்சேனையையும் ஊருக்கு மேற்கே பதிவிருக்கிறவர்களையும் அணிவகுத்தபின்பு, யோசுவா அன்று இரவு பள்ளத்தாக்கிலே போயிருந்தான். ஆயியின் ராஜா அதைக் கண்டபோது அவ 14 னும் ஊராராகிய அவனுடைய சகல ஜனங்களும் அதிகாலையில் விரைவாக எழுந்து, இஸ்ரவேலரை எதிர்த்து யுத்தம்பண்ணச் சமவெளிக்கு எதிரே குறித்த இடத்திற்கு வந்தார்கள்; ஊருக்குப் பின்புறம் தனக்கு

விரோதமாய்ப் பதிவிருக்க ஆட்களை வைத்
15 தது அவனுக்குத் தெரியாது. யோசுவாவும்
இஸ்ரவேலரனைவரும் அவர்களுக்கு முன்
னாக முறிந்தோடுவதுபோல வனாந்தரத்துக்
16 குப்போகிற வழியே ஓடினார்கள். அப்பொ
ழுது ஊருக்குள் இருந்த ஜனங்கள் அனைவ
ரும் அவர்களைத்தொடர்ந்து பிடிக்கும்படி
அழைக்கப்படவே அவர்கள் யோசுவா
வைத் தொடர்வதற்கு ஊரைவிட்டு அப்
17 பால் வரும்படி இழுக்கப்பட்டார்கள். ஆயி
யிலும் பேதேலிலும் இஸ்ரவேலரைப் பின்
தொடர்ந்து பிடிக்க வெளிப்படாத மனு
ஷன் இருந்திலனே; ஊரைத் திறந்து
வைத்துவிட்டு இஸ்ரவேலரைத் தொடர்ந்து
பிடிக்கப்போனார்கள்.

18 அப்பொழுது யெகோவா யோசுவாவினி
டம்: உன் கையில் இருக்கிற ஈட்டியை
ஆயிக்கு நேராக நீட்டு; அதை உன் கையில்
ஒப்புக்கொடுப்பேன் என்றார்; அப்படியே
யோசுவா தன் கையில் இருந்த ஈட்டியை
19 ஊருக்கு நேராக நீட்டினான். அவன் தன்
கையை நீட்டவே பதிவிருந்தவர்கள் தாங்
கள் பதிவிருந்த இடத்திலிருந்து துரிதமாய்க்
கிளம்பி ஊருக்கு ஓடிவந்து அதைப் பிடித்து
விரைவாக ஊரைத் தீக்கொளுத்தினார்கள்.
20 ஆயி ஊரார் பின்னிட்டுப் பார்த்து, இதோ,
ஊரின் புகை ஆகாயத்தில் எழும்புகிறதைக்
கண்டார்கள்; எப்பக்கமாவது ஓடித்தப்பு
வதற்கு அவர்களுக்கு முடியாமற்போ
யிற்று; வனாந்தரத்துக்கு ஓடின படைவீரர்
தங்களைத் தொடர்ந்தவர்கள் முகமாய்த்
21 திரும்பினார்கள். பதிவிருந்தவர்கள் ஊரைப்
பிடித்ததையும் ஊரின் புகை எழும்புகிற
தையும் யோசுவாவும் இஸ்ரவேலரும் பார்த்த
போது திரும்பிக்கொண்டு ஆயி ஊராரை
22 முறியடித்தார்கள். ஊரைப் பிடித்தவர்க
ளும் ஊருக்கு வெளியே வந்து அவர்களுக்கு
எதிர்ப்பட்டதினால் ஆயி ஊரார் இப்புறத்தி
லும் அப்புறத்திலுமிருந்த இஸ்ரவேலரின்
நடுவே அகப்பட்டுக்கொண்டார்கள்; அவர்
களில் எவரும் மீந்திருந்து தப்பியோடி
விடாதபடி இஸ்ரவேலர் அவர்களை வெட்டிப்
23 போட்டார்கள். ஆயியின் ராஜாவை உயி
ரோடே பிடித்து யோசுவாவினிடம்
24 கொண்டுவந்தார்கள். இஸ்ரவேலர் வனாந்
தரவெளியிலே தங்களைத் துரத்தின ஆயியின்
குடிகளையெல்லாம் வெட்டி முடிக்கவே,
அவர்கள் அனைவரும் வாள்வாய்க்கு இரை
யாகி மாண்டுதீர்ந்தபோது இஸ்ரவேலர்
அனைவரும் ஆயிக்குத் திரும்பி அங்கிருந்தவர்
களையும் பட்டயக்கருக்கினால் சங்கரித்தார்
25 கள். அந்நாளிலே விழுந்தவர்கள் அனை
வரும், ஆண்களும் பெண்களும், பன்னீராயி
ரம் பேர்; ஆயி ஊரார் அத்தனைபேரே.
26 ஆயியின் குடிகளையெல்லாம் சங்கரித்துத்
தீருமட்டும் யோசுவா ஈட்டியை நீட்டிக்
கொண்டிருந்த தன் கையை மடக்கவில்லை.
27 மிருகங்களையும் அந்த ஊரில் கொள்ளை
யிட்டவைகளையுமாத்திரம் இஸ்ரவேலர்
தங்களுக்கென்று வைத்துக்கொண்டார்கள்;
யெகோவா யோசுவாவுக்குக் கட்டளையிட்ட
28 வார்த்தையின்படியே செய்தார்கள். யோசு
வா ஆயியைச் சுட்டெரித்து, அதை இந்
நாள் வரைக்கும் இருக்கிறபடி என்றைக்கும்
பாழாய்க்கிடக்கும் மண்மேடாக்கினான்;
29 ஆயியின் ராஜாவை ஒரு மரத்திலே தூக்கிப்
போட்டுச் சாயங்காலமட்டும் அதிலே
தொங்கவிட்டான்; சூரியன் அஸ்தமிக்கவே
யோசுவாவின் கட்டளைப்படி ராஜாவின்
உடலை அவர்கள் மரத்திலிருந்து இறக்கி
அதை ஊர் வாசலண்டையில் போட்டு இந்
நாள்வரைக்கும் இருக்கிற பெரிய கற்குவி
யலை அதின்மேல் குவித்தார்கள்.

30 அப்பொழுது யோசுவா ஏபால் மலையில்
இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவுக்கு
31 ஒரு பலிபீடத்தைக் கட்டினான். யெகோ
வாவின் ஊழியனாகிய மோசே இஸ்ரவேல்
புத்திரருக்குக் கட்டளையிட்டபடி, மோசே
யின் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதி
யிருக்கிறபடியே, அது இருப்பாயுதம்
படாத முழுக்கற்களினாலானது; அதின்மேல்
யெகோவாவுக்குத் தகனபலிகளைச் செலுத்
தினசமாதான பலிகளையும் படைத்தார்கள்.
32 மோசேயின் பிரமாணத்தை அவன் அங்கே
கற்களில் பேர்த்தெழுதினான்; இஸ்ரவேல்
புத்திரர் பார்வையில் அதை எழுதினான்.
33 இஸ்ரவேலர் யாவரும் அந்நியரும் இஸ்ர
வேலில் பிறந்தவர்களும் அவர்களுடைய
மூப்பர், அதிகாரிகள், நியாயாதிபதிகளோடு
கூட யெகோவாவின் உடன்படிக்கைப்
பெட்டகத்தைச் சுமந்த லேவியரான ஆசாரி
யருக்கு எதிரே பெட்டகத்தின் இருபுறத்தி
34 லும் நின்றார்கள்; யெகோவாவின் ஊழிய
னாகிய மோசே கட்டளையிட்டிருந்தபடியே,
இஸ்ரவேல் ஜனங்கள்மேல் முதல் முதல்
ஆசீர்வாதத்தைக் கூறும்படி பாதிப்பேர்
கெரிசீம் மலைக்கு எதிராகவும் பாதிப்பேர்
ஏபால் மலைக்கு எதிராகவும் நின்றார்கள்.
அதன் பின்பு யோசுவா நியாயப்பிரமாண
புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடியே, நியாயப்
பிரமாணத்தில் சொல்லிய ஆசீர்வாதமும்
சாபமுமாகிய சகல வார்த்தைகளையும்
வாசித்தான். 35 இஸ்ரவேலின் முழுச்சபைக்
கும், ஸ்திரீகளுக்கும் பிள்ளைகளுக்கும், அவர்

களுக்குள் சஞ்சரித்த அக்கியருக்கும் மூன்பாக வாசித்தான்; மோசே கட்டளை யிட்ட யாவற்றிலும் ஒன்றையும் விட்டுவிட வில்லை.

**9** யோர்தானின் மேல்புறத்திலே மலைநாட் டிலும் சமனிலங்களிலும் லீபனோனுக்கு எதி ரான பெரிய சமுத்திரத்தின் கரையோர முழுவதிலும் இருந்த ஏத்தியரும் எமோரிய ரும் கானானியரும் பாரிசேரும் ஏவியரும் எபூசியருமானவர்களுடைய சகல ராஜாக்க ளும் அதைக் கேள்விப்பட்டபோது | 2 அவர்கள் ஒரே எண்ணமுடையவர்களாய் யோசுவாவோடும் இஸ்ரவேலரோடும் யுத் தப்பண்ண ஏகமாய்க் கூடினார்கள்.

3 எரிகோவுக்கும் ஆயிக்கும் யோசுவா செய்ததைக் கிபியோன் ஊரார் கேள்விப் 4 பட்டபோது | அவர்களும் ஒரு தந்திரம் செய்தார்கள்: அவர்கள் வழிக்கு உணவுகளை ஆயத்தஞ்செய்து பழைய இரட்டுப்பை களைக் கழுதைகளின்மேல் போட்டுப் பீறலும் பொத்தலுமான பழைய திராட்சரசத் துருத் திகளை அவைகளின்மேல் ஏற்றினார்கள். 5 கேவலமாய் ஒட்டுப்போட்ட பழைய பாத ரட்சைகளைத் தங்கள் கால்களில் தரித்துப் பழைய வஸ்திரங்களை உடுத்திக்கொண்டார் கள்; வழிக்கு அவர்கள் கொண்டுபோன அப்பங்களெல்லாம் காய்ந்து நொறுங்கிப் 6 போனவைகள். அவர்கள் கில்காலில் இருந்த பாளையத்துக்கு யோசுவாவினிடம் சென்று அவனையும் இஸ்ரவேலரையும் பார்த்து: நாங்கள் தூரதேசத்திலிருந்து வந் தவர்கள்; நீங்கள் எங்களோடு உடன் படிக்கை பண்ணவேண்டுமென்று வந்தோம் 7 என்றார்கள். அப்பொழுது இஸ்ரவேலர் அந்த ஏவியரைப்பார்த்து: நீங்கள் எங்கள் நடுவிலே குடியிருக்கிறவர்களாயிருந்தாலும் இருக்கலாம்; நாங்கள் எப்படி உங்களோ டே உடன்படிக்கை பண்ணுகிறது என்றார் 8 கள். அவர்கள் யோசுவாவினிடம், நாங் கள் உமக்கு அடிமைகள் என்று சொல்ல, யோசுவா அவர்களிடம்: நீங்கள் யார், எங்கேயிருந்து வந்தீர்கள் என்று 9 கேட்டான். அதற்கு அவர்கள்: உமது கடவுளாகிய யெகோவாவின் திருநா மத்தைப்பற்றிக் கேள்விப்பட்டு உமது அடி யாராகிய நாங்கள் வெகுதூரமான தேசத்தி லிருந்து வந்தோம்; அவருடைய பிரஸ்தா பத்தையும் அவர் எகிப்திலே செய்த 10 யாவற்றையும், எஸ்போனின் ராஜாவாகிய சீகோன், அஸ்தரோத்திலிருந்த பாசானின் ராஜாவாகிய ஓகு என்கிற யோர்தானுக்குக் கீழ்புறத்திலிருந்த எமோரியரின் இரண்டு ராஜாக்களுக்கும் அவர் செய்த யாவற்றை யும் கேள்விப்பட்டோம். ஆகவே எங்கள் 11 மூப்பரும் எங்கள் தேசத்துக்குடிகளெல் லாரும் எங்களைப்பார்த்து: உங்கள் கைக ளில் வழிக்கு வேண்டிய உணவை எடுத் துக்கொண்டு அவர்களுக்கு எதிர்கொண்டு போய் அவர்களிடத்திலே, நாங்கள் உங்கள் அடியார், எங்களோடே உடன்படிக்கை பண்ணவேண்டும் என்று சொல்லச் சொன் னார்கள். உங்களிடத்தில் வர நாங்கள் 12 புறப்பட்ட அன்றே எங்கள் வழிப் பிரயா ணத்துக்கு இந்த அப்பத்தைச் சுடச்சுட எங்கள் வீட்டிலிருந்து எடுத்துக்கொண்டு வந்தோம்; இப்பொழுது, இதோ, காய்ந்து நொறுங்கிப்போயிருக்கிறது. இந்தத் 13 திராட்சரசத்துருத்திகளை நாங்கள் நிரப்பு கையில் அவை புதிதாயிருந்தன. இப்பொ ழுதோ அவை பீறலாய்ப்போயின; எங்கள் வஸ்திரங்களும் பாதரட்சைகளும் நெடுந் தூரப் பிரயாணத்தினாலே பழங்கதையா யின என்றார்கள். அப்பொழுது இஸ்ர 14 வேலர் யெகோவாவின் உத்தரவைப் பெரு மலே அவர்களுடைய பிரயாண உணவில் சிறிது வாங்கிக்கொண்டார்கள். யோசுவா 15 அவர்களுக்குச் சினேகங்காட்டி அவர்களை உயிரோடே காப்பாற்றுவதாக உடன்படிக் கை பண்ணினான்; சபையின் பிரபுக்களும் அப்படியே அவர்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்தார்கள்.

அவர்களோடே உடன்படிக்கைபண்ணி 16 மூன்று நாள் சென்றபின்பு, அவர்கள் தங் கள் அயலார் என்றும் தங்கள் நடுவே குடி யிருக்கிறவர்களென்றும் கேள்விப்பட்டார் கள். இஸ்ரவேல் புத்திரர் பிரயாணப்பட்டு 17 மூன்றாம் நாள் அவர்கள் ஊர்களுக்கு வந் தார்கள்; அந்த ஊர்கள் கிபியோன், கெபீரா, பெயெரோத், கீரியாத்யெயாரீம் என்பவை கள். சபையின் பிரபுக்கள் அவர்களுக்கு 18 இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவின் பேரில் ஆணையிட்டிருந்தபடியினால் இஸ்ர வேல் புத்திரர் அவர்களைச் சங்காரஞ்செய்யா மல் விட்டுவிட்டார்கள். சபையார் அனை 19 வருமோவெனில் பிரபுக்கள்மேல் முறுமுறுத் தார்கள். அப்பொழுது சகல பிரபுக்களும் சபையார் யாவரையும் பார்த்து: நாங்கள் இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவின் பேரில் அவர்களுக்கு ஆணையிட்டுக்கொடுத் தோம்; அவர்களை நாம் தொடக்கூடாது. நாம் அவர்களுக்கு இட்ட ஆணையினிமித்த 20 தம் கடுங்கோபம் நம்மேல் வராதபடி நாம் அவர்களை உயிரோடே வைப்போம்; ஆனால் ஒன்று செய்வோம் என்று சொல்லிப் | பின் 21

னும் பிரபுக்கள் இஸ்ரவேலரிடம்: அவர்கள் உபரோடிருக்கட்டும், எனினும் அவர்கள் சபையினத்துக்கும் விறகு வெட்டுகிறவர்களாகவும் தண்ணீர் எடுக்கிறவர்களாகவும் இருப்பார்கள் என்று சொன்னார்கள். பிரபுக்கள் அவர்களுக்குச் சொன்னபடி
22 நடந்தது. பின்பு யோசுவா அவர்களை அழைப்பித்து: நீங்கள் எங்கள் நடுவே குடியிருக்கையில், நாங்கள் உங்களுக்கு வெகு தூரத்திலிருக்கிறவர்கள் என்று சொல்லி
23 எங்களை வஞ்சித்தது என்ன? இப்படிச் செய்ததால் நீங்கள் சாபத்துக்குரியவர்கள்; என் கடவுளின் ஆலயத்திற்கு விறகு வெட்டுகிறவர்களும் தண்ணீர் எடுக்கிறவர்களுமான அடிமைகளாயிருப்பீர்கள்; இந்த வேலை உங்களை விட்டு நீங்கவேமாட்டாது
24 என்று அவர்களுக்குச் சொன்னான். அவர்கள் மறுமொழியாக யோசுவாவினிடம்: உமது கடவுளாகிய யெகோவா தமது ஊழியனாகிய மோசேக்குக் கட்டளையிட்டது உமது அடியாருக்கு நிச்சயமாகவே அறிவிக்கப்பட்டது; தேசத்தையெல்லாம் உங்களுக்கு ஒப்புக்கொடுக்கவும் தேசத்தின் குடிகளையெல்லாம் உங்களுக்கு முன்பாக அழிக்கவும் கட்டளையிட்டார்; ஆகவே உங்களாலே எங்களுக்கு என்ன சம்பவிக்குமோ என்று மிகவும் பயந்து இந்தக் காரியத்தைச்செய்
25 தோம். இப்போதும், இதோ, உமது கையிலிருக்கிறோம்; உமக்கு நலமும் நியாயமுமாய்த் தோன்றுகிறபடி எங்களுக்குச் செய்
26 யும் என்றார்கள். அப்படியே யோசுவா அவர்களுக்குச் செய்தான்; இஸ்ரவேல் புத்திரர் அவர்களைக் கொன்றுபோடாதபடி அவர்களை இஸ்ரவேலர் கைக்குத் தப்புவித்
27 தான். அக்காலத்திலே அவர்களைச் சபைக்கும் யெகோவா தெரிந்துகொள்ளும் இடத்திலிருக்கும் அவருடைய பலிபீடத்துக்கும் விறகு வெட்டுகிறவர்களாகவும் தண்ணீர் எடுக்கிறவர்களாகவும் வைத்தான்; இந்நாள் வரைக்கும் அந்த வேலையே செய்கிறார்கள்.

**10** யோசுவா ஆயியைப்பிடித்துச் சங்காரம் பண்ணி, எரிகோவுக்கும் அதின் ராஜாவுக்கும் செய்தபடியே, ஆயிக்கும் அதின் ராஜாவுக்கும் செய்ததையும், கிபியோனின் குடிகள் இஸ்ரவேலோடே சமாதானம்பண்ணி அவர்களுக்குள் வாசமாயிருக்கிறதையும்,
எருசலேமின் ராஜாவாகிய அதோனிசேதேக் கேள்விப்பட்டபோது அவனும் அவன்
2 ஊராரும் மிகவும் பயந்தார்கள். கிபியோன் ராஜதானி பட்டணங்களில் ஒன்றைப்போல் பெரிய பட்டணம், ஆயியைப் பார்க்கிலும் பெரிது, அதிலிருந்த ஜனங்களும் பராக்கிரமசாலிகள். ஆகவே எருசலேமின் ராஜா 3
வாகிய அதோனிசேதேக் எப்பெரோனின் ராஜாவாகிய ஓகாமுக்கும் யர்மூத்தின் ராஜாவாகிய பீராமுக்கும் லாகீசின் ராஜாவாகிய யாப்பியாவுக்கும் எக்லோனின் ராஜாவாகிய தெபீருக்கும் ஆள் அனுப்பி: நாம் கிபி 4
யோனை முறியடிக்கும்படி நீங்கள் என்னிடம் வந்து எனக்குத் துணைசெய்யுங்கள்; அவர்கள் யோசுவாவோடும் இஸ்ரவேல் புத்திரரோடும் சமாதானம் பண்ணிக்கொண்டார்கள் என்று சொல்லச்சொன்னான். அப்படியே எருசலேமின் ராஜா, எப்பெ 5
ரோனின் ராஜா, யர்மூத்தின் ராஜா, லாகீசின் ராஜா, எக்லோனின் ராஜா என்கிற எமோரியரின் ஐந்து ராஜாக்களும் ஒன்றுசேர்ந்தார்கள். அவர்களும் அவர்களுடைய சகல சேனைகளும் சென்று கிபியோனுக்கு எதிரே பாளயமிறங்கி அதற்கு விரோதமாய் யுத்தம்பண்ண ஆரம்பித்தார்கள்.

அப்பொழுது கிபியோனியர் கில்காலி 6
லிருந்த பாளயத்துக்கு யோசுவாவினிடம் ஆளனுப்பி: உமது அடியாரைக் கைவிடாதேயும், சீக்கிரமாய் எங்களிடம் வாரும், எங்களை இரட்சியும், எங்களுக்குத் துணை செய்யும்; மலைநாட்டிலிருக்கிற எமோரியரின் ராஜாக்களெல்லாரும் எங்களுக்கு விரோதமாய்க் கூடிவிட்டார்கள் என்று சொல்லச்சொன்னார்கள். அதைக்கேட்ட 7
மாத்திரமே யோசுவா படை முழுவதையும் சகல பராக்கிரமசாலிகளையும் கூட்டிக்கொண்டு கில்காலிலிருந்துபோனான். யெகோவா யோசுவாவினிடம்: அவர்களுக் 8
குப் பயப்படாதே, அவர்களை உன் கையில் கொடுத்துவிட்டேன், அவர்களில் ஒருவரும் உன்னை எதிர்த்து நிற்கமுடியாதேபோம் என்றார். யோசுவா கில்காலிலிருந்து இரா 9
முழுவதும் நடந்து திடீரென அவர்கள்மேல் வந்துவிட்டான். யெகோவா அவர்களை 10
இஸ்ரவேலுக்கு முன்பாகக் கலங்கடிக்கவே இஸ்ரவேலர் அவர்களைக் கிபியோனண்டையில் பலம் ஒழிய முற்றிலும் முறியடித்துப் பேத்கோரோனுக்கு ஏறிவருகிற வழி வரைக்கும் துரத்தி அசேக்காமட்டும் மக்கேதாமட்டும் முறியடித்தார்கள். அவர்கள் 11
பேத்கோரோனிலிருந்து இறங்குகிற வழியிலே இஸ்ரவேலுக்கு முன்பாக ஓடிப்போகையில் அசேக்காமட்டும் அவர்கள்மேல் யெகோவா வானத்திலிருந்து பெரிய கற்களை எறிந்தார்; அவர்கள் மாண்டார்களே. இஸ்ரவேல் புத்திரர் பட்டயத்தால் கொன்றவர்களிலும் கல்மழையினால் மாண்டவர்களே அதிகப்பேர்.

12 யெகோவா எமோரியரை இஸ்ரவேல் புத்திரர் வசம் ஒப்புக்கொடுத்த அந்நாளிலே யோசுவா, இஸ்ரவேல் புத்திரர் கேட்க, யெகோவாவினிடம் விண்ணப்பஞ்செய்தான்:

சூரியனே, நீ கிபியோன்மேல் தரித்து நில்,
சந்திரனே, நீ அயாலோன் பள்ளத்தாக்கிலே நில்.

13 சூரியன் அப்படித் தரித்து நின்றது;
சந்திரனும் அங்கே நின்றிட்டது.
இஸ்ரவேலர் தம் சத்துருக்களுக்கு நீதி சரிக்கட்டித் தீருமட்டும்.

இது நேர்மையாளர் நூல் என்பதிலே எழுதியிருக்கவில்லையா? அப்படியே சூரியன் அஸ்தமிக்கத் தீவிரிக்காமல் ஏறக்குறைய ஒரு பகல் முழுவதும் நடு வானத்திலே நின்றது;
14 இப்படியாக யெகோவா ஒரு மனிதனின் சொற்கேட்ட அந்நாளையொத்த நாள் அதற்கு முன்னுமில்லை, அதற்குப் பின்னுமில்லை; யெகோவா இஸ்ரவேலுக்காகயுத்தம்பண்ணினார்.
15 யோசுவா இஸ்ரவேலர் அனைவரோடுங் கூடக் கில்காலிலிருக்கிற பாளயத்துக்குத் திரும்பினான்.
16 அந்த ஐந்து ராஜாக்களும் ஓடிப்போய் மக்கேதாவிலிருக்கிற ஒரு குகையில் ஒளித்துக்கொண்டார்கள்.
17 ஐந்து ராஜாக்களும் மக்கேதாவிலிருக்கிற ஒரு குகையில் ஒளித்திருக்கிறார்கள், சிலர் அவர்களைக் கண்டார்கள் என்று யோசுவாவுக்கு அறிவிக்கப்பட்டது.
18 அப்பொழுது யோசுவா: பெரிய கற்களைக் குகையின் வாயிலே புரட்டி அவ்விடத்திலே அவர்களைக் காவல்காக்க ஆட்களை வையுங்கள்.
19 நீங்களோ நில்லாமல் உங்கள் சத்துருக்களைத் தொடர்ந்து அவர்களுடைய பின் அணியை வெட்டிப்போடுங்கள்; அவர்களைத் தங்கள் ஊர்களிற்போய்ச் சேரவொட்டாதிருங்கள்; உங்கள் கடவுளாகிய யெகோவா அவர்களை உங்கள் கையில் கொடுத்துவிட்டார் என்றான். யோசுவாவும் இஸ்ரவேல் புத்திரரும் அவர்களை மகா பெரிய சங்காரமாய் அவர்கள் அழிந்து தீருமளவும் சங்கரித்தார்கள்; அவர்களிலே தப்பி மீந்தவர்கள் அரணான பட்டணங்களுக்குள் புகுந்தார்கள்.
20 ஜனங்களெல்லாரும் சுகபத்திரமாய் மக்கேதாவிலிருந்த பாளயத்துக்கு யோசுவாவினிடம் திரும்பிவந்தார்கள்; இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக ஒருவனும் தன் நாவை அசைக்கவில்லை.
22 அப்பொழுது யோசுவா: குகையின் வாயைத் திறந்து அந்த ஐந்து ராஜாக்களையும் அந்தக் குகையிலிருந்து என்னிடம் கொண்டுவாருங்கள் என்றான்.
23 அவர்கள் அப்படியே செய்து தார்கள்; எருசலேமின் ராஜா, எப்பெரோனின் ராஜா, யர்மூத்தின் ராஜா, லாகீசின் ராஜா, எக்லோனின் ராஜா ஆகிய அந்த ஐந்து ராஜாக்களையும் குகையிலிருந்து அவனிடம் கொண்டுவந்தார்கள்.
24 அந்த ஐந்து ராஜாக்களையும் யோசுவாவினிடம் கொண்டுவரவே யோசுவா இஸ்ரவேலரையெல்லாம் அழைப்பித்துத் தன்னோடு போய்வந்த படைவீரரின் அதிபதிகளைப் பார்த்து: நீங்கள் கிட்ட வந்து, உங்கள் கால்களை இந்த ராஜாக்களுடைய பிடரிகளின்மேல் வையுங்கள் என்றான்; அவர்கள் கிட்டவந்து தங்கள் கால்களை அவர்கள் பிடரிகளின்மேல் வைக்கவே,
25 யோசுவா அவர்களைப் பார்த்து: நீங்கள் பயப்படாமலும் கலங்காமலுமிருங்கள், மனோபலங்கொண்டு தைரியமாயிருங்கள்; நீங்கள் யுத்தம்பண்ணும் உங்கள் சத்துருக்களுக்கெல்லாம் யெகோவா இப்படியே செய்வார் என்றான்.
26 அதன் பின்பு யோசுவா அவர்களை வெட்டிக்கொன்று ஐந்து மரங்களிலே தூக்கிப்போட்டான்; சாயங்காலமட்டும் மரங்களிலே தொங்கினார்கள்.
27 சூரியன் அஸ்தமிக்கும்போது யோசுவா அவர்களை மரங்களிலிருந்து இறக்கக் கட்டளையிட்டான்; அவர்கள் ஒளித்துக்கொண்டிருந்த குகையிலே அவர்களைப் போட்டுப் பெரிய கற்களை வைத்துக் குகையின் வாயை அடைத்தார்கள்; இந்நாள்வரைக்கும் அப்படியே இருக்கிறது.
28 அந்நாளிலே யோசுவா மக்கேதாவைப் பிடித்து அதை வாள்வாய்க்கு இரையாக்கி அதின் ராஜாவையும் அதிலிருந்த ஜனங்கள் யாவரையும் சங்காரம்பண்ணினான், ஒருவரையும் மீந்திருக்க விடவில்லை; எரிகோவின் ராஜாவுக்குச் செய்ததுபோலவே மக்கேதாவின் ராஜாவுக்கும் செய்தான்.
29 மக்கேதாவிலிருந்து யோசுவா இஸ்ரவேலர் அனைவரோடுங்கூட லிப்னாவுக்குக் கடந்துபோய் லிப்னாவோடு யுத்தம் பண்ணினான்.
30 யெகோவா அதையும் அதின் ராஜாவையும் இஸ்ரவேலின் கையில் கொடுத்துவிட்டார்; அதையும் அதிலிருந்த சகல ஜனங்களையும் வாள்வாய்க்கு இரையாக்கினான்; ஒருவரையும் மீந்திருக்கவிடவில்லை; எரிகோவின் ராஜாவுக்குச் செய்ததுபோலவே அதின் ராஜாவுக்கும் செய்தான்.
31 லிப்னாவிலிருந்து யோசுவா இஸ்ரவேலர் அனைவரோடுங்கூட லாகீசுக்குக் கடந்துபோய் அதற்கு எதிரே பாளயமிறங்கி அதற்கு விரோதமாய் யுத்தஞ்செய்தான்.
32 யெகோவா லாகீசை இஸ்ரவேலின் கை

யிலே கொடுத்துவிடவே, அவன் இரண்டாம்காளிலே அதைப் பிடித்து அதையும் அதிலிருந்த சகல ஜனங்களையும் வாள்வாய்க்கு இரையாக்கினான்; லிப்னாவுக்குச் செய்தபடியெல்லாம் செய்தான்.

33 அப்பொழுது கேசேரின் ராஜாவாகிய ஓராம் லாகீஷுக்குத் துணைசெய்யும்படி வந்தான்; யோசுவா அவனையும் அவன் படையையும் வெட்டிப்போட்டான், ஒருவரையும் மீந்திருக்கவிடவில்லை.

34 லாகீஷிலிருந்து யோசுவாவும் இஸ்ரவேலர் அனைவரும் எக்லோனுக்குக் கடந்துபோய் அதற்கு எதிரே பாளயமிறங்கி அதை

35 நோடு யுத்தஞ்செய்தார்கள். அதை அந்நாளிலே பிடித்து அதை வாள்வாய்க்கு இரையாக்கினார்கள், அதிலிருந்த சகல ஜனங்களையும் அந்நாளிலேயே சங்காரம் பண்ணினான்; லாகீஷுக்குச் செய்தபடியெல்லாம் செய்தான்.

36 பின்பு எக்லோனிலிருந்து யோசுவா இஸ்ரவேலர் அனைவரோடுங்கூட எப்பெரோனுக்குக் கடந்துபோய் அதற்கு விரோதமாய்

37 யுத்தஞ்செய்தான். அவர்கள் அதைப் பிடித்து அதையும் அதன் ராஜாவையும் அதைச்சேர்ந்த சகல ஊர்களையும் அதிலிருந்த சகல ஜனங்களையும் வாள்வாய்க்கு இரையாக்கினார்கள்; ஒருவரையும் மீந்திருக்கவிடவில்லை. எக்லோனுக்குச் செய்தபடியெல்லாம் செய்தார்கள்; அதையும் அதிலிருந்த சகல ஜனங்களையும் சங்கரித்தான்.

38 பின்பு யோசுவா இஸ்ரவேலர் அனைவரோடுங்கூடத் தெபீருக்குத் திரும்பி அதற்கு

39 விரோதமாய் யுத்தஞ்செய்து | அதையும் அதின் ராஜாவையும் அதைச்சேர்ந்த சகல ஊர்களையும் பிடித்தான்; அவைகளை வாள்வாய்க்கு இரையாக்கி அதிலிருந்த சகல ஜனங்களையும் சங்கரித்தார்கள்; ஒருவரையும் மீந்திருக்கவிடவில்லை. எப்பெரோனுக்கும் லிப்னாவுக்கும் அவைகளின் ராஜாக்களுக்கும் செய்தபடியே தெபீருக்கும் அதின் ராஜாவுக்கும் செய்தான்.

40 இப்படியே யோசுவா, மலைநாடு, தென்னாடு, சமபூமிநாடு, மலைச்சரிவுநாடு ஆகிய தேசம் முழுவதையும் அவற்றின் சகல ராஜாக்களையும் மடங்கடித்தான்; ஒருவரையும் மீந்திருக்கவிடவில்லை. இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவின் கட்டளைப்படியே சுவாசமுள்ள யாவற்றையும் சங்க

41 ரித்தான். காதேஸ்பர்னேயா துவக்கிக் காத்சாமட்டுமுள்ள சீட்டையும் கோசோன்பிராந்தியம் முழுவதையும் கிபியோன்மட்டுமுள்ளதையும் ஜெயித்தான்.

42 அந்த ராஜாக்கள் அனைவரையும் அவர்கள் தேசங்களையும் யோசுவா ஒரே நடையில் பிடித்தான். இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா இஸ்ரவேலுக்காக யுத்தம்பண்ணினார்.

43 யோசுவா இஸ்ரவேலர் அனைவரோடுங் கூடக் கில்காலிலிருந்த பாளயத்துக்குத் திரும்பினான்.

**11** காத்சோரின் ராஜாவாகிய யாபீன் அதைக் கேள்விப்பட்டபோது அவன் மாதோனின் ராஜாவாகிய யோபாபிடத்திற்கும் சிம்ரோனின் ராஜாவிடத்திற்கும் அக்சாபின் ராஜாவிடத்திற்கும் | வடக்கேயுள்ள 2 மலைநாடுகளிலும் கின்னரோத்துக்குத் தெற்கேயுள்ள அராபாவிலும் சமபூமிகளிலும் மேற்கே மேட்டுநிலத்திலுள்ள தோரிலுமிருந்த இராஜாக்களிடத்திற்கும் | கிழக்கி 3 லும் மேற்கிலும் குடியிருந்த கானானியரிடத்திற்கும் மலைநாடுகளிலிருந்த எமோரியர், ஏத்தியர், பாரசிகர், எபூசியரிடத்திற்கும் எர்மோன் மலையின் அடிவாரத்திலே மிஸ்பா நாட்டிலிருந்த ஏவியரிடத்திற்கும் ஆள் அனுப்பினான். அவர்கள் கடற்கரைமணல் 4 போல் ஏராளமாயிருந்த தங்கள் சகல சேனைகளோடும் மகா ஏராளமான குதிரைகளோடும் இரதங்களோடும் புறப்பட்டார்கள். இந்த ராஜாக்களெல்லாரும் கூடி 5 இஸ்ரவேலோடே யுத்தம்பண்ண வந்து மேரோம் என்கிற ஏரியண்டையிலே ஏகமாய்ப் பாளயமிறங்கினார்கள். அப்பொழுது 6 யெகோவா யோசுவாவினிடம்: அவர்களுக்குப் பயப்படாதே, நாளை இக்கேரத்திலே நான் அவர்களையெல்லாம் இஸ்ரவேலுக்கு முன்பாக வெட்டுண்டவர்களாக ஒப்புக்கொடுப்பேன். நீ அவர்கள் குதிரைகளின் கால் நரம்புகளை வெட்டி அவர்கள் இரதங்களை அக்கினியால் சுட்டெரிக்கவேண்டும் என்றார். யோசுவாவும் அவனோடேகூட 7 யுத்தவீரர் அனைவரும் மேரோம் ஏரியண்டையிலிருந்த அவர்களிடம் திடீரெனவந்து அவர்கள்மேல் விழுந்தார்கள். யெகோவா 8 அவர்களை இஸ்ரவேலின் கையில் ஒப்புக்கொடுத்தார். இஸ்ரவேலர் அவர்களை முறியடித்துப் பெரிய சீதோன்மட்டும் மிஸ்ரபோத் மாயிம்மட்டும், கிழக்கேயிருக்கிற மிஸ்பே பள்ளத்தாக்குமட்டும் தொடர்ந்தார்கள். அவர்களில் ஒருவரும் மீந்திராதபடி அவர்களை வெட்டிப்போட்டார்கள். யெகோவா தனக்குச் சொன்னபடியே 9 யோசுவா அவர்களுக்குச் செய்தான்; அவர்கள் குதிரைகளின் கால் நரம்புகளை வெட்டி

அவர்கள் இரதங்களை அக்கினியால் சுட்டெரித்தான்.

10 அக்காலத்திலே யோசுவா திரும்பிக் காத்சோரைப்பிடித்து அதின் ராஜாவைப் பட்டயத்தினால் வெட்டிப்போட்டான்; காத்சோர் முற்காலத்தில் அந்த ராஜ்யங்களுக்கெல்
11 லாம் தலைமையாயிருந்தது. அதிலிருந்த ஜனங்களையெல்லாம் வாள்வாய்க்கு இரையாக்கிச் சங்கரித்தான்; சுவாசமுள்ளது ஒன்றும் மீந்திருக்கவில்லை; காத்சோரையோ
12 அக்கினியால் சுட்டெரித்தான். அந்த ராஜாக்களின் சகல ஊர்களையும் அந்த ஊர்களின் சகல ராஜாக்களையும் யோசுவா பிடித்து வாள்வாய்க்கு இரையாக்கி அவர்களைச் சங்கரித்தான்; யெகோவாவின் ஊழியனாகிய மோசே கட்டளையிட்டபடியே நடந்
13 தது. மேடுகளில் இருந்த ஊர்கள் எல்லாவற்றையுமோ இஸ்ரவேலர் சுட்டெரியாமல் விட்டுவைத்தார்கள். காத்சோரைமாத்திரமே
14 யோசுவா சுட்டெரித்துவிட்டான். அந்த ஊர்களிலிருந்த கொள்ளைப்பொருட்கள் யாவையும் மிருகங்களையும் இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கென்று வைத்துக்கொண்டார்கள். எல்லா மனுஷரையுமோ வாள்வாய்க்கு இரையாக்கினார்கள்; அவர்களை முற்றிலும் அழித்துவிட்டார்கள்; சுவாசமுள்ள எதையும் மீந்திருக்கவிடவில்லை.
15 யெகோவா தமது ஊழியனாகிய மோசேக்குக் கட்டளையிட்டிருந்தபடியே மோசே யோசுவாவுக்குக் கட்டளையிட்டிருந்தான்; அப்படியே யோசுவா செய்தான்; யெகோவா மோசேக்குக் கட்டளையிட்ட யாவற்றிலும் ஒன்றையும் அவன் செய்யாமல் விடவில்லை.
16 இவ்விதமாக யோசுவா அந்தத் தேசமுழுவதையும் பிடித்தான்; மலைநாட்டையும் தென்னாடு முழுவதையும் கோசேன் பிராந்திய முழுவதையும் சமபூமியையும் அராபாவையும் இஸ்ரவேல் மலைநாட்
17 டையும் அதன் சமபூமிகளையும் | சேயிரைநோக்கி ஏறிப்போகிற மொட்டைமலைதுவக்கி லீபனோனின் பள்ளத்தாக்கில் எர்மோன் மலையடியில் இருக்கிற பாகால் காத்மட்டுமுள்ளதையெல்லாம் கைவசப்படுத்திக் கொண்டு அவற்றின் ராஜாக்கள் அனைவரையும் பிடித்து அவர்களை வெட்டிக் கொன்று
18 போட்டான். யோசுவா அந்த ராஜாக்களெல்லாரோடும் நெடுநாள் யுத்தஞ்செய்து
19 கொண்டிருந்தான். கிபியோனின் குடிகளாகிய ஏவியரைத்தவிர வேறெந்த ஊராரும் இஸ்ரவேல் புத்திரரோடே சமாதானம் பண்ணிக்கொள்ளவில்லை; மற்றெல்லா ஊர்களையும் யுத்தம்பண்ணியே பிடித்தார்கள்.
இஸ்ரவேலை எதிர்த்து யுத்தம்பண்ணுவதற்கு 20
அந்த ஜனங்களின் இருதயம் கடினப்பட்டது; அவர்கள் இரக்கம்பெறாமல் சங்கரிக்கப்பட்டார்கள்; யெகோவா மோசேக்குக் கட்டளையிட்டிருந்தபடியே அழிக்கப்பட்டார்கள்; இவையெல்லாம் யெகோவாவினால் நடந்தன.

அக்காலத்திலே யோசுவா போய் மலை 21
நாட்டிலும் எப்பெரோனிலும் தெபீரிலும் ஆனாபிலும் யூதாவின் மலைநாடு முழுவதிலும் இஸ்ரவேலின் மலைநாடு முழுவதிலும் இருந்த அனாக்கியரையும் அவர்கள் ஊர்களையும் சங்கரித்தான். இஸ்ரவேல் புத்திரரின் 22
தேசத்திலே அனாக்கியர் ஒருவரும் மீந்திருக்கவில்லை; காத்சாவிலும் காத்திலும் அஸ்தோத்திலும் மாத்திரம் சிலர் மீந்திருந்தார்கள்.
யெகோவா மோசேயினிடம் சொல்லியிருந்த 23
படியெல்லாம் யோசுவா தேசமுழுவதையும் பிடித்து, அதை இஸ்ரவேலருக்கு அவர்கள் கோத்திரப் பிரிவுகளின்படியே சுதந்தரமாகக் கொடுத்தான்;

தேசம் யுத்தமின்றி ஓய்ந்திருந்தது.

யோர்தானுக்குக் கிழக்கே, சூரியன் 12
உதிக்கும் திசையிலே, அர்னோன் ஆறு துவக்கி எர்மோன் மலைமட்டும் கீழ்பக்கத்து அராபா முழுவதிலுமுள்ள ராஜாக்களை இஸ்ரவேல் புத்திரர் முறியடித்து அவர்கள் தேசங்களையும் சொந்தமாக்கிக்கொண்டார்கள். அந்த ராஜாக்கள் இவர்களே: எமோ 2
ரியரின் ராஜாவாகிய சீகோன், அவன் வசித்த இடம் எஸ்போன், அவன் அரசாண்ட தேசம் அர்னோன் ஆற்றங்கரையிலிருக்கிற ஆரோவேர் தொடங்கிப் பள்ளத்தாக்கின் மத்தியிலிருந்து பாதிக் கிலெயாத்து உட்பட அம்மோன் புத்திரரின் எல்லையான யாபோக்கு ஆறுமட்டுமுள்ள நாடும்,
கின்னெரேத் கடல் முதல் அராபாவின் கட 3
லாகிய உப்புக்கடல்வரைக்கும் பேத்யெசிமோத்துக்கு ஏறும் வழிவரையுள்ள கீழ்பக்கத்து அராபாவும், தெற்கே பிஸ்காமலைச்சரிவுகளின் அடிவரையுள்ள நாடுமே.
பாசானின் ராஜாவாகிய ஓகு, அவன் ரெப் 4
பாவியரில் மீந்திருந்தவன், அவன் வசித்த இடங்கள் அஸ்தரோத்தும் எத்ரேயியுமாம்.
அவன் அரசாண்ட தேசம் எர்மோன் மலை 5
யும் சல்காவும் கெசூரியர் மாகாத்தியர் என்றவர்களின் எல்லைமட்டுமுள்ள பாசான் முழுதும், எஸ்போனின் ராஜாவாகிய சீகோனின் எல்லைமட்டுமுள்ள பாதிக் கிலெயாத்துமே. அவர்களை யெகோவாவின் ஊழிய 6
னாகிய மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் முறியடித்தார்கள்; அத்தேசத்தை யெகோ.

வாவின் ஊழியனுகிய மோசே ரூபனியருக்கும் காத்தியருக்கும் மனுசேயின் பாதிக் கோத்திரத்தாருக்கும் சொந்தமாகக் கொடுத்தான்.

7 யோர்தானுக்கு மேற்கேயிருந்த நாடுகளின் ராஜாக்களே யோசுவாவும் இஸ்ரவேல் புத்திரரும் முறியடித்தார்கள்; அந்த ராஜாக்கள் அரசாண்ட நாடுகள் லீபனோன் பள்ளத்தாக்கிலுள்ள பாகால்காத்முதல் சேயிருக்கு ஏறிப்போகிற மொட்டைமலைமட்டும் 8 உள்ளவைகள். மலைநாடும் சமனில நாடும் அராபாவும் மலைச்சரிவுநாடும் வனாந்தரமும் தென்னாடும் ஆகிய அந்த நாடுகளை, யோசுவா இஸ்ரவேல் புத்திரருக்கு அவர்கள் பிரிவுகளின்படியே பங்கிட்டுச் சொந்தமாகக் கொடுத்தான். இவைகள் ஏத்தியர், எமோரியர், கானானியர், பாரசீகர், ஏவியர், எபூசி 9 யர் என்பவர்களின் நாடுகள். அந்த ராஜாக்கள் இவர்களே: எரிகோவின் ராஜா, பேதே 10 லுக்கு அருகான ஆயியின் ராஜா, | எருசலேமின் ராஜா, எப்பெரோனின் ராஜா, | 11 யர்மூத்தின் ராஜா, லாகீசின் ராஜா, | 12 எக்லோனின் ராஜா, கேசேரின் ராஜா, | 13 தெபீரின் ராஜா, கெதெரின் ராஜா, | 14 கொர்மாவின் ராஜா, ஆராதின் ராஜா, | 15 லிப்னாவின் ராஜா, அதுல்லாமின் ராஜா, | 16 மக்கேதாவின் ராஜா, பேதேலின் ராஜா, | 17 தப்புவாவின் ராஜா, கேபேரின் ராஜா, | 18 அபேக்கின் ராஜா, லசரோனின் ராஜா, | 19 மாதோனின் ராஜா, காத்சோரின் ராஜா, | 20 சிம்ரோன்மேரோனின் ராஜா, அக்சாபின் 21 ராஜா, | தானாகின் ராஜா, மெகிதோவின் 22 ராஜா, | கேதேசின் ராஜா, கர்மேலுக்கடுத்த 23 யொக்னெயாமின் ராஜா, | தோரின் மேட்டு நிலத்தைச்சேர்ந்த தோரின் ராஜா, கில்காலி 24 லிருந்த கோயியின் ராஜா, | திர்சாவின் ராஜா; ஆக இவர்களெல்லாரும் முப்பத்தொரு ராஜாக்கள்.

**13** யோசுவா வயதுசென்றவனும் முதிர்ந்த வனுமானபோது யெகோவா அவனிடம்: நீ வயது சென்றவனும் முதிர்ந்தவனுமானாய்; சொந்தமாக்கிக்கொள்ளவேண்டிய தேசத்திலே இன்னும் கைவசப்படாமல் மீந்திருப் 2 பது அதிகம். மீந்திருக்கிற நாடுகள் இவைகளே: எகிப்துக்கு எதிரான சீகோர் ஆறு துவக்கி வடக்கே கானானியரைச் சேர்ந்ததாக எண்ணப்படும் எக்ரோனின் எல்லை மட்டுமுள்ள பெலிஸ்தியர் கெசூரியர் என் 3 பவர்களின் எல்லா நாடுகளுமே. பெலிஸ்தியரின் ஆண்டவன்மார் ஐந்துபேர்; அவர்கள் காத்சா, அஸ்தோத், அஸ்கலோன், காத், எக்ரோன் என்கிற பட்டணங்களில் வசிக்கிறார்கள்; அவ்வியரின் நாடு, | தெற்கே 4 யுள்ள கானானியர் நாடு; மேலும் அபேக்கு மட்டும் எமோரியர் எல்லைவரைக்குமுள்ள மெயரா நாடு, அது சீதோனியரைச் சேர்ந்தது. கெபலியரின் நாடு, லீபனோன் நாடு 5 முழுவதும் அது கிழக்கிலுள்ள எர்மோன் மலையடிவாரத்தில் இருக்கிற பாகால் காத் முதல்கொண்டு ஆமாத்துக்குப்போகிற வழி பிரியுமிடம் வரையுள்ளது. லீபனோன் 6 துவக்கி மிஸ்ரபோத்மாயீம் மட்டுமுள்ள மலைக்குடிகளின் நாடு, சீதோனியருடைய முழுநாடுமே. நானே அவர்களை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்திவிடுவேன்; நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, நீ இஸ்ரவேலுக்குச் சுதந்தரமாகச் சீட்டுகளைமாத்திரம் போட்டுத் தேசத்தைப் பங்கிடவேண்டும். ஆகவே இந்தத் தேசத் 7 தை ஒன்பது கோத்திரங்களுக்கும் மனுசேயின் பாதிக்கோத்திரத்துக்கும் சுதந்தரமாகப் பங்கிடவேண்டும் என்று சொன்னார்.

மனுசேயின் மற்றப் பாதிக்கோத்திரத்தா 8 ரும் ரூபனியரும் காத்தியரும் தங்கள் சுதந்தரத்தை அடைந்து தீர்ந்தது; அதை யெகோவாவின் ஊழியனுகிய மோசே யோர்தானுக்கு அப்புறத்திலே சூரியன் உதிக்கும் திசையில் அவர்களுக்குக் கொடுத்தான். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நாடுகள்: 9 அர்னோன் ஆற்றங்கரையிலிருக்கிற ஆரோவேரும் பள்ளத்தாக்கின் மத்தியிலிருக்கிற பட்டணமும் துவக்கித் தீபோன்மட்டுமுள்ள மேதெபாவின் சமவெளிநாடு முழுவதும், எஸ்போனிலிருந்து அம்மோன் புத் 10 திரின் எல்லைமட்டும் அரசாண்ட எமோரியரின் ராஜாவாகிய சீகோனுக்குரிய சகல பட்டணங்களும், | கிலெயாத்தும், கெசூரி 11 யர் மாகாத்தியர் என்பவர்களின் நாடும், எர்மோன்மலை முழுவதும், சல்காமட்டுமுள்ள பாசான்நாடு முழுவதுமே; இந்தப் 12 பாசான்நாடு அதிலே ராஜாவாயிருந்த ஓகின் முழுராஜ்யமுமாம்; இவன் அஸ்தரோத்திலும் எத்திரேயியிலுமிருந்து அரசாண்டவன்; மோசே முறியடித்துத் துரத்தின ரெப்பாவியரில் மீந்திருந்தவன். கெசூரியரையும் 13 மாகாத்தியரையுமோவெனில் இஸ்ரவேல் புத்திரர் துரத்திவிடவில்லை, கெசூரியரும் மாகாத்தியரும் இந்நாள்வரைக்கும் இஸ்ரவேலின் நடுவே குடியிருக்கிறார்கள். லேவிய 14 ரின் கோத்திரத்தாருக்கு மாத்திரம் சுதந்தரம் கொடுக்கப்படவில்லை; இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா அவர்களுக்குச் சொல்லியிருந்தபடியே அவருடைய நிவேதனங்களே அவர்களுடைய சுதந்தரமாயிற்று.

15 மோசே ரூபன் புத்திரரின் கோத்திரத்துக்கு அவர்களுடைய வம்சங்களின்படியே
16 கொடுத்தவைகள் இவைகளே: அர்ணோன் ஆற்றங்கரையிலிருக்கிற ஆரோவேரும் பள்ளத்தாக்கின் மத்தியிலிருக்கிற பட்டணமும் துவக்கி மேதெபாவண்டையிலுள்ள சம
17 வெளிநாடு முழுவதும், எஸ்போனும் அதின் சகல சமவெளி ஊர்களுமாகிய தீபோன், பாமோத்பாகால், பேத்பாகால் மெயோன், |
18 யாகசா, கெதேமோத், மேபாகாத், |
19 கிரியத்தாயிம், சிப்மா, பள்ளத்தாக்கின் மலை
20 யிலுள்ள செரேத்சகார், | பேத்பெயோர்,
21 அஸ்தோத்பிஸ்கா, பேத்யெஷிமோத் | முதலான சகல சமவெளி ஊர்களும் எஸ்போனிலிருந்து அரசாண்ட சீகோன் என்னும் எமோரியருடைய ராஜாவின் ராஜ்யம் முழுவதுமே; அந்தச் சீகோனையும் தேசத்திலே குடியிருந்த சீகோனின் அதிபதிகளாகிய
22 ஏவி, ரெக்கேம், சூர், ஊர், ரேபா என்னும் மித்தியனிய பிரபுக்களையும் மோசே முறி
23 யடித்தான். இஸ்ரவேல் புத்திரர் வெட்டின மற்றவர்களோடு பெயோரின் குமாரனுடைய பிலெயாம் என்னும் குறிசொல்லுகிறவனையும் பட்டயத்தினாலே கொன்றுபோட்டார்கள். யோர்தான் ரூபன் புத்திரரின் எல்லையாயிற்று; அதுவே அவர்களுடைய
24 எல்லை, இவைகளே பட்டணங்களோடும் அவற்றின் கிராமங்களோடும் ரூபன் புத்திரருக்கு அவர்கள் வம்சங்களின்படி வந்த சுதந்தரம்.
24 காத் புத்திரரின் கோத்திரத்துக்கு மோசே அவர்கள் வம்சங்களின்படி கொடுத்தவை
25 கள் இவைகளே: யாசேரும் கிலெயாத்தின் சகல பட்டணங்களும், ராபாவுக்கு எதிரே இருக்கிற ஆரோவேர்மட்டுமுள்ள அம்
26 மோன் புத்திரரின் பாதித்தேசமும், எஸ்போன் துவக்கி ராமாத்மிஸ்பே, பெத்தொனீம் என்பவைகள் வரைக்கும் உள்ளதும், மகனாயீம் துவக்கி லித்தெபீரின் எல்லைமட்
27 டும் உள்ளதும், எஸ்போனின் ராஜாவாகிய சீகோனுடைய ராஜ்யத்தின் மற்றப் பங்காகிய பள்ளத்தாக்கிலுள்ள பேத்தாராம், பேத்நிம்ரா, சுக்கோத், சாப்போன் என்பவைகளும்; இன்னெரேத் கடலோரமட்டும் யோர்தான் எல்லையாக யோர்தானுக்குக் கீழ்
28 பக்கத்திலுள்ளவைகளுமே. இவைகளே பட்டணங்களோடும் அவற்றின் கிராமங்களோடும் காத் புத்திரருக்கு அவர்களுடைய வம்சங்களின்படி வந்த சுதந்தரம்.
29 மனாசே புத்திரரின் பாதிக்கோத்திரத்துக்
30 கும் மோசே கொடுத்தான். மனாசே புத்திரரின் பாதிக்கோத்திரத்துக்கு அவர்கள் வம்சங்களின்படி கொடுக்கப்பட்டவைகள், மகனாயீம் துவக்கிப் பாசானின் ராஜாவாகிய ஓகின் முழுராஜ்யமாயிருந்த பாசான் முழுவதும், பாசானிலுள்ள யாவீரின் சகல ஊர்
31 களுமான அறுபது பட்டிகளுமே. பாதிக் கிலெயாத்தையும் பாசானிலே அஸ்தரோத் எத்ரேயி என்னும் ஓகு ராஜ்யத்தின் ஊர்களையும் மனாசேயின் குமாரனாகிய மாகீரின் புத்திரர் பாதிப்பேருக்கு அவர்களுடைய வம்சங்களின்படியே கொடுத்தான்.
32 மோசே கிழ்திசையில் எரிகோவுக்கு எதிரே யோர்தானுக்கு அக்கரையிலிருக்கிற மோவாபின் சமவெளிகளில் சுதந்தரமாகக் கொடுத்தவைகள் இவைகளே.
33 லேவி கோத்திரத்திற்கோ மோசே சுதந்தரம் கொடுக்கவில்லை, இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா அவர்களுக்குச் சொல்லியிருந்தபடி அவரே அவர்கள் சுதந்தரம்.

14 காணான் தேசத்திலே இஸ்ரவேல் புத்திரர் சுதந்தரித்துக்கொண்ட நாடுகள் இவைகளே; அவற்றை ஆசாரியனாகிய எலெயாசாரும் நூனின் குமாரனாகிய யோசுவாவும் கோத்திரப் பிதாக்களின் வம்சத்தலைவரும் இஸ்ரவேல் புத்திரருக்குச் சுதந்தரமாகக் கொடுத்தார்கள்; யெகோவா மோ
2 சேயைக்கொண்டு கட்டளையிட்டபடியே சீட்டுப்போட்டு ஒன்பதரைக் கோத்திரங்களுக்கும் அவரவர் சுதந்தரத்தைக் கொடுத்தார்கள். மற்ற இரண்டரைக் கோத்திரங்
3 களுக்கும் மோசே யோர்தானுக்கு அப்புறத்திலே சுதந்தரம் கொடுத்திருந்தான்; லேவியருக்கோ அவர்கள் நடுவே சுதந்தரம் கொடுக்கவில்லை. மனாசே எப்பிராயீம்
4 என்னும் யோசேப்பின் புத்திரர் இரண்டு கோத்திரங்களானார்கள்; லேவியருக்குத் தேசத்திலே பங்கு கொடுக்கப்படவில்லை; குடியிருக்க ஊர்களையும் அவர்களுடைய ஆடுமாடு முதலிய சம்பத்துகளுக்கு வேண்டிய வெளிநிலங்களையுமாத்திரம் அவர்களுக்
5 குக் கொடுத்தார்கள். யெகோவா மோசேக்குக் கட்டளையிட்டபடியே இஸ்ரவேல் புத்திரர் செய்து தேசத்தைப் பங்கிட்டுக்கொண்டார்கள்.

6 அப்பொழுது யூதாவின் புத்திரர் கில்காலிலே யோசுவாவினிடம் வந்தார்கள்; கெனிசியனான எப்புன்னேயின் குமாரன் காலேப் யோசுவாவைப் பார்த்து: காதேஸ்பர்னெயாவிலே யெகோவா என்னைக்குறித்தும் உம்மைக்குறித்தும் கடவுளின் மனுஷனாகிய மோசேக்குச் சொன்னது உமக்குத் தெரியும், தேசத்தை வேவுபார்க்க யெகோவா
7 வின் ஊழியனாகிய மோசே என்னைக்

காதேஸ்பர்னெயாவிலிருந்து அனுப்புகிற போது எனக்கு நாற்பது வயது; என் உள்ளத்தில் தோன்றியபடியே அவருக்குச் 8 செய்தி கொண்டுவந்தேன். என்னோடு வந்த என் சகோதரர் ஜனத்தின் இருதயத்தைக் கரைந்துபோகப்பண்ணினார்கள்; நானோ என்கடவுளாகிய யெகோவாவினிடம்பூரண 9 பற்றுடையவன். அந்நாளிலே மோசே: நீ என் கடவுளாகிய யெகோவாவினிடம் பூரணபற்றுடையவனானபடியால் உன் கால் மிதித்துவந்த தேசம் உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் நிச்சயமாகவே என்றென்றும் சுதந்தரமாகும் என்று சொல்லி ஆணையிட் 10 டார். இப்போதும், இதோ, யெகோவா சொன்னபடியே என்னை உயிரோடே காத்தார்; இஸ்ரவேல் வனாந்தரத்தில் சஞ்சரிக்கையில் யெகோவா அந்த வார்த்தையை மோசேயினிடம் சொன்னார்; சொல்லி நாற்பத்தைந்து வருஷமாயிற்று; இதோ, இன்று நான் எண்பத்தைந்து வயதுள்ளவனானேன். 11 மோசே என்னை அனுப்பின நாளிலே எனக்கு இருந்த பலமே இந்நாளிலும் எனக்கு இருக்கிறது, யுத்தம் செய்வதற்கும் ஒடியாடித்திரிவதற்கும் அப்போது எனக்கு இருந்த பலம் இப்போதும் 12 இருக்கிறது. ஆகவே யெகோவா அந்நாளிலே சொன்ன இந்த மலைநாட்டை இப்பொழுது எனக்குத்தாரும்; அங்கே அனாக்கியர் இருக்கிறார்கள் என்றும் அரணிப்பான பெரிய பட்டணங்கள் உண்டென்றும் நீர் அந்நாளிலே கேள்விப்பட்டீரே; யெகோவா என்னோடிருப்பாரானால் யெகோவா சொன்னபடியே அவர்களைத் 13 துரத்திவிடுவேன் என்றான். அப்பொழுது யோசுவா எப்புன்னேயின் குமாரனாகிய காலேபை ஆசீர்வதித்து எப்பெரோனை அவனுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தான். 14 இப்படியாகக் கெனிசியனான எப்புன்னேயின் குமாரன் காலேப் இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவினிடம் பூரணபற்றுடையவனாயிருந்தபடியால் எப்பெரோன் அவனுக்குச் சுதந்தரமாயிற்று; இந்நாள் 15 மட்டும் அப்படியே இருக்கிறது. முன்னே எப்பெரோனுக்குக் கீரியாத் அர்பா என்று பேர்; அர்பா என்பவன் அனாக்கியருக்குள்ளே பெரியவனாயிருந்தான்.

தேசம் யுத்தமின்றி ஓய்ந்திருந்தது.

**15** சீட்டுப்போட்டு யூதா புத்திரரின் கோத்திரத்திற்கு அவர்கள் வம்சங்களின்படியே வந்த பாகம் இதுவே: ஏதோமின் எல்லைக்கு அருகான சீன்வனாந்தரமே தென்புறத் 2 தின் கடையெல்லை. அவர்களுடைய தென் எல்லை உப்புக்கடலின் கடையில் தெற்கு முகமாயிருக்கிற குடாதுவக்கி | அக்ராபீ 3 மின் கணவாய்க்குத் தெற்கேசென்று அங்கிருந்து சீன ஒட்டிப்போய் காதேஸ்பர்னெயாவுக்குத் தெற்கே ஏறி எஸ்ரோனைக் கடந்து ஆதாருக்கு ஏறிக் கர்க்காவைச் சுற்றிப்போய் | அஸ்மோனை ஒட்டிச்சென்று 4 அங்கேயிருந்து எகிப்தின் நிற்குறுக்குச் சென்று கடலில் முடியும்; இதுவே உங்களுக்குத் தென் எல்லையாகும் என்றான். கீழ் எல்லை யோர்தான் முகத்துவாரமட்டும் 5 செல்லுகிற உப்புக்கடலின் கரையே. வட எல்லை, யோர்தான் முகத்துவாரமிருக்கிற கடலின் குடாதுவக்கிப் பேத்கொக்லாவுக்கு ஏறி, | வடக்கே பேத் அராபாவைக் 6 கடந்து, ரூபனின் குமாரனாகிய போகனின் கல்லுக்கு ஏறிப்போய் | அப்பால் ஆகோர் 7 பள்ளத்தாக்கிலிருந்து தெபீருக்கு ஏறி வடக்கே திரும்பி ஆற்றுக்குத் தெற்கே அதும்மீமின் கணவாய்க்கு எதிரேயுள்ள கில்காலுக்கு நேராகச் செல்லுகிறது, அங்கிருந்து என்சேமேசின் தண்ணீரண்டைக்குப் போய் என்ரொகேலுக்குச் செல்லும். அப்புறம் எபூசியரின் மலைச்சாரிவாகிய 8 எருசலேமுக்குத் தெற்கே இன்னோமின் புத்திரனுடைய பள்ளத்தாக்கைக் கடந்து வடக்கே ரெப்பாவியருடைய பள்ளத்தாக்கின் கடையில் மேற்காக இன்னோம் பள்ளத்தாக்கு எதிரே இருக்கிற மலையின் சிகரமட்டும் ஏறிப்போய், அந்த மலையின் 9 சிகரத்திலிருந்து நெப்தோவாகின் நீரூற்றுக்குச் சென்று எப்ரோன் மலைநாட்டுப் பட்டணங்களுக்குச் சென்று கீரியாத்யெயாரீமாகிய பாலாவுக்குப்போய் | பாலாவிலிருந்து 10 மேற்கே சேயீர்மலைப் பக்கமாய்த் திரும்பி வடக்கேயிருக்கிற கெசலோனாகிய யெயாரீம் மலைச்சாரிலிலே சென்று பேத்ஷேமேசுக்கு இறங்கித் திம்னாவுக்குப்போய் | அப் 11 பால் வடக்கே எக்ரோனின் மலைச்சரிவில் சென்று சிக்ரோனுக்குப்போய்ப் பாலாமலையைக் கடந்து யாப்னியேலுக்குச் சென்று கடலிலே முடியும். மேற்கு எல்லை பெரிய 12 சமுத்திரமே.

இவைகளே யூதாபுத்திரருக்கு அவர்கள் வம்சங்களின்படியே சுற்றிலுமிருக்கும் எல்லைகளாம்.

யெகோவா யோசுவாவுக்குக் கட்டளை 13 யிட்டபடியே அவன் எப்புன்னேயின் குமாரனாகிய காலேபுக்கு யூதா புத்திரரின் நடுவே ஒரு பங்கைக் கொடுத்தான்; அவன் கொடுத்த இடம் எப்பெரோனாகிய கீரியாத் அர்பா; இந்த அர்பா அனாக்கின் தகப்பன்.

14 அங்கிருந்த அனாக்கின் மூன்று குமாரராகிய சேசாய், அகீமான், தல்மான் என்னும் அனாக்கின் சந்ததியாரைக் காலேப் துரத்தி
15 விட்டு | அங்கிருந்து ஏ பீரின் குடிகளிடத்திற்குப் போனான்; முற்காலத்திலே தெபீ
16 ரின் பேர் கீரியாத் சேப்பேர். கீரியாத் சேப்பேரை முறியடித்து அதைப் பிடிக்கிறவனுக்கு, என் குமாரத்தியாகிய அக்சாளை விவாகம்பண்ணிக்கொடுப்பேன் என்று
17 காலேப் சொன்னான். காலேபின் சகோதரனாகிய கெனாசின் மகன் ஒத்னியேல் அதைப் பிடித்தான், ஆகவே காலேப் தன் குமாரத்தி அக்சாளை அவனுக்கு விவாகம்
18 பண்ணிக்கொடுத்தான். அவள் புறப்படுகையில் தன் தகப்பனிடம் ஒரு வயல் வெளியைக் கேட்கவேண்டுமென்று ஒத்னியேலிடம் வற்புறுத்தி விடைபெற்றுக் கொண்டு கழுதையின்மேலிருந்து இறங்கினாள். காலேப் அதைக்கண்டு உனக்கு
19 என்னவேண்டுமென்று கேட்க | அவள் எனக்கு ஒரு நன்கொடை தரவேண்டும்; வறண்ட தென்னாட்டிலே என்னைக் கொடுத்துவிட்டீர், நீரூற்று நிலத்தை எனக்குத் தரவேண்டும் என்று கேட்டாள். அப்படியே அவன் அவளுக்கு மேல்நீரூற்றுகள் கீழ்நீரூற்றுகள் என்னும் இடங்களைக் கொடுத்தான்.

20 இவைகளே யூதா புத்திரருக்கு அவர்கள் வம்சங்களின்படி வந்த சுதந்தரம்:

21 கடையாந்தரத் தென்புறமான ஏதோமின் எல்லைக்கு நேராய், யூதா புத்திரரின் கோத்திரத்திற்குக் கிடைத்த ஊர்கள், கப்ச
22 யேல், ஏதேர், யாகூர், | நேனு, திமோனு,
23 அதாதா, | கேதேஸ், காத்சோர், யித்னன், |
24, 25 சீப், தேலெம், பெயாலோத், | காத்சோர்காதாத்தா, காத்சோர் என்னும் கெரீ
26 யோத் கெஸ்ரோன், | அமாம், சேமா,
27 மொலாதா, | ஆத்ஸார்காதா, எஸ்மோன்,
28 பேத்பேலேத், | ஆத்சார்சூகால், பெயேர்
29 ஷெபா, பிஸ்யோத்யா, | பாலா, ஈயிம்,
30 ஏத்சேம், | எல்தோலாத், கெசீல், கோர்
31 மா, | சிக்லாக், மத்மன்னு, சன்சன்னு, |
32 லெபாயோத், சில்கீம், ஆயின், ரிம்மோன் என்பவைகளே; இவ்வூர்களெல்லாம் இருபத்தொன்பது, அவைகளின் கிராமங்களுமிருந்தன.

33 சமனில நாட்டில் எஸ்தாவோல், சொரா,
31 அஷ்னு, | சனோவாகு, என்கன்னீம், தப்பு
35 வாகு, ஏனும், | யர்மூத், அதுல்லாம்,
36 சோக்கோ, அசேக்கா, | சாராயீம், அதித்தாயீம், கெதேரா, கெதேரொத்தாயீம்; ஆகப் பதினாறு ஊர்களும் அவைகளின் கிராமங்களுமே. சேனன், கதாஷா, மிக்
37 தால்காத், | திலியான், மிஸ்பே, யொக்தெ
38 யேல், | லாகிஷ், பொத்ஸகாத், எக்லோன், |
39 கப்போன், லகமாஸ், கித்லீஷ், கெதே
40, 41 ரோத், பேத்டாகோன், நாமா, மக்கேதா; ஆகப் பதினாறு ஊர்களும் அவைகளின்
42 கிராமங்களுமே. லிப்னா, ஏத்தேர்,
43 ஆஷான், | யிப்தாகு, அஸ்னா, நெத்சீப், |
44 கேகிலா, அக்சீப், மரேஷா; ஆக ஒன்பது ஊர்களும் அவைகளின் கிராமங்களுமே.
45 எக்ரோனும் அதைச் சார்ந்த ஊர்களும் கிராமங்களும்; | எக்ரோன் துவக்கிச் சமுத்
46 திரம்மட்டும் அஸ்தோத்தின் பக்கத்திலிருக்கிற சகல கிராமங்களும் | அஸ்தோத்தும்
47 அதைச்சார்ந்த ஊர்களும் கிராமங்களும் காத்சாவும் எகிப்தின் நிற்ரூறுமட்டுமிருக்கிறவைகளும் காத்சாவைச் சார்ந்தவைகளுமான ஊர்களும் கிராமங்களுமே; பெரிய சமுத்திரமே எல்லை.

48 மலைநாட்டில் ஷாமீர், யத்தீர், சோக்
49 கோ, | தன்னா, தெபீர் என்னும் கீரியாத்
50 சன்னா | ஆனப், எஸ்தெமோ ஆனீம், |
51 கோசேன், கோலோன், கிலோ; ஆகப் பதினொரு ஊர்களும் அவைகளின் கிராமங்களுமே, அராப், தூமா, எஷீயான், |
52 யானூம், பேத்தப்புவாகு, அபேக்கா, |
53 கும்தா, எப்பெரோன் என்னும் கீரியாத்
54 அர்பா, சீயோர், ஆக ஒன்பது ஊர்களும் அவைகளின் கிராமங்களுமே. மாகோன்,
55 கர்மேல், சீப், யுத்தா, | யிஸ்ரெயேல்,
56 யொக்தெயாம், சனோவாகு, | காயின்,
57 கிபியா, திம்னா; ஆகப் பத்து ஊர்களும் அவைகளின் கிராமங்களுமே. கல்கூல்,
58 பேத்சூர், கெதோர், | மகராத், பேத் அனோத்
59 எல்தெகோன்; ஆக ஆறு ஊர்களும் அவைகளின் கிராமங்களுமே. கீரியாத் யெயாரீம்
60 என்னும் கீரியாத் பாகால், ராபா; ஆக இரண்டு ஊர்களும் அவைகளின் கிராமங்களுமே.

61 வனாந்தரத்தில் பேத் அராபா, மித்தீன்,
62 செக்காக்கா, | நிப்ஷான், உப்புப்பட்டணம், ஏன்கேதி; ஆக ஆறு ஊர்களும் அவைகளின் கிராமங்களுமே.

63 எருசலேமிலே குடியிருந்த எபூசியரை யூதா புத்திரர் துரத்திவிட முடியாமற்போயிற்று; இந்நாள்மட்டும் எபூசியர் யூதா புத்திரரோடே எருசலேமிலே குடியிருக்கிறார்கள்.

**16** சீட்டுப்போடவே யோசேப்பின் புத்திரருக்கு வந்த பங்கு இதுவே: எரிகோவின் நீரூற்றுக்குக் கிழக்கே, எரிகோவின் அருகே யோர்தானிலிருந்து தொ

டங்கி, எரிகோமுதல் பேதேல்மலைநாடு வரையுள்ள வனுக்தரவழியாக ஏறிச்
2 சென்று | பேதேலிலிருந்து லூசுக்குப்போய் அற்கியரின் எல்லையாகிய அதரோததைக்
3 கடந்து | மேற்கே யப்லெத்தியரின் எல்லை வரை இறங்கிக் கீழ்பேத்கோரோனுக்கும் கேசேருக்கும் சென்று சமுத்திரத்தில் முடி
4 யும். இதற்கு அப்பானுள்ளவை யோசேப் பின் புத்திரராகிய மனுசேக்கும் எப்பிராயீ
5 முக்கும் சுதந்தரங்களாயின. எப்பிராயம் புத்திரருக்கு அவர்கள் வம்சங்களின் படியே கிடைத்த சுதந்தரமானது கிழக்கே அதரோத் அதார் துவக்கி மேல்பேத்கோ ரோனுக்குச் சென்று சமுத்திரத்தில் முடி
6 யும். வடக்கே மிக்மேத்தாத்திலிருந்து கிழக்கே தானத்சிலோவுக்குத் திரும்பி, அதையனோவாகுக்குக் கிழக்கே கடந்து, |
7 யனோவாகிலிருந்து அதரோத்திற்கும் நகராத் திற்கும் இறங்கி எரிகோவைமொட்டி
8 வந்து, யோர்தானில் முடியும். தப்புவாகி லிருந்து எல்லை மேற்கே காண ஈரோடை வழியாய்ச்சென்று சமுத்திரத்திலே முடி யும்; இது எப்பிராயீம் புத்திரரின் கோத் திரத்திற்கு அவர்கள் வம்சங்களின்படியே
9 கிடைத்த சுதந்தரம். இதுவேயன்றி மனுசே புத்திரருடைய சுதந்தரத்தின் நடுவே எப்பி ராயீம் புத்திரருக்குப் பிரித்துக்கொடுக்கப் பட்ட ஊர்களும்அவைகளின் கிராமங்களும்
10 உண்டு. கேசேரிலே குடியிருந்த கானனிய ரையோ அவர்கள் துரத்திவிடவில்லை; இக் நாள்மட்டும் இருக்கிறபடியே கானனியர் எப்பிராயீமர் நடுவே குடியிருந்து அவர்களு டைய ஏவலாட்களாகி வேலைசெய்கிறார்கள்.

**17** யோசேப்பின் சிரேஷ்ட புத்திரனுகிய மனுசேயின் கோத்திரத்தாருக்குக் கிடைத்த பங்கின் விவரம்; மனுசேயின் மூத்த மக னும் கிலெயாத்தின் தகப்பனுமான மாகீர் யுத்த வீரன்; அவனுக்குக் கிலெயாத்தும்
2 பாசானும் கிடைத்தன. அபியேசரின் புத்தி ரரும் கேலேக்கின் புத்திரரும் அஸ்ரியேலின் புத்திரரும் சேகேமின் புத்திரரும் கேபேரின் புத்திரரும் செமீதாவின் புத்திரருமான மனு சேயின் மற்றப்புத்திரருக்கும் அவரவர் வம் சங்களின்படியே பங்கு கிடைத்தது. இவர் கள் யோசேப்பின் குமாரனான மனுசேயின் ஆண் மக்கள், இவர்கள் வம்சகர்த்தாக்கள்.
3 மனுசேயின் குமாரனுகிய மாகீருக்குப் பிறந்த கிலெயாத்தின் குமாரனான கேபேரின் மகன் செலோப்பியாத்துக்கு குமாரத்திகளே தவிர குமாரர் இல்லை; அவன் குமாரத்திகள், மக் லாள், நோகாள், கொக்லாள், மில்காள்,
4 திர்சாள் என்பவர்கள். அவர்கள் ஆசாரிய னுகிய எலெயாசாருக்கும் நூனின் குமாரன் கிய யோசுவாவுக்கும் பிரபுக்களுக்கும் முன் பாக வந்து நின்று: எங்கள் சகோதரர் நடுவே எங்களுக்குச் சுதந்தரம் கொடுக்கும் படி யெகோவா மோசேக்குக் கட்டளையிட் டார் என்றார்கள்; ஆகவே அவர்கள் தகப் பனுடைய சகோதரரின் நடுவே யெகோவா வின் வாக்கின்படியே அவர்களுக்குச் சுதந் தரம் கொடுக்கப்பட்டது. இப்படியாக 5
மனுசேயின் குமாரத்திகள் அவன் குமாரருக் குள்ளே சுதந்தரம் பெற்றார்கள்; மனுசேயின் மற்றப்புத்திரருக்குக் கிலெயாத்தேசம் கிடைத்தது. ஆகவே யோர்தானுக்குக் கீழ் 6
புறத்திலிருந்த கிலெயாத், பாசான் என்னும் தேசங்களே தவிரப் பத்துப்பங்குகள் மனு சேக்குக் கிடைத்தன.

மனுசேயின் எல்லை, ஆசேர் தொடங்கிச் 7
கிகேமின் முன்னிருக்கிற மிக்மேத்தாத்துக் குச்சென்று அங்கேயிருந்து வலதுபுறமாய் என்தப்புவாகின் குடிகளிடத்திற்குப் போகி றது. தப்புவாகின் நாடு மனுசேக்குக் 8
கிடைத்தது; மனுசேயின் எல்லையை ஒட்டி யிருக்கிற தப்புவாகோ, எப்பிராயீம் புத்திர ரின் வசமாயிற்று. அப்புறம் அந்த எல்லை 9
காண ஈரோடை வழியாய்ச் சென்று ஈரோ டைக்குத் தெற்கே இறங்குகிறது; அங் குள்ளஊர்கள் மனுசேயின் ஊர்களின் நடு வே இருந்தும் எப்பிராயீமுக்கு உரியவைக ளாயின; மனுசேயின் எல்லை ஈரோடைக்கு வடக்கே சமுத்திரத்தில் போய் முடியும். தென்புறம் எப்பிராயீமுடையது; வட 10
புறம் மனுசேயுடையது; சமுத்திரம் அதின் எல்லை; அது வடக்கே ஆசேரையும், கிழக்கே இசக்காரையும் தொடுகிறது. இசக்காரிலும் ஆசேரிலுமிருக்கிற பேத்சே 11
யாதும் அதைச் சார்ந்த கிராமங்களும், இப்லெயாமும் அதைச் சார்ந்த கிராமங்க ளும், தோரின் குடிகளும் தோரைச் சார்ந்த கிராமங்களும், என்தோரின் குடிகளும் என் தோரைச் சார்ந்த கிராமங்களும், தானகின் குடிகளும் தானகைச் சார்ந்த கிராமங்களும் மெகிதோவின் குடிகளும் மெகிதோவைச் சார்ந்த கிராமங்களும், மனுசேயைச் சேர்ந் தன; இது மும்மேடு நாடு. மனுசேயின் புத்திரர் அந்த ஊர்களின் குடிகளைத் துரத்தி 12
விட முடியாமற்போயிற்று; கானனியர் தாங்கள் பிரியப்பட்டபடியே அந்த நாட்டில் நிலைத்து இருந்துகொண் டார்கள். இஸ்ரவேல் புத்திரர் பலத்த 13
போதும் கானனியரைத் தங்கள் ஏவ லாட்களாக்கிக் கொண்டதேயன்றி அவர்களைத் துரத்திவிட்டதில்லை.

14 யோசேப்பின் புத்திரர் யோசுவாவைக் கண்டுபேசி: யெகோவா எங்களை இதுவரைக்கும் ஆசீர்வதித்து வந்ததினால், நாங்கள் ஜனம் பெருத்தவர்களாயிருக்கிறோம்; நீர் எங்களுக்கு ஒரே வீதத்தையும் ஒரே பங்கையும் சுதந்தரமாகக் கொடுத்தது என்ன? நாங்கள் இதுவரைக்கும் யெகோவாவினால் ஆசீர்வதிக்கப்பட்டு ஜனம் பெருத்தவர்களாயிருக்கிறோமே என்று கேட்டார்கள்.
15 அதற்கு யோசுவா: நீங்கள் ஜனம் பெருத்தவர்களென்றால் பாரசீகர் ரெப்பாயிர் குடியிருக்கிற காட்டின் காடுகளை வெட்டி உங்களுக்கு இடம் உண்டாக்கிக்கொள்ளுங்கள், எப்பிராயீம் மலைநாடு உங்களுக்கு
16 நெருக்கமே என்றான். அதுகேட்ட யோசேப்பின் புத்திரர் மலைநாடு எங்களுக்குப் போதாது; ஆனாலோ பள்ளத்தாக்கு நாட்டிலுள்ள பேத்செயானிலும் அதைச் சார்ந்த கிராமங்களிலும் யிஸ்ரயேல் பள்ளத்தாக்கிலும் குடியிருக்கிற சகல கானானியரிடத்திலும் இருப்புரதங்கள் உண்டு என்றார்கள்.
17 யோசுவா யோசேப்பு வீட்டாராகிய எப்பிராயீம் புத்திரரையும் மனாசே புத்திரரையும் பார்த்து: நீங்கள் ஜனம் பெருத்தவர்கள், உங்களுக்கு மகா பராக்கிரமம் உண்டு; உங்களுக்குக் கிடைப்பது ஒரு பங்கு மாத்திர
18 மல்ல மலைநாடும் உங்களுடையதே; அது காடே யெனினும் அதை வெட்டித்திருத்திக் கொள்ளுங்கள். அதின் கடையாந்தரமட்டும் அது உங்களுடையதாகும்; கானானியருக்கு இருப்புரதங்கள் இருந்தாலும், அவர்கள் பலமுள்ளவர்களேயென்றாலும் நீங்கள் அவர்களைத் துரத்திவிடுவீர்கள் என்றான்.

**18** இஸ்ரவேல் புத்திரரின் சபையெல்லாம் சீலோவிலே கூடி அங்கே தரிசனக்கூடாரத்தை ஸ்தாபனம்பண்ணினார்கள். தேசம் அவர்கள் வசமாயிற்று.
2 இஸ்ரவேல் புத்திரரில் தங்கள் சுதந்தரத்தை இன்னும் பங்கிட்டுக்கொள்ளாத ஏழு
3 கோத்திரங்கள் இருந்தன. ஆகவே யோசுவா இஸ்ரவேல் புத்திரரைப்பார்த்து: உங்கள் பிதாக்களின் கடவுளாகிய யெகோவா உங்களுக்குக் கொடுத்த தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளாமல் நீங்கள் எந்தமட்டும்
4 அசதியாயிருப்பீர்கள். கோத்திரத்திற்கு மூன்று பேரைத் தெரிந்துகொள்ளுங்கள், நான் அவர்களை அனுப்புவேன்; அவர்கள் எழுந்துபோய்த் தேசத்திலே சுற்றித்திரிந்து
5 அதைத் தங்கள் பங்கிட்டுக்கொள்வதற்கேதுவாய்க் குறித்து என்னிடம் கொண்டு வருவார்கள். தேசத்தை ஏழுபங்காகப் பகிரவேண்டும்; யூதாவம்சத்தார் தெற்கே இருக்கிற தங்கள் பிரதேசத்திலும் யோசேப்பு வம்சத்தார் வடக்கேயிருக்கிற தங்கள் பிரதேசத்திலும் நிலைத்திருப்பார்கள். நீங்கள் 6 தேசத்தை ஏழு பங்காகக் குறித்து இங்கே என்னிடம் கொண்டுவாருங்கள். அப்பொழுது இவ்விடத்தில் நமது கடவுளாகிய யெகோவாவின் சந்நிதியிலே உங்களுக்காகச் சீட்டுப்போடுவேன். லேவியருக்கு உங்கள் 7 நடுவே பங்கில்லை; யெகோவாவுக்குச் செய்யும் ஆசாரிய ஊழியமே அவர்கள் சுதந்தரம்; காத்தும், ரூபனும் மனாசேயின் பாதிக் கோத்திரமும் யோர்தானுக்கு அப்புறத்தில் கிழக்கே யெகோவாவின் ஊழியனாகிய மோசே தங்களுக்குக் கொடுத்த தங்கள் சுதந்திரத்தை அடைந்து தீர்ந்தது என்றான். அப்படியே அந்த மனிதர் எழுந்துபோனார் 8 கள்; தேசவிவரத்தைக் குறித்துவரப் போகிறவர்களுக்கு யோசுவா கட்டளையிட்டு: நீங்கள் போய்த் தேசத்திலே சுற்றித்திரிந்து அதன் விவரத்தை எழுதிக்கொண்டு என்னிடம் திரும்பிவாருங்கள்; அப்பொழுது இங்கே சீலோவிலே யெகோவாவின் சந்நிதியில் உங்களுக்காகச் சீட்டுப்போடுவேன் என்று சொன்னான். அந்த மனிதர் போய் தேசம் 9 எங்கும் கடந்துசென்று அதன்தன ஊர்களின் படியே ஏழுபங்காக ஒரு புஸ்தகத்தில் எழுதிக்கொண்டு சீலோவிலிருந்த பாளயத்திற்கு யோசுவாவினிடம் வந்தார்கள். அப் 10 பொழுது யோசுவா சீலோவிலே யெகோவாவின் சந்நிதியில் அவர்களுக்காகச் சீட்டுப்போட்டு அங்கே இஸ்ரவேல் புத்திரருக்குத் தேசத்தை அவர்கள் பங்கு வீதப்படி பங்கிட்டான்.

பென்யமீன் புத்திரரின் கோத்திரத்திற்கு 11 அவர்களுடைய வம்சங்களின்படியே சீட்டு விழுந்தது; அவர்களுக்குச் சீட்டு விழுந்த பாகம் யூதாபுத்திரருக்கும் யோசேப்புப் புத்திரருக்கும் இடையில் இருந்தது. அவர் 12 கள் வட எல்லை யோர்தானிலே தொடங்கி எரிகோவின் மலைச்சரிவுக்கு வடபக்கமாய்ச் சென்று அப்புறம் மேற்கே மலைநாட்டிற்குள் ஏறிப் பேதாவேன் வனாந்தரத்திலே முடியும். அங்கிருந்து எல்லை பேதேல் 13 என்னும் லூசுக்கு வந்து லூசின் மலைச்சரிவுக்குத் தெற்கே அதரோத் அதார்க்கு இறங்கிக் கீழ் பேத்கோரோனுக்குத் தெற்கேயிருக்கிற மலையருகே செல்லும். அங்கிருந்து 14 எல்லை அப்பால் சென்று மேற்கு எல்லையாகத் தெற்கே திரும்பிப் பேத்கோரோனுக்கு எதிரே தென்புறத்திலிருக்கிற மலையைத் தாண்டி யூதா புத்திரரின் ஊராகிய கிரியாத் பெயாரீம் என்னும் கிரியாத் பாகாலில்

15 போய் மூடியும்; இது மேற்கு எல்லே. தென் எல்லே ; கிரியாத் யெயாரீம் பிராக்கியத்தின் முடிவில் தொடங்குகிறது; அங்கிருந்து எல்லே மேற்கேபோய், நெப்தோவாகின் ஈரூற்
16 றிற்குச் சென்று, | அங்கிருந்து செப்பாவிய ரின் பள்ளத்தில் வடக்கேயிருக்கிற இன் னேம் புத்திரரின் பள்ளத்தாக்குக்கு எதிரே யுள்ள மலேயின் அத்தத்திற்கு இறங்கி, அப் பால் எபூசியரின் மலேச்சரிவுக்குத் தெற்கே இன்னேமின் பள்ளத்தாக்குக்கும் அங் கிருந்து என்ரொகேலுக்கும் இறங்கி வந்து |
17 வடக்கே போய் ஏன்சேமேசுக்கும், அங் கிருந்து அதும்மீம் கணவாய்க்கு எதிரான கெலிலோத்திற்கும் சென்று அங்கிருந்து
18 ரூபன் குமாரனுகிய போகனின் கல்லுக்கு இறங்கி வந்து | அராபாவுக்கு எதிரே வடக் கேயுள்ள மலேச்சரிவுக்குப் போய் அராபா
19 வுக்கு இறங்கும். அப்புறம் அந்த எல்லே பேத்கோகலாவின் மலேச்சரிவின் வடபக்க மாய்ப் போய் யோர்தானின் தென்முகத் துவாரமுள்ள உப்புக்கடலின் வடகுடாவி விலே முடிந்துபோம்; இது தென் எல்லே.
20 கீழ்புறத்தின் எல்லே யோர்தானே; இது பென்யமீன் புத்திரருக்கு அவர்களுடைய வம்சங்களின்படி கிடைத்த சுதந்தரமும் அதின் சுற்று எல்லேகளுமாம்.
21 பென்யமீன் புத்திரரின் கோத்திரத்திற்கு அவர்களுடைய வம்சங்களின்படி கிடைத்த ஊர்கள்: எரிகோ, பேத்கோகலா, ஏமேக்
22 கெசில், | பேத் அராபா, செமராயீம்,
23 பேதேல், | ஆவீம், பாரா, ஒப்ரா, |
24 கெபார் அமோனி, ஒப்னி, கேபா என் னும் பன்னிரண்டு ஊர்களும் அவைகளின்
25 கிராமங்களுமே. கிபியோன், ராமா பெயே
26 ரோத், | மிஸ்பே, கெபீரா, மோத்சா, |
27,28 ரெக்கேம், யிர்பெயேல், தாரலா, | சேலா, ஏலேப், எருசலேம் என்னும் எபூஸ், கிபெ யாத், கிரியாத் என்னும் பதினன்கு ஊர் களும் அவைகளைச் சார்ந்த கிராமங்களுமே; பென்யமீன் புத்திரருக்கு அவர்கள் வம்சங் களின்படியே கிடைத்த சுதந்தரம் இதுவே.
19 இரண்டாம் சீட்டு சிமியோனுக்கு, சிமியோன் புத்திரரின் கோத்திரத்துக்கு அவர்கள் வம்சங்களின்படியே விழுந்தது; அவர்கள் சுதந்தரம் யூதா புத்திரருடைய
2 சுதந்தரத்தின் நடுவே இருந்தது. அவர் களுக்குச் சுதந்தரமாகக் கிடைத்த ஊர்கள்:
3 பெயேர்செபா, ஷெபா, மொலாதா, | ஆத்
4 சார்சூகால், பாலா, ஏத்சேம் | எல்தோலாத்,
5 பெத்தூல், கொர்மா, | சிக்லாக், பெத்மார்கா
6 போத், ஆத்சார்சூசா, | பேத்லெபாவோத், சாருகேன்; ஆகப் பதின்மூன்று ஊர்களும்
அவைகளின் கிராமங்களுமே. மேலும் 7
ஆயின், ரிம்மோன், ஏத்தேர், ஆஷான் என் னும் நாலு ஊர்களும் அவைகளின் கிராமங் களுமே. இந்த ஊர்களுக்குச் சுற்றிலும் 8
தென்ராமாத் என்னும் பாலாத் பெயேர்மட்டு மிருந்த சகல கிராமங்களுமே; இவை சிமி யோன் புத்திரரின் கோத்திரத்திற்கு அவர்கள் வம்சங்களின்படியே கிடைத்த சுதந்தரம்.
சிமியோன் புத்திரரின் சுதந்தரம் யூதா 9
புத்திரரின் பாகத்திற்குள் இருந்தது; யூதா புத்திரரின் பங்கு அவர்களுக்கு மிகவும் அதிகமாயிருந்தபடியால், சிமியோன் புத்திரர் அவர்கள் சுதந்தரத்தின் நடுவிலே சுதந்தரம் பெற்றார்கள்.

மூன்றாம்சீட்டு செபுலோன் புத்திரருக்கு 10
அவர்கள் வம்சங்களின்படியே விழுந்தது; அவர்களுக்குச் சுதந்தரமாகக் கிடைத்த பாகம் சாரீத்மட்டும் எட்டியிருந்தது.
அவர்களுடைய எல்லே மேற்கே மாராலா 11
வுக்கு ஏறித் தபேசேத்தை யொட்டிவந்து யொக்னேயாமுக்கு எதிரான ஆற்றுக்குப் போம். சாரீலிருந்து அது கிழக்கே சூரி 12
யன் உதிக்கும் திசையாகத் திரும்பி கிஸ்லோத் தாபோரின் பிராந்தியத்தைத்தாண்டி தாபரத் துக்குச் சென்று யாபியாவுக்கு ஏறி | அங் 13
கிருந்து கிழ்புறத்திலே காத்கேபேரையும் இத்தாகாத் சினேயும் கடந்து ரிம்மோன் மெத்தோவாருக்கும் நேயாவுக்கும் போம்.
அப்புறம் அந்த எல்லே வடக்கே அன்னத் 14
தோனுக்குத் திரும்பி யிப்தாகேலின் பள்ளத் தாக்கிலே முடியும். காத்தாத், நகலால், 15
சிம்ரோன், யிதாலா, பெத்லகேம் ஆகிய பன்னிரண்டு ஊர்களும் அவைகளின் கிரா மங்களும். இந்த ஊர்களும் அவைகளின் 16
கிராமங்களுமே செபுலோன் புத்திரருக்கு அவர்கள் வம்சங்களின்படியே கிடைத்த சுதந்தரம்.

நாலாம்சீட்டு இசக்காருக்கு, | இசக் 17, 18
கார் புத்திரருக்கு அவர்கள் வம்சங்களின் படியே விழுந்தது; அவர்கள் எல்லே யிஸ்ரெ யேல், கெசல்லோத், சூனேம், | கபராயீம், 19
ஷீயோன், அனகராத், | ராப்பித், கிஷி 20
யோன், ஏபெத்ஸ், | ரேமெத், என்கன்னீம், 21
என்காதா, பேத்பாத்சேத்ஸ் இவைகளே.
அப்புறம் அவர்கள் எல்லே தாபோரையும், 22
சகுமாவையும் பேத்ஷேமேசையும் கடந்து யோர்தானிலே முடியும்; ஆகப் பதினறு ஊர்களும் அவைகளின் கிராமங்களுமே.
இந்த ஊர்களும் அவைகளின் கிராமங்களும் 23
இசக்கார் புத்திரின் கோத்திரத்திற்கு அவர் களுடைய வம்சங்களின்படியே கிடைத்த சுதந்தரம்.

24 ஐந்தாம்சீட்டு ஆசேர் புத்திரருடைய கோத்திரத்துக்கு அவர்கள் வம்சங்களின்
25 படியே விழுந்தது; அவர்கள் எல்லை கெல்
26 கத், கலீ, பேதேன், அக்சாப், | அலம்மே லெக், ஆமாத், மிஷால், இவைகளே; பின்பு அது மேற்கே கர்மேலையும் சிகோர்லிப்னாவை
27 யும் கடந்துசென்று | அப்புறம் அது சூரியன் உதிக்கும் திசையாகத் திரும்பிப் பெத்தாகோ ணுக்குச் சென்று செபுலோனையொட்டி வடக்கே யிப்தாகேலின் பள்ளத்தாக்குக்கும் பேத்தேமேக்குக்கும் கெகியேலுக்கும் வந்து
28 இடதுபுறமான காபூலுக்கும் | எப்ரோனுக் கும் ரெகோபுக்கும் கம்மோனுக்கும் கானா வுக்கும் பெரிய சீதோன்மட்டும்போம்.
29 அப்புறம் எல்லை ராமாவுக்கும் தீரு என்னும் அரணிப்பான பட்டணம்மட்டும் திரும்பும்; பின்பு அது ஓசாவுக்குத் திரும்பி அக்சீபு பிராக்கியத்தின் ஓரத்திலே சமுத்திரத்தில்
30 முடியும்; உம்மாவும் அபேக்கும் ரெகோபும் அதைச்சேர்ந்தன; ஆக இருபத்திரண்டு ஊர்களும் அவைகளின் கிராமங்களுமே.
31 இந்த ஊர்களும் இவைகளின் கிராமங்களும் ஆசேர்புத்திரரின் கோத்திரத்துக்கு அவர்கள் வம்சங்களின்படியே கிடைத்த சுதந்தரம்.
32 நப்தலி புத்திரருக்கு ஆரும்சீட்டு விழுந்தது.
33 நப்தலி புத்திரருக்கு அவர்கள் வம்சங் களின்படியே விழுந்தது. அவர்கள் எல்லை கேலேப்பிலும் சானூனிம் தோப்பிலுமிருந்து வந்து அதாமி நெக்கேபின்மேலும் யப்னியே லின்மேலும் லக்கூம்மட்டும் போய் யோர்
34 தானில் முடியும். அப்புறம் எல்லை மேற்கே அஸ்னோத்தாபோருக்குத் திரும்பி அங்கே யிருந்து குக்கோகுக்குச் சென்று தெற்கே செபுலோனையும் மேற்கே ஆசேரையும் சூரியோதய திசையிலே யோர்தானில் யூதா
35 வையும் ஒட்டிவரும். அரணிப்பான பட்ட ணங்களாவன: சித்திம், சேர், கம்மாத்,
36 ரக்காத், கின்னெரேத், | ஆதமா, ராமா, காத்
37 சோர், | கேதேஸ், எத்ரேயி, ஏன்காத்
38 சோர், | இரோன், மிக்தாலேல், ஓரேம், பேதானூத், பேத்ஷேமேஸ் ஆகப் பத்தொன் பது ஊர்களும் அவைகளின் கிராமங்களுமே.
39 இந்த ஊர்களும் இவைகளின் கிராமங்களும் நப்தலி புத்திரருடைய கோத்திரத்துக்கு அவர்கள் வம்சங்களின்படியே கிடைத்த சுதந்தரம்.
40 ஏழாம்சீட்டு தாண் புத்திரருடைய கோத் திரத்திற்கு அவர்கள் வம்சங்களின்படியே
41 விழுந்தது; அவர்கள் சுதந்தரத்தின் எல்லை
42 சோரா, எஸ்தாவோல், ஈர்ஷேமேஸ், | சாலா
43 பீன், ஆயலோன், யித்லா, | ஏலோன், திம்
44 நாதா, எக்ரோன், | எல்தெக்கே, கிபெத்
45 தோன், பாலாத், | யிகுத், பெனேபெராக்,
46 காத்ரிம்மோன், | மேயார்கோன், ராக்கோன் என்னும் ஊர்களும் யோப்பாவுக்கு எதிரான
47 பிரதேசமுமே. தாண் புத்திரரின் கூடு அவர்களுக்கு ஒடுக்கமாய்ப் போனபடியால் லேஷேமோடு யுத்தம்பண்ணச் சென்று அதைப்பிடித்து வாள்வாய்க்கு இரையாக்கி அதைச் சொந்தமாக்கிக்கொண்டார்கள். அவர்கள் அதிலே குடியேறி லேஷேமுக்குத் தங்கள் தகப்பனுகிய தானுடைய நாமத்தின் படியே தாண் என்று பேரிட்டார்கள்.
48 இந்த ஊர்களும் இவைகளின் கிராமங்களும் தாண்புத்திரரின் கோத்திரத்திற்கு அவர்கள் வம்சங்களின்படியே கிடைத்த சுதந்தரம்.

49 தேசத்தை அதின் எல்லைகளின்படியே பங்கிட்டுச் சுதந்தரித்துத் தீர்ந்தபோது இஸ்ரவேல் புத்திரர் நூனின் குமாரனுகிய யோசுவாவுக்குத் தங்கள் நடுவிலே ஒரு
50 சுதந்தரத்தைக்கொடுத்தார்கள். எப்பிராயீ மின் மலைநாட்டிலிருந்த திம்னாத்சேராகை அவன் கேட்டான்; யெகோவாவின் சொற் படியே அந்த ஊரை அவனுக்குக் கொடுத் தார்கள்; அவன் அந்த ஊரைக்கட்டி அதிலே குடியிருந்தான்.

51 ஆசாரியனுகிய எலெயாசாரும் நூனின் குமாரனுகிய யோசுவாவும் கோத்திரப் பிதாக் களின் தலைவரும் சீலோவிலே, தரிசனக் கூடார வாசலில், யெகோவாவின் சந்நிதி யிலே, இஸ்ரவேல் புத்திரரின் கோத்திரங் களுக்குச் சீட்டுப் போட்டுக் கொடுத்த சுதந் தரங்கள் இவைகளே; இவ்விதமாக அவர் கள் தேசத்தைப் பங்கிட்டு முடித்தார்கள்.

**20** யெகோவா யோசுவாவினிடம்: நீ
2 இஸ்ரவேல் புத்திரருக்கு இதைச்சொல்: நான் மோசேயைக்கொண்டு உங்களுக்குச் சொன்னபடியே உங்களுக்கு அடைக்கல
3 புரங்களை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். அறி யாமல் கைப்பிசகாய் ஒருவனைக் கொன்றவன் அங்கே ஓடிப்போயிருக்கலாம்; இரத்தப்பழி வாங்குகிறவனுடைய கைக்குத் தப்பிப்போ யிருப்பதற்கு அவைகள் உங்களுக்கு
4 அடைக்கலமாயிருக்கும். அந்த ஊர்களில் ஒன்றிற்கு ஓடிவருகிறவன் ஊரினுட் செல் லும் ஊர்வாசலின் முகப்பிலே நின்று கொண்டு அந்த ஊரின் மூப்பர் கேட்கத் தன் காரியத்தைச் சொல்லவேண்டும்; அப் பொழுது அவர்கள் அவனைத் தங்களிடத் தில் ஊருக்குள்ளே சேர்த்துக்கொண்டு, தங்க ளோடே குடியிருக்க அவனுக்கு இடம்
5 கொடுக்கவேண்டும். பழிவாங்குகிறவன் அவனைத்தொடர்ந்து வந்தால் கொன்றவனை இவன் கையில் ஒப்புக்கொடுக்கவேண்

டாம்; அவன் அயலானை முற்பகையின்றி
6 அறியாமலே கொன்றான். நியாயம் விசாரிக்கும் சபைக்குமுன்பாக அவன் நிற்கும் காலமட்டும், அக்காலத்துப் பிரதான ஆசாரியன் மரணமடையுமட்டும், அவன் அந்த ஊரிலேயே குடியிருக்கவேண்டும்; கொன்றவன் அதன் பின்பே தான் விட்டோடிவந்த தன் ஊருக்கும் தன் வீட்டிற்கும் திரும்பிப்போவான் என்று சொன்னார்.
7 அப்படியே அவர்கள் நப்தலியின் மலைநாட்டிலே கலிலேயாவிலுள்ள கேதேசையும் எப்பிராயீமின் மலைநாட்டிலுள்ள சிகேமையும் யூதாவின் மலைநாட்டிலுள்ள எப்பெரோன் என்னும் கீரியாத் அர்பாவையும்
8 பிரதிஷ்டைபண்ணினார்கள். எரிகோவுக்குக் கிழக்கே யோர்தானுக்கு அக்கரையில் ரூபன் கோத்திரத்தைச் சேர்ந்த சமவெளியாகிய வனாந்தரத்திலுள்ள பேசேரையும், காத்கோத்திரத்தைச் சேர்ந்த கிலெயாத்திலுள்ள ராமோத்தையும், மனாசே கோத்திரத்தைச் சேர்ந்த பாசானிலுள்ள கோலானையும் ஏற்படுத்தி வைத்தார்கள். இஸ்ரவேல்
9 புத்திரர் யாவருக்கும் அவர்கள் நடுவே தங்குகிற பரதேசிக்கும் குறிக்கப்பட்ட ஊர்கள் இவைகளே; கைப்பிசகாய் ஒருவனைக் கொன்றவன் எவனோ அவன் சபைக்கு முன்பாக நிற்கும் வரைக்கும் பழிவாங்குகிறவன் கையிலாவது சாகாதபடி இவற்றில் ஓடிப்போய் ஒதுங்கலாம்.

**21** அப்போது லேவியரின் வம்சப்பிதாக்களின் தலைவர், ஆசாரியனாகிய எலெயாசாரிடத்திலும் நூனின் குமாரனாகிய யோசுவாவினிடத்திலும் இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திரப்பிதாக்களின் தலைவரிடத்திலும்
2 சேர்ந்துவந்து | கானான் தேசத்திலுள்ள சீலோவிலே அவர்களோடு பேசி: நாங்கள் குடியிருப்பதற்கு ஊர்களையும் எங்கள் மிருகங்களுக்கு மேய்ச்சல் காடுகளையும் எங்களுக்குக் கொடுக்கும்படி யெகோவா மோசேயைக்கொண்டு கட்டளையிட்டாரே
3 என்றார்கள். யெகோவாவின் சொற்படியே இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சுதந்தரத்திலே இந்த ஊர்களையும் அவைகளின் வெளி நிலங்களையும் லேவியருக்குக் கொடுத்தார்கள்:
4 கெகாத்தியரின் வம்சங்களுக்குச் சீட்டு விழுந்தது; அந்தச் சீட்டின்படி லேவியரில் ஆசாரியனாகிய ஆரோன் குமாரருக்கு யூதா கோத்திரத்திலும் சிமியோன் கோத்திரத்திலும் பென்யமீன் கோத்திரத்திலும் இடைத்த ஊர்கள் பதின்மூன்று.
5 கெகாத்தின் மற்றப் புத்திரருக்கு, எப்பிராயீம் கோத்திரத்தின் வம்சங்களுக்குள்ளும் தாண் கோத்திரத்திலும் மனாசேயின் பாதிக் கோத்திரத்திலும் சீட்டின்படி இடைத்த ஊர்கள் பத்து.
கெர்சோன் புத்திரருக்கு இசக்கார் கோத் 6
திரத்தின் வம்சங்களுக்குள்ளும் ஆசேர் கோத்திரத்திலும் நப்தலி கோத்திரத்திலும் பாசானிலிருக்கிற மனாசேயின் பாதிக்கோத்திரத்திலும் சீட்டின்படி இடைத்த ஊர்கள் பதின்மூன்று.
மெராரி புத்திரருக்கு அவர்கள் வம்சங் 7
களின்படியே ரூபன் கோத்திரத்திலும் காத் கோத்திரத்திலும் செபுலோன் கோத்திரத்திலும் இடைத்த ஊர்கள் பன்னிரண்டு.
இந்த ஊர்களையும் அவைகளின் வெளி 8
நிலங்களையும் இஸ்ரவேல் புத்திரர் யெகோவா மோசேயைக்கொண்டு கட்டளையிட்டபடியே சீட்டுப்போட்டு லேவியருக்குக் கொடுத்தார்கள். யூதா புத்திரரின் 9
கோத்திரத்திலும் சிமியோன் புத்திரரின் கோத்திரத்திலும் பின்வரும் ஊர்களைக் கொடுத்தார்கள், அவைகள் பேர்பேராகக் குறிக்கப்படுகின்றன: லேவி புத்திரரிலே 10
கெகாத்திய வம்சங்களைச் சேர்ந்த ஆரோனின் குமாரருக்கு முதல் சீட்டு விழுந்தது. யூதா 11
மலைநாட்டில் எப்பெரோன் என்னும் கீரியாத் அர்பா,---அர்பா ஆனாக்கின் தகப்பன்---அதையும் சுற்றிலுமிருந்த அதன் வெளிநிலங்களையும் அவர்களுக்குக் கொடுத்தார்கள். ஊரையடுத்த வயல்களையும் அதின் 12
கிராமங்களையும் எப்புன்னேயின் குமாரனாகிய காலேபுக்குக் காணியாட்சியாகக் கொடுத்தார்கள். ஆசாரியனாகிய ஆரோ 13
னின் குமாரருக்கோ எப்பெரோனையும் அதன் வெளிநிலங்களையும்--இது உயிரைக் கொன்றவனுக்கு அடைக்கலபுரம்---லிப்னாவையும் அதன் வெளிநிலங்களையும், | யத் 14
தீரையும் அதன் வெளிநிலங்களையும், எஸ்தெமோவாவையும் அதன் வெளிநிலங்களையும், | கோலோனையும் அதன் வெளிநிலங் 15
களையும், தெபீரையும் அதன் வெளிநிலங்களையும், | ஆயினையும் அதன் வெளிநிலங் 16
களையும், யுத்தாவையும் அதன் வெளிநிலங்களையும், பேத்ஷேமேசையும் அதன் வெளிநிலங்களையும் கொடுத்தார்கள்; அந்த இரண்டு கோத்திரங்களிலுமிருந்து கொடுக்கப்பட்ட ஊர்கள் ஒன்பது. பென்யமீன் 17
கோத்திரத்திலிருந்து கிபியோனும் அதன் வெளிநிலங்களும், கேபாவும் அதன் வெளிநிலங்களும், | ஆனதோத்தும் அதன் 18
வெளிநிலங்களும், அல்மோனும் அதன் வெளிநிலங்களும் கொடுக்கப்பட்டன; ஆக ஊர்கள் நாலு. இப்படியாக ஆசாரியரான 19
ஆரோனின் குமாரருக்குக் கொடுக்கப்பட்ட

வைகளெல்லாம் பதின்மூன்று ஊர்களும் அவைகளின் வெளிநிலங்களுமே.

20 லேவியரான கெகாத்தின் புத்திரரில் மீதியானவர்களுடைய வம்சங்களுக்கு எப்பிராயீம் கோத்திரத்திலே சீட்டுப்போட்டு அவர்களுக்குக் கொடுத்த ஊர்கள் இவைகளே:

21 எப்பிராயீமின் மலைநாட்டிலிருந்த சீகேமும் அதன் வெளிநிலங்களும்,—இது உயிரைக் கொன்றவனுக்கு அடைக்கலபுரம்—கேசேரும் அதன் வெளிநிலங்களும், | கிப்சாயீமும் அதன் வெளிநிலங்களும், பேத்கோரோனும் அதன் வெளிநிலங்களுமே; ஆக

23 ஊர்கள் நாலு. தாண் கோத்திரத்திலே எல்தெக்கேயும் அதின் வெளிநிலங்களும், கிபெத்தோனும் அதன் வெளிநிலங்களும், |

24 ஆயலோனும் அதன் வெளிநிலங்களும், காத்rரிம்மோனும் அதன் வெளிநிலங்களுமே;

25 ஆக ஊர்கள் நாலு. மனாசேயின் பாதிக் கோத்திரத்திலே தானாகும் அதன் வெளிநிலங்களும், காத்rரிம்மோனும் அதன் வெளிநிலங்களுமே; ஆக ஊர்கள் இரண்டு. கெகாத் புத்திரரில் மீதியானவர்களின் வம்சங்களுக்குக் கொடுக்கப்பட்டவைகளெல்லாம் பத்து ஊர்களும் அவைகளின் வெளிநிலங்களுமே.

27 லேவியரின் வம்சங்களிலே கெர்சோன் புத்திரருக்கு மனாசேயின் பாதிக்கோத்திரத்தில் பாசானிலுள்ள கோலானும் அதன் வெளிநிலங்களும்,—இது உயிரைக்கொன்றவனுக்கு அடைக்கலபுரம்—பெயேஸ்திராவும் அதன் வெளிநிலங்களும் கொடுக்கப்

28 பட்டன; ஆக ஊர்கள் இரண்டு. இசக்காரின் கோத்திரத்திலே கிஷியோனும் அதன் வெளிநிலங்களும், தாபராத்தும் அதன்

29 வெளிநிலங்களும் | யர்மூத்தும் அதன் வெளிநிலங்களும், ஏன்கன்னீமும் அதன் வெளிநிலங்களும் கொடுக்கப்பட்டன; ஆக

30 ஊர்கள் நாலு. ஆசேரின் கோத்திரத்திலே மிஷாலும் அதன் வெளிநிலங்களும், அப்

31 தோனும் அதன் வெளிநிலங்களும், | கெல்கத்தும் அதன் வெளிநிலங்களும், ரெகோபும் அதன் வெளிநிலங்களும் கொடுக்கப்

32 பட்டன; ஆக ஊர்கள் நாலு. நப்தலி கோத்திரத்திலே, கலிலேயாவிலுள்ள கேதேசும் அதன் வெளிநிலங்களும்—இது உயிரைக் கொன்றவனுக்கு அடைக்கலபுரம்,—கம்மோத்தோரும் அதன் வெளிநிலங்களும், கர்தானும் அதன் வெளிநிலங்களும் கொ

33 டுக்கப்பட்டன; ஆக ஊர்கள் மூன்று. கெர்சோனியருக்கு அவர்கள் வம்சங்களின்படி கிடைத்தவைகளெல்லாம் பதின்மூன்று ஊர்களும் அவைகளின் வெளிநிலங்களுமே.

மீதியான லேவியராகிய மெராரி புத்திர 34
ரின் வம்சங்களுக்குச் செபுலோன் கோத்திரத்திலே யொக்னேயாமும் அதன் வெளிநிலங்களும், கர்தாவும் அதன் வெளிநிலங்களும், | திம்னாவும் அதன் வெளிநிலங்களும் 35
நகலாலும் அதன் வெளிநிலங்களும் கொடுக்கப்பட்டன; ஆக ஊர்கள் நாலு. ரூபன் 36
கோத்திரத்திலே பேசேரும் அதன் வெளிநிலங்களும், யாகசாவும் அதன் வெளிநிலங்களும், கெதேமோத்தும் அதன் வெளிநிலங்களும், | மேபாகாத்தும் அதன் வெளிநிலங் 37
களும், கொடுக்கப்பட்டன; ஆக ஊர்கள் நாலு. காத் கோத்திரத்திலே கிலெயாத்தி 38
லுள்ள ராமோத்தும் அதன் வெளிநிலங்களும்,—இது உயிரைக் கொன்றவனுக்கு அடைக்கலபுரம்;—மகனாயீமும் அதன் வெளிநிலங்களும், | எஸ்போனும் அதன் 39
வெளிநிலங்களும் யாசேரும் அதன் வெளிநிலங்களும் கொடுக்கப்பட்டன; ஆக ஊர்கள் நாலு. இவைகளெல்லாம் லேவியரின் 40
மீதியான வம்சங்களாகிய மெராரி புத்திரருக்கு அவர்கள் வம்சங்களின்படியே கிடைத்த ஊர்கள்; அவர்களுக்குச் சீட்டு விழுந்து கிடைத்த ஊர்கள் பன்னிரண்டு.

இஸ்ரவேல் புத்திரருடைய காணியாட்சி 41
யின் நடுவிலே லேவியருக்குக் கிடைத்தவைகளெல்லாம் நாற்பத்தெட்டு ஊர்களும் அவைகளின் வெளிநிலங்களுமே. இந்த 42
ஊர்களில் ஒவ்வொன்றிற்கும் அதைச் சூழ்ந்த வெளிநிலங்கள் இருந்தன; எல்லா ஊர்களுக்கும் அப்படியே.

யெகோவா இஸ்ரவேலுக்குக் கொடுப்ப 43
தாக அவர்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தையெல்லாம் இந்தப் பிரகாரமாகக் கொடுத்தார்; அவர்கள் அதைச் சொந்தமாக்கிக்கொண்டு அதிலே குடியிருந்தார்கள்.
யெகோவா அவர்கள் பிதாக்களுக்கு ஆணை 44
யிட்டபடியெல்லாம் அவர்களைச் சுற்றிலும் யுத்தமின்றி இருக்கச்செய்தார்; அவர்களுடைய எல்லாச் சத்துருக்களிலும் ஒருவரும் அவர்களுக்கு எதிர்நிற்கவில்லை; அவர்கள் சத்துருக்களையெல்லாம் யெகோவா அவர்கள் கையிலே கொடுத்துவிட்டார்.
யெகோவா இஸ்ரவேல் குடும்பத்தாருக்குச் 45
சொல்லியிருந்த நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை; எல்லாம் நிறைவேறிற்று.

அப்பொழுது யோசுவா ரூபனியரையும் **22**
காத்தியரையும் மனாசேயின் பாதிக்கோத்தி 2
ரத்தையும் அழைத்து | அவர்களிடம்: யெகோவாவின் ஊழியனாகிய மோசே உங்களுக்குக் கட்டளையிட்டவைகளையெல்லாம்

நீங்கள் கைக்கொண்டீர்கள்; நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றிலும் என் 3 சொற்படியே செய்தீர்கள். நீங்கள் இந்நாளளவும் இவ்வளவுகாலமாக உங்கள் சகோதரரைக் கைவிடவில்லை. உங்கள் கடவுளாகிய யெகோவா கட்டளையிட்டவை 4 களைக் காத்து நடந்தீர்கள். இப்பொழுதும் உங்கள் கடவுளாகிய யெகோவா தாம் உங்களிடம் சகோதரருக்குச் சொல்லியிருந்தபடியே அவர்களை இளைப்பாறப்பண்ணினார்; ஆகையால் யெகோவாவின் ஊழியனாகிய மோசே யோர்தானுக்கு அப்புறத்திலே உங்களுக்குக் கொடுத்த உங்கள் காணியாட்சியான தேசத்திலிருக்கிற உங்கள் கூடாரங்க 5 ளுக்குத் திரும்பிப்போங்கள். ஒரு காரியத்தில்மாத்திரம் சர்வஜாக்கிரதையாயிருங்கள்; யெகோவாவின் ஊழியனாகிய மோசே உங்களுக்குப் போதித்த கற்பனையையும் பிரமாணத்தையும் கைக்கொண்டு உங்கள் கடவுளாகிய யெகோவாவில் அன்புகூர்ந்து அவருடைய வழிகளிலெல்லாம் நடந்து வாருங்கள், அவர் கட்டளைகளை அனுசரித்து அவரைப் பற்றிக்கொண்டிருந்து அவரை உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் சேவியுங்கள் என்று 6 சொன்னான். இவ்விதமாய் யோசுவா அவர்களை ஆசீர்வதித்து அவர்களை அனுப்பிவிடவே அவர்கள் தங்கள் கூடாரங்களுக்கு 7 போய்விட்டார்கள். மனாசேயின் பாதிக்கோத்திரத்துக்கு மோசே பாசானிலே சுதந்தரம் கொடுத்தான்; அதின் மற்றப் பாதிக்கோ யோசுவா யோர்தானுக்கு மேல்புறத்திலே அவர்கள் சகோதரரோடே கொடுத்தான்; யோசுவா அவர்களை அவர்கள் கூடாரங்களுக்கு அனுப்பிவிடுகையில் அவர்களை 8 ஆசீர்வதித்து: நீங்கள் மிகுந்த ஐசுவரியத்தோடும், மகா ஏராளமான ஆடுமாடுகளோடும், பொன் வெள்ளி செம்பு இரும்போடும், அநேக வஸ்திரங்களோடும் உங்கள் கூடாரங்களுக்குத் திரும்பி உங்கள் சத்துருக்களிடத்திலே கொள்ளையிட்டதை உங்கள் சகோதரரோடே பங்கிட்டுக்கொள்ளுங்கள் என்று சொன்னான்.

9 அப்பொழுது ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரும் யெகோவா மோசேயைக்கொண்டு கட்டளையிட்டிருந்தபடியே, தாங்கள் கைவசப்படுத்தியிருந்த தங்கள் காணியாட்சிபோகிய கிலெயாத் தேசத்துக்குப் போகும்படி கானான் தேசத்திலுள்ள சிலோவிலிருந்த இஸ்ரவேல் புத்திரரை விட்டுத் திரும்பிப் 10 போனார்கள். கானான் தேசத்திலுள்ள யோர்தானையடுத்த கெலிலோத்துக்கு வந்தபோது ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரும், அங்கே யோர்தானின் ஓரத்திலே பார்வைக்குப் பெரிதான ஒரு பலிபீடத்தைக் கட்டினார்கள்.

11 ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரும் கானான் தேசத்தின் முகப்பில் இஸ்ரவேல் புத்திரருக்குரிய யோர்தான் கரையிலே கெலிலோத்தின் பக்கத்திலே ஒரு பீடத்தைக் கட்டினார்கள் என்று இஸ்ரவேல் புத்திரர் கேள்விப்பட்டார்கள். 12 அவர்கள் அதைக் கேள்விப்படவே இஸ்ரவேல் புத்திரரின் சபையார் எல்லாரும் அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்படி சிலோவிலே கூட்டங்கூடினார்கள். 13 அவர்கள் கிலெயாத் தேசத்தில் இருந்த ரூபன் புத்திரரிடத்துக்கும் காத் புத்திரரிடத்துக்கும் மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரிடத்துக்கும் ஆசாரியனான எலெயாசாரின் குமாரன் பினெகாசையும்—அவனோடுகூட இஸ்ரவேலின் சகல 14 கோத்திரங்களிலும் ஒவ்வொரு கோத்திரப் பிதாவின் வீட்டுக்கு ஒவ்வொரு பிரபுவாகப் பத்துப் பிரபுக்களையும் அனுப்பினார்கள்; அவர்களில் ஒவ்வொருவனும் இஸ்ரவேலரின் சந்ததியாருக்குள்ளே தன் தன் கோத்திரப்பிதாவின் வீட்டுக்குத் தலைவனாயிருந்தான்.

15 அவர்கள் கிலெயாத் தேசத்திலே ரூபன் புத்திரர் காத் புத்திரர் மனாசேயின் பாதிக்கோத்திரத்தாராகிய இவர்களிடம் வந்து அவர்களோடு பேசி: 16 யெகோவாவின் சபையனைத்தும் சொல்வதைக் கேளுங்கள், நீங்கள் இஸ்ரவேலின் கடவுளுக்கு விரோதமாய்ச் செய்த இத்தத் துரோகம் என்ன? நீங்கள் யெகோவாவுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணும்படி இந்நாளிலே உங்களுக்கு ஒரு பலிபீடத்தை அமைத்துக்கொண்டு யெகோவாவைப் பின்பற்றாதபடி இந்நாளிலே புரண்டுபோனீர்களே. 17 பெயோரைச் சார்ந்துபோய்ச் செய்த அக்கிரமம் நமக்கு போதாதா? அதினிமித்தம் யெகோவாவின் சபையில் வாதையுண்டாயிற்றெனினும் நாம் அதினின்றும் நீங்கும்படி இந்நாளளவும் நம்மைச் சுத்தமாக்கிக்கொள்ளவில்லையே. 18 நீங்கள் யெகோவாவைப் பின்பற்றாதபடி இந்நாளிலும் புரண்டுபோகிறீர்களே; யெகோவாவுக்கு விரோதமாக நீங்கள் இன்னும் கலகம் செய்வீர்களேயானால் அவர் நாளையதினமே இஸ்ரவேல் சபையனைத்தின்மீதும் கடுங்கோபங் கொள்ளாதிருப்பாரோ? 19 உங்கள் காணியாட்சியான

தேசம் தீட்டாயிருக்குமானால் யெகோவாவின் வாசஸ்தலம் தங்குகிறதும் யெகோவாவின் காணியாட்சியானதுமான அக்கரைத் தேசத்திற்கு வந்துவிடுங்கள்; எங்கள் நடுவே காணியாட்சி பெற்றுக்கொள்ளலாம்; நீங்கள் நமது கடவுளாகிய யெகோவாவின் பலிபீடத்தையேயன்றி வேறொரு பீடத்தை உங்களுக்கென அமைத்து யெகோவாவுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணவேண்டாம்; எங்களுக்கு விரோதமாகவும் கலகம்பண்ண
20 வேண்டாம். சேராகின் குமாரன் ஆகான் சாபத்திற்குட்பட்டவற்றின் விஷயத்தில் துரோகம்பண்ணினதினால் இஸ்ரவேல் சபையினத்தின்மேலும் கோபம் வரவில்லையா? அவன் அக்கிரமத்தினால் மடிந்தது அவன் மாத்திரமல்லவே என்று சொன்னார்கள்.

21 அப்பொழுது ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரும், இஸ்ரவேலின் கோத்திரத் தலைவருக்
22 குப் பதிலுரைத்து: தேவாதிதேவனாகிய யெகோவா, தேவாதிதேவனாகிய யெகோவாவே, அதை அறிவார்; இஸ்ரவேலரும் அறிந்துகொள்வார்கள்; அதைக் கலகமாகவாவது யெகோவாவுக்கு விரோதமான துரோகமாகவாவது செய்திருந்தோமேயானால் அவர் இக்காலில் எங்களைக் காப்பாற்
23 றாமல் விடட்டும். யெகோவாவைப் பின்பற்றாதபடி புரண்டுபோவதற்கென்றாவது அதன்மேல் தகனபலியையாகிலும் போஜனபலியையாகிலும் சமாதானபலிகளையாகிலும் செலுத்துவதற்கென்றாவது எங்களுக்குப் பீடத்தை அமைத்துக்கொண்டதுண்டானால் யெகோவாவே தண்டிப்பார்; நாங்கள் பீடத்தை அமைத்த நோக்கம் வேறே:
24 நாளைக்கு உங்கள் பிள்ளைகள் எங்கள் பிள்ளைகளைப்பார்த்து, இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவுக்கும் உங்களுக்கும்
25 என்ன? ரூபன் புத்திரர் காத் புத்திரர் ஆகிய உங்களுக்கும் எங்களுக்கும் நடுவே யெகோவா யோர்தானை எல்லையாக வைத்தார்; யெகோவாவினிடம் உங்களுக்குப் பங்கில்லை என்று சொல்லி எங்கள் பிள்ளைகளை யெகோவாவுக்குப் பயப்படாதிருக்கச் செய்வார்கள் என்று பயங்கொண்டோம்.
26 ஆகவே நாங்கள் இந்த பலிபீடத்தை அமைப்போம் என நினைத்தோம்; தகன பலிக்கென்றும் வேறொரு இரத்தபலிக்கென்றும் நாங்கள் அதை அமைக்கவில்லை; யெகோவாவின் சந்நிதியிலே நாங்கள் தகன பலிகளையும் வேறொரு இரத்தபலிகளையும் சமாதானபலிகளையும் செலுத்தி அவரையே சேவிக்கிறவர்கள் என்பதற்கு இது எங்களுக்கும் உங்களுக்கும் நமக்குப் பின்வரும் நமது சந்ததியாருக்கும்நடுவே சாட்சியாகும். ஆகவே நாளையதினம் உங்கள் பிள்ளைகள் 27 எங்கள் பிள்ளைகளிடம், யெகோவாவினிடம் உங்களுக்குப் பங்கில்லையெனச் சொல்லாதிருப்பார்கள். நாளையதினம் எங்களிடத்தி 28 லாவது எங்கள் சந்ததியாரிடத்திலாவது அப்படிச் சொல்வார்களேயானால், இதோ, இந்தப் பீடத்தைப் பாருங்கள், இது யெகோவாவின் பலிபீடத்தினுடைய அமைப்பேயல்லவா, அதைத் தகனபலிக்கும் வேறெந்த இரத்தபலிக்குமென அமைக்கவில்லை; எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே சாட்சிக்காக எங்கள் பிதாக்கள் அதை அமைத்தார்கள் என்று சொல்லலாமென நினைத்தோம். நம் கடவுளாகிய யெகோவாவின் வாசஸ் 29 தலத்திற்கு எதிரே இருக்கிற அவருடைய பலிபீடத்தைத் தவிர நாங்கள் தகனபலிக்கும் போஜனபலிக்கும் வேறெந்த இரத்தபலிக்கும் வேறொரு பீடத்தைக்கட்டி யெகோவாவுக்கு விரோதமாய்க் கலகம் பண்ணி இக்காளில் யெகோவாவைப் பின்பற்றாதபடி புரண்டுபோகமாட்டோம், இது எங்களுக்குத் தூரமாயிருப்பதாக என்றார்கள்.

ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் 30 மனாசே புத்திரரும் சொன்ன வார்த்தைகளை ஆசாரியனாகிய பினெகாசும் அவனோடிருந்த சபைப் பிரபுக்களும் இஸ்ரவேலின் கோத்திரத்தலைவரும் கேட்டபோது அது அவர்களுக்கு நன்றாய்க் கண்டது. அப்பொழுது 31 ஆசாரியனான எலெயாசாரின் குமாரன் பினெகாஸ் ரூபன் புத்திரரையும் காத் புத்திரரையும் மனாசே புத்திரரையும் பார்த்து: நீங்கள் யெகோவாவுக்கு விரோதமாக அப்படிப்பட்ட துரோகத்தைச் செய்யாதிருக்கிறதினாலே யெகோவா நமது மத்தியில் இருக்கிறார் என்பதை இக்காளில் அறிந்துகொண்டோம்; இப்பொழுது இஸ்ரவேல் புத்திரரை யெகோவாவின் கைக்குத் தப்புவித்தீர்கள் என்றான். ஆசாரியனான எலெ 32 யாசாரின் குமாரன் பினெகாசும் பிரபுக்களும் கிலெயாத் தேசத்தில் இருந்த ரூபன் புத்திரரையும் காத் புத்திரரையும் விட்டுக் கானான் தேசத்திற்கு இஸ்ரவேல் புத்திரரிடம் திரும்பிவந்து அவர்களுக்குச் சமாசாரத்தைத் தெரிவித்தார்கள். அந்தச் 33 செய்தி இஸ்ரவேல் புத்திரருக்கு நன்றாய்க் கண்டது. ஆகவே இஸ்ரவேல் புத்திரர் கடவுளை ஸ்தோத்திரித்தார்கள்; ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் குடியிருந்த தேசத்தை

அழித்துவிட அவர்களுக்கு விரோதமாக யுத்தம் பண்ணப்போவோம் என்கிற பேச்சை விட்டுவிட்டார்கள். யெகோவாவே கடவுள் என்பதற்கு அந்தப் பீடம் நமது நடுவே சாட்சியாயிருக்கும் என்று ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் அதற்கு ஏத் என்று பேரிட்டார்கள்.

34

**23** யுத்தஞ்செய்யும் எந்தச் சத்துருவும் இஸ்ரவேலைச் சுற்றியிராதபடி செய்து யெகோவா அவர்களை இளைப்பாறப்பண்ணினார்; நெடுநாள் சென்றது: யோசுவாவும் வயதுசென்று முதிர்ந்தவனானான். அப்பொழுது யோசுவா இஸ்ரவேலர் அனைவரையும் அவர்கள் மூப்பர்களையும் தலைவர்களையும் நியாயாதிபதிகளையும் அதிகாரிகளையும் அழைத்து அவர்களோடு பேசி: நான் வயதுசென்று முதிர்ந்தவனானேன். உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்கு முன்பாக இந்தச் சகல ஜாதிகளுக்கும் செய்த யாவற்றையும் நீங்கள் கண்டீர்கள்; உங்களுக்காக யுத்தம் பண்ணினவர் உங்கள் கடவுளாகிய யெகோவே. பாருங்கள், யோர்தான் முதல் மேற்திசையுள்ள பெரிய சமுத்திரமட்டும் நான் நிர்மூலமாக்கினவைகளும் இன்னும் மீதியாயிருக்கிறவைகளுமான சகல ஜாதிகளின் தேசத்தையும் சீட்டுப்போட்டு, உங்களுக்கு உங்கள் கோத்திரங்களின்படியே சுதந்தரமாகப் பங்கிட்டேன். உங்கள் கடவுளாகிய யெகோவாதாமே அவர்களை உங்களுக்குமுன்பாகத் துரத்தி உங்கள் பார்வையிலிராதபடி அவர்களை அகற்றிப்போடுவார்; நீங்கள் அவர்கள் தேசத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளுவீர்கள்; உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்குச் சொன்னபடியே ஆகும். ஆகையால் மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவைகளையெல்லாம் கைக்கொள்ளவும் செய்யவும் மிகவும் மனோபலமுள்ளவர்களாயிருங்கள்; அதைவிட்டு வலதுபுறம் இடதுபுறம் விலகாதிருங்கள். மீந்து உங்கள் நடுவே குடியிருக்கிற இந்த ஜாதிகளோடு கலந்து உறவாடவேண்டாம்: அவர்கள் தேவர்களின் பேரை உச்சரிக்கவும் அவைகளைக்கொண்டு ஆணையிடவும் வேண்டாம். அவைகளைச் சேவிக்கவும் தொழுதுகொள்ளவும் வேண்டாம். உங்கள் கடவுளாகிய யெகோவாவையே பற்றிக்கொண்டிருங்கள்; இந்நாள்மட்டும் செய்துவந்ததுபோலவே செய்துவாருங்கள். பலத்த பெரிய ஜாதிகளை யெகோவா உங்களுக்கு முன்பாகத் துரத்தியிருக்கிறார்; உங்களுக்கு முன்பாகவோ எவரும் இன்றுமட்டும் நிற்கவில்லை. உங்களில் ஒருவன் ஆயிரம்பேரைத் துரத்திவிடுவான்; உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்குச் சொல்லியிருந்தபடி அவர்தாமே உங்களுக்காக யுத்தம்பண்ணினார். ஆகவே நீங்கள் மிகவும் ஜாக்கிரதையாயிருந்து உங்கள் கடவுளாகிய யெகோவாவில் அன்புகூருங்கள். நீங்கள் பின்வாங்கிப் போய், உங்களுக்குள்ளே மீதியாயிருக்கிற இந்த ஜாதிகளைச்சேர்ந்து அவர்களோடே சம்பந்தங்கலந்து நீங்கள் அவர்களிடத்திலும் அவர்கள் உங்களிடத்திலும் உறவாடினால் | உங்கள் கடவுளாகிய யெகோவா இனி இந்த ஜாதிகளை உங்களுக்கு முன்பாகத் துரத்திவிடமாட்டார்; உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்குக் கொடுத்த இந்த நல்ல தேசத்திலிருந்து நீங்கள் அழிந்துபோகுமட்டும் அவர்கள் உங்களுக்குக் கண்ணியும் வலையும், உங்கள் விலாக்களுக்குச் சவுக்கும் உங்கள் கண்களுக்கு முள்ளுமாவார்கள்; இதை நிச்சயமாய் அறிந்துகொள்ளுங்கள்.

1 2 3 4 5 6 7 8 9 10 11 12 13

இதோ, இன்று நான் பூலோகத்தார் எல்லாரும் போகிற வழியே போகிறேன்; உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களைப்பற்றிச் சொன்ன நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை; இதைப்பற்றி உங்கள் இருதயத்திலும் மனதிலும் யாதொரு சந்தேகமுமில்லை; அவைகளெல்லாம் உங்கள் விஷயத்தில் நிறைவேறின; அவைகளில் ஒரு வார்த்தையும் தவறிப்போனதில்லை. இப்பொழுதும் உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்குச் சொன்ன நல்ல காரியமெல்லாம் உங்களிடத்திலே நிறைவேறினதுபோலவே உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்குக் கொடுத்த இந்த நல்ல தேசத்திலிருந்து அவர் உங்களை நிர்மூலமாக்குமட்டும் அவர் சொன்ன சகல தீமையான காரியங்களும் உங்களிடம் நிறைவேறும்படி செய்வார்; உங்கள் கடவுளாகிய யெகோவா உங்களுக்குக் கட்டளையிட்ட அவருடைய உடன்படிக்கையை நீங்கள் மீறிப்போய் அந்நிய தேவர்களைச் சேவித்து அவைகளைத்தொழுதுகொள்வீர்களானால் யெகோவாவின் கோபம் உங்கள்மேல் பற்றியெரியும்; அவர் உங்களுக்குக் கொடுத்த நல்ல தேசத்திலிருந்து நீங்கள் சீக்கிரமாய் அழிந்துபோவீர்கள் என்று சொன்னான்.

14 15 16

பின்பு யோசுவா இஸ்ரவேலின் கோத்திரங்களையெல்லாம் சீகேமிலே கூடிவரச்செய்து இஸ்ரவேலின் மூப்பரையும் தலைவரையும் நியாயாதிபதிகளையும் அதிகாரிகளையும் வர

**24**

வழைத்தான்; அவர்கள் கடவுளின் சந்நிதி
2 யில் வந்து நின்றார்கள். அப்பொழுது
யோசுவா முழுஜனத்தையும் பார்த்து: இஸ்ர
வேலின் கடவுளாகிய யெகோவா சொல்லு
கிறதைக் கேளுங்கள்; பூர்வகாலத்திலே உங்
கள் முற்பிதாக்கள் நதிக்கு அப்புறத்திலே
குடியிருந்தார்கள்; ஆபிரகாமுக்கும் நாகோ
ருக்கும் தகப்பனான தேராகு அங்கிருந்
தான். அவர்கள் வேறே தேவர்களைச்
3 சேவித்துவந்தார்கள். நான் நதிக்கு அப்
புறத்தில் இருந்த உங்கள் தகப்பனாகிய
ஆபிரகாமை அழைத்துவந்து அவனைக்
கானான் தேசமெங்கும் சஞ்சரிக்கச் செய்
தேன்; அவன் சந்ததியைப் பெரிதாக்கி
4 அவனுக்கு ஈசாக்கைக்கொடுத்தேன். ஈசாக்
குக்கு யாக்கோபையும் ஏசாவையும்
கொடுத்து ஏசாவுக்குச் சேயீர் மலைநாட்
டைச் சொந்தமாகக் கொடுத்தேன். யாக்
கோபும் அவன் பிள்ளைகளுமோ எகிப்துக்
5 குப்போனார்கள். நான் மோசேயையும்
ஆரோனையும் அனுப்பி எகிப்தியர் மத்தி
யிலே செய்த யாவற்றினாலும் அவர்களை
வாதித்து அதன் பின் உங்களை அத்தேசத்தி
6 லிருந்து வரச்செய்தேன். நான் உங்கள்
பிதாக்களை எகிப்திலிருந்து வரப்பண்ணின
போது சமுத்திரக்கரைக்கு வந்தீர்கள்; எகிப்
தியர் இரதங்களோடும் குதிரைவீரரோடும்
உங்கள் பிதாக்களைப் பிடிக்கச் சிவந்த
சமுத்திரமட்டும் தொடர்ந்துவந்தார்கள்.
7 அவர்கள் யெகோவாவை நோக்கிக் கூப்பி
டவே, அவர் உங்களுக்கும் எகிப்தியருக்
கும் நடுவே அந்தகாரத்தை வரப்பண்ணிச்
சமுத்திரத்தை அவர்கள்மேல் புரளச்செய்து
அவர்களை மூடிப்போட்டார்; நான் எகிப்தி
யருக்குச் செய்ததை உங்கள் கண்கள்
கண்டன; பின்பு வனாந்தரத்திலே நெடுநாள்
8 சஞ்சரித்தீர்கள். அதற்குப்பின்பு உங்களை
யோர்தானுக்கு அப்புறத்திலே குடியிருந்த
எமோரியரின் தேசத்திற்குக் கொண்டுவந்
தேன்; அவர்கள் உங்களோடு யுத்தம்பண்
ணினபோது அவர்களை உங்கள் கையில் ஒப்
புக்கொடுத்தேன்; அவர்கள் தேசத்தைக்
கைவசமாக்கிக்கொண்டீர்கள்; உங்கள்
முகத்திற்கு முன்னிராதபடி நானே அவர்
9 களை அழித்துவிட்டேன். அப்பொழுது
சிப்போரின் குமாரன் பாலாக்கு என்
னும் மோவாபியரின் ராஜா எழும்பி இஸ்ர
வேலுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினான்.
உங்களைச் சபிக்கும்படி பெயோரின் மகன்
10 பிலெயாமை அழைத்தனுப்பினான். பிலெ
யாமுக்குச் செவிகொடுக்க நான் சம்மதியா
மற்போகவே அவன் உங்களுக்கு ஆசீர்
வாதத்தையே கூறினான்; இப்படி உங்களை
அவன் கைக்குத் தப்புவித்தேன். பின்பு 11
யோர்தானைக் கடந்து எரிகோவுக்கு வந்தீர்
கள்; எரிகோவின் குடிகளும் எமோரியரும்
பாரசீகரும் கானானியரும் ஏத்தியரும் கிர்கா
சியரும் ஏவியரும் எபூசியரும் உங்களுக்கு
விரோதமாக யுத்தம்பண்ணினார்கள்; நானோ
அவர்களை உங்கள் கையிலே கொடுத்துவிட்
டேன். நான் உங்களுக்கு முன்னே குளவி 12
களை அனுப்பினேன், அவைகள் எமோரிய
ரின் இரண்டு ராஜாக்களையும் உங்களுக்கு
முன்பாகத் துரத்திவிட்டன; அவர்களைத்
துரத்தினது உங்கள் பட்டயமுமல்ல, உங்
கள் வில்லுமல்ல. இப்படியாக, நீங்கள் 13
பண்படுத்தாத தேசத்தையும் நீங்கள்
கட்டாத ஊர்களையும் உங்களுக்குக் கொடுத்
தேன், அவைகளில் குடியேறினீர்கள்; நீங்
கள் நடாத திராட்சத்தோட்டங்களின் பல
னையும் ஒலிவத்தோப்புகளின் பலனையும்
புசித்தீர்கள் என்று சொல்லுகிறார்.

ஆகவே நீங்கள் யெகோவாவுக்குப் 14
பயந்து குற்றமற்றவர்களாய் உண்மையோடு
அவரைச் சேவித்து உங்கள் பிதாக்கள்
நதிக்கு அப்புறத்திலும் எகிப்திலும் சேவித்த
தேவர்களை அகற்றிவிட்டு யெகோவாவைச்
சேவியுங்கள். யெகோவாவைச் சேவிப் 15
பது நல்லதல்லவென உங்களுக்குத் தோன்
றினால், யாரைத்தான் சேவிப்பது என்று
இன்றைக்குள்ளே தெரிந்துகொள்ளுங்கள்;
நதிக்கு அப்புறத்திலே உங்கள் பிதாக்கள்
சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ?
நீங்கள் வாசம்பண்ணவந்த தேசத்துக்குடி
களாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்
பீர்களோ? நானும் என் வீட்டாருமோ
யெகோவாவையே சேவிப்போம் என்றான்.

அதுகேட்ட ஜனங்கள் பதிலுரைத்து: 16
வேறே தேவர்களைச் சேவிக்கும்படி யெகோ
வாவைவிட்டு விலகுவது எங்களுக்குத் தூர
மாயிருப்பதாக. நமது கடவுளாகிய யெகோ 17
வாவே நம்மையும் நமது பிதாக்களையும் அடி
மைத்தன வீடாகிய எகிப்துதேசத்திலிருந்து
அழைத்துவந்தார்; நமது கண்காணப்
பெரிய அடையாளங்களைச் செய்தார்; நாம்
நடந்த வழியெல்லாம் நாம் கடந்து வந்த
சகல ஜனங்கள் நடுவிலும் நம்மைக் காப்
பாற்றினார். தேசத்திலேகுடியிருந்த எமோ 18
ரியராகிய சகல ஜனங்களையும் யெகோவா
நமக்குமுன்பாகத் துரத்திவிட்டார்; ஆகவே
நாங்களும் யெகோவாவைச் சேவிப்போம்;
அவரே நமது கடவுள் என்று சொன்னார்
கள். யோசுவாவோ ஜனங்களிடம்: யெகோ 19
வாவைச் சேவிப்பது உங்களால் ஆகாது,

காரியம்; அவர் பரிசுத்தமுள்ள கடவுள்; அவர் எரிச்சலுள்ள தெய்வம்; உங்கள் மீறுதலியும் உங்கள் பாவங்களையும் அவர் 20 பொறுக்கமாட்டார். யெகோவா உங்களுக்கு நன்மைசெய்துவந்தார், நீங்கள் யெகோவாவைவிட்டு அந்திய தேவர்களைச் சேவித்தால் அவர் உங்களைவிட்டுத் திரும்பி உங்களுக்குத் தீமைசெய்து உங்களை நிர் 21 மூலமாக்குவார் என்றார். இனங்கள் யோசுவாவினிடம்: அப்படியல்ல, நாங்கள் யெகோவாவையே சேவிப்போம் என்றார் 22 கள். அதுகேட்ட யோசுவா இனங்களைப் பார்த்து: யெகோவாவைச் சேவிக்கும்படி நீங்கள் அவரைத் தெரிந்துகொண்டதற்கு நீங்களே உங்களுக்குச் சாட்சிகள் என்று சொல்ல அவர்கள், நாங்களே சாட்சிகள் 23 என்றார்கள். அப்பொழுது அவன்: அப் படியானால் உங்கள் நடுவே இருக்கிற அந் திய தேவர்களை அகற்றிவிட்டு உங்கள் இருத யத்தை இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோ வாவுக்கு நேராகத் திருப்புங்கள் என்றான். 24 இனங்கள் யோசுவாவினிடம்: நமது கடவு ளாகிய யெகோவாவையேசேவித்து அவர் சப் தத்திற்கே செவிகொடுப்போம் என்றார்கள். 25 அந்தப்படி யோசுவா அந்நாளில் சிகே மிலே இனங்களை உடன்படிக்கைக்கு உட் படப்பண்ணி அவர்களுக்கு அதை நியமமும் சட்டமுமாக ஏற்படுத்தினான். 26 இந்த வார்த்தைகளை யோசுவா கடவுளின் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதி ஒரு பெரிய கல்லை எடுத்து அதை அங்கே யெகோவாவின் பரிசுத்த ஸ்தலத்தின் அருகே இருந்த கர்வாலி மரத்தின்கீழ் நாட்டி | 27 முழுஜனத்தையும் பார்த்து: இதோ, இந்தக் கல்லே நமக்கு விரோதமாய்ச் சாட்சி சொல்லும்; யெகோவா நமக்குச் சொன்ன சகல வார்த்தைகளையும் இது கேட் டது; நீங்கள் உங்கள் கடவுளை மறுதலித்து விடாதபடி இதுவே உங்களுக்கு விரோத மான சாட்சியாகும் என்று சொல்லி | யோசுவா இனங்களை அவரவர் சுதந்தரத் 28 திற்கு அனுப்பிவிட்டான்.

இந்தக்காரியங்கள் நடந்த பின்பு நூனின் 29 குமாரனாகிய யோசுவா என்னும் யெகோவா வின் ஊழியன் நூற்றுப்பத்துவயதுள்ள வனாய் மரணமடைந்தான். அவனை எப் 30 பிராயீமின் மலைநாட்டிலுள்ள காயாஸ் மலைக்கு வடக்கே இருக்கிற திம்னாத்சேராகு என்னும் அவனுடைய சுதந்தரபாகத்திலே அடக்கம்பண்ணினார்கள். யோசுவா உயி 31 ரோடிருந்த சகல நாட்களிலும், யெகோவா இஸ்ரவேலுக்குச் செய்த அவருடைய செயல்கள் யாவையும் அறிந்தவர்களும் யோசுவாவுக்குப்பின்பு உயிரோடிருந்தவர் களுமான மூப்பரின் சகல நாட்களிலும், இஸ்ரவேலர் யெகோவாவைச் சேவித்து வந்தார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து 32 கொண்டுவந்த யோசேப்பின் எலும்புகளை அவர்கள் சிகேமிலே யாக்கோபு சிகேமின் தகப்பனாகிய கமோரின் புத்திரர் கையில் நூறு வெள்ளிக்காசுக்கு வாங்கின நிலத்தி லே அடக்கம்பண்ணினார்கள்; அந்த நிலம் யோசேப்பின் புத்திரருக்குச் சுதந்தரமா யிற்று.

ஆரோனின் குமாரனாகிய எலெயாசாரும் 33 மரணமடைந்தான்; அவன் குமாரனாகிய பினெகாசுக்கு எப்பிராயீமின் மலைநாட்டில் கொடுக்கப்பட்ட கிபியாவிலே அவனை அடக்கம்பண்ணினார்கள்.

# JUDGES

# நியாயாதிபதிகள்

**1** யோசுவா மரித்தபின் இஸ்ரவேல் புத்திரர் யெகோவாவினிடம் விசாரித்து: கானானி யரை எதிர்த்து யுத்தம்பண்ணும்படி எங்க ளில் யார் முதல்முதல் போகவேண்டும் 2 என்று கேட்டார்கள். அதற்கு யெகோவா: யூதாதான் போகவேண்டும்; இதோ, அந்த நாட்டை அவன் கையிலே கொடுத்துவிட் 3 டேன் என்றார். அப்பொழுது யூதா புத்தி ரர் தங்கள் சகோதரராகிய சிமியோனிய ரைப் பார்த்து: எங்களுடைய சுதந்தர நாட் டிற்குள் வாருங்கள், நாம் கானானியரோடே யுத்தம்செய்வோம், அப்புறம் நாங்களும் உங்கள் சுதந்தர நாட்டிற்குள் உங்களோடு வருவோம் என்று கேட்கவே சிமியோனிய ரும் அவர்களோடே போனார்கள். யூதா 4 போனபோது யெகோவா கானானியரையும் பாரீசரையும் அவர்கள் கையிலே கொடுத் துவிட்டார்; அவர்கள் பேசேக்கிலே பதினா

5 யிரம்பேரை முறியடித்தார்கள். பேசேக்கிலே அதொனிபேசேக்கைக் கண்டு அவனோடு யுத்தம்பண்ணிக் கானானியரையும்
6 பாரிசேயரையும் முறியடித்தார்கள். அதொனிபேசேக் ஓடிப்போகையில் அவனைத் தொடர்ந்து பிடித்து அவன் கைகால்களின் பெருவிரல்களைத் தறித்துப்போட்டார்கள்.
7 அப்பொழுது அதொனிபேசேக்கு எழுபது ராஜாக்கள் கைகால்களின் பெருவிரல்கள் தறிக்கப்பட்டவர்களாய் என் மேசையின் கீழ் விழுந்ததைப் பொறுக்கித் தின்றார்கள்; நான் செய்தபடியே கடவுள் எனக்குப் பதில்செய்தார் என்றான். அவனை எருசலேமுக்குக் கொண்டுபோனார்கள்; அங்கே அவன் மரித்துப்போனான்.
8 யூதாவின் புத்திரர் எருசலேமின்மேல் யுத்தம்பண்ணச்சென்று அதைப்பிடித்து அதிலுள்ளவர்களைப் பட்டயக்கருக்கினால் வெட்டிப் பட்டணத்தை அக்கினிக்கு இரை
9 யாக்கி விட்டார்கள். பின்பு யூதாபுத்திரர் மலைநாட்டிலும் தென்னாட்டிலும் சமபூமி நாட்டிலும் குடியிருந்த கானானியரோடு
10 யுத்தம்பண்ணப் போனார்கள். அப்படியே யூதா கோத்திரத்தார் எப்பெரோனில் குடியிருந்த கானானியருக்கு விரோதமாய்ப் போய், சேகாய், அகீமான், தல்மாய் என்பவர்களைக் கொன்றுபோட்டார்கள்; முற்காலத்தில் அந்த எப்பெரோனுக்குக் கீரியாத் அர்பா என்று பேர் வழங்கினது.
11 அங்கிருந்து தெபீரின் குடிகளுக்கு விரோதமாகப் போனார்கள்; முற்காலத்தில் தெபீருக்குக் கீரியாத் சேப்பேர் என்று பேர் வழங்கினது.
12 அப்பொழுது காலேப்: கீரியாத் சேப்பேரை முறியடித்து அதைப் பிடிக்கிறவனுக்கு என் குமாரத்தியாகிய அக்சாளை விவாகம்பண்ணிக் கொடுப்பேன் என்றான்.
13 அப்பொழுது காலேபுடைய தம்பியாகிய கெனாசின் மகன் ஒத்னியேல் அதைப் பிடித்தான்; ஆகவே காலேப் தன் குமாரத்தியாகிய அக்சாளை அவனுக்கு விவாகம்பண்
14 ணிக் கொடுத்தான். அவள் புறப்படுகையில் தன் தகப்பனிடம் ஒரு வயல்வெளியைக் கேட்கவேண்டுமென்று ஒத்னியேலிடம் வற்புறுத்தி விடைபெற்றுக்கொண்டு கழுதையின்மேலிருந்து இறங்கினாள்; காலேப் அதைக்கண்டு உனக்கு என்ன
15 வேண்டுமென்று கேட்க, அவள்: எனக்கு ஒரு நன்கொடை தரவேண்டும்; வறண்ட தென்னாட்டிலே என்னைக் கொடுத்துவிட்டீர், நீரூற்று நிலத்தை எனக்குத் தரவேண்டும் என்று கேட்டாள்; அப்படியே அவன் அவளுக்கு மேல்நீரூற்றுகள் கீழ் நீரூற்றுகள் என்னும் நிலங்களைக் கொடுத்தான்.

16 மோசேயின் மாமனாகிய கேனியனின் புத்திரரும் யூதாவின் புத்திரரோடு கூடப் பேரீச்சமரங்களின் ஊரிலிருந்து ஆராத்திற்குத் தெற்கேயிருக்கிற யூதாவின் வனாந்தரத்திற்கு வந்து அவர்களோடே குடியேறினார்கள்.
17 யூதா புத்திரர் தங்கள் சகோதரராகிய சிமியோனியரோடு கூடப் போனார்கள்; அவர்கள் சேப்பாத்தில் குடியிருந்த கானானியரை முறியடித்து அதைத் தெய்வசாபத்திற்குட்படுத்தி அந்த ஊருக்கு
18 கொர்மா என்று பேரிட்டார்கள். யூதா புத்திரர் காத்சாவையும் அதின் சுற்றுப்புறத்தையும் அஸ்கலோனையும் அதின் சுற்றுப்புறத்தையும் எக்ரோனையும் அதின் சுற்றுப்புறத்தையும் பிடித்தார்கள்.
19 யெகோவா யூதாவோடுகூட இருந்ததினால் மலைநாட்டாரைத் துரத்திவிட்டார்கள்; பள்ளத்தாக்கின் குடிகளுக்கு இருப்புரதங்கள் இருந்தபடியினால் அவர்களைத் துரத்தமுடியாமற்
20 போயிற்று. மோசே சொல்லியிருந்தபடியே எப்பெரோனைக் காலேபுக்குக் கொடுத்தார்கள்; அவன் அதிலிருந்த அனாக்கின் மூன்று குமாரரையும் துரத்திவிட்டான்.

21 பென்யமீன் புத்திரர் எருசலேமிலே குடியிருந்த எபூசியரைத் துரத்திவிடவில்லை, எபூசியர் இக்காள்மட்டும் பென்யமீன் புத்திரரோடு எருசலேமில் குடியிருக்கிறார்கள்.
22 யோசேப்பின் குடும்பத்தாரும் பேதேலுக்கு விரோதமாய்ப் போனார்கள்; யெகோவா அவர்களோடு இருந்தார்.
23 யோசேப்பின் குடும்பத்தார் பேதேலை வேவுபார்க்க ஆட்களை அனுப்பினார்கள்; முற்காலத்திலே அந்த ஊருக்கு லூஸ் என்று
24 பேர் வழங்கினது. அந்த ஊரிலிருந்து வருகிற ஒரு மனுஷனை வேவுகாரர் கண்டு: ஊருக்குள் போகும் வழியை எங்களுக்குக் காண்பி, உனக்குத் தயைகாட்டுவோம் என்றார்கள்.
25 அப்படியே ஊருக்குள் போகும் வழியை அவன் அவர்களுக்குக் காண்பித்தான்; அவர்கள் வந்து அந்த ஊராரை முறியடித்து அவர்களை வாள்வாய்க்கு இரையாக்கினார்கள்; அந்த மனுஷனையும் அவன் குடும்பத்தையுமோ போகும்படி விட்டுவிட்டார்கள்.
26 அந்த மனுஷன் ஏத்தியரின் தேசத்திற்குப்போய் ஒரு ஊரைக்கட்டி அதற்கு லூஸ் என்று பேரிட்டான்; இக்காள்மட்டும் அதற்கு அந்தப் பேரே வழங்குகிறது.
27 மனாசே புத்திரர் பேத்செயான் ஊராரையும் அதைச்சார்ந்த கிராமங்களிலிருந்தவர்

னையும், தானுக் ஊராரையும் அதைச் சார்ந்த கிராமங்களிலிருந்தவர்களையும், தோரின் குடிகளையும் அதைச்சார்ந்த கிராமங்களிலிருந்தவர்களையும், இப்லெயாமின் குடிகளையும் அதைச்சார்ந்த கிராமங்களிலிருந்தவர்களையும், மெகிதோவின் குடிகளையும் அதைச்சார்ந்த கிராமங்களிலிருந்தவர்களையும் துரத்திவிடவில்லை; கானானியர் தாங்கள் பிரியப்பட்டபடியே அந்த நாட்டில் நிலைத்து இருந்துகொண்டார்கள்.

28 இஸ்ரவேலர் பலத்தபோதும் கானானியரைத் தங்கள் ஏவலாட்களாக்கிக்கொண்டதேயன்றி அவர்களைத் துரத்திவிட்டதேயில்லை.

29 எப்பிராயீம் புத்திரர் கேசேரிலே குடியிருந்த கானானியரைத் துரத்திவிடவில்லை: கானானியர் கேசேரில் அவர்கள் நடுவே குடியிருந்தார்கள்.

30 செபுலோன் புத்திரர் கித்ரோனின் குடிகளையும் நகலோலின் குடிகளையும் துரத்திவிடவில்லை; கானானியர் அவர்கள் நடுவே குடியிருந்து ஏவலாட்களானார்கள்.

31 ஆசேர்புத்திரர் அக்கோலின் குடிகளையும் சீதோனின் குடிகளையும், அக்லாபு, அக்சிபு, கெல்பா, அபேக்கு, ரெகோபு, என்னும் ஊர்களின் குடிகளையும் துரத்திவிடவில்லை.

32 அந்நாட்டின் குடிகளாகிய கானானியரின் நடுவே ஆசேரியர் குடியிருந்தார்கள்; அவர்களை அவர்கள் துரத்திவிடவில்லை.

33 நப்தலிபுத்திரர் பேத்ஷேமேசின் குடிகளையும்பேத்அனாத்தின் குடிகளையும்துரத்திவிடாமல் அந்நாட்டின் குடிகளாகிய கானானியரின் நடுவே குடியிருந்தார்கள்; பேத்ஷேமேசு, பேத் அனாத் ஊர்களின் குடிகள் அவர்களுக்கு ஏவலாட்களானார்கள்.

34 எமோரியர் தாண்புத்திரரைப் பள்ளத்தாக்கில் இறங்கவொட்டாமல் மலைநாட்டிற்குள் போகும்படி நெருக்கினார்கள்.

35 எமோரியர் கேரேஸ் மலைநாட்டிலும் ஆயலோனிலும் சால்பீமிலும் தாங்கள் பிரியப்பட்டபடியே நிலைத்து இருந்துகொண்டார்கள்; யோசேப்பின் குடும்பத்தாரின் கை பலத்தபோதோ அவர்களுக்கு ஏவலாட்களானார்கள்.

36 எமோரியரின் நாடு அக்கராபீமின் கணவாயிலிருந்து சேலாவழியாய்ச் சென்று அதற்கு அப்பாலும் போகிறது.

**2** யெகோவாவின் தூதனுவர் கில்காலிலிருந்து போகீமுக்கு வந்து: நான் உங்களை எகிப்திலிருந்து வரச்செய்து உங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்திற்கு உங்களை அழைத்துவந்தேன், உங்களோடே பண்ணின என் உடன்படிக்கையை நான் ஒருகாலும் அபத்தமாக்குவதில்லை என்றும்; 1

நீங்கள் இந்தத்தேசத்தின் குடிகளோடே உடன்படிக்கைபண்ணுமல் அவர்கள் பலிபீடங்களை இடித்துவிடவேண்டும் என்றும் சொன்னேன். நீங்களோ என் சொல்லைக் கேளாதேபோனீர்கள்; நீங்கள் இப்படிச் செய்ததென்ன? ஆகவே நான் அவர்களை உங்கள் முன்பாகத் துரத்துவதில்லை; அவர்கள் உங்கள் விலாக்களிலே குத்துகிறவர்களாவார்கள்; அவர்கள் தேவர்கள் உங்களுக்குக் கண்ணியாவார்கள் என்று சொன்னேன் என்றார். யெகோவாவின் தூதனுவர் இந்த வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் சொல்லவே ஜனங்கள் உரத்த சத்தமிட்டு அழுதார்கள். அந்த இடத்திற்குப் போகீம் என்று பேரிட்டு, அங்கே யெகோவாவுக்குப் பலியிட்டார்கள்.

யோசுவா ஜனங்களை அனுப்பிவிடவே, இஸ்ரவேல் புத்திரர் தேசத்தைக் கைவசப்படுத்திக்கொள்வதற்குத் தங்கள் தங்கள் சுதந்தரபாகத்திற்குப் போனார்கள். யோசுவாவின் சகல நாட்களிலும் யெகோவா இஸ்ரவேலுக்குச் செய்த அவருடைய மகத்தான செயல்கள் அனைத்தையும் கண்டவர்களும் யோசுவாவுக்குப்பின்பு உயிரோடிருந்தவர்களுமாகிய மூப்பரின் சகல நாட்களிலும், ஜனங்கள் யெகோவாவைச் சேவித்துவந்தார்கள். நூனின் குமாரனுகிய யோசுவா என்னும் யெகோவாவின் ஊழியன் நூற்றுப்பத்து வயதுள்ளவனுய் மரணமடைந்தான். அவனை எப்பிராயீமின் மலைநாட்டிலுள்ள காயாஸ்மலைக்கு வடக்கேயிருக்கிற திம்னத்கேரேசு என்னும் அவனுடைய சுதந்தரபாகத்திலே அடக்கம்பண்ணினார்கள். அக்காலத்து சந்ததி முழுதும் தங்கள் பிதாக்களோடு சேர்க்கப்பட்டபின்பு, யெகோவாவையும் அவர் இஸ்ரவேலுக்குச் செய்த செயல்களையும் அறியாத வேறொரு சந்ததி எழும்பிற்று.

அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் யெகோவாவின் பார்வைக்குத் தீமையானதைச் செய்து பாகால்களைச் சேவித்தார்கள். தங்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவந்த அவர்கள் கடவுளாகிய யெகோவாவை விட்டுவிலகித் தங்களைச் சுற்றிலும் இருந்த ஜனங்களின் தேவர்களாகிய அந்திய தேவர்களைப் பின்பற்றிப்போய் அவர்களைத் தொழுதுகொண்டு யெகோவாவுக்குக் கோபமூட்டினார்கள். அவர்கள் யெகோவாவைவிட்டு விலகிப் பாகாலையும் அஸ்தரோத்துக்களையும் சேவித்தார்கள். அப்பொழுது யெகோவா இஸ்ரவேலின்மேல்

கோபமூண்டவராகி. அவர்களைக் கொள்ளை
யிடும்படி கொள்ளைக்காரர் கையில் ஒப்புக்
கொடுத்தார்; சுற்றிலும் இருந்த அவர்கள்
சத்துருக்களின் கையிலே அவர்களை விற்றுப்
போட்டார். அப்புறம் அவர்கள் தங்கள்
சத்துருக்களுக்கு முன்பாக நிற்கமுடியாமற்
15 போனார்கள். அவர்கள்போகும் இடமெல்
லாம் யெகோவாவின் கை தீமைக்கென்றே
அவர்களுக்கு விரோதமாயிருந்தது;
யெகோவா அவர்களுக்குச் சொல்லியிருந்த
படியும் ஆணையிட்டிருந்தபடியும் ஆயிற்று;
16 மிகவும் நெருக்கப்பட்டார்கள். யெகோவா
நியாயாதிபதிகளை ஏழும்பப்பண்ணினார்;
அவர்கள் கொள்ளையிடுகிறவர்களின் கைக்கு
அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தார்கள்.
17 அவர்கள் தங்கள் நியாயாதிபதிகளுக்குச்
செவிகொடாமல், அந்நியதேவர்களைப் பின்
பற்றிச் சோரம்போய் அவைகளைத் தொழுது
கொண்டார்கள்; தங்கள் பிதாக்கள் யெகோ
வாவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து
நடந்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு
விலகி அவர்கள் செய்தபடி செய்யாமற்
18 போனார்கள். யெகோவா அவர்களுக்கு
நியாயாதிபதிகளை எழும்பப்பண்ணினபோது,
யெகோவா நியாயாதிபதியோடிருந்து, அந்த
நியாயாதிபதியின் நாட்களிலெல்லாம் அவர்
கள் சத்துருக்களின் கைக்கு அவர்களை நீங்க
லாக்கி இரட்சித்துவருவார்; அவர்கள் தங்
களை ஒடுக்கி நெருக்குகிறதினிமித்தம் பெரு
மூச்சுவிடுகிறதைக்காணவே யெகோவா பரி
19 தாபங்கொள்வார். நியாயாதிபதி மரண
மடையவே அவர்கள் திரும்பவும் அந்நிய
தேவர்களைப் பின்பற்றிச் சேவித்துத் தொழுது
கொண்டு தங்கள் பிதாக்களிலும் அதிகக்
கேடாய் நடந்து, தங்கள் இருத்தியங்களையும்
தங்கள் முரட்டாட்டமான வழியையும்
20 விட்டுவிடாதிருப்பார்கள். ஆகவே யெகோ
வா இஸ்ரவேலின்மேல் கோபமூண்டவராகி:
இந்த ஜனங்கள் தங்கள் பிதாக்களுக்கு நான்
கட்டளையிட்ட என் உடன்படிக்கையை
மீறி என் சொல்லுக்குச் செவிகொடாதே
21 போனபடியால் | யோசுவா மரித்தபோது
விட்டுப்போன ஜாதிகளில் ஒருவரையும்
நான் இனி அவர்களுக்கு முன்பாகத் துரத்தி
22 விடாதிருப்பேன். அவர்கள் பிதாக்கள்
யெகோவாவின் வழியைக் கவனித்ததுபோல
அவர்களும் அதிலே நடக்கும்படி அதைக்
கவனிப்பார்களோ இல்லையோ என்று அந்த
ஜாதிகளைக்கொண்டு இஸ்ரவேலைப் பரிசோதிப்
பதற்காக அப்படிச் செய்வேன் என்றார்.
23 அதற்காகவே யெகோவா அந்த ஜாதிகளை
யோசுவாவின் கையில் ஒப்புக்கொடாமலும்
அவைகளைச் சீக்கிரமாய்த் துரத்திவிடாமலும்
விட்டுவைத்தார்.

3 இஸ்ரவேலரிலே கானான்தேசத்துச் சகல
யுத்தங்களையும் அறியாதிருந்த யாவரையும்
2 பரிசோதிப்பதற்கும் | இஸ்ரவேல் புத்திரரின்
சந்ததியாரிலே முன்னே யுத்தப் பழக்க
மில்லாதவர்களைப் பழக்குவிப்பதற்கும்
யெகோவா விட்டுவைத்த ஜாதியார் இவர்
களே: பெலிஸ்தியரின் ஆண்டவன்மார்
3 ஐவரும் சகல கானானியரும் சீதோனியரும்
பாகால் எர்மோன்துவக்கி ஆமாத்திற்குப்
போகிற வழிபிரியும் இடம்வரைக்கும்
லீபனோனின் மலைகளிலே குடியிருந்த ஏவிய
ருமே. யெகோவா மோசேயைக்கொண்டு
4 பிதாக்களுக்கு விதித்த கட்டளைகளுக்கு
இஸ்ரவேலர் கீழ்ப்படிவார்களோ என்று
கண்டறியும்படி இஸ்ரவேலரை அவர்க
ளாலே பரிசோதிப்பதற்கே அவர்கள் விடப்
பட்டிருந்தார்கள்.

5 இப்படியாக, கானானியர், ஏத்தியர்,
எமோரியர், பாரசீகர், ஏவியர், எபூசியரா
கிய இவர்கள் நடுவே இஸ்ரவேல் புத்திரர்
6 குடியிருந்து | அவர்கள் குமாரத்திகளை
விவாகம்பண்ணித் தங்கள் குமாரத்திகளை
அவர்கள் குமாரருக்குக்கொடுத்து அவர்கள்
7 தேவர்களைச் சேவித்தார்கள். இவ்விதமாய்
இஸ்ரவேல் புத்திரர் யெகோவாவின் பார்வை
க்குத் தீமையானதைச் செய்து தங்கள் கடவு
ளாகிய யெகோவாவை மறந்து பாகால்களை
யும் மரச்சிலைகளையும் சேவித்து வந்தார்கள்.
8 யெகோவாவின் கோபம் இஸ்ரவேலின்
மேல் மூண்டது; அவர் மெசொப்பொத்தாமி
யாவின் ராஜாவாகிய கூஷன் ரிஷதாயீமின்
கையிலே அவர்களை விற்றுப்போட்டார்;
இப்படியே இஸ்ரவேல் புத்திரர் கூஷன்
ரிஷதாயீமினிடம் எட்டுவருஷம் அடிமைக
ளாயிருந்தார்கள். இஸ்ரவேல் புத்திரர்
9 யொகோவாவினிடம் அபயமிடவே
யெகோவா காலேபின் தம்பியான கெனாசின்
குமாரன் ஒத்னியேல் என்னும் ஒரு இரட்
சகனை அவர்களுக்கு எழும்பப்பண்ணினார்;
அவன் இஸ்ரவேல்புத்திரரை இரட்சித்தான்.
10 அவன்மேல் யெகோவாவின் ஆவி வந்ததி
னால் அவன் இஸ்ரவேலை நியாயம்விசாரிக்
கிறவனானான். அவன் யுத்தம்பண்ணப்
புறப்படவே யெகோவா மெசொப்பொத்
தாமியாவின் ராஜாவாகிய கூஷன்ரிஷ்தாயீ
மை அவன் கையிலே ஒப்புக்கொடுத்தார்;
அவன் கூஷன்ரிஷ்தாயீமை மேற்கொண்
11 டான். தேசம் நாற்பதுவருஷம் அமைதலா
யிருந்தது. கெனாசின் குமாரனாகிய
ஒத்னியேல் மரணமடைந்தான்.

12 இஸ்ரவேல்புத்திரர் மறுபடியும் யெகோ
வாவின் பார்வைக்குத் தீமையானதைச்
செய்தார்கள்; அவர்கள் யெகோவாவின்
பார்வைக்குத் தீமையானதைச் செய்தபடி
யால் யெகோவா எக்லோன் என்னும்
மோவாபின் ராஜா இஸ்ரவேலை மேற்கொள்
13 ளும்படி செய்தார். அவன் அம்மோன்
புத்திரரையும் அமலேக்கியரையும் கூட்
டிக்கொண்டுசென்று இஸ்ரவேலை முறியடித்
தான்; பேரீச்சமரங்களின் ஊரைப்பிடித்
14 தான். இப்படியாகப் பதினெட்டு வருஷ
காலம் இஸ்ரவேல்புத்திரர் எக்லோன் என்
னும் மோவாபின் ராஜாவுக்கு அடங்கியிருந்
15 தார்கள். இஸ்ரவேல்புத்திரர் யெகோவாவி
னிடம் அபயமிடவே யெகோவா அவர்க
ளுக்குப் பென்யமீன் கோத்திரத்தானாகிய
கேராவின் மகன் ஏகூத் என்னும் இரட்ச
கனை எழும்பப்பண்ணினார்; அவன் இடது
கைப்பழக்கமுள்ளவன்; இஸ்ரவேல்புத்தி
ரர் மோவாபின் ராஜாவாகிய எக்லோ
னுக்கு அவன் மூலமாய்க் காணிக்கையை
16 அனுப்பினார்கள். ஏகூத் இருபுறமும் கருக்
குள்ள ஒருமுழ நீளமான ஒரு கத்தியைச்
செய்து அதைத்தன் வஸ்திரத்துக்குள்ளே
தன் வலதுபுறத்து இடுப்பிலே வைத்துக்
17 கட்டிக்கொண்டு | கிட்டவந்து மோவாபின்
ராஜாவாகிய எக்லோனுக்குக் கப்பத்தைச்
செலுத்தினான். எக்லோன் மிகவும் ஸ்தூ
18 லித்த மனுஷன். அவன் கப்பத்தைச்
செலுத்தித் தீர்ந்தபின்பு அதைச் சுமந்து
19 வந்த ஆட்களை அனுப்பிவிட்டான். அவனே
கில்காலருகேயுள்ள பெசிலீமிலிருந்து
திரும்பிவந்து: ராஜாவே, உம்மிடம்
சொல்லவேண்டிய இரகசியமான ஒரு காரி
யம் உண்டு என, அவன்: பொறு என்றான்;
அவனிடமிருந்த யாவரும் அவனை விட்டு
20 வெளியே போய்விட்டார்கள். ஏகூத் அவன்
அருகேபோனான்; அவனுக்கென்று இருந்த
குளிர்ச்சியான மேல் அறையில் அவன்
தனியே உட்கார்ந்திருந்தான்; அப்பொழுது
ஏகூத்: உம்மிடம் நான் சொல்லவேண்
டிய தெய்வவாக்கு ஒன்று உண்டு என்று
சொல்லவே ராஜா தன் ஆசனத்திலிருந்து
21 எழுந்தான். உடனே ஏகூத் தன் இடது
கையை நீட்டித் தன் வலதுபுறத்து இடுப்
பிலே கட்டியிருந்த கத்தியை எடுத்து அதை
22 அவன் வயிற்றினுள் பாய்ச்சினான். அல
கோடேகூடக் கைப்பிடியும் உள்ளே புகும்
படி; அவன் வயிற்றிற்குள்போன கத்தியை
இவன் வெளியே இழுக்காதபடியினால்
நிணம் அலகைச் சுற்றிக்கொண்டடைத்
23 தது; மலஜலம் வெளிப்பட்டது. ஏகூத்
வெளியே கொலுக்கூடத்திற்குவந்து மேல்
அறையின் கதவைத் சாத்திப் பூட்டிப்
போட்டுப் போய்விட்டான். அவன் போன 24
பின்பு ராஜாவின் ஆட்கள் வந்து பார்த்தார்
கள்; இதோ, மேல்அறையின் கதவு பூட்டி
யிருந்தது; அவர் அந்தக் குளிர்ச்சியான
அறையிலே காலைக்கடன் கழிக்கிறாராகும்
என்றிருந்தார்கள். அவர்கள் சலித்துப் 25
போகுமட்டும் காத்திருந்தும் மேல்அறை
யின் கதவு திறக்கப்படாமற்போகவே அவர்
கள் ஒரு திறவுகோலை எடுத்து அதைத் திறந்
தார்கள்; இதோ, அவர்கள் ஆண்டவன்
தரையிலே செத்துக்கிடந்தான். அவர்கள் 26
இப்படித் தாமதித்துக்கொண்டிருக்கையில்
ஏகூத் தப்பியோடிப் பெலீமைக்கடந்து
சேயிராவைச் சேர்ந்தான். அங்கே வந்த 27
போது எப்பிராயீம் மலைநாட்டில் எக்கா
ளம் ஊதும்படி செய்தான்; அப்பொழுது
அவன் முன்செல்ல இஸ்ரவேல் புத்திரரும்
அவனோடுகூட மலைநாட்டிலிருந்து இறங்கி
னார்கள்; | அவன் அவர்களிடம்: என்னைப் 28
பின்தொடர்ந்து வாருங்கள்; யெகோவா
உங்கள் சத்துருக்களாகிய மோவாபியரை
உங்கள் கையிலே கொடுத்துவிட்டார் என்
றான். அவர்கள் அவனைப் பின்தொடர்ந்து
போய் மோவாபுக்குப் போவதற்கு யோர்தா
னைக்கடந்து செல்லும் துறைகளையெல்லாம்
பிடித்துக்கொண்டார்கள்; ஒருவனையும்
கடந்துபோகவொட்டவில்லை. அக்காலத் 29
திலே மோவாபியரில் ஏறக்குறைய பதினா
யிரம்பேரை, பலமும் பராக்கிரமமுமுள்ள
வர்களைக் கொன்றுபோட்டார்கள்; அவர்
களில் ஒருவனும் தப்பவில்லை. இப்படியாக 30
அக்காளிலே மோவாபியர் இஸ்ரவேலினால்
அடக்கப்பட்டார்கள். அதனாலே தேசம்
எண்பதுவருஷம் அமைதலாயிருந்தது.

அவனுக்குப்பிற்பாடு அனாத்தின் குமா 31
சம்கார் எழும்பினான்; அவன் பெலிஸ்திய
ரில் அறுநூறுபேரை ஒரு தாற்றுக்கோலால்
முறியடித்தான்; அவனும் இஸ்ரவேலை இரட்
சித்தான்.

ஏகூத் மரணமடைந்தபின்பு இஸ்ரவேல் 4
புத்திரர் திரும்பவும் யெகோவாவின் பார்
வைக்குத் தீமையானதைச் செய்துவந்தார்
கள். ஆகவே யெகோவா அவர்களைக் காத் 2
சோரில் அரசாண்ட கானானிய ராஜாவாகிய
யாபீனின் கையிலே விற்றுப்போட்டார்;
அவன் சேனாபதியின் பேர் சிசெரா; இவன்
புறஜாதியாரின் கரோஷேத்திலே குடியிருந்
தான். அவனுக்குத் தொளாயிரம் இருப்பு 3
ரதங்கள் இருந்தன; அவன் இஸ்ரவேல்
புத்திரரை இருபதுவருஷம் வலிமையாய்

ஓடுக்கினுன்; இஸ்ரவேல்புத்திரர் யெகோ
வாவை நோக்கி அபயமிட்டார்கள்.

அக்காலத்திலே லபிதோத்தின் மனைவியா
கிய தெபோராள் என்னும் தீர்க்கதரிசினி
இஸ்ரவேலை நியாயம் விசாரித்துவந்தாள்.
5 அவள் எப்பிராயீம் மலைநாட்டிலே ராமாவுக்
கும் பேதேலுக்கும் நடுவே தெபோராளின்
பேரீச்சமரத்தின் கீழே இருப்பாள்; அங்கே
இஸ்ரவேல் புத்திரர் அவளிடம் நியாயவிசா
6 ரணைக்குப் போவார்கள். அவள் நப்தலியி
னுள்ள கேதேசுக்கு ஆள் அனுப்பி அபினே
காமின் குமாரன் பாராக்கை வரவழைத்து:
நீ நப்தலிபுத்திரரிலும் செபுலோன்புத்திரரி
லும் பதினாயிரம்பேரைக் கூட்டிக்கொண்டு
7 தாபோர் மலைக்குப் போ, | நான் யாபீனின்
சேனைபதியாகிய சிசெராவையும் அவன் ரதங்
களையும் அவன் சேனையையும் கீசோன் பள்
ளத்தாக்கிலே உன்னிடத்திற்கு வர இழுத்து
அவனை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன்
என்று இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோ
வா உனக்குக் கட்டளையிடுகிறாரே என்றாள்.
8 அது கேட்ட பாராக்கு: நீர் என்னோடுகூட
வந்தால் போவேன்; என்னோடு வராவிட்
டால் நான் போகமாட்டேன் என்றான்.
9 அதற்கு அவள்: தவறாமல் நான் உன்னோடு
கூட வருவேன்; நீ போகிற பிரயாணத்தினால்
வரும் மேன்மையோ உனக்குக் கிடையாமற்
போம்; ஒரு ஸ்திரீயின் கையிலே யெகோவா
சிசெராவை ஒப்புக்கொடுப்பார் என்று
சொல்லிக்கொண்டு தெபோராள் எழுந்து
பாராக்கோடேகூடக் கேதேசுக்குப்
10 போனாள். அப்பொழுது பாராக்கு செபு
லோன் மனிதரையும் நப்தலி மனிதரையும்
கேதேசுக்கு வரவழைத்துத் தனக்குப்பின்னே
செல்லும் பதினாயிரம்பேரோடே போனான்;
தெபோராளும் அவனோடுகூடப் போனாள்.
11 கேனியனான கேபேர் என்பவன் மோசேயின்
மாமனாகிய ஓபாபின் புத்திரரான கேனிய
ரைவிட்டுப் பிரிந்து கேதேசின் அருகே
இருந்த சானீம் தோப்பின் அருகே தன்
12 கூடாரத்தைப் போட்டிருந்தான். அபினே
காமின் குமாரன் பாராக்கு தாபோர்
மலையில் ஏறிப்போனான் என்று சிசெரா
13 வுக்கு அறிவிக்கப்பட்டபோது | சிசெ
ரா தொளாயிரம் இருப்புரதங்களாகிய தன்
சகல ரதங்களையும் தன்னோடிருந்த
சேனைய முழுவதையும் புறஜாதியாரின்
அரோஷெத்திலிருந்து கீசோன் பள்ளத்
14 தாக்குக்கு வரவழைத்தான். அப்பொ
ழுது தெபோராள் பாராக்கைப் பார்த்து:
எழுந்துபோ, யெகோவா சிசெராவை உன்
கையில் ஒப்புக்கொடுக்கும் நாள் இதுவே;
யெகோவா உனக்குமுன்பாகப் போகிறார்
என்றாள்; அப்பொழுது பாராக்கும் அவன்
பின்னே பதினாயிரம்பேரும் தாபோர் மலையி
லிருந்து இறங்கினார்கள்; யெகோவா 15
சிசெராவையும் அவனுடைய சகல ரதங்
களையும் சேனையத்தையும் பாராக்குக்கு
முன்பாகப் பட்டயக்கருக்கினால் கலங்கடித்
தார்; சிசெரா இரதத்தை விட்டிறங்கிக் கால்
நடையாய் ஓடிப்போனான். பாராக்கு ரதங் 16
களையும் சேனையையும் புறஜாதியாரின்
அரோஷெத்மட்டும் துரத்தினான்; சிசெரா
வின் சேனையெல்லாம் பட்டயக்கருக்கினால்
விழுந்தது; ஒருவனும் மீந்திருக்கவில்லை.

சிசெரா கால்நடையாய்க் கேனியனான 17
கேபேரின் மனைவி யாகேலுடைய கூடாரத்
திற்கு ஓடிவந்தான்; காத்சோரின் ராஜாவா
கிய யாபீனும் கேனியனான கேபேரின்
வீட்டாரும் சிநேகிதராயிருந்தார்கள்.
யாகேல் வெளியே வந்து சிசெராவை எதிர் 18
கொண்டழைத்து: உள்ளேவாரும்; என்
ஆண்டவனே, கூடாரத்தின் உள்ளே வாரும்,
பயப்படவேண்டாம் என்று அவனிடம்
சொன்னாள்; அப்படியே அவன் அவளு
டைய கூடாரத்தினுள்ளே வந்தபோது
அவள் அவனை ஒரு சமுக்காளத்தினாலே
மூடினாள். அவன் அவளைப் பார்த்து: 19
குடிக்க எனக்குக் கொஞ்சம் தண்ணீர் தா,
தாகமாயிருக்கிறது என்றான்; அவள் பால்
துருத்தியைத்திறந்து அவனுக்குக் குடிக்கக்
கொடுத்தாள்; திரும்பவும் அவனை மூடி
விட்டாள். அப்பொழுது அவன்: நீ கூடார 20
வாசலிலே நின்று, யாராவது ஒருவன்
வந்து, இங்கே யாராகிலும் இருக்கிறார்களா
என்று உன்னிடம் கேட்டால், இல்லை
என்று சொல் என்றான். பின்பு கேபேரின் 21
மனைவியாகிய யாகேல் ஒரு கூடார ஆணி
யை எடுத்துத் தன் கையிலே சுத்தியைப்
பிடித்துக்கொண்டு மெதுவாக அவனண்டை
யில் வந்து அவன் நெறியிலே அந்த ஆணி
யை அடித்துப்போட்டாள்; அது உருவிப்
போய்த் தரையிலே புதைந்தது; அவன்
ஆயாசமாய்த் தூங்கிக்கொண்டிருக்கையி
லேயே செத்துப்போனான். அப்பொழுது 22
சிசெராவைப் பிடிக்கப் பாராக்கு தொடர்ந்
துவரவே யாகேல் வெளியே வந்து அவனை
எதிர்கொண்டழைத்து: வாரும், நீர் தேடுகிற
மனுஷனை உமக்குக் காண்பிப்பேன் என்று
சொன்னாள்; அவன் அவளிடத்திற்கு வந்த
போது, இதோ, சிசெரா செத்துக்கிடந்
தான்; ஆணி அவன் நெறியில் அடித்திருந்
தது. இப்படியாகக் கடவுள் அந்நாளிலே 23
கானானியரின் ராஜாவாகிய யாபீனை இஸ்ர

வேல்புத்திரருக்கு அடங்கியிருக்கச் செய்
24 தார். காஞனிய ராஜாவாகிய யாபீனைச்
சங்காரித்துத் தீருமட்டும் இஸ்ரவேல் புத்தி
ரரின் கை அவன்மேல் பாரமாகிக்கொண்
டே வந்தது.

5 அந்நாளிலே தெபோராளும் அபிநோகா
மின் குமாரன் பாராக்கும் இந்தப் பாட்
டைப் பாடினார்கள்:—

2 இஸ்ரவேல் அதிபதிகள் வழிநடத்தி
னார்கள்,
ஜனம் மனப்பூர்வமாய்க் கூடி வந்
தது;
யெகோவாவுக்கே ஸ்தோத்திரம்.

3 ராஜாக்களே, கேளுங்கள்,
அதிகாரிகளே, செவிகொடுங்கள்,
நான் யெகோவாவைப் பாடுவேன்,
இஸ்ரவேலின் கடவுளாம் யெகோவா
வைத்
துதிசெய்து பாடுவேன்.

4 யெகோவாவே, சேயீரிலிருந்து நீர்
வெளிப்பட்டு
ஏதோம் வெளியிருந்து வருகையிலே
பூமி அதிர்ந்தது, வான் சொரிந்தது:
மேகங்கள் தண்ணீர் பொழிந்துபின்
றன.

5 யெகோவா திருமுன் மலைகள் உருகின,
இஸ்ரவேல் கடவுளாம் யெகோவா
திருமுன்
சீனாய் மலையும் உருகிப்போனதே.

6 அனாத்தின் புதல்வன் சம்கார் நாளி
லும்
யாகேல் நாளிலும் பாதைகள் பாழே.
வழிப்பிரயாணிகள் சுற்றினார் பக்கம்.

7 தெபோராளென் வந்திடுமளவும்,
தாயென நானே இஸ்ரவேலிலே
உதித்திடுமளவும், ஆள்பவர் அற்றனர்
இஸ்ரவேலிலே, அற்றேபோயினர்.

8 நவீன தேவரை நாடிக்கொண்டனர்;
வாசல்வரையும் யுத்தம் நடந்தது;
இஸ்ரவேல் நாற்பதினாயிரவரிலே
ஈட்டி கேடகம் எடுப்பவனில்லை.

9 இஸ்ரவேலின் முதல்வர்தம்மை,
ஜனங்களில் தங்களை அளித்திட்ட
வரையே,
எனது இருதயம் நாடுகின்றதுவே.
யெகோவாவைக் கொண்டாடிடுங்
கள்.

10 ரத்தினக்கம்பளம் விரித்துப்போட்டு
வெண்கழுதையின்மேல் ஏறிச் செல்
வோரே,
கால்நடையாக வழிச்செல்வோரே,
இவற்றை விளங்க அறிவித்திடுவீர்.

கொள்ளை பகிர் இரைச்சல் கேளா 11
இடங்களில்
மந்தைக்குத் தண்ணீர் காட்டுகின்ற
வர்கள்
யெகோவா செய் நியாயம் விரித்து
ரைத்திடுவார்,
இஸ்ரவேலில் ஆண்டுவந்து
அவர் செய்கின்ற நியாயச்செயலையே;
அக்காலத்தில் யெகோவாவின் ஜனம்
ஊர் வாசலிலே வந்துகூடிடும்.

விழித்திடு, விழித்திடு, தெபோராளே, 12
விழித்திடு, விழித்திடு, பாட்டுப்பாடு.
பாராக்கே, எழு, அபிநோகாம்
மகனே,
சிறைபிடித்தவரை நீ கொண்டுபோ
வாயே.

மீத்தவர் மேன்மக்களோடு கூடினார்; 13
யெகோவாவின் ஜனம் என்னோடு சேர
வீரராக எழுந்து வந்தனர்.
அமலேக்கிலே வேர் ஊன்றியிருந்த 14
வர்
எப்பிராயீமிலிருந்துவந்து
பென்யமீனே, உன்னைத் தொடர்ந்து
உன் ஜனத்தோடு சேர்ந்துகொண்ட
னர்.
மாகீர்தந்தது சேனைத்தலைவரை,
செபுலோனிலிருந்து வந்தார் அதிகா
ரக்கோல் பிடித்தோர்.
இசக்கார் தலைவர் தெபோராளோடி 15
ருந்தார்;
இசக்கார்புத்திரர் பாராக்கோடே
பள்ளத்தாக்கில் விரைந்து நடந்தார்.
ரூபன்புத்திரக் குடும்பத்தாரே
ஆலோசனையில் ஆழ்ந்திருந்தனர்.
மேய்ப்பவர் குழலின் ஓசைகேட்டுத் 16
தொழுவம்நடுவே அமர்ந்திட்ட
தென்ன?
ரூபன்புத்திரக்குடும்பத்தார்
ஆலோசனையில் ஆழ்ந்திருந்தார்.
கிலெயாத் நின்றுவிட்டது யோர்தா 17
னின் அக்கரையில்,
கப்பலருகே அங்கியாக
தாண்புத்திரர் தாமதித்ததென்ன?
ஆசேர்புத்திரர் கடற்கரையமர்ந்து
தத்தம் குடாக்களில் தாமதித்தாரே.
செபுலோன்புத்திரர்உயிரை மதித்திலர், 18
வெளிக்குன்றுகளில் நப்தலி நின்றது,
இவரும் அவர்போல் உயிரைக் கரு
தார்.
அரசர்கள் வந்து அமர்புரிந்தார் 19
கள்
மெகிதோ நீர் அருகான நாளுக்கில்,

காணுன் அரசர் அமர்புரிந்தாரே.
திரவியக்கொள்ளே கிடைத்திலது அவர்
க்கே.
20 வானில் நின்று நிகழ்ந்தது யுத்தம்;
நட்சத்திரங்கள் தத்தம் அயனம்
நின்று சிசெராவோடு யுத்தம்பண்
ணின.
21 கீசோன்ஓடை, பூர்வ கீசோனே,
அவர்களே அடித்துக்கொண்டுபோ
யிற்று;
என் ஆத்மாவே, பலத்தொடு முன்
செல்,
22 பலவான்கள் ஏறிப் பாய்வதினுலே
குதிரைக் குளம்புகள் தடதடென்று
ஒலித்தன.
23 சபிக்க மேரோசை, அதின் குடிக
ளையே,
மூற்றிலுமாகச் சபித்திடவென்று
யெகோவா தூதன் இயம்புகின்ருரே.
யெகோவா பட்சம் துணையாய் வந்தி
லர்,
பராக்கிரமசாலிகளோடே செல்ல
யெகோவா பட்சம் துணையாய் வந்தி
லர்.
24 கேனியன் கேபேர் மனையாம்
யாகேல்
ஸ்திரீகளில் பாக்கியவதியாவாளே;
கூடாரத்தில் வாசம்செய்யும்
ஸ்திரீகளில் பாக்கியவதி அவளேயாம்.
25 தண்ணீர் கேட்டான், பாலைக்கொடுத்
தாள்;
ராஜகிண்ணியிலே தயிரை அளித்
தாள்.
26 தன் கையாலே ஆணியை எடுத்தாள்,
வலக்கைபிடித்தாள் தொழிலாளர்
சுத்தி,
சிசெராவை அடித்துத் தலையை
உடைத்தாள்;
நெறியிலே உருவக் கடாவிவிட்டாள்.
27 அவளினுடைய காலருகே அவன்
மடங்கி அப்படியே விழுந்துகிடந்
தான்;
அவள் கால் அருகே மடங்கி விழுந்
தான்;
மடங்கிய இடத்தே மடிந்துகிடந்தான்.
28 சிசெரா தாயார் ஜன்னலில் நின்று
பலகணிவழியே பார்த்துப் புலம்பி:
ரதம் வரக் காலம்தாழ்த்தது என்ன?
ரதங்களின் ஒட்டம் தாமதிப்பா
னேன்,
29 என்று சொல்லப் | புத்திசாலித்தோ
ழிகள்
உத்தரம் உரைத்தார்; தானும் உரைப்
பாள்:
கொள்ளேயைக்கண்டு பகிர்கின்றன 30
ராம்;
ஆளுக்கு இரண்டொரு பெண், சிசெ
ராவுக்கு
கொள்ளேயில் பலநிற ஆடை, கொள்
ளேயில்
பலநிறச் சித்திரத் தையலாடை;
கொள்ளேயிட்டவரின் கழுத்துகளுக்கு
ஆளுக்கு இரண்டொரு பலநிறக்
குட்டை
என்று சொல்லிக்கொண்டு கின்ருளே.
யெகோவா, உம்மைப் பகைப்பார் 31
யாரும்
இப்படி அழிவார்; உமில் அன்புடை
யார்
வலியாய் உதிக்கும் சூரியன்போல்
வார்.
தேசம் நாற்பதுவருஷம் அமைதலாயிருக்
தது.

பின்னும் இஸ்ரவேல்புத்திரர் யெகோவா 6
வின் பார்வைக்குத் தீமையானதைச் செய்
யவே, யெகோவா அவர்களே ஏழுவருஷம்
மிதியானியரின் கையில் ஒப்புக்கொடுத்
தார். மிதியானியரின் கை இஸ்ரவேலரை 2
மேற்கொண்டது; இஸ்ரவேல்புத்திரர் மிதி
யானியருக்குப் பயந்து மலைக்கெபிகளையும்
குகைகளையும் அரணுன ஸ்தலங்களையும்
தங்களுக்கு அடைக்கலமாகக் கொண்டார்
கள். இஸ்ரவேலர் விதை விதைத்திருக்கும் 3
போது மிதியானியரும் அமலேக்கியரும்
கிழக்கத்திப் புத்திரரும் அவர்களுக்கு
விரோதமாக வந்து | அவர்கள் நடுவே 4
பாளையமிறங்கிக் காசாவின் எல்லை மட்
டும் நிலத்தின் விளைச்சலை அழிப்பார்கள்;
இஸ்ரவேலிலே ஆகாரத்தையாகிலும் ஆடு
மாடுகள் கழுதைகளையாகிலும் விட்டுவைப்ப
தில்லை. அவர்கள் தங்கள் மிருகங்களோ 5
டும் தங்கள் கூடாரங்களோடும் வெட்டுக்
கிளிகளைப்போல் திரளாய் வருவார்கள்;
அவர்களும் அவர்கள் ஒட்டகங்களும்
எண்ணி முடியாததாயிருக்கும்; இந்தப்பிர
காரமாகத் தேசத்திலேவந்து அதை அழிப்
பார்கள். இப்படியாக இஸ்ரவேலர் மிதி 6
யானியராலே மிகவும் கஷ்டத்திற்காளா
னர்கள்; ஆகவே இஸ்ரவேல்புத்திரர் யெகோ
வாவினிடம் அபயமிட்டார்கள்.

இஸ்ரவேல்புத்திரர் மிதியானியர்நிமித்தம் 7
யெகோவாவினிடம் அபயமிடவே | யெ 8
கோவா ஒரு தீர்க்கதரிசியை அவர்களிடம்
அனுப்பினர்; அவன் அவர்களைப் பார்த்து:

இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா சொல்வதைக் கேளுங்கள்: நான் உங்களை எகிப்திலிருந்து வரவழைத்தேன்; அடிமைத்தன வீட்டிலிருந்து உங்களைக் கொண்டு 9 வந்தேன்; எகிப்தியர் கையினின்றும் உங்களை ஒடுக்கினயாவருடைய கையினின்றும் உங்களை விடுவித்தேன்; அவர்களை உங்களுக்கு முன்பாகத் துரத்தி அவர்கள் தேச 10 த்தை உங்களுக்குக் கொடுத்தேன். நானே உங்கள் கடவுளாகிய யெகோவா என்றும் நீங்கள் குடியிருக்கும் எமோரியரின் தேசத்திலுள்ள அவர்கள் தேவர்களுக்குப் பயப்படாதிருங்கள் என்றும் உங்களுக்குச் சொன்னேன்; நீங்களோ என் சொல்லைக் கேளாதே போனீர்கள் என்கிறார் என்று சொன்னான்.

11 பின்பு யெகோவாவின் தூதனானவர் வந்து, அபியேஸ்ரியனான யோவாசின் ஊராகிய ஒப்ராவிலிருந்த ஒரு கர்வாலி மரத்தின் கீழ் உட்கார்ந்தார்; அப்பொழுது யோவாசின் குமாரன் கிதியோன் ஆலையின் மறைவிலே கோதுமையைப் போரடித்துக்கொண்டிருந்தான்; மிதியானியரின் கையில் அது அகப்படாதபடி அங்கே போரடித்தான்.

12 யெகோவாவின் தூதனானவர் அவனுக்குத் தரிசனம் தந்து, பராக்கிரமசாலியே, யெகோவா உன்னோடே இருக்கிறார் என்றார்.

13 அது கேட்ட கிதியோன் அவரிடம்: என் ஆண்டவனே, ஐயோ, யெகோவா எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச்சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே? யெகோவா எங்களை எகிப்திலிருந்து கொண்டுவந்தார் என்று சொன்னார்களே, இப்பொழுதோ யெகோவா எங்களைக் கைவிட்டு மிதியானியரின் கையிலே எங்களை ஒப்புக் 14 கொடுத்தாரே என்றான். அப்பொழுது யெகோவா அவனிடமாய்த் திரும்பி: உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை மிதியானியரின் கையினின்று விடுவித்து இரட்சிப்பாய்; 15 உன்னை அனுப்பியிருக்கிறவர் நானே என்றார். அதற்கு அவன்: ஐயோ: என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினாலே இரட்சிப்பேன்; இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் அற்பமானது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறி 16 யவன் என்றான். அதற்கு யெகோவா: நான் உன்னோடே இருப்பேன்; ஒரே மனுஷனை முறியடிப்பதுபோல நீ மிதியானி 17 யரை முறியடிப்பாய் என்றார். அப்பொழுது அவன்: உம்முடைய கண்களில் இப்பொழுதும் எனக்குத்தயை கிடைத்ததானால் என்னோடே பேசுகிறவர் தேவரீரே என்பதற்கு எனக்கு ஒரு அடையாளத்தைக் காட்டவேண்டும். நான் உம்மிடத்திற்கு 18 என் காணிக்கையைக் கொண்டு வந்து, உமக்கு முன்பாக வைக்குமளவும் இவ்விடம் விட்டுப் போகாதிருந்தருளும் என அவர்: நீ திரும்பிவருமட்டும் நான் இருப்பேன் என்றார். உடனே கிதியோன் 19 உள்ளே போய் ஒரு வெள்ளாட்டுக்குட்டியையும் ஒரு எப்பாமாவிலே புளிப்பில்லாத அப்பங்களையும் ஆயத்தப்படுத்தி, இறைச்சியை ஒரு கூடையில் வைத்து ஆணத்தை ஒரு இண்ணியில் வார்த்து, அதைக் காவாலி மரத்தின் கீழிருந்த அவரிடம் வெளியே கொண்டுவந்து வைத்தான். அப்பொழுது 20 கடவுளின் தூதனானவர் அவனிடம்: நீ இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் எடுத்து இந்தக் கற்பாறையின் மேல் வைத்து ஆணத்தை ஊற்று என்றார்; அவன் அப்படியே செய்தான். அப்பொ 21 முது யெகோவாவின் தூதனானவர் தமது கையிலிருந்த கோல் நீட்டி அதின் நுனியினால் இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் தொட்டார்; தொடவே அக்கினி கற்பாறையிலிருந்து எழும்பி இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் பட்சித்தது; யெகோவாவின் தூதனவரோ அவன் கண்களுக்கு மறைந்துபோனார். கிதியோன் அவர் யெகோவாவின் 22 தூதன் என்று கண்டு: ஐயோ, என் ஆண்டவரே, யெகோவாவே, நான் யெகோவாவின் தூதனானவரை முகமுகமாய்க் கண்டேனே என்று சொல்ல, யெகோவா அவனிடம்: உனக்குச் சமாதானம்; பயப்படாதே, நீ சாவதில்லை என்றார். 23 அங்கே கிதியோன் யெகோவாவுக்கு ஒரு 24 பலிபீடத்தைக் கட்டி அதற்கு யெகோவா ஷாலோம் என்று பேரிட்டான்; அது இந்நாள்வரைக்கும் அபியேஸ்ரியரின் ஒப்ராவில் இருக்கிறது.

அன்று இரவிலேயே யெகோவா அவனி 25 டம்: நீ உன் தகப்பனுடைய காளைகளில் ஏழுவயதான இரண்டாம் காளையைக் கொண்டுபோய், உன் தகப்பனுக்கு இருக்கிற பாகாலின் பலிபீடத்தைத் தகர்த்து அதின் பக்கத்திலிருக்கிற மரச்சிலையை வெட்டிப்போட்டு | அரணிப்பான அந்த இடத் 26 தின் உச்சியிலே ஒரு இடத்தில் உன் கடவுளாகிய யெகோவாவுக்கு முறைப்படியே ஒரு பலிபீடத்தைக்கட்டி அந்த இரண்

டோம் காணையைக் கொண்டுவந்து, அதை நீ வெட்டிப்போட்ட மரச்சிலையின் விறகுகள் மேல் தகனபலியாகச் செலுத்து என்றார்.
27 அப்பொழுது கிதியோன், தன் வேலையாட்களில் பத்துப்பேரைச் சேர்த்துக்கொண்டு போய் யெகோவா தனக்குச் சொன்னபடியே செய்தான்; அவன் தன் தகப்பன் வீட்டாருக்கும் அந்த ஊராருக்கும் பயந்தபடியினாலே அதைப் பகலிலே செய்யாமல்
28 இரவிலே செய்தான். அந்த ஊரார் காலமே எழுந்திருந்தபோது, இதோ, பாகாலின் பலிபீடம் தகர்க்கப்பட்டிருக்கவும், அதின் பக்கத்திலிருந்த மரச்சிலை வெட்டப்பட்டிருக்கவும் பலிபீடம் ஒன்று கட்டி அதின் மேல் இரண்டாம் காளை பலியிடப்பட்டி
29 ருக்கவும் கண்டு | ஒருவரையொருவர் பார்த்து: இந்தக் காரியத்தைச் செய்தவன் யார் என்று பேசிக்கொண்டார்கள்; கேட்டு விசாரித்தபோது யோவாசின் மகன் கிதியோன் இதைச் செய்தான் என்று சொன்
30 னார்கள். அப்பொழுது ஊரார் யோவாசினிடம் வந்து: உன் மகனை வெளியே கொண்டுவா, அவன் சாகவேண்டும்; அவன் பாகாலின் பலிபீடத்தைத் தகர்த்து, அதின் பக்கத்திலிருந்த மரச்சிலையை வெட்டிப்
31 போட்டானே என்றார்கள். யோவாஸ் தன்னைச் சுற்றி நின்ற அனைவரையும் பார்த்து: நீங்களா பாகாலுக்காக வழக்காடுவீர்கள்? நீங்களா பாகாலைக் காப்பாற்றுவீர்கள்? அதற்காக வழக்காடுகிறவன் இன்று காலையிலேயே கொல்லப்படவேண்டும்; பாகால் கடவுளேயானால் தன் பலிபீடத்தைத் தகர்த்ததினிமித்தம் பாகால்தானே தனக்காக வழக்காடிக்கொள்ளட்டும் என்
32 றான். தன் பலிபீடத்தைத் தகர்த்ததினிமித்தம் பாகாலே அவனோடே வழக்காட்டும் என்று சொல்லி அந்நாளிலே கிதியோனுக்கு யெருபாகால் என்று பேரிடப்பட்டது.
33 மிதியானியரும் அமலேக்கியரும் கிழக்கத்திப்புத்திரர் யாவரும் ஏகமாய்க்கூடி, ஆற்றைக்கடந்து வந்து யிஸ்ரெயேல் பள்
34 ளத்தாக்கிலே பாளையமிறங்கினார்கள். அப்பொழுது யெகோவாவின் ஆவி கிதியோனை ஆட்கொள்ளவே, அவன் எக்காளம் ஊதி அபியேஸ்ரியரைத் தன்னோடு வரக்கூப்பிட்
35 டான். மனாசேயுடெங்கும் ஆட்களை அனுப்பித் தன்னோடு வரும்படி அவர்களையும் கூப்பிட்டான். ஆசேர், செபுலோன், நப்தலி நாடுகளுக்குள்ளும் ஆட்களை அனுப்பினான்; இவர்களும் அவர்களை எதிர்க்க வந்
36 தார்கள். அப்பொழுது கிதியோன் கடவுளினிடம்: தேவரீர் சொன்னபடியே என் கையினாலே இஸ்ரவேலை இரட்சிக்கப்போகிறீரென்றால், | இதோ, நான் மயிர் நீக்கப் 37
படாத ஆட்டுத்தோல் ஒன்றைக் களத்திலே போடுகிறேன்; பனி தோலின்மேல் மாத்திரம் பெய்திருக்கவும், பூமியெங்கும் பெய்யாதிருக்கவும் செய்தீரானால் அப்பொழுது தேவரீர் சொன்னபடி இஸ்ரவேலை என் கையினால் இரட்சிப்பீர் என்று அறிவேன் என்றான். | அப்படியே ஆயிற்று. அவன் 38
மறுநாள் காலமே எழுந்திருந்து தோலை நெருக்கிப் பிழிந்து அதிலிருந்த பனிநீரை ஒரு கிண்ணம் நிறைய எடுத்தான். மறு 39
படியும் கிதியோன் கடவுளினிடம்: நான் இன்னும் ஒரு விசைமாத்திரம் பேசுகிறேன், உமது கோபம் என்மேல் மூளாதிருப்பதாக; தோலினாலே நான் இன்னும் ஒரே விசை விசாரணைசெய்துகொள்ள இடங்கொடும்; தோலின்மேல் மாத்திரம் பனி பெய்யாதிருக்கவும் பூமியெங்கும் பனி பெய்திருக்கவும் கட்டளையிடும் என்றான். அப் 40
படியே கடவுள் அன்று இராத்திரி செய்தார்; தோலின்மேல்மாத்திரம் பனிபெய்யாதிருந்தது பூமியெங்குமோ பனி பெய்திருந்தது.

அப்பொழுது யெருபாகால் என்ற கிதி 7
யோனும் அவனோடிருந்த ஜனங்கள் யாவரும் காலமே எழுந்து புறப்பட்டுக் கரோத்து ஈருற்றின் அருகே பாளையமிறங்கினார்கள்; மிதியானியரின் பாளையம் அவனுக்கு வடக்கே மோரே மேட்டின் பக்கத்தில் பள்
ளத்தாக்கிலே இருந்தது. அப்பொழுது 2
யெகோவா கிதியோனோடு பேசி: உன்னோடிருக்கும் ஜனங்கள் மிகவும் திரளானவர்கள், மிதியானியரை நான் அவர்கள் கையில் ஒப்புக்கொடுப்பது சரியாகாது, ஒப்புக்கொடுத்தால் என் கை என்னை இரட்சித்தது என்று இஸ்ரவேல் எனக்கு விரோதமாக வீம்புபேசுகிறதற்கு இடமாகும்.
ஆகையால் ஜனங்களின் காதுகேட்கப் பிர 3
சித்தப்படுத்தும்படி நீ பேசி, பயமும் நடுக்கமும் உள்ளவன் எவனோ அவன் திரும்பிக் கிலெயாத் மலைகளிலிருந்து விரைவாய் ஓடிப்போய்விடட்டும் என்று சொல் என்றார்; அப்பொழுது ஜனங்களில் இருபத்தீராயிரம்பேர் திரும்பிப் போய்விட்டார்கள், மீதியாயிருந்தவர்கள் பதினாயிரம்பேரே.
பின்னும் யெகோவா கிதியோனோடு 4
பேசி: இன்னும் இருக்கிற ஜனங்கள் அதிகமானவர்களே, அவர்களைத் தண்ணீரண்டைக்கு இறங்கிப்போகப்பண்ணு, அங்கே அவர்களை உனக்கென்று பரீக்ஷிப்பேன்,

உன்னோடி வரலாம் என நான் குறிக்கிற
வன் எவனே அவனே உன்னோடி வரவேண்
டும்; உன்னோடி வரலாகாது என்று நான்
குறிக்கிறவன் எவனே அவன் உன்னோடி
5 வரக்கூடாது என்றார். அப்படியே அவன்
ஜனங்களைத் தண்ணீரண்டைக்கு இறங்கி
போகப்பண்ணினான்; அப்பொழுது யெகோ
வா கிதியோனிடம்: நாய் நக்கும் மாதிரியா
கத் தண்ணீரைத் தன் நாவினாலே நக்கிக்
குடிக்கிறவன் எவனே அவனை ஒருபுறமா
யும், குடிக்கிறதற்கு முழங்கால் ஊன்றிக்
குனிகிறவன் எவனே அவனை வேறொரு
6 புறமாயும் பிறித்து என்றார். தங்கள்
கையால் அள்ளித் தங்கள் வாய்க்கெடுத்த
நக்கிக்கொண்டவர்கள் முந்நூறுபேர்; மற்ற
ஜனங்களெல்லாம் தண்ணீர் குடிக்கிறதற்கு
முழங்கால் ஊன்றிக் குனிந்தார்கள். அப்
7 பொழுது யெகோவா கிதியோனோடி பேசி:
நக்கிக் குடித்த அந்த முந்நூறுபேரைக்
கொண்டு நான் உங்களை இரட்சித்து மிதியா
னியரை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன்,
மற்ற ஜனங்கள் எல்லாரும் தங்கள் தங்கள்
இடங்களுக்குப் போய்விடட்டும் என்றார்.
8 அப்படியே அவன் மற்ற இஸ்ரவேலரெல்
லாரையும் தங்கள் தங்கள் கூடாரங்களுக்கு
அனுப்பிவிட்டு, அந்த முந்நூறுபேரைமாத்
திரம் வைத்துக்கொண்டான்; அவர்கள்
தங்கள் கைகளில் ஆகாரத்தையும் எக்கா
ளங்களையும் எடுத்துக்கொண்டார்கள்; மீதி
யானியரின் சேனை அவனிருந்த இடத்திற்
குக் கீழே பள்ளத்தாக்கில் இருந்தது.
9 அன்று இரவு யெகோவா அவனோடி
பேசி: நீ எழுந்து, அந்தப் பாளயத்தை
நோக்கிப்போ; அதை உன் கையில் ஒப்புக்
10 கொடுத்தேன். போகப் பயப்பட்டாயானால்
முதலாவது நீயும் உன் வேலைக்காரனாகிய
பூராவும் அந்தப் பாளயத்திற்குப் போய்
11 அவர்கள் பேசிக்கொள்வது என்ன என்று
கேள்; பின்பு அந்தப் பாளயத்திற்குப்போக
உன் கைகள் திடப்படும் என்றார்; அப்ப
டியே அவனும் அவன் வேலைக்காரனாகிய
பூராவும் சேனையின் முன்னணியிலே காவல்
காக்கிறவர்களின் இடமட்டும் போனார்கள்.
12 மிதியானியரும் அமலேக்கியரும் சகல
கிழக்கத்திப் புத்திரரும் வெட்டுக்கிளிகளைப்
போலத் திரளாய்ப் பள்ளத்தாக்கிலே பர
விக்கிடந்தார்கள்; அவர்கள் ஒட்டகங்க
ளுக்கும் கணக்கில்லை, கடற்கரை மணல்
13 போல் திரளாயிருந்தன: கிதியோன் வந்த
போது ஒருவன் மற்றொருவனுக்குத் தன்
சொப்பனத்தைச் சொல்லிக்கொண்டிருந்
தான்; அதாவது: இதோ, ஒரு சொப்பனங்
கண்டேன்; சுட்டிருந்த ஒரு வாற்கோதுமை
அப்பம் மிதியானியரின் பாளயத்திற்கு
உருண்டு வந்தது, அது கூடாரமட்டும்
வந்தபோது அதை விழுத்தள்ளிக் கவிழ்த்
துப்போட்டது; கூடாரம் விழுந்துகிடக்
14 தது என்றான். அதுகேட்ட மற்றவன்:
இது யோவாசின் குமாரனாகிய கிதியோன்
என்னும் இஸ்ரவேலனுடைய பட்டயமே,
வேறல்ல; கடவுள் மிதியானியரையும் இந்
தப் பாளயம் அனைத்தையும் அவன் கையி
லே கொடுத்துவிட்டார் என்றான்.
15 அந்தச் சொப்பனத்தையும் அதின் வியா
ர்த்தியையும் கேட்டபொழுது கிதியோன்
பணிந்துகொண்டு இஸ்ரவேலின் பாளயத்
திற்குத் திரும்பிவந்து: எழுந்திருங்கள்,
யெகோவா மிதியானியரின் பாளயத்தை
உங்கள் கைகளில் கொடுத்துவிட்டார் என்று
சொன்னான். பின்பு அந்த முந்நூறு
16 பேரையும் மூன்று படையாக வகுத்து
ஒவ்வொருவன் கையிலும் ஒரு எக்காளத்
தையும் வெறும்பாளையையும் அந்தப்
பாளைக்குள் வைக்கும் தீவர்த்தியையும்
கொடுத்து, அவர்களோடி பேசி: நான் செய்
17 வதைப்பார்த்து, அப்படியே நீங்களும் செய்
யுங்கள். இதோ, நான் பாளயத்தின் முன்
னணியில் வந்திருக்கும்போது நான் எப்
படிச் செய்கிறேனோ அப்படியே நீங்களும்
செய்யவேண்டும். நானும் என்னோடிருக்
18 கும் யாவரும் எக்காளம் ஊதும்போது, நீங்
களும் பாளயத்தைச்சுற்றி எங்கும் எக்கா
ளங்களை ஊதி, யெகோவாவுக்கு ஜயம்,
கிதியோனுக்கு ஜயம் என்று சொல்லுங்கள்
என்றான்.
19 நடுஜாமத்தின் துவக்கத்தில் ஜாமக்காரர்
மாற்றப்பட்டவுடனே கிதியோனும் அவனோ
டிருந்த நூறுபேரும் பாளயத்தின் முன்
னணியில் வந்து, எக்காளங்களை ஊதித் தங்
கள் கைகளிலிருந்த பாளைகளை உடைத்தார்
20 கள். மூன்று படைகளில் இருந்தவர்க
ளும் எக்காளங்களை ஊதிப் பாளைகளை
உடைத்துத் தீவர்த்திகளைத் தங்கள் இட
கைகளிலும் ஊதுவதற்கென எக்காளங்களைத்
தங்கள் வலதுகைகளிலும் பிடித்துக்
கொண்டு, யெகோவாவின் பட்டயம்,
கிதியோனின் பட்டயம் என்று ஆரவா
ரஞ்செய்து | பாளயத்தைச் சுற்றிலும்
21 தாங்கள் நின்ற இடங்களிலேயே நின்று
கொண்டிருந்தார்கள்; அப்பொழுது பாளை
யத்தில் இருந்தவர்கள் எல்லாரும் சிதறிக்
கூக்குரலிட்டுக்கொண்டு ஓட்டம் பிடித்தார்
கள். முந்நூறுபேரும் எக்காளங்களை ஊது
22 கையில் யெகோவா பாளையமெங்கும் ஒருவர்

பட்டயத்தை ஒருவருக்கு விரோதமாய் ஓங்
கப்பண்ணினார்; சேனையானது சேரோத்தி
ஞள்ள பேத்ஷித்தாமட்டும் தாபாத்திற்குச்
சமீபமான ஆபேல்மெகோலாவின் கரைமட்
23 டும் ஓடிப்போயிற்று. அப்பொழுது நப்தலி,
ஆசேர், மனாசே நாடுகளிலிருந்த இஸ்ர
வேலர் அழைக்கப்பட்டுவந்து மிதியானிய
ரைப் பிடிக்கத் தொடர்ந்துபோனார்கள்.
24 கிதியோன் எப்பிராயீம் மலைநாடெங்கும்
ஆட்களை அனுப்பி: மிதியானியரை எதிர்த்
துச் சென்று பேத்பாராவரைக்கும் யோர்
தானின் துறைகளை அவர்களுக்கு முந்திக்
கட்டிக்கொள்ளுங்கள் என்று சொல்லச்
சொன்னான்; அப்படியே எப்பிராயீம்
நாட்டார் அனைவரும் அழைக்கப்பட்டு
வந்து பேத்பாராவரைக்கும் யோர்தானின்
25 துறைகளைக் கட்டிக்கொண்டார்கள். மிதியா
னியரின் இரண்டு அதிபதிகளாகிய ஓரேபை
யும் சேபையும் பிடித்து ஓரேபை ஓரேபின்
கற்பாறையிலும் சேபை சேபின் ஆலையிலும்
கொன்றுபோட்டு மிதியானியரைத் துரத்தி
விட்டு ஓரேப், சேப் என்பவர்களின் தலை
களை யோர்தானின் மேல்கரையிலிருந்த கிதி
யோனிடம் கொண்டுவந்தார்கள்.

8 அப்பொழுது எப்பிராயீமியர் அவனி
டம் வந்து: நீ மிதியானியர்மேல் யுத்தம்
பண்ணப்போனபோது எங்களை அழைப்
பிக்கவில்லையே, நீ எங்களுக்கு இப்படிச்
செய்ததென்ன என்று அவனோடே பலத்த
2 வாக்குவாதம்பண்ணினார்கள். அதற்கு
அவன்: நீங்கள் செய்ததிலும் நான் செய்
தது எம்மாத்திரம்? அபியேஸ்ரியரின் திராட்
சப்பழத்து முழுப்பறிப்புவரத்திலும் எப்பி
ராயீமியரின் வீடு பழப்பறிப்புவரத்து அதிக
3 மல்லவா? கடவுள் உங்கள் கையிலே மிதி
யானியரின் அதிபதிகளாகிய ஓரேபையும்
சேபையும் ஒப்புக்கொடுத்தாரே; நீங்கள்
செய்ததோடு ஒப்பிட்டால் நான் செய்தது
எம்மாத்திரம் என்றான்; இந்த வார்த்தை
யை அவன் சொன்னபோது அவர்களுக்கு
அவன் மேலிருந்த கோபம் தணிந்தது.

4 கிதியோனும் அவனோடிருந்த முந்நூறு
பேரும் யோர்தானுக்குவந்து அதைக் கடந்த
போது சத்துருக்களைப் பின்தொடர்ந்த தவிப்
5 பினால் சோர்ந்துபோயிருந்தார்கள். அவன்
சுக்கோத்து ஊராரைப் பார்த்து: என்னை
டிருக்கிற ஆட்களுக்குக் கொஞ்சம் சாப்
பாடு கொடுங்கள்; அவர்கள் தவித்துச்
சோர்ந்துபோயிருக்கிறார்கள், நான் மிதியா
னியரின் ராஜாக்களாகிய சேபாவையும் சல்
முனாவையும் பிடிக்கத் தொடருகிறேன்
6 என்றான். அதைகேட்ட சுக்கோத்தின் பிர
புக்கள்: சேபாகு, சல்முனா என்பவர்களை
நீ பிடித்தாயிற்றோ? உன் சேனைக்கு
நாங்கள் ஏன் சாப்பாடு கொடுக்க
வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள்.
கிதியோன் அவர்களிடம்: யெகோவா சேபா 7
காயும் சல்முனாவையும் என் கையில் ஒப்
புக்கொடுக்கும்போது உங்கள் உடல்களை
வனாந்தரத்தின் முட்களாலும் நெரிஞ்சல்க
ளாலும் அடிப்பேன் என்று சொல்லி,
அவ்விடம்விட்டுப் பெனூவேலுக்குப்போய், 8
அவ்வூராரிடத்திலும் அந்தப்படியே கேட்
டான்; சுக்கோத்து ஊரார் பதில்சொன்ன
படியே பெனூவேல் ஊராரும் அவனுக்குச்
சொல்லிவிட்டார்கள். அப்பொழுது அவன் 9
பெனூவேல் ஊராரைப்பார்த்து: நான்
ஜயம்பெற்றுத் திரும்பிவரும்போது இந்தத்
துருக்கத்தை இடித்துப்போடுவேன் என்று
சொன்னான்.

சேபாகும் சல்முனாவும், அவர்களோடு 10
கூட, அவர்கள் சேனைகளும் ஏறக்குறையப்
பதினாயிரம்பேர் கர்கோரில் இருந்தார்
கள். கிழக்கத்தியாரின் சகல சேனையிலும்
மீந்திருந்தவர்கள் இத்தனைபேர்தான்; பட்
டயம் எடுக்கத்தக்க இலட்சத்து இருபதினா
யிரம்பேர் விழுந்துபோனார்கள். கூடார 11
வாசிகள் செல்லும் வழியாய்க் கிதியோன்
நோபாகுக்கும் யொக்பெயாவுக்கும் கிழக்கே
போய், மோசம்வராதென எண்ணியிருந்த
அந்தச் சேனையை முறியடித்தான். மிதியா 12
னியரின் இரண்டு ராஜாக்களாகிய சேபா
காவும் சல்முனாவும் ஓடிப்போனார்கள். கிதி
யோனே சேபாகையும் சல்முனாவையும்
தொடர்ந்துபிடித்து அவர்கள் சேனை முழுவ
தையும் கலங்கடித்தான்.

யோவாசின் குமாரனாகிய கிதியோன் யுத் 13
தத்தை முடித்துக் கேரேஸ் கணவாய்வழியா
கத் திரும்பிவந்தபோது ! சுக்கோத்து ஊரா 14
ரில்ஒருவாலிபனைப்பிடித்து அவனிடம் விசா
ரிக்கவே அவன் சுக்கோத்தின் பிரபுக்களும்
அதின் மூப்பருமாகிய எழுபத்தேழு மனு
ஷரின் பேரைக் கிதியோனுக்கு எழுதிக்
கொடுத்தான். கிதியோன் சுக்கோத்து ஊரா 15
ரிடம் வந்து: இதோ, தவித்துச் சோர்ந்து
போயிருக்கிற உன் ஆட்களுக்கு நாங்கள்
என் சாப்பாடு கொடுக்கவேண்டும், சேபாகு
சல்முனா என்பவர்களை நீ பிடித்தாயிற்றே
என்று நீங்கள் என்னை நிந்தித்தீர்களே;
இதோ, நீங்கள் சொன்ன சேபாகும் சல்மு
னாவும் இங்கே இருக்கிறார்கள் என்று
சொல்லி, ஊரின் மூப்பரைப்பிடித்து, 16
வனாந்தரத்து முட்களையும் நெரிஞ்சல்களையும்
கொண்டுவந்து, அவைகளால் சுக்கோத்து

ஊராருக்குப் புத்திகற்பித்துவிட்டுப் |
17 பெனுவேலின் துருக்கத்தை இடித்து அவ்
18 வூராரைக் கொன்றுபோட்டான். பின்பு அவன் சேபாகையும் சல்முனாவையும் பார்த்து: நீங்கள் தாபோரிலே கொன்று போட்ட அந்த மனிதர் எப்படிப்பட்டவர்கள் என்று கேட்க, அவர்கள் உம்மைப் போன்றவர்களே, ஒவ்வொருவனும் ராஜகுமாரன்போலிருந்தான் என்று அவர்கள்
19 பதிற்சொன்னார்கள். அப்பொழுது அவன்: அவர்கள் என் சகோதரர், என் தாயின் பிள்ளைகள்; நீங்கள் அவர்களைக் கொல்லாதிருந்தீர்களேயானால் நானும் உங்களைக் கொல்லாதிருப்பேன். ஜீவனுள்ள யெகோவாவின்மேல் ஆணையாக இதைச் சொல்லு
20 கிறேன் என்று சொல்லித் | தன் மூத்தகுமாரனாகிய யேதேரை நோக்கி: நீ எழுந்து இவர்களை வெட்டிப்போடு என்றான்; அந்த வாலிபனோ தன் பட்டயத்தை உருவவில்லை, அவன் இளைஞனாயிருந்தபடியால் பயப்பட்
21 டான். அதுகண்ட சேபாகும் சல்முனாவும்: நீரே எழுந்துவந்து எங்களை வெட்டிவிடும், ஆளுக்குத்தக்கபடிதான் வீரம் என்றார்கள்; கிதியோன் எழுந்து சேபாகையும் சல்முனாவையும் கொன்றுபோட்டு அவர்கள் ஒட்டகங்களின் கழுத்துகளில் இருந்த பொற்காறைகளை எடுத்துக்கொண்டான்.

22 அப்பொழுது இஸ்ரவேலர் கிதியோனிடம் வந்து: நீர் எங்கள்மேல் ஆளுகைசெய்யும்; எங்களை மிதியானியர் கையினின்று மீட்டீரே, உமக்குப்பின்னும் உமது குமாரனும் உமது குமாரனின் குமாரனும் ஆளட்
23 டும் என்றார்கள். அதற்குக் கிதியோன் நான் உங்கள் ராஜாவாயிருக்கமாட்டேன்; என் குமாரனும் உங்கள் ராஜாவாயிருக்கமாட்டான்; யெகோவாவே உங்கள் ராஜாவா
24 யிருப்பார் என்றான். பின்பு கிதியோன் அவர்களைப்பார்த்து: ஒன்றையோ உங்களிடம் கேட்டுக்கொள்ளுகிறேன், நீங்கள் அவரவர் கொள்ளையிட்ட கடுக்கன்களை என்னிடம் கொண்டுவாருங்கள் என்றான். அவர்கள் இஸ்மவேலராயிருந்தபடியினால் அவர்களிடம் பொற்கடுக்கன்கள் இருந்தன.
25 இஸ்ரவேலர்: சந்தோஷமாய்க் கொடுப்போம் என்று சொல்லி, ஒரு வஸ்திரத்தை விரித்து, அவரவர் கொள்ளையிட்ட கடுக்
26 கன்களை அதிலே போட்டார்கள். அவன் கேட்டுவாங்கின பொற்கடுக்கன்கள் ஆயிரத்து எழுநூறு பொன்சேக்கல் நிறையாயிருந்தன; கடுக்கன்களையேயன்றிப் பொற்காறைகளையும் ஊரங்களையும் மிதியானிய ரின் ராஜாக்கள் போர்த்துக்கொண்டிருந்த இரத்தாம்பரங்களையும் அவர்கள் ஒட்டகங்களின் கழுத்துகளிலிருந்த பொற்சங்கிலிகளையும் கொடுத்தார்கள். அவற்றைக்கொண்டு 27 கிதியோன் ஒரு ஏபோத்தைச்செய்து அதைத் தன் ஊரான ஒப்ராவிலே வைத்தான்; இஸ்ரவேலரெல்லாரும் அங்கே அதை வணங்கிச் சோரம்போனார்கள்; அது கிதியோனுக்கும் அவன் வீட்டாருக்கும் கண்ணியாயிற்று.

இத்தப்பிரகாரமாக மிதியானியர் இஸ்ர 28
வேல் புத்திரருக்குமுன்பாகத் தாழ்த்தப்பட்டார்கள்: அவர்கள் திரும்பத் தலையெடுக்கவில்லை; தேசமானது கிதியோனின் நாட்களில்நாற்பதுவருஷம் அமைதலாயிருந்தது.

யோவாசின் குமாரனாகிய யெருபாகால் 29
தன் வீட்டுக்குப் போய்விட்டான்; அங்கே யே வசித்துவந்தான். கிதியோனுக்கு அநே 30
கம் மனைவிகள் இருந்தார்கள்; அவனுடைய சொந்தக்குமாரர் எழுபதுபேர். சீகேமிலிருந்த அவன் வைப்பாட்டியும் அவ 31
னுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்; அவனுக்கு அபிமேலேக்கு என்று பேரிட்டான்.
பின்பு யோவாசின் குமாரனாகிய கிதியோன் 32
நல்ல விருத்தாப்பியத்திலே மரித்து அபியேஸ்ரியரின் ஒப்ராவிலே தன் தகப்பனாகிய யோவாசின் கல்லறையிலே அடக்கம்பண்ணப்பட்டான்.

கிதியோன் மரித்தபின் இஸ்ரவேல் புத்தி 33
ரர் திரும்பவும் பாகால்களை வணங்கிச் சோரம்போய்ப் பாகால் பெரீத்தைத் தங்களுக்குத் தெய்வமாக வைத்துக்கொண்டார்கள். சுற்றிலுமிருந்த தங்கள் சகல சத் 34
துருக்களின் கையினின்றும் தங்களை இரட்சித்த தங்கள் கடவுளாகிய யெகோவாவை இஸ்ரவேலர் நினையாமற்போனார்கள்.
யெருபாகால் கிதியோன் இஸ்ரவேலுக்குச் 35
செய்த சகல நன்மைக்குந் தக்கபடி அவன் வீட்டாருக்கு அவர்கள் பட்சங்காட்டவுமில்லை.

யெருபாகாலின் குமாரன் அபிமேலேக்கு **9**
தன் தாயின் சகோதரரிடம் சீகேமுக்குப் போய் அவர்களையும் தன் தாயைப்பெற்ற பாட்டனாரின் வம்சத்தார் அனைவரையும் பார்த்து: நீங்கள் சீகேமிலுள்ள சகல குடும் 2
பத்தலைவரின் காதுகளும் கேட்கப்பேசி, யெருபாகாலின் குமாரர் எழுபதுபேரும் உங்களை ஆளுவது உங்களுக்கு நல்லதோ, ஒருவன்மாத்திரம் உங்களை ஆளுவது உங்களுக்கு நல்லதோ என்று கேளுங்கள்; நான் உங்கள் எலும்பும் உங்கள் தசையுமானவன் என்பதையும் நினைத்துக்கொள்ளுங்கள் என்றான்.
அப்படியே அவன்தாயின் சகோதரர் சீகேமி 3
லிருந்த சகல குடும்பத்தலைவரின் காதுகளும்

கேட்க இந்தவார்த்தைகளையெல்லாம் அவன் பொருட்டுப் பேசினார்கள்; அவன் நமது சகோதரன் என்று சொல்லிக்கொண்டு
4 ஊரார் அபிமேலேக்கைச் சேர்ந்துகொள்ள மனமிசைந்தார்கள். அவர்கள் பாகால் பெரீத்தின் கோவிலிலிருந்து எழுபது வெள்ளிக்காசை எடுத்து அவனுக்குக் கொடுத்தார்கள்; அதைக்கொண்டு அபிமேலேக்கு வீணரும் போக்கிரிகளுமான மனுஷரை அமர்த்திக்கொண்டான்; அவர்கள் அவன்
5 பின்னே திரிந்தார்கள். அவன் ஒப்ராவிலே தன் தகப்பன் வீட்டிற்குப்போய், யெருபாகாலின் குமாரராகிய தன் சகோதரர் எழுபது பேரையும் ஒரே கல்லின்மேல் வெட்டிவிட்டான்; யெருபாகாலின் இளையகுமாரனாகிய யோதாமோ ஒளித்திருந்து தப்பினான்.
6 சீகேமிலிருந்த சகல குடும்பத்தலைவரும் பேத்மில்லோவிலிருந்த அனைவரும் கூடிவந்தார்கள். அவர்கள் சீகேமிலே கல்நாட்டியிருந்த திருக்கர்வாலி மரத்தண்டையில் அபி
7 மேலேக்கை ராஜாவாக்கினார்கள். இது யோதாமுக்குத் தெரியவந்தபோது அவன்போய்க் கெரிசீம் மலையின்மேல் ஏறி நின்று உரத்த சத்தமிட்டுக் கூப்பிட்டு: சீகேமின் குடும்பத் தலைவரே, எனக்குச் செவிகொடுங்கள்; அப்
8 போது கடவுளும் உங்களுக்குச் செவிகொடுப்பார். ஒருகாலத்திலே மரங்கள் தங்களுக்கு ஒரு ராஜாவை அபிஷேகம்பண்ணும்படி போயின, அவைகள் ஒலிவமரத்தைப் பார்த்து: நீ எங்களுக்கு ராஜாவாயிரு என்று
9 சொல்ல — ஒலிவமரம்: தேவரும் மனிதரும் கொண்டாடுகிற என் கொழுமையை நான் விட்டு மரங்கள் மேலாகத் தலையாட்டப் போவேனே என்று சொல்லிவிட்டது,
10 பின்பு மரங்கள் அத்திமரத்தினிடம்போய்: நீ வந்து எங்களுக்கு ராஜாவாயிரு என்று
11 சொல்ல | அத்திமரம்: நான் என் மதுரத்தையும் என் நற்கனியையும் விட்டுவிட்டு மரங்கள் மேலாகத் தலையாட்டப்போவேனே
12 என்று சொல்லிவிட்டது. மரங்கள் பின்பு திராட்சச்செடியினிடம் சென்று: நீ வந்து எங்களுக்கு ராஜாவாயிரு என்று கேட்கத் |
13 திராட்சச்செடி: தேவரையும் மனிதரையும் மகிழப்பண்ணும் என் ரசத்தை நான் விட்டுவிட்டு மரங்கள் மேலாகத் தலையாட்டப்போ
14 வேனே என்று சொல்லிவிட்டது. அப்பொழுது மரங்களெல்லாம் முட்செடியினிடம் சென்று: நீ வந்து எங்களுக்கு ராஜாவாயிரு என்று கேட்டுக்கொள்ள | முட்செடியா
15 னது மரங்களைப்பார்த்து: நீங்கள் எண்ணெ உங்களுக்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணுவது மெய்யேயானால் என் நிழலிலே வந்தடையுங்கள்; மெய்யல்லவென்றால் முட்செடியிலிருந்து அக்கினி புறப்பட்டு லீபனோனின் கேதுருமரங்களைப் பட்சிக்குமே என்று
சொன்னது. இப்போதும் நீங்கள் அபிமே 16
லேக்கை ராஜாவாக்கினது உண்மையும் உத்தமமான செய்கையாயும், நீங்கள் யெருபாகாலுக்கும் அவன் வீட்டாருக்கும் செய்தது நன்மையாயும், நீங்கள் அவருக்குச் செய்தது அவர் உங்களுக்குச் செய்தவற்றுக்குத் தக்கதாயும் இருக்குமேயானால்— என் தகப்பனார் உங்களுக்காக யுத்தம்பண் 17
ணித் தமது ஜீவனை எண்ணாமல் போய் உங்களை மீதியானியரின் கையினின்று இரட்சித்தார். நீங்களோ இன்று என் தகப்ப 18
னாருடைய குடும்பத்துக்கு விரோதமாய் எழும்பி அவருடைய குமாரர் எழுபது பேரையும் ஒரே கல்லின்மேல் கொலை செய்து அவர் வேலைக்காரியின் மகன் அபிமேலேக்கு உங்கள் சகோதரனானபடியினால் அவனைச் சீகேமின் குடும்பத்தலைவருக்கு ராஜாவாக்கினீர்கள். — இப்படி இன்னாளில் 19
நீங்கள் யெருபாகாலையும் அவர் குடும்பத்தாரையும் நடத்தினது உண்மையும் உத்தமமுமாயிருக்குமானால் அபிமேலேக்கினிமித்தம் நீங்களும் சந்தோஷமாயிருங்கள்; உங்கள் நிமித்தம் அவனும் சந்தோஷமாயிருக்கட்டும். அப்படியல்லவென்றால் அபிமே 20
லேக்கிலிருந்து அக்கினி புறப்பட்டு சீகேமிலுள்ள குடும்பத்தலைவரையும் பேத்மில்லோவையும் பட்சிக்கும்; சீகேமிலுள்ள குடும்பத்தலைவரிலும் பேத்மில்லோவிலிருந்து அக்கினி புறப்பட்டு அபிமேலேக்கைப் பட்சிக்குமே என்று சொல்லிவிட்டு |
யோதாம் தன் சகோதரனாகிய அபிமே 21
லேக்குக்குப் பயந்து விரைந்து தப்பியோடிப் பெயோருக்குப்போய் அங்கே குடியிருந்தான்.

அபிமேலேக்கு இஸ்ரவேலின்மேல் மூன்று 22
வருஷம் துரைத்தனம்பண்ணினபின்பு, அபி 23
மேலேக்குக்கும் சீகேமிலிருந்த குடும்பத் தலைவருக்கும் விரோதம் உண்டாகச் செய்வதற்கென்று கடவுள் ஒரு துர் ஆவியை அனுப்பவே, | சீகேமின் குடும்பத் தலை 24
வர் அபிமேலேக்குக்குத் துரோகம் பண்ணினார்கள்; இவ்விதமாய் யெருபாகாலின் எழுபது குமாரருக்கும் செய்த கொடுமை வந்து பலித்தது; அவர்கள் ரத்தப்பழி அவர்களைக் கொன்ற அவர்கள் சகோதரனாகிய அபிமேலேக்கின்மேலும் தன் சகோதரரைக்கொல்ல அவனுக்குத் துணைநின்ற சீகேமின் குடும்பத்தலைவர்மேலும் சம்பந்தது. அபிமேலேக் 25
குக்கு விரோதமாய்ச் சீகேமின் குடும்பத்

தலைவர் மலைகளிலே பதிவிருக்கிறவர்களை வைத்தார்கள்; அவர்கள் அந்த வழியாய்ச் சென்ற யாவரையும் கொள்ளையிட்டார்கள்; அது அபிமேலேக்குக்கு அறிவிக்கப்பட்டது.

26 ஏபேதின் குமாரன் காகால் தன் சுற்றத்தாரோடே சீகேமுக்கு வந்து குடியேறினான்; சீகேமின் குடும்பத்தலைவர் அவனில் நம்
27 பிக்கைகொள்ள ஆரம்பித்தார்கள். ஒரு நாள் அவர்கள் தங்கள் தோட்டங்களுக்குப்போய்த் திராட்சக்குலைகளை அறுத்து ஆலியாட்டி ஆடிப்பாடித் தங்கள் தேவதையின் கோவிலுக்குள் போய்ப் புசித்துக் குடித்து அபிமேலேக்கைச் சபித்தார்கள்.
28 அப்பொழுது ஏபேதின் குமாரன் காகால்: அபிமேலேக்கு யார்? சீகேமியராகிய நாம் யார்? நாம் அவனைச் சேவிக்கவேண்டியதென்ன? அவன் யெருபாகாலின் மகன் அல்லவா? செபூல் அவன் காரியக்காரன் அல்லவா? சீகேமின் தகப்பனாகிய கமோரின் மனுஷரையே சேவியுங்கள்; நாம்
29 இவனை சேவிப்பானேன்? இந்த ஜனங்கள் மாத்திரம் என் கைக்குள் இருந்தால் போதும், நான் அபிமேலேக்கைத் துரத்திவிடுவேன்; தன் சேனையெல்லாம் கூட்டிக்கொண்டு எதிர்வரும்படி அபிமேலேக்குக்
30 குச் சொல்லியனுப்புவேன் என்றான். பட்டணத்தின் அதிகாரியாகிய செபூல் ஏபேதின் குமாரனாகிய காகாலின் வார்த்தைகளைக் கேள்விப்படவே கோபமூண்டவனாகி |
31 இரகசியமாய் அபிமேலேக்கினிடம் ஆட்களை அனுப்பி: இதோ, ஏபேதின் குமாரன் காகாலும் அவன் சுற்றத்தாரும் சீகேமுக்கு வந்திருக்கிறார்கள், இதோ, பட்டணத்தை உமக்கு விரோதமாக எழுப்புகிறார்கள்.
32 நீர் உம்மோடிருக்கும் சேனையைக் கூட்டிக்கொண்டு இரவில் எழுந்துவந்து வெளியிலே
33 பதிவிருந்து | காலமே சூரியோதயத்தில் எழும்பிப் பட்டணத்தின்மேல் விழுந்து அவனும் அவனோடிருக்கிற ஜனங்களும் உமக்கு எதிரே வெளிப்பட்டு வரும்போது உமது கைக்கு வருகிறபடி அவனுக்குச் செய்யும் என்று சொல்லச்சொன்னான்.
34 அப்படியே அபிமேலேக்கும் அவனோடிருந்த சேனைமுழுவதும் இரவில் எழுந்து போய்ச் சீகேமுக்கு விரோதமாக நாலு பிரி
35 வாய்ப் பதிவிருந்தார்கள். ஏபேதின் குமாரன் காகால் வெளிப்பட்டு ஊர் வாசலில் வந்து நின்றான்; அப்பொழுது அபிமேலேக்கும் அவனோடிருந்த சேனையும் தாங்கள் பதிவிருந்த இடங்களிலிருந்து எழும்பிவந்தார்
36 கள். காகால் அந்த ஜனங்களைக்கண்டு: இதோ, மலைகளிலிருந்து ஜனங்கள் இறங்கிவருகிறார்கள் என்று செபூலினிடம் சொன்னான். அதற்குச் செபூல்: நீ மலைகளின் நிழலைக்கண்டு, மனுஷர் என நினைக்கிறாய் என்றான். காகாலோ திரும்பவும்: இதோ, 37 ஜனங்கள் தேசத்தின் நடுமேடு எனும் இடத்திலிருந்து இறங்கிவருகிறார்கள், ஒரு படை குறிசொல்லுவோரின் கர்வாலிமரத்தின் வழியாய் வருகிறது என்றான். அது கேட்ட 38 செபூல்: அபிமேலேக்கை நாம் சேவிக்கிறதற்கு அவன் யார் என்று நீ சொன்னாயே, அப்படிச் சொன்ன உன் வாய் இப்பொழுது எங்கே? நீ நிந்தித்த ஜனங்கள் இவர்கள் அல்லவா? இப்பொழுது நீ போய் அவனோடே யுத்தம்பண்ணு என்றான். அப்பொ 39 ழுது காகால் சீகேமின் குடும்பத்தலைவரை நடத்திக்கொண்டு சென்று அபிமேலேக்கோடே யுத்தம்பண்ணினான். அபிமேலேக்கு 40 அவனைத் துரத்தவே அவன் அவனுக்கு முன்பாக ஓடினான்: ஊர் வாசல்மட்டும் அநேகர் வெட்டுண்டு விழுந்தார்கள். அபிமேலேக்கு 41 அருமாவில் இருந்துவிட்டான்; செபூல் காகாலையும் அவன் சுற்றத்தாரையும் சீகேமிலே குடியிராதபடி துரத்திவிட்டான்.

மறுநாளிலே ஜனங்கள் வெளியிலே வய 42 லுக்குப்போனார்கள். அது அபிமேலேக்குக்கு அறிவிக்கப்பட்டபோது | அவன்தன் சேனை 43 யைக் கூட்டிக்கொண்டுசென்று அவர்களை மூன்று பிரிவாக வகுத்து வெளியிலே பதிவிருந்து அந்த ஜனங்கள் பட்டணத்திலிருந்து வெளியே வருகிறதைக்கண்டு அவர்கள்மேல் எழும்பி அவர்களை வெட்டினான். அபிமேலேக்கும் அவனோடிருந்த படையும் 44 விரைந்து வந்து ஊர்வாசலில் நின்றுகொண்டார்கள்; மற்ற இரண்டு படைகளுமோ வெளியிலிருந்த யாவர்மேலும் விழுந்து அவர்களை வெட்டினார்கள். அபிமேலேக்கு அந் 45 நாள் முழுதும் பட்டணத்தோடு யுத்தம் பண்ணி அதைப்பிடித்து அதிலிருந்த ஜனங்களைக்கொன்று பட்டணத்தை இடித்து விட்டு அதிலே உப்பு விதைத்தான்.

சீகேம் துருக்கத்திலிருந்தவர்கள் எல்லா 46 ரும் அதைக் கேள்விப்பட்டபோது அவர்கள் உடன்படிக்கை தேவதையின் கோவில் அரணுக்குள் நுழைந்துகொண்டார்கள். சீகேம் துருக்கத்திலிருந்தவர்கள் அனைவரும் 47 அங்கே கூடியிருந்தது அபிமேலேக்குக்கு அறிவிக்கப்பட்டபோது | அபிமேலேக் 48 கு தன்னோடிருந்த முழுச்சேனையோடும் சல்மோன் மலையில் ஏறித் தன் கையிலே கோடரியைப்பிடித்து ஒரு மரக்கொம்பை வெட்டி அதை எடுத்துத் தன் தோளின்

மேல்போட்டுக்கொண்டு தன்னோடிருந்தவர்களைப் பார்த்து: நான் செய்ததைப் பார்த்தீர்களே, நீங்களும் சிக்கிரமாய் அப்படியே
49 செய்யுங்கள் என்று சொல்ல | யுத்தவீரர் அனைவரும் ஆளுக்கு ஒருகொம்பை வெட்டிக்கொண்டு அபிமேலேக்கின் பின்னே சென்று அவைகளை அந்த அரண் அருகே போட்டு நெருப்புவைத்துக் கொளுத்திவிட்டார்கள்; சிகேம் துருக்கத்திலிருந்தவர்கள் அனைவரும் புருஷரும் ஸ்திரீகளுமாய் ஆயிரம்பேர் மாண்டார்கள்.
50 பின்பு அபிமேலேக்கு தேபேசுக்குப் போய், அதற்கு விரோதமாய்ப் பாளைய
51 மிறங்கி அதைப்பிடித்தான். அந்தப் பட்டணத்தின் நடுவே பலத்த துருக்கம் ஒன்று இருந்தது; அந்த ஊரின் குடும்பத்தலைவர் அனைவரும், சகல புருஷரும் ஸ்திரீகளும், ஓடி அதனுள் புகுந்து கதவை உள்ளே பூட்டிவிட்டுத் துருக்கத்தின் மாடிமேல்
52 ஏறிக்கொண்டார்கள். அபிமேலேக்கு அந்தத் துருக்கமட்டும் வந்து அதைத் தாக்கித் துருக்கத்தின் கதவைச் சுட்டெரித்துப்
53 போடும்படி அதைக் கிட்டிவந்தான். அப்பொழுது ஒரு ஸ்திரீ ஒரு ஏந்திரமேற்கல்லை அபிமேலேக்குடைய தலையின்மேல் போட்டாள்; அது அவன் மண்டையை உடைத்
54 தது. உடனே அவன் தன் ஆயுதஞ்சுமப்பவனைக் கூப்பிட்டு: ஒரு ஸ்திரீ அவனைக் கொன்றாள் என்று என்னைப்பற்றிப் பேசிக்கொள்ளாதபடி நீ உன் பட்டயத்தை எடுத்து என்னைக் கொன்றுபோடு என்று அவனிடம் சொன்னான்; அப்படியே அவன் வேலைக்காரன் அவனை உருவக்குத்தினான்,
55 அவன் செத்தான். அபிமேலேக்கு செத்துப்போனதை இஸ்ரவேலர் கண்டபோது அவர்கள் தங்கள் தங்கள் இடங்களுக்குப்
56 போய்விட்டார்கள். அபிமேலேக்கு தன் னுடைய எழுபது சகோதரரையும் கொன்று தன் தகப்பனுக்குச் செய்த பொல்லாப்பைக் கடவுள் இப்படியாக அவன்மேலே திரும்
57 பப்பண்ணினார்; சிகேமியர் செய்த சகல பொல்லாப்பையும் கடவுள் அவர்கள் தலையின்மேல் திரும்பப்பண்ணினார்; யெருபாகாலின் குமாரன் யோதாமின் சாபம் அவர்கள் மேல் வந்தது.

**10** அபிமேலேக்குக்குப்பின்பு தோதோவின் மகனாகிய பூவாவின் குமாரன் தோலா இஸ்ரவேலை இரட்சிக்க எழும்பினான்; அவன் இசக்கார் கோத்திரத்தான்; ஏப்பிராயீம்
2 மலைநாட்டில் ஷாமீரிலே குடியிருந்தான். அவன் இஸ்ரவேலை இருபத்துமூன்று வருஷம் நியாயம் விசாரித்தபின் மரித்தான். ஷாமீரிலேயே அவனை அடக்கம்பண்ணினார்கள்.

அவனுக்குப் பின்பு கிலெயாத்தியனான 3
யாவீர் எழும்பி இஸ்ரவேலை இருபத்திரண்டு
வருஷம் நியாயம் விசாரித்தான், அவனு 4
க்கு முப்பது குமாரர் இருந்தார்கள்; அவர்களுக்கு முப்பது ஊர்கள் இருந்தன; அவர்கள் முப்பது கழுதைக்குட்டிகளின்மேல் சவாரி செய்பவர்கள்; அவர்கள் ஊர்கள் கிலெயாத் நாட்டிலே இருந்தன; அவ்வூர்களுக்கு இந்நாள்வரைக்கும் யாவீர்ப்பட்டிகள் என்று பேர் வழங்குகிறது. யாவீர் 5
மரித்துக் காமோனிலே அடக்கம்பண்ணப்பட்டான்.

இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் யெகோ 6
வாவின் பார்வைக்குத் தீமையானதைச் செய்து, பாகால்களையும் அஸ்தோரேத்துக்களையும் சீரியாவின் தேவர்களையும் சீதோனின் தேவர்களையும் மோவாபின் தேவர்களையும் அம்மோன் புத்திரரின் தேவர்களையும் பெலிஸ்தியரின் தேவர்களையும் சேவித்தார்கள்; அவர்கள் யெகோவாவைச் சேவியாமல் அவரை விட்டு விலகிப்போனார்கள். 7
அப்பொழுது யொகோவா இஸ்ரவேலின் மேல் கோபமூண்டு அவர்களைப் பெலிஸ்தியர் கையிலும் அம்மோன் புத்திரர் கையிலும் விற்றுப்போட்டார். இவர்கள் அந்த வரு 8
ஷமுதல் பதினெட்டு வருஷகாலம் யோர்தானுக்கு அப்பால் கிலெயாத்திலுள்ள எமோரியரின் தேசத்திலிருந்த இஸ்ரவேல் புத்திரரையெல்லாம் நெருக்கி ஒடுக்கினார்கள். அம்மோன் புத்திரர் யூதாவுக்கும் 9
பென்யமீனுக்கும் எப்பிராயீம் கோத்திரத்தாருக்கும் விரோதமாய் யுத்தம்பண்ண யோர்தானைக் கடந்துவந்தார்கள்; இஸ்ரவேலருக்கு மிகவும்நெருக்கம் உண்டானது.

இஸ்ரவேல் புத்திரர் யெகோவாவை நோ 10
க்கி அபயமிட்டு: உமக்கு விரோதமாகப் பாவம் செய்தோம்; நாங்கள் எங்கள் கடவுளை விட்டுப் பாகால்களைச் சேவித்தோம் என்றார்கள். யெகோவாவோ இஸ்ரவேல் புத் 11
திரரிடம்: எகிப்தியர், எமோரியர், அம்மோன் புத்திரர், பெலிஸ்தியர் ஆகிய இவர்கள் கையிலிருந்து நான் உங்களை மீட்கவில்லையா? | சீதோனியரும் அமலேக்கிய 12
ரும் மாகோனியரும் உங்களை ஒடுக்கின சமயங்களில் நீங்கள் என்னை நோக்கி அபயமிட்டபோது நான் உங்களை அவர்கள் கைக்கு நீங்கலாக்கி இரட்சித்தேன். நீங் 13
களோ என்னை விட்டு விலகி அந்திய தேவர்களைச் சேவித்தீர்கள்; இனி நான் உங்களை இரட்சியேன். நீங்கள் போங்கள்; நீங்கள் 14

தெரிந்துகொண்ட தேவர்களிடம் அபயமிடுங்கள்; அவைகளே உங்கள் ஆபத்துக்காலத்தில் உங்களை இரட்சிக்கட்டும் என்று
15 சொல்லிவிட்டார். இதைக் கேட்கவே இஸ்ரவேல்புத்திரர் யெகோவாவினிடம் அபயமிட்டு: நாங்கள் செய்தது பாவம்; உமது பார்வைக்கு நலமானதையெல்லாம் தேவரீரே எங்களுக்குச் செய்யும், இந்தத் தடவைமாத்திரம் எங்களை இரட்சித்தருளும்
16 என்று சொல்லி | அந்திய தேவர்களைத் தங்கள் நடுவிலிருந்து அகற்றிவிட்டு யெகோவாவைத் தொழுதுகொண்டார்கள்; அவரும் இஸ்ரவேலின் வருத்தத்தைக் கண்டு மிகவும் மனமுருகினார்.

17 அம்மோன்புத்திரர் திரண்டுவந்து கிலெயாத்திலே பாளயமிறங்கினார்கள்; இஸ்ரவேல் புத்திரரும் கூடிவந்து மிஸ்பாவிலே
18 பாளயமிறங்கினார்கள். அப்பொழுது கிலெயாத்தின் சனியத்தலைவர் ஒருவரை யொருவர் பார்த்து: அம்மோன் புத்திரரோடு யுத்தம்பண்ணுவதற்கு முதல் முதல் போகிறவன் யார்? அவனே கிலெயாத்தின் குடிகளுக்கெல்லாம் தலைவனுவான் என்றார்கள்.

**11** கிலெயாத்தியனான யெப்தா பலத்த பராக்கிரமசாலி; அவன் கிலெயாத்துக்கு ஒரு
2 வேசியினிடம் பிறந்தவன். கிலெயாத்தின் மனைவியும் அவனுக்குக் குமாரர்களைப் பெற்றிருந்தாள்; அவன் மனைவி பெற்ற குமாரர் பெரியவர்களானபோது அவர்கள் யெப்தாவைத்துரத்தி, உனக்கு எங்கள் தகப்பன் வீட்டிலே சுதந்தரமில்லை; நீ பரஸ்திரீயின் மகன் என்று சொல்லி அவனைத்துரத்
3 தினார்கள். அப்பொழுது யெப்தா: தன் சகோதரரைவிட்டு ஓடிப்போய்த் தோப் நாட்டிலே குடியிருந்தான்; வீணரான மனுஷர் யெப்தாவோடே கூடிக்கொண்டு அவன் போகுமிடமெல்லாம் போய்வருவார்கள்.

4 சிலகாலைக்குப்பின்பு அம்மோன்புத்திரர் இஸ்ரவேலரோடு யுத்தம்பண்ணினார்கள்,
5 அவர்கள் இஸ்ரவேலரோடு யுத்தம்பண்ணும்போது கிலெயாத்தின் மூப்பர் யெப்தாவைத் தோப்நாட்டிலிருந்து அழைத்துவரப்
6 போனார்கள். அவர்கள் யெப்தாவைக் கண்டு: நீ வந்து எங்கள் சேனபதியாயிரு, அப்பொழுது நாங்கள் அம்மோன்புத்திரரோடு யுத்தம்பண்ணப்போவோம் என்றார்
7 கள். அதற்கு யெப்தா கிலெயாத்தின் மூப்பரைப் பார்த்து: என்னைப் பகைத்து என் தகப்பன் வீட்டிலிருந்து என்னைத் துரத்தினவர்கள் நீங்களேயல்லவா? இப்பொழுது உங்களுக்கு ஆபத்துநேரிட்டிருக்கிற சமயத்தில்
19

நீங்கள் என்னிடத்தில் ஏன் வருகிறீர்கள் என்றான். அதுகேட்ட கிலெயாத்தின் 8
மூப்பர் யெப்தாவினிடம்: நீ எங்களோடு வந்து அம்மோன் புத்திரருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணிக் கிலெயாத்தின்குடிகளாகிய எங்கள் அனைவர்மேலும் தலைவனாயிருக்க வேண்டும்; இதற்காகவே இப்பொழுது திரும்பவும் உன்னை நோக்கி வந்தோம் என்றார்கள். அதற்கு யெப்தா: அம்மோன் 9
புத்திரருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண நீங்கள் என்னைத் திரும்ப அழைத்துப் போனபின்பு யெகோவா அவர்களை என் கையில் ஒப்புக்கொடுத்தால் என்னை உங்களுக்குத் தலைவனாய் வைத்துக்கொள்வீர்களா என்று கிலெயாத்தின் மூப்பரைக் கேட்டான். கிலெயாத்தின் மூப்பர் யெப் 10
தாவினிடம்: நாங்கள் உன் வார்த்தையின் படியே செய்யாவிட்டால் யெகோவா நமக்கு நடுநின்று கேட்பார் என்றார்கள். அப் 11
பொழுது யெப்தா கிலெயாத்தின் மூப்பரோடுகூடப்போனான்; ஜனங்கள் அவனைத் தங்கள் தலைவனாகவும் சேனபதியாகவும் வைத்தார்கள். தான் சொல்லியவைகளையெல்லாம் யெப்தா மிஸ்பாவிலே யெகோவாவின் சந்நிதியில் ஆறிக்கைசெய்தான்.

பின்பு யெப்தா அம்மோன்புத்திரரின் 12
ராஜாவினிடம் ஆட்களை அனுப்பி: நீ என் தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண என்னிடம் வருகிறதற்கு எனக்கும் உனக்கும் என்ன என்று கேட்கச்சொன்னான்.
அம்மோன்புத்திரரின் ராஜா யெப்தாவின் 13
ஆட்களிடம்: இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்தபோது அர்னோன்துவக்கி யாபோக் மட்டும் யோர்தான்வரை எட்டியுள்ள என் தேசத்தைக் கட்டிக்கொண்டார்களே; இப்பொழுது அதை எனக்குச் சமாதானமாய்த் திரும்பக் கொடுத்துவிடவேண்டும் என்று சொல்லுங்கள் என்றான். யெப்தா மறுபடி 14
யும் அம்மோன்புத்திரரின் ராஜாவினிடம் ஆட்களை அனுப்பி; | யெப்தா சொல்லுகி 15
றது இதுவே, இஸ்ரவேலர் மோவாபியரின் தேசத்தையாகிலும் அம்மோன்புத்திரரின் தேசத்தையாகிலும் கட்டிக்கொண்டதில்லை. இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்த 16
போது வனாந்தரவழியாய்ச் செங்கடல்முதற்கொண்டு மட்டும்போய்ப் பின்பு காதேசைச் சேர்ந்தார்கள். அங்கிருந்து இஸ்ரவேலர் ஏதோ 17
மின் ராஜாவினிடம் ஆட்களை அனுப்பி, நாங்கள் உன் தேசத்துவழியாய்க் கடந்து போக இடங்கொடு என்று கேட்கச்சொன்னார்கள்; ஏதோமின் ராஜாவோ செவிகொடுக்கவில்லை; அப்படியே மோவாபின் ராஜாவி

னிடத்திற்கும் ஆள் அனுப்பினார்கள்; அவனும் சம்மதிக்கவில்லை. ஆகவே இஸ்ரவே
18 லர் காதேசிலே தரித்திருந்தார்கள். பின்பு அவர்கள் வனாந்தர வழியாய்ச் சென்று ஏதோம் தேசத்தையும் மோவாப் தேசத்தையும் சுற்றிப்போய் மோவாபின் தேசத்திற்குக் கிழக்கே வந்து அர்னோனுக்கு அப்பால் பாளயமிறங்கினார்கள். மோவாபின் எல்லைக்குள் செல்லவில்லை, அர்னோனே
19 மோவாபின் எல்லை. பின்பு இஸ்ரவேலர் எஸ்போனில் ஆளுகைசெய்த சீகோன் என்னும் எமோரியரின் ராஜாவினிடம் ஆட்களை அனுப்பி, நாங்கள் உன் தேசத்துவழியாய் எங்கள் இடத்திற்குக் கடந்துபோக உத்தரவுகொடு என்று சொல்லச் சொன்னார்
20 கள். சீகோன் இஸ்ரவேலரை நம்பாதிருந்தும் தன் எல்லையைக் கடந்துபோகிறதற்கு இடங்கொடுக்கவில்லை; அவன் தன் சைனிய முழுவதையும் கூட்டிவந்து யாகசாவிலே பாளயமிறங்கி இஸ்ரவேலரோடே யுத்தம்
21 பண்ணினான். இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா சீகோனையும் அவனுடைய சைனியமுழுதையும் இஸ்ரவேலரின் கையில் ஒப்புக்கொடுத்தார்; அவர்களை முறியடித்தார்கள்; அப்படியே இஸ்ரவேலர் எமோரியன் நாடு முழுதையும் வசப்படுத்திக்கொண்டார்
22 கள்; அந்தத் தேசத்தில் குடியிருந்தவர்கள் எமோரியர். அர்னோன்துவக்கி யாபோக் மட்டும் வனாந்தரம்துவக்கி யோர்தான்மட்டும் இருக்கிற எமோரியரின் நாடு முழுதை
23 யும் வசப்படுத்திக்கொண்டார்கள். இப்படியாக இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா எமோரியரைத் தமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முன்பாகத் துரத்தியிருக்க, நீர் அந்தத் தேசத்தைச் சொந்தமாக்கிக்
24 கொள்வது நியாயமோ? கெமோஷ் என்னும் உமது தேவதை உமக்குமுன்பாகத் துரத்துகிறவர்களின் தேசத்தை நீர் சொந்தமாக்கிக்கொள்ளமாட்டீரோ? அப்படியே எங்கள் கடவுளாகிய யெகோவா எங்களுக்குமுன்பாகத் துரத்துகிறவர்களின் தேசத்தையெல்லாம் நாங்களும் சொந்தமாக்கிக்
25 கொள்ளுகிறோம். மேலும் சிப்போரின் குமாரனாகிய பாலாக்கு என்னும் மோவாபின் ராஜாவைப்பார்க்கிலும் நீர் மேலானவரா? அவன் இஸ்ரவேலோடே எப்போதாகிலும் சண்டையிட்டானா? எப்போதாகிலும் அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்
26 ணினானா? இஸ்ரவேலர் எஸ்போனிலும் அதைச்சார்ந்த கிராமங்களிலும், ஆரோவேரிலும் அதைச் சார்ந்த கிராமங்களிலும், அர்னோன் நதியருகான சகல ஊர்களிலும் முந்நூறு வருஷம் குடியிருக்கிறார்களே; இவ்வளவு காலமாய் நீங்கள் அதைத் திருப்பிக்கொள்ளாதே போனதென்ன? நான் 27
உமக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்யவில்லை; நீர் எனக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறதினால் நீர்தான் எனக்கு அநியாயஞ் செய்கிறீர்; நியாயாதிபதியாகிய யெகோவாவே இன்று இஸ்ரவேல் புத்திரருக்கும் அம்மோன் புத்திரருக்கும் நடுநின்று நியாயம்தீர்ப்பார் என்று சொல்லச் சொன்னான். 28
அம்மோன் புத்திரரின் ராஜாவோ தனக்கு யெப்தா சொல்லியனுப்பின வார்த்தைகளுக்குச் செவிகொடாதே போனான்.

அப்பொழுது யெகோவாவின் ஆவி யெப் 29
தாவின்மேல் இறங்கினது; அவன் கிலெயாத்தையும் மனாசே நாட்டையும் கடந்து போய்க் கிலெயாத்திலிருக்கிற மிஸ்பாவுக்கு வந்து அங்கிருந்து அம்மோன்புத்திரருக்கு எதிரே போனான். அச்சமயத்தில் யெப்தா 30
யெகோவாவுக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணி: தேவரீர் அம்மோன்புத்திரரை என் கையில் ஒப்புக்கொடுப்பீரேயானால் | நான் அம்மோன் புத்திரரிடமிருந்து ஜெயம் 31
பெற்றுத் திரும்பிவரும்போது என் வீட்டு வாசற்படியிலிருந்து எனக்கு எதிர்கொண்டு வருவது எதுவோ அது யெகோவாவுக்கு உரியதாகும், அதைத் தகனபலியாகச் செலுத்துவேன் என்றான்.

யெப்தா அம்மோன்புத்திரரோடு யுத்தம் 32
பண்ண அவர்களுக்கு எதிரே போனான்; யெகோவா அவர்களை அவன் கையில் ஒப்புக்கொடுத்தார். அவன் அவர்களை ஆரோ 33
வேரிலிருந்து மின்னீத்திற்குப் போகும் வழிமட்டும் ஆபேல்கெராமீம்வரைக்கும் மகா சங்காரமாய் முறியடித்து இருபது ஊர்களைப் பிடித்தான்; இப்படியாக அம்மோன்புத்திரர் இஸ்ரவேல்புத்திரருக்குமுன்பாக அடக்கப்பட்டார்கள்.

யெப்தா மிஸ்பாவிலிருந்த தன் வீட்டுக் 34
குத் திரும்பிவந்தபோது, இதோ, அவன் குமாரத்தி தம்புரு வாசித்து நடனஞ்செய்து அவனுக்கு எதிர்கொண்டுவந்தாள்; அவள் அவனுக்கு ஒரே பிள்ளை; அவளையன்றி அவனுக்குக் குமாரனும் இல்லை குமாரத்தியும் இல்லை. அவன் அவளைக் காணவே தன் 35
வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: ஐயோ! என் மகளே, என்னை மிகவும் மனமடியச்செய்கிறாய்; நீயும் என்னை அபாயத்துக்குட்படுத்துகிறவளானாயே; நான் யெகோவாவின் முன்பாக என் வாய்திறந்து சொல்லிவிட்டேன்; அதை நான் மாற்றமுடியாது என்றான். அப்பொழுது அவள்: என் தகப்பனே, நீர் 36

யெகோவாவின் முன்பாக உம்முடைய வாயைத்திறந்து பேசினீரே, உமது வாயினுற் சொன்னபடியே எனக்குச் செய்யும். அம்மோன்புத்திரராகிய உமது சத்துருக்களினிடம் பழிவாங்கும் கியத்தை யெகோவா உமக்கு அருளினாரே என்று சொல்லிப் | 37 பின்னும் அவள் தன் தகப்பனிடம்: நான் ஒரு காரியம் கேட்டுக்கொள்ளுகிறேன் அதை எனக்கு அருளவேண்டும்; எனக்கு இரண்டு மாதம் தவணை கொடுத்தருளும் நான் மலைகளின்மேல் போய்த்திரிந்து நானும் என் தோழிமாரும் என் கன்னிமையினிமித்தம் துக்கம்கொண்டாடவேண்டும் என் 38 றாள். அதற்கு அவன், போய்வா என்று சொல்லி அவளை இரண்டு மாதத்திற்கு அனுப்பிவிட்டான்; அவள் தன் தோழிமாரோடுகூடப்போய்த் தன் கன்னிமையினிமித்தம் மலைகளின்மேல் துக்கம்கொண் 39 டாடி | இரண்டுமாதம் முடிந்த பின்பு தன் தகப்பனிடம் திரும்பிவந்தாள்; அப்பொழுது அவன் தான் பண்ணியிருந்த பொருத்தனையின்படியே அவளுக்குச் செய்தான்; அவள் புருஷனை அறியாதிருந்தாள். 40 இதினிமித்தம் இஸ்ரவேலின் குமாரத்திகள் வருஷந்தோறும் போய் நாலுநாள் கிலெயாத்தியனான யெப்தாவின் குமாரத்தியைப் பாடிக்கொண்டாடுவது இஸ்ரவேலிலே வழக்கமாயிற்று.

**12** எப்பிராயீமியர் எகமாய்கூடி வடக்கே சென்று யெப்தாவைக் கண்டு: உன்னோடு வரும்படி நீ எங்களைக் கூப்பிடாமல் அம்மோன்புத்திரரோடு யுத்தம்பண்ணப் போனதென்ன? உன் வீட்டை உன்னோடுகூட நெருப்பில் எரித்துவிடுவோம் என்றார் 2 கள். அதற்கு யெப்தா: எனக்கும் என் சனியத்திற்கும் அம்மோன்புத்திரரோடே பெரிய சண்டை உண்டாயிருந்தபோது, நான் உங்களைக் கூப்பிட்டேன்; நீங்களோ என்னை அவர்கள் கைக்கு நீங்கலாக்கி 3 இரட்சிக்கவில்லை. நீங்கள் துணையாக வரவில்லை என்று காணவே நான் என் உயிரைப் பெரிதென்று கருதாமல் அம்மோன் புத்திரருக்கு எதிரே போனேன்; யெகோவா அவர்களை என் கையில் ஒப்புக்கொடுத்தார்; இப்படியிருக்க, நீங்கள் என்னோடு யுத்தம் பண்ண இன்று என்னிடம் வரவேண்டியது 4 என்ன என்று சொன்னான். பின்பு யெப்தா கிலெயாத்தியர் அனைவரையும் கூட்டிக்கொண்டு சென்று எப்பிராயீமியரோடு யுத்தம்பண்ணி அவர்களை முறியடித்தான். எப்பிராயீமியர் கிலெயாத்தியரை ஏளனமாய்ப்பேசி: நீங்கள் எப்பிராயீமியரிலிருந்து ஓடிப்போனவர்கள்; கிலெயாத்தியரான நீங்கள் எப்பிராயீமியருமல்ல, மனாசேயருமல்ல என்றும் சொல்லியிருந்தார்கள், கிலெயாத்தியர் எப்பிராயீமியருக்கு முன்னி 5 யோர்தானின் இறங்கு துறைகளைப் பிடித்துக்கொண்டார்கள்; அப்பொழுது எப்பிராயீமியரில் தப்பினவன் யாராவது வந்து: என்னை அக்கரைக்குப்போகவிடு என்று கேட்பானானால் கிலெயாத்தியர், நீ எப்பிராயீமனா என்று அவனை விசாரிப்பார்கள்; அவன் அல்ல என்றால், | நீ ஷிபோலேத் 6 என்று சொல் என்பார்கள்; அவன் அப்படி உச்சரிக்க முடியாமல் சிபோலேத் என்பான்; எனவே அவனைப் பிடித்து யோர்தான் துறையிலே வெட்டிவிடுவார்கள். அக்காட்களிலே எப்பிராயீமியரில் நாற்பத்திராயிரம்பேர் விழுந்தார்கள்.

யெப்தா இஸ்ரவேலை ஆறு வருஷம் நியா 7 யம் விசாரித்தான்; பின்பு கிலெயாத்தியனான யெப்தா மரித்து, கிலெயாத்திலுள்ள ஒரு ஊரில் அடக்கம்பண்ணப்பட்டான்.

அவனுக்குப் பின்பு பெத்லெகேம் ஊரா 8 னாகிய இப்சான் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தான். அவனுக்கு முப்பது குமார 9 ரும் முப்பது குமாரத்திகளும் இருந்தார்கள். முப்பதுகுமாரத்திகளையும் வெளியிலே விவாகம்பண்ணிக்கொடுத்துத் தன் முப்பது குமாரருக்கும் வெளியிலே பெண்கொண்டான். அவன் இஸ்ரவேலை ஏழு வருஷம் நியாயம் விசாரித்தான். பின்பு இப்சான் மரித்து பெ 10 த்லெகேமிலே அடக்கம்பண்ணப்பட்டான்.

அவனுக்குப்பின்பு செபுலோனியனான 11 ஏலோன் இஸ்ரவேலை நியாயம்விசாரித்தான். அவன் பத்துவருஷம் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தான், பின்பு செபுலோனியனான 12 ஏலோன் மரித்துச் செபுலோன் நாட்டிலுள்ள ஆயலோனில் அடக்கம்பண்ணப்பட்டான்.

அவனுக்குப் பின்பு இல்லேலின் குமார 13 னாகிய பிரத்தோனியனான அப்தோன் இஸ்ரவேலை நியாயம்விசாரித்தான், அவனுக்கு 14 நாற்பது குமாரரும் முப்பது பேரப்பிள்ளைகளும் இருந்தார்கள். அவர்கள் எழுபது கழுதைகளின்மேல் சவாரிசெய்வார்கள்; அவன் இஸ்ரவேலை எட்டு வருஷம் நியாயம் விசாரித்தான். பின்பு பிரத்தோனிய 15 னான இல்லேலின் குமாரனாகிய அப்தோன் மரித்து எப்பிராயீம் தேசத்தில் அமலேக்கியர் குடியிருந்த மலைநாட்டுப்பிரத்தோனிலே அடக்கம்பண்ணப்பட்டான்.

இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் யெகோ **13** வாவின் பார்வைக்குத் தீமையானதைச்

செய்தபடியால் யெகோவா அவர்களை நாற்பது வருஷமளவும் பெலிஸ்தியர்கையில் ஒப்புக்கொடுத்தார்.

2 அக்காலத்தில் சோரா ஊரிலே தாண் வம்சத்தைச் சேர்ந்த ஒருவனிருந்தான்; அவன் பேர் மனோவா; அவன் மனைவி பிள்ளை
3 பெறுதல் மலடியாயிருந்தாள். யெகோவாவின் தூதனொருவன் அவளுக்குத் தரிசனமாகி அவளோடு பேசி: பிள்ளைபெறுதல் மலடியானீ, இதோ, கர்ப்பந்தரித்து ஒரு
4 ஆண்பிள்ளையைப் பெற்றெடுப்பாய். நீ திராட்சரசமும் மதுவும் அருந்தாதே, தீட்டானது ஒன்றும் சாப்பிடாதே; கர்ப்பந்தரித்து ஒரு
5 மகனைப் பெறுவாய். நீ கர்ப்பந்தரித்து ஒரு ஆண்பிள்ளையைப் பெற்றெடுப்பாய்; அவன் தலையில் சவரக்கத்தி படலாகாது; அந்தப் பிள்ளை பிறந்தது முதல் கடவுளுக்கென்று நசரேனனாயிருப்பான்; அவன் இஸ்ரவேலைப் பெலிஸ்தியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்
6 சிக்கத்தொடங்குவான் என்றார். அப்பொழுது அவள் தன் புருஷனிடம் வந்து: தெய்வமனுஷன் ஒருவர் என்னிடம் வந்தார்; தெய்வதூதன்போற் காணப்பட்டார், அவருடைய தோற்றம் மிகவும் பயங்கரமாயிருந்தது; எங்கிருந்துவந்தீர் என நான் அவரிடம் கேட்கவில்லை; அவர் தமது நாமத்தை எனக்குச் சொல்லவுமில்லை.
7 அவர் என்னிடம்: இதோ, நீ கர்ப்பந்தரித்து ஒரு ஆண்பிள்ளையைப் பெற்றெடுப்பாய்; நீ திராட்சரசமும் மதுவும் அருந்தாதே, தீட்டானது ஒன்றும் சாப்பிடாதே; அந்தப்பிள்ளை பிறந்ததுமுதல் தன் மரணநாள்மட்டும் கடவுளுக்கென்று நசரேனனாயிருப்பான் என்று சொன்னார் என்றாள்.
8 அப்பொழுது மனோவா யெகோவாவினிடம் விண்ணப்பம்பண்ணி: என் ஆண்டவரே, நீர் அனுப்பின தெய்வமனுஷன் மறுபடியும் எங்களிடம் வந்து, பிறக்கப்போகிற பிள்ளைக்கு நாங்கள் செய்யவேண்டியதை எங்களுக்குக் கற்பிப்பாராக என்று வேண்
9 டிக்கொண்டான். கடவுள் மனோவாவின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்தார்; அவன் மனைவி வயல்வெளியில் இருக்கும்போது கடவுளின் தூதன் திரும்பவும் அவளிடம் வந்தான்; அவள் புருஷனாகிய மனோ
10 வா அப்பொழுது அங்கே இல்லை. ஆகவே அவள் சீக்கிரமாய் ஓடி, இதோ, அன்று என்னிடம் வந்தவர் திரும்பவும் வந்திருக்கிறார் என்று தன் புருஷனுக்கு அறிவிக்க
11 வே | மனோவா எழுந்திருந்து தன் மனைவியின்பின்னே சென்று அவனிடம் வந்து: இந்த ஸ்திரீயோடே பேசினவர் நீர்தானா என்று அவனிடம் கேட்டான்; அவன் நான்தான் என்று சொன்னான். அப்பொழுது மனோ 12
வா: நீர் சொன்ன காரியம் நிறைவேறும்போது, அந்தப்பிள்ளையை எப்படி வளர்க்கவேண்டும், அது செய்யப்போகிறதென்ன என்று கேட்டான். யெகோவாவின் தூதன் 13
மனோவாவினிடம்: நான் ஸ்திரீயினிடம் சொன்ன யாவற்றின் விஷயத்திலும் அவள் காக்கிரதையாயிருக்கவேண்டும்; திராட்சச் 14
செடியில் விளைவதொன்றையும் சாப்பிடலாகாது, திராட்சரசத்தையும் மதுவையும் அருந்தலாகாது, தீட்டானதொன்றையும் சாப்பிடவேண்டாம், நான் அவளுக்குக் கட்டளையிட்டதையெல்லாம் கைக்கொள்ள வேண்டும் என்றார். அதுகேட்ட மனோ 15
வா யெகோவாவின் தூதனிடம்: சற்று நேரம் தரித்திரும், நாங்கள் ஒரு வெள்ளாட்டுக்குட்டியை உமக்காகச் சமைத்துக் கொண்டு வருகிறோம் என்றான். யெகோ 16
வாவின் தூதன் மனோவாவினிடம்: நீ என்னை இருக்கச்செய்தாலும் நான் உன் உணவைப் புசிப்பதில்லை; நீ தகனபலி இடுவாயானால் அதை யெகோவாவுக்குச் செலுத்து என்றார். அவன் யெகோவாவின் தூதன் என்பதை மனோவா அறிந்து கொள்ளவில்லை. பின்னும் மனோவா யெகோவாவின் தூத 17
னைப்பார்த்து: உமது திருநாமம் என்ன? நீர் சொன்ன காரியம் நிறைவேறும்போது நாங்கள் உம்மைக் கௌரவப்படுத்தவேண்டுமே என்று கேட்டான். அதற்கு யெகோவா 18
வின் தூதன்: என் நாமம் என்ன என்று நீ கேட்கவேண்டியது என்ன? அது அதிசயமானது என்றார். மனோவா போய், வெள் 19
ளாட்டுக் குட்டியையும் போஜனபலியையும் கொண்டுவந்து அதைக் கற்பாறையின் மேல் யெகோவாவுக்குப் படைத்தான்; அப்பொழுது மனோவாவும் அவன் மனைவியும் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே ஒரு அதிசயம் நடந்தது. அக்கினிஜ்வாலை 20
பலிபீடத்திலிருந்து வானத்திற்கு நேராக எழும்புகையில் யெகோவாவின் தூதன் பலிபீடத்தின் ஜ்வாலையிலே ஏறிப்போய் விட்டான்; அதை மனோவாவும் அவன் மனைவியும் கண்டு தரையிலே முகங்குப்புற விழுந்து பணிந்தார்கள். அதன்பின் யெ 21
கோவாவின் தூதன் மனோவாவுக்கும் அவன் மனைவிக்கும் காணப்படவில்லை; அவன் யெகோவாவின் தூதன் என்று இப்பொழுதுதான் மனோவா அறிந்தான். அறி 22
யவே அவன் தன் மனைவியைப்பார்த்து, நாம் சாவது நிச்சயம், கடவுளைக் கண்டோம் என்று சொன்னான். அவன் மனைவியோ 23

அவனிடம்: நம்மைக் கொன்றுபோடுவது யெகோவாவின் சித்தமென்றால் அவர் நமது கையிலே தகனபலியையும் போஜனபலியையும் அங்கீகரித்திருக்கமாட்டார், இவைகளையெல்லாம் நமக்குக் காண்பித்திருக்கமாட்டார், இவைகளை நமக்கு அறிவித்திருக்கவுமாட்டார் என்றான்.

24 பின்பு அவள் ஒரு ஆண்பிள்ளையைப் பெற்று அதற்குச் சிம்சோன் என்று பேரிட்டாள்; அந்தப்பிள்ளை வளர்ந்தது; யெகோ
25 வா அவனை ஆசீர்வதித்தார். அவன் சோராவுக்கும் எஸ்தாவோலுக்கும் நடுவிலுள்ள மகனேதாணில் இருக்கையில் யெகோவாவின் ஆவி அவனைத் தூண்டத்தொடங்கினது.

**14** சிம்சோன் திம்னாவுக்குப்போய்த் திம்னாவிலே பெலிஸ்தியரின் குமாரத்திகளில் ஒரு
2 பெண்ணைக் கண்டு, திரும்பிவந்து தன் தாய் தகப்பன்மாரைப் பார்த்து: திம்னாவிலே பெலிஸ்தியரின் குமாரத்திகளில் ஒரு பெண்ணைக்கண்டேன்; அவளை எனக்குக் கொள்ள
3 வேண்டும் என்றான். அப்பொழுது அவன் தாயும் தகப்பனும் அவனைப் பார்த்து: நீ போய் விருத்தசேதனமில்லாத பெலிஸ்தியரிடம் பெண்கொள்ள வேண்டியதென்ன? உன் சகோதரரின் குமாரத்திகளிலும் எங்கள் ஜனமனைத்திலும் பெண் இல்லையா என்றார்கள். சிம்சோனே தன் தகப்பனிடம்: அவள் என் கண்ணுக்குப் பிரியமானவள், அவளையே எனக்குக் கொள்ளவேண்டும் என்றான்.
4 பெலிஸ்தியரின் கேட்டுக்கு ஒரு முகாந்தரம் வேண்டுமென யெகோவா செய்த செயலே இது என்று அவன் தாய்தகப்பனையர்க்குத் தெரியவில்லை; அக்காலத்திலே பெலிஸ்தியர் இஸ்ரவேலை ஆண்டுவந்தார்கள்.

5 அப்படியே சிம்சோனும் அவன் தாய் தகப்பன்மாரும் திம்னாவுக்குப் போனார்கள்; அவர்கள் திம்னாவூர் திராட்சத் தோட்டங்களுக்கு வந்தபோது, இதோ, கெர்ச்சிக்கிற பாலசிங்கம் ஒன்று அவனுக்கு எதிராக வந்
6 தது. அப்பொழுது யெகோவாவின் ஆவி வல்லமையோடு அவன்மேல் இறங்கவே, அவன் தன் கையில் ஒன்றுமில்லாதிருந்தும் அதை ஒரு ஆட்டுக்குட்டியைக் கிழிக்கிறதுபோல் கிழித்துவிட்டான்; தான் செய்ததையோ அவன் தன் தாய்தகப்பனுக்கு
7 அறிவிக்கவில்லை. அவன் போய் அந்தப் பெண்ணோடே பேசினான்; அவள் சிம்சோனின் கண்ணுக்குப் பிரியமாயிருந்தாள்.
8 சில நாளைக்குப்பின்பு அவன் அவனை விவாகம்பண்ணத் திரும்பி வந்தபோது சிங்கத்தின் உடலைப் பார்க்கிறதற்கென்று வழிவிலகிப்போனான்; இதோ, சிங்கத்தின் உடலுக்குள்ளே தேனீக்கூட்டமும் தேனும் இருந்தது. அவன் அதைத் தன் கைகளில் எடுத்து 9
துச் சாப்பிட்டுக்கொண்டே நடந்து தன் தாய்தகப்பனிடம் வந்து, அவர்களுக்கும் கொடுத்தான்; அவர்களும் சாப்பிட்டார்கள்; தான் அந்தத் தேனைச் சிங்கத்தின் உடலிலே எடுத்ததையோ அவர்களுக்கு அறிவிக்கவில்லை.

அவன் தகப்பன் அந்தப் பெண் இருந்த 10
இடத்திற்குப் போனபோது, சிம்சோன் அங்கே விருந்து செய்தான்; வாலிபர் அப்படிச்செய்வது வழக்கம். பெலிஸ்தியர் அவ 11
னைக் கண்டபோது அவனோடிருக்கும்படி முப்பது தோழரை அவனிடம் அழைத்து வந்தார்கள். சிம்சோன் அவர்களிடம்: ஒரு 12
விடுகதையை உங்களுக்குச் சொல்லுகிறேன்; அதை நீங்கள் விருந்துண்கிற ஏழு நாளைக்குள்ளே கண்டுபிடித்து எனக்கு விடுவித்தால், நான் உங்களுக்கு முப்பது உள்சட்டைகளையும் முப்பது மேல்சட்டைகளையும் கொடுப்பேன். அதை எனக்கு விடு 13
விக்காதேபோனால், நீங்கள் எனக்கு முப்பது உள்சட்டைகளையும் முப்பது மேல்சட்டைகளையும் கொடுக்கவேண்டும் என்றான். அதற்கு அவர்கள்: உன் விடுகதையைச் சொல்லு; நாங்கள் அதைக் கேட்கட்டும் என்றார்கள். அப்பொழுது அவன்: 14

பட்சிப்போனிலிருந்து பட்சணம்
வந்தது;
கொடியவனிலிருந்து இனிமை
வந்தது

என்று சொன்னான்; அந்த விடுகதை அவர்களால் மூன்றுநாள் மட்டும் விடுவிக்க முடியாதே போயிற்று. நாலாம் நாளிலே அவர் 15
கள் சிம்சோனின் பெண்ஜாதியைப்பார்த்து: உன் புருஷன் அந்த விடுகதையை எங்களுக்கு விடுவிக்கும்படி நீ அவனை நயம் பண்ணு; இல்லாவிட்டால் நாங்கள் உன் தகப்பன்வீட்டை உன்னோடுகூட அக்கினியால் சுட்டெரித்துப்போடுவோம்; எங்களுக்குள்ளவைகளைப் பறித்துக்கொள்ளவா எங்களை அழைத்தீர்கள் என்றார்கள். சிம்சோனின் 16
பெண்ஜாதி அழுது அவனை விடாமல் பற்றிக்கொண்டே யிருந்து: உனக்கு என்மேல் அன்பில்லை, பகையே இருக்கிறது; என் ஜனங்களுக்கு ஒரு விடுகதையைச் சொன்னாய், அதை எனக்கு விடுவிக்காமலே இருக்கிறாய் என்று கேட்க அவன்: இதோ, நான் என் தாய்தகப்பனுக்கும் அதை விடுவிக்க வில்லையே, உனக்கு விடுவிப்பேனோ என்றான். விருந்துண்கிற ஏழுநாளும் அவள் 17
அழுது அவனை விடாமல் பற்றிக்கொண்டே

யிருந்தாள்; அவள் அவனை அலட்சிக்கொண்டே யிருந்தபடியால் ஏழாம்நாளில் அதை அவளுக்கு விடுவித்தான்; அப்பொழுது அவள் தன் ஜனங்களுக்கு அந்த
18 விடுகதையை விடுவித்தாள். ஆகவே ஏழாம் நாளில் பொழுதுபோகுமுன்னே அவ்வூரார் அவனிடம் வந்து:

தேனிலும் இனிமை யாதோ?
சிங்கத்திலும் கொடியது யாதோ

என்று சொல்லிவிட்டார்கள். அதைக் கேட்டபோது அவள்:

நீங்கள் என் கிடாரியால் உழுததில்லையே
என் விடுகதையை அறிவதில்லையே

19 என்று சொன்னாள். யெகோவாவின் ஆவி வல்லமையோடே அவன்மேல் இறங்கினது; அவன் அஸ்கலோனுக்குப்போய் அவ்வூராரில் முப்பதுபேரைக் கொன்று அவர்கள் வஸ்திரங்களை உரிந்து கொண்டுவந்து விடுகதையை விடுவித்தவர்களுக்கு அந்தச் சட்டைகளைக் கொடுத்துவிட்டுக் கோபமூண்டவனாய்த் தன் தகப்பன் வீட்டுக்குப் போய்
20 விட்டான். சிம்சோனின் பெண்ஜாதியோ வென்றால் அவன் தோழரில் அவனுக்கு மாப்பிள்ளைத்தோழனாயிருந்த ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாள்.

**15** சிலநாள் சென்றபின்பு சிம்சோன் கோதுமை அறுக்கிற நாட்களிலே தன் பெண்ஜாதியைப் பார்த்து வரும்படி ஒரு வெள்ளாட்டுக்குட்டியைக் கொண்டுபோனான். அவன் தன் மனைவியின் தகப்பனைக்கண்டு: என் பெண்ஜாதியிருக்கிற அறைவீட்டுக்குள் என்னைப் போகவிடும் என்றுகேட்க, அவள் தகப்பன் அவனைப்போக வொட்டாமல்
2 தடுத்து: நீ அவளை முற்றிலும் வெறுத்துவிட்டாய் என்று நான் எண்ணி அவளை உன் சிநேகிதனுக்குக் கொடுத்துவிட்டேன்; அவள் தங்கை இருக்கிறாள்; தமக்கையிலும் அழகானவள்; அவளுக்குப்பதிலாக இவள் உனக்கு மனைவியாகட்டும் என்று
3 சொன்னாள். அப்பொழுது சிம்சோன்: நான் பெலிஸ்தியருக்குப் பொல்லாப்புச் செய்தாலும் இப்பொழுது என்மேல் குற்றமிராது என்று அவர்களுக்குச் சொல்லிவிட்டுப்
4 போய்! முந்நூறு நரிகளைப் பிடித்துப் பந்தங்களை எடுத்து வாலோடேவால் சேர்த்து இரண்டு வால்களுக்கும் இடையே ஒவ்
5 வொரு பந்தத்தை வைத்துக் கட்டி! பந்தங்களைக் கொளுத்திப் பெலிஸ்தியரின் வெள்ளாண்மையிலே அவைகளை ஓடவிட்டுக் கதிர்க்கட்டுகளையும் வெள்ளாண்மையையும் திராட்சத்தோட்டங்களையும் ஒலிவத்தோப்பு
கூடையும் கொளுத்திவிட்டான். இப்படிச் 6
செய்தவன் யார் என்று பெலிஸ்தியர் கேட்டபோது திம்னா ஊரான் மருமகன் சிம்சோனே செய்தான்; அவன் பெண்ஜாதியை அவன் தோழனுக்குக் கொடுத்து விட்டபடியால் அப்படிச் செய்தான் என்றார்கள். அப்பொழுது பெலிஸ்தியர் போய் அவளையும் அவள் தகப்பனையும் சுட்டெரித்துப் போட்டார்கள். அதுகண்ட 7
சிம்சோன் அவர்களிடம்: நீங்கள் இப்படிச் செய்தபடியால் நான் உங்கள் கையிலே பழிவாங்கித் தீருமளவும் சும்மா இரேன் என்று சொல்லி! அவர்களைச் சின்னபின்ன 8
மாகச் சங்காரம்பண்ணிவிட்டுப் போய் ஏத்தாம்ஊர் அருகே இருந்த கன்மலைச்சந்து ஒன்றிலே குடியிருந்தான்.

அப்பொழுது பெலிஸ்தியர்போய் யூதாவில் 9
பாளயமிறங்கி லேகியிலே பரவியிருந்தார்கள், நீங்கள் எங்களுக்கு விரோதமாக 10
வந்தது ஏன்ன என்று யூதாநாட்டார் அவர்களிடம் சென்று கேட்க அவர்கள்: சிம்சோன் எங்களுக்குச் செய்ததுபோல நாங்களும் அவனுக்குச் செய்யும்படி அவனைக் கட்டிக்கொண்டுபோகிறதற்காக வந்தோம் என்றார்கள். அப்பொழுது யூதா 11
நாட்டாரிலே மூவாயிரம்பேர் ஏத்தாம் ஊர்க் கன்மலைச் சந்திற்குப்போய்: பெலிஸ்தியர் நம்மை ஆளுகிறார்கள் என்று தெரியாதா? என் எங்களுக்கு இப்படிச்செய்தாய் என்று சிம்சோனிடம் கேட்டார்கள். அதற்கு அவன்: அவர்கள் எனக்குச்செய்தபடியே நானும் அவர்களுக்குச் செய்தேன் என்றான். அப்பொழுது அவர்கள்: உன் 12
னைக் கட்டிப் பெலிஸ்தியர் கையில் ஒப்புக்கொடுக்க வந்திருக்கிறோம் என்று சொல்லச் சிம்சோன்: நீங்களே என்னைக் கொல்வதில்லை என்று எனக்கு ஆணையிடுங்கள் என்றான். அதற்கு அவர்கள்: நாங்கள் 13
உன்னை இறுகக்கட்டி அவர்கள் கையில் ஒப்புக்கொடுப்போமே அல்லாமல் உன்னைக் கொன்றுபோடுவதேயில்லை என்று சொல்லி, இரண்டு புதுக்கயிறுகளாலே அவனைக் கட்டிக் கன்மலையிலிருந்து கொண்டுபோனார்கள். அவன் லேகிக்கு வந்துசேரவே 14
பெலிஸ்தியர் அவனைக்கண்டு ஆரவாரம் பண்ணினார்கள்; அச்சமயத்தில் யெகோவாவின் ஆவி அவன்மேல் வல்லமையோடே இறங்கினது, அவன் புயங்களைக் கட்டியிருந்த கயிறுகள் நெருப்புப்பட்ட நூல் போலாகிக் கட்டுகள் அவன் கைகளைவிட்டு அறுந்துபோயின. அவன் கழுதையின் 15
பச்சைத் தாடையெலும்பு ஒன்றைக்கண்டு

தன் கையை நீட்டி அதை எடுத்து அதைக்
கொண்டு ஆயிரம்பேரைக் கொன்றுபோட்
16 டான். அப்பொழுது சிம்சோன்:
கழுதையுடைய தாடை யெலும்பி
னல்
குவித்துவிட்டேன் பிணக்குவியல்.
கழுதையுடைய தாடையெலும்பினல்
ஆயிரம்பேரையே கொன்றுவிட்
டேன்|
17 என்று சொல்லிக்கொண்டு தன் கையில்
இருந்த தாடையெலும்பை எறிந்துவிட்டு,
அவ்விடத்திற்கு ராமாத்லேகி என்று பேரி
ட்டான்.
18 அவனுக்குத் தாகம் அதிகரித்தது, அதி
கரிக்கவே அவன் யெகோவாவினிடம் அப
யமிட்டு: தேவரீர் உமது அடியேன் கையி
னல் இந்தப் பெரிய இரட்சிப்பைக் கட்
டளையிட்டீரே, இப்பொழுது நான் தாகத்
தினல் செத்து, விருத்தசேதனம் இல்லாத
வர்கள் கையிலே விழவேண்டுமோ என்
19 ருன். அப்பொழுது கடவுள் லேகியிலிருந்த
பள்ளத்தைப் பிளக்கப்பண்ணினர்; அதில்
இருந்து தண்ணீர் ஓடிவந்தது; அவன் குடித்த
போது அவன் உயிர் திரும்பவந்தது, அவன்
பிழைத்தான்; ஆகவே அதற்கு ஏன்கோரே
என்று பேரிட்டான்; அது இந்நாள்வரை
20 யும் லேகியில் இருக்கிறது. அவன் பெலி
ஸ்தியரின் நாட்களிலே இஸ்ரவேலை இருபது
வருஷம் நியாயம்விசாரித்தான்.

**16** பின்பு சிம்சோன் காத்சாவுக்குப்போய்
அங்கே ஒரு வேசியைக்கண்டு, அவளிடம்
2 போனன். சிம்சோன் அங்கே வந்திருக்கிற
தாகக் காத்சா ஊராருக்குத் தெரியவந்தது.
அவர்கள் காலையில் வெளிச்சமாகிறபோது
அவனைக் கொன்றுபோடுவோம் என்று
சொல்லி அவனை வளைந்துகொண்டு இரா
முழுதும் அவனுக்காக ஊர்வாசலில் பதிவி
ருந்து இரவிலே ஒன்றும் செய்யாதிருந்
3 தார்கள். சிம்சோன் நடுராத்திரிமட்டும்
படுத்திருந்து, நடுராத்திரியில் எழுந்து பட்ட
ணத்தின்வாசல் கதவுகளையும் அதின் இர
ண்டு நிலைகளையும் பிடித்துத் தாழ்ப்பாளோ
டேகூடப் பேர்த்துத் தன் தோளின்மேல்
வைத்து எப்பெரோனுக்கு எதிரேயிருக்கிற
மலையின் உச்சிக்குச் சுமந்துகொண்டு போ
னன்.
4 அதற்குப் பின்பு அவன் சோரேக்தேரோ
டையருகே குடியிருந்த தெலீலாள் என்
னும் பேருள்ள ஒரு ஸ்திரீயினிடம் காத
5 லாகிச் சிநேகமாயிருந்தான். பெலிஸ்திய
ரின் ஆண்டவன்மார் அவளிடம் சென்று:
நீ அவனை நயம்பண்ணி, அவனுடைய
பெரிய பலம் எதிலே இருக்கிறது என்றும்,
நாங்கள் அவனைக்கட்டி அடக்குவதற்குச்
செய்யவேண்டியதென்ன என்றும் அறிந்து
சொல்; அப்பொழுது நாங்கள் ஒவ்வொரு
வரும் உனக்கு ஆயிரத்து நூறு வெள்ளிக்
காசு கொடுப்போம் என்ருர்கள். அப் 6
படியே தெலீலாள் சிம்சோனைப்பார்த்து:
உன் பெரிய பலம் எதிலே இருக்கிறது,
உன்னைக்கட்டி அடக்குவதற்குச் செய்ய
வேண்டியதென்ன? நீ எனக்குச் சொல்ல
வேண்டும் என்று கேட்கச் சிம்சோன்: உல 7
ராத பச்சையான ஏழு நார்க்கயிறுகளாலே
என்னைக் கட்டினல் நான் பலட்சயமாகிச்
சாதாரண மனுஷன்போல் ஆவேன் என்
ருன். அப்பொழுது பெலிஸ்தியரின் ஆண் 8
டவன்மார் உலராத பச்சையான ஏழு நார்க்
கயிறுகளை அவளிடம் கொண்டுவந்தார்கள்;
அவைகளால் அவள் அவனைக் கட்டினுள்.
பதிவிருக்கிறவர்கள் அறைவீட்டிலே காத்தி 9
ருக்கும்போது அவள்: சிம்சோனே பெலிஸ்
தியர் உன்மேல் வந்துவிட்டார்கள் என்ருள்;
அப்பொழுது நெருப்புப்பட்ட சணல்நூல்
அறுந்துபோவதுபோல அவன் அந்தக் கயி
றுகளை அறுத்துப்போட்டான்; அவன்
பலம் எதில் இருக்கிறதென்று அறியப்பட
வில்லை. அப்பொழுது தெலீலாள் சிம்சோ 10
னைப்பார்த்து: இதோ, என்னைப் பரியாசம்
பண்ணினாய்; நீ எனக்குச் சொன்னது
பொய்; உன்னை எதினலே கட்டலாம்
என்று இப்போது எனக்குச்சொல் என்
ருள். அதற்கு அவன்: இதுவரை எந்த 11
வேலைக்கும் உபயோகியாத புதுக்கயிறுக
ளால் என்னை இறுகக்கட்டினல் நான் பலட்
சயமாகிச் சாதாரண மனுஷன்போல்
ஆவேன் என்ருன். அப்பொழுது தெலீ 12
லாள் புதுக்கயிறுகளை வாங்கி அவைகளால்
அவனைக் கட்டிவிட்டு, சிம்சோனே, பெலி
ஸ்தியர் உன்மேல் வந்துவிட்டார்கள் என்
ருள்; பதிவிருக்கிறவர்கள் அறைவீட்டிற்
குள் இருந்தார்கள்; அவனே தன் புயங்
களில் இருந்த கயிறுகளை ஒரு நூலைப்போல
அறுத்துவிட்டான். அப்போது தெலீலாள் 13
சிம்சோனைப் பார்த்து: இதுவரைக்கும் என்
னைப் பரியாசம்பண்ணிவருகிருய்; நீ என்
னிடம் பேசுவது வெறும் பொய்யே; உன்
னை எதினலே கட்டலாம் எனக்குச்சொல்
என்ருள்; அதற்கு அவன் நீ என் தலைமயி
ரின் ஏழு ஜடைகளையும் நெசவு நூல்பாவோ
டே பின்னிவிட்டால் ஆகும் என்ருன்.
அப்படியே அவள் செய்து அவைகளை 14
ஆணியடித்து மாட்டிவிட்டு, சிம்சோனே,
பெலிஸ்தியர் உன்மேல் வந்துவிட்டார்கள்

என்ருள்; அவன் நித்திரைவிட்டெழுந்து
கூசவு ஆணியையும் நூல்பாவையும்கூடப்
15 பிடுங்கிக்கொண்டு போனுன். அப்பொழுது
அவள் அவனேப்பார்த்து: நீ உன் இருதயத்
தைத்திறந்து என்னேடு பேசவில்லேயே;
என்மேல் காதலாயிருப்பதாக நீ சொல்லு
வது எப்படி? இந்த மூன்று விசையும் நீ
என்னேப் பரியசசம்பண்ணிவிட்டாய்; உன்
பெரிய பலம் எதிலே இருக்கிறது என்று
எனக்குச் சொல்லாமற்போனுயே என்று
16 சொன்னுள். இப்படியாக அவனேத் தினம்
தினம் தன் வார்த்தைகளினுலே நெருக்கி
அலட்டிக்கொண்டிருக்கவே சாவுக்கேது
17 வாப் அவன் விசனம் அதிகரித்தது. அவன்
தன் இருதயத்தைத் திறந்து எல்லாவற்றை
யும் அவளுக்கு வெளிப்படுத்தி: சௌரக்
கத்தி என் தலேயில் படவில்லே; நான் என்
தாயின் கர்ப்பத்தில் பிறந்ததுமுதல் கடவு
ளுக்கென்று நசீரனுனவன்; என் தலே
சிரைக்கப்பட்டால் என் பலம் என்னேவிட்
டுப்போம்; நான் பலட்சயமாகிச் சாதாரண
மனுஷன்போலாவேன் என்று அவளிடம்
18 சொல்லிவிட்டான். அவன் தன் இருதயத்
திலுள்ளதையெல்லாம் தனக்கு வெளிப்படுத்
தினதைத் தெலீலாள் காணவே அவள்
பெலிஸ்தியரின் ஆண்டவன்மாருக்கு ஆள்
அனுப்பி: இந்த விசை வாருங்கள், அவன்
தன் இருதயத்திலுள்ளதையெல்லாம் என
க்கு வெளிப்படுத்திவிட்டான் என்று சொல்
லச் சொன்னுள். பெலிஸ்தியரின் ஆண்ட
வன்மார் வெள்ளிக்காசுகளேத் தங்கள்
கையில் எடுத்துக்கொண்டு அவளிடம் வந்
19 தார்கள். அவள் அவனேத் தன் மடியிலே
நித்திரைசெய்யப்பண்ணிவிட்டு ஒருவனே
அழைத்து அவன் தலேமயிரின் ஏழு ஜடை
களேயும் சிரைப்பித்தாள், அவனே மேற்கொ
ண்டாள்; அவன் பலம் அவனேவிட்டு நீங்
20 கிற்று. அப்பொழுது அவள்: சிம்சோனே,
பெலிஸ்தியர் உன்மேல் வந்துவிட்டார்கள்
என்று சொல்ல அவன் நித்திரைவிட்டு
விழித்து எப்போதும்போல உதறிப்போட்
டுத் தப்பிவிடுவேன் என்ருன்; யெகோவா
தன்னேவிட்டு விலகினதை அவன் அறிய
21 வில்லே. பெலிஸ்தியர் அவனேப்பிடித்து அவன்
கண்களேப் பிடுங்கி அவனேக் காத்சாவுக்குக்
கொண்டுபோய் அவனுக்கு இரண்டு செப்பு
விலங்குகளேமாட்டி சிறைச்சாலேயிலே மாவ
ரைத்துக்கொண்டிருக்க வைத்தார்கள்.
22 அவன் தலேமயிர் சிரைக்கப்பட்டபின்பு
23 திரும்பவும் வளரத்தொடங்கிற்று. பெலிஸ்
தியரின் ஆண்டவன்மார்: நமது பகைஞனு
கிய சிம்சோனே நமது தேவன் நமது கையில்
ஒப்புக்கொடுத்தார் என்று சொல்லித் தங்
கள் தேவனுகிய தாகோனுக்கு ஒரு பெரிய
பலிசெலுத்தவும் சந்தோஷம் கொண்டா
டவும் கூடிவந்தார்கள். ஜனங்கள் அவனேக் 24
கண்டவுடனே: நமது தேசத்தைப் பாழாக்கி
நம்மில் அநேகரைக் கொன்றுபோட்ட
நமது பகைஞனே நமது தேவன் நமது
கையில் ஒப்புக்கொடுத்தார் என்று சொல்
லித் தங்கள் தேவனேப் புகழ்ந்தார்கள்.
இப்படி அவர்கள் மனங்களித்திருக்கும் 25
போது: நாம் வேடிக்கைபார்க்கும்படி சிம்
சோனேக் கூட்டிவாருங்கள் என்ருர்கள்;
அப்பொழுது சிம்சோனேச் சிறைச்சாலேயி
லிருந்து அழைத்துவந்தார்கள். அவன்
அவர்களுக்கு வேடிக்கையாஞன்; அவனேத்
தூண்களுக்கு நடுவே நிறுத்தினுர்கள்.
சிம்சோன் தனக்குக் கைலாகுகொடுத்து 26
நடத்திவந்த பிள்ளேயாண்டானிடம்: வீட்
டைத் தாங்குகிற தூண்களே நான் தடவிப்
பார்க்கும்படி விடு; நான் அவைகளில்
சாய்ந்துகொண்டிருப்பேன் என்ருன். அந்த 27
வீடுநிறையப் புருஷரும் ஸ்திரீகளும் இருந்
தார்கள்; அங்கே பெலிஸ்தியரின் சகல
ஆண்டவன்மாரும் இருந்தனர். புருஷ
ரும் ஸ்திரீகளும் ஏறக்குறைய மூவாயிரம்
பேர் சிம்சோன் வேடிக்கையைப் பார்த்துக்
கொண்டிருந்தார்கள். அப்பொழுது சிம் 28
சோன் யெகோவாவை நோக்கிக் கூப்பிட்டு:
யெகோவாவே, ஆண்டவரே, நான் என்
இரண்டு கண்களுக்காக ஒரே தீர்வையாய்ப்
பெலிஸ்தியர் கையிலே பழிவாங்கும்படி
இந்த ஒருவிசைமாத்திரம் என்னே நினேத்
தருளும், கடவுளே, பலப்படுத்தியருளும்
என்று சொல்லிக்கொண்டு | சிம்சோன் 29
அந்த வீட்டைத் தாங்கிநின்ற இரண்டு
நடுத்தூண்களில் ஒன்றைத் தன் வலதுகை
யினுலும் மற்றொன்றைத் தன் இடதுகையி
னுலும் பிடித்து | நான் பெலிஸ்தியரோடே 30
மடியட்டும் என்று சொல்லிப் பலமாய்த்
சாய்க்கவே அந்த வீடு அதில் இருந்த ஆண்
டவன்மார்மேலும் சகல ஜனங்கள்மேலும்
விழுந்தது. அவன் உயிரோடிருக்கையில்
அவனுல் கொல்லப்பட்டவர்களேப் பார்க்கி
லும் அவன் சாகும்போது அவனுல் கொல்
லப்பட்டவர்கள் அதிகமானுர்கள். பின்பு 31
அவன் சகோதரரும் அவன் தகப்பன் வீட்
டார் அனேவரும் போய் அவனே எடுத்து
வந்து, சோராவுக்கும் எஸ்தாவோலுக்கும்
நடுவே, அவன் தகப்பனுகிய மனோவாவின்
கல்லறையில் அடக்கம்பண்ணினர்கள்.
அவன் இஸ்ரவேலே இருபதுவருஷம் நியா
யம்விசாரித்தான்.

17 எப்பிராயீம் மலைநாட்டிலே மீகா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் இருந்தான்.
2 அவன் ஒருநாள் தன் தாயினிடம் போய்: உன்னிடமிருந்த ஆயிரத்துநூறு வெள்ளிக்காசு களவுபோயிற்றே, அதைக்குறித்து என் காது கேட்க நீ சாபமிட்டாயே, அந்தப் பணம், இதோ, என்னிடம் இருக்கிறது; அதை எடுத்தவன் நான்தான் என்றான். அதற்கு அவன் தாய்: என் மகனே, உன்மேல் யெகோவாவின் ஆசீர்வாதம் என்
3 றான். அவன் அந்த ஆயிரத்துநூறு வெள்ளிக்காசையும் தன் தாயினிடம் திரும்பக் கொடுக்கவே அவள்: என் கையிலிருக்கிற இந்த வெள்ளியை நான் யெகோவாவுக்கென்றே பிரதிஷ்டை செய்கிறேன்; வெட்டுச்சுரூபம் ஒன்றையும் வார்ப்புவிக்கிரகம் ஒன்றையும் செய்வதற்கென அதை என் மகனுக்கு ஒப்புவிக்கிறேன்; இப்போது இதை உனக்குத் திரும்பக்கொடுக்கிறேன்
4 என்றாள். அவன் அந்த வெள்ளியைத் தன் தாய்க்குத் திரும்பக்கொடுத்துவிட்டான்; கொடுத்துவிடவே அவள் இருநூறு வெள்ளிக்காசை எடுத்துத் தட்டான்கையிலே கொடுத்தாள். அவன் அதைக்கொண்டு வெட்டுச்சுரூபம் ஒன்றும் வார்ப்புவிக்கிரகம் ஒன்றும் செய்தான்; அவைகள் மீகா
5 வின் வீட்டில் இருந்தன. இந்த மீகா சுவாமிக்கென ஒரு வீடு கட்டியிருந்தான்; அவன் ஒரு ஏபோத்தையும் சுரூபங்களையும் செய்து தன் குமாரரில் ஒருவனைப் பிரதிஷ்
6 டைபண்ணினான். இவன் அவனுக்கு ஆசாரியனானான். அக்காட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை, அவனவன் தன் தன் பார்வைக்குச் சரியெனத் தோன்றிய படியே செய்துவந்தான்.
7 யூதாவிலுள்ள பெத்லெகேமிலே ஒரு வாலிபன் இருந்தான்; அவன் ஒரு லேவியன்; யூதாவின் குடும்பத்திற்குரியவன்; அவன் பெத்லெகேமிலே பரதேசியாய்த்
8 தங்கியிருந்தான். அவன் எங்கேயாகிலும் போய்ப் பரதேசியாய்த் தங்கும்படி யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரைவிட்டுப் பிரயாணம்போகையில் எப்பிராயீம் மலைநாட்டிலே மீகாவின் வீட்டில் வந்து சேர்ந்
9 தான். எங்கே யிருந்து வந்தாய் என்று மீகா அவனைக் கேட்டதற்கு அவன்: நான் யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரிலிருந்து வருகிற லேவியன், எங்கேயாகிலும் போய்ப் பரதேசியாய்த் தங்கப்போகிறேன் என்றான்.
10 அப்பொழுது மீகா: நீ என்னிடத்திலே இரு, நீ எனக்குத் தகப்பனும் ஆசாரியனுமாயிரும்பாய்; நான் உனக்கு வருஷத்திலே பத்து வெள்ளிக்காசையும் மாற்று வஸ்திரத்தையும் உனக்குவேண்டிய ஆகாரத்தையும் கொடுப்பேன் என்றான். அப்படியே லேவியன் உள்ளே போனான். அந்த லேவியன் அந்த மனிதனிடத்தில் இருக்கச் சம்மதித்தான்; அந்த வாலிபன் அவனுக்கு அவன் குமாரரில் ஒருவனைப்போலிருந்தான். மீகா அந்த லேவியனைப் பிரதிஷ்டைபண்ணினான்; அந்த வாலிபன் மீகாவுக்கு ஆசாரியனாகி அவன் வீட்டில் இருந்தான். அப்பொழுது மீகா: யெகோவா எனக்கு நன்மைசெய்வார் என்று இப்பொழுது எனக்குத்தெரியும்; எனக்கு ஆசாரியனாக ஒரு லேவியன் அகப்பட்டானே என்றான்.

11
12

18 அக்காட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை; அக்காலத்தில் தாண் கோத்திரத்தார் குடியிருக்கிறதற்குத் தங்களுக்குச் சுதந்தரம் தேடிக்கொண்டிருந்தார்கள்; அந்நாள் வரை அவர்களுக்கு இஸ்ரவேல் கோத்திரங்கள் நடுவே சுதந்தரம் கிடைக்கவில்லை,
2 ஆகவே தேசத்தை வேவு பார்த்து ஆராய்ந்து வரும்படி தாண்புத்திரர் தங்கள் கோத்திரத்திலே தங்களில் தெரிந்தெடுத்த பராக்கிரம சாலிகளாகிய ஐவரைச் சோராவிலும் எஸ்தாவோலிலுமிருந்து அனுப்பி, நீங்கள் போய்த்தேசத்தை ஆராய்ந்துபார்த்து வாருங்கள் என்று அவர்களிடம் சொன்னார்கள்; அவர்கள் எப்பிராயீம் மலைநாட்டில் இருக்கிற மீகாவின் வீடுமட்டும் போய், அங்கே இராத்தங்கினார்கள். அவர்கள் மீகாவின் வீட்டண்
3 டை இருக்கையில் லேவியனான வாலிபனின் குரலைக்கேட்டு அறிந்து அவனிருந்த இடத்திற்குப்போய்: உன்னை இங்கே அழைத்து வந்தது யார்? இவ்விடத்தில் என்ன செய்கிறாய்? உனக்கு இங்கே எப்படியிருக்கிறது என்று அவனிடம் கேட்டார்கள். அதற்கு
4 அவன், மீகா தனக்குச் செய்தவைகளைச் சொல்லித் தனக்குச் சம்பளம் பேசினதாகவும் தான் அவனுக்கு ஆசாரியனானதாகவும் சொன்னான். அப்பொழுது அவர்கள் அவ
5 னிடம்: எங்கள் பிரயாணம் வாய்க்குமா வென்று நாங்கள் அறியும்படி கடவுளினிடம் கேள் என்றார்கள். அவர்களுக்கு
6 அந்த ஆசாரியன்: சமாதானத்தோடே போங்கள்; உங்கள் பிரயாணத்தை யெகோவா கண்ணோக்கிக் காப்பார் என்றான்.

7 அப்பொழுது அந்த ஐவரும்போய் லாயிசுக்கு வந்து அதிலிருந்த ஜனங்களைக் கண்டார்கள்; அந்த ஜனங்கள் சீதோனியர் குடியிருக்கிறபடியே பயமின்றிக் குடியிருந்தார்கள். அவர்கள் மோசம் வராதென்றெண்

வரிச் சுகமாயிருந்தவர்கள். தேசத்திலே அவர்களை அடக்கி ஆள ஒருவரும் அதிகாரம் வகித்திருக்கவில்லை; அவர்கள் இருந்த இடத்துக்கும் சீதோனியர் இருந்த இடத்துக்கும் வெகுதூரமிருந்தது; அவர்களுக்கு வேறெவரோடும் யாதொரு சம்பந்தமும் 8 இருக்கவில்லை. இவற்றைக்கண்டு அந்த ஐவரும் சோராவிலும் எஸ்தாவோலிலும் இருந்த தங்கள் சகோதரரிடம் திரும்பிவந்தார்கள். அவர்கள் சகோதரர்: நீங்கள் கொண்டுவருகிற செய்தி என்ன என்று 9 கேட்கவே | அவர்கள்: எழுந்திருங்கள், அவர்களுக்கு விரோதமாய்ப் போவோம் வாருங்கள்; அந்த தேசத்தைப் பார்த்தோம், அது மிகவும் நல்லதேசம்; நீங்கள் சும்மாயிருக்கப்போகிறீர்களா? அந்தத் தேசத்தைச் சொந்தமாக்கிக்கொள்ளப்போகத் தாமதிக்க 10 வேண்டாம். அந்த தேசத்திலுள்ளவர்கள் மோசம்வராதென்று எண்ணியிருக்கிற ஜனங்கள்; அந்தத் தேசம் விஸ்தாரமானது; கடவுள் அதை உங்கள் கையில் ஒப்புக்கொடுத்தார்; அது பூமியிலுள்ள சகல பொருட்களும் குறைவில்லாமலிருக்கிற இடம் என்றார்கள்.

11 அப்பொழுது சோராவிலும் எஸ்தாவோலிலும் இருந்த தாண் கோத்திரத்தாரில் அறுநூறுபேர் ஆயுதபாணிகளாய் அங்கே 12 யிருந்து புறப்பட்டுப்போய் | யூதாவிலுள்ள கீரியாத் யெயாரீமிலே பாளையமிறங்கினார்கள்; அதினால் அந்த இடம் இந்நாள்வரை மகனேதாண் என்னப்படுகிறது; அது கீரியாத் யெயாரீமின் பின்புறம் இருக்கிறது.

13 அவர்கள் அங்கிருந்து எப்பிராயீம் மலைக்குப் போய் மீகாவின் வீட்டுக்கு வந்தார்கள்.

14 அப்பொழுது லாயீசின் நாட்டை வேவு பார்க்கப்போய்வந்த ஐவரும் தங்கள் சகோதரரைப் பார்த்து: இந்த வீடுகளில் ஏபோத்தும் சுரூபங்களும் வெட்டுவிக்கிரகமும் வார்ப்புவிக்கிரகமும் இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா? இப்போதும் நீங்கள் செய்யவேண்டியதை யோசித்துக் 15 கொள்ளுங்கள் என்றார்கள். அப்பொழுது அவ்விடத்திற்கு விலகிப்போய் மீகாவின் குடும்பத்தோடு இருந்த லேவியனான வாலிபனின் வீட்டிலே வந்து அவன் சுகசெய்தி 16 யை விசாரித்தார்கள். ஆயுதபாணிகளான தாண்புத்திரர் அறுநூறுபேரும் வாசற்படி 17 யில் நின்றார்கள். ஆசாரியனும் ஆயுதபாணிகளாகிய அறுநூறுபேருமான வாசற்படியிலே நிற்கையில், தேசத்தை வேவுபார்க்கப்போய்வந்த அந்த ஐவரும் உள்ளே புகுந்து வெட்டுவிக்கிரகத்தையும் ஏபோத்தையும் சுரூபங்களையும் வார்ப்புவிக்கிரகத்தையும் எடுத்துக்கொண்டு வந்தார்கள். அவர்கள் மீகாவின் வீட்டுக்குள் புகுந்து 18 வெட்டுவிக்கிரகத்தையும் ஏபோத்தையும் சுரூபங்களையும்வார்ப்புவிக்கிரகத்தையும்எடுத்துக்கொண்டு வந்தபோது ஆசாரியன் அவர்களைப் பார்த்து: நீங்கள் செய்கிறது என்ன என்று கேட்டான். அதற்கு அவர்கள்: 19 நீ பேசாதே, உன் வாயைப் பொத்திக்கொண்டு எங்களோடே வந்து எங்களுக்குத் தகப்பனும் ஆசாரியனுமாயிரு; நீ ஒரே குடும்பத்துக்கு ஆசாரியனாயிருப்பது நல்லதோ? இஸ்ரவேலில் ஒரு வம்சத்திற்கும் கோத்திரத்திற்கும் ஆசாரியனாயிருப்பது நல்லதோ என்றார்கள். அப்பொழுது ஆசா 20 ரியன் சந்தோஷப்பட்டு ஏபோத்தையும் சுரூபங்களையும் வெட்டுவிக்கிரகத்தையும் எடுத்துக்கொண்டு ஜனங்களிடம்வந்து சேர்ந்துகொண்டான். அவர்கள் புறப்பட்டுப் 21 போனார்கள்; பிள்ளைகளும் ஆடுமாடுகளும் பண்டம்பாடிகளும் அவர்களுக்கு முன்னே போகும்படி செய்தார்கள். அவர்கள் மீகா 22 வின் வீட்டைவிட்டுச் சிறிதுதூரம் போகவே மீகாவின் வீட்டிற்கு அடுத்த வீடுகளிலிருந்தவர்கள் கூட்டங்கூடித் தாண்புத்திரரைத் தொடர்ந்து கிட்டிவந்து | அவர்களைக் கூப் 23 பிட்டார்கள்; அவர்கள் திரும்பிப் பார்த்து மீகாவினிடம்: நீ இப்படிக் கூட்டத்தோடு வருகிறதற்கு நேரிட்ட காரியம் என்ன என்று கேட்டார்கள். அதற்கு அவன்: 24 நான் செய்துவைத்திருந்த என்னுடைய தெய்வங்களையும், அந்த ஆசாரியனையுங் கூட, நீங்கள் கொண்டுபோகிறீர்களே; இனி எனக்கு என்ன இருக்கிறது; உனக்கு என்ன நேரிட்டதென நீங்கள் கேட்பதெப் படி என்றான். தாண்புத்திரர் அவனைப் 25 பார்த்து: இனி எங்களிடம் ஒரு வார்த்தையும் பேசாதே, பேசினால் கோபிகள் உங்கள்மேல் விழுவார்கள்; அப்பொழுது உன்னுலேயே உன் உயிருக்கும் உன் வீட்டாரின் உயிருக்கும் மோசம் வருமென்று சொல்லிவிட்டுத் | தங்கள் வழியே நடந்து 26 போனார்கள்; அவர்கள் தன்னைப்பார்க்கிலும் பலத்தவர்கள் என்று மீகா காணவே அவன் அவர்களைவிட்டுத் திரும்பித் தன் வீட்டுக்குப் போனான். அவர்களோ மீகா 27 செய்திருந்தவைகளையும் அவனுக்கு ஆசாரியனாயிருந்தவனையும் கொண்டுபோய் லாயீசுக்கு, மோசம் வராதென்று எண்ணிச் சுகமாய் வாழ்ந்துகொண்டிருந்த ஜனங்களிடத்திற்கு, வந்துசேர்ந்தார்கள். தாண் கோத்திரத்தார் அவர்களை வாள்வாய்க்கு இரை

யாக்கி ஊரை அக்கினியால் சுட்டெரித்துப்
28 போட்டார்கள். அவர்களைத் தப்புவிப்பார் எவருமில்லை; அவர்கள் இடத்திற்கும் சீதோனுக்கும் வெகுதூரமிருந்தது; வேறெவரோடும் அவர்களுக்குச் சம்பந்தமுமில்லை. லாயீஸ் பேத்ரெகோபுக்குச் சமீபமான பள்ளத்தாக்கில் இருந்தது; தாண் கோத்திரத்தார் அதைத் திரும்பக்
29 கட்டி அதிலே குடியிருந்தார்கள். பூர்வத்திலே லாயீஸ் எனப் பேர் வழங்கிய அந்த ஊருக்கு இஸ்ரவேலின் குமாரனான தங்கள் தகப்பனாகிய தானுடைய நாமத்தின்படியே
30 தாண் என்று பேரிட்டார்கள். அங்கே தாண்புத்திரர் அந்த வெட்டுச்சுரூபத்தைத் தங்களுக்கு ஸ்தாபனம் பண்ணிக்கொண்டார்கள். மோசேயின் குமாரனாகிய கெர்சோனின் மகன் யோனத்தானும் அவன் குமாரரும், அந்தத் தேசத்தார் சிறைப்பட்டுப்போன நாள்மட்டும், தாண் கோத்திரத்
31 தாருக்கு ஆசாரியராயிருந்தார்கள். கடவுளின் வாசஸ்தலம் சீலோவிலிருந்த காலமெல்லாம் அவர்கள் மீகா செய்திருந்த சுரூபத்தையே வைத்துக்கொண்டிருந்தார்கள்.

**19** இஸ்ரவேலில் ராஜா இல்லாத அந்நாட்களிலே எப்பிராயீம் மலைநாட்டின் அந்தத் தூரதேசியாய்த் தங்கின ஒரு லேவியன் இருந்தான். அவன் யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊராளாகிய ஒரு ஸ்திரீயைத்
2 தனக்கு மறுமனையாட்டியாகக் கொண்டிருந்தான். அவள் அவனுக்குத் துரோகம் பண்ணி விபசாரம்செய்து அவனை விட்டு யூதாநாட்டுப் பெத்லெகேம் ஊரிலிருந்த தன் தகப்பன் வீட்டுக்குப்போய் அங்கே
3 நாலு மாதம் இருந்தாள். அவள் புருஷன் அவளோடே நலவுசொல்லவும் அவளைத் திரும்ப அழைத்துவரவும் அவளிடம்போகப் புறப்பட்டான். இரண்டு கழுதைகளை ஆயத்தப்படுத்தித் தன் வேலைக்காரனையும் கூட்டிக்கொண்டு போனான். அவன் அவ்வூர்போய்ச் சேரவே அவள் அவனைத் தன் தகப்பன் வீட்டுக்கு அழைத்துக்
4 கொண்டு போனாள்; அவள் தகப்பன் அவனைக் கண்டபோது சந்தோஷமாய் வரவேற்றுக்கொண்டான். அந்தப் பெண்ணின் தகப்பனாகிய அவன் மாமன் அவனை இருத்திக்கொண்டதினால் மூன்று நாள் அவனோடிருந்தான்; அவர்கள் அங்கே புசித்துக் குடித்
5 துத் தங்கியிருந்தார்கள். நாலாம் நாள் அதிகாலமே அவர்கள் எழுந்திருந்தார்கள்; அவன் பிரயாணத்துக்கு ஆயத்தமாகையில் பெண்ணின் தகப்பன் தன் மருமகனைப் பார்த்து: சிறிது ஆகாரம் புசித்துப் பலம்
6 படுத்திக்கொள்; பிற்பாடு நீங்கள் போகலாம் என்றான். அவர்கள் உட்கார்ந்து, இருவரும் ஒன்றாய்ப் புசித்துக் குடித்தார்கள்; பெண்ணின் தகப்பன் அந்த மனுஷனைப் பார்த்து: நீ உன் மனம் சம்மதித்து இன்று இரவும் இங்கே தங்கிக் களித்திரு
7 என்றான். அந்த மனுஷன் பிரயாணப்பட எழுந்தான்; அவனுடைய மாமனே அவனை வருந்திக்கொண்டான். ஆகவே அவன் அன்று இராத்திரியும் அங்கே இருந்தான். ஐந்தாம் நாளிலே அவன் போகிற
8 தற்கு அதிகாலமே எழுந்திருந்தபோது பெண்ணின் தகப்பன், உன்னைப் பலப்படுத்திக்கொள்ளவேண்டும் என்றான்; அப்படியே அந்திநேரமட்டும் தாமதித்திருந்து இருவரும் போஜனம்பண்ணினார்கள். பின்பு
9 அவனும் அவன் மறுமனையாட்டியும் அவன் வேலைக்காரனும் போகிறதற்கு எழுந்திருந்தபோது பெண்ணின் தகப்பனாகிய அவன் மாமன்: இதோ, பொழுதுபோய்விட்டது, சாயங்காலமுமாயிற்று, இங்கே இராத்திரிக்கு இருங்கள்; பார், மாலைமயங்குகிற வேளையாயிற்று; நீ இங்கே இராத்தங்கிக் களித்திரு; நாளை இருட்டோடே எழுந்திருந்து உன் வீட்டுக்குப் போகலாம் என்றான். அந்த மனுஷனே இராத்திரிக்கு
10 இருக்கச் சம்மதிக்காமல் இரண்டு கழுதைகள் மேலும் சேணம்வைத்துத் தன் மறுமனையாட்டியைக் கூட்டிக்கொண்டு எழுந்து புறப்பட்டு எருசலேமாகிய எபூசுக்கு
11 எதிரே வந்தான். அவர்கள் எபூசண்டையில் வருகையிலே பொழுதுபோகிறதாயிருந்தது; வேலைக்காரன் தன் எஜமானைப் பார்த்து: எபூசியரின்
12 ஊருக்குப்போய் அங்கே இராத்தங்கலாம் என்றான். அதற்கு அவன் எஜமான்: நாம் வழியைவிட்டு இஸ்ரவேல் புத்திரரில்லாத தும் மறுஜாதியார் வசிக்கிறதுமான ஊருக்குப்போகப்படாது; அப்பாலே கிபியாமட்டும் போவோம் என்று சொல்லித் | தன்
13 வேலைக்காரனைப் பார்த்து: நாம் கிபியாவிலாகிலும் ராமாவிலாகிலும் இராத்தங்கும்படி அவைகளில் ஒரு இடத்திற்குப் போய்ச் சேரும்படி போவோம் வா என்றான். அப்படி
14 யே அப்பாலே போனார்கள்; பென்யமீன் நாட்டைச் சேர்ந்த கிபியாவின் கிட்டவருகையில் சூரியன் அஸ்தமனமாயிற்று. ஆகவே
15 கிபியாவிலே வந்து இராத்தங்கும்படி வழியை விட்டு அவ்விடத்திற்குப் போனார்கள்; அவன் ஊருக்குள் போனபோதோ இராத்தங்குகிறதற்கு அவர்களை வீட்டிலே சேர்த்

தூக்கொள்வாரில்லை; அவன் ஊர் வெளி
16 யிலே உட்கார்ந்தான். வயலிலே வேலை
செய்து மாலையிலே திரும்புகிற ஒரு கிழவன்
வந்தான்; அந்த மனுஷனும் எப்பிராயீம்
மலைநாட்டான். அவன் கிபியாவிலே சஞ்
சரிக்க வந்திருந்தான்; அவ்வூராரோ பென்
17 யமீனியர். அந்தக் கிழவன் தலைநிமிர்ந்து
பார்த்து ஊரின் வீதியிலே அந்தப் பிரயாணி
இருக்கக்கண்டு: எங்கே போகிறாய், எங்கி
ருந்து வந்தாய் என்று கேட்டான். அதற்கு
18 அவன்: நாங்கள் யூதாவிலுள்ள பெத்லெகே
மிலிருந்து வந்தோம், எப்பிராயீம் மலைநாட்
டின் அந்தம்மட்டும் போகிறோம்; நான்
அந்த நாட்டான்; யூதாவிலுள்ள பெத்லெ
கேமுக்குப் போய்வந்தேன், நான் யெகோ
வாவின் வாசஸ்தலத்துக்குப் போகிறேன்;
இங்கே என்னை வீட்டிலே சேர்த்துக்கொள்
19 வார் எவரும் இல்லை. எங்கள் கழுதை
களுக்கு வைக்கோலும் தீபனமும் உண்டு;
எனக்கும் உமது அடியாளுக்கும் உமது
அடியானுடனிருக்கிற வேலைக்காரனுக்கும்
ஆகாரமும் திராட்சரசமும் உண்டு: ஒன்றி
20 றிலும் குறைவில்லை என்றான். அதுகேட்ட
அந்தக் கிழவன்: உனக்குச் சமாதானம்,
உன் குறைவுகளெல்லாம் என்மேல் இருக்
கட்டும்; வீதியிலேமாத்திரம் இராத்தங்க
21 வேண்டாம் என்று சொல்லி ! அவனைத்
தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய்க்
கழுதைகளுக்குத் தீபனம் போட்டான்;
அவர்கள் தங்கள் கால்களைக் கழுவிவிட்டுப்
புசித்துக் குடித்தார்கள்.

22 அவர்கள் களித்திருக்கையில், இதோ,
பேலியாலின் மக்களாகிய அந்த ஊராரில்
சிலர் அந்த வீட்டைச் சூழ்ந்துகொண்டு
கதவைத்தட்டி: உன் வீட்டிலே வந்த அந்த
மனுஷனை நாங்கள் அறியும்படி வெளியே
கொண்டுவா என்று வீட்டுக்காரனுகிய அந்
23 தக் கிழவனிடம் சொன்னார்கள். அப்
பொழுது வீட்டுக்காரனுகிய அந்த மனு
ஷன் அவர்களிடம்போய்: இப்படிச் செய்
யவேண்டாம், என் சகோதரரே, இந்தத்
துன்மார்க்கம் வேண்டாம்; அந்த மனுஷன்
என் வீட்டிற்குள் வந்திருக்கையில் இந்த
24 மதிகேட்டைச் செய்யவேண்டாம். இதோ,
கன்னியாஸ்திரீயாகிய என் மகளும், அந்த
மனிதனின் மறுமனையாட்டியும் இருக்கி
றார்கள்; அவர்களை உங்களிடம் வெளியே
கொண்டுவருகிறேன்; அவர்களை அவமானப்
படுத்தி உங்கள் பார்வைக்குச் சரியெனத்
தோன்றுகிறபடி அவர்களுக்குச் செய்யுங்
கள்; இந்த மனிதனுக்கோ அந்த மதிகே
டான காரியத்தைச் செய்யவேண்டாம் என்
றான். அந்த மனுஷர் அவன் சொல்லுக் 25
குச் சம்மதிக்கவில்லை; அப்பொழுது அந்த
மனுஷன் தன் மறுமனையாட்டியைப் பிடி
த்து, அவர்களிடம் வெளியே கொண்டுவந்
துவிட்டான்; அவர்கள் அவளை அறிந்து
கொண்டு இராமுழுதும் விடியுங்காலமட்
டும் அவளை இலச்சையாய் நடத்திக் கிழக்கு
வெளுக்கும்போது அவளைப் போகவிட்டார்
கள். விடியுங்காலத்திற்குமுன்னே அந்த 26
ஸ்திரீ வந்து வெளிச்சமாகுமட்டும் அங்கே
தன் எஜமான் இருந்த வீட்டு வாசலிலே
விழுந்து கிடந்தாள். அவள் எஜமான் 27
காலமே எழுந்திருந்து வீட்டின் கதவைத்
திறந்து பிரயாணப்பட வெளியே வந்த
போது, இதோ, அவன் மறுமனையாட்டியா
கிய ஸ்திரீ வீட்டு வாசலிலே தன் கைகளை
வாசற்படியின்மேல் வைத்தவளாய்க் கிடந்
தாள். எழுந்திரு போவோம் என்று அவன் 28
அவளோடே சொன்னபோது பதில் வர
வில்லை. அப்பொழுது அந்த மனுஷன்
அவளைக் கழுதையின்மேல் போட்டுக்கொ
ண்டு பிரயாணப்பட்டுத் தன் இடத்திற்குப்
போனான். அவன் தன் வீட்டுக்கு வந்த 29
போது, ஒரு கத்தியை எடுத்துத் தன் மறு
மனையாட்டியைப் பிடித்து, அவளை உறுப்பு
உறுப்பாய்ப் பன்னிரண்டு துண்டமாக்கி
இஸ்ரவேலின் நாடெங்கும் அனுப்பினான்.
அதைக் கண்டவர்களெல்லாரும் இஸ்ர 30
வேல் புத்திரர் எகிப்திலிருந்து வந்த நாள்
முதல் இக்காள்வரைக்கும் இதைப்போ
லொத்த காரியம் செய்யப்படவும் இல்லை;
காணப்படவும் இல்லை; இந்தக் காரியத்தை
யோசித்து ஆலோசனைபண்ணுங்கள்; செய்ய
வேண்டியதைச் சொல்லுங்கள் என்றார்கள்.

அப்பொழுது தாண்முதல் பெயேர்செ 20
பாமட்டுமுள்ள இஸ்ரவேல்புத்திரர் அனை
வரும் கிலெயாத்தேசத்தாருடன் மிஸ்பா
விலே யெகோவாவின் சந்நிதியில் ஏகோ
பித்துச் சபைகூடினார்கள். இஸ்ரவேலின் 2
சகல கோத்திரங்களிலுமிருந்து முழு ஜனத்
தின் அதிபதிகளும் கடவுளின் ஜனங்கள்
கூடியிருந்தபோது அங்கே வந்திருந்தார்கள்.
கூடியிருந்தவர்கள் நாலுலட்சம்பேர்; அவர்
கள் அனைவரும் பட்டயமெடுத்துப் போர்
செய்யும் காலாட்கள்; இஸ்ரவேல்புத்திரர் 3
மிஸ்பாவுக்கு வந்த செய்தி பென்யமீன்
புத்திரருக்குத் தெரியவந்தது.

அந்த அக்கிரமம் நடந்தது எப்படி,
சொல்லுங்கள் என்று இஸ்ரவேல் புத்திரர்
கேட்டார்கள். உயிரிழந்த ஸ்திரீயின் புரு 4
ஷனுகிய லேவியன் பதிலுரைத்து: நானும்
என் மறுமனையாட்டியும் பென்யமீன் நாட்

டிலுள்ள கிபியாவிலே இராத்தங்கவந்தோம்.
5 கிபியாவின் குடும்பத்தலைவர் எனக்கு விரோ
தமாய் எழும்பி என்னைக் கொலைசெய்ய
நினைத்து நான் இருந்த வீட்டை இராத்தி
ரியிலே சூழ்ந்துகொண்டு என் மறுமனை
யாட்டியை அவமானப்படுத்தினார்கள்; அதி
6 னாலே அவள் உயிரிழந்தாள். நான் என்
மறுமனையாட்டியின் உடலை யெடுத்து
அதைத் துண்டித்து இஸ்ரவேலின் சுதந்தர
மான சகல நாடுகளுக்கும் அனுப்பினேன்;
இஸ்ரவேலிலே இப்படிப்பட்ட முறைகே
டும் மதிகேடுமான காரியம் செய்யப்பட்
7 டதே. நீங்கள் அனைவரும் இஸ்ரவேல்
புத்திரராயிற்றே, இங்கே ஆலோசித்துத் தீர்
மானம்பண்ணுங்கள் என்று சொன்னான்.
8 அப்பொழுது எல்லா ஜனங்களும் ஏகமாய்
எழும்பி: நம்மில் எவனும் தன் கூடாரத்திற்
குப் போகவும்படாது, எவனும் தன் வீட்டி
9 ற்குத் திரும்பவும்படாது. இப்பொழுது கிபி
யாவுக்கு இப்படிச் செய்வோம், சீட்டு விழு
ந்தவர்கள் அதற்கு விரோதமாகப் போ
10 வோம். பென்யமீன் கோத்திரத்தாரான
கிபியா ஊரார் இஸ்ரவேலிலே நடப்பித்த
சகல மதிகேட்டுக்கும் தக்கதாக ஜனங்கள்
போய்ச் செய்யும்படி நாம் தானியதவசங்
களைச் சம்பாதிக்கவேண்டும்; அதற்காக
இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் நூற்று
வரில் பத்துப்பேரையும், ஆயிரவரில் நூறு
பேரையும், பதினாயிரவரில் ஆயிரம்பேரை
11 யும் தெரிந்தெடுப்போம் என்றார்கள். இஸ்ர
வேலரெல்லாரும் ஒன்றுபோல ஏகோபித்துக்
கிபியாவுக்கு விரோதமாய்ச் செல்லும்படி
கூடியிருந்தார்கள்.
12 இஸ்ரவேலின் கோத்திரத்தார் பென்யமீன்
கோத்திரமெங்கும் ஆட்களை அனுப்பி: உங்
களுக்குள்ளே நடந்த இந்த அக்கிரமம்
13 என்ன? இப்பொழுது கிபியாவில் இருக்கிற
பேலியாளின் மக்களாகிய அந்த மனுஷரை
எங்களிடம் ஒப்புக்கொடுங்கள்; நாங்கள்
அவர்களைக் கொன்றுபோட்டுத் தீமையா
னதை இப்படியே இஸ்ரவேலிலிருந்து அக
ற்றிவிடுவோம் என்று சொல்லச்சொன்னார்
கள்; பென்யமீன் புத்திரருக்கோ இஸ்ரவேல்
புத்திரராகிய தங்கள் சகோதரரின் சொல்
14 லைக் கேட்க மனதில்லை. அவர்கள் இஸ்ர
வேல் புத்திரரோடு யுத்தம்பண்ண எழுந்து
தங்கள் ஊர்களிலிருந்து கிபியாவுக்கு வந்து
15 கூடினார்கள். அந்நாளிலே ஊர்களிலிருந்து
வந்து கூடின பென்யமீனியர் தொகையிடப்
பட்டபோது இருபத்தாறாயிரம்பேர் இருந்
தார்கள்; இவர்கள் எல்லாரும் பட்டயம்
எடுக்கும் ஆட்கள்; இவர்களேயன்றிக் கிபி
யாவின் குடிகளிலும் எழுநூறுபேர் பதிவு
செய்யப்பட்டார்கள். இவர்கள் விசே 16
ஷித்த ஆட்கள். அந்த ஜனங்களெல்லா
ருக்குள்ளும் எழுநூறுபேர் விசேஷித்த
ஆட்கள்; இவர்கள் இடதுகைப்பழக்க
முள்ளவர்கள்; அவர்கள் அனைவரும் ஒரு
மயிரிழையும் தப்பாதபடி கவண்கல் எறி
வார்கள். பென்யமீன் கோத்திரத்தார்போக 17
இஸ்ரவேலிலே பட்டயம் எடுக்கிற ஆட்கள்
நாலுலட்சம்பேர் என்று தொகையிடப்பட்
டது; இவர்களெல்லாரும் யுத்தவீரர்.
இஸ்ரவேல் புத்திரரான அவர்கள் எழும் 18
பிப் பேதேலுக்குப்போய் பென்யமீன் புத்
திரரோடு யுத்தம்பண்ணுவதற்கு இஸ்ரவேல்
புத்திரரில் யார் முதலாவது போகவேண்டும்
என்று கடவுளினிடம் விசாரித்தார்கள்;
அதற்கு யெகோவா முதல் போகவேண்டி
யது யூதாவே என்று உரைத்தார். இஸ்ர 19
வேல்புத்திரர் காலமே எழுந்துசென்று கிபி
யாவுக்கு எதிரே பாளையமிறங்கினார்கள்.
பின்பு இஸ்ரவேலர் பென்யமீனோடு யுத்தம் 20
பண்ணப்போய்க் கிபியாவிலேஅவர்களுக்கு
எதிராகப் போருக்கு அணிவகுத்து நின்றார்
கள். பென்யமீன் புத்திரரோ கிபியாவிலி 21
ருந்து வெளிப்பட்டு இஸ்ரவேலில் இருபத்
திராயிரம்பேரை அன்றையதினம் சங்காரித்து
வீழ்த்தினார்கள்.
இஸ்ரவேல் ஜனங்கள் தங்களைத் தைரியப் 22
படுத்திக்கொண்டு முதல்நாளில் அணிவகு
த்து நின்ற ஸ்தலத்திலேயே மறுபடியும்
போருக்கு அணிவகுத்து நின்றார்கள். இஸ்ர 23
வேல் புத்திரர்போய் யெகோவாவின் சந்நிதி
யில் சாயங்காலமட்டும் அழுது: எங்கள்
சகோதரரோடே, பென்யமீன் புத்திரரோ
டே, திரும்பவும் யுத்தம்கலக்கப்போகவேண்
டுமா என்று யெகோவாவினிடம் விசாரித்
தார்கள்; அப்பொழுது யெகோவா அவர்க
ளுக்கு விரோதமாய்ப் போங்கள் என்றார்.
மறுநாளிலே இஸ்ரவேல் புத்திரர் பென்ய 24
மீன் புத்திரரைக் கிட்டியபோது | பென்ய 25
மீனியர் இரண்டாம் நாளிலும் கிபியாவிலி
ருந்து அவர்களுக்கு எதிரே வந்து இஸ்ர
வேல் புத்திரரில் பதினெண்ணாயிரம்பேரைச்
சங்காரித்து வீழ்த்தினார்கள். இவர்களெல்
லாரும் பட்டயமெடுக்கிற ஆட்கள்.
அப்பொழுது இஸ்ரவேல்புத்திரர் அனை 26
வரும் முழுஜனமும் பேதேலுக்குப்போய்
அங்கே யெகோவாவின் சந்நிதியில் அழுது
தரித்திருந்து, அன்றையதினம் சாயங்காலம்
மட்டும் உபவாசித்து யெகோவாவின் சந்
நிதியிலே தகனபலிகளையும் சமாதானபலி
களையும் செலுத்தி | யெகோவாவினிடம் 27

விசாரித்து—கடவுளின் உடன்படிக்கைப் பெட்டகம் அக்காலத்தில் அங்கே இருந்தது. அங்காட்களில் அவருடைய சந்நிதியில் நின்றவன் ஆரோனின் குமாரனுகிய எலெயாசாரின் புத்திரன் பினெகாசு—எங்கள் சகோதரராகிய பென்யமீன் புத்திரரோடே பின்னும் யுத்தம்பண்ணப்போக வேண்டுமா, போகவேண்டாமா என்று கேட்கவே, யெகோவா, போங்கள்; நாளைக்கு அவர்களை உங்கள் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்றார்.

29 அப்பொழுது இஸ்ரவேலர் கிபியாவைச் சுற்றிலும் பதிவிருக்க ஆட்களை வைத்து,

30 மூன்றாம் நாளிலே பென்யமீன்புத்திரருக்கு விரோதமாய்ப் போய் முன்ன இரண்டு முறையும் செய்ததுபோலவே கிபியாவுக்குச் சமீபமாய்ப் போருக்கு அணிவகுத்து நின்றார்கள். அப்பொழுது பென்யமீன் புத்திரர் ஜனத்திற்கு எதிர்ப்பட்டு ஊரைவிட்டு அப்பாலே சற்றுதூரம் வந்து, வெளியிலே பேதேலுக்கும் கிபியாவுக்கும் போகிற இரண்டு வழிகளில் இஸ்ரவேல் ஜனத்தில் ஏறக்குறைய முப்பதுபேரை, முன்ன இரண்டு முறையும் செய்ததுபோலவே வெட்டவும் கொல்லவும் தொடங்கினார்கள். முன்போலவே நமக்குமுன் முறியடிக்கப்படுகிறார்கள் என்று பென்யமீன்புத்திரர் சொல்லிக்கொண்டார்கள்; இஸ்ரவேல்புத்திரரோ அவர்களை ஊரைவிட்டு அப்பாலேயிருக்கிற வழிகளிலே வரப்பண்ணும்படி நாம் ஓட வேண்டும் என்று சொல்லியிருந்தார்கள்.

33 அப்படியே இஸ்ரவேலர் அனைவரும் தாங்கள் இருந்த இடத்திலிருந்து பின்னடைந்து பாகால்தாமாரிலே போருக்கு அணிவகுத்து நின்றார்கள்; இஸ்ரவேலரில் மாரேகேபாவில் பதிவிருந்தவர்கள் தாங்கள் இருந்த

34 இடத்திலிருந்து எழும்பிவந்தார்கள். இஸ்ரவேல் முழுவதிலுமிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட விசேஷித்த ஆட்களாகிய பதினாயிரம் பேர் கிபியாவுக்கு எதிரே வந்தார்கள், யுத்தம் பலத்தது; தங்களுக்கு விக்கினம் நேரிட்டது என்பதையோ பென்யமீனியர் அறி

35 யாதிருந்தார்கள். யெகோவா இஸ்ரவேலுக்கு முன்பாகப் பென்யமீனை முறியடித்தார்; அன்றையதினம் இஸ்ரவேல்புத்திரர் பென்யமீனிலே இருபத்தையாயிரத்து நூறு பேரைச் சங்கரித்தார்கள்; இவர்கள் அனை

36 வரும் பட்டயமெடுக்கும் ஆட்கள். தாங்கள் முறியடிக்கப்படுகிறதாகப் பென்யமீன் புத்திரர் கண்டுகொண்டார்கள். இஸ்ரவேலர் கிபியாவுக்கு அப்பாலே பதிவிருக்க வைத்திருந்தவர்களை நம்பியிருந்தபடியினாலே பென்யமீனியருக்கு இடம் கொடுத்தார்கள்.

37 பதிவிருந்தவர்கள் விரைந்து கிபியாவின் மேல் பாய்ந்து பரவி, ஊரில் இருந்தவர்கள் அனைவரையும் வாள்வாய்க்கு இரையாக்கினார்கள். ஊரிலிருந்து மகா பெரிய

38 புகையை எழும்பப்பண்ணுவதே இஸ்ரவேலரும் பதிவிருந்தவர்களும் குறித்துக்கொண்ட அடையாளம். இஸ்ரவேலர் யுத்தத்

39 திலே பின்னே போனார்கள், பென்யமீனியர் அதைக் கண்டு இவ்ரவேலரில்ஏறக்குறைய முப்பதுபேரை வெட்டவும் கொல்லவும் தொடங்கினார்கள். முன்ன யுத்தத்தில் நடந்ததுபோலவே இஸ்ரவேலர் தங்களுக்கு முன்பாக முறியடிக்கப்படுகிறார்கள் என்று எண்ணிக்கொண்டார்கள். அச்சமயத்தில்

40 புகை ஊரிலிருந்து ஸ்தம்பம்போல உயர எழும்பத்தொடங்கினது, பென்யமீனியர் பின்னே திரும்பிப்பார்த்தார்கள்; இதோ, ஊர் முழுதும் அக்கினியாய் வானபரியந்தம் எழும்பிற்று. இஸ்ரவேலரும் திரும்பிக்

41 கொண்டார்கள்; பென்யமீனியரோ தங்களுக்கு ஆபத்துநேரிட்டதைக் கண்டு திகைத்து | இஸ்ரவேல் புத்திரரைவிட்டு வனாந்

42 தரத்திற்குப்போகிற வழிக்கு நேராய்த் திரும்பி ஓட்டம்பிடித்தார்கள்; யுத்தமோ அவர்களை விடாமல் தொடர்ந்தது, ஊர்களில் இருந்தவர்களும் தங்கள் நடுவே அகப்பட்டவர்களைக் கொன்றுபோட்டார்கள். இப்படியே பென்யமீனியரைச்

43 சூழ்ந்துகொண்டு துரத்திக் கிபியாவுக்குக் கிழக்கே சூரியன் உதிக்கும் திசையில் அவர்கள் தங்குமிடத்தில் அவர்களை மிதித்துப் போட்டு அவர்களைப் பிடிக்கத்தொடர்ந்தார்கள். இப்படியாகப் பென்யமீனிய

44 ரிலே பதினெண்ணாயிரம்பேர் விழுந்தார்கள்; அவர்களனைவரும் பராக்கிரமசாலிகள். மற்

45 றவர்கள் விலகி வனாந்தரவழியாய் ரிம்மோன் கன்மலைக்கு ஓடிப்போனார்கள்; அவர்களில் இன்னும் ஐயாயிரம்பேரை வழிகளிலே கொன்று மற்றவர்களைக் கீதோம் மட்டும் பின்தொடர்ந்தேசென்று அவர்களில் இரண்டாயிரம்பேரை வெட்டிப்போட்டார்கள். இவ்விதமாகப் பென்யமீனிய

46 ரில் அன்றாளிலே பட்டயம் எடுக்கும் இருபத்தையாயிரம்பேர் விழுந்தார்கள்; அவர்களனைவரும் பராக்கிரமசாலிகள். அறுநூறு

47 பேர் திரும்பிக்கொண்டு வனாந்தரவழியாய் ரிம்மோன் கன்மலைக்கு ஓடி ரிம்மோன் கன்மலையில் நானுமாதம் தங்கினார்கள்.

48 இஸ்ரவேலரோ பென்யமீன்புத்திரரிடம் திரும்பிவந்து ஊரிலிருந்தவர்களையும் மிருகங்களையும் கண்ட யாவற்றையும் வாள்

வாய்க்கு இரையாக்கிக் கண்ட ஊர்கள் அனைத்தையும் அக்கினியால் கொளுத்திப் போட்டார்கள்.

**21** இஸ்ரவேலர் மிஸ்பாவிலே இருக்கும் போது, நம்மில் ஒருவனும் தன் குமாரத்தியைப் பென்யமீனியருக்கு விவாகம்பண்ணிக்கொடுப்பதில்லை என்று ஆணையிட்டிருந்
2 தார்கள். பின்பு ஜனங்கள் பேதேலுக்குப் போய் அங்கே தெய்வசந்நிதியில் சாயங்காலமட்டும் இருந்து சத்தமிட்டு மிகவும்
3 அழுது: இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவே, இஸ்ரவேலிலே இக்கக் காரியம் நேரிட்டது என்ன? இன்று இஸ்ரவேலில் ஒரு கோத்திரம் குறைந்துபோயிற்றே என்
4 னார்கள். மறுநாளிலே ஜனங்கள் காலமே எழுந்திருந்து அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டித் தகனபலிகளையும் சமாதானபலி
5 களையும் செலுத்தினார்கள். மிஸ்பாவிலே யெகோவாவின் சந்நிதிக்கு வராதவன் கொல்லப்படவேண்டும் என்று அவர்கள் பெரிய ஆணையிட்டிருந்தபடியால், இஸ்ரவேல் புத்திரர் யெகோவாவின் சந்நிதியில் சபைகூடினபோது, இஸ்ரவேலின் சகல கோத்திரங்களிலுமிருந்து வராதேபோனவர்கள் உண்டோ என்று விசாரித்தார்கள்.
6 இஸ்ரவேல்புத்திரர் தங்கள் சகோதரராகிய பென்யமீனியரை நினைத்து மனஸ்தாபப்பட்டு: இன்று இஸ்ரவேலில் ஒரு கோத்தி
7 ரம் அகற்றப்பட்டுப்போயிற்றே. மீக்திருப்பவர்களுக்கு மனைவிகள் கிடைக்கும்படி நாம் அவர்களுக்காக என்ன செய்யலாம்? நமது குமாரத்திகளில் ஒருத்தியையும் அவர்களுக்குக் கொடுப்பதில்லை என்று நாம் யெகோவாவின் பேரால் ஆணையிட்டுக்கொ
8 ண்டோமே. இஸ்ரவேலின் கோத்திரங்களில் மிஸ்பாவிலே யெகோவாவின் சந்நிதிக்கு வராதே போனவர்கள் உண்டோ என்று விசாரித்தார்கள்; இதோ, யாபேஷ் கிலெயாத்திலுள்ள மனுஷரில் ஒருவரும் பாளயத்தில் சபைகூடினபோது வரவில்லை.
9 ஜனங்கள் தொகையிடப்பட்டபோது யாபேஷ் கிலெயாத்திலுள்ள குடிகளில் ஒருவரும் அங்கே இல்லை.
10 உடனே சபையார் பராக்கிரமசாலிகளில் பன்னீராயிரம்பேரை அங்கே அழைத்து: நீங்கள் போய் யாபேஷ் கிலெயாத்தில் குடியிருக்கிறவர்களை, ஸ்திரீகளையும் பிள்ளைகளையும்கூட வாள்வாய்க்கு இரையாக்குங்கள்.
11 இப்படிச் செய்யுங்கள், சகல ஆண்களையும் புருஷ சம்போகத்தை அறிந்த சகல பெண்களையும் சங்காரித்துவிடுங்கள் என்று அவர்களுக்குக் கட்டளையிட்டு அனுப்பினார்கள்.
12 இவர்கள் யாபேஷ் கிலெயாத்தில் குடியிருந்தவர்களிலே புருஷ சம்போகத்தை அறியாத நானூறு கன்னிப்பெண்களைக் கண்டுபிடித்து அவர்களைக் காநான்தேசத்தில் சீலோவிலிருந்த பாளயத்திற்குக் கொண்டுவந்தார்கள்.
13 அப்பொழுது சபையாரெல்லாரும் கூடி, ரிம்மோன் கன்மலையிலிருந்த பென்யமீன் புத்திரரோடே பேசவும், அவர்களுக்குச் சமாதானம் கூறவும் ஆட்களை அனுப்பினார்கள்.
14 இப்படியாக பென்யமீனியர் அக்காலத்தில் திரும்ப வந்தார்கள்; யாபேஷ் கிலெயாத்தின் ஸ்திரீகளில் உயிரோடே வைத்த பெண்களை அவர்களுக்குக் கொடுத்தார்கள்; அப்படிச் செய்தும் அவர்கள் தொகைக்குக் காணுதிருந்தது.
15 இஸ்ரவேல் கோத்திரங்களிலே யெகோவா ஒரு பிளப்பை உண்டாக்கினாரே என்று ஜனங்கள் பென்யமீனியருக்காக மனஸ்தாபப்பட்டார்கள்.
16 பென்யமீன் கோத்திர ஸ்திரீகள் அழித்தப்படியினாலே, மீதியான மற்றப் பேர்களுக்கும் மனைவிகள் கிடைக்கும்படி என்ன செய்யலாம் என்று சபையின் மூப்பரானவர்கள் பேசிக்கொண்டார்கள்.
17 பென்யமீனில் தப்பினவர்களுக்குச் சுதந்தரம் இருக்கவேண்டும்; இஸ்ரவேலில் ஒரு கோத்திரம் நிர்மூலமாகக்கூடாதே;
18 நாமோ நமது குமாரத்திகளை அவர்களுக்குக் கொடுக்கமுடியாது; பென்யமீனியருக்குப் பெண்கொடுக்கிறவன் சாபத்துக்காளாவான் என்று இஸ்ரவேல் புத்திரர் ஆணையிட்டாயிற்றே என்றார்கள்.
19 பின்பு அவர்கள் பென்யமீனியரைப் பார்த்து: இதோ, யெகோவாவின் உற்சவம் வருஷந்தோறும் சீலோவில் நடக்கிறது—சீலோ பேதேலுக்கு வடக்கே பேதேலிலிருந்து சிகேமுக்குப் போகிற வழிக்குகிழக்கே லெபோனாவுக்குத் தெற்கே இருக்கிறது—நீங்கள் போய்த்
20 திராட்சத்தோட்டங்களிலே பதிவிருந்து பார்த்துக்கொண்டிருங்கள்; சீலோவின் குமாரத்திகள் நேவாத்தியத்தோடே நடனம்பண்ணுகிறவர்களாய் வரும்போது திராட்சத்தோட்டங்களிலிருந்து வெளிப்பட்டு ஒவ்
21 வொருவனும் தனக்கு மனைவியாகச் சீலோவின் குமாரத்திகளிலே ஒரு பெண்ணைப் பிடித்துப் பென்யமீன் நாட்டிற்குக் கொண்டுபோய் விடுங்கள். அவர்கள் தகப்பன்
22 மாராகிலும் சகோதரராகிலும் எங்களிடம் முறையிட வரும்போது, நாங்கள் அவர்களிடம்: அந்த ஆட்களுக்குத் தயைபாராட்டுங்கள், நாங்கள் யுத்தம்பண்ணினபோது அவனவனுக்கு மனைவி சம்பாதித்துக் கொடுக்கவில்லை; உங்கள்மேல் குற்றமுண்டாக

இப்போது நீங்கள் அவர்களுக்கு மனைவிக
னாக் கொடுக்கவும் இல்லை என்று சொல்லி
23 விடுவோம் என்று சொன்னார்கள். பென்ய
மீன்புத்திரர் அப்படியே செய்து கடனம்
பண்ணிக்கொண்டு வந்தவர்களிலே தங்கள்
தொகைக்குச் சரியான பெண்களை மனைவி
களாகப் பிடித்துக்கொண்டு தங்கள் சுதந்த
ரத்திற்குத் திரும்பிப்போய் ஊர்களைக் கட்டி
அவைகளில் குடியிருந்தார்கள். இஸ்ர 24
வேல்புத்திரரும் அக்காலத்திலே அவ்விடம்
விட்டு அவரவர் தங்கள் கோத்திரத்துக்கும்
தங்கள் குடும்பத்துக்கும் போய் அவரவர்
தங்கள் சுதந்தரத்தில் சேர்ந்தார்கள்.

அந்நாட்களிலே இஸ்ரவேலில் ராஜா 25
இல்லை; அவனவன் தன்தன் பார்வைக்குச்சரி
யெனத் தோன்றியபடியே செய்துவந்தான்.

# RUTH

# ரூத்தின் சரித்திரம்

1 நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்துவரும்
நாட்களில் தேசத்திலே பஞ்சம் உண்டா
யிற்று. அப்பொழுது யூதாவிலுள்ள பெத்
லெகேம் ஊரான் ஒருவன் தன் மனைவியோ
டும் இரண்டு குமாரரோடுங்கூட மோவாப்
நாட்டுக்குப்போய் அங்கே சஞ்சரித்தான்.
2 அந்த மனுஷன் பேர் எலிமேலேக்கு,
அவன் மனைவியின்பேர் நகோமி; அவனு
டைய இரண்டு குமாரரில் ஒருவன் பேர்
மக்லோன், மற்றொருவன் பேர் கிலியோன்;
அவர்கள் யூதாவிலுள்ள பெத்லெகேமிலி
ருந்துவந்த எப்பிராத்தியர்; அவர்கள் மோ
வாப் நாட்டிற்குப் போய் அங்கேயே
3 இருந்துவிட்டார்கள். நகோமியின் புருஷ
னாகிய எலிமேலேக்கு இறந்துபோனான்;
அவளும் அவளுடைய இரண்டு குமார
4 ருமே இருந்தார்கள். அவர்கள் மோவா
பியரில் பெண்கொண்டார்கள். அவர்களில்
ஒருத்திபேர் ஒர்பாள், மற்றவள் பேர் ரூத்;
அங்கே ஏறக்குறையப் பத்துவருஷம் குடி
5 யிருந்தார்கள். பின்பு மக்லோன், கிலி
யோன் என்னும் அவர்கள் இருவரும்
இறந்துபோனார்கள்; அந்த ஸ்திரீ தன் குமா
ரர் இருவரையும்தன் புருஷனையும் இழந்து
6 தனித்தவளானாள். யெகோவா தமது ஜனத்
தைச் சந்தித்து அவர்களுக்கு ஆகாரம் அரு
ளினார் என்று அவள் மோவாப் நாட்டிலே
கேள்விப்பட்டுத் தன் மருமக்களோடேகூட
மோவாப் நாட்டிலிருந்து திரும்பிவரும்படி
7 எழுந்து | தான் இருந்த இடத்தைவிட்டுப்
புறப்பட்டாள்; அவள் மருமக்கள்மார் இரு
வரும் அவளோடுகூட இருந்தார்கள்.

யூதா தேசத்திற்குத் திரும்பிப்போக அவர்
8 கள் வழிநடக்கையில் | நகோமி தன்
இரண்டு மருமக்களையும் பார்த்து: நீங்கள்
இருவரும் தாய்வீட்டுக்குத் திரும்பிப்போங்
கள்; மரித்துப் போனவர்களுக்கும் எனக்கும்
நீங்கள் தயைபாராட்டினதுபோல யெகோ
வா உங்களுக்கும் தயைபாராட்டுவாராக.
9 யெகோவா உங்கள் இருவருக்கும் வாய்க்
கும் புருஷரின் வீடுகளிலே நீங்கள் சுக
மாய் வாழ்ந்திருக்கக் கிருபைசெய்தருளுவா
ராக என்று சொல்லி அவர்களை முத்தமிட்
டாள். அப்பொழுது அவர்கள் சத்தமிட்டு
10 அழுது அவளைப்பார்த்து: உமது ஜனத்தண்
டைக்கே உம்மோடுகூட வருவோம் என்
11 றார்கள். அதற்கு நகோமி: என்மக்களே,
நீங்கள் திரும்பிப்போங்கள்; என்னோடேவர
வருகிறீர்கள்? உங்களுக்குப் புருஷராகும்
படி இனிமேல் என் கர்ப்பத்திலே எனக்குப்
பிள்ளைகள் உண்டாகுமோ? என் மக்களே,
12 திரும்பிப்போங்கள்; நான் வயதுசென்றவள்,
ஒரு புருஷனுடன் வாழத்தக்கவ ளல்ல;
நான் அப்படிப்பட்ட நம்பிக்கை உடைய
வளாய் இன்று இரவிலே ஒரு புரு
ஷனுக்கு வாழ்க்கைப் பட்டு பிள்ளைக
ளைப் பெற்றாலும் | அவர்கள் பெரியவர்க 13
ளாகுமட்டும் புருஷருக்கு வாழ்க்கைப்படா
மல் நீங்கள் பொறுத்திருப்பீர்களோ? வேண்
டாம்; என் மக்களே, யெகோவாவின் கை
எனக்கு விரோதமாயிருக்கிறதினால் உங்கள்
நிமித்தம் நான் மிகவும் விசனப்படுகிறேன்
என்றாள். அப்பொழுது அவர்கள் சத்த 14
மிட்டு அதிகமாய் அழுதார்கள்; ஒர்பாள்
தன் மாமியை முத்தமிட்டுப் போய்விட்
டாள்; ரூத்தோ அவளை விடாமல் பற்றிக்
கொண்டாள். அப்பொழுது நகோமி: 15
இதோ, உன் சகோதரி தன் ஜனங்களிடத்

துக்கும் தன் தேவர்களிடத்திற்கும் திரும்பிப்
போய்விட்டாளே; நீயும் உன் சகோதரியின்
16 பின்னே திரும்பிப்போ என்றாள். அதற்கு
ரூத்: நான் உம்மோடே வராமல் உம்மை
விட்டுத் திரும்பிப்போவதைப்பற்றி என்னி
டம் கட்டாயம் பண்ணவேண்டாம்; நீர்
போகும் இடத்திற்கு நானும் வருவேன்;
நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்;
உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்;
உம்முடைய தெய்வம் என்னுடைய தெய்
17 வம். நீர் மரணமடையும் இடத்தில் நானும்
மரணமடைந்து அங்கே அடக்கம்பண்ணப்
படுவேன். மரணமேயல்லாமல் வேறெது
வும் உம்மைவிட்டு என்னைப் பிரித்தால் யெ
கோவா தமது இஷ்டப்படியெல்லாம் எனக்
18 குச் செய்வாராக என்றாள். அவள் தன்
னோடு வரமன உறுதியாயிருக்கிறதைக்கண்டு
அப்புறம் நகோமி அதைப்பற்றி அவளிடம்
19 ஒன்றும் பேசாதிருந்துவிட்டாள். அப்படி
யே இருவரும் பெத்லெகேம்மட்டும் நடந்து
போனார்கள்.

அவர்கள் பெத்லெகேமுக்கு வந்தபோது
ஊரார் எல்லாரும் அவர்களைப்பார்த்து ஆச்
சரியப்பட்டார்கள்; ஸ்திரீகள், இவள் நகோ
மியோ என்று பேசிக்கொண்டார்கள்.
20 அதற்கு அவள்: நீங்கள் என்னை நகோமி
என்று சொல்லாமல் மாரா என்று
சொல்லுங்கள்; சர்வவல்லவர் எனக்கு
21 மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார். நான்
நிறைவுள்ளவளாய்ப் போனேன், யெகோவா
என்னை வெறுமையாய்த் திரும்பிவரப்பண்
ணினார்; யெகோவா எனக்கு விரோத
மாய்ச் சாட்சிபகர்ந்து சர்வ வல்லவர்
தமையை எனக்குக் கட்டளையிட்டிருக்
கையில் நீங்கள் என்னை நகோமி என்
22 பானேன் என்றாள். இப்படியாக நகோமி
மோவாபிய ஸ்திரீயான தன் மருமகள் ரூத்
தோடே மோவாப் தேசத்திலிருந்து திரும்பி
வந்தாள்; வாற்கோதுமை அறுப்பின் துவக்
கத்திலே அவர்கள் பெத்லெகேமுக்கு வந்
தார்கள்.

**2** நகோமிக்கு அவளுடைய புருஷனுடைய
எலிமேலேக்கின் உறவின்முறையில் இனத்
தான் போவாஸ் என்னும் பேருள்ள ஒருவன்
2 இருந்தான். அவன் காரியசமர்த்தன், செல்
வவான். மோவாபிய ஸ்திரீயான ரூத் என்
பவள் நகோமியைப்பார்த்து: நான் வயல்
வெளிக்குப்போய், யாருடைய கண்களில்
எனக்குத் தயைகிடைக்குமோ அவர்பிறகே
கதிர்களைப்பொறுக்கிக்கொண்டு வருகிறேன்
என்றாள்; அதற்கு இவர், ஏன் மகளே,
3 போ என்றாள். அவன் போய் வயலில்
அறுக்கிறவர்கள்பிறகே பொறுக்கினாள். தற்
செயலாய் அவள் எலிமேலேக்கின் வம்சத்
தானான போவாசினுடைய வயலில்போய்ச்
சேர்ந்தாள். அக்காலத்திலே போவாஸ் 4
பெத்லெகேமிலிருந்து வந்து அறுக்கிறவர்
களைப்பார்த்து: யெகோவா உங்களோடே
இருப்பாராக என்றான்; அதற்கு
அவர்கள், யெகோவா உம்மை ஆசீர்வதிப்
பாராக என்றார்கள். பின்பு போவாஸ் 5
அறுக்கிறவர்களின் மேல்பார்க்கும்படி வைக்
கப்பட்ட வாலிப்பனைப்பார்த்து: இந்தப் பெண்
பிள்ளை யாருடையவள் என்று கேட்க,
அறுக்கிறவர்களின் மேல்பார்க்கிறவன்: இவள் 6
மோவாப் நாட்டிலிருந்து நகோமியோடே
வந்த மோவாபியப்பெண். அறுக்கிறவர் 7
கள் பிறகே அரிக்கட்டுகளிலிருந்து சிந்தின
தைப் பொறுக்கிச் சேர்த்துக்கொள்ளுகி
றேன் என்று என்னிடம் கேட்டுக்கொண்
டாள்; காலமே வந்து இதுவரைக்கும் இங்
கே இருக்கிறாள், சிறிதுநேரந்தான் தன் வீட்
டுக்குப் போயிருந்தாள் என்று பதிற்சொன்
னான். அப்பொழுது போவாஸ் ரூத்தைப் 8
பார்த்து: மகளே, நான் சொல்வதைக் கேள்;
பொறுக்கிக்கொள்ள இவ்விடத்தை விட்டு
வேறே வயலுக்குப் போகவேண்டாம். இங்
கே என் ஊழியக்காரப் பெண்களோடு
கூடவே இரு. அவர்கள் அறுப்பறுக்கும் 9
வயலை நீ பார்த்து அவர்கள் பிறகே போ;
ஒருவரும் உன்னைத் தொடாதபடி வேலைக்
காரருக்குக் கட்டளையிட்டிருக்கிறேன்;
உனக்குத் தாகம் எடுத்தால் தண்ணீர்க்
குடங்களண்டைக்குப்போய் வேலைக்காரர்
மொண்டுகொண்டு வருகிறதிலே குடிக்க
லாம் என்றான். அப்பொழுது அவள் தரை 10
யிலே முகங் குப்புற விழுந்து வணங்கி:
நான் அந்நியதேசத்தாளாயிற்றே, நீர் என்னை
விசாரிக்கும்படி உமது கண்களில் எனக்குத்
தயைகிடைத்தது எப்படி என்றாள். அதற் 11
குப் போவாஸ்: உன் புருஷன் மரண
மடைந்தபின் நீ உன் மாமியாருக்குச் செய்த
யாவும் எனக்குத் தெரிவிக்கப்பட்டது. நீ
உன் தகப்பனையும் உன் தாயையும் உன்
ஜென்மதேசத்தையும்விட்டு, முன்னே நீ அறி
யாத ஜனங்களிடம் வந்தாயே, இதெல்
லாம் எனக்கு நன்றாய்த் தெரியும். நீ 12
செய்ததற்கேற்ற நற்பலனை யெகோவா
உனக்குக் கொடுத்தருள்வார். இஸ்ர
வேலின் கடவுளாகிய யெகோவாவின்
செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த
உனக்கு அவரே பிரதியுபகாரம் செய்வார்
என்று சொன்னான். அதுகேட்கவே அவள்: 13
எனி ஆண்டவனே, உமது கண்களில்

எனக்குத் தயைகிடைத்தது; நான் உமது வேலைக்காரிகளில் ஒருத்தியல்லாதேபோயினும் நீர் உமது அடியாளாகிய எனக்கு அனுதாபம்காட்டி என்னோடு பட்சமாய்ப் பேசினீரே என்றாள். 14 பின்னும் போவாஸ் அவளிடம்: சாப்பாட்டுவேளையிலே நீயும் வந்து நாங்கள் சாப்பிடும் அப்பத்தையே எடுத்து எங்கள் புளிப்பான காடியிலே தொட்டுச் சாப்பிடு என்றான். அப்படியே அவள் அறுப்பறுக்கிறவர்கள் அருகே உட்கார்ந்தாள்; அவளுக்கு வறுத்த கோதுமையைக் கொடுத்தான்; அவள் சாப்பிட்டுத் திருப்தியடைந்து மீந்ததை வைத்துக்கொண்டாள். 15 அவள் கதிர் பொறுக்கிக்கொள்ள எழுந்தபோது, போவாஸ் தன் வேலைக்காரரைப்பார்த்து: அவள் அரிக்கட்டுகள் நடுவே பொறுக்கிக்கொள்ளட்டும்; அவளை ஏனமாய் நடத்தவேண்டாம்; 16 அவள் பொறுக்கிக்கொள்ளும்படி அவளுக்காக அரிகளிலே சிலவற்றைச் சிந்தவிடுங்கள்; அவளைக் கண்டிக்கவேண்டாம் என்று கட்டளையிட்டான். 17 அப்படியே அவள் சாயங்காலமட்டும் வயலிலே கதிர் பொறுக்கினாள்; பொறுக்கினதை அவள் தட்டிஅடித்துத் தீர்த்தபோது அது ஏறக்குறைய ஒருமரக்கால் வாற்கோதுமை கண்டது. 18 அவள் அதை எடுத்துக்கொண்டு ஊருக்குள் வந்தாள்; அவள் பொறுக்கிவந்ததை அவளுடைய மாமி பார்த்தாள். தான் சாப்பிட்டுத் திருப்தியடைந்தபின் மீதியாகவைத்ததையும் எடுத்து அவளுக்குக் கொடுத்தாள். 19 அப்பொழுது அவளுடைய மாமி, இன்று எங்கே கதிர்பொறுக்கினாய், எவ்விடத்தில் வேலைசெய்தாய் என்று அவளிடம் கேட்டு, உன்னைக் கவனித்துக்கொண்டவன் ஆசீர்வாதத்திற்குரியவன் என்றாள்; அப்பொழுது அவள் தான் வேலைசெய்தது இன்னாரிடமென்று தன் மாமிக்கு அறிவித்து, நான் இன்று வேலைசெய்த வயல்காரன் பேர் போவாஸ் என்று சொன்னாள். 20 நகோமி அதைக்கேட்டுத் தன் மருமகளைப்பார்த்து: உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தவர்களுக்கும் விடாமல் தயைபாராட்டி வருகிற யெகோவாவின் ஆசீர்வாதம் அவனுக்குரியதாக என்றாள்; பின்னும் நகோமி அவளைப்பார்த்து: அந்த மனுஷன் நமக்கு நெருங்கின பந்து, நம்மை மீட்பதற்குரிய 21 இனத்தான் என்றாள். பின்னும் மோவாபிய ஸ்திரீயான ரூத்: அவர் என்னைப்பார்த்து, என் அறுப்பெல்லாம் தீருமட்டும் நீ என் வேலைக்காரிகளோடு கூடவே இரு என்று 22 சொன்னார் என்றாள். அதைக்கேட்ட நகோமி தன் மருமகளாகிய ரூத்தைப் பார்த்து: என் மகளே, வேறொரு வயலிலே மனுஷர் உன்னை வருத்தப்படுத்தாதபடி நீ அவன் வேலைக்காரிகளோடே போகிறது நல்லது என்றாள். அப்படியே கோதுமை 23 அறுப்பும் வாற்கோதுமை அறுப்பும் தீருமட்டும் அவள் கதிர்பொறுக்கும்படி போவாசின் வேலைக்காரிகளோடு கூடவேயிருந்து தன் மாமியோடு தங்கினாள்.

பின்பு அவள் மாமியாகிய நகோமி அவ 3
ளைப பார்த்து: என் மகளே, நீ சுகமடையும்படி சுகவாழ்வான இடத்தை நான் உனக்குத் தேடாதிருப்பேனோ? நீ போவாசின் வேலைக்காரிகளோடுகூடவே யிருந்தாய். அவன் நமது பந்து அல்லவா? 2 இதோ, அவன் இன்று இரவு களத்திலே வாற்கோதுமை தூற்றுவான். நீ குளித்து 3 எண்ணெய் பூசி உன் வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு அந்தக் களத்திற்குப் போ; அந்த மனுஷன் புசித்துக் குடித்துத் தீருமட்டும் அவன் கண்ணுக்கு எதிர்ப்படாமலிரு. அவன் படுக்கும் இடத்தைப் 4 பார்த்துக்கொள்; அவன் படுத்துக்கொண்டபின்பு நீ போய், அவன் கால்களின்மேல் மூடியிருக்கிற போர்வையை ஒதுக்கிவிட்டு அவன் கால்மாட்டில் படுத்துக்கொள்; அப்பொழுது நீ செய்யவேண்டியது இன்னதென்று அவன் உனக்குச் சொல்லுவான் என்றாள். அதற்கு அவள்: நீர் எனக்குச் 5 சொன்னபடியெல்லாம் செய்வேன் என்றாள்.

அவள் களத்திற்குப்போய்த் தன் மாமி 6 தனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்தாள். போவாஸ் புசித்துக் குடித்துக் களிகொண் 7 டவனாய் ஒரு அம்பாரத்தின் அடியில் வந்து படுத்துக்கொண்டான். அப்பொழுது அவள் மெள்ளப்போய் அவன் கால்களின்மேல் மூடியிருந்த போர்வையை ஒதுக்கி அவன் கால்மாட்டில் படுத்துக்கொண்டாள். பாதி 8 ராத்திரியிலே அந்த மனுஷன் திடுக்கிட்டு எழும்பி, ஒரு ஸ்திரீ தன் கால்மாட்டிலே படுத்திருக்கிறதைக் கண்டு, | நீ யார் என்று 9 கேட்டான்; அவள், நான் உமது அடியாளாகிய ரூத்; நீர் உமது அடியாள்மேல் உமது போர்வையை விரியும்; நீர் மீட்பதற்குரிய இனத்தான் என்றாள். அதற்கு 10 அவன்: மகளே, நீ யெகோவாவின் ஆசீர்வாதத்திற்குரியவள்; நீ தரித்திரரும் செல்வருமான வாலிபரின் பின்னே செல்லவில்லை; உன் முந்தின நல்லொழுக்கத்திலும் உன் பிந்தின நல்லொழுக்கம் உத்தமமானது. இப்போதும் மகளே, நீ பயப் 11 படாதே; நீ விரும்புகிறபடியெல்லாம் செய்

வேன்; ஈ குணசாலி என்பது என் ஜனமாகிய
12 ஊராரனைவருக்கும் தெரியும். நான் மீட்
பதற்குரிய இனத்தான் என்பது மெய்யே;
எனினும் என்னிலும் நெருங்கிய இனத்
13 தான் ஒருவன் இருக்கிறான். இரவு இப்
படியே தங்கியிரு; நாளைக்கு அவன் மீட்ப
தற்குரிய முறையின்படி உனக்குச் செய்
தால் செய்யட்டும்; அப்படிச்செய்ய அவன்
சம்மதியாவிட்டால் நானே அந்த முறையின்
படி உன்னை விவாகம்பண்ணிக்கொள்வேன்,
யெகோவாவின் ஜீவன்மேல் ஆணை, நித்திய
ஜீவியாகிய யெகோவாவே சாட்சி; விடியற்
காலமட்டும் படுத்துக்கொண்டிரு என்றான்.
14 அவள் விடியற்காலமட்டும் அவன் கால்
மாட்டிலே படுத்திருந்தாள்; களத்திலே ஒரு
ஸ்திரீ வந்ததாக ஒருவருக்கும் தெரியவேண்
டாமென்று அவன் சொல்லியிருந்தபடியால்
ஒருவர்முகம் ஒருவருக்குத் தெரியாததற்கு
15 முன்னே எழுந்திருந்தாள். அவன் அவ
ளைப்பார்த்து, ஈ போர்த்துக்கொண்டிருக்கிற
போர்வையை விரித்துப்பிடி என்றான்.
அவள் அதைப் பிடிக்கவே அவன் அதிலே
ஆறுபடி வாற்கோதுமையை அளந்து
போட்டு அவள்மேல் தூக்கி அனுப்பி
16 விட்டு ஊருக்குள் திரும்பிவந்தான். அவள்
தன் மாமியினிடம் வரவே, அவள்: என்
மகளே, உன் செய்தி என்ன என்று கேட்
டாள். அதற்கு அவள் அந்த மனுஷன்
தனக்குச் செய்ததை யெல்லாம் அவளுக்கு
17 விவரித்தாள். பின்னும் அவள், ஈ உன்
மாமியாரண்டைக்கு வெறுமையாய்ப் போக
வேண்டாம் என்று சொல்லி அவர் எனக்கு
இந்த ஆறுபடி வாற்கோதுமையையும் கொ
18 டுத்தார் என்றாள். அப்பொழுது அவள்:
என் மகளே, இந்தக் காரியம் எவ்வாறு முடி
யுமென்று ஈ அறியுமட்டும் பொறுத்திரு;
அந்த மனுஷன் இந்தக் காரியத்தை இன்
றைக்கு எப்படியும் முடித்து விடுவான்,
முடியாமல் இரான் என்றாள்.

**4** போவாஸ் ஊர் வாசலிலேபோய் உட்
கார்ந்துகொண்டிருந்தான்; அப்பொழுது
மீட்பதற்குரிய அந்த இனத்தான், போ
வாஸ் சொல்லியிருந்தவனே, அவ்வழியே
வந்தான்; அவனைப் பார்த்துப் பேர் சொல்
லிக் கூப்பிட்டு, இங்கே வாரும், சற்று
2 உட்காரும் என்றான்; அவன் வந்து உட்
கார்ந்தான். அப்பொழுது அவன் ஊர்மூப்
பரில் பத்துப்பேரை அழைத்து, இங்கே
உட்காருங்கள் என்றான்; அவர்களும் உட்
3 கார்ந்தார்கள். அப்பொழுது அவன் அந்த
இனத்தானைப் பார்த்து: எலிமேலேக்கு
என்ற நமது சகோதரனுக்கு இருந்த வயல்
நிலத்தின் பங்கை, மோவாப் நாட்டுக்குப்
போய்த் திரும்பிவந்த நகோமி விற்கப்
போகிறாள். அதை உமக்கு அறிவிக்க 4
வேண்டுமென்றிருந்தேன்; சுதந்தரமுறை
யில் அதை மீட்டுக்கொள்ள உமக்கு மன
திருந்தால் ஊராருக்கு முன்பாகவும் என்
ஜனத்தின் மூப்பருக்கு முன்பாகவும் அதை
வாங்கிக்கொள்ளும்; அதை மீட்டுக்கொள்ள
உமக்கு மனதில்லையென்றால் நான் அதை
அறியும்படி எனக்குச் சொல்லிவிடும்;
உம்மையும் உமக்குப்பின்பு என்னையும்
தவிர அதை மீட்பதற்குரியவன் வேறொரு
வனும் இல்லை என்றான். அதற்கு அவன்,
நான் அதை மீட்டுக்கொள்ளுகிறேன் என்
றான். அப்பொழுது போவாஸ்: ஈர் நகோ 5
மியினிடம் அந்த வயல் நிலத்தை வாங்கு
கிற நாளிலே அதை மரித்தவன் மனைவியா
கிய மோவாபிய ஸ்திரீயான ரூத்தினிடமும்
வாங்கவேண்டும்; மரித்தவன் பேரை அவன்
சுதந்தரத்திலே இவ்விதமாகவே நிலைநிற்கச்
செய்யவேண்டும் என்றான். அதுகேட்ட 6
அந்த இனத்தான்: அதை மீட்டுக்கொள்வது
என்னால் ஆகாது; அதை மீட்டுக்கொண்
டால் என் சுதந்தரம் கெட்டுப்போம்; நான்
மீட்கக் கடமைப்பட்டதை ஈரே மீட்டுக்
கொள்ளும்; அதை மீட்டுக்கொள்வது என்
னால் முடியாது என்று சொல்லிவிட்டான்.-
மீட்பதும் விற்பதுமான எந்தக் காரியத்தை 7
யும் உறுதிப்படுத்துவதற்கு, விற்கிறவன்
தன் பாதரட்சையைக் கழற்றி மற்றவனுக்
குக் கொடுப்பான்; இஸ்ரவேலருக்குள்
இதுவே பூர்வகால வழக்கம், இஸ்ரவேலருக்
குள் காரியங்கள் உறுதியாக்கப்படுவது இப்
படியே—பின்னும் அந்த இனத்தான் போ 8
வாசினிடம்: ஈர் அதை வாங்கிக்கொள்ளும்
என்று சொல்லித் தன் பாதரட்சையைக்
கழற்றினான். அப்பொழுது போவாஸ் மூப் 9
பரையும் சகல ஜனங்களையும் பார்த்து:
எலிமேலேக்குக்கு இருந்த யாவற்றையும்
கிலியோனுக்கும் மக்லோனுக்கும் இருந்த
யாவற்றையும் நகோமியினிடம் வாங்கிக்
கொண்டேன் என்பதற்கு இன்றையதினம்
ஈங்கள் சாட்சி. அன்றியும், மரித்தவனுடை 10
ய சகோதரருக்குள்ளும் ஊராருக்குள்ளும்
அவன் பேர் அற்றுப்போகாமல், மரித்தவ
னுடைய சுதந்தரத்திலே அவன்பேரை நிலை
நிற்கச் செய்வதற்கு நான் மக்லோனின்
மனைவியாயிருந்த மோவாபிய ஸ்திரீயான
ரூத்தை எனக்கு மனைவியாகக்கொண்டேன்.
அதற்கும் இன்றையதினம் ஈங்களே சாட்சி 11
என்றான். அப்பொழுது ஊர்வாசலிலிருந்த
சகல ஜனங்களும் மூப்பரும் அவனைப்

பார்த்து: நாங்கள் சாட்சிதான், உன் வீட்டிலே வருகிற மனிவியை யெகோவா, இஸ்ரவேலின் வீட்டைக் கட்டுவித்த ராகேல், லேயாள் என்னும் இருவரையும் போலாக்குவாராக. நீ எப்பிராத்தாவிலே செல்வாக்குள்ளவனுவாய்; பெத்லெகேமிலே புகழ் 12 பெற்றிருப்பாய்; இத்தப் பெண்ணினிடத்திலே யெகோவா உனக்கு அருளிச்செய்யப் போகிற சந்தானத்தினுலே, உன் வீடு தாமார் யூதாவுக்குப்பெற்ற பேரேசின் வீட்டைப்போல ஆகும் என வாழ்த்தினுர்கள். 13 போவாஸ் ரூத்தை விவாகம்பண்ணினுன்; அவள் அவனுக்கு மனிவியானுள், அவன் அவளிடம் பிரவேசித்தபோது, அவள் கர்ப் பந்தரிக்க யெகோவா அனுக்கிரகம் பண்ணினுர்; அவள் ஒரு ஆண்பிள்ளையைப் 14 பெற்ருள். அப்பொழுது ஸ்திரீகள் நகோமியைப் பார்த்து: மீட்பவன் அற்றுப் போகாதபடி இன்று உனக்குத் தயைசெய்த யெகோவாவுக்கு ஸ்தோத்திரம்; பிறந்திருக்கிற பிள்ளையின் பேர் இஸ்ரவேலிலே புகழ் 15 பெறும்; அவன் உன்னை ஆற்றித்தேற்றுவான்; உன் முதிர்வயதிலே உன்னை ஆதரிப்பான்; உன்னைச் சிநேகித்து ஏழு குமாரரைப் பார்க்கிலும் உனக்கு அருமையாயிருக்கிற உன் மருமகள் அவனைப் பெற்ருளே என்று வாழ்த்தினுர்கள். நகோமி அந்தப் 16 பிள்ளையை எடுத்துத் தன் மடியிலேவைத்து அதை வளர்க்கிற தாயானுள். அயல் வீட்டுப் 17 பெண்கள்: நகோமிக்கு ஒரு ஆண் பிள்ளை பிறந்தது என்று வாழ்த்தி அதற்குப் பேரிட்டார்கள்; அவர்கள் இட்டபேர் ஓபேத் என்பது. இவன் தாவீதின் தகப்பனுகிய ஈசாயின் தகப்பனுனன்.

பேரேசுடைய சந்ததியின் வரலாறு: 18 பேரேஸ் எஸ்ரோனைப் பெற்ருன். எஸ் 19 ரோன் ராமைப் பெற்ருன்; ராம் அம்மினதாபைப் பெற்ருன். அம்மினதாப் நக 20 சோனைப் பெற்ருன்; நகசோன் சல்மோனைப் 21 பெற்ருன். சல்மோன் போவாசைப் பெற்ருன்; போவாஸ் ஓபேதைப் பெற்ருன். ஓபேத் ஈசாயைப் பெற்ருன்; ஈசாய் தாவீ 22 தைப் பெற்ருன்.

---

# I. SAMUEL

# சாமுவேல்

## முதலாம் புஸ்தகம்

**1** ஏப்பிராயீம் மலைநாட்டிலே ராமதாயீம் சோப்பீம் என்னும் ஊரில் ஒரு மனுஷன் இருந்தான்; அவன் பேர் எல்க்கானு; அவன் எப்பிராயீமியனுகிய சூப்புக்குப் பிறந்த தோகுவின் குமாரனுகிய எலிகூவின் மகனை யெரோகாமின் புத்திரன். அவனுக்கு 2 இரண்டு மனைவிகள் இருந்தார்கள்; ஒருத்தி பேர் அன்னுள், மற்றவள்பேர் பெனின்னுள்; பெனின்னுளுக்குப் பிள்ளைகள் இருந்தார்கள்; அன்னுளுக்குப் பிள்ளை இல்லை.

3 அந்த மனுஷன் சேனைகளின் யெகோவாவைப் பணிந்து கொள்ளவும் அவருக்குப் பலியிடவும் வருஷந்தோறும் தன் ஊரிலிருந்து சீலோவுக்குப் போய்வருவான்; ஏலியின் இரண்டு குமாராகிய ஒப்னியும் பினெகாசும் அங்கே யெகோவாவுக்கு ஆசாரிய 4 ஊழியஞ் செய்துவந்தார்கள். ஒருநாள் எல்க்கானு அங்கே பலியிட்டான்—அவன் தன் மனைவியாகிய பெனின்னுளுக்கும் அவளுடைய சகல குமாரருக்கும் குமாரத்திகளுக்கும் பலியிட்டதில் எடுத்துப் பங்கிட்டுக் கொடுப்பது வழக்கம். அன்னுளுக்கோ 5 விசேஷித்த பங்கைக் கொடுப்பான், யெகோவா அவள் கர்ப்பத்தை அடைத்திருந்தும் அவன் அவளிடம் பிரியமாயிருந்தான். யெகோவா அவள் கர்ப்பத்தை அடைத் 6 திருந்தபடியினுல் அவளுடைய சக்களத்தி அவளுக்கு மனவருத்தமுண்டாக வசை பேசுவாள். அவள் வருஷந்தோறும் யெ 7 கோவாவின் வாசஸ்தலத்திற்குச் செல்லும் போது அவன் அப்படியே செய்வான்; அவள் சக்களத்தியும் அப்படியே வசை பேசுவாள்—அன்று அன்னுள் சாப்பிடாமல் அழுதுகொண்டிருந்தாள். அவள் புரு 8 ஷனுகிய எல்க்கானு அவளைப் பார்த்து: அன்னுளே, ஏன் அழுகிருய்? ஏன் சாப்

பிடாதிருக்கிறாய்? உன் மனம் வருந்துவானேன்? பத்தகுமாரரைப்பார்க்கிலும் நான் உனக்கு அருமையல்லவா என்றான்.

9 சீலோவிலே அவர்கள் புசித்து முடிந்தபின்பு அன்னாள் எழுந்திருந்தாள்; ஆசாரியனாகிய ஏலி யெகோவாவின் ஆலயத்தின் வாசல் நிலையருகே ஆசனத்தில் உட்கார்ந்
10 திருக்கையில் | அவள் போய் மனங்கசந்து மிகவும் அழுது யெகோவாவினிடம் விண்
11 ணப்பஞ்செய்து | சேனைகளின் யெகோவாவே, தேவரீர் உமது அடியாளின் சிறுமையைப் பார்த்து, உமது அடியாளை மறவாமல் நினைந்தருளி உமது அடியாளுக்கு ஒரு ஆண்பிள்ளையைக் கொடுத்தருள்வீரானால், அவன் உயிரோடிருக்கும் சகலநாளும் நான் அவனை யெகோவாவுக்கு ஒப்புக்கொடுப்பேன்; அவன் தலையில் சவரக்கத்தி படவில்லை என்று பொருத்தனைபண்ணினாள்.
12 அவள் யெகோவாவின் சந்நிதியில் வெகு நேரம் விண்ணப்பம்பண்ணினாள்; ஏலி
13 அவள் வாயைக் கவனித்துக்கொண்டிருந்தான். அன்னாள் தன் இருதயத்திலே பேசினாள்; அவள் உதடுகள் மாத்திரம் அசைந்தன; சத்தமோ கேட்கவில்லை; அவள் வெறித்திருக்கிறாள் என்று ஏலி நினைத்து |
14 அவளைப் பார்த்து: நீ எதுவரைக்கும் வெறித்திருப்பாய், மதுவை உன்னைவிட்டு விலக்கு
15 என்றான். அதற்கு அன்னாள்: அப்படியல்ல, என் ஆண்டவனே, நான் மனக்கிலேசமுள்ளவள்; நான் திராட்சரசமாகிலும் மதுவாகிலும் குடிக்கவில்லை; நான் யெகோவாவின் சந்நிதியில் என் இருதயத்தை
16 ஊற்றிவிட்டேன். உம்முடைய அடியாளை பேலியாலின் மகளாக எண்ணுதேயும்; நான் பேசியதனைத்தும் என் விசாரமும்
17 கிலேசமுமே என்றாள். ஏலி அதைக்கேட்டு: சமாதானத்தோடே போ; நீ இஸ்ரவேலின் கடவுளினிடம் கேட்ட உன் விண்ணப்பத்தின்படியே அவர் உனக்கு அருள்வாராக
18 என்றான். அப்பொழுது அவள்; உமது அடியாளுக்கு உமது கண்களிலே தயை கிடைக்கட்டும் என்றாள்; பின்பு அவள் அவ்விடம்விட்டுப் போய்ப் போஜனஞ்செய்தாள்; அப்புறம் அவள் துக்கமுகமாயிருக்கவில்லை.

19 அவர்கள் அதிகாலையில் எழுந்து யெகோவாவைப் பணிந்துகொண்டு, ராமாவிலுள்ள தங்கள் வீட்டுக்குத் திரும்பிப் போனார்கள்; எல்க்கானா தன் மனைவியாகிய அன்னாளை அறிந்தான்; யெகோவா அவளை நினைத்தருளி
20 னார். அன்னாள் கர்ப்பவதியானாள்; அடுத்த் வருஷம் அவள் ஒரு குமாரனைப் பெற்று யெகோவாவினிடம் அவனைக் கேட்டேன் என்று சொல்லி அவனுக்குச் சாமுவேல் என்று பேரிட்டாள்.

எல்க்கானா என்பவன் தன் வீட்டார் 21 அனைவரோடுங்கூட யெகோவாவுக்கு வருஷாந்தர பலியையும் பொருத்தனையையும் செலுத்தும்படி போனான். அன்னாளோ 22 போகவில்லை, பிள்ளை பால்குடி மறந்தபின்பு அவன் யெகோவாவின் சந்நிதியிலே வரவும் அங்கே எப்பொழுதும் இருக்கவும் நான் அவனைக் கொண்டுபோய் விடுவேன் என்று தன் புருஷனிடம் சொன்னாள். அதற்கு 23 அவள் புருஷன் எல்க்கானா: நீ உன் இஷ்டப்படி செய்; அவனைப் பால்குடி மறக்கப் பண்ணுமட்டும் இரு; யெகோவா தமது வார்த்தையை மாத்திரம் நிறைவேற்றுவாராக என்றான். அப்படியே அந்த ஸ்திரீ தன் பிள்ளையைப் பால்குடி மறக்கப்பண்ணுமட்டும் அதற்குப் பால் கொடுத்தாள்.

அவள் அவனைப் பால்குடி மறக்கப்பண் 24 ணினபின்பு மூன்று வயதுக் காளை ஒன்றையும் ஒரு மரக்கால் மாவையும் ஒரு தோற்பை திராட்சரசத்தையும் எடுத்துக்கொண்டு அவனையும் கூட்டிக்கொண்டு சீலோவிலிருந்த யெகோவாவின் வாசஸ்தலத்திற்குப் போனாள்; பிள்ளை இன்னும் குழந்தையாயிருந்தது. அவர்கள் காளையைப் பலியிட்டுப் 25 பிள்ளையை ஏலியினிடம் கொண்டுவந்துவிட்டார்கள். அப்பொழுது அவள்: என் 26 ஆண்டவனே, இங்கே உம்மண்டையிலே நின்று யெகோவாவை நோக்கி விண்ணப்பம்பண்ணின ஸ்திரீ நான்தான் என்று என் ஆண்டவனுடைய உமது ஜீவன்மேல் ஆணையாகச் சொல்லுகிறேன். நான் விண்ணப் 27 பம்பண்ணிக் கேட்டது இந்தப் பிள்ளையே, நான் கேட்டதை என் விண்ணப்பத்தின்படியே யெகோவா எனக்குக் கட்டளையிட்டார். நானும் அவனை யெகோவாவுக்கென்று 28 ஒப்புக்கொடுத்தேன், அவன் உயிரோடிருக்கும் சகலநாளும் அவன் யெகோவாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டவனே என்றாள்; அவர்கள் அங்கே யெகோவாவைப் பணிந்துகொண்டார்கள்.

அப்பொழுது அன்னாள் பிரார்த்தனை 2
செய்து:
என் இருதயம் யெகோவாவில் களிகூருகிறது;
என் கொம்பு யெகோவாவில் உயர்ந்திருக்கிறது;
என் பகைஞருக்குப் பதில்சொல்ல என் வாய் திறந்திருக்கிறது;
உமது இரட்சிப்பிலே மகிழுகிறேன்.

2 யெகோவாவைப்போல் பரிசுத்தமுள்ளவர் இல்லை;
உம்மையன்றி வேறொருவருமில்லை;
எங்கள் கடவுளைப்போன்ற கன்மலை இல்லை.
3 மேட்டிமைப்பேச்சை இனி பேசாதிருங்கள்;
இறுமாப்பு உங்கள் வாயிலே தோன்றவேண்டாம்;
யெகோவா யாவும் அறியுங்கடவுள்;
செய்கைகள் அவரால் நிதானிக்கப்படாதனவல்ல.
4 பராக்கிரமசாலிகளின் வில் முறிந்தது;
தள்ளாடினவர்களோ பலத்தை இடைக்கச்சாகக் கட்டிக்கொண்டார்கள்.
5 திருப்தியாயிருந்தவர்கள் வயிறுவளர்க்கக் கூலிவேலை செய்கிறார்கள்;
பசியாயிருந்தவர்க்குப் பசியென்பதில்லை;
மலடியாயிருந்தவள் ஏழுபெற்றாள்;
பல பிள்ளைகளைப்பெற்றவளோ பலட்சயப்பட்டாள்.
6 சாகச்செய்பவரும் பிழைக்கச்செய்பவரும் யெகோவாவே;
பாதாளமட்டும் தாழ்த்துகிறார்; உயர ஏறவும் பண்ணுகிறார்.
7 ஏழையாகச் செய்பவரும் ஐசுவரியவானாகச் செய்பவரும் யெகோவாவே;
தாழ்த்துகிறவரும் உயர்த்துகிறவரும் அவரே.
8 சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்குகிறார்;
எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்;
அவர்களைப் பிரபுக்களோடே உட்காரச் செய்கிறார்;
மாட்சிமைச் சிங்காசனத்தைச் சுதந்தரிக்கப்பண்ணுகிறார்;
பூமியின் அஸ்திபாரங்கள் யெகோவாவினுடையவைகள்;
அவரே அவைகளின்மேல் பூச்சக்கரத்தை வைத்தார்.
9 அவர் தமது பக்தரின் பாதங்களைக் காப்பார்;
தெய்வபயமற்றவர்கள் இருளிலே மாண்டழிவார்கள்;
ஜயங்கொள்வது பலத்தினாலல்ல.
10 யெகோவாவோடே போராடுகிறவர்கள் கொறுக்கப்படுவார்கள்;
வானத்திலிருந்து அவர்கள்மேல் முழங்குவார்;
யெகோவா பூமியின் கடையாந்தரங்களை நியாயந்தீர்ப்பார்;
தமது ராஜாவுக்குப் பலம் கொடுப்பார்;
தாம் அபிஷேகம்பண்ணினவரின் கொம்பை உயரப்பண்ணுவார்.

என்று துதித்துப் பாடினாள்.

11 பின்பு எல்க்கானா ராமாவிலிருந்த தன் வீட்டுக்குப் போனான்; அந்தப் பிள்ளையோ ஆசாரியனாகிய ஏலிக்குமுன்பாக யெகோவாவுக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தான்.

12 ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; அவர்கள் யெகோவாவை லட்சியம் செய்யவில்லை. 13 ஆசாரியராக ஜனங்களிடம் பெற்றுக்கொள்ள வேண்டிய வைகளின் விஷயத்தில் இப்படி நடந்து கொண்டார்கள்: எவனுகிலும் ஒரு பலியைச் செலுத்துங்காலத்தில் இறைச்சி வேகும் போது ஆசாரியனுடைய வேலைக்காரன் மூக்கூர் ஆயுதமொன்றைத் தன் கையிலே 14 பிடித்துவந்து | அதைக் கொண்டு கொப்பரையிலாவது பானையிலாவது சருவத்திலாவது சட்டியிலாவது குத்துவான்; அந்த ஆயுதத்தில் வருவதையெல்லாம் ஆசாரியன் எடுத்துக்கொள்ளுவான்; அங்கே சீலோவிலே வருகிற இஸ்ரவேலருக்கெல்லாம் அப்படியே செய்தார்கள். 15 கொழுப்பைத் தகனிக்கிறதற்கு முன்னும் ஆசாரியனுடைய வேலைக்காரன் வந்து பலியிடுகிற மனுஷனைப் பார்த்து: ஆசாரியனுக்குப் பொரிக்கும்படி இறைச்சி கொடு; பச்சை இறைச்சியே வேண்டும்; அவித்ததை உன்னிடம் வாங்குவதில்லை என்பான். 16 அந்த மனுஷன்: இதோ, கொழுப்பைத் தகனிக்கப்போகிறார்கள், பிற்பாடு உன் மனவிருப்பத்தின்படி எடுத்துக்கொள் என்று சொன்னாலும் அவன், அப்படியல்ல இப்பொழுதே கொடு, கொடாவிட்டால் பலவந்தமாய் எடுத்துக்கொள்ளுவேன் என்பான். 17 இவ்விதமாக அந்த வாலிபரின் பாவம் யெகோவாவின் சந்நிதியில் மிகவும் பெரிதாயிற்று; ஜனங்கள் யெகோவாவுக்குப் படைக்கும் காணிக்கையை அலட்சியமாய் எண்ணினார்கள்.

18 சாமுவேல் சிறு பையனுகச் சணல்நூல் ஏபோத்தைத் தரித்து யெகோவாவின் சந்நிதியில் பணிவிடை செய்து வந்தான்; 19 வருஷாந்தரபலி செலுத்துவதற்கு அவனுடைய தாய் தன் புருஷனேடே வரும்போதெல்லாம் அவனுக்கு ஒரு சிறு அங்கியைத் தைத்துக்கொண்டு வருவாள். 20 ஏலி எல்க்கானாவையும் அவன் மனைவியையும் ஆசீர்வதித்து, இந்த ஸ்திரீ யெகோவாவுக்கென்று ஒப்புக்கொடுத்ததற்குப் பதிலாக யெகோவா

உனக்கு அவளாலே சந்தானம் கட்டனீ
யிடுவாராக என்றான்; அவர்கள் தங்கள்
ஊருக்குத் திரும்பப் போய்விட்டார்கள்.
21 அப்படியே யெகோவா அன்னாளைக் கடாட்
சித்தார்; அவள் பிள்ளைகளைப் பெற்றாள்;
மூன்று குமாரரும் இரண்டு குமாரத்திகளும்
பிறந்தார்கள்; சாமுவேல் என்னும் பிள்ளை
யாண்டான் யெகோவாவின் வீட்டிலே
வளர்ந்துவந்தான்.
22 ஏலி மிகவும் கிழவனாயிருந்தான்; தன்
குமாரர் இஸ்ரவேலுக்கெல்லாம் செய்கிற
யாவற்றையும் தரிசனக்கூடார வாசலில்
பணிவிடைசெய்கிற ஸ்திரீகளோடே சய
னிக்கிறதையும் அவன் கேள்விப்பட்டு,
23 அவர்களைப்பார்த்து: நீங்கள் இப்படிப்
பட்ட காரியங்களைச் செய்கிறது என்ன?
இந்த ஜனங்கள் எல்லாரும் உங்கள் தீர்ச்
செய்கைகளைப்பற்றிப் பேசுகிறதைக் கேட்
24 கிறேன். என் குமாரரே, வேண்டாம்;
நான் கேள்விப்படுகிற இந்தச்செய்தி நல்ல
தல்ல; யெகோவாவின் ஜனங்களுக்குள் இச்
25 செய்தி பரவியிருக்கிறதே. ஒருவன் மனுஷ
னுக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால் கட
வுள் அவனுக்கென்று நியாயங்கிடைக்கச்
செய்வார்; ஒருவன் யெகோவாவுக்கு விரோத
மாகப் பாவஞ்செய்வானேயாகில் அவனுக்
காகப் பரிந்து பேசுபவன் யார் என்றான்;
அவர்களோ தங்கள் தகப்பன் சொல்லைக்
கேளாமற்போனார்கள்; அவர்களை அழிக்க
26 யெகோவா சித்தமானார். சாமுவேல் என்
னும் பிள்ளையாண்டான் பெரியவனாக
வளர்ந்து யெகோவாவுக்கும் மனுஷருக்கும்
பிரியமாக நடந்துகொண்டான்.
27 கடவுளின் மனுஷன் ஒருவன் ஏலியி
னிடம் வந்து: யெகோவா உரைப்பதைக்
கேள், நீன் பிதாவின் வீட்டார் எகிப்திலே
பார்வோனின் வீட்டில் இருக்கையில் நான்
என்னை அவர்களுக்கு வெளிப்படுத்தவில்
28 லையா? என் பலிபீடத்தைக் கிட்டிச்சேரவும்
தூபங்காட்டவும் என் சந்நிதியில் ஏபோத்
தைத் தரிக்கவும், இஸ்ரவேல் கோத்திரங்
களிலெல்லாம் அவனை எனக்கு ஆசாரிய
னாகத் தெரிந்துகொண்டு உன் பிதாவின்
வீட்டாருக்கு இஸ்ரவேல் புத்திரரின் நிவே
29 தனங்களையெல்லாம் கொடுத்தேனே. என்
வாசஸ்தலத்திலே செலுத்தும்படி நான் கட்
டனியிட்ட என் பலியையும் என் காணிக்
கையையும் நீங்கள் மிதித்துத் தள்ளுவா
னேன்? என் ஜனமாகிய இஸ்ரவேலின்
காணிக்கைகளிலெல்லாம் பிரதானமான
வைகளைக்கொண்டு உங்களைக் கொழுக்கப்
பண்ணும்படி நீ என்னைப் பார்க்கிலும் உன்
குமாரரை மதிப்பானேன் என்கிறார். ஆக 30
வே இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோ
வா சொல்லுகிறதைக் கேள், உன் வீட்டா
ரும் உன் பிதாவின் வீட்டாரும் என்றைக்
கும் என் சந்நிதியில் பணிவிடை செய்வார்
கள் என்று நான் திட்டமாய்ச் சொல்லி
யிருந்தேன். இப்பொழுதோ அந்தச்
சொல் எனக்குத் தூரமாயிருப்பதாக; என்
னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம்
பண்ணுவேன், என்னை அசட்டைபண்ணு
கிறவர்கள் கனவீனப்படுவார்கள்; இது
தெயவவாக்கு; யெகோவா விளம்புவது.
இதோ, காலம் வருகிறது, உன் வீட்டில் 31
ஒரு கிழவனும் இராதபடி உன் புயத்தை
யும் உன் பிதாவின் வீட்டாரின் புயத்தை
யும் நான் தறித்துப்போடுவேன். இஸ்ரவே 32
லுக்குச் சகல நன்மைகளும் செய்யப்படு
கையில் உன் வாசஸ்தலத்திற்கு அபாயம்
நேரிடுவதைக் காண்பாய்; ஒருபோதும் உன்
வீட்டில் ஒரு கிழவனும் இருப்பதில்லை.
என் பலிபீடத்தை சேவிக்கும்படி நான் 33
உன் சந்ததியிலே ஒருவனை நிர்மூலமாக்
காமல் விடுவேன்; அவன் உன் கண்கள்
பூத்துப்போவதற்கும் உன் ஆத்துமா வே
தனைப்படுவதற்கும் ஏதுவாவான்; உன் வம்
சத்திலுள்ள யாவரும் வாலவயதிலே சாவார்
கள். ஒப்னி, பினெகாஸ் என்னும் உன் 34
இரண்டு குமாரரின்மேல் வருவதே உனக்கு
அடையாளமாகும், அவர்கள் இருவரும்
ஒரேநாளில் சாவார்கள். நான் என் உள் 35
ளத்துக்கும் என் சித்தத்துக்கும் ஏற்றபடி
செய்யும் உண்மையான ஒரு ஆசாரியனை
எழும்பப்பண்ணி அவனுக்கு நிலையான
வீட்டைக் கட்டுவேன்; என்னால் அபிஷே
கம்பண்ணப்பட்டவனுக்கு முன்பாகச்
சகலநாளும் அவன் பணிவிடை செய்வான்.
அப்பொழுது உன் வீட்டாரில் மீதியாயிருப் 36
பவன் எவனும் ஒரு வெள்ளிக்காசுக்காக
வும் ஒரு அப்பத்துக்காகவும் அவனிடம்
வந்து கெஞ்சி: நான் சிறிது ஆகாரம்சாப்
பிட யாதொரு ஆசாரிய ஊழியத்தில் என்
னைச் சேர்த்துக்கொள்ளும் என்று சொல்
லிப் பணிவான் என்று சொல்லுகிறார் என்
றான்.

சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் 3
ஏலிக்கு முன்னின்று யெகோவாவுக்குப்
பணிவிடை செய்துகொண்டிருந்தான்; அந்
நாட்களிலே யெகோவாவின் வசனம் அரி
தாயிருந்தது; தரிசனம் நிகழ்வது அபூர்வமா
யிருந்தது. ஒருநாள் ஏலி தன்னிடத்திலே 2
படுத்துக்கொண்டிருந்தான் ... அவன் கண்
கள் இருளடையத்துவக்கின; அவன் நன்

3 ரூய்ப் பார்க்கமுடியாது — கடவுளின் பெட்டகம் இருந்த யெகோவாவின் ஆலயத்தில் கடவுளின்விளக்கு அணைந்து போகுமுன்னே சாமுவேலும் படுத்துக்கொண்டிருந்தான்.
4 அப்பொழுது யெகோவா சாமுவேலைக் கூப்பிட்டார்; அவன்: இதோ, இருக்கிறேன் என்
5 று சொல்லிக்கொண்டு | ஏலியினிடம் ஓடி, இதோ, இருக்கிறேன்; என்னைக் கூப்பிட்டீரே என்றான். அதற்கு அவன்: நான்கூப்பிடவில்லை, திரும்பிப்போய் படுத்துக்கொள் என்றான்; அவன்போய்ப் படுத்துக்கொண்டான்.
6 மறுபடியும் யெகோவா சாமுவேலே என்று கூப்பிடவே அவன் எழுந்திருந்து ஏலியினிடம் போய்: இதோ, இருக்கிறேன்; என்னைக் கூப்பிட்டீரே என்றான். அதற்கு அவன்: என் மகனே, நான் உன்னைக் கூப்பிடவில்லை, திரும்பிப்போய்ப் படுத்துக்கொள்
7 என்றான். சாமுவேல் யெகோவாவை இதுவரை அறிந்துகொள்ளவில்லை; யெகோவாவின் வாக்கு அவனுக்கு இன்னும் வெளிப்
8 படவில்லை. யெகோவா மறுபடியும் மூன்றாம் விசை, சாமுவேலே என்று கூப்பிட்டார். அவன் எழுந்திருந்து ஏலியினிடம் போய், இதோ, இருக்கிறேன்; என்னைக் கூப்பிட்டீரே என்றான். யெகோவா பிள்ளையாண்டானைக் கூப்பிடுகிறார் என்று இப்
9 பொழுதுதான் ஏலி அறிந்தான்; அறியவே அவன் சாமுவேலைப் பார்த்து: நீ போய்ப் படுத்துக்கொள், உன்னைக் கூப்பிட்டால், யெகோவாவே, பேசியருளும், அடியேன் கேட்கிறேன் என்று சொல் என்றான்; அப்படியே சாமுவேல் போய்த் தன் ஸ்தானத்திலே படுத்துக்கொண்டான்.
10 அப்பொழுது யெகோவா வந்து நின்று முன்போலவே: சாமுவேலே, சாமுவேலே என்று கூப்பிட்டார்; அதற்குச் சாமுவேல்: பேசியருளும், அடியேன் கேட்கிறேன் என்
11 றான். யெகோவா சாமுவேலோடு பேசி: இதோ, நான் இஸ்ரவேலில் ஒரு காரியத்தைச் செய்யப்போகிறேன்; அதைக்கேட்கிற ஒவ்வொருவனுடைய இரண்டு காதுகளிலும் அது தொனித்துக்கொண்டேயிருக்கும்.
12 நான் ஏலியின் குடும்பத்தைப்பற்றிச் சொன்ன யாவையும் தொடக்க முதல் முடிவுவரை ஒன்றும் விடாமல், அவன்மேல் அந்நாளி
13 லே வரப்பண்ணுவேன். அவன் குமாரர் செய்த அக்கிரமத்தை அவன் அறிந்திருந்தான்; அவர்கள் தங்கள்மேல் சாபம் வருவித்துக்கொண்டபோதிலும் அவன் அவர்களை அடக்காமற்போனான். இதினிமித்தம் நான் அவன் குடும்பத்தை என்றென்றுமாக நியாயந்தீர்த்துவிடுவேன். இதை அவனுக்கு அறிவித்திருந்தேன். ஆகவே ஏலியின் குடும் 14
பத்தார் செய்த அக்கிரமத்திற்குப் பலியாவது காணிக்கையாவது ஒருபோதும் பிராயச்சித்தமாகாது என்று ஏலியின் குடும்பத்தைக் குறித்து ஆணையிட்டிருக்கிறேன் என்றார். சாமுவேல் விடியற்காலமட்டும் படுத்திருந்து 15
விட்டு, யெகோவாவின் ஆலயக் கதவுகளைத் திறந்தான்; ஏலிக்கு அந்தத் தரிசனத்தை அறிவிக்கச் சாமுவேல் பயந்தான். ஏலி 16
யோ, சாமுவேலே, என் மகனே என்று சாமுவேலைக் கூப்பிடவே அவன்: இதோ, இருக்கிறேன் என்றான். அப்பொழுது ஏலி: 17
யெகோவா உன்னிடத்தில் சொன்னதென்ன? எனக்கு அதை மறைக்கவேண்டாம்; அவர் உன்னிடத்திலே சொன்னவைகள் அனைத்திலும் ஏதேனும் ஒன்றை நீ எனக்கு மறைத்தாயானால், கடவுள் தமது சித்தப்படியெல்லாம் உனக்குச் செய்வாராக என்றான்.
அப்பொழுது சாமுவேல் ஒன்றையும் அவ 18
னுக்கு மறைக்காமல் அந்தக் காரியங்களையெல்லாம் அவனுக்கு அறிவித்தான்; அதைக் கேட்கவே, ஏலி: அவர் யெகோவா; அவர் தமது பார்வைக்கு நலமாய்த் தோன்றுவதைச் செய்வாராக என்றான்.
சாமுவேல் வளர்ந்தான்; யெகோவா அவ 19
னோடுகூட இருந்தார்; அவர் தமது சகல வார்த்தைகளிலும் ஒன்றையேனும் தவறிப்போகவிடவில்லை. சாமுவேல் யெகோவா 20
வின் தீர்க்கதரிசியாக ஏற்படுத்தப்பட்டான் என்று தாண் முதல் பெயேர்செபாமட்டும் குடியிருந்த சகல இஸ்ரவேலருக்கும் தெரிய வந்தது. யெகோவா பின்னும் சீலோவிலே 21
தரிசனம் தந்தருளினார்; யெகோவா சீலோவிலே தம்முடைய வார்த்தையினாலே சாமுவேலுக்குத் தம்மை வெளிப்படுத்தினார்.
சாமுவேலின் வார்த்தை இஸ்ரவேலுக்கெல் 4
லாம் கிடைத்தது.

இஸ்ரவேலர் பெலிஸ்தியருக்கு விரோதமாய் யுத்தஞ்செய்யப் புறப்பட்டு எபெனேசருகே பாளயமிறங்கினார்கள்; பெலிஸ்தியரோ அபேக்கிலே பாளயமிறங்கியிருந்தார்கள். பெலிஸ்தியர் இஸ்ரவேலருக்கு 2
எதிரே அணி வகுத்து நின்றார்கள்; யுத்தம் அதிகரித்தது, இஸ்ரவேலர் பெலிஸ்தியருக்கு முன்பாக முறியடிக்கப்பட்டார்கள். போர்க்களத்திலே அவர்கள் சேனையில் ஏறக்குறைய நாலாயிரம்பேர் வெட்டுண்டுபோனார்கள்.
ஜனங்கள் திரும்பப் பாளயத்துக்கு வந்த 3
போது இஸ்ரவேலின் மூப்பரானவர்கள், இன்று யெகோவா பெலிஸ்தியருக்கு முன்பாக நம்மை முறியடித்ததென்ன? சீலோவிலிருக்கிற யெகோவாவின் உடன்படிக்கைப்

பெட்டகத்தைக் கொண்டுவருவோம்; அது நமது நடுவில் வந்து நமது பகைஞரின் கைக்கு நம்மை விலக்கி இரட்சிக்கும் என்றார்
4 கள். அப்படியே கேருபுகளின் மத்தியிலே வாசமாயிருக்கிற சேனிய கர்த்தாவின் உடன் படிக்கைப்பெட்டகத்தை எடுத்துவரும்படி ஜனங்கள் சீலோவுக்குச் சொல்லியனுப்பினார்கள்; அங்கே ஏலியின் இரண்டு குமாரராகிய ஒப்னியும் பினெகாசும் கடவுளின் உடன்படிக்கைப் பெட்டகத்தோடு வந்தார்கள்.

5 யெகோவாவின் உடன்படிக்கைப்பெட்டகம் பானையத்திலே வந்தபோது இஸ்ரவேலரெல்லாரும் பூமி அதிரத்தக்கதாக மிகவும்
6 ஆரவாரஞ்செய்தார்கள். அந்த ஆரவார சத்தத்தைப் பெலிஸ்தியர் கேட்டபோது: எபிரேயருடைய பானையத்திலே கேட்கும் இந்த மகா ஆரவார சத்தம் என்ன என்றார்கள்; யெகோவாவின்பெட்டகம் பானையத்திலே வந்தது என்று அறிந்துகொண்டார்
7 கள். கடவுள் பானையத்தில் வந்தார் என்று பெலிஸ்தியர் பயந்து, ஐயோ, நமக்கு மோசம்; இதற்குமுன் ஒருபோதும் இப்படிப்
8 பட்ட காரியம் நடக்கவில்லையே. ஐயோ, நமக்கு மோசம், அந்த மகா தேவனின் கைக்கு நம்மைத் தப்புவிப்பார் யார்? எகிப்தியரைச் சகலவித வாதைகளினாலும் வனாந்தரத்திலே வாதித்த தேவர்கள் இவர்களே, | பெலிஸ்தியரே, பலங்கொள்ளுங்கள்; புருஷராயிருங்கள்; எபிரேயர் உங்களுக்கு அடிமைகளாயிருந்ததுபோல நீங்களும் அவர்களுக்கு அடிமைகளாகாதபடி புருஷராயிருந்து யுத்தம்பண்ணுங்கள் என்
10 று சொல்லிக்கொண்டார்கள். அப்படியே பெலிஸ்தியர் யுத்தம்பண்ணினார்கள், இஸ்ரவேலர் முறியடிக்கப்பட்டு அவரவர் தங்கள் தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப்போனார்கள்; சங்காரம் மிகவும் பெரிதாயிற்று; இஸ்ரவேலிலே முப்பதினாயிரம் காலாட்கள் விழுந்
11 தார்கள். கடவுளின் பெட்டகம் பிடிபட்டது; ஏலியின் இரண்டு குமாரராகிய ஒப்னியும் பினெகாசும் மாண்டார்கள்.

12 பென்யமீன் கோத்திரத்தானாகிய ஒருவன் படையிலிருந்து அன்றையதினமே சீலோவுக்கு ஓடிவந்தான். அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துத் தன் தலையின்மேல் புழு
13 திபைப் போட்டுக்கொண்டிருந்தான். அவன் வந்தபோது ஏலி வழியருகே ஆசனத்தின் மேல் உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருந்தான்; கடவுளின் பெட்டகத்தின் நிமித்தம் அவன் மனம் தத்தளித்துக்கொண்டிருந்தது; அந்த மனுஷன் ஊரிலே செய்தியை அறிவிக்க வந்தபோது ஊரெங்கும் புலம்பல் உண்டாயிற்று. புலம்பல் சத்தத்தை ஏலி 14
கேட்டு இந்தப் பேரிரைச்சல் என்ன என்று கேட்டான்; அந்த மனுஷன் விரைந்துவந்து ஏலிக்கு அறிவித்தான். ஏலி தொண்ணூற் 15
றெட்டு வயதுள்ளவனாயிருந்தான்; அவன் பார்க்கமுடியாதபடி அவன் கண்கள் மங்கலாயிருந்தன. அந்த மனுஷன் ஏலியண் 16
டையில் வந்து, நான் படையிலிருந்து வந்தேன், இன்றுதான் படையைவிட்டு ஓடிவந்தேன் என்றான். அப்பொழுது ஏலி: என் மகனே, நடந்த காரியம் என்ன என்று
கேட்க | செய்திகொண்டு வந்தவன் அவ 17
னிடம்: இஸ்ரவேலர் பெலிஸ்தியருக்குமுன்பாக முறிந்தோடிப்போனார்கள்; ஜனங்களுக்குள்ளே மகா சங்காரம்; உமது குமாரராகிய ஒப்னி பினெகாஸ் என்னும் இருவரும் மாண்டார்கள்; கடவுளின் பெட்டகமும் பிடிபட்டுப்போயிற்று என்றான். அவன் கடவு 18
ளின் பெட்டகத்தைச் சொன்னவுடனே ஏலி ஆசனத்திலிருந்து வாசலின் பக்கமாய் மல்லாக்க விழுந்தான்; அவன் கிழவனும் ஸ்தூலித்தவனுமாயிருந்தபடியால் அவன் பிடரி முறிந்து செத்தான். அவன் இஸ்ரவேலை நாற்பதுவருஷம் நியாயம்விசாரித்தான்.

பினெகாசின் மனைவியாகிய அவன் மரு 19
மகள் நிறைகர்ப்பிணியாயிருந்தாள்; கடவுளின் பெட்டகம் பிடிபட்ட செய்தியையும் தன் மாமனும் தன் புருஷனும் இறந்துபோனதையும் அவள் கேள்விப்பட்ட போது, அவள் கர்ப்பவேதனைப்பட்டு அப்படியே விழுந்து பிரசவித்தாள். அவள் 20
சாகப்போகிறநேரத்தில் அவளைச் சுற்றிநின்றஸ்திரீகள் அவளைப்பார்த்து: நீ பயப்படாதே; ஆண்பிள்ளையைப் பெற்றாய் என்றார்கள்; அவளோ அதற்கு ஒன்றும் சொல்லவுமில்லை, அதின்மேல் சிந்தைவைக்கவுமில்லை. கடவுளின் பெட்டகம் பிடிபட்டதையும் 21
தன் மாமனும் தன் புருஷனும் இறந்துபோனதையும் நினைத்தவளாய்க் கடவுளின் மகிமை போய்விட்டது என்று பிள்ளைக்கு ஈகாபோத் என்று பேரிட்டாள். கடவு 22
ளின் பெட்டகம் பிடிபட்டுப்போனபடியால் மகிமை இஸ்ரவேலைவிட்டு அகன்றது என்றாள்.

பெலிஸ்தியர் கடவுளின் பெட்டகத் 5
தைப்பிடித்து அதை ஏபெனேசரிலிருந்து அஸ்தோத்திற்குக் கொண்டுபோனார்கள். அங் 2
கே வரவே பெலிஸ்தியர் கடவுளின் பெட்டகத்தைத் தாகோனின் கோவிலிலே கொண்டுபோய்த் தாகோனருகே வைத்தார்கள். அஸ் 3

தோத் ஊரார் மறுநாள் காலமே எழுந்து வந்தபோது, இதோ, தாகோன் யெகோவாவின் பெட்டகத்துக்குமுன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்தது; அப்பொழுது அவர்கள் தாகோனை எடுத்து அதை அதின் ஸ்தானத்திலே திரும்பவும் நிறுத்தினார்கள். அவர்கள் மறுநாள் காலமே எழுந்து வந்தபோது, இதோ, தாகோன் யெகோவாவின் பெட்டகத்துக்குமுன்பாகத் தரையிலே விழுந்துகிடந்ததுமல்லாமல் தாகோனின் தலையும் அதின் இரண்டு கைகளும் வாசற்படியின்மேல் உடைபட்டுக் கிடந்தன; தாகோனுக்கு மீதியாயிருந்தது உடல்மாத்திரமே. இது காரணமாகவே இந்நாள் வரைக்கும் தாகோனின் பூசாரிகளும் தாகோனின் கோவிலுக்குள் பிரவேசிக்கிற யாவரும் அஸ்தோத்திலிருக்கிற தாகோனின் வாசற்படியை மிதிக்கிறதில்லை.

அஸ்தோத் ஊராரை அழிப்பதற்கென்று யெகோவாவின் கை அவர்கள்மேல் பாரமாயிற்று; அவர் அஸ்தோத்தின் ஜனங்களையும் அதின் பிராந்தியத்தில் இருந்தவர்களையும் மூலக்கட்டிகளினால் வாதித்தார். இப்படி நடந்ததை அஸ்தோத்தின் ஜனங்கள் கண்டபோது: இஸ்ரவேலரின் தெய்வப்பெட்டகம் நம்மிடம் இருக்கலாகாது; அத்தெய்வத்தின் கை நமதுமேலும் நமது தெய்வமாகிய தாகோனின்மேலும் கொடுமையாயிருக்கிறதே என்று சொல்லிக்கொண்டு, ஆள் அனுப்பிப் பெலிஸ்தியரின் ஆண்டவன்மாரையெல்லாம் தங்களிடம் கூடிவரச்செய்து, இஸ்ரவேலரின் தெய்வப்பெட்டகத்தை நாம் என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள். அவர்கள்: இஸ்ரவேலரின் தெய்வப்பெட்டகத்தை காத் பட்டணத்திற்குக் கொண்டுபோய்விடவேண்டும் என்றார்கள்; அப்படியே இஸ்ரவேலரின் தெய்வப்பெட்டகத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அதை எடுத்துக்கொண்டு போனபின்பு யெகோவாவின் கை அந்தப் பட்டணத்திற்கு விரோதமாகி மிகப் பெருங்கலகத்தை உண்டாக்கிற்று. அந்தப் பட்டணத்தின் மனுஷரையெல்லாம் சிறியவரையும் பெரியவரையும் வாதித்தார். வாதிக்கவே, எல்லாருக்கும் மூலக்கட்டிகள் உண்டாயிற்று.

ஆகவே அவர்கள் தெய்வப்பெட்டகத்தை எக்ரோனுக்கு அனுப்பினார்கள்; தெய்வப்பெட்டகம் எக்ரோனுக்கு வந்தபோது, எக்ரோன் ஊரார்: எங்களையும் எங்கள் ஜனங்களையும் கொன்றுபோட வேண்டுமென்று இஸ்ரவேலரின் தெய்வப்பெட்டகத்தை எங்களிடம் கொண்டுவருகிறீர்களே என்று கூக்குரலிட்டார்கள்; அவர்கள் ஆள் அனுப்பிப் பெலிஸ்தியரின் ஆண்டவன்மாரையெல்லாம் கூடிவரச்செய்து: இஸ்ரவேலரின் தெய்வப்பெட்டகத்தை அனுப்பிவிடுங்கள்; அது தன் ஸ்தானத்திற்குத் திரும்பிப்போகட்டும்; அது எங்களையும் எங்கள் ஜனங்களையும் கொன்றுபோடவேண்டாம் என்று சொன்னார்கள். சாவும் கலக்கமும் அந்த ஊராரையெல்லாம் பிடித்தது; கடவுளின்கை அங்கே மிகவும் பாரமாயிற்று. சாவுக்குத் தப்பியிருந்தவர்கள் மூலக்கட்டிகளினால் வாதிக்கப்பட்டார்கள். அந்தப் பட்டணத்தின் கூக்குரல் வானபரியந்தம் எழும்பிற்று.

யெகோவாவின் பெட்டகம் பெலிஸ்தியரின் தேசத்தில் ஏழுமாதம் இருந்தது. பின்பு பெலிஸ்தியர் பூசாரிகளையும் குறிசொல்லுகிறவர்களையும் அழைப்பித்து: யெகோவாவின் பெட்டகத்தின் விஷயத்தில் நாங்கள் செய்யவேண்டியதென்ன? அதை நாங்கள் எவ்விதமாய் அதின் ஸ்தானத்திற்கு அனுப்பிவிடலாம் என்று எங்களுக்குச் சொல்லுங்கள் என்றார்கள். அதற்கு அவர்கள் இஸ்ரவேலரின் தெய்வப்பெட்டகத்தை நீங்கள் அனுப்பிவிட வேண்டாம்; குற்றநிவாரண காணிக்கையை அவருக்குக் கொடுத்துத்தான் அனுப்பவேண்டும்; அப்பொழுது நீங்கள் சொஸ்தமடைவீர்கள்; அவருடைய கை உங்களைவிட்டகலாதிருந்த முகாந்தரம் இன்னதென்றும் உங்களுக்குத் தெரியவரும் என்றார்கள். அதற்கு அவர்கள், குற்றநிவாரண காணிக்கையாக நாங்கள் கொடுத்தனுப்பவேண்டிய தென்னவென்று கேட்க, அவர்கள்: உங்களெல்லாருக்கும் உங்கள் ஆண்டவன்மாருக்கும் ஒரே வாதைபுண்டானபடியினால் பெலிஸ்தியரின் ஆண்டவன்மாருடைய இலக்கத்திற்குச்சரியாக மூலக்கட்டிகளின் சாயலான ஐந்து பொன் சொரூபங்களையும் பொன்னினால்செய்த ஐந்து சுண்டெலிகளையும் கொடுத்தனுப்பவேண்டும். ஆகவே நீங்கள் உங்கள் மூலக்கட்டிகளின் சாயலான சொரூபங்களையும் உங்கள் தேசத்தைக்கெடுத்த சுண்டெலிகளின் சாயலான சொரூபங்களையும் செய்து இஸ்ரவேலரின் தெய்வத்துக்கு மகிமைசெலுத்துங்கள்; செலுத்தினால் ஒருவேளை உங்களுக்கும் உங்கள் தேவர்களுக்கும் உங்கள் தேசத்திற்கும் விரோதமாயிருக்கிற அவருடைய கை உங்களைவிட்டு விலகும். எகிப்தியரும் பார்வோனும்

1 2 3 4 5 6 7 8 9 10 11 12 6 2 3 4 5 6

தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தினதுபோல நீங்கள் உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்துவானேன்; அவர் தமது வல்லசெயலைக் காட்டியபின்பே எகிப்தியர் அவர்களை அனுப்பினார்கள்; அவர்களும் 7 வந்துவிட்டார்கள். இப்போதும் நீங்கள் ஒரு புதுவண்டி செய்து நுகம்பூட்டாதிருக்கிற இரண்டு கறவைப்பசுக்களைப்பிடித்து அவைகளை வண்டியிலே பூட்டுங்கள்; அவைகளின் கன்றுக்குட்டிகளை அவைகளுக்குப்பின்னே போகவிடாமல் வீட்டிற்குக் கொண்டு 8 வந்துவிடுங்கள். பின்பு யெகோவாவின் பெட்டகத்தை எடுத்து அதை வண்டியின் மேல் வைத்துக் குற்றநிவாரண காணிக்கையாக நீங்கள் அவருக்குக் கொடுத்தனுப்பும் பொன்னுருப்படிகளை அதின் பக்கத்தில் ஒரு சிறிய பெட்டியிலேவைத்து அதை அனுப்பிவிடுங்கள், அப்பொழுது பார்த்துக்கொண்டி 9 ருங்கள்; அது தன் ஸ்தானத்திற்குப் போகும் வழியாய்ப் பேத்ஷேமேசுக்குப்போனால், இந்தப் பெரிய தீங்கை நமக்குச்செய்தவர் அவரே என்று அறிவோம்; போகாதிருந்தால் நம்மை வாதித்தது அவருடைய கையல்ல, தற்செயலாகவே வாதை நமக்கு நேரிட்டது என்று அறிந்துகொள்ளலாம் என்றார்கள்.

10 அந்த மனுஷர் அப்படியே செய்து இரண்டு கறவைப் பசுக்களைக் கொண்டு வந்து வண்டியிலே கட்டி அவைகளின் கன்றுக்குட்டிகளை வீட்டிலே அடைத்து 11 வைத்துவிட்டு | யெகோவாவின் பெட்டகத்தையும் பொன் சுண்டெலிகளும் தங்கள் மூலக்கட்டிகளின் சாயலான சுரூபங்களும் வைத்திருந்த சிறிய பெட்டகத்தையும் அந்த 12 வண்டியிலே வைத்தார்கள். அப்பொழுது அந்தப் பசுக்கள் பேத்ஷேமேசுக்குப்போகிற வழியிலே நேரே சென்றன, வலது இடது பக்கமாய் விலகவில்லை, பெரும்பாதை வழியாகக் கூப்பிட்டுக்கொண்டே நடந்தன; பெலிஸ்தியரின் ஆண்டவன்மார் பேத்ஷேமேசின் எல்லைமட்டும் அவைகளின் பிறகே 13 போனார்கள். பேத்ஷேமேசு ஊரார் பள்ளத்தாக்கிலே கோதுமை அறுத்துக்கொண்டிருந்தார்கள்; அவர்கள் நிமிர்ந்து பார்த்தபோது பெட்டகத்தைக் கண்டார்கள், காணவே 14 சந்தோஷப்பட்டார்கள். வண்டி பேத்ஷேமேசு ஊரானுகிய யோசுவாவின் வயலில் வந்து அங்கேயே நின்றது; அங்கே ஒரு பெரிய கல்லிருந்தது; அவர்கள் வண்டியை நுகங்களைப் பிளந்து பசுக்களை யெகோவாவுக்குத் 15 தகனபலியாகச் செலுத்தினார்கள். லேவியர் யெகோவாவின் பெட்டகத்தையும், அதனோடிருந்த பொன்னுருப்படிகளுள்ள சிறிய பெட்டியையும் இறக்கி அந்தப் பெரிய கல்லின்மேல் வைத்தார்கள்; பேத்ஷேமேசு ஊரார் அன்றையதினம் யெகோவாவுக்குத் தகனபலிகளையும் வேறு இரத்த பலிகளையும் செலுத்தினார்கள். பெலிஸ்தியரின் ஐந்து 16 ஆண்டவன்மாரும் இதைப் பார்த்துவிட்டு அன்றைத்தினமே எக்ரோனுக்குத் திரும்பி விட்டார்கள்.

பெலிஸ்தியர் குற்றநிவாரணத்திற்கென்று 17 யெகோவாவுக்குச் செலுத்தின மூலக்கட்டிகளின் சாயலான பொன் சுரூபங்கள் ஐந்து: அஸ்தோத்திற்காக ஒன்று, காத்சாவுக்காக ஒன்று, அஸ்கலோனுக்காக ஒன்று, காத்துக்காக ஒன்று, எக்ரோனுக்காக ஒன்று. பொன் சுண்டெலிகளோவென்றால் ஐந்து 18 ஆண்டவன்மாருக்கும் ஆதீனமாயிருந்த பெலிஸ்தியரின் சகல ஊர்களாகிய அரணான பட்டணங்கள், கிராமங்கள் இவற்றின் இலக்கத்திற்குச் சரியாயிருந்தன. யெகோவாவின் பெட்டகத்தை வைத்த பெரிய கல்லே சாட்சி; அந்தக் கல் இந்நாள்வரைக்கும் பேத்ஷேமேசு ஊரானுகிய யோசுவாவின் வயலிலே இருக்கிறது.

பேத்ஷேமேசு ஊரார் யெகோவாவின் 19 பெட்டகத்தினுள்ளே பார்த்தபடியினால் யெகோவா ஜனங்களை அடித்தார், அடித்தது எழுபதுபேர்; ஐம்பதினாயிரம்பேர் சாகும்படி செய்தார். யெகோவா ஜனங்களை மகா சங்காரமாக அடித்தபினிமித்தம் ஜனங்கள் துக்கித்துக்கொண்டிருந்தார்கள். இந்தப் 20 பரிசுத்த தெய்வமாகிய யெகோவாவுக்கு முன்பாக நிற்பவன் யார்? பெட்டகம் நம்மிடத்திலிருந்து யாரிடத்துக்குப் போகும் என்று பேத்ஷேமேசு ஊரார் பேசிக்கொண்டு | கிரியாத் யெயாரீம் ஊரா 21 ரிடம் ஆட்களை அனுப்பி: பெலிஸ்தியர் யெகோவாவின் பெட்டகத்தைத் திரும்ப அனுப்பிவிட்டார்கள்; நீங்கள் வந்து அதை உங்களிடத்துக்கு எடுத்துக்கொண்டுபோங்கள் என்று சொல்லச் சொன்னார்கள்.

அப்படியே கிரியாத்யெயாரீம் ஊரார் 7 வந்து யெகோவாவின் பெட்டகத்தை எடுத்து, மேட்டிலிருந்த அபீனதாபின் வீட்டிலே கொண்டுவந்து வைத்தார்கள்; யெகோவாவின் பெட்டகத்தைப் பார்த்துக் கொள்ளும்படி அவன் குமாரனுகிய எலெயாசாரைப் பிரதிஷ்டை செய்தார்கள்.

பெட்டகம் கிரியாத்யெயாரீமிலே நெடு 2 நாள் தங்கியிருந்தது; இருபது வருஷம் அங்கேயே இருந்தது; இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் யெகோவாவை நோக்கத்துப் புலம்

3 கிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது சாமுவேல்: நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் யெகோவாவினிடம் திரும்புகிறவர்களானால் அந்திய தேவர்களையும் அஸ்தரோத்துக்களையும் உங்கள் நடுவிலிருந்து விலக்கி உங்கள் இருதயத்தை யெகோவாவுக்கு நேராகத் திருப்பி அவர் ஒருவரையே சேவியுங்கள்; அப்பொழுது அவர் உங்களைப் பெலிஸ்தியரின் கைக்கு நீங்கலாக்கிவிடுவார் என்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவருக்
4 கும் சொன்னான். அப்பொழுது இஸ்ரவேலுபுத்திரர் பாகால்களையும் அஸ்தரோத்துக்களையும் விலக்கிவிட்டு யெகோவா ஒருவரையே சேவித்தார்கள்.

5 பின்பு சாமுவேல்: நான் உங்களுக்காக யெகோவாவை மன்றாடும்படி இஸ்ரவேலர் யாவரையும் மிஸ்பாவிலே கூடிவரச்செய்யுங்
6 கள் என்றான். அவர்கள் அப்படியே மிஸ்பாவிலே கூடிவந்து தண்ணீர்மொண்டு யெகோவாவின் சந்நிதியில் ஊற்றி அன்றைத்தினம் உபவாசம்பண்ணி யெகோவாவுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தோம் என்று அங்கே அறிக்கையிட்டார்கள்; மிஸ்பாவிலே சாமுவேல் இஸ்ரவேல் புத்திரரை
7 நியாயம்விசாரித்துக்கொண்டிருந்தான். இஸ்ரவேல் புத்திரர் மிஸ்பாவிலே கூடிவந்ததைப் பெலிஸ்தியர் கேள்விப்பட்டபோது பெலிஸ்தியரின் ஆண்டவன்மார் இஸ்ரவேலுக்கு விரோதமாக வந்தார்கள்; அதை இஸ்ரவேல் புத்திரர் கேட்டுப் பெலிஸ்தியருக்
8 குப் பயந்து | சாமுவேலைப் பார்த்து: நமது கடவுளாகிய யெகோவா எங்களைப் பெலிஸ்தியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கும்படி எங்களுக்காக அவரிடம் விடாமல் அபயமிட்டுக்கொண்டிரும் என்றார்கள்.
9 அப்பொழுது சாமுவேல் பால்குடிக்கிற ஒரு ஆட்டுக்குட்டியைப் பிடித்து அதை யெகோவாவுக்குச் சமூல தகனபலியாகச் செலுத்தி இஸ்ரவேலுக்காக யெகோவாவினிடம் அபயமிட்டான்; யெகோவா அவனுக்குச் செவி
10 சாய்த்தருளினார். சாமுவேல் தகனபலியைச் செலுத்துகையில் பெலிஸ்தியர் இஸ்ரவேலோடு யுத்தம்பண்ணக் கிட்டிச்சேர்ந்தார்கள்; யெகோவா பெரிய இடிமுழக்கத்தைப் பெலிஸ்தியர்மேல் அந்நாளிலே வரச்செய்து அவர்களைக் கலங்கடித்தார்; அவர்கள் இஸ்ரவேலுக்கு முன்பாகப் பட்டு
11 விழுந்தார்கள். அப்பொழுது இஸ்ரவேலர் மிஸ்பாவிலிருந்து பெலிஸ்தியரைப் பிடிக்கத் தொடர்ந்து பேத்கார்மட்டும் அவர்களை முறி
12 யடித்தார்கள். அப்பொழுது சாமுவேல் ஒரு கல்லை எடுத்து மிஸ்பாவுக்கும் சேனுக்கும் நடுவாக நிறுத்தி இம்மட்டும் யெகோவா எங்களுக்கு உதவிசெய்தார் என்று சொல்லி அதற்கு ஏபனேசர் என்று பேரிட்டான்.
13 பெலிஸ்தியர் அப்புறம் இஸ்ரவேலின் எல்லையிலே வராதபடி இவ்வண்ணமாகத் தாழ்த்தப்பட்டார்கள்; சாமுவேலின் நாளெல்லாம் யெகோவாவின் கை பெலிஸ்தியருக்கு விரோதமாகவே இருந்தது.
14 பெலிஸ்தியர் இஸ்ரவேலரிடமிருந்து பிடித்திருந்த எக்ரோன்துவக்கிக் காத்மட்டுமுள்ள ஊர்களும் இஸ்ரவேலுக்குத் திரும்பக் கிடைத்தன; அவைகளையும் அவைகளின் பிராந்தியங்களையும் இஸ்ரவேலர் பெலிஸ்தியரிடமிருந்து விடுவித்துக்கொண்டார்கள். இஸ்ரவேலரும் எமோரியரும் சமாதானமாயிருந்தார்கள்.
15 சாமுவேல் தன் ஆயுள்காலமெல்லாம்
16 இஸ்ரவேலை நியாயம் விசாரித்தான். வருஷந்தோறும் அவன் பேதேலையும் கில்காலையும் மிஸ்பாவையும் சுற்றிப்போய் அவ்விடங்களிலெல்லாம் இஸ்ரவேலை நியாயம்விசாரிப்பான். பின்பு அவன் ராமாவுக்குத் திரும்பி
17 வருவான்; அவன் வீடு அங்கே இருந்தது; அங்கேயே அவன் இஸ்ரவேலை நியாயம் விசாரித்துவந்தான், அவ்விடத்திலேயே யெகோவாவுக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான்.

8 சாமுவேல் முதிர்வயதானபோது தன் குமாரரை இஸ்ரவேலின்மேல் நியாயாதிபதிகளாக வைத்தான். மூத்தவன் பேர்
2 யோவேல், இரண்டாவன்பேர் அபியா; அவர்கள் பெயேர்செபாவிலே நியாயம் விசாரித்துவந்தார்கள். அவர்களோ அவன் வழியில்
3 நடவாமல் அநியாய லாபத்தை ஆசித்துப் பரிதானம் வாங்கி நியாயத்தைப் புரட்டிவந்தார்கள்.

4 இஸ்ரவேலின் மூப்பர் அனைவரும் ஒன்றுகூடி ராமாவிலிருந்த சாமுவேலினிடம்
5 வந்து: இதோ, நீர் முதிர்வயதுள்ளவரானீர்; உமது குமாரர் உமது வழியில் நடப்பவர்களல்ல; ஆகவே எங்களை நியாயம் விசாரிக்கிறதற்கு ஒரு ராஜாவை ஏற்படுத்தும், சகல ஜாதிகளிலும் அப்படி இருக்கிறதே என்றார்கள். எங்களை நியாயம் விசாரிக்கிறதற்கு
6 ஒரு ராஜாவை ஏற்படுத்தும் என்று அவர்கள் சொன்ன வார்த்தை சாமுவேலின் பார்வையில் தீயதாயிருந்தது; அவன் யெகோவாவினிடம் விண்ணப்பம்பண்ணினான். விண்ணப்பம்பண்ணவே யெகோவா
7 அவனிடம்: ஜனங்கள் உன்னிடம் கேட்டுக்கொள்ளும் யாவற்றிலும் அவர்கள் சொற்படியே செய்; அவர்கள் தள்ளிவிடுவது உன்னையல்ல என்னையே, நான் அவர்கள்

ஆளாதபடி என்னைத் தள்ளுகிறார்கள்.
8 நான் அவர்களை எகிப்திலிருந்து கொண்டு
வந்த நாள்முதல் இந்நாள்மட்டும் அவர்கள்
என்னைவிட்டு விலகி வேறே தேவர்களைச்
சேவித்துவந்தார்கள்; அவர்கள் எனக்குச்
செய்தவற்றின்படியே உனக்கும் செய்கிறார்
9 கள். இப்போதும் அவர்கள் சொற்படியே
செய்; ஆனாலும் அவர்கள் ஆளப்போகிறவ
னின் அரசாட்சிமுறை இன்னது என்பதை
அவர்களுக்கு அறிவித்து அவர்களைத் திட்ட
மாய் எச்சரிக்கவேண்டும் என்றார்.
10 அப்பொழுது சாமுவேல் ராஜா வேண்
டும் என்று தன்னிடம் கேட்ட ஜனங்
களுக்கு யெகோவாவின் வார்த்தைகளையெல்
11 லாம் அறிவித்து: உங்களை ஆளப்போகிறவ
னுடைய அரசாட்சிமுறையைக் கேளுங்கள்,
அவன் உங்கள் குமாரரைச் சேவகத்திற்
கென்று பிடித்து அவர்களைத் தன் ரதவீரரா
கவும்குதிரைவீரராகவும் வைத்துக்கொள்வான்.
12 அவர்களைத் தன் ரதத்தின்முன் ஓடச்செய்
வான். ஆயிரம்பேருக்கும் ஐம்பது பேருக்கும்
தலைவராகவும் தன் நிலத்தை உழுகிறவர்
களாகவும் தன் விளைச்சலை அறுக்கிறவர்களா
கவும் தன் யுத்த ஆயுதங்களையும் தன் ரதங்
களுக்குரிய போர்க்கருவிகளையும் பண்ணு
கிறவர்களாகவும் அவர்களை வைத்துக்கொள்
13 ளுவான். உங்கள் குமாரத்திகளைப் பரிமளக்
காரிகளாகவும் சமையற்காரிகளாகவும்
அப்பம் சுடுகிறவர்களாகவும் வைப்பான்.
14 சிறந்தடமான உங்கள் வயல்களையும் திராட்
சத்தோட்டங்களையும் ஒலிவத்தோப்புகளை
யும் அபகரித்துத் தன் ஊழியருக்குக்
15 கொடுப்பான். உங்கள் தானியத்திலும்திராட்
சப்பலனிலும் பத்திலொன்றைப் பறிசெய்து
தன் அதிகாரிகளுக்கும்
16 மற்றச் சேவகருக்கும் கொடுப்பான். உங்
கள் வேலைக்காரரையும் உங்கள் வேலைக்
காரிகளையும் உங்களில் சிறந்தடமான
வாலிபரையும் உங்கள் கழுதைகளையும்
பிடித்துத் தன் வேலைக்கு வைத்துக்கொள்ளு
17 வான். உங்கள் ஆடுகளிலே பத்தி
லொன்றை எடுத்துக்கொள்ளுவான்; நீங்கள்
18 அவனுக்கு வேலையாட்களாவீர்கள். நீங்
கள் தெரிந்துகொண்ட உங்கள் ராஜாவினி
மித்தம் அழுகளிலே அபயமிடுவீர்கள்;
யெகோவாவோ அக்காலத்திலே உங்களுக்குச்
19 செவிகொடார் என்றார். சாமுவேலின்
சொற்கேட்க ஜனங்களுக்கு மனதில்லை;
அவர்கள் அவனிடம், அப்படியல்ல,
எங்களுக்கு ஒரு ராஜா இருக்கவேவேண்
20 டும். சகல ஜாதிகளையும்போல நாங்களும்
இருப்போம்; எங்கள் ராஜா எங்களை நியா
யம்விசாரித்து, எங்களுக்கு முன்பாகச்
சென்று எங்கள் யுத்தங்களை நடத்தவேண்
டும் என்றார்கள்: சாமுவேல் ஜனங்களின் 21
வார்த்தைகளையெல்லாம் கேட்டு அவைகளை
யெகோவாவினிடம் சொன்னான். சொல்
லவே யெகோவா சாமுவேலினிடம்: நீ 22
அவர்கள் சொற்படிசெய்து அவர்களை ஆள
ஒரு ராஜாவை ஏற்படுத்து என்றார்; சாமு
வேல் இஸ்ரவேலரிடம் அவரவர் தங்கள்
தங்கள் ஊர்களுக்குப் போகலாம் என்றான்.

பென்யமீன் கோத்திரத்தாரில் கீஷ் என் 9
னும் பேருள்ள ஒருவன் இருந்தான்; அவன்
பென்யமீன் கோத்திரத்தானாகிய அபியாவின்
மகனான பெகோராத்திற்குப் பிறந்த
சேரோரின் புத்திரனாகிய அபியேலின் குமா
ரன்; அவன் தனவந்தன். அவனுக்குச் 2
சவுல் என்னும் பேருள்ள ஒரு குமாரன்
இருந்தான்; அவன் சவுந்தரியமுள்ள வாலி
பன்; இஸ்ரவேல் புத்திரரில் அவனைப்பார்க்
கிலும் சவுந்தரியவான் இல்லை; அவன்
எல்லா ஜனங்களிலும் உயரமாயிருந்தான்,
அவன் தோளுக்குமேல் எட்டினவன் எவனு
மில்லை. சவுலின் தகப்பனாகிய கீஷின் 3
கழுதைகள் காணமற்போயின; கீஷ் தன்
குமாரனாகிய சவுலைக் கூப்பிட்டு நீ வேலைக்
காரரில் ஒருவனைக் கூட்டிக்கொண்டு கழு
தைகளைத் தேடிவா என்றான். அப்படியே 4
அவன் சென்று எப்பிராயீம் மலைநாட்டிலும்
சலிஷா நாட்டிலும் சுற்றித் திரிந்தான்;
அங்கே அவைகளைக் காணவில்லை, ஆகவே
அவர்கள் சாலீம் நாட்டைக் கடந்து
சென்றார்கள்; அங்கேயும் காணவில்லை.
பென்யமீன் நாட்டில் சுற்றித்திரிந்தும்
அவைகளைக் காணவில்லை. அவர்கள் சூப்பு 5
நாட்டிற்கு வந்தபோது சவுல் தன்னை
டிருந்த வேலைக்காரனைப்பார்த்து: நாம் திரும்
பிப்போவோம் வா, என் தகப்பனார் கழுதை
களின்மேலுள்ள கவலையைவிட்டு நமக்காகக்
கவலைப்படுவார் என்றான். அதற்கு அவன்: 6
இதோ, இந்த ஊரிலே கடவுளின் மனிதன்
ஒருவர் இருக்கிறார்; அவர் மதிப்புள்ளவர்;
அவர் சொல்லுவதெல்லாம் தப்பாமல் நடக்
கும்; அங்கே போவோம்; நாம் தேடி
அலைந்துகொண்டிருக்கிற காரியத்தைப்பற்றி
ஒருவேளை அவர் நமக்குத் தெரிவிப்பார்
என்றான். அதுகேட்ட சவுல் தன் வேலைக் 7
காரனிடம்: நாம் போனால் அந்த மனித
னுக்கு எதைக் கொண்டுபோவோம், நமது
பைகளில் இருந்த தின்பண்டங்கள் செல
வழிந்துபோயின; கடவுளின் மனிதனாகிய
அவருக்குக் கொண்டுபோகத்தக்க
காணிக்கை இல்லையே, நம்மிடம் என்ன

8 இருக்கிறது என்றான். பின்னும் அந்த வேலைக்காரன் சவுலினிடம்: இதோ, என் கையில் இன்னும் கால் வெள்ளிச்சேக்கல் இருக்கிறது; கடவுளின் மனிதன் நாம் தேடி அலையும் காரியத்தை நமக்கு அறிவிக்கும் படிக்கு அதை அவருக்குக் கொடுப்பேன் 9 என்றான்—முற்காலத்திலே இஸ்ரவேலில் ஒருவன் கடவுளினிடம் விசாரிக்கப்போனால், ஞானதிருஷ்டிகனிடம் போவோம் வாருங்கள் என்பான்; இக்காலிலே தீர்க்கதரிசி என்னப்படுகிறவன் முற்காலத்தில் ஞானதிருஷ்டிகன் என்னப்பட்டான்— 10 சவுல் தன் வேலைக்காரனிடம்: நீ சொன்னது நல்லது, போவோம் வா என்றான்; அப்படியே கடவுளின் மனிதன் இருந்த அந்த 11 ஊருக்குப் போனார்கள். அவர்கள் ஊர் மேட்டின் வழியாய் ஏறுகிறபோது தண்ணீர் எடுக்கவந்த பெண்களைக்கண்டு, ஞானதிருஷ்டிகன் இங்கே இருக்கிறாரா என்று 12 கேட்க, அவர்கள்: இருக்கிறார்; இதோ, உங்களுக்கு நேரேதான் இருக்கிறார்; விரைவாய்ப் போங்கள்; இன்றைக்கு ஜனங்கள் மேடையில் பலியிடுகிறபடியினால் இன்றை 13 யதினம் ஊருக்கு வந்தார். நீங்கள் ஊருக்குள் சென்றவுடன் அவர் மேடையின்மேல் போஜனம்பண்ணப் போகிறதற்குமுன்னே அவரைப் பார்க்கவேண்டும், அவர் வருமட்டும் ஜனங்கள் போஜனம்பண்ணமாட்டார்கள்; பலியிட்டதை அவர் ஆசீர்வதிப்பார்; அதன்பின்புதான் அழைக்கப்பட்டவர்கள் போஜனம்பண்ணுவார்கள்; உடனே போங்கள்; இக்நேரத்திலே அவரைக் கண்டு 14 கொள்ளலாம் என்றார்கள். அவர்கள் ஊருக்குள் போனார்கள்; ஊரின் நடுவே போகையில், இதோ, சாமுவேல் மேடையின்மேல் ஏறிப்போகிறதற்காக அவர்களுக்கு எதிரே வந்தான்.

15 சவுல் வருவதற்கு முந்தினநாள் 16 யெகோவா சாமுவேலோடு பேசி: நானே இந்நேரம் பென்யமீன் நாட்டான் ஒருவனை உன்னிடம் அனுப்புவேன்; அவனை என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிபதியாக அபிஷேகம் பண்ணு; அவன் என் ஜனத்தைப் பெலிஸ்தியரின் கையினின்று இரட்சிப்பான்; என் ஜனத்தின் அபயகூல் என்னிடம் வந்து எட்டினது; நான் அவர்களைக் கடாட்சித்தேன் என்று வெளிப்படுத்தியிருந்தார். 17 சாமுவேல் சவுலைக் கண்டபோது யெகோவா அவனிடத்தில்: இதோ, நான் உனக்குச் சொல்லியிருந்த மனுஷன் இவனே; இவன்தான் என் ஜனத்தை ஆளுவான் என்றார்.

சவுல் வாசலிலே சாமுவேலைச் சந்திக் 18
கவே, சவுல்: ஞானதிருஷ்டிகன் வீடு எங்கே, எனக்குச் சொல்வீரா என்று கேட்டான். கேட்கவே சாமுவேல்: ஞானதிருஷ்டிகன் 19
நான்தான்; நீ எனக்குமுன் மேடையின் மேல் ஏறிப்போ; நீங்கள் இன்று என்னோடு போஜனம்பண்ணவேண்டும்; நாளைக் காலமே நான் உன் இருதயத்தில் உள்ளவற்றை யெல்லாம் உனக்கு அறிவித்து உன்னை அனுப்பிவிடுவேன். மூன்று 20
நாளைக்குமுன் காணாமற்போன கழுதைகளைப் பற்றிக் கவலைப்படவேண்டாம்; அவைகள் அகப்பட்டன; மேலும் இஸ்ரவேலின் மேன்மையெல்லாம் யாருக்குரியது; உனக்கும் உன் தகப்பன் வீட்டாருக்குமேயல்லவா என்று சொன்னான். அதுகேட்ட 21
சவுல்: நான் பென்யமீன் கோத்திரத்தானும் பிற்றே, அது இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் சிறிதல்லவா? என் குடும்பம் பென்யமீன் கோத்திரக்குடும்பங்களிலெல்லாம் அற்பமானதாயிற்றே. அப்படிப்பட்ட என்னிடம் நீர் இவ்வார்த்தையை உரைப்பானேன் என்று சொன்னான். சாமுவேல் 22
சவுலையும் அவன் வேலைக்காரனையும் போஜன சாலைக்குள் அழைத்துப்போய் அழைக்கப்பட்டவர்களுக்குள்ளே அவர்களைத் தலைமையான இடத்திலே வைத்தான்; அழைக்கப்பட்டிருந்தவர்கள் ஏறக்குறைய முப்பதுபேர். சாமுவேல் சமையற்கார 23
னைப்பார்த்து: வைத்திருக்கும்படி நான் உன்னிடம் ஒரு பங்கைக் கொடுத்தேனே, அதைக் கொண்டுவந்து வை என்றான். அப்பொழுது சமையற்காரன் ஒரு முன்னந் 24
தொடையையும் அதனோடு ஒட்டியிருந்ததையும் எடுத்துக்கொண்டுவந்து, அதைச்சவுலுக்கு வைத்தான்; வைக்கவே சாமுவேல்: இதோ, இது உனக்கென்று வைக்கப்பட்டிருந்தது, இதை நீ வைத்துக்கொண்டு சாப்பிடு; நான் ஜனங்களை விருந்துக்கு அழைத்தபோது, இந்தச் சமயத்திற்கென்றே இதை உனக்காக வைத்திருந்தது என்றான்; அப்படியே சவுல் அன்றைபதினம் சாமுவேலோடு போஜனம் பண்ணினான். அவர்கள் 25
மேடையிலிருந்து ஊருக்குள் இறங்கிவந்தபின்பு சாமுவேல் வீட்டின் மேலே சவுலோடு பேசிக்கொண்டிருந்தான்.

அவர்கள் அதிகாலமே விழக்கு வெளுக் 26
கிற நேரத்தில் எழுந்திருந்தபோது, சாமுவேல் வீட்டின்மேலிருந்த சவுலைக் கூப்பிட்டு, எழுந்திரு, போகலாம்; நானும் உன்னோடு சிறிதுதூரம் வருகிறேன் என்றான். சவுல் எழுந்திருந்தான்: அவனும் சாமுவேலும்

இருவருமாகப் புறப்பட்டுப்போனார்கள். அவர்கள் ஊரின் கடைசிமட்டும் இறங்கி வந்தபோது சாமுவேல் சவுலைப்பார்த்து: வேலைக்காரன் நமக்குமுன்னே நடந்து போகச்சொல் என்றான்; அப்படியே அவன் நடந்துபோனான். பின்பு சாமுவேல்: சற்று நில், நான் கடவுளின் வார்த்தையை உனக்குத் தெரிவிப்பேன் என்றான்.

10 அப்பொழுது சாமுவேல் தைலக்குப்பியை எடுத்துச் சவுலின் தலையின்மேல் வார்த்து அவனை முத்தஞ்செய்தான்; பின்னும் அவன்: யெகோவா உன்னைத் தமது சுதந்தரத்தின்மேல் தலைவனாக அபிஷேகம் 2 பண்ணினாரே. நீ இன்றைக்கு என்னை விட்டுப்போகிறபோது பென்யமீன் எல்லையருகே ராகேலின் கல்லறையண்டையிலே செல்சாகு ஊரில் இரண்டு மனுஷரைக் காண்பாய்; அவர்கள் உன்னைப்பார்த்து: நீ தேடப்போன கழுதைகள் அகப்பட்டன; இதோ, உன் தகப்பன் கழுதைகளின்மேலிருந்த விசாரத்தைவிட்டு உங்களுக்காகக் கவலைப்பட்டு, என் மகனுக்காக என்ன செய்வேன் என்கிறான் என்று சொல்லுவார் 3 கள். நீ அவ்விடத்தைவிட்டு அப்புறம் கடந்துபோய்த் தாபோரின் கர்வாலிமரத்தண்டை சேரும்போது பேதேலுக்குக் கடவுளினிடம் போகிற மூன்று மனுஷர் அங்கே உனக்கு எதிர்ப்படுவார்கள்; ஒருவன் மூன்று ஆட்டுக்குட்டிகளையும் இன்னொருவன் மூன்று அப்பங்களையும் வேறொருவன் திராட்சரசமுள்ள ஒரு தோற்பையையும் 4 கொண்டுவந்து, சமாதானம் கூறி உன்னை வாழ்த்தி உனக்கு இரண்டு அப்பங்களைக் கொடுப்பார்கள்; அவைகளை நீ அவர்க 5 ளிடம் வாங்கிக்கொள். பின்பு பெலிஸ்தியரின் அதிபதிகள் இருக்கிற கிபியாவெலோகீமுக்குப் போவாய், அங்கே நீ ஊருக்குள் செல்லுகையில் மேடையிலிருந்து இறங்கி வருகிற தீர்க்கதரிசிகளின் கூட்டம் உனக்கு எதிர்ப்படும்; அவர்களுக்கு முன்பாகத் தம்புருவும் மேளமும் காகுரமும் சுரமண்டலமும் போகும்; அவர்கள் பரவசமாகிப் 6 பேசுவார்கள். அப்பொழுது யெகோவாவின் ஆவி வல்லமையோடு உன்மேல் வந்து இறங்கும்; நீயும் அவர்களோடுகூடப் பரவசமாகிப் பேசுவாய், நீ புதிய மனிதனுவாய். 7 இந்த அடையாளங்கள் உனக்கு நேரிடும் போது சமயத்துக்கு ஏற்றபடி நீ செய்; 8 கடவுள் உன்னோடு இருக்கிறார். நீ எனக்கு முன்னே கில்காலுக்குப் போ; தகனபலிகளையும் சமாதானபலிகளையும் செலுத்தும்படி நான் உன்னிடம் வருவேன்; நான் வருவதற்காக ஏழுநாள் காத்திரு; நீ செய்யவேண்டியதை நான் வந்து உனக்கு அறிவிப்பேன் என்றான்.

9 அவன் சாமுவேலிடம்விட்டுப் போகும்படி திரும்பினபோது கடவுள் அவனுக்குப் புதிய இருதயத்தைக் கொடுத்தார்; அந்த அடையாளங்கள் எல்லாம் அன்றைத்தினமே நேரிட்டன. 10 அவர்கள் கிபியாவுக்கு வந்தபோது, இதோ, தீர்க்கதரிசிகளின் கூட்டம் அவனுக்கு எதிராகவந்தது; அப்பொழுது கடவுளின் ஆவி அவன்மேல் வல்லமையோடு வந்து இறங்கினதினால் அவனும் அவர்கள் நடுவில் பரவசமாகிப் பேசினான். 11 அதற்குமுன்னே அவனை அறிந்தவர்கள் எல்லாரும் அவன் தீர்க்கதரிசிகளோடிருந்து பரவசமாய்ப் பேசினதைக்கண்டபோது: கீசின் குமாரனுக்கு வந்தது என்ன? சவுலும் தீர்க்கதரிசிகளில் ஒருவனோ என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். 12 அதற்கு அங்கே இருந்தவர்களில் ஒருவன்: இவர்களுக்குத் தகப்பன் யார் என்றான்; ஆகவே சவுலும் தீர்க்கதரிசிகளில் ஒருவனோ என்பது பழமொழியாயிற்று. 13 அவன் பரவசமாகிப் பேசி முடிந்தபின் மேடையின்மேல் வந்தான்.

14 சவுலின் சிறிய தகப்பன், நீங்கள் எங்கே போயிருந்தீர்கள் என்று அவனையும் அவன் வேலைக்காரனையும் கேட்டான். அதற்கு அவன்: நாங்கள் கழுதைகளைத் தேடப்போனோம், அவைகளை எங்கும் காணாதபடியினால் சாமுவேலிடம் போனோம் என்றான். 15 அப்பொழுது சவுலின் சிறிய தகப்பன்: சாமுவேல் உங்களுக்குச் சொன்னது என்ன? அதை எனக்கு அறிவி என்றான். 16 சவுல் தன் சிறிய தகப்பனைப் பார்த்து: கழுதைகள் அகப்பட்டன என்று எங்களுக்குத் திட்டமாய் அறிவித்தார் என்றான். ராஜ்யபாரத்தைப்பற்றிச் சாமுவேல் சொன்னதையோ அவனுக்கு அறிவிக்கவில்லை.

17 சாமுவேல் ஜனங்களை மிஸ்பாவிலே யெகோவாவினிடம் வரவழைத்து, 18 இஸ்ரவேல் புத்திரரோடு பேசி: இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா சொல்லுகிறதைக் கேளுங்கள், நானே இஸ்ரவேலை எகிப்திலிருந்து கொண்டு வந்தேன், எகிப்தியர் கையினின்றும் உங்களை ஒடுக்கின சகல ராஜ்யத்தாரின் கையினின்றும் உங்களை விடுவித்தேன். 19 நீங்களோ உங்களுக்கு நேரிட்ட சகல தீங்குகளுக்கும் இடுக்கண்களுக்கும் உங்களை நீங்கலாக்கி இரட்சித்தவராகிய உங்கள் கடவுளை இக்காலிலே அசட்டை

செய்துவிட்டீர்கள். ஒரு ராஜாவை எங்கள்மேல் ஏற்படுத்தும் என்று அவரிடம் சொன்னீர்கள், இப்பொழுது யெகோவாவின் சந்நிதியிலேஉங்கள் கோத்திரங்களின்படியேயும் உங்கள் வம்சங்களின்படியேயும் வந்து நில்லுங்கள் என்றான். சாமுவேல் இஸ்ரவேலின் கோத்திரங்களையெல்லாம் கிட்டிவரப்பண்ணினபோது பென்யமீன் கோத்திரத்திற்குச் சீட்டு விழுந்தது. அவன் பென்யமீன் கோத்திரத்தை அதின் குடும்பங்களின்படியே கிட்டிவரச்செய்தபோது மாத்திரி குடும்பத்திற்குச் சீட்டு விழுந்தது; அதிலே கீஷின் குமாரனாகிய சவுலின் பேருக்குச் சீட்டு விழுந்தது; அவனைத் தேடினபோது அவன் அகப்படவில்லை. அவன் இப்பொழுது இங்கே வந்திருக்கிறான் என்று அவர்கள் திரும்ப யெகோவாவினிடம் விசாரித்தபோது: இதோ, அவன் தளவாடங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டிருக்கிறான் என்று யெகோவா சொன்னார். அப்பொழுது அவர்கள் ஓடி அங்கேயிருந்து அவனை அழைத்துக்கொண்டு வந்தார்கள்; அவன் ஜனங்கள் நடுவே வந்துநின்றபோது அவன் எல்லா ஜனங்களிலும் உயரமாயிருந்தான்; அவன் தோளுக்குமேல் எட்டினவன் எவனுமில்லை. அப்பொழுது சாமுவேல் சகல ஜனங்களையும் பார்த்து: யெகோவா தெரிந்துகொண்டவனைப் பாருங்கள், ஜனமுழுவதிலும் அவனுக்குச் சமானமானவன் இல்லையே என்றான்; அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் ஆரவாரஞ்செய்து: ராஜா வாழ்க என்றார்கள். அரசாட்சிமுறையைச் சாமுவேல் ஜனங்களுக்கு விவரித்துக்காட்டி அதைப் புஸ்தகத்தில் எழுதி யெகோவாவின் சந்நிதியில் வைத்தான். ஜனங்களையெல்லாம் அவரவர் வீட்டுக்கு அனுப்பிவிட்டான். சவுலும் கிபியாவிலிருந்த தன் வீட்டுக்குப் போனான்; கடவுளால் தங்கள் மனதிலே ஏவப்பட்ட பராக்கிரமசாலிகளும் அவனுடனே போனார்கள். பேலியாலின் மக்களோ: இவன் நம்மை இரட்சிப்பதெப்படி என்று சொல்லி அவனை அசட்டைபண்ணினார்கள்; அவனுக்குக் காணிக்கை கொண்டுவரவில்லை: அவனோ காதுகேளாதவன்போலிருந்தான்.

**11** அக்காலத்தில் நாகாஸ் என்னும் அம்மோனியன் வந்து யாபேஷ் கிலெயாத்துக்கு விரோதமாய்ப் பாளயமிறங்கினான்; அப்பொழுது யாபேஷ் ஊரார் எல்லாரும் நாகாசினிடம்: எங்களோடே உடன்படிக்கைபண்ணும், உம்மைச் சேவிப்போம் என்றார்கள். அதற்கு அம்மோனியனாகிய நாகாஸ், நான் உங்களோடு உடன்படிக்கை செய்யும் நிபந்தனை இதுவே: நான் உங்கள் ஒவ்வொருவருடைய வலது கண்ணையும் பிடுங்குவேன், இது இஸ்ரவேலனைத்திற்கும் நிந்தையாகவேண்டும் என்றான். அதற்கு யாபேஷின் மூப்பர்கள்: நாங்கள் இஸ்ரவேல் நாடெங்கும் ஆட்களை அனுப்பும்படி ஏழுநாள் எங்களுக்குத் தவணைகொடும்; எங்களை இரட்சிப்பதற்கு ஒருவரும் வராவிட்டால் அப்பொழுது உம்மிடம் வருவோம் என்றார்கள்.

அந்த ஆட்கள் சவுலின் கிபியாவுக்கு வந்து ஜனங்களின் காதுகேட்க அந்தச் செய்திகளைச் சொன்னார்கள்; அதைக் கேட்டு ஜனங்களெல்லாரும் சத்தமிட்டு அழுதார்கள். இதோ, சவுல் வயலிலிருந்து மாடுகளை ஓட்டிவருகிறான்; அவன்: ஜனங்கள் அழுகிறார்களே, நேரிட்டதென்ன என்று கேட்டான். யாபேஷ் ஊரார் சொல்லியனுப்பிய செய்திகளை அவனுக்குத் தெரிவித்தார்கள். சவுல் இந்தச் செய்திகளைக் கேட்கவே கடவுளின்ஆவி அவன்மேல் வல்லமையோடு வந்து இறங்கினது; அவன் மிகவும் கோபமூண்டவனாகி | ஒரிணைமாட்டைப் பிடித்துத் துண்டித்து ஆட்கள் கையிலே கொடுத்து: சவுலின் பின்னேயும் சாமுவேலின் பின்னேயும் புறப்பட்டுவராதவன் எவனுடைய மாடுகளுக்கு இப்படியே செய்யப்படும் என்று இஸ்ரவேலின் நாடுகளுக்கெல்லாம் சொல்லியனுப்பினான்; அப்பொழுது யெகோவாவினால் உண்டான திகில் ஜனத்தின்மேல் வந்ததினால் அவர்கள் ஏகோபித்துப் புறப்பட்டு வந்தார்கள். அவர் களைப் பேசேக்கிலே இலக்கம்பார்த்தான்; இஸ்ரவேல் புத்திரரில் மூன்று லட்சம்பேரும் யூதா மனுஷரில் முப்பதினாயிரம்பேரும் இருந்தார்கள்.

வந்த ஆட்களை அவர்கள் பார்த்து: நாளைக்கு உச்சிவெயில்ஆகுமுன்னே உங்களுக்கு இரட்சிப்புக் கிடைக்கும் என்று யாபேஷ் கிலெயாத்ஊராருக்குச் சொல்லுங்கள் என்றார்கள்; அந்த ஆட்கள்போய் யாபேஷ் ஊராரிடம் அதை அறிவித்தார்கள்; அவர்கள் சந்தோஷப்பட்டார்கள். பின்பு யாபேஷ் ஊரார்: நாளைக்கு உங்களிடம் வருவோம், அப்பொழுது உங்கள் இஷ்டப்படியெல்லாம்எங்களுக்குச் செய்யுங்கள் என்று சொல்லி யனுப்பிவிட்டார்கள். மறுநாளிலே சவுல் ஜனங்களை மூன்று படையாக வகுத்து விடியும் ஜாமத்தில் பாளயத்திற்குள் வந்து உச்சி வெயிலாகுமட்டும் அம்மோனியரை முறியடித்தான்; தப்பினவர்கள் சிதறிப்போனார்கள்; இரண்டுபேர்தானும் ஒன்றுசேர்ந்து போக

12 வில்லை. அப்பொழுது ஜனங்கள் சாமுவேலிடம் வந்து: சவுலா நமக்கு ராஜாவாயிருக்கப்போகிறவன் என்று சொன்னவர்கள் யார்? அந்த மனிதரை ஒப்புக்கொடும்; நாங்கள் கொன்றுபோடுவோம் என்றார்
13 கள். அதற்குச் சவுல்: இன்றையதினம் ஒருவரும் கொல்லப்படலாகாது; இன்று யெகோவா இஸ்ரவேலுக்கு இரட்சிப்பை அருளினார் என்றான்.
14 அப்பொழுது சாமுவேல் ஜனங்களைப் பார்த்து: நாம் கில்காலுக்குப் போய் அங்கே ராஜ்யபாரத்தை உறுதிப்படுத்துவோம் வாருங்கள் என்றான்.
15 அப்படியே ஜனங்கள் எல்லாரும் கில்காலுக்குப்போய்க் கில்காலிலே யெகோவாவின் சந்நிதியில் சவுலை ராஜாவாக ஏற்படுத்தினார்கள்; அங்கே யெகோவாவின் சந்நிதியில் சமாதானபலிகளைச் செலுத்தினார்கள்; சவுலும் இஸ்ரவேலர் யாவரும் அங்கே மிகவும் சந்தோஷங்கொண்டாடினார்கள்.

**12** அப்பொழுது சாமுவேல் இஸ்ரவேலர் அனைவரோடும் பேசி: இதோ, நீங்கள் சொன்னவற்றுக்கெல்லாம் நான் செவிகொடுத்து உங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்
2 படுத்தினேன். இதோ, இதுமுதல் உங்களுக்கு முன்சென்று உங்களை நடத்துகிறவர் உங்கள் ராஜாவே, நானோ இழவனும் நரைத்தவனுமானேன்; என் குமாரரே உங்களோடிருக்கிறார்கள்; நான் என் சிறுவயதுமுதல் இக்காள்வரைக்கும் உங்களுக்கு முன்னின்று உங்களை நடத்திவந்தேன்.
3 இதோ, இருக்கிறேன்; எனக்கு விரோதமாய்ச் சொல்லவேண்டியதுண்டானால் யெகோவாவின் சந்நிதியிலும் அவர் அபிஷேகம்பண்ணினவனுக்கு முன்பாகவும் சொல்லுங்கள்; நான் யாருடைய எருதை எடுத்துக்கொண்டேன்? யாருடைய கழுதையை எடுத்துக்கொண்டேன்? யாருக்கு அநியாயஞ் செய்தேன்? யாரை ஒடுக்கினேன்? யாரிடம் பரிதானம் வாங்கிக் கொண்டு கண்சாடையாயிருந்தேன்? அப்படிச் செய்திருந்தால் அதை உங்களுக்குத் திரும்பக்கொடுப்பேன் என்று சொன்னான்.
4 அதற்கு அவர்கள்: நீர் எங்களுக்கு அநியாயஞ்செய்யவும் இல்லை, எங்களை ஒடுக்கவுமில்லை, எவனிடத்திலும் எதையும் வாங்கவுமில்லை என்றார்கள். அதற்கு அவன்: நீங்கள் என்னிடம் எதையும் கண்டுபிடிக்கவில்லை என்பதற்கு இன்று யெகோவாவே சாட்சி; அவர் அபிஷேகம் பண்ணினவரும் அதற்குச் சாட்சி என்றான்; அதற்கு அவர்கள்: அவர் சாட்சிதான் என்றார்கள்.

பின்பு சாமுவேல் ஜனங்களோடு பேசி: மோசேயையும் ஆரோனையும் ஏற்படுத்தினவரும் உங்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து கொண்டுவந்தவரும் யெகோவாவே.
இப்போதும் நீங்கள் வந்து நில்லுங்கள், யெகோவா உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் செய்துவந்த நற்செயல் அனைத்தையும்குறித்து நான் யெகோவாவின் சந்நிதியில் உங்களோடுபேசி விசாரணைசெய்வேன். யாக்கோபு எகிப்துக்குப் போயிருந்தபின் உங்கள் பிதாக்கள் யெகோவாவை நோக்கி அபயமிட்டபோது யெகோவா மோசேயையும் ஆரோனையும் அனுப்பினார்; அவர்கள் உங்கள் பிதாக்களை எகிப்திலிருந்து அழைத்துவந்து அவர்களை இந்த இடத்திலே குடியேறச் செய்தார்கள்.
அவர்கள் தங்கள் கடவுளாகிய யெகோவாவை மறந்தபோது, அவர் அவர்களைக் காத்சோரின் சேனாபதியாகிய சிசெராவின் கையிலும் பெலிஸ்தியரின் கையிலும் மோவாப் ராஜாவின் கையிலும் விற்றுப் போட்டார்; இவர்கள் அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணினார்கள்.
அவர்கள் யெகோவாவை நோக்கி அபயமிட்டு: நாங்கள் யெகோவாவைவிட்டு விலகிப் பாகால்களையும் அஸ்தோரேத்துக்களையும் சேவித்துப் பாவம் செய்தோம்; இப்போதும் எங்கள் சத்துருக்களின் கைக்கு எங்களை நீங்கலாக்கி இரட்சித்தருளும்; இனி உம்மைச் சேவிப்போம் என்றார்கள்.
அப்பொழுது யெகோவா யெருபாகாலையும் பெதானையும் யெப்தாவையும் சாமுவேலையும் அனுப்பிச் சுற்றிலும் இருந்த உங்கள் சத்துருக்களின் கைக்கு உங்களை நீங்கலாக்கி இரட்சித்தார்; நீங்கள் க்ஷேமமாய் வசித்துவந்தீர்கள்.
அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய நாகாஸ் உங்களுக்கு விரோதமாய் வருகிறதை நீங்கள் கண்டபோது, உங்கள் கடவுளாகிய யெகோவாவே உங்களுக்கு ராஜாவாயிருந்தும் நீங்கள் என்னிடம் வந்து: இப்போதிருப்பது சரியாகாது; எங்களை ஆள ஒரு ராஜாவேண்டும் என்றீர்கள்.
நீங்கள் வேண்டும் என்று விரும்பித் தெரிந்துகொண்ட ராஜா, இதோ, இருக்கிறார்; இதோ, யெகோவா உங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்தினார்.
நீங்கள் யெகோவாவின் கட்டளைக்கு விரோதமாய்க் கலகம்பண்ணாமல் யெகோவாவுக்குப் பயந்து அவரைச் சேவித்து அவருடைய சப்தத்திற்குச் செவிகொடுத்து நீங்களும் உங்களை ஆளுகிற ராஜாவும் உங்கள் கடவுளாகிய யெகோவாவைப் பின்பற்றுகிறவர்களாயிருந்தால்

15 லமாம். நீங்கள் யெகோவாவின் சப்தத்
திற்குச் செவிகொடாமல் யெகோவாவின்
கட்டளைக்கு விரோதமாய்க் கலகம் செய்
வீர்களானால் யெகோவாவின் கை உங்கள்
பிதாக்களுக்கு விரோதமாயிருந்ததுபோல
16 உங்களுக்கும் விரோதமாகும். இப்பொ
ழுது யெகோவா உங்கள் கண்களுக்கு முன்
பாகச் செய்யும் பெரிய காரியத்தைத்
17 தரித்துநின்று பாருங்கள். இது கோதுமை
அறுப்பின் காலம் அல்லவா? நான் யெகோ
வாவைநோக்கி விண்ணப்பம்பண்ணவே
அவர் இடிமுழக்கங்களையும் மழையையும்
கட்டளையிடுவார்; நீங்கள் உங்களுக்கு ஒரு
ராஜாவைக் கேட்டதினாலே நீங்கள் செய்த
தீமை யெகோவாவின் பார்வைக்கு எவ்
வளவு பெரிதென்பதை நீங்கள் அப்பொ
18 ழுது கண்டுணருவீர்கள் என்றான். அப்
படியே சாமுவேல் யெகோவாவை நோக்கி
விண்ணப்பம்பண்ணினான்; அன்றையதி
னமே யெகோவா இடிமுழக்கங்களையும்
மழையையும் கட்டளையிட்டார்; அதைக்
கண்டு ஜனங்கள் எல்லாரும் யெகோவாவுக்
கும் சாமுவேலுக்கும் மிகவும் பயந்து சாமு
19 வேலைப் பார்த்து: நாங்கள் சாகாதபடி
உமது கடவுளாகிய யெகோவாவினிடம்
உமது அடியாருக்காக விண்ணப்பம்செய்
யும்; நாங்கள் செய்த எல்லாப் பாவங்க
ளோடும், எங்களுக்கு ஒரு ராஜா வேண்டும்
என்று கேட்ட இந்தப் பாவத்தையும் கூட்
டிக்கொண்டோம் என்று சொன்னார்கள்.
20 அப்பொழுது சாமுவேல் ஜனங்களைப்
பார்த்து: நீங்கள் பயப்படவேண்டாம்; நீங்
கள் இத்தத் தீமையையெல்லாம் செய்தது
உண்மையே; ஆகிலும் யெகோவாவை
விட்டுப் பின்வாங்காமல் உங்கள் முழு இரு
தயத்தோடும் யெகோவாவைச் சேவியுங்
21 கள். விலகிப் போகாதிருங்கள்; விலகினால்
வீணனவைகளைப் பின்பற்றுவீர்கள்; அவை
கள் உபயோகமற்றவைகள், இரட்சிக்க
மாட்டாதவைகள்; அவைகள் வீணனவை
22 களே. யெகோவா தமது மகத்துவமான
நாமத்தினிமித்தம் தமது ஜனத்தைக் கை
விடாதிருப்பார்; யெகோவா உங்களைத்
தமக்கு ஜனமாக்கிக்கொள்ளப் பிரியங்
23 கொண்டாரே. என் விஷயத்திலோ, நான்
உங்களுக்காக விண்ணப்பம்செய்வேன்,
செய்யாதிருப்பேனாகில் யெகோவாவுக்கு
விரோதமாகப் பாவஞ் செய்கிறவனுவேன்;
அது எனக்குத் தூரமாயிருப்பதாக, நன்
மையும் நேர்மையுமான வழியை நான்
24 உங்களுக்குப் போதிப்பேன். நீங்கள்
செய்யவேண்டியது ஒன்றுதான்: யெகோ
வாவுக்குப் பயந்து உண்மையாய் உங்கள்
முழு இருதயத்தோடும் அவரைச் சேவிக்க
வேண்டும்; அவர் உங்களுக்குச் செய்த
பெரிதான காரியங்களைச் சிந்தித்துப் பாரு
கள். நீங்கள் இன்னும் தீமைபானவற் 25
றைச் செய்துகொண்டே வருவீர்களானால்
நீங்களும் உங்கள் ராஜாவும் அழிவீர்கள்
என்றான்.

சவுல் முப்பதுவயதாயிருக்கையில் அர 13
சாட்சிசெய்யத் தொடங்கினான். அவன்
இஸ்ரவேலை இரண்டு வருஷம் அரசாண்ட
பின் | இஸ்ரவேலில் மூவாயிரம்பேரைத் 2
தனக்குத் தெரிந்துகொண்டான்; அவர்
களில் இரண்டாயிரம்பேர் சவுலோடுகூட
மிக்மாசிலும் பேதேல் மலையிலும் ஆயிரம்
பேர் யோனத்தானோடுகூடப் பென்யமீன்
நாட்டிலுள்ள கிபியாவிலும் இருந்தார்கள்;
மற்றவர்களை அவரவர் கூடாரங்களுக்கு
அனுப்பிவிட்டான். யோனத்தான் கேபா 3
விலிருந்த பெலிஸ்தியரின் அதிபதியை முறிய
டித்தான்; பெலிஸ்தியர் அதைக் கேள்விப்
பட்டார்கள்; இது எபிரேயருக்குத் தெரிய
வேண்டும் என்று சவுல் தேசமெங்கும் எக்
காளம் ஊதுவித்தான். பெலிஸ்தியரின் 4
அதிபதியைச் சவுல் முறியடித்தான் என்றும்
அதினிமித்தம் இஸ்ரவேலர்மேல் பெலிஸ்தி
யருக்குப் பகைமூண்டது என்றும் இஸ்ர
வேலரெல்லாரும் கேள்விப்பட்டபோது
படைவீரர் சவுலோடு செல்லும்படி கில்
காலுக்கு வரவழைக்கப்பட்டார்கள்.
பெலிஸ்தியர் இஸ்ரவேலோடு யுத்தம்பண் 5
ணும்படி முப்பதினாயிரம் இரதங்களோடும்
ஆறாயிரம் குதிரை வீரரோடும் கடற்கரை
மணலத்தனை படைவீரரோடும் கூடிவந்து
பேதாவேனுக்குக் கிழக்கே மிக்மாசில்
பாளயமிறங்கினார்கள். இஸ்ரவேலர் தங் 6
களுக்கு உண்டான இக்கட்டைக் கண்ட
போது—ஜனங்கள் நெருக்கத்தில் அகப்
பட்டுக்கொண்டார்கள்—கெபிகளிலும்
மூட்காடுகளிலும் கன்மலைகளிலும்துருக்கங்
களிலும் குழிகளிலும் ஒளித்துக்கொண்டார்
கள். எபிரேயரில் சிலர் யோர்தானைக் 7
கடந்து காத் நாட்டிற்கும் கிலெயாத் நாட்
டிற்கும் போனார்கள்; சவுலோ இன்னும்
கில்காலில் இருந்தான்; அவனோடிருந்த
யாவரையும் நடுக்கம் பிடித்தது.

சாமுவேல் குறித்திருந்த காலத்தின்படியே 8
சவுல் ஏழுநாள்மட்டும் காத்திருந்தான்;
சாமுவேல் கில்காலுக்கு வரத் தாமதிக்கவே
ஜனங்கள் சவுலைவிட்டுச் சிதறிப்போனார்கள்.
சவுல் அதைக் கண்டு: தகனபலியையும் 9
சமாதானபலிகளையும் என்னிடம் கொண்டு

வாருங்கள் என்று சொல்லித் தகனபலி
10 யைச் செலுத்தினான். அவன் தகனபலி
யிட்டு முடிகிறபோது, இதோ, சாமுவேல்
வந்துவிட்டான்; சவுல் அவனுக்கு வந்த
11 னஞ்செய்ய எதிர்கொண்டு போனான். நீர்
செய்தது என்ன என்று சாமுவேல் கேட்ட
தற்குச் சவுல்: ஜனங்கள் என்னைவிட்டுச்
சிதறிப்போகிறதையும் குறித்த தினத்திற்குள்
நீர் வராததையும் பெலிஸ்தியர் மிக்மாசிலே
கூடிவந்திருக்கிறதையும் நான் கண்டேன்.
12 நான் இன்னும் யெகோவாவின் தயவைத்
தேடிக்கொள்ளாதிருக்கையிலேயே பெலிஸ்
தியர் இல்காலில் என்மேல் வந்துவிடுவார்
களே என்றெண்ணி வலிந்து தகனபலியைச் செலுத்திவிட்டேன் என்
13 றான். சாமுவேல் சவுலைப்பார்த்து: மதி
கேடானதைச் செய்தீர்; உமது கடவுளாகிய
யெகோவா உமக்கு விதித்த கட்டளையைக்
கைக்கொள்ளாமற்போனீர்; கைக்கொண்
டிருப்பீரேயாயின் யெகோவா இஸ்ரவேலின்
மேல் உமது ராஜ்யபாரத்தை என்றென்று
14 மாக ஸ்திரப்படுத்தியிருப்பார். இப்போதோ
உமது அரசாட்சி நிலைநிற்காது; யெகோவா
உமக்கு விதித்த கட்டளையை நீர் கைக்
கொள்ளாதபடியினால் யெகோவா தமது
இருதயத்திற்கேற்ற ஒரு மனுஷனைத்தேடி
அவனைத் தமது ஜனத்தின்மேல் அதிபதியாக
ஏற்படுத்தினார் என்று சொன்னான்.
15 சாமுவேல் எழுந்திருந்து கில்காலிலிட்
டுப் பென்யமீன் நாட்டிலுள்ள கிபியாவுக்
குப் போனான்; சவுல் தன்னோடிருந்த படை
வீரரை இலக்கம் பார்த்தபோது ஏறக்
குறைய அறுநூறுபேர் இருந்தார்கள்.
16 சவுலும் அவன் குமாரனாகிய யோனத்தா
னும் அவர்களோடிருந்த படைவீரரும்
பென்யமீன் நாட்டிலுள்ள கேபாவில்
இருந்துவிட்டார்கள்; பெலிஸ்தியரோ மிக்
17 மாசில் பாளயமிறங்கியிருந்தார்கள். கொள்
ளைக்காரர் பெலிஸ்தியரின் பாளயத்திலிருந்து
மூன்று படையாய் வந்தார்கள்; ஒரு படை
ஒப்ரா வழியாய்ச் சூவால் நாட்டிற்கு
18 நேராகப் போயிற்று. வேறொரு படை
பேத்கோரோன் வழியாய்ப் போயிற்று;
மூன்றாவது படை செபோயீமின் பள்ளத்
தாக்கு மேலே போகிற வழியாக வனாந்தரப்
பக்கமாய்ப் போயிற்று.
19 எபிரேயர் பட்டயங்களையும் ஈட்டிகளை
யும் செய்யும்படி விடக்கூடாதென்று
பெலிஸ்தியர் எண்ணியிருந்தபடியால் இஸ்ர
வேல் தேசத்தில் எங்கும் ஒரு கொல்லனும்
20 அகப்படவில்லை. கடப்பாரைகள், மண்
வெட்டிகள், முக்கூர் ஆயுதங்கள், கோடரி
கள் ஆகிய இவற்றின் மூனை மழுங்கும்பொழு
தும் தாற்றுக்கோலைச் சரிப்படுத்தவேண்டிய
பொழுதும் | இஸ்ரவேலர் யாவரும் அவரவர் 21
தங்கள்தங்கள் கொழுவிரும்புகளையும் தங்கள்
மண்வெட்டிகளையும் தங்கள் கோடரிகளை
யும் தங்கள் கடப்பாரைகளையும் தீட்டிக்
கூர்மையாக்குகிறதற்குப் பெலிஸ்தியரிடமே
போய்வருவார்கள். யுத்தகாலம் வந்தபோது 22
சவுலுக்கும் அவன் குமாரனாகிய யோனத்
தானுக்குமேயன்றிச் சவுலோடும் யோனத்தா
னோடும் இருந்த படைவீரரில் ஒருவனுக்
கும் பட்டயமும் ஈட்டியும் இல்லை. பெலிஸ் 23
தியரின் காவல்தண்டு மிக்மாசுக் கணவாய்
போய் நின்றது.

ஒருநாள் சவுலின் குமாரனாகிய யோனத் 14
தான் தன் ஆயுதம் சுமக்கும் வாலிபனைக்
கூப்பிட்டு: நமக்கு எதிராக அந்தப் பக்கத்
தில் இருக்கிற பெலிஸ்தியரின் காவல் தண்
டிற்குப் போவோம் வா என்று சொன்னான்;
அதை அவன் தன் தகப்பனுக்கு அறிவிக்க
வில்லை. சவுல் கிபியாவின் கடை அந்தத் 2
தில் மிக்ரோனிலேயிருந்த ஒரு மாதளமரத்
தின்கீழ் உட்கார்ந்திருந்தான்; அவனோ
டிருந்த படைவீரர் ஏறக்குறைய அறுநூறு
பேர். சீலோவிலே யெகோவாவின் ஆசாரி 3
யனாயிருந்த ஏலியின் குமாரனாகிய பினெ
காசுக்குப் பிறந்த ஈகாபோத்தின் சகோதர
னான அகிதூபின் குமாரன் அகியா என்ப
வன் ஏபோத்தைத் தரித்தவனாயிருந்தான்;
யோனத்தான் போனது படை வீரருக்குத்
தெரியாது. யோனத்தான் பெலிஸ்தியரின் 4
காவல்தண்டிற்குப் போகப்பார்த்த வழியா
கிய கணவாயின் இருபக்கங்களிலும் இப்
பக்கம் ஒரு செங்குத்தான பாறையும் அப்
பக்கம் ஒரு செங்குத்தான பாறையும் இருக்
கிறது; ஒன்றின் பேர் போசேஸ், மற்றொன்
றின் பேர் சென்னே. அந்தப் பாறைகளில் 5
ஒன்று வடக்கே மிக்மாசுக்கு எதிராகவும்
மற்றொன்று தெற்கே கேபாவுக்கு எதிராக
வும் நின்றது. யோனத்தான் ஆயுதம் சுமந்த 6
வாலிபனைப் பார்த்து: விருத்தசேதனம் இல்
லாத இவர்களின் காவல்தண்டிற்குப்
போவோம் வா; ஒருவேளை யெகோவா
நமக்காகக் காரியம்வாய்க்கச் செய்வார்; பல
பேரைக்கொண்டாகிலும் சிலபேரைக்கொ
ண்டாகிலும் இரட்சிக்க யெகோவாவுக்குத்
தடையில்லை என்றான். அப்பொழுது 7
ஆயுதம் சுமப்பவன் அவனைப்பார்த்து:
உமது மனதில் இருக்கிறபடியெல்லாம்
செய்யும்; முன்சென்றுபோம்; இதோ,
உமது பிரியப்படியே நானும் உம்மோடே
வருகிறேன் என்றான். அதுகேட்ட யோனத் 8

தான்: இதோ, நாம் அந்த மனுஷரிடத்திற்குக் கடந்துபோவோம்; அவர்கள் கண்ணுக்குத் தெரியும்படியாகவே போவோம். 9 நாங்கள் உங்களிடம் வருமட்டும் இருங்கள் என்று நமக்குச் சொல்வார்களானால் நாம் அவர்களிடத்திற்கு ஏறிப்போகாமல் நாம் இருக்கும் இடத்திலேயே நின்று 10 கொள்வோம். எங்களிடத்திற்கு ஏறிவாருங்கள் என்று சொல்வார்களானால் ஏறிப்போவோம்; யெகோவா அவர்களை நமது கையில் ஒப்புக்கொடுத்தார்; இதுவே நமக்கு 11 அடையாளம் என்றான். அப்படியே அவர்கள் இருவரும் பெலிஸ்தியருடைய காவல் தண்டின் எதிரே வந்து தோன்றினார்கள்; அப்பொழுது பெலிஸ்தியர்: இதோ, எபிரேயர் தாங்கள் ஒளித்துக்கொண்டிருந்த வளைகளிலிட்டு வெளிப்படுகிறார்கள் என்று 12 சொல்லிக்கொண்டார்கள். காவல்தண்டிலிருந்தவர்கள் யோனத்தானையும் ஆயுதம் சுமப்பவனையும் கூப்பிட்டு: எங்களிடத்துக்கு ஏறிவாருங்கள், உங்களுக்குப் புத்தி கற்பிப்போம் என்றார்கள்; அதைக் கேட்ட மாத்திரம் யோனத்தான் ஆயுதம் சுமப்பவனைப்பார்த்து: என் பின்னாலே ஏறிவா; யெகோவா அவர்களை இஸ்ரவேலின் கையில் ஒப்புக்கொடுத்தார் என்று சொல் 13 லிக்கொண்டு | தன் கைகளாலும் தன் கால்களாலும் தவழ்ந்து ஏறினான்; ஆயுதம் சுமப்பவனும் அவன் பின்னே ஏறினான்; அப்பொழுது பெலிஸ்தியர் யோனத்தானுக்கு முன்பாக மடிந்து விழுந்தார்கள்; ஆயுதம் சுமப்பவனும் யோனத்தான் பின்னாலே 14 வெட்டிக்கொண்டே போனான். யோனத்தானும் ஆயுதம் சுமப்பவனும்போய் முதலாவது அடித்த அடியிலே ஏறக்குறைய இருபதுபேர் அரையேர் நிலவிசாலத்தில் 15 விழுந்தார்கள். பாளையத்திலும் வெளியிலும் இருந்தவர்களையும் சகல படைவீரரையும் நடுக்கம் பிடித்தது; காவல்தண்டிலிருந்தவர்களும் கொள்ளையிடப்போனவர்களும் நடுநடுங்கினார்கள்; பூமியும் அதிர்ந்தது; அது தெய்வத்தால் வந்த திகிலேபோலிருந்தது.

16 பென்யமீனியரின் கிபியாவிலேயிருந்த சவுலின் ஜாமக்காரர், இதோ, அந்தப் பெருங்கூட்டம் கலைந்து இங்குமங்கும் ஓடி 17 கிறதைக் கண்டார்கள். அப்பொழுது சவுல் தன்னோடிருந்த வீரரைக் கூப்பிட்டு: நம்மிடத்திலிருந்து போனவர்கள் யாரென்று இலக்கம்பாருங்கள் என்று சொல்ல அவர்கள் இலக்கம் பார்த்தார்கள்; இதோ, யோனத்தானும் அவன் ஆயுதம் சுமப்பவனும் அங்கே இல்லை என்று தெரியவந்தது. 18 அப்பொழுது சவுல் அகியாவைப் பார்த்து: ஏபோத்தைக் கொண்டுவா என்றான்; அக்காலத்தில் இஸ்ரவேலில் ஏபோத்தைத் தரித்திருந்தவன் அவனே. 19 இப்படிச் சவுல் ஆசாரியனோடே பேசிக்கொண்டிருக்கையில் பெலிஸ்தியரின் பாளையத்திலே உண்டான குழப்பம் மிகவும் அதிகரித்தது; அதுகண்ட சவுல் ஆசாரியனிடம்: இருக்கட்டும் என்றான். 20 சவுலும் அவனோடிருந்த வீரரும் திரண்டு போர்க்களத்திற்குப் போனார்கள்; பெலிஸ்தியர் தண்டிலே ஒருவர் பட்டயம் ஒருவருக்கு விரோதமாயிருந்தபடியால் மிகப் பெருங் கலக்கமுண்டாயிற்று. 21 இதற்குமுன் பெலிஸ்தியரோடுகூட அவர்களோடே வந்து பாளையத்திலே இங்குமங்கு மிருந்த எபிரேயரும் சவுலோடும் யோனத்தானோடும் இருந்த இஸ்ரவேலரோடேகூடிக் கொண்டார்கள். 22 எப்பிராயீம் மலைகளில் ஒளித்துக்கொண்டிருந்த சகல இஸ்ரவேலரும் பெலிஸ்தியர் முறிந்தோடுகிறதைக் கேள்விப்பட்டபோது யுத்தத்திலே அவர்களை நெருக்கித் தொடர்ந்தார்கள். 23 இப்படியாக யெகோவா அன்றையதினம் இஸ்ரவேலை இரட்சித்தார்; அந்த யுத்தம் பேத்தாவேன்மட்டும் நடந்தது.

24 இஸ்ரவேலர் அன்றையதினம் மிகவும் கஷ்டப்பட்டார்கள்: நான் என் சத்துருக்களிடம் பழிவாங்கவேண்டும், சாயங்காலமாகுமுன் எவன் சாப்பிடுகிறானே அவன் சாபத்திற்காளாவான் என்று சவுல் போர்வீரருக்கு ஆணையிட்டுக் கட்டளையிட்டிருந்தபடியால் போர்வீரரெல்லாரும் எவ்வளவேனும் சாப்பிடாதிருந்தார்கள். 25 வீரர் எல்லாரும் ஒரு காட்டிலே வந்தார்கள்; அங்கே தரையிலே தேன் ஒழுகியிருந்தது; 26 போர் வீரர் காட்டிலே வந்தபோது, இதோ, தேன் ஒழுகியிருந்ததைக் கண்டும் ஒருவனும் அதைத் தன் கைகளிட்டுத் தொட்டுத் தன் வாயில் வைக்கவில்லை, அந்த ஆணைக்குப் பயந்திருந்தார்கள். 27 யோனத்தானோ தன் தகப்பன் போர்வீரருக்கு ஆணையிட்டு விதித்திருந்த கட்டளையைக் கேள்விப்படவில்லை; அவன் தன் கையிலிருந்த கோலின் நுனியைத் தேனிலே தோய்த்து அதை எடுத்துத் தன் வாயிலே போட்டுக் கொண்டான்; அவன் கண்கள் தெளிந்தன. 28 போர்வீரரில் ஒருவன் அதைக் கண்டு: இன்று எதையேனும் சாப்பிடுகிறவன் சாபத்திற்காளாவான் என்று உமது தகப்பனார் வீரருக்கு ஆணையிட்டுக் கட்டளைவிதித்திருக்கிறார் என்றான். படைவீரர் களைத்திருந்தார்கள்: 29 அப்பொழுது யோனத்

தான்: என் தகப்பனுர் தேசத்தின் ஜனங்களை அபாயத்துக்குட்படுத்தினர்; இதோ, பாருங்கள், நான் இந்தத் தேனிலே சிறிது ருசித்
30 தேன், என் கண்கள் தெளிவடைந்தன. தங்களுக்கு அகப்பட்ட தங்கள் சத்துருக்களின் கொள்ளையிலே போர்வீரர் இன்று தடுக்கப்படாமல் புசித்திருந்தால் எவ்வளவு நலமாம்; இப்பொழுதோ பெலிஸ்தியருக்கு கேரிட்ட சங்காரம் அவ்வளவு பெரிதல்ல
31 வே என்ருன். அவர்கள் அன்றையதினம் மிக்மாசிலிருந்து ஆயலோன்மட்டும் பெலிஸ்தியரை முறியடித்தார்கள்; போர்வீரர் மிக
32 வும் களைத்துப்போனர்கள். ஆகவே போர்வீரர் கொள்ளையின்மேல் பாய்ந்து ஆடுகளையும் மாடுகளையும் கன்றுக்குட்டிகளையும் பிடித்துத் தரையிலேபோட்டு அடித்து இரத்தத்
33 தோடே புசித்தார்கள். புசிக்கவே: இதோ, இரத்தத்தோடே புசிப்பதினுல் ஜனங்கள் யெகோவாவுக்கு விரோதமாய்ப் பாவம்செய்கிருர்கள் என்று சவுலுக்கு அறிவித்தார்கள்; அவன்: நீங்கள் துரோகம்பண்ணினீர்கள்; இப்போதே ஒரு பெருங் கல்லை என்னிடம் உருட்டிக்கொண்டு வாருங்கள் என்ருன்.
34 பின்னும் சவுல்: நீங்கள் படைவீரர் நடுவே சென்று, அவனவன் தன் தன் மாட்டையும் அவனவன் தன்தன் ஆட்டையும் இங்கே என்னிடம் கொண்டுவந்து அடித்துப் பின்பு சாப்பிடவேண்டும்; அப்படியானுல் இரத்தத்தைப் புசித்து யெகோவாவுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யமாட்டீர்கள் என்று அவர்களுக்குச் சொல்லுங்கள் என்று கட்டளையிட்டான்; அப்படியே எல்லாரும் அவரவர் தங்கள் மாடுகளை அன்று இரவு தங்களே அங்கே கொண்டுவந்து அடித்தார்
35 கள். பின்பு சவுல் யெகோவாவுக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினுன்; இது அவன் யெகோவாவுக்குக் கட்டின முதல் பலிபீடம்.
36 அதன் பின்பு சவுல்: நாம் இந்த இரவிலேயே பெலிஸ்தியரைப் பிடிக்கத் தொடர்ந்துசென்று பொழுது விடியுமட்டும் அவர்களைக் கொள்ளையிடுவோம், அவர்களில் ஒருவரையும் மீதியாக வைக்கவேண்டாம் என்ருன். அவர்களும்: உமக்கு நலமாகத் தோன்றுகிறபடியெல்லாம் செய்யும் என்றார்கள். ஆசாரியனே: நாம் இங்கே கடவுளைக் கிட்டிச் சேர்ந்து விசாரிப்போம் என்
37 ருன். அப்படியே சவுல் கடவுளினிடம் விசாரித்து: நாங்கள் பெலிஸ்தியரைப் பிடிக்கத் தொடர்ந்துபோவது சரியா? அவர்களை இஸ்ரவேலரிடம் ஒப்புக்கொடுப்பீரா என்று கேட்டான்; அவரோ அக்காலிலே அவனுக்கு உத்தரவு அருளவில்லை. அப்பொ 38
ழுது சவுல்; ஜனத்தின் அதிபதிகளே, நீங்கள் எல்லாரும் இங்கே சேர்ந்துவந்து இன்று இந்தப் பாவம் எதினுலே உண்டாயிற்று என்று அறிந்துபாருங்கள். அது என் குமா 39
ரனுகிய யோனத்தானுலே உண்டானதெனினும் அவன் சாகவேவேண்டும், இஸ்ரவேலை இரட்சிக்கிற யெகோவாவின் ஜீவன்மேல் ஆணையாக இதைச் சொல்லுகிறேன் என்ருன்; சகல ஜனங்களுக்குள்ளும் ஒருவனும் அதற்கு ஒரு வார்த்தையும் சொல்லவில்லை.
அவன் இஸ்ரவேலர் அணிவரையும் பார்த்து: 40
நீங்கள் ஒரு பக்கத்திலே இருங்கள்; நானும் என் குமாரனுகிய யோனத்தானும் மறுபக்கத்திலே இருப்போம் என்ருன்; ஜனங்கள் சவுலினிடம்: உமக்கு நலமெனத் தோன்றுகிறதைச் செய்யும் என்ருர்கள். அப்பொ 41
ழுது சவுல் இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவை நோக்கி, யதார்த்தத்தை விளங்கப்பண்ணும் என்ருன்; அப்பொழுது யோனத்தானும் சவுலும் குறிக்கப்பட்டார்கள்; ஜனங்களோ தப்பினர்கள். எனக் 42
கும் என் குமாரனுகிய யோனத்தானுக்கும் சீட்டுப்போடுங்கள் என்று சவுல் சொன்னுன்; அப்பொழுது யோனத்தான் குறிக்கப்பட்டான். அதைக் காணவே சவுல் யோனத் 43
தானைப் பார்த்து: நீ செய்தது என்ன? எனக்குச் சொல் என்று கேட்டான், கேட்டதற்கு யோனத்தான்: என் கையில் இருக்கிற கோலின் நுனியினுலே கொஞ்சம் தேனை எடுத்து ருசித்தேன்; இதோ, நான் சாகிறேன், தடையில்லை என்ருன். அப்பொ 44
ழுது சவுல்: யோனத்தானே, நீ சாகத்தான் வேண்டும்; சாகாவிட்டால் கடவுள் தமது சித்தப்படியெல்லாம் எனக்குச் செய்வாராக என்ருன். ஜனங்களோ சவுலைப் 45
பார்த்து: இஸ்ரவேலிலே இந்தப் பெரிய இரட்சிப்பைச் செய்த யோனத்தானைக் கொல்வது நியாயமாகுமா? ஒருநாளும் ஆகாது, அவன் தலையில் இருக்கிற ஒரு மயிரும் தரையிலே விழுவதில்லை; யெகோவாவின் ஜீவன்மேல் ஆணை, அவன் இன்று நடப்பித்தது கடவுளின் துணையினுலேயே ஆனது என்ருர்கள்; யோனத்தான் சாகாதபடி ஜனங்கள் அவனை மீட்டுக்கொண்டார்கள். சவுல் பெலிஸ்தியரைத் தொடராமல் 46
திரும்பிவிட்டான்; பெலிஸ்தியரும் தங்கள் தேசத்திற்குப் போய்விட்டார்கள்.
இப்படியாகச் சவுல் இஸ்ரவேலை ஆளு 47
கையில் திலபெற்றுச் சுற்றிலும் இருந்த தன் சத்துருக்களாகிய மோவாபியர், அம்மோன் புத்திரர், ஏதோமியர், சோபாவின்

ரீஜாக்கள், பெலிஸ்தியர் ஆகிய அனைவருக்கும் விரோதமாக யுத்தம் பண்ணிவந்தான்; அவன் எவர்கள்மேல் படையெடுத்தானே அவர்களையெல்லாம் மேற்கொண்டான்.

48 அவன் தன் புஜபலத்தைக் காட்டி அமலேக்கியரை முறியடித்தான்; இஸ்ரவேலரைக் கொள்ளையிட்ட யாவரிடத்தினின்றும் அவர்களை மீங்கலாக்கி இரட்சித்தான்.

49 சவுலின் குமாரர் யோனத்தான், யிஸ்வி, மல்கிஷூவா என்பவர்கள்; அவன் குமாரத்திகள் இருவர், மூத்தவள் பேர் மேரப்,

50 இளையவள் பேர் மீகாள். சவுலுடைய மனைவியின் பேர் அகினோவாம், அவள் அகிமாசின் குமாரத்தி; அவனுடைய சேனபதியின் பேர் அப்னேர், அவன் சவுலின் தெய்ய தகப்பனாகிய நேரின் குமாரன். சவுலின் தகப்பனாகிய கிஷூம் அப்னேரின் தகப்பனாகிய நேரும்

52 அபியேலின் குமாரர். சவுல் இருந்த நாளெல்லாம் பெலிஸ்தியரின்மேல் கடினமான யுத்தம் நடந்தது; தைரியமும் பராக்கிரமமுள்ள ஒருவனைச் சவுல் கண்டால் அவனைத் தன்னிடம் சேர்த்துக்கொள்வான்.

**15** பின்பு சாமுவேல் சவுலைப்பார்த்து: இஸ்ரவேலாகிய தமது ஜனத்தின்மேல் உம்மை ராஜாவாக அபிஷேகம்பண்ணுவதற்கு

2 யெகோவா அனுப்பினவன் நானே. இப்போதும் யெகோவா சொல்வதைக் கேளும்: சேனைகளின் யெகோவா சொல்வது, இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்தபோது அமலேக்கு அவர்களை வழிமறித்தான்; அவன்

3 இப்படிச் செய்ததினிமித்தம் நான் அவனைத் தண்டிப்பேன். இப்போதும் நீ போ; அமலேக்கை முறியடித்து அவனையும் அவனுக்குரிய யாவற்றையும் சாபத்துக்குட்படுத்திச் சங்காரம்பண்ணு; அவனுக்கு இரக்கங் காட்டாதே, புருஷரையும் ஸ்திரீகளையும் பிள்ளைகளையும் குழந்தைகளையும் மாடுகளையும் ஆடுகளையும் ஒட்டகங்களையும் கழுதைகளையும் கொன்றுபோடு என்பதே என்று சொன்னான்.

4 அப்பொழுது சவுல் இதை ஜனங்களுக்குத் தெரியப்படுத்தித் தெலாயிமிலே அவர்களை இலக்கம் பார்த்தான்; காலாட்கள்

5 இரண்டுலக்ஷம்பேர் இருந்தார்கள். யூதா கோத்திரத்தார் பதினாயிரம்பேர். சவுல் அமலேக்கின் பிரதான பட்டணத்திற்கு வந்து பள்ளத்தாக்கிலே ஒரு பதிவிடையை

6 வைத்தான். சவுல் அங்கிருந்த கேனியரோடுபோய்: நான் அமலேக்கியரோடுகூட உங்களையும் அழித்துவிடாதபடி நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து விலகிப்போய்விடுங்கள்; இஸ்ரவேல் எகிப்திலிருந்து வந்தபோது நீங்கள் அவர்கள் எல்லாருக்கும் தயைகாட்டினீர்களே என்றான். அப்படியே கேனியர் அமலேக்கியரின் நடுவிலிருந்து விலகிப்போனார்கள். பின்பு சவுல், 7 கவீலா தவக்கி எகிப்திற்குக் கிழக்கேயிருக்கிற சூருக்குப்போகும் வழிமட்டும் அமலேக்கியரை முறியடித்தான். அமலேக்கிய 8 ரின் ராஜாவாகிய ஆகாகை உயிரோடே பிடித்தான்; ஜனங்கள் யாவரையுமோ வாள் வாய்க்கு இரையாக்கிச் சங்கரித்தான். சவு 9 லும் ஜனங்களும் ஆகாகையும், ஆடுமாடுகளில் மேலானவைகளையும் கொழுப்பான வைகளையும் ஆட்டுக்குட்டிகளையும் சிரேஷ்டமான யாவற்றையும் சங்கரிக்காமல் வைத்துக்கொண்டார்கள்; அற்பமானவைகளும் உதவாதவைகளுமான யாவற்றையும் சங்கரித்துவிட்டார்கள்.

அப்பொழுது யெகோவாவின் திருவாக்கு 10 சாமுவேலுக்கு வந்தது: நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு விசனம்; அவன் என்னை விட்டுப் பின்வாங்கினான். என் கட்டளை 11 களின்படி செய்யாமற் போனான் என்றார்; அப்பொழுது சாமுவேல் மனம்கொந்து இரவெல்லாம் யெகோவாவை நோக்கி அபயமிட்டான். மறுநாள் அதிகாலமே சாமு 12 வேல் எழுந்து சவுலைப் பார்க்கப்போனபோது, சவுல் கர்மேலுக்குப்போய்த் தனக்கு ஒரு ஜயஸ்தம்பம் நாட்டிவிட்டுப் பின்பு சுற்றிப்போய்க் கில்காலுக்குச் சென்றுவிட்டான் என்று சாமுவேலுக்கு அறிவிக்கப் பட்டது. சாமுவேல் சவுலினிடம்போ 13 கவே சவுல் அவனைப்பார்த்து: நீர் யெகோவாவின் ஆசீர்வாதத்தைப் பெற்றவர்; யெகோவாவின் கட்டளைப்படியே செய்தேன் என்றான். அப்போது சாமுவேல்: 14 அப்படியானால் என் காதுகளில் விழுகிற ஆடுகளின் சத்தமும் எனக்குக் கேட்கிற மாடுகளின் சத்தமும் என்ன என்று கேட்கச் | சவுல்: அமலேக்கியரிடமிருந்து 15 அவற்றைக் கொண்டுவந்தார்கள்; ஜனங்கள் ஆடுமாடுகளில் சிரேஷ்டமானவைகளை உமது கடவுளாகிய யெகோவாவுக்குப் பலியிடும்படி வைத்துக்கொண்டார்கள்; மற்றவைகளைச் சங்கரித்துவிட்டோம் என்றான். அதைக் கேட்கவே சாமுவேல்: 16 பேச்சை நிறுத்தும், யெகோவா இந்த இராத்திரியிலே எனக்குச் சொன்னதை உமக்கு அறிவிக்கிறேன் என்று சவுலிடம் சொல்ல, அவன்: சொல்லும் என்றான். அப்பொழுது சாமுவேல்: நீர் உமது பார் 17 வைக்குச் சிறியவராயிருந்தபோதல்லவோ இஸ்ரவேல் கோத்திரங்களுக்குத் தலைவரா

னீர்; யெகோவா உம்மை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணுவித்
18 தார். இப்போதும் யெகோவா, நீ போய்த் துஷ்டராகிய அமலேக்கியரைச் சங்கரித்து அவர்களை நிர்மூலமாக்கித் திருமட்டும் அவர்களோடு யுத்தம்பண்ணு என்று
19 சொல்லி உம்மை அனுப்பினார். இப்படியிருக்க நீர் யெகோவாவின் சொல்லைக் கேளாமல் கொள்ளையின்மேல் பாய்ந்து யெகோவாவின் பார்வைக்குத் தீமையான
20 தைச் செய்தபென்ன என்றான். சவுல் சாமுவேலினிடம்: நான் யெகோவாவின் சொல்லையே கேட்டேன்; யெகோவா என்னை அனுப்பின வழியாகவே சென்றேன்; அமலேக்கின் ராஜாவாகிய ஆகாகைப் பிடித்து வந்தேன். அமலேக்கியரைச் சங்கரித்
21 தேன். ஜனங்களோ உமது கடவுளாகிய யெகோவாவுக்குக் கில்காலிலே பலிசெலுத்துவதற்கென்று சாபத்திற்குட்பட்டதாகிய கொள்ளையிலே சிரேஷ்டமான ஆடுமாடுகளைப் பிடித்து வந்தார்கள் என்றான்.
22 அதற்குச் சாமுவேல்:

யெகோவாவின் சொல்லுக்குக் கீழ்ப்படிவதைப்போல
யெகோவாவுக்குப் பிரியம் ஆகுமோ
தகனபலியும் இரத்தபலியுமே?
பலியினும் உத்தமம் கீழ்ப்படிதலே,
கடா நிணத்திலும் செவிகொடுத்தலே.
23 கலகக்குணமே பில்லிசூனியமாம்,
முரட்டாட்டம் வீண் விக்கிரகாராதனைக்கு நேர்;
யெகோவா திருமொழி நீர் தள்ளிடவே
அரசராயிராமல் உமை அவர் தள்ளினார்

24 என்று சொன்னான்; சொல்லவே சவுல் சாமுவேலைப் பார்த்து: நான் யெகோவாவின் கட்டளையையும் உமது வார்த்தைகளையும் மீறிப் பாவஞ்செய்தேன்; நான் ஜனங்களுக்குப் பயந்து அவர்கள் சொற்படி செய்
25 தேன். இப்போதும் நீர் என் பாவத்தை மன்னித்து நான் யெகோவாவைத் தொழுதுகொள்ளும்படி என்னோடே திரும்பிவாரும்
26 என்றான். சாமுவேலோ: நான் உம்மோடே திரும்பிவருவதில்லை; நீர் யெகோவாவின் வார்த்தையைத் தள்ளிவிட்டீர்; இஸ்ரவேலின்மேல் நீர் ராஜாவாயிராதபடி யெகோவாவும் உம்மைத் தள்ளிவிட்டார்
27 என்று சவுலினிடம் சொன்னான். பின்பு சாமுவேல் தான் போகும்படி திரும்பவே, சவுல் அவன் அங்கியின் ஓரத்தைப் பிடித்துக்கொண்டான், அது கிழிந்துபோயிற்று.
28 அப்பொழுது சாமுவேல் அவனைப் பார்த்து: யெகோவா இன்று உம்மிடத்திலிருந்து இஸ்ரவேலின் ராஜ்யத்தைப் பறித்துவிடுவார், உம்மிலும் உத்தமனுயிருக்கிற உமது தோழனுக்கு அதைக் கொடுத்தார். இஸ்ர 29
வேலின் மகிமையாயிருப்பவர் பொய் சொல்லுகிறவரல்ல; மனமாறி மனஸ்தாபப்படுகிறவருமல்ல, மனமாற அவர் மனுஷன் அல்லவே என்றான். அப்பொ 30
ழுது சவுல்: நான் பாவஞ்செய்தேன்; இப்போது என் ஜனத்தினுடைய மூப்பர் பார்வையிலும் இஸ்ரவேலின் பார்வையிலும் எனக்கு மதிப்பு இருக்கும்படி இப்போது நீர் என்னோடே திரும்பிவாரும்; நான் உமது கடவுளாகிய யெகோவாவைத் தொழுதுகொள்ளுவேன் என்றான். அப்படியே 31
சாமுவேல் திரும்பிச் சவுலுக்குப் பின்சென்றான்; சவுல் யெகோவாவைத் தொழுதுகொண்டான்.

பின்பு சாமுவேல் அமலேக்கின் ராஜாவா 32
கிய ஆகாகை என்னிடம் கொண்டுவாருங்கள் என, ஆகாக், மரணத்தின் கசப்பு அற்றுப் போயிற்றென்று தைரியமாய் அவனிடம் வந்தான். சாமுவேலோ: 33

உன் வாள் ஸ்திரீகளைப் பிள்ளையற்றோர் ஆக்கினதுபோல்
ஸ்திரீகளிலெல்லாம் உன் தாய் பிள்ளையற்றுளாவாளே

என்று சொல்லிக் கில்காலில் யெகோவாவின் சந்நிதியிலே ஆகாகைத் துண்டித்துப் போட்டான்.

பின்பு சாமுவேல் ராமாவுக்குப் 34
போனான்; சவுலும் சவுலின் இடியாவிலிருந்த தன் வீட்டுக்குப் போய்விட்டான். சவுல் 35
மரணமடையும் நாள்மட்டும் சாமுவேல் அப்புறம் அவனைக் கண்டு பேசவில்லை; சாமுவேல் சவுலுக்காகத் துக்கித்துக்கொண்டிருந்தான்; இஸ்ரவேலின்மேல் சவுலைத் தாம் ராஜாவாக்கினது யெகோவாவுக்கு விசனமாயிற்று.

யெகோவா சாமுவேலோடு பேசி: இஸ்ர 16
வேலின்மேல் ராஜாவாயிராதபடி நான் தள்ளிவிட்ட சவுலுக்காக நீ எக்தமட்டும் துக்கித்துக்கொண்டிருப்பாய்; நீ உன் கொம்பிலே தைலம் நிரப்பிக்கொண்டுவா; பெத்லெகேமியனாகிய ஈசாயினிடம் உன்னை அனுப்புவேன்; அவன் குமாரரில் ஒருவனை நான் ராஜாவாகத் தெரிந்துகொண்டேன் என்றார். அதற்குச் சாமுவேல்: நான் 2
எப்படிப் போவேன்; சவுல் இதைக் கேள்விப்பட்டால் என்னைக் கொன்றுபோடுவானே என்றான். யெகோவாவோ: நீ ஒரு கிடாரியைக் கையோடே கொண்டுபோய்

யெகோவாவுக்குப் பலியிடவந்தேன் என்று
3 சொல்லி | ஈசாயைப் பலிவிருந்துக்கு அழைப்பாய். அப்பொழுது நீ செய்ய வேண்டியதை நான் உனக்கு அறிவிப்பேன்; நான் உனக்குச் சொல்லுகிறவனை அபிஷேகம்பண்ணவேண்டும் என்றார்.
4 யெகோவாவின் சொற்படியே சாமுவேல் செய்தான்; அவன் பெத்லெகேமுக்கு வந்தபோது அவ்வூர் மூப்பர் நடுக்கத்தோடே அவனுக்கு எதிர்கொண்டுசென்று, நீர் வருகிறது சமாதானமா என்று கேட்டார்கள்.
5 அவன்: சமாதானந்தான்; யெகோவாவுக்குப் பலியிடவந்தேன்; நீங்கள் உங்களைச் சுத்திகரித்துக்கொண்டு என்னோடே பலிவிருந்துக்கு வாருங்கள் என்றான்; ஈசாயையும் அவன் குமாரரையும் சுத்திகரித்து அவர்களையும் பலிவிருந்துக்கு அழைத்தான்.
6 அவர்கள் வந்தபோது அவன் எலியாபைப் பார்த்தவுடனே: இப்பொழுது யெகோவாவின் முன்னிலையில் நிற்கிறவன் அவருடைய அபிஷேகம் பெறுகிறவனுக்கும் என்
7 றான். யெகோவாவோ சாமுவேலினிடம்: நீ இவன் முகத்தோற்றத்தையும் இவன் சரீரவளர்த்தியையும் பார்க்கவேண்டாம்; நான் இவனைத் தள்ளிவிட்டேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் பார்ப்பது முகம், யெகோவா பார்ப்பதோ
8 அகம் என்றார். அப்பொழுது ஈசாய் ஆபினதாபை அழைத்து அவனைச் சாமுவேலுக்கு முன்பாகக் கூட்டிவந்தான்; அவன்: இவனையும் யெகோவா தெரிந்து
9 கொள்ளவில்லை என்றான். ஈசாய் சம்மாவையும் கூட்டிவந்தான்; அவன்: இவனையும் யெகோவா தெரிந்துகொள்ளவில்லை
10 என்றான். இப்படியே ஈசாய் தன் குமாரரில் ஏழுபேரைச் சாமுவேலுக்கு முன்பாகக் கூட்டிவந்தான்; சாமுவேல் ஈசாயைப் பார்த்து: யெகோவா இவர்களில் ஒருவனையும் தெரிந்துகொள்ளவில்லை என்று
11 சொல்லி, | உனக்கு வேறே பிள்ளைகள் இல்லையா என்று ஈசாயைக் கேட்டான். அதற்கு அவன்: இன்னுமொருவன் இருக்கிறான், எல்லாருக்கும் இளையவன்; அவன் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறான் என்றான். அப்பொழுது சாமுவேல் ஈசாயைப் பார்த்து: அவனை அழைத்துவர ஆள்
அனுப்பு: அவன் இங்கே வருமட்டும் நாம்
12 பந்தியிருப்பதில்லை என்றான். ஆள் அனுப்பி அவனை அழைத்துவந்தான். அவன் சிவந்த மேனியும் அழகிய கண்களும் நல்ல ரூபமுள்ளவன். இவன் வாவே, யெகோவா: இவன்தான், நீ எழுந்து இவனை அபிஷேகம்
பண்ணு என்றார். அப்பொழுது சாமு 13
வேல் தைலக்கொம்பை எடுத்து அவனை அவன் சகோதரர் எல்லாரும் பார்க்க அபிஷேகம்பண்ணினான். அந்நாள்முதல் யெகோவாவின் ஆவி தாவீதின்மேல் வல்லமையோடு வந்து இறங்கினது; சாமுவேல் எழுந்து ராமாவுக்குப் போய்விட்டான்.
யெகோவாவின் ஆவி சவுலைவிட்டு அகன் 14
றது; யெகோவாவினால் அனுப்பப்பட்ட - ஒரு பொல்லாத ஆவி அவனைக்கலங்கப்பண்ணிக் கொண்டிருந்தது. அப்பொழுது சவுலின் 15
ஊழியக்காரர் அவனிடம் வந்து: இதோ, கடவுளால் அனுப்பப்பட்ட ஒரு பொல்லாத ஆவி உம்மைக் கலங்கப்பண்ணுகிறதே; உமது சமுகத்தில் ஊழியஞ்செய்கிற 16
உமது அடியாருக்குக் கட்டளையிட்டால் அவர்கள், தேர்ந்த சுரமண்டலக்காரன் ஒருவனைத் தேடிக்கொண்டு வருவார்கள்; கடவுளால் அனுப்பப்பட்ட பொல்லாத ஆவி உம்மேல் வருகையில் அவன் தன் கையினால் அதை வாசித்தால் உமக்குச் சவுக்கிய
மாகும் என்றார்கள். சவுல் தன் ஊழிய 17
ரைப்பார்த்து: நன்றாய் வாசிக்கத்தெரிந்த ஒருவனைத் தேடி என்னிடம் கொண்டு
வாருங்கள் என்றான். அதுகேட்ட வாலி 18
பரில் ஒருவன்: இதோ, பெத்லெகேமிய னாகிய ஈசாயின் குமாரன் ஒருவனைக் கண்டிருக்கிறேன்; அவன் தேர்ந்த சுரமண்டலக்காரன், பராக்கிரமசாலி, யுத்தவீரன், பேச்சில் சமர்த்தன், சவுந்தரியமுள்ளவன்; யெகோவாவும் அவனோடே இருக்கிறார்
என்றான். அப்பொழுது சவுல் ஈசாயி 19
னிடம் ஆட்களை அனுப்பி, ஆடுகளைப் பார்த்துக்கொண்டிருக்கிற உன் குமாரனாகிய தாவீதை என்னிடம் அனுப்பு என்று
சொல்லச்சொன்னான். ஈசாய் அப்பத்தை 20
யும் ஒரு தருத்தி திராட்சரசத்தையும் ஒரு வெள்ளாட்டுக்குட்டியையும் கழுதையின்
மேல் ஏற்றித் தன் குமாரனாகிய தாவீதின் வசமாய்ச் சவுலுக்கு அனுப்பினான். அப் 21
படியே தாவீது சவுலினிடம் வந்து அவனுக்கு ஊழியக்காரனானான்; சவுல் இவனிடம் அதிகப் பிரியமாயிருந்தான். சவு 22
லுக்கு இவன் ஆயுதம் சுமப்பவனானான். சவுல் ஈசாயினிடம் ஆள் அனுப்பி, தாவீது என் ஊழியத்தில் இருக்கட்டும், நான் அவனிடம் தயவாயிருக்கிறேன் என்று சொல்லச்
சொன்னான். அப்படியே தாவீது அங்கே 23
இருந்து, கடவுளினால் அனுப்பப்பட்ட ஆவி சவுலைப் பிடிக்கும்போதெல்லாம் சுரமண்டலத்தை எடுத்துத் தன் கையினால் வாசிப்பான். அப்பொழுது பொல்லாத ஆவி

சவுலிவிட்டு நீங்கும்; அவனுக்கு இலகுவாகும், அவன் சொஸ்தமாவான்.

**17** பெலிஸ்தியர் யுத்தம்பண்ணுகிறதற்குத் தங்கள் சேனைகளைச் சேர்த்து, யூதாவிலுள்ள சோக்கோவிலே கூடிவந்து, சோக்கோவுக்கும் ஆசேக்காவுக்கும் நடுவே இருக்கிற எபேஸ்தம்மிமிலே பாளயமிறங்கினார்கள். 2 சவுலும் இஸ்ரவேலரும் கூடிவந்து கர்வாலிப் பள்ளத்தாக்கில் பாளயமிறங்கிப் பெலிஸ்தியருக்கு எதிராக யுத்தத்திற்கு அணிவகுத்து நின்றார்கள். 3 பெலிஸ்தியர் அப்பக்கத்து மலையின்மேலும் இஸ்ரவேலர் இப்பக்கத்து மலையின்மேலும் நின்றார்கள்; அவர்களுக்கு நடுவே பள்ளத்தாக்கு இருந்தது. 4 அப்பொழுது காத் ஊராகிய கோலியாத் என்னும் பேருள்ள தனிச் சண்டை வீரன் ஒருவன் பெலிஸ்தியரின் பாளயத்திலிருந்து முன்வருவான்; அவன் உயரம் ஆறுமுழம் ஒரு ஜாண். 5 அவன் தன் தலையின்மேல் செம்புச்சிரோவைப் போட்டுச் செதில்போன்ற சங்கிலிக்கவசம் தரித்திருப்பான்; அது செம்பினாலானது; அதின் நிறை ஐயாயிரம் சேக்கல். 6 அவன் கால்களே மூடும் செம்புத்தகடுகளைப் போட்டிருப்பான்; முதுகின்மேல் செம்பினாலான எறிவல்லியம் வைத்திருப்பான். 7 அவனுடைய ஈட்டிப்பிடி நெசவுகாரரின் படமரம் போன்றது; அவன் ஈட்டியின் அலகு இரும்பு, அதன்நிறை அறுநூறு சேக்கல்; கேடகம்பிடிக்கிறவன் அவனுக்கு முன்னாக நடப்பான். 8 அவன் வந்து நின்று இஸ்ரவேல் சேனைகளைப்பார்த்துச் சத்தமிட்டு, நீங்கள் யுத்தத்திற்கு அணிவகுத்து நிற்கிறது என்ன, நான் பெலிஸ்தியன். நீங்கள் சவுலின் சேவகர் அல்லவா? உங்களில் ஒருவனைத் தெரிந்தெடுங்கள், அவன் என்னிடம் 9 வரட்டும். அவன் என்னோடே போர் செய்ய வல்லவனாய் என்னைக் கொன்றுவிட்டால் நாங்கள் உங்களுக்கு அடிமைகளாவோம்; நான் அவனை மேற்கொண்டு அவனைக் கொல்வேனானால் நீங்கள் எங்களுக்கு அடிமைகளாகி எங்களைச் சேவிக்கவேண்டும் என்று சொல்லிப், பின்னும் 10 அந்தப் பெலிஸ்தியன்: நான் இன்றையதினம் இஸ்ரவேலின் சேனைகளைக் கூப்பிடுகிறேன், அவர்களால் இயன்றதைப் பார்க்கட்டும்; ஒருவனை என்னிடம் அனுப்புங்கள், நாங்கள் தனிப்போர் புரிவோம் என்று 11 சொல்லிக்கொண்டு வருவான். சவுலும் இஸ்ரவேலர் அனைவரும் அந்தப் பெலிஸ்தியனுடைய வார்த்தைகளைக் கேட்டுக் கலங்கி மிகவும் பயப்பட்டார்கள்.

தாவீது என்பவன் யூதாவிலுள்ள பெத் 12
லெகேம் ஊராகிய ஈசாய் என்னும் பேருள்ள எப்பிராத்தியனுடைய குமாரன்; ஈசாய்க்கு எட்டுக் குமாரர்; சவுலின் நாட்களிலே இவன் மனங்களுக்குள்ளே வயது சென்ற கிழவனாயிருந்தான். ஈசாயின் 13
டைய மூன்று மூத்தகுமாரர் சவுலோடே யுத்தத்திற்குப்போயிருந்தார்கள்; யுத்தத்திற்குப் போயிருந்த அவனுடைய மூன்று குமாரரில் மூத்தவன் பேர் எலியாப், இரண்டாங்குமாரன் பேர் அபினதாப், மூன்றாங் குமாரன் பேர் சம்மா. தாவீது எல்லாருக்கும் இளையவன்; மூத்தவர்களாகிய அந்த 14
மூன்று பேரும் சவுலோடே போயிருந்தார்கள். தாவீது காலாகாலத்தில் சவுலை விட்டு 15
ப்போய் மறுபடியும் பெத்லெகேமிலிருந்த தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். அந்தப் பெலிஸ்தியன் 16
காலையிலும் மாலையிலும் நாற்பதுநாளாக வந்துகொண்டேயிருந்தான். ஈசாய் தன் 17
குமாரனாகிய தாவீதைப் பார்த்து: உன் சகோதரருக்கு இந்த ஒரு மரக்கால் வறுத்த பயற்றையும் இந்தப் பத்து அப்பங்களையும் எடுத்துக்கொண்டு, பாளயத்திலிருக்கிற உன் சகோதரரிடத்தில் சீக்கிரமாய்ப் போய், | இந்தப் பத்துப் பால்கட்டிகளை 18
ஆயிரவர்க்கு அதிபதியிடம் கொடுத்துவிட்டு உன் சகோதரரின் சுகசெய்தியை விசாரித்து அவர்களிடம் அடையாளம் வாங்கிக்கொண்டுவா என்றான். அச்சமயத்திலே 19
சவுலும் அவர்களும் இஸ்ரவேல் எல்லாரும் கர்வாலிப் பள்ளத்தாக்கிலே பெலிஸ்தியரோடுயுத்தம்பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

தாவீது அதிகாலையில் எழுந்து, ஆடு 20
களைக் காவலாளி வசமாய்விட்டு ஈசாய் தனக்குக் கட்டளையிட்டபடியே எடுத்துக் கொண்டுபோய் இரதங்கள் இருந்த இடத்துக்கு வந்தான்; சேனைகள் அணிவகுத்து நின்று யுத்த ஆரவாரஞ்செய்தார்கள். இஸ்ர 21
வேலரும் பெலிஸ்தியரும் ஒருவருக்கு எதிராக ஒருவர் அணிவகுத்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது தாவீது தான் 22
கொண்டுவந்தவைகளை இறக்கி, பண்டம் பாடிகளைக் காக்கிறவன் வசமாக வைத்துவிட்டுச் சேனைக்குள் ஓடித் தன் சகோதரரின் சுகசெய்தியை விசாரித்தான்; அவன் 23
இவர்களோடே பேசிக்கொண்டிருக்கையில், இதோ, காத் ஊராகிய கோலியாத் என்னும் பேருள்ள அந்தப் பெலிஸ்திய தனிச்சண்டை வீரன் பெலிஸ்தியரின் சேனைகளிலிருந்து முன்வந்து நின்று மேற் சுலியவாறே பேசினான்; அதைத் தாவீது

24 கேட்டான். இஸ்ரவேலர் யாவரும் அந்த மனுஷனைக் கண்டபோது அவன் முகத்துக்கு விலகி ஓடினார்கள்; மிகவும் பயந்
25 தார்கள். அந்நேரத்திலே இஸ்ரவேலர்: மூன்வந்து நிற்கிற அந்த மனுஷனைக் கண்டீர்களா, இஸ்ரவேலை அவமானமாய்ப் பேச வந்து நிற்கிறான்; இவனைக் கொல்லுகிறவன் எவனோ அவனை ராஜா மிகவும் ஐசுவரியவானாக்கி அவனுக்குத் தமது குமாரத்தியைக் கொடுத்து, அவன் தகப்பன் வீட்டாருக்கு இஸ்ரவேலிலே சர்வமானியம் கொடுப்
26 பார் என்றார்கள். தாவீது தன்னண்டையிலே நிற்கிறவர்களைப் பார்த்து: அந்தப் பெலிஸ்தியனைக் கொன்று இஸ்ரவேலுக்கு நேரிட்ட அவமானத்தை நீக்குகிறவனுக்கு என்ன செய்யப்படும்; ஜீவனுள்ள கடவுளின் சேனைகளை அவமானமாய்ப் பேச விருத்தசேதனம் இல்லாத இந்தப் பெலிஸ்
27 தியன் யார் என்றான். அதற்கு ஜனங்கள்: அவனைக் கொல்லுகிறவனுக்கு இன்ன இன்னபடி செய்யப்படும் என்று மேலே
28 கூறியவாறே சொன்னார்கள். அந்த மனுஷரோடே அவன் பேசிக்கொண்டிருந்ததை அவன் மூத்த சகோதரனாகிய எலியாப் கேட்டபோது, அவன் தாவீதின்மேல் கோபங்கொண்டு: நீ இங்கே வந்தது என்ன? வனாந்தரத்திலுள்ள அந்தச் சில ஆடுகளை நீ யார் வசத்தில் விட்டாய்? யுத்தத்தைப் பார்க்கத்தான் வந்தாய்; உன் அகந்தையும் உன் இருதயத்தின் துஷ்டத்தனமும் எனக்குத்
29 தெரியுமே என்றான். அதற்குத் தாவீது: நான் இப்பொழுது செய்தது என்ன? ஒரு கேள்விதானே கேட்டேன் என்று
30 சொல்லி | அவனிட்டை வேறொருவனிடமாகத் திரும்பி அந்தப் பிரகாரமாகவே கேட்டான்; ஜனங்கள் முன்போலவே பதில்
31 சொன்னார்கள். தாவீது சொன்ன வார்த்தைகளை அவர்கள் கேட்டு அதைச் சவுலினிடம் அறிவித்தார்கள். அப்பொழுது சவுல் அவனைத் தன்னிடம் அழைப்பித்தான்.
32 தாவீது சவுலைப் பார்த்து: இவனிமித்தம் ஒருவனும் அதைரியப்படவேண்டியதில்லை; உமது அடியானாகிய நான் போய் இந்தப் பெலிஸ்தியனோடே போர்புரிவேன் என்
33 றான். சவுலோ தாவீதினிடம்: இந்தப் பெலிஸ்தியனோடே எதிர்த்துப் போர்புரிவது உன்னாலே ஆகாது; நீ இளைஞன், அவனோ தன் சிறுவயதுமுதலே போர்ப்பழக்கமுள்
34 ளவன் என்று சொல்லவே | தாவீது அவனிடம்: அடியேன் என் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கையில் ஒருவிசை ஒரு சிங்கமும் மற்றொருவிசை ஒரு கரடியும் வந்து மந்தையிலிருந்து ஆட்டைப் பிடித்துக்கொண்டது. நான் அதைத் 35
தொடர்ந்துபோய் அதை அடித்து ஆட்டை அதின் வாய்க்குத் தப்புவித்தேன்; அது என் மேல் திரும்பினபோது நான் அதின் தாடியைப் பிடித்து அதை அடித்துக் கொன்று போட்டேன். அந்தச் சிங்கத்தையும் அந் 36
தக் கரடியையும் உமது அடியானாகிய நானே கொன்றேன். விருத்தசேதனமில்லாத இந்தப் பெலிஸ்தியனும் அவைகளில் ஒன்றைப்போலானே இருப்பான்; அவன் ஜீவனுள்ள கடவுளின் சேனைகளை அவமானமாய்ப் பேசினானே என்றான். பின்னும் 37
தாவீது: சிங்கத்திற்கும் கரடிக்கும் என்னைத் தப்புவித்த யெகோவா இந்தப் பெலிஸ்தியனின் கைக்கும் என்னைத் தப்புவிப்பார் என்றான்; எனவே சவுல் தாவீதைப்பார்த்து போ, யெகோவா உன்னோடிருப்பார் என்றான்.
சவுல் தாவீதுக்குத் தன் வஸ்திரங்களை 38
உடுத்திச் செம்பினாலான ஒரு சீராவை அவன் தலையின்மேல்போட்டு ஒரு கவசத்தையும் அவனுக்குத் தரிப்பித்தான். சவுலின் பட்டயத்தைத் தாவீது தன் வஸ்தி 39
ரங்கள்மேல் கட்டிக்கொண்டு நடந்துபார்த்தான்; அது அவனுக்குப் பழக்கமில்லை; ஆகவே தாவீது சவுலினிடம்: நான் இவைகளைத் தரித்துக்கொண்டுபோக முடியாது; இது எனக்குப் பழக்கமில்லை என்று சொல்லி அவைகளைக் கழற்றிப்போட்டுத் |
தன் தடியைக் கையிலே பிடித்துக்கொண்டு, 40
ஆற்றிலிருந்து ஐந்து கூழாங் கற்களைத் தெரிந்தெடுத்து அவைகளைத் தன்னிடமிருந்த இடையர் பையாகிய கவண்கற் பையிலே போட்டுத் தன் கவணைக் கையிலே பிடித்துக்கொண்டு அந்தப் பெலிஸ்தியனை நோக்கிப் போனான். பெலிஸ்தியனும் 41
தாவீதைக் கிட்டும்படி நடந்து வந்தான்; கேடகம் பிடிக்கிறவன் அவனுக்கு முன்னாக நடந்தான். பெலிஸ்தியன் தாவீதைப் 42
பார்த்து, அவன் சிவந்த மேனியும் சவுந்தரிய ரூபமுமுள்ள இளைஞன் எனக்கண்டு அவனை அசட்டைபண்ணினான். பெலிஸ் 43
தியன் தாவீதினிடம், நீ தடிகளோடே என்னிடம் வந்தாயே. நான் நாயா என்று சொல்லித் தன் தேவர்களின்பேராலே தாவீதைச் சபித்தான். பின்னும் அந்தப் 44
பெலிஸ்தியன் தாவீதைக் கூப்பிட்டு: என்னிட்டவா, நான் உன் மாம்சத்தை ஆகாயத்துப் பறவைகளுக்கும் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன் என்றான். தாவீதோ 45
பெலிஸ்தியனிடம்: நீ பட்டயத்தோடும்

ஈட்டியோடும் எதிவல்லயத்தோடும் என்னிடம் வருகிறாய்; நானோ நீ அவமானமாய்ப் பேசின இஸ்ரவேலருடைய அணிகளின் கடவுளாகிய சேனைகளின் பெகோவாவினுடைய திருநாமத்திலே உன்னிடம் வருகிறேன். இன்றையதினமே பெகோவா உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார், நான் உன்னைக் கொன்று, உன் தலையை உன்னிடமிருந்து வாங்கிப் பெலிஸ்தியர் பாளையத்துப் பிணங்களை இந்நாளில் ஆகாயத்துப் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் கொடுப்பேன்; கடவுள் இஸ்ரவேலரோடே இருக்கிறார் என்று பூலோகத்தார் யாவரும் இதினால் அறிந்துகொள்வார்கள். பெகோவா இரட்சிப்பது பட்டயத்தினாலும் ஈட்டியினாலும் அல்ல என்று இந்த ஜனக்கூட்டமெல்லாம் அறிந்து கொள்ளும்; யுத்தம் பெகோவாவினுடையது; அவர் உங்களை எங்கள் கையிலே ஒப்புக்கொடுப்பார் என்றான். அந்தப் பெலிஸ்தியன் இளம்பித் தாவீதை எதிர்க்க வருகையில் தாவீது விரைந்து அந்தச் சேனையின் முகமாகப் பெலிஸ்தியனுக்கு எதிரே ஓடித், தன் கையைப் பையிலே போட்டு அதிலிருந்து ஒரு கல்லை எடுத்துக் கவணிலே வைத்துச் சுழற்றிப் பெலிஸ்தியனின் நெற்றியிலே பட எறிந்தான்; அந்தக் கல் அவன் நெற்றியிலே பதிந்துபோனது, அவன் தரையிலே முகங்குப்புற விழுந்தான். இவ்விதமாகத் தாவீது ஒரு கவணினாலும் ஒரு கல்லினாலும் பெலிஸ்தியனை மேற்கொண்டு அவனை மடங்கடித்து அவனைக் கொன்றுபோட்டான். தாவீதின் கையிலே பட்டயமில்லை, அவன் பெலிஸ்தியனண்டையில் ஓடி அவன் பக்கத்திலே நின்று அவன் பட்டயத்தை எடுத்து அதின் உறையிலிருந்து அதை உருவி அவனைக் கொன்று பட்டயத்தினாலே அவன் தலையை வெட்டிப்போட்டான்; தங்கள் பராக்கிரமவீரன் மாண்டுபோனதைக்காணவே பெலிஸ்தியர் ஓட்டம்பிடித்தார்கள். உடனே இஸ்ரவேல் ஜனங்களும் யூதா ஜனங்களும் இளம்பி ஆரவாரஞ்செய்து, காத்துக்குப்போகும் வழிமட்டும் எக்ரோனின் வாசல்கள்மட்டும் பெலிஸ்தியரைத் துரத்தினார்கள்; பெலிஸ்தியரிலே வெட்டுண்டவர்கள் சாராயீமின் வழியிலே, காத்மட்டும் எக்ரோன்மட்டும் விழுந்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் பெலிஸ்தியரை மூர்க்கமாய்த் துரத்தினபிற்பாடு திரும்பிவந்து அவர்கள் பாளையங்களைக் கொள்ளையிட்டார்கள். தாவீது பெலிஸ்தியன் தலையை எடுத்து அதை எருசலேமுக்குக் கொண்டுபோனான்; அவன் ஆயுதங்களையோ தன் கூடாரத்திலே வைத்துக் கொண்டான்.

தாவீது பெலிஸ்தியனை எதிர்க்கச் செல்வதைச் சவுல் கண்டபோது தன் சேனாபதியாகிய அப்னேரைக் கூப்பிட்டு, அப்னேரே, இந்த வாலிபன் யாருடைய மகன் என்று கேட்டான்; அதற்கு அப்னேர்: ராஜாவே, எனக்குத் தெரியாது, உமது ஜீவன்மேல் ஆணை என்று சொல்ல | ராஜா, இந்தப் பிள்ளையாண்டான் யாருடைய மகன் என்று விசாரித்துவா என்றான். தாவீது பெலிஸ்தியனைக் கொன்று திரும்புகையில் அப்னேர் அவனைச் சவுலினிடம்அழைத்துப்போனான். பெலிஸ்தியனுடைய தலை அவன் கையிலிருந்தது. அப்பொழுது சவுல்: வாலிபனே, நீ யாருடைய மகன் என்று அவனைக் கேட்டதற்குத் தாவீது: நான் பெத்லெகேம் ஊராகிய உமது அடியான் ஈசாயின் மகன் என்றான்.

அவன் சவுலோடே பேசி முடிக்கையில் யோனத்தானுடைய மனம் தாவீதின் மனதோடே ஒன்றாய் இசைந்தது. யோனத்தான் அவனைத் தன் உயிரைப்போலச் சிநேகித்தான். சவுல் அவனைத் தகப்பன் வீட்டுக்குத் திரும்பிப்போக ஒட்டாமல் அன்று முதல் தன்னிடத்திலேயே வைத்துக்கொண்டான். யோனத்தான் தாவீதைத் தன் உயிரைப்போலச் சிநேகித்ததினால் அவனும் இவனும் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். யோனத்தான் போர்த்துக் கொண்டிருந்த அங்கியைக் கழற்றி, அதையும் தன் வஸ்திரங்களையும் தன் பட்டயத்தையும் தன் வில்லையும் தன் கச்சையையுங் கூடத் தாவீதுக்குக் கொடுத்துவிட்டான். சவுல் தன்னையனுப்புகிற எவ்விடத்திற்கும் தாவீது போய்க் காரியசித்தியுண்டாகச் செய்தபடியினால் சவுல் அவனைப் படைவீரர்மேல் அதிகாரியாக்கினான். அது சகல ஜனங்களுக்கும் சவுலின் ஊழியக்காரருக்கும்கூட நலமாகக் கண்டது.

தாவீது பெலிஸ்தியனைக் கொன்று திரும்புகையில், ஜனங்கள் வரும்போது ஸ்திரீகள் இஸ்ரவேலின் சகல ஊர்களிலுமிருந்து ஆடல்பாடலுடன்புறப்பட்டு மேளங்களோடும் தேவவாத்தியங்களோடும் சந்தோஷமாய் ராஜாவாகிய சவுலுக்கு எதிர்கொண்டுவந்தார்கள். அந்த ஸ்திரீகள் ஆடிப் பாடுகையில்:

சவுல் ஆயிரக்கணக்காய்க் கொன்றான்;
தாவீதோ லக்ஷக்கணக்காய்க் கொன்றான்

என்று முறைமுறைபாகப் பாடினார்கள். 8 சவுல் மிகவும் எரிச்சலடைந்தான்; இது அவனுக்குத் தீதாகக் காணப்பட்டது. தாவீதுக்கு லக்ஷம் என்கிறார்கள், எனக்கோ ஆயிரமே; அவனுக்கு இன்னும் குறைவாயிருப்பது ராஜாங்க மாத்திரமே என்று 9 சவுல் சொல்லிக்கொண்டு | அந்நாள்முதல் தாவீதைச் சீறி நோக்கினான்.

10 மறுநாளிலே கடவுளால் அனுப்பப்பட்ட பொல்லாத ஆவி சவுலின்மேல் வல்லமையோடு வந்து இறங்கிற்று; அவன் வீட்டிற்குள்ளே புத்திமாறாட்டமாய் பேசிக்கொண்டிருந்தான்; தாவீதும் தினந்தோறும் செய்கிறபடியே தன் கையினால் சுரமண்டலத்தை வாசித்துக்கொண்டிருந்தான். சவு 11 லின் கையிலே ஈட்டி இருந்தது. சவுல், தாவீதைச் சுவரோடே சேர்த்து உருவக் குத்திப்போடுவேன் என்று ஈட்டியை அவன் மேல் எறிந்தான்; தாவீதோ விலகி இரண்டு 12 தரம் அவனுக்குத் தப்பினான். யெகோவா தாவீதோடே இருக்கிறார் என்றும் தன்னை விட்டு விலகிப்போனார் என்றும் சவுல் 13 கண்டு தாவீதுக்குப் பயந்து | அவனைத் தன்னைவிட்டு அப்புறப்படுத்தி அவனை ஆயிரவருக்கு அதிபதியாக வைத்தான். போர்வீரர் போகும்போதும் வரும்போதும் தாவீது அவர்கள் முன்சென்று வந்தான். 14 தாவீது சென்றவிடமெல்லாம் அவன் செய்த காரியங்கள் சித்தியடைந்தன, யெகோவா 15 அவனோடிருந்தார். அவன் காரியசித்தி பெறுவதைச் சவுல் கண்டு அவனுக்கு 16 மிகவும் பயந்திருந்தான். இஸ்ரவேல் ஜனங்களும் யூதா ஜனங்களுமாகிய யாவரும் தாவீதின்மேல் பிரியமாயிருந்தார்கள். அவர்கள் போய்வரும்போதெல்லாம் அவனே அவர்களை நடத்திவந்தான்.

17 சவுல் தாவீதைப்பார்த்து: இதோ, என் மூத்த குமாரத்தியாகிய மேராப், இவளை உனக்கு மனைவியாகக் கொடுப்பேன்; நீ எனக்கு நல்ல போர்வீரனும் மாத்திரம் இருந்து யெகோவாவுக்கென்று யுத்தஞ் செய்துவா என்றான்; தன் கையல்ல, பெலிஸ்தியரின் கையே அவன்மேல் விழட்டும் என்று நினைத்துக்கொண்டு சவுல் இதைச் 18 சொன்னான். தாவீதோ சவுலினிடம்: ராஜாவுக்கு மருமகனாகிறதற்கு நான் எம்மாத்திரம், என் ஜனங்களும், இஸ்ரவேலில் என் தகப்பன் வம்சமும், எம்மாத்திரம் என்றான். 19 சவுலின் குமாரத்தியாகிய மேராபைத் தாவீதுக்குக் கொடுப்பதற்கெனக் குறித்த காலம் வந்தபோது அவள் மெகோலாத்தியனான ஆதரியேலுக்கு மனைவியாகக் கொடுக்கப் பட்டாள். சவுலின் குமாரத்தியாகிய மீகாள் 20 தாவீதை நேசித்தாள்; அது சவுலுக்குத் தெரியவந்தபோது அது அவன் பார்வைக்கு நலமாய்த் தோன்றினது; நான் அவளை அவனுக்குக் கொடுப்பேன்; அவள் அவனுக் 21 குக் கண்ணியாகட்டும், பெலிஸ்தியரின் கை அவன்மேல் விழட்டும் என்று சவுல் எண்ணிக்கொண்டு தாவீதைப்பார்த்து: நீ மறு படியும் எனக்கு மருமகனாவதற்கு இப் பொழுது இடமுண்டு என்றான். பின்பு 22 சவுல் தன் ஊழியக்காரரைப் பார்த்து: நீங்கள் தாவீதோடே இரகசியமாய்ப் பேசி, இதோ, ராஜா உன்மேல் பிரியமாயிருக்கிறார்; அவருடைய ஊழியக்காரர் எல்லாரும் உம்மைச் நேசிக்கிறார்கள்; இப்போதும் நீர் ராஜாவுக்கு மருமகனாகிவிடும் என்று சொல்லுங்கள் என்று கட்டளையிட்டான். 23 சவுலின் ஊழியக்காரர் இந்த வார்த்தைக ளைத் தாவீதின் காதுக்குள் ஒதினார்கள். அப் பொழுது தாவீது, நான் ராஜாவுக்கு மருமகனாவது லேசான காரியம் என்று நினைக் கிறீர்களா? நான் எளியவனும் மதிப்பற்ற வனுமாயிற்றே என்றான். 24 தாவீது இன்ன படி சொன்னான் என்று சவுலின் ஊழியக் 25 காரர் அவனுக்கு அறிவித்தார்கள். அப் பொழுது சவுல்: ராஜா பரிசத்தை விரும்பவில்லை; தமது சத்துருக்களாகிய பெலிஸ்தியரினிடம் புழிவாங்குவதற்கென்று நூறு பெலிஸ்தியர் நுனித்தோல்களைக் கேட்கிறார் என்று தாவீதுக்குச் சொல்லுங்கள் என்றான்; தாவீதைப் பெலிஸ்தியரின் கையில் விழப்பண்ணவேண்டுமென்பதே சவுலின் எண்ணம். 26 அவன் ஊழியக்காரர் தாவீதுக்கு இந்த வார்த்தைகளைத் தெரிவிக்கவே, இவ்விதமாக ராஜாவுக்கு மருமகனாவது தாவீதுக்குப் பிரியமாயிருந்தது. குறித்த 27 நாட்கள் நிறைவேறுமுன்னே | தாவீது எழுந்து தன் ஆட்களைக் கூட்டிக்கொண்டு போய்ப் பெலிஸ்தியரில் இருநூறுபேரைக் கொன்று அவர்கள் நுனித்தோல்களைக் கொண்டுவந்து, அவைகளெல்லாவற்றையும் தான் ராஜாவுக்கு மருமகனாகும்படி ராஜாவுக்குச் செலுத்தினான். அப்பொழுது சவுல் தன் குமாரத்தியாகிய மீகாளை அவனுக்கு மனைவியாகக் கொடுத்தான். யெகோ 28 வா தாவீதோடிருக்கிறார் என்று சவுல் கண்டறிந்துகொண்டான்; சவுலின் குமாரத்தியாகிய மீகாளும் அவனை நேசித்தாள். ஆகவே 29 சவுல் இன்னும் அதிகமாய்த் தாவீதுக்குப் பயந்து தன் ஆயுள்காலமெல்லாம் தாவீதுக்குச் சத்துருவாயிருந்தான். பெலிஸ்தியரின் ஆண்டவன்மார் சண்டைக்கு வரும்போ

செல்லாம் தாவீதே சவுலின் ஊழியக்காரர் அனைவரிலும் பெருஞ்சிறப்புப்பெற்று வந்தான்; அவன் மிகவும் பேர்பெற்றவனானான்.

19 தாவீதைக் கொன்றுபோடவேண்டுமென்று சவுல் தன் குமாரனாகிய யோனத்தானோடும் தன் ஊழியக்காரர் யாவரோடும் பேசினான். சவுலின் குமாரனாகிய யோனத்தானோ தாவீதின்மேல் மிகவும் பிரியமாயிருந்தான்; ஆகவே யோனத்தான் தாவீதுக்கு அதை அறிவித்து, என் தகப்பனாகிய சவுல் உம்மைக் கொன்றுபோட வகைதேடுகிறார்; இப்போதும் நானிக்காலமே நீர் மறைவான இடத்தில் ஒளித்துக்கொண்டிருந்து எச்சரிக்கையாயிரும். நான் வந்து, நீர் இருக்கும் வெளியிலே என் தகப்பன் பக்கத்திலே நின்று உமது பொருட்டு என் தகப்பனோடே பேசுவேன்; எனக்குத் தெரியவருகிறதை உமக்கு அறிவிப்பேன் என்றான். அப்படியே யோனத்தான் தாவீதுக்கு நன்மையாகத் தன் தகப்பனாகிய சவுலோடே பேசி: ராஜாவே, உமது அடியானாகிய தாவீதுக்கு விரோதமாகப் பாவஞ்செய்ய வேண்டாம்; அவன் உமக்கு விரோதமாகப் பாவஞ் செய்யவில்லை; அவன் செய்தவைகள் உமக்கு மிகவும் அனுகூலமாயிற்றே. அவன் தன் உயிரைப் பெரிதென்று கருதாமல் அந்தப் பெலிஸ்தியனைக் கொன்றதினாலே யெகோவா இஸ்ரவேலுக்கெல்லாம் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டதை நீர் கண்டு சந்தோஷப்பட்டீரே. இப்போதும் நீர் காரணமின்றித் தாவீதைக் கொன்று குற்றமில்லாத இரத்தத்திற்கு விரோதமாகப் பாவஞ்செய்வானேன் என்றான். சவுல் யோனத்தான் சொல்லுக்குச் செவிகொடுத்து, அவன் கொல்லப்படுவதில்லை என்று நித்திய ஜீவியாகிய யெகோவாவின்மேல் ஆணையிட்டான். பின்பு யோனத்தான் தாவீதை அழைத்து, இந்த வார்த்தைகளையெல்லாம் அவனுக்கு அறிவித்து, அவனைச் சவுலண்டையிலே கூட்டிக்கொண்டுபோய் விட்டான்; அப்படியே அவன் முன்போல் சவுலின் சமுகத்திலே இருந்தான்.

மறுபடியும் யுத்தம் ஆரம்பித்தது; அப்பொழுது தாவீது சென்று பெலிஸ்தியரோடே யுத்தம்பண்ணி அவர்களை மிகவும் சங்கரித்தான். அவர்கள் அவனுக்கு எதிர்நிற்கா மல் ஓட்டம் பிடித்தார்கள். யெகோவாவினால் அனுப்பப்பட்ட பொல்லாத ஆவி சவுலின்மேல் வந்தது; அவன் தன் வீட்டில் உட்கார்ந்து ஈட்டியைக் கையில் பிடித்துக்கொண்டிருந்தான். தாவீது கையினாலே சுரமண்டலம் வாசித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது சவுல் தாவீதை ஈட்டியினாலே சுவரோடே சேர்த்து உருவக் குத்திப்போடப்பார்த்தான். இவனே விலகிக்கொள்ளவே சவுல் எறிந்த ஈட்டி சுவரிலே பட்டது; தாவீது அன்று இரவே ஓடிப்போய்த் தப்பித்துக்கொண்டான். சவுல் தாவீதின் வீட்டுக்கு ஆட்களை அனுப்பிக் காவல்செய்து மறுநாட்காலையில் அவனைக் கொல்லும்படி கட்டளையிட்டான். இதைத் தாவீதுக்கு அவன் மனைவியாகிய மீகாள் அறிவித்து: நீர் இன்று இரவே உமது பிராணனைத் தப்புவித்துக்கொள்ளாவிட்டால் நாளையதினம் உமது பிராணன் இராது என்று சொல்லித் | தாவீதை ஜன்னல்வழியாய் இறக்கிவிட்டாள். அவன் ஓடிப்போய்த் தப்பிக்கொண்டான். மீகாள் வீட்டு விக்கிரகமொன்றை எடுத்துக் கட்டிலின்மேல் கிடத்தி அதின் தலைமாட்டிலே ஒரு ஆட்டு மயிர்ப் போர்வையைப் போட்டுக் கம்பளியை விரித்து மூடிவைத்தாள். தாவீதைப் பிடித்துவரச் சவுல் ஆட்களை அனுப்பினபோது, அவர் வியாதியாயிருக்கிறார் என்றாள். அப்பொழுது தாவீதைப் பார்ப்பதற்குச் சவுல் ஆட்களை அனுப்பி, அவனைக் கொன்றுபோடும்படி கட்டிலோடே அவனை என்னிடம் எடுத்து வாருங்கள் என்றான். ஆட்கள் வந்தபோது, இதோ, சுரூபம் கட்டிலின் மேலும் ஆட்டுமயிர்ப் போர்வை அதின் தலைமாட்டிலும் கிடக்கக் கண்டார்கள். அப்பொழுது சவுல் மீகாளினிடம்: நீ இப்படி என்னை ஏய்த்து என் பகைஞனைத் தப்பவிட்டு அனுப்பினது என்ன என்று கேட்க மீகாள் சவுலினிடம்: என்னைப் போகவிடு; விடாவிட்டால் நான் உன்னைக் கொன்றுபோடுவேன் என்று அவர் என்னிடம் சொன்னார் என்றாள்.

தாவீது தப்பியோடிப்போய் ராமாவிலிருந்த சாமுவேலினிடம் வந்து சவுல் தனக்குச்செய்த யாவற்றையும் அவனுக்கு அறிவித்தான். பின்பு அவனும் சாமுவேலும்போய் நாயோதிலே தங்கியிருந்தார்கள். தாவீது ராமாவிலுள்ள நாயோதிலே இருக்கிறான் என்று சவுலுக்கு அறிவிக்கப்பட்டது. அப்பொழுது சவுல், தாவீதைப் பிடித்துவர ஆட்களை அனுப்பினான். அவர்கள் பரவசமாய்ப் பேசின தீர்க்கதரிசிகளின் கூட்டத்தையும் சாமுவேல் அவர்களின் தலைவனாக நிற்பதையும் கண்டார்கள்; அப்பொழுது சவுலின் ஆட்கள்மேலும் கடவுளின் ஆவி இறங்கவே அவர்களும் பரவசமாகிப் பேசினார்கள். இது சவுலுக்கு அறிவிக்கப்பட்டபோது அவன் வேறே ஆட்களை

41 ஊருக்குக் கொண்டுபோ என்றான். பையன் போனபின்பு, தாவீது தெற்கேதான் இருந்த இடத்திலிருந்து எழுந்துவந்து தரையிலே முகங்குப்புறவிழுந்து மூன்றுவிசைவணங்கினான்; அவர்கள் ஒருவரையொருவர் முத்தஞ்செய்து கட்டி அழுதார்கள்; தாவீதோ 42 மிகவும் அழுதான். அப்பொழுது யோனத்தான் தாவீதினிடம்: நீர் சமாதானத்தோடே போம்; எனக்கும் உமக்கும் என் சந்ததிக்கும் உமது சந்ததிக்கும் யெகோவாவே என்றும் நடுநிற்கும் சாட்சி என்று யெகோவாவின் திருநாமத்திலே நாம் இருவரும் ஆணையிட்டுக்கொண்டதை நினைத்துக்கொள்ளும் 43 என்றான். பின்பு தாவீது எழுந்துபோய்விட்டான்; யோனத்தானே ஊருக்குள் வந்தான்.

**21** தாவீது நோபிலிருந்த ஆசாரியனாகிய அகிமேலேக்கினிடம் போனான்; அகிமேலேக்கு நடுக்கத்தோடே தாவீதுக்கு எதிர்கொண்டுபோய்: ஒருவரும் உம்மோடே வராமல் நீர் தனிமையாய் வருகிறது என்ன 2 என்று கேட்டான். தாவீது ஆசாரியனாகிய அகிமேலேக்கினிடம்: ராஜா எனக்கு ஒரு காரியத்தைக் கட்டளையிட்டு, நான் உன்னை அனுப்பின காரியமும் உனக்கு கட்டளையிட்டதும் இன்னதென்று ஒருவருக்கும் தெரியவேண்டாம் என்று என்னிடம் சொன்னார்; இன்ன இடத்திற்கு வரவேண்டுமென்று சேவகருக்குச் சொல்லியிருக்கி 3 றேன். இப்போதும் உம்மிடத்தில் என்ன இருக்கிறது? ஐந்து அப்பமாகிலும் என்ன வாகிலும் இருப்பதை எனக்குக் கொடும் 4 என்றான். ஆசாரியன் தாவீதினிடம்: பரிசுத்த அப்பம் இருக்கிறதேயொழிய சாதாரண அப்பம் என்னிடம் இல்லை; வாலிபர்ஸ்திரீகளோடேமாத்திரம் சேராதிருந்தால் 5 கொடுப்பேன் என்றான். அதுகேட்டதாவீது ஆசாரியனிடம்: இந்த மூன்றுநாளாய் ஸ்திரீகள் எங்களுக்கு விலக்கமாயிருந்தார்கள்; நான் புறப்பட்டபோது, காங்கள் செல்லும் காரியம் சாதாரணமானதேயெனினும், வாலிபரின் சரீரங்கள் தீட்டுப்படாமலிருந்தன; இன்றைபதினம் அவர்கள் சரீரங்கள் அதி 6 சுத்தமாயிருக்குமே என்றான். அப்பொழுது ஆசாரியன் அவனுக்குப் பரிசுத்த அப்பத்தைக் கொடுத்தான்; திருச்சமுகத்தப் பங்களைத் தவிர வேறே அப்பம் அங்கே இல்லை. யெகோவாவின் சமுகத்திலிருந்து அவைகள் எடுக்கப்படுகிற நாளிலே அதற்குப் பதிலாகச் சூடான அப்பம் வைக்கப் 7 படும். சவுலுடைய ஊழியக்காரரில் ஏதோமியனாகிய தோவேக்கு என்னும் பேருள்ள ஒருவன் அன்றைபதினம் அங்கே யெகோவாவின் சந்நிதியில் தடைபட்டிருந்தான்; அவன் சவுலின் மேய்ப்பருக்குத் தலைவன். தாவீது அகிமேலேக்கைப் பார் 8 த்து: இங்கே உமது வசம் ஒரு ஈட்டியாகிலும் பட்டயமாகிலும் இல்லையா? ராஜாவின் காரியம் அவசரமானபடியினால் என் பட்டயத்தையாகிலும் வேறே ஆயுதங்களையாகிலும் நான் எடுத்துவரவில்லை என்றான். அதற்கு ஆசாரியன்: நீர் கர்வாலிப் பள்ளத் 9 தாக்கிலே கொன்ற பெலிஸ்தியனாகிய கோலியாத்தின் பட்டயம், இதோ, ஏபோத்துக்குப் பின்புறத்தில் ஒரு துணியிலே சுருட்டிவைத்திருக்கிறது; அதை நீர் எடுத்துக்கொள்ள மனதானால் எடுத்துக்கொண்டுபோம்; அது வேயன்றி வேறொன்றும் இங்கே இல்லை என்றான். அப்பொழுது தாவீது: அதற்கு நிகரில்லை, அதை எனக்குத் தாரும் என்றான்.

அன்றைபதினம் தாவீது எழுந்து சவு 10 லுக்குத் தப்பியோடிக் காத்தின் ராஜாவாகிய ஆகீனினிடம் போனான்; ஆகீனின் ஊழியக் 11 காரர்: அந்த தேசத்து ராஜாவாகிய தாவீது இவனல்லவோ?

சவுல் ஆயிரக்கணக்காய்க் கொன்றான்,
தாவீதோ லக்ஷக்கணக்காய்க் கொன்றான்

என்று அவர்கள் ஆடல்பாடலோடே கொண்டாடினவன் இவனேயல்லவோ என்று ஆகீனினிடம் சொன்னார்கள். இந்த 12 வார்த்தைகளைத் தாவீது மனதிலே வைத்துக்கொண்டு, காத்தின் ராஜாவாகிய ஆகீசுக்கு மிகவும் பயப்பட்டு | அவர்களுக்கு எதிரே 13 புத்திமாறாட்டமுள்ளவனைப்போல் நடந்து பித்தங்கொண்டவனாக அவர்கள் கதவில் கடித்து வாசற்கதவுகளிலே தீறிக்கொண்டிருந்து, தன் வாயிலிருந்து தாடியிலே கோழை வடியத்துக்கொண்டிருந்தான். அது 14 கண்ட ஆகீஸ் தன் ஊழியக்காரரிடம்: இதோ, இந்த மனுஷன் பைத்தியம்பிடித்தவன் என்று உங்களுக்குத் தெரிகிறதே; இவனை நீங்கள் என்னிடம் கொண்டுவந்தது என்ன? எனக்கு முன்பாகப் பைத்திய 15 சேஷ்டைசெய்ய நீங்கள் இவனைக் கொண்டுவந்தீர்களே. பைத்தியகாரர் எனக்குக் குறைவாயிருக்கிறார்களோ? இவன் என் வீட்டிற்குள் வரவேண்டுமா என்று கேட்டான்.

தாவீது அவ்விடத்தை விட்டுத் தப்பி, **22** அதுல்லாம் என்னும் கெபிக்குப் போனான்; அதை அவன் சகோதரரும் அவன் தகப்

பன் வீட்டார் அனைவரும் கேள்விப்பட்டு
2 அங்கே அவனிடம் போனார்கள். நெருக்கப்பட்டவர்கள், கடனினால் கஷ்டப்பட்டவர்கள், மனக்கசப்புள்ளவர்கள் யாவரும் அவனிடம் வந்து கூடிக்கொண்டார்கள். அவன் அவர்களுக்குத் தலைவனானான்; இவ்விதமாக ஏறக்குறைய நானூறு பேர் அவனோடிருந்தார்கள்.
3 தாவீது அவ்விடத்தைவிட்டு மோவாபிலுள்ள மிஸ்பேக்குப்போய் மோவாபின் ராஜாவைப்பார்த்து: கடவுள் என்னை எப்படி நடத்துவார் என்று நான் அறியுமட்டும் என் தகப்பனும் என் தாயும் உம்மிடம் தங்கியிருக்கும்படி தயவுசெய்யும்
4 என்று சொல்லி | அவர்களை மோவாபின் ராஜாவினிடம் அழைத்துக்கொண்டுபோய்விட்டான்; தாவீது துருக்கத்திலுள் இருந்த நாளெல்லாம் அவர்கள் அங்கே அவனோடிருந்தார்கள். பின்பு காத் என்னும் தீர்க்கதரிசி தாவீதினிடம் வந்து: நீர் துருக்கத்திலுள் இராமல் யூதா தேசத்திற்கு வாரும் என்றான். அப்பொழுது தாவீது கேரேத் என்னும் காடுபோய்ச் சேர்ந்தான்.
6 தாவீதும் அவனோடிருந்த ஆட்களும் வெளிப்பட்டுவிட்டார்கள் என்ற செய்தி சவுலுக்குத் தெரியவந்தது. சவுல் கிபியாவிலுள்ள மேட்டிலிருந்த விருக்ஷத்தின்கீழ் உட்கார்ந்திருந்தான்; அவன் கையில் ஈட்டி பிடித்திருந்தான். அவன் ஊழியக்காரர் அனைவரும் அவனைச் சூழ்ந்து நிற்கையில் |
7 அவன் தன்னண்டையில் நின்ற தன் ஊழியக்காரரைப் பார்த்து: பென்யமீன் புத்திரரே, கேளுங்கள்; ஈசாயின் மகன் உங்களெல்லாருக்கும் வயல்களையும் திராட்சத்தோட்டங்களையும் கொடுப்பானோ? உங்களெல்லாரையும் ஆயிரவருக்கு அதிபதிகளும் நூற்றுவருக்கு அதிபதிகளுமாக
8 வானோ? நீங்கள் எல்லாரும் எனக்கு விரோதமாய்க் கட்டுப்பாடு செய்துகொண்டீர்களே. ஈசாயின் மகனோடு என் குமாரன் உடன்படிக்கைசெய்தபோது உங்களில் ஒருவனும் எனக்காகப் பரிதாபப்படவில்லை. ஒருவனும் அதை எனக்குத் தெரிவிக்கவில்லையே. இங்காளிலே இருக்கிறபடி எனக்குச் சதிபண்ண என் குமாரன் என் வேலைக்காரனை எனக்கு விரோதமாகக் கிளப்பிவிட்டதை உங்களில் ஒருவனும் எனக்குத் தெரிவிக்கவில்லையே என்றான்.
9 சவுலின் ஊழியரோடே நின்ற ஏதோமியனாகிய தோவேக்கு அதைக் கேட்டு: ஈசாயின் மகனை நோபிலிருக்கிற அகிதூபின் குமாரனாகிய அகிமேலேக்கினிடம் வரக்

கண்டேன். இவன் அவனுக்காக யெகோவாவினிடம் விசாரித்து அவனுக்கு வழியுணவைக் கொடுத்தான்; பெலிஸ்தியனாகிய கோலியாத்தின் பட்டயத்தையும் அவனுக்குக் கொடுத்தான் என்றான். அப்பொழுது
11 ராஜா: அகிதூபின் குமாரனாகிய அகிமேலேக் என்னும் ஆசாரியனையும் நோபிலிருந்த அவன் தகப்பன் வீட்டாராகிய ஆசாரியர் யாவரையும் அழைப்பித்தான். அவர்களெல்லாரும் ராஜாவினிடம் வந்தார்கள்.
12 சவுல் அவர்களைக் கண்டு: அகிதூபின் குமாரனே, நான் சொல்வதைக் கேள் என்று சொல்ல, அவன், இதோ இருக்கிறேன், என் ஆண்டவனே என்றான்.
13 அப்பொழுது சவுல் அவனிடம்: நீயும் ஈசாயின் மகனும் எனக்கு விரோதமாய்க் கட்டுப்பாடு செய்ததென்ன? நீ அவனுக்கு ஆகாரமும் பட்டயமும் கொடுத்து தெய்வ சந்நிதியில் அவனுக்காக விசாரித்தாயே; இங்காளில் இருக்கிறபடி அவன் சதிபண்ணி எனக்கு விரோதமாய் எழும்பும்படி
14 செய்தாய் என்றான். அகிமேலேக் ராஜாவைப்பார்த்து: உமது ஊழியக்காரர் அனைவரிலும் தாவீதைப் போன்றவன் யார்? அவன் உண்மையுள்ளவன், ராஜாவுக்கு மருமகன், உமக்கே உரிய காவல்வீரரின் தலைவன், உமது வீட்டிலும் மதிப்புள்ளவன்; இன்றையதினம் அவனுக்காக நான்
15 தெய்வ சந்நிதியில் விசாரித்தது முதல்தடவையா? அப்படியல்லவே. ராஜா தமது அடியானாகிய என்மேலாகிலும் என் தகப்பன் வீட்டாரில் எவன்மேலாகிலும் குற்றம் சுமத்தவேண்டாம்; இவைகளிலெல்லாம் ஒரு சிறிய காரியமாகிலும் ஒரு பெரிய காரியமாகிலும் அடியேனுக்குத் தெரியாது என்றான். ராஜாவோ: அகிமேலேக்கே,
16 நீயும் உன் தகப்பன் வீட்டார் அனைவரும் சாகவே வேண்டும் என்றான். பின்பு ராஜா
17 தன்னண்டையிலே நின்ற சேவகரைப் பார்த்து: நீங்கள் முன்வந்து யெகோவாவின் ஆசாரியர்களைக் கொல்லுங்கள், அவர்களும் தாவீதின் பக்கத்தைச் சேர்ந்தவர்கள்; அவன் ஓடிப்போகிறதை அவர்கள் அறிந்திருந்தும் அதை எனக்குத் தெரிவிக்கவில்லை என்றான்; ராஜாவின் வேலைக்காரரோ யெகோவாவின் ஆசாரியர்களைக் கொல்லத் தங்கள் கைகளை நீட்ட மனமில்லாதிருந்தார்கள். அப்பொழுது ராஜா தோவேக்கைப் பார்த்து: நீ முன்வந்து ஆசாரியர்களை அடித்து வீழ்த்து என்றான். ஏதோமியனாகிய தோவேக்கு ஆசாரியர்கள்மேல் விழுந்து சணல்நூல் ஏபோத்தைத் தரித்

திருந்த எண்பத்தைந்து பேரை அன்றைய
19 தினம் கொன்றார். ஆசாரியர்களின்
ஊராகிய நோபிலுமிருந்த புருஷரையும்
ஸ்திரீகளையும் பிள்ளைகளையும் குழந்தைகள
யும் மாடுகளையும் கழுதைகளையும் ஆடுகள
20 யும் வாள்வாய்க்கு இரையாக்கினான். அகி
தூபின் குமாரனாகிய அகிமேலேக்கின் புத்
திரரில் அபியத்தார் என்னும் பேருள்ள
ஒருவன் தப்பித் தாவீது இருந்த இடத்திற்கு
21 ஓடிப்போய்ச் | சவுல் யெகோவாவின்
ஆசாரியர்களைக் கொன்றுபோட்டதைத்
22 தாவீதுக்கு அறிவித்தான். அப்பொழுது
தாவீது அபியத்தாரைப் பார்த்து: ஏதோமி
யனாகிய தோவேக்கு அங்கே இருந்தபடி
யினாலே அவன் எவ்விதத்திலும் சவுலுக்கு
அதை அறிவிப்பான் என்பது அன்றைய
தினமே எனக்குத் தெரியும்; உன் தகப்பன்
வீட்டாராகிய எல்லாருடைய மரணத்துக்
23 கும் காரணம் நானே. நீ என்னிடத்திலே
இரு, பயப்படவேண்டாம்; என் பிராணனை
வாங்கத் தேடுகிறவனே உன் பிராணனையும்
வாங்கத் தேடுகிறான்; நீ என்னோடே இரு
கால் உனக்கு மோசமில்லை என்றான்.

**23** இதோ, பெலிஸ்தியர் கெகிலாவின்மேல்
யுத்தம்பண்ணிக் களஞ்சியங்களைக் கொள்
ளையிடுகிறார்கள் என்று தாவீதுக்குத் தெரிய
2 வந்தது. அப்பொழுது தாவீது யெகோ
வாவினிடம் விசாரித்து: நான் அந்தப்
பெலிஸ்தியரை முறியடிக்கப் போகவேண்
டுமா என்று கேட்க யெகோவா: நீ போ,
பெலிஸ்தியரை முறியடித்துக் கெகிலாவை
இரட்சிப்பாய் என்று தாவீதுக்குச் சொன்
3 னார். தாவீதின் ஆட்களோ அவனைப்
பார்த்து: இதோ, நாங்கள் இங்கே யூதாவில்
இருக்கையிலேயே எங்களுக்குப் பயமா
யிருக்கிறது; நாங்கள் பெலிஸ்தியரின்
சேனைகளை எதிர்ப்பதற்குக் கெகிலாவுக்குப்
போனால் எங்களுக்கு எவ்வளவு அதிக பய
4 மாயிருக்கும் என்றார்கள். அதைக் கேட்
கவே தாவீது திரும்பவும் யெகோவாவினி
டம் விசாரித்ததற்கு அவர்: நீ புறப்பட்
டுக் கெகிலாவுக்குப் போ; நான் பெலிஸ்தி
யரை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன்
5 என்றார். அப்படியே தாவீது தன் ஆட்
களைக் கூட்டிக்கொண்டு கெகிலாவுக்குப்
போய் பெலிஸ்தியரோடே யுத்தம் செய்து
அவர்களுக்குள் பெரிய சங்காரம்பண்ணி
அவர்கள் ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு
போனான். இவ்விதமாகக் கெகிலாவின்
ஜனங்களை இரட்சித்தான்.

6 அகிமேலேக்கின் குமாரனாகிய அபியத்
தார் கெகிலாவுக்குத் தாவீதினிடம் தப்பி
யோடினபோது அவனிடமே ஏபோத்து
இருந்தது. தாவீது கெகிலாவுக்கு வந்தான் 7
என்று சவுலுக்குத் தெரியவந்தபோது, கட
வுள் அவனை என் கையில் ஒப்புக்கொடுத்
தார், அவன் வாசற்கதவுகளும் தாழ்ப்பாள்
களுமுள்ள ஊருக்குள்ளே போனதினாலே
அடைபட்டிருக்கிறான் என்று சவுல் சொல்
லிக்கொண்டு | தாவீதையும் அவன் ஆட் 8
களையும் முற்றுகைபோடும்படி கெகிலாவுக்
குப் போகப் படைவீரர் யாவரையும் யுத்தத்
திற்கு அழைப்பித்தான். தனக்குப் பொல் 9
லாப்புச் செய்யச் சவுல் எத்தனமிடுகின்
றான் என்று தாவீதுக்குத் தெரியவரவே,
அவன் ஆசாரியனாகிய அபியத்தாரைக் கூப்
பிட்டு, ஏபோத்தை இங்கே கொண்டுவா
என்றான். அவன் கொண்டுவந்தபோது 10
தாவீது: இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோ
வாவே, சவுல் கெகிலாவுக்கு வந்து, என்னி
மித்தம் ஊரையழிக்க யோசனையாயிருக்கி
றான் என்று அடியேன் நிட்டமாய்க் கேள்வி
ப்பட்டேன். கெகிலா ஊர்த்தலைவர் என்னை 11
அவன் கையில் ஒப்புக்கொடுப்பார்களோ,
உமது அடியேன் கேள்விப்பட்டபடியே
சவுல் வருவானோ, இஸ்ரவேலின் கடவுளா
கிய யெகோவாவே, இதை உமது அடிய
னுக்குத் தெரிவிக்கவேண்டும் என்று கேட்
டான். யெகோவா: அவன் வருவான் என்
றார். கெகிலா ஊர்த்தலைவர், என்னையும் 12
என் ஆட்களையும் சவுலின் கையில் ஒப்புக்
கொடுப்பார்களோ என்று தாவீது மறுபடி
யும் கேட்டதற்கு யெகோவா, ஒப்புக்
கொடுப்பார்கள் என்றார். ஆகவே தாவீ
தும் ஏறக்குறைய அறுநூறு பேராகிய அவ
னுடைய ஆட்களும் எழுந்து கெகிலாவை
விட்டு வெளியேறிப்போகுமிடமின்றி அலைந்
துதிரிந்தார்கள். தாவீது கெகிலாவிலிருந்து 13
தப்பிப்போனான் என்று சவுலுக்குத் தெரிய
வந்தபோது அவன் புறப்படாமல் இருந்து
விட்டான்.

தாவீது வனாந்தரத்திலுள்ள அரணான 14
களிலே தங்கிச் சீப் வனாந்தரத்திலுள்ள மலை
யிலே தரித்திருந்தான். சவுல் அநுதினமும்
அவனைத் தேடியும், கடவுள் அவனை அவன்
கையில் ஒப்புக்கொடுக்கவில்லை. தன் பிரா 15
ணனை வாங்கத் தேடும்படி சவுல் புறப்பட்டு
விட்டான் என்று தாவீது அறிந்துகொண்
டான். தாவீது சீப் வனாந்தரத்திலுள்ள
கோரேஷிலே இருக்கையில் | சவுலின் குமா 16
ரனாகிய யோனத்தான் எழுந்து கோரேஷுக்
குத் தாவீதினிடம் போய்க் கடவுளுக்குள் அ
வனைத் தைரியமடையச்செய்து: நீ பயப்பட
வேண்டாம்; என் தகப்பனாகிய சவுலின் 17

கையில் நீர் அகப்பட்டுக் கொள்ளமாட்டீர்; நீர் இஸ்ரவேலின்மேல் அரசாளுவீர்; அப்பொழுது நான் உமக்கு அடுத்த ஸ்தானத்தில் இருப்பேன்; இவையெல்லாம் என்தகப்பனாகிய சவுலுக்கும் தெரியும் என்றான். அவர்கள் இருவரும் யெகோவாவின் முன்னிலையில் உடன்படிக்கை செய்துகொண்டபின்பு தாவீது கோரேஷில் இருந்துவிட்டான்; யோனத்தானோ தன் வீட்டிற்குத் திரும்பினான்.

19 பின்பு சீப் ஊரார் கிபியாவிலிருந்த சவுலினிடம் போய்: தாவீது எங்கள் நடுவில் எஷிமோனுக்குத் தெற்கே கலோமேட்டிலே கோரேஷின் தருக்கங்களில் ஒளித்துக்கொண்டிருக்கிறானே. ராஜாவே, இப்போது நீர் விரும்புகிறபடியே இறங்கிவாரும்; நாங்களே அவனை ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்போம் என்றார்கள். அதற்குச் சவுல்: நீங்கள் எனக்குத் தயை பாராட்டினீர்கள்; யெகோவாவின் ஆசீர்வாதம் உங்களுக்கு உரியதாக. நீங்கள் போய், அவன் நடமாடித்திரிகிற இடம் இன்னது என்பதையும் அங்கே அவனைக் கண்டவன் யார் என்பதையும் இன்னும் நன்றாய் விசாரித்து அறியுங்கள்; அவன் மகா தந்திரக்காரன் என்று எனக்குத் தெரியவந்தது; அவன் ஒளித்துக்கொண்டிருக்கும் சகல ஒளிப்பிடங்களையும் பார்த்துக்கொண்டு நிச்சயமாய் உங்களுக்குத் தெரிந்தபின் திரும்பவும் என்னிடம் வாருங்கள்; அப்பொழுது நான் உங்களோடே வந்து, அவன் தேசத்தில் இருந்தால், யூதாவின் சகல ஆயிரங்களுக்குள்ளும் அவனைக் கண்டுபிடிப்பேன் என்றான். அவர்கள் எழுந்து சவுலுக்கு முன்னுலே சீப் ஊருக்குப் போனார்கள்; தாவீதும் அவன் ஆட்களும் எஷிமோனுக்குத் தெற்கே அராபாவிலுள்ள மாகோன் வனாந்தரத்தில் இருந்தார்கள். சவுலும் அவன் படைவீரரும் தன்னைத் தேடவருகிறார்கள் என்று தாவீதுக்குத் தெரியவந்தபோது அவன் மாகோன் வனாந்தரத்திலுள்ள கன்மலைக்குப் போய்அங்கேதங்கினான்; சவுல் அதைக்கேள்விப்பட்டு மாகோன் வனாந்தரத்திலே தாவீதைப் பின்தொடர்ந்தான். சவுல் மலையின்ஒரு பக்கத்திலும் தாவீதும் அவன் ஆட்களும் மலையின் மறுபக்கத்திலும் போய்க்கொண்டிருந்தார்கள். சவுலும் அவன் வீரரும் தாவீதையும் அவன் ஆட்களையும் பிடிப்பதற்கு வளைந்துகொள்ளப்போகையில் தாவீது சவுலுக்குத் தப்பிப்போக விரைந்து சென்றான். அச்சமயத்தில் ஒரு ஆள் சவுலினிடம் வந்து: நீர் சீக்கிரமாய்வாரும்; பெலிஸ்தியர் படையெடுத்துத் தேசத்திற்குள்ளே வந்துவிட்டார்கள் என்றான். ஆகவே சவுல் தாவீதைப் பின்தொடராமல் திரும்பிப் பெலிஸ்தியரை எதிர்க்கப் போனான். அதினிமித்தம் அவ்விடத்திற்குச் சேலா அம்மகலீகோத் என்று பேரிட்டார்கள். தாவீது அவ்விடத்தைவிட்டகன்று ஏன்கேதியின் தருக்கங்களில் தங்கினான்.

24 சவுல் பெலிஸ்தியரைத் துரத்திவிட்டுத் திரும்பிவந்தபோது, இதோ, தாவீது ஏன்கேதி வனாந்தரத்தில் இருக்கிறான் என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டது. அப்பொழுது சவுல் இஸ்ரவேல் அனைத்திலும் பொறுக்கி எடுத்த மூவாயிரம்பேரைக் கூட்டிக்கொண்டு தாவீதையும் அவன் ஆட்களையும் வரையாட்டுக் கன்மலைகளின் மேல் தேடப்போனான். வழியோரத்திலிருந்த ஆட்டுத் தொழுவங்களுக்கு அவன் வந்தபோது அங்கே ஒரு குகை இருந்தது. சவுல் அதினுட் புகுந்து காலைக்கடன் கழித்துக்கொண்டிருந்தான். தாவீதும் அவன் ஆட்களும் அந்தக் குகையின் உள் அந்தத்தில் உட்கார்ந்திருந்தார்கள். அப்பொழுது தாவீதின் ஆட்கள் அவனைப்பார்த்து: இதோ, நான் உன் சத்துருவை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன், உன் பார்வைக்கு நலமானபடி அவனுக்குச் செய்வாய் என்று யெகோவா உம்மோடே பேசிச்சொன்ன நாள் இதுதானே என்றார்கள். தாவீது எழுந்து போய்ச் சவுலுடைய அங்கியின் ஓரத்திற் சிறிதை அறுத்துக்கொண்டான். தாவீது சவுலினுடைய அங்கியின் ஓரத்தை அறுத்துக்கொண்டதினிமித்தம் அவன் மனது வாதித்துக்கொண்டிருந்தது. அவன் தன் ஆட்களைப்பார்த்து: யெகோவா அபிஷேகம் பண்ணின என் ஆண்டவன்மேல் என் கையைப்போட்டு இப்படிப்பட்ட காரியத்தை நான் செய்யாதபடி யெகோவா என்னைக் காப்பாராக; அவர் யெகோவாவினால் அபிஷேகம்பண்ணப்பட்டவர் என்று சொல்லி | இவ்வார்த்தைகளினால் தன் ஆட்களைத் தடுத்துவிட்டான், சவுலின்மேல்விழ அவர்களை விடவில்லை, சவுல் எழுந்திருந்து குகையை விட்டுத் தன் வழியே நடந்துபோனான்.

அப்பொழுது தாவீதும் எழுந்து குகையிலிருந்து வெளியேறி: ராஜாவே, என் ஆண்டவனே என்று சவுலைநோக்கிக் கூப்பிட்டான்; சவுல் திரும்பிப்பார்க்கவே, தாவீது தரைமட்டும் முகங்குனிந்து வணங்கிச் சவுலைப்பார்த்து: தாவீது உமக்குத் தீங்கு செய்யப்பார்க்கிறான் என்ற சொல்லுகிற மனிதரின் வார்த்தைகளை என் கேட்கிறீர்? இதோ, யெகோவா இன்று உம்மைக் குகை

யிலே என் கையில் ஒப்புக்கொடுத்ததை இன்றையதினம் உமது கண்கண்டதே, உம்மைக் கொன்றுபோடவேண்டும் என்று சிலர் சொன்னார்கள். நானே உம்மீது பரிதாபங்கொண்டேன்; என் ஆண்டவன்மேல் என் கையைப்போடேன்; அவர் யெகோவாவினால் அபிஷேகம்பண்ணப்பட்டவர் என்
11 றேன். என் தகப்பனே, பாரும்; என் கையிலிருக்கிற உமது அங்கியின் ஓரத்தைப் பாரும்; உம்மைக் கொன்றுபோடாமல் உமது அங்கியின் ஓரத்தில் சிறிதை அறுத்துக் கொண்டேன்; என் கையிலே பொல்லாப்பும் துரோகமும் இல்லை என்றும் உமக்கு நான் குற்றம் செய்யவில்லை என்றும் அறிந்துகொள்ளும்; நீரோ என் பிராணனை வாங்கும்படி வேட்டையாடுகிறீர். யெகோ
12 வா எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயம் விசாரிப்பார்; யெகோவாவே எனக்காக உம்மிடம் பழிவாங்குவார்; நானே உமது
13 மேல் கைபோடுவதில்லை. தியோரிடம் தீமை பிறக்கும் என்பது முதுமொழி; ஆகவே உமதுபேரில் நான் கைபோடுவ
14 தில்லை. இஸ்ரவேலின் ராஜா யாரைத்தேடப் புறப்பட்டார்? நீர் யாரைப்பிடிக்க வந்தீர்? ஒரு செத்த நாயையா, தெள்ளுப்பூச்சியை
15 யா? யெகோவா நியாயாதிபதியாயிருந்து எனக்கும் உமக்கும் நடுத்தீர்ப்பார்; அவரே எனக்காக வழக்காடி என்னை உமது கைக்குத் தப்புவிப்பார்; அவரே பார்த்துக்கொள்
16 வார் என்று சொன்னான். தாவீது இந்த வார்த்தைகளைச் சவுலோடு சொல்லி முடித்த மாத்திரமே சவுல் சத்தமிட்டு அழுது: என் குமாரனாகிய தாவீதே, இது உன் சத்தமல்ல
17 வா என்று சொல்லிப் | பின்னும் தாவீதைப் பார்த்து: நீ என்னிலும் நேர்மையாளன்; நீ எனக்கு நன்மைசெய்தாய்; நானே உனக்
18 குத் தீமை செய்தேன். நீ எனக்கு நன்மை செய்ததை இன்று விளங்கப்பண்ணினாய்; யெகோவா என்னை உன் கையில் ஒப்புக் கொடுத்திருந்தும் நீ என்னைக் கொன்று
19 போடவில்லை. ஒருவன் தன் பகைஞனைக் கண்டுபிடித்தால் அவனைச் சுகமேபோகவிடுவானோ? இன்று நீ எனக்குச் செய்ததற்கு ஈடாக யெகோவா உனக்கு நன்மைசெய்
20 வார். நிச்சயமாகவே நீ ராஜாவாயிருப்பாய்; இஸ்ரவேலின் ராஜ்யபாரம் உன் கையில் நிலைவரப்படும்; இது எனக்குத் தெரி
21 யும். இப்போதும் நீ எனக்கு யெகோவாவின்மேல் ஆணையிட்டுக்கொடு; எனக்குப்பின் என் சந்ததியை நிர்மூலமாக்காதே, என் தகப்பன் வம்சத்தில் என் பேரை அற்றுப்
22 போகப்பண்ணாதே என்றான். அப்படியே தாவீது சவுலுக்கு ஆணையிட்டுக்கொடுத்தான். பின்பு சவுல் தன் வீட்டுக்குப் போய்விட்டான்; தாவீதும் அவன் ஆட்களுமோ துருக்கத்துக்குப் போனார்கள்.

25 சாமுவேல் மரணமடைந்தான். இஸ்ரவேலர் எல்லாரும் கூடிவந்து அவனுக்காகத் துக்கங்கொண்டாடி ராமாவிலுள்ள அவனுடைய வளவிலே அவனை அடக்கம்பண்ணினார்கள்; தாவீது எழுந்து பாரான் வனாந்தரத்திற்குப் போனான்.

2 மாகோனிலே ஒரு மனுஷன் இருந்தான்; அவனுடைய காணியாட்சி கர்மேலிலே இருந்தது; அந்த மனுஷன் மகா பாரிக்குடித்தனக்காரன்; அவனுக்கு மூவாயிரம் ஆடும் ஆயிரம் வெள்ளாடும் இருந்தது. அவன் கர்மேலில் தன் ஆடுகளை மயிர் கத்தரித்துக்கொண்டிருந்தான்.—அந்த மனு
3 ஷன் பேர் நாபால், அவன் மனைவியின்பேர் அபிகாயில். அந்த ஸ்திரீ மகா புத்திசாலி, ரூபவதி; அவள் புருஷனோ முரடன், துராகிருதன்; அவன் காலேபின் வம்
4 சத்தில் பிறந்தவன். நாபால் தன் ஆடுகளை மயிர் கத்தரிக்கிற செய்தியை வனாந்தரத்தில் இருந்த தாவீது கேட்டபோது |
5 தாவீது பத்துப்பேரை அழைத்து: நீங்கள் கர்மேலுக்குப் போங்கள்; நாபாலிடத்தில் என்பேரினால் அவனுக்கு வாழ்த்துதல் சொல்லி | அவனிடம்: சகோதரனே, உமக்
6 குச் சமாதானம், உமது வீட்டாருக்கும் உமக்குரிய யாவற்றிற்கும் சமாதானம் என்று கூறிப் பின்பு, இப்பொழுது ஆடுகளை மயிர் கத்தரித்துக்கொண்டிருக்கிறீர் என்று கேள்விப்பட்டேன். நாங்கள் கர்
7 மேலில் இருந்த நாளெல்லாம் உமது மேய்ப்பர் எங்களோடேகூட இருந்தார்கள்; நாங்கள் அவர்களுக்குத் தீங்கு செய்ததில்லை; அவர்களுடைய பொருளில் ஏதேனும் காணுமற் போனதுமில்லை, உமது
8 வேலைக்காரரைக் கேட்டுப்பாரும்; அவர்களே உமக்குச் சொல்லுவார்கள். ஆகவே இந்த ஆட்களுக்கு நீர் தயை பாராட்டவேண்டும்; நல்லநாளில் வந்தோம்; உமது கையில் இருப்பதை உமது ஊழியக்காரருக்கும் உமது குமாரனாகிய தாவீதுக்கும் கொடுத்தருளும் என்று சொல்லுங்கள் என்றான்.

9 தாவீதின் ஆட்கள் போய்த் தாவீதின் பேரைச்சொல்லி இந்த வார்த்தைகளையெல்லாம் நாபாலிடம் அறிவித்துவிட்டுப் பின்
10 ஒன்றும் பேசாது காத்திருந்தார்கள். அதைக் கேட்ட நாபால் தாவீதின் ஆட்களிடம்: தாவீது என்பவன் யார்? ஈசாயின்மகன்

யார்? தங்கள் எஜமான்களைவிட்டு ஓடிப்போ
கிற வேலைக்காரர் இக்காலில் அநேகர்
11 உண்டு. நான் என் ஆகாரத்தையும் என்
தண்ணீரையும், என் ஆடுகளை மயிர் கத்தரிக்
கிறவர்களுக்காக நான் அடித்துச் சமையல்
பண்ணியிருக்கிறதையும் எடுத்து, இன்ன
இடத்தார் என்று அறியாத மனுஷருக்குக்
12 கொடுப்பேனோ என்றான். தாவீதின் ஆட்
கள் திரும்பி வழியே திரும்பித் தாவீதினிடம்
வந்து இந்த வார்த்தைகளையெல்லாம் அவ
13 னுக்கு அறிவித்தார்கள். அப்பொழுது
தாவீது தன் ஆட்களைப் பார்த்து: உங்களில்
ஒவ்வொருவனும் தன்தன் பட்டயத்தைக்
கட்டிக்கொள்ளுங்கள் என்றான். அப்படி
யே அவனவன் தன்தன் பட்டயத்தைக் கட்
டிக்கொண்டான்; தாவீதும் தன் பட்டயத்
தைக் கட்டிக்கொண்டான்; ஏறக்குறைய
நானூறுபேர் தாவீதோடே புறப்பட்டார்
கள். இருநூறுபேர் பண்டம்பாடிகள் அண்
டையிலே இருந்துவிட்டார்கள்.
14 அப்பொழுது நாபாலின் ஆட்களில் ஒரு
வன் நாபாலின் மனைவியாகிய அபிகாயிலி
னிடம் வந்து: இதோ, நமது எஜமானை
வாழ்த்தத் தாவீது வனாந்தரத்திலிருந்து ஆட்
களை அனுப்பினான். அந்த ஆட்கள்பேரில்
15 அவர் பாய்ந்து சீறினார். அந்த மனிதரோ
எங்களுக்கு மிகவும் உபகாரிகளாயிருந்தார்
கள். நாங்கள் வெளிகளில் இருந்தபோது,
நாங்கள் அவர்கள் கூடவில் தங்கியிருந்த
காலெல்லாம், அவர்கள் எங்களுக்குத்
தீங்கு செய்ததுமில்லை, நமது பொருளில்
16 ஏதேனும் காணமற்போனதுமில்லை. நாங்
கள் அவர்கள் கூடவில் ஆடுகளை மேய்த்துக்
கொண்டிருந்த காலெல்லாம் அவர்கள்
இரவும் பகலும் எங்களைச் சுற்றிலும் மதில்
17 போலிருந்தார்கள். இப்போதும் நீர் செய்ய
வேண்டியது இன்னதென்று யோசித்துக்
கொள்ளும்; நமது எஜமானுக்கும் அவரு
டைய வீட்டார் அனைவருக்கும் நிச்சயமா
கவே தீமை நேரிடப்போகிறதாயிருக்கிறது.
இவரோ பேலியாலின்மகன், இவரோடு ஒரு
18 வரும் பேசமுடியாது என்றான். அப்பொ
முது அபிகாயில் சீக்கிரமாக இருநூறு அப்
பங்களையும் இரண்டு தருத்தி திராட்சரசத்
தையும் சமையல்பண்ணியிருந்த ஐந்து ஆடு
களையும் ஐந்துபடி வறுத்த பயற்றையும்
காய்ந்த நூறு திராட்சை அடைகளையும்
இருநூறு அத்திபழ அடைகளையும் எடுத்
19 துக் கழுதைகள்மேல் ஏற்றித் | தன் வேலைக்
காரரைப் பார்த்து: நீங்கள் எனக்கு முன்னே
போங்கள்; இதோ, நான் உங்கள் பின்னே
வருகிறேன் என்று சொல்லியனுப்பினாள்.
தன் புருஷனாகிய நாபாலுக்கு அதை அறி
விக்கவில்லை; அவள் ஒரு கழுதையின் 20
மேல் ஏறி மலையிலே மறைக்திருந்த பாதை
வழி இறங்கிவருகையில், இதோ, தாவீதும்
அவன் ஆட்களும் அவளுக்கு எதிரே
இறங்கி வந்தார்கள்; அவர்களைச் சந்தித்
தாள். தாவீது தன் ஆட்களிடம்: இவ 21
னுக்கு வனாந்தரத்திலே இருந்ததையெல்
லாம் வீணாகவே காப்பாற்றினேன்; அவ
னுக்குரியவற்றிலெல்லாம் ஏதேனும் காண
மற் போனதில்லை; அவனோ நன்மைக்குப்
பதிலாக எனக்குத் தீமைசெய்தான். அவ 22
னுக்குரிய யாவற்றிலும் ஒரு ஆண்பிள்ளை
யாகிலும் பொழுதுவிடியுமட்டும் நான்
உயிரோடே வையேன்; வைத்தால், கடவுள்
தமது சித்தப்படியெல்லாம் தாவீதுக்குச்
செய்வாராக என்று சொல்லியிருந்தான்.
அபிகாயில் தாவீதைக் கண்டபோது சீக் 23
கிரமாய்க் கழுதையைவிட்டிறங்கித் தாவீ
துக்கு எதிரே தரையில் முகங்குப்புற
விழுந்து பணிந்த | அவன் பாதத்திலே 24
விழுந்து: என் ஆண்டவனே, இந்தக் குற்
றம் என்மேல் சுமரட்டும்; உமது அடியாளை
உமது செவிகேட்கப் பேசவிடும்; உமது
அடியாள் சொல்வதைக் கேட்டரு
ளும். என் ஆண்டவனுடைய நீர் நாபால் 25
என்னும் இந்தப் பேலியாலின் மனுஷனைக்
கவனிக்கவேண்டாம்; அவன் பெயர் எப்
படியோ அப்படியே அவன் குணமும்.
அவன் பெயர் நாபால்; மதிகேடே அவன்
லக்ஷணம்; உமது அடியாளாகிய நானே
என் ஆண்டவன் அனுப்பின ஆட்களைப்
பார்க்கவில்லை. இப்போதும் என் ஆண்ட 26
வனே, இரத்தத்தைச் சிந்தும் குற்றத்திற்கு
நீர் ஆளாகாதபடிக்கும் உமது கையினா
லேயே நீர் பழிவாங்காதபடிக்கும் யெகோ
வா உம்மைத் தடுத்துவிட்டார்; உமது சத்
துருக்களும் என் ஆண்டவனுக்குத் தீமை
செய்ய நாடுகிறவர்களும் நாபாலைப்போல
ஆவார்கள்; யெகோவா ஜீவனுள்ளவர் என்
பதும் நீர் ஜீவனோடிருக்கிறீர் என்பதும் எவ்
வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமே
இது. இப்போதும் உமது அடியாள் என் 27
ஆண்டவனுக்குக் கொண்டுவந்திருக்கிற
காணிக்கையை ஏற்றுக்கொள்ளும்; என்
ஆண்டவனோடிருக்கிற ஆட்களுக்கு அதைக்
கொடும். உமது அடியாளின் தப்பிதத்தை 28
மன்னியும்; யெகோவா என் ஆண்டவ
னுக்கு நிலையான வீட்டைக் கட்டாமல்
விடார்; யெகோவாவின் யுத்தங்களை நடத்து
கிறவர் என் ஆண்டவன்தானுமே. நீர் உயி
ரோடிருக்கும் காலெல்லாம் உம்மிலே ஒரு

29 நீங்கும் காணப்படுவதில்லை. உம்மைப் பிடிக்கவும் உமது பிராணனை வாங்கவும் ஒரு மனுஷன் எழும்பினாலும் என் ஆண்டவனுடைய பிராணன் உமது கடவுளாகிய யெகோவாவின் பாதுகாப்பினுள்ள ஜீவனுள்ளோரோடே பாதுகாக்கப்பட்டிருக்கும்; உமது சத்துருக்களின் பிராணனையோ கவணில்வைத்து எறிவதுபோல எறிந்துவிடுவார். யெகோவா உம்மைப்பற்றிச் சொல்லியிருக்கும் நல்வாக்கின்படியெல்லாம் இனி என் ஆண்டவனுக்குச் செய்து இஸ்ரவேலின்மேல் அதிபதியாக உம்மை நியமிக்கும்போது நீர் பயந்த இடறும் காரணம் இருப்பதில்லை; நீர் வீணாக இரத்தம் சிந்தினீர் என்றும் என் ஆண்டவனுக்கு நீர் உமது கையினாலேயே பழிவாங்கினீர் என்றும் உமது மனம் உம்மை வாதிப்பதில்லை; யெகோவா என் ஆண்டவனுக்கு நன்மை செய்யும்போது உமது அடியானை நினைப்பீராக என்றாள்.

32 அப்பொழுது தாவீது அபிகாயிலினிடம்: எனக்கு எதிர்ப்படும்படி உன்னை இன்றையதினம் அனுப்பின இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவுக்கு ஸ்தோத்திரம்; உனது விவேகத்தினிமித்தம் ஸ்தோத்திரம்; நான் இரத்தம் சிந்தும் குற்றத்திற்கு ஆளாகாதபடிக்கும் என் கையினாலேயே நான் பழிவாங்காதபடிக்கும் நீ இன்றையதினம் என்னைத் தடுத்துவிட்டபடியினால் உன்னிமித்தமும் யெகோவாவுக்கு ஸ்தோத்திரம். உண்மையே, நீ சீக்கிரமாய் எனக்கு எதிர்ப்பட்டிராவிட்டால், பொழுதுவிடியும்போது நாபாலுக்கு ஒரு ஆண்பிள்ளையும் உயிரோடே விடப்பட்டிருப்பதில்லை; உனக்குத் தீமைசெய்யாதபடி என்னைத் தடுத்துவிட்ட இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவின் ஜீவன்மேல் ஆணையாக இதைச் சொல்லுகிறேன் என்று சொன்னான். அவள் தனக்குக் கொண்டுவந்ததைத் தாவீது அவளிடம் வாங்கிக்கொண்டு அவளைப்பார்த்து: நீ சமாதானத்தோடே உன் வீட்டுக்குப்போ; இதோ, நீ சொன்னதைக் கேட்டேன்; உனக்கு முகமலர்ச்சியுண்டாகச் செய்வேன் என்றான். அபிகாயில் நாபாலிடம் வந்தபோது, இதோ, ராஜவிருந்துக்கு ஒப்பான விருந்து அவன் வீட்டிலே நடந்தது; அவன் இருதயம் களித்தது; அவன் மிகவும் வெறித்திருந்தான்; ஆகவே பொழுதுவிடியுமட்டும் சிறிய காரியமானாலும் பெரியகாரியமானாலும் ஒன்றையும் அவனுக்குச் சொல்லவில்லை. காலையில் நாபாலின் வெறி தெளிந்த பின்பு அவன் மனைவி இந்தக் காரியங்களை அவனுக்குச் சொன்னாள்; அவன் இருதயம் அவனுக்குள்ளே செத்தது, அவன் கல்லைப் போலானான். ஏறக்குறையப் பத்துநாளைக்குப்பின் யெகோவா நாபாலை அடிக்கவே அவன் இறந்தான்: நாபால் செத்துப்போனான் என்று தாவீது கேள்விப்பட்டபோது: நாபாலினால் எனக்கு நேர்ந்த அவமானத்திற்காகப் பழிவாங்கித் தீமைக்கு ஆளாகாதபடி தமது அடியானைத் தடுத்த யெகோவாவுக்கு ஸ்தோத்திரம்; நாபால் செய்த தீமையை யெகோவா தாமே அவன் தலையின்மேல் திரும்பப்பண்ணினார் என்று சொன்னான். பின்பு தாவீது அபிகாயிலை விவாகம்பண்ணுகிறதற்காக அவளோடே பேசும்படி அவளிடம் ஆட்களை அனுப்பினான். தாவீதின் ஆட்கள் கர்மேலுக்கு அபிகாயிலிடம் வந்து, தாவீது உன்னை விவாகம்பண்ண மனதாய் எங்களை உன்னிடம் அனுப்பினார் என்று அவளிடம் சொன்னார்கள். அவள் எழுந்திருந்து தரைமட்டும் குனிந்து, இதோ, நான் என் ஆண்டவனுடைய அடியாள், அவருடைய ஊழியக்காரரின் பாதங்களைக் கழுவத்தக்க பணிவிடைக்காரி என்றாள். பின்பு அபிகாயில் சீக்கிரமாய் எழுந்து ஒரு கழுதையின்மேல் ஏறி ஐந்து தாதிப் பெண்களைக் கூட்டிக்கொண்டு தாவீதின் ஆட்களின் பின்னே போய், அவனுக்கு மனைவியானாள். யிஸ்ரெயேலில் ஊராளாகிய அகினோவாமையும் தாவீது விவாகம்பண்ணினான்; அவர்கள் இருவரும் அவனுக்கு மனைவிகளானார்கள். தாவீதுக்கு மனைவியாயிருந்த மீகாள் என்னும் தன் குமாரத்தியைச் சவுல் கல்லீம் ஊரானாகிய லாயிசின் குமாரனான பல்தியேலுக்குக் கொடுத்திருந்தான்.

**26** பின்பு சீப் ஊரார் கிபியாவுக்குச் சவுலினிடம் வந்து: தாவீது எஷிமோனுக்கு எதிரான கலோ மேட்டில் ஒளித்துக்கொண்டிருக்கிறானே என்றார்கள். அப்பொழுது சவுல் சீப் வனாந்தரத்திலே தாவீதைத் தேடும்படி எழுந்து, இஸ்ரவேலிலே பொறுக்கியெடுத்த மூவாயிரம்பேரோடுகூடச் சீப் வனாந்தரத்திற்குப் போனான். சவுல் எஷிமோனுக்கு எதிரே வழியருகே கலோ மேட்டில் பாளயமிறங்கினான்; தாவீது வனாந்தரத்திலே தங்கிச் சவுல் தன்னைப் பிடிக்க வனாந்தரத்திற்கு வருகிறதைக்கண்டு | வேவுகாரரை அனுப்பிச் சவுல் வந்தது நிச்சயம் என்று அறிந்துகொண்டான். பின்பு தாவீது எழுந்து, சவுல் பாளயமிறங்கியிருந்த இடத்திற்குப்போய்ச் சவுலும் நேரின் குமாரனாகிய அப்னேர் என்னும் அவன் படைத்

தலைவனும் படுத்துக்கொண்டிருந்த இடத்தைப் பார்த்தான்; சவுல் இரதங்களிருந்த இடத்தின் நடுவிலே படுத்துக்கொண்டிருந்தான்; ஈட்டி அவனைச் சுற்றிலும் பானைய
6 மிறங்கியிருந்தார்கள். தாவீது ஏத்தியனாகிய அகிமேலேக்கையும், செருயாளின் குமாரனும் யோவாபின் சகோதரனுமாகிய அபிஷாயையும் கூப்பிட்டு: என்னோடுகூடச் சவுலினிடம் பானையத்திற்கு இறங்கிவருகிறவன் யார் என்றதற்கு, அபிஷாய்: நான் உம்மோ
7 டே வருகிறேன் என்றான். அப்படியே தாவீதும் அபிஷாயும் இரவிலே அந்தப் படை வீரருக்குள்ளே வந்தார்கள்; இதோ, சவுல் இரதங்களின் நடுவிலே படுத்து நித்திரை பண்ணிக்கொண்டிருந்தான். அவன் தலை மாட்டிலே அவனுடைய ஈட்டி தரையிலே குத்தியிருந்தது; அவனைச்சுற்றிலும் அப்னேரும் படைவீரரும் படுத்துக்கொண்டிருந்
8 தார்கள். அப்பொழுது அபிஷாய் தாவீதைப்பார்த்து: இன்று கடவுள் உமது சத்துருவை உமது கையில் ஒப்புக்கொடுத்தார்; இப்போதும் நான் அவனை ஈட்டியினாலே இரண்டு குத்தாகக் குத்தாமல் ஒரே குத்தாகத் தரையிலே உருவக்குத்துவேன், எனக்கு
9 உத்தரவு கொடும் என்றான். தாவீதோ அபிஷாயினிடம்: அவரைக் கொல்லாதே; யெகோவா அபிஷேகம்பண்ணுவித்தவர் மேல் தன் கையைப் போட்டும் குற்றமில்லாமற் போகிறவனுண்டோ என்று சொன்
10 னான். பின்னும் தாவீது: யெகோவாவின் ஜீவன்மேல் ஆணை; யெகோவாவே அவரை அடிப்பார், அல்லது அவருடைய காலம் வரவே அவர் மரிப்பார், அல்லது அவர்
11 யுத்தத்திற்குப்போய் மாளுவார். நானோ என் கையை யெகோவா அபிஷேகம்பண்ணுவித்தவர்மேல் போடாதபடி யெகோவா என்னைக் காப்பாராக. இப்போதும் அவர் தலைமாட்டில் இருக்கிற ஈட்டியையும் தண்ணீர்ச் செம்பையும் எடுத்துக்கொள்; நாம்
12 போவோம் என்றான். தாவீது சவுலின் தலை மாட்டில் இருந்த ஈட்டியையும் தண்ணீர்ச் செம்பையும் எடுத்துக்கொண்டபின்பு போய்விட்டார்கள்; அதைக் கண்டுகொண்டவனில்லை, அறிந்தவனுமில்லை, விழித்துக் கொண்டவனுமில்லை; அவர்கள் எல்லாரும் நித்திரை செய்துகொண்டிருந்தார்கள்; யெகோவா அவர்களுக்கு அயர்ந்த நித்திரை வரச் செய்தார்.

13 தாவீது அப்பக்கத்திற்குக் கடந்து போய்த் தங்களுக்கும் அவர்களுக்கும் நடுவே வெகு தூரமிருக்கத் தள்ளிப்போய் மலையின் உச்
14 சியில் நின்றுகொண்டு | போர்வீரரையும் நேரின் குமாரனுகிய அப்னேரையும் கூப்பிட்டு, அப்னேரே, உத்தரவுசொல்லமாட்டீரா என அப்னேர்: ராஜாவை எழுப்புகிற நீ யார் என்றான். அப்பொழுது தாவீது 15
அப்னேரிடம்: நீரே ஆண் பிள்ளை! உமக்கு நிகரானவன் இஸ்ரவேலிலே இல்லை! நீர் உமது ஆண்டவனுகிய ராஜாவைக் காக்காமற்போனதென்ன? ஒரு வீரன் உமது ஆண்டவனுகிய ராஜாவைக் கொல்லும்படி வந்திருந்தானே; நீர் செய்த இக்காரியம் 16
நன்றோ? யெகோவா அபிஷேகம்பண்ணின உங்கள் ஆண்டவனை நீங்கள் காக்காமற் போனபடியினாலே நீங்கள் சாவதே நியாயம்; யெகோவாவின் ஜீவன்மேல் ஆணை; இப்பொழுது பாரும், ராஜாவின் தலைமாட்டில் இருந்த அவருடைய ஈட்டியும் தண்ணீர்ச் செம்பும் எங்கே என்றான். சவுல் 17
அதைக்கேட்ட மாத்திரமே தாவீதின் குரலையறிந்து: என் குமாரனுகிய தாவீதே, இது உன் குரலா என்றான்; அது கேட்ட தாவீது: ராஜாவாகிய என் ஆண்டவனே, என் குரல் தான் என்று சொல்லிப் | பின்னும்: என் 18
ஆண்டவனுகிய நீர் அடியேனை இப்படிப் பிடிக்கத் தொடருவது என்ன? நான் என்ன செய்தேன்? என்னிடத்தில் என்ன பொல்லாப்பு இருக்கிறது? | இப்போதும் ராஜா 19
வாகிய என் ஆண்டவனே, அடியேனுடைய வார்த்தைகளைக் கேளும்; யெகோவா உம்மை எனக்கு விரோதமாகத் தூண்டிவிட்டதுண்டானால் அவருக்குகந்த ஒரு காணிக்கையைக் கொடுத்துவிடுவோம். உம்மைத் தூண்டிவிட்டவர்கள் மனிதரேயானால் அவர்கள் யெகோவாவின் முன்னிலையில் சாபத்திற்கு ஆளாகட்டும்; அவர்கள் என்னைத் துரத்திவிட்டதினாலே நான் இன்று யெகோவாவின் சுதந்தரத்திற்கு அந்நியனுகச் செய்கிறார்கள்; நான் அந்நிய தேவர்களைச் சேவிக்கவும் கூறுகிறமே. இப்போ 20
தும் யெகோவாவின் சமுகத்திற்குப் புறம்பே என் இரத்தம் தரையில் விழவேண்டாம்; மலைகளிலே ஒரு கவுதாரியை வேட்டையாடுகிறதுபோல இஸ்ரவேலின் ராஜா ஒரு தெள்ளுப்பூச்சியைத் தேட வந்தாரோ என்றான். அப்பொழுது சவுல்: நான் பாவஞ் 21
செய்தேன்; என் குமாரனுகிய தாவீதே, திரும்பிவா; என் ஜீவன் இன்றைபதினம் உனது பார்வையில் அருமையாயிருந்தபடியினால் இனி உனக்கு ஒரு தீங்கும் செய்யேன்; இதோ, நான் மதியற்றவனைப்போல பெரிய தப்பிதஞ் செய்தேனே என்றான். அதற்குத் தாவீது: இதோ, ராஜாவின் ஈட்டி 22
இங்கே இருக்கிறது; உமது ஆட்களில் ஒரு

வுன் இப்புறம் வந்து அதை எடுத்துக்
23 கொண்டு போகட்டும். யெகோவா அவ
னவனுக்கு அவனவன் நீதிக்கும் உண்மைக்
கும் தக்கபடியே பலன் அளிப்பாராக;
இன்று யெகோவா உம்மை என் கையில்
ஒப்புக்கொடுத்திருந்தும் யெகோவா அபி
ஷேகம்பண்ணினவர்மேல் என் கையை
24 நீட்ட நான் சம்மதிக்கவில்லை. இதோ
உமது ஜீவன் இன்றையதினம் என் பார்வை
யில் எப்படி அருமையாயிருந்ததோ அப்
படியே என் ஜீவனும் யெகோவாவின் பார்
வையில் அருமையாயிருப்பதினால் அவர்
என்னைச் சகல உபத்திரவங்களினின்றும்
25 விடுவிப்பார் என்றான். அப்பொழுது சவுல்
தாவீதைப்பார்த்து: என் குமாரனுகிய தாவீ
தே, நீ ஆசீர்வாதத்திற்குரியவன்; நீ பெரிய
காரியங்களைச் செய்வாய், சித்தியும் பெறு
வாய் என்றான். அப்படியே தாவீது தன்
வழியே போனான்; சவுலும் தன் இடத்திற்
குத் திரும்பினான்.

**27** பின்பு தாவீது: நான் ஏதாவது ஒரு நாளி
லே சவுலின் கையினால் மடிவது நிண்ணம்;
நான் பெலிஸ்தியரின் தேசத்திற்குப் போய்த்
தப்பித்துக்கொள்ள வேண்டியதேயொழிய
வேறே வழியில்லை; அப்படிப் போய்விட்
டால், என்னைக் கண்டுபிடிக்கும்படி சவுல்
இஸ்ரவேல் நாட்டில் எங்கும் என்னைத்
தேடாமலிருப்பான்; நானும் அவன் கைக்
குத் தப்புவேன் என்று தன் மனதிலே யோ
2 சித்தவனுய்த் | தன்னோடிருந்த அறுநூறுபே
ரையும் கூட்டிக்கொண்டு எழுந்து, மாயோ
கின் குமாரனுகிய ஆகீஸ் என்னும் காத்
தின் ராஜாவினிடம் போய்ச்சேர்ந்தான்.
3 அங்கே தாவீதும் அவன் இரண்டு மனைவிக
ளாகிய யிஸ்ரெயேல் ஊராளாகிய அகினோ
வாமும் நாபாலின் மனைவியாயிருந்த கர்
மேல் ஊராளாகிய அபிகாயிலும் தாவீதின்
ஆட்களும் அவர்கள் வீட்டாரும் காத் பட்
டணத்திலே ஆகீசினிடம் தங்கியிருந்தார்
4 கள். தாவீது காத் பட்டணத்திற்கு ஓடிப்
போய்விட்டான் என்று சவுலுக்குத் தெரிய
வந்தபோது அவன் அப்புறம் அவனைத்
தேடாமலிருந்தான்.
5 தாவீது ஆகீசோடு பேசி: உமக்கு என்னி
டத்தில் தயை இருக்குமேயானுல் உமது
நாட்டிலுள்ள ஊர்கள் ஒன்றிலே எனக்கு
இடந்தாரும், நான் அங்கே வாசம்பண்ணு
வேன்; அடியேன் உம்மோடேகூட ராஜ
தானி பட்டணத்திலே வாசமாயிருப்பா
6 னேன் என்றான். அப்படியே அன்றைத்
தினம் ஆகீஸ் அவனுக்குச் சிக்லாகைக்
கொடுத்தான்; ஆகவே சிக்லாக் இந்நாள்
வரைக்கும் யூதாவின் ராஜாக்களுக்குரியதா
யிருக்கிறது. தாவீது பெலிஸ்தியரின் நாட்
7 டிலே ஒரு வருஷமும் நாலுமாதமும் குடி
யிருந்தான்.

அங்கேயிருந்து தாவீதும் அவன் ஆட்
8 களும் கெசூரியர்மேலும் கெர்சியர்மேலும்
அமலேக்கியர்மேலும் படையெடுத்துப்போ
னார்கள்; சூருக்குப்போகிற வழி பிலும்
எகிப்துதேசமட்டும் அந்நாட்டிலே தொன்று
தொட்டுக் குடியிருந்தவர்கள் இவர்களே.
தாவீது அந்த நாட்டைக் கொள்ளையடிக்
9 கும்போது புருஷர்களையும் ஸ்திரீகளையும்
உயிரோடே வைக்கிறதில்லை, ஆடுமாடுகளை
யும் கழுதைகளையும் ஒட்டகங்களையும் வஸ்
திரங்களையும் எடுத்துக்கொண்டு ஆகீசினி
டம் திரும்பிவருவான். இன்று எங்கே
10 போய்க் கொள்ளையடித்தீர்கள் என்று ஆகீஸ்
கேட்டால் தாவீது, யூதாவின் தென்னுட்டி
லென்றுவது யெராமெயேலரின் தென்னுட்டி
லென்றுவது கேனியருடைய தென்னுட்டி
லென்றுவது சொல்வான். தாவீது ஒரு
11 புருஷனையாவது ஸ்திரீயையாவது உயிரோ
டே வைக்கிறதில்லை; அவன் இன்ன இன்ன
படி செய்தான் என்று அவனுக்கு விரோத
மாக ஒருவனும் காத்பட்டணத்துக்கு வந்து
அறிவியாதபடி இப்படிச் செய்துவந்தான்.
அவன் பெலிஸ்தியரின் நாட்டுப்புறத்திலே
குடியிருந்த காலெல்லாம் இப்படியே
செய்துகொண்டுவந்தான். ஆகீசும் தாவீதை
12 நம்பினான்; அவன் தனது சொந்த ஜனங்
களாகிய இஸ்ரவேலர் தன்னை வெறுக்கும்
படி செய்கிறான், என்றைக்கும் அவன் என்
ஊழியத்திலிருப்பான் என்று சொல்லிக்
கொண்டிருந்தான்.

அந்நாட்களிலே பெலிஸ்தியர் இஸ்ர **28**
வேலின்மேல் யுத்தத்திற்குப்போகத் தங்கள்
சேனைகளைப் போருக்குத் திரட்டினார்கள்.
அச்சமயத்தில் ஆகீஸ் தாவீதைக்கூப்பிட்டு:
நீயும் உன் ஆட்களும் எவ்விதத்திலும் என்
னோடேகூட யுத்தத்திற்கு வரவேண்டும்;
இதை உனக்கு அறிவித்துவிட்டேன் என்
றான். தாவீது ஆகீசினிடம்: சரி, அடி 2
யேன் செய்யப்போவது இன்னதென்று
உமக்குத் தெரியவரும் என்று சொல்ல
ஆகீஸ் தாவீதினிடம்: சரி, உன்னை எந்நா
ளும் எனக்கு மெய்காவலனுக வைப்பேன்
என்றான்.

சாமுவேல் முன்னமே மரித்துப்போ 3
னான்; இஸ்ரவேலர் அனைவரும் துக்கங்
கொண்டாடி அவன் ஊராகிய ராமாவிலே
அவனை அடக்கம்பண்ணினார்கள். சவுல்
அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறி

சொல்லுகிறவர்களையும் தேசத்திலிருந்து
4 தரத்திவிட்டான். பெலிஸ்தியர் கூடிவந்து
சூனேமுக்கு வந்து பாளயமிறங்கினார்
கள்; சவுலும் இஸ்ரவேலர் யாவரையும் திரட்
டினான்; அவர்கள் கில்போவாவிலே பாளய
5 மிறங்கினார்கள். சவுல் பெலிஸ்தியரின்
பாளயத்தைக்கண்டபோது பயங்கொண்
டான்; அவன் மனது மிகவும் தத்தளித்துக்
6 கொண்டிருந்தது. சவுல் யெகோவாவினி
டம் விசாரித்தபோது யெகோவா அவனுக்
குச் சொப்பனங்களின் மூலமாயாவது
ஊரீம் மூலமாயாவது தீர்க்கதரிசிகள் மூல
7 மாயாவது உத்தரவு அருளவில்லை. ஆகவே
சவுல் தன் ஊழியக்காரரைக் கூப்பிட்டு:
அஞ்சனம்பார்க்கிற ஒரு ஸ்திரீயைத் தேடுங்
கள்; நான் அவளிடம்போய் விசாரிப்பேன்
என்றான்; அதற்கு அவன் ஊழியக்காரர்:
இதோ, ஏன்தோரில் அஞ்சனம்பார்க்கிற ஒரு
ஸ்திரீ இருக்கிறாள் என்றார்கள்.
8 சவுல் வேஷமாறி வேறு வஸ்திரம் தரித்
துக்கொண்டு, அவனும் அவனோடுகூட
இரண்டு ஆட்களும் இரவிலே அந்த ஸ்திரீயி
னிடம் போனார்கள். அவன் அவளோடு
பேசி: நீ அஞ்சனம்பார்த்து எனக்குக் குறி
சொல்லி நான் உன்னிடம் சொல்லுகிறவனை
9 எழும்பிவரச்செய் என்றான். அதுகேட்ட
அந்த ஸ்திரீ: சவுல் அஞ்சனம்பார்க்கிறவர்
களையும் குறிசொல்லுகிறவர்களையும் தேசத்தி
லிருந்து அகற்றிவிட்ட செய்தி உமக்குத்
தெரியுமே; என்னைக் கொன்றுபோடும்படி
நீர் என் பிராணனுக்குக் கண்ணி வைக்
10 கிறது என்ன என்றாள். அப்பொழுது
சவுல் யெகோவாவின்மேல் ஆணையிட்டு:
இக்காரியத்தினிமித்தம் உன்மேல் குற்றம்
சுமராது; யெகோவாவின் ஜீவன்மேல் ஆணை
11 என்றான். அப்பொழுது அந்த ஸ்திரீ:
உமக்கு நான் யாரை எழும்பிவரப்பண்ண
வேண்டும் என்று கேட்டதற்கு அவன்:
சாமுவேலை என்பொருட்டு எழும்பி வரப்
12 பண்ணவேண்டும் என்றான். அந்த ஸ்திரீ
சாமுவேலைக் கண்டமாத்திரமே மகா சத்த
மாய்க் கூப்பிட்டுச் சவுலைப்பார்த்து: ஏன்
13 என்னை ஏமாற்றினீர்? நீர்தான் சவுலா
யிற்றே என்றாள். ராஜா அவளைப்பார்த்து:
நீ பயப்படாதே, நீ காண்கிறது என்ன
என்று கேட்க; அந்த ஸ்திரீ: தேவரொருவர்
பூமிக்குள்ளிருந்து ஏறி வருகிறதைக் காண்
கிறேன் என்று சவுலுக்குச் சொல்லினாள்.
14 அவருடைய ரூபம் என்ன என்று அவனைக்
கேட்க, அவள்: அங்கிதரித்த வயதாளி ஒரு
வன் எழும்பி வருகிறான் என்றாள். அதி
னாலே சவுல் அவன் சாமுவேல் என்று
அறிந்துகொண்டு தரைமட்டும் குனிந்து
பணிந்தான்.

சாமுவேல் சவுலினிடம்: நீ என்னை 15
எழுப்பிக் கலங்கத்து என்ன என்று கேட்
டான்; அதற்குச் சவுல்: நான் மிகவும்
நெருக்கத்திற்காளானேன்; பெலிஸ்தியர்
எனக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார்
கள், கடவுளும் என்னை விட்டகன்றார்;
தீர்க்கதரிசிகளின் மூலமாயாவது சொப்பு
னங்களின் மூலமாயாவது எனக்கு அவரிட
மிருந்து உத்தரவில்லை. ஆகவே உம்மை
அழைப்பித்தேன்; நான் செய்யவேண்டியது
இன்னது என்று நீர் எனக்கு அறிவிக்க
வேண்டும் என்று கேட்டான். அதற்குச் 16
சாமுவேல் யெகோவா உன்னைவிட்டு விலகி
உனக்குச் சத்துருவானாரே; நீ என்னிடத்
தில் ஏன் விசாரிக்கிறாய்? யெகோவா 17
என்னைக்கொண்டு சொன்னபடியே செய்து
முடித்தார். ராஜ்யத்தை உன் கையிலிருந்து
பறித்தார்; அதை உன் தோழனாகிய தாவீ
தைக்குக் கொடுத்துவிட்டார்; நீ யெகோவா 18
வின் சொற்கேளாமலும் அமலேக்கின்மேல்
அவருக்கு இருந்த உக்கிரகோபத்தின்படி
செய்யாமலும் போனபடியினால் யெகோவா
இன்றைத்தினம் உனக்கு இந்தப் பிரகார
மாகச் செய்தார். யெகோவா உன் ஜன 19
மாகிய இஸ்ரவேலரையும் பெலிஸ்தியர்
கையில் ஒப்புக்கொடுப்பார்; நாளைக்கு நீயும்
உன் குமாரரும் என்னோடிருப்பீர்கள்;
இஸ்ரவேலின் பாளயத்தையும் யெகோவா
பெலிஸ்தியர் கையில் ஒப்புக்கொடுப்பார் என்
றான்.

அந்தக்ஷணமே சவுல் நெடிதாங்கிடை 20
யாய்த் தரையிலே விழுந்தான், சாமுவேலின்
வார்த்தைகளைக்கேட்டு மிகவும் பயங்கொண்
டான; அவன் மிகவும் தளர்ச்சியாயிருந்
தான்; இராப்பகல் முழுதும் ஒன்றும் சாப்
பிடவில்லை. அந்த ஸ்திரீ சவுலினிடம் 21
வந்து, அவன் மிகவும் கலங்கியிருக்கிறதைக்
கண்டு அவனைநோக்கி: இதோ, உமது
அடியாளாகிய நான் உமது சொற்கேட்டு
நீர் எனக்குச் சொன்ன உமது வார்த்தை
களுக்குக் கீழ்ப்படிந்தேன்; நான் எனது
உயிரையும் பொருட்படுத்தவில்லை. இப் 22
பொழுது நீர் உமது அடியாள் சொல்வதைக்
கேளும்; நான் உமக்குக் கொஞ்சம் ஆகாரம்
கொண்டுவருகிறேன், அதைச் சாப்பிடும்;
அப்பொழுது நீர் செல்லவேண்டிய வழி
யிலே போவதற்குப் பலமுண்டாகும் என்
றாள். அவனோ தடுத்து, நான் சாப்பிட 23
மாட்டேன் என்றான்; அவன் ஊழியக்
காரும் அந்த ஸ்திரீயும் அவனை மிகவும்

ஊருக்குள்ளே அவன் அவர்கள் சொற்கேட்டுத் தரையிலிருந்து எழுந்திருந்து கட்டிலின்மேல் உட்கார்ந்தான்.
24 அந்த ஸ்திரீயின் வீட்டிலே கொழுத்த கன்றுக்குட்டி ஒன்று இருந்தது; அதைச் சீக்கிரமாய் அடித்து, மா எடுத்துப் பிசைந்து அதைப் புளிப்பில்லாத அப்பங்களாகச்
25 சுட்டுச் | சவுலுக்கும் அவன் ஊழியக்காரருக்கும் கொண்டுவந்தாள்; அவர்கள் சாப்பிட்டு எழுந்திருந்து அந்த இரவிலேயே போய்விட்டார்கள்.

**29** பெலிஸ்தியர் தங்கள் சேனைகளையெல்லாம் அபேக்கிலே கூடிவரச்செய்தார்கள்; இஸ்ரவேலர் யிஸ்ரெயேலிலுள்ள துரவண்டை
2 யிலே பாளயமிறங்கினார்கள். அப்பொழுது பெலிஸ்தியரின் ஆண்டவன்மார் நூறும் ஆயிரமுமான சேர்வைகளோடே போனார்கள்; தாவீதும் அவன் ஆட்களும் ஆகீசோடே
3 பின்தண்டிலே போனார்கள். அப்பொழுது பெலிஸ்தியரின் ஆண்டவன்மார், இந்த எபிரேயர் எதற்கு என்று கேட்க ஆகீஸ் அவர்களிடம்: இஸ்ரவேலின் ராஜாவாகிய சவுலின் ஊழியக்காரனுமிருந்த இந்தத் தாவீது என்னிடம் வந்து ஒரு வருஷத்திற்கு மேலாயிற்றே. இவன் அவர்களைவிட்டு என்னிடம்வந்த நாள் முதல் இந்நாள்வரைக்கும் இவனில் நான் ஒரு குற்றமும் காணவில்லை
4 என்றான். பெலிஸ்தியரின் ஆண்டவன்மாரோ அவன்மேல் கோபங்கொண்டு அவனைப்பார்த்து: இந்த மனுஷனை அனுப்பிவிடும். நீர் இவனுக்குக் கொடுத்த இடத்திற்குத் திரும்பிப்போகட்டும்; இவன் நம்மோடே யுத்தத்திற்கு வரவேண்டாம்; யுத்தத்திலே இவன் நமக்குச் சத்துருவாக வேண்டாம்; இவன் தன் எஜமானனோடே ஒப்புரவாகவேண்டுமானால் பெலிஸ்தியரின் தலைகளைக் கொண்டுவருவது அதற்கு நல்ல வழியல்லவா?

5 சவுல் ஆயிரக்கணக்காய் கொன்றான்,
தாவீதோ லக்ஷக்கணக்காய்க் கொன்றான்

என்று அவர்கள் ஆடிப்பாடிச் சொன்னது இந்தத் தாவீதைக் குறித்தேயல்லவோ என்றார்கள்.

6 அப்பொழுது ஆகீஸ் தாவீதை அழைத்து: யெகோவாவின் ஜீவன்மேல் ஆணை; நீ நேர்மையானவனே, நீ பாளயத்தில் என்னோடே போக்கும் வரத்தமாயிருப்பது எனக்கு இஷ்டமே; நீ என்னிடத்தில் வந்து சேர்ந்தநாள் முதல் இந்நாள்வரைக்கும் நான் உன்னில் ஒரு தீங்கையும் காணவில்லை; ஆண்டவன்மாருக்கோ உன்மேல் பிரியமில்லை; ஆகவே பெலிஸ்தியரின் ஆண்டவன் 7
மாருக்குப் பிரியமானமான எதையும் நீ செய்யாதபடி சமாதானத்தோடே திரும்பிப் போய்விடு என்றான். தாவீது ஆகீசினிடம்: 8
ஏன்? நான் செய்தது என்ன? நான் உம்மிடம் வந்தநாள்முதல் இந்நாள்வரைக்கும் அடியேனிடம் நீர் கண்டகுறைபென்ன? நான் வந்து ராஜாவாகிய என் ஆண்டவனுடைய சத்துருக்களோடே என் யுத்தம் பண்ணலாகாது என்று கேட்டான். அதற்கு 9
ஆகீஸ் தாவீதினிடம்: எனக்குத் தெரியும்; நீ கடவுளின் தூதனைப்போல எனக்குப் பிரியமானவன்; ஆனாலும் பெலிஸ்தியரின் ஆண்டவன்மார், இவன் எங்களோடே யுத்தத்திற்கு வரக்கூடாது என்று சொல்லுகிறார்களே; இப்போதும் நீ நாளை அதிகாலை 10
யில் எழுந்து உன்னோடேவந்த உன் ஆண்டவனுடைய வேலைக்காரரைக் கூட்டிக்கொண்டு ஆயத்தமாகி விடியற்காலத்திலே வெளிச்சமாகிறபோது போய்விடு என்றான். அப்படியே தாவீது அதிகாலையில் எழுந்து 11
தன் ஆட்களைக் கூட்டிக்கொண்டு பெலிஸ்தியரின் தேசத்திற்குத் திரும்பிப்போய்விட்டான்; பெலிஸ்தியரோவெனில் யிஸ்ரெயேலுக்குப் போனார்கள்.

தாவீதும் அவன் ஆட்களும் மூன்றாம் **30**
நாளிலே சிக்லாகுக்கு வந்து சேருகிறதற்குள்ளே அமலேக்கியர் தென்னாட்டிற்கும் சிக்லாகுக்கும் விரோதமாய் வந்து, சிக்லாகைக் கொள்ளையடித்து அதை அக்கினியால் சுட்டெரித்தார்கள். அதிலிருந்த ஸ்திரீ 2
களாகிய சிறியவர்களையும் பெரியவர்களையும் சிறைபிடித்து ஒருவரையும் கொன்றுபோடாமல் அவர்களைத் தங்கள் வழியே ஓட்டிக்கொண்டுபோய்விட்டார்கள். தாவீதும் 3
அவன் ஆட்களும் அந்த ஊருக்கு வந்த போது, இதோ, அது அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டிருந்தது; அவர்கள் மனைவிகளும் அவர்கள் குமாரரும் அவர்கள் குமாரத்திகளும் சிறைப்பட்டுப் போயிருந்தார்கள். அதைக் காணவே தாவீதும் அவனோ 4
டிருந்த படைவீரரும் சத்தமிட்டு அழுதார்கள்; அழுகிறதற்குப் பலமில்லாமற்போகுமட்டும் அழுதார்கள். தாவீதின் இரண்டு 5
மனைவிகளாகிய யிஸ்ரெயேல் ஊராளான அகினோவாமும் கர்மேல் ஊராளான நாபாலின் மனைவியாயிருந்த அபிகாயிலும் சிறைப்பட்டுப்போனார்கள். தாவீதுக்கு மோசம் 6
சேரிடும்போலிருந்தது; சகல வீரரும் தங்கள் குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனக்கிலேசப்பட்டதினாலே அவனைக் கல்லெறிய வேண்டுமெனச் சொல்லிக்கொண்டார்

கள்; தாவீதோ தன் கடவுளாகிய யெகோவாவில் தன்னைத் தைரியப்படுத்திக்கொண்டான்.

7 தாவீது அகிமேலேக்கின் குமாரனாகிய அபியத்தார் என்னும் ஆசாரியனைக் கூப்பிட்டு, ஏபோத்தை என்னிடம் கொண்டுவா என்றான்; அபியத்தார் ஏபோத்தைத் தாவீதி
8 னிடம் கொண்டுவரவே | தாவீது யெகோவாவினிடம் விசாரித்து: நான் அந்தக் கும்பைப் பின்தொடரவேண்டுமா? அதைப் பிடிப்பேனா என்று கேட்டான். அதற்கு அவர்: அதைப் பிடிக்கச்செல்; நீ தவறாமல் அதைப்பிடித்து எல்லாவற்றையும் திருப்பிக் கொள்வாய் என்றார்.

9 அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த அறுநூறுபேரும் போனார்கள்; அவர்கள் பெசோர்நீரோடை பாயும் பள்ளத்துக்கு வந்தபோது அங்கே சிலர்
10 நின்றுபோனார்கள்; தாவீதோ நானூறு பேரோடுகூட அவர்களைப்பிடிக்கத்தொடர்ந்தான். இருநூறுபேர் விடாய்த்துப்போனபடியால் பெசோர்பள்ளத்தைக் கடக்க
11 முடியாமல் நின்றுபோனார்கள். வெளியிலே கிடந்த ஒரு எகிப்தியனை அவர்கள் கண்டு அவனைத் தாவீதினிடம் கொண்டுவந்து அவனுக்கு ஆகாரம் கொடுத்தார்கள்; அவன் சாப்பிட்டுத் தண்ணீர் குடித்தான்.
12 அத்திப்பழ அடை ஒன்றும் காய்ந்த திராட்சை அடை இரண்டும் அவனுக்குக் கொடுத்தார்கள்; அதை அவன் சாப்பிடவே அவனுக்கு உயிர் வந்தது. அவன் இராப்பகல் மூன்றுநாளாய் ஆகாரம் சாப்பிடாமலும் தண்ணீர் குடியாமலுமிருந்தான்.
13 தாவீது அவனைப்பார்த்து: நீ யாருடையவன்? நீ எவ்விடத்தான் என்று கேட்டதற்கு, அவன்: நான் ஒரு எகிப்து தேசத்தான், ஒரு அமலேக்கியனுடைய வேலைக்காரன், நான் வியாதிபாயிருக்கவே மூன்று
14 நாளைக்குமுன்னே என் எஜமான் என்னைக் கைவிட்டான். நாங்கள் கிரேத்தியருடைய தென்னாட்டையும் யூதா நாட்டையும் காலேப் தென்னாட்டையும் கொள்ளையிடப் போனோம்; சிக்லாகை அக்கினியினால் சுட்
15 டெரித்தோம் என்றான். தாவீது அவனிடம்: நீ என்னை அந்தக் கும்பினிடத்துக்குக் கொண்டுபோவாயா என்று கேட்டதற்கு, அவன், நீர் என்னைக் கொன்றுபோடுவதுமில்லை, என்னை என் எஜமான் கையில் ஒப்புக்கொடுப்பதுமில்லை என்று கடவுள்மேல் ஆணையிட்டுவீராகில் உம்மை அந்தக் கும்பினிடத்துக்குக் கூட்டிக் கொண்டு போவேன் என்றான்.

இவன் தாவீதைக் கொண்டுபோய் விட்ட 16
போது, இதோ, அவர்கள் வெளியெங்கும் பரவித் தாங்கள் பெலிஸ்தியர் தேசத்திலும் யூதாநாட்டிலும் கொள்ளையிட்டு வந்த மிகுதியான பொருட்களை வைத்துப் புசித்துக் குடித்து மகிழ்ந்துகொண்டிருந்தார்கள். அவர்களைத் தாவீது அன்று சாயங்காலம் 17
தொடங்கி இருட்டி மறுநாளாகுமட்டும் முறியடித்தான். ஒட்டகங்கள்மேல் ஏறி ஓடிப்போன நானூறு ஆட்கள் தவிர அவர்களிலே தப்பினவன் வேறெவனுமில்லை. அமலேக்கியர் பிடித்துக்கொண்டு 18
போன யாவற்றையும் தாவீது விடுவித்தான்; தன் மனைவிகள் இருவரையும் விடுவித்தான். அவர்கள் கொள்ளையாடிக் கொண்டு 19
போன யாவற்றிலும், சிறியதிலும் பெரியதிலும், குமாரரிலும் குமாரத்திகளிலும், ஒன்றும் குறைபடாமல் எல்லாவற்றையும் தாவீது திருப்பிக்கொண்டான். எல்லா ஆடுமாடு 20
களையும் தாவீது பிடித்துக்கொண்டான்; அவைகளைத் தங்கள் சொந்த மிருகங்களுக்கு முன்னாலே ஓட்டி, இது தாவீதின் கொள்ளை என்றார்கள். விடாய்த்துப்போன 21
நிலையே தாவீதுக்குப்பின் செல்லாமல் பெசோர் ஓடைப் பள்ளத்திலே தங்கி இருந்துவிட்ட இருநூறுபேரிடத்திற்கும் தாவீது வந்தபோது அவர்கள் தாவீதுக்கும் அவனோடிருந்த படைவீரருக்கும் எதிர் கொண்டுவந்தார்கள்; தாவீது அந்த ஆட்களைக்கிட்டி அவர்களுக்குச் சமாதான வார்த்தைதல் சொன்னான். அப்பொழுது 22
தாவீதோடே போயிருந்த ஆட்களிலே பேலியாலின் மக்களான துஷ்டர் அனைவரும்: அவர்கள் எங்களோடே வராதபடியினால் நாங்கள் திருப்பிக்கொண்டுவந்த கொள்ளையுடைமைகளில் அவர்களுக்கு ஒன்றும் கொடுக்கமாட்டோம்; அவர்களில் ஒவ்வொருவனும் தன்தன் மனைவியையும் தன்தன் பிள்ளைகளையுமே அழைத்துக் கொண்டுபோகட்டும் என்றார்கள். அதற்
23 குத் தாவீது: என் சகோதரரே, யெகோவா நமக்குத் தந்ததை நீங்கள் இப்படிச் செய்ய வேண்டாம்; யெகோவா நம்மைக் காப்பாற்றி நமதுமேல் விழுந்த அந்தக் கும்பை நமது கையிலே ஒப்புக்கொடுத்தார். இந்தக்
24 காரியத்திலே எவன் உங்கள் சொற்கேட்பான். யுத்தத்திற்குப் போனவர்களின் பங்கு எவ்வளவோ அவ்வளவே பண்டம்பாடிகளைப் பார்த்திருந்தவர்களின் பங்கும் ஆக வேண்டுட். எல்லாருக்கும் சரிபங்கே என்றான். அப்படியே அக்காள்முதல் நடந்துவரு
25 கிறது; அதை இஸ்ரவேலிலே இந்நாள்

வரைக்கும் இருக்கும் கட்டளையும் பிரமாண
முமாக ஏற்படுத்தினான்.
26 தாவீது சிக்லாகுக்கு வந்தபோது, யூதா
வின் மூப்பரிலே தன் சிநேகிதரானவர்
களுக்குத் தான் கொள்ளையாடினவை
களிலே சிலவற்றை அனுப்பி: இதோ,
யெகோவாவின் சத்துருக்களைக் கொள்ளை
யிட்டதில் உங்களுக்குரிய காணிக்கை
27 என்று சொல்லச் சொன்னான். பேதேலில்
இருந்தவர்களுக்கும் தென்னாட்டு ராமோத்
தில் இருந்தவர்களுக்கும் யத்தீரில் இருந்த
28 வர்களுக்கும் | அரோவேரில் இருந்தவர்
களுக்கும் சிப்மோத்தில் இருந்தவர்களுக்கும்
எஸ்தெமோகாவில் இருந்தவர்களுக்கும் |
29 ராக்காலில் இருந்தவர்களுக்கும் யெராமெ
யேலரின் ஊர்களில் இருந்தவர்களுக்கும்
கேனியரின் ஊர்களில் இருந்தவர்களுக்
30 கும் | கொர்மாவில் இருந்தவர்களுக்கும்
கொராசானில் இருந்தவர்களுக்கும் ஆற்று
31 தில் இருந்தவர்களுக்குப் ! எப்பெரோனில்
இருந்தவர்களுக்கும், தாவீதும் அவன் ஆட்
களும் நடமாடித்திரிந்த எல்லா இடங்களி
லுமிருந்தவர்களுக்கும் கொடுத்தனுப்பி
னான்.

**31** பெலிஸ்தியர் இஸ்ரவேலரோடே யுத்தம்
பண்ணிக்கொண்டேயிருந்தார்கள்; இஸ்ரவே
லர் பெலிஸ்தியருக்குமுன்பாக முதுகிட்டுக்
கில்போவா மலையிலே வெட்டுண்டு விழுந்
2 தார்கள். பெலிஸ்தியர் சவுலையும் அவன் குமா
ரரையும் தொடர்ந்து, சவுலின்
குமாரராகிய யோனத்தானையும் அபினதா
பையும் மல்கீஷுவாவையும் வெட்டிப்
3 போட்டார்கள். சவுலுக்கு விரோதமாய்
யுத்தம் பலத்தது; வில்வீரர் அவனைக்
கண்டுகொண்டார்கள். அப்பொழுது
சவுல் வில்வீரரைக் கண்டு மிகவும் பயந்து
4 நடுங்கித் | தன் ஆயுதம் சுமப்பவனைக் கூப்
பிட்டு: அந்த விருத்தசேதனம் இல்லாத
வர்கள் வந்து என்னைக் குத்திப்போட்டு
என்னை அவமானப்படுத்தாதபடி நீ உன்
பட்டயத்தை உருவி என்னைக் குத்திப்போடு
என்றான். ஆயுதம் சுமப்பவன் மிகவும்
பயந்து அப்படிச் செய்ய மனதில்லாதிருக்
கவே சவுல் தன் பட்டயத்தை எடுத்து
நட்டு அதின்மேல் விழுந்தான். சவுல் 5
இறந்துபோனதை அவன் ஆயுதம் சுமப்
பவன் கண்டபோது அவனும் தன் பட்ட
யத்தின்மேல் விழுந்து அவனோடேகூட
இறந்துபோனான். அப்படியே அன்றைத் 6
தினம் சவுலும் அவன் மூன்று குமாரரும்
அவன் ஆயுதம் சுமப்பவனும் அவனு
டைய எல்லா வீரரும் ஒருமிக்க மாண்
டார்கள். இஸ்ரவேலர் முதுகிட்டோடினோர் 7
கள் என்றும் சவுலும் அவன் குமாரரும்
மாண்டார்கள் என்றும், பள்ளத்தாக்குக்கு
இப்புறத்திலும் யோர்தானுக்கு இப்புறத்தி
லும் இருந்த இஸ்ரவேலர் கண்டபோது
அவர்கள் தங்கள் ஊர்களைவிட்டு ஓடிப்
போனார்கள்; பெலிஸ்தியர் வந்து அவை
களிலே குடியேறினார்கள்.

வெட்டுண்டவர்களை உரிந்துகொள்ளப் 8
பெலிஸ்தியர் மறுநாள் வந்தபோது அவர்
கள், சவுலும் அவன் மூன்று குமாரரும்
கில்போவா மலையிலே விழுந்துகிடப்பதைக்
கண்டு | சவுலின் தலையை வெட்டி, அவன் 9
ஆயுதங்களை எடுத்துக்கொண்டு தங்கள் விக்
கிரகங்களின் கோவில்களிலும் ஜனங்களுக்
குள்ளும் அந்த நற்செய்தியைப் பிரசித்தப்
படுத்தும்படி பெலிஸ்தியர் தேசமெங்கும்
ஆட்களை அனுப்பினார்கள். அவன் ஆயு 10
தங்களை அஸ்தோரேத்துக்களின் கோவி
லிலே வைத்த அவன் உடலைப் பேத்சா
னின் அலங்கத்திலே தூக்கிப்போட்டார்
கள்.

பெலிஸ்தியர் சவுலுக்குச் செய்ததை யா 11
பேஸ் கிலெயாத் ஊரார் கேள்விப்பட்ட
போது | அங்கிருந்த யுத்தவீரர் அனைவரும் 12
எழுந்து இரவெல்லாம் நடந்துபோய்ப்
பேத்சானின் அலங்கத்திலே தொங்கின
சவுலின் உடலையும் அவன் குமாரரின் உட
ல்களையும் எடுத்து யாபேஸுக்குக் கொண்
டுவந்து அவைகளை அங்கே தகனம்பண்ணி
னார்கள். அவர்கள் எலும்புகளை எடுத்து 13
யாபேஸிலிருந்த கர்வாலி மரத்தின் கீழ்
அடக்கம்பண்ணிவிட்டு ஏழுநாள் உபவா
சம் பண்ணினார்கள்.

# II. SAMUEL

# சாமுவேல்

## இரண்டாம் புஸ்தகம்

1 சவுல் மரித்தபின்பு தாவீது அமலேக்கியரை முறியடித்துச் சிக்லாகுக்குத் திரும்பி வந்தான். அவன் அங்கே இரண்டுநாள் தங்கி
2 யிருந்தபின் | மூன்றும் நாளிலே ஒருவன் சவுலின் பாளயத்திலிருந்து அவனிடம் வந்தான்; வந்தவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு தன் தலையின்மேல் புழுதியைப் போட்டுக்கொண்டவனாய்த் தாவீதைக் கிட்டித் தரையிலே விழுந்து வணங்கினான்.
3 நீ எங்கிருந்து வந்தாய் என்று தாவீது அவனைக் கேட்கவே அவன்: நான் இஸ்ரவேலின் பாளயத்திலிருந்து தப்பிவந்தேன் என்றான்.
4 தாவீது அவனைப் பார்த்து: நடந்த காரியம் என்ன? சொல் என்று கேட்டான். அப்பொழுது அவன்: படைவீரர் முறிந்தோடிப் போனார்கள்; அநேகர் விழுந்து மடிந்தார்கள்; சவுலும் அவர் குமாரனாகிய யோனத்தானும் மாண்டார்கள் என்றான்.
5 தாவீது தனக்கு அதை அறிவித்த வாலிபனிடம் கேட்டதற்கு | அந்த வாலிபன்: நான் தற்செயலாய்க் கில்போவா மலைக்குப் போனேன்; அங்கே, இதோ, சவுல் தமது ஈட்டியின்மேல் சாய்ந்து அப்படியே நின்றார்; இரதங்களும் குதிரை வீரரும் அவரைத்
7 தொடர்ந்து நெருங்கி வந்தார்கள். அவர் பின்னே திரும்பிப் பார்த்தார், அங்கே என்னைக்கண்டு கூப்பிட்டார்; நான்: இதோ, இருக்கிறேன் என்றேன்.
8 அப்பொழுது அவர், நீ யார் என்று என்னைக் கேட்க, நான் ஏறு அமலேக்கியன் என்று சொன்னேன்.
9 அவர் என்னைப் பார்த்து: நீ என்னைக் கிட்டிவந்து நின்று என்னைக் கொன்று போடு; எனக்குத் தலைசுற்றி, எனக்குக் கொஞ்சமும் உயிர்போகவில்லை, எனக்கு
10 வேதனையாயிருக்கிறது என்றார். அப்பொழுது நான், அவர் விழுந்தபின்பு பிழைக்க மாட்டார் என்று நிச்சயித்து, அவரைக் கிட்டிப்போய் நின்று அவரைக் கொன்று போட்டேன்; அவர் தலையின்மேல் இருந்த முடியையும் அவர் புயத்தில் இருந்த அந்த கடகத்தையும் எடுத்து, அவைகளை இங்கே என் ஆண்டவனிடம் கொண்டுவந்தேன் என்றான்.
11 அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த ஆட்கள் யாவரும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு |
12 அவன் குமாரனாகிய யோனத்தானும் யெகோவாவின் படைவீரரும் இஸ்ரவேல் குடும்பத்தாரும் பட்டயத்தாலே விழுந்தபடியினால் அழுது சாயங்காலமட்டும் உபவாசமாயிருந்து துக்கங்கொண்டாடினார்கள்.
13 தாவீது அதைத் தனக்கு அறிவித்த வாலிபனைப் பார்த்து, நீ எவ்விடத்தான் என்று கேட்க அவன்: நான் அந்நிய ஜாதியானுடைய மகன், நான் அமலேக்கியன் என்றான்.
14 தாவீது அவனைப் பார்த்து: யெகோவா அபிஷேகம்பண்ணினவரைக் கொன்று போடும்படி பயமின்றி நீ உன் கையை நீட்டினாயே என்று சொல்லித் |
15 தன் ஆட்களில் ஒருவனை கூப்பிட்டு, நீ கிட்டவந்து அவனை அடித்து வீழ்த்து என்றான்; அவன் அவனை வெட்டினான், அவன் செத்தான்.
16 தாவீது அவனைப் பார்த்து: உன் இரத்தப்பழி உன் தலையின்மேல் இருக்கும்; யெகோவா அபிஷேகம்பண்ணினவரை நான் கொன்று போட்டேன் என்று உன் வாயே உனக்கு விரோதமாய்ச் சாட்சி சொல்லிற்று என்றான்.
17 தாவீது சவுலின்பேரிலும் அவன் குமாரனாகிய யோனத்தான்பேரிலும் சரமகவி பாடினான்.
18 வில் என்னும் இக்கவியை யூதா புத்திரருக்குக் கற்றுக்கொடுக்கும்படி கட்டளையிட்டான்; அது நேர்மையாளர் நூலிலே எழுதப்பட்டிருக்கிறது.
19 இஸ்ரவேலே, உன் அலங்காரமது உயர்மேடானவற்றில் அழிந்து கிடந்தது வே.

வலிமையுடையவரும் வீழ்ந்தாரே, ஐயை யோ!
20 காத் நகரத்தினிலே இச்செய்தி கூறுதே,
அஸ்கலோன் வீதியிலே அதை எடுத்துச் சொல்லாதே;
பெலிஸ்தியர் குமாரிகள் பெரிதும் களிப் படைவார்,
விருத்தசேதனமில்லாதார் தம் மகளிர் பெருமையிலே மூழ்கிக் களிப்பாரே கேட்டவுடன்.
21 கில்போவாவின் மலைகளே, கேட்டிடுவீர், பனியும் மழைதானும் இனிமேல் உமை நணையா;
முதற்பலன் தருதற்கு வயலிராது அற்றே போம்,
வலியோர்தம் கேடகங்கள் மதிப்பிழந்தது உம்மிடமே.
சவுல் கேடகமினி அபிஷேகம் பெறுவ தில்லை;
22 பட்டுவீழ்ந்தோர் தம்து இரத்தம் பருகா மல்
வலிமையுடையோர் நிணமதனை உண்ணு மல்
யோனத்தான் வில்லுதான் பின்னேகி வந் திடுமோ?
சவுலரசன் வாள்தான் வீணே திரும்பிடு மோ?
23 சவுலும் யோனத்தானும் இனியர் பிரியர் களாம்,
இருந்தாலும் மாண்டாலும் பிரியார் ஒன்றுபிருப்பார்.
அவர் வேகத்திற்குக் கழுகதுவும் ஒப்பா மோ!
அவர் வீரியத்திற்குச் சிங்கமதும் ஒப்பா மோ!
24 இஸ்ரவேல் குமாரிகாள் சவுலை நினைத் தழுங்கள்,
இரத்தாம்பரம் அளித்தான் உம்மை இனி துடுத்தி,
உடைமேல் உமக்குமிகு பொற்பணி யைத் தந்துவந்தான்.
25 ஐயையோ, போர்முகத்தில் வீழ்ந்தாரே வல்லவர்கள்,
உன்னதமான உன்னுடைய மேடுகளில் வெட்டுண்டு மாண்டு கிடக்கிறான் யோ னத்தான்.
26 யோனத்தானே, எந்தன் உடன்பிறப்பே, நையுதே என் மனது உன்னை நினைந் துருகி,
இனிமையேயாக இருந்தாயே நீ எனக் கு,
அரிதே உனது நேசமதுதான் அரிதே,
மாதர்தம் நேசத்திலும் அதுவே அரிதாம்.
மடிந்தாரே வல்லவர்கள்; அழிந்தனவே 27
ஆயுதங்கள்.

2 பின்பு தாவீது யெகோவாவினிடம் விசா ரித்து: நான் யூதாவின் பட்டணங்கள் ஒன் றுக்குப் போகலாமா என்று கேட்டான். அதற்கு யெகோவா, போ என்றார்; எவ்வி டத்திற்குப் போகலாம் என்று தாவீது கேட்டதற்கு அவர்: எப்பெரோனுக்குப் போ என்றார். அப்படியே தாவீது தன் 2 இரண்டு மனைவிகளையும், யிஸ்ரெயேல் ஊரா னான அகினோவாமையும் கர்மேல் ஊரா னான நாபாலின் மனைவியாயிருந்த அபிகா யிலையும் கூட்டிக்கொண்டு அவ்விடத்திற் குப்போனான். அன்றியும் தன்னோடிருந்த 3 ஆட்களையும் அவரவர் குடும்பத்தாரையும் கூட்டிக்கொண்டுபோனான்; அவர்கள் எப் பெரோனைச் சார்ந்த ஊர்களிலே குடியேறி னார்கள். அப்பொழுது யூதா நாட்டார் 4 வந்து, அங்கே தாவீதை யூதா வம்சத்தாரின் மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார் கள்.

யாபேஷ்கிலெயாத் ஊரார் சவுலை அடக் கம் பண்ணினவர்கள் என்று தாவீதுக்குத் தெரியவந்தபோது | அவன் யாபேஷ் கிலெ 5 யாத் ஊராரிடம் ஆட்களை அனுப்பி: நீங் கள் உங்கள் ஆண்டவனுடைய சவுலுக்குத் தயைகாட்டி அவரை அடக்கம்பண்ணின படியினாலே யெகோவாவின் ஆசீர்வாதம் உங்களுக்கு உரியதாக. யெகோவா தமது 6 கிருபையின்படியும் உண்மையின்படியும் உங்களை நடத்துவார். நீங்கள் இந்தக் காரியத்தைச் செய்தபடியினால் நானும் உங் களுக்கு நன்மை செய்வேன். இப்போதும் 7 நீங்கள் தைரியங்கொண்டு பராக்கிரமசாலி களாயிருங்கள். உங்கள் ஆண்டவனுடைய சவுல் மரித்துப்போனார்; யூதாவம்சத்தார் என்னைத் தங்கள்மேல் ராஜாவாக அபிஷே கம்பண்ணினார்கள் என்று அவர்களுக்குச் சொல்லச் சொன்னான்.

சவுலின் படைத்தலைவனான அப்னேர், 8 நேரின் குமாரன், சவுலின் குமாரனுடைய இஷ்போஷெத்தை மகனயீமுக்கு அழைத் துக்கொண்டுபோய், அவனைக் கிலெயாத், 9 அஷூரியர், யிஸ்ரெயேல், எப்பிராயீம், பென்யமீன் ஆகிய இஸ்ரவேலனைத்தின்மே லும் ராஜாவாக்கினான். சவுலின் குமாரனு 10 கிய இஷ்போஷெத் இஸ்ரவேலின்மேல் ராஜாவான போது அவனுக்கு நாற்பதுவயது, அவன் இரண்டு வருஷம் ராஜ்யபாரம்பண் ணினான். யூதா கோத்திரத்தார் மாத்திரம் தாவீதைப் பின்பற்றினார்கள். தாவீது எப் 11

பெரோனிலே யூதா கோத்திரத்தின்மேல் ராஜ்
யபாரம்பண்ணினது ஏழுவருஷமும் ஆறு
மாதமுமாம்.

12 நேரின் குமாரனுகிய அப்னேர் சவுலின்
குமாரனுகிய இஷ்போசேத்தின் ஆட்களைக்
கூட்டிக்கொண்டு மகனயீமைவிட்டுக் கிபி
13 யோனுக்குப் போனன். அப்பொழுது
செருயாளின் குமாரனுகிய யோவாபும்
தாவீதின் ஆட்களும் புறப்பட்டுப் போனர்
கள்; இருவரும் கிபியோனின் குளத்தண்
டையில் சந்தித்துக் குளத்திற்கு அப்புறத்தில்
அவர்களும் குளத்திற்கு இப்புறத்தில் இவர்
14 களுமாகத் தங்கினர்கள். அப்னேர் யோ
வாபைப்பார்த்து: ஆட்கள் எழுந்து நமக்கு
முன்பாகச் சிலம்பம் அடிக்கட்டும் என்று
சொல்ல யோவாப், அவர்கள் எழுந்து அப்
15 படியே செய்யட்டும் என்றான். எனவே
சவுலின் குமாரனுகிய இஷ்போசேத்தின்
பட்சத்தாராகிய பென்யமீன் ஆட்களில் பன்
னிருவரும், தாவீதின் ஆட்களில் பன்னிருவ
16 ரும் எழுந்து முன்சென்று | ஒருவர் தலையை
ஒருவர் பிடித்து ஒருவருடைய விலாவிலே
ஒருவர் பட்டயத்தினுலே குத்தி ஒருமிக்க
விழுந்தார்கள்; அதினிமித்தம் அந்த இடம்
கெல்காத் அசூரீம் என்னப்பட்டது, அது
கிபியோனண்டையிலிருக்கிறது, அன்றைய
17 தினம் அகோரயுத்தம் நடந்தது. அப்னே
ரும் இஸ்ரவேலரும் தாவீதின் போர்வீரரால்
18 முறியடிக்கப்பட்டார்கள். அங்கே செரு
யாளின் மூன்று குமாரராகிய யோவாபும்
அபிஷாயும் அசாகேலும் இருந்தார்கள்;
அசாகேல் காட்டுக் கலிமான்போல் வேக
19 மாய் ஓடுகிறவன். அவன் அப்னேரைத்
தொடர்ந்து வலது புறத்திலாகிலும் இடது
புறத்திலாகிலும் அவனைவிட்டு விலகாமல்
20 அவனைப் பிடிக்கச் சென்றான். அப்னேர்
திரும்பிப்பார்த்து: நீ அசாகேல் அல்லவா
என்று கேட்க அவன், நான்தான் என்றான்.
21 அப்பொழுது அப்னேர் அவனைப்பார்த்து:
நீ வலது பக்கமாகிலும் இடது பக்கமாகி
லும் விலகிப் போர்வீரரில் ஒருவனைப்
பிடித்து அவன் ஆயுதவர்க்கத்தை எடுத்துக்
கொள் என்றான்; அசாகேலோ விடமாட்
22 டேன் என்று தொடர்ந்து போனன். பின்
னும் அப்னேர் அசாகேலைப்பார்த்து: நீ
என்னை விட்டுப்போ; நான் என் உன்னைத்
தரையில் விழவெட்டவேண்டும்? அப்படிச்
செய்தால் உன் சகோதரனுகிய யோவாபின்
முகத்திலே எப்படி விழிப்பேன் என்றான்.
23 அவனை விலகிப் போகமாட்டேன் என்ற
படியினுல், அப்னேர் பின்புறமாகத் தன்
ஈட்டியினுல் அவன் வயிற்றிலே குத்தினன்;
ஈட்டி ஊடுருவி முதுகிலே வெளிப்பட்டது;
அவன் அவ்விடத்திலேயே விழுந்து செத்
தான்; அசாகேல் செத்து விழுந்த இடத்திலே
வந்தவர்களெல்லாரும் அங்கே தாமதித்தார்
கள். யோவாபும் அபிஷாயும் சூரியன் 24
அஸ்தமிக்குமட்டும் அப்னேரைப் பிடிக்கத்
தொடர்ந்தார்கள்; கிபியோன் வனந்தர
ழிக்கு அருகான கீயோவுக்கு எதிரே இருக்கிற
அம்மா மேடுமட்டும் வந்தார்கள். அப்னே 25
ரோடு சென்ற பென்யமீன் புத்திரர் ஒரே
படையாகக்கூடி அங்கே ஒரு குன்றின் உச்
சியிலே நின்றார்கள். அப்பொழுது அப் 26
னேர் யோவாபைப் பார்த்துக் கூப்பிட்டு,
பட்டயம் சங்காரம் பண்ணவேண்டியது
ஒய்வின்றியோ, முடிவிலே கசப்பாகும்
என்று அறியீரோ, தங்கள் சகோதரரைப்
பிடிக்கத் தொடரவேண்டாமென்று போர்
வீரருக்குச் சொல்லும், எவ்வளவு நேரம்
அதைச் சொல்லாமலே இருப்பீர் என்றான்.
அதற்கு யோவாப்: நீர் இதைச் சொல்லாதி 27
ருப்பீரானுல் போர்வீரர் காலைக் காலைவரை
யும் நிற்காமலே தங்கள் சகோதரரைத்
தொடர்ந்துபிடிக்க வருவார்கள், நித்திய
ஜீவியாகிய யெகோவாவே சாட்சி என்று
சொல்லிவிட்டு | எக்காளம் ஊதினன்; 28
படைவீரர் எல்லாரும் அதற்குமேல் இஸ்ர
வேலைப் பின்தொடராமலும் யுத்தம்பண்ணு
மலும் நின்றுவிட்டார்கள். அன்று இரா 29
முழுதும் அப்னேரும் அவன் ஆட்களும்
அராபாவின் வழியாய்ச் சென்று யோர்தா
னைக் கடந்து பித்ரோனின் வழியே நடந்து
சென்று மகனயீம் சேர்ந்தார்கள். யோவாப் 30
அப்னேரைத் தொடராமல் போர்வீரரை
யெல்லாம் கூடிவரச் செய்தான்; தாவீதின்
ஆட்களிலே அசாகேலைத் தவிர இன்னும்
பத்தொன்பது பேர் குறைந்திருந்தார்கள்.
அப்னேரின் ஆட்களாகிய பென்யமீனியரி 31
லோ முந்நூற்றறுபது பேரைத் தாவீதின்
ஆட்கள் கொன்றுவிட்டார்கள். அசாகேலை 32
அவர்கள் எடுத்துப்போய்ப் பெத்லெகேமி
லுள்ள அவனுடைய தகப்பன் கல்லறை
யிலே அடக்கம்பண்ணினர்கள்; யோவாபும்
அவன் ஆட்களும் இரவெல்லாம் நடந்து
பொழுதுவிடியும்போது எப்பெரோன் வந்து
சேர்ந்தார்கள்.

சவுலின் குடும்பத்துக்கும் தாவீதின் குடும் 3
பத்துக்கும் நெடுநாள் யுத்தம் நடந்தது;
தாவீது வரவர பலத்து வந்தான்; சவுலின்
குடும்பத்தாரோ வரவர பலவீனப்பட்டு வந்
தார்கள்.

எப்பெரோனிலே தாவீதுக்குப் பிறந்த 2
குமாரர்: யிஸ்ரெயேல் ஊராளான அகினோ

வாமினிடம் பிறந்த அம்னோன் அவனு
3 டைய சிரேஷ்ட புத்திரன். கர்மேல் ஊரா
னை நாபாலின் மனைவியாயிருந்த அபிகாயி
லினிடம் பிறந்த கிலெயாப் அவனுடைய
இரண்டாம் குமாரன்; கெசூரின் ராஜாவான
தல்மாயின் குமாரத்தியாகிய மாக்காள் பெற்
4 ற அப்சலோம் மூன்றும் குமாரன். ஹகீத்
பெற்ற அதொனியா நாலாம் குமாரன்;
அபீதால் பெற்ற ஷெபத்தியா ஐந்தாம் குமா
5 ரன். தாவீதின் மனைவியாகிய எக்லாளினி
டம் பிறந்த யித்ரெயாம் ஆறும் குமாரன்;
இவர்களே எப்பெரோனிலே தாவீதுக்குப்
பிறந்தவர்கள்.

6 சவுலின் குடும்பத்துக்கும் தாவீதின் குடும்
பத்துக்கும் யுத்தம் நடந்துவருகையில் அப்
னேர் சவுலின் குடும்பத்திலே வரவர பல
7 முள்ளவனானான். சவுலுக்கு ஆயாவின்
குமாரத்தியாகிய ரிஸ்பாள் என்னும் பேருள்
ள ஒரு மறுமனையாட்டி இருந்தாள்; இஷ்
போசேத் அப்னேரைப் பார்த்து: நீ என்
தகப்பனுருடைய மறுமனையாட்டியினிடத்
8 தில் பிரவேசித்தது என்ன என்றான். அப்
னேர் இஷ்போசேத்தின் வார்த்தைகளைக்
கேட்டு மிகவும் கோபங்கொண்டு, நான்
யூதாவுக்கு உட்கையான ஒரு நாய்த்தலை
யோ? இந்த ஸ்திரீயினிமித்தம் இன்று நீர்
என்னைக் குற்றம்பிடிக்கவந்தீரே, நான் உம்
மைத் தாவீதின் கையில் ஒப்புக்கொடாமல்
இந்நாள்மட்டும் உமது தகப்பனுகிய சவுலின்
குடும்பத்துக்கும் அவருடைய சகோதரருக்
கும் சிநேகிதருக்கும் தயை பாராட்டி வருகி
9 றேனே. ராஜ்யபாரம் சவுலின் குடும்பத்தை
விட்டு நீங்கும்படி நான் செய்வேன்; தாவீ
தின் சிங்காசனத்தைத் தாண் துவக்கிப்
பெயர்ஷெபாமட்டுமுள்ள இஸ்ரவேலின்
மேலும் யூதாவின்மேலும் நிலைநிறுத்து
10 வேன். யெகோவா தாவீதுக்கு ஆணையிட்ட
படியே நான் அவனுக்குச் செய்வேன்,
செய்யாமற்போனால் தமது சித்தப்படியெல்
லாம் கடவுள் அப்னேருக்குச் செய்வாராக
11 என்றான். இஷ்போசேத் அப்னேருக்குப்
பயப்பட்டதினால் அப்புறம் அவனிடம்
ஒன்றும் சொல்ல வழியில்லாமற் போயிற்று.

12 அப்னேர் அப்பொழுதே தாவீதினிடம்
ஆட்களை அனுப்பி: தேசம் யாருடையது?
என்னோடு உடன்படிக்கைபண்ணும்; என்
கை உம்மோடிருக்கும்; இதோ, இஸ்ரவேலி
யெல்லாம் உம்மிடம் திருப்பிவிடுவேன்
13 என்று சொல்லச்சொன்னான். அதற்கு
தாவீது: நல்லது உன்னோடே நான் உடன்
படிக்கை பண்ணுவேன்; ஒரு காரியத்தை
மாத்திரம் உன்னிடம் கேட்டுக்கொள்ளுகி
றேன்; நீ என் முகத்தைப் பார்க்கவரும்
போது சவுலின் குமாரத்தியாகிய மீகாளை
அழைத்துவரவேண்டும்; அதற்குமுன் நீ
என் முகத்தைப் பார்ப்பதேயில்லை என்று
சொல்லச் சொன்னான். பின்னும் அவன் 14
சவுலின் குமாரனுகிய இஷ்போசேத்தினி
டத்திற்கும் ஆட்களை அனுப்பி: நான் பெலி
ஸ்தியரின் நூறு தனித்தோல்களைப் பரிசமா
கக் கொடுத்து விவாகம் செய்த என் மனை
வியாகிய மீகாளை அனுப்பிவிடும் என்று
சொல்லச்சொன்னான். அப்பொழுது இஷ் 15
போசேத் அவளை லாயிசின் குமாரனுகிய
பல்தியேல் என்னும் புருஷனிடமிருந்து
அழைத்துவர ஆட்களை அனுப்பினான்.
அவள் புருஷன் பகூரீம்மட்டும் அவன் 16
பிறகாலே அழுதுகொண்டுவந்தான், அப்
னேர் அவனைப் பார்த்து: நீ திரும்பிப்போ
என்று சொல்லவே அவன் திரும்பிப்போய்
விட்டான்.

அப்னேர் இஸ்ரவேலின் மூப்பரோடே 17
ஆலோசனைசெய்து தாவீது உங்கள்மேல்
ராஜாவாக வேண்டுமென்று நீங்கள் அநே
நாளாய் ஆசைப்பட்டுத் தேடினீர்களே.
இப்போதும் நீங்கள் ஆசித்தபடியே செய் 18
யுங்கள்; என் தாசனுகிய தாவீதின் கையி
னால் என் ஜனமாகிய இஸ்ரவேலைப் பெலிஸ்
தியரின் கைக்கும் அவர்களுடைய சுற்ற
சத்துருக்களின் கைக்கும் நீங்கலாக்கி
இரட்சிப்பேன் என்று யெகோவா தாவீ
தைக் குறித்துச் சொல்லியிருக்கிறாரே என்
றான். இப்படி பிரகாரமாக அப்னேர் 19
பென்யமீனியரின் காதுக்குள் ஒதினான்;
பின்பு அப்னேர் இஸ்ரவேலர் பார்வைக்கும்
பென்யமீனுடைய சகல குடும்பத்தாரின்
பார்வைக்கும் சம்மதியானதை யெல்லாம்
எப்பெரோனிலே தாவீதினிடம் சொல்லுகிற
தற்குப் போனான். அப்னேரும் அவனே 20
டேகூட இருபதுபேரும் எப்பெரோனிலி
ருந்த தாவீதினிடம் வந்தபோது தாவீது
அப்னேருக்கும் அவனேடே வந்த ஆட்க
ளுக்கும் விருந்துசெய்தான். பின்பு அப் 21
னேர் தாவீதைப்பார்த்து: நான் எழுந்து
போய் இஸ்ரவேலரையெல்லாம் ராஜாவா
கிய என் ஆண்டவனிடம் சேர்த்துக்
கொண்டுவருகிறேன்; அவர்கள் உம்மோடே
உடன்படிக்கை செய்வார்கள், அப்பொ
ழுது நீர் விரும்புகிற இடமெல்லாம் அர
சாளுவீர் என்றான்; அப்படியே தாவீது
அப்னேரை அனுப்பிவிட்டான்; அவன்
சமாதானத்தோடே போனான். தாவீதின் 22
ஆட்களும் யோவாபும் கொள்ளையிடப்
போய் அநேகம் பொருட்களைக் கொண்டு

வந்தார்கள்; அச்சமயத்தில் அப்னேர் எப்
பெரோனில் தாவீதினிடத்தில் இல்லை;
அவனை அனுப்பிவிட்டான், அவன் சமா
23 தானத்தோடே போய்விட்டான். யோவா
பும் அவனோடிருந்த எல்லாச் சேனையும்
திரும்பிவந்தபோது நேரின் குமாரனாகிய
அப்னேர் ராஜாவினிடம் வந்தான் என்றும்,
அவர் அவனை அனுப்பிவிட்டார், அவ
னும் சமாதானமாய்ப் போய்விட்டான்
என்றும் யோவாபுக்குத் தெரியவந்தது.
24 அப்பொழுது யோவாப் ராஜாவினிடம்
வந்து: என்ன செய்தீர்? இதோ, அப்னேர்
உம்மிடத்தில் வந்தானே, நீர் அவனுக்கு
விடைகொடுத்து அவனைப் போகவிட்டது
25 என்ன? நேரின் குமாரனாகிய அப்னேரை
அறிவீரே; அவன் உம்மை மோசம்போக்க
வும் உம்முடைய போக்குவரத்தை அறிய
வும் நீர் செய்கிறதையெல்லாம் ஆராயவும்
26 வந்தான் என்று சொன்னான். யோவாப்
தாவீதைவிட்டுப் போனவுடனே அவன்
அப்னேரைக் கூட்டிக்கொண்டுவரும்படி
ஆட்களை அனுப்பினான், அவர்கள் சீராத்
தரவுமட்டும் போய் அவனை அழைத்துக்
கொண்டு வந்தார்கள்; இது தாவீதுக்குத்
27 தெரியாது. அப்னேர் எப்பெரோனுக்குத்
திரும்பிவந்தபோது யோவாப் அவனோடே
இரகசியமாய்ப் பேசப்போகிறவன்போல
அவனை ஊர்வாசலின் நடுவே ஒரு பக்க
மாய் அழைத்துப்போய்த் தன் தம்பி அசா
கேலின் இரத்தப்பழியை வாங்க அங்கே
அவனை வயிற்றிலே குத்திக் கொன்றுபோட்
28 டான். பிற்பாடு தாவீது அதைக்கேட்ட
போது: நேரின் குமாரனாகிய அப்னேரின்
இரத்தத்திற்காக என்மேலும் என் ராஜ்யத்
தின்மேலும் யெகோவாவின் பார்வையில்
29 என்றைக்கும் பழியில்லை. அது யோவா
புடைய தலையின்மேலும் அவன் தகப்பன்
குடும்பமனைத்தின்மேலும் சுமரும்; யோவா
பின் வீட்டாரிலே பிரமேகக்காரனும்
குஷ்டரோகியும் கோல்ஊன்றி நடக்கிறவ
னும் பட்டயத்தால் விழுகிறவனும் அப்
பக்குறைச்சலுள்ளவனும் ஒருக்காலும்
30 ஒழிந்துபோவதில்லை என்றான். கிபியோ
னில் நடந்த யுத்தத்திலே தங்கள் தம்பியா
கிய அசாகேலை அப்னேர் கொன்றதினிமித்
தம் யோவாபும் அவன் சகோதரனாகிய
அபிஷாயும் அவனைக் கொன்றார்கள்.
31 தாவீது யோவாபையும் அவனோடிருந்த
சகல ஜனங்களையும் பார்த்து: நீங்கள் உங்
கள் வஸ்திரங்களைக் கிழித்துவிட்டு இரட்
டைக்கட்டிக்கொண்டு அப்னேரின் பாடை
க்கு முன்னாக நடந்து துக்கங்கொண்டாடுங்

கள் என்று சொல்லித் தாவீதுராஜா தானும்
பின்சென்றான். அவர்கள் அப்னேரை 32
எப்பெரோனிலே அடக்கம்பண்ணுகையில்
ராஜா அப்னேரின் கல்லறையண்டையிலே
சத்தமிட்டு அழுதான்; சகல ஜனங்களும்
அழுதார்கள். ராஜா அப்னேரினிமித்தம் 33
ஒப்பாரிசொல்லி:

மதிகேடன் மாள்வதுபோல்
மாண்டானோ அப்னேர்?—உன்
கையைப் பிணித்ததில்லை 34
கால்விலங்கிட்டதில்லை,
துஷ்டர் கைப்பட்டதேபோல்
மாண்டாயோ அப்னேர்

என்றான்; அப்பொழுது ஜனங்களெல்லா
ரும் பின்னும் அதிகமாய் அவனிமித்தம்
அழுதார்கள். பொழுது இன்னும் இருக் 35
கையில், ஜனங்கள் எல்லாரும் வந்து, பசி
ஆறும் என்று தாவீதுக்குச் சொன்னபோது
தாவீது: சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்
னே நான் அப்பத்தையாகிலும் வேறெதையா
கிலும் ருசி பார்த்தால் தமது சித்தப்படியெல்
லாம் கடவுள் எனக்குச் செய்வாராக என்று
ஆணையிட்டுச் சொன்னான். ஜனங்கள் எல் 36
லாரும் அதைக் கவனித்தார்கள், அது
அவர்களுக்கு நலமாய்த் தோன்றினது;
அப்படியே ராஜா செய்ததெல்லாம் சகல
ஜனங்களுக்கும் நலமாய்த் தோன்றினது.
நேரின் குமாரனாகிய அப்னேரைக்கொன்று 37
போட்டது ராஜாவினால் உண்டானதல்ல
வென்று அந்நாளிலே சகல ஜனங்களும்
இஸ்ரவேலர் அனைவரும் அறிந்துகொண்
டார்கள். ராஜா தன் ஊழியரைப் பார்த்து: 38
இன்றையதினம் இஸ்ரவேலில் பிரபுவும்
பெரிய மனுஷனுமாகிய ஒருவன் விழுந்
தான் என்று அறியீர்களா? நான் ராஜா 39
வாக அபிஷேகம்பண்ணப்பட்டவனாயிரு
ந்த போதிலும் நான் இன்னும் பலவீனனே;
செருயாளின் குமாரராகிய இந்த மனுஷர்
என் பலத்துக்கு மிஞ்சினவர்கள், அந்தத்
தீங்கைச் செய்தவனுக்கு யெகோவா அவன்
தீங்குக்குத் தக்கபடியே செய்வாராக என்
றான்.

அப்னேர் எப்பெரோனிலே செத்துப் 4
போனதைச் சவுலின் குமாரன் கேட்ட
போது அவன் மனம் தளர்ந்தது, இஸ்ரவேல
ரெல்லாரையும் நடுக்கம் பிடித்தது. சவு 2
லின் குமாரனுக்குப் படைத்தலைவரான
இரண்டு பேர் இருந்தார்கள்; ஒருவன் பேர்
பானா, மற்றவன் பேர் ரேகாப்; அவர்கள்
பென்யமீனியரில் பேரோத்தியனாகிய ரிம்
மோனின் குமாரர்கள். பேரோத்தும் 3
பென்யமீனுக்குரியதாய் எண்ணப்பட்டது

பேரோத்தியர் கித்தாயீமுக்கு ஓடிப்போய் இந்நாள்வரைக்கும் அங்கே சஞ்சரிக்கிறார்கள்.

4 சவுலின் குமாரன் யோனத்தானுக்கு இரண்டு காலும் முடமான ஒரு குமாரன் இருந்தான்; சவுலும் யோனத்தானும் மடிந்த செய்தி யிஸ்ரெயேலிலிருந்து வந்த போது அவன் ஐந்து வயதுள்ளவனாயிருந்தான்; அப்பொழுது அவனுடைய தாதி அவனை எடுத்துக்கொண்டு ஓடிப்போனாள்; அவள் ஓடிப்போன அவசரத்தில் அவன் விழுந்து முடவனானான்; அவன் பேர் மெவிபோசேத்.

5 பேரோத்தியனான அர்தரிம்மோனின் குமாரராகிய ரேகாபும் பானாவும் போய், இஷ்போசேத் மத்தியானத்திலே, வெயில் நேரத்தில், படுக்கையின்மேல் படுத்திருக்கும் போது அவன் வீட்டிற்குள் பிரவேசித்
6 துக் | கோதுமை வாங்க வருகிறவர்கள் போல நடுவீடுமட்டும் வந்து அவனை வயிற்றிலே குத்திப்போட்டார்கள்; பின்பு ரேகாபும் அவன் சகோதரன் பானாவும் தப்பி
7 ஓடிப்போனார்கள். அவன் தன் பள்ளியறையிலே தன் கட்டிலின்மேல் படுத்திருக்கும்போது இவர்கள் உள்ளேபோய் அவனைக் குத்திக்கொன்று போட்டு, அவன் தலையை வெட்டிப்போட்டார்கள்; பின்பு அவன் தலையை எடுத்துக்கொண்டு இரா
8 முழுதும் அராபா வழியாய் நடந்து | எப்பெரோனிலிருந்த தாவீதினிடம் இஷ்போசேத்தின் தலையைக் கொண்டுவந்து ராஜாவைப் பார்த்து: இதோ, உமது பிராணனை வாங்கத்தேடின உமது சத்துருவாயிருந்த சவுலின் குமாரனாகிய இஷ்போசேத்தின் தலை, இன்றையதினம் யெகோவா ராஜாவாகிய எங்கள் ஆண்டவனுக்காகச் சவுலினிடமும் அவன் குடும்பத்தாரினிடமும் பழி
9 வாங்கினார் என்றார்கள். தாவீதோ பேரோத்தியனான ரிம்மோனின் குமாரராகிய ரேகாபுக்கும் அவன் சகோதரன் பானாவுக்கும் பதிலுரைத்து: என்னை எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்ட யெகோவாவின் ஜீவன்மேல் ஆணையாக நான் சொல்லுகிற
10 தைக் கேளுங்கள். இதோ, ஒருவன் எனக்கு நற்செய்தி கொண்டுவருவதாக எண்ணிச் சவுல் செத்துப்போனான் என்று எனக்கு அறிவித்துத் தனக்கு வெகுமானம் கிடைக்கும் என்று நினைத்தபோது நான் அவனைப் பிடித்துச் சிக்லாகிலே கொன்று
11 போட்டேனே. தமது வீட்டிற்குள் தமது படுக்கையின்மேல் படுத்திருந்த நீதிமானைக் கொலைசெய்த தெய்வபயமற்ற மனிதருக்கு நான் செய்யும் ஆக்கினை எவ்வளவு அதிகமாகும். இப்போதும் நான் அவருடைய இரத்தப்பழியை உங்களிடத்திலே வாங்கி உங்களைப் பூமியிலிருந்து அழித்துப்போடாதிருப்பேனோ என்று சொல்லி | அவர்களைக் 12
கொன்றுபோடவும் அவர்கள் கால்களை கைகளைத் தறித்து எப்பெரோனிலிருக்கிற குளத்தண்டையிலே தூக்கிப்போடவும் தன் ஆட்களுக்குக் கட்டளையிட்டான். இஷ்போசேத்தின் தலையை எடுத்து எப்பெரோனிலிருக்கிற அப்னேரின் கல்லறையிலே அடக்கம்பண்ணினார்கள்.

அக்காலத்திலே இஸ்ரவேலின் கோத்திரங்களெல்லாம் எப்பெரோனிலிருந்த தாவீதினிடம் வந்து: இதோ, நாங்கள் உமது எலும்பும் உமது தசையுமானவர்கள். சென்ற நாட்களில், சவுல் எங்கள்மேல் 2
ராஜாவாயிருந்த காலங்களிலுங்கூட, இஸ்ரவேலை நடத்திக்கொண்டு போனவரும் நடத்திக்கொண்டு வந்தவரும் நீரே; என் ஜனமாகிய இஸ்ரவேலை நீ மேய்த்து இஸ்ரவேலின்மேல் தலைவனாயிருப்பாய் என்று யெகோவாவும் உம்மிடம் சொன்னாரே என்றார்கள். இஸ்ரவேலின் மூப்பர் எல்லாரும் 3
எப்பெரோனிலிருந்த ராஜாவினிடம் வந்தார்கள்; தாவீது ராஜா எப்பெரோனிலே யெகோவாவின் சந்நிதியில் அவர்களோடே உடன்படிக்கை செய்தபின்பு அவர்கள் தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள். தாவீது 4
ராஜாவாகும்போது முப்பது வயதாயிருந்தான்; அவன் நாற்பது வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான். அவன் எப்பெரோ 5
னிலே யூதாவின்மேல் ஏழு வருஷமும் ஆறு மாதமும் எருசலேமிலே இஸ்ரவேல் யூதா ஆகிய சமஸ்த ஜனத்தின்மேலும் முப்பத்துமூன்று வருஷமும் ராஜ்யபாரம் பண்ணினான்.

தேசத்திலே குடியிருந்த எபூசியர்மேல் 6
யுத்தம்பண்ண ராஜாவானவன் தன் ஆட்களோடே எருசலேமுக்குப்போனான். அவர்கள் தாவீதினிடம்: நீ இவ்விடத்திற்குள் வருவதேயில்லை, குருடரும் சப்பாணிகளும் உன்னைத் தடுப்பார்கள் என்று சொன்னார்கள்; தாவீது இவ்விடத்திற்குள் வரமுடியாது என்று எண்ணி இப்படிச் சொன்னார்கள். தாவீதோ சீயோன் கோட்டையைப் 7
பிடித்தான்; அது தாவீதின் நகரமாயிற்று. எவன் எபூசியன் ஒருவனைக் கொன்று நீர் 8
வரும் சாலகம் வரைக்கும் ஏறுகிறானோ அவன் தாவீது பகைக்கும் சப்பாணிகளையும் குருடரையும் சங்காரித்தவனாவான்

என்று தாவீது அன்றைபதினம் சொல்
லியிருந்தான்; அதனால் குருடனும்
சப்பாணியும் ஆலயத்திலே வரலாகாது
9 என்று சொல்லுகிறதுண்டு. தாவீது அந்
தக் கோட்டையில் வாசம்பண்ணி அதற்
குத் தாவீதுநகரம் என்று பேரிட்டான்;
மில்லோ துவக்கி உட்புறமாகச் சுற்றிலு
10 மிருக்கிற மதிலைக் கட்டினான். தாவீது
நாளுக்குநாள் விருத்தியடைந்தான்; சேனை
களின் கடவுளாகிய யெகோவா அவனோடி
ருந்தார்.

11 தீருவின் ராஜாவாகிய ஈராம் தாவீதினி
டம் ஸ்தானபதிகளை அனுப்பினான்; அவர்க
ளோடு கேதுரு மரங்களையும் தச்சரையும்
கல்தச்சரையும் அனுப்பினான்; அவர்கள்
தாவீதுக்கு ஒரு வீட்டைக் கட்டினார்கள்.
12 யெகோவா தன்னை இஸ்ரவேலின்மேல் ராஜா
வாக உறுதிப்படுத்தித் தமது ஜனமாகிய
இஸ்ரவேலினிமித்தம் தன்னுடைய ராஜ்யத்
தை மேலானதாக்கினார் என்று தாவீது கண்
டறிந்தான்.

13 அவன் எப்பெரோனிலிருந்து வந்த
பின்பு எருசலேமில் இன்னும் அநேக மறு
மனையாட்டிகளையும் ஸ்திரீகளையும் கொண்
டான்; இன்னும் குமாரரும் குமாரத்தி
14 களும் தாவீதுக்குப் பிறந்தார்கள். அவ
னுக்கு எருசலேமிலே பிறந்தவர்கள் இவர்
களே: சம்மூவா, சோபாப், நாத்தான்,
15 சாலொமோன், | யிப்கார், எலிசுவா;
16 நேபேக், யாபியா, | எலிஷாமா, எலியாதா,
எலிப்பேலேத்.

17 தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக
அபிஷேகம்பண்ணினார்கள் என்று பெலிஸ்
தியர் கேள்விப்பட்டபோது அவர்கள் எல்
லாரும் தாவீதைத் தேடிப்பிடிக்கும்படி
வந்தார்கள்; அதைத் தாவீது கேட்டபோது
18 கோட்டைக்குள் போய்விட்டான். பெலிஸ்
தியர் வந்து ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே
19 பரவினார்கள். தாவீது யெகோவாவினிடம்
விசாரித்து: பெலிஸ்தியருக்கு விரோதமாய்ப்
போகலாமா, அவர்களை என் கையில் ஒப்
புக்கொடுப்பீரா என்று கேட்டபோது,
யெகோவா: போ, பெலிஸ்தியரை நிச்சய
மாகவே உன் கையில் ஒப்புக்கொடுப்பேன்
20 என்று தாவீதுக்குச் சொன்னார். தாவீது
பாகால் பெராசீமுக்கு வந்து அங்கே அவர்
களை முறிபடித்தான்; தண்ணீர்கள் அழிக்
கிறதுபோல யெகோவா என் சத்துருக்களை
எனக்கு முன்பாக அழித்துவிட்டார்
என்று சொல்லி அந்த இடத்திற்குப்
பாகால் பெராசீம் என்று பேரிட்டான்.
21 அங்கே பெலிஸ்தியர் தங்கள் விக்கிரகங்களை
விட்டுவிட்டு ஓடிப்போனார்கள்; தாவீதும்
அவன் மனுஷரும் அவைகளை எடுத்துக்
கொண்டார்கள்.

பெலிஸ்தியர் திரும்பவும் வந்து ரெப்பா 22
யீம் பள்ளத்தாக்கிலே பரவினார்கள்.
தாவீது யெகோவாவினிடம் விசாரிக்கவே 23
அவர்: நீ நேராய்ப் போகாமல் அவர்களுக்
குப் பின்னாலே சுற்றிப் பாகாமரங்களுக்கு
எதிரேயிருந்து அவர்கள்மேல் பாய்ந்து |
பாகாமரங்களின் நுனிகளிலே உண்டாகிற 24
நடை சப்தத்தை நீ கேட்கும்போது சீக்
கிரமாய் எழும்பிப்போ; அப்பொழுது
பெலிஸ்தியரின் பாளயத்தை முறியடிக்க
யெகோவா உனக்கு முன்பாகப் புறப்பட்
டிருப்பார் என்றார். யெகோவா தனக்குக் 25
கட்டளையிட்ட பிரகாரமே தாவீது செய்து,
பெலிஸ்தியரைக் கேபா துவக்கிக் கேசே
ருக்குப் போகும் வழிமட்டும் முறியடித்
தான்.

பின்பு தாவீது சமஸ்த இஸ்ரவேலரிலும் 6
சிரேஷ்டமானவர்களாகிய மூப்பதினாயிரம்
பேரைக் கூட்டிக்கொண்டு தன்னிடமிருந்த
சகல வீரரோடும் புறப்பட்டுப்போனான்.
கேருபுகள் நடுவே வாசமாயிருக்கிற சேனை 2
களின் யெகோவாவினுடைய திருநாமம்
தரிக்கப்பெற்ற கடவுளின் பெட்டகத்தைப்
பாகாலே யூதாவிலிருந்து கொண்டுவரும்
படி போனார்கள். கடவுளின் பெட்டகத் 3
தை ஒரு புது இரதத்தின்மேல் ஏற்றி
அதைக் கிபியாவிலிருந்த அபினதாபின்
வீட்டிலிருந்து கொண்டுவந்தார்கள்; அபின
தாபின் குமாரராகிய ஊசாவும் அகியோவும்
அந்தப் புது இரதத்தை நடத்தினார்கள்.
அவர்கள் கடவுளின் பெட்டகத்தை ஏற்றி 4
அதைக் கிபியாவிலிருக்கிற அபினதாபின்
வீட்டிலிருந்து நடத்திக்கொண்டு வரும்
போது அகியோ பெட்டகத்துக்கு முன்னே
நடந்தான். தாவீதும் இஸ்ரவேல் சந்ததியார் 5
அனைவரும் தேவதாரு மரத்தால் செய்த
சகலவித தீத வாத்தியங்களோடும், சுரமண்
டலம் தம்புரு மேளம் வீணை கைத்தாளம்
ஆகிய இவைகளோடும் யெகோவாவுக்கு
முன்பாக ஆடிப் பாடிக்கொண்டு போனார்
கள். அவர்கள் நாகோனின் களமட்டும் 6
வந்தபோது மாடுகள் இடற ஊசா தன்
கையை நீட்டிக் கடவுளின் பெட்டகத்தை
பிடித்தான்; பிடிக்கவே யெகோவாவுக்கு 7
ஊசாவின்மேல் கோபமூண்டது; அவனு
டைய தப்பிதத்தினிமித்தம் கடவுள் அங்கே
அவனை அடித்தார்; அவன் அங்கே கடவு
ளின் பெட்டகத்தண்டையிலேயே செத்
தான். யெகோவா ஊசாவை அழித்ததி 8

ஸ்மித்தம் தாவீது வருத்தமுற்று அந்த ஸ்தலத்திற்குப் பேரேஸ் ஊசா என்று பேரிட்டான்; அந்தப் பேர் இந்நாள்மட்டும் வழங்குகிறது. அன்றையதினம் யெகோவாவைப் பற்றிய பயம் தாவீதைப் பிடிக்கவே அவன், யெகோவாவின் பெட்டகம் என்னிடம் வருவது எப்படியென்று சொல்லி | அதைத் தன்னிடத்திலே தாவீது நகரத்திற்குக் கொண்டுவர மனதில்லாமல் காத் ஊராஞகிய ஓபேத் ஏதோமின் வீட்டிற்குக் கொண்டுபோய் வைத்தான். யெகோவாவின் பெட்டகம் காத் ஊராஞகிய ஓபேத் ஏதோமின் வீட்டிலே மூன்றுமாதம் இருந்தது; அங்காட்களில் யெகோவா ஓபேத் ஏதோமையும் அவன் வீட்டார் அணைவரையும் ஆசீர்வதித்தார். கடவுளின் பெட்டகத்தினிமித்தம் யெகோவா ஓபேத் ஏதோமின் வீட்டையும் அவனுக்குரிய யாவற்றையும் ஆசீர்வதித்தார் என்று தாவீது ராஜாவுக்குத் தெரியவந்தபோது அவன் போய்க் கடவுளின் பெட்டகத்தை ஓபேத் ஏதோமின் வீட்டிலிருந்து தாவீதின் நகரத்துக்கு மகிழ்ச்சியுடனே கொண்டுவந்தான். யெகோவாவின் பெட்டகத்தைச் சுமந்துபோகிறவர்கள் ஆறுவது எட்டு எடுத்து வைத்தபோதெல்லாம் தாவீது ஒரு மாட்டையும் ஒரு கொழுத்த ஆட்டுக்கடாவையும் பலியிட்டான். தாவீது சணல்நூல் ஏபோத்தைத் தரித்துக்கொண்டவனும் மிகுந்த உற்சாகத்தோடு யெகோவாவுக்கு முன்பாக நடனம் பண்ணினான். அப்படியே தாவீதும் இஸ்ரவேல் சந்ததியார் அணைவரும் ஆரவாரஞ் செய்து எக்காளம் ஊதி யெகோவாவின் பெட்டகத்தைக் கொண்டு வந்தார்கள். யெகோவாவின் பெட்டகம் தாவீது நகரத்தினுள் பிரவேசித்தபோது சவுலின் குமாரத்தியாகிய மீகாள் பலகணிவழியாய்ப் பார்த்து, தாவீதுராஜா யெகோவாவின் முன்பாகக் குதித்து நடனம்பண்ணினதைக்கண்டு தன் இருதயத்திலே அவனை அவமதித்தாள். அவர்கள் யெகோவாவின் பெட்டகத்தை உள்ளே கொண்டுவந்து, தாவீது அதற்கெனப் போட்டிருந்த கூடாரத்தினுள், அதின் ஸ்தானத்திலே, அதை வைத்தபோது தாவீது யெகோவாவின் சந்நிதியில் தகனபலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்தினான். தாவீது தகனபலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்தி முடித்துச் சேனைகளின் யெகோவாவுடைய திருநாமத்தில் ஜனங்களை ஆசீர்வதித்து | இஸ்ரவேலின் திரள் கூட்டமான ஸ்திரீ புருஷராகிய சகல ஜனங்களுக்கும் ஆளுக்கு ஒரு அப்பத்தையும் ஒரு இறைச்சித்துண்டையும் ஒரு திராட்சை அடையையும் பங்கிட்டான்; பிற்பாடு ஜனங்கள் எல்லாரும் தங்கள் தங்கள் வீடுகளுக்குப் போய்விட்டார்கள். தாவீது தன் வீட்டாரை ஆசீர்வதிக்கிறதற்குத் திரும்பும்போது சவுலின் குமாரத்தியாகிய மீகாள் தாவீதுக்கு எதிர்கொண்டு வந்து, இஸ்ரவேலின் ராஜா இன்று செய்தது மிகவும் அழகாயிருந்தது! வீணன் ஒருவன் தன் வஸ்திரங்களைக் கழற்றிப்போடுகிறதுபோல ராஜா தமது ஊழியருடைய பெண்களுக்கு எதிரே தமது வஸ்திரங்களை உரிந்துபோட்டுக் குதித்தாடினாரே என்றாள். அதைக்கேட்கவே தாவீது மீகாளைப்பார்த்து: நான் யெகோவாவின் சமுகத்தில்தானே இதைச் செய்தேன்; யெகோவா உன் தகப்பனையும் அவருடைய வீட்டார் அனைவரையும் விட்டு என்னையே தெரிந்தெடுத்து யெகோவாவின் ஜனமாகிய இஸ்ரவேலின் மேல் தலைவனாக ஏற்படுத்தினாரே; ஆகவே நான் யெகோவாவின் சமுகத்தில் ஆடிப்பாடுவேன். இதைப்பார்க்கிலும் இன்னும் நான் தாழ்ந்தும் என் பார்வைக்கே அற்பனாவேன்; நீ சொன்ன அடிமைப்பெண்களின் மதிப்பைப்பெற நினைப்பேனே என்றாள். அதினால் சவுலின் குமாரத்தியாகிய மீகாளுக்கு மரணமடையும் நாள்மட்டும் பிள்ளை இல்லாதிருந்தது.

7 சுற்றிலும் இருந்த சத்துருக்கள் எவராலும் அவனுக்குக் கஷ்டம் உண்டாகாதபடி யெகோவா ராஜாவை இளைப்பாறப்பண்ணினார்; ராஜா தன் வீட்டிலே வாசமாயிருந்தான். அப்போது ராஜா தீர்க்கதரிசியாகிய 2 நாத்தானைக் கூப்பிட்டு: பாரும், கேதுரு மரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே நான் வாசம்பண்ணுகிறேன்; கடவுளின் பெட்டகமோ திரைக்கூடாரத்தில் வாசமாயிருக்கிறதே என்றான். அது கேட்ட 3 நாத்தான் ராஜாவினிடம்: நீர் போய் உமது இருதயத்தில் உள்ளபடியெல்லாம் செய்யும்; யெகோவா உம்மோடு இருக்கிறாரே என்றான். அன்று இரவே யெகோவாவின் திரு 4 வாக்கு நாத்தானுக்கு வந்தது: நீ போய் என் 5 தாசனாகிய தாவீதோடு பேசி, யெகோவா இப்படிச் சொல்லுகிறார், நான் வாசமாயிருப்பதற்கு நீ எனக்கு ஒரு ஆலயம் கட்டுவாயோ? நான் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தி 6 லிருந்து கொண்டுவந்த நாள்முதல் இந்நாள் வரைக்கும் நான் ஒரு ஆலயத்திலே வாசம் பண்ணினதில்லை; கூடாரத்திலும் கூடார வாசஸ்தலத்திலும் வசித்துத் திரிந்தாவந்தேன். நான் இஸ்ரவேலாகிய என் ஜனத்தை மேய்க் 7

கும்படி கட்டளையிட்ட இஸ்ரவேல் கோத்திரங்களில் எந்தக் கோத்திரத்தினிடமாவது, கேதுருமர ஆலயமொன்றை நீங்கள் என் எனக்குக் கட்டவில்லையென்று நான் சகல இஸ்ரவேல் புத்திரரோடும் திரிந்துவந்த காலமெல்லாம், ஒரு வார்த்தை சொன்ன 8 துண்டோ? இப்போதும் நீ என் தாசனாகிய தாவீதோடு பேசி, சேனைகளின் யெகோவா சொல்லுவது இதுவே, ஆடுகளின் பின்னே திரிந்த உன்னை மேய்ச்சல் காட்டிலிருந்து அழைத்தேன், என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு அதிபதியாயிருக்கும்படி உன்னை 9 அழைத்தேன். நீ போன இடமெல்லாம் உன்னோடிருந்தேன், உனக்கு முன்னிராதபடி உன் சத்துருக்களையெல்லாம் சங்காரித்தேன்; பூமியிலுள்ள பெரியோரின் நாமத்திற்கு ஒத்த பெரிய நாமத்தை உனக்கு உண்டாக் 10 குவேன். என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு ஒரு இடத்தை ஏற்படுத்துவேன், அவர்கள் தங்கள் ஸ்தானத்திலே குடியிருப்பார்கள், இனி அவர்கள் அலைந்து திரிவதில்லை; முற்காலத்தில் ஒடுக்கப்பட்டதுபோலவும் என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் நான் நியாயாதிபதிகளை ஏற்படுத்தின நாட்களில் ஒடுக்கப்பட்டதுபோலவும் துஷ்டரால் அவர்கள் ஒடுக்கப்படாதபடி அவர்களை இளைப்பாறப் 11 பண்ணுவேன். எந்தச் சத்துருவானும் உனக்குக் கஷ்டமுண்டாகாதபடி இளைப்பாறப்பண்ணுவேன்; இப்போதும் தாம் உனக்கு வீட்டை உண்டுபண்ணுவார் என்பதை யெகோ 12 வா உனக்கு அறிவிக்கிறார். உன் நாட்கள் நிறைவேறியபின் நீ உன் பிதாக்களோடே நித்திரைபண்ணுகையில் உனக்குப் பின்னாக உன் சந்ததியை, உன் சொந்தப்பிள்ளையாகப் பிறப்பவனை, நான் எழும்பப்பண்ணி அவன் 13 ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன். அவனே என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான்; அவன் ராஜ்யபார சிங்காசனத்தை என்றென்றுமாக நிலைக்கச் செய்வேன். 14 நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன், அவன் எனக்குக் குமாரனாயிருப்பான்; அவன் அக்கிரமம் செய்யும்போது நான் அவனை மனுஷருக்கேற்ற மிலாற்றினாலே தண்டித்து மனுபுத்திரருக்கேற்ற அடி அடிப்பேன். 15 என் கிருபை அவனை விட்டு விலகாது; உனக்கு முன்னிராதபடி நான் தள்ளிவிட்ட சவுலினிடமிருந்து விலக்கினதுபோலாகாது. 16 உன் வீடும் உன் ராஜ்யமும் என்றென்றுமாக உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்; உன் சிங்காசனம் என்றென்றுமாக நிலைபெற்றிருக்கும் என்றார் சொல் என்றார். 17 இந்த வார்த்தைகளின்படியெல்லாம், இந்தத் தரிசன முழுதிலும் கண்டபடியே, நாத்தான் தாவீதுக்குச் சொன்னான்.

18 அப்பொழுது தாவீது ராஜா யெகோவாவின் சந்நிதிக்குட்சென்று தரித்திருந்து: யெகோவாவாகிய என் ஆண்டவரே, தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டு வந்ததற்கு நான் எம்மாத்திரம்? என் 19 வீடு எம்மாத்திரம்? யெகோவாவாகிய என் ஆண்டவரே, இது உமக்கு அற்ப காரியமாய்த் தோன்றிற்றே; தேவரீர் அடியேனுக்குரிய வீட்டைப்பற்றி வெகுகாலத்துக்கப்பால் நடக்கும் செய்தியைச் சொன்னீரே; யெகோவாவாகிய என் ஆண்டவரே, இது மனிதருக்கு ஆச்சரியமுறை. 20 தாவீது இனி உம்மிடம் சொல்லவேண்டியது என்ன? யெகோவாவே என் ஆண்டவரே, நீர் அடியேனை அறிவீர். 21 அடியேனுக்குத் தெரியவேண்டுமென்று உமது வாக்கு களினிமித்தம் உமது சித்தத்தின்படியே இந்தப் பெரிய காரியங்களையெல்லாம் செய்தீர். 22 ஆகவே கடவுளாகிய யெகோவாவே, நீர் பெரியவர் என்று விளங்குகிறது; நாங்கள் எங்கள் காதுகளாலே கேட்ட சகல காரியங்களையும் நினைத்தால் தேவரீருக்கு நிகரானவர் இல்லை; உம்மைத் தவிர வேறே தெய்வமும் இல்லை. 23 உமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கு நிகரான ஜனம் பூமியில் உண்டோ? தனக்கு ஒரு ஜனமாயிருக்கவும் தனக்குப் பேர் உண்டாக்கிக்கொள்ளவும் ஒரு தெய்வம் தானே சென்று மீட்டுக்கொண்ட ஜனமுண்டோ? இந்தப் பெரிய காரியங்களை உங்களுக்குச் செய்துவந்தார்; எகிப்திலிருந்து, அதின் ஜாதிகளிடத்திலும் அதின் தேவர்களிடத்திலுமிருந்து, தேவரீர் உமக்கென்று மீட்டுக்கொண்ட உமது ஜனத்தின் முன்பாக உமது தேசத்திற்கு இந்தப் பயங்கர காரியங்களைச் செய்தீர். 24 உமது ஜனமாகிய இஸ்ரவேலர் உமக்கென்றே நிலைத்திருக்கச்செய்தீர், என்றைக்குமாக உமது ஜனமாயிருக்கச்செய்தீர், யெகோவாவாகிய நீர் தாமே அவர்களுக்குக் கடவுளானீர். 25 இப்போதும் கடவுளாகிய யெகோவாவே, நீர் அடியேனையும் அடியேன் வீட்டையும்பற்றிச் சொன்ன வார்த்தையை என்றென்றைக்குமாக நிலைவரப்படுத்தியருளும், தேவரீர் சொன்னபடியே செய்தருளும். 26 சேனைகளின் யெகோவாவே இஸ்ரவேலை ஆளும் கடவுள் என்று உமது திருநாமம் என்றென்றைக்கும் மகிமைப்படுவதாக; அடியேனாகிய தாவீதின் வீடு இப்படியாக உமக்குமுன் நிலைநிற்கும். 27 இஸ்ரவேலின் கடவுளே, சேனைகளின் யெகோவாவே, உனக்கு வீடு

கட்டுவேன் என்று தேவரீர் சொல்லி அடி
யேனுக்கு வெளிப்படுத்தினபடியால் இவ்
வாறு உம்மை நோக்கிப் பிரார்த்திக்க அடி
28 யேன் தைரியங்கொண்டேன். இப்போதும்
யெகோவாவே, என் ஆண்டவரே, நீரே கட
வுள்; உமது வார்த்தைகள் சத்தியம்; தேவ
ரீர் அடியேனுக்கு இந்த நற்செய்தியை அரு
29 விக்கிறீர். இப்போதும் அடியேனின் வீடு
என்றைக்கும் உமக்கு முன்பாக நிலைத்திருக்
கும்படி அதை ஆசீர்வதித்தருளும்; யெகோ
வாவே, என் ஆண்டவரே, தேவரீரே
இதைச் சொன்னீர், உமது ஆசீர்வாதத்தி
னாலே அடியேனின் வீடு என்றைக்கும் ஆசீர்
வதிக்கப்பட்டிருக்கும் என்றான்.

**8** இதற்குப் பின்பு தாவீது பெலிஸ்தியரை
முறியடித்து அவர்களை அடக்கினான்; அவர்
கள் முக்கிய பட்டணத்தை அவர்கள் கையி
2 லிருந்து பறித்துக்கொண்டான். அவன்
மோவாபியரையும் முறியடித்து அவர்களைத்
தரையிலே படுக்கவைத்து அவர்களை நூல்
போட்டு அளந்து, இரண்டு பங்கு மனுஷ
ரைக் கொன்றுபோட்டு ஒரு பங்கை உயி
ரோடே வைத்தான்; இவ்விதமாக மோவாபி
யர் தாவீதுக்கு அடங்கினவர்களாகி அவ
3 னுக்குக் கப்பங்கட்டிவந்தார்கள். ரெகோ
பின் குமாரனாகிய அதாதேசர் என்னும்
சோபாவின் ராஜா, நதியண்டையில் இருக்
கிற நாட்டைத் திரும்பத் தன் வசமாக்கிக்
கொள்ளப்போகையில் தாவீது அவனையும்
4 முறியடித்தான். அவனுக்கு இருந்த இரா
ணுவத்தில் ஆயிரத்து எழுநூறு குதிரை
வீரரையும் இருபதினாயிரம் காலாட்களையும்
பிடித்து, ரதங்களில் நூறு ரதங்களை வைத்
துக்கொண்டு ரதங்களின் குதிரைகளுடைய
கால் நரம்புகளை வெட்டிப்போட்டான்.
5 சோபாவின் ராஜாவாகிய அதாதேசருக்கு
உதவிசெய்யத் தமஸ்குபட்டணத்துச் சீரியர்
வந்தார்கள்; தாவீது சீரியரில் இருபத்தீரா
6 யிரம் பேரைக் கொன்றுவிட்டுத் | தமஸ்கு
பட்டணத்துச் சீரியர் நடுவிலே அதிபதிகளை
வைத்தான்; சீரியர் தாவீதுக்கு அடங்கின
வர்களாகி அவனுக்குக் கப்பங்கட்டிவந்
தார்கள். தாவீது போன இடமெல்லாம்
யெகோவா அவனுக்கு வெற்றிதந்தார்.
7 அதாதேசரின் சேவகருடைய பொற்பரிசை
களைத் தாவீது எடுத்து அவைகளை எருசலே
8 முக்குக் கொண்டுவந்தான். அதாதேசரின்
பட்டணங்களாகிய பேத்தாகிலும் பெரோத்
தாயிலுமிருந்து தாவீது ராஜா மகா திரளான
செம்பையும் எடுத்துக்கொண்டு வந்தான்.
9 தாவீது அதாதேசரின் இராணுவ முழுதை
யும் முறியடித்த செய்தியை ஆமாத்தின்
ராஜாவாகிய தோயீ கேள்விப்பட்டபோது |
10 அவன் தாவீது ராஜாவின் சுகசெய்தியை
விசாரிக்கவும், தாவீது அதாதேசரோடே
யுத்தம்பண்ணி அவனை முறியடித்ததினிமித்
தம் அவனுக்கு ஆசி கூறவும் தன் குமாரனு
கிய யோராமை ராஜாவினிடம் அனுப்பி
னான்.—அதாதேசரும் தோயீயும் யுத்தம்
செய்துகொண்டிருந்தவர்கள்.— மே லும்
யோராம் தன் கையிலே வெள்ளியும் பொன்
னும் செம்புமான தட்டுமுட்டுகளைக் கொண்
டுவந்தான். தாவீதுராஜா முன்னே தான்
11 கீழ்ப்படுத்தின சீரியர், மோவாபியர், அம்
மோன் புத்திரர், பெலிஸ்தியர், அமலேக்கியர்
என்னும் சகல ஜாதியார்களிடத்திலும்
ரெகோபின் குமாரனாகிய அதாதேசர் என்
னும் சோபாவின் ராஜாவினிடத்திலும்
கொள்ளையிட்டவற்றில் எடுத்து | யெகோ
12 வாவுக்கென்று பிரதிஷ்டை செய்துவைத்
திருந்த வெள்ளியோடும் பொன்னோடுங்கூட
யோராம் கொண்டுவந்தவைகளையும் யெகோ
வாவுக்குப் பிரதிஷ்டைபண்ணினான்.
13 தாவீது சீரியரை முறியடித்துத் திரும்பிய
பொழுது உப்புப் பள்ளத்தாக்கிலே பதி
னெண்ணாயிரம்பேரை முறியடித்துக் கீர்த்தி
14 பெற்றான். ஏதோமிலே அதிபதிகளை வைத்
தான்; ஏதோம் எங்கும் அவன் அதிபதிகளை
வைத்ததினாலே ஏதோமியர் யாவரும் தாவீ
துக்கு அடங்கினவர்களானார்கள்; தாவீது
போன இடமெங்கும் யெகோவா அவனுக்கு
வெற்றி தந்தார்.

15 இப்படியாகத் தாவீது இஸ்ரவேல் அனை
த்தின்மேலும் ராஜாவாயிருந்தான்; அவன்
தன் ஜனமுழுதையும் நீதியாய் நியாயம் விசா
ரித்துவந்தான். 16 செருயாளின் குமாரனாகிய
யோவாப் இராணுவத்தலைவனாயிருந்தான்;
அகிலூதின் குமாரனாகிய யோசபாத் மந்திரி
யாயிருந்தான். 17 அ கி தூ பின் குமாரன்
சாதோக்கும் அபியத்தாரின் குமாரன் அகி
மெலேக்கும் ஆசாரியராயிருந்தார்கள்;
செராயா சம்பிரதியாயிருந்தான். 18 யோயாதா
வின் குமாரன் பெனாயா கிரேத்தியருக்கும்
பிலேத்தியருக்கும் தலைவனாயிருந்தான்; தாவீ
தின் குமாரரோ ஆசாரியராயிருந்தார்கள்.

**9** சவுலின் வீட்டாரில் எவனாவது மீதியா
யிருக்கிறானோ? யோனத்தான் நிமித்தம் நான்
அவனுக்குத் தயைகாட்டுவேன் என்று
2 தாவீது சொன்னான். சவுலின் வீட்டுக்
காரியங்களைப் பார்த்துவந்த சீபா என்னும்
பேருள்ள ஒருவனிருந்தான்; அவனைத்
தாவீதினிடம் அழைத்துவந்தார்கள்; ராஜா
அவனைப் பார்த்து, நீதானோ சீபா என்று
கேட்க அவன், அடியேன் தான் என்றான்.

3 அப்பொழுது ராஜா: சவுலின் வீட்டாரில் மீதியானவன் எவனுவது இல்லையா? கடவுளின் தயைப்படியே நான் அவனுக்குத் தயை காட்டுவேன் என்று சொன்னுன்; அதுகேட்ட சீபா ராஜாவினிடம்: யோனத்தானுக்கு இன்னும் ஒரு குமாரன் இருக்கிறுன், அவன் இரண்டு காலும் முடமான 4 வன் என்றுன். அவன் எங்கே என்று ராஜா கேட்டதற்குச் சீபா, இதோ, அவன் லோதெபாரிலே அம்மீயேலின் குமாரனுகிய மாகீரின் வீட்டில் இருக்கிறுன் என்று 5 ராஜாவினிடம் சொன்னுன். அப்படியே தாவீது ராஜா லோதெபாருக்கு ஆள் அனுப்பி அவனை அம்மீயேலின் குமாரனுகிய மாகீரின் வீட்டிலிருந்து அழைத்து 6 வந்தான். சவுலின் குமாரனுகிய யோனத்தானின் மகன் தாவீதினிடம் வந்தபோது முகங்குப்புற விழுந்து வணங்கினுன்; தாவீது, மெவிபோசெத்தே என்று கூப்பிட அவன், இதோ, அடியேன் என்றுன். 7 தாவீது அவனைப் பார்த்து: நீ பயப்படாதே, உன் தகப்பனுகிய யோனத்தான் நிமித்தம் நான் நிச்சயமாகவே உனக்குத் தயைகாட்டி உன் தகப்பனுகிய சவுலின் நிலங்களையெல்லாம் உனக்குத் திரும்பக்கொடுப்பேன்; நீயோ என் பந்தியிலே நித்தம் சாப்பிடுவாய் 8 என்றுன். அப்பொழுது அவன் வணங்கி: செத்த நாய்க்குச் சமானமான என்னை நீர் நோக்கிப் பார்க்கிறதற்கு அடியேன் எம் 9 மாத்திரம் என்றுன். ராஜா சவுலின் ஊழியனுகிய சீபாவை அழைப்பித்து அவனைநோக்கி: சவுலுக்கும் அவர் வீட்டார் அனைவருக்கும் இருந்த யாவற்றையும் உன் எஜமானுடைய குமாரனுக்குக் கொடுத்தேன். 10 நீயும் உன் குமாரரும் உன் வேலைக்காரரும் அந்த நிலத்தைப் பயிரிட்டு அதின் பலனைச் சேருங்கள்; அது உன் எஜமானுடைய குமாரனின் சம்ரக்ஷணைக்காகும்; உன் எஜமானுடைய குமாரன் மெவிபோசெத் நித்தம் என் பந்தியிலே சாப்பிடுவான் என்றுன்; சீபாவுக்குப் பதினைந்து குமாரரும் இருபது வேலைக்காரரும் இருந்தார் 11 கள். சீபா, ராஜாவைப் பார்த்து: ராஜாவாகிய என் ஆண்டவன் தமது அடியானுக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அடியேன் செய்வேன் என்றுன். மெவிபோசெத்தோ ராஜாகுமாரரில் ஒருவனைப்போல ராஜாவின் 12 பந்தியிலே சாப்பிட்டு. வந்தான். மெவிபோசெத்திற்கு மீகா என்னும் பேருள்ள சிறிய குமாரன் ஒருவன் இருந்தான்; சீபாவின் வீட்டிலே குடியிருந்த யாவரும் மெவி 13 போசெத்திற்கு வேலைக்காரர். மெவிபோசெத் எருசலேமிலே குடியிருந்து ராஜாவின் பந்தியிலே நித்தம் சாப்பிட்டுவந்தான்; அவனுக்கு இரண்டு காலும் முடம்.

10 சிலகாலத்துக்குப்பின் அம்மோன் புத்திரரின் ராஜா மரித்துப்போனுன்; அவன் குமாரனுகிய கானூன் அவன் ஸ்தானத்திலே 2 ராஜாவானுன். அப்பொழுது தாவீது கானூனின் தகப்பனுகிய நாகாஸ் எனக்குச் செய்கம் பாராட்டினதுபோல நானும் அவன் குமாரனுகிய இவனுக்குச் செய்கம் பாராட்டுவேன் என்று சொல்லி, அவன் தகப்பன் இறந்த துக்கம் கேட்டுவரத் தன் ஊழியரை அனுப்பினுன்; தாவீதின் ஊழியர் அம்மோன் புத்திரரின் தேசத்திலே சேர்ந்த போது | அம்மோன் புத்திரரின் தலைவர் 3 தங்கள் ஆண்டவனுகிய கானூனிடம் வந்து: துக்கம் கேட்கிறவர்களைத் தாவீது உம்மிடம் அனுப்பினது உமது தகப்பனுரைக் கனம்பண்ணுகிறதற்கென்று நினைக்கிறீரோ? இந்தப் பட்டணத்தை ஆராய்ந்து உளவு பார்த்து அதைக் கவிழ்த்துப்போடுகிறதற்கல்லவோ தாவீது தன் ஊழியரை உம்மிடம் அனுப்பியிருக்கிறுன் என்றார்கள். 4 கானூன் அதைக் கேட்டுத் தாவீதின் ஊழியரைப்பிடித்து அவர்கள் தாடியிலே ஒரு பாதியைச் சிரைத்து அவர்கள் வஸ்திரங்களை இருப்பிடமட்டும் வைத்துவிட்டு மற்றப் பாதியைக் கத்தரித்துப்போட்டு அவர்களை அனுப்பிவிட்டான். அது தாவீதுக்கு அறி 5 விக்கப்பட்டபோது, அது அந்த மனிதருக்குப் பெரிய அவமானமானபடியினுல், ராஜா அவர்களுக்கு எதிராக ஆட்களை அனுப்பி, உங்கள் தாடி வளருமட்டும் நீங்கள் எரிகோவிலிருந்துவிட்டுப் பிற்பாடு வாருங்கள் என்று சொல்லச்சொன்னுன்.

தாவீதுக்குத் தங்கள்மேல் பகை 6 மூண்டதென்று அம்மோன் புத்திரர் கண்டபோது ஸ்தானுபதிகளை அனுப்பிப் பேத்ரெகோபியுள்ள சீரியரிலும் சோபாவிலுள்ள சீரியரிலும் இருபதினுயிரம் காலாட்களையும், மாக்காதேசத்து ராஜாவினிடம் ஆயிரம்பேரையும் இஷ்தோபிலிருந்த பன்னீராயிரம்பேரையும் கூலிப்படையாக அழைப்பித்தார்கள். அதைத் தாவீது 7 கேள்விப்பட்டபோது யோவாபையும் பராக்கிரமசாலிகளின் சமஸ்த ராணுவத்தையும் அனுப்பினுன். அம்மோன் புத்திரர் 8 புறப்பட்டு ஊர் வாசலுக்கு வெளியே போர் செய்ய அணிவகுத்து நின்றார்கள்; சோபாவிலும் ரெகோபிலுமிருந்துவந்த சீரியரும், இஷ்தோபிலும் மாக்காவிலுமிருந்து வந்த ஆட்களும் வெளிகளிலே பிரத்தியேகமாக

9 இருந்தார்கள். ராணுவங்களின் படை
முகம் தனக்கு முன்னும் பின்னும் இருக்
கிறதை யோவாபு கண்டபோது, அவன்
இஸ்ரவேலில் சிரேஷ்டமானவர்கள் யாவரி
லும் ஒரு பங்கைப் பிரித்தெடுத்து அதைச்
சீரியருக்கு எதிராக அணிவகுத்து நிறுத்தி,
10 மற்றப்படைவீரரை அம்மோன் புத்திரருக்கு
எதிராக அணிவகுத்து நிறுத்தும்படி தன்
சகோதரனுகிய அபிஷாயினிடம் ஒப்பு
11 வித்து: சீரியர் கை மிஞ்சுகிறதாயிருந்தால்
நீ எனக்கு உதவி செய்பவேண்டும், அம்
மோன் புத்திரர் கை மிஞ்சுகிறதாயிருந்தால்
நான் உனக்கு உதவிசெய்பவருவேன்;
12 மனேபலங்கொண்டிரு, நமது ஜனத்திற்
காகவும் நமது கடவுளின் பட்டணங்களுக்
காகவும் பலமாய்ப் போர் செய்வோம்;
யெகோவா தமக்கு நலமாய்த் தோன்றுவ
13 தைச் செய்வாராக என்றான். பின்பு யோவா
பும் அவனேடிருந்த வீரரும் சீரியர்மேல்
யுத்தம்பண்ணக் கிட்டினர்கள். அவர்கள்
அவனுக்கு முன்பாக முறிந்தோடினர்கள்.
14 சீரியர் முறிந்தோடினதை அம்மோன் புத்தி
ரர் கண்டபோது அவர்களும் அபிஷா
யிக்கு முன்பாக முறிந்தோடிப் பட்டணத்
திற்குள் புகுந்தார்கள்; யோவாப் அம்மோன்
புத்திரரை விட்டுவிட்டு எருசலேமுக்குத்
15 திரும்பிவந்தான். தாங்கள் இஸ்ரவேல
ருக்கு முன்பாக முறியடிக்கப்பட்டதைச்
சீரியர் கண்டபோது அவர்கள் ஒன்றுப்க்
16 கூடித் திரண்டார்கள். அதாதேசர் நதிக்கு
அப்பாலிருந்த சீரியரையும் அழைத்தனுப்
பினன். அவர்கள் கேலாமுக்கு வந்தார்
கள்; அதாதேசரின் படைத்தலைவனுகிய
17 சோபாக் அவர்கனே நடத்தினன். அது
தாவீதுக்கு அறிவிக்கப்பட்டபோது அவன்
இஸ்ரவேலே யெல்லாம் கூட்டிக்கொண்டு
யோர்தானேக்கடந்து கேலாமுக்குப்
போனன்; சீரியர் தாவீதுக்கு எதிரே அணி
வகுத்து நின்று அவனேடு யுத்தம் பண்ணி
18 னர்கள். அப்பொழுது சீரியர் இஸ்ரவே
லுக்கு முன்பாக முறிந்தோடினர்கள்;
தாவீது சீரியரில் ஏழுநூறு ரதவீரரையும்
நாற்பதினுயிரம் குதிரைவீரரையும் கொன்று
விட்டான்; அவர்கள் படைத்தலைவனுகிய
சோபாகையும் வெட்டினன், அவன் அவ்
19 விடத்திலேயே செத்தான். அதாதேசருக்
குக் கப்பங்கட்டிவந்த சிற்றரசர் யாவரும்
தாங்கள் இஸ்ரவேலுக்கு முன்பாக முறி
யடிக்கப்பட்டதைக் கண்டு இஸ்ரவேல
ரோடே சமாதானம்பண்ணிக்கொண்டு
அவர்களுக்குக் கப்பங்கட்டுகிறவர்களானுர்
கள்; அப்புறம் அம்மோன் புத்திரருக்
குத் தூணையாய்வரச் சீரியர் பயப்பட்டார்
கள்.

மறு வருஷத்தில் ராஜாக்கள் யுத்தத்திற் 11
குப் புறப்படும் காலத்திலே தாவீது யோவா
பையும் அவனேடேகூட அவன் ஆட்களே
யும் இஸ்ரவேலர் அனைவரையும் அனுப்பி
ருன். அவர்கள் சென்று அம்மோன்
புத்திரரின் தேசத்தை அழித்து ரப்பாவை
முற்றுகைபோட்டார்கள். தாவீதோ எருச
லேமில் இருந்துவிட்டான்.

ஒருநாள் சாயங்காலம் தாவீது தன் 2
படுக்கையிலிருந்து எழுந்து அரமனைமாடி
யின்மேல் உலாவிக்கொண்டிருந்தபோது
ஸ்நானம்பண்ணுகிற ஒரு ஸ்திரீயை மாடியின்
மேலிருந்து பார்த்தான். அந்த ஸ்திரீ 3
மிகுந்த அழகுள்ளவள். தாவீது ஆள்
அனுப்பி, அந்த ஸ்திரீ யார் என்று விசாரித்
தான்; அவள் எலியாமின் குமாரத்தியும்
எத்தியனுன உரியாவின் மனைவியுமாகிய
பத்சேபாளே என்றார்கள். அப்பொழுது 4
தாவீது ஆள் அனுப்பி அவனே அழைத்து
வரச் சொன்னன்; அவள் அவனிடம் வந்த
போது அவளோடே சயனித்தான்; அவள்
அப்போதுதான் தன் தீட்டுநீங்கிச் சுத்திகரித்
திருந்தாள்; பின்பு அவள் தன் வீட்டுக்குப்
போய்விட்டாள். அந்த ஸ்திரீ கர்ப்பந் 5
தரித்துத் தான் கர்ப்பவதியென்று தாவீதுக்கு
அறிவிக்க ஆள் அனுப்பினுள். அப் 6
பொழுது தாவீது: ஏத்தியனுகிய உரியாவை
என்னிடம் அனுப்பு என்று யோவாபினண்
டைக்கு ஆள் அனுப்பினன்; அப்படியே
யோவாப் உரியாவைத் தாவீதினிடம் அனுப்
பினன். உரியா தாவீதினிடம் வந்தபோது 7
அவன் உரியாவினிடம் யோவாபின் சுக
செய்தியையும் படைவீரரின் சுகசெய்தி
யையும் யுத்தத்தின் செய்தியையும் விசா
ரித்தான். பின்பு தாவீது உரியாவைப் 8
பார்த்து: நீ உன் வீட்டிற்குப் போய்ப் பாத
சுத்திசெய் என்றான்; உரியா ராஜ அரமனையி
லிருந்து புறப்பட்டபோது ராஜாவினிட
மிருந்து உசிதமான பதார்த்தங்கள் அவன்
பின்னுலே அனுப்பப்பட்டன. உரியாவோ 9
தன் வீட்டிற்குப் போகாமல் ராஜ அரமனை
வாசலண்டையில் தன் ஆண்டவனுடைய
சேவகரனைவரோடுங்கூடப் படுத்துக்கொண்
டிருந்தான். உரியா தன் வீட்டிற்குப் 10
போகவில்லையென்று தாவீதுக்கு தெரியவந்த
போது அவன் உரியாவைக் கூப்பிட்டு: நீ
பிரயாணத்திலிருந்து வந்தவனல்லவா, நீ ஏன்
உன் வீட்டிற்குப் போகவில்லை என்று கேட்
டான். உரியா தாவீதைப் பார்த்து: பெட் 11
டகமும் இஸ்ரவேலும் யூதாவும் கூடாரங்

களிலே தங்கி, என் ஆண்டவனுடைய யோவாபும் என் ஆண்டவனின் சேனைவீரரும் வெளியிலே பாளயமிறங்கியிருக்கையில், நான் புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் என் மனைவியோடே சயனிக்கிறதற்கும் என் வீட்டுக்குப் போவேனோ? நான் அப்படிச் செய்வதில்லை, உமது பேரிலும் உமது ஆத்துமாவின்பேரிலும் ஆணை என்றான். அப்பொழுது தாவீது உரியாவைப்பார்த்து: இன்றைக்கும் நீ இங்கேயிரு, நாளைக்கு உன்னை அனுப்பிவிடுவேன் என்றான்; அப்படியே உரியா அன்றும் மறுநாளும் எருசலேமில் தங்கியிருந்தான். தாவீது அவனைத் தன்னோடி புசிக்கவும் குடிக்கவும் அழைத்து அவனை வெறிக்கப்பண்ணினான்; அவனோ அன்றிரவும் தன் வீட்டுக்குப் போகாமல் தன் ஆண்டவனின் சேவகரோடேயே தன் படுக்கையில் படுத்துக்கொண்டான். காலமே தாவீது யோவாபுக்கு ஒரு கடிதம் எழுதி உரியாவின் கையில் கொடுத்து அனுப்பினான். அந்தக் கடிதத்திலே: போர் மும்முரமாய் நடக்கிற இடத்தில் நீங்கள் உரியாவை நிறுத்தி அவன் வெட்டுண்டு சாகும்படி அவனை விட்டுவிடுங்கள் என்று எழுதியிருந்தான். அப்படியே யோவாப் அந்தப் பட்டணத்தை முற்றுகைபோட்டிருக்கையில் பராக்கிரமசாலிகள் நின்று எதிர்ப்பதாகத் தான் அறிந்த இடத்திலே உரியாவை நிறுத்தினான். பட்டணத்து ஆட்கள் புறப்பட்டு வந்து யோவாபோடே யுத்தம் பண்ணுகையில் தாவீதின் படைவீரரில் சிலர் பட்டார்கள்; ஏத்தியனாகிய உரியாவும் செத்தான். அப்பொழுது யோவாப் அந்தச் சண்டையின் செய்தி முழுதையும் தாவீதுக்கு அறிவிக்க ஆள் அனுப்பினான். அனுப்பும்போதி அந்த ஆளுக்குக் கட்டளையிட்டு: சண்டையின் செய்தி முழுவதையும் நீ ராஜாவுக்குச் சொல்லி முடிக்கும்போது, ராஜாவுக்குக் கோபம் உண்டாகி அவர்: நீங்கள் பட்டணத்திற்கு இத்தனை சமீபமாய்ப் போய்ச் சண்டை செய்ததென்ன? அலங்கத்தில் நின்று எய்வார்கள் என்று உங்களுக்குத் தெரியாதா? எருப்பேஷத்தின் குமாரன் அபிமேலேக்கைக் கொன்றது யார்? தேபேசிலே ஒரு பெண்பிள்ளை அலங்கத்திலிருந்து ஏந்திரமேற்கல்லை அவன்மேல் போட்டதினால் அல்லவோ அவன் செத்தான்; நீங்கள் அலங்கத்திற்கு இத்தனை சமீபமாய்ப் போனது என்ன என்று உன்னோடே சொன்னால், அப்பொழுது நீ, உமது ஊழியனாகிய உரியா என்னும் ஏத்தியனும் செத்தான் என்று சொல் என்றான். அந்த ஆள் சென்று யோவாப் தன்னிடத்தில் சொல்லியனுப்பிய செய்திகளையெல்லாம் தாவீதுக்கு அறிவித்தான். அவன் தாவீதைப் பார்த்து: அந்த மனுஷர் கைமிஞ்சி புறப்பட்டு வெளியிலே எங்களை எதிர்த்து வந்தபோது நாங்கள் பட்டணவாசல்மட்டும் அவர்களைத் துரத்தினோம். அப்பொழுது வில்வீரர் அலங்கத்திலிருந்து உமது படைவீரரின் மேல் எய்ததினால் ராஜாவின் படைவீரரில் சிலர் செத்தார்கள்; உமது ஊழியனாகிய உரியா என்னும் ஏத்தியனும் செத்தான் என்றான். அதைக் கேட்கவே தாவீது அந்த ஆளைப்பார்த்து, நீ யோவாபினிடம் போய், இந்தக் காரியத்தைப்பற்றி விசனப்படவேண்டாம்; ஒருவனைக் கொல்லுகிறபட்டயம் மற்றொருவனையும் கொல்லுமே, நீ யுத்தத்தைப் பலக்கப்பண்ணிப் பட்டணத்தை இடித்துப்போடு என்று அவனுக்குத் தைரியம் சொல் என்றான்.

தன் புருஷனாகிய உரியா செத்தான் என்று அவன் மனைவி கேள்விப்பட்டபோது, அவள் தன் நாயகனுக்காக இழவுகொண்டாடினாள். துக்கநாள் சென்ற பின்பு தாவீது ஆளனுப்பி அவனை அழைத்துத் தன் வீட்டிலே சேர்த்துக்கொண்டான், அவள் அவனுக்கு மனைவியானாள்; அவள் அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள், தாவீது செய்த இந்தக் காரியம் யெகோவாவின் பார்வையில் தீயதாயிருந்தது.

யெகோவா நாத்தானைத் தாவீதினிடம் அனுப்பினார், அவன் இவனிடம் வந்து இவனோடி பேசி: ஒரு ஊரிலே இரண்டு மனுஷர் இருந்தார்கள், ஒருவன் பணக்காரன், மற்றவன் ஏழை. பணக்காரனுக்கு ஆடுமாடுகள் வெகு திரளாயிருந்தன. ஏழைக்கோ தான் வாங்கி வளர்த்த ஒரே ஒரு சிறிய ஆட்டுக்குட்டியைத் தவிர வேறொன்றுமில்லை; அது அவனிடம் அவன் பிள்ளைகளோடு கூடவேயிருந்து வளர்ந்து அவன் வாயின் அப்பத்தைத் தின்று அவன் பாத்திரத்திலே குடித்து அவன் படுக்கும்போது பக்கத்திலே படுத்து உறங்கி அவனுக்குப் பிள்ளைபோல் இருந்தது, அந்தப் பணக்காரன் வீட்டுக்கு வழிப்போக்கன் ஒருவன் வந்தான்; தன்னிடம் வந்த வழிப்போக்கனுக்குச் சமைபல்செய்ய அவன் தன் ஆடுமாடுகளில் ஒன்றைப் பிடிக்க மனதற்று அந்த ஏழையின் ஆட்டுக்குட்டியைப் பிடித்து அதைத் தன் வீட்டுக்கு வந்த மனுஷனுக்குச் சமையல் செய்வித்தான் என்றான். அதைக்கேட்ட தாவீது அந்த மனுஷன்மேல் மிகவும் கோபமூண்டவனாகி,

நாத்தானைப் பார்த்து: இந்தக் காரியத்தைச் செய்த மனுஷன் சாகவேவேண்டும், யெகோ
6 வாவின் ஜீவன்மேல் ஆணை; அவன் இரக்க மற்றவனாயிருந்து இந்தக் காரியத்தைச் செய்தபடியினால் அந்த ஆட்டுக்குட்டிக்காக நாலத்தனை திரும்பக் கொடுக்கவேண்டும் என்றான்.

7 அப்பொழுது நாத்தான் தாவீதைப் பார்த்து: நீயே அந்த மனுஷன், இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா சொல்வதைக் கேள், நான் உன்னை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினேன், உன்னைச் சவுலின் கையினின்று தப்புவித்தேன்;
8 உன் ஆண்டவனுடைய வீட்டை உனக்குக் கொடுத்து உன் ஆண்டவனுடைய ஸ்திரீகளையும் உனக்கென்று தந்தேன், இஸ்ரவேல் வம்சத்தையும் யூதா வம்சத்தையும் உனக்கே கையளித்தேன்; இது போதாதிருந்தால் இன்னும் நீ விரும்புவதையெல்லாம்
9 தருகிறேன். நீ யெகோவாவின் வார்த்தையை அசட்டைபண்ணி, யெகோவாவுக்குத் தீமையாகத் தோன்றுகிற இந்தக் காரியத்தைச் செய்ததென்ன? ஏத்தியனாகிய உரியாவை நீ பட்டயத்தால் மடிவித்து அவன் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டாய்; அவனை அம்மோன் புத்திரரின் பட்டயத்தாலே கொன்று போட்டாய்.
10 இப்போதும் நீ என்னை அசட்டைபண்ணி ஏத்தியனாகிய உரியாவின் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டபடியினால் பட்டயம் என்றைக்கும் உன்
11 வீட்டைவிட்டு விலகாதிருக்கும். யெகோவா சொல்வதைக் கேள், இதோ, நான் உன் வீட்டிலிருந்தே உனக்கு விரோதமாய் கேடு உண்டாகச் செய்வேன்; உன் கண்கள் பார்க்க உன் ஸ்திரீகளை எடுத்து மற்றவனுக்குக் கொடுப்பேன்; அவன் பட்டப்பகலிலே
12 உன் ஸ்திரீகளோடே சயனிப்பான்; நீ ஒளிப்பிடத்தில் அதைச் செய்தாய், நானோ இக் காரியத்தை இஸ்ரவேலர் எல்லாரும் பார்க்கப் பட்டப்பகலிலே செய்விப்பேன் என்
13 றார் என்று சொன்னான். அப்பொழுது தாவீது நாத்தானிடம்: நான் யெகோவாவுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன் என்று சொல்ல நாத்தான் தாவீதைப் பார்த்து: நீ சாகாதபடிக்கு யெகோவாவும்
14 உன் பாவம் நீங்கச் செய்தார்; ஆனாலும் இந்தக் காரியத்தினாலே யெகோவாவின் சத்துருக்கள் தூஷிக்க நீ காரணமாயிருந்தபடியினால், உனக்குப் பிறந்த பிள்ளை நிச்சயமாகவே சாகும் என்று சொல்லிவிட்டு |
15 நாத்தான் தன் வீட்டுக்குப் போய்விட்டான்.

உரியாவின் மனைவி தாவீதுக்குப்பெற்ற ஆண்பிள்ளையை யெகோவா தண்டித்தார், அது வியாதிப்பட்டுக் கேவலமாயிருந்தது.
16 தாவீது அந்தப் பிள்ளைக்காகக் கடவுளை நோக்கிப் பிரார்த்தித்து, உபவாசம் செய்து, உள்ளேபோய் இரவெல்லாம் தரையிலே
17 கிடந்தான். அவனைத்தரையிலிருந்து எழுந் திருக்கப்பண்ண அவன் வீட்டிலுள்ள பெரியோர்கள் எழுந்து அவனிடம் வந்தார்கள்; அவனோ, மாட்டேன் என்று மறுத்து அவர்களோடே சாப்பிடாதிருந்தான்.
18 ஏழாம் நாளில் பிள்ளை செத்துப்போயிற்று. பிள்ளை செத்துப்போயிற்று என்று தாவீதின் ஊழியர் அவனுக்கு அறிவிக்கப் பயந்தார்கள். பிள்ளை உயிரோடிருக்கையில் நாம் அவரோடே பேசினபோது அவர் நமது சொற் கேட்கவில்லை; பிள்ளை செத்துப்போயிற்று என்று அவரிடம் எப்படிச் சொல்லுவோம்? அவர் தமக்கே தீங்கு செய்துகொள்வாரே என்று பேசிக்கொண்டார்கள்.
19 தாவீது தன் ஊழியர் இரகசியமாய்ப் பேசிக் கொள்ளுகிறதைக் கண்டு, பிள்ளை செத்துப் போயிற்று என்று அறிந்து தன் ஊழியரிடம், பிள்ளை செத்துப்போயிற்றோ என்று கேட்க அவர்கள், செத்துப்போயிற்று என்
20 றார்கள். உடனே தாவீது தரையை விட்டெழுந்து ஸ்நானம்பண்ணி எண்ணெய் பூசிக்கொண்டு தன் வஸ்திரங்களை மாற்றி, யெகோவாவின் ஆலயத்திற்குப்போய்ப் பணிந்துகொண்டு தன் வீட்டுக்கு வந்து போஜனம் கேட்டான். அவன் முன்னே
21 அதை வைத்தபோது புசித்தான். அப்பொழுது அவன் ஊழியர் அவனிடம் வந்து: நீர் செய்கிற இந்தக் காரியம் என்ன? பிள்ளை உயிரோடிருக்கையில் உபவாசித்து அழுதீர்; பிள்ளை மரித்தபின்போ எழுந்திருந்து போசனம் பண்ணுகிறீரே என்றார்கள்.
22 அதற்கு அவன்: பிள்ளை இன்னும் உயிரோடிருக்கையில், பிள்ளை பிழைக்கும்படி யெகோவா எனக்கு இரங்குவாரோ இல்லையோ, யாருக்குத் தெரியும் என்று உபவாசித்து அழுதேன், இப்போது அது மரித்துப்
23 போயிற்றே, நான் உபவாசிக்க வேண்டியது என்ன? இனி நான் அதைத் திரும்பி வரப் பண்ணக்கூடுமோ? நான் அதினிடம் போவேனேயல்லாமல் அது என்னிடம் திரும்பி வரப்போகிறதில்லை என்றான்.

24 பின்பு தாவீது தன் மனைவியாகிய பத்சே பாவை ஆற்றித் தேற்றினான்; அவன் அவளிடம்போய் அவளோடே சயனித்தான், அவள் ஒரு குமாரனைப் பெற்றாள்; அவனுக்குச் சாலொமோன் என்று பேரிட்டான்;

யெகோவா அவனில் அன்பாயிருந்தார்.
25 அவர் தீர்க்கதரிசியாகிய நாத்தானை அனுப்பி அவனுக்கு யெதிதியா என்று பேரிட்டார், யெகோவாவின் நிமித்தமே அந்தப் பேர் இடப்பட்டது.
26 அதற்குள்ளே யோவாப் அம்மோன் புத்திரருடைய ராஜதானியாகிய ரப்பாவின்மேல்
27 யுத்தம்பண்ணி அதைப் பிடித்துத் | தாவீதினிடம் ஆள் அனுப்பி, நான் ரப்பாவின் மேல் யுத்தம்பண்ணி ஜலாதார ஸ்தலத்தைப்
28 பிடித்துக்கொண்டேன். நான் பட்டணத்தைப் பிடித்தால் என் பேர் வழங்கும், அப்படி வழங்காதபடி நீர் மீதியான சேனையைக் கூட்டிக்கொண்டு வந்து பட்டணத்தை முற்றுகைபோட்டுப் பிடிக்கவேண்டும்
29 என்று சொல்லச் சொன்னான். அப்படியே தாவீது சேனைமுழுதையும் கூட்டிக்கொண்டு ரப்பாவுக்குப்போய் அதின்மேல்
30 யுத்தம்பண்ணி, அதைப் பிடித்தான். அந்த ராஜாவின் தலைமேலிருந்த கிரீடத்தை எடுத்துக்கொண்டான்; அதன் நிறை ஒரு பொன் தாலந்து, அதிலே ரத்தினங்கள் பதித்திருந்தன; அது தாவீதின் தலையில் வைக்கப்பட்டது; பட்டணத்திலிருந்து ஏராளமான
31 கொள்ளையைக் கொண்டுபோனான். பின்பு அதிலிருந்த ஜனங்களை அவன் வெளியே கொண்டுபோய் வாள்களாலும் இருப்புப் பாரைகளாலும் இருப்புக்கோடரிகளாலும் வேலைசெய்ய அவர்களை நியமித்துச் செங்கற்சூளையிலும் அவர்களிடம் அடிமைவேலை வாங்கினான்; இப்படியே அம்மோன் புத்திரரின் ஊர்களுக்கெல்லாம் செய்துவிட்டுத் தாவீது தன் முழுப்படையோடும் எருசலேமுக்குத் திரும்பினான்.

**13** தாவீதின் குமாரனுகிய அப்சலோமுக்கு ஒரு சகோதரி இருந்தாள், அவள்பேர் தாமார், அவள் அழகுள்ளவள்; தாவீதின் குமாரன் அம்னோன் அவள்மேல் மோகங்
2 கொண்டான். தன் சகோதரியாகிய தாமாரினிமித்தம் ஏக்கங்கொண்டு வியாதிப்பட்டான்; அவள் கன்னிகையாயிருந்தாள், அவனுக்கு ஏதேனும் செய்வது அம்னோனுக்கு
3 அசாத்தியமாய்த் தோன்றிற்று. அம்னோனுக்கு யோனதாப் என்னும் ஒரு சினேகிதன் இருந்தான்; இவன் தாவீதினுடைய தமையன் சிமியாவின் குமாரன்; அந்த
4 யோனதாப் மகா யுக்திசாலி. இவன் அம்னோனைப் பார்த்து: ராஜகுமாரனுகிய நீ காலை தோறும் இப்படி நோய்கொண்டவன்போல் காணப்படுகிறாயே, காரணமென்ன? எனக்குச் சொல்லமாட்டாயா என்றான். அதற்கு அம்னோன்: என் சகோதரன் அப்சலோமின் சகோதரியாகிய தாமாரின்மேல் நான் ஆசை வைத்திருக்கிறேன் என்றான். அப்பொ 5
ழுது யோனதாப் அவனைப்பார்த்து: நீ வியாதிக்காரனைப்போல் உன் படுக்கையின்மேல் படுத்துக்கொள்; உன்னைப் பார்க்க உன் தகப்பனார் வரும்போது, நீ, என் சகோதரியாகிய தாமார் வந்து நான் பார்க்க என் கண்களுக்கு முன்பாகச் சமைத்துத் தன் கையினாலேயே எனக்குப் போஜனம் தரும்படி நீர் அவளைத் தயவாய் அனுப்பவேண்டும் என்று சொல் என்றான். அப்படியே அம் 6
னோன் வியாதிக்காரன்போல் படுத்துக்கொண்டான்; ராஜா அவனைப்பார்க்க வந்தபோது அவன் ராஜாவினிடம்: என் சகோதரியாகிய தாமார் வந்து என் கண்களுக்கு முன்பாகவே இரண்டு மூன்று பணியாரங்களைச் செய்து தன் கையினாலேயே எனக்குச் சாப்பிடக் கொடுப்பதற்கு நீர் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அப்பொழுது தாவீது வீட்டுக்குள் தாமாரி 7
னிடம் ஆள் அனுப்பி, நீ உன் சகோதரனுகிய அம்னோன் வீட்டுக்குப்போய் அவனுக்குச் சமையல் செய்து கொடு என்று சொல்லச் சொன்னான். அப்படியே தாமார் 8
தன் சகோதரனுகிய அம்னோன் படுத்திருந்த வீட்டுக்குப்போய் மாவெடுத்துப் பிசைந்து, அவன் கண்களுக்கு முன்பாகத் தட்டிப் பணியாரங்களைச் சுட்டாள். சட்டியைக் 9
கொண்டுவந்து பணியாரங்களைக் கொட்டி அவனுக்கு முன்பாக அவைகளை வைத்தாள், அவனோ சாப்பிடமாட்டேன் என்றான்; பின்பு அம்னோன், எல்லாரையும் என்னைவிட்டு வெளியே போகச் சொல் என எல்லாரும் அவனைவிட்டு வெளியே போய் விட்டார்கள். அப்பொழுது அம்னோன் 10
தாமாரைப்பார்த்து: நான் உன் கையினாலே சாப்பிடும்படி அந்தப் பலகாரத்தை உள் அறைக்குக் கொண்டுவா என்றான். அப்படியே தாமார் தான் செய்த பணியாரங்களை உள் அறைக்குத் தன் சகோதரனுகிய அம்னோனிடம் கொண்டுபோனாள். அவன் சாப் 11
பிடும்படி அவள் அவைகளைக் கிட்டக் கொண்டுவருகையில் அவன் அவளைப் பிடித்துக்கொண்டு அவளோடு பேசி: என் சகோதரியே, நீ வந்து என்னோடே சயனி என்றான். அதற்கு அவள், வேண்டாம், என் 12
சகோதரனே, என்னை அவமானப்படுத்தாதே, இஸ்ரவேலிலே இப்படிச் செய்கிறதில்லை, இப்படிப்பட்ட மதிகேடான காரியத்தைச் செய்யவேண்டாம். நான் என் 13
வெட்கத்தோடே எங்கே போவேன்; நீயும் இஸ்ரவேலிலே மதிகேடரில் ஒருவனைப்

போல் ஆவாய்; நீ ராஜாவோடே பேசு, அவர் என்னை உனக்குத்தர மறுக்கமாட்
14 டார் என்றாள். அவளை அவள் சொல்லைக் கேளாமல் பலவந்தம் செய்து அவளோ
15 டே சயனித்து அவளைக் கற்பழித்தான். பிற்பாடு அம்னோன் அவளை மிகவும் வெறுத்தான்; முன் அவனுக்கிருந்த விருப்பத்திலும் இப்போது அவனுக்குண்டான வெறுப்பு அதிகம். ஆகவே அவன் அவளிடம், நீ எழுந்து போய்விடு என்று சொன்னான்.
16 அவளோ: அப்படியல்ல; நீ எனக்கு முன் செய்த தீமையிலும் இப்பொழுது என்னைத் துரத்திவிடுகிறது அதிகத் தீமையாகும் என்றாள். அவளை அவள் சொல்லைக்கேட்க
17 மனதில்லாமல் தன்னைவிட்டிருந்துவருகிறதன் வேலைக்காரனைக் கூப்பிட்டு: நீ இந்தப் பெண்ணை என்னைவிட்டு வெளியே தள்ளிக்
18 கதவைப் பூட்டு என்றான். அப்படியே அந்த வேலைக்காரன் அவளை வெளியே தள்ளிக் கதவைப் பூட்டினான். அவள் நிலையங்கி உடுத்திக்கொண்டிருந்தாள்; ராஜகுமாரத்திகளாகிய கன்னிகைகள் இவ்வகையான அங்கிகளைத் தரித்துக்கொள்வது வழக்கம்.
19 அப்பொழுது தாமார் தன் தலையின்மேல் சாம்பலை வாரிப் போட்டுக்கொண்டு தான் தரித்திருந்த நிலையங்கியைக் கிழித்துத் தன் கையைத் தன் தலையின்மேல் வைத்துச் சத்த
20 மிட்டு அழுதுகொண்டேபோனாள். அவள் சகோதரனாகிய அப்சலோம் அவளைக் கண்டு: உன் சகோதரன் அம்னோன் உன்னோடிருந்தானே? என் சகோதரியே, நீ ஒன்றும் சொல்லாதிரு, அவன் உன் சகோதரன்; இந்தக் காரியத்தை மனதிலே வைக்கவேண்டாம் என்றான். அப்படியே தாமார் தன் சகோதரனாகிய அப்சலோமின் வீட்டிலே
21 பாழானவள் போலிருந்தாள். தாவீதுராஜா இந்தச் செய்திகளையெல்லாம் கேள்விப்பட்டபோது அவனுக்கு அதிகக் கோபமூண்
22 டது. அப்சலோமோ அம்னோனிடம் நன்மையோ தீமையோ ஒன்றும் பேசாதிருந்தான். தன் சகோதரியாகிய தாமாரை அம்னோன் அவமானப்படுத்தியதினிமித்தம் அப்சலோம் அவனைப் பகைத்தான்.

23 இரண்டு வருஷம் சென்றபின்பு, அப்சலோம் எப்பிராயீமுக்குச் சமீபமான பாகால் காத்சோரிலே ஆட்களை வைத்து, ஆடுகளை மயிர்கத்தரித்துக்கொண்டிருந்தான்; அங்கே ராஜகுமாரர் எல்லாரையும்
24 அழைத்தான். அவன் ராஜாவினிடம்போய், இதோ, அடியேன் ஆட்களை வைத்து ஆடுகளை மயிர்கத்தரிக்கிறேன், ராஜாவும் அவருடைய ஊழியரும் அடியேனுடனே வரும்
படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்று கேட்க | ராஜா அவனிடம்: வேண்டாம், 25
என் மகனே, நாங்கள் எல்லாரும் வருவது சரியாகாது, உனக்குப் பாரமாகும் என்றான்; அவனை வருந்திக்கேட்டும் அவன் போகச் சம்மதிக்கவில்லை; அவனுக்கு நல்வார்த்தை சொல்லிவிட்டான். அப்பொ 26
ழுது அப்சலோம்: அது சரியாகாதென்றால் என் சகோதரனாகிய அம்னோனவது எங்களோடே வரும்படி அவனுக்கு உத்தரவு செய்யும் என்றான். அதற்கு ராஜா: அவன் ஏன் உன்னோடே வரவேண்டும் என்று சொல்லிவிட்டான். அப்சலோமோ பின் 27
னையும் ராஜாவை வருந்திக் கேட்டுக்கொள்ளவே அவன் அம்னோனையும் ராஜாவின் குமாரர் அனைவரையும் அவனோடே அனுப்பிவைத்தான்.

அப்சலோம் தன் வேலைக்காரருக்குக் 28
கட்டளையிட்டு: அம்னோன் எப்போது திராட்சரசம் குடித்துக் களித்திருப்பான் என்று சமயம் பார்த்திருங்கள்; நான் அம்னோனை அடியுங்கள் என்று சொல்லுவேன், உடனே நீங்கள் அவனைக் கொன்றுபோடுங்கள், பயப்படவேண்டாம், நான் அல்லவோ உங்களுக்குக் கட்டளையிடுகிறேன்; மனோபலங்கொண்டிருங்கள், பராக்கிரமசாலிகளாயிருங்கள், என்று சொல்லியிருந்தான். அப்சலோம் கட்டளையிட்டிருந்தபடியே 29
அவன் வேலைக்காரர் அம்னோனுக்குச் செய்தார்கள்; ராஜகுமாரர் எல்லாரும் உடனே எழுந்திருந்து தத்தம் கோவேறு கழுதைகளின்மேல் ஏறி ஓட்டம்பிடித்தார்கள்.
அவர்கள் வழியில் இருக்கிறபோதே, அப் 30
சலோம் ராஜகுமாரரையெல்லாம் அடித்துக் கொன்றுபோட்டான், ஒருவரையும் தப்பவிடவில்லை என்று தாவீதுக்குச் செய்தி வந்தது. அச்செய்தியைக் கேட்ட மாத்தி 31
ரமே ராஜா எழுந்து தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு தரையிலே விழுந்து கிடந்தான்; அவன் சகல ஊழியரும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு சுற்றி நின்றார்கள். அச்சமயத்தில் தாவீதின் 32
தமையனாகிய சிமியாவின் குமாரன் யோனதாப் ஓடிவந்து: என் ஆண்டவனே, ராஜகுமாரரான வாலிபரையெல்லாம் கொன்று போட்டார்கள் என்று நினைக்கவேண்டாம்; அம்னோன் மாத்திரம் செத்திருப்பான்; அவன் அப்சலோமின் சகோதரியாகிய தாமாரை அவமானப்படுத்தின நாள்முதற்கொண்டே அப்சலோமின் முகக்குறி இதை விளக்கிற்று. ராஜகுமாரர் அனை 33
வரும் மாண்டார்கள் என்கிற செய்தியை

ராஜாவாகிய என் ஆண்டவன் தமது மனதிலே கொள்ளவேண்டாம்; அம்னோன் ஒருவனே செத்திருப்பான் என்றான்; இதற்குள் அப்சலோம் ஓடிப்போய்விட்டான்.
34 காமக்காரச் சேவகன் தன் கண்களை நிமிர்ந்து நோக்கவே, இதோ, அநேக ஜனங்கள் தனக்குப் பின்னேயுள்ள மலைப் பக்கத்
35 திலே வருகிறதைக் கண்டான். அப்பொழுது யோனதாப் ராஜாவைப் பார்த்து: இதோ, ராஜகுமாரர் வருகிறார்கள்; அடியேன் சொன்னபடியே நடந்திருக்கிறது
36 என்றான். அவன் பேசி முடியவே, இதோ, ராஜகுமாரர் வந்துவிட்டார்கள்; அவர்கள் சத்தமிட்டு அழுதுகொண்டே வந்தார்கள்; ராஜாவும் அவன் ஊழியர் யாவரும் மிக
37 வும் புலம்பி அழுதார்கள். அப்சலோமோ அம்மிஹூதின் குமாரனாகிய தல்மாய் என்னும் கெசூரின் ராஜாவினிடம் ஓடிப் போனான். தாவீது நாளெல்லாம் தன் குமாரனிமித்தம் துக்கித்துக்கொண்டிருக்
38 தான். அப்சலோம் கெசூருக்கு ஓடிப்போய் அங்கே மூன்றுவருஷமிருந்தான்.
39 அம்னோன் மரித்ததினால் தனக்குண்டான துக்கம் நீங்கித் தாவீது ஆறுதலடைந்த போது அவன் அப்சலோமினிடம்போக மிகவும் வாஞ்சையாயிருந்தான்.

**14** ராஜாவின் இருதயம் இன்னும் அப்சலோமின்மேல் பற்றுதலாயிருப்பதைச் செரூயாளின் குமாரன் யோவாப் கண்டு |
2 தெக்கோவாவிலிருந்த புத்திசாலியான ஒரு ஸ்திரீயை அழைத்து: நீ இழவுகொண்டாடுகிறவள்போல் துக்கவஸ்திரம் தரித்துக் கொண்டு, எண்ணெய் பூசிக்கொள்ளாமல், இறந்துபோனவனிமித்தம் நெடுநாள் துக்
3 கிக்கிறவள்போல் நடித்து | ராஜாவினிடம் போய் அவரிடம் இன்னின்ன பிரகாரமாகச் சொல் என்று அவள் சொல்லவேண்டிய வார்த்தைகளை யோவாப் அவளுக்குச்
4 சொல்லிக் கொடுத்தனுப்பினான். அப்படியே அந்தத் தெக்கோவா ஊராள் ராஜாவினிடம் போய்த் தரையிலே முகங்குப் புறவிழுந்து வணங்கி அவனோடு பேசி:
5 ராஜாவே, உதவிசெய்யும் என்றாள். ராஜா அவளைப் பார்த்து, உனக்கு என்னவேண்டும் என்று கேட்க அவள்: நான் ஒரு விதவை, என் புருஷன் செத்துப்போனார்;
6 உமது அடியாளுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்; அவர்கள் இருவரும் ஒரு நாள் வெளியிலே சண்டைசெய்தார்கள், அவர்களை விலக்க ஒருவரும் இல்லாதபடியினால் ஒருவன் மற்றவனை அடித்துக்
7 கொன்றுபோட்டான். வம்சத்தார் எல்லாரும், இதோ, உமது அடியாளுக்கு விரோதமாய் எழும்பித் தன் சகோதரனைக் கொன்றுபோட்டவனை ஒப்புக்கொடு, அவன் கொன்ற அவன் சகோதரனுடைய பிராணனுக்குப் பதிலாக நாங்கள் அவனைக் கொன்றுபோடுவோம்; சுதந்தரவாளனேயாயினும் அவனை அழித்துப்போடுவோம் என்கிறார்கள். இப்படியாக என் புருஷனுக்குப் பேரும் பின் சந்ததியும் பூமியின் மேல் இராதபடி எனக்கு இன்னும் மீதியாயிருக்கிற சிறு தணலையும் அவித்துப்போடப் போகிறார்கள் என்றாள். ராஜா அந்த 8
ஸ்திரீயைப் பார்த்து: நீ உன் வீட்டுக்குப் போ, உன் காரியத்தைக் குறித்து உத்தரவு கொடுப்பேன் என்றான். பின்னும் அந்தத் 9
தெக்கோவா ஊராள் ராஜாவைப் பார்த்து: ராஜாவே, என் ஆண்டவனே, அதற்குரிய பழி என்மேலும் என் தகப்பன் வீட்டின் மேலும் சுமரட்டும்; ராஜாவின்மேலும் அவர் சிங்காசனத்தின்மேலும் குற்றமில்லை என்றாள். அதற்கு ராஜா: உனக்கு விரோதமாகப் பேசுகிறவனை என்னிடம் கொண்டுவா; அவன் இனி உன்னைத் தொடாதிருப்பான் என்றான். பின்னும் அவள்: இரத்தப்பழி வாங்குகிறவர்கள் என் குமாரனை அழித்து நிர்மூலமாக்கி அதிகத் தீமையை உண்டாக்காதபடி ராஜாவானவர் தமது கடவுளாகிய யெகோவாவை நினைப்பாராக என்றாள். அதற்கு ராஜா: உன் குமாரனுடைய மயிரில் ஒன்றாவது தரையில் விழுவதில்லை, யெகோவாவின் ஜீவன்மேல் ஆணை என்றான்.

அப்பொழுது அந்த ஸ்திரீ: ராஜாவாகிய 12
என் ஆண்டவனிடம் உமது அடியாள் ஒரு வார்த்தைசொல்ல உத்தரவாகவேண்டும் என்றாள். அவன், சொல் என்று உத்தரவு கொடுக்கவே | அவள், பின்னை என் கடவு 13
ளின் ஜனத்திற்கு விரோதமாக நீர் அதைப் போன்ற எண்ணத்தையே கொண்டிருக்கிறீர், துரத்துண்ட தமது குமாரனை ராஜா திரும்ப அழைக்காததினாலே, ராஜா இப்பொழுது சொன்ன வார்த்தையின்படி குற்றமுள்ளவரைப்போல் இருக்கிறார். நாம் மரிப்பது நிச்சயம், தரையிலே சிந்தப் 14
பட்ட தண்ணீரைப்போல் இருக்கிறோம், அதைத் திரும்ப எடுத்துச் சேர்க்கமுடியாது. கடவுளோ உயிரை அழித்துவிடுகிறவரல்ல, துரத்துண்டவன் முற்றிலும் துரத்துண்டவனாயிராதபடி யோசனைசெய்துகொண்டேயிருக்கிறார். இப்பொழுதும் நான் என் 15
ஆண்டவனாகிய ராஜாவோடே இந்த வார்த்தையைப் பேசவந்த முகாந்தரம் இதுவே:

ஜனங்கள் எனக்குப் பயமுண்டாக்கினார்கள்; நான் போய் ராஜாவினிடம் பேசுவேன், ஒருவேளை ராஜா தமது அடியாளின் விண்ணப்பத்தின்படி செய்வார் என உமது
16 அடியாளாகிய நான் நினைத்தேன். ராஜா செவிகொடுத்து, என்னையும் என் குமாரனையும் ஏகமாய்க் கடவுளின் சுதந்தரத்திற்குப் புறம்பாக்கி அழிக்க நினைக்கிற மனுஷனின் கைக்குத் தமது அடியாளை நீங்க
17 லாக்கி விடுவிப்பார். ராஜாவாகிய என் ஆண்டவனுடைய வார்த்தை எனக்கு ஆறுதலாயிருக்கும் என்று உமது அடியாளாகிய நான் எண்ணினேன்; நன்மை தீமைகளை அறிந்துகொள்வதில் ராஜாவாகிய என் ஆண்டவன் கடவுளின் தூதனையே போல்வார்; உமது கடவுளாகிய யெகோவா உம்மோடிருப்பாராக என்று சொன்னாள்.

18 ராஜா அந்த ஸ்திரீயினிடம்: நான் உன்னிடத்தில் கேட்கும் கார்யத்தை ஒளிக்காமல் சொல் என்று கேட்க அந்த ஸ்திரீ, ராஜாவாகிய என் ஆண்டவனே, கேளும்
19 என்றாள். அப்பொழுது ராஜா: இதெல்லாம் உனக்கு உட்கையாய் இருப்பது யோவாப்தானே என்று கேட்டான். அதற்கு அந்த ஸ்திரீ: ராஜாவாகிய என் ஆண்டவன் சொல்வதையெல்லாம் விட்டு எவனும் வலது இடதுபுறம் விலகமுடியாது. ராஜாவாகிய என் ஆண்டவன் உயிரோடிருக்கிறார் என்பதைப்போன்ற நிச்சயமான காரியமே இது; உமது அடியாளாகிய யோவாப்தான் இதை எனக்குக் கட்டளையிட்டு அவனே இந்த வார்த்தைகளையெல்லாம் உமது அடியாளுக்குச் சொல்
20 லிக்கொடுத்தான். காரியத்தை கோர்முகமாய்த் திருப்பவேண்டுமென்று உமது அடியாளாகிய யோவாபே இதைச் செய்தான். பூலோகமெங்கும் நடப்பதையெல்லாம் தெரிந்துகொள்வதில் என் ஆண்டவனுடைய அறிவோ தேவதூதனின் அறிவே போலிருக்கிறது என்றாள்.

21 பின்பு ராஜா யோவாபைக் கூப்பிட்டு: சரி, அப்படியே செய்கிறேன், நீ போய் என் பிள்ளையாகிய அப்சலோமைத் திரும்ப
22 அழைத்துக்கொண்டுவா என்றான். அப்பொழுது யோவாப் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கி, ராஜாவை வாழ்த்தி: ராஜா தமது அடியாளுடைய விருப்பத்தின்படி செய்ததினால் என் ஆண்டவனாகிய ராஜாவினிடம் எனக்குத் தயை கிடைத்தது என்று இன்று அடியேனுக்குத் தெரியவந்
23 தது என்றான். பின்பு யோவாப் எழுந்து கேசூருக்குப்போய் அப்சலோமை எருசலேமுக்கு அழைத்துக்கொண்டு வந்தான்.
24 ராஜாவோ, அவன் என் முகத்தைப் பார்க்க வேண்டாம், தன் வீட்டுக்குப் போகட்டும் என்றான்; ராஜாவின் சொற்படியே அப்சலோம் ராஜாவின் முகத்தைப் பார்க்காமல் தன் வீட்டுக்குப் போய்விட்டான்.

25 இஸ்ரவேலர் அனைவரிலும் அப்சலோமைப்போல் சவுக்கிரிய முள்ளவனுகை மெச்சிக்கொள்ளப்பட்டவன் எவனும் இல்லை; உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அவனில் ஒரு பழுதும் இல்லாதிருந்தது.
26 அவன் தலைமயிர் அவனுக்குப் பாரமாயிருந்ததினால் வருஷந்தோறும் சிரைத்துக்கொள்ளுவான்; சிரைக்கும்போது அவன் தலைமயிர் ராஜ நிறையின்படி இருநூறு சேக்கல் நிறையாயிருக்கும்.
27 அப்சலோமுக்கு மூன்று குமாரரும் தாமார் என்று பேர் கொண்ட ஒரு குமாரத்தியும் பிறந்திருந்தார்கள்; இவள் ரூபவதியான பெண்.

28 அப்சலோம் ராஜாவின் முகத்தைப் பார்க்காமலே இரண்டு வருஷம் எருசலேமில் குடியிருந்தான்.
29 ஆகவே அப்சலோம் யோவாபை ராஜாவினிடம் அனுப்பும்படி அழைப்பித்தான்; அவனே அவனிடத்திற்கு வர மறுத்துவிட்டான்; இரண்டாம் விசையும் அழைத்தனுப்பினான், திரும்பவும் மறுத்துவிட்டான்.
30 அப்பொழுது அவன் தன் வேலைக்காரரைக் கூப்பிட்டு: இதோ, என் நிலத்திற்கு அருகே யோவாபின் நிலம் இருக்கிறது, அதிலே அவனுக்கு வாற்கோதுமை விளைந்திருக்கிறது, நீங்கள் போய் அதைத் தீக்கொளுத்திவிடுங்கள் என்றான்; அப்படியே அப்சலோமின் வேலைக்காரர் அந்த நிலத்தைத் தீக்கொளுத்தி விட்டார்கள்.
31 அப்பொழுது யோவாப் எழுந்திருந்து அப்சலோமின் வீட்டிற்குப் போய், என் நிலத்தை உமது வேலைக்காரர் கொளுத்திவிட்டதென்ன என்று கேட்டான்.
32 அப்சலோம் யோவாபினிடம்: நான் உம்மை ராஜாவினிடம் அனுப்பி, இதோ, நான் ஏன் கெசூரிலிருந்து வந்தேன், அங்கேயே இருந்திருந்தால் எனக்கு நல்லது என்று ராஜாவுக்குச் சொல்லுவதற்கு உம்மை இங்கே கூப்பிட்டேன்; இப்போது நான் ராஜாவின் முகத்தைப் பார்க்கவேண்டும்; என்மேல் குற்றமிருந்தால் அவர் என்னைக் கொன்றுபோடட்டும் என்றான்.
33 யோவாப் ராஜாவினிடம் போய் அதை அறிவித்தபோது ராஜா அப்சலோமை அழைப்பித்தான்; அவன் ராஜாவினிடம் வந்து ராஜாவுக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்

கினன்; வணங்கவே ராஜா அப்சலோமை முத்தமிட்டான்.

15 இதன் பின்பு அப்சலோம் ஒரு ரதத்தையும் குதிரைகளையும் தனக்கு முன் ஓட ஐம்
2 பது சேவகரையும் சம்பாதித்தான். மேலும் அப்சலோம் காலேதோறும் எழுந்திருந்து ஊர் வாசலுக்குப் போகிறவழி ஓரத்திலே நின்றுகொண்டு, நியாயம் விசாரித்துத் தீர்க்கவேண்டுமென்று தன் வழக்கை ராஜாவினிடம் கொண்டுபோகும் ஒவ்வொருவனையும் அழைத்து, நீ எந்த ஊரான் என்று கேட்பான்; அவன், அடியேன் இஸ்ரவேல் கோத்திரங்களில் இன்ன கோத்தி
3 ரத்தான் என்று சொல்லும்போது | அப்சலோம் அவனிடம்: இதோ, உன் காரியம் நலமும் நேர்மையுமானதே; ராஜாவினிடத்திலே உன் காரியத்தை விசாரிப்பார் ஒரு
4 வரும் இல்லை என்பான். பின்னும் அப்சலோம்: ஏன்னைத் தேசத்திலே நியாயாதிபதியாக வைத்தால் நலமாயிருக்கும்; வழக்கு வியாஜ்யமுள்ளவர்கள் எல்லாரும் என்னிடம் வந்தால் நான் அவர்களுக்கு நியாயங்
5 கிடைக்கச் செய்வேன் என்பான். எவனாகிலும் அவனைக்கிட்டி வணங்க வரும்போது அவனைத் தழுவி முத்தஞ்செய்வான்.
6 இவ்விதமாக அப்சலோம் ராஜாவினிடத்தில் நியாயத்திற்காக வரும் இஸ்ரவேலருக்கெல்லாம் செய்து இஸ்ரவேலரின் இருதயத்தைக் கவர்ந்துகொண்டான்.
7 நாலு வருஷம் சென்றது, அப்போது அப்சலோம் ராஜாவோடு பேசி: நான் யெகோவாவுக்குப் பண்ணின என் பொருத்தனையை எப்பெரோனில் செலுத்துவதற்
8 குப் போகும்படி உத்தரவுகொடும். யெகோவா என்னை எருசலேமுக்குத் திரும்பி வரப் பண்ணினால் யெகோவாவுக்கு ஆராதனை செய்வேன் என்று அடியேன் சீரியா தேசத்தில் கெசூரிலே குடியிருந்தபோது பொருத்
9 தனை பண்ணினேன் என்றான். அதற்கு ராஜா, சமாதானத்தோடே போய்வா என்றான்; அவன் எழுந்து எப்பெரோனுக்குப்
10 போனான். அப்சலோம் இஸ்ரவேல் கோத்திரங்களுக்கெல்லாம் இரகசிய தூதரை அனுப்பி, நீங்கள் எக்காள தொனியைக் கேட்கும்போது, அப்சலோம் எப்பெரோனிலே ராஜாவானான் என்று சொல்லுங்கள்
11 என்று சொல்லிவைத்திருந்தான். இருநூறுபேர் எருசலேமிலிருந்து அப்சலோமோடே போனார்கள்; இவர்கள் விருந்தினராய் அழைக்கப்பட்டிருந்தவர்கள்; அவர்கள் வஞ்சகமின்றி ஒன்றும் அறியா
12 மற் போனார்கள். அப்சலோம் பலிகளைச் செலுத்தும்போது, தாவீதின் ஆலோசனைக்காரனாகிய அகித்தோப்பேல் என்னும் கீலோனியனையும் அவன் ஊராகிய கீலோவிலிருந்து வரவழைப்பித்தான்; அப்படியே கட்டுப்பாடு பலத்து, ஜனங்கள் அப்சலோமினிடம் திரளாய்வந்து கூடினார்கள்.

அப்பொழுது தாவீதினிடம் ஒருவன் 13
வந்து, இஸ்ரவேலில் ஒவ்வொருவருடைய இருதயமும் அப்சலோமைப் பற்றிக்கொண்டது என்று அறிவித்தான். அதைக் கேட்ட 14
தாவீது எருசலேமிலே தன்னோடிருந்த தன் ஊழியர் அனைவரையும் கூப்பிட்டு: எழுந்து ஓடிப்போவோம், ஓடிப்போகாவிட்டால் நாம் அப்சலோமுக்குத் தப்ப இடமில்லை; அவன் சீக்கிரமாய் நம்மேல் வந்து நமக்குப் பொல்லாங்கு செய்து நகரத்தை வாள் வாய்க்கு இரையாக்கிவிடுவான்; அதற்கு ஏது இராதபடி சீக்கிரமாய்ப் புறப்படுங்கள் என்றான். ராஜாவின் ஊழியர் அவ 15
னிடம்: சகல காரியங்களிலும் ராஜாவின் சித்தப்படியே, இதோ, உமது அடியார் ஆயத்தம் என்றார்கள். அப்படியே ராஜா 16
வும் அவனுடைய வீட்டார் எல்லாரும் கால்நடையாய்ப் புறப்பட்டார்கள்; ராஜா தனது வைப்பாட்டிகளாகிய பத்து ஸ்திரீகளை வீட்டுக்காவலாகப் பின்வைத்துப் போனான். ராஜாவும் அவனுடைய ஆட் 17
கள் யாவரும் கால்நடையாய்ப் புறப்பட்டுக் கடைமுனை வீட்டண்டையிலே தாமதித்து நின்றார்கள். அவனுடைய ஊழியர் அனை 18
வரும் கிரேத்தியர் யாவரும் பிலேத்தியர் யாவரும் அவன் பக்கத்திலே நடந்து போனார்கள்; காத் பட்டணத்திலிருந்து அவனைப் பின்பற்றிவந்திருந்த இத்தியராகிய அறுநூறு பேரும் ராஜாவுக்கு எதிராக நடந்து கடந்தார்கள். அப்பொழுது ராஜா இத் 19
தியனாகிய ஈத்தாயைப் பார்த்து: நீ எங்களோடுகூட வருவானேன்? நீ திரும்பிப் போய், ராஜாவாயிருக்கிறவனுடனே இரு; நீ அந்திய தேசத்தான், நீ உன் நாட்டை விட்டு வந்தவன்; நீ நேற்றுத்தானே வந்தாய், இன்று நான் உன்னை எங்களோடே திரிந்தலையும்படி அழைத்துக்கொண்டு போகலாமா? நான் போகுமிடமின்றி அலைந்து திரிகிறேன்; நீ உன் சகோ 20
தரரையும் அழைத்துக்கொண்டு, திரும்பிப்போ; கிருபையும் சத்தியமும் உன்னோடிருப்பதாக என்றான். ஈத்தாபோ 21
வான் ராஜாவினிடம்: ராஜாவாகிய என் ஆண்டவன் எங்கே இருப்பாரோ அங்கேயே அடியேனும் இருப்பேன், செத்தாலும் பிழைத்தாலும் சரியே; யெகோவாவின் ஜீவன்

மேலும் ராஜாவாகிய என் ஆண்டவனுடைய ஜீவன்மேலும் ஆணை என்றான்.
22 அப்பொழுது தாவீது ஈத்தாயினிடம், சரி, நடவுங்கள் என்றான்; அப்படியே இத்தியனாகிய ஈத்தாயும் அவனோடிருந்த சகல மனுஷரும், பிள்ளைகள் உட்படக் கடந்து
23 போனார்கள். சகல ஜனங்களும் நடந்து போகிறபோது தேச முழுதும் அழுதது, எக சத்தமாய் அழுதார்கள்; ராஜா கேதரோன் ஈரோடையைக் கடந்தான்; ஜனங்கள் எல்லாரும் வனாந்தரத்திற்குப் போகிற வழியே நடந்து போனார்கள்.
24 சாதோக்கும் அவனோடிருந்த சகல லேவியரும் வந்தார்கள்; அவர்கள் கடவுளின் உடன்படிக்கைப் பெட்டகத்தைச் சுமந்துவந்து அதை அங்கே வைத்தார்கள்; அது அங்கே இருக்கையில் அபியத்தாரும் வந்துவிட்டான்; ஜனங்கள் எல்லாரும் நகரத்திலிருந்து கடந்துதீருமட்டும் அது
25 அங்கே இருந்தது. ராஜா சாதோக்கைப் பார்த்து: கடவுளின் பெட்டகத்தை நகரத்திற்குத் திரும்பக்கொண்டுபோ; யெகோவாவினிடம் எனக்குக் கிருபை கிடைத்தானால் அவர் என்னைத் திரும்ப வரப்பண்ணி, நான் அதையும் அவர் வாசஸ்தலத்தையும்
26 பார்க்கும்படி செய்வார். அவர், உன்மேல் எனக்குப் பிரியமில்லை என்றாலோ தமக்கு நலமாய்த் தோன்றுகிறபடியே அவர் எனக்குச் செய்யட்டும், அவர் சித்தம் என்றான்.
27 மேலும் ராஜா ஆசாரியனாகிய சாதோக்கைப்பார்த்து: நீ ஞானதிருஷ்டிகன் அல்லவா, நீ சமாதானத்தோடே நகரத்திற்குத் திரும்பு; உன் மகன் அகிமாசும் அபியத்தாரின் மகன் யோனத்தானுமாகிய உங்கள்
28 குமாரர் இருவரும் உங்களோடேயே திரும்பிப் போகட்டும். உங்களிடத்திலிருந்து எனக்குச் செய்தி வருமட்டும் நான் வனாந்தரத்திற்குப்போகும் வழியிலுள்ள இறங்குதுறைகளிலே தங்கியிருப்பேன் என்றான்.
29 அப்படியே சாதோக்கும் அபியத்தாரும் கடவுளின் பெட்டகத்தை எருசலேமுக்குத் திரும்பக் கொண்டுபோய் அங்கே இருந்தார்கள்.
30 தாவீது தன் தலையை மூடி வெறுங்காலால் நடந்த அழுதுகொண்டு ஒலிவ மலையின்மேல் ஏறிப்போனான். அவனோடிருந்த யாவரும் தங்கள் தலையை மூடி
31 அழுதுகொண்டே ஏறினார்கள். அப்சலோமோடே கட்டுப்பாடு பண்ணினவர்களில் அகித்தோப்பேலும் ஒருவன் என்று தாவீதுக்கு அறிவிக்கப்பட்டபோது தாவீது, யெகோவாவே, அகித்தோப்பேலின் ஆலோசனையை அவமாக்கிவிடும் என்றான். வழக்கமாய்க் கடவுளைத் 32
தொழுதுகொள்ளும் மலையின் உச்சிக்குத் தாவீது வந்தபோது, இதோ, அற்கியனாகிய கூஷாய் தன் வஸ்திரத்தைக் கிழித்துக் கொண்டு தலையின்மேல் புழுதியைப் போட்டுக்கொண்டவனாய் அவனுக்கு எதிர்ப்பட்டான். தாவீது அவனைப் பார்த்து: நீ என் 33
னோடே வருவாயானால் எனக்குப் பாரமாவாய். நீ நகரத்திற்குத் திரும்பிப்போய் 34
அப்சலோமோடு பேசி: ராஜாவே, உமது ஊழியனாயிருப்பேன்; முன்னே நான் உமது தகப்பனாருக்கு ஊழியனாயிருந்தேன்; இப்போதோ நான் உமக்கு ஊழியனாவேன் என்பாயேயானால் நீ அகித்தோப்பேலின் ஆலோசனையை அபத்தமாக்கி எனக்கு
நன்மை செய்வாய். உன்னோடே அங்கே 35
சாதோக்கு, அபியத்தார் என்னும் ஆசாரியர்களும் இருக்கிறார்களே; ராஜாவின் வீட்டிலே நீ என்னென்ன செய்தி கேள்விப்படுவாயோ அதையெல்லாம் சாதோக்கு அபியத்தார் என்னும் ஆசாரியர்களுக்கு அறிவித்துவிடு; அங்கே அவர்களோடே அவர் 36
களின் இரண்டு குமாரரும், சாதோக்கின் மகன் அகிமாசும் அபியத்தாரின் மகன் யோனத்தானும் இருக்கிறார்கள்; நீங்கள் கேள்விப்படும் செய்திகளையெல்லாம் அவர்கள் மூலமாய் எனக்கு அனுப்பிவிடுங்கள் என்றான். அப்படியே தாவீதின் சிநேகி 37
தனாகிய கூஷாய் நகரத்திற்குப்போனான்; அதேசமயத்தில் அப்சலோமும் எருசலேமுக்கு வந்தான்.

தாவீது மலையுச்சியிலிருந்து சற்றப்புறம் **16**
நடந்துபோனபோது, இதோ, மெவிபோசேத்தின் காரியக்காரனாகிய சீபா, பொதி ஏற்றியிருந்த இரண்டு கழுதைகளோ ஓட்டிக்கொண்டு வந்து அவனுக்கு எதிர்ப்பட்டான்; அவைகளில் இருநூறு அப்பங்களும் நூறு சிராட்சை அடைகளும் கோடைகாலப் பழத்திற்செய்த நூறு அடைகளும் ஒரு தருத்தி திராட்சரசமும் இருந்தது. ராஜா சீபாவைப் பார்த்து, இவைகள் என் 2
னத்திற்கு என்று கேட்கச் சீபா: கழுதைகள் ராஜாவின் வீட்டார் ஏறுகிறதற்கும், அப்பங்களும் அடைகளும் ஆட்கள் சாப்பிடுகிறதற்கும் திராட்சரசம் வனாந்தரத்தில் விடாய்த்துப்போனவர்கள் குடிக்கிறதற்குமே என்றான். அப்பொழுது ராஜா: உன் 3
ஆண்டவனுடைய குமாரன் எங்கே என்று கேட்டதற்குச் சீபா ராஜாவைப் பார்த்து: இதோ, அவன் எருசலேமில் இருக்கிறான்; இஸ்ரவேல் வீட்டார் என் தகப்பனுடைய

ராஜ்யத்தை இன்று என்வசம் திருப்பிவிடுவார்கள் என்கிறான் என்று சொன்னான். 4 அப்பொழுது ராஜா சீபாவை நோக்கி: மெவிபோஷெத்திற்கு உரியதெல்லாம் உன்னுடையதாயிற்று என்றான். அதற்குச் சீபா: உம்மை வணங்குகிறேன், ராஜாவாகிய என் ஆண்டவனே, உம்மிடத்தில் எனக்குத் தயை கிடைக்கவேண்டும் என்றான். 5 தாவீது ராஜா பகூரிமட்டும் வந்தபோது, இதோ, சவுலின் வம்சத்தைச் சேர்ந்த ஒருவன் அவனுக்கு எதிர்ப்பட்டான், அவன் கேராவின் குமாரன். அவன் பேர் சிமேயீ. இவன் தாவீதைச் சபித்துக்கொண்டே நடந்தவந்தான்; 6 சகல ஜனங்களும் சகல பலசாலிகளும் தாவீதின் வலது இடதுபுறங்களில் நடக்கையிலேயே இவன் தாவீதின் மேலும் தாவீது ராஜாவின் சகல ஊழியர் மேலும் கற்களை எறிந்தான். 7 சிமேயீ அவனைச் சபித்து: இரத்தப் பிரியனே, பேலியாலின் மனுஷனே, தொலைந்துபோ, தொலைந்துபோ. 8 சவுலின் ஸ்தானத்தில் ராஜாவான உன்மேல் யெகோவா சவுல் வீட்டாரின் இரத்தப்பழி முழுதையும் திரும்பப் பண்ணினார்; ராஜ்யபாரத்தை யெகோவா உன் குமாரனாகிய அப்சலோமின் கையில் ஒப்புக்கொடுத்தார், இதோ, நீ உன் அக்கிரமத்தில் அகப்பட்டுக்கொண்டாய்; நீ இரத்தப் பிரியனான மனுஷன் என்றார். 9 அப்பொழுது செருயாளின் குமாரன் அபிஷாய் ராஜாவைப் பார்த்து: செத்தநாயாகிய இவன் ராஜாவாகிய என் ஆண்டவனைச் சபிப்பானேன்? நான் போய் அவன் தலையை வாங்கிப் போடட்டுமே என்றான். 10 அதற்கு ராஜா: செருயாளின் குமாரரே, எனக்கும் உங்களுக்கும் என்ன? அவன் என்னைச் சபிக்கட்டும்; தாவீதைச் சபிக்கவேண்டுமென்று அவனுக்குச் சொன்னவர் யெகோவா; அப்படியிருக்க ஏன் இப்படிச் செய்கிறாய் என்று கேட்பவன் யார் என்றான். 11 பின்னும் தாவீது அபிஷாயையும் தன் ஊழியர் எல்லாரையும் பார்த்து: இதோ, என் சொந்தக் குமாரனே என் பிராணனை வாங்கத்தேடும்போது இந்தப் பென்யமீனியன் எத்தனை அதிகமாய்ச் செய்வான், அவன் சபிக்கட்டும், அவனுக்கு கட்டளையிட்டவர் யெகோவாவே. 12 அவன் எனக்குச் செய்யும் அக்கிரமத்தை யெகோவா பார்த்து ஒருவேளை இந்நாளில் அவன் என்னைச் சபித்த சாபத்துக்குப் பதிலாக எனக்கு நன்மை செய்வார் என்றான். 13 அப்படியே தாவீதும் அவன் ஆட்களும் வழிப்பாதையிலே நடந்துபோனார்கள்; சிமேயீயோ மலையின் பக்கத்திலே கூடவே நடந்து சபித்து, அவனுக்கு நேரே கற்களை எறிந்து மண்ணைத் தூற்றிக்கொண்டே வந்தான். 14 ராஜாவும் அவனோடிருந்த சகல ஜனங்களும் அயேபீம் சேர்ந்து இளைப்பாறினார்கள்.

15 அப்சலோம் இஸ்ரவேலராகிய தன் சகல ஜனங்களோடுங்கூட எருசலேமுக்கு வந்தான், அகித்தோப்பேலும் அவனோடிருந்தான். 16 அற்கியனாகிய கூஷாய் என்னும் தாவீதின் சிநேகிதன் அப்சலோமினிடம் வந்தபோது அவன் அப்சலோமை வாழ்த்தி: ராஜா வாழ்க, ராஜா வாழ்க என்றான். 17 அப்சலோம் கூஷாயைப்பார்த்து: உன் சிநேகிதன்மேல் உனக்குள்ள தயை இதுதானோ? உன் சிநேகிதனோடே நீ போகாதிருந்தது என்ன என்று கேட்டான். 18 அதுகேட்ட கூஷாய் அப்சலோமினிடம்: அப்படிப் போவது சரியல்ல, யெகோவாவும் இந்த ஜனமும் இஸ்ரவேலரனைவரும் எவரைத் தெரிந்துகொண்டார்களோ அவரையே நான் சேர்ந்துகொள்ளுவேன், அவரோடேயே இருப்பேன். 19 அன்றியும் நான் சேவை செய்யவேண்டியிருப்பது யாரிடத்தில்? அவருடைய குமாரனிடத்தில் தானே. உமது தகப்பனிடத்தில் எப்படிச் சேவித்தேனோ அப்படியே உம்மிடத்திலும் சேவிப்பேன் என்றான்.

20 அப்சலோம் அகித்தோப்பேலைப் பார்த்து, நாங்கள் செய்யவேண்டியது இன்னதென்று ஆலோசனைசொல்லும் என்று கேட்க, அகித்தோப்பேல்: 21 வீட்டுக்காவலாக உமது தகப்பனார் விட்டுப்போயிருக்கிற அவருடைய வைப்பாட்டிகளை நீர் எடுத்துக்கொள்ளும், அப்பொழுது உமது தகப்பனுக்கு நீர் அருவருப்பானீர் என்று இஸ்ரவேலர் யாவரும் கேள்விப்படுவார்கள், உம்மோடிருக்கிறவர்கள் யாவரும் தைரியமடைவார்கள் என்றான். 22 அப்படியே அப்சலோமுக்கு மாடியின்மேல் ஒரு கூடாரத்தைப் போட்டார்கள்; அங்கே அப்சலோம் சகல இஸ்ரவேலருக்கும் தெரியத் தன் தகப்பனுடைய வைப்பாட்டிகளோடு சேர்ந்தான். 23 அந்நாட்களில் அகித்தோப்பேல் சொல்லும் ஆலோசனை தெய்வவாக்குக் கிடைப்பதுபோலிருந்தது; அகித்தோப்பேலின் ஆலோசனையெல்லாம் தாவீதும் அப்சலோமும் அப்படியே மதித்தார்கள்.

17 பின்பு அகித்தோப்பேல் அப்சலோமோடு பேசி: நான் பன்னீராயிரம்பேரைத் தெரிந்தெடுத்துக்கொண்டு இன்று இரவே புறப்பட்டுத் தாவீதைப் பிடிக்கப்போக உத்தரவு

2 கொடும். அவர் விடாய்த்து மனந்தளர்ந்த
வராயிருக்கையில் நான் அவரிடம் போய்
அவரைத் திடுக்கிடப்பண்ணுவேன்; அவ
ரோடிருக்கும் ஜனங்கள் யாவரும் ஓடிப்
போவார்கள்; நான் ராஜாவைமாத்திரம்
3 வெட்டிப்போடுவேன். ஜனங்கள் யாவரை
யுமோவெனில் உமது வசமாய்த் திரும்பப்
பண்ணுவேன்; நீர் தேடுகிற மனிதனையே
தவிர யாவரும் திரும்பிவந்தால் முழு
ஜனத்திற்கும் சமாதானமிருக்கும் என்
4 ருன். இது அப்சலோமுக்கும் இஸ்ரவேல
ரின் சகல மூப்பருக்கும் நலமாகத் தோன்றி
னது.

5 அப்சலோமோ, அற்கியனுகிய கூஷா
யைக் கூப்பிட்டு அவன் வாய்மொழியையும்
6 கேட்போம் என்ருன். கூஷாய் அப்சலோ
மினிடம் வரவே அப்சலோம் அவனைப்
பார்த்து: இந்தப்பிரகாரமாக அகித்தோப்
பேல் சொல்லுகிருன், அவன் சொல்லுகிற
படி செய்வோமா? அல்லவென்ருல் உன்
அபிப்பிராயத்தைச் சொல் என்ருன்.
7 கூஷாய் அப்சலோமினிடம்: இந்த விசை
அகித்தோப்பேல் சொன்ன ஆலோசனை
8 நல்லதல்ல என்று சொல்லிப் | பின்னும்,
உமது தகப்பனும் அவர் ஆட்களும் பல
சாலிகள், வெளியிலே குட்டிகளைப் பறி
கொடுத்த கரடிபோல மனமெரிகிறவர்கள்,
இதெல்லாம் உமக்குத் தெரியும்; உம்மு
டைய தகப்பனும் தேர்ந்த யுத்தவீரர், அவர்
இராக்காலத்தில் ஜனங்களோடே தங்கமாட்
9 டார். இதோ, அவர் இப்பொழுது ஒரு
கெபியிலாவது வேறேயொரு இடத்திலாவது
ஒளித்திருப்பார்; துவக்கத்திலேதானே நமது
ஆட்களில் சிலர் பட்டார்களேயானால்
அதைக் கேட்கிற யாவரும் அப்சலோமைச்
சேர்ந்துகொண்ட ஜனங்களில் சங்காரம்
10 உண்டாயிற்று என்பார்கள். அப்பொழுது
சிங்கத்தின் இருதயத்திற்கொத்த இருதய
முள்ள பலவானும் கலங்கிப்போவான்;
உம்முடைய தகப்பன் பராக்கிரமசாலி என்
றும் அவரோடிருக்கிறவர்கள் பலசாலிகள்
என்றும் இஸ்ரவேலர் அனைவருக்கும் தெரி
11 யும். ஆகவே என் யோசனை இது, தாண்
முதல் பெயேர்ஷெபாமட்டும் உள்ளவர்
களும் கடற்கரை மணல்போல் திரண்டவர்
களுமான இஸ்ரவேலர் அனைவரையும்
கூட்டவேண்டும், நீர்தானே அவர்களோடு
12 யுத்தத்திற்குப்போகவேண்டும். அப்பொழுது
அவர் இருக்கிற இடத்திலே நாம் அவரிடம்
போய்ப் பனி பூமியின்மேல் இறங்குவது
போல அவர்மேல் இறங்குவோம், அவரையா
வது அவரோடிருப்பவர்களில் எவனையாவது
தப்பவிடுவதில்லை. ஒரு பட்டணத்திற்குள் 13
புகுந்துகொள்வாரேயானுல், இஸ்ரவேலர்
எல்லாரும் அந்தப் பட்டணத்தின்மேல்
கயிறுகளைப்போட்டு அதை இழுத்து ஆற்
றிலே போடுவார்கள்; அப்பட்டணத்தில்
ஒரு பொடிக்கல்லும் மீதியாயிராது என்ருன்.
அப்பொழுது அப்சலோமும் இஸ்ரவேலர் 14
அனைவரும், அகித்தோப்பேலின் ஆலோசனை
யைப் பார்க்கிலும் அற்கியனுகிய கூஷா
யின் ஆலோசனை சிறந்தது என்ருர்கள்;
இப்படியாக அப்சலோமின்மேல் தீங்கு
வரப்பண்ணும்பொருட்டு, அகித்தோப்பே
லின் நல்ல ஆலோசனையை அபத்தமாக்கு
கிறதற்கு யெகோவா தீர்மானித்துவிட்
டார்.

பின்பு கூஷாய் சாதோக், அபியத்தார் 15
என்னும் ஆசாரியரைப்பார்த்து, இன்ன
இன்னபடி அகித்தோப்பேல் அப்சலோ
முக்கும் இஸ்ரவேலின் மூப்பருக்கும் ஆலோ
சனை சொன்னுன்; நானே இன்ன இன்ன
படி ஆலோசனை சொன்னேன். இப்பொழு 16
தும் நீங்கள் சிக்கிரமாய்த் தாவீதினிடம் ஆள்
அனுப்பி: நீர் இன்று இரவு வனாந்திரத்திற்
குப் போகும் வழியிலுள்ள இறங்கு துறை
களிலே தங்கவேண்டாம்; ராஜாவும் அவ
ரோடிருக்கிற சகல ஜனங்களும் அழிக்கப்
படாதபடி தாமதமின்றி அக்கரைப்பட
வேண்டும் என்று சொல்லுங்கள் என்ருன்.
யோனத்தானும் அகிமாசும் ஏன்ரோகேல் 17
அண்டை நின்றுகொண்டிருப்பார்கள்,—
அவர்கள் பட்டணத்தில் காணப்படப்
பயந்து உட்செல்லாதிருந்தார்கள்,—ஒரு
வேலைக்காரி அங்கேபோய் அதை அவர்
களுக்குச் சொல்லுவாள்; அவர்கள் தாவீது
ராஜாவுக்கு அதை அறிவிக்கப் போவார்கள்.
அன்றையதினமோ ஒரு ஆள் அவர்களைக் 18
கண்டு அப்சலோமுக்கு அறிவித்தான்;
ஆகையால் அவர்கள் இருவரும் விரைந்து
போய்ப் பகூரிமிலிருந்த ஒருவன் வீட்டிற்
குள் நுழைந்தார்கள்; அவன் முற்றத்தில்
ஒரு கிணறு இருந்தது; அதிலே இறங்கி
னர்கள். வீட்டுக்காரி ஒரு பாயை எடுத் 19
துக் கிணற்றுவாயின்மேல் விரித்துக் கா
யம் வெளிப்பட்டுவிடாதபடி அதின்மேல்
கொய்யைப் பரப்பிவைத்தாள். அப்சலோ 20
மின் ஆட்கள் வீட்டிற்குள் அந்த ஸ்திரீயி
னிடம் வந்து: அகிமாசும் யோனத்தானும்
எங்கே என்றுகேட்க, அந்த ஸ்திரீ: அவர்கள்
வாய்க்காலுக்கு அப்பாலே போய்விட்டார்
கள் என்ருள்; இவர்கள் தேடிக் காணுதே
போய் எருசலேமுக்குத் திரும்பினர்கள்.
இவர்கள் போனபிற்பாடு அவர்கள் கிணற்றி 21

லிருந்து ஏறிவந்து, தாவீது ராஜாவினிடம் போய் அவனிடம்: சீக்கிரமாய் எழுந்து ஆற்றைக் கடந்துபோங்கள், இன்னபடி அகித்தோப்பேல் உங்களுக்கு விரோதமாய் ஆலோசனை சொன்னான் என்று அறிவித்
22 தார்கள். அப்படியே தாவீதும் அவனோடிருந்த சகல ஜனங்களும் எழுந்து யோர்தானைக் கடந்துபோனார்கள்; பொழுதுவிடிகிறதற்குள்ளாக ஒருவரும் பின்றுவிடாமல் எல்லாரும் யோர்தானைக் கடந்தார்கள்.
23 தன் யோசனையின்படி நடக்கவில்லை என்று அகித்தோப்பேல் கண்டபோது, தன் கழுதையின்மேல் சேணம்வைத்து ஏறித் தன் ஊரிலிருந்த தன் வீட்டுக்குப்போய்த் தன் வீட்டுக்காரியங்களை ஒழுங்குபடுத்திவிட்டு தான்றுகொண்டு செத்தான்; அவன் தகப்பன் கல்லறையிலே அவனை அடக்கம்பண்ணினார்கள்.
24 தாவீது மகனயீமுக்கு வந்தான்; அப்சலோமும் சகல இஸ்ரவேலரோடுங்கூட
25 யோர்தானைக் கடந்தான். அப்சலோம், யோவாபுக்குப் பதிலாக அமாசாவை இராணுவத்தலைவனுக்கினான்; இந்த அமாசா இஸ்ரவேலனாகிய யித்திரா என்பவனுடைய குமாரன்; இந்த யித்திரா நாகாசின் குமாரத்தியும் யோவாபின் தாயான செருயாளின் சகோதரியுமாகிய அபிகாலைச் சேர்த்திருந்தவன்.
26 இஸ்ரவேல் ஜனங்களும் அப்சலோமும் கிலெயாத் நாட்டிலே பாளயமிறங்கினார்கள்.
27 தாவீது மகனயீமில் சேர்ந்தபோது, அம்மோன் புத்திரரின் தேசத்து ரப்பாபட்டணத்தானாகிய சோபி என்னும் நாகாசின் குமாரனும் லோதெபார் ஊரானான அம்மீயேலின் குமாரன் மாகீரும் ரோகெலிம் ஊரானும் கிலெயாத்தியனான பர்சிலாயும் தாவீதினிடம்
28 வந்தார்கள்; இவர்கள் படுக்கைகளையும் தட்டுகளையும் மண்பாண்டங்களையும் கோதுமையையும் வாற்கோதுமையையும் மாவையும் வறுத்தபயற்றையும் பெரும்பயறு சிறு
29 பயறுமாகிய வறுத்த பயறுகளையும் | தேனையும் தயிரையும் ஆடுகளையும் பால்கட்டிகளையும் தாவீதுக்கும் அவனோடிருந்த ஜனங்களுக்கும் சாப்பிடக் கொண்டுவந்தார்கள்; அந்த ஜனங்கள் வனாந்தரத்திலே பசியும் இளைப்பும் தவனமுமாயிருப்பார்கள் என்று இப்படிச் செய்தார்கள்.

**18** தாவீது தன்னோடிருந்த ஜனங்களை இலக்கம்பார்த்து அவர்கள்மேல் ஆயிரத்துக்கு அதிபதிகளையும் நூற்றுக்கு அதிபதிகளையும்
2 வைத்தான்; பின்பு தாவீது சேனையிலே மூன்றில் ஒரு பங்கை யோவாபின் வசமாகவும் மூன்றில் ஒரு பங்கைச் செருயாளின் குமாரனும் யோவாபின் சகோதரனுமான அபிஷாயின் வசமாகவும், மூன்றில் ஒரு பங்கை கித்தியனாகிய ஈத்தாயின் வசமாகவும் அனுப்பி: நானும் உங்களோடேகூடப் புறப்பட்டு வருவேன் என்று ராஜா சேனை 3
வீரரிடம் சொன்னான். சேனைவீரரோ: நீர் புறப்படவேண்டாம்; நாங்கள் முறிந்தோடிப்போனாலும் அவர்கள் அதை ஒரு காரியமாகக் கவனிக்கமாட்டார்கள், எங்களில் பாதிப்பேர் செத்துப்போனாலும் எங்கள் காரியத்தைப்பற்றிக் கவலைப்படமாட்டார்கள்; நீரோ எங்களில் பதினாயிரம் பேருக்குச் சரி; நீர் பட்டணத்தில் இருந்துகொண்டு எங்களுக்கு உதவிசெய்வது எங்களுக்கு நலமாகும் என்றார்கள். அப்பொழுது ராஜா 4
அவர்களிடம்: உங்களுக்கு எது நலமாய்த் தோன்றுகிறதோ அதைச் செய்வேன் என்று சொல்லி ராஜா ஊர் வாசலின் ஓரத்திலே நின்றுகொண்டான். சேனைவீரர் அணிவரும் நூறு நூறுகவும் ஆயிரம் ஆயிரமாகவும் புறப்பட்டார்கள். ராஜா, யோவாப் அபி 5
ஷாய் ஈத்தாய் என்பவர்களிடம், என் பிள்ளையாகிய அப்சலோமை என்னிமித்தம் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கட்டளையிட்டான்; ராஜா அப்சலோமைப்பற்றி அதிபதிகளுக்கெல்லாம் இப்படிக் கட்டளையிட்டதை ஜனங்கள் எல்லாரும் கேட்டார்கள்.

சேனை வெளியே இஸ்ரவேலருக்கு எதிராக 6
புறப்பட்டது, எப்பிராயீம் காட்டிலே யுத்தம் நடந்தது. அங்கே இஸ்ரவேல் 7
சேனை தாவீதின் வீரருக்கு முன்பாக முறியடிக்கப்பட்டது; பெரிய சங்காரமுண்டாயிற்று, அங்கே அன்றையதினம் இருபதினாயிரம்பேர் மடிந்தார்கள். அந்தப் பிராந்திய 8
முழுதும் யுத்தம் பரவிக்கொண்டேபோனது. அன்றையதினம் பட்டயத்தினால் விழுந்தவர்களைப் பார்க்கிலும் காட்டிலே விழுந்தவர்கள் மிகவும் ஏராளமானவர்கள்.

அப்சலோம் தாவீதின் படைவீரருக்கு 9
எதிர்பட நேர்ந்தது. அப்சலோம் கோவேறு கழுதையின்மேல் ஏறி வரும்போது அந்தக் கோவேறு கழுதை சன்னல் பின்னலான ஒரு பெரிய கர்வாலி மரத்தின்கீழ் வந்தபோது அவனுடைய தலை கர்வாலிமரத்தில் மாட்டிக்கொண்டது, அவன் வானத்துக்கும் பூமிக்கும்நடுவே தொங்கினான். அவன் ஏறியிருந்த கழுதை அப்பாலே போயிற்று. அதை ஒரு 10
வன் கண்டு யோவாபுக்கு அறிவித்து, இதோ, அப்சலோமை ஒரு கர்வாலி மரத்திலே தொங்கக்கண்டேன் என்றான். அப் 11

பொழுது யோவாப் தனக்கு அதை அறிவித்
தவனைப் பார்த்து: நீ அதைக் கண்டாயே;
பின்னே ஏன் அவனை அங்கேயே வெட்டித்
தள்ளிப் போடவில்லை? நான் உனக்குப்
பத்து வெள்ளிக்காசையும் ஒரு கச்சையை
யும் கொடுத்திருக்கவேண்டியதாகுமே என்
12 ருன். அந்த மனிதன் யோவாபினிடம்: என்
கைகளில் ஆயிரம் வெள்ளிச் சேக்கல் நிறுத்
துக் கொடுத்தாலும் ராஜாவின் குமாரன்மேல்
நான் கை நீட்டமாட்டேன். உங்களில்
யாராலுலும் சரி, பிள்ளையாகிய அப்சலோ
மைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளுங்
கள் என்று ராஜா உமக்கும் அபிஷாய்க்கும்
ஈத்தாய்க்கும் எங்கள் காதுகள் கேட்கக்
13 கட்டளையிட்டாரே. நான் அதற்கு விரோத
மாய் இவனுக்கு மோசம் செய்வேனுலுல்—
ராஜாவுக்கு எதுவும் மறைந்திருக்கமாட்
டாது—நீரும் என்னைக் கைவிடுவீரே என்று
14 சொன்னன். யோவாபோ, நான் இப்படி
உன்னோடு காலம் போக்கமாட்டேன்
என்று சொல்லித் தன் கையிலே மூன்று
வல்லயங்களை எடுத்துக்கொண்டுபோய், அப்
சலோம் இன்னும் கர்வாலி மரத்தின் நடுவி
லே உயிருள்ளவனுய்த் தொங்குகையில்
அவைகளை அவன் நெஞ்சிலே குத்தினன்.
15 அப்பொழுது யோவாபின் ஆயுதங்களைச்
சுமக்கும் பத்துச்சேவகர் அப்சலோமை
16 அடித்துக் கொன்றுபோட்டார்கள். அப்
பொழுது யோவாப் எக்காளம் ஊதி ஜனங்
களை நிறுத்திவிட்டான்; சேனைவீரர் இஸ்ர
வேலைத் தொடராமல் திரும்பிவிட்டார்கள்.
17 அவர்கள் அப்சலோமை எடுத்துக் காட்
டிலிருந்த ஒரு பெரிய குழியிலேபோட்டு
அவன்மேல் மகா பெரிய கற்குவியலைக்
குவித்தார்கள்; இஸ்ரவேலர் அனைவரும் தங்
கள் தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப்போ
18 னர்கள். அப்சலோம் உயிரோடே இருக்
கையில்: என்பேரை நிலைக்கச் செய்வதற்கு
எனக்கு ஒரு குமாரன் இல்லை என்று
சொல்லி, ராஜாவின் பள்ளத்தாக்திலே தனக்
கென்று ஒரு கற்தூண் நிறுத்தி அந்தத்
தூணுக்குத் தன்பேரைத் தரித்திருந்தான்.
அது இந்நாள்வரைக்கும் அப்சலோமின்
ஞாபக சிலை என்று சொல்லப்படுகிறது.
19 சாதோக்கின் குமாரனுகிய அகிமாஸ்:
யெகோவா ராஜாவை அவர் சத்துருக்களின்
கைக்கு நீங்கலாக்கி நியாயஞ்செய்தார் என்
னும் செய்தியை அவருக்குக் கொண்டுபோக
நான் ஓடும்படி எனக்கு உத்தரவுகொடும்
20 என்ருன். யோவாப் அவனிடம்: இன்றைய
தின செய்தியைக் கொண்டுபோகிறவன் நீ
யல்ல; இன்னெருநாளில் நீ செய்தி கொண்டு
போகலாம், இன்றையதின செய்தி ராஜ
குமாரனின் மரணமே, அதை நீ கொண்டு
போகவேண்டாம் என்று சொல்லி |
யோவாப் கூஷியனைக் கூப்பிட்டு: நீ போய்க் 21
கண்டதை ராஜாவுக்கு அறிவி என்ருன்;
கூஷியன் யோவாபை வணங்கி ஓடினன்.
சாதோக்கின் குமாரனுகிய அகிமாஸ் பின் 22
னும் யோவாபினிடம், எப்படியானுலும்
கூஷியன்பிறகே நானும் ஓடும்படி உத்தரவு
கொடும் என்று திரும்பக் கேட்டதற்கு
யோவாப்: என் மகனே, நீ ஏன் ஓடவேண்
டும், நீ கொண்டுபோகும் செய்திக்கு வெகு
மதி கிடையாதே என்ருன். அவன், எப் 23
படியானுலும் நான் ஓடுவேன் என்று சொல்
லவே, யோவாப், ஓடு என்ருன்; அப்படியே
அகிமாஸ் சமபூமிவழியாய் ஓடிக் கூஷிய
னுக்கு முந்திக்கொண்டான்.
தாவீது ஊர் வாசலுக்குள் உட்கார்ந்திருந் 24
தான், காவற்காரச்சேவகன் அலங்கத்தி
லுள்ள வாசல்மாடியின் மதிலோரத்தில்
நடந்துகொண்டிருந்தவன் தன் கண்களை
ஏறெடுத்து, இதோ, ஒரு மனுஷன் தனியே
ஓடிவருகிறதைக்கண்டு | கூப்பிட்டு ராஜா 25
வுக்கு அறிவித்தான். அப்பொழுது ராஜா:
அவன் ஒருவனுய் வந்தால் அவன் நற்
செய்தி கொண்டுவருகிறவனும் என்ருன்.
அவன் ஓடிக்கொண்டே கிட்டிவருகை
யில் | காவற்காரச்சேவகன் வேருருவனும் 26
ஓடிவருவதைக்கண்டு, அதோ, பின்னும்
ஒருவன் தனியே ஓடிவருகிறான் என்று
வாசல்காக்கிறவனைக் கூப்பிட்டுச் சொன்
னன்; ராஜா அதைக்கேட்டு, அவனும்
நற்செய்தி கொண்டுவருகிறவனே என்ருன்.
பின்னும் காவற்காரச்சேவகன்: முந்தினவன் 27
ஒட்டம் சாதோக்கின் குமாரன் அகிமாசின்
ஓட்டம்போல் எனக்குத் தோன்றுகிறது
என்ருன். அப்பொழுது ராஜா: அவன்
நல்ல மனுஷன், அவன் நற்செய்தி சொல்ல
வருகிறான் என்ருன்.
அகிமாஸ் வந்து ராஜாவினிடம்: ராஜா 28
வாழ்க என்று சொல்லி முகங்குப்புற
விழுந்து ராஜாவை வணங்கி: உமது கடவு
ளாகிய யெகோவாவுக்கு ஸ்தோத்திரம்,
ராஜாவாகிய என் ஆண்டவனுக்கு விரோத
மாய்த் தங்கள் கைகளை எடுத்த மனுஷ
ரை ஒப்புக்கொடுத்தார் என்ருன். அப் 29
பொழுது ராஜா, என் பிள்ளையாகிய அப்ச
லோம் சுகமாயிருக்கிறானே என்று கேட்ட
தற்கு அகிமாஸ், ராஜாவின் வேலைக்காரனு
கிய அடியேனை யோவாப் அனுப்பும்
போது பெரிய சந்தடியாயிருந்தது, அது
இன்னதென்று தெரியாது என்ருன். அப் 30

பொழுது ராஜா, நீ அங்கே போய் நில் என, அவன் ஒரு பக்கத்திலே போய் நின்றான்.
31 இதோ, கூஷியன் வந்து: ராஜாவாகிய என் ஆண்டவனே, நற்செய்தி, இன்று யெகோவா உமக்கு விரோதமாய் எழும்பின யாவருடைய கைக்கும் உம்மை நீங்கலாக்கி
32 நியாயஞ்செய்தார் என்றான். ராஜா கூஷியனைப்பார்த்து, என் பிள்ளையாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானென்று கேட்ட தற்குக் கூஷியன்: அந்தப் பிள்ளையாண்டானுக்கு நடந்ததுபோல, ராஜாவாகிய என் ஆண்டவனின் சத்துருக்களுக்கும் தீங்கு செய்ய உமக்கு விரோதமாய் எழும்புகிற யாவருக்கும் நடக்
33 கட்டும் என்றான். அதைக் கேட்கவே ராஜா மிகவும் வருந்தி வாசல்மாடியின்மேல் ஏறிப்போய் அழுதான்; அவன் போகையில், என் மகனே, அப்சலோமே, என் மகனே, என் மகனே, அப்சலோமே, நீ சாகாமல் நான் செத்திருந்தால் நலமாயிருக்கும்; அப்சலோமே, என் மகனே, என் மகனே என்று சொல்லி அழுதான்.

**19** இதோ, ராஜா அப்சலோமினிமித்தம் அழுது புலம்புகிறார் என்று யோவாபுக்கு
2 அறிவிக்கப்பட்டது. ராஜா தமது குமாரனினிமித்தம் மனம் கொந்தியிருக்கிறார் என்று அன்றையதினம் ஜனங்கள் கேள்விப்பட்டார்கள்; ஆகவே அன்றையதினம் அந்த ஜெயம் ஜனத்திற்கெல்லாம் துக்கமாய்
3 மாறிற்று. யுத்தத்தில் முறிந்தோடுகிறதினால் வெட்கப்பட்டுத் திருட்டளவாய் வருகிறவர்கள்போல் சேனைவீரர் அன்றையதினம் திருட்
4 டளவாய் ஊருக்குள் வந்தார்கள். ராஜா தன் முகத்தை மூடிக்கொண்டு, மகா சத்தமாய், என் மகனே, அப்சலோமே, அப்சலோமே, என் மகனே, என் மகனே என்று
5 கதறிக்கொண்டிருந்தான். அப்பொழுது யோவாப் வீட்டிற்குள்ளே ராஜாவினிடம் போய்: இன்று உமது ஜீவனையும் உமது குமாரர் குமாரத்திகளின் ஜீவனையும் உமது மனைவிகளின் ஜீவனையும் உமது மறுமனையாட்டிகளின் ஜீவனையும் தம்புவித்த உமது ஊழியர் எல்லாருடைய முகத்தையும் வெட்கப்
6 படுத்தினீர்; நீர் உம்மைப் பகைக்கிறவர்களைச் சிநேகித்து உம்மைச் சிநேகிக்கிறவர்களைப் பகைக்கிறீர்; அதிபதிகளும் சேனைவீரரும் உமக்கு அற்பமானவர்கள் என்று இன்று விளங்கப்பண்ணுகிறீர்; நாங்கள் அனைவரும் இன்று செத்திருந்தாலும் அப்சலோம் மாத்திரம் உயிரோடிருந்தால் அதுவே உமக்குச் சரியாயிருக்கும் என்று
7 இன்று அறிந்துகொண்டேன். இப்போ

தும் எழுந்திருந்து வெளியே வந்து உமது ஊழியரின் மனங்குளிரும்படி பேசும்; நீர் வெளியே வராதிருந்தால் இன்று இரவு ஒரு வரும் உம்மோடு தங்கியிருப்பதில்லை, யெகோவாவின்மேல் ஆணை; அப்படிப் போய்விட்டால் உமது சிறுவயதுமுதல் இதுவரைக்கும் உமக்கு நேரிட்ட சகல தீமைகளிலும் அது உமக்கு அதிகத் தீமையாகும் என்றான். அப்பொழுது ராஜா 8
எழுந்துபோய் ஊர்வாசலிலே உட்கார்ந்தான்; இதோ, ராஜா ஊர்வாசலில் உட்கார்ந்திருக்கிறார் என்று சகல ஜனங்களுக்கும் அறிவிக்கப்பட்டபோது சேனை வீரர் எல்லாரும் ராஜாவுக்கு முன்பாக வந்தார்கள்.

இஸ்ரவேலரோவெனில் தங்கள் தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப்போனபோது | இஸ்ர 9
வேலின் சகல கோத்திரங்களிலுமுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் வாக்குவாதமுண்டானது; அவர்கள் ராஜா நமது சத்துருக்களின் கையினின்று நம்மை நீங்கலாக்கிவிட்டார், பெலிஸ்தியரின் கைக்கு நம்மைத் தப்புவித்தவர் அவரே; இப்போதோ அப்சலோமுக்குத் தப்பத் தேசத்தை விட்டு ஓடிப்போயிருக்கிறார். நமக்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணின 10
அப்சலோம் யுத்தத்திலே மாண்டான். இப் போதும் ராஜாவைத் திரும்ப அழைத்து வராமல் நீங்கள் சும்மாயிருப்பதென்ன என்று பேசிக்கொண்டார்கள்.

இப்படி இஸ்ரவேலர் எல்லாரும் பேசிக் 11
கொண்டிருந்த செய்தி ராஜா இருந்த வீட்டிலே அவனுக்கு எட்டினது. தாவீது ராஜா சாதோக், அபியத்தார் என்னும் ஆசாரியரிடம் ஆள் அனுப்பி, நீங்கள் யூதாவின் மூப்பரோடே பேசி: ராஜாவை அவருடைய வீட்டுக்குத் திரும்ப அழைத்துவர நீங்கள் தாமதித்துப் பிந்துவதென்ன? நீங்கள் என் சகோதரர், 12
நீங்கள் என் எலும்பும் என் தசையுமானவர்கள்; ராஜாவைத் திரும்ப அழைத்து வர நீங்கள் பிந்துவானேன் என்று சொல்லுங்கள். நீங்கள் அமாசாவோடும் பேசி: 13
நீ என் எலும்பும் தசையுமானவன் அல்லவோ? யோவாபின் ஸ்தானத்திலே உன்னை எந்நாளுமாக எனக்கு முன்பாகப் படைத்தலைவனுக்காவிட்டால் கடவுள் தமது சித்தப்படியெல்லாம் எனக்குச் செய்வாராக என்று சொல்லச் சொன்னான். இப்படியாக 14
யூதாவின் சகல மனுஷருடைய இருதயத்தையும் ஒன்றுபோல் இணங்கப்பண்ணவே அவர்கள் ராஜாவினிடம் ஆள் அனுப்பி,

நீர் உமது சகல வீரரோடும் திரும்பி வாரும்
15 என்று சொன்னார்கள். ராஜா திரும்புகை
யில் யோர்தானண்டை வருவதற்குள்ளாக
யூதா கோத்திரத்தார் கில்கால் மட்டும் ராஜா
வுக்கு எதிர்கொண்டு யோர்தானைக் கடக்கப்
பண்ணும்படி வந்திருந்தார்கள்.
16 பகூரீம் ஊர் பென்யமீனியனாகிய
கேராவின் மகன் சிமேயீம் விரைந்து வந்து
யூதா கோத்திரத்தாரோடுகூடத் தாவீது ராஜா
17 வுக்கு எதிர்கொண்டுபோனான்; அவனோடே
பென்யமீன் கோத்திரத்தார் ஆயிரம்பேர்
இருந்தார்கள். சவுலின் வீட்டு வேலைக்கார
னாகிய சீபாவும் அவன் பதினேந்து குமாரரும்
அவனுடைய இருபது வேலைக்காரரும் ராஜா
வருவதற்கு முன்னே வேகமாய் யோர்தா
18 னுக்கு வந்து | ராஜாவின் வீட்டாரை இக்
கரைப்படுத்தவும் அவன் விரும்பிய காரியத்
தைச் செய்யவும் இறங்குதுறைவழியாய்
அக்கரைக்குப்போனார்கள்; அப்பொழுது
கேராவின்குமாரனாகிய சிமேயீ யோர்தானைக்
கடந்துவந்த ராஜாவுக்கு முன்பாகத் தாழ
19 விழுந்து: என் ஆண்டவன் என் அக்கிர
மத்தை என்மேல் சுமத்தாமலும், ராஜா
வாகிய என் ஆண்டவன் எருசலேமிலிருந்து
வந்த நாளிலே அடியேன் செய்த தீரு
கத்தை ராஜா நினைக்காமலும் தமது மனதில்
20 வைக்காமலும் இருப்பாராக. அடியேன்
பாவஞ்செய்தேனென்று அறிந்திருக்கிறேன்;
இப்போதும் ராஜாவாகிய என் ஆண்டவ
னுக்கு எதிர்கொண்டுவர, இதோ, நான்
யோசேப்பு வீட்டார் அனைவருக்கும் இன்று
முந்திக்கொண்டேன் என்று சொன்னான்.
21 அப்பொழுது செருயாளின் குமாரனாகிய
அபிஷாய்: யெகோவா அபிஷேகம்பண்
ணினவரைச் சிமேயீ சபித்தபடியினால் அதி
னிமித்தம் அவனைக் கொல்லவேண்டாமா
22 என்று கேட்கத் | தாவீது: செருயாளின்
குமாரரே, இன்று நீங்கள் எனக்கு விரோ
திகளாகிறதற்கு எனக்கும் உங்களுக்கும்
என்ன? இன்று இஸ்ரவேலிலே ஒருவன்
கொல்லப்படலாமா? இன்று நான் இஸ்ர
வேலின்மேல் ராஜாவானேன் என்று எனக்
குத் தெரிகிறதே என்று சொல்லிவிட்டு |
23 ராஜா சிமேயீயின் முகமாய்த் திரும்பி, நீ
சாவதேயில்லை என்று அவனுக்கு ஆணை
யிட்டான்.
24 சவுலின் குமாரனாகிய மெவிபோஷெத்
தும் ராஜாவுக்கு எதிர்கொண்டு வந்தான்;
ராஜா போனநாள் முதல் அவன் சமாதானத்
தோடே திரும்பி வருகிற நாள்மட்டும்
அவன் தன் கால்நகங்களைச் சுத்தம்பண்ணவு
மில்லை, தன் தாடியைத் திருத்தவுமில்லை,
தன் வஸ்திரங்களை வெளுக்கவுமில்லை.
அவன் எருசலேமிலே ராஜாவை எதிர் 25
கொள்ளவந்தபோது ராஜா அவனைப்
பார்த்து: மெவிபோஷெத்தே நீ என்னோடு
வராமற்போனது என்ன என்று கேட்டான்.
அதற்கு அவன்: ராஜாவே, என் ஆண்ட 26
வனே, என் வேலைக்காரனால் நான் மோசம்
போனேன்; அடியேன் முடவனானபடியி
னால், கழுதையின்மேல் சேணம் வைத்து
அதின்மேல் ஏறி, ராஜாவோடே போகிறேன்
என்று அடியேன் சொன்னேன். அவனோ 27
ராஜாவாகிய என் ஆண்டவனிடத்தில் உமது
அடியேன்மேல் வீண்பழி சொன்னான்;
ராஜாவாகிய என் ஆண்டவன் கடவுளின்
தூதனைப்போல் இருக்கிறீர், உமக்கு நல
மாய்த் தோன்றுகிறபடி செய்யும். என் 28
தகப்பன் வீட்டார் அனைவரும் ராஜாவாகிய
என் ஆண்டவனுக்கு முன்பாகச் சாவுக்
குரியவர்களேயொழிய மற்றப்படியல்ல;
அப்படியிருந்தும் உமது பந்தியில் சாப்பிடு
கிறவர்களோடு அடியேனை வைத்தீர்; இன்
னும் நான் ராஜாவினிடம் எதையேனும்
கேட்க எனக்கு என்ன நியாயம் இருக்
கிறது என்றான். அப்பொழுது ராஜா 29
அவனைப் பார்த்து: உன் காரியத்தைப்பற்றி
நீ இன்னும் அதிகமாய்ப் பேசுவானேன்?
நான் சொல்வது இதுவே, நீயும் சீபாவும்
நிலத்தைப் பங்கிட்டுக்கொள்ளுங்கள் என்
றான். அதுகேட்ட மெவிபோஷெத் ராஜாவி 30
னிடம்: அவனே எல்லாவற்றையும் எடுத்
துக்கொள்ளட்டும்; ராஜாவாகிய என் ஆண்
டவன் சமாதானத்தோடே தமது வீட்டிற்கு
வந்திருக்கிறாரே என்றான்.
கிலெயாத்தியனாகிய பர்சிலாயும் ரோ 31
கெலிமிலிருந்து வந்து யோர்தான்மட்டும்
ராஜாவை வழிவிட்டனுப்ப அவனோடே
யோர்தானின் துறைமட்டும் வந்தான். பர்சி 32
லாய் எண்பது வயதுக்கிழவன்; ராஜா மகனா
யிமிலே தங்கியிருக்குமட்டும் ராஜாவை
அவன் பராமரித்து வந்தான்; அவன் மிக
வும் பெரிய மனுஷன். ராஜா பர்சிலாயைப் 33
பார்த்து: நீ என்னோடே கடந்துவா; எருச
லேமிலே உன்னை என்னிடத்தில் வைத்துப்
பராமரிப்பேன் என்றான். பர்சிலாயோ 34
ராஜாவினிடம்: நான் இன்னும் எத்தனை
நாள் உயிரோடிருக்கப்போகிறேன்? நான்
ராஜாவோடே எருசலேமுக்கு வருவா
னேன்? இப்பொழுது எனக்கு எண்பது
வயதாயிற்று; இனிப்பும் கசப்பும் இனி
எனக்குத் தெரியுமோ? புசிப்பதும் குடிப் 35
பதும் அடியேனுக்கு ருசிகரமாயிருக்குமோ?
பாடுகிற ஆண் பெண்களின் குரலை இனி

நான் அனுபவிப்பேனோ? அடியேன் இனி
ராஜாவாகிய என் ஆண்டவனுக்குப் பாரமா
36 யிருக்கவேண்டியது என்ன? அடியேன்
சிறுதூரம் யோர்தான்மட்டும் ராஜாவோ
டே வருகிறேன், அதற்காக ராஜா இவ்
வளவு பெரிய உபகாரத்தை எனக்குச்
37 செய்யவேண்டியது என்ன? அடியேன்
திரும்பிப்போக உத்தரவுகொடும், நான் என்
ஊரிலே என் தாய் தகப்பன்மார் கல்லறை
யண்டையிலேயே மரிப்பேன்; ஆனாலும்,
இதோ, உமது அடியானாகிய கிம்காம் ராஜா
வாகிய என் ஆண்டவனோடே வருவான்;
உமக்கு நலமாய்த் தோன்றுகிறதை அவ
38 னுக்குச் செய்யும் என்றான். அப்பொழுது
ராஜா: கிம்காம் என்னோடே வரட்டும்,
உனக்கு நலமாய்த் தோன்றுகிறதை நான்
அவனுக்குச் செய்து உன் விருப்பத்தையே
கட்டளையாய் மதித்து நான் உனக்குச் செய்
39 வேன் என்றான். ஜனங்கள் எல்லாரும்
யோர்தானைக் கடக்கவே, ராஜா பர்சிலாயை
முத்தமிட்டு அவனை ஆசீர்வதித்தார் தானும்
கடந்துபோனான்; பர்சிலாயோ தன்னிடத்
திற்குத் திரும்பிப் போய்விட்டான்.
40 ராஜா கடந்து கில்காலட்டும் போனான்.
கிம்காமும் அவனோடே வந்தான்; யூதா
ஜனம் அனைத்தும் இஸ்ரவேலின் பாதி ஜன
மும் ராஜாவை இக்கரைப்படுத்தினார்கள்.
41 இதோ, மற்ற இஸ்ரவேலர் அனைவரும்
ராஜாவினிடம் வந்து ராஜாவோடு பேசி:
எங்கள் சகோதரராகிய யூதா மனுஷர்
திருட்டுத்தனமாய் உம்மை அழைத்துவந்து
ராஜாவையும் அவர் வீட்டாரையும் அவ
ரோடிருக்கிற தாவீதின் வீரர் அனைவரையும்
யோர்தானைக் கடக்கப்பண்ணினது என்ன
42 என்றார்கள். அதுகேட்ட யூதா கோத்தி
ரத்தார் அனைவரும் இஸ்ரவேல் மனிதருக்
குப் பதிற்சொல்லி: ராஜா எங்களுக்கே கிட்
டினவர், இதற்கு நீங்கள் கோபிப்பானேன்?
நாங்கள் ராஜாவினிடம் ஏதாகிலும் வாங்கித்
தின்றோமோ? எங்களுக்கு வெகுமானம்
43 கொடுக்கப்பட்டதோ என்றார்கள். இஸ்ர
வேலரோ யூதா மனிதருக்குப் பதிலுரைத்து:
ராஜாவாயிருப்பவரிடம் எங்களுக்குப் பத்
தப்பங்கு இருக்கிறது; தாவீதினிடமும் அப்
படியே; அப்படியிருக்க ஏன் எங்களை அற்ப
மாய் எண்ணினீர்கள்; எங்கள் ராஜாவைத்
திரும்ப அழைத்துவரவேண்டும்என்று முதல்
முதல் சொன்னவர்கள் நாங்களே யல்லவா
என்றார்கள். யூதா கோத்திரத்தார் பேசின
தோ இஸ்ரவேலர் பேசினதிலும் அதிகக்கடினம்.

**20** அப்பொழுது பேலியாளின் மகனொரு
வன் தற்செயலாய் அங்கே வந்திருந்தான்;
அவன்பேர் சேபா, அவன் பென்யமீனி
யன், பிக்கிரியின் குமாரன்; அவன் எக்கா
ளம் ஊதி:

தாவீதினிடம் எங்களுக்குப் பங்கில்லை;
ஈசாயின் குமாரனிடம் எங்களுக்குச்
சுதந்தரமில்லை;
இஸ்ரவேலரே, நீங்கள் எல்லாரும்
அவரவர் கூடாரங்களுக்குப் போய்
விடுங்கள்

என்று சொல்லிக் கூவினான். அப்பொழுது 2
இஸ்ரவேலர் எல்லாரும் தாவீதைவிட்டு வில
கிப் பிக்கிரியின் குமாரனாகிய சேபாவின்
பின்னே போனார்கள். யோர்தான் தொடங்கி
எருசலேமட்டுமுள்ள யூதா கோத்திரத்தா
ரே தங்கள் ராஜாவைவிட்டு விலகாமல் அவ
னைச் சார்ந்திருந்தார்கள்.

தாவீது எருசலேமிலுள்ள தன் வீட்டுக்கு 3
வந்தபோது, வீட்டைக் காக்கத் தான் பின்
வைத்துப்போன பத்து வைப்பாட்டிகளையும்
வரவழைத்து, காவல் பண்ணப்பட்ட ஒரு
வீட்டிலே அவர்களை வைத்துப் பராமரித்
தான்; அப்புறம் அவர்களிடம் அவன் பிரவே
சிக்கவில்லை; அப்படியே அவர்கள் சாகிற
நாள்மட்டும் அடைக்கப்பட்டுச் சுமங்
கிலியக் கைம்பெண்கள் போலிருந்தார்கள்.

பின்பு ராஜா அமாசாவைக் கூப்பிட்டு: 4
நீ யூதாகோத்திரத்தாரை மூன்று நாளைக்குள்
ளே என்னிடம் வரவழைக்கவேண்டும்;
நீயும் கூடவந்து இருக்கவேண்டும் என்
றான். அப்படியே அமாசா யூதாவை
அழைக்கப் போனான். குறித்தகாலத்திற் 5
குள் வராமல் அவன் தாமதிக்கவே | தாவீது 6
அபிஷாயைக் கூப்பிட்டு: அப்சலோம்
செய்த மோசத்திலும் பிக்கிரியின் குமார
னாகிய சேபா இப்பொழுது நமக்குச் செய்
யும் மோசம் அதிகமாகும்; அவன் அரணான
பட்டணங்களில் வந்தடைந்து நமக்குத்
தப்பிப்போகாதபடி நீ உன் ஆண்டவனின்
சேனைவீரரைக் கூட்டிக்கொண்டு அவனைப்
பிடிக்கத் தொடர்ந்துபோ என்றான். அப் 7
படியே யோவாபின் ஆட்களும், கிரேத்திய
பிலேத்தியரும் சகல பராக்கிரமசாலிகளும்
அவனோடு புறப்பட்டுப் பிக்கிரியின் குமார
னாகிய சேபாவைப் பிடிக்கத் தொடரும்படி
எருசலேமிலிருந்து போனார்கள். அவர்கள் 8
கிபியோன் அருகே இருந்த பெரிய கல்
லண்டையிலே வந்தபோது அமாசா அவர்க
ளுக்கு எதிர்ப்பட்டு வந்தான். யோவாபோ
தான் தரித்திருந்த போர் உடையின்மேல்
ஒரு கச்சையைக் கட்டிக்கொண்டிருந்தான்;
அதிலே ஒரு பட்டயம் அதின் உறையோ
டே அவன் இடுப்பண்டையிலே தொங்

கிற்று; அவன் புறப்படுகையில் உறை
9 கழன்றுவிழுந்தது. அப்பொழுது யோவாப் அமாசாவைப் பார்த்து, என் சகோதரனே, சுகமா என்று சொல்லி அமாசாவை முத்தஞ் செய்யும்படி தன் வலது கையினால்
10 அவன் தாடியைத் தாங்கித் | தன் கையிலிருந்த பட்டயத்திற்கு அமாசா எச்சரிக்கையாயிராதபோது யோவாப் அவனைப் பட்டயத்தினாலே குடல்சரிய வயிற்றிலே ஓரே குத்தாய்க் குத்தினான்; அவன் செத்துப்போனான்; அப்பொழுது யோவாபும் அவன் சகோதரனாகிய அபிஷாயும் பிக்கிரியின் குமாரனாகிய சேபாவைப் பிடிக்கத் தொடர்ந்
11 தார்கள். யோவாபின் ஆட்களில் ஒருவன் செத்தவனண்டையிலே நின்று, யோவாபின் மேல் பிரியமாயிருக்கிறவன் எவனே, தாவீதின் பட்சத்தில் இருக்கிறவன் எவனே அவன் யோவாபோடே போக என்றான்.
12 அமாசா நடுவழியிலே இரத்தத்திலே புரண்டு கிடந்தபடியினால் ஜனங்கள் எல்லாரும் தாமதித்து நிற்பதை அந்த வீரன் கண்டு அமாசாவை வழியிலிருந்து வயலிலே எடுத்துப் போட்டான்; அவனண்டையில் வருகிறவர்கள் எல்லாரும் தாமதித்து நிற்பதைக் கண்டு ஒரு வஸ்திரத்தை அவன்
13 மேல் போட்டு மூடினான். அவன் வழியிலிருந்து அவனை எடுத்துவிட்ட பிற்பாடு யோவாபோடே சென்ற யாவரும் கடந்து பிக்கிரியின் குமாரனாகிய சேபாவைப் பிடிக்கச் சென்றார்கள்.
14 சேபா இஸ்ரவேல் கோத்திரங்களையெல்லாம் சுற்றி ஆபேல்பேத்மாக்காமட்டும் வந்தான். சமஸ்தபேரியரும் வந்துகூடி அவ
15 னுக்குப்பின் சென்றார்கள். அவர்கள் போய் ஆபேல்பேத்மாக்காவிலே அவனை முற்றுகைபோட்டுப் பட்டணத்தின் வெளி மதிலுக்கு எதிரே கொத்தளம் போட்டார்கள். யோவாபோடிருந்த வீரர் யாவரும் அலங்கத்தை விழப்பண்ணி அழிக்க எத்
16 தனம்பண்ணினார்கள். அப்பொழுது யுக்தி சாலியான ஒரு ஸ்திரீ பட்டணத்திலிருந்து சத்தமிட்டுக் கூப்பிட்டு: கேளுங்கள், கேளுங்கள்; நான் யோவாபோடே பேச வேண்டும்; அவரை இங்கே கிட்டவரச்
17 சொல்லுங்கள் என்றாள். அவன் அவளுக்குச் சமீபமாய் வரவே, அந்த ஸ்திரீ: நீர் தானே யோவாப் என்று கேட்க அவன், நான்தான் என்றான்; அவள் அவனிடம், உமது அடியாளின் வார்த்தைகளைக் கேளும் என அவனும், கேட்கிறேன் என்றான்.
அப்பொழுது அவள்: பூர்வகாலத்து ஜனங்
18 கள் காரியம் முடிப்பது ஆபேலில் விசாரித்தே என்று சொல்வது வழக்கம். இஸ்ர 19
வேலிலே நாங்கள் சமாதானமும் உண்மையு முள்ளவர்களாயிருக்கையில், நீர் இஸ்ரவேலின் தாய் நகரமொன்றை நிர்மூலமாக்கப் பார்க்கிறீரோ? நீர் யெகோவாவின் சுதந்தரத்தை விழுங்குவானேன் என்றாள். யோவாப் 20
அவளிடம்: அது எனக்குத் தூரமாயிருப்பதாக, விழுங்கவேண்டும், அழிக்கவேண்டும் என்கிற ஆசை எனக்கு வெகுதூரமாயிருப்பதாக. காரியம் அப்படியல்ல, எப்பிராயீம் 21
மலைநாட்டான் ஒருவன், பிக்கிரியின் குமாரனாகிய சேபா என்பவன், ராஜாவாகிய தாவீதுக்கு விரோதமாய்த் தன் கையை ஓங்கினான், அவனைமாத்திரம் ஒப்புக்கொடுங்கள்; அப்பொழுது பட்டணத்தைத் தாக்காமல் விட்டுப்போவேன் என்றான். அந்த ஸ்திரீ யோவாபைப் பார்த்து: இதோ, அவன் தலை மதிலின்மேலாக உம்மிடத்திலே போடப் படும் என்று சொல்லிவிட்டு | ஜனங்களிடத் 22
திலேபோய் யுக்தியாய்ப் பேசினதினால் அவர்கள் பிக்கிரியின் குமாரனாகிய சேசாவின் தலையை வெட்டி யோவாபினிடம் போட்டார்கள்; போடவே அவன் எக்காளம் ஊதினான்; சேனைவீரர் பட்டணத்தை விட்டுக் கலைந்து தத்தம் கூடாரங்களுக்குப் போய்விட்டார்கள்; யோவாபும் ராஜாவினிடம் போகும்படி எருசலேமுக்குத் திரும்பினான்.
யோவாப் இஸ்ரவேலின் முழு இராணு 23
வத்தின்மேலும் தலைவன், யோயாதாவின் குமாரனாகிய பெனாயா கிரேத்திய பிலேத்தியர் மேல் தலைவன். அதோராம் ஏவலாட் 24
களின் மேற்பார்க்கிறவனானான். அகிலூதின் 25
குமாரனாகிய யோசபாத் மந்திரி, ஷெவா சம்பிரதி, சாதோக்கும் அபியத்தாரும் ஆசாரியர். யயீரியனாகிய ஈராவும் தாவீதுக்கு 26
ஆசாரியன்.

தாவீதின் நாட்களிலே மூன்று வருஷம் 21
ஓயாத பஞ்சம் உண்டாயிற்று; அப்பொழுது தாவீது யெகோவாவின் சமுகத்தில் விசாரித்தான். யெகோவா: கிபியோனியரைக் கொன்ற சவுலினிமித்தமும் ரத்தப்பழி சுமந்த அவன் வீட்டாரினிமித்தமுமே என்றார். அப்பொழுது ராஜா: கிபியோனி 2
யரை அழைப்பித்தான்; கிபியோனியரோ இஸ்ரவேல் புத்திரரைச் சேர்ந்தவர்களல்ல, எமோரியரில் மீதியாயிருந்தவர்கள்; அவர்களுக்கு இஸ்ரவேல் புத்திரர் ஆணையிட்டிருந்தும் சவுல் இஸ்ரவேல் புத்திரருக்காகவும்யூதாவுக்காகவும் கொண்ட வைராக்கியத்தினால் அவர்களை அழிக்க வகைதேடினான். ஆகவே 3
தாவீது கிபியோனியரைப் பார்த்து: நான்

உங்களுக்குச் செய்யவேண்டியது என்ன? நீங்கள் யெகோவாவின் சுதந்தரத்தை ஆசீர்வதிக்கும்படி நான் செய்யவேண்டிய பிராயச்
4 சித்தம் என்ன என்று கேட்டான். கிபியோனியரோ அவனிடம்: சவுலோடும் அவன் வீட்டாரோடும் எங்களுக்குள்ள காரியத்திலே எங்களுக்கு வெள்ளியும் பொன்னும் வேண்டியதில்லை; இஸ்ரவேலில் ஒருவனைக் கொன்றுபோடவேண்டும் என்பதும் எங்கள் காரியமல்ல என்று சொல்லவே அவன்: அப்படியானால் நான் உங்களுக்கு என்ன
5 செய்யவேண்டும் என்கிறீர்கள் என்று கேட்டான். அவர்கள் ராஜாவினிடம்: எங்களை நிர்மூலமாக்கி, நாங்கள் இஸ்ரவேலின் எல்லையிலெங்கும் நிலையாமல் அழிந்துபோக எவன் எங்களுக்கு விரோதமான யோசனை செய்தானோ அவன் குமாரரில் ஏழுபேரை எங்களுக்கு ஒப்புக்
6 கொடுக்கவேண்டும். யெகோவா தெரிந்தெடுத்த சவுலின் கிபியாவிலே நாங்கள் அவர்களை யெகோவாவுக்கென்று தூக்கிப் போடுவோம் என்றார்கள். நான் அவர்களை ஒப்புக்கொடுப்பேன் என்று ராஜா
7 சொன்னான். ஆனாலும் தாவீதும் சவுலின் குமாரனாகிய யோனத்தானும் யெகோவாவைக் கொண்டு இட்ட ஆணையினிமித்தம், ராஜா சவுலின் குமாரனாகிய யோனத்தானின் மகன் மெபிபோசேத்தைத் தப்பவிட்டு,
8 ஆயாவின் குமாரத்தியாகிய ரிஸ்பாள் சவுலுக்குப்பெற்ற இரண்டு குமாரராகிய அர்மோனியையும் மெபிபோசேத்தையும், சவுலின் குமாரத்தியாகிய மீகாள் மேகோலாத்தியனான பர்சிலாயின் குமாரனாகிய ஆதரியேலுக்குப் பெற்ற ஐந்து
9 குமாரரையும் பிடித்து, அவர்களைக் கிபியோனியர் கையில் ஒப்புக்கொடுத்தான். அவர்களை யெகோவாவின் சமுகத்தில் மலையின்மேல் தூக்கிப் போட்டார்கள். அப்படியே அவர்கள் ஏழுபேரும் ஒருமிக்க விழுந்தார்கள்; அறுப்புக்காலத்தில், வாற்கோதுமை அறுப்புத் துவக்குகிற முதல்
10 நாட்களிலே, அவர்கள் கொன்று போடப்பட்டார்கள். அப்பொழுது ஆயாவின் குமாரத்தியாகிய ரிஸ்பாள் இரட்டித்தணியை எடுத்துக்கொண்டுபோய், அதைப் பாறையின்மேல் விரித்து அறுப்புநாளின் துவக்கம் முதற்கொண்டு வானத்திலிருந்து பிரேதங்கள்மேல் மழைபெய்யுமட்டும் பகலில் ஆகாயத்துப் பறவைகளாகிலும் இரவில் காட்டு மிருகங்களாகிலும் அவர்கள்
11 மேல் விழவொட்டாதிருந்தாள். ஆயாவின் குமாரத்தியாகிய ரிஸ்பாள் என்னும் சவுலின் மறுமனையாட்டி செய்தது தாவீதுக்கு அறிவிக்கப்பட்டபோது, அவன் போய்ப்
12 பெலிஸ்தியர் கில்போவாவிலே சவுலை வெட்டினபோது பெத்சானின் ஊர்வெளியிலே தூக்கிப்போடப்பட்டதும் கிலெயாத்திலுள்ளவர்கள் ராத்திரிவேளையிலே கிலெயாத்ஊராரிடத்தில் திருட்டுத்தனமாய்க் கொண்டுவந்ததுமான சவுலின் எலும்புகளையும் அவன் குமாரனாகிய யோனத்தானின் எலும்புகளையும் அவர்களிடத்திலிருந்து எடுத்துவந்தான். அங்
13 கிருந்து சவுலின் எலும்புகளையும் யோனத்தானின் எலும்புகளையும் கொண்டுவந்து, தூக்கிப்போடப்பட்டவர்களின் எலும்புகளையும் அவைகளோடு சேர்த்துச்,
14 சவுலின் எலும்புகளையும் அவன் குமாரனாகிய யோனத்தானின் எலும்புகளையும் பென்யமீன்நாட்டுச் சேலா ஊரிலுள்ள அவன் தகப்பனாகிய கீசின் கல்லறையில் அடக்கம் பண்ணுவித்தான்; ராஜா கட்டளையிட்டபடியெல்லாம் செய்தார்கள்; தேசத்திற்காகச் செய்யப்பட்ட விண்ணப்பத்தை அதன் பின்பே கடவுள் கேட்டு இரங்கினார்.

15 பின்பு பெலிஸ்தியர் மறுபடியும் இஸ்ரவேலரோடு யுத்தம் பண்ணினார்கள்; அப்பொழுது தாவீதும் அவன் ஆட்களும் போய்ப் பெலிஸ்தியரோடு நடந்த யுத்தத்தில் கலந்துகொண்டார்கள், யுத்தத்திலே தாவீது
16 களைத்துப்போனான். அப்போது இஸ்பிபெனோப் என்னும் ரெப்பாயீமரில் ஒருவன் தாவீதை வெட்டவேண்டுமென்றிருந்தான்.
17 இவன் மூன்நூறு சேக்கல் நிறையுள்ள செம்பு ஈட்டியைப் பிடித்துப் புதுப்பட்டயமொன்றை அரையிலே கட்டியிருந்தான். செருயாளின் குமாரனாகிய அபிஷாய் ராஜாவுக்கு உதவியாக வந்து பெலிஸ்தியனை வெட்டிக் கொன்றுபோட்டான். தாவீதின் ஆட்கள் அவனிடம் வந்து ஆணையிட்டு: இனி நீர் எங்களோடே யுத்தத்திற்கு வரவேண்டாம், இஸ்ரவேலின் விளக்கு அணைந்துபோக நேரிடும் என்று சொன்னார்கள்.

18 அதற்குப் பின்பு பெலிஸ்தியரோடு திரும்பவும் கோபிலே யுத்தம் நடந்தது; அப்பொழுது கூஷாத்தியனாகிய சிபெக்காய் ரெப்பாயீமரில் ஒருவனான சாப்பை வெட்டிப்போட்டான்.

19 பெலிஸ்தியரோடு இன்னும் வேறொரு யுத்தம் கோபிலே நடந்தது; அப்போது யாரே யொர்கிமின் குமாரனாகிய எல்க்கானன் என்னும் பெத்லகேமியன் காத் ஊரானனை கோலியாத்தைக் கொன்றுபோட்டான்; இவன் ஈட்டிப்பிடி, நெசவுகாரரின் படமரம் அளவு பெரிதாயிருந்தது.

20 மற்றுமொரு யுத்தம் காத் ஊரிலே நடந்
தது, அங்கே வளர்ந்துயர்ந்த மனுஷன் ஒரு
வன் இருந்தான்; அவன் கைகளில் அவ்
வாறு விரல்களும் கால்களில் அவ்வாறு
விரல்களுமாக இருபத்துநான்கு விரல்க
ளுள்ளவன்; அவனும் ரெப்பாவியரில் ஒரு
21 வன்; இவன் இஸ்ரவேலை அவமானமாய்ப்
பேசினான். தாவீதின் சகோதரனான சிமேயா
வின் குமாரன் யோனத்தான் அவனை வெட்
டினான்.
22 இந்த நாலுபேரும் காத்தூரிலே ரெப்பா
வியருக்குப் பிறந்தவர்கள்; இவர்கள் தாவீ
தின் கையினாலும் அவன் ஆட்களின் கையி
னாலும் மடிந்தார்கள்.

**22** யெகோவா தாவீதை அவனுடைய சகல
சத்துருக்களின் கைக்கும் சவுலின் கைக்கும்
நீங்கலாக்கி விடுவித்த நாளிலே அவன்
யெகோவாவை நோக்கிப் பாடின பாட்டு:

2 யெகோவா என் கன்மலை, என் கோட்
டை, என்னை விடுவிக்கிறவர்;
3 என் அரணுகிய கடவுள், நான் அடைக்
கலம் புகுந்தவர்;
என் கேடகம், என் ரட்சணியக் கொம்பு,
என் துருக்கம்.
என் புகலிடம், என்னை ரட்சிக்கிறவர்,
கொடுமையினின்று என்னை ரட்சிக்கிறீர்.
4 யெகோவாவை நோக்கிக் கூப்பிடுவேன்,
அவரே துதிக்குப் பாத்திரர்;
அப்போது என் சத்துருக்களினின்று
இரட்சிக்கப்படுவேன்.
5 மரண அலைகள் என்னைச் சூழ்ந்து
கொண்டன;
கேட்டின் வெள்ளம் என்னைப் பயப்படுத்
தினது.
6 பாதாளக் கட்டுகள் என்னைச் சூழ்ந்து
கொண்டன;
மரணக் கண்ணிகள் என்மேல் விழுந்தன.
7 என் நெருக்கத்திலே யெகோவாவை
நோக்கிக் கூப்பிட்டு என் கடவுளை
நோக்கி அபயமிட்டேன்;
தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக்
கேட்டார்;
நான் அபயமிட்ட சத்தம் அவர் செவி
களில் எறிற்று.
8 அப்பொழுது பூமி அசைந்து அதிர்ந்
தது;
அவர் கோபங்கொண்டபடியால்
வானத்தின் அஸ்திபாரங்கள் குலுங்கி
அசைந்தன.
9 அவர் நாசியிலிருந்து புகை எழும்பிற்று;
அவர் வாயிலிருந்து வெளிப்பட்ட அக்
கினி பட்சித்தது,
அதனால் தழல் மூண்டது.
10 வானங்களையும் தாழ்த்தி இறங்கினார்;
அவர் பாதங்களின்கீழ் காரிருள் இருந்
தது.
11 கேருபின்மேல் ஏறி வேகமாய்ச் சென்
றார்;
காற்றின் செட்டைகளின்மீது தரிசன
மானார்.
12 இருளைத் தம்மைச் சூழும் கூடாரமாகின்
னார்,
கரும்புனல்களும் ஆகாயத்துக் கார்மேகங்
களுமே அந்த இருள்.
13 அவர்முன் தோன்றிய பிரகாசத்தினால்
நெருப்புத்தழல் மூண்டது.
14 யெகோவா வானங்களிலிருந்து குமுறி
னார்,
உன்னதமானவர் தமது சத்தத்தைத்
தொனிக்கப்பண்ணினார்.
15 அம்புகளை எய்து அவர்களைச் சிதறடித்
தார்,
மின்னலால் அவர்களைக் கலங்கடித்தார்.
16 யெகோவாவின் கண்டிப்பினாலும்
அவருடைய நாசியின் சுவாசப் பெருங்
காற்றினாலும்
சமுத்திரத்தின் மதகுகள் திறவுண்டு
பூதலத்தின் அஸ்திபாரங்கள் காணப்
பட்டன.
17 உயரத்திலிருந்து அவர் கை நீட்டி
என்னைப் பிடித்து
ஜலப்பிரவாகத்திலிருந்து என்னைத்
தூக்கிவிட்டார்.
18 என் பலத்த சத்துருவுக்கும் என்னைப்
பகைகிறவர்களுக்கும்
என்னை விடுவித்தார்;
அவர்கள் என்னிலும் மேற்கொள்ள முடி
யாத பலவான்கள்.
19 என் ஆபத்துநாளிலே என்மேல் விழுந்
தார்கள்,
யெகோவாவோ எனக்கு ஆதரவாயிருந்
தார்.
20 அவர் விசாலத்திலே என்னைக்கொண்டு
வந்தார்,
என்மேல் பிரியமாயிருந்தபடியால்
என்னை விடுவித்தார்.
21 யெகோவா என் நீதிக்குத் தக்கபடி
எனக்கு பதிலளித்தார்;
என் கைகளின் சுத்தத்திற்குத் தக்கபடி
எனக்குச் சரிக்கட்டினார்.
22 யெகோவாவின் வழிகளைக் கைக்கொண்டு
வந்தேன்;
நான் என் கடவுளுக்குத் துரோகம் பண்
ணினதில்லை.

23 அவருடைய நியாயத்தீர்ப்புகளெயல்
லாம் எனக்கு முன்பாக நிறுத்தினேன்;
அவருடைய கற்பனைகளிலிருந்து நான்
விலகேன்.
24 அவர்முன்பாக நான் குற்றமற்றவனு
யிருந்தேன்,
என் தூர்க்குணப் பாவத்திற்கு என்னை
விலக்கிக் காத்துக்கொண்டேன்.
25 யெகோவா என் நீதிக்கும் தமது பார்வை
யிலுள்ள என் சுத்தத்திற்கும் தக்கபடி
எனக்குப் பலனளித்தார்.
26 இரக்கமுள்ளவனுக்கு நீர் இரக்கமுள்ள
வராகவும்
உத்தமனுக்கு நீர் உத்தமராகவும்
27 சுத்தனுக்கு நீர் சுத்தராகவும்
மாறுபாடுள்ளவனுக்கு நீர் மாறுபடுகிறவ
ராகவும் உம்மைக் காட்டுவீர்.
28 சிறுமையான ஜனத்தை ரட்சிப்பீர்;
உமது கண்கள் மேட்டிமையானவர்கள்
மேலிருக்கும்,
நீர் அவர்களைத் தாழ்த்துவீர்.
29 யெகோவாவே, தேவரீர் என் விளக்கு,
யெகோவா என் இருளில் வெளிச்சம்
தருவார்.
30 உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்
துபோவேன்,
என் கடவுளாலே ஒரு மதிலைத் தாண்டிக்
குதிப்பேன்.
31 கடவுளின் வழி உத்தமமானது;
யெகோவாவின் வசனம் புடமிடப்பட்
டது.
தம்மில் அடைக்கலம் புகும் அனைவருக்
கும் அவரே கேடகம்.
32 யெகோவாவை அல்லாமல் கடவுள் யார்?
நமது கடவுளையன்றிக் கன்மலையும் யார்?
33 கடவுள் எனக்குப் பலத்த அரணானவர்,
குற்றமற்றவனை அவன் வழியில் நடத்து
வார்.
34 அவர் என் கால்களை மான்களின் கால்
களைப்போலாக்கி
என் உயர்ஸ்தலங்களில் என்னை நிறுத்து
கிறார்.
35 செப்புவில்லும் என் புயங்களால் வளை
யும்படி
என் கைகளை யுத்தத்திற்குப் பழக்கு
கிறார்.
36 உமது இரட்சிப்பின் கேடகத்தையும்
எனக்குத் தந்தீர்;
உமது காருண்யம் என்னைப் பெரியவ
னாக்கிற்று.
37 என் கணுக்கால் தள்ளாடவில்லை
நான் நடக்கிற வழியை விசாலமாக்கினீர்

என் சத்துருக்களைப் பின்தொடர்ந்து 38
அவர்களை அழிப்பேன்,
அவர்களை நிர்மூலமாக்கும்வரைக்கும்
திரும்பேன்.
அவர்களை வெட்டி அவர்களை முடித்து 39
விட்டேன்,
அவர்கள் எழுந்திருக்கமாட்டார்கள்;
என் பாதங்களின் கீழ் விழுந்தார்கள்.
யுத்தத்திற்கு நீர் என்னைப் பலத்தால் 40
இடைகட்டினீர்;
எனக்கு விரோதமாய் எழும்பினவர்களை
என் கீழ் மடங்கப்பண்ணினீர்.
நான் என் பகைஞரைச் சங்காரிக்கும்படி 41
என் சத்துருக்கள் புறங்காட்டி ஓடச்
செய்தீர்.
அவர்கள் சுற்றிப் பார்க்கிறார்கள், 42
அவர்களை இரட்சிப்பாரில்லை;
யெகோவாவைப் பார்க்கிறார்கள்,
அவர்களுக்கு அவர் செவி சாய்க்க
வில்லை.
அவர்களைப் பூமியின் தூளாக இடித்துத் 43
தெருக்களின் குப்பைபோல அவர்களை
மிதித்துச் சிதறப் பண்ணுகிறேன்;
என் ஜனத்தின் சண்டைகளுக்கு நீர் என் 44
னைத் தப்புவித்தீர்;
புறஜாதியாருக்கு என்னைத் தலைவனாக
காக்கிறீர்;
நான் அறியாத ஜனம் என்னைச் சேவிக்
கும்.
அந்நியரும் எனக்கு அடங்குவதுபோல் 45
நடிக்கிறார்கள்;
என் சத்தத்தைக் கேட்டவுடனே எனக்
குக் கீழ்ப்படிகிறார்கள்.
அந்நியர் மனமடிந்து 46
தங்கள் அரண்களிலிருந்து தத்தளிப்
போடு வெளிப்படுகிறார்கள்.
யெகோவாவே ஜீவனையுடையவர், 47
என் கன்மலையானவர் ஸ்தோத்திரத்துக்
குரியவர்;
என் இரட்சிப்பின் கன்மலையாகிய கட
வுள் உயர்த்தப்படுவாராக.
அவர் எனக்காகப் பழிக்குப்பழி வாங்கு 48
கிற கடவுள்;
ஜனங்களை எனக்குக் கீழ்ப்படுத்துகிறவர்
அவரே.
அவரே என் சத்துருக்களுக்கு என்னை 49
விலக்கி விடுவிக்கிறவர்;
எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள்
மேல் என்னை நீர் உயர்த்துகிறீர்;
கொடுமையான மனுஷனுக்கு என்னைத்
தப்புவிக்கிறீர்.
இதினிமித்தம் யெகோவாவே, 50

நான் புறஜாதிகளுக்குள் உம்மைப் புகழ்ந்து
உமது திருநாமத்தைச் சொல்லிச் சங்கீதம் பாடுவேன்.
51 தாம் ஏற்படுத்தின ராஜாவுக்கு மகத்தான இரட்சிப்பை அளிக்கிறார்;
தாம் அபிஷேகம்பண்ணின தாவீதுக்கும் அவன் சந்ததிக்கும்
சதா காலங்களாய்க் கிருபை செய்கிறார்.

**23** தாவீதின் கடைசி வார்த்தைகள்:
மேன்மையாய் உயர்த்தப்பட்டு,
யாக்கோபின் கடவுளால் அபிஷேகம் பெற்று
இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடின
ஈசாயின் குமாரன் தாவீது உரைப்பது,
2 யெகோவாவின் ஆவி உன்னைக்கொண்டு பேசினது,
அவர் திருவசனம் என் நாவில் இருந்தது;
3 இஸ்ரவேலின் கடவுள் என்னோடு பேசி,
இஸ்ரவேலின் கன்மலை எனக்குச் சொன்னார்:
நீதிபரராய் மனிதரை ஆண்டு,
தெய்வபயமாய் ஆளுபவர் வருவார்;
4 அவர் மந்தாரமில்லாக்காலையில் உதிக்கும்
காலைச் சூரியனின் ஒளிபோல் இருப்பார்,
மழைக்குப்பின் தன் காந்தியினாலே
பூமியில் புல்முளைக்கச் செய்யும் சூரியன்.
5 என் சந்ததி கடவுள் சம்பந்தமாய் இப்படியேயல்லோ!
நித்திய உடன்படிக்கை என்னோடு செய்தாரே;
அது யாவற்றிலும் ஒழுங்காய் உறுதியாக்கப்பட்டது;
ஆகவே எனக்கு வேண்டிய சகாயமனைத்தையும்
நான் விரும்பும் யாவற்றையும் வளரச் செய்வாரே.
6 பேலியால் மக்கள் யாவருமோ
எறிந்து அகற்றப்படும் முட்களைப்போன்றவர்;
கையால் அவற்றைப் பிடிப்பதில்லை.
7 யாதொருவன் அதை எடுக்கப்போனால்
இருப்பாயுதம் ஈட்டிப்பிடி இவற்றோடு செல்வான்,
இருந்த இடத்தே நெருப்பால் அவை எரிக்கப்படுமே.

8 தாவீதினிடமிருந்த பராக்கிரம வீரர் இவர்களே: தக்கேமோனியனான யோஷேப் பஷேபெத் மூவரில் மேலானவன்; இவன் எண்ணூறுபேரை ஒருமிக்கவெட்டி அவர்கள்மேல் வெற்றிக்குறியாக ஈட்டியை ஆட்டினவன். 9 இவனுக்கு இரண்டாவது அகோகியனின் குமாரனுகிய தோதியின் மகன் எலெயாசார் என்பவன். இவன் பெலிஸ்தியர் யுத்தத்திற்குக் கூடின இடத்திலே தாவீதோடே இருந்து பெலிஸ்தியரை அவமதித்துப்பேசிய மூன்று பராக்கிரமசாலிகளில் ஒருவன். இஸ்ரவேலர் விட்டுவிட்டு 10 ஓடிப்போனார்கள்; இவனோ எழும்பித் தன் கை சலித்துப்போகுமட்டும் பெலிஸ்தியரை வெட்டினான்; அவன் கை பட்டயத்தைப் பற்றிக்கொண்டேயிருந்தது. அன்றையதினம் யெகோவா பெரிய வெற்றியை அளித்தார். கொள்ளையிட மாத்திரம் ஜனங்கள் அவன்பின்னே சென்றார்கள். 11 இவனுக்குப்பின் மூன்றுவதானவன் ஆகேயின் குமாரனுகிய சம்மா என்னும் ஆராரியன். ஆகாரம் கொள்ளையிடவந்த பெலிஸ்தியர்கூடின இடத்திலே ஒரு வயலின் பாகத்திலே சிறுபயறு விளைந்திருந்தது; பெலிஸ்தியரைக் காணவே இஸ்ரவேலர் ஓட்டம்பிடித்தார்கள். 12 சம்மாவோ அந்த நிலத்தின் நடுவிலே போய் நின்று அதைக் காப்பாற்றிப் பெலிஸ்தியரை மடங்கடித்துப் போட்டான்; இப்படியாக யெகோவா பெரிய வெற்றியை அளித்தார்.

13 மூப்பது தலைவரிலே இந்த மூன்றுபேர் அறுப்புக்காலத்திலே அதுல்லாம் கெபியிலிருந்த தாவீதினிடம் போயிருந்தார்கள்; பெலிஸ்தியரின் தண்டு ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே பாளையமிறங்கினபோது | 14 தாவீது அரணான ஒரு இடத்தில் இருந்தான்; அக்காலத்தில் பெலிஸ்தியரின் காவல் தண்டு பெத்லகேமிலே இருந்தது. ஒருநாள் தாவீது, 15 பெத்லகேம் ஊர்வாசலண்டையிலிருக்கிற கிணற்றின் தண்ணீரிலே கொஞ்சம் ஒருவன் என் தாகத்திற்குக் கொண்டுவருவானேயானால் எவ்வளவோ சந்தோஷம் என்று ஆசைப்பட்டுக்கேட்க | 16 இந்த மூன்று பராக்கிரமசாலிகளும் பெலிஸ்தியரின் பாளயத்தினுள்ளே துணிந்து புகுந்து சென்று பெத்லகேம் ஊர்வாசலண்டையிருந்த கிணற்றிலே தண்ணீர்மொண்டு தாவீதினிடம் கொண்டுவந்தார்கள்; அவனோ அதைக் குடிக்க மனதில்லாமல் அதை யெகோவாவுக்கென்று ஊற்றிவிட்டு: 17 யெகோவாவே, இவர்கள் பிராணனை எண்ணாமல் போய் வந்தார்கள், இந்தத் தண்ணீரைக் குடிப்பது

அந்த மனிதரின் இரத்தத்தையே குடிப்பது போலாகும், இது எனக்குத் தூரமாயிருப்பதாக என்று சொல்லி அதைக் குடிக்க மறுத்துவிட்டான்; இப்படிப்பட்டவைகளே இந்த மூன்று பராக்கிரமசாலிகளும் செய்தார்கள்.

18 யோவாபின் சகோதரனும் செரூயாவின் குமாரனுமான அபிஷாய் இம்மூவரில் பிரதானமானவன்; இவன் முன்னூறுபேரை வெட்டிப்போட்டு வெற்றிக்குறியாக ஈட்டியை ஆட்டினவன். இம்மூவரில் இவன்
19 பேர்பெற்றவன். இந்த மூன்றுபேரில் அவன் மதிப்புள்ளவனாயிருந்தானேனும் அவர்களில் தலைவனானான்; ஆனாலும் அந்த முந்தின மூவருக்கு இவன் சமானமானவனல்ல.
20 கப்செயேல் ஊராலான பெனாயா, இவன் யோயாதாவின் குமாரன், இவன் வல்லசெயல்களைச் செய்து பராக்கிரமசாலியாயிருந்த ஒருவனுடைய குமாரன்; இந்தப் பெனாயா மோவாபியனான அரியேலின் இரண்டு மக்களைக் கொன்றவன்; அன்றியும் இவன் உறைந்த மழை பெய்திருந்த ஒருநாளில் ஒரு குழியினுள் இறங்கிப்போய் அங்கிருந்த ஒரு சிங்கத்தைக் கொன்றான்.
21 இடகாத்தியனான ஒரு எகிப்தியனையும் அவன் கொன்றுபோட்டான்; அந்த எகிப்தியன் கையில் ஒரு ஈட்டி இருக்கையில் இவன் ஒரு தடியைப் பிடித்துக்கொண்டு அவனிடத்திலேபோய் அந்த எகிப்தியன் கையிலிருந்த ஈட்டியைப் பறித்து அவன் ஈட்டியினாலேயே அவனைக் கொன்றுபோட்டான்.
22 இவைகளே யோயாதாவின் குமாரனான பெனாயா செய்தபடியினால் மூன்று பராக்கிரமசாலிகளுக்குள்ளே அவன் பேர்பெற்ற
23 வனாயிருந்தான். முப்பதின்மரிலும் இவன் மதிப்புள்ளவன்; முந்தின மூவருக்குமோ இவன் சமானமானவன் அல்ல; இவனைத் தாவீது தனக்கேயுரிய காவல்வீரரின் தலைவனாக வைத்துக்கொண்டான்.
24 முப்பதின்மரில் சேர்ந்தவர்கள் இவர்களே: யோவாபின் தம்பி அசாகேல், பெத்லெகேம் ஊரானாகிய தோதோவின் குமாரன்
25 எல்க்கானான்; கரோதியனான சம்மா, கரோதி
26 யனான எலிக்கா; பல்தியனான கேலெத்ஸ், தெக்கோவா ஊரானான இக்கேஷின் குமா
27 ரன் ஈரா; அனதோத்து ஊரானான அபியே
28 சர். கூஷாத்தியனாகிய மெபுன்னாயி; அகோகியனாகிய சல்மோன், நெத்தோபாத்தியனான
29 மகராயி; பானாவின் குமாரனாகிய கேலேப் என்னும் நெத்தோபாத்தியன், பென்யமீனியரின் கிபியா ஊரானான ரீபா
30 யின் குமாரன் இத்தாயி; பிரத்தோனியனான பெனாயா, ஈகலேகாகால் நாட்டானாகிய ஈத்தாயி; அர்பாத்தியனான அபி அல்பொன், 31
பர்கூமியனான அஸ்மாவேத்; சால்போனிய 32
னான எல்யக்பா, பெனேயாஷேம், யோனத்
தான்; ஆராரியனாகிய சம்மா, ஷாராரின் 33
குமாரனாகிய அகியாம் என்னும் ஆராரியன்;
மாகாத்தியன் ஒருவனின் குமாரனாகிய 34
அகஸ்பாயிம் மகன் எலிப்பேலெத், கீலோ
னியனான அகித்தோப்பேலின் குமாரன்
எலியாம் என்பவன்; கர்மேலியனான கெஸ் 35
ரோ, அர்பியனான பாராயி; சோபா ஊரா 36
னான நாத்தானின் குமாரன் ஈகால், காதிய
னாகிய பானி; அம்மோனியனாகிய சேலேக், 37
பெரோத்தியனான ஈகராய், இவன் செரூயாவின் குமாரனாகிய யோவாபின் ஆயுதம்
சுமப்பவன்; இத்ரியனாகிய ஈரா, இத்ரியனாகிய காரேப்; | ஏத்தியனாகிய உரியா; அவர் 39
களைச் சேர்ந்தவர்களின் மொத்தத் தொகை
முப்பத்தேழு.

**24** யெகோவாவின் கோபம் திரும்ப இஸ்ரவேலின்மேல் மூண்டது. இஸ்ரவேல், யூதா என்பவர்களை இலக்கம்பார்க்கும்படி சொல்வதற்குத் தாவீதை அவர்களுக்கு விரோதமாய் ஏவினார். அப்படியே 2
ராஜா தன்னோடிருந்த சேனைபதியாகிய யோவாபைப்பார்த்து: ஜனங்களின் இலக்கத்தை நான் அறியும்படி தாண்முதல் பெயர்ஷெபாமட்டுமுள்ள இஸ்ரவேலரின் சகல கோத்திரங்களிலும் சுற்றித்திரிந்து ஜனங்களைத் தொகையிடுங்கள் என்றான்.
அப்பொழுது யோவாப் ராஜாவைப்பார்த்து: 3
ராஜாவாகிய என் ஆண்டவனுடைய கண்கள் காணும்படி உமது கடவுளாகிய யெகோவா ஜனத்தை இப்பொழுது இருப்பதிலும் நூறுமடங்கு அதிகமாய் வர்த்திக்கப்பண்ணுவாராக; ஆனாலும் என் ஆண்டவனாகிய ராஜா இந்தக் காரியத்தை விரும்புவானேன் என்றான். யோவாபும் ராஜா 4
வுத்தலைவரும் அப்படிச் சொல்லியும் ராஜாவின் வார்த்தையே பலத்தது. அப்படியே இஸ்ரவேல் ஜனங்களைத் தொகையிட யோவாபும் ராஜாவுத்தலைவரும் ராஜா பார்க்கப் புறப்பட்டுப் போனார்கள். அவர்கள் 5
யோர்தானைக் கடந்து அரோவேரில், காத்பள்ளத்தாக்கின் நடுவே இருந்த ஊரின் வலதுபுறத்திலும் யாசேரின் பக்கமாகவும் பானையமிறங்கினார்கள். அங்கிருந்து கிலெ 6
யாத்திற்கும் தக்தீம் கொத்தி நாட்டிற்கும் போய், அங்கிருந்து தாண்யானுக்கும் தீதோனின் சுற்றுப்புறங்களுக்கும் போனார்கள்.
பிற்பாடு தீருக்கோட்டைக்கும் ஏவியர் 7
கானானியருடைய சகல ஊர்களுக்கும்

போய், அங்கிருந்து யூதாவின் தென்னெட்டிலுள்ள பெயர்ஷெபாவுக்குப் போனார்கள்.
8 இப்படியாகத் தேசமெங்கும் சுற்றித் திரிந்து ஒன்பது மாதமும் இருபதுநாளும் ஆனபிற்பாடு எருசலேமுக்குத் திரும்பிவந்தார்கள்.
9 யோவாப் ஜனத்தை இலக்கம் பார்த்த தொகையை ராஜாவினிடம் கொடுத்தான்; இஸ்ரவேலிலே பட்டயம் எடுக்கத்தக்க யுத்தவீரர் எட்டுலட்சம்பேர் இருந்தார்கள்; யூதாவிலே ஐந்துலட்சம்பேர் இருந்தார்கள்.
10 இவ்விதமாய் ஜனங்களை எண்ணினபின்பு ராஜாவின் இருதயம் அவனை வாதித்தது; அப்பொழுது தாவீது யெகோவாவை நோக்கிப் பிரார்த்தித்து: நான் இப்படிச் செய்து பெரிய பாவத்துக்காளானேன்; இப்போதும் யெகோவாவே, உமது அடியானின் அகிரமத்தை நீக்கியருளும்; நான் மகா மதிகேடாய் நடந்துகொண்டேன் என்று சொன்
11 னான். தாவீது காலமே எழுந்திருந்தபோது தாவீதின் ஞானதிருஷ்டிகளுடைய காத் என்னும் தீர்க்கதரிசிக்கு யெகோவாவின் திரு
12 வாக்கு வந்தது. நீ தாவீதினிடம்போய், மூன்று காரியங்களை உனக்கு முன் வைக்கிறேன், அவற்றில் ஒன்றைத் தெரிந்துகொள், அதை நான் உனக்குச் செய்வேன் என்று யெகோவா உரைக்கிறார் என்று
13 சொல் என்றார். அப்படியே காத் தாவீதினிடம் வந்து இதை அவனுக்குத் தெரிவித்து: உமது தேசத்திலே ஏழுவருஷம் பஞ்சம் வரவேண்டுமா? மூன்று மாதம் உமது சத்துருக்கள் உம்மைப் பிடிக்கத் தொடர நீர் அவர்களுக்கு முன்பாக ஓடிப்போகவேண்டுமா? அல்லது உமது தேசத்திலே மூன்றுநாள் கொள்ளைநோய் உண்டாக வேண்டுமா? இப்போதும் என்னை அனுப்பினவருக்கு நான் என்ன பதில்சொல்ல வேண்டும் என்பதை நீர் யோசித்துப்பாரும்
14 என்று சொன்னான். அப்பொழுது தாவீது காத்தினிடம்: கொடிய இடுக்கணில் அகப்பட்டுக்கொண்டேன்; இப்போதும் நாம் யெகோவாவின் கையில் விழுவோம்; அவருடைய இரக்கம் மகா பெரியது; நாம் மனிதர் கையில் விழவேண்டாம் என்றான்.
15 அப்பொழுது யெகோவா இஸ்ரவேலிலே அன்றுகாலமே தொடங்கிக் குறித்தநேரம் வரைக்கும் கொள்ளைநோயை வரச்செய்தார்; அதினால் தாண்முதல் பெயர்ஷெபாமட்டும் உள்ள ஜனங்களில் எழுபதினாயிரம்பேர்
16 மாண்டார்கள். தெய்வதூதன் எருசலேமை அழிக்கத் தன் கையை அதின்மேல் நீட்டினபோது யெகோவா அந்தத் தீங்குக்கு மனஸ்தாபப்பட்டு ஜனங்களைச் சங்கரிக்கிற தூதனைப் பார்த்து: போதும், இப்போது உன் கையை நிறுத்து என்றார்; யெகோவாவின் தூதன் எபூசியனாகிய அரவனாவின் களத்தண்டையில் இருந்தான். ஜனத்தை உபா 17
திக்கிற தூதனைத் தாவீது கண்டபோது அவன் யெகோவாவினிடம் விண்ணப்பஞ்செய்து: இதோ, பாவஞ்செய்தவன் நானே; அக்கிரமத்தைச் செய்தவன் நானே; இந்த ஆடுகள் செய்ததென்ன? உமது கை எனக்கும் என் தகப்பன் வீட்டிற்கும் விரோதமாயிருக்கட்டும் என்று சொன்னான்.
அன்றையதினம் காத் என்பவன் தாவீதி 18
னிடம் வந்து: நீர் போய் எபூசியனாகிய அரவனாவின் களத்திலே யெகோவாவுக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டும் என்றான் யெகோ 19
வா கற்பித்த பிரகாரமாகத் தாவீது காத்தின் சொற்படியே போனான். வழியை நோக்கி 20
ப் பார்த்துக்கொண்டிருந்த அரவனா, ராஜாவும் அவன் ஊழியரும் தன்னிடம் வருவதைக்கண்டு எதிர்கொண்டுபோய்த் தரைமட்டும் குனிந்து ராஜாவை வணங்கி: ராஜாவாகிய என் ஆண்டவன் அடியேனி 21
டம் வருகிற காரியம் என்ன என்று கேட்கத் தாவீது: இந்தக் களத்தை உன்கையிலே கொள்ளவந்தேன், வாதை ஜனத்தைவிட்டு நிறுத்தப்பட யெகோவாவுக்கு இங்கே ஒரு பலிபீடம் கட்ட வேண்டும் என்றான். அரவனா தாவீ 22
தைப் பார்த்து: ராஜாவாகிய என் ஆண்டவன் இதை எடுத்துக்கொண்டு தமது இஷ்டப்படியே பலியிடுவாராக; இதோ, தகனபலிக்கு மாடுகளும் விறகுக்குப் போரடிக்கிற மரக்கட்டைகளும் மாடுகளின் தூகத்தடிகளும் இங்கே உண்டு. இதோ, இவற்றையெல்லாம், ராஜாவே, 23
அரவனா உமக்குக் கொடுக்கிறான் என்று சொல்லிவிட்டுப் பின்னும் ராஜாவினிடம்: உமதுகடவுளாகிய யெகோவா உம்மிடத்தில் பிரீதியாயிருப்பாராக என்றான். ராஜாவோ 24
அரவனாவினிடம்: அப்படியல்ல, விலை கொடுத்தே அதை நான் உன்னிடம் வாங்குவேன், என் கடவுளாகிய யெகோவாவுக்குச் செலவின்றித் தகனபலிகளைச் செலுத்த மாட்டேன் என்று சொல்லித் தாவீது அந்தக் களத்தையும் மாடுகளையும் ஐம்பது சேக்கல்நிறை வெள்ளிக்கு வாங்கினான். அங்கே தாவீது யெகோவாவுக்கு ஒரு பலி 25
பீடத்தைக் கட்டித் தகனபலிகளையும் சமாதானபலிகளையும்செலுத்தினான். தேசத்துக்காகச் செய்யப்பட்ட விண்ணப்பத்தை யெகோவா கேட்டு இரங்கினார்; இஸ்ரவேலின் மேல் வந்த அந்த வாதை நிறுத்தப்பட்டது.

I. KINGS

# இராஜாக்கள்

## முதலாம் புஸ்தகம்

1 தாவீதுராஜா வயதுசென்று முதிர்ந்தவ
னானான்; போர்வைகளினால் மூடுவது அவ
2 னுக்கு அனல் உண்டாக்கவில்லை. அப்
பொழுது அவன் ஊழியர் அவனிடம்
வந்து: ராஜாவாகிய எங்கள் ஆண்டவனு
க்கு ஒரு கன்னிகையை, ஒரு வாலிப
பெண்ணைத் தேடுவது நலம்; அவள் ராஜ
சமுகத்தில் நின்று அவரைப் பரிபாலித்து
ராஜாவாகிய எங்கள் ஆண்டவனுக்கு
அனல் உண்டாகும்படி உமது மடியிலே
படுத்துக்கொள்ளட்டும் என்று சொன்னார்
3 கள். அப்படியே அவர்கள் இஸ்ரவேலின்
நாடெங்கும் அழகான ஒரு வாலிப
பெண்ணைத்தேடி சூனேம் ஊராளாகிய அபி
ஷாகைக் கண்டு, அவளை ராஜாவினிடம்
4 கொண்டுவந்தார்கள். அந்தப் பெண் மிக
வும் அழகுள்ளவள்; அவள் ராஜாவைப்
பரிபாலித்து அவனுக்குப் பணிவிடை
செய்துவந்தாள்; ராஜாவோ அவளை அறிய
வில்லை.

5 கீதித்திற்குப் பிறந்த அதோனியா என்ப
வன், நானே அரசாளுவேன் என்று சொல்
லித் தன்னை உயர்த்தித் தனக்கு இரதங்களை
யும் குதிரை வீரரையும் தனக்கு முன் ஓடும்
ஐம்பது காலாட்களையும் சம்பாதித்தான்.
6 அவன் செய்வதைப்பற்றி அவன் தகப்பன்
அவனை ஒருநாளும் கடிந்துகொண்டதில்லை,
என் இப்படிச் செய்கிறாய் என்று அவனைக்
கேட்டதுமில்லை; அவனும் மிகவும் அழ
7 குள்ளவன்; அவன் அப்சலோமுக்குப்பின்
பிறந்தவன். அவன் செருயாளின் குமார
ராகிய யோவாபோடும் ஆசாரியராகிய
அபியத்தாரோடும் ஆலோசனை பண்ணிவந்
தான்; அவர்கள் அவனோடு சேர்ந்து அவ
8 னுக்கு உதவிசெய்துவந்தார்கள். ஆசாரி
யராகிய சாதோக்கும் யோயாதாவின் குமா
ரராகிய பெனாயாவும் தீர்க்கதரிசியாகிய
நாத்தானும் சிமேயீயும் ரேயியும் தாவீதோ
டிருந்த பராக்கிரமசாலிகளும் அதோனியா
வோடு சேரவில்லை. அதோனியா என்றோ 9
கேலுக்குச் சமீபமான சோகெலெத் என்
னும் கல்லின் அருகே ஆடுமாடுகளை, கொ
ழுத்த ஜந்துக்களையே, அடித்து ராஜகுமார
ராகிய தன் சகோதரரனைவரையும் ராஜா
வின் ஊழியரான யூதா மனுஷர் அனை
வரையும் அழைத்தான். தீர்க்கதரிசியாகிய 10
நாத்தான், பெனாயா, மற்றும் பராக்கிரம
சாலிகள், தன் சகோதரராகிய சாலொமோ
னாகிய இவர்களையோ அவன் அழைக்க
வில்லை.

அப்பொழுது நாத்தான் சாலொமோ 11
னின் தாயாகிய பத்சேபாளினிடம் வந்து:
நமது ஆண்டவனாகிய தாவீதுக்குத் தெரியா
மல் கீதித்தின் குமாரனாகிய அதோனியா ராஜா
வாகிற செய்தியை நீ கேள்விப்படவில்
லையா? இதோ பார், உன் பிராணனையும் 12
உன் குமாரனாகிய சாலொமோனின் பிரா
ணனையும் தப்புவிப்பதற்கு நான் உனக்கு
ஆலோசனை சொல்லுகிறேன். நீ தாவீது 13
ராஜாவினிடம்போய், ராஜாவாகிய என்
ஆண்டவனே, உமக்குப்பின் என் குமார
னாகிய சாலொமோன் ராஜாவாகி, அவனே
உமது சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்
பான் என்று நீர் உமது அடியாளுக்கு
ஆணையிடவில்லையா? அப்படியிருக்க அதோ
னியா ராஜாவாகிறது என்ன என்று அவரி
டத்தில் கேள். நீ அங்கே ராஜாவோடே 14
பேசிக்கொண்டிருக்கையிலேயே நானும்
உனக்குப்பின் வந்து உன் வார்த்தைகளை
உறுதிப்படுத்துவேன் என்றான்.

அப்படியே பத்சேபாள் பள்ளியறைக் 15
குள் ராஜாவினிடம் போனாள்; ராஜாவோ
மிகவும் வயதுமுதிர்ந்தவன்; சூனேம் ஊரா
ளாகிய அபிஷாகு ராஜாவுக்குப் பணி
விடை செய்துகொண்டிருந்தாள். பத்சே 16
பாள் குனிந்து ராஜாவை வணங்கவே
அவன் அவளிடம்: உனக்கு என்னவேண்
டும் என்று கேட்டான். அதற்கு அவள்: 17

என் ஆண்டவனே உமக்குப்பின் என் குமாரனுகிய சாலொமோன் ராஜாவாகி அவனே உமது சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பான் என்று நீர் உமது கடவுளாகிய யெகோவாவின்பேரில் உமது அடியாளுக்கு 18 ஆணையிட்டீரே. அப்படியிருக்க, இதோ, அதொனீயா ராஜாவாகிறான்; என் ஆண்டவனுகிய ராஜாவே, அது உமக்குத் தெரி 19 யாதா? இதோ, அவன் மாடுகளையும் கொழுத்த ஜந்துக்களையும் ஆடுகளையும் திரளாக அடித்து ராஜகுமாரர் அனைவரையும் ஆசாரியனுகிய அபியத்தாரையும் யோவாப் என்னும் படைத்தலைவனையும் அழைத்திருக்கிறான்; உமது அடியாளுகிய 20 சாலொமோனையோ அழைக்கவில்லை. ராஜாவாகிய என் ஆண்டவனே, ராஜாவாகியஎன் ஆண்டவனுக்குப்பிறகு அவருடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பவன் இன்னுன் என்று தங்களுக்கு அறிவிக்கவேண்டும் என்று இஸ்ரவேலர் அனைவரின் கண்களும் உம் 21 மை நோக்கிக்கொண்டிருக்கின்றன. அறியாமற்போனுல் ராஜாவாகிய என் ஆண்டவன் தமது பிதாக்களோடே படுத்துக் கொண்டபின்பு நானும் என் குமாரனுகிய சாலொமோனும் குற்றவாளிகள்போல் துன் 22 பத்தக்காளாவோமே என்றுள். அவள் ராஜாவோடே பேசிக்கொண்டிருக்கையில் தீர்க்கதரிசியாகிய நாத்தானும் வந்தான். 23 தீர்க்கதரிசியாகிய நாத்தான் வந்திருக்கிறார் என்று ராஜாவுக்குத் தெரிவித்தார்கள்; அவன் ராஜ சந்நிதானத்தில் வந்து முகங் 24 குப்புற விழுந்து ராஜாவை வணங்கி: ராஜாவாகிய என் ஆண்டவனே, அதொனீயா உமக்குப்பின் ராஜாவாகி, அவனே உமது சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பான் என்று 25 நீர் சொன்னதுண்டோ? அவன் இன்றையதினம் போய் மாடுகளையும் கொழுத்த ஜந்துக்களையும் ஆடுகளையும் திரளாக அடித்து ராஜகுமாரர் அனைவரையும் படைத்தலைவரையும் ஆசாரியனுகிய அபியத்தாரையும் அழைத்திருக்கிறான்; அவர்கள் அவனோடி விருந்துண்டு, ராஜாவாகிய அதொனீயா 26 வாழ்க என்று சொல்லுகிறார்கள். ஆனுலும் உமது அடியாளுகிய என்னையும் ஆசாரியனுகிய சாதோக்கையும் யோயாதாவின் குமாரனுகிய பெனாயாவையும் உமது அடியாளுகிய சாலொமோனையும் அவன் 27 அழைக்கவில்லை. ராஜாவாகிய என் ஆண்டவனுக்குப்பின் உமது சிங்காசனத்தில் வீற்றிருப்பவன் இன்னுன் என்று நீர் உமது அடியாருக்குத் தெரிவிக்கவில்லையே, இப்படியிருக்க இந்தக் காரியம் ராஜாவாகிய என் ஆண்டவன் கட்டளையால் நடந்திருக்குமோ என்றான். அதுகேட்ட தாவீது 28 ராஜா: பத்சேபாளை என்னிடம் வரவழையுங்கள் என அவள் ராஜசமுகத்தில் பிரவேசித்து ராஜாவுக்குமுன்னே நின்றுள். அப் 29 பொழுது ராஜா அவளோடி பேசி: உன் குமாரனுகிய சாலொமோன் எனக்குப்பின் அரசாண்டு அவனே என் ஸ்தானத்தில் என் சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பான் என்று நான் உனக்கு இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவின்மேல் ஆணையிட்டேனே, அந்தப்படி இன்றே செய்துதீர்ப்பேன், என் ஆத்துமாவை எல்லா இக்கட்டுக்கும் 30 நீங்கலாக்கி மீட்ட யெகோவாவின் ஜீவன் மேல் ஆணையாக இதைச் சொல்லுகிறேன் என்று ஆணையிட்டான். அப்பொழுது 31 பத்சேபாள் தரைமட்டும் குனிந்து ராஜாவை வணங்கி என் ஆண்டவனுகிய தாவீது ராஜா என்றும் வாழ்க என்றுள்.

பின்பு தாவீது ராஜா ஆசாரியனுகிய 32 சாதோக்கையும் தீர்க்கதரிசியாகிய நாத்தானையும் யோயாதாவின் குமாரன் பெனாயாவையும் என்னிடத்தில் வரவழையுங்கள் என்றான். அவர்கள் அப்படியே ராஜ சந்நிதானத்தில் வந்து சேர்ந்தார்கள். ராஜா 33 அவர்களைப் பார்த்து: நீங்கள் உங்கள் ஆண்டவனுடைய சேவகரைக் கூட்டிக்கொண்டு என் குமாரனுகிய சாலொமோனை எனக் குரிய கோவேறு கழுதையின்மேல் ஏற்றி அவனைக் கீகோனுக்கு அழைத்துக் கொண்டு போங்கள். அங்கே ஆசாரிய 34 னுகிய சாதோக்கும் தீர்க்கதரிசியாகிய நாத்தானும் அவனை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணவேண்டும்; பின்பு எக்காளம் ஊதி, ராஜாவாகிய சாலொ 35 மோன் வாழ்க என்று வாழ்த்துங்கள். அதின்பின்பு அவன் என் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்படி அவனோடி வாருங்கள்; அவனே என் ஸ்தானத்தில் ராஜாவாயிருப்பான்; அவன் இஸ்ரவேலின்மேலும் யூதாவின்மேலும் தலைவனுயிருக்கும்படி அவனை ஏற்படுத்தினேன் என்றான். அதைக்கேட்ட 36 யோயாதாவின் குமாரன் பெனாயா ராஜாவினிடம்: ஆமென், ராஜாவாகிய என் ஆண்டவனுடைய கடவுளாம் யெகோவாவும் இப்படியே சொல்வாராக. யெகோவா 37 ராஜாவாகிய என் ஆண்டவனோடி இருந்ததுபோலவே அவர் சாலொமோனோடும் இருந்து தாவீது ராஜாவாகிய என் ஆண்டவனுடைய சிங்காசனத்திலும் அவருடைய சிங்காசனத்தைப் பெரிதாக்குவாராக என்றான். அப்படியே ஆசாரியனுகிய சாதோக் 38

கும் தீர்க்கதரிசியாகிய நாத்தானும் யோ
யாதாவின் குமாரன் பெனாயாவும் கிரேத்திய
ரும் பிலேத்தியரும் போய்ச் சாலொமோ
னைத் தாவீது ராஜாவினுடைய கோவேறு
கழுதையின்மேல் ஏற்றி அவனைக் கீகோ
னுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள்.
39 ஆசாரியனுகிய சாதோக்கு தைலக்கொம்
பைக் கூடாரத்திலிருந்து எடுத்துக்கொண்
டுபோய்ச் சாலொமோனை அபிஷேகம்பண்
ணினான்; அப்பொழுது எக்காளம் ஊதி,
ராஜாவாகிய சாலொமோன் வாழ்க என்று
40 ஜனங்களெல்லாரும் வாழ்த்தினார்கள். பிற்
பாடு ஜனங்களெல்லாரும் அவனோடு போ
னார்கள்; ஜனங்கள் நாகசுரங்களை ஊதி
ஆனந்த சந்தோஷங்கொண்டாடினார்கள்,
பூமி பிளக்க முழக்கமிட்டார்கள்.
41 அதொனியாவும் அவனோடிருந்த எல்லா
விருந்தாளிகளும் விருந்துண்டு முடிகிற
சமயத்தில் அதைக் கேட்டார்கள்; யோ
வாப் எக்காள சத்தத்தைக் கேட்டபோது,
நகரத்திலே கேட்கிற ஆரவாரம் என்ன
42 என்று விசாரித்தான். அவன் பேசிக்
கொண்டிருக்கையிலேயே ஆசாரியனுகிய
அபியத்தாரின் குமாரன் யோனத்தான் வந்
தான்; அவனைக் கண்ட அதொனியா, உள்
ளேவா, நீ யோக்கியன், நீ கொண்டுவரும்
செய்தியும் நல்லதாம் என்று சொன்னான்.
43 சொல்லவே யோனத்தான் அதொனியா
வைப் பார்த்து: தாவீது ராஜாவாகிய நமது
ஆண்டவன் சாலொமோனையே ராஜாவாக்கி
44 விட்டார். ஆசாரியனுகிய சாதோக்கையும்
தீர்க்கதரிசியாகிய நாத்தானையும் யோயாதா
வின் குமாரன் பெனாயாவையும் கிரேத்திய
ரையும் பிலேத்தியரையும் அவனோடே
அனுப்பினார்; அவர்கள் அவனைப் பட்டத்
துக் கோவேறுகழுதையின்மேல் ஏற்றினார்
45 கள். ஆசாரியனுகிய சாதோக்கும் தீர்க்கதரி
சியாகிய நாத்தானும் அவனைக் கீகோனிலே
ராஜாவாக அபிஷேம்பண்ணினார்கள்; அங்
கிருந்து ஆனந்த சந்தோஷமாய் வந்தார்
கள்; நகரமெல்லாம் முழங்குகிறது; நீங்கள்
46 கேட்ட ஆரவாரம் அதுதான். அன்றியும்
சாலொமோன் ராஜாங்கத்துக்குரிய சிங்கா
47 சனத்தின்மேல் வீற்றிருக்கிறான். தாவீது
ராஜாவாகிய நமது ஆண்டவனை வாழ்த்தும்
படி வந்த ராஜாவின் ஊழியரும், கடவுள்
சாலொமோனின் நாமத்தை உமது நாமத்தி
லும் சிறப்புள்ளதாக்கி அவருடைய சிங்கா
சனத்தை உமது சிங்காசனத்திலும் பெரி
தாக்குவாராக என்று வாழ்த்தினார்கள்;
ராஜாவும் தமது கட்டிலிலிருந்தபடியே
48 குனிந்து பணிந்துகொண்டு | என் கண்கள்



காண இன்றையதினம் என் சிங்காசனத்
தின்மேல் ஒருவனை வீற்றிருக்கச்செய்த
இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா
வுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னார் என்
ருன். அதொனியாவின் விருந்தாளிகள் 49
எல்லாரும் திகில்கொண்டு எழுந்து தங்கள்
தங்கள் வழியே போயவிட்டார்கள்.
அதொனியா சாலொமோனுக்குப் பயந் 50
தான்; ஆகவே அவன் எழுந்துபோய்ப் பலி
பீடத்தின் கொம்புகளைப் பிடித்துக்கொண்
டான். இது சாலொமோனுக்குத் தெரி 51
விக்கப்பட்டது; இதோ, அதொனியா ராஜா
வாகிய சாலொமோனுக்குப் பயப்படுகி
ருன், அவன் பலிபீடத்தின் கொம்புகளைப்
பிடித்துக்கொண்டு, ராஜாவாகிய சாலொ
மோன் தமது அடியானைப் பட்டயத்தாலே
கொன்றுபோடுவதில்லை என்று இன்று
எனக்கு ஆணையிட்டுத் தரவேண்டும் என்று
கேட்கிறான் என்று சொன்னார்கள். அப் 52
பொழுது சாலொமோன்: அவன் யோக்கி
யன் என்று விளங்க நடந்துகொண்டால்
அவன் தலைமயிரில் ஒன்றும் தரையிலே
விழப்போவதில்லை; அவனுல் தீமை விளையு
மெனக் காணப்பட்டாலோ அவன் சாவது
நிண்ணம் என்ருன். அவனைப் பலிபீடத் 53
திலிருந்து கொண்டுவரும்படி ராஜாவாகிய
சாலொமோன் ஆட்களை அனுப்பினான்;
அவன் வந்து சாலொமோன் ராஜாவை
வணங்கவே சாலொமோன் அவனைப் பார்
த்து: நீ உன் வீட்டிற்குப் போ என்ருன்.
தாவீது மரணமடையும் காலம் சமீ 2
பித்தபோது அவன் தன் குமாரனுகிய சாலொ
மோனோடு பேசி: பூலோகத்தார் யாவரும் 2
போகிறவழியே நான் போகிறேன்; நீ தைரி
யமாயிருந்து புருஷனுக நடந்துகொள். நீ 3
உன் கடவுளாகிய யெகோவா விதித்திருக்
கிறவைகளைக் கைக்கொள்ளவேண்டும்;
மோசேயின் நியாயப்பிரமாணத்தில் எழுதி
யிருக்கிறபடியே அவருடைய நியமங்களை
யும் கட்டளைகளையும் தீர்ப்புகளையும் சாட்சி
யங்களையும் கைக்கொண்டு அவர் வழிக
ளில் நடப்பதற்கென அப்படிச் செய்ய
வேண்டும். அப்பொழுது நீ என்ன செய் 4
தாலும், நீ எங்கே போனாலும் எல்லாவற்றி
லும் தெற்றெறுவாய்; அப்படியே யெகோவா
என்னைப்பற்றிச் சொல்லியிருக்கிற தமது
திருவாக்கை உறுதிப்படுத்துவார். உன்
பிள்ளைகள் தங்கள் வழியைக் காத்துத் தங்கள்
முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்
துமாவோடும் எனக்கு முன்பாக உண்மை
யாய் நடப்பார்களேயானுல் இஸ்ரவேலின்
சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் ஒரு

ஆண்பிள்ளை உனக்கு இல்லாமற்போவதில்லை என்று அவர் சொல்லியிருக்கிறார்.
5 செரூயாளின் குமாரனுகிய யோவாப் இஸ்ரவேலின் இரண்டு சேனாபதிகளாகிய நேரின் குமாரன் அப்னேருக்கும் எத்தேரின் குமாரன் அமாசாவுக்கும் செய்தவைகளிலுல் எனக்கு விரோதமாய் வினைவித்த குற்றம் உனக்குத் தெரியுமே, அவன் யுத்தகாலத்தில் இரத்தத்தைச் சிந்துவதுபோல சமாதான காலத்தில் அவர்களைக் கொன்று யுத்தத்தில் நடப்பதுபோல் தன் அரைக்கச்சையிலும் தன் பாதரட்சைகளிலும் இரத்தத்தை
6 வடியவிட்டான். ஆகையால் உன் புத்திக்குத் தோன்றுகிறபடியே நீ செய்து அவனுடைய நரைமயிரைச் சமாதானமாய்ப் பாதாளத்தில் இறங்கவொட்டாதிரு. கிலெயாத்தியனுன பர்சிலாயின் குமாரருக்குத் தயை
7 காட்டு; அவர்கள் உன் பந்தியிலே சாப்பிடுகிறவர்களுடன் இருக்கட்டும். உன் சகோதரனுகிய அப்சலோமுக்கு முன்பாக நான் ஓடிப்போகையில் அவர்கள் என்னை ஆதரித்தார்கள். மேலும் பகூரீம் ஊராளன
8 பென்யமீனியனுகிய கேராவின் மகன் சிமேயீ உன்னிடம் இருக்கிறுன்; நான் மகனயீமுக்குப் போகிற நாளிலே அவன் என்னைக் கொடிய தூஷணமாய்த் தூஷித்தான்; ஆனலும் அவன் யோர்தானிலே எனக்கு எதிர்கொண்டுவந்தபடியினுல், நான் உன்னைப் பட்டயத்தாலே கொன்றுபோடுவதில்லை என்று யெகோவாவின்மேல் அவ
9 னுக்கு ஆணையிட்டுக் கொடுத்தேன். ஆகிலும் நீ அவனைக் குற்றமற்றவன் என்று எண்ணுதே; நீ புத்திமான்; அவனுக்குச் செய்ய வேண்டியது இன்னதென்று உனக்குத் தெரியும்; அவனுடைய நரைமயிரை இரத்தத்துடன் பாதாளத்தில் இறங்கப்பண்ணுவாய் என்றுன்.
10 பின்பு தாவீது நித்திரையடைந்து தன் பிதாக்களோடே சேர்ந்தான்; தாவீதின் நகரத்திலே அவனை அடக்கம்பண்ணினுர்கள்.
11 தாவீது இஸ்ரவேலை அரசாண்ட நாட்கள் நாற்பது வருஷம்; அவன் எப்பெரோனில் ஏழுவருஷமும் எருசலேமில் முப்பத்து
12 மூன்று வருஷமும் அரசாண்டான். சாலொமோன் தன் தகப்பனுகிய தாவீதுடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தான்; அவன் ராஜ்யபாரம் மிகவும் ஸ்திரப்பட்டது.
13 கீத்தின் குமாரன் அதொனீயா சாலொமோனின் தாயாகிய பத்சேபாளினிடம் வந்தான். நீ வருகிறது சமாதானமா என்று அவள் கேட்க அவன், சமாதானந்தான்
14 என்றுன். பின்பு அவன்: உம்மோடே நான் பேசவேண்டிய ஒரு காரியம் இருக்கிறது என அவள்: சொல் என்றுள். அப் 15
பொழுது அவன்: ராஜ்யம் எனக்குரியதாயிருந்தது என்பதும் நானே அரசாளுவேன் என இஸ்ரவேலரெல்லாரும் என்னை நோக்கியிருந்தார்கள் என்பதும் உமக்குத் தெரியும். ஆயினும் ராஜ்யபாரம் என்னை விட்டு அகன்று என் சகோதரனுக்கு ஆயிற்று; யெகோவாவினுலே அது அவருக்கு ஆயிற்று. இப்பொழுது நான் உம்மிடம் கேட் 16
டுக்கொள்ளுகிற ஒரு விண்ணப்பம் உண்டு; நான் கேட்டுக்கொள்வதை நீர் எனக்கு மறுக்கவேண்டாம் என்றுன். அவள்: சொல் என்றுள். அப்பொழுது அவன்: 17
ராஜாவாகிய சாலொமோன் உமது சொல்லை மறுப்பதில்லை; சூனேம் ஊராளாகிய அபிஷாகை எனக்கு அவர் விவாகம்பண்ணிக் கொடுக்க அவரோடே பேசும்படி கேட்டுக் கொள்ளுகிறேன் என்றுன். அதற்குப் பத் 18
சேபாள்: சரி, நான் உனக்காக ராஜாவினிடம் பேசுவேன் என்றுள். பத்சேபாள் 19
அதொனீயாவுக்காக ராஜாவாகிய சாலொமோனிடம் பேசும்படி போனுள்; அப்பொழுது ராஜா எழுந்திருந்து, அவளுக்கு எதிர்கொண்டு வந்து அவளை வணங்கித் தன் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து, ராஜாவின் தாயார் தன் வலது புறத்தில் உட்கார அவளுக்கு ஒரு ஆசனம் அளித்தான். அப்பொழுது அவள்: நான் உம்மி 20
டம் ஒரு சிறிய விண்ணப்பம் கேட்க விரும்புகிறேன்; எனக்கு அதை மறுக்க வேண்டாம் என்றுள். அதற்கு ராஜா: என் தாயாரே, கேளும், நான் உமக்கு மறுப்பதில்லை என்றுன். அப்பொழுது அவள்: 21
சூனேம் ஊராளாகிய அபிஷாகை உமது சகோதரனுகிய அதோனீயாவுக்கு விவாகம் பண்ணிக் கொடுக்கவேண்டும் என்றுள். அதைக் கேட்கவே ராஜாவாகிய சாலொ 22
மோன் தன் தாயாரினிடம்: நீர் சூனேம் ஊராளாகிய அபிஷாகை அதொனீயாவுக்குக் கேட்பானேன்? அப்படியானுல் ராஜ்ய பாரத்தையும் அவனுக்குக் கேளும்; அவன் எனக்கு மூத்த சகோதரன்; அவனுக்கும் ஆசாரியனுகிய அபியத்தாருக்கும் செரூயாளின் குமாரனுகிய யோவாபுக்குமே அதைக் கேளும் என்றுன். பின்பு சாலொமோன் 23
ராஜா அதொனீயா சொன்ன இந்த வார்த்தை அவனுடைய பிராணசேதத்திற்கு ஏதுவாகும். அப்படி ஆகாவிட்டால் யெகோவா தமது சித்தப்படியெல்லாம் எனக்குச் செய்வாராக என்று யெகோவாவின்மேல் ஆணையிட்டான். பின்னும் அவன், இன்றே 24

அதொனீயா கொல்லப்படுவான்; என்னைத் தப்படுத்தினவரும் என்னை என் தகப்பனுடைய தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கப் பண்ணித் தாம் சொன்னபடியே எனக்கு வீட்டைக் கட்டுவித்தவருமாகிய நித்திய ஜீவியாம் யெகோவாவின்மேல் ஆணையாக இதைச் சொல்லுகிறேன் என்று சொல்
25 லிச் | சாலொமோன்ராஜா யோயாதாவின் குமாரன் பெனாயாவுக்குக் கட்டளைகொடுத்து அவனை அனுப்பினான்; இவன் அவன்மேல் விழுந்து அவனைக் கொன்றுபோட்டான்.
26 ராஜா ஆசாரியனுடைய அபியத்தாரைப் பார்த்து: நீ உன் நிலங்கள் இருக்கிற ஆனதோத்திற்குப் போய்விடு; நீ மரணத்திற்கு ஆளாகவேண்டியவன், இந்த நாளிலோ நான் உன்னைக் கொல்லமாட்டேன், நீ என் தகப்பனுடைய தாவீதுக்கு முன்பாக ஆண்டவராகிய யெகோவாவின் பெட்டகத்தைச் சுமந்தாய், என் தகப்பன் அனுபவித்த சிறுமைகளையெல்லாம் நீயும் கூடவே அனுபவித்
27 தாயே என்றான். அபியத்தார் யெகோவாவின் ஆசாரியனுயிராதபடி இப்படியாகச் சாலொமோன் அவனைத் தள்ளிப்போட்டான். யெகோவா சீலோவிலே ஏலியின் குடும்பத்தைப்பற்றிச் சொன்ன வார்த்தையை இவ்விதமாய் நிறைவேற்றினான்.
28 நடந்த இந்தச் செய்தி யோவாபுக்கு வந்து எட்டினது, யோவாப் அப்சலோமின் பட்சம் சாயாதவனுயிருந்தும் அதொனீயாவின் பட்சம் சாய்ந்திருந்தான்; ஆகவே அவன் யெகோவாவின் கூடாரத்திற்கு ஓடிப்போய் பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்
29 துக்கொண்டான். யோவாப் யெகோவாவின் கூடாரத்திற்கு ஓடிப்போனான் என்றும், இதோ, பலிபீடத்தண்டையில் நிற்கிறான் என்றும் சாலொமோன் ராஜாவுக்கு அறிவிக்கப்பட்டபோது, சாலொமோன் யோயாதாவின் குமாரனுடைய பெனாயாவை அனுப்பி, நீ போய் அவன்மேல் விழு என்றான்.
30 பெனாயா யெகோவாவின் கூடாரத்திற்குப் போய் அவனைக் கூப்பிட்டு: வெளியேவா என்று ராஜா சொல்லுகிறார் என அவன்: நான் வரமாட்டேன்; இங்கேயே சாவேன் என்றான்; பெனாயா ராஜாவினிடம் திரும்பிப்போய் யோவாப் இன்னின்னபடி பேசி எனக்கு உத்தரவு கொடுத்தான் என்று அறி
31 வித்தான். அதைக் கேட்ட ராஜா அவனிடம்: அவன் சொன்னபடியே செய், நீ அவனைக் கொன்று அடக்கம்பண்ணு; யோவாப் முகாந்தரமில்லாமல் சிந்தின இரத்தத்தை என்னைவிட்டும் என் பிதாவின் வீட்டைவிட்டும் இவ்விதமாக விலக்கிப்
போடு. அவன் நேரின் குமாரன் அப்னேரை 32
ராகிய இஸ்ரவேல் படைத்தலைவன் மேலும் ஏதேரின் குமாரன் அமாசாவாகிய யூதா படைத்தலைவன்மேலும் விழுந்து அவர்களை என் தகப்பனுடைய தாவீதுக்குத் தெரியாமல் பட்டயத்தால் கொன்றானே. அவ்விருவரும் அவனினும் நீதியும் நற்குணமுமுள்ளவர்கள்; அவனுடைய இரத்தப்பழியை யெகோவா அவன் தலையின்மேலேயே சுமத்துவாராக. இப்படியாக அவர்களைக் 33
கொன்ற இரத்தப்பழி என்றுமாக யோவாபின் தலைமேலும் அவன் சந்ததியாரின் தலைமேலும் திரும்புவதாக, தாவீதுக்கும் அவர் சந்ததியாருக்கும் அவர் வீட்டாருக்கும் அவர் சிங்காசனத்திற்குமோ வெனில் என்றென்றுமாக யெகோவாவினுலே சமாதானம் உண்டாயிருப்பதாக என்றான். அப்படியே 34
யோயாதாவின் குமாரன் பெனாயா போய் அவன்மேல் விழுந்து அவனைக் கொன்று போட்டான்; வனாந்தரத்திலிருந்த அவனுடைய வீட்டிலே அவன் அடக்கம்பண்ணப்பட்டான். அவனுக்குப் பதிலாக 35
யோயாதாவின் குமாரன் பெனாயாவை இராணுவத்தின்மேலும் ஆசாரியனுகிய சாதோக்கை அபியத்தாரின் ஸ்தானத்திலும் ராஜா ஏற்படுத்தினான்.

பின்பு ராஜா சிமேயீயை அழைப்பித்து 36
அவனுடு பேசி: நீ எருசலேமிலே உனக்கு ஒரு வீட்டைக் கட்டி அங்கே குடியிரு, அங்கிருந்து எங்கேயாவது வெளியே போகவேண்டாம். நீ வெளியேறிக் கீதரோன் 37
நீரோடையைக் கடக்கும் நாளில் நீ சாவது நிச்சயம் என்பதையும் உன் இரத்தப்பழி உன் தலையின்மேலேயே இருக்கும் என்பதையும் நீ நிச்சயமாய் அறிந்துகொள் என்றான். சிமேயீ ராஜாவினிடம்: அது நல்ல 38
வார்த்தை; ராஜாவாகிய என் ஆண்டவன் சொன்னபடியே அடியேன் செய்வேன் என்று சொல்லிச் சிமேயீ அநேகநாள் எருசலேமிலே குடியிருந்தான். மூன்று வருஷம் 39
சென்றபோது சிமேயீயின் வேலைக்காரர் இரண்டுபேர் மாக்காவின் குமாரனுகிய ஆகீஸ் என்னும் காத்தின் ராஜாவினிடத்திற்கு ஓடிப்போனார்கள்; உன் வேலைக்காரர் காத் ஊரில் இருக்கிறார்கள் என்று சிமேயீக்கு அறிவித்தார்கள். சிமேயீ எழுந்து 40
தன் கழுதையின்மேல் சேணம்வைத்துத் தன் வேலைக்காரரைத் தேடக் காத் ஊரிலிருந்த ஆகீசினிடம் போனான்; போய்ச் சிமேயீ தன் வேலைக்காரரைக் காத்ஊரிலிருந்து கொண்டுவந்தான். சிமேயீ எருச 41
லேமிலிருந்து காத் ஊருக்குப் போய்த்

திரும்பிவந்தான் என்று சலொமோனுக்கு
42 அறிவிக்கப்பட்டபோது | ராஜா ஆள்
அனுப்பிச் சிமேயியை அழைப்பித்து: நீ
வெளியே புறப்பட்டு எங்கேயாவது போகிற
நாளிலே சாவது நிண்ணம் என்பதை நீ
நிச்சயமாய் அறிந்துகொள் என்று நான்
உன்னை யெகோவாவின்மேல் ஆணையிடச்
செய்து எச்சரித்திருந்தேன்; அதற்கு நீயும்,
நான் கேட்ட வார்த்தை நல்லதென்று
43 சொல்லவில்லையா? நீ யெகோவாவின் ஆண
யையும் நான் உனக்கு இட்ட கட்டளையை
யும் கைக்கொள்ளாதேபோனதென்ன என்று
44 சொல்லிப் | பின்னும் ராஜா சிமேயி
னிடம்: நீ என் தகப்பனாகிய தாவீதுக்குச்
செய்ததும் உன் மனதே ஒப்புக்கொள்ளு
கிறதுமான சகல பொல்லாப்பும் உனக்குத்
தெரியும்; யெகோவாவே உன் பொல்
லாப்பை உன் தலையின்மேல் திரும்பப்
45 பண்ணுவார். ராஜாவாகிய சாலொமோனே
ஆசீர்வாதத்திற்குரியவன்; தாவீதின் சிங்கா
சனம் என்றைக்கும் யெகோவாவுக்கு முன்
46 பாக நிலைநிற்கும் என்று சொல்லி | ராஜா
யோயாதாவின் குமாரனாகிய பெனாயாவுக்
குக் கட்டளைகொடுத்தான்; அவன் வெளியே
போய்ச் சிமேயியின்மேல் விழுந்து அவ
னைக் கொன்றுபோட்டான். ராஜ்யபாரம்
சாலொமோனின் கையிலே ஸ்திரப்பட்டது.

**3** சாலொமோன் எகிப்தின் ராஜாவாகிய
பார்வோனுடே சம்பந்தங்கலந்து பார்வோ
னின் குமாரத்தியை விவாகம்செய்தான்.
தன் அரமனையையும் யெகோவாவின் ஆல
யத்தையும் எருசலேமின் சுற்றுமதிலையும்
கட்டித்தீருங் காலமட்டும் அவன் அவளைத்
தாவீது நகரத்தில் கொண்டுவந்து வைத்
2 திருந்தான் அந்நாட்கள்மட்டும் யெகோவா
வின் நாமத்திற்கு ஒரு ஆலயம் கட்டப்
படாதிருந்ததினால் ஜனங்கள் மேடைகளிலே
3 பலியிட்டுவந்தார்கள். சாலொமோன் யெ
கோவாவில் அன்புகூர்ந்து தன் தகப்பன்
கிய தாவீதினுடைய கட்டளைகளின்படியே
நடந்தானெனினும் அவன் மேடைகளிலே
4 பலியிட்டுத் தூபம் காட்டிவந்தான். அப்
படியே ராஜா பலியிடக் கிபியோனுக்குப்
போனான்; அது ஒரு விசேஷித்த மேடை;
அந்தப் பலிபீடத்தின்மேல் சாலொமோன்
ஓராயிரம் தகனபலிகளைச் செலுத்தினான்.
5 கிபியோனிலே யெகோவா சாலோமோ
னுக்கு இரவில் சொப்பனத்திலே தரிசன
மானார்; கடவுள் அவனோடேசி: நீ விரும்பு
கிறதை என்னிடத்தில் கேள் என்று
6 சொல்ல | சாலொமோன்: என் தகப்பனா
கிய உமது அடியான் தாவீது, உமது பார்
வையில் உண்மையும் நீதியும் மனஉறுதியு
மாய் உம்மோடு நடந்ததற்கிசைய தேவரீர்
அவருக்குப் பெரிய தயை பாராட்டினீர்,
அந்தப் பெரிய தயையை அவருக்கு நிலைக்
கச்செய்து, இந்நாளில் இருக்கிறபடியே,
அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கிற
ஒரு குமாரனை அவருக்குத் தந்தீர். இப் 7
போதும் என் கடவுளாகிய யெகோவாவே,
தேவரீர் அடியேனை என் தகப்பனாகிய
தாவீதின் ஸ்தானத்திலே ராஜாவாக்கினீர்;
நானோ சிறுவன், போகும்போதும் வரும்
போதும் அவர்களை நடத்தத் தெரியாதவன்.
அடியேன் உமது ஜனத்தின் நடுவில் இருக் 8
கிறேன்; இதுவோ நீர் தெரிந்துகொண்ட
ஜனம்; அது ஏராளமானதும் எண்ணிக்
கைக்கு அடங்காததும் இலக்கத்திற்குட்
படாததுமான திரள்ஜனம். ஆகவே உமது 9
ஜனங்களை நியாயம் விசாரிக்கவும் நன்மை
தீமைகளை வகையறுக்கவும் அடியேனுக்
குக் கவனமுள்ள இருதயத்தைத் தந்தரு
ளும்; விசேஷித்ததான இந்த உமது ஜனத்தை
நியாயம் விசாரிக்க யாராலே ஆகும் என்று
கேட்டான். சாலொமோன் இந்தக் காரி 10
யத்தைக் கேட்டது ஆண்டவருடைய பார்
வையில் நல்லதாய்த் தோன்றிற்று. கடவுள் 11
அவனோடு பேசி: நீ தீர்க்காயுசைக் கேட்க
வில்லை, செல்வத்தைக் கேட்கவில்லை, உன்
சத்துருக்களின் பிராணனைக் கேட்கவில்லை,
நீ இந்த ஒரே காரியத்தைக்கேட்டு நியாயம்
விசாரிக்கிறதற்கு ஏற்ற ஞானத்தை வேண்
டிக்கொண்டாய். இதோ, நீ கேட்டபடியே 12
செய்வேன்; ஞானமும் விவேகமுமுள்ள
இருதயத்தை உனக்குத் தருவேன்; இவ்
விஷயத்தில் உனக்குச் சமானமானவன்
உனக்குமுன் இருந்ததுமில்லை, உனக்குச்
சமானமானவன் உனக்குப்பின் இருப்பது
மில்லை. இதுவேயன்றி நீ கேளாத செல் 13
வத்தையும் மேன்மையையும் உனக்குத்
தருவேன்; உன் நாட்களில் இருக்கும் அரச
ரில் எவனும் உனக்குச் சமானமாவதில்லை.
உன் தகப்பனாகிய தாவீது நடந்ததுபோல 14
நீயும் என் நியமங்களையும் என் கட்டளை
களையும் கைக்கொண்டு என் வழிகளில்
நடப்பாயாகில் உனக்கும் தீர்க்காயுசு தரு
வேன் என்றார். சாலொமோனுக்கு நித்திரை 15
தெளிந்தபோது அது சொப்பனம் என்று
அறிந்தான்; அவன் எருசலேமுக்கு வந்து
யெகோவாவின் உடன்படிக்கைப் பெட்ட
கத்தின் எதிரே நின்று தகனபலிகளையும்
சமாதான பலிகளையும் செலுத்தித் தன்
ஊழியர் அனைவருக்கும் விருந்து செய்
தான்.

16 ஒருநாள் வேசிகளான இரண்டு பெண்
கள் ராஜசந்நிதியில் வந்து நின்றார்கள்.
17 அவர்களில் ஒருத்தி: என் ஆண்டவனே,
நானும் இந்த ஸ்திரீயும் ஒரே வீட்டிலே குடி
யிருக்கிறோம்; நான் இவளோடே வீட்டி
லிருக்கையில் ஒரு ஆண்பிள்ளை பெற்றேன்.
18 நான் பிள்ளைபெற்ற மூன்றும் நாளிலே
இந்த ஸ்திரீயும் ஒரு ஆண்பிள்ளை பெற்றாள்;
நாங்கள் ஒன்றாயிருந்தோம், எங்கள் இரு
வரையும் தவிர வீட்டிற்குள்ளே வேறெவரும்
19 இல்லை. இரவு தூக்கத்திலே இந்த ஸ்திரீ
தன் பிள்ளையின்மேல் புரண்டு படுத்ததினால்
20 அது செத்துப்போயிற்று. அப்பொழுது,
உமது அடியாள் நித்திரை பண்ணுகையில்,
இவள் நடுச்சாமத்தில் எழுந்து என் பக்கத்
திலே கிடக்கிற என் பிள்ளையை எடுத்துத்
தன் மார்பிலே கிடத்திக்கொண்டு செத்த
பிள்ளையை எடுத்து என் மார்பிலே கிடத்தி
21 விட்டாள். என் பிள்ளைக்குப் பால் கொடுக்
கக் காலமே நான் எழுந்திருந்தபோது அது
செத்ததாயிருந்தது; பொழுதுவிடிந்தபின்
நான் அதை உற்றுப் பார்க்கும்போது அது
நான்பெற்ற பிள்ளை அல்லவென்று கண்
22 டேன் என்று சொன்னாள். அதற்கு மற்ற
ஸ்திரீ: அப்படியல்ல, உயிரோடிருக்கிறது
என் பிள்ளை, செத்தது உன் பிள்ளை என்
றாள். இவளோ: இல்லை, செத்தது உன்
பிள்ளை, உயிரோடிருக்கிறது என் பிள்ளை
என்றாள்; இப்படி ராஜாவுக்கு முன்பாக
23 வாதாடினார்கள். அப்பொழுது ராஜா: உயி
ரோடிருக்கிறது என் பிள்ளை, செத்தது உன்
பிள்ளை என்று இவள் சொல்லுகிறாள்; அப்
படியல்ல, செத்தது உன் பிள்ளை, உயிரோ
டிருக்கிறது என் பிள்ளை என்று அவள்
24 சொல்லுகிறாள் என்று சொல்லி | ஒரு பட்
டயத்தைக் கொண்டுவாருங்கள் என்றார்;
அவர்கள் ஒரு பட்டயத்தை ராஜாவினிடம்
25 கொண்டுவந்தார்கள். ராஜா உயிரோடிருக்
கிற பிள்ளையை இரண்டாகப் பிளந்து, பாதி
யை இவளுக்கும் பாதியை அவளுக்கும்
26 கொடுங்கள் என்றார். அப்பொழுது உயி
ரோடிருக்கிற பிள்ளையின் தாய், தன்
பிள்ளையினிமித்தம் அவள் வயிறு எரியவே,
ராஜாவைப் பார்த்து: ஐயோ! என் ஆண்ட
வனே, உயிரோடிருக்கிற பிள்ளையைக்
கொல்லவேண்டாம்; அதை அவளுக்கே
கொடுத்துவிடும் என்றாள்; மற்றவள் அது
எனக்கும் வேண்டாம், உனக்கும் வேண்
டாம், பிளந்து போடுங்கள் என்றாள்.
27 அதைக் கேட்கவே ராஜா உயிரோடிருக்கிற
பிள்ளையைக் கொல்லாமல், கொல்லவேண்
டாமென்றவளுக்கே அதைக் கொடுத்து
விடுங்கள்; அவளே அதின் தாய் என்றார்.
28 ராஜா கொடுத்த தீர்ப்பை இஸ்ரவேலர் எல்
லாரும் கேள்விப்பட்டு, நியாயம் விசாரிக்
கிறதற்குக் கடவுள் அருளின ஞானம் ராஜா
வுக்கு உண்டென்று கண்டு அவனுக்குப்
பயந்தார்கள்.

4 ராஜாவாகிய சாலொமோன் சகல இஸ்ர
2 வேலர்மேலும் ராஜாவாயிருந்தான். சா
தோக்கின் குமாரனுகிய அசரியா பிரதான
3 ஆசாரியன். சீசாவின் குமாரராகிய எலி
கோரேப்பும் அகியாவும் சம்பிரதிகள்; அகி
4 லூதின் குமாரன் யோசபாத் மந்திரி. யோ
யாதாவின் குமாரன் பெனாயா படைத்தலை
வன், சாதோக்கும் அபியத்தாரும் ஆசாரி
5 யர். நாத்தானின் குமாரன் அசரியா
மணியகாரரின் தலைவன்; நாத்தானின் குமா
ரன் சாபூத் ஆசாரியன், இவன் ராஜாவின்
6 சிநேகிதன். அகிஷார் அரமனை உக்கிரா
ணக்காரன், அப்தாவின் குமாரன் அதொனி
ராம் ஏவலாட்களை மேற்பார்க்கிறவன்; இவர்
7 களே சாலொமோனின் பிரதான அதிபதி
கள். ராஜாவுக்கும் அவன் அரமனைக்கும்
வேண்டிய உணவுப் பொருட்களைச் சேகரிக்
கிற பன்னிரண்டு மணியகாரர் சாலொ
மோனுக்கு இஸ்ரவேல் தேசமெங்கும் வைக்
கப்பட்டிருந்தார்கள்; அவர்கள் மாதத்
துக்கு ஒருவராக வருஷமுழுதும் கொடுத்து
8 வருவார்கள். அவர்கள் நாமங்களாவன:
பென்கூர், இவன் எப்பிராயீம் மலைநாட்டில்
9 இருந்தான். பென்தேக்கோர், இவன் மாக்
காத்திலும் சால்பீமிலும் பேத்ஷேமேசிலும்
ஏலோன் பேத்கானனிலும் இருந்தான்.
10 பென்கேசெத், இவன் அறுபோத்தில் இருந்
தான்; சோகோவும் கேபர் நாடனைத்தும்
11 இவனுக்குரியவை. பென் அபினதாப்,
நாபாத்தோர் முழுவதும் இவனுக்குரியது;
சாலொமோனின் குமாரத்தியாகிய தாபாத்
12 இவன் மனைவி. அகிலூதின் குமாரனுகிய
பானா, தானாவும் மெகிதோவும் சர்த்தனாவுக்
குப் பக்கமாகவும் யிஸ்ரெயேலுக்குக் கீழாக
வும் பேத்செயான் தொடங்கி ஆபேல்
மெகோலா மட்டும் யொக்மெயாமுக்கு அப்
புறத்து மட்டும் இருக்கிற பேத்செயான்
13 அனைத்தும் இவனுக்குரியது. பென்கே
பேர், இவன் கிலெயாத்திலுள்ள ராமோத்
தில் இருந்தான்; கிலெயாத்திலுள்ள மனாசே
யின் குமாரனுகிய யாவீரினுடைய பட்டி
களும், மதில்களும் வெண்கலத் தாழ்ப்பாள்
களுமுள்ள பாசான் தேசத்தின் அறுபது
பெரிய பட்டணங்களுள்ள அர்கோப் சீமை
14 யும் இவனுக்குரியன. இத்தோவின் குமா
ரன் அனினதாப், இவன் மகனயீமில் இருந்

15 தான். அகிமாஸ், இவன் நப்தலியில் இருந்
தான்; இவன் சாலொமோனுக்கு இருந்த
மற்றொரு குமாரத்தியாகிய பஸ்மாத் என்ப
16 வளை விவாகம்பண்ணினான். கூஷாயின்
குமாரன் பாஷை, இவன் ஆசேரிலும்
17 ஆலோத்திலும் இருந்தான். பருவாகின்
குமாரன் யோசபாத், இவன் இசக்காரில்
18 இருந்தான். ஏலாவின் குமாரன் சிமேயி,
19 இவன் பென்யமீனில் இருந்தான். ஊரி
யின் குமாரன் கேபேர், இவன் கிலெயாத்
நாட்டில் இருந்தான்; கிலெயாத் நாடு முன்
காலத்தில் எமோரியரின் ராஜாவாகிய சீகோ
னுக்கும் பாசானின் ராஜாவாகிய ஓகுக்கும்
உரியதாயிருந்தது; இப்பொழுதோ ஒருவ
னே அவற்றிற்கு அதிபதியாய் இருந்தான்.
20 யூதா, இஸ்ரவேல் இவர்களின் ஜனப்
பெருக்கம் கடற்கரை மணல்போலிருந்தது;
அவர்கள் சுகஜீவிகளாய் வாழ்ந்துவந்தார்
21 கள். நதிதொடங்கிப் பெலிஸ்தியர் நாட்டு
வழியாய் எகிப்தின் எல்லைமட்டுமுள்ள
சகல ராஜ்யங்களையும் சாலொமோன் ஆண்டு
கொண்டிருந்தான்; அவர்கள் சாலொமோ
னுக்குக் கப்பங்கட்டுகிறவர்களாகி அவன்
உயிரோடிருந்த நாளெல்லாம் அவனுக்கு
22 அடங்கியிருந்தார்கள். நாள் ஒன்றிற்குச்
சாலொமோனுக்குச் செல்லும் சாப்பாட்டுச்
செலவு முப்பது மரக்கால் கோதுமை
மாவும் அறுபது மரக்கால் வாற்கோதுமை
23 மாவும், கலைமான்களையும் வெளிமான்களை
யும் வரையாடுகளையும் கொழுமையான
பறவைகளையும் தவிர, கொழுக்க வளர்த்த
பத்து மாடுகளும் மேய்ச்சலிலிருந்து
கொண்டுவந்த இருபது மாடுகளும் நூறு
24 ஆடுகளுமாம். சாலொமோன் ராஜா நதிக்கு
இப்புறத்திலுள்ள திப்சா முதற்கொண்டு
காத்சா மட்டுமுள்ள தேசங்கள் எல்லாவற்
றையும், நதிக்கு இப்புறத்திலுள்ள சகல
ராஜாக்களையும் ஆண்டு வந்தான்; அவ
னுக்கு எப்புறத்திலும் சமாதானமிருந்தது.
25 சாலொமோனுடைய நாளெல்லாம் தான்
தவக்கிப் பெயர்ஷெபாமட்டும் யூதாவி
லும் இஸ்ரவேலிலும் ஒவ்வொருவனும் தன்
தன் திராட்சச்செடியின் நிழலிலும் தன்
தன் அத்திமரத்தின் நிழலிலும் சுகமாய்க்
26 குடியிருந்தான். இரதக் குதிரைகளுக்குரிய
லாயங்கள் சாலொமோனுக்கு நாற்பதினா
யிரம் இருந்தன; பன்னீராயிரம் குதிரை
27 வீரரும் இருந்தார்கள். மேற்சொல்லிய
மணியகாரரில் ஒவ்வொருவரும் தத்தம்
மாதத்திலே, சாலொமோன் ராஜாவுக்கும
ராஜாவின் பந்திக்கு வரும் யாவருக்கும்
வேண்டியவைகளை ஒரு குறைவுமில்லாமல்
கொடுத்து வருவார்கள் இரதக் குதிரை 28
களுக்கும் சவாரிக் குதிரைகளுக்கும் வேண்
டிய வாற்கோதுமையையும் வைக்கோலை
யும் தங்களுக்கு இடப்பட்ட கட்டளையின்
படியே, அவைகள் இருக்கும் இடங்களுக்
குக் கொண்டுவருவார்கள்.

கடவுள் சாலொமோனுக்கு மிகுதியான 29
ஞானத்தையும் புத்தியையும் பரந்தகன்ற
கடற்கரை மணல்போன்ற விசாலமான
விவேகத்தையும் கொடுத்தார். சகல கீழ் 30
திசைப் புத்திரரின் ஞானத்திலும் எகிப்திய
ரின் சகல ஞானத்திலும் சாலொமோனின்
ஞானம் சிறந்தது. அவன் எஸ்ராகிய 31
னாகிய ஏத்தானிலும், மாகோலின் குமார
ராகிய ஏமான், கல்கோல், தர்தா என்பவர்
களிலும் மற்ற எல்லா மனுஷரிலும் ஞான
வானாயிருந்தான்; சுற்றிலும் இருந்த சகல
ஜாதிகளுக்குள்ளும் அவன் கீர்த்தி பிரப
லமாயிருந்தது. அவன் மூவாயிரம் நீதிமொழி 32
களைச் சொன்னான்; அவனுடைய தேங்கள்
ஆயிரத்து ஐந்து. லீபனோனின் கேதரு 33
மரங்கள் முதல் சுவரில் முளைக்கும் ஈசோப்
புப் பூண்டு வரைக்குமுள்ள மர முதலிய
தாபரங்களைக் குறித்தும், மிருகங்கள் பற
வைகள் ஊரும் பிராணிகள் மச்சங்கள்
ஆகிய இவைகளைக் குறித்தும் அறிவுமொழி
களை வசனித்தான். பற்பல தேசங்களிலு 34
மிருந்து சாலொமோனின் ஞானத்தைக்
கேட்பதற்கு வந்தார்கள், அவனுடைய ஞா
னத்தைப்பற்றிக் கேள்விப்பட்ட பூமியின்
சகல ராஜாக்களிடத்திலுமிருந்து இவர்கள்
வந்தார்கள்.

சாலொமோனை அவனுடைய பிதாவின் **5**
ஸ்தானத்தில் ராஜாவாக அபிஷேகம்பண்ணி
னார்கள் என்று தீருவின் ராஜாவாகிய ஈராம்
கேள்விப்பட்டுத் தன் ஊழியரை அவனி
டம் அனுப்பினான்; ஈராம் தாவீதுக்குச் சகல 2
நாளும் சிநேகிதனாயிருந்தான். அப்பொழுது
சாலொமோன் ஈராமினிடம் ஆட்களை
அனுப்பி: என் தகப்பனாகிய தாவீதின் 3
சத்துருக்களை யெகோவா அவருடைய
பாதங்களுக்குக் கீழ்ப்படுத்திவிடுமளவும்
அவர்கள் அவருக்கு எப்புறத்திலும் யுத்தம்
செய்துகொண்டிருந்தார்கள். ஆகவே அவர்
தமது கடவுளாகிய யெகோவாவின் நாமத்
திற்கு ஒரு ஆலயத்தைக் கட்டமுடியா
திருந்தது; இது உமக்குத் தெரியும். இப் 4
பொழுதோ என் கடவுளாகிய யெகோவா
எனக்கு எங்கும் சமாதானத்தை யருளினார்;
எனக்கு விரோதியுமில்லை, மோசமுமில்லை.
இதோ, நான் என் கடவுளாகிய யெகோவா 5
வின் நாமத்திற்கு ஒரு ஆலயத்தைக் கட்ட

வேண்டுமென்றிருக்கிறேன். யெகோவாவும் அப்படியே என் தகப்பனுடைய தாவீதினிடம்: உன் ஸ்தானத்தில் உன் சிங்காசனத்தின்மேல் நான் வைக்கும் உன் குமாரனே என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டுவான் 6 என்று சொல்லியிருக்கிறார். ஆதலால் லீபனோனிலே எனக்காகக் கேதுரு மரங்களை வெட்டக் கட்டளையிட்டருளும், என் வேலையாட்களும் உமது வேலையாட்களோடே இருப்பார்கள்; நீர் சொல்லுகிறபடியெல்லாம் உமது வேலையாட்களின் சம்பளத்தை உமது வசம் கொடுப்பேன்; சீதோனியரைப் போல மரவெட்டுவேலை அறிந்தவர்கள் எங்களுக்குள்ளே எவருமில்லை, இது உமக்குத் தெரியும் என்று சொல்லச்சொன்னான்.

7 ஈராம் சாலொமோனின் வார்த்தைகளைக் கேட்டபோது மிகவும் சந்தோஷப்பட்டு: அந்த ஏராளமான ஜனங்களை ஆளும்படி தாவீதுக்கு ஞானமுள்ள ஒரு குமாரனையருளிய யெகோவா இன்று புகழப்படுக என்று 8 சொல்லி | ஈராம் சாலொமோனிடம் ஆட்களை அனுப்பி: நீர் எனக்குச் சொல்லியனுப்பின காரியத்தை நான் அறிந்துகொண்டேன்; நான் கேதுரு மரங்களையும் தேவதாரு மரங்களையும் உமக்குத் தந்து உமது விருப்பத்தின்படி யெல்லாம் செய்வேன். 9 என் வேலையாட்கள் லீபனோனிலிருந்து அவற்றை இறக்கிக் கடலுக்குக் கொண்டு வருவார்கள்; அங்கே நான் அவைகளைத் தெப்பங்களாகக் கட்டி, நீர் நியமிக்கும் இடத்துக்குக் கடல்வழியாய் அனுப்பி அவைகளை அவிழ்த்து ஒப்பிப்பேன்; அங்கே நீர் அவைகளை ஒப்புக்கொள்ளவேண்டும்; நீரும் நான் விரும்புவதைச் செய்து என் அரமனைக்கு உணவுப்பொருட்களை அனுப்பி வைத்தருளும் என்று சொல்லச்சொன்னான். 10 அப்படியே ஈராம் சாலொமோனுக்கு வேண்டியமட்டும் கேதுரு மரங்களையும் தேவதாரு விருட்சங்களையும் கொடுத்தக்கொண்டு 11 வந்தான். சாலொமோனும் ஈராமின் அரமனை உணவுக்காக இருபதினாயிரம் மரக்கால் கோதுமையும் இடித்துப் பிழிந்த இருபதுமரக்கால் ஒலிவ எண்ணெயும் கொடுத்தான்; இப்படியே சாலொமோன் ஈராமுக்கு வருஷந்தோறும் கொடுத்துவந்தான். 12 யெகோவா சாலொமோனுக்கு வாக்கருளியபடியே அவனுக்கு விவேகத்தைத் தந்தருளினார்; ஈராமும் சாலொமோனும் சமாதானமாயிருந்தார்கள்; இருவரும் உடன்படிக்கை செய்துகொண்டார்கள்.

13 சாலொமோன்ராஜா இஸ்ரவேலரெல்லாரிலும் வேலைக்கென்று முப்பதினாயிரம் ஏவலாட்களைக் கொண்டுவந்தான். அவர்களில் 14 மாதந்தோறும் பதினாயிரம்பேரை மாற்றி மாற்றி லீபனோனுக்கு அனுப்பினான்; அவர்கள் ஒருமாதம் லீபனோனிலும் இரண்டு மாதம் தங்கள் வீடுகளிலும் இருப்பார்கள்; அதோனீராம் அந்த ஏவலாட்களின்மேல் விசாரிப்புக் காரனாயிருந்தான். சாலொ 15 மோனிடத்தில் சுமைசுமக்கிறவர்கள் எழுபதினாயிரம்பேரும் மலைகளில் கல்வெட்டுகிறவர்கள் எண்பதினாயிரம் பேருமிருந்தார்கள். இவர்களைத் தவிர வேலையை விசா 16 ரித்து வேலையாட்களைப் பார்த்துக்கொள்ளுகிறதற்குத் தலைமையான விசாரிப்புக்காரர் மூவாயிரத்து முந்நூறுபேர் இருந்தார்கள். பணிதீர்ந்த கற்களால் ஆலயத்துக்கு அஸ்தி 17 பாரம் போடவேண்டுமென்று ராஜா சிறந்த கற்களைப் பெரியவைகளாய் வெட்டி வரும்படி கட்டளையிட்டான். சாலொமோனின் 18 சிற்பரும் ஈராமின் சிற்பரும் கெபலியரும் அவைகளை வெட்டிச்செதுக்கி, ஆலயத்தைக் கட்டும்படி மரங்களையும் கற்களையும் ஆயத்தப்படுத்தினார்கள்.

6 இஸ்ரவேல்புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நானூற்று எண்பதாம் வருஷத்தில், சாலொமோன் இஸ்ரவேலின்மேல் ராஜாவான நாலாம்வருஷம் இரண்டாம் மாதமாகிய சீப் மாதத்திலே, அவன் யெகோவாவின் ஆலயத்தைக் கட்டத் தொடங்கினான். 2 சாலொமோன் ராஜா யெகோவாவுக்குக் கட்டின ஆலயத்தின் நீளம் அறுபதுமுழம், அகலம் இருபதுமுழம், உயரம் முப்பதுமுழம். 3 ஆலயமாகிய அந்தக் கோவிலின் முகப்பிலே அவன் கட்டின மண்டபம் ஆலயத்தின் அகலத்திற்குச் சரியாய் இருபதுமுழ நீளமும் ஆலயத்துக்கு முன்னே பத்துமுழ அகலமுமாயிருந்தது. 4 உள்ளே விசாலமும் வெளியே ஒடுக்கமுமான பலகணிகளை ஆலயத்திற்குச் செய்வித்தான். 5 அவன் கோவிலின் சுவரும் மூலஸ்தானச் சுவருமாகிய ஆலயத்தின் சுவர்களை ஒட்டி வெளிக் கட்டடங்களைக் கட்டி, அவைகளிலே சுற்றிலும் அறைகளை அமைத்தான். 6 கீழ் அறைகள் எல்லாம் ஐந்துமுழ அகலம், அவற்றின் மேல் அறைகள் ஆறுமுழ அகலம், மூன்றும் மாடி யறைகள் ஏழுமுழ அகலம் உள்ளவை; அவற்றின் உத்திரங்கள் ஆலயத்தின் சுவர்களிலே தாங்காதபடி ஆலயத்தைச் சுற்றிலும் வெளியே ஒட்டுச் சுவர்களைக் கட்டுவித்தான். 7 ஆலயம் கட்டப்படுகையில், அது பணிதீர்ந்து கொண்டுவந்த கற்களாலே கட்டப்பட்டது; ஆகவே அது கட்டப்பட்டபோது சுத்திகள்

உளிகள் முதலான எந்த இருப்பு ஆயுதங்களின் சத்தமும் அதிலே கேட்கவில்லை.
8 கீழ் அறைகளுக்குப்போகிற வாசற்படி ஆலயத்தின் தென்புற மத்தியில் இருந்தது; சுழற்படிக்கட்டு வழியாய் மாடி அறைகளுக்கும் அங்கிருந்து அதற்கு மேல்மாடி
9 அறைகளுக்கும் ஏறுவார்கள். இவ்விதமாக அவன் ஆலயத்தைக் கட்டிமுடித்தான்; கேதுருமர உத்திரங்களாலும் பலகைகளா
10 லும் மச்சுப்பாவினான். அவன் ஐந்துமுழ உயரமான வெளி அறைகளை ஆலய முழுதையும் சுற்றிக் கட்டியிருந்தான்; இவைகள் கேதுரு உத்திரங்களால் ஆலயத்தோடே இணைக்கப்பட்டிருந்தன.
11 அப்பொழுது யெகோவாவின் வார்த்தை
12 சாலொமோனுக்கு வந்தது; அவர்: நீ என் நியமங்களின்படி நடந்து, என் தீர்ப்புகளின்படி செய்து என் கட்டளைகளையெல்லாம் கைக்கொண்டு அவற்றின்படி நடந்தால், நீ கட்டுகிற இந்த ஆலயத்தைப்பற்றி நான் உன் தகப்பனாகிய தாவீதோடே சொன்ன என் வார்த்தையை உன்னிடத்
13 திலே நிறைவேற்றி | இஸ்ரவேல் புத்திரர் நடுவில் வாசம்பண்ணி, என் ஜனமாகிய இஸ்ரவேலைக் கைவிடாதிருப்பேன் என்
14 றார். அப்படியே சாலொமோன் ஆலயத்தைக் கட்டிமுடித்தான்.
15 ஆலயத்துச் சுவர்களின் உட்புறத்தை, தளம் தொடங்கிச் சுவர்களின்மேல் மச்சு மட்டும், கேதுருப் பலகைகளால் மூடி, இப்படியே உட்புறத்தை மரவேலையாக்கி, ஆலயத்தின் தளத்தைத் தேவதாருப் பல
16 கைகளாலே தளவரிசைப்படுத்தினான். தளவரிசைதொடங்கிச் சுவர்களின் உயரமட்டும் ஆலயத்தின் பக்கங்களைத் தொட்டுநிற்கிற இருபதுமுழ நீளமான மறைப்பையும் கேதுருப்பலகைகளால் செய்தான்; அதற்கு உட்பட்ட இடத்தை மகா பரிசுத்த ஸ்தலமென்னும் மூலஸ்தானமாகக் கட்டினான்.
17 அதற்கு முன்னுள்ள தெய்வாலயமாகிய
18 கோவில் நாற்பதுமுழ நீளமிருந்தது. ஆலயத்தினுள் இருந்த கேதுரு மரங்களில் மொக்குகளும் மலர்ந்த பூக்களுமான சித்திரவேலை செய்திருந்தது; ஒரு கல்லேனும் காணப்படவில்லை, எல்லாம் கேதுருமரமா
19 யிருந்தது. யெகோவாவின் உடன்படிக்கைப் பெட்டகத்தை வைக்கிறதற்கு ஆலயத்துக்குள்ளே மூலஸ்தானத்தை ஆயத்தப்
20 படுத்தினான். மூலஸ்தானம் முன்புறமட்டும் இருபதுமுழ நீளம், அதின் அகலம் இருபதுமுழம், உயரம் இருபதுமுழம்; அதைப் பசும்பொன் தகட்டால் மூடினான்;
கேதுருமரப் பீடத்தையும் அப்படியே மூடினான். ஆலயத்தின் உட்புறத்தைச் 21
சாலொமோன் பசும்பொன் தகட்டால் மூடி, மூலஸ்தானத்தின் மறைப்புக்கும் பொன்சங்கிலிகளைக் குறுக்கே போட்டு அதைப் பொன்தகட்டால் மூடினான். இப் 22
படியாகச் சிறிதும் விடாமல் ஆலயம் முழுவதையும் பொன்தகட்டால் மூடி மூலஸ்தானத்திற்கு எதிரே இருந்த பலிபீடத்தையும் முற்றிலும் பொன்தகட்டால் மூடினான்.
மூலஸ்தானத்தில் ஒலிவமரங்களால் இர 23
ண்டு கேருபுகளைச் செய்துவைத்தான்; ஒவ்வொன்றும் பத்துமுழ உயரம். கேருபின் 24
ஒரு செட்டை ஐந்து முழமும் அதின் மற்றச் செட்டை ஐந்து முழமுமாக ஒரு செட்டையின் கடைசிமுனை தொடங்கி மற்றச் செட்டையின் கடைசி முனைமட்டும் பத்து முழம். மற்றக் கேருபும் பத்து 25
முழமே; இரண்டு கேருபுகளுக்கும் ஒரே அளவும் ஒரே உருவமே. ஒரு கேருபின் 26
உயரம் பத்துமுழம்; மற்றக் கேருபின் உயரமும் அப்படியே. அந்தக் கேருபு 27
களை உள் ஆலயத்திலே வைத்தான்; கேருபுகளின் செட்டைகள் விரித்திருந்தன; ஒரு கேருபின் செட்டை ஒரு பக்கத்துச் சுவரையும் மற்றக் கேருபின் செட்டை மறுபக்கத்துச் சுவரையும் தொட்டன. ஆலயத்தின் நடுமையத்தில் அவைகளின் செட்டைகள் ஒன்றையொன்று தொட்டன. அந்தக் 28
கேருபுகளைப் பொன்தகட்டால் மூடினான்.
ஆலயத்தின் சுவர்களிலெல்லாம், சுற்றி 29
லும் உள்ளும் புறமும், கேருபுகள், பேரீத்துகள், மலர்ந்த பூக்கள் இவற்றைச் சித்திரங்களாகச் செதுக்கினான். உள் அறை 30
யிலும் வெளி அறையிலும் ஆலயத்துத் தளவரிசையைப் பொன்தகட்டால் மூடினான்.
மூலஸ்தான வாசலுக்கு ஒலிவமரங்களால் 31
இரட்டைக் கதவுகளைச் செய்தான்; மேல் சட்டமும் நிலைகளும் சேர்ந்து ஐங்கோண வடிவாயிருந்தன. ஒலிவமரத்தாலான 32
அந்த இரட்டைக் கதவுகளில் கேருபுகள், பேரீத்துகள், மலர்ந்த பூக்கள் இவற்றைச் சித்திரங்களாகச் செதுக்கி, அந்தக் கேருபுகளிலும் பேரீத்துகளிலும் பொன்தகடு பதிய மூடினான். இப்படியே தெய்வாலயத்தின் வா 33
சலுக்கும் ஒலிவமர நிலைகளைச் செய்தான்; அதுநாற்கோணவடிவாயிருந்தது. அதின் இர 34
ண்டு கதவுகளும் தேவதாருப் பலகைகளால் செய்யப்பட்டன; ஒரு கதவுக்கு இரண்டு மடிப்புப் பலகைகளும், மற்றக் கதவுக்கு இரண்டு மடிப்புப் பலகைகளும் இருந்தன. அவைகளில் கேருபுகள், பேரீத்து 35

கள், மலர்ந்த பூக்கள் இவற்றைச் சித்திர வேலையாகச் செதுக்கிச் சித்திரங்களுக்குச் சரியாகச் செய்யப்பட்ட பொன்தகட்டால் அவைகளை மூடினான்.

36 மூன்று வரிசை சதுரித்த பெருங் கற்களாலும் ஒரு வரிசை கேதுரு மரங்களாலும் கட்டி உட்பிராகாரத்தை அமைத்தான்.

37 நாலாம் வருஷம் சீப்மாதத்திலே யெகோவாவின் ஆலயத்துக்கு அஸ்திபாரம்போட்
38 டப்பட்டு, பதினோராம் வருஷம் பூல் என்னும் எட்டாம் மாதத்திலே அந்த ஆலயமுழுதும் சகல சட்டதிட்டத்தின்படியே ஒன்றும் குறையாமல் கட்டித்தீர்ந்தது; அவன் அதைக் கட்டிமுடிக்க ஏழு வருஷம் சென்றது.

7 சாலொமோன் தன் அரமனை முழுதையும் கட்டி முடிக்கப் பதின்மூன்று வரு
2 ஷம் சென்றது. அவன் லீபனோன் வனபவனம் என்னும் மாளிகையைக் கட்டினான். அதின் நீளம் நூறுமுழம், அகலம் ஐம்பது முழம், உயரம் முப்பது முழம், அதை நாலுவரிசைக் கேதுருமரத்தூண்கள் வைத்துக் கட்டினான், அவற்றின்மேல் கேதுருமர உத்திரங்கள் பாவப்பட்டிருந்தன.
3 வரிசைக்குப் பதினைந்து தூண்களாக நாற்பத்தைந்து தூண்களில் வைக்கப்பட்டிருந்த உத்திரங்கள்மேல் கேதுருமரத்தினால் மச்சுப்
4 பாவியிருந்தது. மூன்று வரிசைப்பலகணிகள் இருந்தன; மூன்று வரிசையிலும் பலகணிகள் ஒன்றுக்கொன்று எதிராயிருந்தன.
5 பலகணித் திறப்புகளும் நிலைகளும் எல்லாம் சதுரமாயிருந்தன; மூன்று வரிசையிலும் பலகணிகள் ஒன்றுக்கொன்று எதிரா
6 யிருந்தன. அவன் தூண்களைவைத்து மண்டபத்தையும் கட்டினான்; அதன் நீளம் ஐம்பதுமுழம், அகலம் முப்பதுமுழம்; அந்த மண்டபமும் அதின் தூண்களும் உத்திரங்களும் மாளிகையின் தூண்களுக்கும் உத்தி
7 ரங்களுக்கும் எதிராயிருந்தன. தான் உட்கார்ந்து நியாயம் விசாரிக்கிறதற்கு நியாயாசனம் போட்டிருக்கும் ஒரு நியாய விசாரணை மண்டபத்தையும் கட்டினான்; தளமுதல் மச்சுவரையும் அது முழு
8 தும் கேதுருமரமாயிருந்தது. அவன் வாசம்பண்ணும் அவனுடைய அரமனையில் மண்டபத்திற்குட்புறம் அதே மாதிரியாகச் செய்யப்பட்ட வேறொரு உள்முற்றமும் இருந்தது. சாலொமோன் விவாகம் செய்திருந்த பார்வோனின் குமாரத்திக்கும் அந்த மண்டபத்தைப்போலவே ஒரு மாளிகையைக்
9 கட்டுவித்தான். இவையெல்லாம் உள்ளும் புறமும், அஸ்திபாரமுதல் மேல்மட்டம் வரைக்கும் வெளியே இருக்கும் பெரிய முற்றம் வரைக்கும் அளவுப்படி வெட்டி வாளால் அறுக்கப்பட்ட அரிய கற்களால் செய்யப்பட்டன. அஸ்திபாரம் பத்துமுழக்
10 கற்களும் எட்டுமுழக் கற்களுமான அரிய பெருங் கற்களாலானது. அதின்மேல்
11 உயர அளவுப்படியே பணிப்படுத்தின அரிய கற்களும் கேதுருமரங்களும் வைக்கப்பட்டிருந்தன. பெரிய முற்றத்திற்குச்
12 சுற்றிலும் பணிப்படுத்தின கற்கள் மூன்று வரிசையும் கேதுருமர உத்திரங்கள் ஒரு வரிசையும் இருந்தன; யெகோவாவின் ஆலயத்திலுடைய உட்பிராகாரத்திற்கும் அதின் முன்மண்டபத்திற்கும் அப்படியே செய்யப்பட்டிருந்தது.

13 சாலொமோன்ராஜா ஈராம் என்னும் ஒருவனைத் தீருவிலிருந்து அழைப்பித்தான்.
14 இவன் நப்தலி கோத்திரத்தாளாகிய ஒரு கைப்பெண்ணின் மகன்; இவன் தகப்பன் தீரு நகரத்தானான ஒரு கன்னான்; இவன் சகலவித செம்பு வேலையையும் செய்யத் தக்க விவேகமும் புத்தியும் அறிவும் உள்ளவன்; இவன் சாலொமோன் ராஜாவினிடம் வந்து தங்கியிருந்து அவன் வேலையெல்லாம் செய்தான்.

15 இவன் இரண்டு செப்புத்தூண்களை வார்ப்பித்தான், அவற்றின் உயரம் பதினெட்டுமுழம், சுற்றளவு பன்னிரண்டு முழம்.
16 அத்தூண்களின் தலைப்பிலே வைக்க இரண்டு கும்பங்களைச் செம்பினால் வார்ப்பித்தான்; கும்பங்களின் உயரம் ஐந்து
17 முழம். தூண்களுடைய மூன்னியின்மேல் உள்ள கும்பங்களுக்கு வலைப்பின்னல்களும் சங்கிலித் தொங்கல்களும் எவ்வேழிருந்தன. தூண்களைச் செய்தவிதம் இதுவே:
18 தலைப்பின்மேலுள்ள கும்பங்களை மூடும்படி கும்பங்கள் இரண்டிலும் பின்னலின்மேல் சுற்றிலும் இரண்டுவரிசை மாதளம்பழங்களைச் செய்வித்தான். மண்டபத்தின் முன்
19 னிருக்கும் அத்தூண்களுடைய தலைப்பில் வைத்திருந்த மேல்கும்பங்கள் லீலி புஷ்பங்களை ஒத்திருந்தன; அவற்றின்
20 உயரம் நாலுமுழம். இரண்டு தூண்களின் மேலுமுள்ள கும்பங்களில் செய்யப்பட்ட பின்னலுக்கு அருகேயிம்மிய இடத்தில் சுற்றிலும் வரிசையாய்க் கோத்த இரு நூறு மாதளம்பழங்கள் இருந்தன. மற்றக் கும்பத்திலும் அப்படியே இருந்தன. அந்
21 தத் தூண்களைத் தெய்வாலய வாசல் மண்டபத்தின் முன் நிறுத்தினான்; வலதுபுறத்தத் தூணுக்கு யாகீன் என்றும் இடதுபுறத்துத் தூணுக்குப் போவாஸ் என்றும்

22 பேரிட்டான். தூண்களின் சிகரத்தில் மேல்கும்பம் லீலி புஷ்பம்போல் செய்யப் பட்டிருந்தது; இவ்விதமாகத் தூண்களின் வேலை முடிந்தது.

23 கடல் என்னும் தொட்டியையும் வார்ப் பித்தான்; அது சுற்றிலும் வட்டவடிவானது, ஒரு விளிம்பு தொடங்கி மறு விளிம்புமட் டும் அதின் அகலம் பத்துமுழம், உயரம் ஐந்துமுழம், சுற்றளவு முப்பதுமுழம்.

24 அந்தக் கடல் தொட்டியைச்சுற்றி விளிம் புக்குக் கீழே மொக்குகள் அதற்குச் சுற்றி லும் பத்துமுழ அகலத்திலும் செய்யப்பட் டிருந்தன; வாக்கப்பட்ட மொக்குகள் இரண்டு வரிசையாயிருந்தன; இவை தொட்டியோடு ஒன்றாகவே வார்க்கப்பட்டி

25 ருந்தன. தொட்டி பன்னிரண்டு ரிஷபங் களின்மேல் நின்றது; அவற்றில் மூன்று வடக்கேயும் மூன்று மேற்கேயும் மூன்று தெற்கேயும் மூன்று கிழக்கேயும் நோக்கி யிருந்தன; அவற்றின்மேல் கடல்தொட்டி நின்றது, ரிஷபங்களின் பின்புறங்களெல்

26 லாம் உட்புறமிருந்தன. அதின் கனம் நாலு விரற்கடையளவு; அதின் விளிம்பு பான பாத்திரத்தின் விளிம்புபோலவும் லீலி புஷ்பம்போலவும் செய்யப்பட்டிருந்தது; அது இரண்டாயிரம்குடம் தண்ணீர் பிடிக் கும்.

27 செம்பினால் பத்து ஆதாரங்களையும் செய் தான்; ஒவ்வொன்றும் நாலுமுழ நீளமும் நாலுமுழ அகலமும் மூன்றுமுழ உயரமு

28 மாயிருந்தது. அந்த ஆதாரங்கள் செய்யப் பட்ட விதம் இதுவே: சட்டங்களுக்கு இடையில் வைக்கப்பட்ட இடைத்துண்டு

29 கள் இருந்தன. சட்டங்களின் இடையி லிருந்த இந்தத் துண்டுகளில் சிங்கங்களும் காளைகளும் கேரூபுகளும் செய்யப்பட்டி ருந்தன; மேல் சட்டங்களிலும் அப்ப டியே; சிங்கங்களுக்கும் காளைகளுக்கும் கீழே தொங்குமாலைகள் போன்றவை

30 இருந்தன. ஒவ்வொரு ஆதாரத்திற் கும் நாலு செப்புச் சக்கரங்களும் செப்பு அச்சுகளும் அதின் நாலு கோடிகளுக்கும் முட்டுகளும் இருந்தன. கொப்பரையின் கீழிருக்கும்படி கொம்மைகள் வார்ப்பிக்கப் பட்டிருந்தன; இவை ஒவ்வொன்றுக்கும் எதிரே மாலைகள் போன்றவை இருந்தன.

31 ஒரு முழம் உயரமிருந்த கிரீணைகளுக்குள் ளே திறப்பிருந்தது; அந்தத் திறப்பு ஒன் றரைமுழ வட்டவடிவாய்த் தாங்குவதற்கு வசதியாயிருந்தது; திறப்பிலும் சித்திரங்கள் செய்யப்பட்டிருந்தன. இடைத் தண்டுகள்

32 வட்டவடிவல்ல, சதுரமாயிருந்தன. அந்த நாலு சக்கரங்களும் இடைத் தண்டுகளின் கீழே சக்கர அச்சுகளின் ஆதாரத்தில் இருந்தன; சக்கரத்தின் உயரம் ஒன்றரை முழம். சக்கரங்கள் ரத சக்கரங்கள் 33 போலச் செய்யப்பட்டிருந்தன; அவை களின் அச்சுகளும் வட்டங்களும் ஆரக் கால்களும் குடங்களும் எல்லாம் வார்ப்பு வேலையாயிருந்தன. ஒவ்வொரு ஆதாரத்தின் 34 நாலு கோடிகளிலும் நாலு முட்டுகள் இருந்தன. இவை ஆதாரத்தோடு ஏக 35 வேலையாயிருந்தன; ஒவ்வொரு ஆதாரத்தின் தலைப்பிலும் அரைமுழ உயரமான ஒரு வட்டமிருந்தது, ஒவ்வொரு ஆதாரத்தின் மேல்பாகத்திலும்இருந்த பிடிகளும் இடைத் தண்டுகளும் அதோடு ஏகவேலையாயிருந் தன; பிடிகளிலும் இடைத்தண்டுகளிலும் 36 இருந்த பாளங்களிலே கேரூபுகள், சிங்கங் கள், பேரீந்துகள் இவற்றின் சித்திரங்களை வெட்டினான்; சுற்றிலும், ஒவ்வொன்றிலும் இருக்கும் இடங்களுக்குத் தக்கபடி மாலை களையும் செதுக்கினான். இப்படியே அந் 37 தப் பத்து ஆதாரங்களையும் செய்தான்; அவைகளெல்லாம் ஒரே வார்ப்பும் ஒரே அளவும், ஒரேவிதக் கொத்துவேலையுமா யிருந்தன. செம்பினாலே பத்துக் கொப் 38 பரைகளையும் செய்தான்; கொப்பரையின் அகலம் நாலுமுழம், ஒவ்வொரு கொப் பரையும் நாற்பது குடம்பிடிக்கும்; அந்தப் பத்து ஆதாரங்களில் ஒவ்வொன்றின்மேல் ஒவ்வொன்றாகப் பத்துக் கொப்பரைகளும் வைக்கப்பட்டன. ஐந்து ஆதாரங்களை 39 ஆலயத்தின் வலதுபுறத்திலும், ஐந்து ஆதா ரங்களை ஆலயத்தின் இடதுபுறத்திலும் வைத் தான்; கடல்தொட்டியை ஆலயத்தின் வலது புறத்திலே தென்கிழக்கே வைத்தான்.

பின்பு ஈராம் பாத்திரங்களையும் சாம்பல் 40 எடுக்கிற கரண்டிகளையும் கலங்களையும் செய்தான்.

இவ்விதமாக ஈராம் யெகோவாவின் ஆல யத்துக்காகச் சாலொமோன் ராஜாவுக்குச் செய்யவேண்டிய வேலை முழுவதையும் செய்துமுடித்தான். அவையாவன: இரண்டு 41 தூண்கள், இரண்டு தூண்களுடைய தலை யின்மேலுள்ள இரண்டு உருண்டைக் கும் பங்கள், தூண்களுடைய முனையின்மேல் இருந்த இரண்டு உருண்டைக் கும்பங்களை யும் மூடும் இரண்டு வலைப்பின்னல்கள். தூண்களின்மேலுள்ள இரண்டு உருண் 42 டைக் கும்பங்களையும் மூடும்படி ஒவ்வொரு வலைப்பின்னலுக்கும் செய்த இரண்டு வரிசை மாதளம்பழங்கள், ஆக இரண்டு வலைப்பின்னலுக்கும் நானூறு மாதளம்

43 பழங்கள்; பத்து ஆதாரங்கள், ஆதாரங்களின்மேல் வைத்த பத்துக் கொப்பரைகள்; ஒரு கடல்தொட்டி, கடல் தொட்டியின் கீழிருந்த பன்னிரண்டு ரிஷபங்கள்; செப்புச் சட்டிகள், கரண்டிகள், கலங்கள் ஆகிய இவைகளே; யெகோவாவின் ஆலயத்துக்காகச் சாலொமோன் ராஜாவுக்கு இந்த எல்லாப் பணிமுட்டுகளையும் ஈராம் பளபளப்பான செம்பினாலே செய்தான். யோர்தானுக்கு அடுத்த சமவெளியிலே சுக்கோத்துக்கும் சார்தானுக்கும் நடுவேகளிமண் தரையிலே ராஜா இவைகளை வார்ப்பித்தான். இந்தச் சகல பணிமுட்டுகளின் செம்பு மிகவும் ஏராளமாயிருந்தபடியால் சாலொமோன் அவைகளை நிறுக்கவில்லை; அதின் நிறை இவ்வளவென்று நிதானிக்கமுடியாதிருந்தது.

48 பின்னும் யெகோவாவின் ஆலயத்துக்குரிய பணிமுட்டுகளையெல்லாம் சாலொமோன் செய்தான், அவையாவன: பொற் பலிபீடம், திருச்சமுகத்தப்பங்களை வைக்கும் பொன் மேசை; மூலஸ்தானத்திற்கு எதிரே வைக்கும் பசும்பொன் விளக்குத் தண்டுகள், வலதுபுறத்துக்கு ஐந்தையும் இடதுபுறத்துக்கு ஐந்தையும் அவற்றோடு சேர்ந்த பூக்கள், விளக்குகள், கத்தரிகள் இவற்றையும் பொன்னினாலே செய்தான். கிண்ணங்கள், திரிவெட்டிகள், கலங்கள், கலயங்கள், தூபகலசங்கள் இவற்றையெல்லாம் பொன்னினாலே செய்தான். மகா பரிசுத்தமான உள் ஆலயக் கதவு முனைகளையும் தெய்வாலயமாகிய கோவிற் கதவு முனைகளையும் பொன்னினாலே செய்தான்.

51 இவ்விதமாகச் சாலொமோன் ராஜா யெகோவாவின் ஆலயத்துக்காகச் செய்த வேலையெல்லாம் முடிந்தது; முடியவே சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீது பிரதிஷ்டை செய்திருந்த வெள்ளியையும் பொன்னையும் பணிமுட்டுகளையும் கொண்டு வந்து யெகோவாவின் ஆலயக்கருவூலங்களிலே வைத்தான்.

**8** பின்பு யெகோவாவின் உடன்படிக்கைப் பெட்டகத்தைச் சீயோன் என்னும் தாவீதுநகரத்திலிருந்து கொண்டுவரும்படி சாலொமோன்ராஜா இஸ்ரவேலின் மூப்பரையும் கோத்திரப் பிரபுக்களாகிய இஸ்ரவேல் புத்திரரிலுள்ள பிதாக்களின் தலைவர் அனைவரையும் எருசலேமில் தன்னிடத்திலே கூடிவரச்செய்தான். இஸ்ரவேலர் அனைவரும் ஏழாம் மாதமாகிய ஏத்தானீம் மாதத்துப் பண்டிகையிலே சாலொமோன் ராஜாவினிடம் கூடிவந்தார்கள். இஸ்ரவேலின் மூப்பர் அனைவரும் வந்திருக்கையில் ஆசாரியர் யெகோவாவின் பெட்டகத்தை எடுத்துப் | பெட்டகத்தையும் தரிசனக்கூடாரத்தையும் கூடாரத்திலிருந்த பரிசுத்த பணிமுட்டுகள் அனைத்தையும் சுமந்துகொண்டு வந்தார்கள்; அவைகளைக் கொண்டுவந்தவர்கள் லேவியரும் ஆசாரியருமே. சாலொமோன் ராஜாவும் அவனிடம்வந்து கூடியிருந்த இஸ்ரவேல் சபையனைத்தும் பெட்டகத்துக்கு முன்பாக நடந்து எண்ணமுடியாத கணக்கற்ற திரளான ஆடுகளையும் மாடுகளையும் பலியிட்டார்கள். அப்படியே ஆசாரியர்கள் யெகோவாவின் உடன்படிக்கைப் பெட்டகத்தைக் கொண்டுவந்து ஆலயத்தின் மூலஸ்தானமாகிய மகா பரிசுத்தஸ்தலத்திலே கேருபுகளுடைய செட்டைகளின் கீழ் அதற்குரிய இடத்திலே வைத்தார்கள். கேருபுகள் பெட்டகமிருக்கும் ஸ்தானத்திலே தங்கள் செட்டைகளை விரித்து உயர இருந்து பெட்டியையும் அதன் தண்டாயங்களையும் மூடிக்கொண்டிருந்தன. தண்டாயங்கள் நீளமாயிருந்ததினால் அவைகளின் முனைகள் பரிசுத்த ஸ்தலத்திலே மூலஸ்தானத்திற்கு எதிரே தெரிந்தன. வெளியே நிற்பவர்களுக்கோ அவைகள் தெரியாது; அவைகள் இந்நாள்வரைக்கும் அப்படியே இருக்கின்றன. இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து வந்தகாலத்தில் யெகோவா அவர்களோடே உடன்படிக்கை செய்தபோது, மோசே ஓரேபிலே கொண்டுவந்து வைத்த இரண்டு கற்பலகைகளே அல்லாமல் பெட்டகத்திலே வேறொன்றும் இருக்கவில்லை. அப்பொழுது ஆசாரியர்கள் பரிசுத்தஸ்தலத்திலிருந்து புறப்படுகையில் மேகமானது யெகோவாவின் ஆலயத்தை நிரப்பிற்று. மேகத்தினிமித்தம் ஆசாரியர்கள் ஊழியஞ் செய்வதற்கு நிற்கமுடியாமற்போயிற்று; யெகோவாவின் மகிமை யெகோவாவின் ஆலயத்தை நிரப்பிற்று.

அப்பொழுது சாலொமோன்: காரிருளிலே வாசம்பண்ணுவேன் என்று யெகோவா சொன்னார்; தேவரீர் வாசம்பண்ணத்தக்க வீட்டை, நீர் என்றும் வசிக்கும் ஸ்தலத்தை, உமக்குக் கட்டினேன் என்று சொல்லி | ராஜா திரும்பி இஸ்ரவேல் சபையையெல்லாம் ஆசீர்வதித்தான்; இஸ்ரவேல் சபையாரெல்லாரும் நின்றார்கள். அப்பொழுது அவன் அவர்களோடு பேசி: இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா புகழப்படுக; அவர் என் தகப்பனாகிய தாவீதோடு பேசி:

16 என் ஜனமாகிய இஸ்ரவேலை எகிப்திலிருந்து
அழைத்துவந்த நாள்முதற்கொண்டு, என்
நாமம் விளங்கும்படி ஒரு ஆலயத்தைக்
கட்டுவதற்கு நான் இஸ்ரவேலின் சகல
கோத்திரங்களிலுமுள்ள பட்டணம் ஒன்
றையும் தெரிந்துகொள்ளவில்லை, என் ஜன
மாகிய இஸ்ரவேலை ஆளும்படி தாவீதையே
தெரிந்துகொண்டேன் என்று சொன்ன
வாக்கைத் தமது கரத்தினால் நிறைவேற்றி
17 னார். இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோ
வாவின் திருநாமத்திற்கு ஆலயத்தைக் கட்ட
வேண்டும் என்ற விருப்பம் என் தகப்பனு
18 கிய தாவீதின் மனதில் இருந்தது. யெகோ
வாவோ என் தகப்பனுகிய தாவீதோடு
பேசி: என் நாமத்திற்கு ஆலயம் கட்ட
வேண்டும் என்கிற விருப்பம் உன் மனதிலே
19 இருப்பது நல்ல காரியமே, ஆகிலும் அந்த
ஆலயத்தைக் கட்டுபவன் நீயல்ல, உனக்
குப் பிறக்கும் உன் குமாரனே என் நாமத்
திற்கு அந்த ஆலயத்தைக் கட்டுவான்
20 என்றார். யெகோவா சொல்லியபடியே
தமது திருவாக்கை நிறைவேற்றினார்; யெகோ
வா சொல்லியிருந்தபடியே நான் என் தகப்
பனுகிய தாவீதின் ஸ்தானத்தில் எழும்பி,
இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் அமர்ந்து
இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா
வின் திருநாமத்திற்கு ஆலயத்தைக் கட்டி
21 னேன். யெகோவா நமது பிதாக்களை எகிப்து
தேசத்திலிருந்து அழைத்து வந்தபோது
அவர்களோடே செய்த உடன்படிக்கை
இருக்கிற பெட்டகத்தை வைப்பதற்கு
அதிலே ஒரு இடத்தை அமைத்தேன் என்று
சொன்னான்.

22 பின்பு சாலொமோன் யெகோவாவின்
பலிபீடத்திற்கு எதிரே இஸ்ரவேல் சபை
யினத்திற்கும் முன்பாக நின்று வானத்திற்கு
23 நேரே தன் கைகளை விரித்து: இஸ்ரவேலின்
கடவுளாகிய யெகோவாவே, மேலே வானத்
திலும் கீழே பூமியிலும் உமக்கு நிகரான
தெய்வம் இல்லை; தங்கள் முழு இருதயத்
தோடும் உமக்கு முன்பாக நடக்கிற உமது
அடியாருக்கு உடன்படிக்கையையும் இரு
24 பையையும் நிலைநிற்கச் செய்கிறீர். உமது
தாசனுகிய என் தகப்பன் தாவீதுக்குத்
தேவரீர் கொடுத்த வாக்கை நிலைக்கச்செய்
தீர்; அதை உமது வாக்கினால் சொன்னீர்;
இந்நாளில் பார்க்கிறபடி உமது கரத்தினாலே
25 அதை நிறைவேற்றினீர். இஸ்ரவேலின்
கடவுளாகிய யெகோவாவே, உமது தாசனு
கிய என் தகப்பன் தாவீதோடு தேவரீர்
பேசி: நீ எனக்கு முன்பாக நடந்ததுபோல,
உன் குமாரரும் தங்கள் வழியைக் காத்து
எனக்கு முன்பாக நடப்பார்களே
யானால் இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல்
எனக்கு முன்பாக வீற்றிருக்கும் ஒரு
ஆண்பிள்ளை உனக்கு இல்லாமற்போவதில்லை
என்று சொன்னீரே, அதை அவனுக்கு நிறை
வேற்றும். இப்பொழுதும் இஸ்ரவேலின் 26
கடவுளே, உமது தாசனுகிய என் தகப்பன்
தாவீதுக்கு தேவரீர் சொன்ன வார்த்தை
மெய்யேயென்று விளங்குவதாக.

கடவுள் மெய்யாக பூமியில் வாசம் 27
பண்ணுவாரோ? இதோ, வானங்களும்
வானாதிவானங்களும் உம்மைக் கொள்
ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் 28
உம்மைக் கொள்வதெங்ஙனம்? என் கடவு
ளாகிய யெகோவாவே, அடியேனுடைய
விண்ணப்பத்தையும் மன்றாட்டையும் திரு
வுளத்திற்கொண்டருளி அடியேன் உமது
சந்நிதியில் அபயசத்தமிட்டுச் செய்யும்விண்
ணப்பத்திற்குச் செவிசாய்த்தருளும். அடி 29
யேன் இவ்விடத்தை நோக்கிச் செய்யும்
விண்ணப்பத்தைக் கேட்கும்படி இந்த ஆல
யத்தின்மேல் உமது கண்கள் இரவும் பக
லும் திறந்திருப்பதாக. இந்த ஸ்தலத்தில் 30
என் நாமம் விளங்குமென்று சொன்னீரே,
அடியேனும் இந்த ஸ்தலத்தை நோக்கி
விண்ணப்பஞ் செய்யப்போகிற உமது ஜன
மாகிய இஸ்ரவேலும் செய்யும் ஜெபத்தைக்
கேட்டருளும்; பரலோகமாகிய உமது வாச
ஸ்தலத்திலே அதை நீர் கேட்பீராக, கேட்டு
மன்னிப்பீராக.

தன் அயலானுக்கு விரோதமாய்க் குற் 31
றஞ்செய்து ஒருவனை ஆணையிடுவிக்க நேரி
டும்போது அந்த ஆணை இந்த ஆலயத்திலே
உமது பலிபீடத்திற்குமுன் வரவே | தேவ 32
நீர் பரலோகத்திலே அதைக் கேட்டு உமது
அடியாரை நியாயம் விசாரித்தருளும்; துன்
மார்க்கனைக் குற்றவாளியாகத் தீர்த்து அவன்
துன்மார்க்கத்தை அவன் தலையின்மேல்
சுமத்திவிடும்; குற்றமற்றவனை நீதிமானுகத்
தீர்த்து அவனுடைய நீதிக்குத் தக்கபடியே
அவனுக்குச் செய்தருளும்.

உமது ஜனமாகிய இஸ்ரவேல் உமக்கு 33
விரோதமாகப் பாவஞ்செய்ததினிமித்தம் சத்
துருவுக்கு எதிரே முறிந்தோடவே உம்மிடம்
திரும்பி உமது திருநாம மகத்துவத்தை ஒப்
புக்கொண்டு, இந்த ஆலயத்துக்கு நேராக
உம்மைநோக்கி விண்ணப்பஞ்செய்து மன்
றாடினால், | தேவரீர் பரலோகத்திலே 34
அதைக் கேட்டு, உமது ஜனமாகிய இஸ்ர
வேலின் பாவத்தை மன்னித்து, அவர்கள்
பிதாக்களுக்கு நீர் கொடுத்த தேசத்துக்கு
அவர்களைத் திரும்பிவரச் செய்தருளும்.

35 அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்
செய்யவே வானம் அடைபட்டு மழைபெய்
யாதிருக்கும்போது, அவர்கள் இந்த ஸ்தலத்
தை நோக்கி விண்ணப்பஞ்செய்து உமது
திருநாம மகத்துவத்தை ஒப்புக்கொண்டு,
தேவரீர் தங்களைச் சிறுமைப்படுத்துவதிலு
லே அவர்கள் தங்கள் பாவங்களை விட்டுத்
36 திரும்புவார்களானால், | தேவரீர் பரலோகத்
திலே அதைக் கேட்டு உமது அடியாரும்
உமது ஜனமாகிய இஸ்ரவேலும் செய்த
பாவத்தை மன்னித்தருளும்; அவர்கள்
நடக்கவேண்டிய நல்வழியை அவர்களுக்
குப் போதித்து, தேவரீர் உமது ஜனத்திற்
குச் சுதந்தரமாகக் கொடுத்த உமது தேசத்
தில் மழையைக் கட்டளையிட்டருளும்.
37 தேசத்திலே பஞ்சம், கொள்ளைநோய்,
வறட்சி, சாவி, வெட்டுக்கிளி, பச்சைக்கிளி
இவை உண்டாகிறபோதும், அவர்களுடைய
சத்துருக்கள் தேசத்திலுள்ள பட்டணங்களை
முற்றுகை போடுகிறபோதும், ஏதேனும்
வாதையாகிலும் வியாதியாகிலும் வருகிற
38 போதும் | எந்த மனுஷனாலாகிலும் இஸ்ர
வேலாகிய உமது முழு ஜனமுமாலாகிலும் தன்
தன் துன்பத்தை மனதில் உணர்ந்து, இந்த
ஆலயத்தை நோக்கித் தன் கைகளை விரித்
துச் செய்யும் சகல விண்ணப்பத்தையும்
39 சகல மன்றாட்டையும் | தேவரீர் உமது
வாசஸ்தலமாகிய பரலோகத்திலே கேட்டு
மன்னித்தருளும்; அவனவனுடைய வழிக
ளுக்குத் தக்கபடியே பலன் அளித்தருளும்.
நீர் அவனவனுடைய இருதயத்தை அறிந்
திருக்கிறீர், எல்லா மனுபுத்திரரின் இருதய
40 மும் உமக்கே தெரியும். தேவரீர் எங்கள்
பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்தில் அவர்
கள் உயிரோடிருக்கும் நாளெல்லாம் உமக்
குப் பயப்படும்படி இப்படிச்செய்தருளும்;
41 அந்நிய ஜாதியார், உமது ஜனமாகிய
இஸ்ரவேல் ஜாதியல்லாதவர்கள், உமது
மகத்துவமான நாமத்தையும், உமது பல
பலத்தையும் உமது நீட்டிய கரத்தையும்பற்
42 றிக் கேள்விப்படுவார்களே. அப்படிப்
பட்ட அந்நிய ஜாதியானும் உமது திருநாமத்
தினிமித்தம் தூரதேசத்திலிருந்து வந்து,
இந்த ஆலயத்துக்கு நேராக விண்ணப்பம்
43 பண்ணினால், | தேவரீர் உமது வாசஸ்தலமா
கிய பரலோகத்திலே செவிசாய்த்தருளி அந்த
அந்நிய ஜாதியான் உம்மை நோக்கி வேண்
டிக்கொள்வதின்படியெல்லாம் தேவரீர் செய்
தருளும்; அப்பொழுது பூமியின் ஜனங்க
ளெல்லாரும் உமது திருநாமத்தையறிந்து
உமது ஜனமாகிய இஸ்ரவேலைப்போல உம்மைக்
குப் பயப்படுவார்கள்; நான் கட்டின இந்த
ஆலயம் உமது திருநாமம் தரிக்கப்பெற்ற
தென்று அறிவார்கள்.

44 நீர் உமது ஜனங்களை அனுப்பும் வழியி
லே அவர்கள் தங்கள் சத்துருக்களோடு யுத்
தம்பண்ணச் செல்லும்போது நீர் தெரிந்து
கொண்ட இந்த நகரத்தையும் உமது திருநா
மத்திற்கு நான் கட்டின இந்த ஆலயத்தை
யும் நோக்கி யெகோவாவினிடம் விண்
ணப்பம்பண்ணினால், | தேவரீர் பரலோகத்
45 திலே அவர்கள் விண்ணப்பத்தையும் மன்
றாட்டையும் கேட்டு அவர்களுக்கு நியாயம்
செய்தருளும். அவர்கள் உமக்கு விரோத
46 மாய்ப் பாவஞ்செய்யவே—பாவஞ்செய்யாத
மனுஷன் இல்லை—தேவரீர் அவர்கள்மேல்
கோபங்கொண்டு அவர்களுடைய சத்துருக்
கள் கையில் அவர்களை ஒப்புக்கொடுக்கவே,
அந்தச் சத்துருக்கள் அவர்களைத் தூரத்தி
லோ சமீபத்திலோ உள்ள தங்கள் தேசத்
திற்குச் சிறைபிடித்துக்கொண்டுபோக நேரி
டும். அவர்கள் சிறையிருக்கும் தேசத்திலே
47 உணர்வடைந்தவர்களாய் மனந்திரும்பி:
நாங்கள் பாவஞ்செய்து அக்கிரமக்காரராய்த்
துன்மார்க்கமாக நடந்தோம் என்று தாங்கள்
சிறைப்பட்டிருக்கும் தேசத்திலே உம்மை
நோக்கி மன்றாடித் | தங்களைச் சிறை
48 பிடித்த தங்கள் சத்துருக்களின் தேசத்திலே
யே தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள்
முழு ஆத்துமாவோடும் உம்மிடமாகத்
திரும்பித் தங்கள் பிதாக்களுக்குத் தேவரீர்
கொடுத்த தங்கள் தேசத்தையும் தேவரீர்
தெரிந்துகொண்ட இந்த நகரத்தையும்
உமது திருநாமத்திற்கு நான் கட்டின இந்த
ஆலயத்தையும் நோக்கி உம்மிடம் விண்
ணப்பம் பண்ணும்போது, | தேவரீர் உமது 49
வாசஸ்தலமாகிய பரலோகத்திலே அவர்கள்
விண்ணப்பத்தையும் மன்றாட்டையும்
கேட்டு அவர்களுக்கு நியாயஞ்செய்தருளும்.
உமது ஜனங்கள் உமக்கு விரோதமாய்ச் 50
செய்த பாவத்தையும் அவர்கள் உமது
கட்டளையை மீறிய அவர்கள் துரோகங்
கள் யாவற்றையும் மன்னித்து, அவர்
களைச் சிறைபிடித்துக் கொண்டுபோகிற
வர்கள் அவர்களுக்கு இரங்கும்படியாக
அவர்களுக்கு இரக்கங் காட்டியருளும்.
அவர்கள் உமது ஜனம், உமது சுதந்தரம்; 51
எகிப்தென்கிற இருப்புக்காளவாயின் நடுவி
லிருந்து தேவரீர் அவர்களை அழைத்து வந்
தீரே. அவர்கள் உம்மை நோக்கி வேண் 52
டிக்கொள்ளுதின்படியெல்லாம் தேவரீர் அவர்
களுக்குச் செய்யும்படி உம்முடைய கண்கள்
உமது அடியானின் மன்றாட்டுக்கும் உமது
ஜனமாகிய இஸ்ரவேலின் மன்றாட்டுக்கும்

53 திறந்திருப்பதாக. யெகோவாவே, ஆண்டவரே, நீர் எங்கள் பிதாக்களே எகிப்திலிருந்து அழைத்துவந்தபோது உமது தாசனுகிய மோசேயைக்கொண்டு சொன்னபடியே தேவரீர் பூமியின் சகல ஜனங்களிலும் அவர்களே உமக்குச் சுதந்தரமாகப் பிரித்தெடுத்தீரே என்று விண்ணப்பம்பண்ணினான்.

54 சாலொமோன் யெகோவாவை நோக்கி, இந்த விண்ணப்பத்தையும் மன்றாட்டையும் எல்லாம் செய்து முடித்தபின்பு—தன் கைகளே வானத்திற்கு நேராக விரித்து முழங்

55 காற்படியிட்டிருந்தான்—இஸ்ரவேல் சபையையெல்லாம் ஆசீர்வதித்து உரத்த சத்த

56 மாய்ப்பேசி: யெகோவா புகழப்படுவாராக, தாம் சொன்னபடியே அவர் தமது ஜனமாகிய இஸ்ரவேலை இளைப்பாறச் செய்தார். அவர் தமது தாசனுகிய மோசேயைக் கொண்டு சொன்ன அவருடைய நல் வார்த்தைகளில் எல்லாம் ஒரு வார்த்தையாகிலும்

57 தவறிப்போகவில்லை. நமது கடவுளாகிய யெகோவா நம்மைக் கைவிடாமலும் நம்மை விட்டு விலகாமலும் அவர் நமது பிதாக்களோடு இருந்ததுபோல நம்மோடும் இருப்

58 பாராக. இப்படியாக நாம் அவருடைய வழிகளில் எல்லாம் நடப்பதற்கும் அவர் நமது பிதாக்களுக்கு நியமித்த அவருடைய கட்டளைகளையும் அவருடைய நியமங்களையும் அவருடைய தீர்ப்புகளையும் கைக் கொள்ளுகிறதற்கும் நமது இருதயத்தைத்

59 தம்மிடமே திரும்பச் செய்வாராக. நான் யெகோவாவுக்கு முன்பாக விண்ணப்பம் பண்ணின இந்த வார்த்தைகள் இரவும் பகலும் நமது கடவுளாகிய யெகோவாவின் சந்நிதியில் இருப்பதாக. அப்பொழுது அவர் அடியேனுக்கும் தமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கும் அந்தந்த நாளின் அவசியப்படியே

60 நியாயஞ்செய்வார். இப்படி நடந்துவந்தால் பூமியின் ஜனங்களெல்லாரும், யெகோவாவே கடவுள், வேறெவருமில்லை என்று

61 அறிந்துகொள்வார்கள். ஆதலால் இந்நாளில் இருக்கிறபடியே நீங்கள் அவர் நியமங்களில் நடந்து அவர் கட்டளைகளைக் கைக்கொள்ளும்படி உங்கள் இருதயம் முற்றிலும் நமது கடவுளாகிய யெகோவாவோடு இசைந்திருப்பதாக என்றான்.

62 பின்பு ராஜாவும் அவனோடிருந்த இஸ்ரவேலர் அனைவரும் யெகோவாவின் சந்நிதி

63 யில் பலிசெலுத்தினார்கள். சாலொமோன் யெகோவாவுக்குச் சமாதான பலிகளாக இருபத்திரண்டாயிரம் மாடுகளையும் இலட்சத்திருபதினாயிரம் ஆடுகளையும் பலியிட்டான்; இவ்விதமாய் ராஜாவும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் யெகோவாவின் ஆலயத்தைப் பிரதிஷ்டைப் பண்ணினார்கள். யெகோவா 64
வின் ஆலயத்துக்கு எதிரே பிராகாரமத்தியைச் சாலொமோன் பிரதிஷ்டைசெய்து அன்றையதினம் அங்கே தகனபலிகளையும் போஜனபலிகளையும் சமாதான பலிகளின் நிணத்தையும் செலுத்தினான்; யெகோவாவின் சந்நிதியில் இருந்த செப்புப்பலிபீடம் தகனபலிகளையும் போஜனபலிகளையும் சமாதான பலிகளின் நிணத்தையும் கொள்ளமாட்டாமல் சிறிதாயிருந்தது: அக்காலத்திலே சாலொமோனும் அவ 65
னோடிருந்த பெரிய கூட்டமாகிய இஸ்ரவேல் அனைத்தும்—இவர்கள் ஆமாத்திற்குப் போகிற வழிபிரியும் இடம் தொடங்கி எகிப்தின் நிற்குறுவரையுமுள்ள தேசத்திலிருந்து வந்தவர்கள்—நமது கடவுளாகிய யெகோவாவின் சந்நிதியில் ஏழுநாளும், அதற்குப் பின்பு வேறே ஏழுநாளும் ஆகப் பதினான்கு நாட்களாக உற்சவங் கொண்டாடினார்கள். எட்டாம் நாளிலே ஜனங்களுக்கு விடை 66
கொடுத்து அனுப்பினான்; அவர்கள் ராஜாவை வாழ்த்தி யெகோவா தமது தாசனுகிய தாவீதுக்கும் தமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கும் செய்த எல்லா நன்மையினிமித்தமும் சந்தோஷப்பட்டு மனமகிழ்ச்சியோடே தங்கள் கூடாரங்களுக்குப் போய்விட்டார்கள்.

**9** சாலொமோன் யெகோவாவின் ஆலயத்தையும் ராஜ அரமனையையும் தான் செய்ய வேண்டும் என்று விரும்பின எல்லாவற்றையும் கட்டி முடித்தபின்பு | யெகோவா கிபி 2
யோனிலே சாலொமோனுக்குத் தரிசனமானதுபோல இரண்டாந்தரமும் அவனுக்குத் தரிசனமானார். யெகோவா அவனோடு பேசி: 3
நீ என் சமுகத்தில் செய்த உன் விண்ணப்பத்தையும் உன் மன்றாட்டையும் கேட்டேன்; நீ கட்டின இந்த ஆலயத்தை நான் பரிசுத்தமாக்கினேன்; என் நாமம் என்றும் அங்கே விளங்கும்; என் கண்களும் என் இருதயமும் எக்காளும் அங்கே யிருக்கும். நான் 4
உனக்குக் கட்டளையிட்ட எல்லாவற்றையும் நீ செய்து என் நியமங்களையும் என் தீர்ப்புகளையும் கைக்கொள்ளும்படி என் சமுகத்திலே குற்றமற்ற மனதும் நேர்மையும் உள்ளவனுய் உன் தகப்பனுகிய தாவீது நடந்தது போல நடப்பாயானுல் | இஸ்ரவேலின் சிங் 5
காசனத்தின்மேல் உட்காரும் ஒருவன் உனக்கு இல்லாமற்போவதில்லை என்று உன் தகப்பனுகிய தாவீதுக்கு நான் சொன்னபடியே இஸ்ரவேலின்மேலுள்ள உன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றும் நிலைக்கப் பண்ணுவேன். நீங்களும் உங்கள் பிள்ளை 6

களும் என்னைவிட்டுப் பின்வாங்கி, நான்
உங்களுக்கு முன்வைத்த என் கட்டளைகளை
யும் என் நியமங்களையும் கைக்கொள்ளாமற்
போய், வேறே தேவர்களைச் சேவித்து அவர்
7 களைத் தொழுதுகொள்வீர்களாகில், | நான்
இஸ்ரவேலுக்குக்கொடுத்த தேசத்திலே அவர்
கள் இராதபடி அவர்களை நிர்மூலமாக்கி என்
நாமம் விளங்க நான் பரிசுத்தமாக்கின
இந்த ஆலயத்தைப் புறக்கணித்து என்
சமூகம் அதில் இராதபடி செய்வேன்; அப்
பொழுது இஸ்ரவேலர் சகல ஜனங்களுக்
குள்ளும் பழமொழியும் பரியாசச்சொல்
8 லும் ஆவார்கள். இந்த ஆலயமும், இது
மகா உன்னதமானதே என்றாலும், பாழா
கும்; இதைக் கடந்துபோகும் எவனும் பிர
மிப்படைந்து, பகடியாய் ஈசலிட்டு:
யெகோவா இந்த தேசத்துக்கும்
இந்த ஆலயத்துக்கும் இப்படிச் செய்
9 தது என்ன என்று கேட்பான். தங்கள்
பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து
அழைத்து வந்த அவர்கள் கடவுளாகிய
யெகோவாவை அவர்கள் விட்டு விலகி
வேறே தேவர்களைப் பற்றிக்கொண்டு அவர்
களைத் தொழுது சேவித்தார்கள்; அதினிமித்
தமே யெகோவா இந்தத் தீங்கையெல்லாம்
அவர்கள்மேல் வரச்செய்தார் என்று பேசிக்
கொள்வார்கள் என்றார்.

10 சாலொமோன் யெகோவாவின் ஆலயமும்
ராஜ அரமனையுமாகிய இரண்டு மாளிகை
களையும் கட்டிமுடித்த இருபதாம் வருஷக்
11 கடைசியில் | தீருவின் ராஜாவாகிய ஈரா
முக்குச் சாலொமோன் ராஜா கலிலேயா
நாட்டிலுள்ள இருபது ஊர்களைக் கொடுத்
தான்; இந்த ஈராம் சாலொமோன் விரும்
பியபடியெல்லாம் அவனுக்குக் கேதுரு மரங்
களையும் தேவதாரு மரங்களையும் பொன்னை
12 யும் கொடுத்து உதவியிருந்தான். சாலொ
மோன் தனக்குக் கொடுத்த ஊர்களைப் பார்க்
கிறதற்கு ஈராம் தீருவிலிருந்து வந்தபொழுது
அவைகள் அவனுக்குத் திருப்தியாயிராக்க
13 வில்லை. ஆகவே அவன்: என் சகோதரனே,
நீர் எனக்குக் கொடுத்த இந்த ஊர்கள்
என்ன ஊர்கள் என்று சொல்லி அவைக
ளுக்குக் காபூல் நாடு என்று பேரிட்டான்;
அந்தப் பேரே இந்நாள்மட்டும் வழங்கி
14 வருகிறது. ராஜாவுக்கு ஈராம் நூற்றிருபது
தாலந்து பொன் அனுப்பியிருந்தான்.

15 ஏவலாட்களா யிருந்தவர்களைக்கொண்டு
சாலொமோன் ராஜா கட்டியவைகள்:
யெகோவாவின் ஆலயம், ராஜ அரமனை,
மில்லோ, எருசலேமின் மதில், காத்சோர்,
16 மெகிதோ, கேசேர்—எகிப்தின் ராஜாவாகிய
பார்வோன் வந்து கேசேர் பட்டணத்தைப்
பிடித்து அதை அக்கினியால் சுட்டெரித்து
அதிலே குடியிருந்த கானானியரைக்கொன்று
விட்டு அதைச் சாலொமோனின் மனைவியா
கிய தன் குமாரத்திக்குச் சீதனமாகக் கொடுத்
திருந்தான். இந்தக் கேசேர் சாலொமோனால் 17
திரும்பவும் கட்டப்பட்டது—கீழ்பேத்கோ
ரோன் | பாலாத் வனாந்தர வெளியி 18
லுள்ள தாமார், | சாலொமோன் ராஜாவின் 19
பண்டசாலைப் பட்டணங்கள் அனைத்தும்,
இரதங்கள் நிறுத்தியிருந்த பட்டணங்கள்,
குதிரைவீரர் இருந்த பட்டணங்கள் ஆகிய
இவைகளே. எருசலேமிலும் லீபனோனி
லும் தான் அரசாண்ட தேசமெங்கும் தான்
விரும்பியவற்றையெல்லாம் கட்டிமுடித்
தான். இஸ்ரவேல்புத்திரர் சங்காரம்பண்ண 20
மல் விட்டிருந்த இஸ்ரவேல் ஜாதியாரல்லாத
எமோரியர், ஏத்தியர், பாரசிகர், ஏவியர்,
எபூசியருமான சகல ஜனங்களிலும் |
அவர்களுக்குப் பிறகு தேசத்திலே மீந்தி 21
ருந்த அவர்கள் பிள்ளைகளைச் சாலொமோன்
இந்நாள் வரைக்கும் நடக்கிறதுபோல,
ஏவல்வேலை செய்ய ஏற்படுத்திக்கொண்
டான். இஸ்ரவேல் புத்திரரில் எவரையுமோ 22
சாலொமோன் அடிமையாட்களாக்கவில்லை;
அவர்கள் யுத்தவீரரும் ராஜாவின் பணி
விடைக்காரரும் தலைவரும் அதிபதிகளும்
இரதவீரர் குதிரைவீரர் ஆகியவர்களை மேற்
பார்ப்பவருமாயிருந்தார்கள். ஐந்நூற்றைம்பது 23
பதுபேர் சாலொமோனின் வேலையை
விசாரித்து வேலையாட்களைப் பார்த்துக்
கொள்ளுகிறவர்களின்மேல் தலைமை விசார
ணைக் கர்த்தாக்களாயிருந்தார்கள்.

பார்வோனின் குமாரத்தி தாவீதுநகரத்தி 24
லிருந்து சாலொமோன் தனக்குக் கட்டின
தன் மாளிகைக்கு வந்தபின் அவன் மில்
லோவைக் கட்டினான்.

சாலொமோன் யெகோவாவின் ஆலயத் 25
தை முடித்தபின்பு, அவருக்குக் கட்டின
பலிபீடத்தின்மேல் வருஷம் மூன்றுமுறை
தகனபலிகளையும் சமாதான பலிகளையும்
படைத்து யெகோவாவின் சந்நிதிக்கு எதிரே
இருந்த பலிபீடத்தின்மேல் தூபங்காட்டி
வந்தான்.

சாலொமோன்ராஜா ஏதோம் தேசத்தில் 26
சிவந்த சமுத்திரக் கரையிலே ஏலோத்துக்
குச் சமீபத்திலுள்ள எசியோன் கேபேரிலே
கப்பல்களைச் செய்வித்தான். அந்தக் கப் 27
பல்களில் ஈராம் சமுத்திர யாத்திரையில்
பழகிய கப்பலாட்களாகிய தன் வேலையாட்
களைச் சாலொமோனுடைய வேலையாட்க
ளோடுகூட அனுப்பினான். அவர்கள் ஒப் 28

பிருக்குப்போய் அவ்விடத்திலிருந்து நானூற்றிருபது தாலந்து பொன்னைச் சாலொமோன்ராஜாவினிடம் கொண்டுவந்தார்கள்.

10 1 கர்த்தருடைய நாமத்தைப்பற்றி சாலொமோனுக்கு உண்டாயிருந்த கீர்த்தி ஷேபாவின் அரசிக்குக் கேள்வியானபோது அவள் விடுகதைகளினால் அவனைச் சோதிக்
2 கும்படி வந்தாள். மிகுந்த பரிவாரத்தோடும் கந்தவர்க்கங்களையும் மிகுதியான பொன்னையும் ரத்தினங்களையும் சுமக்கிற ஒட்டகங்களோடும் எருசலேமுக்கு வந்தாள்; அவள் சாலொமோனிடம் வந்தபோது தன் மனதில் இருந்த எல்லாவற்றை
3 யும்பற்றி அவனோடே சம்பாஷித்தாள். அப்பொழுது சாலொமோன் அவள் கேட்டவைகளையெல்லாம் விடுவித்தான், அவனுக்கு விடுவிக்கமுடியாதபடி ஒன்றுகூட ராஜா
4 வுக்கு மறைபொருளாயிருக்கவில்லை. ஷேபாவின் அரசி சாலொமோனுடைய சகல ஞானத்தையும் அவன் கட்டின அரமனை
5 யையும் | அவன் மேசையில் பரிமாறப்படும் உணவு வகைகளையும் அவன் உத்தியோகஸ்தரின் ஆசனங்களையும் அவன் ஊழியரின் ஒழுங்கையும் அவர்கள் உடைகளையும் அவனுடைய பானபாத்திரக்காரரையும் அவன் யெகோவாவின் ஆலயத்திலே செலுத்தின தகனபலிகளையும் கண்டபோது அவள்
6 பிரமித்து மெய்ம்மறந்தவளாய் ராஜாவைப் பார்த்து: உமது வர்த்தமானங்களையும் உமது
7 ஞானத்தையும்பற்றி நான் என் தேசத்திலே கேட்ட செய்தி மெய்யாயிற்று. நான் வந்து அதை என் கண்களால் காணுமட்டும் அந்தச் செய்திகளை நான் நம்பவில்லை; இதோ, இவற்றில் பாதியளவாகிலும் எனக்கு அறிவிக்கப்படவில்லை என்று தெரிகிறது; நான் கேள்விப்பட்ட பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உமது ஞானமும் சிறப்பும்
8 அதிகமாயிருக்கிறது. உமது உத்தியோகஸ்தர் பாக்கியவான்கள்; எப்போதும் உமக்கு எதிரே நின்று உமது ஞானத்தைக் கேட்கிற உம்முடைய ஊழியரும் பாக்கியரே.
9 உம்மை இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் வைக்க உம்மில் பிரியங்கொண்ட உமது கடவுளாகிய யெகோவா புகழப்படுவாராக, யெகோவா இஸ்ரவேலை என்றும் நேசிக்கிற படியினால் நியாயமும் நீதியும் செய்வதற்கு உம்மை ராஜாவாக ஏற்படுத்தினார் என்றாள்.

10 அவள் ராஜாவுக்கு நூற்றிருபது தாலந்து பொன்னையும் மிகுதியான கந்தவர்க்கங்களையும் ரத்தினங்களையும் கொடுத்தாள்; ஷேபாவின் அரசி சாலொமோன் ராஜாவுக்குக் கொடுத்த அவ்வளவு கந்தவர்க்கங்கள் பிற்பாடு ஒருக்காலும் வரவில்லை. ஒப்பீரிலிருந்து பொன்னைக் கொண்டுவருகிற ஈராமின் கப்பல்களும் ஒப்பீரிலிருந்து மிகுந்த அலமுக் மரங்களையும் ரத்தினங்களையும் கொண்டுவந்தன. அந்த அலமுக் மரங்களால் ராஜா யெகோவாவின் ஆலயத்திற்கும் ராஜ அரமனைக்கும் கிராதிகளையும் பாடகருக்குச் சுரமண்டலங்களையும் தம்புருகளையும் செய்தான்; அவ்வளவு அலமுக் மரங்கள் பிற்பாடு வந்ததுமில்லை, இக்காள் வரைக்கும் காணப்படவுமில்லை. ஷேபாவின் அரசி விரும்பிக்கேட்ட யாவற்றையும் சாலொமோன் ராஜா அவளுக்குக் கொடுத்ததுமல்லாமல் தானே சந்தோஷமாகவும் வெகுமதிகள் கொடுத்தான்; பின்பு அவள் தன் ஆட்களோடே தன் தேசத்திற்குத் திரும்பிப்போனாள்.

வர்த்தகச் சரக்குகள் மூலமாகவும் சுற்றுப்பிரயாண வியாபாரிகள், அரபிநாட்டரசர், மாகாண அதிபர் ஆகிய இவர்கள் மூலமாகவும் சாலொமோனுக்கு வந்த பொன்னெல்லாமல், வருஷந்தோறும் அவனுக்கு அறுநூற்று அறுபத்தாறு தாலந்து நிறை பொன் வந்தது. சாலொமோன் ராஜா பொன்தகட்டால் இருநூறு பரிசைகளைச் செய்தான்; ஒரு பரிசைக்கு அறுநூறு சேக்கல் நிறை பொன் சென்றது. பொன் தகட்டால் முந்நூறு கேடகங்களையும் செய்தான்; ஒரு கேடகத்திற்கு மூன்று ராத்தல் பொன் சென்றது; அவைகளை ராஜா லீபனோன் வனபவனம் என்னும் மாளிகையிலே வைத்தான். ராஜா தந்தத்தினாலே ஒரு பெரிய சிங்காசனத்தையும் செய்து அதைப் பசும்பொன் தகட்டால் மூடினான். அந்தச் சிங்காசனத்திற்கு ஆறு படிகள் இருந்தன; சிங்காசனத்தின் மேல்பாகப் பின்புறம் வட்டவடிவாயிருந்தது; உட்காரும் இடத்திற்கு இருபுறமும் கைச்சாய்மானங்கள் இருந்தன; கைச்சாய்மானங்களையடுத்து இரண்டு சிங்கங்கள் நின்றன. ஆறு படிகளின்மேலும் இரண்டு பக்கங்களிலும் பன்னிரண்டு சிங்கங்கள் நின்றன; எந்த ராஜ்யத்திலும் இப்படிச் செய்யப்படவில்லை. சாலொமோன் ராஜாவுக்கு இருந்த பான பாத்திரங்களெல்லாம் பொன்; லீபனோன் வனபவனத்தின் பணிமுட்டுகளெல்லாம் பசும்பொன்; வெள்ளியினால் ஒன்றையும் செய்யவில்லை; சாலொமோனின் நாட்களில் வெள்ளி ஒரு பொருளாய் எண்ணப்படவில்லை. ராஜாவுக்குச் சமுத்திரத்திலே ஈரா

பின் கப்பல்களோடேகூடத் தர்ஷீசு நாட்டுக் கப்பல்களும் இருந்தன; தர்ஷீஸ் கப்பல்கள் மூன்று வருஷத்துக்கொருதரம் பொன்னையும் வெள்ளியையும் யானைத் தந்தங்களையும் கபிகளையும் தோகைகளையும் கொண்டு வரும்.

23 பூமியின் சகல ராஜாக்களையும் பார்க்கிலும் சாலொமோன் ராஜா செல்வத்திலும்
24 ஞானத்திலும் சிறந்தவனாயிருந்தான். சாலொமோனின் இருதயத்திலே கடவுள் அருளிய ஞானத்தைக் கேட்கிறதற்காகச் சகல தேசத்தாரும் அவனை நாடிவருவார்கள்.
25 அவர்கள் எல்லாரும் வெள்ளிப் பாத்திரங்கள், பொற்பாத்திரங்கள், வஸ்திரங்கள், ஆயுதங்கள், கந்தவர்க்கங்கள், குதிரைகள், கோவேறுகழுதைகள் ஆகிய இவற்றைத் தங்கள் தங்கள் நன்கொடையாகக் கொண்டு
26 வருவார்கள். வருஷந்தோறும் இப்படியே நடந்தது. சாலொமோன் ரதங்களையும் குதிரைவீரரையும் சேர்த்தான்; அவனுக்கு ஆயிரத்துநானூறு இரதங்கள் இருந்தன; பன்னீராயிரம் குதிரைவீரரும் இருந்தார்கள்; ரதங்களை நிறுத்திவைக்கும் ஊர்களிலும், எருசலேமிலே தன்னிடத்திலும் அவைகளை
27 வைத்திருந்தான். எருசலேமிலே ராஜா வெள்ளியைக் கற்கள்போலவும் தேவதாரு மரங்களைச் சமனிலநாட்டுக் காட்டத்திமரங்கள்போலவும் திரளாக்கிச் சாதாரண வஸ்து
28 களாகச் செய்தான். சாலொமோனுக்கிருந்த குதிரைகள் எகிப்திலிருந்து கொண்டுவரப்பட்டன; ராஜாவின் வர்த்தகர் கூட்டங்கூட்டமாகச் சென்று அவற்றைக் கூட்டங்கூட்டமாய் விலைமதித்து வாங்கிவருவார்கள்.
29 எகிப்திலிருந்து வந்த ஒவ்வொரு இரதத்தின் விலை அறுநூறு வெள்ளிக்காசு, ஒவ்வொரு குதிரையின் விலை நூற்றைம்பது வெள்ளிக்காசு; இந்தப்பிரகாரம் ஏத்தியரின் சகல ராஜாக்களுக்கும் சீரியாவின் ராஜாக்களுக்கும் அவர்கள் மூலமாய்க் கொண்டு வரப்பட்டன.

**11** சாலொமோன் ராஜா பார்வோனின் குமாரத்தியை நேசித்ததுமல்லாமல், மோவாபியரும் அம்மோனியரும் ஏதோமியரும் சீதோனியரும் ஏத்தியருமாகிய அந்நிய
2 ஜாதியாரான அநேக ஸ்திரீகள்மேலும் ஆசை வைத்தான். யெகோவா அந்த ஜாதியாரைப் பற்றி இஸ்ரவேல் புத்திரரிடம்: நீங்கள் அவர்களிடத்திற்கும் அவர்கள் உங்களிடத்திற்கும் செல்லலாகாது; அவர்கள் நிச்சயமாகவே தங்கள் தேவர்களைப் பின்பற்றும்படி உங்கள் இருதயத்தைச் சாயப்பண்ணுவார்கள் என்று சொல்லியிருந்தார்; சாலொ
மோனே அந்த ஸ்திரீகள்மேல் ஆசைவைத்துப் பற்றுதலாயிருந்தான். அவனுக்கு ராஜ 3
குலமான எழுநூறு மனைவிகள் இருந்தார்கள், முந்நூறு வைப்பாட்டிகளும் இருந்தார்கள்; அவனுடைய ஸ்திரீகள் அவன் இருதயத்தை வழுவிப்போகப் பண்ணினார்கள். சாலொமோன் வயதுசென்றவனான 4
போது அவனுடைய ஸ்திரீகள் அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி வழுவிப்போகப் பண்ணினார்கள்; அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போலத் தன் கடவுளாகிய யெகோவாவோடே முழுதும் இசைந்திருக்கவில்லை. சாலொமோன் சீதோனிய 5
ரின் தேவதையாகிய அஸ்தோரேத்தையும் அம்மோனியரின் அருவருப்பாகிய மில்கோமையும் பின்பற்றினான். சாலொமோன் 6
தன் தகப்பனாகிய தாவீதைப்போல யெகோவாவைப் பூரணமாய்ப் பின்பற்றாமல் யெகோவாவின் பார்வையில் தீமையாயிருப்பதைச் செய்தான். அப்பொழுது சாலொ 7
மோன் எருசலேமுக்கு எதிரான மலையிலே மோவாபியரின் அருவருப்பாகிய கெமோஷுக்கும் அம்மோன் புத்திரரின் அருவருப்பாகிய மோளேகுக்கும் மேடைகளைக் கட்டினான். இப்படியே தங்கள் தேவர்களுக்குத் 8
தூபங்காட்டிப் பலியிடுகிற அந்நிய ஜாதியாரான தன் ஸ்திரீகள் எல்லாருக்காகவும் செய்தான்.

இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா 9
சாலொமோனுக்கு இரண்டுவிசை தரிசனமாகி, இந்த விஷயமாகவே கட்டளையிட்டு அந்நிய தேவர்களைப் பின்பற்றவேண்டாம் என்று சொல்லியிருந்தும், அவன் யெகோவாவை விட்டுத் தன் இருதயத்தைத் திருப்பி | அவர் கட்டளையிட்டதைக் கைக் 10
கொள்ளாமற் போனதினால் யெகோவா அவன்மேல் கோபமானார். ஆகவே 11
யெகோவா சாலொமோனை நோக்கி: நான் உனக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையையும் என் நியமங்களையும் நீ கைக்கொள்ளாமற்போய் இந்தக் காரியத்தைச் செய்தபடியினால் ராஜ்யபாரத்தை உன்னிடமிருந்து பறித்து அதை உன் ஊழியனுக்குக் கொடுப்பேன். ஆகிலும் உன் 12
தகப்பனாகிய தாவீதினிமித்தம் நான் அதை உன் காலத்திலே செய்வதில்லை; உன் குமாரனுடைய வசத்தினின்று அதைப் பறித்துவிடுவேன். எனினும் ராஜ்யம் முழுவதை 13
யும் நான் பறித்துவிடமாட்டேன்; என் தாசனாகிய தாவீதினிமித்தமும் நான் தெரிந்துகொண்ட எருசலேமினிமித்தமும் ஒரு

கோத்திரத்தை நான் உன் குமாரனுக்குக்
கொடுப்பேன் என்றார்.
14 யெகோவா ஏதோமியனாகிய ஆதாத் என்
பவனைச் சாலொமோனுக்கு விரோதமாய்
எழும்பச்செய்தார்; இவன் ஏதோமிய ராஜ
15 குலத்தைச் சேர்ந்தவன். தாவீது ஏதோ
மில் இருந்தபோது படைத்தலைவனான
யோவாப் ஏதோமிலுள்ள ஆண்மக்களை
யெல்லாம் சங்காரித்தபின் வெட்டுண்டு
விழுந்த தன் ஆட்களை அடக்கம்பண்ணப்
16 போயிருக்கையில்-ஏதோமின் ஆண்மக்களை
யெல்லாம் சங்காரித்துத் தீருமட்டும் யோவா
பும் சகல இஸ்ரவேலரும் ஆறுமாதமளவும்
17 அங்கேயே இருந்தார்கள்—இந்த ஆதாதும்
இவனுடனேகூட இவன் தகப்பனுடைய ஊழி
யரில் சில ஏதோமியரும் எகிப்திற்குத் தப்பி
ஓடிப்போனார்கள்; ஆதாத் அப்பொழுது
18 ஒரு இளைஞனாயிருந்தான். அவர்கள் மிதி
யானிலிருந்து எழுந்து பாரானுக்குச்
சென்று பாரானிலே சில ஆட்களைக் கூட்
டிக்கொண்டு எகிப்திற்குப் பார்வோன் ராஜா
வினிடம் போனார்கள்; அவன் இவனுக்கு
ஒரு வீடு கொடுத்து இவனுக்கு ஆகாரத்
தைத் திட்டம்பண்ணி நிலமும் கொடுத்
19 தான். பார்வோன் ஆதாதினிடம் மிகவும்
தயவாயிருந்தபடியினால் இராணியாகிய தன்
மனைவி தாப்பெனேஸ் என்பவளின் சகோ
தரியை அவனுக்கு விவாகஞ்செய்து கொடுத்
20 தான். தாப்பெனேசின் சகோதரியாகிய
இவள் அவனுக்குக் கெனுபாத் என்னும்
ஒரு குமாரனைப் பெற்றாள்; அவனைத் தாப்
பெனேஸ் பார்வோனின் வீட்டிலே வளர்த்
தான்; அப்படியே கெனுபாத் பார்வோனின்
வீட்டிலே பார்வோனின் குமாரருடன்
21 இருந்தான். தாவீது நித்திரையடைந்து தன்
பிதாக்களோடே சேர்ந்தான்என்றும்படைத்
தலைவனாகிய யோவாப் இறந்துபோனான்
என்றும் ஆதாத் எகிப்திலே கேள்விப்பட்ட
போது, ஆதாத் பார்வோனிடம்வந்து,
நான் என் சுயதேசத்துக்குப் போக என்னை
அனுப்பவேண்டும் என்று கேட்டான்.
22 அதற்குப் பார்வோன்: இதோ, நீ உன் சுய
தேசத்துக்குப்போக விரும்புவானேன், என்
னிடத்திலே உனக்கு என்ன குறைவு என்று
கேட்க ஆதாத்: ஒரு குறைவுமில்லை, ஆகிலும்
என்னை அனுப்பிவிடவேண்டும் என்றான்.
23 எலியாதாவின் குமாரனாகிய ரேசோன்
என்பவனையும் சாலொமோனுக்கு விரோத
மாகக் கடவுள் எழும்பச் செய்தார்; இவன்
தன் ஆண்டவனாகிய அதாதேசர் என்னும்
சோபாவின் ராஜாவை விட்டு ஓடிப்
24 போய்த் | தாவீது சோபாவில் உள்ளவர்
களைக் கொன்றுபோடுகையில் இவன் தன்
னிடே சிலரைச் சேர்த்துக்கொண்டு அந்தக்
கூட்டத்திற்குத் தலைவனானான்; இவர்கள்
தமஸ்குவுக்குப் போய் அங்கே தங்கித்
தமஸ்குவில் அரசாட்சிசெய்தார்கள். ஆதாத் 25
தீமை செய்தது மாத்திரமல்ல, ரேசோனும்
சாலொமோனின் நாளெல்லாம் இஸ்ரவே
லுக்குச் சத்துருவாகி இஸ்ரவேலைப் பகைத்து
வந்தான்; இவன் சீரியாவின்மேல் ராஜாவா
யிருந்தான்.
சேரேதா ஊரிலே நேபாத்தின் குமாரன் 26
யெரொபெயாம் என்னும் எப்பிராயீமியன்
ஒருவனிருந்தான்; இவன் சாலொமோனி
டம் ஊழியஞ்செய்துவந்தான்; அவன்
தாய் செருகாள் என்னும் பேருள்ள வித
வை. இவனும் ராஜாவுக்கு விரோதமாய்த் 27
தன் கையை ஓங்கினான்; அவன் ராஜாவுக்கு
விரோதமாய் எழும்பும்படி நேர்ந்த விவரம்
இதுவே: சாலொமோன் மில்லோவைக் கட்
டித் தன் தகப்பனாகிய தாவீதினுடைய நக
ரத்திலே இடிந்துபோன இடங்களைப் பழுது
பார்த்தான். அங்கே யெரொபெயாம் என் 28
பவன் சாமர்த்தியசாலியாய் வேலை செய்
தான்; அவன் காரிய சமர்த்தனான வாலிபன்
என்று சாலொமோன் கண்டு, யோசேப்பு
வம்சத்தாருக்கு நியமித்த வேலையெல்
லாம் அவன் விசாரணைக்கு ஒப்புவித்தான்.
ஒருநாள் யெரொபெயாம் எருசலேமிலிருந்து 29
வெளியே போனபோது, சீலோ ஊராளனான
அகியா என்னும் தீர்க்கதரிசி புது அங்கி
ஒன்றைத் தரித்தவனாய் வழியிலே அவ
னைக் கண்டான்; இருவரும் வயல் வெளி
யிலே தனித்திருக்கையில் | அகியா தான் 30
தரித்துக்கொண்டிருந்த புது அங்கி
யைப் பிடித்து அதைப் பன்னிரண்டு துண்
டாகக் கிழித்துப்போட்டு யெரொபெயா
மைப் பார்த்து: பத்துத் துண்டுகளை எடுத்துக்
கொள்; இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோ 31
வா சொல்லுகிறது என்னவென்றால்: இதோ,
நான் ராஜ்யபாரத்தைச் சாலொமோனுடைய
கையிலிருந்து எடுத்துப் பறித்து உனக்குப்
பத்துக் கோத்திரங்களைக் கொடுப்பேன்.
ஒரு கோத்திரமோவெனில் அவனுக்குரிய 32
தாகும், என் தாசனாகிய தாவீதினிமித்தமும்
நான் இஸ்ரவேல் கோத்திரங்களில் எல்லாம்
தெரிந்துகொண்ட எருசலேம் நகரத்தினி
மித்தமும் இப்படியாகும். அவர்கள் என் 33
னைவிட்டுச் சீதோனியரின் தேவதையாகிய
அஸ்தோரேத்தையும் மோவாபியரின் தேவ
னாகிய கெமோஷையும் அம்மோன் புத்திர
ரின் தேவனாகிய மில்கோமையும் தொழுது
கொண்டார்கள்; அவன் தகப்பனாகிய தாவீ

தைப்போல என் பார்வைக்கு நேர்மையான தைச் செய்யவும், என் நியமங்களையும் என் தீர்ப்புகளையும் கைக்கொள்ளவும், அவர்கள் என் வழிகளில் நடவாமற்போனபடியினால்
34 அப்படிச் செய்வேன். எனினும் ராஜ்யம் முழுவதையும் நான் அவன் கையிலிருந்து எடுத்துப்போடுவதில்லை; நான் தெரிந்து கொண்டவனும் என் கட்டளைகளையும் என் நியமங்களையும் கைக்கொண்டவனுமான என் தாசனுடைய தாவீதினிமித்தம் அவன் உயிரோடிருக்கும் நாளெல்லாம் அவனை
35 அதிபதியாக வைப்பேன். அவன் குமாரன் கையிலிருந்தோ ராஜ்யபாரத்தை எடுத்து விடுவேன், ராஜ்யத்திலே பத்துக் கோத்திரங்
36 களை உனக்குத் தருவேன். என் நாமம் விளங்கும்படி நான் தெரிந்துகொண்ட நகரமாகிய எருசலேமிலே என் சமுகத்தில் என் தாசனுடைய தாவீதுக்கு எந்நாளும் ஒரு விளக்கு இருக்கும்படி அவன் குமாரனுக்கு
37 ஒரு கோத்திரத்தைக் கொடுப்பேன். நீ உன் மனவிருப்பத்தின்படி ஆண்டுகொண்டு இஸ்ரவேலின்மேல் ராஜாவாய் இருப்பதற்காக நான் உன்னைத் தெரிந்துகொள்ளுவேன்.
38 நான் உனக்குக் கட்டளையிட்டதையெல்லாம் நீ கேட்டுக் கைக்கொண்டு, நீ என் வழிகளில் நடந்து, என் தாசனுடைய தாவீது செய்ததுபோல என் நியமங்களையும் என் கட்டளைகளையும் கைக்கொள்ளும்படிக்கு என் பார்வையில் நேர்மையாயிருப்பதைச் செய்துவந்தால் நான் உன்னோடிருந்து, நான் தாவீதுக்குக் கட்டினதுபோல உனக்கும் நிலையான வீட்டைக் கட்டி இஸ்ரவேலை
39 உனக்குத் தருவேன். இப்படியாக நான் இந்தக் காரியத்தினிமித்தம் தாவீதின் சந்ததியைச் சிறுமைப்படுத்துவேன்; ஆகிலும் எந்நாளும் அப்படியிராது என்று சொன்
40 னான். ஆகவே சாலொமோன் யெரொபெயாமைக் கொல்ல வகைதேடினான்; யெரொபெயாம் எழுந்து எகிப்திற்குச் சீஷாக் என்னும் எகிப்தின் ராஜாவினிடம் ஓடிப்போய், சாலொமோன் மரணமடையுமட்டும் எகிப்தில் இருந்தான்.

41 சாலொமோனைப்பற்றிய மற்ற விவரங்களும் அவன் செய்தவை அனைத்தும் அவனுடைய ஞானமும் சாலொமோனின் வர்த்தமானங்கள் என்னும் நூலில் எழுதியிருக்கிற
42 தல்லவா. சாலொமோன் எருசலேமிலே முழு இஸ்ரவேலையும் அரசாண்ட காலம்
43 நாற்பது வருஷம். சாலொமோன் நித்திரையடைந்து தன் பிதாக்களோடே சேர்ந்தான்; தன் தகப்பனுடைய தாவீதின் நகரத்திலே அடக்கம்பண்ணப்பட்டான்; அவன் குமாரனுடைய ரெகபெயாம் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

ரெகபெயாமை ராஜாவாக்கும்படி இஸ்ர 12
வேலர் எல்லாரும் சீகேமுக்கு வந்திருந்த படியால் அவன் சீகேமுக்குப்போனான்.
2 சாலொமோன் ராஜாவை விட்டு எகிப்திற்கு ஓடிப்போன நேபாத்தின் குமாரனுடைய யெரொபெயாமோ இதைக் கேள்விப்பட்டான்; அவன் இன்னும் எகிப்திலே
3 குடியிருந்தான். இஸ்ரவேலர் யெரொபெயாமுக்கு ஆள் அனுப்பி அவனை அழைப்பித்தார்கள்; அவனும் இஸ்ரவேல் சபை அனைத்தும் வந்து ரெகபெயாமோடு பேசி:
4 உமது தகப்பன் பாரமான நுகத்தை எங்கள்மேல் வைத்தார்; இப்போதும் நீர் உமது தகப்பன் சுமத்தின கடினமான வேலையையும், அவர் எங்கள்மேல் வைத்த பாரமான நுகத்தையும் லகுவாக்கும், அப்பொழுது உம்மைச் சேவிப்போம் என்றார்கள்.
5 அதற்கு அவன்: நீங்கள் போய் மூன்றுநாள் பொறுத்து என்னிடத்தில் திரும்பி வாருங்கள் என்றான்; அப்படியே ஜனங்கள் போயிருந்தார்கள்.

6 அப்பொழுது ராஜாவாகிய ரெகபெயாம் தன் தகப்பனுடைய சாலொமோன் உயிரோடிருக்கையில் அவன் சமுகத்தில் நின்ற முதியோரோடே ஆலோசனைபண்ணி, இந்த ஜனங்களுக்குப் பதில் சொல்லவேண்டுமே, நீங்கள் என்ன யோசனை சொல்லுகிறீர்கள் என்று கேட்டான்.
7 அதற்கு அவர்கள்: நீர் இன்று இந்த ஜனங்களுக்கு இணங்கி, ஊழியனைப்போல் அவர்கள் சொற்படி செய்து, மறுமொழியாக நல்வார்த்தைகளைச் சொல்வீரானால் எந்நாளும் அவர்கள் உமக்கு ஊழியராயிருப்பார்கள் என்று
8 சொன்னார்கள். அவனோ முதியோர் தனக்குச் சொன்ன ஆலோசனையைத் தள்ளிவிட்டுத் தன்னோடே வளர்ந்து தன் சமுகத்தில் நிற்கிற வாலிபரோடே ஆலோசனைபண்ணி,
9 அவர்களைப் பார்த்து: உமது தகப்பன் எங்கள்மேல் வைத்த நுகத்தை லகுவாக்கும் என்று என்னிடம் கேட்கிற இந்த ஜனங்களுக்குப் பதில் சொல்லவேண்டுமே, நீங்கள் என்ன யோசனை சொல்லுகிறீர்கள் என்று கேட்க | அவனோடு வளர்ந்த வாலி 10
பர் அவனிடம்: உமது தகப்பன் எங்கள் நுகத்தைப் பாரமாக்கினார், நீர் அதை எங்களுக்கு லகுவாக்கும் என்று உம்மிடத்திலே கேட்ட இந்த ஜனத்திற்கு: என் சுண்டுவிரல் என் தகப்பனுடைய இடுப்பைப்பார்க்கிலும் பருமனையிருக்கும். இப் 11
போதும் கேளுங்கள், என் தகப்பன் பார

மான நுகத்தை உங்கள்மேல் வைத்தார், நான் உங்கள் நுகத்தை அதிகப் பாரமாக்குவேன்; என் தகப்பன் உங்களைச் சவுக்குகளினாலே சிக்ஷித்தார், நான் உங்களைத் தேள்களினாலே சிக்ஷிப்பேன் என்று பதில் சொல்ல வேண்டும் என்றார்கள்.

12 மூன்றாம்நாள் என்னிடத்தில் வாருங்கள் என்று ராஜா சொல்லியிருந்தபடியே யெரொபெயாமும் சகல ஜனங்களும் மூன்றாம் நாளிலே ரெகாபெயாமிடம் வந்தார்கள். 13 ராஜா முதியோர் தனக்குச் சொன்ன ஆலோசனையைத் தள்ளிவிட்டு அவர்களுக்குக் கடினமான உத்தரவு கொடுத்தான். 14 வாலிபருடைய ஆலோசனையின்படியே அவர்களோடுபேசி: என் தகப்பன் உங்கள் நுகத்தைப் பாரமாக்கினார், நானே உங்கள் நுகத்தை அதிகப் பாரமாக்குவேன்; என் தகப்பன் உங்களைச் சவுக்குகளினாலே சிக்ஷித்தார், நானே உங்களைத் தேள்களினாலே சிக்ஷிப்பேன் என்றான். 15 ராஜா ஜனங்களுக்குச் செவிகொடாமற்போனான்; யெகோவா சீலோ ஊராஞனை அகீயாவைக்கொண்டு நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமுக்குச் சொன்னதமது வார்த்தையை உறுதிப்படுத்தும்படி யெகோவாவே இப்படி நடக்கும்படி செய்தார்; 16 ராஜா தங்களுக்குச் செவிகொடாததை இஸ்ரவேலர் எல்லாரும் கண்டபோது, ஜனங்கள் ராஜாவுக்கு மறு உத்தரவாக:

தாவீதினிடம் எங்களுக்குப் பங்கில்லை,
ஈசாயின் குமாரனிடம் எங்களுக்குச் சுதந்தரமில்லை,
இஸ்ரவேலே, உன் கூடாரங்களுக்குப் போய்விடு;
இப்போதும் தாவீதே, உன் சொந்த வீட்டைப் பார்த்துக்கொள்

என்று சொல்லிக்கொண்டு இஸ்ரவேலர் தங்கள் தங்கள் கூடாரங்களுக்குப் போய்விட்டார்கள். 17 ஆனாலும் யூதாவின் ஊர்களிலே குடியிருந்த இஸ்ரவேல் புத்திரர்மேல் ரெகாபெயாம் ராஜாவாயிருந்தான். 18 பின்பு ராஜாவாகிய ரெகாபெயாம் ஏவலாட்களின்மேல் விசாரணைக்காரனாகிய அதோராமை அனுப்பினான்; இஸ்ரவேலர் எல்லாரும் அவனைக் கல்லெறிந்து கொன்றார்கள்; அப்பொழுது ராஜாவாகிய ரெகாபெயாம் தாமதமின்றி ரதத்தின்மேல் ஏறி எருசலேமுக்கு ஓடிப்போனான். 19 இப்படியாக இஸ்ரவேலர் தாவீதின் வம்சத்தைவிட்டுக் கலகம்பண்ணிப் பிரிந்து போனார்கள்; இந்நாள்வரைக்கும் பிரிந்தே இருக்கிறார்கள்.

20 யெரொபெயாம் திரும்பி வந்தான் என்று இஸ்ரவேலருக்கெல்லாம் தெரியவந்தபோது, அவனைச் சபையினிடம் அழைத்தனுப்பி அவனை இஸ்ரவேல் அனைத்தின்மேலும் ராஜாவாக்கினார்கள்; யூதா கோத்திரத்தாரேயன்றி வேறெருவரும் தாவீதின் வம்சத்தைப் பின்பற்றவில்லை.

21 ரெகாபெயாம் எருசலேமுக்கு வந்தபோது யூதா வீட்டாரிலும் பென்யமீன் கோத்திரத்தாரிலும் விசேஷித்த யுத்தவீரரான லட்சத்து எண்பதினாயிரம் பேரைத் திரட்டினான்; இஸ்ரவேல் வீட்டாரோடே யுத்தம்பண்ணவும், ராஜ்யத்தைச் சாலொமோனின் குமாரனாகிய தன்னிடமாகத் திருப்பிக்கொள்ளவும் வேண்டுமென்று இப்படிச் செய்தான். 22 கடவுளின் மனுஷனாகிய ஷெமாயாவுக்குக் கடவுளின் வார்த்தை வந்தது; 23 நீ சாலொமோனின் குமாரனாகிய ரெகாபெயாம் என்னும் யூதாவின் ராஜாவோடும் யூதாவின் வீட்டார் அனைவரோடும் பென்யமீனியரோடும் மற்ற ஜனங்களோடும் பேசி: 24 யெகோவா சொல்வதைக் கேளுங்கள், நீங்கள் போகவேண்டாம், இஸ்ரவேல் புத்திரரான உங்கள் சகோதரரோடு யுத்தம் பண்ணவேண்டாம்; நீங்கள் எல்லாரும் தங்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிவிடுங்கள், இந்தக் காரியமும் நடக்கிறது என்னாலேயே என்று சொல் என்றார்; அவர்கள் யெகோவாவின் சொல்லைக் கேட்டு யெகோவாவின் வார்த்தையின்படியே திரும்பிப் போய்விட்டார்கள்.

25 யெரொபெயாம் எப்பிராயீம் மலைநாட்டிலே சீகேமைக் கட்டி அதிலே வாசம் பண்ணி அங்கிருந்துபோய்ப் பெனூவேலைக் கட்டினான். 26 யெரொபெயாம் தன் மனதிலே சிந்தித்து: இப்போதும் ராஜ்யபாரம் தாவீதின் வம்சவசமாய்த் திரும்பிவிடலாம். 27 இந்த ஜனங்கள் எருசலேமிலுள்ள யெகோவாவின் ஆலயத்திலே பலிகளைச் செலுத்தப்போனால் இந்த ஜனங்களின் இருதயம் யூதாவின் ராஜாவாகிய ரெகாபெயாம் என்னும் தங்கள் ஆண்டவன் வசமாய்த் திரும்பலாம், அவர்கள் என்னைக் கொன்றுபோட்டு யூதாவின் ராஜாவாகிய ரெகாபெயாமின் பக்கம் போய்விடலாம் என்று | ராஜா யோசனைபண்ணிக் 28 கொண்டு பொன்னினாலே இரண்டு கன்றுக்குட்டிகளைச் செய்து ஜனங்களைப்பார்த்து: நீங்கள் எருசலேமுக்குப்போகிறது உங்களுக்கு மிகவும் கஷ்டம்; இஸ்ரவேலரே, இதோ, இவைகள் உங்களை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணின உங்கள் தெய்வங்கள் என்று சொல்லி, | ஒன்றைப் பேதே 29

லிலும் ஒன்றைத் தானிலும் ஸ்தாபனஞ்
30 செய்தான். இந்தக் காரியம் பாவத்துக்
கேதுவாயிற்று; ஜனங்கள் இந்தக் கன்றுக்
குட்டியை வணங்கும்படி தான் மட்டும்
31 போவார்கள். அவன் கோவில்மேடைகளை
யும் கட்டி லேவியின் புத்திரராயிராத ஜனத்
தில் சாதாரணமானவர்களை ஆசாரியராக்கி
32 னான். யூதாவில் கொண்டாடப்படும் உற்
சவத்துக் கொப்பாக எட்டாம் மாதம் பதி
னைந்தாம் தேதியிலே யெரொபெயாம் ஒரு
உற்சவத்தையும் ஏற்படுத்தினான்; அவனே
பலிபீடத்தின்மேல் பலியிட்டான்; இப்படி
அவன் பேதேலிலே செய்து தான் செய்து
விட்ட கன்றுக்குட்டிகளுக்குப் பலியிட்டுத்
தான் கட்டிய மேடைகளின் ஆசாரியரைப்
33 பேதேலிலே நியமித்தான். அவன் தன்
இஷ்டப்படியே நியமித்துக்கொண்ட எட்
டாம் மாதம் பதினைந்தாந் தேதியிலே பேதே
லில் தான் கட்டிய பலிபீடத்தின்மேல்
பலியிட்டான்; இஸ்ரவேல் புத்திரருக்கு
அவன் தானே ஒரு உற்சவத்தை ஏற்படுத்
தித் பலிபீடத்தின்மேல் பலியிட்டுத் தூபங்
காட்டினான்.

**13** யெரொபெயாம் தூபங்காட்டப் பலி
பீடத்தண்டையிலே நிற்கையில், இதோ,
கடவுளின் மனுஷன் ஒருவன் யெகோவா
வின் கட்டளைப்படியே யூதாவிலிருந்து
2 பேதேலுக்கு வந்து, யெகோவாவின் கட்ட
ளைப்படியே அந்தப் பலிபீடத்தைப் பார்த்துச்
சத்தமிட்டு: பலிபீடமே, பலிபீடமே,
யெகோவா சொல்வதைக் கேள், இதோ,
தாவீதின் வம்சத்தில் யோசியா என்னும்
பேருள்ள ஒரு குமாரன் பிறப்பான்; உன்
மேல் தூபங்காட்டுகிற மேடைகளின் ஆசா
ரியரை அவன் உன்மேலே பலியிடுவான்;
மனுஷ எலும்புகளும் உன்மேல் சுட்டெரிக்
3 கப்படும் என்று சொன்னான். அன்றைத்
தினமே அவன் ஒரு அடையாளத்தையும்
காண்பித்து, இதோ, இந்தப் பலிபீடம்
வெடித்து அதின்மேலுள்ள சாம்பல் கொட்
டுண்டுபோம், யெகோவா குறித்த அடையா
4 ளம் இதுவே என்றான். பேதேலில் இருந்த
அந்தப் பலிபீடத்திற்கு விரோதமாகக் கட
வுளின் மனுஷன் கூறின வார்த்தையை
ராஜாவாகிய யெரொபெயாம் கேட்டபோது,
அவனைப் பிடியுங்கள் என்று தன் கையைப்
பலிபீடத்திலிருந்து நீட்டினான்; அவனுக்கு
விரோதமாய் நீட்டின கை தன்னிடமாக
மூடக்கூடாதபடி மரத்துப்போயிற்று.
5 கடவுளின் மனுஷன் யெகோவாவின் கட்
டளைப் பிரகாரம் குறித்திருந்த அடையாளத்
தின்படியே பலிபீடம் வெடித்துச் சாம்பல்
பலிபீடத்திலிருந்து கொட்டுண்டுபோயிற்று.
6 அப்பொழுது ராஜா கடவுளின் மனு
ஷனைப் பார்த்து: நீ உன் கடவுளாகிய
யெகோவாவின் தயவை நாடிக் கெஞ்சி என்
கை முன்போலிருக்கும்படி எனக்காக மன்
றாடவேண்டும் என்றான்; அப்படியே கட
வுளின் மனுஷன் யெகோவாவின் தயவை
நாடிக் கெஞ்சினான், ராஜாவின் கை முன்
னிருந்தது போலாயிற்று. அப்பொழுது
7 ராஜா கடவுளின் மனுஷனிடம்: நீ என்னோ
டேகூட வீட்டுக்கு வந்து உன் கோப்பைத்
தீர்த்துக்கொள், உனக்கு வெகுமானம் தரு
வேன் என்று சொல்லக் | கடவுளின் மனு
8 ஷன்: நீர் எனக்கு உமது வீட்டிலுள்ளவற்
றில் பாதியைக் கொடுத்தாலும் நான் உம்
மோடே வருவதுமில்லை, இந்த இடத்தில்
போஜனம் பண்ணுவதுமில்லை. யெகோவா
9 தாமே தமது திருவாக்கால் எனக்குக் கட்
டளையிட்டு, நீ போஜனபானம் செய்யாதே,
போனவழியாய்த் திரும்பாதே எனச் சொல்லி
யிருக்கிறார் என்று ராஜாவுக்குப் பதில்
சொல்லிவிட்டு | அவன் வந்த வழியாய்ப்
10 பேதேலிலிருந்து திரும்பாமல் வேறு வழி
யாய்ப் போய்விட்டான்.

வயதுமுதிர்ந்த தீர்க்கதரிசி ஒருவன்
11 பேதேலிலே குடியிருந்தான்; அவன் குமார
ரில் ஒருவன் அவனிடம் வந்து, கடவுளின்
மனுஷன் அன்றையதினம் பேதேலிலே
செய்தவைகள் எல்லாவற்றையும் அறிவித்
தான்; அவன் ராஜாவுக்குச் சொன்ன வார்த்
தைகளையும் தங்கள் தகப்பனுக்கு அறிவித்
தார்கள். அப்பொழுது அவர்கள் தகப்
12 பன்: அவன் எந்த வழி போனான் என்று
அவர்களைக் கேட்க, யூதாவிலிருந்து வந்த
கடவுளின் மனுஷன் போனவழி இன்ன
தென்று அவன் குமாரர் காட்டினார்கள்.
அவன் தன் குமாரரைப் பார்த்து: கழு
13 தையின்மேல் சேணம் வைத்துக் கொடுங்கள்
என, அவர்கள் கழுதையின்மேல் சேணம்
வைத்துக் கொடுத்தார்கள்; அவன் அதின்
மேல் ஏறிக் | கடவுளின் மனுஷனைத்
14 தொடர்ந்துபோய், ஒரு கர்வாலி மரத்தின்
கீழ் உட்கார்ந்திருந்த அவனைக் கண்டு:
யூதாவிலிருந்து வந்த கடவுளின் மனுஷன்
நீர்தானோ என்று அவனைக் கேட்க: அவன்,
15 நான்தான் என்று சொன்னான். அப்பொ
ழுது: என்னோடே வீட்டுக்கு வந்து போஜ
னம்பண்ணும் என்று கேட்டுக்கொண்
டான். அவன்: நான் உம்மோடே திரும்ப
16 வும் உம்மோடே உள்ளே போகவும்
கூடாது; இந்த இடத்திலே உம்மோடே
நான் போஜனபானம் பண்ணவுங்கூடாது,

17 யெகோவா தாமே எனக்குத் திருவாக்கருளி, நீ அவ்விடத்திலே போஜனபானம் பண்ணுதே, போன வழியாய்த் திரும்பாதே என்று
18 சொல்லியிருக்கிறார் என்றான். அதைக் கேட்ட வயோதிகன், உம்மைப்போல நானும் தீர்க்கதரிசியே, எனக்கும் யெகோவாவின் திருவார்த்தை ஒரு தூதனால் வந்தது: அவன் போஜனம் பண்ணும்படி அவனை உன் வீட்டுக்குத் திருப்பி அழைத்துக் கொண்டுவா எனச் சொல்லப்பட்டது என்று அவனிடம் சொன்னான்; அவன் இப்
19 படிச் சொன்னது பொய். அப்பொழுது அவன் வயோதிகனுடே திரும்பிப்போய் அவன் வீட்டிலே போஜனபானம் பண்ணினான்.
20 அவர்கள் பந்தியில் உட்கார்ந்திருந்த போது அவனைத் திருப்பி அழைத்து வந்த தீர்க்கதரிசிக்கு யெகோவாவின் வார்த்தை
21 வந்தது. அவன் யூதாவிலிருந்து வந்த கடவுளின் மனுஷனைப் பார்த்துச் சத்தமிட்டு, யெகோவாவின் வார்த்தைக்கு அடங்காமற் போனாய், உன் கடவுளாகிய யெகோவா உனக்குக் கட்டளையிட்டதை நீ கைக்
22 கொள்ளவில்லை. போஜனபானம் பண்ண வேண்டாமென்று அவர் விலக்கின இடத்திற்கு நீ திரும்பி வந்து போஜனபானம் பண்ணினாய், ஆகவே உன்னுடைய பிரேதம் உன் பிதாக்களின் கல்லறையிலே சேர்வதில்லை என்று யெகோவா சொல்லுகிறார்
23 என்றான். அவன் போஜனபானம் பண்ணி முடித்தபின்பு அந்தத் தீர்க்கதரிசியைத் திருப்பி அழைத்து வந்தவன் அவனுக்குக் கழுதையின்மேல் சேணம்வைத்துக் கொடுத்
24 தான். அவன் போன வழியிலே ஒரு சிங்கம் அவனுக்கு எதிர்ப்பட்டு அவனைக் கொன்றுபோட்டது; அவன் பிரேதம் வழியிலே விழுந்து கிடந்தது; கழுதை அதினண்டையில் நின்றது; சிங்கமும் பிரேதத்தண்
25 டையிலே நின்றது. அந்த வழியே வந்த மனுஷர், வழியிலே கிடந்த பிரேதத்தையும் பிரேதத்தண்டையிலே நின்ற சிங்கத்தையும் கண்டு வயோதிக தீர்க்கதரிசி குடியிருந்த
26 ஊரிலே வந்து சொன்னார்கள். அவனை வழியிலிருந்து திருப்பி அழைத்து வந்த தீர்க்கதரிசி அதைக் கேட்டபோது, அவன் யெகோவாவின் வார்த்தைக்கு அடங்காமற்போன கடவுளின் மனுஷன்தான், யெகோவா அவனுக்குச் சொல்லியிருந்தபடியே யெகோவா அவனை ஒரு சிங்கத்திற்கு ஒப்புவித்தார்; அது அவனை முறித்துக் கொன்றுபோட்டது என்று சொல்லித்
27 தன் குமாரரைக் கூப்பிட்டு எனக்குக் கழுதையின்மேல் சேணம் வைத்துக் கொடுங்கள் என்று கேட்டான்; அவர்கள் அப்படியே சேணம் வைத்துக் கொடுத்தார்கள். அவன் 28
சென்று வழியிலே கிடந்த அவன் பிரேதத்தையும் பிரேதத்தண்டையிலே நின்ற கழுதையையும் சிங்கத்தையும் கண்டான்; சிங்கம் பிரேதத்தைத் தின்னவுமில்லை, கழுதையை முறித்துப்போடவுமில்லை. அப்பொ 29
ழுது வயோதிகனான அந்தத் தீர்க்கதரிசி கடவுளின் மனுஷனுடைய பிரேதத்தை எடுத்து அதைக் கழுதையின்மேல் வைத்து அதற்காகத் துக்கங்கொண்டாடவும் அதை அடக்கம்பண்ணவும் அதைத் தன் ஊருக்குக் கொண்டுவந்தான். அந்தப் பிரேதத் 30
தைத் தன் கல்லறையிலே வைத்தான். அவனுக்காக, ஐயோ, சகோதரனே என்று புலம்பித் துக்கங் கொண்டாடினார்கள். அவனை 31
அடக்கம்பண்ணின பின்பு அவன் தன் குமாரரை யழைத்து: நான் மரிக்கும்போது கடவுளின் மனுஷனை அடக்கம்பண்ணியிருக்கிற கல்லறையிலே என்னையும் நீங்கள் அடக்கம்பண்ணுங்கள், அவன் எலும்புகளண்டையிலேயே என் எலும்புகளையும் வையுங்கள். பேதேலில் இருக்கிற பலி 32
பீடத்திற்கும் சமாரியாவின் ஊர்களில் இருக்கிற சகல கோவில் மேடைகளுக்கும் விரோதமாக அவன் கூறின யெகோவாவின் வார்த்தை நிச்சயமாகவே நிறைவேறும் என்றான்.

இவற்றுக்குப் பின்பும் யெரொபெயாம் 33
தன் பொல்லாத வழியை விட்டுத் திரும்பவில்லை, ஜனத்தில் சாதாரணமானவர்களையே மறுபடியும் மேடைகளின் ஆசாரியராக்கினான்; எவன்மேல் அவனுக்குப் பிரியமாயிற்றோ அவனைப் பிரதிஷ்டைபண்ணவே அவர்கள் மேடைகளின் ஆசாரியரானார்கள். இப்படிச் செய்ததினாலே யெரொ 34
பெயாம் தன் வீட்டாருக்குச் சாபமுண்டாவதற்கு ஏதுவானான்; அதினிமித்தம் அவன் குடும்பம் பூமியிலிராமல் அழிந்து அதமாயிற்று.

அக்காலத்திலே யெரொபெயாமின் குமா **14**
ரனாகிய அபியா வியாதிப்பட்டான். அப் 2
பொழுது யெரொபெயாம் தன் மனைவியோடு பேசி: நீ எழுந்து, நீ யெரொபெயாமின் மனைவியென்று ஒருவரும் அறியாதபடிக்கு வேஷம் மாறிச் சீலோவுக்குப் போ; இந்த ஜனத்தின்மேல் நான் ராஜாவானேன் என்று எனக்குச் சொன்ன தீர்க்கதரிசியாகிய அகியா அங்கே இருக்கிறான். நீ உன் 3
கையிலே பத்து அப்பங்களையும் பணியாரங்களையும் ஒரு கலசம் தேனையும் எடுத்துக்

கொண்டு அவனிடத்துக்குப் போ; பிள்ளைக்கு நேரிடப்போவது இன்னதென்று அவன் உனக்கு அறிவிப்பான் என்றான். 4 அப்படியே யெரொபெயாமின் மனைவி செய்தாள்; அவள் எழுந்து சீலோவுக்குச் சென்று அகியாவின் வீட்டிற்குள் போனாள்; அகியாவோ வயது முதிர்ந்தவனானபடியால் அவன் கண்கள் மங்கிப்போயிருந்தன; 5 அவன் பார்க்க முடியாதிருந்தான். யெகோவா அகியாவோடு பேசி, இதோ, யெரொபெயாமின் மனைவி தன் குமாரனைப்பற்றி உன்னிடம் விசாரிக்க வருகிறாள்; அவன் வியாதியாயிருக்கிறான்; நீ அவளுக்கு இன்ன இன்ன பிரகாரமாகச் சொல்லவேண்டும், அவள் உள்ளே வரும்போது தன்னை வேறொரு ஸ்திரீயாகக் காண்பிப்பாள் என் 6 றார். ஆகவே வாசற்படிக்குள் வரும் அவளுடைய காலடியின் சத்தத்தை அகியா கேட்டவுடனே அவன், யெரொபெயாமின் மனைவியே, உள்ளே வா, வேறொரு ஸ்திரீயாக உன்னைக் காண்பிப்பதென்ன? துக்க செய்தியை உனக்கு அறிவிக்க நான் அனுப் 7 பப்பட்டேன். நீ போய் யெரொபெயாமைப் பார்த்து, இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா சொல்லுகிறது இதுவே: சாதாரண ஜனங்களின் நடுவிலிருந்த உன்னை நான் உயர்த்தி, உன்னை இஸ்ரவேல் என்னும் என் ஜனத்தின்மேல் அதிபதியாக்கி 8 னேன். ராஜ்யபாரத்தைத் தாவீது வம்சத்தாரின் கையிலிருந்து நான் பறித்து உனக்குக் கொடுத்தேன்; நீயோ என் தாசனாகிய தாவீதைப்போல் நடந்துகொள்ளவில்லை, அவன் என் கட்டளைகளைக் கைக்கொண்டு என் பார்வையில் நேர்மையாயிருப்பதையே செய்யத் தன் முழு இருதயத்தோடும் என் 9 னைப் பிற்பற்றினான். உனக்கு முன்னிருந்த எல்லாரிலும் நீ அதிகத் தீமை செய்தாய்; எனக்குக் கோபம் உண்டாவதற்கே துவாய் நீ போய் உனக்கு அந்திய தேவர்களையும் வார்ப்பு விக்கிரகங்களையும் செய்தாய், என்னையோ உனக்குப்பின்னே அகற் 10 றிவிட்டாய். ஆகையால், இதோ, நான் யெரொபெயாமுடைய வீட்டின்மேல் தீங்கு வரச்செய்வேன்; யெரொபெயாமுக்கு ஒரு ஆண்பிள்ளையும் இராதபடி நிர்மூலமாக்குவேன், இஸ்ரவேலிலே அடைபட்டவனையும் அடைபடாதவனையும் சங்காரம்பண்ணிக் குப்பையைக் கழிப்பதுபோல யெரொபெயாமின் சந்ததியாரைக் கழித்துப்போடுவேன்; அவர்கள் கட்டோடே அழிவார்கள் 11 என்றார். யெரொபெயாமின் வீட்டாரில் ஊரிலே சாகிறவனை நாய்கள் தின்னும்; வெளியிலே சாகிறவனை ஆகாயத்துப் பறவைகள் தின்னும்; யெகோவாவே இதை உரைத்தார். 12 நீ எழுந்து உன் வீட்டுக்குப் போ; நீ ஊருக்குள் காலெடுத்து வைக்கையில் பிள்ளை செத்துப்போகும். 13 அவனுக்காக இஸ்ரவேலரெல்லாரும் துக்கங்கொண்டாடி அவனை அடக்கம்பண்ணுவார்கள்; யெரொபெயாமின் வீட்டாரில் இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா பிரியப்படுகிற குணமும் அவனிடம் இருந்தபடியினால், யெரொபெயாமின் வீட்டாரில் அவன் ஒருவனே கல்லறைக்குட்படுவான். 14 யெகோவாவோ தமக்கு இஸ்ரவேலின்மேல் வேறொரு ராஜாவை எழும்பப்பண்ணுவார்; அவன் அந்நாளிலே யெரொபெயாமின் வீட்டாரைச் சங்கரிப்பான்; இப்போதே இது நிறைவேறத் தொடங்கும். 15 யெகோவா இஸ்ரவேலை அடித்துத் தண்ணீரில் அசையும் நாணல்போல் அவர்களை அலையப்பண்ணி அவர்கள் பிதாக்களுக்குத் தாம் கொடுத்த இந்த நல்ல தேசத்திலிருந்து இஸ்ரவேலை வேரறக் களைவார்; அவர்கள் தங்களுக்கு மரச்சிலைகளைச் செய்து யெகோவாவுக்குக் கோபம் மூட்டினபடியினால் அவர்களை நிக்கப்பாலே சிதறடிப்பார்; 16 யெரொபெயாம் தானே செய்தும் இஸ்ரவேலைச் செய்யப்பண்ணினதுமான பாவத்தினிமித்தம் இஸ்ரவேலைக் கைவிடுவார் என்றான். 17 அப்பொழுது யெரொபெயாமின் மனைவி எழுந்து புறப்பட்டுத் திர்சாவுக்கு வந்தாள்; அவள் வாசற்படியிலே காலைவைத்த மாத்திரமே பிள்ளை 18 யாண்டான் செத்துப்போனான். தமது ஊழியனாகிய அகியா என்னும் தீர்க்கதரிசியைக் கொண்டு யெகோவா சொல்லியிருந்த வார்த்தையின்படியே அவர்கள் அவனை அடக்கம்பண்ணினார்கள்; இஸ்ரவேலர் எல்லாரும் அவனிமித்தம் துக்கங்கொண்டாடினார்கள்.

19 யெரொபெயாமின் யுத்தங்கள், அவன் அரசாட்சி முதலிய மற்ற விவரங்கள் இஸ்ரவேல் ராஜாக்களைப்பற்றிய தினவர்த்தமான என்னும் நூலில் எழுதியிருக்கிறது. 20 யெரொபெயாம் அரசுபுரிந்த காலம் இருபத்திரண்டு வருஷம்; அவன் நித்திரையடைந்து தன் பிதாக்களோடே சேர்ந்த பின் அவன் குமாரனாகிய நாதாப் அவன் ஸ்தானத்திலே ராஜாவானான்.

21 சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாம் யூதாவிலே அரசாண்டுவந்தான்; ரெகொபெயாம் ராஜாவானபோது அவனுக்கு நாற்பத்தொரு வயது, யெகோவா இஸ்ரவேல் கோத்திரங்கள் அனைத்திலும் தமது திருநாமம் நிலையமாகத் தெரிந்துகொண்ட நகரமாகிய

எருசலேமிலே அவன் பதினேழுவருஷம் அரசாண்டான்; அவன் தாயின்பேர் நாமாள், அவள் அம்மோன் ஜாதியைச் சேர்ந்தவள்; 22 யூதா ஜனங்கள் யெகோவாவின் பார்வையில் தீமைபானதைச் செய்தார்கள்; தாங்கள் செய்துவந்த பாவங்களினால் தங்கள் பிதாக்கள் செய்த எல்லாவற்றைப்பார்க்கிலும் அவருக்கு அதிக எரிச்சலை மூட்டினார்கள். 23 அவர்கள் தங்களுக்குக் கோவில்மேடைகளை அமைத்தார்கள், சகல உயர் மலைகளிலும் சகல பச்சை மரத்தின் கீழும் சிலைகளையும் மரச்சிலைகளையும் தங்களுக்குச் செய்துவைத்தார்கள். 24 தாலியம் பூண்ட சோரரும் தேசத்திலே இருந்தார்கள்; யெகோவா இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்திவிட்ட ஜாதிகளுடைய அருவருப்பான செய்கைகளின்படியெல்லாம் செய்துவந்தார்கள்.

25 ரெகாபெயாம் அரசாண்ட ஐந்தாம் வருஷத்திலே எகிப்தின் ராஜாவாகிய ஷிஷாக் 26 எருசலேமுக்கு விரோதமாய் வந்து; யெகோவாவின் ஆலயப் பொக்கிஷங்களையும் ராஜ அரமனைப் பொக்கிஷங்களையும் எடுத்துக்கொண்டான், சாலொமோன் செய்திருந்த பொன் பரிசைகள் அனைத்தையும் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டுபோய் 27 விட்டான். அவைகளுக்குப் பதிலாக ரெகாபெயாம் ராஜா செப்புப் பரிசைகளைச் செய்து அவைகளை ராஜாவின் வாசல் காவலாளராகிய சேவகருடைய தலைவர் வசம் 28 ஒப்பித்தான். ராஜா யெகோவாவின் ஆலயத்தினுள் பிரவேசிக்கும் போதெல்லாம் அந்தச் சேவகர் அவைகளைப் பிடித்துக்கொண்டுபோய்த் திரும்பக் காவல் அறையிலே வைப்பார்கள்.

29 ரெகாபெயாமைப் பற்றிய மற்ற விவரங்களும் அவன் செய்தவை அனைத்தும் யூதாவின் ராஜாக்களைப்பற்றிய தினவர்த்தமானம் என்னும் நூலில் எழுதியிருக்கிறதே. 30 ரெகாபெயாமுக்கும் யெரொபெயாமுக்கும் அவர்கள் இருந்த நாளெல்லாம் யுத்தம் 31 நடந்துகொண்டிருந்தது. ரெகாபெயாம் நித்திரையடைந்து தன் பிதாக்களோடே சேர்ந்து தாவீதுநகரத்தில் தன் பிதாக்களண்டையிலே அடக்கம்பண்ணப்பட்டான்; அவன் தாயின்பேர் நாமாள், அவள் அம்மோன் ஜாதியைச் சேர்ந்தவள்; அவன் குமாரனாகிய அபியாம் அவன் ஸ்தானத்திலே ராஜாவானான்.

**15** நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாம் ராஜாவின் பதினெட்டாம் வருஷத்திலே அபியாம் யூதாவின்மேல் ராஜாவாகி மூன்றுவருஷம் எருசலேமிலே அரசாண் 2 டான்; அவனுடைய தாயின்பேர் மாகாள், அவள் அபிஷலோமின் குமாரத்தி. அபி 3 யாம் தன் தகப்பன் தனக்குமுன் செய்த சகல பாவங்களிலும் நடந்துவந்தான்; அவன் இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல் அவன் கடவுளாகிய யெகோவாவோடு முழுதும் இசைந்திருக்கவில்லை. ஆனாலும் தாவீதினிமித்தம் 4 அவன் கடவுளாகிய யெகோவா அவனுக்குப் பிற்பாடு அவன் குமாரனை எழும்பப் பண்ணி எருசலேமை நிலைநிறுத்தி அவனுக்கு எருசலேமிலே ஒரு விளக்கைக் கட்டளையிட்டுவந்தார். தாவீது ஏத்தியனா 5 கிய உரியாவின் சங்கதி ஒன்றிலே தவிர யெகோவா தனக்குக் கட்டளையிட்டதிலே தன் உயிரோடிருந்த நாளெல்லாம் ஒன்றையும் விட்டு விலகவில்லை; அவர் பார்வையில் நேர்மையானதைச் செய்துவந்தான். ரெகாபெயாமுக்கும் யெரொபெயாமுக்கும் 6 யுத்தம் நடந்துகொண்டே யிருந்ததுபோல இவன் நாட்களிலெல்லாம் நடந்தது.

அபியாமைப்பற்றிய மற்ற விவரங்களும் 7 அவன் செய்தவை யாவும் யூதாவின் ராஜாக்களைப்பற்றிய தினவர்த்தமானம் என்னும் நூலில் எழுதியிருக்கிறதே. அபியாமுக்கும் யெரொபெயாமுக்கும் யுத்தம் நடந்துகொண்டிருக்கையிலே | அபியாம் சித்திரை 8 யடைந்து தன் பிதாக்களோடே சேர்ந்தான்; அவனைத் தாவீதுநகரத்தில் அடக்கம்பண்ணினார்கள்; அவன் குமாரனாகிய ஆசா அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய யெரொபெயா 9 மின் இருபதாம் வருஷத்திலே ஆசா யூதாவின்மேல் ராஜாவாகி, நாற்பத்தொரு வருஷம் எருசலேமிலே அரசாண்டான்; அவ 10 னுடைய தாயின்பேர் மாகாள்; இவள் அபிஷலோமின் குமாரத்தி. ஆசா தன் 11 தகப்பனாகிய தாவீதைப்போலவே யெகோவாவின் பார்வையில் செம்மையானதைச் செய்துவந்தான். தாலியம் பூண்ட சோரரை 12 அவன் தேசத்திலிருந்து அகற்றித் தன் பிதாக்கள் செய்திருந்த கேவலமான விக்கிரகங்களை யெல்லாம் விலக்கி | அவலக்ஷண 13 உருவமொன்றை மரச்சிலையாகச் செய்துவைத்திருந்த தன் தாயாகிய மாகாளையும் அரசபதவியிலிராதபடி விலக்கிவிட்டான்; அவள் செய்த அவலக்ஷண உருவத்தையும் ஆசா நிர்மூலமாக்கிக் கீதரோன் ஓரோடையண்டையிலே சுட்டெரித்துப்போட்டான். மேடைகளோ தகர்க்கப்படவில்லை. 14 ஆனாலும் ஆசா உயிரோடிருந்த நாளெல்லாம்

அவன் இருதயம் யெகோவாவோடே முழு
15 தும் இசைந்திருந்தது. தன் தகப்பனும் தானும் பிரதிஷ்டைசெய்ய கோர்த்துகொண்ட வெள்ளியையும் பொன்னையும் பணிமுட்டுகளையும் அவன் யெகோவாவின் ஆலயத்திலே கொண்டுவந்தான்.
16 ஆசாவுக்கும் இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷாவுக்கும் அவர்களுடைய நாட்களிலெல்லாம் யுத்தம் நடந்துகொண்டேயிருந்
17 தது. ஒருவரும் யூதாவின் ராஜாவாகிய ஆசாவினிடம் போக்குவரத்தாயிராதபடி இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா யூதாவுக்கு விரோதமாக வந்து ராமாவுக்கு அரண்
18 கட்டினான். அப்பொழுது ஆசா யெகோவாவின் ஆலயக்கருவூலத்தில் மீதியாயிருந்த எல்லா வெள்ளியையும் பொன்னையும் ராஜ அரமனைப் பொக்கிஷத்திலிருந்தவைகளையும் எடுத்து அவைகளைத் தன் ஊழியர்கையிலே ஒப்புவித்து, தமஸ்குவில் வாசமாயிருந்த எஸியோனின் மகனாகிய தப்ரிமோனின் குமாரன் பெனாதாத் என்னும் சீரியாவின்
19 ராஜாவினிடம் அனுப்பி: என் தகப்பனுக்கும் உமது தகப்பனுக்கும் இருந்ததுபோல எனக்கும் உமக்கும் உடன்படிக்கை உண்டே; இதோ, உமக்கு வெகுமதியாய் வெள்ளியையும் பொன்னையும் அனுப்புகிறேன்; இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷாவோடு நீர் செய்த உடன்படிக்கையை மீறி அவன் என்னைவிட்டு விலகிப்போகும்படி செய்யும் என்று சொல்லச் சொன்னான்.
20 பெனாதாத் ராஜாவாகிய ஆசா சொன்னதற்கிணங்கித் தன் சேனாபதிகளை இஸ்ரவேலின் பட்டணங்களுக்கு விரோதமாக அனுப்பி, ஈயோனையும் தானையும் ஆபேல் பேத்மாக்காவையும் கின்னரோத் அனைத்தையும் நப்தலியின் முழுதேசத்தோடுங்கூடப் பிடித்
21 துக்கொண்டான். பாஷா அதைக்கேட்டபோது ராமாவைக் கட்டுகிறதைவிட்டுத்
22 தீர்சாவிலிருந்துவிட்டான். அப்பொழுது ராஜாவாகிய ஆசா ஆட்களை அனுப்பி, யூதா எங்கும் ஒருவரும் நிற்காமல் எல்லாரும் போய் பாஷா கட்டின ராமாவின் கற்களையும் அதின் மரங்களையும் எடுத்துவர அறிவித்து அவைகளைக் கொண்டு பென்யமீன் கோத்திரத்திலுள்ள கேபாவுக்கும் மிஸ்பாவுக்கும் அரண்கட்டினான்.
23 ஆசாவைப்பற்றிய மற்ற எல்லா விவரங்களும் அவனுடைய சகல வீரச்செயல்களும் அவன் செய்தவை யாவும் அவன் கட்டின பட்டணங்களின் வரலாறும் யூதாவின் ராஜாக்களைப்பற்றிய தினவர்த்தமானம் என்னும் நூலில் எழுதியிருக்கிறதே. அவனுடைய முதிர்வயதிலே அவன் கால்களில் வியாதிகண்டது. ஆசா தன் பிதாக்களோடே சேரவே தன் தகப்பனாகிய தாவீதின் நகரத்தில் தன் பிதாக்களண்டையிலே அடக்கம்பண்ணப்பட்டான்; அவன் குமாரனாகிய யோசபாத் அவன் ஸ்தானத்திலே ராஜாவானான்.
24
25 யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் இரண்டாம் வருஷத்திலே யெரொபெயாமின் குமாரனாகிய நாதாப் இஸ்ரவேலின்மேல் ராஜாவாகி இரண்டுவருஷம் இஸ்ரவேலின்
26 மேல் அரசாண்டான். அவன் யெகோவாவின் பார்வையில் தீமையானதைச் செய்து தன் தகப்பனுடைய வழியிலும் அவன் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப் பண்ணின அவனுடைய பாவத்திலும் நடந்தான்.
27 இசக்கார் வம்சத்தானாகிய அகியாவின் குமாரனாகிய பாஷா அவனுக்கு விரோதமாகச் சதியாலோசனை பண்ணினான்; நாதாபும் இஸ்ரவேல் அனைத்தும் பெலிஸ்தியரைச் சேர்ந்த கிபெத்தோனை முற்றுகை போட்டிருக்கையில், பாஷா நாதாபைக் கிபெத்தோனிலே
28 வெட்டிப்போட்டான். பாஷா யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் மூன்றாம் வருஷத்திலே நாதாபைக் கொன்றுபோட்டபின்
29 அவன் ஸ்தானத்திலே ராஜாவானான். அப்பொழுது யெரொபெயாம் தானே செய்ததும், தான் இஸ்ரவேலைச் செய்யப்பண்ணினதுமான பாவங்களினிமித்தமும் அவன் இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவுக்கு உண்டாக்கின கோபத்தினிமித்தமும் யெகோவாசிலோ ஊராளனான அகியா என்னும் தமது ஊழியனைக்கொண்டு சொல்லியிருந்த வார்த்தையின்படியே | அவன் ராஜாவானபோது
30 யெரொபெயாமின் வீட்டாரையெல்லாம் வெட்டிப்போட்டான்; யெரொபெயாமுக்குரிய எதையும், சுவாசமுள்ளதொன்றையும், அவன் அழிக்காமல் விடவில்லை.
31 நாதாபைப்பற்றிய மற்ற விவரங்களும் அவன் செய்தவை யாவும் இஸ்ரவேல் ராஜாக்களைப்பற்றிய தினவர்த்தமானம் என்னும் நூலில் எழுதியிருக்கிறதே.
32 ஆசாவுக்கும் இஸ்ரவேல் ராஜாவாகிய பாஷாவுக்கும் அவர்களின் நாட்களிலெல்லாம் யுத்தம் நடந்துகொண்டேயிருந்தது.
33 யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் மூன்றாம் வருஷத்திலே அகியாவின் குமாரனாகிய பாஷா இஸ்ரவேல் அனைத்தின்மேலும் தீர்சாவிலே ராஜாவாகி இருபத்துநாலு வருஷம்
34 அரசாண்டான். அவன் யெகோவாவின் பார்வையில் தீமையானதைச் செய்து, யெரொபெயாமின் வழியிலும் அவன் இஸ்ரா

வேலைப் பாவஞ்செய்யப்பண்ணின அவனுடைய பாவத்திலும் நடந்தான்.

16 யெகோவாவின் வார்த்தை கனானியின் குமாரனாகிய யேகூவுக்கு வந்தது; அவர் 2 பாஷாவுக்கு விரோதமாகப் பேசி: நான் உன்னைப் புழுதியிலிருந்து உயர்த்தி, என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் உன்னைத் தலைவனாகவைத்தேன்; நீயோ யெரொபெயாமின் வழியிலே நடக்கிறாய்; என் ஜனமாகிய இஸ்ரவேல் தங்கள் பாவங்களால் எனக்குக் கோபமுண்டாக்கும்படி அவர்களைப் பாவஞ் 3 செய்யப்பண்ணுகிறாய்; இதோ, நான் பாஷாவையும் அவன் சந்ததியாரையும் நிர்மூலமாக்குவேன்; உன் வீட்டை நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் வீட் 4 டைப்போல் ஆக்குவேன். பாஷாவின் சந்ததியில் ஊரிலே சாகிறவனை நாய்கள் தின்னும், வெளியிலே சாகிறவனை ஆகாயத்துப் பறவைகள் தின்னும் என்றார்.

5 பாஷாவைப்பற்றிய மற்ற விவரங்களும் அவன் செய்ததும் அவனுடைய வீரச் செயல்களும் இஸ்ரவேல் ராஜாக்களைப் பற்றிய தினவர்த்தமானம் என்னும் நூலில் 6 எழுதியிருக்கிறதே. பாஷா நித்திரையடைந்து தன் பிதாக்களோடே சேரவே திர்சாவில் அடக்கம்பண்ணப்பட்டான்; அவன் குமாரனாகிய ஏலா அவன் ஸ்தானத் 7 தில் ராஜாவானான். பாஷா தன் கைகளின் செய்கையால் யெகோவாவுக்குக் கோபம் உண்டாக்கி, அவர் பார்வைக்குச் செய்த எல்லாத் தீமையினிமித்தமும் அவன் யெரொபெயாமின் வீட்டாரை வெட்டிப் போட்டதினிமித்தமும், இவர்களைப்போல் ஆவான் என்று அவனுக்கும் அவன் வீட்டுக்கும் விரோதமாகக் கனானியின் குமாரனாகிய யேகூ என்னும் தீர்க்கதரிசிக்கு யெகோவாவின் வார்த்தை வந்திருந்தது.

8 யூதாவின் ராஜாவான ஆசாவின் இருபத்தாறாம் வருஷத்திலே பாஷாவின் குமாரனாகிய ஏலா இஸ்ரவேலின்மேல் திர்சாவிலே ராஜாவாகி இரண்டுவருஷம் அரசாண் 9 டான். இரதங்களில் பாதிப்பங்குக்குத் தலைவனாகிய சிம்ரி என்னும் அவன் ஊழியன் அவனுக்கு விரோதமாகச் சதியாலோசனை செய்தான், ஏலா திர்சாவிலே அவ்விடத்து அரமனை உக்கிராணக்காரனாகிய அர்சாவின் வீட்டிலே குடித்து வெறிகொண்டிருக்கை 10 யில் | சிம்ரி உள்ளே புகுந்து, யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் இருபத்தேழாம் வருஷத்திலே, அவனை வெட்டிக் கொன்றுபோட்டு அவன் ஸ்தானத்திலே ராஜாவா 11 னான். அவன் ராஜாவாகிச் சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்தபோது, அவன் பாஷாவின் வீட்டாரையெல்லாம் வெட்டிப்போட்டான்; அவனுடைய கருங்கிய இனத்தாரையாகிலும் அவன் சிநேகிதரையாகிலும், ஒரு ஆண்பிள்ளையேனும், அவன் உயிரோடே வைக்கவில்லை. இப்படியாகச் 12 சிம்ரி பாஷாவின் வீட்டாரையெல்லாம் அழித்துவிட்டான்; பாஷாவும் அவன் குமாரனாகிய ஏலாவும் தங்கள் வீணான விக்கிரகங்களினாலே இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவுக்குக் கோபம் உண்டாக்கித் தாங்களே செய்ததும் இஸ்ரவேலைச் செய்யப்பண்ணினதுமான அவர்கள் சகல பாவங்களினிமித்தமும் | யெகோவா 13 தீர்க்கதரிசியாகிய யேகூவினால் பாஷாவைக் குறித்துச் சொல்லியிருந்த அவருடைய வார்த்தையின்படியே ஆயிற்று.

ஏலாவைப்பற்றிய மற்ற விவரங்களும் 14 அவன் செய்ததாவையாவும் இஸ்ரவேல் ராஜாக்களைப்பற்றிய தினவர்த்தமானம் என்னும் நூலில் எழுதியிருக்கிறதே.

யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் இருபத் 15 தேழாம் வருஷத்திலே சிம்ரி திர்சாவிலே ஏழுநாள் ராஜாவாயிருந்தான்; ஜனங்கள் அப்பொழுது பெலிஸ்தியரைச் சேர்ந்த கிபெத்தோனுக்கு எதிரே பாளயமிறங்கியிருந்தார்கள். சிம்ரி சதியாலோசனை 16 செய்து ராஜாவைக் கொன்றுபோட்டான் என்பதை அங்கே பாளயமிறங்கியிருந்த ஜனங்கள் கேள்விப்பட்டபோது இஸ்ரவேலரெல்லாம் படைத்தலைவனாகிய ஒம்ரியை அந்நாளிலேயே பாளயத்தில் இஸ்ரவேல் மேலே ராஜாவாக்கினார்கள். அப்பொழுது 17 ஒம்ரியும் அவனோடேகூட இஸ்ரவேல் அனைத்தும் கிபெத்தோனிலிருந்து வந்து திர்சாவை முற்றுகை போட்டார்கள். பட் 18 டணம் பிடிபட்டதைச் சிம்ரி கண்டபோது அவன் ராஜாவின் வீடாகிய அரமனைக்குள் புகுந்து தான் இருந்த ராஜ அரமனையைத் தீக்கொளுத்தி அதிலே செத்தான். அவன் 19 யெகோவாவின் பார்வையில் தீமையானதைச்செய்து யெரொபெயாமின் வழியிலும் அவன் இஸ்ரவேலைப் பாவஞ் செய்யப்பண்ணின அவன் பாவத்திலும் நடந்து கட்டிக்கொண்ட அவனுடைய பாவங்களினிமித்தம் அப்படி நடந்தது. சிம்ரியைப்பற்றிய 20 மற்ற விவரங்களும் அவன் செய்த சதியாலோசனையும் இஸ்ரவேல் ராஜாக்களைப் பற்றிய தினவர்த்தமானம் என்னும் நூலில் எழுதியிருக்கிறதே.

அப்பொழுது இஸ்ரவேல் ஜனங்கள் இரு 21 பிரிவாய்ப் பிரிந்து பாதி ஜனங்கள் கீனத்

தின் குமாரனுகிய நிப்னியை ராஜாவாக்கும் படி அவனைச் சேர்த்துகொண்டார்கள்; பாதிப்பேர் ஒம்ரியைச் சேர்த்துகொண்டார்
22 கள். தேனுத்தின் குமாரனுகிய நிப்னியைச் சேர்த்தவர்களிலும் ஒம்ரியைச் சேர்த்த ஜனங்கள் பலத்துப்போனுர்கள்; நிப்னி செத்துப்போனுன், ஒம்ரி அரசாண்டான்.
23 யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் முப்பத் தோராம் வருஷத்தில் ஒம்ரி இஸ்ரவேல்மேல் ராஜாவாகிப் பன்னிரண்டு வருஷம் அர சாண்டான்; அவன் திர்சாவிலே ஆறுவரு
24 ஷம் அரசாண்டான். பின்பு அவன் சேமேரின் கையிலிருந்து சமாரியா மலையை இரண்டு தாலந்து வெள்ளிக்கு வாங்கி, அந்த மலையின்மேல் ஒரு பட்டணத்தைக் கட்டி, அந்த மலையின் எஜமானுயிருந்த சேமேருடைய பேரின்படியே அதற்குச்
25 சமாரியா என்று பேரிட்டான். ஒம்ரி யெகோவாவின் பார்வையில் தீமையான தைச் செய்து தனக்கு முன்னிருந்த எல்லா
26 ரைப்பார்க்கிலும் கேடாய் நடந்து | நேபாத்தின் குமாரனுகிய யெரொபெயாமின் சகல வழியிலும் இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவுக்குத் தங்கள் வீணை விக்கிர கங்களாலே கோபம் மூட்டும்படியாய் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின அவனுடைய பாவங்களிலும் நடந்தான்.
27 ஒம்ரியைப்பற்றிய மற்ற விவரங்களும் அவனுடைய வீரச்செயல்களும் இஸ்ரவேல் ராஜாக்களைப்பற்றிய தினவர்த்தமானம் என்
28 னும் நூலில் எழுதியிருக்கிறதே. ஒம்ரி நித் திரையடைந்து தன் பிதாக்களோடு சேரவே சமாரியாவிலே அடக்கம்பண்ணப்பட் டான்; அவன் குமாரனுகிய ஆகாப் அவன் ஸ்தானத்தில் ராஜாவானுன்.
29 யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் முப்பத் தெட்டாம் வருஷத்திலே ஒம்ரியின் குமார னுகிய ஆகாப் இஸ்ரவேலின்மேல் ராஜா வாகிச் சமாரியாவில் இஸ்ரவேலின்மேலே இருபத்திரண்டு வருஷம் அரசாண்டான்.
30 ஒம்ரியின் குமாரனுகிய ஆகாப் தனக்கு முன் னிருந்த எல்லாரைப்பார்க்கிலும் யெகோவாவின் பார்வையில் தீமையான
31 தைச் செய்தான். நேபாத்தின் குமாரனு கிய யெரொபெயாமின் பாவங்களில் நடப் பதை அவன் ஒரு சிறிய காரியமாகவே எண்ணினுன். அவன் சீதோனியரின் ராஜா வாகிய எத்பாகாலின் குமாரத்தி யேசபேலை விவாகம்செய்ததுமல்லாமல் அவன் போய்ப் பாகாலையும் சேவித்து அதைத் தொழுது
32 கொண்டான். தான் சமாரியாவிலே கட் டின பாகாலின் கோவிலில் பாகாலுக்குப்
பலிபீடத்தை எடுப்பித்தான். ஆகாப் ஒரு 33
மரச் சிலையையும் செய்துவைத்து இஸ்ரவே லின் கடவுளாகிய யெகோவாவுக்குக் கோபம் உண்டாக்கும்படி தனக்கு முன் னிருந்த இஸ்ரவேலின் ராஜாக்களெல்லாம் செய்ததைப் பார்க்கிலும் அதிகமாய்ச் செய்து வந்தான். அவன் நாட்களிலே பேதேல் 34
ஊராகிய ஈயேல் எரிகோவைக் கட்டி னுன்; யெகோவா நூனின் குமாரனுகிய யோசுவாவைக் கொண்டு சொல்லியிருந்த வார்த்தையின்படியே அவன் அதின் அஸ்தி பாரத்தைப் போட்டபோது அபிராம் என் னும் தன் மூத்தகுமாரனையும், அதில் வாசல் கதவை வைத்தபோது செகூப் என்னும் தன் இளைய குமாரனையும் இழந்தான்.

கிலெயாத்தின் குடிகளைச் சேர்ந்த திஸ்பிய 17
னுகிய எலியா ஆகாபினிடம் வந்து: இஸ்ர வேலின் கடவுளாகிய யெகோவாவின் சந்நிதி யில் நிற்கிற நான் அவருடைய ஜீவன்மேல் ஆணையாகச் சொல்லுகிறதைக் கேள்; நான் சொன்னலன்றி இந்த வருஷங்களிலே பனி யும் மழையும் பெய்யாதிருக்கும் என்றுன். பின்பு யெகோவாவின் வார்த்தை அவனுக்கு 2
வந்தது: நீ இவ்விடத்தைவிட்டுக் கிழக்கைசைக் 3
குப்போய் யோர்தானுக்கு நேராய் ஒடுகிற கெரீத் நீரோடையண்டையில் ஒளித்துக் கொண்டிரு. அந்த நீரோடையின் தண் 4
ணீரைக் குடிப்பாய்; அங்கே உனக்கு ஆகா ரம் அளிக்கும்படி காகங்களுக்குக் கட்டளை யிடுவேன் என்று சொன்னுர். அப்படியே 5
அவன் போய் யெகோவாவின் சொற்படி செய்தான், யோர்தானுக்கு நேராய் ஒடுகிற கெரீத் நீரோடையண்டையிலே தங்கியிருந் தான். காகங்கள் அவனுக்குக் காலையிலே 6
அப்பமும் இறைச்சியும் கொண்டுவந்தன; மாலையிலும் அப்பமும் இறைச்சியும் கொண்டுவந்தன. தாகத்திற்கு அந்த நீரோ டையின் தண்ணீரைக் குடித்துவந்தான். தேசத்தில் மழைபெய்யாமற்போகவே, சில 7
நாட்களுக்குப்பின்பு அந்த நீரோடை வற்றிப்போயிற்று.

திரும்பவும் யெகோவாவின் வார்த்தை 8
அவனுக்கு வந்தது: நீ எழுந்து சீதோனுக் 9
கடுத்த சாறெபாத் ஊருக்குப்போய் அங்கே தங்கியிரு; உனக்கு ஆகாரம் அளிக்கும்படி அங்கே இருக்கிற ஒரு விதவைக்குக் கட் டளையிட்டேன் என்றுர். அப்படியே 10
அவன் எழுந்து சாறெபாத்துக்குப் போ னுன்; அவன் அந்த ஊருக்கு வரவே, இதோ, ஒர் வாசலண்டையில் விறகு பொறுக்கிக் கொண்டிருந்த ஒரு விதவை யைக் கண்டான். அவன் அவளைக் கூப்

பிட்டு, எனக்கு ஒரு பாத்திரத்திலே தாகத்
திற்குக் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவரு
11 வாயா என்று கேட்டான். அவள் தண்
ணீர் கொண்டுவரப் போகிறபோது அவன்
அவளை மறுபடியும் கூப்பிட்டு, உன் கை
யிலே எனக்குக் கொஞ்சம் ஆகாரமும் எடுத்
துக்கொண்டு வருவாயா என்று கேட்டான்.
12 அதற்கு அவள்: பானையில் ஒருபிடி மாவும்
கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்
லாமல் என்னிடத்தில் வேறே ஆகாரமில்லை;
உமது கடவுளாகிய யெகோவாவின் ஜீவன்
மேல் ஆணை, இதோ, இரண்டு சுள்ளி
விறகு பொறுக்குகிறேன், வீட்டிலுள்ளதை
எனக்கும் என் பிள்ளைக்கும் சமையல் செய்
யப்போகிறேன்; அதைச் சாப்பிடுவோம்,
பிற்பாடோ சாகத்தான் வேண்டும் என்றாள்.
13 அதைக் கேட்ட எலியா அவளைப் பார்த்து:
பயப்படாதே, போ, நீ சொல்லுகிறபடியே
சமையல் செய், ஆனாலும் முதலாவது
அதிலே எனக்கென ஒரு சிறிய அடையைச்
செய்து என்னிடம் கொண்டுவா, பின்பு
உனக்கும் உன் குமாரனுக்கும் செய்யலாம்;
14 இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா
சொல்லுகிறதைக் கேள், யெகோவா தேசத்
தின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள்
மட்டும் உன் பானையின் மாவு செலவழிந்து
போவதுமில்லை, கலசத்தின் எண்ணெய் இல்
15 லாமற் போவதுமில்லை என்றான். அவள்
போய் எலியாவின் சொற்படியே செய்தாள்.
அவளும் இவனும் அவள் வீட்டாரும் பல
16 நாள் சாப்பிட்டார்கள். யெகோவா எலி
யாவைக்கொண்டு சொன்ன வார்த்தையின்
படியே பானையிலே மாவு செலவழிந்துபோகவு
மில்லை, கலசத்தின் எண்ணெய் இல்லாமற்
போகவுமில்லை.
17 இவை நடந்த பின்பு வீட்டுக்காரியாகிய
அந்த ஸ்திரீயின் மகன் வியாதிப்பட்டான்;
அவன் வியாதி அதிகரித்துக்கொண்டே வந்
தது, அவன் சுவாசம் நின்றுபோயிற்று.
18 அப்பொழுது அவள் எலியாவினிடம்வந்து:
கடவுளின் மனுஷனே, எனக்கும் உமக்கும்
என்ன? என் அக்கிரமத்தை நினைக்கப்பண்
ணவும், என் பிள்ளையைச் சாகப்பண்ணவுமா
19 என்னிடம் வந்தீர் என்றாள். அதற்கு
அவன்: உன் பிள்ளையை என்னிடம் தா
என்று சொல்லி, அவனை அவள் மடியி
லிருந்து எடுத்துத் தான் தங்கியிருந்த மேல்
அறைக்கு அவனைக் கொண்டுபோய்த் தன்
20 கட்டிலின்மேல் வைத்துக்கொண்டு: என்
கடவுளாகிய யெகோவாவே, நான் தங்கி
யிருக்க இடங்கொடுத்த இந்த விதவையின்
மகனைச் சாகப்பண்ணி அவளுக்குத் துக்கம்
விளைவிக்கப் போகிறீரோ என்று யெகோவா
வை நோக்கிக் கூப்பிட்டு | அந்தப் பிள்ளை 21
யின்மேல் மூன்றுதரம் குப்புறவிழுந்து: என்
கடவுளே, யெகோவாவே, இந்தப் பிள்ளை
யின் உயிர் அவனுக்குள் திரும்பிவரச் செய்
தருளும் என்று யெகோவாவை நோக்கி
விண்ணப்பம்பண்ணினான். யெகோவா 22
எலியாவின் விண்ணப்பத்திற்குச் செவி
சாய்த்தருளினார்; பிள்ளையின் உயிர் அவ
னுள் திரும்பிவந்தது; அவன் பிழைத்துக்
கொண்டான். அப்பொழுது எலியா பிள் 23
ளையை எடுத்து மேல் அறையிலிருந்து
அவனைக் கீழ்வீட்டிற்குள் கொண்டுவந்து,
அவனை அவன் தாயினிடம் கொடுத்து: பார்,
உன் பிள்ளை பிழைத்துக்கொண்டான் என்று
சொன்னான். அதைக் காணவே அந்த 24
ஸ்திரீ எலியாவைப் பார்த்து: நீர் கடவுளின்
மனுஷனே என்றும் உமது வாயில் பிறக்கும்
யெகோவாவின் வார்த்தை உண்மையே என்
றும் இப்போது அறிந்துகொண்டேன்
என்று சொன்னாள்.

18 வெகுநாள் சென்றது; யெகோவாவின்
வார்த்தை மூன்றாம் வருஷத்தில் எலியா
வுக்கு வந்தது: நீ போய் ஆகாபுக்கு உன்
னைக் காண்பி; நான் தேசத்தின்மேல் மழை
யைக் கட்டளையிடுவேன் என்றார். அப் 2
படியே எலியா ஆகாபுக்குத் தன்னைக் காண்
பிக்கப் போனான்;

பஞ்சம் சமாரியாவிலே கொடிதாயிருக்
கையில் | ஆகாப் தன் அரமனை விசாரிப்புக் 3
காரனாகிய ஓபதியாவை அழைப்பித்தான்;
ஓபதியா யெகோவாவினிடம் மிகுந்த பய
பக்தியுடையவன். யேசபேல் யெகோவாவின் 4
தீர்க்கதரிசிகளைச் சங்காரித்தபோது, ஓபதியா
நூறு தீர்க்கதரிசிகளைச் சேர்த்து அவர்களைக்
கெபிக்கு ஐம்பது பேராக ஒளித்து வைத்து
அவர்களுக்கு ஆகாரமும் தண்ணீரும்
கொடுத்து வந்தான். ஆகாப் ஓபதியாவைப் 5
பார்த்து: தேசத்திலுள்ள சகல நீரூற்றுகளை
யும் சகல நீரோடைகளையும் நீ சுற்றிப்
பார்த்துவா, நாம் மிருகங்களனைத்தையும்
சாகக்கொடாமல் குதிரைகளையும் கோவேறு
கழுதைகளையுமாவது உயிரோடே காப்பாற்
றும்படி நமக்குப் புல் அகப்படுமோ என்
றான். அப்படியே தேசத்தைச் சுற்றிப் 6
பார்க்கும்படி ஆளுக்கொருபக்கம் திட்டம்
செய்துகொண்டு, ஆகாப் ஒரு வழியாயும்
ஓபதியா ஒரு வழியாயும் தனித்தனியே
போனார்கள். ஓபதியா போனவழியிலே 7
எலியா அவனுக்கு எதிர்ப்பட்டான்; ஓப
தியா இவனை இன்னான் என்று அறிந்து
முகங்குப்புற விழுந்து, நீர் என் ஆண்டவ

ஞகிய எலியா அல்லவா என்று கேட்க |
8 அவன், நான்தான்; நீ போய், இதோ, எலியா வந்திருக்கிறான் என்று உன் ஆண்ட
9 வனுக்குச் சொல் என்றான். அதற்கு அவன்: ஆகாப் என்னைக் கொன்றுபோடும் படி நீர் அடியேனை அவன் கையில் ஒப்புக் கொடுப்பதற்கு நான் செய்த பாவம் என்ன?
10 உமது கடவுளாகிய யெகோவாவின்மேல் ஆணையாகச் சொல்லுகிறேன்; உம்மைத் தேடும்படி என் ஆண்டவன் ஆட்களை அனுப்பாத ஜனமும் ராஜ்யமும் இல்லை; நீர் இல்லையென்று அவர்கள் சொன்ன போது உம்மைக் காணவில்லையென்று அந்த ராஜ்யத்தையும் அந்த ஜனத்தையும் அவன்
11 ஆணையிடச் செய்தான். இப்படியிருக்க, நீ போய் உன் ஆண்டவனுக்கு, இதோ எலியா வந்திருக்கிறான் என்று சொல் என்று
12 நீர் சொல்லுகிறீரே. நான் உம்மைவிட்டுப் போனவுடனே ஒருவேளை யெகோவாவின் ஆவி உம்மை எடுத்து நான் அறியாத இடத்திற்குக் கொண்டுபோவார்; நான் ஆகாபினிடம்போய் அறிவித்தபின்பு அவன் உம்மைக் காணவில்லாவிட்டால் என்னைக் கொன்று போடுவானே; அடியேன் சிறுவயதுமுதலே யெகோவாவினிடம் பயபக்தியுடையவன்.
13 யேசபேல் யெகோவாவின் தீர்க்கதரிசிகளைக் கொன்ற காலத்தில் நான் யெகோவாவின் தீர்க்கதரிசிகளில் நூறுபேரைக் கெபிக்கு ஐம்பதுபேராக ஒளித்துவைத்து அவர்களுக்கு ஆகாரமும் தண்ணீரும் கொடுத்து வந்தேனே, நான் இப்படிச் செய்தது என் ஆண்டவனுக்கு அறிவிக்கப்படவில்லையோ?
14 இப்போதும் என் ஆண்டவன் என்னைக் கொன்றுபோடுவதற்கேதுவாய் நீர், இதோ எலியா வந்திருக்கிறான் என்று அவனுக்குச் சொல் என்று சொல்லுகிறீரே என்றான்.
15 அதற்கு எலியா: சேனைகளின் யெகோவா உடைய சந்நிதியில் நிற்கிற நான் அவருடைய ஜீவன்மேல் ஆணையாகச் சொல்லுகிறதைக் கேள், இன்றையதினமே நான் என்னை அவனுக்குக் காண்பிப்பேன் என்றான்.
16 அதைக் கேட்டபின் ஓபதியா ஆகாபினிடம்போய் அதை அவனுக்கு அறிவித்தான்; உடனே ஆகாப் எலியா இருந்த
17 இடத்திற்குப் போனான். ஆகாப் எலியாவைக் காணவே: இஸ்ரவேலை அபாயத்திற்குட்படுத்துகிறவன் நீயல்லவா என்று அவ
18 னிடம் சொன்னான். அதற்கு அவன்: இஸ்ரவேலை அபாயத்திற்குட்படுத்துகிறவன் நான் அல்ல, நீரும் உமது தகப்பன் வீட்டாருமே, நீங்கள் யெகோவாவின் கட்டளைகளைவிட்டு விலகிப் பாகால்களைப் பற்றிக் கொண்டீர்களே. இப்போதும் ஆட்களை 19
அனுப்பி இஸ்ரவேலனைத்தையும் கர்மேல் மலையில் என்னண்டை கூடிவரச்செய்யும், யேசபேலின் பந்தியிலே சாப்பிடுகிறவர்களான பாகாலின் தீர்க்கதரிசிகள் நானூற்றைம்பது பேரையும் மரச்சிலைகளின் தீர்க்கதரிசிகள் நானூறுபேரையும் கூட்டிச் சேரும் என்றான்.

அப்படியே ஆகாப் இஸ்ரவேல் புத்திரர் 20
எல்லாருக்குள்ளும் ஆட்களை அனுப்பிக் கர்மேல் மலையிலே அந்தத் தீர்க்கதரிசிகளைக் கூடிவரும்படி செய்தான். அப்பொழுது 21
எலியா சகல ஜனத்திற்கும் எதிரே வந்து நின்று, நீங்கள் எத்தனை மட்டும் இருபுறமும் சாய்ந்து இடறிக்கொண்டிருப்பீர்கள்; யெகோவா தெய்வமானால் அவரைப் பற்றிக் கொள்ளுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பற்றிக்கொள்ளுங்கள் என்றான்; ஜனங்களோ பதில் ஒன்றும் சொல்லாதிருந்தார்கள். அப்பொழுது எலியா ஜனங்களை 22
நோக்கி: யெகோவாவின் தீர்க்கதரிசிகளில் மீந்திருக்கிறவன் நான் ஒருவனே; பாகாலின் தீர்க்கதரிசிகளோ நானூற்றைம்பதுபேர். இப்போதும் இரண்டு காளைகளை எங்களிடம் 23
கொண்டுவரட்டும்; ஒரு காளையை அவர்கள் தெரிந்தெடுத்து அதைத் துண்டித்து நெருப்புப்போடாமலே விறகுகளின்மேல் வைக்கட்டும்; நானும் மற்றக் காளையை அப்படியே செய்து நெருப்புப்போடாமல் விறகுகளின்மேல் வைப்பேன். நீங்கள் உங்கள் 24
தெய்வத்தின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுங்கள்; நான் யெகோவாவின் திருநாமத்தைச் சொல்லிக் கூப்பிடுவேன்; கூப்பிடுகையில் அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம் என்றான்; அதற்கு ஜனங்கள் எல்லாரும், நீர் சொல்வதே சரி என்றார்கள். அப்பொழுது எலியா பாகா 25
லின் தீர்க்கதரிசிகளைப் பார்த்து: நீங்கள் அநேகரானதால் நீங்களே முந்தி ஒரு காளையைத் தெரிந்தெடுத்து அதை ஆயத்தம்பண்ணி நெருப்புப்போடாமல் உங்கள் தெய்வத்தின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுங்கள் என்றான். தங்களுக்குக் கொடுக்கப்பட்ட காளையை அவர்கள் வாங்கி அதை 26
ஆயத்தம்பண்ணி: பாகாலே, எங்களுக்கு உத்தரவு அருளும் என்று காலைதொடங்கி மத்தியானமட்டும் பாகாலின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டார்கள்; கூப்பிட்டும் ஒரு சத்தமும் பிறக்கவில்லை, உத்தரவு கொடுப்பாருமில்லை. அவர்கள் கட்டின பலிபீடத்திற்கு எதிரே இடித்துத் தாண்டினார்

27 கள். மத்தியானமும் ஆயிற்று, எலியா அவர்களைப் பரியாசம்பண்ணி: உரத்த சத்தமாய்க் கூப்பிடுங்கள், அவன் தெய்வமாமே; அவன் தியானத்தில் இருக்கிறானே, அலுவலாய்ப் போயிருக்கிறானே, பிரயாணம் போயிருக்கிறானே; தூங்கினாலும் தூங்குவான், அவனை எழுப்பவேண்டியதாகுமே
28 என்றான். அவர்கள் உரத்த சத்தமாய்க் கூப்பிட்டுத் தங்கள் வழக்கத்தின்படியே இரத்தம் தங்கள்மேல் வடியுமட்டும் கத்திகளாலும் ஈட்டிகளாலும் தங்களைக் கீறிக்
29 கொண்டார்கள். மத்தியானவேளை கடந்தது, அந்திப்பலிசெலுத்தும் நேரமும் வந்தது. பரவசமானதுபோல் பேசிக்கொண்டிருந்தார்கள்; பேசியும் ஒரு சத்தமும் பிறக்கவில்லை, உத்தரவு கொடுப்பாருமில்லை, கவனிப்பாருமில்லை.
30 எலியா சகல ஜனங்களையும் கூப்பிட்டு: என்னைக் கிட்டி வாருங்கள் எனச் சகல ஜனங்களும் அவனைக் கிட்டினார்கள்; தகர்க்கப்பட்டிருந்த யெகோவாவின் பலிபீடத்
31 தை அவன் செப்பனிட்டான். யாக்கோபின் குமாரரால் உண்டான கோத்திரங்களின் இலக்கப்படியே பன்னிரண்டு கற்களை எடுத்தான். உன் பேர் இஸ்ரவேல் எனப்படும் என்னும் திருவாக்கை யெகோவாவினிடம் பெற்றவன் இந்த யாக்கோபே.
32 அந்தக் கற்களால் யெகோவாவின் திருநாமத்திற்கென்று ஒரு பலிபீடத்தைக் கட்டிப் பலிபீடத்தைச் சுற்றிலும் தானியம் அளக்கிற இரண்டுபடி விதைவிதைக்கத்தக்க இட
33 மாக ஒரு வாய்க்காலைச் செய்து | விறகுகளை அடுக்கி ஒரு காளையைத் தண்டித்து விறகு
34 களின்மேல் வைத்தான். பிற்பாடு அவன்: நீங்கள் நாலுகுடம் தண்ணீர் கொண்டுவந்து தகனபலியின்மேலும் விறகுகளின்மேலும் ஊற்றுங்கள் என்றான். பின்பு இரண்டாந்தரமும் அப்படியே ஊற்றுங்கள் என்றான்; இரண்டாந்தரமும் ஊற்றினார்கள்; அதற்குப்பின்பு மூன்றாந்தரமும் அப்படியே ஊற்
35 றுங்கள் என்றான்; மூன்றாந்தரமும் ஊற்றினார்கள். ஊற்றவே தண்ணீர் பலிபீடத்தைச்சுற்றி ஓடினது; வாய்க்காலிலும் தண்
36 ணீர் நிரப்பினான். அந்திப்பலிசெலுத்தும் நேரத்திலே எலியா தீர்க்கதரிசி வந்து: ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கடவுளே, யெகோவாவே, இஸ்ரவேலிலே நீரே கடவுள் என்றும் நான் உமது ஊழியன் என்றும் நான் இந்தக் காரியங்களையெல்லாம் உமது கட்டளைப்படியே செய்தேன் என்றும் இன்றையதினம் விளங்கப்பண்
37 ணும்; யெகோவாவே, எனக்கு உத்தரவளியும், யெகோவாவாகிய நீரே கடவுள் என்றும் தங்கள் இருதயத்தை உம்மிடம் திரும்பச் செய்தவர் நீரே என்றும் இந்த ஜனங்கள் அறியும்படி எனக்கு உத்தரவளியும் என்றான். அப்பொழுது யெகோவாவினிட 38
மிருந்து அக்கினி இறங்கி அந்தத் தகன பலியையும் விறகுகளையும் கற்களையும் மண்ணையும் பட்சித்து வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது. இதைக் 39
காணவே ஜனங்களெல்லாரும் முகங்குப்புற விழுந்து: யெகோவாவே கடவுள், யெகோவாவே கடவுள் என்றார்கள். அப் 40
பொழுது எலியா அவர்களைப் பார்த்து: பாகாலின் தீர்க்கதரிசிகளில் ஒருவனும் தப்பிப்போகாதபடி அவர்களைப் பிடியுங்கள் என்றான்; அவர்களைப் பிடித்தபோது எலியா அவர்களைக் கீழே கீசோன் நீரோடைக் கரைக்குக் கொண்டுபோய் அங்கே அவர்களை வெட்டிப்போட்டான்.

பின்பு எலியா ஆகாபைப்பார்த்து: நீர் 41
போம், போஜனபானம் பண்ணும், பெருமழையின் இரைச்சல் கேட்கிறது என்றான். ஆகாப் போஜனபானம் பண்ணப்போனான்; 42
பின்பு எலியா கர்மேல் மலையுச்சிக்கு ஏறித் தரையிலே பணிந்து முகம் முழங்காலிற்படக் குனிந்திருந்தான்; பின்பு அவன் தன் பணி 43
விடைக்காரனைப் பார்த்து, நீ போய்ச் சமுத்திரமுகமாய் உற்றுப்பார் என்று சொல்ல, அவன் போய்ப் பார்த்து, ஒன்றும் இல்லை என்றான்; நீ இன்னும் ஏழுதரம் போய்ப் பார் என்றான். ஏழாந்தரம் அவன்: இதோ, 44
சமுத்திரத்திலிருந்து சிறிய மேகம் எழும்புகிறது, அது மனுஷனின் உள்ளங்கையளவாய்த் தோன்றுகிறது என்றான். அப்பொழுது எலியா, நீ போய் ஆகாபைப் பார்த்து, இரதத்தைப் பூட்டிப் போய்விடும், போகாவிட்டால் மழை உம்மைத் தடைசெய்யும் என்று சொல் என்றான். அந்நேரமே 45
வானம் மேகங்களினாலும் காற்றினாலும் இருண்டது, பெருமழை உண்டாயிற்று; ஆகாப் இரதத்தில் ஏறி யிஸ்ரெயேலுக்குப் போனான். யெகோவாவின் கை எலியாவின் 46
மேல் இருந்தது, அவன் தன் அரையைக் கட்டிக்கொண்டு யிஸ்ரெயேலுக்கு வருமட்டாக ஆகாபுக்கு முன் ஓடினான்.

எலியா செய்த எல்லாவற்றையும் தீர்க்க **19**
தரிசிகளனைவரையும் அவன் பட்டயத்தாலே கொன்ற விவரம் அனைத்தையும் ஆகாப் யேசபேலுக்கு அறிவித்தான். அப்பொழுது 2
யேசபேல் எலியாவினிடம் ஆள் அனுப்பி: அவர்களில் ஒவ்வொருவனுடைய பிராணனுக்கும் செய்யப்பட்டதுபோல நான் நாளை

இங்கேரத்தில் உன் பிராணனுக்கும் செய்வேன்; செய்யாதேபோலவும் தேவர்கள் தங்கள் சித்தப்படியெல்லாம் எனக்குச் செய்யட்டும் என்று சொல்லச் சொன்னாள்.
3 அவன் அதைக் கேட்கவே எழுந்து, தன் பிராணனைக் காக்கும்படி யூதாவைச்சேர்ந்த பெயேர்ஷெபாவுக்குப் போய்விட்டான். அவன் அங்கே தன் வேலைக்காரனை நிறுத்தி
4 விட்டுத் | தான் மாத்திரம் வனாந்தரத்தில் ஒருநாள் பிரயாணம்போய் ஒரு சூரைச்செடியின்கீழ் உட்கார்ந்து, தான் சாகவேண்டும் என்று கோரி: போதும் யெகோவாவே, என்னை எடுத்துக்கொள்ளும்; நான் என் பிதாக்களிலும் நல்லவன் அல்ல என்று
5 சொல்லி | அந்தச் சூரைச்செடியின்கீழ்ப் படுத்துக்கொண்டு நித்திரைசெய்தான்; நித்திரைசெய்கையில், இதோ, ஒரு தூதன் அவனைத் தட்டியெழுப்பி: எழுந்திருந்து
6 போஜனம்பண்ணு என்றான். அவன் விழித்துப் பார்க்கவே, இதோ, தழலில் சுடப்பட்ட அடையும் ஒரு பாத்திரத்திலே தண்ணீரும் அவன் தலைமாட்டில் இருந்தது; அப்பொழுது அவன் போஜனபானம் பண்ணிவிட்டுத் திரும்பப் படுத்துக்
7 கொண்டான். யெகோவாவின் தூதன் இரண்டாந்தரமும் வந்து அவனைத் தட்டியெழுப்பி: எழுந்திருந்து போஜனம்பண்ணு; நீ போகவேண்டிய பிரயாணம் வெகுதூரம்
8 என்றான். அவன் எழுந்திருந்து போஜனபானம்பண்ணி, அந்த போஜனபலத்தினால் நாற்பதுநாள் இரவு பகல் நடந்து ஓரேப் என்னும் தெய்வபர்வதமட்டும் போனான்.
9 அங்கே அவன் ஒரு கெபியினுட்புகுந்து அங்கே இராத்தங்கினான்; இதோ, யெகோவாவின் வார்த்தை அவனுக்கு வந்தது: எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம்
10 என்றார். அதற்கு அவன்: சேனைய கர்த்தாவாகிய யெகோவாவின் விஷயத்தில் வெகு பக்தி வைராக்கியமாயிருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையை விட்டுவிட்டார்கள்; உமது பலிபீடங்களை இடித்து, உமது தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்று போட்டார்கள்; நீதியாயிருக்கிறவன் நான் ஒருவனே, என் உயிரையும் வாங்கத் தேடுகிறார்கள் என்றான்.
11 அப்பொழுது அவர்: நீ வெளியே வந்து யெகோவாவுக்கு முன்பாக மலையிலே நில் என்றார்; இதோ, யெகோவா கடந்துபோனார்; யெகோவாவுக்கு முன்பாகப் பர்வதங்களைப் பிளக்கிறதும் கன்மலைகளை உடைக்கிறதுமான பலத்த பெருங்காற்று எழும்பிற்று; யெகோவாவோ அந்தக் காற்றிலே இருக்கவில்லை: காற்றின்பின் பூமிஅதிர்ச்சி உண்டாயிற்று; யெகோவாவோ பூமி அதிர்ச்சியிலும் இருக்கவில்லை. பூமி அதிர்ச்சியின் 12
பின் அக்கினிவந்தது; யெகோவாவோ அக்கினியிலும் இருக்கவில்லை; அக்கினியின்பின் அமர்ந்த மெல்லிய சத்தம் கேட்டது. அதை எலியா கேட்கவே தன் அங்கியி 13
னால் முகத்தை மூடிக்கொண்டு வெளியே வந்து கெபியின் வாசலில் நின்றான். நிற்கவே, இதோ, எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம் என்கிற சப்தம் அவனுக்குக் கேட்டது. அதற்கு அவன்: சேனைய 14
கர்த்தாவாகிய யெகோவாவின் விஷயத்தில் வெகு பக்தி வைராக்கியமாயிருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள்; உமது பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள், நீதியாயிருக்கிறவன் நான் ஒருவனே, என் உயிரையும் வாங்கத்தேடுகிறார்கள் என்று சொன்னான். அப்பொழுது யெகோ 15
வா அவனைப்பார்த்து: நீ வந்த வழியாய்த் திரும்பித் தமஸ்கு வனாந்தரத்திற்குப்போய் அசாவேலைச் சீரியாவின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணு; பின்பு நிம்சியின் குமா 16
ரனாகிய யேகூவை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணி, ஆபேல் மெகோலா ஊராரான ஷாப்பாத்தின் குமாரன் எலீஷாவை உன் ஸ்தானத்திலே தீர்க்கதரிசியாக அபிஷேகம்பண்ணு. அசாவேலின் பட்ட 17
யத்திற்குத் தப்பினவனை யேகூ கொன்றுபோடுவான்; யேகூவின் பட்டயத்திற்குத் தப்பினவனை எலீஷா கொன்றுபோடுவான். ஆனாலும் பாகாலுக்கு முன் முடங்காத 18
முழங்காலையும் அவனை முத்தஞ்செய்யாத வாயையுமுடைய ஏழாயிரம்பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன் என்றார்.

அப்படியே அவ்விடம் விட்டுப்போய் 19
ஷாப்பாத்தின் குமாரனாகிய எலீஷாவைக் கண்டான்; அவன் பன்னிரண்டு ஏர் பூட்டி உழுதுகொண்டிருந்தான். அவனே பன்னிரண்டாம் ஏரை ஓட்டினான். எலியா அவன் இருந்த இடம்போய் அவன்மேல் தன் அங்கியைப்போட்டான். போட்ட 20
மாத்திரமே அவன் தன் மாடுகளை விட்டு விட்டு எலியாவின்பிறகே ஓடி: நான் என் தகப்பனையும் என் தாயையும் முத்தஞ் செய்ய உத்தரவுகொடும் அதன்பின் உம்மோடு வருவேன் என்றான். அதற்கு அவன்: அப்படியே போ, நான் செய்தது உனக்குத் தெரியுமே என்றான். அப்பொ 21

பூது எலீஷா அவனைவிட்டுப் போய் ஓர் ஏர்மாடுகளைப்பிடித்து அடித்து ஏரின் மர மூட்டுகளால் அவற்றின் இறைச்சியைச் சமைத்து ஜனங்களுக்குக்கொடுத்தான்; அவர்கள் சாப்பிட்டபிற்பாடு அவன் எழுந்து போய் எலியாவோடு சென்று அவனுக்குப் பணிவிடை செய்துவந்தான்.

**20** சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் தன் சேனையெல்லாம் கூட்டிக்கொண்டு போய்ச் சமாரியாவை முற்றுகைபோட்டு அதின்மேல் யுத்தம்பண்ணினான்; அவனோடுகூட முப்பத்திரண்டு ராஜாக்கள் இருந்தார்கள், குதிரைகளும் இரதங்களும் 2 இருந்தன. அவன் நகரத்தினுள் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபினிடம் தூதுவரை 3 அனுப்பி: உன் வெள்ளியும் உன் பொன்னும் என்னுடையது, உன் ஸ்திரீகளிலும் உன் குமாரரிலும் உத்தமராயிருக்கிறவர்களும் என்னுடையவர்கள் என்று பெனாதாத் சொல்லுகிறான் என்று அவனுக்குச் சொல் 4 லச்சொன்னான். அதற்கு இஸ்ரவேலின் ராஜா: ராஜாவாகிய என் ஆண்டவனே, நீர் சொல்லுகிறபடியே நானும் என்னுடைய வைகள் யாவும் உமக்கே உரிமை என்று 5 சொல்லியனுப்பினான். அந்தத் தூதுவர் திரும்பவும் வந்து: பெனாதாத் சொல்லுகிறதைக்கேளும், உன் வெள்ளியையும் உன் பொன்னையும் உன் ஸ்திரீகளையும் உன் குமாரரையும் நீ எனக்குக் கொடுக்கவேண்டுமென்று உனக்குச் சொல்லியனுப்பினேன்; 6 என்றாலும் நானே இந்நேரத்தில் என் ஊழியரை உன்னிடம் அனுப்புவேன்; அவர்கள் உன் வீட்டையும் உன் ஊழியரின் வீடுகளையும் சோதித்து உனக்கு அருமையாயிருப்பவைகளையெல்லாம் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு போவார்கள் என்று சொன்னார்கள்.

7 அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா தேசத்தின் மூப்பரையெல்லாம் அழைப்பித்து: இவன் தீமை செய்யத்தேடுகிற விதத்தைக் கவனித்துக்கொள்ளுங்கள்; என் ஸ்திரீகளையும் என் குமாரரையும் என் வெள்ளியையும் என் பொன்னையும் கேட்க இவன் என்னிடம் ஆள் அனுப்பினபோது, நான் கொடுக்கமாட்டேன் என்று இவனுக்கு 8 மறுக்கவில்லையே என்றான். மூப்பர் அனைவரும் சகல ஜனங்களும் அதைக் கேட்கவே அவனைப்பார்த்து: நீர் அவனுக்குச் செவிகொடுக்கவேண்டாம்; அவனுக்குச் சம்மதிக்கவும் வேண்டாம் என்றார்கள். 9 அப்படியே அவன் பெனாதாத்தின் தூதுவரைப் பார்த்து: நீங்கள் ராஜாவாகிய என் ஆண்டவனுக்குச் சொல்லவேண்டியது இதுவே, நீர் முதல்விசை அடியேனுக்குச் சொல்லியனுப்பிய யாவற்றையும் செய்வேன்; இந்தக் காரியத்திற்கோ நான் சம்மதிக்கமுடியாது என்றான். தூதுவர்கள் போய் இந்த மறுமொழியை அவனுக்குச் சொன்னார்கள். அப்பொழுது பெனாதாத் 10 அவனிடம் ஆள் அனுப்பி: என்னோடு வருகிற திரள் ஜனங்கள் ஆளுக்கு ஒரு கைப்பிடியாவது வாரிக்கொள்ளச் சமாரியாவிலே தூள் இராது; இருக்குமெனக் கண்டால் தேவர்கள் தங்கள் சித்தப்படியெல்லாம் எனக்குச் செய்யட்டும் என்று சொல்லச்சொன்னான். அதற்கு இஸ்ரவேலின் ராஜா, போர் 11 முடித்து ஆயுதம் கழற்றுபவன்போல் தரித்துப் போருக்குச் செல்பவன் வீரியம்பேசாதது என்று அவனுக்குச் சொல்லுங்கள் என்றான். பெனாதாத்தும் மற்ற ராஜாக்க 12 ளும் கூடாரங்களிலே குடித்துக்கொண்டிருந்தார்கள். இந்த வார்த்தையைக் கேட்கவே பெனாதாத் தன் ஊழியரைப்பார்த்து, ஆயத்தம்பண்ணுங்கள் என்றான்; அப்படியே நகரத்தின்மேல் சண்டைசெய்ய ஆயத்தம் பண்ணினார்கள்.

இதோ, தீர்க்கதரிசி ஒருவன் இஸ்ரவே 13 லின் ராஜாவாகிய ஆகாபினிடம் வந்து: யெகோவா சொல்வதைக் கேளும், அந்த ஏராளமான ஜனக்கூட்டத்தையெல்லாம் கண்டாயா? இதோ, நானே யெகோவா என்று நீ அறியும்படி இன்றைக்கு அதை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்று சொன்னான். யாரைக்கொண்டு என்று 14 ஆகாப் கேட்க, அவன், மாகாண அதிபதிகளின் ஆட்களைக் கொண்டு என்று யெகோவா சொல்லுகிறார் என்றான். பின்பு அவன் யுத்தத்தைத் துவக்கவேண்டியது யார் என்று கேட்க அவன், நீர்தான் என்றான். அவன் மாகாண அதிபதிகளின் ஆட்களை 15 இலக்கம்பார்த்தான். இருநூற்று முப்பத்திரண்டுபேர் இருந்தார்கள்; அவர்களுக்குப் பின்பு இஸ்ரவேல் புத்திரராகிய சகல ஜனத்தையும் கணக்கிட்டு ஏழாயிரம்பேர் எனக் கண்டான். அவர்கள் மத்தியான வேளையி 16 லே புறப்பட்டார்கள். பெனாதாத்தும் அவனுக்கு உதவியாக வந்த மற்ற முப்பத்திரண்டு ராஜாக்களும் கூடாரங்களிலே குடித்து வெறிகொண்டிருந்தார்கள். மாகாண அதிபதிகளின் ஆட்கள் முன் 17 தண்டாகச் சென்றார்கள். அவர்கள் வருவதைக்கேட்ட பெனாதாத் விசாரிக்கும்படி ஆட்களை அனுப்பினான்; அவர்கள், சமாரியாவிலிருந்து ஆட்கள் புறப்பட்டு வருகி

ரூர்கள் என்று அவனுக்கு அறிவித்தார்கள்.
18 அப்பொழுது அவன்: அவர்கள் சமாதானத்
திற்காக வந்தாலும் அவர்களே உயிரோடே
பிடியுங்கள்; அவர்கள் யுத்தத்திற்காக
வந்தாலும் அவர்களே உயிரோடே பிடி
19 யுங்கள் என்றான். மாகாண அதிபதி
களின் ஆட்களும் அவர்கள் பின்னே வரு
கிற இராணுவமும் நகரத்திலிருந்து வெளியே
20 வந்தபோது | அவர்கள் அவரவர் தங்க
ளுக்கு எதிர்ப்படுகிறவர்களே வெட்டினார்
கள்; சீரியர் முறிந்தோடினார்கள்;
இஸ்ரவேலர் அவர்களைப் பிடிக்கத்
தொடர்ந்தார்கள், சீரியாவின் ராஜாவாகிய
பெனாதாதோ குதிரையின்மேல் ஏறிச் சில
குதிரைவீரரோடுங்கூடத் தப்பியோடிப்போ
21 னான். இஸ்ரவேலின் ராஜா புறப்பட்டுக்
குதிரைகளையும் இரதங்களையும் முறியடித்
துச் சீரியரில் மகா சங்காரம் உண்டாக
22 வெட்டினான். பின்பு அந்தத் தீர்க்கதரிசி
இஸ்ரவேலின் ராஜாவினிடம் வந்து: நீர்
போய் உம்மைப் பலப்படுத்திக்கொண்டு
இன்னது செய்யவேண்டும் என்பதைப்
பற்றி ஜாக்கிரதையாயிரும்; வருகிற வருஷத்
திலே சீரியாவின் ராஜா உமக்கு விரோதமாக
வருவான் என்றான்.
23 சீரியா ராஜாவின் ஊழியர் அவனி
டம் வந்து: அவர்கள் தேவர்கள் மலைத்
தேவர்கள், அதினால் அவர்கள் நம்மை
மேற்கொண்டார்கள்; நாம் அவர்க
ளோடே சமபூமியிலே யுத்தம்பண்ணி
அவர்களே மேற்கொள்ள முடியாதாவெனப்
24 பார்ப்போம்; அதற்காக நீர் இப்படிச் செய்
யும், இந்த ராஜாக்களையெல்லாம் அவர்கள்
இடங்களிலிருந்து அகற்றிவிட்டு அவர்கள்
இடங்களிலே மாகாண அதிபதிகளை ஏற்படுத்
25 தும்: நீர் இழந்த சேனைக்குச் சரியாய்ச்
சேனையையும், அந்தக் குதிரைகளுக்குச் சரி
யாய்க் குதிரைகளையும், இரதங்களுக்குச் சரி
யாய் இரதங்களையும் இலக்கம் பார்த்துக்
கொள்ளும்; பிற்பாடு சமபூமியிலே நாம்
அவர்களோடு யுத்தம்பண்ணி அவர்களே
மேற்கொள்ள முடியாதாவெனப் பார்ப்
போம் என்றார்கள்; அவன் அவர்கள் சொன்
னதைக்கேட்டு அப்படியே செய்தான்.
26 மறுவருஷத்திலே பெனாதாத் சீரியரை
இலக்கம் பார்த்து இஸ்ரவேலோடு யுத்தம்
27 பண்ண அபேக்குக்கு வந்தான். இஸ்ர
வேல் புத்திரரும் இலக்கம் பார்க்கப்பட்டு
ஆகாராதிகளைச் சேர்த்துக்கொண்டு அவர்
களே எதிர்க்கப்போனார்கள் இவர்கள் சீரிய
ருக்கு எதிரே இரண்டு வெறிய வெள்ளாட்
டுக் கிடைகளைப்போலப் பாளயமிறங்கி
ஞர்கள்; சீரியரோ தேசமெங்கும் நிறைந்
தார்கள். அப்பொழுது கடவுளின் மனுஷன் 28
ஒருவன் இஸ்ரவேல் ராஜாவினிடம் வந்து:
யெகோவா சொல்வதைக் கேளும்,
யெகோவா பள்ளத்தாக்குகளின் தெய்
வம் அல்ல, மலைகளின் தெய்வமே
என்று சீரியர் சொல்லியிருக்கிறபடியினால்
நான் இந்த ஏராளமான ஜனக்கூட்டத்
தையெல்லாம் உன் கையில் ஒப்புக்
கொடுத்தேன்; நானே யெகோவா என்பதை
நீங்கள் அதினாலே அறிவீர்கள் என்று
சொன்னான். ஏழுநாளளவும் அவர்கள் முக 29
முகமாய்ப் பாளயமிறங்கியிருந்தார்கள்;
ஏழாம் நாளில் யுத்தம் கலந்தார்கள், இஸ்ர
வேல் புத்திரர் ஒரேநாளிலே சீரியரில் லட்சம்
காலாட்களே மடங்கடித்தார்கள். மீதியான 30
வர்கள் அபேக்குப் பட்டணத்திற்குள் ஓடிப்
போனார்கள்; மீதியாயிருந்த இருபத்தேழாயி
ரம் பேரின்மேல் அங்கே அலங்கம் இடிந்து
விழுந்தது; பெனாதாத்தும் ஓடிப்போய் நக
ரத்திற்குள் புகுந்து அறை அறையாய் ஒடிப்
பதுங்கினான். அவன் ஊழியர் அவனிடம் 31
வந்து: இதோ, இஸ்ரவேல் வம்சத்து ராஜாக்
கள் தயாளமுள்ளவர்கள் என்று கேட்டி
ருக்கிறோம்; நாங்கள் இரட்டுகளே எங்கள்
அரைகளில் கட்டிக் கயிறுகளே எங்கள்
தலைகளில் சுற்றிக்கொண்டு இஸ்ரவேல்
ராஜாவினிடம் போவோம்; உம்மை உயி
ரோடே வைத்தாலும் வைக்கலாம் என்று
சொல்லி | இரட்டைத் தங்கள் அரைக 32
ளில் கட்டிக் கயிறுகளைத் தங்கள் தலைகளில்
சுற்றிக்கொண்டு இஸ்ரவேல் ராஜாவினிடம்
வந்து: என்னை உயிரோடே வையும் என்று
உமது அடியானாகிய பெனாதாத் விண்ணப்
பம் பண்ணுகிறான் என்றார்கள். அதற்கு
அவன், இன்னும் அவன் உயிரோடே
இருக்கிறானா, அவன் என் சகோதரன் என்
றான். அந்த மனுஷர் இதை நல்வாக்காக 33
எடுத்து அவன் வாய்ச்சொல்லை உடனே
பிடித்துக்கொண்டு, ஆம், உமது சகோதர
னாகிய பெனாதாத் என்றார்கள்; அப்பொழுது
அவன், நீங்கள் போய், அவனை அழைத்துக்
கொண்டு வாருங்கள் என்றான்; பெனாதாத்
அவனிடம் வந்தபோது அவனை தன் இர
தத்தில் ஏற்றிக்கொண்டான். அப்பொழுது 34
பெனாதாத் இவனைப் பார்த்து: என் தகப்
பன் உமது தகப்பனார் கையிலே பிடித்த
பட்டணங்களைத் திரும்பக் கொடுத்துவிடுகி
றேன்; என் தகப்பன் சமாரியாவிலே செய்
ததுபோல நீரும் தமஸ்குவிலே வீதிகளை
அமைத்துக்கொள்ளலாம் என்றான். அதற்கு
ஆகாப், நீர் இந்த நிபந்தனையின்படி நடந்து

கொள்வதென்றால் நான் உம்மை அனுப்பி விடுகிறேன் என்று சொல்லி அவனோடு உடன்படிக்கைபண்ணி அவனை அனுப்பி விட்டான்.

35 அப்பொழுது தீர்க்கதரிசன சிஷ்யரில் ஒருவன் யெகோவாவின் கட்டளையின்பேரில் தன் தோழனைப்பார்த்து, நீ என்னை அடி என அந்த மனுஷன் அவனிடம், 36 அடிக்கமாட்டேன் என்றான். அப்பொழுது அவன் இவனைப்பார்த்து: நீ யெகோவாவின் சொல்லுக்குக் கீழ்ப்படியாமற் போனபடியால், இதோ, நீ என்னைவிட்டுப் போகும்போதே ஒரு சிங்கம் உன்னைக் கொல்லும் என்றான்; அப்படியே இவன் அவனைவிட்டுப் போகும்போதே ஒரு சிங்கம் இவனைக் கண்டு கொன்றுபோட்டது. 37 அதன்பின் அவன் வேறொருவனைக்கண்டு: என்னை அடி என அந்த மனுஷன் அவனைக் 38 காயமுண்டாக அடித்தான். அந்தத் தீர்க்கதரிசி போய்த் தன் கண்களின்மேல் கட்டுப் போட்டுக்கொண்டு வேஷமாறினவனாய் வழியிலே ராஜா வரக் காத்திருந்தான். 39 ராஜா அவ்வழியாய் வந்தபோது, இவன் ராஜாவைப் பார்த்துக் கூப்பிட்டு, அடியேன் போர்முகத்தில் நின்றபோது ஒருவன் விலகி என்னிடம் ஒருவனைக் கொண்டுவந்து, இந்த மனுஷனைப் பத்திரம்பண்ணு; இவன் தப்பிப்போனால் உன் பிராணன் அவன் பிராணனுக்கு ஈடாகும், அல்லது ஒரு தாலந்து வெள்ளியை நீ கொடுக்கவேண்டும் 40 என்றான். அடியேன் இங்கும் அங்கும் அலுவலாயிருக்கையிலே அவன் ஓடிப் போய்விட்டான் என்றான். இஸ்ரவேல் ராஜா அவனைப் பார்த்து: அதுவே தீர்ப்பு, 41 நீ சொன்னதே என்றான். அப்பொழுது அவன் சீக்கிரமாய்த் தன் கண்களின்மேலிருந்த கட்டை அவிழ்த்துவிடவே இஸ்ரவேலின் ராஜா அவன் தீர்க்கதரிசிகளில் ஒருவன் என்று அறிந்துகொண்டான். 42 அப்பொழுது தீர்க்கதரிசி ராஜாவைப் பார்த்து: யெகோவா சொல்லுகிறதைக்கேளும், என் சாபத்திற்குட்பட்டவனை உன் கையிலிருந்து தப்பிப்போகும்படி நீ விட்டபடியினால் உன் பிராணன் அவன் பிராணனுக்கும் உன் ஜனம் அவன் ஜனத்திற்கும் ஈடாகும் என்று சொன்னான். இஸ்ரவேலின் ராஜா இதைக் கேட்டுச் சலிப்பும் சினமுமாய் வீட்டிற்குப் போனான்; சமாரியா வந்து சேர்ந்தான்.

21 இவற்றின்பின் நிகழ்ந்தது இதுவே: யிஸ்ரயேல்-ஊராளனான நாபோத்துக்கு யிஸ்ரயேலிலே சமாரியா ராஜாவாகிய ஆகாபின் அரமனையையடுத்து ஒரு திராட்சத் தோட்டமிருந்தது. 2 ஆகாப் நாபோத்தோடே பேசி: உன் திராட்சத்தோட்டம் என் வீட்டை அடுத்திருக்கிறபடியால் அதைக் கீரைத்தோட்டமாக்கும்படி எனக்குக் கொடு, அதினும் நல்ல திராட்சத்தோட்டத்தை அதற்குப் பதிலாக உனக்குத் தருகிறேன்; பணந்தான் வேண்டுமென விரும்புவாயானால் அதின் கிரயத்தைத் தருகிறேன் என்றான். 3 நாபோத்தோ ஆகாபினிடம்: நான் என் பிதாக்களின் சுதந்தரத்தை உமக்கு விற்றுப்போடாதபடி யெகோவா என்னைக் காப்பாராக என்றான். 4 என் பிதாக்களின் சுதந்தரத்தை உமக்குக் கொடேன் என்று யிஸ்ரயேலியனான நாபோத் தன்னிடம் சொன்ன வார்த்தையினிமித்தம் ஆகாப் சலிப்பும் சினமுமாய்த் தன் வீட்டிற்கு வந்து போஜனம்பண்ணுமல் தன் கட்டிலின்மேல் படுத்துத் தன் முகத்தைத் திருப்பிக்கொண்டிருந்தான். 5 அவன் மனைவியாகிய யேசபேல் அவனிடம்வந்து: நீர் போஜனம்பண்ணுதபடி உமது மனம் சலிப்பாயிருக்கிறது என்ன என்று அவனைக் கேட்டதற்கு 6 | அவன் அவளிடம்: நான் யிஸ்ரயேலியனான நாபோத்தோடே பேசி, உன் திராட்சத்தோட்டத்தை எனக்கு விலைக்குக்கொடு, அல்லது உனக்கு விருப்பமானால் அதற்குப்பதிலாக வேறே திராட்சத்தோட்டத்தை உனக்குத் தருவேன் என்றேன். அதற்கு அவன், என் திராட்சத்தோட்டத்தை உமக்குக் கொடுக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டான் என்றான். 7 அதைக் கேட்ட அவன் மனைவியாகிய யேசபேல் அவனைப்பார்த்து: நீர் இப்போது இஸ்ரவேலின்மேல் ராஜ்யபாரம் பண்ணுகிறவரா? நீர் எழுந்து போஜனம் பண்ணி மனமகிழ்ச்சியாயிரும்; யிஸ்ரயேலியனான நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை நானே உமக்குக் கொடுப்பேன் என்றாள். 8 அவள் ஆகாபின் பெயரால் சொன்னாள். அவள் அவனுடைய முத்திரையைப்போட்டு அந்த நிருபங்களை நாபோத் இருந்த ஊரில் அவனோடே குடியிருந்த மூப்பரிடத்துக்கும் பெரியோரிடத்துக்கும் அனுப்பினாள். 9 நீங்கள் உபவாசம் என்று பிரசித்தப்படுத்தி நாபோத்தை ஜனத்தின்முன் முதல் ஸ்தானத்தில் இருத்தி, 10 | அவன் கடவுளையும் ராஜாவையும் தூஷித்தான் என்று அவனுக்கு விரோதமாய்ச் சாட்சி சொல்லுகிற பேலியாளின் மக்களாகிய இருவரை அவனுக்கு எதிராக நிறுத்தி, அவனை வெளியே கொண்டுபோய் அவன் சாகும்படி கல்லெறியுங்கள் என்று

அந்த நிருபங்களிலே எழுதியிருந்தாள்.
11 அவன் ஊரிலே குடியிருந்த மூப்பரும் பெரியோருமாகிய அவன் ஊரார் யேசபேல் தங்களுக்கு அனுப்பின நிருபங்களில் எழுதிக் கட்டளையிட்டிருந்தபடியே செய்தார்
12 கள். அப்படியே அவர்கள் உபவாசம் என்று பிரசித்தப்படுத்தி நாபோத்தை ஜனத்தின் முன்னே முதல் ஸ்தானத்தில் இருத்தினார்கள். அப்பொழுது பேலியாளின் மக்
13 களாகிய இருவர் வந்து அவனுக்கு எதிரே நின்று: நாபோத் கடவுளையும் ராஜாவையும் தூஷித்தான் என்று ஜனத்தின் முன்னிலையில் அவனுக்கு விரோதமாய்ச் சாட்சி சொன்னார்கள்; ஆகவே அவனை ஊருக்கு வெளியே கொண்டுபோய், அவன் சாகும்
14 படி அவனைக் கல்லெறிந்தார்கள். நாபோத் கல்லெறியுண்டு செத்தான் என்று அப்புறம் யேசபேலுக்குச் சொல்லியனுப்பினார்
15 கள். நாபோத் கல்லெறியுண்டு செத்தான் என்று யேசபேலுக்குத் தெரியவந்தபோது அவள் ஆகாபினிடம்போய்: நீர் எழுந்திரும், யிஸ்ரெயேலியனான நாபோத் உமக்கு விலைக்குத் தரமாட்டேன் என்ற சொன்ன திராட்சத்தோட்டத்தைச் சொந்தமாய் எடுத்துக்கொள்ளும்; நாபோத் உயிரோடில்லை,
16 அவன் செத்தான் என்றாள். நாபோத் செத்தான் என ஆகாப் கேட்டபோது அவன் யிஸ்ரெயேலியனான நாபோத்தின் திராட்சத்தோட்டத்தைச் சொந்தமாய் எடுத்துக்கொள்ளும்படி எழுந்துபோனான்.
17 யெகோவாவின் வார்த்தை திஸ்பியனான
18 எலியாவுக்கு வந்தது: இதோ, சமாரியாவிலிருக்கிற இஸ்ரவேல் ராஜாவாகிய ஆகாப் நாபோத்தின்திராட்சத்தோட்டத்தைச்சொந்தமாய் எடுத்துக்கொளளும்படி அவ்விடத்திற்குப் போயிருக்கிறான்; நீ எழுந்துபோய் அவனுக்கு எதிர்ப்பட்டு, அவனோடேசி,
19 நீ கொலைசெய்து அபகரித்தாய் என்று யெகோவா சொல்லுகிறார் என்று சொல்; பின்னும் நீ அவனிடம்: நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின இடத்திலே உன் இரத்தத்தையும் நாய்கள் நக்கும் என்று யெகோவா சொல்லுகிறார் என்றும் சொல்
20 என்றார். அப்பொழுது ஆகாப் எலியாவைப்பார்த்து: என் சத்துருவே என்னைக் கண்டுபிடித்தாயா என்றான். அதற்கு அவன்: கண்டுபிடித்தேன்; யெகோவாவின் பார்வையில் தீமையானதைச் செய்ய நீ
21 உன்னை விற்றுப்போட்டாய். ஆகவே யெகோவா உன்னைப்பற்றி: நான் உன்மேல் தீங்குவரச்செய்து உன் சந்ததியைத் துடைத்துப்போடுவேன், ஆகாபுக்கு ஒரு ஆண்
பின்னையும் இராதபடி இஸ்ரவேலில் அடைபட்டவனையும் அடைபடாதவனையும் சங்காரிப்பேன். நீ என்னைக் கோப 22
மூட்டி இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப் பண்ணினதினிமித்தம் உன் குடும்பத்தை நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் குடும்பத்தைப் போலவும் அகியாவின் குமாரனாகிய பாஷாவின் குடும்பத்தைப் போலவும் ஆகும்படி செய்வேன் என்கிறார்.
யேசபேலைப்பற்றியும் யெகோவா: நாய்கள் 23
யேசபேல் யிஸ்ரயேலின் மதில் அருகே தின்னும். ஆகாபின் சந்ததியில் ஊரிலே 24
சாகிறவனை நாய்களும், வெளியிலே சாகிறவனை ஆகாயத்துப் பறவைகளும் தின்னும் என்கிறார் என்று சொன்னான்.—ஆகாபைப் 25
போன்ற துன்மார்க்கன் இல்லை. அவன் யெகோவாவின் பார்வையில் தீமையானதைச் செய்யத் தன்னை விற்றுப்போட்டவன், அவனைத் தூண்டிவிட்டவள் அவன் மனைவியாகிய யேசபேல். அவன் கேவல 26
மான விக்கிரகங்களைப் பற்றிக்கொண்டு மகா அருவருப்பாய் நடந்துகொண்டான்; இஸ்ரவேல் புத்திரருக்கு முன்னிராதபடி யெகோவா துரத்திவிட்ட எமோரியர் செய்தபடியெல்லாம் இவன் செய்து வந்தான்—
ஆகாப் இந்த வார்த்தைகளைக் கேட்டபொ 27
ழுது தன் வஸ்திரங்களைக் கிழித்துத் தன் சரீரத்தின்மேல் இரட்டைப் போர்த்துக்கொண்டு உபவாசம்பண்ணி இரட்டிலே படுத்து, அடங்கிப்போனவனாக நடந்துகொண்டான். அப்பொழுது யெகோவாவின் வார் 28
த்தை திஸ்பியனாகிய எலியாவுக்கு வந்தது:
ஆகாப் என் முன்னிலையில் தன்னைத் தாழ்த் 29
தியடங்கினதைக் கண்டாயா? அவன் என் முன்னிலையில் தன்னைத் தாழ்த்தி அடங்கினபடியினால் நான் அவன் காட்களிலே அந்தத் தீங்கை வரச்செய்யாமல் அவன் குமாரனின் காட்களில் அதை அவன் குடும்பத்தின்மேல் வரச்செய்வேன் என்றார்.

சீரியரும் இஸ்ரவேலரும் மூன்றுவருஷம் 22
யுத்தமின்றி அமைதியாயிருந்தார்கள். மூன் 2
றும் வருஷத்திலே யூதாவின் ராஜாவாகிய யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவைப் பார்க்கப்போனான். இஸ்ரவேலின் ராஜா தன் 3
ஊழியரோடு பேசி: இலெயாத்திலுள்ள ராமோத் நம்முடையதென்று உங்களுக்குத் தெரியும்; நாம் அதைச் சீரியா ராஜாவின் கையிலிருந்து பிடித்துகொள்ளாமல் சும்மா இருக்கிறோமே என்று சொல்லிக் கொண்டிருந்தான். யோசபாத் தன்னிடம் 4
வரவே அவனிடம்; இலெயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ண என்னோடு

கூட வருகிறீரா என்று கேட்க, யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவினிடம்: நீரும் நானும் ஒன்றே, என் ஜனம் உமது ஜனம், என் குதிரைகள் உமது குதிரைகள் என்று 5 சொல்லிப் | பின்னும் யோசபாத் இஸ்ரவேல் ராஜாவினிடம்: யெகோவா சொல்வது இன்னதென்று இன்றைக்கு விசாரித்து 6 அறியும் என்றான். அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா தீர்க்கதரிசிகளை, ஏறக்குறைய நானூறுபேரைக் கூடிவரச்செய்து: நான் கிலெயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ணப் போகலாமா, போகலாகாதா என்று அவர்களைக் கேட்டதற்கு, அவர்கள், போம், ஆண்டவர் ராஜாவின்கையில் அதை ஒப்புக்கொடுப்பார் என்றார்கள். 7 பின்பு யோசபாத் நாம் விசாரித்து அறிகிறதற்கு இவர்களையன்றி யெகோவாவின் தீர்க்கதரிசிகளிலும் யாராகிலும் இங்கே 8 இல்லையா என்று கேட்டான். அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா யோசபாத்தைப் பார்த்து: யெகோவாவினிடம் விசாரித்து அறிகிறதற்கு இன்னும் ஒருவன் இருக்கிறான், அவன், யிம்லாவின் குமாரனாகிய மிகாயாவே; எனக்கோ அவன் ஆகாதவன்; அவன் என்னைப்பற்றித் தீமையாகவே தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன், நன்மையாகச் சொல்லுகிறதில்லை என்றான். அதற்கு யோசபாத், ராஜா அப்படிச் சொல்லவேண் 9 டாம் என்றான். அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா அரமனை அண்ணகரில் ஒருவனைக் கூப்பிட்டு யிம்லாவின் குமாரனாகிய மிகாயாவைச் சீக்கிரமாய் அழைத்துவா 10 என்றான். இஸ்ரவேலின் ராஜாவும் யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தும் சமாரியாவின் ஊர்வாசலின் எதிரே யிருந்த களத்திலே ராஜவஸ்திரம் தரித்தவர்களாய்த் தத்தம் சிங்காசனத்தில் உட்கார்ந்திருந்தார்கள்; சகல தீர்க்கதரிசிகளும் அவர்கள் முன்னிலையில் தீர்க்கதரிசனஞ் சொல்லிக்கொண் 11 டிருந்தார்கள். கெனானாவின் குமாரனாகிய சிதெக்கியா தனக்கு இருப்புக்கொம்புகளைச் செய்து, இவைகளால் நீர் சீரியரை முட்டி நிர்மூலமாக்கிப்போடுவீர் என்று யெகோவா 12 சொல்லுகிறார் என்றான். சகல தீர்க்கதரிசிகளும் அதற்கு இசைவாகவே தீர்க்கதரிசனம் சொல்லி, கிலெயாத்திலுள்ள ராமோத்துக்குப் போம், உமக்கு வாய்க்கும்; யெகோவா அதை ராஜாவின் கையில் ஒப்புக் கொடுப்பார் என்றார்கள்.

13 மிகாயாவை அழைக்கப்போன ஆள் அவனோடு பேசி: இதோ, தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் ஏகவாக்காய் ராஜாவுக்கு அனுகூலமாயிருக்கிறது; உமது வார்த்தையும் அவர்களில் ஒருவர் வார்த்தையைப்போல இருக்கும்படி அனுகூலமாகவே சொல்லும் என்றான். அதற்கு மிகாயா: யெகோவா 14 என்னிடம் சொல்வதையே சொல்லுவேன். யெகோவாவின் ஜீவன்மேல் ஆணை என்று சொன்னான். அவன் ராஜாவினிடம் வந்த 15 போது ராஜா அவனைப் பார்த்து: மிகாயாவே, நாங்கள் கிலெயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ணப் போகலாமா, போகலாகாதா என்று கேட்டான். அதற்கு அவன்: போம், உமக்கு வாய்க்கும்; யெகோவா அதை ராஜாவின் கையில் ஒப்புக் கொடுப்பார் என்றான். ராஜா அவனைப் 16 பார்த்து: நீ யெகோவாவின் நாமத்திலே உண்மையை யல்லாமல் வேறொன்றையும் என்னிடத்தில் சொல்லவேண்டாமென்று நான் எத்தனைதரம் உன்னை ஆணையிடுவிக்க வேண்டும் என்று சொன்னான். அதைக் 17 கேட்ட மிகாயா: இஸ்ரவேலரெல்லாரும் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போல மலைகளிலே சிதறியிருந்ததைக் கண்டேன்; அப்பொழுது யெகோவா, இவர்களை நடத்துகிறவன் இல்லை, அவரவர் தத்தம் வீட்டிற்குச் சமாதானத்தோடே திரும்பட்டும் என்றார் என்று சொன்னான். இஸ்ரவேலின் 18 ராஜா யோசபாத்தைப் பார்த்து: இவன் என்னைப்பற்றி நன்மையாக அல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன் என்று நான் உம்மிடம் சொல்லவில்லையா என்றான்.

அப்பொழுது மிகாயா பேசத்தொடங்கி: 19 யெகோவாவின் வார்த்தையைக் கேளும்; யெகோவா தமது சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறதையும் பரமசேனை யெல்லாம் அவரைச் சூழ்ந்து அவர் வலதுபக்கத்திலும் அவர் இடதுபக்கத்திலும் நிற்கிறதையும் கண்டேன். யெகோவா சூழ நின்றவர்க 20 ளைப் பார்த்து: ஆகாப் போய்க் கிலெயாத்திலுள்ள ராமோத்திலே மாளும்படி யார் அவனுக்குத் தூண்போதனை செய்வான் என்று கேட்டதற்கு ஒருவன் இப்படியும் ஒருவன் அப்படியும் சொன்னார்கள். ஒரு 21 ஆவி முன்வந்து யெகோவாவுக்கு எதிரே நின்று: நான் அவனுக்கு தூண்போதனை செய்வேன் என்றது. எவ்வகையாய் 22 என்று யெகோவா அதைக் கேட்க, அது: நான் போய் அவனுடைய சகல தீர்க்கதரிசிகளின் வாயிலும் பொய்யின் ஆவியாய் இருப்பேன் என்றது; அதற்கு அவர்: நீ அவனுக்குத் தூண்போதனை செய், நீ சித்தி பெறுவாய்; போய் அப்படியே செய்

23 என்றார். ஆகவே யெகோவா பொய்யின் ஆவியை உமது தீர்க்கதரிசிகளாகிய இவர்கள் அனைவருடைய வாயிலும் கட்டளையிட்டார்; யெகோவா உம்மைப்பற்றி தீமையே என்று சொன்னான்.

24 அதைக் கேட்டுக்கொண்டிருந்த கெனானாவின் குமாரனாகிய சிதெக்கியா கிட்டவந்து மிகாயாவைக் கன்னத்தில் அடித்து, யெகோவாவின் ஆவி எந்த வழியாய் என்னை விட்டு உன்னோடே பேசும்படி வந்தது

25 என்றான். அதற்கு மிகாயா: நீ போய் ஒளித்து அறை அறையாய்ப் பதுங்கும் அந்நாளிலே அதைக் காண்பாய் என்றான்.

26 அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா: மிகாயாவைப் பிடியுங்கள், அவனை நகரத் தலைவனாகிய ஆமோனிடத்திற்கும் ராஜகுமாரனாகிய யோவாசினிடத்திற்கும் கொண்டுபோங்கள்;

27 இவனைச் சிறைச்சாலையிலே வைத்து நான் சுகமாய்த் திரும்பிவருமளவும் இவனுக்கு இடுக்கத்தின் அப்பத்தையும் துயரத்தின் தண்ணீரையும் சாப்பிடக் கொடுங்கள் என்று ராஜா சொன்னார் என்று

28 சொல்லுங்கள் என்றான். அப்பொழுது மிகாயா: நீர் சுகமாய்த் திரும்பி வந்துவிடுவீரேயானால் யெகோவா என்னைக்கொண்டு பேசினதில்லையாகும் என்று சொல்லி, ஜனங்களே, நீங்கள் எல்லாரும் இதைக் கவனித்துக்கொள்ளுங்கள் என்றான்.

29 பின்பு இஸ்ரவேலின் ராஜாவும் யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தும் கிலெயாத்திலுள்ள ராமோத்துக்குப் போனார்கள்.

30 இஸ்ரவேலின் ராஜா யோசபாத்தைப்பார்த்து: நான் வேஷமாறி யுத்தத்திற்குப் போவேன்; நீரோ உமது வஸ்திரங்களையே தரித்திரும் என்று சொன்னான்; அப்படியே இஸ்ரவேலின் ராஜா வேஷமாறி யுத்தத்திற்

31 குப் போனான். சீரியாவின் ராஜா தனக்கு இருந்த ரதங்களின் முப்பத்திரண்டு தலைவரையும் பார்த்து: நீங்கள் சிறியவரோடும் பெரியவரோடும் யுத்தம்பண்ணவேண்டாம்; இஸ்ரவேலின் ராஜா ஒருவனோடே மாத்திரம் யுத்தம்பண்ணுங்கள் என்று கட்டளை

32 யிட்டிருந்தான். ஆகவே ரதங்களின் தலைவர் யோசபாத்தைக் காண்கையில், இவன்தான் இஸ்ரவேலின் ராஜா என்று சொல்லி யுத்தம்பண்ணும்படி அவன்மேல் வரத்திரும்பினார்கள்; யோசபாத் கூக்குரலிட்டான்.

33 இவன் இஸ்ரவேலின் ராஜா அல்ல என்று ரதங்களின் தலைவர் கண்டு அவனைவிட்டு

34 விலகிப்போனார்கள். ஒருவன் வில்லை நாணேற்றிக் குறி பார்க்காமல் எய்தான்; அது இஸ்ரவேல் ராஜாவினுடைய கவசச் சந்திலே பட்டது; படவே அவன் தன் சாரதியைப் பார்த்து: நீ திருப்பி என்னை இராணுவத்துக்கப்பால் கொண்டுபோ, எனக்குக் காயம்பட்டது என்றான். அந்நாளெல்லாம் அதோ யுத்தம் நடக்கவே ராஜா சீரியருக்கு எதிராக ரதத்திலே நின்று கொண்டிருந்தான்; சாயங்காலத்தில் அவன் இறந்துபோனான்; காயத்திலிருந்து வடிந்த இரத்தம் இரதத்தின் தட்டிலே ஓடியிருந்தது. பொழுதுபோகும்போது அவனவன் தன்தன் ஊருக்கும் அவனவன் தன்தன் தேசத்திற்கும் போய்விடுங்கள் என்று இராணுவத்தில் கூவியறிவிக்கப்பட்டது. ராஜா இறந்துபோனான், அவனைச் சமாரியாவுக்கு கொண்டுவந்து சமாரியாவிலே அடக்கம் பண்ணினார்கள். அந்த இரதத்தைச் சமாரியாவிலிருந்த குளத்திலே கழுவினார்கள்; கழுவின இடம் வேசிகள் குளிக்கும் துறை; கழுவும்போது, யெகோவா சொல்லியிருந்த வார்த்தையின்படியே, நாய்கள் அவன் இரத்தத்தை நக்கின.

ஆகாபைப்பற்றிய மற்ற விவரங்களும் அவன் செய்தவை யாவும் அவன் கட்டின தந்த அரமனையின் வரலாறும் அவன் கட்டின எல்லாப் பட்டணங்களின் வரலாறும் இஸ்ரவேல் ராஜாக்களைப்பற்றிய தினவர்த்தமானம் என்னும் நூலில் எழுதியிருக்கிறதே.

ஆகாப் நித்திரையடைந்து தன் பிதாக்களோடே சேர்ந்தான். அவன் குமாரனாகிய அகசியா அவன் ஸ்தானத்திலே ராஜாவானான்.

ஆசாவின் குமாரனாகிய யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபின் காலம் வருஷத்தில் யூதாவின்மேல் ராஜாவானான். யோசபாத் ராஜாவானபோது அவனுக்கு முப்பத்தைந்து வயது. அவன் இருபத்தைந்து வருஷம் எருசலேமிலே அரசாண்டான். அவன் தாயின் பேர் அசூபாள்; அவள் சில்கியின் குமாரத்தி. அவன் தன் தகப்பனாகிய ஆசாவின் வழிகளிலெல்லாம் நடந்தான்; அவன் அதைவிட்டு விலகாமல் யெகோவாவின் பார்வையில் நேர்மையானதைச் செய்துவந்தான்; பூஜை மேடைகளோ தகர்க்கப்படவில்லை; ஜனங்கள் இன்னும் பூஜை மேடைகளின்மேல் பலியிட்டுத் தூபங்காட்டிவந்தார்கள். யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவோடே சமாதானமாயிருந்தான்.

யோசபாத்தைப்பற்றிய மற்ற விவரங்களும் அவனில் விளங்கிய புஜபலமும் அவன் செய்த யுத்தங்களும் யூதாவின் ராஜாக்களைப்பற்றிய தினவர்த்தமானம் என்

47 னும் நூலில் எழுதியிருக்கிறதே. தன் தகப்பனுகிய ஆசாவின் நாட்களில் மீதியாய் விட்டிருந்த தாலியம்பூண்ட சோரரையும் தேசத்திலிருந்து அற்றுப்போகப் பண்
48 ணினான். அக்காலத்திலே ஏதோமிலே ராஜா இல்லை; அதிபதி ஒருவன் ஆண்டுவந்
49 தான். பொன் கொண்டுவர ஒப்பீருக்குப் போகும்படி யோசபாத் தர்ஷீஸ் கப்பல்களைச் செய்தான்; அவைகள் போகவில்லை; எசியோன் கேபேரிலே உடைந்துபோயின.
50 அப்பொழுது ஆகாபின் குமாரனுகிய அகசியா யோசபாத்தினிடம் ஆள் அனுப்பி என் வேலைக்காரர் உமது வேலைக்காரரோடுங் கூடக் கப்பல்களிலே போகட்டும் என்றான்;
51 யோசபாத்தோ சம்மதிக்கவில்லை. யோசபாத் நித்திரையடைந்து தன் பிதாக்களோடே சேரவே தாவீது நகரத்தில் தன் பிதாக்களோடே அடக்கம்பண்ணப்பட்டான்; அவன் குமாரனுகிய யோராம் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

52 ஆகாபின் குமாரனுகிய அகசியா யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தின் பதினேழாம் வருஷத்திலே சமாரியாவில் ராஜாவாகி, இஸ்ரவேலின்மேல் இரண்டு வருஷம் அரசாண்டான். அவன் யெகோவாவின்
53 பார்வையில் தீமையானதைச் செய்து தன் தகப்பன் வழியிலும் தன் தாயின் வழியிலும் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரன் யெரொபெயாமின் வழியிலும் நடந்து | பாகாலைச் சேவித்து,
54 அவனைத் தொழுதுகொண்டு தன் தகப்பன் செய்தபடியெல்லாம் செய்து இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவுக்குக் கோபமூட்டிவந்தான்.

# II. KINGS

# இராஜாக்கள்

## இரண்டாம் புஸ்தகம்.

1 ஆகாப் மரணமடைந்தபின் மோவாபியர் இஸ்ரவேலுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணிப் பிரிந்துபோனார்கள்.

2 அகசியா சமாரியாவிலிருந்த தன் வீட்டின் மேல்மெத்தையிலிருந்து பலகணிவழியாய் விழுந்து வியாதிப்பட்டான். இந்த வியாதி நீங்கிப் பிழைப்பேனு என்று எக்ரோனின் தெய்வமாகிய பாகால் செபூபினிடம் போய் விசாரியுங்களென்று ஆட்
3 களை அனுப்பினான். யெகோவாவின் தூதன் திஸ்பியனுகிய எலியாவினிடம் வந்து: நீ எழுந்துபோய்ச் சமாரியா ராஜாவின் ஆட்களுக்கு எதிர்ப்பட்டு, இஸ்ரவேலிலே கடவுள் இல்லை யென்று நீங்கள் எக்ரோனின் தெய்வமாகிய பாகால் செபூபினிடம் விசா
4 ரிக்கப் போகிறீர்கள்? இப்படிச் செய்தகினிமித்தம் நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல் சாகவே சாவாய் என்று யெகோவா சொல்லுகிறார் என்பதை அவர்களுக்குச் சொல் என்றான்; அப்படியே எலியா
5 போய்ச் சொன்னான். அந்த ஆட்கள் அகசியாவினிடம் திரும்பிவந்தபோது, நீங்கள் திரும்பி வந்துவிட்டது என்ன என்று அவன் அவர்களிடம் கேட்டான். அதற்கு அவர் 6
கள்: ஒரு மனுஷன் எங்களுக்கு எதிர்ப்பட்டு, உங்களை அனுப்பின ராஜாவினிடம் நீங்கள் திரும்பிப்போய், இஸ்ரவேலிலே கடவுள் இல்லை யென்று நீ எக்ரோனின் தெய்வமாகிய பாகால் செபூபினிடம் விசாரிக்கப்போகிறாய்; இப்படிச் செய்தகினிமித்தம் நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல் சாகவே சாவாய் என்று யெகோவா சொல்லுகிறார் என்பதை அவனுக்குச் சொல்லுங்கள் என்றான் என்று சொன்னார்கள். அப் 7
பொழுது ராஜா அவர்களைப்பார்த்து, உங்களுக்கு எதிர்ப்பட்டு, இந்த வார்த்தைகளை உங்களுக்குச் சொன்ன மனுஷன் எப்படிப்பட்டவன் என்று கேட்க | அவர்கள்: 8
அவன் மயிர் உடையைத்தரித்து வார்க்கச்சையைத் தன் அரையிலே கட்டிக்கொண்டிருந்தான் என்றார்கள். எனவே அவன்: திஸ்பியனுகிய எலியாதான் என்றான்.

9 அகசியா அவனிடம் ஐம்பதிற்கதிபதி ஒருவனையும் அவனுடைய ஐம்பது ஆட்களையும் அனுப்பினான்; மலையின் உச்சியில்

உட்கார்ந்திருந்த எலிசாவினிடம் இவன் ஏறிப்போய்: கடவுளின் மனுஷனே, ராஜா
10 உன்னை வரச் சொல்லுகிறார் என | எலியா அந்த ஐம்பதிற்கதிபதியினிடம்: நான் கடவுளின் மனுஷனேயானால் அக்கினி வானத்திலிருந்து இறங்கி உன்னையும் உன் ஐம்பது ஆட்களையும் பட்சிக்கட்டும் என்றான். உடனே அக்கினி வானத்திலிருந்து இறங்கி அவனையும் அவன் ஐம்பது ஆட்களையும் பட்சித்
11 தது. மறுபடியும் அவனிடம் வேறொரு அதிபதியையும் அவனுடைய ஐம்பது ஆட்களையும் அனுப்பினான். இவன் அவனிடம் வந்து, கடவுளின் மனுஷனே, ராஜா உன்னைச் சீக்கிரமாய் வரச் சொல்லுகிறார்
12 என | எலியா அவர்களிடம்: நான் கடவுளின் மனுஷனேயானால், அக்கினி வானத்திலிருந்து இறங்கி உன்னையும் உன் ஐம்பது ஆட்களையும் பட்சிக்கட்டும் என்றான். உடனே கடவுளின் அக்கினி வானத்திலிருந்து இறங்கி அவனையும் அவனுடைய
13 ஐம்பது ஆட்களையும் பட்சித்தது. மூன்றாந்தரமும் ஒரு அதிபதியையும் அவனுடைய ஐம்பது ஆட்களையும் அனுப்பினான்; இந்த மூன்றாம் அதிபதி ஏறிவந்தபோது அவன் எலியாவுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு: கடவுளின் மனுஷனே, என் உயிரும் உமது அடியாராகிய இந்த ஐம்பது பேரின் உயிரும் உமது பார்வையில் அரு
14 மையாயிருக்கட்டும். இதோ, அக்கினி வானத்திலிருந்து இறங்கி முன்னை இரண்டு அதிபதிகளையும் அவர்களுடைய ஐம்பது ஐம்பது ஆட்களையும் பட்சித்தது; இப்போதும் என் உயிர் உமது பார்வையில் அருமையாயிருக்கட்டும் என்று வேண்டிக்கொண்டான்.
15 அப்பொழுது யெகோவாவின் தூதன் எலியாவினிடம் வந்து: அவனோடுகூட இறங்கிப்போ, அவனுக்குப் பயப்படாதே என்றான்; அப்படியே அவன் எழுந்து அவனோடுகூட ராஜாவினிடம்இறங்கிப்போய் |
16 அவனைப்பார்த்து: இஸ்ரவேலிலே கடவுள் இல்லையென்று நீ எக்ரோனின் தெய்வமாகிய பாகால் செபூபினிடம் விசாரிக்க ஆட்களை அனுப்பினபடியால்? ஆதலால் நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல் சாகவே சாவாய் என்று யெகோவா சொல்லுகிறார்
17 என்றான். எலியா தெரிவித்த யெகோவாவின் வார்த்தைப்படியே அவன் இறந்து போனான்; அவனுக்குக் குமாரன் இல்லாதபடியால் அவன் ஸ்தானத்திலே யோராம் ராஜாவானான்; யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தின் குமாரனான யோராமின் இரண்டாம் வருஷத்திலே அவன் ராஜாவானான்.

அகசியா செய்த காரியங்களைப்பற்றிய 18
மற்ற விவரங்கள் இஸ்ரவேல் ராஜாக்களைப் பற்றிய தினவர்த்தமானம் என்னும் நூலில் எழுதியிருக்கிறதே.

யெகோவா எலியாவைப் பெருங்காற்றி 2
லே பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப் போகும்போது எலியா எலிஷாவோடுகூடக் கில்காலிலிருந்து புறப்பட்டுப்போனான்.
எலியா எலிஷாவோடு பேசி: நீ இங்கே 2
இரு; யெகோவா என்னைப் பேதேல் மட்டும் போக அனுப்புகிறார் என, எலிஷா: நான் உம்மை விடுவதில்லை; யெகோவாவின் ஜீவன்மேல் ஆணை, உமது ஜீவன்மேலும் ஆணை என்று சொல்லிவிட்டான். அப்படியே அவர்கள் பேதேலுக்குப் போனார்கள்.
பேதேலிலிருந்த தீர்க்கதரிசன சிஷ்யர் எலி 3
ஷாவினிடம் வந்து: இன்றையதினம் யெகோவா உன் எஜமானை உன் தலைக்கு மேலாக எடுத்துக்கொள்ளப்போகிறார் என்பது உனக்குத் தெரியுமா என்று கேட்க அவன்: எனக்குத் தெரியும், சும்மா இருங்கள் என்றான். மறுபடியும் எலியா அவனைப் 4
பார்த்து: எலிஷாவே, நீ இங்கே இரு, யெகோவா என்னை எரிகோமட்டும் போக அனுப்புகிறார் என, அவன்: நான் உம்மை விடுவதில்லை, யெகோவாவின் ஜீவன்மேல் ஆணை, உமது ஜீவன்மேலும் ஆணை என்று சொல்லிவிட்டான்; அப்படியே அவர்கள் எரிகோவுக்கு வந்தார்கள். எரிகோவி 5
லிருந்த தீர்க்கதரிசன சிஷ்யர் எலிஷாவினிடம் வந்து: இன்றையதினம் யெகோவா உன் எஜமானை உன் தலைக்குமேலாக எடுத்துக்கொள்ளப்போகிறார் என்பது உனக்குத் தெரியுமா என்று கேட்க அவன், எனக்குத் தெரியும், சும்மா இருங்கள் என்றான்.
திரும்பவும் எலியா அவனைப் பார்த்து: நீ 6
இங்கே இரு, யெகோவா என்னை யோர்தான்மட்டும் போக அனுப்புகிறார் என, அவன்: நான் உம்மை விடுவதில்லை; யெகோவாவின் ஜீவன்மேல் ஆணை, உமது ஜீவன்மேலும் ஆணை என்று சொல்லிவிட்டான்; அப்படியே இருவரும் போனார்கள். தீர்க்க 7
தரிசன சிஷ்யரில் ஐம்பதுபேர் போய் அவர்களுக்கு நேரே தூரத்தில் நின்றுகொண்டிருந்தார்கள்; அவர்கள் இருவரும் யோர்தான் கரையிலே நின்றார்கள்.

அப்பொழுது எலியா தன் அங்கியைக் 8
கழற்றி முறுக்கித் தண்ணீரை அடித்தான்; அது இரண்டாகப் பிரிந்துநின்றது; அவர்கள் இருவரும் உலர்ந்த தரைவழியாய் அக்கரைக்குப் போனார்கள். அவர்கள் பின்னும் 9
சென்றுகொண்டிருக்கையில் எலியா எலி

ஷாவைப் பார்த்து: நான் உன்னைவிட்டு எடுத்துக்கொள்ளப்படுமுன்னே நான் உனக்கு என்ன செய்யவேண்டுமெனக் கேள் என்றான். அதற்கு எலிஷா: உம்மி லுள்ள ஆவியிலே எனக்கு இரட்டைப் பங்கு கொடுக்கும்படி வேண்டுகிறேன் என் 10 றான். அதற்கு அவன்: நீ கேட்கிற காரி யம் அரிதானது; நான் உன்னைவிட்டு எடுத் துக்கொள்ளப்படுகையில் நீ என்னைக் கண் டால் அது உனக்குக் கிடைக்கும்; காணு 11 விட்டால் கிடையாது என்றான். அவர் கள் இப்படியே பேசிக்கொண்டு நடக்கை யில், இதோ, அக்கினிரதமும் அக்கினிக் குதிரைகளும் தோன்றி அவர்கள் இருவரை யும் பிரித்தது. எலியா பெருங்காற்றிலே 12 வானத்திற்கு ஏறிப்போனான். எலிஷா இதைக் காணவே: என் தகப்பனே, என் தகப்பனே, இஸ்ரவேலுக்கு ரதங்களும் குதி ரைவீரருமாய் இருந்தவரே என்று சத்த மிட்டுக் கூப்பிட்டான்; அவனை அப்புறம் காணவில்லை. எலிஷா தன் வஸ்திரத்தைப் பிடித்து இரண்டு துண்டாகக் கிழித்துக் கொண்டான்.

13 எலியாவின் அங்கி கீழே விழவே எலிஷா அதை எடுத்துக்கொண்டு திரும்பிப்போய் 14 யோர்தானின் கரையிலே நின்று | எலியா வினிடமிருந்து விழுந்த அங்கியைப் பிடித்து எலியாவின் கடவுளாகிய யெகோவா எங் கே என்று சொல்லிக்கொண்டு தண்ணீரை அடித்தான்; தண்ணீரை அடிக்கவே அது இரண்டாகப்பிரிந்து நின்றது; எலிஷா 15 கடந்துபோனான். எரிகோவின் பக்கத்தில் பார்த்துக்கொண்டு நின்ற தீர்க்கதரிசன சிஷ்யர் இதைக் காணவே, எலியாவின் ஆவி எலிஷாவின்மேல் இறங்கியிருக்கிறது என்று சொல்லி, அவனுக்கு எதிர்கொண்டுபோய்த் தரைமட்டும் குனிந்து அவனை வணங்கி: 16 இதோ, பராக்கிரமசாலிகளான ஐம்பது பேர் உமது அடியாரோடே இருக்கிறார் கள்; அவர்கள் போய் உமது எஜமானைத் தேடிவரும்படி உத்தரவு கொடும்; யெகோ வாவின் ஆவி அவரை எடுத்துக்கொண்டு போய் ஏதேனும் ஒரு மலையிலாவது பள்ளத் தாக்கிலாவது வைத்திருக்கலாம் என்றார் கள். அதற்கு எலிஷா, அவர்களை அனுப்ப 17 வேண்டாம் என்றான். அவன் சலித்துப் போகுமட்டும் அவர்கள் அவனை அலட்டிக் கொண்டிருக்கவே அவன், அனுப்புங்கள் என்றான்; அப்படியே ஐம்பதுபேரை அனுப் பினார்கள்; அவர்கள் மூன்றுநாளாய் அவ 18 னைத் தேடியும் கண்டுபிடிக்கவில்லை; எரி கோவிலிருந்த எலிஷாவினிடம் அவர்கள் திரும்பிவந்தபோது அவன் இவர்களைப் பார்த்து: போகவேண்டாம் என்று நான் உங்களுக்குச் சொன்னேனே என்றான்.

பின்பு அவ்வூரார் எலிஷாவினிடம் 19 வந்து: இதோ, எங்கள் ஆண்டவன் காண் கிறபடி இந்த ஊர் இருக்கும் இடம் ரம் மியமானது, தண்ணீரோ நல்லதல்ல, சினை யழியச்செய்கிறது என்றார்கள். அப்பொ 20 ழுது அவன்: ஒரு புதுத்தோண்டியை எடுத்து அதிலே உப்பைப்போட்டுக் கொண்டு வாருங்கள் என்றான்; அதை அவ னிடம் கொண்டுவந்தார்கள். அவன் நீரூற் 21 றண்டைக்குப்போய் உப்பை அதிலே கொட்டி: இந்தத் தண்ணீரை ஆரோக்கிய மாக்கினேன்; இனி இதினால் சாவும் வராது, சினையழிதலும் நேரிடாது என்று யெகோவா சொல்லுகிறார் என்றான். எலிஷா சொன்ன 22 வார்த்தையின்படியே அந்தத் தண்ணீர் ஆரோக்கியமாயிற்று; இன்னாள்வரைக்கும் அப்படியே இருக்கிறது.

அவன் அவ்விடத்தை விட்டுப் பேதே 23 லுக்குப்போனான்; அவன் வழியிலே வரு கையில் ஊர்ப்பிள்ளைகள் வந்து அவனைப் பார்த்து: மொட்டைத்தலை, வாவா, மொட் டைத்தலை வாவா, என்று சொல்லிப் பரி யாசஞ் செய்தார்கள். அவன் திரும்பி 24 அவர்களைப்பார்த்து, யெகோவாவின் நாமத் திலே அவர்களைச் சபித்தான்; சபிக்கவே இரண்டு கரடிகள் காட்டிலிருந்து வெளிப் பட்டுவந்து அவர்களில் நாற்பத்திரண்டு பிள்ளைகளைப் பீறிப்போட்டன. அவன் அவ் 25 விடம்விட்டுக் கர்மேல்மலைக்குப்போனான்; அங்கிருந்து சமாரியாவுக்குத் திரும்பினான்.

யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தின் 3 பதினெட்டாம் வருஷத்திலே ஆகாபின் குமாரனாகிய யோராம் சமாரியாவில் இஸ்ர வேலின்மேல் ராஜாவாகிப் பன்னிரண்டு வருஷம் அரசாண்டான். அவன் யெகோ 2 வாவின் பார்வையில் தீமையானதைச் செய் தான்; எனினும் தன் தகப்பனைப்போலும் தன் தாயைப்போலுமல்ல; தன் தகப்பன் செய்திருந்த பாகாலின் சிலையை அகற்றி விட்டான். ஆயினும் இஸ்ரவேலைப் பாவஞ் 3 செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களை அவன் விட்டு நீங்கவில்லை.

மோவாபின் ராஜாவாகிய மேசா திராளான 4 ஆடுமாடுகளையுடையவன்; அவன் இஸ்ர வேலின் ராஜாவுக்கு இலட்சம் ஆட்டுக் குட்டிகளையும் மயிர்கத்தரிக்கப்படாத இலட்சம் ஆட்டுக்கடாக்களையும் செலுத்தி வந்தான். ஆகாப் இறந்துபோனபின் மோவா 5

பின் ராஜா இஸ்ரவேலின் ராஜாவுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணிப் பிரிந்துவிட்டான்.
6 அக்காலத்திலே யோராம் ராஜா சமாரியாவைவிட்டு வெளியேறி இஸ்ரவேலை யெல்லாம் இலக்கம்பார்த்தான்.
7 பின்பு அவன் யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தினிடம் ஆள் அனுப்பி: மோவாபின் ராஜா எனக்கு விரோதமாய்க் கலகம்பண்ணிப் பிரிந்தான்; மோவாபியர்மேல் யுத்தம்பண்ண என்னோடே வருகிறீரா என்று கேட்டான். அதற்கு அவன்: நான் வருகிறேன்; நீரும் நானும் ஒன்றே; என் ஜனம் உமது ஜனம், என் குதிரைகள் உமது குதிரைகள் என்று
8 சொல்லிப் | பின்னும், எந்த வழியாய்ப் போவோம் என்றுகேட்டான். அதற்கு யோராம், ஏதோம் வனாந்தரவழியாய் என்றான்.
9 அப்படியே இஸ்ரவேலின் ராஜாவும் யூதாவின் ராஜாவும் ஏதோமின் ராஜாவும் சேர்ந்துபோனார்கள். அவர்கள் ஏழுநாள் சுற்றுப்பிரயாணம் செய்தபின் அவர்களோடு சென்ற இராணுவத்திற்கும் மிருகங்களுக்
10 கும் தண்ணீர் இல்லாமற்போயிற்று. அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா: ஐயோ, இந்த மூன்று ராஜாக்களையும் யெகோவா மோவாபியரின் கையில் ஒப்புக்கொடுக்க
11 வரவழைத்தாரே என்றான். அப்பொழுது யோசபாத்: நாம் யெகோவாவினிடம் விசாரிக்கும்படி யெகோவாவின் தீர்க்கதரிசியாராவது இங்கே இல்லையா என்று கேட்டதற்கு இஸ்ரவேல் ராஜாவின் ஊழியரில் ஒருவன்: எலியாவின் கைகளுக்குத் தண்ணீர்வார்த்த ஷாப்பாத்தின் குமாரனாகிய எலீஷா இங்கே இருக்கிறான் என்று சொன்
12 னான். அது கேட்ட யோசபாத், யெகோவாவின் வார்த்தை அவனிடம் இருக்கிறது என்றான். இஸ்ரவேலின் ராஜாவும் யோசபாத்தும் ஏதோமின் ராஜாவும் அவனிடம் போனார்கள்.
13 எலீஷா இஸ்ரவேலின் ராஜாவைப்பார்த்து: எனக்கும் உமக்கும் என்ன? நீர் உமது தகப்பனின் தீர்க்கதரிசிகளிடத்திற்கும் உமது தாயாரின் தீர்க்கதரிசிகளிடத்திற்கும் போம் என்றான். அதற்கு இஸ்ரவேலின் ராஜா: அப்படியல்ல, யெகோவாவே இந்த மூன்று ராஜாக்களையும் மோவாபியரின் கையில் ஒப்புக்கொடுக்கிறதற்கு வரவழைத்தார் என்
14 றான். அதைக்கேட்ட எலீஷா: யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தின் முகத்தை நான் பாராதிருந்தால் உம்மைக் கவனிக்கமாட்டேன், உம்மைப்பார்க்கவுமாட்டேன்; சேனைகளுடைய யெகோவாவின் ஜீவன்மேல் ஆணை; அவர் சந்நிதியிலேயே நான் நிற்கிறவன். இப்போதும் சரமண்டலக்காரன் 15
ஒருவனை என்னிடம் அழைத்துவாருங்கள் என்றான்; சரமண்டலக்காரன் வந்து வாசித்தபோது யெகோவாவின் கரம் எலீஷாவின் மேல் வந்தது; அவன்: யெகோவா சொல்வ 16
தைக் கேளுங்கள், இந்தப் பள்ளத்தாக்கிலே எங்கும் வாய்க்கால்களை வெட்டுங்கள் என்கிறார். உங்கள் கண் காணக் காற்றடித்து, 17
மழைபெய்யாது; ஆனாலும் இந்தப் பள்ளத்தாக்கிலே தண்ணீர் நிரம்பும்; நீங்களும் உங்கள் ஆடுமாடுகளும் மற்ற மிருகங்களும் குடிப்பீர்கள். இதை யெகோவாவே சொல்லுகிறார். இதுவோ யெகோவாவின் 18
பார்வையில் சிறிய காரியம்; மோவாபியரையே உங்கள் கையில் ஒப்புக்கொடுக்கப் போகிறாரே. நீங்கள் சகல கோட்டைகளை 19
யும் சகல சிறந்த பட்டணங்களையும் அழித்து நல்ல மரங்களையெல்லாம் வெட்டி, ஈரூற்றுகளையெல்லாம் தூர்த்து நல்ல நிலத்தையெல்லாம் கல்லால்கெடுப்பீர்கள் என்றான். மறுநாள் காலமே பலிசெலுத்தப்படும் நேரத்தில், இதோ, தண்ணீர் 20
ஏதோம் தேசவழியாய் ஓடிவந்தது; தேசமெங்கும் தண்ணீர் நிரம்பிற்று.

தங்களோடு யுத்தம்பண்ண ராஜாக்கள் 21
வருகிறதை மோவாபியரெல்லாரும் கேட்டபோது அவர்களில் ஆயுதம் தரிக்கும் வயதுள்ளவர்களும் அதற்கு மேற்பட்டவர்கள் யாவரும் கூடிச்சேர்ந்து தங்கள் எல்லையிலே வந்து நின்றார்கள். மோவாபியர் வந்த 22
போது காலையில் உதித்த சூரிய ஒளியில் அந்தத் தண்ணீர் அவர்களுக்கு எதிரே இரத்தம்போல் சிவப்பாய்க் காணப்பட்டது; ஆகவே அவர்கள்: இது இரத்தம், அந்த 23
ராஜாக்கள் தங்களைத் தாங்களே ஒருவரை யொருவர் வெட்டிக்கொண்டு மாண்டுபோனார்கள்; மோவாபியரே, கொள்ளையிட வாருங்கள் என்று சொன்னார்கள். அவர்கள் 24
இஸ்ரவேலின் பாளையத்திற்கு வந்தபோதோ இஸ்ரவேலர் எழும்பி மோவாபியரை முறியடித்தார்கள்; மோவாபியர் ஓட்டம்பிடித்தார்கள்; இஸ்ரவேலர் அவர்கள் தேசத்திற்குள் புகுந்து அங்கேயும் மோவாபியரை முறியடித்தார்கள். பட்டணங்களை இடித் 25
தார்கள், சகல நல்ல நிலத்திலும் கல்லெறிந்து நிரப்பினார்கள், ஈரூற்றுகளையெல்லாம் தூர்த்தார்கள், நல்ல மரங்களையெல்லாம் வெட்டிப்போட்டார்கள்; கீர்கரேசேத்திலே மாத்திரம் அதின் மதில்கள் இன்னும் இடிபடாதிருந்தன; கவண்காரர் அதைச் சூழ்ந்து அதையும் சேதமாக்கினார்கள். நின்று யுத்தம் செய்வதற்குத் தனக் 26

குச் சக்தியில்லையென்று மோவாபியரின் ராஜா கண்டபோது அவன் ஏதோமின் ராஜா இருக்குமிடத்திற்குப் பாய்ந்துசெல்வ தற்குப் பட்டயம் எடுக்கிற எழுநூறு பேரைக் கூட்டிக்கொண்டு போனான்; அவர் 27 களாலோ முடியாமற்போயிற்று. அப்பொ ழுது அவன் தன் ஸ்தானத்திலே ராஜாவாகப் போகிற தன் கேஷடபுத்திரனைப் பிடித்து அலங்கத்தின்மேல் அவனைத் தகனபலியா கச் செலுத்தினான்; அப்பொழுது இஸ்ர வேலர்மேல் கடுங்கோபம் மூண்டது; அவர் கள் அவனைவிட்டுப் புறப்பட்டுத் தங்கள் தேசத்திற்குத் திரும்பிவிட்டார்கள்.

**4** தீர்க்கதரிசன சிஷ்யரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்த ஒரு ஸ்திரீ எலிஷாவினிடம் வந்து சத்தமிட்டு அழுது: உமது அடியா னுகிய என் புருஷன் இறந்துபோனார்; உமது அடியான் யெகோவாவுக்குப் பயந்த நடந்தவர் என்பது உமக்குத் தெரியும்: கடன்கொடுத்தவன் இப்போது என் இரண்டு குமாரரையும் தனக்கு அடிமைக ளாக்கிக்கொள்ள வந்திருக்கிறான் என்றாள். 2 எலிஷா அவளைப்பார்த்து: நான் உனக்கு என்ன செய்யவேண்டும்? வீட்டிலே உனக்கு என்ன இருக்கிறது, சொல் என்றான். அதற்கு அவள்: ஒரு குடம் எண்ணெயே யன்றி உமது அடியாள் வீட்டிலே வேறொன் 3 றும் இல்லை என்றாள். அப்பொழுது அவன்: நீ போய் உன் அயல்வீட்டுக்காரர் எல்லாரிடத்திலும் வெறும் பாத்திரங்களைக் 4 கேட்டு வாங்கி | உள்ளே போய், உன் பிள்ளைகளுடன் உள்ளே இருந்து கதவைப் பூட்டிக்கொண்டு அந்தப் பாத்திரங்கள் எல்லாவற்றிலும் வார்த்து நிறைத்ததை ஒரு 5 பக்கத்திலே வை என்றான். அவள் அவனை விட்டுப் போய்த் தானும் பிள்ளைகளும் உள்ளே இருந்து கதவைப் பூட்டிக்கொண் டாள்; பிள்ளைகள் பாத்திரங்களை அவளிடம் கொடுக்கக் கொடுக்க அவள் அவைகளில் 6 வார்த்து நிரப்பினாள். அந்தப் பாத்திரங் கள் நிறைந்தபின் அவள் தன் மகன் ஒருவ னைப்பார்த்து: இன்னும் ஒரு பாத்திரம் கொடு என அவன் வேறே பாத்திரம் இல்லை என்றான்; அவ்வளவில் எண்ணெய் நின்று 7 போயிற்று. அவள் போய்க் கடவுளின் மனுஷனுக்கு அதை அறிவிக்கவே அவன்: நீ போய் அந்த எண்ணெயை விற்று உன் கடனைத் தீர்த்துவிட்டு மீந்ததை வைத்து நீயும் உன் பிள்ளைகளும் ஜீவனம்பண்ணுங் கள் என்றான்.

8 பின்பு ஒருநாள் எலிஷா சூனேம் ஊருக் குப் போயிருந்தபோது அங்கே நல்ல நிலை மையிலிருந்த ஒரு ஸ்திரீ போஜனம்பண்ண 9 வரும்படி அவனை வருந்திக் கேட்டுக்கொண் டாள்; அப்படியே அவன் அவ்வழிவருகிற போதெல்லாம் சாப்பாட்டுக்கு அங்கே வந்து தங்குவான். ஒருநாள் அவள் தன் புருஷ னைப் பார்த்து: இதோ, எப்போதும் நம்மி டத்தில் வந்து தங்கிப்போகிறவர் கடவுளின் பரிசுத்த மனுஷன் என்று எனக்குத் தெரி 10 கிறது. நாம் மெத்தையின்மேல் ஒரு சிறிய அறையைக்கட்டி அதில் அவருக்கு ஒரு கட்டிலையும் மேசையையும் நாற்காலியை யும் குத்துவிளக்கையும் வைப்போம்; அவர் நம்மிடத்தில் வரும்போது அங்கே தங்க 11 லாம் என்றாள். ஒருநாள் அவன் அங்கே வந்து அந்த மேல் அறையிலே தங்கி அங்கே 12 படுத்துக்கொண்டிருந்தான். அவன் தன் வேலைக்காரனுகிய கேயாசியைக் கூப்பிட்டு: இந்தச் சூனேமியாளை அழைத்துக்கொண்டு வா என்று சொல்ல, அவன் அவளை அழைத் துக்கொண்டு வந்தான்; அவள் அவனுக்கு 13 எதிரே வந்து நின்றாள். அவன் கேயாசி யைப் பார்த்து: இதோ, எங்கள்பொருட்டு இவ்வளவு கஷ்டபட்டு எங்களை உப சரித்துவருகிறாயே, உனக்கு நான் என்ன செய்யவேண்டும்; ராஜாவினிடமாவது சேனை பதியினிடமாவது உனக்காக நான் பேச வேண்டிய காரியம் ஏதாவது உண்டோ என்று அவளைக் கேள் என்றான். அதற்கு அவள், என் ஜனத்தின் நடுவே நான் குறைவின்றிக் குடியிருந்து வருகிறேன் என்றாள். அவளுக்குச் செய்யவேண்டியது 14 என்னவென்று கேயாசியை அவன் கேட்ட தற்கு அவன், அவளுக்குப் பிள்ளை இல்லை, அவள் புருஷனும் வயது சென்றவன் என் றான். அப்பொழுது அவன், அவளைக் கூப் 15 பிடு என அவளைக் கூப்பிட்டான்; அவள் வந்து வாசற்படியிலே நின்றாள். அப்பொ 16 முது அவன்: குறித்த காலமாகிய அடுத்த வருஷம் இதே காலத்தில் உன் கையிலே ஒரு பிள்ளை இருக்கும் என்றான். அதற்கு அவள்: நீர் சொல்லுகிறது என்ன! கட வுளின் மனுஷனே, என் ஆண்டவனே, உமது அடியாளை வஞ்சிக்கவேண்டாம் என்றாள். அந்த ஸ்திரீ கர்ப்பந்தரித்து எலிஷா தன்னி 17 டம் சொன்னபடியே, அடுத்த வருஷம் அதே காலத்தில் ஒரு ஆண்பிள்ளையைப் பெற்றாள்.

அந்தப் பிள்ளை வளர்ந்தது, அது ஒரு 18 நாள் அறுப்பறுக்கிறவர்களிடத்திலிருந்த தன் தகப்பனண்டை போயிருந்தபோது | தன் தகப்பனைப் பார்த்து: ஐயோ என் தலை, 19 ஐயோ என் தலை என்று சொல்லத் தகப்பன்

தன் வேலைக்காரனிடம், பிள்ளையைத் தாயினிடம் எடுத்துக்கொண்டுபோய்விடு என்
20 ருன். பிள்ளையை எடுத்து அவன் தாயினிடம் கொண்டுபோய்விட்டான், அது மத்
தியானமட்டும் அவள் மடியிலேயே இருந்து
21 செத்துப்போயிற்று. அப்பொழுது அவள் மெத்தைக்கு ஏறிப்போய்க் கடவுளின் மனு
ஷனுடைய கட்டிலின்மேல் பிள்ளையை வைத்து அந்த அறையின் கதவைப் பூட்டி
22 விட்டாள். பின்பு அவள் போய்த் தன் புருஷனைக் கூப்பிட்டு: கடவுளின் மனுஷன் இருக்கும் இடத்திற்கு நான் சீக்கிரமாய்ப் போய்வரவேண்டும், வேலைக்காரரில் ஒரு
வேணியும் ஒரு கழுதையையும் எனக்கு
23 அனுப்பும் என்று சொன்னாள். அவன்: இது அமாவாசையும் அல்ல, ஓய்வுநாளும் அல்லவே; நீ இன்றைக்கு அவரிடத்தைக் குப் போகவேண்டியது என்ன என்று கேட்க அவள்: நான் போகிற காரியம் சரி
24 தான் என்று சொல்லிவிட்டுக் | கழுதையின்மேல் சேணம்வைத்து ஏறித் தன் வேலைக்காரனைப் பார்த்து: இதை ஓட்டிக்கொண்டு போ; நான் உனக்குச் சொன்னாலொழியப் போகிற வழியிலே எங்கும் ஓட்டத்தை
25 நிறுத்தாதே என்று சொல்லிப் | பிரயாணமாகிக் கர்மேல் மலையிலிருந்த கடவுளின் மனுஷனிடம் போனாள்.

கடவுளுடைய மனுஷன் அவளை எதிரே வரக்கண்டு, தன் வேலைக்காரனாகிய கேயாசியைக் கூப்பிட்டு: அதோ, சூனேமியாள்
26 வருகிறாள். நீ அவளுக்கு எதிர்கொண்டு ஓடி, நீ சுகமா? உன் புருஷன் சுகமா? பிள்ளை சுகமா என்று அவளிடம் கேள் என்றான். அவள் சுகந்தான் என்று சொல்
27 லிக்கொண்டே | மலையிலிருந்த கடவுளின் மனுஷனிடம் வந்து அவன் காலைப் பிடித்துக்கொண்டாள்; அப்பொழுது கேயாசி அவளை விலக்கிவிட வந்தான்; கடவுளின் மனுஷனோ: அவளை விட்டுவிடு, அவள் மனக்கசப்பாயிருக்கிறாள்; யெகோவா அதை எனக்கு மறைத்துவைத்தார், எனக்கு அறி
28 விக்கவில்லை என்றான். அப்பொழுது அவள், எனக்கு ஒரு ஆண்பிள்ளை வேண்டுமென்று நான் என் ஆண்டவனிடம் கேட்டதுண்டா? என்னை மோசம்போக்கவேண்டாமென்று நான் சொல்லவில்லையா என்றாள்.
29 அதைக் கேட்டபொழுது அவன் கேயாசியைப் பார்த்து: நீ உன் இடையைக் கட்டிக்கொண்டு, என் தடியை உன் கையிலே பிடித்துக்கொண்டு வழியில் எதிர்ப்படும் எவனுக்கும் உபசாரமொழி கூறுமலும் உபசாரமொழி கூறும் எவனுக்கும் பதிலுரை யாமலும் சென்று, என் தடியை அந்தப் பிள்ளையின் முகத்தின்மேல் வை என்றான். பிள்ளையின் தாயோ: நான் உம்மை விடுவ 30
தில்லை, யெகோவாவின் ஜீவன்மேல் ஆணை, உமது ஜீவன்மேலும் ஆணை என்று சொல்லவே அவன் எழுந்திருந்து அவள் பின்னே போனான்.

கேயாசி அவர்களுக்குமுன்னே போய், 31
அந்தத் தடியைப் பிள்ளையின் முகத்தின் மேல் வைத்தான்; வைத்தும் பேச்சு மூச்சில்லை, ஸ்மரணையுமில்லை; ஆகவே அவன் திரும்பி எலிஷாவுக்கு எதிர்கொண்டு வந்து: பிள்ளை விழிக்கவில்லை என்று அவனுக்கு அறிவித்தான். எலிஷா வீட்டிற்குள் வந்த 32
போது, இதோ, அந்தப்பிள்ளை அவன் கட்டிலின்மேல் செத்ததாய்க் கிடத்தப்பட்டிருந்தது. அவன் உள்ளே போய்ப் பிள்ளையும் 33
தானுமாத்திரம் உள்ளே இருக்கக் கதவைப் பூட்டிக்கொண்டு யெகோவாவை நோக்கி விண்ணப்பம்செய்து | பிள்ளையின் கிட்டப் 34
போய்த் தன் வாய் பிள்ளையின் வாயின் மேலும், தன் கண்கள் அவன் கண்களின் மேலும், தன் உள்ளங்கைகள் அவன் உள்ளங்கைகளின்மேலும் படும்படியாகப் பிள்ளையின்மேல் குப்புறப்படுத்துக்கொண்டான்; அப்பொழுது பிள்ளையின் உடல் அனல் கொண்டது. அவன் எழுந்து அறையில் 35
இங்கும் அங்கும் உலாவித் திரும்பவும் கிட்டப்போய் அவன்மேல் குப்புறப்படுத்தான். அப்பொழுது அந்தப் பிள்ளை ஏழுதரம் தும்மித் தன் கண்களைத் திறந்தான். அப் 36
பொழுது அவன் கேயாசியைக் கூப்பிட்டு, அந்தச் சூனேமியாளைக் கூட்டிக்கொண்டு வா என அவளைக் கூட்டிக்கொண்டு வந்தான்; அவள் அவனிடம் வந்தபோது அவன், உன் பிள்ளையை எடுத்துக்கொண்டு போ என்றான். அப்பொழுது அவள் 37
உள்ளேபோய், அவன் பாதத்திலே விழுந்து தரைமட்டும் பணிந்து தன் பிள்ளையை எடுத்துக்கொண்டு வெளியே போனாள்.

தேசத்திலே பஞ்சமாயிருக்கையில் எலி 38
ஷா ஒருநாள் கில்காலுக்கு வந்தான்; தீர்க்கதரிசன சிஷ்யர் அவனுக்கு எதிரே உட்கார்ந்திருந்தார்கள்; அவன் தன் வேலைக்காரனைக்கூப்பிட்டு: நீ பெரிய பானையை அடுப்பிலே வைத்துத் தீர்க்கதரிசன சிஷ்யருக்கு ஏதாவது சமையல் செய் என்றான்.
ஒருவன் கீரைபறிக்க வெளியிலேபோய் ஒரு 39
பேய்க்கொம்மட்டிக் கொடியைக் கண்டு அதன் காய்களை மடிநிறைய அறுத்து வந்து, அவைகளை அரிந்து பானையிலே போட்டான்; அது இன்னதென்று அவர்க

40 ளுக்குத் தெரியாது. சாப்பிட அதை ஜனங்களுக்கு வார்த்தார்கள்; அவர்கள் அதை ருசிபார்க்கவே சத்தமிட்டு: கடவுளின் மனுஷனே, பானையிலுள்ளது சாவு என்று சொல்லிச் சாப்பிடமுடியாதிருந்தார்கள்.
41 அப்பொழுது அவன் மாவைக் கொண்டு வரச் சொல்லி அதைப் பானையிலே போட்டு ஜனங்கள் சாப்பிடும்படி அவர்களுக்கு வார் என்றான்; அப்புறம் பானையிலே தோஷம் இல்லாமற்போயிற்று.
42 பின்பு பாகால் சலீஷாவிலிருந்து ஒரு மனுஷன் கடவுளின் மனுஷனுக்கு முதற் பலன் ஆகாரத்தை, வாற்கோதுமையின் இருபது அப்பங்களையும் கதிர்களையும், ஒரு சாக்கிலே கொண்டுவந்தான்; அப்பொழுது எலிஷா ஜனங்களுக்குச் சாப்பிடக்கொடு என்
43 றான், அதைக்கேட்ட அவன் வேலைக்காரன்: இதை நான் நூறுபேருக்குப் பரிமாறுவது எப்படி என்றான். அதற்கு அவன்: அதை ஜனங்களுக்குச் சாப்பிடக்கொடு; சாப்பிட்ட பிற்பாடு இன்னும் மீதியிருக்கும் என்று யெகோவா சொல்லுகிறார் என்றான்.
44 அப்படியே அவர்களுக்குப் பரிமாறினான்; யெகோவாவுடைய வார்த்தையின்படியே அவர்கள் சாப்பிட்டதுபோக மீதியும் இருந்தது.

**5** சீரியா தேசத்திலே நாகமான் என்ற ஒருவன் இருந்தான்; இவன் ராஜாவின் படைத்தலைவன்; யெகோவா இவன் மூலமாய்ச் சீரியாவுக்கு வெற்றிகிடைக்கச் செய்திருந்தபடியால், இவன் தன் ஆண்டவனிடம் மதிப்புப்பெற்றுச் செல்வாக்குடையவனாயிருந்தான்; அவன் பராக்கிரமவீரன்; எனி
2 னும் குஷ்டரோகி. சீரியாவிலிருந்து கொள்ளைக்கென்று சென்ற தண்டுகள் இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஒரு சிறு பெண்ணைச் சிறைபிடித்துக்கொண்டு வந்திருந்தார்கள்; அவள் நாகமானின் மனைவிக்குப் பணி
3 விடைசெய்துகொண்டிருந்தாள். ஒருநாள் அவள் தன் நாச்சியாரைப் பார்த்து: என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் எவ்வளவோ நலமாயிருக்கும்; அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள்.
4 அப்பொழுது நாகமான் போய் இஸ்ரவேல் தேசத்துப்பெண் இன்ன இன்ன பிரகாரமாய்ச் சொல்லுகிறாள் என்று தன் ஆண்ட
5 னிடம் அறிவித்தான். சீரியாவின் ராஜா: நல்லது போகலாம், இஸ்ரவேலின் ராஜாவுக்கு நிருபம் தருகிறேன் என்றான்; அப்படியே அவன் பத்துத் தாலந்து வெள்ளியையும் ஆறுயிரம் சேக்கல் நிறை பொன்னை
யும் அலங்காரமான பத்து வஸ்திரங்களையும்
6 எடுத்துக்கொண்டுபோய் | இஸ்ரவேல் ராஜாவினிடத்தில் அந்த நிருபத்தைக் கொடுத்தான். அதிலே: இந்த நிருபத்தை உம்மிடத்தில் கொண்டுவருகிறவன் என் ஊழியக்காரனுகிய நாகமான், நீர் அவன் குஷ்டரோகத்தை நீக்கிவிடும்படி அவனை உம்மிடம் அனுப்பியிருக்கிறேன் என்று எழுதியிருந்
7 தது. இஸ்ரவேலின் ராஜா அந்த நிருபத்தை வாசித்தபோது, அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: சாகவும் பிழைக்கவும் செய்கிறதற்கு நான் ஒரு தெய்வமா? ஒரு மனுஷனுடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடவேண்டும் என்று எனக்கு இவன் நிருபம் அனுப்பியிருக்கிறானே; இவன் என்னோடு சண்டை செய்யச் சமயம் தேடுகிறான், இதைக் கவனித்துக் கொள்ளுங்கள் என்றான்.
8 இஸ்ரவேலின் ராஜா தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்ட செய்தி கடவுளின் மனுஷனுகிய எலிஷாவுக்கு தெரியவந்தபோது அவன்: நீர் உமது வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்வானேன்? அவன் என்னிடத்தில் வந்து, இஸ்ரவேலிலே தீர்க்கதரிசி உண்
9 டென்பதை அறிந்துகொள்ளட்டும் என்று ராஜாவுக்குச் சொல்லியனுப்பினான். அப்படியே நாகமான் தன் குதிரைகளோடும் தன்
10 இரதத்தோடும் வந்து எலிஷாவின் வாசலிலே நின்றான். அப்பொழுது எலிஷா: அவனிடத்தில் ஆள் அனுப்பி, நீ போய் யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணு; உன்
11 தேகம் சுகமாகி, நீ சுத்தமாவாய் என்று சொல்லச்சொன்னான். அதைக்கேட்ட நாகமான் கடுங்கோபங்கொண்டு: அவன் வெளியே வந்து நின்று தன் கடவுளாகிய யெகோவாவின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டுத் தன் கையினால் அந்த இடத்தைத் தடவி, இவ்விதமாகக் குஷ்டரோகத்தை நீக்குவான்
12 என்று நினைத்திருந்தேன். நான் ஸ்நானம் பண்ணிச் சுத்தமாகிறதென்னால் தமஸ்குவின் நதிகளாகிய ஆப்னாவும் பர்பாரும் இஸ்ரவேலின் தண்ணீர்கள் எல்லாவற்றிலும் மேலானவையல்லவோ என்று சொல்லிக் கோபாவேசமாய்த் திரும்பிப் போனான்.
13 அவன் ஊழியர் வந்து அவனோடு பேசி: தகப்பனே, ஒரு பெரிய காரியத்தைச் செய்யும்படி அந்தத் தீர்க்கதரிசி உமக்குச் சொல்லியிருந்தால் நீர் அதைச் செய்வீர் அல்லவா? ஸ்நானம்பண்ணிச் சுத்தமாகும் என்று மாத்திரம் சொல்லியிருக்க என் செய்யக்கூடாது என்று சொன்னார்கள். அப்படி
14 யே அவன் போய்க் கடவுளின் மனுஷனு

டைய சொற்படி யோர்தானில் ஏழுதரம் மூழுகினான்; அவன் தேகம் சிறுபிள்ளையின் தேகம்போலாக மாறிற்று; அவன் சுத்தமானான்:

15 நாகமான் தன் பரிவாரத்தார் அனைவரோடுங்கூடக் கடவுளின் மனுஷனிடம் திரும்பி வந்து அவன் எதிரே நின்று: இதோ, இஸ்ரவேலிலிருக்கிற தெய்வத்தைத் தவிர பூமியெங்கும் வேறே தெய்வம் இல்லை என்பதை அறிந்தேன்; இப்போதும் அடியேன் தரும் காணிக்கையை அங்கீகரிக்க
16 வேண்டுகிறேன் என்றான். அதற்கு எலீஷா நான் வாங்கிக்கொள்ளவே மாட்டேன், யெகோவாவின் ஜீவன்மேல் ஆணை, நான் அவர் சந்நிதியில் நிற்கிறவன் என்று சொன்னான்; அங்கீகரிக்கவேண்டுமென்று அவனை வருந்திக்கேட்டும் உடன்படவேயில்லை.
17 அப்பொழுது நாகமான்: இது இருக்கட்டும், மற்றுமோர் விண்ணப்பம், இரண்டு கோவேறு கழுதைகள் சுமக்கும் இரண்டு பொதிமண் அடியேனுக்குக் கட்டளையிட வேண்டும்; அடியேன் இனி யெகோவாவுக்கேயன்றி அந்திய தெய்வங்களுக்குத் தகனத்
18 தையும் பலியையும் செலுத்துவதில்லை. ஒரு காரியத்தை மாத்திரம் யெகோவா அடியேனுக்கு மன்னிப்பாராக; என் ஆண்டவன் ரிம்மோன் கோவிலுக்குள் தொழுதுகொள்ளப்போகும்போது நான் அவருக்குக் கைலாகு கொடுக்கவேண்டும், அச்சமயத்தில் நானும் ரிம்மோன் கோவிலிலே பணிய வேண்டியதாகும், இப்படி நான் ரிம்மோன் கோவிலிலே பணிவதை யெகோவா அடியே
19 னுக்கு மன்னிப்பாராக என்றான். அதற்கு எலீஷா: சமாதானமாய்ப் போ என்றான்; நாகமான் அவ்விடம்விட்டுச் சிறிதுதூரம்
20 போகவே | கடவுளின் மனுஷனான எலீஷாவின் வேலைக்காரனாகிய கேயாசி தனக்குள்ளே சிந்தித்து: அந்தச் சிரியனாகிய நாகமான் கொண்டுவந்ததை என் ஆண்டவன் அவனிடம் வாங்காமல் விட்டுவிட்டாரே, நான் அவன் பிறகே ஓடி அவனிடம் கொஞ்சமாகிலும் வாங்கிக்கொள்ளுவேன்; யெகோவாவின் ஜீவன்மேல் ஆணை என்று சொல்லிக்
21 கொண்டான். அப்படியே அவன் நாகமான் பின்னே ஓடினான்; கேயாசி தன் பின்னே ஓடிவருவதை நாகமான் கண்டபோது அவனுக்கு எதிர்கொண்டுபோகும்படி இரதத்திலிருந்து குதித்து: சுகசெய்தியா என்று
22 கேட்க | அவன்: சுகசெய்திதான்; தீர்க்கதரிசன சங்கத்தாரில் இரண்டு வாலிபர், இதோ, இப்பொழுதுதான் எப்பிராயீம் மலைநாட்டிலிருந்து என்னிடம் வந்தார்கள்; அவர்களுக்கு ஒரு தாலந்து வெள்ளியும் இரண்டு அலங்கார வஸ்திரங்களும் தரவேண்டும் என்று கேட்க என் எஜமான் என்னை அனுப்பினார் என்றான். அதற்கு நாகமான்: ஒன்
23 றல்ல இரண்டு தாலந்தை வாங்கிக்கொள் என்று சொல்லி அவனை வருந்திக்கொண்டு இரண்டு தாலந்து வெள்ளியை இரண்டு பைகளிலே இரண்டு அலங்கார வஸ்திரங்களோடே கட்டி அவனுக்கு முன்பாகச் சுமந்துபோகத் தன் வேலைக்காரரான இரண்டுபேர்மேல் வைத்தான். கேயாசி
24 மேட்டண்டைக்கு வந்தபோது அவன் அதை அவர்களிடமிருந்து வாங்கி வீட்டிலே வைத்துக்கொண்டு அந்த ஆட்களை அனுப்பிவிட்டான்; அவர்கள் போய்விட்டார்கள்.
25 பின்பு அவன் தன் எஜமானுக்கு எதிரே போய் நிற்கையில்: கேயாசியே, எங்கேயிருந்து வந்தாய் என்று எலீஷா அவனைக் கேட்க, அவன், அடியேன் எங்கும் போகவில்லை என்றான். 26 அப்பொழுது எலீஷா இவனைப் பார்த்து: அந்த மனுஷன் உனக்கு எதிர்கொண்டு வரத் தன் இரதத்திலிருந்து இறங்கித் திரும்பின அந்தச் சமயத்திலே என் மனம் உன்னோடுகூடச் செல்லவில்லையா? பணத்தை வாங்குவதற்கும் வஸ்திரங்களையும் ஒலிவத்தோப்புகளையும் திராட்சத்தோட்டங்களையும் ஆடுமாடுகளையும் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் சம்பாதிப்பதற்கும் இதுவா காலம்? 27 நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததியாரையும் என்றைக்குமாகப் பிடித்திருக்கும் என்றான்; உடனே அவன் குஷ்டரோகியாகி உறைந்த மழையின் நிறமுடையவனாய் எலீஷாவின் சமுகத்தைவிட்டு வெளியே போனான்.

6 தீர்க்கதரிசன சங்கத்தார் எலீஷாவினிடம் வந்து: இதோ, நாங்கள் உமக்கு எதிரே குடியிருக்கிற இந்த இடம் எங்களுக்கு நெருக்கமாயிருக்கிறது. 2 நாங்கள் யோர்தானண்டைபோய் அவ்விடத்திலே ஆளுக்கு ஒரு உத்திரத்தை வெட்டிக் குடியிருப்பதற்கு அங்கே எங்களுக்கு ஒரு இடத்தை அமைத்துக்கொள்வோம் என்று கேட்க அவன், போங்கள் என்றான். 3 அவர்களில் ஒருவன், நீரும் உமது அடியாரோடு வர வேண்டுகிறேன் என்றான். அதற்கு அவன், நானும் 4 வருகிறேன் என்று சொல்லி | அவர்களோடு கூடப் போனான்; அவர்கள் யோர்தானருகே வந்தபோது, மரங்களை வெட்டினார்கள். 5 ஒருவன் ஒரு உத்திரத்தை வெட்டி விழுத்துகையில் கோடரி தண்ணீரிலே விழுந்துவிட்டது; அவன்: ஐயோ என் ஆண்டவனே,

அது இரவல் கோடாரியாயிற்றே என்று கூவி
6 ஞன். கடவுளின் மனுஷன், அது எங்கே விழுந்தது என்று கேட்டான்; அவன் அந்த இடத்தைக் காண்பித்தான்; எலீஷா ஒரு கொம்பை வெட்டி அதை அந்த இடத்தில் எறிந்து அந்தக் கோடாரியை மிதக்கப் பண்ணி, அதை எடுத்துக்கொள் என்றான்,
7 அப்படியே அவன் தன் கையை நீட்டி அதை எடுத்துக்கொண்டான்.
8 சீரியாவின் ராஜா இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம் பண்ணுகையில் தன் ஊழிய ரோடே ஆலோசனை செய்து இன்னின்ன இடங்களிலே பதிவிருப்போம் என்று
9 சொல்லியிருந்தான்: கடவுளின் மனுஷனே இஸ்ரவேல் ராஜாவினிடம் ஆள் அனுப்பி இன்ன இடத்துக்குப் போகவேண்டாம்; ஜாக்கிரதை, சீரியர் அங்கே பதிவிருக்கிறார்
10 கள் என்று சொல்லச்சொன்னான். இஸ்ரவேல் ராஜா கடவுளின் மனுஷன் எச்சரித்துத் தனக்குத் தெரிவித்த இடத்திற்கு ஆட்களை அனுப்பிப்பார்த்து ஜாக்கிரதையாயிருந்துகொள்வான்; இப்படி நடந்தது ஒரு
11 முறை இரண்டுமுறைமாத்திரமல்ல. இக்காரியத்தினிமித்தம் சீரியா ராஜாவின் இருதயம் கலக்கமுற்றது; அவன் தன் ஊழியரை அழைத்து: நம்மவர்களில் இஸ்ரவேலின் ராஜாவுக்கு உளவாயிருப்பவன் யார், எனக்கு அறிவிக்கமாட்டீர்களா என்று
12 கேட்டான். அப்பொழுது அவன் ஊழியரில் ஒருவன்: அப்படியல்ல, என் ஆண்டவனுடைய ராஜாவே, நீர் உமது பள்ளியறையிலே பேசுகிற வார்த்தைகளையும் இஸ்ரவேலிலிருக்கிற தீர்க்கதரிசியாகிய எலீஷா இஸ்ரவேலின் ராஜாவுக்கு அறிவிப்பான் என்றான்.
13 அதைக்கேட்ட சீரியா ராஜா: நீங்கள்போய் அவன் எங்கே இருக்கிறான் என்று பாருங்கள், நான் ஆட்களை அனுப்பி அவனைப் பிடிப்பேன் என்றான்; அவன் தோத்தானில் இருக்கிறான் என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டது.
14 அப்பொழுது அவன் அங்கே குதிரைகளையும் இரதங்களையும் பலமான படையையும் அனுப்பினான்; அவர்கள் இராக்காலத்திலே வந்து ஊரை வளைந்துகொண்
15 டார்கள். கடவுளின் மனுஷனுடைய வேலைக்காரன் அதிகாலமே எழுந்து வெளியே செல்லுகையில், இதோ, படை வீரர் குதிரைகளோடும் இரதங்களோடும் ஊரைச் சுற்றிக்கொண்டிருக்கக்கண்டான்; காணவே வேலைக்காரன் எலீஷாவினிடம் வந்து: ஐயோ என் ஆண்டவனே, என்ன
16 செய்வோம் என்றான். அதற்கு அவன்: பயப்படாதே, அவர்களோடிருக்கிறவர் களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகமானவர்கள் என்றான்; அப்பொழுது
17 எலீஷா விண்ணப்பஞ் செய்து: யெகோவாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்றான், யெகோவா அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார்; இதோ, எலீஷாவைச் சுற்றி மலை எங்கும் அக்கினிமயமான குதிரைகளும் ரதங்களும்
18 நிறைந்திருப்பதை அவன் கண்டான். படை வீரர் எலீஷாவினிடம் வருகையில் அவன் யெகோவாவை நோக்கி விண்ணப்பஞ் செய்து: இந்த ஜனங்கள் குருடராகும்படி செய்யும் என்று கேட்டான்; எலீஷா கேட்டுக்கொண்டபடியே அவர்கள் குருடராகும்
19 படி செய்தார். எலீஷா அவர்களோடு பேசி: இது உங்கள் வழி அல்ல; நீங்கள் தேடுகிற ஊரும் இதுவல்ல; என்னோடு வாருங்கள்; நீங்கள் தேடுகிற மனுஷனிடம் நான் உங்களைக் கூட்டிக்கொண்டுபோவேன் என்று சொல்லி அவர்களைச் சமாரியாவுக்குக் கூட்டிக்கொண்டுபோனான்.
20 அவர்கள் சமாரியாவுக்குள் வந்தபோது எலீஷா: யெகோவாவே, இவர்கள் பார்க்கும்படி இவர்கள் கண்களைத் திறந்தருளும் என்று வேண்டிக்கொண்டான்; அப்படியே யெகோவா அவர்கள் கண்களைத் திறந்தருளினார்; அவர்கள் கண் விழித்துப் பார்க்கும்போது, இதோ, அவர்கள் சமாரியாவின் நடுவே இருந்தார்கள்.
21 இஸ்ரவேலின் ராஜா அவர்களைக் கண்டபோது, எலீஷாவைப் பார்த்து: என் தகப்பனே, நான் இவர்களை வெட்டிவிடவேண்டுமா என்று கேட்க | அவன்: நீர் வெட்டவேண்டாம்;
22 நீர் உமது பட்டயத்தாலும் உமது வில்லினாலும் சிறையாக்கிக்கொண்டவர்களை வெட்டுகிறதுண்டோ? இவர்கள் போஜனபானம் செய்துவிட்டுத் தங்கள் ஆண்டவனிடம் போகும்படி அவர்கள் பசி தாகத்தை நீக்க அவர்களுக்கு ஆகாரம் கொடும் என்றான்.
23 அப்படியே ராஜா அவர்களுக்கு நல்ல போஜனம் அளித்தான்; அவர்கள் போஜனபானம் செய்தபின்பு அவர்களை அனுப்பிவிட்டான்; அவர்கள் தங்கள் ஆண்டவனிடம் திரும்பிப்போனார்கள்; அப்பால் சீரியரின் கொள்ளைத்தண்டுகள் இஸ்ரவேல் தேசத்தினுள் வரவில்லை.
24 இதின்பின்பு சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் தன் சேனை முழுவதையும் கூட்டிக்கொண்டுவந்து சமாரியாவை முற்றுகை போட்டான்.
25 முற்றுகையினாலே சமாரியாவில் கொடிய பஞ்சமுண்டாயிற்று; ஒரு

கழுதைத் தலை எண்பது வெள்ளிச் சேக்கலுக்கும் காற்படி புறுமலம் ஐந்து வெள்ளிச்
26 சேக்கலுக்கும் விற்கப்பட்டது. இஸ்ரவேலின் ராஜா ஒருநாள் அலங்கத்தின்மேல் நடந்துபோகையில், ஒரு ஸ்திரீ அவனைப்
பார்த்துக் கூப்பிட்டு, ராஜாவே, என் ஆண்
27 டவனே, இரட்சியும் என்றாள். அதற்கு அவன்: யெகோவா உன்னை இரட்சியாதிருக்கால் நான் எதிலிருந்து எடுத்து உன்னை இரட்சிப்பேன், களத்திலிருந்தா, ஆலையி
28 லிருந்தா என்று சொல்லிப் | பின்னும் அவளிடம்: உன் கஷ்டம் என்ன என்று கேட்டான். அதற்கு அவள்: இந்த ஸ்திரீ என்னிடம் வந்து: உன் மகனைத்தா, அவனை இன்று தின்போம்; என் மகனை நாளைக்குத்
29 தின்போம் என்றாள். அப்படியே என் மகனை ஆக்கித்தின்றோம்; மறுநாள் நான் இவளிடம்: நாம் உன் மகனைத் தின்னும்படி அவனைத்தா என்றேன்; அவளோ தன் மகனை
30 ஒளித்துவிட்டாள் என்றாள். அந்த ஸ்திரீயின் வார்த்தைகளை ராஜா கேட்டவுடனே அவன் அலங்கத்தின்மேல் நடந்துகொண்டிருக்கையிலேயே தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டான்; உள்ளே தன் உடலோடு அவன் இரட்டு உடுத்தியிருந்ததை
31 ஜனங்கள் கண்டார்கள். அவன் ஷாப்பாத்தின் மகனாகிய எலிஷாவின் தலை அவன் மேல் இராதபடி இன்றே செய்யாதிருந்தால் தேவன் தமது சித்தப்படியெல்லாம் எனக்குச் செய்வாராக என்று சொன்னான்.
32 எலிஷா தன் வீட்டில் உட்கார்ந்திருந்தான்; மூப்பரும் அவனோடு உட்கார்ந்திருந்தார்கள்; அச்சமயத்திலே ராஜா ஒரு ஆளைத் தனக்கு முன்னே அங்கே போகும்படி அனுப்பினான்; இந்த ஆள் எலிஷாவினிடத்துக்கு வருவதற்குள் எலிஷா தன்னோடிருந்த மூப்பரைப்பார்த்து: பார்த்தீர்களா, அந்தக் கொலைபாதகனுடைய மகன் என் தலையை வாங்க ஆள் அனுப்பினான்; இதோ பாருங்கள், அந்த ஆள் வரும்போது நீங்கள் கதவைச் சாத்திக் கதவோடு சாய்ந்துகொள்ளுங்கள்; அவனுக்குப் பின்னாக அவன் ஆண்டவனுடைய காலடிச் சத்தம் கேட்
33 கிறதே என்றான். அவர்களோடு அவன் பேசிக்கொண்டிருக்கையிலேயே அந்த ஆள் அவனிடம் வந்து: இதோ, இது யெகோவாவினால் வந்த தீங்கு, யெகோவா துணைசெய்வார் என நான் இன்னும் காத்திருப்பதெப்படி என்று ராஜா சொல்லுகிறார் என்றான்.

7 அப்பொழுது எலிஷா யெகோவா சொல்வதைக் கேளுங்கள்; நாளை இந்நேரத்தில் சமாரியாவின் வாசலிலே ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும் இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும் விற்கப்படும் என்று யெகோவா சொல்லுகிறார் என்றான். அப்பொழுது 2 ராஜாவுக்குக் கையாகு கொடுக்கிற பராக்கிரமசாலியானவன் கடவுளின் மனுஷனோடு பேசி: இதோ, யெகோவா வானத்திலே மதகுகளைத் திறந்தாலும் இப்படி நடக்குமா என அவன்: உன் கண்களினாலே அதைக் காண்பாய், நீயோ அதைச் சாப்பிடமாட்டாய் என்றான்.

குஷ்டரோகிகள் நாலுபேர் ஊர் வாசலண் 3 டையில் இருந்தார்கள்; அவர்கள் ஒருவரையொருவர் பார்த்து: நாம் இங்கே இருந்து சாகவேண்டியது என்ன? ஊருக் 4 குள போவோமென்றால் ஊரிலே பஞ்சம், அங்கே சாவோம்; நாம் இங்கேயே உட்கார்ந்திருப்போமென்றால் இங்கேயும் சாவோம்; ஆகவே இப்பொழுது நாம் சீரியருடைய பாளையத்தில் போய்ச் சேர்ந்துகொள்வோம் வாருங்கள்; அவர்கள் நம்மை உயிரோடே வைத்தால் உயிரோடிருக்கிறோம், அவர்கள் நம்மைக் கொன்றால், சாகிறோம் என்று சொல்லிச் | சீரியரின் பாளையத்தி 5 னுள் போக இருட்டினவுடனே எழுந்திருந்து சீரியருடைய பாளையத்தின் முனையில் வந்தார்கள்; இதோ, அங்கே ஒருவருமில்லை. ஆண்டவர் சீரியரின் இராணுவத்திற்கு இர 6 தங்களின் இரைச்சலையும் குதிரைகளின் இரைச்சலையும் பெரிய சேனையின் இரைச்சலையும் கேட்கப்பண்ணினதினாலே அவர்கள் ஒருவரையொருவர் பார்த்து: இதோ, நம்மோடு போருக்கு வர இஸ்ரவேலின் ராஜா ஏத்தியரின் ராஜாக்களையும் எகிப்தியரின் ராஜாக்களையும் கூலிபேசி அழைத்திருக்கிறான் என்று சொல்லி | இருட்டினவுடனே எழுந்திருந்து ஓட்டம் 7 பிடித்தார்கள்; தங்கள் கூடாரங்களையும் தங்கள் குதிரைகளையும் தங்கள் கழுதைகளையும் தங்கள் பாளையத்தையும் அவைகள் இருந்தபடியே விட்டுவிட்டுத் தங்கள் பிராணன் மாத்திரம் தப்பும்படி ஓடிப்போனார்கள். அந்தக் குஷ்டரோகி 8 கள் பாளையத்தின் முனையில் வந்தபோது, ஒரு கூடாரத்திற்குள் புகுந்து புசித்துக் குடித்து அதிலிருந்த வெள்ளியையும் பொன்னையும் வஸ்திரங்களையும் எடுத்துக் கொண்டுபோய் ஒளித்துவைத்துவிட்டுத் திரும்பிவந்து மற்றுமொரு கூடாரத்திற்குள் புகுந்து அதிலிருந்தும் அப்படியே எடுத்துக் கொண்டுபோய் ஒளித்துவைத்தார்கள்.

9 பின்பு அவர்கள் ஒருவரோடொருவர் பேசி: நாம் செய்கிறது நியாயமல்ல, இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் பேசாதிருந்து பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் நாம் குற்றவாளிகளாவோம்; இப்போதும் நாம் ராஜாவின் அரமனைக்குப் போய் இதை அறிவிப்போம் வாருங்கள் 10 என்றார்கள். அப்படியே அவர்கள் வந்து ஊர் வாசலில் நின்ற காவலாளரைக் கூப்பிட்டு: நாங்கள் சீரியரின் பாளையத்திற்குப் போய்வந்தோம்; அங்கே ஒருவரும் இல்லை, ஒரு மனுஷனுடைய சத்தமும் கேட்கவில்லை, கட்டியிருக்கிற குதிரைகளும் கட்டியிருக்கிற கழுதைகளும் கூடாரங்களும் இருந்தபடியே இருக்கின்றன என்று அவர் 11 களுக்குச் சொன்னார்கள். அப்பொழுது வாசல் காவலாளர் சத்தமிட்டு இதை அறிவிக்கவே ஜனங்கள் அரமனைக்குள் போய் 12 அதை அறிவித்தார்கள். அப்பொழுது ராஜா இரவிலேயே எழுந்திருந்து தன் ஊழியரைக் கூப்பிட்டு: சீரியர் நமக்குச் செய்ய யோசிக்கிறது இன்னதென்று உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; பஞ்சத்தினாலே நாம் பட்டினியாயிருக்கிறோம் என்பது அவர்களுக்குத் தெரியும்; ஆகையால் நாம் ஊரை விட்டு வெளியே போனால் நம்மை உயரோடே பிடித்துக்கொண்டு ஊருக்குள் பிரவேசிக்கலாம் என்று யோசித்து அவர்கள் பாளையத்தை விட்டுப்போய் வெளியிலே ஒளித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று 13 சொன்னான். அதைக்கேட்ட அவன் ஊழியரில் ஒருவன் இங்கே மீதியாயிருக்கிற குதிரைகளில் ஐந்து குதிரைகளை ஆட்கள் கொண்டுபோகும்படி உத்தரவு கொடும்; அவர்களை நாம் அனுப்பிப்பார்ப்போம், அவர்கள் இங்கே நின்றால் இங்கே மீதியாயிருக்கிற சகல இஸ்ரவேலையும்போலவே அவர்கள் பிழைப்பார்கள்; அவர்கள் போவதென்றால் இங்கே அழியப்போகிற சகல இஸ்ரவேலையும்போலவே அவர்கள் அழி 14 வார்கள் என்றான். அப்படியே குதிரைகள் பூட்டியிருந்த இரண்டு இரதங்களைக் கொண்டுவந்தார்கள்; ராஜா, போய்ப் பாருங்கள் என்று சொல்லிச் சீரியர் சேனையைத் தொடர்ந்துபார்க்கும்படி அனுப்பினான். 15 அவர்களும் பார்க்கும்படி யோர்தான்மட்டும் போனார்கள்; சீரியர் பரபரப்பாய் ஓடுகையில் வஸ்திரங்களையும் தட்டுமுட்டுகளையும் எறிந்துவிட்டு ஓடினார்கள், இவைகள் வழியெல்லாம் நிறைந்துகிடந்தன; அனுப்பப்பட்டவர்கள் திரும்பிவந்து ராஜாவுக்கு 16 அதை அறிவித்தார்கள். அறிவித்தமாத்திரமே ஜனங்கள் வெளியேறிச் சீரியர் பாளையத்தைக் கொள்ளையிட்டார்கள்; யெகோவா சொல்லியிருந்தபடியே ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும் இரண்டுமரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும் விற்கப்பட்டது.

17 ராஜா தனக்குக் கைலாகு கொடுக்கிற அந்தப் பராக்கிரமசாலியை ஊர் வாசல் காவலுக்குப் பொறுப்பாளியாக நியமித்திருந்தான்; ஊர் வாசலில் ஜனங்கள் அவன் மிதிபட்டுச் செத்துப்போனார்; ராஜா தன்னிடம் வந்தபோது கடவுளின் மனுஷன் சொல்லியிருந்தபடியே இது 18 நிகழ்ந்தது. கடவுளின் மனுஷன் ராஜாவுக்குச் சொல்லியிருந்தபடியெல்லாம் நடந்தது: இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும், ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும் நாளை இந்நேரத்திலே சமாரியாவின் வாசலிலே விற்கும் என்று 19 சொல்லியிருந்தான். அதற்கு அந்தப் பராக்கிரமசாலி கடவுளின் மனுஷனிடம்: இதோ, யெகோவா வானத்திலே மதகுகளைத் திறந்தாலும் இப்படி நடக்குமா என்று கேட்க எலீஷா, இதோ, உன் கண்களினாலே அதைக் காண்பாய், நீயோ அதைச் சாப்பிடமாட்டாய் என்று சொல்லியிருந்தான். 20 அந்தப்படியே அவனுக்கு நடந்தது; ஊர் வாசலில் ஜனங்கள் அவன் மிதியுண்டு அவன் செத்துப்போனார்.

8 எலீஷா தான் உயிர்ப்பித்த பிள்ளையின் தாயை ஒருநாள் கண்டு பேசி: நீ உன் வீட்டாரையும் கூட்டிக்கொண்டு இவ்விடம் விட்டுப் போய் வேறெங்கேயாகிலும் சஞ்சரி; யெகோவா இந்த தேசத்திலே பஞ்சத்தை வருவிக்கிறார், பஞ்சம் வருவது நிண்ணம், அது ஏழு வருஷம் தேசத்திலிருக்கும் 2 என்று சொல்லியிருந்தான். கடவுளின் மனுஷன் தனக்குச் சொன்னபடியே அந்தஸ்திரீ செய்து தன் வீட்டாரையும் கூட்டிக்கொண்டு அவ்விடம்விட்டுப் புறப்பட்டுப் பெலிஸ்தியர் தேசத்திற்குப் போய் அங்கே 3 ஏழுவருஷம் சஞ்சரித்தாள் ஏழுவருஷம் சென்றபின்பு அவள் பெலிஸ்தியரின் தேசத்தைவிட்டுத் திரும்பி வந்து, தன் வீட்டையும் தன் வயலையும் பெறுவதற்கு ராஜாவினிடம் முறையிடப்போனாள். 4 அந்தச் சமயத்திலே ராஜா கடவுளின் மனுஷனுடைய வேலைக்காரனாகிய கேயாசியோடு பேசிக்கொண்டிருந்தான். எலீஷா செய்த மகத்தான செயல்களையெல்லாம் தனக்கு விவரமாய்ச் சொல்லும்படி கேட்டுக்கொண்டிருந்தான். 5 செத்துப்போனவனை உயிர்ப்பித்தார்

என்பதை அவன் ராஜாவுக்கு விவரித்துக் கொண்டிருக்கையிலே, இதோ, அவன் உயிர்ப்பித்த பிள்ளையின் தாய் அங்கே வந்து தன் வீட்டையும் தன் வயலையும்பற்றி ராஜாவினிடம் முறையிட்டாள். அப்பொழுது கேயாசி: ராஜாவே, என் ஆண்டவனே, இவள்தான் அந்த ஸ்திரீ, எலிஷா உயிர்ப்பித்த இவளுடைய குமாரன் இவன்தான் 6 என்றான். ராஜா அந்த ஸ்திரீயைக் கேட்டதற்கு அவள் அதை அவனுக்கு விவரித்துச் சொன்னாள். ராஜா அவள் விஷயத்தைப் பற்றி அரமனை உத்தியோகஸ்தன் ஒருவனுக்குக் கட்டளையிட்டு, அவளுக்குரிய யாவும், அவள் தேசத்தை விட்டுப் போனகாள் முதல் இதுவரையுள்ள அந்த வயலின் வருமானம் முழுதும் அவளுக்குக் கிடைக்கும்படி செய் என்றான்.

7 எலிஷா தமஸ்குவுக்குப் போயிருந்த ஒரு சமயத்தில் சீரியா ராஜாவாகிய பெனாதாத் வியாதியாயிருந்தான்; கடவுளின் மனுஷன் இங்கே வந்திருக்கிறான் என்று அவனுக்கு 8 அறிவிக்கப்பட்டபோது | ராஜா அசாவேலைக் கூப்பிட்டு: நீ உன்னோடு காணிக்கையை எடுத்துக்கொண்டுபோய்க் கடவுளின் மனுஷனைப் பார்த்து, நான் இந்த வியாதி நீங்கிப் பிழைப்பேனா என்று அவன் மூலமாய் யெகோவாவினிடம் விசாரணை செய்து 9 வா என்று சொன்னான். அசாவேல் தமஸ்குவின் உசிதமான வஸ்துக்கள் யாவற்றிலும் காணிக்கையாக நாற்பது ஒட்டகச் சுமையை எடுத்துக்கொண்டு அவனைப் பார்க்கப் போனான்; அவன் எலிஷாவினிடம் வந்து அவனுக்கு எதிரே நின்று: சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் என்னும் உமது குமாரன் என்னை உம்மிடம் அனுப்பி, இந்த வியாதி நீங்கிப் பிழைப்பேனா என்று விசாரிக்கச் 10 சொன்னார் என்றான். எலிஷா அவனைப் பார்த்து: நீ போய், வியாதி நீங்கிப் பிழைப்பது நிண்ணம் என்று அவனுக்குச் சொல், ஆனாலும் அவன் சாகவே சாவான் என்பதை யெகோவா எனக்குக் காண்பித்தார் 11 என்றான். பின்பு கடவுளின் மனுஷன் தன் முகத்தைத் திருப்பாமல் அவன் முகம் கவிழுமட்டும் நோக்கிக்கொண்டிருந்து 12 அழத் தொடங்கினான். அதைகண்ட அசாவேல், என் ஆண்டவன் அழுகிறது என்ன என்று கேட்க அவன்: நீ இஸ்ரவேலருக்குச் செய்யப்போகிற தீங்கை நான் அறிந்தவனாய் அழுகிறேன்; நீ அவர்கள் கோட்டைகளை அக்கினிக்கு இரையாக்குவாய், அவர்கள் வாலிபரைப் பட்டயத்தால் கொன்றுபோடுவாய், அவர்கள் குழந்தைகளைத் தரையோடே மோதியடிப்பாய், அவர்கள் கர்ப்பவதிகளைக் கீறிப்போடுவாய் என்றான். அசா 13 வேல் அதைக் கேட்டு: இத்தனை பெரிய காரியத்தைச் செய்ய நாயடியேன் எம்மாத்திரம் என்றான். அதற்கு எலிஷா: நீ சீரியாவின்மேல் ராஜாவாவாய் என்பதை யெகோவா எனக்குக் காட்டினார் என்றான். இவன் 14 எலிஷாவை விட்டுத் தன் ஆண்டவனிடம் வந்தபோது, அவன்: எலிஷா உனக்குச் சொன்னதென்ன என்று கேட்க இவன், நீர் வியாதி நீங்கிப் பிழைப்பீர் என்று எனக்குச் சொன்னான் என்றான். மறுநாளிலோ ஒரு 15 போர்வையை எடுத்துத் தண்ணீரிலே தோய்த்து அவன் முகத்தின்மேல் விரித்தான்; அவன் செத்துப்போனான்; அசாவேல் அவன் ஸ்தானத்திலே ராஜாவானான்.

இஸ்ரவேல் ராஜாவாகிய ஆகாபின் குமா 16 ரன் யோராமுடைய ஐந்தாம் வருஷத்தில் யோசபாத் யூதாவில் இன்னும் ராஜாவாயிருக்கையிலேயே, யோசபாத்தின் குமாரனாகிய யோராம், யூதாவின் ராஜாவாகி அரசாளத் தொடங்கிவிட்டான். அவன் ராஜா 17 வானபோது அவனுக்கு முப்பத்திரண்டு வயது; எட்டு வருஷம் எருசலேமிலே அரசாண்டான். அவன் இஸ்ரவேல் ராஜாக் 18 களின் வழியிலே நடந்து ஆகாபின் வீட்டார் செய்ததுபோலவே செய்துவந்தான்; ஆகாபின் குமாரத்தி அவனுக்கு மனைவியாயிருந்தாள்; அவன் யெகோவாவின் பார்வையில் தீமையானதைச் செய்தான். யெகோ 19 வாவோ தமது தாசனாகிய தாவீதினிமித்தம் யூதாவை அழித்துவிட மனமற்றிருந்தார்; அவர் தாவீதினிடம்: உன் குமாரருக்குள்ளே எந்நாளும் ஒரு விளக்கை உனக்குக் கட்டளையிடுவேன் என்று சொல்லியிருக்கிறாரே.

அவன் நாட்களிலே ஏதோமியர் யூதா 20 வுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணிப் பிரிந்து தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்திக் கொண்டார்கள். ஆகவே யோராம் தன் 21 சகல ரதங்களோடுங்கூடச் சாயீருக்குப் போனான்; அங்கே ஏதோமியர் அவனை வளைந்துகொள்ளவே அவன் இரவில் எழுந்திருந்து ஏதோமியரையும் அவர்கள் ரதங்களின் தலைவரையும் அடித்துத் தள்ளினான். ஜனங்கள் தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப்போனார்கள். இப்படியாக ஏதோமியர் 22 யூதாவுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணிப் பிரிந்துபோனார்கள்; இந்நாள்மட்டும் பிரிந்தே இருக்கிறார்கள். அதே காலத்தில் லிப்னா ஊராரும் கலகம்பண்ணிப் பிரிந்தார்கள்.

யோராமைப்பற்றியும் மற்ற விவரங்களும் 23 அவன் செய்தவை அனைத்தும் யூதாவின்

ராஜாக்களைப்பற்றிய தினவர்த்தமானம் என்
24 னும் நூலில் எழுதியிருக்கிறதே. யோராம் நித்திரையடைந்து தன் பிதாக்களோடு சேரவே தாவீது நகரத்தில் தன் பிதாக்களோடே அடக்கம் பண்ணப்பட்டான். அவன் குமாரனுகிய அகசியா அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

25 இஸ்ரவேலின் ராஜாவும் ஆகாபின் குமாரனுமாகிய யோராமுடைய பன்னிரண்டாம் வருஷத்திலே யூதாவின் ராஜாவாகிய யோராமின் குமாரன் அகசியா ராஜாவானான்.

26 அகசியா ராஜாவானபோது அவனுக்கு இருபத்திரண்டு வயது. அவன் எருசலேமில் ஒரே வருஷம் அரசாண்டான். அவன் தாயின் பேர் அத்தாலியாள்; அவள் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஒம்ரியின் குமாரத்தி.

27 அவன் ஆகாபுடைய குடும்பத்தாரின் வழியிலே நடந்து ஆகாபின் குடும்பத்தாரைப்போல் யெகோவாவின் பார்வையில் தீமைபானதைச் செய்தான். அவன் ஆகாபின் குடும்பத்திலே சம்பந்தங் கலந்திருந்
28 ததால் இப்படியாயிற்று. அவன் ஆகாபின் குமாரனுகிய யோராமோடுகூடக் கிலெயாத்திலுள்ள ராமோத்திற்குச் சிரியாவின் ராஜாவாகிய அசாவேலோடு யுத்தம்பண்ணப் போனான்; சிரியர் யோராமை வெட்டிக்
29 காயப்படுத்தினார்கள். ராஜாவாகிய யோராம் தான் சிரியாவின் ராஜாவாகிய அசாவேலோடு யுத்தம் பண்ணுகையில் சிரியர் ராமாவிலே தன்னை வெட்டின காயங்களை ஆற்றிக்கொள்ள யிஸ்ரெயேலுக்கு போயிருந்தான்; ஆகாபின் குமாரனுகிய யோராம் வியாதியாயிருந்தபடியினால் யூதாவின் ராஜாவாகிய யோராமின் குமாரன் அகசியா அவனைப் பார்க்கும்படி யிஸ்ரெயேலுக்குப் போனான்.

9 தீர்க்கதரிசியாகிய எலிஷா தீர்க்கதரிசனசிஷ்யரில் ஒருவனைக் கூப்பிட்டு: நீ இடை கட்டிக்கொண்டு இந்தத் தைலக் குப்பியை உன் கையில் எடுத்துக்கொண்டு கிலெ
2 யாத்திலுள்ள ராமோத்திற்குப் போ. நீ அங்கே சேரும்போது நிம்சியின் மகனான யோசபாத்தின் குமாரன் யேகூ இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து, அவன் இருக்குமிடத்தினின்று சென்று அவன் சகோதரரின் நடுவிலிருந்து அவனை எழுந்திருக்கப்பண்ணி உள் அறையொன்றுக்கு அவனை அழைத்துக்கொண்டு
3 போய்த் , தைலக்குப்பியை எடுத்து அவன் தலையின்மேல் வார்த்து: உன்னை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணியிருக்கிறேன் என்று யெகோவா சொல்லுகிறார் எனச் சொல்லிவிட்டுக் கதவைத் திறந்துகொண்டு தாமதியாமல் ஓடிப்போ
என்றான். தீர்க்கதரிசியின் ஊழியனுகிய 4
அந்த வாலிபன் அப்படியே கிலெயாத்திலுள்ள ராமோத்திற்குப் போனான். அவன் 5
அங்கே வந்தபோது, இதோ, படைத்தலைவர்கள் ஒரு வீட்டிலே உட்கார்ந்திருந்தார்கள். அவன் அங்கே போய்: படைத்தலைவரே, உமக்கு ஒரு காரியம் சொல்லவேண்டும் என்றான். அதற்கு யேகூ: எங்கள் அனைவரிலும் யாருக்கு என்று கேட்க, அவன் தலைவராகிய உமக்கே என்றான். அவன் எழுந்து அறைவீட்டிற்குள் போன 6
போது இவன் அந்தத் தைலத்தை அவன் தலையின்மேல் வார்த்து: இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா சொல்லுகிறதைக் கேள், உன்னை யெகோவாவின் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினேன். நான் என் ஊழியராகிய தீர்க்க 7
தரிசிகளின் இரத்தப்பழியையும் யெகோவாவின் சகல ஊழியரின் இரத்தப்பழியையும் யேசபேலின் கையிலே வாங்கும்படி நீ உன் ஆண்டவனுகிய ஆகாபின் குடும்பத்தை அழித்துவிடவேண்டும். ஆகாபின் 8
குடும்பமெல்லாம் அழியும்படி இஸ்ரவேலிலே அவனுடையவர்களில் அடைபட்டவனையும் அடைபடாதவனையும் சங்கரிப்பேன்; ஆகாபுக்கு ஒரு ஆண்பிள்ளையாகிலும் இராதபடி செய்வேன். ஆகாபின் 9
குடும்பத்தை நேபாத்தின் குமாரனுகிய யெரொபெயாமின் குடும்பத்தையும் அகியாவின் குமாரனுகிய பாஷாவின் குடும்பத்தையும் போலாக்குவேன். யேசபேலை யிஸ்ரெ 10
யேலின் வெளியிலே நாய்கள் தின்னும்; அவளை அடக்கம்பண்ணுகிறவன் இரான் என்கிறார் என்று சொல்லிவிட்டுக் கதவைத் திறந்துகொண்டு ஓடிப்போனான்.

யேகூ தன் ஆண்டவனுடைய ஊழிய 11
ரிடம் திரும்பி வந்தபோது: அவர்கள் அவனைப் பார்த்து: சுகசெய்தியா? அந்தப் பயித்தியகாரன் உன்னிடம் வந்த காரியம் என்ன என்று கேட்க அவன்: அந்த மனுஷனும் அவன் சொல்லுகிற காரியமும் உங்களுக்குத் தெரியுமே என்றான். அதற்கு அவர் 12
கள், அது வீண்பேச்சு, நீயே எங்களுக்குச் சொல் என்று கேட்டார்கள். அவன் அவர்களிடம்: நான் உன்னை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினேன் என்று யெகோவா உரைக்கிறார் என்று இன்ன இன்னபடி என்னிடம் சொன்னான் என்றான். அதைக் கேட்டவுடனே ஒவ்வொருவ 13
னும் தன் தன் வஸ்திரத்தைப் படியின்மேலே அவன் உட்காருமிடத்தில் விரித்து எக்

காளம் ஊதி, யேகூ ராஜாவானான் என்று
ஆர்ப்பரித்தார்கள்.
14 அப்படியே நிம்சியின் மகனாகிய யோச
பாத்தின் குமாரன் யேகூ என்பவன் யோரா
முக்கு விரோதமாகக் கட்டுப்பாடுபண்ணி
னான்; — கிலெயாத்திலுள்ள ராமோத்தைச்
சீரியாவின் ராஜாவாகிய அசாவேல் பிடித்
துக்கொள்ளாதபடி யோராம் இஸ்ரவேல்
அனைவரோடுங்கூட அங்கே காவல் செய்து
15 கொண்டிருந்தான். சீரியாவின் ராஜாவா
கிய அசாவேலோடே செய்த யுத்தத்திலே
சீரியர் தன்னை வெட்டின காயங்களை ஆற்
றிக்கொள்ளுகிறதற்கு யோராம் ராஜாவோ
திரும்பி யிஸ்ரெயேலுக்குப் போயிருந்தான்—
யேகூ அவர்களோடு பேசி: இது உங்களுக்
குச் சம்மதியாயிருந்தால், ஒருவரும் இவ்வூரி
லிருந்து யிஸ்ரெயேலுக்குப் போய் இதை
அறிவியாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்
16 என்று சொல்லிவிட்டு ; ஒரு இரதத்தில் ஏறி
யிஸ்ரெயேலுக்கு நேராகப் போனான், யோ
ராம் அங்கேதான் படுக்கையிலிருந்தான்;
யூதாவின் ராஜாவாகிய அகசியாவும் யோரா
மைப் பார்க்கும்படி அங்கே வந்திருந்தான்.
17 யிஸ்ரெயேலில் கோபுரத்தின்மேல் நின்ற
காமக்காரன் யேகூவின் கூட்டம் வருவ
தைக் கண்டு: ஒரு கூட்டம் தெரிகிறது
என்றான். அப்பொழுது யோராம்: நீ ஒரு
ஆளைக் கூப்பிட்டு, அவனைக் குதிரையில்
ஏற்றி அவர்களுக்கு எதிரே அனுப்பி, சமா
தானமா என்று கேட்கச் சொல் என்றான்.
18 குதிரையேறிச் சென்றவன் அவனுக்கு
எதிரே போய், சமாதானமா என்று ராஜா
கேட்கச் சொன்னார் என்றான். அதற்கு
யேகூ: சமாதானத்தைப்பற்றி உனக்கென்ன?
என் பின்னே திரும்பிவா என்றான். அப்
பொழுது காமக்காரன்: அனுப்பின ஆள்
அவர்கள் இடமட்டும் போனான், திரும்பிவர
19 வில்லை என்றான். ஆகவே வேறொரு ஆளைக்
குதிரை ஏற்றி அனுப்பினான்; அவன் அவர்
களிடம் போய்: சமாதானமா என்று ராஜா
கேட்கச் சொன்னார் என்றான். அதற்கு
யேகூ: சமாதானத்தைப்பற்றி உனக்
கென்ன? என் பின்னே திரும்பிவா என்
20 றான். அப்பொழுது காமக்காரன்: அவன்
அவர்கள் இடமட்டும் போனான், திரும்பி
வரவில்லை, இரதம் ஓட்டுகிறதைப் பார்த்
தால் நிம்சியின் குமாரனாகிய யேகூ ஓட்டு
கிறதுபோல இருக்கிறது, தலைதடுமாறி ஓட்டு
கிறான் என்று சொன்னான்.
21 அப்பொழுது யோராம்: இரதத்தைக்
கொண்டுவா என்றான்; அவன் இரதம் வந்த
போது இஸ்ரவேலின் ராஜாவாகிய யோரா
மும் யூதாவின் ராஜாவாகிய அகசியாவும்
அவனவன் தன் தன் இரதத்தில் ஏறி யேகூ
வுக்கு எதிரே போனார்கள். யிஸ்ரெயேலிய
னாகிய நாபோத்தின் நிலத்திலே அவர்கள்
யேகூவைச் சந்தித்தார்கள். யோராம் யேகூ 22
வைக் கண்டவுடனே: யேகூவே, சமாதான
மா என்று கேட்க யேகூ: உன் தாயாகிய
யேசபேலின் வேசித்தனங்களும் அவளு
டைய பில்லிசூனியங்களும் இத்தனை ஏராள
மாயிருக்கையில் சமாதானம் ஏது என்றான்.
அதைக் கேட்டமாத்திரமே யோராம் தன் 23
இரதத்தைத் திருப்பிக்கொண்டு ஓடிப்போய்,
அகசியாவைப் பார்த்து, அகசியாவே, சதி
மோசம் என்றான். யேகூ தன் கையிலே 24
வில்லை எடுத்து அம்பு யோராமின் நெஞ்
சை ஊடுருவிப்பாய அவன் புயங்களின்
நடுவே எய்தான்; அவன் தன் இரதத்திலே
சுருண்டு விழுந்தான். அப்பொழுது யேகூ 25
தன் மெய்காவலனாகிய பித்காரைக் கூப்
பிட்டு: இவனை எடுத்து யிஸ்ரெயேலியனாகிய
நாபோத்தின் வயல் நிலத்தில் எறிந்துபோடு;
ஒருநாள் நீயும் நானும் குதிரை ஏறி இவன்
தகப்பனாகிய ஆகாபின் பிறகே ஓடிவந்த
போது அவன்மேல் விழுந்த யெகோ
வாவின் கடினவாக்கை நினைத்துக்கொள்.
நேற்று நாபோத்தின் இரத்தத்தையும் அவன் 26
குமாரரின் இரத்தத்தையும் மெய்யாகவே
கண்டேன், இது தெய்வத் திருவாக்கு;
இந்த நிலத்திலே உன்னிடம் பழிவாங்கு
வேன், இது தெய்வத் திருவாக்கே; இப்போ
தும் அவனை எடுத்து யெகோவாவின் சொற்
படியே இந்த நிலத்தில் எறிந்துபோடு என்
றான்.
இதை யூதாவின் ராஜாவாகிய அகசியா 27
கண்டு நந்தனவன வீட்டின் வழியாய் ஓடிப்
போனான்; யேகூ அவனைப் பின்தொடர்ந்து
அவனையும் இரதத்திலே எய்து கொல்லுங்
கள் என்றான். அவர்கள் இப்லெயாமின
ருகே இருக்கிற கூருக்கு ஏறிப்போகும்
வழியிலே அப்படியே எய்தார்கள்; அவன்
மெகிதோவுக்கு ஓடிப்போய் அங்கே செத்
துப்போனான். அவன் ஊழியர் அவனை 28
இரதத்திலே எருசலேமுக்குக் கொண்டு
போய்த் தாவீதுநகரத்தில் அவன் பிதாக்க
ளோடு அவனுடைய கல்லறையிலே அடக்
கம்பண்ணினார்கள். இந்த அகசியா ஆகா 29
புடைய குமாரனாகிய யோராமின் பதினே
ராம் வருஷத்தில் யூதாவின்மேல் அரசாளத்
தொடங்கினான்.
யேகூ யிஸ்ரெயேலுக்கு வந்தான்; அதை 30
யேசபேல் கேட்டபோது அவள் தன் கண்
களுக்கு மையிட்டுத் தன் தலையைச் சிங்கா

ரித்துக்கொண்டு பலகணிவழியாய் எட்
31 டிப்பார்த்து | யேகூ ஊர்வாசலில் வந்த
வுடனே அவனிடம்: சிம்ரியே, எஜமானைக்
கொன்றவனே, சமாதானமா என்று கேட்
32 டாள். அவன் அந்தப் பலகணிக்கு நேராக
முகம் நிமிர்ந்து: யார் என் பட்சத்தில்
இருக்கிறது? யார் என்று கேட்டான்;
இரண்டு மூன்றுபேர், அரமனை அண்ண
33 கர், அவனை எட்டிப்பார்த்தார்கள். அப்
பொழுது அவன்: அவனைக் கீழே தள்ளுங்
கள் என அவனை அப்படியே கீழே தள்ளி
விட்டார்கள், அவளுடைய இரத்தம் சுவரி
னும் குதிரைகளின்மேலும் தெறித்தது;
34 அவன் அவனை மிதித்துக்கொண்டு | உள்
ளேபோய்ப் போஜனபானம் செய்தபின்பு:
நீங்கள்போய்ச் சாபத்திற்குள்ளான அந்த
ஸ்திரீயைப் பார்த்து அவனை அடக்கம்பண்
ணுங்கள்; அவள் ஒரு ராஜ குமாரத்தி என்
35 ருன். அவர்கள் அவனை அடக்கம்பண்
ணப்போனபோது அவளுடைய தலையோட்
டையும் கால்களையும் உள்ளங்கைகளையுமே
அல்லாமல் வேறொன்றையும் காணவில்லை.
36 அவர்கள் திரும்பிவந்து அதை அவனுக்கு
அறிவித்தார்கள். அப்பொழுது அவன்:
யெகோவா திஸ்பியனாகிய எலியா என்னும்
தமது ஊழியனைக்கொண்டு சொன்னவார்த்
தை இதுவே; யிஸ்ரெயேலின் வெளியிலே
யேசபேலின் உடலை நாய்கள் தின்னும்,
37 இன்னதுதான் யேசபேலென்று சொல்ல
முடியாதபடி யேசபேலின் பிரேதம் யிஸ்
ரெயேலின் வெளியிலே வயலில்போடும்
எருவைப்போலாகும் என்று சொன்னாரே
என்ருன்.

**10** ஆகாபுக்குச் சமாரியாவிலே எழுபது
குமாரர் இருந்தார்கள். யேகூ திருபங்களை
எழுதிச் சமாரியாவிலிருந்த யிஸ்ரெயேலின்
அதிகாரிகளிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும்
ஆகாபுடையபிள்ளைகளைப் பார்த்துவந்தவர்க
2 ளிடத்திற்கும் அனுப்பினன்; அவைகளிலே:
உங்கள் ஆண்டவனுடைய குமாரர் உங்க
ளோடிருக்கிறார்கள்; இரதங்களும் குதிரை
களும் அரணான பட்டணங்களும் ஆயுதங்
3 களும் உங்களுக்கு உண்டு. இப்பொழு
தும், இந்த திருபம் உங்களிடம் வரும்
போது, நீங்கள் உங்கள் ஆண்டவனுடைய
குமாரரில் நலமும் தகுதியுமுள்ளவனைப்
பார்த்து அவனை அவன் தகப்பனுடைய
சிங்காசனத்தில் வையுங்கள்; உங்கள் ஆண்
டவனுடைய குடும்பத்துக்காக யுத்தம்பண்
4 ணுங்கள் என்று எழுதியிருந்தது. அவர்
கள் மிகவும் பயந்தார்கள்; இதோ, இரண்டு
ராஜாக்கள் அவனுக்கு முன்பாக நிற்க
முடியாமற்போனார்களே, நாங்கள் எப்படி
நிற்போம் என்று சொல்லிக்கொண்டார்
கள். ஆகவே அரமனை விசாரிப்புக்கார 5
னும் நகர விசாரிப்புக்காரனும் மூப்பரும்
பிள்ளைகளைப் பார்த்துவந்தவர்களும் யேகூ
வினிடம் ஆள் அனுப்பி: நாங்கள் உமது
அடியார்; நீர் எங்களுக்குச் சொல்வதை
யெல்லாம் செய்வோம்; நாங்கள் எவரையும்
ராஜாவாக்குவதில்லை; உமது பார்வையில்
நலமானதைச் செய்யும் என்று சொன்னார்
கள்.

யேகூ மறுபடியும் அவர்களுக்கு நிரு 6
பத்தை எழுதி: நீங்கள் என் பட்சத்தில்
சேர்ந்து என் சொல்லைக்கேட்பது உண்மை
யானால் உங்கள் ஆண்டவனுடைய குமார
ரின் தலைகளை வாங்கிவிட்டு நாளை இந்நே
ரமே அவற்றை யிஸ்ரெயேலுக்கு என்னிடம்
கொண்டுவாருங்கள் என்று தெரிவித்தான்.
ராஜாவின் குமாரராகிய எழுபதுபேரும்
தங்களைப்பார்த்துவந்த பட்டணத்தின்
பெரிய மனுஷரோடு இருந்தார்கள். இந்த 7
நிருபம் அவர்களிடம் வந்தபோது அவர்
கள் ராஜகுமாரரை, எழுபதுபேரையும்,
பிடித்து வெட்டி அவர்கள் தலைகளைக்
கூடைகளிலே வைத்து அவனிடம் யிஸ்ரெ
யேலுக்கு அனுப்பினர்கள். ஒரு ஆள் 8
யேகூவினிடம் வந்து, ராஜகுமாரரின் தலை
களைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று
அறிவித்தபோது அவன், விடியற்காலமட்
டும் அவைகளை ஊர்வாசலிலே இரண்டு
குவியலாகக் குவித்து வையுங்கள் என்ருன்.
மறுநாள் காலமே அவன் வெளியே வந்து 9
நின்று சகல ஜனங்களையும் நோக்கிட்டு: உங்
கள்மேல் குற்றமில்லை, இதோ, என் ஆண்
டவனுக்கு விரோதமாகச் சதியாலோசனை
செய்து அவனைக் கொன்றுபோட்டவன்
நானே; இவர்கள் எல்லாரையும் அடித்தது
யார்? யெகோவாவின் வார்த்தைகளில், 10
யெகோவா ஆகாபின் குடும்பத்தாருக்கு
விரோதமாகச் சொன்னவைகளிலே, ஒன்
றும் தவறிப்போகவில்லை; இதை அறிந்து
கொள்ளுங்கள்; யெகோவா தமது ஊழியனு
கிய எலியாவைக்கொண்டு சொன்னதையே
செய்துமுடித்தார் என்ருன். யிஸ்ரெயேலி 11
லும் ஆகாபுடைய குடும்பத்தில் ஒருவரை
யும் தப்பவிடாதபடி எல்லாரையும் யேகூ
கொன்றுபோட்டான்; அவனுடைய சகல
பிரதானிகளிலும் அவனுடைய நெருங்கினரி
லும் அவனுடைய ஆசாரியரிலும் ஒருவ
ரையும் தப்பவிடவில்லை.

பிற்பாடு அவன் புறப்பட்டுச் சமாரியா 12
வுக்குப்போனன்; வழியிலே அவன் பேத்

ஏகேத் என்னும் இடையர் ஊருக்கு வந்த
13 போது | அங்கே யூதாவின் ராஜாவாகிய
அகசியாவின் சகோதரரைக் கண்டான்; நீங்
கள் யார் என்று அவன் அவர்களைக் கேட்
டதற்கு அவர்கள்: நாங்கள் அகசியாவின்
சகோதரர், நாங்கள் ராஜாவின் பிள்ளைகளை
யும் ராஜமாதாவின் பிள்ளைகளையும் கண்டு
14 வரப்போகிறோம் என்றார்கள். அதைக்
கேட்ட யேகூ: இவர்களை இப்படியே பிடி
யுங்கள் என்றான்; அவர்களை அப்படியே
பிடித்துப் பேத் ஏகேத்தின் தரவண்டை
யிலே வெட்டிப்போட்டார்கள்; அவர்கள்
நாற்பத்திரண்டுபேர்; அவர்களில் ஒருவனை
யும் தப்பவிடவில்லை.
15 அவன் அவ்விடம்விட்டுப் போனபோது,
தனக்கு எதிர்ப்பட்ட ரேகாபின் குமாரனு
கிய யோனதாபைக் கண்டு அவனை உப
சரித்து: ஏன் மனம் உன் மனதோடே உண்
மையாய் இசைந்திருப்பதுபோல உன் மன
மும் உண்மையாய் இசைந்திருக்கிறதா
என்று கேட்டான். அதற்கு யோனதாப்,
அப்படியே இருக்கிறது என்றான்; அப்படி
யிருக்கிறதானால் நீ கைகொடு என்று சொன்
னான்; அவனும் கை கொடுத்தான். அப்
போது யேகூ அவனைத் தன்னிடம் இரதத்
16 தில் ஏறிவரச்சொல்லி, | நீ என்னோடு வந்து
யெகோவாவின் விஷயத்தில் எனக்குள்ள
பக்திவைராக்கியத்தைப் பார் என்றான்;
அப்படியே இவனை அவன் இரதத்தின்மேல்
17 ஏற்றினார்கள். அவன் சமாரியாவுக்கு
வந்தபோது சமாரியாவிலே ஆகாபுக்கு மீதி
யான யாவரையும் அழித்துத் தீருமளவும்
சங்காரஞ்செய்தான்; யெகோவா எலியா
வுக்குச் சொல்லியிருந்த வார்த்தையின்படி
யே நடந்தது.
18 பின்பு யேகூ முழுஜனத்தையும் கூடிவ
ரச்செய்து அவர்களோடு பேசி: ஆகாப்
பாகாலைச் சேவித்தது கொஞ்சம், யேகூ
19 அவனைச் சேவிப்பது அதிகம். இப்போதும்
பாகாலின் சகல தீர்க்கதரிசிகளையும் அவ
னுடைய தொண்டர் அனைவரையும் அவ
னுடைய சகல ஆசாரியரையும் என்னி
டம் அழைத்து வாருங்கள்; ஒருவனும்
வராதிருக்கக்கூடாது; நான் பாகாலுக்குப்
பெரும்பலி படைக்கப்போகிறேன், வராதி
ருப்பவன் எவனோ அவன் உயிரோடிருப்ப
தில்லை என்றான்; பாகாலின் தொண்டரை
அழிக்கும்படி யேகூ இதைத் தந்திரமாய்ச்
20 செய்தான். பாகாலுக்கு விசேஷித்த திரு
நாளை ஏற்படுத்துங்கள் என்றான், அப்படி
21 யே திருநாள் என்று கூறினார்கள். யேகூ
இஸ்ரவேல் தேசமெங்கும் அதைச் சொல்லி
யனுப்பினான், பாகாலின் தொண்டர் அனை
வரும் வந்தார்கள்; வராதவன் ஒருவனு
மில்லை; அவர்கள் பாகாலின் கோவிலுக்குள்
சென்றார்கள்; பாகாலின் கோவில் எப்பக்க
மும் நிறைந்திருந்தது. அப்பொழுது அவன் 22
வஸ்திரசாலை விசாரணைக்காரனைக் கூப்பிட்டு:
பாகாலின் தொண்டருக்கெல்லாம் வஸ்திரங்
களை எடுத்துக்கொண்டுவா என்று சொல்ல
அவர்களுக்கு வஸ்திரங்களை எடுத்துக்கொண்
டுவந்தான். பின்பு யேகூ ரேகாபின் குமார 23
னாகிய யோனதாபோடுங்கூடப் பாகாலின்
கோவிலுக்குள் சென்று, பாகாலின் தொண்
டரைப்பார்த்து: பாகாலின் தொண்டரே
யன்றி யெகோவாவின் தொண்டரில் ஒரு
வரும் இங்கே உங்களோடு இருக்கக்கூ
டாது, அதைத் திட்டமாய்ப் பார்த்துக்கொள்
ளுங்கள் என்றான்.
அவர்கள் தகனபலிகளையும் மற்றபலிகளை 24
யும் செலுத்த உள்ளே சென்றபின்பு, யேகூ
வெளியிலே எண்பதுபேரைத் தனக்கு ஆய
த்தமாக வைத்து: நான் உங்கள் கையில்
ஒப்புவிக்கிற மனுஷரில் எவனாகிலும் தப்பி
னால் அவனுடைய ஜீவனுக்குத் தப்பவிட்ட
வன் ஜீவன் ஈடாகும் என்றான். தகனபலி 25
யிட்டுத் திர்ந்தபோது யேகூ சேவகரையும்
மெய்காவலரையும் கூப்பிட்டு: உள்ளே
போய் அவர்களை வெட்டிப்போடுங்கள்;
ஒருவரையும் வெளியே விடவேண்டாம்
என்றான்; அப்படியே சேவகரும் மெய்காவ
லரும் அவர்களைப் பட்டயத்தினால் வெட்டி
எறிந்துவிட்டார்கள், பாகால் கோவிலின்
உட்புறம் எங்கும் போய் | பாகால் கோ 26
வில் சிலைகளை வெளியே எடுத்துவந்து,
அவைகளைத் தீக்கொளுத்திப் | பாகாலின் 27
சிலையைத் தகர்த்துப் பாகாலின் கோவிலை
இடித்து மலஜலாதி இடமாக்கினார்கள்;
இந்நாள்வரைக்கும் அப்படியே இருக்கி
றது.
இப்படியே யேகூ பாகால் இஸ்ரவேலில் 28
இராதபடி அதை அழித்துப்போட்டான்.
பேதேலிலும் தாணிலும் வைத்த பொற்கன் 29
றுக்குட்டிகளால் இஸ்ரவேலைப் பாவஞ்
செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய
யெரொபெயாமின் பாவங்களையோ யேகூ
விட்டுவிலகவில்லை. யெகோவா யேகூவினி 30
டம் என் பார்வையில் நேர்மையானதை நீ
நன்றாய்ச் செய்து என் மனதின் விருப்பப்
படியெல்லாம் ஆகாபின் குடும்பத்துக்குச்
செய்தபடியினால் உன் குமாரர் இஸ்ரவேல்
சிங்காசனத்தில் நாலு தலைமுறையாக வீற்றி
ருப்பார்கள் என்றார். யேகூவோ இஸ்ரவே 31
லின் கடவுளாகிய யெகோவாவின் நியாயப்

பிரமாணத்தின்படி தன் முழு இருதயத் தோடும் நடந்துகொள்ள ஜாக்கிரதையா யிருக்கவில்லை; இஸ்ரவேலைப் பாவஞ்செய் யப்பண்ணின பெரொபெயாமின் பாவங் களை விட்டு அவன் விலகவும் இல்லை.

32 அக்காலமுதல் யெகோவா இஸ்ரவேலைக் குறைந்துபோகப்பண்ணினார்; அசாவேல் அவர்களை இஸ்ரவேலின் எல்லைகளிலெல்
33 லாம் முறியடித்தான். யோர்தான் துவக் கிக் கிழக்கிலுள்ள அர்னோன் ஆற்றுக்குச் சமீபமான அரோவேர் முதற்கொண்டுள்ள கிலெயாத்திலும் பாசானிலுமிருந்த காத்தி யர், ரூபேனியர், மனாசேயர் இவர்களுடைய தேசமாகிய கிலெயாத் முழுவதையும் முறிய டித்தான்.

34 பேகூவைப்பற்றிய மற்ற விவரங்களும் அவன் செய்தவை யாவும் அவனுடைய பராக்கிரமமுழுதும் இஸ்ரவேல் ராஜாக்க ளைப் பற்றிய தினவர்த்தமானம் என்னும்
35 நூலில் எழுதியிருக்கிறதே. யேகூ நித்திரை யடைந்து தன் பிதாக்களோடே சேர்ந்த போது அவனைச் சமாரியாவில் அடக்கம் பண்ணினார்கள்; அவன் ஸ்தானத்தில் அவன் குமாரனாகிய யோவாகாஸ் ராஜாவானான்.

36 யேகூ சமாரியாவிலே இஸ்ரவேலின்மேல் அரசாட்சிசெய்தகாலம் இருபத்தெட்டு வரு ஷம்.

அகசியாவின் தாயாகிய அத்தாலியாள் தன் குமாரன் இறந்துபோனதைக் கண்ட போது எழும்பி ராஜவம்சத்தார் யாவரை
2 யும் சங்காரம்பண்ணினாள். யோராம் ராஜா வின் குமாரத்தியும் அகசியாவின் சகோதரி யுமாகிய யோசேபாள் கொலையுண்ணப்படு கிற ராஜகுமாரரின் நடுவிலிருந்த அகசியா வின் மகனாகிய யோவாசைத் திருட்டுத் தனமாய் எடுத்து அவன் கொல்லப்படாத படி அவனையும் அவன் தாதியையும் அத்தா லியாளுக்குத் தெரியாமல் பள்ளியறையில்
3 ஒளித்துவைத்தாள். அத்தாலியாள் தேச த்தை அரசாண்டுவருகையில் இவன் தன் தாதியோடு ஆறுவருஷம் யெகோவாவின் ஆலயத்தில் ஒளித்துவைக்கப்பட்டிருந்தான்.

4 ஏழாம் வருஷத்திலே யோயாதா கேரி யரிலும் சேவகரிலும் நூற்றுக்கதிபரை அழைப்பித்து அவர்களைத் தன்னிடம் யெ கோவாவின் ஆலயத்திற்கு வரச்சொன்னான்; அங்கே அவன் அவர்களோடு உடன்படிக் கை செய்து அவர்களை யெகோவாவின் ஆலயத்தின்மேல் ஆணையிடுவித்துக்கொண்டு அவர்களுக்கு ராஜாவின் குமாரனைக் காண்
5 பித்து | அவர்களோடு பேசி: நீங்கள் செய்ய வேண்டிய காரியம் இதுவே; ஓய்வுநாளில் இங்கே வரவேண்டியவர்களில் மூன்றில் ஒரு பங்கு ராஜாவின் அரமனையைக் காக்க வேண்டும். மூன்றில் ஒருபங்கு சூர் என் 6
னும் வாசலிலும், மூன்றில் ஒருபங்கு சேவகர் இருக்குமிடத்திற்குப் பின்னுள்ள வாசலிலும் நின்று பத்திரமாய்க் காவல் காக்கவேண்டும். உங்களில் மற்ற இர 7
ண்டுபிரிவார், ஓய்வுநாளில் காவல் வேலை விட்டிருக்கும் யாவரும், ராஜாவினிடம் யெகோவாவின் ஆலயத்தைக் காவல் காக்கவேண்டும். நீங்கள் அவரவர் தத்தம் 8
ஆயுதங்களைக் கையிலே பிடித்தவர்களாய் ராஜாவைச் சுற்றி வரிசையாய் நின்று கொண்டிருக்கவேண்டும்; வரிசைகளுக்குள் புகுந்து வருகிறவன் கொல்லப்படவேண் டும்; ராஜா போகும்போதும் வரும்போதும் நீங்கள் அவரோடே இருக்கவேண்டும் என்று கட்டளையிட்டான்.

ஆசாரியனாகிய யோயாதா கட்டளையிட்ட 9
படியெல்லாம் நூற்றுக்கதிபதிகள் செய்து ஓய்வுநாளில் முறைப்படி வருகிறவர்களும் முறைப்படி போகிறவர்களுமாகிய தங்கள் தங்கள் ஆட்களைக் கூட்டிக்கொண்டு ஆசாரி யனாகிய யோயாதாவினிடம் வந்தார்கள். தாவீது ராஜாவினுடையவைகளாயிருந்த 10
யெகோவாவின் ஆலயத்திலே வைக்கப்பட்டி ருந்த ஈட்டிகளையும் கேடகங்களையும் ஆசாரி யன் நூற்றுவர் தலைவரிடம் கொடுத்தான். சேவகர் தங்கள் தங்கள் ஆயுதங்களைப் பிடித் 11
தவர்களாய் ஆலயத்தின் வலதுபக்கமூலை தொடங்கிப் பலிபீடமட்டும் பலிபீடந் தொடங்கி ஆலயத்தின் இடதுபக்கமூலைமட் டும் ஆலயத்திற்கு எதிரே ராஜாவைச் சுற்றி நின்றார்கள். அப்பொழுது யோயாதா ராஜ 12
குமாரனை வெளியே கொண்டுவந்து கிரீடத் தை அவன்மேல் வைத்துச் சாட்சியபிரமா ணத்தை அவன் கையிலே கொடுத்தான்; இப்படியே அவர்கள் அவனை ராஜாவாக்கி அபிஷேகம்பண்ணினார்கள்; ராஜா வாழ்க என்று சொல்லி ஜனங்கள் கைகொட்டினார் கள்.

சேவகரும் ஜனங்களும் செய்த ஆரவாரத் 13
தை அத்தாலியாள் கேட்டபோது அவள் யெகோவாவின் ஆலயத்திற்கு ஜனங்களிடம் வந்து, | இதோ, ராஜா முறைமையின்படி 14
யே தூணருகே நிற்பதையும், ராஜாவண்டை யிலே தலைவர் நிற்பதையும், பூரிகை ஊது வோர் ஜதி நிற்பதையும், தேசத்து ஜனங்கள் அனைவரும் சந்தோஷங்கொண்டாடிப் பூரி கை ஊதுவதையும் கண்டாள்; காணவே அத்தாலியாள் தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு: துரோகம் துரோகம் என்று கூவி

15 ஞள். ஆசாரியனுகிய யோயாதா சேனுதி
பதிகளாகிய நூற்றுவர் தலைவருக்குக் கட்
டளையிட்டு: இவனைச் சேவகர் நிற்கும் வரி
சைகளுக்கு வெளியே கொண்டுபோங்கள்;
இவனைத் தொடருகிற எவனையும் பட்டயத்
தாலே வெட்டிப் போடுங்கள் என்றான்; ஆசா
ரியன் யெகோவாவின் ஆலயத்திலே அவள்
கொல்லப்படலாகாது என்று சொல்லி
16 யிருந்தான். அவர்கள் அவனைப் பிடித்துக்
கொண்டுபோனர்கள்; ராஜாவின் அரம
னைக்குக் குதிரைகள் செல்லுகிற வழியாய்
அவள் வரவே அங்கே அவனைக் கொன்று
போட்டார்கள்.

17 அப்பொழுது யோயாதா, ஜனமானது
யெகோவாவின் ஜனமாக வேண்டுமென்று
யெகோவாவுக்கும் ராஜாவுக்கும்ஜனத்துக்கும்
உடன்படிக்கை செய்வித்தான், அப்படியே
ராஜாவுக்கும் ஜனத்துக்கும் ஒரு உடன்படிக்
18 கையையும் செய்வித்தான். பின்பு தேசத்
தின் ஜனங்கள் எல்லாரும் பாகாலின் கோவி
லுக்குப் போய் அதை இடித்து அதின் பல
பீடங்களையும் அதின் விக்கிரகங்களையும்
முற்றிலும் உடைத்துப் பாகாலின் பூசாரியா
கிய மாத்தானைப் பலிபீடங்களுக்கு எதிரே
கொன்றுபோட்டார்கள். யெகோவாவின்
ஆலயத்தைப் பார்த்துக்கொள்ளுகிறவர்களை
19 ஆசாரியன் ஏற்படுத்தினுன். நூற்றுக்கதி
பதிகளையும் கேரியரையும் சேவகரையும்
தேசத்தின் சகல ஜனங்களையும் கூட்டி ராஜா
வை யெகோவாவின் ஆலயத்திலிருந்து வரச்
செய்தான்; அவர்கள் எல்லாரும் சேவகரின்
வாசல்வழியாய் ராஜ அரமனைக்குப் போனர்
கள்; அங்கே யோவாஸ் ராஜசிங்காசனத்தின்
20 மேல் உட்கார்ந்தான். தேசத்தின் ஜனங்கள்
எல்லாரும் மகிழ்ந்தார்கள், எருசலேம்
நகரம் அமைதலாயிருந்தது, அத்தாலியாளை
யோ ராஜ அரமனையண்டையிலே பட்டயத்
தால் கொன்றுபோட்டார்கள்.

21 யோவாஸ் ராஜாவானபோது அவனுக்கு
ஏழுவயது.

**12** யேகூவின் ஏழாம் வருஷத்தில் யோவாஸ்
ராஜாவாகி எருசலேமில் நாற்பதுவருஷம்
அரசாண்டான். அவன் தாயின் பேர் சிபி
யாள்; அவள் பெயர்ஷெபா ஊராள்.

2 யோவாஸ் ஆசாரியனுகிய யோயாதாவினி
டம் போதனை பெற்றிருந்தபடியால் தன்
ஆயுள்காலமெல்லாம் அவன் யெகோவா
வின் பார்வையில் நேர்மையானதைச் செய்து
வந்தான். கோவில்மேடைகள் மாத்திரம்
3 அகற்றப்படவில்லை. ஜனங்கள் இன்னும்
மேடைகளில் பலியிட்டுத் தூபங்காட்டிவந்
தார்கள்.

4 யோவாஸ் ஆசாரியரோடு பேசி: பிரதிஷ்
டையாக நேர்ந்து யெகோவாவின் ஆலயத்
துக்குக் கொண்டுவரும் பணம் முழுவதை
யும் இலக்கத்திற்குட்படுகிறவர்களின் பணத்
தையும் ஆட்களின் மீட்புக்கென்று மதிக்
கப்படுகிற பணத்தையும் அவனவன் தன்
தன் மனதிலே ஏவப்பட்டு யெகோவாவின்
ஆலயத்திற்குக் கொண்டுவரும் எல்லாப்
பணத்தையும் | ஆசாரியர் அவரவர் தங்க 5
ளுக்கு அறிமுகமானவர்களிடம் வாங்கிக்
கொண்டு ஆலயத்தில் எங்கெங்கே பழுது
காண்கிறதோ அங்கே யெல்லாம் ஆலயத்
தைப் பழுதுபார்க்கவேண்டும் என்றான்.
அப்படிக் கட்டளையிட்டிருந்தும் ராஜாவா 6
கிய யோவாசின் இருபத்து மூன்றும் வரு
ஷத்திலே, இன்னும் ஆசாரியர் ஆலயத்
தைப் பழுதுபாராதே போனபடியினால், |
ராஜாவாகிய யோவாஸ் ஆசாரியனுகிய 7
யோயாதாவையும் மற்ற ஆசாரியரையும்
அழைப்பித்து: நீங்கள் ஆலயத்தைப் பழுது
பாராதே போனதென்ன? இனி நீங்கள்
உங்களுக்கு அறிமுகமானவர்களிடம் பணத்
தை வாங்கவேண்டாம், ஆலயத்தைப் பழுது
பார்க்கிறதற்கு அதை விட்டுவிடுங்கள் என்
றான். அப்பொழுது ஆலயத்தைப் பழுது 8
பார்ப்பது தங்கள் காரியமல்லவென்று
ஜனத்தினிடம் பணத்தை வாங்கிக்கொள்ளா
திருப்பதற்கு ஆசாரியர் சம்மதித்தார்கள்.
ஆசாரியனுகிய யோயாதா ஒரு பெட்டியை 9
எடுத்து அதின் மூடியிலே ஒரு துவாரமிட்டு
அதைப் பலிபீடத்தண்டையிலே யெகோ
வாவின் ஆலயத்தில் ஜனங்கள் உட்செல்
லும் வலது பக்கத்திலே வைத்தான்; வாசற்
படியிலே காவல் காக்கிற ஆசாரியர்கள்
யெகோவாவின் ஆலயத்திற்குக் கொண்டு
வரும் பணத்தையெல்லாம் அதிலே போடு
வார்கள். பெட்டியிலே பணம் குவிந்து 10
விட்டதென்று அவர்கள் காணும்போது,
ராஜாவின் சம்பிரதியும் பிரதான ஆசாரிய
னும் வந்து யெகோவாவின் ஆலயத்திலே
இருக்கும் பணத்தை எண்ணி முடிப்புக்
கட்டி | கணக்கிட்ட பணத்தை யெகோவா 11
வின் ஆலய விசாரணைக்காரர் கையிலே
கொடுப்பார்கள்; அவர்கள் அதை யெகோ
வாவின் ஆலயத்தைப் பழுதுபார்க்கிற தச்ச
ருக்கும் சிற்பருக்கும் | கொற்றருக்கும் கல் 12
தச்சருக்கும் கொடுப்பதுமல்லாமல் யெகோ
வாவின் ஆலயத்தைப் பழுதுபார்க்கத்
தேவையான மரங்களையும் வெட்டின கற்
களையும் கொள்ளுகிற செலவுக்கும் ஆலயத்
தைப் பழுதுபார்க்கிறதற்குச் செல்லும் மற்
றும் சகல செலவுகளுக்கும் கொடுப்

13 பார்கள். யெகோவாவின் ஆலயத்தில் கொடுக்கப்பட்ட பணத்தினாலே வெள்ளிக்கிண்ணங்களும் திரிவெட்டிகளும் கலங்களும் பூரிகைகளும் மற்றும் பொன் வெள்ளிப் பாத்திரங்களும் பண்ணப்படவில்லை;
14 வேலை செய்கிறவர்களுக்கே அதைக் கொடுத்தார்கள்; யெகோவாவின் ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்கென்றே கொடுக்கப்பட்
15 டது. வேலை செய்கிறவர்களுக்குப் பணத்தை வாங்கிக் கொடுத்த மனுஷரிடம் கணக்குக் கேட்கவில்லை, அவர்கள் உண்
16 மையாய் அதை நடப்பித்தார்கள். குற்றநிவாரணத்திற்கென்றும் பாவநிவாரணத்திற்கென்றும் கொடுத்த பணம் ஆலயத்திற்காகக் கொண்டுவரப்படவில்லை, அது ஆசாரியருக்குரியது.
17 அக்காலத்திலே சீரியாவின் ராஜாவாகிய அசாவேல் வந்து காத்தாரின்மேல் யுத்தம் பண்ணி அதைப் பிடித்தான்; அப்பால் அசாவேல் எருசலேமுக்கு விரோதமாகவும்
18 போகவிருந்தான். அப்பொழுது யூதாவின் ராஜாவாகிய யோவாஸ் தன் பிதாக்களாகிய யோசபாத், யோராம், அகசியா என்னும் யூதாவின் ராஜாக்கள் பிரதிஷ்டை செய்து வைத்திருந்த யாவற்றையும் தான் பிரதிஷ்டை செய்துவைத்திருந்ததையும், யெகோவாவின் ஆலயக் கருவூலத்திலும் ராஜ அரமனைப் பொக்கிஷத்திலும் அகப்பட்ட பொன் யாவையும் எடுத்துச் சீரியாவின் ராஜாவாகிய அசாவேலுக்கு அனுப்பினான்; ஆகவே அவன் எருசலேமுக்கு விரோதமாய் வராமல் போய்விட்டான்.
19 யோவாசைப்பற்றிய மற்ற விவரங்களும் அவன் செய்தவை யாவும் யூதாவின் ராஜாக்களைப்பற்றிய தினவர்த்தமானம் என்னும்
20 நூலில் எழுதியிருக்கிறதே. யோவாசின் ஊழியர் எழும்பிச் சதியாலோசனை செய்து சில்லாவுக்குப்போகிற வழியிலே மில்லோவின் அருகேயிருந்த வீட்டிலே அவனைக்
21 கொன்றுபோட்டார்கள். அவனுடைய ஊழியராகிய சிமியாதின் குமாரன் யோசகாரும் சோமேரின் குமாரன் யோசபாத்தும் அவனைச் சாக அடித்தார்கள். தாவீது நகரத்தில் அவனுடைய பிதாக்களண்டையில் அடக்கம்பண்ணப்பட்டான்; அவன் குமாரனாகிய அமத்சியா அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

**13** அகசியாவின் குமாரனாகிய யோவாஸ் என்னும் யூதா ராஜாவின் இருபத்துமூன்றாம் வருஷத்திலே யேகூவின் குமாரனாகிய யோவாகாஸ் இஸ்ரவேலின்மேல் சமாரியாவிலே ராஜாவாகிப் பதினேழு வருஷம் அரசாண்டான். அவன் யெகோவாவின் பார்
2 வையில் தீமையானதைச் செய்து, இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவ
வழியிலே நடந்துவந்தான்; அதை விட்டு
3 அவன் விலகவில்லை. யெகோவா இஸ்ரவேலின்மேல் கோபமூண்டவராகி அவர்களைச் சீரியாவின் ராஜாவாகிய அசாவேலின் கையிலும் அசாவேலின் குமாரனாகிய பெனாதாத்தின் கையிலும் எந்நாளும் ஒப்புக்கொடுத்தார். யோவாகாஸ் யெகோவாவின் சமுகத்
4 தை நாடிக் கெஞ்சினான்; சீரியாவின் ராஜா இஸ்ரவேலை ஒடுக்கி அவர்களுக்கு வருவித்த உபத்திரவத்தை யெகோவா கண்டு அவனுக்குச் செவிசாய்த்தார். யெகோவா இஸ்ரவே
5 லுக்கு ஒரு இரட்சகனை அருளினார்; அவர்கள் சீரியரின் கையின் கீழிருந்து நீங்கினார்கள். இப்படியாக இஸ்ரவேல் புத்திரர் முன்போலவே தங்கள் கூடாரங்களில் குடியிருந்
6 தார்கள். ஆகிலும் இஸ்ரவேலைப் பாவஞ் செய்யப்பண்ணின யெரொபெயாம் வீட்டாரின் பாவங்களை அவர்கள் விட்டு விலகாமல் அதிலே நடந்துவந்தார்கள். சமாரியாவிலிருந்த மரச்சிலையும் இன்னும் அங்கே
7 இருந்தது. யோவாகாசுக்குச் சீரியாவின் ராஜா, ஐம்பது குதிரைவீரரையும் பத்து இரதங்களையும் பதினாயிரம் காலாட்களையுமே அல்லாமல் சேனைகளில் வேறொன்றையும் மீதியாகவிடவில்லை; அவன் அவர்களை அழித்து, போரடிக்கும் இடத்துத் தூளைப்போல ஆக்கிவிட்டான்.
8 யோவாகாசைப்பற்றிய மற்ற விவரங்களும் அவன் செய்தவை யாவும் அவனுடைய பராக்கிரமும் இஸ்ரவேல் ராஜாக்களைப்பற்றிய
தினவர்த்தமானம் என்னும் நூலில் எழுதி
9 யிருக்கிறதே. யோவாகாஸ் நித்திரையடைந்து தன் பிதாக்களோடே சேரவே அவனைச் சமாரியாவில் அடக்கம்பண்ணினார்கள்; அவன் குமாரனாகிய யோவாஸ் அவன் ஸ்தானத்திலே ராஜாவானான்.
10 யூதாவின் ராஜாவாகிய யோவாசுடைய முப்பத்தேழாம் வருஷத்தில் யோவாகாசின் குமாரனாகிய யோவாஸ் இஸ்ரவேலின்மேல் ராஜாவாகிச் சமாரியாவிலே பதினாறு வருஷம் அரசாண்டான்;
11 அவன் யெகோவாவின் பார்வையில் தீமையானதைச் செய்தான்; இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களைவிட்டு விலகாமல் அவைகளில் நடந்தான்.
12 யோவாசைப்பற்றிய மற்ற விவரங்களும் அவன் செய்தவை யாவும் யூதாவின் ராஜா

வாகிய அமத்தியாவோடு அவன் செய்த யுத்தமும் அவன் புஜபலமும் இஸ்ரவேல் ராஜாக்களைப்பற்றிய இனவர்த்தமானம் என்னும் நூலில் எழுதியிருக்கிறதே. 13 யோவாஸ் நித்திரையடைந்து தன் பிதாக்களோடு சேரவே யெரொபெயாம் அவன் சிங்காசனத்தில் வீற்றிருந்தான். யோவாஸ் சமாரியாவில் இஸ்ரவேலின் ராஜாக்களண்டையிலே அடக்கம்பண்ணப்பட்டான்.

14 யோவாஸ் உயிரோடிருந்தகாலத்தில் எலீஷா வியாதிப்பட்டான். அந்த வியாதியே அவன் மரணத்திற்கேதுவாயிற்று; அப்பொழுது இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ் அவனிடம்போய் அவன்மேல் குனிந்து அழுது: என் தகப்பனே, என் தகப்பனே இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரைவீரருமாயிருந்தவரே என்றான். 15 எலீஷா அவனைப் பார்த்து: வில்லையும் அம்புகளையும் எடுத்து வாரும் என வில்லையும் அம்புகளையும் அவனிடம் எடுத்துவந்தான். 16 அப்பொழுது அவன் இஸ்ரவேல் ராஜாவினிடம்: உமது கையை வில்லின்மேல் வையும் என அவன் தன் கையை வைத்தபோது எலீஷா தன் கைகளை ராஜாவின் கைகள் 17 மேல் வைத்து, | கீழ்ப்பக்கத்து ஜன்னலைத் திறவும் என்றான்; அவன் அதைத் திறந்தபோது எலீஷா, எய்யும் என்றான்; அவன் எய்தான்; அப்போது எலீஷா, இது யெகோவாவின் வெற்றியம்பும் சீரியரை மேற்கொள்ளும் வெற்றியம்புமாம். நீர் சீரியரை அபேக்கிலே தீர முறியடிப்பீர் 18 என்றான். பின்பும், அம்புகளைப் பிடியும் என அவைகளைப் பிடித்தான். அப்பொழுது அவன் இஸ்ரவேலின் ராஜாவிடம், தரையிலே அடியும் என அவன் மூன்றுதரம் 19 அடித்து நின்றுவிட்டான். அப்பொழுது கடவுளின் மனுஷன் அவன் மேல் கோபமாகி: நீர் ஐந்து ஆறு விசை அடித்தீரானால், அப்பொழுது சீரியரைத் தீர முறியடிப்பீர்; இப்பொழுதோ சீரியரை மூன்றுதடவை மாத்திரம் முறியடிப்பீர் என்றான்.

20 எலீஷா மரணமடைந்தான்; அவனை அடக்கம்பண்ணினார்கள். மறு வருஷத்திலே மோவாபியரின் கொள்ளைத்தண்டுகள் 21 தேசத்திலே வந்தன. அச்சமயத்தில் அவர்கள் ஒரு மனுஷனை அடக்கம்பண்ணப் போகையில், இதோ, அந்தத் தண்டைக் கண்டு பயந்து அந்த மனுஷனை எலீஷாவின் கல்லறையில் போட்டுவிட்டார்கள்; அந்த மனுஷனின் பிரேதம் அதிலே விழுந்து எலீஷாவின் எலும்புகளின்மேல் பட்டவுடனே அந்த மனுஷன் உயிர் பிழைத்து தன் கால்களை ஊன்றி எழுந்திருந்தான்.

22 யோவாகாஸ் அரசாண்ட நாளெல்லாம் சீரியாவின் ராஜாவாகிய அசாவேல் இஸ்ரவேலை ஒடுக்கினான். 23 யெகோவாவோ அவர்களுக்கு இரங்கினார்; ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடு தாம் செய்த உடன்படிக்கையினிமித்தம் அவர்கள்மேல் மனதுருகி அவர்கள் முகமாய்த் திரும்பினார்; அவர்களை அழிக்க அவருக்கு மனமில்லை; தமது சமுகத்தைவிட்டு அவர்களை இன்னும் அகற்றிவிடவில்லை. 24 சீரியாவின் ராஜாவாகிய அசாவேல் இறந்துபோனான், அவன் குமாரனாகிய பெனாதாத் அவன் ஸ்தானத்திலே ராஜாவானான். 25 யோவாசின் தகப்பனாகிய யோவாகாசோடு அசாவேல் யுத்தம் பண்ணிப் பிடித்துக்கொண்ட பட்டணங்களை இப்பொழுது யோவாஸ், அசாவேலின் குமாரனாகிய பெனாதாதின் கையிலிருந்து திரும்பப் பிடித்துக்கொண்டான். மூன்று தடவை யோவாஸ் அவனை முறியடித்து இஸ்ரவேலின் பட்டணங்களைத் திரும்பப் பிடித்துக்கொண்டான்.

**14** யோவாகாசின் குமாரனாகிய யோவாஸ் என்னும் இஸ்ரவேல் ராஜாவுடைய இரண்டாம் வருஷத்திலே யூதாவின் ராஜாவாகிய யோவாசின் குமாரன் அமத்தியா ராஜாவானான். 2 அவன் ராஜாவானபோது அவனுக்கு இருபத்தைந்து வயது, அவன் எருசலேமிலே இருபத்தொன்பது வருஷம் அரசாண்டான். அவன் தாயின்பேர் யோவதானென், அவள் எருசலேம் நகரத்தாள். 3 அவன் யெகோவாவின் பார்வையில் நேர்மையானதைச் செய்தான்; எனினும் தன் தகப்பனாகிய தாவீதைப்போன்ற நேர்மையானவனல்ல: தன் தகப்பனாகிய யோவாஸ் செய்தபடியெல்லாம் செய்துவந்தான். 4 மேடைகள் மாத்திரம் அகற்றப்படவில்லை; ஜனங்கள் இன்னும் மேடைகளின்மேல் பலியிட்டுத் தூபங்காட்டிவந்தார்கள். 5 ராஜ்யபாரம் அவன் கையிலே ஸ்திரப்பட்டபோது அவன் தன் தகப்பனாகிய ராஜாவைக் கொன்றுபோட்ட தன் ஊழியரைக் கொன்றுபோட்டான். 6 கொலை செய்தவர்களின் பிள்ளைகளையோ அவன் கொல்லவில்லை, மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடியே நடந்துகொண்டான்; பிள்ளைகளினிமித்தம் பிதாக்கள் கொல்லப்படலாகாது, பிதாக்களினிமித்தம் பிள்ளைகள் கொல்லப்படலாகாது, அவனவன் செய்த பாவத்தினிமித்

தம் அவனவனே கொல்லப்படவேண்டும் என்று யெகோவா அவ்விடத்தில் கட்டளையிட்டிருக்கிறார்.

7 அவன் உப்புப்பள்ளத்தாக்கிலே ஏதோமியரில் பதினாயிரம்பேரை வெட்டினான்; யுத்தஞ்செய்து சேலாவைப் பிடித்து அதற்கு யொக்தெயேல் என்னும் பேரைக் கொடுத்தான்; அப்பேரே இந்நாள்வரை வழங்குகிறது. 8 அப்பொழுது அமத்சியா யேகூவின் மகனாகிய யோவாகாசின் குமாரன் யோவாஸ் என்னும் இஸ்ரவேல் ராஜாவினிடத்தில் ஆட்களை அனுப்பி: நாம் போர் செய்து பார்ப்போம் வாரும் என்று சொல்லச் 9 சொன்னான். அதற்கு இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ் யூதாவின் ராஜாவாகிய அமத்சியாவுக்கு ஆள் அனுப்பி: லீபனோனிலுள்ள ஒரு முட்செடி லீபனோனிலுள்ள ஒரு கேதுருமரத்துக்குத் தூதனுப்பி: நீ உன் மகளை என் மகனுக்கு மனைவியாக விவாகஞ்செய்துகொடு என்று கேட்கச் சொல்லிற்று; லீபனோனிலுள்ள ஒரு காட்டுமிருகமோ அவ்வழி போகையிலே அந்த முட்10 செடியை மிதித்துவிட்டது. நீ ஏதோமியரை முறியடித்தது உண்மையே, இதினிமித்தம் உன் இருதயம் உன்னைக் கர்வங்கொள்ளச் செய்வானேன், நீ உன் வீட்டிலேயே தரித்துநின்று பெருமைபாராட்டிக்கொண்டிரு; நீ உனக்குக் கேட்டைத் தேடிக்கொள்வானேன், நீயும் உன்னோடு யூதாவும் விழ நேருமே என்று சொல்லச்11 சொன்னான். அமத்சியாவோ செவிகொடாதே போனான்; ஆகவே இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ் வந்தான்; யூதாவிலுள்ள பேத்ஷேமேசிலே அவனும் யூதாவின் ராஜா12 அமத்சியாவும் யுத்தம் கலந்தபோது | யூதாவின் படைவீரர் இஸ்ரவேலருக்கு முன்பாக முறிந்து தங்கள் தங்கள் கூடாரங்களுக்கு13 ஓடிப்போனார்கள். அகசியாவின் மகனாகிய யோவாகாசின் குமாரன் அகத்சியா என்னும் யூதாவின் ராஜாவையோ, இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ் பேத்ஷேமேசிலே பிடித்துக்கொண்டான்; அவன் எருசலேமுக்கு வந்து எருசலேமின் அலங்கத்திலே எப்பிராயீம் வாசல் தொடங்கி மூலைவாசல் மட்டும் நானூறுமுழ நீளத்தை இடித்துப்14 போட்டு | யெகோவாவின் ஆலயத்திலும் ராஜாவுடைய அரமனைப் பொக்கிஷங்களிலும் அகப்பட்ட பொன் வெள்ளி யாவையும் சகல பணிமுட்டுகளையும் எடுத்துக்கொண்டு பிணையிருப்பவர்களையும் பிடித்துக்கொண்டு சமாரியாவுக்குத் திரும்பிப் போனான்.

யோவாஸ் செய்த மற்றக் காரியங்களும் 15 அவனுடைய புஜபலமும் அவன் யூதாவின் ராஜாவாகிய அமத்சியாவோடு செய்த யுத்தமும், இஸ்ரவேல் ராஜாக்களைப்பற்றிய தினவர்த்தமானம் என்னும் நூலில் எழுதியிருக்கிறதே. யோவாஸ் நித்திரையடைந்து தன் 16 பிதாக்களோடு சேரவே சமாரியாவில் இஸ்ரவேல் ராஜாக்களண்டையிலே அடக்கம் பண்ணப்பட்டான்; அவன் குமாரனாகிய யெரொபெயாம் அவன் ஸ்தானத்திலே ராஜாவானான்.

யோவாகாசின் குமாரனாகிய யோவாஸ் 17 என்னும் இஸ்ரவேலின் ராஜா மரணமடைந்தபின், யோவாசின் குமாரனாகிய அமத்சியா என்னும் யூதாவின் ராஜா பதினைந்து வருஷம் உயிரோடிருந்தான். அமத்சியாவைப் 18 பற்றிய மற்ற விவரங்கள் யூதாவின் ராஜாக்களைப்பற்றிய தினவர்த்தமானம் என்னும் நூலில் எழுதியிருக்கிறதே. எருசலேமிலே 19 அவனுக்குவிரோதமாகக் கட்டுப்பாடு செய்தபடியால் அவன் லாகேஷுக்கு ஓடிப்போனான்; அவர்களோ அவன் பின்னே லாகேஷுக்கு ஆட்களை அனுப்பி அங்கே அவனைக் கொன்றுபோட்டார்கள். குதிரைகள் 20 மேல் அவனை எடுத்துவந்து எருசலேமில், தாவீதுநகரத்திலே, அவன் பிதாக்களண்டையில் அவனை அடக்கம்பண்ணினார்கள். யூதா ஜனங்கள் யாவரும் பதினாறுவயதுள்ள 21 அசரியாவை அழைத்துவந்து அவனை அவன் தகப்பனாகிய அமத்சியாவின் ஸ்தானத்தில் ராஜாவாக்கினார்கள். அமத்சியா 22 ராஜா நித்திரையடைந்து தன் பிதாக்களோடு சேர்ந்தபின் இவன் ஏலாதை அரணாக்கி அதைத் திரும்ப யூதாவின் வசமாக்கிக்கொண்டான்.

யோவாசின் குமாரனாகிய அமத்சியா 23 என்னும் யூதா ராஜாவின் பதினைந்தாம் வருஷத்தில் இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாசின் குமாரன் யெரொபெயாம் ராஜாவாகிச் சமாரியாவில் நாற்பத்தொரு வருஷம் அரசாண்டான். இவன் யெகோவாவின் பார்24 வையில் தீமையானதைச் செய்தான்; இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்கள் அணுவளவையும் அவன் விட்டு விலகவில்லை. அவன் ஆமாத்திற்குப் போகிற 25 வழி பிரியும் இடம்தொடங்கி அராபாவின் கடல்மட்டுமுள்ள இஸ்ரவேலின் எல்லைகளை முன்போலாக்கினான்; காத்கேப்பேர் ஊராலும் அமித்தாயின் குமாரனுமாகிய யோனா தீர்க்கதரிசி என்னும் தமது ஊழியனைக் கொண்டு இஸ்ரவேலின் கடவுளாகிய

யெகோவா சொல்லியிருந்த வார்த்தையின்
26 படியே ஆயிற்று. இஸ்ரவேலின் உபத்திர
வம் மிகவும் கொடிது என்றும் அடைப்பட்ட
வனுமில்லை அடைபடாதவனுமில்லை, இஸ்ர
வேலுக்கு ஒத்தாசை செய்கிறவனுமில்லை
27 என்றும் யெகோவா கண்டார். இஸ்ரவே
லின் பேரை வானத்தின் கீழிராதபடி அழித்
துப்போடுவேன் என்று யெகோவா சொல்
லாமல் யோவாகின் குமாரனுகிய யெரொ
பெயாமைக்கொண்டு அவர்களை இரட்சித்
தார்.

28 யெரொபெயாமைப்பற்றிய மற்ற விவரங்
களும் அவன் செய்தவை யாவும் அவன்
புஜபலமும் அவன் யுத்தம் பண்ணித்
தமஸ்கு, ஆமாத்து இவற்றில் பூர்வத்திலே
யூதாவுக்கு உரியதாயிருந்ததை இஸ்ரவே
லுக்குச் சேர்த்துக்கொண்ட விவரமும் இஸ்ர
வேல் ராஜாக்களைப்பற்றிய தினவர்த்தமானம்
29 என்னும் நூலில் எழுதியிருக்கிறதே. யெரொ
பெயாம் நித்திரையடைந்து இஸ்ரவேலின்
ராஜாக்களாகிய தன் பிதாக்களோடு சேர்ந்
தான்; அவன் குமாரனுகிய சகரியா அவன்
ஸ்தானத்தில் ராஜாவானான்.

**15** உஸ்ரவேலின் ராஜாவாகிய யெரொபெ
யாமின் இருபத்தேழாம் வருஷத்தில் யூதா
வின் ராஜாவாகிய அமத்சியாவின் குமாரன்
2 அசரியா ராஜாவானான். அவன் ராஜாவான
போது அவனுக்குப் பதினாறு வயது, அவன்
ஐம்பத்திரண்டு வருஷம் எருசலேமிலே
அரசாண்டான்; அவன் தாயின்பேர் எக்
கோலியாள், அவள் எருசலேம் நகரத்தாள்.
3 அவன் தன் தகப்பனுகிய அமத்சியா செய்த
படியெல்லாம் யெகோவாவின் பார்வையில்
4 நேர்மையானதைச் செய்தான். கோவில்
மேடைகள் மாத்திரம் அகற்றப்படவில்லை; ஜனங்கள் இன்னும் மேடைகள்மேல் பலி
யிட்டுத் தூபங்காட்டிவந்தார்கள்.
5 யெகோவா இந்த ராஜாவை வாதித்ததினால் அவன் தன் மரணநாள் மட்டும் குஷ்ட
ரோகியாயிருந்து தனித்த ஒரு வீட்டிலே
வாசம்பண்ணினான்; ராஜாவின் குமாரனுகிய
யோதாம் அரமனையிலே தலையாயிருந்து
தேசத்தின் ஜனங்களை நியாயம்விசாரித்தான்.
6 அசரியாவைப்பற்றிய மற்ற விவரங்க
ளும் அவன் செய்தவை யாவும் யூதா ராஜாக்
களைப்பற்றிய தினவர்த்தமானம் என்னும்
7 நூலில் எழுதியிருக்கிறதே. அசரியா நித்
திரையடைந்து தன் பிதாக்களோடு சேரவே
அவனைத் தாவீதுநகரத்தில் அவன் பிதாக்க
ளண்டையிலே அடக்கம்பண்ணினார்கள்;
அவன் குமாரனுகிய யோதாம் அவன் ஸ்தா
னத்தில் ராஜாவானான்.

யூதாவின் ராஜாவாகிய அசரியாவின் 8
முப்பத்தெட்டாம் வருஷத்திலே யெரொபெ
யாமின் குமாரனுகிய சகரியா இஸ்ரவேலின்
மேல் சமாரியாவிலே ராஜாவாகி ஆறுமாதம்
அரசாண்டான். தன் பிதாக்கள் செய்தபடி 9
யெல்லாம் யெகோவாவின் பார்வையில்
தீமையானதைச் செய்தான்; இஸ்ரவேலைப்
பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமா
ரனுகிய யெரொபெயாமின் பாவங்களை
அவன் விட்டு விலகவில்லை. யாபேசின் 10
குமாரனுகிய சல்லூம் அவனுக்கு விரோத
மாகச் சதியாலோசனைபண்ணி ஜனங்க
ளுக்கு எதிரே அவனை வெட்டிக் கொன்று
போட்டு அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.
சகரியாவைப்பற்றிய மற்ற விவரங்கள் 11
இஸ்ரவேல் ராஜாக்களைப்பற்றிய தினவர்த்த
மானம் என்னும் நூலில் எழுதியிருக்கிறதே.
யெகோவா யேகூவோடே பேசி: உன் குமா 12
ரர் நாலாம் தலைமுறைமட்டும் இஸ்ரவேல்
சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார்கள்
என்று சொன்ன வார்த்தை இப்படியாக
நிறைவேறிற்று.

யூதாவின் ராஜாவாகிய உசியாவின் மூப் 13
பத்தொன்பதாம் வருஷத்தில் யாபேசின்
குமாரனுகிய சல்லூம் ராஜாவாகிச் சமாரி
யாவில் ஒரு மாதம் அரசாண்டான். காதி 14
யின் குமாரனுகிய மெனுகேம் திர்சாவி
லிருந்து சமாரியாவுக்கு வந்து யாபேசின்
குமாரனுகிய சல்லூமைச் சமாரியாவிலே
வெட்டிக் கொன்றுபோட்டு அவன் ஸ்தா
னத்திலே ராஜாவானான். சல்லூமைப்பற் 15
றிய மற்ற விவரங்களும் அவன் செய்த சதி
யாலோசனையும், இதோ, இஸ்ரவேல் ராஜாக்
களைப்பற்றிய தினவர்த்தமானம் என்னும்
நூலில் எழுதியிருக்கிறதே. மெனுகேம் திப் 16
சாகையையும் அதிலுள்ள யாவையும் திர்சா
தொடங்கி அதின் பிரதேசங்களையும் கொள்
ளையிட்டான்; அவர்கள் தனக்கு வாசலைத்
திறக்கவில்லை என்று அவர்களை வெட்டி,
அவர்கள் கர்ப்பவதிகளையெல்லாம் கீறிப்
போட்டான்.

யூதாவின் ராஜாவாகிய அசரியாவின் 17
முப்பத்தொன்பதாம் வருஷத்தில் காதியின்
குமாரனுகிய மெனுகேம் இஸ்ரவேல்மேல்
ராஜாவாகிச் சமாரியாவிலே பத்துவருஷம்
அரசாண்டான்; அவன் தன் நாட்களிலெல்
லாம் யெகோவாவின் பார்வையில் தீமை
யானதைச் செய்தான். இஸ்ரவேலைப் பாவஞ் 18
செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனு
கிய யெரொபெயாமின் பாவங்களை விட்டு
விலகாதிருந்தான். அசரியாவின் ராஜாவா 19
கிய பூல், இஸ்ரவேல் தேசத்திற்கு விரோத

மாய் வந்தான்; ராஜியபாரத்தைத் தன் கை
யில் பலப்படுத்துவதற்குப் பூல் தனக்குத்
தஞ்சையாகவேண்டுமென்று மெனுகேம் அவ
னுக்கு ஆயிரம் தாலந்து வெள்ளி கொடுத்
20 தான். அசிரியாவின் ராஜாவுக்குக் கொடுக்க
வேண்டிய இந்தப் பணத்தை மெனுகேம்
இஸ்ரவேலில் பெரிய ஐசுவரியவான்களிடம்
ஆளுக்கு ஐம்பது வெள்ளிச்சேக்கல் வீதம்
தண்டினான்; அப்படியே அசிரியாவின்
ராஜா இஸ்ரவேல் தேசத்திலே நிற்காமல்
திரும்பிப் போய்விட்டான்.
21 மெனுகேமைப்பற்றிய மற்ற விவரங்க
ளும் அவன் செய்தவை யாவும் இஸ்ரவேல்
ராஜாக்களைப்பற்றிய தினவர்த்தமானம் என்
22 னும் நூலில் எழுதியிருக்கிறதே. மெனு
கேம் நித்திரையடைந்து தன் பிதாக்களோடு
சேரவே அவன் குமாரனுகிய பெக்காகியா
அவன் ஸ்தானத்தில் ராஜாவானுன்.
23 யூதாவின் ராஜாவாகிய அசரியாவின் ஐம்
பதாம் வருஷத்தில் மெனுகேமின் குமாரன்
பெக்காகியா இஸ்ரவேலின்மேல் ராஜா
வாகிச் சமாரியாவிலே இரண்டு வருஷம்
24 அரசாண்டான். அவன் யெகோவாவின்
பார்வையில் தீமையானதைச் செய்தான்;
இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின
நேபாத்தின் குமாரனுகிய யெரொபெயாமின்
பாவங்களை அவன் விட்டு விலகாதிருந்தான்.
25 ரெமலியாவின் குமாரனுகிய பெக்காகு
என்னும் அவனுடைய மெய்காவலாளன்
அவனுக்கு விரோதமாய்ச் சதியாலோசனை
பண்ணி அர்கோபையும் ஆரியேயையும்
சேர்த்துக்கொண்டு கிலெயாத்தியரில் ஐம்
பதுபேரைக் கூட்டிவந்து சமாரியாவில்
ராஜாவின் வீடாகிய அரமனைக்குள்ளே
அவனை வெட்டிக் கொன்றுபோட்டு அவன்
26 ஸ்தானத்தில் ராஜாவானுன். பெக்காகியா
வைப்பற்றிய மற்ற விவரங்களும் அவன்
செய்தவை யாவும், இதோ, இஸ்ரவேல்
ராஜாக்களைப்பற்றிய தினவர்த்தமானம் என்
னும் நூலில் எழுதியிருக்கிறதே.
27 யூதாவின் ராஜாவாகிய அசரியாவின் ஐம்
பத்திரண்டாம் வருஷத்தில் ரெமலியாவின்
குமாரனுகிய பெக்காகு இஸ்ரவேலின்மேல்
ராஜாவாகிச் சமாரியாவிலே இருபது வரு
28 ஷம் அரசாண்டான். அவன் யெகோவா
வின் பார்வையில் தீமையானதைச் செய்
தான்; இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப் பண்
ணின நேபாத்தின் குமாரனுகிய யெரொ
பெயாமின் பாவங்களை அவன் விட்டு விலகா
29 திருந்தான். இஸ்ரவேலின் ராஜாவாகிய
பெக்காகின் நாட்களில் அசிரியாவின் ராஜா
வாகிய திகிலாத்பிலேசர் வந்து ஈயோன்,
ஆபேல் பேத்மாக்கா, யனோவாகு, கேதேஸ்,
காத்சோர் என்னும் ஊர்களையும் கிலெயாத்
தையும் கலிலேயாவைச் சேர்ந்த நப்தலி
நாடு முழுவதையும் பிடித்துக் குடிகளைச்
சிறையாக அசிரியாவுக்குக் கொண்டுபோ
னுன். ஏலாவின் குமாரனுகிய ஓசேயா 30
ரெமலியாவின் குமாரனுகிய பெக்காகுக்கு
விரோதமாய்ச் சதியாலோசனை செய்து
அவனை வெட்டிக் கொன்றுபோட்டான்;
உசியாவின் குமாரனுகிய யோதாமின் இரு
பதாம் வருஷத்திலே ஓசேயா பெக்காகின்
ஸ்தானத்தில் ராஜாவானுன். பெக்காகைப் 31
பற்றிய மற்ற விவரங்களும் அவன் செய்
தவை யாவும், இதோ, இஸ்ரவேல் ராஜாக்
களைப்பற்றிய தினவர்த்தமானம் என்னும்
நூலில் எழுதியிருக்கிறதே.
ரெமலியாவின் குமாரனுகிய பெக்காகு 32
என்னும் இஸ்ரவேல் ராஜாவின் இரண்டாம்
வருஷத்தில் யூதாவின் ராஜாவாகிய உசியா
வின் குமாரன் யோதாம் ராஜாவானுன்.
அவன் ராஜாவானபோது அவனுக்கு இரு 33
பத்தைந்து வயது, அவன் எருசலேமிலே
பதினுறு வருஷம் அரசாண்டான்; அவன்
தாயின் பேர் எருஷாள், அவள் சாதோக்
கின் குமாரத்தி. அவன் யெகோவாவின் 34
பார்வையில் நேர்மையானதைச் செய்தான்;
தன் தகப்பனுகிய உசியா செய்தபடியெல்
லாம் செய்தான். கோவில்மேடைகள் 35
மாத்திரம் அகற்றப்படவில்லை; ஜனங்கள்
இன்னும் மேடைகளின்மேல் பலியிட்டுத்
தூபங்காட்டி வந்தார்கள்; இவன் யெகோ
வாவின் ஆலயத்தின் மேலேயுள்ள வாசலைக்
கட்டினுன். யோதாம் செய்த மற்றக் காரி 36
யங்கள் யூதா ராஜாக்களைப் பற்றிய தினவர்த்
தமானம் என்னும் நூலில் எழுதியிருக்
கிறதே. அந்நாட்களிலே யெகோவா சீரி 37
யாவின் ராஜாவாகிய ரேத்சீனையும் ரெமலி
யாவின் குமாரனுகிய பெக்காகையும் யூதா
வுக்கு விரோதமாக அனுப்பத் தொடங்கி
னுர். யோதாம் நித்திரையடைந்து தன் 38
பிதாக்களோடு சேரவே தன் தகப்பனுகிய
தாவீதின் நகரத்திலே தன் பிதாக்களண்டை
யில் அடக்கம்பண்ணப்பட்டான்; அவன்
குமாரனுகிய ஆகாஸ் அவன் ஸ்தானத்தில்
ராஜாவானுன்.
ரெமலியாவின் குமாரனுகிய பெக்காகின் 16
பதினேழாம் வருஷத்தில் யூதாவின் ராஜாவா
கிய யோதாமின் குமாரன் ஆகாஸ் ராஜாவா
னுன். ஆகாஸ் ராஜாவானபோது அவனுக்கு 2
இருபது வயது, அவன் எருசலேமிலே
பதினுறு வருஷம் அரசாண்டான்; அவன்
தகப்பனுகிய தாவீது தன் கட்வளாகிய

யெகோவாவின் பார்வையில் கேர்மையான தைச் செய்ததுபோல இவன் செய்யவில்லை.
3 இவன் இஸ்ரவேல் ராஜாக்களின் வழியிலே நடந்து யெகோவா இஸ்ரவேல் புத்திரருக்கு முன்னிராதபடி தூரத்தின ஜாதிகளுடைய அருவருப்புகளின்படியே தன் குமாரனையும்
4 அக்கினியிலிட்டான். கோவில்மேடைகளி லும் குன்றுகளின்மேலும் பச்சையான சகல மரங்களின்கீழும் பலியிட்டுத் தூபங்காட்டி வந்தான்.
5 சீரியாவின் ராஜாவாகிய ரேத்சினும், ரெமலியாவின் குமாரனுகிய இஸ்ரவேலின் ராஜா பெக்காகும் யுத்தம்பண்ணும்படி எருசலேமுக்கு வந்து ஆகாசை வளைந்து கொண்டார்கள்; எனினும் ஜெயிக்கமுடி
6 யாமல் திரும்பிவிட்டார்கள். அக்காலத் திலே சீரியாவின் ராஜாவாகிய ரேத்சின் ஏலாத்தைத் திரும்பச் சீரியாவோடு சேர்த் துக்கொண்டு யூதாகாட்டாரை ஏலாத்தி லிருந்து துரத்தினான்; சீரியர் ஏலாத்திற்கு வந்து குடியேறி இந்நாள்வரைக்கும் அங்
7 கேயே இருக்கிறார்கள். ஆகாஸ் அசீரியா வின் ராஜாவாகிய திகிலாத்பிலேசரிடம் தூது வரை அனுப்பி: நான் உமது அடியான், உமது குமாரன், சீரியாவின் ராஜாவும் இஸ்ர வேலின் ராஜாவும் சேர்ந்து எனக்கு விரோ தமாய் வந்திருக்கிறார்கள், நீர் வந்து என்னை அவர்கள் கையினின்று விடுவித்தருளும்
8 என்று சொல்லச் சொல்லி | யெகோவாவின் ஆலயத்திலும் ராஜாவின் அரமனைப் பொக்கி ஷங்களிலும் அகப்பட்ட வெள்ளியையும் பொன்னையும் எடுத்து அசீரியா ராஜாவுக்கு
9 வெகுமானமாக அனுப்பினன். அசீரியா ராஜா அவனுக்குச் செவிகொடுத்துத் தமஸ்கு வுக்குப்போய் அதைப் பிடித்து அதின் குடி களைக் கிருக்குச் சிறைபிடித்துக்கொண்டு போனன்; ரேத்சினைக் கொன்றுபோட் டான்.
10 அப்பொழுது ஆகாஸ்ராஜா அசீரியாவின் ராஜாவாகிய திகிலாத்பிலேசரைக் கண்டு வரும்படி தமஸ்குவுக்குப் போனன்; அவன் தமஸ்குவிலிருந்த பலிபீடத்தைக் கண்டான்; ஆகாஸ்ராஜா அந்தப் பலிபீடத்தின் மாதிரி யையும் அதின் பாகங்கள் செய்யப்பட் டிருந்த விதத்தையும் காட்டிவரைந்து ஆசாரியனுகிய உரியாவுக்கு அனுப்பினன்.
11 ஆகாஸ்ராஜா தமஸ்குவிலிருந்து வரைந்து காட்டியனுப்பியிருந்தபடியெல்லாம் ஆசா ரியனுகிய உரியா பலிபீடத்தைக் கட்டி
12 னன். ஆகாஸ்ராஜா தமஸ்குவிலிருந்து திரும்பிவருவதற்குள் ஆசாரியனுகிய உரியா அதைச் செய்துமுடித்தான். ராஜா தமஸ்கு விலிருந்து வந்தபோது அவன் அந்தப் பலி பீடத்தைப் பார்த்து, அந்தப் பலிபீடத் தைக் கிட்டிச் சேர்ந்து அதில் ஏறித் | தன் 13
தகனபலியையும் தன் போஜனபலியையும் தகனித்துத் தன் பானபலியை வார்த்துத் தனக்காகச் செலுத்தின சமாதான பலிகளின் இரத்தத்தை அந்தப் பலிபீடத்தின்மேல் தெளித்தான். யெகோவாவின் சந்நிதியில் 14
இருந்த செப்புப் பலிபீடத்தை அவன் தன் பலிபீடத்திற்கும் யெகோவாவின் ஆலயத் திற்கும் நடுவே ஆலயத்தின் முகப்பிலிருந்து எடுத்து அதைத் தன் பலிபீடத்திற்கு வட புறமாய் வைத்தான். ஆகாஸ் ராஜா ஆசாரி 15
யனுகிய உரியாவுக்குக் கட்டளையிட்டு: இந்தப் பெரிய பலிபீடத்தின்மேல் நீ காலைத் தகனபலியையும் மாலைப் போஜனபலியை யும் ராஜாவின் தகனபலியையும் அவரு டைய போஜனபலியையும் தேசத்தினுடைய சகல ஜனங்களின் தகனபலியையும் அவர் கள் போஜனபலியையும் அவர்கள் பானபலி களையும் செலுத்தி அதின்மேல் தகனங்களின் இரத்தமுழுவதையும் மற்றப் பலிகளின் இரத்தமுழுவதையும் தெளிக்கவேண்டும்; அந்தச் செப்புப் பலிபீடமோ நான் சன்ன தம் கேட்பதற்காகும் என்று சொன்னன். ஆகாஸ்ராஜா கட்டளையிட்டபடியெல்லாம் 16
ஆசாரியனுகிய உரியா செய்தான்.
ஆகாஸ்ராஜா கொப்பரை ஆதாரங் 17
களின் இடைத்துண்டுகளை வெட்டி எடுத்து விட்டான்; ஆதாரங்களின் மேலிருந்த கொப்பரைகளை எடுத்துவிட்டான்; கடல் தொட்டியைக் கீழே நிற்கிற செப்பு நிஷபங்களின் மேலிருந்து இறக்கி அதைக் கற்களின் தளவரிசையிலே வைத் தான். ஆலயத்தை அடுத்துக் கட்டியிருந்த 18
ஓய்வுநாள் மண்டபத்தையும் ராஜா பிரவே சிக்கும் மண்டபத்தையும் யெகோவாவின் ஆலயத்தோடு சேர்த்துவிட்டான்; அசீரியா ராஜாவினிமித்தம் இவற்றையெல்லாம் செய் தான்.
ஆகாஸ் செய்த மற்றக்காரியங்கள் யூதா 19
ராஜாக்களைப்பற்றிய தினவர்த்தமானம் என் னும் நூலில் எழுதியிருக்கிறதே. ஆகாஸ் 20
நித்திரையடைந்து தன் பிதாக்களோடு சேரவே தாவீது நகரத்தில் தன் பிதாக்களின் டையிலே அடக்கம் பண்ணப்பட்டான்; அவன் குமாரனுகிய எசேக்கியா அவன் ஸ்தானத்தில் ராஜாவானன்.
யூதாவின் ராஜாவாகிய ஆகாசின் பன்னி 17
ரண்டாம் வருஷத்தில் ஏலாவின் குமாரனு கிய ஓசேயா சமாரியாவிலே இஸ்ரவேலின் மேல் ராஜாவாகி ஒன்பது வருஷம் அரசாண்

2 ான். அவன் யெகோவாவின் பார்வை
யில் தீமையானதைச் செய்தான்; என்ருலும்
தனக்கு முன்னிருந்த இஸ்ரவேலின் ராஜாக்
3 களைப்போல் செய்யவில்லே. அவனுக்கு
விரோதமாக அசீரியாவின் ராஜாவாகிய சல்ம
னேசார் வந்தான்; அப்பொழுது ஓசேயா
அவனைச் சேவிக்கிறவனுகி அவனுக்குக்
4 கப்பங்கட்டிவந்தான். ஓசேயா எகிப்தின்
ராஜாவாகிய சோ என்பவனிடம் தூதுவரை
அனுப்பினனென்றும் வருஷந்தோறும்
தனக்குக் கட்டவேண்டிய கப்பத்தை அவன்
அனுப்பாதேபோனன் என்றும் தெரியவந்த
போது ஓசேயா துரோகஞ்செய்தான் என்று
அசீரியா ராஜா கண்டு அவனைப் பிடித்துக்
5 கட்டிச் சிறையிலே வைத்தான். அசீரியா
ராஜா தேசம் எங்கும் படைகொண்டு
சென்று சமாரியாவுக்கும் வந்து அதை
மூன்று வருஷம் முற்றுகைபோட்டிருந்
6 தான். ஓசேயாவின் ஒன்பதாம் வருஷத்
திலே அசீரியா ராஜா சமாரியாவைப்
பிடித்து இஸ்ரவேலை அசீரியாவுக்குச் சிறை
யாகக் கொண்டுபோய் அவர்களைக் கெலாகி
லும் கோசானின் நதியாகிய காபோரண்டை
யிலும் மேதியரின் ஊர்களிலும் குடியேற்றி
னன்.

7 இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கடவுளாகிய
யெகோவாவுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்
தபடியால் இப்படி நேரிட்டது. அவர் அவர்
களை எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுடைய
கையினின்று விடுதலையாக்கி எகிப்துதேசத்தி
லிருந்து அவர்களைக் கொண்டுவந்திருந்தும்
அவர்கள் அந்திய தேவர்களைத் தொழுது
8 கொண்டு | யெகோவா இஸ்ரவேல் புத்திர
ருக்கு முன்னிராதபடி துரத்திவிட்ட ஜாதி
களின் முறைமைகளிலும் இஸ்ரவேல்
ராஜாக்கள் ஏற்படுத்தின முறைமைகளிலும்
9 நடந்துவந்தார்கள். செய்யத்தகாத காரி
யங்களை இஸ்ரவேல்புத்திரர் தங்கள் கடவு
ளாகிய யெகோவாவுக்கு விரோதமாக மறை
வில் செய்துவந்தார்கள்; காவல் கோபுரம்
மாத்திரமுடைய சிற்றூராலும் சரி, அர
ணன பட்டணமாலும் சரி, எல்லா ஊர்
களிலும் அவர்கள் தங்களுக்குக் கோவில்
10 மேடைகளை யமைத்துச் | சகல உயர்மேடு
களிலும் சகல பச்சைமரங்களின் கீழும்
தங்களுக்குக் கற்சிலைகளையும் மரச்சிலைகளை
11 யும் நிறுத்தித் | தங்கள் நடுவில் குடியிராத
படி யெகோவா விலக்கிவிட்ட ஜாதிகளைப்
போலவே அவர்களும் சகல தோவில்மேடை
களிலும் தூபங்காட்டி யெகோவாவுக்குக்
கோபமுண்டாகத்தக்கிரியைகளைச் செய்து
12 வந்தார்கள். செய்யவேண்டாம் என்று
யெகோவா தங்களுக்கு விலக்கியிருந்ததைச்
செய்து கேவலமான விக்கிரகங்களைச்
சேவித்துவந்தார்கள். யெகோவா தீர்க்க 13
தரிசிகள் ஞானதிருஷ்டிகர் அனைவரையுங்
கொண்டு இஸ்ரவேலையும் யூதாவையும்
திட்டமாய் எச்சரித்து, நீங்கள் உங்க
ளுடைய தீயவழிகளை விட்டுத் திரும்பி நான்
உங்கள் பிதாக்களுக்குக் கட்டளையிட்டதும்
என் ஊழியராகிய தீர்க்கதரிசிகளைக்
கொண்டு உங்களுக்குச் சொல்லியனுப்பி
னதுமான நியாயப்பிரமாணத்தின்படி யெல்
லாம் என் கட்டளைகளையும் என் நியமங்களை
யும் கைக்கொள்ளுங்கள் என்று சொல்லி
யிருந்தார். அவர்களோ செவிகொடுக்க 14
வில்லை, தங்கள் கடவுளாகிய யெகோ
வாவை நம்பாமற்போன தங்கள் பிதாக்
களைப்போல் வணங்காக் கழுத்துள்ளவர்
களாகி | அவருடைய நியமங்களையும் 15
அவர் தங்கள் பிதாக்களோடேசெய்த
அவருடைய உடன்படிக்கையையும் அவர்
எச்சரித்துத் தங்களுக்கு ஏற்படுத்திய அவ
ருடைய சாட்சியங்களையும் வெறுத்துவிட்டு
வீணனவைகளைப் பற்றிக்கொண்டு வீண
ராளுர்கள்; சுற்றிலும் இருக்கிறவர்களைப்
போல் செய்யவேண்டாமென்று யெகோவா
தங்களுக்குக் கட்டளையிட்டிருந்தும் அவர்
கள் அந்த ஜாதிகளைப்போலவே செய்தார்
கள். தங்கள் கடவுளாகிய யெகோவாவின் 16
கட்டளைகளையெல்லாம் விட்டுவிட்டு
இரண்டு கன்றுக்குட்டிகளைத் தங்களுக்
கென்று வார்ப்பித்து, மரச்சிலைகளைச் செய்து
வானத்தின் சேனைகளையெல்லாம் பணிந்து
கொண்டு பாகாலைச் சேவித்தார்கள். தங் 17
கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும்
அக்கினியிலிட்டு நிமித்தங்கள் பார்த்துக்
குறிகேட்டு யெகோவாவுக்குக் கோபமுண்
டாக்க அவர் பார்வையில் தீமையானதைச்
செய்கிறதற்குத் தங்களை விற்றுப்போட்டார்
கள்.

ஆகவே யெகோவா இஸ்ரவேலின்மேல் 18
கடுங்கோபங்கொண்டு தமது முகத்திற்
கெதிரே இராதபடி அவர்களை அகற்றினர்;
யூதாகோத்திரம் மாத்திரமே மீதியாயிற்று.
யூதா ஜனங்களும் தங்கள் கடவுளாகிய 19
யெகோவாவின் கட்டளைகளைக் கைக்கொள்
ளாமற்போனர்கள்; இஸ்ரவேல் உண்டாக்
கிக்கொண்ட முறைமைகளில் இவர்களும்
நடந்துவந்தார்கள். ஆகவே யெகோவா 20
இஸ்ரவேல் சந்ததியாரையெல்லாம்
வெறுத்து அவர்களைச் சிறுமைப்படுத்திக்
கொள்ளைக்காரர் கையில் ஒப்புக்கொடுத்துத்
தமது முகத்திற்கு எதிரே இராதபடி தள்ளி

21 விட்டார். இஸ்ரவேலைத் தாவீது வம்சத்
தைவிட்டுப் பிரியச்செய்தார், அவர்கள்
நேபாத்தின் குமாரனுகிய யெரொபெயாமை
ராஜாவாக்கிக் கொள்ளவே, யெரொபெயாம்
இஸ்ரவேலை யெகோவாவை விட்டுப் பின்
வாங்குவதற்கும் பெரிய பாவத்தைச் செய்
22 வதற்கும் இழுத்துவிட்டான். அப்படியே
இஸ்ரவேல் புத்திரர் யெரொபெயாம் செய்த
சகல பாவங்களிலும் நடந்து அவைகளை
23 விட்டு விலகாதிருந்தார்கள். அவர்கள்
தமது முகத்திற்கு எதிரே இராதபடி
யெகோவா அவர்களை அகற்றிவிட்டார்;
யெகோவா தீர்க்கதரிசிகளாகிய தமது ஊழி
யர் அனைவரையுங்கொண்டு சொல்லியிருந்த
படியே ஆயிற்று; இப்படியாக இஸ்ர
வேலரை அவர்கள் தேசத்தினின்று அசீரி
யாவுக்குச் சிறைபோகச் செய்தார்; இந்நாள்
வரைக்கும் அப்படியே இருக்கிறார்கள்.

பாபிலோன், கூத்தா, அவ்வா, ஆமாத்து,
செப்பர்வாயிம் இவைகளிலிருந்து அசீரியா
ராஜா ஜனங்களை வரச்செய்து அவர்களை
24 இஸ்ரவேல் புத்திரருக்குப் பதிலாகச் சமாரி
யாவின் ஊர்களிலே குடியேற்றினான்; இவர்
கள் சமாரியாவைச் சொந்தமாக்கிக்கொண்டு
அதின் ஊர்களிலே குடியிருந்தார்கள்.
25 அவர்கள் அங்கே முதலாவது குடியேறின
போது யெகோவாவுக்குப் பயந்து நடவாத
தினால் யெகோவா அவர்களுக்குள்ளே சிங்
கங்களை அனுப்பினார்; அவைகள் அவர்
26 களில் சிலரைக் கொன்றன. இது அசீரியா
ராஜாவுக்கு அறிவிக்கப்பட்டது: நீர்
கொண்டுபோய்ச் சமாரியாவின் ஊர்களிலே
குடியேற்றின ஜாதிகள் அத்தேசத்துத் தெய்
வத்தின் முறைமையை அறியாதபடியினால்
அவர் அவர்களுக்குள்ளே சிங்கங்களை
அனுப்பினார்; இதோ, சிங்கங்கள் அவர்
களைக் கொன்றுபோடுகின்றன; அத்தேசத்
துத் தெய்வத்தின் முறைமைகள் அவர்களுக்
குத் தெரியாதே என்று சொன்னார்கள்.
27 அதைக்கேட்ட அசீரியா ராஜா: நீங்கள்
அங்கிருந்து கொண்டுவந்த ஆசாரியரில்
ஒருவனை அங்கே அழைத்துக்கொண்டு
போங்கள்; அவன் அங்கே போய்க் குடி
யிருந்து அத்தேசத்துத் தெய்வத்தின் முறை
மையை அவர்களுக்குப் போதிக்கவேண்டும்
28 என்று கட்டளையிட்டான். அப்படியே
அவர்கள் சமாரியாவிலிருந்து சிறைபிடித்
துக்கொண்டு போயிருந்த ஆசாரியரில்
ஒருவன் வந்து பேதேலிலே குடியிருந்து
யெகோவாவுக்குப் பயந்து நடக்கவேண்டிய
விதத்தை அவர்களுக்குப் போதித்தான்.
29 போதித்தும் அந்தந்த ஜாதியார் தங்கள்
தங்கள் தேவர்களைத் தங்களுக்குச் செய்து
கொண்டு அந்தந்த ஜாதியார் குடியேறி
யிருந்த தங்கள் தங்கள் ஊர்களிலே சமாரி
யர் அமைத்திருந்த மேடைக்கோவில்களில்
வைத்தார்கள். பாபிலோனியர் சுக்கோத்
30 பெனோத்தையும் கூத்தியர் நேர்காலையும்
ஆமாத்தியர் அசிமாவையும் | அவ்வியர் நிப்
31 காசையும் தர்தாக்கையும் செய்துகொண்
டார்கள்; செப்பர்வியர் செப்பர்வாயிமின்
தேவர்களாகிய அத்ரமேலேக்குக்கும் அன்ன
மேலேக்குக்கும் தங்கள் பிள்ளைகளை அக்
கினியில் தகனித்து வந்தார்கள். அவர்கள்
32 யெகோவாவைத் தொழுதுகொண்டதோடு
கூடத் தங்களுக்குள்ளிருந்தே கோவில்
மேடை ஆசாரியரை ஏற்படுத்தினார்கள்;
இவர்கள் மேடைக் கோவில்களில் அவர்
களுக்கென்று பூசை செய்து வந்தார்கள்.
இப்படியாக அவர்கள் யெகோவாவையும்
33 தொழுதுவந்தார்கள்; தாங்கள் விட்டுவந்த
ஜாதிகளுடைய முறைமையின்படியே தங்
கள் தேவர்களையும் சேவித்துவந்தார்கள்.
34 இந்நாள்வரைக்கும் அவர்கள் தங்கள் மூன்
னின முறைகளின்படியே செய்துவருகிறார்
கள்; அவர்கள் யெகோவாவுக்குப் பயந்து
நடக்கிறதுமில்லை, யெகோவா இஸ்ரவேல்
என்று பேரிட்ட யாக்கோபின் புத்திரருக்
குக் கட்டளையிட்ட நியமங்கள், தீர்ப்புகள்,
நியாயப்பிரமாணங்கள், கட்டளைகள் இவற்
றின்படி செய்கிறதுமில்லை. யெகோவா
35 இஸ்ரவேல் புத்திரரோடே உடன்படிக்கை
செய்து அவர்களுக்குக் கட்டளையிட்டு: நீங்
கள் அந்நிய தேவர்களுக்குப் பயந்துநடக்க
வேண்டாம், அவர்களைத் தொழுதுகொள்ள
வும் சேவிக்கவும் அவர்களுக்குப் பலியிட
வும் வேண்டாம்; உங்களை மகாவல்லமை
36 யினாலும் நீட்டிய கரத்தினாலும் எகிப்து
தேசத்திலிருந்து கொண்டுவந்த யெகோவா
வுக்கே பயந்துநடந்து அவரையே தொழுது
கொண்டு அவருக்கே பலியிடவேண்டும்.
அவர் உங்களுக்கு எழுதிக்கொடுத்த நியமங்
37 களையும் தீர்ப்புகளையும் நியாயப்பிரமாணத்
தையும் கட்டளைகளையும் நீங்கள் கைக்
கொண்டு எந்நாளும் அவற்றின்படியே
செய்யவேண்டும்; அந்நிய தேவர்களுக்குப்
பயப்படவேண்டாம். நான் உங்களோடே
38 செய்த உடன்படிக்கையை நீங்கள் மறக்க
வேண்டாம்; அந்நிய தேவர்களுக்குப் பயப்
படவேண்டாம்; உங்கள் கடவுளாகிய
39 யெகோவாவுக்கே பயந்துநடக்கவேண்டும்;
அப்பொழுது அவர் உங்கள் சகல சத்துருக்
களின் கையினின்றும் உங்களைத் தப்புவிப்
பார் என்று அவர்களுக்குச் சொல்லியிருந்

40 நார். அவர்களோ செவிகொடுக்கவில்லை; தங்கள் முன்னை முறைமைகளின்படியே
41 செய்துவந்தார்கள். அதே பிரகாரமாக இந்த ஜாதிகளும் யெகோவாவுக்குப் பயந்தும் தங்கள் விக்கிரகங்களைச் சேவித்தும் வந்தார்கள்; அவர்கள் பிள்ளைகளும் அவர்கள் பிள்ளைகளின் பிள்ளைகளும் தங்கள் பிதாக்கள் செய்தபடியே இந்நாள்வரைக்கும் செய்துவருகிறார்கள்.

**18** ஏலாவின் குமாரனாகிய ஓசேயா என்னும் இஸ்ரவேல் ராஜாவின் மூன்றாம் வருஷத்திலே ஆகாஸ் என்னும் யூதா ராஜாவின்
2 குமாரன் எசேக்கியா ராஜாவானான். அவன் ராஜாவானபோது அவனுக்கு இருபத்தைந்து வயது, அவன் எருசலேமிலே இருபத்தொன்பது வருஷம் அரசாண்டான்; அவன் தாயின்பேர் அபி, அவள் சகரியாவின்
3 குமாரத்தி. அவன் தன் தகப்பனாகிய தாவீது செய்தபடியெல்லாம் யெகோவாவின் பார்வையில் நேர்மையானதைச் செய்துவந்
4 தான். அவன் கோவில்மேடைகளை அகற்றிக் கற்சிலைகளைத் தகர்த்து, மரச்சிலைகளை வெட்டி, மோசே செம்பினால் செய்திருந்த சர்ப்பத்தை உடைத்துப்போட்டான்; அந்நாள்வரைக்கும் இஸ்ரவேல்புத்திரர் அதற்குத் தூபங்காட்டிவந்தார்கள்; அதற்கு நெகுஸ்தான் என்று பேர் வழங்கிற்று.
5 அவன் இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவின் மேலேயே நம்பிக்கையாயிருந்தான்; யூதாவின் சகல ராஜாக்களிலும் இவ்விஷயத்தில் அவனுக்குச் சமானமானவன் அவனுக்குப்பின் தோன்றினதில்லை, அவனுக்கு
6 முன்னிருந்ததுமில்லை. அவன் யெகோவாவை விட்டுப் பின்வாங்காமல் அவரையே பற்றியிருந்தான்; யெகோவா மோசேக்கு இட்ட கட்டளைகளைக் கைக்கொண்டு நடந்
7 தான். ஆகவே யெகோவா அவனோடிருந்தார்; அவன் தான் எடுத்த காரியங்களிலெல்லாம் சித்தி பெற்றான்; அவன் அசீரியா ராஜாவுக்கு அடங்காமல் அவன் அதிகாரத்
8 தைத் தள்ளிவிட்டான். அவன் பெலிஸ்தியரைக் காத்சாமட்டும் முறியடித்தான், அதின் சுற்றுப்புறங்களிலுள்ள யாவற்றையும் காவல்கோபுரங்களையும் அரணான பட்டணங்களையும் பிடித்தான்.
9 எசேக்கியா ராஜாவின் நாலாம் வருஷத்தில், ஏலாவின் குமாரனாகிய ஓசேயா என்னும் இஸ்ரவேல் ராஜாவின் ஏழாம் வருஷத்திலே, அசீரியா ராஜாவாகிய சல்மனாசார் சமாரியாவின்மேல் படையெடுத்து வந்து அதை முற்றுகை போட்டான்.
10 மூன்று வருஷமானபின்பு அசீரியர் அதைப் பிடித்தார்கள்; எசேக்கியாவின் ஆறாம் வருஷத்தில், இஸ்ரவேலின் ராஜாவாகிய ஓசேயாவின் ஒன்பதாம் வருஷத்திலே, சமாரியா பிடிபட்டது. அசீரியா ராஜா இஸ்ரவேலை 11
அசீரியாவுக்குச் சிறையாகக் கொண்டுபோய்க் கெலாகிலும் கோசானின் நதியாகிய காபோரண்டையிலும் மேதியரின் ஊர்களிலும் குடியேற்றினான். அவர்கள் தங்கள் 12
கடவுளாகிய யெகோவாவின் சப்தத்திற்குச் செவிகொடாமல் அவருடைய உடன்படிக்கையையும் யெகோவாவின் தாசனாகிய மோசே கட்டளையிட்ட யாவற்றையும் மீறி, அதற்குச் செவிகொடாமலும் அதின்படி செய்யாமலும் போனார்களே.

எசேக்கியா ராஜாவின் பதினாலாம் வரு 13
ஷத்திலே அசீரியா ராஜாவாகிய சனகெரிப் யூதாவிலிருந்த அரணான சகல ஊர்களுக்கும் விரோதமாய் வந்து அவைகளைப் பிடித்தான். அப்பொழுது யூதாவின் ராஜாவாகிய 14
எசேக்கியா லாகீஷுக்கு அசீரியா ராஜாவினிடம் ஆள் அனுப்பி: நான் குற்றஞ்செய்தேன்; என்னைவிட்டுத் திரும்பிப்போம்; நீர் என்மேல் சுமத்துவதைச் சுமப்பேன் என்று சொன்னான்; அப்படியே யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா மூன்றுறு தாலந்து வெள்ளியையும் முப்பது தாலந்து பொன்னையும் கொடுக்கும்படி அசீரியா ராஜா கட்டளையிட்டான். அப்பொழுது எசேக்கியா 15
யெகோவாவின் ஆலயத்திலும் அரமனைப் பொக்கிஷங்களிலும் அகப்பட்ட வெள்ளியையெல்லாம் கொடுத்தான். அக்காலத்தில் 16
யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா யெகோவாவின் ஆலயக்கதவுகளிலும் நிலைகளிலும் தான் அழுத்தியிருந்த பொன்தகடுகளைக் கழற்றி அவைகளை அசீரியா ராஜாவுக்குக் கொடுத்தான்.

அசீரியா ராஜா லாகீஷிலிருந்து தர்தான், 17
ரப்சாரீஸ், ரப்சாக்கே என்பவர்களைப் பெரிய சேனையோடே எருசலேமுக்கு எசேக்கியா ராஜாவினிடம் அனுப்பினான்; அவர்கள் எருசலேமுக்கு வந்து வண்ணார் வயலின் வழியிலே மேலேயுள்ள குளத்துவாய்க் காலண்டையிலே நின்றுகொண்டிருந்தார்கள். ராஜாவை அழைப்பிக்கவே இல்க்கி 18
யாவின் குமாரனாகிய எலியாக்கீம் என்னும் அரமனை உக்கிராணக்காரனும், செப்னு என்னும் சம்பிரதியும், ஆசாப்பின் குமாரனாகிய யோவாகு என்னும் மந்திரியும் அவர்களிடம் போனார்கள். ரப்சாக்கே அவர் 19
களைப் பார்த்து: நீங்கள் எசேக்கியாவினிடம் போய், அசீரியா ராஜாவாகிய மகாராஜா வானவர் இப்படிச் சொல்லுகிறார் என்று

சொல்லுங்கள், உனக்குள்ள நம்பிக்கையை
20 என்ன சொல்ல! யுத்தத்திற்கு வேண்டிய
மந்திராலோசனையும் வல்லமையும் வாய்ப்
பேச்சினாலேயே வந்துவிடுமென நினைக்கி
றாயா? நீ யாரை நம்பிக்கொண்டு என்னை
21 விரோதிக்கிறாய்? இதோ, எகிப்தை, நொறுங்க
அந்த நாணல்கோலை, நம்புகிறாய்; அதின்
மேல் ஒருவன் சாய்ந்தால் அது அவன்
உள்ளங்கையில் பட்டு உருவிப்போம்; எகிப்
தின் ராஜாவாகிய பார்வோன் தன்னை நம்பு
கிற யாவருக்கும் இப்படியே இருப்பான்.
22 எங்கள் கடவுளாகிய யெகோவாவையே
நம்புகிறோம் என்று என்னிடம் சொல்வீர்
களாகில், எசேக்கியா அகற்றிவிட்ட
கோவில் மேடைகளும் பலிபீடங்களும்
அவருடையவைகளேயல்லவா? எருசலேமி
லிருக்கிற இந்தப் பலிபீடத்தின்முன் பணி
யுங்கள் என்று அவன் யூதாவிலும் எரு
சலேமிலு முள்ளவர்களுக்குச் சொன்ன
23 னே. இதோ, அசீரியாவின் ராஜாவாகிய
என் ஆண்டவனோடே பந்தயம்போடு, அவர்
உனக்கு இரண்டாயிரம் குதிரைகளைக் கொ
டுப்பார்; அவைகள்மேல் ஏறுகிற இரண்
24 டாயிரம் ஆட்களைச் சம்பாதிப்பாயா? சம்
பாதியாதேபோனால் நீ என் ஆண்டவனு
டைய சிறிய ஊழியரில் ஒரே ஒரு தலை
வனைக்கூடத் திருப்பி ஒட்டிவிடுவதெப்படி?
இரதங்களும் குதிரைவீரரும் வருவார்கள்
25 என்று எகிப்தை நம்புகிறாயோ? இப்போ
தும் யெகோவாவையன்றி இந்த ஸ்தலத்தை
அழிக்க வந்தேனோ? இந்தத் தேசத்திற்கு
விரோதமாய்ப் போய் அதை அழித்துப்
போடு என்று எனக்குச் சொன்னவர் யெகோ
வாவே என்றான்.
26 அப்பொழுது இல்க்கியாவின் குமாரன்
எலியாக்கீமும் செப்னாவும் யோவாகும் ரப்
சாக்கேயைப் பார்த்து: உமது அடியாரோ
டே அரமேய பாஷையிலே பேசும்; அது
எங்களுக்குத் தெரியும்; அலங்கத்திலிருக்
கிற ஜனங்கள் கேட்கிறார்கள், எங்களோ
டே யூதருடைய பாஷையிலே பேசவேண்
27 டாம் என்றார்கள். அதைக் கேட்ட ரப்
சாக்கே: இந்த வார்த்தைகளைப் பேசும்படி
என்னை அனுப்பினது உங்கள் ஆண்டவ
னண்டைக்கும் உங்களண்டைக்குமா? உங்
களோடே அலங்கத்திலிருக்கிறவர்களும் தங்
கள் மலத்தைத் தின்று தங்கள் நீரைக் குடிக்
கப்போகிறவர்களுமாகிய இந்த ஜனங்களண்
டைக்கேயல்லவா என்னை அனுப்பியிருக்கி
28 றார் என்று சொல்லி | ரப்சாக்கே எதிரே
வந்து நின்றுகொண்டு யூதர் பாஷையிலே
உரத்த சத்தமாய்ப் பேசி: அசீரியா ராஜா
வாகிய மகாராஜா சொல்வதைக் கேளுங்
கள். எசேக்கியா உங்களை வஞ்சியாதபடி 29
பாருங்கள்; அவன் உங்களை என் கைக்குத்
தப்புவிக்கமுடியாது. யெகோவா நம்மை 30
நிச்சயமாய்த் தப்புவிப்பார்; இந்த நகரம்
அசீரியா ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்
கப்படுவதில்லை என்று சொல்லி, எசேக்கியா
உங்களை யெகோவாவை நம்பப்பண்ணு
வான்; அதற்கு இடங்கொடாதிருங்கள்
என்று ராஜா சொல்லுகிறார். எசேக்கியா 31
வின் சொல்லைக் கேளாதிருங்கள்; அசீரியா
ராஜா சொல்வதைக் கேளுங்கள்: நீங்கள்
என்னோடே இராசியாகி என்னிடம் வாருங்
கள்; அவனவன் தன் தன் திராட்சச் செடி
யின் கனியையும் தன் தன் அத்திமரத்தின்
கனியையும் புசித்து, அவனவன் தன் தன்
ஊற்றின் தண்ணீரைக் குடித்துக்கொண்
டிருங்கள். பின்பு நான் வந்து உங்கள் 32
தேசத்துக்கு ஒப்பான தானியமும் திராட்சத்
தோட்டமுமுள்ள தேசமும், அப்பமும்
திராட்சரசமுமுள்ள தேசமும், ஒலிவ எண்
ணெயும் தேனுமுள்ள தேசமுமாகிய நாட்
டுக்கு உங்களை அழைத்துக்கொண்டுபோ
வேன்; இவ்விதமாய் நீங்கள் பிழைத்திருப்
பீர்கள், சாகவே மாட்டீர்கள்; யெகோவா
நம்மை விடுவிப்பார் என்று சொல்லி உங்
களைத் தப்புவழியில் நடத்த எசேக்கியாவுக்
குச் செவிகொடாதிருங்கள். பற்பல ஜாதி 33
களின் தேவர்களில் யாராவது தங்கள்
தேசத்தை அசீரியா ராஜாவின் கைக்குத்
தப்புவித்ததுண்டோ? ஆமாத், அர்பாத் 34
பட்டணங்களின் தேவர்கள் எங்கே? செப்
பர்வாயிம், ஏனா, இவ்வா பட்டணங்களின்
தேவர்கள் எங்கே? சமாரியா என் கைக்குத்
தப்புவிக்கப்பட்டதுண்டோ? அந்த 35
தேசங்களின் சகல தேவர்களிலும் தங்கள்
தேசத்தை என் கைக்குத் தப்புவித்தது
யார்? அப்படியிருக்க யெகோவா எரு
சலேமை என் கைக்குத் தப்புவிப்பார் என்று
சொல்வதெப்படி என்று ராஜா சொல்லுகி
றார் என்றான்.
ஜனங்களோ அவனுக்கு ஒரு வார்த்தை 36
யும் சொல்லாமல் மவுனமாயிருந்தார்கள்;
அவனுக்குப் பதில் சொல்லவேண்டாம்
என்று ராஜா கட்டளையிட்டிருந்தான். அப் 37
பொழுது இல்க்கியாவின் குமாரனாகிய எலி
யாக்கீம் என்னும் அரமனை உக்கிராணக்கார
னும், செப்னா என்னும் சம்பிரதியும், ஆசாப்
பின் குமாரன் யோவாகு என்னும் மந்திரியும்,
தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு
எசேக்கியாவினிடம் வந்து, ரப்சாக்கேயின்
வார்த்தைகளை அவனுக்குத் தெரிவித்தார்கள்.

19 எசேக்கியா ராஜா அதைக் கேட்டபோது தன் வஸ்திரங்களைக் கிழித்து இரட்டு உடுத்திக்கொண்டு யெகோவாவின் ஆலயத்தினுட்
2 சென்றான். அரமனை உக்கிராணக்காரனாகிய எலியாக்கீமையும் சம்பிரதியாகிய செப்னாவையும் ஆசாரியரின் மூப்பரையும் இரட்டுடுத்தினவர்களாய், ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா தீர்க்கதரிசியினிடம்
3 அனுப்பினான். இவர்கள் அவனைக் கண்டு, எசேக்கியா ராஜா எங்களை உம்மிடம் அனுப்பியிருக்கிறார்: இது இடுக்கமான், சிக்கடிக்கும் நிந்தனைக்கும் உட்படும் நாள், பிள்ளைப்பேறு நோக்கியிருக்கிறது, பெற
4 வோ பலமில்லை; ஜீவனுள்ள கடவுளை நிந்திக்கும்படி அசீரியா ராஜாவாகிய தன் ஆண்டவனால் அனுப்பப்பட்ட ரப்சாக்கே சொன்ன வார்த்தைகளையெல்லாம் உமது கடவுளாகிய யெகோவா ஒருவேளை கவனிப்பார்; உமது கடவுளாகிய யெகோவா கேட்டு கவனித்த வார்த்தைகளினிமித்தம் தண்டனை செய்வார்; ஆகவே இன்னும் மீதியாயிருக்கிறவர்களுக்காக விண்ணப்பஞ் செய்யும்படி எசேக்கியா ராஜா கேட்கச்
5 சொன்னார் என்றார்கள். இந்தப்படியே எசேக்கியா ராஜாவின் ஊழியர் ஏசாயாவி
6 னிடம் வந்து சொன்னார்கள். அப்பொழுது ஏசாயா அவர்களிடம்: யெகோவா இப்படிச் சொல்லுகிறார் என்று உங்கள் ஆண்டவனிடம் சொல்லுங்கள், அசீரியா ராஜாவின் ஊழியர் என்னைத் தூஷித்துப் பேசின வார்த்தைகளைக் கேட்டு பயப்பட
7 வேண்டாம். இதோ, ஒரு ஆவியை அவனுக்குள் அனுப்புவேன், அவன் ஒரு செய்தியைக் கேட்டுத் தன் தேசத்துக்குத் திரும்புவான்; அங்கே, அவன் தேசத்திலே அவனைப் பட்டயத்தால் விழப்பண்ணுவேன் என்கிறார் என்று சொன்னான்.
8 ரப்சாக்கே திரும்பிப் போனபோது அசீரியா ராஜா லாகிஷைவிட்டுப் போய்விட்டான் என்று கேள்விப்பட்டு, சென்று அவன் லிப்னாவின்மேல் யுத்தம்பண்ணிக் கொண்டிருக்கும்போது அவனைக் கண்
9 டான். எத்தியோப்பியா ராஜாவாகிய திராக்கா தன்னோடு யுத்தம்பண்ண வருகிறான் என்று அசீரியா ராஜா கேள்விப்பட்டவுடனே அவன் திரும்பவும் எசேக்கியாவி
10 னிடம் தூதுவரை அனுப்பி: நீங்கள் யூதா ராஜாவாகிய எசேக்கியாவினிடம் நீ நம்பியிருக்கிற உன் கடவுள் உன்னை வஞ்சியாதபடி பார்த்துக்கொள், எருசலேம் அசீரியா ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவ
11 தில்லையென்று நினையாதே. இதோ, அசீரியா ராஜாக்கள் சகல தேசங்களையும் சங்காரித்த செய்தி உனக்குத் தெரியுமே, நீயா தப்பப் போகிறாய்? என் பிதாக்கள் அழித்துவிட்ட 12
கோசான், காரான், ரேத்சேப்பு என்பவற்றையும், தெலாசாரிலிருந்த ஏதேன் புத்திரரையும் அவர்கள் தேவர்கள் தப்புவித்தது உண்டோ? ஆமாத்தின் ராஜாவும் அர்பாத் 13
தின் ராஜாவும் செப்பர்வாயீம் பட்டணத்து ராஜாவும் ஏனா இவ்வா என்பவற்றின் ராஜாக்களும் எங்கே என்று சொல்லுங்கள் என்றான்.

எசேக்கியா தூதுவரின் கையிலிருந்து 14
நிருபத்தை வாங்கி வாசித்தபின்பு, அவன் யெகோவாவின் ஆலயத்திற்குப்போய் அதை யெகோவாவின் சந்நிதியில் விரித்தான். எசேக்கியா யெகோவாவின் சந்நிதியிலே 15
விண்ணப்பஞ்செய்து: யெகோவாவே, கேரூபுகள்மீது வீற்றிருக்கிற இஸ்ரவேலின் கடவுளே, பூமியின் சகல ராஜ்யங்களுக்கும் நீர் ஒருவரே கடவுள், வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர் நீரே. யெகோ 16
வாவே, உமது திருச்செவியைச் சாய்த்துக் கேட்டருளும்; யெகோவாவே, உமது திருக்கண்களைத் திறந்து பார்த்தருளும்; ஜீவனுள்ள கடவுளை நிந்தித்துச் சனகேரிப் சொல்லியனுப்பின வார்த்தைகளை நீரே கேளும். யெகோவாவே, அசீரியா ராஜாக் 17
கள் அந்த ஜாதிகளையும் அவர்கள் தேசத்தையும் நாசமாக்கி | அவர்கள் தேவர்களை 18
நெருப்பிலே போட்டுவிட்டது மெய்யே; அவைகள் தேவர்கள் அல்ல, மனுஷர் கை வேலையான மரமும் கல்லுந்தானே; ஆகவே அவைகளை அழித்துவிட்டார்கள். இப்போ 19
தும் யெகோவாவே, எங்கள் கடவுளே, எங்களை அவன் கைக்கு நீங்கலாக்கி இரட்சித்தருளும்; யெகோவாவாகிய நீர் ஒருவரே கடவுள் என்று பூமியின் ராஜ்யங்கள் எல்லாம் அறியும்படி செய்தருளும் என்று பிரார்த்தித்தான்.

அப்பொழுது ஆமோத்சின் குமாரனாகிய 20
ஏசாயா எசேக்கியாவுக்கு ஆள் அனுப்பி, இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா இதைச் சொல்லுகிறார்: அசீரியா ராஜாவாகிய சனகேரிபைப்பற்றி நீ என்னை நோக்கிச் செய்த விண்ணப்பத்தைக் கேட்டேன் என்கிறார். அவனைக் குறித்து யெகோவா 21
சொல்வது இதுவே:

சீயோன் குமாரி, கன்னிகையானவள்,
உன்னை இகழ்ந்தாள், உன்னைப் பரிகசித்தாள்;
எருசலேமின் குமாரியவளே
நீ ஓடிடத் தன் தலை துலுக்கினாளே.

22 நிந்தனை தூஷணை மொழிந்தனை, யாரையோ?
உன் குரல் உயர்த்தினை, எவர்மேல் விரோதம்?
இஸ்ரவேல் பரிசுத்தர்க்கு மாறுய்
உனது கண்களைப் பெருமையில் உயர்த்தினை.

23 தூதுவராலே நீ ஆண்டவரை
நிந்தனைசெய்து பின்னரும் பேசி:
மலைகளின் முகடும் லீபனோன் அந்தமும்
நான் வந்தேறினேன் என் இரதத்திரளால்,
உயர்தேருவும் நல்தேவதாரும்
அங்குள்ளவற்றை வெட்டி எறிவேன்,
எட்டிடுவேன் அதன் கடைகுடில் மட்டும்
செழுமையிலோங்கும் வனமதுவரையும்;

24 பிறநாடுகளில் கிணறுவெட்டி
அந்நிய நீரை அள்ளிக் குடித்தேன்,
எகிப்திற்பாயும் நீர்ப்பெருக்கனைத்தும்
உள்ளங்காலால் வறளவும் செய்தேன்;
என்று கூறிப் பிதற்றி நின்றாய்.

25 அரண்நகரைப் பாழ் மண்மேடாக்கிட
நீ என் கருவியாயினை, வேறல.
ஊழி ஊழிமுன் நான் அதைக் குறித்தேன்,
பூர்வநாளிலே நான் அதை விளித்தேன்,
இதுபொழுது அதை நிறைவேற்றிடச் செய்தேன்,
நீயோ அதனைக் கேட்டிலேபோலும்;

26 ஆகவே அந்நகர்க்குடிகள் இனைத்துக்
கலங்கினர், வெட்கினர்; வெளிப்புல் பூண்டும்
கூரையில் முனைக்கும் சிறுபுல்லதுவும்
வளருமுன் தீய் பயிரும் போலாயினர்.

27 நானே அறிந்தேன் உனது நிலைமை,
உனது போக்கும் வரவும் தெரிந்தேன்;
என்மேற் குமுறும் உன் மனமதும்
கண்டேன்.

28 என்மேற் குமுறும் உன் வீம்புப் பேச்சு
என் செவிப்பட்டது, எடுத்தேன் கறட்டை,
பாய்ச்சினேன் மூக்கில், கடிவாளமதை
வாயிலிட்டு வலித்தில் திருப்பி
வந்த வழியே சென்றிடச் செய்வேனீ

29 என்று சொல்லுகிறார். பின்னும் கேள், உனக்கு அடையாளம் இதுவே: இந்த வருஷம் தப்பிப் பயிராகிறதையும் இரண்டாம் வருஷத்திலே தானுய் விளைகிறதையும் சாப்பிடுவீர்கள்; மூன்றாம் வருஷத்திலோ விதைத்து அறுத்துத் திராட்சத் தோட்டங்களை நாட்டி அவைகளின் கனிகளைப் புசிப்பீர்கள்.

30 யூதவம்சத்தில் தப்பி மீந்தது
கீழே வேர் விடும், மேலே கனிதரும்;
31 மீந்தோர் எருசலே நின்றும், தப்பினோர்
சீயோன் மலையில் நின்றும் வந்திடுவர்.
யெகோவா வைராக்கியம் இதை முடிக்கும்.
32 ஆகவே யெகோவா அசீரியா ராஜாவைப்பற்றி இதைச் சொல்லுகிறார்:
அவன் இந்நகருள் புகுந்திடமாட்டான்;
இதன்மேல் அம்பு அவன் எய்வதுமில்லை;
கேடகம் தாங்கி எதிர்வந்து நில்லான்,
கொத்தளம் போட்டிதை எதிர்ப்பதுமில்லை.
33 வருவழி மீள்வான், நகர் நுழையானே,
தெய்வத்திருவாக்கு இதுவாகும்மே.
34 இந்நகரத்தற்கு நானே காவல்,
நானே இதனை இரட்சித்திடுவேன்;
எனது நிமித்தமும் எனது ஊழியனும்
தாவீது நிமித்தமும் இதைச் செய்திடுவேன்

என்றார் என்று சொன்னான்.

35 அன்று இரவு யெகோவாவின் தூதன் வந்து அசீரியரின் பாளையத்திலே லட்சத்தெண்பத்தையாயிரம் பேரைச் சங்கரித்தான்; அதிகாலமே எழுந்திருந்தபோது, இதோ, அவர்கள் அனைவரும் செத்த பிரேதங்களாய்க் கிடந்தார்கள். 36 அது கண்ட அசீரியா ராஜாவாகிய சனகெரிப் பிரயாணமாகித் திரும்பிப்போய் நினிவேயில் இருந்து விட்டான். 37 ஒருநாள் அவன் தன் தேவனாகிய நிஸ்ரோகின் கோவிலிலே தொழுது கொள்ளுகையில், அத்ரமேலேக்கும் சரேத்சேரும் அவனைப் பட்டயத்தினால் வெட்டிப் போட்டு, அராராத் தேசத்திற்குத் தப்பி ஓடிப்போனார்கள்; அவன் குமாரனாகிய ஏசர்கத்தோன் அவன் ஸ்தானத்திலே ராஜாவானான்.

20 அந்நாட்களில் எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்தறுவாயிலிருந்தான்; அப்பொழுது அவனைப் பார்க்கவந்த ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா தீர்க்கதரிசி அவ

னிடம்: யெகோவா சொல்வதைக்கேளும், நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர்; உமது வீட்டுக் காரியத்தை ஒழுங்குபடுத்தும் 2 என்றான். அதைக் கேட்கவே எசேக்கியா தன் முகத்தைச் சுவர்ப்புறமாகத் திருப்பிக் கொண்டு, யெகோவாவை நோக்கி விண் 3 ணப்பஞ்செய்து: யெகோவாவே, நான் உமக்கு முன்பாக முழுமனதோடும் உண் மையாய் நடந்தேன், உமது பார்வையில் நலமானதைச் செய்தேன், இதை நினைத் தருளும் என்று கெஞ்சினான், மிகவும் அழு 4 தான். ஏசாயா பாதி ஊரைக்கடந்து செல்லா முன்னே யெகோவாவின் வார்த் 5 தை அவனுக்கு வந்தது: நீ திரும்பிப்போய் என் ஜனத்தின் அதிபதியாகிய எசேக்கியா வைப் பார்த்து, உன் தகப்பனாகிய தாவீ தின் கடவுள் யெகோவா இதைச் சொல்லு கிறார், உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன்; மூன்றாம் நாளிலே நீ யெகோவாவின் ஆலயத்திற்குப் 6 போவாய். உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன்; உன்னையும் இந்த நகரத்தையும் அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவிப்பேன்; என்நிமித்தமும் என் தாசனாகிய தாவீதின் நிமித்தமும் இந்த நகரத்துக்குக் காவலாயிருப்பேன் என்கிறார் 7 என்று சொல் என்றார். பின்பு ஏசாயா, அத்திப்பழ அடையைக் கொண்டுவாருங் கள் என்றான்; அதை அவர்கள் கொண்டு வந்து பிளவையின்மேல் வைத்துக் கட்டின 8 போது அவன் பிழைத்தான். எசேக்கியா ஏசாயாவைப் பார்த்து: யெகோவா என் னைக் குணமாக்குவார் என்பதற்கும் மூன் றாம்நாளிலே நான் யெகோவாவின் ஆலயத் திற்குப் போவேன் என்பதற்கும் அடையா 9 ளம் என்ன என்று கேட்க | ஏசாயா: யெகோவா தாம் சொன்ன வார்த்தையின் படியே செய்வாரென்பதற்கு இது வே யெகோவா உனக்குக் கொடுக்கும் அடை யாளம், இந்தச்சாயை பத்துப்பாகை முன் னே போகவேண்டுமோ, பத்துப்பாகை பின் னே திரும்பவேண்டுமோ என்று கேட்டான். 10 அதற்கு எசேக்கியா: சாயை பத்துப்பாகை முன்னே போகிறது லேசான காரியம், வேண்டாம்; சாயை பத்துப்பாகை பின்னே 11 திரும்பட்டும் என்றான். அப்பொழுது ஏசா யா தீர்க்கதரிசி யெகோவாவை நோக்கிக் கூப்பிடவே, அவர் ஆகாசின் சூரியகடிகா ரத்திலே பத்துப்பாகை மூன்போயிருந்த சாயை பத்துப்பாகை பின்னே திரும்பும்படி செய்தார்.

அக்காலத்திலே பலாதானின் குமாரனா கிய பெரோதாக் பலாதான் என்னும் பாபி லோனின் ராஜா எசேக்கியா வியாதியா யிருந்ததாகக் கேள்விப்பட்டு, அவனிடத் துக்கு நிருபங்களையும் வெகுமானத்தையும் அனுப்பினான். தூதர் சொன்னவைகளை 13 எசேக்கியா கேட்டபின்பு அவன் தன் அரிய பொருட்களை வைத்திருந்த இடம் அனைத் தையும் வெள்ளியையும் பொன்னையும் கந்த வர்க்கங்களையும், நல்ல தைலத்தை எண்ணெ யையும், தன் ஆயுதசாலை அனைத்தையும், தன் பொக்கிஷசாலைகளிலிருந்த யாவற்றை யும் காண்பித்தான்; தன் அரமனையிலும் தன் ராஜ்யத்தில் எங்கும் எசேக்கியா அவர் களுக்குக் காண்பியாத பொருள் ஒன்றும் இல்லை. அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசி 14 எசேக்கியா ராஜாவினிடம் வந்து, அந்த மனுஷர் என்ன சொன்னார்கள், எங்கிருந்து உம்மிடம் வந்தார்கள் என்று கேட்க எசேக்கியா: தூரதேசத்திலிருந்து, பாபி லோனிலிருந்தே அவர்கள் என்னிடம் வந் தார்கள் என்றான். அதைக்கேட்ட ஏசாயா: 15 அவர்கள் உமது வீட்டிலே என்ன பார்த் தார்கள் என்று கேட்டான். அதற்கு எசேக்கியா: என் வீட்டிலுள்ள யாவற்றை யும் பார்த்தார்கள், நான் அவர்களுக்குக் காண்பியாத பொருள் ஒன்றும் என் பொக் கிஷசாலைகளில் இல்லை என்றான். அப்பொ 16 ழுது ஏசாயா எசேக்கியாவைப் பார்த்து: யெகோவாவின் வார்த்தையைக் கேளும். இதோ, உமது வீட்டில் உள்ளவற்றிலும் 17 உமது பிதாக்கள் இந்நாள்வரை சேர்த்த வற்றிலும் யாதொன்றும் மீதியாக வைக்கப் படாமல் யாவும் பாபிலோனுக்குக் கொண்டு போகப்படும் நாட்கள் வரும் என்று யெகோவா சொல்லுகிறார். உமது சந்தான 18 மாய்ப் பிறக்கும் உமது குமாரரிலும் சிலர் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கே ராஜாவின் அரமனையிலே அண்ணக ராய் வேலைசெய்வார்கள் என்றான். இதைக் கேட்கவே எசேக்கியா 19 ஏசாயாவினிடம்: யெகோவா உரைப்பதாக நீர் சொல்வதெல்லாம் நல்லதே என்று சொல்லி, என் நாட்களிலாவது சமாதான மும் சௌக்கியமும் இருக்குமே என்றான்.

எசேக்கியாவைப்பற்றிய மற்ற விவரங் 20 களும், அவனுடைய புஜபலமானதும், அவன் ஒரு குளம் வெட்டிச் சாலகம் அமைத்துத் தண்ணீரை நகரத்திற்குள்ளே வரச்செய்த விதமும் யூதாவின் ராஜாக்களைப் பற்றிய இனவர்த்தமானம் என்னும் நூலில் எழுதியிருக்கிறதே. எசேக்கியா நித்திரை 21

யடைந்து தன் பிதாக்களோடு சேரவே அவன் குமாரனாகிய மனாசே அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

21 மனாசே ராஜாவானபோது அவனுக்குப் பன்னிரண்டு வயது, அவன் ஐம்பத்தைந்து வருஷம் எருசலேமில் அரசாண்டான்; அவன் தாயின்பேர் எப்சிபாள். அவன் யெகோவாவின் பார்வையில் தீமையானதைச் செய்தான்; யெகோவா இஸ்ரவேல் புத்திரருக்கு முன்னிராதபடி துரத்திவிட்ட ஜாதிகளின் அருவருப்புகளின்படியே செய்து, தன் தகப்பனாகிய எசேக்கியா அழித்துப்போட்ட கோவில்மேடைகளைத் திரும்பவும் கட்டிப் பாகாலுக்குப் பலிபீடங்களை எடுப்பித்து இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் செய்ததுபோலவே மரச்சிலையைச் செய்து வான சேனையனைத்தையும் தொழுது அவற்றைச் சேவித்துவந்தான். யெகோவா ஆலயத்தைப்பற்றிப்பேசி, எருசலேமிலே என் நாமத்தை விளங்கப்பண்ணுவேன் என்று சொல்லியிருந்தார். அவனே யெகோவாவின் ஆலயத்தில் பலிபீடங்களைக் கட்டினான்; யெகோவாவின் ஆலயப்பிராகாரங்கள் இரண்டிலும் வானசேனையனைத்துக்கும் பலிபீடங்களைக் கட்டினான். தன் குமாரனை அக்கினியிலிட்டான்; சகுனம் பார்க்கிறவனும் குறிகேட்கிறவனுமாயிருந்து அஞ்சனம்பார்க்கிறவர்களையும் குறி சொல்லுகிறவர்களையும் வைத்துக்கொண்டு யெகோவாவுக்குக் கோபமுண்டாக அவர் பார்வையிலே தீமையானதை மிகுதியாய்ச் செய்துவந்தான். யெகோவா தாவீதோடும் அவன் குமாரனாகிய சாலொமோனோடும் ஆலயத்தைப்பற்றிப் பேசி, இந்த ஆலயத்திலே, நான் இஸ்ரவேலின் சகல கோத்திரங்களிலுமிருந்து தெரிந்துகொண்ட எருசலேமிலே, என் நாமத்தை என்றென்றும் விளங்கப்பண்ணுவேன் என்று சொல்லியிருந்தார்; இவனே தான் செய்த மரச்சிலை விக்கிரகத்தை அதிலே வைத்தான். நான் அவர்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றின்படியேயும், என் தாசனாகிய மோசே அவர்களுக்குக் கட்டளையிட்ட நியாயப்பிரமாணமனைத்தின்படியேயும் செய்ய ஜாக்கிரதையாய் இருந்தார்களேயானால், நான் இனி இஸ்ரவேலின் காலை அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்தையிழந்து அலையப்பண்ணுவதில்லை என்று யெகோவா சொல்லியிருந்தார்; அவர்களோ கேளாதே போனார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு முன்னிராதபடி யெகோவா அழித்துவிட்ட ஜாதிகள் செய்த தீமையிலும் அதிகமாய்ச் செய்ய மனாசே அவர்களைத் தூண்டி வழிவிலகச் செய்தான்.

யெகோவா தீர்க்கதரிசிகளாகிய தமது ஊழியரின் மூலமாகப் பேசி: யூதாவின் ராஜாவாகிய மனாசே இந்த அருவருப்புகளைச் செய்து தனக்கு முன்னிருந்த எமோரியர் செய்த எல்லாவற்றிலும் கேடாக நடந்து தன் கேவலமான விக்கிரகங்களின் மூலமாய் யூதாவையும் பாவஞ்செய்யப்பண்ணினபடியால் | இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா இதை உரைக்கிறார், இதோ, நான் எருசலேமின்மேலும் யூதாவின்மேலும் திங்கை வரப்பண்ணுவேன், அதைக் கேட்கும் ஒவ்வொருவனுடைய இரு காதுகளிலும் அது தொனித்துக்கொண்டேயிருக்கும். சமாரியாவுக்கு விரோதமாய் நான் பிடித்த அளவுநூலையும் ஆகாபின் வீட்டிற்கு விரோதமாய் நான் பிடித்த தூக்குநூலையும் எருசலேமுக்கு விரோதமாகவும் பிடிப்பேன்; ஒருவன் ஒரு காலத்தைத் துடைத்துப் பின்பு அதைக் கவிழ்த்து வைக்கிறதுபோல எருசலேமைத் துடைத்துவிடுவேன். அவர்கள் பிதாக்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட நாள் முதற்கொண்டு இந்நாள்வரைக்கும் அவர்கள் என் பார்வையில் தீமையானதைச் செய்து, எனக்குக் கோபம் மூட்டிவந்தபடியினால் என் சுதந்தரத்தில் மீதியானதைக் கைவிடுவேன்; அவர்கள் பகைஞரின் கையில் அவர்களை ஒப்புக்கொடுப்பேன். தங்கள் பகைஞருக்கெல்லாம் கொள்ளையும் சூறையுமாய்ப் போவார்கள் என்றார். யெகோவாவின் பார்வையில் தீமையானதைச் செய்யும்படியாக மனாசே யூதாவைப் பாவஞ்செய்யப்பண்ணினதுமல்லாமல், அந்தப் பாவத்தோடுகூடக் குற்றமில்லாத இரத்தத்தையும் அவன் மிகவும் அதிகமாய்ச் சிந்தி எருசலேம் முழுவதிலும் நிறையும்படி செய்தான்.

மனாசேயைப்பற்றிய மற்ற விவரங்களும் அவன் செய்தவை யாவும் அவன் செய்த பாவமும் யூதாவின் ராஜாக்களைப்பற்றிய தினவர்த்தமானம் என்னும் நூலில் எழுதியிருக்கிறதே. மனாசே தன் பிதாக்களோடே சேரவே ஊசாவின் தோட்டமாகிய தன் அரமனைத் தோட்டத்திலே அடக்கம்பண்ணப்பட்டான்; அவன் குமாரனாகிய ஆமோன் அவன் ஸ்தானத்திலே ராஜாவானான்.

ஆமோன் ராஜாவானபோது அவனுக்கு இருபத்திரண்டு வயது; அவன் இரண்டு வருஷம் எருசலேமில் அரசாண்டான்; அவன் தாயின்பேர் மெசுல்லேமேத், அவள்

யோத்பா ஊராஞுகிய காருத்தின் குமாரத்தி.
20 அவன் தன் தகப்பஞுகிய மனுசே செய்தது
போலவே யெகோவாவின் பார்வையில்
21 நீமையானதைச் செய்து | தன் தகப்பன்
நடந்த வழிகளிலெல்லாம் நடந்து தன் தகப்
பன் சேவித்த கேவலமான விக்கிரகங்களைச்
சேவித்து அவைகளைத் தொழுதுவந்தான்.
22 யெகோவாவின் வழியிலே நடவாமல் தன்
பிதாக்களின் கடவுளாகிய யெகோவாவை
23 விட்டு விலகினான். ஆமோனின் ஊழியர்
அவனுக்கு விரோதமாய்ச் சதியாலோசனை
செய்து ராஜாவை அவன் அரமனையிலே
24 கொன்றுபோட்டார்கள். தேசத்து ஜனங்
களோ ராஜாவாகிய ஆமோனுக்கு விரோத
மாய்ச் சதிசெய்தவர்களையெல்லாம் வெட்டிப்
போட்டு அவன் குமாரனாகிய யோசியாவை
அவன் ஸ்தானத்தில் ராஜாவாக்கினார்கள்.
25 ஆமோன் செய்த மற்றக் காரியங்கள்
யூதாவின் ராஜாக்களைப்பற்றிய தினவர்த்தமா
னம் என்னும் நூலில் எழுதியிருக்கிறதே.
26 ஊசாவின் தோட்டத்திலுள்ள அவனுடைய
கல்லறையில் அவன் அடக்கம்பண்ணப்பட்
டான்; அவன் குமாரனாகிய யோசியா அவன்
ஸ்தானத்திலே ராஜாவானான்.

**22** யோசியா ராஜாவானபோது அவனுக்கு
எட்டு வயது; அவன் முப்பத்தொருவரு
ஷம் எருசலேமில் அரசாண்டான், அவன்
தாயின்பேர் எதிதாள், அவள் பொத்ஸகத்
2 ஊராஞுகிய அதாயாவின் குமாரத்தி. அவன்
யெகோவாவின் பார்வையில் நேர்மையான
தைச் செய்து தன் தகப்பஞுகிய தாவீதின்
வழியிலெல்லாம் வலது இடதுபுறம் விலகா
மல் நடந்தான்.
3 யோசியா ராஜாவின் பதினெட்டாம் வரு
ஷத்திலே, ராஜா மெசுல்லாமின் குமாரனு
கிய அத்சலியாவின் மகன் சாப்பான் என்
னும் சம்பிரதியை யெகோவாவின் ஆலயத்
4 துக்கு அனுப்பி: நீ பிரதான ஆசாரியனுகிய
இல்க்கியாவினிடம் போய், யெகோவாவின்
ஆலயத்துக்குக் கொண்டுவரப்படுகிறதும்
வாசல்காக்கிறவர்கள் ஜனத்தின் கையிலே
வாங்குகிறதுமான பணத்தை அவன் தொ
5 கைபார்த்துப் | பிற்பாடு அவன் அதை
யெகோவாவின் ஆலயவேலை விசாரணைக்
காரர் கையிலே கொடுத்து அவர்கள் அதை
யெகோவாவின் ஆலயத்தைப் பழுதுபார்க்
6 கிற வேலைக்காரராகிய | தச்சருக்கும் சிற்ப
ருக்கும் கொற்றருக்கும் கொடுக்கும்படி
செய்யவேண்டும்; ஆலயத்தைப் பழுதுபார்க்
கத் தேவையான மரங்களையும் சதிரித்த
கற்களையும் வாங்குகிறதற்கும் அதைச் செல
7 வழிக்கவேண்டும் என்று சொல்; அந்தப்
பணத்தைத் தங்கள் கையில் பெற்றுக்
கொள்ளுகிறவர்களிடம் கணக்குக் கேட்க
வேண்டாம்; அவர்கள் அதை உண்மையாய்
நடத்துவார்கள் என்றான்.

8 பிரதான ஆசாரியனுகிய இல்க்கியா சம்
பிரதியாகிய சாப்பானைப் பார்த்து: நான்
யெகோவாவின் ஆலயத்திலே நியாயப்பிர
மாணப் புஸ்தகத்தைக் கண்டெடுத்தேன்
என்று சொல்லி, அந்தப் புஸ்தகத்தைச்
சாப்பானிடம் கொடுத்தான்; அவன் அதை
9 வாசித்தான். சம்பிரதியாகிய சாப்பான்
ராஜாவினிடம் திரும்பிவந்து ராஜாவுக்குப்
பதில் சொல்லி, ஆலயத்திலே அகப்பட்ட
பணத்தையெல்லாம் உமது அடியார் எடு
த்து அதை யெகோவாவின் ஆலயவேலை
விசாரணைக்காரர் கையிலே கொடுத்தார்கள்
10 என்று சொன்னான். சம்பிரதியாகிய சாப்
பான் பின்னையும் ராஜாவைப்பார்த்து: ஆசா
ரியனுகிய இல்க்கியா என்னிடம் ஒரு புஸ்
தகம் கொடுத்தான் என்று அறிவித்து அதை
11 ராஜாவுக்கு முன்பாக வாசித்தான். ராஜா
நியாயப்பிரமாண புஸ்தகத்தின் வார்த்தை
களைக் கேட்டபோது, தன் வஸ்திரங்களைக்
12 கிழித்துக்கொண்டு | ஆசாரியனுகிய இல்க்
கியா, சாப்பானின் குமாரனுகிய அகீக்காம்,
மிகாயாவின் குமாரனுகிய அக்போர், சம்
பிரதியாகிய சாப்பான், ராஜ ஊழியனுகிய
அசாயா ஆகிய இவர்களுக்கு ராஜா கட்ட
13 ளையிட்டு: நீங்கள் போய்க் கண்டெடுக்கப்
பட்ட இந்தப் புஸ்தகத்தின் வார்த்தைகளைப்
பற்றி எனக்காகவும் ஜனத்திற்காகவும்
யூதா அனைத்திற்காகவும் யெகோவாவினிடம்
விசாரியுங்கள்; நமது பிதாக்கள் இந்தப்
புஸ்தகத்தின் வார்த்தைகளுக்குச் செவிகொ
டாதவர்களாய் நமது விஷயமாக எழுதியிரு
க்கிற யாவற்றின்படியேயும் செய்யாமற்போ
யினர்; அது காரணமாய் நம்மேல் பற்றியெரி
ந்த யெகோவாவின் உக்கிரகோபம் பெரிதா
யிற்று என்று சொன்னான்.

14 அப்பொழுது ஆசாரியனுகிய இல்க்கியா
வும் அகீக்காமும் அக்போரும் சாப்பானும்
அசாயாவும் உல்தாள் என்னும் தீர்க்கதரிசி
னியினிடம் போனார்கள்; இவள் அர்காஸின்
குமாரனுகிய திக்வாவின் மகனான சல்லூம்
என்னும் வஸ்திரசாலை விசாரணைக்காரனின்
மனைவி, இவள் எருசலேமின் புதுப்பேட்
டையிலே குடியிருந்தாள்; அவர்கள் அவ
15 ளைக் கண்டு பேசினபோது | அவள் அவர்
களைப்பார்த்து: இஸ்ரவேலின் கடவுளாகிய
யெகோவா இப்படிச் சொல்லுகிறார், உங்
களை என்னிடத்தில் அனுப்பினவனிடம் நீங்
கள்போய்: யெகோவா இப்படிச் சொல்லு

16 கிரூர் என்று சொல்லி, இதோ, நான் இந்த ஸ்தலத்தின்மேலும் அதின் குடிகளின்மேலும் தீங்கை வரப்பண்ணுவேன்; யூதாவின் ராஜா வாசித்த புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவை
17 கனே யெல்லாம் வரச்செய்வேன். அவர்கள் என்னே விட்டு விலகி, வேறே தேவர்களுக்குத் தூபங்காட்டித் தங்கள் கைகளின் கிரியைகள் யாவற்றினாலும் எனக்குக் கோபமூட்டினபடியினால் என் உக்கிரகோபம் இந்த ஸ்தலத்தின்மேல் பற்றியெரியும்; அது அவிந்துபோவதில்லே என்கிரூர் என்று
18 சொல்லுங்கள். பின்னும், யெகோவாவினிடம் விசாரிக்கிறதற்கு உங்களே அனுப்பின யூதாவின் ராஜாவினிடம் இதைச் சொல்லுங்கள்: நீர் கேட்ட விஷயங்களேப்பற்றி இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா இப்
19 படிச் சொல்லுகிரூர்: நான் இந்த ஸ்தலத்திற்கும் அதின் குடிகளுக்கும் விரோதமாகப் பேசி, அவர்கள் திடுக்கிடும் காட்சியும் சாபச் சொல்லும் ஆவார்கள் என்று சொன்னதை நீ கேட்டபோது, நீ இதயமெலிந்தவனுப் யெகோவாவின் சந்நிதியில் உன்னேத் தாழ்த்தி உன் வஸ்திரங்களேக் கிழித்துக்கொண்டு, எனக்கு முன்பாக அழுதபடியினால் நானும் செவிசாய்த்தேன்; இது யெகோவாவின் திரு
20 வாக்கு. இதோ, நான் உன்னே உன் பிதாக்களண்டையிலே சேர்த்துக்கொள்ளுவேன், நீ சமாதானமாய் உன் கல்லறையில் சேர்வாய்; நான் இந்த ஸ்தலத்தின்மேல் வரப்பண்ணும் சகல தீங்கையும் உன் கண்கள் காண்பதில்லே என்று சொல்லுங்கள் என்ரூர்; அப்படியே அவர்கள்போய் இதை ராஜாவுக்கு அறிவித்தார்கள்.

**23** அப்பொழுது ராஜா ஆட்களே அனுப்பி யூதாவிலும் எருசலேமிலுமிருந்த மூப்பரை
2 யெல்லாம் கூட்டிச் சேர்த்தான்; அவர்கள் அவனிடம் வந்தபோது ராஜாவும் அவனுடு யூதாவிலுள்ள யாவரும், எருசலேமின் குடிகள் அனேவரும், ஆசாரியரும், தீர்க்கதரிசிகளும், சிறியோர் துவக்கிப் பெரியோர் மட்டுமுள்ள ஜனமுழுதும் யெகோவாவின் ஆலயத்துக்குப் போனர்கள்; யெகோவாவின் ஆலயத்திலே கண்டெடுக்கப்பட்ட உடன்படிக்கைப் புஸ்தகத்தின் வார்த்தை கனேயெல்லாம் ராஜா அவர்கள் காதுகள்
3 கேட்க வாசித்தான். பின்பு ராஜா தூண் அருகே நின்றுகொண்டு, யெகோவா காட்டிய வழியில் நடப்போம், அவருடைய கட்டளைகளேயும் அவருடைய சாட்சியங்களேயும் அவருடைய நியமங்களேயும் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் கைக்கொள்வோம், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற உடன்படிக்கையின் வார்த்தைகனே நிறைவேற்றுவோம் என்று யெகோவாவின் சந்நிதியிலே உடன்படிக்கை பண்ணினுன்; ஜனங்கள் எல்லாரும் உடன்படிக்கைக்கு உட்பட்டார்கள்.

4 பின்பு ராஜா பிரதான ஆசாரியனுகிய இல்க்கியாவுக்கும் அவனுக்கு அடுத்த ஸ்தானத்திலுள்ள ஆசாரியருக்கும் வாசல் காக்கிறவர்களுக்கும் கட்டளேயிட்டு, பாகாலுக்கும் மரச்சிலேக்கும் வானசேனேயனேத்துக்கும் செய்யப்பட்டிருந்த சகல பணிமூட்டுகனேயும் யெகோவாவின் ஆலயத்திலிருந்து புறம்பாக்கச் சொல்லி அவைகனே எருசலேமுக்கு வெளியே கீதரோன் வெளிகளில் சுட்டெரித்து அவைகளின் சாம்பலேப் பேதேலுக்குக் கொண்டுபோகப் பண்ணினுன்.
5 யூதாவின் பட்டணங்களிலும் எருசலேமுக்குச் சுற்றிலும் கோவில்மேடைகளின்மேல் தூபங்காட்டும்படி யூதாவின் ராஜாக்கள் நியமித்திருந்த பூசாரிகனேயும் பாகாலுக்கும் சூரியனுக்கும் சந்திரனுக்கும் இரகங்களுக்கும் வானசேனேயனேத்திற்கும் தூபங்காட்டினவர்களேயும் நீக்கிவிட்டான். மரச்
6 சிலேயை யெகோவாவின் ஆலயத்திலிருந்து எடுத்து எருசலேமுக்கு வெளியே கீதரோன் நீரோடைக்குக் கொண்டுபோய் அதைக் கீதரோன் ஓரத்திலே சுட்டெரித்துத் தூளாக்கி, அந்தத் தூளேப் பொதுஜனப் பிரேதக் குழிகளின்மேல் போடுவித்தான்.
7 யெகோவாவின் ஆலயப் பிராகாரத்தில் தாலியம் பூண்ட சோரரின் வீடுகளிருந்தன, அவ்விடங்களில் ஸ்திரீகள் மரச்சிலேக்குக் கூடாரங்களே நெய்யப்போவார்கள்; ராஜா
8 அவ்வீடுகளே இடித்துப்போட்டான். அவன் யூதாவின் பட்டணங்களிலிருந்த சகல ஆசாரியரையும் வரச்சொல்லி, கேபா முதல் பெயேர்ஷெபாமட்டும் ஆசாரியர் தூபங்காட்டிவந்த கோவில் மேடைகளேத் தீட்டாக்கிப் பட்டணத்து வாசலுக்குப்போகும் வழிக்கு இடதுபுறத்தில் பட்டணத்தலேவனுகிய யோசுவாவின் வாசலண்டையிலே இருந்த வாசற்கோவில் மேடையையும் இடித்துப்போட்டான். கோவில்மேடை
9 களின் ஆசாரியர் எருசலேமிலிருந்த யெகோவாவின் பலிபீடத்தின்மேல் ஏறக் கூடாதென்றும் தங்கள் சகோதரர் நடுவில் புளிப்பில்லாத அப்பங்களேமாத்திரம் புசிக்கலாமென்றும் கட்டளேயிட்டான். ஒருவனும்
10 மோளேகுக்கென்று தன் குமாரனேயாகிலும் தன் குமாரத்தியையாகிலும் அக்கினியிலிடாதபடி இன்னேம்புத்திரர் பள்ளத்தாக்கிலிருந்த தோப்பேத் என்னும் ஸ்தலத்தையும்

11 அவன் தீட்டாக்கினான். யெகோவாவின் ஆலயத்திற்குள் போகிற இடங்தொடங்கிப் பர்வாரீமிலிருந்த நாத்தான்மேலெக் என்னும் பிரதானியின் அறைவீடுமட்டும் யூதாவின் ராஜாக்கள் சூரியனுக்கென்று வைத்திருந்த குதிரை உருவங்களை அகற்றிச் சூரிய இரதங்களை அக்கினியில் சுட்டெரித்தான்.
12 யூதாவின் ராஜாக்கள் செய்தவைகளும் ஆகாசின் மேல்வீட்டில் இருந்தவைகளுமான பலிபீடங்களையும், மனாசே யெகோவாவின் ஆலயப்பிராகாரங்கள் இரண்டிலும் செய்துவைத்திருந்த பலிபீடங்களையும் ராஜா இடித்து, அவைகளின் தூளை அங்கிருந்து கொண்டுபோய்க் கேதரோன் ஆற்றோடையில்
13 கொட்டினான். எருசலேமுக்கு எதிரே, நாசமலையின் வலது புறத்தில், இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலொமோன் சீதோனியரின் அருவருப்பாகிய அஸ்தோரேத்திற்கும், மோவாபியரின் அருவருப்பாகிய கெமோஷுக்கும், அம்மோன் புத்திரரின் அருவருப்பாகிய மில்கோமுக்கும் கட்டியிருந்த கோவில்மேடைகளையும் ராஜா தீட்டாக்
14 கி | கற்சிலைகளை உடைத்து மரச்சிலைகளை வெட்டி அவைகள் இருந்த இடத்தில் மனித எலும்புகளை நிரப்பினான்.
15 இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப் பண்ணின நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாம் பேதேலில் செய்துவைத்திருந்த பலிபீடம், கோவில்மேடை ஆகிய இரண்டையும் அவன் இடித்து, அந்தக் கோவில் மேடையைச் சுட்டெரித்துத் தூளாக்கி மரச்சிலை
16 யையும் சுட்டெரித்தான். யோசியா திரும்பிப் பார்த்து அங்கே அந்த மலையிலிருந்த கல்லறைகளைக் கண்டு, ஆட்களை அனுப்பி, அந்தக் கல்லறைகளிலிருந்த எலும்புகளை எடுத்துவரச்செய்து, அவைகளை அந்தப் பலிபீடத்தின்மேல் சுட்டெரித்துப் பலிபீடத்தைத் தீட்டாக்கினான்; இதை அறிவித்த கடவுளின் மனுஷன் கூறியிருந்த யெகோவா
17 வின் சொற்படியே இது நடந்தது. அப்பொழுது ராஜா: நான் காண்கிற அந்தச் சமாதித்தூண் யாருடையது என்று கேட்க, அந்த ஊரார், அது யூதாவிலிருந்து வந்த கடவுளின் மனுஷனுடைய சமாதி, நீர் செய்த இந்தக் காரியங்களைப் பேதேலின் பலிபீடத்திற்கு விரோதமாய்க் கூறியறிவித்த
18 வன் அவனே என்றார்கள். அதற்கு ராஜா: அதை அப்படியே விட்டுவிடுங்கள், ஒருவனும் அவன் எலும்புகளைத் தொடவேண்டாம் என்றான்; அப்படியே அவன் எலும்புகளைச் சமாரியாவிலிருந்து வந்த தீர்க்கதரிசியின் எலும்புகளோடு விட்டுவிட்டார்கள்.
19 யெகோவாவுக்குக் கோபமூட்ட இஸ்ரவேலின் ராஜாக்கள் சமாரியாவின் ஊர்களிலே செய்துவைத்திருந்த மேடைக் கோவில்களையெல்லாம் யோசியா தகர்த்துப் பேதேலிலே தான் செய்தவைகளின்படியெல்லாம் அவைகளுக்கும் செய்து | அவ்
20 விடங்களில் இருந்த கோவில்மேடைகளின் ஆசாரியரையெல்லாம் பலிபீடங்களின்மேல் கொன்றுபோட்டு அவற்றின்மேல் மனித எலும்புகளைச் சுட்டெரித்துவிட்டு எருசலேமுக்குத் திரும்பினான்.
21 பின்பு ராஜா சகல ஜனங்களுக்கும் கட்டளையிட்டு: இந்த உடன்படிக்கைப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடியே உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்குப் பஸ்காவை ஆசரியுங்கள் என்றான்.
22 இஸ்ரவேலை நியாயம் விசாரித்த நியாயாதிபதிகளின் நாட்கள் தொடங்கி, இஸ்ரவேல், யூதா இவற்றின் ராஜாக்களுடைய சகல நாட்களிலும் இந்தப் பஸ்காவைப்போல் பஸ்கா ஆசரிக்கப்படவில்லை.
23 யோசியா ராஜாவின் பதினெட்டாம் வருஷத்திலே இந்தப் பஸ்கா எருசலேமிலே யெகோவாவுக்கென்று ஆசரிக்கப்பட்டது.
24 ஆசாரியனாகிய இல்க்கியா யெகோவாவின் ஆலயத்திலே கண்டெடுத்த புஸ்தகத்தில் எழுதியிருக்கிற நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை நிறைவேற்றும்படியாக யோசியா அஞ்சனம்பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் சுரூபங்களையும் கேவலமான விக்கிரகங்களையும் யூதா தேசத்திலும் எருசலேமிலும் காணப்பட்ட சகல அருவருப்புகளையும் நிர்மூலமாக்கினான்.
25 அவனைப்போன்ற ராஜா அவனுக்குமுன் இருந்ததில்லை, மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி தன் முழு இருதயத்தோடும் தன் முழு ஆத்துமாவோடும் தன் முழு பலத்தோடும் அவன் யெகோவாவினிடம் திரும்பி அவரைப் பற்றிக்கொண்டான்; அவனுக்குப்பின் அவனைப் போன்றவன் எழும்பினதுமில்லை.
26 எனினும் மனாசே யெகோவாவுக்குக் கோபமூட்டிச்செய்த சகல காரியங்களினிமித்தமும் யூதாவின்மேல் பற்றியெரிந்த தமது உக்கிரகோபத்தை விட்டு
27 யெகோவா திரும்பவில்லை. நான் இஸ்ரவேலைத் தள்ளிவிட்டதுபோல யூதாவையும் என் முன்னிலாதபடி தள்ளி, நான் தெரிந்துகொண்ட இந்த எருசலேம் நகரத்தையும் என் நாமம் விளங்கும்படி நான் குறித்த ஆலயத்தையும் வெறுத்துவிடுவேன் என்று யெகோவா சொன்னார்.
28 யோசியாவைப்பற்றிய மற்ற விவரங்களும் அவன் செய்தவையாவும் யூதாவின் ராஜாக்

கீழ்ப்பற்றிய தினவர்த்தமானம் என்னும் நூலில் எழுதியிருக்கிறதே.

29 அவன் நாட்களிலே எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் நேகோ அசீரியா ராஜாவின்மேல் படையெடுத்துச்சென்று ஐபிராத்து நதிமட்டும் போனான். யோசியா ராஜா அவனை எதிர்த்துச் சென்றான்; பார்வோன்நேகோ அவனை மெகிதோவிலே கண்டமாத்திரமே அவனைக் கொன்றுபோட்

30 டான். மரணமடைந்தவனை அவன் ஊழியர் ரதத்தின்மேல் ஏற்றி, மெகிதோவிலிருந்து எருசலேமுக்குக் கொண்டுவந்து அவன் கல்லறையில் அடக்கம்பண்ணினார்கள்; தேசத்தின் ஜனங்கள் யோசியாவின் குமாரனாகிய யோவாகாசை அழைத்து அவனை அபிஷேகம்பண்ணி, அவன் தகப்பன் ஸ்தானத்திலே அவனை ராஜாவாக்கினார்கள்.

31 யோவாகாஸ் ராஜாவானபோது அவனுக்கு இருபத்துமூன்று வயது; அவன் மூன்றுமாதம் எருசலேமில் அரசாண்டான்; அவன் தாயின்பேர் கமூதாள், அவள் லிப்னா ஊரானாகிய எரேமியாவின் குமாரத்தி.

32 அவன் தன் பிதாக்கள் செய்தபடியெல்லாம் யெகோவாவின் பார்வையில் தீமையான

33 தைச் செய்தான். அவன் எருசலேமிலே ராஜாவாயிருக்கையில் பார்வோன்நேகோ அவனை ஆமாத்தேசத்திலுள்ள ரிப்லாவிலே பிடித்துக் கட்டுவித்துத் தேசத்தின்மேல் நூறு தாலந்து வெள்ளியையும் ஒரு தாலந்து பொன்னையும் அபராதமாகச் சுமத்தினான்.

34 பின்பு பார்வோன்நேகோ யோசியாவின் குமாரனாகிய எலியாக்கீமை அவன் தகப்பனாகிய யோசியாவின் ஸ்தானத்திலே ராஜாவாக்கி, அவன் பேரை யோயாக்கீம் என மாற்றினான்; யோவாகாசை எகிப்துக்குக் கொண்டுபோய்விட்டான், அவன் அங்கே

35 மரணமடைந்தான். அந்த வெள்ளியையும் பொன்னையும் யோயாக்கீம் பார்வோனுக்குக் கொடுத்தான்; பார்வோனின் கட்டளைப்படி அந்தப் பணத்தைக் கொடுப்பதற்கு, அவன் தேசத்தின்மேல் வரிசுமத்தி அவரவரை மதிப்பிட்டபடியே அந்த வெள்ளியையும் பொன்னையும் தேசத்து ஜனங்களிடம் தண்டிப் பார்வோனுக்குக் கொடுத்தான்.

36 யோயாக்கீம் ராஜாவானபோது அவனுக்கு இருபத்தைந்து வயது, அவன் பதினொரு வருஷம் எருசலேமில் அரசாண்டான்; அவன் தாயின்பேர் செபிதாள், அவள் ரூமா ஊரானாகிய பெதாயாவின் குமாரத்தி. அவன் தன் பிதாக்கள் செய்தபடியெல்லாம் யெகோவாவின் பார்வையில் தீமையானதைச் செய்தான்.

அவன் நாட்களிலே பாபிலோன் ராஜா 24
வாகிய நேபுகாத்நேச்சார் வந்தான்; யோயாக்கீம் மூன்று வருஷம் அவனுக்கு அடங்கியிருந்தான், பின்பு அவனுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினான். அப்பொழுது 2
யெகோவா கல்தேயா, சீரியா, மோவாபு, அம்மோன் புத்திரர் நாடு இவற்றிலிருந்து கொள்ளைத்தண்டுகளை அவன்மேல் வரவிட்டார்; யூதாவை அழிக்கும்படி அதற்கு விரோதமாய் வரவிட்டார்; தீர்க்கதரிசிகளாகிய தமது ஊழியரைக்கொண்டு யெகோவா சொன்ன வார்த்தையின்படியாயிற்று. யெகோவாவின் சமுகத்திலிருந்து யூதா 3
அகற்றப்படவேண்டுமென்று அவருடைய கட்டளையினால் அப்படி நடந்தது; மனாசே தன எல்லாச் செய்கைகளினாலும் செய்த பாவங்களினிமித்தம் இப்படி நேர்ந்தது. அவன் குற்றமற்ற இரத்தத்தைச் சிந்தினான்; 4
எருசலேமைக் குற்றமற்ற இரத்தத்தினால் நிரப்பினான்; யெகோவா மன்னிக்க மனதில்லாதிருந்தார்.

யோயாக்கீமைப் பற்றிய மற்ற விவரங் 5
களும் அவன் செய்தவை யாவும் யூதாவின் ராஜாக்களைப்பற்றிய தினவர்த்தமானம் என்னும் நூலில் எழுதியிருக்கிறதே. யோயாக் 6
கீம் நித்திரையடைந்து தன் பிதாக்களோடே சேரவே, அவன் குமாரனாகிய யோயாக்கீன் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான். எகிப் 7
தின் ராஜா அப்புறம் யுத்தத்திற்கென்று தன் தேசத்திலிருந்து வெளியேறவில்லை; எகிப்தின் நீரோடை துவக்கி ஐபிராத்து நதிமட்டும் எகிப்தின் ராஜாவுக்கு இருந்த யாவற்றையும் பாபிலோன் ராஜா பிடித்திருந்தான்.

யோயாக்கீன் ராஜாவானபோது அவனுக் 8
குப் பதினெட்டு வயது, அவன் எருசலேமிலே மூன்று மாதம் அரசாண்டான்; அவன் தாயின்பேர் நெகுஷ்தாள்; அவள் எருசலேம் ஊரானான எல்நாத்தானின் குமாரத்தி. அவன் தன் தகப்பன் செய்தபடியெல்லாம் 9
யெகோவாவின் பார்வையில் தீமையானதைச் செய்தான்.

அக்காலத்திலே பாபிலோன் ராஜாவாகிய 10
நேபுகாத்நேச்சாரின் படைவீரர் எருசலேமுக்கு வந்தார்கள்; நகரம் முற்றுகை போடப்பட்டது. பாபிலோன் ராஜாவாகிய 11
நேபுகாத்நேச்சாரின் போர்வீரர் நகரத்தை முற்றுகை போடுகையில் அவன் தானும் அதற்கு விரோதமாய் வந்தான். அப் 12
பொழுது யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனும் அவன் தாயும் அவன் ஊழியரும் அவன் பிரபுக்களும் அரமனை உத்தியோகஸ்தரும் பாபிலோன் ராஜாவினிடம்

வெளியே போனார்கள்; பாபிலோன் ராஜா
தன் ஆளுகையின் எட்டாம் வருஷத்திலே
13 அவனைப் பிடித்துச் சிறைசெய்தான். அங்
கிருந்து யெகோவாவின் ஆலயப்பொக்கிஷ
மனைத்தையும் ராஜ அரமனைப் பொக்கிஷங்
களையும் எடுத்துக்கொண்டு இஸ்ரவே
லின் ராஜாவாகிய சாலொமோன் யெகோ
வாவின் ஆலயத்திலே பதித்திருந்த பொன்
தகடுகளையெல்லாம் பேர்த்து எடுத்தான்;
யெகோவா சொல்லியிருந்தபடியே ஆயிற்று.
14 எருசலேமியர் அனைவரும் சகல பிரபுக்
களும் சகல செல்வருமாகிய பதினாயிரம்
பேரையும் சகல தச்சரையும் கொல்லரை
யும் சிறைபிடித்துக்கொண்டுபோனான்;
தேசத்தில் ஏழை ஜனங்களே மீதியாயிருந்
15 தார்கள்; வேறெவரும் இல்லை. அவன்
யோயாக்கீனையும் ராஜாவின் தாயையும் ராஜ
ஸ்திரீகளையும் அவன் அரமனை உத்தியோ
கஸ்தரையும் தேசத்திலிருந்த பெரியவர்களை
யும் எருசலேமிலிருந்து பாபிலோனுக்குச்
16 சிறையாகக் கொண்டுபோனான். இப்படி
யாகப் பாபிலோன் ராஜா செல்வரான
ஏழாயிரம்பேரையும் தச்சரும் கொல்லரு
மாகிய ஆயிரம்பேரையும் யுத்தம்பண்ணத்
தக்க பராக்கிரமசாலிகளையும் பாபிலோனுக்
17 குச் சிறையாகக் கொண்டுபோனான். அவன்
ஸ்தானத்தில் பாபிலோன் ராஜா அவன் சிறிய
தகப்பனுகிய மத்தனியாவை ராஜாவாக
வைத்து அவனுக்குச் சிதெக்கியா என்று
மறுபேரிட்டான்.
18 சிதெக்கியா ராஜாவானபோது அவனுக்கு
இருபத்தொரு வயது, அவன் பதினொரு
வருஷம் எருசலேமிலே அரசாண்டான்;
அவன் தாயின்பேர் கமூதாள். அவள்
லிப்னா ஊரானுகிய எரேமியாவின் குமா
19 ரத்தி. யோயாக்கீம் செய்தபடியெல்லாம்
அவனும் யெகோவாவின் பார்வையில் தீமை
20 யானதைச் செய்தான். எருசலேமுக்கும்
யூதாவுக்கும் நடந்தவெல்லாம் யெகோவா
வின் கோபத்தினாலேயே நடந்தன. அவர்
களைத் தமது சமுகத்திலிருந்து அகற்றித் தீரு
மட்டும் இப்படிச் செய்தார். சிதெக்கியா
பாபிலோன் ராஜாவுக்கு விரோதமாகக்
கலகம்பண்ணினான்.

**25** அவன் ராஜ்யபாரம்பண்ணும் ஒன்ப
தாம் வருஷம் பத்தாம் மாதம் பத்தாந்தேதி
யிலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்
நேச்சார் தன் முழு இராணுவத்தோடும்
எருசலேமுக்கு விரோதமாய் வந்து, அதற்கு
எதிரே பாளயமிறங்கிச் சுற்றிலும் அதற்கு
எதிராகக் கொத்தளங்களைக் கட்டினான்.
2 சிதெக்கியா ராஜாவின் பதினொராம் வருஷ
மட்டும் நகரம் முற்றுகைபோடப்பட்டிருந்
தது. நாலாம் மாதம் ஒன்பதாந்தேதியிலே 3
நகரத்திலே பஞ்சம் கொடிதாயிற்று, தேசத்
தின் ஜனத்திற்கு ஆகாரமில்லாமற்போயி
ற்று. நகரமதிலில் திறப்புக்கண்டது, அப் 4
பொழுது கல்தேயர் நகரத்தைச் சூழ்ந்திருக்
கையிலேயே, உள்ளிருந்த யுத்தவீரர் எல்
லாரும் இரவுநேரத்தில், இரண்டு மதில்க
ளுக்கு நடுவே ராஜாவின் தோட்டத்திற்குப்
போகிற வாசல் வழியாகத் தப்பி அராபாவுக்
குச் செல்லும் வழியாய் ஓடிப்போனார்கள்.
கல்தேயர் சேனைவீரர் ராஜாவைப் பிடிக்கத் 5
தொடர்ந்து எரிகோவின் சமவெளியிலே
அவனைக் கிட்டினார்கள்; அதற்குமுன்னே
அவன் சேனையெல்லாம் அவனை விட்டுச்
சிதறிப்போயிற்று. அவர்கள் ராஜாவைப் 6
பிடித்து ரிப்லாவிலிருந்த பாபிலோன் ராஜா
வினிடம் கொண்டுபோனார்கள். அங்கே
அவனுக்குத் தீர்ப்புச் செய்யப்பட்டது.
சிதெக்கியாவின் குமாரரை அவன் கண்க 7
ளுக்கு முன்பாக வெட்டிச் சிதெக்கியாவின்
கண்களைக் குருடாக்கி, அவனுக்கு இரண்டு
செப்புவிலங்குகளைப்போட்டு, அவனை
பாபிலோனுக்குக் கொண்டுபோனார்கள்.
ஐந்தாம் மாதம் ஏழாந்தேதியிலே நேபு 8
காத்நேச்சார் என்னும் பாபிலோன் ராஜா
வின் பத்தொன்பதாம் வருஷத்திலே பாபி
லோன் ராஜாவின் ஊழியனுகிய நேபூசர
தான் என்னும் மெய்காவலரின் அதிபதி
எருசலேமுக்கு வந்து | யெகோவாவின் 9
ஆலயத்தையும் ராஜ அரமனையையும் சுட்
டெரித்தான்; எருசலேமின் சகல கட்ட
டங்களையும், விசேஷமாய்ப் பெரிய வீடுகள்
அனைத்தையும், அக்கினியால் சுட்டெரித்து
விட்டான். காவலர் அதிபதியோடிருந்த 10
கல்தேய சேனைவீரரெல்லாரும் எருசலே
மைச் சுற்றிலுமிருந்த அலங்கங்களை இடித்
துப்போட்டார்கள். நகரத்தில் மீதியாயிருந்த 11
மற்ற ஜனங்களையும் பாபிலோன் ராஜாவின்
பக்கமாக ஓடிவந்துவிட்டவர்களையும் ஜனக்
கூட்டத்தில் மீதியாயிருந்தவர்களையும் காவ
லர் அதிபதியாகிய நேபூசரதான் சிறைக
ளாகக் கொண்டுபோனான். தேசத்திலுள்ள 12
ஏழைகளில் சிலரைக் காவலர் அதிபதி
திராட்சத்தோட்டங்களையும் வயல்களையும்
பயிரிடுவதற்கு விட்டுவிட்டான்.
யெகோவாவின் ஆலயத்திலிருந்த செப் 13
புத் தூண்களையும் யெகோவாவின் ஆலயத்
திலிருந்த ஆதாரங்களையும், செப்புக் கடல்
தொட்டியையும் கல்தேயர் உடைத்துப்
போட்டு, அவற்றின் செம்பைப் பாபிலோ
னுக்கு எடுத்துக்கொண்டு போனார்கள்.

14 சட்டிகளையும் கரண்டிகளையும் திரிவெட்டி
களையும் கலயங்களையும் ஆராதனைக்குரிய
மற்ற செப்புப் பணிமுட்டுகள் அனைத்தை
15 யும் எடுத்துக்கொண்டார்கள். சுத்தப்
பொன்னும் சுத்த வெள்ளியுமான தூபகல
சங்களையும் கலங்களையும் காவலர் அதிபதி
16 எடுத்துக்கொண்டான். சாலொமோன்
யெகோவாவின் ஆலயத்துக்கென்று செய்
திருந்த தூண்கள் இரண்டு, கடல்தொட்டி
ஒன்று, ஆதாரங்கள் ஆகிய இவற்றின் செம்
17 பிற்கு நிறையில்லை. ஒரு தூணின் உயரம்
பதினெட்டு முழம், அதின்மேல் மூன்று
முழ உயரமான செப்புக்கும்பம் இருந்தது;
கும்பத்தைச் சுற்றி செய்யப்பட்டிருந்த
வலைப்பின்னலும் மாதளம்பழங்களும் எல்
லாம் செம்பாகவே யிருந்தது; இரண்டா
வது தூணும் அதின் வலைப்பின்னலும்
இதைப்போலவே இருந்தது.
18 காவலர் அதிபதி பிரதான ஆசாரியனாகிய
செராயாவையும் இரண்டாம் ஆசாரியனா
கிய செப்பனியாவையும் வாசல்காக்கும்
19 மூன்று காவற்காரரையும் பிடித்தான். நக
ரத்திலே யுத்தவீரரின் விசாரணைக்காரனாகிய
அரமனை உத்தியோகஸ்தன் ஒருவனையும்
ராஜசமூக ஊழியரிலே நகரத்தில் அகப்
பட்ட ஐந்துபேரையும் தேசத்தின் ஜனத்
தைச் சேனையில் சேர்க்கிற தலைவனான
இராணுவச் சம்பிரதியையும்வெளியிலிருந்து
வந்தவர்களிலே நகரத்தில் அகப்பட்ட அறு
20 பதுபேரையும் பிடித்தான். இவர்களைக்
காவலர் அதிபதியாகிய நெபூசரதான்
பிடித்து அவர்களை ரிப்லாவில் இருந்த
பாபிலோன் ராஜாவினிடம் கொண்டுபோ
21 னான். பாபிலோன் ராஜா ஆமாத்தேசத்தில்
ரிப்லா ஊரிலே அவர்களை வெட்டிக்
கொன்றுபோட்டான்; இவ்வாறாக யூதா
ஜனங்கள் தங்கள் தேசத்திலிருந்து சிறை
யாகக் கொண்டுபோகப்பட்டார்கள்.
22 பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்
சார் யூதா தேசத்தில் விட்டுவைத்து மீதி
யாகவிருந்த ஜனத்தின்மேல் அவன் சாப்பா
னின் குமாரனாகிய அகீக்காமின் மகன்
கெதலியாவை அதிகாரியாக வைத்தான்.
23 பாபிலோன் ராஜா கெதலியாவை அதிகாரி
யாக வைத்ததைச் சகல இராணுவத்தலைவ
ரும் அவர்கள் ஆட்களும் கேட்டபோது,
அவர்கள் மிஸ்பாவுக்குக் கெதலியாவினிடம்
வந்தார்கள்; வந்தவர்கள் இவர்களே: நெத
னியாவின் குமாரன் இஸ்மவேல், கரேயா
வின் குமாரன் யோகனன், நெத்தோபாத்திய
னாகிய தன்கூமேத்தின் குமாரன் செராயா,
மாகாத்தியனான ஒருவனுடைய குமாரன்
யாசனியா இவர்களும் இவர்கள் ஆட்களு
மே. அப்பொழுது கெதலியா அவர்களுக்
24 கும் அவர்கள் ஆட்களுக்கும் ஆணையிட்டு:
நீங்கள் கல்தேய உத்தியோகஸ்தருக்குப்
பயப்படவேண்டாம்; தேசத்திலிருந்து
கொண்டே பாபிலோன் ராஜாவைச் சேவி
யுங்கள், அப்பொழுது நீங்கள் சௌக்கிய
மாயிருப்பீர்கள் என்றான்.
ராஜவம்சத்திலே பிறந்த எலிஷாமாவின்
25 குமாரனாகிய நெதனியாவின் குமாரன் இஸ்ம
வேல் ஏழாம் மாதத்திலே பத்து ஆட்க
ளோடே வந்து கெதலியாவை வெட்டவே
அவன் இறந்தான்; அவனோடே மிஸ்பாவி
லிருந்த யூதகாட்டாரையும் கல்தேயரையும்
வெட்டிப்போட்டான். அப்பொழுது சிறி
26 யோரும் பெரியோருமாகிய ஜனங்கள் யாவ
ரும் சேனாபதிகளும் கல்தேயருக்குப் பயந்து
தங்கள் தேசத்தைவிட்டு எகிப்திற்குப் போய்
விட்டார்கள்.
யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனு
27 டைய சிறையிருப்பின் முப்பத்தேழாம்
வருஷம் பன்னிரண்டாம் மாதம் இருப
த்தேழாந் தேதியிலே, எவீல்மெரொதாக் என்
னும் பாபிலோன் ராஜா தான் ராஜாவான
வருஷத்திலே யூதாவின் ராஜாவாகிய
யோயாக்கீனுக்குத் தயைகாட்டி அவனைச்
சிறையினின்று விடுவித்தான். அவனோடு
28 அன்பாய்ப் பேசி அவனுடைய ஆசனத்
தைத் தன்னோடே பாபிலோனிலிருந்த
ராஜாக்களின் ஆசனங்களிலும் உயரமாக
வைத்து | அவனுடைய சிறைச்சாலை வஸ்தி
29 ரங்களை மாற்றினான்; யோயாக்கீன் உயிரோ
டிருந்த சகல காலும் நித்தம் அவனோடு
போஜனம்செய்துவந்தான். அவன் உயிரோ
30 டிருந்த காலெல்லாம் அவனுடைய அணு
தினச் செலவுக்கு வேண்டியது ராஜாவினிட
மிருந்து அணுதினமும் அவனுக்குக் கொடுக்
கப்பட்டுவந்தது.

I. CHRONICLES

# தினவர்த்தமானம்

## முதல் பாகம்

1 2 ஆதாம், சேத், ஏனோஸ், | கேனன்,
3 மகலாலெயேல், யாரேத், | ஏனோக்கு, மெத்
4 தூசலா, லாமேக்கு, | நோவா, சேம், காம், யாப்பேத்.
5 யாப்பேத்தின் குமாரர் கோமேர், மாகோகு, மாதாய், யாவான், தூபால்,
6 மேசேக்கு, தீராஸ் என்பவர்கள். கோமேரின் குமாரர், அஸ்கெனஸ், தீப்பத்து,
7 தொகர்மா என்பவர்கள்; யாவானின் குமாரர், எலீசா, தர்ஷீஸ், கித்திம், ரொதானீம் என்பவர்கள்.
8 காமின் குமாரர், கூஷ், மிஸ்ராயீம், பூத்,
9 கானன் என்பவர்கள். கூஷின் குமாரர், சேபா, கவீலா, சப்தா, ராமா, சப்தெகா என்பவர்கள்; ராமாவின் குமாரர், ஷேபா,
10 தெதான் என்பவர்கள். கூஷ் நிம்ரோதைப் பெற்றார்; இவன் பூமியிலே பராக்கிரம
11 சாலியானான். மிஸ்ராயீம் லூதியரையும் அனாமியரையும் லெகாபியரையும் நப்தூ
12 கியரையும் | பத்ருசியரையும் கஸ்லூகியரையும்—இவர்களிடமிருந்தே பெலிஸ்தியர் வந்தார்கள்—கப்தோரியரையும் பெற்றான்.
13 கானன் தன் மூத்த மகனாகிய சீதோனையும்
14 ஏத்தையும் | எபூசியரையும் எமோரியரை
15 யும் கிர்காசியரையும் | ஏவியரையும் அர்கி
16 யரையும் சீனியரையும் | அர்வாதியரையும் செமாரியரையும் காமாத்தியரையும் பெற்றான்.
17 சேமின் குமாரர் ஏலாம், அசூர், அர்பக்சாத், லூத், ஆராம், ஊத்ஸ், கூல், கேத்தெர்,
18 மேசக் என்பவர்கள். அர்பக்சாத் சாலாகைப் பெற்றான்; சாலாகு ஏபேரைப் பெற்றான்.
19 ஏபேருக்கு இரண்டு குமாரர் பிறந்தார்கள்; ஒருவன்பேர் பேலேகு, ஏனெனில் அவன் நாட்களில் பூமி பகுக்கப்பட்டது; அவன்
20 சகோதரன் பேர் யொக்தான். யொக்தான்
அல்மோதாத்தையும் சாலேப்பையும் அசர்மா
21 வேத்தையும் யேராகையும் | அதோராமை
22 யும் ஊசாலையும் திக்லாவையும் | ஏபாலையும் அபிமாவேலையும் ஷேபாவையும் |
ஒப்பீரையும் கவீலாவையும் யோபாபையும் 23
பெற்றான்; இவர்கள் அனைவரும் யொக்தானுடைய குமாரர்.
சேம், அர்பக்சாத், சாலாகு, | 24, 25
ஏபேர், பேலேகு, ரெகூ | செரூகு, நாகோர், 26
தேராகு | ஆபிராம், இவனே ஆபிரகாம். 27
ஆபிரகாமின் குமாரர், ஈசாக்கு, இஸ்ம 28
வேல் என்பவர்கள்.
இவர்களுடைய சந்ததிகளாவன: இஸ்ம 29
வேலின் மூத்த குமாரனாகிய நெபாயோத்,
கேதார், அத்பியேல், மிப்சாம் | மிஷ்மா, 30
தூமா, மாசா, ஆதாத், தேமா, | யெத்தூர், 31
நாபீஷ், கேத்மா என்பவர்களே; இவர்களே இஸ்மவேலின் மக்கள்.
ஆபிரகாமின் மறுமனையாட்டியாகிய 32
கெத்தூராள் பெற்ற குமாரர், சிம்ரான், யக்ஷான், மெதான், மிதியான், இஸ்பாக், சுவாகு என்பவர்கள்; யக்ஷானின் குமாரர், ஷேபா, தெதான் என்பவர்கள். மிதியானின் 33
குமாரர், ஏப்பா, ஏப்பேர், ஆனோக்கு, அபிதா, எல்தாகா என்பவர்கள்; இவர்கள் எல்லாரும் கெத்தூராளின் பிள்ளைகள்.
ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான்; ஈசாக் 34
கின் குமாரர், ஏசா, இஸ்ரவேல் என்பவர்கள்.
ஏசாவின் குமாரர் எலீப்பாஸ், ரெகுவேல், 35
யெயூஷ், யாலாம், கோராகு என்பவர்கள்.
எலீப்பாசின் குமாரர், தேமான், ஓமார், 36
செப்பி, கத்தாம், கேனஸ், திம்னா, அமலேக்கு என்பவர்கள். ரெகுவேலின் குமா 37
ரர், நகாத், செராகு, சம்மா, மீசா என்பவர்கள். சேயீரின் குமாரர் லோத்தான், 38
சோபால், சிபியோன், ஆனாகு, திஷோன், ஏத்சேர், தீஷான் என்பவர்கள். லோத்தா 39
னின் குமாரர் கோரி, ஓமாம் என்பவர்கள்; லோத்தானின் சகோதரி திம்னா. சோபா 40
வின் குமாரர், அல்யான், மானகாத், ஏபால், ஷெப்பி, ஓனம் என்பவர்கள்; சிபியோ

னின் குமாரர், அயா, ஆனகு என்பவர்கள்.
41 ஆனகின் குமாரர் சிஷோன், சிஷோனின்
குமாரர், அம்ராம், எஸ்பான், இத்தரான்,
42 கெரான் என்பவர்கள். ஏத்சேருடைய
குமாரர், பில்கான், சகவான், யாக்கான் என்
பவர்கள்; தீஷானின் குமாரர், ஊத்ஸ்,
அரான் என்பவர்கள்.
43 இஸ்ரவேல் புத்திரரை ஒரு ராஜா ஆளா
தற்கு முன்னே ஏதோம் தேசத்தில் அர
சாண்ட ராஜாக்கள் இவர்களே: பேயோ
ரின் குமாரன் பேலா; இவன் பட்டணம்
44 தின்காபா. பேலா மரித்தபின் பொஸ்ரு
ஊரானுகிய சேராகின் குமாரன் யோபாப்
அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.
45 யோபாப் மரித்தபின் தேமானிய தேசத்தா
னுகிய உஷாம் அவன் ஸ்தானத்தில் ராஜா
46 வானான். உஷாம் மரித்தபின் பேதாதின்
குமாரன் ஆதாத் அவன் ஸ்தானத்தில் ராஜா
வானான், இவன் மிதியானியரை மோவா
பின் நாட்டிலே முறியடித்தவன்; இவன்
47 பட்டணம் ஆவீத். ஆதாத் மரித்தபின்
மஸ்ரேக்கா ஊராணுகிய சம்லா அவன் ஸ்தா
48 னத்தில் ராஜாவானான். சம்லா மரித்தபின்
நதியோரமான ரெகொபோத் ஊராணுகிய
சவுல் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.
49 சவுல் மரித்தபின் அக்போரின் குமாரன்
பாகால்கானன் அவன் ஸ்தானத்தில் ராஜா
50 வானான். பாகால்கானன் மரித்தபின் ஆதாத்
அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்; இவன்
பட்டணம் பாகு; இவன் மனைவியின்பேர்
மெகேதபேல்; அவள் மத்ரேத்தின் குமாரத்தி;
51 மேசகாவின் பேத்தி. ஆதாத் மரித்தபின்
ஏதோமிலிருந்த பிரபுக்கள் இவர்களே;
திம்னு பிரபு, அல்யா பிரபு, யெதேத் பிரபு,
52 ஒகொலிபாமா பிரபு, ஏலா பிரபு, பினோன்
53 பிரபு, கேனஸ் பிரபு, தேமான் பிரபு, மிப்
54 சார் பிரபு, மக்தியேல் பிரபு, ஈராம் பிரபு;
இவர்களே ஏதோமின் பிரபுக்கள்.

**2** இஸ்ரவேலின் குமாரர், ரூபன், சிமி
யோன், லேவி, யூதா, இசக்கார், செபு
2 லோன், தாண், யோசேப்பு, பென்யமீன்,
நப்தலி, காத், ஆசேர் என்பவர்கள்.
3 யூதாவின் குமாரர், ஏர், ஓனான், சேலா
என்பவர்கள்; இந்த மூன்று குமாரர் சூவா
வின் மகளான கானான் ஸ்திரீயினிடம்
அவனுக்குப் பிறந்தவர்கள்; யூதாவின்
மூத்த குமாரன் ஏர் என்பவன் யெகோவா
வின் பார்வையில் பொல்லாதவனுயிருந்தி
னல் அவர் அவனைக் கொன்றுபோட்டார்.
4 அவன் மருமகளாகிய தாமார் அவனுக்குப்
பேரேசையும் சேராவையும் பெற்றாள்;
யூதாவின் குமாரர் அனைவரும் ஐந்துபேர்.
5 பேரேசின் குமாரர் எஸ்ரோன், ஆமூல்
6 என்பவர்கள். சேராவின் குமாரர் சிம்ரி,
7 ஏத்தான், ஏமான், கல்கோல், தாரா
என்னும் ஐந்துபேரே. சாபத்திற்குட்பட்ட
தின் விஷயத்திலே துரோகம்பண்ணி இஸ்ர
வேலை அபாயத்துக்குட்படுத்தின ஆகார்
8 என்பவன் கர்மீ புத்திரரில் ஒருவன். ஏத்
9 தானின் குமாரர் அசரியா; எஸ்ரோனுக்குப்
பிறந்த குமாரர், யெராமெயேல், ராம்,
10 கெலூபாய் என்பவர்கள். ராம் அம்மினதா
பைப் பெற்றான்; அம்மினதாப் யூதா
புத்திரரின் தலைவனுகிய நகசோனைப் பெற்
11 றான். நகசோன் சல்மாவைப் பெற்றான்;
12 சல்மா போவாஸைப் பெற்றான். போவாஸ்
ஓபேதைப் பெற்றான்; ஓபேத் ஈசாயைப்
13 பெற்றான். ஈசாய்க்குப் பிறந்த மூத்தகுமா
ரன் எலியாப், இரண்டாம் குமாரன் அபீன
தாப், மூன்றும் குமாரன் சிம்மா, நாலாம்
14 குமாரன் நெதனெயேல், ஐந்தாம் குமாரன்
ரதாயி; ஆறும் குமாரன் ஒத்சேம்; ஏழாம்
15 குமாரன் தாவீது. அவர்கள் சகோதரிகள்
16 செருயாள், அபிகாயில் என்பவர்கள்; செரு
யாளின் குமாரர், அப்ஷாய், யோவாப், அசா
கேல் என்னும் மூன்றுபேர். அபிகாயில்
17 அமாசாவைப் பெற்றாள்; அமாசாவின் தகப்
பன் இஸ்மவேலனுகிய யேத்தேர் என்ப
வன்.

18 எஸ்ரோனின் குமாரன் காலேப் எரியோத்
என்னும் தன் மனைவியாகிய அசுபாளாலே
பெற்ற குமாரர், ஏசேர், சோபாப், அர்
தோன் என்பவர்கள். அசுபாள் சென்று
19 போனபின் காலேப் எப்ராத்தை விவாகம்
பண்ணினான்; இவள் அவனுக்குக் கூரைப்
20 பெற்றாள். கூர் ஊரியைப் பெற்றான்;
21 ஊரி பெசலெயேலைப் பெற்றான். பிற்பாடு
எஸ்ரோன் கிலெயாத்தின் தகப்பனுகிய
மாகீரின் குமாரத்தியினிடம் பிரவேசித்து
அறுபது வயதுள்ளவனுய் அவளை விவாகம்
பண்ணினான்; இவள் அவனுக்குச் செகூ
பைப் பெற்றாள். செகூப் யாவீரைப் பெற்
22 றான்; இவனுக்குக் கிலெயாத் நாட்டில்
இருபத்துமூன்று ஊர்கள் இருந்தன.
23 கெசூரியரும் ஆராமியரும் யாவீரின் பட்டி
னையும் கேனாத்தையும் அதைச் சேர்ந்த
கிராமங்களையும், மொத்தம் அறுபது ஊர்
களை அவர்களிடமிருந்து பறித்துக்கொண்
டார்கள்; இவர்கள் எல்லாரும் கிலெயாத்
தின் தகப்பனுகிய மாகீரின் குமாரர். காலேப்
24 எப்ராத்தாவில் எஸ்ரோன் இறந்துபோன
பின் எஸ்ரோனின் மனைவியாகிய அபியாள்
அவனுக்குத் தெக்கோவாவின் தகப்பனுகிய
அஷ்கூரைப் பெற்றாள்.

25 எஸ்ரோனுக்கு முதற்பிறந்த யெராமெ
யேலின் குமாரர், ராம் என்னும் மூத்தவ
னும், பூனு, ஒரென், ஒத்சேம், அகியா என்
26 பவர்களுமே. அத்தாராள் என் னும்
பேருள்ள வேறொரு மனைவியும் யெராமெ
யேலுக்கு இருந்தாள்; இவள் ஒனமின்
27 தாய். யெராமெயேலுக்கு முதற்பிறந்த
ராமின் குமாரர், மாஸ், யாமீன், ஏக்கோ
28 என்பவர்கள். ஒனமின் குமாரர், ஷம்மாய்,
யாதா என்பவர்கள்; ஷம்மாயின் குமாரர்,
29 நாதாப், அபீஷூர் என்பவர்கள். அபீ
ஷூருடைய மனைவியின்பேர் அபியாயில்;
அவள் அவனுக்கு அக்பானையும் மோலிதை
30 யும் பெற்றாள். நாதாபின் குமாரர், சேலேத்,
அப்பாயிம் என்பவர்கள்; சேலேத் பிள்ளை
31 யில்லாமல் மரித்தான். அப்பாயிமின் குமா
ரர் இஷி, இஷியின் குமாரர் ஷேஷான்,
32 ஷேஷானின் குமாரர் அக்லாய். ஷம்மா
யின் சகோதரனுகிய யாதாவின் குமாரர்
யேத்தேர், யோனத்தான் என்பவர்கள்;
யேத்தேர் பிள்ளையில்லாமல் மரித்தான்.
33 யோனத்தானின் குமாரர் பேலேத், சாசா
என்பவர்கள், இவர்கள் யெராமெயேலின்
புத்திரர்.
34 ஷேஷானுக்குக் குமாரத்திகளேயன்றிக்
குமாரர்கள் இல்லை; ஷேஷானுக்கு யர்கா
என்னும் பேருள்ள எகிப்திய வேலைக்காரன்
35 ஒருவன் இருந்தான். ஷேஷா தன் குமா
ரத்தியைத் தன் வேலைக்காரனுகிய யர்காவுக்
குக் கொடுத்தான்; அவள் அவனுக்கு அத்
36 தாயியைப் பெற்றாள். அத்தாயி நாதானைப்
பெற்றாள்; நாதான் சாபாதைப் பெற்றான்.
37 சாபாத் எப்லாலைப் பெற்றான்; எப்லால்
38 ஓபேதைப் பெற்றான். ஓபேத்யேகூவைப்
பெற்றான்; யேகூ அசரியாவைப் பெற்
39 றான். அசரியா கேலேத்சைப் பெற்றான்;
கேலேத்ஸ் எலியாசாவைப் பெற்றான்.
40 எலியாசா சிஸ்மாயைப் பெற்றான்; சிஸ்மாய்
41 சல்லூமைப் பெற்றான். சல்லூம் எக்கம்
மியாவைப் பெற்றான்; எக்கம்மியா எலி
ஷாமாவைப் பெற்றான்.
42 யெராமெயேலின் சகோதரனுகிய காலே
பின் குமாரர், சீப்பின் தகப்பனுகிய மேசா
என்னும் முதற் பிறந்தவனும் எப்ரோனின்
தகப்பனுகிய மாரேஷாவின் குமாரருமே.
43 எப்ரோனின் குமாரர் கோராகு, தப்புவாகு,
44 ரேக்கேம், ஷேமா என்பவர்கள். ஷேமா
யோர்க்கேயாமின் தகப்பனுகிய ரகமைப்
பெற்றான்; ரேக்கேம் ஷம்மாயைப் பெற்
45 றான். ஷம்மாயின் குமாரன் மாகோன்;
46 மாகோன் பெத்சூரின் தகப்பன். காலே
பின் மறுமனையாட்டியாகிய எப்பாள் கீரா
னையும் மோசாவையும் காசேசையும் பெற்
றாள். காரான் காசேசைப் பெற்றான்.
யாதாயின் குமாரர், ரேகேம், யோதாம், 47
கேஷாம், பேலேத், ஏபா, ஷாகாப் என்
பவர்கள். காலேபின் மறுமனையாட்டியா 48
கிய மாகாள் ஷேபேரையும் திர்காளுவை
யும் பெற்றாள். அவள் மத்மன்னாவின் 49
தகப்பனுகிய ஷாகாபையும், மக்பேனாவுக்
கும் கிபெயாவுக்கும் தகப்பனுகிய ஷெவா
வையும் பெற்றாள்; காலேபின் குமாரத்தி
அக்சாள் என்பவள்.
எப்ராத்தாளிடம் முதற் பிறந்த கூரு 50
டைய குமாரனுகிய காலேபின் குமாரர்,
கீரியாத்யெயாரீமின் தகப்பனுன சோபா
னும், | பெத்லெகேமின் தகப்பனுன சல்மா 51
வும், பேத்காதேரின் தகப்பனுன காரேப்
புமே. கீரியாத்யெயாரீமின் தகப்பனுன 52
சோபாலின் குமாரர், ஆரோவேயும், மெனு
கோத் சந்ததியாரின் பாதிப்பேருமே. கிரி 53
யாத்யெயாரீமின் வம்சத்தார் இத்திரியரும்
பூதியரும் ஷீமாத்தியரும் மிஷ்ராலியருமே;
இவர்களிடத்தில் சோராத்தியரும் எஷ்த
வோலியரும் தோன்றினார்கள். சல்மாவின் 54
சந்ததியார் பெத்லெகேமியரும் நெத்தோ
பாத்தியரும் அதரோத்பேத்யோவாப் ஊரா
ரும் மானகத்தியரிலும் சோரியரிலும் பாதி
னங்களுமே. யாபேஸில் குடியிருந்த சாஸ் 55
திரிகளின் வம்சத்தார் திராத்தியரும், ஷிமாத்
தியரும் சுக்காத்தியருமே; பேத்ரேகாபின்
தகப்பனுகிய கம்மாத்தின் சந்ததியாரான
கேனியர் இவர்களே.

தாவீதுக்கு எப்பெரோனிலே பிறந்த 3
குமாரர்: அம்னோன் முதற்பேருனவன்,
இவன் யிஸ்ரெயேல் ஊராளான அகினோவா
மிடத்தில் பிறந்தவன்; இரண்டாம் குமா
ரன் தானியேல், இவன் கர்மேல்-ஊராளான
அபிகாயிலிடத்தில் பிறந்தவன். மூன்றும் 2
குமாரன் அப்சலோம், இவன் கெசூரின்
ராஜாவாகிய தல்மாயின் குமாரத்தி மாக்கா
லிடம் பிறந்தவன்; நாலாம் குமாரன் அதொ
னீயா, இவன் ஆகித்தினிடம் பிறந்தவன்.
ஐந்தாம் குமாரன் ஷெபத்தியா, இவன் அபி 3
தாலிடம் பிறந்தவன்; ஆறும் குமாரன் யித்
ரெயாம், இவன் தாவீதின் மனைவியாகிய எக்
லாளிடம் பிறந்தவன். எப்பெரோனிலே 4
அவனுக்குப் பிறந்தவர்கள் ஆறு குமாரரே;
அங்கே ஏழு வருஷமும் ஆறு மாதமும்
அரசாண்டான்; எருசலேமிலோ முப்பத்து
மூன்று வருஷம் அரசாண்டான். எருசு 5
லேமில் அவனுக்குப் பிறந்தவர்கள் இவர்
களே: அம்மீயேலின் குமாரத்தியாகிய பத்சு
வாளிடம் சிமெயா, சோபாப், நாத்தான்

6 சாலொமோன் என்னும் நாலுபேரும் | இப்
7 கார், எலிஷாமா, எலிப்பேலேத், | நோகா,
8 நேபேக், யாபீயா | எலிஷாமா, எலியாதா,
எலிப்பேலேத் என்னும் ஒன்பது பேருமே.
9 மறுமனையாட்டிகளின் குமாரரையும் இவர்
கள் சகோதரியாகிய தாமாரையும் தவிர
இவர்களே தாவீதின் குமாரர்.
10 சாலொமோனின் குமாரன் ரெகொபெயாம்;
இவன் குமாரன் அபியா; இவன் குமாரன்
11 ஆசா; இவன் குமாரன் யோசபாத். இவன்
குமாரன் யோராம்; இவன் குமாரன் அகசி
12 யா; இவன் குமாரன் யோவாஸ். இவன்
குமாரன் அமத்சியா; இவன் குமாரன் அசரி
13 யா; இவன் குமாரன் யோதாம். இவன்
குமாரன் ஆகாஸ்; இவன் குமாரன் எசேக்
14 கியா; இவன் குமாரன் மனாசே. இவன்
குமாரன் ஆமோன்; இவன் குமாரன்
15 யோசியா. யோசியாவின் குமாரர், முதல்
பிறந்தவன் யோகனன், இரண்டாம் குமா
ரன் யோயாக்கீம், மூன்றும் குமாரன் சிதெக்
16 கியா, நாலாம் குமாரன் சல்லூம். யோ
யாக்கீமின் குமாரர் எகொனியா; இவன்
17 மகன் சிதெக்கியா. சிறைப்பட்டுப்போன
எகொனியாவின் குமாரர் செயல்தியேல்,
18 மல்கீராம், பெதாயா, | செனாசார், யெகமி
யா, ஓஷாமா, நெதபியா என்பவர்கள்.
19 பெதாயாவின் குமாரர், செருபாபேல்,
சிமேயி என்பவர்கள்; செருபாபேலின் குமா
ரர் மெசுல்லாம், கனனியா என்பவர்கள்;
இவர்கள் சகோதரி செலோமீத் என்ப
20 வள். இன்னும் கஷூபா, ஓகேல் பெர
கியா, கசதியா, யூஷப்கேசெத் என்னும்
21 ஐந்துபேருமே. கனனியாவின் குமாரர்,
பெலத்தியா, ஏசாயா என்பவர்களும், பெபா
யாவின் சந்ததியாரும், அர்னனின் சந்ததி
யாரும், ஒபதியாவின் சந்ததியாரும், செகனி
22 யாவின் சந்ததியாருமே. செகனியாவின்
குமாரர் செமாயா, செமாயாவின் குமாரர்
கத்தூஷ், இக்கால், பாரியாகு, நெயாரியா,
23 ஷாப்பாத் என்னும் ஆறுபேர். நெயாரி
யாவின் குமாரர் எலியோயேனய், எசேக்
கியா, அஸ்ரீக்காம் என்னும் மூன்றுபேர்.
24 எலியோயேனயின் குமாரர் ஒதவ்யா, எலி
யாஷீப், பெலாயா, அக்கூப், யோகனன்,
தெலாயா, ஆனனி என்னும் ஏழுபேர்.

**4** யூதாவின் குமாரர் பேரேஸ், எஸ்ரோன்,
2 கர்மீ, கூர், சோபால் என்பவர்கள். சோ
பாலின் குமாரன் ராயா யாகாத்தைப் பெற்
றான்; யாகாத் அகுமாயியையும் லாகாதை
யும் பெற்றான்; சோராத்தியரின் வம்சங்கள்
3 இவைகளே. அபியேதாமின் சந்ததியார்,
யிஸ்ரெயேல், யிஸ்மா, யித்பாஸ்,— இவர்கள்
சகோதரியின் பேர் அத்செலெல்போனி—
கெதோரின் பிதாவான பெனுவேல், கூஷா 4
வின் தகப்பனான ஏசேர் என்பவர்களே;
இவர்கள் பெத்லெகேமின் தகப்பனான எப்
ராத்தாவுக்கு முதற்பிறந்த கூரின் குமாரர்.
தெக்கோவாவின் தகப்பனான அஷ்கூ 5
ருக்கு கேலாள், நாராள் என்னும் இரண்டு
மனைவிகள் இருந்தார்கள். நாராள் அவ 6
னுக்கு அகுசாமையும் கேபேரையும் தேமெ
னியையும் அகஸ்தாரியையும் பெற்றாள்;
நாராளின் குமாரர்கள் இவர்களே. கேலா 7
ளின் குமாரர், சேரேத், யித்ஸ்கார், எத்னன்
என்பவர்கள். கோத்ஸ் என்பவன் அனூ 8
பையும், சோபேபாவையும், ஆருமின் குமா
ரனான அகர்கேலின் வம்சங்களையும் பெற்
றான். யாபேஸ் தன் சகோதரரைப் பார்க் 9
கிலும் மதிப்புள்ளவனாயிருந்தான். அவன்
தாய்: நான் துக்கத்தோடே அவனைப் பெற்
றேன் என்று சொல்லி அவனுக்கு யாபேஸ்
என்று பேரிட்டாள். யாபேஸ் இஸ்ரவே 10
லின் கடவுளைப் பிரார்த்தித்து: தேவரீர்
என்னை ஆசீர்வதித்தருளும், என் எல்லை
யைப் பெரிதாக்கியருளும், உமது திருக்கரம்
என்னோடிருந்து எனக்குத் துக்கம் நேரி
டாதபடி தீங்கினின்று என்னை விலக்கி
யருள்வதாக என்று வேண்டிக்கொண்டான்;
அவன் வேண்டிக்கொண்டதைக் கடவுள்
அருளினார்.
கேலூபின் சகோதரனான கெலூப் 11
மெகீரைப் பெற்றான்; இவன் எஸ்தோனின்
தகப்பன். எஸ்தோன் பேத்ராபாவையும் 12
பசேயாகையும் இர்காகாஷின் தகப்பனான
தெகின்னையையும் பெற்றான்; இவர்கள்
ரேகாவூர் மனுஷர்.
கெனாசின் குமாரர் ஒத்னியேல், சொராயா 13
என்பவர்கள்; ஒத்னியேலின் குமாரர் காத்
தாத், | மெயோனொதாய் ஒபிராவைப் பெற் 14
றான்; சொராயா கேராஷீமின் தகப்பனான
யோவாபைப் பெற்றான்; அவர்கள் கம்மா
ளர். எப்புன்னேயின் குமாரனான காலே 15
பின் குமாரர், ஈரு, ஏலா, நாகாம்; ஏலாவின்
குமாரர் கெனாஸ். எகலெலேலின் குமாரர் 16
சீப், சீப்பா, திரியா, அசாரெயேல்.
எஸ்ராவின் குமாரர், யேத்தேர், மேரேத், 17
ஏப்பேர், யாலோன் என்பவர்கள். மேரேத்
விவாகம்பண்ணின பார்வோனின் குமாரத்தி
யாகிய பித்தியாள், மிரியாம், ஷம்மாயி,
எஷ்தெமோவாவின் தகப்பனான யிஸ்பாகு
என்பவர்களைப் பெற்றாள். அவன் யூத 18
மனைவி கெதோரின் தகப்பனான யாரேதை
யும் சோக்கோவின் தகப்பனான கேபேரை
யும் சானோவாகின் தகப்பனான யெகுதியேல்

19 யும் பெற்றாள்; நாகாமின் சகோதரி, ஒதீ
யாவினுடைய மனைவி, பெற்ற குமாரர் கர்
மியனுடைய அபீகேஇலாவும் மாகாத்தியனு
20 கிய எஷ்தேமோவாவுமே. ஏமோனின்
குமாரர், அம்னோன், ரின்னு, பென்காலுன்,
தீலோன் என்பவர்கள்; இஷியின் குமாரர்,
சோகேதும் பென்சோகேதுமே.
21 யூதாவின் குமாரனுடைய சேலாவின் புத்
திரர்: லேக்காவின் தகப்பனான ஏரும், மரே
ஷாவின் தகப்பனான லாதாவும், மெல்லிய
துணி நெய்த அஷ்பெயா வீட்டு வம்சங்
22 களும் | யோக்கீமும் கொசேபாவின் மனு
ஷரும், மோவாபியரை ஆண்ட யோவாஸ்,
சாராப் என்பவர்களும் யஷூபிலேகெமு
மே; இவைகள் பூர்வகாலத்தின் செய்திகள்.
23 இவர்கள் குயவராயிருந்து நெத்தாயிமிலும்
கெதேராவிலும் குடியிருந்தார்கள்; ராஜாவின்
வேலையைப் பார்க்கிறவர்களாய் அவன்
அருகே வாசம்பண்ணினார்கள்.
24 சிமியோனின் குமாரர் நெமூவேல்,
யாமீன், யாரீப், சேராகு, சவுல் என்பவர்
25 கள். இவன் குமாரன் சல்லூம்; இவன்
குமாரன் மிப்சாம்; இவன் குமாரன்
26 மிஷ்மா. மிஷ்மாவின் குமாரர், அவனே
பெற்ற கம்மூவேல்; இவன் குமாரன் சக்
27 கூர்; இவன் குமாரன் சிமேயீ. சிமேயீக்குப்
பதினாறு குமாரரும் ஆறு குமாரத்திகளும்
இருந்தார்கள்; அவன் சகோதரருக்குப்
பிள்ளைகள் கொஞ்சமே; அவர்கள் வம்சங்க
ளெல்லாம் யூதாவின் புத்திரரைப்போலப்
28 பெருகவில்லை. அவர்கள் பெயேர்ஷெபா
விலும் மொலாதாவிலும் கத்சார்ஷூவாலி
29 லும் | பில்காவிலும் ஏத்சேமிலும் தோலாதி
30 லும் | பெத்தூவேலிலும் கொர்மாவிலும் சிக்
31 லாகிலும் | பேத்மர்காபோத்திலும் கத்சார்
சூசிமிலும் பேத்பிரியிலும் சாராயிமிலும்
குடியிருந்தார்கள்; தாவீது ராஜாவாகுமட்
டும் இவைகளும் இவற்றைச் சார்ந்த கிரா
மங்களும் அவர்கள் ஊர்களாயிருந்தன.
32 மேலும் ஏத்தாம், ஆயின் ரிம்மோன், தோ
கேன், ஆஷான் என்னும் ஐந்து பட்டணங்
33 களும் | அவைகளை யடுத்துப் பாகால் மட்டு
மிருந்த கிராமங்களும் அவர்களுடையவை
கள்; இவைகளே அவர்கள் வாசஸ்தலங்
கள்; அவர்களுக்குரிய வம்ச அட்டவணை
யும் இருந்தது.
34 மெஷோபாபும், யம்லேகும், அமத்சியா
35 வின் குமாரன் யோஷாவும் | யோவேலும்,
அசியேலின் மகன் செராயாவுக்குப் பிறந்த
36 யோசிபியாவின் குமாரன் யேகூவும் | எலி
யோயேனையும் யாக்கோபாவும் யெஷோகா
யாவும் அசாயாவும் அதீயேலும் யெசீமியே
லும் பெனையாவும் | ஷெமாயா பெற்ற ஷிம் 37
ரியின் மகன் யெதாயாவுக்குப் பிறந்த அல்
லோனின் புத்திரனுடைய ஷீப்பியின் குமாரன்
சீசாவும் என்று | பேர்பேராய் எழுதியிருக் 38
கிற இவர்கள் தங்கள் வம்சங்களிலே தலை
வராயிருந்தார்கள்; இவர்கள் பிதாக்களின்
வீட்டார் அதிகமாய்ப் பரவினார்கள். தங் 39
கள் ஆடுகளுக்கு மேய்ச்சலைத் தேடும்படி
கெதோரின் வழியாய்ப் பள்ளத்தாக்கின்
கிழ்புறமட்டும்போய் | கல்ல செழிப்பான 40
மேய்ச்சலையும் கண்டுபிடித்தார்கள்; அங்காடு
அமைதலும் சுகமுமுள்ள விஸ்தாரமான
நாடு; பூர்வத்திலே அங்கே குடியிருந்தவர்
கள் காமின் சந்ததியார். பேர்பேராய் எழுதி 41
யிருக்கிற இவர்கள் யூதாவின் ராஜாவாகிய
எசேக்கியாவின் நாட்களிலே அங்கே
சென்று அங்கிருந்த மெயூனியரை யடித்து
அவர்கள் கூடாரங்களை அழித்து இந்நாள்
வரையும் அவர்களில் எவரும் அங்கிராத
படி அவர்களைச் சங்கரித்து அங்கே தங்கள்
ஆடுகளுக்கு மேய்ச்சல் உண்டென்று அந்த
ஸ்தலத்திலே குடியேறினார்கள். சிமியோ 42
னின் புத்திரராகிய இவர்களில் ஐந்நூறு
மனுஷர் இஷியின் குமாரரான பெலத்தியா,
நெகரியா, ரெப்பாயா, ஊசியேல் என்ற
தலைவரோடு சேயீர் மலைநாட்டிற்குப்
போய் | அமலேக்கியரில் தப்பி மீதியாயிருக் 43
தவர்களை முறியடித்து அங்கே குடியேறினார்
கள்; இந்நாள்வரைக்கும் அங்கேயே இருக்
கிறார்கள்.

5 இஸ்ரவேலின் சேஷ்டபுத்திரனுடைய ரூப
னின் குமாரர்—இவனே சேஷ்டபுத்திரன்,
ஆயினும் அவன் தன் தகப்பனுடைய மஞ்
சத்தைத் தீட்டுப்படுத்தினபடியினால் அவ
னுடைய சேஷ்டபுத்திர நிலைமையம் இஸ்ர
வேலின் குமாரனுடைய யோசேப்பின் மக்க
ளுக்குக் கொடுக்கப்பட்டது; கோத்திர அட்
டவணையிலோ யோசேப்பு மூத்தற்பிறந்தவ
னாகப் பதிவுசெய்யப்படவில்லை. யூதா தன் 2
சகோதரரிலே பலத்தவனானாலும்; அரசாளுப
வன் அவன் சந்ததியில் தோன்றினாலும்;
சேஷ்டபுத்திர நிலைமையமோ யோசேப்புக்
குரியதாயிற்று—இஸ்ரவேலின் சேஷ்டபுத் 3
திரனுடைய ரூபனின் குமாரர், ஆனோக்கு,
பல்லூ, எஸ்ரோன், கர்மீ என்பவர்கள்.
யோவேலின் குமாரர், அவனே பெற்ற 4
ஷெமாயா, இவன் குமாரன் கோக், இவன்
குமாரன் சிமேயீ; | இவன் குமாரன் மீகா, 5
இவன் குமாரன் ராயா, இவன் குமாரன்
பாகால். இவன் குமாரன் பேரா, இவனே 6
ரூபனியரின் தலைவன்; இவனை அசீரியா
ராஜாவாகிய தில்காத்பில்நேசர் சிறைபிடித்

7 கப்போனுன். தத்தம் வம்சங்களின்படி கோத்திர அட்டவணைகளில் எழுதப்பட்டிருக்கிற வரலாற்றின்படியேயுள்ள சகோதரர் இவர்களே; தலைமையானவன் யெயியேல், 8 சகரியா, | யோவேலின் மகனுகிய ஷேமாவுக்குப் பிறந்த ஆசாசின் குமாரன் பேலா; இவன் அரோவேரிலே நேபோமட்டும் பாசால் மெயோன்மட்டும் வாசம்பண்ணினுன். 9 அவர்கள் ஆடுமாடுகள் கிலெயாத் தேசத்தில் மிகுதியானபடியினுலே அவர்கள் கீழ்நாட்டிலும் பரவிக் கிழக்கே ஐபிராத்து நதிதொடங்கி வனந்தரத்தின் எல்லைமட்டும் 10 வாசம்பண்ணினர்கள். சவுலின் நாட்களில் ஆகரியரோடு அவர்கள் யுத்தம்பண்ணித் தங்கள் கையால் அவர்களை விழுத்தியபின் கிலெயாத்திற்குக் கீழ்புறத்திலே அவர்கள் கூடாரங்களில் குடியேறினர்கள்.

11 காத்தின் புத்திரர் அவர்களுக்கு எதிரே பாசான் தேசத்திலே சல்காமட்டும் வாசம் 12 பண்ணினர்கள். அவர்களில் யோவேல் தலைமையானவன், சாப்பாம் அவனுக்கு இரண்டாவதாயிருந்தான்; யானுப் ஷாப்பாத் என்பவர்களும் பாசானில் இருந்தார் 13 கள். அவர்கள் பிதாக்களின் வம்சத்தைச் சேர்ந்த அவர்கள் சகோதரர், மிகாவேல், மெசுல்லாம், சேபா, யோராயி, யாக்கான், 14 சீகா, ஏபேர் என்னும் ஏழுபேர். இவர்கள் அபிகயிலின் குமாரர்; அபிகயில் கூரியின் குமாரன், இவன் யரொவாகின் குமாரன், இவன் கிலெயாத்தின் குமாரன், இவன் மிகவேலின் குமாரன், இவன் எஷிஷாயின் குமாரன், இவன் யக்தோவின் குமாரன், 15 இவன் பூசின் குமாரன். கூனியின் மகனுகிய அப்தியேலின் குமாரன் அகீ அவர்கள் 16 பிதாக்களின் வம்சத்தலைவன். அவர்கள் கிலெயாத்திலுள்ள பாசானிலும் அதைச் சார்ந்த கிராமங்களிலும் சாரோனைச் சூழ்ந்த சகல வெளிநிலங்களின் அந்தம்மட்டும் 17 வாசம்பண்ணினர்கள். இவர்களெல்லாரும் யூதாவின் ராஜாவாகிய யோதாமின் நாட்களிலும் இஸ்ரவேலின் ராஜாவாகிய யெரொபெயாமின் நாட்களிலும் தங்கள் கோத்திர அட்டவணைக் கணக்கிலே எழுதப்பட்டார்கள்.

18 ரூபன் புத்திரரிலும் காத்தியரிலும் மனுசேயின் பாதிக்கோத்திரத்தாரிலும் கேடகமும் பட்டயமும் எடுத்து வில் வளைத்து யுத்தத்திற்குப் பழகிப் படைக்குப் போகத் தக்க பராக்கிரமசாலிகள் நாற்பத்துநாலாயிரத்து எழுநூற்று அறுபதுபேரிருந்தார் 19 கள். இவர்கள் ஆகரியரோடும், யெத்தூர் நாபீஷ், நோதாப் என்பவர்களோடும் யுத்தம்பண்ணினபோது | யுத்தத்திலே இவர் 20 களுக்கு உதவிகிடைத்தபடியினுல் ஆகரியரும் அவர்களோடிருந்த யாவரும் இவர்கள் கையில் ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள்; ரூபனியர் முதலியோர் யுத்தத்திலே கடவுளை நோக்கிக் கூப்பிட்டார்கள், அவர்கள் அவர் மேல் நம்பிக்கையாயிருந்தபடியினுல் அவர்கள் விண்ணப்பத்தை அவர் கேட்டருளினர். அவர்கள் பகைவருக்கு இருந்த மிரு 21 கங்களாகிய ஐம்பதினுயிரம் ஒட்டகங்களையும், இரண்டு லட்சத்து ஐம்பதினுயிரம் ஆடுகளையும், இரண்டாயிரம் கழுதைகளையும், மனுஷரில் லட்சம் பேர்களையும் பிடித்தார்கள். யுத்தம் கடவுள் நித்தப்படியே நடந்த 22 படியினுல் அநேகர் வெட்டுண்டு விழுத்தார்கள்; சிறைப்பட்டுப்போகுமட்டும் இவர்களுடைய ஸ்தலத்திலே குடியிருந்தார்கள்.

மனுசேயின் பாதிக்கோத்திரத்துப் புத்திர 23 ரும் அத்தத் தேசத்தில் பாசான் தொடங்கிப் பாகால் எர்மோன்மட்டும், சேனீர்மட்டும், எர்மோன் பர்வதமட்டும் குடியிருந்தார்கள்; அவர்கள் மிகவும் பெருகியிருந்தார்கள். அவர்கள் பிதாக்களின் வம்சத்தலைவர் இவர் 24 களே: ஏப்பேர், யிஷி, எலியேல், அஸ்ரியேல், எரேமியா, ஓதாவியா, யக்தியேல்; இவர்கள் பராக்கிரமவீரரும் தங்கள் பிதாக்களின் வீட்டில் பேர்பெற்ற தலைவருமாயிருந்தார்கள்.

அவர்கள் தங்கள் பிதாக்களின் கடவுளுக் 25 குத் துரோகம்பண்ணி, கடவுள் அவர்களுக்கு முன்பாக அழித்திருந்த அத்தேச ஜனங்களின் தேவர்களைப் பின்பற்றிச் சோரம் போனர்கள். இஸ்ரவேலின் கடவுள் அசி 26 ரியா ராஜாவாகிய பூலின் இதயத்தையும், அசிரியா ராஜாவாகிய தில்காத்பில்நேசரின் இதயத்தையும் தூண்டிவிடவே, இவன் ரூபனியரும் காத்தியரும் மனுசேயின் பாதிக் கோத்திரத்தாருமாகிய அவர்களைச் சிறை பிடித்துக் கெலாகுக்கும் காபோருக்கும் ஆராவுக்கும் கோசான் ஆற்றங்கரைக்கும் கொண்டுபோனுன்; இந்நாள்வரைக்கும் அங்கேயே இருக்கிறார்கள்.

லேவியின் குமாரர், கெர்சோம், கெகாத், 6 மெராரி என்பவர்கள். கெகாத்தின் குமா 2 ரா, அம்ராம், யித்சேயார், கெப்ரோன், ஊசியேல் என்பவர்கள். அம்ராமின் பிள்ளை 3 கள், ஆரோன், மோசே, மிரியாம் என்பவர்கள்; ஆரோனின் குமாரர், நாதாப், அபியூ, எலெயாசார், இத்தாமார் என்பவர்கள். எலெயாசார் பினெகாசைப்பெற்றுன், பினெ 4 காஸ் அபிஷூவாவைப் பெற்றுன், | அபி 5 ஷூவா புக்கியைப் பெற்றுன், புக்கி ஊசி

6 பைப் பெற்ருன், | ஊசி செராகியாவைப் பெற்ருன், செராகியா மெராயோதைப் பெற்
7 ருன், | மெராயோத் அமரியாவைப் பெற்ருன், அமரியா அகிதூபைப் பெற்ருன் !
8 அகிதூப் சாதோக்கைப் பெற்ருன், சாதோக்
9 அகிமாசைப் பெற்ருன், | அகிமாஸ் அசரி
யாவைப் பெற்ருன், அசரியா யோகனூனைப்
10 பெற்ருன், | யோகனூன் அசரியாவைப் பெற்ருன்,—சாலொமோன் எருசலேமில் கட்டின ஆலயத்திலே ஆசாரியபணிவிடை
11 செய்தவன் இவனே—அசரியா அமரியாவைப் பெற்ருன், அமரியா அகிதூபைப்
12 பெற்ருன், அகிதூப் சாதோக்கைப் பெற்ருன், சாதோக் சல்லூமைப் பெற்ருன், |
13 சல்லூம் இல்கியாவைப் பெற்ருன், இல்கி
14 யா அசரியாவைப் பெற்ருன், | அசரியா செராயாவைப் பெற்ருன், செராயா யோத்
15 சதாக்கைப் பெற்ருன். யெகோவா நேபுகாத்நேச்சாரைக்கொண்டு யூதா ஜனங்களையும் எருசலேமியரையும் சிறைபிடித்துக் கொண்டு போனபோது யோத்சதாக்கும் சிறைப்பட்டுப்போனன்.
16 லேவியின் குமாரர், கெர்சோம், கெகாத்,
17 மெராரி என்பவர்களே. கெர்சோமுடைய குமாரரின் நாமங்கள், லிப்னி, சிமேயீ.
18 கெகாத்தின் குமாரர், அம்ராம், யித்சேயார்,
19 கெப்ரோன், ஊசியேல் என்பவர்கள். மெராரியின் குமாரர், மகேலி, மூசி என்பவர்கள்; தத்தம் பிதாக்கள்வழியே உண்டான லேவிய
20 வம்சங்கள் இவைகளே: கெர்சோமின் குமாரர்: அவனே பெற்ற லிப்னீ, இவன் குமாரன் யாகாத், இவன் குமாரன் சிம்மா, |
21 இவன் குமாரன் யோவாகு, இவன் குமாரன் இத்தோ, இவன் குமாரன் சேராகு, இவன் குமாரன் யாத்திராயி என்பவர்களே;
22 கெகாத்தின் குமாரர்: அவனே பெற்ற அம்மீனதாப், இவன் குமாரன் கோராகு,
23 இவன் குமாரன் ஆசீர், | இவன் குமாரன் எல்க்கானு, இவன் குமாரன் எப்யாசாப்,
24 இவன் குமாரன் ஆசீர், | இவன் குமாரன் தாகாத், இவன் குமாரன் ஊரியேல், இவன் குமாரன் ஊசியா, இவன் குமாரன் சவுல்
25 என்பவர்களே. எல்க்கானுவின் குமாரர்
26 அமாசாயியும் அகிமோத்தும். இவன் குமாரன் எல்க்கானு, இவன் குமாரன் எல்க்கானு சோபாய்; இவன் குமாரன் நாகாத், |
27 இவன் குமாரன் எலியாப், இவன் குமாரன் யெரொகாம், இவன் குமாரன் எல்க்கானு
28 என்பவர்களே. சாமுவேலின் குமாரர், அவனுடைய முதற்பேருன வஸ்னீ, அபீயா
29 என்பவர்கள். மெராரியின் குமாரர் மகேலி, இவன் குமாரன் லிப்னீ, இவன் குமாரன் சிமேயீ, இவன் குமாரன் ஊசா, | இவன் குமாரன் சிமெயா, இவன் குமாரன் ஆகியா, இவன் குமாரன் அசாயா.
30
31 யெகோவாவின் பெட்டகம் நிலையாயிருக்கும் இடத்திற்கு வந்தபோது, தாவீது யெகோவாவின் ஆலயத்தில் சங்கீத சேவையை நடத்துவதற்கு ஆட்களை ஏற்படுத்தினன். சாலொமோன் எருசலேமில்
32 யெகோவாவின் ஆலயத்தைக் கட்டித் தீருமட்டும் அந்த ஆட்களே தரிசனக்கூடார வாசஸ்தலத்திற்கு முன்பாகச் சங்கீதங்கள் பாடித் தங்கள் முறைமையின்படியே பணிவிடை செய்துவந்தார்கள்; அந்தச் சேவை செய்தவர்களும் அவர்கள் குமாரரும் இவர்களே: கெகாத்திய வம்சத்தாரில் ஏமான்
33 என்னும் பாடகன், இவன் யோவேலின் குமாரன், இவன் சாமுவேலின் குமாரன், |
34 இவன் எல்க்கானுவின் குமாரன், இவன் யெரொகாமின் குமாரன், இவன் எலீயேலின் குமாரன், இவன் தோவாகின் குமாரன், | இவன் சூப்பின் குமாரன், இவன்
35 எல்க்கானுவின் குமாரன், இவன் மாகாத்தின் குமாரன், இவன் அமாசாயின் குமாரன், | இவன் எல்க்கானுவின் குமாரன்,
36 இவன் யோவேலின் குமாரன், இவன் அசரியாவின் குமாரன், இவன் செப்பனியாவின் குமாரன், | இவன் தாகாதின் குமா
37 ரன், இவன் ஆசீரின் குமாரன், இவன் எபியாசாப்பின் குமாரன், இவன் கோராகின் குமாரன், | இவன் யித்சேயாரின் குமாரன்,
38 இவன் கெகாத்தின் குமாரன், இவன் இஸ்ரவேலின் மகனுகிய லேவியின் குமாரன்.
அவன் சகோதரனுகிய ஆசாப் அவன் வல
39 பக்கத்திலே நிற்பான்; ஆசாப் பெரகியாவின் குமாரன், இவன் சிமெயாவின் குமாரன், |
40 இவன் மிகாவேலின்குமாரன், இவன் பாசெ
யாவின் குமாரன், இவன் மல்கியாவின் குமாரன், | இவன் எத்னியின் குமாரன், இவன்
41 சேராகின் குமாரன், இவன் அதாயாவின் குமாரன், | இவன் ஏத்தானின் குமாரன்,
42 இவன் சிம்மாவின் குமாரன், இவன் சிமேயியின் குமாரன், | இவன் யாகாதின் குமா
43 ரன், இவன் கெர்சோமின் குமாரன், இவன் லேவியின் குமாரன். மெராரியின் புத்திர
44 ராகிய இவர்கள் சகோதரர் இடதுபக்கத்திலே நிற்பார்கள்; இவர்களைச் சேர்ந்தவனுகிய ஏத்தான் என்பவன் கேஷியின் குமாரன், இவன் அப்தியின் குமாரன், இவன்
மல்லூகின் குமாரன், | இவன் கஷபியா
45 வின் குமாரன், இவன் அமத்சியாவின் குமாரன், இவன் இல்க்கியாவின் குமாரன், |
இவன் அம்சியின் குமாரன், இவன் பானி
46

யின் குமாரன், இவன் சேமேரின் குமா
47 ரன், | இவன் மகேலியின் குமாரன், இவன்
மூசியின் குமாரன், இவன் மெராரியின் குமா
48 ரன், இவன் லேவியின் குமாரன். அவர்கள்
சகோதரராகிய மற்ற லேவியர் சடவுளின்
ஆலயமாகிய வாசஸ்தலத்தின் பணிவிடைக
ளுக்கெல்லாம் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.
49 ஆரோனும் அவன் குமாரரும் தகன பலி
பீடத்தின்மேல் பலியிட்டுத் தூபங்காட்டும்
பீடத்தின்மேல் தூபங்காட்டி, கடவுளின்
ஊழியனாகிய மோசே கற்பித்தபடியெல்லாம்
மகாபரிசுத்தஸ்தலத்தின் சகல வேலைகளையும்
செய்வதற்கும் இஸ்ரவேலுக்காகப் பிராயச்
சித்தம் பண்ணுவதற்கும் நியமிக்கப்பட்டி
50 ருந்தார்கள். ஆரோனின் குமாரர் இவர்
களே: அவன் குமாரன் எலெயாசார், இவன்
குமாரன் பினெகாஸ், இவன் குமாரன் அபீ
51 ஷூவா, | இவன் குமாரன் புக்கி, இவன்
குமாரன் ஊசி, இவன் குமாரன் செரா
52 கியா, | இவன் குமாரன் மெராயோத்,
இவன் குமாரன் அமரியா, இவன் குமாரன்
53 அகிதூப், | இவன் குமாரன் சாதோக்,
இவன் குமாரன் அகிமாஸ்.
54 அவர்கள் பாளையமிறங்கின இடங்களின்
படியே அவரவர் எல்லைகளுக்குள்ளே
அவரவர் வாசஸ்தலங்கள் கிடைத்தன.
55 சீட்டுவிழுந்தபடியே யூதா தேசத்திலுள்ள
எப்பெரோனையும் அதைச் சுற்றியிருந்த
வெளிநிலங்களையும் கெகாத்திய வம்சத்தைச்
சேர்ந்த ஆரோனின் புத்திரருக்குக் கொடுத்
56 தார்கள். அந்தப் பட்டணத்தின் வயல்
களையும் அதைச் சார்ந்த கிராமங்களையும்
எப்புன்னேயின் குமாரனாகிய காலேபுக்குக்
57 கொடுத்தார்கள். இப்படியே ஆரோனின்
புத்திரருக்கு எப்பெரோன் என்னும் அடைக்
கல புரங்களில் ஒன்றையும், லிப்னாவையும்
அதன் வெளிநிலங்களையும், யத்தீரையும்,
எஸ்தமோவாவையும் அதின் வெளிநிலங்
58 களையும், | ஏலேனையும் அதின் வெளிநிலங்
களையும், தெபீரையும் அதின் வெளிநிலங்
59 களையும், | ஆஷானையும் அதின் வெளிநிலங்
களையும், பேத்ஷேமேசையும் அதின் வெளி
60 நிலங்களையும், | பென்யமீன் கோத்திரத்திலே
கேபாவையும் அதின் வெளிநிலங்களையும்,
அலேமெத்தையும் அதின் வெளிநிலங்களை
யும், ஆனதோத்தையும் அதின் வெளிநிலங்
களையும் கொடுத்தார்கள்; இவர்கள் வம்சங்
களின்படியே கொடுக்கப்பட்ட இவர்கள்
61 ஊர்களெல்லாம் பதின்மூன்று. கெகாத்தின்
மற்றப் புத்திரருக்கு ஒரு கோத்திர வம்சத்
திலே, பாதிக்கோத்திரமாகிய மனாசேயின்
பாதியிலே, விழுந்த சீட்டின்படியே பத்து
ஊர்கள் கிடைத்தன. கெர்சோமின் புத்தி 62
ரருக்கு அவர்கள் வம்சங்களின்படியே,
இசக்கார் கோத்திரத்திலும் ஆசேர் கோத்தி
ரத்திலும் நப்தலி கோத்திரத்திலும் பாசானி
லுள்ள மனாசே கோத்திரத்திலும் பதின்
மூன்று ஊர்கள் கிடைத்தன. மெராரியின் 63
புத்திரருக்கு அவர்கள் வம்சங்களின்படியே
ரூபன் கோத்திரத்திலும் காத் கோத்திரத்தி
லும் செபுலோன் கோத்திரத்திலும் விழுந்த
சீட்டின்படி பன்னிரண்டு ஊர்கள் கிடைத்
தன. இப்படியாக இஸ்ரவேல் புத்திரர் 64
லேவியருக்கு ஊர்களையும் அவைகளின்
வெளிநிலங்களையும் கொடுத்தார்கள். சீட்டுப் 65
போட்டு யூதா புத்திரரின் கோத்திரத்திலும்
சிமியோன் புத்திரரின் கோத்திரத்திலும்
பென்யமீன் புத்திரரின் கோத்திரத்திலும்
பேர்பேராகச் சொல்லப்பட்ட அந்த ஊர்
களைக் கொடுத்தார்கள்.

கெகாத் புத்திர வம்சங்களில் சிலருக்கு 66
அவர்களுக்குரியவைகளாக அவர்களுக்கு
எப்பிராயிம்கோத்திரத்திலே ஊர்கள் கிடைத்
தன. அடைக்கலபுரங்களில் அவர்களுக்கு 67
எப்பிராயீம் மலைநாட்டிலுள்ள சீகேமை
யும் அதின் வெளிநிலங்களையும் கொடுத்
தார்கள்; கேசேரையும் அதின் வெளி
நிலங்களையும், | யொக்மெயாமையும் அதின் 68
வெளிநிலங்களையும், பேத்கோரோனையும்
அதின் வெளிநிலங்களையும், | ஆயலோனை 69
யும் அதின் வெளிநிலங்களையும் காத்ரிம்மோ
னையும் அதின் வெளிநிலங்களையும், | மனா 70
சேயின் பாதிக்கோத்திரத்திலே ஆனேரையும்
அதின் வெளிநிலங்களையும், பிலியாமையும்
அதின் வெளிநிலங்களையும் கொடுத்தார்கள்;
இவைகள் கெகாத் புத்திரரிலுள்ள மற்ற
வம்சங்களுக்குக் கிடைத்தன.

கெர்சோம் புத்திரருக்கு மனாசேயின் 71
பாதிக்கோத்திர வம்சத்திலே பாசானிலிருக்
கிற கோலானும் அதின் வெளிநிலங்களும்,
அஸ்தரோத்தும் அதின் வெளிநிலங்களும், |
இசக்கார் கோத்திரத்திலே கேதேசும் அதின் 72
வெளிநிலங்களும், தாபராத்தும் அதின்
வெளிநிலங்களும், | ராமோத்தும் அதின் 73
வெளிநிலங்களும், ஆனேமும் அதின்
வெளிநிலங்களும், | ஆசேர் கோத்திரத்திலே 74
மாஷாலும் அதின் வெளிநிலங்களும், அப்
தோனும் அதின் வெளிநிலங்களும் | குக் 75
கோக்கும் அதின் வெளிநிலங்களும், ரெகோ
பும் அதின் வெளிநிலங்களும், | நப்தலி 76
கோத்திரத்திலே கலிலேயாவிலிருக்கிற கேதே
சும் அதின் வெளிநிலங்களும், கம்மோனும்
அதின் வெளிநிலங்களும், கிரியத்தாயிமும்
அதின் வெளிநிலங்களும் கிடைத்தன.

77 மொராரியின் மற்றப் புத்திரருக்குச் செபு
லோன் கோத்திரத்திலே ரிம்மோனும் அதின்
வெளிநிலங்களும், தாபோரும் அதின் வெளி
78 நிலங்களும், | எரிகோவுக்கு எதிரே யோர்தா
னுக்கு அப்புறத்தில் யோர்தானுக்குக் கிழக்கே
இருக்கிற ரூபன் கோத்திரத்தில் வனாந்தரத்தி
லுள்ள பேசேரும் அதின் வெளிநிலங்களும்,
79 யாக்சாவும் அதின் வெளிநிலங்களும், | கெதே
மோத்தும் அதின் வெளிநிலங்களும், மேபா
80 காத்தும் அதின் வெளிநிலங்களும், | காத்
கோத்திரத்திலே கிலெயாத்திலுள்ள ராமோத்
தும் அதின் வெளிநிலங்களும், மகனயீமும்
81 அதின் வெளிநிலங்களும், | எஸ்போனும்
அதின் வெளிநிலங்களும், யாசேரும் அதின்
வெளிநிலங்களும் கிடைத்தன.

**7** இசக்காருடைய குமாரர், தோலா, பூவா,
யாசூப், சிம்ரோன் என்னும் நாலுபேர்.
2 தோலாவின் குமாரர், ஊசி, ரெப்பாயா,
யெரியேல், யக்மாயி யிப்சாம், சாமுவேல்
என்பவர்கள்; தோலாவுக்குப் பிறந்த இவர்
கள் தங்கள் பிதாக்களின் வம்சங்களிலே
தலைவரும் தத்தம் தலைமுறைகளிலே பரா
கிரம வீரருமாயிருந்தார்கள்; தாவீதின் நாட்
களில் அவர்கள் தொகை இருபத்தீராயிரத்து
3 அறுநூறுபேர். ஊசியின் குமாரர்; யிஸ்ரகியா;
யிஸ்ரகியாவின் குமாரர் மிகாவேல், ஒபதியா,
யோவேல், யிஷியா என்னும் ஐவர்; இவர்
4 கள் அனைவரும் தலைவர். அவரவர் தலை
முறைகளில் அவர்கள் பிதாக்கள் வம்சங்க
ளின்படியே யுத்தவீரரான கூட்டத்தார் மூப்
பத்தாறுயிரம்பேர் அவர்களோடிருந்தார்
கள்; அவர்களுடைய மனைவிமக்கள் ஏராள
5 மானவர்கள். இசக்காரின் மற்ற வம்சங்
கள் அனைத்திலும் அவர்களுக்குச் சகோதர
ரான பராக்கிரமவீரர் தத்தம்வம்ச அட்ட
வணைகளில் எழுதப்பட்டவர்கள் எண்பத்
தேழாயிரம் பேர்.
6 பென்யமீன் குமாரர், பேலா, பேகர்,
7 யெதியவேல் என்னும் மூவர். பேலாவின்
குமாரர், எஸ்போன், ஊசி, ஊசியேல்,
யெரிமோத், ஈரி என்னும் ஐவர்; இவர்கள்
பிதாக்களின் வம்சங்களில் தலைவர், பரா
கிரமவீரர். இவர்கள் வம்ச அட்ட
வணையில் எழுதப்பட்டவர்கள் இருபத்தீரா
8 யிரத்து முப்பத்து நாலுபேர். பேகேரின்
குமாரர், செமீரா, யோவாஷ், எலியேசர்,
எலியோயேனும், ஒம்ரி, யெரேமோத்,
அபியா, ஆனதோத், அலேமெத் என்பவர்
கள்; இவர்கள் எல்லாரும் பேகேரின்
9 குமாரர். தத்தம் தலைமுறைகளில் பிதாக்
களின் வம்சங்களிலே தலைவராகவும் பரா
கிரம வீரராகவும் அட்டவணையில் எழுதப்
பட்டவர்கள் இருபதினாயிரத்து இருநூறு
பேர்.
10 யெதியவேலின் குமாரர் பில்கான்; பில்கா
னின் குமாரர், யெயூஷ், பென்யமீன், ஏகூத்,
கெனானா, சேத்தான், தர்ஷீஷ், அகிஷாகார்
என்பவர்கள். யெதியவேலின் குமாரராகிய
11 இவர்கள் எல்லாரும் தங்கள் பிதாக்கள் வம்
சத்தாரில் தலைவரும் பராக்கிரம வீரருமா
யிருந்தார்கள்; யுத்தத்திற்குப் போகத்தக்க
போர்வீரர் பதினேழாயிரத்து இருநூறுபேர்.
12 சுப்பீமும் குப்பீமும் ஈரின் குமாரர்; கூசிம்
ஆகேரின் குமாரர்.
13 நப்தலியின் குமாரர் யாக்சியேல், கூனி,
யேத்சேர், சல்லூம் என்பவர்கள்; இவர்கள்
பில்காள் பிள்ளைகள்.
14 மனாசேயின் புத்திரர் அஸ்ரியேல், இவன்
மனைவியினிடம் பிறந்தவன்—மனாசேயின்
மறுமனையாட்டியாகிய ஆராமிய ஸ்திரீயி
னிடத்தில் கிலெயாத்தின் தகப்பனாகிய
15 மாகீர் பிறந்தான். மாகீர் குப்பீம் சுப்பீம்
என்பவர்களுடைய சகோதரியாகிய மாக்
காளை விவாகம்பண்ணினான்—மனாசேயின்
இரண்டாம் குமாரன் செலோப்பியாத்;
செலோப்பியாத்திற்குக் குமாரத்திகளே இருந்
16 தார்கள். மாகீரின் மனைவியாகிய மாக்
காள் ஒரு குமாரனைப் பெற்று அவனுக்
குப் பேரேஷ் என்று பேரிட்டாள்; இவன்
சகோதரன் பேர் ஷேரேஷ்; இவனுடைய
குமாரர் ஊலாம், ரேக்கேம் என்பவர்கள்.
17 ஊலாமின் குமாரர் பெதான், இவர்கள் மனா
சேயின் குமாரனாகிய மாகீருக்குப் பிறந்த
கிலெயாத் புத்திரர். அவன் சகோதரியா
18 கிய அம்மொளேகேத் ஈஷ்ஹோதையும்
அபியேசரையும் மாகலாவையும் பெற்றாள்.
19 செமீதாவின் குமாரர், அகியான், சேகேம்,
லிக்கீ, அனியாம் என்பவர்கள்.
20 எப்பிராயீமின் குமாரர், சுத்தெலாகு;
இவன் குமாரன் பேரேத், இவன் குமாரன்
தாகாத், இவன் குமாரன் எலாதா; இவன்
குமாரன் தாகாத். இவன் குமாரன் சாபாத்;
21 இவன் குமாரர் சுத்தெலாகு, ஏசேர், எலி
யாத்; தேசத்தில் பிறந்த காத்தூராருடைய
ஆடுமாடுகளை அவர்கள் பிடிக்கப்போனபடி
யால் காத்தூரார் அவர்களைக் கொன்று
போட்டார்கள். அவர்கள் தகப்பனாகிய
22 எப்பிராயீம் நெடுநாள் துக்கங்கொண்டாடி
னான். அவன் சகோதரர் அவனை ஆற்றித்
23 தேற்றும்படி வந்தார்கள். பின்பு அவன்
தன் மனைவியினிடம் பிரவேசித்தான், அவள்
கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெற்றாள்;
தன் குடும்பம் தீங்குக்குட்பட்டிருந்ததினால்
பிள்ளைக்குப் பெரீயா என்று பேரிட்டான்.

24 அவன் குமாரத்தி ஷேயெராள்; இவளே கீழ்
பேத்கோரோணையும்மேல்பேத்கோரோணையும்
ஊசேன் ஷேயெராவையும் கட்டினவள்.
25 அவன் குமாரர், ரேப்பாகு, ரேஷேப் என்பவர்
கள்; இவன் குமாரன் தேலாக், இவன் குமா
26 ரன் தாகான், | இவன் குமாரன் லாதான்;
இவன் குமாரன் அம்மியூத், இவன் குமாரன்
27 எலிஷாமா, | இவன் குமாரன் நூன், இவன்
28 குமாரன் யோசுவா. அவர்கள் காணியாட்சி
யும் வாசஸ்தலங்களும் இவைகளே: பேதே
லும் அதைச் சார்ந்த கிராமங்களும், கீழ்
திசையில் ஹகராலும், மேல்திசையில் கேசே
ரும் அதைச்சார்ந்த கிராமங்களும், சீகேமும்
அதைச்சார்ந்த கிராமங்களும், ஐயாவும்
அதைச்சேர்ந்த கிராமங்கள் வரைக்கும்;
29 மனாசே புத்திரரின்பக்கத்திலே பேத்சேயா
னும் அதைச்சார்ந்த கிராமங்களும், தானா
கும் அதைச்சார்ந்த கிராமங்களும், மெகிதோ
வும் அதைச்சார்ந்த கிராமங்களும், தோரும்
அதைச்சார்ந்த கிராமங்களுமே; இவ்விடங்
களில் இஸ்ரவேலின் குமாரனாகிய யோசேப்
பின் புத்திரர் குடியிருந்தார்கள்.
30 ஆசேரின் குமாரர், யிம்னா, யிஸ்வா,
யிஸ்வி, பெரீயா என்பவர்கள்; இவர்கள்
31 சகோதரி சேராகு. பெரீயாவின் குமாரர்,
கேபேர், மல்கியேல் என்பவர்கள்; இவன்
32 பிர்சாவீத்தின் தகப்பன். கேபேர் யப்லேத்
தையும் சோமேரையும் கோத்தாமையும்
இவர்கள் சகோதரியாகிய ஷுகாவையும்
33 பெற்றான். யப்லேத்தின் குமாரர், பாசாக்,
பிம்மால், அஷ்வாத் என்பவர்கள்; இவர்
34 களே யப்லேத்தின் குமாரர். சேமேரின்
குமாரர் அகீ, ரோகா, எகூபா, ஆராம் என்ப
35 வர்கள். அவன் சகோதரனாகிய எலேமின்
குமாரர், சோபாகு, யிம்னா, ஷேலேஸ்,
36 ஆமால் என்பவர்கள். சோபாகின் குமாரர்,
சுவாகு, கர்னேப்பர், ஷுகால், பேரி,
37 யிம்மா, | பேசேர், ஒத், ஷம்மா, ஷில்ஷா,
38 இத்தரான், பேரா என்பவர்கள். யேத்தே
ரின் குமாரர், எப்புன்னே, பிஸ்பா, ஆரா
39 என்பவர்கள். உல்லாவின் குமாரர், ஆரகு,
40 கன்னியேல், ரித்தியீர் என்பவர்கள். ஆசே
ரின் புத்திரராகிய இவர்கள் எல்லாரும் தத்
தம் பிதாக்களின் வம்சங்களிலே தலைவர்,
சிரேஷ்டமான பராக்கிரம வீரர், பிரபுக்
களின் தலைவர்; வம்ச அட்டவணைகளில்
யுத்தவீரராக எழுதப்பட்டவர்களின்
தொகை இருபத்தாருயிரம்.

**8** பென்யமீன் பேலா என்னும் தன் மூத்த
குமாரனையும், அஸ்பேல் என்னும் இரண்
டாம் குமாரனையும், அகராகு என்னும்
2 மூன்றாம் குமாரனையும், | நோகா என்னும்
நாலாம் குமாரனையும், ராபா என்னும் ஐந்
தாம் குமாரனையும் பெற்றான். பேலா 3
வுக்கு இருந்த குமாரர், அட்டார், கேரா,
அபியூத், | அபிஷுவா, நாமான், அகோகு | 4
கேரா, செபூபான், சுராம் என்பவர்கள். 5
ஏகூதின் குமாரர், கேபாவில் குடியிருந்த 6
வர்களின் வம்சத் தலைவர், அவர்கள் மனா
காத்திற்குச் சிறையாகக் கொண்டுபோகப்
பட்டார்கள். கொண்டுபோனவர்கள் 7
நாமான், அகியா, கேரா என்பவர்கள்,
அவன் ஊசாவையும் அகிகூதையும் பெற்
றான்.

ஷகராயிம் தன் மனைவிகளாகிய கூஷீம் 8
மையும் பாராவையும் அனுப்பிவிட்டபின்
மோவாப் வெளிகளிலே பிள்ளைகளைப் பெற்
றான். தன் மனைவியாகிய கோதேசினிடம் 9
யோபாவையும், சிப்யாவையும், மேஷாவை
யும், மல்காமையும், | எயூத்சையும், சாகியா 10
வையும், மிர்மாவையும் பெற்றான்; இவர்
களே அவன் குமாரர், வம்சத்தலைவர். கூஷி 11
மினிடம் அவன் பெற்ற பிள்ளைகள் அபீதூபு,
எல்பாகல் என்பவர்கள். எல்பாகலின் 12
குமாரர், ஏபேர், மீஷாம், ஷேமேத்; ஒனோ
வையும் லோதையும் அதைச்சார்ந்த கிரா
மங்களையும் கட்டினவன் இவனே.

பெரீயாவும் சேமாவும் ஆயலோன் குடிக 13
ளின் வம்சத்தலைவர்; இவர்கள் காத்தின் குடி
களை முறியடித்து ஒட்டிவிட்டார்கள்.
அகியோ, ஷாஷாக், யெரேமோத், செப 14, 15
தியா, ஆராத், ஏதேர், | மிகாவேல், யிஷ்பா, 16
யோகா என்பவர்கள் பெரீயாவின் குமாரர்.
செபதியா, மெசுல்லாம், கிஸ்கி, கேபேர், | 17
யிஷ்மெராயி, யிஷ்லியா, யோபாப் என்ப 18
வர்கள் எல்பாகலின் குமாரர். யாக்கிம், 19
சிக்ரி, சப்தி, | எலியேனாய், சில்தாய், எலி 20
யேல், | அதாயா, பெராயா, ஷிம்ராத் என் 21
பவர்கள் சிமேயியின் குமாரர். யிஷ்பான், 22
ஏபேர், எலியேல், | அப்தோன், சிக்ரி, 23
கானூன், | கனனியா, ஏலாம், அந்தோதி 24
யா, | இப்தியா, பெனூவேல் என்பவர்கள் 25
ஷாஷாக்கின் குமாரர். ஷம்ஷெராய், 26
ஷெகரியா, அத்தாலியா, | யாரெஷியா, 27
எலியா, சிக்ரி, என்பவர்கள் எரோகாமின்
குமாரர். இவர்கள் தத்தம் தலைமுறைகளில் 28
வம்சத்தலைவர், இவர்கள் எருசலேமிலே
குடியிருந்தார்கள்.

கிபியோனின் தகப்பன் கிபியோனிலே 29
குடியிருந்தான். அவன் மனைவியின்பேர் 30
மாக்காள். அவன் மூத்தகுமாரன் அப்
தோன் என்பவன்; மற்றவர்கள் சூர், கீஷ், 31
பாகால், நாதாப், கெதோர், அகியோ,
சேகேர் என்பவர்கள். மிக்லோத் சிமி 32

யாவைப் பெற்றான்; இவர்களும் தங்கள் சகோதரரோடுகூட எருசலேமிலே தங்கள் சகோதரருக்கு எதிரே குடியிருந்தார்கள்.
33 நேர் கீசைப் பெற்றான், கீஷ் சவுலைப் பெற்றான், சவுல் யோனத்தானையும் மல்கிஷூவாவையும் அபினதாபையும் எஸ்பாகாலையும்
34 பெற்றான். யோனத்தானின் குமாரன் மெரீபாகால்; மெரீபாகால் மீகாவைப்பெற்றான்.
35 மீகாவின் குமாரர் பீதோன், மேலேக்,
36 தரேயா, ஆகாஸ் என்பவர்கள். ஆகாஸ் யோகதாவைப்பெற்றான்; யோகதா அலெமேத்தையும் அஸ்மாவேத்தையும் சிம்ரியையும். பெற்
37 றான். சிம்ரி மோசாவைப் பெற்றான்; மோசா பினியாவைப் பெற்றான்; இவன் குமாரன் ராபா, இவன் குமாரன் எலியாசா,
38 இவன் குமாரன் ஆத்சேல். ஆத்சேலுக்கு ஆறு குமாரர், அவர்கள் அஸ்ரீக்காம், பொக்குரு, இஸ்மவேல், செயரியா, ஒபதியா, கானான் என்பவர்கள்; இவர்கள் எல்
39 லாரும் ஆத்சேலின் குமாரர். அவன் சகோதரனாகிய ஏஷேக்கின் குமாரர், மூத்த குமாரன் ஊலாம், இரண்டாம் குமாரன் யெயூஷ்,
40 மூன்றாம் குமாரன் எலிபேலேத். ஊலாமின் குமாரர் பராக்கிரமவீரர், வில்வீரப்பவர்கள்; அவர்களுக்குப் புத்திரர் பௌத்திரர் அநேகர் இருந்தார்கள், நூற்றைம்பதுபேர்; இவர்கள் எல்லாரும் பென்யமீன் புத்திரர்.

**9** இஸ்ரவேலர் எல்லாரும் தங்கள் தங்கள் கோத்திர அட்டவணைக் கணக்கிலே எழுதப்பட்டார்கள்; இவர்கள் நாமங்கள், இதோ, இஸ்ரவேல் ராஜாக்களின் புஸ்தகத்திலே எழுதியிருக்கிறதே; யூதா கோத்திரத்தார் தங்கள் துரோகத்தினிமித்தம் பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டுபோகப்பட்டார்கள்.
2 முதல்முதல் தங்கள் காணியாட்சியிலும் தங்கள் பட்டணங்களிலும் குடியேறினவர்கள் சாதாரண இஸ்ரவேலரும் ஆசாரியரும் லேவியரும் கோவில் வேலையாட்களுமே.
3 யூதா புத்திரரிலும் பென்யமீன் புத்திரரிலும் எப்பிராயீம் மனாசே என்பவர்களின் புத்திரரிலும் எருசலேமில் குடியேறினவர்கள் இவர்களே.
4 யூதாவின் குமாரனாகிய பேரேசின் சந்ததியில் பிறந்த ஊத்தாய், இவன் அம்மிஹூதின் குமாரன், இவன் ஒம்ரியின் குமாரன், இவன் இம்ரியின்குமாரன், இவன் பானியின்
5 குமாரன். சிலோவியரில் மூத்தவனாகிய
6 அசாயாவும் அவன் பிள்ளைகளும், | சேராவின் சந்ததியில் யெகூவேலும் அவன் சகோதரருமே; மொத்தம் அறுநூற்றுத் தொண்
7 ணூறுபேர். பென்யமீன் சந்ததியாரில் சல்லூ, இவன் மெசுல்லாமின் குமாரன், இவன் ஒதாவியாவின் குமாரன், இவன் அசெனூவாவின் குமாரன்; யிப்னெயா, இவன்
8 யெரோகாமின் குமாரன்; ஏலா, இவன் ஊசியின் குமாரன், இவன் மிக்கிரியின் குமாரன்; மெசுல்லாம், இவன் செபத்தியாவின் குமாரன், இவன் ரெகுவேலின் குமாரன், இவன் யிப்னீயாவின் குமாரன்; அவர்
9 கள் வம்சங்களைச்சேர்ந்த அவர்கள் சகோதரருமே; மொத்தம் தொளாயிரத்து ஐம்பத்தாறுபேர். இவர்கள் எல்லாரும் தங்கள் பிதாக்களின் வம்சங்களிலே தலைவர். ஆசா
10 ரியாரிலே, யெதாயா, யோயாரீப், யாகீன்;
11 தெய்வாலய விசாரணைத் தலைவன் அசரியா, இவன் இல்க்கியாவின் குமாரன், இவன் மெல்லாவின் குமாரன், இவன் சாதோக்கின் குமாரன், இவன் மெராயோதின் குமாரன், இவன் அகிதூபின் குமாரன்; அதாயா,
12 இவன் யெரோகாமின் குமாரன், இவன் பஷ்கூரின் குமாரன், இவன் மல்கியாவின் குமாரன்; மாசாய், இவன் அதீயேலின் குமாரன், இவன் யக்சேராவின் குமாரன், இவன் மெசுல்லாமின் குமாரன், இவன் மெஷில்லேமீதின் குமாரன், இவன் இம்மேரின் குமாரன்; அவர்கள் பிதாக்களின் வம்சங்களிலே
13 தலைவராயிருந்த அவர்கள் சகோதரருமே; மொத்தம் ஆயிரத்து எழுநூற்று அறுபது பேர். இவர்கள் தெய்வாலயப் பணிவிடை செய்ய மிகவும் திறமையுள்ளவர்கள்.
14 லேவியரிலே, மெராரி வம்சத்தைச் சேர்ந்த செமாயா, இவன் கஷூபின் குமாரன், இவன் அஸ்ரீக்காமின் குமாரன், இவன்
15 கஷபியாவின்குமாரன்; பக்பக்கார், கேரேஷ், காலால், மத்தனியா; மத்தனியா மீகாவின் குமாரன், இவன் சிக்ரியின் குமாரன், இவன்
16 ஆசாபின் குமாரன்; ஒபதியா, இவன் செமாயாவின் குமாரன், இவன் காலாலின் குமாரன், இவன் எதுதூனின் குமாரன்; பெரகியா, இவன் ஆசாவின் குமாரன், இவன்
17 எல்க்கானாவின் குமாரன், அவன் நெத்தோபாத்தியரின் கிராமங்களிலே குடியிருந்தான்; வாசல் காவலாளராகிய சல்லூம், அக்கூப், தல்மோன், அகீமான் என்பவர்களும் இவர்கள் சகோதரருமே; தலைவன் சல்லூம்.
18 இவர்கள் கிழக்கே யிருக்கிற ராஜவாசலில் இந்நாள்மட்டும் வேலைசெய்து வருகிறார்கள். லேவி புத்திரரின் பாளையத்திலே வாசல் காவலாளராயிருந்தவர்கள் இவர்களே.
19 கோராகின் குமாரனாகிய எலியாசாப்புக்குப் பிறந்த கோரேயின் மகன் சல்லூமும், அவன் பிதாவின் வம்சத்தாராகிய அவனுடைய சகோதரருமான கோராகியரும்கூடாரவாசற்படிக் காவல் விசாரணைக்கு நியமிக்

கப்பட்டிருந்தார்கள்; அவர்கள் பிதாக்கள்
யெகோவாவின் பாளையத்தில் உட்செல்லும்
20 வழியைக் காத்துவந்தார்கள். எலெயாசா
ரின் குமாரனுகிய பினேகாசு முற்காலத்திலே
அவர்கள்மேல் விசாரணைக்காரனுயிருந்தான்.
21 — யெகோவா அவனோடிருப்பாராக. ! மெஷெலெம்யாவின் குமாரனுகிய சகரியா
தரிசனக்கூடாரவாசல் காவல்காரனுயிருந்
22 தான். வாசற்படிகளைக் காப்பதற்குத் தெரிந்துகொள்ளப்பட்ட இவர்களெல்லாரும் இரு
நூற்றுப் பன்னிரண்டு பேர், இவர்கள் தங்
கள் கிராமங்களிலே தங்கள் வம்ச அட்ட
வணைக் கணக்கில் எழுதப்பட்டார்கள்;
தாவீதும் ஞானதிருஷ்டிகனுகிய சாமுவே
லும் அவர்களை வேலைகளில் நியமித்தார்கள்.
23 அப்படியே அவர்களும் அவர்கள் குமாரரும்
யெகோவாவின் ஆலயமாகிய கூடாரவாச
ஸ்தல வாசல்களைக் காப்பதற்கு நியமிக்கப்
24 பட்டார்கள். வாசல்களைக் காப்போர்
கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு ஆகிய
25 நான்குதிசைகளிலும் இருப்பார்கள். தங்கள்
கிராமங்களிலே வசித்து வந்த அவர்கள்
சகோதரர் காலாகாலங்களில் ஏழுநாளளவு
26 அவர்களோடு வந்திருக்கவேண்டும். பிர
தான வாசல் காவலாளராகிய நாலுபேரு
மோவெனில் இடைவிடாமல் காவலிருக்க
வேண்டியவர்கள்; இவர்கள் லேவியர்; ஆல
யத்தின் அறைகளும் பண்டசாலைகளும்
27 இவர்கள் காவலிலிருந்தன. காவல் அவர்
கள் வசம் இருந்தபடியால் அவர்கள் இராக்
காலங்களில் தெய்வாலயத்தைச் சுற்றித்
தங்கியிருப்பார்கள், காலைதோறும் கதவை
28 நீத் திறந்துவிடுவார்கள். அவர்களில் சிலர்
ஆராதனைப் பணிமுட்டுகளைப் பத்திரமாய்ப்
பார்த்துவந்தார்கள், அவர்கள் அவைகளை
உள்ளே கொண்டுபோகுமுன்னும் வெளியே
கொண்டுவருமுன்னும் எண்ணு
29 வார்கள். அவர்களில் மற்றும் சிலர் பரி
சுத்த ஸ்தலத்திலுள்ள பணிமுட்டுகள்,
மெல்லியமா, திராட்சரசம், எண்ணெய், சாம்
பிராணி, சுகந்தவர்க்கங்கள் ஆகிய பொருட்
களைப் பார்த்துவர நியமிக்கப்பட்டிருந்தார்
30 கள். ஆசாரியரின் குமாரரில் சிலர் சுகந்த
வர்க்கத்திலிருந்து பரிமளதைலம் இறக்கு
31 வார்கள். லேவியரில் கோராகியனை சல்
லூமின் மூத்த குமாரனுகிய மத்தித்தியாவுக்
குப் பலகாரம் சுடுகிற வேலையின் விசாரணை
32 ஒப்புவித்திருந்தது. அவர்கள் சகோதரரா
கிய கொகாத்தியரில் சிலர் ஒய்வுநாள்தோறும்
திருச்சமுகத்து அப்பங்களை ஆயத்தப்படுத்த
33 தும்படி நியமிக்கப்பட்டிருந்தார்கள். இவர்
களில் லேவிய வம்சத்தலைவரான பாடகர்
இரவும் பகலும் தங்கள் வேலையைச் செய்ய
வேண்டியிருந்தபடியால் அவர்கள் மற்ற
வேலைக்கு நீங்கலாய் அறைகளிலேயே
இருந்தார்கள். லேவியரில் வம்சத்தலைவ 34
ராகிய இவர்கள் தத்தம் தலைமுறைகளில்
தலைவர்; இவர்கள் எருசலேமிலே குடியிருந்
தார்கள்.

கிபியோனிலே குடியிருந்தவர்கள், கிபி 35
யோனின் தகப்பனுகிய யெகியேல், இவன்
மனைவியின்பேர் மாக்காள். அவன் மூத்த 36
குமாரன் அப்தோன்; மற்றவர்கள் சூர்,
கீஷ், பாகால், நேர், நாதாப், | கெதோர், 37
அகியோ, சகரியா, மிக்லோத் என்பவர்கள்.
மிக்லோத் சிமியாவைப் பெற்றான்; இவர் 38
களும் தங்கள் சகோதரரோடுகூட எருசலே
மிலே தங்கள் சகோதரருக்கு எதிரே குடி
யிருந்தார்கள். நேர் கீஷைப் பெற்றான்; 39
கீஷ் சவுலைப் பெற்றான்; சவுல் யோனத்தா
னையும் மல்கிஷூவாவையும் அபினதாபை
யும் எஸ்பாகாலையும் பெற்றான். யோனத் 40
தானின் குமாரன் மெரீபாகால்; மெரீ
பாகால் மீகாவைப்பெற்றான். மீகாவின் குமா 41
ரர், பீதோன், மேலேக், தக்ரேயா என்பவர்
கள். ஆகாஸ் யாராகாவைப் பெற்றான்; யாராக் 42
அலெமேத்தையும் அஸ்மாவேத்தையும் சிம்ரி
யையும் பெற்றான்; சிம்ரி மோசாவைப் பெற்
றான். மோசா பினியாவைப் பெற்றான்; 43
இவன் குமாரன் ரெப்பாயா; இவன் குமா
ரன் எலியாசா, இவன் குமாரன் ஆத்சேல்.
ஆத்சேலுக்கு ஆறுகுமாரர்; அவர்கள் அஸ்ரீக் 44
காம், பொக்கெரு, இஸ்மவேல், ஷெயரியா,
ஒபதியா, கானன் என்பவர்கள்; இவர்கள்
ஆத்சேலின் குமாரர்.

பெலிஸ்தியர் இஸ்ரவேலரோடே யுத்தம் 10
பண்ணிக்கொண்டேயிருந்தார்கள்; இஸ்ர
வேலர் பெலிஸ்தியருக்கு முன்பாக முறிந்
தோடிக் கில்போவா மலையிலே வெட்டுண்டு
விழுந்தார்கள். பெலிஸ்தியர் சவுலையும் 2
அவன் குமாரரையும் நெருங்கித் தொடர்ந்து,
சவுலின் குமாரராகிய யோனத்தானையும்
அபினதாபையும் மல்கிஷூவாவையும்
வெட்டிப்போட்டார்கள். சவுலுக்கு விரோத 3
மாய் யுத்தம் பலத்தது, வில்வீரர் அவனைக்
கண்டுகொண்டார்கள்; அப்பொழுது சவுல்
வில்வீரரைக்கண்டு மிகவும் பயந்து நடுங்
கித் | தன் ஆயுதம் சுமப்பவனைக் கூப்பிட்டு: 4
அந்த விருத்தசேதனம் இல்லாதவர்கள்
வந்து என்னை அவமானப்படுத்தாதபடி
நீ உன் பட்டயத்தை உருவி என்னைக்
குத்திப்போடு என்றான்; ஆயுதம் சுமப்பவன்
மிகவும் பயந்து அப்படிச்செய்ய மனதில்லா
தேயிருக்கவே சவுல் தன் பட்டயத்தை எடுத்து

5 நட்டு அதின்மேல் விழுந்தான். சவுல் இறந்துபோனதை அவன் ஆயுதம் சுமப்பவன் கண்டபோது அவனும் தன் பட்டயத்தின்மேல் விழுந்து இறந்துபோனான்.
6 அப்படியே சவுலும் அவன் மூன்று குமாரரும் அவன் வீட்டார் அனைவரும் ஒருமிக்க
7 மாண்டார்கள். இனங்கள் முறிந்தோடினார்கள் என்றும் சவுலும் அவன் குமாரரும் மாண்டார்கள் என்றும் பள்ளத்தாக்கிலுள்ள இஸ்ரவேலர் எல்லாரும் கண்டபோது அவர்கள் தங்கள் ஊர்களை விட்டு ஓடிப் போனார்கள்; பெலிஸ்தியர் வந்து அவைகளிலே குடியேறினார்கள்.
8 வெட்டுண்டவர்களை உரிந்துகொள்ளப் பெலிஸ்தியர் மறுநாள் வந்தபோது அவர்கள், சவுலும் அவன் குமாரரும் கில்போவா மலை
9 யிலே விழுந்து கிடப்பதைக்கண்டு | அவன் வஸ்திரங்களை உரிந்து, அவன் தலையையும் அவன் ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு தங்கள் விக்கிரகங்களுக்கும் ஜனங்களுக்கும் அந்த நற்செய்தியை பிரசித்தப்படுத்தும்படி பெலிஸ்தியர் தேசமெங்கும் ஆட்களை அனுப்
10 பினார்கள். அவன் ஆயுதங்களைத் தங்கள் தெய்வத்தின் கோவிலிலே வைத்து, அவன் தலையைத் தாகோன் கோவிலிலே தூக்கி வைத்தார்கள்.
11 பெலிஸ்தியர் சவுலுக்குச் செய்த யாவற்றையும் யாபேஷ் கிலேயாத் ஊரார் யாவ
12 ரும் கேள்விப்பட்டபோது | அங்கிருந்த யுத்தவீரர் அனைவரும் எழுந்துபோய்ச் சவுலின் உடலையும் அவன் குமாரரின் உடல்களையும் எடுத்து, யாபேஷுக்குக் கொண்டு வந்து அவர்கள் எலும்புகளை யாபேஷிலிருந்த கர்வாலிமரத்தின்கீழ் அடக்கம் பண்ணிவிட்டு ஏழுநாள் உபவாசம் பண்ணினார்கள்.
13 சவுல் யெகோவாவின் வார்த்தைக்குச் செவிகொடாமல் யெகோவாவுக்குத் துரோகம் செய்தான்; அஞ்சனம் பார்க்கிறவளிடம் விசாரித்து ஆலோசனை கேட்டான்; ஆகவே
14 அவன் மாண்டான். அவன் யெகோவாவினிடம் ஆலோசனை கேட்காதிருக்கவே அவர் அவனைக் கொன்று ராஜ்யபாரத்தை ஈசாயின் குமாரனுகிய தாவீதினிடம் கொடுத்துவிட்டார்.

11 அக்காலத்திலே இஸ்ரவேலர் எல்லாரும் எப்பெரோனிலிருந்த தாவீதினிடம் கூடி வந்து: இதோ, நாங்கள் உமது எலும்பும்
2 உமது தசையுமானவர்கள். சென்ற நாட்களில், சவுல் ராஜாவாயிருந்த காலங்களிலுங்கூட, இஸ்ரவேலை நடத்திக்கொண்டுபோன வரும் நடத்திக்கொண்டிவந்தவரும் நீரே; என் ஜனமாகிய இஸ்ரவேலை நீ மேய்த்து என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் தலைவனுயிருப்பாய் என்று உமது கடவுளாகிய யெகோவாவும் உம்மிடம் சொன்னாரே என்றார்கள். இஸ்ரவேலின் மூப்பரெல்லாரும் 3 எப்பெரோனிலிருந்த ராஜாவினிடம் வந்தார்கள்; தாவீது எப்பெரோனிலே யெகோவாவின் சந்நிதியில் அவர்களோடே உடன்படிக்கைசெய்த பின்பு அவர்கள் தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள், யெகோவா சாமுவேலைக் கொண்டு சொல்லியிருந்தபடியே இது நடந்தது.

பின்பு தாவீது சமஸ்த இஸ்ரவேலரோடும் 4 எருசலேமுக்குப்போனான்; அது எபூசு என வழங்கினது, எபூசியர் அங்கே இருந்தார்கள், அவர்களே தேசத்தில் குடியிருந்தவர்கள். அப்பொழுது எபூசின் குடிகள் 5 தாவீதினிடம்: நீ இவ்விடத்திற்குள் வருவதேயில்லை என்றார்கள்; என்றாலும் தாவீது சீயோன் கோட்டையைப் பிடித்தான்; அது தாவீதின் நகரமாயிற்று. எபூசியன் ஒருவனை 6 முதல்முதல் கொல்லுகிறவன் எவனோ அவன் தலைவனும் சேனைபதியுமாவானென்று தாவீது சொல்லியிருந்தான்; செருயாளின் குமாரனுகிய யோவாப் முதல்முதல் ஏறினான், அவனே தலைவனானான். தாவீது 7 அந்தக் கோட்டையில் வாசம்பண்ணினபடியினால் அது தாவீதுநகரம் என்னப்பட்டது. பிற்பாடு அவன் மில்லோ துவக்கிச் சுற்றி 8 லும் ஊருக்கு மதிலைக் கட்டினான்; யோவாப் நகரத்தின் மற்ற இடங்களைப் பழுதுபார்த்தான். தாவீது நாளுக்குநாள் விருத்தி 9 யடைந்தான்; சைன்யகர்த்தாவாகிய யெகோவா அவனோடிருந்தார்.

ராஜ்யபார விஷயத்தில் தாவீதுக்குப் 10 பலத்த தூணாயிருந்து யெகோவா இஸ்ரவேலைப்பற்றிச் சொல்லியிருந்தபடியே அவனை ராஜாவாகச் செய்யும்படி சமஸ்த இஸ்ரவேலரோடும்கூடச் சேர்ந்திருந்த பிரதான பராக்கிரமவீரர் இருந்தார்கள். தாவீ 11 துக்கு இருந்த அந்தப் பராக்கிரமவீரரின் இலக்கமாவது: ஹக்மோனியின் குமாரனுகிய யாஷொபெயாம், இவன் முப்பது வீரருக்குத் தலைவன், இவன் மூன்றூறுபேரை ஒருமிக்க வெட்டி அவர்கள்மேல் வெற்றிக்குறியாகத் தன் ஈட்டியை ஆட்டினவன். இவ 12 னுக்கு இரண்டாவது அகோகியனான தோதோவின் மகன் எலெயாசர், இவன் பராக்கிரமவீரர் மூவரில் ஒருவன். பெலிஸ் 13 தியர் பாஸ்தம்மீமில் யுத்தத்திற்குக் கூடிவந்தபோது தாவீதோடிருந்தான்; வாற்

கோதுமை விளைந்து நிறைந்திருந்த ஒரு வயல் அங்கே இருந்தது, பெலிஸ்தியரைக் காணவே ஜனங்கள் ஓட்டம்பிடித்தார்கள்;
14 அவர்களோ அந்த நிலத்தின் நடுவிலே போய் நின்று அதைக் காப்பாற்றிப் பெலிஸ்தியரை மடங்கடித்தார்கள்; இப்படியாக யெகோவா பெரிய வெற்றியைத் தந்தார்.
15 மூப்பது தலைவரிலே மூவர் கன்மலைக்கு, அதுல்லாம் கெபியிலிருந்த தாவீதினிடம் போயிருந்தார்கள்; பெலிஸ்தியரின் பாளையம் ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே இறங்கின
16 போது | தாவீது அரணான ஒரு இடத்தில் இருந்தான்; அக்காலத்தில் பெலிஸ்தியரின் காவல்தண்டு பெத்லகேமிலே இருந்தது.
17 ஒருநாள் தாவீது, பெத்லகேம் ஊர்வாசலண் டையிலிருக்கிற கிணற்றின் தண்ணீரிலே கொஞ்சம் ஒருவன் என் தாகத்திற்குக் கொண்டு வருவானேயானால் எவ்வளவோ நன்றும் என்று ஆசைப்பட்டுக் கேட்க |
18 அந்த மூவரும் பெலிஸ்தியரின் பாளையத்தி னுள்ளே துணிந்து புகுந்து சென்று பெத்ல கேம் ஊர்வாசலண்டையிலிருந்த கிணற்றி லே தண்ணீர் மொண்டு தாவீதினிடம் கொண்டுவந்தார்கள்; தாவீதோ அதைக் குடிக்க மனதில்லாமல் அதை யெகோவா
19 வுக்கென்று ஊற்றிவிட்டு: நான் இதைச் செய்யாமலே யிருக்கும்படி என் கடவுள் என்னைக் காப்பாராக; தங்கள் பிராணனை யும் பாராத இந்த மனிதரின் இரத்தத்தை நான் குடிப்பதோ! அவர்கள் தங்கள் பிரா ணனை எண்ணாமல் போய் அதைக்கொண்டு வந்தார்களே என்று சொல்லி அதைக் குடிக்க மறுத்துவிட்டான். இப்படிப் பட்டவைகளை இந்த மூன்று பராக்கிரம சாலிகளும் செய்தார்கள்.
20 யோவாபின் சகோதரனாகிய அப்ஷாய் இம்மூவரில் பிரதானமானவன்; இவன் முந் நூறுபேரை வெட்டிப்போட்டு வெற்றிக் குறியாக ஈட்டியை ஆட்டினவன்; இம்
21 மூவரில் இவன் பேர்பெற்றவன். இந்த மூன்றுபேரில் அவன் மற்ற இரண்டுபேரி லும் மதிப்புள்ளவனாயிருந்ததினால் அவர் களில் தலைவனானான்; ஆனாலும் முந்தின மூவருக்கு அவன் சமானமானவனல்ல.
22 கப்செயேல் ஊரானான பெனாயா, இவன் யோயாதாவின் குமாரன், இவன் வல்ல செயல்களைச் செய்து பராக்கிரமசாலியாயிரு ந்த ஒருவனுடைய குமாரன்; இந்தப் பெனா யா மோவாபியனான அரியேலின் இரண்டு மக்களைக் கொன்றவன்; அன்றியும் இவன் உறைந்த மழைபெய்திருந்த ஒருகாலில் ஒரு குழியினுள் இறங்கிப்போய் அங்கிருந்த ஒரு சிங்கத்தைக் கொன்றான். மிகவும் 23
வளர்ந்து ஐந்துமுழ உயரமாயிருந்த ஒரு எகிப்தியனையும் அவன் கொன்றுபோட் டான்; அந்த எகிப்தியன் கையில் நெசவு காரர் படமரம்போன்ற ஒரு ஈட்டி இருக் கையில், இவன் ஒரு தடியைப் பிடித்துக் கொண்டு அவனிடத்திலே போய், அந்த எகிப்தியன் கையிலிருந்த ஈட்டியைப் பறி த்து அவன் ஈட்டியினாலேயே அவனைக் கொன்றுபோட்டான். இவைகளை யோயா 24
தாவின் குமாரனான பெனாயா செய்தபடியி னால் மூன்று பராக்கிரமசாலிகளுக்குள்ளே அவன் பேர்பெற்றவனாய் இருந்தான். மூப் 25
பதின்மரிலும் இவன் மேன்மையுள்ளவன், முந்தின மூவருக்குமோ இவன் சமானமான வனல்ல; இவனைத் தாவீது தனக்கேயுரிய காவல்வீரரின் தலைவனாக வைத்துக்கொண் டான்.

ராணுவத்திலிருந்த மற்றப் பராக்கிரமசா 26
லிகள் இவர்களே: யோவாபின் தம்பி அசா கேல், பெத்லகேம் ஊரானாகிய தோதோ வின் குமாரன் எல்க்கானான்; அரோரிய 27
னான சம்மோத், பெலோனியனாகிய கே லெத்ஸ்; தெக்கோவா ஊரானான இக்கே 28
ஷின் குமாரன் ஈரா, ஆனதோத்து ஊரா னான அபியேசர்; கூஷாத்தியனாகிய சிபெக் 29
காயி, அகோகியனாகிய சலாய்; நெத்தோ பாத்தியனாகிய மகராயி; பானாவின் குமாரன் 30
கேலேத் என்னும் நெத்தோபாத்தியன்; பென்யமீனியரின் கிபியா ஊரானான ரிபா 31
யின் குமாரன் இத்தாயி, பிரத்தோனியனா கிய பெனாயா; நகலேகாஷ் நாட்டானா 32
கிய கூராயி, அர்பாத்தியனான அபியேல்; பகூமியனான அஸ்மாவேத், சால்போனிய 33
னாகிய எல்யக்பா; கிசோனியனாகிய பினே 34
யாஷேம், ஆராரியனாகிய ஷாகேயின் குமா ரன் யோனத்தான்; சாக்காரின் குமாரன் 35
அகியாம் என்னும் ஆராரியன், ஊரின் குமாரன் எலிபால்; மெகராத்தியனாகிய 36
கேப்பேர், பெலோனியனாகிய அகியா; கர்மேலியனாகிய கெஸ்ரோ, எஸ்பா 37
யின் குமாரன் நாராயி; நாத்தானின் சகோ 38
தரன் யோவேல், அகரியின் குமாரன் மிப் கார்; அம்மோனியனாகிய சேலேக், பெ 39
ரோத்தியனான நாராய், இவன் செரூயாளின் குமாரனாகிய யோவாபின் ஆயுதம் சுமப் பவன்; இத்திரியனாகிய ஈரா, இத்திரியனா 40
கிய காரேப்; ஏத்தியனாகிய உரியா, அக்லா 41
யின் குமாரன் சாபாத்; ரூபனியனாகிய 42
அதினா, இவன் ரூபனியரின் தலைவன், சீசா வின் குமாரன்; இவனோடே மூப்பதுபேர் இருந்தார்கள். மாகாவின் குமாரன் ஆனான், 43

44 மிதினியனுகிய யோசபாத்; அஸ்தரோத்தியனுகிய உசியா, அரோவேரியனுகிய கோத்தாமின் குமாரர் ஷாமாவும் யெகியேலும்;
45 ஷிம்ரியின் குமாரன் யெதிகவேல், அவன்
46 சகோதரனுகிய தித்தியன் யோகா; மகவியனை எலியேல், எல்நாமின் குமாரர் எரீபா
47 யும் யொசவியாவும்; மோவாபியனை யித்மாவும் மெசோபாயா ஊராராகிய எலியேலும் ஒபேதும் யாசியேலுமே.

**12** தாவீது கீஷின் குமாரனுகிய சவுலினிமித்தம் இன்னும் மறைவாயிருக்கையில் யுத்தத்திலே உதவிசெய்யப் பராக்கிரமவீரர்
2 அவனிடம் சிக்லாகுக்கு வந்தார்கள். அவர்கள் வில்லாளர், கவண்கல் எறிகிறதற்கும் வில்லினால் அம்பு எய்கிறதற்கும் வலது இடது கைப்பழக்கமானவர்கள், அவர்கள் சவுலின் சகோதரராகிய பென்யமீனியரைச்
3 சேர்ந்தவர்கள். வந்தவர்கள் இவர்களே: அகியேசர் என்னும் தலைவன், யோவாஸ், இவர்கள் கிபேயா ஊராளுகிய செமாகாவின் குமாரர்; எசியேல், பேலேத்து, இவர்கள் அஸ்மாவேத்தின் குமாரர்; பெராக்கா,
4 ஆனதோத்தியனை யேகூ; | கிபியோனியனுகிய யிஷ்மாயா, இவன் முப்பதின்மரில் பராக்கிரமன், முப்பதின்மரில் தலைவன்; எரேமியா, யகசியேல், யோகனன், கெதே
5 ரா ஊராளை யோசபாத், | எலுசாயி, யெரீமோத், பிகலியா, செமரியா, சுருப்பிய
6 ளை செபத்தியா; | எல்க்கானை, யிசீயா, அசாரியேல், யொவேசேர், யாஷொபெ
7 யாம் இவர்கள் கோராகியர்; | யொவேலா, செபதியா, இவர்கள் கெதோர் ஊராளை எரோகாமின் குமாரர்.
8 காத்தியரில் சிலரும் வனந்தர அரணில் இருந்த தாவீதின் பட்சமாய்ச் சேர்ந்தார்கள், அவர்கள் பராக்கிரமசாலிகள், யுத்தப் பயிற்சியுள்ளவீரர்; பரிசையும் ஈட்டியும் பிடித்தவர்கள், சிங்கம்போன்ற முகத்தினர், கலைமான்போன்ற வேகமுடையவர்கள்.
9 அவர்கள் தலைவன் ஏசேர், இரண்டாவதானவன் ஒபதியா, மூன்றுவது எலியாப், |
10 நாலாவது மிஷ்மன்னு, ஐந்தாவது எரே
11 மியா, | ஆறுவது அத்தாயி, ஏழாவது எலீ
12 யேல், | எட்டாவது யோகனன், ஒன்பதா
13 வது எல்சபாத், | பத்தாவது எரேமியா,
14 பதினேராவது மக்பன்னை; காத்புத்திரரான இவர்களே ராணுவத்தலைவர்; அவர்களில் சிறியவன் நூறுபேருக்கும் பெரியவன் ஆயிரம்பேருக்கும் சமானமானவர்கள்.
15 முதல் மாதத்தில், யோர்தான் கரைபுரண்டுபோம் நாட்களிலே, அதைக் கடந்து பள்ளத்தாக்குகளில் இருந்த யாவரையும் கிழக்கேயும் மேற்கேயும் துரத்திவிட்டவர்கள் இவர்களே.
16 பின்னும் பென்யமீன் புத்திரரிலும் யூதா புத்திரரிலும் சிலர் தாவீதினிடம் அரணுக்கு வந்தார்கள்.
17 தாவீது வெளிப்பட்டு அவர்களுக்கு எதிரே போய் அவர்களோடு பேசத் தொடங்கி: நீங்கள் எனக்கு உதவி செய்பவர்களாய் நல்மனதோடு என்னிடம் வந்தீர்களேயானால் என் இருதயம் உங்களோடு ஒன்றி இசைந்திருக்கும்; நான் நீமை ஒன்றும் செய்யாதிருக்கையில் நீங்கள் என்னை என் சத்துருக்களுக்குக் காட்டிக்கொடுக்க வந்தீர்களேயானால் நமது பிதாக்களின் கடவுள் அதைப் பார்த்து விசாரிப்பாராக என்றான்.
18 அப்பொழுது அமுப்பதின்மரின் தலைவனுகிய அமாசாயை ஆவி ஆட்கொள்ளவே, அவன்:

தாவீதே, நாங்கள் உமக்கே,
ஈசாப் மகனே, நாங்கள் உம்மோடு தான்;
ஐய, ஐய, உமக்கே,
உம் துணைவர்க்கு ஐய,
உமது கடவுளே உம் துணைபுரிவார்

என்று சொன்னான். அப்பொழுது தாவீது அவர்களைச் சேர்த்துக்கொண்டு அவர்களைத் தண்டுக்குத் தலைவராக்கினான்.
19 மனாசேயரிலும் சிலர் தாவீதின் பக்கம் வந்து சேர்ந்துகொண்டார்கள்; அக்காலத்திலே தாவீது பெலிஸ்தியரோடுகூட சவுல்மேல் யுத்தம்செய்யச் சென்றுகொண்டிருந்தான். ஆனாலும் பெலிஸ்தியருக்கு உதவி செய்ய இவர்களுக்குச் சமயம் கிடைக்கவில்லை. பெலிஸ்தியரின் பிரபுக்கள் ஆலோசனைசெய்து அவன் தன் ஆண்டவனுகிய சவுலின் பட்சம் சேர்ந்துகொள்வானேயானால் நமக்கு உயிர் மோசம்போம் என்று
20 அவனை அனுப்பிவிட்டார்கள். அப்படியே அவன் சிக்லாகுக்குத் திரும்பிப் போகையில், மனாசேயரில் அத்னா, யோசபாத், யெதிகவேல், மிகாவேல், யோசபாத், எலிகூ, சில்தாயி என்னும் மனாசே கோத்திரத்தாரின் ஆயிரவர் தலைவர் அவன் பட்சமாய் வந்தார்கள்.
21 அங்கே வந்த கொள்ளைத் தண்டுக்கு விரோதமாய் இவர்கள் தாவீதுக்கு உதவி செய்தார்கள்; இவர்களெல்லாரும் பராக்கிரமவீரர், ராணுவத்தலைவர்.
22 தாவீதுக்கு உதவிசெய்யும் மனுஷர் நாளுக்குநாள் அவனிடம் வந்து சேர்ந்துகொண்டிருந்தபடியால் அவர்கள் சேனை மகா பெரும் சேனையானது.
23 யெகோவாவின் சொற்படியே சவுலின் ராஜ்யபாரத்தைத் தாவீதினிடம் ஒப்புவிப்

பதற்கு யுத்தசன்னத்தரான தலைவர் எப்பெ
ரோனிலே தாவீதினிடம் வந்தார்கள்; வந்
24 தவர்கள் தொகையாவது: யூதா புத்திரரில்
பரிசையும் ஈட்டியும் பிடித்த யுத்தசன்னத்
25 தர் ஆறுயிரத்து எண்ணூறு பேர். சிமி
யோன் புத்திரரில் பராக்கிரமசாலிகளான
26 யுத்தவீரர் ஏழாயிரத்து நூறுபேர். லேவி
புத்திரரில் நாலாயிரத்து அறுநூறுபேர்.
27 ஆரோன் சந்ததியாரின் அதிபதியாகிய யோ
யாதாவும் அவனோடிருந்த மூவாயிரத்து
28 எழுநூறு பேரும், | பராக்கிரமசாலியான
சாதோக் என்னும் வாலிபனும் அவன் தகப்
பன் குடும்பத்தாரான இருபத்திரண்டு தலை
29 வருமே. பென்யமீன் புத்திரரான சவுலின்
சகோதரரில் மூவாயிரம்பேர்; அதுவரைக்
கும் அவர்களில் பெரும்பாலானவர்கள்
சவுலின் குடும்பத்திற்குச் சார்பாயிருந்தார்
30 கள். எப்பிராயீம் புத்திரரில் பராக்கிரம
சாலிகள் இருபதினாயிரத்து எண்ணூறுபேர்;
அவர்கள் தங்கள் பிதாக்களின் வம்சத்தில்
31 பேர்பெற்றவர்கள். மனாசேயின் பாதிக்
கோத்திரத்தில் பதினெண்ணாயிரம்பேர்; இவர்
கள் தாவீதை ராஜாவாக்குவதற்கு வரும்
படி பேர்போகக் குறிக்கப்பட்டிருந்தார்
32 கள். இசக்கார் புத்திரரில் தலைமையான
வர்கள் இருநூறுபேர், இஸ்ரவேலர் செய்ய
வேண்டியது இன்னதென்று அவர்கள்
காலத்தையறிந்து யோசனை சொல்லத்தக்க
வர்கள், இவர்கள் சொல்லுக்கு இவர்களு
டைய சகோதரர் அனைவரும் அடங்குவார்
33 கள். செபுலோன் புத்திரரில் ஐம்பதினா
யிரம்பேர், இவர்கள் யுத்தத்திற்குப் பழகின
வர்கள், சகலவித யுத்த ஆயுதங்களையும்
உபயோகிக்கத் தெரிந்தவர்கள், ஒரே மன
34 தாய்ச் சண்டை செய்பவர்கள். நப்தலி
புத்திரரில் ஆயிரம் தலைவர், பரிசையும் ஈட்
டியும் பிடித்து அவர்களோடிருந்தவர்கள்
35 முப்பத்தேழாயிரம்பேர். தாண்புத்திரரில்
யுத்தத்திற்குப் பழகினவர்கள் இருபத்து
36 எண்ணாயிரத்து அறுநூறுபேர். ஆசேர்
புத்திரரில் யுத்தத்திற்குப் பழகி ஆயுதம்
37 தரித்தவர்கள் நாற்பதினாயிரம்பேர். யோர்
தானுக்கு அக்கரையிலிருந்து ரூபனியரி
லும் காத்தியரிலும் மனாசேயின் பாதிக்கோத்
திரத்தாரிலும் சகல யுத்தாயுதங்களையும்
தரித்து வந்தவர்கள் நூற்றிருபதினாயிரம்
பேர்.

38 இவர்களெல்லாரும் தாவீதை இஸ்ரவே
லின்மேல் ராஜாவாக்குவதற்கு முழுமன
தோடே எப்பெரோனுக்கு வந்தார்கள்.
இவர்கள் அனைவரும் யுத்தவீரர், யுத்தத்
திற்கு அணிவகுக்கக்கூடியவர்கள்; இஸ்ர
வேலில் மற்ற யாவரும் தாவீதை ராஜா
வாக்கவேண்டுமென ஒரே மனதாயிருந்தார்
கள். அவர்கள் அங்கே தாவீதோடு மூன்று 39
நாள் தங்கி போஜனபானம் பண்ணினார்
கள்; அவர்கள் சகோதரர் அவர்களுக்கு
எல்லாவற்றையும் ஆயத்தம் பண்ணியிருந்
தார்கள். அவர்களை ஒட்டி இசக்கார், 40
செபுலோன், நப்தலியின் எல்லைமட்டும்
எட்டியிருந்தவர்களும், கழுதைகள்மேலும்
ஒட்டகங்கள்மேலும் கோவேறு கழுதைகள்
மேலும் மாடுகள்மேலும் ஆகாராதிகளை
ஏற்றி மா, அத்திப்பழ அடைகள், வற்ற
லான திராட்சப்பழங்கள், திராட்சரசம்,
எண்ணெய், ஆடுமாடுகள் ஆகிய இவற்றை
ஏராளமாய்க் கொண்டுவந்தார்கள்; இஸ்ர
வேலிலே மகிழ்ச்சியுண்டாயிற்று.

தாவீது ஆயிரவர் தலைவர் நூற்றுவர் தலை 13
வர் ஆகிய சகல அதிபதிகளோடுமிருந்து
ஆலோசனை செய்தபின் | இஸ்ரவேலின் 2
முழுச்சபையோடும் பேசி: உங்களுக்கு நல
மெனத் தோன்றினால், நமது கடவுளாகிய
யெகோவாவின் திருச்சித்தம் இதுவேயானால்,
வெளிநிலம் சூழ்ந்த ஊர்களில் குடியிருக்
கிற ஆசாரியரும் லேவியரும் உட்பட
இஸ்ரவேல் நாடெங்குமுள்ள நமது சகோ
தரர் அனைவரும் நம்மிடம் கூடும்படி,
நாம் எல்லாத்திசைகளுக்கும் ஆட்களையனுப்
புவோம்; நமது கடவுளின் பெட்டகத்தைத் 3
திரும்ப நம்மிடம் கொண்டுவருவோம்; சவு
லின் நாட்களில் அதை நாடாதிருந்துவிட்
டோமே என்றான். இக்காரியம் சகல 4
ஜனத்தின் பார்வைக்கும் சரியாய்த் தோன்றிய
படியால் அப்படியே செய்யவேண்டும்
என்று சபையார் எல்லாரும் சொன்னார்கள்.
அக்காலத்தில் கடவுளின் பெட்டகத்தைக் 5
கீரியாத்யெயாரீமிலிருந்து கொண்டுவரும்
படி தாவீது எகிப்தைச் சேர்ந்த சீகோர்
ஆறு துவக்கி ஆமாத்துக்குப் போகிறவழி
பிரியுமிடம்வரை குடியிருந்த இஸ்ரவேலரை
யெல்லாம் கூடிவரச்செய்தான்.

கேரூபுகள் நடுவே வாசமாயிருக்கிற யெ 6
கோவாவாகிய கடவுளின் திருநாமம் தரிக்கப்
பெற்ற அவருடைய பெட்டகத்தை யூதாவி
லுள்ள கீரியாத்யெயாரீம் எனும் பாகலாவி
லிருந்து கொண்டுவரும்படி தாவீதும் இஸ்ர
வேலர் அனைவரும் அவ்விடத்திற்குப்
போனார்கள். அவர்கள் கடவுளின் பெட்ட 7
கத்தை அபினதாபின் வீட்டிலிருந்து ஒரு
புது ரதத்தின்மேல் ஏற்றிக்கொண்டுவந்தார்
கள்; ஊசாவும் அகியோவும் ரதத்தை நடத்
தினார்கள். தாவீதும் சகல இஸ்ரவேலரும் 8
தங்கள் முழுபலத்தோடும் கடவுளுக்கு முன்

பாகச் சுரமண்டலம், தம்புரு, மேளம், கைத்தாளம், பூரிகை ஆகிய இவைகளோடு
9 மகிழ்ச்சியாய் ஆடிப்பாடினார்கள். அவர்கள் கீதோனின் களமட்டும் வந்தபோது மாடுகள் இடறவே, ஊசா பெட்டகத்தைப்
10 பிடிக்கத் தன் கையை நீட்டினான்; நீட்டவே யெகோவாவுக்கு ஊசாவின்மேல் கோபம் மூண்டது, அவன் தன் கையைப் பெட்டகத்தின்மேல் நீட்டினதினாலே அவனை அடித்தார்; அங்கே அவன் தெய்வசமுகத்தில் செத்
11 தான். யெகோவா ஊசாவை அழித்ததினிமித்தம் தாவீது மனவருத்தமுற்று அந்த ஸ்தலத்திற்குப் பேரேஸ் ஊசா என்று பேரிட்டான்; அந்தப் பேர் இந்நாள்மட்டும் வழங்கு
12 கிறது. அன்றையதினம் கடவுளுக்குப்பயந்து தாவீதைப் பிடிக்கவே அவன், கடவுளின் பெட்டகத்தை நான் என்னிடத்துக்குக் கொண்டுவருவது எப்படி என்று சொல்
13 லிப்பெட்டகத்தைத்தன்னிடத்திலே தாவீதுநகரத்திற்குக் கொண்டுவராமல் அதைக் காத்தானாகிய ஒபேத் ஏதோமின் வீட்டிற்
14 குக் கொண்டுபோய் வைத்தான். கடவுளின் பெட்டகம் ஒபேத் ஏதோமின் வீட்டில் அவன் வீட்டாரோடே மூன்றுமாதமிருந்தது; அந்நாட்களில் யெகோவா ஒபேத் ஏதோமின் வீட்டையும் அவனுக்குரிய யாவற்றையும் ஆசீர்வதித்தார்.

**14** தீருவின் ராஜாவாகிய ஈராம் தாவீதினிடம் ஸ்தானபதிகளை அனுப்பினான், அவனுக்கு ஒரு வீட்டைக் கட்டுகிறதற்குக் கேதுரு மரங்களையும் கல்தச்சரையும் தச்சரையும் அவர்களோடு அனுப்பினான்.
2 யெகோவா தன்னை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக உறுதிப்படுத்தித் தமது ஜனமாகிய இஸ்ரவேலினிமித்தம் தன்னுடைய ராஜ்யத்தை மிகவும் உயர்த்தினார் என்று தாவீது கண்டறிந்தான்.
3 எருசலேமிலே தாவீது இன்னும் அநேகஸ்திரீகளை விவாகம்பண்ணினான்; பின்னும் தாவீது குமாரரையும் குமாரத்திகளையும்
4 பெற்றான். எருசலேமிலே அவனுக்குப் பிறந்த குமாரரின் நாமங்களாவன: சம்மூவா,
5 சோபாப், நாத்தான், சாலொமோன், | யிப்
6 கார், எலிசுவா, எல்பேலேத், | நோகா,
7 நேபேக், யாபீயா, | எலிஷாமா, பெலியாதா, எலிப்பேலேத் என்பவைகள்.
8 தாவீது சமஸ்த இஸ்ரவேலின்மேலும் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டதைப் பெலிஸ்தியர் கேள்விப்பட்டபோது பெலிஸ்தியர் எல்லாரும் தாவீதைத் தேடிப் பிடிக்கும்படி வந்தார்கள்; அதைத் தாவீது கேட்டபோது அவர்களுக்கு எதிரே சென்
9 றான். பெலிஸ்தியர் வந்து ரெப்பாயீம் பள்
10 ளத்தாக்கிலே பரவினார்கள். தாவீது கடவுளினிடம் விசாரித்து: பெலிஸ்தியருக்கு விரோதமாய்ப் போகலாமா, அவர்களை என் கையில் ஒப்புக்கொடுப்பீரா என்று கேட்டபோது, யெகோவா: போ, அவர்களை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்றார். அவர்கள் பாகால் பெராசீமுக்கு வந்தபோது
11 தாவீது அங்கே அவர்களை முறியடித்தான்; வெள்ளம் அழிக்கிறதுபோல கடவுள் என் கையினால் என் சத்துருக்களை அழித்துவிட்டார் என்றார்; அதினிமித்தம் அந்த ஸ்தலத்திற்குப் பாகால் பெராசிம் என்று பேரிட்டார்கள். அங்கே பெலிஸ்தியர் தங்கள்
12 தெய்வங்களை விட்டுவிட்டு ஓடிப்போனார்கள்; தாவீது கட்டளையிட்டபடியே அவைகள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டன.
13 பெலிஸ்தியர் திரும்பவும் வந்து அந்தப்
14 பள்ளத்தாக்கிலே பரவினார்கள். தாவீது திரும்பவும் கடவுளினிடம் விசாரிக்கவே அவர்: நீ அவர்களுக்கு நேராய்ப் போகாமல் அவர்களுக்குப் பின்னாலே சுற்றிப் பாகாமரங்களுக்கு எதிரேயிருந்து அவர்கள்மேல் பாய்ந்து | பாகாமரங்களின் தூளிகளிலே
15 உண்டாகிற நடைசப்தத்தை நீ கேட்கும்போது யுத்தத்திற்குப் புறப்படு; பெலிஸ்தியரின் பாளயத்தை முறியடிக்கக் கடவுள் உனக்கு முன்பாகப் புறப்பட்டிருப்பார் என்றார். கடவுள் தனக்குக் கட்டளையிட்ட
16 பிரகாரமே தாவீது செய்தான், பெலிஸ்தியரின் ராணுவத்தைக் கிபியோன் துவக்கிக் கேசேர்மட்டும் முறியடித்தார்கள். அப்படியே தாவீதின் கீர்த்தி சகல தேசங்களிலும் பரவினது; சகல ஜாதிகளும் அவனுக்குப் பயமடையும்படி யெகோவா செய்தார்.

**15** அவன் தனக்குத் தாவீது நகரத்தில் வீடு
கள் கட்டிக் கடவுளின் பெட்டகத்துக்கு ஒரு இடத்தை ஆயத்தப்படுத்தி அதற்கு ஒரு கூடாரத்தைப் போட்டான். பிற்பாடு 2
தாவீது: லேவியரேயொழிய வேறெவரும் கடவுளின் பெட்டகத்தைச் சுமக்கலாகாது, யெகோவாவின் பெட்டகத்தைச் சுமக்கவும், என்றைக்கும் அவருக்குப் பணிவிடை செய்யவும், அவர்களையே யெகோவா தெரிந்துகொண்டார் என்றார். அப்படியே யெகோ 3
வாவின் பெட்டகத்துக்கெனத் தான் ஆயத்தப்படுத்தின இடத்திற்கு அதைக் கொண்டுவரும்படி தாவீது இஸ்ரவேலையெல்லாம் எருசலேமிலே கூடிவரச் செய்தான். ஆரோன் புத்திரரையும் லேவியரையும் கூட 4
வரச்செய்தான். கோகாத்புத்திரரில் ஊரி 5
யேல் என்னும் அதிபதியும் அவன் சகோதர

6 ரும் நூற்றிருபதுபேர், மெராரியின் புத்திர
ரில் அசாயா என்னும் அதிபதியும் அவன்
7 சகோதரரும் இருநூற்றிருபதுபேர், கெர்
சோம் புத்திரரில் யோவேல் என்னும் அதி
பதியும் அவன் சகோதரரும் நூற்றுமுப்பது
8 பேர், எலீசாபான் புத்திரரில் ஷெமாயா
என்னும் அதிபதியும் அவன் சகோதரரும்
9 இருநூறுபேர், கெப்ரோன் புத்திரரில் எலி
யேல் என்னும் அதிபதியும் அவன் சகோ
10 தரரும் எண்பதுபேர், ஊசியேல் புத்திரரில்
அம்மீனதாப் என்னும் அதிபதியும், அவன்
சகோதரரும் நூற்றுப்பன்னிரண்டுபேர்.

11 பின்பு தாவீது ஆசாரியராகிய சாதோக்
கையும் அபியத்தாரையும் லேவியராகிய
ஊரியேல், அசாயா, யோவேல், ஷெமாயா,
எலியேல், அம்மீனதாப் என்பவர்களையும்
12 அழைத்து, அவர்களோடு பேசி: லேவியரில்
நீங்கள் வம்சத்தலைவர், நீங்கள் இஸ்ரவேலின்
கடவுளாகிய யெகோவாவின் பெட்டகத்தை
அதற்கென நான் ஆயத்தப்படுத்தியிருக்கிற
இடத்திற்குக் கொண்டுவரும்படி உங்களை
யும் உங்கள் சகோதரரையும் சுத்திகரித்துக்
13 கொள்ளுங்கள். முன்னே தடவை நீங்கள்
அதைச் சுமக்காதிருந்ததினாலே நமது கடவு
ளாகிய யெகோவா நமக்குள் அழிவு உண்
டாகச்செய்தார், நாம் அவரை விதித்த
வண்ணமாய்த் தேடாதுபோனோமென்றான்.
14 அப்படியே ஆசாரியரும் லேவியரும் இஸ்ர
வேலின் கடவுளாகிய யெகோவாவின் பெட்
டகத்தைக் கொண்டுவரத் தங்களைச் சுத்தி
கரித்துக்கொண்டார்கள்.
15 பின்பு லேவிபுத்திரர் யெகோவாவின்
வார்த்தைப்படியே மோசே கட்டளையிட்ட
பிரகாரம் கடவுளின் பெட்டகத்தை அதின்
தண்டாயங்களினாலே தங்கள் தோள்மேல்
சுமந்துகொண்டு வந்தார்கள்.
16 தாவீது லேவியரின் அதிபதிகளைப்பார்த்து:
நீங்கள் உங்கள் சகோதரராகிய பாடகரைத்
தம்புரு சுரமண்டலம் கைத்தாளங்களாகிய
தேவவாத்தியங்கள் முழங்கத் தங்கள் சத்
தத்தை உயர்த்தி மகிழ்ந்து பாடும்படி ஏற்
17 படுத்துங்கள் என்று சொன்னான். அப்
படியே லேவியர் யோவேலின் குமாரனாகிய
ஏமானையும், அவன் சகோதரரில் பெரகியா
வின் குமாரனாகிய ஆசாப்பையும், மெராரி
புத்திரரான அவர்கள் சகோதரரில் குஷாயா
18 வின் குமாரனாகிய ஏத்தானையும், | இவர்க
ளோடுங்கூட இரண்டாவது வரிசையாக
அவர்கள் சகோதரராகிய சகரியா, பேன்,
யகசியேல், ஷெமிரமோத், யெகியேல்,
உன்னி, எலியாப், பெனாயா, மாசேயா,
மத்தித்தியா, எலிப்பலேகு, மிக்னேயா,
ஓபேத் ஏதோம், யெயியேல் என்னும் வாசல்
காவலாளரையும் ஏற்படுத்தினார்கள். பாட 19
ராகிய ஏமானும் ஆசாப்பும் ஏத்தானும்
செப்புக் கைத்தாளங்களை வாசிக்க ஏற்
படுத்தப்பட்டார்கள். சகரியா, ஆசியேல், 20
ஷெமிரமோத், யெகியேல், உன்னி, எலியாப்,
மாசேயா, பெனாயா என்பவர்கள் அலா
மோத் என்னும் இராகத்தைப் பாடுகையில்
தம்புருகளிலே வாசித்து நடத்தவும் |
மத்தித்தியா, எலிப்பலேகு, மிக்னேயா, 21
ஓபேத்ஏதோம், யெயியேல் அசசியா என்ப
வர்கள் செமனீத் என்னும் இராகத்தைப்
பாடுகையில் சுரமண்டலங்களிலே வாசித்து
நடத்தவும் ஏற்படுத்தப்பட்டார்கள். சுமக் 22
கிற வேலையில் கெனனியா லேவியருக்கு
அதிபதியாயிருந்தான், சுமக்கும் விதத்தை
நன்கு யுகித்தவனதலால் அதை அவர்களுக்
குப் போதிப்பான். பெரகியாவும் எல்க் 23
கானாவும் பெட்டகத்துக்குக் காவலாக ஏற்
படுத்தப்பட்டார்கள். ° ஷெபனியா, யோச 24
பாத், நெதனெயேல், அமாசாயி, சகரியா,
பெனாயா, எலியேசர் என்னும் ஆசாரியர்
கடவுளின் பெட்டகத்துக்கு எதிரே பூரிகை
னை ஊதும்படி ஏற்படுத்தப்பட்டார்கள்;
ஓபேத்ஏதோமும் யெகியாவும் பெட்டகத்
துக்குக் காவலாக ஏற்படுத்தப்பட்டார்
கள்.

இப்படியாகத் தாவீதும் இஸ்ரவேலின் 25
மூப்பரும் ஆயிரவர் தலைவரும் யெகோவா
வின் உடன்படிக்கைப் பெட்டகத்தை
ஓபேத்ஏதோமின் வீட்டிலிருந்து மகிழ்ச்சி
யோடே கொண்டுவரப்போனார்கள். யெகோ 26
வாவின் உடன்படிக்கைப் பெட்டகத்தைச்
சுமந்த லேவியருக்குக் கடவுள் அநுக்கிரகம்
பண்ணினபடியால், அவர்கள் ஏழுகாளை
யும் ஏழு ஆட்டுக்கடாக்களையும் பலியிட்
டார்கள். தாவீதும் பெட்டகத்தைச் சுமந்த 27
சகல லேவியரும் பாடகரும் சுமப்பவர்களின்
தலைவனாகிய கெனனியாவும் வாத்தியக்கார
ரும் மெல்லிய துணியினாலான அங்கிகளைத்
தரித்திருந்தார்கள்; தாவீது சணல் நூல்
ஏபோத்தைத் தரித்திருந்தான். அப்படியே 28
இஸ்ரவேலனைத்தும் யெகோவாவின் உடன்
படிக்கைப் பெட்டகத்தை கெம்பீரத்
தோடும், எக்காளம் பூரிகை கைத்தாளம்
ஆகியவற்றின் தொனியோடும், தம்புரு சுர
மண்டலம் இவற்றை வாசிக்கிற சத்தத்தோ
டும் கொண்டுவந்தார்கள். யெகோவாவின் 29
உடன்படிக்கைப் பெட்டகம் தாவீதுநகர
மட்டும் வந்தபோது சவுலின் குமாரத்தியா
கிய மீகாள் பலகணி வழியாய்ப்பார்த்து,
தாவீது ராஜா குதித்து நடனம்பண்ணுகிற

தைக் கண்டு தன் இருதயத்திலே அவனை அவமதித்தாள்.

**16** அவர்கள் கடவுளின் பெட்டகத்தை உள்ளே கொண்டுவந்தபோது, தாவீது அதற்குப் போட்டிருந்த கூடாரத்தின் நடுவே அவர்கள் அதை வைத்துக் கடவுளின் சந்நிதியில் தகனபலிகளையும் சமாதான 2 பலிகளையும் செலுத்தினார்கள். தாவீது தகனபலிகளையும் சமாதானபலிகளையும் செலுத்தித் தீர்ந்தபின்பு அவன் ஜனத்தை யெகோவாவின் நாமத்திலே ஆசீர்வதித்து | 3 இஸ்ரவேலராகிய அனைவருக்கும், ஆண்களுக்கும் பெண்களுக்கும், ஆளுக்கு ஒரு அப்பத்தையும் இறைச்சித்துண்டையும் திராட்சை அடையையும் கொடுத்தான்.

4 யெகோவாவின் பெட்டகத்துக்கு எதிரே சேவித்து இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவைக் கொண்டாடி நன்றி செலுத்தி புகழுகிறதற்குத் தாவீது லேவியரில் 5 சிலரை நியமித்தான்: அவர்களில் தலைவன் ஆசாப், சகரியா அவனுக்கு இரண்டாவதானவன்; யெயீயேல், செமிரமோத், யெகீயேல், மத்தித்தியா, எலியாப், பெனாயா, ஓபேத் ஏதோம், யெகீயேல் என்பவர்கள் தம்புரு, சுரமண்டலம் என்னும் தேவாத்தியங்களை வாசிக்கவும், ஆசாப் கைத்தாளங் 6 களைக் கொட்டவும், | பெனாயா, யகசியேல் என்னும் ஆசாரியர் கடவுளின் உடன்படிக்கைப் பெட்டகத்துக்கு எதிரே எப்போதும் பூரிகைகளை ஊதவும் நியமிக்கப்பட்டார்கள்.

7 அப்பொழுது அந்நாளிலேயே தாவீது முதல் தடவையாக, ஆசாபும் அவன் சகோதரரும் யெகோவாவுக்குப் பின்வருமாறு நன்றிசெலுத்திப் பாடவேண்டுமென்று கட்டளையிட்டான்.

8 யெகோவாவுக்கு நன்றி செலுத்துங்கள்,
அவர் திருநாமத்தைத் தொழுதுகொள்ளுங்கள்;
அவர் செயல்களை ஜாதிகளுக்குள்ளே பிரஸ்தாபப்படுத்துங்கள்.

9 அவரைப் பாடுங்கள்,
அவரைத் துதித்துப் பாடுங்கள்;
அவருடைய அதிசயச் செயல்களையெல்லாம் தியானித்துப் பேசுங்கள்.

10 அவருடைய பரிசுத்த நாமத்தைப்பற்றி மேன்மை பாராட்டுங்கள்.
யெகோவாவைத் தேடுகிறவர்களின் இருதயம் மகிழ்வதாக.

11 யெகோவாவையும் அவர் வல்லமையையும் நாடுங்கள்,
அவர் திருச்சமுகத்தை நித்தமும் தேடுங்கள்;

அவருடைய தாசனாகிய இஸ்ரவேலின் 12
சந்ததியே!
அவர் தெரிந்தெடுத்தவர்களாகிய யாக்
கோபின் புத்திரரே!
அவர் செய்த அதிசயங்களையும் அவரு 13
டைய அற்புதச் செயல்களையும்
அவர் வாயின் நியாயத்தீர்ப்புகளையும்
நினைவுகூருங்கள்.
அவரே நமது கடவுளாகிய யெகோவா, 14
அவருடைய நியாயத்தீர்ப்புகள் பூமியெங்
கும் விளங்கும்.
அவர் உடன்படிக்கையை என்றென் 15
றைக்கும்
அவர் கட்டளையிட்ட வாக்கை ஆயிரந்
தலைமுறைக்கும்
நினைத்துக்கொள்ளுங்கள்.
ஆபிரகாமோடே அவர் செய்த உடன் 16
படிக்கையையும்
அவர் ஈசாக்குக்கு இட்ட ஆணையையும்
மறவாதிருங்கள்.
அதை யாக்கோபுக்குப் பிரமாணமாகவும் 17
இஸ்ரவேலுக்கு நித்திய உடன்படிக்கை
யாகவும் உறுதிப்படுத்தி:
கானான் தேசத்தை உனக்குத் தரு 18
வேன்
இதுவே உங்கள் சுதந்தர பாகம்
என்று சொன்னார்.
அக்காலத்தில் நீங்கள் கொஞ்சத் தொகை 19
யானவர்கள்,
மிகவும் சொற்பப்பேர், அத்தேசத்திலே
பரதேசிகள்.
அவர்கள் ஒரு ஜனத்தைவிட்டு மறு 20
ஜனத்தண்டைக்கும்
ஒரு ராஜ்யத்தைவிட்டு மறு தேசத்தாண்
டைக்கும் போய்க்கொண்டிருந்தார்கள்.
அவர்களுக்குத் தீங்குசெய்ய எவருக்கும் 21
இடங்கொடுக்கவில்லை,
அவர்கள் நிமித்தம் ராஜாக்களைக் கடிந்து
கொண்டு:
நான் அபிஷேகம் பண்ணினவர்களை 22
நீங்கள் தொடாதேயுங்கள்,
என்னுடைய தீர்க்கதரிசிகளுக்குத்
தீங்குசெய்யாதிருங்கள்
என்று சொன்னார்.
பூமியின் குடிகளே, எல்லாரும் யெகோ 23
வாவைப் பாடுங்கள்,
நாளுக்கு நாள் அவர் இரட்சிப்பை நற்
செய்தியாகப் பிரஸ்தாபியுங்கள்.
புறஜாதிகளுக்குள் அவர் மகிமையையும் 24
சகல ஜாதியாருக்குள்ளும் அவர் அதிச
யங்களையும்
விவரித்துச் சொல்லுங்கள்.

25 யெகோவா பெரியவர், மிகவும் ஸ்தோத்
திரிக்கப்படத்தக்கவர்,
எல்லா தேவர்களிலும் பயப்படத்தக்கவர்
அவரே.
26 சகல ஜாதியாரின் தேவர்களும் விக்கிர
கங்களே,
யெகோவாவோ வானங்களைப் படைத்
தவர்.
27 மகிமையும் மகத்துவமும் அவர் சமுகத்
திலும்
வல்லமையும் மகிழ்ச்சியும் அவர் பரி
சுத்த ஸ்தலத்திலுமுள்ளன.
28 ஜாதியாரின் சந்ததிகளே,
யெகோவாவுக்கு மகிமையையும் வல்ல
மையையும் செலுத்துங்கள்,
யெகோவாவுக்கே செலுத்துங்கள்.
29 யெகோவாவின் திருநாமத்திற்குரிய மகி
மையை அவருக்கே செலுத்திக்
காணிக்கைகளோடு அவர் திருச்சந்நி
தியில் பிரவேசியுங்கள்.
பரிசுத்த அலங்காரத்தோடு யெகோவா
வைத் தொழுதுகொள்ளுங்கள்.
30 பூமியின் குடிகளே எல்லாரும் அவ
ருக்கு முன்பாக நடுங்குங்கள்,
பூமிஅசையாதபடி உறுதிப்பட்டிருக்கும்.
31 வானங்கள் மகிழ்ந்து பூமிபூரிப்பாவதாக,
யெகோவா அரசாளுகிறார்
என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்வார்
களாக.
32 சமுத்திரமும் அதன் நிறைவும் முழங்கு
வதாக,
வயல்வெளியும் அதிலுள்ள யாவும் களி
கூருவதாக.
33 அப்பொழுது காட்டுமரங்கள் யெகோவா
வின் சந்நிதியில் கெம்பீரிக்கும்,
அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகி
றாரே.
34 யெகோவாவுக்கு நன்றிசெலுத்துங்கள்,
அவர் நல்லவர்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
35 எங்கள் கடவுளாகிய யெகோவாவே,
நாங்கள் உமது பரிசுத்த நாமத்துக்கு
நன்றிசெலுத்தி
உம்மைத் துதிப்பதிலேயே மேன்மை
பாராட்டும்படி
எங்களை ரட்சித்தருளும்.
எங்களைப் புறஜாதிகளிலிருந்து விடுவித்
துச் சேர்த்தருளும்.
36 இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா
அநாதியாய் என்றென்றைக்குமுள்ள
சதாகாலங்களிலும்
ஸ்தோத்திரத்திற்குரியவர்.

ஜனமெல்லாம் ஆமென் என்றும் யெகோ
வாவைத் துதியுங்கள் என்றும் சொன்னார்
கள்.

37 பின்பு பெட்டகத்துக்கு எதிரே நித்தம்
அன்றுடகமுறையாய்ச் சேவிக்கும்படி,
அவன் அங்கே யெகோவாவின் உடன்படிக்
கைப் பெட்டகத்துக்கு எதிரே ஆசாபையும்
அவன் சகோதரரையும் வைத்துவிட்டான்.
38 ஒபேத்ஏதோமும் அவன் சகோதரரும் அறு
பத்தெட்டுப்பேர். எதுதூனின் குமாரனு
கிய இந்த ஒபேத்ஏதோமையும் ஓசாவையும்
வாசல் காக்கிறவர்களாக வைத்தான்.
39 கிபி
யோனிலுள்ள மேடையின் மேலிருந்த
யெகோவாவின் வாசஸ்தலத்தண்டையில்
40 தகனபலிபீடத்தின்மேல் தகனங்களை நித்த
மும் அந்தி சந்தியில், இஸ்ரவேலுக்குக்
கட்டளையிடப்பட்ட யெகோவாவின் நியாயப்
பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடியெல்லாம்
யெகோவாவுக்குச் செலுத்துவதற்கு அங்கே
அவன் ஆசாரியனுகிய சாதோக்கையும்
அவன் சகோதரராகிய ஆசாரியரையும் நிய
மித்தான்.
41 இவர்களோடுகூட ஏமானையும்
எதுதூனையும் பேர்பேராகக் குறித்துத் தெரிந்
தெடுக்கப்பட்ட மற்றவர்களையும், அவர்
கிருபை என்றுமுள்ளது என யெகோவா
42 வுக்கு நன்றிசெலுத்த ஏற்படுத்தினான். பூரி
கைகளும் கைத்தாளங்களும், ஏமான், எது
தூன் என்பவர்களிடம் கடவுளைப் பாடும்
கீதவாத்தியக்காரருக்கென, வைக்கப்பட்டி
ருந்தன; எதுதூனின் குமாரரை வாசல் காக்
கிறவர்களாக ஏற்படுத்தினான்.
43 பிற்பாடு
ஜனங்கள் எல்லாரும் தங்கள் தங்கள் வீடு
களுக்குப் போய்விட்டார்கள்; தாவீதும் தன்
வீட்டாரை ஆசீர்வதிக்கத் திரும்பினான்.

**17** தாவீது தன் வீட்டிலே வாசமாயிருக்கும்
போது அவன் தீர்க்கதரிசியாகிய நாத்தானைக்
கூப்பிட்டு: பாரும், நான் கேதுருமரவீட்
டிலே வாசம்பண்ணுகிறேன்; யெகோவாவின்
உடன்படிக்கைப் பெட்டகமோ திரைக்
கூடாரத்தில் வாசமாயிருக்கிறதே என்றான்.
2 அதுகேட்ட நாத்தான் தாவீதினிடம்: உமது
இருதயத்தில் உள்ளபடியெல்லாம் செய்யும்;
கடவுள் உம்மோடு இருக்கிறாரே என்றான்.
3 அன்று இரவே கடவுளின் திருவாக்கு நாத்
தானுக்கு வந்தது:
4 நீ போய் என் தாசனுகிய
தாவீதோடு பேசி, யெகோவா இப்படிச்
சொல்லுகிறார், நான் வசிப்பதற்கென
எனக்கு ஆலயம் கட்டப்போகிறவன் நீயல்ல;
5 நான் இஸ்ரவேலைக் கொண்டுவந்த நாள்
முதல் இந்நாள்வரைக்கும் நான் ஒரு ஆல
யத்திலே வாசம்பண்ணினதில்லையே; ஒரு
கூடாரத்திலிருந்து மறுகூடாரத்துக்கும் ஒரு

வாசஸ்தலத்திலிருந்து மறு வாசஸ்தலத்திற்
6 கும் போனேன். நான் என் ஜனத்தை
மேய்க்கும்படி கட்டளையிட்ட இஸ்ரவேலின்
நியாதிபதிகளில் யாதொருவனிடமாவது,
கேதுரு மர ஆலயமொன்றை நீங்கள் என்
எனக்குக் கட்டவில்லையென்று நான் சகல
இஸ்ரவேலோடும் திரிந்துவந்த காலமெல்
லாம் ஒரு வார்த்தை சொன்னதுண்டோ?
7 இப்போதும் நீ என் தாசனுகிய தாவீதோடு
பேசி, சேனைகளின் யெகோவா சொல்வது
இதுவே, ஆடுகளின் பின்னே திரிந்த உன்னை
மேய்ச்சல்காட்டிலிருந்து அழைத்தேன், என்
ஜனமாகிய இஸ்ரவேலுக்கு அதிபதியாயிருக்
கும்படி உன்னை அழைத்தேன். நீ போன
8 இடமெல்லாம் உன்னோடிருந்தேன்; உனக்கு
முன்னிராதபடி உன் சத்துருக்களையெல்
லாம் சங்காரித்தேன்; பூமியிலுள்ள பெரியோ
ரின் நாமத்திற்கு ஒத்த நாமத்தை உனக்கு
9 உண்டாக்குவேன். என் ஜனமாகிய இஸ்ர
வேலுக்கு ஒரு இடத்தை ஏற்படுத்துவேன்,
அவர்கள் தங்கள் ஸ்தானத்திலே குடியிருப்
பார்கள், இனி அவர்கள் அலைந்து திரிவ
தில்லை; முற்காலத்தில் ஒடுக்கப்பட்டது
போலவும் என் ஜனமாகிய இஸ்ரவேலின்
மேல் நியாதிபதிகளை ஏற்படுத்தின நாட்
களில் ஒடுக்கப்பட்டதுபோலவும் துஷ்ட
ரால் அவர்கள் இனி ஒடுக்கப்படாதபடி
10 அவர்களை நிலைநாட்டுவேன். உன் சத்துரு
க்களையெல்லாம் அடங்கச்செய்வேன். இப்
போதும் யெகோவா உனக்கு ஒரு வீட்டைக்
கட்டுவார் என்பதை உனக்கு அறிவிக்கி
11 றேன். நீ உன் பிதாக்களிடத்திலே போக
உன் நாட்கள் நிறைவேறும்போது, உனக்
குப்பின் உன் சந்ததியை, உன் புத்திரரில்
ஒருவனை, எழும்பப்பண்ணி அவன் ராஜ
12 யத்தை நிலைப்படுத்துவேன். அவனே
எனக்கு ஒரு ஆலயத்தைக் கட்டுவான்;
அவன் சிங்காசனத்தை என்றென்றுமாக
13 நிலைக்கச்செய்வேன். நான் அவனுக்குப்
பிதாவாயிருப்பேன், அவன் எனக்குக் குமா
ரனுயிருப்பான்; உனக்குமுன்னிருந்தவனை
விட்டு என் கிருபையை நான் விலக்கினது
போல அவனைவிட்டு விலக்குவதில்லை.
14 அவனை என் ஆலயத்திலும் என் ராஜ்யத்தி
லும் என்றென்றுமாக நிலைக்கப்பண்ணு
வேன்; அவன் சிங்காசனம் என்றென்றுமாக
நிலைபெற்றிருக்கும் என்று சொல் என்றார்.
15 இந்த வார்த்தைகளின்படியெல்லாம், இந்தத்
தரிசன முழுதிலும் கண்டபடியே, நாத்தான்
தாவீதுக்குச் சொன்னான். ஏ

16 அப்பொழுது தாவீது ராஜா யெகோவா
வின் சந்நிதிக்குட்சென்று தரித்திருந்து: கட
வுளாகிய யெகோவாவே, தேவரீர் என்னை
இதுவரைக்கும் கொண்டுவந்ததற்கு நான்
எம்மாத்திரம்? என் வீடு எம்மாத்திரம்?
கடவுளே, இது உமக்கு அற்பக்காரியமாய்த் 17
தோன்றிற்றே; தேவரீர் அடியேனுக்குரிய
வீட்டைப்பற்றி வெகுகாலத்துக்கப்பால்
நடக்கும் செய்தியைச் சொன்னீரே; கட
வுளாகிய யெகோவாவே, உயிர்குடிப்பிறந்த
வனுக என்னை மதித்தீரே. அடியேனுக்கு 18
நீர் அளிக்கும் மேன்மையைப்பற்றித் தாவீது
இனி உம்மிடம் சொல்லவேண்டியது
என்ன? தேவரீர் அடியேனை அறிவீர்;
யெகோவாவே, அடியேனின் பொருட்டு,
உமது சித்தப்படியே, இந்தப் பெரிய காரி 19
யங்களையெல்லாம் தெரிவிக்கும்படி இந்தப்
பெரிய காரியத்தையெல்லாம் செய்தீர்.
யெகோவாவே, நாங்கள் எங்கள் காதுகளால் 20
கேட்ட சகல காரியங்களையும் நினைத்தால்,
தேவரீருக்கு நிகரானவர் இல்லை; உம்மைத்
தவிர வேறே தெய்வமும் இல்லை. உமது 21
ஜனமாகிய இஸ்ரவேலுக்கு நிகரான ஜனம்
பூமியில் உண்டோ? அது தமக்கு ஒரு ஜன
மாயிருக்கவும் தமக்குப் பேர் உண்டாக்கிக்
கொள்ளவும் அதை மீட்கும்படி கடவுள்
தாமே சென்றுரே; எகிப்திலிருந்து நீர் மீட்
டுக்கொண்ட உமது ஜனத்தின் முன்பாக
ஜாதிகளைத் துரத்தும்படி பயங்கரமான
பெரிய காரியங்களைச் செய்தீர்; உமது ஜன 22
மாகிய இஸ்ரவேலர் என்றுமாக உமது ஜன
மாயிருப்பதற்கு அவர்களை ஏற்படுத்தினீர்;
யெகோவாவாகிய நீர்தாமே அவர்களுக்குக்
கடவுளானீர். இப்போதும் யெகோவாவே, 23
தேவரீர் அடியேனையும் அடியேன் வீட்டை
யும்பற்றிச் சொன்ன வார்த்தை என்றென்
றைக்குமாக நிலைவரப்பட்டிருப்பதாக; தேவ
நீர் சொன்னபடியே செய்தருளும். இஸ்ரவே 24
லின்கடவுளாகிய சேனைகளின் யெகோவாவே
இஸ்ரவேலை ஆளும் கடவுள் என்று உமது
திருநாமம் நிலைவரப்பட்டு என்றென்றைக்கும்
மகிமைப்படுவதாக; அடியேனுகிய தாவீதின்
வீடு இப்படியாக உமக்கு முன் நிலைநிற்
கும். என் கடவுளே, உனக்கு வீடுகட்டு 25
வேன் என்று தேவரீர் சொல்லி அடியே
னுக்கு வெளிப்படுத்தினபடியால் இவ்வாறு
உம்மை நோக்கிப் பிரார்த்திக்க அடியேன்
தைரியங் கொண்டேன். இப்போதும் 26
யெகோவாவே, நீரே கடவுள்; தேவரீர் அடி
யேனைப்பற்றி இந்த நற்செய்தியை அறிவித்
தீர். இப்போதும் அடியேனின் வீடு என் 27
றைக்கும் உமக்கு முன்பாக நிலைத்திருக்கும்
படி அதை ஆசீர்வதித்தருளும்; யெகோ
வாவே, தேவரீர் அதை ஆசீர்வதித்தீர், அது

என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் என்றான்.

**18** இதற்குப் பின்பு தாவீது பெலிஸ்தியரை முறியடித்து அவர்களை அடக்கினான்; காத் பட்டணத்தையும் அதைச்சார்ந்த கிராமங்களையும் பெலிஸ்தியர் கையிலிருந்து பறித்துக் 2 கொண்டான். அவன் மோவாபியரையும் முறியடித்ததினாலே மோவாபியர் தாவீதுக்கு அடங்கினவர்களாகி அவனுக்குக் கப்பங் 3 கட்டிவந்தார்கள். சோபாவின் ராஜாவாகிய அதரேசர் தன் ஆளுகையைப் பலப்படுத்த ஐபிராத்து நதியண்டையில் சென்றபோது தாவீது அவனையும் ஆமாத்தின் அருகே முறி 4 யடித்தான். அவனிடமிருந்து ஆயிரம் ரதங்களையும் ஏழாயிரம் குதிரைவீரரையும் இருபதினாயிரம் காலாட்களையும் பிடித்து ரதங்களில் நூறு ரதங்களை வைத்துக்கொண்டு மற்ற ரதங்களின் குதிரைகளுடைய கால் 5 நரம்புகளை வெட்டிப்போட்டான். சோபாவின் ராஜாவாகிய அதரேசருக்கு உதவி செய்யத் தமஸ்குப்பட்டணத்துச்சீரியர் வந்தார்கள்; தாவீது சீரியரில் இருபத்தீராயிரம் 6 பேரைக் கொன்றுவிட்டுத் | தமஸ்குப்பட்டணத்துச்சீரியர் நடுவிலே அதிபதிகளை வைத்தான். சீரியர் தாவீதுக்கு அடங்கினவர்களாகி அவனுக்குக் கப்பங்கட்டிவந்தார்கள். தாவீது போன இடமெல்லாம் 7 யெகோவா அவனுக்கு வெற்றிதந்தார். அதரேசரின் சேவகருடைய பொற்பரிசைகளைத் தாவீது எடுத்து அவைகளை எருசலேமுக் 8 குக் கொண்டுவந்தான். அதரேசரின் பட்டணங்களாகிய திப்காத்தினும் கூனினுமிருந்து தாவீது மகா திரளான செம்பையும் எடுத்துக் கொண்டுவந்தான்; அதினாலே சாலொமோன் செப்புக் கடல்தொட்டியையும் தூண்களையும் செப்புத் தட்டுமுட்டுகளையும் செய்தான்.

9 தாவீது சோபாவின் ராஜாவாகிய அதரேசரின் ராணுவ முழுதையும் முறியடித்த செய்தியை ஆமாத்தின் ராஜாவாகிய தோவு 10 கேள்விப்பட்டபோது | அவன் தாவீது ராஜாவின் சுகசெய்தியை விசாரிக்கவும், அவன் அதரேசரோடு யுத்தம்பண்ணி அவனை முறியடித்ததினிமித்தம் அவனுக்கு ஆசி கூறவும் தன் குமாரனாகிய அதோராமை அனுப்பினான்.—அதரேசரும் தோவுவும் யுத்தம்செய்து கொண்டிருந்தவர்கள்—மேலும் பொன்னும் வெள்ளியும் செம்புமான சகல விதத் தட்டுமுட்டுகளையும் அவனிடம் 11 அனுப்பினான். இவற்றைத் தான் ஏதோமியர், மோவாபியர், அம்மோன் புத்திரர், பெலிஸ்தியர், அமலேக்கியர் என்னும் சகல ஜாதிகளிடத்திலும் கொள்ளையிட்ட வெள்ளி, பொன் இவற்றோடுகூடத் தாவீது ராஜா யெகோவாவுக்கென்று பிரதிஷ்டைசெய்தான். செரூயாளின் குமாரன் அப்சாய் 12 உப்புப்பள்ளத்தாக்கிலே பதினெண்ணாயிரம் ஏதோமியரை முறியடித்தான். ஆகையால் 13 தாவீது ஏதோமிலே அதிபதிகளை வைத்தான்; ஏதோமியர் யாவரும் தாவீதுக்கு அடங்கினவர்களானார்கள்; தாவீது போன இடமெல்லாம் யெகோவா அவனுக்கு வெற்றி தந்தார்.

தாவீது இஸ்ரவேல் அனைத்தின்மேலும் 14 ராஜாவாயிருந்தான்; அவன் தன் ஜனமுழுதையும் நீதியாய் நியாயம் விசாரித்துவந்தான். செரூயாளின் குமாரன் யோவாப் 15 ராணுவத்தலைவன்; அகிலூதின் குமாரனாகிய யோசபாத் மந்திரி. அகிதூபின் குமாரன் 16 சாதோக்கும் அபியத்தாரின் குமாரன் அபிமேலேக்கும் ஆசாரியர்; சவ்சா சம்பிரதி. யோயாதாவின் குமாரன் பெனாயா கிரேத்தியருக்கும் பிலேத்தியருக்கும் தலைவனாயிருந்தான்; தாவீதின் குமாரர் ராஜாவினிடம் பிரதானிகளாயிருந்தார்கள்.

**19** சிலகாலத்துக்குப்பின் அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய நாகாஸ் மரித்துப்போனான்; அவன் குமாரன் அவன் ஸ்தானத்திலே ராஜாவானான். அப்பொழுது தாவீது: 2 காலூனின் தகப்பனாகிய நாகாஸ் எனக்குச் சிநேகம்பாராட்டினபடியால் நானும் அவன் குமாரனாகிய இவனுக்குச் சிநேகம் பாராட்டுவேன் என்று சொல்லி, அவன் தகப்பன் இறந்த துக்கம் கேட்டுவர ஆட்களை அனுப்பினான். தாவீதின் ஆட்கள் காலூனிடம் துக்கம்கேட்க அம்மோன் புத்திரரின் தேசத்திலே சேர்ந்தபோது | அம்மோன் புத்திர 3 ரின் தலைவர் காலூனிடம் வந்து: துக்கம் கேட்கிறவர்களைத் தாவீது உம்மிடம் அனுப்பினது உமது தகப்பனாரைக் கனம்பண்ணுகிறதற்கென்று நினைக்கிறீரோ? தேசத்தை ஆராயவும் அதைக் கவிழ்த்துப் போடவும் உளவுபார்க்கவுமேயல்லவோ அவன் ஆட்கள் உம்மிடம் வந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். காலூன் அதைக் கேட்டுத் 4 தாவீதின் ஆட்களைப் பிடித்து அவர்கள் தாடியைச் சிரைத்து அவர்கள் வஸ்திரங்களை இருப்பிடமட்டும் வைத்துவிட்டு மற்றப் பாதியைக் கத்தரித்துப்போட்டு அவர்களை அனுப்பிவிட்டான். அந்த மனுஷர் வரு 5 கையில் அவர்கள் செய்தி தாவீதுக்கு அறிவிக்கப்பட்டது. அது அந்த மனுஷருக்குப் பெரிய அவமானமானபடியினால் ராஜா அவர்களுக்கு எதிராக ஆட்களை அனுப்பி,

ஊங்கள் தாடி வளருமட்டும் ரீங்கள் எரி
கோவிலிருந்துவிட்டுப் பிற்பாடு வாருங்கள்
என்று சொல்லச் சொன்னுன்.

6 தாவீதுக்குத் தங்கள்மேல் பகை மூண்ட
தென்று அம்மோன் புத்திரர் கண்டபோது
தானுனும் அம்மோன் புத்திரரும் மெசொப்
பொத்தாமியாவிலும் மாக்காசிரியாவிலும்
சோபாவிலுமிருந்து தங்களுக்கு ரதங்களும்
குதிரை வீரரும் கூலிப்படையாக வரும்படி
7 ஆயிரம் தாலந்து வெள்ளி அனுப்பி | முப்
பத்தீராயிரம் ரதங்களையும் மாக்காவின் ராஜா
வையும் அவன் ஜனத்தையும் கூலிப்படை
யாக அழைப்பித்தார்கள்; இவர்கள் வந்து
மேதெபாவுக்கு எதிரே பாளயமிறங்கினர்
கள்; அம்மோன் புத்திரரும் தங்கள் பட்ட
ணங்களிலிருந்து கூடிக்கொண்டு யுத்தம்
8 பண்ண வந்தார்கள். அதைத் தாவீது
கேள்விப்பட்டபோது யோவாபையும் பராக்
கிரமசாலிகளின் சமஸ்த ராணுவத்தையும்
9 அனுப்பினுன். அம்மோன் புத்திரர் புறப்
பட்டு ஊர்வாசலுக்கு வெளியே போர்செய்ய
அணிவகுத்து நின்ருர்கள்; வந்த ராஜாக்கள்
வெளிகளிலே பிரத்தியேகமாக இருந்தார்
10 கள். ராணுவங்களின் படைமுகம் தனக்கு
முன்னும் பின்னும் இருக்கிறதை யோவாப்
கண்டபோது அவன் இஸ்ரவேலிலே சிரேஷ்
டமானவர்கள் யாவரிலும் ஒரு பங்கைப்
பிரித்தெடுத்து அதைச் சீரியருக்கு எதிராக
11 அணிவகுத்து நிறுத்தி | மற்றப்படைவீரரை
அம்மோன் புத்திரருக்கு எதிராக அணி
வகுத்து நிறுத்தும்படி தன் சகோதரனுகிய
12 அப்ஷாயினிடம் ஒப்புவித்து: சீரியர் கை
மிஞ்சுகிறதாயிருந்தால் ரீ எனக்கு உதவி
செய்யவேண்டும், அம்மோன் புத்திரர் கை
மிஞ்சுகிறதாயிருந்தால் நான் உனக்கு உதவி
13 செய்ய வருவேன்; | மனேபலங்கொண்டிரு;
நமது ஜனத்திற்காகவும் நமது கடவுளின்
பட்டணங்களுக்காகவும் பலமாய்ப் போர்
செய்வோம்; யெகோவா தமக்கு நலமாய்த்
தோன்றுவதைச் செய்வாராக என்ருன்.
14 பின்பு யோவாபும் அவனோடிருந்த வீரரும்
சீரியரோடு யுத்தம்பண்ணக் கிட்டினர்கள்;
அவர்கள் அவனுக்குமுன்பாக முறிந்தோடி
15 னர்கள். சீரியர் முறிந்தோடினதை அம்
மோன் புத்திரர் கண்டபோது அவர்களும்
அவன் சகோதரனுகிய அப்ஷாயிக்குமுன்
பாக முறிந்தோடிப் பட்டணத்திற்குள் புகுந்
தார்கள்; யோவாபோ எருசலேமுக்குத்
திரும்பிவந்தான்.

16 தாங்கள் இஸ்ரவேலருக்குமுன்பாக முறி
யடிக்கப்பட்டதைச் சீரியர் கண்டபோது
அவர்கள் நதிக்கப்பாலிருந்த சீரியரையும்
வரவழைத்தார்கள்; அதரேசரின் படைத்
தலைவனுகிய சோபாக் அவர்களை நடத்தி
னுன். அது தாவீதுக்கு அறிவிக்கப்பட்ட 17
போது அவன் இஸ்ரவேலையெல்லாம் கூட்
டிக்கொண்டு யோர்தானைக் கடந்து அவர்
களுக்குச் சமீபமாய் வந்து அவர்களுக்கு
எதிரே அணிவகுத்தான்; தாவீது சீரியருக்கு
எதிரே அணிவகுக்கவே அவனோடு யுத்தம்
பண்ணினர்கள். அப்பொழுது சீரியர் இஸ்ர 18
வேலருக்கு முன்பாக முறிந்தோடினர்கள்;
தாவீது சீரியரில் ஏழாயிரம் ரதவீரரையும்
நாற்பதினுயிரம் காலாட்களையும் வெட்டிப்
போட்டுப் படைத்தலைவனுகிய சோபாக்கை
யும் கொன்ருன். தாங்கள் இஸ்ரவேலருக்கு 19
முன்பாக முறியடிக்கப்பட்டதை அதரேச
ரின் சிற்றரசர் கண்டபோது அவர்கள் தாவீ
தோடே சமாதானம்பண்ணிக்கொண்டு அவ
னுக்கு அடங்கினவர்களானர்கள். அப்புறம்
அம்மோன் புத்திரருக்குத் துணையாய் வரச்
சீரியருக்கு மனமில்லாதே போயிற்று.

மறு வருஷத்தில் ராஜாக்கள் யுத்தத்திற் 20
குப் புறப்படும் காலத்திலே யோவாப்
ராணுவபலத்தோடு சென்று அம்மோன் புத்
திரரின் தேசத்தைப் பாழாக்கி ரப்பாவுக்கு
வந்து அதை முற்றுகை போட்டான்; தாவீ
தோ எருசலேமில் இருந்துவிட்டான்; யோ
வாப் ரப்பாவை அடித்துச் சங்கரித்தான்.
தாவீது வந்து அவர்கள் ராஜாவின் தலைமே 2
லிருந்த கிரீடத்தை எடுத்துக்கொண்டான்;
அது ஒரு தாலந்து பொன் நிறையுள்ள
தெனக் கண்டான்; அதிலே ரத்தினங்கள்
பதித்திருந்தன; அது தாவீதின் தலையில்
வைக்கப்பட்டது; பட்டணத்திலிருந்து
ஏராளமான கொள்ளையையும் கொண்டுபோ
னுன். பின்பு அதிலிருந்த ஜனங்களை 3
வெளியே கொண்டுபோய், வாள்களாலும்
இருப்புப்பாரைகளாலும் கோடரிகளாலும்
வேலைசெய்ய அவர்களை நியமித்தான். இப
படியே அம்மோன் புத்திரரின் ஊர்களுக்
கெல்லாம் செய்துவிட்டுத் தாவீது தன்
முழுப்படையோடும் எருசலேமுக்குத் திரும்
பினுன்.

அதற்குப்பின்பு பெலிஸ்தியரோடு கேசே 4
ரிலே யுத்தம் நடந்தது; அப்பொழுது
கூஷாத்தியனுகிய சிபெக்காய் செப்பாயிய
ரில் ஒருவனன சிப்பாயி என்பவனை
கொன்றுபோட்டான்; அதினால் அவர்கள்
வசப்படுத்தப்பட்டார்கள்.

திரும்பவும் பெலிஸ்தியரோடு யுத்தமுண் 5
டாகவே யாவீரின் குமாரனன எல்க்கானன்
காத் ஊரானன கோலியாத்தின் சகோதர
னுகிய லகெமியைக் கொன்றுபோட்டான்;

அவன் ஈட்டிப்பிடி கெசவுகாரரின் பட மரம் அளவு பெரிதாயிருந்தது.
6 மற்றுமொரு யுத்தம் காத் ஊரிலே நடந்தது, அங்கே வளர்ந்துயர்ந்த மனுஷனொருவனிருந்தான்; அவனுக்கு அவ்வாறு விரல்களாக இருபத்துநாலு விரல்கள் இருந்தன;
7 அவனும் ரெப்பாவியரில் ஒருவன்; | இவன் இஸ்ரவேலை அவமானமாய்ப் பேசினான்; தாவீதின் சகோதரனான சிமேயாவின் குமாரன் யோனத்தான் அவனை வெட்டினான்.
8 காத் ஊரிலிருந்த ரெப்பாவியனுக்குப் பிறந்த இவர்கள் தாவீதின் கையினாலும் அவன் ஆட்களின் கையினாலும் மடிந்தார்கள்.

**21** சாத்தான் இஸ்ரவேலுக்கு விரோதமாய் எழும்பி இஸ்ரவேலை இலக்கம் பார்ப்பதற்
2 குத் தாவீதை எழுப்பிவிட்டான். அப்படியே தாவீது யோவாபையும் சேனைத் தலைவரையும் கூப்பிட்டு: நீங்கள் போய்ப் பெயர்ஷெபா தொடங்கித் தாண்மட்டும் இருக்கிற இஸ்ரவேலை எண்ணி, அவர்கள் இலக்கத்தை நான் அறியும்படி என்னிடம் வந்து
3 சொல்லுங்கள் என்றான். அப்பொழுது யோவாப், யெகோவா தமது ஜனத்தை இப்பொழுது இருப்பதிலும் நூறு மடங்கு அதிகமாய் வர்த்திக்கப்பண்ணுவாராக; ராஜாவே, என் ஆண்டவனே, அவர்கள் எல்லாரும் என் ஆண்டவனின் ஊழியரல்லவா? என் ஆண்டவன் இதை விசாரிப்பானேன்? இது இஸ்ரவேலின்மேல் குற்றமாய்
4 வினைவானேன் என்றான். யோவாப் அப்படிச் சொல்லியும் ராஜாவின் வார்த்தையே பலத்தது; யோவாப் புறப்பட்டு இஸ்ரவேல் எங்கும் சுற்றித்திரிந்து எருசலேமுக்குத்
5 திரும்பினான்; ஜனத்தை இலக்கம்பார்த்த தொகையை யோவாப் தாவீதினிடம் கொடுத்தான். இஸ்ரவேலிலெல்லாம் பட்டயம் எடுக்கத்தக்க வீரர் பதினொரு லட்சம்பேரும், யூதாவில் பட்டயம் எடுக்கத்தக்க வீரர் நாலு லட்சத்து எழுபதினாயிரம்பேரும் இருந்
6 தார்கள். லேவி பென்யமீன் கோத்திரங்களில் உள்ளவர்களையோ மற்றவர்களின் இலக்கத்திற்குட்பட எண்ணுதே போனான், ராஜாவின் வார்த்தை அவனுக்கு அருவருப்பாயிருந்ததினால் எண்ணுதே போனான்.
7 ஜனங்களை இலக்கம்பார்த்தது கடவுளின் பார்வையில் தீயதாயிருந்தபடியினால் அவர்
8 இஸ்ரவேலை வாதித்தார். தாவீது கடவுளை நோக்கிப் பிரார்த்தித்து: நான் இந்தக் காரியத்தைச் செய்து பெரிய பாவத்துக்காளானேன்; இப்போதும் உமது அடியானின் அக்கிரமத்தை நீக்கியருளும்; நான் மகா மதிகேடாய் நடந்துகொண்டேன் என்று
9 சொன்னான். அப்பொழுது யெகோவா தாவீதின் ஞானதிருஷ்டிகனாகிய காத் என்பவனோடு பேசி, | நீ தாவீதினிடம் போய், 10 மூன்று காரியங்களை உனக்குமுன் வைக்கிறேன், அவற்றில் ஒன்றைத் தெரிந்துகொள்; அதை நான் உனக்குச் செய்வேன் என்று யெகோவா உரைக்கிறார் என்று சொல் என்றார். அப்படியே காத் தாவீதி 11
னிடம் வந்து யெகோவா உரைப்பதைக் கேள், நீயே தெரிந்துகொள், மூன்று வரு 12
ஷத்துப் பஞ்சம் வரவேண்டுமா? உன் பகைஞரின் பட்டயம் உன்னைத் தொடரவே உன் சத்துருக்களால் மூன்று மாதச் சங்காரம் வரவேண்டுமா? இஸ்ரவேலின் எல்லையெங்கும் யெகோவாவின் தூதன் சங்காரம் செய்யும்படி தேசத்தில் நிற்கும் யெகோவாவின் பட்டயமாகிய மூன்றுநாள் கொள்ளைநோய் வரவேண்டுமா? இப்போதும் என்னை அனுப்பினவருக்கு நான் என்ன பதில் சொல்ல வேண்டும் என்பதை நீர் யோசித்துப்பாரும் என்று சொன்னான். அப்பொழுது தாவீது 13
காத்தினிடம்: கொடிய இடுக்கணில் அகப்பட்டுக்கொண்டேன்; இப்போதும் நான் யெகோவாவின் கையில் விழுவேன்; அவருடைய இரக்கம் மகா பெரியது; நான் மனிதர் கையில் விழவேண்டாம் என்றான்.

ஆகவே யெகோவா இஸ்ரவேலிலே 14
கொள்ளைநோயை வரச்செய்தார், அதினால் இஸ்ரவேலில் எழுபதினாயிரம்பேர் மாண்டார்கள். எருசலேமையும் அழிக்கக் கடவுள் 15
ஒரு தூதனை அனுப்பினார்; அவன் அழிக்கச் செல்கையிலோ யெகோவா பார்த்து, அந்தத் தீங்குக்கு மனஸ்தாபப்பட்டுச் சங்கரிக்கிற தூதனைப் பார்த்து: போதும், இப்போது உன் கையை நிறுத்து என்றார்; யெகோவாவின் தூதன் எபூசியனாகிய ஓர்னானின் களத்தண்டையிலே நின்றான்.
தாவீது நிமிர்ந்து பார்த்து, பூமிக்கும் வானத் 16
திற்கும் நடுவே நின்ற யெகோவாவின் தூதன் உருவின பட்டயத்தைத் தன் கையில் பிடித்து அதை எருசலேமின்மேல் நீட்டியிருப்பதைக் கண்டான்; அப்பொழுது தாவீதும் மூப்பரும் இரட்டுப்போர்த்துக்கொண்டு முகங்குப்புற விழுந்தார்கள். தாவீது கட 17
வுளினிடம் விண்ணப்பம் செய்து: ஜனத்தை இலக்கம்பார்க்கச் சொன்னவன் நான் அல்லவோ? பாவஞ்செய்தவன் நானே, பெரிய தீமை செய்தேன், இந்த ஆடுகள் செய்ததென்ன? என் கடவுளாகிய யெகோவாவே, வாதிக்கும்படி உமது கை உமது ஜனத்திற்கு விரோதமாயிராமல் எனக்கும்

ன் தகப்பன் வீட்டிற்கும் விரோதமாயிருக்
கட்டும் என்று சொன்னான்.
18 அப்பொழுது யெகோவாவின் தூதன்
காத்தோடு பேசி: எபூசியனாகிய ஒர்னானின்
களத்திலே யெகோவாவுக்கு ஒரு பலிபீடத்
தைக் கட்டும்படி தாவீது அங்கே போக
வேண்டுமென்று அவனுக்குச் சொல் என்று
19 கட்டளையிட்டான். யெகோவாவின் நாமத்
தில் காத் சொன்ன வார்த்தையின்படியே
20 தாவீது போனான். ஒர்னானோ கோதுமை
யைப் போரடித்துக் கொண்டிருந்தான்,
அவன் திரும்பிப் பார்க்கவே தெய்வதூத
னைக் கண்டான், அவனோடிருந்த அவனு
டைய நாலு குமாரரும் ஒளித்துக்கொண்
21 டார்கள். தாவீது ஒர்னானிடம் வருகை
யில் ஒர்னான் நிமிர்ந்து நோக்கித் தாவீதைக்
கண்டு களத்திற்கு வெளியே வந்து, தரை
மட்டும் குனிந்து தாவீதை வணங்கினான்.
22 வணங்கவே தாவீது ஒர்னானைப் பார்த்து:
இந்தக் களநிலத்தை எனக்குக் கொடு, நான்
யெகோவாவுக்கு ஒரு பலிபீடத்தைக் கட்ட
வேண்டும், பறும் விலைக்கு அதை எனக்
குக் கொடுத்துவிடு, வாதை ஜனத்தை விட்டு
நிறுத்தப்படவேண்டுமே என்று சொன்
23 னான். அதுகேட்ட ஒர்னான் தாவீதினிடம்:
அதை எடுத்துக்கொள்ளும், ராஜாவாகிய
என் ஆண்டவன் தமது இஷ்டப்படியே
செய்வாராக; இதோ, தகனபலிக்கு மாடு
களையும் விறகுக்குப் போரடிக்கிற மரக்கட்
டைகளையும் போஜனபலிக்குக் கோதுமை
யையும் கொடுக்கிறேன், யாவையும் கொடுக்
24 கிறேன் என்றான். தாவீது ராஜாவோ ஒர்னா
னிடம்: அப்படியல்ல, பறும் விலைகொ
டுத்தே நான் அதை வாங்குவேன், உன்
னுடையதை நான் யெகோவாவுக்கென்று
எடுத்துக்கொண்டு செலவின்றித் தகனபலி
செலுத்தமாட்டேன் என்று சொல்லித்
25 தாவீது அந்த நிலத்திற்கு அறுநூறு சேக்கல்
நிறை பொன்னை ஒர்னானுக்குக் கொடுத்து
26 அங்கே யெகோவாவுக்கு ஒரு பலிபீடத்
தைக் கட்டித் தகனபலிகளையும் சமாதான
பலிகளையும் செலுத்தினான்; அவன் யெகோ
வாவை நோக்கிக் கூப்பிடவே, யெகோவா
வானத்திலிருந்து தகனபலிபீடத்தின்மேல்
இறங்கின அக்கினியினால் அவனுக்குப்
27 பதில் கொடுத்து பட்டயத்தை உறையிலே
திரும்பப் போடவேண்டும் என்று தெய்வ
தூதனுக்கும் கட்டளையிட்டார்.
28 எபூசியனாகிய ஒர்னானின் களத்திலே
யெகோவா தனக்கு உத்தரவு அருளினதைத்
தாவீது கண்டு அக்காலத்திலே அங்கே
29 தானே பலியிட்டான். மோசே வனாந்தரத்
தில் செய்திருந்த யெகோவாவின் வாசஸ்தல
மும் சர்வாங்க தகனபலிபீடமும் அக்கா
லத்திலே கிபியோன் மேடையில் இருந்தன.
30 தாவீது தெய்வசந்நிதியில் விசாரிக்கப்போக
முடியாதிருந்தான்; யெகோவாவின் தூதனு
டைய பட்டயத்தைப்பற்றிய திகில் அவ
னைப் பிடித்திருந்தது. அப்பொழுது 22
தாவீது: கடவுளாகிய யெகோவாவின் ஆலய
ஸ்தலம் இதுவே; இஸ்ரவேல் பலியிடவேண்
டிய தகனபலிபீட ஸ்தலமும் இதுவே
என்று சொன்னான்.

பின்பு தாவீது இஸ்ரவேல் தேசத்தி 2
லிருந்த அந்நிய ஜாதியாரைக் கூடிவரச்
செய்து, கடவுளின் ஆலயத்தைக் கட்டுவ
தற்குப் பெருங்கற்களைப் பணிப்படுத்தக் கல்
தச்சரை ஏற்படுத்தினான். தாவீது வாசல் 3
களின் கதவுகளுக்கு வேண்டிய ஆணிகளுக்
கும் அள்ளுகளுக்கும் மிகுதியான இரும்
பையும் நிறுத்துமுடியாத ஏராளமான செம்
பையும் | எண்ணிறந்த கேதுரு மரங்களை 4
யும் சம்பாதித்தான்; சீதோனியரும் தீரிய
ரும் தாவீதுக்குத் திரளான கேதுருமரங்களைக்
கொண்டுவந்தார்கள். தாவீது யோசிப்பா 5
னுடைய குமாரனாகிய சாலொமோன் சிறு
வன், இளைஞன்; யெகோவாவுக்குக் கட்ட
வேண்டிய ஆலயமோ மகா பெரிதாயிருக்க
வேண்டும்; சகல தேசங்களிலும் பேரும்
பெருமையும் உடையதாய் விளங்கவேண்
டும்; ஆதலால் அதற்காக வேண்டியவை
களை ஆயத்தம்பண்ணுவேன் என்று சொல்
லித் தன் மரணத்திற்குமுன்னே திரளாய்
ஆயத்தம் செய்து வைத்தான்.

தாவீது தன் குமாரனாகிய சாலொமோனை 6
அழைத்து இஸ்ரவேலின் கடவுளாகிய
யெகோவாவுக்கு ஆலயத்தைக் கட்டும்படி
அவனுக்குக் கட்டளைகொடுத்துச் | சாலொ 7
மோனைப் பார்த்து: என் குமாரனே, என்
கடவுளாகிய யெகோவாவின் நாமத்திற்கு
ஒரு ஆலயத்தை நானே கட்ட என் மனதில்
நினைத்திருந்தேன். எனக்கு வந்த யெகோ 8
வாவின் வார்த்தையோ உரைத்தது வேறே:
நீ மிகுதியான ரத்தத்தைச் சிந்திப் பெரிய
யுத்தங்களைச் செய்தவன்; என் நாமத்திற்கு
ஆலயத்தை நீ கட்டவேண்டாம்; எனக்கு
முன்பாக மிகுதியான ரத்தத்தைத் தரை
யிலே சிந்தப் பண்ணினாயே. இதோ, உனக் 9
குப் பிறக்கப்போகிற குமாரன் சமாதான
புருஷனாயிருப்பான்; சுற்றிலுமிருக்கும்
அவன் சத்துருக்களையெல்லாம் விலக்கி
அவன் சமாதானமாயிருக்கும்படி செய்
வேன்; அவன் பேரே சாலொமோன்; அவன்
நாட்களில் இஸ்ரவேலுக்குச் சமாதானத்தை

10 யும் அமைதியையும் அருளுவேன். அவனே என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டுவான்; அவன் எனக்குக் குமாரனுயிருப்பான், நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன்; இஸ்ர வேலில் ஆளுதற்குரிய அவன் சிங்காசனத்தை என்றைக்குமாக நிலைக்கச்செய்வேன் என்
11 ரார். இப்போதும்என்குமாரனே, யெகோவா உன்னோடிருப்பார், நீ சித்திபெறுவாய், யெகோவா உன்னைப்பற்றிச் சொன்னபடியே உன் கடவுளாகிய யெகோவாவின் ஆலயத்
12 தைக் கட்டுவாய். யெகோவா இஸ்ரவேலின் ஆளுகையை உனக்குக் கட்டளையிடும்போது நீ உன் கடவுளாகிய யெகோவாவின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதற்கேது வாக அவர் உனக்கு விவேகத்தையும் அறி
13 வையும் அருளுவாராக. யெகோவா இஸ்ர வேலைப்பற்றி மோசேக்குக் கட்டளையிட்ட நியமங்களையும் தீர்ப்புகளையும் காத்து நடக்க நீ ஜாக்கிரதையா யிருப்பாயானுல் சித்தி பெறுவாய்; நீ மனேபலங்கொண்டு தைரிய
14 மாயிரு, பயப்படாதே, கலங்காதே. எனக் குப் பல கஷ்டங்களிருந்தும், இதோ, நான் யெகோவாவின் ஆலயத்திற்கென்று பொன் னிலே ஒரு லட்சம் தாலந்தையும் வெள்ளி யிலே பத்து லட்சம் தாலந்தையும் நிறுத்து முடியாத திரளான செம்பையும் இரும்பை யும் சம்பாதித்தேன், மரங்களையும் கற்களை யும் சம்பாதித்தேன்; நீ இவைகளோடு இன்
15 னும் அதிகம் சேர்ப்பாய். வேலை செய்யத் தக்க திரளான ஆட்கள், கல்வெட்டுக்கார ரும், தச்சரும், கல்தச்சரும் எந்த வேலையிலும் நிபுணரானவர்களும், உன்னோடிருக்கிறார்
16 கள். பொன்னுக்கும் வெள்ளிக்கும் செம் புக்கும் இரும்புக்கும் கணக்கில்லை; தாமதி யாமல் வேலையை நடத்து; யெகோவா உன் னோடிருப்பாரா என்று சொன்னுன்.

17 தன் குமாரனுகிய சாலொமோனுக்கு உத விசெய்யத் தாவீது இஸ்ரவேலின் தலைவர்
18 அனைவருக்கும் கட்டளையிட்டு: உங்கள் கட வுளாகிய யெகோவா உங்களோடிருந்து சுற் றிலும் உங்களுக்கு அமைதலைத் தந்தார் அல்லவா? தேசத்தின் குடிகளை என் கையில் ஒப்புக்கொடுத்தார்; யெகோவா வுக்கு முன்பாகவும் அவருடைய ஜனத்திற்கு
19 முன்பாகவும் தேசம் அடங்கிற்று. இப் போதும் நீங்கள் உங்கள் இதயத்தையும் உங்கள் மனதையும் உங்கள் கடவுளாகிய யெகோவாவைத் தேடுதற்குத் திருப்பி நீங் கள் எழுந்து கடவுளாகிய யெகோவாவின் திருஸ்தலத்தைக் கட்டுங்கள், யெகோவாவின் உடன்படிக்கைப் பெட்டகத்தையும் கடவு ளின் பரிசுத்த பணிமுட்டுகளையும் யெகோ வாவின் நாமத்திற்குக் கட்டப்படும் ஆலயத்தி ற்குள்கொண்டுபோங்கள் என்றுசொன்னுன்.

23 தாவீது விருத்தாப்பியமும் பூரண ஆயுசு முள்ளவனுனபோது தன் குமாரனுகிய சாலொமோனை இஸ்ரவேலின்மேல் ராஜா வாக்கினுன். இஸ்ரவேலின் தலைவர் அனை 2 வரையும் ஆசாரியரையும் லேவியரையும் கூடிவரச்செய்தான். அப்பொழுது முப்பது 3 வயதுள்ளவர்களும் மேற்பட்டவர்களுமான லேவியர் எண்ணப்பட்டார்கள்; பேர்பேராக எண்ணப்பட்ட ஆண்களின் இலக்கம் முப் பத்தெண்ணுயிரம். அவர்களில் இருபத்து 4 நாலாயிரம்பேர் யெகோவாவின் ஆலயத்திற் குரிய வேலையை விசாரிப்பவர்கள், ஆறு யிரம்பேர் தலைவர், நியாயவிசாரிப்புக்காரர்; நாலாயிரம்பேர் வாசல்காவலாளர், துதிசெய் 5 வதற்கெனத் தான் செய்திருந்த கீதவாத்தியங் களை வைத்துக்கொண்டு யெகோவாவைத் துதிக்கிறவர்கள் நாலாயிரம்பேர் இருக்க வேண்டும் என்று தாவீது கட்டளையிட்டான்.

அவர்களை லேவியின் குமாரராகிய கெர் 6 சோன், கெகாத், மெராரி என்பவர்களுடைய வம்சப்பிரிவுகளின்படி வகுத்தான். கெர் 7 சோனியரில் லாதான், சிமேயி. லாதானின் 8 குமாரர், யெகியேல், இவன் தலைவன், சேத் தாம், யோவேல் என்னும் மூவர்; சிமேயி 9 யின் குமாரர், ஷெலோமோத், கசியேல், ஆரான் என்னும் மூவர்; இவர்கள் லாதான் வம்சங்களின் தலைவர். சிமேயியின் குமாரர், 10 யாகாத், சீனு, யெயூஷ், பெரீயா; இந்த நால் வரும் சிமேயியின் குமாரர்; யாகாத் தலைவன், இரண்டாவது சீசா; யெயூஷுக்கும் பெரீ 11 யாவுக்கும் அநேகம்குமாரர் இராதபடியினுல் அவர்கள் ஒரே வம்சமாகவும் ஒரே வகுப் பாகவும் எண்ணப்பட்டார்கள். கெகாத் 12 தின் குமாரர், அம்ராம், யித்சார், கெப்ரோன், ஊசியேல் என்னும் நால்வர். அம்ராமின் 13 குமாரர், ஆரோன், மோசே என்பவர்கள்; ஆரோனும் அவன் குமாரரும் மகா பரிசுத்த மானவற்றை என்றைக்கும் பிரதிஷ்டை செய்வதற்கும் என்றைக்கும் யெகோவாவின் சன்நிதியில் தூபங்காட்டுவதற்கும் அவருக்கு ஆராதனை செய்வதற்கும் அவர் நாமத்திலே ஆசீர்வாதம் கொடுப்பதற்கும் பிரித்துவைக் கப்பட்டார்கள். கடவுளின் மனுஷனுகிய 14 மோசேயின் குமாரரோவெனில் லேவிகோத் திரத்தாருக்குள் எண்ணப்பட்டார்கள். மோசேயின் குமாரர் கெர்சோம், எலியேசர். 15 கெர்சோமின் குமாரர், ஷெபூவேல் தலைவன். 16 எலியேசரின் குமாரர், ரெகபியா தலைவன்; 17 எலியேசருக்கு வேறே குமாரர் இல்லை, ரெக பியாவின் குமாரர் மிகப்பலர். யித்சாரின் 18

19 குமாரர், ஷெலோமீத் தலைவன். கெப்ரோனின் குமாரர், எரீயா தலைவன், இரண்டாவது அமரியா, மூன்றாவது யகசியேல், நாலாவது எக்காமெயாம். 20 ஊசியேலின் குமாரர், மீகா தலைவன், இரண்டாவது யிஷியா. 21 மொராரியின் குமாரர், மகேலி, மூசி; மகேலியின் குமாரர், எலெயாசார், கீஷ். 22 எலெயாசார் மரித்தபோது அவனுக்குக் குமாரத்திகளே அல்லாமல் குமாரர் இல்லை; கீஷின் குமாரராகிய இவர்களுடைய சகோதரர் 23 இவர்களை விவாகம்பண்ணினார்கள். மூசியின் குமாரர், மகேலி, ஏதேர், யெரேமோத் என்னும் மூவர்.

24 லேவி புத்திரராகிய இவர்கள் தங்கள் பிதாக்களுடைய குடும்பங்களின்படியே வம்சத்தலைவராய்ப் பேர்பேராக எண்ணி எழுதப்பட்டார்கள். இருபது வயதுள்ளவர்களும் மேற்பட்டவர்களுமாகிய இவர்கள் யெகோவாவின் ஆலயப் பணிவிடையைச் 25 செய்துவந்தார்கள். தாவீது இப்படிச்செய்த காரணம்: இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா தமது ஜனத்துக்கு அமைதியைக் கட்டளையிட்டார், அவர் என்றைக்கும் எரு 26 சலேமிலேயே வாசம்பண்ணுவார், இனி லேவியர் வாசஸ்தலத்தையும் அதின் ஊழியத்திற்கடுத்த அதின் பணிமுட்டுகள் யாவற்றையும் சுமப்பது அவசியமில்லையென்று 27 அவன் நினைத்ததே. தாவீது கடைசியாகக் கட்டளையிட்டபடி லேவியரில் எண்ணப்பட்டவர்கள் இருபது வயதுள்ளவர்களும் 28 மேற்பட்டவர்களுமாயிருந்தார்கள். இவர்கள் யெகோவாவின் ஆலயப்பணிவிடையில் ஆரோனின் குமாரருக்கு உதவிசெய்ய நியமிக்கப்பட்டார்கள்; இவர்கள் பிராகாரங்களையும் அறைகளையும் பார்த்துக்கொள்வார்கள், சகல பரிசுத்த பணிமுட்டுகளையும் சுத்திகரிப்பார்கள், கடவுளின் ஆலயத்திற்குரிய 29 மற்ற வேலைகளையும் பார்ப்பார்கள். சமுகத்தப்பங்கள் போஜனபலிக்கு வேண்டிய மெல்லியமா, புளிப்பில்லாத அதிரசங்கள் சட்டிகளிலே செய்கிறதும் சுடுகிறதுமானவைகள் ஆகிய இவற்றை ஆயத்தப்படுத்துவதோடு இவைகளின் நிறையையும் அளவையும் 30 பார்த்துக்கொள்வார்கள். நாள்தோறும் காலையிலும் மாலையிலும் அவர்கள் வந்து நின்று யெகோவாவுக்கு நன்றிசெலுத்தி அவரைத் துதிக்கவேண்டும், ஓய்வுநாட்களிலும் அமாவாசைகளிலும் உற்சவநாட்களிலும் யெகோவாவுக்குச் செலுத்தும் தகனபலிகளுக்குரிய வேலைகளையெல்லாம் பார்க்கவேண்டும். 31 குறிக்கப்பட்ட தொகையானவர்கள் தங்களுக்கு விதித்த நியமத்தின்படியே எப்போதும் யெகோவாவுக்கு முன்பாக நிற்கவேண்டும். தரிசனக்கூடாரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் பார்த்துக்கொள்வதுமல்லாமல், தங்கள் சகோதரராகிய ஆரோனின் புத்திரர் யெகோவாவின் ஆலயத்தில் செய்யும் பணிவிடைகளிலும் இவர்கள் உதவிசெய்ய வேண்டியதாயிருந்தது. 32

24 ஆரோன் புத்திரரின் வகுப்புகள் இவைகளே: ஆரோனின் குமாரர், நாதாப், அபியூ, எலெயாசார், இத்தாமார் என்பவர்கள். 2 நாதாபும் அபியூவும் குமாரர் இல்லாமல் தங்கள் தகப்பனுக்கு முன்னே மரித்தபடியினால் எலெயாசாரும் இத்தாமாரும் ஆசாரிய ஊழியம் செய்தார்கள். 3 எலெயாசாரின் சந்ததியானை சாதோக்கு, இத்தாமாரின் சந்ததியானை அகிமேலேக்கு என்பவர்கள் உதவிசெய்ய, தாவீது ஆரோன் சந்ததியாரை அவர்கள் செய்யவேண்டிய ஊழியத்துக்கு முறை ஏற்படுத்தி வகுத்தான். 4 அவர்களை வகுத்தபோது இத்தாமாரின் புத்திரரைப் பார்க்கிலும் எலெயாசாரின் புத்திரருக்குள்ளே தலைமையானவர்கள் அதிகமானபேர் என்று கண்டபடியால் எலெயாசாரின் புத்திரரில் பதினாறுபேரை வம்சத்தலைவராகவும் இத்தாமாரின் புத்திரரில் எட்டுப்பேரை வம்சத்தலைவராகவும் ஏற்படுத்தினார்கள். 5 விதியாசம்பண்ணாமல் இருபக்ஷத்தாரையும் சீட்டுப்போட்டு வகுத்தார்கள்; எலெயாசாரின் புத்திரரிலிருந்தும் இத்தாமாரின் புத்திரரிலிருந்தும் பரிசுத்த ஸ்தலத்துக்குரிய தலைவரும் தெய்வகாரியத் தலைவரும் நியமிக்கப்பட்டார்கள். 6 லேவியரில் நெதனெயேலின் குமாரனாகிய ஷெமாயா என்னும் சம்பிரதி ராஜாவுக்கு முன்பாகவும், அதிபதிகள், ஆசாரியனாகிய சாதோக்கு, அபியத்தாரின் குமாரனாகிய அகிமேலேக்கு, ஆசாரியர் வம்சத்தலைவர், லேவியர் வம்சத்தலைவர் இவர்களுக்கு முன்பாகவும் அவர்கள் நாமங்களை எழுதினான். எலெயாசாருக்கு ஒரு வம்சமும் இத்தாமாருக்கு ஒரு வம்சமுமாக எடுக்கப்பட்டது.

7 முதலாவது சீட்டு யோயாரீபுக்கு விழுந்தது, இரண்டாவது யெதாயாவுக்கு, 8 மூன்றாவது காரிமுக்கு, நான்காவது செயோரீமுக்கு, 9 ஐந்தாவது மல்கியாவுக்கு, ஆறாவது மீயாமினுக்கு, 10 ஏழாவது அக்கோத்சுக்கு, எட்டாவது அபியாவுக்கு, 11 ஒன்பதாவது யேஷுவாவுக்கு, பத்தாவது செகனியாவுக்கு, 12 பதினோராவது எலியாஷீபுக்கு, பன்னிரண்டாவது யாக்கீமுக்கு, 13 பதின்மூன்றாவது குப்பாவுக்கு, பதினான்காவது எஷெபெயாபுக்கு, 14 பதினைந்தாவது பில்கா

15 வுக்கு, பதினாறாவது இம்மேருக்கு, | பதினே
ழாவது கேசிருக்கு, பதினெட்டாவது அப்
16 பித்சேத்சுக்கு, | பத்தொன்பதாவது பெதக்
கியாவுக்கு, இருபதாவது எசேக்கியேலுக்
17 கு, | இருபத்தோராவது யாகீனுக்கு, இரு
18 பத்திரண்டாவது காமூலுக்கு, | இருபத்து
மூன்றாவது தெலாயாவுக்கு, இருபத்துநான்
19 காவது மாசியாவுக்கு விழுந்தது. இஸ்ர
வேலின் கடவுளாகிய யெகோவா அவர்கள்
தகப்பனாகிய ஆரோனுக்குக் கட்டளையிட்ட
படியே ஆரோன் அவர்களுக்கு நியமனம்
செய்திருந்த பிரகாரம் நடந்தது. தங்கள்
முறை வரிசைகளில் யெகோவாவின் ஆல
யத்திற்குள் பிரவேசிக்கும்படி அவர்களு
டைய ஊழியத்திற்கென்று வகுத்தபிரிவுகள்
இவைகளே.

20 லேவியின் மற்றப் புத்திரர் இவர்களே:
அம்ராமின் குமாரரில் சுபவேல், சுப
21 வேலின் குமாரரில் யெக்தெயா, | ரெகபியா
22 வின் குமாரரில்மூத்தவனாகியிசியா, | இத்
சாரியரில் செலோமோத்து,செலோமோத்
23 தின் குமாரரில் யாகாத்து, | பெனாயாரில்
மூத்தவனாகிய எரீயா, இரண்டாவது அமரி
யா, மூன்றாவதாகியேயேல், நாலாவது எக்கா
24 மெயாம்; | ஊசியேலின் குமாரரில் மீகா,
25 மீகாவின் குமாரரில் சாமூர், | மீகாவின்
சகோதரனாகிய இசியா, இசியாவின் குமார
26 னில் சகரியா. மெராரியின் குமாரர் மகேலி,
மூசி, மெராரியின் குமாரனாகிய யாசியாவின்
27 குமாரர்; அவன் குமாரனாகிய யாசியாவின்
வழிவந்த மெராரியின் குமாரர், சோகாம்,
28 சக்கூர், இப்ரி; மகேலியின் குமாரரில் எலெ
29 யாசார், இவனுக்குக் குமாரரில்லை. கீசுக்
குப் பிறந்தவர்கள் கீசின் குமாரனாகிய
30 யெராமெயேல், | மூசியின் குமாரர், மகேலி,
ஏதேர், யெரீமோத். லேவியின் புத்திரராகிய
இவர்கள் தங்கள் பிதாக்களின் வம்சங்களின்
31 படியே எழுதப்பட்டார்கள். இவர்களும்
தங்கள் சகோதரராகிய ஆரோனின் புத்திரர்
செய்ததுபோலவே, தாவீது ராஜாவுக்குமுன்
பாகவும், சாதோக்கு, அகிமேலேக்கு, ஆசாரி
யர் வம்சத்தலைவர், லேவியர் வம்சத்தலைவர்
இவர்களுக்குமுன்பாகவும் சீட்டுப்போட்டுக்
கொண்டார்கள். தங்களிலிருந்த வம்சத்
தலைவருக்கும் அவர்களுடைய சிறிய சகோ
தரருக்கும் ஒன்றுபோலவே செய்தார்கள்.

**25** மேலும் தாவீதும் சேனைத்தலைவரும்,
ஆசாப், ஏமான், எதுதூன் என்பவர்களின்
குமாரரில் சிலரை ஊழியத்திற்கென்று பிரித்
தெடுத்தார்கள்; இவர்கள் சுரமண்டலம்
தம்புரு கைத்தாளம் இவற்றை வாசித்துத்
தீர்க்கதரிசனம் பாடுகிறவர்கள்; தங்கள்
ஊழியத்தைச் செய்வதற்குக் குறித்தெடுக்
கப்பட்டவர்கள் இவர்களே: ஆசாபின் குமா 2
ரரில், சக்கூர், யோசேப்பு, நெதனியா,
அசாரேலா; ஆசாபின் குமாரராகிய இவர்
களே ஆசாபினால் நடத்தப்பட்டுத் தீர்க்க
தரிசனம் பாடுவார்கள்; தீர்க்கதரிசனம்
பாடும்படி ஆசாபை நடத்தினவன் ராஜாவே.
எதுதூனைச் சேர்ந்தவர்கள் அவன் குமாரரா 3
கிய கெதலியா, செரீ, எசாயா, சுபியா,
மத்தித்தியா என்னும் ஆறுவர்; இவர்கள்
தங்கள் தகப்பனாகிய எதுதூனால் நடத்தப்
பட்டுச் சுரமண்டலம் வாசிக்கிறவர்கள்;
எதுதூன் யெகோவாவுக்கு நன்றிசெலுத்தி
அவரைத் துதித்துத் தீர்க்கதரிசனம் பாடு
கிறவன். ஏமானைச் சேர்ந்தவர்கள் அவன் 4
குமாரராகிய புக்கீயா, மத்தனியா, ஊசி
யேல், செபுவேல், யெரீமோத், கனனியா,
கனானி, எலியாத்தா, கித்தல்தி, ரொமம்தியே
சர், யொஷ்பெகாஷா, மலோத்தி, ஒத்திர்,
மகசியோத்; இவர்களெல்லாரும் ராஜாவின் 5
ஞானதிருஷ்டிகனாகிய ஏமானின் குமாரர்,
ஏமானின் கொம்பை உயர்த்துவதாகக் கட
வுள் வாக்குக்கொடுத்தபடியே அவர் அவ
னுக்குப் பதினாலு குமாரரையும் மூன்று
குமாரத்திகளையும் கொடுத்தார். யெகோவா 6
வின் ஆலயத்தில் தாளங்கள் தம்புருகள் சுர
மண்டலங்களாகிய தேவாத்தியங்களை வாசித்
தற்பாடுகையில் கடவுளின் ஆலய ஆராத
னைக்கென்று இவர்கள் எல்லாரும் தங்கள்
பிதாவுக்கு உதவிசெய்தார்கள்; ராஜா,
ஆசாப், எதுதூன், ஏமான் என்பவர்களால்
நடத்தப்பட்டு எல்லாம் நடந்தது. யெகோ 7
வாவைப் பாடும் பாட்டுகளைக் கற்று நிபுண
ரான அவர்கள் சகோதரரோடுங்கூட அவர்
கள் தொகை இருநூற்றெண்பத்தெட்டு.

அவர்களில் சிறியவனுக்கும் பெரியவ 8
னுக்கும், ஆசானுக்கும் மாணாக்கனுக்கும்,
சரிசமானமாய் முறை வரிசையைக் குறித்
துச் சீட்டுப்போட்டார்கள். முதலாவது 9
சீட்டு ஆசாப் வம்சத்தைச் சேர்ந்த யோசேப்
புக்கு விழுந்தது, இரண்டாவது கெதலியா
வுக்கு, அவன், அவன் சகோதரர், அவன்
குமாரர் எல்லாரும் பன்னிரண்டுபேர். மூன் 10
றாவது சக்கூருக்கு, அவன் குமாரரும்
அவன் சகோதரரும் உட்படப் பன்னி
ரண்டுபேர்; நான்காவது யிசெரிக்கு, அவன் 11
குமாரரும் அவன் சகோதரரும் உட்படப்
பன்னிரண்டுபேர்; ஐந்தாவது நெதனெயா 12
வுக்கு, அவன் குமாரரும் அவன் சகோதர
ரும் உட்படப் பன்னிரண்டுபேர்; ஆறாவது 13
புக்கீயாவுக்கு அவன் குமாரரும் அவன்
சகோதரரும் உட்படப் பன்னிரண்டுபேர்;

14 ஏழாவது எசரேலாவாவுக்கு, அவன் குமார
ரும் அவன் சகோதரரும் உட்படப் பன்னி
15 ரண்டுபேர்; எட்டாவது ஏசாயாவுக்கு,
அவன் குமாரரும் அவன் சகோதரரும் உட்
16 படப் பன்னிரண்டுபேர்; ஒன்பதாவது மத்
தனியாவுக்கு, அவன் குமாரரும் அவன்
சகோதரரும் உட்படப் பன்னிரண்டுபேர்;
17 பத்தாவது சிமேயிக்கு, அவன் குமாரரும்
அவன் சகோதரரும் உட்படப் பன்னி
18 ரண்டுபேர்; பதினொராவது அசாரியேலுக்கு,
அவன் குமாரரும் அவன் சகோதரரும் உட்
19 படப் பன்னிரண்டுபேர்; பன்னிரண்டாவது
கஷபியாவுக்கு, அவன் குமாரரும் அவன்
சகோதரரும் உட்படப் பன்னிரண்டுபேர்;
20 பதின்மூன்றுவது ஷூபாவேலுக்கு, அவன்
குமாரரும் அவன் சகோதரரும் உட்படப்
21 பன்னிரண்டுபேர்; பதினான்காவது மத்தித்தி
யாவுக்கு, அவன் குமாரரும் அவன் சகோ
22 தரரும் உட்படப் பன்னிரண்டுபேர்; பதி
னைந்தாவது யெரேமோத்துக்கு, அவன் குமா
ரரும் அவன் சகோதரரும் உட்படப் பன்
23 னிரண்டுபேர்; பதினாறுவது கனனியாவுக்கு,
அவன் குமாரரும் அவன் சகோதரரும் உட்
24 படப் பன்னிரண்டுபேர்; பதினேழாவது
யொஷ்பெகாஷாவுக்கு, அவன் குமாரரும்
அவன் சகோதரரும் உட்படப் பன்னிரண்டு
25 பேர்; பதினெட்டாவது கனானிக்கு, அவன்
குமாரரும் அவன் சகோதரரும் உட்படப்
26 பன்னிரண்டுபேர்; பத்தொன்பதாவது மலோ
த்தித்துக்கு, அவன் குமாரரும் அவன் சகோதர
27 ரும் உட்படப் பன்னிரண்டுபேர்; இருபதா
வது எலியாத்தாவுக்கு, அவன் குமாரரும்
அவன் சகோதரரும் உட்படப் பன்னிரண்டு
28 பேர்; இருபத்தோராவது ஒத்தீருக்கு, அவன்
குமாரரும் அவன் சகோதரரும் உட்படப்
29 பன்னிரண்டுபேர்; இருபத்திரண்டாவது
கிதல்தித்துக்கு, அவன் குமாரரும் அவன் சகோ
30 தரரும் உட்படப் பன்னிரண்டுபேர்; இரு
பத்துமூன்றுவது மகசியோத்துக்கு, அவன்
குமாரரும் அவன் சகோதரரும் உட்படப்
31 பன்னிரண்டுபேர்; இருபத்துநான்காவது
ரொமம்தியேசருக்கு, அவன் குமாரரும்
அவன் சகோதரரும் உட்படப் பன்னி
ரண்டுபேர்.

**26** வாசல் காவலாளரை வகுத்த பிரிவுகள்
இவைகளே: கோராகிய வம்சத்தானை
மெஷேலெம்யா, அவன் கோரேயின் குமா
ரன் ஆசாபின் புத்திரரைச் சேர்ந்தவன்.
2 மெஷேலெம்யாவுக்குக் குமாரர் பலர், மூத்த
வன் சகரியா, யெதிகவேல் இரண்டாவது,
செபதியா மூன்றுவது, யத்னியேல் நான்கா
3 வது, | ஏலாம் ஐந்தாவது, யோகனான் ஆறு
வது, எலியேயோனாய் ஏழாவது; ஒபேத் 4
ஏதோமுக்கும் குமாரர் பலர், மூத்தவன்
ஷெமாயா, யோசபாத் இரண்டாவது,
யோவாகு மூன்றுவது, சாகார் நாலாவது,
நெதனெயேல் ஐந்தாவது, | அம்மீயேல் 5
ஆறுவது, இசக்கார் ஏழாவது, பெயுல்லெ
தாயி எட்டாவது; கடவுள் அவனை ஆசீர்
வதித்திருந்தார். அவன் குமாரனாகிய ஷெமா 6
யாவுக்கும் குமாரர் பிறந்தார்கள், அவர்கள்
சாமர்த்தியமுள்ளவர்களாய்த் தங்கள் தகப்
பன் குடும்பத்தாரை ஆண்டுவந்தார்கள்;
ஷெமாயாவின் குமாரர் ஒத்னி, இவன் சகோ 7
தரர் ரெப்பாவேல், ஓபேத், எல்சாபாத்,
இவர்கள் சாமர்த்தியசாலிகள், எலிகூ, செம
கியா. இவர்களெல்லாரும் ஓபேத் ஏதோ 8
மின் சந்ததியார், அவர்களும் அவர்கள்
குமாரரும் அவர்கள் சகோதரரும் பணி
விடைக்குத் திறமையுள்ளவர்கள், சாமர்த்
தியசாலிகள்; ஓபேத் ஏதோமைச் சேர்ந்த
வர் அறுபத்திரண்டுபேர். மெஷேலெம்யா 9
வுக்கும் குமாரரும் சகோதரரும் பதினெட்
டுப்பேர் இருந்தார்கள், அவர்கள் சாமர்த்
தியசாலிகள். மெராரியின் வம்சத்தைச் 10
சேர்ந்த ஓசாவின் குமாரர், சிம்ரி தலைமை
யானவன்—இவன் மூத்தவனல்ல, எனி
னும் இவன் தகப்பன் இவனைத் தலைவனாக
வைத்தான்— | இல்க்கியா இரண்டாவது, 11
தெபலியா மூன்றுவது, சகரியா நான்கா
வது; ஓசாவின் குமாரர் சகோதரர் எல்
லாரும் பதின்மூன்றுபேர்.

தங்கள் சகோதரருக்கு நியமிக்கப்பட் 12
டதுபோலவே, வாசல்காவல் முறைகார
ருக்கு, அவர்கள் தலைவருக்கு, யெகோவா
வின் ஆலயத்தில் பணிவிடை செய்வதற்கு
அவர்கள் ஊழியம் நியமிக்கப்பட்டது.
சிறியவர் பெரியவர் என்னும் வித்தியாச 13
மின்றித் தங்கள் பிதாக்களின் வம்சத்தாரில்
இன்ன வாசலுக்கு இன்னசென்று சீட்டுப்
போட்டுக்கொண்டார்கள். கிழ்புற வாச 14
லுக்கு ஷெலெம்யாவுக்குச் சீட்டுவிழுந்தது;
விவேகமுள்ள ஆலோசனைக்காரனாகிய செ
கரியா என்னும் அவன் குமாரனுக்குச் சீட்
டுப்போட்டபோது அவனுக்குச் சீட்டு வட
புறத்திற்கு விழுந்தது. ஒபேத் ஏதோமுக் 15
குத் தென்புறத்திற்கும், அவன் குமாரருக்
குப் பண்டசாலைகளுக்கும், | சுப்பீமுக்கும் 16
ஓசாவுக்கும் மேற்புறவாசலுக்கும் வழி
யேறிவரும் இடத்திலுள்ள ஷல்லேகேத்
வாசலுக்கும் சீட்டுவிழுந்தது; அவர்கள்
காவலிருக்கவேண்டிய இடங்கள் அடுத்
தடுத்து இருந்தன. லேவியர் கிழக்கே ஆறு 17
பேரும், வடக்கே நாள்தோறும் நாலு

பேரும் தெற்கே காள்தோறும் காலுபேரும் பண்டசாலைகளில் இரண்டிரண்டுபேரும், |
18 மேற்புறத்தில் பர்வாரண்டையில் ஏறிவரும் வழியிலே நாலுபேரும், பர்வாரில் இருவ
19 ரும் வைக்கப்பட்டார்கள். கோராகிய வம் சத்தாரிலும் மெராரிய வம்சத்தாரிலும் நிய மிக்கப்பட்ட காவலாளர் பிரிவுகள் இவை களே.
20 மற்ற லேவியரில் அகியா கடவுளின் ஆலயக்கருவூலங்களையும், பரிசுத்தமான வற்றை வைத்திருக்கும் இடங்களையும்
21 பார்த்துவருவான். லாதானின் குமாரர், லாதானின் வழிவந்த கெர்சோனியர், கெர் சோனியனான லாதானின் வம்சத்திலே தலை
22 வர் யெகியேலியும், | யெகியேலியின் குமார ராகிய சேத்தாமும், அவன் சகோதரனாகிய யோவேலுமே; இவர்கள் யெகோவாவின் ஆலயக்கருவூலங்களை விசாரிக்கிறவர்கள்.
23 அம்ராமீயரிலும் யித்சேயாரியரிலும் கெப் ரோனியரிலும் ஊசியேலியரிலும் சிலர் அப்
24 படியே. மோசேயின் குமாரனாகிய கெர்சோ மின் சந்ததியான் செபுவேல் கருவூலப் பிர
25 தானி. எலியேசர் வழிவந்த அவன் சகோ தரர், இவன் குமாரன் ரெகபியாவும் இவன் குமாரன் ஏசாயாவும் இவன் குமாரன் யோரா மும் இவன் குமாரன் சிக்கிரியும் இவன்
26 குமாரன் செலோமோத்துமே. தாவீது ராஜாவும், ஆயிரவர் தலைவர் நூற்றுவர் தலைவரானவர்களின் வம்சத்தலைவரும் சேனை பதிகளும் பிரதிஷ்டைசெய்த பரிசுத்தமான வைகளை வைத்திருந்த பொக்கிஷங்களையெல் லாம் அந்த செலோமோத்தும் அவன் சகோ
27 தரருமே பார்த்துவந்தார்கள். யுத்தத்திலும் கொள்ளையிலும் எடுத்தவைகளை யெகோவா வின் ஆலயப் பரிபாலனத்துக்கென்று பிர
28 திஷ்டை செய்திருந்தார்கள். ஞானதிருஷ் டிகனாகிய சாமுவேலும், கீசின் குமாரனா கிய சவுலும், நேரின் குமாரனாகிய அப்னே ரும், செருயாவின் குமாரனாகிய யோவா புமும், அவரவர் பிரதிஷ்டைசெய்திருந்த அனைத்தும் செலோமோத்தின் பார்வைக் கும் அவன் சகோதரர் பார்வைக்கும் ஒப்பு விக்கப்பட்டன.
29 யித்சேயாரியரில் கெனனியாவும் அவன் குமாரரும் வெளிக்காரியங்களைப் பார்க்கும் படி நியமிக்கப்பட்டு இஸ்ரவேலில் தலைவ ரும் நியாயவிசாரணைக்காரருமாயிருந்தார்
30 கள். கெர்சோனியரில் கஷபியாவும் அவன் சகோதரருமாகிய ஆயிரத்து எழுநூறு சாமர்த்தியசாலிகள் யோர்தானுக்கு மேற்கே யுள்ள இஸ்ரவேலின்மேல் யெகோவாவின் எல்லா ஊழியத்தையும் ராஜாவின் வேலை
யையும் விசாரிக்க நியமிக்கப்பட்டார்கள்.
31 எப்ரோனியரிலே யெரீயா கெப்ரோனிய தலைமுறைகளுக்கும் வம்சங்களுக்கும் தலை வன்; தாவீது அரசாண்ட நாற்பதாம் வரு ஷத்திலே ஆராய்ச்சிசெய்தபோது அவர்க ளுக்குள் கிலெயாத் நாட்டு யாசேரிலே சாமர்த்தியசாலிகள் இருப்பதாகத் தெரிய
32 வந்தது. அவன் சகோதரராகிய இரண்டா யிரத்து எழுநூறு சாமர்த்தியசாலிகள் வம் சத்தலைவராயிருந்தார்கள்; கடவுளுக்கடுத்த சகல காரியங்களையும் ராஜாவுக்கடுத்த காரி யங்களையும் பார்த்துக்கொள்வதற்கென்று தாவீது ராஜா அவர்களை ரூபனியர்மேலும் காத்தியர்மேலும் மனாசேயின் பாதிக்கோத் திரத்தின்மேலும் நியமித்தான்.

27 வருஷமுழுவதும் மாதாமாதம் முறைப் படியே மாறி மாறி ராஜாவுக்குச் சேனைய சம்பந்தமான சேவைசெய்த தங்கள் இலக் கத்தின்படியேயுள்ள இஸ்ரவேல் புத்திரர், தங்கள் வம்சத்தலைவரும் ஆயிரவர் தலைவ ரும் நூற்றுவர் தலைவரும் மேல்விசாரணைக் காரரும் உட்பட இவர்களே; பிரிவுக்கு இருபத்துநாலாயிரம்பேர்.
2 முதலாவது மாதத்துக்குரிய முதல் பிரி வுக்குச் சப்தியேலின் குமாரன் யாஷோ பெயாம் தலைவன், அவன் பிரிவில் இருந்த
3 வர்கள் இருபத்துநாலாயிரம்பேர். அவன் பேரேசின் சந்ததியான், முதல் மாதப்பிரிவி லிருந்த சேனைபதிகள் அனைவருக்கும் தலை வன். இரண்டாவது மாதத்துக்குரிய பிரி
4 வுக்கு அகோகியனான தோதாயி தலைவன், இது அவன் பிரிவு, அதிலே மிக்லோத் பிரபுவுமிருந்தான், அவன் பிரிவில் இருந்த வர்கள் இருபத்துநாலாயிரம்பேர். மூன்று
5 வது மாதத்துக்குரிய மூன்றாம் சேனையப் பிரிவின் அதிபதி ஆசாரியனாகிய யோயாதா வின் குமாரன் பெனாயா, இவனே தலைவன்; அவன் பிரிவில் இருந்தவர்கள் இருபத்து நாலாயிரம்பேர். இந்தப் பெனாயா அந்த
6 முப்பது பராக்கிரமசாலிகளில் ஒருவன், அந்த முப்பதுபேர்களின் தலைவன்; அவன் பிரிவிலே அவன் குமாரனாகிய அமீச பாத்துமிருந்தான். நாலாவது மாதத்திற்
7 குரிய நாலாம் பிரிவுக்கு யோவாபின் சகோ தரனாகிய அசாகேல் தலைவன்; அவனுக்குப் பின்பு அவன் குமாரன் செபதியா தலைவனா னான், அவன் பிரிவில் இருந்தவர்கள் இரு பத்துநாலாயிரம் பேர். ஐந்தாவது மாதத்
8 திற்குரிய ஐந்தாம் பிரிவின் தலைவன் யிஸ்ரா கியனான சம்கூத்; அவன் பிரிவில் இருந்த வர்கள் இருபத்துநாலாயிரம்பேர். ஆறாவது 9 மாதத்திற்குரிய ஆறாம் பிரிவின் தலைவன்

தெக்கோவா ஊராளனை இக்கேஷின் குமாரன் ஈரா; அவன் பிரிவில் இருந்தவர்கள்
10 இருபத்துநாலாயிரம்பேர். ஏழாவது மாதத்திற்குரிய ஏழாம் பிரிவின் தலைவன் எப்பிராயீம் புத்திரரைச் சேர்ந்த பெலோனியனாகிய
கெலெத்ஸ்; அவன் வகுப்பில் இருந்தவர்
11 கள் இருபத்துநாலாயிரம்பேர். எட்டாவது மாதத்திற்குரிய எட்டாம் பிரிவின் தலைவன்
சேராகியரைச் சேர்ந்த கூஷாத்தியனாகிய சிபெக்காயி; அவன் பிரிவில் இருந்தவர்கள்
12 இருபத்துநாலாயிரம் பேர். ஒன்பதாவது மாதத்திற்குரிய ஒன்பதாம் பிரிவின் தலைவன்
பென்யமீனியரைச் சேர்ந்த அனதோத்து ஊராளனாகிய அபியேசர்; அவன் பிரிவில்
இருந்தவர்கள் இருபத்துநாலாயிரம்பேர்.
13 பத்தாவது மாதத்திற்குரிய பத்தாம் பிரிவின் தலைவன் சேராகியரைச்சேர்ந்த நெத்தோபாத்தியனாகிய மகராயி; அவன் பிரிவில்
இருந்தவர்கள் இருபத்துநாலாயிரம்பேர்.
14 பதினொராவது மாதத்திற்குரிய பதினொராம் பிரிவின் தலைவன் எப்பிராயீமியரைச்
சேர்ந்த பிரத்தோனியனாகிய பெனாயா;
அவன் பிரிவில் இருந்தவர்கள் இருபத்து
15 நாலாயிரம்பேர். பன்னிரண்டாவது மாதத்திற்குரிய பன்னிரண்டாம் பிரிவின் தலைவன்
ஒத்னியேல் சந்ததியைச் சேர்ந்த நெத்தோபாத்தியனாகிய கெல்தாயி; அவன் பிரிவில்
இருந்தவர்கள் இருபத்துநாலாயிரம்பேர்.
16 இஸ்ரவேல் கோத்திரங்களின் தலைவர்கள் இவர்களே: ரூபனியருக்குத் தலைவன் சிக்ரியின் குமாரன் எலியேசர்; சிமியோனியருக்கு மாக்காவின் குமாரன் செபத்தியா.
17 லேவியருக்குக் கேமுவேலின் குமாரன் கஷபியா; ஆரோன் சந்ததிக்குச் சாதோக்.
18 யூதாவுக்குத் தாவீதின் சகோதரரில் ஒருவனாகிய எலிகூ; இசக்காருக்கு மிகாவேலின் குமாரன் ஒம்ரி.
19 செபுலோனுக்கு ஒபதியாவின் குமாரன் யிஷ்மாயா; நப்தலிக்கு அஸ்ரியேலின் குமாரன் யெரீமோத். எப்பிராயீம்
20 புத்திரருக்கு அசியாவின் குமாரன் ஒசேயா; மனாசேயின் பாதிக்கோத்திரத்திற்குப் பெதாயாவின் குமாரன் யோவேல். கிலெயாத்திலுள்ள மனாசேயின் பாதிக்கோத்திரத்திற்குச்
21 சகரியாவின் குமாரன் யித்தோ; பென்யமீனுக்கு அப்னேரின் குமாரன் யாசியேல்.
22 தாணுக்கு யெரோகாமின் குமாரன் அசாரியேல்; இவர்கள் இஸ்ரவேல் கோத்திரங்களுக்குத் தலைவராயிருந்தார்கள்.
23 இருபது வயதுள்ளவர்களையும் அதற்குக் கீழ்ப்பட்டவர்களையும் தாவீது கணக்கிடவில்லை. இஸ்ரவேலை வானத்தின் நட்சத்திரங்களைப்போலப் பெருகப்பண்ணுவேன்
என்று யெகோவா சொல்லியிருந்தாரே.
24 செருயாவின் குமாரன் யோவாப் எண்ணத் துவக்கியும் முடிக்காதேபோனான்; எண்ணினதினிமித்தம் இஸ்ரவேலின்மேல் கடுங்
கோபம் வந்தது; ஆகவே அந்தத் தொகை தாவீது ராஜாவின் தினவர்த்தமானங்களிலே
இருக்கும் கணக்கில் எழுதப்படவில்லை.
25 ராஜாவுடைய பொக்கிஷங்களின்மேல் அதியேலின் குமாரன் அஸ்மாவேத்து விசாரணைக்காரனாயிருந்தான்; நாட்டுப்புறங்களிலே, ஊர்களிலும் கிராமங்களிலும் தருக்கங்களிலுமிருந்த பண்டசாலைகளின்மேல் உசியாவின் குமாரன் யோனத்தான்;
26 வயல்வெளிகளின் வேலைசெய்கிறவர்களின் மேல் கெலூபின் குமாரன் எஸ்ரி;
27 திராட்சத் தோட்டங்களின்மேல் ராமா ஊராளனாகிய சிமேயி; திராட்சத்தோட்டங்களிலே திராட்சரசம் வைக்கும் இடங்களின்மேல் ஷிப்மியனாகிய சப்தி;
28 ஒலிவமரங்களின்மேலும் சமபூமியிலுள்ள காட்டுக் காட்டத்திமரங்களின்மேலும் கெதேரியனாகிய பாகால்கானான்; எண்ணெய்க் கிடங்குகளின்மேல் யோவாஷ்;
29 சாரோனில் மேய்கிற மாடுகளின்மேல் சாரோனியனாகிய ஷித்ராயி; பள்ளத்தாக்குகளிலுள்ள மாடுகளின்மேல் அத்லாயின் குமாரன் ஷாப்பாத்து;
30 ஒட்டகங்களின்மேல் இஸ்மவேலியனாகிய ஒபீல்; கழுதைகளின்மேல் மெரொனோத்தியனாகிய யெக்தெயா;
31 ஆடுகளின்மேல் ஆகரியனாகிய யாசீசு; இவர்களெல்லாரும் தாவீது ராஜாவின் பொருள்களின்மேல் விசாரணைக்காரராயிருந்தார்கள்.
32 தாவீதின் பெரிய தகப்பனாகிய யோனதான் ஆலோசனைக்காரன்; இவன் புத்திசாலி, படிப்புள்ளவன். கக்மோனியின்
குமாரன் யெகியேல் ராஜகுமாரரைப் பார்த்து
33 வந்தவன். அகித்தோப்பேல் ராஜாவுக்கு ஆலோசனைக்காரன்; அற்கியனாகிய கூஷாய் ராஜாவின் தோழன்.
34 அகித்தோப்பேலுக்குப் பிற்பாடு பெனாயாவின் குமாரன் யோயாதாவும் அபியத்தாரும் ஆலோசனைக்காரராயிருந்தார்கள்; யோவாப் ராஜாவின் சேனாபதி.

28 கோத்திரங்களின் தலைவரும், ராஜாவைச் சேவிக்கிற பிரிவுகளின் தலைவரும், ஆயிரவர் தலைவரும், நூற்றுவர் தலைவரும் ராஜாவுக்கும் ராஜகுமாரருக்கும் உரிய சகல
பொருட்களையும் மிருகங்களையும் விசாரித்த தலைவருமாகிய இஸ்ரவேலின் சகல தலைவரையும் பிரதானிகள் பராக்கிரமசாலிகள்
சகல பராக்கிரமவீரர் இவர்களோடே தாவீது எருசலேமிலே கூடிவரச்செய்தான்.
2 அப்பொழுது தாவீது ராஜா எழுந்துநின்று:

என் சகோதரரே, என் ஜனமே, நான் சொல்
வதைக் கேளுங்கள்; யெகோவாவின் உடன்
படிக்கைப்பெட்டகமும் நமது கடவுளின்
பாதபடியும் தங்குவதற்கு ஒரு ஆலயத்தை
நானே கட்டவேண்டுமென்று என் மன
திலே நினைத்துக் கட்டுகிறதற்கு ஆயத்தமும்
3 பண்ணினேன். கடவுளோ என்னோடு பேசி:
நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்ட
வேண்டாம்; நீ யுத்தங்கள்செய்து அதிக
4 ரத்தம் சிந்தினவன் என்றார். இப்போதும்
இஸ்ரவேல் அனைத்தின்மேலும் என்றைக்
கும் ராஜாவாயிருக்க இஸ்ரவேலின் கடவு
ளாகிய யெகோவா என் தகப்பனுடைய
வீட்டார் அனைவரிலும் என்னையே தெரிந்
தெடுத்தார்; அவர் யூதாவைத் தலைமையா
கத் தெரிந்தெடுத்தார். யூதாவின் வம்சத்
தில் என் தகப்பன் குடும்பத்தைத் தெரிந்
தார்; முழு இஸ்ரவேலின்மேலும் ஒரு ராஜா
வை ஏற்படுத்த என் தகப்பனுடைய குமா
5 ரரிலே என்மேல் பிரியமானார். யெகோவா
எனக்கு அநேக குமாரரைத் தந்தருளி
னார்; இஸ்ரவேலை ஆளும் யெகோவா
வின் ராஜ்யபார சிங்காசனத்தின்மேல்
உட்காருவதற்கோ அவர் என்னுடைய
குமாரர் அனைவரிலும் என் குமாரனாகிய
6 சாலொமோனையே தெரிந்தெடுத்து | என்
னோடு பேசி: உன் குமாரனாகிய சாலொ
மோனே என் ஆலயத்தையும் ஏன்
பிராகாரங்களையும் கட்டுவான்; அவனையே
எனக்குக் குமாரனாகத் தெரிந்தெடுத்தேன்;
நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன்.
7 இந்நாளிற் போலவே அவன் என் கட்டளை
களின்படியும் என் தீர்ப்புகளின்படியும்
செய்துகொண்டே யிருப்பானானால் அவன்
ராஜ்யபாரத்தை என்றைக்குமாக நிலைக்கச்
8 செய்வேன் என்றார். யெகோவாவின் சபை
யாகிய முழு இஸ்ரவேலும் பார்க்கவும் நமது
கடவுள் கேட்கவும் நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன்; கேளுங்கள், உங்கள் கட
வுளாகிய யெகோவாவின் கட்டளைகளையெல்
லாம் கைக்கொண்டு ஆராயுங்கள், அப்ப
டிச் செய்வீர்களேயானால் இந்த நல்ல தே
சம் உங்களுக்குச் சொந்தமாகவேயிருக்கும்,
உங்களுக்குப் பின் அதை உங்கள் பிள்ளை
களுக்குச் சாஸ்வத சுதந்தரமாகவும் விட்டுப்
9 போவீர்கள். இப்போதும் என் குமாரனா
கிய சாலொமோனே, நீ உன் பிதாவின் கட
வுளை அறிந்து மனமுவந்து முழு இருதயத்
தோடும் அவரைச் சேவி; யெகோவா சகல
இதயங்களையும் ஆராய்பவர், நினைவுகள்
உத்தேசங்கள் எல்லாவற்றையும் அறிபவர்,
நீ அவரைத் தேடுவாயானால் அவர் உனக்கு
வெளிப்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால்
அவர் உன்னை என்றைக்குமாகத் தள்ளிவிடு
வார். இப்போதும் கவனித்துக்கொள், 10
பரிசுத்த ஸ்தலமாக ஒரு ஆலயத்தைக் கட்டு
வதற்கு யெகோவா உன்னையே தெரிந்தெ
டுத்தார். மனோபலங்கொண்டு நீ அதைச்
செய்துமுடி என்று சொன்னார்.

முகப்பு மண்டபம், ஆலயக் கட்டடங் 11
கள், அதின் பண்டசாலைகள், மேல் அறை
கள், உள் அறைகள், கிருபாசனத்தை
வைக்கும் இடம் ஆகிய இவற்றையும் |
தன் மனதில் நிதானித்தபடியே யெகோவா 12
வின் ஆலயப் பிராகாரங்கள், சுற்றறைகள்,
கடவுளின் ஆலயக் கருவூலங்கள், பரிசுத்த
பொருட்களை வைக்கும் பொக்கிஷசாலைகள்
ஆகிய இவற்றையும் அமைக்கவேண்டிய
மாதிரியைத் தாவீது தன் குமாரனாகிய
சாலொமோனுக்கு வரைந்து காட்டினார்.
ஆசாரியர் லேவியர் இவர்கள் முறை வகுப் 13
பதைப்பற்றியும் யெகோவாவின் ஆலய
ஆராதனைக்குரிய வேலை அனைத்தையும்பற்றி
யும் யெகோவாவின் ஆலய ஆராதனைக்
குரிய பணிமுட்டுகள் அனைத்தையும்பற்றி
யும் கட்டளை கொடுத்தான். வெவ்வேறான 14
ஆராதனைகளில் உபயோகிக்கவேண்டிய
பொற்பாத்திரங்கள் அனைத்திற்கும் வேண்
டிய பொன்னின் நிறை இவ்வளவு என்ப
தையும் வெவ்வேறான ஆராதனைகளில் உப
யோகிக்கவேண்டிய வெள்ளிப் பாத்திரங்கள்
அனைத்திற்கும் வேண்டிய வெள்ளியின்
நிறை இவ்வளவு என்பதையும் விவரித்துச்
சொன்னார். ஒவ்வொரு பொன் விளக்குத் 15
தண்டுக்கும் அதின் விளக்குகளுக்கும் இவ்
வளவென எல்லாப் பொன் விளக்குத்தண்
டுகளுக்கும் அவைகளின் பொன் விளக்கு
களுக்கும் வேண்டிய பொன்னின் நிறையை
யும், வெள்ளி விளக்குத்தண்டுகளில் ஒவ்
வொரு விளக்குத்தண்டுக்கும் அதின் விளக்
குகளுக்கும் அந்தந்த விளக்கின் உபயோகத்
துக்குத் தக்கபடி வேண்டிய வெள்ளியின்
நிறையையும், | மேசை ஒன்றுக்கு இவ்வ 16
ளவெனத் திருச்சமுகத்தப்பங்களை வைக்
கும் மேசைகளுக்கெல்லாம் வேண்டிய
பொன்னின் நிறையையும், வெள்ளி மேசை
களுக்கு வேண்டிய வெள்ளியின் நிறையை
யும், | முள்ளுகளுக்கும் கலங்களுக்கும் 17
கிண்ணங்களுக்கும் வேண்டிய பசும்பொன்
னின் நிறையையும், பொற்கரகங்களில் ஒவ்
வொரு கரகத்துக்கும் வேண்டிய நிறையை
யும், வெள்ளிக்கரகங்களில் ஒவ்வொரு கர
கத்துக்கும்வேண்டியநிறையையும், | தூபங் 18
காட்டும் பீடத்திற்கு வேண்டிய புடமிடப்

பட்ட பொன்னின் நிறையையும் குறித்
தான்; செட்டைகளே விரித்து யெகோவா
வின் உடன்படிக்கைப்பெட்டகத்தை மூடும்
பொன் கேரூபுகளான வாகனத்தின் மாதிரி
19 யையும் வரைந்து காட்டினான். இத்தமாதி
ரியாகக் காட்டப்பட்ட வேலைகளையெல்லாம்
யெகோவா தாமே தமது கரத்தினால் எழுதி
எனக்குத் தெரியப்படுத்தினார் என்றான்.
20 பின்னும் தாவீது தன் குமாரனாகிய சா
லொமோனோடு பேசி: நீ மனோபலங்கொ
ண்டு தைரியமாயிருந்து, இதைச் செய்து
முடி; நீ பயப்படாதே, கலங்காதே; கடவு
ளாகிய யெகோவா என்னும் என் கடவுள்
உன்னோடிருப்பார்; யெகோவாவின் ஆலயத்
தினிலே ஆராதனைசெய்வதற்கு வேண்டிய
வேலையையெல்லாம் நீ முடித்துத் தீருமட்
டும் அவர் உன்னை விட்டு விலகு
வதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை;
21 கடவுளின் ஆலயப் பணிவிடைக்கெல்லாம்
ஆசாரியர் லேவியருடைய முறை வகுப்பு
கள், இதோ, இருக்கின்றன; செய்யவேண்டிய
எல்லா வேலைக்கும் ஆட்கள் உன்னோடிருக்
கிறார்கள்; அவர்கள் எல்லாரும் சகல
தொழில்களிலும் நிபுணர், மனப்பூர்வமாய்
வேலைசெய்பவர்கள்; தலைவரும் சகல ஜனங்
களும் உன் சொற்படியெல்லாம் செய்யக்
காத்திருக்கிறார்கள் என்று சொன்னான்.

**29** பின்பு தாவீது ராஜா சபையனைத்தையும்
பார்த்துப் பேசி: கடவுள் தெரிந்தெடுத்த
என் குமாரனாகிய சாலொமோன் இன்னும்
சிறுவனும் இளைஞனுமாயிருக்கிறான்; செய்
யவேண்டிய வேலையோ பெரியது; அது
ஒரு மனுஷனுக்கல்ல, கடவுளாகிய யெகோ
2 வாவுக்குக் கட்டும் அரமனை. நான் என்
னாலே இயன்றமட்டும் என் கடவுளின்
ஆலயத்துக்கென்று பொன்வேலைக்குப் பொ
ன்னையும், வெள்ளிவேலைக்கு வெள்ளியை
யும், செம்புவேலைக்குச் செம்பையும், இரும்
புவேலைக்கு இரும்பையும், மரவேலைக்கு
மரத்தையும், கோமேதகக்கற்கள், பதிக்கும்
கற்கள், கருநீலக்கற்கள், பலவருணக் கற்
கள் ஆகிய விலையுயர்ந்த சகலவித ரத்தினங்
களையும், வெண்கற்பாளங்களையும் ஏராளமா
3 கச் சேர்த்துவைத்தேன். நான் என் கடவு
ளின் ஆலயத்தின்மேல் கொண்ட ஆசையி
னாலே பரிசுத்த ஆலயத்துக்கென நான்
சேர்த்த அனைத்தோடுங்கூட எனக்குச்
சொந்தமான பொன்னையும் வெள்ளியையும்
என் கடவுளின் ஆலயத்துக்கென்றே கொ
4 டுத்துவிட்டேன்; நான் கொடுத்தது ஓப்பீ
ரின் தங்கமாகிய மூவாயிரம் தாலந்து தங்க
மும் சுத்தவெள்ளியாகிய ஏழாயிரம் தால
ந்து வெள்ளியுமாம். இவற்றைக் கட்டடத்
தின் சுவர்களே மூடுவதற்கென்றும், பொன்
வேலைக்குப் பொன்னும், வெள்ளி வேலைக்கு
வெள்ளியும் இருப்பதற்கென்றும், கம்மா
ளர் செய்யும் வேலை அனைத்திற்கென்றும்
கொடுத்துவிட்டேன். இப்போதும் உங்க 5
ளில் யார் இன்றையதினம் யெகோவாவுக்குக்
கைநிறைந்த காணிக்கைகளைச் செலுத்து
வான் என்றான்.

அப்பொழுது வம்சத்தலைவரும் இஸ்ர 6
வேல் கோத்திரத்தலைவரும் ஆயிரவர் தலை
வரும் நூற்றுவர் தலைவரும் ராஜசேவைத்
தலைவரும் மனப்பூர்வமாய்க் கொண்டுவந்
தார்கள். கடவுளின் ஆலயத்துக்குரிய 7
வேலைக்கென்று ஐயாயிரம் தாலந்து பொன்
னையும் பதினாயிரம் அதர்கோனையும் பதினா
யிரம் தாலந்து வெள்ளியையும் பதினெண்
ணாயிரம் தாலந்து செம்பையும் லட்சம்
தாலந்து இரும்பையும் கொடுத்தார்கள்.
ரத்தினங்களை வைத்திருந்தவர்கள் அவைக 8
ளையும் யெகோவாவின் ஆலயப் பொக்கிஷத்
திற்கென்று கெர்சோனியனான யெகியேலின்
வசம் கொடுத்தார்கள். இப்படி மனப்பூர் 9
வமாய்க் கொடுத்ததுபற்றி ஜனங்கள் சந்
தோஷப்பட்டார்கள்; மனதார சந்தோஷ
மாய் யெகோவாவுக்குக் கொடுத்தார்கள்;
தாவீது ராஜாவும் ஆனந்த சந்தோஷங்கொ
ண்டான்.

ஆகவே தாவீது முழுச்சபைக்கும் எதிரே 10
யெகோவாவுக்கு ஸ்தோத்திரம் செலுத்தி:
எங்கள் பிதாவாகிய இஸ்ரவேலின் கட
வுளே, யெகோவாவே, தேவரீரே அநாதியாய்
என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும்
ஸ்தோத்திரத்திற்குரியவர். யெகோவாவே, 11
மேன்மை, வல்லமை, மகிமை, மாட்சிமை,
மகத்துவம் உமக்கேயுரியன, வானத்திலும்
பூமியிலும் உள்ளனவெல்லாம் உமக்கே
யுரியன, யெகோவாவே, ராஜ்யமும் உமக்
குரியது, தேவரீரே எல்லாருக்கும் தலைவ
ராய் உயர்ந்திருக்கிறீர். ஐசுவரியமும் கன 12
மும் வருவது உம்மாலேயே, தேவரீர் எல்
லாவற்றையும் ஆளுபவர், உமது கரத்திலே
சக்தியும் வல்லமையும் உண்டு; எவரையும்
மேன்மைப்படுத்துவதும் பலப்படுத்துவதும்
உமது கரமே. இப்போதும் எங்கள் கட 13
வுளே, நாங்கள் உமக்கு நன்றி செலுத்தி
ரோம், உமது மகிமையுள்ள திருநாமத்தைப்
புகழுகிறோம். இப்படி மனப்பூர்வமாய்க் 14
கொடுக்கும் திறமை எங்களில் இல்லை; நான்
எம்மாத்திரம்? என் ஜனம் எம்மாத்திரம்?
எல்லாம் உம்மாலே உண்டானது; நாங்கள்
உமக்குக் கொடுத்தது உமது கரத்தில் பெற்

15 றதே. உமக்கு முன்பாக நாங்கள் எங்களுடைய பிதாக்கள் எல்லாரையும்போல அந்நியரும் பரதேசிகளுமாயிருக்கிறோம்; நாங்கள் பூமியிலே ஜீவிக்கும் நாட்கள் 16 நிழல்போன்றதே; நம்பிக்கையில்லை. எங்கள் கடவுளாகிய யெகோவாவே, உமது பரிசுத்த நாமத்திற்கென்று உமக்கு ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்கு நாங்கள் குவித்திருக்கிற இந்தப் பொருள்கள் எல்லாம் உமது கரத்திலிருந்து வந்ததே; எல்லாம் 17 உம்முடையதே. என் கடவுளே, நீர் இதயங்களை ஆராய்ந்து நேர்மை குணத்தில் பிரியங்கொள்பவர், இது எனக்குத் தெரியும்; இவற்றையெல்லாம் நான் நேர்மையான இருதயத்தோடு மனப்பூர்வமாய்க் கொடுத்தேன்; இப்பொழுது இங்கேயிருக்கிற உமது ஜனமும் உமக்கு மனப்பூர்வமாய்க் கொடுப்பதைக் கண்டு சந்தோஷித் 18 தேன். ஆபிரகாம் ஈசாக்கு இஸ்ரவேல் என்னும் எங்கள் பிதாக்களின் கடவுளே, யெகோவாவே, உமது ஜனத்தின் இதயத்தில் உண்டாயிருக்கிற இந்த நினைவையும் எண்ணத்தையும் என்றைக்கும் காத்தருளும், அவர்கள் இதயத்தை உமக்கு நேர்ப்படுத்தி 19 யருளும். என் குமாரனாகிய சாலொமோன் உமது கட்டளைகளையும் உமது சாட்சியங்களையும் உமது நியமங்களையும் கைக்கொள்ளும்படிக்கும், எல்லாவற்றையும் செய்து நான் ஆயத்தம்பண்ணின இந்த அரமனையைக் கட்டி முடிக்கும்படிக்கும், அவன் ஒரே மனதாயிருக்கும்படி செய்தருளும் என்று பிரார்த்தித்தான்.

20 அதின் பின்பு தாவீது முழுச் சபையையும் பார்த்து, உங்கள் கடவுளாகிய யெகோவாவை ஸ்தோத்திரியுங்கள் என்று சொல்லவே சபையார் எல்லாரும் தங்கள் பிதாக்களின் கடவுளாகிய யெகோவாவை ஸ்தோத்திரித்தார்கள்; பின்பு அவர்கள் குனிந்து யெகோவாவையும் ராஜாவையும் பணிந்து 21 கொண்டு | யெகோவாவுக்குப் பலிசெலுத்தினார்கள், மறுநாளிலே தகனபலிகளாக ஆயிரம் காளைகளையும் ஆயிரம் ஆட்டுக்கடாக்களையும் ஆயிரம் ஆட்டுக்குட்டிகளையும் அவைகளுக்குரிய பானபலிகளையும் யெகோவாவுக்குச் செலுத்தினார்கள்; அவற்றோடுகூட முழு இஸ்ரவேலுக்காகவும் ஏராளமான பலிகளைச் செலுத்தினார்கள். அவர்கள் அன்றையதினம் மிகுந்த சந்தோ 22 ஷத்தோடே யெகோவாவுக்கு முன்பாகப் போஜனபானம்பண்ணித் தாவீதின் குமாரனாகிய சாலொமோனை இரண்டாம் விசை ராஜாவாக்கி யெகோவாவின் சந்நிதியில் அவனை அதிபதியாகவும் சாதோக்கை ஆசாரியனாகவும் அபிஷேகம்பண்ணினார்கள். அப்படியே சாலொமோன் தன் தகப்பனா 23 கிய தாவீதின் ஸ்தானத்திலே யெகோவாவின் சிங்காசனத்தில் ராஜாவாய் வீற்றிருந்து சித்தியடைந்தான்; இஸ்ரவேலர் எல்லாரும் அவன் சொல்லுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்கள். சகல பிரபுக்களும் பராக்கிரமவீரரும் 24 தாவீது ராஜாவின் சகல குமாரருங்கூட ராஜாவாகிய சாலொமோனுக்கு அடங்கியிருந்தார்கள். சகல இஸ்ரவேலருக்குமுன் 25 பாக யெகோவா சாலொமோனை மிகவும் பெரியவனாக்கினார்: இஸ்ரவேலில் அவனுக்கு முன்னே ராஜாவான எவனுக்கும் இல்லாதிருந்த ராஜமகத்துவத்தை அவனுக்குக் கட்டளையிட்டார்.

ஈசாயின் குமாரனாகிய தாவீது இஸ்ர 26 வேல் அனைத்துக்கும் ராஜாவாயிருந்தான். அவன் இஸ்ரவேலை அரசாண்டகாலம் நாற் 27 பது வருஷம், எப்பெரோனிலே ஏழுவருஷம், எருசலேமிலே முப்பத்துமூன்று வருஷம். அவன் பூரண ஆயுசும் ஐசுவரிய 28 மும் மகிமையுமுள்ளவனாய் நல்ல முதிர் வயதிலே மரணமடைந்தான்; அவன் குமாரனாகிய சாலொமோன் அவன் ஸ்தானத்திலே அரசாண்டான். தாவீது ராஜாவின் ஆதி 29 யோடந்தமான சங்கதிகள், இதோ, ஞானதிருஷ்டிகனாகிய சாமுவேலின் வர்த்தமானத்திலும், தீர்க்கதரிசியாகிய நாத்தானின் வர்த்தமானத்திலும், ஞானதிருஷ்டிகனாகிய காத்தின் வர்த்தமானத்திலும் எழுதப்பட்டிருக்கின்றன. அவன் அரசாட்சியின் சகல 30 விவரங்களும் அவன் பராக்கிரமும் அவனுக்கும் இஸ்ரவேலுக்கும் மற்ற சகல ராஜ்யங்களுக்கும் தேசங்களுக்கும் சம்பவித்த காரியங்களும் அவற்றிலே காணப்படுகின்றன.

# II. CHRONICLES

# தினவர்த்தமானம்

## இரண்டாம் பாகம்

1 தாவீதின் குமாரனாகிய சாலொமோன் தன் ராஜ்யத்திலே பலங்கொண்டான்; அவன் கடவுளாகிய யெகோவா அவனோடிருந்து 2 அவனை மிகவும் பெரியவனாக்கினார். சாலொமோன் ஆயிரவர் தலைவர், நூற்றுவர் தலைவர், நியாயாதிபதிகள், இஸ்ரவேல் எங்கும் முள்ள வம்சத்தலைவரான சகல பிரபுக்கள் ஆகிய இஸ்ரவேலர் அனைவரையும் கூப்பிட் 3 டான். சாலொமோனும் அவனோடே கூடச் சபையார் அனைவரும் கிபியோனி 4 லிருந்த மேடைக்குப் போனார்கள். யெகோவாவின் ஊழியனான மோசே வனாந்தரத்திலே செய்த கடவுளின் தரிசனக்கூடாரம் அங்கே இருந்தது; கடவுளின் பெட்டகத்தையோ தாவீது கீரியாத்யெயாரீமிலிருந்து அதற்கென ஆயத்தம்பண்ணின இடத்துக்குக் கொண்டுவந்தான்; எருசலேமிலேயே அவன் அதற்குக் கூடாரம்போட்டிருந் 5 தான். கூரின் புத்திரனாகிய ஊரியின் குமாரன் பெசலெயேல் செய்த செப்புப் பலிபீடமும் கிபியோனில் யெகோவாவின் வாசஸ்தலத்திற்கு எதிரே இருந்தது; சாலொமோனும் சபையாரும் யெகோவாவினிடம் 6 விசாரித்தார்கள். அங்கே சாலொமோன் யெகோவாவின் சந்நிதியில் தரிசனக்கூடாரத்தண்டையிலிருந்த செப்புப் பலிபீடத்திற்குப்போய் அதின்மேல் ஆயிரம் தகனபலிகளைச் செலுத்தினான்.

7 அன்று இரவே கடவுள் சாலொமோனுக்குத் தரிசனமாகி, நீ விரும்புகிறதை என்னி 8 டத்தில் கேள் என்று சொல்லச் | சாலொமோன் கடவுளினிடம்: தேவரீர் என் தகப்பனாகிய தாவீதுக்குப் பெரிய தயை பாராட்டினீர், என்னை அவன் ஸ்தானத்திலே ராஜா 9 வாக்கினீர். இப்போதும் கடவுளாகிய யெகோவாவே, நீர் என் தகப்பனாகிய தாவீதுக்கு அருளின உமது வாக்கு உறுதிப்படுவதாக; தேவரீர் பூமியின் தூளத்தினை ஏராளமான ஜனத்தின்மேல் என்னை ராஜாவாக்கினீர். இப்போதும் இந்த ஜனம் போதும் போதும் வரும்போதும் நான் அவர்களுக்கு முன்செல்ல எனக்கு ஞானத்தையும் அறிவையும் தந்தருளும்; உமது பெரிய ஜனமாகிய இவர்களை நியாயம் விசாரிக்கத்தக்கவன் யார் என்று பிரார்த்தித்தான். 10 11 அப்பொழுது கடவுள் சாலொமோனோடு பேசி: இதுவே உன் இருதயத்தில் இருந்தபடியானும், நீ ஐசுவரியத்தையும் செல்வத்தையும் கனத்தையும் உன் சத்துருக்களின் பிராணனையும் தீர்க்காயுசையும் கேளாமல், நான் உன்னை அரசாளப்பண்ணின என் ஜனத்தை நியாயம் விசாரிப்பதற்கு வேண்டிய ஞானத்தையும் அறிவையும் நீ கேட்டபடியினாலும் | ஞானமும் அறிவும் தருவதுமல்லாமல், 12 உனக்கு முன்னிருந்த ராஜாக்களுக்காகிலும் உனக்குப் பின்வரும் ராஜாக்களுக்காகிலும் இல்லாத ஐசுவரியத்தையும் செல்வத்தையும் கனத்தையும் உனக்குத் தருவேன் என்றார். இப்படியாகச் சாலொமோன் கிபி 13 யோனிலிருந்த மேடைக்குப் போய்த் தரிசனக்கூடாரத்தின் சந்நிதியிலிருந்துவிட்டு எருசலேமுக்கு வந்து இஸ்ரவேலை அரசாண்டான்.

சாலொமோன் ரதங்களையும் குதிரைவீரர் 14 களையும் சேர்த்தான்; அவனுக்கு ஆயிரத்து நானூறு ரதங்கள் இருந்தன; பன்னீராயிரம் குதிரை வீரரும் இருந்தார்கள்; ரதங்களை நிறுத்திவைக்கும் ஊர்களிலும் எருசலேமிலே தன்னிடத்திலும் அவைகளை வைத்திருந்தான். எருசலேமிலே ராஜா வெள்ளி 15 யையும் பொன்னையும் கற்களைப்போலவும், கேதுரு மரங்களைச் சமனிலநாட்டுக் காட்டத்தி மரங்கள்போலவும் திரளாக்கிச் சாதாரண வஸ்துக்களாகச்செய்தான். சாலொ 16 மோனுக்கு இருந்த குதிரைகள் எகிப்திலிருந்து கொண்டுவரப்பட்டன; ராஜாவின் வர்த்தகர் கூட்டங் கூட்டமாகச் சென்று அவற்றைக் கூட்டம் கூட்டமாய் விலை

17 மதித்து வாங்கி வருவார்கள். அவர்கள் எகிப்திலிருந்து ஒரு ரதத்தை அறுநூறு வெள்ளிக்காசுக்கும் ஒரு குதிரையை நூற்றைம்பது வெள்ளிக்காசுக்கும் வாங்கிவருவார்கள்; இந்தப் பிரகாரம் ஏத்தியரின் சகல ராஜாக்களுக்கும் சீரியாவின் ராஜாக்களுக்கும் அவர்கள் மூலமாகவே கொண்டு வரப்பட்டன.

**2** சாலொமோன் யெகோவாவின் நாமத்திற்கு ஒரு ஆலயத்தையும் தனக்கு ஒரு ராஜ அரமனையையும் கட்டக் கட்டளையிட்டுச் | 2 சுமை சுமப்பதற்கு எழுபதினாயிரம்பேரையும் மலையில் கல் வெட்டுவதற்கு எண்பதினாயிரம் பேரையும், இவர்களைப் பார்த்துக் கொள்வதற்கு மூவாயிரத்து அறுநூறுபேரையும் எண்ணி ஏற்படுத்தினான்.

3 தீருவின் ராஜாவாகிய ஊராமினிடம் ஆள் அனுப்பி: என் தகப்பனாகிய தாவீது தாம் வசிப்பதற்கு ஒரு அரமனையைக் கட்டிக்கொள்ளும்படி நீர் அவருக்குக் கேதுரு மரங்களை அனுப்பினீரே, அவருக்குச் செய்ததுபோல எனக்கும் செய்யும்படி கேட் 4 கிறேன்; இதோ, நான் என் கடவுளாகிய யெகோவாவின் நாமத்திற்கு ஒரு ஆலயத்தைக் கட்டப்போகிறேன்; அவர் சந்நிதியில் சுகந்தவர்க்கங்களின் தூபம் காட்டுவதற்கும், எப்போதும் இருக்கும்படி திருச்சமுகத்தப்பங்களை வைப்பதற்கும், காலையிலும் மாலையிலும் ஓய்வுநாட்களிலும் மாதப் பிறப்புகளிலும் எங்கள் கடவுளாகிய யெகோவாவின் உற்சவங்களிலும் தகனபலிகளைச் செலுத்துவதற்கும்—இவையெல்லாம் இஸ்ரவேலுக்கு நித்தியநியமமாகக் குறிக்கப்பட்டவை—அந்த ஆலயத்தை அவருடைய திருநாமத்திற்குப் பிரதிஷ்டை செய்ய 5 வேண்டும். நான் கட்டப்போகிற ஆலயம் பெரிதாயிருக்கவேண்டும், எங்கள் தெய்வம் 6 எல்லாத் தேவர்களிலும் பெரியவர். அவருக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட வல்லவன் யார்? வானங்களும் வானாதிவானங்களும் அவரைக் கொள்ளாதே, அவர் சந்நிதியில் தூபங்காட்டுவதற்கே ஒழிய அவர் வசிப்பதற்கென ஆலயம் கட்டுவதற்கு நான் எம் 7 மாத்திரம்? இப்போதும் சாமர்த்தியசாலியான ஒருவனை என்னிடம் அனுப்பும், இவன் பொன், வெள்ளி, செம்பு, இரும்பு இவற்றிலும் இரத்தாம்பரநூல், சிவப்புநூல், இளநீல நூல் இவற்றிலும் வேலைசெய்யும் நிபுணனுகவும் சித்திரவேலை தெரிந்தவனுகவும் இருக்கவேண்டும். என் தகப்பனாகிய தாவீது ஏற்படுத்தினவர்களும் என்னிடம் யூதாவிலும் எருசலேமிலும் இருக்கிறவர்களுமாகிய சாமர்த்தியசாலிகளோடு சேர்ந்து அவன் வேலை செய்யவேண்டும். லீபனோனிலிருந்து கேதுரு மரங்களையும் தேவதாரு மரங்களையும் அலகும் மரங்களையும் எனக்கு அனுப்பும்; உமது வேலைக்காரர் லீபனோனின் மரங்களை வெட்டப் பழகினவர்களென்பது எனக்குத் தெரியும்; என் வேலையாட்கள் உமது வேலையாட்களோடே இருப்பார்கள். எனக்கு ஏராளமான மரங் 9 களை ஆயத்தம்பண்ணவேண்டும், நான் கட்டப்போகிற ஆலயம் பெரியதும் ஆச்சரியப் படத்தக்கதுமாயிருக்கும். அந்த மரங்களை 10 வெட்டுகிற வேலைக்காரருக்கு இருபதினாயிரம் மரக்கால் கோதுமையையும் இருபதினாயிரம் மரக்கால் வாற்கோதுமையையும் இருபதினாயிரம்குடம் திராட்சரசத்தையும் இருபதினாயிரம்குடம் எண்ணெயையும் கொடுப்பேன் என்று சொல்லி அனுப்பினான்.

அப்பொழுது தீருவின் ராஜாவாகிய 11 ஊராம் சாலொமோனுக்குப் பதில் எழுதி: யெகோவா தமது ஜனத்தை நேசித்தபடியால் உம்மை அவர்கள்மேல் ராஜாவாக வைத்தார் என்று சொல்லிப் பின்னும்: வானத்தையும் பூமியையும் படைத்த இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா புகழப்படுக; யெகோவாவுக்கு ஒரு ஆலயத்தையும் தனக்கு ஒரு ராஜ அரமனையையும் கட்டும்படி, ஞானமும் விவேகமுமுள்ள புத்திசாலியான ஒரு குமாரனை அவர் தாவீது ராஜாவுக்குக் கொடுத்தாரே. இப்போதும் 13 ஞானமும் புத்தியுமுள்ள ஒருவனை, ஊராம் அபி என்பவனை, அனுப்புகிறேன். அவன் 14 தானின் குமாரத்திகளில் ஒரு ஸ்திரீயின் குமாரன்; அவன் தகப்பன் தீருதேசத்தான்; அவன் பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, கல், மரம், இரத்தாம்பர நூல், இளநீல நூல், மெல்லிய வெள்ளை நூல், சிவப்பு நூல் இவற்றில் வேலை செய்யவும், சகலவித சித்திரவேலைகளையும் செய்யவும் தெரிந்தவன்; விசித்திரமான நெசவு வேலை எது வேண்டுமென்று கேட்டாலும் அவன் செய்வான், உம்மிடமுள்ள சாமர்த்தியசாலிகளோடும் என் ஆண்டவனுகிய உமது தகப்பன் தாவீதினிடமிருந்த சாமர்த்தியசாலிகளோடும் சேர்ந்து அவ்வேலைகளையெல்லாம் செய்வான். ஏன் ஆண்டவன் தாம் சொன்ன 15 படியே கோதுமையையும் வாற்கோதுமையையும் எண்ணெயையும் திராட்சரசத்தையும் தமது ஊழியருக்கு அனுப்புவாராக. உமக்குத் தேவையான மரங்களையெல்லாம் 16 நாங்கள் லீபனோனிலே வெட்டி, அவை

கனைத் தெப்பங்களாகக் கட்டிக் கடல்வழியாய் உம்மிடம் யோப்பாமட்டும் கொண்டுவருவோம்; பிற்பாடு நீர் அவைகளை எருசலேமுக்குக் கொண்டுபோகலாம் என்று எழுதி அனுப்பினான்.

17 தன் தகப்பனாகிய தாவீது எண்ணித் தொகையிட்டது போலவே சாலொமோனும் இஸ்ரவேல் தேசத்திலிருந்த அந்நியரையெல்லாம் எண்ணித் தொகையிட்டான்; அவர்கள் லட்சத்து ஐம்பத்து மூவாயிரத்து
18 அறுநூறுபேர் எனத் தெரியவந்தது. இவர்களில் எழுபதினாயிரம்பேரைச் சுமைசுமக்கவும் எண்பதினாயிரம்பேரை மலையிலே கல்வெட்டவும் ஏற்படுத்தினான்; இனங்கள் சரியாய் வேலை செய்யும்படி பார்த்துக்கொள்வதற்கு மூவாயிரத்து அறுநூறுபேரை ஏற்படுத்தினான்.

**3** பின்பு சாலொமோன் எருசலேமிலே யெகோவாவின் ஆலயத்தைக் கட்டத் துவக்கினான்; அவன் கட்டின இடம், யெகோவா தாவீதுக்குத் தரிசனமானதும் தாவீது ஆயத்தஞ்செய்திருந்ததுமான மோரியா மலையிலுள்ள எபூசியனான ஒர்னானின் களமே.
2 தன் அரசாட்சியின் நாலாம் வருஷம் இரண்டாம்மாதம் இரண்டாம் தேதியிலே
3 கட்டத்தொடங்கினான். கடவுளின் ஆலயத்தைக் கட்டுவதற்குச் சாலொமோன் போட்ட அஸ்திபாரம் முற்காலத்து அளவின்படியே அறுபதுமுழ நீளம், இருபது
4 முழ அகலம். முகப்பிலிருந்த மண்டபம் ஆலயத்தின் அகலத்திற்குச் சரியாக இருபது முழம், அதன் உயரம் நூற்றிருபது முழம்; அதின் உட்புறத்தைப் பசும்பொன்தகட்டால் மூடினான்.
5 ஆலயத்தின் பெரிய பாகத்தைத் தேவதாரு பலகைகளினால் மூடிப் பசும்பொன்தகடு போட்டு அதின்மேல் பேரீந்துகளையும்
6 சங்கிலிகளையும் சித்திரித்துக் | கோவிலை ரத்தினங்கள் இழைத்து அலங்கரித்தான்; உப
7 யோகித்த பொன் பர்வாயீம் பொன். கோவிலின் உத்திரங்களையும் நிலைகளையும் சுவர்களையும் கதவுகளையும் பொன்தகட்டால் மூடிக் கொத்துவேலையாய்ச் சுவர்களிலே கேரூபுகளைச் சித்திரவேலையாகச் செதுக்கினான்.
8 மகா பரிசுத்த ஸ்தலமாகிய பாகத்தையும் கட்டினான்; அதின் நீளம் ஆலயத்தின் அகலத்திற்குச் சரியாக இருபது முழம், அதின் அகலம் இருபதுமுழம், அதை அறுநூறு தாலந்து பசும்பொன்னினால் மூடினான்.
9 ஆணிகளின் நிறை ஐம்பது பொன்சேக்கல்; மேல் அறைகளையும் பொன்னினால் மூடி
10 னான். அவன் மகா பரிசுத்தஸ்தலத்திலே இரண்டு கேரூபுகளையும் சித்திரவேலையாய்ச் செய்து அவைகளைப் பொன்தகட்டால் மூடினான். அந்தக் கேரூபுகளுடைய செட்டை 11
களின் நீளம் இருபதுமுழம், ஒரு கேரூபின் ஒருசெட்டை ஐந்துமுழம், அது ஆலயச் சுவரைத் தொட்டது; மறுசெட்டை ஐந்து முழம், அது மற்றக் கேரூபின் செட்டையைத் தொட்டது. இரண்டாம் கேரூபின் 12
ஒருசெட்டை ஐந்துமுழம், அது ஆலயச் சுவரைத் தொட்டது; அதின் மறுசெட்டை ஐந்துமுழம், அது முன்னை கேரூபின் செட்டையைத் தொட்டது. இப்படியாக அந் 13
தக் கேரூபுகளின் செட்டைகள் விரிந்து இருபதுமுழ நீளமாயிருந்தன; அவைகள் தங்கள் கால்களில் நின்றன; அவைகளின் முகங்கள் அவற்றின் உட்புறம் நோக்கியிருந்தன.

இளநீல நூல், இரத்தாம்பர நூல், சிவப்பு 14
நூல், மெல்லிய வெள்ளை நூல் இவற்றால் திரையைச் செய்தான்; அதிலே கேரூபுகளைச் சித்திரவேலையாகச் செய்தான்.

ஆலயத்தின் முன்பக்கத்தில் முப்பத் 15
தைந்துமுழ உயரமான இரண்டு தூண்களையும் அவைகள் தலைப்புகளின்மேல் வைக்கும் ஐந்துமுழ உயரமான கும்பங்களையும் செய்தான். மூலஸ்தானத்துக்குச் செய்த 16
சங்கிலிபோன்றவைகளைச் செய்து தூண்களின் தலைப்புகளின்மேல் பற்றவைத்து நூறு மாதளம்பழங்களைப் பண்ணி அந்தச் சங்கிலிகளில் கோத்தான். அந்தத் தூண் 17
களை அவன் தெய்வாலயத்தின் முன்பக்கத்திலே, ஒன்றை வலதுபுறத்திலும் மற்றொன்றை இடதுபுறத்திலும் நாட்டி, வலதுபுறத்தூணுக்கு யாகீன் என்றும் இடதுபுறத்தூணுக்குப் போவாஸ் என்றும் பேரிட்டான்.

அன்றியும் செப்புப் பலிபீடத்தைச் செய் **4**
தான், அதின் நீளம் இருபதுமுழம், அகலம் இருபதுமுழம், உயரம் பத்துமுழம்.
கடல் என்னும் தொட்டியையும் வார்ப் 2
பித்தான், அது சுற்றிலும் வட்டவடிவானது, ஒரு விளிம்பு தொடங்கி மறு விளிம்புமட்டும் அதின் அகலம் பத்துமுழம், உயரம் ஐந்துமுழம், சுற்றளவு முப்பதுமுழம். அந் 3
தக் கடல்தொட்டியைச் சுற்றி அதற்குக் கீழே ரிஷபம்போன்றவைகள் பத்துமுழ அகலத்திலும் அதற்குச் சுற்றிலும் செய்யப்பட்டிருந்தன; ரிஷபங்கள் இரண்டு வரிசையாயிருந்தன; இவை தொட்டியோடு ஒன்றாகவே வார்க்கப்பட்டிருந்தன. தொட்டி 4
பன்னிரண்டு ரிஷபங்களின்மேல் நின்றது; அவற்றில் மூன்று வடக்கேயும் மூன்று

மேற்கேயும் மூன்று தெற்கேயும் மூன்று கிழக்கேயும் நோக்கியிருந்தன; அவற்றின் மேல் கடல்தொட்டி இருந்தது; ரிஷபங்களின் பின்புறங்களெல்லாம் உட்புறமிருந்தன. அதின் கனம் நாலுவிரற்கடையளவு; அதின் விளிம்பு பானபாத்திரத்தின் விளிம்பு போலவும் லீலிபுஷ்பம்போலவும் செய்யப்பட்டிருந்தது; அது மூவாயிரங்குடம் தண்ணீர் பிடிக்கும். கழுவுகிறதற்கெனப் பத்துக் கொப்பரைகளையும் செய்து ஐந்தை வலது புறத்திலும், ஐந்தை இடதுபுறத்திலும் வைத்தான்; தகனத்துக்குரியவைகளை அவைகளில் அலசுவார்கள்; கடல் தொட்டியோ ஆசாரியர்கள் தங்களைச் சுத்தம் பண்ணிக்கொள்வதற்கென வைக்கப்பட்டிருந்தது. பத்துப் பொன்விளக்குத்தண்டுகளையும் அவைகளின் விதிப்படியே செய்து அவைகளை ஆலயத்தில் வலதுபுறத்திலே ஐந்தும் இடதுபுறத்திலே ஐந்துமாக வைத்தான். பத்து மேசைகளையும் செய்தான், அவைகளை ஆலயத்தில் வலது புறத்திலே ஐந்தும் இடதுபுறத்திலே ஐந்து மாக வைத்தான்; நூறு பொன்கலங்களையும் செய்தான். மேலும் ஆசாரியரின் பிராகாரத்தையும் பெரிய பிராகாரத்தையும் பிராகாரத்தின் கதவுகளையும் செய்து, கதவுகளைச் செம்பிளுல் மூடினான். கடல்தொட்டியை ஆலயத்தின் வலதுபுறத்திலே தென்கிழக்கே வைத்தான். ஊராம் செப்புச்சட்டிகளையும் சாம்பலெடுக்கிற கரண்டிகளையும் கலங்களையும் செய்தான்.

இவ்விதமாக ஊராம் யெகோவாவின் ஆலயத்திலே சாலொமோன் ராஜாவுக்குச் செய்யவேண்டிய வேலையைச் செய்துமுடித்தான். அவையாவன: இரண்டு தூண்கள், இரண்டு தூண்களுடைய தலையின்மேலுள்ள உருண்டைக் கும்பங்கள், தூண்களுடைய முனையின்மேலிருந்த இரண்டு உருண்டைக் கும்பங்களையும் மூடும் இரண்டு வலைப்பின்னல்கள், தூண்களின் மேலுள்ள இரண்டு உருண்டைக் கும்பங்களையும் மூடும்படி ஒவ்வொரு வலைப்பின்னலுக்கும் செய்த இரண்டு வரிசை மாதளம் பழங்கள் ஆக இரண்டு வலைப்பின்னலுக்கும் நானூறு மாதளம்பழங்கள்; ஆதாரங்கள், ஆதாரங்களின்மேல் வைத்த கொப்பரைகள்; ஒரு கடல்தொட்டி, அதன்கீழிருந்த பன்னிரண்டு ரிஷபங்கள்; செப்புச்சட்டிகள், கரண்டிகள், முள்துறடுகள் ஆகிய இவைகளே; யெகோவாவின் ஆலயத்துக்காகச் சாலொமோன் ராஜாவுக்கு இந்த எல்லாப் பணிமுட்டுகளையும் ஊராம்அபி பளபளப்பான செம்பிளுலே செய்தான். யோர்தானுக்கடுத்த சமவெளியிலே சுக்கோத்துக்கும் செரேத்தாவுக்கும் நடுவே களிமண்தரையிலே ராஜா அவைகளை வார்ப்பித்தான். இந்தப் பணிமுட்டுகளையெல்லாம் சாலொமோன் மிகவும் ஏராளமாகச் செய்தான்; செம்பின் நிறை இவ்வளவென்று நிதானிக்க முடியாதிருந்தது.

பின்னும் கடவுளின் ஆலயத்துக்குரிய பணிமுட்டுகளையெல்லாம் சாலொமோன் செய்தான், அவையாவன: பொற்பலிபீடம், திருச்சமுகத்தப்பங்களை வைக்கும் பொன் மேசைகள், மூலஸ்தானத்திற்கு எதிரே விதிப்படியே விளக்கேற்றுவதற்குப் பசும்பொன் விளக்குத்தண்டுகள், அவைகளின் விளக்குகள்; பொன்னிளுல் செய்த பூக்கள், விளக்குகள், கத்திரிகள்; இத்தப் பொன் சுத்தத் தங்கம்; பசும்பொன்னுல் செய்த திரிவெட்டிகள், கலங்கள், கலயங்கள், தூபகலசங்கள் ஆகிய இவைகளே. ஆலயத்தின் கதவுகள், உட்கதவுகளாகிய மகா பரிசுத்தஸ்தலத்தின் கதவுகளும் கோவிலின் கதவுகளும், எல்லாம் பொன்னுற் செய்யப்பட்டிருந்தன.

இவ்விதமாகச் சாலொமோன் யெகோவாவின் ஆலயத்துக்காகச் செய்த வேலையெல்லாம் முடிந்தது; முடியவே சாலொமோன் தன் தகப்பனுகிய தாவீது பிரதிஷ்டை செய்திருந்த வெள்ளியையும் பொன்னையும் சகல பணிமுட்டுகளையும் கொண்டுவந்து கடவுளின் ஆலயக்களஞ்சியங்களிலே வைத்தான்.

பின்பு யெகோவாவின் உடன்படிக்கைப் பெட்டகத்தைச் சீயோன் என்னும் தாவீது நகரத்திலிருந்து கொண்டுவரும்படி சாலொமோன் இஸ்ரவேலின் மூப்பரையும் கோத்திரப் பிரபுக்களாகிய இஸ்ரவேல் புத்திரரிலுள்ள பிதாக்களின் தலைவர் அனைவரையும் எருசலேமிலே கூடிவரச்செய்தான். இஸ்ரவேலர் அனைவரும் ஏழாம் மாதத்துப் பண்டிகையிலே ராஜாவினிடம் கூடிவந்தார்கள். இஸ்ரவேலின் மூப்பர் அனைவரும் வந்திருக்கையிலே லேவியர் பெட்டகத்தை எடுத்துப் பெட்டகத்தையும் தரிசனக்கூடாரத்தையும் கூடாரத்திலிருந்த பரிசுத்த பணிமுட்டுகள் அனைத்தையும் சுமந்துகொண்டு வந்தார்கள்; அவைகளைக் கொண்டு வந்தவர்கள் லேவியரான ஆசாரியரே. சாலொமோன் ராஜாவும் அவனிடம் வந்து கூடியிருந்த இஸ்ரவேல் சபையனைத்தும் பெட்டகத்துக்கு முன்பாக நடந்து எண்ணமுடியாத கணிக்கற்ற திரளான ஆடுகளையும் மாடுகளையும் பலியிட்டார்கள். அப்படியே ஆசாரியர்கள் யெகோவாவின் உடன்படிக்

கைப் பெட்டகத்தைக் கொண்டுவந்து ஆலயத்தின் மூலஸ்தானமாகிய மகா பரிசுத்த ஸ்தலத்திலே கேரூபுகளுடைய செட்டைகளின் கீழ் அதற்குரிய இடத்திலே வைத்
8 தார்கள். கேரூபுகள் பெட்டகமிருக்கும் ஸ்தானத்திலே தங்கள் செட்டைகளை விரித்து உயர இருந்து பெட்டியையும் அதின் தண்டாயங்களையும் மூடிக்கொண்டிருந்தன.
9 தண்டாயங்கள் நீளமாயிருந்ததினால் அவைகளின் முனைகள் பெட்டகத்துக்கு வெளியே தீண்டி மூலஸ்தானத்திற்கு எதிரே தெரிந்தன; வெளியே நிற்பவர்களுக்கோ அவைகள் தெரியாது; அது இந்நாள்வரைக்கும் அப்
10 படியே இருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து வந்த காலத்தில் யெகோவா அவர்களோடே உடன்படிக்கைசெய்த போது, மோசே ஓரேபிலே கொண்டுவந்து கொடுத்த இரண்டு கற்பலகைகளே அல்லாமல் பெட்டகத்திலே வேறொன்றும் இருக்கவில்லை.
11 ஆசாரியர் பரிசுத்தஸ்தலத்திலிருந்து வெளியே வந்துவிட்டார்கள், அங்கிருந்த ஆசாரியர் தங்கள் வகுப்பு முறைமையைக் கவனியாமல் எல்லாருமே தங்களைச் சுத்தி
12 கரித்திருந்தார்கள். ஆசாப், ஏமான், ஏதூதூன் என்பவர்களுடைய கூட்டத்தாரும் அவர்களுடைய குமாரர் சகோதரருடைய கூட்டத்தாருமாகிய பாடகரான லேவியரெல்லாரும் மெல்லிய வஸ்திரங்களைத் தரித்துக் கைத்தாளங்களையும் தம்புருக்களையும் சுரமண்டலங்களையும் பிடித்துக்கொண்டு பலிபீடத்திற்குக் கிழக்கே நின்றார்கள்; பூரிகைகளை ஊதுகிற ஆசாரியர்கள் நூற்றிருபதுபேர்
13 அவர்களோடுகூட நின்றார்கள். அவர்கள் ஒருமிக்கப் பூரிகைகளை ஊதி, ஏகசத்தமாய் யெகோவாவுக்கு நன்றிசெலுத்தி அவரைத் துதித்துப் பாடினார்கள்; அவர்கள் இப்படிப் பூரிகைகள், தாளங்கள், தேவாதியங்களுடைய சத்தத்தைத் தொனிக்கப்பண்ணி,

யெகோவா நல்லவர்,
அவர் கிருபை என்றுமுள்ளது

என்று அவரைத் துதித்துப் பாடிக்கொண்டிருக்கையிலேயே யெகோவாவின் வீடாகிய தெய்வாலயத்திலே மேகம் நிறைந்தது.
14 யெகோவாவின் மகிமை கடவுளின் ஆலயத்தை நிரப்பிற்று; அந்த மேகத்தினிமித்தமே ஆசாரியர் ஆராதனைசெய்வதற்கு அங்கே நிற்கமுடியாமல் போயிற்று.

**6** அப்பொழுது சாலொமோன்: காரிருளிலே வாசம் பண்ணுவேன் என்று
2 யெகோவா சொன்னார்; நானே, தேவரீர் வாசம்பண்ணத்தக்க வீட்டை, நீர் என்றும் வசிக்கும் ஸ்தலத்தை உமக்குக் கட்டினேன் என்று சொல்லி | ராஜா திரும்பி இஸ்ரவேல் 3
சபையையெல்லாம் ஆசீர்வதித்தான்; இஸ்ரவேல் சபையார் எல்லாரும் நின்றார்கள். அப்பொழுது அவன் அவர்களோடு பேசி: 4
இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா புகழப்படுக, அவர் என் தகப்பனாகிய தாவீதோடு பேசி, | என் ஜனத்தை எகிப்தி 5
லிருந்து அழைத்துவந்த நாள்முதற்கொண்டு என் நாமம் விளங்கும்படி ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்கு நான் இஸ்ரவேலின் சகல கோத்திரங்களிலுமுள்ள பட்டணம் ஒன்றையும் தெரிந்துகொள்ளவில்லை, என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும்படி எவரையும் தெரிந்துகொள்ளவில்லை, | என் நாமம் 6
விளங்கும்படி எருசலேமையும், என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும்படி தாவீதையும் தெரிந்துகொண்டேன் என்று சொன்ன வாக்கைத் தமது கரத்தினால் நிறைவேற்றினார். இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோ 7
வாவின் திருநாமத்திற்கு ஆலயத்தைக் கட்ட வேண்டும் என்ற விருப்பம் என் தகப்பனாகிய தாவீதின் மனதில் இருந்தது. யெகோ 8
வாவோ என்தகப்பனாகிய தாவீதோடு பேசி: என் நாமத்திற்கு ஆலயம் கட்டவேண்டும் என்கிற விருப்பம் உன் மனதிலே இருப்பது நல்ல காரியமே, | ஆகிலும் அந்த ஆலயத் 9
தைக் கட்டுபவன் நீ அல்ல; உனக்குப் பிறக்கும் உன் குமாரனே என் நாமத்திற்கு அந்த ஆலயத்தைக் கட்டுவான் என்றார். யெகோவா சொல்லியபடியே தமது திரு 10
வாக்கை நிறைவேற்றினார்; யெகோவா சொல்லியிருந்தபடியே நான் என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்தில் எழும்பி இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் அமர்ந்து, இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவின் திருநாமத்திற்கு ஆலயத்தைக் கட்டினேன்; யெகோவா இஸ்ரவேல் புத்திரரோடு செய்த 11
உடன்படிக்கையிருக்கிற பெட்டகத்தை அதிலே வைத்தேன் என்று சொன்னான்.

பின்பு சாலொமோன் யெகோவாவின் பலி 12
பீடத்திற்கு எதிரே இஸ்ரவேல் சபையனைத்துக்கும் முன்பாக நின்று தன் கைகளை விரித்தான். சாலொமோன் ஐந்துமுழ நீள 13
மும் ஐந்துமுழ அகலமும் மூன்றுமுழ உயரமுமான ஒரு பிரசங்கபீடத்தைச் செம்பினால் செய்து அதை நடுப்பிராகாரத்திலே வைத்திருந்தான்; அதின்மேல் அவன் நின்று இஸ்ரவேல் சபையனைத்துக்கும் முன்பாக முழங்காற்படியிட்டு வானத்திற்குநேரே தன் கைகளை விரித்து: இஸ்ரவேலின் கடவுளா 14
கிய யெகோவாவே, வானத்திலும் பூமியிலும்

உமக்கு நிகரான தெய்வமில்லை; தங்கள் முழுஇருதயத்தோடும் உமக்குமுன்பாக நடக்கிற உமது அடியாருக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் நிலைநிற்கச் 15 செய்கிறீர். உமது தாசனுகிய என் தகப்பன் தாவீதுக்குத் தேவரீர் கொடுத்த வாக்கை நிலைக்கச்செய்தீர்; அதை உமது வாக்கினால் சொன்னீர், இந்நாளில் பார்க்கிறபடி உமது 16 கரத்தினால் அதை நிறைவேற்றினீர். இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவே, உமது தாசனுகிய என் தகப்பன் தாவீதோடு தேவரீர் பேசி: நீ எனக்குமுன்பாக நடந்தது போல உன் குமாரரும் தங்கள் வழியைக் காத்து என் நியாயப்பிரமாணத்தில் நடப் பார்களேயானால் இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் எனக்கு முன்பாக வீற்றிருக்கும் ஒரு ஆண்பிள்ளை உனக்கு இல்லாமற்போவதில்லை என்று சொன்னீரே, அதை அவ 17 னுக்கு நிறைவேற்றும். இப்பொழுதும் இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவே, உமது தாசனுகிய தாவீதுக்குத் தேவரீர் சொன்ன வார்த்தை மெய்யேயென்று விளங்குவதாக.

18 கடவுள் மெய்யாக மனுஷரோடு பூமியிலே வாசம்பண்ணுவாரோ? இதோ, வானங்களும் வானாதிவானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் உம் 19 மைக் கொள்வதெங்ஙனம்! என் கடவுளாகிய யெகோவாவே, அடியேனுடைய விண்ணப்பத்தையும் மன்றாட்டையும் திருவுளத்திற்கொண்டருளி, அடியேன் உமது சந்நிதியில் அபயசத்தமிட்டுச் செய்யும் விண்ணப் 20 பத்திற்குச் செவிசாய்த்தருளும். அடியேன் இவ்விடத்தை நோக்கிச் செய்யும் விண்ணப்பத்தைக் கேட்கும்படி இந்த ஆலயத்தின்மேல் உமது கண்கள் இரவும் பகலும் 21 திறந்திருப்பதாக. இந்த ஸ்தலத்தில் என் நாமம் விளங்குமென்று சொன்னீரே, அடியேனும் இந்த ஸ்தலத்தை நோக்கி விண்ணப்பஞ்செய்யப்போகிற உமது ஜனமாகிய இஸ்ரவேலும் செய்யும் ஜெபங்களைக் கேட்டருளும்; பரலோகமாகிய உமது வாசஸ்தலத்திலே நீர் அவற்றைக் கேட்பீராக, கேட்டு மன்னிப்பீராக.

22 தன் அயலானுக்கு விரோதமாய்க் குற்றம் செய்த ஒருவனை ஆணையிடுவிக்க நேரிடும் போது, அந்த ஆணை இந்த ஆலயத்திலே 23 உமது பலிபீடத்திற்குமுன் வரவே | தேவரீர் பரலோகத்திலே அதைக் கேட்டு உமது அடியாரை நியாயம்விசாரித்தருளும்; துன் மார்க்கனுக்குப் பதில் செய்து அவன் துன் மார்க்கத்தை அவன் தலையின்மேல் சுமத்தி விடும்; குற்றமற்றவனை நீதிமானுகத் தீர்த்து அவனுடைய நீதிக்குத் தக்கபடியே அவனுக்குச் செய்தருளும்.

உமது ஜனமாகிய இஸ்ரவேல் உமக்கு 24 விரோதமாகப் பாவஞ்செய்ததினிமித்தம் சத்துருவுக்கு எதிரே முறிந்தோடவே, உம்மிடம் திரும்பி உமது திருநாம மகத்துவத்தை ஒப்புக்கொண்டு இந்த ஆலயத்திற்கு நேராக உம்மை நோக்கி விண்ணப்பஞ் செய்து மன்றாடினால் | தேவரீர் பரலோ 25 கத்திலே அதைக் கேட்டு உமது ஜனமாகிய இஸ்ரவேலின் பாவத்தை மன்னித்து அவர்களுக்கும் அவர்கள் பிதாக்களுக்கும் நீர் கொடுத்த தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரச் செய்தருளும்.

அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பாவஞ் 26 செய்யவே, வானம் அடைபட்டு மழைபெய்யாதிருக்கும்போது அவர்கள் இந்த ஸ்தலத்தை நோக்கி விண்ணப்பஞ்செய்து உமது திருநாம மகத்துவத்தை ஒப்புக்கொண்டு, தேவரீர் தங்களைச் சிறுமைப்படுத்துவதினாலே அவர்கள் தங்கள் பாவங்களை விட்டுத் திரும்புவார்களானால் | தேவரீர் பரலோகத் 27 திலே அதைக் கேட்டு உமது அடியாரும் உமது ஜனமாகிய இஸ்ரவேலும் செய்த பாவத்தை மன்னித்தருளும்; அவர்கள் நடக்கவேண்டிய நல்வழியை அவர்களுக்குப் போதித்து, தேவரீர் உமது ஜனத்திற்குச் சுதந்தரமாகக் கொடுத்த உமது தேசத்தில் மழையைக் கட்டளையிட்டருளும்.

தேசத்திலே பஞ்சம், கொள்ளைநோய், 28 வறட்சி, சாவி, வெட்டுக்கிளி, பச்சைக்கிளி இவை உண்டாகிறபோதும், அவர்களுடைய சத்துருக்கள் தேசத்திலுள்ள பட்டணங்களை முற்றுகைபோடுகிறபோதும், ஏதேனும் வாதையாகிலும் வியாதியாகிலும் வருகிறபோதும் | எந்த மனுஷனாலும், இஸ்ர 29 வேலாகிய உமது முழு ஜனமுமானாலும், தன்தன் துன்பத்தையும் வியாகுலத்தையும் மனதில் உணர்ந்து இந்த ஆலயத்தை நோக்கித் தன் கைகளை விரித்துச் செய்யும் சகல விண்ணப்பத்தையும் சகல மன்றாட்டையும் | தேவரீர் உமது வாசஸ்தலமாகிய பர 30 லோகத்திலே கேட்டு மன்னித்தருளும்; அவனவனுடைய வழிகளுக்குத் தக்கபடியே 31 பலன் அளித்தருளும்; நீர் அவனவனுடைய இருதயத்தை அறிந்திருக்கிறீர், எல்லா மனுப்புத்திரரின் இருதயமும் உமக்கே தெரியும்; தேவரீர் எங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்தில் அவர்கள் உயிரோடிருக்கும் நாளெல்லாம் உமக்குப் பயப்படும்படி இப்படிச் செய்தருளும்.

32 அந்திய ஜாதியார், உமது ஜனமாகிய இஸ்ரவேல் ஜாதியல்லாதவர்கள், உம்முடைய மகத்துவமான நாமத்தினிமித்தமும், உமது புஜபலத்தினிமித்தமும், உமது நீட்டிய கரத்தினிமித்தமும், தூரதேசங்களிலிருந்து வந்து இந்த ஆலயத்துக்குநேராக
33 விண்ணப்பம்பண்ணினால் | தேவரீர் உமது வாசஸ்தலமாகிய பரலோகத்திலே செவிசாய்த்தருளி அந்த அந்திய ஜாதியான் உம்மை நோக்கி வேண்டிக்கொள்வதின்படியெல்லாம் தேவரீர் செய்தருளும்; அப்பொழுது பூமியின் ஜனங்களெல்லாரும் உமது திருநாமத்தை அறிந்து உமது ஜனமாகிய இஸ்ரவேலைப்போல உமக்குப் பயப்படுவார்கள்; நான் கட்டின இந்த ஆலயம் உமதுதிருநாமம் தரிக்கப்பெற்றதென்று அறிவார்கள்.
34 நீர் உமது ஜனங்களை அனுப்பும் வழியிலே அவர்கள் தங்கள் சத்துருக்களோடு யுத்தம்பண்ணச் செல்லும்போது, நீர் தெரிந்துகொண்ட இந்த நகரத்தையும் உமது திருநாமத்திற்கு நான் கட்டின இந்த ஆலயத்தையும் நோக்கி உம்மிடம் விண்ணப்பம்
35 பண்ணினால் | தேவரீர் பரலோகத்திலே அவர்கள் விண்ணப்பத்தையும் மன்றாட்டையும் கேட்டு அவர்களுக்கு நியாயம்
36 செய்தருளும். அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யவே—பாவஞ்செய்யாத மனுஷன் இல்லை—தேவரீர் அவர்கள்மேல் கோபங்கொண்டு அவர்களுடைய சத்துருக்கள் கையில் அவர்களை ஒப்புக்கொடுக்கவே, அவர்களைச் சிறைபிடிக்கிறவர்கள் அவர்களைத் தூரத்திலோ சமீபத்திலோ உள்ள ஒரு தேசத்திற்குச் சிறைபிடித்துக் கொண்டுபோக
37 நேரிடும். அவர்கள் சிறையிருக்கும் தேசத்திலே, உணர்வடைந்தவர்களாய் மனந்திரும்பி: நாங்கள் பாவஞ்செய்து அக்கிரமக்காரராய்த் துன்மார்க்கமாக நடந்தோம் என்று தாங்கள் சிறைப்பட்டிருக்கும் தேசத்
38 திலே உம்மை நோக்கி மன்றாடித் | தாங்கள் சிறைகளாகப்போன தங்கள் சிறைபிருப்பின் தேசத்திலேயே தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும் உம்மிடமாகத் திரும்பித் தங்கள் பிதாக்களுக்குத் தேவரீர் கொடுத்த தங்கள் தேசத்தையும் தேவரீர் தெரிந்துகொண்ட இந்த நகரத்தையும் உமது திருநாமத்திற்கு நான் கட்டின இந்த ஆலயத்தையும் நோக்கி உம்மிடம் விண்ணப்பம்பண்ணும்போது |
39 தேவரீர் உமது வாசஸ்தலமாகிய பரலோகத்திலே அவர்கள் விண்ணப்பத்தையும் மன்றாட்டுகளையும் கேட்டு அவர்களுக்கு நியாயஞ் செய்தருளும்; உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்த உமது ஜனத்திற்கு மன்னித்தருளும்.

இப்போதும் என் கடவுளே, இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் விண்ணப்பத்தைக் கண்திறந்து செவிசாய்த்து கவனித்தருளும். 40

இப்போதும்கடவுளே, யெகோவாவே, 41
நீர் உமது தாபரஸ்தலத்திற்குள் எழுந்தருளும்;
உமது வல்லமை விளங்கும் பெட்டகத்தோடு நீர் வாரும்;
கடவுளே, யெகோவாவே, உமது ஆசாரியர் ரட்சிப்பு என்னும் ஆடைதரிப்பாராக.
உமது பரிசுத்தர் பெற்ற நன்மையிலே 42 மகிழ்க,
கடவுளே, யெகோவாவே, புறக்கணியாதிரும்
நீர் அபிஷேகம் பண்ணினவன் முகத்தை,
உமது ஊழியனும் தாவீதுக்கு பாராட்டிய கிருபையை மறவாதிரும்

என்று பிரார்த்தித்தான்.

சாலொமோன் பிரார்த்தனைசெய்து முடித்தவளவிலே அக்கினி வானத்திலிருந்து இறங்கி 7
தகனபலியையும் இரத்தபலிகளையும் பட்சித்தது; யெகோவாவின் மகிமையும் ஆலயத்தை நிரப்பிற்று. யெகோவாவின் மகிமை 2
யெகோவாவின் ஆலயத்தை நிரப்பினதினாலே ஆசாரியர் யெகோவாவின் ஆலயத்தினுள் பிரவேசிக்கமுடியாதிருந்தது. அக்கினி இறங் 3
குவதையும் யெகோவாவின் மகிமை ஆலயத்தின்மேல் தங்கியிருப்பதையும் இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் கண்டபோது தளவரிசைமட்டும் தரையிலே முகங்குப்புறக் குனிந்து பணிந்து,

யெகோவா நல்லவர்,
அவர் கிருபை என்றுமுள்ளது

என்று சொல்லி அவரைத் துதித்தார்கள்.

அப்பொழுது ராஜாவும் சகல ஜனங்களும் 4
யெகோவாவின் சந்நிதியிலே பலியிட்டார்கள். சாலொமோன் ராஜா இருபத்திரண்டு 5
யிரம் மாடுகளையும், லட்சத்திருபதினாயிரம் ஆடுகளையும் பலியிட்டான்; இவ்விதமாக ராஜாவும் முழு ஜனமும் கடவுளின் ஆலயத்தைப் பிரதிஷ்டைபண்ணினார்கள். ஆசாரி 6
யர்கள் தங்கள் வேலையிடங்களிலே நின்றார்கள்; லேவியரும் யெகோவாவுக்குரிய தேவவாத்தியங்களை வைத்துக்கொண்டு நின்றார்கள்; ஸ்தோத்திர ஆராதனைகளிலே லேவியர்,

அவர் கிருபை என்றுமுள்ளது

என்று யெகோவாவைத் துதித்துப் பாடும்படியாகத் தாவீது அந்தக் தேவவாத்தியங்

னேச் செய்திருந்தான். அவர்களுக்கு எதிரே நின்று ஆசாரியர்களும் பூரிகைகளை ஊதினார்கள்; இஸ்ரவேலர் அனைவரும் நின்று 7 கொண்டிருந்தார்கள். யெகோவாவின் ஆலயத்துக்கு எதிரே பிராகார மத்தியைச் சாலொமோன் பிரதிஷ்டைசெய்து அங்கே தகன பலிகளையும் சமாதானபலிகளின் நிணத்தையும் செலுத்தினான்; சாலொமோன் செய்திருந்த செப்புப்பலிபீடம் தகனபலிகளையும் போஜனபலிகளையும் நிணத்தையும் கொள்ள வில்லை.

8 இவ்வாறுசச் சாலொமோனும் அவனோடு கூடச் சமஸ்த இஸ்ரவேலும் அச்சமையத்திலே ஏழுநாளளவும் உற்சவம் கொண்டாடினார்கள். ஆமாத்துக்குப் போகும் வழி பிரியும் இடமுதல் எகிப்தின் நீரோடைமட்டும் உள்ள தேசத்திலிருந்து மிகப்பெருங்கூட்ட 9 மாகக் கூடியிருந்தார்கள். எட்டாம் நாளை விசேஷித்த உற்சவநாளாக ஆசரித்தார்கள்; ஏழுநாள் பலிபீடப் பிரதிஷ்டையையும் ஏழுநாள் உற்சவத்தையும் ஆசரித்தார்கள். 10 ஏழாம் மாதத்தின் இருபத்து மூன்றும் தேதியிலே ஜனங்களைத் தத்தம் கூடாரங்களுக்கு அனுப்பிவிட்டான்; தாவீதுக்கும் சாலொமோனுக்கும் தமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கும் யெகோவா செய்த நன்மையை நினைத்துச் சந்தோஷமும் மனமகிழ்ச்சியுமாய்ப் போனார்கள்.

11 இவ்விதமாகச் சாலொமோன் யெகோவாவின் ஆலயம், ராஜ அரமனை இவற்றைக் கட்டும் வேலையை முடித்தான்; யெகோவாவின் ஆலயத்திலும் தன் அரமனையிலும் சாலொமோன் செய்ய விரும்பியவற்றையெல் 12 லாம் செய்து தெரியடைந்தான். யெகோவா இரவிலே சாலொமோனுக்குத் தரிசனமாகி: நான் உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், இந்த ஸ்தலத்தை எனக்குப் பலியிடும் 13 ஆலயமாக அங்கீகரித்தேன். இதோ, மழை பெய்யாதபடி வானத்தை அடைப்பேன், அல்லது தேசத்தையழிக்க வெட்டுக்கிளிகளுக்குக் கட்டளையிடுவேன், அல்லது என் ஜனத்திற்குள் கொள்ளைநோயை வரவிடு 14 வேன், | அக்காலங்களிலே, என் நாமம் தரிக்கப்பெற்ற என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி விண்ணப்பஞ்செய்து என் முகத்தைத் தேடித் தங்கள் தீயவழிகளைவிட்டுத் திரும்புவார்களானால், நான் பரலோகத்திலே செவிசாய்த்து அவர்கள் பாவத்தை மன்னிப்பேன், அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் 15 கொடுப்பேன். இந்த ஸ்தலத்திலே செய்யும் விண்ணப்பத்தை நான் கண்திறந்து செவி 16 சாய்த்துக் கவனிப்பேன். என் நாமம் இந்த ஆலயத்தில் என்றென்றும் இருக்கும்படி நானே இதைத் தெரிந்துகொண்டு பரிசுத்தப்படுத்தினேன்; நான் எந்நாளும் இதன்மேல் கண்ணும் கருத்துமாயிருப்பேன். உன் தகப்பனாகிய தாவீது நடந்தது 17 போல நீயும் எனக்கு முன்பாக நடந்து, நான் உனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் செய்து என் நியமங்களையும் என் தீர்ப்புகளையும் கைக்கொள்வாயானால் | உன் 18 ராஜ்யபார சிங்காசனத்தை நிலைக்கச்செய்வேன், இஸ்ரவேலின்மேல் அரசாட்சிசெய்யும் ஒரு ஆண்பிள்ளை உனக்கு இல்லாமற் போவதில்லை என்று நான் உன் தகப்பனாகிய தாவீதுக்கு கொடுத்த வாக்கின்படியே செய்வேன். நீங்கள் வழிவிலகி நான் உங்களுக்கு 19 முன் வைத்த என் நியமங்களையும் என் கட்டளைகளையும் விட்டுப்போய் வேறே தேவர்களைச் சேவித்து அவர்களைப் பணிந்துகொள்வீர்களேயானால் | நான் அவர்களுக்குக் கொ 20 டுத்த என் தேசத்திலிருந்து அவர்களை வேரறக் களைந்து என் நாமத்திற்கென்று நான் பரிசுத்தப்படுத்தின இந்த ஆலயத்தை என் சமுகத்தினின்று அகற்றித் தள்ளி அதைச் சகல ஜாதிகளுக்குள்ளும் பழமொழியும் பரியாசச் சொல்லுமாக்குவேன். அப்பொழுது உன் 21 னதமாயிருக்கிற இந்த ஆலயத்தைக் கடந்து போகும் எவனும் பிரமிப்படைந்து: யெகோவா இந்தத் தேசத்திற்கும் இந்த ஆலயத்திற்கும் இப்படிச் செய்தது என்ன என்று கேட்பான். தங்கள் பிதாக்களை 22 எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவந்த அவர்கள் கடவுளாகிய யெகோவாவை அவர்கள் விட்டுவிலகி வேறே தேவர்களைப் பற்றிக்கொண்டுஅவர்களைத் தொழுது சேவித்தார்கள். அதினிமித்தமே யெகோவா இந்தத் தீங்கையெல்லாம் அவர்கள்மேல் வரச்செய்தார் என்று பேசிக்கொள்வார்கள் என்றார்.

8 சாலொமோன் யெகோவாவின் ஆலயத்தையும் தன் அரமனையையும் கட்ட இருபதுவருஷகாலம் சென்றது; பின்பு சாலொ 2 மோன், ஊராம் தனக்குக் கொடுத்திருந்த ஊர்களைப் பலப்படுத்தி அவைகளிலே இஸ்ரவேல் புத்திரரைக் குடியேற்றினான்.

3 பிற்பாடு சாலொமோன் ஆமாத்சோபாவுக்குப் போய் அதை மேற்கொண்டான். 4 அவன் வனாந்தரத்திலுள்ள தத்மோரையும் ஆமாத் நாட்டிலே தான் கட்டியிருந்த பண்டசாலைப் பட்டணங்கள் அனைத்தையும் பலப்படுத்தினான். 5 அலங்கங்களும் கதவுகளும் தாழ்ப்பாள்களுமுடைய மேல் பேத்கோரோனையும் கீழ்பேத்கோரோனையும்

6 பாலாத்தையும் | தனக்கு இருந்த பண்ட சாலைப் பட்டணங்களையும் ரதங்கள் இருக்கும் சகல ஊர்களையும் குதிரைவீரர் இருக்கும் ஊர்களையும் சாலொமோன் பலப்படுத்தி எருசலேமிலும் லீபனோனிலும் தான் அரசாண்ட தேசமெங்கும் தான் விரும்பியவற்றையெல்லாம் கட்டிமுடித்தான்.

7 இஸ்ரவேல் புத்திரர் சங்காரம்பண்ணுமல் விட்டிருந்த இஸ்ரவேல் ஜாதியாரல்லாத ஏத்தியர், எமோரியர், பெரிசியர், ஏவியர், எபூசி
8 யருமான சகல ஜனங்களிலும் | அவர்களுக்குப் பிறகு தேசத்திலே மீந்திருந்த அவர்கள் பிள்ளைகளைச் சாலொமோன், இந்நாள்வரை நடக்கிறதுபோல, ஏவல் வேலை செய்ய ஏற்ப
9 டுத்திக்கொண்டான்; இஸ்ரவேல் புத்திரரில் எவரையுமோ சாலொமோன் தன் வேலைக்கென்று அடிமையாட்களாக்கவில்லை; அவர்கள் யுத்தவீரரும் தலைவரும் அதிபதிகளும் அவனுடைய ரதவீரர் குதிரைவீரர் ஆகியவர்களே மேற்பார்ப்பவர்களுமாயிருந்தார்கள்.
10 சாலொமோன் ராஜாவின் பிரதான தலைவராகிய இவர்கள் இருநூற்று ஐம்பதுபேர்; இவர்கள் ஜனங்களை நடத்தினார்கள்.

11 யெகோவாவின்பெட்டகம் வரும் ஸ்தலமெல்லாம் பரிசுத்தமானது, ஆகவே இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீதின் அரமனையில் ஸ்திரீகள் வாசம்பண்ணலாகாது என்று சொல்லிச் சாலொமோன் தான் பார்வோனின் குமாரத்திக்குக் கட்டியிருந்த மாளிகைக்கு அவளைத் தாவீது நகரத்திலிருந்து கூட்டிக்கொண்டு போனான்.

12 அப்பொழுது சாலொமோன் தான் முகப்பு மண்டபத்திற்கு எதிரே கட்டியிருந்த யெகோவாவின் பலிபீடத்தின்மேல் யெகோவாவுக்குத் தகனபலிகளைச் செலுத்தினான்.
13 அந்தந்த நாளுக்கு மோசே கட்டளையிட்ட பலிகளை ஓய்வுநாட்களிலும் மாதப்பிறப்புகளிலும் வருஷத்தில் மூன்றுதரம் ஆசரிக்கிற உற்சவங்களாகிய புளிப்பில்லாத அப்பம் புசிக்கும் உற்சவம், ஏழாம் வாரத்து உற்சவம், கூடார உற்சவம் இவற்றிலும்
14 செலுத்தினான். அவன் தன் தகப்பனாகிய தாவீதின் தீர்மானப்படியே ஆசாரிய முறைவகுப்புகளை அவர்கள் பணிவிடைக்கென்று ஏற்படுத்தினான்; அப்படியே லேவியரையும் அவர்கள் வேலைக்கென்று, ஸ்தோத்திரப் பாட்டைப் பாடுவதற்கும், அந்தந்த நாளுக்கு வேண்டியபடி ஆசாரியருக்கு உதவியாயிருப்பதற்கும், ஏற்படுத்தினான்; வாசல்காவலாளரையும் அந்தந்த வாசலுக்குக் குறிக்கப்பட்ட வகுப்பு முறைப்படியே ஏற்படுத்தினான். கடவுளின் மனுஷனாகிய தாவீது இப்படியே கட்டளையிட்டிருந்தான்.
15 கருவூலங்கள் உட்படச் சகல காரியங்களின் சம்பந்தமாகவும் ராஜா ஆசாரியரையும் லேவியரையும்பற்றிக்கொடுத்த கட்டளையைவிட்டு அவர்கள் விலகாதிருந்தார்கள்.
16 இப்படியாக யெகோவாவின் ஆலயத்துக்கு அஸ்திபாரமிட்ட நாள்வரைக்கும் அதன் பின் அது முடியும்வரைக்கும் சாலொமோனின் வேலையெல்லாம் நடந்தேறினது. யெகோவாவின் ஆலயமும் நிறைவேறலாயிற்று.

17 பின்பு சாலொமோன் ஏதோம் தேசத்தில் கடல் ஓரத்திலே இருக்கும் எசியோன்கேபேருக்கும் ஏலோத்துக்கும் போனான்.
18 அவனுக்கு ஊராம் தன் ஆட்கள்மூலமாய்க் கப்பல்களையும் சமுத்திர யாத்திரையில் பழகினவேலையாட்களையும் அனுப்பினான்; அவர்கள் சாலொமோனின் ஆட்களோடு ஒப்பரேக்குப் போய் அங்கிருந்து நானூற்றைம்பது தாலந்து பொன்னை ஏற்றிச் சாலொமோன் ராஜாவினிடம் கொண்டுவந்தார்கள்.

9 ஷேபாவின் அரசி சாலொமோனின் கீர்த்தியைக் கேள்விப்பட்டபோது, விடுகதைகளினாலே சாலொமோனைச் சோதிக்கும்படி வந்தாள்; மிகுந்த பரிவாரத்தோடும், கந்தவர்க்கங்களையும் மிகுதியான பொன்னையும் ரத்தினங்களையும் சுமக்கிற ஒட்டகங்களோடும் எருசலேமுக்கு வந்தாள்; அவள் சாலொமோனிடம் வந்தபோது தன் மனதிலிருந்த எல்லாவற்றையும்பற்றி அவனோடு சம்பாஷித்தாள்.
2 அப்பொழுது சாலொமோன் அவள் கேட்டவைகளையெல்லாம் விடுவித்தான்; அவளுக்கு விடுவிக்கமுடியாதபடி ஒன்றாகிலும் சாலொமோனுக்கு மறைபொருளாயிருக்கவில்லை.
3 ஷேபாவின் அரசி சாலொமோனுடைய ஞானத்தையும் அவன் கட்டின அரமனையையும் | அவன் மேசையில்
4 பரிமாறப்படும் உணவு வகைகளையும் அவன் உத்தியோகஸ்தரின் ஆசனங்களையும் அவன் ஊழியரின் ஒழுங்கையும் அவர்கள் உடைகளையும் அவனுடைய பானபாத்திரக்காரரையும் அவர்கள் உடைகளையும் யெகோவாவின் ஆலயத்துக்குள் பிரவேசிக்கும் கடைமண்டபத்தையும் கண்டபோது அவள் பிரமிப்படைந்து மெய்ம்மறந்தவளாய், | ராஜா
5 வைப் பார்த்து: உமது வர்த்தமானங்களையும் உமது ஞானத்தையும்பற்றி நான் என் தேசத்திலே கேட்ட செய்தி மெய்யாயிற்று.
6 நான் வந்து அதை என் கண்களால் காணுமட்டும் சொல்லப்பட்டவைகளை நம்பவில்லை; உமது பெரிய ஞானத்தில் பாதியளவாகிலும் அவர்கள் எனக்கு அறிவிக்கவில்லை; நான்

கேள்விப்பட்ட பிரஸ்தாபத்தைப் பார்க்கி
லும் நான் காண்பது அதிகமாகவேயிருக்கி
7 றது. உமது உத்தியோகஸ்தர் பாக்கியவான்
கள்; எப்போதும் உமக்கு எதிரே நின்று
உமது ஞானத்தைக் கேட்கிற உமது ஊழிய
8 ரும் பாக்கியரே. உமது கடவுளாகிய
யெகோவாவுக்கு முன்பாக நீர் ராஜாவாயிருக்
கும்படி உம்மைத் தமது சிங்காசனத்தின்
மேல் வீற்றிருக்கப்பண்ண உம்மில் பிரியங்
கொண்ட உமது கடவுளாகிய யெகோவா
புகழப்படுவாராக; உமது கடவுள் இஸ்ர
வேலை என்றும் நிலைநிறுத்தும்படி நேசிக்கிற
படியினால் அவர் நியாயமும் நீதியும் செய்கிற
தற்கு உம்மை அவர்கள்மேல் ராஜாவாக ஏற்
படுத்தினார் என்றாள்.

9 அவள் ராஜாவுக்கு நூற்றிருபது தாலந்து
பொன்னையும் மிகுதியான கந்தவர்க்கங்
களையும் ரத்தினங்களையும் கொடுத்தாள்;
ஷேபாவின் அரசி சாலொமோன் ராஜாவுக்
குக்கொடுத்த அவ்வளவு கந்தவர்க்கங்கள்
10 ஒருக்காலும் கண்டதில்லை. ஒப்பீரிலிருந்து
பொன்னைக் கொண்டுவருகிற ஊராமின்
வேலைக்காரரும் சாலொமோனின் வேலைக்
காரரும் அலகும் மரங்களையும் ரத்தினங்களை
11 யும் கொண்டுவந்தார்கள். அந்த அலகும்
மரங்களால் ராஜா யெகோவாவின் ஆலயத்
துக்கும் ராஜ அரமனைக்கும் கிராதிகளையும்
பாடகருக்குச் சுரமண்டலங்களையும் தம்புரு
களையும் செய்தான்; அப்படிப்பட்ட மரங்
களை அதற்குமுன்னே யூதேயா தேசத்தில்
12 ஒருக்காலும் கண்டதில்லை. ஷேபாவின்
அரசி ராஜாவுக்கு கொண்டுவந்தவைகளுக்
குச் சரியான வெகுமதிகளைச் சாலொமோன்
ராஜா அவளுக்குக் கொடுத்ததுமல்லாமல்
அவள் விரும்பிக்கேட்ட யாவற்றையும்
கொடுத்தான்; பின்பு அவள் தன் ஆட்க
ளோடே தன் தேசத்திற்குத் திரும்பிப்
போனாள்.

13 சுற்றுப்பிரயாண வியாபாரிகளும்
வர்த்தகரும் கொண்டுவந்த பொன்னை
யல்லாமல் சாலொமோனுக்கு வருஷந்
தோறும் அறுநூற்று அறுபத்தாறு
14 தாலந்து நிறை பொன் வந்தது. அரபி
நாட்டு அரசர் யாவரும் மாகாண அதிபரும்
சாலொமோனுக்குப் பொன்னையும் வெள்ளி
15 யையும் கொண்டுவருவார்கள். சாலொ
மோன்ராஜா பொன்தகட்டால் இருநூறு பரி
சைகளைச் செய்தான்; ஒரு பரி
சைக்கு அறுநூறு சேக்கல் நிறை பொன்
16 தகட்டைச் செலவழித்தான். பொன்
தகட்டால் முன்னூறு கேடகங்களையும் செய்
தான்; ஒரு கேடகத்திற்கு முன்னூறுசேக்கல்
நிறை பொன்னைச் செலவழித்தான்; அவை
களை ராஜா லீபனோன் வனபவனம் என்னும்
மாளிகையிலே வைத்தான். ராஜா தந்தத் 17
தினால் ஒரு பெரிய சிங்காசனத்தையும்
செய்து அதைப் பசும்பொன்தகட்டால் மூடி
னான். அந்தச் சிங்காசனத்துக்கு ஆறுபடி 18
களும் ஒரு பொன் பாதபடியும் இருந்தன;
இவை சிம்மாசனத்தோடு சேர்ந்திருந்தன;
உட்காரும் இடத்திற்கு இருபுறமும் கைச்
சாய்மானங்கள் இருந்தன; கைச்சாய்மா
னங்களையடுத்து இரண்டு சிங்கங்கள் நின்
றன. ஆறுபடிகளின்மேலும் இரண்டு பக் 19
கங்களிலும் பன்னிரண்டு சிங்கங்கள் நின்
றன; எந்த ராஜ்யத்திலும் இப்படிச் செய்
யப்படவில்லை. சாலொமோன் ராஜாவுக்கு 20
இருந்த பானபாத்திரங்களெல்லாம் பொன்;
லீபனோன் வனபவனத்தின் பணிமுட்டுக
ளெல்லாம் பசும்பொன்; சாலொமோனின்
காட்சியில் வெள்ளி ஒரு பொருளாய் எண்
ணப்படவில்லை. ராஜாவின் கப்பல்கள் 21
ஊராமின் ஆட்களோடு தர்ஷீசுக்குப் போய்
வரும்; தர்ஷீஸ் கப்பல்கள் மூன்று வருஷத்
துக்கொருதரம் பொன்னையும் வெள்ளியை
யும் யானைத் தந்தங்களையும் கபிகளையும்
தோகைகளையும் கொண்டுவரும்.

பூமியின் சகல ராஜாக்களையும் பார்க்கி 22
லும் சாலொமோன் ராஜா செல்வத்திலும்
ஞானத்திலும் சிறந்தவனாயிருந்தான். சாலொ 23
மோனின் இருதயத்திலே கடவுள் அரு
ளிய ஞானத்தைக் கேட்பதற்காகப் பூமி
யின் ராஜாக்கள் அனைவரும் அவனை நாடி
வருவார்கள். அவர்கள் எல்லாரும் வெள் 24
ளிப்பாத்திரங்கள், பொற்பாத்திரங்கள், வஸ்
திரங்கள், ஆயுதங்கள், கந்தவர்க்கங்கள்,
குதிரைகள், கோவேறுகழுதைகள் ஆகிய
இவற்றைத் தங்கள் தங்கள் பங்கொடையா
கக் கொண்டுவருவார்கள்; வருஷந்தோறும்
இப்படியே நடந்தது. சாலொமோனுக்கு 25
நாலாயிரம் குதிரைலாயங்களும் ரதங்களும்
இருந்தன, பன்னீராயிரம் குதிரைவீரரும்
இருந்தார்கள்; ரதங்களை நிறுத்திவைக்கும்
ஊர்களிலும் எருசலேமிலே தன்னிடத்தி
லும் அவைகளை வைத்திருந்தான். நதி 26
தொடங்கிப் பெலிஸ்தியர்நாட்டு வழியாய்
எகிப்தின் எல்லை மட்டுமுள்ள சகல ராஜாக்
களின்மேலும் அவன் ஆட்சிசெலுத்தினான்.
எருசலேமிலே ராஜா வெள்ளியைக் கற்கள் 27
போலவும் கேதுருமரங்களைச் சமனிலை நாட்டுக்
காட்டத்தி மரங்கள்போலவும் திராளாக்கிச்
சிறந்தாரணவஸ்துக்களாகச் செய்தான். எகிப்தி 28
லும் மற்றத் தேசங்களிலுமிருந்துசாலொமோ
னுக்குக் குதிரைகளைக் கொண்டு வந்தார்கள்.

29 சாலொமோனுடைய ஆதியந்தமான மற்
றச் சங்கதிகள் தீர்க்கதரிசியாகிய நாத்தா
னின் வர்த்தமானத்திலும், சிலோனியனுகிய
அகியா எழுதின தீர்க்கதரிசனத்திலும்,
நேபாத்தின் குமாரனுகிய யெரொபெயாமைப்
பற்றி ஞானதிருஷ்டிகனுகிய இத்தோ எழு
தின தரிசனங்களிலும் எழுதியிருக்கிறதல்ல
30 வா? சாலொமோன் எருசலேமிலே இஸ்ர
வேலெயெல்லாம் நாற்பதுவருஷம் அர
31 சாண்டான்; பின்பு சாலொமோன் நித்திரை
யடைந்து தன் பிதாக்களோடே சேர்ந்தான்;
அவனை அவன் தகப்பனுகிய தாவீதின் நக
ரத்தில் அடக்கம்பண்ணினர்கள்; அவன்
குமாரனுகிய ரெகாபெயாம் அவன் ஸ்தானத்
தில் ராஜாவானன்.

**10** ரெகாபெயாமை ராஜாவாக்கும்படி இஸ்ர
வேலர் எல்லாரும் சீகேமுக்கு வந்திருந்த
படியால் அவன் சீகேமுக்குப் போனன்.
2 சாலொமோன் ராஜாவை விட்டு ஓடிப்போய்
எகிப்திலிருந்த நேபாத்தின் குமாரனுகிய
யெரொபெயாம் அதைக் கேட்டபோது,
அவன் எகிப்திலிருந்து திரும்பிவந்தான்.
3 ஆள் அனுப்பி அவனை அழைப்பித்தார்கள்;
பின்பு யெரொபெயாமும் சகல இஸ்ரவேல
4 ரும் வந்து ரெகாபெயாமோடு பேசி: உமது
தகப்பன் பாரமான நுகத்தை எங்கள்மேல்
வைத்தார்; இப்போதும் நீர் உமது தகப்பன்
சுமத்தின கடினமான வேலையையும் அவர்
எங்கள்மேல் வைத்த பாரமான நுகத்தை
யும் லகுவாக்கும், அப்பொழுது உம்மைச்
5 சேவிப்போம் என்றார்கள். அதற்கு அவன்:
நீங்கள் மூன்றுநாள் பொறுத்து என்னிடம்
திரும்பிவாருங்கள் என்றான், அப்படியே
ஜனங்கள் போயிருந்தார்கள்.
6 அப்பொழுது ராஜாவாகிய ரெகாபெயாம்
தன் தகப்பனுகிய சாலொமோன் உயிரோ
டிருக்கையில் அவன் சமுகத்தில் நின்ற
முதியோரோடே ஆலோசனைபண்ணி, இந்த
ஜனங்களுக்குப் பதிற்சொல்லவேண்டுமே.
நீங்கள் என்ன யோசனை சொல்லுகிறீர்கள்
7 என்று கேட்டான். அதற்கு அவர்கள்:
நீர் இந்த ஜனங்களுக்குத் தயையும் பட்ச
மும் காட்டி அவர்களுக்கு நல்வார்த்தை
களைச் சொல்வீரானுல் எந்நாளும் அவர்கள்
உமக்கு ஊழியராயிருப்பார்கள் என்றார்கள்.
8 அவனை முதியோர் தனக்குச் சொன்ன
ஆலோசனையைத் தள்ளிவிட்டுத் தன்னோடே
வளர்ந்து தன் சமுகத்தில் நிற்கிற வாலிப
9 ரோடே ஆலோசனைபண்ணி | அவர்களைப்
பார்த்து: உமது தகப்பன் எங்கள்மேல்
வைத்த நுகத்தை லகுவாக்கும் என்று என்
னிடம் கேட்கிற இந்த ஜனங்களுக்குப்
பதில் சொல்லவேண்டுமே, நீங்கள் என்ன
யோசனை சொல்லுகிறீர்கள் என்றுகேட்க !
அவனோடு வளர்ந்த வாலிபர் அவனிடம்: 10
உமது தகப்பன் எங்கள் நுகத்தைப் பார
மாக்கினர், நீர் அதை எங்களுக்கு லகுவாக்
கும் என்று உம்மிடத்திலே கேட்ட இந்த
ஜனத்திற்கு: என் சுண்டுவிரல் என் தகப்பனு
டைய இடுப்பைப்பார்க்கிலும் பருமனு
யிருக்கும். இப்போதும் கேளுங்கள், என் 11
தகப்பன் பாரமான நுகத்தை உங்கள்மேல்
வைத்தார், நான் உங்கள் நுகத்தை அதிகப்
பாரமாக்குவேன்; என் தகப்பன் உங்களைச்
சவுக்குகளினுலே சிஷித்தார், நான் உங்க
ளைத் தேள்களினுலே சிஷிப்பேன் என்று
பதில் சொல்லவேண்டும் என்றார்கள்.
மூன்றும் நாள் என்னிடத்தில் வாருங் 12
கள் என்று ராஜா சொல்லியிருந்தபடியே
யெரொபெயாமும் சகல ஜனங்களும் மூன்
றும் நாளிலே ரெகாபெயாமிடம் வந்தார்
கள். ராஜா முதியோரின் ஆலோசனையைத் 13
தள்ளிவிட்டு அவர்களுக்குக் கடினமான
உத்தரவு கொடுத்தான். வாலிபருடைய 14
ஆலோசனையின்படியே அவர்களோடே
பேசி: நான் உங்கள் நுகத்தைப் பாரமாக்கு
வேன், அது அதிகமாகும்படி செய்வேன்;
என் தகப்பன் உங்களைச் சவுக்குகளினுலே
சிஷித்தார், நானே உங்களைத் தேள்களி
னுலே சிஷிப்பேன் என்றான். ராஜா ஜனங் 15
களுக்குச் செவிகொடாமற் போனன்;
யெகோவா சிலோ ஊராளனை அகியாவைக்
கொண்டு நேபாத்தின் குமாரனுகிய யெரொ
பெயாமுக்குச் சொன்ன தமது வார்த்தையை
உறுதிப்படுத்தும்படி கடவுளே இப்படி
நடக்கும்படி செய்தார். ராஜா தங்களுக்குச் 16
செவிகொடாததை இஸ்ரவேலர் எல்லாரும்
கண்டபோது, ஜனங்கள் ராஜாவுக்கு மறு
உத்தரவாக:

தாவீதினிடம் எங்களுக்குப் பங்கில்லை,
ஈசாயின் குமாரனிடம் எங்களுக்குச்
சுதந்தரமில்லை,
இஸ்ரவேலே உன் கூடாரங்களுக்குப்
போய்விடு,
இப்போதும் தாவீதே, உன் சொந்த வீட்
டைப் பார்த்துக்கொள்

என்று சொல்லிக்கொண்டு இஸ்ரவேலர்
எல்லாரும் தங்கள் தங்கள் கூடாரங்களுக்
குப் போய்விட்டார்கள். ஆனாலும் யூதா 17
வின் ஊர்களிலே குடியிருந்த இஸ்ரவேல்
புத்திரர்மேல் ரெகாபெயாம் ராஜாவாயிருந்
தான். பின்பு ராஜாவாகிய ரெகாபெயாம் 18
ஏவலாட்களின் மேல் விசாரணைக்காரனுகிய
அதோராமை அனுப்பினன்; இஸ்ரவேல்

புத்திரர் அவனைக் கல்லெறிந்து கொன்றார்கள்; அப்பொழுது ராஜாவாகிய ரெகபெயாம் தாமதமின்றி ரதத்தின்மேல் ஏறி எருச
19 லேமுக்கு ஓடிப்போனான். இப்படியாக இஸ்ரவேலர் தாவீதின் வம்சத்தைவிட்டுக் கலகம்பண்ணிப் பிரிந்துபோனார்கள், இந்நாள்வரைக்கும் பிரிந்தே இருக்கிறார்கள்.
**11** ரெகபெயாம் எருசலேமுக்கு வந்தபோது யூதா வீட்டாரிலும் பென்யமீன் வீட்டாரிலும் விசேஷித்த யுத்தவீரரான லட்சத்து எண்பதினாயிரம்பேரைத் திரட்டினான்; இஸ்ரவேலோடு யுத்தம்பண்ணவும் ராஜ்யத்தைத் தன்னிடமாகத் திருப்பிக்
2 கொள்ளவும்வேண்டுமென்று இப்படிச் செய்தான். கடவுளின் மனுஷனாகிய ஷெமாயாவுக்கு யெகோவாவின் வார்த்தை வந்தது;
3 நீ சாலொமோனின் குமாரனாகிய ரெகபெயாம் என்னும் யூதாவின் ராஜாவோடும் யூதாவிலும் பென்யமீனிலுமுள்ள சகல
4 இஸ்ரவேலரோடும் பேசி: யெகோவா சொல்வதைக் கேளுங்கள், நீங்கள் போகவேண்டாம், உங்கள் சகோதரரோடு யுத்தம் பண்ணவேண்டாம்; நீங்கள் எல்லாரும் தங்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிவிடுங்கள், இந்தக் காரியம் நடக்கிறது என்னாலேயே என்று சொல் என்றார்; அவர்கள் யெகோவாவின் சொல்லுக்குச் செவிகொடுத்து யெரொபெயாமுக்கு விரோதமாய்ச் செல்லாமல் திரும்பிப் போய்விட்டார்கள்.
5 ரெகபெயாம் எருசலேமில் வாசமாயிருந்து யூதாவிலே அரணான பட்டணங்
6 களைக் கட்டினான். பெத்லகேம், ஏத்தாம்,
7 தெக்கோவா, | பேத்சூர், சோகோ, அதுல்
8, 9 லாம், | காத், மரேஷா, ஜிப், | அதோரா
10 யீம், லாகீஷ், அசேக்கா, | சொரா, ஆயலோன், எப்பெரோன் என்னும் அரணான பட்டணங்களைக் கட்டினான்; இவை யூதா
11 விலும் பென்யமீனிலும் உள்ளவை; இந்த அரண்களைப் பலப்படுத்தி அவைகளிலே அதிபதிகளையும் ஆகாராதிகள், எண்ணெய், திராட்சரசம் இவற்றை வைக்கும் பண்ட
12 சாலைகளையும் ஏற்படுத்தினான். ஒவ்வொரு ஊரிலும் பரிசைகளையும் ஈட்டிகளையும் வைத்து அந்த இடங்களை மிகவும் பலப்படுத்தினான்; யூதாவும் பென்யமீனுமே அவனைச் சேர்ந்தன.
13 இஸ்ரவேலெங்குமுள்ள ஆசாரியரும் லேவியரும் தங்கள் சகல இடங்களிலு
14 மிருந்து அவனிடம் கூடிவந்தார்கள். லேவியர் யெகோவாவுக்கு ஆசாரிய ஊழியஞ் செய்யாதபடி யெரொபெயாமும் அவன் குமாரரும் அவர்களைத் தள்ளிப்போடவே
அவர்கள் தங்கள் வெளிநிலங்களையும் தங்கள் காணியாட்சிகளையும் விட்டு யூதாநாட்டுக்கும் எருசலேமுக்கும் வந்துவிட்டார்
15 கள். யெரொபெயாம் மேடைகளுக்கென்றும் பேய்களுக்கென்றும் தான் செய்திருந்த கன்றுக்குட்டிகளுக்கென்றும் ஆசாரியரை
16 ஏற்படுத்திக்கொண்டான். இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவையே தேடவேண்டுமெனும் கருத்துடையவர்கள் தங்கள் பிதாக்களின் கடவுளாகிய யெகோவாவுக்குப் பலியிடும்படி இந்த லேவியரின் பின்னே எருசலேமுக்கு வந்துகொண்டிருந்தார்கள். இப்
17 படியாக மூன்று வருஷமளவும் யூதாவின் ராஜ்யத்தை ஸ்திரப்படுத்திச் சாலொமோனின் குமாரனாகிய ரெகபெயாமைப் பலப்படுத்தினார்கள்; தாவீதும் சாலொமோனும் நடந்த வழியிலே மூன்றுவருஷகாலம் நடந்துவந்தான்.

ரெகபெயாம் தாவீதின் குமாரனாகிய எரி
18 மோத்துக்கும் ஈசாயின் குமாரனாகிய எலீயாபின் குமாரத்தி அபியாயிலுக்கும் பிறந்த மகலாத்தை விவாகம்பண்ணினான். இவன்
19 அவனுக்கு யெயூஷ், ஷெமரியா, சாகாம் என்னும் குமாரரைப் பெற்றாள். அவளுக்
20 குப்பிறகு அப்சலோமின் குமாரத்தியாகிய மாகாளை விவாகம்பண்ணினான்; அவள் அவனுக்கு அபியா, அத்தாயி, சீசா, ஷெலோமீத் என்பவர்களைப் பெற்றாள். ரெகபெயாம்
21 தன் மனைவிகள் மறுமனையாட்டிகள் எல்லாரிலும் அப்சலோமின் குமாரத்தியாகிய மாகாளை நேசித்தான்; பதினெட்டு மனைவிகளையும் அறுபது மறுமனையாட்டிகளையும் விவாகம்பண்ணி, இருபத்தெட்டுக் குமாரரையும் அறுபது குமாரத்திகளையும் பெற்றான். ரெகபெயாம் மாகாள் பெற்ற குமார
22 னாகிய அபியாவை அவன் சகோதரருக்குள்ளே தலைவனும் பெரியவனுமாக ஏற்படுத்தினான்; அவனே ராஜாவாக்கவேண்டுமென்றிருந்தான். அவன் புத்திசாலியாய்
23 நடந்து யூதாவையும் பென்யமீனையும் சேர்ந்த சகல நாடுகளிலுமுள்ள அரணான சகல பட்டணங்களிலும் தன் குமாரர் யாவரையும் பிரித்துவைத்து அவர்களுக்கு மிகுதியான ஆகாராதிகளைக் கொடுத்து அவர்களுக்கு அநேகம் மனைவிகளைத் தேடிக் கொண்டான்.

ரெகபெயாம் ராஜ்யத்தை ஸ்திரப்படுத்**12** தித் தன்னைப் பலப்படுத்திக்கொண்டபின் அவனும் அவனோடே இஸ்ரவேலர் அனைவரும் யெகோவாவின் நியாயப்பிரமாணத்தை விட்டு விலகினார்கள். அவர்கள் யெகோவா 2

வுக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணின படியினால் ரெகொபெயாம் ராஜாவின் ஐந்தாம் வருஷத்தில் எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் ஆயிரத்து இருநூறு ரதங்களோடும் அறு 3 பதினாயிரம் குதிரைவீரரோடும் எருசலே முக்கு விரோதமாய் வந்தான். அவனோடு எகிப்திலிருந்து வந்த லீபியர், சூக்கியர், எத்தியோப்பியரான ஜனங்கள் கணக்கற்ற 4 வர்கள். அவன் யூதாவைச் சேர்ந்த அரணான பட்டணங்களைப் பிடித்து எருசலேம் மட்டும் வந்தான்.

5 செமாயா தீர்க்கதரிசி ரெகொபெயாமிடத்துக்கும், சீஷாக்குக்குப் பயந்து எருசலேமிலே வந்து கூடியிருந்த யூதாவின் அதிபதிகளிடத்துக்கும் வந்து அவர்களோடு பேசி, யெகோவா சொல்வதைக் கேளுங்கள்: நீங்கள் என்னை விட்டுவிட்டீர்கள், நானும் உங்களை சீஷாக்கின் கையிலே விழும்படி 6 விட்டுவிட்டேன் என்கிறார் என்றான். அப்பொழுது இஸ்ரவேலின் அதிபதிகளும் ராஜாவும் தங்களைத் தாழ்த்தி: யெகோவா நியாயம் 7 செய்பவர் என்றார்கள். அவர்கள் தங்களைத் தாழ்த்தினதை யெகோவா கண்டபோது, யெகோவாவின் வார்த்தை செமாயாவுக்கு வந்தது: அவர்கள் தங்களைத் தாழ்த்தினார்கள் நான் அவர்களை அழிக்கமாட்டேன்; சீஷாக்கின் மூலமாய் என் உக்கிரம் எருசலேமின்மேல் ஊற்றப்படாதபடி அவர்கள் சற்றே தப்பும்படி செய்வேன். 8 என்னைச் சேவிப்பதற்கும் புறதேச ராஜ்யங்களைச் சேவிப்பதற்குமுள்ள வித்தியாசத்தை அவர்கள் அறியும்படி அவர்கள் அவனைச்சேவிக்கிறவர்களாவார்கள் என்று சொன்னார். 9 அப்படியே எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் எருசலேமுக்கு விரோதமாய் வந்து, யெகோவாவின் ஆலயப்பொக்கிஷங்களையும் ராஜ அரமனைப் பொக்கிஷங்களையும் எடுத்துக்கொண்டான், எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டான்; சாலொமோன் செய்திருந்த பொன் பரிசைகளையும் எடுத்துக் 10 கொண்டுபோய்விட்டான். அவைகளுக்குப் பதிலாக ரெகொபெயாம் ராஜா செப்புப்பரிசைகளைச் செய்து, அவைகளை ராஜாவின் வாசல் காவலாளராகிய சேவகருடைய தலை 11 வர்வசம் ஒப்புவித்தான். ராஜா யெகோவாவின் ஆலயத்தினுள் பிரவேசிக்கும்போதெல்லாம் அந்தச் சேவகர் அவைகளைப் பிடித்துக்கொண்டுபோய்த் திரும்பக் காவல் அறையிலே வைப்பார்கள்.

12 அவன் தன்னைத் தாழ்த்தினபடியினால் யெகோவாவின் கோபம் அவனைவிட்டு நீங்கிற்று, அவன் முழுதுமாய் அழிக்கப்பட வில்லை; யூதாவிலே இன்னும் சில நல்ல காரியங்கள் இருந்தன. அப்படியே ரெகா 13 பெயாம் ராஜா எருசலேமிலே தன்னைப் பலப்படுத்திக்கொண்டு அரசாண்டான்; ரெகொபெயாம் ராஜாவானபோது அவனுக்கு நாற்பத்தொரு வயது; யெகோவா இஸ்ரவேல் கோத்திரங்கள் அனைத்திலும் தமது திருநாம நிலையமாகத் தெரிந்துகொண்ட நகரமாகிய எருசலேமிலே அவன் பதினேழு வருஷம் அரசாண்டான்; அவன் தாயின்பேர் நாமாள்; அவள் அம்மோன் 14 ஜாதியைச் சேர்ந்தவள். அவன் யெகோவாவைத் தேடுவதற்குத் தன் இதயத்தைச் செவ்வைப்படுத்தாமல் தீமையானதைச் செய்தான்.

15 ரெகொபெயாமின் ஆதியோடந்தமான சங்கதிகள் தீர்க்கதரிசியாகிய செமாயா, ஞானதிருஷ்டிகளுகிய இத்தோ இவர்கள் வர்த்தமானங்களிலே வம்சஅட்டவணையில் இருக்கிற பிரகாரமாகவே எழுதியிருக்கிறதல்லவா? ரெகொபெயாமுக்கும் யெரொபெயாமுக்கும் அவர்கள் இருந்த நாளெல்லாம் 16 யுத்தம் நடந்துகொண்டிருந்தது. ரெகொபெயாம் நித்திரையடைந்து தன் பிதாக்களோடே சேரவே தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணப்பட்டான்; அவன் குமாரனுகிய அபீயா அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

யெரொபெயாம் ராஜாவின் பதினெட் 13
டாம் வருஷத்தில் அபீயா யூதாவின்மேல் ராஜாவாகி | மூன்று வருஷம் எருசலே 2 மிலே அரசாண்டான்; அவனுடைய தாயின் பேர் மிகாயாள்; அவள் கிபியா ஊராகிய ஊரியேலின் குமாரத்தி; அபீயாவுக்கும் யெரொபெயாமுக்கும் யுத்தம் நடந்துகொண்டேயிருந்தது. அபீயா தெரிந்தெ 3 டுத்த நாலுலட்சம்பேர் அடங்கிய பராக்கிரமவீரரின் ராணுவத்தைக்கொண்டு யுத்தத்தைத் தொடங்கினான்; யெரொபெயாம் தெரிந்தெடுத்த எட்டுலட்சம்பேர் அடங்கிய பலத்த பராக்கிரமவீரரை அவனுக்கு எதிரே யுத்தத்திற்கு அணிவகுத்தான். அப்பொழுது 4 அபீயா எப்பிராயீம் மலைநாட்டிலுள்ள செமாரயீம் என்னும் மலையின்மேல் ஏறிநின்று: யெரொபெயாமே, சமஸ்த இஸ்ரவேலரே, கேளுங்கள். இஸ்ரவேலின் அரசாட்சியை 5 என்றுமாக இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா தாவீதுக்கும் அவன் குமாரருக்கும் மாறுத உடன்படிக்கையாய்க் கட்டளையிட்டது உங்களுக்குத் தெரியாதா? ஆகிலும் தாவீதின் குமாரனுகிய சாலொ 6 மோனின் சேவைக்காரனை யெரொபெ

யாம், நேபாத்தின் குமாரன், எழும்பித் தன் எஜமானுக்கு விரோதமாகக் கலகம்பண்ணி
7 ஞன். பேலியாலின் மக்களாகிய வீணர் அவனேடே கூடிச் சாலொமோனின் குமார னுகிய ரெகொபெயாமுக்கு விரோதமாய்ப் பலத்துக்கொண்டார்கள்; ரெகொபெயாம் அவர்களே எதிர்க்கமுடியாதிருந்தான், அவன்
8 வாலவயதுள்ளவன், தைரியமற்றவன். இப் போதும் தாவீதின் குமாரன் கையிலிருக்கிற யெகோவாவின் ராஜ்யத்திற்கு விரோதமாக நீங்கள் பலத்துக்கொள்ளலாமென நினைக் கிறீர்கள்; நீங்கள் ஏராளமான கூட்டமே; யெரொபெயாம் உங்களுக்குத் தேவர்களாக உண்டுபண்ணினபொன்கன்றுக்குட்டிகளும்
9 உங்களோடு இருக்கின்றன. நீங்கள் ஆரோ னின் குமாரராகிய யெகோவாவின் ஆசா ரியரையும் லேவியரையும் தள்ளிவிட்டு மற்றத் தேசங்களிலுள்ள ஜனங்களைப் போலவே உங்களுக்கு ஆசாரியரை ஏற் படுத்திக்கொள்ளவில்லையோ? இளங்காளை யையும் ஏழு ஆட்டுக்கடாக்களையும் கொடுத் துத் தன்னைப் பிரதிஷ்டைசெய்யும்படி வரு கிற எவனும் தெய்வம் அல்லாதவைகளுக்கு
10 ஆசாரியனுகிருனே. எங்களுக்கோ யெகோ வாவே கடவுள், நாங்கள் அவரைவிட்டு விலகவில்லை; யெகோவாவுக்கு ஊழியஞ் செய்கிற ஆசாரியர் ஆரோனின் குமாரரே; ஆலயத்தைச்சேர்ந்த மற்றப் பணிவிடை
11 களைச் செய்கிறவர்கள் லேவியரே. அவர் கள் காலைதோறும் மாலைதோறும் யெகோ வாவுக்குத் தகனபலிகளையும் சுகந்த வாசனை யான தூபத்தையும் செலுத்திப் பரிசுத்த மேசையின்மேல் திருச்சமுகத்தப்பங்களை அடுக்கிவைக்கிறார்கள், பொன் குத்துவிளக் கிலே மாலைதோறும் அதின் விளக்குகளை ஏற்றுகிறார்கள்; நமது கடவுளாகிய யெகோவா கட்டளையிட்டதை நாங்கள் கைக்கொள்ளுகிறோம்; நீங்களோ அவரை
12 விட்டு விலகிப்போனீர்கள். இதோ, எங்க ளோடே கடவுள் சேனபதியாக இருக் கிறார், ஆசாரியர்களும் இருக்கிறார்கள், உங்களுக்கு விரோதமாய் யுத்தத்திற்கு எழும் பப் பெருந்தொனியாய் முழங்குகிற பூரிகை களும் உண்டு; இஸ்ரவேல் புத்திரரே, உங்கள் பிதாக்களின் கடவுளாகிய யெகோ வாவுக்கு விரோதமாக யுத்தஞ்செய்யாதே யுங்கள்; செய்தால் நீங்கள் சித்திபெறமாட் டீர்கள் என்றான்.

13 யெரொபெயாம் அவர்களுக்குப் பின்னே வரும்படி பதிவிருக்கும் ஆட்களைச் சுற்றிப் போகச் செய்தான்; இப்படியாக இஸ்ரவேல் யூதாவுக்கு முன்னும் அந்தப் பதிவிடை அவர்களுக்குப் பின்னும் இருந்தது. யூதா 14
ஜனங்கள் திரும்பிப்பார்த்து முன்னும் பின் னும் யுத்தம் நடக்கும் எனக் கண்டு யெ கோவாவை நோக்கிக் கூப்பிட்டார்கள்; ஆசாரியர்கள் பூரிகைகளை முழக்கினர்கள். யூதா ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள்; யூதா 15
ஜனங்கள் ஆர்ப்பரிக்கவே கடவுள் யெரொ பெயாமையும் இஸ்ரவேலனைத்தையும் அபீ யாவுக்கும் யூதாவுக்கும் முன்பாக முறிய டித்தார். இஸ்ரவேல் புத்திரர் யூதாவுக்கு 16
முன்பாக முறிக்தோடினர்கள்; கடவுள் அவர்களை இவர்கள் கையில் ஒப்புக்கொடுத் தார். அபீயாவும் அவன் ஜனங்களும் அவர்க 17
ளிலே மகா சங்காரம்பண்ணினர்கள்; தெரிக் தெடுத்த ஐந்துலட்சம்பேர் இஸ்ரவேலிலே வெட்டுண்டு விழுந்தார்கள். இப்படியாக 18
இஸ்ரவேல் புத்திரர் அக்காலத்திலே தாழ்த் தப்பட்டார்கள்; யூதா புத்திரரோ தங்கள் பிதாக்களின் கடவுளாகிய யெகோவாவின் மேல் நம்பிக்கையாயிருந்ததினால் மேற்கொ ண்டார்கள். அபீயா யெரொபெயாமைத் 19
தொடர்ந்துசென்று அவன் பட்டணங்களா கிய பேதேலையும் அதைச்சார்ந்த கிராமங் களையும், எஷானவையும் அதைச்சார்ந்த கிராமங்களையும், எப்ரோனையும் அதைச் சார் ந்தகிராமங்களையும்பிடித்தான். அப்பால்அபீ 20
யாவின் நாட்களில் யெரொபெயாம் பலம் கொள்ளவில்லை, யெகோவா அவனை அடித் தார், அவன் மரித்தான். அபீயா பலங் 21
கொண்டான்; அவன் பதினலு ஸ்திரீகளை விவாகம்பண்ணி இருபத்திரண்டு குமார ரையும் பதினறு குமாரத்திகளையும் பெற் றான்.

அபீயாவின் மற்ற விவரங்கள், அவன் 22
செய்தவைகளும் அவன் சொன்னவைக ளும், தீர்க்கதரிசியாகிய இத்தோ எழுதின மித்திராஷியிலே எழுதியிருக்கிறது.

அபீயா நித்திரையடைந்து தன் பிதாக்க 14
ளோடே சேரவே அவனைத் தாவீது நகரத் தில் அடக்கம்பண்ணினர்கள்; அவன் ஸ்தா னத்திலே அவன் குமாரனுகிய ஆசா ராஜா வானன்; இவனுடைய நாட்களில் தேசம் பத்து வருஷமளவும் அமைதலாயிருந்தது. ஆசா தன் கடவுளாகிய யெகோவாவின் 2
பார்வையில் நன்மையும் நேர்மையுமான தைச் செய்தான். அந்திய தேவர்களின் 3
பலிபீடங்களையும் மேடைகளையும் அகற்றிச் சிலைகளை உடைத்து மரச்சிலைகளை வெட்டி னன்; தங்கள் பிதாக்களின் கடவுளாகிய 4
யெகோவாவைத் தேடவும் நியாயப்பிரமா ணத்தின்படியும் கட்டளையின்படியும் செய்ய வும் யூதாவுக்குக் கீட்டளையிட்டான். யூதா 5

வின் சகல பட்டணங்களிலுமிருந்து பூஜை மேடைகளையும் சூரியவணக்கச் சிலைகளையும் அகற்றினான்; அவன் நாட்களில் ராஜ்யம் 6 அமைதலாயிருந்தது. யெகோவா அவனுக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிட்டார், அந்த வருஷங்களில் அவனுக்கு விரோதமான யுத்தம் இல்லாமல் தேசம் அமைதலாயிருந்தது; ஆகவே அவன் யூதாவிலே அரணான 7 பட்டணங்களைக் கட்டினான். அவன் யூதாவோடு பேசி: நாம் இந்தப் பட்டணங்களைக் கட்டி, அவைகளுக்கு அலங்கங்கள், கோபுரங்கள், வாசல்கள், தாழ்ப்பாள்கள் இவற்றை அமைத்துப் பலப்படுத்துவோம்; நமது கடவுளாகிய யெகோவாவை நாம் தேடிவந்தபடியால் தேசம் இன்னும் நமது வசமேயிருக்கிறது. நாம் அவரைத் தேடினோம், அவர் சுற்றிலும் நமக்கு அமைதியைக் கட்டளையிட்டார் என்றான்; அப்படியே கட்டினார்கள், சித்திபெற்றார்கள். 8 யூதாவிலே பரிசையும் ஈட்டியும் பிடிக்கிற மூன்று லட்சம்பேரும், பென்யமீனிலே கேடகம் பிடித்து வில்லை நாணேற்றுகிற இரண்டு லட்சத்து எண்பதினாயிரம்பேரும் அடங்கிய சேனை ஆசாவுக்கு இருந்தது; இவர்களெல்லாரும் பராக்கிரமவீரர்.

9 அவர்களுக்கு விரோதமாக எத்தியோப்பியனாகிய சேராகு பத்துலட்சம்பேர்களுள்ள சேனையோடும் முந்நூறு ரதங்களோடும் 10 புறப்பட்டு மரேஷாமட்டும் வந்தான். அப்பொழுது ஆசா அவனை எதிர்க்கச் சென்றான்; மரேஷாவுக்கு அடுத்த செபத்தா என்னும் பள்ளத்தாக்கில் யுத்தத்திற்கு அணி 11 வகுத்து நின்றார்கள். ஆசா தன் கடவுளாகிய யெகோவாவை நோக்கிக் கூப்பிட்டு: யெகோவாவே, பலமுள்ளவனுக்கும் பலமற்றவனுக்கும் நடக்கும் யுத்தத்தில் உதவி செய்பவர் உம்மையன்றியில்லை, எங்கள் கடவுளாகிய யெகோவாவே, எங்களுக்குத் துணை நில்லும்; நாங்கள் உமதுபேரில் நம்பிக்கைவைத்து உமது திருநாமத்தில் எதிராளமான இந்தத் திரள்கூட்டத்தை எதிர்க்க வந்தோம்; யெகோவாவே, நீரே எங்கள் கடவுள்; மனுஷன் உம்மை மேற்கொள் 12 ளான் என்றான். அப்பொழுது யெகோவா அந்த எத்தியோப்பியரை ஆசாவுக்கும் யூதாவுக்கும் முன்பாக முறியடிக்கவே எத்தியோ 13 ப்பியர் ஓட்டம்பிடித்தார்கள். அவர்களை ஆசாவும் அவனோடிருந்த ஜனங்களும் கேரார்மட்டும் துரத்தினார்கள்; ஒருவரும் உயிரோடே தப்பாதபடி எத்தியோப்பியர் விழுந்தார்கள்; யெகோவாவுக்கும் அவருடைய சேனைக்கும் முன்பாக நொறுங்கிப் போனார்கள்; யூதா புத்திரர் மிகுதியாகக் 14 கொள்ளையிட்டார்கள்; கேராரின் சுற்றுப்பட்டணங்களையெல்லாம் பிடித்துக்கொண்டார்கள்; யெகோவாவால் உண்டான பயம் அந்த ஊர்மேல் வந்தது; அந்தப் பட்டணங்களையெல்லாம் கொள்ளையிட்டார்கள், அவைகளில் கொள்ளை மிகுதியாய் அகப்பட்டது. மிருகங்களையடைத்திருந்த கொட் 15 டாரங்களையும் அவர்கள் இடித்துப்போட்டுத் திரளான ஆடுகளையும் ஒட்டகங்களையும் பிடித்துக்கொண்டு எருசலேமுக்குத் திரும்பினார்கள்.

அப்பொழுது கடவுளின் ஆவி ஓதேதின் **15** குமாரனாகிய அசரியாவின்மேல் வரவே, 2 அவன் ஆசாவுக்கு எதிர்கொண்டுபோய் அவனோடு பேசி: ஆசாவே, முழு யூதாவே, முழு பென்யமீனே, கேளுங்கள், நீங்கள் யெகோவாவோடிருப்பீர்களானால் அவர் உங்களோடிருப்பார்; நீங்கள் அவரைத் தேடுவீர்களானால் அவர் உங்களுக்கு வெளிப்படுவார்; அவரை விட்டுவிடுவீர்களேயானால் அவர் உங்களை விட்டுவிடுவார். 3 இஸ்ரவேலிலே அநேகாளாய் மெய்யான கடவுளும் இல்லை, உபதேசிக்கிற ஆசாரியனும் இல்லை, நியாயப்பிரமாணமும் இல்லை. 4 தங்கள் நெருக்கத்திலே இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவினிடம் திரும்பி அவரைத் தேடினபோது அவர் அவர்களுக்கு வெளிப்பட்டார். 5 அக்காலங்களிலே எவனும் சமாதானமாய் வெளியே போனதுமில்லை, உள்ளே வந்ததுமில்லை; தேசங்களின் குடிகள் எல்லாருக்குள்ளும் மகாகுழப்பம் உண்டாயிற்று; 6 ஜாதியை ஜாதியும் பட்டணத்தைப் பட்டணமும் நொறுக்கிற்று; கடவுள் அவர்களைச் சகலவித இடுக்கண்களினாலும் மனம் குழம்பச்செய்தார். 7 நீங்களோ உங்கள் மனந்தளராமல் தைரியமாயிருங்கள்; நீங்கள் செய்பவற்றுக்குப் பலன் பெறுவீர்கள் என்றான்.

8 ஆசா இந்த வார்த்தைகளையும் தீர்க்கதரிசியாகிய ஓதேதின் தீர்க்கதரிசனத்தையும் கேட்டபோது மனோபலங்கொண்டு, யூதா பென்யமீன் தேசம் அனைத்திலும் எப்பிராயீமின் மலைநாட்டில் தான் பிடித்த பட்டணங்களிலுமிருந்த அருவருப்புகளை அகற்றிவிட்டான்; யெகோவாவின் முகப்புமண்டபத்தின் முன்னிருந்த யெகோவாவின் பலிபீடத்தைப் புதுப்பித்தான். 9 யூதா பென்யமீன் ஜனங்களையும் எப்பிராயீமிலும் மனாசேயிலும் சிமியோனிலும் இருந்துவந்து அவர்களோடு சஞ்சரித்தவர்களையும் கூட்டினான்; அவனுடைய கடவுளாகிய யெகோவா

அவனெடிருக்கிறார் எனக்கண்டு இஸ்ரவே
லிலிருந்து நிரளான ஜனங்கள் அவன் பட்
10 சத்தில் வந்துசேர்ந்தார்கள். ஆசா அர
சாண்ட பதினைந்தாம் வருஷம் மூன்றாம்
மாதத்திலே அவர்கள் எருசலேமிலே வந்து
11 கூடித் | தாங்கள் கொள்ளையிட்டு ஒட்டிக்
கொண்டு வந்திருந்தவைகளில் அந்நாளிலே
எழுநூறு மாடுகளையும் ஏழாயிரம் ஆடுக
ளையும் யெகோவாவுக்குப் பலியிட்டார்கள்.
12 தங்கள் பிதாக்களின் கடவுளாகிய யெகோ
வாவைத் தங்கள் முழு இருதயத்தோடும்
தங்கள் முழு ஆத்துமாவோடும் தேடுவோம்
13 என்றும், | இஸ்ரவேலின் கடவுளாகிய யெ
கோவாவைத் தேடாதவன் எவனே, சிறியோர்
பெரியோர் ஸ்திரீ புருஷர் யாராலும் சரி
யே, அவன் கொல்லப்படவேண்டும் என்றும்
14 ஒரு உடன்படிக்கை செய்து | மகா சத்தத்
தோடும் கெம்பீரத்தோடும் பூரிகைகளோ
டும் எக்காளங்களோடும் யெகோவாவுக்கு
15 முன்பாக ஆணையிட்டார்கள். இந்த ஆண
யினிமித்தம் ஜனங்கள் யாவரும் சந்தோ
ஷப்பட்டார்கள்; தங்கள் முழு இருதயத்
தோடும் ஆணையிட்டுத் தங்கள் முழுமன
தோடும் அவரைத் தேடினார்கள்; யெகோவா
அவர்களுக்கு வெளிப்பட்டார், சுற்றிலும் அ
வர்களுக்கு அமைதியிருக்கும்படி செய்தார்.
16 அவலக்ஷணமான உருவமொன்றை மரச்
சிலையாகச் செய்துவைத்திருந்த தன் தாயா
கிய மாகாள் அரசபதவியிலிராதபடி அவனை
ராஜாவாகிய ஆசா விலக்கிவிட்டான்;
அவள் செய்த அவலக்ஷண உருவத்தையும்
நிர்மூலமாக்கிப் பொடிபடுத்திக் கீதரோன்
ஈரோடையண்டையிலே சுட்டெரித்துப்
17 போட்டான். கோவில் மேடைகளோ இஸ்ர
வேலிலிருந்து தகர்க்கப்படவில்லை; ஆனாலும்
ஆசா உயிரோடிருந்த நாளெல்லாம் அவன்
இருதயம் முழுவதும் கடவுளோடு இசைந்தி
18 ருந்தது. தன் தகப்பனும் தானும் பிரதிஷ்டை
செய்ய நேர்ந்துகொண்ட வெள்ளியையும்
பொன்னையும் பணிமுட்டுகளையும் அவன்
யெகோவாவின் ஆலயத்திலே கொண்டுவந்
19 தான். ஆசா அரசாண்ட முப்பத்தைந்
தாம் வருஷமட்டும் யுத்தம் இல்லாதிருந்தது.

16 ஆசா அரசாண்ட முப்பத்தாறாம் வரு
ஷத்திலே இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா
யூதாவுக்கு விரோதமாய் வந்து ஒருவரும்
யூதாவின் ராஜாவாகிய ஆசாவினிடம்
போக்குவரத்தாயிராதபடி ராமாவுக்கு அர
2 ண் கட்டினான். அப்பொழுது ஆசா யெ
கோவாவின் ஆலயத்திலும் ராஜாவின் அர
மனையிலுமிருந்த பொக்கிஷங்களிலுள்ள
வெள்ளியையும் பொன்னையும் எடுத்துத்
தமஸ்குவிலே வசித்த பெனாதாத் என்னும்
சீரியா ராஜாவினிடம் அனுப்பி: என் தகப் 3
பனுக்கும் உமது தகப்பனுக்கும் இருந்தது
போல எனக்கும் உமக்கும் உடன்படிக்கை
உண்டே; இதோ, வெள்ளியும் பொன்னும்
உமக்கு அனுப்புகிறேன்; இஸ்ரவேலின்
ராஜாவாகிய பாஷாவோடு நீர் செய்த
உடன்படிக்கையை மீறி அவன் என்னை
விட்டு விலகிப்போம்படி செய்யும் என்று
சொல்லச்சொன்னான். பெனாதாத் ராஜா 4
வாகிய ஆசா சொன்னதற்கிணங்கித் தன்
சேனாபதிகளை இஸ்ரவேலின் பட்டணங்
களுக்கு விரோதமாக அனுப்பினான்; அவர்
கள் ஈயோனையும் தாணையும் ஆபேல் மாயீ
மையும் நப்தலி பட்டணங்களின் எல்லாப்
பண்டசாலைகளையும் பிடித்துக்கொண்டார்
கள். பாஷா இதைக்கேட்டபோது ராமா 5
வைக் கட்டுகிறதை நிறுத்தித் தன் வேலை
யைவிட்டு ஒழிந்தான். அப்பொழுது ராஜா 6
வாகிய ஆசா யூதா அனைத்தையும் கூட்டிக்
கொண்டு போய், பாஷா கட்டின ராமா
வின் கற்களையும் அதின் மரங்களையும் எடு
த்துவந்து அவைகளால் கேபாவுக்கும் மிஸ்
பாவுக்கும் அரண் கட்டினான்.

அக்காலத்திலே ஞானதிருஷ்டிகளுகிய 7
களினி யூதாவின் ராஜாவாகிய ஆசாவினி
டம் வந்து அவனெடு பேசி: நீர் உமது
கடவுளாகிய யெகோவாவின்மேல் நம்பிக்
கை வையாமல் சீரியா ராஜாவின்மேல்
நம்பிக்கை வைத்தபடியால் சீரியா ராஜா
வின் ராணுவம் உமது கைக்குத் தப்பிப்
போயிற்று. மிகவும் ஏராளமான ரதங் 8
களையும் குதிரை வீரரையுமுடைய எத்தி
யோப்பியரும் லீபியரும் மகா சேனையா
யிருந்தார்களே; அப்படியிருந்தும் நீர் யெ
கோவாவின்மேல் நம்பிக்கைவைத்தபடியால்
அவர்களை உமது கையில் ஒப்புக்கொடுத்
தார். முழு இருதயத்தோடும் தம்மோடு 9
இசைந்திருக்கிறவர்களுக்குத் தமது வல்ல
மையை விளங்கப்பண்ணும்படி யெகோவா
வின் கண்கள் பூமியெங்கும் சுற்றிப்பார்த்
துக்கொண்டிருக்கின்றன; இந்த விஷயத்தில்
நீர் செய்தது மதிகேடு; ஆகவே இதுமுதல்
உமக்கு விடாத யுத்தமிருக்கும் என்றான்.
ஆசா ஞானதிருஷ்டிகன்மேல் கோபங்கொண்டு 10
அவனை சிறையிலே வைத்தான், அவன் சொன்
னதினிமித்தம் அவன்மேல் கடுங்கோபமாயி
ருந்தான், அன்றியும் அக்காலத்தில் ஜனங்க
ளுக்குள் சிலரைக் கொடுமையாய் நடத்தினான்.

ஆசாவைப்பற்றிய ஆதியோடந்தமான 11
விவரங்களெல்லாம் யூதாவையும் இஸ்ரவே
லையும் ஆண்ட ராஜாக்களின் புஸ்தகத்தில்

12 எழுதியிருக்கிறது. ஆசா அரசாண்ட முப்
பத்தொன்பதாம் வருஷத்திலே அவன் கால்
களில் வியாதி கண்டது, அவன் நோவு மிக
வும் அதிகரித்தது, எனினும் அவன் தன்
வியாதியில் யெகோவாவைத் தேடவில்லை,
13 வைத்தியரையே தேடினான். ஆசா நித்தி
ரையடைந்து தன் பிதாக்களோடே சேர்ந்
தான்; தான் அரசாண்ட நாற்பத்தோராம்
14 வருஷத்திலே மரித்தான். தாவீது நகரத்
தில் அவன் தனக்கென வெட்டிவைத்திருந்த
கல்லறையிலே அவனை அடக்கம்பண்ணி
னார்கள்; தைலக்காரர் செய்திருந்த கந்தவர்க்
கங்கள், பரிமளங்கள் நிறைந்த ஒரு படுக்
கையின்மேல் அவனைக் கிடத்தினார்கள்; அவ
னுக்காகத் திரளான கந்தவர்க்கங்களைக்
கொளுத்தினார்கள்.

**17** அவன் ஸ்தானத்திலே அவன் குமாரனா
கிய யோசபாத் ராஜாவாகி, இஸ்ரவேலுக்கு
விரோதமாகத் தன்னைப் பலப்படுத்திக்
2 கொண்டான். அவன் யூதாவின் அரணான
பட்டணங்களிலெல்லாம் படைவீரரையும்
யூதா தேசத்திலும் தன் தகப்பனாகிய ஆசா
பிடித்த எப்பிராயீமின் பட்டணங்களிலும்
3 அதிபதிகளையும் வைத்தான். யெகோவா
யோசபாத்தோடிருந்தார்; அவன் தன் தகப்
பனாகிய தாவீது முவக்கத்தில் நடந்த வழி
4 களில் நடந்துவந்தான். பாகால்களைத்
தேடவில்லை. தன் தகப்பனுடைய கடவு
ளைத் தேடி அவருடைய கட்டளைகளின்படி
நடந்துகொண்டான்; இஸ்ரவேல் செய்தது
5 போல் செய்யவில்லை. ஆகவே யெகோவா
அவன் கையில் ராஜ்யபாரத்தைத் திடப்படுத்
தினார்; யூதா கோத்திரத்தார் எல்லாரும்
யோசபாத்துக்கு வெகுமதிகளைக் கொண்டு
வந்தார்கள்; அவனுக்கு ஐசுவரியமும் கௌ
6 ரவமும் மிகுதியாயிற்று. யெகோவாவின்
வழிகளில் நடப்பதற்கு அவன் தைரியங்
கொண்டு கோவில் மேடைகளையும் மரச்
சிலைகளையும் யூதாவை விட்டகற்றினான்.
7 யூதாவின் ஊர்களிலிருந்து ஜனங்களுக்
குப் போதகம் செய்யும்படி அவன் தன் பிர
புக்களாகிய பென்காயில், ஒபதியா, சகரி
யா, நெதனெயேல், மிகாயா என்பவர்களை
அனுப்பினான்; தான் அரசாண்ட மூன்றாம்
வருஷத்திலே அவர்களை அனுப்பினான்.
8 இவர்களோடேகூட ஷெமாயா, நெதனியா,
செபதியா, அசாகேல், ஷெமிரமோத், யோ
னத்தான், அதொனீயா, தொபியா, தோப
தொனீயா என்னும் லேவியரையும் இவர்க
ளோடே ஆசாரியரான எலிஷாமாவையும்
9 யோராமையும் அனுப்பினான்; இவர்கள்
யூதாவிலே போதகம்செய்து யெகோவாவின்
நியாயப்பிரமாண புஸ்தகத்தை வைத்துக்
கொண்டு யூதாவின் ஊர்களிலெங்கும் திரிந்து
ஜனங்களுக்குப் போதித்தார்கள்.

10 யூதாவைச் சுற்றியிருந்த தேசங்களிலுள்ள
சகல ராஜ்யங்கள்மேலும் யெகோவாவைப்
பற்றிய திகில் உண்டாகவே யோசபாத்
தோடு யுத்தம்பண்ணாதிருந்தார்கள். 11 பெலிஸ்
தியரிலும் சிலர் யோசபாத்துக்கு வெகுமதி
களையும் பகுதியாக வெள்ளியையும் கொண்டு
வந்தார்கள்; அரபியரும் அவனுக்கு ஏழா
யிரத்து எழுநூறு ஆட்டுக்கடாக்களையும்
ஏழாயிரத்து எழுநூறு வெள்ளாட்டுக்
கடாக்களையும் கொண்டுவந்தார்கள். 12 இப்
படியாக யோசபாத் வரவர மிகவும் பெரிய
வனாகி யூதாவிலே கோட்டைகளையும் பண்ட
சாலைப் பட்டணங்களையும் கட்டினான்.
13 யூதாவின் பட்டணங்களிலே திரண்ட
பொருட்களையும், எருசலேமிலே பராக்கிரம
சாலிகளான போர்வீரரையும் வைத்திருந்
தான். 14 அவர்கள் பிதாக்களுடைய வம்சங்
களின்படியே அவர்கள் இலக்கமாவது:
யூதாவைச் சேர்ந்த ஆயிரவர் தலைவரில்
அத்னா தலைமையானவன்; அவனிடத்தில்
பராக்கிரம வீரர் மூன்று லட்சம்பேர் இருந்
தார்கள். 15 அவனுக்கு உதவியாயிருந்த அதி
பதி யோகனான்; அவனிடம் இரண்டுலட்
சத்து எண்பதினாயிரம்பேர் இருந்தார்கள்.
16 அவனுக்கு உதவியாயிருந்தவன் சிக்rயின்
குமாரனாகிய அமசியா, இவன் யெகோவா
வுக்குத் தன்னை மனப்பூர்வமாய் ஒப்புக்
கொடுத்தவன்; அவனிடத்திலே பராக்கிரம
வீரர் இரண்டுலட்சம்பேர் இருந்தார்கள்.
17 பென்யமீனியரைச் சேர்ந்தவர்களிலே எலி
யாதா பராக்கிரம வீரன்; வில்லும் கேட
மும் பிடிக்கிறவர்கள் இரண்டுலட்சம்பேர்
அவனிடம் இருந்தார்கள். 18 அவனுக்கு
உதவியாயிருந்தவன் யோசபாத்; அவனிடம்
யுத்தசன்னத்தரான லட்சத்து எண்பதினா
யிரம்பேர் இருந்தார்கள். 19 யூதா எங்கு
முள்ள அரணான பட்டணங்களில் ராஜா
வைத்திருந்தவர்கள் தவிர இவர்களே ராஜா
வைச் சேவித்தவர்கள்.

**18** யோசபாத்துக்கு மிகுந்த ஐசுவரியமும்
கௌரவமும் உண்டாயிற்று; அவன் ஆகா
போடே சம்பந்தங்கலந்தான். 2 சில வரு
ஷங்கள் சென்றபின்பு சமாரியாவிலிருந்த
ஆகாபினிடத்துக்குப் போனான்; அப்பொ
ழுது ஆகாப் அவனுக்கும் அவனோடு வந்த
ஜனத்திற்கும் அநேகம் ஆடுமாடுகளை அடிப்
பித்துக் கிலெயாத்திலுள்ள ராமோத்திற்கு
விரோதமாய் வரும்படி அவனைத் தூண்டி
னான். 3 இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப்

யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தோடு பேசி: கிலெயாத்திலுள்ள ராமோத்துக்கு என்னோடே வருகிறீரா என்று கேட்க அவன்: நீரும் நானும் ஒன்றே, என் ஜனம் உமது ஜனம், உம்மோடேகூட யுத்தத்திற்கு வருகிறேன் என்றான்.

4 பின்னும் யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவினிடம்: யெகோவா சொல்வது இன்னதென்று இன்றைக்கு விசாரித்து அறியும் 5 என்றான். அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா தீர்க்கதரிசிகளே, நானூறுபேரை, கூடிவரச்செய்து: நாங்கள் கிலெயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ணப் போகலாமா, போகலாகாதா என்று அவர்களைக் கேட்டதற்கு அவர்கள்: போம், கடவுள் ராஜாவின் கையில் அதை ஒப்புக்கொ 6 டுப்பார் என்றார்கள். பின்பு யோசபாத்: நாம் விசாரித்து அறிகிறதற்கு இவர்களையன்றி யெகோவாவின் தீர்க்கதரிசிகளில் யாராகிலும் இங்கே இல்லையா என்று கேட் 7 டான். அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா யோசபாத்தைப் பார்த்து: யெகோவாவினிடம் விசாரித்து அறிகிறதற்கு இன்னும் ஒருவன் இருக்கிறான்; அவன் யிம்லாவின் குமாரனாகிய மிகாயாவே; எனக்கோ அவன் ஆகாதவன், அவன் என்னைப்பற்றி எப்போதும் தீமையாகவே தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன், நன்மையாகச் சொல்லுகிறதில்லை என்றான்; அதற்கு யோசபாத், ராஜா அப் 8 படிச் சொல்லவேண்டாம் என்றான். அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா அரமனை அண்ணகரில் ஒருவனைக் கூப்பிட்டு, யிம்லாவின் குமாரனாகிய மிகாயாவைச் சீக்கிரமாய் 9 அழைத்துவா என்றான். இஸ்ரவேலின் ராஜாவும் யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தும் சமாரியாவின் ஊர்வாசலின் எதிரேயிருந்த களத்திலே ராஜவஸ்திரம் தரித்தவர்களாய்த் தத்தம் சிங்காசனங்களில் உட்கார்ந்திருந்தார்கள்; சகல தீர்க்கதரிசிகளும் அவர்கள் முன்னிலையில் தீர்க்கதரிசனஞ் சொல் 10 லிக்கொண்டிருந்தார்கள். கெனானாவின் குமாரனாகிய சிதெக்கியா தனக்கு இரும்புக் கொம்புகளைச் செய்து இவைகளால் நீர் சீரியரை முட்டி நிர்மூலமாக்கிப்போடுவீர் என்று யெகோவா சொல்லுகிறார் என்றான். 11 சகல தீர்க்கதரிசிகளும் அதற்கு இசைவாகவே தீர்க்கதரிசனஞ்சொல்லி, கிலெயாத்திலுள்ள ராமோத்திற்குப் போம், உமக்கு வாய்க்கும்; யெகோவா அதை ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றார்கள்.

12 மிகாயாவை அழைக்கப்போன ஆள் அவனோடே பேசி: இதோ, தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் ஏகவாக்காய் ராஜாவுக்கு அது கூலமாயிருக்கிறது; உமது வார்த்தையும் அவர்களில் ஒருவர் வார்த்தையைப்போல இருக்கும்படி அதுகூலமாகவே சொல்லும் என்றான். 13 அதற்கு மிகாயா: என் கடவுள் சொல்வதையே சொல்லுவேன், யெகோவாவின் ஜீவன்மேல் ஆணை என்று சொன்னான். 14 அவன் ராஜாவினிடம் வந்தபோது ராஜா அவனைப் பார்த்து: மிகாயாவே, நாங்கள் கிலெயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம் பண்ணப்போகலாமா, போகலாகாதா என்று கேட்டான். அதற்கு அவன்: போங்கள், உங்களுக்கு வாய்க்கும்; உங்கள் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள் என்றான். 15 ராஜா அவனைப் பார்த்து: நீ யெகோவாவின் நாமத்திலே உண்மையையல்லாமல் வேறொன்றையும் என்னிடத்தில் சொல்ல வேண்டாமென்று நான் எத்தனைதரம் உன்னை ஆணையிடுவிக்கவேண்டும் என்று சொன்னான். 16 அதைக்கேட்ட மிகாயா: இஸ்ரவேலர் எல்லாரும் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல மலைகளிலே சிதறியிருந்ததைக் கண்டேன்; அப்பொழுது யெகோவா, இவர்களை நடத்துகிறவன் இல்லை; அவரவர் தத்தம் வீட்டிற்குச் சமாதானத்தோடே திரும்பட்டும் என்றார் என்று சொன்னான். 17 இஸ்ரவேலின் ராஜா யோசபாத்தைப் பார்த்து: இவன் என்னைப்பற்றி நன்மையாக அல்ல தீமையாகவே தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் என்று நான் உம்மிடம் சொல்லவில்லையா என்றான்.

18 அப்பொழுது மிகாயா பேசத்தொடங்கி: யெகோவாவின் வார்த்தையைக் கேளுங்கள், யெகோவா தமது சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறதையும் பரமசேனையெல்லாம் அவர் வலதுபக்கத்திலும் அவர் இடதுபக்கத்திலும் நிற்கிறதையும் கண்டேன். 19 அப்பொழுது யெகோவா பார்த்து: இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் போய்க் கிலெயாத்திலுள்ள ராமோத்திலே மாளும்படி யார் அவனுக்குத் தூண்டுதல் செய்வான் என்று கேட்டதற்கு, ஒருவன் இப்படியும் ஒருவன் அப்படியும் சொன்னார்கள். 20 ஒரு ஆவி முன்வந்து, யெகோவாவுக்கு எதிரே நின்று: நான் அவனுக்குத் தூண்டுதல் செய்வேன் என்றது; எவ்வகையாய் என்று யெகோவா அதைக்கேட்க | அது: நான் 21 போய், அவனுடைய சகல தீர்க்கதரிசிகளின் வாயிலும் பொய்யின் ஆவியாய் இருப்பேன் என்றது. அதற்கு அவர்: நீ அவனுக்குத் தூண்டுதல் செய், நீ ஜெயித்து பெறுவாய்; போய் அப்படியே செய் என்

22 ரூர். ஆகவே யெகோவா பொய்யின் ஆவி
யை உமது தீர்க்கதரிசிகளாகிய இவர்கள்
வாயிலே கட்டளையிட்டார்; யெகோவா உம்
மைப்பற்றிப் பேசினது தீமையே என்று
சொன்னான்.
23 அதைக் கேட்டுக்கொண்டிருந்த கெனனி
வின் குமாரனுகிய சிதெக்கியா கிட்டவந்து,
மிகாயாவைக் கன்னத்தில் அடித்து, யெகோ
வாவின் ஆவி எந்த வழியாய் என்னிலிட்டு
உன்னோடே பேசும்படி வந்தது என்றான்.
24 அதற்கு மிகாயா: நீ போய் ஒளித்து அறை
அறையாய்ப் பதுங்கும் அந்நாளிலே அதைக்
25 காண்பாய் என்றான். அப்பொழுது இஸ்ர
வேலின் ராஜா: மிகாயாவைப் பிடியுங்கள்,
அவனை நகரத் தலைவனுகிய ஆமோனிடத்
துக்கும் ராஜகுமாரனுகிய யோவாசினிடத்
26 துக்கும் கொண்டுபோங்கள்; இவனைச்
சிறைச்சாலையிலே வைத்து நான் சுகமாய்த்
திரும்பிவருமளவும் இவனுக்கு இடுக்கத்
தின் அப்பத்தையும் இடுக்கத்தின் தண்ணீ
ரையும் சாப்பிடக்கொடுங்கள் என்று ராஜா
சொன்னார் என்று சொல்லுங்கள் என்றான்.
27 அப்பொழுது மிகாயா: நீர் சுகமாய்த்
திரும்பிவந்து விடுவீரேயானுல் யெகோவா
என்னைக்கொண்டு பேசினதில்லையாகும்
என்று சொல்லி, ஜனங்களே, நீங்கள் எல்
லாரும் இதைக் கவனித்துக்கொள்ளுங்கள்
என்றான்.
28 பின்பு இஸ்ரவேலின் ராஜாவும் யூதாவின்
ராஜாவாகிய யோசபாத்தும் கிலெயாத்தி
29 லுள்ள ராமோத்திற்குப் போனார்கள். இஸ்ர
வேலின் ராஜா யோசபாத்தைப் பார்த்து:
நான் வேஷமாறி யுத்தத்திற்குப்போவேன்,
நீரோ உமது வஸ்திரங்களையே தரித்திரும்
என்று சொன்னான், இஸ்ரவேலின் ராஜா
வேஷமாறிக்கொண்டான், அவர்கள் யுத்
தத்திற்குப் போனார்கள்; சீரியாவின் ராஜா
30 தன் ரதங்களின் தலைவரைப் பார்த்து: நீங்
கள் சிறியவரோடும் பெரியவரோடும் யுத்
தம்பண்ணவேண்டாம், இஸ்ரவேலின் ராஜா
ஒருவனேடே மாத்திரம் யுத்தம்பண்ணுங்கள்
31 என்று கட்டளையிட்டிருந்தான். ஆகவே
ரதங்களின் தலைவர் யோசபாத்தைக் காண்
கையில் இவன்தான் இஸ்ரவேலின் ராஜா
என்று சொல்லி யுத்தம்பண்ண அவன்மேல்
வரும்படி சூழ்ந்துகொண்டார்கள்; யோச
பாத் கூக்குரலிடவே யெகோவா அவனுக்
குத் துணையானர்; அவர்கள் அவனைவிட்டு
32 விலகும்படி கடவுள் செய்தார். இவன்
இஸ்ரவேலின் ராஜா அல்லவென்று ரதங்
களின் தலைவர் கண்டு அவனைவிட்டு வில
33 கிப்போனார்கள். ஒருவன் வில்லை ஆண்மை
யாய் முழு இருதயத்தோடும் இந்த வேலை

றிக் குறிபார்க்காமல் எய்தான், அது இஸ்ர
வேல் ராஜாவினுடைய கவசச்சன்னிலே பட்
டது; படவே அவன் தன் சாரதியைப்
பார்த்து: நீ திருப்பி என்னை ராணுவத்துக்
கப்பால் கொண்டுபோ, எனக்குக் காயம்
பட்டது என்றான். அக்காலெல்லாம் 34
அகோர யுத்தம் நடக்கவே இஸ்ரவேலின்
ராஜா சீரியருக்கு எதிராக ரதத்திலே சாயங்
காலமட்டும் நின்றுகொண்டிருந்தான்; சூரி
யன் அஸ்தமிக்கும்போது இறந்துபோனான்.

யூதாவின் ராஜாவாகிய யோசபாத் எருச 19
லேமிலுள்ள தன் வீட்டிற்குச் சுகமாய்த்
திரும்பிவந்தான். அப்பொழுது கனியின் 2
குமாரனுகிய யேகூ என்னும் ஞானதிருஷ்டி
கன் எதிர்கொண்டுவந்து ராஜாவாகிய யோச
பாத்தைப் பார்த்து: துன்மார்க்கனுக்குத்
துணைநின்று யெகோவாவைப் பகைக்கிறவர்
களை நீர் நேசிப்பது சரியா? இதினிமித்தம்
யெகோவாவின் கடுங்கோபம் உம்மேல் வந்
திருக்கிறது. உம்மிடத்திலே சில நல்ல 3
காரியங்கள் காணப்படுகின்றன, நீர் மரச்
சிலைகளைத் தேசத்திலிருந்து அகற்றிக் கடவு
ளைத் தேட உமது இதயத்தை நேராக்கினீரே
என்றான்.

யோசபாத் எருசலேமிலே வாசம்பண்ணி 4
னன், திரும்பவும் பெயர்ஷெபா தொடங்கி
எப்பிராயீம் மலைநாடுமட்டுமுள்ள ஜனத்திற்
குள்ளே பிரயாணம்செய்து அவர்களைத் தங்
கள் பிதாக்களின் கடவுளாகிய யெகோவாவி
னிடமாகத் திரும்பச்செய்தான். அவன் 5
யூதாவிலே அரணான பட்டணம் ஒவ்வொன்
றிலும் நியாயாதிபதிகளை ஏற்படுத்தி | அந்த 6
நியாயாதிபதிகளோடு பேசி: நீங்கள் செய்கிற
காரியத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருங்
கள்; நீங்கள் மனுஷனுக்கென்றல்ல யெகோ
வாவுக்கென்றே நியாயம் விசாரிக்கவேண்டும்;
நியாயம் விசாரிக்கும்போதெல்லாம் அவர்
உங்களோடிருக்கிறார். ஆகவே யெகோவா 7
வுக்குப் பயப்படுகிற பயம் உங்களில்
இருக்க; இந்த வேலையை எச்சரிக்கையா
யிருந்து செய்யுங்கள், நமது கடவுளாகிய
யெகோவாவினிடம் அநியாயமில்லை, அவர்
பக்ஷபாதமுள்ளவரல்ல, பரிதானம் வாங்கு
கிறவருமல்ல என்றான். யோசபாத் எருச 8
லேமிலும் லேவியர் ஆசாரியர் இஸ்ரவேலின்
வம்சத்தலைவர் இவர்களில் சிலரை யெகோ
வாவுக்குரிய காரியங்களிலும் மற்றும் விவா
தங்களிலும் நியாயவிசாரணைசெய்ய ஏற்படுத்
தினான்; அவன் எருசலேமுக்குத் திரும்பி 9
வந்தபோது அவர்களுக்குக் கட்டளையிட்டு:
நீங்கள் யெகோவாவுக்குப் பயந்து உண்மை

10 யைச் செய்யுங்கள். தத்தம் ஊர்களிலே குடியிருக்கிற உங்கள் சகோதரரிடமிருந்து வரும் வழக்குகளிலே, ரத்தப்பழியோ, நியாயப்பிரமாணம், கட்டளை, நியமம், தீர்ப்பு இவற்றை மீறியதோ, இவற்றிலெல்லாம், நீங்கள் அவர்களை எச்சரிக்கவேண்டும். அவர்கள் யெகோவாவின் பார்வையில் குற்றவாளிகளாகவே யிராதபடிக்கும், கடுங்கோபம் உங்கள்மேலும் உங்கள் சகோதரர் மேலும் வராதபடிக்கும் பார்த்துக்கொள்ளுங்கள், இப்படிச் செய்வீர்களானால் நீங்கள் குற்றமற்றவர்களாயிருப்பீர்கள். 11 யெகோவாவுக்குரிய சகல காரியங்களிலும், இதோ பிரதான ஆசாரியனுகிய அமரியா உங்களுக்கு மேலானவனுயிருப்பான்; ராஜாவுக்குரிய சகல காரியங்களிலும் இஸ்மவேலின் குமாரனுகிய செபதியா என்னும் யூதாவம்சத்தலைவன் மேலானவன். லேவியரும் உங்களுக்கு உத்தியோகமாக விசாரணைசெய்வார்கள், நீங்கள் மனோபலங்கொண்டு உங்கள் வேலையைச் செய்யுங்கள், நேர்மையாளருக்கு யெகோவாவே துணை என்று சொன்னுன்.

**20** இதற்குப்பின்பு மோவாப் புத்திரரும் அம்மோன் புத்திரரும் அவர்களோடே மெயூனியரிற் சிலரும் யோசபாத்திற்கு விரோதமாய் யுத்தம்பண்ண வந்தார்கள். 2 சிலர் வந்து யோசபாத்துக்கு இதை அறிவித்து: இதோ, மிகத்திரளான ஜனங்கள் கடலுக்கு அக்கரையிலுள்ள சீரியாவிலிருந்து உமக்கு விரோதமாய் வருகிறார்கள்; அவர்கள் ஏன்கேதியாகிய கத்சாத்சோன் தாமாரில் இருக்கிறார்கள் என்று சொன்னர் 3 கள். அப்பொழுது யோசபாத் பயந்து யெகோவாவினிடம் திரும்பி அவரைத் தேடி யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறுவித் 4 தான். அப்படியே யூதா ஜனங்கள் யெகோவாவினிடம் சகாயந்தேடக் கூடினர்கள்; யூதாவிலுள்ள சகல ஊர்களிலுமிருந்து அவர்கள் யெகோவாவைத் தேடவந்தார்கள். 5 அப்பொழுது யோசபாத் யெகோவாவின் ஆலயத்தில் புதுப்பிராகார முகப்பிலே யூதா ஜனங்களும் எருசலேமியரும் கூடியிருந்த 6 சபையிலே வந்து நின்று: எங்கள் பிதாக்களின் கடவுளாகிய யெகோவாவே, பரலோகத்திலே நீரே கடவுள்; ஜாதிகளின் ராஜ்யங்கள் அனைத்தையும் ஆளுபவரும் தேவரீரே; உமது கரத்திலே சக்தியும் வல்லமையும் உண்டு; ஒருவரும் உம்மை எதிர்த்துநிற்க 7 முடியாது. உமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முன்பாக இந்தத் தேசத்துக் குடிகளைத் துரத்திவிட்டு இதை உமது சிநேகிதனுகிய ஆபிரகாமின் சந்ததிக்கு என்றைக்கு மாகக் கொடுத்தவர் எங்கள் கடவுளாகிய நீரேயல்லவா? ஆகவே அவர்கள் இங்கே 8 குடியிருந்து இங்கேயே உமது திருநாமத்திற்கென்று ஒரு பரிசுத்தஸ்தலத்தைக் கட்டினர்கள். எங்கள்மேல் பட்டயம், நியாய 9 தண்டனை, கொள்ளைநோய், பஞ்சம் முதலான தீமைகள் வரும்போது, நாங்கள் இந்த ஆலயத்திற்கும் உமது திருச்சந்நிதிக்கு முன்பாக—உமது திருநாமம் இந்த ஆலயத்தில் விளங்குகிறதே—வந்து நின்று எங்கள் இடுக்கணில் உம்மை நோக்கிக் கூப்பிட்டால் தேவரீர் கேட்டு ரட்சிப்பீர் என்று சொல்லியிருக்கிறர்கள். இப்போதும், 10 இதோ, அம்மோன் புத்திரர், மோவாபியர், சேயீர்மலை நாட்டார் இங்கே வந்திருக்கிறார்கள், இஸ்ரவேலர் எகிப்துதேசத்திலிருந்து வந்தபோது இவர்கள் தேசங்களின் வழியாய்ப்போக இஸ்ரவேலருக்கு நீர் இடங்கொடுக்கவில்லை. அப்படியே இஸ்ரவேலர் அவர்களை விட்டு விலகி அவர்களை அழிக்காமல் விட்டார்கள். இப்போதும், இதோ, 11 அவர்கள் அதற்குப்பதிலாக எங்களுக்குச் செய்வதென்ன! எங்களுக்கு உரிமையாகத் தேவரீர் தந்த உமது உரிமையிலிருந்து எங்களைத் துரத்திவிட வருகிறர்கள். எங்கள் 12 கடவுளே, அவர்களை நீர் நியாயந்தீர்க்கமாட்டீரோ? எங்களுக்கு விரோதமாக வருகிற இந்த ஏராளமான கூட்டத்தின்முன் நிற்க எங்களுக்குப் பலமில்லை; நாங்கள் செய்ய வேண்டியது இன்னதென்றும் எங்களுக்குத் தெரியவில்லை; எங்கள் கண்கள் உம்மையே நோக்குகின்றன என்றன.

யூதா கோத்திரத்தார் அனைவரும் அவர் 13 கள் குழந்தைகளும் அவர்கள் மனைவிகளும் அவர்கள் குமாரருங்கூட யெகோவாவின் சந்நிதியில் நின்றர்கள். அப்பொழுது 14 யெகோவாவின் ஆவி சபையின் நடுவிலே ஆசாப்பின் புத்திரரைச்சேர்ந்த லேவியனுன யகசியேலின்மேல் வந்தது; இவன் சகரியாவின் குமாரன், இவன் பெனயாவின் குமாரன், இவன் யெயியேலின் குமாரன், இவன் மத்தனியாவின் குமாரன். யகசியேல் பேசத்தொடங்கி: சகல 15 யூதா கோத்திரத்தாரே, எருசலேமின் குடிகளே, யோசபாத் ராஜாவே, எல்லாரும் கவனியுங்கள்; யெகோவா சொல்வதைக் கேளுங்கள், நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படவேண்டாம், கலங்கவேண்டாம்; இந்த யுத்தம் உங்களுடையதல்ல, கடவுளுடையது. நாளைக்கு நீங் 16 கள் அவர்களுக்கு விரோதமாய்ப் போங்கள்; இதோ, அவர்கள் ஸீஸ்மேட்டுவழியாய்

வருகிறார்கள்; நீங்கள் அவர்களை யெருவேல் வனந்தரத்திற்கு எதிரே பள்ளத்தாக்கின் 17 கடைமுனையிலே காண்பீர்கள். யுத்தம் செய்கிறவர்கள் நீங்கள் அல்ல; யூதா மனுஷரே, எருசலேம் ஜனங்களே, நீங்கள் சும்மா நின்றுகொண்டு யெகோவா உங்களுக்குக் கொடுக்கும் ரட்சிப்பைப் பாருங்கள்; பயப்படவேண்டாம், கலங்கவேண்டாம்; நாளையதினம் அவர்களுக்கு எதிராகப் போங்கள்; யெகோவா உங்களோடிருக்கிறார் 18 என்று சொன்னான். அப்பொழுது யோசபாத் தரைமட்டும் முகங்குனிந்தான்; யூதா கோத்திரத்தார் அனைவரும் எருசலேமின் குடிகளும் யெகோவாவுக்குமுன்பாகத் தாழவிழுந்து அவரைப் பணிந்துகொண்டார்கள். 19 கெகாத்து புத்திரரையும் கோராகு புத்திரரையும் சேர்ந்த லேவியர் எழுந்து நின்று இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவை மகா சத்தத்தோடே பெருந்தொனியாய்த் துதித்தார்கள்.

20 அவர்கள் அதிகாலமே எழுந்திருந்து தெக்கோவாவின் வனந்தரத்திற்குப் போகப் புறப்பட்டார்கள்; புறப்படுகையில் யோசபாத் வந்து நின்று, யூதாவே, எருசலேமின் குடிகளே, கேளுங்கள்; உங்கள் கடவுளாகிய யெகோவாவில் நம்பிக்கையாயிருங்கள்; அப்பொழுது நிலைநிற்பீர்கள்; அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள்; அப்பொழுது சித்திபெறுவீர்கள் என்று சொன்னான். 21 பின்பு அவன் ஜனத்தோடே ஆலோசனை செய்து, பாடகரை நியமித்து, ஆயுதம் அணிந்தவர்களுக்குமுன்பாக நடந்து,

யெகோவாவுக்கு நன்றி செலுத்துங்கள்.
அவர் இரக்கம் என்றுமுள்ளது

என்று பரிசுத்த அலங்காரத்தோடு யெகோ 22 வாவைப் பாடும்படி செய்தான். அவர்கள் பாடித் துதிசெய்யத்தொடங்கவே, யூதாவுக்கு விரோதமாய் வந்திருந்த அம்மோன் புத்திரர், மோவாபியர், சேயீர்மலை நாட்டார் இவர்கள், மேல் பதிவிருந்தவர்கள் விழும்படி யெகோவா செய்தார், அவர்கள் முறியடிக் 23 கப்பட்டார்கள். அம்மோன் புத்திரரும் மோவாபியரும் சேயீர்மலை நாட்டாரை அழிக்கவும் நிர்மூலமாக்கவும் அவர்களுக்கு விரோதமாய் எழும்பினார்கள்; சேயீர் நாட்டாரை அழித்துத் தீர்ந்தபோது தங்களையும் அழிப்பதற்கு ஒருவருக்கொருவர் உதவி செய்துகொண்டார்கள்.

24 யூதா கோத்திரத்தார் வனந்தரத்தைப் பார்க்கும் மேட்டிடற்கு வந்து அந்த ஏராளமான கூட்டமிருந்த திக்கை நோக்கினபோது, இதோ: அவர்கள் தரையிலே பிரேதங்களாக விழுந்துகிடக்கிறதைக் கண்டார்கள்; ஒருவரும் தப்பவில்லை. யோசபாத்தும் அவன் 25 வீரரும் அவர்கள் உடைமைகளைக் கொள்ளையிட வந்தபோது அங்கே ஏராளமான பொருட்களையும் பிரேதங்களையும் ஆடை ஆபரணங்களையும் கண்டு அவற்றைப் பறித்துக்கொண்டார்கள்; அவற்றை எடுத்துக் கொண்டு போகமுடியாதிருந்தது; மூன்று நாளாகக் கொள்ளையிட்டார்கள், அது அவ் வளவு மிகுதியாயிருந்தது. நாலாம் நாளில் 26 பெராக்கா பள்ளத்தாக்கிலே கூடினார்கள்; அங்கே யெகோவாவுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினார்கள்; ஆதலால் அவ்விடத்திற்குப் பெராக்கா பள்ளத்தாக்கு என்னும் பேர் தரித்தார்கள். அந்தப் பேரே இந்நாள் வரைக்கும் வழங்குகிறது.

பின்பு யூதா மனுஷர் யாவரும் எருச 27 லேம் ஜனங்களும் அவர்களுக்குமுன்னே யோசபாத்தும் களிப்போடே எருசலேமுக்குப் போகத்திரும்பினார்கள்; யெகோவா அவர்களை அவர்கள் சத்துருக்கள் விஷயமாய்க் களிகூரச் செய்தார். அவர்கள் 28 தம்புருகளோடும் சுரமண்டலங்களோடும் பூரிகைகளோடும் எருசலேமிலிருக்கிற யெகோவாவின் ஆலயத்திற்கு வந்தார்கள். இஸ்ரவேலின் சத்துருக்களோடு யெகோ 29 வாவே யுத்தம்பண்ணினார் என்று பிறதேச ராஜ்யத்தார் எல்லாரும் கேள்விப்படவே கடவுளைப்பற்றிய திகில் அவர்களைப் பிடித்தது. இவ்விதமாக யோசபாத்தின் அர 30 சாட்சிகாலம் அமைதலாயிருந்தது; அவன் கடவுள் சுற்றிலும் அவனுக்கு அமைதியிருக்கும்படி செய்தார்.

யோசபாத் யூதாவை அரசாண்டான்; 31 அவன் ராஜாவானபோது அவனுக்கு முப்பத்தைந்து வயது, இருபத்தைந்து வருஷம் எருசலேமிலே அரசாண்டான்; அவன் தாயின்பேர் அசூபாள், அவள் சில்கியின் குமாரத்தி. அவன் தன் தகப்பனாகிய ஆசா 32 வின் வழியிலே நடந்தான், அவன் அதை விட்டு விலகாமல் யெகோவாவின் பார்வையில் நேர்மையானதைச் செய்துவந்தான். பூஜை மேடைகளோ தகர்க்கப்படவில்லை; 33 ஜனங்கள் தங்கள் இருதயத்தைத் தங்கள் பிதாக்களின் கடவுளுக்கு இன்னும் நேராக் காதிருந்தார்கள்.

யோசபாத்தின் ஆதியந்தமான மற்ற விவ 34 ரங்கள் கனியின் குமாரனாகிய யேகூவின் வர்த்தமானத்தில் எழுதியிருக்கின்றன; அது இஸ்ரவேல் ராஜாக்களின் புஸ்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

அதன் பின்பு யூதாவின் ராஜாவாகிய 35

யோசபாத், இஸ்ரவேலின் ராஜாவாகிய அகசியாவோடு கூடினான், இவன் தெய்வ
36 பயமின்றி நடப்பவன். தர்ஷீசுக்குச் செல்லும் கப்பல்களைச் செய்வதற்கு அவனோடே கூடிக்கொண்டான். அப்படியே எசியோன்
37 கேபேரிலே கப்பல்களைச் செய்தார்கள். மரேஷா ஊராகிய எலியேசர், தொதாவாவின் குமாரன், யோசபாத்துக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொல்லி, நீர் அகசியாவோடே கூடிக்கொண்டபடியினால் நீர் செய்தவைகளை யெகோவா அதமாக்கினார் என்றான்; அந்தக் கப்பல்கள் உடைந்து போயின; அவைகள் தர்ஷீசுக்குச் செல்ல முடியாமற்போயிற்று.

**21** யோசபாத் நித்திரையடைந்து தன் பிதாக்களோடே சேர்ந்து தாவீது நகரத்தில் தன் பிதாக்களண்டையிலே அடக்கம்பண்ணப்பட்டான்; அவன் ஸ்தானத்திலே அவன்
2 குமாரனாகிய யோராம் ராஜாவானான். அவனுக்கு இருந்த சகோதரராகிய யோசபாத்தின் குமாரர் அசரியா, யெகியேல், சகரியா, அசரியா, மிகாவேல், ஷெபத்தியா என்பவர்களே; இவர்கள் எல்லாரும் இஸ்ரவேலின்
3 ராஜாவாகிய யோசபாத்தின் குமாரர். அவர்களுடைய தகப்பன் அவர்களுக்கு அநேகன்கொடைகளை, வெள்ளியையும் பொன்னையும் உசிதங்களான பொருட்களையும், கொடுத்ததுமல்லாமல் யூதாவிலே அரணான பட்டணங்களையும் அவர்களுக்குக் கொடுத்தான்; யோராம் ஜேஷ்ட புத்திரனானபடியினால் அவனுக்கு ராஜ்யத்தைக் கொடுத்தான்.

4 யோராம் தன் தகப்பனுடைய ராஜ்யபாரத்தை வகித்துத் தன்னைப் பலப்படுத்திக்கொண்டபின்பு தன் சகோதரர் யாவரையும் இஸ்ரவேலின் பிரபுக்களில் சிலரையும் பட்ட
5 யத்தால் கொன்றுபோட்டான். யோராம் ராஜாவானபோது அவனுக்கு முப்பத்திரண்டு வயது, எட்டு வருஷம் எருசலே
6 மிலே அரசாண்டான். அவன் இஸ்ரவேல் ராஜாக்களின் வழியிலே நடந்து ஆகாபின் வீட்டார் செய்ததுபோலவே செய்துவந்தான்; ஆகாபின் குமாரத்தி அவனுக்கு மனைவியாயிருந்தாள்; அவன் யெகோவாவின் பார்வையில் தீமையானதைச் செய்தான்.
7 யெகோவாவோ தாம் தாவீதோடு செய்த உடன்படிக்கையினிமித்தம் தாவீதின் வம்சத்தை அழித்துவிட மனமற்றிருந்தார்; தாவீதுக்கும் அவன் குமாரருக்கும் என்றென்றைக்குமாக ஒரு விளக்கைக் கட்டளையிடுவேன் என்று சொல்லியிருந்தாரே.

8 அவன் நாட்களிலே ஏதோமியர் யூதாவுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணிப் பிரிந்து தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்திக்கொண்டார்கள். ஆகவே யோராம் தன் 9
அதிபதிகளோடு தன் சகல ரதங்களையும் கூட்டிக்கொண்டு அங்கே போனான்; ஏதோமியர் அவனை வளைந்துகொள்ளவே அவன் இரவில் எழுந்திருந்து அவர்களையும் அவர்கள் ரதங்களின் தலைவரையும் முறியடித்தான். ஆகிலும் ஏதோமியர் யூதாவுக்கு 10
விரோதமாய்க் கலகம்பண்ணிப் பிரிந்து போனார்கள், இந்நாள்மட்டும் பிரிந்தே இருக்கிறார்கள். அதே காலத்திலே லிப்னா ஊராரும் அவனுக்கு விரோதமாய்க் கலகம் பண்ணிப் பிரிந்தார்கள். அவன் தன் பிதாக்களின் கடவுளாகிய யெகோவாவைவிட்டு விலகினபடியால் இப்படி நடந்தது. அவன் 11
யூதா மலைகளின்மேல் பூஜைமேடைகளைக் கட்டி எருசலேமின் குடிகளைச் சோரம்போகப்பண்ணி யூதாவையும் அதற்கு எவிவிட்டான்.

அப்பொழுது தீர்க்கதரிசியாகிய எலியா 12
எழுதின ஒரு நிருபம் அவனிடத்திற்கு வந்தது; அதிலே: உமது தகப்பன் தாவீதினுடைய கடவுளாகிய யெகோவா சொல்வதைக் கேளும், நீர் உன் தகப்பனாகிய யோசபாத்தின் வழிகளிலும் யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் வழிகளிலும் நடவாமல்
இஸ்ரவேல் ராஜாக்களின் வழியிலே நடந்து, 13
ஆகாபுடைய குடும்பத்தின் சோரமார்க்கத்திற்கு ஒத்தபடியே யூதாவையும் எருசலேமின் குடிகளையும் சோரம்போகப்பண்ணினீர்; உன்னைப்பார்க்கிலும் நல்லவர்களாயிருந்த உன் தகப்பன் வீட்டாரான உன் சகோதரரையும் கொன்றுபோட்டீர்; ஆகையால், இதோ, யெகோவா உன் ஜனத் 14
தையும் உன் பிள்ளைகளையும் உன் மனைவிகளையும் உனக்குரிய யாவற்றையும் மிகவும் அதிகமாய் வாதிப்பார். உனக்குக் கொடிய 15
வியாதியாகிய குடல் நோய் உண்டாகும், நாளாகவே உன் குடல்கள் இற்றுவிழும் என்று எழுதியிருந்தது.

அப்படியே யெகோவா பெலிஸ்தியரின் 16
இதயத்தையும் எத்தியோப்பியாவுக்கடுத்த தேசத்தாரான அரபியரின் இதயத்தையும் யோராமுக்கு விரோதமாகத் தூண்டிவிட்டார். அவர்கள் யூதாவுக்குள் வந்து பலாத் 17
காரமாய்ப் புகுந்து ராஜ அரமனையில் அகப்பட்ட சகல பொருட்களையும் கொண்டுபோனார்கள்; அவன் பிள்ளைகளையும் அவன் மனைவிகளையும் பிடித்துக்கொண்டுபோனார்கள்; அவன் குமாரரில் இளையவனாகிய யோவாகாசையன்றி வேறே ஒரு குமாரனும் அவ

18 னுக்கு மீந்திருக்கவில்லை. இவைகள் எல்
லாம் சம்பவித்தபின் யெகோவா அவன்
குடல்களில் உண்டான தீராத நோயினால்
19 அவனை வாதித்தார். நெடுநாளானபின்,
இரண்டு வருஷம் முடியவே, அவனுக்கு
உண்டான நோயினால் அவன் குடல்கள்
இற்றுப்போயின; அவன் மாண்டான். அவ
னுடைய பிதாக்கள் நிமித்தம் கந்தவர்க்கங்
களைக் கொளுத்தினதுபோல் அவன் ஜனங்
கள் அவனிமித்தம் கொளுத்தவில்லை.
20 அவன் ராஜாவானபோது அவனுக்கு முப்
பத்திரண்டு வயது, எட்டு வருஷம் எருச
லேமில் அரசாண்டான், துக்கிப்பாரின்றியே
மாண்டான்; அவனைத் தாவீதுநகரத்தில்
அடக்கம்பண்ணினார்கள்; ஆனாலும் ராஜாக்
களின் கல்லறைகளில் அவனை வைக்க
வில்லை.

**22** எருசலேமின் குடிகள் யோராமின்
இளைய குமாரனாகிய அகசியாவை அவன்
ஸ்தானத்திலே ராஜாவாக்கினார்கள்; பாளையத்
திலே அரபியரோடேகூட வந்திருந்த கொள்
ளைத்தண்டைச் சேர்ந்தவர்கள் மூத்த குமா
ரரையெல்லாம் கொன்றுபோட்டார்கள்;
இவ்விதமாக அகசியா என்னும் யூதாவின்
ராஜாவாகிய யோராமின் குமாரன் அரசாண்
2 டான். அகசியா ராஜாவானபோது அவ
னுக்கு இருபத்திரண்டு வயது, அவன் எருச
லேமில் ஒருவருஷம் அரசாண்டான்; அவன்
தாயின்பேர் அத்தாலியாள், அவள் ஒம்ரியின்
3 குமாரத்தி. அவனும் ஆகாப் குடும்பத்தா
ரின் வழிகளில் நடந்துவந்தான்; அவனு
டைய தாய் தனது ஆலோசனைகளினாலே
அவனைத் துன்மார்க்கத்துக்கு ஏவிவிட்டாள்.
4 அவன் ஆகாபின் குடும்பத்தாரைப்போல்
யெகோவாவின் பார்வையில் தீமையான
தைச்செய்தான்; அவன் தகப்பன் சென்று
போனபின்பு அவர்களே அவனுக்குக்
கேடாக அவனுடைய ஆலோசனைக்காரரா
5 யிருந்தார்கள். அவன் இஸ்ரவேலின் ராஜா
வாகிய யோராம் என்னும் ஆகாபின் குமார
னோடே கூடக் கிலெயாத்திலுள்ள ராமோத்
திற்குச் சீரியாவின் ராஜாவாகிய அசாகே
லுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போன
தும் அவர்களுடைய ஆலோசனையினாலேயே,
அங்கே சீரியர் யோராமைக் காயப்படுத்தி
6 னார்கள். அப்பொழுது தான் சீரியாவின்
ராஜாவாகிய அசாகேலோடு யுத்தம்பண்ணு
கையில் தன்னை அவர்கள் ராமாவிலே வெட்
டின காயங்களை யிஸ்ரெயேலிலே ஆற்றிக்
கொள்ள அவன் திரும்பினான்; அப்பொழுது
ஆகாபின் குமாரனாகிய யோராம் வியாதியா
யிருந்தபடியினால் யூதாவின் ராஜாவாகிய
யோராமின் குமாரன் அகசியா யிஸ்ரெயேலி
லிருந்த அவனைப் பார்க்கப்போனான். அகசி 7
யா யோராமிடத்துக்கு வந்தது அவன் கேட்
டுக்கென்றே கடவுளால் நடந்த காரியமாம்;
எப்படியென்றால் அவன் வந்தபோது யோரா
முடனேகூட வெளியேறி நிம்சியின் குமார
னாகிய யேகூவுக்கு எதிரே போனான், இந்த
யேகூ ஆகாபின் குடும்பத்தாரைச் சங்காரிக்க
யெகோவாவினால் அபிஷேகம் பண்ணப்
பெற்றவன். யேகூ ஆகாபின் குடும்பத்தா 8
ருக்கு ஆக்கினை நடத்தினபோது அவன் அக
சியாவைச் சேவித்த யூதாவின் பிரபுக்களை
யும் அகசியாவுடைய சகோதரரின் குமார
ரையும் கண்டுபிடித்துக் கொன்றுபோட்
டான். பின்பு அவன் அகசியாவைத் தேடி 9
னான்; சமாரியாவில் ஒளித்துக்கொண்
டிருந்த அவனை அவர்கள் பிடித்து யேகூவி
னிடத்தில் கொண்டுவரவே அவனைக்
கொன்றுபோட்டான்; இவன் தன் முழு
இருதயத்தோடும் யெகோவாவைத் தேடின
யோசபாத்தின் குமாரன் என்று சொல்லி
அவனை அடக்கம்பண்ணினார்கள்; அரசா
னும் சக்தியுள்ள ஒருவரும் இனி அகசியா
வின் குடும்பத்தில் இல்லை.

அகசியாவின் தாயாகிய அத்தாலியாள் 10
தன் குமாரன் இறந்துபோனதைக் கண்ட
போது எழும்பி யூதா கோத்திரத்திலுள்ள
ராஜவம்சத்தார் அனைவரையும் சங்காரம்
பண்ணினாள். ராஜாவின் குமாரத்தியாகிய 11
யோசபியாத் கொலையுண்ணப்படுகிற ராஜ
குமாரரின் நடுவிலிருந்த அகசியாவின் மகனு
கிய யோவாசைத் திருட்டுத்தனமாயெடுத்து
அவனையும் அவன் தாதியையும் பள்ளியறை
யில் ஒளித்துவைத்தாள்; இப்படியாக அத்
தாலியாள் அவனைக் கொன்றுபோட்டபடி
ராஜாவாகிய யோராமின் குமாரத்தி யோச
பியாத் அவனை ஒளித்துவைத்தாள்; அவள்
அகசியாவின் சகோதரி, ஆசாரியனாகிய யோ
யாதாவின் மனைவி. யோவாஸ் இவர்களோடு 12
ஆறு வருஷமாகக் கடவுளின் ஆலயத்திலே
ஒளித்துவைக்கப்பட்டிருந்தான்; அத்தாலி
யாள் தேசத்திலே அரசாண்டாள்.

ஏழாம்வருஷத்திலே யோயாதா தைரியங் 23
கொண்டு நூற்றுவர் தலைவராகிய எரோகா
மின் குமாரன் அசரியா, யோகனானின் குமா
ரன் இஸ்மவேல், ஓபேதின் குமாரன்
அசரியா, ஆதாயாவின் குமாரன் மாசே
யா, சிக்ரியின் குமாரன் எலிஷாபாத் என்ப
வர்களைத் தன்னோடு உடன்படிக்கை செய்
வித்தான். அவர்கள் யூதாவிலே சுற்றித் 2
திரிந்து யூதாவின் பட்டணங்களிலெல்லாம்
இருந்த லேவியரையும் இஸ்ரவேலுடைய

பிதாக்களின் வம்சத்தலைவரையும் கூட்டிக்
கொண்டு எருசலேமுக்கு வந்தார்கள்.
3 அந்தச் சபையார் எல்லாரும் கடவுளின்
ஆலயத்தில் ராஜாவோடே உடன்படிக்கை
செய்தார்கள்; யோயாதா அவர்களோடு
பேசி: இதோ, யெகோவா தாவீதின் குமார
ரைப்பற்றிச் சொன்னபடியே ராஜகுமாரன்
4 ராஜாவாகவேண்டும். நீங்கள் செய்யவேண்
டிய காரியம் இதுவே, ஓய்வுநாளில் இங்கே
வரவேண்டிய ஆசாரியரும் லேவியருமான
உங்களில் மூன்றில் ஒருபங்கு வாசற்படி
5 களிலும் | மூன்றில் ஒரு பங்கு ராஜாவின்
அரமனையிலும் மூன்றில் ஒருபங்கு எசோத்
வாசலிலும் காவல்காக்கவேண்டும்; ஜனங்க
ளெல்லாம் யெகோவாவின் ஆலயப்பிரகாரங்
6 களில் இருக்கவும் வேண்டும். ஆசாரியரும்
லேவியரில் ஊழியம்செய்கிறவர்களும் தவிர
ஒருவரும் யெகோவாவின் ஆலயத்திற்குள்
பிரவேசிக்கக்கூடாது, அவர்களே உட்பிர
வேசிப்பார்கள்; அவர்கள் பரிசுத்தமாக்கப்
பட்டவர்கள்; ஜனங்களெல்லாரும் யெகோ
வா கட்டளையிட்டதைச் செய்யவேண்டும்.
7 லேவியர் அவரவர் தத்தம் ஆயுதங்களைக்
கையிலே பிடித்தவர்களாய் ராஜாவைச் சுற்றி
வரிசையாய் நின்றுகொண்டிருக்கவேண்டும்;
ஆலயத்துக்குள் புகுந்து வருகிறவன் கொல்
லப்படவேண்டும்; ராஜா வரும்போதும் போ
கும்போதும் நீங்கள் அவரோடே இருங்கள்
என்று கட்டளையிட்டான்.
8 ஆசாரியனாகிய யோயாதா கட்டளையிட்ட
படியெல்லாம் லேவியரும் யூதா கோத்திரத்
தார் அனைவரும் செய்தார்கள்; ஓய்வுநாளில்
முறைப்படி வருகிறவர்களும் முறைப்படி
போகிறவர்களுமாகிய தங்கள் தங்கள் ஆட்
களைக் கூட்டிக்கொண்டுவந்தார்கள்; முறை
வகுப்புகள் பிரிந்துபோக ஆசாரியனாகிய
யோயாதா உத்தரவு கொடுக்கவில்லை.
9 தாவீது ராஜாவினுடையவைகளாயிருந்த
கடவுளின் ஆலயத்திலேவைக்கப்பட்டிருந்த
ஈட்டிகளையும் கேடகங்களையும் பரிசைகளை
யும் ஆசாரியனாகிய யோயாதா நூற்றுவர் தலை
10 வரிடம் கொடுத்தான்; அவரவர் தங்கள் ஆயு
தங்களைக் கையிலே பிடித்தவர்களாய் ஆல
யத்தின் வலதுபக்கமூலை தொடங்கிப் பலி
பீடமட்டும், பலிபீடந்தொடங்கி ஆலயத்
தின் இடதுபக்கமூலைமட்டும், ஆலயத்திற்கு
எதிரே ராஜாவைச் சுற்றி நிற்கும்படி ஜனங்
11 களையெல்லாம் நிறுத்தினான். பின்பு ராஜகுமா
ரனை வெளியே கொண்டுவந்து, கிரீடத்தை
அவன்மேல் வைத்துச் சாட்சியப்பிரமாணத்
தை அவன் கையிலே கொடுத்து, அவனை
ராஜாவாக்கினார்கள்; யோயாதாவும் அவன்
குமாரரும் அவனை அபிஷேகம்பண்ணி,
ராஜா வாழ்க என்றார்கள்.
12 அங்கே ஓடிவந்து ராஜாவைப் புகழுகிற சத்தத்தை அத்தாலியாள் கேட்டபோது, அவள் யெகோவாவின் ஆலயத்திற்கு
13 ஜனங்களிடம் வந்து, | இதோ, வாசலருகே தன் தூணருகே யிருந்த ராஜாவையும் ராஜாவண்டையில் நின்ற தலைவரையும் பூரிகை ஊதுகிறவர்களையும், சந்தோஷங்கொண்டாடிப் பூரிகைகள் ஊதுகிற தேசத்து ஜனங்கள் அனைவரையும், தேவாத்தியங்களைக் கையிலே பிடித்துப் புகழும் பாடல்களை நடத்தும் பாடகரையும் கண்டாள்: காணவே அத்தாலியாள் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: துரோகம், துரோகம் என்று கூவினாள்.
14 ஆசாரியனாகிய யோயாதா சேனாபதிகளாகிய நூற்றுவர் தலைவரை வெளியே அழைத்து அவர்களோடு பேசி: இவளைச் சேவகர் நிற்கும் வரிசைகளுக்கு வெளியே கொண்டுபோங்கள்; இவளைத் தொடருகிற எவனையும் பட்டயத்தால் வெட்டிப்போடுங்கள் என்றான். யெகோவாவின் ஆலயத்திலே அவளைக் கொன்றுபோடாதேயுங்கள் என்று ஆசாரியன் சொல்லியிருந்தான்.
15 அவர்கள் அவளைப் பிடித்துக் கொண்டுபோனார்கள், குதிரை வாசல்வழியாய் அரமனைக்குச் செல்லும் இடத்திற்கு அவள் வரவே அங்கே அவளைக் கொன்று போட்டார்கள்.
16 அப்பொழுது யோயாதா தாங்கள் யெகோவாவின் ஜனமாகவேண்டுமென்று தனக்கும் சகல ஜனங்களுக்கும் ராஜாவுக்கும் உடன்படிக்கை செய்வித்தான்.
17 அப்பொழுது ஜனங்களெல்லாரும் பாகாலின் கோவிலுக்குப்போய் அதை இடித்து அதன் பலிபீடங்களையும் அதின் விக்கிரகங்களையும் தகர்த்துப் பாகாலின் பூசாரியாகிய மாத்தானைப் பலிபீடங்களுக்கு எதிரே கொன்றுபோட்டார்கள்.
18 யோயாதா யெகோவாவின் ஆலயத்தைப் பார்த்துக் கொள்ளுகிறவர்களை ஏற்படுத்தி அவர்களைத் தாவீது யெகோவாவின் ஆலயத்திற்கென நியமித்த லேவியரான ஆசாரியருக்கு உதவியாக வைத்தான்; தாவீது கட்டளையிட்ட பிரகாரம் மகிழ்ச்சியோடும் சங்கீதத்தோடும் யெகோவாவின் தகனபலிகளை மோசேயின் நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடியே செலுத்தவேண்டியவர்கள் ஆசாரியர்களே.
19 எவ்வகையிலேனும் தீட்டுப்பட்டவன் யெகோவாவின் ஆலயத்திற்குள் பிரவேசியாதபடி அதின் வாசல்களுக்குக் காவலாளரை நிறுத்தினான்.
20 நூற்றுக்கதிபதிகளையும்

மேன்மக்களையும் ஜனத்தை நடத்துகிறவர்களையும் தேசத்தின் சகல ஜனங்களையும் கூட்டி ராஜாவை யெகோவாவின் ஆலயத்திலிருந்து வரச்செய்தான், உயர்ந்த வாசல்வழியாய் ராஜா அரமனைக்குள் அவனை அழைத்துவந்து ராஜசிங்காசனத்தின்மேல் உட்காரப்பண்ணினார்கள். தேசத்து ஜனங்களெல்லாரும் மகிழ்ந்தார்கள்; நகரம் அமைதலாயிருந்தது; அத்தாலியாளைப் பட்டயத்தால் கொன்றுபோட்டார்கள்.

24 1 யோவாஸ் ராஜாவானபோது அவனுக்கு ஏழுவயது, அவன் நாற்பது வருஷம் எருசலேமில் அரசாண்டான்; அவன் தாயின் பேர் சிபியாள், அவள் பெயர்ஷெபா ஊராள். 2 ஆசாரியனாகிய யோயாதாவின் நாளெல்லாம் யோவாஸ் யெகோவாவின் பார்வையில் நேர்மையானதைச் செய்துவந்தான். 3 அவனுக்கு யோயாதா இரண்டு ஸ்திரீகளை விவாகஞ்செய்து கொடுத்தான்; அவர்களால் குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

4 அதன்பின்பு யெகோவாவின் ஆலயத்தைப் புதுப்பிக்க யோவாஸ் நிர்ணயம்செய்தான். 5 அவன் ஆசாரியரையும் லேவியரையும் கூடிவரச்செய்து அவர்களோடே பேசி: நீங்கள் யூதாவின் ஊர்களுக்குப்போய் உங்கள் கடவுளின் ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்கு வருஷாவருஷம் இஸ்ரவேலெங்கும் பணம் சேகரியுங்கள்; இந்தக் காரியத்தைத் தாமதமில்லாமல் செய்யுங்கள் என்றான்; 6 லேவியரோ தாமதம் செய்தார்கள். அப்பொழுது ராஜா பிரதான ஆசாரியனாகிய யோயாதாவை அழைப்பித்து: சாட்சிய வாசஸ்தலத்துக்குக் கொடுக்கும்படி யெகோவாவின் ஊழியனாகிய மோசே விதித்ததும் இஸ்ரவேல் சபையார் செலுத்திவந்ததுமான வரியை, யூதாவினிடத்திலும் எருசலேமியரிடத்திலும் லேவியர் வாங்கவேண்டுமே, நீர் ஏன் அதைப் பார்த்துக்கொள்ளவில்லை? 7 அத்தாலியாள் என்னும் தெய்வபயமற்ற ஸ்திரீயின் மக்கள் கடவுளின் ஆலயத்தில் நுழைந்து கொள்ளையிட்டது மல்லாமல், யெகோவாவின் ஆலயத்திலிருந்த பரிசுத்தமானவைகளை யெல்லாம் பாகால்களுக்காகச் செலவு பண்ணிப்போட்டார்களே என்றான். 8 அப்பொழுது ராஜாவின் கட்டளைப்படியே ஒரு பெட்டியைச் செய்து அதை யெகோவாவின் ஆலயவாசலுக்கு வெளியேவைத்து, 9 கடவுளின் ஊழியனாகிய மோசே வனாந்தரத்திலே இஸ்ரவேலின்மேல் விதித்த வரியை யெகோவாவுக்குக் கொண்டுவாருங்கள் என்று யூதாவிலும் எருசலேமிலும் விளம்பரஞ்செய்தார்கள். 10 அப்பொழுது அதிபதிகள் அனைவரும் சகல ஜனங்களும் சந்தோஷமாய்க் கொண்டுவந்து பெட்டிநிறைய அதிலே போட்டார்கள். 11 லேவியர் கையால் அந்தப் பெட்டி ராஜாவின் விசாரிப்புக்காரர் அண்டையிலே கொண்டுவரப்படுகையில் அதிகப்பணம் உண்டென்று கண்டால் ராஜாவின் சம்பிரதியும் பிரதான ஆசாரியனுடைய விசாரணைக்காரனும் வந்து, பெட்டியிலிருப்பதைக் கொட்டி யெடுத்துக்கொண்டு அதைத் திரும்ப அதின் ஸ்தானத்திலே வைத்துவிடுவார்கள்; இப்படியே நாள்தோறும் செய்து மிகுந்த பணத்தைச் சேர்த்தார்கள். 12 அதை ராஜாவும் யோயாதாவும் யெகோவாவின் ஆலயவேலையைப் பார்க்கும் ஊழியக்காரர் கையிலே கொடுத்தார்கள்; அதைக் கொண்டு அவர்கள் யெகோவாவின் ஆலயத்தைப் புதுப்பிக்கும்படி கல்தச்சரையும் தச்சரையுமேபன்றி, யெகோவாவின் ஆலயத்தைப் பழுதுபார்க்கும்படி கொல்லரையும் கன்னாரையும் கூலிக்கு அமர்த்திக்கொண்டார்கள். 13 வேலைபார்க்கிறவர்கள் வேலை செய்துவரவே பழுதுபார்க்கும் வேலை அவர்கள் மூலமாய் நடந்தேறிவந்தது; கடவுளின் ஆலயத்தை அதின் முன்னிை சீருக்குக் கொண்டுவந்து அதை நன்றாக்கினார்கள். 14 அதை முடித்துத் தீர்த்தபின்பு மீதப்பணத்தை ராஜாவுக்கும் யோயாதாவுக்கும் முன்பாகக் கொண்டுவந்தார்கள்; அதைக்கொண்டு யெகோவாவின் ஆலயத்திற்குரிய பணிமுட்டுகளையும் ஆராதனை, பலி முதலியவைகளுக்கு வேண்டிய பணிமுட்டுகளையும் கலசங்களையும் பொற்பாத்திரங்களையும் வெள்ளிப் பாத்திரங்களையும் செய்வித்தான்; யோயாதாவின் நாளெல்லாம் நித்தம் யெகோவாவின் ஆலயத்திலே தகனபலிகளைச் செலுத்திவந்தார்கள்.

15 யோயாதா விருத்தாப்பியமும் பூரண ஆயுசுமுள்ளவனாய் மரித்தான்; அவன் மரித்தபோது அவனுக்கு நூற்றுமுப்பது வயது. 16 அவன் கடவுளுக்கென்றும் அவருடைய ஆலயத்திற்கென்றுமாக இஸ்ரவேலுக்கு நன்மைசெய்தபடியினால் அவனைத் தாவீதின் நகரத்தில் ராஜாக்களண்டையிலே அடக்கம் பண்ணினார்கள்.

17 யோயாதா மரித்தபின்பு யூதாவின் பிரபுக்கள் வந்து ராஜாவைப் பணிந்துகொண்டார்கள்; ராஜாவும் அவர்களுக்குச் செவிகொடுத்தான். 18 ஆகவே அவர்கள் தங்கள் பிதாக்களின் கடவுளாகிய யெகோவாவின் ஆலயத்தை விட்டுவிட்டு மாச்சில்களையும் விக்கிரகங்களையும் சேவித்தார்கள், அவர்கள்

செய்த இத்தக் குற்றத்தினிமித்தம் யூதா
வின்மேலும் எருசலேமின்மேலும் கடுங்
19 கோபம் மூண்டது. அவர்களைத் தம்மிடம்
திரும்பப்பண்ண யெகோவா அவர்களிடம்
தீர்க்கதரிசிகளை அனுப்பினார்; தீர்க்கதரிசி
கள் ஜனங்களைத் திட்டமாகவே எச்சரித்தார்
கள், ஜனங்களோ செவிகொடுக்கவில்லை.
20 அப்பொழுது கடவுளின் ஆவி ஆசாரிய
னுடைய யோயாதாவின் குமாரனான சகரியா
வை ஆட்கொள்ளவே அவன் ஜனத்திற்கு
எதிரேவந்து நின்று: கடவுள் சொல்வதைக்
கேளுங்கள், நீங்கள் யெகோவாவின் கட்
டளைகளை மீறுகிறது என்ன? இதினால் நீங்
கள் சித்திபெறமாட்டீர்கள்; நீங்கள் யெகோ
வாவை விட்டுவிட்டதினால் அவர் உங்களை
21 விட்டுவிடுவார் என்றான். அதினால் அவர்கள்
அவனுக்கு விரோதமாகக் கட்டுப்பாடு
பண்ணி யெகோவாவின் ஆலயப் பிராகாரத்
திலே ராஜாவின் கட்டளைப்படியே அவனைக்
22 கல்லெறிந்து கொன்றார்கள். இப்படியாக
அவனுடைய தகப்பனாகிய யோயாதா தனக்
குக் காட்டிய தயைகளை யோவாஸ்ராஜா
மறந்து அவனுடைய குமாரனைக் கொன்று
போட்டான்; இவன் சாகும் தருணத்தில்,
யெகோவா இதைப் பார்ப்பார், இதற்குப்
பழிவாங்குவார் என்றான்.
23 மறுவருஷத்திலே சீரியாவின் படைவீரர்
அவனுக்கு விரோதமாகவந்து யூதாவிலும்
எருசலேமிலும் புகுந்து ஜனத்தின் அதிபதி
களையெல்லாம் அழித்துவிட்டார்கள், கொள்
ளையிட்ட பொருட்களையெல்லாம் தமஸ்கு
24 வின் ராஜாவுக்கு அனுப்பினார்கள். சீரியா
வின் சேனை சிறுகூட்டமாய் வந்திருந்தாலும்
இஸ்ரவேலர் தங்கள் பிதாக்களின் கடவுளா
கிய யெகோவாவை விட்டுவிட்டபடியினால்
யெகோவா இவர்களுடைய மகா பெரிய
சேனையை அவர்கள் கையில் ஒப்புக்கொடுத்
தார்; இவ்விதமாக யோவாசின்மேல் ஆக்கி
னையை நிறைவேற்றினார்கள்.
25 அவர்கள் அவனை மகா நோவுக்குள்ளான
வனாக விட்டுப்போனார்கள்; அவர்கள்
போனபின்பு அவன் ஊழியர், ஆசாரியனு
கிய யோயாதாவுடைய குமாரனின் ரத்தத்
தினிமித்தம், அவனுக்கு விரோதமாய்க் கட்
டுப்பாடுசெய்து அவன் படுக்கையிலே அவ
னைக் கொன்றுபோட்டார்கள்; அவன் இப்
படி மரிக்கவே அவனைத் தாவீது நகரத்தில்
அடக்கம்பண்ணினார்கள்; எனினும் ராஜாக்
களின் கல்லறைகளில் அவனை வைக்க
26 வில்லை. அவனுக்கு விரோதமாகக் கட்டுப்
பாடு செய்தவர்கள், அம்மோனிய ஸ்திரீ
யான சிமியாதின் குமாரனாகிய சாபாத்தும்,
மோவாபியஸ்திரீயான சிம்ரீத்தின் குமாரனா
கிய யோசபாத்துமே. அவன் குமாரரைப் 27
பற்றியும் அவன்மேல் விழுந்த கடினவாக்
கைப் பற்றியும் கடவுளின் ஆலயத்திலே
அவன் செய்ததைப் பற்றியும், இதோ,
ராஜாக்களின் புத்தகத்தை விளக்கும் மித்தி
ராஷிலே எழுதியிருக்கிறது; அவன் குமார
னாகிய அமத்சியா அவன் ஸ்தானத்தில் ராஜா
வானான்.

அமத்சியா ராஜாவானபோது அவனுக்கு 25
இருபத்தைந்து வயது, அவன் இருபத்
தொன்பது வருஷம் எருசலேமிலே அர
சாண்டான்; அவன் தாயின் பேர் யோவ
தானா, அவள் எருசலேம் நகரத்தாள்.
அவன் யெகோவாவின் பார்வையில் நேர்மை 2
யானதைச் செய்தான்; எனினும் முழு மன
தோடும் அப்படிச் செய்யவில்லை. ராஜிய 3
பாரம் அவனுக்கு ஸ்திரப்பட்டபோது அவன்
தன் தகப்பனாகிய ராஜாவைக் கொன்று
போட்ட அவன் ஊழியரைக் கொன்று
போட்டான். அவர்களின் பிள்ளைகளையோ 4
அவன் கொல்லவில்லை, மோசேயின் நியாயப்
பிரமாணபுஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடியே
நடந்துகொண்டான்; பிள்ளைகளினிமித்தம்
பிதாக்கள் கொல்லப்படலாகாது, பிதாக்க
ளினிமித்தம் பிள்ளைகள் கொல்லப்படலா
காது, அவனவன் செய்த பாவத்தினிமித்தம்
அவனவனே கொல்லப்படவேண்டும் என்று
யெகோவா கட்டளையிட்டிருக்கிறார்.

அமத்சியா யூதா கோத்திரத்தாரைக் கூட 5
வரச் செய்து அவர்கள் பிதாக்களுடைய
வம்சங்களின்படியே, யூதா பென்யமீன்
தேசங்கள் எங்குமுள்ள ஆயிரவர் தலைவர்
நூற்றுவர் தலைவர் இவர்களின் கீழ் அவர்க
ளைப் பிரித்துவைத்தான்; இருபது வயதுள்ள
வர்களையும் மேற்பட்டவர்களையும் இலக்கம்
பார்த்து ஈட்டியையும் கேடகத்தையும்
பிடித்து யுத்தத்திற்குச் செல்லும் விசேஷித்த
வீரர் மூன்று லட்சம்பேரென்று கண்
டான். இஸ்ரவேலிலும் லட்சம் பராக்கிரம 6
வீரரை நூறுதாலந்து வெள்ளி கொடுத்துக்
கூலிக்கு அமர்த்தினான். அப்பொழுது கட 7
வுளின் மனுஷன் ஒருவன் அவனிடம்
வந்து: ராஜாவே இஸ்ரவேலின் சேனை உம்
மோடு வரலாகாது; யெகோவா எப்பிராயீ
மின் சகல புத்திரருமாகிய இஸ்ரவேலோடு
இல்லை. போக மனதானால் நீர் போம், 8
காரியத்தை நடத்தும், மனோபலங்கொண்டு
யுத்தத்திற்குப் போம்; இஸ்ரவேலைக் கூட்
டிச் சென்றால் கடவுள் உம்மைச் சத்துரு
வுக்கு முன்பாக விழப்பண்ணுவார்; ஒத்
தாசைசெய்யவும் விழப்பண்ணவும் கடவுள்

9 வல்லவர் என்றான். அப்பொழுது அமத்சியா: அப்படிச் செய்தால் நான் இஸ்ரவேலின் சேனைக்கெனக் கொடுத்த நூறுதாலந்து என்னவாகும் என்று கடவுளின் மனுஷனைக் கேட்க, கடவுளின் மனுஷன் அவனிடம்: அதிலும் அதிகமாய் உமக்குக் கொடுக்க 10 யெகோவா வல்லவர் என்றான். அப்பொழுது அமத்சியா எப்பிராயீமிலிருந்து தன்னிடம் வந்த சேனையை வீட்டிற்குப்போக அனுப்பிவிட்டான்; அவர்கள் யூதாவின் மேல் மிகுந்த கோபங்கொண்டு உக்கிர கோபத்தோடே தங்கள் இடங்களுக்குத் திரும்பிவிட்டார்கள்.

11 அமத்சியாவோ தைரியங்கொண்டு தன் சேனையை உப்புப் பள்ளத்தாக்குக்கு நடத்திப்போய் சேயீர் புத்திரரில் பதினாயிரம் 12 பேரை வெட்டினான். பதினாயிரம் பேரை யூதா புத்திரர் உயிரோடு பிடித்து ஒரு கன்மலை உச்சியிலே கொண்டுபோய் அவர்களைக் கன்மலையிலிருந்து கீழே தள்ளவே அவர்கள் எல்லாரும் நொறுங்கி மடிந்தார் 13 கள். தன்னோடு யுத்தத்திற்கு வரவேண்டாமென்று அமத்சியா அனுப்பிவிட்ட சைனியத்தார் சமாரியா துவக்கிப் பேத்கோரோன் மட்டுமுள்ள யூதா பட்டணங்களின்மேல் விழுந்து அவைகளிலே மூவாயிரம் பேரை வெட்டித் திரளாய்க் கொள்ளையிட்டார்கள்.

14 அமத்சியா ஏதோமியரை முறியடித்த பின்பு சேயீர் புத்திரரின் தெய்வங்களைக் கொண்டுவந்து அவைகளைத் தனக்குத் தெய்வங்களாக வைத்து, அவைகளுக்கு முன் பாகப் பணிந்து அவைகளுக்குத் தூபங் 15 காட்டினான். அப்பொழுது யெகோவா அமத்சியாவின்மேல் கோபமூண்டவராகி அவனிடத்துக்கு ஒரு தீர்க்கதரிசியை அனுப்பினார்; இவன் அவனோடு பேசி: அந்த ஜனத்தின் தெய்வங்களை நீர் தேடினானே, அவைகள் தங்கள் ஜனத்தை உமது கைக்குத் தப்புவிக்கவில்லையே என்று சொன் 16 னான். தன்னோடே அவன் இப்படிப் பேசினபோது ராஜா அவனிடம்: உன்னை ராஜாவுக்கு ஆலோசனைக்காரனாக வைத்தார்களோ? பேச்சை நிறுத்து, இல்லாவிட்டால் வெட்டிப்போடுவேன் என்றான்; அப்பொழுது தீர்க்கதரிசி அந்தப் பேச்சை நிறுத்தி: நீர் என் ஆலோசனையைக் கேளாமல் இப்படி நடக்கிறபடியால் கடவுள் உம்மை அழிக்கத் தீர்மானித்திருக்கிறார் என்பதை அறிவேன் என்றான்.

17 பின்பு யூதாவின் ராஜாவாகிய அமத்சியா யோசனைகேட்டு யேகூவின் மகனாகிய யோவாகாசின் குமாரன் யோவாஸ் என்னும் இஸ்ரவேல் ராஜாவினிடம் ஆட்களை அனுப்பி: நாம் போர்செய்து பார்ப்போம் வாரும் என்று சொல்லச் சொன்னான். அதற்கு 18 இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ் யூதாவின் ராஜாவாகிய அமத்சியாவுக்கு ஆள் அனுப்பி: லீபனோனிலுள்ள ஒரு முட்செடி லீபனோனிலுள்ள ஒரு கேதுரு மரத்துக்குத் தூதனுப்பி: நீ உன் மகனை என் மகனுக்கு மனைவியாக விவாகஞ்செய்து கொடு என்று கேட்கச் சொல்லிற்று; லீபனோனிலுள்ள ஒரு காட்டுமிருகமோ அவ்வழி போகையிலே அந்த முட்செடியை மிதித்துப்போட்டது. நீ ஏதோமியரை முறியடித்ததாக 19 நினைக்கிறாயே! பெருமைபாராட்டும்படி உன் இருதயம் உன்னைக் கர்வங்கொள்ளப்பண்ணினது; இப்போதும் நீ உன் வீட்டிலே தரித்திரு, எனக்குக் கோபமூட்டி உனக்குக் கேட்டைத் தேடிக்கொள்வானேன், நீயும் உன்னோடே யூதாவும் விழ நேருமே என்று சொல்லச் சொன்னான். அமத்சியாவோ 20 செவிகொடாதே போனான்; யூதா புத்திரர் ஏதோமின் தெய்வங்களைத் தேடினதினிமித்தம் அவர்களை அவர்கள் சத்துருக்கள் கையில் ஒப்புக்கொடுக்கும்படி கடவுளாலேயே இப்படி நடந்தது. ஆகவே இஸ்ர 21 வேலின் ராஜாவாகிய யோவாஸ் வந்தான்; யூதாவிலுள்ள பேத்ஷேமேசிலே அவனும் யூதாவின் ராஜா அமத்சியாவும் யுத்தம் கலந்தார்கள். யூதா இஸ்ரவேலுக்கு முன்பாக 22 முறிந்து தங்கள் தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப்போனார்கள். யோவாகாசின் மகனாகிய 23 யோவாசுக்குப் பிறந்த அமத்சியா என்னும் யூதாவின் ராஜாவையோ இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ் பேத்ஷேமேசிலே பிடித்து அவனை எருசலேமுக்குக் கொண்டுவந்தான்; எருசலேமின் அலங்கத்திலே எப்பிராயீம் வாசல்தொடங்கி மூலை வாசல்மட்டும் நானூறுமுழ நீளத்தை இடித்துப் போட்டான். ஒபேத் ஏதோமின் வசத்திலே விடப்பட்டுக் 24 கடவுளின் ஆலயத்திலிருந்த பொன் வெள்ளியாவையும் சகல பணிமுட்டுகளையும் ராஜாவின் அரமனைப் பொக்கிஷங்களையும் எடுத்துக்கொண்டு பிணையிருப்பவர்களையும் பிடித்துக்கொண்டு சமாரியாவுக்குத் திரும்பிப் போனான்.

யோவாகாசின் குமாரனாகிய யோவாஸ் 25 என்னும் இஸ்ரவேலின் ராஜா மரணமடைந்தபின்பு யோவாசின் குமாரனாகிய அமத்சியா என்னும் யூதாவின் ராஜா பதினைந்து வருஷம் உயிரோடிருந்தான். அமத்சியாவைப் 26 பற்றிய ஆதியோடந்தமான மற்ற விவரங்கள் யூதா இஸ்ரவேல் என்பவர்களின்

ராஜாக்களைப்பற்றிய புஸ்தகத்தில் எழுதி
27 யிருக்கிறதே. அமத்சியா யெகோவாவை
விட்டு விலகின காலமுதற்கொண்டு எருச
லேமிலே அவனுக்கு விரோதமாகக் கட்டுப்
பாடு செய்தபடியால் அவன் லாகீஷுக்கு
ஓடிப்போனான்; அவர்களோ அவன் பிறகே
லாகீஷுக்கு ஆட்களை அனுப்பி அங்கே
28 அவனைக் கொன்றுபோட்டார்கள். குதிரை
கள் மேல் அவனை எடுத்து வந்து யூதாவின்
நகரத்தில் அவன் பிதாக்களண்டையில்
அடக்கம்பண்ணினார்கள்.

**26** அப்பொழுது யூதா ஜனங்கள் எல்லா
ரும் பதினாறு வயதான உசியாவை அழைத்
து வந்து, அவனை அவன் தகப்பனாகிய
அமத்சியாவின் ஸ்தானத்திலே ராஜாவாக்கி
2 னார்கள். ராஜா நித்திரையடைந்து தன்
பிதாக்களோடே சேர்ந்தபின்பு இவன்
ஏலோதைக் கட்டி அதைத் திரும்ப யூதா
3 வின் வசமாக்கிக்கொண்டான். உசியா
ராஜாவானபோது அவனுக்குப் பதினாறு
வயது, அவன் ஐம்பத்திரண்டு வருஷம் எரு
சலேமில் அரசாண்டான்; அவன் தாயின்
பேர் எக்கோலியாள், அவள் எருசலேம்
4 நகரத்தாள். அவன் தன் தகப்பனாகிய
அமத்சியா செய்தபடியெல்லாம் யெகோ
வாவின் பார்வையில் நேர்மையானதைச்
5 செய்தான்; கடவுளுக்குப் பயப்படுகிற பய
த்தைப் போதித்துவந்த சகரியாவின் நாட்க
ளிலே கடவுளைத் தேடிவந்தான்; அவன்
யெகோவாவைத் தேடின நாளெல்லாம் கட
வுள் அவன் காரியங்களை வாய்க்கச் செய்
தார்.

6 அவன் புறப்பட்டுப்போய்ப் பெலிஸ்தி
யரோடு யுத்தம்பண்ணிக் காத்தின் அலங்கத்
தையும் யப்னேவின் அலங்கத்தையும் அஸ்
தோத்தின் அலங்கத்தையும் இடித்துப்போ
ட்டு, அஸ்தோத் நாட்டிலும் பெலிஸ்தியருக்
குள்ளே மற்ற இடங்களிலும் பட்டணங்க
7 ளைக் கட்டினான். பெலிஸ்தியரையும் கூர்பா
காலிலே குடியிருந்த அரபியரையும் மெயூ
னியரையும் வெல்லக் கடவுள் அவனுக்குத்
8 துணை நின்றார். அம்மோனியர் உசியாவுக்கு
வெகுமதிகளைக் கொடுத்தார்கள்; அவன்
கீர்த்தி எகிப்துவரைக்கும் எட்டினது;
அவன் மிகவும் அதிகமாய்ப் பலங்கொண்
9 டான். உசியா எருசலேமிலே மூலைவாசல்
மேலும் பள்ளத்தாக்கு வாசல்மேலும் மூலை
களின்மேலும் கோபுரங்களைக்கட்டி அவைக
ளைப் பலப்படுத்தினான். அவனுக்கு அநே
ஆடுமாடுகளிருந்தபடியினால் அவன் வனாந்
தரத்திலே கோபுரங்களைக் கட்டி அநே
10 கதரவுகளை வெட்டினான். சமனிலநாட்டிலும்

சமவெளிநாட்டிலும் அப்படியே செய்தான்,
மலைகளிலும் வயல்வெளிகளிலும் அவனுக்
குப் பயிர் செய்கிறவர்களும் திராட்சத்தோ
ட்டம் பார்க்கிறவர்களும் இருந்தார்கள்;
அவன் வெள்ளாண்மைப் பிரியன். உசியா 11
வுக்கு யுத்தம் பழகிய சேனையும் இருந்தது.
அது சம்பிரதியாகிய யெயியேலினாலும் விசா
ரணைக்காரனாகிய மாசேயாவினாலும் இலக்
கம் பார்க்கப்பட்டபடியே ராஜாவின் பிரபுக்
களில் ஒருவனாகிய கனனியாவின்கீழ் பிரிவு
பிரிவாய் யுத்தத்திற்குப் புறப்படும். பராக் 12
கிரமவீரரான வம்சத்தலைவரின் தொகை
யெல்லாம் இரண்டாயிரத்து அறுநூறு.
இவர்களின் கீழ் சத்துருக்களுக்கு விரோத 13
மாக ராஜாவுக்குத் துணை நிற்க பலத்தோடு
தைரியமாய் யுத்தம்பண்ணுகிற மூன்றுலட்
சத்து ஏழாயிரத்து ஐந்நூறுபேர் அடங்கிய
சேனை இருந்தது. இந்தச் சேனையிலுள்ள 14
வருக்கெல்லாம் உசியா கேடகங்களையும்
ஈட்டிகளையும் தலைச்சீராக்களையும் மார்க்
கவசங்களையும் வில்லுகளையும் கல்லெறிகிற
கவண்களையும் ஆயத்தப்படுத்தினான். கோபு 15
ரங்கள்மேலும் அலங்கக்கோடிகள்மேலும்
நின்று அம்புகளையும் பெரிய கற்களையும்
பிரயோகிக்கிறதற்கு மிகவும் சாமர்த்தியமாய்
அமைந்த யந்திரங்களையும் அவன் எருசலே
மில் செய்தான்; அப்படியே அவன் கீர்த்தி
வெகுதூரம் பரவிற்று, அவன் பலமடைவ
தற்கு ஆச்சரியமானவிதமாய் உதவிபெற்
றான்.

அவன் பலப்பட்டபோது அவன் மனம் 16
கர்வங்கொண்டது, அவன் கேடானவைக
ளைச் செய்து தன் கடவுளாகிய யெகோவா
வுக்குத் துரோகம்பண்ணினான்; அவன் தூப
பீடத்தின்மேல் தூபங்காட்ட யெகோவா
வின் ஆலயத்திற்குள் பிரவேசித்தான். ஆசா 17
ரியனாகிய அசரியாவும் அவனோடேகூட
யெகோவாவின் ஆசாரியரான தைரியசாலி
கள் எண்பதுபேரும் அவன் பிறகே உட்
சென்று | ராஜாவாகிய உசியாவுக்கு எதிர் 18
நின்று: உசியாவே, யெகோவாவுக்குத் தூப
ங்காட்டுவது உமக்குரிய வேலையல்ல, தூப
ங்காட்டுவது பரிசுத்தமாக்கப்பட்ட ஆரோ
னின் குமாரராகிய ஆசாரியருக்கே உரிய
வேலை, பரிசுத்த ஸ்தலத்தைவிட்டு வெளியே
போம்; நீர் செய்வது துரோகம்; கடவுளா
கிய யெகோவாவினிடமிருந்து உமக்கு
இதனால் கிடைப்பது கௌரவமல்ல என்
றார்கள். அதுகேட்ட உசியா மூர்க்கங் 19
கொண்டான்; ஆசாரியருக்கு எதிரே யெ
கோவாவின் ஆலயத்தில் தூபபீடத்தின்முன்,
தூபகலசத்தைத் தன் கையிலே பிடித்து

ஆசாரியர்மீது கடுங்கோபங்கொண்டவனும் நிற்கும்போதே அவனுடைய நெற்றியில் குஷ்டரோகம் தோன்றிற்று. பிரதான ஆசாரியனுடைய அசரியாவும் சகல ஆசாரியரும் அவனை நோக்கிப்பார்த்தார்கள், இதோ, அவன் நெற்றியிலே குஷ்டரோகம்! அதிவிரைவில் அவனை அங்கிருந்து வெளியேறச் செய்தார்கள்; அவனும் யெகோவா தன்னை அடித்ததையறிந்து விரைந்து வெளியே போனான்.

21 ராஜாவாகிய உசியா தன் மரணநாள்மட்டும் குஷ்டரோகியாயிருந்தான்; குஷ்டரோகியாகவே தனித்த ஒரு வீட்டிலே வாசம்பண்ணிவந்தான்; யெகோவாவின் ஆலயத்துக்கோ அவன் புறம்பாக்கப்பட்டான்; அவன் குமாரனாகிய யோதாம் ராஜ அரமனையிலே தலையாயிருந்து தேசத்தின் ஜனங்களை நியாயம் விசாரித்தான்.

22 உசியாவைப்பற்றிய ஆதியோடந்தமான மற்ற விவரங்களை ஆமோத்சின் குமாரனாகிய 23 ஏசாயா தீர்க்கதரிசி எழுதினான். உசியா நித்திரையடைந்து தன் பிதாக்களோடே சேர்ந்தான், அவன் குஷ்டரோகியாயிருந்த படியினால் அவனை அவன் பிதாக்களண்டையில், ராஜாக்களை அடக்கம்பண்ணுகிற இடத்திற்கு அருகான நிலத்திலே, அடக்கம்பண்ணினார்கள்; அவன் குமாரனாகிய யோதாம் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

**27** யோதாம் ராஜாவானபோது அவனுக்கு இருபத்தைந்து வயது, அவன் பதினாறு வருஷம் எருசலேமிலே அரசாண்டான்; அவன் தாயின்பேர் எருஷாள், அவள் சாதோக்கின் 2 குமாரத்தி. அவன் யெகோவாவின் பார்வையில் நேர்மையானதைச் செய்தான்; தன் தகப்பனாகிய உசியா செய்தபடியெல்லாம் செய்துவந்தான்; எனினும் அவனைப்போல யெகோவாவின் ஆலயத்தினுள் இவன் பிரவேசிக்கவில்லை; ஜனங்கள் இன்னும் கேடானவைகளையே செய்துவந்தார்கள்.

3 அவன் யெகோவாவின் ஆலயத்தின் மேலேயுள்ள வாசலைக்கட்டினான்; ஓபேலின் மதிலின்மேல் அநேக கட்டடங்களையும் கட்
4 டினான். யூதாவின் மலைநாட்டிலே பட்டணங்களையும் காடுகளிலே கோட்டைகளை
5 யும் கோபுரங்களையும் கட்டினான். அவன் அம்மோன் புத்திரரின் ராஜாவோடு யுத்தம் பண்ணி அவர்களை மேற்கொண்டான்; அம்மோன் புத்திரர் அவனுக்கு அந்த வருஷத்திலே நூறு தாலந்து வெள்ளியையும் பதினாயிரம் மரக்கால் கோதுமையையும் பதினாயிரம் மரக்கால் வாற்கோதுமையையும் கொடுத்தார்கள்; இரண்டாம் மூன்றும் வருஷங்களிலும் அம்மோன் புத்திரர் அப்படியே அவனுக்குச் செலுத்தினார்கள். 6 யோதாம் தன் கடவுளாகிய யெகோவாவுக்கு முன்பாகத் தன் வழிகளை நேராக்கினதினால் பலங்கொண்டான்.

7 யோதாமின் மற்ற விவரங்களும் அவனுடைய சகல யுத்தங்களும் அவன் செய்தவைகளும் இஸ்ரவேல் யூதா என்பவர்களின் ராஜாக்களைப்பற்றிய புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது. 8 அவன் ராஜாவானபோது அவனுக்கு இருபத்தைந்து வயது, அவன் பதினாறு வருஷம் எருசலேமில் அரசாண்டான். 9 யோதாம் நித்திரையடைந்து தன் பிதாக்களோடே சேரவே அவனைத் தாவீதுநகரத்தில் அடக்கம்பண்ணினார்கள்; அவன் குமாரனாகிய ஆகாஸ் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

**28** ஆகாஸ் ராஜாவானபோது அவனுக்கு இருபது வயது, அவன் எருசலேமிலே பதினாறு வருஷம் அரசாண்டான்; அவன் தகப்பனாகிய தாவீது யெகோவாவின் பார்வையில் நேர்மையானதைச் செய்ததுபோல இவன் செய்யவில்லை. 2 இவன் இஸ்ரவேல் ராஜாக்களின் வழியிலே நடந்து பாகால்களுக்கு வார்ப்பு விக்கிரகங்களைச் செய்தான். 3 மேலும் அவன் இன்னும் குமாரரின் பள்ளத்தாக்கிலே தூபங்காட்டி யெகோவா இஸ்ரவேல் புத்திரருக்கு முன்னிராதபடி தேசத்தின் ஜாதிகளுடைய அருவருப்புகளின்படியே தன் குமாரரையும் அக்கினியிலிட்டான். 4 கோவில் மேடைகளிலும் குன்றுகளின்மேலும் பச்சையான சகல மரங்களின்கீழும் பலியிட்டுத் தூபங்காட்டிவந்தான்.

5 அவனுடைய கடவுளாகிய யெகோவா அவனைச் சீரியா ராஜாவின் கையில் ஒப்புக்கொடுத்தார்; அவர்கள் அவனை முறியடித்து அங்கே இருந்தவர்களில் அநேகரைச் சிறைபிடித்துத் தமஸ்குவுக்குக் கொண்டுபோனார்கள்; அவன் இஸ்ரவேல் ராஜாவின் கையிலும் ஒப்புக்கொடுக்கப்பட்டான்; இவன் பெரிய சங்காரஞ்செய்து அவனை முறியடித்தான். 6 யூதா கோத்திரத்தார் தங்கள் பிதாக்களின் கடவுளாகிய யெகோவாவை விட்டுவிட்டபடியினால் ரெமலியாவின் குமாரனாகிய பெக்காகு அவர்களில் ஒரே நாளில் லட்சத்திருபதினாயிரம் பேரைக் கொன்றுபோட்டான்; அவர்கள் எல்லாரும் பராக்கிரமவீரர். 7 அன்றியும் எப்பிராயீமிலே பராக்கிரமசாலியென விளங்கிய சிக்ரி என்னும் ஒருவன் ராஜகுமாரனாகிய மாசேயாவையும் அரமனைத் தலைவனாகிய அஸ்ரீக்காமையும் ராஜாவுக்கு அடுத்த ஸ்தானத்திலி

ருந்த எல்க்கானாவையும் கொன்றுபோட்
8 டான். இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சகோ
தரரிலே இரண்டு லட்சம்பேரை ஸ்திரீகளை
யும் குமாரரையும் குமாரத்திகளையும், சிறை
பிடித்து அவர்களிடமிருந்து அதிகமான
பொருட்களைக் கொள்ளையிட்டு, கொள்ளைப்
பொருட்களைச் சமாரியாவுக்குக் கொண்டு
போனார்கள்.

9 அங்கே ஓதேத் என்னும் பேருள்ள யெ
கோவாவின் தீர்க்கதரிசி ஒருவன் இருந்தா
ன்; அவன் சமாரியாவுக்கு வருகிற சேனை
க்கு எதிர்ப்பட்டு போய் அவர்களோடு
பேசி: இதோ, உங்கள் பிதாக்களின் கடவு
ளாகிய யெகோவா யூதாவின்மேல் கோபங்
கொண்டபடியினால் அவர்களை உங்கள் கை
களில் ஒப்புக்கொடுத்தார்; நீங்களோ வான
பரியந்தம் எட்டுகிற உக்கிரத்தோடே அவர்
10 களைச் சங்கரித்தீர்கள். இப்போதும் யூதா
வின் புத்திரரையும் எருசலேமியரையும்
நீங்கள் உங்களுக்கு வேலைக்காரராகவும்
வேலைக்காரிகளாகவும் ஏற்படுத்த வேண்டு
மென்று நினைக்கிறீர்கள், இப்படிச் செய்வ
தால் உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு
விரோதமான குற்றத்தை உங்கள்மேல் சுமத்
11 திக்கொள்வீர்கள். நீங்கள் எனக்குச் செவி
கொடுங்கள், நீங்கள் உங்கள் சகோதரரிடம்
சிறைபிடித்து வந்தவர்களைத் திரும்ப அனுப்
பிவிடுங்கள்; யெகோவாவின் உக்கிரகோபம்
உங்கள்மேல் இருக்கிறது என்றான்.

12 அப்பொழுது எப்பிராயீம் புத்திரரின்
தலைவரில் சிலர், யோகனானின் குமாரனாகிய
அசரியா, மெஷில்லேமோத்தின் குமாரனா
கிய பெரகியா, சல்லூமின் குமாரனாகிய
எசேக்கியா, காத்லாயின் குமாரனாகிய அமாசா
என்பவர்கள், யுத்தத்திலிருந்து வந்தவர்க
13 ளுக்கு எதிரே வந்து நின்று | அவர்களைப்
பார்த்து: நீங்கள் சிறைபிடித்த இவர்களை
இங்கே உள்ளே கொண்டுவரவேண்டாம்;
யெகோவாவுக்கு விரோதமாக நமதுமேலுள்ள
குற்றத்தோடுகூட நமது பாவங்களையும்
குற்றங்களையும் அதிகமாக்க நினைக்கிறீர்கள்;
நம்மேலுள்ள குற்றமும் இஸ்ரவேலின்மே
லுள்ள உக்கிர கோபமும் பெரிதாயிருக்
14 கிறதே என்றார்கள். அப்பொழுது, சிறை
பிடித்தவர்களையும் கொள்ளையுடைமைகளை
யும் ஆயுதபாணிகளானவர்கள் அதிபதிக
ளுக்கு முன்பாகவும் சமஸ்த சபைக்கு முன்
15 பாகவும் விட்டுவிட்டார்கள். விட்டுவிடவே
முன்னே பேர் குறிக்கப்பட்டவர்கள் முன்
வந்து சிறைபிடிக்கப்பட்டவர்களைச் சேர்த்
துக்கொண்டு அவர்களில் வஸ்திரமில்லாத
யாவருக்கும் கொள்ளையில் எடுக்கப்பட்ட
வஸ்திரங்களைக் கொடுத்து, உடுப்பையும்
பாதரட்சைகளையும் போடுவித்து அவர்க
ளுக்குச் சாப்பிடவும் குடிக்கவும் கொடுத்து,
அவர்களுக்கு எண்ணெய் பூசி அவர்களில்
பலட்சயமானவர்களையெல்லாம் கழுதைகள்
மேல் ஏற்றிப் பேரீச்சமரங்களின் ஊராகிய
எரிகோவிலே அவர்கள் சகோதரரிடம்
கொண்டுவந்து விட்டுவிட்டுச் சமாரியாவுக்
குத் திரும்பினார்கள்.

அக்காலத்திலே ஆகாஸ் ராஜா 16
வின் ராஜாக்களிடம் உதவிகேட்டு ஆட்
களை அனுப்பினான். ஏதோமியர் மறுபடி 17
யும் வந்து யூதாவை முறியடித்துச் சிலரைச்
சிறைபிடித்துப் போயிருந்தார்கள். பெலிஸ் 18
தியரும் சமபூமிநாட்டிலும் யூதாவின் தென்
னாட்டிலுமுள்ள ஊர்களின்மேல் விழுந்து
பெத்ஷேமேசையும் ஆயலோனையும் கெதே
ரோத்தையும், சொக்கோவையும் அதைச்
சார்ந்த கிராமங்களையும், திம்னாவையும்
அதைச்சார்ந்த கிராமங்களையும், கிம்சோவை
யும் அதைச்சார்ந்த கிராமங்களையும் பிடித்து
அங்கே குடியேறினார்கள். இஸ்ரவேல் ராஜா 19
வாகிய ஆகாசினிமித்தம் யெகோவா யூதா
வைத் தாழ்த்தினார்; அவன் யூதாவைச்
சுயேச்சையாய்த் திரியவிட்டு யெகோவா
வுக்கு விரோதமாய் மிகவும் துரோகம்பண்
ணினான். அசீரியாவின் ராஜாவாகிய தில் 20
காத்பில்நேசர் அவனிடம் வந்தான்; அவனே
துன்பத்தை வினவித்தையல்லாமல் ஆகா
சுக்கு உதவி செய்யவில்லை. ஆகாஸ் யெகோ 21
வாவின் ஆலயத்திலும் ராஜ அரமனையிலும்
பிரபுக்களின் கையிலும் இருந்தவற்றைப்
பறித்து அசீரியாவின் ராஜாவுக்குக் கொடுத்
தும் அவனுக்கு உதவி கிடைக்கவில்லை.

தன் துன்பகாலத்தில் அவன், அந்த 22
ஆகாஸ் ராஜா, யெகோவாவுக்கு விரோத
மாய்ப் பின்னும் அதிகத் துரோகம் செய்
தான். தன்னை முறியடித்த தமஸ்குவின் தெய் 23
வங்களுக்கு அவன் பலியிட்டான்; சீரியா
ராஜாக்களின் தெய்வங்கள் அவர்களுக்குத்
துணைசெய்கின்றன, அவைகள் எனக்கும்
துணைசெய்யும்படி அவைகளுக்குப் பலியிடு
வேன் என்று சொல்லிக்கொண்டு அப்படிச்
செய்தான்; அத்தெய்வங்களோ அவனும்
இஸ்ரவேல் அனைத்தும் விழுவதற்கு ஏது
வாயின. ஆகாஸ் கடவுளின் ஆலயத்தின் 24
பணிமுட்டுகளைச் சேர்த்துக் கடவுளின் ஆல
யப்பணிமுட்டுகளை நொறுக்கி யெகோவா
வின் ஆலயக்கதவுகளைப் பூட்டிப்போட்டு
எருசலேமிலே மூலைக்குமூலை பலிபீடங்களை
அமைத்தான். அந்திய தெய்வங்களுக்குத் 25
தூபங்காட்டும்படி யூதாவிலே ஊர் ஊரா

கப் பூஜிமேடைகளைக் கட்டித் தன் பிதாக்களின் கடவுளாகிய யெகோவாவுக்குக் கோபமூட்டினான்.

26 அவனுடைய மற்ற விவரங்களும் அவனுடைய ஆதியோடந்தமான சகல சங்கதிகளும் யூதா இஸ்ரவேல் என்பவர்களின் ராஜாக்களைப்பற்றிய புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது.

27 ஆகாஸ் தித்திரை யடைந்து தன் பிதாக்களோடே சேரவே அவனை எருசலேம்நகரத்தில் அடக்கம்பண்ணினார்கள்; இஸ்ரவேல் ராஜாக்களின் கல்லறைகளிலோ அவனை வைக்கவில்லை; அவன் குமாரனாகிய எசேக்கியா அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

**29** எசேக்கியா ராஜாவானபோது அவனுக்கு இருபத்தைந்து வயது, அவன் இருபத்தொன்பது வருஷம் எருசலேமிலே அரசாண்டான்; அவன் தாயின்பேர் அபியாள், 2 அவள் சகரியாவின் குமாரத்தி. அவன் தன் தகப்பனாகிய தாவீது செய்தபடியெல்லாம் யெகோவாவின் பார்வையில் நேர்மையானதைச் செய்துவந்தான்.

3 அவன் தன் ராஜ்யபாரத்தின் முதல்வருஷம் முதல்மாதத்தில் யெகோவாவின் ஆலயக் கதவுகளைத் திறந்து, அவைகளைப் பழுது 4 பார்த்து | ஆசாரியரையும் லேவியரையும் அழைத்துவந்து அவர்களைக் கீழ்ப் பிரா 5 கார வெளியிலே கூடிவரச்செய்து | அவர்களோடு பேசி: லேவியரே, கேளுங்கள்; நீங்கள் இப்போது உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொண்டு உங்கள் பிதாக்களின் கடவுளாகிய யெகோவாவின் ஆலயத்தைப் பரிசுத்தம்பண்ணி அசுத்தமானதைப் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வெளியே நீக்கிவிடுங்கள். 6 நமது பிதாக்கள் துரோகம்பண்ணி நமது கடவுளாகிய யெகோவாவின் பார்வையில் தீமையானதைச் செய்து அவரை விட்டு விலகினார்கள்; யெகோவாவின் வாசஸ்தலத்தைத் தேடாமல் பராமுகஞ்செய்து அதற்கு 7 முதுகைத் திருப்பினார்கள். அவர்கள் பரிசுத்த ஸ்தலத்தில் இஸ்ரவேலின் கடவுளுக்குத் தகனபலி செலுத்தாமலும் தூபங்காட்டாமலும் விளக்குகளை அணைத்து மண்டபக் 8 கதவுகளுக்கும் பூட்டிட்டார்கள். ஆகவே யெகோவாவின் கடுங்கோபம் யூதாவின்மேலும் எருசலேமின்மேலும் வந்தது; அவர் இவர்களை, நீங்கள் உங்கள் கண்களினால் காண்கிறபடியே, பயங்கரக் காட்சியும் பிர 9 மிப்பும் பழிப்புமாகச் செய்தார். இதோ, இதினிமித்தம் நமது பிதாக்கள் பட்டயத்தினால் விழுந்தார்கள், நமது குமாரரும் நமது குமாரத்திகளும் நமது மனைவிகளும் சிறைக 10 ளானார்கள். இப்போதும் இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவின் உக்கிரகோபம் நம்மைவிட்டுத் திரும்பும்படி அவரோடே உடன்படிக்கை செய்ய என் மனதிலே நினைக்கிறேன். என் மக்களே, இப்பொ 11 முது அசோக்கிரதையாயிராதேயுங்கள்; நீங்கள் யெகோவாவின் சந்நிதியில் நின்று அவருக்குத் தொண்டு செய்யவும் அவருக்குப் பணிவிடை செய்கிறவர்களும் தூபங்காட்டுகிறவர்களுமாயிருக்கவும் உங்களையே அவர் தெரிந்தெடுத்தார் என்றார்.

அப்பொழுது கெகாத் புத்திரரில் அமா 12 சாயின் குமாரன் மாகாத்தும் அசரியாவின் குமாரன் யோவேலும், மெராரியின் புத்திரரில் அப்தியின் குமாரன் கீஷும் எகலெலேலின் குமாரன் அசரியாவும், கெர்சோனியரில் சிம்மாவின் குமாரன் யோவாகும் யோவாகின் குமாரன் ஏதேனும், | எலீ 13 சாபான் புத்திரரில் சிம்ரியும் யெகூவேலும், ஆசாப்பின் புத்திரரில் சகரியாவும் மத்தனியாவும், | ஏமானின் புத்திரரில் யெகூ 14 யேலும் சிமேயியும், எதுதூனின் புத்திரரில் செமாயாவும் ஊசியேலும் ஆகிய லேவியர் எழுந்துபோய்த் | தங்கள் சகோதரரைக் 15 கூடிவரச்செய்து பரிசுத்தம்பண்ணிக் கொண்டு யெகோவாவின் வார்த்தைகளுக்கு இசைவாக ராஜா கட்டளையிட்டபடியே யெகோவாவின் ஆலயத்தைச் சுத்திகரிக்க வந்தார்கள். ஆசாரியர்கள் யெகோவாவின் 16 ஆலயத்தைச் சுத்திகரிக்கும்படி உள்ளே பிரவேசித்து யெகோவாவின் ஆலயத்திற் கண்ட சகல அசுத்தத்தையும் யெகோவாவின் ஆலயப் பிராகாரத்திற்குக் கொண்டு வந்தார்கள்; லேவியர் அதை எடுத்து வெளியே கொண்டுபோய்க் கீதரோன் பள்ளத்தாக்கிலே கொட்டினார்கள். முதல்மாதம் 17 முதல்தேதியிலே அவர்கள் சுத்திகரிக்கத் துவக்கி எட்டாந்தேதியிலே யெகோவாவின் மண்டபம்வரை வந்தார்கள்; பின்னும் எட்டுநாளில் யெகோவாவின் ஆலயத்தைப் பரிசுத்தப்படுத்தி முதலாம் மாதம் பதினாறாம் தேதியில் அதை முடித்தார்கள். அவர்கள் 18 எசேக்கியா ராஜாவினிடம் அரமனைக்குள் போய்: நாங்கள் யெகோவாவின் ஆலயத்தையும் தகனபலிபீடத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும் திருச்சமுகத்தப்பங்களின் மேசையையும் அதின் சகல பணிமுட்டுகளையும் சுத்திகரித்தோம்; ஆகாஸ் 19 ராஜா அரசாளும்போது எறிந்துவிட்ட சகல பணிமுட்டுகளையும் சரிப்படுத்திப் பரிசுத்தம்பண்ணினோம்; இதோ, அவைகள் யெகோவாவின் பலிபீடத்திற்கு எதிரே இருக்கின்றன என்றார்கள்.

20 எசேக்கியாராஜா காலமே எழுந்திருந்து நகரத்தின் அதிபதிகளைக் கூட்டிக்கொண்டு
யெகோவாவின் ஆலயத்திற்குப் போனான்.
21 அங்கே ஏழுகாளைகளையும் ஏழு ஆட்டுக்
கடாக்களையும் ஏழு ஆட்டுக்குட்டிகளையும்
ஏழு வெள்ளாட்டுக்கடாக்களையும் ராஜ்யத்
திற்காகவும் பரிசுத்தஸ்தலத்திற்காகவும் யூதா
வுக்காகவும் பாவநிவாரணபலியிடுவதற்
கெனக் கொண்டுவந்தார்கள்; அவைகளை
யெகோவாவின் பலிபீடத்தின்மேல் பலியி
டுங்கள் என்று ராஜா ஆசாரியராகிய ஆரோ
22 னின் புத்திரருக்குச் சொன்னான். அப்
படியே காளைகள் அடிக்கப்படவே ஆசாரி
யர்கள் ரத்தத்தைப் பிடித்துப் பலிபீடத்தின்
மேல் தெளித்தார்கள்; ஆட்டுக்கடாக்கள்
அடிக்கப்படவே அவற்றின் ரத்தத்தையும்
பலிபீடத்தின்மேல் தெளித்தார்கள், ஆட்டுக்
குட்டிகள் அடிக்கப்படவே அவற்றின் ரத்
தத்தையும் பலிபீடத்தின்மேல் தெளித்தார்
23 கள். பிற்பாடு பாவநிவாரண பலிக்கான
வெள்ளாட்டுக்கடாக்களை ராஜாவுக்கும் சபை
யாருக்கும் முன்பாகக் கொண்டுவந்தார்கள்;
அவைகள்மேல் அவர்கள் தங்கள் கைகளை
24 வைத்தார்கள். ஆசாரியர் அவைகளை
அடித்து இஸ்ரவேல் அனைத்திற்கும் பிராயச்
சித்தம் செய்வதற்கென அவற்றின் ரத்தத்
தைப் பலிபீடத்தின்மேல் பாவநிவாரணபலி
யாகப் படைத்தார்கள்; இஸ்ரவேல் அனைத்
திற்காகவும் தகனபலியையும் பாவநிவாரண
பலியையும் செலுத்தவேண்டுமென்று ராஜா
சொல்லியிருந்தான்.
25 தாவீதும் ராஜாவின் ஞானதிருஷ்டிகளை
கிய காத்தும் தீர்க்கதரிசியாகிய நாத்தானும்
கட்டளையிட்டிருந்தபடியே ராஜா கைத்தா
ளங்களையும் தம்புருகளையும் சுரமண்டலங்
களையும் வாசிக்கிற லேவியரை யெகோவா
26 வின் ஆலயத்திலே நிறுத்தினான்; இப்படிச்
செய்யவேண்டும் என்ற கட்டளை யெகோ
வாவினிடமிருந்தே அவர் தீர்க்கதரிசிகளின்
27 மூலமாய் வந்தது. அந்தப்படியே லேவியர்
தாவீதின் தேவவாத்தியங்களையும், ஆசாரியர்
பூரிகைகளையும் பிடித்து நின்றார்கள். அப்
பொழுது தகனபலிகளைப் பலிபீடத்தின்மேல்
செலுத்த எசேக்கியா கட்டளையிட்டான்;
பலிசெலுத்தத் துவக்கின நேரத்திலேயே
யெகோவாவைத் துதிக்கும் கீதமும் பூரிகை
களும் இஸ்ரவேல் ராஜாவாகிய தாவீது ஏற்
படுத்தின தேவவாத்தியங்களும் முழங்கத்
28 தொடங்கின. தகனபலியைச் செலுத்தித்
திருமட்டும், கீதத்தைப்பாடிப் பூரிகைகளை
ஊதிக்கொண்டிருக்கையில், சபையார் எல்
29 லாரும் பணிந்துகொண்டிருந்தார்கள். பலி
யிட்டுத் தீர்த்தபோது ராஜாவும் அவரோ
டிருந்த அனைவரும் தாழக்குனிந்து பணிந்து
கொண்டார்கள். பின்பு எசேக்கியா ராஜா 30
வும் அதிபதிகளும் லேவியரை யழைத்து,
நீங்கள் தாவீதும் ஞானதிருஷ்டிகளாகிய
ஆசாபும் பாடின பாடல்களினாலே யெகோ
வாவைத் துதியுங்கள் என்றார்கள்; அப்
படியே மகிழ்ச்சியோடே துதிசெய்து
குனிந்து பணிந்துகொண்டார்கள்.
பின்பு எசேக்கியா பேசத்தொடங்கி: 31
இப்போதும் நீங்கள் யெகோவாவுக்கென்று
உங்களைப் பிரதிஷ்டை செய்தீர்கள்; நீங்
கள் கிட்டவந்து யெகோவாவின் ஆலயத்
திற்கு இரத்தபலிகளையும் ஸ்தோத்திரபலிக
ளையும் கொண்டுவாருங்கள் என்றான்; சபை
யார் இரத்தபலிகளையும் ஸ்தோத்திரபலிக
ளையும் இஷ்டமுள்ளவர்களெல்லாம் தகன
பலிகளையும் கொண்டுவந்தார்கள். சபை 32
யார் கொண்டுவந்த தகனபலிகளின் தொ
கை, காளைகள் எழுபது, ஆட்டுக்கடாக்கள்
நூறு, ஆட்டுக்குட்டிகள் இருநூறு; இவை
யெல்லாம் யெகோவாவுக்குத் தகனபலியா
யின. அறுநூறு காளைகளும் மூவாயிரம் 33
ஆடுகளும் ஸ்தோத்திரபலிகளாயின. தகன 34
மான மிருகங்களையெல்லாம் தோலுரிப்பதற்
குப் போதுமான ஆசாரியரோ அங்கில்லை,
ஆகவே மற்ற ஆசாரியர் தங்களைப் பரிசுத்
தம்பண்ணுமளவும், அந்த வேலை தீருமட்
டும் அவர்கள் சகோதரராகிய லேவியர்
அவர்களுக்கு உதவி செய்தார்கள்; பரிசுத்
தம்பண்ணிக்கொள்ளுகிற விஷயத்தில்
லேவியர் ஆசாரியரைப் பார்க்கிலும் மன
உற்சாகமுள்ளவர்களாயிருந்தார்கள். தகன 35
பலிகளும் ஸ்தோத்திரபலிகளின் கொழுப்
பும் தகனங்களுக்குரிய பானபலிகளும்
மிகுதியாயிருந்தன; இவ்விதமாக யெகோ
வாவின் ஆலய ஆராதனை ஒழுங்கு செய்
யப்பட்டது. கடவுள் ஜனத்தை ஆயத்தப் 36
படுத்தினதைப்பற்றி எசேக்கியாவும் ஜனங்
கள் எல்லாரும் சந்தோஷப்பட்டார்கள்;
இந்தக் காரியம் திடீரென்றாவண்ணமாய்
விரைவில் நடந்தது.
அதன்பின்பு எசேக்கியா இஸ்ரவேல் 30
யூதா எங்கும் ஆட்களை அனுப்பி எப்பிரா
யீம் மனாசே கோத்திரங்களுக்கும் நிருபங்
களை எழுதி, இஸ்ரவேலின் கடவுளாகிய
யெகோவாவுக்குப் பஸ்காவை ஆசரிக்கும்
படி எருசலேமிலுள்ள யெகோவாவின் ஆல
யத்திற்கு வரும்படி கூப்பிட்டான். பஸ் 2
காவை இரண்டாம் மாதத்தில் ஆசரிக்கும்
படி ராஜாவும் அவன் அதிபதிகளும் எருச
லேமிலுள்ள சபையார் யாவரும் தீர்மானித்

திருந்தார்கள். ஆசாரியர் போதுமானபேர் தங்களைப் பரிசுத்தம்பண்ணுமளவும் ஜனங்கள் எருசலேமிலே இன்னும் கூடிவராமலும் இருந்தபடியினால் அதற்குரிய காலத்திலே அதை ஆசரிக்கக் கூடாமற்போயிற்று. இந்தக் காரியம் ராஜாவின் பார்வைக்கும் சமஸ்த சபையின் பார்வைக்கும் சரியெனத் தோன்றினது. இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவுக்குப் பஸ்காவை ஆசரிக்கும்படி எருசலேமுக்கு வாருங்கள் என்று பெயேர்ஷெபாமுதல் தாண்மட்டுமுள்ள இஸ்ரவேல் தேசமெங்கும் விளம்பரம் செய்யத் தீர்மானம்பண்ணினார்கள்; எழுதியிருக்கிறபடியே வெகுகாலமாய் அவர்கள் திரளாய்க்கூடி அதை ஆசரிக்கவில்லை.

ராஜாவும் அவன் அதிபதிகளும் கொடுத்த நிருபங்களை அஞ்சல்காரர் வாங்கி, ராஜாவின் கட்டளைப்படியே இஸ்ரவேல் யூதா எங்கும் போய்: இஸ்ரவேல் புத்திரரே, ஆபிரகாம் ஈசாக்கு இஸ்ரவேல் என்பவர்களின் கடவுளாகிய யெகோவாவினிடம் திரும்புங்கள்; திரும்பினால் அசீரிய ராஜாக்களின் கைக்குத் தப்பி மீதியாயிருக்கிற உங்களண்டைக்கு அவர் திரும்புவார். உங்கள் பிதாக்களைப்போலவும் உங்கள் சகோதரரைப்போலவும் இராதேயுங்கள்; அவர்கள் தங்கள் பிதாக்களின் கடவுளாகிய யெகோவாவுக்குத் துரோகம்பண்ணினார்கள்; பார்த்தவர்கள் திடுக்கிடும்படி அழிநிமித்தம் அவர்களைப் பாழாக்கினார், அதை நீங்களும் காண்கிறீர்களே. இப்போதும் உங்கள் பிதாக்களைப்போல நீங்களும் வணங்காக் கழுத்துள்ளவர்களாகாதேயுங்கள்; நீங்கள் யெகோவாவுக்கு இணங்கி அவர் என்றைக்குமாக பிரதிஷ்டை செய்திருக்கிற அவருடைய பரிசுத்த ஸ்தலத்திற்கு வந்து உங்கள் கடவுளாகிய யெகோவாவைச் சேவியுங்கள்; அப்பொழுது அவருடைய உக்கிர கோபம் உங்களைவிட்டுத் திரும்பும். நீங்கள் யெகோவாவினிடம் திரும்பும்போது உங்கள் சகோதரரும் உங்கள் பிள்ளைகளும் தங்களைச் சிறைபிடித்தவர்களிடம் இரக்கம் பெற்று இந்தத் தேசத்திற்குத் திரும்புவார்கள்; உங்கள் கடவுளாகிய யெகோவா இரக்கமும் உருக்கமுமுள்ளவர்; நீங்கள் அவரிடம் திரும்பினால் அவர் தமது திருமுகத்தை உங்களைவிட்டு விலக்குவதில்லை என்றார்கள். அப்படியே அந்த அஞ்சல்காரர் எப்பிராயீம் மனாசே தேசங்களில் செபுலோன் மட்டும் ஊராராகத் திரிந்தார்கள்; அங்கிருந்தவர்களோ இவர்களைப் பார்த்து நகைத்துப் பரியாசம்பண்ணினார்கள். ஆகிலும் ஆசேரிலும் மனாசேயிலும் செபுலோனிலும் சிலர் தங்களைத் தாழ்த்தி எருசலேமுக்கு வந்தார்கள். யூதாவிலும் கடவுளின் கரம் தூண்ட நின்று, யெகோவாவின் வார்த்தைக் குறைவாக ராஜாவும் அதிபதிகளும் கட்டளையிட்டபடியே செய்வதற்கு ஒரே மனமுள்ளவர்களாகும்படி தூண்டிற்று.

அப்படியே இரண்டாம் மாதத்தில் புளிப்பில்லா அப்பப் பண்டிகையை ஆசரிக்க வெகு ஜனங்கள் எருசலேமில் மகா பெரும் சபையாய்க் கூடினார்கள். அவர்கள் எழும்பி எருசலேமிலிருந்த பலிபீடங்களையும் தூபபீடங்களையும் அகற்றி அவற்றைக் கீதரோன் பள்ளத்தாக்கிலே போட்டுவிட்டார்கள். பின்பு அந்த இரண்டாம் மாதம் பதினாலாந்தேதியில் பஸ்காவை அடித்தார்கள்; ஆசாரியரும் லேவியரும் வெட்கப்பட்டுத் தங்களைப் பரிசுத்தப்படுத்திக்கொண்டு தகனபலிகளை யெகோவாவின் ஆலயத்திற்குக் கொண்டுவந்து | கடவுளின் மனுஷனாகிய மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு இசையத் தங்களுக்கு விதிக்கப்பட்டபடியே தங்கள் தங்கள் ஸ்தானங்களிலே நின்றார்கள்; ஆசாரியர் லேவியரின் கையிலிருந்து ரத்தத்தை வாங்கித் தெளித்தார்கள். சபையிலே அநேகர் தங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளவில்லை; ஆகையால் சுத்தமில்லாதவர்களின் ஆட்டுக்குட்டிகளை யெகோவாவுக்குப் பரித்தமாக்கும்படி லேவியர் அவர்களுக்காகப் பஸ்காவின் ஆட்டுக்குட்டிகளை அடிக்கும் காரியத்தைப் பார்த்தார்கள். ஏராளமான ஜனங்கள், விசேஷமாய் எப்பிராயீம் மனாசே, இசக்கார், செபுலோன் கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள், தங்களைச் சுத்தம்பண்ணிக் கொள்ளாதிருந்தும் பஸ்காவைச் சாப்பிட்டார்கள். எழுதப்பட்டிருந்த முறைக்கு இது விரோதமேயெனினும் எசேக்கியா அவர்களுக்காக விண்ணப்பம் பண்ணி: கடவுளை, தங்கள் பிதாக்களின் கடவுளாகிய யெகோவாவை, தேடும்படி தங்கள் இருதயத்தை நேராக்கினவர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்கேற்ற சுத்தமில்லாதவர்களேயெனினும், யெகோவாவே, நன்மைச் சொரூபியே, அவர்கள் எல்லாருக்கும் மன்னிப்பாராக என்றான். யெகோவா எசேக்கியாவுக்குச் செவிசாய்த்து ஜனங்களைத் தீங்கின்றிக் காத்தார்.

இப்படியாக எருசலேமிலே கூடியிருந்த இஸ்ரவேல் புத்திரர் புளிப்பில்லா அப்பப் பண்டிகையை ஏழுநாளளவும் மகா ஆனந்தத்தோடே கொண்டாடினார்கள்; லேவிய

ரும் ஆசாரியரும் யெகோவாவுக்கென்று பேரோசையாய்த் தொனிக்கும் தேவாத்தியங்களை முழக்கித் தினந்தோறும் யெகோ
22 வாவைத் துதித்துக்கொண்டிருந்தார்கள். யெகோவாவுக்கென்று நல்ல ஊழியஞ் செய்த லேவியர் அனைவரோடும் எசேக்கியா பட்சமாய்ப் பேசினான்; இப்படி அவர்கள் பண்டிகையை ஏழுநாளளவும் கொண்டாடி ஸ்தோத்திர பலிகளைச் செலுத்தித் தங்கள் பிதாக்களின் கடவுளாகிய யெகோவாவைத்
23 துதித்தார்கள். பின்னும் ஏழுநாள் ஆசரிக்கும்படி சபையார் எல்லாரும் தீர்மானித்து அந்த ஏழுநாளும் ஆனந்தத்தோடே கொண்
24 டாடினார்கள். யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா சபைக்கு ஆயிரம் காளைகளையும் ஏழாயிரம் ஆடுகளையும் கொடுத்தான்; அதிபதிகளும் சபைக்கு ஆயிரம் காளைகளையும் பதினாயிரம் ஆடுகளையும் கொடுத்தார்கள்; ஆசாரியரில் அநேகம்பேர் தங்களைப் பரிசுத்தம்
25 பண்ணிக்கொண்டார்கள். யூதாவின் சபையனைத்தும் ஆசாரியரும் லேவியரும் இஸ்ரவேலிலிருந்து வந்தவர்களாகிய சபையனைத்தும் இஸ்ரவேல் தேசத்திலிருந்து வந்த அந்நியரும் யூதாவில் குடியிருந்தவர்களும்
26 மகிழ்ச்சியாயிருந்தார்கள். இப்படியாக எருசலேமிலே மிகுந்த மகிழ்ச்சியாயிருந்தது; தாவீதின் குமாரனாகிய சாலொமோன் என்னும் இஸ்ரவேல் ராஜாவின் நாள்முதற்
27 கொண்டு எருசலேமிலே இப்படி நடந்ததில்லை. லேவியரான ஆசாரியர்கள் எழுந்து நின்று ஜனத்தை ஆசீர்வதித்தார்கள்; அவர்கள் சத்தத்தை யெகோவா கேட்டார், அவர்கள் விண்ணப்பம் அவருடைய பரிசுத்த வாசஸ்தலமாகிய பரலோகத்தில் வந்து எட்டினது.

**31** இவையெல்லாம் முடிந்தபின்பு அங்கிருந்த இஸ்ரவேலர் எல்லாரும் யூதாவின் ஊர்களுக்குச் சென்று யூதா பென்யமீனெங்கும், எப்பிராயீமிலும் மனாசேயிலுங்கூட, இருந்த சிலைகளை உடைத்து மரச்சிலைகளை வெட்டி பூஜைமேடைகளையும் பீடங்களையும் இடித்து, அவைகளையெல்லாம் முழுதுமாய்த் தகர்த்துப்போட்டார்கள்; பின்பு இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் தங்கள் தங்கள் ஊர்களுக்கு, தங்கள் காணியாட்சிகளுக்கு திரும்பினார்கள்.

2 எசேக்கியா, ஆசாரியர் லேவியருடைய வகுப்புகளை அவர்கள் முறைகளின்படியே யும், அவரவரை அவர்கள் ஊழியத்தின்படியேயும் ஏற்படுத்தி, ஆசாரியரையும் லேவியரையும் தகனபலிகளையும் சமாதானபலிகளையும் செலுத்தவும் யெகோவாவின் பாளயத்தின் வாசல்களில் ஊழியஞ்செய்து துதித்து ஸ்தோத்திரிக்கவும் ஒழுங்குபடுத்தினான்.
3 ராஜா தன் ஆஸ்தியிலிருந்து எடுத்துக்கொடுத்த பங்கு யெகோவாவின் நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி காலை மாலை, ஓய்வுநாள், மாதப்பிறப்பு, உற்சவங்கள் இவற்றில் செலுத்தவேண்டிய தகனபலிகளுக்காயிற்று. ஆசாரியரும் லேவியரும்
4 யெகோவாவின் நியாயப்பிரமாணத்தை உறுதியாய் அனுசரிக்கும்படி அவர்களுக்குரிய பாகத்தைக் கொடுக்க ராஜா ஜனங்களுக்கு, எருசலேமின் குடிகளுக்கு, கட்டளையிட்டான். இந்தக் கட்டளை பரவினபோது
5 இஸ்ரவேல் புத்திரர் தானியத்திலும் திராட்சரசத்திலும் எண்ணெயிலும் தேனிலும் நிலத்தின் எல்லா வரத்திலும் முதற்பலன்களைத் திரளாகக் கொண்டுவந்து எல்லாவற்றிலும் தசமபாகத்தை ஏராளமாய்க் கொடுத்தார்கள். யூதாவின் ஊர்களில் குடியிருந்தவர்
6 களுங்கூட, இஸ்ரவேல் புத்திரரும் யூதா புத்திரரும், ஆடுமாடுகளில் தசமபாகத்தையும் தங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கென்று பிரதிஷ்டைசெய்தவைகளாகிய தசமபாகத்தையும் கொண்டுவந்து குவியல் குவியலாக வைத்தார்கள். மூன்றாம் மாதத்
7 தில் குவியல் செய்யத்தொடங்கி ஏழாம் மாதத்தில் முடித்தார்கள். எசேக்கியாவும்
8 அதிபதிகளும் வந்து, அந்தக் குவியல்களைக் காணும்போது யெகோவாவுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தி அவருடைய ஜனமாகிய இஸ்ரவேலைப் புகழ்ந்தார்கள். அந்தக் குவியல்
9 களைப்பற்றி எசேக்கியா ஆசாரியரிடமும் லேவியரிடமும் விசாரித்தபோது, சாதோக்
10 தின் வம்சத்தானாகிய அசரியா என்னும் பிரதான ஆசாரியன் அவனிடம்: இந்தக் காணிக்கையை யெகோவாவின் ஆலயத்திற்குக் கொண்டுவரத் தொடங்கினதுமுதல் நாங்கள் திருப்தியாய்ச் சாப்பிட்டுவருகிறோம்; இன்னும் அதிகமான மிச்சம் இருக்கிறது; யெகோவா தமது ஜனத்தை ஆசீர்வதித்ததினால் இந்தத் திரட்சியான அம்பாரம் மீந்திருக்கிறது என்றான்.

அப்பொழுது எசேக்கியா யெகோவாவின் 11
ஆலயத்திலே அறைகளை ஆயத்தப்படுத்தச் சொன்னான். அவர்கள் அவைகளை ஆயத் 12
தப்படுத்தின பின்பு அவைகளிலே காணிக்கைகளையும் தசமபாகத்தையும் பிரதிஷ்டை செய்யப்பட்டவைகளையும் உண்மையாய் எடுத்துவைத்தார்கள்; அவைகளின்மேல் லேவியனாகிய கொனனியா தலைவனாயிருந்தான்; அவன் தம்பி சிமேயி இரண்டாவது தாள்ளாயிருந்தான். எசேக்கியா ராஜாவும் 13

கடவுளின் ஆலய விசாரணைக்காரனுகிய அசரியாவும் செய்த ஏற்பாட்டின்படியே, எகியேலும் அசரியாவும் நாகாத்தும் அசாகேலும் யெரீமோத்தும் யோசபாத்தும் எலியேலும் யிஸ்மகியாவும் மாகாத்தும் பெனயாவும் கொனனியாவின் மூலும் அவன் தம்பியாகிய சிமேயின் மூலும் விசாரிப்புக்காரராயிருந்தார்கள். கிழக்கு வாசலுக்கு காக்கிற யிம்னவின் குமாரனுகிய கோரே என்னும் லேவியன் கடவுளுக்குச் செலுத்தும் மனப்பூர்வ காணிக்கைகளை மேல்பார்த்தவன்; யெகோவாவுக்குச் செலுத்தப்பட்ட காணிக்கைகளையும் மகா பரிசுத்தமானவைகளையும் பங்கிடுவது இவன் வேலை. வகுப்புகள் தோறும் தங்கள் சகோதரரிலே பெரியவனுக்கும் சிறியவனுக்கும் பங்கிட்டுக் கொடுப்பதற்கு, உண்மையுள்ளவர்களாக எண்ணப்பட்ட ஏதேன், மின்யமீன், யேஷுவா, ஷெமாயா, அமரியா, ஷெகனியா என்பவர்கள் ஆசாரியர் ஊர்களில் கோரேக்கு உதவியாக வேலையில் நியமிக்கப்பட்டார்கள். வம்ச அட்டவணைகளில் எழுதப்பட்டு மூன்று வயதுள்ளவர்களும் மேற்பட்டவர்களுமாய், யெகோவாவின் ஆலயத்திலே தத்தம் வகுப்புமுறையின்படி தத்தம் வேலை செய்ய அன்றுடக ஊழியத்திற்குப் பிரவேசிக்கிற ஆண்கள் அனைவருக்குமோ அவர்கள் ஊர்களில் பங்கு கொடுப்பதில்லை. ஆசாரியர் தங்கள் வம்சமுறைப்படியே அட்டவணைகளில் எழுதப்பட்டார்கள், லேவியரில் இருபது வயதுள்ளவர்களும் மேற்பட்டவர்களும் தத்தம் வேலைகளின்படியும் தத்தம் வகுப்பு முறைகளின்படியும், எழுதப்பட்டார்கள். அவர்களுக்குரியவர்களெல்லாரும், குழந்தைகள், மனைவிகள், குமாரர், குமாரத்திகள் அனைவரும் அவர்களோடு எழுதப்படவேண்டும்; பரிசுத்தமானவற்றையெல்லாம் அவர்கள் பரிசுத்தமாகவே பாராட்டிவரவேண்டும். தங்களுக்குரிய ஊர்களைச் சார்ந்த வெளிநிலங்களிலே குடியிருந்த ஆரோன் புத்திரராகிய ஆசாரியருக்கென்று பேர்பேராகக் குறிக்கப்பட்ட ஆட்கள் ஊர்தோறும் நியமிக்கப்பட்டிருந்தார்கள்; ஆசாரிய வம்சத்தைச் சேர்ந்த ஆண்கள் அனைவருக்கும் லேவிய வம்ச அட்டவணையிலே எழுதப்பட்ட யாவருக்கும், அவர்கள் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும்.

இந்தப் பிரகாரமாக எசேக்கியா யூதா வெங்கும் ஏற்பாடு செய்து தன் கடவுளாகிய யெகோவாவின் பார்வையில் நன்மையும் நேர்மையும் உண்மையுமானதைச் செய்து வந்தான். தன் கடவுளைத் தேடவேண்டுமென்று கடவுளின் ஆலயத்திற்குரிய வேலையிலும், நியாயப்பிரமாணம் கட்டளை என்பவற்றின் விஷயத்திலும் ஏதேது செய்யத் தொடங்கினனே, அதையெல்லாம் தன் முழு இருதயத்தோடும் செய்து சித்திபெற்றான்.

32 பக்திக்கு அறிகுறியான இக்காரியங்கள் நடந்தேறியபின் அசீரியா ராஜாவாகிய சனகேரிப் வந்து, யூதாவுக்குள் புகுந்து அரணன பட்டணங்களுக்கு எதிரே பாளயமிறங்கினன்; அவைகளைத் தன் வசமாக்கிக் கொள்ள நினைத்தான். சனகேரிப் எருசலேமின்மேல் யுத்தம்பண்ண வரவேண்டுமென்றிருப்பதை எசேக்கியா கண்டபோது | தன் பிரபுக்களோடும் தன் பராக்கிரமசாலிகளோடும் ஆலோசனைசெய்து நகரத்திற்குப் புறம்பேயுள்ள ஊற்றுகளைத் தூர்த்துப்போடத் தீர்மானித்தான்; அதற்கு அவர்கள் உதவியாயிருந்தார்கள். அசீரியா ராஜாக்கள் வந்து அதிகத் தண்ணீரைக் கண்டுபிடிப்பானேன் என்று சொல்லி அநேகம் ஜனங்கள்கூடி எல்லா ஊற்றுகளையும் நாட்டின் நடுவில் பாயும் ஓடையையும் அடைத்துப்போட்டார்கள். அவன் மனமே பலங்கொண்டு, இடிக்கப்பட்டிருந்த மதிலெல்லாம் கட்டி அவைகளின்மேல் கொத்தளங்களை யமைத்து வெளியே மற்றொரு மதிலையும்கட்டித் தாவீதுநகரத்திலுள்ள மில்லோவைப் பலப்படுத்தினான்; ஏராளான எறிவல்லயங்களையும் கேடகங்களையும் செய்து | படைவீரர்மேல் சேனைத் தலைவரை நியமித்து, அவர்களை நகரவாசல் வெளியில் தன்னண்டை கூடிவரச்செய்து அவர்களோடு பேசி: நீங்கள் மனைபலங்கொண்டு தைரியமாயிருங்கள்; அசீரியா ராஜாவுக்கும் அவனெடிருக்கிற திரள்கூட்டத்திற்கும் பயப்படவேண்டாம், கலங்கவேண்டாம்; அவனெடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருப்பவர் வல்லவர். அவனெடிருப்பது மனிதபுயம், நமக்குத் துணைநின்று நமது யுத்தங்களை நடத்த நம்மோடிருக்கிறவர் நமது கடவுளாகிய யெகோவாவே என்று சொல்லி அவர்களைத் தைரியப்படுத்தினன்; யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா சொன்ன இந்த வார்த்தைகளில் நம்பிக்கையுடையவராய் ஜனங்கள் தைரியங்கொண்டார்கள்.

இதன்பின்பு, அசீரியா ராஜாவாகிய சனகேரிப் தன் முழுச்சேனையுடன் லாகீஷுக்கு எதிரே, பாளயமிறங்கியிருக்கையில், யூதா ராஜாவாகிய எசேக்கியாவினிடத்துக்கும் எருசலேமிலுள்ள யூதா ஜனங்கள் யாவரிடத்துக்கும் தன் ஊழியரை அனுப்பி:

10 அசீரியா ராஜாவாகிய சனகேரிப் சொல் வதைக் கேளுங்கள், எதின்மேல் நம்பிக்கை வைத்தவர்களாய், முற்றுகையிடப்பட்ட
11 எருசலேமிலுள்ளே தங்கியிருப்பீர்கள்? நீங் கள் பசியிலும் தாகத்திலும் சாவதற் கேதுவாய் எசேக்கியா ராஜா, நமது கடவு ளாகிய யெகோவா நம்மை அசீரிய ராஜா வின் கைக்குத் தப்புவிப்பார் என்று
12 சொல்லி உங்களைத் தூண்டுகிறானே. அவ ருடைய மேடைகளையும் அவருடைய பலி பீடங்களையும் அகற்றிவிட்டு, ஒரே பலிபீடத் திற்கு முன்பாகப் பணிந்து அதின்மேல் தூபங்காட்டவேண்டுமென்று யூதாவுக்கும் எருசலேமுக்கும் சொன்னவன் இந்த
13 எசேக்கியாவேயல்லவா? நானும் என் பிதாக் களும் சகலதேச ஜனங்களுக்கும் செய் தது உங்களுக்குத் தெரியாதா? அந்தத் தேசங்களை என் கைக்குத் தப்புவிக்க அத் தத் தேச ஜாதிகளின் தேவர்கள் வல்லவரா
14 யிருந்தார்களோ? என் பிதாக்கள் சங்கரித்த அந்த ஜாதிகளுடைய சகல தேவர்களிலும் எந்தத் தெய்வம் தன் ஜனத்தை என் கைக்குத் தப்புவிக்க. வல்லதாயிருந்தது; அப்படியிருக்கவும் உங்கள் தெய்வம் உங் களை என் கைக்குத் தப்புவிக்க வல்லதா
15 யிருக்குமோ? இப்போதும் எசேக்கியா உங் களை இப்படி வஞ்சித்துத் தூண்ட நீங்கள் இடங்கொடுக்கவேண்டாம்; நீங்கள் அவ னில் நம்பிக்கைவைக்கவும் வேண்டாம்; சகல தேசங்களிலும் சகல ஜாதிகளுக்கு மிருந்த தேவர்களில் எந்தத் தெய்வமாவது தன் ஜனத்தை என் கைக்கும் என் பிதாக்க ளின் கைக்கும் தப்புவிக்க வல்லதாயிருந்த தோ? இப்படியிருப்பதினாலே உங்கள் தெய் வமும் உங்களை என் கைக்குத் தப்புவியா தென்பது எவ்வளவு நிச்சயம் என்று சொல்
16 லச் சொன்னான். அவனுடைய ஊழியர் கடவுளாகிய யெகோவாவுக்கு விரோதமாக வும் அவருடைய ஊழியனாகிய எசேக்கியா வுக்கு விரோதமாகவும் பின்னும் அதிக
17 மாய்ப் பேசினார்கள். சனகேரிப் இஸ்ரவே லின் கடவுளாகிய யெகோவாவை நிந்திக் கவும் அவருக்கு விரோதமாகப் பேசவும் நிருபங்களை எழுதி, தேச ஜாதிகளின் தேவர் கள் தங்கள் ஜனங்களை என் கைக்குத் தப்பு விக்காதிருந்ததுபோல எசேக்கியாவின் தேவ னும் தன் ஜனங்களை என் கைக்குத் தப்பு
18 விப்பதில்லையென்று சொன்னான். அவர்கள் நகரத்தைப் பிடிப்பதற்கேதுவாக, அலங்கத் தின்மேல் நின்ற எருசலேமின் ஜனங்களைப் பயப்படுத்திக் கலங்கப்பண்ணும்படி யூத பாஷையிலே மகா சத்தமாய்க் கூப்பிட்டு
19 அவர்களோடு பேசினார்கள். உலகத்தின் ஜனங்களுடைய தேவர்களைப்பற்றி, மனுஷ கைவேலையாகச் செய்யப்பட்டவைகளைப் பற்றி, பேசினதுபோலவே எருசலேமின் கடவுளைப்பற்றியும் பேசினார்கள்.

20 எசேக்கியா ராஜாவும் ஆமோத்சின் குமார னாகிய ஏசாயா தீர்க்கதரிசியும் இதினிமித்தம் பிரார்த்தனைசெய்து வானத்தை நோக்கி
21 அபயமிட்டார்கள். அபயமிடவே யெகோ வா ஒரு தூதனை அனுப்பினார்; அவன் அசீரிய ராஜாவின் பாளயத்திலுள்ள சகல பராக்கிரமவீரரையும் தலைவரையும் சேனை பதிகளையும் அதம்பண்ணினான்; அப்படியே சனகேரிப் வெட்கிய முகத்தோடு தன் தேசத்திற்குத் திரும்பினான்; அங்கே அவன் தன் தேவனுடைய கோவிலுக்குள் பிரவே சிக்கும்போது அவனுடைய சொந்தக் குமா ரரே அவனைப் பட்டயத்தால் வெட்டிப் போட்டார்கள். இப்படியாக யெகோவா
22 எசேக்கியாவையும் எருசலேமின் குடிகளை யும் அசீரியருடைய ராஜாவாகிய சனகேரிப் பின் கைக்கும் மற்ற எல்லாருடைய கைக் கும் நீங்கலாக்கி ரட்சித்துச் சுற்றிலும் அவர் களைக் காத்து நடத்தினார். அநேகம்பேர்
23 யெகோவாவுக்கென்று எருசலேமுக்குக் காணிக்கைகளையும் யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவுக்கு அருமையானவைகளையும் கொண்டுவந்தார்கள்; இதன்பின் அவன் சகல ஜாதிகளின் பார்வையிலும் மேன்மை யுள்ளவனானான்.

24 அந்நாட்களில் எசேக்கியா வியாதிப் பட்டு மரணத்தறுவாயிலிருந்தான்; அவன் யெகோவாவை நோக்கி ஜெபம்பண்ணினான், அவர் அவனுக்குப் பதிலளித்து ஒரு அற் புத அடையாளத்தையும் கட்டளையிட் டார். எசேக்கியாவோ தான் பெற்ற நன்
25 மைக்குத் தக்கபடி நடவாமல் மனமேட்டி மையாலானான்; ஆகவே அவன்மேலும் யூதா வின்மேலும் எருசலேமின்மேலும் கடுங் கோபம் மூண்டது. எசேக்கியாவின் மன
26 மேட்டிமையினிமித்தம் அவனும் எருச லேமின் குடிகளும் தங்களைத் தாழ்த்தினபடி யினால் யெகோவாவின் கடுங்கோபம் எசேக் கியாவின் நாட்களிலே அவர்கள்மேல் வர வில்லை.

27 எசேக்கியாவுக்கு மிகுந்த ஐசுவரியமும் கௌரவமும் உண்டாயிற்று; வெள்ளி, பொன், ரத்தினங்கள், கந்தவர்க்கங்கள், கேடகங்கள், விநோதமான ஆபரணங்கள் இவற்றை வைப்பதற்குப் பொக்கிஷசாலை களையும், | தனக்கு வரும் தானியம், திராட்ச 28
ரசம், எண்ணெய் இவற்றை வைப்பதற்குப்

பண்டசாலைகளையும், பலவகையான மிருகங்களுக்குக் கொட்டாரங்களையும், மந்தைகளுக்குத் தொழுவங்களையும் அமைத்தான்.
29 அவன் தனக்குப் பட்டணங்களைக் கட்டினான்; அவனுக்கு மிகுதியான ஆட்டுமந்தைகளும் மாட்டுமந்தைகளும் இருந்தன; கடவுள் அவனுக்கு மகா திரளான ஆஸ்தி
30 யைக் கொடுத்தார். இந்த எசேக்கியா கீகோன் ஒடைக்குப்போகிற மேல் ஊற்றை அடைத்துவிட்டுத் தண்ணீரைத் தாவீதுகர த்திற்கு மேல்புறமாகத் திருப்பினான்; எசேக்கியா செய்த யாவற்றிலும் சித்திபெற்றான்.
31 ஆகிலும் பாபிலோன் அதிபதிகளின் ஸ்தானபதிகள் தேசத்திலே நடந்த அற்புதத்தைப் பற்றி விசாரிக்க அவனிடத்துக்கு அனுப்பப்பட்ட விஷயத்திலே, அவன் இருதயத்தில் உண்டான யாவற்றையும் அறியும்படி அவனைச் சோதிக்கவேண்டுமென்று கடவுள் அவனைக் கைவிட்டார்.
32 எசேக்கியாவின் மற்ற விவரங்களும் அவனுடைய பக்திவிஷயங்களும் ,ஆமோத்சின் குமாரனுகிய ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்திலும் யூதா இஸ்ரவேல் என்பவர்களின் ராஜாக்களைப்பற்றிய புஸ்தகத்திலும் எழுதி
33 யிருக்கிறது. எசேக்கியா நித்திரையடைந்து தன் பிதாக்களோடே சேரவே அவனைத் தாவீது வம்சத்தாரின் கல்லறைகளுக்கு ஏறிப்போகுமிடத்தில் அடக்கம்பண்ணினார்கள்; யூதாவனைத்தும் எருசலேமின் குடிகளும் அவன் மரித்தபோது அவனைக் கனம் பண்ணினார்கள்; அவன் குமாரனுகிய மனாசே அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

**33** மனாசே ராஜாவானபோது அவனுக்குப் பன்னிரண்டு வயது, அவன் ஐம்பத்தைந்து வருஷம் எருசலேமில் அரசாண்டான்.
2 அவன் யெகோவாவின் பார்வையில் தீமையானதைச் செய்தான்; யெகோவா இஸ்ரவேல் புத்திரருக்கு முன்னிராதபடி துரத்திவிட்ட ஜாதிகளின் அருவருப்புகளின்படியே
3 செய்தான். அவன் தன் தகப்பனுகிய எசேக்கியா இடித்துப்போட்ட மேடைகளைத் திரும்பவும் கட்டிப் பாகால்களுக்குப் பலிபீடங்களை எடுப்பித்து மரச்சிலைகளைச் செய்து வானசேனையனைத்தையும் தொழுதுகொண்டு அவைகளைச் சேவித்து
4 வந்தான். யெகோவா ஆலயத்தைப்பற்றிப் பேசி எருசலேமிலே என் நாமத்தை என்றைக்குமாக விளங்கப்பண்ணுவேன் என்று சொல்லியிருந்தார், அவனே யெகோவாவின் ஆலயத்தில் பலிபீடங்களைக் கட்டினான்.
5 யெகோவாவின் ஆலயப் பிராகாரங்கள் இரண்டிலும் வானசேனையனைத்துக்கும் பலிபீடங்களைக் கட்டினான். அவன் இன்னும் 6
குமாரனின் பள்ளத்தாக்கிலே தன் குமாரரை அக்கினியிலிட்டான்; சகுனம்பார்க்கிறவனும் குறிகேட்கிறவனுமாயிருந்து பில்லிசூனியங்களை அநுசரிக்கிறவனுகி அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் வைத்துக்கொண்டு யெகோவாவுக்குக் கோபமுண்டாக அவர் பார்வையில் தீமையானதை மிகுதியாய்ச் செய்துவந்தான்.
7 கடவுள் தாவீதோடும் அவன் குமாரனுகிய சாலொமோனோடும் ஆலயத்தைப்பற்றிப் பேசி, இந்த ஆலயத்திலே, நான் இஸ்ரவேலின் சகல கோத்திரங்களிலுமிருந்து தெரிந்துகொண்ட எருசலேமிலே, என் நாமத்தை என்றென்றும் விளங்கப்பண்ணுவேன் என்றும், | நான் அவர்களுக்குக் கட்டளையிட்ட 8
படியெல்லாம் செய்ய அவர்கள் ஜாக்கிரதையாயிருந்து மோசேயைக்கொண்டு நான் கொடுத்த சகல நியாயப்பிரமாணத்திற்கும் நியமங்களுக்கும் தீர்ப்புகளுக்கும் அவர்கள் இசைந்து நடப்பார்களேயானால் நான் இனி இஸ்ரவேலின் காலை உங்கள் பிதாக்களுக்கென்று ஏற்படுத்திய தேசத்தினின்று அகற்றுவதில்லையென்றும் சொல்லியிருந்தார்; இவனே தான் செய்த விக்கிரகச்சிலையைக் கடவுளின் ஆலயத்திலே வைத்தான்.
9 இஸ்ரவேல் புத்திரருக்கு முன்னிராதபடி யெகோவா அழித்தவிட்ட ஜாதிகள் செய்த தீமையிலும் யூதாவும் எருசலேமின் குடிகளும் அதிகத் தீமைசெய்யும்படி மனாசே அவர்களைத் தூண்டி வழிவிலகச் செய்தான்.
10 யெகோவா மனாசேயோடும் அவனுடைய ஜனத்தோடும் பேசினபோதிலும் அவர்கள்
11 கவனிக்காதே போனார்கள். ஆகவே யெகோவா அசீரியா ராஜாவின் சேனபதிகளை அவர்கள்மேல் வரப்பண்ணினார்; அவர்கள் மனாசேயைத் தூண்டில் முள்ளிலே பிடித்து, இரண்டு செப்புச் சங்கிலியால் அவனைக் கட்டிப் பாபிலோனுக்குக் கொண்டுபோனார்கள். அவன் இப்படி நெருக்கப்படு 12
கையில் தன் கடவுளாகிய யெகோவாவை நோக்கிக் கெஞ்சித் தன் பிதாக்களின் கடவுளுக்கு முன்பாகத் தன்னை மிகவும் தாழ்த்தினான். அவரை நோக்கி அவன் விண்ணப் 13
பம் பண்ணிக்கொண்டிருந்தபோது அவர் அவன் விண்ணப்பத்துக்கு இரங்கி அவன் மன்றாட்டைக் கேட்டு அவனைத் திரும்ப எருசலேமுக்கு, தன் ராஜ்யத்திற்கு, வரப்பண்ணினார்; யெகோவாவே கடவுள் என்று அப்பொழுது மனாசே உணர்ந்தான்.

பின்பு அவன் தாவீது நகரத்தின் வெளி 14
அலங்கத்தைக் கீகோனுக்கு மேற்கேயுள்ள

பள்ளத்தாக்கு தொடங்கி மீன் வாசல்மட்டும் கட்டி, ஒபேலைச் சுற்றிலும் அதை வளைத்து, அதை மிகவும் உயர்த்தினான்; யூதாவிலுள்ள அரணான பட்டணங்களிலெல்லாம் ராணுவத்தலைவரை வைத்தான்;
15 யெகோவாவின் ஆலயத்திலிருந்து அந்நிய தேவர்களையும் விக்கிரகத்தையும் எடுத்துப் போட்டு யெகோவாவின் ஆலயமுழுள்ள மலையிலும் எருசலேமிலும் தான் கட்டியிருந்த எல்லாப் பலிபீடங்களையும் அகற்றிப் பட்டணத்திற்கு வெளியே எறிந்துவிட்டான்.
16 யெகோவாவின் பலிபீடத்தைச் செப்பனிட்டு அதின்மேல் சமாதான பலிகளையும் ஸ்தோத்திர பலிகளையும் செலுத்தி இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவைச் சேவிக்க வேண்டும் என்று யூதாவுக்குக் கட்டளையிட்
17 டான். ஆகிலும் ஜனங்கள் இன்னும் பூஜைமேடைகளில் பலியிட்டுவந்தார்கள்; அவர்கள் பலியிட்டதோ தங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கென்றே.
18 மனாசேயின் மற்ற விவரங்களும் அவன் தன் கடவுளை நோக்கிச் செய்த விண்ணப்பமும் இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவின் நாமத்தில் அவனுடனே பேசின ஞானதிருஷ்டிகளின் வார்த்தைகளும், இதோ,
19 இஸ்ரவேல் ராஜாக்களைப்பற்றிய புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது. அவன் செய்த விண்ணப்பமும், அவன் மன்றாட்டுக்குயெகோவா இரங்கினதும், அவன் தன்னைத் தாழ்த்திய தற்கு முன்னே செய்த அவனுடைய எல்லாப் பாவமும் துரோகமும், அவன் பூஜைமேடைகளைக் கட்டி மரச்சிலைகளையும் விக்கிரகங்களையும் வைத்த இடங்களும், இதோ,
20 கோசாயின் வர்த்தமானத்தில் எழுதியிருக்கிறது. மனாசே நித்திரையடைந்து தன் பிதாக்களோடே சேரவே, அவனை அவன் வீட்டிலே அடக்கம் பண்ணினார்கள்; அவன் குமாரனாகிய ஆமோன் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.
21 ஆமோன் ராஜாவானபோது அவனுக்கு இருபத்திரண்டு வயது, அவன் இரண்டு வருஷம் எருசலேமில் அரசாண்டான்.
22 அவன் தன் தகப்பனாகிய மனாசே செய்தது போலவே யெகோவாவின் பார்வையில் தீமையானதைச் செய்துவந்தான்; தன் தகப்பனாகிய மனாசே செய்திருந்த விக்கிரகங்களுக்கெல்லாம் ஆமோன் பலியிட்டு அவை
23 களைச் சேவித்தான். தன் தகப்பனாகிய மனாசே தன்னைத் தாழ்த்திக்கொண்டது போல இந்த ஆமோன் யெகோவாவின் முன்பாகத் தன்னைத் தாழ்த்தவில்லை; குற்றத்தின்மேல் குற்றத்தைச் சுமத்திக்கொண்டான். அவன் ஊழியர் அவனுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடுபண்ணி அவன் அரமனையிலேயே அவனைக் கொன்றுபோட்டார்கள்.
24 அந்நாட்டு ஜனங்களோ ஆமோன் ராஜாவுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடு செய்தவர்களையும் வெட்டிப்போட்டார்கள்; நாட்டு ஜனங்களே அவன் குமாரனாகிய யோசியாவை அவன் ஸ்தானத்தில் ராஜாவாக்கினார்கள்.
25

**34** யோசியா ராஜாவானபோது அவனுக்கு எட்டு வயது, அவன் முப்பத்தொரு வருஷம் எருசலேமிலே அரசாண்டான். அவன்
2 யெகோவாவின் பார்வையில் நேர்மையானதைச்செய்து தன் தகப்பனாகிய தாவீதின் வழிகளிலே வலது இடதுபுறம் விலகாமல் நடந்தான். அவன் தன் அரசாட்சியின் எட்
3 டாம் வருஷத்தில், தான் இன்னும் இளவயதாயிருக்கையிலேயே, தன் தகப்பனாகிய தாவீதின் கடவுளைத் தேட ஆரம்பித்துப் பன்னிரண்டாம் வருஷத்தில் பூஜைமேடைகள், மரச்சிலைகள், விக்கிரகங்கள், வார்ப்பு உருவங்கள் ஆகிய இவைகள் அற்றுப்போகும்படி யூதாவையும் எருசலேமையும் சுத்திகரிக்கத் தொடங்கினான். அவன் பார்வை
4 யில் பாகால்களின் பலிபீடங்களை இடித்தார்கள்; அவைகளின்மேலிருந்தசூரியவணக்கச் சிலைகளை வெட்டி மரச்சிலைகளையும் விக்கிரகங்களையும் வார்ப்பு உருவங்களையும் உடைத்துப் பொடியாக்கி அவைகளுக்குப் பலியிட்டவர்களின் பிரேதக்குழிகள்மேல் தூவிப்
5 பூசாரிகளின் எலும்புகளை அவர்கள் பீடங்களின்மேல் சுட்டெரித்து இவ்விதமாக யூதாவையும் எருசலேமையும் சுத்திகரித்தான். அப்படியே அவன் மனாசே, எப்பிராயீம், சிமியோன் இவற்றின் ஊர்களிலும் நப்
6 தலிமட்டும் சுற்றிலும்பாழாய்க்கிடந்த இடங்களிலும் அப்படியே செய்தான். அவன் இஸ்ர
7 வேல் நாடெங்குமுள்ள பலிபீடங்களையும் மரச்சிலைகளையும் தகர்த்து விக்கிரகங்களை உடைத்துப் பொடிபடுத்திச் சகல சூரியவணக்கச் சிலைகளையும் வெட்டிப்போட்டபின்பு எருசலேமுக்குத் திரும்பினான்.

அவன் தேசத்தையும் ஆலயத்தையும் 8
சுத்திகரித்தபின்பு அவன் தன் ராஜ்யபாரத்தின் பதினெட்டாம் வருஷத்திலே, அத்சலியாவின் மகன் சாப்பானையும், நகரத் தலைவனாகிய மாசேயாவையும், யோவாகாசின் குமாரனாகிய யோவாகு என்னும் மந்திரியையும் தன் கடவுளாகிய யெகோவாவின் ஆலயத்தைப் பழுதுபார்க்கும்படி அனுப்பினான். அவர்கள் பிரதான ஆசாரியனாகிய இல்க்கி 9
யாவினிடம் வந்து வாசல் காவலாளரான

லேவியர், மனுஷேயிலும் எப்பிராயீமிலும் இஸ்ரவேலில் மீதியாயிருந்த யாவரிடத்திலும் யூதா பென்யமீன் எங்கும் எருசலேமின் குடிகளிடத்திலும் சேர்த்துக் கடவுளின் ஆலயத்திற்கென்கொண்டுவந்த
10 பணத்தை ஒப்புவித்து | வேலைபார்க்கிறவர்களாகிய யெகோவாவின் ஆலய விசாரணைக்காரர் கையில் அதைக் கொடுத்தார்கள்; இவர்கள் அதை ஆலயத்தைச் செப்பனிட்டுப் பழுதுபார்க்கிறதற்கு யெகோவாவின் ஆலயத்தில் வேலைசெய்த வேலையாட்களுக்
11 குச் செலவிட்டார்கள். அப்படியே யூதாவின் ராஜாக்கள் அழித்துப்போட்ட கட்டடங்களுக்காக வெட்டின கற்களையும் இணைப்பு மரங்களையும் பாவுபலகைகளையும் வாங்கும்படி தச்சருக்கும் சிற்பருக்கும்
12 அதைக் கொடுத்தார்கள். இந்த மனுஷர் வேலையை உண்மையாய்ச் செய்தார்கள்; வேலையை நடத்த மெராரியின் புத்திரரில் யாகாத், ஒபதியா என்னும் லேவியரும், கொகாத்துப் புத்திரரில் சகரியா, மெசுல்லாம் என்பவர்களும் அவர்கள்மேல் விசாரணைக்காரராயிருந்தார்கள்; தேவாத்தியங்களில்
13 கைதேர்ந்த லேவியர் எல்லாரும் அங்கிருந்தார்கள். சுமைகாரரை விசாரித்தவர்களும் பற்பல வேலைகளைச் செய்த யாவரையும் நடத்தினவர்களும் லேவியர்; லேவியரில் மற்றும் சிலர் கணக்கரும் விசாரணைக்காரரும் வாசற் காவலாளருமாயிருந்தார்கள்.
14 யெகோவாவின் ஆலயத்துக்குக் கொண்டுவரப்பட்ட பணத்தை அவர்கள் எடுத்தபோது, மோசேயைக்கொண்டு கட்டளையிடப்பட்ட யெகோவாவின் நியாயப்பிரமாண புஸ்தகத்தை ஆசாரியனுகிய இல்க்
15 கியா கண்டெடுத்தான். அப்பொழுது இல்க்கியா சம்பிரதியாகிய சாப்பானைப் பார்த்து: யெகோவாவின் ஆலயத்திலே நியாயப்பிரமாணப் புஸ்தகத்தைக் கண்டெடுத்தேன் என்று சொல்லி அந்தப் புஸ்தகத்
16 தைச் சாப்பானிடம் கொடுத்தான். சாப்பான் அந்தப் புஸ்தகத்தை ராஜாவினிடம் கொண்டுபோனான், நடந்த வேலையை ராஜாவுக்கு விவரித்து: உமது ஊழியருக்குக் கட்டளையிடப்பட்டவைகளையெல்லாம் அவர்கள்
17 செய்கிறார்கள். யெகோவாவின் ஆலயத்திலே அகப்பட்ட பணத்தை அவர்கள் எடுத்து அதை விசாரணைக்காரருக்கும் வேலையாட்களுக்கும் கொடுத்தார்கள் என்று
18 சொன்னான். பின்னும் சம்பிரதியாகிய சாப்பான் ராஜாவினிடம்: ஆசாரியனுகிய இல்க்கியா என் கையில் ஒரு புஸ்தகம் கொடுத்தான் என்று அறிவித்து அதிலிருந்து ராஜாவுக்கு முன்பாக வாசித்தான். நியாயப்பிர
19 மாணத்தின் வார்த்தைகளை ராஜா கேட்டபோது, அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு | இல்க்கியா, சாப்பானின்
20 குமாரனுகிய அகீக்கா, மீகாவின் குமாரனுகிய அப்தோன், சம்பிரதியாகிய சாப்பான், ராஜ ஊழியனுகிய அசாயா ஆகிய இவர்களுக்குக் கட்டளையிட்டுச்சொன்னது: நீங்
21 கள் போய்க் கண்டெடுக்கப்பட்ட இந்த புஸ்தகத்தினுடைய வார்த்தைகளைப்பற்றி எனக்காகவும் இஸ்ரவேலிலும் யூதாவிலும் மீதியானவர்களுக்காகவும் யெகோவாவினிடம் விசாரியுங்கள்; இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற எல்லாவற்றின்படியேயும் செய்வதற்கேதுவாய் யெகோவாவின் வார்த்தையை நமது பிதாக்கள் கைக்கொள்ளாதே போயினர், அது காரணமாய் நம்மேல் ஊற்றப்பட்ட யெகோவாவின் கோபம் பெரிதாயிற்று என்றான்.

22 அப்பொழுது இல்க்கியாவும் ராஜா அனுப்பின மற்றவர்களும் உல்தாள் என்னும் தீர்க்கதரிசியினிடம் போனார்கள்; இவள் அஸ்ராவின் குமாரனுகிய தோக்காத்தின் மகனை சல்லும் என்னும் வஸ்திரசாலை விசாரணைக்காரனின் மனைவி; இவள் எருசலேமின் புதுப்பேட்டையிலே குடியிருந்தாள்; தங்களுக்குக் கட்டளையிடப்பட்ட பிரகாரம்
23 அவர்கள் அவளோடு பேசினார்கள். அவள் அதைக்கேட்டு, இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா இப்படிச் சொல்லுகிறார்: உங்களை என்னிடத்தில் அனுப்பினவரிடம் நீங்கள் போய், யெகோவா இப்படிச் சொல்லுகிறார் என்று சொல்லி, இதோ, நான் இந்த
24 ஸ்தலத்தின்மேலும் இதின் குடிகளின் மேலும் தீங்கை வரச்செய்வேன்; யூதாவின் ராஜாவுக்கு முன்பாக வாசிக்கப்பட்ட புஸ்தகத்தில் எழுதியிருக்கிற சகல சாபங்களையும்
25 வரச்செய்வேன். அவர்கள் என்னைவிட்டு விலகி வேறே தேவர்களுக்குத் தூபங்காட்டித் தங்கள் கைகளின் கிரியைகள் எல்லாவற்றினும் எனக்குக் கோபமூட்டினபடியினல் என் கோபம் இந்த ஸ்தலத்தின்மேல் ஊற்றப்படுகிறது, அது அவியாது போவதில்லை என்கிறார் என்று சொல்லுங்கள். பின்
26 னும், யெகோவாவினிடம் விசாரிப்பதற்கு உங்களை அனுப்பின யூதாவின் ராஜனிடம் இதைச்சொல்லுங்கள், நீர்கேட்ட விஷயங்களைப்பற்றி இஸ்ரவேலின் கடவுளாகியயெகோவா இப்படிச் சொல்லுகிறார்: இந்த ஸ்தலத்
27 திற்கும் அதின் குடிகளுக்கும் விரோதமாகக் கடவுள் சொன்ன அவருடைய வார்த்தைகளை நீ கேட்டபோது நீ இதய மெலிந்து

ஞய்க் கடவுளின் சந்நிதியில் உன்னைத் தாழ்த்தி, எனக்கு முன்பாகவே உன்னைத் தாழ்த்தி, உன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு எனக்கு முன்பாக அழுதபடியினால் 28 நானும் செவிசாய்த்தேன். இது யெகோவாவின் திருவாக்கு; இதோ, நான் உன்னை உன் பிதாக்களண்டையிலே சேர்த்துக்கொள்வேன், நீ சமாதானமாய் உன் கல்லறையிலே சேர்வாய், நான் இந்த ஸ்தலத்தின்மேலும் இதின் குடிகளின்மேலும் வரப்பண்ணும் சகல தீங்கையும் உன் கண்கள் காண்பதில்லை என்று சொல்லுங்கள் என்றார்; அப்படியே அவர்கள் போய் இதை ராஜாவுக்கு அறிவித்தார்கள்.

29 அப்பொழுது ராஜா ஆட்களையனுப்பி யூதாவிலும் எருசலேமிலுமுள்ள மூப்பரை 30 யெல்லாம் கூடிவரச்செய்தான்; ராஜாவும் அவனோடு யூதாவிலுள்ள யாவரும் எருசலேமின் குடிகளும் ஆசாரியரும் லேவியரும் பெரியோர்முதல் சிறியோர் மட்டுமுள்ள ஜனமுழுதும் யெகோவாவின் ஆலயத்துக்குப் போனார்கள்; யெகோவாவின் ஆலயத்திலே கண்டெடுக்கப்பட்ட உடன்படிக்கைப் புஸ்தகத்தின் வார்த்தைகளையெல்லாம் ராஜா அவர்கள் காதுகள் கேட்க வாசித்தான். 31 ராஜா தன் ஸ்தானத்திலே நின்றுகொண்டு, யெகோவா காட்டிய வழியில் நடப்போம், அவருடைய கட்டளைகளையும் அவருடைய காட்சியங்களையும் அவருடைய நியமங்களையும் ஒவ்வொருவனும் தன்தன் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் கைக்கொள்ளுவோம், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற உடன்படிக்கையின் வார்த்தைகளை நிறைவேற்றுவோம் என்று யெகோவாவின் சந்நிதியிலே உடன்படிக்கைபண்ணினான். 32 எருசலேமிலும் பென்யமீனிலுமிருந்த யாவரையும் அதற்கு உடன்படப்பண்ணினான்; அப்படியே எருசலேமின் குடிகள் தங்கள் பிதாக்களின் தெய்வமாகிய கடவுளின் உடன்படிக்கையின்படியே செய்தார்கள். 33 யோசியா இஸ்ரவேல் புத்திரரின் நாடுகள் எங்கும் இருந்த அருவருப்புகளையெல்லாம் அகற்றி, இஸ்ரவேலிலே இருந்தவர்கள் யாவரும் தங்கள் கடவுளாகிய யெகோவாவைச் சேவிக்கும்படி செய்தான்; அவன் உயிரோடிருந்த நாளெல்லாம் அவர்கள் தங்கள் பிதாக்களின் கடவுளாகிய யெகோவாவைவிட்டு விலகவில்லை.

**35** அதற்குப் பின்பு யோசியா எருசலேமிலே யெகோவாவுக்கென்பஸ்காவை ஆசரித்தான், அவர்கள் முதலாம்மாதம் பதினாலாந்தேதியிலே பஸ்காவை அடித்தார்கள். அவன் ஆசாரியர்களை அவரவர் ஊழியத்திற் 2 கென்று நியமித்து யெகோவாவின் ஆலயத்தில் ஆராதனைசெய்வதற்கு அவர்களைத் தைரியப்படுத்தினான். இஸ்ரவேலுக்கெல்லாம் 3 போதிக்கிறவர்களும் யெகோவாவுக்கென்று பரிசுத்தமாக்கப்பட்டவர்களுமாகிய லேவியரோடு பேசி: பரிசுத்த பெட்டகத்தைத் தாவீதின் குமாரனாகிய சாலொமோன் என்னும் இஸ்ரவேலின் ராஜா கட்டின ஆலயத்திலே வையுங்கள்; அதைத் தோள்மேல் வைத்துச் சுமக்கும்வேலை இனி உங்களுக்கு இராது; இப்போது நீங்கள் உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கும் அவருடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கும் சேவைசெய்யுங்கள்; இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீது 4 எழுதினபடியும் அவன் குமாரனாகிய சாலொமோன் விதித்தபடியும் வம்சம் வம்சமாகவும் பிரிவு பிரிவாகவும் உங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ளுங்கள். நீங்கள் பரிசுத்த ஸ்தலத்திலே உங்கள் சகோதரராகிய மற்ற 5 இஸ்ரவேலரின் வம்சப் பிரிவுகளுக்குத் தக்கபடியே ஒரு ஜன வம்சத்துக்கு ஒரு லேவிய வம்ச வகுப்பாக நின்றுகொண்டு | பஸ்கா 6 வை அடித்து உங்களைப் பரிசுத்தம்பண்ணி, மோசேயைக் கொண்டு யெகோவா சொன்னபடியே உங்கள் சகோதரர் செய்யும்படி, அவர்களுக்காக அவைகளை ஆயத்தப்படுத்துங்கள் என்றான்.

வந்திருந்த ஜனங்கள் எல்லாருக்கும் 7 அவர்கள் இலக்கத்தின்படியே பஸ்கா பலிக்காக மூப்பதினாயிரம் ஆட்டுக்குட்டிகளையும் வெள்ளாட்டுக் குட்டிகளையும் மூவாயிரம் காளைகளையும் ராஜாவாகிய யோசியா தன் னுடைய ஆஸ்தியிலிருந்து கொடுத்தான். அவனுடைய பிரபுக்களும் மனப்பூர்வமான 8 காணிக்கையாக ஜனத்திற்கும் ஆசாரியருக்கும் லேவியருக்குமென்று கொடுத்தார்கள்; கடவுளின் ஆலய விசாரணைக் கர்த்தாக்களாகிய இல்க்கியாவும் சகரியாவும் யெகியேலும் ஆசாரியருக்குப் பஸ்கா பலிக்கென்று இரண்டாயிரத்து அறுநூறு ஆட்டுக்குட்டிகளையும் மூன்நூறு காளைகளையும் கொடுத்தார்கள். லேவியரின் தலைவரான கொனனியாவும் 9 செமாயா, நெதனெயேல் என்னும் அவன் சகோதரரும் கஷபியா, யெயியேல், யோசபாத் என்பவர்களும் லேவியருக்குப் பஸ்கா பலிக்கென்று ஐயாயிரம் ஆட்டுக்குட்டிகளையும் ஐந்நூறு காளைகளையும் கொடுத்தார்கள்.

இப்படி ஆராதனைக்கு வேண்டியவைகள் 10 திட்டம்பண்ணப்பட்டபோது ராஜாவின் கட்டளைப்படியே ஆசாரியர் தத்தம் ஸ்தா

னங்களிலும் லேவியர் வகுப்பு வகுப்பாகவும்
11 நின்று | பஸ்காவை அடித்தார்கள்; ஆசாரி
யர் அவர்கள் கையிலிருந்து ரத்தத்தை
வாங்கித் தெளித்தார்கள்; லேவியர் தோலு
12 ரித்தார்கள். மோசேயின் புஸ்தகத்தில்
எழுதியிருக்கிறபடி ஜனங்கள் யெகோவாவுக்
குப் பலிசெலுத்தும்படி தகனபலி பாகங்கள்
பிரிக்கப்பட்டு, பிதாக்களுடைய வம்சப்
பிரிவுகளின்படியே ஜனங்களுக்குக் கொடுக்
கப்பட்டது; காளைகள் விஷயத்திலும் அப்
13 படியே செய்யப்பட்டது. அவர்கள் பஸ்கா
ஆட்டுக்குட்டியை விதிக்கப்பட்டபடியே
நெருப்பிலே பொரித்துப் பரிசுத்தமாக்கப்
பட்ட மற்றவைகளைக் கொப்பரைகளிலும்
பாளைகளிலும் சட்டிகளிலும் சமைத்து
ஜனங்களுக்கெல்லாம் ஒடிஒடிக் கொடுத்தார்
14 கள். பின்பு தங்களுக்கென்றும் ஆசாரி
யருக்கென்றும் ஆயத்தப்படுத்தினார்கள்;
ஆரோனின் புத்திரராகிய ஆசாரியர்கள் பலி
களையும் நிணத்தையும் தகனிப்பதில் இரவு
மட்டும் வேலையாயிருந்தபடியினால், லேவி
யர் தங்களுக்கென்றும் ஆரோனின் புத்திர
ராகிய ஆசாரியருக்கென்றும் ஆயத்தப்படுத்
15 தினார்கள். தாவீது, ஆசாப், ஏமான், ராஜா
வின் ஞானதிருஷ்டிகளுகிய எதுதூன் என்
பவர்கள் கட்டளையிட்டிருந்தபடியே ஆசா
பின் புத்திரராகிய பாடகர் தங்கள் தங்கள்
ஸ்தானங்களிலும், வாசல் காவலாளர் வாசல்
வாசலாகவும் நின்றார்கள்; அவர்கள் தங்கள்
ஊழியத்தைவிட்டு வர அவசியமில்லை;
லேவியரான அவர்கள் சகோதரரே அவர்
களுக்கென்று ஆயத்தப்படுத்தினார்கள்.
16 இப்படியாக யோசியாராஜாவின் கட்ட
ளைப்படி பஸ்காவை ஆசரிப்பதற்கும்
யெகோவாவின் பலிபீடத்தின்மேல் தகனப
லிகளை இடுவதற்கும் அடுத்த யெகோவாவின்
ஆராதனையெல்லாம் அன்றையதினம் ஒழுங்
17 காய்ச் செய்யப்பட்டது. அங்கே வந்திருந்த
இஸ்ரவேல் புத்திரர் அப்பொழுது பஸ்கா
வையும் புளிப்பில்லா அப்பப்பண்டிகை
யையும் ஏழுநாளளவும் ஆசரித்தார்கள்.
18 தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் நாள்
தொடங்கி இஸ்ரவேலிலே அதுபோன்ற
பஸ்கா ஆசரிக்கப்படவில்லை; யோசியாவும்,
ஆசாரியரும் லேவியரும், யூதாவனைத்தும்
இஸ்ரவேலிலிருந்து வந்திருந்தவர்களும் எரு
சலேமின் குடிகளும் ஆசரித்த இந்த பஸ்
காவைப்போல் இஸ்ரவேல் ராஜாக்களில்
19 ஒருவரும் ஆசரித்ததில்லை. யோசியாவு
டைய அரசாட்சியின் பதினெட்டாம் வரு
ஷத்திலே இந்தப் பஸ்காவை ஆசரித்தார்
கள்.

இவற்றின்பின் யோசியா தெய்வாலயத்திற் 20
குரிய காரியங்களை யெல்லாம் ஒழுங்குசெய்
தபின், எகிப்தின் ராஜாவாகிய நேகோ ஐபி
ராத்து நதியோரமான கர்கெமீஷ் பட்ட
ணத்தின்மேல் யுத்தம்பண்ண வரவே, யோ
சியா அவனை எதிர்க்கப் புறப்பட்டான்.
நேகோ இவனிடம் ஸ்தானுபதிகளை அனுப் 21
பி: யூதாவின் ராஜாவே, எனக்கும் உமக்கும்
என்ன? நான் வந்தது உமக்கு விரோதமாய்
அல்ல, என்னேடே யுத்தம்செய்துவருகிற
ராஜ வம்சத்துக்கு விரோதமாய்ப்போகி
றேன்; நான் சீக்கிரம் செல்லவேண்டுமென்று
தெய்வமே சொல்லியிருக்கிறார்; என்னோடி
ருக்கிற தெய்வத்திற்கு நீர் எதிர்நிற்கவேண்
டாம், உம்மை அழித்துவிடுவார் என்று
சொல்லச் சொன்னான். யோசியாவோ திரும் 22
பிவிடாமலும் நேகோ சொன்ன தெய்வ
வார்த்தைகளுக்குச் செவிகொடாமலும்
வேஷம்மாறி அவனோடே யுத்தம்பண்ணப்
புறப்பட்டான்; மெகிதோவின் பள்ளத்தாக்
கிலே யுத்தம்பண்ணுவதற்கு வந்தான். வில் 23
வீரர் யோசியா ராஜாவின்மேல் அம்பெய்தார்
கள்; அப்பொழுது ராஜா தன் ஆட்களைப்
பார்த்து, என்னை அப்புறம் கொண்டுபோங்
கள், எனக்குக் கொடிய காயம்பட்டது
என்றான். அவனுடைய ஆட்கள் ரதத்தின் 24
மேலிருந்த அவனை இறக்கி அவன் கொண்டு
வந்திருந்த இரண்டாவது ரதத்தின்மேல்
ஏற்றிக்கொண்டு எருசலேமுக்குப் போனார்
கள்; அவன் மரணமடைந்தான்; அவன்
பிதாக்களின் கல்லறைகளிலே அவனை
அடக்கம்பண்ணினார்கள்; யூதாவிலும் எரு
சலேமிலுமுள்ள யாவரும் யோசியாவினி
மித்தம் துக்கங்கொண்டாடினார்கள். எரே 25
மியா யோசியாவின்மேல் சரம கவிபாடி
னான்; சகல பாடகரும் பாடகிகளும் இந்
நாள்வரைக்கும் தங்கள் பிரலாபப்பாடல்
களிலே யோசியாவின்மேல் இந்தச் சரம
கவியைப் பாடுகிறார்கள்; இது இஸ்ரவே
லிலே வழக்கமாகிவிட்டது; இதோ, அது
பிரலாபப்பாடல் புஸ்தகத்திலே எழுதப்பட்
டிருக்கிறது.

யோசியாவின் மற்ற விவரங்களும் யெ 26
கோவாவின் நியாயப் பிரமாணத்தில் எழுதி
யிருப்பதற் கிசைவான அவனுடைய பக்தி
விஷயங்களும், | அவனுடைய ஆதியோடந் 27
தமான சங்கதிகளும் இஸ்ரவேல் யூதா என்
பவர்களின் ராஜாக்களைப்பற்றிய புஸ்தகத்தில்
எழுதியிருக்கிறது.

அப்பொழுது நாட்டுஜனங்கள் யோசியா **36**
வின் குமாரனாகிய யோவாகாசை அழைத்து,
அவனை அவன் தகப்பன் ஸ்தானத்திலே

2 எருசலேமில் ராஜாவாக்கினார்கள். யோவா
காஸ் ராஜாவானபோது அவனுக்கு இருபத்
துமூன்று வயது, அவன் மூன்றுமாதம் எரு
3 சலேமிலே அரசாண்டான். அவன் எருச
லேமில் அரசாளாதபடி எகிப்தின் ராஜா
அவனைத் தள்ளிவிட்டுத் தேசத்தின்மேல்
நூறுதாலந்து வெள்ளியையும் ஒருதாலந்து
பொன்னையும் அபராதமாகச் சுமத்தினான்;
4 அவன் தமையனாகிய எலியாக்கிமை யூதா
வின்மேலும் எருசலேமின்மேலும் ராஜா
வாக்கி அவன் பேரை யோயாக்கீம் என மாற்
றினான்; அவன் தம்பியாகிய யோவாகாசை
நேகோ எகிப்திற்குக் கொண்டுபோனான்.
5 யோயாக்கீம் ராஜாவானபோது அவ
னுக்கு இருபத்தைந்து வயது, அவன் பதி
னொருவருஷம் எருசலேமிலே அரசாண்
டான்; அவன் தன் கடவுளாகிய யெகோவா
வின் பார்வையில் தீமையானதைச் செய்து
6 வந்தான். அவனுக்கு விரோதமாகப் பாபி
லோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார்
வந்து அவனைப் பாபிலோனுக்குக் கொண்டு
போக இரண்டு செப்புச் சங்கிலிகளால்
7 அவனைக் கட்டினான். யெகோவாவின்
ஆலயப்பணிமுட்டுகளிலும் சிலவற்றைநேபு
காத்நேச்சார் பாபிலோனுக்குக் கொண்டு
போய் அவைகளைப் பாபிலோனிலிருந்த
8 தன் கோவிலிலே வைத்தான். யோயாக்கீ
மின் மற்ற விவரங்களும் அவன் செய்த
அருவருப்புகளும் அவனிடத்திலே காணப்
பட்ட தீயகுணங்களும் இஸ்ரவேல் யூதா
என்பவர்களின் ராஜாக்களைப்பற்றிய புஸ்த
கத்தில் எழுதியிருக்கிறது; அவன் ஸ்தானத்
தில் அவன் குமாரனாகிய யோயாக்கீன் ராஜா
வானான்.
9 யோயாக்கீன் ராஜாவானபோது அவ
னுக்கு எட்டுவயது, அவன் மூன்றுமாதமும்
பத்துநாளும் எருசலேமிலே அரசாண்டு
யெகோவாவின் பார்வையில் தீமையான
10 தைச் செய்தான். மறுவருஷ ஆரம்பத்திலே
நேபுகாத்நேச்சார் ராஜா அவனையும் யெகோ
வாவின் ஆலயத்தின் அருமையான பணி
முட்டுகளையும் பாபிலோனுக்குக் கொண்டு
போனான்; அவன் சகோதரனாகிய சிதெக்கி
யாவை யூதாவின்மேலும் எருசலேமின்
மேலும் ராஜாவாக்கினான்.
11 சிதெக்கியா ராஜாவானபோது, அவனுக்கு
இருபத்தொரு வயது, அவன் பதினொருவரு
ஷம் எருசலேமிலே அரசாண்டான்.
12 அவன் தன் கடவுளாகிய யெகோவாவின்
பார்வையில் தீமையானதைச் செய்துவந்
தான்; அவன் யெகோவாவின் வார்த்தை
யைச் சொன்ன எரேமியா தீர்க்கதரிசிக்கு
முன்பாகத் தன்னை தாழ்த்தவில்லை. கடவுள் 13
மேல் தன்னை ஆணையிடுவித்துக்கொண்ட
நேபுகாத்நேச்சார் என்னும் ராஜாவுக்கு
விரோதமாய்க் கலகம்பண்ணினான்; இஸ்ர
வேலின் கடவுளாகிய யெகோவாவினிடம்
திரும்பாதபடி வணங்காக் கழுத்துள்ளவனா
கித் தன் இருதயத்தைக் கடினப்படுத்தி
னான். ஆசாரியரில் பிரதானமானவர்கள் 14
யாவரும் ஜனங்களும் கூடிப் புறஜாதிகளு
டைய சகல அருவருப்புகளின்படியும் மிக
வும் துரோகம்பண்ணி, யெகோவா எருசலே
மிலே பரிசுத்தம்பண்ணின அவருடைய
ஆலயத்தைத் தீட்டுப்படுத்தினார்கள். அவர் 15
களுடைய பிதாக்களின் கடவுளாகிய யெ
கோவா தமது ஜனத்தின்மீதும் தமது வாச
ஸ்தலத்தின்மீதும் இரக்கமுள்ளவராய் அவர்
களிடத்துக்குத் தமது ஸ்தானபதிகளைத்
திரும்பத்திரும்ப அனுப்பினார். அவர்களோ 16
கடவுளின் ஸ்தானபதிகளைப் பரியாசம்
பண்ணி அவருடைய திருவார்த்தைகளை அ
சட்டைசெய்து அவருடைய தீர்க்கதரிசிகளை
நிந்தித்தார்கள்; இப்படிச்செய்யச் செய்ய
யெகோவாவின் கோபம் அவருடைய ஜனத்
தின்மேல் மூண்டது; சகாயமில்லாமல்
போயிற்று. ஆகவே அவர் கல்தேயரின் 17
ராஜாவை அவர்கள்மேல் வரப்பண்ணினார்;
அவன் அவர்கள் வாலிபரை அவர்களுடைய
பரிசுத்தமான ஆலயத்திலே பட்டயத்தினால்
கொன்றான்; வாலிபரென்றும் கன்னிகை
களென்றும் முதியோரென்றும் விருத்தாப்
பியரென்றும் இரக்கங்காட்டவில்லை, எல்
லாரையும் கடவுள் அவன் கையில் ஒப்புக்
கொடுத்தார். அவன் கடவுளின் ஆலயத்தி 18
லிருந்த பெரிதும் சிறிதுமான பணிமுட்டு
கள் அனைத்தையும், யெகோவாவின் ஆலயப்
பொக்கிஷங்களும் ராஜாவுக்கும் அவன் அதி
பதிகளுக்கும் இருந்த பொக்கிஷங்களுமாகிய
அனைத்தையும் பாபிலோனுக்குக் கொண்டு
போனான். அவர்கள் கடவுளின் ஆலயத் 19
தைத் தீக்கொளுத்தி எருசலேமின் அலங்
கத்தை இடித்து அதின் மாளிகைகளையெல்
லாம் அக்கினியால் சுட்டெரித்து அருமை
யான பணிமுட்டுகளையெல்லாம் அழித்தார்
கள். பட்டயத்திற்குத் தப்பின மீதியான 20
வர்களை அவன் பாபிலோனுக்குச் சிறை
பிடித்துப்போனான்; பாரசீக ராஜ்யபாரம்
ஸ்தாபிக்கப்படுமட்டும் அங்கே அவர்கள்
அவனுக்கும் அவன் குமாரருக்கும் அடிமை
களாயிருந்தார்கள். யெகோவா எரேமியா 21
வின் மூலமாய்ச் சொன்ன வார்த்தை நிறை
வேறும்படிக்கு தேசம் தான் ஓய்ந்திருக்க
வேண்டிய வருஷங்களுக்கு ஈடாக ஓய்வை

அதுபலித்துத் தீருமட்டும், அது பாழாய்க் கிடந்த நாளெல்லாம் எழுபது வருஷங்களாக, ஒய்ந்திருந்தது.

22 எரேமியாவின் மூலமாய் யெகோவா சொன்ன வார்த்தை நிறைவேறும்படி பாரசிக ராஜாவாகிய கோரேசின் முதலாம் வருஷத்திலே யெகோவா பாரசிக ராஜாவாகிய கோரேசின் மனதை ஏவவே அவன் கடிதம் எழுதி ஆட்களையும் அனுப்பி: பாரசிக ராஜாவாகிய கோரேஸ் சொல்வதைக்கேளுங்கள், பரலோகத்தின் கடவுளாகிய யெகோவா பூமியின் ராஜ்யங்களையெல்லாம் என்வசம் கொடுத்து யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். அவருடைய 23 ஜனங்கள் அனைவரிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானே அவன் போகட்டும், அவனுடைய கடவுளாகிய யெகோவா அவனோடிருப்பாராக என்று தன் ராஜ்யம் எங்கும் விளம்பரம் பண்ணினான்.

---

# EZRA

# எஸ்ரா

1 எரேமியாவின் மூலமாய் யெகோவா சொன்னவார்த்தை நிறைவேறும்படி பாரசிக ராஜாவாகிய கோரேசின் முதலாம் வருஷத்திலே யெகோவா பாரசிக ராஜாவாகிய கோரேசின் மனதை ஏவவே அவன் கடிதம் எழுதி ஆட்களையும் அனுப்பி: 2 பாரசிக ராஜாவாகிய கோரேஸ் சொல்வதைக் கேளுங்கள், பரலோகத்தின் கடவுளாகிய யெகோவா பூமியின் ராஜ்யங்களையெல்லாம் என் வசம் கொடுத்து யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக்கட்டும்படி எனக்குக் கட்டளையிட் 3 டிருக்கிறார். அவருடைய ஜனங்கள் அனைவரிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானே அவன் யூதாவிலுள்ள எருசலேமுக்குப் போகட்டும், அவனுடைய கடவுள் அவனோடிருப்பாராக; அவன் இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவின் ஆல 4 யத்தைக் கட்டக்கடவன்; அவரே எருசலேமில் இருக்கிற தெய்வம். அந்த ஜனங்களில் மீதியாயிருக்கிறவர்கள் எவ்விடங்களில் தங்கியிருக்கிறார்களோ அவ்விடங்களிலுள்ள ஜனங்கள் எருசலேமிலுள்ள கடவுளின் ஆலயத்துக்கென்று மனப்பூர்வ காணிக்கையைக் கொடுத்தனுப்புவது மாத்திரமேயன்றிப் பொன் வெள்ளி முதலிய பொருட்களையும் மிருகங்களையும் அவர்களுக்கு உதவியாகக் கொடுக்க வேண்டுமென்று தன் ராஜ்யமெங்கும் விளம்பரம் பண்ணினான்.

5 அப்பொழுது எருசலேமிலுள்ள யெகோவாவின் ஆலயத்தைக் கட்டுவதற்குப் போகும்படி யூதா பென்யமீன் வம்சங்களின் தலைவரும் ஆசாரியரும் லேவியருமேயன்றி எவர்கள் மனதைக் கடவுள் ஏவினாரோ அவர்கள் எல்லாருங்கூடப் புறப்பட்டார்கள். அவர்களைச் சுற்றிக் குடியிருந்த 6 யாவரும் மனப்பூர்வ காணிக்கையாகக் கொடுத்த யாவற்றோடுங்கூட வெள்ளிப் பணிமுட்டுகளையும் பொன்னையும் மற்றப் பொருட்களையும் மிருகங்களையும் உச்சித மானவைகளையும் அவர்களுக்கு உதவியாகக் கொடுத்தார்கள். 7 நேபுகாத்நேச்சார் எருசலேமிலிருந்து கொண்டுபோய்த் தன் தெய்வத்தின் ஆலயத்திலே வைத்திருந்த யெகோவாவின் ஆலயப்பணிமுட்டுகளையும் கோரேஸ் ராஜா எடுத்துக் கொடுத்தான். அவைகளைப் பாரசிக ராஜாவாகிய கோரேஸ் 8 பொக்கிஷக்காரனாகிய மித்திரெதாத்தின் கையிலே கொடுத்து யூதாவின் அதிபதியாகிய சேஸ்பாத்சாரிடம் எண்ணி ஒப்புவித்தான். அவைகளின் தொகையாவது: 9 பொன் தட்டுகள் முப்பது, வெள்ளித் தட்டுகள் ஆயிரம், கத்திகள் இருபத்தொன்பது; பொற்கிண்ணங்கள் முப்பது, 10 மட்ட வெள்ளிக்கிண்ணங்கள் நானூற்றுப் பத்து, வேறு பணிமுட்டுகள் ஆயிரம். பொன் வெள்ளிப்பணிமுட்டுகளெல்லாம் 11 ஐயாயிரத்து நானூறு; சிறையிருப்பினின்று திரும்பினவர்கள் பாபிலோனிலிருந்து எருசலேமுக்குப் போகையில் சேஸ்பாத்சார் இவற்றை எடுத்துக்கொண்டுபோனான்.

2 பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் பாபிலோனுக்குக் கொண்டுபோனவர்களுக்குள்ளே சிறையிருப்பிலிருந்து எருச

லேமுக்கும் யூதாவிலுள்ள தங்கள் தங்கள்
2 ஊர்களுக்கும், | செருபாபேல், யேஷுவா,
நெகேமியா, செராயா, ரெலாயா, மொர்தெ
காய், பில்சான், மிஸ்பார், பிக்வாய், ரெகூம்,
பானா என்பவர்களோடேகூடத் திரும்பி
வந்த இக்காட்டின் புத்திரர் இவர்களே:
3 இந்த இஸ்ரவேலரின் தொகையாவது:
பரோஷின் புத்திரர் இரண்டாயிரத்துநூற்று
4 எழுபத்திரண்டுபேர். செபத்தியாவின் புத்
5 திரர் முந்நூற்று எழுபத்திரண்டுபேர். ஆர
கின் புத்திரர் எழுநூற்று எழுபத்தைந்து
6 பேர். யேஷுவா, யோவாப் என்பவர்க
ளுடைய சந்ததியைச் சேர்ந்த பாகாத்மோ
வாபின் புத்திரர் இரண்டாயிரத்து எண்ணூற்
7 றுப் பன்னிரண்டுபேர். ஏலாமின் புத்திரர்
ஆயிரத்து இருநூற்று ஐம்பத்து நாலுபேர்.
8 சத்தூவின் புத்திரர் தொள்ளாயிரத்து நாற்
9 பத்தைந்துபேர். சக்காயின் புத்திரர் எழு
10 நூற்று அறுபதுபேர். பானியின் புத்திரர்
11 அறுநூற்று நாற்பத்திரண்டுபேர். பெபா
யின் புத்திரர் அறுநூற்று இருபத்துமூன்று
12 பேர். அஸ்காதின் புத்திரர் ஆயிரத்து
13 இருநூற்று இருபத்திரண்டுபேர். அதொனீ
காமின் புத்திரர் அறுநூற்று அறுபத்
14 தாறுபேர். பிக்வாயின் புத்திரர்
இரண்டாயிரத்து ஐம்பத்தாறுபேர்.
15 ஆதீனின் புத்திரர் நானூற்று ஐம்பத்து
16 நாலுபேர். எசேக்கியாவின் சந்ததியைச்
சேர்ந்த ஆதேரின் புத்திரர் தொண்
17 ணூற்றெட்டுப்பேர். பேத்தாயின் புத்திரர்
18 மூந்நூற்று இருபத்துமூன்றுபேர். யோரா
கின் புத்திரர் நூற்றுப்பன்னிரண்டுபேர்.
19 காசூமின் புத்திரர் இருநூற்று இருபத்து
20 மூன்றுபேர். கிபாரின் புத்திரர் தொண்
21 ணூற்றைந்துபேர். பெத்லெகேமின் புத்தி
22 ரர் நூற்றிருபத்துமூன்றுபேர். நெத்தோ
23 பா ஊரார் ஐம்பத்தாறுபேர். ஆனதோத்து
24 ஊரார் நூற்றிருபத்தெட்டுப்பேர். அஸ்மா
25 வேத்தின் புத்திரர் நாற்பத்திரண்டுபேர். கிரி
யாத்யாரீம் ஊராரும் கெபீரா ஊராரும்
பெயெரோத் ஊராரும் எழுநூற்று நாற்பத்து
26 மூன்றுபேர். ராமா ஊராரும் கேபா ஊரா
27 ரும் அறுநூற்று இருபத்தொருபேர். மிக்
மாசு ஊரார் நூற்றிருபத்திரண்டுபேர்.
28 பேதேல் ஊராரும் ஆயி ஊராரும்
இருநூற்று இருபத்து மூன்று பேர்.
29 நேபோவின் புத்திரர் ஐம்பத்திரண்டு
30 பேர். மக்பீஷின் புத்திரர் நூற்றைம்
31 பத்தாறுபேர். மற்றுமொரு ஏலாமின்
புத்திரர் ஆயிரத்து இருநூற்று ஐம்பத்து
32 நாலுபேர். காரிமின் புத்திரர் முந்நூற்று
33 இருபதுபேர். லோத், காதித், ஓனோ ஊர்

களின் புத்திரர் எழுநூற்று இருபத்தைந்து
பேர். எரிகோவின் புத்திரர் மூந்நூற்று 34
நாற்பத்தைந்துபேர். செனுவாவின் புத்திரர் 35
மூவாயிரத்து அறுநூற்று முப்பதுபேர்.

ஆசாரியர்: யேஷுவாவின் குடும்பத்தா 36
ஞிய யெதாயாவின் புத்திரர் தொள்ளா
யிரத்து எழுபத்துமூன்றுபேர். இம்மேரின் 37
புத்திரர் ஆயிரத்து ஐம்பத்திரண்டுபேர்.
பஷ்கூரின் புத்திரர் ஆயிரத்து இருநூற்று 38
நாற்பத்தேழுபேர். காரிமின் புத்திரர் ஆயி 39
ரத்துப்பதினேழுபேர்.

லேவியர்: ஓதாவியாவின் சந்ததியைச் 40
சேர்ந்த யேஷுவா, கத்மியேல் என்பவர்
களின் புத்திரர் எழுபத்துநாலுபேர். பாடகர்: 41
ஆசாபின் புத்திரர் நூற்றிருபத்தெட்டுப்பேர்.
வாசல் காவலாளரின் புத்திரர்: சல்லூமின் 42
புத்திரரும் ஆதேரின் புத்திரரும் தல்மோனின்
புத்திரரும் அக்கூபின் புத்திரரும் கதிதாவின்
புத்திரரும் ஷோபாயின் புத்திரருமானவர்க
ளெல்லாரும் நூற்று முப்பத்தொன்பதுபேர்.

கோவில் வேலையாட்கள்: சீகாவின் புத்தி 43
ரர், கசூபாவின் புத்திரர், தபாகோத்தின் புத்தி
ரர், | கேரோசின் புத்திரர், சீயாகாவின் புத் 44
திரர், பாதோனின் புத்திரர், | லெபானாவின் 45
புத்திரர், சகாபாவின் புத்திரர், அக்கூபின் புத்
திரர், | காகாபின் புத்திரர், சம்லாயின் புத்தி 46
ரர், கானூனின் புத்திரர், | கித்தேலின் புத்திரர், 47
காகாரின் புத்திரர், ராயாவின் புத்திரர், |
ரேத்சீனின் புத்திரர், நெகோதாவின் புத்தி 48
திரர், காசாமின் புத்திரர், | ஊசாவின் புத்தி 49
ரர், பாசெயாகின் புத்திரர், பேசாயின் புத்தி
ரர், | அஸ்னாவின் புத்திரர், மெயூனியரின் 50
புத்திரர், நெபுசெரின் புத்திரர், | பக்பூக் 51
கின் புத்திரர், கக்கூபாவின் புத்திரர், கர்கூ
ரின் புத்திரர், | பஸ்லூதின் புத்திரர், மெகி 52
தாவின் புத்திரர், கர்ஷாவின் புத்திரர், |
பர்கோசின் புத்திரர், சிசராவின் புத்திரர், 53
தேமாவின் புத்திரர், | நெத்சீயாகின் புத்திரர், 54
கதீபாவின் புத்திரருமே.

சாலொமோனுடைய வேலையாட்களின் 55
புத்திரர்: சோதாயின் புத்திரர், சொபேரேதின்
புத்திரர், பெருதாவின் புத்திரர், | யாலாவின் 56
புத்திரர், தர்கோனின் புத்திரர், இத்தேலின்
புத்திரர், | செபத்தியாவின் புத்திரர், கத்தீ 57
லின் புத்திரர், பொகெரேத் அதசெபாயீமின்
புத்திரர், ஆமியின் புத்திரருமே.

கோவில் வேலையாட்களும் சாலொமோ 58
னுடைய வேலையாட்களின் புத்திரருமான
எல்லாரும் முந்நூற்றுத் தொண்ணூற்றிரண்
டுபேர்.

தெல்மெலாகு, தெல்கர்ஷா, கெருபு, அத் 59
தான், இம்மேர் என்னும் இடங்களிலிருந்து

வந்தவர்கள்,—தாங்கள் இஸ்ரவேல் சந்ததியாரே எனத் தங்கள் கோத்திரத்தைச் சொல்லமுடியாமல் இருந்தவர்கள்—இவர்
60 களே: தெலாயாவின் புத்திரர், தொபீயாவின் புத்திரர், நெக்கோதாவின் புத்திரர், ஆக
61 அறுநூற்று ஐம்பத்திரண்டு பேர். ஆசாரியரின் புத்திரரில் கொபாயாவின் புத்திரர், அக்கோசின் புத்திரர், கிலெயாத்தியனான பர்சிலாயின் குமாரத்திகளில் ஒருத்தியை விவாகம்பண்ணி, அவர்கள் வம்சநாமம் தரிக்கப்
62 பெற்ற பர்சிலாயின் புத்திரரே. இவர்கள் தங்கள் வம்ச அட்டவணையைத் தேடியும் அதைக் கண்டுபிடியாதிருந்தபடியால் ஆசாரிய ஊழியத்திற்குத் தகாதவர்கள் என்று
63 எண்ணப்பட்டார்கள். ஊரீம் தும்மீம் என்பவைகளோடுடைய ஆசாரியன் ஒருவன் எழும்புமட்டும் இவர்கள் மகா பரிசுத்த மானதிலே புசிக்கக்கூடாது என்று தேசாதிபதி அவர்களுக்குச் சொன்னான்.

64 சபையார் எல்லாரும் மொத்தமாக நாற்பத்திரண்டாயிரத்து முந்நூற்று அறுபதுபேர்.
65 அவர்களைத் தவிர அவர்களுடைய வேலைக்காரரும் வேலைக்காரிகளும் ஏழாயிரத்து முந்நூற்று முப்பத்தேழுபேரும் பாடகரும் பாடகிகளும் இருநூறுபேரும் இருந்தார்
66 கள். அவர்களுடைய குதிரைகள் எழுநூற்று முப்பத்தாறு, அவர்களுடைய கோவேறுகழுதைகள் இருநூற்று நாற்பத்தைந்து, |
67 அவர்களுடைய ஒட்டகங்கள் நானூற்று முப்பத்தைந்து, கழுதைகள் ஆறுயிரத்து எழுநூற்று இருபது.

68 வம்சத்தலைவரில் சிலர் எருசலேமிலுள்ள யெகோவாவின் ஆலயத்துக்கு வந்தபோது கடவுளின் ஆலயத்தை அதின் பூர்வஸ்தானத்திலே எடுப்பிக்கும்படிக்கு அதற்காக
69 மனப்பூர்வ காணிக்கைகளைக் கொடுத்தார்கள். அவர்கள் தங்கள் சக்திக்குத்தக்கதாகத் திருப்பணிப் பொக்கிஷத்திற்கு அறுபத்தோராயிரம் அதர்கோனையும் ஐயாயிரம் ராத்தல் வெள்ளியையும் நூறு ஆசாரிய
70 அங்கிகளையும் கொடுத்தார்கள். ஆசாரியரும் லேவியரும் சாதாரண ஜனங்களில் சிலரும் பாடகரும் வாசல் காவலாளரும் கோவில் வேலையாட்களும் தங்கள் தங்கள் ஊர்களிலும் இஸ்ரவேலர் எல்லாரும் தங்கள் தங்கள் ஊர்களிலும் குடியேறினார்கள்.

**3** ஏழாம் மாதம் வந்தபோது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தங்கள் ஊர்களிலே குடியிருக்கையில், ஜனங்கள் எருசலேமிலே ஏக
2 மாய்க் கூடினார்கள். அப்பொழுது யோத்சதாக்கின் குமாரனான யேஷுவாவும் அவன் சகோதரராகிய ஆசாரியரும் செயல்தியேலின் குமாரனான செருபாபேலும் அவன் சகோதரரும் எழும்பி, கடவுளின் மனிதனான மோசேயின் நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி தகனபலிகளைச் செலுத்தும்படிக்கு இஸ்ரவேல் தெய்வத்தின் பலிபீடத்தைக் கட்டினார்கள். தேசத்திலிருந்த 3
ஜனங்களுக்கு அவர்கள் பயந்திருந்தும் பலிபீடத்தை அதின் இடத்திலே கட்டி அதின்மேல் அவர்கள் யெகோவாவுக்குத் தகனபலிகளை, அந்திசந்தி தகனபலிகளை, செலுத்தினார்கள். எழுதியிருந்தபடியே அவர் 4
கள் கூடார உற்சவத்தை ஆசரித்து, நியமத்தின்படியே அன்றுடைய கணக்குக்கிசைய ஒவ்வொரு நாளிலும் அந்தந்தநாளுக்குரிய பலியைச் செலுத்தினார்கள். அதன்பின்பு 5
நித்தமும் மாதப்பிறப்புகளிலும் யெகோவாவின் சகல பரிசுத்த உற்சவங்களிலும் செலுத்தவேண்டிய தகனபலிகளையும் யெகோவாவுக்கு அவரவர் செலுத்தும் மனப்பூர்வ பலிகளையும் செலுத்தினார்கள். ஏழாம் 6
மாதம் முதல் தேதியில் யெகோவாவுக்குத் தகனபலிகளைச் செலுத்தத் தொடங்கினார்கள்; யெகோவாவின் ஆலயத்திற்கோ அஸ்திபாரம் இன்னும் போடப்படவில்லை. அப்பொ 7
ழுது பாரசீக ராஜாவாகிய கோரேஸ் தங்கள் விஷயமாய்ப் பிறப்பித்திருந்த கட்டளைக்கிசைய அவர்கள் கல்தச்சருக்கும் தச்சருக்கும் பணத்தையும் லீபனோனிலிருந்து கேதுரு மரங்களைச் சமுத்திர வழியாய் யோப்பாமட்டும் கொண்டுவரச் சீதோனியருக்கும் தீரியருக்கும் போஜனபானத்தையும் எண்ணெயையும் கொடுத்தார்கள்.

அவர்கள் எருசலேமிலுள்ள கடவுளின் 8
ஆலயத்திற்கு வந்த இரண்டாம்வருஷம் இரண்டாம்மாதத்திலே, செயல்தியேலின் குமாரனான செருபாபேலும் யோத்சதாக்கின் குமாரனான யேஷுவாவும் மற்றுமுள்ள அவர்கள் சகோதரராகிய ஆசாரியரும் லேவியரும் சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கு வந்த அனைவரும் யெகோவாவின் ஆலயத்திற்குரிய வேலையை ஆரம்பித்து, இருபது வயதுள்ளவர்களும் மேற்பட்டவர்களுமாகிய லேவியரை வேலையை நடத்தும்படி வைத்தார்கள். அப்படியே கடவுளின் 9
ஆலயத்திற்குரிய வேலையைச் செய்கிறவர்களை நடத்தும்படி யேஷுவாவும் அவன் குமாரரும் சகோதரரும் கத்மியேலும் அவன் குமாரரும் யூதாவின் குமாரரும் ஏனதாத்தின் குமாரரும் அவர்கள் சகோதரராகிய லேவியரும் ஒருமனப்பட்டு நின்றார்கள்.

கட்டுகிறவர்கள் யெகோவாவின் ஆலயத் 10
திற்கு அஸ்திபாரம் போட்டபோது ஆசாரிய

வஸ்திரந்தரித்துப் பூரிகைகளை ஊதுகிற ஆசாரியரையும், தாளங்களைக்கொட்டுகிற ஆசாபின் குமாரராகிய லேவியரையும் இஸ்ரவேல் ராஜாவாகிய தாவீதின் கட்டளைப் படியே யெகோவாவைத் துதிப்பதற்கென நிறுத்தினார்கள்;

11 யெகோவா நல்லவர்,
இஸ்ரவேலின்மேல் அவருடைய கிருபை என்றுமுள்ளது என்று அவரைப் புகழ்ந்து துதிக்கையில் மாறிமாறிப் பாடினார்கள்; யெகோவாவைத் துதிக்கையில் ஜனங்கள் எல்லாரும் யெகோவாவின் ஆலயத்திற்கு அஸ்திபாரம்போடப்பட்டதினிமித்தம் மகா
12 கெம்பீரமாய் ஆர்ப்பரித்தார்கள். முந்தின ஆலயத்தைக் கண்டிருந்த முதிர்வயதான ஆசாரியரிலும் லேவியரிலும் பிதாக்கள் வம்சங்களின் தலைவரிலும் அநேகர் இந்த ஆலயத்துக்குத் தங்கள் கண்களுக்கு முன்பாக அஸ்திபாரம் போடப்பட்டதைக் கண்டபோது மகா சத்தமிட்டு அழுதார்கள்; மற்றும் பலரோ கெம்பீரமாகவும் சந்தோஷ
13 மாகவும் ஆரவாரஞ்செய்தார்கள். ஜனங்கள் மகா கெம்பீரமாய் ஆர்ப்பரித்ததினாலே அவர்கள் சத்தம் வெகுதூரம் கேட்டது; சந்தோஷ ஆரவாரத்தின் சத்தம் இன்னதென்றும் ஜனங்களுடைய அழுகையின் சத்தம் இன்னதென்றும் அறியமுடியாதிருந்தது.

**4** சிறையிருப்பிலிருந்து திரும்பின ஜனங்கள் இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவுக்கு ஆலயத்தைக் கட்டுகிறார்கள் என்று யூதா பென்யமீன் என்பவர்களின் சத்துருக்
2 கள் கேள்விப்பட்டபோது | அவர்கள் செருபாபேலிடத்துக்கும் வம்சத் தலைவரிடத்துக்கும் வந்து: உங்களோடேகூட நாங்களும் கட்டுவோம்; உங்களைப்போல நாங்களும் உங்கள் தெய்வத்தை வணங்குகிறோம்; இவ்விடத்துக்கு எங்களை வரப்பண்ணின அசீரியாவின் ராஜாவாகிய ஏசர்கத்தோன் நாட்கள் முதற்கொண்டு நாங்களும் அவருக்கே பலியிட்டு வருகிறோம் என்று அவர்களோடே சொன்னார்கள்.
3 அதைக் கேட்ட செருபாபேலும் யேஷுவாவும் இஸ்ரவேலின் மற்ற வம்சத்தலைவரும் அவர்களுக்குப் பதிலுரைத்து: உங்களோடு சேர்ந்து நாங்கள் எங்கள் கடவுளுக்கு ஆலயம் கட்டுவது சரியாகாது; பாரசிக ராஜாவாகிய கோரேஸ் ராஜா எங்களுக்குக் கட்டளையிட்டபடி நாங்களே இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவுக்கு
4 அதைக் கட்டுவோம் என்றார்கள். அதினால் தேசத்திலிருந்த ஜனங்கள் யூதா ஜனத்தை அதைரியப்படுத்தி, கட்டாதபடிக்கு அவர்தமக்குப் பயமுறுத்தி வந்தார்கள்; பாரசிக ராஜா 5
வாகிய கோரேசின் காலமுழுதும், பாரசிக ராஜாவாகிய தரியு அரசாட்சிக்கு வருமட்டும், இஸ்ரவேலின் யோசனையை அபத்தமாக்கும்படி அவர்களுக்கு விரோதமாய் ஆலோசனைக்காரருக்குக் கைக்கூலி கட்டி வந்தார்கள்.

அகஸ்வேருவரசாண்டகாலத்தில், அவனு 6
டைய அரசாட்சியின் ஆரம்பத்திலே, யூதாவிலும் எருசலேமிலும் குடியிருக்கிறவர்களுக்கு விரோதமாகப் பிரியாது எழுதினார்கள்.

அர்தசஷ்டாவின் நாட்களிலும் பிஷ்லா 7
மும் மித்ரிதாத்தும் தாபெயேலும் அவர்களோடே சேர்ந்த மற்றவர்களும் பாரசிகராஜாவான அர்தசஷ்டாவுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள்; அது அரமேய எழுத்திலும் அரமேய பாஷையிலும் எழுதியிருந்தது.

ஆலோசனைச் சபைத்தலைவனாகிய ரெகூ 8
மும் சம்பிரதியாகிய ஷிம்ஷாயும் எருசலேமுக்கு விரோதமாக அர்தசஷ்டா என்னும் ராஜாவுக்கு அடியில் வருமாறு ஒரு நிருபம் எழுதினார்கள். எழுதினவர்கள் இவர்களே: 9
ஆலோசனைச் சபைத்தலைவனாகிய ரெகூம், சம்பிரதியாகிய ஷிம்ஷாய், அவர்களோடே சேர்ந்த மற்றவர்களாகிய தினாவியர், அபத்சக்கியர், தர்பேலியர், அப்பார்சியர், அற்கேவியர், பாபிலோனியர், சூசங்கியர், தெகாவியர், ஏலாமியரும், | பெரியவரும் 10
பேர்பெற்றவருமான அஸ்னப்பார் அழைத்துக்கொண்டுவந்து சமாரியாவின் ஊர்களிலும் நதிக்கு மேற்கே மற்றுமுள்ள இடங்களிலும் குடியேறப்பண்ணின மற்ற ஜனங்களுமே.

அவர்கள் அர்தசஷ்டா என்னும் ராஜா 11
வுக்கு அனுப்பின நிருபத்தின் நகலாவது: நதிக்கு மேற்கே இருக்கிற உமது அடியாரின் வந்தனம், இப்போதும் ராஜசமுகத்துக் 12
குத் தெரிந்திருக்கவேண்டிய ஒரு காரியம், உம்மிடத்திலிருந்து எங்களிடம் எருசலேமுக்கு வந்த யூதர் ராஜதுரோகமும் தீங்கும் நிறைந்த இந்தப்பட்டணத்தைக் கட்டுகிறார்கள், அதின் அஸ்திபாரங்களைப் பலப்படுத்தி அதின் மதில்களை எழுப்புகிறார்கள். இப்போதும் ராஜா கவனிக்கவேண்டியதா 13
வது, இந்தப்பட்டணம் கட்டப்பட்டு அலங்கங்கள் எடுப்பிக்கப்பட்டுத் தீர்ந்தால், அவர்கள் பகுதியையும் தீர்வையையும் ஆயத்தையும் கொடுக்கமாட்டார்கள், அதினால் ராஜவருமானத்திற்கு நஷ்டம்வரும். இப்போதும் நாங்கள் அரமனை உப்புத்தின் 14

கிறபடியினால் ராஜாவுக்கு அவமானம் நேரிடு
வதைப் பார்த்திருப்பது எங்களுக்கு அடாத
காரியம் என்றெண்ணி நாங்கள் இதை
அனுப்பி ராஜாவுக்குத் தெரியப்படுத்து
15 கிறோம். உம்முடைய பிதாக்களின் வர்த்த
மானப் புஸ்தகங்களில் சோதித்துப்பார்க்கச்
செய்தால் இந்தப் பட்டணம் ராஜதுரோக
மும், ராஜாக்களுக்கும் நாடுகளுக்கும் நஷ்
டமும் உண்டாக்குகிற பட்டணம் என்
றும், பூர்வகாலமுதலே கலகத்துக்கு இட
மானதாயிருந்தபடியினால் இந்தப் பட்ட
ணம் பாழாக்கப்பட்டது என்றும், அந்த
வர்த்தமானப் புஸ்தகங்களில் கண்டறிய
16 லாம். ஆகையால் இந்தப் பட்டணம்
கட்டப்பட்டு இதின் அலங்கங்கள் எடுப்
பிக்கப்பட்டுத் தீர்ந்தால் நதிக்கு மேல்புறத்
திலே உமக்கு ஒன்றும் இராதேபோம் என்
பதை ராஜாவுக்குத் தெரிவித்துக்கொள்ளு
கிறோம் என்று எழுதி அனுப்பினார்கள்.

17 அப்பொழுது ராஜா ஆலோசனைச் சபைத்
தலைவனாகிய ரெகூமுக்கும் சம்பிரதியாகிய
ஷிம்ஷாயிக்கும் அவர்களோடே சேர்ந்தவர்க
ளாய்ச் சமாரியாவிலும் நதிக்கு மேல்புறத்தி
லும் குடியிருந்த மற்றவர்களுக்கும் பதில்
18 அனுப்பி: உங்களுக்குச் சமாதானம்; இப்
பொழுதும் நீங்கள் நமக்கு அனுப்பின
கடிதம் நமது சமுகத்தில் தெளிவாய் வாசிக்
19 கப்பட்டது. நமது உத்தரவினால் சோதித்துப்
பார்க்கவே அந்தப்பட்டணம் பூர்வகால
முதலே ராஜாக்களுக்கு விரோதமாய் எழும்
பினது என்றும், அதிலே ராஜதுரோகமும்
20 கலகமும் நேரிட்டன என்றும், | எருச
லேமிலே வல்லமையுள்ள ராஜாக்கள் இருந்
தார்கள் என்றும் அவர்கள் நதிக்கு மேல்
புறத்தில் உள்ள சகலதேசங்களையும் ஆண்டு
வந்தார்கள் என்றும் பகுதியும் தீர்வையும்
ஆயமும் அவர்களுக்குச் செலுத்தப்பட்டன
21 என்றும் தெரியவருகிறது. இப்பொழுதும்
நம்மிடமிருந்து உத்தரவு பிறக்கும்வரை
யும் அந்த மனிதர் அந்தப்பட்டணத்தைக்
கட்டாமல் நிறுத்திவிடும்படி கட்டளையிடுங்
22 கள். இதிலே நீங்கள் அசட்டையாய்
இராதபடி பார்த்துக்கொள்ளுங்கள், ராஜாக்
களுக்கு அதிக நஷ்டமும் சேதமும் வருவா
23 னேன் என்று எழுதினான். ராஜாவாகிய
அர்தசஷ்டாவுடைய கடிதத்தின் நகல் ரெகூ
முக்கும் சம்பிரதியாகிய ஷிம்ஷாயிக்கும்
அவர்களோடே சேர்ந்தவர்களுக்கும் முன்பாக
வாசிக்கப்பட்டவுடனே அவர்கள் எருச
லேமிலிருந்த யூதரிடத்திற்கு விரைந்து
போய்ப் பலவந்தம்செய்து கட்டாயப்
படுத்தி வேலைசெய்யாதபடி அவர்களை நிறு
த்திவிட்டார்கள். அப்பொழுது எருசலேமி 24
லுள்ள தெய்வாலயத்தின் வேலை நிறுத்தப்
பட்டது, பாரசீகராஜாவாகிய தரியு ராஜ்ய
பாரம் பண்ணின இரண்டாம் வருஷமட்
டும் நிறுத்தப்பட்டிருந்தது.

அப்பொழுது ஆகாய் தீர்க்கதரிசியும் 5
இத்தோவின் குமாரனாகிய சகரியா என்னும்
தீர்க்கதரிசியும் யூதாவிலும் எருசலேமிலு
முள்ள யூதருக்கு இஸ்ரவேலின் கடவு
ளுடைய நாமத்திலே தீர்க்கதரிசனம் சொன்
னார்கள். அப்பொழுது செயல்தியேலின் 2
குமாரனாகிய செருபாபேலும் யோத்சதாக்
கின் குமாரனாகிய யேஷுவாவும் எழும்பி,
எருசலேமிலுள்ள தெய்வாலயத்தைக் கட்
டத் தொடங்கினார்கள்; கடவுளின் தீர்க்க
தரிசிகளும் தங்களோடிருந்
தார்கள். அக்காலத்திலே நதிக்கு மேல் 3
புறத்தில் அதிபதியாயிருந்த தத்னாய் என்
பவனும் செத்தர்போஸ்னாயும் அவர்களோச்
சேர்ந்தவர்களும் அவர்களிடம்வந்து இந்த
ஆலயத்தைக் கட்டவும் இந்த மதிலை
எடுப்பிக்கவும் உங்களுக்குக் கட்டளையிட்ட
வன் யார் என்று அவர்களைக் கேட்டார்
கள். அப்பொழுது இந்த ஆலயத்தைக் 4
கட்டுகிற மனிதரின் நாமங்கள் இன்ன
வென்று அவர்களுக்கு விவரித்துச் சொன்
னோம். தரியு இச்செய்தியை அறிந்து 5
கொண்டு அதைப்பற்றிக் கடிதம் அனுப்பு
மட்டும் அவர்கள் வேலை தடைபடவில்லை;
யூதருடைய மூப்பர்மேல் அவர்கள் கடவுள்
கண்ணோக்கமாயிருந்தார்.

நதிக்கு மேல்புறத்தில் அதிபதியாயிருந்த 6
தத்னாயும் செத்தர்போஸ்னாயும் அவர்களோச்
சேர்ந்தவர்களாய் நதிக்கு மேல்புறத்திலிருந்த
அப்பர்சாகியரும் தரியுராஜாவுக்கு எழுதி
யனுப்பின நிருபத்தின் நகல்—அவர்கள் 7
அவனுக்கு ஒரு நிருபம் அனுப்பி அதிலே
அடியிற்கண்டமாதிரி எழுதியிருந்தார்கள்:—
ராஜாவாகிய தரியுவுக்கு எல்லா சமாதான
மும் உண்டாவதாக. இப்போதும் ராஜ 8
சமுகத்துக்குத் தெரிந்திருக்கவேண்டிய ஒரு
காரியம், நாங்கள் யூதர் நாட்டிலுள்ள மகா
கடவுளின் ஆலயத்துக்குப் போனோம்; அது
பெருங்கற்களால் கட்டப்படுகிறது; சுவர்
களின்மேல் உத்தரங்கள் பாய்ச்சப்பட்டு
அந்த வேலை தாமதமின்றி நடந்து அவர்க
ளுக்குக் கைகூடிவருகிறது. நாங்கள் அவர் 9
களை மூப்பரிடம், இந்த ஆலயத்தைக் கட்ட
வும் இந்த மதிலை எடுப்பிக்கவும் உங்களுக்குக்
கட்டளையிட்டது யார் என்று கேட்டோம்.
இதுவுமல்லாமல் அவர்களுக்குள்ளே தலைவ 10
ரான மனிதர் இன்னாரென்று உமக்கு எழு

தித் தெரியப்படுத்தும்படி அவர்கள் நாமங்
11 கள் என்னவென்றும் கேட்டோம். அவர்
கள் எங்களுக்குப் பதிலுரைத்து: நாங்கள்
பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் கடவு
ளாயிருக்கிறவருக்கு அடியார், இஸ்ரவேலின்
பெரிய ராஜா ஒருவன் அநேக வருஷங்க
ளுக்கு முன்னே கட்டித்திர்த்த இந்த ஆல
யத்தை நாங்கள் மறுபடியும் கட்டுகிறோம்.
12 எங்கள் பிதாக்கள் பரலோகத்தின் கடவு
ளுக்குக் கோபமூட்டினபடியினால் அவர்
இவர்களைப் பாபிலோன் ராஜாவாகிய நேபு
காத்நேச்சார் என்னும் கல்தேயன் கையில்
ஒப்புக்கொடுத்தார்; அவன் இந்த ஆலயத்
தை அழித்து ஜனத்தைப் பாபிலோனுக்குக்
13 கொண்டுபோனான். பாபிலோன் ராஜாவா
கிய கோரேசோ தமது முதலாம் வருஷத்
திலே இந்த தெய்வாலயத்தைக் கட்டும்படி
14 கட்டளையிட்டார். நேபுகாத்நேச்சார் எரு
சலேமிலிருந்த தெய்வாலயத்திலிருந்து
எடுத்துப் பாபிலோன் கோவிலில் கொண்டு
போய் வைத்திருந்த தெய்வாலயத்தின் பொன்
வெள்ளிப் பணிமுட்டுகளையும் கோரேஸ்
ராஜா பாபிலோன் கோவிலிலிருந்து எடுத்து
அவர் தேசாதிபதியாக நியமித்திருந்த செஸ்
பாத்சா என்பவனிடம் அவைகளை ஒப்பு
15 வித்து, | அவனுக்கு பேசி: நீ இந்தப் பணி
முட்டுகளை எடுத்து எருசலேமிலிருக்கும்
தெய்வாலயத்துக்குக் கொண்டுபோ, தெய்
வாலயம் அதின் ஸ்தானத்திலே கட்டப்பட
16 வேண்டும் என்றார். அப்பொழுது அந்தச்
செஸ்பாத்சார் வந்து எருசலேமிலுள்ள
தெய்வாலயத்தின் அஸ்திபாரத்தைப் போட்
டான்; அந்நாள்முதல் இதுவரைக்கும் அது
கட்டப்பட்டு வருகிறது; அது இன்னும்
17 முடியவில்லை என்று சொன்னார்கள். இப்
பொழுதும் ராஜாவுக்குச் சித்தமாயிருந்தால்
எருசலேமிலுள்ள தெய்வாலயத்தைக் கட்ட
ராஜாவாகிய கோரேஸ் கட்டளையிட்டதுண்
டோ என்று பாபிலோனில் இருக்கிற ராஜா
வின் கஜானாவிலே ஆராய்ந்துபார்க்கவும்
இந்த விஷயத்தில் ராஜாவினுடைய சித்தம்
இன்னதென்று எங்களுக்கு எழுதியனுப்ப
வும் உத்தரவாகவேண்டும் என்று எழுதி
யிருந்தது.

**6** அப்பொழுது தரியுராஜா கட்டளை பிறப்
பிக்கவே பாபிலோனில் பொக்கிஷம் வைத்
திருந்த தஸ்திரசாலையில் சோதனை செய்தார்
2 கள். மேதிய நாட்டிலிருந்த அக்மேதா
கோட்டையிலே ஒரு சுருள் அகப்பட்டது;
3 அதிலே எழுதி வைத்திருந்ததாவது: ராஜா
வாகிய கோரேசின் முதலாம் வருஷத்தில்
கோரேஸ் ராஜா எருசலேமிலிருந்த தெய்வா
லயத்தைப்பற்றி உத்தரவு பிறப்பித்தான்;
ஆலயம் பலிசெலுத்தப்பட்டுவந்த ஸ்தானத்
திலே கட்டப்படவேண்டும்; அதின் அஸ்தி
பாரங்கள் பலமாயிருக்கவேண்டும்; அது
அறுபது முழ உயரமும் அறுபதுமுழ
அகலமுமாயிருக்கவேண்டும். அது மூன்று 4
வரிசைப் பெருங் கற்களாலும் ஒரு வரிசை
புது மரங்களாலும் கட்டப்படவேண்டும்;
அதற்குச் செல்லும் செலவு ராஜாவின் அர
மனையிலிருந்து கொடுக்கப்படவேண்டும்.
அன்றியும் நேபுகாத்நேச்சார் எருசலேமி 5
லிருந்த ஆலயத்திலிருந்து எடுத்து பாபிலோ
னுக்குக் கொண்டுவந்த தெய்வாலயப் பொன்
வெள்ளிப் பணிமுட்டுகளைத் திரும்பக் கொ
டுத்து எருசலேமிலுள்ள தெய்வாலயமாகிய
தங்கள் ஸ்தானத்திலே கொண்டுபோய்ச்
சேர்த்து அவைகளைக் கடவுளின் ஆலயத்
திலே வைக்கவேண்டும் என்று எழுதியிருந்
தது.

ஆகவே தரியு ராஜா எழுதி: இப்பொழு 6
தும் நதிக்கு மேல்புறத்தில் அதிபதியாயிருக்
கிற தத்தனேயும் ஷெத்தர்போஸ்னையுமாகிய
நீங்களும் உங்களைச் சேர்ந்தவர்களாய்
நதிக்கு மேல்புறத்திலிருக்கிற அப்பர்சாகி
யரும் அவ்விடத்துக்குப் போகாமல் விலகி
யிருங்கள். தெய்வாலய வேலை நடக்கும் 7
படி விட்டுவிடுங்கள், யூதருடைய அதிபதி
யும் யூதரின் மூப்பரும் இந்த தெய்வாலயத்
தை அதின் ஸ்தானத்திலே கட்டவேண்டும்.
தெய்வாலயத்தை யூதரின் மூப்பர் கட்டும் 8
விஷயத்தில் நீங்கள் செய்யவேண்டியதின்ன
தென்று நாம் கொடுக்கும் கட்டளை இதுவே:
ராஜாவின் வருமானத்தில், நதிக்கு மேல்புறத்
தில் வாங்கப்படும் பகுதியிலே, அந்த மனித
ருக்குச் செல்லும் செலவை ஒழுங்காய்க்
கொடுக்கவேண்டும்; வேலை தடைபடக்
கூடாது. பரலோகத்தின் கடவுளுக்குத் 9
தகனபலிகளிடத் தேவையாயிருக்கிற
இளங்காளைகள், ஆட்டுக்கடாக்கள், ஆட்
டுக்குட்டிகள், கோதுமை, உப்பு, திராட்ச
ரசம், எண்ணெய் முதலானவற்றை எருச
லேமிலுள்ள ஆசாரியரின் சொற்படியே
நாடோறும் தவறாமல் கொடுக்கவேண்டும்.
அவர்கள் பரலோகத்தின் கடவுளுக்குச் 10
சுகந்த வாசனையான பலிகளைச் செலுத்தி,
ராஜாவுக்கும் அவர் குமாரருக்கும் தீர்க்கா
யுசு வேண்டி மன்றாடும்படி இப்படிச் செய்ய
வேண்டும். பின்னும் நாம் கட்டளையிடு 11
கிறோம்: எந்த மனிதனாவது இந்தக் கட்
டளையை மீறினால் அவன் வீட்டில் ஒரு
உத்திரத்தைப் பிடுங்கி அவனை அதிலே
தூக்கி அறையவேண்டும்; அவன் அப்படிச்

செய்தபடியினால் அவன் வீடு குப்பை
12 மேடாக வேண்டும். ஆகையால் இக்கட்
டானை மீறி எருசலேமிலுள்ள கடவுளின்
ஆலயத்தைக் கெடுக்கத் தங்கள் கையை
நீட்டப்போகிற எந்த ராஜாவையும் எந்த
ஜனத்தையும், தமது திருநாமத்தை அங்கே
விளங்கப்பண்ணின கடவுளே நிர்மூலமாக்
குவார்; தரியுவாகிய நாம் இந்தக் கட்டளை
யைக் கொடுத்தோம்; இதை ஜாக்கிரதை
யாய் அனுசரிக்கவேண்டும் என்று கட்டளை
யிட்டான்.

13 அப்பொழுது நதிக்கு மேல்புறத்தில் அதி
பதியாயிருந்த தத்னையும் ஷெத்தர்போஸ்னை
யும் அவர்களைச் சேர்ந்தவர்களும் தரியு
ராஜா கட்டளையிட்ட பிரகாரம் ஜாக்கிரதை
14 யாய்ச் செய்தார்கள். அந்தப்படியே யூத
ரின் மூப்பர் கட்டினார்கள்; தீர்க்கதரிசியா
கிய ஆகாயும் இத்தோவின் குமாரனுகிய
சகரியாவும் தீர்க்கதரிசன போதனை
சொல்லிவந்தபடியினால் அவர்கள் காரியம்
கைகூடிவந்தது; அவர்கள் இஸ்ரவேலின்
கடவுளுடைய கட்டளைக்கிசையக் கோ
ரேஸ், தரியு, பாரசிக ராஜாவாகிய அர்த
சஷ்டா என்பவர்கள் கட்டளையிட்டபடியே
15 அதைக் கட்டி முடித்தார்கள். தரியு ராஜா
அரசாண்ட ஆறும் வருஷத்தில் ஆதார்
என்னும் மாதம் மூன்றுந்தேதியிலே அந்த
ஆலயம் கட்டிமுடிந்தது.

16 அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரும்
ஆசாரியரும் லேவியரும் சிறையிருப்பி
லிருந்து திரும்பின மற்றவர்களும் இந்த
தெய்வாலயத்தை மகிழ்ச்சியோடு பிரதிஷ்
17 டை செய்தார்கள். தெய்வாலயத்தின் பிர
திஷ்டைக்கென்று நூறு காளைகளையும் இரு
நூறு ஆட்டுக்கடாக்களையும் நானூறு ஆட்
டுக்குட்டிகளையும், இஸ்ரவேல் கோத்திரங்
களின் இலக்கப்படியே முழு இஸ்ரவேலுக்
கும் பாவநிவாரண பலியாகப் பன்னிரண்டு
வெள்ளாட்டுக்கடாக்களையும் பலியிட்டார்
18 கள். மோசேயின் புஸ்தகத்தில் எழுதி
யிருக்கிறபடியே அவர்கள் எருசலேமி
லுள்ள கடவுளின் ஆராதனைக்கென்று ஆசா
ரியரை அவர்கள் வகுப்புகளின்படியும்
லேவியரை அவர்கள் பிரிவுகளின்படியும்
ஏற்படுத்தினார்கள்.

19 சிறையிருப்பிலிருந்து திரும்பினவர்கள்
முதலாம்மாதம் பதினாலாந்தேதியிலே பஸ்
20 காவையும் ஆசரித்தார்கள். ஆசாரியரும்
லேவியரும் ஏகமாய்த் தங்களைச் சுத்திகரித்
துக்கொண்டதினால் எல்லாரும் சுத்தமா
யிருந்து, சிறையிருப்பிலிருந்து திரும்பின
வர்கள் எல்லாருக்காகவும் ஆசாரியரான
தங்கள் சகோதரருக்காகவும் தங்களுக்காக
வும் பஸ்காவை அடித்தார்கள். அப்படி 21
யே சிறையிருப்பிலிருந்து திரும்பின இஸ்ர
வேல் புத்திரரும் இஸ்ரவேலின் கடவுளா
கிய யெகோவாவை நாடி வணங்கும்படி
அந்தத் தேசத்திலிருந்த ஜனங்களின் அசுத்
தத்தை விட்டு இஸ்ரவேல் புத்திரரோடு
சேர்ந்துகொண்ட அனைவரும் அதைப் புசித்
துப் | புளிப்பில்லா அப்பப்பண்டிகையை 22
ஏழுநாளளவும் சந்தோஷத்தோடு ஆசரித்
தார்கள்; யெகோவா அவர்களை மகிழ்ச்சி
யாக்கி அவர்கள் கைகளை இஸ்ரவேலின்
கடவுள் என்னும் கடவுளுடைய ஆலய
வேலையிலே பலப்படுத்துவதற்கேதுவாக
அசிரிய ராஜாவின் இருதயத்தை அவர்கள்
பட்சம் சார்ந்திருக்கப்பண்ணினாரே.

இவைகளுக்குப்பின்பு, பாரசிக ராஜாவா 7
கிய அர்தசஷ்டா அரசாண்ட காலத்திலே,
செராயாவின் குமாரனுகிய எஸ்ரா பாபிலோ
னிலிருந்து புறப்பட்டான்; இந்தச் செராயா
அசரியாவின் குமாரன், இவன் இல்க்கியா
வின் குமாரன், | இவன் சல்லூமின் குமா 2
ரன், இவன் சாதோக்கின் குமாரன், இவன்
அகிதூபின் குமாரன், | இவன் அமரியா 3
வின் குமாரன், இவன் அசரியாவின் குமா
ரன், இவன் மெராயோதின் குமாரன், இவன்
செராகியாவின் குமாரன் | இவன் ஊசியின் 4
குமாரன், இவன் புக்கியின் குமாரன், |
இவன் அபிஷூவாவின் குமாரன், இவன் 5
பினெகாசின் குமாரன், இவன் எலெயாசா
ரின் குமாரன், இவன் பிரதான ஆசாரிய
னான ஆரோனின் குமாரன். இந்த எஸ்ரா 6
வேதசாஸ்திரி, இஸ்ரவேலின் கடவுளாகிய
யெகோவா அருளிய மோசேயின் நியாயப்
பிரமாணத்திலே தேர்ந்தவன்; அவனு
டைய கடவுளாகிய யெகோவாவின் கரம்
அவன்மேல் இருந்ததினால் அவன் கேட்ட
வைகளையெல்லாம் ராஜா அவனுக்குக்
கொடுத்தான். இஸ்ரவேல் புத்திரரிலும் 7
ஆசாரியரிலும் லேவியரிலும் பாடகரிலும்
வாசல் காவலாளரிலும் கோவில் வேலையாட்
களிலும் சிலரும் அர்தசஷ்டா ராஜாவின்
ஏழாம் வருஷத்திலே எருசலேமுக்குப்
புறப்பட்டார்கள். ராஜாவின் ஏழாம் வரு 8
ஷம் ஐந்தாம் மாதத்தில் எஸ்ரா எருசலே
முக்கு வந்தான்; முதலாம் மாதம் முதல் 9
தேதியிலே அவன் பாபிலோனிலிருந்து பிர
யாணப்பட்டு ஐந்தாம்மாதம் முதல்தேதி
யிலே எருசலேம் வந்து சேர்ந்தான்; அவன் 10
கடவுளின் தயவுள்ள கரம் அவன்மேல்
இருந்தது, யெகோவாவின் நியாயப்பிரமா
ணத்தை ஆராயவும் அதின்படி செய்யவும்

இஸ்ரவேலிலே நியமங்களையும் தீர்ப்புகளையும் உபதேசிக்கவும் எஸ்ரா தன் இருதயத்தை ஏவாக்கியிருந்தான்.

11 யெகோவா இஸ்ரவேலைப்பற்றிக் கொடுத்த கட்டளைகளும் நியமங்களும் அடங்கிய நூலில் தேர்ந்த வேதசாஸ்திரியும் ஆசாரியனுமாகிய எஸ்ரா ராஜாவாகிய அர்தசஷ்டா கொடுத்த நிருபத்தின் நகலாவது:

12 ராஜாதிராஜாவாகிய அர்தசஷ்டா பரலோக தெய்வத்தின் நியாயப்பிரமாணத்திலே தேர்ந்த வேதசாஸ்திரியும் ஆசாரியனுமாகிய

13 எஸ்ராவுக்கு, நலமாகுக; நாம் விதிப்பது இதுவே: நமது ராஜ்யத்திலுள்ள இஸ்ரவேல் ஜனத்திலும் அதின் ஆசாரியரிலும் லேவியரிலும் உன்னோடே எருசலேமுக்குப்போக விரும்புகிற யாவரும் போகலாம், ராஜாவும் அவருடைய மந்திரிமார் ஏழுபேருமாக உன்

14 னை அனுப்புகிறோம். நீ உன் கையிலிருக்கிற உன் கடவுளின் நியாயப்பிரமாணத்தை வைத்துக்கொண்டு யூதாவையும் எருசலேமையும் பற்றிய காரியங்களை விசாரிக்க

15 செய்யவேண்டும். ராஜாவும் அவருடைய மந்திரிமாரும் எருசலேமில் வாசம்பண்ணுகிற இஸ்ரவேலின் கடவுளுக்கு மனப்பூர்வமாய்க் கொடுத்த வெள்ளியையும் பொன்னை

16 யும் ¦ பாபிலோன் நாடெங்கும் உனக்குக் கிடைக்கும் எல்லா வெள்ளியையும் பொன்னையும் உன் ஜனத்தாரும் ஆசாரியரும் எருசலேமிலுள்ள தங்கள் கடவுளின் ஆலயத்துக்கென்று மனப்பூர்வமாய்க் கொடுக்கும் காணிக்கைகளையும் நீ கொண்டுபோகவேண்டும்; இவற்றின்பொருட்டே நீ அனுப்பப்

17 படுகிறாய். ஆகையால் அந்தத் திரவியத்தைக்கொண்டு நீ காளைகளையும் ஆட்டுக்கடாக்களையும் ஆட்டுக்குட்டிகளையும் அவைகளோடே படைக்கவேண்டிய போஜனபலிகளையும் பானபலிகளையும் தாமதமின்றி வாங்கி அவைகளை எருசலேமிலுள்ள உங்கள் கடவுளின் ஆலயத்துப் பலிபீடத்தின்

18 மேல் செலுத்துவாய். மீதியான வெள்ளியையும் பொன்னையும் கொண்டு, உனக்கும் உன் சகோதரருக்கும் நலமாய்த் தோன்றுவது எதுவோ அதை உங்கள் கடவுளின்

19 சித்தத்திற்கிசையச் செய்யுங்கள். உன் கடவுளின் ஆலய ஆராதனைக்கென்று உன்னிடம் கொடுக்கப்படும் பணிமுட்டுகளை நீ எருசலேமின் கடவுளுடைய சந்நிதியிலே ஒப்பு

20 விப்பாய். உன் கடவுளின் ஆலயத்துக்கு இன்னும் தேவையாய், நீ இன்னும் கொடுக்கவேண்டுமெனத் தோன்றுகிறவற்றை நீ ராஜாவின் கஜானாவிலிருந்து வாங்கிக்கொடுப்

21 பாய். நதிக்கு மேல்புறத்திலுள்ள சகல கஜான்களுக்கும் அர்தசஷ்டா என்னும் ராஜாவாகிய நாம் கட்டளையிடுகிறோம், பரலோக தெய்வத்தின் நியாயப்பிரமாணத்திலே தேர்ந்த வேதசாஸ்திரியும் ஆசாரியனுமாகிய எஸ்ரா உங்களிடம் கேட்டுக்கொள்வது எதுவோ அதைத் தடையின்றிக் கொடுங்கள். வெள்ளி நூறு தாலந்துவரைக்கும், 22 கோதுமை நூறு கலம் வரைக்கும், திராட்சரசம் நூறு குடம்வரைக்கும், எண்ணெய் நூறு குடம் வரைக்கும் கொடுங்கள்; உப்பு வேண்டியமட்டும் கொடுங்கள். பரலோக 23 தெய்வம் கட்டளையிடுவதெல்லாம் பரலோக தெய்வத்தின் ஆலயத்திற்கெனச் சரியாய்க் கொடுக்கப்படவேண்டும்; ராஜாவும் அவர் குமாரரும் ஆளும் ராஜ்யத்தின்மேல் கடுங் கோபம் வருவானேன். பின்னும் ஆசாரி 24 யர், லேவியர், பாடகர், வாசல் காவலாளர், கோவில் வேலையாட்கள், அந்தத் தெய்வாலயத்தில் சேவை செய்பவர் ஆகிய எவர்மேலும் பகுதியாகிலும் தீர்வையாகிலும் ஆயமாகிலும் சுமத்தலாகாதென்று அவர்களைப் பற்றி உங்களுக்குத் தெரிவிக்கிறோம். பின்னும் நதிக்கு மேல்புறத்திலே உன் கடவுளின் 25 நியாயப்பிரமாணங்களை அறிந்த சகல ஜனங்களையும் நியாயம் விசாரிக்கும் அதிகாரிகளையும் நியாயாதிபதிகளையும் எஸ்ராவாகிய நீயே உன் வசம் ஒப்புவிக்கப்பட்டுள்ள உன் கடவுளின் ஞானோபதேசத்திற்கிசைய ஏற்படுத்திக்கொள்; அந்த உபதேசங்களை அறியாதவர்களுக்கு அவைகளை நீயே போதிப்பாய். உன் 26 கடவுளின் நியாயப்பிரமாணத்தின்படியேயும் ராஜாவின் பிரமாணத்தின்படியேயும் செய்யாதவனெவனே அவன் தாமதமின்றித் தீர்க்கப்பட்டு, மரணமோ, தேசப்பிரஷ்டமோ, அபராதமோ, காவலோ தண்டனையாகப் பெறவேண்டும் என்று எழுதியிருந்தது.

எருசலேமிலுள்ள யெகோவாவின் ஆல 27 யத்தை அலங்கரிக்க, இப்படிப்பட்ட யோசனையை ராஜாவின் இருதயத்தில் அருளி, ராஜாவுக்கும் அவருடைய மந்திரிமார்களுக்கும் ராஜாவைச்சேர்ந்த பராக்கிரம வீரரான சகல அதிபதிகளுக்கும் முன்பாக எனக்குத் தயவுகிடைக்கப்பண்ணின எங்கள் பிதாக்களின் கடவுளாகிய யெகோவாவுக்கு ஸ்தோஸ்திரம். இப்படியாக என் 28 கடவுளாகிய யெகோவாவின் கரம் என்மேல் இருந்ததினால் நான் மனோபலங்கொண்டு இஸ்ரவேலில் சில தலைவரை என்னோடே கூட வரும்படி சேர்த்துக்கொண்டேன்.

8 அர்தசஷ்டா ராஜா அரசாண்ட காலத்திலே பாபிலோனிலிருந்து என்னோடேகூட

வந்த வம்சத்தலைவர் அவர்கள் வம்ச அட்ட
2 வணைகளின்படி இவர்களே: பினெகாசின்
புத்திரரில் கெர்சோம், இத்தாமாரின் புத்திர
ரில் தானியேல், தாவீதின் புத்திரரில் கத்
3 தூஷ், | பாரோஷின் சந்ததியைச்சேர்ந்த
ஷெகனியாவின் புத்திரரில் சகரியா, அவ
ளோடேகூட வம்ச அட்டவணையில் எழுதி
யிருக்கிற நூற்றைம்பது ஆண்மக்கள்;
4 பாகாத்மோவாபின் சந்ததியைச் சேர்ந்த செர
கியாவின் குமாரனுகிய எலியோயேனாய், அவ
5 னோடேகூட இருநூறு ஆண்மக்கள். ஷெக
னியாவின் சந்ததியைச்சேர்ந்த யகசியேலின்
குமாரன், அவனோடேகூட மூன்றூறு ஆண்
6 மக்கள்; ஆதீனின் சந்ததியைச்சேர்ந்த யோ
னத்தானின் குமாரனுகிய ஏபேது, அவனோ
7 டேகூட ஐம்பது ஆண்மக்கள்; ஏலாமின்
சந்ததியைச்சேர்ந்த அதலியாவின் குமாரனு
கிய எஷாயா, அவனோடேகூட எழுபது
8 ஆண்மக்கள்; ஷெப்பத்தியாவின் சந்ததியைச்
சேர்ந்த மிகாவேலின் குமாரனுகிய செபத்
தியா, அவனோடேகூட எண்பது ஆண்மக்
9 கள்;யோவாபின்சந்ததியைச்சேர்ந்த யெகியே
லின் குமாரனுகிய ஓபதியா, அவனோடேகூட
இருநூற்றுப்பதினெட்டு ஆண்மக்கள்;
10 ஷெலோமீத்தின் சந்ததியைச்சேர்ந்த யோசி
பியாவின் குமாரன், அவனோடேகூட நூற்
11 றறுபது ஆண்மக்கள்; பேபாயின் சந்ததி
யைச்சேர்ந்த பேபாயின் குமாரனுகிய
சகரியா, அவனோடேகூட இருபத்தெட்டு
12 ஆண்மக்கள்; அஸ்காதின் சந்ததியைச்
சேர்ந்த அக்காத்தானின் குமாரனுகிய யோக
னன், அவனோடேகூட நூற்றுப்பத்து ஆண்
13 மக்கள்; அதொனீகாமின் புத்திரரில் கடைசி
யில் சேர்ந்த எலிபேலேத், யெயியேல்,
ஷெமாயா என்பவர்கள், அவர்களோடே
14 கூட அறுபது ஆண்மக்கள்; பிக்வாயின்
புத்திரரில் ஊத்தாய், சபூது என்பவர்கள்,
அவர்களோடேகூட எழுபது ஆண்மக்கள்.
15 இவர்களை நான் அகாவாவில் விழுகிற
நிற்ருற்றினண்டையிலே கூட்டிக்கொண்டு
போனேன்; அங்கே மூன்று நாள் தங்கியிருந்
தோம்; நான் ஜனங்களையும் ஆசாரியரையும்
பார்வையிடும்போது லேவி புத்திரரில் ஒரு
16 வரையும் அங்கே காணவில்லை. அப்பொ
ழுது நான் எலியேசர், அரியேல், ஷெமாயா,
எல்நாத்தான், யாரீப், எல்நாத்தான், நாத்
தான், சகரியா, மெசுல்லாம் என்னும் தலைவ
ரையும் யோயாரீப், எல்நாத்தான் என்னும்
போதக சமர்த்தரையும் அழைப்பித்து, |
17 சகிப்பியா என்னும் ஸ்தலத்திலிருந்த தலைவ
னுகிய இத்தோவிடம் அனுப்பி, நமது கட
வுளின் ஆலயத்துக்கென்ப் பணிவிடைக்
காரரை எங்களிடம் அழைத்துவரும்படி
அவர்கள் சகிப்பியா என்னும் ஸ்தலத்திலி
ருந்த இத்தோவுக்கும் அவன் சகோதரருக்
கும் கோவில் வேலையாட்களுக்கும் சொல்ல
வேண்டிய வார்த்தைகளைச் சொல்லிக்
கொடுத்தேன். அவர்கள் நமது கடவுளின் 18
தயவுள்ள கரம் எங்கள்மேலிருந்தபடியால்
இஸ்ரவேலுக்குப் பிறந்த லேவியின் குமார
னுகிய மகேலியின் புத்திரரில் புத்திசாலியா
கிய ஷெரேபியாவும் அவன் குமாரரும்
சகோதரருமான பதினெட்டுப்பேரையும் |
மொவாரி புத்திரரில் கஷபியாவும் அவ 19
னோடே ஏசாயாவும் அவன் சகோதரரும்
அவர்கள் குமாரருமான இருபதுபேரை
யும் | தாவீதும் பிரபுக்களும் லேவியர் பணி 20
விடைக்கென நியமித்த கோவில் வேலை
யாட்களில் இருநூற்று இருபதுபேரையும்
எங்களிடம் அழைத்துக்கொண்டு வந்தார்
கள்; இவர்கள் எல்லாரும் பேர் பேராய்க்
குறிக்கப்பட்டார்கள்.

அப்பொழுது நாங்கள் எங்கள் கடவு 21
ளுக்கு முன்பாக எங்களைத் தாழ்த்தவேண்டு
மென்றும் எங்களுக்கும் எங்கள் பிள்ளை
களுக்கும் எங்கள் சகல பொருட்களுக்
கும் இடையூறில்லாப் பிரயாணம் அவரால்
கிடைக்கவேண்டுமென்றும் நான் அங்கே
அந்த அகாவா நதியண்டையிலே உபவாசத்
தைக் கூறினேன். வழியிலே சத்துருவை 22
விலக்கி எங்களுக்குத் துணைசெய்வதற்குச்
சேவகரையும் குதிரைவீரரையும் ராஜாவி
னிடம் கேட்க நான் வெட்கப்பட்டிருந்
தேன்; எங்கள் கடவுளின் கரம் அவரைத்
தேடுகிற யாவர்மேலும் நன்மைக்கேதுவாக
அமர்ந்திருக்கிறதென்றும் அவருடைய
வல்லமையும் அவருடைய கோபமுமோ
அவரைவிட்டு விலகுகிற யாவர்மேலும் வரு
கிறதென்றும் நாங்கள் ராஜாவுக்குச் சொல்லி
யிருந்தோம். அப்படியே நாங்கள் உபவா 23
சம்பண்ணி நமது கடவுளினிடம் அதைத்
தேடினோம், எங்கள் விண்ணப்பத்தைக்
கேட்டருளினார்.

பின்பு நான் ஆசாரியரின் தலைவரிலே 24
சேரேபியாவையும் கஷபியாவையும் அவர்
கள் சகோதரரிலே பத்துப்பேரையும் ஆகப்
பன்னிரண்டுபேரைப் பிரித்தெடுத்து |
ராஜாவும் அவருடைய ஆலோசனைக்காரரும் 25
அவருடைய அதிபதிகளும் அங்கிருந்த சகல
இஸ்ரவேலரும் நமது கடவுளின் ஆலயத்துக்
கென்று அளித்த காணிக்கையாகிய வெள்
ளியையும் பொன்னையும் பணிமுட்டுகளையும்
அவர்களிடம் நிறுத்துக்கொடுத்தேன். நான் 26
அவர்கள் கையிலே நிறுத்துக்கொடுத்தவை

கள் அறுநூற்று ஐம்பதுதாலந்து வெள்ளி, நூறு தாலந்து நிறையான வெள்ளிப்பணி
27 மூட்டுகள், நூறு தாலந்து பொன், ஆயிரம் அதர்கோன் பெறுமான இருபது பொற்
கிண்ணங்கள், பொன்னைப்போல எண்ணப்
பட்ட பளபளப்பான இரண்டு நல்ல செப்
28 புப்பாத்திரங்கள் ஆகிய இவைகளே. பின்பு நான் அவர்களோடு பேசி: நீங்கள் யெகோ
வாவுக்குப் பரிசுத்தமானவர்கள்; இந்தப்
பணிமுட்டுகளும் உங்கள் பிதாக்களின்
கடவுளாகிய யெகோவாவுக்கு மனப்பூர்வ
மாய்ப்படைத்த இந்த வெள்ளியும் இந்
29 தப்பொன்னும் பரிசுத்தமானவைகள். நீங்கள் அதை எருசலேமில் யெகோவாவின்
ஆலய அறைகளில் ஆசாரியர் லேவிய
ருடைய தலைவருக்கும் இஸ்ரவேலுடைய
வம்சத்தலைவருக்கும் முன்பாக நிறுத்து
ஒப்புவிக்குமட்டும் விழிப்பாயிருந்து அதைக்
30 காத்துக்கொள்ளுங்கள் என்றேன். அப்படியே அந்த ஆசாரியரும் லேவியரும்
நிறுக்கப்பட்ட அந்த வெள்ளியையும்
பொன்னையும் பணிமுட்டுகளையும் எருச
லேமுக்கு, நமது கடவுளின் ஆலயத்துக்குக்
கொண்டுபோகும்படி வாங்கிக்கொண்டார்
கள்.

31 நாங்கள் முதலாம் மாதம் பன்னிரண்டாந் தேதியிலே அகாவா நதியைவிட்டு
எருசலேமுக்குப் போகப் பிரயாணப்பட்
டோம்; நமது கடவுளின் கரம் எங்கள்மே
லிருந்து, வழியிலே சத்துருவின் கைக்கும்
பதிவிருக்கிறவர்களின் கைக்கும் எங்களைத்
32 தப்புவித்தது. நாங்கள் எருசலேமுக்கு
வந்து அங்கே மூன்றுநாள் சும்மா இருந்
தோம்.

33 நாலாம் நாளிலே அந்த வெள்ளியும் பொன்னும் பணிமுட்டுகளும் நமது கடவு
ளின் ஆலயத்தில் ஆசாரியனாகிய உரியா
வின் குமாரன் மெரேமோத்தின் கையிலே
நிறுத்து ஒப்புவிக்கப்பட்டன; அவனோடு
பினெகாசின் குமாரன் எலெயாசாரும் இருந்
தான். லேவியரான யேஷூவாவின் குமா
ரன் யோசபாத்தும் பின்னூயியின் குமாரன்
நொவதியாவும் அவர்களோடிருந்தார்கள்.
34 எல்லாம் நிறையின்படியும் தொகையின்படியும் ஒப்புவிக்கப்பட்டன; அந்த நிறையெல்
லாம் அச்சமயத்திலேயே எழுதப்பட்டது.

35 சிறைமீண்டு சிறையிருப்பிலிருந்து திரும்பினவர்கள் இஸ்ரவேலின் கடவுளுக்குத்
தகனபலிகளாகப் பன்னிரண்டு காளைகளை
முழு இஸ்ரவேலினிமித்தமும் செலுத்
தினார்கள், பின்னும் தொண்ணூற்றாறு
ஆட்டுக்கடாக்களையும் எழுபத்தேழு ஆட்டுக்
குட்டிகளையும் பன்னிரண்டு பர்வதிவாரண
வெள்ளாட்டுக்கடாக்களையும் செலுத்தினார்
கள்; அவையெல்லாம் யெகோவாவுக்குத்
தகனபலிகளாயின. பின்பு ராஜாவின் சன் 36
னதங்களை நதிக்கு மேல்புறத்திலிருந்த ராஜ
பிரதிநிதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் ஒப்பு
வித்தார்கள்; ஒப்புவிக்கவே அவர்கள் ஜனங்
களுக்கும் கடவுளின் ஆலயத்துக்கும் உதவி
யாயிருந்தார்கள்.

இவைகள் முடிந்தபின்பு தலைவர் என் 9
னிடம் வந்து: இஸ்ரவேல் ஜனங்களும்
ஆசாரியரும் லேவியருமாகிய இவர்கள்
கானானியர், ஏத்தியர், பாரசீகர், எபூசியர்,
அம்மோனியர், மோவாபியர், எகிப்தியர்,
எமோரியர் என்னும் புறதேச ஜனங்களுக்கும்
அவர்களுடைய அருவருப்புகளுக்கும் விலகி
யிருக்கவில்லை. அவர்களுடைய குமாரத்தி 2
களிலே தங்களுக்கும் தங்கள் குமாரருக்கும்
பெண்களைக் கொண்டார்கள்; இப்படியாகப்
பரிசுத்த சந்ததி புறதேச ஜனங்களோடே
கலந்துபோகிறது; தலைவரும் அதிபதிகளுமே
இந்தத் துரோகத்திற்கு வழிகாட்டினவர்கள்
என்றார்கள். இதைக் கேள்விப்பட்டபோது 3
நான் என் வஸ்திரத்தையும் என்
அங்கியையும் கிழித்து என் தலையிலும்
என் தாடியிலுமுள்ள மயிரைப் பிய்த்துத்
திகைத்துக் கலங்கி இருந்துவிட்டேன். அப் 4
பொழுது சிறையிருப்பிலிருந்து திரும்பினவர்
களின் துரோகத்தினிமித்தம் இஸ்ரவேலின்
கடவுளுடைய வார்த்தைகளை நினைத்து
நடுங்கின யாவரும் என்னிடம் கூடிவந்தார்
கள்; நானோ அந்திப்பலிசெலுத்தும் நேரமட்
டும் திகைத்துக் கலங்கி உட்கார்ந்துகொண்
டிருந்தேன்.

அந்திப்பலி நேரத்திலே என் தாழ்மை 5
யை விட்டெழுந்து வஸ்திரத்தையும்
அங்கியையும் கிழித்துக்கொண்டே முழங்
காற்படியிட்டு என் கைகளை என் கடவு
ளாகிய யெகோவாவுக்கு நேராக விரித்து:
என் கடவுளே, நான் வெட்கிக் கலங்கு 6
கிறேன்; நான் முகம் நிமிர்த்து, என் கட
வுளே, உம்மை நோக்கத் துணியேன், எங்
கள் அக்கிரமங்கள் எங்கள் தலைக்கு மேலா
கப் பெருகின; எங்கள் குற்றம் வானபரியந்
தம் வளர்ந்துபோயிற்று. எங்கள் பிதாக் 7
களின் நாட்கள்முதல் இந்நாள்மட்டும்
நாங்கள் பெரிய குற்றத்துக்கு உள்ளானவர்
களே. எங்கள் குற்றங்களினிமித்தம் நாங்
களும் எங்கள் ராஜாக்களும் எங்கள் ஆசாரி
யரும் அந்நியதேச ராஜாக்களின் கையிலே
ஒப்புக்கொடுக்கப்பட்டுப் பட்டயத்துக்கும்
சிறைக்கும் கொள்ளைக்கும் வெட்கத்துக்கும்

ஆளானேம்; இந்நாள்வரை அப்படியே
8 இருக்கிறது. இப்பொழுதோ எங்கள் கடவுளாகிய யெகோவாவினாலே சிறிது காலமாக எங்களுக்கு இரக்கம் கிடைத்தது; எங்களிலே தப்பின சிலரை மீதியாகவைத்தார்; தமது பரிசுத்தஸ்தலத்திலே எங்களுக்கு அடிவைக்கும் இடங்கொடுத்தார்; இப்படியாக எங்கள் கடவுள் எங்கள் கண்களைத் தெளிவாக்கி எங்கள் அடிமைத்தனத்திலே
9 எங்கள் உயிருக்குச் சிறிது ஆதாரம் அளித்தார். நாங்கள் அடிமைகளாயிருக்கிறோம்; எங்கள் கடவுளே, எங்கள் அடிமைத்தனத்திலே எங்களைக் கைவிடாமல் எங்கள் உயிரை ஆதரிப்பதற்கென்றும் நாங்கள் எங்கள் கடவுளின் ஆலயத்தை எடுப்பித்து, பாழாய்ப்போன அதை புதுப்பிப்பதற்கென்றும் எங்களுக்கு யூதாவிலும் எருசலேமிலும் ஒரு வேலியைக் கட்டனியிடுவதற்கென்றும் பாரசீக ராஜாக்கள் சமுகத்தில் எங்களுக்குத் தயைகிடைக்கச் செய்தார்.
10 இப்பொழுதும் எங்கள் கடவுளே, இவற்றின் பின் நாங்கள் சொல்லக்கூடியது என்ன? உமது கட்டனைகளை விட்டுவிட்
11 டோம். தேவரீர் உமது ஊழியராகிய தீர்க்கதரிசிகளைக் கொண்டு எங்களுக்குக் கட்டனையிட்டு: நீங்கள் சொந்தமாக்கிக் கொள்ளப்போகும் தேசமானது அந்நியதேச ஜனங்களின் திட்டினால் தீட்டானது, அதில் ஒருமூலைதொடங்கி மறுமூலைமட்டும் தங்கள் அசுத்தத்தினாலே அருவருப்புகள்
12 நிறைந்திருக்கச் செய்தார்கள். இப்போதும் நீங்கள் உங்கள் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும் அவர்கள் குமாரத்திகளை உங்கள் குமாரருக்குக் கொள்ளாமலும் அவர்கள் சுகத்தையும் வாழ்வையும் ஒருக்காலும் நாடாமலும் இருங்கள்; மனேபலங்கொண்டு தேசத்திலிருக்கும் நலமானவற்றை நீங்களும் அனுபவித்து உங்கள் பிள்ளைகளுக்கும் அவற்றை என்றென்றும் சொந்தமாக விட்டுப்போவதற்கு இதுவே வழியாம் என்று சொன்னீரே.
13 இப்பொழுதும் எங்கள் கடவுளே, எங்கள் பொல்லாத செய்கைகளினாலும் எங்கள் பெரிய குற்றத்தினாலும் இவைகளெல்லாம் எங்கள்மேல் வந்தும் தேவரீர் எங்கள் அக்கிரமத்தினளவாய் எங்களைத் தண்டியாமல் எங்களில் சிலரைத் தப்பவிட்டிருக்கிறீர்;
14 அப்படியிருக்க நாங்கள் மறுபடியும் உமது கட்டளைகளை மீறி இந்த அருவருப்புகளை நடப்பிக்கும் ஜனங்களோடே சம்பந்தங்கலப்பது தகுமோ? அப்படிச் செய்தால் எங்களில் ஒருவரும் மீந்து தப்பாதபடி எங்களை நிர்மூலமாக்குமட்டும் தேவரீர் எங்கள்
15 மேல் கோபமாயிருப்பீரல்லவோ? இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவே, நீர் நீதியுள்ளவர்; ஆகையால், இந்நாளில் இருக்கிறதுபோல எங்களில் சிலரே தப்பி மீந்திருக்கிறோம்; இதோ, நாங்கள் குற்றத்திற்குள்ளானவர்களாய் உமக்கு முன்பாகக் கிடக்கிறோம்; இப்படிப்பட்டவைகளைச் செய்திருக்கிறவர்கள் உமக்கு முன்பாக நிலைநிற்கமுடியாதே என்று பிரார்த்தித்தேன்.

10 எஸ்ரா இப்படி விண்ணப்பம்பண்ணி அறிக்கையிட்டு அழுது, கடவுளின் ஆலயத்துக்கு எதிரே தாழவிழுந்து கிடக்கையில் இஸ்ரவேலில் புருஷரும் ஸ்திரீகளும் பிள்ளைகளுமான மகா பெரிய சபை அவனிடத்தில் வந்து கூடிற்று; ஜனங்கள் மிகவும்
2 அழுதார்கள். அப்பொழுது ஏலாமின் சந்ததியைச் சேர்ந்த யெகியேலின் குமாரன் செகனியா எஸ்ராவோடு பேசி: நாங்கள் தேசத்திலிருக்கிற ஜனங்களில் அந்நியஸ்திரீகளைச் சேர்த்துக்கொண்டதினால் எங்கள் கடவுளுக்குத் துரோகஞ்செய்தோம்; ஆயினும் இந்த விஷயத்திலே இன்னும் இஸ்ரவேலுக்கு நம்பிக்கை உண்டு. இப்பொழு
3 தும் அந்த ஸ்திரீகள் எல்லாரையும் அவர்களிடம் பிறந்தவர்களையும் என் ஆண்டவனுடைய ஆலோசனைக்கும் நமது கடவுளின் கட்டளைக்கு நடுங்குகிறவர்களின் ஆலோசனைக்கும் ஏற்றபிரகாரம் அகற்றிப்போடுவோம் என்று நமது கடவுளோடே உடன்படிக்கை செய்வோம்; நியாயப்பிரமாணத்தின்படியே செய்யப்படுவதாக. எழுந்திரும்;
4 இந்தக் காரியத்தை நடப்பிக்கவேண்டியவர் நீரே; நாங்களும் உம்மோடே இருப்போம்; நீர் மனேபலங்கொண்டு இதைச் செய்யும் என்றான். அப்பொழுது எஸ்ரா
5 எழுந்திருந்து ஆசாரியருக்கும் லேவியருக்கும் சகல இஸ்ரவேலருக்கும் தலைவராயிருந்தவர்களை, சொல்லப்பட்டபடியே செய்வோம் என்று ஆணையிடச் சொன்னான், அவர்கள் ஆணையிட்டார்கள். அதின்பின்பு
6 கடவுளின் ஆலயத்துக்கு எதிரே இருந்த எஸ்ரா எழுந்து, எலியாஷீபின் குமாரனாகிய யோகனானின் அறைக்குட் சென்றான்; அங்கே வந்தபோது, அவன் சிறையிருப்பிலிருந்து திரும்பினவர்களுடைய துரோகத்தினிமித்தம் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் துக்கித்துக்கொண்டிருந்தான்.
7 அப்பொழுது யூதாவிலும் எருசலேமிலும் விளம்பரம்பண்ணி, சிறையிருப்பிலிருந்து திரும்பினவர்கள் எல்லாரும் எருசலேமிலே
8 வந்து கூடவேண்டும் என்றும், தலைவர் மூப்

பாகளுடைய ஆலோசனையின்படியே மூன்று நாளைக்குள்ளே வராதவன் எவனே அவனுடைய பொருளெல்லாம் ஒப்திசெய்யப்பட்டுச் சிறையிருப்பிலிருந்து திரும்பின சபைக்கு அவன் புறம்பாக்கப்படுவான் என்றும் 9 அறிவித்தார்கள். அப்படியே யூதா பென்யமீன் கோத்திரத்தார் அனைவரும் மூன்று நாளைக்குள்ளே எருசலேமிலே வந்து கூடினார்கள்; அது ஒன்பதாம் மாதம் இருபதாந்தேதி; ஜனங்கள் எல்லாரும் கடவுளின் ஆலயத்திற்கெதிரேயிருந்த வெளியிலே அந்தக் காரியத்தினிமித்தமும் அடைமழையினாலும் நடுங்கிக்கொண்டிருந்தார்கள். அப் 10 பொழுது ஆசாரியனாகிய எஸ்ரா எழுந்திருந்து அவர்களோடு பேசி: நீங்கள் இஸ்ரவேலின்மேலிருக்கிற குற்றத்தை அதிகரிக்கப்பண்ண அந்திய ஸ்திரீகளைச் சேர்த்துக் 11 கொண்டு துரோகஞ்செய்தீர்கள். இப்பொழுதும் நீங்கள் உங்கள் பிதாக்களின் கடவுளாகிய யெகோவாவினிடம் உங்கள் பாவத்தை அறிக்கையிட்டு அவருடைய திருச்சித்தத்தின்படியே செய்து, தேசத்திலிருக்கிற ஜனங்களையும் அந்திய ஸ்திரீகளையும் விட்டு 12 விலகுங்கள் என்றான். அப்பொழுது சபையார் யாவரும் மகா சத்தத்தோடே பதிலுரைத்து: ஆம், நீர் சொல்லுகிறபடியே செய்ய 13 வேண்டியதுதான். ஆனாலும் ஜனங்கள் திரளானவர்கள், காலம் மாரிகாலம், இங்கே வெளியிலே நிற்க எங்களாலே முடியாது; மேலும் இது ஒருநாள் இரண்டுநாள் வேலையல்ல; இவ்விஷயத்தில் நாங்கள் செய்த 14 குற்றமும் மிகப்பெரியது. ஆகவே இதற்கு எங்கள் தலைவர் சபைமுழுவதற்கும் விசாரிப்புக்காரராக வைக்கப்படவேண்டும்; இந்தக் காரியத்தினிமித்தம் நமது கடவுளுக்கு இருக்கிற உக்கிரகோபம் எங்களைவிட்டுத் திரும்பும்படி எங்கள் ஊர்களில் அந்திய ஸ்திரீகளைச் சேர்த்துக்கொண்ட அனைவரும் ஊரின் அந்தந்த மூப்பரோடும் நியாயாதிபதிகளோடும் குறித்த காலங்களில் 15 வரவேண்டும் என்றார்கள். அசாவேலின் குமாரன் யோனத்தானும் திக்வாவின் குமாரன் யக்சியாவுமாத்திரம் இதை எதிர்த்தார்கள்; மெசுல்லாமும் லேவியனான ஷபெதாயும் அவர்களுக்குத் துணையாயிருந்தார்கள். 16 சிறையிருப்பிலிருந்து திரும்பினவர்களோ எஸ்ரா சொன்னபடியே செய்தார்கள்; ஆசாரியனாகிய எஸ்ராவும் தங்கள் தங்கள் பிதாக்களுடைய குடும்பத்தின்படியே பேர்பேராக அழைக்கப்பட்ட வம்சத்தலைவர் அனைவரும் இதற்கென்று நியமிக்கப்பட்டார்கள்; அவர்கள் பத்தாம்மாதம் முதல்தேதியிலே இக்காரியத்தை விசாரிப்பதற்கு உட்கார்ந்து | அந்தியஸ்திரீகளைச் சேர்த்துக்கொண்ட 17 வர்கள் எல்லாருடைய காரியங்களையும் முதலாம்மாதம் முதல்தேதியிலே விசாரித்து முடித்தார்கள்.

ஆசாரிய புத்திரரில் அந்திய ஸ்திரீகளைச் 18 சேர்த்துக்கொண்டவர்களாகக் காணப்பட்டவர்கள் இவர்களே: யோத்சதாக்கின் குமாரனாகிய யேஷூவாவின் குமாரரிலும் அவன் சகோதரரிலும், மாசேயா, எலியேசர், யாரீப், கெதலியா என்பவர்கள். இவர்கள் 19 தங்கள் ஸ்திரீகளைத் தள்ளிவிடுவதாகக் கையடித்துக் கொடுத்தார்கள்; தங்கள் குற்றத்தினிமித்தம் அவர்கள் செலுத்திய குற்றநிவாரண பலி ஒரு ஆட்டுக்கடா. இம்மேரின் 20 புத்திரரில் கனானியும் செபதியாவும்; காரிம் 21 புத்திரரில் மாசேயா, எலியா, ஷெமாயா, யெகியேல், உசியா என்பவர்கள்; பஷ்கூரின் புத்திரரில் எலியோயேனாய், 22 மாசேயா, இஸ்மவேல், நதனெயேல், யோசபாத், எலியாசா என்பவர்கள்; லேவியரில் 23 யோசபாத், சிமேயீ, கெலீதா என்ற பேரு முள்ள கெலாயா, பெதகியா, யூதா, எலியேசர் என்பவர்கள்; பாடகரில் எலியாசீப்; வாசல் காவலாளரில் சல்லூம், 24 தேலேம், ஊரி என்பவர்கள்; மற்ற இஸ்ரவேலரில் பாரோஷின் புத்திரரில் ரமியா, 25 யிசியா, மல்கியா, மீயாமின், எலெயாசார், மல்கியா, பெனாயா என்பவர்கள்; ஏலாமின் 26 புத்திரரில் மத்தனியா, சகரியா, யெகியேல், அப்தி, யெரேமோத், எலியா என்பவர்கள்; சத்தூவின் புத்திரரில் எலியோயேனாய், 27 எலியாஷீப், மத்தனியா, யெரேமோத், சாபாத், அசீசா என்பவர்கள்; பேபாயின் 28 புத்திரரில் யோகனான், கனனியா, சாபாயி, அத்லாயி என்பவர்கள்; பானியின் புத்திரரில் மெசுல்லாம், மல்லூக், அதாயா, 29 யாஷூப், ஷெயால், எரேமோத் என்பவர்கள்; பாகாத்மோவாபின் புத்திரரில் அத்னா, 30 கெலால், பெனாயா, மாசேயா, மத்தனியா, பெசலெயேல், பின்னூயி, மனாசே என்பவர்கள்; காரிமின் புத்திரரில் எலியேசர், 31 யிஷியா, மல்கியா, செமாயா, சிமியோன், 32 பென்யமீன், மல்லூக், ஷெமரியா என்பவர்கள்; காசூமின் புத்திரரில் மத்னாயி, 33 மத்தத்தா, சாபாத், எலிப்பேலேத், எரெமாயி, மனாசே, சிமேயி என்பவர்கள்; பானி 34 யின் புத்திரரில் மாதாய், அம்ராம், ஊவேல், | பெனாயா, பேதியா, கெல்லூகி, | வனி 35, 36 யா, மெரேமோத், எலியாஷீப், | மத்த 37 னியா, மத்தெனாய், யாசூ, | பானி, பின் 38 னூயி, சிமேயி, | ஷெலேமியா, நாத்தான், 39

40 அதாயா, | மக்காத்பாய், ஷாஷாய், ஷா
41 ராய், | அசரயேல், ஷெலேமியா, ஷெம
42 ரியா, | சல்லூம், ஆமரியா, யோசேப்பு என்
43 பவர்கள்; நேபோவின் புத்திரரில் யெயி
யேல், மத்தித்தியா, சாபாத், செபீனா, யத்
தாய், யோவேல், பெனாயா என்பவர்கள்.
இவர்கள் எல்லாரும் அந்நிய ஸ்திரீகளைச் 44
சேர்த்துக்கொண்டவர்கள்; இந்த ஸ்திரீக
ளில் சிலர் பிள்ளைகளைப் பெற்றிருந்தார்
கள்.

## NEHEMIAH

# நெகேமியா

**1** 1 ஆகலியாவின் குமாரனாகிய நெகேமியா
வைப்பற்றிய விவரம்: இருபதாம் வருஷம்
கிஸ்லேவ் மாதத்தில் நான் சூசான் கோட்
2 டையில் இருந்தபோது | என் சகோதரரில்
ஒருவனாகிய ஆனானியும் வேறே சிலரும்
யூதாவிலிருந்து வந்தார்கள்; அவர்களிடத்தில்
நான் சிறையிருப்பில் தப்பி மீந்த யூதரின்
செய்தியையும் எருசலேமின் செய்தியையும்
3 விசாரித்தேன். அதற்கு அவர்கள்: சிறை
யிருப்பில் மீந்திருக்கிறவர்கள் அந்த நாட்
டிலே மகா தீங்கையும் நிந்தையையும்
அநுபவிக்கிறார்கள்; எருசலேமின் அலங்
கம் இடிபட்டும் அதின் வாசல்கள் அக்கினி
யால் சுட்டெரிக்கப்பட்டும் கிடக்கின்றன
என்றார்கள்.
4 இந்த வார்த்தைகளைக் கேட்கவே நான்
உட்கார்ந்து அழுது, துக்கங்கொண்டவ
னாய்ச் சிலநாள் உபவாசித்து பரலோகத்
5 தின் கடவுளை நோக்கி மன்றாடி: ஆ யெகோ
வாவே, பரலோகத்தின் கடவுளே, மகத்துவ
முள்ள பயங்கர தெய்வமே, உம்மில்
அன்புகூர்ந்து உமது கட்டளைகளைக் கைக்
கொள்ளுகிறவர்கள் விஷயத்தில் கிருபை
யுள்ள உடன்படிக்கையை நிறைவேற்று
6 கிறவரே, அடியேனுடைய ஜெபத்தைக்
கேட்பதற்கு உமது திருச்செவி கவனித்
திருப்பதாக, உமது திருக்கண்கள் திறந்
திருப்பதாக; உமது அடியாராகிய இஸ்ர
வேல் புத்திரருக்காக இப்பொழுது இரவும்
பகலும் உமக்கு முன்பாக மன்றாடுகிறேன்;
இஸ்ரவேல் புத்திரராகிய நாங்கள் உமக்கு
விரோதமாகச் செய்த பாவங்களை அறிக்கை
யிடுகிறேன்; நானும் என் பிதாப்பன் வீட்டா
7 ரும் பாவஞ்செய்தோம். நாங்கள் உமக்கு
முன்பாக மிகவும் கெட்டவர்களாய் நடந்
தோம்; உம்மை ஊழியனாகிய மோசேக்கு நீர்
இட்ட கட்டளைகளையும் நியமங்களையும்
தீர்ப்புகளையும் கைக்கொள்ளாதே போ
னோம். தேவரீரோ உமது ஊழியனாகிய 8
மோசேக்குக் கட்டளையிட்டருளிய வாக்கை
நினைப்பீராக, நீங்கள் துரோகஞ்செய்தால்
நான் உங்களைப் புறஜாதிகளுக்குள்ளே சித
றடிப்பேன்; எனினும் நீங்கள் என்னிடம் 9
திரும்பி என் கட்டளைகளைக் கைக்கொண்டு
அவைகளின்படி செய்வீர்களானால், உங்க
ளிலே துரத்துண்டுபோனவர்கள் வானத்தின்
கடையாந்தரத்தில் இருந்தாலும் நான் அங்
கேயிருந்து அவர்களைக் கூட்டிச் சேர்த்து
என் நாமம் தரித்திருக்கும்படி நான் தெரிந்து
கொண்ட ஸ்தலத்துக்கு அவர்களைக்கொண்டு
வருவேன் என்று சொன்னீரே, தேவரீர் 10
உமது மகா வல்லமையினாலும் உமது பலத்த
கரத்தினாலும் மீட்டுக்கொண்ட உமது அடி
யாரும் உமது ஜனங்களும் இவர்கள்தானே.
ஆண்டவரே, அடியேனின் ஜெபத்தையும் 11
உமது திருநாமத்துக்குப் பயந்து நடக்க
ஆசிக்கும் உமது அடியாரின் ஜெபத்தையும்
உமது திருச்செவி கவனித்திருப்பதாக;
இந்நாளில் அடியேனின் காரியத்தை வாய்க்
கச்செய்து இந்த மனுஷனுக்கு முன்பாக
எனக்கு இரக்கம் கிடைக்கப்பண்ணியரு
ளும் என்று பிரார்த்தித்தேன். நான் ராஜா
வுக்குப் பானபாத்திரக்காரனாயிருந்தேன்.
அர்தசஷ்டா ராஜாவின் இருபதாம்வரு **2**
ஷம் நீசான் மாதத்திலே, திராட்சரசம் ராஜா
வுக்குமுன்பாக வைத்திருக்கையில் நான்
அதை எடுத்து அவருக்குக்கொடுத்தேன்;
நான் முன் ஒருபோதும் அவர் சமுகத்தில்
துக்கமுகமாயிருந்ததில்லை. அப்பொழுது 2
ராஜா என்னைப் பார்த்து: நீ துக்கமுகமா
யிருப்பது என்ன? உனக்கு வியாதியில்லையே,
இது மனதுக்கமே ஒழிய வேறொன்றும்
அல்ல என்றார்; நான் மிகவும் பயந்து |
ராஜாவை நோக்கி: ராஜா என்றும் வாழ்க; 3
என் பிதாக்களின் கல்லறைகள் இருக்கும்
நகரம் பாழாகி அதின் வாசல்கள் அக்கினி

யால் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்க நான் துக்கமுகமாய் இராதிருப்பது எப்படி என் 4 றேன். அப்பொழுது ராஜா என்னைப் பார்த்து: நீ விரும்புகிற காரியம் என்ன என்று கேட்கவே நான் பரலோகத்தின் கடவுளை 5 நோக்கி ஜெபம்பண்ணி | ராஜாவைப்பார்த்து: ராஜாவுக்குச் சித்தமிருந்து அடியேனுக்கு உமது சமுகத்தில் தயை கிடைத்தால் என் பிதாக்களின் கல்லறைகளிருக்கும் பட்டணத்தைத் திரும்பக்கட்டும்படி யூதா தேசத்துக்கு நீர் என்னை அனுப்பியருளும் 6 என்றேன். அப்பொழுது ராஜா, ராஜபத்தினியும் அவர் பக்கத்தில் உட்கார்ந்திருக்கையிலேயே, என்னைப் பார்த்து: உன் பிரயாணத்துக்கு எத்தனை நாள் செல்லும், நீ எப்பொழுது திரும்பிவருவாய் என்று கேட்டார். என்னை அனுப்ப ராஜா சித்தமாயிருந்தபடியால் நான் காலத்தைக் குறிப்பிட்டுச் சொன் 7 னேன். பின்னும் நான் ராஜாவினிடம்: ராஜாவுக்குச் சித்தமாயிருந்தால் நான் யூதா தேசத்துக்குப் போய்ச் சேருமட்டும் நதிக்கு அப்புறத்திலுள்ள தேசாதிபதிகள் என்னை வழிவிட்டனுப்பவேண்டுமென்று என் கையிலேயே அவர்களுக்குக் கடிதங்கள்கொடுக் 8 கும்படிக்கும் | தெய்வாலயத்தைச் சேர்ந்த கோட்டையின் கதவு வேலிக்கும் நகர அலங்கத்தின் வேலிக்கும் நான் தங்கப் போகிற வீட்டின் வேலிக்கும் வேண்டிய மரங்களை ராஜாவின் வன காவலனாகிய ஆசாப் எனக்குக் கொடுக்கவேண்டுமென்று அவனுக்கு ஒரு கடிதம் கொடுக்கும்படிக் கும் உத்தரவாகக் கேட்கிறேன் என்றேன்; என் கடவுளின் தயவுள்ள கரம் என்மேல் இருந்தபடியால் ராஜா அவைகளை எனக் குக் கொடுத்தார்.

9 அப்படியே நான் நதிக்கு அப்புறத்திலிருந்த தேசாதிபதிகளிடம் வந்து ராஜாவின் கடிதங்களை அவர்களுக்குக் கொடுத்தேன்; ராஜா என்னோடேகூட ராணுவத்தலைவரையும் குதிரைவீரரையும் அனுப்பியிருந்தார். 10 இதைக் கொரோனியனாகிய சன்பல்லாத்தும் அம்மோனிய அடிமையான தொபியாவும் கேட்டபோது இஸ்ரவேல் புத்திரரின் நன்மையை விசாரிக்க ஒருவன் வந்துவிட்டானே என்று அதிக மன வருத்தங் கொண்டார்கள்.

11 நான் எருசலேமுக்கு வந்து அங்கே 12 மூன்றுநாள் இருந்தபின்பு, | நான் ராத்திரியில் எழுந்து சில மனுஷரை என்னோடு கூட்டிக்கொண்டேன்; என் கடவுள் என் மனதைத் தூண்டி நான் எருசலேமுக்குச் செய்யும்படி எனக்குக் காட்டியிருந்தவை களை நான் ஒருவருக்கும் அறிவிக்கவில்லை; நான் ஏறிப்போன மிருகமேயல்லாமல் வேறெரு மிருகமும் என்னோடிருக்கவில்லை. 13 நான் அன்று இரவு பள்ளத்தாக்கு வாசல் வழியாய் வெளியேறி வலுசர்ப்பத் துரவைக் கடந்து குப்பை வாசலுக்கு வந்து எருசலேமில் இடிந்துபோன அலங்கத்தையும் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்ட அதின் வாசல்களையும் பார்வையிட்டேன். அவ் 14 விடத்தைவிட்டு ஊருணி வாசலண்டைக்கும் ராஜாவின் குளத்தண்டைக்கும் போனேன்; நான் ஏறியிருந்த மிருகம் அங்கே கடந்துபோகிறதற்கு வழியில்லை. அன்று இரவிலேயே நான் நீரோடை வழி 15 யாய்ப் போய் அலங்கத்தைப் பார்வையிட்டுத் திரும்பிப் பள்ளத்தாக்கு வாசல் வழியாய் வந்துவிட்டேன். நான் எங்கே 16 போனேன் என்பதும் என்ன செய்தேன் என்பதும் அதிபதிகள் ஒருவருக்கும் தெரியாது; அதுவரையிலும் நான் யூதருக்காகிலும் ஆசாரியர்கள் பெரியவர்கள் அதிபதிகளுக்காகிலும் வேலைசெய்கிற மற்றவர்களுக்காகிலும் ஒன்றும் அறிவிக்கவில்லை. பின்பு நான் அவர்களோடு பேசி: நமது 17 சிறுமையைப் பார்க்கிறீர்களே, இதோ, எருசலேம் பாழாயிருக்கிறது, அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கிறது, நாம் இன்னும் நிந்தைக்குள்ளிராதபடி எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, | என் 18 கடவுளின் கரம் நன்மைக்கேதுவாக என்மேல் இருக்கிறதென்றும் ராஜா என்னோடே இன்னின்னபடி சொன்னார் என்றும் அவர்களுக்கு அறிவித்தேன்; அப்பொழுது அவர்கள், எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி அந்த நல்வேலையைச் செய்யத் தைரியங்கொண்டார்கள்.

கொரோனியனை சன்பல்லாத்தும், அம் 19 மோனிய அடிமையான தொபியாவும், அரபியனை கேஷேமும் இதைக் கேட்டபோது, எங்களைப்பரியாசம்பண்ணி எங்களை நிந்தித்து: நீங்கள் செய்கிற இந்தக்காரியம் என்ன? நீங்கள் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணப் போகிறீர்களோ என்றார்கள். அதற்கு நான் பதிலுரைத்து: பர 20 லோகத்தின் கடவுளே எங்கள் காரியத்தை வாய்க்கச் செய்வார்; நாங்கள் அவருடைய ஊழியர், நாங்கள் எழுந்து கட்டுவோம்; உங்களுக்கோவென்றால் எருசலேமிலே பங்குமில்லை, பாத்தியமுமில்லை, பேருமில்லை யென்று அவர்களுக்குச் சொன்னேன்.

**3** அப்பொழுது பிரதான ஆசாரியனுகிய எலியாஷீபும் அவன் சகோதரராகிய ஆசாரியரும் எழுந்து ஆட்டுவாசலைக் கட்டினார்கள்; அதைக்கட்டி, அவர்கள் பிரதிஷ்டைபண்ணி அதின் கதவுகளை வைத்தார்கள்; பின்பு மேயாகோபுரமுதல் கனனெயேல் கோபுரமட்டும்கட்டிப் பிரதிஷ்டைபண்ணினார்கள். **2** அவர்கள் அருகே எரிகோ ஊரார் கட்டினார்கள்; இவர்கள் அருகே இம்ரியின் குமாரனுகிய சக்கூர் கட்டினான். **3** மீன்வாசலை அசெனுவின் குமாரர் கட்டினார்கள்; அதற்கு உத்திரம் பாவி அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பாள்களை **4** யும் போட்டார்கள். அவர்கள் அருகே அக்கோசின் குமாரனுகிய உரியாவின் மகன் மெரேமோத் பழுதுபார்த்தான்; அவர்கள் அருகே மெஷேசாபெயேலின் குமாரனுகிய பெரகியாவின் மகன் மெசுல்லாம் பழுதுபார்த்தான்; அவர்கள் அருகே பானுவின் குமாரனுகிய சாதோக் பழுதுபார்த்தான். **5** அவர்கள் அருகே தெக்கோவா ஊரார் பழுதுபார்த்தார்கள்; அவர்கள் மேன்மக்களோ தங்கள் ஆண்டவனிட்ட வேலையைக் குனிந்து செய்ய முன்வரவில்லை. **6** பழைய வாசலைப் பாசெயாகின் குமாரன் யோயாதாவும் பெசோதியாவின் குமாரன் மெசுல்லாமும் பழுதுபார்த்தார்கள்; அவர்கள் அதற்கு உத்திரம்பாவி அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பாள்களை **7** யும் போட்டார்கள். அவர்கள் அருகே மெலதியா என்னும் கிபியோனியனும் யாதோன் என்னும் மெரொனோத்தியனும் அவர்களோடு கிபியோன், மிஸ்பா ஊர்களின் ஆட்களும் நதிக்கு மேல்புறத்திலுள்ள தேசாதிபதியின் நியாயஸ்தலம்வரைக்கும் **8** பழுதுபார்த்தார்கள். அவர்கள் அருகே தட்டாரில் ஒருவனுகிய காயாவின் குமாரன் ஊசியேல் பழுதுபார்த்தான்; அவன் அருகே பரிமளக்காரரில் ஒருவன் குமாரனுகிய கனனியா பழுதுபார்த்துக் கட்டினான்; அதுமுதற்கொண்டு அகலமான மதில் மட்டும் எருசலேமை இடிக்காமல் விட் **9** டிருந்து | அவர்கள் அருகே எருசலேம் மாகாணத்தின் பாதிக்கு அதிபதியாகிய கூரின் குமாரன் ரெப்பாயா பழுதுபார்த்தான். **10** அவர்கள் அருகே கருமாப்பின் குமாரன் யெதாயா தன் வீட்டுக்கு எதிரானதைப் பழுதுபார்த்தான்; அவன் அருகே கஷெப் நெயாவின் குமாரன் கத்தூஷ் பழுதுபார்த் **11** தான். மற்றொரு பாகத்தையும் சூளைக் கோபுரத்தையும் காரிமின் குமாரன் மல்கியாவும் பாகாத்மோவாபின் குமாரன் கஷூபும் பழுதுபார்த்தார்கள். அவன் அருகே **12** எருசலேம் மாகாணத்தின் மறுபாதிக்கு அதிபதியாகிய அலோகேஷின் குமாரன் சல்லூமும் அவன் குமாரத்திகளும் பழுதுபார்த்தார்கள்.

பள்ளத்தாக்கின் வாசலைக் காஞனும் **13** சனோவாகின் குடிகளும் பழுதுபார்த்தார்கள்; அவர்கள் அதைக் கட்டி அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பாள்களையும் போட்டுக் குப்பைவாசல்வரை அலங்கத்தில் ஆயிரம் முழம் கட்டினார்கள். குப்பைவாசலைப் பெத்கேரேம் மாகாணத்து **14** அதிபதியாகிய மல்கியா, ரெக்காவின் குமாரன், பழுதுபார்த்தான்; அவனே அதைக் கட்டி அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பாள்களையும் போட்டான்.

ஊருணிவாசலை மிஸ்பா மாகாணத்து அதி **15** பதியாகிய சல்லூம், கொல்கோசேயின் குமாரன், பழுதுபார்த்தான்; அவனே அதைக் கட்டி மச்சுப்பாவி, அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பாள்களையும் போட்டு ராஜாவின் சிங்காரத்தோட்டத்துக்கு நீர்ப் பாய்ச்சும் குளத்தை ஒட்டிய மதிலையும் தாவீதின் நகரத்திலிருந்து இறங்குகிற படிகள்வரையுள்ளதையும் கட்டினான். அவ **16** னுக்குப் பின்னகப் பேத்சூர் மாகாணத்தின் பாதிக்கு அதிபதியாகிய நெகேமியா, அஸ்பூக்கின் குமாரன், தாவீதின் கல்லறைகளுக்கு எதிரான இடமட்டாகவும் வெட்டுக்குளமட்டாகவும் ராணுவக்கூடமட்டாகவும் உள்ள மதிலைப் பழுதுபார்த்தான். அவனுக்குப் பின்னக லேவியரிலே பானி **17** யின் குமாரன் ரெகூம் பழுதுபார்த்தான்; அவன் அருகே கேகிலா மாகாணத்தின் பாதிப்பாகத்து அதிபதியாகிய கசபியா தன் மாகாணத்தார் பேரால் கட்டினான். அவனுக்குப் பின்னக அவன் சகோதரரில் **18** கேகிலா மாகாணத்து மறுபாதிக்கு அதிபதியாகிய பவ்வாய், கேனதாதின் குமாரன், பழுதுபார்த்தான். அவன் அருகே மிஸ் **19** பாவின் பிரபுவாகிய ஏசர், யேஷூவாவின் குமாரன், மூனையிலே ஆயுதசாலைப் படிகளுக்கு எதிரேயுள்ள மற்றொரு பாகத்தைப் பழுதுபார்த்தான். அவனுக்குப் பின்னகச் **20** சாபாயின் குமாரன் பாரூக், அந்த மூனை துவக்கிப் பிரதான ஆசாரியனுகிய எலியாஷீபின் வாசற்படிமட்டுமுள்ள பின்னொரு பாகத்தை உற்சாகமாய் பழுதுபார்த்தான். அவனுக்குப் பின்னக அக்கோசின் குமார **21** னுகிய உரியாவின் மகன் மெரேமோத் எலியாஷீபின் வீட்டு வாசற்படி துவக்கி அவனுடையவீட்டின் கடைகோடிமட்டுமுள்ள

மற்றொரு பாகத்தைப் பழுதுபார்த்தான்.
22 அவனுக்குப் பின்னுகச் சமபூமியில் வாசமா
யிருந்த ஆசாரியர்கள் பழுதுபார்த்தார்கள்.
23 அவர்களுக்குப் பின்னுகப் பென்யமீனும்
கஷூபும் தங்கள் வீட்டுக்கு எதிரேயுள்ள
தைப் பழுதுபார்த்தார்கள்; அவர்களுக்குப்
பின்னுக அனனியாவின் குமாரனுகிய மாசே
யாவின் மகன் அசரியா தன் வீட்டின்
24 அருகேயுள்ளதைப் பழுதுபார்த்தான். அவ
னுக்குப் பின்னுகக் கேனுதாதின் குமாரன்
பின்னூயி அசரியாவின் வீடு துவக்கி மூலை
மட்டும் வளைவு வரைக்குமுள்ள வேறொரு
25 பாகத்தைப் பழுதுபார்த்தான். ஊசாயின்
குமாரன்பாலால் மூலைக்கு எதிரேயும் சிறைச்
சாலை முற்றத்துக்கடுத்த ராஜாவின் மேல்
அரமனைக்கு வெளிப்புறமாயுள்ள கோபுரத்
துக்கு எதிரேயுமுள்ளதைக் கட்டினுன்;
அவனுக்குப் பின்னுகப் பாரோஷின் குமா
26 ரன் பெதாயா கட்டினுன். ஓபேலிலே குடி
யிருந்த கோவில் வேலையாட்கள் கிழக்கே
யிருந்த தண்ணீர் வாசலுக்கு எதிரேயும்
வெளிப்புறமான அந்தக் கோபுரத்துக்கு
27 எதிரேயும் கட்டினுர்கள். அவர்களுக்குப்
பின்னுகத் தெக்கோவா ஊழார் வெளிப்புற
மான பெரிய கோபுரத்துக்கு எதிரே ஒபே
லின் மதில்மட்டுமுள்ள பின்னெருபாகத்
தைப் பழுதுபார்த்தார்கள்.
28 குதிரைவாசல் முதற்கொண்டு ஆசாரி
யர்கள் அவரவர் தத்தம் வீடுகளுக்கு எதிரே
29 யுள்ளதைப் பழுதுபார்த்தார்கள். அவர்க
ளுக்குப் பின்னுக இம்மேரின் குமாரன்
சாதோக் தன் வீட்டுக்கு எதிரே இருந்த
தைப் பழுதுபார்த்தான்; அவனுக்குப்
பின்னுகக் கிழக்குவாசலுக் காக்கிற ஷெமா
யா, ஷெகனியாவின் குமாரன், பழுது
30 பார்த்தான். அவனுக்குப்பின்னுக ஷெலேமி
யாவின் குமாரன் கனனியாவும் சாலாபின்
ஆறுவது குமாரனுகிய காஞனும் வேறொரு
பங்கைப் பழுதுபார்த்தார்கள்; அவர்களுக்
குப் பின்னுகப் பெரகியாவின் குமாரன்
மெசுல்லாம் தன் அறைவீட்டுக்கு எதிரே
31 யுள்ளதைப் பழுதுபார்த்தான். அவனுக்
குப்பின்னுகத் தட்டாரில் ஒருவனுகிய மல்
கியா சேனைகூடுகிற வாசலுக்கு எதிரே
கோவில் வேலையாட்களும் வியாபாரிகளும்
குடியிருந்த ஸ்தலமுதல் மூலையின் மேல்வீடு
மட்டாகவும் உள்ளதைப் பழுதுபார்த்தான்.
32 மூலையின் மேல்வீட்டுக்கும் ஆட்டுவாசலுக்
கும் நடுவே இருந்தைத் தட்டாரும் வியா
பாரிகளும் பழுதுபார்த்துக் கட்டினுர்கள்.

**4** நாங்கள் அலங்கத்தைக் கட்டுகிற செய்
தியைச் சன்பல்லாத் கேட்டபோது அவன்
கோபித்து எரிச்சலடைந்து யூதரைப் பரி
யாசம் பண்ணினுன். இந்த அற்பமான 2
யூதர் செய்கிறது என்ன! தங்களுக்கு இடங்
கிடைக்குமென்று நினைக்கிறார்களோ! பலி
யிடுவார்களோ! என்றைக்காவது முடிப்
பார்களோ! எரிந்து மண்மேடுகளாய்க்
கிடக்கும் கற்களுக்கு உயிர்கொடுப்பார்க
ளோ என்று தன் சகோதரருக்கும் சமாரி
யாவின் சேனைக்கும் முன்பாகச் சொன்
னுன். அப்பொழுது அம்மோனியனுகிய 3
தொபியா அவன் பக்கத்திலே நின்று: அவர்
கள் இஷ்டம்போல் கட்டட்டுமே, ஒரு நரி
ஏறிப்போனுல் அவர்கள் கல்மதில் இடிந்து
போகும் என்றுன்.

எங்கள் கடவுளே, நாங்கள் அவமானத் 4
திற்குள்ளாகிறோமே, பாரும்; அவர்கள் பேசு
கிற நிந்தையான பேச்சை அவர்கள் தலை
யின்மேல் திருப்பிவிடும், அவர்கள் அந்திய
நாட்டுக்குச் சிறையாகிப்போய்ச் சூறையா
கச்செய்யும். அவர்கள் அக்கிரமத்தை 5
மூடிப்போடாதேயும், அவர்கள் பாவம்
உமக்கு முன்பாக அழிக்கப்படாதிருப்ப
தாக, கட்டுகிறவர்களின் எதிரே மனம்நோ
கப் பேசினுர்களே.

நாங்களோ அலங்கத்தைக் கட்டிவந் 6
தோம்; அலங்கமுழுதும் பாதி உயரமட்டும்
கட்டிமுடிந்தது; ஜனங்கள் வேலை செய்கிற
தற்கு ஆவலாயிருந்தார்கள்.

எருசலேமின் அலங்கத்தைப் பழுது 7
பார்க்கிற வேலை நடந்தேறுகிறது என்றும்
இடிக்கப்பட்ட இடங்கள் அடைபட்டு
வருகின்றன என்றும் சன்பல்லாத்தும்
தொபியாவும் அரபியரும் அம்மோனியரும்
அஸ்தோத்தியரும் கேள்விப்பட்டபோது
அவர்கள் மிகவும் கோபங்கொண்டு,
எருசலேமின்மேல் யுத்தம்பண்ணப்போக 8
வும் வேலையைத் தடுக்கவும் எல்லாரும் ஏக
மாய்க் கட்டுப்பாடு பண்ணினுர்கள். நாங் 9
களோ எங்கள் கடவுளை நோக்கி ஜெபம்
பண்ணி அவர்களால் மோசம் நேரிடாதபடி
இரவும் பகலும் காவற்காரரை வைத்தோம்.
அப்பொழுது யூதாகாட்டார் வந்து: சுமை 10
காரின் பலம் குறைந்துபோகிறது, மண்
மேடோ அதிகமாயிருக்கிறது, நாங்கள்
அலங்கத்தைக் கட்டமுடியாது என்று
சொன்னுர்கள். எங்கள் சத்துருக்களோ 11
வென்றால்: அவர்கள் அறியாமலும் பாராம
லும் இருக்கையிலேயே நாங்கள் அவர்கள்
நடுவே சென்று அவர்களைக் கொன்றுபோடு
வோம், இவ்விதமாக அந்த வேலையை ஒயப்
பண்ணுவோம் என்றார்கள். அவர்கள் பக் 12
கத்தில் குடியிருந்த யூதர் பலதடவை எங்க

லிடம் வந்து, சகல இடங்களிலுமிருந்து அவர்கள் நமக்கு விரோதமாய் வருகிறார்கள் 13 என்று சொன்னார்கள். அப்பொழுது நான்: அலங்கத்தின் பின்னே இருந்த பள்ளமான இடங்களிலும் வெளிகளிலும் பட்டயம், ஈட்டி, வில் இவற்றைப் பிடிக்கும்ஜனங்களைக் 14 குடும்பங் குடும்பமாக நிறுத்தினேன். அவர்களைப் பார்க்கவே நான் எழுந்து, பெரியோரையும் அதிபதிகளையும் மற்ற ஜனங்களையும் நோக்கி: சத்துருக்களுக்குப் பயப்படவேண்டாம், நீங்கள் மகத்துவமும் பயங்கரமுமான ஆண்டவரை நினைத்து உங்கள் சகோதரருக்காகவும் உங்கள் குமாரருக்காகவும் உங்கள் குமாரத்திகளுக்காகவும் உங்கள் மனைவிகளுக்காகவும் உங்கள் வீடுகளுக்காகவும் யுத்தம்பண்ணுங்கள் என்றேன்.

15 எங்களுக்குச் செய்தி தெரியவந்ததென்றும் கடவுள் அவர்கள் ஆலோசனையை அபத்தமாக்கினாரென்றும் எங்கள் பகைஞர் கேள்விப்பட்டார்கள்; அப்பொழுது நாங்கள் எல்லாரும் அவரவர் தத்தம் வேலையைச் செய்ய அலங்கத்துக்குத் திரும்பினோம்.

16 அன்றுமுதல் என்வேலையாட்களில் பாதிப்பேர் வேலைசெய்தார்கள், பாதிப்பேர் ஈட்டிகளையும் பரிசைகளையும் வில்லுகளையும் கவசங்களையும் பிடித்து நின்றார்கள்; அதிபதிகள் யூதாவம்சத்தார் எல்லாருக்கும் பின்

17 னாக நின்றார்கள். அலங்கத்திலே கட்டுகிறவர்களும் சுமை சுமக்கிறவர்களும் சுமையேற்றுகிறவர்களும் ஒருகையினாலே வேலை செய்து மறுகையினாலே எறிவல்லயம் பிடித்

18 திருந்தார்கள். கட்டுகிறவர்கள் தங்கள் பட்டயத்தைத் தங்கள் இடுப்பிலே கட்டிக்கொண்டவர்களாய் வேலைசெய்தார்கள்; எக்காளம் ஊதுகிறவன் என்னண்டையிலே

19 நின்றான். நான் பெரியோரையும் அதிபதிகளையும் மற்ற ஜனங்களையும் நோக்கி: வேலை பெரிது, இடம் விஸ்தாரமானது, நாம் அலங்கத்தின்மேல் நெடுந தூரமாயிருக்கிறோம். எவ்விடத்திலே எக்காள

20 சத்தம் கேட்கிறதோ அவ்விடத்திற்கு நீங்கள் வந்து எங்களோடே கூடுங்கள்; நமது கடவுள் நமக்காக யுத்தம்பண்ணுவார் என்

21 றேன். இப்படியே நாங்கள் வேலை செய்துகொண்டிருந்தோம்; அவர்களிலேபாதிப்பேர் விழக்கு வெளுக்கும் நேரமுதல் நட்சத்திரங்கள் வெளிப்படுமட்டும் ஈட்டிகளைப் பிடித்

22 திருந்தார்கள். அக்காலத்திலே நான் ஜனங்களோடு பேசி: இரவில் நமக்குக் காவலுக்கும் பகலில் வேலைக்கும் உதவியாயிருக்க அவனவன் தன்தன் வேலைக்காரனோடுகூட எருசலேமுக்குள்ளே ராத்தங்கவேண்டும் என்று சொன்னேன். நானுகிலும் என் 23 சகோதரராகிலும் என் வேலைக்காரராகிலும் என்னைடிருந்த காவல்காரராகிலும் எங்கள் வஸ்திரங்களைக் களைந்துபோடாதிருந்தோம்; ஒவ்வொருவருக்கும் தண்ணீரைப்போலவே ஆயுதமும் அவசியமாயிருந்தது.

5 யூதராகிய தங்கள் சகோதரருக்கு விரோதமாக ஜனங்களும் அவர்கள் ஸ்திரீகளும் பெரிய கூக்குரலிட்டார்கள். அவர்களில் 2 சிலர்: நாங்கள் எங்கள் குமாரரோடும் எங்கள் குமாரத்திகளோடும் பெரியகூட்டம், நாங்கள் சாப்பிட்டுப் பிழைக்கும்படி எங்களுக்குத் தானியம் கிடைக்கச் செய்யுங்கள் என்றார்கள். 3 வேறு சிலர்: எங்கள் நிலங்களையும் எங்கள் திராட்சத் தோட்டங்களையும் எங்கள் வீடுகளையும் நாங்கள் அடைமானமாகவைத்து இந்தப் பஞ்சத்திலே தானியம் வாங்கினோம் என்றார்கள். 4 மற்றும் சிலர்: ராஜாவுக்குத் தீர்வை செலுத்த நாங்கள் எங்கள் நிலங்கள்மேலும் எங்கள் திராட்சத் தோட்டங்கள்மேலும் பணத்தைக் கடனுக வாங்கினோம்; 5 எங்கள் உடல் எங்கள் சகோதரர் உடல் போன்றதுதான், எங்கள் பிள்ளைகளும் அவர்கள் பிள்ளைகளைப் போன்றவர்களே; ஆனாலும், இதோ, நாங்கள் எங்கள் குமாரரையும் எங்கள் குமாரத்திகளையும் அடிமைத்தனத்திற்கு உட்படுத்தவேண்டியதாயிருக்கிறது; இப்பொழுதும் எங்கள் குமாரத்திகளில் சிலர் அடிமைகளாயிருக்கிறார்கள்; அவர்களை மீட்க எங்களுக்கு திராணியில்லை; எங்கள் நிலங்களும் எங்கள் திராட்சத் தோட்டங்களும் வேறே மனிதர் கைவசமாயிற்று என்றார்கள்.

6 அவர்கள் கூக்குரலையும் இந்த வார்த்தைகளையும் கேட்டபோது நான் மிகவும் 7 கோபங்கொண்டேன். நான் என் மனதிலே ஆலோசனைபண்ணிப் பெரியோரையும் அதிபதிகளையும் கண்டித்து: நீங்கள் உங்கள் சகோதரர்மேல் வட்டி சுமத்துகிறீர்களே என்று சொல்லி அவர்களுக்கு விரோதமாக ஒரு பெரிய சபை கூடிவரச்செய்து 8 அவர்களோடு பேசி: புறஜாதியாருக்கு விற்கப்பட்டிருந்த யூதராகிய நமது சகோதரரை நாம் நமது சக்திக்குத்தக்கபடி மீட்டிருக்கையில் இவர்கள் நமக்கு விலைப்பட்டுப்போகும்படி நீங்கள் உங்கள் சகோதரரை விற்பது நியாயமா என்று கேட்டேன், அவர்கள் பேசாதிருந்தார்கள், பதில் சொல்ல அவர்களுக்கு வாயில்லை. 9 பின்னும் நான் அவர்களோடு பேசி: நீங்கள் செய்கிற இந்தக் காரியம் நல்லதல்ல; நமது பகைஞராகிய புறஜாதியார் நம்மை நிந்தித்துக்கொண்டிருக்

கையில் நீங்கள் நமது கடவுளுக்குப் பயந்து
10 நடக்கவேண்டாமா? நானும் என் சகோதரரும் என் ஆட்களும் அவர்களுக்குப் பணத்தையும் தானியத்தையும் கடனாகக் கொடுத்துவருகிறோம், நாம் இந்தக் கடன்
11 களைக் கேளாதிருந்து விடுவோமாக. நீங்கள் இன்றே அவர்கள் நிலங்களையும் அவர்கள் திராட்சத் தோட்டங்களையும் அவர்கள் ஒலிவத்தோப்புகளையும் அவர்கள் வீடுகளையும் கொடுத்துவிடுங்கள்; நீங்கள் அவர்களுக்குக் கடனாகக்கொடுத்த பணத்திலும் தானியத்திலும் திராட்சரசத்திலும் எண்ணெயிலும் அவர்களிடத்தில் தண்டிவருகிறவட்டியையும் அவர்களிடம் வாங்காதிருங்கள்
12 என்றேன். அதற்கு அவர்கள்: நாங்கள் அதைத் திரும்பக்கொடுத்துவிடுவோம்; அவர்களிடம் வட்டி கேட்கமாட்டோம்; நீர் சொல்லுகிறபடியே செய்வோம் என்றார்கள்; அப்பொழுது நான் ஆசாரியரை அழைத்து, இவர்கள் இந்த வார்த்தையின் படியே செய்ய அவர்களை ஆணையிடுவித்துக்
13 கொண்டேன். நான் என் வஸ்திரத்தை உதறி இந்த வார்த்தையை நிறைவேற்றாத எந்த மனிதனையும் அவன் வீட்டிலும் அவன் சம்பாத்தியத்திலும் இருந்து கடவுள் இப்படியே உதறிப்போடுவார்; இவ்விதமாக அவன் உதறிப்போடப்பட்டு வெறுமையாய்ப் போவானாக என்றேன்; அதற்குச் சபையார் எல்லாரும், ஆமேன் என்று சொல்லிவிட்டு யெகோவாவுக்கே துதி செலுத்தினார்கள். பின்பு இவர்கள் இந்த வார்த்தையின்படியே செய்தார்கள்.
14 நான் யூதாநாட்டிலே அதிபதியாயிருக்கும்படி அர்தசஷ்டா ராஜா என்னை ஏற்படுத்தின காலமுதல் பன்னிரண்டு வருஷமாய், அரசருடைய இருபதாம் வருஷம் தொடங்கி முப்பத்திரண்டாம் வருஷம் வரைக்கும், நானும் என் சகோதரரும் அதிபதிகளுக்குரிய படியை வாங்கிச் சாப்
15 பிடவில்லை. எனக்கு முன்னிருந்த அதிபதிகள் இவர்களுக்குப் பாரமாயிருந்து, அவர்களிடம் அன்றாட உணவு, திராட்சரசம் இவற்றுக்காக நாற்பது சேக்கல் வெள்ளியை வாங்கிவந்தார்கள்; அவர்கள் வேலைக்காரரும் அதிகாரமுள்ளவர்களைப்போல் இவர்களை நெருக்கினார்கள்; நானோ கடவுளுக்குப் பயந்ததினால் இப்படிச் செய்ய
16 வில்லை. அந்த அலங்கத்தின் வேலையிலே முயன்று நின்றேன்; ஒரு வயலையும் நான் சம்பாதிக்கவில்லை; என் வேலைக்காரரை வரும் அந்த வேலைக்கென்றே கூடிவந்தார்
17 கள். யூதரிலும் மூப்பரிலும் நூற்றைம்பது
பேரும் எங்களைச் சுற்றிலுமிருந்த புறஜாதிகளிடமிருந்து எங்களிடம் வந்தவர்களும் என் பந்தியில் சாப்பிட்டார்கள். நாளொன்றுக்கு ஒரு காளையும் முதல்தரமான ஆறு ஆடும் சமைக்கப்பட்டது, பட்சிகளும் சமைக்கப்பட்டது; இவையெல்லாம் என் செலவிலேயே சமைக்கப்பட்டன; பத்து நாளைக்கு ஒருதரம் நானுமித்த திராட்சரசமும் செலவழிந்தது; இப்படியெல்லாம் இருந்தும் ஜனங்கள் பட்ட கஷ்டம் அதிகமாயிருந்தபடியினால் அதிபதிகளுக்குரிய படியை நான் வாங்காமலிருந்தேன்.
18
19 என் கடவுளே, நான் இந்த ஜனத்துக்காகச்செய்த எல்லாவற்றையும் எனக்கு நன்மையுண்டாக நினைத்தருளும்.

6 நான் அலங்கத்தைக்கட்டி முடித்ததையும், இனி அதிலே திறப்பு ஒன்றுமில்லை என்பதையும்—வாசல்களுக்கு நான் இன்னும் கதவு போடவில்லை— சன்பல்லாத்தும் தொபியாவும் அரபியனான கேஷேமும் மற்றுமுள்ள எங்கள் பகைஞரும் கேள்விப்பட்டபோது | சன்பல்லாத்தும் கேஷேமும் 2
என்னிடம் ஆள் அனுப்பி: நாம் ஒனே பள்ளத்தாக்கிலுள்ள கெபிரீமிலே ஒருவரையொருவர் கண்டு பேசுவோம் வாரும் என்று கூப்பிட்டார்கள்; அவர்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தார்கள். நான் அவர் 3
களிடம் ஆட்களை அனுப்பி: நான் பெரிய வேலையொன்றைச் செய்துகொண்டிருக்கிறேன், நான் வரமுடியாது; நான் அந்த வேலையைவிட்டு உங்களிடத்திற்கு வருகிறதினால் வேலைகெட்டுப்போவானேன் என்று சொல்லச்சொன்னேன். அவர்கள் இப் 4
படியே நாலுதரம் எனக்குச் சொல்லியனுப்பினார்கள்; நானும் இப்படியே அவர்களுக்குப் பதில் சொல்லி அனுப்பினேன். இந் 5
தாந்தரமும் சன்பல்லாத்து அந்தப்பிரகாரமாகவே தன் வேலைக்காரனையும் அவன் கையிலே முத்திரைபோடாத ஒரு கடிதத்தையும் எனக்கு அனுப்பினான். அதிலே: 6
நீரும் யூதரும் கலகம்பண்ண நினைக்கிறீர்கள் என்றும், அதற்காகவே நீர் அலங்கத்தைக் கட்டுகிறீர் என்றும், இப்படியாக நீர் அவர்களுக்கு ராஜாவாகப்போகிறீர் என்றும், | உம்மையே குறித்து, யூதாவிலே ஒரு 7
ராஜா இருக்கிறார் என்று எருசலேமிலே கூறுகிற தீர்க்கதரிசிகளையும் சம்பாதித்திருக்கிறதாகவும் புறஜாதிகளுக்குள்ளே பிரஸ்தாபமாயிருக்கிறது, கஷ்மூவும் அப்படிச் சொல்லுகிறான்; இப்போதும் இந்தச்செய்தி ராஜாவுக்கு எட்டுமே; ஆகையால் நாம் ஒருவரோடொருவர் ஆலோசனைபண்ணுகிறதற்

காக நீர் வரவேண்டும் என்று எழுதியிருந்
8 தது. அதற்கு நான்: நீர் சொல்லுகிற அந்தக்
காரியங்களில் ஒன்றும் நடக்கவில்லை;
அவைகள் உம்முடைய மனோராஜ்யமே
ஒழிய வேறல்ல என்று சொல்லியனுப்பி
9 னேன். அவர்கள் எங்களைப் பயமுறுத்தி,
அந்தவேலை நடந்தேறாது, அவர்கள் மனே
தைரியமற்றுப்போவார்கள் என்று சொல்
லிக்கொண்டிருந்தார்கள்.

இப்போதும் தேவரீர் எங்களுக்கு மனே
பலத்தைக் கட்டளையிட்டருளும்.

10 நான் மெகேதபேலின் குமாரனுகிய
தெலாயாவின் மகன் செமாயாவின் வீட்
டுக்குப்போனேன், அவன் வெளியேறாதபடி
தன் வீட்டினுள் தடைபட்டிருந்தான்;
நான் வரவே அவன்: நாம் இருவரும் கடவு
ளின் வீடாகிய ஆலயத்துக்குள்ளே போய்,
ஆலயத்தின் கதவுகளைப் பூட்டிக்கொள்
வோம் வாரும்; உம்மைக்கொன்றுபோட
வருவார்கள், இன்று இரவிலே உம்மைக்
கொன்றுபோட வருவார்கள் என்றான்.

11 அதற்கு நான்: என்னைப்போன்ற மனிதன்
ஓடிப்போவானோ? என்னைப்போன்றவன்
உயிர் பிழைக்கும்படி ஆலயத்திலே
போய்ப் பதுங்குவானோ? நான் போவ
12 தில்லை என்றேன். கடவுள் அவனுக்
குக் கட்டளையிடவில்லையென்றும் தொபீ
யாவும் சன்பல்லாத்தும் அவனுக்குக் கைக்
கூலி கொடுத்ததினால் அவன் எனக்கு விரோ
தமாய் அந்தத் தீர்க்கதரிசனத்தைச் சொன்
13 னான் என்றும் அறிந்துகொண்டேன். நான்
பயந்து அப்படிச்செய்து பாவத்தைக் கட்
டிக்கொள்ள வேண்டுமென்றும் என்னை நிந்
திப்பதற்கேதுவான அபகீர்த்திக்கு முகாந்த
ரம் உண்டாக்கவேண்டுமென்றும் அவனுக்
குக் கைக்கூலி கொடுத்திருந்தார்கள்.

14 என் கடவுளே, தொபீயாவும் சன்பல்
லாத்தும் செய்த இந்தச் செய்கைகளுக்குத்
தக்கபடி நீர் அவர்களையும் நொவதியாள்
என்னும் தீர்க்கதரிசினியையும் எனக்குப்
பயமுறுத்தப்பார்த்த மற்றத்தீர்க்கதரிசிகளை
யும் நினைத்துக்கொள்ளும்.

15 இப்படியாக அலங்கமானது ஐம்பத்
திரண்டு நாளைக்குள்ளே கட்டப்பட்டு,
எலூல் மாதம் இருபத்தைந்தாந்தேதியிலே
16 முடிந்தது. எங்கள் பகைஞர் எல்லாரும்
அதைக்கேட்டபோது எங்களுக்குச் சுற்றிலு
மிருந்த புறஜாதியார் அனைவரும் பயந்து
மிகவும் தைரியமிழந்து இந்த வேலை எங்
கள் கடவுளால் செய்யப்பட்டதென்று
17 அறிந்துகொண்டார்கள். அந்த நாட்க
ளில் யூதாவிலுள்ள பெரிய மனிதருக்கும்
தொபீயாவுக்கும் மிகுதியான கடிதப்போக்கு
வரவு இருந்தது. அவன் ஆராகின் குமார 18
னுகிய செகனியாவுக்கு மருமகனுயிருந்
தான், அவன் குமாரனுகிய யோகனன்
பெரகியாவின் குமாரனுகிய மெசல்லாமின்
குமாரத்தியை விவாகம்பண்ணியிருந்தான்,
ஆகவே யூதாவில் அநேகர் அவனுக்கு
ஆணையிட்டுக் கட்டுப்பட்டிருந்தார்கள்.
அவன் செய்யும் நன்மைகளை அவர்கள் 19
எனக்கு முன்பாக விவரிப்பார்கள், என்
வார்த்தைகளையும் அவனுக்குக் கொண்டு
போவார்கள்; தொபீயா என்னைப் பயமுறுத்
தக் கடிதங்களை அனுப்புவான்.

அலங்கம் கட்டி முடிந்தது, கதவுகள் 7
போட்டாயிற்று, வாசல் காவலாளரையும்
பாடகரையும் லேவியரையும் ஏற்படுத்தி
யாயிற்று; இதன்பின் நான் என் சகோதர 2
னுகிய கனனியாவையும் கோட்டைத் தலைவ
னுகிய கனனியாவையும் எருசலேமின் காவ
லுக்கென ஏற்படுத்தினேன்; இந்தக் கன
னியா அநேகரைப் பார்க்கிலும் உண்மை
யுள்ளவன், கடவுளுக்குப் பயந்தவனென
மதிக்கப்பட்டவன். நான் அவர்களோடு 3
பேசி: வெயில் ஏறுமட்டும் எருசலேமின்
வாசல்களைத் திறக்கவேண்டாம்; காவலா
ளர் நின்றுகொண்டிருக்கும்போதே கதவு
களைச் சாத்தித் தாழிடவேண்டும்; எருசலே
மின் குடிகளில் காவலாளரை நியமித்துத்
தங்கள் தங்கள் வீடுகளுக்கெதிரே காவல்
வேலைசெய்ய ஏற்படுத்தவேண்டும் என்று
சொன்னேன்.

பட்டணம் விஸ்தாரமும் பெரிதுமாயிருந் 4
தது, அதிலிருந்த ஜனங்கள் சொற்பப்பேர்,
வீடுகள் இன்னும் கட்டப்படவில்லை. அப் 5
பொழுது வம்ச அட்டவணைகளில் பதிவு
செய்வதற்கென நான் பெரியோரையும் அதி
பதிகளையும் ஜனங்களையும் கூடிவரச்செய்ய
என் கடவுள் என் மனதைத் தூண்டிவிட்
டார்; முதல் முதல் வந்தவர்களின் வம்ச
அட்டவணைப் புஸ்தகம் அப்பொழுது
எனக்கு அகப்பட்டது; அதிலே எழுதி
யிருக்க நான் கண்டது இதுவே:

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச் 6
சார் சிறைபிடித்துப் போனவர்களும் சிறை
யிருப்பிலிருந்து எருசலேமுக்கும் யூதாவி
லுள்ள தங்கள் தங்கள் பட்டணங்களுக்
கும் செருபாபேல், யேஷூவா, நெகே
மியா, அசரியா, ராமியா, நகமானி, மொர்
தெகாய், பில்சான், மிஸ்பேரெத், பிக்வாய்,
நெகூம், பானு என்பவர்களோடேகூடத்
திரும்பி வந்தவர்களுமான இந்த நாட்டின்
புத்திரர் இவர்களே;

7 இந்த இஸ்ரவேலரின் தொகையாவது:
8 பாரோஷின் புத்திரர் இரண்டாயிரத்து
9 நூற்று எழுபத்திரண்டுபேர். ஷெபத்தியா
10 வின் புத்திரர் முன்நூற்று எழுபத்திரண்டு
11 பேர். ஆரகின் புத்திரர் அறுநூற்று ஐம்பத்
12 திரண்டுபேர். யேஷுவா, யோவாப் என்
பவர்களுடைய சந்ததியைச் சேர்ந்த பாகாத்
மோவாபின் புத்திரர் இரண்டாயிரத்து எண்
13 ணூற்றுப் பதினெட்டுப்பேர். ஏலாமின் புத்
திரர் ஆயிரத்து இருநூற்று ஐம்பத்துநாலு
14 பேர். சத்தூவின் புத்திரர் எண்ணூற்று
15 நாற்பத்தைந்துபேர். சக்காயின் புத்திரர்
16 எழுநூற்று அறுபதுபேர். பின்னூயியின்
புத்திரர் அறுநூற்று நாற்பத்தெட்டுப்பேர்.
17 பெபாயின் புத்திரர் அறுநூற்று இருபத்
18 தெட்டுப்பேர். அஸ்காதின் புத்திரர் இரண்
டாயிரத்து முன்நூற்று இருபத்திரண்டுபேர்.
19 அதொனீகாமின் புத்திரர் அறுநூற்று
20 அறுபத்தேழுபேர். பிக்வாயின் புத்திரர்
இரண்டாயிரத்து அறுபத்தேழுபேர். ஆதி
21 னின் புத்திரர் அறுநூற்று ஐம்பத்
22 தைந்துபேர். எசேக்கியாவின் சந்ததியைச்
சேர்ந்த ஆதேரின் புத்திரர் தொண்ணூற்
23 றெட்டுப்பேர். காசூமின் புத்திரர் முந்நூற்று
24 இருபத்தெட்டுப்பேர். பேத்சாயின் புத்திரர்
25 முந்நூற்று இருபத்துநாலுபேர். காரீப்பின்
புத்திரர் நூற்றுப்பன்னிரண்டுபேர். கிபி
யோனின் புத்திரர் தொண்ணூற்றைந்து
26 பேர். பெத்லெகேம் ஊராரும் நெத்தோபா
ஊராரும் நூற்று எண்பத்தெட்டுப்பேர்.
27 ஆனதோத்து ஊரார் நூற்றிருபத்தெட்டுப்
28 பேர். பேத் அஸ்மாவேத் ஊரார் நாற்பத்
29 திரண்டுபேர். கீரியாத்யெயாரீம் ஊராரும்
கெபீரா ஊராரும் பெயெரோத் ஊராரும்
30 எழுநூற்று நாற்பத்துமூன்றுபேர். ராமா
ஊராரும் கபா ஊராரும் அறுநூற்று
31 இருபத்தொருபேர். மிக்மாசு ஊரார் நூற்
32 றிருபத்திரண்டுபேர். பேதேல் ஊராரும்
ஆயி ஊராரும் நூற்று இருபத்துமூன்று
33 பேர். மற்றுமொரு நேபோ ஊரார் ஐம்
34 பத்திரண்டு பேர். மற்றுமொரு ஏலாம்
புத்திரர் ஆயிரத்து இருநூற்று ஐம்பத்து
35 நாலுபேர். காரிமின் புத்திரர் முந்நூற்று
36 இருபதுபேர். எரிகோவின் புத்திரர் மூந்
37 நூற்று நாற்பத்தைந்துபேர். லோத், காதீத்,
ஓனே ஊர்களின் புத்திரர் எழுநூற்று
38 இருபத்தொருபேர். செனுவாவின் புத்திரர்
மூவாயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பது
பேர்.
39 ஆசாரியர்: யேஷுவாவின் குடும்பத்தா
னுகிய யெதாயாவின் புத்திரர் தொள்ளா
40 யிரத்து எழுபத்துமூன்றுபேர். இம்மோரின்
புத்திரர் ஆயிரத்து ஐம்பத்திரண்டுபேர்.
41 பஷ்கூரின் புத்திரர் ஆயிரத்து இருநூற்று
42 நாற்பத்தேழுபேர். காரிமின் புத்திரர் ஆயி
ரத்துப் பதினேழுபேர்.
43 லேவியர்: ஒதெவாவின் சந்ததியைச்
சேர்ந்த கத்மியேலின் குமாரனுகிய யேஷு
44 வாவின் புத்திரர் எழுபத்துநாலுபேர். பாட
45 கர்: ஆசாபின் புத்திரர் நூற்று நாற்பத்தெட்
டுப்பேர். வாசல் காவலாளர்: சல்லூமின்
புத்திரரும் ஆதேரின் புத்திரரும் தல்மோ
னின் புத்திரரும் அக்கூபின் புத்திரரும் கதி
தாவின் புத்திரரும் ஷோபாயின் புத்திரரு
மானவர்களெல்லாரும் நூற்று முப்பத்தெட்
டுப்பேர்.
46 கோவில் வேலையாட்கள்: சீகாவின் புத்
திரர், கசூபாவின் புத்திரர், தபாகோத்தின் புத்
47 திரர், | கேரோசின் புத்திரர், சீயாவின் புத்தி
48 ரர், பாதோனின் புத்திரர், | லெபானாவின்
புத்திரர், ககாபாவின் புத்திரர், சல்மாயின்
49 புத்திரர், | கானூனின் புத்திரர், கித்தேலின்
புத்திரர், காகாரின் புத்திரர், | ராயாவின்
50 புத்திரர், ரேத்சீனின் புத்திரர், நெகோதா
வின் புத்திரர், | காசாமின் புத்திரர், ஊசா
51 வின் புத்திரர், பாசெயாகின் புத்திரர், |
பேசாயின் புத்திரர், மெயூனியரின் புத்திரர்,
52 நெபூசேயரின் புத்திரர், | பக்பூக்கின் புத்
53 திரர், கக்கூபாவின் புத்திரர், கர்கூரின் புத்தி
ரர், | பஸ்லீதின் புத்திரர், மெகீதாவின் புத்
54 திரர், கர்ஷாவின் புத்திரர், | பர்கோசின் புத்
55 திரர், சிசெராவின் புத்திரர், தேமாகின் புத்
திரர், நெத்சியாகின் புத்திரர், கதிபாவின் புத்
56 திரர் ஆகிய இவர்களே.
57 சாலொமோனுடைய வேலையாட்களின்
புத்திரர்: சோதாயின் புத்திரர், சொபேரேதின்
புத்திரர், பெரீதாவின் புத்திரர், | யாலாவின்
58 புத்திரர், தர்கோனின் புத்திரர், கித்தேலின்
புத்திரர், | ஷெபத்தியாவின் புத்திரர், கத்தீ
59 லின் புத்திரர், பொகேரேத் அத்செபாயீமின்
புத்திரர், ஆமோனின் புத்திராகிய இவர்
களே.
60 கோவில் வேலையாட்களும் சாலொமோ
னுடைய வேலையாட்களின் புத்திரருமான
எல்லாரும் முந்நூற்றுத் தொண்ணூற்றி
ரண்டுபேர்.
61 தெல்மெலாகு, தெல்கர்ஷா, கெரூபு,
அத்தோன், இம்மேர் என்னும் இடங்களி
லிருந்து வந்தவர்கள் — தாங்கள் இஸ்ரவேல்
சந்ததியாரே எனத் தங்கள் கோத்திரத்தைச்
62 சொல்ல முடியாமல் இருந்தவர்கள் — இவர்
களே: தெலாயாவின் புத்திரர், தொபியா
வின் புத்திரர், நெக்கோதாவின் புத்திரர்
63 ஆக அறுநூற்றுநாற்பத்திரண்டுபேர்; ஆசா

ரியரில் கொபாயாவின் புத்திரர், அக்கோ
சின் புத்திரர், கிலெயாத்தியனான பர்சில
64 யின் குமாரத்திகளில் ஒருத்தியை விவாகம்
பண்ணி அவர்கள் வம்சாமம் தரிக்கப்
பெற்ற பர்சிலாயின் புத்திரருமே. இவர்
கள் தங்கள் வம்ச அட்டவணையைத் தேடி
யும் அதைக் கண்டுபிடியாதிருந்தபடியால்
ஆசாரிய ஊழியத்திற்குத் தகாதவர்கள்
65 என்று எண்ணப்பட்டார்கள். ஊரீம் தும்
மீம் என்பவைகளையுடைய ஆசாரியன் ஒரு
வன் எழும்புமட்டும் இவர்கள் மகா பரி
சுத்தமானதிலே புசிக்கக்கூடாது என்று தே
சாதிபதி அவர்களுக்குச் சொன்னான்.
66 சபையார் எல்லாரும் மொத்தமாக நாற்
பத்திராயிரத்து முந்நூற்று அறுபதுபேர்.
67 அவர்களைத்தவிர அவர்களுடைய வேலைக்
காரரும் வேலைக்காரிகளும் ஏழாயிரத்து
முந்நூற்றுமுப்பத்தேழுபேரும்; பாடகரும்
பாடகிகளும் இருநூற்று நாற்பத்தைந்து
68 பேரும் இருந்தார்கள். அவர்களுடைய
குதிரைகள் எழுநூற்றுமுப்பத்தாறு, அவர்
களுடைய கோவேறு கழுதைகள் இரு
69 நூற்றுநாற்பத்தைந்து. ஒட்டகங்கள்
நானூற்றுமுப்பத்தைந்து, கழுதைகள் ஆரு
யிரத்து எழுநூற்று இருபது.
70 வம்சத்தலைவரில் சிலர் வேலைக்கென்று
கொடுத்தாவது: தேசாதிபதி ஆயிரம் அதர்
கோனையும் ஐம்பது கலங்களையும் ஐந்நூற்று
முப்பது ஆசாரிய அங்கிகளையும் பொக்கி
71 ஷத்துக்குக் கொடுத்தான். வம்சத்தலைவரில்
சிலர் வேலையின் பொக்கிஷத்துக்கு இருபதி
னாயிரம் அதர்கோனையும் இரண்டாயிரத்து
இருநூறு ராத்தல் வெள்ளியையும் கொடுத்
72 தார்கள். மற்ற ஜனங்கள் இருபதினாயிரம்
அதர்கோனையும் இரண்டாயிரம் ராத்தல்
வெள்ளியையும் அறுபத்தேழு ஆசாரிய
73 அங்கிகளையும் கொடுத்தார்கள். ஆசாரிய
ரும் லேவியரும் வாசல் காவலாளரும் பாட
கரும் சாதாரண ஜனங்களில் சிலரும் கோ
வில் வேலையாட்களும் இஸ்ரவேலர் அனைவ
ரும் தங்கள் தங்கள் ஊர்களில் குடியேறி
னார்கள்.

ஏழாம் மாதம் வந்தபோது இஸ்ரவேல்
புத்திரர் தங்கள் ஊர்களில் இருக்கையில்
8 ஜனங்கள் எல்லாரும் தண்ணீர் வாசலுக்கு
முன்னிருந்த வெளியிலே ஏகமாய்க் கூடி
வேதசாஸ்திரியாகிய எஸ்ரவோடு பேசி,
யெகோவா இஸ்ரவேலுக்குக் கட்டளையிட்ட
மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்
தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்
டார்கள். அப்படியே ஏழாம்மாதம் முதல்
தேதியில் ஆசாரியனான எஸ்ர நியாயப்
பிரமாணத்தைப் புருஷரும் ஸ்திரீகளும்,
கேட்டு அறியத்தக்க அனைவரும் ஆகிய
சபைக்கு முன்பாகக் கொண்டுவந்து | தண்
ணீர்வாசலுக்கு முன்னிருந்த வெளிக்கு எதி
ரே நின்று, சூரியோதயம் தொடங்கி உச்சி
வேளைமட்டும் புருஷருக்கும் ஸ்திரீகளுக்கும்
உணர்வுள்ளவர்களுக்கும் முன்பாக அதை
வாசித்தான்; சகல ஜனங்களும் நியாயப்பிர
மாணப் புஸ்தகத்திற்குக் கவனமாய்ச் செவி
கொடுத்தார்கள். வேதசாஸ்திரியாகிய 4
எஸ்ர அதற்கென்று செய்யப்பட்ட ஒரு
மர மேடையின்மேல் நின்றான்; அவனண்
டையிலே அவனுடைய வலது பக்கத்தில்
மத்தித்தியாவும் சேமாவும் அனாயாவும் உரி
யாவும் கில்க்கியாவும் மாசெயாவும், அவனு
டைய இடது பக்கத்தில் பெதாயாவும் மீசே
வேலும் மல்கியாவும் காசூமும் கஸ்பதானா
வும் சகரியாவும் மெசுல்லாமும் நின்றார்
கள். எஸ்ர சகல ஜனங்களுக்கும் மேலாக 5
நின்று சகல ஜனங்களும் காணப் புஸ்தகத்
தைத் திறந்தான்; அவன் அதைத் திறந்த
போது ஜனங்கள் எல்லாரும் எழுந்து நின்
றார்கள். அப்பொழுது எஸ்ர மகத்துவ 6
தெய்வமாகிய யெகோவாவை ஸ்தோத்திரித்
தான்; ஜனங்களெல்லாரும் கையுயர்த்தி
ஆமேன், ஆமேன் எனப் பதிற்சொல்லிக்
குனிந்து முகங்குப்புற விழுந்து யெகோவா
வைப் பணிந்துகொண்டார்கள். யேஷூ 7
வா, பானி, ஷெரேபியா, யாமீன், அக்கூப்,
ஷபெதாய், ஓதியா, மாசேயா, கெலீதா,
அசரியா, யோசபாத், கானன், பெலாயா
என்பவர்களும் லேவியரும் நியாயப்பிரமா
ணத்தை ஜனங்களுக்கு விளக்கினார்கள்;
ஜனங்கள் நின்றுகொண்டேயிருந்தார்கள்.
அவர்கள் கடவுளின் நியாயப்பிரமாண புஸ் 8
தகத்தைத் தெளிவாக வாசித்து, அர்த்தஞ்
சொல்லி, வாசித்ததை அவர்களுக்கு விளக்
கினார்கள்.

ஜனங்கள் எல்லாரும் நியாயப்பிரமாணத் 9
தின் வார்த்தைகளைக் கேட்டபோது அழுத
படியால், தேசாதிபதியாகிய நெகேமியாவும்
வேதசாஸ்திரியாகிய எஸ்ர என்னும் ஆசா
ரியனும் ஜனங்களுக்கு விளக்கிக்காட்டின
லேவியரும் சகல ஜனங்களையும் நோக்கி:
இந்த நாள் உங்கள் கடவுளாகிய யெகோ
வாவுக்குப் பரிசுத்த நாள்; நீங்கள் துக்கப்
படவும் அழவும் வேண்டாம் என்றார்கள்.
பின்னும் அவன் அவர்களோடு பேசி: நீங் 10
கள் போய்க் கொழுமையானதைப் புசித்து,
மதுரமானதைக் குடித்து, தங்களுக்கென
ஒன்றும் ஆயத்தஞ் செய்யாதவர்களுக்குப்
பங்குகளை அனுப்புங்கள்; இந்த நாள் நமது

ஆண்டவருக்குப் பரிசுத்தநாள், விசாரப்படவேண்டாம், யெகோவாவினால் வரும் 11 மகிழ்ச்சியே உங்கள் பலம் என்றான். லேவியரும் ஜனங்களையெல்லாம் அமர்த்தி: பேசாதிருங்கள், இந்த நாள் பரிசுத்த நாள், விசாரப்படவேண்டாம் என்றார்கள். அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் தங்களுக்கு அறிவிக்கப்பட்ட வார்த்தைகளை உணர்ந்து கொண்டபடியால், போஜனபானம் பண்ணவும் பங்குகளை அனுப்பவும் மிகுந்த சந்தோஷம் கொண்டாடவும் போனார்கள்.

13 மறுநாளிலே முழு ஜனத்தின் வம்சத் தலைவரும் ஆசாரியரும் லேவியரும் நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளைக் கவனமாய்க் கேட்டறியவேண்டும் என்று வேதசாஸ்திரியாகிய எஸ்ரவினிடம் கூடிவந்தார்கள்.

14 அப்பொழுது இஸ்ரவேல்புத்திரர் ஏழாம் மாதத்து உற்சவத்திலே கூடாரங்களில் குடியிருக்கவேண்டும் என்று யெகோவா மோசேயைக்கொண்டு கற்பித்தது நியாயப்பிரமாணத்திலே எழுதியிருக்கக்கண்டார்கள்.

15 காணவே, எழுதியிருக்கிறபடி கூடாரங்களைப் போடுவதற்கு, நீங்கள் மலைகளுக்குப் போய் ஒலிவக் கிளைகளையும் காட்டு ஒலிவக் கிளைகளையும் மிருதுச் செடிகளின் கிளைகளையும் பேரீச்சின் ஓலைகளையும் தழைத்திருக்கிற விருக்ஷங்களின் கிளைகளையும் கொண்டு வாருங்கள் என்று தங்களுடைய சகல ஊர்களிலும் எருசலேமிலும் கூறிப் பிரசித்தப்16 படுத்தினார்கள். அப்படியே ஜனங்கள் வெளியேபோய் அவைகளைக் கொண்டுவந்து, தங்கள் வீடுகள்மேலும் தங்கள் முற்றங்களிலும் கடவுளின் ஆலயப்பிராகாரங்களிலும் தண்ணீர்வாசல் வெளியிலும் எப்பிராயீம் வாசல் வெளியிலும் தங்களுக்குக் கூடாரங்17 களைப் போட்டார்கள். இந்தப் பிரகாரமாகச் சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த சபையார் எல்லாரும் கூடாரங்களைப் போட்டுக் கூடாரங்களில் குடியிருந்தார்கள்; இப்படியே நூனின் குமாரனாகிய யேஷுவாவின் நாட்கள்முதல் அந்நாள்மட்டும் இஸ்ரவேல் புத்திரர் செய்யாதிருந்து இப்பொழுது செய்தபடியால் மிகுந்த சந்தோ18 ஷம் உண்டாயிருந்தது. முதலாம்நாள் தொடங்கிக் கடைசிநாள்மட்டும் தினம்தினம் கடவுளின் நியாயப்பிரமாண புஸ்தகம் வாசிக்கப்பட்டது; ஏழுநாளாக உற்சவத்தை ஆசரித்தார்கள்; எட்டாம்நாளோ முறையின்படியே விசேஷித்த உற்சவநாளாயிற்று.

**9** அந்தமாதம் இருபத்து நாலாந்தேதியிலே இஸ்ரவேல் புத்திரர் உபவாசம்பண்ணி இரட்டுடுத்தித் தங்கள்மேல் புழுதியைப் போட்டுக்கொண்டவர்களாய்க் கூடிவந்தார்கள். இஸ்ரவேல் சந்ததியார் அந்திய ஜாதி 2 யாரையெல்லாம் விட்டுப்பிரித்து வந்து நின்று தங்கள் பாவங்களையும் தங்கள் பிதாக்களின் அக்கிரமங்களையும் அறிக்கையிட்டார்கள். அவர்கள் இருந்த இடத்திலேயே 3 எழுந்து நின்றார்கள்; அப்பொழுது பகலில் நாலில் ஒருபங்கு நேரமளவும் அவர்களுடைய கடவுளாகிய யெகோவாவின் நியாயப்பிரமாண புஸ்தகம் வாசிக்கப்பட்டது; பகலில் மற்றொரு கால்பங்கு நேரமளவும் பாவ அறிக்கை பண்ணித் தங்கள் கடவுளாகிய யெகோவாவைத் தொழுதுகொண்டார்கள். 4 யேஷுவா, பானி, கத்மியேல், ஷெபனியா, புன்னி, ஷெரேபியா, பானி, கெனானி என்பவர்கள் லேவியருடைய படிகளின்மேல் ஏறிநின்று தங்கள் கடவுளாகிய யெகோவாவை நோக்கி மகாசத்தமாய் ஓலமிட்டார்கள். பிறகு லேவியராகிய 5 யேஷுவா, கத்மியேல், பானி, கஷப்நெயா, ஷெரேபியா, ஓதியா, ஷெபனியா, பெதாயா என்பவர்கள் ஜனங்களைப்பார்த்து: நீங்கள் எழுந்திருந்து அநாதியாய் என்றென்றைக்கும் இருக்கிற உங்கள் கடவுளாகிய யெகோவாவை ஸ்தோத்திரியுங்கள் என்று சொல்லி: யெகோவாவே, எந்த துதி தோத்திரத்துக்கும் மேலான உமது மகிமையுள்ள திருநாமம் துதிக்கப்படுவதாக. நீர் ஒருவரே யெகோவா, 6 வானங்களையும் வானாதிவானங்களையும் அவைகளுடைய சர்வசேனைகளையும், பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும், சமுத்திரங்களையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் படைத்தவர் நீரே; அவற்றையெல்லாம் நீரே காத்துவருகிறீர்; வானசேனைகள் உம்மைப் பணிந்துகொள்ளுகின்றன. ஆபிராமைத் தெரிந்தெடுத்து அவனை ஊர் 7 என்னும் கல்தேய நகரத்திலிருந்து கொண்டுவந்து அவனுக்கு ஆபிரகாம் என்று பேரிட்ட கடவுளாகிய யெகோவா நீரே; அவன் இருதயம் உமக்கு முன்பாக உண் 8 மையுள்ளதாயிருக்கக் கண்டு, கானானியர், ஏத்தியர், எமோரியர், பாரிசியர், எபூசியர், கிர்காபெருடைய தேசத்தை அவன் சந்ததிக்குக் கொடுக்கும்படி அவனோடே உடன்படிக்கைசெய்து உமது திருவாக்கை நிறைவேற்றினீர்; நீர் உண்மையுள்ளவர்.

எகிப்திலே எங்கள் பிதாக்கள் அதப 9 வித்த உபத்திரவத்தை நீர் பார்த்துச் சிவந்த சமுத்திரத்தண்டையில் அவர்கள் அபயசத்தத்தைக் கேட்டீர்; பார்வோனுக்கும் அவனு 10 டைய எல்லா ஊழியருக்கும் அவன்

தேசத்தின் முழுஜனத்திற்கும் விரோதமாக அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்தீர்; அவர்கள் உமது ஜனங்களை அகந்தையோடு நடத்தினதை நீர் அறிந்து இவைகளைச் செய்தீர்; இப்படியாக இந்நாள் வரைக்கும் இருக்கிறபடியே உமக்குப் பேர் 11 உண்டாக்கினீர். நீர் அவர்களுக்கு முன்பாகச் சமுத்திரத்தைப் பிரித்தீர், அவர்கள் கடலின் நடுவே வெட்டாந்தரையில் நடந்தார்கள்; வலிய தண்ணீர்களிலே கல்லைப் போடுகிறதுபோல அவர்களைத் தொடர்ந்தவர்களை ஆழங்களிலே போட்டுவிட்டீர். 12 நீர் பகலிலே மேகஸ்தம்பத்தினாலும், அவர்கள் நடக்கவேண்டிய வழியிலே அவர்களுக்கு வெளிச்சம் தரும்படி இரவிலே அக்கினி ஸ்தம்பத்தினாலும் அவர்களை வழி 13 நடத்தினீர். நீர் சீனாய் மலையில் இறங்கி வானத்திலிருந்து அவர்களோடேபேசி, நல்ல நியமங்களும் கட்டளைகளுமாகிய உண்மையான பிரமாணங்களையும் நேர்மையான தீர்ப்புகளையும் அவர்களுக்குக் கொடுத்து 14 தீர். உமது பரிசுத்த ஓய்வுநாளை அவர்களுக்கு அறிவித்து, உமது ஊழியனாகிய மோசேயைக்கொண்டு அவர்களுக்குக் கட்டளைகளையும் நியமங்களையும் நியாயப்பிரமா 15 ணத்தையும் கட்டளையிட்டீர். அவர்கள் பசிதீர்க்க வானத்திலிருந்து ஆகாரம் கொடுத்தீர், அவர்கள் தாகம் தீர்க்கக் கன்மலையிலிருந்து தண்ணீர் வரச்செய்தீர், நான் உங்களுக்குக் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தைச் சொந்தமாக்கிக்கொள்ள நீங்கள் செல்லுங்கள் என்று அவர்களுக்குச் சொன்னீர்.

16 அவர்களும் எங்கள் பிதாக்களுமோ வெண்ணுல் அகங்காரமுள்ளவர்களாய் வணங்காக் கழுத்துள்ளவர்களாகி உமது கட்டளைகளுக்குச் செவிகொடாதே போனார் 17 கள். அவர்கள் செவிகொடுக்க மறுத்து அவர்களிடத்திலே நீர் செய்த உமது அற்புதங்களை நினையாமற்போய் வணங்காக் கழுத்துள்ளவர்களானார்கள்; அவர்கள் கலகம் பண்ணித் தங்கள் அடிமைத்தனத்துக்கே திரும்பும்படி ஒரு தலைவனை ஏற்படுத்தினார்கள்; கடவுளாகிய நீரோ வெகுவாய் மன்னிப்பவர், இரக்கமும் உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த இருபையுமுள்ளவர்; நீர் 18 அவர்களைக் கைவிடவில்லை. வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டி ஒன்றை அவர்கள் தங்களுக்குச் செய்துகொண்டு, உன்னை எகிப்திலிருந்து கொண்டுவந்த உன் தெய்வம் இதுவே என்று சொல்லி, கோபத்திற்கேதுவான பெரிய அக்கிரமங்களைச் செய்தார்கள்; நீரோ மிகுந்தஇருபை யுள்ளவராய் அவர் 19 களை வனாந்தரத்திலே கைவிடாதிருந்தீர்; அவர்களைப் பகலிலே வழிநடத்தின மேகஸ்தம்பமும் அவர்கள் நடக்கவேண்டிய வழியிலே அவர்களுக்கு இரவிலே வெளிச்சம் தந்த அக்கினி ஸ்தம்பமும் அவர்களைவிட்டு விலகவில்லை. அவர்களுக்கு உணர்வு பிறப் 20 பிக்க உமது நல் ஆவியைக் கட்டளையிட்டீர்; அவர்கள் வாய்க்கு உமது மன்னாவை மறுக்கவில்லை, அவர்கள் தாகத்துக்குத் தண்ணீரைக் கொடுத்தீர். இப்படி நாற் 21 பது வருஷமாக வனாந்தரத்திலே அவர்களுக்கு ஒன்றும் குறைபடாதபடி அவர்களைப் பராமரித்துவந்தீர்; அவர்கள் வஸ்திரங்கள் கந்தையாய்க் கழிந்துபோகவுமில்லை, அவர்கள் கால்கள் வீங்கவுமில்லை. அவர் 22 களுக்கு ராஜ்யங்களையும் ஜனங்களையும் ஒப்புக்கொடுத்துப் பல இடங்களில் அவர்களுக்குப் பங்களித்தீர்; எஸ்போனின் ராஜாவாகிய சீகோனின் தேசத்தையும் பாசானின் ராஜாவாகிய ஓகின் தேசத்தையும் கட்டிக் கொண்டார்கள். அவர்கள் பிள்ளைகளை 23 வானத்து நட்சத்திரங்களைப் போலப் பெருகப்பண்ணினீர், நீங்கள் போய்ச் சொந்தமாக்கிக்கொள்ளுங்கள் என்று அவர்கள் பிதாக்களுக்கு நீர்சொன்ன தேசத்திற்கு அவர்களை அழைத்துவந்தீர். அப்படியே பிள்ளைகள் 24 சென்று அந்தத் தேசத்தைச் சொந்தமாக்கிக் கொண்டார்கள்; நீர் அவர்களுக்கு முன்பாகத் தேசத்தின் குடிகளாகிய கானானியரை அடக்கினீர், அவர்கள் ராஜாக்களையும் தேசத்தின் ஜனங்களையும் தங்கள் இஷ்டப்படி செய்ய அவர்கள் கையிலே ஒப்புக்கொடுத்தீர். அவர்கள் அரணான ஊர்களையும் செழிப் 25 பான பூமியையும் கைவசப்படுத்திக் கொண்டு சகலவித நல் உடைமைகள் நிறைந்த வீடுகளையும் வெட்டப்பட்ட தாவுகளையும் ஏராளமான திராட்சத்தோட்டங்களையும் ஒலிவத்தோப்புகளையும் கனி விருட்சங்களையும் சொந்தமாக்கிக்கொண்டு புசித்துத் திருப்தியாகிக் கொழுத்து உமது பெரிய தயாளத்தினால் செல்வமாய் வாழ்ந்தார்கள்.

ஆயினும் அவர்கள் கீழ்ப்படியாதவர் 26 களாகி உமக்கு விரோதமாய்க் கலகம் பண்ணி உம்முடைய நியாயப்பிரமாணத்தைத் தங்களுக்குப் பின்னே எறிந்துவிட்டுத் தங்களை உம்மிடமாகத் திருப்பும்படி அவர்களைத் திடசாட்சியாய் எச்சரித்த உமது தீர்க்கதரிசிகளைக் கொன்றுபோட்டுக் கோபத்திற்கேதுவான பெரிய அக்கிரமங்களைச் செய்தார்கள். ஆகவே அவர்கள் 27

சத்துருக்களின் கையில் அவர்களை ஒப்புக்
கொடுத்தீர், சத்துருக்கள் அவர்களைத் துன்
பப்படுத்தினார்கள்; அவர்கள் துன்பம் அநுப
விக்த காலத்தில் உம்மைநோக்கி அபய
மிடவே நீர் பரலோகத்திலிருந்து செவி
சாய்த்து உமது மிகுந்த இரக்கத்தின்படியே
ரட்சகர்களை அவர்களுக்குக் கொடுத்தீர்,
ரட்சகர்கள் அவர்களை அவர்கள் சத்துருக்க
28 ளின் கைகளினின்று விடுவித்தார்கள். அவர்
களுக்கு அமைதி உண்டான போதோ உமக்கு
முன்பாக மறுபடியும் தீமைசெய்யத்
தொடங்கினார்கள்; ஆகவே அவர்கள் சத்து
ருக்கள் அவர்களை ஆளும்படி அவர்கள்
கையிலே ஒப்புவித்தீர்; அவர்கள் மனந்
திரும்பி உம்மை நோக்கி அபயமிட்ட
போதோ நீர் பரலோகத்திலிருந்து செவி
சாய்த்து, உமது இரக்கங்களின்படியே
அநேகந்தரம் அவர்களை விடுதலையாக்கிவிட்
29 டீர். அவர்களை உமது நியாயப்பிரமாணத்
துக்குத் திரும்பச் செய்ய அவர்களைத் தி
சாட்சியாய் எச்சரித்தீர்; அவர்களோ அகங்
காரிகளாய் உமது கட்டளைகளுக்குச் செவி
கொடாமல் உமது தீர்ப்புகளுக்கு விரோத
மாகப் பாவஞ்செய்தார்கள்,—இவற்றுக்குக்
கீழ்ப்படிந்து நடக்கிற மனுஷன் இவற்றி
னால் பிழைப்பானே;—அவர்கள் தோள்
கொடுக்க இசையாமல் முரட்டுத்தனங்காட்
டினார்கள், வணங்காக் கழுத்துள்ளவர்களா
30 னார்கள், செவிகொடாதேபோனார்கள். நீர்
அநேக வருஷமாக அவர்களிடம் பொறு
மையாயிருந்து உமது தீர்க்கதரிசிகளைக்
கொண்டு உமது ஆவியினாலே அவர்களைத்
தி சாட்சியாய் எச்சரித்தீர்; அவர்களோ
செவிகொடுக்கவில்லை; ஆகவே நீர் அவர்
களைப் புறநாட்டார் கையில் ஒப்புக்கொடுத்
31 தீர். ஆகிலும் உமது மிகுந்த இரக்கங்
களின்படியே அவர்களை நிர்மூலமாக்காம
லும் அவர்களைக் கைவிடாமலும் இருந்தீர்;
நீர் இரக்கமும் உருக்கமுமுள்ள கடவுள்.

32 இப்பொழுதும் எங்கள் கடவுளே, உடன்
படிக்கையையும் கிருபையையும் காக்கிற
பயங்கர வல்ல மகா தெய்வமே, அசீரியா
ராஜாக்களின் காட்சிமுதல் இந்நாள்வரை
யும் எங்களுக்கும் எங்கள் ராஜாக்களுக்
கும் எங்கள் அதிபதிகளுக்கும் எங்கள் ஆசா
ரியர்களுக்கும் எங்கள் தீர்க்கதரிசிகளுக்
கும் எங்கள் பிதாக்களுக்கும் உம்முடைய
ஜனங்கள் அனைவருக்கும் நேரிட்ட சகல
உபத்திரவத்தையும் அற்பமாய் நினையாதிரும்.
33 எங்களுக்கு நேரிட்ட யாவற்றிலும் உமது
நீதி விளங்குகிறது; நீர் உண்மையுள்ளவராய்
விளங்கினீர்; நாங்களோ துன்மார்க்கரா
னோம். எங்கள் ராஜாக்களும் எங்கள் அதி 34
பதிகளும் எங்கள் ஆசாரியர்களும் எங்கள்
பிதாக்களும் உம்முடைய நியாயப்பிரமா
ணத்தின்படி நடவாமலும், உமது கட்டளை
களையும் அவர்களுக்கு எச்சரிப்புகளான
உமது சாட்சியங்களையும் கவனியாமலும்
போனார்கள். அவர்கள் தங்கள் ராஜ்யத்தை 35
யும், நீர் அவர்களுக்குப் பாராட்டிய பெருந்
தயாளத்தையும் நீர் அவர்களுக்கு அளித்த
விசாலமும் செழிப்புமான தேசத்தையும்
அநுபவித்தபோதிலும் அவர்கள் உம்மைச்
சேவிக்கவுமில்லை, தங்கள் தீயசெயல்
களைவிட்டுத் திரும்பவுமில்லை. இதோ, 36
இன்றைத்தினம் நாங்கள் அடிமைகளாயிருக்
கிறோம்; அதின் கற்பனைகளையெல்லாம்
அநுபவிக்கும்படி நீர் எங்கள் பிதாக்களுக்
குக் கொடுத்த இந்தத் தேசத்திலேயே நாங்
கள் அடிமைகளாயிருக்கிறோம். அதின் 37
செல்வ வரத்தெல்லாம் எங்கள் பாவங்களி
னிமித்தம் நீர் எங்கள்மேல் வைத்த ராஜாக்
களுக்கே உரித்தாகிறது; அவர்கள் தங்கள்
இஷ்டப்படியே எங்கள் சரீரங்கள்மேலும்
எங்கள் மிருகங்கள்மேலும் அரசாட்சி
செலுத்துகிறார்கள்; நாங்கள் மகா உபத்திர
வத்தில் இருக்கிறோம் என்று பிரார்த்திக்கச்
செய்தார்கள்.

பின்னும் அவர்கள்: இவற்றையெல்லாம் 38
நினைத்து உறுதியான உடன்படிக்கை எழுதி
வைக்கிறோம்; முத்திரையிடப்பட்ட பத்தி
ரத்தில் நமது அதிபதிகள், நமது லேவியர்,
நமது ஆசாரியர் இவர்களுடைய நாமங்கள்
காணப்படுகின்றன. முத்திரையிடப்பட்ட **10**
பத்திரத்தில் கையொப்பமிட்டவர்கள் இவர்
களே: ஆலியாவின் குமாரனாகிய தேசாதி
பதி நெகேமியா, அகெக்கியா, | செராயா, 2
அசரியா, எரேமியா, | பஷ்கூர், அமரியா, 3
மல்கியா, | ஆத்தூஷ், செபனியா, மல் 4
லூக், | காரிம், மெரேமோத், ஓபதியா, | 5, 6
தானியேல், கினெதோன், பாருக், | மெசுல் 7
லாம், அபியா, மீயாமின், | மாசியா, 8
பில்காய், செமாயா என்பவர்கள், இவர்
கள் ஆசாரியர்; லேவியர்: அசனியாவின் 9
குமாரன் யேஷூவா, ஏனதாதின் குமார
னில் ஒருவனாகிய பின்னூயி, கத்மியேல்.
அவர்கள் சகோதரராகிய செபனியா, ஓதீ 10
யா, கெலீதா, பெலாயா, ஆனன், | மீகா, 11
ரெகோப், ஆசபியா, | சக்கூர், செரேபி 12
யா, செபனியா, | ஓதீயா, பானி, பெனீனு 13
என்பவர்கள். ஜனத்தின் தலைவர்: பரோஷ், 14
பாகாத்மோவாப், ஏலாம், சத்thu, பானி, |
புன்னி, அஸ்காத், பெபாயி, | அதோனீ 15, 16
யா, பிக்வாய், ஆதின், | ஆதேர், எசேக்கியா, 17

18 அதூர், | ஒதியா, காரும், பேத்சாய், |
19, 20 காரீப், ஆனதோத், நோபாய், | மக்பி
21 யாஷ், மெசுல்லாம், கேசீர், | மெஷேசாபெ
22 யேல், சாதோக், யதுவா, | பெலத்தியா,
23 காஞன், அனூயா, | ஓசேயா, கனனியா,
24 கஷூப், | அல்லோகேஷ், பிலகா, ஷோ
25 பேக், | ரெகூம், கஷப்னை, மாசேயா, |
26, 27 அதியா, காஞன், ஆனன், | மல்லூக்,
காரிம், பானை என்பவர்களுமே.

28 ஜனத்திலே மற்றவர்களாகிய ஆசாரிய
ரும் லேவியரும் வாசல் காவலாளரும் பாட
சரும் கோவில் வேலையாட்களும், அத்தே
சத்திலிருந்த ஜனங்களே விட்டுப்பிரிந்து வில
கிக் கடவுளின் நியாயப்பிரமாணத்துக்குத்
திரும்பின அனைவரும் அவர்கள் மனைவி
களும் அவர்கள் குமாரரும் அவர்கள் குமா
ரத்திகளும் பகுத்தறியும் சக்தியுள்ள யாவ
29 ரும், | மேன்மக்களாகிய தங்கள் சகோதர
ரோடே சேர்ந்து ஆணையிட்டு: கடவுளின்
ஊழியனுகிய மோசேயைக்கொண்டு கொ
டுக்கப்பட்ட கடவுளின் நியாயப்பிரமாணத்
தின்படி நடந்து எங்கள் ஆண்டவராகிய
யெகோவாவின் சகல கட்டளைகளையும்
தீர்ப்புகளையும் நியமங்களையும் கைக்
30 கொண்டு அவற்றை அனுசரிப்போம்; நாங்
கள் எங்கள் குமாரத்திகளைத் தேசத்திலிருக்
கிற ஜனங்களுக்குக் கொடாமலும் எங்கள்
குமாரருக்கு அவர்கள் குமாரத்திகளைக்
31 கொள்ளாமலும் இருப்போம்; தேசத்திலிருக்
கிற ஜனங்கள் ஓய்வுநாளிலே சரக்குகளை
யும் எத்தவிதத் தானியதவசத்தையும் விற்
கிறதற்குக் கொண்டுவந்தால் நாங்கள்
அதை ஓய்வுநாளிலும் பரிசுத்த நாளிலும்
அவர்களிடம் வாங்காதிருப்போம்; நாங்கள்
ஏழாம் வருஷத்தை விடுதலை வருஷமாக்
கி சகல கடன்களையும் தண்டாமல் விட்டு
32 விடுவோம். எங்கள் கடவுளின் ஆலய
ஆராதனைக்கு வேண்டிய சமுகத்தப்பங்க
ளுக்கும் நித்திய போஜனபலிக்கும், சகல
ஒய்வுநாட்களிலும் மாதப்பிறப்புகளிலும்
உற்சவ நாட்களிலும் செலுத்தும் தகனபலி
களுக்கும் ஸ்தோத்திரபலிகளுக்கும் இஸ்ர
வேலின் பிராயச்சித்தத்தின் பொருட்டுப்
படைக்கப்படும் பாவநிவாரண பலிகளுக்
33 கும், | எங்கள் கடவுளுடைய ஆலயத்தின்
சகல வேலைக்கும் வருஷந்தோறும் நாங்கள்
சேக்கலில் மூன்றில் ஒரு பங்கைக் கொடுப்
போம்; இந்தக் கடமையை எங்கள்மேல்
34 ஏற்றுக்கொள்ளுகிறோம். நியாயப்பிரமா
ணத்தில் எழுதியிருக்கிற பிரகாரம் எங்கள்
கடவுளாகிய யெகோவாவின் பலிபீடத்தின்
மேல் எரிப்பதற்கென்று எங்கள் பிதாக்களு
டைய குடும்பங்களின்படியே யார் யார்
குறித்த காலங்களில் யெகோவாவின் ஆல
யத்திற்கு விறகுக்காணிக்கை கொண்டுவர
வேண்டுமென்று ஆசாரியருக்கும் லேவிய
ருக்கும் ஜனத்துக்கும் சீட்டுப்போடுவோம்.
நாங்கள் வருஷந்தோறும் எங்கள் கடவு 35
ளின் ஆலயத்துக்கு எங்கள் பூமியின் முதற்
பலனையும் சகலவித விருட்சங்களின் முதற்
கனிகள் எல்லாவற்றையும் கொண்டுவரு
வோம்; நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக் 36
கிறபடியே எங்கள் குமாரரில் முதற்பேறு
களையும் எங்கள் ஆடுமாடுகளாகிய மிருகங்
களின் தலையீற்றுகளையும் எங்கள் கடவு
ளின் ஆலயத்துக்கும் எங்கள் கடவுளின்
ஆலயத்திலே ஊழியஞ்செய்கிற ஆசாரிய
ரிடத்துக்கும் கொண்டுவருவோம்; நாங்கள் 37
எங்கள் பிசைந்தமாவில் முதற்பாகத்தை
யும், நாங்கள் உயர்த்திப்படைக்கும் பலி
களையும், சகல மரங்களின் முதற்பலன்களை
யும், திராட்சப்பழரசத்தையும் எண்ணெ
யையும், எங்கள் கடவுளின் ஆலய அறை
களில் வைக்கும்படி ஆசாரியரிடத்துக்கும்,
எங்கள் வேளாண்மையின் தசமபாகத்தை லேவிய
ரிடத்துக்கும் கொண்டுவருவோம்; லேவிய
ராகிய இவர்கள் எங்கள் வெள்ளாண்மை
செய்யும் ஊர்களிலெல்லாம் தசமபாகம்
சேர்ப்பார்கள். லேவியர் தசமபாகம் சேர்க் 38
கும்போது ஆரோனின் குமாரனுகிய ஒரு
ஆசாரியன் லேவியரோடேகூட இருப்பான்,
தசமபாகமாகிய அதிலே பத்தில் ஒருபங்கை
லேவியர் எங்கள் கடவுளின் ஆலயப்பொக்
கிஷ அறைகளில் கொண்டுவரவேண்டும்.
பரிசுத்தஸ்தலத்தின் பணிமுட்டுகளும் ஊழி 39
யஞ்செய்கிற ஆசாரியரும் வாசல் காவலாள
ரும் பாடகரும் இருக்கிற அந்த அறை
களிலே இஸ்ரவேல் புத்திரரும் லேவி புத்திர
ரும் தானியம், திராட்சரசம், எண்ணெய்
என்பவைகளின் படைப்புப்பாகங்களைக்
கொண்டுவரவேண்டும். நாங்கள் இவ்வித
மாய்ச் செய்துவருவோம், எங்கள் கடவு
ளின் ஆலயத்தைப் பரிபாலனம் செய்யா
மல் விடுவதில்லையென்று பிரமாணஞ்செய்
தார்கள்.

ஜனத்தின் அதிகாரிகள் எருசலேமிலே **11**
குடியிருந்தார்கள்; மற்ற ஜனங்கள் தங்களுக்
குள்ளே பத்துப்பேரில் ஒருவனே எருசலே
மென்னும் பரிசுத்த நகரத்திலும் ஒன்பது
பேரை மற்ற ஊர்களிலும் குடியிருக்கப் 2
பண்ணச் சீட்டுப்போட்டார்கள். மனப்
பூர்வமாய் எருசலேமிலே குடியிருக்கச் சம்
மதித்த மனுஷரையெல்லாம் ஜனங்கள்
ஆசீர்வதித்தார்கள்.

3 பின்கூறப்படுகிற காட்டின் தலைவர் எருசலேமிலே குடியிருந்தார்கள்; யூதாவின் ஊர்களில் சாமானிய இஸ்ரவேலரும் ஆசாரியரும் லேவியரும் கோவில் வேலையாட்களும் சாலொமோனுடைய வேலைக்காரரின் புத்திரரும் தங்கள் ஊர்களிலுள்ள தங்கள் தங்கள் காணியிலே குடியிருந்தார்கள்.
4 எருசலேமிலே யூதா புத்திரரில் சிலரும் பென்யமீன் புத்திரரில் சிலரும் குடியிருந்தார்கள்.

யூதா புத்திரரிலே: அத்தாயாவும், இவன் உசியாவின் குமாரன், இவன் சகரியாவின் குமாரன், இவன் அமரியாவின் குமாரன், இவன் ஷெபத்தியாவின் குமாரன், இவன் மகலாலெயேலின் குமாரன், இவர்கள் பெரேசின் வம்சத்தைச்சேர்ந்தவர்கள்;
5 மாசேயாவும், இவன் பாருக்கின் குமாரன், இவன் கொல்கோசேயின் குமாரன், இவன் கசாயாவின் குமாரன், இவன் அதாயாவின் குமாரன், இவன் யோயாரீபின் குமாரன், இவன் சகரியாவின்குமாரன், இவன் சீலோ
6 வியனின் குமாரன். எருசலேமிலே குடியிருந்த பேரேசின் புத்திரரெல்லாரும் நானூற்று அறுபத்தெட்டுப்பேர், இவர்கள் பராக்கிரமசாலிகள்.
7 பென்யமீன் புத்திரரில்: சல்லூ, இவன் மெசுல்லாமின் குமாரன், இவன் யோவேவின் குமாரன், இவன் பெதாயாவின் குமாரன், இவன் கொலாயாவின் குமாரன், இவன் மாசேயாவின் குமாரன், இவன் ஈதீயேலின் குமாரன், இவன் ஏசாயாவின்
8 குமாரன். அவனுக்குப்பின் கப்பாய், சல்லாய் முதலானவர்கள் தொள்ளாயிரத்து
9 இருபத்தெட்டுப்பேர். சிக்கிரியின் குமாரன் யோவேல் அவர்கள்மேல் விசாரிப்புக்காரனுயிருந்தான், பட்டண விசாரிப்பு வேலையில் அவனுக்கு அடுத்தவன் செனுவாவின் குமாரன் யூதா.
10 ஆசாரியர்களில்: யோயாரீபின் குமார
11 னுகிய யெதாயாவும் யாகீனும் | தெய்வாலய விசாரணைக் கர்த்தாவாகிய செராயாவும், இவன் இல்க்கியாவின் குமாரன், இவன் மெசுல்லாமின் குமாரன், இவன் சாதோக்கின் குமாரன், இவன் மெராயோத்தின் குமாரன், இவன் அகிதூபின் குமா
12 ரன், | ஆலயத்திலே பணிவிடைசெய்கிற அவர்கள் சகோதரராகிய எண்ணூற்று இருபத்திரண்டு பேரும், அதாயாவும், இவன் எரோகாமின் குமாரன், இவன் பெலாலியாவின் குமாரன், இவன் அம்சியின் குமாரன், இவன் சகரியாவின் குமாரன், இவன் பஷ்கூரின் குமாரன், இவன் மல்கியாவின் குமாரன், | பிதர 13
வம்சத்தலைவராகிய அவனுடைய சகோதரர் இருநூற்று நாற்பத்திரண்டுபேரும், அமாசெசாயும், இவன் அசரெயேலின் குமாரன், இவன் அக்சாயின் குமாரன், இவன் மெசில்லேமோத்தின் குமாரன், இவன் இம்மேரின் குமாரன், | அவர் 14
கள் சகோதரராகிய பராக்கிரமசாலிகள் நூற்று இருபத்தெட்டுப்பேருமே; இவர்கள்மேல் அகெதோலிமின் குமாரன் சப்தியேல் விசாரிப்புக்காரனுயிருந்தான்.

லேவியரிலே: ஷெமாயாவும், இவன் 15
கஷூவின்குமாரன், இவன் அஸ்ரீக்காமின் குமாரன், இவன் கஷபியாவின் குமாரன், இவன் பூனியின் குமாரன், | தெய்வாலயத் 16
தின் வெளிவேலையை விசாரிக்கிற லேவியரின் தலைவரிலே ஷபெதாயும் யோசபாத்தும் | ஜெபத்தில் ஸ்தோத்திரப் பாட்டைத் 17
துவக்குகிற தலைவனுகிய மத்தனியாவும், இவன் மீகாவின் குமாரன், இவன் சப்தியின் குமாரன், இவன் ஆசாபின் குமாரன்; மத்தனியாவின் சகோதரரில் அவனுக்கு அடுத்தவனுன பக்பூக்கியாவும், அப்தாவுமே, இவன் ஷம்மூவாவின் குமாரன், இவன் காலாவின் குமாரன், இவன் எதுத்தூனின் குமாரன். பரிசுத்த நகரத்திலிருந்த லேவி 18
யர் எல்லாரும் இருநூற்று எண்பத்துநாலு பேர்.

வாசல் காவலாளர்: அக்கூபும், தல்மோ 19
னும், வாசல்களில் காவல்காக்கிற அவர்கள் சகோதரரும் நூற்று எழுபத்திரண்டு பேர்.

சாமானிய இஸ்ரவேலரும் ஆசாரியரும் 20
லேவியரும் யூதாவின் சகல ஊர்களிலும் தங்கள் தங்கள் சுதந்தரங்களிலிருந்தார்கள். கோவில்வேலையாட்கள் ஒபேலிலே 21
குடியிருந்தார்கள்; அவர்கள்மேல் சீகாவும் கிஸ்பாவும் விசாரிப்புக்காரராயிருந்தார்கள்.
தெய்வாலயத்தின் ஊழியத்தில் எருசலேமி 22
லிருந்த லேவியரின் விசாரிப்புக்காரன் ஆசாபின் வம்சத்தைச் சேர்ந்த பாடகரில் ஒருவனுகிய ஊசி, இவன் பானியின் குமாரன், இவன் கஷபியாவின் குமாரன், இவன் மத்தனியாவின் குமாரன், இவன் மீகாவின் குமாரன். பாடகரைப்பற்றி ராஜகட்டளை 23
பிறந்திருந்தது, அவர்களுக்கு அன்றுடப்படி கொடுக்கும்படி நிட்டமான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. யூதாவின் குமாரனுகிய 24
சேராவின் புத்திரரில் மெஷேசாபெயேலின் குமாரன் பெதகியா ஜனத்தைப்பற்றிய காரியங்களிலெல்லாம் ராஜாவுக்கு உதவிசெய்தவன்.

25 வயல்சூழ்ந்த கிராமங்களில் குடியிருந்த
வர்களுக்குள்ளே யூதாவின் புத்திரரில் சிலர்
கீரியாத் அர்பாவிலும் அதைச்சார்ந்த கிரா
மங்களிலும் தீபோனிலும் அதைச்சார்ந்த
கிராமங்களிலும் எக்கப்செயேலிலும் அதின்
26 கிராமங்களிலும் | யேஷுவாவிலும், மோ
லாதாவிலும், பேத்பேலேதிலும், கத்சார்
27 ஷுவாலிலும், பெயேர்ஷெபாவிலும் அதைச்
28 சார்ந்த கிராமங்களிலும் | சிக்லாகிலும்,
மெகோனாவிலும் அதைச்சார்ந்த கிராமங்க
29 ளிலும், | என்ரிம்மோனிலும், சொராவிலும்,
30 யர்மூத்திலும், | சனோவாகிலும், அதுல்லாமி
லும் அவற்றைச்சார்ந்த கிராமங்களிலும்,
லாகேஷிலும் அதின் வயல்வெளிகளிலும்,
அசேக்காவிலும் அதைச்சார்ந்த கிராமங்க
ளிலும், பெயேர்ஷெபா தொடங்கி இன்னே
மின் பள்ளத்தாக்குமட்டும் குடியேறினார்
கள்.

31 பென்யமீன் புத்திரர் கேபாதொடங்கி
மிக்மாசிலும், ஆயாவிலும், பேதேலிலும்
32 அதைச் சார்ந்த கிராமங்களிலும் | ஆன
33 தோத், நோப், அனனியா, | காத்சோர்,
34 ராமா, கித்தாயிம், காதித், செபோயிம், நெப
35 லாத், | லோத், ஓனே என்னும் ஊர்களி
லும் கம்மாளர் பள்ளத்தாக்கிலும் குடியிருந்
தார்கள்.

36 யூதாவுக்குரிய லேவியரிலே சிலவகுப்பார்
பென்யமீனிலே குடியிருந்தார்கள்.

**12** ஷெயல்தியேலின் குமாரனாகிய செருபா
பேலோடும் யேஷுவாவோடும் வந்த ஆசா
ரியரும் லேவியரும் இவர்களே: சொராயா,
2 எரேமியா, எஸ்ரா, | அமரியா, மல்லூக்,
3 அத்தூஷ், | ஷெகனியா, ரெகூம், மெரே
4 மோத், | இத்தோ, கிநெதோய், அபியா, |
5, 6 மீயாமின், மாதியா, பில்கா, | ஷெமாயா,
7 யோயாரீப், யெதாயா, | சல்லு, ஆமோக்,
கில்கியா, யெதாயா என்பவர்கள்; இவர்கள்
யேஷுவாவின் நாட்களில் ஆசாரியருக்கும்
தங்கள் சகோதரருக்கும் தலைவராயிருந்தார்
8 கள். லேவியர் இவர்களே: யேஷுவா,
பின்னூயி, கத்மியேல், ஷெரேபியா, யூதா,
மத்தனியா என்பவர்கள்; மத்தனியாவும்
அவன் சகோதரரும் ஸ்தோத்திரப்பாட்டுப்
9 பாடுகிறவர்களே நடத்தினார்கள். பக்புக்கியா,
உன்னி என்கிற அவர்கள் சகோதரர் தங்கள்
ஊழியப் பிரிவுகளில் அவர்களுக்கு எதிரே
நின்றார்கள்.

10 யேஷுவா யொயாக்கீமைப் பெற்றான்,
யொயாக்கீம் எலியாஷீபைப் பெற்றான்,
எலியாஷீப் யோயாதாவைப் பெற்றான், |
11 யோயாதா யோனத்தானைப் பெற்றான்;
யோனத்தான் யதுவாவைப் பெற்றான்.

யொயாக்கீமின் நாட்களிலே பிதாவம் 12
சங்களின் தலைவராயிருந்த ஆசாரியர்கள்
இவர்களே: செராயா வம்சத்தில் மெராயா,
எரேமியா வம்சத்தில் கனனியா, | எஸ்ரா 13
வம்சத்தில் மெசுல்லாம், அமரியாவம்சத்தில்
யோகனான், | மெலீகு வம்சத்தில் யோனத் 14
தான், ஷெபனியா வம்சத்தில் யோசேப்பு, |
காரிம்வம்சத்தில் அத்னா, மெராயோத்வம்சத் 15
தில் கெல்காய், | இத்தோவம்சத்தில் சகரி 16
யா, கிநெதோன் வம்சத்தில் மெசுல்லாம், |
அபியாவம்சத்தில் சிக்ரி, மினியாமீன், 17
மொவதியா என்பவர்கள் வம்சங்களில் பிர
தான், | பில்காவம்சத்தில் சம்மூவா, ஷெமா 18
யா வம்சத்தில் யோனத்தான், | யோயாரீப் 19
வம்சத்தில் மத்தெனாய், யெதாயா வம்சத்தில்
ஊசி, | சல்லாய் வம்சத்தில் கல்லாய், 20
ஆமோக் வம்சத்தில் ஏபேர், | சில்க்கியா 21
வம்சத்தில் கஷபியா, யெதாயாவம்சத்தில்
நெதனயேல் என்பவர்கள்.

எலியாஷீப், யோயாதா, யோகனான், 22
யதுவா என்பவர்களின் நாட்களில் லேவியர்
பிதாவம்சங்களுக்குத் தலைவர் எழுதப்பட்
டார்கள்; பாரசீகராகிய தரியுவின் அர
சாட்சி காலத்தில் ஆசாரியருக்கு அப்படி
யே எழுதப்பட்டது. லேவி புத்திரரின் 23
பிதாவம்சத்தலைவர் எலியாஷீபின் குமாரனா
கிய யோகனானின் நாட்கள்மட்டும் தின
வர்த்தமானப் புஸ்தகத்தில் எழுதப்பட்
டிருந்தார்கள். லேவியர் வம்சத்தலைவர் 24
இவர்களே: கஷபியா, ஷெரேபியா, கத்மி
யேலின் குமாரன் யேஷுவா என்பவர்கள்;
இவர்களும் இவர்கள் சகோதரரும் கடவு
ளின் மனுஷனாகிய தாவீதின் கட்டளைப்
படியே தெரிக்கவும் தோத்திரிக்கவும் வகுப்
புக்கு வகுப்பு எதிரே நின்றார்கள். மத் 25
தனியா, பக்புக்கியா, ஒபதியா, மெசுல்
லாம், தல்மோன், அக்கூப் என்பவர்கள்
வாசல் காவலாளராய் வாசல்களருகே
யிருந்த பொக்கிஷசாலைகளைக் காவல் காத்
தார்கள். யோத்சதாக்கின் குமாரனாகிய 26
யேஷுவாவின் குமாரன் யொயாக்கீமின்
நாட்களிலும் அதிபதியாகிய நெகேமியாவும்
வேதசாஸ்திரியாகிய ஆசாரியன் எஸ்ராவும்
இருந்த நாட்களிலும் அவர்கள் அப்படியே
இருந்தார்கள்.

எருசலேமின் அலங்கத்தைப் பிர 27
திஷ்டை பண்ணுகையில் கைத்தாளம் தம்
புரு சுரமண்டலம் முதலான கீதவாத்தியங்
களை வாசித்துத் துதித்துப் பாடி மகிழ்ச்சி
யோடே பிரதிஷ்டையைக் கொண்டாட
எல்லா இடங்களிலும் இருந்த லேவியரை
எருசலேமுக்குக் கூட்டிவரும்படி தேடி

28 னர்கள். அப்படியே பாடகர்கள் எருச
லேமின் சுற்றுப்புறங்களிலும் நெத்தோபாத்
29 தியரின் கிராமங்களிலும் | பேத்கில்காலிலும்,
கேபா, அஸ்மாவேத் ஊர்களின் வெளிகளி
லும் இருந்துவந்து கூடினார்கள்; பாடகர்
எருசலேமுக்குச் சுற்றிலும் தங்களுக்குக்
30 கிராமங்களைக் கட்டியிருந்தார்கள். ஆசாரி
யரும் லேவியரும் தங்களைச் சுத்திகரித்துக்
கொண்டு, ஜனத்தையும் பட்டணவாசல்களை
யும் அலங்கத்தையும் சுத்திகரித்தார்கள்.
31 அப்பொழுது நான் யூதாவின் அதிபதிகளை
அலங்கத்தின்மேல் ஏறப்பண்ணித் துதிசெய்
யும் பெரிய பாடகக்கூட்டத்தாரை இரு
பிரிவாகச்செல்ல நிறுத்தினேன்; அவர்களில்
ஒரு கூட்டத்தார் அலங்கத்தின்மேல் வலது
புறமாகக் குப்பைவாசலின் திசையாய்ப்
32 போனார்கள். அவர்களோடே ஓசாயாவும்
33 யூதாவின் அதிபதிகளில் பாதிப்பேரும், | அச
34 ரியா, எஸ்ரா, மெசுல்லாம், | யூதா, பென்ய
மீன், செமாயா, எரேமியா என்பவர்
35 களும், | பூரிகைகளை வைத்திருந்த ஆசாரிய
வகுப்பாரும் போனார்கள்; பின்னும் சகரியா
வும், இவன் யோனத்தானின் குமாரன், இவன்
செமாயாவின் குமாரன், இவன் மத்தனியா
வின் குமாரன், இவன் மிகாயாவின் குமாரன்,
இவன் சக்கூரின் குமாரன், இவன் ஆசாப்
36 பின் குமாரன்; கடவுளின் மனுஷனு
கிய தாவீதின் தேவாதியங்களை வாசிக்
கிற அவன் சகோதரரான செமாயா,
அசரயேல், மிலலாய், கிலலாய், மாகாய்,
நெதனெயேல், யூதா, கனனி என்
பவர்களும் போனார்கள். வேதசாஸ்திரி
யாகிய எஸ்ரா இவர்கள் முன்னே நடந்
37 தான். அவர்கள் ஊருணி வாசல்வழியே
சென்று தங்களுக்கு நேரே தாவீதின் நகரத்
துக்குச் செல்லும் படிகளில், அலங்கத்தை
ஒட்டியிருந்த படிகளிலே, தாவீதின் மாளி
கைக்கு மேலாக ஏறிக் கீழ்திசையிலிருந்த
38 தண்ணீர்வாசல்வரை சென்றார்கள். துதி
செய்யும் பாடகர் கூட்டத்தாரின் இரண்
டாம் பிரிவார் எதிர்ப்படுமாறு நடந்து
போனார்கள், அவர்களோடு நான் சென்
றேன்; ஜனத்தில் பாதிப்பேரும் சென்றார்கள்;
அலங்கத்தின்மேல் சூளைக்கோபுர வழியாக
39 வும் | அகழ்மதில் வழியாகவும் சென்று
எப்பிராயீம்வாசலையும் பழையவாசலையும்
மீன்வாசலையும் கனனெயேலின் கோபுரத்
தையும் மேயா கோபுரத்தையும் கடந்து
ஆட்டுவாசல்வரைபோய்ச் சிறைச்சாலை
40 வாசலருகே நின்றார்கள். அதற்குப் பின்பு
துதிபாடும் இருகூட்டத்தாரும் கடவுளின்
ஆலயத்திலே வந்து நின்றார்கள்; நானும்
என்னோடே அதிபதிகளில் பாதிப்பேரும், |
41 பூரிகைகளைப் பிடித்திருந்த எலியாக்கீம்,
மாசேயா, மினியாமீன், மிகாயா, எலியோ
யேனை, சகரியா, கனனியா என்கிற ஆசாரி
42 யரும், | மாசேயா, செமாயா, எலெயாசார்,
ஊசி, யோகனன், மல்கியா, ஏலாம், ஏசேர்
என்பவர்களும் நின்றோம்; பாடகரும் அவர்
களை நடத்தினவனுமாகிய யெஸ்ரகியாவும்
43 பாடினார்கள். கடவுள் தங்களுக்கு
மகா சந்தோஷத்தைக் கொடுத்ததினால் அந்
நாளிலே பெரிய பலிகளைச் செலுத்திச் சந்
தோஷமாயிருந்தார்கள்; ஸ்திரீகளும் பிள்ளை
களுங்கூடச் சந்தோஷமாயிருந்தார்கள்;
எருசலேமிலே கொண்டாடிய சந்தோஷம்
வெகுதூரம் கேட்டது.
44 அன்றையதினம் பொக்கிஷங்களையும்
படைப்புகளையும் முதற்கனிகளையும் தசம
பாகங்களையும் வைக்கும் அறைகளின்மேல்
விசாரிப்புக்காரர் நியமிக்கப்பட்டார்கள்;
இவர்களே ஆசாரியருக்கும் லேவியருக்கும்
ஊர்நிலங்களிலிருந்து நியாயப்பிரமாணத்
தின்படியே வரவேண்டிய பகுதிகளை அறை
களில் சேர்த்து வைக்கவேண்டியவர்கள்;
ஆசாரியரும் லேவியரும் ஊழியஞ் செய்வ
தைக் கண்டு யூதா மனிதர் சந்தோஷித்தார்
45 கள். அவர்கள் தங்கள் கடவுளின் விஷய
மாகவும் சுத்திகரிப்பின் விஷயமாகவும்
செய்யவேண்டியவற்றைச் செய்துவந்தார்
கள்; அப்படியே பாடகரும் வாசல்காவ
லாளரும், தாவீதும் அவன் குமாரனாகிய
சாலொமோனும் கட்டளையிட்டபடியேசெய்
46 தார்கள். தாவீதும் ஆசாபும் இருந்த பூர்வ
நாட்களிலேயே பாடகரை நடத்தும் தலைவன்
இருந்தான், கடவுளுக்குத் துதிதோத்திரப்
47 பாடல்கள் பாடப்பட்டன. ஆகவே செருபா
பேலின் நாட்களிலும், நெகேமியாவின் நாட்
களிலும், இஸ்ரவேலர் எல்லாரும் பாடகருக்
கும் வாசல்காவலாளருக்கும் தினவீதமான
பகுதிகளைக் கொடுத்தார்கள், அப்படியே
அவர்கள் லேவியருக்கென்று அவர்களுக்
குரிய பரிசுத்த பகுதிகளைக் கொடுத்தார்கள்;
லேவியரும் அப்படியே ஆரோன் புத்திரருக்
கென்று அவர்களுக்குரிய பரிசுத்த பகுதி
களைக் கொடுத்தார்கள்.

**13** அன்றையதினம் ஜனங்கள் கேட்க
மோசேயின் புஸ்தகத்திலிருந்து வாசிக்கப்
பட்டது; அதிலே எழுதியிருக்கக் கண்ட
ஒரு விஷயம்: அம்மோனியரும் மோவாபி
யரும் இஸ்ரவேல் புத்திரருக்கு அப்பமும்
தண்ணீரும் கொடுக்க எதிர்கொண்டு வராம
லிருந்ததோடு அவர்களைச் சபிக்கப் பிலே
2 யாமைக் கூலிபேசி வரவழைத்தார்கள். அந்

தச் சாபத்தைக் கடவுள் ஆசீர்வாதமாக மாற்றிவிட்டார், எனினும் அவர்கள் என்
3 றைக்கும் கடவுளின் சபைக்குட்படலா காது என்பதே. ஆகையால் அவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கேட்டபோது பல ஜாதியாரான ஜனங்களே யெல்லாம் இஸ்ர வேலிலிருந்து பிரித்துவிட்டார்கள்.

4 எங்கள் கடவுளின் ஆலயத்தின் அறை களே மேல்பார்க்க வைக்கப்பட்டிருந்த ஆசா ரியனுகிய எலியாஷீப், தொபீயாவோடே
5 சம்பந்தங்கலந்தவனுயிருந்து தொபீயாவுக் கென்று ஒரு அறையை ஆயத்தம்பண்ணி யிருந்தான். போஜனபலிக்குரியவைகள், சாம்பிராணி, பணிமுட்டுகள், லேவியருக் கும் பாடகருக்கும் வாசல்காவலாளருக்கும் ஏற்படுத்தப்பட்ட தானியம் திராட்சரசம் எண்ணெய் என்பவைகளின் தசமபாகம், ஆசாரியரைச் சேரவேண்டிய படைப்பான காணிக்கைகள் ஆகிய இவற்றை முற் காலத்தில் அந்த அறையிலே வைத்திருந்
6 தார்கள். இதெல்லாம் நடந்தபோது நான் எருசலேமில் இல்லை; பாபிலோன் ராஜா வாகிய அர்தசஷ்டாவின் முப்பத்திரண் டாம் வருஷத்திலே நான் ராஜாவினிடத் திற்குப் போயிருந்தேன்; சில நாளுக்குப் பின்பு ராஜாவினிடத்தில் உத்தரவு பெற்றுக்
7 கொண்டு, திரும்ப எருசலேமுக்கு வந் தேன்; வந்தவுடன் எலியாஷீப் தொபீயா வுக்குக் கடவுளின் ஆலயப்பிராகாரங்களிலே ஒரு அறையை ஆயத்தம்பண்ணிச் செய்த
8 தீமையை அறிந்துகொண்டேன். அதினால் நான் மிகவும் மனவருத்தமுள்ளவனுகித் தொபீயாவின் வீட்டுத் தட்டுமுட்டுகளை யெல்
9 லாம் அந்த அறையிலிருந்து வெளியே எறிந்துவிட்டேன். பின்பு நான் அந்த அறைகளைச் சுத்திகரிக்கச் சொல்லிக் கட வுளின் ஆலயப் பணிமுட்டுகளையும் போஜன பலிக்குரியவைகளையும் சாம்பிராணியையும் அங்கே திரும்பக் கொண்டுவந்து வைத்தேன்.

10 பின்னையும் லேவியருக்குரிய பகுதிகள் கொடுக்கப்படவில்லை யென்பதையும் பணி விடைசெய்கிற லேவியரும் பாடகரும் தங் கள் தங்கள் வயல்நிலங்களுக்கு ஓடிப்
11 போனர்கள் என்பதையும் நான் அறிந்து கொண்டேன். அதினிமித்தம் அதிபதி களைக் கடிந்துகொண்டு, கடவுளின் ஆலயம் கைவிடப்பட்டுப் போனதேன் என்று சொல்லி, ஓடிப்போனவர்களைச் சேர்த்து அவரவர் வேலையில் அவர்களை வைத்தேன்.

12 அப்பொழுது யூதர் எல்லாரும் தானியம் திராட்சரசம் எண்ணெய் என்பவைகளின் தசமபாகத்தைப் பொக்கிஷ அறைகளுக்குக்
கொண்டுவந்தார்கள். நான் ஆசாரியனுகிய 13
ஷெலேமியாவையும் வேதசாஸ்திரியாகிய சாதோக்கையும் லேவியரில் பெதாயாவை யும் இவர்களுக்குதவியாக மத்தனியாவின் குமாரன் சக்கூரின் மகனுகிய ஆனூவையும் பொக்கிஷ அறைகளின்மேல் விசாரிப்புக் காரராக வைத்தேன்; அவர்கள் உண்மை யுள்ளவர்கள் என்று மதிக்கப்பட்டார்கள்; ஆகவே தங்கள் சகோதரருக்குப் பங்கிடுகிற வேலை அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்டது.

என் கடவுளே இந்தக் காரியத்தினிமித் 14
தம் என்னை நினைத்தருளும்; என் கடவுளின் ஆலயத்துக்காகவும் அதில் நடக்கும் பணி விடைகளுக்காகவும் பக்தி மேலீட்டினுல் நான் செய்தவைகளை அழியவிடாதிரும்.

அந்த நாட்களில் நான் யூதாவிலே ஓய்வு 15
நாளில் சிலர் ஆலை மிதிப்பதையும், சிலர் தானியப் பொதிகளைக் கழுதைகள்மேல் ஏற்றிக்கொண்டு வருவதையும், திராட்ச ரசம், திராட்சப்பழம், அத்திப்பழம் முதலிய பல சரக்குகளை ஓய்வுநாளிலே எருசலேமுக் குக் கொண்டுவருவதையும் கண்டு, அவர் கள் ஆகாரதிகளை விற்ற நாளிலேயே அவர் களைக் கண்டித்தேன். தீரு பட்டணத் 16
தாரும் சிலர் எருசலேமிலேயே குடி யிருந்தார்கள், அவர்கள் மீனையும் சகலவித சரக்குகளையும் கொண்டுவந்து ஓய்வுநாளிலே யூதா புத்திரருக்கும் எருசலேமிலுள்ளவர் களுக்கும் விற்றுர்கள். நான் யூதாவின் 17
பெரியவர்களைக் கண்டித்துப்பேசி: தீங்கள் என் இந்தத் தீமை செய்கிறீர்கள்? ஓய்வு நாளைப் பரிசுத்தமற்றதாக்குகிறீர்களே. உங் 18
கள் பிதாக்கள் இப்படிச் செய்தபடியினு லல்லவா நமது கடவுள் நம்மேலும் இந்த நகரத்தின்மேலும் இந்தத் தீங்கை யெல்லாம் வரப்பண்ணினுர்; அப்படி யிருந்தும் நீங்கள் ஓய்வுநாளைப் பரிசுத்த மற்றதாக்கி இஸ்ரவேலின்மேல் இன்னும் அதிக உக்கிரகத்தை வரப்பண்ணுகிறீர்களே என்று அவர்களுக்குச் சொன்னேன். ஓய்வு 19
நாள் ஆரம்பமாகுமுன், எருசலேமின் வாசல்கள் இருட்டாகும்போதே, கதவு களைப் பூட்டவும் ஓய்வுநாள் முடியுமட்டும் அவைகளைத் திறவாதிருக்கவும் வேண்டு மென்று கட்டளையிட்டேன்; ஓய்வுநாளிலே ஒரு சுமையும் உள்ளே வராதபடி வாச லண்டையிலே என் ஆட்களில் சிலரை நிறுத்தினேன். அதினுலே வர்த்தகரும் பல 20
வித சரக்குகளை விற்கிறவர்களும் இரண் டொருதரம் எருசலேமின் மதிற்புறத்தே ராத்தங்கினர்கள். அதைக்கண்டு நான் 21
அவர்களை கண்டித்து நீங்கள் அலங்

கத்தண்டையிலே ராத்தங்குகிறது என்ன? நீங்கள் மறுபடியும் இப்படிச் செய்தால் நான் உங்களைத் தண்டிப்பேன் என்று அவர் களிடம் சொன்னேன்; அதுமுதல் அவர்கள்
22 ஓய்வுநாளில் வரவில்லை. நான் லேவியரைக் கூப்பிட்டு, ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்கும் படி உங்களைச் சுத்திகரித்துக்கொண்டு வாசல்களைக் காக்க வாருங்கள் என்று கட் டளையிட்டேன்.

என் கடவுளே, இதையும் எனக்கென நினைத்தருளி உமது மிகுந்த இரக்கத்தின் படி எனக்கு இரக்கங்காட்டியருளும்.

23 அஸ்தோத், அம்மோன், மோவாப் ஜாதி களான ஸ்திரீகளைச் சேர்த்துக்கொண்ட சில
24 யூதரையும் அந்த நாட்களில் கண்டேன். அவர்கள் பிள்ளைகள் பேசின பேச்சு அரை வாசி அஸ்தோத் பாஷை; அவர்கள் அந் தந்த ஜாதிகளின் பாஷையைப் பேசினார் களேயன்றி, யூத பாஷையைச் சரியாய்ப்
25 பேச அவர்களுக்குத் தெரியாது. அவர் களையும் நான் கண்டித்துச் சபித்தேன்; அவர்களில் சிலரை அடித்து மயிரைப் பிய்த்து நீங்கள் உங்கள் குமாரத்திகளை அவர் கள் குமாரருக்குக் கொடுக்கக்கூடாது, அவர்கள் குமாரத்திகளில் ஒருவரையும் உங்கள் குமாரருக்காகிலும் உங்களுக்காகி லும் கொள்ளக்கூடாது என்று சொல்லி அப்படியே கடவுள்பேரில் அவர்களை ஆணை
26 யிடச் செய்தேன். பின்னும் நான் அவர்க ளோடு பேசி: இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலொமோன் இப்படிச்செய்து பாவத்துக் காளானானல்லவா? அவனைப்போன்ற ராஜா அநேக ஜாதிகளுக்குள்ளே இராததில்லை; கடவுளும் அவனில் அன்பாயிருந்து முழு இஸ்ரவேலின்மேலும் அவனை ராஜாவாக்கி னார்; அப்படிப்பட்டவனையும் அந்நிய ஸ்திரீகள் பாவஞ்செய்யப் பண்ணினார்களே. நீங்கள் அந்நிய ஸ்திரீகளைச் சேர்த்து நமது 27 கடவுளுக்குத் துரோகிகளாகி இந்தப் பெரிய தீமையையெல்லாம் செய்வதற்கு உங்களுக்கு இடங்கொடுப்போமோ என் றேன். யோயாதாவின் வம்சத்திலே ஒரு 28 வன், பிரதான ஆசாரியனாகிய எலியாஷிபி னுடைய குமாரன், கோரோனியனான சன் பல்லாத்துக்கு மருமகனானான்; ஆதலால் நான் அவனை என்னை விட்டுத் துரத்தி னேன்.

என் கடவுளே, அவர்கள் ஆசாரியப்பட் 29 டத்தையும், ஆசாரியருக்கும் லேவியருக்கு முள்ள உடன்படிக்கையையும் தீட்டுப் படுத்தினார்கள் என்பதை அவர்களுக்கு விரோதமாய் நினைத்துக்கொள்ளும்.

இப்படியே நான் அந்நியரையெல்லாம் 30 நீக்கி ஆசாரியரையும் லேவியரையும் சுத்தி கரித்து அவரவர் வேலையில் ஆசாரியருக் கும் லேவியருக்குமுரிய ஊழிய முறைகளை ஏற்படுத்திக் | குறித்தகாலங்களிலே செலுத் 31 தப்படவேண்டிய விறகுக் காணிக்கையை யும் முதற்பலன்களையும் திட்டம்பண்ணி னேன்.

என் கடவுளே, எனக்கு நன்மையுண்டாக என்னை நினைத்தருளும்.

# ESTHER

# எ ஸ் தர்

1 இந்தத்தேசம் முதல் எத்தியோப்பியா தேசம்வரைக்குமுள்ள நூற்றிருபத்தேழு நாடுகளையும் அகஸ்வேரு ராஜா அரசாண்டு
2 வந்தான்; அக்காலத்தில் அகஸ்வேரு ராஜா சூசான் கோட்டையிலிருந்த தன் ராஜ்ய
3 சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்த | தன் ராஜ்யபாரத்தின் மூன்றாம் வருஷத்திலே, தன் அதிபதிகளுக்கும் உத்தியோகஸ்தருக் கும் விருந்துபண்ணினான்; அப்பொழுது பாரசீகம், மேதியா தேசங்களிலுள்ள சேனை பதிகளும் மகத்தானவர்களும் நாடுகளின் அதிபதிகளும் அவன் சமுகத்தில் கூடிவந் திருந்தார்கள். அவன் தன் ராஜரீகச் சிறப் 4 பையும் செல்வத்தையும் தன் மகத்துவத் தின் மேன்மைப்பிரதாபத்தையும் அநேக நாட்களாய், நூற்றெண்பது நாளளவும், விளங்கச்செய்துகொண்டிருந்தான். அந்த 5 நாட்கள் முடிந்தபோது, ராஜா சூசான் கோட்டையிலிருந்த பெரியோர் முதல் சிறி யோர்மட்டுமுள்ள சகல ஜனங்களுக்கும் ராஜ அரமனையை அடுத்ததாய் மதில் சூழ்ந் திருந்த சிங்காரத்தோட்டத்திலே ஏழுநாள் விருந்து செய்வித்தான். வெண்மையும் 6 பச்சையும் நீலமுமான தொங்குதிரைகள்

மெல்லிய சிவப்புநூலில் செய்யப்பட்ட கயிறுகளினாலே சலவைக்கற்தூண்களிலே வெள்ளி வளையங்களில் தொங்கவைக்கப் பட்டிருந்தன; பச்சையும் வெள்ளையும் மஞ்சளும் கறுப்புமான சலவைக்கற்கள் பதித்திருந்த தளவரிசையின்மேல் பொன் வெள்ளி இவற்றால் செய்யப்பட்ட மஞ்சங் 7 கள் வைக்கப்பட்டிருந்தன. பானம் பொற் பாத்திரங்களிலே கொடுக்கப்பட்டது, பாத் திரங்களெல்லாம் வெவ்வேறு உருவங்க ளானவை; ராஜபானமான திராட்சரசம் அரச தாராளமாய்ப் பரிமாறப்பட்டது. 8 பானவிஷயத்தில் கட்டாயமில்லை என்பதே முறைபாயிற்று, விருந்தினரை அவரவர் இஷ்டத்திற்கே விட்டுவிடவேண்டுமென அரசன் தன் அரமனைப் பெரிய மனு ஷருக்கெல்லாம் கட்டளை பிறப்பித்திருந் தான்.

9 வஷ்தி ராணியும் அகஸ்வேரு ராஜாவின் அரமனையிலே ஸ்திரீகளுக்கு ஒரு விருந்து 10 செய்தாள். ஏழாம்நாளிலே அகஸ்வேரு ராஜா திராட்சரசம் குடித்துக் களித்திருக்கும் போது மகா ரூபவதியான வஷ்தி ராணியின் சௌந்தரியத்தை ஜனங்களுக்கும் அதிபதி 11 களுக்கும் காண்பிக்கும்படி, தன் சமுகத் தில் சேவித்த மெகுமான், பிஸ்தா, கர்போனா, பிகெத்தா, அபகெத்தா, சேதார், கர்காஸ் என்னும் ஏழு அண்ணகருக்கும் கட்டளை யிட்டு, ராஜகிரீடம் தரிக்கப்பட்டவளாய் அவளை ராஜசன்னிதிக்கு அழைத்துவரவேண்டு 12 மென்று சொன்னான். வஷ்தி ராணியோ அண்ணகர் மூலமாய் ராஜா சொல்லியனுப் பிய கட்டளைக்கு இணங்கவில்லை, வரமறுத்து விட்டாள்; அப்பொழுது ராஜா கடுங்கோப மடைந்து மூர்க்கவெறிகொண்டான். 13 கொள்ளவே, காலநிகழ்ச்சினையுறிய வல்ல சாஸ்திரிகளையழைத்து—நீதி நியாயங்களை அறிந்த யாவரோடும் கலந்துபேசி ஆலோ சித்த பின்பே ராஜா எவ்விஷயத்தையும் 14 தீர்மானிப்பது வழக்கம். அகஸ்வேரு ராஜா வோடு நெருங்கிப்பழகி அவன் சன்னிதியில் இருப்பவர்களாய் ராஜ்யத்தின் முதல் ஆச னத்தில் அமர்ந்தவர்கள் கர்ஷெனா, ஷேதார், அத்மாதா, தர்ஷீஷ், மேரேஸ், மர்ஸெனா, 15 மெமூகான் என்பவர்கள்—அவர்களோடு பேசி: வஷ்தி ராணிக்கு நியாயப்படி செய்ய வேண்டியதென்ன? ராஜாவாகிய அகஸ்வேரு அண்ணகர் மூலமாய்ச் சொல்லியனுப்பின கட்டளையின்படி அவள் செய்யாமற்போ 16 னாளே என்று கேட்டான். மெமூகான் ராஜாவையும் அதிபதிகளையும் பார்த்து: ராணியாகிய வஷ்தி செய்த குற்றம் ராஜா வுக்கு மாத்திரம் விரோதமானதல்ல, அகஸ் வேரு ராஜாவின் சகல நாடுகளிலுமுள்ள சகல அதிபதிகளுக்கும் சகல ஜனங்களுக் கும் விரோதமாகும். அகஸ்வேரு ராஜா 17 ராணியாகிய வஷ்தியைத் தமக்கு முன்பாக அழைத்துவரச் சொன்னபோது, அவள் வர மாட்டேனென மறுத்த செய்தியை எல்லா ஸ்திரீகளும் கேட்கும்போது அவர்கள் தங்கள் கணவரை அற்பமாய் எண்ணுவார் கள். இன்றைத்தினமே பாரசீகத்திலும் 18 மேதியாவிலுமுள்ள அதிபதிகளின் ஸ்திரீகள் ராணியின் செய்தியைக் கேட்கும்போது, ராஜாவின் அதிபதிகளுக்கெல்லாம் அப் படியே சொல்லுவார்கள்; மிதமிஞ்சிய அசட்டையும் எரிச்சலும் வினையும். ராஜா 19 வுக்கு நலமாய்த் தோன்றினால், வஷ்தி இனி அகஸ்வேரு ராஜாவுக்கு முன்பாக வரக் கூடாது என்றும் அவளுடைய ராஜ மேன் மையை அவளிலும் நல்லவளாகிய மற் றொரு ஸ்திரீக்கு ராஜா கொடுப்பார் என்றும் ஒரு ராஜகட்டளை பிறப்பிக்கவேண்டும்; அது மாற்றப்படாதிருக்கும்படி பாரசீகருக் கும் மேதியருக்குமுரிய தேசசட்டத்தில் எழுதப்படவேண்டும். இப்படி ராஜா 20 தீர்த்த காரியம் அவருடைய ராஜ்யமெங் கும்—அது விஸ்தாரமானது—கேட்கப்படும் போது, பெரியோர் முதல் சிறியோர் மட்டு முள்ள எல்லா ஸ்திரீகளும் தங்கள் கணவ ரைக் கனம்பண்ணுவார்கள் என் றார். இந்த வார்த்தை ராஜாவுக்கும் அதிபதிகளுக் 21 கும் நலமாய்த்தோன்றினதினால், ராஜா மெமூ காவுடைய வார்த்தையின்படியேசெய்து; ராஜாவின் சகல நாடுகளுக்கும் அந்தந்த 22 நாட்டின் எழுத்திலும் அந்தந்த ஜாதியாரின் பாஷையிலும் கடிதங்களை எழுதியனுப்பி: ஒவ்வொரு புருஷனும் தன் தன் வீட்டை ஆளவேண்டும் என்றும் தன் ஜனத்தின் பாஷையில் பேசவேண்டும் என்றும் கட் டளையிட்டான்.

இவைகளுக்குப்பின்பு அகஸ்வேரு ராஜா **2** வின் உக்கிரம் தணியவே அவன் வஷ்தியை யும் அவள் செய்த குற்றத்தையும் அவளைப் பற்றிய தீர்மானத்தையும் நினைத்தான். அப்பொழுது ராஜாவைச் சேவிக்கிற அவனு 2 டைய உத்தியோகஸ்தர் அவனிடம் வந்து: ரூபவதிகளாயிருக்கிற கன்னிகைகளை ராஜா வுக்கென்று தேடவேண்டும். அதன் 3 பொருட்டு ராஜா தமது ராஜ்யத்தின் நாடுகளி லெல்லாம் விசாரிப்புக்காரரை வைக்க வேண்டும்; இவர்கள் ரூபவதிகளான சகல கன்னிகைகளையும் கூட்டிச் சூசான் கோட் டையிலுள்ள அந்தர்ப்புரத்துக்கு அழைத்து

வந்து ஸ்திரீகளைக் காத்துவருகிற ராஜாவின் அண்ணகனுடைய ஏகாயின் வசத்திலே ஒப்புவிக்கவேண்டும்; அவர்கள் அலங்கரிப்புக்கு வேண்டியவைகள் அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும். அப்பொழுது ராஜாவின் கண்களுக்குப் பிரியமான கன்னிகை வஸ்தியின் ஸ்தானத்தில் பட்டத்து ஸ்திரீயாக வேண்டும் என்றார்கள்; இந்த வார்த்தை ராஜாவுக்கு நலமாய்த் தோன்றினபடியால் அப்படியே செய்தான்.

5 அக்காலத்திலே சூசான் கோட்டையிலே ஒரு யூதன் இருந்தான், அவன் பென்யமீனியன், அவன் பேர் மொர்தெகாய், அவன் யாவீரின் குமாரன், இவன் சிமேயியின் குமாரன், இவன் கீஷின் குமாரன். அவன் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யூதாவின் ராஜாவாகிய எகோனியாவைச் சிறைபிடித்துப்போனபோது, எகோனியாவோடே எருசலேமிலிருந்து சிறைப்பட்டுப் போனவர்களில் ஒருவன். அவன் தன் சிறிய தகப்பன் குமாரத்தியாகிய அத்சாளை வளர்த்துவந்தான், அவளுக்கு எஸ்தர் என்னும் பேர் வழங்கிற்று; அவளுக்குத் தாய்தகப்பனில்லை; அந்தப் பெண் ரூபவதி, சௌந்தரியமுடையவள்; அவள் தகப்பனும் அவள் தாயும் மரணமடைந்தபோது, மொர்தெகாய் அவளைத் தன் குமாரத்தியாக எடுத்துக்கொண்டான். ராஜாவின் தீர்மானமும் கட்டளையும் பிரசித்தமானபோது அநேகம் பெண்கள் கூட்டப்பட்டுச் சூசான் கோட்டையிலுள்ள ஏகாயின் வசம் ஒப்புவிக்கப்பட்டார்கள், எஸ்தரும் ராஜாவின் அரமனைக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டு ஸ்திரீகளைக் காத்துவந்த ஏகாயின் வசம் ஒப்புவிக்கப்பட்டாள். அந்தப் பெண் அவன் பார்வைக்கு ரூபருசியிருந்ததினால் அவளுக்கு அவனிடம் தயை கிடைத்தது; ஆகவே அவன் அவளுடைய அலங்கரிப்புக்கு வேண்டியவைகளையும் அவளுக்கு வேண்டிய ஆகாராதிகளையும் தாமதமின்றிக் கொடுத்து, ராஜ அரமனையிலிருந்து அவளுக்கெனக் குறிக்கப்பட்ட ஏழு தாதிமார்களையும் அவளுக்குக் கொடுத்து, அந்தர்ப்புரத்தில் சிறந்த ஒரு இடத்திலே அவளையும் அவள் தாதிமார்களையும் வைத்தான். எஸ்தரோ தன் ஜனம், குலம் இன்னவென்று அறிவிக்கவில்லை; அதைத் தெரிவிக்கவேண்டாமென்று மொர்தெகாய் அவளுக்குக் கட்டளையிட்டிருந்தான். எஸ்தரின் சுகசெய்தியையும் அவளுக்கு நடக்குங் காரியத்தையும் அறியும்படி மொர்தெகாய் நாடோறும் அந்தர்ப்புரத்துக்கு வெளியே உலாவுவான்.

கன்னிகைகளுக்கு ஏற்பட்ட ஒழுங்கின் 12
படியே ஒவ்வொரு பெண்ணும் பன்னிரண்டு மாதமளவும், ஆறுமாதம் வெள்ளைப்போளத் தைலத்திலும் ஆறுமாதம் கந்தவர்க்கங்களிலும் ஸ்திரீகளின் அலங்கரிப்புக்கு வேண்டிய மற்றவைகளிலும், அலங்கரிக்கப்பட வேண்டும்; அலங்கரிப்பின் நாட்கள் தீர்ந்த பின்பு ராஜாவாகிய அகஸ்வேருவினிடம் செல்ல அவளவளுடைய முறை வரும் போது | இவ்விதமாய் அலங்கரிக்கப்பட்ட 13
பெண் ராஜாவினிடம் செல்வாள், அந்தர்ப்புரத்திலிருந்து தன்னோடேகூட ராஜ அரமனைக்குக் கொண்டுபோக, அவள் தனக்கு வேண்டுமென்று கேட்பவையெல்லாம் அவளுக்குக் கொடுக்கப்படும். சாயங்காலத் 14
திலே அவள் உள்ளே சென்று காலமே மறுமனையாட்டிகளைக் காத்துவரும் ஷாஷ்காஸ் என்னும் அரமனை அண்ணகனின் வசம் இருக்கும் மற்றொரு அந்தர்ப்புரத்திற்குத் திரும்பிப் போவாள்; ராஜா தன்னை விரும்பிப் பேர்சொல்லி அழைப்பித்தாலொழிய அவள் மறுபடியும் ராஜாவினிடம் செல்ல முடியாது.

மொர்தெகாய் தனக்குச் குமாரத்தியாய் 15
எடுத்துக் கொண்டவளும் அவன் சிறிய தகப்பனுடைய அபியாயேலின் குமாரத்தியுமான எஸ்தர் ராஜாவினிடம் செல்லுவதற்கு முறை வந்தபோது, அவள், ஸ்திரீகளைக் காத்துவந்த அரமனை அண்ணகனுடைய ஏகாய் சொன்னவைகளையேயன்றி வேறொன்றையும் கேட்டு வாங்கவில்லை; எஸ்தரைப் பார்த்த வர்களெல்லாரும் அவளிடம் பிரியமாயிருந்தார்கள். அப்படியே எஸ்தர் அகஸ்வேரு 16
ராஜாவுடைய அரசாட்சியின் ஏழாம் வருஷம் தேபேத் மாதமாகிய பத்தாம் மாதத்திலே ராஜாவினிடம் அரமனைக்கு அழைத்துக்கொண்டுபோகப்பட்டாள். ராஜா சகல 17
ஸ்திரீகளைப்பார்க்கிலும் எஸ்தர்மேல் அன்பு வைத்தான்; சகல கன்னிகைகளிலும் அவளே அவன் சமுகத்தில் அதிக தயையும் பட்சமும் பெற்றாள். அவன் ராஜ கிரீடத்தை அவள் சிரசின்மேல் வைத்து அவளை வஸ்தியின் ஸ்தானத்திலே பட்டத்து ஸ்திரீயாக்கினான். அப்பொழுது ராஜா தன் சகல 18
அதிபதிகளுக்கும் உத்தியோகஸ்தருக்கும் எஸ்தரால் ஒரு பெரிய விருந்துசெய்து, நாடுகளுக்குத் தீர்வை சகாயஞ் செய்து, அரசதாராளமாய் வெகுமானங்களையும் கொடுத்தான்.

இரண்டாந்தரம் அந்தப்பெண்கள் சேர்க்கப்படும்போது மொர்தெகாய் ராஜாவின் அரமனை வாசலில் உட்கார்ந்திருந்தான். 19

20 மொர்தெகாய் தனக்குக் கட்டளையிட்டிருந்த
படியே எஸ்தர் தன் குலம் ஜனம் இன்ன
தென்று அறிவிக்காதிருந்தாள்; எஸ்தர் மொர்
தெகாயினிடம் வளர்ந்தபோது அவன் சொற்
கேட்டு நடந்ததுபோலவே இப்பொழுதும்
21 அவன் சொற்கேட்டு நடந்துவந்தாள். அந்
நாட்களில் மொர்தெகாய் ராஜாவின் அரமனை
வாசலில் உட்கார்ந்திருந்தபோது வாசல்படி
யிலே காவல்காக்கிற பிக்தான், தேரேஷ்
என்னும் அரமனை அண்ணகர் அகஸ்வேரு
ராஜாவின்மேல் கடுங்கோபங்கொண்டு அவ
னைக் கொன்றுபோட வகைதேடினார்கள்.
22 இந்தக்காரியம் மொர்தெகாய்க்குத் தெரிய
வரவே அவன் அதை எஸ்தர் ராணிக்கு அறி
வித்தான்; மொர்தெகாய் இப்படிச் சொல்லுகி
றன் என்று எஸ்தர் ராஜாவுக்குச் சொன்
23 னாள். அந்தக்காரியம் விசாரிக்கப்பட்ட
போது அது மெய்யென்று தெரியவந்தது;
அவர்கள் இருவரும் மரத்திலே தூக்கப்பட்
டார்கள்; இது ராஜாவினிடமிருக்கும் தின
வர்த்தமானப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்
கிறது.

**3** இவற்றின்பின் அகஸ்வேரு ராஜாஅம்மெ
தாத்தாவின் குமாரனுமாகிய ஆமான் என்னும் ஆ
காகியனை உயர்த்திச் சிறந்த பதவியைக் கொ
டுத்துத் தன் சகல அதிபதிகளுக்கும் மேலாக
உயர்ந்த ஆசனத்திலே அவனை வைத்தான்.
2 ராஜாவின் அரமனை வாசலிலிருந்த ராஜா
வின் ஊழியர் அனைவரும் தாழக் குனிந்து
ஆமானை வணங்கிவந்தார்கள்; அவனுக்கு
இப்படிச் செய்யவேண்டும் என்று ராஜா
கட்டளையிட்டிருந்தான், மொர்தெகாயோ
குனிபவுமில்லை, அவனை வணங்கவுமில்லை.
3 ராஜாவின் அரமனை வாசலிலிருந்த ராஜா
வின் ஊழியர் அதைக்கண்டபோது மொர்
தெகாயினிடம், நீ ராஜாவின் கட்டளையை
4 மீறுவது என்ன என்று கேட்டார்கள். இப்
படி அவர்கள் நாளுக்குநாள் அவனிடம்
சொல்லியும் அவர்கள் சொன்னதை அவன்
கவனிக்கவில்லை; தான் யூதன் என்று அவன்
அவர்களுக்கு அறிவித்திருந்தான், மொர்தெ
காய் நடந்துகொண்ட முறை ஆமானுக்குச்
சரியாயிருக்குமோவெனப் பார்ப்பதற்கு
5 அதை ஆமானுக்கு அறிவித்தார்கள். மொர்
தெகாய் குனியவுமில்லை தன்னை வணங்கவு
மில்லை என ஆமான் கண்டபோது மூர்க்கம்
6 நிறைந்தவனுனான். மொர்தெகாய் இன்ன
ஜனத்தைச் சேர்ந்தவனென்று ஆமானுக்கு
அறிவிக்கப்பட்டிருந்தது, ஆகவே மொர்தெ
காய் ஒருவனைமாத்திரம் கொன்றுபோடுவது
ஆமானின் மனதுக்குத் திருப்தியாய்க் காணப்
படவில்லை; அகஸ்வேருவின் ராஜ்யமெங்கு
மிருந்த மொர்தெகாயின் ஜனத்தாராகிய யூத
ரையெல்லாம் சங்காரிக்க அவன் வகைதேடி
னான்.

7 அகஸ்வேரு ராஜாவின் பன்னிரண்டாம்
வருஷம் எந்த நாள் அதற்கு இசைந்த
தெனப்பார்க்க ஒவ்வொரு நாளையும் ஒவ்
வொரு மாதத்தையும் குறித்து நீசான் மாத
மாகிய முதலாம் மாதத்திலே ஆமானுக்கு
முன்பாகப் பூர், அதாவது சீட்டு, போட்டுக்
கொண்டேபோக அது அதார் மாதமான
பன்னிரண்டாம் மாதத்தின்மேல் விழுந்தது.
8 அப்பொழுது ஆமான் அகஸ்வேரு ராஜா
வோடுபேசி: உம்முடைய ராஜ்யத்தின் சகல
நாடுகளிலுமுள்ள ஜனங்களுக்குள்ளே ஒரு
ஜனம் தெறுண்டு பரவியிருக்கிறது; அவர்
களுடைய சட்டங்கள் சகல ஜனங்களு
டைய சட்டங்களுக்கும் விகற்பமாயிருக்கி
றது, அவர்கள் ராஜாவின் சட்டங்களைக்
கைக்கொள்ளுகிறதில்லை; அவர்களை இப்ப
டியே விட்டிருக்கிறது ராஜாவுக்கு நியாயமா
காது. 9 ராஜாவுக்கு நலமெனத் தோன்றினால்,
அவர்களைச் சங்காரிக்கவேண்டுமென்று கட்
டளை எழுதி அனுப்பவேண்டியது; அப்பொ
முது நான் ராஜாவின் கஜானாவிலே கொண்டு
வந்து செலுத்தப் பதினாயிரம் தாலந்து வெள்
ளியை நிறுத்துப் பொக்கிஷக்காரர் கையிலே
கொடுப்பேன் என்றான். 10 அதைக்கேட்கவே
ராஜா தன் கையிலிருந்த தன் முத்திரை
மோதிரத்தைக் கழற்றி அம்மெதாத்தாவின்
குமாரனுகிய ஆமான் என்னும் யூதசத்துரு
ஆகாகியனிடம் அதைக்கொடுத்து: 11 அந்த
வெள்ளியை நீயே வைத்துக்கொள், அந்த
ஜனமும் உன் கையிலேயே இருக்கிறது, உன்
இஷ்டப்படியெல்லாம் அவர்களுக்குச் செய்
யலாம் என்றான்.

12 முதலாம் மாதம் பதின்மூன்றாந்தேதியிலே
ராஜாவின் சம்பிரதிகள் அழைக்கப்பட்டார்
கள்; ஆமான் கட்டளையிட்டபடியெல்லாம்
ராஜப்பிரதிநிதிகளுக்கும் அந்தந்த நாட்டின்
அதிகாரிகளுக்கும் அந்தந்த ஜனத்தின் அதி
பதிகளுக்கும் அந்தந்த நாட்டின் எழுத்திலும்
அந்தந்த பாஷையிலும் எழுதப்
பட்டது; அகஸ்வேரு ராஜாவின் பேரால்
அது எழுதப்பட்டு ராஜாவின் மோதிரத்தினால்
முத்திரையிடப்பட்டது. 13 அதார் மாதமான
பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாந்தேதி
யாகிய ஒரே நாளிலே சகல யூதரையும்,
சிறியோர் பெரியோர் குழந்தைகள் ஸ்திரீகள்
ஆகிய யாவரையும், அழித்துக்கொன்று
சங்காரிக்கவும் அவர்களைக் கொள்ளையிடவும்
தஞ்சற்காரர் கையிலே ராஜாவின் நாடுக
ளுக்கெல்லாம் கடிதங்கள் அனுப்பப்பட்

14 டன. அந்த நாளுக்கென்று ஆயத்தமா யிருக்கவேண்டுமென சகல ஜனங்களுக்கும் அறிவிக்கும்படி ஒவ்வொரு நாட்டிலும் கட் டளையாக அதின் நகலைப்பிரசித்தப்படுத்த வேண்டுமெனக் கட்டளையிடப்பட்டது.
15 அந்தக்கட்டளை சூசான் கோட்டையிலே பிறந்தவுடனே அங்கிருந்த அந்த அஞ்சற் காரர் ராஜாவின் உத்தரவின்படியே விரைந் து சென்றார்கள். ராஜாவும் ஆமானும் குடிக் கும்படி உட்கார்ந்தார்கள்; சூசான் நகரத் தாரோ திகில் கொண்டார்கள்.

4 நடந்த யாவற்றையும் மொர்தெகாய் அ றிந்தபோது, அவன் தன் வஸ்திரங்களைக் கி ழித்து, இரட்டுடுத்திச் சாம்பலைப் போட்டுக் கொண்டு நகரத்தின் நடுவே நடந்துசென்று துயரப்பெருங்குரலாய் அலறிக்கொண்டு |
2 அரமனை வாசல் மூகப்புமட்டும் வந்தான்; ஒருவனும் இரட்டுடுத்தினவனுய் அரமனை
3 வாசலுக்குள் செல்லக்கூடாது. நாடுகளெங் கும், ராஜாவின் உத்தரவும் அவன் கட்டளை யும்போய்ச் சேர்ந்த இடமெல்லாம் யூதருக் குள்ளே மகா துக்கமுண்டாயிற்று, உப வாசஞ்செய்து அழுது புலம்பினார்கள், அநே கர் இரட்டும் சாம்பலுமாய்க் கிடந்தார்கள்.
4 எஸ்தரின் தாதிமாரும் அவளுடைய அண் ணகரும்போய் அதை அவளுக்கு அறிவித் தார்கள்; அரசி அதைக்கேட்டு மிகவும் துக் கப்பட்டு, மொர்தெகாய் உடுத்திருந்த இரட் டை எடுத்துப்போட்டு அவனை உடுத்துவிக் கிறதற்கு வஸ்திரங்களை அனுப்பினாள்; அவ னை அவைகளை வாங்கிக்கொள்ளவில்லை.
5 அப்பொழுது எஸ்தர் தன் பணிவிடைக் கென்று ராஜா நியமித்திருந்த அவன் அண் ணகரில் ஒருவனுகிய அத்தாகை அழைப் பித்து, காரியம் என்ன? அதின் காரணம் என்ன என்று அறியும்படி மொர்தெகாயினி டம் விசாரிக்க அவனுக்குக் கட்டளையிட்
3 டாள். அப்படியே அத்தாகு அரமனை வாசலுக்கு முன்னுள்ள ஊர்வெளியிலிருந்த
7 மொர்தெகாயினிடம் போனான். மொர்தெ காய் தனக்குச் சம்பவித்த எல்லாவற்றை யும் அறிவித்து, யூதரை அழித்து ஆமான் ராஜாவின் கஜானாவுக்கு எண்ணிக்கொடுப்ப தாகச்சொன்ன பணத்தொகையைப் பற்றி
8 யும் தெரிவித்தான். அன்றியும் யூதர்களை அழிக்கும்படி சூசானில் எழுதி வெளியிட்ட கட்டளையின் நகலை அவனிடம் கொடுத்து, அதை எஸ்தருக்குக் காண்பித்துத் தெரியப் படுத்தச்சொல்லி அவள் தவருமல் ராஜாவி னிடம் சென்று தன் ஜனத்துக்காக விண்ணப் பம்பண்ணவும் மன்றாடவும் வேண்டுமென்று அவளுக்குச் சொல்லச்சொன்னான்.

அப்படியே அத்தாகுபோய் மொர்தெகா 9
யின் வார்த்தைகளை எஸ்தருக்கு அறிவித் தான். அதைக்கேட்ட எஸ்தர் அத்தாகின் 10
மூலமாய் மொர்தெகாய்க்குச் செய்தி யனுப்பி: அழைக்கப்படாமல் யாராவது 11
உள்முற்றத்துக்கு ராஜாவினிடம் சென்றால், புருஷராகிலும் ஸ்திரீயாகிலும் சரியே, அவன் கொல்லப்படுவான்; ராஜா தன் பொற்செங்கோலை அவனுக்கு நீட்டினால் அவன் தப்பிப்பிழைப்பான், எல்லாருக்கும் ஒரே சட்டமே. இது ராஜாவின் சகல ஊழியருக்கும் ராஜாவின் நாடுகளிலுள்ள சகல ஜனங்களுக்கும் தெரியும்; நானே இந்த முப்பது நாளளவும் ராஜாவினிடம் வரவழைக்கப்படவில்லை என்று சொல்லச் சொன்னாள்.

எஸ்தரின் வார்த்தைகள் மொர்தெகாய்க்கு 12
அறிவிக்கப்படவே | அவன் எஸ்தருக்கு 13
மறுமொழியாக: யூதரெல்லாரும் அழிக்கப் படுகையில் நீ மாத்திரம், ராஜ அரமனையி லிருப்பதால், தப்பிக்கொள்வாய் என்று நினையாதே. இந்தக்காலத்திலே நீ மவுன 14
மாயிருந்தால் வேருரு வழியாக யூதருக் குச் சகாயமும் ரட்சிப்பும் வரும், நீயும் உன் தகப்பன் வீட்டாருமோ அழிவீர்கள். நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியா யிருப்பதற்கென்றே உனக்கு ராஜமேன்மை யிடைத்திருக்கலாமே, யார் அறிவார் என்று சொல்லச்சொன்னான். எஸ்தர் மொர்தெகா 15
யினிடம் ஆள் அனுப்பி, | நீர் போய் சூசா 16
னிலுள்ள யூதரையெல்லாம் கூடிவரச்செய் து மூன்றுநாள் இரவு பகல் அன்னபான மின்றி என் பொருட்டு உபவாசம்பண்ணுங் கள், நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம்; இப்படிச் செய்தபின் நான் சட்டத்துக்கு மாருகவே ராஜாவினிடம் செல்வேன்; செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச்சொன்னாள். அப்படியே மொர் 17
தெகாய் சென்று எஸ்தர் தனக்குக் கட்டளை யிட்டபடியெல்லாம் செய்தான்.

மூன்றும்நாளிலே எஸ்தர் ராஜவஸ்திரந் 5
தரித்துக்கொண்டு அரமனையின் உள்முற்றத் தில் ராஜ அரமனைக்கு எதிராகவந்து நின் றாள்; ராஜா அரமனைவாசலுக்கு எதிரான கொலுமண்டபத்தில் ராஜாசனத்திலே வீற்றி ருந்தான். எஸ்தர் ராணி முற்றத்தில் நிற் 2
பதை ராஜா கண்டபோது அவளுக்கு அவன் கண்களில் தயைகிடைத்தது, ராஜா தன் கையிலிருந்த பொற்செங்கோலை எஸ்தரிட மாக நீட்டினான்; எஸ்தர் கிட்டவந்து செங் கோலின் தலையைத் தொட்டாள். ராஜா 3
அவளோடு பேசி: எஸ்தர் ராணியே உனக்கு

என்ன வேண்டும்? ஈ விரும்புவதென்ன? ஈ விரும்புவது ராஜ்யத்தில் பாதியாயிருப்பினும் அது உனக்குக் கொடுக்கப்படும் என்றான்.
4 அதுகேட்ட எஸ்தர்: ராஜாவுக்குச் சித்தமானால் நான் அவருக்கு ஆயத்தம் செய்திருக்கிற விருந்துக்கு ராஜாவும் ஆமானும் இன்று
5 வரவேண்டும் என்றாள். அப்பொழுது ராஜா எஸ்தர் சொற்படி செய்ய ஆமானை விரைந்து வரும்படி சொல்லி, எஸ்தர் செய்த விருந்துக்கு ராஜாவும் ஆமானும் வந்தார்கள்.
6 விருந்திலே திராட்சரசம் பரிமாறப்படுகையில் ராஜா எஸ்தரைப் பார்த்து: ஈ விரும்புவதென்ன? அது உனக்குக் கொடுக்கப்படும்; ஈ கேட்பதென்ன? ராஜ்யத்தில் பாதியை ஈ கேட்
7 டாலும் கிடைக்கும் என்றான். அதற்கு எஸ்தர் பதிலுரைத்து: நான் விரும்புவதும் கேட்
8 பதும் என்னவென்று கேட்கிறீரோ? ராஜா என்மீது தயவுபாராட்டி நான் விரும்புவதைக் கொடுக்கவும், நான் கேட்பதைச் செய்யவும் சித்தங்கொள்வாரானால், நான் இன்னும் செய்யப்போகிற விருந்துக்கு ராஜாவும் ஆமானும் வரவேண்டும், நாளைத்தினம் வரும்போது ராஜாவின் கட்டளைப் படியே நான் என் விருப்பத்தை வெளியிடுவேன் என்றாள்.
9 அன்றையதினம் ஆமான் சந்தோஷப்பட்டு மனமகிழ்ச்சியோடே போனான்; ராஜாவின் வாசலிலிருந்த மொர்தெகாய் தனக்குமுன் எழுந்திராமலும் அசையாமலும் இருந்ததை ஆமான் கண்டபோதோ அவன் மொர்தெகாயின்மேல் உக்கிரகோபம்
10 நிறைந்தவனானான். ஆகிலும் ஆமான் தன்னை அடக்கிக்கொண்டு தன் வீட்டுக்கு வந்து தன் சிநேகிதரையும் தன் மனைவியாகிய
11 சேரேஷையும் அழைத்துத் | தன் செல்வப் பெருக்கையும் தன் சந்தான விருத்தியையும் ராஜா தன்னைப் பெரியவனாக்கித் தன்னை அதிபதிகள்மேலும் ராஜாவின் உத்தியோகஸ்தர்மேலும் உயர்த்திச் செய்த எல்லாவற்றையும் அவர்களுக்கு விவரித்துச் சொன்
12 னான். பின்னும் ஆமான்: ராணியாகிய எஸ்தரும் தான் செய்த விருந்துக்கு ராஜாவோடுகூட என்னைத்தவிர வேறொருவரையும் அழைக்கவில்லை; நாளைக்கும் ராஜாவோடே நான் விருந்துக்கு அழைக்கப்பட்டிருக்கி
13 றேன். இவையெல்லாம் இப்படியிருந்தும் யூதனாகிய அந்த மொர்தெகாய் ராஜாவின் அரமனை வாசலில் உட்கார்ந்திருப்பதை நான் காணுமளவும் எனக்குத் திருப்தியில்லை
14 யென்றான். அப்பொழுது அவன் மனைவியாகிய சேரேஷும் அவனுடைய சிநேகிதர் எல்லாரும் அவனைப்பார்த்து: ஐம்பதுமுழ உயரமான ஒரு தூக்குமரம் செய்யும், அதிலே மொர்தெகாயைத் தூக்கிப்போடும்படி நாளைக்காலையில் நீர் ராஜாவுக்குச் சொல்லும்; பின்பு சந்தோஷமாக நீர் ராஜாவோடு விருந்துக்குப்போம் என்றார்கள்; இது ஆமானுக்கு நலமாய்த் தோன்றினது; அவன் தூக்குமரத்தைச் செய்வித்தான்.

6 அன்று இரவு ராஜாவுக்கு நித்திரை வராத படியினால் தினவர்த்தமானங்கள் எழுதியிருந்த புஸ்தகத்தைக் கொண்டுவரச் சொன்னான்; அது ராஜசமுகத்தில் வாசிக்கப்படுகையில் | வாசல்காவலாளரில் ராஜாவின் 2
இரண்டு அண்ணகராகிய பிக்தானாவும் தேரேஷுமென்பவரும் அகஸ்வேரு ராஜாவைக் கொன்றுபோட வகைதேடின செய்தியை மொர்தெகாய் அறிவித்தான் என்று எழுதியிருக்கக் கண்டார்கள். அப்பொழுது 3
ராஜா: இதினிமித்தம் மொர்தெகாய்க்கு அளிக்கப்பட்ட கனமும் மேன்மையும் என்ன என்று கேட்க, ராஜாவைக் கேவித்து நின்ற ஊழியர், அவனுக்கு ஒன்றும் அளிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அப்பொழுது ராஜா, முற்றத்தில் நிற்கிறது 4
யார் என்று கேட்டான், ஆமான் தான் செய்த தூக்குமரத்திலே மொர்தெகாயைத் தூக்கிப்போடவேண்டுமென்று ராஜாவினிடம் பேசும்படி அரமனையின் வெளிமுற்றத்திலே வந்திருந்தான். ராஜாவின் ஊழியர் 5
அவனிடம்: இதோ, ஆமான் முற்றத்திலே நிற்கிறார் என்று சொல்ல ராஜா: அவன் உள்ளேவரட்டும் என்றான்.

ஆமான் உள்ளே வந்தபோது ராஜா அவ 6
னைப்பார்த்து: ராஜா கனம்பண்ணவிரும்புகிற மனுஷனுக்குச் செய்யவேண்டிய தென்ன என்று கேட்க ஆமான் தன் மனதிலேயே யோசித்து, ராஜா ஒருவனைக் கனம்பண்ண விரும்பினால் அவன் நானேயாம் என்று நினைத்து | ராஜாவினிடம்: ராஜா 7
கனம்பண்ண விரும்புகிற மனுஷனுக்குச் செய்யவேண்டியது இதுவே: ராஜா தரித்துக் 8
கொள்ளுகிற ராஜ வஸ்திரமும் ராஜா ஏறுகிறதும் தலையிலே ராஜகிரீடம் தரிக்கப்பட்டதுமான குதிரையும் கொண்டுவரப்படவேண்டும். அந்த வஸ்திரமும் குதிரையும் 9
ராஜாவின் மகத்தான அதிபதிகளில் ஒருவனுடைய கையிலே கொடுக்கப்படவேண்டும்; ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனுக்கு அந்த ராஜவஸ்திரத்தை உடுத்தியபின் அவனைக் குதிரையின்மேல் ஏற்றி நகர வெளிக்குக் கொண்டுபோய் ராஜா கனம் பண்ண விரும்புகிற மனுஷனுக்கு இப்படியே செய்யப்படும் என்று அவனுக்கு

முன்பாகச் சத்தமிட்டுக் கூறவேண்டும்
10 என்றான். அதுகேட்ட ராஜா ஆமானிடம்: நீ சொன்னபடி வஸ்திரத்தையும் குதிரையையும் சிக்கிரமாய்க் கொண்டுபோய் ராஜாவின் வாசலில் உட்கார்ந்திருக்கிற யூதனாகிய மொர்தெகாயிக்கு அப்படியே செய்; நீ சொன்ன எல்லாவற்றிலும் ஒன்றும் தவறுத
11 படி பார் என்றான். அப்படியே ஆமான் வஸ்திரத்தையும் குதிரையையும் கொண்டு போய் மொர்தெகாயை உடுத்தி அவனைக் குதிரையின்மேல் ஏற்றி, நகர வெளிக்குக் கொண்டுபோய், ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனுக்கு இப்படியே செய்யப்படுகிறது என்று அவனுக்கு முன்பாகச்
12 சத்தமிட்டுக் கூறினான். பின்பு மொர்தெகாய் ராஜாவின் வாசலுக்குத் திரும்பிவந்தான்; ஆமானோ சஞ்சலப்பட்டு முக்காடிட்டுக்கொண்டு தன் வீட்டுக்கு விரைந்து சென்
13 றான். ஆமான் தனக்கு நேரிட்ட யாவற்றையும் தன் மனைவியாகிய சேரேஷுக்கும் தன் சிநேகிதர் எல்லாருக்கும் அறிவித்த போது அவனுடைய ஞானிகளும் அவன் மனைவியாகிய சேரேஷும் அவனைப் பார்த்து: மொர்தெகாயிக்கு முன்பாக நீர் தாழ்ந்து போகத் தொடங்கினீர்; அவன் யூதகுலத்தான் என்றால் நீர் அவனை மேற்கொள்வதில்லை, அவனுக்கு முன்பாகத் தாழ்ந்துபோ
14 வதே நிச்சயம் என்றார்கள். அவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போதே, ராஜாவின் அண்ணகர் வந்து எஸ்தர் செய்த விருந்துக்குத் தாமதமின்றிவர ஆமானைக் கூப்பிட்டார்கள்.

**7** எஸ்தர் ராணியோடு விருந்துண்ண
2 ராஜாவும் ஆமானும் வந்தபோது | விருந்தில் திராட்சரசம் பரிமாறப்படுகையில், அந்த நாளில் திரும்பவும் ராஜா எஸ்தரினிடம்: எஸ்தர் ராணியே, நீ விரும்புவதென்ன? அது உனக்குக் கொடுக்கப்படும்; நீ கேட்ப தென்ன? ராஜ்யத்தில் பாதியை நீ கேட்டா
3 லும் கிடைக்கும் என்றான். அப்பொழுது எஸ்தர் ராணி பதிலுரைத்து: ராஜாவே, நீர் எனக்குத் தயை பாராட்டி என் சொல்லுக்குச் செவிசாய்க்கச் சித்தங்கொள்வீரானால், நான் விரும்புகிறபடியே என் ஜீவனையும் நான் கேட்கிறபடியே என் ஜனத்தாரின் ஜீவனையும் எனக்குக் கட்டளையிட்டருளும்.
4 அழித்துக்கொன்று சங்காரிக்கப்பட நானும் என் ஜனத்தாரும் விற்கப்பட்டோம்; அடிமைகளாகவும் வெள்ளாட்டிகளாகவும் விற்கப்பட்டிருந்தால் நான் பேசாதிருப்பேன்; அந்தக் கஷ்டத்தினிமித்தம் ராஜாவைத் தொந்தரவுபடுத்துவது நியாயமாகாதே என்
றான். அதுகேட்ட அகஸ்வேரு ராஜா எஸ்தர் 5
ராணியைப்பார்த்து: இப்படிச் செய்யத் துணிந்தவன் யார்? அவன் எங்கே? என்று கேட்க | எஸ்தர்: சத்துருவும் பகைஞனுமா 6
கிய அந்த மனிதன் இந்தத் துஷ்டனே, ஆமானே, என்றாள்; அப்பொழுது ராஜாவுக்கும் ராணிக்கும் முன்பாக ஆமான் திகில் கொண்டவனானான். ராஜா உக்கிரகோபத் 7
தோடே திராட்சரசப் பந்தியை விட்டெழுந்து அரமனைச் சிங்காரத் தோட்டத்திற்குப் போனான்; ராஜாவினால் தனக்குத் தீங்கு நிர்ணயிக்கப்பட்டதென்று ஆமான் கண்டு, எஸ்தர் ராணியினிடம் தன் பிராணனைக் காக்கவேண்டுமெனக் கேட்க எழுந்து நின்றான். ராஜா அரமனைச் சிங்காரத் தோட் 8
டத்திலிருந்து விருந்துசாலைக்குத் திரும்பி வரும்போது எஸ்தர் உட்கார்ந்திருந்த மஞ்சத்தின்மேல் ஆமான் விழுந்து கிடந்தான்; அது கண்ட ராஜா: நான் உள்ளே இருக்கும்போதே என் கண்முன்னே இவன் ராணியைப் பலவந்தம் செய்யவேண்டுமென்றிருக்கிறானே என்றான்; இந்த வார்த்தை ராஜாவின் வாயிலிருந்து விழுந்தவுடனே ஆமானின் முகத்தை மூடிப்போட்டார்கள்.
அப்பொழுது ராஜசமுகத்தில் நின்ற அண் 9
ணகரில் கர்போனா என்னும் ஒருவன்: இதோ, ராஜாவுக்கு நன்மையுண்டாகப் பேசின மொர்தெகாயிக்கு ஆமான் செய்வித்த ஐம்பதுமுழ உயரமான தூக்குமரம் ஆமானின்வீட்டண்டை நாட்டப்பட்டிருக்கிறது என்று சொல்ல, ராஜா: அதிலே அவனைத் தூக்கிப்போடுங்கள் என்றான். ஆமான் 10
மொர்தெகாயிக்கு ஆயத்தம்பண்ணின தூக்குமரத்தில் இப்படியாக ஆமானையே தூக்கிப்போட்டார்கள்; அப்பொழுது ராஜாவின் உக்கிரகோபம் தணிந்தது.

அன்றையதினம் அகஸ்வேரு ராஜா யூத 8
ரின் சத்துருவாயிருந்த ஆமானின் வீட்டை எஸ்தர் ராணிக்குக் கொடுத்தான்; மொர்தெகாய் ராஜசமுகத்திற்கு வரவழைக்கப்பட்டான்; அவன் தனக்கு இன்ன உறவு என்று எஸ்தர் அறிவித்திருந்தாள். ராஜா 2
ஆமானின் கையிலிருந்து எடுத்துவிட்ட தன் மோதிரத்தைக் கழற்றி அதை மொர்தெகாயிக்குக் கொடுத்தான்; எஸ்தர் மொர்தெகாயை ஆமானின் அரமனைக்கு அதிகாரியாக வைத்தாள்.

மறுபடியும் எஸ்தர் ராஜசமுகத்தில் பேசி 3
அவன் பாதங்களில் விழுந்து அழுது, ஆகாகியனான ஆமான் சிந்தித்த தீங்கையும் அவன் யூதருக்கு விரோதமாய் யோசித்த யோசனையையும் அவமாக்கிவிட அவனிடம் விண்

4 ணப்பம் பண்ணினாள். அப்பொழுது ராஜா பொற்செங்கோலை எஸ்தருக்கு நீட்டினான்; எஸ்தர் எழுந்திருந்து ராஜசமுகத்தில்
5 நின்று: ராஜா சித்தங்கொண்டு எனக்குத் தயைபாராட்டி நான் சொல்வதைச் சரியென எண்ணி என்னில் பிரியங்கொண்டால் ராஜாவின் நாடுகளிலெல்லாம் இருக்கிற யூதரைச் சங்கரிக்கவேண்டும் என்று அம்மெதாத்தாவின் குமாரனாகிய ஆமான் என்னும் ஆகாகியன் சூழ்ச்சிசெய்து எழுதிய கடிதங்கள் வியர்த்தமாகும்படி
6 எழுதி அனுப்பப்படவேண்டும். என் ஜனத்தின்மேல் வரும் தீங்கை நான் பார்ப்பது எப்படி? என் குலத்துக்குவரும் அழிவை நான் சகிப்பதெப்படி என்றாள்.
7 அப்பொழுது அகஸ்வேரு ராஜா எஸ்தர் ராணியோடும் யூதனாகிய மொர்தெகாயோடும் பேசி: இதோ, ஆமானின் வீட்டை எஸ்தருக்குக் கொடுத்தேன்; அவன் யூதரைக் கொன்றுபோட நிணைத்தபடியினால் அவனை மரத்திலே தூக்கிப்போட்டார்கள். இப்
8 போதும் உங்களுக்கு இஷ்டமானபடி நீங்கள் ராஜாவின் நாமத்தில் யூதருக்கு எழுதி ராஜாவின் மோதிரத்தினால் முத்திரைபோடுங்கள்; ராஜாவின் நாமத்தில் எழுதப்பட்டு ராஜாவின் மோதிரத்தினால்முத்திரை போடப்பட்டதை வியர்த்தமாக்க ஒருவராலும் முடியாது என்றான்.
9 அந்நேரத்திலேயே சீவான்மாதம் என்னும் மூன்றாம் மாதம் இருபத்துமூன்றாந் தேதியிலேயே ராஜாவின் சம்பிரதிகள் அழைக்கப்பட்டார்கள்; மொர்தெகாய் கட்டளையிட்டபடியெல்லாம் யூதருக்கும் ராஜ பிரதிநிதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் இந்து தேசம்முதல் எத்தியோப்பியா தேசமட்டுமுள்ள நூற்றிருபத்தேழு நாடுகளின் அதிபதிகளுக்கும் அந்தந்த நாட்டின் எழுத்திலும் அந்தந்த ஜாதியாரின் பாஷையிலும், யூதருக்கு அவர்கள் எழுத்திலும் அவர்கள்
10 பாஷையிலும் எழுதப்பட்டது. கடிதங்களை அகஸ்வேரு ராஜாவின் நாமத்திலே எழுதி ராஜாவின் மோதிரத்தினால் முத்திரையிட்டு ராஜாவின் லாயத்தில் வளர்ந்து ராஜாவின் வேலைக்கென உபயோகிக்கப்பட்ட வேகமான குதிரைகள்மேல் ஏறின அஞ்சல்காரர் கையில்கொடுத்து அனுப்பினான்.
11 அகஸ்வேரு ராஜாவுடைய எல்லா நாடுகளிலும் அதார்மாதம் என்கிற பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாந்தேதியாகிய அந்த ஒரே
12 நாளிலே, அந்தந்த ஊரிலுள்ள யூதர் ஒன்றுச் சேர்ந்து, தங்கள் பிராணனைக் காப்பாற்றவும் ஒவ்வொரு ஜனத்திலும் நாட்டிலும் தங்களுக்கு விரோதமாய் வரும் சைனியத்தார் யாவரையும் அவர்கள் குழந்தைகளையும் ஸ்திரீகளையும் அழித்துக்கொன்று சங்காரிக்கவும் அவர்கள் உடைமைகளைக் கொள்ளையிடவும் ராஜா யூதருக்கு உத்தரவு கொடுத்தார் என்று அந்தக் கடிதங்களில் எழுதியிருந்தது. யூதர் தங்கள் பகைஞரிடம் பழிவாங்கும்படி அந்த நாளுக்கென்று ஆயத்தமாயிருக்க வேண்டுமெனச் சகல ஜனங்களுக்கும் அறிவிக்கும்படி ஒவ்வொரு நாட்டிலும் கட்டளையாக அதின் நகலைப் பிரசித்தப்படுத்த வேண்டுமெனக் கட்டளையிடப்பட்டது. அந்தக் கட்டளை சூசான் கோட்டையில் பிறந்தவுடனே அஞ்சல்காரர் ராஜாவின் லாயத்தில் வளர்ந்த வேகமான குதிரைகள்மேல் ஏறி ராஜாவின் கட்டளையினாலே ஏவப்பட்டு விரைந்து சென்றார்கள்.
மொர்தெகாய் நீலமும் வெண்கமயமான ராஜவஸ்திரமும் பெரிய பொற்கிரீடமும் மெல்லிய சிவப்பு நூலினாலான அங்கியும் தரித்தவனாய் ராஜசந்நிதியிலிருந்து புறப்பட்டான்; சூசான் நகரம் ஆர்ப்பரித்து மகிழ்ந்திருந்தது. இவ்விதமாக யூதருக்கு வெளிச்சமும் மகிழ்ச்சியும் களிப்பும் கனமும் உண்டாயிற்று. ராஜாவின் வார்த்தையும் அவனுடைய கட்டளையும் போய்ச்சேர்ந்த எல்லா நாடுகளிலும் எல்லா ஊர்களிலும் யூதருக்குள்ளே மகிழ்ச்சியும் களிப்பும் உண்டாயிற்று, அந்நாள் விருந்தாண்டு கொண்டாடும் நல்ல நாளாயிற்று; யூதருக்குப் பயப்படுகிற பயம் தேசத்து ஜனங்களைப் பிடிக்கவே அவர்களில் அநேகர் யூதமார்க்கத்தில் சேர்ந்துகொண்டார்கள்.
அதார்மாதம் என்கிற பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாந்தேதியே ராஜாவின் வார்த்தையின்படியும் அவனுடைய கட்டளையின்படியும் செய்யவேண்டியநாள், அந்த நாளில் யூதரின் பகைஞர் அவர்களை மேற்கொள்ளலாம் என்று நம்பியிருந்தார்கள்; காரியமோ மாறுய் முடிந்தது, அந்நாளில் யூதரே தங்கள் பகைஞரை மேற்கொள்பவரானார்கள். அகஸ்வேரு ராஜாவின் சகல நாடுகளிலுமுள்ள ஊர்களிலே யூதர் தங்களுக்குத் தீங்குசெய்ய நிணைத்திருந்தவர்களைக் கொல்லும்படி கூடிக்கொண்டார்கள்; ஒருவரும் அவர்களுக்குமுன் நிற்கமுடியவில்லை; அவர்களைப்பற்றிய பயம் சகல ஜனங்களையும் பிடித்தது. நாடுகளின் சகல அதிகாரிகளும் ராஜ பிரதிநிதிகளும் தேசாதிபதிகளும் ராஜகாரியங்களைப் பார்க்கிறவர்களும் யூதருக்குத் துணைநின்றார்கள்; மொர்தெகாயைப்

பற்றிய பயம் அவர்களைப் பிடித்தது;
4 மொர்தெகாய் அரமனையில் பெரியவனாயிருந்தான், அவனுடைய கீர்த்தி சகல நாடுகளிலும் பரவிற்று; இந்த மொர்தெகாய்
5 மென்மேலும் பெரியவனானான். அப்படியே யூதர் தங்கள் சத்துருக்களையெல்லாம் பட்டயத்தால் வெட்டிக் கொன்று சங்காரித்துத் தங்கள் இஷ்டப்படி தங்கள் பகைஞருக்
6 குச் செய்தார்கள். யூதர் சூசான் கோட்டையிலும் ஐந்நூறுபேரைக் கொன்று சங்க
7 ரித்தார்கள். அம்மெதாத்தாவின் குமாரனாகிய ஆமான் என்னும் யூதருடைய சத்துருவின் குமாரரான பர்ஷான், தாத்தா, தல்
8 போன், அஸ்பாதா, | பொராதா, அதலியா,
9 அரிதாதா | பர்மஷ்டா, அரீசாய், அரிதாய், வாய்சாதா ஆகிய பத்துப்பேரையும்
10 கொன்றுபோட்டார்கள். ஆனாலும் கொள்ளையிடத் தங்கள் கையை நீட்டவில்லை.
11 அன்றையதினம் சூசான்கோட்டையில் கொல்லப்பட்டவர்களின் தொகை ராஜாவுக்
12 குத் தெரியவரவே | ராஜா எஸ்தர் ராணியை அழைத்து: யூதர் சூசான் கோட்டையில் ஐந்நூறுபேரையும் ஆமானின் பத்துக் குமாரரையும் கொன்று சங்காரித்தார்கள்; ராஜாவின் மற்ற நாடுகளிலும் என்னென்ன செய்திருப்பார்களோ! இப்போதும் நீ விரும்புவதென்ன? அது உனக்குக் கொடுக்கப்படும்; நீ இன்னும் கேட்பதென்ன? அது உனக்குக்
13 கிடைக்கும் என்றான். அப்பொழுது எஸ்தர் ராஜா சித்தங்கொண்டால் இன்றையதினத்துக் கட்டளையின்படியே சூசானிலுள்ள யூதர் நாளையதினமும் செய்யவும் ஆமானின் பத்துக் குமாரரின் உடலையும் தூக்குமரத்தில் தூக்கிப்போடவும் உத்தரவாகவேண்
14 டும் என்றாள். அப்படியே செய்யும்படி ராஜா சம்மதித்துச் சூசானிலே கட்டளை பிறப்பித்தான்; ஆமானின் பத்துக் குமாரருடைய உடல்களையும் தூக்கிப்போட்டார்
15 கள். இப்படியாகச் சூசானிலிருந்த யூதர் அதார்மாதம் பதினாலாந்தேதியிலும் கூடிச் சேர்ந்து சூசானில் மூந்நூறு பேரைக் கொன்றார்கள்; கொள்ளையிடவோ தங்கள் கையை நீட்டவில்லை.
16 ராஜாவின் நாடுகளிலுள்ள மற்ற யூதர்கள் கூடிவந்து தங்கள் பிராணனைக் காப்பாற்றவும் தங்கள் சத்துருக்களின் விரோதத்திற்கு முடிவுண்டாக்கவும் பகைஞரில் எழுபத்தையாயிரம்பேரைக் கொன்றுபோட்டார்கள்; கொள்ளையிடவோ தங்கள் கையை
17 நீட்டவில்லை. அதார்மாதத்தின் பதின்மூன்றாந்தேதியிலே இப்படிச் செய்து பதினாலாந்தேதியிலே இளைப்பாறி அதை விருந்துண்டு களிக்கும் நாளாக்கினார்கள்.
18 சூசானிலிருந்த யூதரோ அந்த மாதத்தின் பதின்மூன்றாந் தேதியிலும் பதினாலாந்தேதியிலும் கூடிவந்து பதினைந்தாந் தேதியில் இளைப்பாறி, அதை விருந்துண்டு களிக்கும்
19 நாளாக்கினார்கள். அதினிமித்தமே அலங்கமில்லாத ஊர்களில் குடியிருக்கிற நாட்டுப்புறத்தாரான யூதர்கள் அதார்மாதத்தின் பதினாலாந்தேதியை விருந்துண்டு களிக்கும் நல்ல நாளாகவும் ஒருவருக்கொருவர் வரிசையனுப்புகிற நாளாகவும் ஆசரிக்கிறார்கள்.

20 மொர்தெகாய் இந்த வர்த்தமானங்களை எழுதிச் சமீபத்திலும் தூரத்திலும்
21 இருந்த அகஸ்வேரு ராஜாவின் சகல நாடுகளிலுமுள்ள எல்லா யூதருக்கும் நிருபங்களை அனுப்பி | வருஷந்தோறும்
22 அதார்மாதத்தின் பதினாலாம் பதினைந்தாந் தேதிகள் யூதர் தங்கள் சத்துருக்களின் விரோதத்திற்கு முடிவுண்டாக்கின நாட்களாகவும் அந்த மாதம் அவர்கள் சஞ்சலம் சந்தோஷமாகவும் அவர்கள் துக்கம் மகிழ்ச்சியாகவும் மாறின மாதமாகவும் இருந்தபடியினாலே | அந்தநாட்களை அவர்கள் விருந்துண்டு களிக்கும் நாட்களாகவும் ஒருவருக்கொருவர் வரிசையனுப்பும் நாட்களாகவும் எளியவர்களுக்குத் தானதர்மஞ் செய்யும் நாட்களாகவும் ஆசரிக்கவேண்டுமென்று நிட்டம்பண்ணினான்.
23 அப்பொழுது யூதர் தாங்கள் செய்யத் தொடங்கினதையும் மொர்தெகாய் தங்களுக்கு எழுதிக் கட்டளையிட்டதையும்
24 வருஷவிஷயமாக ஏற்றுக்கொண்டார்கள். அம்மெதாத்தாவின் குமாரனாகிய ஆமான் என்னும் ஆகாகியன் யூதருக்கெல்லாம் சத்துருவாயிருந்து யூதரைச் சங்கரிக்கினைத்து அவர்களை அழிக்கவும் சங்கரிக்கவும் பூர்சீட்டைப் போடுவித்தான்.
25 அது ராஜாவுக்குத் தெரியவந்தபோது, யூதருக்கு விரோதமாய் ஆமான் கினைத்த அவனுடைய தீய யோசனை அவன் தலையின்மேலேயே திரும்பும்படி ராஜா கட்டளை பிறப்பித்ததினாலே ஆமானையும் அவன் குமாரரையும் மரத்திலே தூக்கிப்போட்டார்கள்.
26 ஆதலால் அந்த நாட்கள் பூர் என்னும் பதத்தினால் பூரீம் என வழங்கின; மொர்தெகாய் அந்த நிருபத்தில் எழுதியிருந்த எல்லா வார்த்தைகளினிமித்தமும், தாங்களே இந்த விஷயத்தில் அனுபவித்தவைகளினிமித்தமும், தங்களுக்கு நேரிட்டவைகளினிமித்தமும், | யூதர், எழுதியிருக்கிறபடியே, அந்த
27 இரண்டு நாட்களையும் வருஷந்தோறும்

குறித்தகாலத்தில் தவறாமல் ஆசரிக்கவேண்டு
28 மென்றும், | இந்த நாட்கள் தலைமுறை
தோறும் ஒவ்வொரு வம்சத்திலும் நாட்டிலும்
ஊரிலும் நினைவுகூரப்பட்டு ஆசரிக்கப்பட
வேண்டுமென்றும், பூரீம் என்னும் இந்தப்
பண்டிகை நாட்கள் யூதர் நடுவிலிருந்து நீங்
கக்கூடாதென்றும், அவைகளின் ஞாபகம்
தங்கள் சந்ததியாரினின்று ஒழியக்கூடா
தென்றும் நிருபத்தில் திட்டப்படுத்தப்பட்ட
தைத் தங்களுக்கும் தங்கள் சந்ததியாருக்கும்
தங்களோச் சேர்ந்துகொண்ட யாவருக்கும்
29 வருஷவிதியாக ஏற்றுக்கொண்டார்கள். பூரீ
மைப்பற்றி எழுதிய இந்த இரண்டாம் நிரு
பத்தைத் திட்டப்படுத்தும்படி அபியா
யேலின் குமாரத்தியாகிய எஸ்தர் ராணியும்
யூதனாகிய மொர்தெகாயும் பின்னும் வற்
30 புறுத்தி எழுதினார்கள். அவன் அகஸ்வேரு
வின் ராஜ்யத்திலிருந்த நூற்றிருபத்தேழு நாடு
களிலுமுள்ள எல்லா யூதருக்கும் பக்ஷமான
சமாதான வார்த்தைகளடங்கிய நிருபங்களை
31 அனுப்பி | யூதனாகிய மொர்தெகாயும் எஸ்தர்
ராணியும் யூதருக்கு ஏற்படுத்தினதும் அவர்
கள் உபவாசித்துச் சத்தமிட்டு அலறித் தங்க
ளுக்கும் தங்கள் சந்ததியாருக்கும் வருஷவிதி
யாக ஏற்றுக்கொண்டதுமான பூரீம் நாட்
களோ அவற்றுக்குரிய சரியான காலத்தில்
ஆசரிக்கவேண்டுமெனத் திட்டப்படுத்தி எழு
தினான். இப்படியாக எஸ்தரின் கட்டளை 32
பூரீம் நாட்களைப்பற்றிய இந்த வர்த்தமானங்
களைத் திட்டப்படுத்தினது; அது ஒரு புஸ்த
கத்தில் எழுதப்பட்டது.

அகஸ்வேரு ராஜா தேசத்தின்மேலும் 10
சமுத்திரத்திலுள்ள தீவுகளின்மேலும் பகுதி
ஏற்படுத்தினான். வல்லமையும் பராக்கிரமமு 2
மான அவனுடைய எல்லாச் செய்கைகளும்
ராஜா பெரியவனுக்கின மொர்தெகாயின்
உயர்பதவியின் விவரமும் மேதியா, பாரசீகம்
இவற்றின் ராஜாக்களைப்பற்றிய தினவர்த்த
மானப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறதல்லவா.
யூதனாகிய மொர்தெகாய் அகஸ்வேரு ராஜா 3
வுக்கு அடுத்தவனும் யூதருக்குள்ளே பெரியவ
னும் தன் திரளான சகோதரருக்குப் பிரிய
மானவனுமாயிருந்தான், மேலும் அவன் தன்
ஜனத்தின் நன்மையை நாடினான், அவன்
பேசியதெல்லாம் தன் வம்சத்தாரின் க்ஷேமத்
திற்கே ஏதுவாயிருந்தது.

---

# JOB

# யோபு

1 ஊத்ஸ் தேசத்திலே ஒரு மனிதன் இருந்
தான்; அவன் பேர் யோபு; அவன் குற்ற
மற்றவன், நேர்மையாளன், கடவுளுக்குப்
2 பயந்து தீமைக்கு விலகி நடந்தவன். அவ
னுக்கு ஏழு குமாரரும் மூன்று குமாரத்தி
3 களும் பிறந்தார்கள். அவனுக்கு ஏழா
யிரம் ஆடுகளும், மூவாயிரம் ஒட்டகங்
களும், ஐந்நூறு ஏர் மாடுகளும், ஐந்நூறு
கழுதைகளுமாகிய மிருக சம்பத்து இருந்
ததுமன்றி மிகவும் ஏராளமான அடிமை
களும் இருந்தார்கள். அந்த மனிதன் கீழ்
தேசத்தார் அனைவரிலும் பெரியவனாயிருந்
தான்.

4 அவன் குமாரர் முறையே ஒவ்வொரு
நாளில் ஒவ்வொரு வீட்டில் விருந்துசெய்து
தங்கள் மூன்று சகோதரிகளையும் தங்களோ
5 டே விருந்துண்ண அழைப்பார்கள். எல்
லாரும் விருந்துசெய்து தீரும்மட்டும் ஒவ்வொரு
முறையின் முடிவுதோறும் யோபு தன்
குமாரர் ஒருவேளை பாவஞ்செய்து கடவுளைத்
தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்
கள் என்று சொல்லி அவர்களை அழைத்
தனுப்பிப் பரிசுத்தப்படுத்தி அதிகாலமே
எழுந்து அவர்களில் ஒவ்வொருவருக்காக
வும் தகனபலிகளைச் செலுத்துவான்; இப்
படியே யோபு தவறாமல் ஒழுங்காய்ச்
செய்துவருவான்.

ஒருநாள் தெய்வதூதர் யெகோவாவின் 6
சந்நிதியில் வந்து நின்றபோது சாத்தானும்
அவர்கள் நடுவிலே வந்து நின்றான்.
யெகோவா சாத்தானைப்பார்த்து, நீ எங்கே 7
போய் வருகிறாய் என்று கேட்கச் சாத்
தான், நான் பூமியெங்கும் போய்ச் சுற்றித்
திரிந்து வருகிறேன் என்று யெகோவாவுக்
குப் பதிலுரைத்தான். பின்னும் யெகோவா 8
சாத்தானிடம்: என் தொண்டனாகிய யோ
பைக் கவனித்தாயா? பூமியிலே அவனைப்
போல் குற்றமற்றவனும் நேர்மையாளனு
மாய்க் கடவுளுக்குப் பயந்து தீமைக்கு
விலகி நடக்கிறவன் எவனுமில்லை என்று

9 சொன்னார். அது கேட்ட சாத்தான் யெகோ
வாவினிடம்: யோபு லாபமில்லாமலா கட
10 வுளுக்குப் பயந்து நடக்கிறான்! நீர் அவனை
யும் அவன் வீட்டையும் அவனுக்குரிய
யாவற்றையும் சுற்றி வேலியடைக்கவில்லை
யோ? அவன் செய்வதையெல்லாம் நீர்
ஆசீர்வதித்தீர்; அவன் சம்பத்து தேசத்திலே
11 பெருகிற்று. உமது கையை நீட்டி அவ
னுக்குரியவற்றையெல்லாம் தொடும், அப்
பொழுது அவன் உமது முகத்துக்கு எதி
ரேயே உம்மைத் தூஷிக்கமாட்டானே
12 பாரும் என்றார். யெகோவா சாத்தானி
டம்: இதோ, அவனுக்குரியவையெல்லாம்
உன் கையிலிருக்கிறது; அவன்மேல் மாத்
திரம் உன் கையை நீட்டாதே என்றார்;
அப்படியே சாத்தான் யெகோவாவின் சந்
நிதியைவிட்டுப் புறப்பட்டுப்போனான்.
13 ஒருநாள் யோபின் குமாரரும் அவன்
குமாரத்திகளும் தங்கள் மூத்த சகோதரன்
வீட்டிலே விருந்து சாப்பிட்டுக் கொண்
14 டிருக்கையில் | ஒரு ஆள் அவனிடம்வந்து:
எருதுகள் உழுகிறபோது, கழுதைகள்
அவற்றின் பக்கத்திலே மேய்ந்துகொண்டி
15 ருக்கையில், | ஷேபாவியர் அவைகள்
மேல் விழுந்து அவைகளைச் சாய்த்துக்
கொண்டு போனார்கள்; வேலையாட்களையும்
பட்டயத்தினால் வெட்டிப்போட்டார்கள்;
நான் ஒருவன்மாத்திரம் தப்பி அதை உமக்கு
அறிவிக்கும்படி வந்தேன் என்றான்.
16 இவன் இப்படிப் பேசிக்கொண்டிருக்
கையிலேயே வேறொருவன் வந்து: வானத்தி
லிருந்து கடவுளின் அக்கினி விழுந்து ஆடு
களையும் வேலையாட்களையும் சுட்டெரித்துப்
போட்டது; நான் ஒருவன்மாத்திரம் தப்பி
அதை உமக்கு அறிவிக்கும்படி வந்தேன்
என்றான்.
17 இவன் இப்படிப் பேசிக்கொண்டிருக்கை
யிலேயே இன்னொருவன் வந்து: கல்தேயர்
மூன்று பிரிவாய் வந்து ஒட்டகங்கள்மேல்
விழுந்து அவைகளை ஓட்டிக்கொண்டுபோ
னார்கள்; வேலையாட்களையும் பட்டயத்தினால்
வெட்டிப் போட்டார்கள்; நான் ஒருவன்
மாத்திரம் தப்பி அதை உமக்கு அறிவிக்கும்
படி வந்தேன் என்றான்.
18 இவன் இப்படிப் பேசிக்கொண்டிருக்
கையிலேயே மற்றுமொருவன் வந்து: உமது
குமாரரும் உமது குமாரத்திகளும் தங்கள்
மூத்த சகோதரன் வீட்டிலே விருந்து சாப்
19 பிட்டுக்கொண்டிருக்கையில் | வனாந்தர
வழியாய்ப் பெருங்காற்று வந்து அந்த வீட்
டின் நாலு மூலையிலும் ஆடிக்கவே வீடு
அவர்கள்மேல் விழுந்தது; பிள்ளைகள் இறந்
தார்கள்: நான் ஒருவன்மாத்திரம் தப்பி
அதை உமக்கு அறிவிக்கும்படி வந்தேன்
என்றான்.

20 அப்பொழுது யோபு எழுந்திருந்து தன்
அங்கியைக் கிழித்துத் தன் தலையைச் சிரைத்
துத் தரையிலே விழுந்து பணிந்து:
21 தாயின் கர்ப்பநின்று வெளிப்பட்டேன்
யாதுமின்றி,
திரும்பி எகிடுவதும் யாதொன்று மின்
றியே.
கொடுத்தவர் யெகோவா, எடுத்தவரும்
யெகோவா,
யெகோவா திருநாமம் துதிக்கப்படுக
என்று சொன்னான். இவையெல்லாம் நடந்
22 தும் யோபு பாவஞ் செய்யவுமில்லை, கடவு
ளைக் குறைசுமத்தவுமில்லை.

2 பின்னொரு நாளிலே தெய்வதூதர் யெ
கோவாவின் சந்நிதியில் வந்து நின்றபோது
சாத்தானும் அவர்கள் நடுவிலே யெகோவா
வின் சந்நிதியில் வந்து நின்றான். 2 யெகோ
வா சாத்தானைப் பார்த்து, நீ எங்கேபோய்
வருகிறாய் என்று கேட்கச் சாத்தான், நான்
பூமியெங்கும் போய்ச் சுற்றித்திரிந்து வரு
கிறேன் என்று யெகோவாவுக்குப் பதி
லுரைத்தான். அப்பொழுது யெகோவா 3
சாத்தானிடம்: நீ என் தொண்டனாகிய
யோபைக் கவனித்தாயா? பூமியிலே அவ
னைப்போல் குற்றமற்றவனும் நேர்மையா
னவனுமாய்க் கடவுளுக்குப் பயந்து தீமைக்கு
விலகி நடக்கிறவன் எவனுமில்லை, அவன்
இன்னும் உத்தம பக்தனாகவே நிலைநிற்கி
றான். அவனை நிர்மூலமாக்கும்படி நியாய
மின்றியே நீ என்னை எதிர்த்து என்று சொன்
னார். அதுகேட்ட சாத்தான் யெகோவாவி 4
னிடம்: தோலுக்குப் பதிலாகத்தான் தோல்;
தன் ஜீவனைக் காப்பதற்குத் தனக்குரிய
யாவற்றையும் மனுஷன் கொடுத்துவிடு
வான். நீர் உமது கையை நீட்டி அவன் 5
எலும்பையும் அவன் மாம்சத்தையும் தொ
டும்; அப்பொழுது அவன் உமது முகத்
திற்கு எதிரேயே உம்மைத் தூஷிக்கமாட்
டானே பாரும் என்றான். யெகோவா சாத் 6
தானிடம்: இதோ, அவன் உன் கையிலிருக்
கிறான்; அவன் பிராணனைமாத்திரம் தப்ப
விடு என்றார்.

அப்படியே சாத்தான் யெகோவாவின் 7
சந்நிதியைவிட்டுப் புறப்பட்டுப்போய் யோ
பின் உள்ளங்கால் தொடங்கி அவன் உச்
சந்தலைமட்டும் கொடிய பருக்களால் அவனை
வாதித்தான். அவன் ஒரு ஓட்டை எடுத்து 8
தன்னைச் சுரண்டிக்கொண்டு சாம்பற்
குப்பை மேட்டிலே உட்கார்ந்தான். அப் 9

பொழுது அவன் மனைவி அவனிடம் வந்து: நீர் இன்னும் உமது பக்தியிலேயே நிலைநிற்கிறீரோ? கடவுளை விட்டுவிடும், மரணமே
10 கதி என்றாள். அதுகேட்ட யோபு: மதி கெட்டவர்கள் பேசுகிறதுபோல நீ பேசுகிறாய்; கடவுளின் கையிலே நாம் நன்மையைமாத்திரம் ஏற்றுக்கொள்ளவேண்டுமோ, தீமையையும் ஏற்றுக்கொள்ளவேண்டாமோ என்றான்; இவையெல்லாம் நடந்தும் யோபு தன் நாவினாலும் பாவஞ்செய்யவில்லை.

11 தேமானியனான எலீப்பாஸ், சூகியனான பில்தாது, நாகமாத்தியனான சோப்பார் என்னும் மூவர், யோபின் சிநேகிதர், யோபுக்கு நேரிட்ட தீங்குகள் யாவையும் கேள்விப்பட்டபோது, அவனுக்குத் தங்கள் அனுதாபத்தைக் காட்டவும், அவனைத் தேற்றவும் ஒரு நேரத்தைக் குறித்துக்கொண்டு அவரவர் தங்கள் ஊர்களிலிருந்து வந்தார்
12 கள். அவர்கள் தூரத்தில் வருகையில் கண் நிமிர்ந்து நோக்கி அவன் உருமாறியிருப்பதை கண்டு சத்தமிட்டு அழுது தங்கள் அங்கிகளைக் கிழித்துக்கொண்டு, தங்கள் தலைகள் மேல் வந்து விழும்படி புழுதியை வானத்திலே தூற்றிக்கொண்டு அவன் சமீபத்தில்
13 வந்து, அவனுக்கு நேர்ந்த துன்பம் மகா கொடியதென்று கண்டு ஒருவரும் அவனோடு ஒரு வார்த்தையும் பேசாமல் இரவு பகல் ஏழுநாள் அவனோடேகூடத் தரையிலே உட்கார்ந்திருந்தார்கள்.

3 அதன்பின்பு யோபு தன் வாயைத்திறந்து
2 தான் பிறந்த நாளைச் சபித்தான்; அவன் பேசத்தொடங்கி:

3 அழிக நான் பிறந்தநாள்;
ஆண் ஜனித்தது என்றுரைத்த அவ்விரவும் தான் அழிக.

4 அந்நாள் இருளாக,
வானிலே கடவுள் அதை நோக்காதிருக்க;
ஒளிதான் அதன்மேல் வீசாதொழிக.

5 இருள், காரிருள் இவை அதை ஆண்டு கொள்க,
மப்பு அதை மூடுக,
பகல் எழும் இருளால் திகிலது பிடிக்க.

6 அவ்விரா காரிருளின் கைப்படுக.
ஆண்டிலே அந்நாள் களிக்கும் நாளாகாது
மாதநாட் கணக்கிலும் சேராதொழிக.

7 அவ்விரவு எவ்வுயிரும் ஜனியாதிருக்க,
மகிழ்ச்சித் தொனி அதில் கேளாதிருக்க.

8 கரிநாளதனைக் கணித்திடுவோரும்,
லிவியாதானை எழுப்ப வல்லோரும்,
இந்நாளதனைச் சபிப்பாராக.

கடையாம வெள்ளிகள் காரிருட்படுக; 9
காலை ஒளிவரக் காத்திருந்தும் வந்திலதாம்,
விழித்தெழு காலையைக் கண்டு களியாதிருக்க;
நான் ஜனித்த கர்ப்பத்தின் கதவை 10
அடைத்திலதே,
கண்காண் நோவைக் காட்டா தொழித்திலதே.
கருவினில் ஏனே அழியாதிருந்தேன்! 11
பிறந்த கணமே ஏனே இறவாதிருந்துவிட்டேன்,
என்னை ஏந்த மடியிருந்தது ஏனே 12
தான்!
ஏந்த மடியும் உண்ண ஸ்தனங்களும்
உண்டாயிருந்ததேனே ஏனே!
அவை இலாதிருந்தால் அமர்ந்து அசை 13
யாமே
தூங்கி மடிந்து தொலைந்திருப்பேனே.
உலகின் மன்னர் மந்திரிமாரொடும், 14
தங்கள் பேர் நிலைக்கப் பாழ்நிலமவற்றைக்
கட்டிமடிந்த பெரியாரோடும்,
பொன் படைத்தவராய்த் தம் வீடுகளில் 15
வெள்ளி நிரப்பிய மன்னவரோடும்
ஒன்றுயத் தூங்கி உறங்கியிருப்பேன்.
அன்றேல், வெளிப்படா முதிராப்பிண் 16
டம்,
ஒளியது காணுச் சிசுக்கள் என்னும்
இவற்றோடு ஒன்றுய் உறங்கியிருப்பேன்.
துஷ்டர் தொந்தரவிலதாம் ஆங்கே, 17
தளர்ந்து பலமற்றோர் இளைப்பாறுவார்.
அடிமைகளும் ஒன்றுய் அமர்ந்திருப்பார் 18
கள்,
ஆளோட்டிகளின் அரவம் அங்கில்லை,
சிறியார் பெரியார் எனும் பேதமிலை, 19
அடிமைக்கு ஆண்டையின் ஆக்கினையில்லை.
நிர்ப்பாக்கியருக்கு ஒளியளிப்பான் 20
னேன்?
மனங்கசந்தோர்க்கு உயிர் அளிப்பானேன்?
அவர்கள் ஆவலாய்ச் சாவை நோக்கு 21
வார்,
புதையலைத் தேடியலைவார் போலச்
சாவைத்தேடியும் அடையாதிருப்பார்,
பிரேதக்குழியைக் கண்டு களித்து 22
ஆரவாரத்துடன் மகிழ்ந்திருப்பார்,
வழி ஒருவனுக்கு மறைவாயிருக்க, 23
கடவுள் அவனைச் சூழ்ந்தடைத்திருக்க,
ஒளியால் அவன் பெறுபயன்தான்
யாதோ?

24 பெருமூச்சே என் போஜனமாகும்,
நான் கதறுவது வெள்ளமாய்ப் புரளும்;
25 நான் பயப்படுவதே எனக்கு நேரும்,
நான் அஞ்சுவதே எனக்கு வந்துறும்.
26 சமாதானமும் அமைதியும் சுகமும்
நிறைவு எனக்கு வந்திடாமுன்னர்
துயரப் பெருக்கும் வந்தே தீரும்
என்று புலம்பினன்.

**4** அதுகேட்ட தேமானியனாகிய எலீப்
பாஸ் பதிலுரைத்து:
2 பேசத் துணிந்திடில் மனம் வருந்த
வீரோ நீர்?
யாரே பேசாது அடங்கியிருப்பார்?
3 பலர்க்கு நல்யோசனை அளித்துவந்தவர்
நீர்,
தளர்ந்தோர் கையையும் திடமாக்கிவந்
தீர்,
4 விழுவார் நின்றனர் உமது சொல்லாலே,
தளர் மூழங்கால்களைப் பலமுறச் செய்
தீர்.
5 நீர் வருந்துகின்றீர் துன்பு உமக்காதலின்,
இத்யம் கலங்குவீர் அல்லது உமைத்
தொட்டதால்.
6 தெய்வபக்தியிலோ உமதுயிர்க்குறுதி,
குற்றமில் ஜீவியமே உம் தைரியம்.
7 பிழையிலார் அழிவரோ? அழியார்,
அறிவீர்;
நேர்மையர் அதமாயின இடம் உண்
டோ?
8 துன்பை உழுது தீங்கை விளைத்தவர்
அதையே அறுப்பார், இது நான் கண்
டது.
9 தெய்வ சுவாசத்தால் அவர் அழிவார்,
அவர் கோபின் காற்றதனால் ஒழிவார்.
10 சிங்க கர்ச்சனையும் துஷ்டசிங்க
முழக்கும் அடங்கும், பாலசிங்கப்
பற்கள் யாவும் தகர்த்தேபோகும்.
11 வீரம்மிகுசிங்கமும் இரையின்றிமாளும்,
பெண்சிங்கச் சிறுகுட்டிகள் சிதறும்.
12 ஒரு சொல் இரகசியமாய், இதோ,
கேட்டேன்,
அதன் மெல் ஓசை என் செவியிற் பட்
டது;
13 அயர்ந்த நித்திரை மனிதர்மேல் வருமக
யில்
பலவித்த் தோற்றம் ராத் தரிசனத்திறு
கையில்
14 திகிலும் நடுக்கமும் என்னைப் பிடித்தது,
என் எலும்பனைத்தும் நடுநடுங்கினவே.
15 அப்போழ்து என்முகமேல் ஒரு காற்று
கடந்தது, என் உடல் மயிர் சிலிர்த்தது
வே.
16 ஓர் உரு என் கண்முன்னே நின்றது,
அதன் ரூபமதை விளங்க நோக்கவிலை,
அமைதலின் நடுவோர் சிறுதொனி கேட்
டேன்:
17 அழியு மானிடன் தெய்வத்தொடு கோர்
மையனே?
தன் சிருஷ்டிகரோடு சுத்தனே மானி
டன்?
18 இதோ, தம் ஊழியரிலும் நம்பிக்கை
வைத்திலர்,
தூதரின் மாட்டும் குற்றம் சுமத்துவார்,
அங்ஙனமாகவும் மானிடன் எங்கே!
19 புழுவியில் அஸ்திபாரமிட்டு
மண்வீடுகளில் தங்கி வசித்து
பொட்டுப்பூச்சிபோல் நசுங்குமானிடர்!
20 காலையிருந்து மாலைக்குள் அழிவார்,
கவனிப்பாரின்றி அழிவார், திரும்பாரே.
21 அவர் கூடாரக் கயிறற்றுப்போக
ஞானமின்றி மாண்டொழிவாரே
என்றுரைத்தது.

**5** கூப்பிட்டுப்பாரும், பதிலுரைப்பவர்
யார்?
பரிசுத்த தூதரில் எவரிடம் திரும்புவீர்?
2 மதிகேடன் அழிவான் மனவிசாரத்தால்;
எரிச்சல் அழிக்கும் புத்தியில்லாளை.
3 மதிகேடனெருவன் வேரூன்றக் கண்
டேன்,
சடுதியில் இவன் வீட்டிற்கு ஐயோவென
நேர்ந்தது.
4 உதவிக்குத் தூரமாகி அவன் மக்கள்
தப்புவிப்பாரின்றி வாசலில் நொறுங்கு
வார்;
5 மூட்செடியடைப்பையும் மீறிப்பதித்துப்
பசித்தவர் அவன் விளைவதனை யருந்து
வார்,
தாகமுள்ளோர் அவன் ஆஸ்தியை உறிஞ்
சுவார்.
6 புழுதியினின்று தீங்குகள்விளையா,
மண்ணினின்று துன்பம் விளையா.
7 அக்கினிப் பொறி மேலே பறப்பதுபோல்
துன்பத்துக்கென்றே மானிடன் பிறந்து
ளான்.
8 நானே கடவுளை நாடுவேன், அவர்
பால்
என்வழக்கதனை ஒப்புவித்திடுவேன்.
9 ஆய்தற்கரிய பெருங்காரியமும்
எண்ணற்கரும் அதிசயமும் அவர் செய்
வார்.
10 பூமியின்மேல் மழை பெய்திடச் செய்
வார்,
வயல்வெளிகளில் நீர் பெருகிடச் செய்
வார்.

11 தாழ்ந்தவர் தம்மை உயர்வினில் வைப்
பார்,
துக்கிப்போர் உதவி பெற்றுயர்ந்திருப்
பார்;
12 தந்திரக்காரர் உபாயம் அவமாக்கிடுவார்,
அவர்கள் கை செய்வன அவமே.
13 ஞானிகளே அவர்கள்தம் தந்திரத்தில்
பிடித்திடுவார்,
திரியாவரர்தம் ஆலோசனை கவிழும்.
14 பகற்காலத்திலும் இருளினுள்ளாகி
மத்தியானத்தில் இரவிற்போல்தடவுவார்.
15 அவரோ எளியனை அவர்வாய் வாளுக்கும்
பலவான் கைக்கும் விலக்கி இரட்சிப்
பார்.
16 ஆகவே எளியவன் நம்பிக்கைபெறு
வான்,
நீதியும் தனது வாயைமூடும்.
17 கடவுள் கடிந்துகொள்ளும் மனிதன்,
இதோ, பாக்கியவான்,
சர்வவல்லோர் செய்கை இதை அற்பமாய்
எண்ணுதே.
18 அவரே காயப்படுத்துபவர், கட்டுபவர்.
அடிப்பவர் அவர், அவர் கை குணமாக்
கும்.
19 அறுமுறை இக்கட்டுக்கு உமை நீங்க
லாக்குவார்,
ஏழாம்முறையும் தீங்கு உமைத்தொ
டாது.
20 பஞ்சத்திலே உமைச்சாவுக்கு விலக்கு
வார்,
யுத்தத்தில் பட்டயவெட்டுக்கு விலக்கு
வார்.
21 நாவாம் சவுக்குக்கு நீர் மறையுண்பீர்
இம்சையின் காலத்தும் அஞ்சாதிருப்பீர்.
22 இம்சையும் பஞ்சமும் பார்த்து நகைப்
பீர்,
காட்டு மிருகங்கட்கும் பயப்படாதிருப்
பீர்;
23 வெளிக்கற்களோடு உமக்கு உடன்படிக்
கையுண்டு,
வெளிமிருகங்கட்கும் உம்மோடு சமாதா
னம்.
24 உமது கூடாரத்தில் மனசாந்தி காண்பீர்,
மந்தையைப் பார்க்குங்கால் குறைகாண
மாட்டீர்;
25 காண்பீர் உமது சந்தானப் பெருக்கை,
சந்ததி பூமியின் பூண்டுபோல் தழைத்
திடும்.
26 காலத்தில் அரிக்கட்டு களம்வந்து சேர்
தல்போல்
முதிர்வயதாகுங்கால் கல்லறையிற் சேர்ந்
திடுவீர்.
27 நாங்கள் ஆராய்ந்து அறிந்தது, இதோ,
இதுவே,
காரியம் இப்படியே, கேட்டறிந்து
கொள்வீரே

என்று சொன்னான்.

6 அதுகேட்ட யோபு பதிலுரைப்பா
னாய்:
2 என் சஞ்சலமெலாம் நிறுத்து என் நிர்ப்
பந்தம்
அனைத்தும் தராசில் வைத்தால் நலமாம்.
3 கடற்கரைமணலிலும் அது பாரமாகும்,
ஆதலின் என்சொல் தடுமாறினதாம்.
4 சர்வவல்லவரின் அம்பு என்னுள் தைத்
தது,
அவற்றின் விஷத்தை என் ஆவி குடித்
திடும்,
தெய்வபயங்கரங்கள் அணியணியாய்
முன்நிற்கும்,
5 புல்நிறை இடம் காட்டுக்கழுதையது
கத்திடுமோ!
எருது கதறிடுமோ தீவனம் மிகுந்த
இடம்!
6 ருசியிலாப்பண்டத்தை உப்பின்றி உண்
போமோ!
முட்டையின் வெள்ளைக்கருவில் உண்
டோ நல்லசுவை!
7 இதை என் ஆத்மா தொடமாட்டாதே,
அரோசிக போஜனம் போலாம் அதுவே.
8 ஆ! என் மன்றாட்டு அருளப்படின், என்
ஆசையைக் கடவுள் அருளின், நன்றும்!
9 கடவுள் என்னை நொறுக்கிடச் சித்த
மாய்த்
தம்கரம் நீட்டித்துணிப்பது என் ஆசை.
10 அப்பொழுது இன்னும் ஆறுதலிருக்கும்;
பரிசுத்தர் திருமொழி நான் மறுத்தில
னாய்,
இரக்கமில் வாதையாம் இதிலும் குதி
கொள்வேன்.
11 என்பலம் எவ்வளவு நான் காத்திருக்க!
என்முடிவென்னை பொறுமையோடி
ருக்க!
12 என்பலம் கல்லோ!
என்தசை செம்போ!
13 உதவி என்பதில்லை,
போக்கிடம் அற்றுப்போயிற்றெனக்கே.
14 துன்புளானுக்கு நண்பர் தயையாக
வேண்டுமலோ,
அன்றேல் சர்வவல்லார் பயம் அவனு
க்கு அற்றேபோம்.
15 என்சகோதரர் எனைவஞ்சித்தார் நீரோ
டைபோல்,

நீர்வறண்ட ஆற்றுப்பரப்பேபோல் ஆயினரே.
16 குளிர்காட் பனிக்கட்டியால் கறைப்பட்டது,
அதன்மேல் உறைமழை விழுந்து கலக்கது.
17 உஷ்ணங் காணவே வற்றிவடிந்து
அனல்பட உருவழிந்து மறைந்துபோயினதே.
18 வர்த்தகக்கூட்டம் வழிவிலகி இங்கு வந்து
பாலைவனத்தைக் கண்டு எகிமாண்டாரே.
19 தேமாவர்த்தகக் கூட்டம் தேடியலைந்தார்கள்;
சேபா வழிப்போக்கர் அதைத்தேடிக் காத்திருந்தார்;
20 நம்பி அதைத்தேடினதால் வெட்கிக் கலங்கினரே,
நீரோடைமட்டும் வந்து மனமடிந்தார்.
21 அவ்வாறே நீங்களும் உதவாமற்போனீர்கள்;
பயங்கரங்கண்டு பெரிதும் திகில்கொண்டீர்.
22 ஏதாகிலும் கொணரும் என்று நான் சொன்னதுண்டோ?
உமது பொருள்நின்று உதவும் நிதியென்றும்
சத்துருவின் கையிலிருந்து விடுவியுமென்றும்
23 இம்சிப்போர் கைநின்று மீட்டுவிடுமென்றேனும்
உங்களிடத்திலே நான் உரைத்ததும் உண்டோ?
24 போதனைசெய்யுங்கள், மௌனமாய் நான் இருப்பேன்;
எதிலேதவறினேன்? அறியஉரைத்திடுங்கள்;
25 நேர்மையுள்ளோர் சொல்லே மிகுவலிமையுள்ளன.
நீங்கள்கடிந்திடுதலால் விளைபயன் என்னே?
26 வார்த்தைகளையோகடிந்திடவந்தீர்?
கலக்கத்துளான்சொல் காற்றேபோலும்.
27 அனுதையின்மேல் சீட்டுபோட்டிடுவீர்;
நேசித்தனை வர்த்தகப் பொருளாக்கிடுவீர்.
28 உற்றெனைநோக்கிப் பார்ப்பின் நன்றும்,
உமது முகத்தெதிர் பொய்யுரைத்தேனே?
29 அநீதம் அகற்றுதற்கு என்பால் திரும்புக,
திரும்புக பின்னும், நீதம் என்காரியம்;
30 நான் உரைப்பதிலே அநீதம் உண்டோ?
கேட்டைப் பகுத்தறியாதோ என்வாய்?

பூமியின் வாழ்க்கை கூலிப்படையாளின் 7
மலோ?
வாஞ்ஞன் கூலியாள் நாட்போன்றதுவே.
வேலையாள் நிழலை ஆசித்திடுவான், 2
கூலியாள் கூலிவரக் காத்திருப்பான்;
எனக்குறுபங்கோ வெறுமையாம் மாதங் 3
கள்,
சஞ்சல இரவுகள் நானடை பாகம்:
எப்பொழுதெழுவேன் எனும் நினைவோ 4
டே படுப்பேன்,
இரவோ கழியாமல் நீடித்து நின்றுவிடும்,
இழக்கு வெளுக்கும்வரை புரண்டுருண்டு
நான் சலித்தேன்;
பூச்சி என்உடலை மூடி உடையாயிற்று, 5
புழுதி அடையே போர்வை போலாயிற்று;
தோலும் சரித்து வெடித்துச் சீழ் ஒடினதே.
என்நாள் நெய் நாடாவிலும் விரை 6
யும்,
ஒழியும் எதிர்பார் நம்பிக்கையின்றி.
என்உயிர் காற்றும், என்கண்ணே இனி 7
நலம் காண்பதிலை; இதை நீர் அறிவீர்.
இப்போகாண்பவர் இனி எனைக்காணார், 8
உமதகண் என்மேல், நானே இலனும்.
மேகம் பறந்து அகன்றொழிதலே போல் 9
பாதாளம் செல்வான் இனி ஏறமாட்டானே.
தன் வீட்டிற்குத் திரும்பி வந்திடான், 10
அவன் இடம் இனிமேல் அவனைக்காணாது.
ஆகவே நான் என்வாயை அடக்கேன், 11
என் ஆவியின் வேதனையால் உரைப்பேன்,
என் ஆன்மக் கசப்பால் முறையிடுவேன்.
தேவரீர் என்மேல் காவல் வைப்பா 12
னேன்,
நான் சமுத்திரமோ? ஒரு திமிங்கலமோ?
கட்டில் ஆறுதலைக் கொடுக்கும், படுக் 13
கை
எனது தவிப்பைக் குறைக்கும் என்பனேல்,
நீர் சொப்பனத்தில் எனைக்கலங்கடித்து 14
தரிசனத்தாலே திகில விகிப்பீர்.
ஆக என் ஆன்மா விரும்பும் நெருக் 15
குண்பதை,
இவ்வெலும்போடு உயிர் தாங்கலிலும்
மரணத்தை.
இதை வெறுத்திடுவேன், என்றும் பிழை 16
யேன்,
எனைவிட்டுவிடும், என் நாள் காற்றே.

17 மானிடன் என்ன! அவனை ஏன் மதிப்பீர்?
அவன்மேல் ஏனே சிந்தைவைத்திடுவீர்!
18 காலைதோறும் ஏன் அவனை விசாரிப்பீர்?
நிமிஷந்தோறும் ஏனே பரீக்ஷிப்பீர்?
19 எத்தனைகால் எனைவிடாது நோக்குவீர்?
உமிழ்நீர் விழுங்குதற்கு விட்டுநோக்க
மாட்டீரோ?
20 மன்னுயிரைப் பார்ப்பவரே! பாவம்
நான் செய்திடின்
அதனால் உமக்கு வினைவ தென்னே?
என்னை ஏனே உமது இலக்காய் வைத்
தீர்?
நானே எனக்குப் பாரமானேனே.
21 என் மீறுதலை ஏன் மன்னித்திலீர்?
என் அக்கிரமத்தை ஏன் அகற்றிடவிலை?
இதோ, மண்ணிலே படுக்கப் போகி
றேன்.
என்னைத் தேடுவீர், நானே அங்கிருேன்
என்று சொன்னான்.

**8** அப்பொழுது சூகியனான பில்தாத்
பதிலுரைத்து:
2 எதுகாள்வரை நீர் இப்படி யுரைப்பீர்?
எதுவரை உமது சொல் வலிய காற்றைக்
கும்?
3 தெய்வம் நியாயமதனைப் புரட்டுமோ?
சர்வவல்லவர் நீதியைப் புரட்டுவரோ?
4 உமது பிள்ளைகள் கடவுட்கு மாறாய்
பாவஞ் செய்ய, அவர்கள் பாதகத்தின்
வசத்தில் அவர்களை அவர் ஒப்புவித்தால்
5 நீர் மனமாரக் கடவுளைத் தேடி
சர்வவல்லவரின் இரக்கத்தை நாடிடும்;
6 சுத்தமும் நேர்மையுமாயிருப்பீரேல்
அப்பொழுது அவர் உமக்காக விழித்து
உம
நீதிவாசஸ்தலம் நிலைநிறுத்துவார்.
7 உமது துவக்கத்தை அற்பமதாக்க
உமது முடிவோ மகத்தாகும்மே.
8 முன்னை தலைமுறையாரை விசாரியும்,
அவர் மூளுேர் ஆய்ந்ததில் நிலைகொண்
டிருந்திடும்.
9 நாம் நேற்றையவர், யாதும் அறியோம்,
பூமியின்மேல் நம் நாள் நிழல் போலாம்.
10 அவர் போதித்து உமக்கு அறிவூட்டுவா
ரலோ?
இதயம் எழு சொற்களை வெளியிடுவா
ரலோ?
11 சேறின்றி நாணல் ஓங்கிவளருமோ?
நீரின்றிக் கோரைப்புல் மூளைத்திடுமோ?
12 பசுமையாயிருந்தும் அறுபடாதிருக்க
எப்புல்லினும் இது விரைவினில் வாடும்.
13 கடவுளை மறப்போர் வழியும் இப்படியே,
தெய்வ மிகழ்வோன் நம்பிக்கை யழி
யும்.
14 அவன் நம்பி எதிர்ப்பார்த்திருந்தது அற்
றுப்போம்,
அவன் ஆதாரம் சிலந்தி வீடுபோலாம்.
15 அவன் தன் வீட்டின்மேல் சாய்ந்திட
வீழ்ந்திடும்,
புகலிடமாய் அதைக் கொள்ள நில்லா
தாம்.
16 வெயில் எரிக்கையிலும் அவன் பசும்
செடியாய்க்
கொடிகள் தோட்ட முழுதும் பரவிடும்.
17 அதின்வேர் கற்குவியலதைச் சுற்றி
கற்களின் நடுவும் நுழைந்து புகினும்
18 அங்கிருந்து அழிபடவே, இருந்த இடம்,
நான் உனை அறிந்திலேன் என மறுத
லிக்கும்.
19 அவன் வழி மகிழ்ச்சி இதுவே யாகும்,
மண்ணினின்று பிற மூளைத்து எழுந்திடு
மே.
20 கடவுள், இதோ, குற்றமிலானை அவ
மதியார்,
தீயவரைக் கைபிடித்து நடத்தார்.
21 இனும் அவர் நிரப்புவார் உம்வாயை
நகைப்பால்,
உதடு கெம்பீர ஆர்ப்பரிப்பால் நிரம்பும்.
22 உமைப்பகைப்போர்க்கு நாணமே உடை
யாம்,
தெய்வ பயமற்றோர் கூடார மிலதாம்
என்று சொன்னான்.

9 அவனுக்கும் யோபு பதிலுரைப்பவனாய்:
2 காரியம் இதுவே, நானும் அறிவேன்;
கடவுள் எதிரிலே மண்பிறந்தான் நீதிமா
னே,
3 கடவுள் அவனொடு வழக்கிட வருவ
ரேல்
ஆயிரத்தில் ஒன்றேனும் பதிலுரைக்க
மாட்டானே.
4 அவர் இதய ஞானமுள்ளார், பலத்தில்
பராக்கிரமர்;
அவர்க்கு மாறாய்க் கடினப்பட்டு வாழ்ந்
தோன் யாரே?
5 பர்வதம் பேர்த்தெறிவார், எவரும் அறிந்
திடார்,
தமது கோபத்தில் அவற்றைப் புரட்டிடு
வார்,
6 பூமியின் தூண்கள் அதிரும்படியாய்
இடம் நின்று அவற்றை அசைத்திடு
வாரே.
7 சொல்லுரைக்கச் சூரியனும் உதியாதிருந்
துவிடும்,
நக்ஷத்திரத்தை முத்திரையிட்டு மூடிடுவார்.

8 வானங்களை விரித்தவர் அவர் ஒருவரே.
கடல் அலைமேல் நடக்க வல்லவரும் அவரே.
9 சப்தரிஷிகணம், மிருகசீரிஷமீன்,
கார்த்திகை, தக்ஷண மண்டலம் படைத்தார்.
10 ஆயமுடியாப் பெருங் காரியங்களையும்
எண்ணிலா அதிசயங்களையும் அவர் செய்வார்.
11 இதோ, கடந்துசெல்வார், நான் அவரைக் கண்டிலேன்,
என் முன்னே எகுவார், நானே அவர் அறியேன்,
12 இதோ, பறித்து அகல்வார், அவரை மறிப்பவர் யார்?
யாது செய்தீரென்று யார் அவரிடம் சொல்வார்?
13 கடவுள் கோபம் கொள்ளும்போது அதை அடக்கார்,
ராகாப் எனும் பாம்பின் சகாயர் அடங்கிடுவார்.
14 இங்ஙனமாக, அவர்க்கு எதிர்சொல நான் எம்மாத்திரம்,
அவரொடு வழக்காட வார்த்தை எங்ஙனம் தெரிவேன்.
15 நியாய முளேனுயினும் அவர்க்குப் பதிலுரையேன்,
நியாயாதிபதியினிடம் இரக்கத்தைக் கெஞ்சிடுவேன்.
16 நான் கூப்பிட அவர் பதிலுரைத்தாரெனினும்
என் சொலுக்குச் செவிசாய்த்தாரென நம்பேன்.
17 புசலினுலே என்னை முறிக்கிறார்,
காரணமின்றிப் பல காயம் உண்டாக்கினார்.
18 கசப்பினுல் என்னை நிரப்பினர், மூச்சு
விடுதற்கும் எனக்கு இடங்கொடுத்தாரிலை,
19 பலமுடையார் யாரென்றுல் அவரே பலவானும்,
வழக்காளுலோ அவரை வரவழைப்பார் யாரே?
20 நியாயமுளேன் நான் எனில் என்வாயே
என்னைப்பழிக்கும்.
குற்றமிலேன் எனில் மாறுபாடனென்று
சாட்சியிடும்.
21 குற்றமிலேனே நான், என் உயிர்
பொருட்டல்ல,
என் உயிரதனை நான் அவமதிப்பேன்.
22 எல்லாம் ஒன்றே, நான் அதை
உரைப்பேன்,

குற்றமுளான் இலான் எவனையும் அழிப்பார்.
23 வாதை சடுதியில் அழித்து மர்ய்கையில்
குற்றமிலார் வேதனையைக்கண்டு அவர் நகைப்பார்.
24 உலகமே தெய்வபயமில்லார் கைப்பட்டுளது,
அங்குள நீதிபதிகர் கண்களை மூடிடுவார்,
அவர் மூடாவிடில் அதைச் செய்பவர் யாரே?
25 என்நாள் அஞ்சல்காரரில் விரையும்,
அவை வாழ்வதனைக் காணுதேகும்.
26 விரைவிற்செல்லும் நாணற்படவாய்
இரைமேற்பாயும் கழுகென ஏகும்.
27 அங்கலாய்ப்பை நான் மறந்து என் முகத்தின்
துக்கமாற்றித் திடன் கொள்வேனெனில்
28 என் துன்பமனைத்தும் நினைத்துத் திகைப்பேன்,
குற்றமிலானென்று எனை எண்ணீர்,
நான் அறிவேன்.
29 துஷ்டனெனவே தீர்க்கப்பெறுவேன்,
நான் வாதாடி ஆகும் பயனென்?
30 உறை மழையதிலே எனைக் கழுவிடினும்
சவுக்காரத்தில் கை சுத்திகரிப்பினும்
31 நீரோ எனைச் சேற்றுக்குழி அமிழ்த்துவீர்,
என் வஸ்திரமே எனை அருவருக்கும்.
32 அவர் எனைப்போலொரு மானிடனல்ல,
ஆதலின் அவர்க்கு நான் பதிற்சொல்வ
தெங்ஙனம்,
நியாய விசாரனைக்குக் கூடுதல் எப்படியோ?
33 எங்களிருவர்மேலும் அதிகாரமுள்ள
வொரு
மத்தியஸ்தனும் எங்களுக்கிலனே.
34 அவர் தம் தண்டத்தை எனை விட்டகற்றுக.
அவர் பயங்கரம் எனில் நிகில் விலையாதிருக்க.
35 அப்போதவர்க்கு நான் அஞ்சேன், உரைப்பேன்;
அஞ்சுவதற்கென உள்ளே காரணமில்லை.

10 எனதுயிர் வெறுத்தேன்,
துயர்க்கு இடங்கொடுப்பேன்,
சஞ்சலத்தில் உரைப்பேன்,
2 நான் கடவுளினிடம்:
துஷ்டனுய் எனைத்தீர்க்காதிரும், ஏனே
என்னேடு வாதாடுகின்றீர் என்பேன்.

3 இம்சித்து உமது கைச்சிருஷ்டியை வெறுத்துத்
துஷ்டர் செயலே ஒப்புடன் நோக்குதல் நன்றே உமது திருவுளத்திற்கே!
4 மாமிசக்கண்ணரோ நீர்?
மானிடப் பார்வைபோலோ நீர் பார்ப்பது?
5 உமதுகாள் மானிடன் நாட்கள் போன்றதுவோ?
உமது ஆண்டு மானிடன் வாணாள் போன்றதோ?
6 பின்னே என் எனது அக்கிரமத்தைக் கிளறித்
தேடி என் பாவமதனை ஆய்வீர்?
7 துஷ்டனல நான், நீர் அதை அறிவீர்;
உமது கைக்குத் தப்புவிப்பவனிலை.
8 எனை முழுதும் உருவாக்கிப் படைத்தது
உமது கரமே, பினை ஏன் அழிப்பீர்!
9 களிமணுப் எனை உருவாக்கினீர், மண்ணுக்கே
எனைத் திருப்பிடுவீர், இதை நினைத்தருளும்.
10 பாலென நீர் எனை வார்த்துத்
தயிரென உறைபச்செய்தீர் அன்றே?
11 தோலும் தசையும் எனக்குத் தரித்தீர்,
என்பும் நரம்பும் கொண்டு இசைத்தீர்.
12 உயிர்தந்தீர் அருள் அதுவும் காட்டினீர்,
உம் விசாரனை என் ஆவியைக் காத்தது.
13 இவை உம் உள்ளத்தில் மறைந்துள்ளன,
உமது யோசனை இதுவென அறிவேன்:
14 பாவம் நான் செய்திடில் நீர் எனைப் பிடிப்பீர்,
என் அக்கிரமத்தை என்மேல் சுமத்தல் திண்ணம்;
15 துஷ்டனுயிடின் நான், அந்தோ கெட்டேன்!
நேர்மையனுயினும் தலைநிமிர் கில்லேன்
அவமானம் நிறைந்துளது, என் நிர்ப்பந்தம்
கண்முன் நின்றுகொண்டிருக்கிறது;
16 நிமிர்ந்திடில் சிங்கமாய் எனை வேட்டையாடுவீர்,
எனக்கு மாறுப்ப் பின்னும் அதிசயம் விளக்குவீர்.
17 புது சாட்சிகளை எனக்கெதிர் எழுப்புவீர்,
என்மேல் உமது கினமதை வளர்ப்பீர்;
என்மேலுறுவது சேனை சேனையே.
18 பின்னே ஏன் கருவின்று எனை வெளிப்படுத்தினீர்?
கண்ணிற்படாதன்றே மரித்தால் நலமாம்!
19 என்றும் இலேனுப்க் கருவினின்று நேர்
பிரேதக் குழிக்கே கொண்டுபோயிருப்பார்.
20 எனக்குள நாள் சில, ஒய்வாராக,
சிறிது தேறுதற்கெனை விடுவாராக.
21 மீளா நாடு நான் ஏகிடுவேன், இதோ,
அந்தகாரமுள காரிருள் நாடாம்;
22 கரிய இரவுகோ மையிருள் நாடு,
காரிருள் நாடு அது, ஒழுங்கில் நாடு,
ஒளியும் அங்கே இருளாய் மாறிடும்
என்று சொன்னுன்.

11 அப்பொழுது நாகமாத்தியனுகிய சோப்பார் பதிலுரைத்து;
2 பலசொல் வினம்பினை, பதில் வேண்டாமோ?
வாயாடி பக்கமே வழக்கு வெல்லுமோ?
3 கேட்டாரை வீம்புரை மௌனமாக்கிடுமோ?
பரிகசித்தால் உனை எவரும் வெட்கத்துள்ளாக்காரோ?
4 நூயதென் சொல்லென்றுய், தெய்வபார்வையிலே
நான் சுத்தன் என்றும் உரைத்து முழங்கிவிட்டாய்.
5 தெய்வமே பேசித் தமது திருவாய்திறந்து,
உனக்குப் பதிலுரைத்தால் எத்தனை நன்றும்!
6 ஞான இரகசியத்தை உனக்கு அறிவிப்பாராக,
அதன் பொருள் ஒன்றல, வியாபித்திருப்பது;
கடவுள் கவனித்தது உன் அக்கிரமம் முழுதுமோ?
அல்ல, இதை நீ உணர்ந்துகொள்ளுக.
7 ஆய்தற்கரிய ஆழ் தெய்வத்தை ஆய்வையோ?
சர்வ வல்லவரை நீ முற்றிலும் ஆய்வையோ?
8 வானளவு உயர்வாம், உன்னுல் ஆவதென்?
பாதளத்தில் தாழ்வாம், கீயறிவதென்னே?
9 அளவோ பூமியைப் பார்க்கிலும் நீண்டது,
சமுத்திரமதிலும் அகன்று நிற்பது.
10 பாய்ந்து வந்தடைப்பார், விசாரனைக் கழைப்பார்,
யாதே செய்யிலும் யார் அதைத் தடுப்பார்?
11 வியர்த்த மனிதனை அவர் அறியாரோ?
கவனிப்பதின்றியே அக்கிரமங் கண்டறிவார்.

12 சர்வ மூடனே ஞானியாகான்,
கழுதைக் குட்டியும் மனிதனுகாதே.
13 உன் இதயத்தைக் கடவுட்கு நேர்ப்
படுத்தி
உனது கரங்களை அவர்க்குநேர் விரிப்பை
யேல்,
14 அக்கிரம மிருப்பின் கைகின்று அதைய
கற்றி
தீமையை வாசல்தல நின்றோட்டிடு,
15 அப்போழ்து காணின்றி முகம் ஏறெடுப்
பாய்,
பயமென்பதின்றித் திடன்கொண்டிருப்
பாய்;
16 உற்றவாதையை முற்றிலும் மறப்பாய்;
வடிந்த நீரே என நீ அதை நினைப்
பாய்.
17 உனது ஆயுசுநாள் பகலென ஒளிரும்,
அந்தகாரமும் உதயமே போலாம்.
18 நம்பி எதிர்பார்த்துப் பயமில்லாதிருப்
பாய்,
மோசமில்லை என்று கண்டு சுகமே படுத்
திருப்பாய்.
19 நிலில் வினைப்பாரின்றியே நித்திரை செய்
வாய்,
பலர் உனது தயவை நாடி வணங்குவார்.
20 துஷ்டரின் கண்கள் ஒளி மங்கிவிடும்,
அடைக்கலமென்பது அவர்க்கிலாதே
போம்;
அவர் எதிர்பார்த்து ஆசிப்பது மரணமே
என்று சொன்னான்.

12 யோபு அதைக் கேட்கவே பதிலுரைத்
தான்:
2 ஆம், நீங்களே சரியான மனிதர்கள்!
நீர் இறந்திடில் ஞானம் இல்லாதே போ
கும்!
3 உங்களைப்போலவே எனக்கும் அறிவுண்
டு,
உங்களிலும் நான் தாழ்ந்தவனல்ல;
இவற்றையெல்லாம் அறியாதவர் யாரே?
4 விண்ணப்பத்திற்குக் கடவுளின் பதி
லைப்
பெற்ற நான் இப்போது நண்பர் நகைப்
பானேன்!
குற்றமிலா நேர்மையன் நகைப்புக் கிட
மானேன்!
5 ஆபத்திலுள்ளாரை சுகஜீவி இகழுவான்,
காலிடறினவர்களுக்குக் கதியதுவே யன்
றிலை;
6 இம்சை செய்வோர் வாசல் வாழ்வினிற்
களிக்கும்,
தெய்வகோபம் எழுப்பிடுவோர்க்கு இல
தாமே மோசம்,
கடவுள் அவர்கள் தம் கையை நிரப்பு
வார்.
7 காட்டுமிருகத்தைக் கேள், அது போ
திக்கும்,
ஆகாயப்பறவையை வினவு, அது அறி
விக்கும்.
8 பூமியோடு பேசு, அது போதிக்கும்;
சமுத்திர மச்சங்களும் அதை விரிக்கும்.
9 யெகோவா கரமே இதைச் செய்ததென்
று
இவற்றின் மூலமாய் அறியாதான் யாரே?
10 அவர் கரத்தே சர்வ பிராணியின் ஜீவ
னும்
மாமிச மனிதனின் சுவாசமும் உள்ளன.
11 வாய் போஜன ருசி அறிதலேபோல
செவி வார்த்தைகளைச் சோதித்தறியுமே.
12 முதியோரிடத்ததோ ஞானம்!
நெடுநாளிருந்தவரிடத்ததோ விவேகம்!
13 ஞானமும் வலமையும் உளது அவரிட
மே,
அவரதே ஆலோசனையும் விவேகமும்.
14 அவர் இடித்ததை, இதோ, கட்டுவா
ரிலரே?
அவர் அடைப்பவனை வெளிவிடுபவரார்?
15 மழையை அவர் நிறுத்த எங்கும் உல
ருமே,
அவரதை விடுவரேல் உலகு பாழாமே.
16 பலமும் விவேகமும் அவரிடத்தனவே.
மோசம்போபவர், மோசம்போக்குநர்,
யாவரும் அவர் கையில் அடங்கினவரே.
17 மந்திரிமாரைப் பதிசெய்து ஒட்டுவார்,
நியாயாதிபதிகளை மூடரேயாக்குவார்.
18 ராஜாக்களின் கட்டுப்பாட்டைக் கலிழ்ப்
பார்,
அவர் இடுப்புகளில் கயிற்றை மாட்டு
வார்,
19 ஆசாரியரைப் பதிசெய்து ஒட்டுவார்,
நிலைத்திருந்தவரைக் கவிழ்த்துப்போடு
வார்,
20 பிறர் நம்புவோரின் வாய் மூடிடச்செய்
வார்,
முதிர்ந்தோர் தமது விவேகமற்றுவார்,
21 பிரபுக்கள்மேலே இகழ்ச்சியைக் குவிப்
பார்,
பலவான்கள் கச்சையைத் தளர்த்திவிடு
வார்.
22 இருள் ஆழத்தை வெளிப்படையாக்கிக்
காரிருளை ஒளியதனுள் கொணர்வார்.
23 ஜாதிகள் பெருகவும் அழியவும் செய்
வார்,
ஜனங்கள் பரவிடச்செய்து வாரிடுவார்.
24 ஜனநிபதிகளின் புத்தியை மாய்ப்பார்,

வழியிலா வெளியிலே அலைத்திடச் செய்வார்.
25 ஒளியிலா இருளிலே தடவியேகுவோர்
வெறித்தார்போல் தடுமாறிடச் செய்வார்.

**13** இவையெல்லாம், இதோ, என் கண் கண்டறிந்தது;
என் காது கேட்டு இதைக் கவனித்துளது.
2 நீர் அறிந்துளதை நானும் அறிவேன்,
நான் உங்களிலும் தாழ்ந்தவனல்ல.
3 சர்வவல்லரொடு நான் பேசிடின் நன்றும்!
கடவுள்முன் நியாய வழக்கிட விரும்புவேன்.
4 நீங்களோ பொய்யைப் பிணைக்கிறவர்கள்,
நீங்கள் அனைவரும் உதவா வைத்தியர்.
5 மௌனமாயிருப்பீரேல் அதுவே நன்றும்!
ஞானமுள்ளவரென மதிக்கப்படுவீர்.
6 கேட்டிடும் எனது நியாய உரையை,
நான் உரைக்கு முறைபாடு கவனியும்.
7 கடவுள் சார்பென வந்து பொய்வழக்கிடுவிரோ!
அவர்க்கும் இவ்வஞ்சனைப்பேச்சு அவசியமோ?
8 கடவுட்குத் தாட்சண்யம் காட்டுவீர்போலும்?
நீங்களோ கடவுளுக்காய் வழக்காடுவீர்?
9 அவர் உமை ஆய்வரேல் உமக்கு நன்றுமோ?
மனிதனைப்போற்கடவுளை வஞ்சிப்பீரோ?
10 மறைவினில் முகதாட்சணியம் காட்டிடில்
அவர் உமை சிக்கியாதிரார், இது திண்ணம்.
11 அவர் மகத்துவம் உமில் திகில் விளையாதோ?
அவர் பயங்கரம் உமைப் பிடித்தாட்டாதோ?
12 உமது ஞானவுரை சாம்பலுக்கொப்பாம்,
உமது கேடகம் களிமண் கேடகமே.
13 பேச்சை நிறுத்தி மௌனமாயிருங்கள்,
நான் பேசிடுவேன், வருவது வரட்டும்.
14 உடலைப் பொருளாயெண்ணி திருப்பேன்,
உயிரையும் பெரிதாய் மதித்திடமாட்டேன்.
15 கொல்வார், இதோ, எனை; நலம் எதிர்பாரேன்;
என்வழிகளை அவர்க்கு உரைப்பதற்கஞ்சேன்.
இதுவே எனக்குத் துணையாம், கடவுள் பால் 16
பக்தியற்றவன் அவர் சந்நிதிசேரான்.
நான் சொல்லுவதைக் கவனமாய்க்கேளும், 17
நான் தெரிவிப்பதற்குச் செவிகொடுத்திடும்.
என் வழக்கதனை முறையே விரிப்பேன், 18
எனது நீதிவிளங்கிடும், அறிவேன்;
வாதிட்டு இதனை மறுப்பவர் யாரே? 19
மறுப்பரேல் மௌனமாகி மரிப்பேன்.
செய்யாதிருக்க உமை வேண்டுவதிரண்டே, 20
அப்போதுமதுமுன்ஒளியாதிருப்பேன்.
உமது கரத்தை எனக்கு அப்புறப்படுத்தும், 21
உமது பயங்கரம் என்னில் திகில் விளையாதிருக்க.
நீர் எனைக்கூப்பிடும் நான் பதில் உரைப்பேன், 22
அலது நான் பேசுவேன், நீர் பதில் உரையும்.
என் அக்கிரமமும் பாவமும் எவை? சொலும்; 23
மீறி நான் செய்துள பாவம் எனக்குணர்த்தும்.
ஏனே உமது திருமுகம் மறைத்து 24
எனை எதிராளியாக நீர் மதிப்பீர்?
பறக்கும் சருகை அடித்தோட்டுவீரோ? 25
காய்ந்த தரும்பைப் பிடிக்கத் தொடர்வீரோ?
எனக்கெனக் கசப்பையே குறித்துவைத்தீர், 26
வாலிபகாள் அக்கிரமம் என் சுதந்தரமாக்கிவிட்டீர்.
காலைத்தொழுவடித்து வழிஎல்லாம் கா 27
வல்வைத்தீர்,
காலடிசெல்லும் இடம் குறுக்கி எல்லையிட்டீர்.
இதையனுபவிப்பவனே அழுகிய வஸ் 28
துப்போன்றும்
பொட்டரித்த துணியேபோலும் அழிகுபோனவன்.

**14** ஸ்திரீயினிடம் பிறந்த மனிதன் எவனும்
வாழ்நாள் குறுகிச் சஞ்சல நிறைந்தவன்.
2 பூவைப்போலவே பூத்து வாடிப்போவான்,
நிழல்போல் அகன்றிடுவான், நிலையில்லான் ஆவானே.
3 இத்தகையான்மேல் உமது திருக்கண்ணை வைப்பீரோ!

உம்மோடு வழக்காட எணேக்கொண்டு போவீரோ!
4 சுத்தம் பிறக்குமோ அசுத்தம் நின்று?
அன்றும், அஃதொரு நாளுமின்றே.
5 அவன் வாணுளின் அளவைக் குறித்துவிட்டீர்,
அவன் மாதத்தின் தொகை உம்மிடத்திலே யுளது;
கடந்துபோகா எல்லேயையும் வைத்தீர் அவனுக்கே.
6 ஆகவே அவனேநோக்காமல் விட்டுவிடும்,
வேலேமுடி கூலியாள் சுகதோஷம் பெற்றிடுக,
7 மரத்திற்கெனிலோ பின் ஆசையுண்டு,
வெட்டப்படினும் திரும்பத்தழைக்கும்;
இளங்கிளேகள் அங்கே தோன்றுமற் போகா.
8 அதின்வேர் தரையிலே பழையதாகி
அடிக்கிட்டைதானும் மண்ணதனுள் செத்திடினும்,
9 தண்ணீர் வாசணேயால் அது தளிர்த்து
நட்ட இளமரம்போல் கிளேவிட்டிடுமே.
10 மானிடன் மாண்டபின் ஒழிந்தே போவான்,
பிராணன் போனதன்பின் அவன் எங்கோ?
11 கண்ணீர் ஏரியினின்று வடிந்து
ஆறு வறண்டு வற்றிடல்போல
12 மனிதன் படுத்துக்கிடப்பான், எழுந்திரான்;
வாணுள்ளளவும் தெளியான் உறக்கம்,
தூக்க நின்றெழுப்பப் படுவதில்லேயே.
13 நீர் என்னேப் பாதாளத்தில் ஒளித்து உமது
கோபம் தீருமளவும் எணே மறைத்து
திரும்ப நினேக்குநாள் குறிப்பின்றன்றும்.
14 மாண்டபின் மானிடன் பிழைப்பது முண்டோ?
முறைமாற்றிடுநாள் வந்திடுமளவும்
காத்திருப்பேன், என் போர்நாளெல்லாம்.
15 நீர் எணே அழைத்திடில் நான் பதிலுரைப்பேன்;
உமது கை படைத்ததில் உமக்கு உண்டன்றே வாஞ்சை.
16 நீர் செய்வதோ! என் நடையை எண்ணுகிறீர்,
பாவஞ்செய்யளவிலே பார்த்துக்கொள்கின்றீரே.
17 மீறுதலேயும் கட்டி முத்திரையும் போட்டுவைத்தீர்,
அக்கிரமத்தையும் சேர்த்துப் பத்திரமாய் வைத்துள்ளீர்.
18 மலேயும் விழுந்து கரைந்துபோகும்,
கற்பாறையும் இடம்விட்டுப் பேரும்;
19 நீர்பாயக் கற்களும் குழியும், பூமியின்
தூளேவெள்ளம் அடித்துக்கொண்டு போம், அவ்வாறே
மனிதன் ஆசித்தெதிர் பார்ப்பதை அழித்தீர்.
20 என்றென்றும் நீர் அவணே மேற்கொள்வீர், போய்விடுவான்;
அவன் ரூபத்தை விகாரப்படுத்தி அனுப்பிடுவீர்.
21 அவன் மக்கள் கௌரவமடையினும் அறியான்!
சிறுமைப்படினும் கவனியாதிருப்பான்.
22 அவன் அறிவது தன் மாமிச நோவே,
அவன் உயிரே அவன் துயர் விணேக்கும்,
என்று சொல்லி முடித்தான்.

15 அதைக்கேட்ட தேமானியனுகிய எலிப்பாஸ் பதிலுரைத்து:
2 விவேகி என்பான் வீண் முழக்குரை பகரலும்
தன்னுளம் தீக்காற்றால் நிரப்பலும் நேரோ?
3 பிரயோஜனமிலாப் பேச்சொடும் லாபமில்
வார்த்தையைக் கொண்டும் தர்க்கிக்கலாமோ?
4 தெய்வபயத்தைத் தள்ளி முடித்துவிட்டாய்,
கடவுள்முன் பக்தியதணேயும் குறைத்தாய்.
5 அக்கிரமம் தூண்ட உன் வாய் மொழி பகரும்,
தந்திரக்காரரின் நாவைத் தெரிந்துகொண்டாய்.
6 நான் அல, உன் வாய் உணேக் குற்றப்படுத்தும்,
உனது நாவே விரோதமாய்ப் பேசும்.
7 மனிதரில் முந்திப் பிறந்தவன் நீயோ?
பருவதங்களின்முன் உருக்கொண்டாயோ?
8 தெய்வாலோசணேச் சபையில் நின்று கேட்டாயோ?
ஞானமதை உனக்கே பதித்து வைத்துக்கொண்டாயோ?
9 நீ அறிந்தவற்றிலே நாங்கள் அறியாததென்ன?
நீ உணர்ந்தவற்றில் எங்கட்கு விளங்காததென்ன?
10 உன் தந்தையினும் வயதில் மூதிர்ந்து
நரைத்த விருத்தாப்பியர் எங்களிலுமுண்டே.

11 கடவுள் உமை ஆற்றி உரைக்கும் சொல் அற்பமோ
மிருதுவசனம் உன்னோடுரைத்தாரே.
12 இதயம் ஆட்டிவைக்கும் வழியே நீ செல்வதென்ன?
உன் கண்மேட்டிமையாய் நோக்குவதும் என்னேயோ?
13 கடவுளுக்கு மாருய்க் கோபித்தெழுந்து வாய்வந்தவாறெல்லாம் பேசுவதென்ன?
14 மானிடனும் குற்றமற்றவனுவனோ?
ஸ்திரீயினிடம் பிறந்தான் நியாயமுளோனுவனோ?
15 இதோ, தம் பரிசுத்த தூதரையும் நம்பாரே,
வானங்களும் அவர்க்குமுன் தூயனவல்ல;
16 அருவருப்பும் கேடும் மிகுதியாய்ச் செய்து
நீரென அநியாயம் அருந்து மானிடன் கதியென்!
17 கேள், உனக்கு ஒருகாரியம் உரைத்திடுவேன்,
கண்டதையே விரித்திடுவேன் உனக்கு,
18 ஞானிகள் தங்கள்முன்னோரிடம் கேட்டு மறையாதுரைத்திட்ட காரியமே அது,
19 அம்முன்னோரே தேசமதைப் பெற்றிருந்தார்,
அந்நியர் அவர்கூட கடத்தற்கிடமில்லை:
20 தெய்வபயமிலான் நாளெலாம் பயமூளான்,
இம்சைபுரிவோர்க்கு உரிய சின்னலும் அப்படியே.
21 அவன் காதில் தொனிப்பது பயங்கர சத்தமே,
வாழ்ந்துளேன் எனும்போதே பாழ்செய்வோன் வருவானே.
22 இருள்நின்று தப்பிவரும் நம்பிக்கையில்லான்,
பட்டயம் அவனுக்குப் பதிவிருந்து காத்திருக்கும்.
23 ஆகாரம் எங்கே என்று திரிந்தலைவான்,
இருள்புகும் நாள் தனக்கு அருகாயிற் றென்று அறிவான்,
24 இடுக்கண் நெருக்கம் அவனைக் கலக்கடிக்கும்,
போர்க்கெழும் அரசென வந்து மேற்கொள்ளும்.
25 கடவுட்கு மாருய்க் கையை நீட்டினுன்,
வல்லவர்க்கு மாருக வலிமை பாராட்டுகிறுன்,
26 வலிய கழுத்தோடு வல்ல குமிழ்க் கேடகத்தை எடுத்துக்கொண்டு அவரை எதிர்க்கவே ஓடுகிறுன்.
27 கொழுப்புத்தறுமிய முகத்தான் தொங்கசரிக்த அடிவயிற்றுன்.
28 அவன் குடியிருப்புப் பாழாம் ஊரே, மண்மேடாமெனச் சாபமாகிக் குடிபோனதாகிவிட்ட வீடே.
29 செல்வனுகான் அவன் ஆஸ்தியும் நிலையா,
மணிக்கதிராய் அவன் பயிர் சாய்வதிலை;
30 இருளினின்றவன் தப்புவதில்லை, தீவெப்பால் அவன் இளங்கிளை காயும், அவரது சுவாசத்தால் ஒழிவானே.
31 நம்பேல் மாயை, நம்பிடின் வஞ்சம், மாயையே அவன் அடைபலனுகும்.
32 நாள்வருமுன் அது பலித்திடும் முழுதும், இனியவன் பசுமரம் போலாவதிலை;
33 பிஞ்சுஉதிர் திராட்சச்செடி போலாவான், பூவுதிர் ஒலிவமரம் போலிருப்பான்;
34 கடவுளே மறப்போர் குலந்தழையாதாம், லஞ்சம் பெறுவோர் வீடு நீக்கிரையாம்;
35 துன்பே கருவாம், பெறுவது அக்கிரமம்; அவர்களில் ஜனித்திடுவது வஞ்சனையாம் என்று சொன்னுன்.

16 அவன் சொல்வதைக்கேட்ட யோபு:
2 இதுபோலவே நான் பலமுறை கேட்டுளேன்,
நீரெலாம் ஆற்றுமுறை நோகச்செய்வதே.
3 காற்றும் சொல் இதோ முடிவடைகிறதோ?
இனும் பதிலுரைத்தற்கு எவும் ஏதேனுமுண்டோ?
4 நானும் உங்களைப்போற் பேசிடுவேன், நானுளநிலைமையில் நீங்கள் இருப்பின்
இனியசொல் பற்பல உங்கட்குரைத்து உங்கள்முன்னே என்தலை அசைத்திடுவேன்.
5 என்வாயால் உங்களைத் திடப்படுத்துவேன்,
உதடுகளால்உமைஆற்றித் தேற்றுவேன்.
6 பேசினும் எனதுநோவு ஆறுது, பேசாதிருப்பினும் நோவு அகன்றிடுமோ?
7 இப்போதெனை அவர் இளைத்திடச் செய்தார்,
என்குலம் முழுதையும் நீர்பாழாக்கினீர்.
8 நீர் எனைப்பிடித்துக் கொண்டதே சாட்சியம்,
என்மெலிவு எழும்பி என் எதிர்சாட்சியிடும்.
9 கோபத்தில் அவர் எனைப்பீறி இம்சிக்கின்றார்,

என்பேரிலே அவர் பற்கடிக்கின்றார்;
என்சத்துரு எனக்கோரமாய் நோக்குவார்.
10 எனவிரூங்கத் தம் வாய்திறக்கின்றார்,
நிந்தையாய் எனக்கன்னத்தில் அறைந்தார்,
யாவரும் ஏகமாய்க் கூடினர் விரோதமாய்.
11 கடவுள் என அக்கிரமக்காரர் வசம்விட்டு விட்டார்,
தெய்வபயமற்றோர் கையில் எறிந்துவிட்டார்.
12 நான்சுகமாய் வாழ்ந்திருந்தேன், அவரோ
என கைத்துப்
பிடரிபிடித்தென்னைத் துண்டுதுண்டாய்
விட தொறுக்கித்
தாம் எய்வதற்கு என இலக்காக வைத்துவிட்டார்.
13 அவருடைய வில்லாளர் எனைச் சூழ்ந்து
கொண்டார்கள்,
என் ஈரலைப்பிளந்து விட்டார், இரக்கமில்லை.
என்பிச்சு அதனைத்தரையிலே ஊற்றிவிட்டார்.
14 அடிமேலடியடித்தே என்னை தொறுக்குகின்றார்,
பராக்கிரமசாலியைப்போல் அவர் என்மேல் பாய்வார்.
15 இரட்டுடையைத் தைத்துத் தோள்மேலே
போட்டுள்ளேன்,
என் கொம்பதனைப் புழுதிமட்டாய்த்
தாழ்த்திவிட்டேன்.
16 அழுது அழுது என்முகம் மாறிச் சிவந்ததுவே,
கண்ணிமையவற்றின்மேல், இதோ, காரிருளே.
17 என் கைகளிலே கொடுமையில்லாதிருந்தும்
என் பிரார்த்தனை சுத்தமாயிருந்தும் வந்ததிவை.
18 பூமியே, மூடிவிடேல் என் இரத்தம்,
நான் அழுவதற்கு ஒய்விடமிலாதிருக்க.
19 இக்காலமும் என் சாட்சி பரத்திலே,
எனக்குப் பரிந்துரைப்பார் வானிலிருக்கின்றார்.
20 தோழரும் எனை ஏளனஞ்செய்கின்றார்,
கடவுளை நோக்கி என் கண் நீர்சிந்தி:
21 தெய்வத்தோடு மானிடன் வழக்கிடுகையில்,
மனுப்புத்திரற்குத் தோழனோடு வாதில்
கடவுள் நியாயஞ் செய்தாலின்று எனக்கூறும்.

சில்லாண்டுகளே இன்னும் உள்ளன, 22
மீளாவழியே போய்விடுவேனே.
என் மூச்சொழியும், என் நாள் முடியும், 17
நான் வரக்காத்திருப்பது கல்லறையே.
எனைச் சூழ்ந்திருப்பவர் பரியாசக்காரர், 2
அவர்வின கசப்பையே நாளெலாம்
நோக்குவேன்.
நீர் முன்வந்து என் பிணையாய் நின்றிடும், 3
கைகொடுப்பார் பிறர் உண்டோ எனக்கு?
விவேகம் புகாதென அவர் இதயம் 4
அடைத்திட்டீர்,
ஆதலின் அவர்களை உயர்த்தாதிருப்பீர்.
தன்னலம் நாடித் தோழரைக் காட்டிக் 5
கொடுத்தால்,
அவன் பிள்ளைகள் கண் ஒளிமங்கிப்போம்.
ஜனங்களுள் எனை அவர் பழமொழி 6
யாக்கினர்,
கண்டாரெல்லாம் முகத்தில் காறியுமிழ்வாரே.
சஞ்சலத்தினுல் என் கண்கள் இருளாயின, 7
நிழல்போன்றன என் அவயவங்களே.
நேர்மையாளர் கண்டு திடுக்கிடுவர், 8
குற்றமற்றோர் தெய்வமறந்தான்மேல்
சினங்கொள்வார்.
என்றாலும் நேர்மையான் தன் வழியில் 9
ஊன்றிநிற்பான்,
கையிற்களங்கமிலான் மென்மேற்பல
மடைவான்.
இப்போதோ நீங்கள் யாவரும் வந்திடுங் 10
கள்,
வந்தாலும் விவேகி ஒருவனும் உங்களில்
இலையே.
போயின என்நாள், அற்றன நினைத் 11
தவை,
என் இதயத்தில் நான் ஆசித்தனவே.
இரவை எனக்குப் பகலெனக்காட்டு 12
வார்,
இருள் எதிர் இருக்கையில் ஒளி இதோ
வருமென்பார்.
நான் காத்திருப்பதென்? பாதாளவீடே! 13
இருளிலே படுக்கை விரித்துப்படுக்கிறேன்.
குழியை நோக்கி, என் தந்தை நீ என் 14
பேன்,
புழுவை, நீ என்தாய், தங்கை என்பேன்.
இங்ஙனமாகவும் நம்பி ஆசிப்பதெங்கே 15
யோ?

என் ஆசை நம்பிக்கையை யாரே கண்டிடுவார்!
16 அது பாதாளத்தினுள்ளே சென்றிடும்,
நானும் அதோடு தூளில் இறங்கிடுவேன்
என்று பதிலுரைத்தான்.
**18** அப்பொழுது சூகியனான பில்தாத் பதிலுரைப்பானாய்:
2 பகர்மொழி தேடி எதுவரை யுரைப்பாய்?
உணர்வோடிருப்பாயேல் நாங்களும்
பேசுவோம்.
3 எங்களை மிருகமாய் மதிப்பதேனோ?
உன் பார்வையில் எமை மூடராய்
நினைப்பதென்?
4 கோபத்தினால் தன்னைத்தானே பீறிடும்
உன் பொருட்டால் பூமி பாழாய்விடுமோ?
கன்மலைதன்னிடம் விட்டுப்பேருமோ?
5 செய்வபயமற்றோன் தன் விளக்கு
அணைந்துபோம்,
அவன் அக்கினியின் சுவாலை ஒளிராது.
6 அவன் கூடாரத்தின் ஒளி இருளாகும்,
அவன் வீட்டினுள்ள விளக்கும் அணையும்.
7 அவனது தைரிய நடையும் குன்றும்,
அவன் ஆலோசனை அவனைக் கவிழ்த்திடும்.
8 அவன் கால்களே அவனை வலைப்படுத்தும்,
இலைமறை குழியின்மேல் நடப்பவனாவான்.
9 கண்ணி அவன் குதிகாலைப் பிடிக்கும்,
வலை அவனை அகப்படுத்திக்கொள்ளும்.
10 தரையிலே அவனுக்கென ஒரு சுருக்கும்
வழியிலே பொறியும் மறைபட்டுள்ளன.
11 சுற்றிலும் பயங்கரம் திடுக்கிடச்செய்யும்,
எங்கெங்கோடினும் துரத்திவிரட்டும்.
12 நிர்ப்பாக்கியம் பசித்த அவனை விழுங்கும்,
அவன் விழாவை எனக் கேடு காத்திருக்கும்.
13 மரண முதல்புதல்வன் அவன் அவயவத்தைப் பட்சிக்கும்,
அவன் அவயவங்களில் ஒன்றும் விடாமலே.
14 நம்பியிருந்த கூடாரமிருந்து எடுபடுவான்,
பயங்கர அரசின்பால் துரத்துண்பான்.
15 அவனுடையாரல்லார் அவன் வீட்டில்
தங்குவார்,
அவன் வீடெங்கும் கந்தகம் சிதறிக்கிடக்கும்.
16 கீழுள வேர்கள் காய்ந்துபோகும்,
மேல்உள கிளைகளும் பட்டுப்போய்விடும்.
17 பூமியினின்று அவன் நினைவற்றுப்போகும்
வீதிகளில் அவன்பேர் இலாதேபோம்.
18 ஒளியினின்று இருளில் துரத்தப்படுவான்,
உலகுகின்று அவனை ஓட்டிடுவார்கள்.
19 ஜனத்தினுள் பின்னடி சந்ததியில்லை,
அவன் வீடதிலே மீக்தவரில்லை.
20 அவனுக்கு நேரிட்ட கேட்டதனைக் கேட்டு
மேலோடு திடுக்கிடும், கீழ்நாடு நகில் கொளும்.
21 அக்கிரமக்காரர் வீட்டினுக்கு நேர்வதிதே,
கடவுளை அறிய நினையார் கதி இதுவே
என்று சொன்னான்.
**19** அப்பொழுது யோபு பதிலுரைத்து:
2 எதுநாள்வரை நீர் என்னை வருத்தி
வார்த்தைகளால் எனை நொறுக்கிடுவீர்கள்.
3 பத்துமுறை அவமானமுறப் பேசினீர்,
வாதையுறச் செய்கின்றீர், நாணமிலாராகிவிட்டீர்.
4 தப்பி நான் நடந்ததுண்மையே யாயிடின்
என் தப்பிதமுளது என்னுடனேயே.
5 எனக்கு மாறுப்ப் பெருமை பாராட்டுவீரோ,
நிந்தை நான் உற்றது நியாயமெனச் சாதிப்பீரோ?
6 என் நியாயம் புரட்டினோர் கடவுளே,
அவர் தம் வலை எனைச்சுற்றி விரித்தார், அறிக.
7 கொடுமை என, இதோ, கதறினின்றேன், கேள்வியில்லை,
கூக்குரலிட்டு நின்றேன், நியாய விசாரணையில்லை.
8 என் வழிக்கு வேலியிட்டார், கடத்தற் கிடமில்லை,
பாதை முழுவதிலும் இருளைப் பரப்பிவிட்டார்.
9 என்னிலிருந்து என் மகிமை உரிந்துவிட்டார்,
என் தலையினின்று கிரீடம் எடுத்துவிட்டார்.
10 நாலாதிசையிலும் நாசமாக்கினார், தொலைந்தேன்,
எனது நம்பிக்கையைச் செடிபோல் பறித்தெறிந்தார்.
11 என்பேரிலே தமது கோபத்தீ மூட்டிவிட்டார்,

என்னைத் தம் பகைஞருள் ஒருவனுய் மதித்தார்.
12 அவர்தம் படைகள் ஏகமாய்க் கூடி
என்மீதுவர வழியொன்று செய்து
என் கூடாரத்தைச் சுற்றி இறங்கின.
13 என் சகோதரர் எனக்குத் தூரமாகிடச் செய்தார்,
அறிமுகமானவர்கள் அந்நியராய்ப் போனார்கள்.
14 சுற்றத்தாரும் விலகிப்போயினர்,
நட்புக்கொண்டோரும் என்னை மறந்திட்டார்.
15 என் வீடு தங்கினோர், என் வேலைக்காரிகள்
யாவரும் என்னை அந்நியனுய் எண்ணுவர்.
அவர் பார்வையில் பரதேசியானேன்.
16 அடிமையை யழைப்பினும் அளியான் பதிலுரை,
வாயால் அவனைக் கெஞ்சிடலானேன்.
17 என் பெண்டவள் என் மூச்சை வெறுப்பாள்,
உடன் பிறந்தோர்க்கும் துர்நாற்றமானேன்.
18 சிறியோருக்கும் அலட்சியமானேன்,
எழுந்திடின் எனக்கு விரோதமாய்ப் பேசுவார்.
19 ஆலோசனைத் தோழர் யாவரும் வெறுத்தனர்,
நான் நேசித்தவர் எனக்கு மாறுயினர்.
20 தோலொடும் தசையொடும் என் எலும்பு ஒட்டும்,
பல்லின் தோலொடு மாத்திரம் தப்பினேன்.
21 இரங்குக, இரங்குக, என் சிநேகிதரே,
கடவுளினுடைய கரம் என்னைத் தொட்டது.
22 கடவுளைப்போல் நீங்கள் இம்சிக்கத் தொடர்வானேன்?
பட்சித்தது என் தசையில் இனும் உமக்குப்போதாதோ?
23 ஆ, நான் சொல்வதை இப்போதெழுதிடின்,
ஒரு நூலாய் அதை வரைந்திடின் நன்றும்!
24 என்றும் நிலைக்கக் கல்லில் வெட்டி,
ஈய எழுத்தால் பதித்திடின் நன்றும்!
25 என்னை மீட்பவர் உயிரோடிருக்கின்றார்,
இறுதியில் தூளிலே நிற்பார், அறிவேன்;
26 தோல் முதலாயிது அழுகிப்போனபின்
தசையிலானுய்க் கடவுளைக் கண்டிடுவேன்.
நானே காண்பேன் அவரை என் சார்பில்,
27 அந்நியர் அல்லர் என என் கண்ணே காணும்;
அந்நால் வரக்காத்து என் உளம் தேயும்.
28 எவ்வாறெலாம் அவனை வதைக்கலாம் என்பீரேல்,
—காரியத்தின் மூலம் என்னிடம் இருப்பதுபோல்—
29 பட்டயமதற்குப் பயந்திருங்கள்,
கோபமோ வாளின் தண்டனைக்குரியது.
நியாயத்தீர்ப்பொன்று உளதறியுங்கள்
என்று சொன்னுன்.

**20** இதைக் கேட்டுக்கொண்டிருந்த நாகமாத்தியனை சோப்பார் பதிலுரைத்து:
2 என் உளம் குழம்புதற்கும் என் மனம்
பதில் உரைத்தற்கும் காரணமிதுவே:
3 கண்டன உரையைக் கேட்டு நானும்
நேன்,
அறிவிலாக் காற்றுச்சொலே நான் பெற்ற
பதில்.
4 மானிடன் உலகிலே உதித்த நாள்முதல்
பூர்வகாள்தொட்டு நீர் கற்றறிந்தது இதுவேயோ?
5 தெய்வபயமற்றோன் கொண்டாட்டம்
சின்னுள், அறிவோம்;
தெய்வமறந்தோன் சந்தோஷம் கூணமேயன்றே.
6 வானின் அளவு அவன் மேன்மையுயரினும்,
அவன் தலை மேகத்தை எட்டி மூட்டினும்
7 தன் மலமேபோல் என்றுமாய் அழிவான்,
கண்டிருந்தோர் அவன் எங்கென்று கேட்பார்.
8 கனவெனப் பறந்திடுவான், காணப்படானே;
இராத்தரிசனம்போல் துரத்துண்டு போவான்.
9 இதுவரை பார்த்த கண் இனி அவனைக் காணுதாம்,
அவன் வாசஸ்தலம் இனி அவனைக் காணுது.
10 எளியவர் தயவை அவன் பிள்ளைகள் தேடும்,
தன் பொருளைத் தன் கரத்தால் கொடுத்துவிட நேரிடுமே.
11 அவன் எலும்பு யௌவனப் பலத்தோடிருக்கையில்
மாய்ந்து அவனுடு மண்ணில் படுக்கும்.

12 தீமை அவன் வாய்க்கு இனிதாயிருத்
தலின்
அதைத் தன் நாவின்கீழ் அடக்கி மறைப்
பான்;
13 அதை அவன் வெளிவிடான், பதனம்
பண்ணுவான்,
தன் வாயினுள்ளே வைத்துக்கொள்
வான்;
14 ஆயினும் அவன் போஜனம் அவன் வயிற்
றில்
விரியனின் விஷமாய் மாறிப்போகும்.
15 தான் விழுங்கியுள ஆஸ்தியைக் கக்கு
வான்,
தெய்வம் அதை அவன் வயிறுநின்று
வெளித்தள்ளிடுவார்.
16 விரியன் பாம்பின் விஷத்தை உறிஞ்சு
வான்,
விஷப்பாம்பின் நாக்கே அவனைக் கொன்
றிடும்.
17 தேனும் தயிரும் ஒடுகின்ற
ஓடையும் ஆறும் அவன் காண்பதில்லை.
18 தேடிய பொருளை அனுபவியான், கொடுத்
தொடுவான்,
அவன் மகிழ்ச்சி அவன் ஆஸ்திப் பெருக்
குப்போலாகாது.
19 சிறுமை யுற்றோரை இம்சைசெய்து கை
விட்டு
வீடுகளைப் பறிசெய்தான், கட்டாமலே
யிருப்பான்.
20 பேராசையால் அமைதலில்லாமலே யிலை
வான்,
பொருளோ ஆபத்தில் அவனை விடுவிக்
காதே.
21 பட்சியாமல் அவன் விடுவதொன்றில்லை,
ஆகவே அவன் வாழ்வு நிலைநில்லாதே.
22 பூரண நிறைவிலும் அவனுக்கு நெருக்
கமே,
நிர்ப்பாக்கியர் கையனைத்தும் அவன்மேல்
வருமே
23 அவன் வயிறு நிரப்பவேண்டிக் கட
வுள் தம்
உக்கிரகோபத்தை அவன்மேல் அனுப்பி
டுவார்;
அவன் உண்கையில் அதை அவன்மேற்
சொரிவார்.
24 இருப்பாயுதத்திற்குத் தப்பியோடவே
செப்புவில் அவனை உருவ எய்திடும்.
25 அதை எடுத்திடுகையில் முதுகுவழி
வெளிவரும்,
மின்னும் அம்பு பிச்சினின்று வெளிப்
படும்;
பயங்கரம் அவனை முழுதும் பிடிக்கும்.

அவன் பொருளாய் மீந்திருப்பது 26
இருளே,
மானிடர் வளர்க்காத தீ அவனை உண்
ணும்;
அவன் வீட்டில் மீந்திருப்பதைப் பகரிக்
கும்.
அவன் அக்கிரமமதை வான் வெளிப் 27
படுத்தும்,
பூமி அவனுக்கு மாறாய் எழுந்து நிற்கும்.
அவன் வீட்டிலுள்ள சம்பத்து நீங்கும், 28
தெய்வ கோபாக்கினி வெள்ளம் வாரிப்
போம்.
தெய்வ பயமற்றோருக்குக் கடவுள் 29
தரும் பங்கிதுவே,
தெய்வம் குறித்திட்ட சுதந்தரமும்
இதுவே
என்று சொன்னான்.

இதற்கு யோபு பதிலுரைத்து: 21

நான் சொல்லுவதைக் கவனமாய்க்கே 2
ளும்,
கவனமாய்க் கேட்பதுவே எனைத்தேற்று
வதாம்.
நான் பேசிடுவேன், பொறுத்திருங்கள், 3
நான் பேசியபின் பரிகசித்திடலாம்.
நான் முறையிடுவது மானிடன்பே 4
ரிலோ?
பொறுமையிலேனுய் நான் இருப்பது
வியப்போ?
கவனித்து என்னைப்பாருங்கள், அப்பொ 5
ழுது
திடுக்கிட்டுக் கையால் வாய் பொத்திக்
கொள்ளுங்கள்.
அதை நினைக்கவே நானும் கலங்குவேன், 6
நடுக்கம் எனது உடலைப் பிடிக்கும்.
தெய்வபயமற்றவர் உயிரோடிருப்ப 7
தேன்?
விருத்தராகி அவர் வல்லவருமாவ
னேன்?
அவர் சந்ததி அவர்முன் அவரோடே, 8
அவர்மக்கள் அவர் கண் எதிரே நிலைக்
கின்றார்.
அவர் வீடுகட்குப் பயமிலை, வாழ்வே; 9
கடவுளின் தண்டனைக்கோல் அவர்மேல்
வராது.
அவர் எருது பொலியவே வீணுகாது, 10
அவர் பசு சினை அழியாமல் ஈனும்.
அவர் மக்கள் மந்தையென வெளியேறி 11
வருவார்,
அவர் பிள்ளைகள் குதித்து விளையாடுவார்
கள்.
தம்புரு, சுரமண்டலம் அவர் எடுத்துப் 12
பாடி

நாதசுரமதைக் கேட்டுக் களிப்பார்.
13 செல்வராய்த் தங்கள் வாழ்நாட்களைப் போக்கிக்
கணப்பொழுதிலே பாதாளம் இறங்குவார்.
14 கடவுளோநோக்கி: எங்களைவிட்டு விலகும்,
உமதுவழிகளை அறிந்திட விரும்போம்;
15 சர்வவல்லவர் யார்? அவரைச் சேவிப்பதேன்?
அவரைப் பிரார்த்திப்பதால் பயன் என்ன என்பார்.
16 அவர்கள் வாழ்வு அவர்கள் கையிலிராதோ?
தெய்வபயமிலார் ஆலோசனை எனக்குத் தூரமே
17 தெய்வபயமில்லார்தம் விளக்கு அணைந்துபோவதும்
அவர்கள் நிர்ப்பாக்கியம் அவர்கள்மேல் வருவதும்
அவர்கள் பங்கைக் கடவுள் கோபத்தில் அளிப்பதும்
18 காற்றிலகப்பட்ட தரும்பைப்போலாவதும்
பெருங்காற்றதில் பறக்கும் பதரைப்போலாவதும்
உண்டோ? அரிது அரிதே!
19 ஒருவன் அக்கிரமம் அவன்பிள்ளைகள் மேல் சுமரும் என்பர்.
கடவுள் அவனுக்கே பதிற்செய்து
அவனையே உணர்ந்திடச் செய்வாராக.
20 அவன்கண்களே அவன் அழிவினைக் காண,
அவனே சர்வவல்லார் கோபம் பருகிடுக.
21 அவன் மாதங்களின்தொகை அற்றுப் போகவே
தன்பின் தன் குடும்பத்திற்காகக் கவையுண்டோ?
22 உயர்ந்தோர் தமையும் தீர்க்கும் கடவுட்கு
ஒருவன் அறிவை உணர்த்த வல்லனே?
23 துன்பும் துயரமும் சற்றுமிலானுய்க்
குறைவிலா பலத்தோடு ஒருவன் சாகிறான்;
24 அவன் பால்பாத்திரம் நிரம்பிவழியும்,
அவன் எலும்புகளின் ஊனும் புஷ்டியே.
25 மற்றொருவனே வாழ்வு சிறிதும் கண்டறியானுய்
ஆன்மக் கசப்பினிலே உயிர் விடுவான்.
26 இருவரும் சமமாய் மண்ணிலே படுப்பார்,
அவர்களை மூடிக்கொள்வது புழுவே.

இதோ, நான் அறிவேன் உமது எண்ணங்களை, 27
எனை இம்சித்திட நீர் கொண்டுள சூழ்ச்சியை.
பிரபுவின் வீடெங்குளது! எங்கே 28
தெய்வபயமிலார் கூடாரம்! எனச் சாதிப்பீர்.
நெடும்பிரயாணம் செய்தோரைக் கேட்டிலீரோ! 29
அவர் கண்டு சொல்வதை நீர்மறுக்க மாட்டீர்.
தீயவன் ஆபத்துநாளில் விலக்கப்படுவான், 30
தெய்வகோபப்பெருக்கிலும் தப்பிடுவான் என்றுரைப்பார்.
அவன் முகத்தெதிர் அவன்வழி யெடுத்துரைப்பார் யார்? 31
அவன்செயற்கு அவனுக்குப் பதிலளிப்பவர் யார்?
தோள்மேற் சுமந்து அவனைக் கல்லறைக்குக் கொண்டுபோவார், 32
அவன் சமாதியிலே காவல்நிற்பார்கள்.
பள்ளத்தாக்குமண்ணில் இனிய நித்திரை செய்வான்; 33
அவன்முன் எண்ணிறந்தோர் அவ்வழியே சென்றதுபோல்
அவன்பினும் உலகெலாம் அங்கேயே சென்றிடும்.
எனை ஆற்றுதற்கு நீர் வீணுரைபகர்வதென்? 34
நீர் உரைக்கும் பதிலெல்லாம் பொய்யுரையே, மெய்யல்ல
என்று சொன்னான்.

அப்பொழுது தேமானியனாகிய எலீப் பால் பதிலுரைத்து: **22**

மானிடன் கடவுட்குப் பிரயோசனமாவானோ? 2
விவேகியாயிருப்பதன்பயன் அவனுக்கே.
நேர்மையாளன் நீ எனில் கடவுட்கு நன்மையுண்டோ? 3
குற்றமின்றி நீ நடந்தால் கடவுளுக்கு லாபமுண்டோ?
கடவுளின்கைகூக்கும், கடவுள்உன்னோடு வழக்காடுதற்கும் காரணம் உன் பயபக்தியோ? 4
உன்னுடைய தீர்க்குணம் பெரிதல்லவோ! 5
உனது அக்கிரமங்கட்கு ஓர் முடிவிலையே!
காரணமின்றியே உனது சகோதரரிடம் அடகுவாங்கி 6
ஆடையிலா ஏழைகளின் தனியைப் பறிசெய்தாய்

7 விடாய்த்தவன் தாகம் நீங்க நீர் கொடுத்
திலீ,
பசித்தவனுக்குப் போஜனம் கொடுக்க
மறுத்துவிட்டாய்.
8 வல்லவனுக்கே காணி என்றுயிற்று,
அதில்வசிப்பவர் உன்தயை பெற்றோரே.
9 விதவைகளை வெறுமையாய் அனுப்பி
விட்டாய்,
தாய்தந்தையிலார்தம் பலம் ஒடிக்கப்பட்
டது.
10 ஆகவே கண்ணிகள் உனைச்சூழ்கின்றன,
திடீரெனத் திகில்கள் உனைக் கலக்குகின்
றன.
11 கண்மூழையாக் காரிருள் வந்து கவிகின்
றது,
பெருவெள்ளம் வந்துன்னை மூடுகின்றது.
12 உன்னதவானில் கடவுள் இருக்கின்ற
ரலவோ!
மேல் நக்ஷத்திரங்களைப்பார், அவற்றுயர
மென்!
13 கடவுள் எங்ஙனமறியும்? கருமேகத்
தூடே
நோக்கி நியாயம் விசாரிக்க வல்லரோ!
14 அவர் பாராமல் மேகம் மறைத்ததே,
உலாவுமிடம் அவருக்கு ஆகாயவிரிவே
என்றுரைப்பாய்.
15 பூர்வநாள் துன்மார்க்கர் அவ்வழி நடந்
தார்,
நீயும் அவ்வழி அனுசரிக்கின்றாயோ?
16 காலம் வராமுன்னே வாரிக்கொளப்பட்
டார்,
அவர் அஸ்திபாரம் வெள்ளத்தில் ஒடிற்று.
17 எமைவிட்டு விலகும்! சர்வவல்லவரால்
எங்களுக்காவதென் என்றுரைத்தார் கட
வுளிடம்.
18 எனினும் அவர் வீட்டை நன்மையால்
அவரே நிரப்பினவர்,
—தெய்வபயமில்லார் வழி எனக்குத்
தூரமாக—
19 நேர்மையாளர் அதைக்கண்டு மகிழ்ந்
தார்,
குற்றமிலார் அவர்களைக்கண்டு நகைத்து,
20 எங்கள் பகைஞர் நிர்மூலமாயினர்,
மீந்ததை அக்கினி பகுத்தது என்கிறார்.
21 கடவுளோடு நீ பழகிச் சமாதானமாக
இரு,
அதினால் உனக்கு நன்மை விளையும்.
22 அவர் வாயினின்று போதனை பெற்றுக்
கொள்,
அவர் திருமொழிகளை இதயத்திற் காத்திடு
வாய்.
23 சர்வவல்லாரிடம் திரும்பு, நீ நிற்பாய்;
அக்கிரமத்தை வீட்டினுக்கப் பால்
எறிந்துவிடு.
24 பொன்னைத் தூளிலேபோட்டு ஒப்பிரின்
தங்கத்தை ஆற்றுக் கல்லென விட்டுவிடு.
25 சர்வவல்லவர் தாமே யுனக்குப்
பசும்பொன்னும் சொக்க வெள்ளியுமா
வார்.
26 அப்போழ்து சர்வவல்லார்மேல் மன
மகிழ்ந்து
கடவுட்குநேர் உன்முகம் எறெடுப்பாய்.
27 நீ பிரார்த்திக்கவே அவர் செவிசாய்ப்பார்,
நீயும் உனது பொருத்தனை செலுத்து
வாய்.
28 நீ நிர்ணயிக்கும் காரியம் நிலைபெறும்,
உன் பாதைகளில் வெளிச்சம் ஒளிரும்.
29 ஒருவன் ஒடுக்குண்கையில், அவன் எழுக
வென்று
நீ கெஞ்சிடத் தாழ்மையுள்ளோரை
யகுப்பார்.
30 குற்றமுள்ளோனெனினும் விடுவித்திடு
வார்,
அவன் தப்புதற்கேது உன் கையின் சுத்
தமே
என்று சொன்னான்.

பின்பு யோபு பேச ஆரம்பித்து: **23**

2 இன்னும் என் முறைப்பாடு கசப்பே;
பெருமூச்சால் என் கைகள் வலியிழந்
தன.
3 அவரை நான் காணுமிடம் அறிந்தால்
எத்தனை நன்றும்!
4 அவர் ஆசனத்தின் எதிர் வந்து நின்று,
என் வழக்கை முறையாய் அவர் எதி
ரவைத்து
நியாயங்களனைத்தையும் குறையின்றிப்
பேசுவேன்.
5 அவர் மறுமொழிகளை நான் அறிந்திடு
வேன்,
அவர் எனக்குரைப்பதை உணர்ந்து
கொள்ளுவேன்.
6 தம் மகா வலிமையில் எனோடு வழக்கிடு
வரோ!
அங்ஙனம் செய்யார், கவனமாய்க் கேட்
பார்.
7 அவரொடு அங்கு வழக்கிடுபவர் நேர்
மையரே,
எனைத்தீர்ப்பவர் கைக்கு என்றும் தப்
பிடுவேனே.
8 கீழ்திசை ஏகுவேன், அவரோ அங்கிலை,
மேல்திசை ஏகுவேன், அங்கும் கா
ணேன்.
9 வடதிசைச் செயல் கண்டு சென்றேன்,
கண்டிலேன்,

தென்றிசையும் நான் அவரைக் காணுப்
படி ஒளிப்பார்.
10 நான் செல்லும் வழியையோ அவர் அறிந்
திடுவார்,
அவர் பரீக்ஷையின்பின் பொன் என
மிளிர்வேன்.
11 என் கால் அவர் அடிச்சுவடு பற்றினது,
விலகாது அவர் வழியடங்கி நடந்தேன்.
12 அவர் விதிக்கும் கட்டளைவிட்டு வில
கேன்,
என் யோசனையினும் அவர் மொழி மிகக்
காத்தேன்;
13 அவருக்கு ஒரேமனம், யாரே திருப்பு
வார்!
அவர் தம் சித்தப்படியே செய்வார்.
14 எனக்கெனத் தாம் குறித்ததை நிறை
வேற்றுவார்,
இதுபோல்வன பல இனும் உண்டு அவ
ரிடம்.
15 ஆகவே அவர் திருமுன் கலங்கிடுவேன்,
சிந்தை செய்தோறும் நில்லை எனைப்பிடிக்
கும்,
16 என் இதயமெலிந்திடச் செய்தவர் கட
வுள்,
எனைக் கலங்கடித்தவரும் சர்வவல்லவ
ரே.
17 இருள் வாராமுன்னரே எனைச் சங்கரித்
திலர்!
மாண இருளை மறைத்தார், இப்படியா
னேன்!

**24** விசாரணை காலங்களெனச் சர்வவல்
லார் குறியாததேன்?
அவரை யறிந்தோர் தீர்ப்புநாட்களை யறி
யாததேன்?
2 எல்லைக்கல்லை ஒற்றிப்போடுவார்,
மேய்ப்பதாமே கொள்ளையிட்ட மந்தை
யை.
3 தாய்தந்தை யில்லாரின் கழுதையை ஓட்
டிக்கொள்வார்,
விதவையின் மாட்டை ஈடாய் எடுத்துக்
கொள்வார்.
4 ஏழைகளை வழியைவிட்டு விலக்குவார்,
நாட்டின் எளியோரெலாம் ஒளித்திடவே
வேண்டும்.
5 இவர், இதோ, காட்டுக்கழுதைகள்
போல்வார்,
இரைதேடிடத் தம் வேலைமேற் செல்
வார்.
அவர் மக்கட்கு உணவு ஈவது பாழ்
வனமே.
6 வயலில் அறுத்துக்கொள்வது மிருக
உணவே,

சேர்த்துக்கொள்வது துஷ்டன் தோட்
டத்தில் மிஞ்சினதே.
7 ஆடையின்றி இரவெலாம் நிர்வாணமாகிக்
குளிருக்குப் போர்வை யில்லாதிருப்பார்.
8 மலைமேற்பெய்யும் மழையில் நனைந்து
ஒதுக்கிடமின்றிக் கன்மலை தழுவிக்கிடப்
பார்.
9 தந்தையிலாக் கைக்குழவியைத் தாய்ப்
பால் குடியாதிழுத்து,
எளியவனிடம் கொடிதாய் அடமானம்
வாங்குவதால்
10 எளியோர் வஸ்திரமின்றி நடந்தலைவார்,
பட்டினியாய் அரிக்கட்டைச் சுமப்பார்.
11 மதில்சூழ் இடத்தில் செக்காட்டிடுவார்,
தாகமாயிருந்துகொண்டே ஆலை ஆட்டு
வார்.
12 ஜனமுள்ள ஊர்நின்று தள்ளுண்டு தவிக்
கின்றார்,
குற்றுயிராயுள்ளாரின் ஆன்மா கூப்பிடு
கிறது;
கடவுளோ நடக்கின்ற குற்றமானதை
நோக்கார்.
13 மற்றவரும் இருக்கின்றார், ஒளியின்
பகைஞர்,
அதின் வழியறியார் அப்பாதையிலே நில்
லார்.
14 விடியாமுன் கொலைபாதகன் எழுவான்,
ஏழை எளியவரா யிவரைக் கொல்வான்;
இரவில் அவன் திருடனைப்போல் வரு
வான்.
15 விபசாரன் கண் மாலை வரக்காத்திருக்கும்,
தன்னை எவரும் காணுரென வெண்ணித்
தன்னுடைய முகத்தை மூடிக்கொள்
வான்.
16 இரவிலே வீடுகள் கன்னமிடுவார்,
பகலிலே ஒதுங்கி மறைந்திருப்பார்;
ஒளியினை அறிய விரும்பமாட்டார்.
17 காரிருளே அவர் காலையாகும்,
காரிருள் நிலையோடு அவர்க்குப் பழக்கம்.
18 உலகம் நினைப்பது: பெரு வெள்ளத்
தில்
அவர்கள் விரைவில் அடிபட்டுப் போ
வார்,
நாட்டில் அவர் பங்கு சாபமேயாகும்,
திராட்சத் தோட்ட வழியினிபோகார்.
19 வறட்சி, உஷ்ணம் உறைமழைநீர் உண்
ணல்போல்
பாதாளம் இத்தப் பாவிகளைப் பட்சிக்
கும்;
20 பெற்ற கர்ப்பம் மறந்துவிடும், புழு இனி
தாய் உண்ணும்;
அப்பால் அவரை நினைப்பாரில்லை;

மரம்போல் தீமை முறிந்து வீழ்ந்திடும்,
21 பிள்ளை பெரு மலடிக்குத் தீமை செய்
தோர்க்கும்
வித்வைக்கு நன்மை செய்யாதிருந்தோர்க்
கும்
இந்தக் கதியே ஆகும் என்பதே.
22 கடவுளோ பலமுளோரைத் தம்வலி
யால் தாங்குகிறார்,
பிழைப்போம் என நினையாதிருக்கையி
லும் எழுந்திருப்பார்.
23 கடவுள் அவர்க்கு வாழ்வளிக்கவே சுகித்
திருப்பார்,
கடவுளின் கண்களே அவர் வழியைக்
காக்கும்.
24 அப்படி உயர்ந்து நோவின்றிப் பொட்
டெனச் சாவார்,
பிறர்போல் அவரும் தாழ்ந்து சென்றிடு
வார்;
கதிரின் தலையைப்போல அறுப்புண்
பார்.
25 இஃதுண்மையில்லையாயின்,
எனைப் பொய்யனுக்குவான் யாரே?
என் வார்த்தையை வீணுக்குவான் யாரே
என்று பதிலுரைத்தான்.

**25** அப்பொழுது சுகியனான பில்தாத் பதி
லுரைத்து:
2 இராசத்துவம், பயங்கரம் அவரிடம்
உள்ளன,
தமது உயர்ஸ்தலங்களில் சமாதானம்
செய்கின்றார்.
3 அவர் சைனியங்களுக்கு ஓர் கணக்குண்
டோ?
அவர் ஒளி வீசப்பெறுதவர் உண்டோ?
4 இப்படியிருக்கக் கடவுள் முன்னிலையில்
மானிடன் நேர்மையன் ஆவதெப்
படியோ?
ஸ்திரீயினிடம் பிறந்தான் தூயனுக்
காணப்படுவதும் எப்படியோ?
5 சந்திரனே நோக்கும், அதவும் பிரகாச
மிலை;
நக்ஷத்திரங்களும் அவர் பார்வையில்
தூயனவல்ல;
6 புழுப்போன்ற மானிடன் தூய்மை எம்
மாத்திரம்!
பூச்சியேபோன்ற மானிடப் புதல்வன்
என்று சொன்னான்.

**26** அதுகேட்ட யோபு மறுபடியும்
பேசத் தொடங்கி:
2 சக்தியிலான் ஒருவனுக்கு நன்கு
உதவுகின்றாயே!
பலமிலாக் கைக்குன் ஆதரிப்பு மிக
நன்றே!
விவேக மிலானுக்கு உன் ஆலோசனை 3
அழகுதான்!
ஆய்ந்தமைந்த புத்திகனே மிகமிகவே
புகட்டிவிட்டாய்!
மொழிகனே எவரிடம் குவிக்கவந்தாய்! 4
உனில் வெளிப்படும் விவேகம் எவரிடம்
பெற்றாயோ!
அவர் முன்னிலையில் நடுநடுங்கிடுவார் 5
இறந்தோர், நீரின்கீழ் வசிப்பவரே.
அவர் எதிரே பாதாளம் திறப்பே, 6
பாதாளக் குழியும் மூடுண்டதல்ல.
வெறும் வெளியில் உத்தரமண்டலம் 7
விரித்தவர் அவரே,
தொங்கவிட்டார் பூவுலகை, ஆதாரம்
ஒன்றுமிலை.
தமது கார்மேகத்தில் தண்ணீரைக் கட்டி 8
வைப்பார்,
கீழ்மேகம் பாரத்தினுல் கிழிந்துபோவ
தில்லை.
தமது சிங்காசனம் நாம் காணுப்படி 9
மறைத்து
அதன்மேல் மேகம் விரித்து மூடுவார்.
ஒளியும் இருளும் பிரியும் இடமாய் 10
நீர்மேல் அவர் ஒரு வரையைக் குறித்
தார்.
அவர் கண்டித்திடுமளவில் வானின் 11
தூண்கள் அனைத்தும் நடுங்கித் திடுக்கி
டும்.
ஞானத்தால் ராகாப் பாம்பை உருவக் 12
குத்தித்
தமது வலியால் கடலை நடுநடுங்கச் செய்
கின்றார்.
அவர் சுவாசத்தால் வானம் அலங்காரமா 13
கும்,
விரைந்தோடும் பாம்பை அவர் கரம்
குத்திவிடும்.
இதோ, இவையெலாம் அவர் செயலின் 14
கடை ஓரமே;
நம் செவிப்படுவது சிறுமெல்லோசையே,
அவர் வல்ல பேரிடியின் முழக்கறிபவன்
யார்
என்று சொன்னான்.

தன்மனதிலுள்ளதையே யோபு இன் **27**
னும் வெளியிட்டு:
என்நியாயமதைப் புரட்டிய கடவுள், 2
ஆன்மா கசந்திடச் செய்த சர்வவல்லார்
ஆகியவர் ஜீவன்மேல் ஆணையாகச்
சொல்லுகிறேன்:
என் மூச்சு என்னிலே இருக்குமட்டும், 3
தெய்வம் அருள் சுவாசம் என் நாசியி
லுள்ள மட்டும்,
என்தன் உதடுகள் அநீதம் பேசா, 4

என் நாவு உரையாது வஞ்சனைச் சொற்
கள்.
5 உமது சொலை நியாயமாய் ஒப்புவது
தூரமாக,
சாகுநாள்மட்டும் என் நேர்மை எனை
விட்டகற்றேன்.
6 என்நேர்மையை இறுகப் பிடித்துளேன்,
விட்டிடேன்;
நெஞ்சு வாழ்க்கும் எதும் என் ஜீவியத்தி
லிலை.
7 என் பகைஞன் தெய்வ பயமில்லான்
என்று ஆய்விடுக.
எனக்கு மாறாய் எழும்புவோன் அக்கிர
மக்காரனேயாக.
8 கடவுளை மறந்தோனைக் கடவுள் தறித்து
அவன் உயிர் எடுக்கையில் அவன் நம்பி
ஆசிப்பதென்?
9 ஆபத்து அவன்மீது வந்திடும்போது
அவன் கூப்பிடுவதைக் கடவுள் கேட்
பாரோ?
10 சர்வவல்லவரில் அவன் களிகூர்வானோ?
என்றும் அவரை இறைஞ்சி நிற்பானோ?
11 தெய்வகரத் திருச்செயலை உங்களுக்கு
உபதேசிப்பேன்,
திரு உளத்தில் உள்ளவற்றை உங்கட்கு
மறைப்பதிலை.
12 இதோ, நீங்கள் எல்லாரும் அதைக்
கண்டறிந்தவரே,
ஏதோ பின்னை இவ்வீண் எண்ணங்
கொண்டீர்?
13 தியோன் கடவுளிடம் பெறும் பங்கது
வும்
கொடியோற்குச் சர்வவல்லார் தரும்
சுதந்தரமும் இதே:
14 அவன் புதல்வர் பெருகுவரேல் பட்ட
யத்திற்கே இரையாம்,
போதும் உணவு அவன் சந்ததிக்கிராதே.
15 மீந்தோர் கொள்ளைநோய்க்கு இரையாகிக்
கிடப்பார்கள்,
அவர்தம் விதவைகள் தக்கங்கொண்டா
டார்.
16 அவன் தூள் எனப் பணம் குவித்தனனே
னும்,
மண்ணெனவே ஆடைகளைச் செய்து
வைத்திருப்பினும்
17 அவன் செய்துளவற்றை நேர்மையானே
தரிப்பான்,
அவன் பணத்தைக் குற்றமிலான் பங்கிட்
டெடுப்பானே.
18 பொட்டுப்பூச்சிபோல் தன் வீடு கட்டுகி
றான்,
காவலுக்கிட்ட குடிசைபோலாகிவிடும்.

செல்வனுய்த் தூங்கச்செல்வான், 19
தொலைந்திடா தென்றிருப்பான்,
கண்ணைத விழிக்கும்போதோ அங்
கொருபொருளுமில்லை.
வெள்ளமெனத் திகில்கள் அவன்மேல் 20
வந்துவிடும்,
இரவிற் பெருங்காற்றுத் திருடனுய் வந்து
விடும்.
கொண்டல் அவனைத்தூக்க அவன் 21
போய்விடுவான்,
அவனிடத்திலின்று அவனை வாரிடும்,
கொண்டுபோம்.
எய்பவர் கடவுளே, காட்டார் இரக்கம்; 22
அவன் அவர் கைக்குத் தப்பிட விரை
வான்.
ஜனங்களோ அவனைப் பார்த்துக் கை 23
கொட்டுவார்,
அவனிடம்விட்டு அவனைச் சீ என ஓட்
டிடுவார்.
வெள்ளியதற்கு ஓரிடம் உண்டு, 28
புடமிடும் பொன்னுக்குப் பிறப்பிடம்
உண்டு.
இரும்பு மண்ணினின்று எடுக்கப்படும், 2
செம்பைக் கல்லினின்று உருக்கி எடுப்
பார்.
இருள் குடியிருக்கும் இடத்திருள் 3
அகற்றி
அந்தகாரம் காரிருளிலும் கடைமூலை
மட்டும்
கற்களைத்தேடி ஆராய்ந்திடுவார்.
மனித சஞ்சாரத்திற் கப்பால் ஆழ்குழி 4
வெட்டி
காலடி படுமிடங்களின் கீழ் மறைந்து
மனிதர் அணுகா இடம் இறங்கித்
தொங்குவார்.
பூமியின் மேலே உண்பொருள் விளை 5
யும்,
கீழ் ஆழத்திலே தியிற்போலக் குழம்பிக்
கிடந்திடும்.
அதன் கற்களில் நீலக்கற்கள் விளைந் 6
திடும்,
அவ்விடத்திலே பொன் தூளும் அகப்
படும்.
பட்சியும் அறியாது அங்கு செல்வழியை, 7
வல்லூறின் கண்ணும் அதைக் கண்ட
திலை,
சிறந்துள மிருகத்தின் காலடியும் பட்ட 8
திலை,
சிங்கமும் அதைக் கடந்து சென்றதிலை.
மானிடன் தன் கைகளைக் கடும்பாறை 9
யின்மேல் நீட்டி
மலைகளை வேரோடு புரட்டிவிடுவான்.

10 கல்மலைகளுள்ளும் கடைபாதைகளே
வெட்டிடுவான்,
விலையுயர்ந்ததொன்றும் அவன் கண்ணுக்குத் தப்பாது.
11 துளிகசியாப்படிஆரோடையடைப்பான்,
மறைந்துகிடப்பனவற்றை வெளிச்சத்தே
கொணர்க்கிடுவான்.
12 ஞானமதைக் கண்டெடுப்பதெங்கேயோ?
அறிவுவிளையும் இடந்தான் ஏதோ?
13 அதற்குச் செலும் வழி மானிடன் அறியான்;
ஜீவனுள்ளோரின் தேசத்தில் இல்லை அது.
14 என்னிடமில்லை அது என்றிடும் ஆழம்,
சமுத்திரமும் என்னிடமில்லை எனுமே.
15 தங்கம் கொடுத்திடினும் அது கிடையாது,
வெள்ளி நிறுத்துக்கொடுத்தாலும் முடியாது.
16 ஒப்பீரின் தங்கம் அதைச் சமமாய் நிறுக்காது;
அரிய கோமேதகம், நீலம் சமமாவதில்லை.
17 பொன்னும் பளிங்குமதற்கு ஈடாகாது,
பொற்பாத்திரம் கொடுத்தும் அதை மாற முடியாது,
18 பவளம், படிகம் இவை ஒப்புரைக்க ஏதுவில்லை.
முத்தினும் ஞானமதைத் தேடல் மிக அரிதே.
19 எத்தியோப்பியா புஷ்பராகம் இணையாமோ?
பசும்பொன்னும்தான் அதற்குச் சமநிறையாகாது.
20 ஞானமானது வருவது எங்கிருந்தோ?
அறிவு விளையும் இடந்தான் ஏதோ?
21 சர்வ பிராணிகளின் கண்களுக்கும் அது மறைவே,
வானின் பறவைகட்கும் அஃதொளிக்கப்பட்டுளது.
22 காதுகளால் மாத்திரம் அதைப்பற்றிக்
கேட்டதுண்டு
என்றுரைக்கும் பாதாளக்குழியும் மரணமுமே.
23 கடவுளோ அதன் வழியதனை அறிவார்,
அதன் குடியிருப்பும் அவர்க்கே தெரியும்.
24 அவர்கண் பூமியின் கடைமட்டும் சென்றுலவும்,
வானத்தின் கீழுள்ள அனைத்தையும் காண்கிறார்.
25 காற்றினுக்கு நிறையை ஏற்படுத்தி,
நீரையும் அளவிலே அளந்துவிட்டு,
மழைக்கும் வரையரைப்பிரமாணம் வகுத்து, 26
முழங்கு கார்மேகத்தின் வழி ஏற்படுத்தி
கையில் அவர் அதைக்கண்டு விவரித்திட்டார்; 27
அதை நிலைப்படுத்தி ஆராய்ச்சி செய்தார்.
மனிதனிடமோ அவர் இதையுரைத்து: 28
ஆண்டவர்க்குப் பயந்து நடப்பதே ஞானம்,
தீமையைவிட்டு விலகிடல் அறிவு என்றார்
என்று சொன்னான்.

தன் மனதிலுள்ளதையே யோபு 29
இன்னும் வெளியிட்டு:
சென்ற மாதங்களிலும், கடவுள் எனைக் 2
காத்து
வந்த நாளிலுமிருந்த வாழ்விருந்தால்
நன்றுகும்!
அவர் தீபஒளி அந்நாள் என் தலைமேல் 3
வீசினது,
அவர் தந்த ஒளியாலே இருளைக் கடந்து
வந்தேன்.
முன்னுள சுகபலவாழ்வு இனும் வருமோ! 4
அந்நாள் கடவுளினுடைய அந்தரங்க
நேகம் என் வீட்டின்மேலிருந்து வந்தது.
அந்நாள் சர்வவல்லார் என்னோடிருந்தார், 5
எனைச் சூழ என் பிள்ளைகளிருந்தார்கள்.
வீட்டில் எவ்விடத்திற் கால் வைப்பினும் 6
கெய்யே,
பாறை நின்றென்னருகே எண்ணெய் நதி ஓடிற்று.
ஊர்வாசலுக்கு நான் எழுந்து சென்று 7
ஊர்வெளியில் ஆசனம்போட்டு இருந்திடவே
வாலிபர் எனைக்கண்டு ஒதுங்கி நிற்பார், 8
வயோதிகர் எழுந்து நின்றுகொண்டிருப்பார்.
பிரபுக்கள் தமது பேச்சை நிறுத்திக் 9
கையால் தமது வாய் பொத்திடுவார்;
பெரியமனிதர் தம் சத்தம் அடக்குவார். 10
அவர் நா அவர் மேல்வாயோடு ஒட்டும்.
என் சொல்லைக் கேட்ட காது எனைப் 11
பாக்கியனெனும்,
எனைக்காண் கண்ணும் எனைப்புகழ்ந்து
சாட்சியிடும்.
கூப்பிடும் ஏழை, திக்கில்லாப்பிள்ளை, 12
உதவியற்றோனையும் நான் விடுவித்தேனே.

13 அழிவதற்கிருந்தோன் ஆசீர்வாதம் என்
மேல் வந்தது,
விதவையின் இதயம் மகிழ்ந்திடச் செய்
தேன்.
14 நேர்மைதரித்தேன், நான் நேர்மைக்கு
உருவானேன்,
நியாயம் என் அங்கியும் பாகையுமா
யிற்று.
15 குருடனுக்குக் கண்ணானேன்,
முடவனுக்குக் காலானவனும் நானே.
16 ஏழைக்குத் தந்தையாயிருந்தவன் நானே,
அறியா வழக்கையும் ஆய்ந்து பார்த்
தேன்.
17 அநியாயக்காரர்தம் கடைவாய்ப்பற்க
ளைத் தகர்த்தேன்,
அவர் பறித்ததை அவர் பல் நின்று
பறித்தேன்
18 அக்காலத்தில் நான் நினைத்திருந்தது:
என்கூட்டினுள்ளோரோடு நான்சாவேன்,
என்நாட்களை மணலெனப் பெருக்கிடு
வேன்;
19 என்வேர் மட்டும் நீர் வந்தெட்டும்,
இரவெலாம் பனிவந்தறங்
கும்;
20 என்மகிமை என்றும் புதிதாய் நிலைக்
கும்,
என் கையின்வில் புதுப்பலம் கொளும்
என்பதே.
21 என்சொலுக்குச் செவிகொடுத்துக் காத்
திருந்தனர்,
பேசாதிருந்து என் ஆலோசனையைக்
கேட்டார்கள்.
22 என்பேச்சின்பின்னே எவரும் பேசுவ
தில்லை,
என்சொற்கள் அவர்க்கு மழைத்துளிகள்
போலாயின,
23 மழைக்கேபோல எனக்குக் காத்திருந்த
னர்,
பின்மாரி ஆசிப்பார்போல் வாய்திறந்
திருந்தார்.
24 நான் சிரித்திடத் தம் தைரியம் இழப்
பார்,
என் முகக்களையை மாற்றுந்திறம் அவர்
க்கிலை.
25 அவர் செலும் வழி குறிப்பேன், எனைத்
தலைவனாய்க் கொள்வார்,
சைனியத்துள் வீற்றிருக்கும் அரசேபோ
லிருந்தேன்;
துக்கர்த்துள் ஆழ்ந்தவனைத் தேற்றுபவன்
போலிருந்தேன்.
30 இப்பொழுதோ இளையாரும் என்னைப்
பரிகசிப்பார்,
அவர் பெற்றோர் என் காவல்நாய்களோ
டொன்றாய்
வைத்தற்கும் யோக்கியர் அல்லரென்றி
ருந்தேன்.
2 அவர்க்குள கைபலத்தால் எனக்காம் பய
னென்?
வாலிபபலம் அவர்க்கில்லையாயிற்றே.
3 வறுமையும் பசியும் அவர்களை வாட்
டும்,
வெறும் பாழ்வனமே உணவாய்க்கறிப்
பார்;
இதன்முனும் அவ்வனம்பாழே, வெறு
மையே.
4 செடிகளுக்குள்ளுள்ள தழைகளைப் பிடுங்
குவார்,
சூரையின்வேர் அவர்க்கு ஆகாரமாகும்.
5 இனசமூகத்தினின்று அகற்றப்பட்டவர்,
கள்ளன், திருடன் எனக்கடிந்து துரத்
தண்டோராம்;
6 அவர் குடியிருப்பு நிகில்லை பள்ளத்
தாக்கே,
தரை, கற்பாறை இவற்றிலுள்ள குகை
களே.
7 செடிகளுக்குள் உணவின்றிக் கதறுவார்,
அவர்கூடுமிடம் காஞ்சொறிப்புதரே.
8 மூடரின் மக்கள், பேரிலார் சந்ததி,
தேசம் நின்று அடித்துத் துரத்தண்ட
வரே.
9 ஆனாலும் இப்பொழுதோ, நான் அவ
ர்க்குப்பாட்டானேன்,
என்மீது அவர்கள் வசையாகப்பேசிடு
வார்;
10 என்னை அருவருப்பார், கண்டால் அகன்
றிடுவார்;
என்முகத்தில் காறித் துப்புதற்கும் கூசி
லரே.
11 கட்டை அறுத்திடவே துன்புறுத்தற்
கேகுகின்றார்,
கடிவாளமில் குதிரைபோலே என்மேல்
வருவார்;
12 வலப்புறம் எழுவார் திரண்டகும்பினர்,
என்கால்தவறி விழுந்திடத் தள்ளுவார்,
என்மீதுவரக் கெடுவழிவகுப்பார்.
13 நான் செல்பாதையைக் கெடுத்தழித்திடு
வார்,
நான் விழுந்திடத் தம்மால் ஆனதைச்
செய்வார்.
துணையிலாத் தனியாட்கள் எனக்கிது
செய்வார்.
14 வருவார்பெரிய திறப்பிலேபோல,
இடிந்துவிழுகையிலே புரண்டேஇவரு
வாரே.

15 பயங்கரங்கள் என்மேல் திரும்பிவருகின்றனவே,
காற்றுப்போல் என்மேன்மையை அவை பறக்கடிக்கும்,
என்சுகவாழ்வு மேகம்போல் அகலும்.
16 இப்போதென்னுயிர் கரைந்தோடிவிட்டது,
இடுக்கநாள் என்னைப் பிடித்துக்கொண்டது;
17 இரவெலாம் எலும்புகள் துளைபடுகின்றன,
எனைக்கறித்திடுநோய் இளைப்பாறுதே.
18 தம்பெருவலியால் என்உடை வேறுக்கினார்,
சட்டையின் கழுத்தென ஒட்டும் அது என்மேல்.
19 சேற்றிலே என்னைத்தூக்கி எறிந்துவிட்டார்,
தூளுக்கும் சாம்பலுக்கும் ஒப்பாகிவிட்டேன் நான்.
20 உமைநோக்கிக் கூப்பிட்டேன், மாறுத்தரமில்லை;
காத்துநிற்கின்றேன், நீர் பார்த்தே இருந்துவிட்டீர்.
21 ஐயோ, கொடியராய் மாறிவிட்டீர் என்மீதே,
உமதுவல்லகரத்தால் என்னை இம்சிக்கின்றீர்.
22 காற்றிலே என்னைத்தூக்கிப் பறக்கவிட்டீர்,
இரைச்சல், இதோ, என்னைக்கரைந்துருகச் செய்யும்.
23 மரணத்துக்கே என்னை ஒப்புவித்தீர் என்றறிவேன்,
ஜீவனுள்ளோர் எல்லாரும் கூடும் பெருவீடே.
24 விழுவான் ஒருவன் கைநீட்டாதிருப்பானே!
ஆபத்தில் உள்ளான் அபயமிட்டுக் கூவானே!
25 நெருக்கத்திலுள்ளானைக் கண்டழுததுண்டே நான்,
ஏழைகளைக்கண்டு நான் கொண்டேன் பெருந்துயரம்;
26 நன்மை வருமென்றிருந்தேன், வந்ததையோ தீமை!
ஒளிக்கெனக் காத்திருந்தேன், வந்ததுவோ இருளே!
27 என்குடல் கொதிக்கும், அமராதிருக்கும்;
எனக்கெதிர்படுவன துன்பமாம் நாட்களே.
கரிய உருவானேன், வெயில்பட்டதென் றல்ல; 28
சபைநடுவெழுந்து அபயமிட்டலறுவேன்.
நரிக்கு உடன் பிறப்பானேன், 29
தீக்கோழித் தோழனுனேன்.
தோல்கரிந்து உரிந்தது, 30
எலும்பு வெப்பால் காய்ந்தது.
சுரமண்டலதொனி புலம்பலாய்மாறிற்று, 31
நாகசுரமும் அழுகுரலாயிற்றே.
கண்களோடு உடன்படிக்கை செய்தேன், **31**
கன்னிகை இனி நான் நோக்குவதெப்படி!
நோக்கிடில் வான்கடவுள் அளிக்கும் 2
பங்கு என்னுகும்!
உன்னதச் சர்வவல்லார் யாது சுதந்தரமளிக்கும்!
அவர் அளிப்பார் அநியாயனுக்கு 3
ஆபத்து,
அக்கிரமக்காரனுக்கு இடுக்கண் அல்லவோ.
என் வழிகளை அவர் பார்த்தறிகின்றார், 4
என் நடைகளையெல்லாம் அவர் எண்ணுகின்றார்.
நான் பொய்வழியில் நடந்துவந்தேனே! 5
கபடிலே என் கால் விரைந்ததுண்டா?
—சுமுத்திரைத் தராசில் கடவுளே எனை 6
நிறுக்க,
அவரே எனது நேர்மையை அறிக—
நல்வழிவிட்டு என் நடை விலகினதோ? 7
கண்செல் இடமெலாம் இதயம் சென்றதோ?
ஒருமாசு என்கையில் ஒட்டியதுண்டோ?
உண்டெனில் வேறொருவன் உண்க 8
நான் விதைத்ததை,
என் பயிரெல்லாம் வேரோடழிக.
என்மனம் மோசம்போய் ஒருத்திபாற் 9
செல
நான் அயலான் வாசலிலே காத்துநின்ற
துண்டானுல்
என் மனைவி பிறனுக்கு மாவரைத்திடுக, 10
வேற்றுமனிதர் அவள்மேற் சாய்க.
என் செயல் மகா பெரும் தோஷமாகும், 11
நியாயாதிபதிகள் விசாரிக்கும் குற்றமாம்.
பாதாளக்குழிவரை பக்ஷிக்கும் நெருப்பு 12
அது,
என் சம்பத்தையெலாம் வேரோடழிக்கும்.
வேலையாள், ஆணை பெண்ணை, என் 13
னோடி

வழக்கிடுகையில் நான் நியாயங்கேளா
திருந்தால்,
14 கடவுள் எழும்பிவரும்போது என் செய்
வேன்?
அவர் விசாரிக்கையில் நான் எப்பதில்
உரைப்பேன்?
15 தாய்கருவிலெனைப் படைத்தவர் அவரை
யும் படைத்தார்,
இருவரையும் கர்ப்பத்தில் அமைத்தா
ரும் ஒருவரே.
16 எளியோர் வாஞ்சித்ததை நான்
கொடாதிருந்தேனே?
விதவையின் கண்கள் ஒளிமங்கச் செய்
தேனே?
17 தந்தையிலாப் பிள்ளைனை உடன் இருத்தி
ஊட்டாமல்
நானே தனியாய் என்னாகாரம் உண்
டேனே?
18 என் சிறுவயதுமுதல் என்னோடு
தந்தையோடிருப்பது போன்றவனிருந்
தான்.
நான்பிறந்த நாள்முதலாய் அவள் என்
னோடிருந்தாள்,
நானும் அவளுக்கு வழிகாட்டிவந்தேன்.
19 உடுப்பின்றி ஒருவன் மடிவதையும்,
ஏழை
மூடவஸ்திரமின்றி யிருப்பதையும் காண்
கையில்
20 என் ஆட்டுமயிருடையால் அவன் அனல்
கொள்ள
அவன் இடை என்னைப் புகழாதிருந்த
துண்டோ?
21 ஊர்வாசலிலிருப்போர் என் பக்ஷம் எனக்
கண்டு
அனாதைக்குமாறாய் என் கை நீட்டிய
துண்டோ?
22 உண்டெனில் எனது தோள்பட்டை
சரிந்திடுக,
என் புயம் தோள் நின்று ஒடிந்துபோய்
விடுக.
23 கடவுளால் வருதுன்பம் வெருதிகில்
வீணைக்குமே,
அவர் மகத்துவத்தெதிரே என்னால் ஆவ
தென்?
24 பொன்னை எனதுயிர்க்குறுதியாய்க்
கொண்டேனே?
தங்கத்தினிடம், நீ என் ஆதாரம் என்
றேனே?
25 என்ஆஸ்தி பெரிதென்று நான் மகிழ்ந்
திருந்தேனே?
கை படைத்தது அதிகமென்று களித்
திருந்தேனே?
சூரியன் பிரகசித்திடுவதைப் பார்க்கை 26
யில்
சந்திரன் மகிமையிற் செல்வதைக் காண்
கையில்
அந்தரங்கத்தில் என் மனம் மோசம் 27
போய்விட
கைமுத்தமிட்டு அவற்றை வாழ்த்திய
துண்டோ?
உண்டெனில் உயர்வான் கடவுளை மறுத் 28
ததாய்
நியாயவிசாரணைக்குரிய குற்றமாம்.
என் பகைஞனுக்கு உற்ற நஷ்டத் 29
தில் மகிழ்ந்தேனே?
அவன் தீமையுறக்கண்டு பெருமையிற்
களித்தேனே?
அன்று, அவன் ஜீவன் சாபத்துள்ளாதற் 30
கேதுவாய்
என்வாயைப் பாவத்திற்குட்படவும் விட
வில்லை.
அவன் உணவினால் திருப்தியாகாதார் 31
உண்டோவென்று
என் வீட்டினுள்ளார் எனைப்பற்றிச்
சொன்னதிலையோ?
பரதேசி வீதியிலே ராத்தங்கவிட்டதில்லை, 32
வழிப்போக்கனுக்கென்று வாசல் திறந்து
வைத்தேன்.
என் அக்கிரமத்தை உள்ளத்தில் 33
ஒளித்துவைத்து
மனிதமுறையால் என்மீறுதலை மறைத்
தேனே?
திரள்கூட்டத்தாருக்கு நான் பயந்தொ 34
துங்கி
இனஜனத்தார் பகடிக்குத் திடுக்கிட்டுப்
பேசாதும்
வாசற்படிகடந்து செல்லாது மிருந்
தேனே?
ஆ! என்வழக்கு ஒருவன் கேட்டால் 35
எத்தனை நன்றும்!
—இதோ, என் கைக்குறி; கடவுள் பதி
லளிக்க!—
வாதி எதிர்வழக்கெழுதி எனக்களித்திடில்
நன்றும்!
அதை என் தோளின்மேலே சுமந்து 36
கிரீடமாகவும் தரித்துக்கொள்வேனே.
அரசகுமாரன்போல் அவரிடம் சென்று 37
என் நடைகளுக்கெல்லாம் நியாயங்
காட்டுவேன்.
என் நிலம் எனக்கு மாறாய்க்கூவுமோ? 38
அதன் படைச்சால்களும் கூடிவந்
தழுமோ?
கூலிகொடாமல் அதன் பலனைப் புசித்
தேனே? 39

பயிரிட்டவர்தம் உயிர் மெலியச் செய்த
துண்டோ?
40 உண்டெனில் கோதுமையல முள்
முளைக்க,
வாற்கோதுமையல களையே முளைக்க
என்று சொல்லிவிட்டான். இவ்வளவில்
யோபு சொன்ன வார்த்தைகள் முடிந்தன.

**32** யோபு தன்பார்வையில் நேர்மை
யுள்ளவனுயிருந்தபடியினால் அந்த மூவரும்
அதன்மேல் அவனோடு நியாயம் பேசாமல்
2 நிறுத்திவிட்டார்கள். அதினால் ராமின்
வம்சத்தானை பூசியனுகிய பரகெயேலின்
குமாரன் எலீகூவுக்குக் கோபம் மூண்டது;
யோபு கடவுளுக்கு எதிரே தன்னை நேர்மை
யுள்ளவனுக மதித்ததினால் அவன்மேல் அவ
3 னுக்குக் கோபம் மூண்டது. கொடுக்கத்
தக்க மறுமொழி யோபின் மூன்று சிநேகி
தரும் கொடுக்கமுடியாதிருந்தும் அவர்கள்
அவனைக் குற்றவாளியென்று தீர்த்ததினிமித்
தம் அவர்கள் மேலும் அவனுக்குக் கோபம்
4 மூண்டது. அவர்கள் தன்னைப்பார்க்கிலும்
வயது சென்றவர்களானபடியினால் எலீகூ
இதுவரையும் யோபினிடம் பேசாமற்காத்
5 திருந்தான். அந்த மூன்று மனுஷரின்
வாயிலும் மறுஉத்தரவு பிறக்கவில்லையென்று
எலீகூ கண்டபோது அவனுக்குக் கோபம்
மூண்டது.

6 ஆகவே பரகெயேலின் குமாரன் எலீகூ
என்னும் பூசியன் பதிலுரைத்தது:
நான் இளையவன் நீங்கள் வயதில்
முதிர்ந்தோர்,
ஆதலின் எனக்குத் தெரிந்ததை உமது
முன்
விவரித்திட அஞ்சிப் பயந்திருந்தேன்.
7 மூதியோர் பேசிடுக, வயது சென்றவர்
ஞானம் உரைத்திடுக என நான் இருந்
தேன்.
8 மனிதரினுள்ள ஆவிதான் காரியம்,
அவர்க்கறிவு அளிப்பது சர்வவல்லோர்
சுவாசமே.
9 பெரியோர் அனைவரும் ஞானிகளல்ல,
முதியோரெலாம் நியாயம் உணர்ந்தோ
ரல்ல.
10 ஆதலிற் சொல்வேன், எனக்குச் செவி
கொடுங்கள்;
எனக்குத் தெரிந்ததை நானும் விவரித்
திடுவேன்.
11 இதோ, நீர் பேசி முடியுமட்டும் காத்
திருந்தேன்;
நீங்கள் ஆராய்ந்து வார்த்தைகளைக் கண்டு
உணர்வுள்ளன வுரைப்பீர் எனக் கேட்
டிருந்தேன்.
12 கவனித்து வந்தேன் நீங்கள் சொல்வதை,
யோபுக்கு நியாயம் எடுத்துக்காட்டி
அவர்
வார்த்தைக்குப் பதிலுரைப்பார் உங்களில்
ஒருவரிலை.
13 மிஞ்சின ஞானம் கண்டோம், மானிட
னல்ல
கடவுளே அவரை மேற்கொள்ள
வேண்டுமென
நீங்கள் சொல்லிக்கொள்ளாதபடி பாருங்
கள்.
14 அவர் இதுவரை பேசினது என்னை
டல்ல,
உமது சொல்கொண்டு நான் அவர்க்குப்
பதிலுரையேன்.
15 —அவர்கள் திடுக்கிட்டு அப்பால் பதிற்
பேசாதிருந்தார்கள்,
அவர்களுக்குப் பேச்சு அற்றுப்போ
யிற்று.
16 அவர்கள் பேசாராதலின் நான் காத்திருக்
கவோ?
அவர்கள் பின்னும் மறுமொழி கொடா
திருக்கவும்—
17 எனக்குத் தோன்றியதை நான் பதிலுரைப்
பேன்,
எனக்குத் தெரிந்ததை நானும் விவரித்
திடுவேன்.
18 சொல்லவேண்டியன என்னுள் நிறைந்
தன,
என் உள்ளம் விம்மி வெடித்திடும்போ
லும்.
19 என் இதயத்துள்ளது அடைபட்ட ரசம்
போலும்,
வெடித்திடப்போம் புதுத்துருத்தியே
போல.
20 பேசுவனேல் மனம் எனக்கு ஆறும்,
வாயைத்திறந்து நான் பதிலுரைத்திடு
வேன்.
21 எவர்க்கும் முகதாக்ஷணியம் காட்ட
எவர்க்கும் இச்சகம் பேசிடமாட்டேன்.
22 இச்சகம் பேசிட அறியேன், பேசிடின்,
எனைப் படைத்தார் எனைச் சிக்கிரம் எடுப்
பார்.

**33** யோபே, நான் உரைத்திடுவது
கேளும்,
என் வார்த்தைகளுக்கெல்லாம் செவி
கொடும்.
2 இதோ, இப்பொழுது என் வாய்திறந்
தேன்,
என் நாவே வாய்நின்று பேசிடும்;
3 என் இதயநேர்மையையே என்சொல்
விளம்பும்,

என் உதடு அறிந்ததை உண்மையாய்
உரைக்கும்.
4 எனைப் படைத்தது கடவுளின் ஆவியே,
சர்வவல்லோர் சுவாசமே எனக்குயிர்
அளிக்கும்.
5 உம்மாலாமெனில் எனக்குப் பதிற்
கொடும்,
வாதிட எதிரே வந்து நில்லும்.
6 கடவுள்முன், இதோ, நான் உம்மைப்
போன்றவனே,
நானும் களிமண் நின்றெடுபட்டேன்.
7 எனைக்கண்டு நீர், இதோ, திடுக்கிடவேண்
டாம்,
என் தணிவினால் நீர் வருத்தமுறவேண்
டாம்.
8 என் செவியில் விழவே நீர் பேசினீர்,
நான் கேட்டேன், நீர் உரைத்தது இதுவே:
9 மீறுதல் இல்லேன், நானே சுத்தன்;
குற்றமிலேன், எனில் அக்கிரமமில்லே.
10 இதோ, அவர் எனில் குற்றம் பிடிக்கப்
பார்க்கிறார்,
எனைத் தம் பகைஞராக எண்ணுகிறார்.
11 என் கால்களைத் தொழுவடித்து நடை
களிலெல்லாம்
குற்றம்பிடிக்கக் காத்திருக்கிறார் எனச்
சொன்னீர்.
12 இதை உரைத்தது நியாயமல்லவென்று
சொல்வேன்,
மனுஷனிலும் கடவுள் மகா பெரியவர்.
13 தமது செயல்களைப்பற்றி ஒன்றும் உரைத்
திலரென்று
ஏனோ நீர் கடவுளொடு வழக்காடுவீர்?
14 அவர் பேசுவது ஒருவழி மாத்திரமல்ல,
மானிடரோ அதைக் கவனிப்பதில்லை.
15 மானிடன் அயர்ந்த நித்திரைக்குட்
பட்டு
படுக்கையின்மேல் உறங்கும்போது
இராத்தரிசனமாம் சொப்பனத்திலே
16 மானிடன் செவிகேட்டிடும்படி செய்து,
முன்னெச்சரிப்பின்மேல் முத்திரையிடு
வார்.
17 மனிதன் தன் போசனையில் நீங்கவும்,
பெருமை
மானிடன் விட்டகலவும் இப்படிச் செய்
வார்.
18 அவன் ஆத்துமாவைப் படுகுழிக்கும்
அவன் உயிரை
ஆயுத மரணத்துக்கும் இப்படித் தப்பு
விப்பார்.
19 தன் படுக்கையில் வாதையினாலும்
என்பெல்லாம்
விடாநோவாலும் சிக்கிக்கப்படுவான்.
ஆகவே அவன் உயிர் உணவு அரோசிக் 20
கும்,
அவன் ஆத்துமா ருசிபோனம் வெறுக்
கும்.
தசை என்பதுவே காணுதொழிய 21
மறைத்திருந்த எலும்புகளும் வெளியே
தோற்றும்.
அவன் ஆன்மா படுகுழியைக் கிட்டும், 22
அவன் உயிர் சாவு வினைப்போரை அணு
கும்.
மத்தியஸ்தனான தூதனொருவன், 23
ஆயிரத்தில் ஒருவனே, அவன் பக்கமாகி
நேர்வழியை அவனுக்கு எடுத்துக் காட்டி
டில்
கடவுள் அவனுக்கு இரங்குபவராய்க் 24
குழியில் இறங்காதபடி அவனைக் காத்
திடும்,
அவனை மீட்கும்பொருள் பெற்றுவிட்
டேன் என்பார்.
அப்போதவன் தசை குழந்தையதினும் 25
சுகமாய்
வாலிபகாலத்திருந்ததே போலாவான்.
கடவுளை வேண்டுவான், தயவது பெறு 26
வான்;
திருமுகதரிசனம் மகிழ்ச்சியோடடை
வான்,
நேர்மையனுய் அவனைத் திரும்ப நிலை
நாட்டுவர்.
மனிதரை நோக்கி: நான் பாவம் செய் 27
தேன், நேர்மை
புரட்டினேன், பெறுதற்குரியதை யளித்
தாரில்லை.
குழியினுட் செல்லாமல் என் உயிரை 28
ரகஷித்தார்,
ஆகவே என் உயிர் ஒளிகாணும் என்
றவன் சொல்வான்.
இதோ, கடவுள் இப்படியெலாம் 29
மானிடர்க்கு
செய்வது ஒருமுறை மாத்திரமல்ல,
மானிடன் உயிரைக் குழிநின்று திருப்ப 30
வும்
ஜீவ ஒளியில் வெளிச்சம் காணவும் இப்
படிச் செய்வார்.
யோபே, கவனியும், சொல்வதைக் 31
கேளும்,
மௌனமாயிரும், நான் பேசிடுவேன்;
சொல்வன உளவேல் பதில் உரைத்தி 32
டும்;
பேசிடும், நேர்மையாய் உமைத் தீர்ப்ப
தென் விருப்பே.
சொல ஏதுமிலையேல் நான் சொல்வது 33
கேளும்,

மௌனமாயிரும், ஞானம் உபதேசிப்
பேன்
என்று சொன்னான்.

34 எலிகூ பின்னும் பேசி:
2 ஞானமுள்ளவரே, கேளும் என்
வார்த்தை,
அறிவுள்ளவரே, எனக்குச் செவிகொடும்.
3 வாய் போஜனருசி பார்ப்பதேபோல
செவி வார்த்தைகளைச் சோதித்தறியும்.
4 நியாயமானதை நமக்கென்று தெரி
வோம்,
நன்மை இன்னதென நாம் ஒருங்கிருந்து
ஆய்வோம்.
5 யோபு சொல்வதென்? நான் நேர்மை
யுள்ளான்,
கடவுளோ எனது நியாயம் தள்ளினார்;
6 நியாயமெனதாயிருந்தும் பொய்யனென
நிற்கிறேன்,
மீறுதலிலாதிருந்தும் அம்புகாயம் ஆறு
தென்பதே;
7 யோபைப்போன்ற மனிதன் உண்டோ?
தெய்வதூஷணத்தை நீரெனப் பருகு
வார்;
8 அக்கிரமச் செய்கையாரோடு உறவாடு
வார்,
தெய்வபயமில்லாரோடு கூடமாடுவார்.
9 கடவுளோடு சிநேகமாக நடப்பது
மானிடனுக்கு லாபமல்லவெனச் சொன்
னாரே.
10 ஆகவே விவேகிகாள், எனக்குச் செவி
கொடுங்கள்,
அக்கிரமச் செய்கை கடவுளுக்குத் தூர
மாம்;
சர்வவல்லவர் அநியாயம் செய்யாரே.
11 மானிடன் செயல்படியே அவனுக்குப்
பதிலளிப்பார்,
அவன் செல் வழிப்படியே அனுபவிக்கச்
செய்திடுவார்;
12 தீயன கடவுள் புரியார், மெய்யே;
நியாயமானதைச் சர்வவல்லோர் புரட்
டிடவுமாட்டாரே.
13 பூமியின்மேல் அதிகாரம் அவர்க்கு எவ
ரும் கொடுத்ததோ?
பூலோகமெலாம் ஒழுங்குபடச் செய்த
வரும் யார்?
14 கடவுள் தமைத்தாமே நோக்கியவராய்
இருப்பாரேல்
தம் ஆவி, சுவாசம் இவை தமதிடமே
இழுத்திடுவார்,
15 இழுக்கவே உயிர்யாவும் ஒருங்கே
மடிந்துவிடும்,
மானிடன் மண்ணுக்குத் திரும்பிடுவானே.
உணர்வு உமக்கிருந்தால் நீர் இதைக் 16
கேளும்,
என்வார்த்தைகளுக்குச் செவிகொடுத்
திடும்:
நீதி பகைப்பவர் ஆளவல்லவரோ? 17
நீதியுள்ள வல்லவரைக் குற்றப்படுத்து
வரோ?
இராசாவையும் அவர் உதவாதவனே என் 18
பார்,
பிரபுக்களையும் துஷ்டரே என்று சொல்லி
விடுவார்.
அதிகாரியென முகதாக்ஷணியம் காட் 19
டார்,
சிறியரிலும் பெரியருக்கு மதிப்பு அதிகம்
காட்டாரே.
யாவரும் அவர்கையால் படைக்கப்பட்ட
வரே.
சடுதியில் சாவார், சாமமாயினும் சரி 20
யே,
ஜனமுழுதாயின் என்ன? அதிர்ச்சியுற்றழி
யும்;
வலியோரும் அழிந்திடுவார், மானிடக்
கையாலல்ல.
அவர் கண்நோக்கம் மானிடன் வழி 21
யின்மேலாம்,
அவன் நடைகளையெலாம் அவர் பார்த்
தறிகிறார்.
அக்கிரமஞ்செய்வோர் ஒளித்துமறைய 22
அந்தகாரம் காரிருள் எங்குமில்லை.
மனிதனை நியாயத் தீர்ப்புக்குக் கொணர 23
நெடுநேரம் அவனை அவர் நோக்கவேண்
டியதிலை.
ஆராய்வதின்றி வலியுள்ளாரை நொறுக்கு 24
வார்,
வேறே பிறரை அவர் ஸ்தானத்தில் வைப்
பார்.
ஆகவே அவர்கள் செயலை அவர் கவ 25
னித்து
அவர்கள் நசுங்கிட இரவுநேரத்தே
கவிழ்த்திடுவார்.
எல்லாரும் பார்க்கும் இடத்திலே அவர் 26
களை
துன்மார்க்கரேயென்று அடித்துத் துரத்து
கிறார்.
அவர்கள் அவரைவிட்டு விலகி 27
அவர் வழிகளையெல்லாம் உணராதிருந்
தாரே.
இப்படியே எளியார் கூக்குரல் அவரி 28
னிடம் சேரச்
செய்தார்கள், எளியார்தம் குரலை அவர்
கேட்டாரே.
கடவுள் யாதும் செய்யாதிருக்கையில் 29

ஜனத்தையோ ஆனையோ குற்றப்படுத்து
வோன் யார்?
அவர் திருமுகமறைத்தால் யார் அவரைக்
காணவல்லார்?
30 தெய்வமறப்போனும் ஜனங்களைச் சிக்கில்
வீழ்த்திடுவோனும்
ஆளுகை செய்வதற்கு அவர் இடங்
கொடாரே.
31 யாதாமொருவன் கடவுளை நோக்கி:
தண்டனைபெற்றேன், இனிப் பாவஞ்
செய்யேன்,
32 நான்காணாததை எனக்குப் போதித்தரு
ளும்,
அநியாயஞ்செய்ததுண்டேல் இனிச்செய்
யேன் என்பானேல்,
33 நீர் ஆக்ஷேபிப்பதால் அவர் உமது மனம்
போல
பிரதிபலன் அளிப்பாரோ? தீர்ப்பவர்
நீரே, நானல்ல! தெரிந்ததையுரைப்பீர்.
34 விவேகமுள்ளவரும், ஞானமுள்ள
வராய் நான்
சொல்வதைக் கேட்கின்றவரும் என்னி
டம்:
35 யோபு பேசினார் அறிவில்லாமலே,
அவர் சொற்கள் ஞானமிலாதன என்
பார்.
36 யோபு முற்றுமுடியச் சோதிக்கப்படுக,
அக்கிரமக்காரரேபோல் அவர் பதிலுரைத்
தாரே.
37 தெய்வதுரோகத்தைத் தம் பாவத்தோடு
கூட்டிவிட்டார்,
எங்கள் நடுவில் அவர் தமது கைகொட்டி
கடவுட்கு மாறாய் வெகுவார்த்தை பேசி
விட்டார்
என்று சொன்னான்.

**35** எலிகூ பின்னும் பேசி:
2 இப்படியுரைப்பதை நீர் நியாயமென்
றெண்ணுவீரோ?
கடவுளுக்கு எதிரே நீர் நேர்மையுள்ளார்
என்பீரே.
3 பாவம் நான் செய்யாமையால் எனக்குப்
பயனென்ன?
எனக்குக் கிடைத்துவிட்ட லாபமென்ன
என்றீரே.
4 உமக்கும் உம்மோடுள்ள தோழருக்
கும்
நான் பதிலுரைப்பேன், கேட்டிடுவீரே.
5 நிமிர்ந்து வானம் நோக்கிப்பாரும்,
உமக்குமேல் வானுள்ள மேகம் கவனி
யும்;
6 நீர் பாவம் செய்திடின் அவர்க்கு விளைவ
தென்ன?
உமது மீறுதல் பெருகின் அவர்க்கு நேர்
வதென்?
7 நேர்மையுள்ளார் நீர் எனில் அவர்க்குக்
கிடைப்பதென்?
உமதிடமிருந்து அவர்பெறும் லாப
மென்னே?
8 உம்போல் மனிதனுக்கே உமது அக்கிர
மம் பலிக்கும்,
மானிடனுய்ப் பிறந்தாற்கே உம்நேர்மை
பலிக்கும்.
9 இம்சை பெரிதுற்றோர் கெஞ்சிமுறை
யிடுவார்,
10 வல்லோர் புயத்துக்குத் தப்ப அலறிடு
வார்;
எனைப்படைத்த கடவுள் எங்கே எனக்
கேட்பான் எவனுமிலை,
இரவிலே மகிழ்ந்து பாடச்செய்வார்
அவரே;
11 பூவிலங்கின்மேற்பட்ட அறிவும் ஆகாயப்
பறவையினும் ஞானமும் கற்பிப்பவர்
அவரே.
12 தீயோரின் பெருமையால் கதறிக் கூப்
பிடும்போதோ
அவர் பதிலுரையா திருப்பதுமுண்டு.
13 வீண்வார்த்தைகளுக்குக் கடவுள் செவி
கொடார்,
சர்வவல்லோர் அதைக் கவனித்திடாரே.
14 நீரோ சொல்வதென்? அவரைக்காண்கி
லேன்,
என் வழக்கு அவருக்கு முன்னிருக்
கிறது,
காத்துக்கொண்டே நிற்கிறேன், இப்போ
தவர்
15 தமது கோபத்தில் சிக்ஷியார், அகந்தை
யைக்
குறைவறக் கவனியாதிருப்பார் என்கிறீர்.
16 ஆகவே யோபு வாயில் வெறுங்காற்றை
அறிவிலாச் சொற்களை மிகப் பெருக்கி
விடுகிறார்
என்று சொன்னான்.

**36** எலிகூ பின்னும் தொடர்ந்தே பேசு
வானுய்:
2 சற்றே பொறும், நான் விவரித்திடு
வேன்,
கடவுள் சார்பில் இனும் சில உரைத்திடு
வேன்;
3 நான்சொலும் அறிவு தூரத்திலிருந்துற்
றது,
என் சிருஷ்டிகர் நீதியுளர் எனக்காட்டு
வேன்;
4 உண்மையாகவே என் வார்த்தைகள்
பொய்யல,

உம்மோடு பேசுவோன் அறிவிலே தேறினவன்.
5 இதோ, கடவுள் வல்லார், பலத்திலும் அறிவிலும் வல்லார், எவரையுமோ அற்பமாய் எண்ணிடார்.
6 தெய்வபயமற்றோர் பிழைத்திருக்கவொட்டார், எளியோர்க்கு நியாயம் கிடைக்கச்செய்வார்.
7 நேர்மையாளரை விட்டுத் தமது கண்களை விலக்கார், அரசரோடு சிம்மாசனம் ஏறவும் உயர் ஸ்தலத்திலென்றும் உட்காரவும் செய்கிறார்.
8 அவர்கள் விலங்கிலிருக்க நேரிட்டு உபத்திரவக் கயிற்றில் சிக்கிக்கொள்வாரேல்
9 அவர்கள் செய்தவற்றையும் பெருமையிலே மீறினவற்றையும் தெரியப்படுத்துவார்;
10 போதனை பெறுதற்கு அவர்கள் காதைத் திறப்பார், அக்கிரமம் விட்டு விலகிடக் கற்பிப்பார்;
11 அவர்கள் செவிகொடுத்து அடங்கி நடப்பரேல் செல்வராய்த் தமது வாழ்நாட்களைப் போக்கி இன்பமாய்த் தமது ஆண்டுகளைக் கழிப்பார்.
12 செவிகொடாராயின் ஆயுத மரணத்துக்கு ஆளாகி அறிவீனப் பெருது மாள்வார்.
13 தெய்வத்தை மறக்கு மனதுடையார் கோபமிகுத்துள்ளவராகி தம்மை தெய்வம் கட்டிடும் நாள் கெஞ்சி அவரைக் கூப்பிடார்.
14 வாலவயதிலே அவர்கள் மாளுவார், தாளியம்பூண்ட சோரருக்குள் உயிர்விடுவார்.
15 சிறுமைப்பட்டோரை அவர் சிறுமையால் விடுவிப்பார், உபத்திரவத்தால் அவர்கள் செவியைத் திறந்திடுவார்.
16 நெருக்கத்தின் வாயினின்று உம்மை அவர் இழுத்து நெருக்கமிலா விசாலமதிலே நிறுத்துவார்; உமது பந்தி கொழுமைப் பதார்த்தங்களால் நிறையும்.
17 இப்போதோ, தெய்வபயமிலார் தீர்ப்பு முழுதும் உற்மேலாயிற்று, நியாயமுள தீர்ப்பு உமைப் பிடித்து வைத்துளது.
சிக்ஷைபெறும்போது சினம் உமை 18 இழுத்துவிடாதிருக்க, மீட்கும் பொருளின் மிகுதி உமை வழி விலக்கிவிட வேண்டாம்.
நெருக்கமிலாவிடத்து நீர் கெஞ்சுவது 19 பலிக்குமோ? சக்தியாலானவற்றையெல்லாம் செய்யாத இதனைக் கற்பீரோ?
இரவை வாஞ்சையாதிருந்திடும், இரவிலே 20 ஜனமெலாம் இடம்விட்டு வாரிக்கொள்ளப்படுமே.
அக்கிரமமதற்குத் திரும்பாதிரும், ஜாக் 21 கிரதை, நெருக்கத்தையல்ல அக்கிரமத்தையே ஆசித்தெடுத்துக் கொண்டீரே,
இதோ, கடவுள் தம் வலிமையில் உயர்ந் 22 துளார், அவர்போல் போதித்திடுபவர் யாரே?
வழியை அவருக்கு நியமித்தவன் யாரோ? 23 அநியாயம் செய்தீர் நீர் என்று அவருக்கு உரைப்பவன் யார்?
மனிதராம் புகழப்பெறும் அவர் செயல் 24 களை மகிமைப்படுத்தம்படி பார்த்துக்கொள்ளும்.
மனிதரெலாம் அதைத் தரிசித்துக்கொண் 25 டிருக்கின்றார், மண்பிறந்தான் அதனைப் பார்ப்பதும் தூரமிருந்தே.
இதோ, கடவுள் மகத்துவர், அறிய 26 வொண்ணார்; அவர் ஆண்டின் தொகையை ஏண்ண முடியாதே.
நீர்த்துளிகளை மேல் இழுத்துக்கொள் 27 வார், அவர் மேகம்வரும்போது மழைத்துளியாய் அவை இறங்கும்.
மேகங்கள் அதைப் பொழிந்துவிடவே 28 மனிதர்மேல் துளியென மிகுதியாய் இறங்கும்.
மேகம் பரவி வியாபிப்பதையும் அவ 29 ருடைய கூடாரமிருந்து எழும் குமுறலையும் அறிவார் யார்?
இதோ, தம்மைச் சூழ ஒளி விரிக்கின்றார், 30 சமுத்திரத்தின் அடிநிலையதனையும் மூடுகின்றார்.
அவற்றால் மானிடரைச் செழிக்கின்றார், 31 ஆகாரத்தையும் அவற்றால் மிகுதியாய் அளிக்கின்றார்.
மின்னலின் ஒளிக்குளே தமது கை 32 மறைத்து

இன்னின்னதை யடிக்கவென்று கட்டளை யிடுவார்.
33 மேகமுழக்கு அவர் அருகுளார் என்றுரைக்கும்,
ஆடுமாடுகளும் அவர் வருகையைத் தெரிவிக்கும்.
**37** இதனால் என் இதயம் தத்தளிப்புற்றுத்
தன்னிடம் விட்டு தெறிக்கின்றதுவே.
2 அவர் குரலினுடைய கோப சத்தத்தையும் அவர் வாயில்
நின்றெழு முழக்கையும் கவனித்திடுக.
3 வான்கீழ் எங்கும் அத்தொனியையும்
பூமியின் கடைமூலைமேல் மின்னலையும் அனுப்புவார்.
4 அதன்பின் சத்தம் முழங்கவே தமது
மகத்துவதொனியைக் குமுறப்பண்ணுவார்;
அவர் சத்தம் கேட்கையிலே மின்னலை
அவர் நிறுத்தார்.
5 கடவுளின் முழக்கம் ஆச்சரியமாய்த்
தொனிக்கும்,
நமது அறிவினுக் கெட்டாப் பெருங்காரியம் செய்வார்.
6 உறைமழை, பொழிமழை, தமது வல்
பெருமழை
இவைநோக்கிப் பூமிமேல் பொழிந்திடுக
என்பார்.
7 தாம் படைத்த மனிதர் யாவரும் கவனித்தறிதற்கு
அவர்கள் கரங்களைக் கட்டி முத்திரை
யிட்டு வைப்பார்.
8 வன விலங்குகளும் குகைகளுட் புகுந்து
தம் கெபிகளிலே தங்கிக் கிடக்கும்.
9 சூறாவளி ஆகாயமண்டலமிருந்து வரும்,
வடதிசை நின்று வாடை எழும்பும்.
10 தம் சுவாசத்தாற் கடவுள் கொடுப்பார் பனிக்கட்டி,
அதினால் நீர்ப்பரப்பெல்லாம் அடைபடும்.
11 மேகத்தை நீர்த்துளியால் பாரமேற்றுவார்,
மின்னல் மேகத்தையும் பரவச்செய்திடுவார்;
12 தமது யோசனைப்படியே அவை எங்கும்
திரியச்செய்வார், அவர் கட்டளைப்படியெல்லாம்
அவைகள் பூவுலகெங்கும் நடப்பிக்கும்.
13 தண்டனையோ, பூமிக்குதவியோ, இரு
பையோ
எதன்பொருட்டேனும் அவற்றை வீர
வழைப்பார்.
யோபே, இதற்குச் செவிகொடும், 14
தரித்து நின்று
அற்புதத் திருச்செயலைக் கவனித்துப்
பாரும்.
கடவுள் நியமனம் பண்ணித் தம்மேகம் 15
நின்று ஒளிவீசச்செயும் விதம் அறிவீரோ?
மேகங்களைத் தொங்கவைக்கும் ஒழுங்கை 16
யும்
நிறைஞானமுள்ளாரின் அற்புதச் செயல்
களையும்
தென்றலால் உலகெலாம் செயலற்றிருக் 17
கையில் உம்
ஆடை அனல்கொளுத்தும் வகையும்
அறிவீரோ?
வார்த்த உலோகக் கண்ணாடிபோல் 18
கெட்டியான
ஆகாயத்தை அவருடனிருந்து விரிப்
பீரோ?
அவர்க்கு நாங்கள் சொலத்தக்கதைப் 19
போதியும்,
இருளில் அகப்பட்டோம், பேசவதை
யறியோம்.
பேசுவேன் என ஒருவன் அவர் எதிரே 20
உரைப்பதுண்டோ?
விழுங்கப்பட்டானென்ன என்று ஒருவன்
உரைப்பானே?
காற்றடித்து மேகம் விலக்கிடவே அதன் 21
நடு
பிரகாசிக்கும் ஒளியை நோக்க இய
லுமோ?
வடதிசை நின்று பொற்பிரகாசம் வந் 22
திடும்;
கடவுள் பயங்கர மகத்துவமணிந்தவர்.
சர்வவல்லவரைக் கண்டு ஆராயமுடி 23
யாதே;
வலிமையினும் நியாயமதினும் மிகுத்தோர்,
பூரண நியாயம் புரட்டார்; ஒடுக்கார்.
ஆதலின் மானிடர் அவர்க்கு அஞ்சி 24
நடப்பார்;
தமை ஞானிகளென மதிப்பவரை அவர்
நோக்கார்
என்று சொல்லிவிட்டான்.
அப்பொழுது யெகோவா பெருங் **38**
காற்றினின்று யோபுக்குப் பதிற்பேசுவாராய்:
அறிவிலா வார்த்தைகொண்டு எனது 2
ஆலோசனையை
அந்தகாரப்படுத்தும் இவன் யார்?
புருஷரைப்போல் நீ இடைகட்டிக் 3
கொள்,
நான் கேட்பவற்றை நீ அறிவித்திடுவாய்;
நான் பூமிக்கு அஸ்திபாரமிடும்போது நீ 4

எங்கிருந்தாய்? அறிவாளியாயின் அறி
வித்திடுவாய்.
5 அதற்கு அளவு குறித்தவர் யார்? நீ
யறிவைபோனும்!
அதன்மேல் அளவு நூல் போட்டவர்
யார்?
6 தூண் பாதங்கள் நிலைபெற்றது எதின்
மேலோ?
அதன் கோடிக்கல்லை வைத்தவர் யார்?
7 அக்காலம் விடிவெள்ளிகள் கூடிப் பாடி
னவே,
தெய்வதூதரெல்லாரும் ஆனந்த ஆர
வாரஞ் செய்தாரே.
8 கர்ப்பத்தினின்று சமுத்திரம் உதித்
துப் புரண்டு
வந்தபோது கதவிட்டு அதை அடைத்த
வர் யார்?
9 மேகத்தை அதற்கு ஆடையாய் அளித்து
அதைச் சுற்றும் துணியாக இருளைத் தந்
தேன்.
10 அதற்காம் எல்லையைக் குறித்து வைத்
துக்
கதவுகளும் தாழ்ப்பாள்களும் இட்
டேன்.
11 இம்மட்டே, இனி மிஞ்சிவராதே;
உன் அலைப்பெருமை இங்கு அடங்க
என்றேனே.
12 காலைவரக் கட்டளை உன் நாளில் என்
றும் இட்டாயோ?
அருணோதயத்துக்கு இடங்காட்டி யறி
வித்தாயோ?
13 அது பூமியின் கடைமுனைகளைப் பற்றவே
துஷ்டர் அதினின்று உதறப்படுவார்.
14 முத்திரை பெறு களிமண்போல் பூமி
புது உருவாம்,
யாவும் ஆடை அணிந்தனபோல் தோற்
றும்.
15 துன்மார்க்கரிடம் நின்று அவரொளி எடு
படும்,
ஓங்கி எழுந்த புயமும் முறியும்.
16 சமுத்திர ஊற்றுகளண்டை நீ வந்த
துண்டோ?
ஆழத்தின் அடியில் நீ உலாவினதுண்
டோ?
17 மரணவாசல்கள் உனக்குக் காட்டப்பட்
டனவோ?
காரிருளின் வாசல்களை நீ கண்டதுண்
டோ?
18 பூமியின் விசாலங்களை யெல்லாம் பார்த்
தனையோ?
அவையெலாம் உனக்குத் தெரிந்தால்
சொல்லிவிடு.

ஒளிவசித்திடுமிடம் செல்வழிஎங்கே? 19
இருளினுடைய இருப்பிடம் எங்கே?
அதின் எல்லைவரை நீ வழி காட்டுவா 20
யோ?
அதின் வீட்டுக்கு ஏகும் பாதையறிவா
யோ?
இது உனக்குத் தெரியும்? நீ முன்னே 21
பிறந்தவன்!
உன் நாட்களின் தொகை மிகவும்
பெரிது!
உறைமழைப் பண்டசாலைக்குப் 22
போனதுண்டோ?
கல்மழைப் பண்டசாலையைப் பார்த்த
துண்டோ?
ஆபத்து நாட்கென்றும் கலகயுத்த நாட் 23
கென்றும்
நான் அவைகளை வைத்துவைத்திருக்கின்
றேன்.
ஒளிபிரிந்திடுமிடம், கீழ்காற்று பூமி 24
யின்மேல்
வீசிப்பரவுமிடம் இவற்றுக்கு வழி
எங்கே?
வெள்ளத்துக்கு நீர்க்கால், முழங்கு 25
கின்ற
மேகத்துக்கு வழியை வகுத்தவர் யார்?
பூமியிலே மனுஷர் குடியிலா இடங்களி 26
லும்
மானிட சஞ்சாரமிலா வனத்திலும் மழை
பொழியும்.
பாழ் அவாந்தரத் தரையைத் திருப்தி 27
யாக்கிவிடும்,
இளம்புல்முளை தரைகின்று எழச் செய்
யும்.
மழைக்குத் தகப்பனுண்டோ? 28
பனித்துளிகளை ஜநிப்பித்தவர் யார்?
யார் வயிற்றிருந்து பனிக்கட்டி வந்தது? 29
ஆகாயத்து உறைபனியைப் பெற்றவர்
யார்?
நீரே கல்லாய் மாறி மறைய 30
ஆழத்தின் முகம் கெட்டியாய் உறைந்
துளதே.
கார்த்திகை இணைக்கும் பந்தம் நீ கட்டு 31
வாயோ?
மிருகசிருஷத்தின் கட்டை அவிழ்த்திடு
வாயோ?
இராசிகளை அதனதன் காலத்தில் வரப் 32
பண்ணுவாயோ?
சப்தரிஷிகளைச் சேர்ந்தவற்றோடும் நட
துவையோ?
வான நியமங்களை நீ அறிவாயோ? 33
பூமிமேல் வான் ஆளுகையை நீ குறித்
தாயோ?

34 உன்குரல் மேகபரியந்தம் உயர்த்தி
மிகுமழை உன்மேல் பொழியச்செய்வா
யோ?
35 மின்னலையனுப்பிட அவை போய்விடு
மோ?
இங்குளோம் என்று உன்னிடம் வந்து
சைக்குமோ?
36 மேகங்களிலே ஞானம் நுழைத்தவர்
யார்?
விண்வீழ்கொள்ளிக்கு விவேகம் அளித்த
வர் யார்?
37 மேகங்களே எண்ணுதற்கு ஞானமுடைய
வன் யார்?
விண்துருத்திகளை வார்த்து நீர்பொழியச்
செய்பவன் யார்?
38 பொழியவே தூளெலாம் பாளமாய்ச்
சேரும்,
மண்கட்டிகள் ஒன்றாய் ஒட்டிக்கொள்
ளும்.
39 சிங்கத்துக்கு இரை வேட்டையாடு
வாயோ?
பால சிங்கத்தின் பசி தீர்ப்பாயோ?
40 அவை தம் கெபியிலே தங்கியிருக்கும்,
தங்கள் குகைகளில் பதிவிருந்திடும்.
41 காக்கைக் குஞ்சுகள் கடவுளை நோக்கிக்
கூப்பிட்டு
உணவின்றிப் பறந்தலையும்போது
காக்கைக்கு ஆகாரம் தேடிக்கொடுப்பவர்
யார்?

**39** வரையாடுகள் ஈனும் காலம் அறிவா
யோ?
ஈனும் நோவு பெண்மானுக்குறக் கவ
னிப்பவன் நீயோ?
2 அவை சினையாயிருக்கும் மாதங்களை
எண்ணி
அவை ஈனும் காலத்தை அறிந்திடுவா
யோ?
3 அவை தாம் குனிந்து குட்டிகளைப்
போட்டுத்
தம் நோவதனைத் தம்மிட நின்றகற்
றும்.
4 குட்டிகள் பலத்து வனவெளியிலே
வளர்ந்து
அவற்றண்டை திரும்பவராதே போய்
விடும்.
5 காட்டுக்கழுதை தன் இஷ்டம்போல்
அலையவிட்டவர் யார்?
வனத்தில் அலைகழுதையைக் கட்டவிழ்
த்து விட்டவர் யார்?
6 வனத்தையதற்கு வீடாய் அளித்தேன்,
உவர் நிலம் வாசஸ்தலமாகக் கொடுத்
தேன்.

நகர இரைச்சலை அசட்டையாய்ச் சிரிக் 7
கும்,
ஒட்டுகிறவன் குரலை அது கேட்பதில்லை.
மலைகளெங்கும தன் மேய்ச்சலைக் 8
கண்டு
சகலவித பசும்பூண்டையும் தேடும்.
காட்டெருது உன்னிடம் உழைக்கச் 9
சம்மதிக்குமோ?
அது உன் முன்னணையருகு இராத்தங்கு
மோ?
காட்டெருதைக்குக் கயிறிட்டு ஏர் உழு 10
வாயோ?
அது உன்பின்னே பரம்படிக்குமோ?
அது வெகு பலமுளதென்று அதை 11
நம்புவாயோ?
அதனிடம் உனது விசாரத்தை விடுவா
யோ?
தானியத்தை அது வீடுகொணர்ந்து 12
களத்திலே சேர்க்குமென நம்புவாயோ?
தீக்கோழி செட்டையடித்துக் களித் 13
தோடும்,
அதன் செட்டை இறகுகளிலோ பகு
மூண்டா?
தன் முட்டைகளை அது தரையிலே 14
இட்டு
மணல் அனல் உறைக்கும் என விட்டு
விடும்.
காலால் மிதியுண்டு உடையுமெனவும் 15
காட்டு மிருகம் உடைத்திடுமெனவும்
நினையாது.
குஞ்சு தனதல்லவெனக் கல்நெஞ்சா 16
யிருந்துவிடும்,
அது பட்ட நோ விருதா, அதற்குக்
கவையில்லை.
ஞானத்தை அது மறந்திடக் கடவுள் 17
செய்திட்டார்,
அறிவில் அதற்குப் பங்களித்தாரில்லை.
சமயம் வரும்போது செட்டையடித்துக் 18
கிளம்பிக்
குதிரையையும் சவாரி செய்வோனையும்
இகழும்.
குதிரைக்கு வீரியம்கொடுத்தவன் 19
நீயோ?
கழுத்தை அசை கீள்மயிரால் நீயோ
உடுத்தினை?
வெட்டுக்கிளியென அதைக் குதிக்தோ 20
டச் செய்வாயோ?
அது மூச்செறியும்போது பயங்கரமாம்.
தரையிலே தாளடித்துத் தன் பலத்திலே
களித்து
ஆயுதம் தரித்தோர்க்கெதிர்த்துச் செல்
லும். 21

22 பயமென்னுல் சிரித்துவிடும் திடுக்கிடாது,
பட்டயம் கண்டாலும் பயந்து திரும்பாது.
23 அம்பருத்தூணியதின்மேல் கலகலவென்கையில்
ஈட்டியும் எறிவல்லயமும் மின்னிடுகையில்
24 கடுமூர்க்கங்கொண்டு தரைவிழுங்குவதுபோல் பாயும்,
எக்காளதொனி கேட்கவே தரித்து நிற்காது.
25 எக்காளங்கேட்கவே நிகியெனக் கணைக்கும்,
தூரதின்றே யுத்தத்தின் மோப்பம்பிடித்துப்
படைத்தலைவர் ஆர்ப்பும் சேனை ஆரவாரமும் அறியும்.
26 உன் அறிவாலோ ராகோளி உயரப் பறப்பதும்
தெற்குமுகமாய்த் தன் செட்டை விரித்தேகுவதும்?
27 ஈ கற்பிக்கவே கழுகு உயரமாய்ப் பறந்து
தனது கூட்டை உயரிடத்திலே கட்டிடுமோ?
28 அது கன்மலையிலே தங்கி வசிக்கும்,
கன்மலைச் சிகரம் அரண்ஸ்தலம் அதற்கிடமாம்.
29 அங்கிருந்தே இரையைத் தேடிப்பார்க்கும்,
அதன் கண்ணுக்குத் தூரப்பார்வையுண்டு.
30 அதின் குஞ்சுகள் உதிரத்தை உரிஞ்சும்,
பிணம் எங்குளதோ கழுகு அங்குளதாம்
என்று சொன்னார்.

**40** பின்னும் யெகோவா யோபுக்குப் பதிற்பேசி:
2 குற்றம் பிடிப்போன் சர்வவல்லரோடு வழக்கிடுவானோ?
கடவுளைக் குற்றப்படுத்துவோன் பதிலுரைக்க
என்று சொன்னார்.
3 இதைக்கேட்ட யோபு யெகோவாவுக்குப் பதிலுரைத்து:
4 அற்பனேன், உமக்கு இதோ, யாது பதிலுரைப்பேன்?
கையால் என் வாயைப் பொத்திக்கொள்வேன்.
5 ஒருமுறை பேசினேன், திரும்ப உரையேன்;
இருமுறை பேசினேன், இனி அது செய்யேன்
என்று சொன்னான்.
6 அதுகேட்ட யெகோவா பெருங்காற்றினின்று யோபுக்குப் பதிலுரைப்பவராய்:
7 புருஷனைப்போல ஈ இடைகட்டிக்கொள்,
நான் கேட்பவற்றை ஈ அறிவித்திடுவாய்.
8 என் தீர்ப்பதனை ஈ அவமாக்கிடுவாயோ?
உனை நேர்மையனுக்க எனைக் குற்றப்படுத்துவையோ?
9 கடவுளின் புயம்போல் உனக்குப் புயம் உண்டோ?
அவர் குரல்போல் ஈ முழங்கிடுவாயோ?
10 மேன்மை மகத்துவங்களால் ஈ உனை அலங்கரித்து
மகிமை கனம் இவற்றைத் தரித்துக்கொள்க.
11 உன்கோபப் பெருக்கை எங்கும் வீசி
அகந்தையுளோரைக் கண்பார்வையால் வீழ்த்திப்பார்.
12 பெருமையுள்ளோரைப் பார்த்துத் தாழ்த்தி
தெய்வபயமில்லாரை அவர் இருக்குமிடத்தே மிதிப்பாய்.
13 அவரையெலாம் ஒருங்கே தூளிலே மறைத்து
அவர் முகங்களை மறைவிடத்திலே கட்டிடுவாய்.
14 அப்பொழுது நானும் உன்னைப்புகழ்ந்து
உன் வலதுகை உனக்கு வெற்றி அளித்ததென்பேன்.
15 பெகேமோத்தைப்பார், உனைப்படைத்ததுபோல்
அதையும் படைத்தேன், மாடுபோல் புல்லினும்.
16 இதோ, அதினுடைய பலம் அதன் இடுப்பிலே,
அதன் வீரியம் அதன் வயிற்று நரம்பிலே.
17 கேதுருப்போல் வாலை விறைப்பாய் நீட்டும்,
தொடை நரம்புகள் பின்னிக்கொண்டிருக்கும்.
18 செப்புக்குழாய்கள் போலும் எலும்புகள்,
விலா எலும்புகள் இருப்புக்கம்பிகள் போலும்.
19 தெய்வசிருஷ்டிகளிற் பிரதானமாம் அது,
அதைப் படைத்தோர் அதற்கோர் ஆயுதமுந்தந்தார்;
20 மலைகளர் அதற்கு மேய்ச்சலை வினைக்கும்,
அங்கே காட்டுமிருகங்கள் விளையாடும்;

21 அது தாமரைப் புதரினுள்ளும்
நாணலின் மறைவினும் ஊளையிடும் படுக்
கும்.
22 தழைகளின் நிழல் அதைக் கவித்து
கொள்ளும்,
நதி அலரிகள் அதைச் சூழ்ந்துகொள்
ளும்.
23 இதோ, நதி புரண்டுவரினும் பயந்தோ
டாது,
யோர்தானே இரண்டு முகத்திலே மோதி
னும் தைரியம் இழவாது.
24 அது பார்த்திருக்கையில் அதைப் பிடிப்
பவர் யார்?
கயிறுபோட அதின் மூக்கைத் துளைப்ப
வர் யார்?

41 லிவியாதானைத் தூண்டில்போட்டு
இழுத்திடுவாயோ?
கடிவாளத்தால் நாக்கை அமுக்கிடுவா
யோ?
2 அதன்மூக்கில் நாரினுல் செய் சரடு
இடுவாயோ?
முள்ளினுல் தாடையைக் குத்திடுவா
யோ?
3 அது உனைப்பார்த்து நெடும் விண்ணப்
பஞ்செய்யுமோ?
உன்னிடம் பணிவாய் இன்சொல்
உரைக்குமோ?
4 நீ அதை யென்றும் அடிமைகொள்வ
தற்கு
அது உன்னோடு உடன்படிக்கை செய்யு
மோ?
5 குருவியொடுபோல் அதனோடி வீளை
யாடி
பெண்மக்களுக்காய் அதைக்கட்டிவைப்
பாயோ?
6 செம்படவர் கூட்டத்தார் அதால் வர்த்
தகஞ்செய்து
வியாபாரிகட்கு அதைப் பங்கிடுவாரோ?
7 அதன் தோலைக் கூர்முள்ளாலும் தலையை
மீன்பிடி எறிவல்லியத்தாலும் நிரப்புவை
யோ?
8 கைஅதின்மேற்படவே நேர்ந்த சண்டை
யை
நினைப்பாய், இனிஅதைச் செய்யாதிருப்
பாய்.
9 அதைப் பிடிக்கலாமெனும் நம்பிக்கை
அவமாம்,
பார்த்தாலே ஒருவன் பயந்துவிழுவானே.
10 அதை எழுப்பும் தைரியவானிலாதிருக்க,
என்னெதிரே நின்றிடுபவன் யாரே?
11 நான் பிரதிபலன் அளித்தற்கு எனக்கு
முன் கொடுத்தவன் யார்?

வான்கீழுள்ளனயாவும் என்னுடையன.
அதின் அங்கம், வீரியம், அமைப்பின் 12
நேர்த்தி
இன்னதென உரையாமல் மறையேன்.
அதன்மேற்போர்வையைக் கிளப்ப வல்ல 13
வன் யார்?
தாடை இருவரிசையின் உட்செல
வலான் யார்?
அதின் முகக் கதவைத் திறந்திடுபவன் 14
யார்?
பற்களைச் சுற்றிலும் பயங்கரமாமே.
வரிசை வரிசையான செதில் அதின் 15
சிறப்பு,
முத்திரிக்கப்பட்டனபோல் அ வை
நெருங்கியன.
காற்றுப் புகுதற்குமிடமின்றி நெருக்க 16
மாய்
அவை ஒன்றோடொன்று இணைக்கப்
பட்டுள்ளன
ஒன்றிலொடொன்று ஒட்டிக்கொண்டு 17
பிரிக்கொணுதபடி இணையுண்டன.
அது தும்மிடவே ஒளி வீசிடும், 18
அதின்
கண்கள் அருணோதயத்து இமைகளே
போலும்.
அதின் வாய்நின்று எரிபந்தம் வெளிப் 19
படும்,
அக்கினிப்பொறிகள் வெளியே குதிக்கும்.
சுள்ளித் தீயில்வைத்த சட்டியிலேபோல 20
அதின் நாசியிலே புகை எழும்பிடும்.
அதின் சுவாசம் கரிகளைக் கொளுத்தும், 21
அதின் வாயிலிருந்து ஜ்வாலை வெளிப்
படும்.
அதன் கழுத்திலே பலம் குடியிருக்கும், 22
பயம் அதின் எதிரே கூத்தாடிச் செல்லும்.
அதன் சதைத் தொங்கல்கள ஒன்றுபட் 23
இணைபட்டு
ஆடாதபடி கெட்டியாய் ஒட்டியிருக்கும்.
அதன் நெஞ்சு கல்போல் பலமாயிருக் 24
கும்,
எந்திரத்தின் அடிக்கல்போற் கெட்டிய
யிருக்கும்.
அஞ்சுதெழும்பவே பலசாலிகள் அஞ்சு 25
வார்,
பயத்தினுலே மயங்கித் திகைப்பார்.
அதைத் தாக்குபவன் பட்டயம், ஈட்டி, 26
வல்லியம், அம்பும் அதன்முன் நிலையா.
இரும்பை வைக்கோலாக மதிக்கும், 27
செம்பை உளுத்த மரமாயெண்ணும்.
அம்பு அதைத் துரத்திவிடமுடியாது, 28
கவண்கல்லும் அதன் எதிர் தரும்பாகி
விடும்.

29 தண்டாயுதங்களைத் தூரும்புகளாய் மதிக்கும்,
எறி வல்லியங்கள் உஸ்ஸென வருதலே இகழும்.
30 வயிற்றின்கீழே கூர்மையானவைகள் உண்டு,
சேற்றில் அதின் தடம் போரடிகருவித் தடம்போலும்.
31 ஆழத்தை உலைப்பாணைபோல் பொங்கப் பண்ணும்,
நீரைத் தைலமாகக் கலக்கும்.
32 தன்பின்னே பாதையைத் துலங்கப்பண்ணும்,
சமுத்திரத்தை நரை விழுந்ததுபோலாக்கி விடும்.
33 பூமியிலே அதற்கொப்பான தொன்றில்லை,
பயமறியாதாகும்படி படைக்கப்பட்டது.
34 மேட்டிமையானதையெல்லாம் அற்பமென எண்ணும்,
அகங்காரப் பிராணிகளுக்கெல்லாம் அது வே ராஜாவாம்
என்று சொல்லிவிட்டார்.

**42** அப்பொழுது யோபு யெகோவாவுக்குப் பதிலுரைப்பவனாய்:

2 தேவரீர் யாவையும் செய்யவல்லவர்,
நீர் செய்ய நினைத்தது தடைபடாது, அறிவேன்.
3 அறிவின்றி யோசனையை மறைக்கும் இவன் யார்?
ஆகவே தெரியாததையும் விளங்காதிருந்த
அதிசயங்களையும் பற்றிப் பேசினேன்
என்றறிந்தேன்.
4 நீர் செவிசாய்த்திடும், நான் பேசிடுவேன்;
நான் கேட்பவற்றை நீரே அறிவித்திடுவீர்.
5 உமை நான் அறிந்ததெலாம் காதினால் கேட்டதே,
இப்போதோ உமைக் கண்களால் காண்கிறேன்.
6 ஆகவே நான் முன் சொன்னதை வெறுத்து
தூளும் சாம்பலுமாய் மனஸ்தாபமுறுவேன்
என்று சொன்னான்.
7 யெகோவா இந்த வார்த்தைகளை யோபோடே பேசியபின் யெகோவா தேமானியனை எலீப்பாசைப் பார்த்து: உன்மேலும் உன் இரண்டு சிநேகிதர்மேலும் எனக்குக் கோபம் மூளுகிறது; என் தொண்டனுகிய யோபைப்போல நீங்கள் என்னைப் பற்றித் தகுதியானவைகளைப் பேசவில்லை. ஆகவே நீங்கள் ஏழு காளைகளையும் 8
ஏழு ஆட்டுக்கடாக்களையும் தெரிந்து கொண்டு என் தொண்டனுகிய யோபினிடம் போய் உங்களுக்காகத் தகனபலிகளை இடுங்கள்; என் தொண்டனுகிய யோபும் உங்களுக்காக விண்ணப்பம் செய்வான்; நான் அவன் விண்ணப்பத்தைக்கேட்டு உங்கள் மதிகேட்டுக்குத் தக்கபடி உங்களுக்குச் செய்யாதிருப்பேன்; என் தொண்டனுகிய யோபைப்போல நீங்கள் என்னைப் பற்றித் தகுதியானவைகளைப் பேசவில்லை என்றார். அப்பொழுது தேமானியனாகிய 9
எலீப்பாசும் சுகியனாகிய பில்தாதும் நாகமாத்தியனாகிய சோப்பாரும் போய் யெகோவா தங்களுக்குச் சொன்னபடியே செய்தார்கள்; யெகோவா யோபைக் கடாட்சித்தருளினார்.
யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் 10
செய்தபோது யெகோவா அவன் துன்பநிலைமையை மாற்றினார். யோபுக்குமுன் இருந்த எல்லாவற்றையும் இரண்டத்தனையாய் யெகோவா அவனுக்குத் தந்தருளினார். அவ 11
னுடைய சகல சகோதரரும் சகோதரிகளும் முன் அவனுக்கு அறிமுகமாயிருந்தவர்கள் அனைவரும் அவனிடம் வந்து, அவன் வீட்டிலே அவனோடு போஜனம்பண்ணி, யெகோவா அவன்மேல் வரப்பண்ணின சகல தீங்கினிமித்தமும் அவனுக்காகத் தங்கள் அனுதாபத்தைக்காட்டி அவனைத் தேற்றினார்கள். ஒவ்வொருவரும் அவனுக்கு ஒரு தங்கக் காசையும் பொன் மோதிரத்தையும் கொடுத்தார்கள். யெகோ 12
வா யோபின் முன்நிலைமையைப் பார்க்கிலும் அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார்; பதினாயிரம் ஆடுகளும் ஆறாயிரம் ஒட்டகங்களும் ஆயிரம் ஏர் மாடுகளும் ஆயிரம் கழுதைகளும் அவனுக்கு உண்டாயின.
ஏழு குமாரரும் மூன்று குமாரத்திகளும் 13
அவனுக்குப் பிறந்தார்கள். மூத்த மகளுக்கு 14
எமீமாள் என்றும் இரண்டாம் மகளுக்குக் கெத்சியாள் என்றும் மூன்றாம் மகளுக்குக் கேரேனுப்புக் என்றும் பேரிட்டான்.
தேசத்தில் எங்கும் யோபின் குமாரத்திகளைப் 15
போல் சௌந்தரியமான பெண்கள் காணப்படவில்லை; அவர்கள் தகப்பன் அவர்கள் சகோதரரின் நடுவிலே அவர்களுக்குச் சுதந்தரம் கொடுத்தான். இதற்குப் பின்பு யோபு 16
நூற்று நாற்பது வருஷம் உயிரோடிருந்து தன் பிள்ளைகளையும் தன் பிள்ளைகளின் பிள்ளைகளையும் நாலுதலைமுறைவரைக்கும் கண்டான். யோபு விருத்தாப்பியமும் பூரண 17
ஆயுசுமுள்ளவனுய் மரித்தான்.

PSALMS

# சங்கீதங்கள்

## முதலாம் பாகம்

## 1—41

**1** தெய்வபயமற்றவர்களின் ஆலோசனை
யில் செல்லாமல்
பாவிகளின் வழியிலே நில்லாமல்
பரியாசக்காரரோடு உட்காராமல்
2 யெகோவாவின் பிரமாணத்திலே பிரியமாகி
இரவும் பகலும் அவர் பிரமாணத்தைத் தியா
னஞ்செய்கிற மனிதன் பாக்கியவான்.
3 அவன் நீர்க்காலோரம் நடப்பட்ட மரம்
போன்றவன்,
அது பருவகாலத்திலே கனிதரும்,
அதன் இலை உதிராது,
அப்படியே அவன் செய்வதெல்லாம் சித்திக்
கும்.
4 தெய்வபயமற்றவர்களோ அப்படியிரார்,
காற்று அடித்துக்கொண்டுபோகும் பதர்
போலிருப்பார்கள்.
5 ஆதலால் தெய்வபயமற்றவர்கள் நியாயத்
தீர்ப்பில் நிலைநிற்கமாட்டார்கள்;
பாவிகளும் நீதிமான்கள் சபையிலே நிலை
நிற்கமாட்டார்கள்.
6 யெகோவா நீதிமான்கள் வழியைக் கவனித்
துக்கொள்வார்
தெய்வபயமற்றவர்கள் வழியோ பாழாகும்.

**2** புறஜாதிகள் கொந்தளிப்பானேன்?
புறதேசத்தார் வீண்காரியத்தைச் சிந்திப்பா
னேன்?
2 யெகோவாவுக்கும் அவர் மேசியாவுக்கும்
விரோதமாய்ப்
பூமியின் ராஜாக்கள் எழும்புகிறார்கள்;
அதிகாரிகளும் கூடி ஆலோசனை செய்கிறார்
கள்.
3 அவர்கள் கட்டுகளை அறுத்து
அவர்கள் கயிறுகளை நம்மிடமிருந்து
எறிந்துவிடுவோம் என்கிறார்கள்.
4 பரலோகத்தில் வீற்றிருப்பவர் நகைப்பார்;
ஆண்டவர் அவர்களைப் பரியாசம் செய்
வார்.
5 பின்பு அவர் தமது கோபத்திலே அவர்க
ளோடு பேசித்
தமது உக்கிரத்திலே அவர்களைக் கலங்கடிப்
பார்.
6 நானே சீயோனில், எனது பரிசுத்த பர்வ
தத்தில்,
என் ராஜாவை ஏற்படுத்தினேன் என்கிறார்.
7 யெகோவாவின் தீர்மானத்தைச் சொல்லு
கிறேன்;
அவர் என்னிடம்:
நீர் எனது குமாரன்,
நானே இன்று உம்மை ஜநிப்பித்
தேன்.
8 என்னிடம் கேளும்,
ஜாதிகளை உமது சுதந்தரமாகவும்
பூமியின் கடைமுனைவரையுமுள்ள
தை உமது காணியாட்சியாகவும்
கொடுப்பேன்;
9 இருப்புக்கோலால் அவர்களை நொ
றுக்கி
குயக்கலத்தைப்போல் அவர்களை
உடைத்துப்போடுவீர்
என்று சொன்னார்.
10 இப்படியிருக்க, ராஜாக்களே, விவேகமடை
யுங்கள்;
பூமியின் நியாயாதிபதிகளே, எச்சரிப்பை
ஏற்றுக்கொள்ளுங்கள்.
11 பயத்தோடு யெகோவாவைச் சேவியுங்கள்;
நடுக்கத்தோடு களிகூருங்கள்.
12 குமாரன் கோபங்கொள்ளாமலும்
நீங்கள் வழியிலே அழியாமலுமிருக்கும்படி
அவரை முத்தஞ்செய்துகொள்ளுங்கள்.
அவர் கோபம் சீக்கிரமாய்ப் பற்றி எரியும்,
அவரிடம் அடைக்கலம் புகுந்தவர்கள்
யாவரும்
பாக்கியவான்கள்.

**3** தன் குமாரனாகிய அப்சலோமுக்குத் தப்பியோ
டினபோது தாவீது பாடின சங்கீதம்.
யெகோவா, என் பகைஞர் எத்தனை ஏராள
மானவர்!

எனக்கு விரோதமாய் எழும்புவோர் ஏராளமானவர்.
2 கடவுளிடம் அவனுக்குத் தஞ்சமில்லை என்று
என் ஆத்துமாவைக்குறித்துச் சொல்லுவோர் ஏராளமானவர்.
3 யெகோவா, நீரோ, எனக்குக் கேடகமானவர்,
என் மகிமையும் என் தலையை நிமிரச்செய்கிறவரும் நீரே.
4 நான் சத்தமிட்டு யெகோவாவைக் கூப்பிடுவேன்,
அவர் தமது பரிசுத்த பர்வதத்திலிருந்து எனக்கு மறுமொழியருளுவார்.
5 நான் படுத்துக்கொண்டேன், உறங்கிவிட்டேன், விழித்துக்கொண்டேன்;
யெகோவாவே என் ஆதரவு.
6 என்னைச் சூழ்ந்திருக்கும் பதினாயிரம்பேருக்கும் நான் அஞ்சேன்.
7 யெகோவா, எழுந்தருளும்,
என் கடவுளே, என்னை இரட்சித்தருளும்,
என் பகைஞர் யாவரையும் தாடையிலே அடிக்கிறீர்;
தெய்வபயமற்றவர்கள் பற்களைத் தகர்த்துப் போடுகிறீர்.
8 இரட்சிப்பு யெகோவாவினுடையதே.
உமது ஜனத்தின்மீது உமது ஆசீர்வாதம் இருப்பதாக.

**4** தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு; வாத்தியம்: யாழ்.
என் நீதியின் கடவுளே,
நான் கூப்பிடும்போது எனக்குச் செவிசாய்த்தருளும்,
இடுக்கத்திலிருக்கையில் நெருக்கத்தை நீக்குகிறீர்;
இரங்கியருளும், என் மன்றாட்டைக் கேட்டருளும்.
2 மனுமக்களே, நீங்கள்
எதுவரைக்கும் என் மகிமையை அவமானப்படுத்துவீர்கள்?
எதுவரைக்கும் வீணானவற்றில் ஆசைவைத்துப் பொய்யை நாடுவீர்கள்?
3 பக்தியுள்ளவனை யெகோவா தமக்கெனத் தெரிந்தெடுத்தாரென்று அறியுங்கள்;
நான் யெகோவாவை நோக்கிக் கூப்பிடும்போது அவர் கேட்பார்.
4 கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்,
படுத்துக்கொள்ளுகையிலே உங்கள் இருதயங்களில் சிந்தைசெய்து அமருங்கள்.
5 நீதிக்குரிய பலிகளைச் செலுத்துங்கள்,
யெகோவாவின்மேல் நம்பிக்கையாயிருங்கள்.
நலமானதை நாம் அனுபவிக்கச் செய்பவன் யார்
என்று சொல்லுவோர் அநேகர்.
6 யெகோவா, உமது திருமுகத்தின் ஒளியை எங்கள்மேல் வீசச் செய்தருளும்.
7 தங்கள் தானியமும் திராட்சரசமும் பெருகுங்காலத்தில்
அவர்கள் அடையும் சந்தோஷத்திலும் அதிகச் சந்தோஷத்தை
என் இருதயத்திலே அளித்தீர்.
8 சமாதானமுடையவனாய்ப் படுத்துக்கொள்ளுவேன், உறங்கிவிடுவேன்.
யெகோவா, தனிமையிலும் நீர் என்னைப் பயமின்றி இருக்கச் செய்கிறீர்.

**5** தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு; வாத்தியம்: கெகிலோத்.
யெகோவா, என் வார்த்தைகளுக்குச் செவிசாய்த்தருளும்,
என் தியானத்தைக் கவனித்தருளும்.
2 என் ராஜாவே, என் கடவுளே, என் கதறுதலைக் கேட்டருளும்,
நான் விண்ணப்பஞ்செய்கிறது உம்மிடத்திலேயே.
3 யெகோவா, அதிகாலையிலே என் சத்தம் உமது திருச்சந்நிதியில் கேட்கும்,
அதிகாலையிலே உமக்கென்று ஆயத்தமாகிக் காத்திருப்பேன்.
4 நீர் அக்கிரமத்தில் பிரியங்கொள்ளும் தெய்வமல்ல,
தீயவன் உமதண்டை தங்குவதில்லை.
5 வீம்புக்காரர் உமது பார்வையில் நிலைநிற்பதில்லை,
அக்கிரமச் செய்கைக்காரர் அனைவரும் உமக்கு வெறுப்பு.
பொய் பேசுகிறவர்களை அழிப்பீர்;
இரத்தப்பிரியனும் வஞ்சகனும் யெகோவாவுக்கு அருவருப்பு.
7 நானோ உமது மிகுதியான கிருபையினால்
உமது ஆலயஞ்சென்று
திருச்சந்நிதி முகமாய்த் திரும்பி பயபக்தியோடு பணிவேன்.
8 யெகோவா, என் பகைவர்நிமித்தம் என்னை
உமது நீதியில் நடத்தும்,
என்முன்னே உமது வழியைச் செவ்வையாக்கும்.
9 அவர்கள் வாயில் உண்மையில்லை,
அவர்கள் உள்ளம் கேடுபாடுள்ளது,
அவர்கள் தொண்டை திறந்த பிரேதக்குழி,
அவர்கள் நாவோ இனிமையானவைகளைப் பேசும்.
10 கடவுளே, நீர் அவர்களுக்குக் குற்றத்தீர்ப்பிடும்;

தங்கள் யோசனையில் தாங்களே விழட்டும்,
அவர்களைத் தள்ளிவிடும், அவர்கள் துரோ
கங்கள் திரளானவைகள்;
உம்மை விரோதித்துக் கலகஞ்செய்தார்கள்.
11 உம்மில் நம்பிக்கை வைக்கிறவர்கள் அனை
வரும் மகிழ்ச்சியடைந்து,
நீரே காப்பீரென்று சொல்லி எக்காளம்
கெம்பீரிப்பார்கள்.
உமது திருநாமத்தை நேசிப்பவர்கள் உம்
மில் களிப்பார்கள்.
12 யெகோவா, நீதிமானை நீர் ஆசீர்வதிப்பீர்,
கருணையென்னும் கேடகத்தினால் அவனை
மூடிக் காப்பீர்.

**6** தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு; வாத்தியம்: யாழ்; இராகம்: செமினீத்.

யெகோவா, உமது கோபத்தில் என்னைக் கண்
டியாதேயும்;
உமது எரிச்சலிலே என்னைத் தண்டியாதே
யும்.
2 யெகோவா, என்மேல் இரங்கும்,
நான் வாடிப்போனேன்;
யெகோவா, எனக்குக் குணம் அளித்தரு
ளும்,
என் எலும்புகள் நடுங்குகின்றன.
3 என் ஆத்துமாவும் மிகமிகுங்குகின்றது.
யெகோவா, நீர் எதுவரை இப்படியிருப்பீர்?
4 யெகோவா திரும்பும், என் ஆத்துமாவை
விடுவியும்;
உமது இரக்கத்தினிமித்தம் என்னை இரட்சி
யும்.
5 மரித்தபின் உம்மை நினைப்பவன் இல்லை
யே;
பாதாளத்திலே உமக்கு நன்றிசெலுத்துபவன்
யார்?
6 பெருமூச்சினால் இளைத்துப்போனேன்,
இரவெல்லாம் அழுகை, படுக்கை கண்ணீ
ரால் ஈரம், கட்டிலும் நனைந்துவிட்டது.
7 துயரத்தினால் கண்கள் மங்கிப்போயின;
என் பகைவர் அனைவராலும் அவை குழி
விழுந்துபோயின.
8 அக்கிரமச்செய்கைக்காரரே, நீங்கள் எல்லா
ரும் என்னைவிட்டு அகன்றுபோங்கள்;
என் அழுகுரலை யெகோவா கேட்டார்.
9 என் விண்ணப்பத்தைக் யெகோவா மறு
மொழி யருளினார்,
என் ஜெபத்தை யெகோவா ஏற்றருளுவார்.
10 பகைவர் யாவரும் வெட்கி நடுங்குவார்கள்,
பின்னுகத் திரும்பிச் சடுதியிலே வெட்கு
வார்கள்.

**7** சிகாயோன் என்னும் பாடல்; பென்யமீனிய
னான கூஷ் என்பவன் வார்த்தையால் தாவீது
வருந்தி யெகோவாவை நோக்கிப் பாடியது.

யெகோவா, என் கடவுளே, உம்மில்
அடைக்கலம் புகுவேன்,
என்னைப் பிடிக்கத்தொடருகிறவர்கள் எல்
லாரிடமிருந்தும் என்னை இரட்சித்தரு
ளும்.
இல்லாவிடில், சிங்கம்போலே சத்துரு என் 2
னைப் பிடித்துக்கொண்டுபோய்ப் பீறிப்
போடுவான்,
விடுவிக்கிறவனுமில்லை.
என் கடவுளாகிய யெகோவாவே, 3
நான் இதைச் செய்ததும்
என் கைகளிலே நியாயக்கேடிருந்ததும்
என்னோடு சமாதானமாயிருந்தவனுக்கு நான் 4
தீங்கு செய்ததும்
என் சத்துருவை நான் காரணமின்றிக்
கொள்ளையிட்டதும்
உண்டானால்,
பகைவன் என் ஆத்துமாவைத் தொடர்ந்து 5
பிடித்து
என் உயிரைத் தரையிலே தள்ளி மிதித்து
என் மகிமையைத் தூளிலே தாழ்த்துவா
னாக.
யெகோவா, கோபத்தோடு எழுந்து 6
என் சத்துருக்களின் மூர்க்கத்தினிமித்தம்
உயர்ந்தருளும்;
எனக்காக விழித்தெழும்பும்;
நியாயத்தீர்ப்பை நியமித்தவர் நீரே.
ஜாதிகளின் கூட்டம் உம்மைச் சூழ்ந்திருக்க 7
அவர்களுக்கு மேலாக நீர் திரும்பவும் உன்
னதத்திற்கு எழுந்தருளுவீராக.
ஜாதிகளுக்குத் தீர்ப்பிடுகிறவர் யெகோவா 8
வே,
யெகோவா, என் நீதிக்கும் என் உள்ளத்
தின் உண்மைக்கும் தக்கபடி
நீர் எனக்கும் நியாயஞ்செய்யும்.
தெய்வபயமற்றவனுடைய பொல்லாங்கை 9
ஒழித்துவிடும்;
நீதிமானை நிலைநிறுத்தும்,
நீதியுள்ள கடவுள் நீர்,
நினைவுகளையும் இருதயங்களையும் ஆராய்ந்
தறிகிறவர் நீரே.
என் கேடகம் கடவுளினிடமே, 10
நேர்மையான இருதயமுள்ளவர்களை அவர்
காப்பார்.
கடவுள் நீதியுள்ள நியாயாதிபதி; 11
அவர் நாள்தோறும் எனக்கொள்ளுகிற தெய்
வம்.
மனந்திரும்பாதவனுக்கு விரோதமாய் அவர் 12
தமது பட்டயத்தைக் கருக்காக்குவார்;
தமது வில்லை நாணேற்றி ஆயத்தமாய் வைத்
திருக்கிறார்.
மரணாயுதங்களும் ஆயத்தமாயிருக்கின்றன, 13

அவருடைய அம்புகள் அக்கினி அம்புகள்.
14 இதோ, அக்கிரமத்தைப் பெற்றெடுக்க
வேதனைப்படுகிறான்,
கர்ப்பத்தினுள்ளே உற்றது தீவினை;
பெற்றெடுத்தது மாயை.
15 குழியை வெட்டினான், ஆழமாக்கினான்,
தான் வெட்டின குழியிலேயே விழுந்தான்.
16 அவன் தீவினை அவன் சிரசின்மேல் திரும்பி
விடும்,
அவன் கொடுமை அவன் உச்சந்தலைமேலே
யே வந்து இறங்கிவிடும்.
17 யெகோவாவின் நீதிக்கிசைய நான் அவ
ரைத் துதித்து
உன்னதமானவராகிய யெகோவாவின் திரு
நாமத்தைப் பாடுவேன்.

**8** தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு;
இராகம்: கித்தீத்.

எங்கள் ஆண்டவராகிய யெகோவா,
உமது திருநாமம் உலகெங்கும் எவ்வளவோ
மேன்மையானது!
உமது மகத்துவத்தை உயர்ந்த வானத்திலே
வைத்திருக்கிறீர்.
2 உமது சத்துருக்களினிமித்தம்,
பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்
போடும்படி
பாலகர் வாயினாலும் குழந்தைகள் வாயி
னாலும் துதி உண்டாகும்படி செய்தீர்.
3 வானம் உமது விரலின் கிரியை,
சந்திர நக்ஷத்திரங்களையும் நீரே உண்டாக்
கினீர்.
4 இவற்றை நான் கவனிக்கும்போது
மனுஷனை நீர் நினைப்பதற்கும்
மனுஷகுமாரனை நீர் கண்ணோக்குவதற்கும்
அவன் எம்மாத்திரம் என்கிறேன்.
5 அவனைத் தெய்வதூதரிலும் சற்றே சிறிய
வனாக்கினீர்;
மகிமையினாலும் கனத்தினாலும் அவனுக்கு
முடிசூட்டினீர்.
6 உமது கரம் படைத்தவைகளின்மேல்
அவன் ஆளுகை செய்யும்படி அருள்புரிந்
தீர்;
யாவற்றையும் அவன் பாதங்களுக்குக் கீழ்ப்
படுத்தினீர்.
7 ஆடுமாடுகள் அனைத்தையும் காட்டுமிருகங்
களையும்
8 ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து
மச்சங்களையும்
கடலில் நீந்திச்செல்லும் பிராணிகள் யாவற்
றையும்
அவன் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்.
9 எங்கள் ஆண்டவராகிய யெகோவா,
உமது திருநாமம் உலகெங்கும் எவ்வளவோ
மேன்மையானது!

தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு; **9**
இராகம்: முத்லபேன்.

என் முழு இருதயத்தாலும் யெகோவாவைத்
துதிப்பேன்,
உமது அதிசயங்களையெல்லாம் விவரிப்
பேன்.
உம்மில் மகிழ்ந்து களிகூருவேன், 2
உன்னதமானவரே, உமது திருநாமத்தைப்
பாடித்துதிப்பேன்.
என் பகைஞர் பின்னிட்டுத் திரும்புகையில் 3
உமது சமுகத்தால் இடறுண்டு அழிந்து
போவார்கள்.
வழக்கிலே நான் நியாயம் பெறச் செய்தீர், 4
நீதியுள்ள நியாயாதிபதியாய்ச் சிங்காசனத்தி
லே அமர்ந்தீர்
புறஜாதிகளைக் கண்டித்தீர், தெய்வ பயமற்ற 5
வர்களை அழித்தீர்;
அவர்கள் பேர்தானும் என்றும் இல்லாமல்
அழித்துவிட்டீர்.
பகைவர் முடிவடைந்தார்கள், என்றென் 6
றைக்கும் பாழாஞர்கள்,
அவர்கள் பட்டணங்களை அழித்துவிட்டீர்,
அவர்கள் ஞாபகமும் அற்றுப்போயிற்று.
யெகோவாவோ என்றென்றைக்கும் சிங்கா 7
சனத்தில் வீற்றிருக்கிறவர்,
தமது நியாயாசனத்தை ஆயத்தப்படுத்தி
யிருக்கிறார்.
பூச்சக்கரத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார், 8
ஜனங்களுக்கு நேர்மையாய் நியாயஞ்செப்
வார்.
சிறுமைப்பட்டவனின் துருக்கம் யெகோ 9
வா,
நெருக்கவேளையில் அவரே துருக்கம்.
உமது திருநாமத்தை அறிந்தவர்களின் நம் 10
பிக்கை உம்மேலிருக்கும்,
யெகோவா, உம்மைத்தேடி வந்தவர்களை நீர்
கைவிட்டதில்லை.
சீயோனில் வாசமாயிருக்கிற யெகோவா 11
வைப் பாடித்துதியுங்கள்,
அவர் செயல்களைப் புறஜாதியாருக்கு அறி
வியுங்கள்.
சிறுமையானவர்கள் கூப்பிடும் குரலை மறவா 12
மல் இரத்தப்பழி வாங்குகிறவராய்
அவர்களை நினைத்தருளுவார்.
யெகோவா, மரணவாசலினின்று என்னைத் 13
தூக்கியெடுப்பவர் நீரே.
நீர் எனக்கு இரங்கிப்
பகைவர் எனக்கு விளைவித்துவருகிற துன்
பத்தை நோக்கியருளும்.

14 அப்பொழுது உமது புகழை நான் பாடி
வேன்,
சீயோன் குமாரத்தியின் வாசல் தோறும்
உமது இரட்சிப்பால் அகமகிழ்வேன்.
15 புறஜாதிகள் தாங்கள் வெட்டின குழியில்
தாங்களே விழுந்தார்கள்.
அவர்கள் மறைத்துவைத்திருந்த வலையில்
அவர்கள் கால்களே சிக்கிக்கொண்டன.
16 யெகோவா நியாயத்தை நிறைவேற்றித் தம்
மை வெளியிட்டார்,
தெய்வபயமற்றவன் தன் கைகள் செய்தவை
களிலேயே சிக்கியபட்டுக்கொண்
டான்.
17 தெய்வபயமற்றவர்கள், கடவுளை மறந்த
சகல ஜாதிகளும், பாதாளம் திரும்புவார்
கள்.
18 ஏழையானவன் என்றைக்கும் மறக்கப்பட
வதில்லை,
சிறுமையானவன் நம்பிக்கை என்றைக்கும்
அழிவதில்லை.
19 யெகோவா எழுந்தருளும்;
மனுஷன் மேற்கொள்ளவிடாதிரும்;
புறஜாதிகள் உமது சமுகத்தில் நியாயந்
தீர்க்கப்படுவார்களாக.
20 யெகோவா, நீர் அவர்களைப் பயமுறுத்தும்,
தாங்கள் மனுஷரேயென்று புறஜாதிகள்
உணர்ந்துகொள்ளச்செய்யும்.

**10** யெகோவா, நீர் ஏன் தூரத்தில் நிற்கி
றீர்?
நெருக்க வேளையிலே ஏன் மறைந்துவிட்டீர்?
2 தெய்வபயமற்றவர்களின் பெருமையினால்
சிறுமையானவன் கொடிய துன்பத்துக்கா
ளாகிறான்,
தாங்கள் நினைத்த மோசத்தில் தாங்களே
அகப்படுவார்களாக.
3 தெய்வபயமற்றவன் தன் உள்ளம் ஆசிப்ப
திலே மிகவும் பெருமைபாராட்டுகிறான்,
பொருளாசைக்காரன் யெகோவாவை
அலட்சியஞ்செய்து விட்டுவிடுகிறான்.
4 தெய்வபயமற்றவன் பெருமைகொண்டு
தெய்வம் விசாரியாரென்றிருக்கிறான்,
அவன் நினைவெல்லாம் தெய்வம் இல்லை
யென்பதே.
5 தன் வழிகள் என்றும் நிலைக்குமென்று
எண்ணுகிறான்,
உமது தீர்ப்புகள் மகா உயரமானவைகள்,
அவன் கண்ணுக்கு எட்டாதவைகள்;
அவன் தன் பகைவர் யாவரையும் பரியாச
மாய்ப் பார்க்கிறான்.
6 நான் அசைக்கப்படுவதேயில்லை,
எத்தீங்கும் தலைமுறை தலைமுறைகளாக
என்னை அணுகாது
என்று தன் உள்ளத்தில் சொல்லிக்கொள்
ளுகிறான்.
7 அவன் வாய் சபிப்பும் கபடும் கொடுமையும்
நிறைந்தது,
அவன் நாவின் கீழ் தீவினையும் அக்கிரம
மும் இருக்கும்.
8 ஊரின் அருகே ஒதுக்கிடத்தில் அவன்
பதுங்கியிருந்து
மறைவிடத்திலே குற்றமற்றவனைக் கொல்லு
கிறான்;
நிக்கற்றவனைப் பிடித்து அகப்படுத்த அவன்
கண்கள் நோக்கமாயிருக்கின்றன.
9 கெபியிலிருக்கும் சிங்கம்போல் மறைவிலே
பதிவிருக்கிறான்,
சிறுமையானவனைப் பிடிக்கும்படி பதிவிருக்
கிறான்,
சிறுமையானவனைத் தன் வலைக்குள் இழுத்
துப்பிடிக்கிறான்,
10 குனிந்து பதுங்கிக்கிடக்கிறான்,
நிக்கற்றவர்கள் அவன் பலத்த கையில் விழு
கிறார்கள்.
11 கடவுள் மறந்துவிட்டார், தமது முகத்தை
மறைத்தார்,
என்றும் அதைக் காணமாட்டார்
என்று தன் உள்ளத்தில் சொல்லிக்கொள்
ளுகிறான்.
12 யெகோவா எழுந்தருளும், கடவுளே, உமது
கையை உயர்த்தும்,
சிறுமையானவர்களை மறந்துவிடாதேயும்.
13 தெய்வபயமற்றவன் கடவுளை அசட்டை
செய்து,
அவர் விசாரியாரென்று
தன் உள்ளத்தில் சொல்லிக்கொள்வானேன்?
14 நீரோ அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்,
வருத்தத்தையும் துயரத்தையும் கவனித்துக்
கொண்டிருக்கிறீர்,
நீரே அதற்குச் சரிசெய்வீர்,
நிக்கற்றவன் தன்னை உம்மிடம் அடைக்கல
மாக ஒப்புவிக்கிறான்;
அநாதனுக்கு நீரே சகாயர்.
15 தெய்வபயமற்றவன் புயத்தை முறித்து
விடும்;
பொல்லாதவன் துன்மார்க்கம் காணப்படா
மற் போகுமட்டும் அதைத்தேடி விசாரி
யும்.
16 யெகோவா என்றென்றும் அரசாளுகிறவர்;
புறஜாதிகள் அவர் தேசத்திலிருந்து அகன்று
போய் அழிவார்கள்.
17 யெகோவா, சிறுமையானவர்களின் விண்
ணப்பத்தை நீர் கேட்டீர்;
அவர்கள் இருதயம் ஸ்திரமாகும்படி செய்
தருளும்,

கேட்பதற்கென்றே உமது திருச்செவி சாய்த்
தருளும்,
18 மண்ணான மனிதன் பயமுறுத்தாதபடி,
கடவுளே, அநாதருக்கும் சிறுமைப்பட்
டவர்களுக்கும் நீரே நியாயஞ்செய்தரு
ளும்.

**11** தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு.
யெகோவாவினிடம் நான் அடைக்கலம்
புகுந்தேன்,
அப்படியிருக்க,
பட்சியைப்போல் உன் மலைக்குப்
பறந்துபோ.
2 தெய்வபயமற்றவர்கள், இதோ, நேர்மை
யுள்ளவர்கள்மேல் இருளிலே எய்வ
தற்குத்
தங்கள் வில்லை வளைத்தார்கள்,
நாணில் அம்பு தொடுத்தார்கள்.
3 அஸ்திபாரங்களும் அழிந்துபோயிற்றென்
றால் நீதிமான் செய்வதென்ன?
என்று நீங்கள் என் 'என் ஆத்துமாவினி
டம் சொல்லுகிறீர்கள்.
4 யெகோவா தமது பரிசுத்த ஆலயத்தில்
இருக்கிறார்,
யெகோவாவின் சிங்காசனம் பரலோகத்தி
லிருக்கிறது;
அவருடைய கண்கள் மனுமக்களைப் பார்க்
கும்,
அவருடைய இமைகள் மனுமக்களைச்
சோதித்தறியும்.
5 யெகோவா நீதிமான்களைச் சோதித்தறிவார்,
தெய்வபயமற்றவனையும் இம்சைசெய்வதில்
விருப்பமுள்ள யாவரையும்
அவர் திருவுள்ளம் வெறுக்கும்.
6 தெய்வபயமற்றவர்கள் சிக்கிக்கொள்வதற்
கென்று
கண்ணிகளை அவர் வருஷிப்பார்,
அக்கினியும் கந்தகமும் நீக்காற்றும்
அவர்களுக்குரிய பங்காகும்.
7 யெகோவா நீதியுள்ளவர், நீதியின்மேல் பிரி
யங்கொள்ளுகிறவர்;
நேர்மையுள்ளவர்கள் அவர் திருமுகத்
தைத் தரிசிப்பார்கள்.

**12** தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு
இராகம்: செமினீத்.
யெகோவா, இரட்சியும்,
பக்தியுள்ளவன் அற்றுப்போனான்,
உண்மையுள்ளோர் எனப்படுவோர்
மனுப்புத்திரருக்குள் ஒழிந்துபோனார்கள்.
2 ஒருவரோடொருவர் வஞ்சனை பேசுகிறார்
கள்;
இச்சகம் பேசும் இனிய உதடுடையவர்
கள்,
அவர்கள் மனம் ஒன்று நினைக்க வாய்
ஒன்று பேசும்.
இச்சக உதட்டையும் 3
பெருமை பேசும் நாவையும்
யெகோவா அழித்துவிடுவார்.
எங்கள் நாவின் வலிமையால் எவரையும் 4
வெல்வோம்,
எங்கள் உதடுகள் எங்களுடையவைகளே,
எங்களுக்கு எஜமானன் யார்
என்று சொல்லுகிறவர்களை அழிப்
பார்.
சிறுமையானவர்கள் கொள்ளையிடப்பட் 5
டார்கள்,
ஏழைகள் எங்கிப் பெருமூச்சு விட்டார்
கள்,
ஆதலால் நான் இப்பொழுதே எழுந்திருப்
பேன்,
பரியாசம் செய்கிறவர்களிலிருந்து அவனைக்
காத்துக்கொள்வேன்
என்று யெகோவா உரைப்பார்.
யெகோவாவின் திருமொழி தூயமொழி, 6
ஏழுமுறைமட்டும் குகையிலே புடமிடப்
பட்ட வெள்ளிபோலத் தூயதாம்.
யெகோவா, நீர் அவர்களைக் காப்பீர், 7
இச்சந்ததியாரிலிருந்து விலக்கி நீரே என்
றும் அவர்களைக் காப்பீர்.
இழிகுணமானது மனுமக்களுக்குள் உயர் 8
பதவி பெறவே
தெய்வபயமற்றவர்கள் எப்பக்கங்களிலும்
திரிவார்கள்.

தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு. **13**
யெகோவா, எதுவரைக்கும் முடிவின்றி நீர்
என்னை மறந்திருப்பீர்,
எதுவரைக்கும் உமது திருமுகத்தைத்
திருப்பி எனக்கு மறைப்பீர்.
எதுவரைக்கும் நித்தம் நித்தம் என் இரு 2
தயத்தில் சஞ்சலமுடையவனாய்
என் ஆத்துமாவில் ஆலோசித்துக்
கொண்டேயிருப்பேன்?
எதுவரைக்கும் சத்துரு என்மேல் தன்னை
உயர்த்துவான்?
என் கடவுளாகிய யெகோவா, நீர் நோக்கிப் 3
பார்த்து எனக்குச் செவிசாய்த்தருளும்;
நான் மரணநித்திரை அடையாதபடி என்
கண்களைத் தெளிவாக்கும்.
அவனை மேற்கொண்டேன் என்று என் 4
பகைஞன் சொல்லாதபடிக்கும்
நான் தள்ளாடுகிறதினால் 'என் சத்துருக்
கள் களிகூராதபடிக்கும் இப்படிச்
செய்தருளும்.
நான் உமது 'கிருபையில் நம்பிக்கை வைத் 5
திருக்கிறேன்,

உமது இரட்சிப்பில் என் இருதயம் களி கூரும்.
6 யெகோவா எனக்கு வெகு நன்மை செய்தார்,
நான் அவரைப் பாடுவேன்.

**14** தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு.
கடவுள் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான்,
அவர்கள் செய்வதெல்லாம் கேடு, அரு வருப்பு,
நன்மை செய்கிறவனில்லை.
2 கடவுளைத் தேடுகிற உணர்வுள்ள வன் உண்டோ என்று பார்க்க
யெகோவா பரலோகத்திலிருந்து மனுப்புத்தி ரரை நோக்கிப்பார்த்தார்.
3 எல்லாரும் வழிவிலகி ஏகமாய்க் கெட்ட வர்களானார்கள்;
நன்மை செய்கிறவனில்லை, ஒருவனுமில்லை.
4 அக்கிரமக்காரர் யாவரும் அறிவற்றுப் போனார்களோ?
ஆகாரத்தைப் புசிக்கிறதுபோல என் ஜனத்தைப் பட்சிக்கிறார்களே;
அவர்கள் யெகோவாவைத் தொழுதுகொள்ளுகிறதுமில்லை.
5 அதோ, அவர்களுக்கு மிகுந்த பயம்,
கடவுள் நீதிமானின் சந்ததியோடிருக்கிறாரே.
6 சிறுமையானவன் ஆலோசனையை அவமாக்கப் பார்க்கிறீர்களே.
யெகோவாவோ அவன் அடைக்கலம்.
7 சீயோனிலிருந்து இஸ்ரவேலுக்கு ரட்சிப்பு வருவது எக்காளோ!
யெகோவா தமது ஜனத்தின் துன்ப நிலைமையை மாற்றும்போது
யாக்கோபுக்குக் களிப்பும் இஸ்ரவேலுக்கு மகிழ்ச்சியுமுண்டாகும்.

**15** தாவீதின் சங்கீதம்.
யெகோவா, உமது கூடாரத்தில் தங்குபவன் யார்?
உமது பரிசுத்த பர்வதத்தில் வாசமாயிருப்பவன் யார்?
2 உத்தமனும் நடந்து, தர்மவழியில்சென்று,
மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன் தானே.
3 அவன் தன் நாவினால் புறங்கூறான்,
தன் தோழனுக்குத் தீங்குசெய்யான்,
தன் அயலான்மேல் நிந்தை சுமத்தான்;
4 மதிக்கத்தகாதவனை அவன் மதியான்,
யெகோவாவுக்குப் பயந்தவர்களையோ கனம் பண்ணுவான்;
ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் மாறுதிருப்பான்.
தன் பணத்தை வட்டிக்குக் கொடான், 5
குற்றமில்லாதவனுக்கு விரோதமாய்ப் பரிதானம் வாங்கான்,
இப்படிச் செய்கிறவன் என்றென்றைக்கும் அசைக்கப்படுவதில்லை.

தாவீதினுடைய மிக்தாம் சங்கீதம். **16**
கடவுளே என்னைக் காப்பாற்றும்,
உம்மிடத்தில் அடைக்கலம் புகுந்தேன்.
நான் யெகோவாவினிடம்: 2
தேவரீரே என் ஆண்டவர்,
உம்மையன்றி எனக்கு வேறே செல்வமில்லை.
பூமியிலுள்ள உமது பரிசுத்தவான் 3
களே
என் முழு மகிழ்ச்சிக்கும் ஏதுவான மேன்மக்கள்
என்று சொன்னேன்.
அந்திய தேவர்களைத் தங்களுக்குத் தேடிக் 4
கொள்ளுகிறவர்களுக்கு வேதனைகள் பெருகும்,
அவர்கள் செலுத்துகிற ரத்தபானபலிகளை
நான் செலுத்தமாட்டேன்,
அவர்கள் நாமங்களை என் உதடுகளினால்
உச்சரிக்கவுமாட்டேன்.
யெகோவா என் சுதந்தர பாகம், என் பாத் 5
திரத்தின் பங்கு.
எனக்குரிய பாகத்தைத் தேவரீர் பாதுகாக்கிறீர்.
இன்பமானவைகளில் எனக்குப் பாகம் 6
கிடைத்தது;
ஆம், மகிமையான சுதந்தரமே எனக்கு
உண்டாயிற்று.
எனக்கு ஆலோசனை தந்த யெகோவாவைத் 7
தொழுதுகொள்ளுகிறேன்,
இராக்காலங்களிலும் என் இருதயம் என்னை
உணர்த்தும்.
யெகோவாவை நான் எப்பொழுதும் எனக்கு 8
முன் நோக்கிக்கொண்டிருக்கிறேன்,
அவர் என் வலது பாரிசத்திலிருக்கிறார்,
நான் அசைக்கப்படுவதில்லை.
ஆகவே என் இருதயம் மகிழ்ந்தது, 9
என் மகிமை களிகூர்ந்தது;
என் மாம்சமுங்கூட நம்பிக்கையில் தங்கும்.
என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; 10
உமது பக்தன் அழிவைக் காணவொட்டீர்.
ஜீவவழியை எனக்குத் தெரியப்படுத்துவீர், 11
உமது சந்நிதானத்தில் பரிபூரண ஆனந்தமும்
உமது வலதுபாரிசத்தில் நித்தியபேரின்பமும் உண்டு.

**17** தாவீது விண்ணப்பமாகப் பாடியது.
யெகோவா, நியாயத்தைக் கேட்டருளும்,
என் அபயசத்தத்தைக் கவனித்தருளும்,
கபடமில்லாத உதடுகளினின்று வரும்
என் விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்தருளும்.
2 உமது திருச்சந்நிதியிலிருந்து என் நியாயம்
வெளிப்படுவதாக.
உமது கண்கள் நேர்மையானவைகளை நோக்குவதாக.
3 நீர் என் இருதயத்தைப் பரிசோதித்தீர்,
இராக்காலத்திலே விசாரித்தீர்,
என்னைப் புடமிட்டுப்பார்த்தீர்,
ஒன்றும் கண்டுபிடியாதிருக்கிறீர்,
என் வாய் மீறிப்போகாதபடி தீர்மானம்
பண்ணினேன்.
4 மனுஷரின் செய்கைகளைக்குறித்தோ
நான் உமது உதடுகளின் வாக்கின்படியே
மூர்க்கனுடைய பாதைகளுக்கு விலக்கமாய்
என்னைக் காத்துக்கொள்ளுகிறேன்.
5 என் காலடிகள் உமது வழிகளில் ஸ்திரமாயிருக்கும்,
என் கால்கள் வழுவிப்போகவில்லை.
6 கடவுளே, நான் உம்மைநோக்கிக் கெஞ்சுகிறேன், எனக்கு மறுமொழியளிப்பீர்,
என்னிடமாய் உமது செவியைச் சாய்த்து
என் வார்த்தையைக் கேட்டருளும்.
7 உம்மில் அடைக்கலம் புகுகிறவர்களை
அவர்களுக்கு விரோதமாய் எழும்புகிறவர்களினின்று
உமது வலதுகரத்தினால் தப்புவித்து ரட்சிக்கிறவரே!
உமது அதிசயமான கிருபையை விளங்கப்பண்ணும்.
8 கண்மணியைப்போல என்னைக் காத்தருளும்
நீர் சிறகுகளின் உமது செட்டைகளின் நிழலிலே மறைத்து
என்னை ஒடுக்குகிற துன்மார்க்கரினின்றும்
என்னைச் சூழ்ந்துகொள்ளுகிற பிராணப்பகைஞரினின்றும்
என்னைக் காப்பாற்றும்.
10 அவர்கள் கொழுத்துப்போய்த் தங்கள் மனதைக் கடினப்படுத்திக்கொண்டார்கள்,
தங்கள் வாயினால் வீம்பு பேசுகிறார்கள்.
11 எங்கள் பாதைகளில் இப்பொழுது எங்களை வளைந்துகொண்டார்கள்,
எங்களைத் தரையிலே தள்ளும்படி அவர்கள்
கண்கள் எங்களை நோக்கியிருக்கின்றன.
12 இரை பிடிக்க ஆசிக்கும் சிங்கத்துக்கும்
மறைவிடங்களில் பதிவிருக்கும் பாலசிங்கத்துக்கும்
ஒப்பாயிருக்கிறார்கள்.
13 யெகோவாவே, எழுந்தருளும்,
அவனுக்கு எதிரிட்டு அவனை மடங்கடியும்,
உமது பட்டயத்தினால் துன்மார்க்கரின்
கைக்கு என் ஆத்துமாவைத் தப்புவியும்.
14 யெகோவாவே, மனுஷர் கைக்கு,
இம்மையில் தங்கள் பங்கைப் பெற்றிருக்கிற உலகமக்கள் கைக்கு,
உமது கரத்தினால் என்னைத் தப்புவியும்,
அவர்கள் வயிற்றை உமது நிலையத்தினால் நிரப்புகிறீர்;
நிறைவான புத்திரபாக்கியத்தினால் அவர்கள்
திருப்தியடைகிறார்கள்,
தங்களுக்கு மீதியான பொருளைத் தங்கள்
குழந்தைகளுக்கு விட்டுப்போகிறார்கள்.
15 நானோ நீதியாய் நடந்து உமது திருமுகத்தைத் தரிசிப்பேன்;
நான் விழிக்கும்போது உமது சாயலால்
திருப்தியாவேன்.

**18** யெகோவாவின் தாசனாகிய தாவீதின் சங்கீதம்;
பாடகர் தலைவனுக்கு; தன் சகல சத்துருக்களின் கைக்கும் சவுலின் கைக்கும் யெகோவா தன்னை நீங்கலாக்கி விடுவித்த நாளிலே
யெகோவாவை நோக்கித் தாவீது இந்தப்
பாட்டின் வார்த்தைகளைப் பாடினான்.

யெகோவா, என் பலமே, உம்மில் அன்பு கூருகிறேன்.
2 யெகோவா என் கன்மலை, என் கோட்டை, என்னை விடுவிக்கிறவர்;
என் கடவுள், என் அரண், நான் அடைக்கலம் புகுந்தவர்;
என் கேடகம், என் ரட்சணியக் கொம்பு,
என் துருக்கம்.
3 துதிக்கத்தக்க யெகோவாவை நோக்கிக் கூப்பிடுவேன்,
அவரே துதிக்குப் பாத்திரர்;
அப்போது என் சத்துருக்களினின்று ரட்சிக்கப்படுவேன்.
4 மரணக்கட்டுகள் என்னைச் சுற்றிக்கொண்டன;
பேலியாளின் பிரவாகம் என்னைப் பயப்படுத்தினது.
5 பாதாளக்கட்டுகள் என்னைச் சூழ்ந்துகொண்டன;
மரணக்கண்ணிகள் என்மேல் விழுந்தன,
6 என் நெருக்கத்திலே யெகோவாவை நோக்கிக் கூப்பிட்டு
என் கடவுளை நோக்கி அபயமிட்டேன்,
தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார்,

அவர் சந்நிதியில் நான் அபயமிட்ட சத்தம்
அவர் செவிகளில் ஏறிற்று.
7 அப்பொழுது பூமி அசைந்து அதிர்ந்தது;
அவர் கோபங்கொண்டபடியால்
பர்வதங்களின் அஸ்திபாரங்கள் குலுங்கி
அசைந்தன.
8 அவர் நாசியிலிருந்து புகை எழும்பிற்று;
அவர் வாயிலிருந்து வெளிப்பட்ட அக்கினி
பட்சித்தது,
அதனால் தழல் மூண்டது.
9 வானங்களையும் தாழ்த்தி இறங்கினார்,
அவர் பாதங்களின்கீழ்க் காரிருள் இருந்தது.
10 கேரூபின்மேல் ஏறி வேகமாய்ச் சென்றார்,
காற்றின் செட்டைகளைக்கொண்டு பறந்தார்.
11 இருளைத் தமக்கு மறைவிடமும் தம்மைச்
சூழும் கூடாரமுமாக்கினார்,
கரும்புனல்களும் ஆகாயத்துக் கார்மேகங்
களுமே அந்த இருள்.
12 அவர்முன் தோன்றிய பிரகாசத்தினால் அவ
ருடைய மேகங்கள் விலகிப்பறந்தன,
கல்மழையும் நெருப்புத்தழலும் பொழிந்
தன.
13 யெகோவா வானங்களிலே குமுறினார்;
உன்னதமானவர் தமது சத்தத்தைத் தொனிக்
கப்பண்ணினார்;
கல்மழையும் நெருப்புத்தழலும் பொழிந்
தன.
14 தமது அம்புகளை எய்து அவர்களைச் சிதற
டித்தார்,
திரளான மின்னல்களால் அவர்களைக் கலங்
கடித்தார்.
15 அப்பொழுது, யெகோவா, உமது கண்டிப்பி
னாலும்
உம்முடைய நாசியின் சுவாசப் பெருங்
காற்றினாலும்
கண்ணீர்களின் பாதைகள் திறவுண்டு
பூதலத்தின் அஸ்திபாரங்கள் காணப்பட்
டன.
16 உயரத்திலிருந்து அவர் கையை நீட்டி
என்னைப் பிடித்து
ஜலப்பிரவாகத்திலிருந்து என்னைத் தூக்கி
விட்டார்.
17 என் பலத்த சத்துருவுக்கும் என்னைப் பகைக்
கிறவர்களுக்கும்
என்னை விடுவித்தார்;
அவர்கள் என்னில் மேற்கொள்ளமுடியாத
பலவான்கள்.
18 என் ஆபத்துநாளில் என்மேல் விழுந்தார்
கள்,
யெகோவாவோ எனக்கு ஆதாரவாயிருந்தார்.
19 அவர் விசாலத்திலே என்னைக் கொண்டுவந்
தார்;
என்மேல் பிரியமாயிருந்தபடியால் என்னை
விடுவித்தார்.
20 யெகோவா என் நீதிக்குத்தக்கபடி எனக்குப்
பதிலளித்தார்,
என் கைகளின் சுத்தத்திற்குத்தக்கபடி எனக்
குச் சரிக்கட்டினார்
21 யெகோவாவின் வழிகளைக் கைக்கொண்டு
வந்தேன்,
நான் என் கடவுளுக்குத் துரோகம்பண்
ணினதில்லை.
22 அவருடைய நியாயத்தீர்ப்புகளையெல்லாம்
எனக்குமுன்பாக நிறுத்தினேன்,
அவருடைய கற்பனைகளை நான் தள்ளி
வைக்கவில்லை.
23 அவர்முன்பாக நான் குற்றமற்றவனாயிருந்
தேன்,
என் தீவர்க்குணப்பாவத்துக்கு என்னை விலக்
கிக் காத்துக்கொண்டேன்.
24 யெகோவா என் நீதிக்கும் தமது பார்வையில்
சுத்தமாயிருக்கிற என் கைகளின் செய்
கைக்கும் தக்கபடி
எனக்குப் பலனளித்தார்.
25 இரக்கமுள்ளவனுக்கு நீர் இரக்கமுள்ளவ
ராகவும்
உத்தமனுக்கு நீர் உத்தமராகவும்
சுத்தனுக்கு நீர் சுத்தராகவும்
26 மாறுபாடுள்ளவனுக்கு நீர் மாறுபடுகிறவரா
கவும்
உம்மைக் காட்டுவீர்.
27 தேவரீர் சிறுமையான ஜனத்தை இரட்சிப்பீர்,
மேட்டிமையான கண்களையோ தாழ்த்துவீர்.
28 தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர்;
என் கடவுளாகிய யெகோவா என் இருளில்
வெளிச்சந்தருவார்.
29 உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து
போவேன்;
என் கடவுளாலே ஒரு மதிலைத் தாண்டிக்
குதிப்பேன்.
30 கடவுளின் வழி உத்தமமானது;
யெகோவாவின் வசனம் புடமிடப்பட்டது;
தம்மில் அடைக்கலம் புகும் அனைவருக்கும்
அவரே கேடகம்.
31 யெகோவாவை யல்லாமல் கடவுள் யார்?
நமது கடவுளையன்றிக் கன்மலையும் யார்?
32 என்னைப் பலத்தால் இடைகட்டி
என் வழியை உத்தமமாக்குகிறவர் கடவுளே.
33 அவர் என் கால்களை மான்களின் கால்களைப்
போலாக்கி
என் உயர்ஸ்தலங்களின்மேல் என்னை நிறுத்
துகிறார்.
34 செப்பு வில்லும் என் புயங்களால் வளையும்
படி

என் கைகளே யுத்தத்திற்குப் பழக்குகிறார்.
35 உமது ரட்சிப்பின் கேடகத்தையும் எனக்குத் தந்தீர்;
உமது வலதுகரம் என்னைத் தாங்கினது;
உமது காருண்யம் என்னைப் பெரியவனாக்கிற்று.
36 என் கணுக்கால்கள் தள்ளாடவில்லை,
நான் நடக்கிற வழியை விசாலமாக்கினீர்.
37 என் சத்துருக்களைப் பின்தொடர்ந்து அவர்களைப் பிடிப்பேன்;
அவர்களை நிர்மூலமாக்கும்வரைக்கும் திரும்பேன்.
38 அவர்களை வெட்டுவேன், அவர்கள் எழுந்திருக்கமாட்டார்கள்;
அவர்கள் என் பாதங்களின்கீழ் விழுவார்கள்,
39 யுத்தத்திற்கு நீர் என்னைப் பலத்தால் இடைகட்டினீர்;
எனக்கு விரோதமாய் எழும்பினவர்களை என் கீழ் மடங்கப்பண்ணினீர்.
40 நான் என் பகைஞரைச் சங்காரிக்கும்படி
என் சத்துருக்கள் புறங்காட்டி ஓடச்செய்தீர்.
41 அவர்கள் கூப்பிட்டார்கள், ரட்சிப்பாரில்லை;
யெகோவாவை நோக்கிக் கூப்பிட்டார்கள்,
அவர்களுக்கு அவர் மறுமொழியருளவில்லை;
42 காற்றுமுகத்திலே பறக்கிற தூளாக நான் அவர்களை இடித்தேன்,
தெருக்களின் குப்பைபோல் அவர்களை எறிந்துபோட்டேன்.
43 ஜனங்களின் சண்டைகளுக்கு நீர் என்னைத் தப்புவித்தீர்.
புறஜாதிகளுக்கு என்னைத் தலைவனாக்கினீர்;
நான் அறியாத ஜனம் என்னைச் சேவிக்கும்.
44 அவர்கள் என்னைப்பற்றிக் கேட்டவுடனே எனக்குக் கீழ்ப்படிவார்கள்.
அந்நியரும் எனக்கு அடங்குவதுபோல் நடிக்கிறார்கள்.
45 அந்நியர் மனமடிந்து தங்கள் அரண்களிலிருந்து தத்தளிப்போடு வெளிப்படுவார்கள்.
46 யெகோவா ஜீவனுள்ளவர்;
என் கன்மலையானவர் ஸ்தோத்திரத்தக்கவர்;
என் ரட்சிப்பின் கடவுள் உயர்த்தப்படுவாராக.
47 அவர் எனக்காகப் பழிக்குப் பழிவாங்குகிற கடவுள்,
ஜனங்களை எனக்குக் கீழ்ப்படுத்துகிறவர் அவரே.
48 அவரே என் சத்துருக்களுக்கு என்னை விலக்கி விடுவிக்கிறவர்;
எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் மேல் என்னை உயர்த்துகிறீர்,
கொடுமையான மனுஷனுக்கு என்னைத் தப்புவிக்கிறீர்.
49 இதினிமித்தம், யெகோவா,
நான் புறஜாதிகளுக்குள் உம்மைப் புகழ்ந்து
உமது நாமத்தைச் சொல்லிச் சங்கீதம் பாடுவேன்.
50 தாம் ஏற்படுத்தின ராஜாவுக்கு மகத்தான ரட்சிப்பை அளிக்கிறார்,
தாம் அபிஷேகம்பண்ணின தாவீதுக்கும்
அவன் சந்ததிக்கும் சதாகாலங்களாய்க் கிருபை செய்கிறார்.

## 19

தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு.
1 வானங்கள் கடவுளின் மகிமையைப் பிரஸ்தாபிக்கின்றன;
ஆகாயமண்டலம் அவர் கரங்களின் கிரியையைக் காட்டுகிறது.
2 பகல் பகலுக்கு வார்த்தைகளை உரைக்கிறது;
இரவு இரவுக்கு அறிவைத் தெரிவிக்கிறது.
3 அவைகளுக்குச் சத்தமில்லை, பாஷையுமில்லை, அவற்றின் தொனி கேட்கப்படுவதுமில்லை.
4 ஆயினும், அவைகளின் அளவுநூல் உலகமெங்கும்
அவைகளின் வசனங்கள் பூமியின் கடைசிவரைக்கும் செல்லுகின்றன;
அவைகளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார்.
5 அது தன் மணவறையிலிருந்து புறப்படுகிற மணவாளன்போலிருக்கிறது,
பராக்கிரமசாலிபோல் தன் பாதையில் ஓட மகிழ்ச்சிகொள்ளுகிறது.
6 அது வானங்களின் ஒரு முனையிலிருந்து புறப்பட்டு
அவைகளின் மறுமுனைவரைக்கும் சுற்றியோடுகிறது;
அதின் காந்திக்கு மறைவானது ஒன்றுமில்லை.
7 யெகோவாவின் பிரமாணம் குறைவற்றது,
அது ஜீவனைப் புதுப்பிக்கிறது;
யெகோவாவின் சாட்சியம் நம்பிக்கைகுரியது,
அது பேதையை ஞானியாக்குகிறது.
8 யெகோவாவின் கட்டளைகள் நேர்மையானவை,
அவை இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கும்,

யெகோவாவின் கற்பனை தூயது,
அது கண்களைத் தெளிவிக்கிறது.
9 யெகோவாவுக்குப் பயப்படுகிற பயம் சுத்த
மானது,
அது என்றைக்கும் நிலைத்திருக்கும்,
யெகோவாவின் நியாயத்தீர்ப்புகள் உண்
மையானவை;
அவை முற்றிலும் நீதியுள்ளவை.
10 அவை பொன்னிலும் மிகுந்த பசும்பொன்
னிலும் விரும்பப்படத்தக்கவை,
தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும்
தெளிதேனிலும் மதுரமுள்ளவை.
11 அன்றியும், அவைகளால் உமது அடியேன்
எச்சரிக்கப்படுகிறேன்,
அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால்
மிகுந்த பலன் உண்டு.
12 தன் பிழைகளை உணருகிறவன் யார்?
அறியாமற் செய்கிற குற்றங்களுக்கு
என்னை நீங்கலாக்கும்.
13 துணிந்து செய்கிற பாவங்களுக்கு உமது
அடியேனை விலக்கிக் காரும்,
அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்
டாதிரும்,
அப்பொழுது நான் குற்றமில்லாதவ
னுவேன்,
பெரும் பாதகமற்றவனாக விளங்கு
வேன்.
14 யெகோவா, என் கன்மலையே, என் மீட்பரே,
என் வாயின் வார்த்தைகளும் என் இருத
யத்தின் தியானமும்
உமது சமுகத்தில் பிரியமாயிருப்ப
தாக.

**20** தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு.
ஆபத்துநாளிலே யெகோவா உமக்குச் செவி
கொடுப்பாராக;
யாக்கோபின் கடவுளுடைய திருநாமம் உம்
மைக் காப்பதாக.
2 பரிசுத்த ஸ்தலத்திலிருந்து அவர் உமக்கு
ஒத்தாசை யனுப்பிச்
சீயோனிலிருந்து உம்மை ஆதரிப்பாராக.
3 உமது காணிக்கைகளையெல்லாம் அவர்
நினைத்து,
உமது தகனபலியைப் பிரியமாய் ஏற்றுக்
கொள்வாராக.
4 அவர் உமது மனதின் விருப்பப்படியே
உமக்குத் தந்தருளி
உமது ஆலோசனைகளையெல்லாம் நிறை
வேற்றுவாராக.
5 நீர் அளிக்கும் வெற்றியிலே நாங்கள்
மகிழ்ந்து
எங்கள் கடவுளின் திருநாமத்திலே கொடி
யேற்றுவோம்,
உமது விண்ணப்பங்களையெல்லாம்
யெகோவா நிறைவேற்றுவாராக.
யெகோவா தாம் அபிஷேகம்பண்ணினவ 6
ருக்குச் சகாயம் செய்கிறார்
என்பது இப்பொழுது எனக்குத்
தெரிகிறது.
தமது வலதுகரத்தின் ஜயசத்தியைக் காண்
பித்துத்
தமது பரிசுத்த வானத்திலிருந்து அவரு
டைய வேண்டுகோளைக் கேட்பார்.
சிலர் பெருமை ரதங்களாம், 7
சிலர் பெருமை குதிரைகளாம்.
எங்கள் பெருமையோ எங்கள் கடவுளா
கிய யெகோவாவின் திருநாமமே.
அவர்கள் முழங்குவிழுந்தார்கள், 8
நாங்களோ எழுந்து நிமிர்ந்து நிற்கிறோம்.
யெகோவா, இரட்சியும்; 9
நாங்கள் கூப்பிடும்போது ராஜா எங்களுக்கு
மறுமொழி அருளுவாராக.

தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு. **21**
யெகோவா, உமது வல்லமையிலே ராஜா
மகிழ்வார்,
நீர் அளிக்கும் வெற்றியிலே எவ்வளவாய்க்
களிகூருவார்!
அவர் மனதின் விருப்பப்படி நீர் அவருக் 2
குத் தந்தருளினீர்;
அவர் உதடுகளின் விண்ணப்பத்தைத்
தள்ளிவிடவில்லை.
உத்தம ஆசீர்வாதங்களோடு நீர் அவருக்கு 3
எதிர்கொண்டு வந்தீர்,
அவர் சிரசிலே பொற்கிரீடம் தரிப்பித்
தீர்.
அவர் உம்மிடம் ஆயுசைக் கேட்டார், 4
நீர் அதை அவருக்கு அளித்தீர்,
என்றென்றுமுள்ள தீர்க்காயுசை அளித்
தீரே.
நீர் அளித்த வெற்றியினால் அவர் பெற்ற 5
மகிமை பெரிதாயிற்று;
மகிமையையும் மகத்துவத்தையும் அவ
ருக்கு அருளுவீர்.
அவரை என்றென்றும் ஆசீர்வாதங்களுள் 6
ளவராக்குகிறீர்,
அவரை உமது சமுகத்திலே மகிழ்ச்சியி
னால் பூரிப்பாக்குகிறீர்.
ராஜா யெகோவாவில் நம்பிக்கைவைத்திருக் 7
கிறார்,
உன்னதமானவரின் தயவிருப்பதினால்
அசைக்கப்படாதிருப்பார்.
உமது கை உமது சத்துருக்களெல்லாரை 8
யும் கண்டுபிடிக்கும்;
உமது வலதுகரம் உம்மைப் பகைக்கிறவர்
களைக் கண்டுபிடிக்கும்

9 நீர் பிரத்தியட்சமாகும்போது அவர்களை
அக்கினிச்சூளையாக்கிப்போடுவீர்,
யெகோவா தமது கோபத்திலே அவர்களை
அழிப்பார்;
அக்கினி அவர்களைப் பட்சிக்கும்.
10 அவர்கள் பிள்ளைகளைப் பூமியிலிராதபடி
ஒழித்து
அவர்கள் சந்ததியை மனுபுத்திரரிலிராத
படி ஒழியப்பண்ணுவீர்.
11 அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பொல்
லாங்கு நினைத்தார்கள்;
தராலோசனை செய்தார்கள், நிறைவேற்ற
முடியாமற் போனார்கள்.
12 அவர்கள் புறங்காட்டியோடும்படி செய்
வீர்,
உமது அம்புகளை நாணேற்றி
அவர்கள் முகத்திற்கு நேரே விடுவீர்.
13 யெகோவா, உமது பலத்திலே உயர்ந்தரு
ளும்;
அப்பொழுது உமது பராக்கிரமத்தைப்
பாடித் துதிப்போம்.

**22** தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு; இராகம்: காலைப்பெண்மான் என்பது.

என் கடவுளே, என் கடவுளே, ஏன் என்னைக் கைவிட்டீர்?
என்னை இரட்சியாமலும் நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்?
2 என் கடவுளே, நான் பகலிலே கூப்பிடுகிறேன், உத்தரவு கொடீர்,
இரவிலே கூப்பிடுகிறேன், எனக்கு அமைதலில்லை.
3 தேவரீரோ பரிசுத்தர்;
இஸ்ரவேலின் துதிகளுக்குள் வீற்றிருக்கிறீர்.
4 எங்கள் பிதாக்கள் உம்மில் நம்பிக்கை வைத்தார்கள்;
நம்பின அவர்களை நீர் விடுவித்தீர்.
5 உம்மை நோக்கிக் கூப்பிட்டு விடுதலைபெற்றார்கள்.
உம்மை நம்பி வெட்கப்பட்டுப் போகாதிருந்தார்கள்.
6 நானோ ஒரு புழு, மனுஷனல்ல;
மனுஷரால் நிந்திக்கப்பட்டவன், ஜனங்களால் அவமதிக்கப்பட்டவன்.
7 என்னைப் பார்க்கிறவர்களெல்லாரும் என்னைப் பரியாசம்பண்ணுகிறார்கள்;
அவர்கள் தங்கள் உதட்டைப் பிதுக்கித் தலையைத் துலுக்கி:
8 யெகோவாவின்மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவனை விடுவிக்கட்டும்,
இவன்மேல் பிரியமாயிருக்கிறாரே, இவனை மீட்டுவிடட்டும்
என்கிறார்கள்.
9 நீரே என்னைக் கர்ப்பத்திலிருந்து எடுத்தவர்;
என் தாயினிடம் நான் பால்குடித்த காலிலேயே
என்னை நம்பிக்கையுடையவனாயிருக்கப் பண்ணினீர்.
10 கர்ப்பத்திலிருந்தே உமது சார்பில் விழுந்தேன்;
நான் என் தாயின் வயிற்றில் இருந்தது முதலே நீர் என் கடவுள்.
11 என்னை விட்டுத் தூரமாகாதேயும்,
ஆபத்து கிட்டியிருக்கிறது, சகாயருமில்லை.
12 அநேகம் காளைகள் என்னைச் சூழ்ந்திருக்கின்றன;
பாசான் தேசத்துப் பலத்த எருதுகள் என்னை வளைந்துகொண்டன.
13 பீறிக்கொச்சிக்கிற சிங்கத்தைப்போல்
எனக்கு விரோதமாய்த் தங்கள் வாயைத் திறக்கிறார்கள்.
14 தண்ணீரைப்போல ஊற்றுண்டேன்,
என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டன;
என் இருதயம் மெழுகுபோலாகி,
என் குடல்களின் நடுவே உருகிற்று.
15 என் பலம் ஓட்டைப்போலாகக் காய்ந்தது;
என் நாவு மேல்வாயோடே ஒட்டிக்கொண்டது,
என்னை மரணத்தூளிலே போட்டீர்.
16 நாய்கள் என்னைச் சூழ்ந்தன,
தீமைசெய்வோரின் கூட்டம் என்னை வளைந்துகொண்டது,
என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள்.
17 என் எலும்புகளையெல்லாம் நான் எண்ணலாம்;
அவர்கள் என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.
18 என் வஸ்திரங்களைத் தங்களுக்குப் பங்கிட்டுக்கொண்டு
என் உடையின்மேல் சீட்டுப்போடுகிறார்கள்.
19 யெகோவா, நீர் எனக்குத் தூரமாகாதேயும்,
என் பலமே, எனக்குச் சகாயம்பண்ண விரைந்தருளும்.
20 என் ஆத்துமாவைப் பட்டயத்திற்குத் தப்புவியும்,
என் ஆருயிர் நாய்வசமாகாதபடி காப்பாற்றும்.
21 என்னைச் சிங்கத்தின் வாயிலிருந்து ரட்சியும்;

நான் காட்டெருதின் கொம்புகளில் இருக்கும்போது
எனக்கு மறுமொழி கொடுத்தீர்.
22 உமது திருநாமத்தை என் சகோதரருக்கு அறிவித்துச்
சபைநடுவில் உம்மைத் துதிப்பேன்.
23 யெகோவாவுக்குப் பயப்படுகிறவர்களே, அவரைத் துதியுங்கள்;
யாக்கோபின் சந்ததியாரே, நீங்கள் எல்லாரும் அவரைக் கனம்பண்ணுங்கள்;
இஸ்ரவேலின் சந்ததியாரே, நீங்கள் எல்லாரும் அவருக்கு அஞ்சுங்கள்.
24 சிறுமையானவனின் சிறுமையை அவர் அற்பமாய் எண்ணவில்லை, அருவருக்கவில்லை;
தமது முகத்தை அவனுக்கு மறைக்கவுமில்லை,
தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனுக்கு கேட்டருளினார்.
25 மகா சபையில் நான் உம்மையே துதிப்பேன்,
அவருக்குப் பயப்படுகிறவர்களுக்கு முன்பாக
என் பொருத்தனைகளைச் செலுத்துவேன்.
26 சிறுமையானவர்கள் புசித்துத் திருப்தியடைவார்கள்;
யெகோவாவைத் தேடுகிறவர்கள் அவரைத் துதிப்பார்கள்;
உங்கள் இருதயம் என்றென்றைக்கும் வாழும்.
27 பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து யெகோவாவினிடம் திரும்பும்;
புறஜாதிகளின் சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுதுகொள்ளும்.
28 ராஜ்யம் யெகோவாவினுடையதே,
அவர் புறஜாதிகளை ஆளுகிறவர்.
29 பூமியிலுள்ள கொழுத்தவர்கள் யாவரும் புசித்துப் பணிந்துகொள்வார்கள்;
புழுதியில் இறங்குகிறவர்கள் யாவரும்,
அழியாதபடி தங்கள் உயிரைக் காத்துக்கொள்ள முடியாதவர்கள் யாவருமே,
அவருக்கு முன்பாக வணங்குவார்கள்.
30 வரப்போகிற சந்ததி அவரைச் சேவிக்கும்;
இனிவரும் தலைமுறைக்கு ஆண்டவரின் செய்தி அறிவிக்கப்படும்;
31 அவர்கள் வந்து இவைகளைச் செய்தவர் அவரே என்று
பிறக்கப்போகிற ஜனத்துக்கு அவர் நீதியை அறிவிப்பார்கள்.

தாவீதின் சங்கீதம். **23**

யெகோவா என் மேய்ப்பர்,
எனக்கு ஒன்றும் குறைவில்லை.
அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் 2
மடக்கி,
களைப்பாற்றும் தண்ணீர்களண்டையில்
என்னைக் கொண்டுபோய் விடுகிறார்.
அவர் எனக்குப் புது உயிர் கொடுக்கிறார், 3
தமது நாமத்தினிமித்தம் என்னை நீதியின்
பாதைகளில் நடத்துகிறார்.
நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே 4
நடந்தாலும்
பொல்லாங்குக்குப் பயப்படேன்;
தேவரீர் என்னோடுகூட இருக்கிறீர்;
உமது கோலும் உமது தடியும் என்னைத்
தேற்றும்.
என் சத்துருக்களுக்கு முன்பாக 5
நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்
படுத்தி
என் தலைக்கு எண்ணெய் பூசுகிறீர்;
என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.
என் ஜீவனுள்ள நாளெல்லாம் 6
நன்மையும் கிருபையும் என்னைத்
தொடரும்;
நான் யெகோவாவின் வீட்டிலே சதாகாலமும் நிலைத்திருப்பேன்.

தாவீதின் சங்கீதம். **24**

பூமியும் அதின் நிறைவும்
உலகமும் அதின் குடிகளும்
யெகோவாவினுடையவை,
அதைக் கடல்களின்மேல் அஸ்திபாரப் 2
படுத்தி
நதிகளின்மேல் ஸ்தாபித்தவர் அவரே.
யெகோவாவின் பர்வதத்தில் ஏறுபவன் 3
யார்?
அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிற்பவன்
யார்?
சுத்தமுள்ள கைகளும் மாசற்ற இருதய 4
மும் உடையவனுமே
பொய்யானவற்றில் மனம்வையாமலும்
கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே.
அவன் யெகோவாவினிடமிருந்து ஆசீர் 5
வாதத்தையும்,
தன் ரட்சிப்பின் கடவுளினிடமிருந்து நீதி
யையும் பெறுவான்.
அவரைத் தேடி விசாரிக்கிறவர்களின் சந்ததி 6
இதுவே,
உமது சமுகத்தை நாடுகிறவர்களே யாக்
கோபின் சந்ததி.
வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங் 7
கள்;

அநாதி கதவுகளே உயருங்கள்;
மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்.
8 யார் இந்த மகிமையின் ராஜா?
அவர் வல்லமையும் பராக்கிரமமுமுள்ள யெகோவா,
அவரே யுத்தத்தில் பராக்கிரமமுள்ள யெகோவா.
9 வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்,
அநாதி கதவுகளே உயருங்கள்,
மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்.
10 யார் இந்த மகிமையின் ராஜா?
அவர் சேனைகளின் யெகோவா, அவரே மகிமையின் ராஜா.

**25** தாவீதின் சங்கீதம்.
யெகோவா, உமக்கு நேராக என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்.
2 என் கடவுளே, உம்மில் நம்பிக்கை வைத்திருக்கிறேன்,
நான் வெட்கப்பட்டுப்போகாதபடி செய்யும்;
என் சத்துருக்கள் என்னிமித்தம் மகிழ்வொட்டாதிரும்.
3 உம்மை நோக்கிக் காத்திருக்கிற எவனும் வெட்கப்பட்டுப்போகாதபடி செய்யும்;
காரணமின்றித் துரோகம்பண்ணுகிறவர்களே வெட்கப்பட்டுப்போவார்களாக.
4 யெகோவாவே, உமது வழிகளை எனக்குக் காட்டியருளும்.
உமது பாதைகளை எனக்குப் போதித்தருளும்.
5 உமது சத்தியத்திலே என்னை நடத்தி என்னைப் போதித்தருளும்,
நீரே என் ரட்சிப்பின் கடவுள்,
உம்மை நோக்கி நாள்முழுதும் காத்திருக்கிறேன்.
6 யெகோவா, உமது இரக்கங்களையும் உமது கிருபைகளையும் நினைத்தருளும்;
அவைகள் அநாதிகாலமுதல் இருக்கிறவைகளே.
7 என் வாலிபப்பருவத்தின் பாவங்களையும் என் மீறுதல்களையும் நினையாதிரும்;
யெகோவா, உமது காருண்யத்தினிமித்தம் என்னை உமது கிருபையின்படியே நினைத்தருளும்.
8 யெகோவா நல்லவர், நேர்மையுள்ளவர்;
ஆகையால் பாவிகளுக்கு வழியைத் தெரிவிக்கிறார்.
9 சிறுமையானவர்களை நியாயமாய் நடத்திச் சிறுமையானவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்.
10 யெகோவாவின் உடன்படிக்கையையும் அவர் சாட்சியங்களையும் கைக்கொள்ளுகிறவர்களுக்கு
அவர் பாதைகளெல்லாம் கிருபையும் சத்தியமுமானவைகள்.
11 யெகோவா, உமது நாமத்தினிமித்தம் என் அக்கிரமத்தை மன்னித்தருளும், அது பெரிது.
12 எந்த மனுஷன் யெகோவாவுக்குப் பயப்படுகிறானோ
அவன் தெரிந்துகொள்ளவேண்டிய வழியை அவர் அவனுக்குப் போதிப்பார்.
13 அவன் சுகவாழ்விலிருப்பான்;
அவன் சந்ததி தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்.
14 தமக்குப் பயந்தவர்களை யெகோவா நம்பி அவர்களுக்குத் தமது இரகசியத்தை வெளியிடுகிறார்;
அவர்களுக்குத் தமது உடன்படிக்கையை விளக்கிக் காட்டுவார்.
15 என் கண்கள் எப்போதும் யெகோவாவை நோக்கியிருக்கின்றன;
அவரே என் கால்களை வலையிலிருந்து விடுவிப்பார்.
16 என் முகமாய்த் திரும்பி எனக்கு இரங்கியருளும்;
நான் தனித்தவன், சிறுமையானவன்.
17 என் இருதயத்தின் வியாகுலங்கள் பெருகிவிட்டன;
என் இடுக்கண்களினின்று என்னை விடுவியும்.
18 என் சிறுமையையும் என் வருத்தத்தையும் பாரும்;
என் பாவங்களையெல்லாம் மன்னித்தருளும்.
19 என் சத்துருக்களைப் பாரும்,
அவர்கள் பெருகி உக்கிரபகையாய் என்னைப் பகைக்கிறார்கள்.
20 என் ஆத்துமாவைக் காப்பாற்றி என்னை விடுவியும்;
நான் வெட்கப்பட்டுப்போகாதபடி செய்யும்;
உம்மில் நம்பிக்கையைவைக்கிறேன்.
21 உத்தமமும் நேர்மையும் என்னைக் காக்கக் கடவது;
நான் உமக்கே காத்திருக்கிறேன்.
22 கடவுளே, இஸ்ரவேலை
அவனுடைய எல்லா இக்கட்டுகளினின்றும் மீட்டருளும்.

**26** தாவீதின் சங்கீதம்.
யெகோவா, என்னை நியாயம் விசாரியும்,
நான் குற்றமற்றவனாய் நடக்கிறேன்;
நான் யெகோவாவில் நம்பிக்கையைவைத்திருக்கிறேன்,

நான் தள்ளாடுவதில்லை.
2 யெகோவா, என்னை ஆராய்ந்து என்னைச்
சோதித்துப்பாரும்;
என் மனதையும் என் இருதயத்தையும்
புடமிட்டுப் பாரும்.
3 உமது கிருபை என் கண்களுக்குமுன்
இருக்கிறது;
உமது சத்தியத்திலே நடந்துகொள்ளுகி
றேன்.
4 வீணரோடே நான் உட்காரவில்லை,
வஞ்சகரோடே நான் சேரவில்லை.
5 தீமைசெய்வோரின் கூட்டத்தை நான்
பகைக்கிறேன்,
தெய்வபயமற்றவரோடு உட்காரேன்.
6 யெகோவா, நான் குறியின் சத்தத்தைத்
தொனிக்கப்பண்ணி
உமது அதிசயங்களையெல்லாம் விவரிக்கும்
படி,
7 குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவி
உமது பீடத்தைச் சுற்றிவருகிறேன்.
8 நீர் வாசமாயிருக்கிற ஆலயத்தையும்
உமது மகிமை தங்கியிருக்கிற ஸ்தலத்தை
யும் ஆசிக்கிறேன்.
9 என் ஆத்துமாவைப் பாவிகளோடும்
என் ஜீவனை ரத்தப்பிரியரோடுங்கூட
எடுத்துக்கொள்ளாதேயும்.
10 அவர்கள் கைகளில் தீவினையிருக்கிறது,
அவர்கள் வலதுகை பரிதானம் நிறைந்
திருக்கிறது.
11 நானோ குற்றமற்றவனாய் நடப்பேன்;
என்னை மீட்டருளும், என்மேல் இரக்க
மாயிரும்.
12 என்கால் சமமான இடத்திலே நிற்கிறது;
சபைகளிலே நான் யெகோவாவைத் துதிப்
பேன்.

**27** தாவீதின் சங்கீதம்.
யெகோவா என் வெளிச்சம், என் ரட்சிப்பு;
யாருக்குப் பயப்படுவேன்?
யெகோவா என் ஜீவனுக்கு அரண்;
யாருக்கு அஞ்சுவேன்?
2 தீமைசெய்கிறவர்களாகிய என் சத்துருக்
களும் என் பகைஞரும்
என் மாம்சத்தைப் பட்சிக்க என்னை நெருங்
குகையில்
அவர்களே இடறிவிழுந்தார்கள்.
3 எனக்கு விரோதமாய் ஒரு பாளயமிறங்கி
னாலும்
என் இருதயம் பயப்படாது,
என்மேல் யுத்தம் எழும்பினாலும்
நான் நம்பிக்கையாயிருப்பேன்.
4 ஒன்றை நான் யெகோவாவினிடம் கேட்
டேன்; அதையே நாடுவேன்:
நான் யெகோவாவின் திவ்யபிரசன்னத்தைப்
பார்க்கவும்
அவர் ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யவும்
என் ஜீவனுள்ள காலமெல்லாம் யெகோவா
வின் ஆலயத்தில்
தங்கியிருப்பதையே நாடுவேன்.
5 தீங்குகாலில் அவர் என்னைத் தம்முடைய
கூடாரத்தில் மறைத்துத்
தமது கூடாரமறைவிலே ஒளித்துவைப்பார்;
என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார்.
6 இப்பொழுதும் என் தலை என்னைச் சுற்றிலு
மிருக்கிற என் சத்துருக்களுக்குமேலாக
நிமிரும்படிசெய்வார்.
நான் அவர் கூடாரத்திலே ஆனந்த பலிகளை
யிட்டு
யெகோவாவைப் பாடிக் கீர்த்தனம்பண்ணு
வேன்.
7 யெகோவா, நான் கூப்பிடுகிற சத்தத்தைக்
கேளும்,
எனக்கு இரங்கி உத்தரவு அருளிச்செய்யும்.
8 என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்
னீரே,
யெகோவா, உமது திருமுகத்தையே தேடு
வேன் என்று
என் இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று.
9 உமது திருமுகத்தை எனக்கு மறையாதே
யும்;
உமது கோபத்தில் அடியேனை விலக்கிப்
போடாதேயும்,
நீரே எனக்குச் சகாயர்;
என் ரட்சிப்பின் கடவுளே,
என்னைத் தள்ளிவிடாமலும் என்னைக் கைவி
டாமலும் இரும்.
10 என் தகப்பனும் என் தாயும் என்னைக்
கைவிட்டாலும்
யெகோவா என்னைச் சேர்த்துக்கொள்ளு
வார்.
11 யெகோவா, உமது வழியை எனக்குப்
போதித்து,
என் எதிராளிகளினிமித்தம்
செவ்வையான பாதையில் என்னை நடத்தும்.
12 என் சத்துருக்களின் இஷ்டத்திற்கு என்னை
ஒப்புக்கொடாதேயும்;
பொய்ச்சாட்சிகளும் கொடுமைசெய்யச் சீறு
கிறவர்களும்
எனக்கு விரோதமாய் எழும்பியிருக்கிறார்
கள்.
13 நானோ ஜீவனுள்ளோர் தேசத்திலே
யெகோவாவின் தயாளத்தைக் கண்டடை
வேன் என்று
நம்பியிராவிட்டால் என் கதி என்னவாகு
மோ!

14 யெகோவாவுக்கே காத்திரு;
உன் இருதயத்தில் பலங்கொண்டு தைரிய
மாயிரு;
யெகோவாவுக்கே காத்திரு.

**28** தாவீதின் சங்கீதம்.
யெகோவா, உம்மை நோக்கிக் கூப்பிடுகி
றேன்;
என் கன்மலையே, கேளாதவர்போல் இருந்து
விடாதேயும்;
நீர் மவுனமாயிருந்தால் நான் குழியில் இறங்
குகிறவர்களுக்கு ஒப்பாவேன்.
2 நான் உம்மை நோக்கிச் சத்தமிட்டு
உமது பரிசுத்த சந்நிதிக்கு நேராகக் கை
யெடுக்கையில்
என் விண்ணப்பங்களின் சத்தத்தைக்
கேட்டருளும்.
3 தெய்வபயமற்றவரோடும் அக்கிரமக்கார
ரோடும் என்னை வாரிக்கொள்ளாதேயும்.
அயலானுக்குச் சமாதான வார்த்தையைச்
சொல்லுகிறார்கள்.
தங்கள் இருதயங்களிலோ தீமையைச் சிந்
திக்கிறார்கள்.
4 அவர்களின் செய்கைகளுக்கும் அவர்களின்
பொல்லாத கிரியைகளுக்கும் தக்கபடி
அவர்களுக்குக் கொடும்,
அவர்கள் கைகளின் செய்கைக்குத்தக்கபடி
அவர்களுக்கு அளியும்,
அவர்களுக்குச் சரிக்குச்சரிசெய்யும்.
5 அவர்கள் யெகோவாவின் கிரியைகளையும்
அவர் கைகளின் செயல்களையும் கவனி
யாதிருக்கிறபடியால்
அவர்களை இடித்துப்போடுவார், அவர்களைக்
கட்டமாட்டார்.
6 யெகோவா ஸ்தோத்திரத்துக்குரியவர்,
அவர் என் விண்ணப்பங்களின் சத்தத்தைக்
கேட்டார்.
7 யெகோவா என் பலம், என் கேடகம்;
அவரில் என் இருதயம் நம்பிக்கையைத்
திருக்கிறது, நான் சகாயம் பெற்றேன்,
ஆகையால் என் இருதயம் களிகூருகிறது;
என் பாட்டினால் அவரைத் துதிப்பேன்.
8 யெகோவா தமது ஜனத்தின் பலம்;
தாம் அபிஷேகம் பண்ணினவனுக்கு
இரட்சணிய ஆதரவு அவரே.
9 தேவரீர் உமது ஜனத்தை ரட்சியும்,
உமது சுதந்தரத்தை ஆசீர்வதியும்;
அவர்களுக்கு மேய்ப்பனாயிருந்து அவர்களை
என்றைக்கும் சுமந்தருளும்.

**29** தாவீதின் சங்கீதம்.
தெய்வதூதர்களே, யெகோவாவைக் கொ
ண்டாடுங்கள்,
யெகோவாவுக்கே மகிமையையும் வல்லமை
யையும் செலுத்துங்கள்.
யெகோவாவின் திருநாமத்திற்குரிய மகிமை 2
யை அவருக்குச் செலுத்துங்கள்;
பரிசுத்த அலங்காரத்தோடு யெகோவாவைத்
தொழுதுகொள்ளுங்கள்.
யெகோவாவின் சத்தம் தண்ணீர்கள்மேல் 3
தொனிக்கிறது;
மகிமையுள்ள கடவுள் முழங்குகிறார்:
யெகோவா திரளான தண்ணீர்கள்மேல்
இருக்கிறார்.
யெகோவாவின் சத்தம் வல்லமையுள்ளது; 4
யெகோவாவின் சத்தம் மகத்துவமுள்ளது.
யெகோவாவின் சத்தம் கேதுருமரங்களை 5
முறிக்கிறது;
யெகோவா லீபனோனின் கேதுருமரங்களை
முறித்துவிடுகிறார்.
அவைகளைக் கன்றுக்குட்டிகள்போலவும் 6
லீபனோனையும் சிரியோனையும் காட்டெருது
கள்போலவும்
துள்ளப்பண்ணுகிறார்.
யெகோவாவின் சத்தம் அக்கினிஜ்வாலை 7
களைப் பிளக்கிறது.
யெகோவாவின் சத்தம் வனாந்தரத்தை அதி 8
ரப்பண்ணுகிறது.
யெகோவா காதேஸ் வனாந்தரத்தை அதிரப்
பண்ணுகிறார்.
யெகோவாவின் சத்தம் பெண்மான்கள் 9
ஈனும்படிசெய்கிறது;
காடுகளைத் திறப்பாக்குகிறது,
அவர் ஆலயத்திலுள்ள ஒவ்வொன்றும்,
மகிமை, மகிமை என்று சொல்லிப் புகழ்
கிறது.
யெகோவா ஜலப்பிரளயத்தை வருவிக்கிற 10
வராய் வீற்றிருந்தார்,
யெகோவா என்றைக்கும் ராஜாவாக வீற்றி
ருக்கிறார்.
யெகோவா தமது ஜனத்திற்குப் பலங்கொடுப் 11
பார்;
யெகோவா தமது ஜனத்திற்குச் சமாதானம்
அருளி அவர்களை ஆசீர்வதிப்பார்.

**30** தாவீதின் சங்கீதம்; ஓரகப் பிரதிஷ்டைக்
கீர்த்தனை.
யெகோவா, நான் உம்மை உயர்த்திப் பாடு
வேன்;
நீர் என்னைக் கைதூக்கி எடுத்தீர்;
என் சத்துருக்களை என்னிமித்தம் மகிழ
விடவில்லை.
என் கடவுளாகிய யெகோவா, உம்மைநோக் 2
கிக் கூப்பிட்டேன்,
என்னை நீர் குணமாக்கினீர்,

3 யெகோவா, நீர் என் ஆத்துமாவைப் பாதாளத்திலிருந்து ஏறச்செய்தீர்,
நான் குழியில் இறங்காதபடி என்னை உயிரோடு காத்தீர்.
4 யெகோவாவின் பக்தர்களே, அவரைத் துதித்துப் பாடுங்கள்;
அவருடைய பரிசுத்த நாமத்தை நன்றியறிதலோடு கொண்டாடுங்கள்.
5 அவருடைய கோபம் நிமிஷநேரம்.
அவருடைய கிருபையோ வாழ்நாளெல்லாம்;
இராக்காலத்திலே அழுகை தங்கினாலும்
விடியற்காலத்திலே களிப்பின் தொனி கேட்கும்.
6 நானே ஒருக்காலும் அசைக்கப்படுவதில்லை யென்று
என் வாழ்விலே சொன்னேன்.
7 யெகோவா, நான் வசிக்கும் பர்வதத்தை
உமது கிருபையினால் நீர் திடமாய் நிற்கப்பண்ணினீர்:
உமது திருமுகத்தை நீர் மறைத்துக்கொண்டபோதோ
நான் கலங்கினவனானேன்.
8 யெகோவா, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன்;
யெகோவாவினிடம் விண்ணப்பஞ் செய்து:
9 நான் குழியில் இறங்கும்போது என் இரத்தத்தால் என்ன லாபமுண்டு,
புழுதி உம்மைத் துதித்து, உமது சத்தியத்தை அறிவிக்குமோ,
10 யெகோவா, எனக்கு இரங்கிச் செவிசாய்த்தருளும்;
யெகோவா, எனக்குச் சகாயராயிரும்
என்று சொன்னேன்.
11 என் புலம்பலை ஆனந்த நடனமாக மாற்றிவிட்டீர்:
நீர் என் இரட்டைக் கீனைத்துபோட்டு
மகிழ்ச்சியென்னும் கச்சையினால் என்னை இடைகட்டினீர்.
12 என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம்பண்ணும்படியாகவே
இப்படிச் செய்தீர்.
என் கடவுளாகிய யெகோவாவே, உமக்கு
என்றைக்கும் நன்றிசெலுத்துவேன்.

**31** தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு.
யெகோவா, நீரே என் அடைக்கலம்,
நான் ஒருக்காலும் வெட்கப்படாதபடி செய்யும்;
உமது நீதியின்படி என்னை விடுவியும்.
2 உமது திருச்செவியை எனக்குச் சாய்த்துச்
சீக்கிரமாய் என்னை விடுவியும்;
நீர் எனக்குப் பலத்த துருக்கமும் என்னை
இரட்சிக்கும் அரணுமாயிரும்.
3 என் கன்மலையும் என் கோட்டையும் நீரே;
உமது திருநாமத்தினிமித்தம் எனக்கு வழி
காட்டி என்னை நடத்தியருளும்.
4 அவர்கள் எனக்கு மறைவாய் வைத்த வலையிலிருந்து என்னை விடுவித்தருளும்;
தேவரீரே எனக்கு அரண்.
5 உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்;
சத்தியபரனாகிய யெகோவா, நீர் என்னை மீட்டுக்கொண்டீர்.
6 வீண் விக்கிரகங்களைப் பற்றிக்கொள்ளுகிறவர்களை நான் பகைக்கிறேன்;
என் நம்பிக்கையோ யெகோவாவிலே இருக்கிறது.
7 உமது கிருபையிலே களிகூர்ந்து மகிழுவேன்;
நீர் என் உபத்திரவத்தைப் பார்த்திருக்கிறீர்;
நெருக்கங்களிலே என்னைக் கவனித்திருக்கிறீர்.
8 சத்துருவின் கையில் என்னை விட்டுவிடவில்லை;
என் கால்களை விசாலத்திலே நிற்கச்செய்தீர்.
9 யெகோவா, எனக்கு இரங்கியருளும்;
நான் நெருக்கத்திலிருக்கிறேன்;
துயரத்தினால் என் கண்ணும்
என் ஆத்துமாவும் என் வயிறுங்கூடத் தொய்ந்துபோயின.
10 என் ஜீவகாலம் சஞ்சலத்திலும் என் வருஷங்கள் தவிப்பிலும் கழிந்துபோயின;
என் அக்கிரமத்தினாலே என் பலம் குறைந்து
என் எலும்புகள் உலர்ந்துபோயின.
11 என் சகல சத்துருக்களினிமித்தமும் நான்
நிந்தைக்காளானேன்;
என் அயலாருக்கு நான் பெரிய நிந்தை;
எனக்கு அறிமுகமானவர்களுக்குத் திகிலானேன்;
வீதியிலே என்னைக் காண்பவர்களும் விலகி ஓடுவார்கள்.
12 செத்தவன்போல் ஒருவர் மனதிலுமில்லாமல் மறக்கப்பட்டேன்;
உடைந்த பாத்திரம்போலானேன்.
13 அநேகர் சொல்லும் அவதூறு எனக்கு எட்டினது;
எப்பக்கமும் திகில் என்னைச் சூழ்ந்தது;
அவர்கள் எனக்கு விரோதமாக ஏகமாய் ஆலோசனை செய்தார்கள்;
என் உயிரை வாங்கச் சதியாலோசனை செய்தார்கள்.
14 நானோ, யெகோவா, உம்மில் நம்பிக்கை வைத்திருக்கிறேன்;
நீரே என் கடவுள் என்று சொன்னேன்.

15 என் காலங்கள் உமது கரத்திலிருக்கின்றன;
என் சத்துருக்களின் கையினின்றும் என்னை
இம்சைப்படுத்துகிறவர்களின் கையினின்றும்
என்னை விடுவித்தருளும்.
16 உமது திருமுகத்தை உமது ஊழியக்காரன்
மீது பிரகாசிக்கச்செய்தருளும்;
உமது கிருபையினாலே என்னை இரட்சித்
தருளும்.
17 யெகோவாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்
டேன்;
நான் வெட்கப்படாதபடி செய்யும்;
தெய்வபயமற்றவர்கள் வெட்கப்பட்டுப் பா
தாளத்தில் மவுனமாயிருக்கட்டும்.
18 நீதிமானுக்கு விரோதமாய்ப் பெருமையோ
டும் இகழ்ச்சியோடும்
இறுமாப்பாய்ப் பேசுகிற பொய் உதடுகள்
பேச்சற்றுப்போகட்டும்.
19 உமக்குப் பயந்தவர்களுக்கென்று நீர் வைத்
திருக்கிற நன்மை எவ்வளவு பெரிது!
மனுபுத்திரர் முன்னிலையில் உம்மிடம்
அடைக்கலம் புகுந்தவர்களுக்கு
நீர் செய்திருக்கிற நன்மை எவ்வளவு
பெரிது!
20 மனுஷர் சதியோசனைக்கு அவர்களை உமது
சமுகத்தின் மறைவிலே மறைத்து
நாவுகளின் சண்டைக்கு அவர்களை விலக்கி
உமது கூடாரத்திலே ஒளித்துவைத்துக் காப்
பாற்றுகிறீர்.
21 யெகோவா ஸ்தோத்திரத்துக்குரியவர்,
அரணான நகரத்தில்
எனக்குத் தமது கிருபையை அதிசயமாய்
விளங்கப்பண்ணினாரே.
22 நானோ உமது கண்களுக்குமுன் இராதபடி
வெட்டுண்டேன்
என்று என் மனக்கலக்கத்திலே சொன்
னேன்;
உம்மை நோக்கிக் கூப்பிட்டபோதோ
நீர் என் விண்ணப்பங்களின் சத்தத்தைக்
கேட்டீர்.
23 யெகோவாவின் பக்தர்களே, நீங்களெல்லா
ரும் அவரில் அன்புகூருங்கள்;
உண்மையுள்ளவர்களை யெகோவா தற்காப்
பார்,
பெருமைபாராட்டுகிறவனுக்கோ பூரண
மாய்ப் பதிலளிப்பார்.
24 யெகோவாவுக்குக் காத்திருக்கிறவர்களே,
நீங்களெல்லாரும் உங்கள் இருதயத்தில்
பலங்கொண்டு தைரியமாயிருங்கள்.

**32** தாவீதின் மஸ்கில் சங்கீதம்.

எவன் மீறுதல் மன்னிக்கப்பட்டதோ,
எவன் பாவம் மூடப்பட்டதோ
அவன் பாக்கியவான்.
எவன் அக்கிரமத்தை யெகோவா எண்ணா 2
திருக்கிறாரோ,
எவன் ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ
அவன் பாக்கியவான்.
நான் வெளியிடாமல் மனதில் அடக்கி 3
யிருந்தபோது
ஓயாத கதறுதலினால் என் எலும்புகள்
உலர்ந்துபோயின.
இரவும் பகலும் என்மேல் உமது கை பார 4
மாயிருந்ததினால்
என் சாரம் உஷ்ணகால வறட்சியாய்
மாறிற்று.
நான் என் அக்கிரமத்தை மறைக்காமல் என் 5
பாவத்தை உம்மிடம் ஒப்புக்கொண்
டேன்;
என் மீறுதல்களை யெகோவாவுக்கு அறிக்
கையிடுவேன் என்றேன்;
தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்
னித்தீர்.
இப்படியிருப்பதால் 6
உம்மைக் கண்டுபிடிக்கும் சமயம்பார்த்துப்
பக்தியுள்ளவனெவனும் உம்மை நோக்கி
விண்ணப்பஞ்செய்யட்டும்;
மிகுந்த ஜலப்பிரவாகம் வந்தாலும் அது
அவனை அணுகுவதேயில்லை.
நீர் எனக்கு மறைவிடம்; 7
என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக் காப்
பீர்;
இரட்சணியப் பாடல்கள் என்னைச் சூழ்ந்து
கொள்ளும்படி செய்வீர்.
நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண் 8
டிய வழியை உனக்குக் கற்பிப்பேன்;
உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு
ஆலோசனை சொல்லுவேன்.
வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய்கட்டப் 9
பட்டாலன்றி உன் கிட்டச் சேராத
குதிரையைப்போலவும் புத்தியில்லாக் கோ
வேறு கழுதையைப்போலவும் இருக்க
வேண்டாம்,
தெய்வபயமற்றவனுக்கு வரும் வேதனைகள் 10
அநேகம்;
யெகோவாவில் நம்பிக்கையாயிருக்கிறவனை
யோ கிருபை சூழும்.
நீதிமான்களே, யெகோவாவில் மகிழ்ந்து களி 11
கூருங்கள்;
நேர்மையான இருதயமுள்ளவர்களே, நீங்
கள் எல்லாரும் ஆனந்தமுழக்கமிடுங்
கள்.
நீதிமான்களே, யெகோவாவில் களிகூர்ந்து **33**
முழக்கமிடுங்கள்;

துதி செய்வது நேர்மையானவர்களுக்குத் தகுந்தது.

2 நன்றியறிந்தவர்களாய் யெகோவாவைச் சுர மண்டலத்தினால் துதியுங்கள்;
பத்துநரம்பு வீணையினால் அவரைக் கீர்த்தனம்பண்ணுங்கள்.

3 புதுப்பாட்டைப் பாடி அவரைத் துதியுங்கள்;
ஆனந்த சத்தத்தோடே வாத்தியங்களை நேர்த்தியாய் வாசியுங்கள்.

4 யெகோவா வார்த்தை நேர்மையானது;
தாம் செய்வதையெல்லாம் அவர் உண்மையின்படியே செய்கிறார்.

5 அவர் நீதி நியாயங்களில் பிரியப்படுகிறவர்
பூமி யெகோவாவின் காருணியம் நிறைந்திருக்கிறது.

6 யெகோவா வார்த்தையினால் வானங்களும்,
அவர் வாயின் சுவாசத்தினால் அவற்றின் சர்வ சேனையும்
உண்டாக்கப்பட்டன.

7 அவர் சமுத்திர ஜலங்களைக் குவியலாகச் சேர்க்கிறார்;
ஆழத்தின் ஜலங்களைப் பொக்கிஷவைப்பாக வைக்கிறார்.

8 பூமியெல்லாம் யெகோவாவுக்குப் பயப்படுவதாக;
உலகின் குடிகளெல்லாம் அவருக்கு அஞ்சி நிற்பார்களாக.

9 அவர் சொல்ல ஆயிற்று;
அவர் கட்டளையிட நிலைநின்றது.

10 யெகோவா புறஜாதிகளின் ஆலோசனையை விருதாவாக்குகிறார்;
ஜனங்களின் எண்ணங்களை அவமாக்குகிறார்.

11 யெகோவா ஆலோசனை நித்தியகாலமாகவும்;
அவர் இருதயத்தின் எண்ணங்கள் தலைமுறை தலைமுறையாகவும் நிலைநிற்கும்.

12 யெகோவாவைத் தெய்வமாகவுடைய ஜாதியும்,
அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளன.

13 யெகோவா வானத்திலிருந்து நோக்கிப் பார்த்து
எல்லா மனுப்புத்திரரையும் காண்கிறார்.

14 தாம் வாசமாயிருக்கிற ஸ்தானத்திலிருந்து
பூமியின் குடிகள் எல்லார்மேலும் கண்ணோக்கமாயிருக்கிறார்.

15 அவர்கள் இருதயங்களையெல்லாம் அவர் உருவாக்கினார்,
அவர்கள் செய்கைகளையெல்லாம் கவனித்து வருகிறார்.

எந்த ராஜாவும் தன் சேனபலத்தினாலே 16
ரட்சிக்கப்படான்;
எந்த வீரனும் தன் மிகுந்த பலத்தினாலே
தப்புவிக்கப்படான்.

இரட்சிக்கிறதற்குக் குதிரை விருதா? 17
அது தன் மிகுந்த வீரியத்தினால் தப்புவியாது.

தமக்குப் பயந்து தமது கிருபைக்குக் காத் 18
திருக்கிறவர்களை
மரணத்திலிருந்து விடுவிக்கவும் 19
பஞ்சத்தில் அவர்களை உயிரோடு காக்கவும்,
இதோ, யெகோவாவின் கண் நோக்கமா
யிருக்கிறது.

நம்முடைய ஆத்துமா யெகோவாவுக்குக் 20
காத்திருக்கிறது;
அவரே நமக்குத் துணை, நமக்குக் கேடகம்.

அவருடைய பரிசுத்த நாமத்தில் நாம் நம் 21
பிக்கை வைத்திருக்கிறபடியால்,
நம்முடைய இருதயம் அவரில் களிகூரும்.

யெகோவா, நாங்கள் உமக்குக் காத்திருக் 22
கிறபடியே
உமது கிருபை எங்கள்மேல் இருப்பதாக.

தாவீதின் சங்கீதம்; தான் புத்திமாறாட்டமா **34**
யிருப்பதுபோல் அபிமேலேக்கின்முன்
காட்டினபோது, அவனால் துரத்திவிடப்
பட்டுப் போகையில் பாடினது.

யெகோவாவை நான் எக்காலங்களிலும்
ஸ்தோத்திரிப்பேன்;
அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்.

யெகோவாவில் என் ஆத்துமா மேன்மை 2
பாராட்டும்; சிறுமையானவர்கள் அதைக்
கேட்டு மகிழுவார்கள்.

என்னோடு சேர்ந்து யெகோவாவை மகிமைப் 3
படுத்துங்கள்;
நாம் ஏகோபித்து அவர் நாமத்தை
உயர்த்துவோமாக.

நான் யெகோவாவைத் தேடினேன்; 4
அவர் எனக்கு மறுமொழி கொடுத்து என்
எல்லாப் பயத்தினின்றும் என்னை விடு
வித்தார்.

அவர்கள் அவரை நோக்கிப்பார்த்து முக 5
மலர்ந்தார்கள்,
அவர்கள் முகங்கள் வெட்கமடைவதே
யில்லை.

இந்த ஏழை கூப்பிட்டான், யெகோவா 6
கேட்டருளி
அவனுடைய சகல இடுக்கண்களினின்றும்
அவனை விடுவித்து ரட்சித்தார்.

யெகோவாவின் தூதனானவர் அவருக்குப் 7
பயந்தவர்களைச் சூழப் பாளையமிறங்கி
அவர்களை விடுவிக்கிறார்.

8 யெகோவா நல்லவர் என்று ருசித்தறியுங்கள்;
அவரில் அடைக்கலம் புகும் மனுஷன் பாக்கியவான்.
9 யெகோவாவின் பரிசுத்தவான்களே, அவருக்குப் பயப்படுங்கள்;
அவருக்குப் பயப்படுகிறவர்களுக்குக் குறைவில்லை.
10 பாலசிங்கங்கள் குறையுற்றுப் பட்டினியாயிருக்கும்,
யெகோவாவைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறையாது.
11 பிள்ளைகளே வாருங்கள், எனக்குச் செவிகொடுங்கள்;
யெகோவாவுக்குப் பயப்படும் பயத்தை உங்களுக்குப் போதிப்பேன்.
12 நன்மையைக் கண்டு அனுபவிக்கும்படி
ஜீவனை விரும்பி நீடித்த நாட்களை அபேட்சிக்கிற மனுஷன் யார்?
13 பொல்லாப்புக்கு உன் நாவை விலக்கிக் கபடம் பேசாதபடி உன் உதடுகளைக் காத்துத்
14 தீமையை விட்டு நீங்கி நன்மை செய்து
சமாதானத்தைத் தேடி அதைப் பின்தொடர்ந்துகொள்.
15 யெகோவா கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கம்,
அவர் செவிகள் அவர்கள் வேண்டுதலின்மேலே கவனம்,
16 தீமைசெய்கிறவர்கள் ஞாபகம்
பூமியிலிராதபடி அற்றுப்போகப் பண்ண
யெகோவா முகம் அவர்களுக்கு விரோதம்.
17 கூப்பிடுகிறவர்களுக்கு யெகோவா செவிசாய்த்தருளிச்
சகல இடுக்கண்களினின்றும் அவர்களை விடுவிக்கிறார்.
18 உடைந்த இருதயமுள்ளவர்களுக்கு யெகோவா சமீபம்,
நைந்த ஆவியுள்ளவர்களை ரட்சிக்கிறார்.
19 நீதிமானுக்கு வரும் தீங்குகள் அநேகம்;
யெகோவா அவைகளெல்லாவற்றினின்றும்
அவனை விடுவிப்பார்.
20 அவன் எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார்;
அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை.
21 தீமை தெய்வபயமற்றவனைக் கொல்லும்;
நீதிமானைப் பகைக்கிறவர்கள் குற்றவாளிகளாக எண்ணப்படுவார்கள்.
22 யெகோவா தமது தாசரின் ஆத்துமாவை மீட்டுக்கொள்ளுகிறார்;
அவரிடம் அடைக்கலம்புகும் எவனும் குற்றவாளியாக எண்ணப்படான்.

தாவீதின் சங்கீதம். **35**

யெகோவா, நீர் என் வழக்காளிகளோடே வழக்காடும்,
என்னோடு யுத்தம் பண்ணுகிறவர்களோடே யுத்தம்பண்ணும்.
2 நீர் கேடகத்தையும் பரிசையையும் பிடித்து
எனக்குத் துணையாக எழுந்து நில்லும்.
3 ஈட்டியை ஓங்கி என்னைப் பிடிக்கத்தொடருகிறவர்களை மறித்து,
நானே உன் ரட்சிப்பு என்று என் ஆத்துமாவுக்குச் சொல்லும்.
4 என் உயிரை வாங்கத் தேடுகிறவர்கள்
வெட்கிக் கலங்குவார்களாக,
எனக்குத் தீங்குசெய்ய நினைக்கிறவர்கள்
பின்னிட்டுத் திரும்பி நாணமடைவார்களாக.
5 யெகோவாவின் தூதன் அவர்களைத் துரத்தவே,
அவர்கள் காற்றுமுகத்தில் பறக்கும் பதரைப்போலாவார்களாக.
6 யெகோவாவின் தூதன் அவர்களைப் பிடிக்கத் தொடருகையில்
அவர்கள் வழி இருளும் சறுக்கலுமாவதாக.
7 வலையுள்ள குழியைக் காரணமில்லாமலே
எனக்கென்று ஒளித்துவைத்தார்கள்,
காரணமில்லாமலே அதை எனக்கென்று
வெட்டிவைத்தார்கள்.
8 அவர்களுக்குத் தெரியாமலே அவர்களுக்கு அழிவு வரட்டும்,
அவர்கள் ஒளித்துவைத்த வலை அவர்களையே
பிடிக்கட்டும்;
அவர்களே அந்தக் குழியில் விழுந்து
அழிந்துபோகட்டும்.
9 என் ஆத்துமாவோ யெகோவாவில் களிகூரும்,
அவர் அளிக்கும் ரட்சிப்பில் மகிழ்ந்திருக்கும்.
10 யெகோவா, உமக்கு நிகரானவர் யார்?
சிறுமையானவனை அவனிலும் பலவானுடைய கையினின்றும்
சிறுமையும் எளிமையுமானவனைக் கொள்ளையிடுகிறவனுடைய கையினின்றும்
விடுவிக்கிறீர் என்று என் எலும்புகளெல்லாம் சொல்லும்.
11 அநியாயமான சாட்சிகள் எழும்பி
எனக்குத் தெரியாதவைகளை என்னிடம்
கேட்கிறார்கள்.
12 நான் செய்த நன்மைக்குப் பதிலாகத் தீமை
செய்கிறார்கள்,
என் ஆத்துமா நிர்க்கற்றுப்போகப் பார்க்கிறார்கள்.

13 நானே அவர்கள் வியாதியாயிருந்தபோது
இரட்டை உடுத்திக்கொண்டேன்;
உபவாசத்தால் என்னை ஒடுக்கித் தலை
குனிந்து ஜெபித்துக்கொண்டேயிருந்
தேன்.
14 நான் அவனை என் சிநேகிதனுகவும் சகோத
ரனுகவும் பாவித்து நடந்துகொண்டேன்,
தாய்க்காகத் துக்கிக்கிறவனைப்போல் துக்க
வஸ்திரம் தரித்துத் தலைகவிழ்ந்து நடந்
தேன்.
15 நான் தடுமாறினபோதோ அவர்கள் சந்தோ
ஷப்பட்டுக் கூட்டங்கூடினார்கள்,
நீசரும் நான் அறியாதவர்களும் எனக்கு
விரோதமாய்க் கூட்டங்கூடினார்கள்;
ஓயாமல் என்னை நிந்தித்தார்கள்.
16 பக்ஷணத்திற்காக இச்சகம் பேசுகிற பரியா
சக்காரரோடு சேர்ந்துகொண்டு
என்பேரில் பற்கடித்தார்கள்.
17 ஆண்டவரே, எதுவரைக்கும் இதைப் பார்த்
துக்கொண்டிருப்பீர்?
என் ஆத்துமாவை அழிவினின்றும்
என் ஆருயிரைப் பாலசிங்கங்களினின்றும்
விடுவியும்.
18 மகாசபையிலே உமக்கு நன்றிசெலுத்த
வேன்,
திரள் ஜனங்கள் நடுவில் உம்மைப் புக
ழுவேன்.
19 அநியாயமாய் எனக்குச் சத்துருக்களானவர்
கள் என்னைப்பற்றி மகிழவிடாதேயும்,
காரணமின்றி என்னைப் பகைக்கிறவர்கள்
கண்சிமிட்டவும்
இடங்கொடாதேயும்.
20 அவர்கள் பேச்சு சமாதானமுடையதல்ல,
தேசத்திலே அமைதலாயிருக்கிறவர்களுக்கு
விரோதமாய்
வஞ்சகமான காரியங்களைக் கருதுகிறார்கள்.
21 எனக்கு விரோதமாகத் தங்கள் வாயை விரி
வாய்த் திறந்து
ஆகா, ஆகா, எங்கள் கண்கண்டது என்கி
றார்கள்.
22 யெகோவா, நீர் இதைக் கண்டீர், மவுனமா
யிராதேயும்;
ஆண்டவரே எனக்குத் தூரமாகாதேயும்.
23 என் கடவுளே, என் ஆண்டவரே,
எனக்கு நியாயஞ்செய்யும், என் வழக்கைத்
தீர்த்தருளும்,
விழித்து எழுந்தருளும்.
24 என் கடவுளாகிய யெகோவா, உமது நீதி
யின்படி எனக்கு நியாயஞ்செய்யும்;
என்னைப்பற்றி அவர்கள் மகிழவொட்டா
திரும்.
25 அவர்கள் தங்கள் இருதயத்திலே
ஆகா, நாங்கள் விரும்பினது இதுவே என்று
சொல்லாதபடிக்கும்
அவனை விழுங்கிவிட்டோம் என்று பேசாத
படிக்கும் செய்தருளும்.
எனக்கு கேரிட்ட தீங்கினிமித்தம் சந்தோ 26
ஷிக்கிறவர்கள்
ஏகமாய் வெட்கி நாணுவார்களாக.
எனக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டு
கிறவர்களுக்கு
வெட்கமும் கலக்கமுமே உடையா
வதாக.
என் நீதியில் பிரியங்கொள்ளுகிறவர்கள் 27
கெம்பீரித்து மகிழ்வார்களாக;
தமது அடியானின் வாழ்வில் பிரியங்கொள்
ளுகிற யெகோவாவுக்கு மகிமை உண்டா
வதாக
என்று எப்போதும் சொல்வார்களாக.
என் நாவு உமது நீதியையும், 28
நாள் முழுதும் உமது துதியையும் சொல்
லிக்கொண்டேயிருக்கும்.

**யெகோவாவின் தாசனுகிய தாவீதின் சங்கீதம்; 36**
பாடகர் தலைவனுக்கு.

துன்மார்க்கனிடம் மீறுதலானது சொல்வது
என் உள்ளத்திற்குத் தெரிகிறது,
அவன் கண்களுக்குமுன் தெய்வபயமில்லை.
அவன் அக்கிரமம் அருவருப்பென்று 2
காணப்படுமளவும்
அது அவன் பார்வையில் இன்பமாய்த்
தோன்றுகிறது.
அவன் வாயின் வார்த்தைகள் அக்கிரமும் 3
வஞ்சகமுமுள்ளவை;
விவேகமாய் நடந்துகொள்வதையும் நன்மை
செய்வதையும் விட்டுவிட்டான்.
அவன் தன் படுக்கையில் அக்கிரமத்தை 4
யோசிக்கிறான்.
நல்லதல்லாத வழியிலே நிலைத்திருக்கிறான்,
பொல்லாப்பை வெறுக்காதிருக்கிறான்.
யெகோவா, உமது கிருபை வானங்களில் 5
விளங்குகிறது,
உமது உண்மை மேகமண்டலங்கள் பரியந்
தம் எட்டியுள்ளது.
உமது நீதி மகத்தான பர்வதங்கள் போன் 6
றது,
உமது நியாயங்கள் மகா ஆழமானவை,
யெகோவா, மனுஷரையும் மிருகங்களையும்
காப்பாற்றுகிறவர் நீரே.
கடவுளே, உமது கிருபை எவ்வளவு அரு 7
மையானது!
மனுப்புத்திரர் உமது செட்டைகளின் நிழ
லிலே வந்தடைகிறார்கள்.
உமது வீட்டிலுள்ள ஐசுவரியமானவைகளி 8
னால் பூரண திருப்தியடைவார்கள்,

உமது பேரின்ப நதியிலுல் அவர்கள் தாகத்தைத் தீர்க்கிறீர்.
9 உம்மிடத்திலேயே ஜீவ ஊற்று இருக்கிறது;
உமது வெளிச்சத்திலே வெளிச்சம் காண்போம்.
10 உம்மை அறிந்தவர்களுக்கு உமது கிருபையையும்
நேர்மையான இருதயமுள்ளவர்களுக்கு உமது நீதியையும் பாராட்டிக்கொண்டேயிரும்.
11 பெருமைக்காரரின் கால் என்மேல் வராமலும்
தெய்வபயமற்றவரின் கை என்னைப் பறக்கடியாமலும் இருப்பதாக.
12 அதோ, அக்கிரமஞ் செய்வோர் விழுந்தார்கள்;
அவர்கள் தள்ளுண்டுபோனார்கள், எழுந்திருக்கமாட்டார்கள்.

**37** தாவீதின் சங்கீதம்.

தீமைசெய்கிறவர்களினிமித்தம் எரிச்சலடையாதே;
அநியாயம் செய்கிறவர்கள்மேல் பொறுமை கொள்ளாதே.
2 அவர்கள் புல்லைப்போல் சீக்கிரமாய் உலர்ந்துபோவார்கள்;
பசும்பூண்டைப்போல் வாடிப்போவார்கள்.
3 யெகோவாவில் நம்பிக்கையாயிருந்து நன்மைசெய்;
தேசத்தில் குடியிருந்து உண்மையைக் கடைப்பிடி.
4 யெகோவாவில் மனமகிழ்ச்சியாயிரு.
அவர் உன் இருதயத்தின் விண்ணப்பங்களை உனக்கு அருள்செய்வார்.
5 உன் வழியை யெகோவாவுக்கு ஒப்புவி;
அவரில் நம்பிக்கையாயிரு, அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.
6 உன் நீதியை வெளிச்சம்போலவும்,
உன் நியாயத்தைப் பட்டப்பகல்போலவும் வெளிப்படப்பண்ணுவார்.
7 யெகோவாவை நோக்கி அமர்ந்து அவருக்குக் காத்திரு;
காரியசித்தியுள்ளவனிமித்தமும்
தீவினைகளைச் செய்து முடிக்கிற மனுஷனிமித்தமும்
எரிச்சல்கொள்ளாதே.
8 கோபத்தை விலக்கு, உக்கிரத்தை விட்டுவிடு,
எரிச்சல்கொள்ளாதே, அது தீங்குசெய்வதற்கே ஏதுவாகும்.
9 தீமை செய்கிறவர்கள் அறுப்புண்டுபோவார்கள்;
யெகோவாவுக்குக் காத்திருக்கிறவர்களோ தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்.
10 இன்னுங் கொஞ்சநேரந்தான், அப்போது தெய்வபயமற்றவன் இரான்;
அவன் ஸ்தானத்தை உற்று விசாரித்தால் அவன் இல்லை.
11 சிறுமையானவர்கள் தேசத்தைச் சுதந்தரிப்பார்கள்;
மிகுந்த வாழ்வில் மனமகிழுவார்கள்.
12 தெய்வபயமற்றவன் நீதிமானுக்குத் தீங்கு செய்ய ஆலோசிக்கிறான்;
அவனைப் பார்த்துப் பற்கடிக்கிறான்.
13 ஆண்டவர் அவனைப் பார்த்து நகைக்கிறார்; அவன் நாள் வருகிறதென்று காண்கிறார்.
14 சிறுமையும் எளிமையுமானவனைக் கீழே தள்ளிவிடவும்
நேர்மையான வழியில் நடக்கிறவர்களைக் கொன்றுவிடவும்
தெய்வபயமற்றவர்கள் பட்டயத்தை உருவித் தங்கள் வில்லை நாணேற்றுகிறார்கள்.
15 அவர்கள் பட்டயமோ அவர்கள் இருதயத்திற்குள்ளேயே உருவிப்போம்;
அவர்கள் வில்லுகள் முறிந்துபோம்.
16 தெய்வபயமற்ற அநேகருக்குள்ள செல்வப்
பெருக்கிலும்
நீதிமானுக்குள்ள சொற்பமே நல்லது.
17 தெய்வபயமற்றவர் புயங்கள் முறிந்துபோம்;
நீதிமான்களையோ யெகோவா தாங்குகிறார்.
18 குற்றமற்றவரின் நாட்களை யெகோவா கவனித்துக்கொண்டிருக்கிறார்;
அவர்கள் சுதந்தரம் என்றென்றைக்கும் நிற்கும்.
19 ஆபத்துக்காலத்திலே அவர்கள் வெட்கப்படுவதில்லை,
பஞ்சகாலத்திலும் திருப்தியடைவார்கள்.
20 தெய்வபயமற்றவர்களோ அழிந்துபோவார்கள்;
யெகோவாவின் சத்துருக்கள் புல்வெளியின் அழகைப்போல ஒழிந்துபோவார்கள்;
புகையாக ஒழிந்துபோவார்கள்.
21 தெய்வபயமற்றவன் கடன் வாங்கியே ஜீவித்துச் செலுத்தமுடியாமல் போகிறான்;
நீதிமானோ இரக்கங்காட்டிக் கொடுத்து வருகிறான்.
22 அவரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்;
அவரால் சபிக்கப்பட்டவர்களோ அறுப்புண்டுபோவார்கள்.
23 மனுஷனின் நடைகள் உறுதிப்படுவது
யெகோவாவினாலேயே;
அவன் வழிகள் அவருக்குப் பிரியமாயிருந்தால் அப்படியாகும்.

24 அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவ
தில்லை;
கர்த்தர் கையினால் அவனைத் தாங்குகி
றார்.
25 நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ள
வனுமானேன்,
நீதிமான் கைவிடப்பட்டதையும் அவன்
சந்ததி பிச்சையெடுத்துப் பிழைக்கிறதை
யும்
நான் காணவில்லை.
26 அவன் நாளெல்லாம் இரக்கங்காட்டிக்
கடன் கொடுக்கிறான்,
அவன் சந்ததியும் ஆசீர்வாதமாம்.
27 தீமையைவிட்டு விலகி நன்மைசெய்,
என்றென்றைக்கும் நிலைத்திருப்பாய்.
28 கர்த்தர் நியாயத்தில் பிரியங்கொள்ளுகி
றார்;
தமது பக்தர்களைக் கைவிடுவதில்லை;
அவர்கள் என்றைக்கும் காக்கப்படுவார்கள்;
துஷ்டரின் சந்ததியோ அறுப்
புண்டுபோம்.
29 நீதிமான்கள் தேசத்தைச் சுதந்தரித்துக்
கொள்வார்கள்;
என்றைக்கும் அதிலே வாசமாயிருப்பார்கள்.
30 நீதிமான் வாய் ஞானத்தை உரைக்கும்,
அவன் நாவு நியாயத்தைப் பேசும்.
31 அவனுடைய கடவுளின் பிரமாணம் அவன்
இருதயத்தில் இருக்கிறது;
அவன் நடைகளில் ஒன்றும் வழுவிப்போவ
தில்லை.
32 துஷ்டன் நீதிமான்மேல் கண்
வைத்து
அவனைக் கொல்ல வகைதேடுகிறான்.
33 கர்த்தர் இவனை அவன் கையில் விட்டு
விடமாட்டார்,
நியாயம் விசாரிக்கப்படுகையில்
இவனை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவு
மாட்டார்.
34 கர்த்தருக்குக் காத்திருந்து அவருடைய
வழியை அநுசரி,
அப்பொழுது நீ தேசத்தைச் சுதந்தரித்துக்
கொள்வதற்கு அவர் உன்னை உயர்த்து
வார்;
துஷ்டர் அறுப்புண்டு போவதை
நீ கண்ணாரக் காண்பாய்.
35 துஷ்டனுமற்ற கொடுங்கோலன் ஒருவனைக்
கண்டேன்,
தான் மூளைத்த நிலத்திலேயே வளர்ந்து
வரும் பச்சைமரத்தைப்போல் தழைத்த
வனாயிருந்தான்;
36 அவன் ஒழிந்துபோனான்,
இதோ, அவன் இல்லை;
அவனைத் தேடினேன், அவன் காணப்படா
தே போனான்.
37 நீ உத்தமனை நோக்கியிரு, நேர்மையானவ
னைப் பார்த்திரு;
சமாதான மனுஷன் சந்ததி நிலைநிற்கும்.
38 அக்கிரமக்காரர் ஏகமாய் அழிக்கப்படுவார்
கள்;
துஷ்டரின் சந்ததி அறுப்புண்டு
போம்.
39 நீதிமான்கள் இரட்சிப்போ கர்த்தரினால்
வரும்,
இக்கட்டுக்காலத்தில் அவரே அவர்கள்
அடைக்கலம்.
40 கர்த்தர் துணை நின்று அவர்களை விடுவிப்
பார்,
அவர்கள் அவரில் அடைக்கலம் புகுந்திருக்
கிறபடியால்
துஷ்டரின் கையினின்று அவர்
களை விடுவித்துக்காப்பார்.

**தாவீதின் சங்கீதம்; நினைவுகூருதலாகப் பாடி 38**
னது.

கர்த்தாவே, உமது உக்கிரத்திலே என்னைத்
தண்டியாதேயும்;
உமது எரிச்சலிலே என்னைக் கண்டியாதே
யும்.
2 உமது அம்புகள் எனக்குள்ளே தைத்திருக்
கின்றன;
உமது கை என்மேல் இறுத்துகிறது.
3 உமது கோபத்தினிமித்தம் என் மாம்சத்தில்
ஆரோக்கியமில்லை;
என் பாவத்தினிமித்தம் என் எலும்புகளில்
சவுக்கியமில்லை.
4 என் அக்கிரமங்கள் என் தலைக்குமேல் பெரு
கின;
அவைகள் சுமையைப்போல் பாரமாயின,
என்னால் தாங்கமுடியாதவையாயின.
5 என் மதிகேட்டினிமித்தம்
என் புண்கள் அழுகி நாற்றமெடுத்தன.
6 நான் மிகவும் மடங்கி ஓடுங்கினேன்;
நாள் முழுதும் துக்கங்கொண்டவனாய்த்
திரிகிறேன்.
7 என் குடல்கள் எரிபற்றமாயின;
என் மாம்சத்தில் ஆரோக்கியமில்லை.
8 நான் பலமற்றுப்போனேன், நொறுங்கிப்
போனேன்;
என் இருதயத்தின் கொந்தளிப்பினிமித்தம்
கதறுகிறேன்.
9 ஆண்டவரே, என் ஏங்கலெல்லாம் உமக்கு
முன்பாக இருக்கிறது;
என் பெருமூச்சு உமக்கு மறைந்திருக்கிற
தில்லை.

10 என் உள்ளம் குழம்பி அலைகிறது,
நான் பலமற்றுப்போனேன்;
என் கண்களின் ஒளியும் இல்லாதேபோயிற்று.
11 என் சிநேகிதரும் என் தோழரும் என் வாதையைக்கண்டு விலகி நிற்கிறார்கள்;
எனக்கு நெருங்கினவர்களும் தூர நிற்கிறார்கள்
12 என் உயிரை வாங்கத்தேடுகிறவர்கள் எனக்குக் கண்ணிகளை வைக்கிறார்கள்;
எனக்குத் தீமைசெய்யத் தேடுகிறவர்கள் கேடானவைகளைப் பேசி
நாள்முழுதும் வஞ்சனைகளைச் சிந்திக்கிறார்கள்.
13 நானோ செவிடனைப்போல் காதுகேளாமலிருக்கிறேன்;
வாய்திறவாத ஊமையனைப்போலிருக்கிறேன்.
14 காது கேளாதவனும்
தன் வாயில் மறு உத்தரவு இல்லாதவனுமான
மனுஷனுக்கு ஒப்பானேன்.
15 யெகோவா, நான் உமக்கே காத்திருக்கிறேன்,
என் கடவுளாகிய ஆண்டவரே, நீர் மறுமொழிகொடுப்பீர்.
16 அவர்கள் என்னிமித்தம் சந்தோஷப்படாதபடி செய்யுமென்று சொன்னேன்,
என் கால் தவறும்போது என்மேல் பெருமை பாராட்டுவார்களே.
17 நான் தடுமாறி விழப்போகிறேன்;
என் வருத்தம் எப்பொழுதும் என்முன்பாக இருக்கிறது.
18 என் அக்கிரமத்தை நான் அறிக்கையிடுகிறேன்.
என் பாவத்தினிமித்தம் விசாரப்படுகிறேன்.
19 என் சத்துருக்கள் சுகமும் பலமுமுள்ளவர்கள்;
அநியாயமாய் என்னைப் பகைக்கிறவர்கள் பெருகியிருக்கிறார்கள்.
20 நான் நன்மையானதைப் பின்பற்றுகிறபடியால்
நன்மைக்குத் தீமைசெய்கிறவர்கள் என்னை விரோதிக்கிறார்கள்.
21 யெகோவா, என்னைக் கைவிடாதேயும்;
என் கடவுளே, எனக்குத் தூரமாயிராதேயும்.
22 என் இரட்சிப்பாகிய ஆண்டவரே,
எனக்குச் சகாயஞ்செய்ய விரைந்து வாரும்.

**39** தாவீதின் சங்கீதம்; பாடகர் நாயகனுக்கு; இராகம்: ஏதூன்.

1 நாவினால் பாவஞ்செய்யாதபடி நான் என் வழிகளைக் காப்பேன்;
தெய்வபயமற்றவன் எனக்குமுன் இருக்குமட்டும் என் வாய்க்குப் பூட்டுப்போடுவேன்
என்று சொல்லிக்கொண்டேன்.
2 நான் மவுனமாகி ஊமையனாயிருந்தேன், நலமானதையும் பேசாமல் அமர்ந்திருந்தேன்;
என் வருத்தமோ அதிகரித்தது.
3 என் இருதயம் எனக்குள்ளே எரிய ஆரம்பித்தது;
நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது;
அப்பொழுது பேச எனக்கு நாவெழுந்தது.
4 யெகோவா, என் முடிவையும்
என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதையும்
நான் அறியும்படி செய்யும்;
நான் எவ்வளவு நிலையற்றவன் என்று உணரும்படி செய்யும்.
5 இதோ, என் நாட்களை நாலுவிரற்கடையளவே ஆக்கிவிட்டீர்;
என் ஆயுசு உமது பார்வைக்கு ஒன்றுமில்லாததுபோலிருக்கிறது,
மனுஷன் எவ்வளவு நிலையுள்ளவனாயிருந்தாலும்
அவன் காற்றுக்கு ஒப்பானவனே.
6 நிழலாட்டமாகவே மனுஷன் திரிகிறான்,
நிலையற்ற காரியத்திற்கே அவன் சஞ்சலப்படுகிறான்.
ஆஸ்தியைச் சேர்த்துவைக்கிறான்,
யார் அதை வாரிக்கொள்வானென்று அறியான்.
7 இப்போதும், ஆண்டவரே, நான் எதற்குக் காத்திருக்கிறேன்?
நான் நம்பிக் காத்திருக்கிறது உமக்கே.
8 என் துரோகங்கள் எல்லாவற்றிலுமிருந்து என்னை விடுவியும்;
மூடனின் நிந்தனைக்கு என்னை ஒப்புக்கொடாதேயும்.
9 இது உமது செயலே என்று
நான் வாய்திறவாமல் மவுனமாயிருக்கிறேன்.
10 என்னிலிருந்து உமது வாதையை எடுத்துப்போடும்;
உமது கரத்தின் அடிகளால் நான் சோர்ந்துபோனேன்.
11 அக்கிரமத்தினிமித்தம் நீர் மனுஷனைக் கண்டித்து சிட்சிக்கையில்
அவன் அழகைப் பொட்டாரிப்பாய் அழியப்பண்ணுகிறீர்,
நிச்சயமாகவே எந்த மனுஷனும் காற்றுக்கொப்பானவனே.

12 யெகோவா, என் ஜெபத்தைக் கேட்டரு
ளும், என் அபயசத்தத்திற்குச் செவிசாய்த்
தருளும்;
என் கண்ணீருக்கு மவுனமாயிராதேயும்;
என் பிதாக்களெல்லாரையும் போல
நானும் உமக்குமுன்பாக அந்நியனும் பர
தேசியுமே.
13 காலஞ்சென்று இல்லாமல் போகுமுன்னே
நான் தேறுதல் அடையும்படி என்னைக்
கவனியாமலிரும்.

**40** தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு.

யெகோவாவுக்கு ஆவலுடன் காத்திருந்தேன்;
அவர் என்னிடமாய்ச் சாய்ந்து என் அபய
சத்தத்தைக் கேட்டருளினார்.
2 பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலு
மிருந்து
என்னைத் தூக்கியெடுத்தார்,
என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி
என் அடிகளை உறுதிப்படுத்தினார்.
3 அவர் என் வாயிலே புதுப்பாட்டைக்
கொடுத்தார்;
அது நமது கடவுளைத் துதிக்கும்பாட்டு;
அநேகர் அதைக்கண்டு பயந்து
யெகோவாவில் நம்பிக்கை வைப்பார்
கள்.
4 யெகோவாவையே தன் நம்பிக்கையாகக்
கொண்டிருக்கிற மனுஷன் பாக்கிய
வான்;
அவன் அகங்காரிகளையும் பொய்யானவைக
ளிடம் விலகிப்போனவர்களையும் நோக்
கான்.
5 என் கடவுளாகிய யெகோவாவே, நீர் செய்த
அதிசயங்களும்
எங்கள் பொருட்டு நீர் பண்ணின யோசனை
களும் அநேகம்;
உமக்கு நிகரானது ஒன்றுமில்லை;
நான் அவைகளை அறிவித்துச் சொல்லப்
புகுந்தால் அவைகள் எண்ணமுடியாத
வைகள்.
6 நீர் விரும்புவது பலியும் காணிக்கையு
மல்ல;
என் செவிகளைத் திறந்தீர்;
நீர் கேட்பது தகனபலியும் பாவநிவாரண
பலியுமல்ல.
7 அப்பொழுது நான்: இதோ வருகிறேன்,
புஸ்தகச் சுருளில் என்னைக்குறித்து எழுதி
யிருக்கிறதே.
8 என் கடவுளே, உமது சித்தத்தைச் செய்
வதே என் பிரியம்,
உமது பிரமாணம் என் உள்ளத்தில் இருக்
கிறது
என்று சொன்னேன்.
மகா சபையிலே நீதியை நற்செய்தியாகக் 9
கூறியறிவித்தேன்;
என் உதடுகளை மூடேன், யெகோவாவே,
நீர் அறிவீர்.
உமது நீதியை நான் என் இருதயத்திற்குள் 10
மறைத்துவைக்கவில்லை;
உமது உண்மையையும் உமது ரட்சிப்பை
யும் கூறியிருக்கிறேன்,
உமது கிருபையையும் உமது சத்தியத்தை
யும் மகாசபைக்கு அறிவியாதபடி
நான் ஒளித்துவைக்கவில்லை.
யெகோவாவே, நீர் உமது இரக்கங்களை 11
எனக்குக் கிடையாமற்போகப்பண்ணு
தேயும்,
உமது கிருபையும் உமது சத்தியமும் எப்
பொழுதும் என்னைக் காப்பதாக.
எண்ணிறந்த தீமைகள் என்னைச் சூழ்ந்து 12
கொண்டன,
என் அக்கிரமங்கள் என்னைத் தொடர்ந்து
பிடித்தன,
நான் நிமிர்ந்துபார்க்க முடியாதிருக்கிறது;
அவைகள் என் தலைமயிரிலும் அதிகமா
யிருக்கின்றன;
என் இருதயம் சோர்ந்துபோகிறது.
யெகோவாவே, என்னை விடுவித்தருளும்; 13
யெகோவாவே, எனக்குச் சகாயம்செய்ய
விரைந்தருளும்.
என்னை அழிக்கத் தேடுகிறவர்கள் 14
ஏகமாய் வெட்கி நாணுவார்களாக;
எனக்கு வரும் தீங்கில் பிரியங்கொள்ளுகிற
வர்கள்
பின்னிட்டுத் திரும்பி அவமானத்துக்குள்
ளாவார்களாக;
என்னைப் பார்த்து ஆகா! ஆகா! என்று 15
சொல்லுகிறவர்கள்
வெட்கித் திடுக்கிடுவார்களாக.
உம்மைத் தேடுகிற அனைவரும் 16
உம்மில் மகிழ்ந்து களிப்பார்களாக;
உமது ரட்சிப்பை ஆசிக்கிறவர்கள்
யெகோவாவுக்கு மகிமை என்று எப்
போதும் சொல்வார்களாக.
நானோ சிறுமையானவன், ஏழை; 17
ஆண்டவரோ என்மேல் நினைவாயிருக்கி
றார்,
தேவரீரே எனக்குத் துணை, என்னை விடுவிக்
கிறவர்;
என் கடவுளே, தாமதியாதேயும்.

தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு. **41**

தளர்ந்தவனைக் கவனித்துக்கொள்ளுகிற
வன் பாக்கியவான்;
தீங்குநாளில் யெகோவா அவனை விடுவிப்
பார்.

2 யெகோவா அவனைப் பாதுகாத்து அவனை
உயிரோடே வைப்பார்;
தேசத்திலே அவன் வாழ்ந்திருப்பான்,
அவன் சத்துருக்களின் இஷ்டத்திற்கு நீர்
அவனை ஒப்புக்கொடீர்.
3 படுக்கையின்மேல் வியாதியாய்க் கிடக்கை
யில் யெகோவா அவனைத் தாங்குவார்;
அவனுடைய வியாதிப்படுக்கையை முற்றி
லும் மாற்றுகிறீர்.
4 யெகோவா, எனக்கு இரங்கும்;
உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன்,
என்னைக் குணமாக்கும்
என்று நான் சொன்னேன்.
5 என் சத்துருக்கள் எனக்கு விரோதமாய்த்
தீங்குபேசி,
அவன் எப்போது சாவான், அவன்பேர் எப்
போது ஒழியும் என்கிறார்கள்.
6 ஒருவன் என்னைப்பார்க்க வந்தால் வஞ்
சனையாய்ப் பேசுகிறான்,
தீமைக்கு ஏதுவானதை அவன் தன் இரு
தயத்தில் சேகரித்துக்கொண்டு
தெருவிலே போய் அதைத் தூற்றுகி
றான்.
7 என் பகைஞரெல்லாரும் எனக்கு விரோத
மாக ஏகமாய் முணுமுணுத்து
எனக்குத் தீங்குவரும்படி எனக்கு விரோத
மாய் ஆலோசனை செய்கிறார்கள்.
8 தீராவியாதி அவனைப் பிடித்துக்கொண்டது,
படுக்கையில் கிடக்கிற அவன் இனி எழுந்
திருப்பதில்லை
என்று சொல்லுகிறார்கள்.
9 என் பிராணசிநேகிதனும் நான் நம்பினவனும்
என் சாப்பாட்டைச் சாப்பிட்டவனுமா
கிய மனுஷன்
என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்.
10 யெகோவா, எனக்கு இரங்கும்,
நான் அவர்களுக்குப் பதிற்செய்ய என்னை
எழுந்திருக்கப்பண்ணும்.
11 என் சத்துரு என்மேல் ஜயங்கொள்ள
வில்லை;
நீர் என்மேல் பிரியமாயிருக்கிறீரென்பது
இதினால் தெரிகிறது.
12 நான் குற்றமற்றவனாய் நடக்கையில் என்
னைத் தாங்குவீர்;
உமது சமுகத்தில் என்னைச் சதாகாலமும்
நிலைநிறுத்துவீர்.
13 இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா
அநாதியாய் என்றென்றுமுள்ள சதா
காலங்களிலும் ஸ்தோத்திரத்துக்குரியவர்;
ஆமேன், ஆமேன்.

---

# இரண்டாம் பாகம்

## 42—72

**42** கோராகு புத்திரரின் மஸ்கில் சங்கீதம்; பாட
கர் தலைவனுக்கு.

மானானது நீரோடைகளை வாஞ்சிக்கிறது
போல
கடவுளே, என் ஆத்துமா உம்மையே வாஞ்
சிக்கிறது.
2 என் ஆத்துமா கடவுளின்மேல், ஜீவனுள்ள
கடவுளின்மேலேயே,
தாகமாயிருக்கிறது;
நான் எப்பொழுது கடவுளின் திருச்சந்நி
தியில் வந்து காணப்படுவேன்?
3 உன் கடவுள் எங்கே என்று அவர்கள்
நாள்தோறும் என்னிடம் சொல்லுகிற
படியால்
இரவும் பகலும் கண்ணீரே என் உணவா
யிற்று.
4 முற்காலத்தில் திருவிழா கொண்டாடத்
திரள்கூட்டம் போகும்போது
நான் கூட்டத்தாரைக் களிப்பும் துதியுமான
சத்தத்தோடே
தெய்வாலயத்திற்கு நடத்திக்கொண்டு
போனேன்.
இவற்றையெல்லாம் நான் நினைக்கையில்
என் உள்ளம் எனக்குள்ளே உருகுகிறது.
5 என் ஆத்துமாவே, நீ ஏன் தைரியமற்றுப்
போனாய்?
ஏன் எனக்குள் சஞ்சலப்படுகிறாய்?
கடவுளுக்குக் காத்திரு,
அவர் திருச்சமுக ரட்சிப்பினிமித்தம் நான்
இன்னும் அவரைத் துதிப்பேன்.
6 என் கடவுளே, என் ஆத்துமா எனக்குள்
தைரியமற்றுப்போனது;
ஆகையால் யோர்தான் தேசத்திலும் எர்
மோன் மலைகளிலும் மீசார் மலையிலு
மிருந்துகொண்டு
உம்மை நினைவுகூருகிறேன்.
7 உமது அருவிகளின் இரைச்சலால்
ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது,
உமது அலைகளும் திரைகளும் எல்லாம்
என்மேல் புரண்டுபோகின்றன.

8 யெகோவா பகற்காலத்திலே தமது கிருபை
யைக் கட்டளையிடுகிறார்;
இராக்காலத்திலே அவரைப் பாடும் பாட்டு
என் வாயிலிருக்கிறது,
எனக்கு ஜீவனுயிருக்கிற கடவுளினிடம்
நான் செய்யும் விண்ணப்பமே அந்தப்
பாட்டு.
9 நான் என் கன்மலையாகிய கடவுளை நோக்கி,
ஏன் என்னை மறந்தீர்?
சத்துருவினால் ஒடுக்கப்பட்டு நான் ஏன்
துக்கங்கொண்டவனுய்த் திரியவேண்டும்
என்று சொல்லுகிறேன்.
10 உன் கடவுள் எங்கே என்று
என் சத்துருக்கள் நாளெல்லாம் என்னோடு
சொல்லி என்னை நிந்திப்பது
என் எலும்புகளை நொறுக்குவதுபோல் இருக்
கிறது.
11 என் ஆத்துமாவே, நீ ஏன் தைரியமற்றுப்
போனுய்?
ஏன் எனக்குள் சஞ்சலப்படுகிறுய்?
கடவுளுக்குக் காத்திரு,
என் முகத்துக்கு ரட்சிப்பும் என் கடவுளு
மானவரை நான் இன்னும் துதிப்பேன்.

**43** கடவுளே, நீர் என்னை நியாயம் விசாரி
யும்,
பக்தியற்ற ஜாதியோடு எனக்காக வழக்
காடும்,
கபடும் அநியாயமுமுள்ள மனுஷன் கையி
னின்று என்னை விடுவியும்.
2 நீரே என் அரணுகிய கடவுள்;
ஏன் என்னைத் தள்ளிவிட்டீர்?
சத்துருவினால் ஒடுக்கப்பட்டு நான் ஏன்
துக்கங் கொண்டவனுய்த் திரியவேண்
டும்?
3 உமது வெளிச்சத்தையும் உமது சத்தியத்
தையும் அனுப்பியருளும்;
அவைகள் என்னை நடத்தி
உமது பரிசுத்த பர்வதத்திற்கும் உமது
வாசஸ்தலங்களுக்கும்
என்னைக் கொண்டுபோய்ச் சேர்ப்பதாக.
4 அப்பொழுது நான் கடவுளின் பீடத்தண்
டைக்கும்
எனக்கு ஆனந்த மகிழ்ச்சியாயிருக்கிற கட
வுளினிடத்திற்கும் செல்வேன்,
கடவுளே, என் கடவுளே, உம்மைச் சுர
மண்டலத்தால் துதிப்பேன்.
5 என் ஆத்துமாவே, நீ ஏன் தைரியமற்றுப்
போனுய்?
ஏன் எனக்குள் சஞ்சலப்படுகிறுய்?
கடவுளுக்குக் காத்திரு,
என் முகத்துக்கு ரட்சிப்பும் என் கடவுளு
மானவரை நான் இன்னும் துதிப்பேன்.

கோராகு புத்திரின் மஸ்கில் சங்கீதம்; **44**
பாடகர் தலைவனுக்கு.
கடவுளே, பூர்வகாட்களில், எங்கள் பிதாக்
கள் நாட்களிலே,
நீர் நடப்பித்த செயல்களை அவர்கள் எங்க
ளுக்கு அறிவித்தார்கள்;
எங்கள் காதுகளால் கேட்டோம்.
2 தேவரீர் உமது கையினாலே புறஜாதிகளைத்
துரத்தி
இவர்களை நாட்டினீர்,
ஜனங்களைத் துன்பப்படுத்தி
இவர்களைப் பரவச்செய்தீர்.
3 அவர்கள் தேசத்தைக் கட்டிக்கொண்டது
தங்கள் பட்டயத்தினாலல்ல,
அவர்களை ரட்சித்தது அவர்கள் புயமுமல்ல,
உமது வலதுகரமும் உமது புயமும் உமது
திருமுகத்தின் ஒளியுமே இதைச் செய்தது;
நீர் அவர்கள்மேல் பிரியமாயிருந்தீரே.
4 கடவுளே, நீர் என் ராஜா,
யாக்கோபுக்கு ரட்சிப்பைக் கட்டளையிடும்.
5 உம்மாலே எங்கள் சத்துருக்களைக் கீழே
விழத் தாக்குவோம்;
எங்களுக்கு விரோதமாய் எழும்புகிறவர்களை
உமது நாமத்தினால் மிதித்துப் போடு
வோம்.
6 என் வில்லை நான் நம்பேன்,
என் பட்டயமும் என்னை ரட்சியாது.
7 நீரே எங்கள் சத்துருக்களினின்று எங்களை
ரட்சித்தீர்;
எங்களைப் பகைக்கிறவர்களை வெட்கத்துக்
குள்ளாக்கினீர்.
8 நித்தம் நித்தம் கடவுளில் மேன்மைபாராட்
டுவோம்;
என்றென்றும் உமது திருநாமத்தைத் துதிப்
போம்.
9 நீர் எங்களைத் தள்ளிவிட்டு அவமானத்திற்
குள்ளாக்கினீர்;
எங்கள் சேனைகளோடு செல்லாதிருக்கிறீர்.
10 சத்துருவுக்கு எதிரே நாங்கள் பின்னிட்டுப்
போகப் பண்ணுகிறீர்;
எங்கள் பகைஞர் தங்கள் இஷ்டம்போல்
கொள்ளையிடுகிறார்கள்.
11 அடிக்கப்படும் ஆடுகளைப்போல் இரையாக
எங்களை ஒப்புக்கொடுத்தீர்;
புறஜாதிகளுக்குள்ளே எங்களைச் சிதறடித்
தீர்;
12 நீர் உமது ஜனங்களை அற்பவிலைக்கு விற்கி
றீர்;
அவர்கள் கிரயத்தினால் உமக்கு லாப
மில்லையே.
13 எங்கள் அயலாருக்கு எங்களை நிந்தையாக
வும்

எங்கள் சுற்றுப்புறத்தாருக்குப் பரியாசமும்
சக்கந்தமுமாகவும் வைக்கிறீர்.
14 புறஜாதிகளுக்குள்ளே நாங்கள் பழமொழி
யாகவும்
ஜனங்கள் எங்களைப் பார்த்துத் தலைதுலுக்க
வும் செய்கிறீர்.
15 நிந்தித்துத் தூஷிக்கிறவனுடைய சத்தத்தி
னிமித்தமும்
சத்துருவினிமித்தமும் பழிவாங்குகிறவனி
மித்தமும்
16 என் இலச்சை நித்தம் எனக்குமுன் இருக்
கிறது;
என் முகத்தின் வெட்கம் என்னை மூடுகிறது.
17 இவையெல்லாம் எங்கள்மேல் வந்திருந்தும்
உம்மை நாங்கள் மறக்கவுமில்லை,
உமது உடன்படிக்கைக்குத் துரோகம்
பண்ணவுமில்லை.
18 நீர் எங்களை இப்படி நரிகள் வசிக்கும்
இடத்திலே நொறுக்கி
மரண இருளிலுலே எங்களை மூடும்படியாக
19 எங்கள் இருதயம் பின் வாங்கவுமில்லை,
எங்கள் காலடி உமது பாதையை விட்டு
விலகவுமில்லை.
20 நாங்கள் எங்கள் கடவுளின் திருநாமத்தை
மறந்து
அந்திய தேவனைக் கையெடுத்திருந்தோமா
னால்
21 கடவுள் அதை ஆராய்ந்து விசாரியாதிருப்
பாரோ?
இருதயத்தின் இரகசியங்களை அவர் அறிந்
திருக்கிறாரே.
22 உமது நிமித்தம் நாள்முழுதும் கொல்லப்
படுகிறோம்,
அடிக்கப்படும் ஆடுகள்போல எண்ணப்படு
கிறோம்.
23 ஆண்டவரே, விழித்துக்கொள்ளும்,
ஏன் நித்திரைபண்ணுகிறீர்? எழுந்தருளும்,
எங்களை என்றைக்கும் தள்ளிவிடாதிரும்.
24 ஏன் உமது திருமுகத்தை மறைக்கிறீர்?
எங்கள் சிறுமையையும் எங்கள் இம்சை
யையும் ஏன் மறந்துவிடுகிறீர்?
25 எங்கள் ஆத்துமா புழுதிமட்டும் தாழ்ந்திருக்
கிறது;
எங்கள் வயிறு தரையோடு ஒட்டியிருக்
கிறது.
26 எங்களுக்குத் துணையாக எழுந்தருளும்;
உமது கிருபையினிமித்தம் எங்களை மீட்
டருளும்.

**45** கோராகு புத்திரின் மஸ்கீல் சங்கீதம்; நேசப்
பாட்டு; பாடகர் தலைவனுக்கு; இராகம்:
சோஷனீம்.

நல்ல செய்தியால் என் இருதயம் பொங்கு
கிறது;
என் பாடல் ராஜாவின் மேலேயே என்
கிறேன்;
என் நாவு விரைவாய் எழுதுகிறவனுடைய
எழுத்தாணி.
மனுப்புத்திரரைப்பார்க்கிலும் நீர் மகாசவுந் 2
தரியமுள்ளவர்;
உமது உதடுகள் அருள் பொழிகின்றன.
இதினால் கடவுள் உம்மை என்றென்றும்
ஆசீர்வதித்திருக்கிறார்.
பராக்கிரம புருஷனே, 3
உமக்கு மகிமையும் மகத்துவமுமாக உமது
பட்டயத்தை
உமது அரையிலே கட்டிக்கொள்ளும்.
சத்தியத்தினிமித்தமும் நீதியுடன்கூடிய சாந் 4
தத்தினிமித்தமும்
உமது மகத்துவத்திலே ஜயமாக ஏறி
வாரும்.
உமது வலதுகரம் பயங்கரமானவைகளை
உமக்குக் கற்பிக்கும்.
உமது அம்புகள் கூர்மையானவைகள், 5
அவைகள் ராஜாவின் சத்துருக்கள் இருதயத்
திற்குள் பாயும்,
ஜனசதளங்கள் உமக்குக்கீழே விழுவார்கள்.
தேவா, உமது சிங்காசனம், என்றென்று 6
முள்ளது;
உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள
செங்கோல்.
நீர் நீதியில் பிரியங்கொண்டு அக்கிரமத்தை 7
வெறுத்துவிட்டீர்;
ஆதலால் கடவுள், உமது கடவுளே, உமது
தோழரிலும் மேலாக
உம்மை ஆனந்த தைலத்தினால் அபி
ஷேகம்பண்ணினார்.
உமது வஸ்திரங்களெல்லாம் வெள்ளைப் 8
போளம் சந்தனம் லவங்கம் இவற்றின்
வாசனைபொருந்தியன,
தந்த அரமனைகளிலிருந்து வரும் வீணை
வாத்தியங்கள் உம்மை மகிழ்விக்கின்றன.
உமது நாயகிகளுக்குள்ளே அரசரின் குமா 9
ரத்திகளுண்டு,
ராஜபத்தினி ஒப்பீரின் தங்கம் அணிந்தவ
ளாய் உமது வலப்புறம் நிற்கிறாள்.
குமாரத்தியே கேள், உன் செவியைச் சாய்த் 10
துக் கவனி,
உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டை
யும் மறந்துவிடு.
அப்பொழுது ராஜா உன் அழகில் பிரியப் 11
படுவார்,
அவர் உன் ஆண்டவர், அவரைப் பணிந்து
கொள்.

12 தேருகுமாரத்தி காணிக்கை கொண்டுவருவாள்;
ஜனங்களில் ஐசுவரியவான்களும் உன் தயவை நாடி வணங்குவார்கள்.
13 அந்தர்ப்புரத்திலே ராஜகுமாரத்தி பூரண மகிமையுள்ளவள்;
அவள் உடை பொற்சரிகையாலானது.
14 சித்திரத்தையலாடை தரித்தவளாய் ராஜாவினிடம் அழைத்துக்கொண்டு வரப்படுவாள்;
அவள் பின்செல்லும் அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள்
உம்மிடம் கூட்டிக்கொண்டு வரப்படுவார்கள்.
15 அவர்கள் மகிழ்ச்சியோடும் களிப்போடும் வந்து
ராஜ அரமனைக்குள் பிரவேசிப்பார்கள்.
16 உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்;
அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பீர்.
17 உமது நாமத்தை எல்லாத் தலைமுறைகளிலும் பிரஸ்தாபப்படுத்துவேன்;
இதினிமித்தம் ஜனங்கள் உம்மை என்றென்றுமுள்ள சதாகாலங்களிலும் துதிப்பார்கள்.

**46** கோராகு புத்திரரின் கீர்த்தனை; பாடகர் தலைவனுக்கு; இராகம்: அலாமோத்.

கடவுள் நமக்கு அடைக்கலம், பலம்;
ஆபத்தில் அவரே கைகண்ட துணைவர்.
2 ஆகையால் பூமி நிலைமாறினாலும்
சமுத்திர ஆழத்திலே மலைகள் குலுங்கினாலும்
3 அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கினாலும்
அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும்
நாம் பயப்படோம்.
4 ஒரு நதியுண்டு, அதின் நீர்க்கால்கள் கடவுளின் திருநகரத்தையும்
உன்னதமானவரின் பரிசுத்த வாசஸ்தலங்களையும் சந்தோஷிப்பிக்கும்.
5 கடவுள் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது;
அதிகாலைமுதலே கடவுள் அதற்கு உதவி செய்வார்.
6 புறஜாதிகள் கொந்தளித்தார்கள், ராஜ்யங்கள் நிலைகுலைந்தன;
அவர் தமது சத்தத்தை முழங்கப்பண்ணினார், பூமி கரைந்தது.
7 சேனைகளின் யெகோவா நம்மோடிருக்கிறார்;
யாக்கோபின் கடவுளே நமது உயர்ந்த துருக்கம்.
8 யெகோவாவின் செயல்களை வந்து பாருங்கள்;
அவர் பூமியிலே எவ்வளவு பயங்கரமான வைகளைச் செய்திருக்கிறார்!
9 பூமியின் கடைமுனைமட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார்,
வில்லை ஒடித்து ஈட்டியை முறிக்கிறார்;
இரதங்களை நெருப்பிலே சுட்டெரிக்கிறார்.
10 நீங்கள் அமர்ந்திருந்து நானே கடவுளென்று அறிந்துகொள்ளுங்கள்;
புறஜாதிகளுக்குள் உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன்.
11 சேனைகளின் யெகோவா நம்மோடிருக்கிறார்;
யாக்கோபின் கடவுள் நமது உயர்ந்த துருக்கம்.

கோராகு புத்திரரின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு. **47**

சகல ஜனங்களே, கைகொட்டுங்கள்,
களிப்புடனே கடவுள்முன் ஆரவாரஞ்செய்யுங்கள்.
2 உன்னதமானவராகிய யெகோவா பயங்கரமானவர்;
அவரே பூமியனைத்தையும் ஆளும் மகத்தான ராஜா.
3 ஜனங்களை நமக்குக் கீழ்ப்படுத்துவார்;
புறஜாதிகளை நமது பாதங்களுக்குக் கீழாக்குவார்.
4 தாம் பிரியங்கொண்டவனான யாக்கோபின் சிறப்பான தேசத்தை
நமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொடுப்பார்.
5 கடவுள் ஆர்ப்பரிப்போடும் யெகோவா எக்காள சத்தத்தோடும்,
உயர எழுந்தருளினார்.
6 கடவுளைத் துதித்துப் பாடுங்கள், பாடுங்கள்;
நமது ராஜாவைத் துதித்துப் பாடுங்கள், பாடுங்கள்.
7 கடவுள் பூமியனைத்திற்கும் ராஜா;
பாடல்களைப்பாடி அவரைத் துதியுங்கள்.
8 கடவுள் புறஜாதிகளை ஆளுகிறவர்,
கடவுள் தமது பரிசுத்த சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறார்.
9 ஜனங்களின் பிரபுக்கள் ஆபிரகாமின் கடவுளுடைய ஜனங்களாகச் சேர்க்கப்படுகிறார்கள்,
பூமியின் கேடகங்கள் கடவுளினுடையவைகள்;
அவர் மிகவும் உயர்ந்தவர்.

**48** கோராகு புத்திரின் சங்கீதம், கீர்த்தனை.
யெகோவா மகத்தானவர்;
அவர் நமது கடவுளின் திருநகரத்திலும்
தமது பரிசுத்த பர்வதத்திலும்
மிகவும் புகழப்படத்தக்கவர்.
2 வடதிசைச் சீயோன்பர்வதம் அழகாய்
உயர்ந்துள்ளது;
பூமிமுழுவதற்கும் அது மனமகிழ்ச்சி;
அதுவே மகா ராஜாவின் திருநகரம்.
3 அதின் அரமனைகளில் கடவுள் தம்மை
உயர்ந்த தருக்கமாக விளங்கப் பண்ணு
கிறார்.
4 இதோ, ராஜாக்கள் கூடி
ஏகமாய்க் கடந்துவந்தார்கள்.
5 அவர்கள் கண்டு பிரமித்துக்
கலங்கி விரைந்தோடினார்கள்.
6 அங்கே நடுக்கங்கொண்டு
பிரசவவேதனைப்படுகிற ஸ்திரீபோல வேத
னைப்பட்டார்கள்.
7 தர்ஷீசின் கப்பல்களைக்
கீழ்காற்றினால் உடைக்கிறீர்.
8 நாம் எப்படிக் கேள்விப்பட்டோமோ அப்
படியே
நமது கடவுள் நகரமாகிய சேனைகளின்
யெகோவா திருநகரத்திலே கண்டோம்;
கடவுள் அதை என்றென்றும் நிலைக்கச்
செய்வார்.
9 கடவுளே, உமது ஆலயத்தின் நடுவிலே
உமது கிருபையைச் சிந்தித்துக்கொண்டிருக்
கிறோம்.
10 கடவுளே, உமது திருநாமம் எப்படி விளங்கு
கிறதோ
அப்படியே உமது புகழும் பூமியின் கடை
யாந்தரங்கள் பரியந்தம் விளங்குகிறது,
உமது வலதுகரம் நீதி நிறைந்தது.
11 உம்முடைய நியாயத்தீர்ப்புகளினிமித்தம்
சீயோன்பர்வதம் மகிழ்வதாக,
யூதாவின் குமாரத்திகள் களிகூருவார்களாக.
12 சீயோனைச் சுற்றிவாருங்கள்;
சுற்றிக்கொண்டே அதின் கோபுரங்களை எண்
ணுங்கள்.
13 பின்வரும் சந்ததிக்கு நீங்கள் விவரிக்கும்
படி
அதின் கொத்தளங்களைக் கணக்கிடுங்கள்,
அதின் அரமனைகளின் உட்சென்று பாரு
ங்கள்.
14 இந்தக் கடவுளே என்றென்றுமுள்ள சதா
காலங்களிலும் நமது கடவுள்;
மரணபரியந்தம் நம்மை நடத்துவார்.

**49** கோராகு புத்திரின் சங்கீதம்; பாடகர் தலை
வனுக்கு.
சகல தேசத்தாரே, இதைக் கேளுங்கள்.
பூமியின் குடிகளே, செவிகொடுங்கள்;
தாழ்ந்தோரே, உயர்ந்தோரே, தனவந்தரே, 2
வறியோரே,
நீங்கள் எல்லாரும் ஏகமாய்ச் செவிகொடுங்
கள்.
என் வாய் ஞானத்தைப் பேசும்; 3
என் இருதயத்தின் தியானம் விவேகத்தைப்
பற்றியதாகும்.
என் செவியை உவமைமொழிக்குச் சாய்ப் 4
பேன்;
என் மறைபொருளைச் சுரமண்டலத்தில்
வெளிப்படுத்துவேன்.
என்னைப் பிடிக்கத் தொடருகிறவர்களின் 5
அக்கிரமம்
என்னைச் சூழ்ந்துகொள்ளும் தீங்குநாட்
களில்
நான் பயப்படவேண்டியதென்ன?
தங்கள் செல்வத்தை நம்பித் 6
தங்கள் திரளான ஐசுவரியத்தில் பெருமை
பாராட்டுகிறவர்களில் ஒருவனாவது
தன் சகோதரன் அழிவடையாமல் 7
இனி என்றைக்கும் உயிரோடிருக்கும்படி
எவ்விதத்தினாலாவது அவனை மீட்டுக்கொ 8
ள்ளவும்
அவனுக்காக மீட்கும்பொருளைக் கடவு
ளுக்குக் கொடுக்கவும் முடியாதே.
உயிரை மீட்பது மிகவும் அரியது; 9
அது ஒருபோதும் முடியாது.
ஞானிகள் மரித்து 10
மதிகேடரும் மிருககுணமுள்ளவரும் ஏக
மாய் அழிந்து
தங்கள் ஆஸ்தியை மற்றவர்களுக்கு வைத்
துப்போகிறதைக் காண்கிறார்.
அவர்களோ 11
தங்கள் வீடுகள் நித்தியகாலமாகவும்
தங்கள் வாசஸ்தலங்கள் தலைமுறை
தலைமுறைபரியந்தமும் இருக்குமென்று தங்
கள் உள்ளத்தில் நினைத்துக்கொள்ளுகிறார்
கள்.
அவர்கள் தங்கள் பேர்களைத் தங்கள் நிலங்
களுக்கு இடுகிறார்கள்;
கீர்த்திபெற்ற மனிதனும் நிலைத்திருக்கிற 12
தில்லை;
அழிந்துபோகும் மிருகங்களுக்கு ஒப்பா
யிருக்கிறான்.
இந்த வழியே நடப்பது அவர்கள் மதிகே 13
டாம்,
ஆகிலும் அவர்கள் சொல்லை அவர்கள் சந்
ததியாருக்குப் பிரியம்.
அவர்கள் ஆட்டுமந்தைப்போலப் பாதாளத் 14
திற்கென்றே குறிக்கப்பட்டிருக்கிறார்கள்,
மரணமே அவர்கள் மேய்ப்பன்;

நேர்மையானவர்கள் அதிகாலையில் அவர்
களை ஆண்டுகொள்வார்கள்,
அவர்கள் அழகு இல்லாமலே போகும்படி
பாதாளம் அதை அழிக்கும்.
15 என் ஆத்துமாவையோ கடவுள் பாதாளத்
தின் வல்லமையினின்று மீட்பார்;
அவர் என்னைச் சேர்த்துக்கொள்வார்.
16 ஒருவன் ஐசுவரியவானாகி அவன் வீட்டின்
பெருமை அதிகப்படும்போது
நீ பயப்படாதே.
17 அவன் மரிக்கும்போது ஒன்றும் கொண்டு
போவதில்லை;
அவன் பெருமை அவனைத் தொடர்ந்து
செல்வதுமில்லை.
18 அவன் உயிரோடிருக்கையில் தன் ஆத்து
மாவை வாழ்த்தி,
நீ உனக்கே நன்மையை நாடினால் மனு
ஷர் உன்னைப் புகழ்வார்கள் என்று
சொன்னாலும்
19 அவன் தன் பிதாக்களின் சந்ததியையே
சேர்வான்,
அவர்கள் எக்காலமும் வெளிச்சத்தைக்
காண்பதில்லை.
20 விவேகமில்லாதவன் கீர்த்தியையுடையவனா
யிருந்தும்
அழிந்துபோகும் மிருகங்களுக்கு ஒப்பா
வான்.

**50** ஆசாபின் சங்கீதம்.
கடவுள், யெகோவாவாகிய கடவுளே, பேசு
கிறார்;
சூரியன் உதிக்கும் திசைதொடங்கி
அது அஸ்தமிக்கும் திசைவரைக்குமுள்ள
பூமியைக் கூப்பிடுகிறார்.
2 அழகு நிறைந்த சீயோனிலிருந்து கடவுள்
பிரகாசத்தை வீசுகிறார்.
3 நமது கடவுள் வருவார், மவுனமாயிரார்;
அவருக்குமுன் அக்கினி பட்சிக்கும்,
அவரைச் சுற்றிலும் மகாபுசல் கொந்தளிப்
பாயிருக்கும்.
4 அவர் தமது ஜனத்தை நியாயம்விசாரிக்கும்
படி
உயர்ந்த வானங்களையும் பூமியையும் கூப்
பிடுவார்.
5 பலியினாலே என்னோடு உடன்படிக்கை
செய்த என் பக்தரை
என்னிடம் கூட்டுங்கள் என்பார்.
6 வானங்கள் அவர் நீதியை அறிவிக்கும்;
கடவுள்தாமே நியாயாதிபதி.
7 என் ஜனமே கேள், நான் பேசுவேன்;
இஸ்ரவேலே, உனக்கு விரோதமாய்ச் சாட்
சியிடுவேன்;
நானே கடவுள், உன் கடவுள்.

உன் பலிகளினிமித்தம் உன்னைக் கண்டி 8
யேன்;
உன் தகனபலிகள் எப்போதும் எனக்குமுன்
இருக்கின்றன.
உன் வீட்டிலிருந்து காளைகளையும் 9
உன் தொழுவங்களிலிருந்து ஆட்டுக்கடாக்
களையும்
நான் ஏற்றுக்கொள்வதில்லை.
சகல காட்டுப்பிராணிகளும் 10
பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரிகிற
மிருகங்களும் என்னுடையவைகள்.
மலைகளிலுள்ள பறவைகளையெல்லாம் அறிந் 11
தேயிருக்கிறேன்;
வெளியில் நடமாடுகிறவைகளெல்லாம்
என் வசமே.
நான் பசியாயிருந்தேனேயானால் உனக்குச் 12
சொல்லேன்;
பூமியும் அதின் நிறைவும் என்னுடையவை.
நான் எருதுகளின் மாம்சம் புசிப்பேனோ? 13
ஆட்டுக்கடாக்களின் ரத்தம் குடிப்பேனோ?
கடவுளுக்கு ஸ்தோத்திரபலியிடு; 14
உன்னதமானவருக்கு உன் பொருத்தனை
களைச் செலுத்து.
ஆபத்து காலிலே என்னை நோக்கிக் கூப்பிடு, 15
நான் உன்னை விடுவிப்பேன்; நீ என்னை மகி
மைப்படுத்துவாய்.
தெய்வபயமற்றவர்களைப் பார்த்துக் கடவுள்: 16
நீ என் கற்பனைகளை அறிவிக்கவும்
என் உடன்படிக்கையை உன் வாயிலே
எடுக்கவும்
உனக்கு என்ன நியாயமுண்டு?
சிட்சையை நீ பகைக்கிறாய்; 17
என் வார்த்தைகளை உனக்குப் பின்னை
எறிந்துவிடுகிறாய்.
நீ திருடனைக் காணும்போது பிரியமாய் 18
அவனோடு சேருகிறாய்;
விபசாரரோடும் உனக்குப் பங்குண்டு.
உன் வாயைப் பொல்லாப்புக்குத் திறக்கிறாய்; 19
உன் நாவு சற்பனையைப் பிணைக்கிறது.
உன் சகோதரனுக்கு விரோதமாய் நீ உட் 20
கார்ந்து பேசுகிறாய்,
உன் தாயின் மகன்மேல் அவதூறு பேசு
கிறாய்.
நீ இவற்றையெல்லாம் செய்தாய்; 21
நான் மவுனமாயிருந்தபடியால்
உன்னைப்போல் நானும் இருப்பேன் என்று
நினைவுகொண்டாய்,
நானே அவற்றை ஒவ்வொன்றாக உன் கண்
முன் நிறுத்தி
உன்னைக் கண்டிப்பேன்.
கடவுளை மறக்கிறவர்களே, இதைச் சிந்தித் 22
துக்கொள்ளுங்கள்;

இல்லாவிட்டால் நான் உங்களைப் பீறிப்
போடுவேன்,
உங்களை விடுவிப்பார் ஒருவருமிரார்.
23 ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்
படுத்துகிறான்,
வழியை ஆயத்தப்படுத்துகிறவன்
கடவுளின் இரட்சிப்பைக் காணும்படி செய்
வேன் என்று சொல்லுகிறார்.

**51** தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு; தாவீது பத்சேபாளினிடம் சென்றபின் நாத்தான் தீர்க்கதரிசி அவனிடம் வந்த போது பாடினது.

கடவுளே, உமது கிருபையின்படி எனக்கு
இரங்கும்;
உமது இரக்கங்களின் பெருக்கத்துக்குத்
தக்கபடியே
என் மீறுதல்களை அழித்துவிடும்.
2 என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும்
கழுவியருளும்;
என் பாவமற என்னைச் சுத்திகரியும்.
3 என் மீறுதல்களை நான் உணருகிறேன்;
என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்
நிற்கிறது.
4 தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான்
பாவஞ்செய்து,
உமது பார்வையில் தீங்கானதை நடப்பித்
தேன்;
இதினாலே நீர் உமது வார்த்தைகளில் நீதி
பரராகவும்
உமது நியாயம் விசாரிக்கப்படும்போது
வெற்றியுடையவராகவும் விளங்குகிறீர்.
5 இதோ, நான் அக்கிரமத்தில் ஜனித்தேன்;
என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்
தரித்தாள்.
6 இதோ, உள்ளத்தில் உண்மையிருப்பது
உமக்குப் பிரியம்;
அந்தரங்கத்திலே ஞானத்தை எனக்குத் தெ
ரியப்படுத்துவீர்.
7 ஈசோப்பால் என் பாவத்தீட்டை நீக்கும்.
அப்பொழுது நான் சுத்தமாவேன்,
என்னைக் கழுவியருளும்:
அப்பொழுது நான் உறைந்தமழையி
லும் வெண்மையாவேன்.
8 நீர் கொறுக்கின என் எலும்புகள் களி
கூரும்படி
நான் சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும்
கேட்கச்செய்யும்.
9 என் பாவங்களைப் பாராதபடி
உமது திருமுகத்தை மறைத்தருளும்;
என் அக்கிரமங்களையெல்லாம் அழிந்து
விடும்.
கடவுளே, சுத்த இருதயத்தை என்னிலே 10
சிருஷ்டியும்;
நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே
புதுப்பியும்.
உமது சமுகத்தினின்று என்னைத் தள்ளி 11
விடாதிரும்;
உமது பரிசுத்த ஆவியை என்னிடமிருந்து
எடுத்துக்கொள்ளாதிரும்.
உமது ரட்சணிய சந்தோஷத்தைத் திரும்ப 12
வும் எனக்குத்தாரும்;
உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி
செய்யும்.
அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளைப் 13
போதிப்பேன்;
பாவிகள் உம்மிடம் மனந்திரும்புவார்கள்.
கடவுளே, என்னை ரட்சிக்குங் கடவுளே, 14
இரத்தப்பழியினின்று என்னை விடுவித்தரு
ளும்;
அப்பொழுது என் நாவு உமது நீதியை
களிப்போடு பாடும்.
ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்தரு 15
ளும்;
அப்பொழுது என் வாய் உமது புகழை
அறிவிக்கும்.
நீர் விரும்புவது பலியல்ல; 16
விரும்பினால் செலுத்துவேன்;
தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல.
கடவுளுக்கேற்கும் பலிகள் நைந்துபோன 17
ஆவிதான்;
கடவுளே, உடைந்ததும் நைந்ததுமான
இருதயத்தை நீர் புறக்கணியீர்.
நீர் பிரியம்வைத்திருக்கிறபடியே சீயோ 18
னுக்கு நன்மைசெய்யும்,
எருசலேமின் மதில்களைக் கட்டுவீராக.
அப்பொழுது, நீதியின் பலிகளில், தகன 19
பலியில், சமூல தகனபலியிலேயே, பிரி
யங்கொள்ளுவீர்;
அப்பொழுது உமது பீடத்தின்மேல் காளை
களைப் பலியிடுவார்கள்.

தாவீதின் மஸ்கில் சங்கீதம்; பாடகர் தலை **52**
வனுக்கு;
தாவீது அபிமெலேக்கின் வீட்டுக்கு வந்தா
னென்று ஏதோமியனாகிய தோவேக்கு
வந்து சவுலுக்கு அறிவித்தபோது பாடி
னது.

பராக்கிரமசாலியே, பொல்லாப்பில் என்
பெருமைபாராட்டுகிறாய்?
கடவுள் கிருபை எந்நாளுமுள்ளது.
உன் நாவு தீட்டப்பட்ட சவரகன் கத்தி 2
யைப்போலக்
கபடாய்க் கேட்டையே செய்ய ஆலோசிக்
கிறது.

3 நன்மையைப் பார்க்கிலும் தீமையும் நீதி
யானதைப் பேசுவதைப்பார்க்கிலும்
பொய் பேசுவதுமே உனக்குப் பிரியம்.
4 கபட்டு நாவே,
அழிவையுண்டாக்கும் சகல வார்த்தைக
ளும் உனக்குப் பிரியம்.
5 அப்படியே கடவுள் உன்னை என்றென்றும்
இராதபடி அழித்துப்போடுவார்,
அவர் உன்னைப் பிடித்து உன் கூடாரத்தி
லிருந்து பிடுங்கி
நீ ஜீவனுள்ளோர் தேசத்தில் இராதபடி
உன்னை வேரோடு களைவார்.
6 நீதிமான்கள் அதைக் கண்டு பயந்து
அவனைப் பார்த்து நகைத்து,
7 இதோ, கடவுளைத் தன் அரணாக எண்ணா
மல்
தன் செல்வப்பெருக்கத்தில் நம்பிக்கை
வைத்துத்
தன் பொல்லாப்பில் பலத்துக்கொண்ட
மனுஷன் இவன்தான்
என்று சொல்வார்கள்.
8 நானோ கடவுள் வாசஸ்தலத்திலுள்ள பச்
சை ஒலிவமரம் போலிருக்கிறேன்;
கடவுள் கிருபையில் என்றென்றும் நம்பிக்
கை வைத்திருக்கிறேன்.
9 நீரே இதைச் செய்தீர் என்று
உமக்கு நான் என்றென்றும் நன்றி செலுத்
துவேன்,
உமது பக்தர்நடுவில் உமது திருநாமத்தை
நோக்கிக் காத்திருப்பேன்;
அதுவே நலமானது.

**53** தாவீதின் மஸ்கில் சங்கீதம்; பாடகர் தலை
வனுக்கு; இராகம்: மகலாத்.

கடவுள் இல்லை என்று மதிகேடன் தன்
இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான்,
அவர்கள் செய்வதெல்லாம் கேடு, அரு
ருப்பு, அக்கிரமம்.
நன்மை செய்கிறவனில்லை.
2 கடவுளைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்
டோ என்று பார்க்கக்
கடவுள் பரலோகத்திலிருந்து மனுப்புத்
திரளை நோக்கிப் பார்த்தார்.
3 அவர்களில் ஒவ்வொருவனும் பின்வாங்கிப்
போனான்;
எல்லாரும் ஏகமாய்க் கெட்டவர்களானார்
கள்,
நன்மைசெய்கிறவன் இல்லை, ஒருவனும்
இல்லை.
4 அக்கிரமக்காரர் அறிவற்றுப்போனார்களோ?
ஆகாரத்தைப் புசிக்கிறதுபோல் என் ஜனத்
தைப் பட்சிக்கிறார்களே;
அவர்கள் கடவுளைத் தொழுதுகொள்ளுகிற
தில்லை.
5 பயமில்லாத இடத்தில் மிகவும் பயந்தார்
கள்;
உனக்கு விரோதமாய்ப் பாளயமிறங்கின
வனுடைய எலும்புகளைக்
கடவுள் சிதறப்பண்ணினார்,
கடவுள் அவர்களை வெறுத்தபடியினால்
நீ அவர்களை வெட்கத்திற்குள்ளாக்கி
னாய்.
6 சீயோனிலிருந்து இஸ்ரவேலுக்கு ரட்சிப்பு
வருவது எந்நாளோ?
கடவுள் தமது ஜனத்தின் தன்பரிதிலைமையை
மாற்றும்போது
யாக்கோபுக்குக் களிப்பும் இஸ்ரவேலுக்கு
மகிழ்ச்சியும் உண்டாகும்.

**54** தாவீதின் மஸ்கில் சங்கீதம்; பாடகர் தலை
வனுக்கு; வாத்தியம்: யாழ்.

தாவீது தங்களிடம் ஒளித்துக்கொண்டிருப்ப
தாகச் சீப்ஊார் சவுலினிடம் சொன்ன
போது பாடினது.

கடவுளே, உமது திருநாமத்தினால் என்னை
இரட்சித்தருளும்;
உமது வல்லமையினால் எனக்கு நியாயஞ்
செய்தருளும்.
2 கடவுளே, என் விண்ணப்பத்தைக் கேட்
டருளும்;
என் வாயின் வார்த்தைகளுக்குச் செவிசாய்த்
தருளும்.
3 அந்நியர் எனக்கு விரோதமாய் எழும்பி
யிருக்கிறார்கள்;
கொடியர் என் உயிரை வாங்கத்தேடுகிறார்
கள்;
அவர்கள் தங்கள்முன் கடவுளை நோக்கிக்
கொண்டிருக்கிறதில்லை.
4 இதோ, கடவுள் எனக்குச் சகாயர்;
ஆண்டவர் என் ஆத்துமாவை ஆதரிக்கிற
வர்களோடே இருக்கிறார்.
5 அவர் என் சத்துருக்களுக்குத் தீமையைச்
சரிக்கட்டுவார்;
உமது சத்தியத்தின்படி அவர்களை நிர்மூல
மாக்கும்.
6 மனப்பூர்வமாய் நான் உமக்குப் பலியிடு
வேன்;
யெகோவாவே, உமது திருநாமத்திற்கு
நன்றிசெலுத்துவேன்;
அது நலமானது.
7 அவர் எல்லா நெருக்கத்தினின்றும் என்னை
விடுவித்தார்;
என் சத்துருக்களுக்கு நேரிட்டதைக் கண்
ணாரக்கண்டேன்.

**55** தாவீதின் மஸ்கீல் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு; வாத்தியம்: யாழ்.

கடவுளே, என் ஜெபத்துக்குச் செவிசாய்த்தருளும்;
என் விண்ணப்பத்திற்கு மறைந்திராதேயும்.
2 என்மேல் கவனமாகி மறு உத்தரவு அருளிச்செய்யும்;
சத்துரு இடும் சத்தத்தினிமித்தமும்
தெய்வபயமற்றவன் செய்யும் இடுக்கத்தினிமித்தமும்
கலங்கிப் பெருமூச்சோடு முறையிடுகிறேன்.
3 குற்றங்களை அவர்கள் என்மேல் சாட்டிக்
கோபத்தில் என்னை இம்சைப்படுத்துகிறார்கள்.
4 என் இருதயம் எனக்குள் வியாகுலப்படுகிறது;
மரணத்திகில் என்மேல் விழுந்தது.
5 அச்சமும் நடுக்கமும் என்னைப் பிடித்தன;
பயங்கரம் என்னை மூடிற்று.
6 அப்பொழுது நான்:
ஆ, எனக்குப் புறாவைப்போல் சிறகுகள் இருந்தால்
நான் பறந்துபோய் இளைப்பாறுவேன்,
7 நான் தூரமாக அலைந்து திரிந்து
வனாந்தரத்தில் தங்கியிருப்பேன்,
8 பெருங்காற்றுக்கும் புசலுக்கும் தப்பும்படி
விரைந்துசெல்வேன்
என்று சொன்னேன்.
9 ஆண்டவரே, அவர்களை அழியும்,
அவர்கள் பாஷையைப் பிரித்துபோகப்பண்ணும்,
கொடுமையையும் சண்டையையும் நகரத்திலே கண்டேன்.
10 அவைகள் இரவும் பகலும் அதின் மதில்கள்மேல் சுற்றித்திரிகின்றன;
அக்கிரமமும் கேடும் அதின் நடுவில் இருக்கின்றன;
11 கேடுபாடுகள் அதின் நடுவில் உண்டு;
கொடுமையும் கபடும் அதின் வீதியைவிட்டு விலகுவதில்லை.
12 என்னை நிந்தித்தவன் சத்துரு அல்ல,
அப்படியிருந்தால் சகிப்பேன்,
எனக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டினவன் என் பகைஞன் அல்ல;
அப்படியிருந்தால் அவனுக்கு மறைந்திருப்பேன்.
13 எனக்குச் சமமான மனுஷனும்
என் தோழனும் நான் நெருங்கிப் பழகின வனுமாகிய
நீயே அவன்.
நாம் ஒருமித்த இனிமையாய்ப் பேசி ஆலோ 14
சித்தோம்;
கூட்டத்தோடு சேர்ந்து தெய்வாலயத்துக்குப் போனோம்.
மரணம் அவர்கள்மேல் திடீரென வரட்டும்; 15
அவர்கள் உயிரோடே பாதாளத்தில் இறங்கட்டும்;
அவர்கள் குடியிருப்புகளிலும் அவர்கள் உள்ளத்திலும் பொல்லாங்கு இருக்கிறது.
நானோ கடவுளை நோக்கிக் கூப்பிடுவேன்; 16
யெகோவா என்னை ரட்சிப்பார்.
அந்தி சந்தி மத்தியான வேளைகளிலும் 17
நான் பெருமூச்சோடு முறையிடுவேன்;
அவர் என் சத்தத்தைக் கேட்பார்.
கூட்டங்கூடி என்னை எதிர்த்தவர்கள் ஏரா 18
ளம்.
அவரோ எனக்கு நேரிட்ட போரிலிருந்து
என் ஆத்துமாவைச் சமாதானத்தோடு விடுவித்தார்.
ஆதிமுதலாய் வீற்றிருக்கிற கடவுள் 19
கேட்டு அவர்களைத் தாழ்த்திவிடுவார்,
அவர்களில் மனமாறுதல் இடையாது;
கடவுளுக்குப் பயப்படுகிற பயமில்லை.
அவன் தன்னோடே சமாதானமாயிருந்தவர் 20
களுக்கு விரோதமாய்த்
தன் கையை நீட்டினான்;
தன் உடன்படிக்கையை அலட்சியஞ் செய்தான்.
அவன் வாயின் சொற்கள் வெண்ணெயைப் 21
போல மெதுவானவைகள்;
அவன் உள்ளமோ யுத்தம்,
அவன் வார்த்தைகள் எண்ணெயிலும் மிருதுவானவைகள்;
ஆனாலும் அவைகள் உருவின பட்டயங்கள்.
யெகோவாவின்மேல் உன் பாரத்தை வைத்து 22
விடு,
அவர் உன்னை ஆதரிப்பார்;
நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்.
கடவுளே, நீர் அவர்களை அழிவின் குழியில் 23
இறங்கப்பண்ணுவீர்;
இரத்தப்பிரியரும் வஞ்சகரும்
தங்கள் ஆயுள் நாட்களில் பாதிவரையிலாகிலும் பிழைத்திருக்கமாட்டார்கள்,
நானோ உம்மில் நம்பிக்கைவைத்திருக்கிறேன்.

**56** தாவீதின் மிக்தாம் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு; இராகம்: யோனத் எலம் ரெஹோகீம்.

பெலிஸ்தியர் தன்னைக் காத்தூரில் பிடித்தபோது தாவீது பாடினது.

கடவுளே, எனக்கு இரங்கும்,
மனுஷன் என்னை விழுங்கப் பார்க்கிறான்;
நாள்முழுதும் போர்செய்து என்னை ஒடுக்குகிறான்.
2 எனக்காகப் பதிவிருக்கிறவர்கள்
நாள்முழுதும் என்னை விழுங்கப்பார்க்கிறார்கள்;
எனக்கு விரோதமாய் அகங்காரத்தோடு போர்செய்கிறவர்கள் அநேகர்.
3 நான் பயப்படுகிற நாளில்
உம்மில் நம்பிக்கைவைப்பேன்.
4 கடவுள் துணையால் அவருடைய வார்த்தையைப் புகழுவேன்;
கடவுளில் நம்பிக்கைவைத்திருக்கிறேன், நான் பயப்படேன்,
மாம்சமானவர்கள் எனக்கு என்ன செய்வார்கள்?
5 நாளெல்லாம் என் காரியங்களைக் கெடுக்கிறார்கள்;
எனக்குத் தீங்கு செய்வதே அவர்கள் முழு எண்ணம்.
6 அவர்கள் சதியோசனைசெய்து பதிவிருக்கிறார்கள்;
என் உயிரை வாங்கக் காத்திருந்து என் போக்குவரவுகளைக் கவனிக்கிறார்கள்.
7 அக்கிரமஞ்செய்திருக்க இவர்கள் தப்புவார்களா?
கடவுளே, உமது கோபத்திலே ஜாதிகளைக் கீழே தள்ளும்.
8 என் அலைச்சலையெல்லாம் தேவரீர் கணக்கிட்டிருக்கிறீர்.
என் கண்ணீரை உமது துருத்தியில் வையும்;
அது உமது கணக்கில். அல்லவோ இருக்கிறது.
9 நான் உம்மைக் கூப்பிடும் நாளில்
என் சத்துருக்கள் பின்னிட்டுத் திரும்புவார்கள்;
கடவுள் என் பட்சத்தில் இருக்கிறார் என்பதை அறிவேன்.
10 கடவுள் துணையால் அவருடைய வார்த்தையைப் புகழுவேன்;
யெகோவா துணையால் அவருடைய வார்த்தையைப் புகழுவேன்.
11 கடவுளில் நம்பிக்கைவைத்திருக்கிறேன், நான் பயப்படேன்;
மனுஷன் எனக்கு என்ன செய்வான்?
12 கடவுளே, நான் உமக்குப் பண்ணின பொருத்தனைகள்
என்மேல் இருக்கின்றன,
உமக்கு ஸ்தோத்திர பலிகளைச் செலுத்துவேன்.
நான் கடவுளுக்கு முன்பாக 13
ஜீவனுள்ளோரின் வெளிச்சத்திலே நடக்கும்படி
நீர் என்னை மரணத்துக்குத் தப்புவித்தீர்,
என் கால்களை இடறலுக்குத் தப்புவித்தீரல்லவா?

தாவீதின் மிக்தாம் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு; இராகம்: அல்தஷ்கேத். 57
சவுலுக்குத் தப்பியோடிக் குகையில் ஒளிந்திருக்கையில் பாடினது.

எனக்கு இரங்கும், கடவுளே, எனக்கு இரங்கும்,
என் ஆத்துமா உம்மிடம் அடைக்கலம் புகுந்திருக்கிறது,
ஆபத்துகள் கடந்துபோகுமட்டும்
உமது செட்டைகளின் நிழலிலே வந்து அடைவேன்.
எனக்காக யாவையும் செய்து முடிக்கிற 2
கடவுளாகிய
உன்னதமான கடவுளை நோக்கிக் கூப்பிடுவேன்.
என்னை விழுங்கப் பார்க்கிறவன் என்னை நிந் 3
திக்கையில்
அவர் பரலோகத்திலிருந்து உதவி அனுப்பி
என்னை ரட்சிப்பார்;
கடவுள் தமது கிருபையையும் தமது சத்தி
யத்தையும் அனுப்புவார்.
நான் சிங்கங்களின் நடுவிலிருக்கிறேன்; 4
தீயை இறைக்கிற மனுப்புத்திரருக்குள்ளே
கிடக்கிறேன்;
அவர்கள் பற்கள் ஈட்டிகளும் அம்புகளுமாம்;
அவர்கள் நாவு கருக்கான பட்டயம்.
கடவுளே, வானங்களுக்கு மேலாக உயர்ந் 5
தருளும்;
உமது மகிமை பூமியனைத்தின்மேலும் இருப்பதாக.
என் கால்களுக்கு வலையை ஆயத்தஞ் செய் 6
தார்கள்;
என் ஆத்துமா தொய்ந்துபோயிற்று,
எனக்கு எதிரே குழியை வெட்டினார்கள்;
அவர்களே அதின் நடுவில் விழுந்தார்கள்.
என் இருதயம் ஸ்திரமாயிருக்கிறது; 7
கடவுளே, என் இருதயம் ஸ்திரமே,
நான் பாடுவேன், துதித்துப் பாடுவேன்.
என் மகிமையே விழி, 8
வீணையே, சுரமண்டலமே, விழியுங்கள்;
அதிகாலையை விழிக்கச் செய்வேன்.
ஆண்டவரே, ஜனங்களுக்குள்ளே உமக்கு 9
நன்றிசெலுத்துவேன்;

ஜாதிகளுக்குள்ளே உம்மைத் துதித்துப் பாடுவேன்.
10 உமது கிருபை வானங்கள் பரியந்தமும்
உமது சத்தியம் மேகமண்டலங்கள் பரியந்தமும் எட்டுகின்றன.
11 கடவுளே, வானங்களுக்கு மேலாக உயர்ந்தருளும்;
உமது மகிமை பூமியனைத்தின்மேலும் இருப்பதாக.

**58** தாவீதின் மிக்தாம் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு; இராகம்: அல்தஷ்கேத்.

அதிபதிகளே, நீங்கள் பேசுவது மெய்யாகவே நீதியோ?
மனுப்புத்திரரே, நீங்கள் நியாயஞ்செய்வது நேர்மையோ?
2 உள்ளத்தில் நீங்கள் சிந்திப்பதெல்லாம் நியாயக்கேடே,
பூமியிலே உங்கள் கைகளின் கொடுமையை நிறுத்தக் கொடுக்கிறீர்கள்,
3 தெய்வபயமற்றவர்கள் கர்ப்பத்தில் உற்பவித்ததுமுதல் விலகிப்போகிறார்கள்;
தாயின் வயிற்றிலிருந்து பிறந்ததுமுதலே பொய்சொல்லி வழிதப்பிப் போகிறார்கள்.
4 சர்ப்பவிஷத்தைப்போன்ற விஷம்
அவர்களில் இருக்கிறது,
5 பாம்பாட்டிகள் விநோதமாய் ஊதினாலும்
அவர்கள் ஊதும் சத்தத்திற்குச் செவிகொடாதபடி
தன் காதை அடைத்துக்கொள்ளும்
செவிட்டு விரியன்போல் இருக்கிறார்கள்.
6 கடவுளே, அவர்கள் வாயிலுள்ள பற்களை உடைத்துப்போடும்;
யெகோவா, பாலசிங்கங்களின் கடைவாய்ப் பற்களைத் தகர்த்துப்போடும்.
7 கடந்தோடும் தண்ணீர்போல் அவர்கள் ஒழிந்துபோகட்டும்;
அவன் தன் அம்புகளைத் தொடுக்கும்போது அவைகள் சின்னபின்னமாய்ப் போகட்டும்.
8 கரைந்துகொண்டே ஊறும் நத்தைபோல் ஒழிந்துபோவார்களாக;
ஸ்திரீயின் முதிராப்பிண்டம் போல் சூரியனைக் காணாதிருப்பார்களாக.
9 முள்ளுருப்பினால் உங்கள் பானைகளில் சூடேறுமுன்னே
பச்சையானதையும் எரிந்துகொண்டிருப்பதையும்
அவர் சுழல்காற்றினால் அடித்துக்கொண்டு போவார்.
10 பழிவாங்குவதை நீதிமான் காணும்போது மகிழுவான்;
அவன் தன் பாதங்களைத் தன்மார்க்கனின் இரத்தத்திலே கழுவுவான்;
அப்பொழுது மனிதர்: 11
மெய்யாகவே நீதிமானுக்குப் பலன் உண்டு,
மெய்யாகவே பூமியிலே நியாயஞ் செய்கிற கடவுள் ஒருவர் உண்டு
என்று சொல்லுவார்கள்.

தாவீதின் மிக்தாம் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு; இராகம்: அல்தஷ்கேத். **59**

தாவீதின் வீட்டருகே காத்திருந்து அவனைக் கொல்வதற்கென்று சவுல் ஆட்களை அனுப்பினபோது தாவீது பாடினது.

என் கடவுளே, என் சத்துருக்கள் கையிலிருந்து என்னை விடுவியும்;
எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்களுக்கு விலக்கி என்னைக் காத்தருளும்.
அக்கிரமம் செய்கிறவர்களுக்கு என்னைத் 2
தப்புவியும்;
இரத்தப் பிரியருக்கு என்னை விலக்கி ரட்சியும்.
இதோ, என் உயிரை வாங்கப் பதிவிருக்கி 3
றார்கள்;
பலவான்கள் எனக்கு விரோதமாய்ச் சதியாலோசனை செய்கிறார்கள்;
யெகோவா, அவர்கள் இப்படிச் செய்யும் காரணம்
அவர்கள் என்னிடம் கண்ட மீறுதலும் பாவமுமல்ல.
என்னிடம் அக்கிரமம் இல்லாதிருந்தும் 4
விரைந்து வந்து ஆயத்தஞ்செய்கிறார்கள்;
எனக்குத் துணையாக விழித்துக்கொள்ளும், பார்த்தருளும்.
சேனைகளின்கர்த்தாவாகிய யெகோவா, இஸ்ர 5
வேலின் கடவுளே,
நீரே சகல புறஜாதிகளையும் விசாரிக்க எழுந்தருளும்;
துரோகமாய் அக்கிரமஞ்செய்கிற எவருக்கும் இரக்கங்காட்டாதேயும்.
அவர்கள் சாயங்காலம் திரும்பிவந்து 6
நாய்கள்போல் குலைத்து ஊரைச் சுற்றித் திரிகிறார்கள்.
இதோ, அவர்கள் வாயினால் கக்குகிறார் 7
கள்;
அவர்கள் உதடுகளில் பட்டயங்கள்,
கேட்கிறவன் யார் என்கிறார்கள்.
ஆனாலும் நீரோ, யெகோவா, அவர்களைப் பார்த்து 8
நகைப்பீர்;
புறஜாதிகள் யாவரையும் பரியாசம் செய்வீர்.

9 என் பலமே, நான் உமக்குக் காத்திருப்பேன்;
கடவுளே என் உயர்ந்த துருக்கம்.
10 என் கடவுள் தமது கிருபையிலே எனக்கு எதிர்கொண்டு வருவார்;
என் சத்துருக்களுக்கு நேரிடுவதை நான் பார்க்கச் செய்வார்.
11 அவர்களைக் கொன்றுபோடாதேயும்,
என் ஜனங்கள் மறந்துபோவார்களே;
எங்கள் கேடகமாகிய ஆண்டவரே,
உமது வல்லமையினால் அவர்களை அலையச் செய்யும், அவர்களைத் தாழ்த்திப்போடும்.
12 அவர்கள் வாயின் பாவம், அவர்கள் உதடுகளின் பேச்சு,
அவர்கள் இடும் சாபம், அவர்கள் சொல்லும் பொய் ஆகிய இவற்றினிமித்தம்
தங்கள் பெருமையில் பிடிபடுவார்களாக.
13 அவர்களை உமது உக்கிரத்திலே நிர்மூலமாக்கும்;
இனி இராதபடி நிர்மூலமாக்கும்,
கடவுள் பூமியின் எல்லைவரைக்கும் யாக்கோபிலே அரசாளுகிறவர்
என்று அவர்கள் அறிந்துகொள்ளட்டும்.
14 அவர்கள் சாயங்காலம் திரும்பிவந்து
நாய்கள்போல் குரைத்துக்கொண்டு ஊரைச் சுற்றித் திரிவார்களாக.
15 அவர்கள் சாப்பாட்டிற்கு அலைந்துதிரிகிறார்கள்;
திருப்தியடையாவிட்டால் இரவெல்லாம் அங்கேயே இருந்துவிடுவார்கள்.
16 காலை உமது வல்லமையைப் பாடுவேன்;
காலையிலே உமது கிருபையைக் களிப்போடு பாடுவேன்;
எனக்கு நெருக்கமுண்டான காலில்
நீர் எனக்குத் துருக்கமும் அடைக்கலமுமானீர்.
17 என் பலமே, உம்மைத் துதித்துப் பாடுவேன்;
கடவுள் என் துருக்கம், என் அருட்கடவுள் அவரே.

**60** தாவீதின் மிக்தாம் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு; இராகம்: சூஷன் ஏதூத்.

மெசொபொத்தாமியா தேசத்துச் சீரியரோடும் சோபா தேசத்துச் சீரியரோடும் தாவீது யுத்தம்பண்ணுகையில் யோவாப் திரும்பிவந்து உப்புப் பள்ளத்தாக்கிலே பன்னீராயிரம் ஏதோமியரை வெட்டினபோது தாவீது போதனையாகப் பாடினது.

கடவுளே, நீர் எங்களைக் கைவிட்டீர், எங்களை நொறுக்கிவிட்டீர்;
எங்கள்மேல் கோபமாயிருந்தீர்;
எங்களைத் திரும்ப நிலைநிறுத்தும்.
பூமியை அதிரப்பண்ணி அதில் வெடிப்பு 2
உண்டாகச் செய்தீர்;
அதின் வெடிப்புகளைப் பொருந்தப்பண்ணும், அது அசைகிறது.
உமது ஜனங்கள் கடினமான காரியங்களைக் 3
கண்டு அனுபவிக்கச் செய்தீர்;
தத்தளிப்பின் மதுவை எங்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர்.
சத்தியத்தினிமித்தம் கூடிவரும்படியாக 4
உமக்குப் பயந்து நடக்கிறவர்களுக்கு ஒரு கொடியைக் கொடுத்தீர்.
உமக்குப் பிரியமானவர்கள் விடுவிக்கப்படும் 5
படி
உமது வலதுகரத்தினால் ரட்சித்து எனக்கு மறுமொழியருளும்.
கடவுள் தமது பரிசுத்தத்தில் விளம்பினார், 6
நான் களிகூருவேன்;
சீகேமைப் பங்கிட்டுச் சுக்கோத் பள்ளத்தாக்கை அளந்துகொடுப்பேன்.
கிலேயாத் என்னுடையது, மனாசேயும் 7
என்னுடையது;
எப்பிராயீம் என் தலைச்சீரா;
யூதா என் செங்கோல்.
மோவாப் எனக்குப் பாதசுத்தி பாத்திரம்; 8
ஏதோமின்மேல் என் பாதரட்சையை
எறிந்துபோடுவேன்,
பெலிஸ்தியாவே, என்னிமித்தம் ஆர்ப்பரி.
அரணான பட்டணத்திற்குள் என்னை நடத் 9
திக்கொண்டுபோகிறவர் யார்?
ஏதோம்மட்டும் எனக்கு வழிகாட்டுகிறவர் யார்?
கடவுளே, நீர் எங்களைத் தள்ளிவிட்டீரல்ல 10
வோ?
கடவுளே, நீர் எங்கள் சேனைகளோடே புறப்படவில்லையே.
பகைஞருக்குத்தப்ப எங்களுக்குத் துணை 11
செய்யும்;
மனுஷன் உதவி விருதா.
கடவுளாலே பராக்கிரமஞ்செய்வோம்; 12
அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப் போடுவார்.

தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு; **61**
வாத்தியம்: யாழ்.

கடவுளே, என் அபயசத்தத்தைக் கேட்டருளும்;
என் விண்ணப்பத்தைக் கவனித்தருளும்.
என் இருதயம் தொய்யும்போது 2
பூமியின் கடையாந்தரத்திலிருந்து
உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்,

எனக்கு எட்டாத உயரமான கன்மலையில்
என்னைக் கொண்டுபோய்விடும்.
3 தேவரீர் எனக்கு அடைக்கலம்;
சத்துருவுக்கு எதிரே பலத்த துருக்கம்.
4 நான் உமது கூடாரத்தில் சதாகாலமும்
தங்குவேன்;
உமது செட்டைகள் மறைவிலே வந்து
அடைவேன்.
5 கடவுளே, நீர் என் பொருத்தனைகளைக் கவ
னித்துக்கொண்டீர்;
உமது திருநாமத்திற்குப் பயப்படுகிறவர்
களின் சுதந்தரத்தைத் தந்தீர்.
6 ராஜாவின் நாட்களோடே நாட்களைக் கூட்டு
வீர்;
அவர் வருஷங்கள் தலைமுறை தலைமுறை
யாக இருக்கும்.
7 அவர் கடவுள் முன்னிலையில் என்றென்
றும் நிலைத்திருப்பார்;
கிருபையும் உண்மையும் அவரைக் காக்கக்
கட்டளையிடும்.
8 இப்படியே தினமும் என் பொருத்தனைகளை
நான் செலுத்தும்படி
உமது திருநாமத்தை என்றைக்கும் துதித்
துப்பாடுவேன்.

**62** தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு;
இராகம்: ஏதூன்.

கடவுளையே நோக்கி என் ஆத்துமா அமர்ந்
திருக்கிறது;
என் ரட்சிப்பு அவராலேயே.
2 அவரே என் கன்மலை, என் ரட்சிப்பு, என்
துருக்கம்;
நான் அதிகமாய் அசைக்கப்படுவதில்லை.
3 கொல்லவேண்டுமென்று நீங்கள் அனை
வரும்
எதுவரை ஒரு மனுஷன்மேல் பாய்ந்து வரு
வீர்கள்?
சாய்ந்த சுவருக்கும் இடிந்த மதிலுக்கும் ஒப்
பாவீர்கள்.
4 அவனுடைய மேன்மையிலிருந்து அவனைத்
தள்ளும்படிக்கே
அவர்கள் ஆலோசனைபண்ணுகிறார்கள்;
பொய்பேசுவதே அவர்களுக்குப் பிரியம்,
வாயினால் ஆசீர்வதிக்கிறார்கள்; உள்ளத்தி
லே சபிக்கிறார்கள்.
5 என் ஆத்துமாவே, கடவுளையே நோக்கி
அமர்ந்திரு;
நான் நம்பிக்கையாய் எதிர்பார்த்திருப்பது
அவராலே வரும்.
6 அவரே என் கன்மலை, என் ரட்சிப்பு, என்
துருக்கம்;
நான் அசைக்கப்படுவதில்லை.
என் ரட்சிப்பும் என் மகிமையும் கடவு 7
ளிடத்திலேயே இருக்கிறது,
என் பலமான கன்மலையும் என் அடைக்கல
மும் கடவுளில் இருக்கிறது,
ஜனங்களே, எக்காலத்திலும் அவரில் நம் 8
பிக்கையாயுங்கள்,
அவர் முன்னிலையில் உங்கள் இருதயத்தை
ஊற்றிவிடுங்கள்,
கடவுள் நமக்கு அடைக்கலம்.
தாழ்ந்தோர் மாயை, உயர்ந்தோர் பொய்; 9
தராசிலே வைக்கப்பட்டால் அவர்கள் அனை
வரும் மேலே போவார்கள்.
காற்றிலும் லேசானவர்களே.
கொடுமையில் நம்பிக்கையாயிராதிருங்கள், 10
கொள்ளைப்பொருளில் பெருமைபாராட்டா
திருங்கள்,
ஐசுவரியம் விருத்தியானால் இருதயத்தை
அதின்மேல் வையாதேயுங்கள்.
கடவுள் ஒன்றை விளம்பினார், 11
இரண்டுதரம் கேட்டேன்:
வல்லமை கடவுளுடையது என்பதே.
கிருபையும் உம்முடையது, ஆண்டவரே! 12
தேவரீர் அவனவன் செய்கைக்குத் தக்க
படியே அளிக்கிறீர்.

**தாவீதின் சங்கீதம்; யூதாவின் வனாந்தரத்தி 63**
**லிருக்கையில் பாடினது.**

கடவுளே, நீர் என் கடவுள், கருத்தாய் உம்
மைத் தேடுகிறேன்,
வறண்டதும் விடாய்த்ததும் நீரற்றதுமான
நிலத்திலே
என் ஆத்துமா உமதுமேல் தாகமா
யிருக்கிறது,
என் மாம்சம் உம்மை வாஞ்சிக்கிறது.
இப்படியே உமது வல்லமையையும் உமது 2
மகிமையையும் காணும்படி
பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப் பார்த்துக்
கொண்டிருந்தேன்.
ஜீவனிலும் உமது கிருபையே நல்லது, 3
என் உதடுகள் உம்மைப் போற்றும்.
நான் உயிரோடிருக்குமளவும் உம்மை இப் 4
படியே துதித்து
உமது திருநாமத்தைச் சொல்லிக் கையெடுப்
பேன்.
நிணத்தையும் கொழுப்பையும் உண்டது 5
போல
என் ஆத்துமா திருப்தியாகும்.
என் படுக்கையில் நான் உம்மை நினைத்து 6
இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கும்
போது
என் வாய் ஆனந்தக் களிப்புள்ள உதடு
களால் உம்மைப்போற்றும்.

7 நீர் எனக்குத் துணையாயிருந்தீர்;
உமது செட்டைகள் நிழலிலே களிகூருகிறேன்.
8 என் ஆத்துமா உம்மைப் பற்றிக்கொண்டே தொடருகிறது;
உமது வலதுகரம் என்னைத் தாங்குகிறது.
9 என் உயிரைத் தேடுகிறவர்களோ
தங்களின் அழிவுக்கே ஏதுவாய்ப் பூமியின் ஆழங்களில் இறங்குவார்கள்.
10 அவர்கள் பட்டயத்துக்காளாவார்கள்,
நரிகளுக்கு இரையாவார்கள்.
11 ராஜாவோ கடவுளில் களிகூருவார்;
அவர்பேரில் சத்தியம்பண்ணுகிறவர்கள் யாவரும் மேன்மை பாராட்டுவார்கள்;
பொய் பேசுகிறவர்களின் வாய் அடைபடும்.

**64** தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு.

கடவுளே, என் பெருமூச்சின் சத்தத்தைக் கேட்டருளும்;
சத்துருவால் வரும் பயத்தை நீக்கி
என் உயிரைக் காத்தருளும்.
2 பொல்லாதவர்கள் கூட்டத்துக்கும்
அக்கிரமம் செய்வோர் அமளிக்கும்
என்னை விலக்கி மறைத்தருளும்.
3 அவர்கள் தங்கள் நாவைப் பட்டயத்தைப் போல் கூர்மையாக்குகிறார்கள்;
கசப்பு வார்த்தைகளாகிய தங்கள் அம்பு களை நாணேற்றுகிறார்கள்.
4 மறைவுகளில் குற்றமற்றவன்மேல் எய்யும் பொருட்டே அப்படிச் செய்கிறார்கள்;
சற்றும் பயமின்றிச் சடுதியில் அவன்மேல் எய்கிறார்கள்.
5 பொல்லாத காரியத்தில் தங்களைத் தைரியப் படுத்திக்கொள்ளுகிறார்கள்;
மறைவான கண்ணிகள் வைக்கிறதைப்பற்றிப் பேசிக்கொள்ளுகிறார்கள்;
அவற்றைக் காண்பவன் யார் என்கிறார்கள்.
6 அவர்கள் நியாயக்கேடுகளை ஆய்ந்து தேடுகிறார்கள்;
ஆய்ந்து தேடி முடித்தோம் என்கிறார்கள்,
அவர்களில் ஒவ்வொருவன் உட்கருத்தும் இருதயமும் ஆழமே.
7 கடவுளே அவர்கள்மேல் அம்புகளை எய்வார்,
சடுதியாய் அவர்கள் காயப்படுவார்கள்.
8 அவர்கள் நாவுகளே அவர்களுக்கு விரோதமாயிருப்பதால்
அவர்கள் இடறிவிழ நேரிடும்;
அவர்களைக் கவனித்துப்பார்க்கிற யாவரும் தலையசைப்பார்கள்.
9 எல்லா மனுஷரும் பயப்படுவார்கள்,
கடவுளின் செயலை அறிவிப்பார்கள்,
அவர் கிரியையை உணர்ந்துகொள்வார்கள்.
10 நீதிமான் யெகோவாவில் மகிழ்ந்து அவரில் நம்பிக்கைவைப்பான்;
நேர்மையான இருதயமுள்ளவர்கள் யாவரும் மேன்மைபாராட்டுவார்கள்.

**65** தாவீதின் சங்கீதம்; சேர்த்தனை; பாடகர் தலைவனுக்கு.

கடவுளே, சீயோனில் உம்மை நோக்கி அமர்ந்திருந்து துதிக்கிறார்கள்;
உமக்கே பொருத்தனை செலுத்தப்படும்.
2 ஜெபத்தைக் கேட்கிறவரே,
மாம்சமான யாவரும் உம்மிடம் வருவார்கள்.
3 அக்கிரம காரியங்கள் எனக்குமேல் பெருகி விட்டன;
தேவரீரோ எங்கள் மீறுதல்களை மன்னிக்கிறீர்.
4 உமது பிராகாரங்களில் வாசமாயிருக்கும் படி
நீர் தெரிந்தெடுத்துக் கிட்டிச்சேரச்செய்கிறவன் பாக்கியவான்;
உமது பரிசுத்த ஆலயமாகிய வீட்டின் நன்மையால் திருப்தியாவோம்.
5 எங்கள் ரட்சிப்பின் கடவுளே,
பயங்கர செயல்களினால் எங்களுக்கு நீதியாய் உத்தரவு அளிக்கிறீர்;
பூமியின் கடையாந்தரங்களிலும் தூரமான சமுத்திரங்களிலுமுள்ள
எல்லாருடைய நம்பிக்கைக்கும் ஆதாரம் நீரே.
6 பராக்கிரமத்தைக் கச்சையாகக் கட்டிக் கொண்டு
உமது பலத்தினால் பர்வதங்களை நிலையாக நிறுத்துகிறீர்.
7 சமுத்திரங்கள் கோஷ்டத்தையும் அவைகள் அலைகள் கோஷ்டத்தையும்
ஜனங்கள் அமளியையும் அமர்த்துகிறீர்.
8 கடையாந்தர இடங்களில் குடியிருக்கிறவர்களும்
உமது அடையாளங்களினிமித்தம் பயப்படுகிறார்கள்;
காலையும் மாலையும் களிப்புடன் தோன்றச் செய்கிறீர்.
9 தேவரீர் பூமியை விசாரித்து அதற்கு நீர்ப் பாய்ச்சுகிறீர்;
அதை மிகவும் செழிப்பாக்குகிறீர்;
கடவுளின் நதி தண்ணீர் நிறைந்துள்ளது;
இப்படியாக நீர் பூமியைத் திருத்தி அவர்களுக்குத் தானியம் விளையச்செய்கிறீர்.

10 படைச்சால்களைத் தண்ணீரால் நிறைக்கி
நீர்;
உழுதமண் அமுங்கச்செய்கிறீர்;
அதை மழையால் இளகச்செய்கிறீர்;
அதின் பயிரை ஆசீர்வதிக்கிறீர்.
11 வருஷத்தை உமது நன்மையால் முடிசூட்டு
கிறீர்;
உமது பாதைகளில் கொழுமை பொழி
கிறது.
12 வனாந்தர தாபரங்கள்மேலும் பொழிகிறது;
மேடுகள் களிப்பை அணிந்து பூரிக்கும்.
13 மேய்ச்சலுள்ள வெளிகளை ஆடுகள் ஆடை
போல் மறைக்கும்;
பள்ளத்தாக்குகளைத் தானியம் மூடும்;
எங்கும் ஆரவாரமும் பாடலுமே.

**66** கீர்த்தனை சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு.

பூமியின் குடிகளே,
நீங்கள் எல்லாரும் ஆர்ப்பரித்துக் கடவுளைக்
கீர்த்தனம்பண்ணுங்கள்.
2 அவர் திருநாமத்தின் மகத்துவத்தைத் துதித்
துப்பாடுங்கள்;
மகிமை உண்டாகும்படி அவர் துதியைக்
கொண்டாடுங்கள்.
3 நீங்கள் கடவுளினிடம்:
தேவரீர் உமது கிரியைகள் எவ்வளவு
பயங்கரமானவை,
உமது மகத்துவமான வல்லமையினிமித்
தம்
உமது சத்துருக்கள் உமக்கு அடங்குவது
போல் நடிக்கிறார்கள்;
4 பூமியின் மீதெங்கும் உம்மைப் பணிந்து
கொண்டு
உம்மைத் துதித்துப் பாடுவார்கள்;
அவர்கள் உமது திருநாமத்தைத் துதித்
துப்பாடுவார்கள்
என்று சொல்லுங்கள்.
5 வாருங்கள், கடவுள் செயல்களைப் பாருங்
கள்.
அவர் மனுப்புத்திரரிடம் நடப்பிக்கும் கிரி
யைகள் பயங்கரமானவை.
6 கடலை வெட்டாந்தரையாக மாற்றினார்;
ஆற்றைக் காலடையாய்க் கடந்தார்கள்;
அங்கே அவரில் களிகூர்ந்தோம்.
7 அவர் தமது வல்லமையில் என்றென்றும்
அரசாளுகிறவர்;
அவருடைய கண்கள் புறஜாதிகள்மேல்
நோக்கமாயிருக்கின்றன;
துரோகிகள் தங்களை உயர்த்தாதபடி செய்
யும்.
8 ஜனங்களே, நமது கடவுளை ஸ்தோத்திரியுங்
கள்;
அவரைத் துதிக்கும் சத்தம் தொனிக்கச்
செய்யுங்கள்.
9 நம்மைப் பிழைத்திருக்கச் செய்தவர்
அவரே;
அவர் நமது கால்களைத் தள்ளாடவிடவில்லை.
10 கடவுளே, எங்களைப் பரிசோதித்தீர்;
வெள்ளியைப் புடமிடுவதுபோல் எங்க
ளைப் புடமிட்டீர்;
11 எங்களை வலையில் அகப்படுத்தினீர்;
எங்கள் முதுகுகளின்மேல் வருத்தமான
பாரத்தை ஏற்றினீர்;
12 மனுஷர் எங்கள் தலையின்மேல் ரதங்களை
நடத்தும்படி செய்தீர்;
நெருப்பிலும் தண்ணீரிலும் அகப்பட்டிருந்
தோம்;
ஈரோ செழிப்பினுள் எங்களைக் கொண்டு
வந்து விட்டீர்.
13 தகனபலிகளைக்கொண்டு உமது ஆலயத்திற்
குள் பிரவேசிப்பேன்;
என் இக்கட்டின் வேளையில் என் உதடுகள்
உச்சரித்தவைகளும்
நான் வாய் திறந்து கேர்ந்துகொண்டவை
களுமான
என் பொருத்தனைகளை உமக்குச் செலுத்து
வேன்.
15 செம்மறி ஆட்டுக்கடாக்களைத் தகனிக்கும்
புகையோடு
கொழுமையானவைகளை உமக்குத் தகன
பலியாக இடுவேன்;
காளைகளையும் வெள்ளாட்டுக்கடாக்களையும்
உமக்குப் பலியிடுவேன்.
16 கடவுளுக்குப் பயந்தவர்களே, நீங்கள் எல்
லாரும் வந்து கேளுங்கள்;
அவர் எனக்குச் செய்தருளியதைச் சொல்
லுவேன்.
17 அவரை நோக்கி என் வாயினால் கூப்
பிடவே
நன்றி செலுத்தும் புகழ் என் நாவில் வந்து
விட்டது.
18 என் இருதயத்தில் அக்கிரமசிந்தை கொண்
டிருந்தேனானால்
ஆண்டவர் எனக்குச் செவிகொடாரே.
19 கடவுள் எனக்குச் செவிகொடுத்ததோ மெய்;
என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டருளி
னார்.
20 கடவுள் ஸ்தோத்திரத்துக்குரியவர்;
அவர் என் ஜெபத்தை அல்லத்தட்ட
வில்லை;
தமது கிருபையை என்னைவிட்டு விலக்க
வில்லை.

**67** கீர்த்தனை சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு;
வாத்தியம்: யாழ்.

பூமியில் உமது வழியும்
சகல ஜாதிகளுக்குள்ளும் உமது ரட்சணிய
மும் விளங்கும்படி.
2 கடவுள் எங்களுக்கு இரங்கி எங்களை ஆசீர்
வதிப்பாராக;
தமது திருமுகத்தை எங்களுக்கு நேரே பிர
காசிக்கப்பண்ணுவாராக;
3 கடவுளே, ஜாதிகள் உம்மைத் துதிப்பார்க
ளாக;
சகல ஜாதிகளும் உம்மைத் துதிப்பார்க
ளாக.
4 தேவரீர் புறஜாதியாரை நிதானமாய் நியாயந்
தீர்த்துப்
பூமியிலுள்ள ஜனங்களை நடத்துவீர்;
அதினால் ஜாதிகள் சந்தோஷித்துக் கெம்
பீரத்தோடே மகிழ்வார்களாக.
5 கடவுளே, ஜாதிகள் உம்மைத் துதிப்பார்க
ளாக.
சகல ஜாதிகளும் உம்மைத் துதிப்பார்க
ளாக.
6 பூமி தன் பலனைத்தந்தது;
கடவுளாகிய எங்கள் கடவுளே எங்களை
ஆசீர்வதிப்பார்.
7 கடவுள் எங்களை ஆசீர்வதிப்பார்.
பூமியின் எல்லைகளெல்லாம் அவருக்குப்
பயந்திருக்கும்.

**68** தாவீதின் சங்கீதம்; கீர்த்தனை; பாடகர் தலை
வனுக்கு.

கடவுள் எழுந்தருளுவார்;
அவருடைய சத்துருக்கள் சிதறுண்டு
போவார்கள்;
அவரைப் பகைக்கிறவர்கள் அவர் முன்
ஓடிப்போவார்கள்.
2 புகை பறக்கடிக்கப்படுவதுபோல
அவர்களைப் பறக்கடிப்பீர்,
மெழுகு அக்கினிமுன் உருகுவதுபோல
தெய்வபயமற்றவர்கள் கடவுள்முன் அழி
வார்கள்.
3 நீதிமான்களோ கடவுள்முன் மகிழ்ந்து
களிகூர்ந்து ஆனந்த சந்தோஷமடைவார்
கள்.
4 கடவுளைப் பாடி அவர் திருநாமத்தைத் துதித்
துப்பாடுங்கள்;
வனாந்தரங்களில் ஏறிவருகிறவருக்கு வழி
யை ஆயத்தப்படுத்துங்கள்,
அவர் நாமம் யெகோவா;
அவர்முன் களிகூருங்கள்.
5 தமது பரிசுத்த வாசஸ்தலத்திலிருக்கிற
கடவுள்
அநாதப் பிள்ளைகளுக்குத் தகப்பன்,
விதவைகளுக்கு நியாயம் செய்கிறவர்.
தனிமையானவர்களுக்குக் கடவுள் வீடு 6
வாசல் ஏற்படுத்துகிறார்;
சிறையிலிருப்பவர்களை வாழ்வினுள்
கொண்டுவருகிறார்;
துரோகிகளோ வறண்ட இடத்தில் தங்கு
வார்கள்.
கடவுளே, நீர் உமது ஜனங்கள் முன் 7
சென்று
அவாந்தர வெளியிலே நடந்துவருகையில்
பூமி அதிர்ந்தது; 8
கடவுள் முன்பாக வானமும் சொரிந்தது;
இஸ்ரவேலின் கடவுளாகிய கடவுளுக்கு
முன்பாகவே
இந்தச் சீனாய்மலையும் அசைந்தது.
கடவுளே, மழையை ஏராளமாய்ப் பெய்யப் 9
பண்ணினீர்,
இளைத்துப்போன உமது சுதந்தரத்தைத்
திடப்படுத்தினீர்.
உமது மந்தை அதிலே தங்கியிருந்தது, கட 10
வுளே, உமது கருணையினாலே ஏழை
களைப் பராமரிக்கிறீர்.
ஆண்டவரே செய்தியைச் சொன்னவர், 11
அதைப் பிரசித்தப்படுத்தும் ஸ்திரீகள்
கூட்டம் மிகுதி.
சேனைகளின் ராஜாக்கள் ஓடிவிடுவார்கள், 12
ஓடிவிடுவார்கள்;
வீட்டிலிருந்தவளோ கொள்ளைப் பொருளைப்
பங்கிடுவாள்.
நீங்கள் தொழுவங்களினடுவில் படுத்துக் 13
கொள்ளுகையில்
வெள்ளியால் மூடிய புறாச் சிறகுகளும்
பசும்பொன்னால் மூடிய அதின் இறகு
களும்
உங்களுக்குக் கிடைக்குமோ?
சர்வவல்லவர் அங்கே ராஜாக்களைச் சித 14
றடிக்கும்போது
சல்மோன்மலை உறைந்தமழை பெய்தது
போலாகும்.
பாசான் பர்வதம் தெய்வபர்வதம், 15
பாசான் பர்வதம் சிகரங்களுள்ளது.
உயர்ந்த சிகரமுள்ள பர்வதங்களே, 16
கடவுள் வாசமாயிருக்கப் பிரியங்கொண்ட
இந்த மலையை
நீங்கள் ஏன் பொறுமையாய்ப் பார்க்கிறீர்
கள்?
யெகோவா இதிலேயே என்றென்றும் வாச
மாயிருப்பார்.
கடவுளின் இரதங்கள் பதினாயிரங்களும் 17
ஆயிரமாயிரங்களுமானவை;
ஆண்டவர் சீனாயிலிருந்தவண்ணமாகவே
பரிசுத்தமுள்ளவராய்
அவைகள் நடுவில் இருக்கிறார்.

18 தேவரீர் உன்னதத்திற்கு ஏறிச்
சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கிக்கொண்டுபோனீர்;
கடவுளாகிய யெகோவா வீற்றிருக்கும்
பொருட்டு,
மனுஷரிடமிருந்து, துரோகிகளிடமிருந்தும்,
காணிக்கைகளைப் பெற்றுக்கொண்டீர்;
19 ஆண்டவர் ஸ்தோத்திரத்திற்குரியவர்,
அவர் தினந்தினம் நமது பாரங்களைச் சுமக்கிறார்;
அவரே நமது ரட்சிப்பின் கடவுள்.
20 கடவுளே நம்மை ரட்சித்துவரும் கடவுள்,
மரணத்துக்குத் தப்புவிக்கிற வழிகள் ஆண்டவராகிய யெகோவாவில் உண்டு.
21 சத்துருக்கள் விஷயத்திலோ, கடவுள் அவர்கள் சிரசையும்
தன் அக்கிரமங்களில் தரித்து நடக்கிறவன் மயிர்நிறைந்த உச்சந்தலையையும்
உடைத்துவிடுவார்.
22 பாசானிலிருந்தும் சமுத்திர ஆழங்களிலிருந்தும்
நான் திரும்ப அழைத்துவருவேன்;
23 உன் கால் இரத்தத்தில் தோயும்,
உன் நாய்கள் நாவு சத்துருக்களினிடம்
அதற்குரிய
பங்கைப் பெற்றுக்கொள்ளும்
என்று ஆண்டவர் சொன்னார்.
24 கடவுளே, நீர் பவனிசெல்வதை,
என் கடவுளும் ராஜாவுமானவர் பவனி
செல்வதையே, கண்டார்கள்.
25 முன்னுகப் பாடுவோரும்
பின்னுக நரம்புவாத்தியங்களை வாசிப்போரும்
சுற்றிலும் தம்புரு வாசிக்கும் கன்னிகைகளும் நடந்தார்கள்.
26 இஸ்ரவேலின் ஊற்றிலிருந்து தோன்றினவர்களே,
சபைகளின் நடுவே ஆண்டவராகிய கடவுளை ஸ்தோத்திரியுங்கள்.
27 அங்கே அவர்களை நடத்துகிற இளையவனாகிய பென்யமீனும்
யூதாவின் பிரபுக்களும் அவர்கள் கூட்டமும்
செபுலோனின் பிரபுக்களும் நப்தலியின்
பிரபுக்களும் இருக்கிறார்கள்.
28 உன் கடவுள் உனக்குப் பலத்தைக் கட்டளையிட்டார்,
கடவுளே, நீர் எங்கள் நிமித்தம் செய்தவற்றில்
உமது பலத்தைக் காட்டியருளும்.
29 எருசலேமிலுள்ள உமது ஆலயத்தினிமித்தம்
ராஜாக்கள் உமக்குக் காணிக்கைகளைக்
கொண்டுவருவார்கள்.
30 நாணலிலுள்ள மிருகத்தையும்
ஜனங்களாகிய கன்றுகளோடுகூடிய ரிஷபக்கூட்டத்தையும் கண்டியும்.
ஒவ்வொருவனும் வெள்ளிகாணயங்களைக்
கொண்டுவந்து பணிந்து அடங்குவான்;
யுத்தத்தில் பிரியப்படுகிற ஜனங்களைச் சிதறடிப்பார்.
31 பிரபுக்கள் எகிப்திலிருந்து வருவார்கள்;
எத்தியோப்பியா கடவுளை நோக்கிக் கை
யெடுக்க விரைந்து வரும்.
32 பூமியின் ராஜ்யங்களே, கடவுளைப் பாடுங்கள்;
ஆண்டவரைத் துதித்துப் பாடுங்கள்.
33 ஆதிமுதலாயுள்ள வானுயர் வானங்களை
வாகனமாயுடையவரைப் பாடுங்கள்;
இதோ, தமது சத்தத்தை, பலத்த சத்தத்தையே,
முழங்கப்பண்ணுகிறார்.
34 கடவுளுக்கே வல்லமை உரியதென்றிருங்கள்,
அவருடைய மகிமை இஸ்ரவேலின்மேலும்
அவருடைய வல்லமை மேகமண்டலங்களிலும் உள்ளது.
35 கடவுளே, உமது பரிசுத்த ஸ்தலங்களிலிருந்து பயங்கரமாய் விளங்குகிறீர்;
இஸ்ரவேலின் கடவுளே தமது ஜனங்களுக்குப்
பலத்தையும் சத்துவத்தையும் அருளுகிறவர்;
கடவுள் ஸ்தோத்திரத்துக்குரியவர்.

தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு; **69**
இராகம்: சோஷனீம்.

கடவுளே, என்னை ரட்சியும்,
வெள்ளங்கள் என் உயிருக்கு மோசமாகப் பெருகுகின்றன.
2 ஆழமான உளையில் அமிழ்ந்திருக்கிறேன்;
நிற்க நிலையில்லை, நிலையாத ஜலத்தில் ஆழ்ந்திருக்கிறேன்;
வெள்ளங்கள் என்மேல் புரண்டுபோகின்றன.
3 கூப்பிட்டு இளைத்தேன்;
என் தொண்டை வறண்டது;
என் கடவுளுக்கு நான் காத்திருந்து என் கண்கள் பூத்துப்போயின.
4 காரணமின்றி என்னைப் பகைப்பவர்கள்
என் தலைமயிரிலும் அதிகம்,
அநியாயமாய் எனக்குச் சத்துருக்களாகி
என்னைச் சங்கரிக்கவேண்டுமென்றிருக்கிறவர்கள் பலத்திருக்கிறார்கள்,

நான் எடுத்துக்கொள்ளாததை நான் கொடுக்கவேண்டியதாயிற்று.
5 கடவுளே, என் மதிகேடு உமக்குத் தெரியும்;
என் குற்றங்கள் உமக்கு மறைந்தவையல்ல.
6 சேனைகளின் யெகோவாவே, ஆண்டவரே,
உமக்குக் காத்திருக்கிறவர்கள் என்னிமித்தம் வெட்கப்படாதிருப்பார்களாக;
இஸ்ரவேலின் கடவுளே, உம்மைத் தேடுகிறவர்கள் என்னிமித்தம் கலங்காதிருப்பார்களாக.
7 உமது நிமித்தம் நிந்தையைச் சகித்தேன்;
இலச்சை என் முகத்தை மூடிற்று.
8 என் சகோதரருக்கு வேற்றுமனுஷனும்
என் தாயின் பிள்ளைகளுக்கு அந்நியனுமானேன்.
9 உமது வீட்டைப்பற்றிய வைராக்கியம் என்னைப் பட்சித்தது;
உம்மை நிந்திப்பவரின் நிந்தனைகள் என்மேல் விழுந்தன.
10 என் ஆத்துமா வாடும்படி உபவாசித்து அழுதேன்,
அதுவும் எனக்கு நிந்தையாய் முடிந்தது.
11 இரட்டை என் உடுப்பாக்கினேன்;
அதினால் அவர்களுக்குப் பழமொழியானேன்.
12 ஊர் வாசலில் உட்கார்ந்திருப்பவர்கள் எனக்கு விரோதமாய்ப் பேசுகிறார்கள்;
மதுபானம்பண்ணுவோர் பாடலானேன்.
13 நானோ, யெகோவா,
அனுக்கிரக காலத்தில் உம்மை நோக்கி விண்ணப்பஞ்செய்கிறேன்;
கடவுளே, உமது மிகுந்த கிருபையின்படியும் ரட்சிப்புக்குரிய உமது உண்மையின்படியும்
எனக்கு மறு உத்தரவு அருளும்.
14 நான் அமிழ்ந்திப்போகாதபடி சேற்றினின்று என்னைத் தாக்கிவிடும்;
என்னைப் பகைப்பவர்களினின்றும் நிலையாத வெள்ளத்தினின்றும்
நான் நீங்கும்படி செய்யும்.
15 ஜலப்பிரவாகங்கள் என்மேல் புரளாமலும்
ஆழம் என்னை விழுங்காமலும்
பாதாளம் என்மேல் தன் வாயை அடைத்துக்கொள்ளாமலும் இருப்பதாக.
16 யெகோவா, எனக்குச் செவிசாய்த்தருளும்,
உமது கிருபை அருமையானது;
உமது இரக்கப்பெருக்கின்படியே என்னை நோக்கியருளும்.
17 உமது திருமுகத்தை அடியேனுக்கு மறையாதேயும்;
நான் நெருக்கத்திலிருக்கிறேன், எனக்கு மறுமொழி கொடுக்க விரைந்தருளும்.
என்னைக் கிட்டிவந்து என்னை விடுவித்தருளும்; 18
என் சத்துருக்களினிமித்தம் என்னை மீட்டுவிடும்.
என் நிந்தையும் என் வெட்கமும் என் அவமானமும் 19
தேவரீருக்குத் தெரியுமே;
என் சத்துருக்கள் எல்லாரும் உமக்கு முன்பாக இருக்கிறார்களே.
நிந்தை என் இருதயத்தைப் பிளந்தது, 20
நான் மிகவும் வருந்துகிறேன்;
பரிதபிக்கிறவனுண்டோ என்று காத்திருந்தேன், ஒருவனும் இல்லை;
தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந்தேன், ஒருவனையும் காணேன்.
என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள்; 21
என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள்.
அவர்கள் பந்தி அவர்களுக்குக் கண்ணியும் 22
சுகவாழ்வில் அது அவர்களுக்குப் பொறியுமாகக் கடவது.
அவர்கள் கண்கள் காணுதபடி அந்தகாரப் 23
படச்செய்யும்;
அவர்கள் இடுப்புகளை எப்போதும் தள்ளாடப்பண்ணும்.
உமது உக்கிரத்தை அவர்கள்மேல் ஊற்று 24
றும்;
உமது கோபாக்கினி அவர்களைத் தொடர்ந்து பிடிப்பதாக.
அவர்கள் வாசஸ்தலம் பாழாவதாக; 25
அவர்கள் கூடாரங்களில் எவனும் குடிபுகாதிருப்பானாக.
தேவரீர் அடித்தவனை அவர்கள் துன்பப் 26
படுத்துகிறார்களே;
நீர் காயப்படுத்தினவர்களின் நோவைப்பற்றிக் குறைவாய்ப்பேசுகிறார்களே.
அவர்கள் அக்கிரமத்தோடு அக்கிரமத்தைக் 27
கூட்டும்;
அவர்கள் உமது நீதிக்கு வந்தெட்டாதிருப்பார்களாக.
ஜீவபுஸ்தகத்திலிருந்து அவர்கள் பேர் எடு 28
பட்டுப்போவதாக,
அது நீதிமான்கள் பேரோடே எழுதப்படாதிருப்பதாக.
நானோ சிறுமையானவன், நோவுள்ளவன்; 29
கடவுளே, உமது ரட்சிப்பு என்னைக் காப்பதாக.
கடவுளின் திருநாமத்தைப் பாட்டினால் 30
துதிப்பேன்;

அவருக்கு நன்றிசெலுத்தி அவரை மகிமைப்படுத்துவேன்.
31 காணியைப்பார்க்கிலும், கொம்பும் விரிகுளம்புமுள்ள எருதைப்பார்க்கிலும்,
இதுவே யெகோவாவுக்குப் பிரியமாயிருக்கும்.
32 சிறுமையானவர்கள் இதைக்கண்டு சந்தோஷப்படுவார்கள்;
கடவுளைத் தேடுகிறவர்களே, உங்கள் இருதயம் வாழ்வதாக.
33 யெகோவா ஏழைகளுக்குச் செவிசாய்க்கிறார்;
கட்டுண்ட தம்முடையவர்களை அவர் புறக்கணியார்.
34 வானமும் பூமியும் சமுத்திரங்களும்
அவைகளில் சஞ்சரிக்கிற யாவும் அவரைத் துதிக்கக்கடவது.
35 கடவுள் சீயோனை ரட்சித்து யூதாவின் பட்டணங்களைக் கட்டுவார்;
அப்பொழுது அதில் குடியிருந்து அதைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்.
36 அவர் தாசரின் சந்ததியார் அதைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்,
அவர் திருநாமத்தை நேசிக்கிறவர்கள் அதில் வாசமாயிருப்பார்கள்.

**70** தாவீதின் சங்கீதம்; ஞாபகப்படுத்தலாகப் பாடினது; பாடகர் தலைவனுக்கு.

கடவுளே, என்னை விடுவித்தருளும்;
யெகோவாவே, எனக்குச் சகாயஞ்செய்ய விரைந்தருளும்.
2 என்னை அழிக்கத்தேடுகிறவர்கள்
வெட்கி நாணுவார்களாக;
எனக்கு வரும் தீங்கில் பிரியங்கொள்ளுகிறவர்கள்
பின்னிட்டுத் திரும்பி அவமானத்துக்குள்ளாவார்களாக.
3 ஆகா, ஆகா, என்று சொல்லுகிறவர்கள்
தாங்கள் அடையும் வெட்கத்தினால் பின்னிட்டுப் போவார்களாக.
4 உம்மைத் தேடுகிற அனைவரும்
உம்மில் மகிழ்ந்து களிப்பார்களாக;
உமது ரட்சிப்பை நேசிக்கிறவர்கள்,
கடவுளுக்கு மகிமை என்று எப்போதும் சொல்வார்களாக.
5 நானோ சிறுமையானவன், ஏழை,
கடவுளே, என்னிடம் விரைந்து வாரும்;
நீரே என் துணை, என்னை விடுவிக்கிறவர்,
யெகோவா தாமதியாதேயும்.

**71** யெகோவா, உம்மில் நம்பிக்கைவைத்திருக்கிறேன்;
நான் ஒருபோதும் வெட்கப்படாதபடி செய்யும்.
உமது நீதியில் என்னை விடுவியும், என்னை மீட்டருளும், 2
உமது செவியை எனக்குச் சாய்த்து என்னை ரட்சித்தருளும்.
நான் எப்பொழுதும் வந்தடையத்தக்க பலத்த துருக்கமாயிரும்; 3
என்னை ரட்சிப்பதற்குக் கட்டளையிட்டீரே;
நீரே என் கன்மலை, என் கோட்டை.
என் கடவுளே, தெய்வபயமற்றவன் கையினின்றும் 4
நியாயக்கேடும் கொடுமையுமுள்ளவன் வசத்தினின்றும்
என்னை மீட்டருளும்.
யெகோவாவாகிய ஆண்டவரே, நான் ஆவலோடு காத்திருக்கிறவர் நீரே; 5
என் சிறுவயதுதொடங்கி நான் நம்பிக்கை வைத்திருக்கிறவர் நீரே.
நான் கர்ப்பத்தில் உற்பவித்ததுமுதல் என் 6
நீதாங்கிவந்தவர் நீரே;
என் தாயின் வயிற்றிலிருந்து என்னை எடுத்தவர் நீரே;
நான் எப்பொழுதும் துதித்துக்கொண்டிருப்பவரும் நீரே.
அநேகருக்கு நான் ஒரு புதுமைபோலானேன்; 7
நீரோ எனக்குப் பலத்த அடைக்கலம்.
என் வாயில் உமது துதியும் 8
நாள்தோறும் உமது புகழும் நிறைந்திருக்கும்.
முதிர்வயதில் என்னைத் தள்ளி விடாதேயும்; 9
என் பலம் அற்றுப்போகும்போது என்னைக் கைவிடாதேயும்.
என் சத்துருக்கள் என்னைப்பற்றிப் பேசுகிறார்கள்; 10
என் உயிரைவாங்கக் காத்திருக்கிறவர்கள்
கூடி ஆலோசனை பண்ணுகிறார்கள்;
கடவுள் அவனைக் கைவிட்டார், 11
அவனைத் தொடர்ந்து பிடியுங்கள்,
அவனை விடுவிப்பாரில்லை
என்று சொல்லுகிறார்கள்.
கடவுளே, எனக்குத் தூரமாயிராதேயும்; 12
என் கடவுளே, எனக்குச் சகாயஞ் செய்ய விரைந்தருளும்.
என்னை விரோதிக்கிறவர்கள் வெட்கி அழிவார்களாக; 13
தீங்குசெய்ய நாடுகிறவர்களுக்கு நிந்தையும் அவமானமும் உடையாவதாக.
நானோ எப்பொழுதும் நம்பிக்கையோடு 14
எதிர்பார்த்திருப்பேன்;

இன்னும் அதிகமதிகமாய் உம்மைத் துதித்துக்கொண்டேயிருப்பேன்.
15 என் வாய் உமது நீதியையும்
நாள்தோறும் உமது ரட்சிப்பையும்
எண்ணி எண்ணிச் சொல்லிக்கொண்டிருக்கும்;
அவற்றின் தொகை எனக்குத் தெரியாதே.
16 யெகோவாவாகிய ஆண்டவரின் பலத்த செயல்களைச்
சொல்லிக்கொண்டு கிட்டிச் சேருவேன்;
உமது நீதி ஒன்றையே நினைவுகூருவேன்.
17 கடவுளே, என் சிறுவயதுமுதல் எனக்குப் போதித்துவந்தீர்;
இதுவரைக்கும் உமது அதிசயங்களை அறிவித்துவந்தேன்.
18 இப்பொழுதும், கடவுளே, வரும் சந்ததிக்கு
உமது பலத்தையும்
வரப்போகிற ஒவ்வொருவனுக்கும் உமது பராக்கிரமத்தையும்
நான் அறிவிக்கும்வரைக்கும்,
முதிர்வயதும் நரையுமிருமுள்ளவனுகும் வரைக்கும்,
என்னைக் கைவிடாதேயும்.
19 கடவுளே, உமது நீதி உன்னதம்வரைக்கும் எட்டியுள்ளது;
பெரிதானவைகளை நீர் செய்தீர்;
கடவுளே, உமக்கு நிகரானவர் யார்?
20 அநேக இக்கட்டுகளையும் ஆபத்துகளையும்
நான் அனுபவிக்கும்படி செய்த நீர்
திரும்பவும் என்னை உயிர்ப்பித்துத்
திரும்பவும் என்னைப் பூமியின் ஆழங்களிலிருந்து ஏறப்பண்ணுவீர்;
21 என் மேன்மையைப் பெருகப்பண்ணித்
திரும்பி என்னைத் தேற்றுவீர்.
22 என் கடவுளே, நான் வீணையை எடுத்து
உம்மை, உமது சத்தியத்தையே, துதிப்பேன்.
இஸ்ரவேலின் பரிசுத்தரே, சுரமண்டலத்தை எடுத்து
உம்மைத் துதித்துப் பாடுவேன்.
23 உம்மைத் துதித்துப் பாடும்போது என் உதடுகளும்
நீர் மீட்டுக்கொண்ட என் ஆத்துமாவும் கெம்பீரித்து மகிழும்.
24 எனக்குத் தீங்குசெய்யத் தேடுகிறவர்கள்
வெட்கி அவமானமடைந்தபடியால்
நாளெல்லாம் என் நாவு உமது நீதியைக் கொண்டாடும்.

**72** சாலொமோனின் சங்கீதம்.
கடவுளே, ராஜாவுக்கு உமது நியாயத்தீர்ப்புகளையும்
ராஜகுமாரனுக்கு உமது நீதியையும் கட்டளையிட்டருளும்.
அவர் உமது ஜனத்தை நீதியோடும் 2
சிறுமையுற்ற உம்முடையவர்களை நியாயத்தோடும் விசாரித்து வருவார்.
பர்வதங்கள் ஜனத்திற்குச் சமாதானத்தைத் 3
தரும்;
குன்றுகள் நீதியிலே சமாதானத்தைக் கொடுக்கும்.
ஜனத்திலுள்ள சிறுமையானவர்களுக்கு 4
அவர் நியாயம் செய்வார்.
ஏழையின் பிள்ளைகளைக் காப்பாற்றுவார்;
ஒடுக்குகிறவனை நொறுக்குவார்.
சூரியனும் சந்திரனுமுள்ளமட்டும் 5
தலைமுறை தலைமுறையாக அவர்கள் உமக்குப் பயந்திருப்பார்கள்.
புல்லறுத்த வெளியின்மேல் பெய்யும் தூற 6
லைப்போலவும்
பூமியை நனைக்கும் மழையைப்போலவும் இறங்குவார்.
அவர் நாட்களில் நீதிமான் செழிப்பான்; 7
சந்திரனுள்ளவரைக்கும் சமாதானம் பெருகியிருக்கும்.
ஒரு சமுத்திரந்தொடங்கி மறு சமுத்திரம் 8
வரைக்கும்
நதிதொடங்கிப் பூமியின் எல்லைகள் வரைக்கும் அரசாளுவார்.
காட்டு ஜனங்கள் அவருக்கு முன்பாகக் 9
குனிந்து வணங்குவார்கள்;
அவர் சத்துருக்கள் மண்ணை நக்குவார்கள்.
தர்ஷீசின் ராஜாக்களும் தீவுகளின் ராஜாக் 10
களும் காணிக்கைகளைக் கொண்டுவருவார்கள்;
ஷேபாவினும் சேபாவினுமுள்ள ராஜாக்கள்
வெகுமானங்களைக் கொண்டு வருவார்கள்.
சகல ராஜாக்களும் அவரைப் பணிந்து 11
கொள்வார்கள்;
சகல ஜாதிகளும் அவரைச் சேவிப்பார்கள்.
கூப்பிடுகிற ஏழையையும் 12
துணையற்ற சிறுமையானவனையும் அவர் விடுவிப்பார்.
பலவீனனுக்கும் ஏழைக்கும் அவர் இரக் 13
கங்காட்டுவார்;
ஏழைகளின் உயிரைக் காப்பாற்றுவார்.
அவர்கள் உயிரை இடுக்கத்தினின்றும் 14
கொடுமையினின்றும் விடுவிப்பார்,
அவர்கள் இரத்தம் அவர் பார்வையில் அருமையாயிருக்கும்.
அவர் வாழ்ந்திருப்பார்; 15
ஷேபாவின் பொன் அவருக்குக் கொடுக்கப்படும்;

அவர் நிமித்தம் இடைவிடாமல் ஜெபம்
செய்யப்படும்;
நாளெல்லாம் வாழ்த்துவார்கள்.
16 தேசத்தில், மலையின் உச்சியிலும், தானியமிருக்கும்;
விளைந்த பயிர்கள் அசைவது லீபனோனைப்
போலிருக்கும்,
பூமியின் புல்லைப்போல நகரத்தார் செழித்
தோங்குவார்கள்.
17 அவர் பேர் என்றென்றும் நிலைத்திருக்கும்;
சூரியனுள்ளமட்டும் அவர் பேர் சந்தான
பரம்பரையாய் நிலைக்கும்;
அவருடைய ஆசீர்வாதத்தைச் சொல்லி
மனுஷர் தங்களை வாழ்த்திக்கொள்வார்கள்,
சகல ஜாதிகளும் அவரைப் பாக்கியரென்று
வாழ்த்துவார்கள்.
இஸ்ரவேலின் கடவுள், யெகோவாவாகிய 18
கடவுளே, ஸ்தோத்திரத்துக்குரியவர்;
அவர் ஒருவரே அதிசயங்களைச் செய்கிறவர்.
மகிமைபொருந்திய அவருடைய திருநாமம் 19
என்றென்றும் ஸ்தோத்திரிக்கப்படுவதாக;
பூமி முழுவதிலும் அவருடைய மகிமையே
நிறைந்திருப்பதாக; ஆமேன், ஆமேன்.

ஈசாயின் புத்திரனாகிய தாவீதின் பிரார்த்தனை 20
கள் முடிந்தன.

---

# மூன்றாம் பாகம்

## 73—89

**73** ஆசாபின் சங்கீதம்.
இஸ்ரவேலுக்கு, சுத்த இருதயமுள்ளவர்
களுக்கே, கடவுள் முற்றிலும் நல்லவர்,
2 நானோ என் கால்கள் தள்ளாடுவதற்கும்
என் அடிகள் சறுக்குவதற்கும் சற்றே தப்
பினேன்.
3 தெய்வபயமற்றவர்களின் வாழ்வை நான்
கண்டபோது
அந்த வீம்புக்காரர்மேல் பொறாமை கொண்
டேன்.
4 மரணத்திலும் அவர்களுக்குக் கஷ்டமில்லை;
அவர்கள் பலம் உறுதியாயிருக்கிறது.
5 மற்ற மனுஷர்போல் கஷ்டங்களில் அகப்
படார்கள்;
மற்ற மனுஷர்போல் உபாதியை அடை
யார்கள்.
6 ஆகவே பெருமை சரப்பணியைப்போல்
அவர்களைச் சுற்றிக்கொள்ளும்;
கொடுமை ஆடையைப்போல் அவர்களை
மூடிக்கொள்ளும்.
7 அவர்கள் கண்கள் கொழுப்பினால் வெ
ளியே துருத்தினவைகள்;
அவர்கள் மனோராஜ்யங்களுக்குக் கணக்
கில்லை.
8 அவர்கள் அவமதிப்பாய்ப் பேசுகிறார்கள்;
அவர்கள் பொல்லாப்பின் சொற்கள் இடுக்
கண் விளைவிக்கும்;
அவர்கள் பேச்சு இறுமாப்பானது.
9 தங்கள் வாய் வானமட்டும் எட்டப் பேசு
கிறார்கள்;
அவர்கள் நாவு உலகமெங்கும் ஓடுகி
றது.
ஆகையால் அவர்களுடைய ஜனம் இந்த 10
வழியாகவே திரும்பும்;
தண்ணீர்கள் அவர்களுக்குப் பரிபூரண
மாய்ச் சுரந்துவரும்.
கடவுளுக்கு அது எப்படித் தெரியும்? 11
உன்னதமானவருக்கு அதைப்பற்றி அறிவு
உண்டோ
என்று சொல்லுகிறார்கள்.
இதோ, இவர்கள் தெய்வபயமற்றவர்கள்; 12
இவர்கள் என்றும் சுகஜீவிகளாயிருந்து
ஆஸ்தியைப் பெருகப்பண்ணுகிறார்கள்.
என் இருதயத்தை நான் சுத்தம்பண்ணினதும் 13
குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழு
வினதும் விருதா.
நாள்முழுதும் நான் வாதிக்கப்பட்டும் 14
காலைதோறும் சிட்சிக்கப்பட்டும் இருக்கி
றேன்.
இவ்விதமாய்ப் பேசுவேன் என்று நான் 15
சொன்னேனாகில்,
இதோ, உமது பிள்ளைகளின் சந்ததிக்குத்
துரோகியாவேன்,
இதை அறியும்படி யோசித்துப் பார்த்தேன்; 16
அது எனக்கு மிகவும் வருத்தமாய்த் தோன்
றினது.
நான் கடவுளின் பரிசுத்த ஸ்தலத்துக்குச் 17
சென்று
அவர்கள் முடிவைச் சிந்திக்குமளவும்
அப்படியிருந்தது.
நிச்சயமாகவே நீர் அவர்களைச் சறுக்கலான 18
இடங்களில் நிறுத்திப்
பாழான இடங்களில் விழுந்துவிடப்பண்
ணுகிறீர்.

19 அவர்கள் நிமிஷகாலத்தில் எவ்வளவு பாழாய்ப்போகிறார்கள்!
பயங்கரமானவைகளால் அழிந்து நிர்மூலமாகிறார்கள்.
20 தீத்திரை தெளிந்தவுடனே சொப்பனம் ஒழிவதுபோல்,
ஆண்டவரே, நீர் விழிக்கும்போது,
நிழலாட்டமேயென்று அவர்களை இகழுவீர்.
21 என் மனம் கசந்து
என் இதயத்தில் குத்துண்டபோது
22 நான் மிருக குணமுள்ளவனும் அறிவீனனுமானேன்;
உமது முன்னிலையில் மிருகம்போலிருந்தேன்.
23 ஆனாலும் நான் இடைவிடாமல் உமது முன்னிலையிலிருக்கிறேன்;
நீர் என் வலதுகையைப் பிடித்துத் தாங்குகிறீர்.
24 உமது ஆலோசனையினால் என்னை நடத்தி
முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக் கொள்வீர்.
25 பரலோகத்தில் உம்மையன்றி எனக்கு யார் உண்டு?
பூலோகத்தில் உம்மையன்றி நான் ஆசிப்பது ஒன்றுமில்லை.
26 என் மாம்சமும் என் இருதயமும் சோர்ந்துபோகின்றன;
கடவுளோ என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலை;
அவரே என் பங்கு.
27 இதோ, உம்மைவிட்டுத் தூரமாய்ப் போகிறவர்கள் அழிவார்கள்;
உம்மைவிட்டுச் சோரம்போகிற அனைவரையும் சங்கரிப்பீர்.
28 எனக்கோ கடவுளை அண்டிக்கொண்டிருப்பதே நலம்,
நீர் செய்தவைகளையெல்லாம் நான் சொல்லி வரும்படி
யெகோவாவாகிய ஆண்டவரில் என் நம்பிக்கையை வைத்திருக்கிறேன்.

**74** ஆசாபின் மஸ்கீல் சங்கீதம்.

கடவுளே, நீர் எங்களை என்றென்றும் ஏன் தள்ளிவிட்டீர்?
உமது மேய்ச்சலின் ஆடுகள்மேல் உமது கோபம் ஏன் புகைகிறது?
2 நீர் பூர்வகாலத்தில் சம்பாதித்த உமது சபையை
உமது சுதந்தரமான கோத்திரமாக நீர் மீட்டுக்கொண்டதை,
நீர் வாசமாயிருந்துவருகிற சீயோன் மலையை, நினைத்தருளும்.

42

நெடுங்காலமாகப் பாழாய்க்கிடக்கிற ஸ்தலங்களில் 3
உமது பாதங்களை எழுந்தருளப்பண்ணும்;
பரிசுத்த ஸ்தலத்திலே சத்துரு அனைத்தையும் கெடுத்துப்போட்டான்.
உமது சத்துருக்கள் உமது சபையின் நடுவே கர்ச்சித்துத் 4
தங்கள் கொடிகளை அடையாளங்களாக நாட்டுகிறார்கள்.
அடர்ந்த சோலையில் கோடரிகளை ஓங்கி 5
மரங்களை வெட்டுகிறவர்கள்போல் தோன்றினார்கள்.
அதின் செதுக்கு வேலைகள் முழுவதையும் 6
கோடரிகளாலும் சம்மட்டிகளாலும் தகர்த்துப்போட்டார்கள்.
உமது பரிசுத்த ஸ்தலத்தை அக்கினிக்கு 7
இரையாக்கினார்கள்;
உமது திருநாமத்தின் வாசஸ்தலத்தைத் தரைமட்டமாக்கித் தீட்டுப்படுத்தினார்கள்.
அவர்களை ஏகமாய் நிர்மூலமாக்குவோம் 8
என்று தங்கள் இருதயத்தில் சொல்லிக்
கடவுளின் சபையார் கூடுமிடங்களை யெல்லாம் தேசத்திலே சுட்டெரித்தார்கள்.
எங்களுக்கு இருந்த அடையாளங்களைக் 9
காணோம்,
தீர்க்கதரிசியும் இல்லாதேபோனான்;
எதுவரைக்கும் என்று அறிகிறவனும் எங்களிடமில்லை.
கடவுளே, எதுவரைக்கும் சத்துரு நிந்திப்பான்? 10
பகைவன் உமது திருநாமத்தை எப்பொழுதும் தூஷிப்பானோ?
உமது கரத்தை, உமது வலதுகரத்தை, ஏன் 11
முடக்கிக்கொள்ளுகிறீர்?
அதை உமது மடியிலிருந்து எடுத்து ஒங்கி
நிர்மூலமாக்கும்.
பூமியின் நடுவில் ராட்சிப்பைச் செய்துவருகிற கடவுள் 12
பூர்வகாலமுதலே என்னுடைய ராஜா.
தமது வல்லமையினால் சமுத்திரத்தை இரண்டாகப் பிளந்தவர் நீர்; 13
ஜலத்திலுள்ள வலுசர்ப்பங்களின் தலைகளை உடைத்தவர் நீர்.
லிவியாதானின் தலைகளை நருக்கிப்போட்டவர் நீர்; 14
அதை வனாந்தரத்து மிருகங்களுக்கு உணவாகக் கொடுத்தவரும் நீரே.
ஊற்றும் ஆறும் உண்டாகப் பிளந்தவர் நீர்; 15

வற்றுத நதிகளை வற்றிப்போகப்பண்ணினவரும் நீரே.
16 பகலும் உம்முடையது, இரவும் உம்முடையது;
தேவரீர் ஒளியையும் சூரியனையும் ஏற்படுத்தினீர்.
17 பூமியின் எல்லைகளையெல்லாம் திட்டம் பண்ணினவர் நீர்;
கோடைகாலத்தையும் மாரிகாலத்தையும் உண்டாக்கினவரும் நீரே.
18 யெகோவாவே, சத்துரு உம்மை நிந்தித்ததையும்
மதியீன ஜனம் உமது திருநாமத்தைத் தூஷித்ததையும் நினைத்துக்கொள்ளும்.
19 உமது காட்டுப்புறாவின் உயிரைத்
துஷ்டமிருகத்திற்கு ஒப்புக்கொடாதேயும்;
உமது சிறுமையானவர்களின் உயிரை என்றென்றைக்கும் மறந்துவிடாதேயும்.
20 உமது உடன்படிக்கையை நினைத்தருளும்,
தேசத்தின் இருளான இடங்களில் கொடுமைக் குடியிருப்புகள் நிறைந்திருக்கின்றன.
21 சிறுமைப்பட்டவன் அவமானத்தோடே திரும்பவிடாதிரும்;
சிறுமையானவனும் ஏழையும் உமது திருநாமத்தைத் துதிக்கும்படி செய்யும்.
22 கடவுளே, எழுந்தருளும், உமக்காக நீரே வழக்காடும்;
மதிகேடனாலே நாடோறும் உமக்கு வரும் நிந்தையை நினைத்துக்கொள்ளும்.
23 உமது சத்துருக்களின் சத்தத்தை மறவாதேயும்;
உமக்கு விரோதமாய் எழும்புகிறவர்களின் அமளி இடைவிடாமல் எழும்புகிறது.

**75** ஆசாபின் சங்கீதம்; சேர்த்தனே; பாடகர் தலைவனுக்கு; இராகம்: அல்தஷ்கேத்.

உமக்கு நன்றிசெலுத்துகிறோம், கடவுளே,
உமக்கு நன்றிசெலுத்துகிறோம்;
உமது திருநாமம் சமீபமாயிற்று;
உமது அதிசயமான செயல்களைப் பிரஸ்தாபிக்கிறார்கள்.
2 குறித்த காலத்தில் தவறாமல் வந்து
நேர்மையாய் நியாயந்தீர்ப்பேன்.
3 பூமியானது அதின் சகல குடிகளோடும் கரைந்துபோகிறது,
நானே அதின் தூண்களை நிலைநிறுத்துகிறேன்.
4 வீம்புக்காரரிடம், வீம்பு பாராட்டாதேயுங்கள் என்றும்,
தெய்வபயமற்றவர்களிடம், கொம்பை உயர்த்தாதிருங்கள்,
5 உங்கள் கொம்பை உயரமாய் உயர்த்தாதிருங்கள்,
இறுமாப்புள்ள கழுத்துடையவர்களாய்ப் பேசாதிருங்கள் என்றும் சொன்னேன்.
6 கிழக்கிலும் மேற்கிலும்
மலைக்காட்டிலுமிருந்து ஒன்றும் வராது.
7 கடவுளே நியாயாதிபதி,
ஒருவனைத் தாழ்த்தி ஒருவனை உயர்த்துகிறார்.
8 பொங்குகிற மதுபானம் நிறைந்த பாத்திரம்
யெகோவாவின் கையிலிருக்கிறது;
அது மருந்துகள் கலந்தது,
அதிலிருந்து வார்க்கிறார்,
பூமியிலுள்ள துன்மார்க்கர் யாவரும் அதின் வண்டல்களை உறிஞ்சிக் குடிக்கிறார்கள்.
9 நானோ என்றென்றும் இதைப் பிரஸ்தாபப்படுத்துவேன்,
யாக்கோபின் கடவுளைத் துதித்துப் பாடுவேன்.
10 தெய்வ பயமற்றவர்களின் கொம்புகளையெல்லாம் வெட்டிப்போடுவேன்,
நீதிமானின் கொம்புகளோ உயர்த்தப்படும்.

**76** ஆசாபின் சங்கீதம்; சேர்த்தனே; பாடகர் தலைவனுக்கு; வாத்தியம்: யாழ்.

யூதாவில் கடவுள் அறியப்பட்டவர்,
இஸ்ரவேலில் அவருடைய திருநாமமே பெரிது.
2 சாலேமில் அவருடைய கூடாரமும்
சீயோனில் அவருடைய வாசஸ்தலமும் இருக்கிறது.
3 அங்கேயிருந்து வில்லின் அம்புகளையும்
கேடகத்தையும்
பட்டயத்தையும் யுத்தத்தையும் முறித்தார்.
4 கொள்ளை நிறைந்த பர்வதங்களைப் பார்க்கிலும் நீர் பிரகாசமுள்ளவர் மகத்துவமுள்ளவர்.
5 தைரியஞ்சுள்ளவர்கள் கொள்ளையாகி நித்திரையடைந்துவிட்டார்கள்;
வல்லமையுள்ள எந்த மனுஷன் கையும் உதவாமற்போயிற்று.
6 யாக்கோபின் கடவுளே, நீர் கண்டித்ததினால்
இரதங்களும் குதிரைகளும் அயர்ந்த நித்திரைக்குட்பட்டன.
7 நீர், நீரே, பயங்கரமானவர்,
உமது கோபம் மூளும்போது உமது முன்னிலையில் நிற்பவன் யார்?
8 நியாயம் விசாரிக்கவும்

பூமியில் சிறுமையானவர்கள் யாவரையும் ரட்சிக்கவும்
9 தேவரீர் எழுந்தருளினபோது
வானத்திலிருந்து தீர்ப்புக் கேட்கப்பண்ணினீர்,
பூமி பயந்து அமர்ந்தது.
10 மனுஷன் கோபம் உமது மகிமையை விளங்கப்பண்ணும்,
மீதியான கோபத்தை நீர் அரைக்கச்சையாகக் கட்டிக்கொள்வீர்.
11 பொருத்தனைபண்ணி அதை உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு நிறைவேற்றுங்கள்,
அவரைச் சுழ்ந்திருக்கிற அனைவரும்
பயங்கரமான அவருக்கே காணிக்கைகளைக் கொண்டுவரக்கடவர்கள்.
12 பிரபுக்கள் ஆவியை அவர் அடக்குவார்,
பூமியின் ராஜாக்களுக்கு அவர் பயங்கரமானவர்.

**77** ஆசாபின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு; இராகம்: எதூதூன்.

என் சத்தம் கடவுளிடம் சேரும்படி கெஞ்சுகிறேன்,
என் சத்தம் கடவுளிடம் சேரவே, அவர் எனக்குச் செவிசாய்த்தருளுவார்.
2 என் ஆபத்துநாளில் ஆண்டவரைத் தேடினேன்,
இராக்காலத்தில் என் கை தளராமல் விரிக்கப்பட்டிருந்தது,
என் ஆத்துமா ஆறுதலுக்கு இடங்கொடாமற்போயிற்று.
3 நான் கடவுளை நினைக்கும்போது தைரியமற்றுப்போகிறேன்;
நான் தியானிக்கும்போது என் ஆவி தொய்ந்துபோகிறது.
4 ஆங்காதபடி என் கண்ணிமைகளை நீர் பிடித்திருக்கும்போது
நான் மிகவும் கலங்குகிறேன், பேசமுடியவில்லை.
5 பூர்வ நாட்களையும்
அதிகாலத்து வருஷங்களையும் சிந்திக்கிறேன்,
6 நான் பாடின பாட்டை இராக்காலத்திலே நினைக்கிறேன்,
என் இருதயத்திலே சிந்தைசெய்கிறேன்,
என் ஆவி ஆராய்ச்சிசெய்கிறது.
7 ஆண்டவர் நித்தியகாலமாய்த் தள்ளிவிடுவாரோ?
இனி ஒருபோதும் தயைசெய்யமாட்டாரோ?
8 அவர் கிருபை முற்றிலும் அற்றுப்போயிற்றோ?
வாக்குத்தத்தமானது தலைமுறை தலைமுறைக்கும் ஒழிந்துபோயிற்றோ?
கடவுள் இரக்கங்காட்ட மறந்தாரோ? 9
கோபத்தினாலே தமது இரக்கங்களை அடைத்துக்கொண்டாரோ
என்று சொன்னேன். (சேலா)
அப்பொழுது நான்: இது என் பலவீனம். 10
உன்னதமானவரின் வலதுகரத்தின் வருஷங்கள் உண்டே என்றேன்.
யெகோவாவின் செயல்களை நினைவுக்குக் 11
கொண்டுவருவேன்,
பூர்வகாலத்தில் நீர் செய்த அதிசயங்களை நினைப்பேன்.
உமது கிரியைகளையெல்லாம் தியானிப் 12
பேன்,
உமது செயல்களை யோசிப்பேன்;
கடவுளே, உமது வழி பரிசுத்தமுள்ளது; 13
கடவுளைப்போல பெரிய தெய்வம் யார்?
அதிசயங்களைச் செய்கிற கடவுள் நீரே; 14
ஜாதிகளுக்குள்ளே உமது வல்லமையை விளங்கப்பண்ணினீர்.
யாக்கோபு யோசேப்பு என்பவர்களின் 15
புத்திரராகிய உமது ஜனத்தை
உமது புயத்தினால் மீட்டுக்கொண்டீர்.
கடவுளே, ஜலங்கள் உம்மைக் கண்டன; 16
ஜலங்கள் உம்மைக்கண்டு வாலதையுற்றன;
ஆழங்களும் கலங்கின.
மேகங்கள் தண்ணீரை ஊற்றின, 17
ஆகாயமண்டலங்கள் முழங்கின,
உமது அம்புகளும் இங்குமங்கும் பறந்தன.
உமது குமுறலின் சத்தம் சுழல்காற்றில் 18
முழங்கினது,
மின்னல்கள் பூமியைப் பிரகாசிப்பித்தன;
பூமி குலுங்கி அதிர்ந்தது.
உமது வழி கடலிலும் 19
உமது பாதைகள் திரள் தண்ணீர்களிலும் இருந்தன;
உமது காலடிகள் தெரியப்படாமற்போயின.
மோசே ஆரோன் என்பவர்களின் கையால் 20
உமது ஜனத்தை ஒரு ஆட்டிமந்தையைப் போல் வழி நடத்தினீர்.

ஆசாபின் மஸ்கீல் சங்கீதம். **78**

என் ஜனங்களே, என் உபதேசத்தைக் கேளுங்கள்,
என் வாயின் வசனங்களுக்கு உங்கள் செவிகளைச் சாயுங்கள்.
உவமையைப் பேச என் வாயைத் திறப் 2
பேன்;
பூர்வகால மறைபொருட்களை வெளியாக்கி விடுவேன்.

ஏ அவைகளை நாங்கள் கேள்விப்பட்டு அறிந்
தோம்;
எங்கள் பிதாக்கள் அவைகளை எங்களுக்கு
அறிவித்தார்கள்.
4 அவர்கள் பிள்ளைகளுக்கு நாங்கள் அவை
களை மறையோம்;
யெகோவாவின் துதிகளையும் அவர் பலத்தை
யும் அவர் செய்த அதிசயங்களையும்
பின்வரும் சந்ததியாருக்கு விவரிப்போம்.
5 அவர் யாக்கோபிலே சாட்சியத்தை ஏற்
படுத்தி
இஸ்ரவேலிலே பிரமாணத்தை நியமித்து
அவைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கு அறி
விக்கும்படி
நமது பிதாக்களுக்குக் கட்டளையிட்டார்.
6 இனிப்பிறக்கும் பிள்ளைகளாகிய பின்சந்ததி
யார் அதை அறிந்துகொண்டு
எழும்பித் தங்கள் பிள்ளைகளுக்கு அவை
களைச் சொல்லவேண்டுமென்றும்
7 அந்தப் பிள்ளைகளும் கடவுள்மேல் தங்கள்
நம்பிக்கையை வைத்துக்
கடவுள் செயல்களை மறவாமல் அவர் கற்
பனைகளைக் கைக்கொள்ளவேண்டுமென்
றும்
8 இருதயத்தைச் செவ்வைப்படுத்தாமலும்
தங்கள் ஆவியினால் கடவுளை உறுதியாய்ப்
பற்றிக்கொள்ளாமலுமிருந்த
மூர்க்கரான முழுமுள்ள சந்ததியா
ராகிய தங்கள் பிதாக்களுக்கு
அவர்கள் ஒப்பாகாதிருக்கவேண்டுமென்றும்
இவைகளைக் கட்டளையிட்டார்.
9 ஆயுதமணிந்த வில்வீரரான எப்பிராயீம்
புத்திரர்
யுத்தநாளிலே முதுகு காட்டினார்கள்.
10 அவர்கள் கடவுளின் உடன்படிக்கையைக்
கைக்கொள்ளவில்லை;
அவர் பிரமாணத்தின்படி நடக்கமாட்டோ
மென்றார்கள்.
11 அவர் செயல்களையும்
அவர் தங்களுக்குக் காண்பித்த அதிசயங்
களையும் மறந்தார்கள்.
12 அவர்கள் பிதாக்களுக்கு முன்பாக
எகிப்துதேசத்துச் சோவான் வெளியிலே
அவர் அதிசயமானவைகளைச் செய்தார்.
13 கடலைப் பிளந்து அவர்களைக் கடக்கப்
பண்ணினார்;
தண்ணீர்கள் குவியலாக நிற்கும்படி செய்
தார்.
14 பகலிலே மேகத்தினாலும்
இராமுழுதும் அக்கினி வெளிச்சத்தினாலும்
அவர்களை வழிநடத்தினார்.
15 வனாந்தரத்திலே கன்மலைகளைப் பிளந்தார்;
மகா ஆழங்களிலுள்ளதுபோன்ற தண்
ணீரை ஏராளமாய் அவர்களுக்குக் குடிக்
கக்கொடுத்தார்.
16 கன்மலையிலிருந்து நீரோட்டங்களை வரச்
செய்தார்;
தண்ணீர் நதியாக ஓடிவரும்படி செய்தார்.
17 அப்படியிருந்தும் அவர்கள் பின்னும்பின்
னும் அவருக்கு விரோதமாய்ப் பாவஞ்
செய்து
வறண்ட வெளியிலே உன்னதமானவருக்கு
விரோதமாய்க் கலகஞ்செய்தார்கள்.
18 தாங்கள் இச்சித்த போஜனத்தைக் கேட்டுத்
தங்கள் இருதயத்தில் கடவுளைச் சோதித்துப்
பார்த்தார்கள்.
19 ஆம், அவர்கள் கடவுளுக்கு விரோதமாய்ப்
பேசினார்கள்:
கடவுள் வனாந்தரத்திலே போஜனபங்
கியை ஆயத்தப்படுத்தக்கூடுமோ?
20 இதோ, அவர் கன்மலையை அடித்
தார்;
தண்ணீர் வெளிப்பட்டது, நதிகள்
பெருகி ஓடின;
இப்படியே அவர் சாப்பாட்டையும்
கொடுக்கக்கூடுமோ?
தமது ஜனத்திற்கு இறைச்சியையும்
கொடுப்பாரோ?
என்று சொன்னார்கள்.
21 யெகோவா அதைக்கேட்டுக் கோபங்கொண்
டார்,
அவர்கள் கடவுள்மேல் நம்பிக்கைவையாம
லும்
அவர் காப்பாற்றுவார் என்று நம்பாமலும்
போனதினால்
22 யாக்கோபுக்கு விரோதமாய் அக்கினி பற்றி
யெரிந்தது,
இஸ்ரவேலுக்கு விரோதமாய்க் கோபம்
பொங்கியெழுந்தது.
23 அவர் உயரத்திலுள்ள மேகங்களுக்குக் கட்
டளையிட்டார்;
வானத்தின் கதவுகளைத் திறந்தார்;
24 மன்னாவை அவர்களுக்கு ஆகாரமாக வரு
ஷிக்கப்பண்ணினார்;
வானத்தின் தானியத்தை அவர்களுக்குக்
கொடுத்தார்.
25 தூதரின் சாப்பாட்டை மனுஷன் சாப்பிட்
டான்,
அவர்களுக்கு ஆகாரத்தைப் பூரணமாய்
அனுப்பினார்.
26 ஆகாயத்திலே கீழ்காற்றை வரப்பண்ணி
னார்;
தமது வல்லமையினால் தென்றலையும் வீசச்
செய்தார்.

27 இறைச்சியைத் தூளத்தனையாயும்
சிறகுள்ள பறவைகளைக் கடற்கரை மண
லத்தனையாயும் வருஷிக்கப்பண்ணினார்.
28 அவைகளை அவர்கள் பாளயத்தின் நடுவி
லும்
அவர்கள் கூடாரங்களைச்சுற்றிலும் வந்து
விழப்பண்ணினார்.
29 அப்படியே அவர்கள் தின்று தெவிட்டினார்
கள்;
அவர்கள் ஆசித்ததை அவர்களுக்குக்
கொடுத்தார்.
30 அவர்கள் தங்கள் ஆசையை விட்டுவிட
வில்லை;
அவர்கள் போஜனம் அவர்கள் வாயிலிருக்
கும்போதே
31 தேவனின் கோபம் அவர்கள்மேல் எழும்பி
னது,
அவர்களில் கொழுத்தவர்களைச் சங்கரித்து
இஸ்ரவேலின் வாலிபர்களை மடியப்பண்
ணினது.
32 இவையெல்லாம் நடந்தும் அவர் செய்த
அதிசயங்களை அவர்கள் நம்பாமல்
இன்னும் பாவம்செய்துகொண்டே வந்தார்
கள்.
33 ஆதலால் அவர்கள் நாட்களை விருதாவிலும்
அவர்கள் வருஷங்களைப் பயங்கரத்திலும்
கழியப்பண்ணினார்.
34 அவர்களை அவர் கொல்லும்போதுதான்
அவர்கள் அவரைப்பற்றிவிசாரித்தார்கள்,
விசாரிக்கவே, அவர்கள் திரும்பிக் தேவ
னைத் தேடினார்கள்.
35 தேவன் தங்கள் கன்மலையென்றும்
உன்னதமான தேவன் தங்களை விடுவிக்
கிறவர் என்றும் நினைவுகூர்ந்தார்கள்.
36 ஆனாலும் அவர்கள் தங்கள் வாயினால் அவ
ருக்கு இச்சகம் பேசித்
தங்கள் நாவினால் அவரிடம் பொய் சொன்
னார்கள்.
37 அவர்கள் இருதயம் அவரிடம் நிலைவரப்
படவில்லை;
அவர் உடன்படிக்கையில் அவர்கள் உண்
மையாயிருக்கவில்லை.
38 அவரோ அவர்களை அழித்துவிடவில்லை;
இரக்கமுள்ளவராய் அவர்கள் அக்கிரமத்
தை மன்னித்துவந்தார்,
அவர் அநேகந்தரம் தமது கோபத்தை
விலக்கிவந்தார்,
தமது முழு உக்கிரத்தையும் எழுப்பவில்லை.
39 அவர்கள் மாம்சமே யென்றும்
திரும்பிவராமல் போய்விடுகிற காற்றே
யென்றும்
நினைவுகூர்ந்தார்.
40 எத்தனைதரம் வனாந்தரத்திலே அவருக்கு
விரோதமாய்க் கலகஞ்செய்தார்கள்!
எத்தனைதரம் அவாந்தர வெளியிலே அவரை
விசனப்படுத்தினார்கள்!
41 அவர்கள் திரும்பவும் தேவனைச் சோதித்துப்
பார்த்தார்கள்;
இஸ்ரவேலின் பரிசுத்தரைக் கோபமூட்டி
னார்கள்.
42 அவர் கரத்தையும்
அவர் தங்களைச் சத்துருவினின்று விடுவித்த
நாளையும்
43 அவர் எகிப்திலே செய்த அடையாளங்களை
யும்
சோவான்வெளியிலே செய்த அற்புதங்களை
யும்
44 தண்ணீரைக் குடிக்கமுடியாதபடி
எகிப்தின் நதிகளையும் ஓரோடைகளையும்
இரத்தமாக மாற்றினதையும்
நினையாமற்போனார்கள்.
45 அவர்களை அழிக்கும் பெரிய ஈக்களையும்
அவர்களைக் கெடுக்கும் தவளைகளையும்
அவர்களுக்குள்ளே அனுப்பினார்.
46 அவர்கள் வினைச்சலைப் பச்சைப்புழுக்களுக்
கும்
அவர்கள் பிரயாசத்தின் பலனை வெட்டுக்
கிளிகளுக்கும்
கொடுத்தார்.
47 கல்மழையினால் அவர்கள் திராட்சச்செடி
களையும்
ஆலாங்கட்டியினால் அவர்கள் அத்திமர
களையும் அழித்தார்.
48 அவர்கள் மிருகங்களைக் கல்மழைக்கும்
அவர்கள் மந்தைகளை இடிகளுக்கும் ஒப்
புக்கொடுத்தார்.
49 தமது உக்கிரமான கோபம், மூர்க்கம்,
ரௌத்திரம், இடுக்கம் முதலியவற்றைத்
தீங்குசெய்யும் தூதர்களாக அவர்கள்
நடுவே அனுப்பினார்.
50 அவர் தமது கோபத்துக்கு வழிதிறந்தார்;
அவர்கள் உயிரை மரணத்துக்கு விலக்கிக்
காவாமல்
அவர்கள் ஜீவனைக் கொள்ளைநோய்க்கு ஒப்
புக்கொடுத்தார்.
51 எகிப்திலே தலைச்சன்கள் அனைத்தையும்
காமின் கூடாரங்களிலே அவர்கள் பலத்தின்
முதற்பலனானவர்களையும் சங்கரித்தார்.
52 தமது ஜனங்களை ஆடுகளைப்போல் புறப்
படப்பண்ணி
அவர்களை வனாந்தரத்திலே மந்தையைப்
போல் நடத்திக்கொண்டுபோனார்.
53 அவர்கள் பயப்படாதபடி அவர்களைப் பத்
திரமாய் வழிநடத்தினார்;

அவர்கள் சத்துருக்களேயோ கடல் மூடி விட்டது.
54 அவர்களைத் தமது பரிசுத்த ஸ்தலத்தின் எல்லைவரைக்கும்,
தமது வலதுகரம் சம்பாதித்த இந்தப் பர்வதம்வரைக்கும்
அழைத்துக்கொண்டுவந்தார்.
55 அவர்கள் முன்பாகப் புறஜாதிகளைத் துரத்திவிட்டுத்
தேசத்தை நூல்போட்டுப் பங்கிட்டு
அவர்கள் கூடாரங்களில் இஸ்ரவேலின் கோத்திரங்களைக் குடியேற்றினார்.
56 ஆனாலும் அவர்கள் உன்னதமான கடவுளைச் சோதித்துப்பார்த்து
அவருக்கு விரோதமாய்க் கலகஞ்செய்தார்கள்;
அவருடைய சாட்சியங்களைக் கைக்கொள்ளாமல்
57 தங்கள் பிதாக்களைப்போல வழிவிலகித் துரோகம்பண்ணி மோசம்போக்கும் வில்போல் துவண்டு
58 தங்கள் மேடைகளினால் அவருக்குக் கோபத்தையும்
தங்கள் விக்கிரகங்களினால் எரிச்சலையும் உண்டாக்கினார்கள்.
59 கடவுள் அதைக்கேட்டு உக்கிரமாகி இஸ்ரவேலை மிகவும் வெறுத்தார்.
60 மனுஷர்நடுவில் தாம் போட்டிருந்த கூடாரமாகிய சீலோவிலுள்ள வாசஸ்தலத்தைவிட்டு விலகினார்.
61 தமது பலத்தைச் சிறையிருப்புக்கும்
தமது மகிமையைச் சத்துருவின் கைக்கும் ஒப்புக்கொடுத்தார்.
62 தமது ஜனத்தைப் பட்டயத்துக்கு இரையாக்கித்
தமது சுதந்தரத்தின்மேல் கோபங்கொண்டார்.
63 அவர்கள் வாலிபரை அக்கினி பட்சித்தது;
அவர்கள் கன்னிகைகள் வாழ்க்கைப்படாதிருந்தார்கள்.
64 அவர்கள் ஆசாரியர் பட்டயத்தால் விழுந்தார்கள்;
அவர்கள் விதவைகள் துக்கங்கொண்டாட ஏதுவில்லை.
65 அப்பொழுது ஆண்டவர் நித்திரை தெளிந்தவனைப்போலவும்
சிறட்சரச மயக்கத்தினின்று எழுந்த பராக்கிரமசாலியைப் போலவும் விழித்துத்
66 தமது சத்துருக்களைப் பின்புறமாக அடித்து
அவர்களை நித்திய நிந்தைக்கு ஆளாக்கினார்.
67 அவர் யோசேப்பின் கூடாரத்தைப் புறக்கணித்தார்;
எப்பிராயீம் கோத்திரத்தை அவர் தெரிந்துகொள்ளவில்லை.
68 யூதாவின் கோத்திரத்தையோ,
தமக்குப் பிரியமான சீயோன் மலையையே,
தெரிந்தெடுத்தார்.
69 தமது பரிசுத்த ஸ்தலத்தை மலைபோலாகவும்
என்றைக்கும் நிற்கும்படி தாம் அஸ்திபாரப்படுத்தின பூமியைப்போலாகவும் கட்டினார்.
70 தமது தாசனாகிய தாவீதைத் தெரிந்தெடுத்து
ஆட்டுத்தொழுவங்களிலிருந்து அவனை அழைத்தார்.
71 கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த அவனைத்
தமது ஜனமாகிய யாக்கோபையும் தமது சுதந்தரமாகிய இஸ்ரவேலையும் மேய்ப்பதற்காக
அழைத்துக்கொண்டு வந்தார்.
72 இவன் அவர்களை நேர்மையான இருதயத்தோடு மேய்த்துத்
திறமையான கைகளினால் அவர்களை நடத்தினான்.

ஆசாபின் சங்கீதம். **79**

கடவுளே, புறஜாதிகள் உமது சுதந்தரத்தில் புகுந்தார்கள்,
உமது பரிசுத்த ஆலயத்தைத் தீட்டுப்படுத்தினார்கள்;
எருசலேமை மண்மேடுகளாக்கினார்கள்.
2 உமது ஊழியரின் பிரேதங்களை ஆகாயத்துப் பறவைகளுக்கும்,
உமது பக்தரின் மாம்சத்தைப் பூமியின் மிருகங்களுக்கும்
இரையாகக் கொடுத்தார்கள்.
3 அவர்கள் இரத்தத்தை எருசலேமைச்சுற்றிலும் தண்ணீரைப்போல் சிந்தினார்கள்;
அவர்களை அடக்கம்பண்ணுவாருமில்லை.
4 எங்கள் அயலாருக்கு நிந்தையானோம்;
எங்கள் சுற்றுப்புறத்தாருக்குப் பரியாசமும் சக்கந்தமுமானோம்.
5 யெகோவா, எதுவரைக்கும் நீர் நீங்காக் கோபங்கொண்டிருப்பீர்?
உமது எரிச்சல் எதுவரைக்கும் அக்கினிபோல் எரியும்?
6 உம்மை அறியாத புறஜாதிகள்மேலும்
உமது திருநாமத்தைத் தொழுதுகொள்ளாத ராஜ்யங்கள் மேலும்
உமது உக்கிரத்தை ஊற்றிவிடும்.
7 அவர்கள் யாக்கோபைப் பட்சித்து
அவன் குடியிருப்பைப் பாழாக்கினார்களே.
8 பூர்வபிதாக்களின் அக்கிரமங்களை எங்களுக்கு விரோதமாக நினையாதேயும்;

உமது இரக்கங்கள் சீக்கிரமாய் எங்களுக்கு எதிர்கொண்டு வருவதாக;
நாங்கள் மிகவும் பலமற்றுப்போனோம்.
9 எங்கள் ரட்சிப்பின் கடவுளே,
உமது நாமத்தின் மகிமையினிமித்தம் எங்களுக்கு உதவி செய்தருளும்,
உமது திருநாமத்தினிமித்தம் எங்களை விடுவித்து எங்கள் பாவங்களை மன்னித்தருளும்.
10 அவர்கள் கடவுள் எங்கே என்று புறஜாதிகள் சொல்வானேன்?
சிந்துண்ட உமது ஊழியரின் இரத்தத்துக்காகப் பழிவாங்கப்படுமென்பது
புறஜாதிகளுக்குள் எங்கள் கண்கள் முன்விளங்கும்படி செய்யும்.
11 கட்டுண்டவனின் பெருமூச்சு உமக்கு முன்பாக வரட்டும்;
கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களை உமது புஜபலத்தின்படியே உயிரோடு காத்தருளும்.
12 ஆண்டவரே, எங்கள் அயலார் உம்மை நிந்தித்த நிந்தையை
ஏழத்தனையாக அவர்கள் மடியிலே திரும்பப்பண்ணும்.
13 அப்பொழுது உமது ஜனமும் உமது மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நாங்கள்
உமக்கு என்றென்றும் நன்றிசெலுத்துவோம்;
தலைமுறை தலைமுறையாக உமது துதியைப் பிரஸ்தாபிப்போம்.

**80** ஆசாபின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு; இராகம்: சோஷானீம் எத்.

இஸ்ரவேலின் மேய்ப்பரே,
யோசேப்பை ஆட்டுமந்தைபோல் நடத்துகிறவரே,
செவிசாய்த்தருளும்.
கேருபுகள்மேல் வீற்றிருக்கிறவரே,
பிரகாசத்தை வீசியருளும்.
2 எப்பிராயீம், பென்யமீன், மனாசே என்பவர்களுக்கு முன்பாக
நீர் உமது வல்லமையை எழுப்பி எங்களை ரட்சிக்க வந்தருளும்.
3 கடவுளே, எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும்,
உமது திருமுகத்தைப் பிரகாசிக்கச் செய்தருளும்;
அப்பொழுது ரட்சிக்கப்படுவோம்.
4 சேனைகளின் கர்த்தாவாகிய யெகோவா,
உமது ஜனத்தின் விண்ணப்பத்துக்கு விரோதமாய்
நீர் எதுவரைக்கும் கோபங்கொள்வீர்?
கண்ணீராகிய ஆகாரத்தால் அவர்களைப் போஷித்தீர்; 5
மிகுதியான கண்ணீரையே அவர்களுக்குப் பானமாகக் கொடுத்தீர்.
எங்கள் அயலாருக்குள் எங்களை நிமித்தம் 6
சண்டையுண்டாகச் செய்கிறீர்;
எங்கள் சத்துருக்கள் தங்களுக்குள்ளே பரியாசம் பண்ணுகிறார்கள்.
சேனைகளின் கடவுளே, எங்களை முன் 7
நிலைமைக்கு
எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும்,
உமது திருமுகத்தைப் பிரகாசிக்கச் செய்தருளும்;
அப்பொழுது ரட்சிக்கப்படுவோம்.
நீர் எகிப்திலிருந்து ஒரு திராட்சக்கொடியைக் 8
கொண்டுவந்து
புறஜாதிகளைத் துரத்திவிட்டு அதை நாட்டினீர்.
அதற்கு இடத்தை ஆயத்தப்படுத்தினீர்; 9
அது வேரூன்றித் தேசமெங்கும் படர்ந்தது.
அதின் நிழலால் மலைகளும் 10
அதின் கிளைகளால் தெவ்வியமான கேதுருக்களும் மூடப்பட்டன.
அது தன் கொடிகளைச் சமுத்திரமட்டாகவும் 11
தன் கிளைகளை நதிமட்டாகவும் படரவிட்டது.
இப்பொழுதும் அதின் அடைப்புகளை ஏன் 12
தகர்த்துப்போட்டீர்?
வழிநடக்கிற யாவரும் பறிக்கிறார்களே.
காட்டுப்பன்றி அதை நாசம்பண்ணுகிறது; 13
வெளியில் நடமாடுகிறவைகள் அதை மேய்கின்றன.
சேனைகளின் கடவுளே, திரும்பிவந்தருளும், 14
வானத்திலிருந்து கண்ணோக்கிப்பார்த்து
இந்தத் திராட்சச்செடியை விசாரித்தருளும்.
உமது வலதுகரம் நாட்டினதையும் 15
உமக்கென்றே நீர் வளர்த்துவந்த கிளையையும் காத்தருளும்.
அது அக்கினியால் சுடப்பட்டது, வெட்டி 16
நீண்டுபோயிற்று;
உமது திருமுகத்தின் கண்டிப்பிலல் அழிந்துபோகிறார்கள்.
உமது திருக்கரம் உமது வலதுபாரிசத்துப் 17
புருஷன்மீதிலும்,
உமக்கென்றே நீர் வளர்த்துவந்த மனுஷகுமாரன்மீதிலும் இருப்பதாக.
அப்பொழுது உம்மைவிட்டுப் பின்வாங்க 18
மாட்டோம்;

எங்களை உயிர்ப்பியும், அப்பொழுது உமது
திருநாமத்தைத் தொழுதுகொள்ளுவோம்.
19 சேனைகளின் கர்த்தாவாகிய யெகோ
வா
எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும்
உமது திருமுகத்தைப் பிரகாசிக்கச்
செய்தருளும்;
அப்பொழுது ரட்சிக்கப்படுவோம்.

**81** ஆசாபின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு;
இராகம்: ஒத்தீத்.

நமது பலமாகிய கடவுளைக் கெம்பீரமாய்ப்
பாடுங்கள்;
ஆர்ப்பரித்து யாக்கோபின் கடவுளைக் கீர்த்
தனம்பண்ணுங்கள்.
2 தம்புரு வாசித்து
இனிய ஒசையுடைய சுரமண்டலத்தையும்
வீணையையும் எடுத்துச்
சங்கீதம் பாடுங்கள்.
3 மாதப்பிறப்பிலும்
பௌர்ணமியாகிய நமது பண்டிகை நாட்
களிலும்
எக்காளம் ஊதுங்கள்.
4 இது இஸ்ரவேலுக்குப் பிரமாணமும்
யாக்கோபின் கடவுள் விதித்த ஏற்பாடு
மாம்.
5 எகிப்துதேசத்துக்கு விரோதமாக அவர்
செல்லுகையில்
இதை யோசேப்பிலே சாட்சியமாக ஏற்
படுத்தினார்.
நாம் நினைத்திராத வார்த்தையைக் கேட்
டேன்:
6 அவன் தோளில் சுமையும்
அவன் கைகளில் கூடையும் இராத
படி செய்கிறேன்.
7 ஆபத்திலே நீ கூப்பிட்டாய்,
நான் உன்னைத் தப்புவித்தேன்;
இடிமுழக்கம் உண்டாகும் மறைவி
டத்திலிருந்து
உனக்கு உத்தரவு அருளினேன்,
மெரீபாவின் தண்ணீர்களிடத்தில் உன்
னைச் சோதித்து அறிந்தேன்.
8 என் ஜனமே, கேள்,
உன்னை எச்சரித்துச் சொல்லுவேன்:
இஸ்ரவேலே, நீ எனக்குச் செவிகொ
டுத்தாயானால் நலம்.
9 உனக்குள் வேறு கடவுள் இருக்க
வேண்டாம்,
அந்நிய கடவுளை நீ தொழுதுகொள்ள
வேண்டாம்.
10 எகிப்துதேசத்திலிருந்து உன்னை வெளி
யேறச்செய்த
உன் கடவுளாகிய யெகோவா நானே;
உன் வாயை விரிவாய்த்திற,
நான் அதை நிரப்புவேன்.
11 என் ஜனமோ என் சத்தத்துக்குச்
செவிகொடுக்கவில்லை;
இஸ்ரவேல் என்னை விரும்பவே
யில்லை.
12 ஆகவே அவர்களை அவர்கள் இரு
தயத்தின் கடினத்திற்கு விட்டுவிட்
டேன்;
தங்கள் யோசனைகளின்படியே நடந்
தார்கள்.
13 ஆ, என் ஜனம் எனக்குச் செவி
கொடுத்து
இஸ்ரவேல் என் வழிகளில் நடந்தால்
எவ்வளவோ உத்தமம்!
14 நான் சிக்கிரத்தில் அவர்கள் எதிராளி
களை அடக்கி
என் கையை அவர்கள் சத்துருக்
களுக்கு விரோதமாகத் திருப்புவேன்.
15 யெகோவாவைப் பகைக்கிறவர்கள்
அவருக்கு அடங்குவதுபோல் நடிக்கி
றார்கள்;
அவர்கள் காலமோ சதாகாலங்களிலும்
நிலைத்திருக்கும்.
16 உத்தமான கோதுமையினால் அவர்கள்
போஷிக்கப்படுவார்கள்,
கன்மலையின் தேனினால் உன்னைத்
திருப்தியாக்குவேன்.

ஆசாபின் சங்கீதம்.

**82**

தெய்வசபையிலே கடவுள் எழுந்தருளி
யிருக்கிறார்,
தேவர்களின் நடுவிலே அவர் நியாயம் விசா
ரிக்கிறார்.
2 எதுவரைக்கும் நீங்கள் அநியாயத் தீர்ப்புச்
செய்து
துன்மார்க்கருக்கு முகதாட்சணியம் காட்டு
வீர்கள், (சேலா)
3 பலவீனனுக்கும் அநாதப்பிள்ளைக்கும் நியா
யஞ்செய்து
சிறுமையானவனுக்கும் திக்கற்றவனுக்கும்
நீதிசெய்யுங்கள்.
4 பலவீனனையும் ஏழையையும் விடுவித்து
தெய்வபயமற்றவரின் கையினின்று அவர்
களைத் தப்புவியுங்கள்.
5 அறியாமலும் உணராமலும் இருக்கிறார்
கள்;
இருளிலே திரிகிறார்கள்.
பூமியின் அஸ்திபாரங்களெல்லாம் அசை
கிறது.

6 நீங்கள் தேவர்கள் என்றும்
நீங்களெல்லாரும் உன்னதமானவரின் மக்கள் என்றும்
நான் சொல்லியிருந்தேன்.
7 என்றாலும் நீங்கள் மனுஷரைப்போலச் செத்து
லோகப்பிரபுக்களில் ஒருவன் விழுந்துபோவதுபோல் விழுந்துபோவீர்கள்.
8 கடவுளே, எழுந்தருளும்,
பூமியை நியாயம் விசாரியும்;
நீரே சகல ஜாதிகளையும் சுதந்தரமாகக் கொண்டிருப்பவர்.

**83** ஆசாபின் சங்கீதம்; கீர்த்தனை.

கடவுளே, மவுனமாயிராதேயும்,
பேசாமலிராதேயும்;
கடவுளே, சும்மாயிராதேயும்.
2 இதோ, உமது சத்துருக்கள் கொந்தளித்து
உமது பகைஞர் தலையை உயர்த்துகிறார்கள்.
3 உமது ஜனத்துக்கு விரோதமாகச் சர்ப்பனை
னையோசித்து
உமது மறைவிலிருக்கிறவர்களுக்கு விரோதமாக ஆலோசனை செய்கிறார்கள்.
4 அவர்கள் இனி ஒரு ஜனமாயிராதபடிக்கும்
இஸ்ரவேலின்பேரை இனி எவரும் நினையாதபடிக்கும்
அவர்களை அதம்பண்ணுவோம் வாருங்கள்
என்று சொல்லுகிறார்கள்.
5 அவர்கள் ஒரே மனதாய் ஆலோசனை செய்து
உமக்கு விரோதமாய் உடன்படிக்கை செய்திருக்கிறார்கள்.
6 இப்படிச் செய்திருக்கிறவர்கள்:
ஏதோமின் கூடாரத்தார், இஸ்மவேலர்,
மோவாபியர், ஆகாரியர்,
7 கேபாலர், அம்மோனியர், அமலேக்கியர்;
தீருவின் குடிகளோடுகூடிய பெலிஸ்தியர்
என்பவர்களே.
8 அசீரியரும் அவர்களோடு சேர்ந்து கொண்டு
லோத்தின் புத்திரருக்குப் புஜபலமானார்கள்.
9 மிதியானியருக்குச் செய்ததுபோலவும்
கீசோன் ஆற்றண்டை சிசெரா, யாபீன் என்பவர்களுக்குச் செய்ததுபோலவும்
அவர்களுக்குச் செய்யும்.
10 இவர்கள் என்தோரிலே அழிக்கப்பட்டு
நிலத்துக்கு எருவானார்களே.
அவர்கள் அதிபதிகளை ஓரேபுக்கும் சேபுக்கும் 11
அவர்கள் சகல பிரபுக்களையும் சேபாகுக்கும்
சல்முனாவுக்கும் சமமாக்கும்.
கடவுளின் நிலங்களை 12
எங்களுக்குச் சுதந்தரமாக நாங்கள் எடுத்துக்கொள்வோம்
என்று சொல்லுகிறார்களே.
என் கடவுளே, அவர்களைச் சுழல்காற்றின் 13
புழுதிக்கும்
காற்றுமுகத்தில் பறக்கும் பதருக்கும் சமமாக்கும்.
காட்டை எரிக்கும் நெருப்புப்போலவும் 14
மலைகளைக் கொளுத்தும் அக்கினிஜ்வாலைகள் போலவும்,
நீர் உமது புசலினாலே அவர்களைத் தொ 15
டர்ந்து
உமது பெருங்காற்றினாலே அவர்களைப் பயமுறுத்தும்.
யெகோவா, அவர்கள் உமது திருநாமத்தைத் 16
தேடும்படி
அவர்கள் முகங்களை அவமானத்தால் மூடும்.
அவர்கள் என்றைக்குமாக வெட்கிக் 17
கலங்கி
நாணமடைந்து அழிந்துபோகட்டும்.
அப்பொழுது, யெகோவா என்னும் திரு 18
நாமத்தையுடைய தேவரீர் ஒருவரே
பூமியனைத்தின்மேலும் உன்னதமானவர்
என்று மனுஷர் உணர்ந்துகொள்வார்கள்.

**84** கோராகு புத்திரின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு; இராகம்: கித்தீத்.

சேனைகளின் யெகோவா,
உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள்!
2 யெகோவாவின் ஆலயப்பிராகாரங்களின் மேல்
என் ஆத்துமா வாஞ்சைகொண்டு ஏக்கமாயிருக்கிறது;
என் இருதயமும் என் மாம்சமும்
ஜீவனுள்ள கடவுளை நோக்கிக் கெம்பீரசத்தமிடுகின்றன.
3 அடைக்கலான் குருவிக்கு வீடும்,
தகைவிலான் குருவிக்குத் தன் குஞ்சுகளை வைக்கும் கூடும் கிடைத்ததே,
அது உமது பீடங்களே.
என் ராஜாவே, என் கடவுளே, சேனைகளின் யெகோவா!
4 உமது ஆலயத்தில் வாசமாயிருப்போர் பாக்கியர்

அவர்கள் இனிமேலும் உம்மைத் துதித்துக்
கொண்டே யிருப்பார்கள்.
5 உம்மிலே பலங்கொண்டு
யாத்திரை போகும் வழிகளைத் தங்கள் இரு
தயங்களில் நினைத்துக் கொள்ளுவோர்
பாக்கியர்.
6 அவர்கள் அழுகையின் பள்ளத்தாக்கை
உருவ நடந்து
அதை ஊற்றருக்கிக்கொள்ளுகிறார்கள்,
முன்மழை அதை ஆசீர்வாதத்தால் நிரப்
பும்.
7 அவர்கள் பலத்தின்மேல் பலம் அடைந்தார்
கள்;
ஒவ்வொருவனும் சீயோனிலே தெய்வ சந்
நிதியில் வந்து காணப்படுவான்.
8 சேனைகளின் கர்த்தாவாகிய யெகோவா, என்
விண்ணப்பத்தைக் கேட்டருளும்,
யாக்கோபின் கடவுளே, செவிசாய்த்தரு
ளும்.
9 எங்கள் கேடகமாகிய கடவுளே, கண்
ணோக்கமாயிரும்;
நீர் அபிஷேகம்பண்ணினவரின் முகத்தை
நோக்கிப்பாரும்.
10 ஆயிரம் நாளிலும்
உமது பிராகாரங்களில் செலவிடும்
ஒரே நாள் நல்லது;
தெய்வபயமற்றவர்களின் கூடாரங்களில்
வாசமாயிருப்பதிலும்
என் கடவுளுடைய ஆலயத்தின்
வாசற்படியில் காத்திருப்பதையே
தெரிந்துகொள்ளுவேன்.
11 கடவுளாகிய யெகோவா சூரியன், கேட
கம்;
யெகோவா கிருபையும் மகிமையும் அருளு
வார்;
நேர்மையாய் நடக்கிறவர்களுக்கு நன்மை
யான எதையும் அவர் மறுக்கமாட்
டார்.
12 சேனைகளின் யெகோவா,
உம்மில் நம்பிக்கைவைத்திருக்கிற மனுஷன்
பாக்கியவான்.

**85** கோராகு புத்திரரின் சங்கீதம்; பாடகர் தலை
வனுக்கு.

யெகோவா, நீர் உமது தேசத்தின்மேல்
கடாட்சம் வைத்தீர்;
யாக்கோபின் துன்ப நிலைமையை மாற்றி
னீர்.
2 உமது ஜனத்தின் அக்கிரமத்தை மன்னித்
தீர்;
அவர்கள் பாவத்தையெல்லாம் மூடிவிட்
டீர்.
உமது உக்கிரத்தையெல்லாம் நீக்கிவிட் 3
டீர்;
உமது கோபத்தின் எரிச்சலிலிருந்து திரும்பி
னீர்.
எங்கள் இரட்சிப்பின் கடவுளே, 4
எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும்;
எங்கள்மேலுள்ள உமது கினத்தை ஆறப்
பண்ணும்.
என்றைக்கும் எங்கள்மேல் கோபமாயிருப் 5
பீரோ?
தலைமுறை தலைமுறையாக உமது கோபத்
தை நீடித்திருக்கப்பண்ணுவீரோ?
உமது ஜனம் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி 6
நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்
டீரோ?
யெகோவா, உமது கிருபையை எங்களுக் 7
குக் காண்பித்தருளும்.
உமது இரட்சிப்பை எங்களுக்கு அருளிச்
செய்யும்.
யெகோவாவாகிய கடவுள் விளம்புவதைக் 8
கேட்பேன்;
அவர் தமது ஜனத்துக்கும் தமது பக்தருக்
கும்
சமாதானம் கூறுவார்,
அவர்கள் மதிகேட்டுக்குத் திரும்பாதிருப்
பார்களாக.
நமது தேசத்திலே மகிமை வாசமாயிருக்கும் 9
படி
அவருடைய இரட்சிப்பு அவருக்குப் பயந்த
வர்களுக்குச் சமீபமாயிற்று.
கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று 10
சந்திக்கும்,
நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று
முத்தஞ்செய்யும்.
சத்தியம் பூமியிலிருந்து முளைக்கும்; 11
நீதி வானத்திலிருந்து தாழப்பார்க்கும்.
யெகோவா நன்மையானதைத் தருவார்; 12
நமது தேசமும் தன் பலனைக்கொடுக்கும்.
நீதி அவர் முன்சென்று 13
அவர் அடிச்சுவடுகளை வழியாக்கும்.

**86** தாவீதின் பிரார்த்தனை.

யெகோவா, உமது திருச்செவியைச் சாய்த்து
என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்;
நான் சிறுமையானவன், ஏழை.
என்னைக் காத்தருளும், நான் பக்தியுள்ள 2
வன்;
என் கடவுளே, உம்மில் நம்பிக்கை வைத்
திருக்கிற அடியேனை நீர் ரட்சித்தருளும்.
ஆண்டவரே, எனக்கு இரங்கும், 3
நாளெல்லாம் உம்மை நோக்கிக் கூப்பிடு
கிறேன்.

4 அடியேன் ஆத்துமா மகிழச் செய்யும்;
உமக்கு நேராக, ஆண்டவரே, என் ஆத்து
மாவை உயர்த்துகிறேன்.
5 ஆண்டவரே, நீர் நல்லவர், மன்னிக்கச்
சித்தமாயிருக்கிறவர்;
உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவரிடத்தி
லும் மிகுந்த கிருபையுடையவர்.
6 யெகோவா, என் ஜெபத்திற்குச் செவிசாய்த்
தருளும்;
என் விண்ணப்பங்களின் சத்தத்தைக்
கவனித்தருளும்.
7 என் ஆபத்துநாளில் உம்மை நோக்கிக் கூப்
பிடுவேன்;
நீர் எனக்குச் செவிகொடுப்பீர்.
8 ஆண்டவரே, தேவர்களுக்குள்ளே உமக்கு
நிகருமில்லை;
உமது செயல்களுக்கு ஒப்புமில்லை.
9 ஆண்டவரே, நீர் உண்டாக்கின சகல ஜாதி
களும் வந்து
உமது திருச்சந்நிதியில் பணிந்து
உமது திருநாமத்தை மகிமைப்படுத்துவார்
கள்.
10 தேவரீர் மகத்துவமுள்ளவர், அதிசயமான
வைகளைச் செய்கிறவர்;
நீர் ஒருவரே கடவுள்.
11 யெகோவாவே, உமது வழியை எனக்குப்
போதியும்;
நான் உமது சத்தியத்திலே நடப்பேன்;
நான் உமது திருநாமத்திற்குப் பயந்திருக்கும்
படி
என் இருதயத்தை ஒருமுகப்படுத்தும்.
12 என் கடவுளாகிய ஆண்டவரே,
உம்மை என் முழு இருதயத்தோடும் துதிப்
பேன்;
உமது திருநாமத்தை என்றென்றும் மகி
மைப்படுத்துவேன்.
13 என்மீதுள்ள உமது கிருபை பெரிது;
என் ஆத்துமாவைத் தாழ்ந்த பாதாளத்தி
னின்று விடுவித்தீர்.
14 கடவுளே, அகங்காரிகள் எனக்கு விரோத
மாய் எழும்புகிறார்கள்,
கொடுமைக்காரர் கூட்டம் என் உயிரை
வாங்கத் தேடுகிறது,
உம்மைத் தங்களுக்கு எதிரேயிருப்பவராய்
நோக்காதிருக்கிறார்கள்.
15 நீரோ, ஆண்டவரே, உருக்கமும் இரக்க
மும் நீடிய சாந்தமும்,
மிகுந்த கிருபையும் சத்தியமுமுள்ள கட
வுள்.
16 என் முகமாய்த் திரும்பி எனக்கு இரங்கும்;
உமது வல்லமையை அடியேனுக்கு அருளி
உமது அடியாளின் மகனை ரட்சியும்.
யெகோவா, நீர் எனக்குத் துணைசெய்து 17
என்னைத் தேற்றுகிறதை
என் பகைஞர் கண்டு வெட்கப்படும்படி
அதுகூலமான ஒரு அடையாளத்தை எனக்
குக் காண்பித்தருளும்.

கோராகு புத்திரரின் சங்கீதம்; கீர்த்தனை. **87**

அவர் அஸ்திபாரம் பரிசுத்த பர்வதங்களில்
உள்ளது.
யாக்கோபின் வாசஸ்தலங்களெல்லாவற்றி 2
லும் அதிகமாய்
யெகோவா சீயோன் வாசல்களில் பிரியப்
படுகிறார்.
கடவுளின் நகரமே! 3
உன்னைப்பற்றி மகிமையான விசேஷங்கள்
சொல்லப்படுகின்றன.
என்னை அறிந்தவர்களில் ராகாபும் பாபி 4
லோனும் உண்டென்பேன்.
இதோ பெலிஸ்தியா, தீரு, எத்தியோப்பியா
தேசங்களைப்பற்றியும்
இன்னான் அங்கே பிறந்தான் என்று சொல்
லப்படும்.
இன்னான் இன்னான் அதிலே பிறந்தானென்று 5
சீயோனைப்பற்றிச்
சொல்லப்படும்,
உன்னதமானவர்தாமே அதை ஸ்திரப்படுத்து
வார்.
யெகோவா ஜனங்களைப் பேரெழுதும்போது 6
இன்ன இன்ன மனிதன் அங்கே பிறந்தான்
என்று அவர்களைத் தொகையிடுவார்.
எங்கள் ஊற்றுகளெல்லாம் உன்னிலேயே 7
என்று பாடுவாரும் ஆடுவாரும் ஏகமாய்ச்
சொல்லுவார்கள்.

கோராகு புத்திரரின் சங்கீதம்; கீர்த்தனை; **88**
எஸ்ராயெலனாகிய ஏமானின் மஸ்கீல் சங்கீ
தம்; பாடகர் தலைவனுக்கு; இராகம்: மக
லாத்லேயனோத்.

என் இரட்சிப்பின் கடவுளாகிய யெகோவா,
பகலிலே கூப்பிடுகிறேன், இரவிலும் உமது
சந்நிதிமுன் கூப்பிடுகிறேன்.
என் விண்ணப்பம் உமது சமுகத்தில் வருவ 2
தாக;
என் அபயசத்தத்திற்கு உமது திருச்செவி
யைச் சாய்த்தருளும்.
என் ஆத்துமாவுக்கு நேர்ந்த துன்பம் 3
போதும், போதும்;
என் ஜீவன் பாதாளத்தைக் கிட்டிவிட்
டது.
நான் குழியில் இறங்குகிறவர்களோடு எண் 4
ணப்பட்டேன்;
பலமற்ற மனுஷன் போலானேன்.

5 மரித்தவர்களில் ஒருவனைக விட்டுவிடப்பட்
டேன்;
வெட்டுண்டு பிரேதக்குழிகளில் கிடக்கிறவர்
கள்போலானேன்;
இனிமேல் நீர் அவர்களை நினைப்பதில்லை;
அவர்கள் உமது கைக்கு விலக்கப்பட்டார்
கள்.
6 என்னைப் பாதாளக்குழியிலும்
இருளான இடங்களிலும் ஆழங்களிலும்
வைத்தீர்.
7 உமது கோபம் என்மேல் இறுத்துகிறது;
உமது அலைகள் எல்லாவற்றினாலும் என்னை
மோதுகிறீர். சேலா
8 எனக்கு அறிமுகமானவர்களை எனக்குத்
தூரமாக விலக்கினீர்;
அவர்களுக்கு என்னை அருவருப்பாக்கினீர்.
நான் வெளியேற முடியாதபடி அடைபட்
டிருக்கிறேன்.
9 உபத்திரவத்தினால் என் கண்கள் குழி
விழுந்துபோயின;
யெகோவா, அநுதினமும் நான் உம்மை
நோக்கிக் கூப்பிட்டு
உமக்கு நேராக என் கைகளை விரிக்கிறேன்.
10 மரித்தவர்களுக்காக அதிசயங்களைச் செய்
வீரோ?
இறந்துபோனவர்கள் எழுந்து உம்மைத்
துதிப்பார்களோ? சேலா
11 பிரேதக்குழியில் உமது கிருபையும்
பாதாளத்தில் உமது உண்மையும் விவரிக்
கப்படுமோ?
12 இருளில் உமது அதிசயங்களும்
மறதியின் நாட்டிலே உமது நீதியும் அறியப்
படுமோ?
13 நானோ, யெகோவா, உம்மைநோக்கிக் கூப்
பிடுகிறேன்;
காலையிலே என் விண்ணப்பம் உமது சந்நிதி
யில் வரும்.
14 யெகோவா, ஏன் என் ஆத்துமாவைத் தள்ளி
விடுகிறீர்?
ஏன் உமது திருமுகத்தை எனக்கு மறைக்
கிறீர்?
15 சிறுவயதுமுதலே நான் சிறுமையானவன்,
மாண்டுபோகிறவன்;
உம்மால் வரும் திகில்களை நான் சுமந்து
மனங்கலங்குகிறேன்.
16 உமது எரிச்சல் என்மேல் புரண்டு போகி
றது;
உம்மால் வரும் பயங்கரங்கள் என்னை
அதம்பண்ணுகின்றன.
17 அவைகள் நாளெல்லாம் தண்ணீரைப்போல்
என்னைச் சூழ்ந்து
ஏகமாய் என்னை வளைத்துகொள்ளுகின்றன.
18 நேசரையும் தோழரையும் எனக்குத் தூர
மாய் விலக்கினீர்,
எனக்கு அறிமுகம் இருளே.

## எஸ்ராகியனாகிய ஏத்தானின் மஸ்கீல் சங்கீதம். 89

1 யெகோவாவின் கிருபைகளை என்றும் பாடி
வேன்;
உமது உண்மையைத் தலைமுறை தலைமுறை
யாய் என் வாயால் அறிவிப்பேன்.
2 கிருபை என்றைக்கும் ஸ்திரமாக்கப்படும்.
வானங்களிலே உமது உண்மையை ஸ்தாபிப்
பீர் என்றேன்.
3 என்னால் தெரிந்துகொள்ளப்பட்டவனோடே
உடன்படிக்கைபண்ணி
என் தாசனாகிய தாவீதினிடம்:
4 என்றைக்கும் உன் சந்ததியை நிலைப்
படுத்தித்
தலைமுறை தலைமுறையாக உன் சிங்கா
சனத்தைக் கட்டுவேன் என்று
ஆணையிட்டேன்
என்று சொன்னீர். சேலா
5 யெகோவா, வானங்கள் உமது அதிசயங்
களைத் துதிக்கும்;
பரிசுத்தவான்கள் சபையிலே உமது
உண்மையும் விளங்கும்.
6 ஆகாயமண்டலத்தில் யெகோவாவுக்கு ஒப்
பானவர் யார்?
பலவான்களின் புத்திரரில் யெகோவாவுக்கு
நிகரானவர் யார்?
7 பரிசுத்தவான்களின் ஆலோசனைச்சபையில்
அவர் மிகவும் பயங்கரமான கடவுள்;
தம்மைச் சூழ்ந்திருக்கிற அனைவரிடத்திலும்
அச்சத்தை உண்டாக்குகிறவர்.
8 சேனைகளின் கர்த்தாவாகிய யெகோவா,
உம்மைப்போல் வல்லமையுள்ளவர் யார்,
யெகோவா?
உமது உண்மை உம்மைச் சூழ்ந்திருக்கி
றது.
9 தேவரீர் சமுத்திரத்தின் பெருமையை ஆளு
கிறவர்;
அதின் அலைகள் எழும்பும்போது அவைகளை
அமர்த்துகிறீர்.
10 நீர் ராகாபை வெட்டுண்ட ஒருவனைப்போல்
நொறுக்கினீர்;
உமது புயபலத்தினால் உமது சத்துருக்களைச்
சிதறடித்தீர்.
11 வானங்கள் உம்முடையது, பூமியும் உம்
முடையது;
பூலோகத்தையும் அதிலுள்ள யாவையும்
நீரே அஸ்திபாரப்படுத்தினீர்.
12 வட்க்கையும் தெற்கையும் சிருஷ்டித்தவர்
நீரே;

தாபோரும் எர்மோனும் உமது நாமத்திலே
கெம்பீரிக்கும்.
13 நீர் புஜபலமுள்ளவர்;
உமது கரம் பராக்கிரமமுள்ளது;
உமது வலதுகரம் உயர்ந்திருக்கிறது.
14 நீதியும் நியாயமும் உமது சிங்காசனத்தின்
ஆதாரம்;
கிருபையும் சத்தியமும் உமக்குமுன்னே
நடக்கும்.
15 ஆனந்த ஆரவாரத்தை அறிந்த ஜனம்
பாக்கியமுள்ளது;
யெகோவா, அவர்கள் உமது திருமுக
வெளிச்சத்தில் நடக்கிறவர்கள்.
16 அவர்கள் உமது திருநாமத்தில் நாளெல்லாம்
களிகூர்ந்து
உமது நீதியில் உயர்ந்திருப்பார்கள்.
17 நீரே அவர்கள் பலத்தின் மகிமை;
உமது பிரீதியால் எங்கள் கொம்பு உயரும்.
18 எங்கள் கேடகம் யெகோவாவுக்குரியது;
எங்கள் ராஜா இஸ்ரவேலின் பரிசுத்தருக்
குரியவர்.
19 அக்காலத்திலே நீர் உமது பக்தருக்குத்
தரிசனமாகி:
சகாய சக்தியை ஒரு பராக்கிரமசாலியின்
மேல் வைத்தேன்.
ஜனத்தில் தெரிந்தெடுக்கப்பட்டவனை
உயர்த்தினேன்,
20 என் தாசனுகிய தாவீதைக் கண்டுபிடித்தேன்,
என் பரிசுத்த தைலத்தினால் அவனை அபி
ஷேகம்பண்ணினேன்,
21 என் கரம் அவனோடே உறுதியாய் நிலைத்
திருக்கும்,
என் புயம் அவனைப் பலப்படுத்தும்,
22 சத்துரு அவனை மேற்கொள்வதில்லை,
நியாயக்கேட்டின் மகன் அவனை ஒடுக்குவ
தில்லை,
23 அவன் சத்துருக்களை அவனுக்குமுன்பாக
கொறுக்கிவிடுவேன்,
அவனைப் பகைக்கிறவர்களை வெட்டுவேன்,
24 என் உண்மையும் என் கிருபையும் அவனோ
டிருக்கும்,
என் நாமத்தில் அவன் கொம்பு உயர்ந்திருக்
கும்,
25 அவன் கரத்தைச் சமுத்திரத்தின்மேலும்
அவன் வலதுகரத்தை ஆறுகள்மேலும்
ஆளுகைசெய்ய வைப்பேன்;
26 அவன் என்னிடம், நீரே என் பிதா,
என் கடவுள், என் ரட்சிப்பின் கன்மலை
என்று கூப்பிடுவான்;
27 நான் அவனை முதற்பேருனவனும்
பூமியின் ராஜாக்களிலும் மகா உயர்ந்தவனு
மாக்குவேன்;
என் கிருபையை என்றைக்கும் அவனுக் 28
காகக் காத்துவைப்பேன்,
என் உடன்படிக்கை அவனுக்காக உறுதி
யாய் நிலைக்கும்;
அவன் சந்ததி என்றென்றும் நிலைத்திருக்கவும் 29
அவன் ராஜாசனம் வானங்களுள்ளமட்டும்
நிலைநிற்கவும் செய்வேன்;
அவன் பிள்ளைகள் என் பிரமாணத்தைவிட்டு 30
விலகி
என் நியாயங்களின்படி நடவாமல்
என் நியமங்களை அலட்சியஞ்செய்து 31
என் கட்டளைகளைக் கைக்கொள்ளாதிருந்
தால்,
அவர்கள் மீறுதலைப் பிரம்பினாலும் 32
அவர்கள் அக்கிரமத்தை அடிகளினாலும்
தண்டிப்பேன்;
என் கிருபையையோ அவனை விட்டு விலக் 33
கேன்;
என் உண்மையில் பிசகவுமாட்டேன்,
என் உடன்படிக்கையை மீறேன், 34
என் உதடுகள் விளம்பினதை மாற்றேன்;
ஒருவிசை என் பரிசுத்தத்தின்பேரில் ஆணை 35
யிட்டாயிற்று,
தாவீதுக்கு நான் பொய்சொல்வேனோ!
அவன் சந்ததி என்றென்றுமிருக்கும், 36
அவன் சிங்காசனம் சூரியனைப்போல
எனக்குமுன் நிலைநிற்கும்,
சந்திரனைப்போல அது என்றென்றும் 37
உறுதியாயும்,
ஆகாயமண்டலத்திலுள்ள உண்மையான
சாட்சியைப்போல நிலையாயுமிருக்கும்
என்று விளம்பினீர்.
என்றாலும் நீர் வெறுத்துத் தள்ளிவிட்டீர்; 38
நீர் அபிஷேகம்பண்ணுவித்தவன்மேல் உக்
கிரகோபங் கொண்டீர்.
உமது தாசனுடனே நீர் பண்ணின உடன்படிக் 39
கையை ஒழித்துவிட்டீர்;
அவன் கிரீடத்தை அலட்சியஞ்செய்து தரை
யிலே தள்ளிவிட்டீர்.
அவன் மதில்களையெல்லாம் தகர்த்துப் போட் 40
டீர்;
அவன் அரண்களைப் பாழாக்கினீர்.
வழிநடக்கிற யாவரும் அவனைக் கொள்ளை 41
யிடுகிறார்கள்,
தன் அயலாருக்கு நிந்தையானான்.
அவன் சத்துருக்களின் வலதுகையை நீர் 42
உயர்த்தி
அவன் விரோதிகள் யாவரும் மகிழும்படி
செய்தீர்.
அவன் பட்டயத்தின் கருக்கை மழுக்கிப் 43
போட்டீர்;
யுத்தத்திலே அவன் நிற்காதபடி செய்தீர்.

44 அவன் மகிமையை அற்றுப்போகப்பண்ணினீர்;
அவன் சிங்காசனத்தைத் தரையிலே தள்ளிவிட்டீர்.
45 அவன் வாலிபகாட்களைக் குறுக்கினீர்;
வெட்கத்தை அவனுக்கு உடையாக்கினீர்.
46 யெகோவா, நீர் எதுவரைக்கும் மறைந்திருப்பீர்? முடிவின்றியோ?
உமது உக்கிரகோபம் அக்கினியைப்போல் எதுவரை எரிந்துகொண்டேயிருக்கும்?
47 என் உயிர் எவ்வளவு நிலையற்றது என்பதை நினைத்தருளும்;
மனுப்புத்திரர் யாவரையும் விருதாவாய்ச் சிருஷ்டித்துவிட்டதேன்?
48 பாதாள வல்லமைக்குத் தன்னைத் தப்புவித்துக்கொண்டு
மரணத்தைக் காணுமல் உயிரோடிருப்பவன் யார்?
ஆண்டவரே, நீர் உமது உண்மையைக் 49
கொண்டு
தாவீதுக்குச் சத்தியம்பண்ணி வாக்களித்த
உமது பூர்வகால இரக்கங்கள் எங்கே?
ஆண்டவரே, உமது அடியார் சுமக்கும் நிந் 50
தையையும்
வலிமையுள்ள சகல ஜனங்களாலும் என்
உள்ளத்தில் நான் சுமக்கும் நிந்தையையும் நினைத்தருளும்.
யெகோவா, இவை உமது சத்துருக்கள் நிந் 51
தித்த நிந்தனைகள்;
நீர் அபிஷேகம்பண்ணினவனின் காலடிகளே நிந்திக்கிறார்களே.
யெகோவா சதாகாலங்களிலும் ஸ்தோத்திரத் 52
துக்குரியவர்;

ஆமேன், ஆமேன்.

---

# நான்காம் பாகம்

## 90—106

**90** கடவுளின் மனிதனாகிய மோசேயின் பிரார்த்தனை.

ஆண்டவரே, தலைமுறை தலைமுறையாக
எங்கள் வாசஸ்தலம் நீரே.
2 மலைகள் தோன்றுமுன்னும்
பூமியையும் உலகத்தையும் நீர் உருவாக்குமுன்னும்
ஆதியந்தமில்லாத சதாகாலங்களிலும் நீரே கடவுள்.
3 நீர் மனிதரைப் புழுதிக்குத் திரும்பச்செய்து
மனுப்புத்திரரே, திரும்புங்கள் என்கிறீர்.
4 ஆயிரம் வருஷம் உமது பார்வைக்குக் கடந்துபோன நேற்றையதினமும் இராச் சாமமும்போலாம்.
5 அவர்களே வெள்ளம்போல் வாரிக்கொண்டு போகிறீர்;
நித்திரைக்கு ஒத்திருக்கிறார்கள்;
காலையிலே செழித்திருக்கிற புல்லுக்கு ஒப்பானவர்கள்.
6 அது காலையிலே பூத்துச் செழித்து
மாலையிலே உலர்ந்து காய்ந்துபோம்.
7 நாங்கள் உமது கோபத்தினால் அழிந்து
உமது உக்கிரத்தினால் கலங்குகிறோம்.
8 எங்கள் அக்கிரமங்களை உமக்கு முன்பாகவும்
எங்கள் அந்தரங்கபாவங்களை உமது முகத்தின் வெளிச்சத்திலும் நிறுத்தினீர்.
9 எங்கள் நாட்களெல்லாம் உமது கோபத்தால் போய்விட்டன;
ஒரு பேச்சைப்போல் எங்கள் வருஷங்களை
முடித்துவிடுகிறோம்.
எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம்; 10
பலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும்
அதின் மேன்மையானது பிரயாசமும் சஞ்சலமுமே;
அது சீக்கிரமாய்க் கடந்துபோகிறது, நாங்களும் பறந்துபோகிறோம்.
உமது கோபத்தின் வல்லமையையும் 11
உமக்குப் பயப்படத்தக்கவிதமாய் உமது
உக்கிரத்தையும்
அறிந்துகொள்ளுகிறவன் யார்?
நாங்கள் விவேக இருதயமுள்ளவர்களாகும் 12
படி
எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்.
யெகோவா திரும்பும், எதுவரை இப்படி 13
யிருக்கும்?
உமது அடியாருக்காகப் பரிதபியும்.
நாங்கள் எங்கள் வாழ்நாளெல்லாம் களி 14
கூர்ந்து மகிழும்படி
காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும்.
தேவரீர் எங்களைச் சிறுமைப்படுத்தின நாட் 15
களுக்கும்
நாங்கள் துன்பத்தைக்கண்ட வருஷங்களுக்கும் சரியாய்
எங்களை மகிழ்ச்சியாக்கும்.

16 உமது கிரியை உமது ஊழியருக்கும்
உமது மகிமை அவர்கள் பிள்ளைகளுக்கும் விளங்குவதாக.
17 எங்கள் ஆண்டவராகிய கடவுளின் தெய்வ பிரசன்னம்
எங்கள்மேல் இருப்பதாக,
எங்கள் கைகளின் கிரியையை எங்களிடம் உறுதிப்படுத்தும்;
ஆம், எங்கள் கைகளின் கிரியையை நீரே உறுதிப்படுத்தியருளும்.

**91** உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன்
சர்வவல்லவரின் நிழலில் தங்கியிருப்பான்.
2 நான் யெகோவாவினிடம்:
நீர் என் அடைக்கலம், என் கோட்டை,
நான் நம்பிக்கை வைத்திருக்கிற என் தேவன்
என்று சொல்லுவேன்.
3 அவர் உன்னைக் குழிவன் கண்ணியினின்றும்
பாழாக்கும் கொள்ளைநோயினின்றும் விடுவிப்பார்.
4 தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்;
அவர் செட்டைகளின்கீழே நீ அடைக்கலம் புகுவாய்;
அவருடைய உண்மை உனக்குப் பரிசையும் கேடகமுமாகும்.
5 இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும்
பகலில் பறக்கும் அம்புக்கும்
6 இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும்
மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும்
நீ பயப்படாதிருப்பாய்.
7 உன் பக்கத்தில் ஆயிரம்பேரும்
உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும்
அது உன்னை அணுகாது.
8 உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்ப்பாய்;
தெய்வபயமற்றவருக்கு வரும் பலனைக் கண்டுகொள்வாய்.
9 எனக்கு அடைக்கலமாயிருக்கிற யெகோவாவை, உன்னதமானவரையே,
உனக்கு வாசஸ்தலமாகக் கொண்டாய்.
10 ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது;
வாதை உன் கூடாரத்தை அணுகாது.
11 உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி
உனக்காகத் தமது தூதருக்குக் கட்டளையிடுவார்.
12 உன் பாதம் கல்லில் படாதபடி
அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொள்வார்கள்.
13 சிங்கத்தின்மேலும் விரியன் பாம்பின்மேலும் நீ நடப்பாய்.
பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப்போடுவாய்.
14 அவன் என்மேல் வாஞ்சையாயிருக்கிறபடியால்
அவனை விடுவிப்பேன்;
என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால்
அவனைக் காப்பேன்.
15 அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான்,
நான் அவனுக்கு மறுமொழி அளிப்பேன்
ஆபத்தில் நானே அவனோடிருப்பேன்;
அவனைத் தப்புவித்து அவனைக் கனப்படுத்துவேன்.
16 நீண்ட ஆயுளால் அவனைத் திருப்தியாக்கி
என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்.

ஓய்வுநாள் சங்கீதம்; கீர்த்தனை. **92**

யெகோவாவுக்கு நன்றிசெலுத்துவதும்,
உன்னதமானவரே, உமது திருநாமத்தைத் துதித்துப் பாடுவதும் நன்றும்.
2 பத்துநரம்பு வீணையினாலும் தம்புருவினாலும்
சுரமண்டல கானத்தினாலும்,
3 காலையிலே உமது கிருபையையும்
இரவுதோறும் உமது சத்தியத்தையும் பிரஸ்தாபிப்பது உத்தமே.
4 யெகோவா, உமது கிரியையினால் என்னை மகிழ்ச்சியாக்கினீர்;
உமது திருக்கரத்தின் செயல்களினிமித்தம் ஆனந்தித்துப் பாடுவேன்.
5 யெகோவா, உமது செயல்கள் எவ்வளவு மகத்துவமானவைகள்;
உமது யோசனைகள் மகா ஆழமானவைகள்.
6 மிருககுணமுள்ள மனுஷன் அதை அறியான்;
மதிகேடன் அதை உணரான்.
7 தெய்வபயமற்றவர் புல்லைப்போல் தழைப்பதும்,
அக்கிரமஞ்செய்கிற யாவரும் செழிப்பதும்
அவர்கள் என்றைக்கும் அழிந்துபோவதற்கே ஏதுவாகும்.
8 யெகோவா, என்றைக்கும் நீரே உயர்ந்திருக்கிறவர்.
9 யெகோவா, இதோ, உமது சத்துருக்கள்,
இதோ, உமது சத்துருக்கள் அழிந்தே போவார்கள்,

அக்கிரமஞ்செய்கிற யாவரும் சிதறுண்டு போவார்கள்.
10 என் கொம்பையோ காட்டெருதின் கொம்பைப்போல் உயர்த்துவீர்;
புது எண்ணெயை எனக்குப் பூசுகிறீர்.
11 என் சத்துருக்களுக்குச் சம்பவிப்பதை நான் கண்ணாரக் காண்பேன்,
எனக்கு விரோதமாய் எழும்புகிற துன்மார்க்கருக்குச் சம்பவிப்பதை நான் காதாரக் கேட்பேன்.
12 நீதிமான் பனைபோல் செழிப்பான்,
லீபனோனின் கேதுருவைப்போல் வளருவான்.
13 யெகோவாவின் ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள்
எங்கள் கடவுளின் பிராகாரங்களில் செழித்திருப்பார்கள்.
14 அவர்கள் முதிர்வயதிலும் கனி தந்து செழுமையும் பசுமையுமாயிருப்பார்கள்.
15 யெகோவா நேர்மையுள்ளவரென்பதும்
என் கன்மலையாகிய அவரிடம் அநீதியில்லை யென்பதும்
அதினால் விளங்கும்.

**93** யெகோவா அரசாளுகிறார்;
மகத்துவத்தை அணிந்துகொண்டிருக்கிறார்,
அணிந்துகொண்டிருக்கிறார்;
யெகோவா வல்லமையைக் கச்சையாகக் கட்டிக்கொண்டிருக்கிறார்,
பூமி அசையாதபடி நிலைத்திருக்கிறது.
2 உமது சிங்காசனம் பூர்வமுதலே நிலைபெற்றது;
நீர் அநாதியாயிருக்கிறீர்.
3 யெகோவா, நதிகள் எழும்பின,
நதிகள் இரைச்சலிட்டன;
நதிகள் அலைதிரண்டு எழும்புகின்றன.
4 திரள் தண்ணீர்களின் இரைச்சலுக்கும்
சமுத்திரத்தின் பலத்த அலைகளுக்கும் மேலாக
யெகோவா உன்னதத்திலே மகத்துவமுள்ளவர்.
5 உமது சாட்சியங்கள் மிகவும் உண்மையானவைகள்;
யெகோவா, நித்தியகாலங்களாகப்
பரிசுத்தமே உமது ஆலயத்தின் அலங்காரம்.

**94** பழிவாங்கும் கடவுளே, யெகோவா,
பழிவாங்கும் கடவுளே, பிரகாசியும்.
2 பூமியின் நியாயாதிபதியே, நீர் எழுந்தருளும்,
அகங்காரிகளுக்குப் பதிலளியும்.
3 யெகோவா, தெய்வபயமற்றவர்கள் எவரைக்கும்—
எதுவரைக்கும் பெருமைகொண்டு களிப்பார்கள்?
அவர்கள் வாயாடி இறுமாப்பாய்ப் பேசுகிறார்கள்; 4
அக்கிரமஞ்செய்கிற யாவரும் பெருமை பாராட்டுகிறார்கள்.
யெகோவா, அவர்கள் உமது ஜனத்தை 5
நொறுக்குகிறார்கள்;
உமது சுதந்தரத்தை ஒடுக்குகிறார்கள்.
விதவையையும் அந்நியனையும் கொன்று 6
போடுகிறார்கள்;
அநாதப் பிள்ளைகளைக் கொலைசெய்துவிடுகிறார்கள்.
யெகோவா பாரார், 7
யாக்கோபின் கடவுள் கவனியார்
என்று சொல்லுகிறார்கள்.
ஜனத்தில் மிருககுணமுள்ளவர்களே, உணர் 8
வடையுங்கள்;
மூடரே, எப்பொழுது புத்திமான்களாவீர்கள்?
காதை உண்டாக்கினவர் கேளாரோ? 9
கண்ணை உருவாக்கினவர் காணாரோ?
ஜாதிகளைச் சிட்சிக்கிறவர், 10
மனுஷனுக்கு அறிவைப்புகட்டுகிறவர்,
கண்டியாரோ?
யெகோவா மனுஷன் யோசனைகளை அறிவார்; 11
அவைகள் வீணென்று அவருக்குத் தெரியும்.
யெகோவா, நீர் சிட்சித்து 12
உமது பிரமாணத்தைக்கொண்டு போதிக்கிற மனுஷன் பாக்கியவான்.
தெய்வபயமற்றவனுக்குக் குழிவெட்டப் 13
படும் வரைக்கும்,
திங்குகாட்களில் இவன் அமர்ந்திருக்க வேண்டுமென்றே
இப்படிச் செய்கிறீர்.
யெகோவா தமது ஜனத்தைத் தள்ளிவிடார்; 14
தமது சுதந்தரத்தைக் கைவிடார்.
நியாயம் நீதியினிடமாகத் திரும்பும், 15
நேர்மையான இருதயத்தார் யாவரும்
அதைப் பின்பற்றுவார்கள்.
துன்மார்க்கருக்கு விரோதமாய் என் பட்சத்தில் 16
எழும்புகிறவன் யார்?
அக்கிரமச் செய்கைக்காரருக்கு விரோதமாய்
என் பட்சத்தில் நிற்பவன் யார்?
யெகோவா எனக்குத் துணையாயிராவிட்டால் 17
என் ஆத்துமா சீக்கிரமாய் மவுனத்தில்
வாசம்பண்ணியிருக்கும்.
என் கால் சறுக்குகிறது என்று நான் 18
சொன்னபோது,
யெகோவா, உமது கிருபை என்னைத் தாங்கினது;
என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகும் 19
போது

உம்மால் வரும் ஆறுதல் என் ஆத்துமாவை மகிழச்செய்கிறது.
20 சட்டங்களினால் தீமையைப் பிறப்பிக்கிற கொடுங்கோலாசனத்திற்கும் உமக்கும் இசைவுண்டோ?
21 அவர்கள் நீதிமான் உயிருக்கு விரோதமாய்க் கூட்டங்கூடிக் குற்றமில்லாத ரத்தத்தைக் குற்றமாகத் தீர்க்கிறார்கள்.
22 எனக்கோ யெகோவா துருக்கம்; என் கடவுளே அடைக்கலமான கன்மலை.
23 அவர்கள் அக்கிரமத்தை அவர்கள்மேல் திரும்பச்செய்து அவர்கள் பொல்லாப்பிலே அவர்களைச் சங்காரிப்பார்; நமது கடவுளாகிய யெகோவா அவர்களைச் சங்காரிப்பார்.

**95** யெகோவாவைக் கெம்பீரமாய்ப் பாடி நமது ரட்சணியக் கன்மலையை ஆர்ப்பரித்துப் பாடுவோம் வாருங்கள்.
2 நன்றியறிதலோடு அவர் சந்நிதிமுன் வந்து சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம்.
3 யெகோவா மகத்தான கடவுள்; எல்லா தேவர்களுக்குமேல் மகத்தான ராஜா.
4 பூமியின் ஆழங்கள் அவர் கையில் இருக்கின்றன; மலைகளின் சிகரங்களும் அவருடையவைகளே.
5 சமுத்திரம் அவருடையது, அவரே அதை உண்டாக்கினார்; வெட்டாந்தரையையும் அவர் திருக்கரங்களே உருவாக்கின.
6 நம்மை உண்டாக்கின யெகோவாவுக்கு முன்பாக நாம் பணிந்துகுனிந்து முழங்காற்படியிடுவோம் வாருங்கள்.
7 அவர் நமது கடவுள், நாம் அவர் மேய்ச்சலின் ஜனமும் அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே. இன்று அவர் சத்தத்தைக் கேட்பீர்களாகில்
8 மெரீபாவிலும் வனந்தரத்திலே மசாவிலிருந்த நாளிலும் நடந்ததுபோல உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்.
9 அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து என்னைப் பரீட்சைபார்த்து என் கிரியையையும் கண்டார்கள்.
10 நாற்பது வருஷமாய் நான் அந்தச் சந்ததியை அரோசித்து அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனம் என்றும்,
என் வழிகளை அறியாதவர்கள் என்றும் சொல்லி,
என் இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதேயில்லை யென்று
என் கோபத்திலே ஆணையிட்டேன்.
11

**96** யெகோவாவுக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்.
பூமியின் குடிகளே, எல்லாரும் யெகோவாவைப் பாடுங்கள்.
2 யெகோவாவைப் பாடி அவர் திருநாமத்தை ஸ்தோத்திரித்து நாளுக்குநாள் அவர் ரட்சிப்பை நற்செய்தியாகப் பிரஸ்தாபியுங்கள்.
3 புறஜாதிகளுக்குள் அவர் மகிமையையும் சகல ஜாதிகளுக்குள்ளும் அவர் அதிசயங்களையும் விவரித்துச் சொல்லுங்கள்.
4 யெகோவா பெரியவர், மிகவும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவர்; எல்லா தேவர்களிலும் பயப்படத்தக்கவர் அவரே.
5 ஜாதிகளின் சகல தேவர்களும் விக்கிரகங்களே; யெகோவா வானங்களைப் படைத்தவர்.
6 மகிமையும் மகத்துவமும் அவர் சமுகத்திலும் வல்லமையும் வனப்பும் அவர் பரிசுத்த ஸ்தலத்திலும் உள்ளன.
7 ஜாதிகளின் சந்ததிகளே, யெகோவாவுக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள், யெகோவாவுக்கே செலுத்துங்கள்.
8 யெகோவாவின் திருநாமத்திற்குரிய மகிமையை அவருக்கே செலுத்திக் காணிக்கைகளோடு அவர் பிராகாரங்களில் பிரவேசியுங்கள்.
9 பரிசுத்த அலங்காரத்தோடு யெகோவாவைத் தொழுதுகொள்ளுங்கள்; பூலோகத்தாரே, நீங்கள் யாவரும் அவருக்கு முன்பாக நடுங்குங்கள்.
10 யெகோவா அரசாளுகிறார்; பூமியும் அசையாதபடி உறுதிப்பட்டிருக்கும்; அவர் ஜாதிகளை நேர்மையாய் நியாயம் விசாரிப்பார் என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லுங்கள்.
11 வானங்கள் மகிழ்ந்து பூமி பூரிப்பாகிச் சமுத்திரமும் அதின் நிறைவும் முழங்குவதாக.

12 வயல்வெளியும் அதிலுள்ள யாவும் களிகூருவதாக;
அப்பொழுது காட்டுமரங்களெல்லாம் கெம்பீரிக்கும்.
13 யெகோவாவுக்கு முன்பாகவே அந்த ஆரவாரம், அவர் வருகிறார்;
அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்;
அவர் பூலோகத்தை நீதியிலும்
ஜாதிகளைத் தமது உண்மையிலும் நியாயந்தீர்ப்பார்.

**97** யெகோவா அரசாளுகிறார்,
பூமி பூரிப்பாகித்
திரளான தீவுகள் மகிழக்கடவது.
2 மேகமும் மந்தாரமும் அவரைச் சூழ்ந்திருக்கின்றன;
நீதியும் நியாயமும் அவர் சிங்காசனத்தின் ஆதாரம்.
3 அக்கினி அவருக்கு முன்சென்று
சுற்றிலும் இருக்கிற அவர் சத்துருக்களைச் சுட்டெரிக்கிறது.
4 அவருடைய மின்னல்கள் பூமியைப் பிரகாசிப்பித்தன;
பூமி அதைக்கண்டு அதிர்ந்தது.
5 யெகோவா பிரசன்னத்தினால் மலைகள்
மெழுகுபோல் உருகின;
சர்வபூமியின் ஆண்டவரின் பிரசன்னத்தினாலேயே உருகிப்போயின.
6 வானங்கள் அவருடைய நீதியை அறிவிக்கின்றன;
சகல ஜாதிகளும் அவர் மகிமையைக் கண்டிருக்கிறார்கள்.
7 சொரூபங்களை வணங்கி
விக்கிரகங்களைப்பற்றிப் பெருமைபாராட்டுகிற யாவரும்
வெட்கப்படுவார்களாக,
தேவர்களே, நீங்களனைவரும் அவரைத் தொழுதுகொள்ளுங்கள்.
8 யெகோவா, உமது நியாயத்தீர்ப்புகளைக் கேட்டு,
சீயோன் மகிழ்ந்தது,
யூதாவின் குமாரத்திகள் களிகூர்ந்தார்கள்.
9 யெகோவா, பூமியனைத்தின்மேலும் நீர் உன்னதமானவர்;
எல்லா தேவர்களிலும் நீரே மிகவும் உயர்ந்தவர்.
10 யெகோவாவில் அன்புகூருகிறவர்களே,
தீமையைப் பகையுங்கள்;
அவர் தமது பக்தரைக் காப்பாற்றித் தெய்வபயமற்றவரின் கையினின்று அவர்களை விடுவிக்கிறார்.
11 நீதிமானுக்கு வெளிச்சமும்
நேர்மையான இருதயத்தாருக்கு மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கின்றன.
12 நீதிமான்களே, யெகோவாவில் மகிழுங்கள்,
அவர் பரிசுத்த நாமத்தை நன்றியறிதலோடு கொண்டாடுங்கள்.

**98** யெகோவாவுக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்;
அவர் அதிசயமானவைகளைச் செய்திருக்கிறார்;
அவருடைய வலதுகரமும் அவருடைய பரிசுத்த புயமும் அவருக்கு ஜயம் வரும்படி செய்தன.
2 யெகோவா தமது ஜயத்தைப் பிரஸ்தாபப்படுத்தி
தமது நீதியைப் புறஜாதிகளின் கண்களுக்கு முன்பாக விளங்கக்காட்டினார்.
3 இஸ்ரவேல் குடும்பத்துக்குத் தாம் பாராட்டின
கிருபையையும் உண்மையையும் நினைவுகூர்ந்தார்,
பூமியின் எல்லைகளெல்லாம்
நமது கடவுளால் வந்த ஜயத்தைக் கண்டன.
4 பூமியின் குடிகளே, நீங்கள் எல்லாரும் ஆர்ப்பரித்து யெகோவாவைப் பாடுங்கள்;
முழக்கமிட்டுக் கெம்பீரமாய்ப் பாடுங்கள், துதித்துப் பாடுங்கள்.
5 சுரமண்டலத்தால் யெகோவாவைத் துதித்துப்பாடுங்கள்;
சுரமண்டலத்தாலும் கீதசத்தத்தாலும் அவரைத் துதித்துப் பாடுங்கள்.
6 யெகோவாவாகிய இறைவன் சந்நிதானத்தில்
பூரிகைகளாலும் எக்காள சத்தத்தாலும்
ஆனந்தமாய் ஆர்ப்பரியுங்கள்.
7 யெகோவாவுக்கு முன்பாக,
சமுத்திரமும் அதின் நிறைவும்
பூமியும் அதின் குடிகளும் முழங்குவதாக.
8 ஆறுகள் கைகொட்டி
மலைகள் ஏகமாய்க் கெம்பீரித்துப்பாடுவதாக.
9 அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்,
பூலோகத்தை நீதியாகவும் ஜாதியாரை நேர்மையாகவும் நியாயந்தீர்ப்பார்.

**99** யெகோவா அரசாளுகிறார்,
ஜனங்கள் தத்தளிப்பார்களாக;
அவர் கேருபுகள்மேல் வீற்றிருக்கிறார்,
பூமி அசைவதாக.
2 யெகோவா சீயோனில் மகத்தானவர்;
அவர் எல்லா ஜனங்களுக்கும் மேலாக உயர்ந்தவர்.
3 மகத்துவமும் பயங்கரமுமான உமது திரு
நாமத்தை அவர்கள் துதிப்பார்களாக;

அவர் பரிசுத்தமுள்ளவர்.
4 ராஜாவின் வல்லமை நீதியின்மேல் பிரியங்கொள்ளுகிறது;
தேவரீர் நேர்மையை நிலைநிறுத்துகிறீர்;
நீர் யாக்கோபிலே நியாயமும் நீதியும் செய்கிறீர்.
5 நமது கடவுளாகிய யெகோவாவை உயர்த்தி
அவர் பாதபடியிலே பணியுங்கள்;
அவர் பரிசுத்தமுள்ளவர்.
6 அவருடைய ஆசாரியரில் மோசேயும் ஆரோனும்,
அவர் நாமத்தைக் கூப்பிடுகிறவர்களில் சாமுவேலும்
யெகோவாவை நோக்கிக் கூப்பிட்டார்கள்;
அவர் அவர்களுக்குப் பதிலளித்தார்.
7 மேகஸ்தம்பத்திலிருந்து அவர்களோடு பேசினார்;
அவர்கள் அவருடைய சாட்சிப்பிரமாணங்களையும்
அவர் தங்களுக்கு நியமித்த சட்டத்தையும் கைக்கொண்டார்கள்.
8 எங்கள் கடவுளாகிய யெகோவா, நீர் அவர்களுக்குப் பதிலளித்தீர்;
நீர் அவர்கள் செய்கைகளினிமித்தம் பழிவாங்குகிறவர்,
அவர்களுக்கு மன்னிக்கிற கடவுளும் நீரே.
9 நமது கடவுளாகிய யெகோவாவை உயர்த்தி
அவருடைய பரிசுத்த பர்வதத்திலே பணிந்துகொள்ளுங்கள்;
நமது கடவுளாகிய யெகோவா பரிசுத்தர்.

**100** ஸ்தோத்திர பலிக்குரிய சங்கீதம்.

பூமியின் குடிகளே,
எல்லாரும் யெகோவாவைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்.
2 மகிழ்ச்சியோடே யெகோவாவைச் சேவியுங்கள்;
ஆனந்தசத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள்.
3 யெகோவாவே கடவுளென்று அறிந்துகொள்ளுங்கள்;
நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்,
நாம் அவருடைய ஜனம், அவருடைய மேய்ச்சலின் ஆடுகள்
4 அவர் வாசல்களில் நன்றியறிதலோடும்
அவர் பிராகாரங்களில் துதியோடும் பிரவேசியுங்கள்;
அவருக்கு நன்றிசெலுத்தி அவர் நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்.
5 யெகோவா நல்லவர், அவர் இரக்கம் என்றென்றும்
அவர் உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது.

தாவீதின் சங்கீதம். **101**

இரக்கத்தையும் நியாயத்தையும் குறித்துப் பாடுவேன்;
யெகோவா, உம்மைத் துதித்துப்பாடுவேன்.
உத்தம வழியிலே விவேகமுள்ளவனாய் நடப்பேன், 2
எப்பொழுது என்னிடம் வருவீரோ!
என் வீட்டிலே குற்றமற்ற இருதயமுள்ளவனாய் நடந்துகொள்ளுவேன்.
எந்த இழிவான காரியத்தையும் என் கண் முன் நிறுத்தி நோக்கமாட்டேன்; 3
வழிவிலகுகிறவர்கள் செய்கையைப் பகைக்கிறேன்;
அது என்னைப் பற்றிக்கொள்ளாது.
மாறுபாடான இருதயம் என்னைவிட்டு அகலும்; 4
தீயவன் எவனையும் அறியமாட்டேன்.
அயலான்மேல் மறைவில் அவதூறு பேசுகிறவனைச் சங்காரிப்பேன்; 5
மேட்டிமைக் கண்ணனையும் கர்வநெஞ்சனையும் பொறுக்கமாட்டேன்.
தேசத்தில் உண்மையுள்ளவர்கள் என்னோடே வாசம்பண்ணும்படி 6
என் கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கும்;
உத்தமவழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான்.
கபடுசெய்கிறவன் என் வீட்டுக்குள் இருப்பதில்லை; 7
பொய்சொல்லுகிறவன் என் கண்முன் நிலைப்பதில்லை.
அக்கிரமஞ்செய்வோர் யாவரும் 8
யெகோவாவின் நகரில் இராமல் அறுப்புண்டு போகும்படி
தேசத்திலுள்ள தெய்வபயமற்றோர் யாவரையும் காலைதோறும் சங்காரிப்பேன்.

சிறுமையானவன் துக்கத்தில் மூழ்கி **102**
யிருக்கும்போது யெகோவாவின் சந்நிதியில் தன் வியாகுலத்தை ஊற்றித்தெரிவித்துச் செய்யும் பிரார்த்தனை.

யெகோவா, என் பிரார்த்தனையைக் கேட்டருளும்;
என் அபயசத்தம் உம்மிடம் சேர்வதாக.
என் ஆபத்துகாலிலே உமது திருமுகத்தை 2
எனக்கு மறையாதேயும்;
உமது திருச்செவியை என்னிடமாய்ச் சாய்த்தருளும்;
நான் கூப்பிடும் நாளிலே எனக்கு விரைவாய்ப் பதிலளித்தருளும்.

3 என் நாட்கள் புகையைப்போல் ஒழிந்தன;
என் எலும்புகள் கொள்ளியைப்போல் எரி
யுண்டன.
4 என் இருதயம் புல்லைப்போல் வெட்டுண்டு
உலர்ந்தது;
போஜனத்தைப் புசிக்க மறந்தேன்.
5 என் பெருமூச்சின் சத்தத்தினிமித்தம் எலும்
புகள் தோலோடு ஒட்டிக்கொள்ளுகின்
றன.
6 வனாந்தர நாரைக்கு ஒப்பானேன்;
பாழான இடங்களில் தங்கும் ஆந்தை
போலானேன்.
7 எனக்கு நித்திரையில்லை;
வீட்டின்மேல் தனித்திருக்கும் குருவிபோலா
னேன்.
8 நாளெல்லாம் என் சத்துருக்கள் என்னை
நிந்திக்கிறார்கள்;
என்மேல் மூர்க்கவெறிகொண்டவர்கள்
சாபமிடும்போது
இவனைப்போலாகவென்று சபிக்கிறார்கள்.
9 நீர் என்னை உயரத்தூக்கித் தள்ளிவிட்டீர்;
உமது கோபத்திற்கும் கடுங்கோபத்திற்கும்
ஆளானேன்.
10 ஆதலால் நான் சாம்பலை ஆகாரமாகப் புசித்
தண்ணீரோடு என் கண்ணீரைக் கலந்து
குடித்தேன்.
11 என் நாட்கள் சாய்ந்துபோகிற நிழலைப்போ
லிருக்கிறது;
புல்லைப்போல் உலர்ந்துபோகிறேன்.
12 யெகோவாவாகிய நீரோ என்றென்றும்
இருப்பீர்;
உமது பேர்ப்பிரஸ்தாபம் தலைமுறை தலை
முறையாக நிற்கும்.
13 தேவரீர் எழுந்தருளுவீர், சீயோனுக்கு
இரங்குவீர்;
அதற்கு இரக்கங்காட்டும் காலம் ஆயிற்று;
குறித்தகாலமும் வந்தது.
14 உமது ஊழியர் அதின் கற்களின்மேல் பிரி
யங்கொள்ளுகிறார்கள்;
அதின் மண்ணுக்காகப் பரிதபிக்கிறார்கள்.
15 யெகோவா சீயோனைக் கட்டித்
தமது மகிமையில் வெளிப்பட்டார்.
16 நிக்கற்றவர்கள் ஜெபத்தை அலட்சியஞ்செய்
யாமல்
அவர்கள் விண்ணப்பத்தை அங்கீகரித்தார்
என்று
17 புறஜாதிகள் யெகோவாவின் திருநாமத்துக்
கும்
பூமியின் ராஜாக்களெல்லாரும் உமது மகி
மைக்கும் பயப்படுவார்கள்.
18 பின்வரும் சந்ததிக்காக இது எழுதப்படும்:
சிருஷ்டிக்கப்படும் ஜனம் யெகோவா
வைத் துதித்து:
19 யெகோவா கட்டுண்டவர்களின்
பெருமூச்சைக் கேட்கவும்
கொலைக்கு நியமிக்கப்பட்டவர்
களை விடுதலையாக்கவும்
20 தமது உயர்ந்த பரிசுத்த ஸ்தலத்தி
லிருந்து பார்த்து
வானங்களிலிருந்து பூமியின்மேல்
கண்ணோக்கமானார்.
21 யெகோவாவைச் சேவிப்பதற்கு
ஜாதிகளும் ராஜ்யங்களும் ஏகமாய்க்
கூடிவருகையில்,
22 சீயோனிலே யெகோவாவின் திரு
நாமத்தையும்
எருசலேமிலே அவருடைய துதி
யையும்
பிரஸ்தாபிக்க வேண்டுமென்று இப்
படிச் செய்தார்
என்று சொல்லும்.
23 வழியிலே என் பலத்தை அவர் ஒடுக்கி
என் நாட்களைக் குறுகப்பண்ணினார்.
24 அப்பொழுது நான்:
என் கடவுளே, பாதி வயதில் என்னை
எடுத்துக்கொள்ளாதேயும்,
உமது வருஷங்கள் தலைமுறை தலை
முறையாக இருக்கும்;
25 நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்
படுத்தினீர்,
வானங்கள் உமது திருக்கரங்களின் கிரி
யைகள்;
26 அவைகள் அழிந்துபோம், நீரோ நிலை
நிற்கிறீர்;
அவைகளெல்லாம் வஸ்திரம்போலப்
பழமையாய்ப் போம்,
உடையைப்போல் அவற்றை மாற்று
வீர், அவைகள் மாறிப்போம்;
27 நீரோ மாறுதலவர்,
உமது ஆண்டுகள் முடிவடைவதில்லை,
28 உமது அடியாரின் பிள்ளைகள் வாழ்ந்
திருகொண்டிருப்பார்கள்,
அவர்கள் சந்ததி உமக்குமுன்பாக
நிலைபெற்றிருக்கும்
என்று சொன்னேன்.

தாவீதின் சங்கீதம். **103**

1 என் ஆத்துமாவே, யெகோவாவை ஸ்தோத்
திரி;
என் முழு உள்ளமே, அவர் பரிசுத்த
நாமத்தை ஸ்தோத்திரி.
2 என் ஆத்துமாவே, யெகோவாவை ஸ்தோத்
திரி;

அவர் செய்த சகல உபகாரங்களையும் மற
வாதே.
3 அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்
னித்து,
உன் நோய்களையெல்லாம் குணமாக்கி
4 உன் பிராணனை மரணத்தினின்று மீட்டு
உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினா
லும் முடிசூட்டி
5 நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்கு
கிறார்;
கழுகுக்குச் சமானமாக உன் வாலிபப் பரு
வம் திரும்ப வருகிறது.
6 ஒடுக்கப்படுகிற யாவருக்கும்
யெகோவா நீதியையும் நியாயத்தையும் செய்
கிறார்.
7 அவர் தமது வழிகளை மோசேக்கும்
தமது செயல்களை இஸ்ரவேல் புத்திரருக்கும்
தெரியப்பண்ணினார்.
8 யெகோவா உருக்கமும் இரக்கமும்
நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ள
வர்.
9 காலமெல்லாம் அவர் வழக்காடார்;
என்றென்றுமாகக் கோபங்கொண்டிரார்.
10 நமது பாவங்களுக்குத் தக்கபடி அவர் நமக்
குச் செய்யவில்லை;
நமது அக்கிரமங்களுக்குத் தக்கபடி அவர்
நமக்குப் பதிற் செய்யவில்லை.
11 பூமிக்கு வானம் எவ்வளவு உயரமோ
அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவ
ருடைய கிருபையும்
அவ்வளவு பெரிது.
12 மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூர
மோ
அவ்வளவு தூரமாய் அவர் நமது மீறுதல்
களை நம்மைவிட்டு விலக்கினார்.
13 தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது
போல
யெகோவா தமக்குப் பயந்தவர்களுக்கு
இரங்குகிறார்.
14 நமது உருவம் இன்னதென்று அவருக்குத்
தெரியும்;
நாம் மண்ணே என்று நினைவுகூருகிறார்.
15 மனுஷனின் நாட்கள் புல்லுக்கு ஒப்பாம்;
காட்டிலேயுள்ள பூவைப்போல் பூக்கிறான்.
16 காற்று அதின்மேல் வீசினவுடனே அது
இல்லாமற்போம்;
அது இருந்த இடமும் இனி அதை அறி
யாது.
17 யெகோவாவின் கிருபையோ அவருக்குப்
பயந்தவர்கள்மேலும்,
அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகள்
மேலும்,
அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது.
அவர் உடன்படிக்கையைக் கைக்கொண்டு 18
அவர் கட்டளைகளின்படி செய்ய அவற்றை
நினைக்கிறவர்கள் மேலேயே உள்ளது.
யெகோவா தமது சிங்காசனத்தை வானங் 19
களில் ஸ்தாபித்திருக்கிறார்;
அவர் ராஜ்யம் எல்லாவற்றையும் ஆளுகி
றது.
யெகோவாவினுடைய சொல்லின் சத்தத் 20
துக்குச் செவிகொடுத்து
அவர் சொற்படி செய்கிற பலத்த வீரர்களே,
அவர் தூதர்களே, அவரை ஸ்தோத்திரியுங்
கள்.
யெகோவாவின் சர்வ சேனைகளே, 21
அவருக்குப் பிரியமானதைச் செய்து
வருகிற அவர் பணிவிடையாட்களே,
அவரை ஸ்தோத்திரியுங்கள்.
யெகோவா ஆளுகைசெய்கிற எவ்விடங்களி 22
லுமுள்ள
அவர் சகல சிருஷ்டிகளே, அவரை ஸ்தோத்
திரியுங்கள்;
என் ஆத்துமாவே, யெகோவாவை ஸ்தோத்
திரி.

**104** என் ஆத்துமாவே, யெகோவாவை
ஸ்தோத்திரி;
என் கடவுளாகிய யெகோவா, நீர் மிகவும்
பெரியவர்;
நீர் மகிமையையும் மகத்துவத்தையும்
அணிந்துகொண்டிருக்கிறீர்.
ஒளியை வஸ்திரமாகப் போர்த்திருக்கிறீர்; 2
வானங்களைக் கூடாரத்துணியைப்போல்
விரித்திருக்கிறீர்.
தமது மேல்வீடுகளைத் தண்ணீர்கள்மேல் 3
கட்டி
மேகங்களைத் தமது இரதமாக்கிக்
காற்றின் செட்டைகள்மேல் செல்லுகிறார்.
தமது தூதரைக் காற்றுகளாகவும் 4
தமது பணிவிடையாட்களை அக்கினி
ஜ்வாலைகளாகவும் செய்கிறார்.
பூமி ஒருபோதும் நிலைபெயராதபடி 5
அதின் ஆதாரங்கள்மேல் அதை ஸ்தாபித்
தார்.
அதை வஸ்திரத்தினால் மூடுவதுபோல ஆழத் 6
தால் மூடினீர்;
மலைகள்மேல் தண்ணீர்கள் நின்றன.
உமது கண்டிப்பினால் அவைகள் விலகியோ 7
டின;
உமது குமுறலின் சத்தத்தால் விரைந்தபோ
யின.
நீர் அவைகளுக்கு ஏற்படுத்தின இடத்தில் 8
மலைகள் உயர்ந்தன, பள்ளத்தாக்குகள்
தாழ்ந்தன.

9 தண்ணீர்கள் திரும்பவும் பூமியை மூடிக்
கொள்ளாதபடி
கட்டக்கமுடியாத எல்லையை அவைகளுக்கு
ஏற்படுத்தினீர்.
10 அவர் மலைவெடிப்புகளில் நீரூற்றுகளை வர
விடுகிறார்;
அவைகள் மலைகள் நடுவே ஓடுகின்றன.
11 அவைகள் வெளியின் ஜீவஜந்துக்களுக்கெல்
லாம் தண்ணீர் கொடுக்கும்;
அங்கே காட்டுக்கழுதைகள் தங்கள் தாகத்
தைத் தீர்த்துக்கொள்ளும்.
12 அவைகள் ஓரமே ஆகாயத்துப் பறவைக
ளுக்கு இருப்பிடம்;
அங்கே கிளைகளிலிருந்து பாடும்.
13 தமது மேல்வீடுகளிலிருந்து மலைகளுக்குத்
தண்ணீர் வார்க்கிறார்;
உமது கிரியைகளின் பலனாலே பூமி திருப்தி
யடைகிறது.
14 பூமியிலிருந்து ஆகாரம் உண்டாகும்படி
அவர் மிருகங்களுக்குப் புல்லையும்
மனுஷருக்கு உபயோகமான பயிர்வகை
களையும் முளைப்பிக்கிறார்.
15 மனுஷன் இருதயத்தைத் திராட்சரசம்
மகிழ்ச்சியாக்கும்,
எண்ணெய் அவனுக்கு முகக்களை உண்டு
பண்ணும்;
ஆகாரம் அவன் இருதயத்தை ஆதரிக்கும்.
16 யெகோவாவின் மரங்களும்
அவர் நாட்டின லீபனோனின் கேதுருக்க
ளும் திருப்தியடைந்தன.
17 அங்கே குருவிகள் கூடுகட்டும்;
தேவதாரு விருட்சங்கள் கொக்குகள் குடி
யிருப்பு.
18 உயர்ந்தமலைகள் வரையாடுகளுக்கும்
கன்மலைகள் குழிமுசல்களுக்கும் அடைக்
கலம்.
19 சந்திரனைக் காலக்குறிப்புகளுக்காகப்
படைத்தார்;
சூரியன் தன் அஸ்தமனத்தை அறியும்.
20 நீர் இருளை வரச்செய்கிறீர், இராக்கால
மாகும்;
அதிலே சகல காட்டு ஜந்துக்களும் நட
மாடும்.
21 பாலசிங்கங்கள் இரைக்காகக் கெர்ச்சிக்
கின்றன;
கடவுளால் தங்களுக்கு ஆகாரம் கிடைக்
கும்படி தேடுகின்றன.
22 சூரியன் உதிக்கையில் அவைகள் ஒதுங்
கித்
தங்கள் தாபரங்களில் படுத்துக்கொள்ளும்.
23 அப்பொழுது மனுஷன் சாயங்காலமட்டும்
வெளியேறித்
தன் வேலைக்கும் தன் பண்ணைக்கும் போகி
றான்.
24 யெகோவா, உமது செயல்கள் எவ்வளவு
திரளானவை!
அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்
தீர்;
பூமி உமது சிருஷ்டிகள் நிறைந்துள்ளது.
25 இதோ, சமுத்திரம் பெரிதும் விஸ்தாரமு
மானது;
அதிலே சஞ்சரிக்கும் சிறியவைகளும் பெரி
யவைகளுமான எண்ணிறந்த பிராணிகள்
உண்டு.
26 அதிலே கப்பல்கள் ஓடும்;
அதிலே விளையாடும்படி நீர் உருவாக்கின
லிவியாதானும் உண்டு.
27 ஏற்றவேளையில் ஆகாரத்தைத் தருவீர்
என்று
அவைகளெல்லாம் உம்மை நோக்கிக் காத்
திருக்கும்.
28 நீர் கொடுக்க அவைகள் வாங்கிக்கொள்
ளும்;
நீர் உமது கையைத் திறக்க, அவைகள்
நன்மையால் திருப்தியாகும்.
29 நீர் உமது முகத்தை மறைக்க, அவைகள்
திகைக்கும்;
நீர் அவைகள் சுவாசத்தை வாங்கிக்கொள்
ள, அவைகள் மாண்டு
தங்கள் மண்ணுக்குத் திரும்பும்.
30 நீர் உமது ஆவியை அனுப்ப அவைகள்
சிருஷ்டிக்கப்படும்;
நீர் பூமியின் முகத்தையும் புதிதாக்குகிறீர்.
31 யெகோவாவின் மகிமை என்றென்றும் இருப்
பதாக;
யெகோவா தமது கிரியைகளிலே மகிழ்வா
ராக.
32 அவர் பூமியை நோக்கிப்பார்க்க, அது அதி
ரும்;
அவர் மலைகளைத்தொட, அவைகள் புகை
யும்.
33 நான் உயிரோடிருக்குமளவும் என் யெகோ
வாவைப் பாடுவேன்;
நான் உள்ளளவும் என் கடவுளைத் துதித்துப்
பாடுவேன்;
34 என் தியானம் அவருக்கு இனிமையாயிருப்
பதாக;
நானே யெகோவாவிலே மகிழுவேன்.
35 பாவிகள் பூமியிலிருந்து நிர்மூலமாகித்
தெய்வபயமற்றவர்கள் இனி இராமற் போ
வார்களாக;
என் ஆத்துமாவே, யெகோவாவை ஸ்தோத்
திரி,
அல்லேலூயா.

**105** யெகோவாவுக்கு நன்றிசெலுத்துங்கள்;
அவர் திருநாமத்தைத் தொழுதுகொள்ளுங்கள்;
அவர் செயல்களை ஜனங்களுக்குள்ளே பிரஸ்தாபப்படுத்துங்கள்.
2 அவரைப் பாடுங்கள்;
அவரைத் துதித்துப்பாடுங்கள்;
அவர் அதிசயச் செயல்களையெல்லாம் தியானித்துப் பேசுங்கள்.
3 அவர் பரிசுத்த நாமத்தைப்பற்றி மேன்மை பாராட்டுங்கள்;
யெகோவாவைத் தேடுகிறவர்கள் இருதயம் மகிழ்வதாக.
4 யெகோவாவையும் அவர் வல்லமையையும் நாடுங்கள்;
அவர் திருச்சமுகத்தை நித்தமும் தேடுங்கள்.
5 அவர் தாசனுடைய ஆபிரகாமின் சந்ததியே!
அவர் தெரிந்தெடுத்தவர்களாகிய யாக்கோபின் புத்திரரே!
6 அவர் செய்த அதிசயங்களையும் அவருடைய அற்புதச் செயல்களையும்
அவர் வாயின் நியாயத்தீர்ப்புகளையும் நினைவுகூருங்கள்.
7 அவரே நமது கடவுளாகிய யெகோவா,
அவர் நியாயத்தீர்ப்புகள் பூமியெங்கும் விளங்கும்.
8 தாம் செய்த உடன்படிக்கையையும்
ஆயிரந்தலைமுறைக்கென்று தாம் கட்டளையிட்ட வாக்கையும்
9 ஆபிரகாமோடே அவர் செய்த உடன்படிக்கையையும்
அவர் ஈசாக்குக்கு இட்ட ஆணையையும்
என்றென்றும் மறவாமலிருக்கிறார்.
10 அதை யாக்கோபுக்குப் பிரமாணமாகவும்
இஸ்ரவேலுக்கு நித்திய உடன்படிக்கையாகவும் உறுதிப்படுத்தி:
11 காணான் தேசத்தை உனக்குத் தருவேன்,
இதுவே உங்கள் சுதந்தரபாகம்
என்று சொன்னார்.
12 அக்காலத்தில் அவர்கள் கொஞ்சத் தொகையானவர்கள்;
மிகவும் சொற்பப்பேர், அத்தேசத்திலே பரதேசிகள்.
13 அவர்கள் ஒரு ஜனத்தைவிட்டு மறுஜனத்தண்டைக்கும்
ஒரு ராஜ்யத்தைவிட்டு மறுதேசத்தாரண்டைக்கும் போய்க்கொண்டிருந்தார்கள்.
14 அவர்களுக்குத் தீங்குசெய்ய எவருக்கும் இடங்கொடுக்கவில்லை;
அவர்கள் நிமித்தம் ராஜாக்களைக் கடிந்துகொண்டு:
15 நான் அபிஷேகம்பண்ணினவர்களை நீங்கள் தொடாதேயுங்கள்,
என் தீர்க்கதரிசிகளுக்குத் தீங்குசெய்யாதிருங்கள்
என்று சொன்னார்.
16 தேசத்திலே பஞ்சத்தை வருவித்து
ஆகாரமென்னும் ஜீவாதாரத்தை முற்றிலும் தகர்த்தார்.
17 அவர்களுக்கு முன்னே ஒரு மனிதனை அனுப்பினார்;
யோசேப்பு அடிமையாக விற்கப்பட்டான்.
18 அவன் கால்களில் விலங்கிட்டு ஒடுக்கினார்கள்;
இரும்புச் சங்கிலியில் அவன் கட்டுண்டிருந்தான்.
19 அவன் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும்
யெகோவா வாக்கு அவனைப் புடமிட்டுவந்தது.
20 ராஜா ஆள் அனுப்பி அவனைக் கட்டவிழ்த்துவிடுவித்தான்;
ஜாதிகளுக்கு அதிபதியானவன் அவனை விடுதலைசெய்தான்.
21 அவனைத் தன் வீட்டுக்கு ஆண்டவனும்
தன் ஆஸ்திக்கெல்லாம் அதிபதியுமாக்கினான்
22 தன் பிரபுக்களை அவன் மனதின்படி கட்டுவதற்கும்
தன் மூப்பருக்கு விவேகத்தைப் போதிப்பதற்கும்
அவனுக்கு அதிகாரம் கொடுத்தான்.
23 அப்படிவருகையிலே இஸ்ரவேல் எகிப்திற்கு வந்தான்;
யாக்கோபு காமின் தேசத்திலே பரதேசியாக வாசம்பண்ணினான்.
24 அவர் தமது ஜனத்தை மிகவும் பலுகப்பண்ணி
அவர்கள் சத்துருக்களிலும் அவர்களைப் பலவான்களாக்கினார்.
25 தமது ஜனங்களைப் பகைக்கவும்
தமது ஊழியரை வஞ்சனையாய் நடத்தவும்
சத்துருக்களின் இருதயத்தை மாற்றினார்.
26 தமது தாசனுடைய மோசேயையும்
தாம் தெரிந்தெடுத்த ஆரோனையும் அனுப்பினார்.
27 இவர்கள் அவர்கள் நடுவில் அவருடைய அடையாளங்களையும்
காமின் தேசத்திலே அற்புதங்களையும் செய்தார்கள்.
28 அவர் இருளை அனுப்பி அந்தகாரம் உண்டாகச்செய்தார்;
அவர் வார்த்தைகளை எதிர்ப்பாரில்லை.

29 அவர்களின் தண்ணீர்களை இரத்தமாக மாற்றி
அவர்களின் மச்சங்களைச் சாகப்பண்ணினார்.
30 அவர்கள் தேசமுழுதும் தவளைகள் பலுகி நிறைந்தன;
அவர்கள் ராஜாக்களின் அறைவீடுகளிலும்
31 அவைகள் வந்தன.
அவர் கட்டளையிடத் திரளான வண்டுகளும்,
அவர்கள் எல்லைகளிலெங்கும் கொசுக்களும் வந்தன.
32 அவர்கள் மழைகளைக் கல்மழையாக்கி
ஜ்வாலிக்கிற அக்கினியை அவர்கள் தேசத்திலே வரப்பண்ணினார்.
33 அவர்கள் திராட்சச்செடிகளையும் அத்திமரங்களையும் அழித்து
அவர்கள் எல்லைகளெங்குமுள்ள மரங்களை முறித்தார்.
34 அவர் கட்டளையிட, எண்ணிமுடியாத வெட்டுக்கிளிகளும்
பச்சைப்புழுக்களும் வந்து
35 அவர்கள் தேசத்திலுள்ள சகல பூண்டுகளையும் அரித்து
அவர்கள் நிலத்தின் கனியைத் தின்றுவிட்டன.
36 அவர்கள் தேசத்திலே தலைச்சன்கள் அனைத்தையும்
அவர்களில் முதற்பலனான யாவரையும் சங்கரித்தார்.
37 அப்பொழுது அவர்களை வெள்ளியோடும் பொன்னோடும் வெளிப்படப்பண்ணினார்;
அவர்கள் கோத்திரங்களில் பலவீனப்பட்டவன் ஒருவனுமில்லை.
38 அவர்களைப்பற்றிய பயம் எகிப்தியரைப் பிடித்திருந்ததால் அவர்கள் புறப்பட்டபோது எகிப்தியர் சந்தோஷப்பட்டார்கள்.
39 அவர் மேகத்தை மறைவுக்காக விரித்து
இரவில் வெளிச்சம் தருவதற்காக அக்கினியையும் தந்தார்.
40 கேட்டார்கள், அவர் காடைகளை வரப்பண்ணினார்;
வானகாரத்தினாலும் அவர்களைத் திருப்தியாக்கினார்.
41 கன்மலையைத் திறந்தார், தண்ணீர்கள் வெளிப்பட்டு
வறண்ட வெளிகளில் ஆறாய் ஓடின.
42 அவர் தமது பரிசுத்த வாக்கையும்
தமது தாசனாகிய ஆபிரகாமையும் நினைத்தார்.
43 தமது ஜனத்தைச் சந்தோஷத்தோடும்
தாம் தெரிந்தெடுத்தவர்களைக் கெம்பீரசத்தத்தோடும் புறப்படப்பண்ணினார்.
44 அந்நிய ஜனங்களுடைய பிரயாசத்தின் பலன்
அவர்களுக்குச் சொந்தமாகும்படி
புறஜாதிகள் தேசங்களை அவர்களுக்குக் கொடுத்தார்.
45 தமது நியமங்களை அவர்கள் காத்துநடக்கும்
படிக்கும்
தமது நியாயப்பிரமாணங்களை அவர்கள்
கைக்கொள்ளும்படிக்குமே இப்படிச் செய்தார்,
அல்லேலூயா.

**106**

அல்லேலூயா,
1 யெகோவாவுக்கு நன்றிசெலுத்துங்கள், அவர் நல்லவர்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
2 யெகோவாவின் வல்லசெயல்களைச் சொல்லி
அவர் துதியையெல்லாம் பிரஸ்தாபிக்கக்கூடியவன் யார்?
3 நியாயத்தை அநுசரிக்கிறவர்களும்
எக்காலத்திலும் நீதியைச் செய்கிறவர்களும் பாக்கியவான்கள்.
4 யெகோவா உமது ஜனத்தின்மீது கீர்வைத்திருக்கிற
பிரியத்தின்படியே என்னை நினைத்தருளும்;
உமது ரட்சிப்பினால் என்னைச் சந்தித்தருளும்.
5 நீர் தெரிந்தெடுத்தவர்களின் சுகவாழ்வை நான் கண்டு
உமது ஜனத்துக்குரிய சந்தோஷத்தினால் நான் மகிழ்ந்து
உமது சுதந்தரத்தோடுகூடி மேன்மைபாராட்டும்படிக்கே இப்படிச் செய்தருளும்.
6 எங்கள் பிதாக்களோடுகூட நாங்களும் பாவஞ்செய்தோம்;
அக்கிரமக்காரரும் தெய்வபயமற்றவருமாக நடந்துவந்தோம்.
7 எங்கள் பிதாக்கள் எகிப்திலே உமது அநேகசெயல்களை உணராமலும்
உமது கிருபைகளை நினையாமலும் போனார்கள்;
சமுத்திர ஓரத்தில், சிவந்த சமுத்திர ஓரத்திலேயே, கலகம்பண்ணினார்கள்.
8 அவரோ தமது நாமத்தினிமித்தம் அவர்களை ரட்சித்தார்;
தமது பராக்கிரமத்தை வெளிப்படுத்திக் காட்டும்படி அப்படிச் செய்தார்.
9 அவர் சிவந்த சமுத்திரத்தை அதட்டினார், அது வற்றிப்போயிற்று;
வெட்டாந்தரையில் நடக்கிறதுபோல அவர்களை ஆழங்களில் நடந்துபோகப்பண்ணினார்.

10 பகைஞன் கையினின்று அவர்களை ரட்சித்
துச்
சத்துருவின் கையினின்று அவர்களை மீட்
டார்.
11 அவர்கள் சத்துருக்களைத் தண்ணீர்கள்
மூடிக்கொண்டன;
அவர்களில் ஒருவனும் மீந்திருக்கவில்லை.
12 அப்பொழுது அவர்கள் அவர் வார்த்தை
களில் நம்பிக்கைவைத்து
அவர் துதியைப் பாடினார்கள்.
13 ஆனாலும் சீக்கிரமாய் அவர் செயல்களை
மறந்தார்கள்;
அவர் ஆலோசனைக்கு அவர்கள் காத்திருக்க
வில்லை.
14 வனாந்தரத்திலே இச்சை மிகுந்தவர்களாகி
அவாந்தரவெளியிலே கடவுளைச் சோதித்துப்
பார்த்தார்கள்.
15 அவர்கள் கேட்டதை அவர்களுக்குக்
கொடுத்தார்;
அவர்கள் சரீரமோ மெலிவடையச் செய்
தார்.
16 பாளயத்தில் அவர்கள் மோசேயின்மேலும்
யெகோவாவின் பரிசுத்தனாகிய ஆரோனின்
மேலும் பொறுமைகொண்டார்கள்.
17 பூமி பிளந்து தாத்தானை விழுங்கி
அபிராமின் கூட்டத்தை மூடிப் போட்
டது.
18 அவர்கள் கூட்டத்தில் அக்கினி பற்றி
யெரிந்தது;
தெய்வபயமற்றவரை அக்கினிஜ்வாலை
எரித்துப்போட்டது.
19 அவர்கள் ஓரேபிலே ஒரு கன்றுக்குட்டியைச்
செய்து
வார்ப்பு விக்கிரகத்தை வணங்கினார்கள்.
20 இவ்விதமாகத் தங்கள் மகிமையைப்
புல்தின்னும் காளையின் சாயலாக மாற்றினார்
கள்.
21 எகிப்திலே மகத்தானவைகளையும்
காமின் தேசத்திலே அதிசயங்களையும்
22 திகைந்த சமுத்திரத்தண்டையிலே பயங்கர
மானவைகளையும்
செய்தவராகிய தங்கள் ரட்சகரான கட
வுளை மறந்தார்கள்.
23 ஆனபடியால் அவர்களை நாசம்பண்ணுவேன்
என்றார்;
அவர் தெரிந்தெடுத்த மோசேயோ
அவர்களை அவர் அழிக்காதபடி
அவர் உக்கிரத்தை ஆற்றும்பொருட்டு
அவருக்கு முன்பாகநின்று தடுத்தான்.
24 அவர் வார்த்தையை நம்பாமல்
அருமையான தேசத்தை அசட்டைபண்ணி
னார்கள்;
25 யெகோவாவின் சத்தத்திற்குச் செவிகொ
டாமல்
தங்கள் கூடாரங்களில் முறுமுறுத்தார்கள்.
26 ஆகவே, அவர்களை வனாந்தரத்திலே மடியச்
செய்வேன் என்றும்
27 அவர்கள் சந்ததியைப் புறஜாதிகள் நடுவே
அழியச்செய்வேன் என்றும்
அவர்களைப் பற்பல தேசங்களிலே சிதறடிப்
பேன் என்றும்
அவர்களுக்கு விரோதமாகத் தமது கையை
உயர்த்தி ஆணையிட்டார்.
28 அவர்கள் பாகால்பேயோரைத் தொழுது
கொண்டு
மரித்தோருக்கு இட்ட பலிகளைப் புசித்தார்
கள்.
29 தங்கள் செய்கைகளினால் அவருக்குக் கோப
மூட்டினார்கள்;
ஆகவே, வாதை அவர்களுக்குள் புகுந்தது.
30 அப்பொழுது பினெகாஸ் எழுந்து நின்று
தண்டித்து நியாயஞ்செய்தான்;
அதினால் வாதை நிறுத்தப்பட்டது.
31 இது சந்ததிதலைமுறையாக என்றென்
றும்
அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது.
32 மெரீபாவின் தண்ணீர்களண்டையிலும் அவ
ருக்குக் கடுங்கோபமூட்டினார்கள்;
அவர்கள் நிமித்தம் மோசேக்கும் பொல்
லாப்பு நேர்ந்தது.
33 அவர்கள் அவர் ஆவிக்கு விரோதமாய்க்
கலகம்பண்ணினதினாலே
மோசே தன் உதடுகளினால் பதறிப்பேசி
னான்.
34 யெகோவா தங்களுக்குக் கட்டளையிட்டி
ருந்தபடி
அவர்கள் அந்த ஜாதிகளை அழிக்கவில்லை.
35 புறஜாதிகளோடு கலந்து
அவர்கள் செய்கைகளைக் கற்று
36 அவர்கள் விக்கிரகங்களைச் சேவித்தார்கள்;
அவைகள் அவர்களுக்குக் கண்ணிகளா
யின.
37 அவர்கள் தங்கள் குமாரரையும் தங்கள்
குமாரத்திகளையும்
பேய்களுக்குப் பலியிட்டார்கள்.
38 அவர்கள் குற்றமில்லாத ரத்தத்தை,
தங்கள் குமாரர் குமாரத்திகளின் ரத்தத்தை
யே, சிந்தினார்கள்;
கானான்தேசத்து விக்கிரகங்களுக்கு அவர்
களைப் பலியிட்டார்கள்;
தேசம் இரத்தத்தால் தீட்டுப்பட்டது.
39 இப்படியாக அவர்கள் தங்கள் கிரியைகளி
னால் அசுத்தத்திற்குள்ளாகித்
தங்கள்செய்கைகளினால்சோரம்போனார்கள்.

40 அதினால் யெகோவா கோபம் அவருடைய ஜனத்தின்மேல் மூண்டது;
அவர் தமது சுதந்தரத்தை அருவருத்தார்.
41 அவர்களைப் புறஜாதிகள் கையில் ஒப்புக்கொடுத்தார்;
அவர்கள் பகைஞர் அவர்களை ஆண்டார்கள்.
42 அவர்கள் சத்துருக்கள் அவர்களை ஒடுக்கினார்கள்;
அவர்கள் கையின்கீழ் தாழ்த்தப்பட்டார்கள்.
43 அநேகந்தரம் அவர்களை விடுவித்தார்;
அவர்களோ தங்கள் யோசனையினால் அவருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணித் தங்கள் அக்கிரமத்தினால் சிறுமைக்குள்ளானார்கள்.
44 அவர்கள் அபயமிட்ட சத்தத்தை அவர் கேட்டபோதோ
அவர்களுக்கு உண்டான இடுக்கத்தை அவர் கண்ணோக்கினார்.
தமது உடன்படிக்கையை அவர்களுக்காக 45
நினைத்துத்
தமது மிகுந்த இரக்கத்தின்படியே மனஸ்தாபப்பட்டார்.
அவர்களைச் சிறைபிடித்த யாவரும் 46
அவர்களுக்கு இரங்கும்படியாகவும் செய்தார்.
எங்கள் கடவுளாகிய யெகோவா, 47
நாங்கள் உமது பரிசுத்த நாமத்துக்கு நன்றி செலுத்தி
உம்மைத் துதிப்பதிலேயே மேன்மை பாராட்டும்படி
எங்களை ரட்சித்து
எங்களைப் புறஜாதிகளிலிருந்து சேர்த்தருளும்.
இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா 48
அநாதியாய் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ஸ்தோத்திரத்திற்குரியவர்;
ஜனமெல்லாம் ஆமேன் என்று சொல்லுவதாக;
அல்லேலூயா.

---

# ஐந்தாம் பாகம்

## 107—150

**107** யெகோவாவுக்கு நன்றிசெலுத்துங்கள், அவர் நல்லவர்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
2 யெகோவாவினால் மீட்கப்பட்டவர்கள் அப்படிச் சொல்லக்கடவர்கள்,
அவர் அவர்களைச் சத்துருவின் கையினின்று மீட்டுக்
3 கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலுமுள்ள
பலதேசங்களிலுமிருந்து கூட்டிச் சேர்த்தார்.
4 வனாந்தரத்திலே அவாந்தர வழியாய் அலைந்து திரிந்தார்கள்;
தாபரிக்கும் ஊரைக் காணவில்லை.
5 பசியோடும் தாகத்தோடும்
ஆத்துமா தொய்ந்தவர்களாய் அலைந்தார்கள்.
6 தங்கள் ஆபத்திலே யெகோவாவை நோக்கி அபயமிட்டார்கள்;
அவர்கள் இக்கட்டுகளிலிருந்து அவர்களை விடுவித்தார்.
7 தாபரிக்கும் ஊர் போய்ச்சேர
அவர்களைச் செவ்வையான வழியிலே நடத்தினார்.
8 யெகோவாவின் கிருபையினிமித்தமும்
மனுப்புத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும்
இவர்கள் அவரைத் துதிப்பார்களாக.
9 தவனமுள்ள ஆத்துமாவை அவர் திருப்தியாக்கிப்
பசியுள்ள ஆத்துமாவை நன்மையினால் நிரப்புகிறார்.
10 கடவுள் வார்த்தைகளுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி
உன்னதமானவர் ஆலோசனையை அசட்டைபண்ணினதினாலே
11 சிலர் அந்தகாரத்திலும் மரண இருளிலும்
உட்கார்ந்து
ஒடுக்கத்திலும் இரும்பிலும் கட்டுண்டிருந்தார்கள்.
12 அவர்கள் இருதயத்தை அவர் கஷ்டத்தினால் தாழ்த்தினார்;
தாழ்த்தவே விழுந்துபோனார்கள், சகாயம் செய்வோரில்லை.
13 தங்கள் ஆபத்திலே யெகோவாவை நோக்கி அபயமிட்டார்கள்;
அவர்கள் இக்கட்டுகளிலிருந்து அவர்களை ரட்சித்தார்.
14 அவர்கள் கட்டுகளையறுத்து

அந்தகாரத்திலும் மரண இருளிலுமிருந்து
அவர்களை வெளியேற்றினார்.
15 யெகோவாவின் இருபயினிமித்தமும்
மனுப்புத்திரருக்கு அவர்செய்கிற அதிசயங்
களினிமித்தமும்
இவர்கள் அவரைத் துதிப்பார்களாக.
16 அவர் செப்புக் கதவுகளை உடைத்து
இருப்புத் தாழ்ப்பாள்களையும் முறித்தார்.
17 மதிகேடர் தங்கள் மீறுதல்களிலும்
தங்கள் அக்கிரமங்களிலும் நடந்து
சிறுமையுற்றிருந்தார்கள்.
18 அவர்கள் ஆத்துமா சகல போஜனத்தையும்
அருவருத்தது;
மரண வாசல்களைக் கிட்டிவிட்டார்கள்.
19 தங்கள் ஆபத்திலே யெகோவாவை நோக்கி
அபயமிட்டார்கள்;
அவர்கள் இக்கட்டுகளிலிருந்து அவர்களை
ரட்சித்தார்.
20 அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்
களைக் குணமாக்கி
அவர்களைப் படுகுழியினின்று தப்புவித்
தார்.
21 யெகோவாவின் இருபயினிமித்தமும்
மனுப்புத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்
களினிமித்தமும்
இவர்கள் அவரைத் துதித்து
22 ஸ்தோத்திரபலிகளைச் செலுத்தி
அவர் செயல்களை ஆனந்தசத்தத்தோடே
பிரஸ்தாபிப்பார்களாக.
23 கப்பலேறிப் பிரயாணம்பண்ணிப்
பெரிய சமுத்திரங்களிலே வியாபாரஞ்செய்
கிறவர்கள்,
24 யெகோவாவின் செயல்களையும்
ஆழத்திலே அவர் அதிசயங்களையும் காண்கி
றார்கள்.
25 அவர் கட்டளையிடப் பெருங்காற்று
எழும்பி
அதில் உயரமாய் அலை திளம்பச்செய்யும்.
26 அவர்கள் ஆகாயத்தில் ஏறி ஆழங்களில்
இறங்குகிறார்கள்;
அவர்கள் ஆத்துமா ஆபத்தினாலே கரைந்து
போகிறது.
27 வெறித்தவனைப்போல் அங்குமிங்கும் தடு
மாறுகிறார்கள்;
அவர்கள் புத்தியெல்லாம் மடித்தப்போ
னது.
28 தங்கள் ஆபத்திலே அவர்கள் யெகோவா
வை நோக்கி அபயமிடுகிறார்கள்;
அவர்கள் இக்கட்டுகளிலிருந்து அவர்களை
விடுவித்து வெளியேற்றுகிறார்.
29 கொந்தளிப்பை அமைதியாகச் செய்கிறார்,
அதின் அலைகள் ஒலியும் அடங்குகின்றது.
அமைதியுண்டானதினிமித்தம் அவர்கள் 30
சந்தோஷப்படுகிறார்கள்;
அவர்கள் நாடின துறைமுகத்தில் அவர்
களைக் கொண்டுவந்து சேர்க்கிறார்.
யெகோவாவின் இருபயினிமித்தமும் 31
மனுப்புத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்
களினிமித்தமும்
இவர்கள் அவரைத் துதித்து
ஜனத்தின் சபையிலே அவரை உயர்த்தி 32
மூப்பர் உட்காரும் இடத்திலே அவரைப்
போற்றுவார்களாக.
ஜனங்களின் அக்கிரமத்தினிமித்தம் அவர் 33
ஆறுகளை அவாந்தரவெளியாகவும்
நீரூற்றுகளை வறண்ட நிலமாகவும்
செழிப்பான தேசத்தை உவர்நிலமாகவும் 34
மாற்றுகிறார்.
அவர் அவாந்தரவெளியைத் தண்ணீர்த் 35
தடாகமாகவும்
வறண்ட நிலத்தை நீரூற்றுகளாகவும்
மாற்றி
பசித்தவர்களை அங்கே குடியேற்றுகிறார், 36
அங்கே அவர்கள் தாபரிக்கும் ஊரைக்கட்டி
வயல்களை உண்டாக்கி விதைத்து, 37
திராட்சத்தோட்டங்களை நாட்டுகிறார்கள்;
அவைகளில் வரும் பலனைச் சேர்க்கிறார்கள்.
அவர்களை ஆசீர்வதிக்கிறார், மிகுதியும் பெரு 38
குகிறார்கள்;
அவர்கள் மிருகஜீவன்கள் குறைந்து போக
வொட்டார்.
பின்பு அவர்கள் இடுக்கத்தினாலும் ஆபத்தி 39
னாலும் துயரத்தினாலும்
குறைந்து தாழ்வடைகிறார்கள்.
பிரபுக்கள்மேல் அவர் இகழ்ச்சி வரப் 40
பண்ணி
வழியில்லாத அவாந்தரவெளியிலே அவர்
களைத் திரியச்செய்கிறார்.
ஏழையையோ சிறுமையினின்று எடுத்துக் 41
காப்பாற்றி
அவன் வம்சங்களை மந்தையைப்போலாக்கு
கிறார்.
நேர்மையுள்ளவர்கள் அதைக்கண்டு மகிழ் 42
வார்கள்
நியாயக்கேடான வாயெல்லாம் அடை
படும்.
விவேகமுள்ள யாவரும் இவற்றைக் கவ 43
னிப்பார்களாக,
இவர்கள் யெகோவாவின் கிருபைகளை
உணர்ந்துகொள்வார்கள்.

தாவீதின் சங்கீதம்; கீர்த்தனை. **108**

கடவுளே, என் இருதயம் ஸ்திரமாயிருக்
கிறது;

நான் பாடுவேன், துதித்துப்பாடுவேன்;
என் மகிமையும் பாடும்.
2 வீணையே, சுரமண்டலமே, விழியுங்கள்;
அதிகாலையை விழிக்கச்செய்வேன்.
3 யெகோவா, ஜனங்களுக்குள்ளே உமக்கு
நன்றிசெலுத்துவேன்;
ஜாதிகளுக்குள்ளே உம்மைத் துதித்துப் பாடு
வேன்.
4 உமது கிருபை வானங்களுக்கு மேலாகவும்
உமது சத்தியம் மேகமண்டலங்கள் பரியந்
தமும் எட்டுகிறது.
5 கடவுளே, வானங்களுக்கு மேலாக உயர்ந்
தருளும்,
உமது மகிமை பூமியனைத்தின்மேலும் இருப்
பதாக.
6 உமக்குப் பிரியமானவர்கள் விடுவிக்கப்
படும்படி
உமது வலதுகரத்தினால் ரட்சித்து எனக்கு
மறுமொழியருளும்.
7 கடவுள் தமது பரிசுத்தத்தில் விளம்பினார்,
நான் களிகூருவேன்;
சீகேமைப் பங்கிட்டுச் சுக்கோத்தின் பள்
ளத்தாக்கை அளந்துகொடுப்பேன்.
8 கிலெயாத் என்னுடையது, மனாசேயும் என்
னுடையது;
எப்பிராயீம் என் தலைச்சீரா;
யூதா என் செங்கோல்.
9 மோவாப் எனக்குப் பாதசுத்தி பாத்திரம்,
ஏதோமின்மேல் என் பாதரட்சையை
எறிந்துபோடுவேன்;
பெலிஸ்தியாவின்மேல் ஆர்ப்பரிப்பேன்.
10 அரணான பட்டணத்திற்குள் என்னை நடத்
திக்கொண்டு போகிறவர் யார்?
ஏதோம்மட்டும் எனக்கு வழிகாட்டுகிறவர்
யார்?
11 கடவுளே, நீர் எங்களைத் தள்ளிவிட்டீரல்ல
வோ?
கடவுளே, நீர் எங்கள் சேனைகளோடே
புறப்படவில்லையே,
12 பகைஞருக்குத்தப்ப எங்களுக்குத் துணை
செய்யும்;
மனுஷன் உதவி விருதா.
13 கடவுளாலே பராக்கிரமஞ்செய்வோம்,
அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப்
போடுவார்.

**109** தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு.

நான் துதிக்கும் கடவுளே,
மௌனமாய் இருந்துவிடாதேயும்.
2 தெய்வபயமற்ற வாயும் கபட்டுவாயும்
எனக்கு விரோதமாய்த் திறந்திருக்கின்றன;
கள்ளநாவினால் என்னோடு பேசுகிறார்கள்.
பகையான வார்த்தைகளால் என்னைச் 3
சூழ்ந்துகொண்டு
முகாந்தரமில்லாமல் என்னோடு சண்டை
செய்கிறார்கள்.
நான் அவர்களுக்குச் சிநேகங்காட்ட, அவர் 4
கள் என்மேல் குற்றஞ்சாட்டுகிறார்கள்,
நானோ ஜெபம்செய்துகொண்டே யிருக்கி
றேன்.
நன்மைக்குப்பதிலாக எனக்குத் தீமைசெய் 5
கிறார்கள்;
என் சிநேகத்துக்குப்பதில் பகையே.
அவனுக்கு மேலாகத் தெய்வபயமற்றவனை 6
ஏற்படுத்திவையும்;
குற்றஞ்சாட்டுகிறவன் அவன் வலதுபக்கத்
தில் நிற்பானாக;
அவன் நியாயம் விசாரிக்கப்படும்போது 7
குற்றவாளியாகக்கடவன்;
அவன் ஜெபம் பாவமாகக்கடவது.
அவன் நாட்கள் கொஞ்சமாவதாக; 8
அவன் உத்தியோகத்தை வேறொருவன்
பெறுவானாக.
அவன் பிள்ளைகள் அநாதர்களும் 9
அவன் மனைவி விதவையுமாவார்களாக.
அவன் பிள்ளைகள் பாழாய்ப்போன தங்கள் 10
வீடுகளை விட்டு
அலைந்து திரிந்து பிச்சையெடுத்து யாசிப்
பார்களாக.
கடன் கொடுத்தவன் அவனுக்கு உள்ள யாவ 11
தையும் அபகரித்துக்கொள்வானாக;
அவன் பிரயாசத்தின் பலனை அந்நியர் பறித்
துக்கொள்ளக்கடவர்கள்.
அவனுக்கு ஒருவரும் கருணை பாராட்டிக் 12
கொண்டேயிராமலும்
அவனுடைய அநாதப்பிள்ளைகளுக்கு இரக்
கங் காட்டாமலும் போவார்களாக.
அவன் சந்ததியார் நிர்மூலமாக்கக்கடவர்கள்; 13
இரண்டாந் தலைமுறையில் அவர்கள் பேர்
அற்றுப்போவதாக.
அவன் பிதாக்கள் அக்கிரமம் யெகோவா 14
வின் நினைவிலே இருப்பதாக;
அவன் தாயின் பாவம் நீங்காமலிருப்பதாக.
அவைகள் நித்தமும் யெகோவாவுக்கு 15
முன்பாக இருக்கக்கடவது:
அப்படிப்பட்டவர்கள் பேர் பூமியிலிராமல்
நிர்மூலமாவதாக.
அவன் இரக்கங்காட்ட மறந்து 16
சிறுமையானவனையும் ஏழையையும் இம்
சைப்படுத்தி
மனமுடைந்தவனைக் கொலைசெய்யும்படி
தேடினானே.
சாபத்தில் பிரியங்கொண்டான், அது அவ 17
னுக்கு வந்தது;

அவன் ஆசீர்வாதத்தை விரும்பாமற் போ
னான், அது அவனுக்குத் தூரமாய் வில
கிப்போயிற்று.
18 சாபத்தைத் தன் உடையாக்கினான்,
அது அவன் உள்ளத்தில் தண்ணீரைப் போ
லவும்
அவன் எலும்புகளில் எண்ணெயைப் போ
லவும் பாய்ந்தது.
19 அது அவன் போர்த்துக்கொள்ளுகிற வஸ்தி
ரமும்
நித்தமும் கட்டிக்கொள்ளுகிற கச்சையுமா
வதாக.
20 என்மேல் குற்றஞ் சாட்டுகிறவர்களுக்கும்
எனக்கு விரோதமாய்த் தீங்கு பேசுகிறவர்
களுக்கும்
யெகோவாவினால் வரும் பலன் இதுவே.
21 ஆண்டவராகிய யெகோவா,
உமது திருநாமத்தினிமித்தம் என்னை ஆத
ரித்தருளும்;
உமது கிருபை உத்தமம், என்னை விடுவித்
தருளும்.
22 நான் சிறுமையானவன், ஏழை;
என் இருதயம் எனக்குள் குத்துண்டிருக்
கிறது.
23 சாயும் நிழலைப்போல் அகன்றுபோனேன்;
வெட்டுக்கிளியைப்போல் பறக்கடிக்கப்படு
கிறேன்.
24 உபவாசத்தினால் என் முழங்கால்கள் தளர்ந்
தன.
என் உடம்பு புஷ்டியற்று மெலிந்தது.
25 நான் அவர்களுக்கு நிந்தையானேன்,
அவர்கள் என்னைப் பார்த்துத் தங்கள் தலை
யைத் துலுக்குகிறார்கள்.
26 என் கடவுளாகிய யெகோவா, எனக்குச்
சகாயஞ்செய்தருளும்;
உமது கிருபையின்படி என்னை ரட்சித்தரு
ளும்.
27 இது உமது கரம் என்றும்
யெகோவா, இதைச் செய்தவர் நீரே என்
றும்
அப்பொழுது அவர்கள் அறிவார்கள்.
28 அவர்கள் சபிப்பார்கள், நீரோ ஆசீர்வதிப்
பீர்,
அவர்கள் எழும்பவே வெட்கப்படுவார்கள்.
உமது அடியேனே மகிழ்வேன்.
29 என்மேல் குற்றஞ்சாட்டுகிறவர்களுக்கு அவ
மானமே உடையாவதாக;
தங்கள் வெட்கத்தைச் சால்வையைப்போல்
போர்த்துக்கொள்வார்களாக.
30 நான் யெகோவாவுக்கு என் வாயால் மிக
வும் நன்றிசெலுத்தி
அநேகர் நடுவிலே அவரைப் புகழுவேன்.
31 ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவர்களி
னின்று
ஏழையின் ஆத்துமாவை ரட்சிக்கும்படி
அவர் அவன் வலதுபக்கத்தில் நிற்பார்.

தாவீதின் சங்கீதம். **110**

1 யெகோவா என் ஆண்டவரிடம்:
நான் உமது சத்துருக்களை உமது பாதபடி
யாக்கிப்போடுமட்டும்
நீர் என் வலதுபாரிசத்தில் உட்காரும் என்
றார்.
2 யெகோவா சீயோனிலிருந்து உமது வல்ல
மையின் செங்கோலை ஒச்சுவார்,
நீர் உமது சத்துருக்களின் நடுவே ஆளுகை
செய்யும்.
3 உமது பராக்கிரமத்தின் நாளிலே
உமது ஜனம் மனப்பூர்வமும் பரிசுத்த அல
ங்காரமுமுள்ளதாய்க் கூடிவரும்;
விடியற்காலத்துக் கர்ப்பத்தில் பிறக்கும்
பனிக்குச் சமானமாய்
உமது யௌவன ஜனம் உம்மிடம் திரண்டு
வரும்.
4 மெல்கிசேதேக்கின் முறைமையின்படி
நீர் என்றென்றும் ஆசாரியரே
என்று யெகோவா ஆணையிட்டார்;
மனம் மாறுமலுமிருப்பார்.
5 உமது வலதுபாரிசத்திலிருக்கிற ஆண்டவர்
தமது கோபத்தின் நாளிலே ராஜாக்களைச்
சங்காரிப்பார்.
6 அவர் புறஜாதிகளுக்குள் நியாயந்தீர்ப்பார்;
எல்லா இடங்களிலும் பிரேதங்கள் நிறை
யச் செய்வார்;
விஸ்தாரமான தேசங்களின்மேல் தலைவர்க
ளாயிருக்கிறவர்களைச் சங்காரிப்பார்.
7 வழியிலே அவர் நீரோடையில் தாகந்தீர்ப்
பார்,
ஆகையால் தம் தலையை அவர் நிமிர்த்து
வார்.

அல்லேலூயா. **111**

1 நேர்மையானவர்கள் சங்கத்திலும், சபையி
லும்
யெகோவாவுக்கு முழு இருதயத்தாலும்
நன்றிசெலுத்துவேன்.
2 யெகோவா செயல்கள் மகத்தானவைகள்;
அவைகளில் பிரியங்கொள்ளுகிற யாவரா
லும் ஆராயப்படுகிறவைகள்.
3 அவர் செய்வதெல்லாம் மகிமையும் மகத்து
வமுமே;
அவர் நீதி என்றென்றும் நிலைநிற்கும்.
4 அவர் தமது அதிசயமான செயல்களை
மறவாமல் நினைக்கச்செய்தார்;

யெகோவா இரக்கமும் மன உருக்கமுமுள்ளவர்.
5 தமக்குப் பயந்திருக்கிறவர்களுக்கு ஆகாரம் கொடுக்கிறார்;
தமது உடன்படிக்கையை என்றென்றும் நினைப்பார்.
6 புறஜாதிகளின் சுதந்தரத்தைத் தமது ஜனத்துக்குக் கொடுத்ததினால்
தமது செயல்களின் வல்லமை அவர்களுக்கு விளங்கும்படி செய்தார்.
7 அவர் கரத்தின் கிரியைகள் சத்தியமும் நியாயமுமே,
அவர் கட்டளைகளெல்லாம் மாறுதலைகள்.
8 அவைகள் என்றென்றுமுள்ள சதாகாலங்களிலும் நிலையானவைகள்;
அவைகள் உண்மையும் நேர்மையுமாய்ச் செய்யப்பட்டவைகள்.
9 அவர் தமது ஜனத்திற்கு மீட்பை அனுப்பித்
தமது உடன்படிக்கையை நித்தியமாகக் கட்டளையிட்டார்;
அவர் திருநாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது.
10 யெகோவாவுக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம்;
அவர் கட்டளைகளின்படி செய்கிற யாவருக்கும் நல் விவேகமுண்டு;
அவர் புகழ் என்றென்றும் நிலைக்கும்.

**112** அல்லேலூயா.

யெகோவாவுக்குப் பயந்து
அவர் கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.
2 அவன் சந்ததியார் பூமியிலே பராக்கிரமசாலிகளாவார்;
நேர்மையானவர்கள் வம்சம் ஆசீர்வதிக்கப்படும்.
3 ஆஸ்தியும் ஐசுவரியமும் அவன் வீட்டிலிருக்கும்;
அவன் நீதி என்றென்றும் நிலைக்கும்.
4 நேர்மையானவர்களுக்கு இருளிலே வெளிச்சம் உதிக்கும்,
அவன் இரக்கமும் மன உருக்கமும் நீதியுமுள்ளவன்.
5 இரக்கங்காட்டிக் கடன்கொடுத்துத்
தன் காரியத்தை நியாயத்தின்படி நடப்பிக்கிற மனுஷன் பாக்கியவான்.
6 அவன் என்றென்றும் அசைக்கப்படுவதில்லை,
நீதிமான் என்றும் மறக்கப்படுவதில்லை.
7 துர்ச்செய்தியைக் கேட்கிறதினால் பயப்படான்;
அவன் இருதயம் யெகோவாவில் நம்பிக்கை வைத்துத் திடனாயிருக்கும்.
அவன் இருதயம் நிலையாயிருக்கும்; 8
அவன் தன் சத்துருக்களுக்கு நேரிடுவதைக் கண்ணாரக்காணுமட்டும் பயப்படாதிருப்பான்.
வாரியிறைத்தான், ஏழைகளுக்குக்கொடுத்தான், 9
அவன் நீதி என்றென்றைக்கும் நிற்கும்;
அவன் கொம்பு மகிமையாக உயர்த்தப்படும்.
தெய்வபயமற்றவன் அது கண்டு மனங்கொதித்துத் 10
தன் பற்களைக் கடித்துக் கரைந்துபோவான்;
தெய்வபயமற்றவர் ஆசிப்பதெல்லாம் அழியும்.

அல்லேலூயா. **113**

யெகோவா தாசரே, துதியுங்கள்.
யெகோவா திருநாமத்தைத் துதியுங்கள்.
இதுமுதல் என்றென்றுமாக 2
யெகோவா திருநாமம் ஸ்தோத்திரத்துக்குரியது.
சூரியன் உதிக்கும் திசைதொடங்கி 3
அது அஸ்தமிக்கும் திசைமட்டும்
யெகோவா திருநாமம் துதிக்கப்படுவதாக.
யெகோவா சகல புறஜாதிகள் மேலும் உயர்ந்தவர்; 4
அவர் மகிமை வானங்களுக்கு மேலானது.
நமது கடவுளாகிய யெகோவாவுக்கு நிகரானவர் யார்? 5
அவர் உயர வீற்றிருந்து தம்மைத் தாழ்த்தி
வானத்தையும் பூமியையும் பார்த்தருளுகிறார். 6
பலவீனரைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார். 7
ஏழையைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்.
அவனைப் பிரபுக்களோடும் 8
தமது ஜனத்தின் அதிபதிகளோடும் உட்காரச் செய்கிறார்.
மலடியைப் பிள்ளைகளுக்குத் தாயாகி மகிழ்ந்து வீட்டிலே வாழும்படி செய்கிறார். 9

அல்லேலூயா.

இஸ்ரவேல் எகிப்திலும் **114**
யாக்கோபின் குடும்பம் அந்நிய பாஷைக்காரரிடமிருந்து
புறப்பட்டு வந்தபோது
யூதா அவருக்குப் பரிசுத்த ஜாதியும் 2
இஸ்ரவேல் அவருக்கு ராஜ்யமுமாயிற்று.
கடல் கண்டு விலகி ஓடிற்று; 3
யோர்தான் பின்னிட்டுத் திரும்பினது.
மலைகள் ஆட்டுக்கடாக்கள் போலவும் குன்று 4
கள் ஆட்டுக்குட்டிகள் போலவும் துள்ளின.

5 கடலே, நீ விலகியோடுவதற்கும்,
யோர்தானே, நீ பின்னிட்டுத் திரும்புவதற்கும்,
6 மலைகளே, நீங்கள் ஆட்டுக்கடாக்கள் போலவும்,
குன்றுகளே, நீங்கள் ஆட்டுக்குட்டிகள் போலவும் துள்ளுவதற்கும்
உங்களுக்கு என்ன நேரிட்டது?
7 பூமியே, நீ ஆண்டவர் முன்பாகவும்
யாக்கோபின் கடவுள் முன்பாகவும் அதிரு.
8 அவர் கன்மலையைத் தண்ணீர்த் தடாகமாகவும்
கற்பாறையை நீரூற்றுகளாகவும் மாற்றுகிறார்.

**115** எங்களுக்கு அல்ல, யெகோவாவே எங்களுக்கு அல்ல;
உமது இரு பையினிமித்தமும் உமது சத்தியத்தினிமித்தமும்
உமது திருநாமத்திற்கே மகிமை வரப்பண்ணும்.
2 அவர்களுடைய கடவுள் எங்கே என்று புறஜாதிகள் சொல்வானேன்?
3 நமது கடவுள் பரலோகத்தில் இருக்கிறார்;
தமக்குச் சித்தமான யாவற்றையும் செய்கிறார்.
4 அவர்கள் விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னுமாமே,
அவைகள் மனுஷர் கைவேலையே.
5 அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது
அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது.
6 அவைகளுக்குக் காதுகளிருந்தும் கேளாது.
அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது.
7 அவைகளுக்குக் கைகளிருந்தும் தடவாது.
அவைகளுக்குக் கால்களிருந்தும் நடவாது.
தங்கள் தொண்டையால் சத்தமிடாது.
8 அவைகளைச் செய்கிறவர்கள், அவைகளில்
நம்பிக்கை வைக்கிறவர்கள் யாவரும்,
அவைகளைப்போலவே இருப்பார்கள்.
9 இஸ்ரவேலே, யெகோவாவில் நம்பிக்கையாயிரு,
அவரே அவர்கள் துணை, அவர்கள் கேடகம்,
10 ஆரோன் குடும்பத்தாரே, யெகோவாவில்
நம்பிக்கையாயிருங்கள்,
அவரே அவர்கள் துணை, அவர்கள் கேடகம்,
11 யெகோவாவுக்குப் பயப்படுகிறவர்களே,
யெகோவாவில் நம்பிக்கையாயிருங்கள்,
அவரே அவர்கள் துணை, அவர்கள் கேடகம்.
12 யெகோவா நம்மை மறவாமல் நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்,
இஸ்ரவேல் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார்;
அவர் ஆரோன் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார்,
13 யெகோவாவுக்குப் பயப்படுகிறவர்களை,
பெரியோரையும் சிறியோரையும், ஆசீர்வதிப்பார்.
14 யெகோவா உங்களை,
உங்களையும் உங்கள் பிள்ளைகளையும், வர்த்திக்கப்பண்ணுவாராக.
15 வானத்தையும் பூமியையும் படைத்த
யெகோவாவினால் நீங்கள் ஆசீர்வாதம் பெற்றவர்கள்.
16 பரலோகம் யெகோவாவினுடையது,
பூலோகத்தையோ மனுப்புத்திரருக்குக் கொடுத்தருளிட்டார்.
17 மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற
அனைவரும்
யெகோவாவைத் துதியார்கள்.
18 நாமோ, இதுமுதல் என்றென்றும்
யெகோவாவை ஸ்தோத்தரிப்போம்,
அல்லேலூயா.

**116** யெகோவா என் சத்தத்தையும் என் விண்ணப்பங்களையும்கேட்டருளினார்,
அவரில் அன்புகூருகிறேன்.
2 அவர் தமது செவியை எனக்குச் சாய்த்தருளினார்.
உயிருள்ளளவும் நான் அவரைத் தொழுது கொள்ளுவேன்.
3 மரணக்கட்டுகள் என்னைச் சுற்றிக்கொண்டன;
பாதாள இடுக்கண்கள் என்னைப் பிடித்தன;
இக்கட்டையும் துயரத்தையும் அடைந்தேன்.
4 அப்பொழுது நான் யெகோவாவின் திருநாமத்தைக் கூப்பிட்டு,
யெகோவா, என் ஆத்துமாவை விடுவியும்
என்று கெஞ்சினேன்.
5 யெகோவா இரக்கமும் நீதியுமுள்ளவர்,
நமது கடவுள் மன உருக்கமுள்ளவர்.
6 யெகோவா பேதைகளைக் காக்கிறார்,
நான் பலமற்றுப்போனேன், அவர் என்னை இரட்சித்தார்.
7 என் ஆத்துமாவே, யெகோவா உனக்கு உபகாரம் செய்தார்;
நீ உன் இளைப்பாறுதலுக்குத் திரும்பு.
8 என் உயிரை மரணத்துக்கும்
என் கண்ணைக் கண்ணீருக்கும்
என் கால் இடறலுக்கும் தப்புவித்தீர்.
9 நான் யெகோவா முன்னிலையில்
ஜீவனுள்ளோர் தேசத்திலே நடப்பேன்.
10 நான் நம்பிக்கையாயிருக்கிறேன், ஆகையால் பேசுகிறேன்,

நான் மிகவும் வருத்தப்பட்டேன்.
11 எந்த மனுஷனும் பொய்யன்
என்று என் மனக்கலக்கத்திலே சொன்னேன்.
12 யெகோவா எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும்
அவருக்கு என்னத்தைக் கைமாறுசெய்வேன்,
13 இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு
யெகோவாவின் திருநாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்.
14 நான் யெகோவாவுக்குச் செய்த பொருத்தனைகளை
அவர் ஜனமனைத்துக்கு முன்பாகவும் செலுத்துவேன்.
15 யெகோவாவின் பக்தர் மரணம்
அவர் பார்வையில் அற்பமானதல்ல.
16 யெகோவாவே, நான் உமது அடிமைதான், உமது அடிமை, உமது அடியாளின் மகன்;
என் கட்டுகளை அவிழ்த்துவிட்டீர்.
17 நான் உமக்கு ஸ்தோத்திரபலியைச் செலுத்தி
யெகோவாவின் திருநாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்.
18 நான் யெகோவாவுக்குச் செய்த பொருத்தனைகளை
அவர் ஜனமனைத்துக்கு முன்பாகவும்,
19 யெகோவாவின் ஆலயப்பிராகாரங்களிலும்,
எருசலேமே, உன் நடுவிலும் நிறைவேற்றுவேன்,
அல்லேலூயா.

**117** புறஜாதிகளே, எல்லாரும் யெகோவாவைத் துதியுங்கள்;
ஜனங்களே, எல்லாரும் அவரைப் போற்றுங்கள்.
2 அவர் கிருபை நம்மேல் வல்லபமானது,
யெகோவாவின் உண்மை என்றுமுள்ளது,
அல்லேலூயா.

**118** யெகோவாவுக்கு நன்றி செலுத்துங்கள், அவர் நல்லவர்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
2 அவர் கிருபை என்றுமுள்ளதென்று
இஸ்ரவேல் சொல்வதாக.
3 அவர் கிருபை என்றுமுள்ளதென்று
ஆரோன் குடும்பத்தார் சொல்வார்களாக.
4 அவர் கிருபை என்றுமுள்ளதென்று
யெகோவாவுக்குப் பயப்படுகிறவர்கள் சொல்வார்களாக.
5 நெருக்கத்திலிருந்து யெகோவாவை நோக்கி அபயமிட்டேன்;
யெகோவா எனக்கு மறுமொழி அருளி
என்னை விசாலத்திலே வைத்தார்.
யெகோவா என் பட்சத்தில் இருக்கிறார், 6
நான் பயப்படேன்;
மனுஷன் என்னை என்ன செய்வான்?
எனக்குச் சகாயம் செய்கிறவர்கள் நடுவிலே யெகோவா என் பட்சத்தில் இருக்கிறார்; 7
என்னைப் பகைக்கிறவர்களுக்கு நேரிடுவதைக் கண்ணாரக் காண்பேன்.
மனுஷனில் நம்பிக்கை வைப்பதைப் பார்க்கிலும் 8
யெகோவாவிடம் அடைக்கலம் புகுவதே நலம்.
பிரபுக்களில் நம்பிக்கை வைப்பதைப் பார்க்கிலும் 9
யெகோவாவிடம் அடைக்கலம் புகுவதே நலம்.
சகல ஜாதிகளும் என்னை வளைந்துகொள்ளுகிறார்கள், 10
யெகோவா திருநாமத்தினால் அவர்களை அழித்துவிடுவேன்.
என்னை வளைந்துகொள்ளுகிறார்கள், 11
ஆம், வளைந்துகொண்டே வருகிறார்கள்;
யெகோவா திருநாமத்தினால் அவர்களை அழித்துவிடுவேன்.
தேனீக்களைப்போல என்னை வளைந்துகொள்ளுகிறார்கள், 12
முள் நெருப்பைப்போல் அணைந்துபோவார்கள்;
யெகோவா திருநாமத்தினால் அவர்களை அழித்துவிடுவேன்.
நான் விழும்படி நீ என்னைப் பலமாகத் தள்ளினாய், 13
யெகோவாவோ எனக்குத் துணை நின்றார்.
யெகோவா என் பலம், என் கீதம்; 14
அவரே எனக்கு இரட்சிப்புமானார்.
நீதிமான்கள் கூடாரங்களிலே இரட்சிப்பின் 15
கெம்பீரசத்தம் உண்டு;
யெகோவா வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும்.
யெகோவா வலதுகரம் உயர்ந்திருக்கிறது, 16
யெகோவா வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும்.
நான் சாகேன், பிழைத்திருப்பேன்; 17
பிழைத்து, யெகோவா செயல்களைப் பிரஸ்தாபிப்பேன்.
யெகோவா என்னை வெகுவாய் சிட்சித்தார்; 18
சாவுக்கோ என்னை ஒப்புக்கொடுக்கவில்லை.
நீதியின் வாசல்களை எனக்குத் திறவுங்கள்; 19
நான் அவைகளுக்குள் பிரவேசித்து யெகோவாவுக்கு நன்றிசெலுத்துவேன்.
இதுவே யெகோவாவின் வாசல், 20
நீதிமான்களே இதற்குள் பிரவேசிப்பார்கள்.

21 நீர் எனக்கு மறுமொழியருளி
எனக்கு ரட்சிப்பாக இருக்கப்படியால்
நான் உமக்கு நன்றிசெலுத்துவேன்.
22 வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின
கல்லே
கோடிக்குத் தலைக்கல்லாயிற்று.
23 அது யெகோவாவினாலே ஆயிற்று;
அது நமது கண்களுக்கு ஆச்சரியம்.
24 இது யெகோவா உண்டுபண்ணின நாள்,
இதிலே களிகூர்ந்து மகிழ்வோம்.
25 யெகோவாவே, ரட்சித்தருளும்;
யெகோவாவே, சித்திபெறச் செய்தருளும்.
26 யெகோவா நாமத்தில் வருகிறவர் ஆசீர்வதிக்
கப்பட்டவர்;
யெகோவா ஆலயத்திலிருந்தே உங்களை
ஆசீர்வதிக்கிறோம்.
27 யெகோவாவே கடவுள், அவரே நமக்கு
வெளிச்சந்தந்தார்;
பண்டிகைப் பலியைப் பலிபீடத்துக்கொம்
புகள் மட்டும் கொண்டுபோகக் கயிறுக
ளால் கட்டுங்கள்.
28 நீரே என் கடவுள், உமக்கு நன்றி செலுத்து
வேன்;
நீரே என் கடவுள், நான் உம்மை உயர்த்து
வேன்.
29 யெகோவாவுக்கு நன்றி செலுத்துங்கள்,
அவர் நல்லவர்;
அவர் கிருபை என்றுமுள்ளது.

## א ஆலெப்.

**119** யெகோவாவின் பிரமாணத்திலே
குற்றமற்றவர்களாய் நடக்கிறவர்கள் பாக்
கியவான்கள்.
2 அவர் சாட்சியங்களைக் கைக்கொண்டு
அவரை முழு இருதயத்தோடும் தேடுகிறவர்
கள் பாக்கியவான்கள்.
3 அவர்கள் அநியாயம் செய்வதேயில்லை;
அவர் வழிகளில் நடக்கிறார்கள்.
4 உமது கட்டளைகளை நாங்கள் கருத்தாய்க்
கைக்கொள்ளும்படி
அவைகளை நீர் கற்பித்தீர்.
5 உமது நியமங்களைக் கைக்கொள்ளும்படி
என் வழிகள் நிலைவரப்படுவதே என் ஆசை.
6 நான் உமது கற்பனைகளையெல்லாம் கவனிக்
கும்போது
வெட்கப்படுவதில்லை.
7 உமது நீதியுள்ள நியாயத்தீர்ப்புகளை நான்
அறிந்துகொள்ளும்போது
நேர்மையான இருதயத்தால் உமக்கு நன்றி
செலுத்துவேன்.
8 உமது நியமங்களைக் கைக்கொள்ளுவேன்.
முற்றிலும் என்னைக் கைவிடாதேயும்.

## ב பேத்.

9 வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்
பண்ணுவான்?
உமது வார்த்தையின்படி கவனமாயிருப்ப
தினால் தானே.
10 என் முழு இருதயத்தோடும் உம்மைத் தேடு
கிறேன்;
என்னை உமது கற்பனைகளைவிட்டு வழி
தப்பவிடாதேயும்.
11 நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்
செய்யாதபடி
உமது திருவசனத்தை என் இருதயத்தில்
வைத்துக் காத்தேன்.
12 யெகோவா, நீர் ஸ்தோத்திரத்துக்குரியவர்;
உமது நியமங்களை எனக்குப் போதித்தரு
ளும்.
13 நீர் அருளிய நியாயத்தீர்ப்புகளையெல்
லாம்
என் உதடுகளால் பிரஸ்தாபித்திருக்கிறேன்.
14 திரள் செல்வத்தில் களிகூருவதுபோல
நான் உமது சாட்சியங்களின் வழியில் களி
கூருகிறேன்.
15 உமது கட்டளைகளைத் தியானித்து
உமது வழிகள்மேல் கவனமாயிருக்கிறேன்.
16 உமது நியமங்களில் மகிழ்ச்சியாயிருக்கி
றேன்;
உமது வார்த்தையை மறவேன்.

## ג கிமெல்.

17 உமது அடியேனுக்கு அநுக்கிரகம் செய்
தருளும்;
அப்பொழுது நான் பிழைத்து உமது வார்த்
தையைக் கைக்கொள்ளுவேன்.
18 உமது பிரமாணத்திலுள்ள அதிசயங்களை
நான் பார்க்கும்படி
என் கண்களைத் திறந்தருளும்.
19 பூமியிலே நான் பரதேசி;
உமது கற்பனைகளை எனக்கு மறையாதே
யும்.
20 உமது நியாயத்தீர்ப்புகள்மேல் வைத்திருக்
கிற ஓயாத வாஞ்சையினால்
என் ஆத்துமா நைந்துபோகிறது.
21 சாபத்திற்குள்ளான அகங்காரிகளை நீர் கண்
டிக்கிறீர்;
அவர்கள் உமது கற்பனைகளைவிட்டு வழி
விலகிப்போகிறார்களே.
22 நிந்தையையும் அவமானத்தையும் என்னை
விட்டகற்றும்;
நான் உமது சாட்சியங்களைக் கைக்கொள்ளு
கிறேன்.
23 பிரபுக்களும் உட்கார்ந்து எனக்கு விரோத
மாய்ப் பேசிக்கொள்ளுகிறார்கள்;

உமது அடியேனே உமது நியமங்களைத் தியானிக்கிறேன்.
24 உமது சாட்சியங்கள் என் மகிழ்ச்சி;
அவைகளே என் ஆலோசனைக்காரர்.

ד டாலெத்.

25 என் ஆத்துமா மண்ணோடு ஒட்டிக்கொண்டிருக்கிறது;
உமது வார்த்தையின்படி என்னை உயிர்ப்பித்தருளும்.
26 என் வழிகளை உமக்கு வெளியிட்டுச் சொன்னேன், நீர் எனக்கு மறுமொழி அருளினீர்.
உமது நியமங்களை எனக்குப் போதித்தருளும்.
27 உமது கட்டளைகளின் வழியை எனக்கு உணர்த்தியருளும்;
உமது அதிசயமான செயல்களைத் தியானிப்பேன்.
28 சஞ்சலத்தினால் என் ஆத்துமா கரைந்து போகிறது;
உமது வார்த்தையின்படி என்னை எடுத்து நிறுத்தும்.
29 பொய் வழியை என்னைவிட்டு விலக்கி
உமதுபிரமாணத்தை எனக்கு அருள் செய்யும்
30 மெய்வழியை நான் தெரிந்தெடுத்து
உமது நியாயத்தீர்ப்புகளை என்முன் நிறுத்தினேன்.
31 உமது சாட்சியங்கள்மேல் பற்றுதலாயிருக்கிறேன்;
யெகோவா என்னை வெட்கத்திற்குட்படப் பண்ணாதிரும்.
32 நீர் என் இருதயத்தை விசாலமாக்கும் போது
நான் உமது கற்பனைகளின்வழியே ஓடுவேன்.

ה ஹெ.

33 யெகோவா, உமது நியமங்களின் வழியை எனக்குப் போதித்தருளும்;
முடிவுபரியந்தம் நான் அதைக் காத்துக்கொள்ளுவேன்.
34 எனக்கு உணர்வைத் தாரும்;
நான் உமது பிரமாணத்தைக் காத்துக்கொள்வேன்;
என் முழு இருதயத்தோடும் அதைக் கைக்கொள்ளுவேன்.
35 உமது கற்பனைகளின் பாதையில் என்னை நடத்தியருளும்;
அதில் நான் பிரியங்கொள்ளுகிறேன்.
36 பொருளாசையல்ல, உமது சாட்சியங்களையே,
என் இருதயம் சாரும்படி செய்தருளும்.
37 வீணானவற்றைப் பாராதபடி நீர் என் கண்களைத் திருப்பியருளும்;
உமது வழிகளில் என்னை உயிர்ப்பித்தருளும்.
38 உமக்குப் பயப்படுகிறதற்கு ஏதுவான உமது திருவசனத்தை
உமது அடியேன் விஷயத்தில் உறுதிப்படுத்தியருளும்.
39 நான் அஞ்சுகிற நிந்தையை விலக்கியருளும்;
உமது நியாயத்தீர்ப்புகள் நலமானவைகள்.
40 இதோ, உமது கட்டளைகள்மேல் வாஞ்சையாயிருக்கிறேன்;
உமது நீதியினால் என்னை உயிர்ப்பித்தருளும்.

ו வௌ.

41 யெகோவா, உமது திருவசனத்தின்படி
உமது கிருபை, உமது இரட்சிப்பே, என்னிடம் வருவதாக.
42 அப்பொழுது, என்னை நிந்திக்கிறவனுக்கு நான் உத்தரவு சொல்லுவேன்;
உமது வார்த்தையில் நம்பிக்கைவைத்திருக்கிறேன்.
43 சத்தியவார்த்தை முற்றிலுமாக என் வாயினின்று நீங்கவிடாதேயும்;
உமது நியாயத்தீர்ப்புகளுக்கு ஆசையோடு காத்திருக்கிறேன்.
44 நான் விடாமல் என்றென்றும்
உமது பிரமாணத்தைக் கைக்கொள்ளுவேன்.
45 நான் உமது கட்டளைகளை ஆராய்ந்து வருகிறபடியால்
விசாலத்திலே நடப்பேன்.
46 நான் உமது சாட்சியங்களைக்குறித்து ராஜாக்களுக்குமுன் பேசுவேன்;
வெட்கப்படுவதில்லை.
47 நான் ஆசித்துவருகிற
உமது கற்பனைகளின்பேரில் மகிழ்ச்சியாயிருப்பேன்.
48 நான் ஆசித்துவருகிற உமது கற்பனைகளுக்குக் கையெடுப்பேன்;
உமது நியமங்களைத் தியானிப்பேன்.

ז சாயீன்.

49 நீர் உமது அடியேனுக்கு அருளிய வார்த்தையை நினைத்தருளும்;
நம்பிக்கையோடு நான் அதற்குக் காத்திருக்கும்படி செய்தீரே.
50 உமது திருவசனம் என்னை உயிர்ப்பிப்பதே
என் சிறுமையில் எனக்குக் கிடைக்கும் ஆறுதல்.

51 அகந்தைக்காரர் என்னை மிகவும் பரியாசம்
பண்ணினார்கள்;
நானே உமது பிரமாணத்தைவிட்டு வில
கினதில்லை.
52 யெகோவா, பூர்வகாலத்தில் நீர் அருளிய
நியாயத்தீர்ப்புகளை
நான் நினைத்து என்னைத் தேற்றிக்கொள்ளு
கிறேன்.
53 உமது பிரமாணத்தைவிட்டு விலகுகிற
தெய்வபயமற்றவர் நிமித்தம்
எனக்கு எரிச்சலுண்டாயிற்று.
54 நான் பரதேசியாய்த் தங்கும் வீட்டிலே
உமது நியமங்கள் எனக்குத் தேங்கீதங்களாயின.
55 யெகோவா, இராக்காலத்திலே உமது திரு
நாமத்தை நினைத்து
உமது பிரமாணத்தைக் கைக்கொள்ளுகி
றேன்.
56 நான் உமது கட்டளைகளைக் காத்துநடப்
பதே
எனக்குக் கிடைத்த சிலாக்கியம்.

ח சேத்.

57 யெகோவா, உமது வார்த்தைகளைக் கைக்
கொள்ளுவதே
என் பங்கு என்றேன்.
58 உமது தயவை நாடி முழு இருதயத்தோடும்
கெஞ்சுகிறேன்;
உமது திருவசனத்தின்படி எனக்கு இரங்
கும்.
59 என் வழிகளைச் சிந்தித்துக்கொண்டு
என் கால்களை உமது சாட்சியங்களுக்கு
நேராகத் திருப்பினேன்.
60 உமது கற்பனைகளைக் கைக்கொள்ளும்படி
நான் தாமதமின்றி விரைந்து வந்தேன்.
61 தெய்வபயமற்றவர் கண்ணிகள் என்னைச்
சுற்றிக்கொண்டன;
நானே உமது பிரமாணத்தை மறக்கவில்லை.
62 உமது நீதியுள்ள நியாயத்தீர்ப்புகளினிமித்
தம்
உமக்கு நன்றிசெலுத்தும்படி நடுராத்திரியில்
எழுந்திருப்பேன்.
63 உமக்குப் பயப்படுகிறவர்களுக்கும்,
உமது கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவர்
களுக்கே, நான் தோழன்.
64 யெகோவா, பூமியில் உமது கிருபை நிறைந்
திருக்கிறது;
உமது நியமங்களை எனக்குப் போதித்தரு
ளும்.

ט தேத்

65 யெகோவா, உமது வார்த்தையின்படியே
உமது அடியேனுக்கு நன்மைசெய்துவந்
தீர்.
நல்விவேகத்தையும் அறிவையும் எனக்குப் 66
போதித்தருளும்;
உமது கற்பனைகளில் நம்பிக்கைவைத்திருக்
கிறேனே.
நான் சிறுமைப்படுவதற்குமுன் வழிதப்பி 67
நடந்தேன்;
இப்பொழுதோ உமது திருவசனத்தைக்
கைக்கொள்ளுகிறேன்.
தேவரீர் நல்லவர், நன்மைசெய்கிறவர்; 68
உமது நியமங்களை எனக்குப் போதித்தரு
ளும்.
அகங்காரிகள் எனக்கு விரோதமாய்ப் 69
பொய்களைப் பிணைக்கிறார்கள்;
நானே முழு இருதயத்தோடும் உமது கட்
டளைகளைக் காத்துக்கொள்ளுவேன்.
அவர்கள் இருதயம் நிணந்துன்னி மரத்துப் 70
போயிருக்கிறது;
நானே உமது பிரமாணத்தில் மகிழ்ச்சியா
யிருக்கிறேன்.
நான் உமது நியமங்களைக் கற்றுக்கொள் 71
ளும்படி
சிறுமைக்குள்ளாக்கப்பட்டது எனக்கு நல்
லது.
ஆயிரக்கணக்கான பொன் வெள்ளிக் காசு 72
களைப்பார்க்கிலும்
நீர் விளம்பின பிரமாணமே எனக்கு அரு
மையானது.

י யோட்.

உமது திருக்கரங்கள் என்னை உண்டாக்கி 73
என்னை நிலைப்படுத்தின;
உமது கற்பனைகளைக் கற்றுக்கொள்ள என்னை
உணர்வுள்ளவனுக்கும்.
நான் உமது வார்த்தைக்கு நம்பிக்கையோடு 74
காத்திருக்கிறபடியால்
உமக்குப் பயந்தவர்கள் என்னைக் கண்டு
சந்தோஷப்படுவார்கள்.
யெகோவா, உமது நியாயத்தீர்ப்புகள் நீதி 75
யுள்ளவையென்றும்
உண்மையுள்ளவராய் என்னைச் சிறுமைப்
படுத்தினீரென்றும் அறிவேன்.
நீர் உமது அடியேனுக்கு அருளிய உமது 76
திருவசனத்தின்படி
உமது கிருபை என்னைத் தேற்றிவருவதாக.
நான் பிழைத்திருக்கும்படி உமது இரக்கங் 77
கள் எனக்குக் கிடைப்பதாக;
உமது பிரமாணமே என் மகிழ்ச்சி.
அகங்காரிகள் வெட்கிப்போவார்களாக; 78
அவர்கள் பொய்களினால் என்னைக் கெடுக்
கப்பார்த்தார்களே;
நானே உமது கட்டளைகளைத் தியானிப்
பேன்.

79 உமக்குப் பயந்து உமது சாட்சியங்களை
அறிந்துகொள்ளுகிறவர்கள்
என்னண்டை திரும்புவார்களாக;
80 நான் வெட்கிப்போகாதபடி
என் இருதயம் உமது நியமங்களில் குற்ற
மற்றதாயிருப்பதாக.

כ கப்.

81 உமது இரட்சிப்புக்கு என் ஆத்துமா தவிக்கி
றது;
உமது வார்த்தைக்கு நம்பிக்கையோடு காத்
திருக்கிறேன்.
82 எப்பொழுது என்னைத் தேற்றுவீரோ
என்று
உமது திருவசனத்திற்குக் காத்திருந்து
என் கண்களும் பூத்துப்போயின.
83 புகைபட்ட துருத்திபோலானேன்;
உமது நியமங்களையோ மறவேன்.
84 உமது அடியேனின் நாட்கள் எம்மாத்திரம்?
என்னை இம்சிக்கிறவர்களுக்கு நீர் எப்பொ
ழுது நியாயத்தீர்ப்புசெய்வீர்?
85 உமது பிரமாணத்துக்கு இசைந்து நடவாத
அகங்காரிகள்
எனக்குக் குழிகளை வெட்டினார்கள்.
86 உமது கற்பனைகளெல்லாம் உண்மையுள்
ளவை;
அநியாயமாய் என்னை இம்சிக்கிறார்கள்,
நீர் எனக்குச் சகாயஞ்செய்தருளும்.
87 அவர்கள் என்னைப் பூமியிலிராமல் நீக்கப்
பார்த்தார்கள், சற்றே தப்பினேன்;
நானோ உமது கட்டளைகளை விட்டுவிட
வில்லை.
88 உமது கிருபையின்படியே என்னை உயிர்ப்
பித்தருளும்;
நீர் விளம்பின சாட்சியத்தை நான் கைக்
கொள்ளுவேன்.

ל லாமேட்.

89 யெகோவா, உமது வார்த்தை
என்றென்றும் வானங்களில் நிலைத்திருக்கி
றது.
90 உமது உண்மை தலைமுறை தலைமுறையாக
இருக்கும்;
பூமியை உறுதிப்படுத்தினீர், அது நிலையா
யிருக்கிறது.
91 உமது நியாயத்தீர்ப்புகளைப் பார்த்தாலோ
அவை இந்நாள் வரைக்கும் நிலைநிற்கின்
றன;
சமஸ்தமும் உம்மைச் சேவிக்கும்.
92 உமது பிரமாணம் என் மகிழ்ச்சியாயிருந்
தது,
அப்படியில்லாதிருந்தால், அப்போதே என்
வருத்தத்திலே அழிந்துபோயிருப்பேன்.
நான் ஒருபோதும் உமது கட்டளைகளை மற 93
வேன்;
அவைகளால் என்னை நீர் உயிர்ப்பித்தீர்.
நான் உம்முடையவன், என்னை ரட்சித்தரு 94
ளும்;
உமது கட்டளைகளை ஆராய்ந்துவருகிறேன்.
தெய்வபயமற்றவர்கள் என்னை அழிக்கக் 95
காத்திருக்கிறார்கள்;
நானோ உமது சாட்சியங்களைச் சிந்தித்துக்
கொண்டிருக்கிறேன்.
நிறைவானது எனப்படும் யாவற்றுக்கும் 96
வரையறையுண்டெனக் கண்டுகொண்
டேன்,
உமது கற்பனையோ மகா விஸ்தாரமானது.

מ மேம்.

உமது பிரமாணத்தை நான் எவ்வளவாய் 97
ஆசிக்கிறேன்!
நாளெல்லாம் அதுவே என் தியானம்.
நீர் உமது கற்பனைகளைக்கொண்டு 98
என் சத்துருக்களிலும் என்னை அதிக ஞான
முள்ளவனுக்குகிறீர்;
அவைகள் என்றும் என்னோடிருக்கின்றன.
உமது சாட்சியங்களே என் தியானம்; 99
ஆகவே, எனக்குப் போதித்த யாவரிலும்
நான் அதிக விவேகமுள்ளவனாயிருக்கி
றேன்.
உமது கட்டளைகளை நான் காத்துநடக்கிற 100
படியால்
வயதுமுதிர்ந்தவர்களிலும் நான் உணர்வுள்
ளவனாயிருக்கிறேன்.
உமது வார்த்தையை நான் கைக்கொள் 101
ளும்படி
எந்தத் தீயவழிக்கும் என் கால்களை விலக்
குகிறேன்.
நீரே எனக்குப் போதித்திருக்கிறபடியால் 102
நான் உமது நியாயத்தீர்ப்புகளை விட்டு
விலகேன்.
உமது திருவசனம் என் நாவுக்கு எவ்வள 103
வோ இனிமையானது!
என் வாய்க்கு அது தேனிலும் இனிமை.
உமது கட்டளைகளால் உணர்வடைந் 104
தேன்;
ஆகவே பொய்வழி ஒவ்வொன்றையும்
வெறுக்கிறேன்.

נ நூன்.

உமது வார்த்தை என் கால்களுக்குத் தீபம்; 105
அது என் பாதைக்கு வெளிச்சம்.
உமது நீதியுள்ள நியாயத்தீர்ப்புகளைக் 106
கைக்கொள்ளுவேன் என்று ஆணையிட்
டேன்;
அதை நிறைவேற்றுவேன்.

107 நான் மிகவும் சிறுமைக்குள்ளானேன்;
யெகோவா, உமது வார்த்தையின்படியே
என்னை உயிர்ப்பித்தருளும்.
108 யெகோவா, மனப்பூர்வமாய் நான் செலுத்
தும் என் வாயின் பலிகளை ஏற்
றுக்
கொண்டு
உமது நியாயத்தீர்ப்புகளை எனக்குப்
போதித்தருளும்.
109 என் பிராணன் எப்பொழுதும் என் கை
யில் இருக்கிறது;
ஆயினும் உமது பிரமாணத்தை மற
வேன்.
110 தெய்வபயமற்றவர்கள் எனக்குக் கண்ணி
வைக்கிறார்கள்;
நானோ உமது கட்டளைகளைவிட்டு விலகு
கிறதில்லை.
111 உமது சாட்சியங்களை நித்திய சுதந்தர
மாகக்கொண்டிருக்கிறேன்;
அவைகளே என் இருதயத்தின் மகிழ்ச்சி.
112 முடிவுபரியந்தம் இடைவிடாமல் உமது
நியமங்களின்படி செய்ய
என் இருதயத்தைச் சாய்த்தேன்.

ס சாமெக்.

113 இருமனமுள்ளவர்களை நான் பகைக்கி
றேன்;
உமது பிரமாணத்தையோ ஆசிக்கிறேன்.
114 என் மறைவிடமும் என் கேடகமும்
நீரே;
உமது வார்த்தைக்கு நம்பிக்கையோடி
காத்திருக்கிறேன்.
115 தீமைசெய்கிறவர்களே, என்னை விட்டு
அகன்றுபோங்கள்;
அப்போது என் தேவனின் கற்பனைகளை
நான் காத்து நடப்பேன்.
116 நான் பிழைத்திருக்கும்படி உமது திரு
வசனத்திற்கிசைய என்னைத் தாங்கியரு
ளும்;
எனது நன்னம்பிக்கை அற்றுப்போய்
நான் வெட்கிப்போகாதபடி செய்யும்.
117 என்னைத் தாங்கியருளும், அப்பொழுது
நான் காக்கப்பட்டு
எக்காலமும் உமது நியமங்களையே கவ
னித்து நோக்கியிருப்பேன்.
118 உமது நியமங்களை விட்டு வழிவிலகுகிற
யாவரையும் இகழ்ந்து தள்ளுகிறீர்;
அவர்கள் உபாயம் வெறும் பொய்யே.
119 பூமியிலுள்ள தெய்வபயமற்றவர் யாவரை
யும் களிம்பைப்போல அகற்றிவிட
கிறீர்;
ஆகையால் உமது சாட்சியங்களை ஆசிக்கி
றேன்.
120 உமக்குப் பயப்படும் பயத்தால் என் உ
டம்பு சிலிர்க்கிறது;
உமது நியாயத்தீர்ப்புகளுக்குப் பயப்பட
கிறேன்.

ע ஆயின்.

121 நியாயமும் நீதியும் செய்கிறேன்;
என்னை ஒடுக்குகிறவர்களுக்கு என்னை
ஒப்புக்கொடாதேயும்.
122 உமது அடியேனுக்கு நன்மையாகப் பிணை
யாளியாயிரும்;
அகங்காரிகள் என்னை ஒடுக்கவொட்டா
தேயும்.
123 உமது இரட்சிப்புக்கும் உமது நீதியின்
திருவசனத்திற்கும் காத்திருந்து
என் கண்கள் பூத்துப்போகின்றன.
124 உமது அடியேனை உமது கிருபையின்
படியே நடத்தி
உமது நியமங்களை எனக்குப் போதித்தரு
ளும்.
125 நான் உமது அடியேன்,
உமது சாட்சியங்களை அறியும்படி என்னை
உணர்வுள்ளவனாக்கும்.
126 காரியத்தை நடத்த யெகோவாவுக்கு
வேளை வந்தது;
அவர்கள் உமது பிரமாணத்தை மீறினர்
களே.
127 நானோ பொன்னிலும் பசும்பொன்னிலும்
அதிகமாய் உமது கற்பனைகளை ஆசிக்
கிறேன்.
128 ஆதலால் நேர்வழியிலே நடக்கிறேன்;
எல்லாவற்றைப்பற்றியும் நீர் அருளியிருக்
கிற சகல கட்டளைகளுமே அந்த நேர்
வழி.
சகல பொய்வழிகளையும் பகைக்கிறேன்.

פ பே.

129 உமது சாட்சியங்கள் அதிசயமானவைகள்;
என் ஆத்துமா அவைகளைக் காத்துக்கொள்
ளும்.
130 உமது வார்த்தைகளின் வாசல்வழியே
வெளிச்சம் வரும்;
அது பேதைகளை உணர்வுள்ளவர்களாக்
கும்.
131 உமது கற்பனைகளை நான் வாஞ்சித்து என்
வாயை ஆ வென்று திறந்து ஏங்கு
கிறேன்.
132 உமது திருநாமத்தை நேசிக்கிறவர்களுக்கு
நீர் செய்திருக்கிற நியாயத் தீர்ப்பின்
படியே
என் முகமாய்த் திரும்பி எனக்கு இரங்கி
யருளும்.
133 உமது திருவசனத்திலுள் என் காலடிகளை
நிலைப்படுத்தி

ஒரு அநியாயமும் என்னை ஆளவொட்டாதேயும்.

134 மனுஷர் செய்யும் இடுக்கத்தினின்று என்னை விடுவித்தருளும்:
நான் உமது கட்டளைகளைக் கைக்கொள்ளுவேன்.

135 அடியேன்மேல் உமது திருமுகத்தைப் பிரகாசிக்கப்பண்ணி
உமது நியமங்களை எனக்குப் போதித்தருளும்.

136 உமது பிரமாணத்தை மனுஷர் கைக்கொள்ளாதபடியால்
என் கண்களிலிருந்து தண்ணீர் தாரை தாரையாய் ஓடும்.

## ץ த்சாடே

137 யெகோவா, நீர் நீதிபரர்:
உமது நியாயத்தீர்ப்புகளில் நேர்மையுள்ளவர்.

138 உமது சாட்சியங்களை நீதியிலும்
மகா உண்மையிலும் ஏற்படுத்தினீர்.

139 என் சத்துருக்கள் உமது வார்த்தைகளை மறந்தபடியால்
என் வைராக்கியம் என்னை அழித்துவிட்டது.

140 உமது திருவசனம் மிகவும் புடமிடப்பட்டது;
அடியேன் அதை ஆசிக்கிறேன்.

141 நான் சிறியவன், அசட்டை பண்ணப்பட்டவன்;
ஆயினும் உமது கட்டளைகளை மறந்துவிடவில்லை.

142 உமது நீதி நித்தியநீதி,
உமது பிரமாணம் சத்தியம்.

143 இக்கட்டும் நெருக்கமும் என்னைப் பிடித்தன;
உமது கற்பனைகளே என் மகிழ்ச்சி.

144 உமது சாட்சியங்கள் சதாகாலமும் நீதியுள்ளவை;
என்னை உணர்வுள்ளவனாக்கும், நான் பிழைப்பேன்.

## ק கோப்

145 முழு இருதயத்தோடும் அபயமிட்டேன்;
யெகோவா, எனக்கு மறுமொழியருளும்.
உமது நியமங்களைக் காத்து நடப்பேன்.

146 உம்மை நோக்கிக் கூப்பிட்டேன், என்னை இரட்சித்தருளும்;
நான் உமது சாட்சியங்களைக் கைக்கொள்ளுவேன்.

147 விடியுமுன்னே நான் எழுந்து கூப்பிட்டேன்;
உமது வார்த்தைக்கு நம்பிக்கையோடு காத்திருந்தேன்.

148 உமது திருவசனத்தைத் தியானிக்கும்படி குறித்த சாமங்களுக்குமுன் என் கண்கள் விழித்துக்கொண்டன.

149 உமது கிருபையின்படியே என் அபயசத்தத்தைக் கேட்டருளும்;
யெகோவா, உமது நியாயத்தீர்ப்பின்படியே என்னை உயிர்ப்பித்தருளும்.

150 தீவினையைப் பின்பற்றுகிறவர்கள் சமீபித்திருக்கிறார்கள்;
அவர்கள் உமது பிரமாணத்துக்குத் தூரத்திலிருக்கிறார்கள்.

151 யெகோவா, நீர் சமீபத்திலிருக்கிறீர்;
உமது கற்பனைகளெல்லாம் உண்மை.

152 நீர் உமது சாட்சியங்களை என்றென்றுமாக ஸ்தாபித்தீர் என்பது
அவைகளினாலேயே எனக்குத் தெரியவந்து கெடுகாளாயிற்று.

## ר ரேஷ்.

153 என் சிறுமையைப் பார்த்து என்னை விடுவித்தருளும்;
உமது பிரமாணத்தை மறந்துவிடவில்லை.

154 எனக்காக நீர் வழக்காடி என்னை மீட்டுக்கொள்ளும்;
உமது திருவசனத்தின்படியே என்னை உயிர்ப்பித்தருளும்.

155 இரட்சிப்பு தெய்வபயமற்றவருக்குத் தூரம்;
அவர்கள் உமது நியமங்களை ஆராயவில்லை.

156 யெகோவா, உமது இரக்கங்கள் மிகுதியானவை;
உமது நியாயத்தீர்ப்புகளின்படியே என்னை உயிர்ப்பித்தருளும்.

157 என்னை இம்சிக்கிறவர்களும் என்னை விரோதிக்கிறவர்களும் அநேகர்;
நானோ உமது சாட்சியங்களைவிட்டு விலகினதில்லை.

158 உமது திருவசனத்தைக் கைக்கொள்ளாத துரோகிகளை நான் கண்டபோது
எனக்கு அருவருப்பு உண்டானது.

159 இதோ, உமது கட்டளைகளை ஆசிக்கிறேன்;
யெகோவா, உமது கிருபையின்படியே என்னை உயிர்ப்பித்தருளும்.

160 உமது வார்த்தையின் சாராம்சம் சத்தியம்;
உமது நீதியுள்ள நியாயத்தீர்ப்பு ஒவ்வொன்றும் நித்தியமே.

## ש ஷீன்.

161 பிரபுக்கள் என்னைக் காரணமின்றி இம்சித்தார்கள்;

என் இருதயமோ உமது வார்த்தைகளுக்கே அஞ்சி நிற்கிறது.
162 மிகுந்த கொள்ளையைக் கண்டுகொண்டவன் மகிழ்வதுபோல
நான் உமது திருவசனத்தினிமித்தம் மகிழுகிறேன்.
163 பொய்யைப் பகைக்கிறேன், அருவருக்கிறேன்;
உமது பிரமாணத்தையோ ஆசிக்கிறேன்.
164 உமது நீதியுள்ள நியாயத்தீர்ப்புகளினிமித்தம்
ஒருநாளில் ஏழுதரம் உம்மைத் துதிக்கிறேன்.
165 உமது பிரமாணத்தை ஆசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு;
அவர்கள் இடறிவிழ ஏதுவில்லை.
166 யெகோவா, உமது ரட்சிப்புக்கு நான் நம்பிக்கையோடு காத்திருக்கிறேன்;
உமது கற்பனைகளின்படியே செய்கிறேன்.
167 என் ஆத்துமா உமது சாட்சியங்களைக் கைக்கொள்ளுகிறது;
அவைகளை நான் மிகவும் ஆசிக்கிறேன்.
168 உமது கட்டளைகளையும் உமது சாட்சியங்களையும் கைக்கொள்ளுகிறேன்;
என் வழிகளெல்லாம் உமக்கு முன்பாக இருக்கின்றன.

ת தௌ.

169 யெகோவா, என் அபயசத்தம் உமது சந்நிதிக்கு எட்டுவதாக;
உமது வார்த்தையின்படியே என்னை உணர்வுள்ளவனுக்கும்.
170 என் விண்ணப்பம் உமது சந்நிதியில் வருவதாக;
உமது திருவசனத்தின்படியே என்னை விடுவித்தருளும்.
171 உமது நியமங்களை நீர் எனக்குப் போதித்து வருகிறீர்.
என் உதடுகள் உமது துதியைப் பிரஸ்தாபப்படுத்தும்.
172 உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவை;
ஆகவே என் நாவு உமது திருவசனத்தைப் பாடும்.
173 நான் உமது கட்டளைகளைத் தெரிந்துகொண்டபடியால்
உமது திருக்கரம் எனக்குத் துணையாவதாக.
174 யெகோவா, உமது ரட்சிப்பின்மேல் ஆவலாயிருக்கிறேன்;
உமது பிரமாணமே என் மகிழ்ச்சி.
175 உம்மைத் துதிக்கும்படி என் ஆத்துமா பிழைத்திருப்பதாக;
உமது நியாயத்தீர்ப்புகள் எனக்கு உதவியாவதாக.
176 காணாமற்போன ஆட்டைப்போல வழி தப்பிப்போனேன்;
அடியேனைத் தேடியருளும்;
உமது கற்பனைகளை நான் மறந்துவிடவில்லையே.

## யாத்திரை தேம். 120

என் நெருக்கத்திலே யெகோவாவை நோக்கிக் கூப்பிட்டேன்;
அவர் எனக்கு மறுமொழி யருளினார்.
2 யெகோவா, பொய் உதடுகளுக்கும் கபடுநாவுக்கும்
என்னைத் தப்புவியும்.
3 கபடுநாவே, உனக்கு என்ன கிடைக்கும்?
பின்னும் உனக்கு என்ன வருமோ?
4 பராக்கிரமசாலியின் கூர்மையான அம்புகளும்
சூரைச்செடிகளை எரிக்கும் தழலுமே கிடைக்கும்.
5 ஐயோ! நான் மேசேக்கிலே சஞ்சரித்தது போதும்!
கேதாரின் கூடாரங்கள் நடுவிலே குடியிருந்ததும் போதும்!
6 சமாதானத்தைப் பகைக்கிறவர்களோடு
நான் குடியிருந்ததும் போதும்!
7 நான் சமாதானப்பிரியன்;
அவர்களோ நான் வாய்திறந்தவுடனே சண்டைக்கு நிற்கிறார்கள்.

## யாத்திரை சங்கீதம். 121

பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்;
எனக்கு உதவி வருவது எங்கிருந்தோ!
2 எனக்கு உதவி வருவது
வானத்தையும் பூமியையும் உண்டாக்கின யெகோவாவினிடமிருந்தே.
3 அவர் உன் காலைத் தள்ளாடவொட்டார்;
உன்னைக் காக்கிறவர் உறங்கார்.
4 இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர்
உறங்குகிறதுமில்லை, தூங்குகிறதுமில்லை.
5 யெகோவாவே உன்னைக் காக்கிறவர்;
யெகோவா உன் வலதுபக்கத்தில் உனக்கு நிழலாயிருக்கிறார்.
6 பகலில் வெயிலாகிலும் இரவில் நிலவாகிலும்
உன்னைச் சேதப்படுத்துவதில்லை.
7 யெகோவா உன்னை எல்லாத் தீங்கினின்றும் விலக்கிக் காப்பார்;
அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்.

8 யெகோவா உன் போக்கையும் உன் வரத்தையும்
இதுமுதற்கொண்டு என்றைக்கும் காப்பார்.

**122** யாத்திரை தேம்; தாவீதின் சங்கீதம்.

யெகோவாவின் வீட்டுக்குப் போவோம் வாருங்கள் என்று
அவர்கள் என்னிடம் சொல்லவே, மகிழ்ச்சியடைந்தேன்.
2 எருசலேமே, உன் வாசல்களில்
எங்கள் கால்கள் நிற்கலாயின.
3 எருசலேம்
இசைவிணைப்பாய்க் கட்டப்பட்ட நகரம்.
4 ஜனங்கள், யெகோவாவின் ஜனங்களே, அங்கே போவார்கள்;
இஸ்ரவேலுக்குச் சாட்சியாக யெகோவாவின் திருநாமத்திற்கு
நன்றிசெலுத்துவதற்குப் போவார்கள்.
5 அங்கே நியாயாசனங்கள் வைக்கப்பட்டிருந்தன;
அவைகள் தாவீதின் வம்சத்தார் சிங்காசனங்களே.
6 எருசலேமுக்குச் சமாதானவாழ்த்துக்கூறி,
உன்னை நேசிக்கிறவர்கள் வாழ்ந்திருப்பார்களாக,
7 உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும்
உன் அரமனைகளுக்குள்ளே வாழ்வும் இருப்பதாக
என்று சொல்லுங்கள்.
8 உன்னில் சமாதானம் இருப்பதாக என்று
என் சகோதரர்நிமித்தமும் என் சிநேகிதர் நிமித்தமும் சொல்லுவேன்.
9 நமது கடவுளாகிய யெகோவாவின் ஆலயத்தினிமித்தம்
உனது நன்மையை நாடுவேன்.

**123** யாத்திரை சங்கீதம்.

பரலோகத்தில் வாசமாயிருக்கிறவரே,
உமக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்.
2 இதோ, வேலைக்காரர் கண்கள் தங்கள் எஜமான்கள் கையை நோக்கிக்கொண்டே யிருக்கிறதுபோலவும்
வேலைக்காரி கண்கள் தன் எஜமாட்டி கையை நோக்கிக்கொண்டே யிருக்கிறது போலவும்
எங்கள் கடவுளாகிய யெகோவா
எங்களுக்கு இரக்கங்காட்டும் வரைக்கும் எங்கள் கண்கள் அவரையே நோக்கிக் கொண்டிருக்கும்.
3 எங்களுக்கு இரங்கும், யெகோவாவே, எங்களுக்கு இரங்கும்;
எங்களுக்கு நேர்ந்த நிந்தனை போதும், போதும்.
4 சுகஜீவிகளால் எங்களுக்கு நேர்ந்த பரியாசமும்
பெருமைக்காரரின் நிந்தனையும் போதும், போதும்.

யாத்திரை தேம்; தாவீதின் சங்கீதம். **124**

5 மனுஷர் நமக்கு விரோதமாய் எழும்பின போது, யெகோவா நமது பக்கத்தில் இல்லாதிருந்தால்,
யெகோவா தாமே நமது பக்கத்தில் இல்லாதிருந்தால்,
அவர்கள் கோபம் நம்மேல் எரிகையில்
அவர்கள் நம்மை உயிரோடே விழுங்கியிருப்பார்கள்;
அப்பொழுது தண்ணீர்கள் நம்மேல் பாய்ந்து
வெள்ளம் நமதுமேல் புரண்டுபோயிருக்கும்;
கொந்தளித்து எழும்பும் ஜலங்கள்
நமதுமேல் புரண்டுபோயிருக்கும் என்று இஸ்ரவேல் சொல்லட்டும்.
6 யெகோவாவுக்கு ஸ்தோத்திரம்,
அவர் நம்மை அவர்கள் பற்களுக்கு இரையாக ஒப்புக்கொடுக்க வில்லை.
7 குழுவன் கண்ணிக்குத் தப்பின குருவிபோல
நமது ஆத்துமா தப்பிற்று;
கண்ணி தெறித்தது, நாம் தப்பினோம்.
8 நமக்குச் சகாயம் யெகோவாவின் திருநாமத்தில் உள்ளது,
வானத்தையும்பூமியையும் உண்டாக்கினவர் அவரே.

யாத்திரை தேம். **125**

யெகோவாவில் நம்பிக்கைவைக்கிறவர்கள் சீயோன் பர்வதத்தைப் போலிருப்பார்கள்;
அது என்றென்றும் அசையாமல் நிலைத்திருக்கும்.
2 பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருக்கிறதுபோல
யெகோவா இதுமுதல் என்றென்றைக்கும்
தமது ஜனத்தைச் சுற்றிலுமிருப்பார்.
3 நீதிமான்கள் அநியாயத்திற்குத் தங்கள் கைகளை நீட்டாதபடி
ஆகாமியத்தின் கொடுங்கோல் நீதிமான்கள் சுதந்தரத்தின்மேல் நிலையாதேபோம்.
4 யெகோவா நல்லவர்களுக்கும்
நேர்மையான இருதயமுள்ளவர்களுக்கும் நன்மைசெய்யும்.
5 தங்கள் கோணலான வழிகளுக்குப் போகும்படி விலகினவர்களை

அக்கிரமஞ்செய்கிறவர்களோடே யெகோவா
போகப்பண்ணுவார்,
இஸ்ரவேலுக்கோ சமாதானம் உண்டாவ
தாக.

**126** யாத்திரை கீதம்.

சியோனின் துன்பநிலைமையை யெகோவா
மாற்றினபோது
சொப்பனம் காண்கிறவர்கள்போல் இருந்
தோம்.
2 அப்பொழுது நமது வாய் நகைப்பினாலும்
நமது நாவு ஆனந்தசத்தத்தினாலும் நிறைந்
திருந்தன;
யெகோவா இவர்களுக்குப் பெரிய காரியங்
களைச் செய்தார் என்று
புறஜாதிகளுக்குள்ளே அப்போது சொல்லிக்
கொண்டார்கள்.
3 யெகோவா நமக்குப் பெரிய காரியங்களைச்
செய்தார்;
நாம் மகிழ்ச்சியுடையவர்களானோம்.
4 யெகோவா, தென்னாட்டு நீரோடைகளை
மாறும்படி செய்வதுபோல
எங்கள் துன்ப நிலைமையை மாறும்படி
செய்யும்.
5 கண்ணீரோடே விதைக்கிறவர்கள்
கெம்பீரத்தோடே அறுப்பார்கள்.
6 அள்ளித்தூவ விதை சுமக்கிறவன் அழு
தழுது போவான்.
அறுத்த அரிகள் சுமக்கும்போதோ பாடிப்
பாடி வருவான்.

**127** யாத்திரை கீதம்; சாலொமோனின் சங்கீதம்.

யெகோவா வீட்டைக் கட்டாராகில்
அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம்
விருதா,
யெகோவா நகரத்தைக் காவாராகில்
காவலாளர் விழித்திருக்கிறது விருதா.
2 நீங்கள் அதிகாலையில் எழுந்து நடுஜாமம்
வரை வேலைசெய்து,
அரும்பிரயாசத்தின் ஆகாரம் புசிப்பது
விருதா,
தமக்குப் பிரியமானவனுக்கு,
கடவுள், அவன் நித்திரை செய்யும்போதே
கொடுக்கிறார்.
3 இதோ, பிள்ளைகள் யெகோவாவினால் வரும்
சுதந்தரம்;
கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும்
பலன்.
4 வாலிபத்தின் குமாரர்
பராக்கிரமசாலி கையிலுள்ள அம்புகளுக்கு
ஒப்பானவர்கள்.
அவைகளால் தன் அம்பறாத்தூணியை 5
நிரப்பியிருக்கிற மனுஷன் பாக்கியவான்;
ஊர் வாசலில் சத்துருக்களோடே பேசும்
போது அவர்கள் கலங்கமாட்டார்கள்.

யாத்திரை சங்கீதம். **128**

யெகோவாவுக்குப் பயந்து
அவர் வழிகளில் நடக்கிற எவனும் பாக்
கியவான்.
உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடு 2
வாய்;
நீ பாக்கியவான், நீ நன்றாயிருப்பாய்.
உன் வீட்டில் உன் மனைவி கனிதரும் திராட் 3
சக் கொடிபோல் இருப்பாள்;
உன் பந்தியைச் சுற்றிலும் உன் பிள்ளைகள்
ஒலிவக்கன்றுகள்போல் இருப்பார்கள்.
இதோ, யெகோவாவுக்குப் பயப்படுகிற 4
மனுஷன்
இவ்விதஆசீர்வாதம் பெறுவான்.
யெகோவா சியோனில் நின்று உன்னை 5
ஆசீர்வதிப்பார்;
நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின்
வாழ்வைக் காண்பாய்.
நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளைக் காண் 6
பாய்;
இஸ்ரவேலுக்குச் சமாதான முண்டாவதாக.

யாத்திரை சங்கீதம். **129**

என் சிறுவயது தொடங்கிப் பலமுறை
என்னை நெருக்கினார்கள்,
என் சிறுவயது தொடங்கிப் பலமுறை 2
என்னை நெருக்கினார்கள்,
என்னையோ மேற்கொள்ளவில்லை;
உழுகிறவர்கள் என் முதுகின்மேல் உழுது 3
நீண்ட படைச்சால்களை நீளமாக்கினார்கள்;
யெகோவா நீதிபர்; 4
தெய்வபயமற்றவரின் கயிறுகளை அவர்
அறுத்தாரே என்று இஸ்ரவேல் சொல்
லட்டும்.
சியோனைப் பகைக்கிற அனைவரும் 5
பின்னிட்டுத் திரும்பி நாணமடைவார்
களாக.
வீட்டின்மேல் முளைக்கும் புல்லுக்கு அவர் 6
கள் ஒப்பாவார்களாக;
அதைப் பிடுங்குமுன் அது உலர்ந்துபோம்.
அறுக்கிறவன் அதினால் தன் கையையும் 7
அரிகளைக் கட்டுகிறவன் தன் மடியையும்
நிரப்புவதில்லை.
வழிப்போக்கர்: 8
உங்களுக்கு யெகோவாவின் ஆசீர்வாதம்,
யெகோவாவின் நாமத்திலே உங்களை
ஆசீர்வதிக்கிறோம்
என்று சொல்வதுமில்லை.

**130** யாத்திரை சங்கீதம்.

யெகோவா ஆழங்களிலிருந்து
உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்.
2 ஆண்டவரே, என் சத்தத்தைக் கேட்டருளும்,
என் விண்ணப்பங்களின் சத்தத்தை
உமது திருச்செவிகள் கவனித்துக்கொண்டேயிருப்பதாக.
3 யெகோவா, நீர் அக்கிரமங்களைக் கவனித்திருப்பீரானால்
நிலைநிற்கக்கூடியவன் யார் ஆண்டவரே?
4 உம்மிடம் மன்னிப்பு உண்டு;
ஆகையால் மனுஷர் உம்மிடம் பயபக்தியாயிருப்பார்கள்.
5 யெகோவாவுக்குக் காத்திருக்கிறேன்;
என் ஆத்துமா காத்திருக்கிறது;
அவர் வார்த்தைக்கு நம்பிக்கையோடு காத்திருக்கிறேன்.
6 விடியற்காலத்திற்குக் காத்திருக்கும் சாமக்காரைப்பார்க்கிலும்,
விடியற்காலத்திற்குக் காத்திருக்கும் சாமக்காரைப்பார்க்கிலும் அதிகமாய்
என் ஆத்துமா ஆண்டவருக்குக் காத்திருக்கிறது.
7 இஸ்ரவேல் யெகோவாவுக்கு நம்பிக்கையுடன் காத்திருப்பதாக,
யெகோவாவிடம் கிருபையுண்டு,
அவரிடம் திரளான மீட்புமுண்டு.
8 அவரே இஸ்ரவேலை
அதின் சகல அக்கிரமங்களினின்றும் மீட்டுரட்சிப்பார்.

**131** யாத்திரை தேம்; தாவீதின் சங்கீதம்.

யெகோவா, என் இருதயம் இறுமாப்புள்ளதல்ல;
என் கண்கள் மேட்டிமையுள்ளவைகளுமல்ல;
பெரிய காரியங்களிலும் எனக்கு மிஞ்சின
கருமங்களிலும் நான் தலையிடுகிறதுமில்லை.
2 நான் உண்மையாகவே என் ஆத்துமா அடங்கி அமர்ந்திருக்கும்படி செய்கிறேன்;
பால் மறந்த குழந்தை தன் தாயினிடம்
இருப்பதுபோல
பால் மறந்த குழந்தைபோல என் ஆத்துமா
என்னிடம் இருக்கிறது.
3 இஸ்ரவேலே, இதுமுதல் என்றென்றும்
யெகோவாவுக்குக் காத்திரு.

**132** யாத்திரை சங்கீதம்.

யெகோவா, தாவீதின் சகல உபத்திரவத்தையும்
அவனுக்காக நினைத்தருளும்.
அவன் யெகோவாவுக்கு ஆணையிட்டு 2
யாக்கோபின் வல்லவருக்குப் பொருத்தனை பண்ணி:
நான் யெகோவாவுக்கு ஒரு இடத்தை 3
யும்
யாக்கோபின் வல்லவருக்கு ஒரு வாசஸ்தலத்தையும் காணுமட்டும்,
என் வீடாகிய கூடாரத்தினுட் செல்வது 4
மில்லை;
என் படுக்கையாகிய கட்டிலின் மேல்
ஏறுவதுமில்லை;
என் கண்களுக்கு நித்திரையையும் 5
என் இமைகளுக்கு உறக்கத்தையும் வர
விடுவதுமில்லை
என்று சொன்னானே.
இதோ, எப்பிராத்தாவிலே அது இருக்கிற 6
தென்று கேள்விப்பட்டோம்;
இயாரின் வெளிகளிலே அதைக் கண்டு
கொண்டோம்.
அவர் வாசஸ்தலங்களுக்குள் பிரவேசித்து 7
அவர் பாதபடியில் பணிவோம்.
யெகோவா, உமது வல்லமைவிளங்கும் 8
பெட்டகத்துடன்
நீர் உமது தாபரஸ்தலத்திற்குள் எழுந்தருளும்.
உமது ஆசாரியருக்கு நீதி உடையாவதாக; 9
உமது பக்தர்கள் கெம்பீரிப்பார்களாக.
நீர் அபிஷேகம் பண்ணினவனை 10
உமது தாசனுகிய தாவீதினிமித்தம் புறக்கணியாதிரும்.
யெகோவா தாவீதுக்கு உண்மையாய் ஆணை 11
யிட்டு:
உன் சந்ததியிலிருந்தே உன் சிங்காசனத்திற்குத் தெரிந்தெடுத்து வைப்பேன்;
உன் குமாரர் என் உடன்படிக்கையை 12
யும்
நான் அவர்களுக்குப் போதிக்கும் என் சாட்சியங்களையும் கைக்கொண்டால்
அவர்கள் குமாரரும் என்றென்றும்
உன் சிங்காசனத்தில் வீற்றிருப்பார்கள்
என்று சொன்னார்; அவர் உண்மையுள்ளவர், தவறமாட்டார்.
யெகோவா சீயோனைத் தெரிந்தெடுத்தார்; 13
அதையே தமது வாசஸ்தலமாக விரும்பினார்.
அவர்: 14
இது என்றென்றும் என் தாபரஸ்தலம்;
இங்கேயே நான் வசிப்பேன்;

இதையே நான் விரும்பினேன்.
15 அதின் ஆகாரத்தை நான் ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பேன்;
அதின் ஏழைகளை நான் உணவினால் திருப்தியாக்குவேன்.
16 அதின் ஆசாரியருக்கு இரட்சிப்பை உடுத்துவேன்;
அதிலுள்ள பக்தர்கள் மிகவும் கெம்பீரிப்பார்கள்.
17 அங்கே தாவீதுக்கு ஒரு கொம்பை முளைக்கப்பண்ணுவேன்:
நான் அபிஷேகம் பண்ணினவனுக்காக ஒரு விளக்கை ஆயத்தம் பண்ணியிருக்கிறேன்.
18 அவன் சத்துருக்களுக்கு வெட்கத்தை உடுத்துவேன்;
அவன்மீதிலோ அவன் கிரீடம் இலங்கும்
என்று சொன்னார்.

**133** யாத்திரை கீதம்; தாவீதின் சங்கீதம்.

இதோ, சகோதரர் ஒருமித்து வசிப்பது
எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது!
2 அது ஆரோன் தலைமேல் ஊற்றப்பட்ட அருமையான தைலத்துக்கு ஒப்பாயிருக்கும்.
அது அவன் தாடியிலே வடியும்,
அது அவன் அங்கியில் இறங்கும்.
3 சீயோன் பர்வதங்களின்மேல் இறங்குகிற எர்மோன் பனிக்கும் அது ஒப்பாயிருக்கிறது;
அங்கே யெகோவா ஆசீர்வாதத்தை,
என்றென்றுமுள்ள ஜீவனையே, கட்டளையிடுகிறார்.

**134** யாத்திரை கீதம்.

இதோ, இராக்காலங்களில்
யெகோவா ஆலயத்தில் நிற்கும் யெகோவாவின் ஊழியரே,
நீங்களெல்லாரும் யெகோவாவை ஸ்தோத்திரியுங்கள்.
2 பரிசுத்தஸ்தலத்திற்கு நேராக நீங்கள் கையெடுத்து
யெகோவாவை ஸ்தோத்திரியுங்கள்.
3 வானத்தையும் பூமியையும் உண்டாக்கின யெகோவா
சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பாராக.

**135** அல்லேலூயா, யெகோவாவின் திருநாமத்தைத் துதியுங்கள்;
யெகோவாவின் ஊழியரே,
2 யெகோவாவின் ஆலயத்திலும்
நமது கடவுளின் பிராகாரங்களிலும் நிற்கிறவர்களே, துதியுங்கள்.
3 யெகோவாவைத் துதியுங்கள், யெகோவா நல்லவர்;
அவர் திருநாமத்தைத் துதித்துப்பாடுங்கள்; அது இனிமையானது.
4 யெகோவா யாக்கோபைத் தமக்கென்றும் இஸ்ரவேலைத் தமக்குச் சொந்தமென்றும் தெரிந்தெடுத்தார்.
5 யெகோவா மகத்தானவர்,
நமது ஆண்டவர் எல்லா தேவர்களுக்கும் மேலானவர்;
இதை நான் அறிவேன்.
6 வானத்திலும் பூமியிலும் சமுத்திரங்களிலும் சகல ஆழங்களிலும்
யெகோவா தமக்குச் சித்தமான யாவையும் செய்கிறார்.
7 அவர் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து மேகங்களை எழும்பப்பண்ணி,
மழைக்காக மின்னலையும் உண்டாக்கிக்
காற்றைத் தமது பண்டசாலைகளிலிருந்து வெளிப்படப்பண்ணுகிறார்.
8 அவர் எகிப்திலே மனுஷரின் தலைப்பிள்ளைகளையும்
மிருகத்தின் தலையீற்றுகளையும் சங்கரித்தார்.
9 எகிப்து தேசமே,
உன் நடுவில் அடையாளங்களையும் அற்புதங்களையும்
பார்வோன்மேலும் அவனுடைய சகல ஊழியர்மேலும் நடப்பித்தார்.
10 அவர் அநேக ஜாதிகளை அடித்தார்,
பலத்த ராஜாக்களைக் கொன்றார்.
11 எமோரியரின் ராஜாவாகிய சீகோனையும்
பாசானின் ராஜாவாகிய ஓகையும்
கானானின் சகல ராஜ்யங்களையும் அழித்தார்.
12 அவர்கள் தேசத்தைச் சுதந்தரமாகக் கொடுத்தார்;
தமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கே சுதந்தரமாக்கினார்.
13 யெகோவா, உமது திருநாமம் என்றுமுள்ளது;
யெகோவா, உமது பேர்ப்பிரஸ்தாபம் தலைமுறை தலைமுறையாக நிற்கும்.
14 யெகோவா தமது ஜனத்தின் நியாயத்தை விசாரித்துத்
தமது அடியார்மீது பரிதாபப்படுவார்.
15 புறஜாதிகளின் விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னுமாம்;
அவைகள் மனுஷர் கைவேலையே.
16 அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது;
அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது;
17 அவைகளுக்குக் காதுகளிருந்தும் கேளாது;

அவைகள் வாயிலே சுவாசமுமில்லை.
18 அவைகளைச் செய்கிறவர்கள், அவைகளில்
நம்பிக்கை வைக்கிறவர்கள் யாவரும்,
அவைகளைப்போலவே இருப்பார்கள்
19 இஸ்ரவேல் குடும்பத்தாரே, யெகோவாவை
ஸ்தோத்திரியுங்கள்;
ஆரோன் குடும்பத்தாரே, யெகோவாவை
ஸ்தோத்திரியுங்கள்.
20 லேவி குடும்பத்தாரே, யெகோவாவை
ஸ்தோத்திரியுங்கள்,
யெகோவாவுக்குப் பயப்படுகிறவர்களே,
யெகோவாவை ஸ்தோத்திரியுங்கள்.
21 எருசலேமில் வசிக்கிற யெகோவாவுக்குச்
சீயோனிலிருந்து ஸ்தோத்திரமுண்டாவதாக;
அல்லேலூயா.

**136** யெகோவாவுக்கு நன்றிசெலுத்துங்கள்,
அவர் நல்லவர்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
2 தேவாதி தேவனுக்கு நன்றிசெலுத்துங்கள்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
3 கர்த்தாதி கர்த்தாவுக்கு நன்றிசெலுத்துங்கள்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
4 தாம் ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச்
செய்கிறவருக்கு நன்றிசெலுத்துங்கள்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
5 சர்வஜ்ஞராய் வானங்களை உண்டாக்கின
வருக்கு நன்றிசெலுத்துங்கள்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
6 தண்ணீர்களின்மேலே பூமியைப் பரப்பின
வருக்கு நன்றிசெலுத்துங்கள்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
7 பெரிய சுடர்களை உண்டாக்கினவருக்கு
நன்றிசெலுத்துங்கள்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
8 பகலில் ஆளுகைசெய்ய அவர் சூரியனைப்
படைத்தார்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
9 இரவில் ஆளுகைசெய்ய அவர் சந்திரனை
யும் நட்சத்திரங்களையும் படைத்தார்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
10 எகிப்தியரின் தலைச்சன்களைச் சங்காரித்த
வருக்கு நன்றிசெலுத்துங்கள்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
11 அவர்கள் நடுவிலிருந்து இஸ்ரவேலைப்
புறப்படப்பண்ணினார்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
12 புஜபலத்தினாலும் கீட்டியகரத்தினாலும்
அதைச் செய்தார்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
13 செங்கடல் சமுத்திரத்தை இரண்டாகப் பிரித்த
வருக்கு நன்றிசெலுத்துங்கள்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
அதின் நடுவே இஸ்ரவேலைக் கடந்துபோகப் 14
பண்ணினார்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
பார்வோனையும் அவன் சேனைகளையும் 15
செங்கடல் சமுத்திரத்திலே தள்ளிக் கவிழ்த்
துப்போட்டார்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
தமது ஜனங்களை வனாந்தரத்திலே வழிநடத் 16
தினவருக்கு நன்றிசெலுத்துங்கள்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
பெரிய ராஜாக்களைச் சங்கரித்தவருக்கு 17
நன்றிசெலுத்துங்கள்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
வல்லமையுள்ள ராஜாக்களை அழித்தார்; 18
அவர் கிருபை என்றுமுள்ளது.
எமோரியரின் ராஜாவாகிய சிகோனை அழித் 19
தார்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
பாசானின் ராஜாவாகிய ஓகை அழித்தார்; 20
அவர் கிருபை என்றுமுள்ளது.
அவர்கள் தேசத்தைச் சுதந்தரமாகத்தந்தார்; 21
அவர் கிருபை என்றுமுள்ளது.
அது அவர் தாசனாகிய இஸ்ரவேலுக்குச் 22
சுதந்தரமாயிற்று;
அவர் கிருபை என்றுமுள்ளது.
நமது தாழ்வில் நம்மை நினைத்தவருக்கு 23
நன்றிசெலுத்துங்கள்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
நமது சத்துருக்கள் கையிலிருந்து நம்மை 24
விடுதலைபண்ணினார்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
மாம்சதேகமுள்ள யாவுக்கும் ஆகாரம் 25
கொடுக்கிறார்;
அவர் கிருபை என்றுமுள்ளது.
பரலோகத்தின் கடவுளுக்கு நன்றிசெலுத் 26
துங்கள்;
அவர் கிருபை என்றுமுள்ளது.

பாபிலோனின் ஆறுகள் அண்டையில் **137**
நாங்கள் உட்கார்ந்து
அங்கே சீயோனை நினைத்து அழுதோம்.
அதின் நடுவிலிருக்கும் மரங்களின்மேல் 2
எங்கள் சுரமண்டலங்களைத் தொங்கவைத்
தோம்.
எங்களைச் சிறைபிடித்தவர்கள் அங்கே 3
எங்கள் பாட்டுகளையும்
எங்களைப் பாழாக்கினவர்கள் எங்கள் சந்
தோஷகீதத்தையும் கேட்கவிரும்பிச்
சீயோனின் பாடல்களில் சிலவற்றை எங்க
ளுக்குப் பாடுங்கள் என்று கேட்டார்கள்.
யெகோவாவின் பாடலை 4

அந்நியதேசத்தில் நாங்கள் பாடுவதெப்படி?
5 எருசலேமே, நான் உன்னை மறந்தால்
என் வலதுகை தன் தொழிலை மறப்பதாக.
6 நான் உன்னை நினையாமலும்
எருசலேமை என் முக்கியமான மகிழ்ச்சி
யிலும் அதிகமாக எண்ணுமலும்போனால்
என் நாவு என் மேல்வாயோடு ஒட்டிக்
கொள்வதாக.
7 யெகோவா, எருசலேம் அழிந்தநாளை
ஏதோமின் புத்திரருக்கு விரோதமாய் நினைத்
துக்கொள்ளும்;
அதை இடித்துப்போடுங்கள், அஸ்திபார
மட்டும் இடித்துப்போடுங்கள் என்று
அவர்கள் சொன்னார்களே.
8 பாபிலோன் குமாரத்தியே, பாழாய்ப்போகிற
வளே,
நீ எங்களுக்குச் செய்தபடியே உனக்குப்
பதில்செய்கிறவன் பாக்கியவான்.
9 உன் குழந்தைகளைப் பிடித்துக்
கல்லின்மேல் மோதியடிக்கிறவன் பாக்கிய
வான்.

**138** தாவீதின் சங்கீதம்.

என் முழு இருதயத்தோடும் உமக்கு நன்றி
செலுத்துவேன்;
தேவர்களுக்கு முன்பாக உம்மைத் துதித்
துப்பாடுவேன்.
2 உமது பரிசுத்த ஆலயத்துக்கு நேரே திரும்பி
உமது கிருபையினிமித்தமும் உமது உண்
மையினிமித்தமும் உமது திருநாமத்
துக்கு நன்றிசெலுத்துவேன்,
உமது சகல பிரஸ்தாபத்துக்கும் மேலாக
உமது திருவசனத்தை நீர் மேன்மைப்படுத்தி
யிருக்கிறீர்.
3 நான் கூப்பிட்ட நாளிலே எனக்கு உத்தரவு
அருளினீர்;
என் ஆத்துமாவுக்குப் பலமளித்து என்னைத்
தைரியப்படுத்தினீர்.
4 யெகோவா, பூமியின் ராஜாக்களெல்லாரும்
உமது வாய் வார்த்தைகளைக் கேட்டு உமக்கு
நன்றிசெலுத்துவார்கள்.
5 யெகோவா மகிமை மேன்மையுள்ளதென்று
அவர்கள் யெகோவா வழிகளைப் பாடுவார்
கள்.
6 யெகோவா உயர்ந்தவராயிருந்தும் தாழ்மை
யுள்ளவனைக் கண்ணோக்குகிறார்;
மேட்டிமையுள்ளவனையோ தூரத்திலிருந்தே
அறிகிறார்.
7 நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நீர்
என்னை உயிர்ப்பிப்பீர்;
என் சத்துருக்கள் கோபத்திற்கு விரோத
மாகி உமது திருக்கரத்தை நீட்டுவீர்;
உமது வலதுகரம் என்னை ரட்சிக்கும்.
8 யெகோவா எல்லாவற்றையும் எனக்குச்
செய்துமுடிப்பார்;
யெகோவா, உமது கிருபை என்றுமுள்
ளது;
உமது திருக்கரம் உண்டாக்கினவற்றைக்
கைவிடாதிருப்பீராக.

தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு. **139**

யெகோவா,
நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர்.
2 நான் உட்காருவதையும் நான் எழுந்திருப்
பதையும் நீர் அறிவீர்;
என் ஆலோசனைகளைத் தூரத்திலிருந்தே
அறிகிறீர்.
3 நான் நடப்பதையும் படுத்திருப்பதையும்
நீர் சோதித்தறிவீர்;
என் வழிகளெல்லாம் உமக்கு நன்றாய்த்
தெரியும்.
4 என் நாவில் பிறக்கும் ஒவ்வொரு வார்த்
தையும்
இதோ, யெகோவா, உமக்குத் தெரியாமற்
போகிறதில்லை.
5 முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை
நெருக்கி
உமது திருக்கரத்தை என்மேல் வைக்கி
றீர்.
6 இவ்வகை அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரி
யம்;
எனக்கு எட்டாத உயரம்.
7 உமது ஆவிக்கு மறைவாக நான் போவ
தெங்கே?
உமது திருச்சந்நிதியை விட்டு நான் ஓடுவ
தெங்கே?
8 நான் வானத்திற்கு ஏறினாலும் நீர் அங்கே
இருக்கிறீர்;
நான் பாதாளத்திலே படுக்கைபோட்டா
லும் நீர் அங்கேயும் இருக்கிறீர்.
9 நான் காலையின் செட்டைகளை எடுத்துச்
சமுத்திரக் கடையாந்தரங்களிலே போய்த்
தங்கினாலும்
10 அங்கேயும் உமது திருக்கரம் என்னை
நடத்தும்;
உமது வலதுகரம் என்னைப் பிடித்துத்
தாங்கும்.
11 இருள் என்னை மூடிக்கொள்ளட்டும்,
வெளிச்சம் என்னைச் சுற்றிலும் இரவா
கட்டும்
என்று நான் சொன்னாலும்,
12 உமக்குமுன் இருளும் இருளாகாது;
இரவும் பகலைப்போல் வெளிச்சமாயிருக்
கும்;

இருளும் வெளிச்சமும் உமக்குச் சரி.
13 நீர் என் உள் அவயவங்களையும் உருவாக்கி
யிருக்கிறீர்;
என் தாயின் கர்ப்பத்திலே என்னை நீரே
இசைத்துவைத்தீர்.
14 பிரமிப்பும் அதிசயமுமாக நான் உண்டாக்
கப்பட்டேன்;
உமக்கு நன்றிசெலுத்துவோம்.
உமது செயல்கள் அதிசயமானவை;
அது எனக்கு நன்றாய்த் தெரியும்.
15 நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டுப்
பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர
விதமாய் உருவாக்கப்பட்டபோது
என் எலும்புகள் உமக்கு மறைந்திருக்க
வில்லை.
16 என் கருவை உமது கண்கள் கண்
டன;
உமது புஸ்தகத்தில் அனைத்தும் எழுதியிருந்
தது;
உருவேற்பட்ட நாட்களும் அவைகளில்
ஒன்றுகூடமில்லாதபோதே எழுதியிருந்
தன.
17 கடவுளே, உமது ஆலோசனைகள் எனக்கு
எத்தனை அருமையானவைகள்!
அவைகளின் தொகை எவ்வளவு அதிகம்!
18 அவைகளை நான் எண்ணப்போனால் மண
லைப்பார்க்கிலும் அதிகமாம்;
நான் விழித்தும் இன்னும் உம்மண்டை
யிலேயே இருக்கிறேன்.
19 கடவுளே, நீர் தெய்வபயமற்றவனை அழித்
துவிட்டீரேயானால் நலம்!
இரத்தப்பிரியரே, நீங்கள் என்னைவிட்டு
அகன்றுபோங்கள்.
20 அவர்கள் தந்திரமாய் உமக்கு விரோதமாக
எழும்புகிறார்கள்;
உமது சத்துருக்கள் உமது திருநாமத்தை
வீணில் வழங்குகிறார்கள்.
21 யெகோவா, உம்மைப் பகைக்கிறவர்களை
நான் பகையாமலும்
உமக்கு விரோதமாய் எழும்புகிறவர்களை
அருவருக்காமலும் இருப்பேனே?
22 முழுப்பகையாய் அவர்களைப் பகைக்கி
றேன்;
அவர்களை எனக்குப் பகைஞராக எண்ணு
கிறேன்.
23 கடவுளே, என்னை ஆராய்ந்து என் இருத
யத்தை அறிந்துகொள்ளும்;
என்னைப் பரிசோதித்து என் சிந்தனைகளை
அறிந்துகொள்ளும்.
24 வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில்
உண்டோ என்று பார்த்துச்
நித்திய வழியிலே என்னை நடத்தும்.

தாவீதின் சங்கீதம்; பாடகர் தலைவனுக்கு. **140**
1 யெகோவா, பொல்லாத மனுஷனின் கையி
னின்று என்னை விடுவித்தருளும்;
கொடுமையுள்ள மனுஷனுக்கு என்னை
விலக்கிக் காத்தருளும்.
2 அவர்கள் தங்கள் இருதயத்திலே கேடு
நினைத்து
நாள்தோறும் சண்டைக்குக் கூடுகிறார்கள்.
3 பாம்பைப்போல் தங்கள் நாவைக் கூர்மை
யாக்குகிறார்கள்;
அவர்கள் உதடுகளின்கீழ் விரியன் பாம்
பின் விஷமிருக்கிறது.
4 யெகோவா, தெய்வபயமற்றவன் கைகளி
னின்று என்னை ரட்சித்தருளும்;
கொடுமையுள்ள மனுஷனுக்கு என்னை
விலக்கிக் காத்தருளும்;
நான் நடக்கையில் அவர்கள் என்னை
விழுத்தட்டப்பார்க்கிறார்கள்.
5 அகங்காரிகள் எனக்குக் கண்ணியையும்
கயிறுகளையும் மறைவாய் வைக்கிறார்கள்;
வழியோரத்திலே வலையை விரித்து எனக்
குச் சுருக்குகளை வைக்கிறார்கள்.
6 நான் யெகோவாவிடம், நீர் என் கட
வுள் என்றேன்;
யெகோவா, என் விண்ணப்பங்களின் சத்
தத்துக்குச் செவிசாய்த்தருளும்:
7 ஆண்டவராகிய யெகோவா, என் ரட்சிப்
பின் பலமே,
யுத்தநாளில் என் தலையை மூடிக்காத்தீர்.
8 யெகோவா, தெய்வபயமற்றவன் ஆசைகள்
சித்தியாதபடி செய்யும்;
அவனுடைய யோசனை நடந்தேற வொட்
டாதேயும்;
அவன் தன்னை உயர்த்தாதபடி செய்யும்.
9 என்னை வளைந்துகொள்பவருடைய உதடு
களின் கேடுகள்
அவர்கள் தலைகளிலேயே வருவதாக.
10 நெருப்புத்தழல் அவர்கள்மேல் விழுவதாக;
அக்கினியிலும் எழுந்திருக்கமுடியாத படு
குழிகளிலும் தள்ளப்படுவார்களாக.
11 பொல்லாத நாவுள்ளவன் தேசத்திலே நிலைப்
பதில்லை;
பொல்லாப்பு கொடுமையான மனுஷனை
விழத்தட்டத் தொடர்ந்துசெல்லும்.
12 யெகோவா சிறுமைப்பட்டவன் வழக்கை
விசாரிப்பார்;
ஏழைகளுக்கு நியாயஞ்செய்வார்;
13 இது எனக்குத் தெரியும்.
உண்மையாகவே நீதிமான்கள் உமது திரு
நாமத்துக்கு நன்றிசெலுத்துவார்கள்;
நேர்மையாக வாழ்கிறவர்கள் உமது திருச்சந்நிதி
யிலேயே தங்குவார்கள்.

**141** தாவீதின் சங்கீதம்.

2யெகோவா, உம்மை நோக்கிக் கூப்பிடுகி
றேன்;
என்னிடம் வரும்படி விரைந்தருளும்;
நான் உம்மை நோக்கிக் கூப்பிடுகையில்
என் சத்தத்திற்குச் செவிசாய்த்தருளும்.
என் பிரார்த்தனை உமது சந்நிதியில் தூபமா
கவும்
என் கையெடுப்பு அந்திப்பலியாகவும் இருப்
பதாக.
3யெகோவா, என் வாய்க்குக் காவல்வையும்;
என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்
ளும்.
4 என் இருதயத்தைத் தீமையான எதற்கும்
சாரவொட்டாதேயும்;
அக்கிரமக்காரரோடு சேர்ந்து
தன்மார்க்கத்தை நடப்பிக்காதபடி தடுத்
தருளும்;
அவர்கள் இனிய பதார்த்தங்களில் ஒன்றை
யும் நான் சாப்பிடவொட்டாதேயும்.
5 நீதிமான் என்னைக் குட்டுவது எனக்குக்
கிடைத்த கிருபையாம்;
அவன் என்னைக் கண்டிப்பது என் தலைக்கு
எண்ணெயாம்;
இதை என் தலை அல்லத்தட்டுவதில்லை.
அவர்கள் தியசெய்கைகளுக்கு விரோதமாய்
நான் இன்னும் ஜெபிப்பேன்.
6 அவர்கள் நியாயாதிபதிகள்
கன்மலைகளிலிருந்து கீழே தள்ளுண்டு
போகிறபோது
என் வார்த்தைகள் இனிமையானவைக
ளென்று கேட்பார்கள்.
7 உழும்போது மண்பிளந்து சிதறிவிடுகிறது
போல
எங்கள் எலும்புகள் பாதாளவாயிலே சித
றிக்கிடக்கின்றன.
8 ஆண்டவராகிய யெகோவா, என் கண்கள்
உம்மையே நோக்கியிருக்கின்றன;
உம்மில் அடைக்கலம் புகுந்தேன்;
என் உயிர் அழிந்துபோகவிடாதேயும்.
9 அவர்கள் எனக்கு வைத்த கண்ணிகளுக்
கும்
அக்கிரமக்காரரின் சுருக்குகளுக்கும்
விலக்கி என்னைக் காத்தருளும்.
10 தெய்வபயமற்றவர்கள் தங்கள் வலைகளில்
அகப்பட்டுக்கொள்வார்களாக.
நானே அப்போது தப்பிக் கடந்துபோவேன்.

**142** தாவீதின் மஸ்கீல் சங்கீதம்; கெபியில்
ஒளிந்திருக்கையில் பாடினது; பிரார்த்தனை.

யெகோவாவை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்
பிடுகிறேன்,
யெகோவாவை நோக்கிச் சத்தமிட்டு விண்
ணப்பஞ்செய்கிறேன்.
அவர் சந்நிதியில் நான் பெருமூச்சுவிட்டு 2
அவருக்கு முன்பாக என் நெருக்கத்தை
அறிக்கையிடுகிறேன்.
என் ஆவி என்னில் தொய்ந்துபோகும் 3
போது நீர் என் பாதையை அறிவீர்;
நான் நடக்கிற வழியில் மறைவாக எனக்
குக் கண்ணிவைத்தார்கள்.
வலதுபுறமாய்க் கண்ணோக்கிப்பாரும்; 4
என்னைக் கவனிப்பார் ஒருவருமில்லை;
எனக்கு அடைக்கலமில்லாமற்போயிற்று;
என்னை விசாரிப்பார் ஒருவருமில்லை.
யெகோவா, உம்மை நோக்கிக் கூப்பிடு 5
கிறேன்;
நீரே என் அடைக்கலம்;
ஜீவனுள்ளோர் தேசத்தில் நீரே என் பங்கு
என்றேன்.
என் அபயசத்தத்தைக் கவனித்தருளும்; 6
நான் மிகவும் பலமற்றுப்போனேன்;
என்னை இம்சிக்கிறவர்களுக்கு என்னைத்
தப்புவியும்;
அவர்கள் என்னிலும் பலவான்கள்
உமது திருநாமத்துக்கு நான் நன்றிசெலுத் 7
தும்படி
என்னைச் சிறையினின்று வெளியேறச்செய்
யும்;
எனக்கு நீர் மிகவும் நன்மை செய்கிறபடி
யால்
நீதிமான்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளுவார்
கள்.

தாவீதின் சங்கீதம். **143**

யெகோவா, என் ஜெபத்தைக் கேளும்;
என் விண்ணப்பங்களுக்குச் செவிசாய்த்தரு
ளும்;
உமது நீதிக்கிசைய உமது உண்மையின்
படியே
எனக்கு மறுமொழி அருளும்.
அடியேனை நியாய விசாரணைக்குட்படுத்தா
தேயும்.
ஜீவனுள்ள ஒருவனும் உமது சந்நிதியில் 2
நீதிமான் அல்லவே.
சத்துரு என் ஆத்துமாவை இம்சைப்படுத்தி 3
என் உயிரைத் தரையோடே நசுக்கி
வெகுகாலத்துக்குமுன் மரித்தவர்கள்போல்
என்னை இருளில் இருக்கப்பண்ணுகிறான்.
என் ஆவி என்னில் தொய்ந்துபோகிறது; 4
என் இருதயம் எனக்குள் திடுக்கிட்டுக்
கலங்குகிறது.
பூர்வ நாட்களை நினைக்கிறேன்; 5
உமது செயல்களையெல்லாம் தியானிக்கிறேன்;

உமது கரத்தின் கிரியைகளைச் சிந்திக்கிறேன்.
6 என் கைகளை உமக்கு நேராக விரிக்கிறேன்,
விடாய்த்துப்போன நிலத்தைப்போல்
என் ஆத்துமா உம்மைநோக்கிக் காத்திருக்கிறது.
7 யெகோவா, எனக்கு உத்தரவு கொடுக்க விரைந்தருளும்;
என் ஆவி தியங்குகிறது;
உமது திருமுகத்தை எனக்கு மறையாதேயும்,
மறைத்தால் நான் குழியில் இறங்குகிறவர்கள்போல் ஆகிவிடுவேன்,
8 அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப்பண்ணும்;
உம்மில் நம்பிக்கைவைத்திருக்கிறேன்;
நான் நடக்கவேண்டிய வழியை எனக்குத் தெரிவித்தருளும்;
உமக்கு நேராக என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்.
9 யெகோவா, என் சத்துருக்களினின்று என்னை விடுவித்தருளும்;
உம்மைப் புகலிடமாகக் கொள்ளுகிறேன்.
10 உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும்; நீரே என் கடவுள்;
உமது நல்ல ஆவி என்னைச் செம்மையான இடத்தில் நடத்துவதாக.
11 யெகோவா, உமது திருநாமத்தினிமித்தம் என்னை உயிர்ப்பித்தருளும்;
உமது நீதியின்படியே என் ஆத்துமாவை இடுக்கத்திற்கு நீங்கலாக்கிவிடும்.
12 உமது கிருபையிலே என் சத்துருக்களை அழியும்;
என் ஆத்துமாவை ஒடுக்குகிற யாவரையும் சங்காரம்பண்ணும்;
நான் உமது அடிமை.

**144** தாவீதின் சங்கீதம்.

என் கன்மலையாகிய யெகோவா ஸ்தோத்திரத்துக்குரியவர்;
அவர் என் கைகளை யுத்தத்திற்கும்
என் விரல்களைப் போருக்கும் பழக்குகிறார்.
2 அவர் எனக்குக் கிருபை பாராட்டுகிறவர்,
என் கோட்டை, என் துருக்கம், என்னை விடுவிக்கிறவர்,
என் கேடகம், என் புகலிடம்,
என் ஜனத்தை எனக்குக் கீழ்ப்படுத்துகிறவர்.
3 யெகோவா, மனுஷனை நீர் கவனிக்கிறதற்கும்
மனுப்புத்திரனை நீர் எண்ணுகிறதற்கும்
அவன் எம்மாத்திரம்?
மனுஷன் காற்றுக்கு ஒப்பானவன்; 4
அவன் நாட்கள் கடந்துபோகிற நிழலுக்குச் சமானம்.
யெகோவா, நீர் உமது வானங்களைத் தாழ்த்தி 5
இறங்கி,
மலைகள் புகையும்படி அவைகளைத்தொடும்.
மின்னல்களை வரவிட்டு அவர்களைச் சிதறடி 6
யும்;
உமது அம்புகளை எய்து அவர்களைக் கலங்கடியும்.
உயரத்திலிருந்து உமது திருக்கரத்தை நீட்டி 7
ஜலப்பிரவாகத்தினின்று, அந்நியரின் கையினின்றே,
என்னை விலக்கி ரட்சித்தருளும்.
அவர்கள் வாய் வஞ்சனை பேசும்; 8
அவர்கள் வலதுகரம் கள்ளத்தனமுள்ளது.
யெகோவா, நான் உமக்குப் புதுப்பாட் 9
டைப் பாடுவேன்;
பத்துநரம்பு வீணையினால் உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன்.
ராஜாக்களுக்கு ஜெயத்தைத் தந்து 10
உமதடியானாகிய தாவீதைப் பொல்லாத பட்டயத்திற்குத் தப்புவிக்கிறவர் நீரே.
அந்நியரின் கையினின்று என்னை விலக்கி 11
ரட்சியும்;
அவர்கள் வாய் வஞ்சனை பேசும்;
அவர்கள் வலதுகரம் கள்ளத்தனமுள்ளது.
எங்கள் குமாரர் விருட்சக்கன்றுகள்போல 12
இளமையில் ஓங்கி வளருவார்கள்;
எங்கள் குமாரத்திகள் அலங்காரமாய்ச் செதுக்கப்பட்ட அரமனை மூலஸ்தம்பங்கள்போலிருப்பார்கள்.
எங்கள் களஞ்சியங்கள் நிரம்பியிருக்கும், 13
அவைகள் சகலவித பொருட்களையும் கொடுக்கும்;
வயல்வெளிகளில் எங்கள் ஆடுகள்
ஆயிரம் பதினாயிரமாய்ப் பலுகும்.
எங்கள் எருதுகள் பெரும்பொதி சுமக்கும்; 14
சத்துரு உட்புகுதலும் குடியோடிப்போதலும் இராது;
எங்கள் வீதிகளில் கூக்குரலும் கேளாது.
இவ்விதமான சீரைப்பெற்ற ஜனம் பாக்கிய 15
முள்ளது;
யெகோவாவைத் தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது.

தாவீதின் சங்கீதம்; ஸ்தோத்திர பாட்டு. **145**

ராஜாவாகிய என் கடவுளே, உம்மை உயர்த்துவேன்;
உமது திருநாமத்தை எப்பொழுதும் என்றென்றும் ஸ்தோத்திரிப்பேன்.
நாடோறும் உம்மை ஸ்தோத்திரிப்பேன்; 2

உமது திருநாமத்தை எப்பொழுதும் துதிப்
பேன்.
3 யெகோவா மகத்தானவர், மிகவும் புகழப்
படத்தக்கவர்;
அவருடைய மகத்துவம் ஆராய்ச்சிக் கெட்
டாதது.
4 ஒரு தலைமுறை வருந்தலைமுறைக்கு
உமது செயல்களின் புகழைச் சொல்
லும்;
உமது வல்லசெயல்களை அறிவிக்கும்.
5 உமது மகத்துவத்தின் மகிமையையும் மேன்
மையையும்
உமது அதிசயமான செயல்களையும் தியா
னிப்பேன்.
6 இனங்கள் உமது பயங்கரமான செயல்களின்
வல்லமையைப்பற்றிப் பேசுவார்கள்;
உமது மகத்துவத்தை நான் பிரஸ்தாபிப்
பேன்.
7 உமது மிகுந்த தயாளத்தை அவர்கள்
நினைத்துப் பேசுவார்கள்;
உமது நீதியைக் கெம்பீரித்துப் பாடுவார்
கள்.
8 யெகோவா இரக்கமும் உருக்கமும்
நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ள
வர்.
9 யெகோவா எல்லார்மேலும் கருணையுள்ள
வர்;
அவர் இரக்கங்கள் அவருடைய சகல
சிருஷ்டிகளின்மேலும் உள்ளது.
10 யெகோவா, உமது சிருஷ்டிகளெல்லாம்
உமக்கு நன்றி செலுத்தும்;
உமது பக்தர்கள் உம்மை ஸ்தோத்திரிப்பார்
கள்.
11 மனுப்புத்திரருக்கு உமது வல்லசெயல்களை
யும்
உமது ராஜ்யத்திற்குரிய மகத்துவத்தின் மகி
மையையும் தெரிவிக்கும்படி
12 உமது ராஜ்யத்தின் மகிமையை அறிவித்து
உமது வல்லமையைப்பற்றிப் பேசுவார்கள்.
13 உமது ராஜ்யம் சதாகாலங்களிலுமுள்ள
ராஜ்யம்,
உமது ஆளுகை தலைமுறை தலைமுறையாக
வும் உள்ளது.
14 யெகோவா விழுகிற யாவரையும் தாங்கு
கிறார்;
தொய்ந்துபோன யாவரையும் தூக்கி விடு
கிறார்.
15 சகல ஜந்துக்களின் கண்களும் உம்மை
நோக்கிக் காத்திருக்கின்றன;
ஏற்ற வேளையிலே நீர் அவைகளுக்கு ஆகா
ரங்கொடுக்கிறீர்.
16 நீர் உமது திருக்கரத்தைத் திறந்து
சகல பிராணிகளின் விருப்பத்தையும் திருப்
தியாக்குகிறீர்.
17 யெகோவா தமது வழிகளிலெல்லாம் நீதி
யுள்ளவர்;
தமது செயல்களிலெல்லாம் கிருபையுள்ள
வர்.
18 தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும்,
உண்மையாகவே தம்மை நோக்கிக் கூப்பிடு
கிற யாவருக்கும்,
யெகோவா சமீபமானவர்.
19 அவர் தமக்குப் பயந்தவர்களின் விருப்பத்
தின்படி செய்து
அவர்கள் அபயசத்தத்துக்குச் செவி கொ
டுத்து
அவர்களை ரட்சிக்கிறார்.
20 யெகோவா தம்மில் அன்புகூருகிற யாவரை
யும் காப்பாற்றுவார்;
தெய்வபயமற்றவர் யாவரையுமோ அழிப்
பார்.
21 என் வாய் யெகோவாவின் துதியைச் சொல்
லும்;
மாம்சதேகமுள்ள யாவும் அவருடைய பரி
சுத்த நாமத்தை
எப்பொழுதும் என்றென்றும் ஸ்தோத்திரிப்
பதாக.

அல்லேலூயா;

## 146

என் ஆத்துமாவே, யெகோவாவைத் துதி.
நான் உயிரோடிருக்குமளவும் யெகோவா 2
வைத் துதிப்பேன்;
நான் உள்ளளவும் என் கடவுளைத் துதித்துப்
பாடுவேன்.
பிரபுக்களிலும் இரட்சிக்கத் திராணியில்லாத 3
மனுப்புத்திரனிலும்
நம்பிக்கையையாதேயுங்கள்.
அவன் ஆவி பிரிந்துபோம், அவன் தன் 4
மண்ணுக்குத் திரும்புவான்;
அக்காளிலே அவன் யோசனைகள் அழியும்.
யாக்கோபின் கடவுளைத் தன் துணையாகக் 5
கொண்டிருந்து
தன் கடவுளாகிய யெகோவாவை நம்பிக்
காத்திருக்கிறவன் பாக்கியவான்.
அவரே வானத்தையும் பூமியையும் சமுத் 6
திரத்தையும்
அவைகளிலுள்ள யாவையும் உண்டாக்கி
னவர்;
அவர் என்றென்றும் உண்மையைக் காக்
கிறவர்.
ஒடுக்கப்பட்டவர்களுக்கு அவர் நியாயஞ் 7
செய்கிறார்;
பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரங்கொடுக்
கிறார்;

ட்டுண்டவர்களை யெகோவா விடுதலையாக்குகிறார்.
8 குருடரின் கண்களை யெகோவா திறக்கிறார்;
தொய்ந்துபோனவர்களை யெகோவா தூக்கி விடுகிறார்;
நீதிமான்களில் யெகோவா பிரியங்கொள்ளுகிறார்.
9 அந்நியரை யெகோவா காப்பாற்றுகிறார்;
அநாதப் பிள்ளையையும் விதவையையும் அவர் ஆதரிக்கிறார்;
தெய்வபயமற்றவரின் வழியையோ தாறுமாறாகச் செய்கிறார்.
10 யெகோவா சதாகாலங்களிலும் அரசாளுகிறார்;
சீயோனே, உன் கடவுள், தலைமுறை தலைமுறையாகவும் ராஜரிகம்பண்ணுகிறார்.
அல்லேலூயா.

**147** அல்லேலூயா;
நமது கடவுளைத் துதித்துப்பாடுவது நல்லது;
துதிசெய்வதே இனிமையானது, அதுவே தகுந்தது.
2 யெகோவா எருசலேமைக் கட்டுகிறார்:
தூரத்துண்ட இஸ்ரவேலரைக் கூட்டிச் சேர்க்கிறார்.
3 உடைந்த இருதயமுள்ளவர்களைக் குணமாக்குகிறார்;
அவர்கள் காயங்களைக் கட்டுகிறார்.
4 அவர் நட்சத்திரங்களின் இலக்கத்தை எண்ணி
அவைகளுக்கெல்லாம் பேரிட்டு அழைக்கிறார்.
5 நமது ஆண்டவர் மகத்தானவர், மிகுந்த பராக்கிரமமுள்ளவர்;
அவர் அறிவுக்கு வரம்பில்லை.
6 யெகோவா சிறுமையானவர்களை ஆதரிக்கிறார்;
தெய்வபயமற்றவரைத் தரைமட்டும் தாழ்த்துகிறார்.
7 யெகோவாவுக்கு நன்றிசெலுத்திப் பாடுங்கள்;
நமது கடவுளைச் சுரமண்டலத்தால் துதித்துப்பாடுங்கள்.
8 அவர் வானத்தை மேகங்களால் மூடுகிறார்;
பூமிக்கென்று மழையைச் சித்தப்படுத்துகிறார்;
மலைகளில் புல்லை முளைப்பிக்கிறார்.
9 அவர் மிருகங்களுக்கும்
கூப்பிடுகிற காகங்களுக்கும் ஆகாரங் கொடுக்கிறார்.
10 அவர் குதிரையின் பலத்தை விரும்பார்;
வீரனின் கால்களில் பிரியங்கொள்ளார்.
தமக்குப் பயந்தவர்களில், தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களிலேயே 11
யெகோவா பிரியங்கொள்ளுகிறார்.
எருசலேமே, யெகோவாவைப் போற்று, 12
சீயோனே, உன் கடவுளைத் துதி,
அவர் உன் வாசல்களின் தாழ்ப்பாள்களைப் 13
பலப்படுத்துகிறார்;
உன்னிலுள்ள உன் பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார்.
அவர் உன் எல்லைகளில் சமாதானம் நிறைந் 14
திருக்கச் செய்கிறார்;
உசிதமான கோதுமையினால் உன்னைத் திருப்தியாக்குகிறார்.
அவர் தமது கட்டளையைப் பூமிக்கு அனுப் 15
புகிறார்;
அவர் சொல் மிகவும் விரைவாய்ச் செல்லுகிறது:
பஞ்சைப்போல உறைந்த மழையைத் தரு 16
கிறார்;
சாம்பலைப்போல உறைந்த பனியைத் தூவுகிறார்.
அவர் தமது கல்மழையைத் துணிக்கைகளாக அனுப்புகிறார். 17
அவர் குளிருக்குமுன்பாக நிற்பவன் யார்?
திரும்பவும் அவர் தமது கட்டளையை அனு 18
ப்பி அவைகளை உருகப்பண்ணுகிறார்;
தமது காற்றை வீசும்படி செய்யவே, தண்ணீர்கள் ஓடும்.
யாக்கோபுக்குத் தமது திருவசனத்தையும், 19
இஸ்ரவேலுக்குத் தமது நியமங்களையும்
தமது நியாயத்தீர்ப்புகளையும் அறிவிக்கிறார்.
அவர் வேறே எந்த ஜனத்துக்கும் இப்படிச் 20
செய்ததில்லை;
அவர்கள் அவருடைய நியாயத்தீர்ப்புகளை
அறியவில்லை,
அல்லேலூயா.

அல்லேலூயா; **148**
வானங்களிலிருந்து யெகோவாவைத் துதியுங்கள்;
உன்னதங்களில் அவரைத் துதியுங்கள்:
அவர் தூதர்களே, நீங்கள் யாவரும் அவ 2
ரைத் துதியுங்கள்;
அவர் சேனைகளே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள்.
சூரியசந்திரரே, அவரைத் துதியுங்கள்; 3
பிரகாசமுள்ள சகல நட்சத்திரங்களே,
அவரைத் துதியுங்கள்.
வானுதிவானங்களே, அவரைத் துதியுங்கள்; 4
ஆகாயமண்டலத்தின்மேலுள்ள தண்ணீர்களே, அவரைத் துதியுங்கள்.

5 அவைகள் யெகோவாவின் திருநாமத்தைத்
துதிக்கக்கடவது;
அவர் கட்டளையிட அவைகள் சிருஷ்டிக்
கப்பட்டன.
6 அவர் அவைகளை என்றுமுள்ள சதாகாலங்
களிலும் நிலைக்கச்செய்தார்;
மாறுத நியமத்தை அவைகளுக்கு நியமித்
தார்.
7 பூமியிலிருந்து யெகோவாவைத் துதியுங்கள்:
வலுசர்ப்பங்களே, சகல ஆழங்களே,
8 அக்கினியே, கல்மழையே, உறைந்த மழை
யே, மூடுபனியே,
அவர் சொற்படி செய்யும் பெருங்காற்றே,
9 மலைகளே, சகல குன்றுகளே,
கனிமரங்களே, சகல கேதுருக்களே,
10 காட்டுமிருகங்களே, சகல நாட்டுமிருகங்
களே,
ஊரும் பிராணிகளே, இறகுள்ள பறவை
களே,
11 பூமியின் ராஜாக்களே, சகல தேசத்தாரே,
பிரபுக்களே, பூமியின் சகல நியாயாதிபதி
களே,
12 வாலிபரே, கன்னிகைகளே,
முதியோரே, இளையோரே,
துதியுங்கள்.
13 அவர்கள் யெகோவா திருநாமத்தைத் துதிப்
பார்களாக;
அவர் திருநாமமே உயர்ந்தது;
அவர் மகிமை பூமிக்கும் வானத்திற்கும்
மேலானது.
14 அவர் தமது ஜனத்திற்கு ஒரு கொம்பை
உயர்த்தினார்;
அது அவர் பக்தர் யாவருக்கும்,
தமக்கு அருகான ஜனமாகிய இஸ்ரவேல்
புத்திரருக்கும்
புகழ்ச்சியாகும்.
அல்லேலூயா.

**149** அல்லேலூயா;

யெகோவாவுக்குப் புதுப்பாட்டைப் பாடுங்
கள்;
பக்தர் சபையிலே அவர் புகழைப் பாடுங்
கள்.
2 இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரில்
மகிழ்வதாக;
சீயோன்குமாரர் தங்கள் ராஜாவில் களிகூரு
வார்களாக.
3 அவர் திருநாமத்தை நடனத்தோடே துதித்
துத்
தம்புரினாலும் சுரமண்டலத்தினாலும் அவ
ரைத் துதித்துப் பாடுவார்களாக.
4 யெகோவா தமது ஜனத்தில் பிரியமாயிருக்
கிறார்;
சிறுமையானவர்களை ரட்சிப்பினால் அலங்
கரிப்பார்.
5 பக்தர்கள் மகிமையில் களிகூர்ந்து
தங்கள் படுக்கைகளில் கெம்பீரிப்பார்க
ளாக.
6 அவர்கள் வாயில் சடவுளின் உயர்ந்த புக
ழும்
அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள
பட்டயமும் இருக்கும்.
7 இதினால் புறஜாதிகளிடம் பழிவாங்குவார்
கள்;
ஜனங்களைத் தண்டிப்பார்கள்.
8 அவர்கள் ராஜாக்களைச் சங்கிலிகளாலும்
மேன்மக்களை இருப்புவிலங்குகளாலும் கட்
டுவார்கள்;
எழுதப்பட்டிருக்கிற நியாயத் தீர்ப்பை
அவர்கள்பேரில் செலுத்துவார்கள்.
9 இந்தக் கனம் அவருடைய பக்தர் யாவருக்
கும் உரியது;
அல்லேலூயா.

அல்லேலூயா; **150**

கடவுளை அவர் பரிசுத்த ஸ்தலத்தில் துதி
யுங்கள்;
அவர் வல்லமை விளங்கும் ஆகாயவிரிவிலே
அவரைத் துதியுங்கள்.
2 அவர் வல்லசெயல்களினிமித்தம் அவரைத்
துதியுங்கள்;
மாட்சிமையுள்ள அவர் மகத்துவத்தினிமித்
தம் அவரைத் துதியுங்கள்.
3 எக்காள தொனியோடே அவரைத் துதியுங்
கள்;
வீணையோடும் சுரமண்டலத்தோடும் அவ
ரைத் துதியுங்கள்.
4 தம்புரோடும் நடனத்தோடும் அவரைத்
துதியுங்கள்;
வீணையோடும் நீங்குழலோடும் அவரைத்
துதியுங்கள்.
5 ஓசையுள்ள கைத்தாளங்களோடும் அவ
ரைத் துதியுங்கள்.
பேரோசையுள்ள கைத்தாளங்களோடும்
அவரைத் துதியுங்கள்;
6 சுவாசமுள்ள யாவும் யெகோவாவைத் துதிப்
பதாக;
அல்லேலூயா.

PROVERBS

# நீதிமொழிகள்

1 தாவீதின் குமாரனும் இஸ்ரவேலின் ராஜாவுமாகிய
சாலொமோனின் நீதிமொழிகள்:
2 ஞானமும் போதகமும் இவற்றால் அறிய
லாம்.
உணர்வுமொழிகளை உணர்ந்துகொள்ள
லாம்.
3 விவேகம் வினைக்கும் போதகத்தையும்,
நீதி, நியாயம், நேர்மைகளையும் அடைந்து
கொள்ளலாம்.
4 பேதையர்க்கு இவை விவேகம் அளிக்
கும்,
வாலிபர்க்கு அறிவும் யுக்தியும் தரும்.
5 புத்திமான் இவைகேட்டு அறிவில் உயர்
வான்,
உணர்வுள்ளவன் நல்யோசனை பெறு
வான்.
6 நீதிமொழி, உபமானம், ஞானிகளின்
வாக்கு,
அவர்கள் மறைமொழி இவற்றை அவை
உணர்ந்திடச்செய்யும்.

1: 7—9: 18.

7 யெகோவாவுக்குப் பயப்படுவதே ஞானத்
தின் ஆரம்பம்,
ஞானத்தையும், போதகத்தையும் மதிகே
டர் வெறுப்பார்.
8 மகனே, தந்தையின் போதகத்தைக்கேள்,
தாய் போதிப்பதைத் தள்ளிவிடாதே.
9 உன் தலைக்கு அவை அழகிய முடியாம்,
கழுத்துக்குச் சரப்பணியுமாகும்.
10 மகனே, பாவிகள் உனக்கு மயக்காட்டி
இழுத்தால் நீ சம்மதிக்கவேண்டாம்.
11 அவர்கள் உன்னிடம்: எங்களோடு வா,
இரத்தம் சிந்திட நாம் பதிவிருப்போம்,
காரணமின்றிக் குற்றமிலாரைப் பிடிக்க
ஒளித்திருப்போம்;
12 பாதாளம்போல் அவரை உயிரொடு
விழுங்குவோம்;
குழி இறங்கினவரைப்போல அவரை
முழுதும் விழுங்குவோம்;
சகலவித அரும்பொருளுங் கண்டடை 13
வோம்,
கொள்ளைப் பொருளால் நம் வீடு நிரப்பு
வோம்;
எங்களோடே சேர்ந்துகொள், 14
நமக்கெல்லாம் ஒரு பையே இருக்கும்
என்று சொல்லுவார்களேயாகில்
மகனே, வழியில் அவரொடு நடவாதே, 15
அவர் பாதைக்கு உன் காலை விலக்கு.
அவர்கள் கால் தீங்குசெய்வதற்கு ஓடும், 16
இரத்தம் சிந்துவதற்கே விரையும்.
எவ்வகைப் பறவையாயினும் சரி, 17
பறவை பார்த்திருக்க வலைவிரிப்பது
வீண்,
இவர்கள் பதிவிருப்பதோ தங்கள் இரத் 18
தத்திற்கே,
இவர்கள் ஒளித்திருப்பது தங்கள் உயிர்
இழப்பதற்கே.
பொருளாசைக்காரருக்கெல்லாம் இது 19
வே சம்பவிக்கும்,
பொருளாசை தன்னையுடையார் உயிரை
வாங்கிவிடும்.
ஞானம் வீதியிலே கூப்பிடும், 20
வெளிகளிலே சத்தமிடும்.
சந்தடிமிகுந்த தெருச்சந்திகளிலும், 21
பட்டணவாசல் திறந்திருக்குமிடங்களி
லேயும்
தன் வார்த்தைகளை இவ்விதம் உரைக்
கும்:
பேதைகாள், எதுவரை பேதைமை 22
விரும்புவீர்?
ஏளனக்காரர் எதுவரை ஏளனில் பிரியம்
வைப்பார்?
அறிவீனர் எதுவரை அறிவை வெறுத்
திருப்பார்?
திரும்பி எனது சிட்சைக்கு இடங்கொடுங் 23
கள்,
என் ஆவியை, இதோ, உங்களில் அருளு
வேன்,
என் வார்த்தைகளை உங்கட்கு அறிவிப்
பேன்.

24 நான் கூப்பிட்டேன், கேட்க மறுத்தீர்கள்,
கையை நீட்டினேன், கவனிப்பான் எவனும் இல்லை.
25 எனது ஆலோசனையனைத்தையும் தள்ளிவிட்டீர்,
எனது சிட்சைக்கு இணங்க மறுத்தீர்.
26 அப்படியே நானும் உமது ஆபத்தில் நகைப்பேன்,
திகில் உம்மைப் பிடிக்கையில் பரிகாசம் செய்வேன்.
27 புசல்போல் திகில் உம்மேல் வரும்போது
பெருங்காற்றுபோல் ஆபத்து உமக்கு நேரிடுங்கால்,
நெருக்கம், இடுக்கண் உம்மேல் வரும்போது இப்படிச் செய்வேன்.
28 அப்போது அவர் என்னை அழைப்பார், பதிலுரையேன்;
தேடிடுவார், என்னைக் கண்டடமாட்டார்.
29 காரணம் என்ன? அறிவை வெறுத்திட்டார்,
யெகோவாவுக்குப் பயப்படுவது அவர்க்கு இஷ்டமில்லை.
30 என் ஆலோசனைக்குச் செவி கொடுத்திலர்;
என் சிட்சையனைத்தையும் அலட்சியம் செய்தார்.
31 ஆதலின் தம் செயலால் விளைவதைப் புசிப்பார்,
தம் சூழ்ச்சியைத் தாமே அனுபவித்துச் சலிப்பார்.
32 பேதையரின் தவறு அவர் உயிரைக் கொல்லும்,
மதிகேடரின் நிர்விசாரம் அவரையே யழிக்கும்.
33 எனக்குச் செவிகொடுப்பவன் மோசமின்றி வசிப்பான்,
தீமை விளைவிக்கும் திகிலுக்கு விலகி அமர்ந்திருப்பான்.

**2** மகனே, ஞானத்திற்கு நீ செவிசாய்த்து
உணர்வுக்கு உன் இருதயத்தைத் திருப்பு மாறு
2 என் மொழிகளை நீ ஏற்றுக்கொண்டு
என் கட்டளை உன்னிடமே காத்து
3 விவேகத்தை வா எனக்கூப்பிட்டு
உணர்வைச் சத்தமிட்டு அழைத்து
4 வெள்ளியைப்போல் அதை நாடிப்
புதையலைத் தேடுவதுபோல் அதைத் தேடுவாயாகில்,
5 யெகோவாவுக்குப் பயப்படுவது இன்னதென்று நீ உணர்வாய்,
கடவுளை அறியும் அறிவைக் கண்டடைவாய்.
6 ஞானம் அளிப்பவர் யெகோவாவே,
அறிவும் உணர்வும் அவர் வாயிலிருந்து உதிக்கும்.
7 சுகவாழ்வை நேர்மையாளருக்காக வைத்திருப்பார்,
குற்றமின்றி நடப்போருக்குக் கேடகமாவார்.
8 நியாயம் நிறைவேறும் வழிகளைக்காத்துத்
தமது பக்தரின் பாதையைப் பார்த்துக் கொள்வார்.
9 அப்போது நீதி, நியாயம், நேர்மைகளையும்
சகல நன்னெறிகளையும் நீ உணர்ந்து கொள்வாய்.
10 ஞானம் உன் இதயத்தினுட்புகுந்து
அறிவு உன் ஆன்மாவுக்கு இன்பமாகும்;
11 யுக்தி உனக்குக் காவலாய் நின்றிடும்,
உணர்வு உன்னைக் காத்திடும்.
12 அது உன்னைத் துன்மார்க்கரின் வழிகளின்றும்
மாறுபாடு உரைப்பவரினின்றும் தப்புவிக்கும்.
13 அந்தகார வழிகளில் நடக்கும்படி
அவர்கள் நேர்மை நெறிகளினின்று விலகுவார்கள்;
14 தீமையானவற்றைச் செய்வதில் மகிழ்ந்து
மாறுபாட்டிலே களிப்பார்கள்.
15 அவர்கள் வழிகள் கோணலானவைகள்,
அவர்கள் நடப்பது மாறுபாடாம் வழிகளிலே.
16 அது உன்னை அந்நிய பெண்ணினின்று,
இனிய மொழிகள் உரைத்திடும் பரத்தையில் நின்றே, தப்புவிக்கும்;
17 அவள் தன் இளவயதின் நாயகனைவிட்டுத்
தன் கடவுளொடு செய்த உடன்படிக்கை மறந்தாள்.
18 அவள் வீடு மரணத்துக்கும்
அவள் பாதைகள் மரித்தோரிடமும் சாயும்;
19 அவளிடம் செல்வோர் எவரும் திரும்பார்,
ஜீவபாதைகளில் அவர்கள் சேர்வதுமில்லை.
20 இப்படியாக ஞானம் உன்னைக்காக்கவே
நீ நல்லவர்களின் வழியிலே நடப்பாய்,
நீதிமான்களின் பாதைகளைக் காத்துச் செல்வாய்.
21 நேர்மையாளரே தேசத்தில் வசிப்பார்,

குற்றமற்றோரே அதில் மீந்திருப்பார்.
22 தெய்வபயமற்றோர் தேசத்தினின்று நிர்
மூலமாவார்,
துரோகிகள் அதினின்று பிடுங்கப்படு
வார்.

**3** என் மகனே, என் போதகம் மறவேல்,
உன் இருதயம் என் கட்டளையைக்
காப்பதாக.
2 நெடுநாள் வாழ்வு, தீர்க்காயுள், சமாதா
னம்,
மென்மேலும் அவை உனக்குத் தரும்.
3 இரக்கம் உண்மைகள் உன்னைவிட்டு வில
காதிருக்க;
அவற்றைக் கழுத்தில் தரித்துக்கொள்
வாய்,
இதயப் பலகையில் அவற்றை எழுதிக்
கொள்க.
4 கடவுளின் பார்வை மனுஷர் பார்வை
யிலும்
அப்போது தயை, நல்விவேகம் பெறு
வாய்.
5 உன் உணர்வில் சாயாதே
உன் முழு நெஞ்சோடும் யெகோவாவை
நம்பு.
6 உன் எல்லா வழியிலும் அவரை நினை.
அப்போதவர் உன் பாதையை நேராக்கு
வார்.
7 உன்னையே புத்திமானென்று எண்ணுதே,
யெகோவாவுக்குப் பயந்து தீமைக்கு
விலகு.
8 உடலுக்கு அது ஆரோக்கியமாகும்,
எலும்புகளுக்கு அது ஊனுமாகும்.
9 யெகோவாவை உன் பொருளாலும்
உன் சகல விளைச்சலின் முதற்பலனாலும்
கனம்பண்ணு.
10 அப்போதுன் களஞ்சியங்கள் பூரணமாய்
நிரம்பிவிடும்,
ஆலைகளில் திராட்சரசம் வழிந்தோடும்.
11 மகனே, யெகோவா சிட்சையை அசட்
டை செய்யாதே,
அவர் கண்டிக்கும்போது வெறுப்படை
யாதே.
12 நேசமகனைப் பிதா சிட்சிப்பதுபோல்
யெகோவா தாம் நேசிப்பவனையும் சிட்
சிப்பார்.
13 ஞானத்தைப் பெற்ற மனுஷன்,
உணர்வை அடைந்துகொண்டவனே,
பாக்கியன்;
14 ஞானம் சம்பாதித்தல் வெள்ளியினும்
மேலாம்,
ஞானலாபம்பசும்பொன்னிலும்உத்தமம்.
முத்துக்களிலும் அது விலையேறியது, 15
ஆசிப்பதொன்றும் அதற்கு நிகராவ
தில்லை;
தீர்க்காயுள் அதன் வலக்கையிலுள்ளது, 16
செல்வம், மேன்மை அதன் இடக்கையில்
உளவாம்.
அதன் வழிகள் இன்ப வழிகளாம், 17
அதின் பாதைகளெல்லாம் சமாதானம்.
தனையடைந்தோர்க்கு அது ஜீவவிருட் 8
சம்,
அதைப் பற்றிக்கொள்ளும் எவனும்
பாக்கியன்.
ஞானத்தால் யெகோவா பூமிக்கு அஸ்தி 19
பாரமிட்டார்,
பேரறிவால் வானங்களை ஸ்தாபித்தார்;
அவர் அறிவால் ஊற்றுக் கண்கள் திறந் 20
தன,
ஆகாயமும் பனியைப் பொழிந்திடும்.
மகனே, விவேகம், யுக்தி இவற்றை 21
காத்துக்கொள்,
இவை உன் கண்களுக்கெதிரே நீங்கா
திருப்பதாக.
இவை உன் ஆத்துமாவுக்கு உயிராகும், 22
உனது கழுத்துக்கு அலங்காரமாகும்.
ஆகவே நீ பயமின்றி உன் வழியில் நடப் 23
பாய்.
உன் காலினுலே நீ இடறமாட்டாய்.
படுக்கும்போது நீ நிகில் கொள்வதில்லை, 24
படுக்கையில் உன் நித்திரை இனிதா
யிருக்கும்.
சடுதியில் வரும் நிகிலுக்கு அஞ்சிடவேண் 25
டாம்,
தெய்வ பயமற்றோர் பாழாகும்போதும்
அஞ்சவேண்டாம்.
உனது நம்பிக்கை யெகோவாவே, 26
உனது கால் சிக்கிக்கொளாதபடி அவர்
காப்பார்.
சக்தி உனக்கிருக்குங்கால் நன்மை பெறத் 27
தக்கவர்க்குச்
நன்மை செய்யாதிராதே.
கையிற் பொருளிருக்குங்கால் போய் 28
நாளைவாவென்று
அயலானிடம் சொல்லாதே.
அயலானுக்குத் தீங்கு செய்ய நாடாதே, 29
சந்தேகப்படாமல் அவன் உன்னோடு
வசிக்கிறான்.
தீங்கு உனக்கு ஒருவன் செய்யாதிருக்கக் 30
காரணமின்றி அவனோடு வழக்காடாதே.
கொடுமையுள்ளவன்மேல் பொறாமை 31
கொள்ளாதே,
அவன் நடைகளில் எதையும் விரும்
பாதே.

32 யெகோவா மாறுபாடுள்ளவனை அருவ
ருப்பார்,
நேர்மையாளரோடு அவரின் அந்தரங்க
சிநேகமுண்டு.
33 தெய்வபயமற்றோன் வீட்டிலே யெகோ
வாவின் சாபம்,
நீதிமான் வாசலையோ அவர் ஆசீர்வதிக்
கிறார்.
34 ஏளனக்காரரை அவர் ஏளனஞ் செய்
வார்,
தாழ்மையுள்ளவர்க்கோ கிருபையளிக்
கிறார்.
35 ஞானவான்களுக்கு மேன்மை கிடைக்
கும்,
மதிகேடரின் கதியோ அவமானமே.

**4** பிள்ளைகளே, தகப்பன் போதகம்
கேட்பீர்,
உணர்வை அறிய அதைக் கவனிப்பீர்.
2 நற்போதனையை நான் உமக்களிப்பேன்,
எனது உபதேசம் விடாதிருப்பீர்.
3 நானும் பிள்ளையாயிருந்தேன், எனக்கும்
பிதாவிருந்தார்,
தாய்க்கு ஒரே பிள்ளை, இளஞனுமாயிருந்
தேன்.
4 அவர் எனக்குப் போதித்து இதை
உரைத்தார்:
என் மொழிகளை உன் இதயம் காத்துக்
கொள்க,
என் கட்டளைகளைக் கைக்கொள், பிழைப்
பாய்.
5 ஞானம் தேடு, உணர்வைத் தேடிக்
கொள்,
என் வாய்மொழிகளை மறவேல், அவற்றி
னின்று விலகாதே;
6 அதைவிடேல், உன்னை அது காப்பாற்
றும்;
அதன்மேல் பிரியமாயிரு, அது உன்னைக்
காக்கும்.
7 ஞானமே பிரதானம், ஞானத்தைத் தேடிக்
கொள்,
தேடியவை எல்லாம் கொடுத்து உணர்
வைத் தேடுவாய்.
8 அதை மேலாக்கு, உன்னை அது உயர்த்தும்,
நீ அதைத்தழுவிடின் உன்னை மேன்மைப்
படுத்தும்.
9 அது உன் தலைக்கு அழகிய முடிசூடும்,
அலங்கார கிரீடம் உனக்கு அளிக்கும்.
10 மகனே, கேள், என்மொழி ஏற்றுக்
கொள்;
அப்போது உன் ஆயுள் நாள் பெருகும்.
11 உனக்கு நான் போதித்தது ஞானவழி,
உன்னை நான் நடத்தியது நேர்மையான
பாதையே.
12 அவற்றில் நடந்தால் உன் வழி இடுக்க
மாகாது,
அதிலே ஓடினும் இடறிவிழமாட்டாய்.
13 நற்போதகத்தைப் பற்றிக்கொள், விட்டு
விடாதே,
அதைக் காத்துக்கொள், அது உனக்குயி
ராமே.
14 தெய்வபயமற்றோர் பாதையிற் செல்
லாதே,
தீயோரின் வழியில் நடவாதே.
15 அத்திசை செல்லேல், அதின் வழி போ
கேல்,
அவ்வழிவிட்டு விலகிச்செல்வாய்.
16 தீமைசெய்தாலன்றி அவர் தூங்குவ
தில்லை
எவரையேனும் விழத்தள்ளாவிடில் அ
வர் தூக்கம் கலையும்.
17 தெய்வபயமின்மையே அவர் உணவு,
கொடுமையின் ரசமே அவர் பானம்.
18 நீதிமான்கள் பாதை உதய ஒளிபோல்,
நடுப்பகல்வரை மேன்மேல் வளரும்.
19 தெய்வபயமிலாப் பாதையோ காரிரு
ளாம்,
தாங்கள் இடறுவது எதில் என்று தாம
றியார்.
20 என் மகனே, நான் சொல்வதைக்
கவனி,
என் மொழிகளுக்கு உன் செவி சாய்ப்
பாய்.
21 இவை கண்களுக்கெதிரே நீங்காதிருப்ப
தாக,
அவற்றை உன் இதயத்தினுள்ளே காத்
துக்கொள்.
22 அவை தமைக்கண்டுகொள்வோர்க்கு ஜீவ
னும்,
அவை உடலுக்கெல்லாம் ஆரோக்கியம்.
23 எல்லாப் பொருட்கு மேலாக இதயத்
தைக் காத்துக்கொள்வாய்
ஜீவகுணம் அதிலே தோன்றும்.
24 தாறுமாறு நிகழாமல் நாவைக் காப்பாய்,
உதடுகளுக்கு மாறுபாடு தூரமாய்விடுக.
25 கண்களிரண்டும் நேராய் நோக்கு,
கண்ணிமைகொண்டு முன்னேரே பார்.
26 நீ செல்லும் பாதையைக் கவனித்துக்
கொள்,
உன் வழிகளெல்லாம் நிலைவரமாயிருப்ப
தாக.
27 வலப்புறம் சாயேல், இடப்புறம் வில
கேல்,
தீமையினின்று உன் காலை விலக்கு.

**5** என் மகனே, என் ஞானத்தைக் கவனி,
உணர்வுமொழிக்குன் செவிசாய்த்திடு வாய்.
2 அப்போது யுக்தியைப் பேணிக்கொள் வாய்,
அறிவை உன் உதடு காத்துக்கொள் ளும்;
3 பரஸ்திரீ உதடு தேன் ஒழுகு கூடி,
அவள் வாய் எண்ணெயிலும் மிருது.
4 முடிவிலே அது எட்டிபோல் கசக்கும்,
இருபுறமும் கருக்குள்ள பட்டயம் போல் அது கூர்மையாம்.
5 அவள் கால் மரணத்துக்கு இறங்கும்,
அவள் காலடிகள் பாதாளம் பிடித்தே கும்.
6 ஜீவவழியைச் சிறிதும் சிந்தியாள்,
அவள் பாதைகள் நிலையற்றன, அவளும் அதை அறியாள்.
7 இப்பொழுதும் பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுப்பீர்,
நான் உரைப்பவற்றை விட்டு விலகா தீர்;
8 உன் வழி அவட்குத் தூரமாவதாக,
அவள் வீட்டுவாசலுக் கிட்டிச்சேராதே.
9 சேர்ந்தால் உன் மேன்மையை அந்நி யர்க்கு அளிப்பாய்,
உன் வாழ்நாள் சம்பத்தைக் கொடி யோர்க்குக் கொடுப்பாய்.
10 உன் செல்வத்தால் அந்நியர் திருப்தியா வார்,
உன் உழைப்பின் பலன் பிறர் வீட்டில் சேரும்.
11 உன் தசையும் உடலும் உருவழிந்திடுங் கால்
இறுதியிலே நீ அலறி, ஐயோ,
12 போதகத்தை நான் வெறுத்தேனே,
சிட்சையை மனதில் அலட்சியம் செய் தேனே,
13 போதிப்பார் சொல்லை நான் கேளாமற் போனேனே,
உபதேசிப்பாருக்குச் செவி சாயாதிருந் தேனே,
14 சபை, சங்கம் இவற்றுள் எல்லாத் தீங் குக்கும் உள்ளாயிருப்பேன்,
சற்றே தான் தப்பினேன் என்று சொல் வாய்.
15 உன் தொட்டியில் வைத்த ஜலத்தை யும்
உன் கிணற்றில் ஊறும் நீரையும் குடித் திரு.
16 உன் ஊற்றுகள் வெளியிலும்
உன் ஓடைகள் வீதிகளிலேயும் பாயத் தகுமோ?
17 அவைகள் உனக்கே உரியனவாக,
அந்நியர்க்கும் உன்னோடு உரித்தாக வேண்டாம்.
18 உன் ஊற்றுக்கண் ஆசீர்வதிக்கப்படுக,
உன் இளவயதின் நாயகியொடு மகிழ்ந் திரு.
19 அவள் பிரிய பெண்மான், அழகிய வரை யாடு,
அவள் மார்பு உன்னை எப்பொழுதும் மகிழ்விக்க,
அவள் காதலில் நீ மயங்கியிருக்க.
20 மகனே, நீ பரஸ்திரீ மயக்கங்கொள்வ தேனோ?
அந்நியபெண் மார்பைத் தழுவவேண்டி யதேனோ?
21 மானிடன் வழிகள் யெகோவாவின் கண் முன் உள்ளன,
அவன் பாதைகளை எல்லாம் அவர் கவ னிப்பார்.
22 தெய்வபயமற்றோனை அவன் அக்கிரமமே பிடிக்கும்,
தன் பாவக்கயிறுகளாலேயே கட்டப்படு வான்.
23 போதகத்தைக் கேளாததினால் மடிவான்,
தன் மதிகேட்டின் மிகுதியால் மயங்கிடு வான்.

**6** மகனே, அயலானுக்காக நீ பிணைப் பட்டு
அந்நியனுக்குக் கையடித்துக்கொடுத்து
2 நீ உன் வாய்மொழிகளிலே சிக்குண்டு
உன் வாய்மொழிகளிலே பிடிபட்டால்,
3 மகனே, உன் அயலான் கையில் நீ அகப் பட்டபடியாகையால்
உன்னை விடுவிப்பதற்கு இப்போது இது செய்:
உன் அயலானிடம் விரைந்து வருந்திக் கேள்,
4 உன் கண்களுக்குத் தூக்கம் வரவிடாதே,
உன் இமைகள் உறங்கவேண்டாம்;
5 வேட்டைக்காரன் கைக்கு வெளிமானும்,
குழுவன் கைக்குக் குருவியும் தப்புவது போல் தப்பிடுப்பார்.
6 சோம்பேறி, எறும்பினிடம் போ,
அதன் வழியைப் பார்த்து ஞானம் பெறு வாய்.
7 அதற்கு அதிபதியில்லை, தலைவனுமில்லை,
ஆண்டு நடத்துவோனுமில்லை.
8 வெயில்காலம் உணவைச் சம்பாதிக்கும்,
அறுப்பிலே தானியம் சேர்த்துவைக்கும்.

9 சோம்பேறீ, எதுவரை படுத்திருப்பாய்?
தூக்கம்விட்டு எப்போது எழுந்திருப்பாய்?
10 இன்னுங்கொஞ்சம் தூக்கம், இன்னும்
சிறிது நித்திரை,
இன்னும் கைமுடக்கிச் சிறிது உறக்கம்
என்பாயோ?
11 தரித்திரம் வழிபறிப்பவன்போல் வரும்,
வறுமை ஆயுதமணிந்தவன்போல் வரும்.
12 உதவாதவன், ஓர் அக்கிரமக்காரன்,
தாறுமாறு பேசியலைகிறான்;
13 கண்ணைச் சிமிட்டிடுவான், காலாலும்
பேசிடுவான்,
காட்டிடுவான் சைகை விரலால்.
14 மாறுபாடு அவன் இதயத்திலுள்ளது,
இடைவிடாமல் அவன் தீமை பிணைப்
பான்,
சண்டைகளுக்கு எங்கும் விதை போடு
வான்.
15 ஆதலின், நிர்ப்பாக்கியம் அவனுக்கு
விரைந்து வரும்,
சடுதியில் நாசமடைவான், பிழையான்.
16 யெகோவா வெறுக்கின்றவைகள் ஆறு,
ஏழும் அவருக்கு அருவருப்பே:
17 அகந்தைக் கண், பொய்நாவு,
குற்றமில்லா ரத்தம் சிந்துங்கை,
18 தீயசூழ்ச்சி பிணைக்கும் இதயம்,
பொல்லாங்குக்கு விரைந்தேகுங் கால்,
19 பொய் உரைக்கும் கள்ளச்சாட்சி,
சகோதரருக்குள் சண்டை விதைப்பது
ஆகிய இவையே.
20 மகனே, உன் தந்தையின் கட்டளை
யைக் காத்துக்கொள்,
தாயின் போதனையைத் தள்ளாதே.
21 அவற்றை என்றும் உன் இதயத்தின்
மேல் அணிந்துகொள்,
உன் கழுத்திலே அவற்றை கட்டிக்
கொள்.
22 நடக்கும்போது உனக்கு அது வழிகாட்
டும்,
படுக்கும்போது உனக்கு அது காவலா
கும்,
விழிக்கும்போது உன்னோடு அது உரை
யாடும்.
23 கட்டளை விளக்கு, போதனை ஒளி,
போதகம், சிக்ஷை இவை ஜீவவழி.
24 அது உன்னைத் துன்மார்க்க ஸ்திரீ நின்
றும்
இனிய நா உடைய பரஸ்திரீயினின்றும்
விலக்கும்.
25 இதயத்திலே அவள் அழகை இச்சி
யாதே,
கண்ணிமைகளால் அவள் உன்னைக்கவர்ந்
திட வொட்டேல்.
26 வேசிக்கள்ளன் வாழ்வு ஓர் அப்பத்துண்டு
அளவாய்க் குறையும்,
விபசாரி அருமையான ஆன்மாவை
வேட்டையாடுகிறாள்.
27 தன் ஆடைவேகாமல் யாராகிலும் மடியில்
வைத்திருக்கலாமோ தணல்.
28 தன்கால் சுடாமல் தழலின் மேலே
நடப்பவன்யார்.
29 பிறன் மனைவியிடம் செல்வார்க்கு இப்
படியாகும்,
அவனைத் தொடுமெவனும் குற்றமிலான்
ஆகான்.
30 தன் பசிதீர்த்தற்கென்றே ஒருவன் திருடி
னும்
கண்டார் அவனை இகழமாட்டாரோ?
31 பிடிபட்டாலோ எழுமடங்கு கொடுத்
தத் தீர்க்கவேண்டியதாகும்,
தன்வீட்டின் பொருளெல்லாம் கொடுத்
திடவேண்டியதாமே.
32 பிறன் மனையோடு விபசாரம் செய்பவன்
புத்தியில்லாதவன்,
தன் உயிரைத் தானே மாய்ப்பவன்
ஆவான்.
33 அவன் வாதையும் இலச்சையும் அடை
வான்,
அவன் மேலுள்ள நிந்தை என்றும் ஒழி
யாது.
34 மனைவிமேல் சந்தேகம் புருஷன் மூர்க்
கத்தை எழுப்பும்,
பழிவாங்கும் நாளிலே அவன் இரக்கம்
காட்டான்.
35 எந்த ஈட்டையும் மதித்திடமாட்டான்,
திரள் பொருளைக்கொடுத்தாலும் அமர்ந்
திருக்கமாட்டானே.

7 மகனே, என் வார்த்தைகளைக் காத்துக்
கொள்,
என் கட்டளைகளை உன்னிடமே வைத்திரு.
2 என் கட்டளைகளைக் கைக்கொள், பிழை
ப்பாய்,
கண்மணிபோல் போதனையைக் காத்துக்
கொள்;
3 அவற்றை உன் விரல்களில் கட்டிக்
கொள்,
இதயப் பலகையில் அவற்றை எழுதிக்
கொள்.
4 ஞானத்தினிடம், நீ உன் சகோதரி என்று
சொல்,
உணர்வை நீ என் உறவினள் என்று
அழை.

5 இனியமொழி பேசும் அந்நிய பெண்ணு
இய
பரஸ்திரீயினின்று அவை உனை விலக்கிக்
காக்கும்.
6 நான் என் வீட்டின் ஜன்னலில் நின்று
பலகணிவழியே நோக்கினபோது,
7 புத்தியில்லா வாலிபன் ஒருவனைப்
பேதையர் மத்தியில் கண்டேன், திறியர்
மத்தியில் கவனித்தேன்;
8 தெருவிலே சந்தி முனையினருகே அவன்
நடந்தான்,
அவள் வீடுசெல்லும் வழியே எகினன்;
9 மாலைமயங்கும் அஸ்தமனநேரம்,
காரிருளும் இரவும் கவியும்நேரம்,
10 இதோ, ஒரு பெண் அவனுக்கெதிர்ப்
பட்டாள்;
வேசையின் ஆடை தரித்தவள், சுந்தர
மனதுள்ளவள்.
11 —அவள் பரபரத்தவள், அடங்காமன
முடையாள்,
வீட்டில் அவள் கால் தரிப்பதில்லை,
12 தெருவிலே நிற்பாள், அதோ, வெளி
களிலே வருவாள்,
சந்திமுனைதோறும் பதிவிருப்பாள்.—
13 அவனைப் பிடித்து அவள் முத்தமிட்டு
முகம் நாணமல் அவனோடு பேசி:
14 சமாதான பலிகள் நான் படைக்க
வேண்டியிருந்தது,
என் பொருத்தனைகளை இன்றே செலுத்தி
னேன்;
15 ஆதலின் எதிர்ப்பட்டு உன்னைக்காணவந்
தேன்,
உன் முகத்தை நாடி வந்தேன், உன்
னைக் கண்டுகொண்டேன்;
16 என் மஞ்சத்திலே ரத்தினக்கம்பளமும்
எகிப்தின் மெல்லிய விசித்திர வஸ்திரமும்
விரித்துவைத்தேன்.
17 படுக்கையை வெள்ளைப்போளம், சந்த
னம்,
லவங்கம் இவற்றால் வாசனையிட்
டேன்,
18 வா, விடியற்காலம் வரை சம்போகமா
யிருப்போம்,
இன்பங்களிலூலே பூரித்திடுவோம்,
19 என் புருஷன் வீட்டிலே இல்லை,
தூரப்பயணம் சென்றிருக்கின்றான்,
20 பணப்பையைத் தன்கையிற் கொண்டு
போனான்,
பௌர்ணமியன்று வீடு திரும்புவான்
என்று சொன்னாள்.
21 இனியசொல் பலசொல்லி அவனை வசப்
படுத்தித்
தன்உதட்டின் மிருதுமொழியால் அவனை
மயக்குகின்றாள்.
22 உடனே அவன் அவள் பின் செல்கின்
றான்;
அடிக்கப்படும்படி ஒரு மாடு செல்வது
போலும்,
விலங்கிடப்பட்ட மூடன் தண்டனைக்குப்
போவதுபோலும்
23 ஓர் அம்பு அவன் ஈரலைப் பிளக்கும்
வரை போகிறான்;
குருவி கண்ணியில் விழ விரைவதுபோற்
செல்கிறான்;
அது தன் பிராணனை வாங்கிவிடும் என்
றறியான்.
24 இப்போதும் பிள்ளைகளே, எனக்குச்
செவிகொடுங்கள்,
என் வாயின் மொழிகளைக் கவனியுங்கள்.
25 உன் இதயத்தை அவள் வழியிலே சாய
விடாதே,
அவள் பாதையிலே மயங்கித் திரியாதே.
26 காயப்படுத்தி அநேகரை அவள் வீழ்த்தி
னாள்,
அவளால் கொலையுண்டோர் பலதிரள்.
27 அவள் வீடு பாதாளத்திற்கு எடுத்துவழி,
மரண அறைகளுக்கே அது இறங்கும்.

8 ஞானம் கூப்பிடுவதில்லையோ?
உணர்வு சத்தமிடுவதில்லையோ?
2 வழியருகேயுள்ள மேடைகளின் உச்சி
யிலும்
பாதைகள் சந்திக்கும் இடங்களிலும்
அது நிற்கிறதே.
3 ஊர்வாசல் ஓரம், பட்டண முகப்பு,
வாசல் நடையிலும் நின்று சத்தமிட்
டழைத்து:
4 மானிடரே, நான் கூப்பிடுவது உங்களை
யே,
நான் கூவிச்சொல்வது மனுப்புத்திரருக்
கே,
5 பேதைகளே, விவேகம் அடைந்திடுங்கள்,
மதிகேடரே, புத்தியைப் பெற்றிடுங்கள்;
6 கேளுங்கள், மேலானவைகளை உரைத்திடு
வேன்,
என் உதடுகளை நேர்மை விளம்புவதற்
குத் திறப்பேன்.
7 என் வாய் உரைப்பது சத்தியமே,
துன்மார்க்கம் என் உதட்டுக்கு அரு
வருப்பு.
8 என் வாய் உரைப்பனவெல்லாம் நீதி,
உருட்டும் புரட்டும் அதில் இல்லை.
9 உணர்வுள்ளவனுக்கு அவையெலாம்
தெளிவே,

அறிவடைந்தோர்க்கு அது நேர்மையாம்;
10 வெள்ளியைப்பார்க்கிலும் என் போதகத்
தையும்
அரும்பொன்னைப்பார்க்கிலும் அறிவை
யும் அங்கீகரித்திடுங்கள்.
11 முத்துக்களிலும் ஞானமே சிரேஷ்டம்,
ஆசிப்பதொன்றும் அதற்கு நிகராவ
தில்லை.
12 ஞானம் என்னும் நான் விவேகத்தோடு
வசிக்கிறேன்,
யுக்தியும் அறிவும் எனக்குரியன.
13 யெகோவாவுக்குப் பயப்படுவது தீமை
யைப் பகைப்பதாம்;
பெருமை, வீம்பு, தீமையான வழி,
புரட்டு வாய் அனைத்தையும் நான் பகைக்
கிறேன்.
14 ஆலோசனை விவேகங்கள் என்னுடை
யன,
நானே அறிவு, வலிமை என்னுடையதே.
15 என்னாலேயே அரசர் அரசாளுகின்றார்,
அதிகாரிகள் நீதிநியமங்கள் விதிக்கிறார்
கள்.
16 அதிகாரிகள், பெரியோர், பூமியின் நியா
யாதிபர்,
அனைவர்க்குமுரிய அதிகாரமென்ன
லேயே.
17 என்னை ஆசிப்பவரை நானும் ஆசிப்
பேன்,
என்னைத்தேடுவோர் என்னைக் கண்டடை
வார்.
18 செல்வமும் மேன்மையும் என்னிட
முண்டு.
ஒழியாப் பொருளும் நீதியுமுண்டே.
19 பொன்னைத்தங்கம் இவற்றிலும் என்னால்
வரும் பலன் மேலாம்,
அரிய வெள்ளியிலும் என்னால் விளைவது
மேலாம்.
20 நீதியான வழியிலும்
நியாய பாதைகளிலும் நான் நடந்து
21 பொருட்களை என் நண்பர் சுதந்தரிக்கச்
செய்வேன்,
அவர்கள் பொக்கிஷங்களை நான் நிரப்பு
வேன்.
22 தமது சிருஷ்டிகளில் யெகோவா
என்னையே முதல்முதல் படைத்தார்.
23 நித்தியத்தில் ஆதியிலே பூமி உண்டாகு
முன்னே,
நான் ஏற்பட்டேன்.
24 ஆழங்களும் நீர் புரண்டுவரும் ஊற்று
களும்
உண்டாகுமுன் நான் ஜெநிப்பிக்கப்பட்
டேன்.
மலைகள் நிலைபெறுமுன்னும் 25
குன்றுகள் உண்டாகுமுன்னும்
பூமியும் வெளிகளும் பூமியின் முதல் 26
மண்பொடியும்
அவரால் உருவாகுமுன் நான் ஜெநிப்பிக்
கப்பட்டேன்.
அவர் வானத்தை நிறுத்துகையில் நான் 27
அங்கிருந்தேன்,
கடல்மேல் ஆகாயவிரிவை அவர் குறிக்
கையில்,
வானிலே மேகங்களை ஏற்படுத்துகையில், 28
ஆழத்தின் ஊற்றுகள் பலத்தொடு பொங்
குகையில்,
கடல்நீர் அவர் நியமம் மீறுதபடி அதற்கு 29
எல்லையிட்டு
பூமிக்கு அஸ்திபாரமிடுகையிலே
அவர் அருகே நான் செல்லப்பிள்ளை 30
யாய் வளர்ந்தேன்,
நித்தம் மகிழ்ந்து காலமெலாம் அவர்
முன் விளையாடினேன்.
அவர் படைத்த பூவுலகில் நான் விளை 31
யாடித் திரிந்தேன்,
மனுமக்களோடே மனமகிழ்ந்திருந்தேன்
இப்போதும் பிள்ளைகளே, எனக்குச் 32
செவிகொடுங்கள்,
என் வழியைக் காத்து நடப்போர் பாக்
கியர்.
என் போதகத்தைக்கேட்டு ஞானமடை 33
யுங்கள்,
அதைத் தள்ளிவிடாதிருங்கள்.
என் வாசற்படியிலே நித்தம் விழித் 34
திருந்து
எனது கதவு நிலையருகே காத்திருந்து
எனக்குச் செவிகொடுக்கும் மனுஷன்
பாக்கியவான்.
என்னைக்கண்டவன் ஜீவனைக் கண்டவ 35
னாவான்,
யெகோவாவிடம் அவன் தயை பெறு
வான்.
என்னைக்காணத் தவறுபவன் தன் உயிர் 36
நாசமுறச் செய்வான்;
என்னைப்பகைப்போரெல்லாரும் மரணம்
ஆசிப்பவர் என்றுரைக்கும்.

**9** ஞானம் தனது மாளிகையைக் கட்டித்
தனது ஏழுதூண்களையும் நிறுத்தி,
தனது கொழுத்த ஜந்துக்களையடித்து, 2
திராட்சரசம் கலந்துவைத்து, பந்தியை
ஆயத்தஞ்செய்து,
தனது தோழிகளை அனுப்பி, நகரத்தின் 3
உயர்மேடைகளின்மேல் நின்று கூப்
பிட்டு:

4 எவன் பேதையோ அவன் இங்குவரட்
டும் என்று சொல்லும்;
புத்தியில்லாதவனோடு அது பேசி:
5 நீ வந்து எனது அப்பம் புசித்திடு,
நான் கலந்துவைத்த திராட்சரசத்தைக்
குடித்திடு,
6 பேதைமை விடு, அப்போது பிழைப்
பாய்,
உணர்வின் வழியே நட என்று உரைக்
கும்.
7 —பரியாசக்காரனைக் கண்டிப்போன்
லச்சைபெறுவான்,
தெய்வபயமற்றோனைக் கண்டிப்பவன்
தானே கறைப்படுவான்.
8 பரியாசக்காரனைக் கண்டியாதே, அவன்
உன்னை பகைப்பான்;
ஞானமுள்ளவனைக் கடிந்துகொள்,
அவன் உன்னை நேசிப்பான்.
9 ஞானமுள்ளவனுக்குக் கொடு, அவன்
இன்னும் ஞானமடைவான்,
நீதிமானுக்கு உபதேசம்பண்ணு, அவன்
அறிவில் வளர்வான்.
10 யெகோவாவுக்குப் பயப்படுவதே ஞானத்
தின் ஆரம்பம்,
பரிசுத்தரை அறியும் அறிவே உணர்
வாம்—
11 என்னாலே உன் வாழ்நாள் பெரு
கும்,
உனது ஆயுளின் வருஷங்கள் விருத்தி
யாகும்.
12 நீ ஞானியானால் ஞானியாவதின் பயன்
உனக்கே,
நீ பரியாசக்காரனானால் அதன் பயனும்
உனக்கேயாம்.
13 மதிகேடான ஸ்திரீ வாயாடி,
அவள் யாதுமறியாப் பேதைமை யுரு
வம்.
14 அவள் தன் வாசற்படியிலும்
நகரின் மேடைகள்மீதும் ஆசனம்போட்
டமர்ந்து,
15 தம் வழிநோக்கி நேரேசெல்லும்
வழிப்போக்கரைப் பார்த்துப்பேசி:
16 எவன் பேதையோ அவன் இங்குவருக
என்று சொல்லுவாள்;
புத்தியில்லாதவனோடு அவள் பேசி:
17 திருட்டு நீர் இத்திக்கும்,
அந்தரங்கத்தின் அப்பம் இன்பமாம்
என்று சொல்லிக் கூப்பிடுவாள்.
18 மரித்தோரே அவ்விடமிருப்பார் என்
றும்
அவள் விருந்தினர் பாதாள ஆழத்தில்
கிடப்பாரென்றும் அவன் அறியானே.

10: 1–22: 16.

சாலொமோனின் நீதிமொழிகள்:— **10**
ஞானமுள்ள மகன் தந்தையை மகிழ்விப்
பான்,
மதியீன மகனோ தாய்க்குத் துயரமா
வான்.
2 தெய்வபயமிலார் சல்வம்ஒன்றுக்கும்
உதவாது,
நீதியோ மரணத்தினின்று விடுவிக்கும்.
3 நீதிமான் பசியினால் வருந்த யெகோவா
விடார்,
தெய்வபயமிலார் ஆசையைத் தள்ளிடு
வார்.
4 சோம்பற்கையால் வேலை செய்பவன்
ஏழையாவான்,
சுறுசுறுப்புளோன் கை செல்வம் தரும்.
5 புத்தியுள்ள மகன் கோடையில் சேர்ப்
பான்,
அறுப்புகாளில் தூங்கும் மகன் இலச்சை
வருவிப்பான்.
6 நீதிமான் தலையில் ஆசீர்வாதம்,
தெய்வபயமிலான் வாயைக் கொடுமை
மூடும்.
7 நீதிமான்பேரால் ஆசீர்வாதம் வழங்கும்.
தெய்வபயமிலான் பேரோ அழிந்து
போம்.
8 ஞான இதயமுள்ளவன் கட்டளைக்குச்
செவிகொடுப்பான்,
அலப்புவாய் மூடனோ விழுந்துபோ
வான்.
9 குற்றமின்றி நடப்போன் பயமின்றி
நடப்பான்,
கோணல்வழி நடப்போன் மறைந்திருக்க
முடியாது.
10 கண்சாடை காட்டுவோன் துயரம் வினை
விப்பான்,
அலப்புவாய் மூடனோ விழுந்துபோ
வான்.
11 நீதிமான் வாய் ஜீவ ஊற்று,
தெய்வபயமிலான் வாயைக் கொடுமை
மூடும்.
12 பகை சண்டைகளை எழுப்பும்,
அன்பு சகல பாவங்களையும் மூடும்.
13 உணர்வுளோன் உதடுகளில் ஞானம்
விளங்கும்,
புத்தியிலான் முதுகுக்குப் பிரம்பே.
14 ஞானவான் அறிவைச் சேர்த்துவைப்
பான்,
மூடனின் வாய்க்கும் நாசத்துக்கும்
தூரமில்லை.
15 தனவானின் தனம் அவனுக்கு அரணான
பட்டணம்,

ஏழைகளின் வறுமையோ அவர்களுக்கே நாசம்.

16 நீதிமான் உழைப்பால் ஜீவன் பிறக்கும்,
தெய்வபயமிலான் விர்த்தியால் பாவம் பிறக்கும்.

17 போதகம்காப்பவன் ஜீவவழியில் நடப்பான்,
சிட்சையை வெறுப்பவன் தவறிப்போவான்.

18 பகை மறைப்பவன் பொய் உதடன்,
புறங்கூறுபவனே மதிகேடன்.

19 சொல் பெருகினால் பாவமில்லாதிராது,
உதட்டை அடக்குவோனே புத்திமான்.

20 நீதிமானின் நாவு அரிய வெள்ளி,
தெய்வபயமிலான் உள்ளம் ஒன்றும் பெறாது.

21 நீதிமான் உதடுகள் பலரைப்போஷிக்கும்,
மூடர் புத்தியில்லாமையால் மாளுவார்.

22 யெகோவாவின் ஆசீர்வாதம் செல்வம் வருவிக்கும்,
உழைப்பினால் அத்துடன் ஒன்றும் சேர்வதில்லை.

23 மதிகேடனுக்கு விளையாட்டு தீமை செய்வதே,
உணர்வுள்ளவனுக்கு ஞானமும் அப்படியே.

24 தெய்வபயமிலான் பயப்படுவது அவனுக்கு நிகழும்,
நீதிமான் ஆசிப்பது அவனுக்குக் கிடைக்கும்.

25 சுழல்காற்றடிக்கவே தெய்வபயமிலான் இல்லாமற்போவான்,
நீதிமானே என்றும் ஒழியாத அஸ்திபாரம் போல்வான்.

26 பல்லுக்குப் புளிப்பு, கண்ணுக்குப் புகை,
தன்னை அனுப்புவோர்க்குச் சோம்பேறியும் அப்படியே.

27 யெகோவாவுக்குப் பயப்படுவது ஆயுசு நாட்களைப் பெருக்கும்,
தெய்வபயமிலான் ஆண்டுகளோ குறுகிப் போம்.

28 நீதிமான் எதிர்பார்ப்புதைப் பெற்று மகிழ்வான்,
தெய்வபயமில்லாதவன் நம்பி ஆசிப்பது அழியும்.

29 யெகோவாவின் வழி குற்றமிலார்க்கு அரணும்,
அக்கிரமஞ்செய்வோருக்கோ அது அழிவாம்.

30 நீதிமான் என்றும் அசைக்கப்படுவதில்லை,
தெய்வபயமிலாரோ தேசத்தில் வசிப்பதில்லை.

நீதிமான் வாயிலே ஞானம் கனியும், 31
மாறுபாடுள்ள நாவு அறுப்புண்டுபோகும்;
நீதிமான் உதடு உசித மொழிகளை அறியும், 32
தெய்வபயமிலார் வாயோ மாறுபாடுள்ளது.

**11** கள்ளத்தராசு யெகோவாவுக்கு அருவருப்பு,
சுமுத்திரை நிறைகல்லோ அவருக்குப் பிரியம்;
2 அகந்தை வரவே இலச்சையும் வந்துவிடும்,
தாழ்ந்த மனமுடையாரிடமே ஞானம்.
3 நேர்மையாளருக்கு அவர்கள் நல்லொழுக்கமே வழிகாட்டும்,
துரோகிகளையோ அவர்கள் மாறுபாடே பாழாக்கும்.
4 கோபாக்கினைநாளில் செல்வம் உதவாமற் போம்,
நீதியோ மரணத்தினின்று விடுவிக்கும்.
5 குற்றமிலான் நீதி அவன் வழியை நேராக்கும்,
தெய்வபயமிலான் தன் துன்மார்க்கத்தால் விழுவான்.
6 நேர்மையாளரின் நீதி அவர்களைத் தப்புவிக்கும்,
துரோகிகளோ தங்கள் துராசையிலே அகப்படுவார்கள்.
7 தெய்வபயமிலான் நம்பிக்கை மரணத்தில் அற்றுப்போம்,
அக்கிரமக்காரர் எதிர்பார்ப்பது அழிந்தே போம்.
8 நீதிமான் இடுக்கத்தினின்று விடுவிக்கப்படுவான்,
அவனிருந்த இடத்திற்குத் தெய்வபயமிலான் வருவான்.
9 தெய்வமிகழ்வோன் தன் வாயாலே தனது அயலானைக் கெடுப்பான்,
நீதிமானே தனது அறிவினால் தப்புவிக்கப்படுவான்.
10 நீதிமான்கள் வாழ்ந்திருக்க நகரம் களிகூரும்,
தெய்வபயமிலார் அழியவே கெம்பீரமுண்டாகும்.
11 நேர்மையாளர் ஆசீர்வாதத்தால் நகர் சிறக்கும்,
தெய்வபயமிலார் வாயோ அதை இடித்து வீழ்த்திவிடும்.
12 புத்தியிலான் தனது அயலானை இகழ்ந்துரைப்பான்,
உணர்வுள்ளவனே வாய் பேசாதிருப்பான்.

13 தூற்றித் திரிபவன் இரகசியங்களை வெளி
யிடுவான்,
நம்பத்தக்க சுபாவமுடையவன் காரியத்
தை மூடிவைப்பான்.
14 ஆலோசனையில்லா இடத்தில் ஜனங்கள்
தவறுவார்கள்,
ஆலோசனைக்காரர் பலரிருந்தால் சுக
முண்டாகும்.
15 அந்நியர்க்குப் பிணைப்படுவோன் வெகு
பாடுபடுவான்,
கையடித்துப் பிணைப்படுதலை வெறுப்
பவன் சுகம்பெறுவான்.
16 சௌந்தரியவதி புகழ்பெறுவாள்,
கொடுமைக்காரர் செல்வத்தைக் காப்
பார்.
17 இரக்கமுள்ளோன் தன் உயிருக்கே
நன்மை செய்வான்,
குரூரமுள்ளோன் தன் உடலுக்குத்
தீங்குசெய்வான்.
18 தெய்வபயமிலான் பெறும் லாபம் பொய்
யே,
நீதிவிதைப்பவன் மெய்ப்பலன் பெறு
வான்.
19 நீதியில் நிலைப்பவன் ஜீவவழியில் செல்லு
கிறான்,
தீமையைப் பின்தொடர்பவனே மரண
வழி எகுகிறான்.
20 மாறுபாட்டு இதயமுள்ளோர் யெகோ
வாவுக்கு அருவருப்பு,
குற்றமிலா வழிநடப்போர் அவருக்குப்
பிரியர்.
21 துஷ்டன் தண்டனைக்குத் தப்பமாட்
டான், நிச்சயமே;
நீதிமான் சந்ததியோ விடுதலைபெறும்.
22 விவேகமிலா சௌந்தரியவதி பன்றியின்
மூக்கிலே
பொன்மூக்குத்தி போலிருப்பாள்.
23 நீதிமான்கள் ஆசையெல்லாம் நன்மை
யாய் முடியும்,
தெய்வபயமிலார் எதிர்பார்ப்பது கோபாக்
கினையாம்.
24 வாரியிறைத்தும் செல்வரானவரும்,
செய்யத்தக்க செலவு செய்யாதிருந்தும்
வறுமையுற்றவரும் உண்டு.
25 உதாரகுணமுள்ள ஆன்மா செழிக்கும்,
ஜலம் வார்ப்போன் ஜலம்பெறுவான்.
26 தானியம் கட்டிவைத்துக்கொள்பவனை
ஜனமெலாம் சபிக்கும்,
அதை விற்பவன் தலைமேல் ஆசீர்வாதம்
தங்கும்.
27 நன்மை செய்யத் தேடுபவன் தயை
யை நாடுவான்,
தீமைசெய்ய ஆசிப்பவன் அதையே
பெறுவான்.
தன்செல்வம்நம்பியிருப்பவன் விழுவான், 28
நீதிமான்களோ தளிர்போல் தழைப்பார்
கள்.
தன் வீட்டைக் கெடுப்பவன் காற்றைப் 29
பெறுவான்.
மூடன் ஞானிக்கு அடிமையாவான்.
நீதிமான் பெறும் பலன் ஜீவவிருட்சம், 30
ஞானமுள்ளோன் பிறரை நல்வழியில்
நடத்துவான்.
நீதிமானும், இதோ, பூமியிலே பலன் 31
பெறுவான்,
தெய்வபயமற்றவனும் பாவியும் பலன்
பெறுவது எவ்வளவு அதிக நிச்சயம்!

போதகம் விரும்புவோன் அறிவை **12**
விரும்புவான்;
சிட்சை வெறுப்பவன் மிருககுணத்
தான்.
நல்லவன் யெகோவாவினிடம் தயை 2
பெறுவான்,
தீயனபிணைப்பவனை ஆக்கினைக்குள்ளாக்
குவார்.
தெய்வபயமில்லாமையால் மானிடன் 3
நிலைப்பதில்லை,
நீதிமான்களின் வேரோ அசையாது நிற்
கும்.
நிறமையுள்ள மனையாள் கணவனின் 4
கிரீடம்,
இலச்சைவருவிப்பவள் அவன் எலும்
புருக்கி.
நீதிமான்கள் நினைப்பவை நியாயமாம், 5
தெய்வபயமிலார் ஆலோசனைகள் சூதாம்.
தெய்வபயமிலார் பேச்சு ரத்தம்சிந்தப் 6
பதிவிருப்பதை,
நேர்மையாளர் வாய் அவர்களைத் தப்பு
விக்கும்.
தெய்வபயமற்றோர் கவிழ்ந்து ஒழிவார், 7
நீதிமான்களின் வீடோ நிலைபெறும்.
மானிடன் பெறுபுகழ் மதியின் அளவே, 8
மாறுபாடான இதயமுள்ளோன் இக
ழப்படுவான்.
ஊணில்லாதிருந்தும் தன்னை உயர்த்து 9
வதிலும்
ஊழியனை உடையவனுயிருந்து இகழப்
படுதல் நன்றும்.
நீதிமான் தன் மிருகங்களின் உயிருக் 10
காகக் கவலைகொள்வான்,
தெய்வபயமில்லார் நெஞ்சம் கல்லே.
தன் நிலம் பயிரிடுவோனுக்கு உணவு 11
மிருந்திருக்கும்,

வீணனவற்றைப் பின்செல்வோனுக்குப்
புத்தியில்லை.
12 தெய்வபயமிலான் ஆசிப்பது துஷ்டர்
வலியே,
நீதிமானின் வேர் தழைக்கும்.
13 துஷ்டனுக்கு அவன் வாயின் பாவமே
கண்ணி,
நீதிமானே நெருக்கத்தினின்று தப்புவான்.
14 தன் வாயின் நற்பலனல் ஒருவன் தானே
திருப்தியாவான்,
தன் கிரியையின் பலனைத் தானே பெறு
வான்.
15 மதியீனன் வழி அவன் பார்வையில்
நேர்மையாம்,
ஆலோசனைக்குச் செவிகொடுப்பவன்
ஞானமுள்ளவன்.
16 மூடன் தன் வருத்தத்தை உடனே
வெளியிடுவான்,
விவேகியோ இலச்சையையும் மூடிவிடு
கிறான்.
17 மெய்யுரைப்பவன் வெளியிடுவது நீதி,
கள்ளச்சாட்சி உரைப்பதோ வஞ்சகம்.
18 யோசனையின்றிப் பேசிப் பட்டயம்போற்
குத்துவோருண்டு,
ஞானமுள்ளோரின் நாவு காயமாற்றும்.
19 சத்திய உதடு என்றும் நிலைக்கும்,
பொய் நாவோ நிமிஷநேரமே.
20 தீங்குபிணைப்போரின் இதயத்திலேகபடு,
சமாதானயோசனை சொல்வோர்க்கோ
சந்தோஷம்.
21 நீதிமானுக்கு ஒரு கேடும் வராது,
தெய்வபயமில்லாரிடம் நிலையே நிறை
யும்.
22 பொய் உதடுகள் யெகோவாவுக்கு அரு
வருப்பு,
உண்மையாய் நடப்பவரில் பிரியங்
கொள்வார்.
23 விவேகி தன் அறிவை மூடிக்காப்
பான்,
மதிகேடன் இதயமோ மூடத்தனம்
விளம்பும்.
24 சுறுசுறுப்புளோர் கை ஆளுகைசெய்
யும்,சோம்பேறியோ ஏவல் வேலையாள்
ஆவான்.
25 மனக்கவலைமனிதன் இதயத்தைஒடுக்கும்,
நல்வார்த்தையோ அதை மகிழச்செய்யும்.
26 நீதிமான் தன் அயலானை நல்வழிப்படுத்
துவான்,
தெய்வபயமிலார் வழி அவரை மோசப்
படுத்தும்.
27 கிடைத்த வேட்டையைச் சோம்பேறி
சமையான்,
சுறுசுறுப்பே மனிதர்க்கு அரும்பொருள்.
நீதியின் பாதையில் ஜீவன் உண்டு, 28
அப்பாதை எங்கும் மரணம் இல்லை.

ஞானமுள்ள மகன் தகப்பன் போத **13**
கத்தைக் கேட்பான்,
பரியாசக்காரனே கடிந்துரைக்கும் சொற்
கேளான்;
தன் வாயின் நற்பலனை மனுஷன் அனு 2
பவிப்பான்,
துரோகிகளின் ஆன்மாவோ கொடுமை
புசிக்கும்.
தன் வாய்க்குக் காவல் வைப்போன் தன் 3
உயிரைக்காப்பான்
வாயைவிரிவாய்த்திறப்பவன் பாழாவான்.
சோம்பேறி ஆசிப்பான், ஒன்றையும் 4
பெறான்;
சுறுசுறுப்புள்ளவனேசெழிப்படைவான்.
நீதிமான் பொய்யானபேச்சைப் பகைப் 5
பான்,
தெய்வபயமில்லான் வெட்கமும், இலச்
சையும் வருவிப்பான்.
குற்றமின்றி நடப்பவனை நீதி காக்கும், 6
பாவியையோ தெய்வபயமில்லாமை
கவிழ்த்துவிடும்.
ஒன்றுமிலாதிருந்தும் செல்வர்போல் 7
நடிப்பவருண்டு,
திரள் செல்வமிருந்தும் வறியர்போல்
நடப்பவருண்டு.
ஒருவன் செல்வம் அவர் உயிர் மீட்கும், 8
தரித்திரனே மிரட்டுவதால் பயமுறான்.
நீதிமான் ஒளிபிரகாசமாய் விளங்கும், 9
தெய்வபயமிலான் தீபமோ அணைந்த
போம்.
வாதுபிறப்பது அகந்தையினலே, 10
ஆலோசனை கேட்போரிடத்திலே ஞானம்.
எளிதினிற் சேர்த்தபொருள் குறைந்து 11
விடும்,
சிறிது சிறிதாய்ச் சேர்ப்பவன் பெருக்கு
வான்.
நெடுநாட் காத்திருப்பது இதயச் 12
சோர்பு உண்டாக்கும்,
ஆசித்தது கிடைக்கும்போதோ ஜீவவிருட்
சம் போலாகும்.
திருவசனம் மதியாதவன் தண்டனைக் 13
குத்தப்பான்,
கட்டளைக்குப் பயந்து நடப்பவன் நற்
பலனடைவான்.
ஞானவான்கள் போதனை ஜீவஊற்று, 14
மரணக்கண்ணிகளுக்கு அது தப்புவிக்
கும்.
நல்விவேகம் தயைசம்பாதிக்கும் 15

துரோகிகளின் வழியோ கரடுமுரடாம்.
16 எவ்விவேகியின் அறிவும் அவன் வேலையிலே தோன்றும்,
மூடனே தன் புத்தியீனத்தைப் பரப்பிக் காட்டுகிறான்.
17 தீயகுணமுள்ள தூதன் தீங்கிலே விழுவான்,
உண்மையுள்ள ஸ்தானுபதியோ ஒளஷதம்.
18 போதகத்தைத் தள்ளுபவன் வறுமையும் இலச்சையும் அடைவான்;
கண்டிப்புக்குச் செவி கொடுப்போன் சிறப்படைவான்.
19 ஆசை நிறைவேறுவது ஆன்மாவுக்கு இன்பம்,
தீமையைவிட்டு விலகுவது மூடருக்கு அருவருப்பு.
20 ஞானிகளோடுறவாடு, ஞானவானுவாய்;
மூடரின் தோழனுக்கு நேர்வது கேடே.
21 பாவிகளைக் கேடு தொடரும்,
நீதிமான்களுக்கோ வாழ்வு பலிக்கும்.
22 நல்லவன் தன் பிள்ளைகளின் பிள்ளைகட்குச் சுதந்தரம் வைப்பான்,
பாவியின் பொருளோ நீதிமானுக்கு வைக்கப்படும்,
23 ஏழைகளின் புதுவயலில் மிகுதி ஆகாரம் உண்டாகும்,
அநியாயமாய் வாரிக்கொள்ளப்படுவார் உண்டு.
24 பிரம்பு கையாடாதவன் மகனைப் பகைக்கிறான்,
மகனை நேசிப்பவனே காலத்தே கண்டிக்கிறான்.
25 நீதிமான் தான் திருப்தியாகுமட்டும் புசிப்பான்,
தெய்வபயமிலான் வயிறு பசியாகவே இருக்கும்.

**14** விவேகமுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுவாள்,
புத்தியிலாதவளோ அதைத் தன்கையால் இடிப்பாள்.
2 நேர்மையாய் நடப்போன் யெகோவாவுக்குப் பயந்தவன்,
தாறுமாறான வழிநடப்போன் அவரை அலட்சியம் செய்பவன்.
3 மூடன் வாயே அவன் அகந்தைக்குப் பிரம்பாம்,
ஞானிகளின் உதடுகளோ அவர்களைக் காக்கும்.
4 எருதில்லா இடத்திலே மூன்னணையும் வெறுமையாம்,
காளைபலத்தினால் விளைவு மிகுதியாம்.
5 மெய்ச்சாட்சி பொய்யுரையான்,
கள்ளச்சாட்சி பொய் உரைப்பான்.
6 பரியாசக்காரன் தேடினும் ஞானத்தைக் கண்டடையான்,
உணர்வுளோனுக்கு அறிவு லேசாய் வரும்.
7 மூடனுக்கு எதிரே விலகியோடு,
அறிவுள உதடுகளை அங்கு நீ காணுய்.
8 தன்வழி உணர்வதே விவேகியின் ஞானமாம்,
மதிகேடரின் புத்தியீனம் வஞ்சனையே.
9 மூடர் செலுத்தும் பாவபலியும் அவரைப் பரிகாசம் செய்யும்,
நேர்மையுள்ளோருக்குள் நேசம் வழங்கும்.
10 இதயக்கசப்பை இதயமே அறியும்,
அதின் மகிழ்ச்சியிலும் அந்நியன் ஊடாடான்.
11 தெய்வபயமிலான் வீடு அழிந்தேபோம்,
நேர்மையாளன் கூடாரமோ செழிக்கும்.
12 மனிதனுக்கு நேர்மையாய்த் தோன்றும் வழிகளுண்டு,
முடிவிலோ அவை மரண பாதைகளாம்.
13 நகைப்பிலும் மனதுக்குத் துக்கமுண்டு,
மகிழ்ச்சியின் முடிவு துயரமாகும்.
14 பின்வாங்கும் இதயமுளோன் தன் வழிகளிலே திருப்திகொள்வான்,
நல்லவன் திருப்தியாவது தன் செய்கைகளிலே.
15 பேதை தான்கேட்ட எவ்வார்த்தையையும் நம்புவான்,
விவேகியோ தன் நடையைக் கவனித்துக்கொள்வான்.
16 ஞானமுள்ளவன் தீமைக்குப் பயந்து விலகுவான்,
மதிகேடனே அச்சமின்றி முன்செல்வான்.
17 முற்கோபி புத்தியீனமானதைச் செய்வான்,
தீயனபிணைப்பவன் பகைக்கப்படுவான்.
18 பேதையர் புத்தியீனத்தைச் சுதந்தரிப்பார்,
விவேகிகள் அறிவுமுடி சூட்டப்பெறுவார்.
19 தீயோர் நல்லவர் முன் பணிவார்,
மதிகேடர் நீதிமான்கள், தலைவாசலில் பணிவார்.
20 ஏழையை அவன் அயலானும் பகைப்பான்,
செல்வனுக்கோ சிநேகிதர் பலர்.

21 அயலாரீன அவமதிப்பவன் பாவஞ்செய்
கிறான்,
சிறுமையுற்றோனுக்கு இரங்குபவன் பாக்
கியவான்.
22 தீமை யோசிப்பவர் அலைந்துபோவா
ரல்லவோ?
நன்மை யோசிப்பவருக்குக் கிருபையும்
சத்தியமும் கிடைக்கும்.
23 சகல உழைப்பும் பயன் விளைவிக்கும்,
வெறும் வாய்ப்பேச்சில் பலனொன்று
மில்லை.
24 செல்வம் ஞானிகளுக்குக் கிரீடம்,
மதிகேடர் புத்தியீனம் புத்தியீனமே.
25 மெய்ச்சாட்சி சொல்வோன் உயிரை ர்ட்
சிப்பான்,
பொய்யுரைப்பவனோ வஞ்சனைக்காரன்.
26 யெகோவாவுக்குப் பயப்படுவோன்
பலத்த நம்பிக்கையுடையவன்,
அவன் பிள்ளைகள் அடைக்கலம் பெறு
வார்.
27 யெகோவாவுக்குப் பயப்படுவது ஜீவ
ஊற்று,
மரணக்கண்ணிகளுக்கு அது தப்புவிக்
கும்.
28 குடிகள் பெருகுவது அரசனுக்குச்
சிறப்பு,
ஜனத்தொகை குறைபவே தலைவனுக்கு
அழிவாம்.
29 கீடிய சாந்தமுள்ளவன் மிகுந்த உணர்
வுள்ளான்,
முற்கோபி புத்தியீனத்தை உயர்த்து
வான்.
30 சாந்தமனது உடலுக்கு ஜீவன்,
காதற்சமுசயமோ எலும்புருக்கி.
31 எளியவனை ஒடுக்குவோன் அவனைப்
படைத்தவரை இகழுவான்,
ஏழைக்கு இரங்குவோன் அவரைக்
கனம்பண்ணுவான்.
32 மதிகேடன் தன் நீமையாலே விழு
வான்,
நீதிமான் தனது மரணத்திலும் நம்பிக்கை
விடான்.
33 உணர்வுளோன் இருதயத்தில் ஞானம் தங்
கும்,
மதியீனர் உள்ளத்துக்கும் அது விளங்கா
தாது.
34 நீதியானது ஜனத்தை உயர்த்தும்,
பாவமோ எந்த ஜனத்துக்கும் இழிவாம்.
35 விவேகமுள்ள ஊழியன்மேல் ராஜாத்தை
தங்கும்,
இலச்சை விளைப்பவன்மேல் ராஜகோப
மிருக்கும்.

சாந்தமான பதில் கோபத்தை அகற் 15
றும்,
கடிஞ்சொல்லோ சினத்தை எழுப்பி
விடும்.
ஞானிகளின் நாவு நல்லறிவை வழங்கும், 2
மதியீனர் வாய் புத்தியீனம் கக்கும்.
யெகோவாவின் கண்கள் எல்லாவிடங் 3
களிலும்
நல்லோர் தியோரையும் பார்த்திருக்கும்.
சாந்தமுள்ள நாவு ஜீவவிருட்சம், 4
நாவின் மாறுபாடோ உள்ளம் நொறுக்
கும்.
மூடன் தகப்பனின் போதகத்தை இகழு 5
வான்,
சிட்சையைக்காத்து நடப்பவனே
விவேகி.
நீதிமான் வீட்டிலே பல செல்வமுண்டு, 6
தெய்வபயமிலான் வருமானம் துன்பம்
விளைக்கும்.
ஞானிகளின் உதடு அறிவை இறைக் 7
கும்,
மதிகேடர் இதயமோ நேரானதன்று.
தெய்வபயமிலார் பலி யெகோவாவுக்கு 8
அருவருப்பு,
நேர்மையானவர் மன்றாட்டு அவர்க்குப்
பிரியம்.
தெய்வபயமிலான் வழி யெகோவாவுக்கு 9
அருவருப்பு,
நீதியைப் பின்பற்றுவோனை அவர் நேசிப்
பார்.
வழிவிலகுவோன் கடுந்தண்டனை பெறு 10
வான்,
சிட்சை வெறுப்பவன் மரணம் அடை
வான்.
பாதாளமும் குழியும் யெகோவாவுக்கு 11
மல்லவானவையல்ல,
மானிடன் இதயம் அவர்க்கு மறைந்
திருக்குமோ?
பரியாசக்காரன் சிட்சையை நேசியான், 12
ஞானவான்களிடம் செல்ல விரும்பான்.
மனமகிழ்ச்சி முகமலர்ச்சி தரும், 13
துக்கத்திலோ மனது தளரும்.
உணர்வுளோன் இதயம் அறிவை நாடும், 14
மதியீனர் வாயோ புத்தியீனத்தை மேயும்.
சிறுமையுற்றோன் நாட்களெல்லாம் திங் 15
குள்ளன,
மனரம்மியம் உள்ளவனுக்கு நித்திய
விருந்து.
சஞ்சலத்தொடுகூடிய பெரும் பொருளி 16
லும்
யெகோவா பயத்தொடுகூடிய சொற்பமே
நன்றும்.

17 கொழுத்த காணிக் கறியைப் பகையோ
டுண்பதிலும்
இலேக்கறியைச் சினேகத்தோடுண்பது
நன்றும்.
18 கோபக்காரன் சண்டை இளப்புவான்,
நீடிய சாந்தமுள்ளவன் சண்டையை
அமர்த்துவான்.
19 சோம்பேறியின் வழி முள்வேலியாம்,
நேர்மையாளர் வழியோ ராஜபாதையாம்.
20 ஞானமுள்ள மகன் தந்தையை மகிழ்
விப்பான்,
மதிகேடனே தன் தாயை இகழுவான்.
21 புத்தியீனம் புத்தியிலாளுக்கு மகிழ்ச்சி,
உணர்வுளோன் நேரான வழியில் நடப்
பான்.
22 கலந்த ஆலோசியாவிடின் எண்ணிய
காரியம் பலியாது,
ஆலோசனைக்காரர் பலரிருந்தால் அது
சித்திக்கும்.
23 பதிற்சொல்வதிலே மனுஷனுக்கு
மகிழ்ச்சியுண்டு,
சமயோசிதச் சொல் எத்தனை நன்றும்!
24 விவேகி ஜீவவழியில் மேல்நோக்கி நடப்
பான்,
அப்போது கீழான பாதாளம் விட்டகல்
வான்.
25 அகங்காரியின் வீட்டை யெகோவா
இடித்தெறிவார்,
விதவையின் எல்லையை நிலைபடுத்து
வார்.
26 தீயோர் யோசனைகள் யெகோவாவுக்கு
அருவருப்பு,
இனிய சொற்களோ சுத்தமானவைகள்.
27 பொருளாசைக்காரன் தன் வீட்டைக்
கலைக்கிறான்,
பரிதானங்களைப் பகைப்பவனே பிழைப்
பான்.
28 நீதிமான் மனம் யோசித்துப் பதிற்சொல்
லும்,
தெய்வபயமிலான் வாய் தீமைகொப்ப
ளிக்கும்.
29 தெய்வபயமிலார்க்கு யெகோவா தூரமே,
நேர்மையாளரின் மன்றாட்டை அவர்
கேட்கிறார்.
30 கண்களின் ஒளி மனமகிழ்ச்சியை விளக்
கும்,
நற்செய்தி எலும்புகளைப் பலப்படுத்தும்.
31 ஜீவனுக்கேதுவான சிட்சையைக் கேட்
கும் செவி
ஞானிகளினிடத்தே தங்கும்.
32 போதகத்தைத் தள்ளுபவன், தன் ஆன்
மாவை அசட்டைசெய்வான்,
சிட்சைக்குச் செவிகொடுப்பவனுக்குப்
புத்தியுண்டாம்.
33 யெகோவாவுக்குப் பயப்படுவது ஞானம்
வினைக்கும் போதகமாம்,
மேன்மை பிறப்பது தாழ்மைக்குப் பின்
னும்.

16 மனதின் யோசனைகள் மனுஷனுடை
யவைகள்,
நாவின் பதில் யெகோவாவினிடமிருந்து
வரும்.
2 மனிதனின் பார்வையில் அவன் வழிக
ளெல்லாம் சுத்தமே,
யெகோவாவோ அவனில் உள்ளவற்றை
நிறுக்கிறார்.
3 உனது செயல்களை யெகோவாவுக்கு
ஒப்புவி,
உன் யோசனைகளை அவர் நிலைக்கச் செய்
வார்.
4 யெகோவா ஒவ்வொன்றையும் ஒவ்
வொரு நோக்கத்துக்காய்ப் படைத்தார்,
தெய்வபயமற்றோனையும் தீங்கு நாளுக்
கென்று படைத்தார்.
5 மனமேட்டிமையுள்ளவனெவனும் யெ
கோவாவுக்கு அருவருப்பு,
அவன் தண்டனைக்குத் தப்பான், நிச்ச
யமே.
6 இரக்கமும் உண்மையும் அக்கிரமத்தை
மூடிவிடும்,
யெகோவாவுக்குப் பயப்படுவதால் மனி
தன் தீமையினின்று விலகுவான்.
7 யெகோவா ஒருவன் வழியிலே பிரியங்
கொண்டால்
சத்துருக்களையும் அவன் மித்திரராக்கு
வார்.
8 அநியாயமாய் வரும் பெரிய லாபத்திலும்
நீதியாய் வரும் சொற்பமே நன்றும்.
9 மானிடன் இதயம் அவன் வழியை
யோசிக்கும்,
அவன் நடைகளை நிலைப்படுத்துபவர்
யெகோவாவே.
10 ராஜாவின் உதடுகளில் பிறப்பதே தீர்ப்பு,
நியாயமுரைப்பதில் அவன் வாய் தவ
றுதல்.
11 சுமுத்திரை நிறைகோல், தராசு யெகோ
வாவுக்குரியன,
பையிலுள்ள நிறைகல் எல்லாம் அவர்
செய்தவைகளே.
12 அநீதி செய்வது ராஜாக்கட்கு அரு
வருப்பு,
நீதியினால் சிங்காசனம் நிலைப்படும்.
13 நீதியுள்ள உதடுகள் அரசருக்குப் பிரியம்,

நேர்மையுரைப்பவனே அரசன் நேசிப்பான்.

14 அரசகோபம் மரணதூதர்போலாம்,
ஞானமுள்ளவனோ அதை ஆற்றுவான்.

15 ராஜ முகமலர்ச்சி ஜீவனுகும்,
அவன் தயை பின்மாரிபெய்யும் மேகம் போலாம்.

16 பொன்னிலும் ஞானத்தைச் சம்பாதிப்பது எத்தனை நன்மை!
வெள்ளியிலும் உணர்வைச் சம்பாதிப்பது உத்தமம்.

17 தீமையினின்று விலகுவதே நேர்மையாளர் செல்லும் வழியாம்,
தன்வழி காத்துக்கொள்பவன் உயிரைக் காக்கிறான்.

18 அழிவின் முன்னே அகந்தை,
வீழ்தலின் முன்னே மனமேட்டிமை.

19 பெருமையுள்ளவரொடு சேர்ந்து கொள்ளைப்பொருளைப் பகிர்வதிலும்
சிறுமையுற்றவரொடு சேரும் மனத்தாழ்மையே நன்மை.

20 விவேகமாய்க் காரியம் செய்வோன் சுகம் பெறுவான்,
யெகோவாவில் நம்பிக்கை வைப்பவன் பாக்கியன்.

21 ஞான இதயமுள்ளோன் உணர்வுள்ளவன் எனப்படுவான்,
இனிதாய்ப் பேசுவது அறிவைப் பெருக்கும்.

22 விவேகம் அதை உடையவர்க்கு ஜீவ ஊற்றும்,
புத்தியீனரின் போதகம் மதியீனமே.

23 ஞானியின் இதயம் அவன் வாய்க்கு உணர்வு ஊட்டும்,
அவன் உதடுகட்கு அறிவைப் பெருகச் செய்யும்.

24 இன்சொல் தேன்கூட்டைப்போலிருக்கும்,
ஆன்மாவுக்கு அது மதுரம், உடலுக்கு ஔஷதம்.

25 மனிதனுக்கு நேர்மையாய்த் தோன்றும் வழிகளுண்டு,
முடிவிலோ அவை மரணபாதைகளாம்.

26 உழைப்பவன் பசி அவன் உழைப்புக்கு உதவியாம்,
அவன் வாய் அவனை அதற்கு ஏவிவிடும்.

27 பேலியாள் மகன் கேடாகிய குழிவெட்டுகிறான்,
எரியும் அக்கினிமயம் அவன் உதட்டில் உண்டு.

28 மாறுபாடுள்ளவன் சண்டைக்கு விதை போடுவான்,
கோள் உரைப்போன் உயிர்த்தோழரையும் பிரிப்பான்.

29 கொடுமையுள்ளவன் தன் அயலானுக்கு நயங்காட்டி
நன்றல்லாத வழியில் அவனை நடக்கச் செய்வான்.

30 கவிழ்கண்ணன் மாறுபாடானவற்றை யோசிப்பான்,
உதட்டை மடிப்போன் தீங்கை விளைத்தான்.

31 நீதியாம் வழியில் நடந்து உண்டான நரைமயிர் சிறந்த கிரீடமாகும்.

32 பராக்கிரமத்திலும் வீண்ட பொறுமையே நன்றும்,
நகரத்தைப்பிடிப்பவனிலும் மனதை அடக்குவோன் பெரியவன்.

33 சீட்டு மடியதனிலே போடப்படும்,
அதின் தீர்ப்போ யெகோவாவினுலே வரும்.

17 சண்டையொடு கூடும்பண்டம் நிறைந்த வீட்டிலும்
அமரிக்கையொடு பெறும் காய்ந்த ஊண் ஒருவாய் மேலாம்.

2 விவேகியான ஊழியன் இலச்சைதரும் மகனை ஆண்டு
சகோதரருக்குள்ளே சுதந்தரத்தையும் பெறுவான்.

3 வெள்ளிக்குக் குகை, பொன்னுக்குப் புடம்,
யெகோவாவோ இருதயங்களைப் பரீட்சிப்பவர்.

4 அக்கிரம உதடு உரைப்பதை துஷ்டன் கவனமாய்க் கேட்பான்,
பொய்யனே கேடுசெய்யும் நாவுக்குச் செவிகொடுப்பான்.

5 எளியவனைப் பரிகசிப்பவன் அவனைப் படைத்தவரை இகழுவான்,
பிறர் கேட்டில் களிப்பவன் தண்டனைக்குத் தப்பான்.

6 பிள்ளைகளின் பிள்ளைகள் முதியோரின் கிரீடம்,
பிள்ளைகளின் மேன்மை அவர்கள் பிதாக்களே.

7 மேன்மைபேசும் உதடு மூடனுக்குத் தகாது,
பொய்பேசும் உதடு மேன்மக்கட்கு எவ்வளவுந் தகாது.

8 கொடுப்பவர் பார்வையில் அதிஷ்டக்கல் லாகும்,
அது செல்லும் திசையெலாம் காரியம் வாய்க்கும்.

9 குற்றத்தை மூடுவோன் சிநேகத்தை நாடு
பவன்,
அதைத் திரும்பப் பேசுபவன் உயிர்த்
தோழரைப் பிரிப்பான்.
10 மூடனே நூறடியடிப்பதிலும் உணர்வுள்ள
வனே
வாயாற் கண்டிப்பது அதிகமாய் உறைக்
கும்.
11 துஷ்டன் கலகத்தையே தேடுகிறான்,
அவனுக்கு விரோதமாய்க் கொடுந்தூதன்
வருவான்.
12 குட்டி பறிகொடுத்த கரடிக்கு எதிர்ப்படி
னும்,
புத்தியீனத்தில் திரியும் மதியீனனுக்கு
எதிர்ப்படல் ஆகாது.
13 நன்மைக்குத் தீமைசெய்பவன் எவனே
அவன் வீட்டினின்று தீமை அகலாது.
14 சண்டையின் ஆரம்பம் மதகு திறப்பது
போலாம்,
அது பிறக்குமுன் விவாதத்தை விட்டுவிடு.
15 துஷ்டனைக் குற்றமில்லாதவனுகவும்
குற்றமில்லாதவனைக் குற்றமுள்ளோனுக
வும்
தீர்க்கும் இருவரும் யெகோவாவுக்கு
அருவருப்பு.
16 ஞானத்தைச் சம்பாதிப்பதற்கு மதிகேடன்
கையிலே
பணமிருந்து பயனென்ன? புத்தி அவ
னுக்கில்லையே.
17 சிநேகிதன் அன்பு எக்காலமும் உண்டு,
இடுக்கணில் உதவிசெய்யச் சகோதரன்
பிறந்தான்.
18 புத்தியில்லாதவன் கையடித்துக்கொடுத்
துத்
தன் அயலான்காணப் பிணைப்படுவான்.
19 பாதகப்பிரியன் வாதப்பிரியனும்,
உயர்த்தி வாசல் அமைப்போன் அழிவை
நாடுவான்.
20 மாறுபாடாம் இதயமுள்ளவன் வாழ்வு
கண்டடையான்,
21 புரட்டுநாவுள்ளவன் தீங்கிலேவிழுவான்.
மதியீனனைப்பெற்றவன் தனக்கே துயரை
வருவிக்கிறான்,
மதிகேடனின் தகப்பனுக்கு மகிழ்ச்சி
யில்லை.
22 மனமகிழ்ச்சியே நல்ல மருந்தாம்,
மனேதுக்கமோ எலும்பு உலரச்செய்யும்.
23 தெய்வபயமற்றவன் இரகசியமாக லஞ்
சம் வாங்கி
நியாயவழி புரட்டுவான்.
24 உணர்வுளானுக்கு எதிரேயே ஞானம்
இருக்கிறது
மூடனின் கண்களோ பூமியின் கடை
முனைமட்டும் திரிந்தலையும்.
25 மூடபுத்திரன் தந்தைக்குச் சஞ்சலமா
வான்,
பெற்ற தாய்க்குக் கசப்புமாவான்.
26 நீதிமானுக்கு அபராதம் விதிப்பது நன்
றன்று,
மேலான குணமுள்ளவரை அடிப்பது
நேர்மைக்கு மாறும்.
27 அறிவாளி தனது வாயை அடக்குவான்,
உணர்வுள்ளவன் அமர்ந்த மனதுடை
யான்.
28 பேசாதிருந்தால் மூடனும் ஞானி என்
றெண்ணப்படுவான்,
தன் வாயை மூடிக்கொண்டிருப்பவனே
உணர்வுடையவன்.

18 பிரிந்துபோவோன் சுயேச்சையாய்
நடந்து,
சகல விவேகத்தோடு சண்டை செய்
வான்.
2 மதியீனன் உணர்விலே பிரியங்கொள்
ளான்,
தன் மனதிலுள்ளவற்றை வெளியிட
ஆசிப்பான்.
3 தெய்வபயமற்றோன் வரவே இகழ்ச்சியும்
கூடவரும்,
அவமானத்துடனே நிந்தையும் வந்து
விடும்.
4 மானிடன் வாய்மொழிகள் ஆழமான நீர்,
ஓடும் ஆறு, ஞான ஊற்று.
5 தெய்வபயமிலானுக்கு முகதாட்சணியம்
காட்டுவதும்
வழக்கிலே நீதிமானைப் புரட்டுவதும் நன்
றன்று.
6 மதியீனன் உதடுகள் விவாதத்திலே
மறையும்,
அவன் வாய் அடிகளே வரவழைக்கும்.
7 மதியீனன் வாய் அவனுக்கே கேடு,
அவன் உதடு அவன் உயிருக்கே கண்ணி.
8 கோளரைப்போன் சொற்கள் இனிய
உணவேபோல்
வயிற்றின் அடிவரை சென்று தங்கும்.
9 தன் வேலையிலே அசதியாயிருப்பவன்
அழிவு செய்வோனுக்கு உடன்பிறந்த
வன்.
10 யெகோவாவின் திருநாமம் பலத்த கோபு
ரம்,
நீதிமான் அதற்குள் ஓடி அடைக்கலம்
பெறுவான்.
11 செல்வன் தன் பொருளே அரணாகவென்
றும்

உயர்மதிலென்றும் எண்ணிக்கொள்வான்.

12 அழிவுக்குமுன் இதயத்தின் இறுமாப்பு தோன்றும்,
மேன்மை பிறப்பது தாழ்மைக்குப் பின்னும்.

13 காரியத்தைக் கேட்குமுன் பதிலுரைப் பவனுக்கு
அது புத்தியீனமும் இலச்சையுமாம்.

14 மனிதனின் தைரியம் பலவீனத்தில் அவனைத் தாங்கும்,
மனோதுக்கத்தைத் தாங்குவான் யாரே?

15 உணர்வுள்ளவன் மனம் அறிவைச் சம்பாதிக்கும்,
ஞானமுள்ளவன் செவி அறிவை நாடும்.

16 மனிதன் கொடுக்கும் கொடைகள் அவனுக்கு வழிதிறக்கும்,
பெரியோர் சந்நிதிக்கு அவனைக் கொண்டுபோம்.

17 வழக்கில் முதல் பேசுவோன் சரியாயிருப்பதுபோல் தோன்றும்,
அவன் எதிராளி வரவே அவனைப் பரிசோதிப்பான்.

18 சீட்டுப்போடுவது வழக்குகளை ஒழிக்கும்,
பலவான்களின் நடுவே சிக்கெடுக்கும்.

19 சகோதரனுக்குத் துரோகம் செய்திடின்
அவனை வசப்படுத்துவது அரண்நகரிலும் அரிது,
அவ்வகை விரோதம் கோட்டைத் தாழ்ப்பாள்களே போலும்.

20 தன் வாய்ப்பலனால் ஒருவன் வயிறு நிரம்பும்,
தன் உதட்டின் வினைவால் அவன் திருப்தியாவான்.

21 மரணத்தையும் ஜீவனையும் விளைவிப்பது நாவே,
நாவாடப் பிரியங்கொள்வார் அதின் கனி புசிப்பார்.

22 மனைவியைப் பெற்றவன் நல்வாழ்வு பெற்றவன்,
யெகோவாவினிடம் தயையும் பெற்றவன்.

23 ஏழை கெஞ்சிக் கேட்பான்,
செல்வனோ கடினமாகப் பதிலுரைப்பான்.

24 தோழரைச் சம்பாதிக்கும் ஆசையால் வினைவது கேடு,
உடன் பிறந்தோரிலும் உரிய நண்பர் உண்டு.

**19** குற்றமற்றவனாய் நடக்கும் ஏழை
மாறுபாட்டு உதடுள்ள மதியீனனிலும் மேல்.

ஒருவன் அறிவிலாதிருப்பது நன்றன்று, 2
விரையும் காலுள்ளவன் வழிதப்பி ஏகுவான்.

ஒருவன் வழியைக் கெடுப்பது அவன் 3
மதியீனம்,
அவன் மனமோ யெகோவாவின்மேல் கோபங்கொள்ளும்.

செல்வம் பற்பல தோழரைச் சேர்க்கும், 4
ஏழையோ உள்ள ஒரு தோழனையும் இழப்பான்.

பொய்ச்சாட்சி தண்டனைக்குத் தப்பமாட்டான், 5
பொய் உரைப்பவனும் விடுவிக்கப்படுவதில்லை.

பிரபுவின் தயை நாடி வணங்குவோர் 6
பலர்,
ஈகையுள்ளவனுக்கு எவனும் சிநேகிதன்.

ஏழையை உடன்பிறந்தோரெல்லாரும் 7
பகைப்பார்,
அப்படியானால், தோழர் அவனுக்குத்
தூரமாகுதல் எத்தனை நிச்சயம்!
அவன் வார்த்தை சொல்லிக் கெஞ்சினும்
பயன்படாது.

புத்தி சம்பாதிப்போன் தன் உயிரை 8
நேசிப்பான்
உணர்வைக் காப்பவன் வாழ்வு பெறுவான்.

பொய்ச்சாட்சிக்காரன் தண்டனைக்குத் 9
தப்பமாட்டான்,
பொய்யுரைப்பவன் அழிந்தே போவான்.

மதியீனனுக்கு இன்பவாழ்வு தகாதானால் 10
அதிபதிமேல் அதிகாரம் அடிமைக்கு எள்ளளவும் ஆகுமோ.

ஒருவன் விவேகம் நீடிய சாந்தத்தை 11
வினைக்கும்,
குற்றம் கவனியாது விடுவது அவன் சிறப்பாம்.

ராஜகோபம் சிங்ககர்ச்சனைக்கொப்பாம், 12
அவன் தயை பசும்புல்மேல் பெய்யும் பனி.

மதியீனமகன் தன் தந்தைக்குக் கேடாவான், 13
மனைவியின் சண்டை ஓயா ஒழுக்கு.

வீடும் ஆஸ்தியும் பிதாக்கள் வைக்கும் 14
சுதந்தரம்,
புத்தியுள்ள மனைவி யெகோவா அருளும் ஈவு.

சோம்பல் தூங்கிவிழச் செய்யும், 15
அசதியுள்ளவன் பட்டினியாயிருப்பான்.

கட்டளையைக் காப்பவன் உயிரைக்காப்பான், 16

தன் வழிகளைக் கவனியாதவன் சாவான்.
17 ஏழைக்கு இரங்குவோன் யெகோவாவுக்குக் கடன் கொடுப்பவன்,
அவன் செய்ததற்கு அவர் பிரதிபலன் அளிப்பார்.
18 நம்பிக்கையுள்ளமட்டும் மகனைச் சிட்சி,
சிட்சியாவிடில் அவன் மாள நீ காரண மாவாய்.
19 கடுங்கோபி அபராதத்திற்குள்ளாதல் சரியே,
தப்புவித்தால் பின்னும் கேடு அதிகரிக்கச் செய்வாய்.
20 ஆலோசனையைக் கேள், போதகத்தை ஏற்றுக்கொள்,
அந்திய காலத்தில் நீ ஞானமுள்ளவனாயிருப்பாய்.
21 மானிட இதயத்தின் எண்ணங்கள் பல,
யெகோவாவின் யோசனையே நிலைநிற்கும்.
22 மனுஷனிடத்தில் மதிக்கப்பெறுவது அவன் தயாளமே,
பொய்யுரைப்பதிலும் ஏழையாயிருப்பதே நன்று.
23 யெகோவா பயம் ஜீவனுக்கு ஏது,
அதை அடைந்தோன் திருப்தியாய் அமர்வான்;
தீங்கு அவனை அணுகாது.
24 சோம்பேறி கலத்திலே கையை வைப்பான்,
திரும்பத் தன் வாய்க்கு அதை எடாதிருப்பான்.
25 பரியாசக்காரனையடி, பேதை அறிவடைவான்,
உணர்வுள்ளவனைச் சிட்சி, அவன் அறிவை உணர்வான்.
26 தகப்பனை இம்சித்துத் தாயை விரட்டிவிடுவோன்
இலச்சையும் அவமானமும் வினைக்கும் புத்திரன்.
27 மகனே, அறிவைத்தரும் வார்த்தைகளை விட்டு
விலகச்செய்யும் போதகத்தை இனி கேளாதே.
28 நீசத்தன சாட்சி நியாயத்தை நிந்திப்பான்,
தெய்வபயமில்லாதவன் வாய் அக்கிரமத்தை விழுங்கும்.
29 பரிபாசக்காரருக்குத் தண்டனைகளும்
மதியீனர் முதுகுக்கு அடிகளும் எப்போதும் ஆயத்தம்.

**20** திராட்சரசம் பரியாசக்காரன், மது அமளிக்காரன்;
அதில் மயங்கி நடக்கும் எவனும் ஞானியல்ல.
2 ராஜதிகில் சிங்ககர்ச்சனைக்கொப்பாம்,
அவன் கோபத்தை எழுப்புவோன் தன் உயிர்க்கே துரோகியாம்.
3 வழக்குக்கு விலகுவது மனிதனுக்கு மேன்மையாம்,
புத்தியீனன் எவனும் சண்டை எழுப்புவான்.
4 குளிருக்குப் பயந்து சோம்பேறி உழச் செல்லான்,
அறுப்பிலே பிச்சைகேட்பான், ஒன்றும் கிடையாது.
5 மானிட இதயயோசனை ஆழமான நீர் போலாம்,
உணர்வுள்ளவனே அதை இறைத்திடுவான்.
6 பலர் தம் தயாளத்தை வெளியிடுவது சகஜம்,
உண்மையுள்ளவனைக் கண்டுபிடிப்பதோ அரிது.
7 நீதிமான் குற்றமற்றவனாய் நடப்பான,
அவனுக்குப்பின் அவன் மக்கள் பாக்கியராயிருப்பார்கள்.
8 ராஜா தன் நியாயசனத்திலே அமர்கையில்
சகல தீமையையும் தன் கண்களினால் சலித்து எறிவான்.
9 என் இருதயத்தைச் சுத்தமாக்கினேன், பாவமறத் தப்புரவானேன் என்றுரைக்கத்தக்கவன் யார்?
10 மாறுபாடான நிறைகல்லும்மாறுபாடான மரக்காலும்
யெகோவாவுக்கு அருவருப்பு.
11 பிள்ளையே யெனினும் அதின் நடத்தை சுத்தமோ நேர்மையோ என்பதை அதன் செய்கையே விளக்கும்.
12 கேட்கும் காது, காணும் கண்
இரண்டையும் படைத்தவர் யெகோவா.
13 தூக்கம் விரும்பேல், விரும்பினால் ஏழையாவாய்,
கண்விழித்திரு, வேண்டிய உணவுபெறுவாய்.
14 கொள்பவன் 'உதவாதது, உதவாதது' என்றுரைப்பான்,
போய்விட்டபின்போ அதனை மெச்சிக்கொள்வான்.
15 பொன்னும் விரிவான முத்துக்களும் பிரிந்தும்
அறிவுள்ள உதடே அரிய ரத்தினமாம்.
16 பிறனுக்குப் பிணை நின்றவன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்,

அங்கியர் நிமித்தம் அவன் கையில் சூடு வாங்கிக்கொள்.
17 வஞ்சித்துப் பெற்ற உணவு மனிதனுக்கு இன்பம்,
பின்போ அவன் வாயில் பருக்கைக்கல் நிறையும்.
18 ஆலோசனையினால் எண்ணங்கள் சித்தி பெறும்,
நல்யோசனை கேட்டுப் போருக்குப் புறப்படு.
19 தூற்றித்திரிபவன் இரகசியங்களை வெளியிடுவான்,
அலப்பு வாயனோடு கலவாதே.
20 தகப்பனையும் தாயையும் சபிப்பவன் தீபம்
காரிருள் வேளையில் அணைந்துபோமே.
21 துவக்கத்திலே விரைவாகப் பெற்ற பொருள்
முடிவிலே ஆசீர்வாதம் பெறாது.
22 தீமைக்குப் பதிற்செய்வேன் என்று சொல்லாதே,
யெகோவாவுக்கே காத்திரு, அவர் உனக்கு உதவி செய்வார்.
23 மாறுபாடான நிறைகற்கள் யெகோவாவுக்கு அருவருப்பு,
கள்ளத்தராசு நன்றன்று.
24 மனிதன் நடைகள் வாய்ப்பது யெகோவாவினால்,
மனிதன் தன் வழியை அறிவதெப்படி?
25 கடவுளுக்குப் பரிசுத்தம் என்று நினையாமற் சொல்வதும்
பொருத்தனை செய்தபின் யோசிப்பதும் மனிதனுக்கு மோசமாம்.
26 தெய்வபயமிலாரை ஞானமுள்ள ராஜா சலித்தெடுத்து
அவர்கள்மேல் உருளையை உருட்டுவான்.
27 மனிதனின் ஆன்மா யெகோவா தரும் தீபம்,
உள்ளத்தில் உள்ளதையெல்லாம் அது ஆராயும்.
28 இரக்கமும் உண்மையும் அரசனைக்காக்கும்,
இரக்கத்தால் சிங்காதனம் நிலைநிற்கச் செய்வான்.
29 வாலிபரின் அலங்காரம் அவர்கள் பராக்கிரமம்,
முதியோர் சிறப்போ அவர் நரைமயிரே.
30 தழும்புவிழும் அடி தீமையறச் சுத்திகரிக்கும்,
உள்ளத்தின் உள்ளிடத்தை வாதை சுத்திகரிக்கும்.

அரசன் இருதயம் யெகோவா கையில் நீர்க்கால்களைப்போலும், **21**
தாம் விரும்புமிட மெல்லாம் அவர் அதைத் திருப்புவார்.
2 மனிதன் பார்வையில் அவன் வழியெல்லாம் நேர்மையே,
இருதயங்களை நிறுத்துப் பார்ப்பவரோ யெகோவா.
3 பலியிடுவதைப் பார்க்கிலும் நீதி நியாயங்களைச் செய்வது யெகோவாவுக்குப் பிரியமாம்.
4 மேட்டிமைப் பார்வை, அகந்தையான மனம்,
தெய்வபயமற்றோர் விளக்கு, இவையெலாம் பாவம்.
5 சுறுசுறுப்புள்ளவன் யோசனை செல்வம் தரும்,
பதறிச் செய்பவனோ தரித்திரனுவான்.
6 பொய் நாவினாலே தேடுகிறபொருள்
காற்றாய் ஒழியும், சாவையே நாடும்.
7 தெய்வபயமிலார் கொடுமை அவரை இழுத்துக்கொண்டுபோம்,
நியாயஞ்செய்வதற்கு அவர் மறுத்தாரே.
8 குற்றமுள்ளவன் வழி கோணலாகும்,
சுத்தமுள்ளவர் செய்கைகளே நேர்மையாயுள்ளவை.
9 சண்டைக்காரியோடு விசால வீட்டினுள் வசிப்பதிலும்
வீட்டின்மேல் மூலையிலே தங்குவது நன்றாகும்.
10 தெய்வபயமிலான் மனம் தீங்குசெய்ய நாடும்,
அவன் கண்ணில் அயலானுக்கு இரக்கங் கிடையாது.
11 பரியாசக்காரன் தண்டிக்கப்படவே பேதை ஞானமடைவான்;
ஞானவான் போதிக்கப்படுகையில் அறிவடைவான்.
12 நீதிபரர் தெய்வபயமிலார் வீட்டைக் கவனித்துப்பார்த்து
தெய்வபயமிலாரைக் கேடுண்டாகக் கவிழ்ப்பார்.
13 ஏழையின் கூக்குரலுக்குத் தன் செவியடைப்பவன்
தான் கூப்பிடுகையில் சேட்கப்படான்.
14 இரகசிய வெகுமதி கோபம் தணிக்கும்,
மடியிலுள்ள பரிதானம் கடுங்கோபம் ஆற்றும்.
15 நியாயஞ்செய்யப்படுவது நீதிமானுக்கு சந்தோஷம்,
அக்கிரமஞ்செய்வோருக்கோ அது அழிவாம்.

16 விவேகத்தின்வழிவிட்டுத்தப்பிநடப்பவன்
செத்தவர் கூட்டத்திலே சேர்ந்து தங்குவான்.
17 சிற்றின்பப்பிரியன் தரித்திரனுவான்,
மதுபானத்தையும் மினுக்கெண்ணெயையும் விரும்புவோன் செல்வனுவதில்லை.
18 தெய்வபயமிலான் நீதிமானை மீட்கும்
பொருளாவான்,
நேர்மையாளனுக்குத் துரோகி பதிலாவான்.
19 சண்டையிட்டுச் சஞ்சலம் வினைக்கும்
மனையாளொடு வாழ்தலினும்
வனாந்தரத்தே குடியிருப்பது நன்றும்.
20 அருந்தெவியமும் எண்ணெயும் ஞானியின் வாசஸ்தலத்திலுண்டு,
மதியீனனே. அவற்றைச் செலவழித்து விடுவான்.
21 நீதியும் தயாளமும் நாடிப் பின்செல்வோன்
ஜீவனும் நீதியும் மேன்மையும் கண்டடைவான்.
22 பலவானின் நகரமதில்மேல் விவேகி
ஏறி அதைப் பிடித்து
அவன் நம்பியிருந்த பலத்தையழிப்பான்.
23 தனது வாயையும் நாவையும் காப்பவன்
இடுக்கணில் நின்று தன் உயிரைக் காப்பான்.
24 அகங்கார இடும்பனுக்குப் பரியாசக்கார
னென்று பெயர்,
அவன் சினத்தோடு பெருமையாய் நடப்பான்.
25 சோம்பேறி தன் ஆசையால் மடிவான்,
அவன் கை வேலைக்குச் சம்மதியாது.
26 நாளெலாம் ஆசித்துக்கொண்டிருப்பவ
ருண்டு,
நீதிமானே வரையாது கொடுப்பான்.
27 தெய்வபயமிலார் பலி அருவருப்பாம்,
கெட்ட எண்ணத்தோடு அதைச் செலுத்தின் அதிக அருவருப்பாமே.
28 பொய்ச்சாட்சி சொல்வோன் மடிந்தே
போவான்
தான் கேட்டதைச் சொல்வோன் சொல்
ஒப்புக்கொள்ளப்படும்.
29 தெய்வபயமிலான் தன் முகத்தைக்
கடினமாக்குவான்.
நேர்மையாளனே தன் வழியைச் சீராக்குவான்.
30 ஞானம், புத்தி, ஆலோசனை ஒன்றும்
யெகோவாவுக்கு மாறாய் நில்லாது.
31 யுத்த நாளுக்கெனக் குதிரை ஆயத்தஞ் செய்வார்,
ஜெயம் வருவதோ யெகோவாவினால்.

திரள்செல்வத்திலும் நற்கீர்த்திநிறைந்தது, 22
பொன் வெள்ளியினும் தயாளமே நன்றும்.
செல்வனும் ஏழையும் கூடவே குடியிருப்பார், 2
அவர்கள் அனைவரையும் படைத்தவர் யெகோவாவே.
விவேகி ஆபத்தைக்கண்டு மறைவான், 3
பேதைகளோ நேரே போவார், கேட்டுக்குள்ளாவார்.
தாழ்மையும் யெகோவாவினிடம் பயபக்தியும் 4
செல்வம், மேன்மை, ஜீவன் வினைக்கும்.
மாறுபாடுள்ளவன் வழியில் முள்ளும் 5
கண்ணியுமுண்டு,
தன் உயிரைக் காப்பவன் அவற்றுக்குத் தூரமாவான்.
நடக்கவேண்டிய வழியில் பிள்ளையைப் 6
பழக்கு,
முதிர்வயதினும் அவன் அதை விடாதிருப்பான்.
செல்வவான் ஏழைகளை ஆளுவான், 7
கடன்பட்டவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை.
அநியாயம் விதைப்பவன் கேட்டை 8
அறுப்பான்,
அவன் உக்கிரத்தின்கோல் ஒழிந்திடும்.
கருணைக்கண்ணன் ஆசீர்வாதம் பெறுவான், 9
தனது ஆகாரத்தில் அவன் ஏழைக்கு அளிப்பான்.
பரியாசக்காரனைத் துரத்து, வாது நீங்கிவிடும், 10
வழக்கும் அவமானமும் ஒழிந்துபோம்.
சுத்த இதயமும் இன்சொலும் விரும்புவோன் 11
அரசனுக்குத் தோழனுவான்.
யெகோவாவின் கண்கள் அறிவைக்காக்கும், 12
துரோகிகள் வார்த்தைகளை அவர் தாறுமாறுக்குவார்.
வெளியிலே சிங்கம், வீதியிலே கொலையுண்பேன் 13
என்று சோம்பேறி சொல்லுவான்.
பரஸ்திரீயின் வாய் ஆழமான படுகுழி, 14
யெகோவா அருவருக்கிறவன் அதில் விழுவான்.
பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும், 15
சிட்சையின் பிரம்பு அதை அவனிட்டகற்றும்.

16 ஏழையை ஒடுக்குவோன் அவனைப் பெருகச்செய்வான்,
செல்வனுக்குக் கொடுப்பவன் அவனைக் குறைபடச்செய்வான்.

---

22: 17—24: 22.

17 செவியைச்சாய்த்து ஞானிகளின் வார்த்தைகளைக்கேள்,
என் போதனைக்கு உன் இருதயத்தைத் திருப்பு.
18 அவற்றை உன் உள்ளத்தில் காத்து
உன் உதட்டிலே ஆயத்தமாய் வைத்திருந்தால் இன்பமாம்.
19 உனது நம்பிக்கையெகோவாமேல் இருப்பதற்கு
இன்று அவற்றை உனக்குத் தெரியப்படுத்துகிறேன்.
20 இதன் முன்னே இதை நான் ஆலோசனையாகவும்
அறிவாகவும் உனக்கு எழுதிவைத்தேனே.
21 சத்தியவார்த்தைகளின் யதார்த்தத்தை நீ அறிவதற்கும்,
உன்னை அனுப்பினோர்க்கு நீ மெய்மொழி பதிலுரைப்பதற்கும் இதைச் செய்தேன்.
22 ஏழை என்றெண்ணி ஏழையைக் கொள்ளையிடாதே,
சிறுமையுற்றவனை நியாயஸ்தலத்தில் நொறுக்காதே.
23 யெகோவா அவர்களுக்காக வழக்காடுவார்,
அவர்களைக் கொள்ளையிடுவோர் உயிரைக் கொள்ளைசெய்வார்.
24 கோபக்காரனோடு உறவாடாதே,
உக்கிரகோபமுள்ளவனோடு செல்லாதே.
25 அவன் வழிகளைக் கற்றுக்கொண்டு
உன் உயிருக்குக் கண்ணி வருவிக்க நேருமே.
26 கையடித்துப் பிணைப்பட்டுக்
கடனுக்காய்ப் பிணைப்படுவோரில் ஒருவனாகாதே.
27 செலுத்த உனக்கொன்றும் இல்லாதிருந்தால்,
நீ படுக்கும் படுக்கையையும் அவன் எடுத்துக்கொள்வானே.
28 உனது பிதாக்கள் நாட்டிவைத்த
பூர்வ எல்லைக்குறியை மாற்றாதே.
29 தன் வேலையில் சாமர்த்தியமுள்ளவனைப் பார்த்தால்
அவன் தாழ்ந்தோர்முன் நில்லான், அரசன்முன் நிற்பானே.

23 அதிபதியொடு நீ போஜனம்பண்ண அமர்ந்தால்
உன்முன் இருப்பவன் இன்னான் என்பதை மறவேல்.
2 நீ போஜனப்பிரியனாயிருந்தால்
உன் தொண்டையிலே கத்தியை வை.
3 அவன் ருசிபதார்த்தங்களை இச்சியாதே,
அவை வஞ்சிக்கும் போஜனம்.
4 செல்வனாகிவிட வேண்டுமென்று உழையேல்,
உன் விவேகத்தை அதற்கென்றே செலவிடேல்;
5 இல்லாமற்போம் பொருள்மேல் உன் கண்ணைப் பறக்கவிடுவானேன்?
ஆகாயத்தில் பறக்கும் கழுகுபோல்
அது தனக்குச் சிறகுகளை உண்டுபண்ணிக்கொள்ளுமே.
6 வன்கண்ணன் ஆகாரத்தைப்புசியேல்,
அவன் ருசிபதார்த்தங்களை இச்சியாதே;
7 அவன் தனக்குள்ளே கணக்குப் பார்த்துக்கொண்டேயிருப்பான்;
புசியும், அருந்தும் என்று அவன் உரைப்பான்;
அவன் இருதயமோ உன்னோடிராது.
8 உண்ட உணவை நீ வாந்திசெய்ய நேரும்,
நீ உரைத்த இன்சொற்களெல்லாம் ஒழியும்.
9 மதியீனன் செவிக்குப் புத்தி சொல்லாதே,
புத்தியுள்ள உனது சொற்களை அவன் மதியான்.
10 பூர்வ எல்லைக்குறியை மாற்றாதே,
திக்கற்ற பிள்ளைகளின் நிலத்தை அபகரிக்க முழையாதே.
11 அவர்களை மீட்பதற்குரியவர் வல்லவர்,
அவர்கள் பொருட்டு அவர் உன்னோடு வழக்காடுவார்.
12 உன் இருதயத்தைப் போதகத்திற்கும்
உன் செவிகளை அறிவுமொழிகட்கும் சாய்ப்பாய்.
13 பிள்ளையைச் சிட்சியாமல் விடாதே,
பிரம்பால் அடித்திடின் மரணத்துக்குத் தப்புவான்.
14 ஆம், நீ அவனைப் பிரம்பால் அடிப்பதால்,
பாதாளத்துக்கு அவன் உயிரைத் தப்புவிப்பாய்.
15 மகனே, உன் இதயம் விவேகமுள்ளதாயிருந்தால்
என் இதயமும் எனக்குள்ளே மகிழும்.
16 உன் உதடுகள் நேர்மையானவற்றைப் பேசினால்
என்னுடைய உள்ளமும் ஆர்ப்பரிக்கும்.

17 பார்வைகள்மேல் உன் மனம் பொருமை
கொள்ளவேண்டாம்,
யெகோவாவின்மேல் என்றும் பயபக்தி
யாயிரு.
18 நிச்சயம், உனக்குப் பிரதிபலன் வரும்,
உனது நம்பிக்கை அற்றுப்போகாது.
19 மகனே, நீ செவிசாய்த்து ஞானமடைந்
துகொள்,
உன் இதயத்தை நேர்வழியிலே நடத்து.
20 மதுபானப் பிரியரொடும்
மாமிசப் பெருந்தீனிக்காரரொடும் உற
வாடாதே.
21 குடியன், பெருந்தீனிக்காரன் தரித்திர
னாவான்,
நித்திரைப் பிரியம் கந்தைகளே உடுத்து
விக்கும்.
22 பெற்ற தந்தைக்குச் செவிகொடு,
இழிவென்று உன் தாயை இகழேல்,
23 விலை கொடுத்துச் சத்தியத்தை வாங்கு,
அதை விற்காதே;
ஞானம், போதகம், உணர்வையும் அப்
படியே.
24 நீதிமானைப் பெற்றதந்தை மிக மகிழ்வான்,
ஞானவானைப் பெற்றவன் அவனிமித்
தம் களிப்பான்.
25 உன் தகப்பனும் உன் தாயும் களிப்
படைக,
உன்னைப் பெற்றெடுத்தவளும் மகிழுக.
26 மகனே, உனது இதயத்தை எனக்குத் தா
உன் கண்கள் என் வழியிலே பிரியங்
கொள்வதாக.
27 வேசி ஆழமான படுகுழி,
பரஸ்திரீ இடுக்கமான கிணறு;
28 கொள்ளைக்காரன்போல் அவள் பதிவிருப்
பாள்,
மனிதருக்குள் துரோகிகளே அதிகரிக்கச்
செய்வாள்.
29 ஐயோவென்று அழுவார் யார்? அந்
தோ என்பவரார்?
யாருக்குச் சண்டைகள்? எவருக்குப்
புலம்பம்?
யாருக்குக் காரணமில்லாக் காயம்?
எவருக்கு மங்கலான கண்கள்?
30 மதுபானமுள்ள இடம் தங்கித தரிப்
பார்க்கும்
நிராட்சரசக் கலப்பைச் சோதிப்போர்க்
குமே.
31 நிராட்சரசம் கண்டு அது எத்தனை சிவப்
பென்றும்
பாத்திரத்திலே அது தளதளப்பாய்த்
தோற்றுதென்றும்
மெதுவாய் இறங்கிடுமென்றும் உரையா
தே.
32 முடிவிலே அது பாம்புபோற் கடிக்கும்,
விரியன் பாம்புபோலத் தீண்டும்.
33 உன் கண்கள் பலவிதத் தோற்றங்களைக்
காணும்,
உன துள்ளம் தாறுமாறுனவற்றைப்
பேசும்;
34 நடுக்கடலிலே சயனித்திருப்பவனைப்
போலாவாய்,
பாய்மரத்தின் தனியிலே படுத்திருப்பவ
னுவாய்.
35 என்னை அடித்தார்கள், எனக்கு நோக
வில்லை
என்னை அறைந்தார்கள், எனக்கோ
சுரணையில்லை,
அதை இன்னும் நான் தேடுவதற்கு
எப்போது விழிப்பேன் என்றுரைப்பாய்.

**24** தீயவர்மேலே பொருமை கொள்
ளேல்,
அவர்களோடு இருந்திட விரும்பேல்.
2 அவர்கள் இதயம் கொடுமை யோசிக்கும்,
அவர்கள் உதடுகள் தீமை பேசும்.
3 ஞானத்தினால் வீடுகட்டப்படும்,
விவேகத்தினாலே அது நிலை நிறுத்தப்
படும்.
4 அறிவினாலே அறைகளில்
அருமையும் இனிமையுமான பலபொ
ருள்கள் நிறையும்.
5 ஞானவான் பலவான்,
அறிவுள்ளவன் தன் வல்லமையைப்
பெருக்குவான்.
6 நல்யோசனை கேட்டுப் போரை நடத்து,
ஆலோசனைக்காரர் பலரிருந்தால் ஜெய
முண்டாம்.
7 ஞானம் மூடனுக்குக் கிடைப்பதரிது,
நியாயஸ்தலத்தில் அவன் தன் வாய் திற
வான்.
8 தீமை செய்வதற்கு யோசிப்பவனை
உபாய தந்திரக்காரன் என்றுரைப்பார்.
9 மதியீனனின் உபாயதந்திரம் பாவமே,
பரியாசக்காரன் மனிதனுக்கு அரு
வருப்பு.
10 குறையுற்ற நேரத்தில் தளர்வாயாகில்
உன் பலம் குறைந்துவிடும்.
11 மரணத்துக்கு நடத்தப்படுவோரை
விடவி,
கொல்லப்படுதற்குத் தடுமாறி நடப்பவ
ரை மீட்டுக்கொள்.
12 அதை அறியோம் என்றுரைத்திடுவா
யோ?

இதயஞ்சோதிப்பவர் அதைக் கவனிப்
பார்.
உன் உயிரைக் காப்பவர் அதை அறி
வார்,
செயலுக்குத் தக்கபடி மனிதனுக்குப்
பதிலளிப்பார்.
13 மகனே, தேனைச் சாப்பிடு, நன்றும்,
கூட்டிலிருந்தொழுகு தேன் வாய்க்குத்
தித்திப்பு.
14 ஞானம் உன் ஆன்மாவுக்கும் தித்திப்பு
என்று அறிவாய்,
அதை அடைந்துகொண்டால் உனக்
குப் பிரதிபலன் வரும்,
உனது நம்பிக்கை அற்றுப்போகாது.
15 தெய்வபயமிலானே, நீதிமான் வாச
லிலே பதிவிரேல்,
அவன் தங்கும் இடத்தைப் பாழாக்கா
தே.
16 நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் எழுந்
திருப்பான்,
தெய்வபயமிலாரோ கேட்டிலே இடறி
விழுவார்.
17 உன் சத்துரு விழும்போது மகிழாதே,
அவன் இடறும்போது இருதயத்தில்
ஆர்ப்பரியாதே.
18 யெகோவா அதைக்கண்டு வெறுப்புற்று
அவனிலிருந்து தமது கோபத்தை நீக்
காதபடி,
நீ மகிழாதே, ஆர்ப்பரியாதே,
19 பொல்லாதவர்மேல் எரிச்சலாகாதே,
தெய்வபயமிலார்மேல் பொறுமை கொள்
ளாதே.
20 நீதவானுக்கு இனிவருங்காலமென்றில்லை,
தெய்வபயமிலார் விளக்கு அணைந்தே
போம்.
21 மகனே, யெகோவாவுக்கும் அரசனுக்
கும் பயந்துநட,
கலகக்காரரோடு உறவாடாதே.
22 சடுதியில் அவர்களுக்குக் கேடுவரும்,
அவரிருவராலும் வரும் சங்காரத்தை
அறிபவனார்?

---

24: 23—24: 34.

23 இவையும் ஞானவான்கள் உரைத்தன
வே:
நியாயந்தீர்ப்பதில் முகதாட்சணியம் நன்
றன்று.
24 தெய்வபயமிலானிடம், நீ நீதிமானென்று
சொல்வோனை ஜனங்கள் சபிப்பார்கள்,
புறஜாதியாரும் அவனை வெறுப்பார்கள்.
25 அவனைச் சிட்சிப்பவர்களோ சுகமுண்
டாம்,
அவர்க்கு நல்வாழ்வாம் ஆசீர்வாதம்
வரும்.
26 நேரான மறுமொழி சொல்லுகிறவன்,
உதடுகளை முத்தமிடுபவன் போல்வான்.
27 வெளியில் உன் வேலையை ஆயத்தஞ்
செய்து
வயலிலே செய்யவேண்டியதை முடித்து
பின்பு உன் வீட்டைக் கட்டுவாய்.
28 காரணமின்றி அயலானுக்கு மாறுகச்
சாட்சி சொல்லாதே,
உன் உதடுகளால் வஞ்சகம் பேசுவா
யோ?
29 அவன் எனக்குச் செய்தபடி அவனுக்
குச் செய்வேன்,
ஒருவன் செயலுக்குத் தக்கபடி பதில்
செய்வேன் என்றுரையேல்.
30 சோம்பேறியின் வயலையும்
மதியீனனின் திராட்சத்தோட்டத்தையும்
கடந்துபோனேன்.
31 இதோ, அதெல்லாம் முட்காடாயிருந்
தது,
நிலமுழுவதையும் காஞ்சொறி மூடியிருந்
தது,
அதின் கற்சுவர் இடிந்து கிடந்தது.
32 அதைக் கண்டு நான் சிந்தனை செய்தேன்,
அதைப் பார்த்துப் போதனையடைந்
தேன்.
33 இன்னும் கொஞ்சம் தூக்கம் இன்னும்
சிறிது நித்திரை,
இன்னும் கைமுடக்கிச் சிறிது உறக்கம்
என்பாயோ?
34 உன் தரித்திரம் வழிப்பறிப்பவன்போல்
வரும்,
உன் வறுமை ஆயுதமணிந்தவன்போல்
வரும்.

---

25: 1—29: 27.

25 இவையும் சாலொமோனின் நீதிமொழி
களே:
இவற்றை யூதாவின் ராஜாவாகிய எசேக்
கியாவின் மனுஷர் தொகுத்து எழுதினார்
கள்.
2 காரியத்தை மறைத்து வைப்பது கடவு
ளின் சிறப்பு,
காரியத்தை ஆராய்வதோ அரசரின்
சிறப்பு.
3 வானத்தின் உயரம், பூமியின் ஆழம்,
ராஜாக்களின்
இதயங்கள் இவை ஆராயமுடியாதன.
4 வெள்ளியினின்று களிம்பை நீக்கிவிடு,
தட்டானுக்கு உகந்தது அதில் உண்டா
கும்.

5 தெய்வபயமிலாதோன் ராஜசமுகநின்று நீக்கிவிடு,
அப்பொழுது ராஜசிங்காசனம் நீதியில் நிலைக்கும்.
6 ராஜசந்நிதியிலேபெருமை பாராட்டாதே,
பெரியோரிருக்கும் ஸ்தலத்திலே நில்லாதே.
7 உனக்குத் தெரிந்த பிரபு காண
நீ தாழ்த்தப்படுவது நன்றன்று;
மேலே வா என்று அழைக்கப்படுவது
உனக்கு நன்மையாகும்.
8 வழக்காட விரைந்து செல்லாதே,
முடிவில் உன் விரோதி உன்னை வெட்கப்படுத்தும்போது
நீ என்ன செய்வதென்றறியாயே.
9 விரோதியோடு வழக்காடுகையிலே
பிறர் இரகசியத்தை நீ வெளியிடாதே.
10 வெளியிட்டால் அதைக்கேட்பவன்
உன்னை நிந்திப்பான்,
உன் அவமானம் உன்னைவிட்டு நீங்காது.
11 சமயோசிதச் சொல் வெள்ளித்தட்டிலே
வைக்கப்பட்ட பொற்பன்னீர்ப்பழமாம்.
12 கேட்கும் காதுக்கு ஞானமாய்க் கண்டித்து புத்தி சொல்வோன்
பொற்கடுக்கனும் தங்கபூஷணமும் போல்வான்.
13 உறைமழைக்குளிர்ச்சி கோடைகாலத்திற்கு எப்படியோ
அப்படியே உண்மையான ஸ்தானாபதி
தன்னையனுப்பியவனுக்கு ஆவான்;
தன் எஜமானின் மனதை அவன் குளிரச்செய்வான்.
14 தயாளமுள்ளேனெனப் பொய்யாய்ப் பெருமை பேசுபவன்
மழைபொழியா மேகம் காற்றுக்கு ஒப்பாவான்.
15 நீண்ட பொறுமை பிரபுவையும் சாந்தப்படுத்தும்,
சாந்தமுள்ள நாவு எலும்பையும் கொறுக்கும்.
16 தேனைக்காண்பாயாகில் மட்டாய்ச் சாப்பிடு,
இல்லாவிட்டால் தெவிட்டி வாந்திசெய்வாய்.
17 அடிக்கடி அயலான் வீட்டிற் கால் வையாதே,
வைத்தால் அவன் சலித்து உன்னை வெறுப்பான்.
18 அயலானுக்கு மாறுப்பொய்ச்சாட்சியுரைப்போன்,
தண்டாயுதம், வாள், கூர் அம்புக்கொப்பாவான்.
19 ஆபத்துகாளில் துரோகியின்மேல் வைக்கும் நம்பிக்கை
உடைந்தபல்லுக்கும் முழி புரண்ட காலுக்கும் ஒப்பாம்.
20 துக்கமுள்ளவனோயாற்றப் பாட்டுப் பாடுவது
குளிரில் துணிகளைகலையும் வெடியுப்பில் காடிவார்த்தலையும்போலாம்.
21 உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்கு ஆகாரம் கொடு,
தாகமாயிருந்தால் அவன் தாகத்தைத்தீர்.
22 அப்போது அவன் தலைமேல் எரிதழல் குவிப்பாய்,
யெகோவா உனக்குப் பலனளிப்பார்.
23 வடகாற்று மழையை வருவிக்கும்,
புறங்கூறும் நாவு கோபமுகம் உண்டாக்கும்.
24 சண்டைக்காரியோடு விசால வீட்டில் வசிப்பதிலும்
வீட்டின்மேல் மூலையிலே தங்குவது நன்மையாகும்.
25 தூரதேசமிருந்து வரும் நற்செய்தி விடாய்த்தவன் பெற்றகுளிர்ந்த ஜலமாம்.
26 தெய்வபயமில்லாதவன்முன் நீதிமான் தள்ளாடுவது
கலங்கிய ஊற்றும், கெட்டுப்போன சுனையாம்.
27 தேனை மிகுதியாய் உண்பது நன்றன்று,
வரும்புகழைப் பரிசோதிப்பதே புகழ்.
28 மனதை அடக்கிக்கொள்ளாத மனிதன்
மதிலிடிந்துபோன நகரம் போல்வான்.

26 வேனலிலே உறைமழையும்
அறுப்புநாளில் மழையும் பொருந்தாதது போல்
மதியீனனுக்கு மகிமை பொருந்தாது.
2 அடைக்கலான் அலைவதுபோலவும் தகைவிலான் பறப்பதுபோலவும்
அகாரணமாயிட்ட சாபம் பறந்துபோம்.
3 குதிரைக்குச் சவுக்கு, கழுதைக்குக் கடிவாளம்,
மதியீனன் முதுகுக்குப் பிரம்பு,
4 மூடனுக்கு அவன் புத்தியீனப்படி பதிற் சொல்லாதே,
சொன்னால் நீயும் அவன்போல் ஆவாய்.
5 மூடனுக்கு அவன் புத்தியீனப்படி பதிற் சொல்,
சொல்லாவிட்டால் தன்னை ஞானி என்றெண்ணிக்கொள்வான்.
6 மதியீனன் கையால் செய்தியனுப்புவோன்
தனது கால்களையே தறித்து நஷ்டம் தாகவானே.

7 மதியீனர் வாயின் நீதிமொழிகள்
கொண்டியின் கால்கள் தொங்குவன போல.
8 மதியீனனுக்குச் சிறப்பையளிப்பவன் கவணிலே கல்லைக்கட்டியவனுவான்.
9 மதியீனன் வாயில் அகப்பட்ட நீதி மொழி வெறியன் கைப்பட்ட முள்ளாகும்.
10 வழிப்போக்கரை வேலைகொள்ளும் மூடன் பலரைக் காயப்படுத்தும் வில்லாளிபோல் வான்.
11 தன் மதியீனத்தைத் திரும்பத்திரும்பச் செய்யும் மூடன் தான் கக்கினதற்கே திரும்பும் நாய்போல் வான்.
12 தன்னை ஞானியென மதிக்கும் ஒருவனைக் கண்டாயோ? அவனிலும் மூடனே நன்னம்பிக்கைக் குரியவன்.
13 வழியிலே கொல்லும் மிருகம், வெளியிலோ சிங்கம் என்று சோம்பேறி சொல்லுவானே.
14 குழியில்கட்ட கதவு ஆடுவதுபோல சோம்பேறி தனது படுக்கையிலே திரும்புவான்.
15 சோம்பேறி கலத்திலே கையையவைப்பான், திரும்பத்தன் வாய்க்கு அதை எடுப்பது அவனுக்குக் கஷ்டம்.
16 விவேக மறுமொழி கொடுக்கும் ஏழுபேரிலும் தன்னை அதிக ஞானமுள்ளவன் எனச் சோம்பேறி மதிப்பான்.
17 வழியிலே தனக்கு அடா வழக்கில் தலையிடுபவன் நாயின் காதைப் பிடித்திழுப்பவனுவான்.
18 அயலானை வஞ்சித்து, விளையாட்டுக் கென்று செய்தேன் என்றுரைக்கு மனிதன்
19 எரிகொள்ளி, அம்பு, மரணம் இவற்றை எறிந்திடும் பைத்தியகாரன் போல்வான்.
20 விறகில்லாவிடில் நெருப்பு அவிந்திடும், கோளனில்லாவிடில் சண்டை அடங்கும்.
21 கரியால் தழல் விளையும், விறகால் நெருப்பெரியும் வாதுப்பிரியனுல் சண்டை மூளும்.
22 கோளுரைப்பவன் சொற்கள் இனிய உணவுபோல் வயிற்றின் அடிவரைசென்று தங்கும்.
23 தீயநெஞ்சோடு ஒட்டி நேச அனல்காட்டும் உதடு ஓட்டைப் பொதிந்துள்ள வெள்ளித்தகடாம்.
24 பகைப்பவன் தன் உதடுகளால் சூது பேசுகிறான், தனது உள்ளத்திலே கபடத்தை வைக்கிறான்.
25 அவன் இதம்பேசினலும் அவனை நம்பாதே, அவன் இருதயத்தில் ஏழு அருவருப்புகள் உண்டே.
26 வஞ்சகமாய்ப் பகையை மறைத்து வைப்பவனது நிமை மகாசபையிலே வெளிப்படும்.
27 படுகுழி வெட்டுவோன் தானே அதில் விழுவான், கல்புரட்டுவோன்மேல் அக்கல்லே திரும்பவிழும்.
28 கள்ள நாவு தான் காயப்படுத்தினவரைப் பகைக்கும், இச்சகம் பேசும்வாய் அழிவை விளைக்கும்.

27 நாளைத் தினத்தைப்பற்றிப் பெருமை பாராட்டாதே, ஒருநாள் விளைப்பது இன்னதென்று அறியாயே.
2 உன்னுடைய வாய் அல்ல பிறரே, உன் உதடு அல்ல, அந்நியரே உன்னைப் புகழ்க.
3 கல் கனம், மணல் பாரம், மூடனின் கோபம் இரண்டிலும் பாரம்.
4 உக்கிரம் கொடுமை, கோபம் பெருவெள்ளம், காதற்சமுசயத்தின்முன் நிற்கத்தக்கவர் யார்?
5 குற்றத்தை மறைக்கும் அன்பிலும் வெளிப்படையாய்க் கண்டித்துப் பேசும் சிட்சையே நன்றும்.
6 சிநேகிதன் அடிப்பது நற்கருத்துடனே, பகைவனிடும் முத்தங்களுக்கோ கணக்கில்லை.
7 திருப்தியடைந்தவன் தேன்கூட்டையும் மிதிப்பான், பசித்தவனுக்கோ எந்தக் கசப்பும் இத்திப்பாம்.
8 தனது ஸ்தானத்தை விட்டலையும் மனிதன் தன் கூட்டை விட்டலையும் குருவிபோன்றிருப்பான்.
9 தைலமும் தூபமும் மனமகிழ்ச்சியை விளைவிக்கும், உள்ளங்கசிந்து நலம்பேசும் நட்பின் இன்பமும் அப்படியே.

10 உனது நண்பனையும் தந்தையின் நண
பனையும் கைவிடாதே,
உனது கஷ்ட நாளில் உடன்பிறந்தான்
வீடு செல்லேல்,
தூர சகோதரனிலும் சமீப அயலானே
உத்தமம்.
11 மகனே, நீ ஞானவானாகி எனது இத
யம் மகிழச்செய்,
அப்போது நான் என்னை நிந்திப்போர்க்கு
பதிலுரைப்பேன்,
12 விவேகி ஆபத்தைக்கண்டு மறைவான்,
பேதைகளோ நேர்போவார், கேட்டுக்
குள்ளாவார்.
13 அந்நியனுக்குப் பிணைநின்றவன் வஸ்தி
ரத்தை எடுத்துக்கொள்,
அந்நிய ஸ்திரீயின் நிமித்தம் அவன் கை
யில் ஈடுவாங்கிக்கொள்.
14 ஒருவன் காலையில் எழுந்து சத்தமிட்டு
நண்பனுக்குக்
கூறும் ஆசீர்வாதம் சாபமாய் எண்ணப்
படும்.
15 சண்டைக்காரியான மனையாள்
அடைமழை நாளின் ஒயா ஒழுக்கு.
16 அவளை அடக்க முயல்வோன் காற்றை
அடக்கவும்
தன் வலக்கையால் எண்ணெயைப
பிடிக்கவும் முயல்பவனும்.
17 இரும்பை இரும்பு கூர்மையாக்கிவிடும்,
அப்படியே
மனிதனை அவன் சிநேகிதன் கூர்மையாக்
குவான்.
18 அத்திமரம் காத்திருப்போன் கனி புசிப்
பான்,
எஜமானிடம் காப்போன் சிறப்படை
வான்
19 தண்ணீர் முகத்தை முகத்துக்குக் காட்
டுவதுபோல்
இதயம் மனிதனை மனிதனுக்குக் காட்
டும்.
20 பாதாளமும், பாதாளக்குழியும் திருப்தி
யாவதில்லை,
மானிடன் கண்களும் திருப்தியாவதில்லை.
21 வெள்ளிக்குக் குகை, பொன்னுக்குப்
புடம்,
மானிடனைச் சோதிப்பது அவன் புகழே.
22 மதியீனனை உரலிலிட்டு உலக்கையால்
கொய்யோடே சேர்த்துக் குத்தினும்
அவன் மதியீனம் அவனை விட்டகலாது.
23 உனது ஆடுகளின் நிலைமை நன்றாய்
அறிந்துகொள்,
உன் மந்தைகளின்மேல் கவனமாயிரு.
24 செல்வம் என்றும் நிலைப்பதல்ல,
கிரீடம் தலைமுறையாக நிலை நிற்குமோ?
25 புல் நீக்கியபின் இளம்புல் தோன்ற
மலைப் பூண்டுகளும் சேர்க்கப்படுமாயின்
26 ஆட்டுக்குட்டிகள் உனக்கு ஆடையையும்
கடாக்கள் வயல்வாங்கக் கிரயமும் கொ
டுக்கும்.
27 உன் ஆகாரத்துக்கும் உன் வீட்டாரின்
ஆகாரத்துக்கும்
வேலைக்காரிகள் பிழைப்புக்கும்
தேவையான வெள்ளாட்டுப் பாலிருக்
கும்.

**28** எவரும் தொடராதிருந்தும் தெயவ
பயமற்றோர் ஓடுவார்,
நீதிமான்களோ பாலசிங்கம்போல தை
ரியமாயிருப்பார்கள்.
2 தேசத்தின் மீறுதல் நிமித்தம் அதிகாரி
கள் பலராவார்,
புத்தி யறிவுள்ள மனுஷனாலோ நாடு
நெடுகாளிருக்கும்.
3 சிறுமையுற்றோரை ஒடுக்கும் தரித்திர
னான அதிகாரி
ஆகாரம் விளையாதபடி வெள்ளமாய்
அடிக்கும் மழை.
4 பிரமாணத்தை கைவிடுவோர் தெய்வ
பயமிலாரை மெச்சுவார்,
பிரமாணம் கைக்கொள்வோர் அவரோடு
போராடுவார்.
5 துஷ்டர் நியாயத்தை உணரார்,
யெகோவாவைத் தேடுவோரோ யாவை
யும் உணர்வார்.
6 இருவழி நடக்கும் திரியாவரச் செல்வ
னிலும்
நேர்மையாய் நடக்கும் தரித்திரனே உத்
தமன்.
7 பிரமாணத்தைக் கைக்கொள்ளுவோன்
விவேகமுள்ள மகன்.
பெருந்தீனியார் தோழன் தகப்பனுக்கு
அவமானம்.
8 வட்டிவாங்கியும் கூட்டி வாங்கியும்
பொருள் பெருக்குவோன்
சிறுமையுற்றவனுக்கு இரங்குகிறவனுக்
கென்று அதைச் சேர்க்கிறான்.
9 பிரமாணத்தைக் கேளாதபடி,
தனது செவியை விலக்குவோன் ஜெபம்
அருவருப்பு.
10 நேர்மையாளர் தவறித் தீயவழி செல்
லும்படி செய்வோன்
தான் வெட்டின குழியில் தானே விழு
வான்.
குற்றமற்றவரோ வாழ்வைச் சுதந்தரிப்
பார்.

11 செல்வவான் தன் பார்வையில் ஞான
வான்,
சிறுமையுற்ற தரித்திரனோ அவனை ஆராய்
கிறான்.
12 நீதிமான்கள் ஆரவாரிக்கையில் யாவும்
சிறப்புறும்,
தெய்வபயமிலோர் தழைக்கையிலோ
மானிடரைக் காண்பதரிது.
13 தன் பாவங்களை மறைப்பவன் வாழ்
வடையான்,
அறிக்கைசெய்து அவற்றை விட்டுவிடு
வோன் இரக்கம் பெறுவான்.
14 எப்போதும் பயபக்தியாயிருப்பவன் பாக்
கியவான்,
இதயத்தைக் கடினமாக்குவோன் கேட்
டில் விழுவான்.
15 சிறுமையுற்றவரை ஆளும் தெய்வபய
மற்றவன்
கெர்ச்சிக்கும் சிங்கத்தையும் பீறிடும் கர
டியையும் போன்றிருப்பான்.
16 உணர்விலா அதிபதி மிக ஒடுக்குபவனு
மாவான்,
அநியாய லாபம் வெறுப்போன் தீர்க்கா
யுள் பெறுவான்.
17 இரத்தப்பழி சுமப்போன் குழிக்கு ஓடிப்
போவான்,
அவனுக்கு யாரும் உதவிசெய்ய வேண்
டாம்.
18 குற்றமற்றவனாய் நடப்போன் தப்புவிக்
கப்படுவான்,
இருவழி நடப்போன் அவற்றிலொன்
றில் விழுவான்.
19 தன் நிலம் பயிரிடுவோனுக்கு ஆகாரம்
நிறையும்,
வீணனவற்றை நோக்குவோனுக்குத்
தரித்திரம் நிறையும்.
20 உண்மையுள்ள மனிதன் பேராசீர்வாதம்
பெறுவான்,
செல்வனாக விரைபவன் தண்டனைக்குத்
தப்பான்.
21 பட்சபாதம் நன்றன்று; ஒருகவளம்
உணவுக்காய் அநியாயஞ் செய்வோரு
முண்டு.
22 வன்கண்ணன் செல்வனாகிறதற்கு ஆத்தி
ரப்படுவான்,
வறுமை தனக்கு வருமென்று அறியான்.
23 நாவினால் முகஸ்துதி பேசுவோனைப்
பார்க்கிலும்
கண்டித்தப்பேசுபவனே கடைசியில்
கயைபெறுவான்.
24 தாய்தந்தையரைக் கொள்ளையிட்டு, பாத
கம் இல்லை என்பவன்
அழிவு செய்வோனுக்கு அண்ணன் ஆ
வான்,
25 பொருளாசைக்காரன் சண்டை கிளப்பு
வான்,
யெகோவாவில் நம்பிக்கையுள்ளவன்
வாழ்ந்திருப்பான்.
26 தன் புத்தியில் நம்பிக்கையுள்ளவன் மதி
யீனன்,
ஞானமாய் நடப்பவன் விடுவிக்கப்படு
வான்.
27 ஏழைக்கு அளிப்பவன் குறையுறமாட்
டான்,
கண்மூடிக்கொள்பவன் பல சாபம் பெ
றுவான்.
28 தெய்வபயமிலோர் தழைக்கையில் மனி
தர் ஒளித்துக்கொள்வார்கள்,
அவர்கள் அழியவே நீதிமான்கள் பெரு
குவார்கள்.

29 பலமுறை கிட்சைபெற்றும் வணங்
காக்கழுத்துடையவன்
சடுதியில் நாசமடைவான், நிவாரண
மில்லை.
2 நீதிமான்கள் பெருகவே ஜனங்கள் மகிழ்
வார்கள்,
தெய்வபயமிலான் ஆளும்போதோ ஜனம்
தவிக்கும்.
3 ஞானத்தை விரும்புவோன் தந்தையை
மகிழ்விப்பான்,
வேசையர் சம்பந்தமுள்ளவன் செல்
வத்தை அழிப்பான்.
4 நியாயத்தைச்செய்யும் அரசன் தேசத்தை
நிலைபெறச்செய்வான்,
பரிதானப் பிரியனோ அதைக்கவிழ்த்து
விடுவான்.
5 பிறனுக்கு முகஸ்துதி பேசுகிறவன்
அவன் கால்களுக்கு வலைவிரிக்கிறான்.
6 துஷ்டனின் பாதகம் அவனுக்கே கண்
ணியாம்,
நீதிமானோ பாடி மகிழ்கிறான்.
7 நீதிமான் சிறுமையுற்றவனின் நியாயத்
தைக் கவனிப்பான்,
தெய்வபயமிலானோ எதையும் உணரான்.
8 பரியாசக்காரர் நகரத்தைக் கிளப்பிவிடு
வார்,
ஞானவான்களோ கோபத்தை விலக்கு
வார்கள்.
9 மதியில்லாதவனோடு ஞானவான் வழக்
காடுகையில்
சினந்தாலும் சிரித்தாலும் அமைதியில்லை.
10 இரத்தப்பிரியர் குற்றமிலாதவனைப் பகை
ப்பார்,

நேர்மையாளரோ அவன் உயிரைக்காப்
பார்.
11 மதியீனன் தனது சினமெல்லாம் வெளி
யிடுவான்,
ஞானவானோ அவனை முடிவிலே அமர்த்
துவான்.
12 அதிபதி பொய்க்குச் செவிகொடுத்தால்
அவன் ஊழியரெல்லாம் தெய்வபயமற்ற
வராவார்.
13 ஏழையும் கொடியவனும் கூடவே குடி
யிருப்பார்கள்,
இருவர் கண்களுக்கும் ஒளிகொடுப்பவர்
யெகோவாவே.
14 சிறுமையுற்றோர் வழக்கை நியாயமாய்
விசாரிக்கும்
ராஜாவின் சிங்காசனம் என்றும் நிலைக்
கும்.
15 பிரம்பும் சிட்சையும் ஞானம் விளைவிக்
கும்,
சுயேச்சையாய்விட்ட பிள்ளை தாய்க்கு
அவமானம் வருவிக்கும்.
16 தெய்வபயமிலான் பெருகப் பாதகம் பெ
ருகும்,
நீதிமான்களோ அவர்கள் விழுவதைக்
காண்பார்கள்.
17 மகனைச் சிட்சிப்பாய், அவன் உனக்கு
ஆறுதலாவான்,
உன் மனதுக்கு இன்பம் ஊட்டுவான்.
18 தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனம்
சுயேச்சையாய் விடப்படும்,
பிரமாணத்தைக் காப்பவனோ பாக்கிய
வான்.
19 அடிமை சிட்சிக்கப்படுவது வார்த்தை
யாலல்ல,
அவன் அதை அறிந்தாலும் அடங்கான்.
20 பதறிப்பேசும் ஒருவனைக் கண்டாயோ?
அவனிலும் மூடனே நன்னம்பிக்கைக்
குரியவன்.
21 அடிமையைச் சிறுவயதில் இளக்கார
மாய் வளர்த்தால்
கடைசியிலே அவன் உன்னை அவமதிப்
பான்.
22 கோபக்காரன் சண்டை கிளப்புவான்,
மூர்க்கன் பெரும்பாதகன்.
23 மனிதனின் அகந்தை அவனைத் தாழ்த்
தும்,
மனத்தாழ்மையுள்ளவன் மேன்மைபெறு
வான்.
24 திருடனோடு பங்காளியானவன் தன் உயி
ரைப்பகைப்பவன்,
ஆணையிட்டனுப்பதைக் கேட்டும் ஒன்
றும் வெளியிடான்.
25 மனுஷனுக்குப் பயப்படுவது கண்ணி
யை வருவிக்கும்,
யெகோவாவை நம்புபவனே உயர்த்த
அடைக்கலம் பெறுவான்.
26 ஆளுகை செய்பவனின் தயவை நாடி
வருபவர் பலர்,
அவனவன் நியாயமோ யெகோவாவினால்
வரும்.
27 நீதிமானுக்கு அநியாயக்காரன் அரு
ருப்பு,
நேர் நெறி நடப்போன் தெய்வபயமிலா
னுக்கு அருவருப்பு.

**30** யாக்கேயின் குமாரனாகிய ஆகூரின்
வார்த்தைகள்,
அம்மனிதன் திருவாக்காய்ச் சொல்லு
கிறான்:—
கடவுளே தளர்ந்தேன், கடவுளே தளர்ந்
தேன், ஒழிந்துபோனேன்.
2 மானிடர் அனைவரிலும் நானே மிருகக்
குணமுள்ளவன்,
மனிதருக்கேற்ற உணர்வு எனக்கில்லை.
3 ஞானத்தை நான் கற்றதில்லை,
பரிசுத்தரையறியும் அறிவை நான் பெற்ற
தில்லை.
4 வானமளவு ஏறி இறங்கி வந்தவன் யார்?
காற்றைத் தம் கைகளில் சேர்த்துவைத்த
வர் யாரே?
தண்ணீரை அங்கியிலே கட்டிவைத்துக்
கொண்டவரார்?
பூமியின் கடைமுனைகளை நிறுத்தினவர்
யார்?
அவர் நாமமும் அவர் குமாரனின் நாம
மும் அறிவாயோ!
5 கடவுளின் வசனங்களெல்லாம் பூ
மிடப்பட்டவை,
அடைக்கலம் புகுந்தோர்க்கு அவரே
கேடகம்.
6 அவர் வசனங்களோடொன்றையும் கூட்
டாதே,
கூட்டினால் அவர் உன்னைக் கண்டிப்பார்,
நீ பொய்யனாவாய்.
7 உம்மிடம் நான் கேட்கும் இரண்
டுண்டு,
மரணத்தின்முன் அவற்றைக் கொடாமல்
மறுக்கவேண்டாம்;
8 வஞ்சனை, பொய் எனக்கு வெகுதூர
மாக்கிவிடும்;
வறுமையும் செல்வமும் எனக்குக்
கொடாமல்
அன்றுடகப்படியை எனக்களித்துப்
போஷியும்.

9 எல்லாம் எனக்குப் பூரணமாஞல், நான்
உம்மை மறுதலித்து
யெகோவா யாரெனச் சொல்ல கேரிடும்
வறுமையுறுவேனுகில் நான் திருடனுகி,
கடவுளின் திருநாமத்தைப் பழிக்க
நேருமே.
10 வேலையாளை எஜமானிடம் நிந்தியாதே,
அவன் உன்னைச் சபிப்பான், நீ குற்ற
வாளியாவாய்.
11 தந்தையைச் சபித்தும் தாயை ஆசீர்
வதியாதும்
இருக்கும் சந்ததியாருண்டே.
12 அழுக்கறக் கழுவப்படாதிருந்தும் தம்
பார்வையில்
சுத்தமாய்த் தோன்றும் சந்ததியாருண்டே.
13 வேறெரு சந்ததியாருமுண்டு,
அவர்கள் கண்களின் மேட்டிமை எவ்
வளவு!
அவர் இமை நெறிப்பை என்ன
சொல்ல!
14 பட்டயங்களை யொத்த பற்களையும் கத்தி
களைப்
போன்ற கடைவாய்ப்பற்களையு முடைய
சந்ததியாருண்டு.
அவர்கள் தேசத்திலிராதபடி சிறுமை
யுற்றேரையும்
மானிடருள்ளிராதபடி எளியோரையும்
பட்சிப்பார்கள்.

---

30: 15–30: 33.

15 தா, தா என்கிற இரண்டு குமாரிகள்
அட்டைக்கு உண்டு,
திருப்தியுறு மூன்றுண்டு, போதும் என்
காத நான்குண்டு.
16 பாதாளம், மலட்டுக்கர்ப்பம், தண்ணீ
ரால்
திருப்தியுறுத நிலம், போதுமென்று
சொல்லாத அக்கினி ஆகியவைகளே.
17 தந்தையைப் பரியாசம் செய்து
தாயின் கட்டளையை அசட்டை செய்
பவனின் கண்ணை
நதிக்கரைக் காகங்கள் பிடுங்கும்,
கழுகின் குஞ்சுகள் தின்னும்.
18 எனக்கு அதிக ஆச்சரியமானவை
மூன்றுண்டு,
என் அறிவுக்கெட்டாதன நான்குமுண்டு:
19 ஆகாயத்திலே கழுகின் வழி,
கன்மலையிலே பாம்பின் வழி,
நடுக்கடலிலே கப்பலின் வழி,
ஸ்திரீயினிடத்திலே புருஷனின் வழியே.
20 விபசார ஸ்திரீயின் வழி இப்படியாம்:
அவள் தின்று தன் வாயைத்துடைத்து,
நான் ஒரு பாவமும் அறியேன் என்
பாள்.
21 பூமி கலக்கமுறுவது மூன்றினிமித்
தம்,
தாங்கமுடியாத நான்கினிமித்தமே:
22 அரசபதவி பெற்ற அடிமையினிமித்தம்,
உண்டு திருப்தியுறும் மூடனினிமித்தம்,
23 வெறுக்கப்பட்டும் ஒருவனுக்கு வாழ்க்
கைப்பட்டவள் நிமித்தம்,
காச்சியார் ஸ்தானத்தில் இல்லாள் ஆகும்
அடிமைப்பெண்ணினிமித்தமுமே.
24 பூமியிலே சிறியனவாயிருந்தும்
ஞானியினும் ஞானமுள்ள நான்குண்டு:
25 பலவீனக் கூட்டமாயினும் வெயில்காலத்
தில்
ஆகாரம் சேர்த்துவைக்கும் எறும்பு,
26 வலிமையில்லாக் கூட்டமாயினும் தங்
கள் வீட்டைக்
கன்மலையிலே ஏற்படுத்துங் குழிமுசல்,
27 அரசன் ஒருவன் இல்லாதிருந்தும்
அணி அணியாய்ப் புறப்படும் வெட்டுக்
கிளி,
28 கையாலெடுக்கக் கூடியதாயிருந்தும்
அரசமாளிகையிலே வசிக்கும் பல்லியே.
29 ஒய்யார நடை உடையன மூன்
றுண்டு,
ஒய்யாரமாய்ச் செல்வன நான்குண்டு:
30 மிருகங்களில் பராக்கிரம வீரனும்
எதற்கும் பின்னிடாததுமான சிங்கம்,
31 போர்க்குதிரை, வெள்ளாட்டுக்கடா,
சேனையோடு செல்கின்ற அரசன்.
32 மூடத்தனத்தாலோ, ஆலோசனை
செய்தோ,
பெருமையாய் நடந்திருந்தால் உன்
வாயைக் கைகொண்டு மூடு.
33 பாலைக்கடைய வெண்ணெய் பிறக்கும்,
மூக்கைப்பிசைய ரத்தம் பிறக்கும்,
கோபத்தைக்கிண்டச் சண்டை பிறக்
கும்.

---

31: 1–31: 9.

31 லெமூவேல் அரசன் வார்த்தைகள்;
அவன் தாயார் போதகஞ்செய்து அவனை
வளர்த்த திருவாக்கு:
2 மகனே கேள், என் கர்ப்பக்கனியே
கேள்,
எனது பொருத்தனைகளின் மகனே கேள்:
3 ஸ்திரீகளுக்கு உன் பலத்தைக் கொ
டாதே,
ராஜாக்களைக் கெடுக்கும் வழிகளிற் செல்
லாதே.

4 திராட்சரசம் குடிப்பது அரசர்க்குத் தகுதியன்று,
லெமூவேலே, அரசர்க்கு அது தகுதியன்று;
மதுபானம் ஆசிப்பது அதிகாரிகட்குத் தகுதியன்று.
5 குடிப்பதினாலே பிரமாணங்களை மறந்து
சிறுமையுற்றோர்க்கெலாம் நியாயம் புரட்ட நேரிடும்.
6 மடிந்துபோகிறவனுக்கு மதுபானத்தையும்
மனங்கசந்தோனுக்குத் திராட்சரசத்தையும் கொடுங்கள்.
7 அவன் குடித்துத் தன் குறையை மறந்து
தன் சஞ்சலத்தை அப்பால் நினையாதிருக்கட்டும்.
8 ஊமையன் பொருட்டும் நிக்கற்றவர்களின்
நியாயத்தின் பொருட்டும் உன் வாயைத் திற.
9 உன்வாய் திறந்து நீதியோடு தீர்ப்புச் செய்,
சிறுமையும் எளிமையுமானவனுக்கு நியாயஞ்செய்.

---

31: 10–31: 31.

10 குணசாலியான பெண்ணைக் கண்டுபிடிப்பவன் யார்?
அவள் விலை முத்துக்களிலும் உயர்ந்தது.
11 அவள் புருஷன் இதயம் அவளை நம்பும்,
அவன் சம்பத்து குறையாது.
12 அவள் உயிரோடிருக்கும் நாளெல்லாம்
அவனுக்கு நன்மையே செய்வாள், தீமை செய்யாள்.
13 ஆட்டுமயிரையும் சணலையும் தேடித்
தன் கைகளால் சந்தோஷமாய் வேலை செய்வாள்.
14 வியாபாரக் கப்பல்களைப் போல்வாள் அவள்,
தூரத்திலிருந்து உணவுப்பொருள் வாங்கி வருவாள்.
15 இருட்டோடெழுந்து வீட்டார்க்கு ஆகாரங்கொடுப்பாள்,
தனது வேலைக்காரிகளுக்குப் படியளப்பாள்.
16 வயல்வாங்க யோசித்து அதை வாங்குகிறாள்,
தன் சம்பாத்தியத்தால் திராட்சத்தோட்டம் நாட்டுகிறாள்.
17 தன்னைப் பலத்தால் இடைகட்டிக்கொண்டு
தன் கைகளைப் பலப்படுத்துகிறாள்.
18 தன் உழைப்பு சித்திபெறுமென்று அவளுக்குத் தெரியும்,
இரவிலே அவள் விளக்கு அணையாதிருக்கும்.
19 தனது கைகளை இராட்டிலே வைக்கிறாள்,
அவள் விரல்கள் கதிரிலேயே இருக்கும்.
20 சிறுமையுற்றோர்க்குத் தன் கையைத் திறப்பாள்,
எளியவர்க்குத் தன் கையை நீட்டுவாள்.
21 தன் வீட்டாருக்கெல்லாம் சிவப்புக் கம்பளியாடையிருப்பதால்
அவர்கள் நிமித்தம் அவள் குளிருக்குப் பயப்படாள்.
22 தனக்கென இரத்தினக் கம்பளங்களைச் செய்கிறாள்,
மெல்லிய வஸ்திரமும் இரத்தாம்பரமும் அவள் உடையாம்.
23 அவள் புருஷன் நாட்டின் தலைவரோடு ஊர்வாசலிலே
உட்கார்ந்து யாவருக்கும் தெரிந்தவனாவான்.
24 மெல்லிய வஸ்திரம் நெய்து விற்கிறாள்,
கச்சைகளை வர்த்தகரிடம் ஒப்புவிப்பாள்.
25 பலமும் திறப்புமே அவள் ஆடை,
வருங்காலத்தைப்பற்றியும் அவள் நகைப்பாள்.
26 ஞானம் விளங்கத் தன்வாயைத் திறக்கிறாள்,
பட்சமுள்ள போதனை அவள் நாவில் உண்டு.
27 வீட்டுக்காரியங்களிலே கண்ணோக்கமாயிருப்பாள்,
அவள் புசிப்பது சோம்பலின் அப்பம் அன்று.
28 அவள் பிள்ளைகள் எழுந்து அவளைப் பாக்கியவதி என்பார்கள்,
அவள் புருஷனும் அவளைப் புகழ்ந்து:
29 குணசாலியான பெண்கள் பலரிருந்தார்கள்,
நீயோ அவர்களெல்லாரிலும் மேலானவள் என்பான்.
30 சௌந்தரியம் வஞ்சனை, அழகு வீண்,
யெகோவாவுக்குப் பயப்படும் பெண்ணே புகழ்ச்சிக்குரியவள்.
31 அவள் கைகளின் பலனை அவள் பெறுவாளாக.
அவள் செயல்கள் அவளை ஊர்வாசல்களிலே புகழ்வதாக.

ECCLESIASTES: OR THE PREACHER

# பிரசங்கி

1 தாவீதின் குமாரனும் எருசலேமில் அரசாண்டவனுமாகிய பிரசங்கியின் வார்த்தைகள்:—

2 மா மாயை என்றே உரைத்தான் பிர சங்கி,
மா மாயை, யாவும் மாயையேயாமே!

3 சூரியன்கீழ் மனிதன் உழைக்கும் உழைப்பினால்
அவன் அடைந்திடு பலன் யாதோ, யாதோ!

4 சந்ததி போம், மறு சந்ததி வந்திடும்,
என்றும் நிலைப்பது பூமி ஒன்றே.

5 சூரியன் உதிக்கும், சூரியன் அடையும்,
சூரியன் தான் உதித்த இடத்துக்கே விரைந்தேகும்.

6 தெற்கே சென்று வடதிலே திரும்பி
இப்படியே காற்று சுற்றிவந்து
முன் சுற்றியவிடம் திரும்பவும் சுற்றும்.

7 நதியெலாம் கடலினுள் ஓடி வீழ்ந்திடும்,
வீழினும் கடலோ நிரம்புவதில்லை;
உற்பத்தி இடத்துக்கே நதிகள் திரும்பி வரும்.

8 யாவும் களைக்க உழைக்கின்றன, அதை
மனிதன் வாய்விட்டு உரைப்பதற்கில்லை;
கண்டும் கண்டும் கண் திருப்தியாவதில்லை,
கேட்டும் கேட்டும் காது நிரம்பாது.

9 பின் இருப்பனவெலாம் முன் இருந்தனவே,
இனி செய்வனவும் முன் செய்யப்பட்டனவே,
நூதனமென ஒன்று இலை சூரியன்கீழ்.

10 பார், இதோ, நூதனம் என உரைக்க
ஒன்றுண்டோ!
நம்முன் பூர்வகாலிலும் அது இருந்ததே.

11 முற்கால் இருந்தவரை மறந்துவிட்டோம், அப்படியே
பிற்கால் வருபவரை அவர் பின்னோர் மறப்பாரே.

12 பிரசங்கியாகிய நான் எருசலேமில் இஸ்

13 ரவேலரை ஆண்டுவந்தேன். வானகீழ் நடப்பவற்றையெல்லாம் விசாரித்து விவேகமாய் ஆராய்ச்சி செய்வதற்கு என் மனதைப் புகுத்தினேன்; மனிதர் உழைப்பதற்கெனக் கடவுள் நியமித்தது கடும்பாடே.

14 சூரியன்கீழ் செய்யப்படுவனவற்றையெல்லாம் பார்த்தேன்; இதோ, யாவும் மாயை, காற்றைப் பிடிக்க வேட்டையாடுவதாம்.

15 கோணல் நிமிராது,
குறைவு நிறைவாகாது.

16 இதோ, எனக்குமுன் எருசலேமிலிருந்த அனைவரிலும் நான் மிகவும் அதிக ஞானத்தைச் சம்பாதித்தேன்; என் மனம் மிகுந்த ஞானத்தையும் அறிவையும் கண்டது என்று நான் எனக்குள்ளே சொல்லிக் கொண்டேன்.

17 ஞானம் இன்னதென அறிவதற்கும் மூடத்தனம், மதிகேடு இன்னவென அறிவதற்கும் நான் என் மனதைப் புகுத்தினேன்; இதுவும் காற்றைப் பிடிக்க வேட்டையாடுவதெனவே கண்டேன்.

18 ஞானம் பெருகச் சஞ்சலம் பெருகும்,
அறிவு மிகுக்க வேதனை மிகுக்கும்.

2 சரி, களிப்பையனுபவித்துப் பார்த்து இன்பத்தை ருசிப்பாய் என என் மனதைக் குச் சொன்னேன்; இதோ, இதுவும் மாயையாயிற்று.

2 நகைப்பைப்பற்றி, அது பைத்தியம் என்றேன்; சந்தோஷத்தைப்பற்றி, இதனால் பயனென்னவென்று சொன்னேன்.

3 வானத்தின்கீழ் மானிடர் உயிரோடிருக்கும் நாளளவும் எதைச்செய்வது நலமென அறியும் வரைக்கும், என் இதயம் ஞானத்தை நோக்கிக்கொண்டிருக்கையிலேயே, நான் என் தேகத்துக்கு மதுபானத்தால் இன்பளிக்கவும் மதிகேட்டைப் பற்றிக்கொண்டிருக்கவும் தலைப்பட்டேன்.

4 நான் பெரிய வேலைகளைச் செய்தேன்; எனக்கென்று வீடுகளைக் கட்டினேன், திராட்சத் தோட்டங்களை நாட்டினேன்.

5 எனக்கென்று தோட்டங்களையும் சிங்காரவனங்களையும் அமைத்து அவற்றிலே சகலவகைக் கனிமரங்களையும் நாட்டினேன்.

6 மரக்கன்றுகளை வளர்க்கும் தோட்டத்துக்கு நீர்ப்பாய்ச்சுவதற்கெனக்

7 குளங்களே வெட்டினேன். வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் சம்பாதித்தேன், வீட்டிலே பிறந்த வேலைக்காரரும் எனக்கு இருந்தார்கள்; எனக்கு முன் எருசலேமிலிருந்த எல்லாரைப் பார்க்கிலும் எனக்கு ஆடு மாடு முதலான ஆஸ்திகள் திரளாய் 8 இருந்தன. வெள்ளியையும் பொன்னையும், ராஜாக்களிடத்திலும் மாகாணங்களிலும் இருந்து பொருள்களையும் திரட்டினேன்; சங்கீதக்காரரையும் சங்கீதக்காரிகளையும் மனுபுத்திரருக்கு இன்பமான பல கணிகை 9 யரையும் சம்பாதித்தேன். நான் வரவரப் பெரியவனாகி எனக்குமுன் எருசலேமிலிருந்த யாவரிலும் பெரியவனாகிவிட்டேன்; பெரியவனாகியும் ஞானத்தைத் தேடுவதை 10 யோ விட்டிருக்கவில்லை. என் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நான் அவைகளுக்குத் தடைபண்ணவில்லை; என் இருதயத்துக்கு எவ்வகையான சந்தோஷத்தையும் விலக்கவில்லை; நான் உழைத்துச் செய்த யாவற்றினாலும் என் மனதுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று; என் உழைப்புகளினாலெல்லாம் எனக்குக் கிடைத்த பலன் 11 இதுவே. என் கைகள் செய்த சகல வேலைகளையும் நான் பட்ட எல்லா பிரயாசத்தையும் பார்த்தபோதோ, இதோ, எல்லாம் மாயையே, காற்றை வேட்டையாடுவதே சூரியன்கீழ் பலன் ஒன்றுமில்லை.

12 அரசனின்பின் வருபவன் முன் செய்யப்பட்டதையே செய்வதன்றி வேறென் செய்வான்? எனவே ஞானத்தையும், மூடத்தனம், மதிகேடு என்பவற்றையும் மறுபடி 13 யும் ஆராய்ந்து ஒப்பிடலானேன். ஒப்பிடவே இருளிலும் வெளிச்சம் சிரேஷ்டமாயிருப்பதுபோல் மதிகேட்டிலும் ஞானம் சிரேஷ்டமெனக் கண்டேன்.

14 ஞானிக்குக் கண் தலையிலே,
மூடன் நடப்பதோ இருளிலே.
எனினும் ஒருவனுக்குச் சம்பவிப்பதே எல்லாருக்கும் சம்பவிக்கிறதெனக் கண்டேன்.

15 காணவே, மதிகேடனுக்கேபோல எனக்கும் சம்பவிக்கின்றதே, ஞானம் சம்பாதித்து நானடைந்த பலன் என்னவென்று என் உள்ளத்தில் சிந்தித்தேன்; இதுவும் மாயை என்று என் உள்ளத்தில் தேர்ந்தேன்.

16 மதிகேடனும் சரியே, ஞானியும் சரியே, என்றும் நினைவிலிரார்; இப்பொழுது உள்ளனவெல்லாம் வரும் நாட்களில் மறக்கப்பட்டுப்போம், மதிகேடன் மடிவதேபோல் ஞானியும் மடிவானன்றே.

17 ஆகவே ஜீவனை வெறுத்தேன்; சூரியன் கீழ் செய்யப்படுவனவெல்லாம் தீமையெனக் கண்டேன், எல்லாம் மாயையே, காற்றை வேட்டையாடுவதே. சூரியன் 18 கீழ் நான் உழைத்த உழைப்பையெல்லாம் வெறுத்தேன்; பின்வருவோனுக்கு அதை நான் விட்டுப்போக வேண்டியதாகுமே. அவன் ஞானியாயிருப்பானோ மதிகேடனா 19 யிருப்பானோ யார் அறிவார்? எப்படியிருப்பினும் சூரியன்கீழ் நான் விவேகமாய் உழைத்துச் சம்பாதித்த யாவற்றின்மேலும் அவனே அதிகாரியாவான்; இதுவும் மாயையே. ஆகையால் சூரியன்கீழ் நான் பட்ட 20 சகல பிரயாசத்தின்மேலுமுள்ள ஆசையை விட்டுவிடலானேன். ஒருவன் புத்தி, யுக்தி, 21 சக்தியோடு உழைக்கிறான், உழைத்துச் சம்பாதித்ததையோ அப்படி உழையாதிருந்த வேறொருவனுக்குச் சொந்தமாக விட்டுவிட வேண்டியதாகும்; இதுவும் மாயையே, பெரிய தீங்கே. மனுஷன் சூரியன்கீழ் 22 படுகிற சகல பிரயாசத்தினாலும் அவனுடைய இருதயத்தின் எத்தனங்களினாலும் அவனுக்குப் பலன் என்ன? அவன் நாட்க 23 ளெல்லாம் சஞ்சலம்; அவன் பிரயாசம் கவலை வருத்தம், இரவிலும் மனதுக்கு ஓய்வில்லை; இதுவும் மாயையே.

மனுஷன் புசித்துக் குடித்துத் தான் 24 உழைக்கும்போதே இன்பத்தை அநுபவிப்பதிலும் நலமானது வேறொன்றுமில்லை; இது வருவதும் கடவுளினிடமிருந்தே என்று கண்டேன். கடவுளினாலன்றி எவன் ஆகா 25 ரம் புசித்து இன்பம் அநுபவிப்பான்? தமக் 26 குப் பிரியமாயிருக்கிறவனுக்குக் கடவுள் ஞானத்தையும் அறிவையும் சந்தோஷத்தையும் அளிக்கிறார்; பாவஞ்செய்கிறவனுக்கோ, தமக்குப் பிரியமாயிருப்பவனுக்கு விட்டுப்போவதற்கென பொருளைத் தேடிக் குவித்துவைக்கும் தொல்லையை நியமித்திருக்கிறார்; இதுவும் மாயையே, காற்றை வேட்டையாடுவதே.

3 ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின்கீழுள்ள ஒவ்வொரு காரியத்துக்கும் ஒரு சமயமுண்டு.

2 பிறக்க ஒருகாலம், இறக்க ஒருகாலம்;
நட்டுவைக்க ஒருகாலம், நட்டதைப் பிடுங்க ஒருகாலம்;

3 கொல்ல ஒருகாலம், குணமாக்க ஒருகாலம்;
இடிக்க ஒருகாலம், கட்ட ஒருகாலம்;

4 அழுதற்கொரு காலம், நகைத்தற்கொரு காலம்;
புலம்புதற்கு ஒருகாலம், நடனத்திற்கு ஒருகாலம்;

5 கல் எறிந்துவிட ஒருகாலம், கல் சேர்த்து
வைக்க ஒருகாலம்;
தழுவுதற்கு ஒருகாலம், தழுவாதுவிலக
ஒருகாலம்;
6 தேட ஒருகாலம், இழக்க ஒருகாலம்;
காப்பதற்கொருகாலம். சிதறிவிட ஒரு
காலம்;
7 கிழிக்க ஒருகாலம், தைக்க ஒருகாலம்;
மௌனம் ஒருகாலம், பேச்சு ஒருகாலம்;
8 நேசிக்க ஒருகாலம், பகைக்க ஒருகாலம்.
யுத்தம் ஒருகாலம், சமாதானம் ஒரு
காலம்.
9 உழைத்து வேலைசெய்பவனுக்கு அதி
10 னால் பலனென்ன? மானிடர் உழைப்பதற்
கெனக் கடவுள் அவர்களுக்கு நியமித்த
11 கடமையைக் கண்டேன். அவர் யாவற்
றையும் அதினதின் காலத்திலே அழகாகச்
செய்திருக்கிறார்; நித்தியகால நினைவையும்
அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார்;
என்றாலும் கடவுள் ஆதிமுதல் அந்தமட்
டும் செய்துவரும் கிரியையை மனுஷன்
12 கண்டுணரான். களிப்பாயிருப்பதும் உயி
ரோடிருக்கும் நாளெல்லாம் சுகவாழ்வை
அனுபவிப்பதுமேயன்றி நலமானது வேறொ
ன்றும் மனுஷனுக்கில்லை என அறிந்தேன்.
13 அன்றியும் மனுஷர் யாவரும் புசித்துக்
குடித்துத் தங்கள் உழைப்பிலெல்லாம்
இன்பத்தை அனுபவிப்பதும் கடவுளின்
14 ஏற்பாடு. கடவுள் செய்வன எல்லாம்
என்றும் நிலைக்கும் என்று அறிவேன்; அதி
னோடே ஒன்றும் கூட்டவுமுடியாது, அதி
லிருந்து ஒன்றும் குறைக்கவும் முடியாது;
மனுஷர் தமது சமுகத்தில் பயந்து நடக்க
வேண்டுமென்று கடவுள் இப்படிச் செய்து
15 வருகிறார். இப்போது நடப்பது முன்
நடந்ததே, இனி இருக்கப்போவதும் முன்
இருந்ததே; நிகழ்ந்ததே நிகழும்படி கடவுள்
தேடிப்பார்க்கிறார்.
16 சூரியன்கீழ் மற்றொன்றையும் கண்
டேன்: நியாயமிருக்கவேண்டிய இடத்திலே
துன்மார்க்கம் இருக்கிறது, நீதியிருக்க
வேண்டிய இடத்திலே தூர்க்குணமிருக்
17 கிறது. ஆகவே நான் எனக்குள் யோசித்து:
நீதியுள்ளவனையும் துன்மார்க்கனையும்
கடவுள் நியாயந்தீர்ப்பார், எக்காரியத்திற்
கும் எவ்வேலைக்கும் ஒரு காலத்தை ஏற்
18 படுத்தியிருக்கிறார் என்றேன். பின்னும்
நான் எனக்குள் யோசித்து: மானிடர்
பொருட்டாகவே இப்படி நடக்கிறது, தாங்
கள் மிருகங்கள் போன்றவர்கள் என்று
அவர்களே கண்டுகொள்ளும்படி கடவுள்
அவர்களைப் பரிசோதிக்கிறார் என்றேன்.
மனிதருக்குச் சம்பவிப்பதே மிருகங்களுக் 19
கும் சம்பவிக்கும்; அவர்களுக்கும் இவைக
ளுக்கும் சம்பவிப்பது ஒன்றே; இவைகள்
சாவதுபோலவே அவர்களும் சாகிறார்கள்;
எல்லாவற்றிலும் ஒரே சுவாசமே, மிருகத்தி
லும் மனுஷன் மேன்மையுள்ளவன் அல்ல;
எல்லாம் மாயையே. எல்லாம் ஒரே இடத் 20
துக்குப் போகிறது; எல்லாம் மண்ணி
லிருந்து உண்டாகிறது, எல்லாம் மண்ணுக்
குத் திரும்புகிறது. மனுஷனுடைய ஆவி 21
உயர ஏறுகிறதோ என்றும் மிருகங்களின்
ஆவி கீழே பூமியில் இறங்குகிறதோ என்
றும் அறிகிறவன் யார்?
இப்படியிருப்பதால், மனிதன் தான் 22
செய்யும் வேலையிலே தான அனுபவிக்கும்
களிப்பேயன்றி நலமானது வேறொன்றும்
அவனுக்கில்லை, இதுவே அவன் பங்கு
என்று கண்டுகொண்டேன்; தனக்குப்பின்
நிகழும் காரியங்களைக் காணும்படி அவனைத்
திரும்பி வரப்பண்ணுகிறவன் யார்?
4 பின்பு நான் சூரியன்கீழ் நடக்கும்
கொடுமைகளையெல்லாம் பார்த்தேன்;
இதோ, ஒடுக்கப்பட்டவர்களின் கண்ணீ
ரைக் கண்டேன், அவர்களைத் தேற்றுவா
ரில்லை; ஒடுக்குகிறவர்கள் அவர்களை இம்
சித்தார்கள், அவர்களைத் தேற்றுவாரில்லை.
2 ஆதலால் இன்னும் உயிரோடிருப்பவர்க
ளைப் பார்க்கிலும் முன்னமே மரித்தவர்களே
3 பாக்கியவான்கள் என்றேன். இவ்விருநிறத்
தாரிலும் பாக்கியவான் இன்னும் பிறவாத
வனே; சூரியன்கீழ் செய்யப்படும் தூர்ச்
செய்கைகளை அவன் காணவில்லையே.
4 மனுஷனின் சகல உழைப்பும், பயன்
படும் சகல செய்கையும் ஒருவர்மேலொரு
வர் கொண்ட பொறாமையினால் விளைவதே
எனக் கண்டேன்; இதுவும் மாயையே,
காற்றை வேட்டையாடுவதே.
5 மதிகேடன் தன் கைகட்டியிருந்து
தன் சதையைத் தானே உண்பான்.
6 காற்றை வேட்டையாடி உழைத்து
இருகை நிறையக் கொள்வதைப் பார்க்
கிலும்
அமர்ந்து ஒரு கைப்பிடி கொள்வதே
மேலாம்.
7 சூரியன்கீழ் மாயையான மற்றொரு காரி
8 யத்தையும் கண்டேன்: ஏகாங்கிகளான
வருக்குச் சொந்தமானவர்களாய்ப் பிள்ளை
களும் சகோதரருமில்லை; எனினும் அவர்
கள் உழைப்புக்கு முடிவில்லை; அவர்கள்
கண் செல்வத்தைக்கண்டு திருப்தியாவது
மில்லை, தாம் ஒரு நன்மையையும் அனு
பவிப்பதுமில்லை, எவர்பொருட்டு உழைக்

கிறேம் என அவர்கள் சிந்திப்பதுமில்லை,
9 இதுவும் மாயையே; கடஉழைப்பே. தனி
யனுயிருப்பதிலும் இருவராயிருப்பது நலம்;
அவர்கள் உழைப்பினுல் அவர்களுக்கு
10 நல்ல பலன் கிடைக்கும். ஒருவன் விழுந்
தால் அவன் உடனுளி அவனைத் தூக்கி
விடுவான், தனியாயிருந்து விழுபவன்
நிலைமை பரிதாபம், அவனைத் தூக்கிவிடத்
11 தணேயில்லையே? இருவராய்ப் படுத்திருந்
தால் அவர்களுக்கு அனலுண்டாகும், தனி
யாயிருப்பவனுக்கு அனலுண்டாவது எப்
12 படி? தனித்தவனே யாதாமொருவன் மேற்
கொள்ளலாம், இருவராயிருந்தாலோ அவனே
எதிர்த்து நிற்கலாம்; மூப்புரிநூல் சீக்கிர
மாய் அறுது.

13 ஆலோசனேக்குச் செவிகொடாத மதியீன
வயோதிக அரசனிலும் விவேகியான ஏழை
14 இளைஞனே சிரேஷ்டமானவன். இளைஞன்
அந்த ராஜ்யத்திலே ஏழையாய்ப் பிறந்து
சிறைச்சாலேயிலிருந்தாலும் அங்கிருந்து
15 அரசபதவிக்குப் போவதுமுண்டு. சூரியன்
கீழ் உயிர்வாழ்வார் யாவரும் அரசபதவிக்கு
வரும் இளைஞனுக்குச் சார்பாய் நிற்பது
6 கண்டேன். அவனைத் தம் தலைவனுய்
ஏற்று வாழ்ந்தின ஜனங்களுக்கோ கணக்
கில்லே, பின்வரும் சந்ததியாரோ அவனைக்
கொண்டாடுவதில்லே; இதுவும் மாயையே,
காற்றை வேட்டையாடுவதே.

**5** நீ தெய்வாலயத்துக்குச் செல்லும்போ
தெல்லாம் உன் நடையைக் காத்துக்கொள்,
மதிகேடர்போலப் பலியிடுவதைப் பார்க்கி
லும் செவிகொடுக்கச் சேர்வதே நலம்;
அறிவிலாதவர்களாய்த் தீமை செய்கின்றார்
2 களே. தெய்வ சமுகத்தில் நீ உன் வாயி
னுல் பரபரப்பாய்ப் பேசாதே, மனம் பதறி
ஒரு வார்த்தையையும் சொல்லாதே; கடவுள்
வானத்திலிருக்கிறார், நீயோ பூமியிலிருக்கி
றாய், உன் வார்த்தைகள் சொற்பமா
யிருக்க.

3 தொல்லே மிகுதியில் சொப்பனம் தோன்
றும்,
சொல் மிகுதியில் மூடத்தனம் விளங்
கும்.

4 நீ கடவுளுக்கு ஒரு பொருத்தனேபண்
ணிக்கொண்டால் அதைச் செலுத்தத் தாம
தியாதே; அவர் மதிகேடரில் பிரியப்படுவ
தில்லே, நீ நேர்ந்துகொண்டதைச்செய். நீ
5 நேர்ந்துகொண்டதைச் செய்யாமற்போவதி
லும் நேர்ந்துகொள்ளா திருப்பதே நலம்.
6 வாய்தவறிப் பேசிப் பழிக்காளாய்விடாத
படி பார்த்துக்கொள், நினையாமல் அதைச்
செய்துவிட்டேனெனத் தெய்வசந்நிதியில்
சொல்லாதே; கடவுள் உன் வார்த்தைகளைக்
கேட்டுக் கோபங்கொண்டு உன் கைகளின்
கிரியையை அழிப்பானேன்? சொப்பனமும் 7
மாயையும் மிகுந்த இடத்திலே வார்த்தை
களும் மிகுதியாகும், ஆகவே நீ கடவுளுக்கே
பயந்துகட.

ஒரு தேசத்தில் ஏழைகள் ஒடுக்கப்படுவ 8
தையும் நியாயமும் நீதியும் புரட்டப்படுவ
தையும் நீ காண்பாயானுல் அதைப்பற்றி
ஆச்சரியப்படாதே; உயர்ந்தவனே அவன்
மேல் உள்ளவன் காக்கிறான்; இவர்கள்
மேலும் உயர்ந்தவன் உண்டு. இப்படியிருந் 9
தும், பூமியின் விளைநிலங்களேப் பாதுகாக்கும்
அரசன் ஒருவன் இருப்பது நலமாம்.

பணப்பிரியன் பணத்தினுல் திருப்தியடை 10
வதில்லே, செல்வப்பிரியன் செல்வப்பெருக்கி
னுல் திருப்தியடைவதில்லே; இதுவும் மாயை
யே. பொருள் பெருகினுல் அதை உண் 11
கிறவர்களும் பெருகுகிறார்கள், அதை உடை
யவர்கள் தங்கள் கண்களினுல் அதைக்
காண்பதேயன்றி அவர்களுக்குப் பிரயோஜ
னம் என்ன? வேலைசெய்கிறவன் கொஞ்ச 12
மாய்ப் புசித்தாலும் அதிகமாய்ப் புசித்தா
லும் அவன் நித்திரை இன்பமே; செல்வனின்
பேருண்டி அவனைத் தூங்கவொட்டாது.

சூரியன்கீழ் நான் கண்ட மற்றொரு 13
கொடிய தீங்குமுண்டு, அதாவது, செல்வமா
னது அதை உடையவர்களுக்கே கேடாகக்
காத்துவைக்கப்படுகிறது. அந்தச்செல்வம் 14
துர்ச்சம்பவத்தால் அழிந்துபோகவே செல்வ
வானுக்குப் புத்திரன் இருந்தாலும் அப்புத்
திரன் யாதொன்றும் பெருமற்போகிறான்.
தன் தாயின் கர்ப்பத்திலிருந்து நிர்வாணியாய் 15
வந்தான்; வந்ததுபோலவே அவன் நிர்வாணி
யாய்த் திரும்பிப்போவான்; அவன் தன்
உழைப்பினுல் பெற்ற பலனுனையும்
தன் கையிலே எடுத்துப்போவதில்லே. அவன் 16
வந்தபடியே போகிறான், இதுவும் கொடிய
தீங்கே; அவன் காற்றைப்பிடிக்க உழைத்து
அடையும் லாபமென்ன? அவன் தன் 17
நாளெல்லாம் இருளிலே வசித்து மிகவும்
கலித்து நோய்கொண்டு கோபியாய்க் காலங்
கழிக்கிறான்.

இதோ, உயிரோடிருக்கும்படி கடவுள் 18
அருளிய நாளெல்லாம் மனுஷன் புசித்துக்
குடித்து, சூரியன்கீழ் உழைக்கும்போ
தெல்லாம் இன்பம் அநுபவிப்பதே நலமும்
அழகுமான காரியமென்று நான் கண்டேன்,
இதுவே அவன் பங்கு. கடவுள் செல்வத் 19
தையும் ஆஸ்தியையும் எவனுக்குக் கொடுத்
திருக்கிறாரோ அவன் அதிலே புசிக்கவும்
தன் பங்கைப் பெறவும் தன் உழைப்பிலே

மகிழ்ந்திருக்கவும் அவனுக்கு அதிகாரம்
20 கிடைப்பது கடவுளின் ஏற்பாடு. அவன்
தன் இருதயத்திலே மகிழ்ச்சியாயிருக்கும்படி
கடவுள் அவனுக்கு அளித்திருக்கிறபடி
யினால் அவன் தன் ஜீவிய காட்சிகளைப்பற்றி
அதிகமாய் நினையான்.

6 சூரியன்கீழ் நான் கண்ட மற்றொரு
தீங்குமுண்டு, அது மனுஷருக்குக் கடின
2 மானது: கடவுள் பலருக்குச் செல்வத்தை
யும் ஆஸ்தியையும் பெருமையையும்கொடுக்
கிறார், அவன் ஆசிப்பதெதுவும் அவனுக்குக்
கிடையாமற் போகாது, அவற்றை அநுப
விக்கவோ கடவுள் அவனுக்கு இடங்கொடுக்
கவில்லை, அந்நியன் ஒருவன் அதை அநுப
விக்கிறான்; இதுவும் மாயையே, கொடிய
3 வாதையே. ஒருவன் நூறுபிள்ளைகளைப்
பெற்று, அநேக வருஷம் ஜீவித்து, தீர்க்கா
யுசை அடைந்திருந்தும் அவன் ஆத்துமா
அந்தச் செல்வத்தால் திருப்தியடையாமலும்
அவன் பிரேதக்குழியிற் சேராமலும் போவா
னேயானால் அவனிலும் கருவழிந்த பிண்
4 டம் பாக்கியமுள்ளது. இது தோன்றுவது
வியர்த்தம், மறையும் இருளிலே; இதன்
5 பேரை இருள் மூடிவிடும். இது சூரியனைக்
கண்டதில்லை, ஒன்றையும் அறிந்ததில்லை,
அவனுக்கு இல்லாத அமைதி இதற்குண்டு.
6 அவன் இரண்டாயிரம்வருஷம் பிழைத்திருந்
தாலும் நலமானதொன்றையும் அநுபவியா
தேபோனால் அவனுக்கு மேன்மையென்ன?
எல்லாரும் ஒரே இடத்திற்கே போகிறார்
களே.

7 மனுஷன் உழைப்பதெல்லாம் வயிற்றுக்
குத்தானே,
அவன் பசியோ திருப்தியாவதில்லை.

8 இப்படியிருக்க, மதிகேடனினும் ஞானி
எவ்விஷயத்தில் மேலானவன்? ஜீவனுள்
ளோருக்கு எதிரே நடந்துகொள்ளும் நிற
மையுடைய ஏழைக்குப் பலனென்ன?
9 ஆசித்ததைத் தேடிப்போவதினும் கண் எதிரே
உள்ளதைப் பார்த்திருப்பது நலம்; இதுவும்
மாயையே, காற்றை வேட்டையாடுவதே.

10 நிகழ்வனவெல்லாம் முன்னமே அறியப்
பட்டுப் பேரிடப்பட்டனவே; மனுஷன்
இப்படிப்பட்டவன் என்று தெரிந்திருக்கி
றது, தன்னிலும் பலமுள்ளவரோடே
11 அவன் வாதாடமுடியாது. சொற்களைப்
பெருக்கி மாயையைப் பெருகச்செய்தால்
12 மனிதனுக்குப் பயனென்ன? நிழலைப்போன்ற
மாயையான தன் ஜீவகாலத்தைப் போக்கும்
மனுஷனுக்கு அவன் ஜீவனில் நலமானது
இன்னதென்று அறிந்தவன் யார்? தனக்குப்
பின்பு சூரியனின்கீழ் சம்பவிக்குங்காரியம்
இன்னதென்று மனுஷனுக்கு அறிவிப்பவன்
யார்?

நற்பெயர் நறுமணத்திலும் நற்பெயர் சிறந்தது, 7
பிறப்பு நாளிலும் இறப்பு நாள் நல்லது.
விருந்து வீட்டுக்குப் போவதைப் பார்க்கி 2
லும்
துக்க வீட்டுக்குப் போவதே நலமாம்;
இதில் சகல மனிதரின் முடிவும் விளங்
குமே,
உயிருளான் இதைத் தன் மனதிலே சிந்
திக்க.
நகைப்பிற் சிறந்தது சஞ்சலம், 3
முகதுக்கத்தை வினைப்பது இதயத்தைச்
சீர்ப்படுத்தும்.
ஞானிகள் இதயம் துக்கவீட்டிலே, 4
மூடரின் இதயம் களிப்புவீட்டிலே.
மூடரின் பாட்டைக் கேட்பதைப் பார்க் 5
கிலும்
ஞானி கடிந்துரைக்கும் சொற்கேட்டால்
நன்றும்.
பானையின்கீழ் எரி முள்ளின் சடசடப் 6
புப்
போலாம் மூடனின் நகைப்பு; இதுவும்
மாயை.
ஒடுக்கிப் பெறும் ஊதியம் ஞானியை 7
மூடனுக்கும்,
பரிதானம் இதயத்தைக் கெடுத்துவிடுமே.
காரிய ஆரம்பத்திலும் முடிவே நன்றும், 8
பெருமையதனிலும் பொறுமையே உத்த
மம்.
சினங்கொள விரையேல், 9
மூடர் நெஞ்சம் சினத்துக்குறைவிடம்.
இக்காட்களைப் பார்க்கிலும் முன்காட்கள் 10
நலமாயிருந்ததேன் எனக்கேட்காதே; இவ்
விசாரணை ஞானத்தால் விளைவதல்ல.
சுதந்தரம் போலவே ஞானம் நன்றும், 11
சூரியன்கீழ் வாழ்வார்க்கு ஞானமே
சிரேஷ்டம்.
செல்வமேபோல் ஞானமும் வேலியாம், 12
ஞானமோ தன்னை உடையவர்க்கு உயிர்
தரும்;
இதுவே அறிவின் சிறப்பாகும்மே.
தெய்வச்செயலை உற்றுநோக்குக, 13
அவர் கோணலாக்கினதை நிமிர்த்திவிடு
பவன் யார்?
வாழ்வுகாலத்தில் மகிழ்ந்திரு, தாழ்வு 14
காலத்தில் சிந்தனை செய்து, மனுஷன் தனக்
குப்பின் நேரிடுவதொன்றையும் கண்டு
கொள்ளாதபடி கடவுள் இவ்விரண்டை
யும், ஒன்றைப் போலவே மற்றதையும்
ஏற்படுத்தியிருக்கிறார் என்று அறிந்து
கொள். இவை எல்லாவற்றையும் வியர்த்த 15

மான என் நாட்களில் கண்டேன், தன் நீதியிலே அழியும் நீதிமானுமுண்டு, தன் தீமையிலே நெடுநாளிருக்கிற துன்மார்க் கனுமுண்டு.

16 மிதமிஞ்சிய நீதியுள்ளவனுயிராதே, உன்னை அளவுகடந்த ஞானமுள்ளவனுக்காதே; நீயே உன்னை அழித்துக்கொள்ளவேண்டிய
17 தேன்? மிதமிஞ்சின துஷ்டனுயிராதே, அதிக மூடனுயுமிராதே; உன் காலத்துக்கு
18 முன்னே நீ என் சாகவேண்டும்? இவற்றில் ஒன்றைக் கைவிடாமலே மற்றொன்றைப் பற்றிக்கொள்வது நலம்; கடவுளுக்குப் பயந்த நடப்பவன் இவைகள் எல்லாவற்றி னின்றும் தப்புவான்.

19 நகரத்தில் அதிகாரமுள்ள பத்துப்பேரைப் பார்க்கிலும் ஞானம் ஞானியை அதிக பல
20 வானுக்கும். ஒரு பாவமும் செய்யாமல் நன்மையையே செய்துவரும் நீதிமான் பூமி
21 யிலில்லே. பேசப்படும் சகல வார்த்தை களையும் கவனியாதே; கவனித்தால் உன் வேலைக்காரன் உன்னைச் சபிப்பதையும்
22 கேட்க நேரிடும். பலமுறை நீயும் பிறரைச் சபித்தாயென்பது உன் மனதுக்குத் தெரி யுமே.

23 இவை எல்லாவற்றையும் ஞானத்தினுல் பரிசோதித்துப் பார்த்தேன்; நான் ஞான வானுவேன் என்றேன், ஞானமோ எனக்
24 குத் தூரமாயிற்று. மெய்ப்பொருளது வோ அது தூரம், மகா ஆழம்; அதைக்
25 கண்டுபிடிப்பவன் யார்? ஞானத்தையும் காரணகாரிய விவகாரத்தையும் ஆராய்ந்து தேடவும், தெய்வபயமில்லாமை மூடத் தனம், மதிகேடே பைத்தியம் என்பதை அறியவும் என்மனதைப் புகுத்தினேன்.
26 சாவிலும் அதிகக் கசப்புள்ளதொன்று கண்டேன், அது ஸ்திரீயே, அவளே கண்ணி, அவள் உள்ளமே வலையாம்; அவள் கைகள் கட்டும் கயிறுகளாம், கடவுளுக்குப் பிரிய மானவன் அவளுக்குத் தப்புவான்; பாவி
27 யோ அவளால் பிடிபடுவான். காரியத்தை அறியும்படி ஒன்றின்பின் ஒன்றுய் விசா ரணைசெய்து, இதோ, இதைக் கண்டுபிடித்
28 தேன் என்று பிரசங்கி சொல்லுகிருன்: என் மனம் இன்னும் ஒன்றைத்தேடுகிறது, அதை நான் கண்டுபிடிக்கவில்லே; ஆயிரம் புரு ஷருக்குள்ளே நல்லவன் ஒருவனைக் கண் டேன், சகல ஸ்திரீகளிலுமோ நல்லவள்
29 ஒருத்தியையும் காணவில்லே. ஒன்றையோ கண்டேன், இதோ, கடவுள் மனுஷனை நேர்மையாயவனுகப் படைத்தார்; அவர் களோ அநேக தந்திரோபாயங்களைத் தேடிக் கொள்ளுகிருர்கள்.

8 ஞானியைப்போன்றவன் யார்? காரியத்தின் பொருளை விளக்குபவன் யார்? மனுஷன் ஞானம் அவன் முகத்துக்கு ஒளிதரும், முகக்கடுந்தோற்றம் மாறிப்போமே.

2 இதோ, உன்னை நான் எச்சரித்திடுவேன், ராஜ கட்டளைக்கிசைந்து நடப்பாய், இங்ஙனம் கடவுள்முன் ஆணையிட்டாயே.

3 ராஜசந்நிதிவிட்டு விலக விரையாதே, தீயகாரியங்களில் தலையிட்டுக் கொள் ளாதே; ராஜா தன் இஷ்டப்படியெல்லாம் செய் பவன்.

4 ராஜாவின் சொல் அதிகாரமுள்ளது, யாதுசெய்தீர் என அவற்குரைப்பவன் யார்?

5 கட்டளைப்படி செய்வான் தீங்கினை அறி யான், காலமும் கிரமமும் ஞானிதன்னுள் அறி வான்.

6 காரியம் எதற்கும் காலமுண்டு, கிரம முண்டு, மனிதன் தீமையோ அவன்மேல் பார மாகிடுமே.

7 வினவது இன்னவென அறிபவனில்லே, வினவது இங்ஙனமென அவனுக்குரைப் பான் யார்?

8 காற்றையடக்க அதன்மேல் அதிகாரமுள் ளான் இல்லே, அப்படியே மரணநாள்மேல் அவனுக்கு அதிகாரமில்லே. அப்போருக்குத் தப்ப வழியில்லே, துன்மார்க்கம் தன்னை உடையவனை மீட் காதே.

9 இவற்றையெல்லாம் நான் கவனித்துச் சூரியன்கீழ் செய்யப்படும் யாவற்றையும் பற்றிச் சிந்தனைசெய்தேன்; ஒருவன் மற் றொருவனுக்குக் கேடு விளைப்பதற்கேது வாய் ஆளுகைசெய்யும் காலமுமுண்டு.

10 துன்மார்க்கர் காலஞ்சென்று அடக்கம் பண்ணப்பட்டதையும், நேர்மையானவற் றைச் செய்துவந்தவர்களோ பரிசுத்தஸ்தலம் நின்று அகற்றப்பட்டுத் தங்கள் ஊரிலேயே மறக்கப்பட்டுப் போனதையும் கண்டேன்; இதுவும் மாயையே.

11 தர்க்கிரியைக்குத் தண்டனை சீக்கிரமாய் வராதபடியால் மனி தரின் இருதயம் தீமைசெய்யத் துணிவு கொள்ளுகிறது.

12 பாவி நூறுதரம் தீமை செய்தும் நெடுநாள் வாழ்கிருன், எனினும் கடவுளுக்குப் பயந்து அவருக்கு முன்பாக பயபக்தியாய் நடப்பவர்களே நன்மையிருப்

13 பார்கள் என்பதையும், | தன்மார்க்கனே நன்றாயிருப்பதில்லை, அவன் கடவுளுக்கு முன்பாக பயபக்தியாய் நடவாதபடியால் நிழல்போன்ற அவன் வாழ்நாள் நீடித்
14 திராது என்பதையும் அறிவேன். பூமியின் மேல் நடக்கிற வேறொரு மாயையான காரியமுமுண்டு; அதாவது, தன்மார்க்கரின் செய்கைக்குரியதே நீதிமான்களுக்கும் வருகிறது, நீதிமான்களின் செய்கைக்குரியதே தன்மார்க்கருக்கும் வருகிறது, இதுவும்
15 மாயையே என்றேன். ஆகவே நான் களிப்பைப் புகழ்ந்தேன்; புசிப்பதும் குடிப்பதும் களிப்பதுமேயன்றிச் சூரியன்கீழ் மனுஷனுக்கு நலமானது வேறொன்றுமில்லை; சூரியன் கீழ் கடவுள் அவனுக்குத் தந்த ஜீவகாலத்திலே அவன் உழைப்பில் அவனுக்கு நிலைப்பது இதுவே.
16 நான் ஞானத்தை அறியவும் மனுஷன் இரவு பகல் கண்ணுறக்கமின்றிப் பூமியிலே பிரயாசப்பட்டுச் செய்பவைகளைப் பார்க்கவும் என்மனதைச் செலுத்தினபோதெல்
17 லாம் | கடவுளின் எல்லாச் செயல்களையும் பற்றி இதை அறிந்தேன்: சூரியன் கீழ் செய்யப்படுகிறவற்றை மனுஷன் ஆராய்ந்தறிய முடியாது, மனுஷன் எவ்வளவு பிரயாசப்பட்டுத் தேடினாலும் அதைக் கண்டுபிடிக்க முடியாது, அதை அறிபலாம் என்று ஞானியொருவன் எண்ணினாலும் அவனும் அதை ஆராய்ந்துகொள்ள முடியாது என்பதே.

**9** இவை எல்லாவற்றையும் என் மனதிலே சிந்தித்தேன்; எல்லாவற்றையும் நிதானித்தறியும்படி பிரயாசப்பட்டேன்: நீதிமான்களும் ஞானிகளும் அவர்கள் செய்கைகளும் கடவுளின் கைவசமே; வரப்போவது நேசமோ பகையோ என்பதை மனுஷன்
2 அறியான், ஒன்றைப்போலவே மற்றது அவன் எதிரேயிருக்கிறது. யாவருக்கும் சம்பவிப்பன வெல்லாம் ஒன்றே; சன்மார்க்கனுக்கும் தன்மார்க்கனுக்கும், நற்குணமுள்ளவனுக்கும், சுத்தமுள்ளவனுக்கும் சுத்தமில்லாதவனுக்கும், பலியிடுகிறவனுக்கும் பலியிடாதவனுக்கும் சம்பவிப்பதொன்றே. நல்லவனுக்கு எப்படியோ பொல்லாதவனுக்கும் அப்படியே; ஆணையிடுகிறவனுக்கும் ஆணையிடப்பயப்படுகிறவனுக்கும் சம்பவிப்
3 பதொன்றே. எல்லாருக்கும் ஒன்றே சம்பவிப்பது சூரியன்கீழ் நடப்பனவற்றிலெல்லாம் பெரிய தீமையாம்; ஆதலால் மனுபுத்திரரின் இருதயத்திலே தீமை நிறைந்திருக்கிறது; அவர்கள் வாழ்நாளெல்லாம் அவர்கள் இருதயத்தில் மூடத்தனம் தங்கியிருக்கிறது, கடைசியாக அவர்கள் செத்தவர்களிடத்திற்கே போகிறார்கள். ஜீவ 4
னுள்ளோரைச் சேர்ந்தவனுக்கே நம்பிக்கையுண்டு; செத்த சிங்கத்திலும் உயிருள்ள நாயே சிறந்தது. உயிரோடிருப்பவர்கள் மரிப்போ 5
மென்று அறிவார்களே, மரித்தவரோ ஒன்றும் அறியார்; இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை, அவர்கள் பேர்தானும் மறக்கப்படுகிறது. அவர்கள் ஆசையும் வெறுப்பும் 6
சமூசயமும் யாவும் ஒழிந்துபோயின, சூரியன்கீழ் செய்யப்படும் எதிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை.

நீ போய், உன் ஆகாரத்தைக் களிப்போடு 7
புசித்து உன் திராட்சரசத்தை மனமகிழ்ச்சியோடு குடி; நீ செய்தவைகளைக் கட
வுள் அங்கீகரித்திருக்கிறார். எக்காலத்திலும் 8
உன் வஸ்திரங்கள் வெள்ளையாயும் உன் தலைக்கு எண்ணெய் குறையாததாயும் இருப்பதாக. சூரியன்கீழ் கடவுள் 9
உனக்கு நியமித்திருக்கிற வியர்த்தமான நாட்களிலெல்லாம் நீ நேசிக்கிற மனைவியோடே நிலையில்லாத இந்த ஜீவனுக்குரிய வாழ்வை அநுபவி; இந்த ஜீவ வாழ்விலும் சூரியன்கீழ் நீ உழைக்கிற உழைப்பிலும் உன் பங்கு இதுவே. செய்யும்படி உன் 10
கைக்கு நேரிடுவது எதுவோ அதை உன் பலத்தோடே செய்; நீ செல்லும் பாதாளத்திலே செய்வதும் யோசிப்பதும் அறிவதும் இல்லை, ஞானமும் இல்லையே.

நான் சூரியன்கீழ் மற்றொன்றையும் 11
கண்டேன்: ஓட்டத்திற்கெலிப்பது வேகமுள்ளவர்களுக்கேயுரியதல்ல, யுத்தத்தில் வெற்றிகொள்வது பராக்கிரமசாலிகளுக்கேயுரியதல்ல, உணவு சம்பாதிப்பது ஞானவான்களுக்கேயுரியதல்ல, செல்வம் சேர்ப்பது புத்திமான்களுக்கேயுரியதல்ல, தயவைப்பெறுவது அறிவாளிகளுக்கேயுரியதல்ல, அவர்களெல்லாருக்கும் சமயமும் பிராப்தியும் வேண்டும். கொடியவலையில் 12
பிடிபடும் மீன்களையும் கண்ணியிற்சிக்கும் குருவிகளையும்போல மனிதனும் தன் கேடு காலத்தையறியான்; தங்களுக்குத் திடீரெனக் கேடுகாலம் வரும்போது மனிதரும் அவைகளைப்போலவே அகப்பட்டுக்கொள்ளுகிறார்கள்.

சூரியன்கீழ் ஞானமுள்ள காரியம் 13
ஒன்றையும் கண்டேன்; அது எனக்குப் பெரிதாகத் தோன்றிற்று. ஒரு சிறு பட்ட 14
ணம் இருந்தது, அதிலே குடியிருந்தவர்கள் சொற்பப்பேர்; ஒரு பெரிய ராஜா அதற்கு விரோதமாய் வந்து அதை வளைந்துகொண்டு, அதற்கு எதிரே பெரிய கொத்தளங்களைக்

15 கட்டிஞன். அந்தப் பட்டணத்திலே ஞான
முள்ள ஒரு ஏழை மனிதன் இருந்தான்;
அவன் தன் ஞானத்தினாலே அந்தப் பட்ட
ணத்தை விடுவித்தான்; அந்த ஏழை மனித
16 னையோ ஒருவரும் நினைக்கவில்லை. அதைக்
கண்டு பராக்கிரமத்திலும் ஞானமே உத்தம
மெனினும் ஏழையின் ஞானம் அசட்டை
பண்ணப்படும், அவன் சொல்லை ஒருவரும்
கேளார் என்றேன்.
17 மூடரை நடத்தும் தலைவர் முழக்கினும்
அமர்ந்துபேசும் ஞானிசொல் திறந்தது.
18 யுத்தாயுதங்களிலும் ஞானமே நல்லதாம்,
ஆனாலொருவன் பெருந்தன்மையை அழிப்
பான்.

**10** விஷமுள்ள ஈயால் தைலக்காரன்
பரிமளதைலம் நாறிக்கெடுமே.
ஞானம், மதிப்பு இவற்றின் பலனை
சொற்ப மதியீனம் அங்ஙனம் கெடுக்கும்.
2 ஞானியின் புத்தி வலக்கையினுளதாம்,
மூடனின் புத்தியோ இடக்கையினதாம்.
3 எங்கு செல்லினும் மூடனுக்குப் புத்தி
யில்லை,
தான் மூடனென்று எவர்க்கும் தெரிவிப்
பான்.
4 அதிகாரியின் கினம் உன்மேல் எழும்
பின்
உன் ஸ்தானத்தில் அமர்ந்திரு, விலகேல்;
சாந்தம் பெருங்குற்றங்களை அமர்த்தும்.
5 சூரியன்கீழ் கண்ட மற்றுமோர் தீமை,
அதிகாரியின் தவறால் விளைவதுபோலும்.
6 மூடர் மகோன்னத பதவி வகிக்கின்றார்,
செல்வரோ தாழ்ந்த நிலையில் இருக்கின்
றார்.
7 வேலையாள் குதிரைமேல் சவாரி செய்
கின்றான்,
பிரபுவோ வேலையாள்போல் கால்நடை
யாய்ச் செலக்கண்டேன்.
8 படுகுழி வெட்டுவோன் அதிலே விழு
வான்,
மதிலையிடிப்பானைப் பாம்பு கடிக்கும்.
9 கல்லை வெட்டுவோன் காயப்படுவான்,
மரத்தைப் பிளப்பவன் மோசத்துக்காளா
வான்.
10 மழுங்கிய ஆயுதம் தீட்டாதிருப்பின்
மிகுந்த பலத்தோடு உழைக்கநேரும்,
சித்தியுள்ள வேலையாளின் சிறப்பு அவன்
புத்தியே.
11 தடைகட்டப்படாமுன் பாம்பு கடித்தி
டின்
தடைகட்டுபவனால் பயனொன்றுமில்லை.
12 ஞானியின் வாய்மொழி தயவைப்பெற்
றிடும்,
மூடனின் உதடோ அவனையே விழுங்கி
டும்.
13 அவன் வாய்மொழி புத்தியீனத்தில்
துவக்கி
சுத்தப் பைத்தியத்தில் முடிந்திடுமே.
14 மூடன் மிகப்பேசுவான், நடப்பதறிவா
ரில்லை,
அவன் பின் நேர்வதை அவனுக்கு யார்
உரைப்பார்?
15 மூடன் கனைப்பான். தன் உழைப்பினால்,
ஊருக்குப்போக வழியுமறியான்.
16 அரசனும் இளைஞன், அதிகாரிகளும்
காலையிலே விருந்துண்டு களிப்பவர்,
நாடே, உனக்கு ஐயோ பரிதாபம்!
17 அரசனும் குலமகன், அதிகாரிகளும்
வெறிக்கக் குடியார், வேளை மிதமாய்ப்
புசிப்பார்,
நாடே, நீ மிக பாக்கியமுடையாய்.
18 மிகு சோம்பலினால் மேல்மச்சு பழு
தாம்,
கைகட்டிக்கொள்ள வீடு ஒழுக்காம்.
19 விருந்தெனப்படுவது களிப்புக்காமே,
மதுபானம் உயிர் களித்திடச் செய்யும்;
யாவற்றையுமோ கொடுப்பது பணமே.
20 அரசனை உன் மனதுள்ளும் சபியேல்,
செல்வனை உன்படுக்கையறையிலும் சபி
யேல்,
வான்பறவை உனது குரலைக் கொண்டு
போம்,
சிறகுள்ளன நீ சொன்னதை உரைக்கும்.

**11** தண்ணீர்கள்மேல் உன் உணவை
வழங்கு,
பலநாட்பின் அதின் பலனைப் பெறு
வாய்.
2 பங்கிட்டு அளி எழுவர் எண்மருக்கே,
பூமிமேல்வரும் ஆபத்தை அறியாயே.
3 மேகம் நிறைந்திருந்தால் பூமேல் மழை
பொழியும்,
மரம் எங்கே விழுந்தாலும், தெற்கோ
வடக்கோ,
விழுந்த இடத்திலே அது கிடந்திடுமே.
4 காற்றை நோக்குவோன் விதைக்க
மாட்டான்,
மேகத்தை நோக்குவோன் அறுக்கமாட்
டான்.
5 காற்றின் வழியை இன்னதென நீ
அறியாய்,
கர்ப்பவதி வயிற்றில் எலும்பு உருவாகும்
விதமறியாய்,
அங்ஙனமே நீ அறியாய் கடவுளின் திருச்
செயலை,
யாவற்றையும் செய்திடுபவர் அவரே.

6 காலேவிதைத்திடுவாய், மாலே கைகட்
டாதே,
அதுவோ இதுவோ எது வாய்த்திடுமோ?
இரண்டும் ஒன்றுபோல் பயன்படுமோ? நீ
அறியாய்.
7 வெளிச்சம்தானே இன்பமாகும்,
சூரியனேக் காண்பது கண்ணுக்கினிதாம்.
8 பற்பலவாண்டு உயிர்பிழைத்திருப்பினும்
மனுஷன் அவ்வாண்டுகளே மகிழ்ச்சி
யாய்க் கழிக்க,
இருள் நாட்களேயும் மறவாதிருக்க,
இவை பலவாம்; நிகழ்வன யாவும்
மாயையே.
9 வாலிபனே, உன் இளமையிற் களித்திடு,
வாலிப நாளில் உன்மனம் மகிழ்ந்திருக்க;
மனமும் கண்ணும் செல்வழி செல்க,
எனினும் ஒன்றை மறவேல்; கடவுள்
இவைநிமித்தம் எல்லாம் உனே நியாயம்
விசாரிப்பார்.
10 இதயமிருந்து சஞ்சலமதனேயும்
தேகம் நின்று நோவையும் விலக்கு;
இளவயதும் வாலிபமும் எல்லாம்
மாயையே.

**12** உன்னேப் படைத்தவரை உன் வால
வயதில் நினே,
தீங்குநாள் வந்திடுமே, எனக்குப் பிரிய
மில்லே
என்று நீ சொல்லும் வருஷங்கள் சேர்ந்
திடுமே;
2 சூரியன், வெளிச்சம், சந்திரன், வெள்ளி
யும்
அந்தகாரமாகிவிடுமே.
3 மழை ஓய மேகம் திரும்பத் திரும்ப
வரும்,
வீட்டுக் காவலாளர் நடுநடுங்கிப்
பலசாலிகளும் கூனித்தளர்ந்து
எந்திரம் அரைப்போர் குறைந்து அவர்
ஒய்ந்து
பலகணிவழியாய் நோக்கி நிற்பார் கண்
ஒளி மங்குவார்.
4 எந்திர சத்தம் தாழ்ந்ததாக
வாசற் கதவுகள் யாவும் அடைபடுமே;
குருவி கீச்சிடும்போதே எழ நேரும்,
தேவாத்தியத் தொனியும் அடங்கிடும்.
மேடு கண்டு பயமுற வழியில் 5
பயங்கள் தோன்ற வாதமை மரமும்
பூத்து வெட்டுக்கிளி தளர்வடைந்து
பசி வினேக்கும் பூண்டும் பயனற்றுப்
போமே.
மனிதன் தன் நித்திய வீடு செல்வானே,
துக்கங்கொண்டாடுவோர் வீதியில் திரி
வாரே.
வெள்ளிக் கயிறு அறுந்துபோய்விடும், 6
பொற்கிண்ணியதும் நசுங்கிப்போமே,
ஊற்றின் அருகே குடமது உடையும்,
துரவினுள் உருளே உடைந்து வீழும்.
மண் தான் இருந்த பூமிபால் திரும்பும்; 7
ஆவியும் தனேயளித்த கடவுள்பால் திரும்
புமே.
மாயை யாவும் மாயையே யாமே 8
என்று பிரசங்கி உரைத்துவிட்டான்.
மற்றுமொன்று, பிரசங்கி ஞானவான், 9
அவன் ஜனத்துக்கு அறிவைப் போதித்தான்;
அவன் கவனமாய்க் கேட்டாராய்ந்து அநேக
நீதிமொழிகளே இசைத்து எழுதினன்.
விரும்பத்தக்க மொழிகளேச் சேர்க்கும்படி 10
பிரசங்கி தேடினன்; சத்திய மொழிகளாக
அவற்றை நேர்மையாய் எழுதினன்.
ஞானவான்களின் மொழிகள் தாற்றுக் 11
கோல் போல்வன,
தொகுத்த மொழி அறையுண்ட ஆணிகள்
போலும்;
அவற்றை அளித்தவர் ஒரே கர்த்தா.
பின்னும் சொல்லுகிறேன், என் மகனே, 12
நான் எச்சரித்துச் சொல்வதற்குச் செவி
கொடு; முடிவின்றிப் பலநூல்களே எழுது
கிறார்கள், அதிகப் படிப்பு உடலுக்கு
இளேப்பு.
யாவற்றையும் யோசித்தபின் காரியத்தின் 13
முடிவு இதுவே: கடவுளுக்குப் பயந்து,
அவர் கட்டளேகளேக் கைக்கொள்; எல்லா
மனிதருடைய கடமையும் இதுவே. ஒவ் 14
வொரு செய்கையையும், அந்தரங்கமான
ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானா
லும் தீமையானாலும், கடவுள் நியாய விசா
ரணேக்குக் கொண்டுவருவார்.

THE SONG OF SOLOMON

# கீத கீதம்

1 சாலொமோனின் கீதங்களிலே கீதமா
வது:
2 அவர் தம் வாய் முத்தங்களால் எனை
முத்தமிடுக,
உமது நேசம் திராட்சரசத்திலும் இன்
பம்:
3 உமது பரிமளதைலங்கள் இனிய மண
முள்ளன,
உமதுபேர் ஊற்றுண்ட பரிமளதைல
மாம்;
ஆதலால் கன்னியர் உமில் பிரியாயி
னர்.
4 எனைப் பிடித்திழும், உம்மோடு ஓடிவரு
வோம்;
என் ராஜா என்னைத் தம் அறைகளில்
அழைத்துவந்தார்;
நாங்கள் உம்மில் மகிழ்ந்து களிகொள்
வோம்;
திராட்சரசத்திலும் உமது நேசமே கொண்
டாட்டம்,
பலர் உம்மில் பிரியாயிருப்பதும்
இயல்பே.
5 எருசலேம் குமாரிகாள், அழகி நான்
கறுத்துளேன்
கேதார் கூடாரங்கள், சாலொமோனின்
திரைகள் ஆகிய இவற்றைப்போன்றே.
6 கறுப்பென நினைந்து எனை நோக்காதீர்
கள்,
வெயில் எனைக் காய்ந்தது, என் தாய் மக்
கள்
கோபித்து எனைத் தோட்டக்காவலுக்
கனுப்பினர்;
என் திராட்சத்தோட்டத்தையோ நான்
காக்கவில்லை.
7 என் உயிர்க் காதலரே, எங்கு மேய்ப்
பீர் உமதுமந்தை?
மத்தியானம் மந்தையை எங்கு மடக்கு
வீர்? சொல்லும்;
உமது தோழரின் மந்தைகளோடே
பரஸ்திரீபோல் நான் போகவேண்டிய
தேன்?
பெண்களில் பேரழகே! அதை அறியா 8
யெனின்
மந்தையின் தடம்பிடித்து மேய்ப்போர்
கூடாரங்கள்
அண்டை உன் ஆட்டுமறிகளே மேய்ப்
பாய்.
என் அன்பே, பார்வோனின் ரதங் 9
களில் பூட்டிய
பரிகளுக்கே உன்னை ஒப்பிடுகின்றேன்.
அணி பல பூண்ட உன் கன்னங்களும் 10
ஆரங்கள்பூண்ட உன் கழுத்தும் அழ
கின.
வெள்ளிப் பொட்டுள பொற்கன்ன 11
சரத்தை
நாமே உனக்குச் செய்திடுவோமே.
என் ராஜா பந்தியிலிருந்தனராக 12
என் பரிமளம் தன் வாசனை வீசிடும்.
என் காதலர் எனக்கு என் மார்பிடை 13
தங்கும்
வெள்ளைப்போள முடிப்பாவாரே.
என் காதலர் எனக்கு என்கேதியிலே 14
தோட்டத்தில் மூனைக்கும் மருதோன்றிப்
பூங்கொத்தாவார்.
என் அன்பே, நீ அழகி, அழகி; 15
புருக்கள்போன்ற கண்ணையுடையாய்.
என் காதலரே, நீர் அழகினர், இனிய 16
வர்,
நமது மஞ்சம் பசுமையானது.
நமது வீட்டு உத்திரம் கேதுருமரமாம், 17
நமது மச்சு தேவதாருமரம்.

2 சாரோனிலே பூத்த பூக்களிலே நான்
ஒன்று,
பள்ளத்தாக்கிலே மலரும் ஒரு லீலி நான்.
முள்நடுவே முளைத்தெழுந்த லீலி 2
மலர்போன்றே
இளங்கன்னியர் நடுவே இருப்பாள் என்
காதலியே.
காட்டுமரங்களின் நடுவே இனித்த 3
பன்னீர்ப் பழமரம்போல்
இளங்காளையர் நடுவே இருப்பார் என்
காதலரே.

அந்தமர நீழலிலே அமர்ந்திருக்க ஆசை
கொண்டேன்;
ருசிப்பதற்கு அதன் கனிகள் எத்த
னையோ இன்பமாம்.
4 விருந்துசாலைக்கு என்னை அழைத்துக்
கொடுபோனார்,
என்மேற் பறந்தது அவர் காதல் எனும்
கொடியே.
5 திராட்ச அடையைக் கொடுத்தென்னைத்
தேற்றுங்கள்,
பன்னீர்ப்பழங்களைக் கொடுத்தென்னை
ஆற்றுங்கள்,
காதல்மிகக்கொண்டு களைத்து நான் சோக
முற்றேன்.
6 அவர் இடக்கை என் தலைக்கணையாக
அவர் வலக்கை என்னைத் தழுவிக்கொள்
ளுமே.
7 எருசலேம்குமாரிகாள், எழுப்பவேண்
டாம் காதலதை,
வெளிமான்கள்மேல் ஆணை, மரைகளின்
மேல் ஆணை;
அதை விழித்தெழச் செய்யீர் அதுவே
எழும்பும்வரை.
8 இதோ, என் காதலர் குரல்! அவர்
வந்திட்டார்,
மலைதாண்டி மேடுகள்மேல் குதித்து வந்து
விட்டார்.
9 என் நேசர் மானுக்கும் இளமரைக்கும்
ஒப்பாவார்;
இதோ, அவர் எங்கள் மதில்புறத்தே
வந்துநின்றார்,
பலகணியின் உள்பார்த்துக் கிராதிவழி
யாகத்
தமதுமலர்ந்த முகமதனைக்காட்டுகின்றார்.
10 என் காதலர் என்னோடுரையாடி இது
சொல்வார்:
அன்பே! என் அழகுருவே, எழுந்திருப்
பாய், வந்திடுவாய்,
11 குளிர்காலம், இதோ, மறைந்துவிட்டது
கண்டாய்,
12 மழைபெய்து ஓய்ந்தது; | மலர்கள் மலர்ந்
தனவே;
பாடிக்களிக்கும் காலமும் வந்ததுபார்,
காட்டுப்புரு கூவும், நாடெங்கும் கேட்
கிறதே.
13 அத்திமரத்திலே பிஞ்சு பருத்தது பார்,
திராட்சச்செடிகளும் பூத்து மணம் வீசி
டுதே;
அன்பே! என் அழகுருவே, எழுந்திருப்
பாய், வந்திடுவாய்.
14 கன்மலைப் பிளப்பிலும் செங்குத்துப்
பாரை
ஒளிப்பிடமதிலும் உரையும் என் புறவே!
காட்டுக உன் முகத்தை, கேட்கச்செய்
உன் குரலை,
உன் குரல் இன்பம், உன் முகம் அழகே.
நரி, சிறுநரிகளைப் பிடிக்க நமக்குதவி 15
செய்க,
நமது திராட்சச்செடிகளெல்லாம் பூத்
திருக்கத்
திராட்சத்தோட்டங்களை அவை அழித்
திடுமே.
எனக்குரியார் என் காதலர், நானும் 16
அவர்க்குரியேன்,
லீலி மலர்க்காட்டிலே மேய்ப்பார் தமது
மந்தை.
குளிர்காலைவந்து இருள் மறைந்துபோ 17
கும்வரை
மரையாய்க் கலைமானாய் மணம்நிறைந்த
மலைக்காட்டில்
சுற்றித்திரிந்து வருவார் என் காதலரே.

**3** உயிர்க் காதலரை இரவு படுக்கையிலே
தேடினேன்,
தேடியும் நான் அவரைக் கண்டுபிடித்தே
னில்லை;
எழுவேன், நகரத்தின் வீதிவெளிகளில் 2
அலைவேன்,
என் உயிர்க் காதலரைத் தேடுவேன்
என்றுரைத்தேன்;
தேடியும் நான் அவரைக் கண்டுபிடித்தே
னில்லை.
நகர்வீதி நிரிகாவலாளர் எனைக் கண் 3
டிடவே,
என் உயிர்க்காதலரைக் கண்டதுண்டோ
என்றுரைத்தேன்.
கண்டுகொண்டேன் காதலரைச் சிறிது 4
அப்பாற் சென்றவுடன்;
பற்றிப்பிடித்தேன் ஒரு சிறிதும் விட
வில்லை;
என் தாயின் வீட்டிற்கும் எனைப்பெற்ற
வள் அறைக்கும்
அவரை நான் கொண்டுவந்து சேர்த்து
விட்டேன் நிற்காமல்.
எருசலேம் குமாரிகாள், எழுப்ப 5
வேண்டாம் காதலதை,
வெளிமான்கள்மேல் ஆணை, மரைகளின்
மேல் ஆணை,
அதை விழித்தெழச் செயீர், அதுவே
எழும்பும்வரை.
என்னே இது! வனாந்தரம் நின்றுவரு 6
வது,
தூபஸ்தம்பம்போல் தோற்றிடுதே.
வெள்ளைப்போளமும் சாம்பிராணியும்
பல்விதவர்த்தகக் கந்தப்பொடியும்

மணமது வீசி வருவது யாதோ?
7 இதோ, இது சாலொமோனுடைய பல்லக்கு,
சூழ்ந்திருப்பார் பராக்கிரமசாலிகள் அறுபதுபேர்;
இஸ்ரவேலிலே பராக்கிரம சாலிகளாம் இவர்.
8 இவரெலாம் யுத்தம் பழகினோர்; வாள் பிடித்தோர்,
இரவுநேர் பயங்கரம் எதிர்க்கவேண்டி தத்தம் அரையில் வாள் கட்டியிருப்பார்.
9 சாலொமோன் தனக்கொரு பல்லக்குச் செய்தான்,
அது லீபனோனின் மரத்தாலானது.
10 அதின் தூண்வெள்ளி, சாய்மானம் பசும்பொன்,
அதின் ஆசனம் இரத்தாம்பரம் மூடினது;
எருசலேம் குமாரிகள் அன்பினாலே அதன் உட்புறத்தை அலங்கரித்திருந்தனர்.
11 சீயோன் குமாரிகாள், சாலொமோன் ராஜனை,
வெளிச்சென்று பாருங்கள், விவாகநாளில்,
மனமகிழ்ச்சிநாளிலே, தாயார் சூட்டிய முடியோடவர் வீற்றிருக்கின்றாரே.
4 என் அன்பே! நீ அழகி, அழகி,
முக்காட்டினுள் கண்கள் புறாக்களே போன்றன;
கிலெயாத் சரிவிலே இறங்கிவருகின்ற வெள்ளாட்டு மந்தைபோல் தோற்றும் நின்கூந்தல்.
2 மயிர்கத்தரித்துக் குளித்துக்கரையேறும் ஆட்டு மந்தையைப்போலும் உன் பற்களே.
அவையெலாம் இரட்டைக்குட்டிகள் ஈன்றன,
ஒன்றேனும் மலடாயிருந்ததில்லை.
3 உன் உதடு சிவப்புநூல், வாயே இனிமை,
முக்காட்டினுள் கன்னங்கள் வெடித்த மாதளம்பழம்போலும்.
4 உன் கழுத்து தாவீதின் கோபுரமேபோலும்,
ஆயுதசாலையாய்க் கட்டியது அக்கோபுரம்;
அதிலே ஆயிரம் பரிசைகள் தொங்கும்,
இவையெலாம் பராக்கிரமமுளோர் கேடகங்கள்.
5 உன் இருஸ்தனங்கள் லீலிமலர்மேயும்
இளவெளிமான் இரண்டாம், இரட்டை மான்குட்டிகளாம்.

குளிர்காலே வந்து இருள் மறைந்து போகும்வரை
வெள்ளைப்போள மலையினும் சாம்பிராணிக் குன்றுகள்மேலும் போயிருப்பேனே.
என் அன்பே! நீ பூரண அழகினள், 7
உன்னிடத்திலே மாசென ஒன்றில்லை.
என் மணவாளீ! என்னோடுவா லீபனோனிலிருந்து, 8
லீபனோனிலிருந்து என்னோடுவா.
அமானுக்கொடுமுடி, செனீர்எர்மோன் கொடுமுடி, சிங்கத்தாபரம், சிவிங்கி மலைகளின்மேலிருந்து இறங்கி வந்திடுவாய்.
புத்திமயக்கிவிட்டாய்! சகோதரீ! மணவாளீ! 9
கண்ணால் கழுத்துப்பணியால் மயக்கிவிட்டாய்.
உன்நேசம் எத்தனை இனிமை! சகோதரீ! மணவாளீ! உன்நேசம் திராட்சரசத்திலும் இனிமை. 10
சகல கந்தவர்க்கங்களைப் பார்க்கிலும் உனது பரிமளதைலமே வாசனை.
என் மணவாளீ! உன் உதடினின்று தேன் ஒழுகும்; 11
உன் நாவின் கீழே இருப்பன பால் தேனுமே;
உன் ஆடைவாசம் லீபனோன் வாசனையாம்.
சகோதரீ! மணவாளீ! பூட்டிட்ட தோட்டம் நீ, 12
பூட்டிவிட்ட நீரூற்று, முத்திரையிட்ட கிணருனாய்.
மாதனைத்தோட்டமாகத் தழைத்தாய் நீ. 13
அரியகனி, மருதோன்றி, நளதச்செடி, நளதம், 14
குங்குமம், வசம்பு, லவங்கம், பல்விதமான தூபவர்க்கமரம், வெள்ளைப்போளம், கரிபோளம்
சகலவித கந்தவர்க்கங்களும் நிறைந்தாய்.
தோட்டத்தின் நீரூற்று ஓடுநீர் உளதுரவாம், 15
லீபனோனின்று வரும் நீரோடையுள்ளது.
வாடையே, நீ எழும்பு; தென்றலே, வந்திடுவாய்; 16
கந்தம் பரவுதற்குத் தோட்டத்தில் வீசிடுக;
என் காதலர் தம் தோட்டம் புகுந்து அங்குள அருங்கனி அருந்துவாரே.
சகோதரீ! மணவாளீ! என்தோட்டம் 5
நான் புகுவேன்,

என் வெள்ளைப்போளம் என் கந்தவர்க்
கம் சேர்த்திடுவேன்,
என் தேன் கூட்டை என் தேனோடு நான்
புசிப்பேன்,
திராட்சரசம் என் பாலும் குடித்திடுவேன்.
அன்பரே, நீங்கள் புசித்துக் குடித்
திடுங்கள்;
காதலிலே மயங்கிக் கிடக்கக் குடிப்பீரே.
2 நான் தூங்கினேன், இதயமோ விழித்
திருந்தது,
இதோ, என்காதலர் கதவுதட்டினர்,
கேட்டேன்,
சகோதரீ, அன்பே, என்புறவே, உத்த
மியே!
கதவுதிறந்திடுவாய், தலைபனியினல் நனைந்
தேன்;
தலைமயிர் இரவின் தூறலால் நனைந்த
தென்றார்.
3 ஆடை களைந்துவிட்டேன், அதைத்
திரும்ப உடுத்திடவோ!
பாதங்கழுவினேன், அழுக்காக்கிடவோ
என்றுரைக்க,
4 என்காதலர் கதவின் துவாரவழியே
தமதுகையை நீட்டின அளவிலே
அவர் நிமித்தமாக என் உளம் உருகி
ஓடிற்றே.
5 எழுந்தேன் என் காதலருக்குக் கதவைத்
திறந்திடவே;
என்கையினின்று வெள்ளைப்போளமும்
விழுந்தது;
கைவிரல் நின்று வெள்ளைப்போளம்
கதவின் கைப்பிடிமேலே வடிந்தது.
6 காதலர் பொருட்டு நான் கதவுதிறந்தேன்,
என் காதலரோ அங்கில்லை, அகன்றார்;
அவர் சொன்ன சொல்லால் என் இதயம்
சோர்ந்தது,
தேடினேன் அவரைக்கண்டேனில்லை.
கூவியழைத்தேன், மறுமொழி இல்லை.
7 நகர்வீதி திரி காவலாளர் எனைக்கண்டார்;
அடித்தார் என்னைக் காயப்படுத்தினர்.
ஆலங்கக் காவலாளர் என் மீதிருந்த
துப்பட்டாவை எடுத்துக்கொண்டார்.
8 எருசலேம் குமாரிகாள், ஆணையிட்
டுச் சொல்லுகிறேன்,
என் காதலரைக் காண்பீரேல் சொல்லுங்
கள்,—
கண்டால், ஐயோ, எதை உரைத்திடு
வது—
காதலினுலே சோகமுற்றேன், சொல்லுங்
கள்.
9 பெண்களிற் பேரழகே! காதலர் யாரி
லும்
உன் காதலர் எவ்வகையிற் சிறந்தவர்?
எங்கள்பால் இப்படி நீ ஆணையிடுதற்கு
உன் காதலர் எவ்வகையிற் சிறந்தவர்.
என் காதலர் மிகவெண்மையர், சிவந் 10
தவர்;
பதினாயிரம் பேர்களிலே சிறந்தவர்;
தலை தங்கமாம், மயிரோ சுருண்டு 11
காகம்போலும் கருநிறமுள்ளது.
நீர் நிறை ஒடைகள் ஓரம்தங்கிப் 12
பாலிலே முழுகி எழும் புருக்களே
அவர் கண்கள்.
கன்னங்கள் மணநிறை பூச்செடிப் 13
பாத்திகள்,
கந்தவர்க்கம் நிறைந்த பெட்டகங்கள்.
உதடுகள் லீலி புஷ்பங்கள்போலும்,
அவை நின்று வெள்ளைப்போளம் துளிக்
கும்.
அவர் கரம் பத்மராகம் பதித்த பொன் 14
தண்டு,
அவர் அரை நீலமிழைத்த தந்தப்பிழம்பு.
பொற்பாதம் மேல்நிற்கும் வெண்கல் 15
தூண் அவர் கால்,
அவரைக் காண்பதே லீபனோன் காண்ப
தாம்.
கேதுரு மரமதைப்போற் சிறப்புள்ளவர்.
வாய் இனிமையுளது, அவர் குறையிலா 16
நிறையழகர்;
இவரே என் காதலர்,
எருசலேம் குமாரிகாள், இவரே என்
நேசர்.
எங்குபோனர் உன் காதலர்? பெண்க 6
ளில் பேரழகே!
எத்திசை திரும்பினர் உனது காதலர்?
நாங்கள் உன்னோடுசேர்ந்து அவரைத்
தேடுவோம்.
தோட்டத்தில் ஆடு மேய்த்து லீலிகள் 2
கொய்ய
என்நேசர் தமது தோட்டத்திற்கு
மணநிறைப் பூச்செடிப் பாத்திகட்கேகி
னர்.
காதலர்க்கு நானுரியேன், எனக்குரியார் 3
காதலரும்,
லீலிமலர்க் காட்டிலே மேய்ப்பார் தமது
மந்தை.
அன்பே! நீ திர்சாபோல் அழகினள், 4
எருசலேம்போற் சௌந்தர்யமும் கொடி
யுடைப்
படைபோல் பயங்கரவலிமையும் உள்ள
வள் நீயே.
கண்களைத் திருப்பு, எனை அவை மயக் 5
கும்;
கிலெயாத்சரிவிலே இறங்கி வருகின்ற

வெள்ளாட்டு மந்தைபோல் தோற்றும் நின் கூந்தல்

4 குளித்தபின் கரையேறுகின்ற
ஆட்டுமந்தையைப்போலும் உன் பற்கள்,
அவையெலாம் இரட்டைக்குட்டிகள் ஈன்றன,
ஒன்றேனும் மலடாயிருந்ததில்லை.

7 முக்காட்டினுள் கன்னங்கள் வெடித்த மாதளம்பழம்போலும்.

8 ராஜபத்தினிகள் அறுபதுபேர், மறுமனையார்
எண்பதுபேர், தோழியர்க்கோ தொகையில்லை.

9 எனது புரு, என் உத்தமி, ஒருத்தியே;
தாய்க்கு ஒரே பிள்ளை, பெற்றவட்குப் பிரிய மகள்;
கன்னியர் அவளைக் காணுந்தோறும்
பாக்கியவதியெனப் பகர்வார் வாழ்த்து.
ராஜபத்தினிகளும் மறுமனையாரும் புகழ்வார்.

10 உதயம்போல எட்டிநோக்கும் இப்
பெண் யாரோ?
மதியின் ஒளியேபோல் அழகுடையாள்,
நண்பகற்குரிய வெளிச்சம்போல் தூயவள்,
கொடிப்படை பயங்கரவலிமைகொண்டு
விளங்குவாள்.

11 பள்ளத்தாக்கின் பசுமையை நோக்கவும்
திராட்சை தளிர்த்ததா, மாதளை பூத்ததா
என்றறிய வாதுமைத்தோட்டம் போனேன்.

12 நினையா முன்னரே என் ஆவல் எனை
நெறிப்புள என் ஜனத்தார் ரதத்தின்மேல் ஏற்றினதே.

13 திரும்புக, திரும்புக, சுலமித்தியே!
திரும்புக, திரும்புக, நாங்கள் உனைப் பார்க்க.
போர்வீரர் நடனம் ஆடும்போது
சுலமித்தியைப் பார்ப்பதேனோ?

**7** ராஜகுமாரியே, பாதரட்சையிட்டு நீ
நர்த்தனம் செய்கின்ற நடை அழகை
என்சொல்ல!
உனது இடுப்பின் உருண்டை வடிவம்
கைதேர்ந்தவன் செய்யும் கழுத்தணிபோலும்.

2 உன்மடி வட்டக்கலசமாம், அதிலே
இனிய ரசம் என்றும் வற்றுதாகும்;
உன்வயிறு லீலிசூழ் கோதுமை அம்பாரம்.

3 உன் ஸ்தனமிரண்டும் இளவெளிமானி
ரண்டாம்,
இரட்டை மான்குட்டிகளே போன்றன
வாம்.

4 உன் கழுத்து யானைத்தந்தக் கோபுரம்
போலும்,
எஸ்போனிலே பத்ரபீம் வாசலண்டை
குளங்களேபோலும் உனது கண்கள்.
தமஸ்குவின் திசையை நோக்கியுயர்ந்த
லீபனோன் கோபுரம்போலும் உன்மூக்கு.

5 உன்மேல் உன்தலை கர்மேல்போலாம்,
தலைமயிர் இரத்தாம்பர மயமானது;
அதின் வலியிலே ராஜா மயங்கிச்சிக்கினார்.

6 மனோகரமான அன்பே! உனது
அழகை என்சொல்ல! நீ எத்தனை இனிமை!

7 பனைபோல் உயர்ந்தாய், ஸ்தனங்கள் குலைகளாம்.

8 பனைமரத்திலேறி மடல்கள் பிடிப்பேன்
என்றேன்,
உன் ஸ்தனங்கள் திராட்சக்குலைகளே
போலும்,
உன் சுவாச வாசனை பன்னீர்ப்பழம்போலும்.

9 உன் வாய் உத்தம திராட்சரசமாம்.
அந்த ரசம் என் நேசரிலே மெதுவாயிறங்கும்,
உறங்குவோரின் உதட்டை நனைக்கும்.

10 நான் உரியேன் காதலர்க்கு, அவர் ஆசை
என்மேலாம்.

11 வாரும் என் காதலரே, வயல் வெளிக்குச் செல்வோம்,
கிராமங்களிலே ராத்தங்கிடுவோம்.

12 காலையெழுந்து திராட்சத்தோட்டம் சென்று
திராட்சை தளிர்த்ததா, அதன் பூ மலர்ந்ததா,
மாதளை பூத்ததா என்று பார்த்திடுவோம்;
அங்கே என் அன்பை உமக்கு அளித்திடுவேன்;

13 காதற்பழங்கள் வாசனை வீசும்;
புதியவும் பழையவும் அரிய பல்கனிகள்
நமது வாசல்களண்டையிலுண்டு.
என் காதலரே! உமக்கென்றே அவை
வைத்தேன்.

**8** ஆ, நீர் எனதுதாயின் பாலுண்ட
என் சகோதரனாயிருப்பின் எத்தனை நன்றும்!
நான் உமை வெளியே கண்டு முத்தமிட்டாலும்
எவரும் என்னை நிந்தனைசெய்யார்.

2 என் தாய் வீட்டுக்கழைத்துப் போவேன்,

நீர் எனக்குப் போதிப்பீர், நீர் குடிப்ப
தற்கு நான்
மணமுள்ள ரசம், மாதளம்பழ ரசத்தை
யே, தருவேன்.
3 அவர் இடக்கை என் தலைக்கணையாக
அவர் வலக்கை என்னைத் தழுவிக்கொள்
ளுமே.
4 எருசலேம் குமாரிகாள், ஆணையிட்டுச்
சொல்லுகிறேன்,
எழுப்பவேண்டாம் காதலதை,
அதை விழித்தெழச் செய்யீர் அதுவே
எழும்பும் வரை.
5 வனாந்தரம் நின்று, இதோ, வருபவள்
யாரே?
தன் காதலன்மேல் சாய்ந்து வருகின்றாள்.
பன்னீர்ப்பழ மரத்தின்கீழ் உமை
எழுப்பினேன்,
அங்கே உம்தாய் கர்ப்பவேதனையுற்
றுமைப் பெற்றாள்;
உமைப் பெற்றவள் அங்கேயே கர்ப்ப
வேதனைப்பட்டாள்.
6 முத்திரை மோதிரமாய் எனை மார்
போடு தரித்திரும்,
முத்திரை மோதிரமாய்ப் புயத்தின்மேல்
அணிந்துகொளும்,
அன்பு மரணம்போலே வலிதாம்;
பாதாளம்போலவே அடக்க அரிதாம்
ஆசை;
அதின் தழல் அக்கினித்தழலேபோலும்,
அதின் ஜ்வாலி அவியா ஜ்வாலையா
மே.
7 திரள் தண்ணீரும் அன்பை அவியா,
வெள்ளங்களும் அதை அடித்துக்கொண்
டோடா,
அன்பைப் பெறுதற்கொருவன் தன்னி
டத்துள
ஆஸ்தியனைத்தும் அளிப்பானாயினும்
அதைகண்டு அவனைப் பழிப்பவர் உண்
டோ?
8 நமக்கு ஓர் இளைய சகோதரியுண்டு,
அவளுக்கு இன்னும் ஸ்தனங்களில்லை,
அவளைப் பெண்பேசிடுகின்ற நாளிலே
நாம் அவளுக்கு என்ன செய்திடுவோம்.
9 அவள் மதிலாயின் வெள்ளிமுடியதின்
மேல் அமைப்போம்;
வாசலாயின் அதற்குக் கேதுருப்பலகை
வைத்தடைப்போம்.
10 நான் மதிலே, என் ஸ்தனங்கள் கோ
புரம்;
அவர் சமீபிக்கவே அவர் பார்வையிலே
கடாட்சம் பெறத்தக்கவளானேன்.
11 பாகால் ஆமோனில் சாலொமோ
னுக்கு
உரிய திராட்சத்தோட்டமொன்று இருக்
கது.
தோட்டத்தைக் காவலாளர்வசம் ஒப்பு
வித்தார்,
அதன் பலனுல் ஆளுக்கு ஆயிரம் வெள்
ளிவரும்.
12 என் திராட்சத்தோட்டம் என் வசமே
இருக்கிறது,
சாலொமோனே, உமக்கு அந்த ஆயிர
மும்
பலனைக் காப்பாருக்கு இருநூறும் சேர்ந்
திடுமே.
13 தோட்டம் வசிப்பவளே! உன் குர
லைத்
தோழர் கேட்டனர்; நானும் கேட்கச்
செய்க.
14 என் காதலரே, விரைந்திடும், கந்த
வர்க்க
மலைமான், இளமரையாக வந்திடுமே.

# ISAIAH

# ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம்

1 ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா, யூதாவின் ராஜாக்களாகிய உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்பவர்களின் நாட்களில் யூதாவையும் எருசலேமையும் பற்றிக்கண்ட தரிசனம்.

2 வானங்களே, கேளுங்கள்; பூமியே, செவிகொடு;
யெகோவாவே பேசுகிறார்,
நான் பிள்ளைகளைப் பேணி வளர்த்தேன்,
அவர்களோ எனக்கு துரோகஞ்செய்தார்கள்.

3 மாடு தன்னை உடையவனையும்,
கழுதை தன் எஜமானின் முன்னணையையும் அறியும்;
இஸ்ரவேலுக்கோ அறிவில்லை
என் ஜனத்துக்கோ உணர்வில்லை என்கிறார்.

4 பாவமுள்ள ஜாதிக்கு ஐயோ கேடாம்!
அது அக்கிரமப் பாரஞ்சுமந்த ஜனம்,
தூர்ச்செய்கைக்காரர் சந்ததி, தீங்குசெய்யும் மக்கள்,
அவர்கள் யெகோவாவை விட்டுவிட்டார்கள்,
இஸ்ரவேலின் பரிசுத்தரை அசட்டை செய்தார்கள்,
பின் திரும்பிப்போய்விட்டார்கள்.

5 இன்னும் உங்களை அடித்துப் பயனென்ன?
விலகிப் போய்க்கொண்டே யிருக்கிறீர்களே,
தலையெலாம் வியாதி, இதயமெல்லாம் தளர்ந்ததே;

6 உள்ளங்கால்தொடங்கி உச்சந்தலைமட்டும்
அதில் சுகமேயில்லை;
அது ஆறுத காயமும் வீக்கமும் புதுக்காய இரணமுமுள்ளது;
அது சீழ் பிதுக்கப்படவில்லை, கட்டப்படவில்லை, எண்ணெயினால் ஆற்றப்படவில்லை.

7 உங்கள் தேசம் பாழாயிருக்கிறது, உங்கள் பட்டணங்கள் அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டன;
உங்கள் நாட்டை அந்நியர் உங்கள் கண்களுக்கு முன்பாகப் பட்சிக்கிறார்கள்;
அது அந்நியரால் கவிழ்க்கப்பட்ட பாழ்ந் தேசம்போல் இருக்கிறது.

8 தராட்சத்தோட்டக் குச்சுபோலவும், வெள்ளரித்தோட்டக் குடிசைபோலவும், முற்றுகைபோடப்பட்ட பட்டணம் போலவும் சியோன் குமாரியே, மீந்திருக்கிறாள்.

9 சேனைகளின் யெகோவா நமக்கெனக் கொஞ்சத்தை மீந்திருக்க விடாதிருந்தால்
நாம் சோதோமைப்போலாகிக் கொமோராவுக்கு ஒத்திருப்போம்.

10 சோதோமின் அதிபதிகளே, யெகோவாவின் வார்த்தையைக் கேளுங்கள்;
கொமோராவின் ஜனமே, நமது கடவுளின் போதனைக்குச் செவிகொடுங்கள்.

11 நீங்கள் மிகுதியாய்ச் செலுத்தும் பலிகள் எனக்கு எதற்கென்று யெகோவா சொல்லுகிறார்;
ஆட்டுக்கடா தகனபலிகளும் கொழுத்த மிருக நிணங்களும் எனக்கு ஆரோகியமாயின;
காளைகள், ஆட்டுக்குட்டிகள், கடாக்கள் ஆகிய இவற்றின் இரத்தம் எனக்குப் பிரியமில்லை.

12 நீங்கள் என் தரிசனத்துக்கு வரும்போது என் பிராகாரங்களில் இப்படி மிதித்து நடக்கவேண்டுமென்று உங்களிடம் கேட்டது யார்?

13 இனி வீண் காணிக்கைகளைக் கொண்டு வரவேண்டாம்;
அவற்றின் தூபம் எனக்கு அருவருப்பு;
அக்கிரம ஆசரிப்பான அமாவாசை, ஓய்வுநாள், சபைக்கூட்டம் ஆகிய இவற்றை நான் சகிக்கமுடியாது.

14 உங்கள் அமாவாசைகளும் உங்கள் உற்சவங்களும் எனக்கு வெறுப்பு;
அவைகள் எனக்குப் பாரமாயிற்று,
அவற்றைச் சுமந்து சலித்தேன்,

15 நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும்
என் கண்களை உங்களைவிட்டு மறைக்கி
றேன்;
நீங்கள் மிகவும் ஜெபித்தாலும் கேளேன்,
உங்கள் கைகள் இரத்தம் நிறைந்த
வைகள்.
16 உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்;
உங்கள் தூர்ச்செயல்களை என் கண்
காணுதபடி அகற்றிவிடுங்கள்;
தீமைசெய்தலை விட்டு ஒயுங்கள்;
17 நன்மைசெய்யப் படியுங்கள், நியாயமான
தை நாடுங்கள்;
ஒடுக்கப்பட்டவனை ஆதரியுங்கள், திக்
கற்ற பிள்ளையின் நியாயத்தையும் வித
வையின் வழக்கையும் விசாரியுங்கள்.
18 இப்போதும் வழக்காடுவோம் வாருங்
கள் என்று யெகோவா சொல்லுகி
றார்;
உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தா
லும் உறைந்த மழையைப்போல் வெண்
மையாகும்;
அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்
தாலும் பஞ்சைப்போலாகும்.
19 நீங்கள் மனமிசைந்து செவிகொடுத்தால்
தேசத்தின் நற்பலனைப் புசிப்பீர்கள்.
20 இசையாமல் எதிர்ப்பீர்களானால்
பட்டயத்துக்கு இரையாவீர்கள்;
யெகோவாவின் வாய் இதைச் சொல்
லிற்று.
21 உண்மையுள்ள நகரம், ஐயோ, வேசி
யாயிற்றே!
அதில் நியாயம் நிறைந்திருந்தது, நீதி
அதில் குடிகொண்டிருந்தது;
இப்பொழுதோ அதின் குடிகள் கொலை
பாதகராளார்.
22 உன் வெள்ளி களிம்பாயிற்று;
உன் திராட்சரசந் தண்ணீர்க் கலப்பா
யிற்று.
23 உன் அதிபதிகள் முரடரும் திருடர்
தோழருமாயினர்;
அவர்களில் ஒவ்வொருவனும் பரிதானத்
தை விரும்பிக் கைக்கூலியை நாடித்
திரிகிறான்;
திக்கற்ற பிள்ளையின் நியாயத்தை விசாரி
யார், விதவையின் வழக்கு அவர்க
ளிடத்தில் ஏறுவதில்லை.
24 ஆகையால் சேனைகளின் யெகோவாவும்
இஸ்ரவேலின் வல்லவருமாகிய ஆண்டவ
ரிடமிருந்து வரும் தெய்வ வர்க்கைக்
கேளுங்கள்:
இதோ, நான் என் சத்துருக்களைத் தண்
டித்து மனதாறுவேன்.
என் பகைஞர்மேல் பழிதீர்ப்பேன்.
25 நான் என் கையை உன்மேல் திருப்பிப்
புடமிட்டு உன் களிம்பு நீங்க உன்னைச்
சுத்தமாக்கி
உன் ஈயத்தை யெல்லாம் நீக்குவேன்.
26 முன்னிருந்தவர்கள்போன்ற நியாயாதி
பதிகளையும்,
ஆதியில் இருந்தவர்கள்போன்ற ஆலோ
சனைக்காரரையும்
உனக்குத் திரும்பவும் கட்டளையிடுவேன்;
பின்பு தர்மபுரம் என்றும் சத்தியநகரம்
என்றும் பெயர் பெறுவாய்.
27 சீயோன் நியாயத்தினாலும்
அதிலே மனமாறுகிறவர்கள் நீதியினாலும்
மீட்கப்படுவார்கள்.
28 துரோகிகளும் பாவிகளுமோ ஏகமாய்
நொறுங்குண்டுபோவார்கள்;
யெகோவாவை விட்டு விலகுகிறவர்கள்
ஒழிந்துபோவார்கள்.
29 உங்களுக்குப் பிரியமாயிருந்த கர்வாலி
மரங்களினிமித்தம் வெட்கப்படுவீர்கள்;
நீங்கள் விரும்பிச்சென்ற தோப்புகளி
னிமித்தம் நாணமடைவீர்கள்.
30 இலையுதிர்ந்த கர்வாலி மரமாவீர்கள்,
தண்ணீரில்லாத் தோப்பாவீர்கள்.
31 பராக்கிரமசாலி சணற்கூளமாவான்,
அவன் கிரியை அக்கினிப்பொறியாகும்,
அவிப்பாரின்றி இரண்டும் ஏகமாய்
வெந்துபோம்.

**2** ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா யூதா
வையும் எருசலேமையும் பற்றிக் கண்ட
தரிசனம்:
2 கடைசி நாட்களில் யெகோவாவின் ஆலய
முள்ள பர்வதம்
பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்
கப்பட்டு மலைகளுக்குமேலாய் உயர்த்தப்
படும்;
எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்
கள்.
3 பல ஜாதிகள் புறப்பட்டு வந்து:
நாம் யெகோவாவின் பர்வதத்துக்கும்
யாக்கோபின் கடவுளுடைய ஆலயத்
துக்கும் போவோம் வாருங்கள்,
அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்
பார், நாம் அவர் பாதைகளில் நடப்
போம் என்பார்கள்;
சீயோனிலிருந்து போதகமும் எரு
சலேமிலிருந்து யெகோவாவின் வசன
மும் வெளிப்படும்.
4 அவர் ஜாதியாருக்குள் நியாயந்தீர்த்து
பல தேசத்தாருக்குத் தீர்ப்புச் செய்வார்;

அப்பொழுது அவர்கள் தங்கள் பட்ட
யங்களைக் கலப்பைக் கொழுக்களாக
வும்
தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும்
அடிப்பார்கள்;
ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம்
எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தம்
கற்பதுமில்லை.
5 யாக்கோபின் வம்சத்தாரே, வாருங்
கள்,
யெகோவாவின் வெளிச்சத்திலே நடப்
போம்.
6 யாக்கோபின் வம்சத்தாராகிய உமது
ஜனத்தைக் கை விட்டீர்,
கீழ்நாட்டு வழக்கங்கள் அவர்களுக்குள்
நிறைந்தன,
அவர்கள் பெலிஸ்தியரைப்போல் சகுனம்
பார்க்கிறார்கள்,
அந்திய நாட்டாரோடு உடன்படிக்கை
செய்கிறார்கள்.
7 அவர்கள் தேசத்தில் வெள்ளியும் பொன்
னும் நிறைந்தன, அவர்கள் பொக்கி
ஷங்களுக்கு முடிவில்லை;
அவர்கள் தேசத்தில் குதிரைகள் நிறைந்
தன, அவர்கள் இரதங்களுக்கு முடி
வில்லை.
8 அவர்கள் தேசத்தில் விக்கிரகங்கள்
நிறைந்தன;
தங்கள் கைகள் படைத்தவற்றையும் தங்
கள் விரல்கள் செய்தவற்றையும் பணிந்து
கொள்ளுகிறார்கள்.
9 மனிதர் பணிந்து நடக்கிறார்கள், மனு
புத்திரர் தாழ்வடைகிறார்கள்,
நீர் அவர்களுக்கு மன்னியாதிரும்.
10 யெகோவாவின் பயங்கரத்திற்கும் அவரு
டைய மகிமைப்பிரதாபத்திற்கும் விலகி,
நீ கன்மலையினுள் ஒதுங்கி மண்ணில்
ஒளித்துக்கொள்.
11 மானிடரின் மேட்டிமையான கண்கள்
தாழ்த்தப்படும்,
மனுஷரின் வீறுப்பும் தணியும்,
யெகோவா ஒருவரே அந்நாளில் உயர்ந்
திருப்பார்.
12 எல்லாம் தாழ்த்தப்படும் பொருட்டுச்
சேனைகளின் யெகோவாவுக்குரிய நாளா
னது பெருமையும் மேட்டிமையுமான
யாவற்றின்மேலும் வரும்;
உயர்ந்தவை எல்லாவற்றின்மேலும்,
13 லீபனோனிலே உயரமாய் ஓங்கிவளர்ந்த
சகல கேதுருக்களின் மேலும்,
பாசானிலுள்ள சகல கர்வாலிமரங்களின்
மேலும்,
உன்னதமான சகல பர்வதங்களின்மே 14
லும்,
உயரமான சகல மலைகளின்மேலும்,
உயர்ந்த சகல கோபுரங்களின்மேலும், 15
அரணான சகல மதில்களின்மேலும்,
தர்ஷீசின் சகல கப்பல்களின்மேலும், 16
கண்ணுக்கினிய விநோதங்கள் அனைத்
தின்மேலும் வரும்.
அப்பொழுது மானிடரின் மேட்டிமை 17
தாழ்ந்து மனுஷரின் வீறுப்புத் தணி
யும்;
யெகோவா ஒருவரே அந்நாளில் உயர்
ந்திருப்பார்.
விக்கிரகங்கள் கட்டோடே ஒழிந்து 18
போம்.
பூமியைத் தத்தளிக்கப்பண்ண யெகோ 19
வா எழும்பும்போது,
அவருடைய பயங்கரத்திற்கும் அவரு
டைய மகிமைப் பிரதாபத்திற்கும் வில
கிக்
கன்மலைகளின் கெபிகளிலும் பூமியின்
குழிகளிலும் புகுந்துகொள்வார்கள்.
மனுஷன் பணிந்துகொள்ளத் தனக்குச் 20
செய்திருந்த
தன் வெள்ளிவிக்கிரகங்களையும் தன்
பொன்விக்கிரகங்களையும்
அந்நாளிலே அகழ் எலிகளுக்கும் வௌ
வால்களுக்கும் எறிந்துவிடுவான்.
பூமியைத் தத்தளிக்கப்பண்ண யெகோ 21
வா எழும்பும்போது,
அவருடைய பயங்கரத்திற்கும் அவரு
டைய மகிமைப் பிரதாபத்திற்கும் வில
கிக்
கன்மலைகளின் வெடிப்புகளிலும் ஓன்று
களின் சந்துகளிலும் புகுந்துகொள்ளு
வான்.
நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம் 22
புவதை விட்டுவிடுங்கள்;
அவனை ஒருபொருளென மதிக்கலாமோ!

இதோ, சேனைகளின் யெகோவாவாகிய 3
ஆண்டவர்
எருசலேமிலிருந்தும் யூதாவிலிருந்தும்
ஊன்றுகோலையும் ஆதரவையும்,
உணவு, தண்ணீர் ஆகிய சகல ஆதாரங்
களையும்,
பராக்கிரமசாலியையும் யுத்தவீரனையும் 2
நியாயாதிபதியையும்
தீர்க்கதரிசியையும் குறிசொல்வோனையும்
முதியவனையும்
ஐம்பதின்மருக்கு அதிபதியையும் மதிப் 3
புள்ளவனையும் ஆலோசனைக்காரனையும்

தொழில் சாமர்த்தியசாலியையும் மந்திர
வாதியையும் விலக்குவார்.
4 இளைஞரை அவர்களுக்கு அதிபதிகளாகத்
தருவேன்;
பிள்ளைகள் அவர்மேல் ஆளுவார்கள் என்
கிறார்.
5 ஜனங்கள் ஒடுக்கப்படுவார்கள்; ஒருவருக்
கொருவரும் அயலானுக்கு அயலானும்
விரோதமாயிருப்பார்கள்;
வாலிபர் வயோதிகருக்கும் கீழ்மக்கள்
மேன்மக்களுக்கும் மாறாய் எழும்புவார்
கள்.
6 ஒருவன் தன் தகப்பன் வீட்டாளுகிய
தன் சகோதரனைப் பிடித்து:
உனக்கு ஆடை இருக்கிறது, நீ எங்
களுக்கு அதிபதியாயிரு;
பாழாய்ப்போன இது உன் கையின்
கீழாகட்டும் என்று சொல்ல
7 அவன் அந்நாளிலேயே பதிலுரைத்து:
நான் புண் ஆற்றுகிறவனுயிருக்கமாட்
டேன்;
என் வீட்டிலே உணவுமில்லை, ஆடையு
மில்லை;
என்னை ஜனங்களுக்கு அதிபதியாக வைக்
கவேண்டாம் என்பான்.
8 எருசலேம் இடறுகிறது, யூதா விழு
கிறது;
அவர்கள் நாவும் அவர்கள் செய்கை
களும் யெகோவாவுக்கு விரோதம்;
அவருடைய மகிமையின் கண்களுக்கு
முன் எதிர்த்து நிற்கிறார்கள்.
9 அவர்கள் முகப்பார்வை அவர்களுக்கு
விரோதமாய்ச் சாட்சியிடும்,
அவர்கள் சோதோம் ஊராரைப்போல
தங்கள் பாவத்தைப் பிரஸ்தாபப்படுத்து
கிறார்கள் ஒன்றையும் மறைப்பதில்லை;
ஐயோ அவர்களுக்குக் கேடே! தங்க
ளுக்கே தீமையை வருவித்துக்கொள்
ளுகிறார்கள்.
10 நீதிமான்களைப்பற்றிப்பேசி, அவர்களுக்
குச் சுகவாழ்வு என்று சொல்லுங்
கள்;
அவர்கள் தங்கள் செயல்களின் நற்பல
னை அநுபவிப்பார்கள்.
11 துன்மார்க்கனுக்கு ஐயோ கேடே! அவன்
கைகள் செய்தது அவனுக்கு பலிக்
கும்.
12 என் ஜனத்தை ஒடுக்குகிறவர்கள் இளை
ஞரே,
ஆளுகிறவர்கள் ஸ்திரீகளே.
என் ஜனமே உன்னை நடத்துகிறவர்கள்
உன்னை மோசம் போக்குகிறார்கள்;
நீ நடப்பதற்குத் தப்புவழியைக் காட்டு
கிறார்கள்.
13 யெகோவா வழக்காட எழுந்திருக்
கிறார்,
ஜனங்களை நியாயந்தீர்க்க வந்து நிற்கிறார்.
14 யெகோவா தமது ஜனத்தின் மூப்பரை
யும் அதின் அதிபதிகளையும் நியாயம்
விசாரிப்பார்.
இந்தத் திராட்சத்தோட்டத்தை மேய்ந்து
விட்டவர்கள் நீங்களே,
சிறுமையுற்றவனிடம் கொள்ளையிட்ட
பொருள் உங்கள் வீடுகளில் இருக்
கிறது.
15 நீங்கள் ஏன் என் ஜனத்தை நொறுக்கிச்
சிறுமையானவர்களை நைய நருங்கப்
புடைக்கிறீர்கள்?
சேனைகளின் யெகோவாவாகிய ஆண்ட
வரின் தெய்வவாக்கே இது.
16 மேலும் யெகோவா சொல்லுகிறார்:
சீயோன் குமாரத்திகள் அகந்தை கொண்
டவர்களாய்க்
கழுத்துவளையாமல் நடந்து, கண்களால்
சுற்றி நோக்கிக் குறுநடையொடு தங்
கள் கால்களில் சிலம்பு ஒலிக்கத்திரி
கிறார்கள்.
17 ஆதலால் ஆண்டவர் சீயோன் குமாரத்தி
களின் உச்சந்தலையைப்புண்ணும் பொரு
க்குமாக்குவார்,
யெகோவா அவர்கள் மானத்தை மூடா
மல் நிர்வாணமாக்குவார்,
18 அந்நாளிலே ஆண்டவர் அவர்களுடைய
ஆபரணங்களாகிய
சிலம்புகளையும் சுட்டிகளையும் காறைகளை
யும்,
19 ஆரங்களையும் அஸ்தகடகங்களையும் தலை
மூக்காடிகளையும்
20 சிரபூஷணங்களையும் பாதசங்கிலிகளையும்
அரைக்கச்சைகளையும்
சுகந்தபரணிகளையும் மந்திரத்தாயித்து
களையும்
21 மோதிரங்களையும் மூக்குத்திகளையும்
22 விநோத வஸ்திரங்களையும் மேலாடைகளை
யும் போர்வைகளையும் சிறு பைகளை
யும்
23 கண்ணுடிகளையும் சல்லாக்களையும் குல்
லாக்களையும் தப்பட்டாக்களையும் உரிச்
சுபோடுவார்.
24 அப்பொழுது சுகந்தத்துக்குப் பதிலாகத்
துர்க்கந்தமும்,
கச்சைக்குப் பதிலாகக் கயிறும்,
மயிர்ச்சுருளுக்குப் பதிலாக வழுக்கைத்
தலையும்,

ஆடம்பரமான வஸ்திரங்களுக்குப் பதி
லாக இரட்டும்,
அழகுக்குறிக்குப் பதிலாக சூட்டுத்தழும்
பும் இருக்கும்.
25 உன் புருஷர் கட்கத்தினாலும்
உன் பராக்கிரமசாலிகள் யுத்தத்தினாலும்
விழுவார்கள்.
26 அவளுடைய வாசல்கள் துக்கித்துப்
புலம்பும்,
அவள் தனியாகித் தரையில் உட்காரு
வாள்.

**4** அந்நாளில் ஏழு ஸ்திரீகள் ஒரே புருஷ
னைப் பிடித்து: நாங்கள் எங்கள் சொந்த
ஆகாரத்தைப் புசித்து எங்கள் சொந்த வஸ்
திரத்தை உடுப்போம், எங்கள் நிந்தை நீங்
கும்படிக்கு உன்பேர் மாத்திரம் எங்கள்
மேல் விளங்கட்டும் என்பார்கள்.
2 யெகோவா முளைப்பித்தது இஸ்ரவேலில்
தப்பிமீந்தவர்களுக்கு அந்நாளிலே அழகும்
மகிமையுமாகும்; பூமியின் கனி அவர்களு
3 க்குச் சிறப்பும் அலங்காரமுமாகும். அப்
பொழுது ஆண்டவர் சீயோன் குமாரத்தி
களின் அசுத்தத்தைக் கழுவி நியாயத்தீர்ப்
பின் ஆவியினாலும் அக்கினிச்சுத்திகரிப்பின்
ஆவியினாலும் எருசலேமின் இரத்தப்பழி
களை அதின் நடுவிலிருந்து அகற்றிவிடும்
4 போது | சீயோனிலே விடப்பட்டு எருசலே
மில் மீதியானவனுக்கு ஜீவனுக்கென்று எருச
லேமிலே பேரெழுதப்பட்டவனெவனும்
5 பரிசுத்தனென்று சொல்லப்படுவான். யெ
கோவா சீயோன் மலையிலுள்ள சகல இடங்
களின்மேலும் அதின் சபைகளின்மேலும்
பகலிலே மேகத்தையும் புகையையும்
இரவிலே ஜ்வாலிக்கும் அக்கினிப் பிரகா
சத்தையும் உண்டாக்குவார்; மகிமையான
6 யாவற்றின்மேலும் மறைவு இருக்கும். பக
லின் வெயிலுக்கு நிழல்தரவும் பெருங்காற்
றுக்கும் மழைக்கும் ஒதுங்கியிருக்கும் மறை
விடம் தரவும் ஒரு கூடாரம் இருக்கும்.

**5** இப்பொழுது நான் என் பிரிய நண்ப
ரைப்பற்றி ஒரு பாட்டுப் பாடுவேன்;
அது என் நண்பரின் திராட்சத்தோட்டத்
தைப் பற்றிய பாட்டு:
மிகவும் செழிப்பான மலையிலே என்
நண்பருக்கு ஒரு திராட்சத்தோட்டம்
இருந்தது.
2 அவர் அதைக் கொத்திவிட்டு அதிலுள்ள
கற்களைப் பொறுக்கி,
அதிலே நல்ல ஜாதித்திராட்சச் செடி
களை நட்டு,
அதின் நடுவிலே ஒரு கோபுரத்தைக்
கட்டி, அதில் ஆலையையும் அமைத்து,
அது நல்ல திராட்சப்பழங்களைத் தரு
மென்று காத்திருந்தார்;
அதுவோ காட்டுப்பழங்களைத் தந்தது.
3 எருசலேமின் குடிகளே, யூதாவின்
மனுஷரே,
எனக்கும் என் திராட்சத்தோட்டத்துக்
கும் நியாயந் தீருங்கள்.
4 நான் என் திராட்சத்தோட்டத்திற்கெனச்
செய்யாத வேலையொன்றுமில்லையே,
இனிச் செய்வதென்ன?
அது நல்ல திராட்சப்பழங்களைத் தரு
மென்று காத்திருந்தேனே,
அது காட்டுப்பழங்களைத் தந்த
தென்ன?
5 என் திராட்சத்தோட்டத்துக்குச் செய்
யப்போகிறதை இப்போது உங்களுக்கு
அறிவிப்பேன்;
அதின் வேலியை எடுத்துப்போடுவேன்,
அது மேய்ச்சல்காடாகும்;
அதின் அடைப்பைத் தகர்ப்பேன், அது
மிதியுண்டுபோம்.
6 அதைப் பாழாக்கிவிடுவேன்;
அது கறுக்கப்படுவதில்லை, அது கொத்தப்
படுவதில்லை;
முட்செடியும் நெருஞ்சியும் முளைக்கும்;
அதின்மேல் மழை பெய்யாதபடி மேகங்
களுக்கும் கட்டளையிடுவேன் என்கிறார்.
7 சேனைகளின் யெகோவாவுடைய திராட்
சத்தோட்டம் இஸ்ரவேலின் வம்சமே;
அவருக்கு இனிய நாற்று யூதாவின் மனு
ஷரே,
நியாயம் வருமென்று காத்திருந்தார்,
வினைந்ததோ அநியாயம்;
நீதி வருமென்று காத்திருந்தார், வந்ததோ
முறைப்பாடே!
8 வீட்டோடே வீட்டைச்சேர்த்து, வய
லோடே வயலைக் கூட்டுகிறவர்களுக்கு
ஐயோ கேடாம்!
மற்றவர்களுக்கு இடமில்லாதபடி நீங்
கள் மாத்திரமே தேசத்தில் வசிக்கவேண்
டுமோ!
9 சேனைகளின் யெகோவா என் செவி கேட்
கச் சொல்லுகிறார்:
மெய்யாகவே அந்தத் திரளானவீடுகள்
பாழாகும்;
பெரியவைகளும் நேர்த்தியானவைகளு
மாகிய வீடுகள் குடியில்லாதிருக்கும்.
10 பத்தேர்நிலத் திராட்சத்தோட்டம் ஒரே
குடம் ரசம் தரும்;
ஒரு ஓமர்விதை ஒரு எப்பாவினையும்.

11 அதிகாலமே எழுந்து மதுவை நாடித்
திராட்சரசம் தங்களுக்குக் களிப்பு வீணாக்
கும்படி
இருட்டியபின்னும் குடித்துக்கொண்டே
யிருக்கிறவர்களுக்கு ஐயோ கேடாம்!
12 சுரமண்டலம், தம்புரு, மேளம், நாக
சுரம், மதுபானம் இவையே அவர்கள்
விருந்து.
யெகோவாவின் செயலையோ அவர்கள்
கவனிப்பதுமில்லை,
அவர் கரத்தின் செய்கையைச் சிந்திப்பது
மில்லை.
13 என் ஜனங்கள் நினையாத நேரத்தில்
சிறைப்பட்டுப் போகிறார்கள்;
அவர்களில் விசேஷித்தவர்கள் பட்டினி
யாய்க் கிடக்கிறார்கள்,
சாதாரண ஜனங்கள் தாகத்தால் தொய்ந்
துபோகிறார்கள்.
14 அதினிமித்தம் பாதாளம் மிகவும் ஆசை
கொண்டு
தன் வாயை அளவின்றி ஆவெனத்
திறந்தது;
அவர்கள் மேன்மக்களும் இரைந்து களித்
தாடும் சாதாரண ஜனங்களும்
அதற்குள் இறங்குவார்கள்.
15 மனிதர் பணிந்து நடக்கிறார்கள், மனு
புத்திரர் தாழ்வடைகிறார்கள்,
மேட்டிமையானவர்களின் கண்கள் தாழ்
கின்றன.
16 சேனைகளின் யெகோவா நியாயத்தீர்ப்பி
னால் உயர்ந்திருப்பார்
பரிசுத்த கடவுள் நீதியினால் பரிசுத்தராய்
விளங்குவார்.
17 அப்பொழுது ஆட்டுக்குட்டிகள் தங்கள்
மேய்ச்சல் காட்டிலே போல மேயும்;
கொழுத்தவர்களுடையதாயிருந்த பா
ழாய்ப்போன நிலங்களிலே அந்நியரின்
மந்தைகள் புல் தேடும்.
18 மாயைக் கயிறுகளால் அக்கிரமப் பழி
யையும்
வண்டில் வடங்களால் பாவதண்டனை
யையும்
தங்கள்மேல் இழுத்துக்கொள்ளுகிறவர்
களுக்கு ஐயோ கேடாம்!
19 நாம் பார்க்கும்படி அவர் விரைந்து நாம்
செய்யவேண்டியதைச் சீக்கிரம் செய்
யட்டும்,
நாம் அறியும்படி இஸ்ரவேலின் பரிசுத்த
ருடைய ஆலோசனை கிட்டிவந்து சேரட்
டும் என்று சொல்லுகிறார்களே.
20 தீமையை நன்மையென்றும் நன்மை
யைத் தீமையென்றும் சொல்லி
இருளை வெளிச்சமாக்கி, வெளிச்சத்தை
இருளாக்கிக் கசப்பைத் தித்திப்பும்,
தித்திப்பைக் கசப்புமாக்குகிறவர்களுக்கு
ஐயோ கேடாம்!
21 தங்கள் பார்வையில் ஞானிகளும்
தங்கள் நினைவில் உணர்வுள்ளவர்களுமா
யிருப்போருக்கு ஐயோ கேடாம்!
22 திராட்சரசம் குடிப்பதில் பராக்கிரம
சாலிகளும்
மதுவைக் கலப்பதில் சமர்த்தருமாயிருக்
கிறவர்களுக்கு ஐயோ கேடாம்!
23 இவர்கள் பரிதானம் வாங்கிக் குற்றவா
ளியை நீதிமானாகத் தீர்க்கிறார்கள்,
நீதிமானின் நீதியை அவனிடமிருந்து
அகற்றுகிறார்கள்.
24 ஆதலால் அக்கினி ஜுவாலை வைக்கோ
லைப் பட்சிப்பது போலவும்
காய்ந்தபுல் நெருப்புக்கு இரையாகி
எரிந்துபோவது போலவும்
அவர்கள் வேர் கெட்டு அவர்கள் பூ
தூசியைப்போல் பறந்துபோம்;
அவர்கள் சேனைகளின் யெகோவாவு
டைய போதகத்தை அலட்சியஞ்செய்து
இஸ்ரவேலினுள்ள பரிசுத்தருடைய வச
னத்தை அசட்டைபண்ணினார்களே.
25 ஆகையால் யெகோவாவின் கோபம்
தமது ஜனங்களுக்கு விரோதமாய்
மூண்டது;
அவர் தமது கையை அவர்களுக்கு
விரோதமாய் நீட்டி அவர்களை அடித்
தார்;
பர்வதங்கள் அதிர்ந்தன, அவர்கள் பிணங்
கள் கடிவீதிகளில் குப்பைபோலாயின.
இவையெலாம் நடந்தும் அவருடைய
கோபம் ஆறவில்லை,
இன்னும் அவருடைய கை நீட்டின
படியே இருக்கிறது.
26 அவர் தூர ஜாதியாருக்கு ஒரு கொடியை
ஏற்றி,
அவர்களைப் பூமியின் கடையாந்தரங்
களிலிருந்து ஓசை காட்டி அழைக்
கவே
அவர்கள் விரைந்து வேகமாய் வருவார்
கள்.
27 அவர்களில் விடாய்த்தவனும் இடறுகிற
வனும் இல்லை;
தூங்குகிறவனும் உறங்குகிறவனும்
இல்லை;
அவர்களில் எவனுடைய இடுப்பின் கச்
சையும் அவிழ்வதில்லை.
பாதரட்சைகளின் வார் அறுந்துபோவ
தும் இல்லை.

28 அவர்கள் அம்புகள் கூர்மையானவை,
அவர்கள் வில்லுகளெல்லாம் நாணேற்றினவைகள்,
அவர்கள் குதிரைகளின் குளம்புகள் கற்போல கடினமென்று எண்ணப்பட்டன,
அவர்கள் சக்கரங்கள் சுழல்காற்றை ஒத்தவைகள்.
29 அவர்கள் கெர்ச்சிப்பு பெண் சிங்கத்தின் கெர்ச்சிப்பு போன்றது,
பால சிங்கங்களைப்போலக் கெர்ச்சிப்பார்கள்,
உறுமிக்கொண்டு இரையைப் பிடிப்பார்கள்,
தப்புவிக்கிறவன் இல்லாமல் அதை எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள்.
30 அந்நாளில் சமுத்திரம் இரைவதுபோல் அவர்களுக்கு விரோதமாய் இரைவார்கள்;
அப்பொழுது தேசத்தைப் பார்த்தால், இதோ, வியாகுல இருளாம்;
மேகங்களினால் வெளிச்சம் இருண்டு போம்.

6 உசியா ராஜா மரணமடைந்த வருஷத்தில் ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கக்கண்டேன்; அவருடைய வஸ்திரத்தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது. 2 சேராபுகள் அவர் பக்கத்தில் நின்றன; அவைகளில் ஒவ்வொன்றுக்கும் அவ்வாறு செட்டைகளிருந்தன, ஒவ்வொன்றும் இரண்டு செட்டைகளால் தன் தன் முகத்தைமூடி, இரண்டு செட்டைகளால் தன் தன் கால்களை மூடி, 3 இரண்டு செட்டைகளால் பறந்து, | ஒன்றையொன்று பார்த்து:

சேனைகளின் யெகோவா பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்;

பூமியனைத்திலும் அவருடைய மகிமை நிறைந்திருக்கிறது என்று சத்தமிட்டுக் 4 கூறின. கூறின சத்தத்தால் வாசல் அடிநிலைகள் அசைந்தன; ஆலயமெங்கும் புகை நிறைந்தது.

5 அப்பொழுது நான்: ஐயோ! அதமானேன்; நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வசிக்கிறவன், சேனைகளின் யெகோவாவாகிய ராஜாவை என் கண்கள் கண்டனவே என்றேன். 6 எனவே சேராபுகளில் ஒன்று தன் கையிலிருந்த குறட்டால் பலிபீடத்திலிருந்து ஒரு நெருப்புத்தழலை 7 எடுத்து என்னிடம் பறந்து வந்து | அதினால் என் வாயைத்தொட்டு: இதோ, இது உன் உதடுகளைத் தொட்டதினால் உன் அக்கிரமம் நீங்கிற்று, உன் பாவத்துக்குப் பிராயச்சித்தமாயிற்று என்றது.

8 யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவரின் குரலையும் அப்பொழுது கேட்டேன்; கேட்கவே நான்: இதோ, அடியேன், என்னை அனுப்பும் என்றேன். 9 அப்பொழுது அவர்: நீ போய், இந்த ஜனத்தோடு பேசி:

நீங்கள் காதாரக்கேட்டும் உணராதிருங்கள்;
கண்ணாரக்கண்டும் அறியாதிருங்கள் என்று சொல்.
10 நீ இந்த ஜனத்தின் இருதயத்தைக் கொழுத்ததாக்கி,
அதின் காதுகளை மந்தப்படுத்தி, அதின் கண்களை மூடிப்போடு.
அவர்கள் தங்கள் கண்களினால் காணவும்
தங்கள் காதுகளினால் கேளாமலும்
தங்கள் இருதயத்தினால் உணர்ந்து திரும்பிக் குணமடையாமலுமிருக்கும்படி இப்படிச் செய்யவேண்டும்

என்றார். 11 அப்பொழுது நான்: ஆண்டவரே எதுவரைக்கும் என்று கேட்க அவர்:

பட்டணங்கள் குடியற்றுப் பாழாகி,
வீடுகள் மனுஷ சஞ்சார மில்லாதாகி,
பூமி பாழ்பட்டு வனாந்தரமாகும் வரைக்குமே.
12 யெகோவா மனுஷரைத் தூரமாக விலக்குவார்,
தேசத்தின் நடுவில் பெரும் பாழாம்.
13 அதில் இன்னும் பத்தில் ஒரு பங்கிருந்தால்
அதுவும் திரும்ப நிர்மூலமாகும்;
கர்வாலிமரமும் அரசமரமும் போலிருக்கும்;
அவை வெட்டப்படினும் அடிமரம் இருக்கும்;

அந்த அடிமரமே பரிசுத்த வித்தாகும் என்றார்.

7 உசியாவினுடைய மகனாகிய யோதாமின் குமாரன் ஆகாஸ் என்னும் யூதா தேசத்து ராஜாவின் நாட்களிலே, ரேத்சின் என்னும் சீரியாவின் ராஜாவும், ரெமலியாவின் குமாரனாகிய பெக்காகு என்னும் இஸ்ரவேலின் ராஜாவும் எருசலேமின்மேல் யுத்தம் பண்ண வந்தார்கள், அவர்களால் அதைப் பிடிக்க முடியாமற் போயிற்று. 2 சீரியர்

வந்து எப்பிராயீமில் பாஷயமிறங்கினதற்க
ளென்று தாவீதின் குடும்பத்துக்கு அறிவிக்
கப்பட்டபோது ராஜாவின் இருதயமும்
அவன் ஜனத்தின் இருதயமும் காட்டுமரங்
கள் காற்றினால் அசைவதுபோல் அசைந்த
நடுங்கின.

3 அப்பொழுது யெகோவா ஏசாயாவோடு
பேசி: நீயும் உன் மகன் ஷெயார் யாஷூ
பும் வண்ணார் வயலின் வழியிலே மேலே
யுள்ள குளத்து வாய்க்காலின் முனையிலே
4 ஆகாசுக்கு எதிர்கொண்டுபோய் | நீ அவ
னிடம் இதைச்சொல்: நீ கலங்காமல்
அமர்ந்திருக்கப்பார்; புகைகிற இந்த
இரண்டு கொள்ளிக்கட்டைகளைக் கண்டு
ரீயரோடே வந்த ரேத்சீனும் ரெமலியா
வின் மகனும் கொண்ட உக்கிரகோபத்தி
னிமித்தம் நீ பயப்படவேண்டாம், உன்
5 இருதயம் துவளவேண்டாம். சீரியர் எப்
பிராயீமோடும் ரெமலியாவின் மகனோடும்
உனக்கு விரோதமாகத் துராலோசனை
6 பண்ணி | நாம் யூதாவுக்கு விரோதமாய்ப்
போய் அதற்குத் திகில் விளைத்து நமக்கென
அதைப் பிடித்துக்கொண்டு அதிலே தாபெய
லின் குமாரனை ராஜாவாக ஏற்படுத்தவோம்
7 என்று சொல்லுகிறார்கள். யெகோவாவாகிய
ஆண்டவரோ, அந்த ஆலோசனை நிலை நிற்ப
திலை, அதின்படி சம்பவிப்பதுமில்லை;
8 சீரியாவின் தலை தமஸ்கு, தமஸ்குவின் தலை
ரேத்சீன்; இன்னும் அறுபத்தைந்து வருஷங்
களிலே எப்பிராயீம் நொறுங்குண்டுபோம்;
9 அது ஒரு ஜனமாயிராது. எப்பிராயீமின்
தலை சமாரியா, சமாரியாவின் தலை ரெமலி
யாவின் மகன்;

நீங்கள் நம்பிக்கை யற்றுப்போனால்
நிலை நிற்கமாட்டீர்கள்

என்று சொல்லுகிறார் என்று சொல் என்
றார்.

10 பின்னும் யெகோவா ஆகாசோடு பேசி:
11 நீ உன் கடவுளாகிய யெகோவாவினிடம்
ஒரு அடையாளத்தைக் கேட்டுக்கொள்;
ஆழத்திலிருந்தாகிலும் உன்னதத்திலிருந்தாகி
12 லும் அது வரவேண்டுமெனக் கேட்டுக்
கொள் என்று சொன்னார். ஆகாசோ: நான்
கேட்கமாட்டேன், நான் யெகோவாவைப்
13 பரீட்சை செய்யமாட்டேன் என்றான். அப்
பொழுது ஏசாயா: தாவீதின் வம்சத்தாரே,
கேளுங்கள்; நீங்கள் மனுஷரை மனஞ்
சலிக்கச் செய்தது போதாதென்று என் கட
வுளையும் மனஞ்சலிக்கச் செய்யப்போகிறீர்
14 களோ? ஆகவே ஆண்டவர் தாமே உங்க
ளுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்
பார்; இதோ, கன்னிகையானவள் கர்ப்ப
வதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவ 15
ருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்.
தீமையை வெறுத்து நன்மையைத் தெரிந்து
கொள்ள அறியும் வயதுமட்டும் அவர் தயி
ரையும் தேனையும் சாப்பிடுவார். அந்தப் 16
பிள்ளை தீமையை வெறுக்கவும் நன்மை
யைத் தெரிந்துகொள்ளவும் அறியுமுன்னே.
நீ திகில்கொள்ளுகிற இரண்டு ராஜாக்களின்
தேசம் பாழாய்விடப்படும். எப்பிராயீம் 17
யூதாவை விட்டுப் பிரிந்த நாள்முதல் வராத
நாட்களை யெகோவா உன்மேலும் உன்
ஜனத்தின்மேலும் உன் பிதாவுடைய வம்ச
தின் மேலும் வரப்பண்ணுவார், அசீரியா
ராஜாவையே வரப்பண்ணுவார்.

அந்நாட்களிலே யெகோவா எகிப்து நதி 18
களின் கடையாந்தரத்திலுள்ள ஈயையும்
அசீரியா தேசத்திலிருக்கும் தேனீயையும்
ஒசை காட்டி அழைப்பார். அவைகள் 19
வந்து ஏகமாய்ச் செங்குத்துமலைப் பள்ளத்
தாக்குகளிலும் கன்மலை வெடிப்புகளிலும்
எல்லா முட்காடுகளிலும் மேய்ச்சலுள்ள
சகல இடங்களிலும் இறங்கும். அக்கா 20
லத்திலே ஆண்டவர் கூலிக்கு வாங்கின
சவரகன் கத்தியினால், அதாவது நதியின்
அக்கரையிலுள்ள அசீரியா ராஜாவினால்,
தலைமயிரையும் கால்மயிரையும் சிரைப்பித்
துத் தாடியையும் வாங்கிப் போடுவிப்பார்.

அக்காலத்தில் ஒருவன் ஒரு இளம் பசு 21
வையும் இரண்டு ஆடுகளையும் வளர்ப்பான்;
அவைகள் பூரணமாய்ப் பால் கறக்கிறபடி 22
யினால் தயிரைச் சாப்பிடுவான்; தேசத்திலே
மீதியாயிருப்பவனெவனும் தயிரையும் தேனை
யுமே சாப்பிடுவான். அக்காலிலே ஆயிரம் 23
வெள்ளிக்காசு பெறும் ஆயிரம் திராட்சச்
செடியிருந்த நிலமெல்லாம் முட்செடியும்
நெருஞ்சிலுமாகும். தேசமெங்கும் முட் 24
செடியும் நெருஞ்சிலுமாயிருப்பதினால்
அம்பு, வில் பிடித்தே அங்கே போவார்
கள்; முன்னே மண்வெட்டியால் கொத்தின 25
மலைகளிலே முட்செடிகளுக்கும் நெருஞ்சி
லுக்கும் பயந்து இப்போது ஒருவனும்
போகமாட்டான்; அவைகள் மாடுகளை
ஓட்டி விடுவதற்கும் ஆடுகள் மிதிப்பதற்கு
மான இடமாகும் என்றார்.

8 பின்னும் யெகோவா என்னிடம்: நீ ஒரு
பெரிய பலகையை எடுத்து மானிட எழுத்
தினால் அதிலே மகேர்-ஷாலால்-ஹாஷ்-
பாஸ் என்று விளங்க எழுது; ஆசாரியன் 2
உரியாவையும் யெபெரெகியாவின் குமாரன்
சகரியாவையும் எனக்கு உண்மையுள்ள
சாட்சிகளாக நான் ஏற்படுத்துகிறேன் என்

3 ரூர். பின்பு நான் என் மனைவியைச் சேர்ந்தபோது அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்றாள்; அப்பொழுது யெகோவா என்னிடம் மகேர்-ஷாலால்-ஹாஷ்-பாஸ் என்னும் பேரை அவனுக்கு இடு.
4 இந்தப் பாலகன் அப்பா, அம்மா என்று கூப்பிட அறியுமுன்னே தமஸ்குவின் ஆஸ்தியும் சமாரியாவின் கொள்ளையும் அசீரியா ராஜாவினிடம் கொண்டுபோகப்படும் என்றார்.
5 பின்னும் யெகோவா என்னிடம்:
6 மெதுவாய் ஓடுகிற சீலோவாவின் தண்ணீர்களை
இந்த ஜனம் அசட்டை பண்ணி
ரேத்சீனையும் ரெமலியாவின் குமாரனையும்
சார்ந்து சந்தோஷிக்கிறபடியினால்,
7 இதோ, ஆண்டவர் நிரளான பலத்த
ஆற்றுநீர் போன்ற
அசீரியா ராஜாவையும் அவனுடைய
எல்லா ஆடம்பரத்தையும்
அவர்கள்மேல் புரளப்பண்ணுவார்;
அது ஆற்றுப்பரப்பெல்லாம் பரவிச்
சகல கரைகள் மேலும் புரண்டு
யூதாவுக்குள் பாய்ந்து பிரவாகித்து ஏறிக்
கழுத்துமட்டும் வரும்.
8 அவன் செட்டைகள் விரிந்து
இம்மானுவேலே, உமது தேசமுழுவதையும் மூடும்.
9 ஜனங்களே, நீங்கள் கொதித்தெழுங்கள், முறிந்துவிழுவீர்கள்;
தூரதேசத்தாரே, எல்லாரும் செவிகொடுங்கள்;
இடைகட்டிக்கொள்ளுங்கள், முறிந்து விழுவீர்கள்;
இடைகட்டிக்கொள்ளுங்கள், முறிந்து விழுவீர்களே.
10 ஆலோசனை செய்யுங்கள், அது வியர்த்தமாகும்;
பேசுவதெல்லாம் பேசிக்கொள்ளுங்கள், அது நிற்காது;
கடவுள் எங்களோடு இருக்கிறாரே
என்றார்.
11 யெகோவாவின் கரம் பலத்தோடு என்மேல் வரவே அவர் என்னோடு பேசி, நான்
12 இந்த ஜனத்தின் வழியிலே நடவாதபடி
என்னை எச்சரித்து: இந்த ஜனங்கள் சதிமோசம் எனச்சொல்வதையெல்லாம் நீங்கள் சதிமோசம் எனச் சொல்லவேண்டாம்,
அவர்கள் பயப்படுகிறபடியெல்லாம் நீங்கள் பயப்படவேண்டாம், அஞ்சவேண்டாம்.
13 சேனைகளின் யெகோவாவையே பரிசுத்தமாய்க் கொண்டாடுங்கள், அவரே உங்கள்
பயம், அவரே உங்கள் அச்சம்; அவர் உங்
14 களுக்குப் பரிசுத்த வஸ்துப்போலிருப்பார்,
இஸ்ரவேலின் இருவீட்டாருக்கோ தடுக்குக்
கல்லும் இடறுதற்கான பாறையுமாவார்;
எருசலேமின் குடிகளுக்குச் சுருக்கும்
கண்ணியுமாவார். அவர்களில் அநேகர் 15
இடறி விழுந்து நொறுங்கிச் சிக்குண்டு பிடிபடுவார்கள் என்றார்.
சாட்சியத்தைக் கட்டி வைத்து என் சீஷ 16
ருக்குள்ளே போதகத்தை முத்திரையிடு.
நானோ யாக்கோபின் குடும்பத்துக்குத் தமது 17
முகத்தை மறைக்கிற யெகோவாவுக்கெனக்
காத்திருந்து நம்பிக்கையோடு அவருக்கு
எதிர்பார்த்திருப்பேன். இதோ, நானும் 18
பிள்ளைகளும், சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் யெகோவாவாலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்.
அவர்கள் உங்களோடு பேசி: அஞ்சனம் 19
பார்க்கிறவர்களிடமும் முணுமுணென்று
ஓதுகிற குறிகாரரிடமும் விசாரியுங்கள்
என்று சொல்வார்களானால், ஜனம் தன்
கடவுளினிடம் விசாரிக்கவேண்டியதல்லவோ? உயிருள்ளவர்களுக்காகச் செத்தவர்களிடம் விசாரிக்கலாமோ என்று சொல்லுங்கள். விடியற்கால வெளிச்சமில்லாத 20
வர்கள் போதகமும் சாட்சியுமே காரியமாம் எனச்சொல்லவேண்டிய நாள் வரவே
வரும். இடுக்கண் அடைந்தவர்களாய்ப் 21
பட்டினியோடு தேசத்தைக் கடந்துபோவார்கள், அவர்கள் பட்டினியாயிருக்கும்
போது மூர்க்கவெறிகொண்டு தங்கள் ராஜாவையும் தங்கள் கடவுளையும் தூஷிப்பார்கள்; அவர்கள் அண்ணாந்து பார்த்தும்
மேலே பூமியைப் பார்த்தும், இதோ, இக்கட் 22
டும் அந்தகாரமும் துன்பத்தால் வரும் இருளுமே இருக்கும்; காரிருளிலே தள்ளுண்டு அலைவார்கள்.

இப்பொழுது இக்கட்டிருக்குமிடத்தில் இனி இருளிருப்படையில்லை; 9
முற்காலத்திலே அவர் செபுலோன் நாட்டையும் நப்தலி நாட்டையும் ஈனப்படுத்தினார்.
இனிவருங்காலத்திலோ
கடற்கரைப் பாதையிலும் யோர்தான்
நதிக்கப்புறத்திலுமுள்ள புறஜாதியார் நாட்டை
அவர் மகிமைப்படுத்துவார்.
இருளில்நடக்கிற ஜனங்கள் 2
பெரு வெளிச்சங்காண்பார்கள்;

மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்கள்மேல்
வெளிச்சம் உதிக்கும்.
3 அந்த ஜாதியைத் திரளாக்கி
அதற்கு மகிழ்ச்சியைப் பெருகப்பண்ணுவீர்;
அறுப்பில் மகிழ்வதுபோலவும்
கொள்ளையைப் பங்கிடுகையில் களிகூருவதுபோலவும்
உமக்கு முன்பாக மகிழுவார்கள்.
4 மிதியானியரின் நாளில் நடந்ததுபோல
அவர்கள்மேல் பாரமாயிருக்கும் நுகத்தடியையும்
அவர்கள் முதுகில் அடிக்கும் பிரம்பையும்
அவர்கள் ஆளோட்டியின் கோலையும் முறித்துப்போடுவீர்.
5 யுத்த அமளியில் வீரர் தரித்த பாதரக்ஷைகளும்
இரத்தம் புரண்ட உடுப்பும்
சுட்டெரிக்கப்படும், அக்கினிக்கு இரையாம்.
6 நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்;
நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்;
ராஜாதிகாரம் அவர் தோள்மேலிருக்கும்;
அவர் நாமம் அதிசயமான ஆலோசனைக் கர்த்தா,
வல்லமையுள்ள கடவுள், நித்திய பிதா,
சமாதானபிரபு எனப்படும்.
7 தாவீதின் சிங்காசனத்தையும் அவன் ராஜ்யத்தையும் அவர் பலப்படுத்தி
அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும்
நிலைப்படுத்துவதற்கென
அவருடைய ராஜாதிகாரப் பெருக்குக்கும்
சமாதானத்துக்கும் முடிவில்லை,
சேனைகளின் யெகோவாவுடைய வைராக்கியம் இதைச் செய்யும்.
8 ஆண்டவர் யாக்கோபுக்கு மாறாய் ஒரு
வார்த்தையை அனுப்பினார்,
அது இஸ்ரவேலின்மேல் வந்தது.
9 எப்பிராயீமியரும் சமாரியாவின் குடிகளுமாகிய
சகல ஜனங்களுக்கும் இது தெரியவரும்.
அவர்கள் அகந்தையும் மனப்பெருமையுமாய்ப்பேசி
10 செங்கல்கட்டு இடிந்துபோயிற்று,
பணிப்படுத்தின கல்லாலே திரும்பக்கட்டுவோம்;
காட்டத்திமரங்கள் வெட்டிப்போடப்பட்டன,
அவற்றுக்குப் பதிலாகக் கேதுருமரங்களை வைப்போம்
என்று சொல்லுகிறார்கள்.
11 யெகோவாவோ ரேத்சீனுடைய சத்துருக்களை அவர்களுக்கு விரோதமாய் எழும்பச்செய்து
அவர்களுடைய விரோதிகளையும் தூண்டிவிடுவார்.
12 கீழ்திசையிலிருந்து சீரியரும்
மேல்திசையிலிருந்து பெலிஸ்தியரும் வந்து
இஸ்ரவேலை வாய் கொண்டமட்டும் பட்சிப்பார்கள்;
இவையெல்லாம் நடந்தும் அவர் கோபம் ஆறவில்லை,
அவர் கை இன்னும் நீட்டினபடியே இருக்கிறது.
13 ஜனமானது தன்னை அடிக்கிறவரிடம் திரும்புகிறதில்லை,
சேனைகளின் யெகோவாவைத் தேடுகிறதில்லை;
14 ஆகையால் யெகோவா இஸ்ரவேலிலே
தலையையும் வாலையும் கிளையையும் நாணலையும்
ஒரே நாளிலே வெட்டிப்போடுவார்.
15 முதியவனும் மதிப்புள்ளவனுமே தலை,
பொய்யைப் போதிக்கிற தீர்க்கதரிசியே வால்.
16 இந்த ஜனத்தை நடத்துவோர் தப்புவழி காட்டுகிறவர்கள்,
அவர்களால் நடத்தப்படுவோர் நாசத்துக்குள்ளாவார்.
17 ஆகவே அவர்கள் வாலிபரால் ஆண்ட வருக்குச் சந்தோஷமில்லை,
அவர்களுடைய திக்கற்ற பிள்ளைகள் மேலும் விதவைகள் மேலும் அவருக்கு இரக்கமில்லை;
அவர்களில் ஒவ்வொருவனும் தெய்வ மிகழ்வோன், தீமை செய்வோன்;
ஒவ்வொரு வாயும் மதிகேடு உரைக்கும்,
இவையெல்லாம் நடந்தும் அவர் கோபம் ஆறவில்லை,
அவர் கை இன்னும் நீட்டினபடியே இருக்கிறது.
18 தெய்வபயமிலா குணம் அக்கினிபோல எரிகிறது,
அது முட்செடியையும் நெருஞ்சிலையும் பட்சிக்கும்,
அது நெருங்கிய காட்டைக் கொளுத்தும்,
புகை திரண்டு எழும்பும்.
19 சேனைகளின் யெகோவாவுடைய கோபத்தினால்

தேசம் எரிந்துபோம், ஜனம் அக்கினிக்கு இரையாகும்;
ஒருவனும் தன் சகோதரனுக்கு இரக்கங் காட்டான்.
20 வலதுபுறத்திலே பிடுங்கிப் பசித்தும் பசி தீர்வதில்லை,
இடதுபுறத்திலே தின்றும் திருப்தியாவ தில்லை;
அவனவன் தன் தன் புயத்தின் மாம்சத் தைத் தின்பான்.
21 மனாசே எப்பிராயீமையும் எப்பிராயீம் மனாசேயையும் பட்சிப்பார்கள்,
இவர்கள் ஏகமாய் யூதாவின்மேல் விழு வார்கள்;
இவையெல்லாம் நடந்தும் அவர் கோபம் ஆறவில்லை,
அவர் கை இன்னும் நீட்டினபடியே இருக்கிறது.

10 அநியாய நியமங்களை நியமிப்போர்க்கு ஐயோ கேடாம்!
அவர்கள் எழுதுவதெல்லாம் கொடு மையே.
2 ஏழைகளுக்கு நீதி கிடைக்காமற் செய்ய வும்
என் ஜனத்தில் சிறுமையானவர்களின் நியாயத்தை அகற்றவும்
விதவைகளைச் சூறையாடவும் திக்கற்ற பிள்ளைகளைக் கொள்ளையிடவும்
அப்படிச் செய்கிறார்கள்.
3 தெய்வ விசாரணைவரும் நாளிலும் தூரத் திலிருந்து அழிவுவரும் நாளிலும்
நீங்கள் என்ன செய்வீர்கள்?
உதவிபெறும்படி யாரிடம் ஓடுவீர்கள்?
உங்கள் செல்வத்தை எங்கே வைத்து விடுவீர்கள்?
4 கட்டுண்டவர்களோடு கால் முடங்கி யிருக்கவேண்டும்,
அன்றேல் கொல்லப்பட்டவருள் விழ வேண்டும்,
இவையெல்லாம் நடந்தும் அவர் கோபம் ஆறவில்லை,
அவர் கை இன்னும் நீட்டினபடியே இருக்கிறது.
5 என் கோபத்தின் கோலாகிய அசீரியா வுக்கு ஐயோ கேடாம்!
அவன் கையிலிருக்கும் தண்டாயுதம் என் கோபமே.
6 தெய்வபக்தியுள்ள ஜாதிக்கு விரோதமாய் நான் அவனை அனுப்புவேன்;
எனக்குக் கோபமூட்டின ஜனத்தைக் கொள்ளையிடவும் சூறையாடவும்
அதை வீதிகளின் சேற்றைப்போல் மிதித் துப்போடவும்
அவனுக்குக் கட்டளை கொடுப்பேன்.
7 அவன் கொள்ளும் கருத்தோ இதுவல்ல,
அவன் இதயத்தின் எண்ணம் இப்படி யல்ல;
சங்காரஞ்செய்து பல ஜாதிகளை அழிக்க வேண்டுமென்பதே
அவனுடைய மனதில் உள்ள எண்ணம்.
8 அவன் பெருமையாய்ப் பேசி:
என் அதிபதிகள் அனைவரும் ராஜாக்க ளல்லவோ?
9 கல்னேபட்டணம் கர்கேமீஷைப்போ லானதில்லையோ?
ஆமாத்து அர்பாத்தைப் போலானதில்லை யோ?
சமாரியா தமஸ்குவைப்போலானதில்லை யோ?
10 எருசலேமையும் சமாரியாவையும் பார்க் கிலும் சிறந்த சிலைகளுள்ள
விக்கிரக ராஜ்யங்களை என் கை எட்டிப் பிடித்ததுண்டே;
11 நான் சமாரியாவுக்கும் அதின் விக்கிர கங்களுக்கும் செய்ததுபோல்
எருசலேமுக்கும் அதின் பொம்மைக ளுக்கும் செய்யாமலிருப்பேனோ
என்று சொல்லுகிறான்.
12 ஆகவே ஆண்டவர் சீயோன் மலையிலும் எருசலேமிலும் தாம் செய்யவேண்டியவற் றையெல்லாம் முடித்தபின் அசீரியா ராஜா வினுடைய இருதயப்பெருமையால் விளை தலையும் அவன் மேட்டிமைக் கண்களின் அகங்காரத்தையும் நான் விசாரிப்பேன் என்கிறார். அவன் அகந்தையாய்ப் பேசி:
13 என் கை பலத்தினால் நான் இதைச் செய்தேன்,
என் ஞானத்தினாலேயே; நான் விவேகி;
நான் ஜாதிகளின் எல்லைகளை மாற்றி னேன்,
அவர்கள் செல்வங்களைக் கொள்ளையிட் டேன்,
சிம்மாசனமிருந்தவர்களை வல்லமை யோடு தாழ்த்தள்ளினேன்.
14 ஒரு குருவிக்கூட்டை எடுப்பதுபோல் என் கை ஜாதிகளின் ஆஸ்தியை எடுத் தது;
விட்டுவிடப்பட்ட முட்டைகளை வாரிக் கொள்வதுபோல்
பூமியையெல்லாம் நான் வாரிக்கொண் டேன்;
ஒருவரும் செட்டையை அசைத்தது மில்லை,

வாயைத் திறந்ததுமில்லே, கீச்சென்று
சத்தமிட்டதுமில்லே
என்று சொல்லுகிறானே.
15 வெட்டுகிறவனிடம் கோடரி மேன்மை
பாராட்டுவதுண்டோ?
தன்னைக் கையாடுகிறவனிடம் வாள்
பெருமை பாராட்டுவதுண்டோ?
தன்னைப் பிடித்தவனைத் தடி ஆட்டிவைப்
பதுபோலவும்
கோலானது மரத்திலும் சிரேஷ்டமான
வனைத் தூக்கி எடுப்பதுபோலவும்
அது ஆகுமே.
16 ஆகையால் சேனைகளின் ஆண்டவரா
கிய யெகோவா
அவனைச் சேர்ந்த கொழுத்தவர்களுக்
குள்ளே ஷீணத்தை அனுப்புவார்;
எரிகிற அக்கினிபோன்ற ஜ்வாலி
யொன்று
அவன் மகிமையின் கீழ் எரியும்.
17 இஸ்ரவேலின் ஒளியானவர் அக்கினி
யும்
அதின் பரிசுத்தர் அக்கினி ஜ்வாலையு
மாகி
அவனுடைய முட்செடிகளையும் நெருஞ்
சில்களையும்
ஒரே நாளிலே தகித்துப் பட்சிப்பார்;
18 அவனுடைய வனத்தின் மகிமையையும்
அவனுடைய தோப்பின் மகிமையையும்
உள்ளும் புறம்புமாய் அழியப்பண்ணு
வார்;
தேய்ந்துபோகிற நோயாளி போலாகும்.
19 காட்டில் அவனுக்கு மீந்த மரம் கொஞ்
சமாம்,
சிறுபிள்ளை அவற்றை
எண்ணி எழுதுமே.
20 இஸ்ரவேலில் மீந்தவர்களும் யாக்
கோபின் வம்சத்தில் தப்பினவர்களும்
தங்களை அடித்தவன்மேல் ஒருபோதும்
சார்ந்திராமல்
இஸ்ரவேலின் பரிசுத்தராகிய யெகோ
வாவையே
அக்காலத்தில் உண்மையாய்ச் சார்ந்து
கொள்வார்கள்.
21 மீந்தவர் திரும்புவார் வல்லமையுள்ள
கடவுளிடம்,
யாக்கோபில் மீந்தவர்களே.
22 இஸ்ரவேலே, உன் ஜனம் சமுத்திர மண
லத்தனையாயிருந்தாலும்
அவர்களில் மீந்தவரே திரும்புவார்.
அழிவு தீர்மானிக்கப்பட்டது,
அது நீதிவெள்ளமாய்ப் பாய்ந்தவரும்.
23 தீர்மானிக்கப்பட்ட அழிவை
சேனைகளின் யெகோவாவாகிய ஆண்ட
வர்
தேசத்துக்குள் எங்கும் வரச்செய்வார்.
24 ஆகையால் சேனைகளின் யெகோவாவா
கிய ஆண்டவர்:
சீயோனில் வாசமாயிருக்கிற என் ஜன
மே,
அசீரியா உன்னைக் கோலால் அடித்து
எகிப்தியரைப்போல் தன் தண்டாயுதத்
தை உன்மேல் ஓங்கினாலும்
நீ பயப்படாதே.
25 இன்னும் கொஞ்சகாலத்துக்குள்ளே என்
உக்கிரம் தீர்ந்துபோம்,
என் கோபம் அவர்கள் சங்காரமாய்
மாறும்
என்று சொல்லுகிறார்.
26 ஒரேப் கன்மலையண்டையிலே மிதியா
னியர் வெட்டுண்டதுபோல்
சேனைகளின் யெகோவா அவன்மேல்
ஒரு சவுக்கை எழும்பி வரப்பண்ணி
எகிப்திலே தமது கோலைக் கடலின்மேல்
ஓங்கினதுபோல்
அதை அவன்மேல் ஓங்குவார்.
27 உன் தோளினின்று அவன் சுமையும்
உன் கழுத்தினின்று அவன் நுகமும்
அந்நாளிலே நீக்கப்படும்;
நீ புஷ்டியாவதினால் நுகம் முறிந்து
போம்.
28 அவன் ஆயாத்துக்கு வந்து மிக்ரோ
னைக் கடந்து
மிக்மாசிலே தன் பண்டம் பாடிகளை
வைத்திருக்கிறான்.
29 கணவாயைத் தாண்டிக் கேபாவிலே
பாளையமிறங்குகிறார்கள்,
ராமா அதிர்கிறது;
சவுலின் ஊராகிய கிபியா ஓடிப்போகி
றது.
30 காலீம் குமாரத்தியே! கூவிச் சத்தமிடு;
லாயிசாவே! கவனித்துப் பார்
ஏழை ஆனதோத்தே!
31 மத்மேனா ஓடிப்போகிறது,
கேபிமின் குடிகள் பொருளைப் பத்திரப்
படுத்தி ஓடுகிறார்கள்.
32 இன்று இன்னும் நோபிலே தங்கியி
ருந்து,
சீயோன் குமாரத்தியின் பர்வதத்துக்கும்
எருசலேமின் மேட்டுக்கும் விரோத
மாய்க்
கையசைத்து மிரட்டுவான்.
33 இதோ சேனைகளின் யெகோவாவா
கிய ஆண்டவர்
கிளைகளைப் பயங்கரத்தோடு வெட்டுவார்;

ஒங்கி வளர்ந்த மரங்கள் வெட்டுண்டு
மேட்டிமையானவைகள் வீழ்த்தப்படும்.
34 காட்டின் அடர்த்தியைக் கோடரியினால்
வெட்டுவார்;
மகத்துவமானவராலே லீபனோன் விழும்.

**11** ஈசா யென்னும் அடிமரத்திலிருந்து ஒரு
துளிர்தோன்றி
அவன் வேர்களிலிருந்து ஒரு மூலை
கிளம்பிக் கனிதரும்.
2 அவர்மேல் யெகோவாவின் ஆவி தங்கும்;
அது ஞானத்தையும் உணர்வையும்
ஆலோசனையையும் வல்லமையையும்
யெகோவாவைப்பற்றிய அறிவையும்
பயத்தையும்
அருளும் ஆவியாம்.
3 யெகோவாவுக்குப் பயப்படுவதே அவ
ருக்கு மிகவும் பிரியமானது;
அவர் தமது கண் கண்டபடி நியாயந்
தீர்க்கமாட்டார்,
தமது காது கேட்டபடி தீர்ப்புச்செய்ய
மாட்டார்.
4 நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரிப்
பார்,
தேசத்தில் சிறுமையுற்றோர்க்கு நேர்மை
யாய்த் தீர்ப்புச்செய்வார்;
பூமியைத் தமது வாக்கின் கோலால்
அடித்துத்
தமது வாயின் சுவாசத்தால் தெய்வபய
மிலாரைச் சங்கரிப்பார்.
5 நீதி அவருக்கு அரைக்கட்டு,
உண்மை அவருக்கு இடைக்கச்சை.
6 அப்பொழுது ஓனாய் ஆட்டுக்குட்டியோ
டே தங்கும்,
சிவிங்கி வெள்ளாட்டுக்குட்டியோடே
படுத்துக்கொள்ளும்;
கன்றுக்குட்டியும் பாலசிங்கமும் கொ
ழுத்த காளையும் ஒருமித்திருக்கும்;
ஒரு சிறு பையன் அவைகளை நடத்து
வான்.
7 பசுவும் கரடியும் கூடிமேயும்,
அவைகளின் குட்டிகள் ஒன்றாய்ப் படுத்
துக்கொள்ளும்;
சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல்
தின்னும்.
8 பால்குடிக்கும் குழந்தை விரியன்பாம்பு
வளையின்மேல் விளையாடும்,
பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்
றிலே தன் கையை வைக்கும்.
9 என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு
செய்வாருமில்லை, சங்காரம் செய்வாரு
மில்லை;
சமுத்திரத்திலே தண்ணீர் நிறைந்திருப்
பதுபோல்
பூமியிலே யெகோவாவை அறிகிற அறிவு
நிறைந்திருக்கும்.
10 தேசத்தாருக்குக் கொடியாக நிற்கும்
ஈசாயின்வேரை
அக்காலத்திலே ஜாதிகள் தேடி விசாரிப்
பார்கள்;
அவருடைய வாசஸ்தலம் மகிமையே.
11 அக்காலத்திலே ஆண்டவர் இரண்
டாம் முறை தமது கரம் நீட்டி
தமது ஜனத்தில் மீந்தவர்களைச் சேர்த்துக்
கொள்வார்;
அவர்கள் அசீரியாவிலும் எகிப்திலும்
பத்ரோசிலும்
எத்தியோப்பியாவிலும் ஏலாமிலும் ஷி
னெயாரிலும்
ஆமாத்திலும் சமுத்திர தீவுகளிலும் தப்பி
மீந்தவர்கள்.
12 அவர் ஜாதிகளுக்கு ஒரு கொடியை
ஏற்றி
இஸ்ரவேலில் துரத்தண்ட ஆண்களைச்
சேர்த்து
யூதாவில் சிதறடிக்கப்பட்ட பெண்க
ளைப்
பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து
கூட்டுவார்.
13 எப்பிராயீமின் மேலுள்ள பொறாமை
நீங்கும்,
யூதாவைத் துன்பப்படுத்தினவர்கள் சங்
கரிக்கப்படுவார்கள்;
எப்பிராயீம் யூதாவின்மேல் பொறாமை
கொள்ளான்,
யூதா எப்பிராயீமைத் துன்பப்படுத்தான்.
14 அவர்கள் மேற்கே பெலிஸ்தியர் தோளின்
மேல் பறந்தடித்து
ஒன்றாய்ச் சேர்ந்து கீழ்த்திசையாரைக்
கொள்ளையிட்டு
ஏதோமின்மேலும் மோவாபின்மேலும்
கைபோடுவார்கள்;
அம்மோன் புத்திரர் அவர்களுக்குக் கீழ
டங்குவார்கள்.
15 எகிப்தின் குடாக்கடலை யெகோவா முற்
றிலும் அழித்துத்
தமது காற்றின் வலிமையொடு நதியின்
மேல் தமது கையையசைத்து
ஏழு ஓடைகளாகப் பிரித்து
ஜனங்கள் கால் நனையாமல் கடந்துபோ
கச் செய்வார்.
16 இஸ்ரவேலர் எகிப்து தேசத்தை விட்டு
வந்த நாளில்
அவர்களுக்கு இருந்ததுபோல

அவருடைய ஜனத்தில் மீந்தவர்களுக்கு,
அசீரியாவிலிருந்து தப்பி மீந்திருப்பவர்
களுக்கே,
ஒரு பெரும் பாதையிருக்கும்.

**12** அக்காலத்திலே நீ இப்படிச் சொல்
வாய்:
யெகோவாவே, நான் உமக்கு நன்றி
செலுத்துகிறேன்;
நீர் என்மேல் கோபமாயிருந்தீர்,
இப்பொழுதோ உம்முடைய கோபம்
நீங்கிற்று,
2 நீர் என்னை ஆற்றித் தேற்றுகிறீர்.
இதோ, கடவுளே என் இரட்சிப்பு;
நான் நம்பிப் பயப்படாதிருப்பேன்;
ஆண்டவராகிய யெகோவாவே என்
பலம், என் ஸ்தோத்திரப்பாட்டு;
அவரே எனக்கு ரட்சிப்பானார் என்பாய்.
3 நீங்கள் ரட்சிப்பின் ஊற்றுகளிலிருந்து
மகிழ்ச்சியோடே தண்ணீர் மொண்டு
கொள்வீர்கள்.
4 அக்காலத்திலே நீங்கள் பாடி:
யெகோவாவுக்கு நன்றி செலுத்துங்கள்;
அவர் திருநாமத்தைத் தொழுதுகொள்
ளுங்கள்;
அவருடைய திருச்செயல்களை ஜனங்
களுக்குள்ளே அறிவியுங்கள்;
அவருடைய திருநாமமே உயர்ந்ததென்று
பிரஸ்தாபம் பண்ணுங்கள்.
5 யெகோவாவைத் துதித்துப்பாடுங்கள்;
அவர் மகத்துவமானவைகளைச் செய்தார்;
இது பூமியெங்கும் அறியப்படுக.
6 சீயோனில் வாசமாயிருக்கிறவளே,
நீ ஆனந்த சத்தமிட்டு ஆர்ப்பரி;
இஸ்ரவேலின் பரிசுத்தர்
உன் நடுவில் பெரியவராயிருக்கிறார் என்
பீர்கள்.

**13** ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா பா
பிலோன்மேல் விழக்கண்ட கடின
வாக்கு:
2 அதிபதிகளின் வாசல்களுக்குள் ஜனங்
கள் வருதற்கென
பாழ்பட்ட மலைமேல் கொடியேற்றுங்
கள்;
உரத்த சத்தமிட்டுக் கூப்பிடுங்கள்;
கையால் சைகை காட்டுங்கள்.
3 பிரதிஷ்டை செய்த வீரருக்கு நான் கட்
டளை கொடுத்தேன்;
என் கோபத்தை நிறைவேற்ற என்
பராக்கிரமசாலிகளையும் அழைத்திருக்கி
றேன்;

அவர்கள் மேன்மையாய் ஆர்ப்பரிக்கிற
என்வீரரே என்கிறார்.
4 கேளுங்கள், மலைகளிலே திரள் சனிய
சத்தத்துக்கொத்த வெகுகூட்டத்தின் இ
ரைச்சல்!
கேளுங்கள், ராஜ்யங்களின் அ ம ளி
இரைச்சல்,
பல ஜாதியார் ஒன்றுசேர்க்கூட்டப்பட்
டார்கள்;
சேனைகளின் யெகோவா யுத்த ராணு
வத்தைச் சரிபார்க்கிறார்.
5 அவர்கள் பூமியின் தூர இடங்களிலிருந்
தும்
வானின் கடையாந்தரங்களிலிருந்தும்
வருகிறார்கள்;
யெகோவா தமது கோபத்தின் ஆயுதங்
களோடு,
உலகமுழுதையும் அழிப்பதற்கென வரு
கிறார்.
6 அலறுங்கள், யெகோவாவின் நாள்
சமீபமாயிற்று,
அது சர்வவல்லவரிடமிருந்து மகாசங்
காரமாய் வரும்.
7 ஆதலால் எல்லாக்கைகளும் தெளிந்து
போம்,
ஒவ்வொரு மனிதனின் இதயமும் கரைந்
துபோம்.
8 அவர்கள் திகிலடைவார்கள்,
வேதனைகளும் வாதைகளும் அவர்களைப்
பிடிக்கும்;
பிள்ளை பெறுகிறவள்போல் வேதனையுறு
வார்கள்;
திகிலடைந்து ஒருவரையொருவர் பார்ப்
பார்கள்;
அவர்கள் முகங்கள் அக்கினி நிறமா
யிருக்கும்.
9 இதோ, யெகோவாவின் நாள் வருகி
றது,
அது கரேமும் மூர்க்கமும் உக்கிரகோப
மூமானது;
அது பூமியைப் பாழாக்கும்,
அதிலுள்ள பாவிகளை அழித்துவிடும்.
10 வானத்தின் நட்சத்திரங்களும் ராசிகளும்
ஒளிகொடாதிருக்கும்;
சூரியன் இருளாய் உதிக்கும்,
சந்திரன் ஒளி கொடாதிருக்கும்.
11 தீமையினிமித்தம் உலகத்தையும்
அக்கிரமத்தினிமித்தம் தெய்வபயமற்ற
ரையும் நான் தண்டிப்பேன்;
அகங்காரிகளின் பெருமையை ஒழியப்
பண்ணுவேன்,
கொடியரின் இடும்பைத் தாழ்த்துவேன்.

12 மானிடனைப் பசும் பொன்னிலும்
நரனை ஒப்பீரின் தங்கத்திலும் அபூருவ
மாக்குவேன்.
13 இதினிமித்தம் சேனைகளின் யெகோவா
வின் உக்கிரத்தினால்
அவருடைய கடுங்கோபத்தின் நாளிலே
வானத்தை அசையப்பண்ணுவேன்;
பூமி தன்னிடம்விட்டு நீங்கும்படி அதி
ரச்செய்வேன்.
14 வேட்டையாடும் கலைமானைப்போலும்
கூட்டிச் சேர்ப்பாரில்லாத ஆடுகளைப்
போலும் இருப்பார்கள்;
அவனவன் தன் தன் ஜனத்தினிடம்
திரும்பி
தன் தன் தேசத்துக்கு ஓடிப்போவான்.
15 அகப்பட்டவனெவனும் குத்துண்டு சா
வான்,
பிடிபட்டவனெவனும் பட்டயத்தால்
விழுவான்.
16 அவர்கள் குழந்தைகள் அவர்கள் கண்
காண மோதியடிக்கப்படும்;
அவர்கள் வீடுகள் கொள்ளையிடப்படும்;
அவர்கள் மனைவிகள் அவமானத்துக்குள்
ளாவார்கள்.
17 இதோ, நான் அவர்களுக்கு விரோதமாய்
மேதியரை எழுப்புவேன்,
அவர்கள் வெள்ளியை மதியார்கள்,
பொன்னின்மேல் பிரியப்படார்கள்;
18 அவர்கள் வில்லுகள் இளைஞரைச் சிதைக்
கும்,
கர்ப்பக்கனிக்கு அவர்கள் இரக்கங்காட்
டுவதில்லை;
அவர்கள் கண் பிள்ளைகளைத் தப்பவிடு
வதுமில்லை.
19 ராஜ்யங்களின் கிரீடமும்
கல்தேயர் பெருமைபாராட்டிய அலங்
காரமுமான பாபிலோன் கவிழும்;
கடவுள் சோதோமையும் கொமோராவை
யும் கவிழ்த்த காலத்தில்
நிகழ்ந்ததுபோல நிகழும்.
20 இனி ஒருபோதும் அதில் ஒருவரும் குடி
யேறுவதுமில்லை,
தலைமுறைதோறும் அதில் ஒருவரும்
வசிப்பதுமில்லை;
அங்கே அரபியன் கூடாரம்போடுவது
மில்லை;
மேய்ப்போர் அங்கே மந்தையை மடக்கு
வதுமில்லை.
21 காட்டு மிருகங்கள் அங்கே படுத்துக்
கொள்ளும்;
கோட்டான்கள் அவர்கள் வீடுகளை நிரப்
பும்;
நெருப்புக்கோழிகள் அங்கே குடிகொள்
ளும்;
காட்டாடு அங்கே துள்ளும்.
22 அவர்கள் மாளிகைகளில் ஓலங்களும்
அவர்கள் இனிமையான அரமனைகளில்
நரிகளும் ஏகமாய் ஊளையிடும்;
அதின் காலம் சீக்கிரம் வரும்,
அதின் நாட்கள் நீடித்திராது.

14 யெகோவா யாக்கோபுக்கு இரங்கி
விடுவார்,
பின்னும் அவர் இஸ்ரவேலரைத் தெரிந்து
கொண்டு
அவர்களை அவர்கள் தேசத்திலே வாழ்ந்
திருக்கச் செய்வார்;
அந்நியரும் அவர்களிடம் வந்து
யாக்கோபின் வீட்டாரோடே சேர்ந்து
கொள்வார்கள்.
2 ஜாதிகள் அவர்களை அழைத்துக்கொண்
டுபோய்
அவர்கள் இடத்திலே விடுவார்கள்;
யெகோவா தந்த நாட்டிலே இஸ்ரவேல்
வீட்டார்
அவர்களை வேலைக்காரராகவும் வேலைக்
காரிகளாகவும் கையாண்டு,
தங்களைச் சிறையாக்கினவர்களைச் சிறை
யாக்கித்
தங்களை ஒடுக்கினவர்களை ஆளுவார்கள்.
3 யெகோவா உன் துக்கத்தையும் உன்
சஞ்சலத்தையும்
உன்மேல் சுமந்திருந்த கடினமான அடி
மைத்தனத்தையும் நீக்கி
உன்னை வாழ்ந்திருக்கச்செய்யும் அக்
காலத்திலே,
4 நீ பாபிலோன் ராஜாவைப்பற்றிப் பரி
யாசம்பாடுவாய்:
ஒடுக்கினவன் ஒழிந்தானே!
கொடுங்கோலும் ஒழிந்ததே!
5 தெய்வபயமற்றோரின் தண்டாயுதத்தை
யும்
அரசாண்டவர்களின் செங்கோலையும்
யெகோவா முறித்துப்போட்டார்.
6 அக்கோல் உக்கிரங்கொண்டு
ஓயாத அடியாய்த் தேசத்தாரை அடித்
துத்
தடுப்பாரின்றித் தன்பப்படுத்திக்
கோபமாய் ஜாதிகளை அரசாண்டதே.
7 பூமிமுழுதும் ஆமர்ந்து இளைப்பாறு
கிறது;
ஆனந்த சத்தமிட்டுப் பாடுகிறார்கள்.
8 தேவதாரு விருட்சங்களும் லீபனோனின்
கேதுருக்களும்

உன் விழுகையினிமித்தம் மகிழ்ந்து
நீ விழுந்த நாள்முதல்
எங்களிடத்தில் வருவார் இல்லையென்று
சொல்லுகின்றன.
9 கீழேயுள்ள பாதாளம் உன்னிமித்தம்
விழித்தெழுந்து
நீ வரும்போது எதிர்கொள்ளும்படி
மரித்தோரை, பூமியில் அதிபதியாயிருந்
தவரையெல்லாம், எழுப்பி
ஜாதிகளின் சகல ராஜாக்களையும்
சிங்காசனங்கள்விட்டு எழுந்திருக்கப்
பண்ணுகிறது.
10 அவர்களெல்லாரும் உன்னைக் காணவே:
நீயும் எங்களைப்போல பலட்சயமானாயே!
எங்களுக்குச் சமானமானாயே!
என்று சொல்லுவார்கள்.
11 உன் ஆடம்பரமும் உன் வாத்திய முழக்
கமும்
பாதாளத்திலே தள்ளுண்டுபோயின;
புழுக்களே உன் படுக்கை, பூச்சிகளே
உன் போர்வை.
12 அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி
யே
வானத்திலிருந்து நீ விழுந்தாயே!
ஜாதிகளைத் தாழ்த்தி அடக்கினவனே,
தரையிலே நீ வீழ வெட்டப்பட்டாயே!
13 நான் வான் ஏறுவேன் என்று சொன்
னாயே,
கடவுளின் நட்சத்திரங்களுக்கு மேலாக
என் சிங்காசனத்தை உயர்த்துவேன்;
வடபுறத்தில், தேவர்கூடும் பர்வதத்திலே,
வீற்றிருப்பேன்,
14 மேகமேடு ஏறி உன்னதருக்கு ஒப்பா
வேன்
என்று உன் இதயத்தில் சொல்லிக்
கொண்டிருந்தாயே.
15 ஐயோ நீ பாதாளத்தில், குழியின் ஆழத்
திலே தள்ளுண்டுபோனாயே!
16 உன்னைக் காண்பவர்கள் உன்னை உற்றுப்
பார்த்துக் கவனித்து:
இவன்தானா பூமியை அதிரப்பண்ணி
ராஜியங்களை நடுங்கச்செய்தவன்!
17 உலகத்தை வனாந்தரமாக்கி, அதின் நகர்
களை அழித்துத்
தங்கள் வீடுகளுக்குப் போகும்படி
சிறைகளை விடுதலை செய்யாதிருந்தவன்
இவன்தானா என்பார்கள்.
18 ஜாதிகளின் சகல ராஜாக்களும்
தங்கள் அறைகளிலே மகிமையோடே
படுத்திருக்கிறார்கள்.
19 நீயோ கல்லறையில்லாதவனாய் எறியப்
பட்டாய்,

உதவாதென அகற்றப்பட்ட செடி
போன்றாய்,
பட்டயத்தால் கொலையுண்டு கற்குழியில்
கிடப்போர் உனக்கு ஆடையானார்,
காலால் மிதியுண்ட பிணம் போலானாய்.
20 நீ அவர்களைப்போல அடக்கம்பண்ணப்
படுவதில்லை;
நீ உன் தேசத்தைக்கெடுத்து உன் ஜனத்
தைக் கொன்றுபோட்டாய்;
தீமைசெய்வோர் சந்ததியின்பேர் என்றும்
நிலைப்பதில்லை.
21 பிதாக்களுடைய அக்கிரமத்தினிமித்தம்
அவன் பிள்ளைகளைக் கொல்லுமிடத்தை
ஆயத்தப்படுத்துங்கள்;
அவன் புத்திரர் எழும்பித் தேசத்தைச்
சுதந்தரித்துக்கொண்டு
உலகத்தைப் பட்டணங்களால் நிரப்ப
வேண்டாம்.
22 இதோ, சேனைகளுடைய யெகோவா
வின் திருவாக்கு:
நான் அவர்களுக்கு விரோதமாய் எழும்
புவேன்,
பாபிலோனுக்குப் பேரும் மீந்தவரும்
பின்னடியும் சந்ததியும் இராமற் சங்
காரம் பண்ணுவேன்;
இது யெகோவாவின் திருவாக்கு.
23 அதைக் கொக்கு வசிக்குமிடமும்
தண்ணீர் நிற்கும் பள்ளங்களுமாக்கி
அதைச் சங்காரம் என்னும் துடைப்பத்
தினால் பெருக்கிவிடுவேன்;
இது சேனைகளுடைய யெகோவாவின்
திருவாக்கு.
24 சேனைகளின் யெகோவா ஆணையிட்
டுச் சொல்லுகிறார்:
நான் நினைத்திருக்கிறபடியே நடக்கும்
நான் நிர்ணயித்தபடியே நிலைநிற்கும்.
25 அசீரியாவை என் தேசத்திலே முறித்து,
என் மலைகளின்மேல் அவனை மிதித்துப்
போடுவேன்;
அவனுடைய நுகம் அவர்கள் மேலிருந்
து விலகி
அவனுடைய சுமை அவர்கள் தோளி
லிருந்து நீங்கும்.
26 பூமியனைத்தின் மேலும் நிர்ணயிக்கப்
பட்டது இதுவே;
சகல ஜாதிகள் மேலும் நீட்டப்பட்
டிருக்கிற கையும் இதுவே.
27 இப்படி நிர்ணயித்திருக்கிறவர் சேனை
களின் யெகோவா,
அதை வியர்த்தமாக்குவோன் யார்?
அவருடைய கை நீட்டப்பட்டிருக்க
அதைத் திருப்புவான் யார்?

28 ஆகாஸ் ராஜா மரணமடைந்த வரு
ஷத்திலே வந்த கடின வாக்கு இதுவே:
29 முழு பெலிஸ்தியாவே, உன்னை அடித்த
கோல்
முறிந்ததென்று சந்தோஷியாதே.
பாம்பின் வேரிலிருந்து கட்டு விரியன்
தோன்றும்;
அதின் கனி பறக்கிற விஷப்பாம்பாகும்.
30 மிகவும் எளியவர்கள் நல்மேய்ச்சல்
பெறுவார்கள்.
ஏழைகள் சுகமாய்ப் படுத்திருப்பார்கள்,
உன் வேரைப் பஞ்சத்தினாலே சாகப்
பண்ணுவேன்,
உன்னில் மீந்திருப்பவர்கள் கொல்லப்
படுவார்கள்.
31 வாசலே அலறு, நகரமே கதறு;
பெலிஸ்தியாவே, நீ முழுதும் கரைந்து
போகிறாய்;
வடக்கேயிருந்து புகைக்காடாய் வரு
கிறான்;
அவன் கூட்டங்களில் பின்னிற்பவ
னில்லை.
32 இப்போதும் பெலிஸ்தியரின் ஸ்தானாதி
பதிகளுக்கு என்ன பதில் சொல்லப்படும்?
யெகோவா சீயோனை அஸ்திபாரப்படுத்தி
னார்;
அவருடைய ஜனத்தில் சிறுமையானவர்
கள்
அதிலே திடன்கொண்டு தங்குவார்கள்
என்று சொல்லப்படும்.

**15** மோவாபின்மேல் வந்த கடினவாக்கு:
ஐயோ, ஒரே இரவிலே
மோவாபிலுள்ள ஆர் என்னும் பட்ட
ணம் பாழாக்கப்பட்டதே,
அது அதமாயிற்றே;
ஐயோ, ஒரே இரவிலே
மோவாபிலுள்ள கீர் என்னும் பட்ட
ணம் பாழாக்கப்பட்டதே,
அது அதமாயிற்றே.
2 அழும்படி பாயித்தும் தீபோனும்
கோவில் மேடைகளுக்குப் போகின்றன.
நேபோமேலும் மேதெபாமேலும் மோ
வாப் ஏறி அலறுகிறது;
அவர்கள் தலைசளெல்லாம் மொட்டை
யாயின.
தாடிகளெல்லாம் சத்தரிக்கப்பட்டன.
3 அதின் வீதிகளில் இரட்டுத்தித்திரிகிறார்,
அதின் வீடுகள் மேலும் அதின் ஊர்
வெளிகளிலும்
எல்லாரும் அழுது அழுது அலறுகிறார்
கள்.
4 எஸ்போன் ஊராரும் எலெயாலே ஊரா
ரும் அபயமிட்டுக் கூவுகிறார்கள்;
அவர்கள் சத்தம் யாகாஸ்மட்டும் கேட்
கப்படுகிறது;
அதைக்கேட்டு மோவாபின் ஆயுதபாணி
கள் கதறுகிறார்கள்;
அது மனம் வருந்துகிறது.
5 என் இருதயம் மோவாபினிமித்தம்
அபயமிட்டுக் கூவுகிறது;
அதிலிருந்து தப்பி ஓடுகிறவர்கள்
சோவாரை, எக்லத் ஷெலிஷீயாவை,
சென்றடைந்தார்கள்;
லூகித்துக்கு ஏறும் வழியிலே அழுது
கொண்டே ஏறுகிறார்கள்;
ஐயோ அழிந்ததே என்று கொரோனா
யிமின் வழியிலே கூக்குரல் இடுகி
றார்கள்.
6 நிம்ரீமின் நீர்நிலைகள் பாழாய்ப்போம்;
புல் உலர்ந்து முளை அழிந்து பச்சை
யில்லாதாயிற்று.
7 ஆகவே தங்கள் சமீபத்தில் மீந்திருக்
ததையும்
தாங்கள் சேர்த்து வைத்திருந்ததையும்
அலரி ஆற்றுக்கப்பால் எடுத்துப்போகி
றார்கள்.
8 கூக்குரல் மோவாபின் எல்லையெங்கும்
சுற்றும்;
அது அலறுகிற சத்தம்
எக்லாயிம்மட்டும் பெரேலீம்மட்டும் எட்
டும்.
9 தீமோனின் ஜலமெல்லாம் இரத்தமாக
வேயிருக்கிறது,
ஆயினும் தீமோனின்மேல் இன்னும்
அதிகக் கேடுகளைக் கட்டளையிடுவேன்;
மோவாபிலே தப்பி மீந்தவர்கள்மேலும்
தேசத்தில் மீந்திருப்பவர்கள்மேலும் ஒரு
சிங்கத்தை வரப்பண்ணுவேன்.

**16** தேசத்தின் தலைவருக்குச் செலுத்த
வேண்டிய ஆட்டுக்குட்டிகளைச்
சேலா பட்டணத்திலிருந்து வனாந்தர
வழியாய்ச்
சீயோன் குமாரத்தியின் மலைக்கு அனுப்
புங்கள்.
2 அலைந்து திரியும் பக்ஷிகளைப்போலவும்
கலைக்கப்பட்ட கூட்டின் குஞ்சுகளைப்
போலவும்
அர்னோன் நதியின் இறங்கு துறைகளிலே
மோவாபின் குமாரத்திகள் வந்திருப்பார்
கள்.
3 நீர் ஆலோசனைபண்ணி, நியாயமான
தைச் செய்யும்

மத்தியானத்திலே உமது நிழலை இரவைப் போலாக்கியருளும்;
துரத்தப்பட்டவர்களை மறைத்துக்கொள்ளும்;
ஓடிவருகிறவர்களைக் காட்டிக்கொடாதிரும்.
4 துரத்தண்ட என் ஜனங்கள் உம்மிடம் தங்கட்டும்;
மோவாபுக்கோவெனில்
சங்கரிப்பவனுக்குத் தப்ப அவனுக்கு மறைவிடமாயிரும்;
கொடியவர் இல்லாமற்போகவே சங்காரம் தீர்ந்து,
ஒடுக்குவோர் தேசத்தில் இலராகும் போது,
5 இரக்கத்தினாலே ஒரு சிங்காசனம் ஸ்தாபிக்கப்படும்;
அதின்மேல் தாவீதின் கூடாரத்தில்
உண்மையுள்ள நியாயாதிபதியொருவர் வீற்றிருப்பார்,
அவர் நியாயத்திலே கண்ணோக்கமுள்ளவர்,
தாமதமின்றி நீதி செய்பவர்.
6 மோவாபின் பெருமையைப்பற்றிக் கேட்டோம்,
அவன் மிகவும் பெருமைக்காரன்;
அவன் மேட்டிமையையும் அவன் பெருமையையும்
அவன் இறுமாப்பையும்பற்றிக் கேட்டோம்;
அவன் வீம்போ செல்லாது.
7 ஆகையால் மோவாபியர் ஒருவருக்காக ஒருவர் அலறுவார்கள்;
எல்லாரும் ஏகமாய் அலறுவார்கள்;
கீர்காரேசெத் ஊரின் திராட்சஅடைகளை நினைத்து
மனமுடைந்து பெருமூச்சு விடுவார்கள்.
8 எஸ்போன் ஊர் வயல்கள் வாடிப்போயின;
சிப்மா ஊர் திராட்சைச்செடிகளும் அப்படியே வாடின;
இவற்றின் சிறந்த பழங்கள் ஜாதிகளின்
அதிபதிகளை மேற்கொண்டிருந்தன;
இவற்றின் கொடிகள் யாசேர்மட்டும்
சென்று வனாந்தரத்தில் படர்ந்து
கடலுக்கப்பாலும் எட்டியிருந்தன.
9 ஆகவே யாசேர் அழுவதுபோல
சிப்மா ஊர் திராட்சச்செடியை நினைத்து
அழுவேன்;
எஸ்போனே, எலெயாலேயே,
உனக்கு என் கண்ணீரைப் பாய்ச்சுவேன்;
நீ கோடைகாலப் பழம் பறிக்கும் காலத்திலும்
பயிர்களை அறுக்கும் காட்களிலும்
யுத்த ஆரவாரம் உன்மேல் வந்தவிட்டதே.
உன் பழமரத்தோப்புகளிலிருந்து சந் 10
தோஷமும் களிப்பும் அற்றுப்போயின,
திராட்சத்தோட்டங்களிலே பாடலுமில்லை, ஆர்ப்பரிப்புமில்லை;
ஆலையில் இரசத்தை மிதிப்பவனுமில்லை;
சந்தோஷ ஆரவாரத்தை ஒயப்பண்ணினேன்.
ஆகையால் மோவாபினிமித்தம் என் 11
குடல்களும்
கீர்காரேசினிமித்தம் என் உள்ளமும்
சுரமண்டல நரம்புபோல் துடிக்கின்றன.
பிரயாசத்துடன் மோவாப் கோவில்மே 12
டைகளின்மேல் வரும்போதும்
பிரார்த்தனை செய்யத் தன் திருஸ்தானத்திலே பிரவேசிக்கும்போதும்
அவனுக்கு வாய்க்காமற்போம்.
சென்ற காலத்திலே யெகோவா மோ 13
வாபைப்பற்றி அப்படிச் சொன்னார். இப் 14
பொழுதும், ஒரு கூலிக்காரன் திட்டமாய்க் கணக்குப்பார்க்கும் வருஷங்களுக்கொத்த மூன்று வருஷங்களுக்குள்ளே மோவாபின் மகிமையும் அதின் ஜனத்திரளோடே சீரழிந்துபோம்; அதிலே மீந்தவர்கள் மிகவும் சொற்பமானவர்கள், சிறப்பொன்றுமில்லாதவர்கள் என்று யெகோவா சொல்லுகிறார்.

தமஸ்குவின்மேல் விழுந்த கடின 17
வாக்கு:
இதோ, தமஸ்கு தள்ளுண்டுபோம்,
அது இனி நகரமாயிராது, பாழான மண்மேடாம்.
அரோவேரின் ஊர்கள் பாழாய் விடப் 2
பட்டு மந்தைவெளிகளாம்,
மந்தை அங்கே படுத்துக்கொள்ளும்
எவரும் பயமுறுத்தார்.
எப்பிராயீமுக்கு அரண் ஒழியும், 3
தமஸ்குவுக்கு ராஜாங்கம் ஒழிந்துபோம்,
சீரியாவில் மீந்தவர்களும் ஒழிவார்கள்,
இஸ்ரவேலின் மகிமைக்கு நேரிட்டதுபோலாகும்;
இது யெகோவா திருவாக்கு.
அக்காலத்திலே யாக்கோபின் மகிமை 4
குறைந்துபோம்,
அவனுடைய கொழுத்த தேகம் மெலிந்துபோம்.
ஒருவன் ஒங்கின பயிரைச் சேர்த்துப் 5
பிடித்துத்

தன் கையினால் கழிர்களை அறுப்பதுபோலும்
ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே கழிர்களைப் பொறுக்குவது போலுமாகும்.
6 ஆயினும் ஒலிவ மரத்தை உலுக்கும்போது அதினிக்கொம்பிலே இரண்டு மூன்று கனிகளும்
கனி மரக்கிளைகளிலே நாலைந்து கனிகளும் மீந்திருப்பதுபோல்
பின்னே பொறுக்குவதற்கெனக் கொஞ்சம் மீந்திருக்கும்;
இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவின் திருவாக்கு இது.
7 அக்காலத்தில் மனிதன் தன்னைப் படைத்தவரையே நோக்குவான்,
அவன் கண்கள் இஸ்ரவேலின் பரிசுத்தரையே நோக்கிக்கொண்டிருக்கும்;
8 தன் கை செய்த பீடங்களை நோக்கான்,
தன் விரல்கள் செய்த மரச்சிலைகளையும்
சூரிய வணக்கச் சிலைகளையும் நோக்கிக்கொண்டிரான்.
9 அக்காலத்திலே அவர்களுடைய அரண
ன பட்டணங்கள் குடியின்றியிருக்கும்,
இஸ்ரவேல் புத்திரருக்கு எதிரேவிடப்பட்ட
காட்டரண்களையும் மலையரண்களையும்போ
லாம்; அவை பாழாய்க்கிடக்கும்.
10 உன் ரட்சிப்பாகிய கடவுளை நீ மறந்தாய்,
உன் பலமாகிய கன்மலையை நீ நினைக்கவில்லை,
ஆதலால் நீ இனிமையாய்த் தோன்றும்
காற்றுகளை நட்டு
அந்திய தேசத்துக் கன்றுகளை வைப்பாய்.
11 நட்ட நாளிலே அதற்கு வேலி கட்டி
மறுநாட் காலையில் அது பூமலரச்செய்வாய்,
ஆயினும் துக்கமும் கடும் வேதனையும்
வரும் நாளிலே
அவை பலனின்றிப்போம்.
12 இதோ, கடல்கள் கொந்தளிப்பதுபோலக் கொந்தளிக்கிறபெரும் ஜனக்கூட்டம்!
பெருவெள்ளம்போல் இரைகிற ஜாதிகளின் இரைச்சல்!
13 ஜாதிகள் பெருவெள்ள இரைச்சல்போல் இரைவார்கள்,
அவரோ அவர்களை அதட்டுவார்;
அவர்கள் தூரமாய் ஓடிப்போவார்கள்,
மலைகளிலே காற்று பறக்கடிக்கும் பதரைப்போலவும்
சுழல் காற்றில் அகப்பட்ட சருகுபோலவும் துரத்தப்படுவார்கள்.
14 இதோ, சாயங்காலத்திலே திகிலுண்டாகும்,
காலைவராமுன் அவர்கள் ஒழிந்துபோவார்கள்;
நம்மைக் கொள்ளையிடுவோரின் பங்கு இதுவே,
நம்மைச் சூறையாடுவோரின் பாகம் இதுவே.

18 எத்தியோப்பியாவின் நதிகளுக்கு அக்கரையிலே
ஒலியெழப் பறக்கும்செட்டைகளுடைய நாட்டுக்கு ஐயோ கேடாம்!
2 அது கடல் வழியாய்த் தண்ணீர்களின் மேல்
நாணல் படவுகளிலே ஸ்தானாபதிகளை அனுப்புகிறதே,
வேகமான தூதர்களே, பளபளப்பான
வளர்ந்த தேகமுடைய ஜனத்தினிடம் போங்கள்,
அது சுற்றுப்புறமெங்கும் திகில் விளைத்த ஜாதி,
அவர்கள் பலமுடையோர், வெற்றியுடையோர்;
பல ஆறுகள் அந்நாட்டிலே ஓடும்.
3 பூச்சக்கரத்தில் வாசமாயிருக்கிறவர்களும்
பூலோகத்திலே வசிப்பவருமாகிய சுர் நீங்கலெல்லாரும்
மலைகளின்மேல் கொடியேற்றப்படும்போது பாருங்கள்,
எக்காளம் ஊதப்படும்போது கேளுங்கள்.
4 யெகோவா என்னிடம் சொல்வதைக் கேளுங்கள்:
சூரிய ஒளியின் பிரகாசமான உஷ்ணம் போலவும்
அறுப்புக்காலத்து உஷ்ணத்தில் உண்டாகும் பனிமேகத்தைப்போலவும்
நான் அமர்ந்திருந்து
என் வாசஸ்தலத்தின்று கண்ணோக்குவேன் என்கிறார்.
5 பழப்பதிப்புக் காலத்துக்கு முன்னே
சிராட்சச்செடிகள் பூப்பூத்துப் பிஞ்சாகிக்
காய்கள் முற்றியிருக்கும்போதே
அவர் அரிவாள்களினாலே கப்புக்கவர்களை அறுத்துக்
கொடிகளையெரிந்து அகற்றிப்போடுவார்.
6 அவைகள் முழுதுமாய் மலைகளின் குரூரப்பட்சிகளுக்கும்
பூமியின் குரூர மிருகங்களுக்கும் விடப்படும்;

கோடைகாலத்திலே பட்சிகள் அதின்
மேல் தங்கும்,
மாரிகாலத்திலே பூமியின் மிருகங்களெல்
லாம் அதின்மேல் தங்கும்.
7 பளபளப்பான வளர்ந்த தேகமுடையதும்
சுற்றுப்புறமெங்கும் திகில் விளைத்ததும் பல
முடையதும் வெற்றியுடையதும் பல ஆறு
கள் ஓடும் தேசத்தையுடையதுமான ஒரு
ஜனம் சேனைகளின் யெகோவாவினுடைய
நாமம் தங்கும் இடமாகிய சீயோன் மலை
யில், சேனைகளின் யெகோவாவுக்கு, அக்கா
லத்திலே ஒரு காணிக்கையைப் படைக்கும்.

**19** எகிப்தின்மேல் விழுந்த கடினவாக்கு:
இதோ, யெகோவா வேகமான மேகத்
தின்மேல் ஏறி எகிப்துக்கு வருகிறார்.
அப்பொழுது எகிப்தின் விக்கிரகங்கள்
அவருக்கு முன்பாக நடுங்கும்,
எகிப்தின் இருதயம் அதனுள்ளே
கரைந்துபோகும்.
2 எகிப்தியருக்கு விரோதமாய் எகிப்திய
ரையே தூண்டுவேன்,
சகோதரனோடே சகோதரனும், சிநேகித
னோடே சிநேகிதனும்,
பட்டணத்தோடே பட்டணமும், ராஜ்
யத்தோடே ராஜ்யமும்
யுத்தம்பண்ணும்படி செய்வேன்.
3 அதினால் எகிப்தியர் தங்களுள் தைரிய
மற்றுப்போவார்கள்,
அவர்கள் ஆலோசனை அழியும்படி செய்
வேன்;
அப்பொழுது விக்கிரகங்களையும் மந்திர
வாதிகளையும்,
அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறி
சொல்லுகிறவர்களையும் தேடுவார்கள்.
4 நான் எகிப்தியரைக் கொடுமையான அதி
பதியின் கையில் ஒப்புப்பேன்;
கொடுமையுள்ள ராஜா அவர்கள் ஆளு
வான்,
இது சேனைகளின் யெகோவாவாகிய
ஆண்டவரின் திருவாக்கு.
5 அப்பொழுது கடல் நீர் குறைந்து
நதியும் வற்றி வறண்டுபோம்.
6 ஆறுகள் துர்நாற்றம் வீசும்;
எகிப்தின் வாய்க்கால்கள் வெறுமையாகி
வறண்டுபோம்;
கொறுக்கையும் நாணலும் வாடிப்போம்.
7 நதியண்டை, நதிக்கரையிலேயிருக்கிற
புல்தரைகளும்
நதியருகே விதைக்கப்பட்ட யாவும்
உலர்ந்துபோம்;
அது அழிந்து இல்லாதேபோம்.
8 மீன் பிடிக்கிறவர்கள் பெருமூச்சு விடு
வார்கள்,
நதியிலே தூண்டில் போடுகிற யாவரும்
துக்கிப்பார்கள்;
தண்ணீரிலே வலை வீசுகிறவர்கள் சலித்
துப்போவார்கள்.
9 மெல்லிய சணலைப் பக்குவப்படுத்துகிற
வர்களும்
சல்லாக்கினை நெய்கிறவர்களும் நாணு
வார்கள்.
10 தேசத்தின் தூண்களானவர்கள் முறிந்து
போவார்கள்,
கூலிவேலை செய்வோரும் மனம் வாடி
வார்கள்.
11 சோவான் ஊர் அதிபதிகள் மூடர்களே;
பார்வோனுடைய ஆலோசனைக்காரருள்
மகாஞானமுள்ளவர்களும்
மதியீன ஆலோசனையே சொல்லுகிறார்
கள்.
நீங்கள் பார்வோனோடு பேசி:
நான் ஞானிகளின் வழி வந்தவன்,
நான் பூர்வ ராஜாக்கள் வம்சம் பிறந்
தவன்
என்று சொல்வதெப்படி?
12 இப்போதும் உன் ஞானிகள் எங்கே?
சேனைகளின் யெகோவா எகிப்தைப்பற்
றிச் செய்த யோசனையை
அவர்கள் உனக்குத் தெரிவிக்கட்டும்
அவர்களுக்குத்தான் தெரியுமே!
13 சோவான் அதிபதிகள் மூடரானார்கள்;
நோப்பின் அதிபதிகள் மோசம்போனார்
கள்;
எகிப்தின் கோத்திரத் தலைவர் அதை வழி
தப்பச் செய்கிறார்கள்.
14 யெகோவா அதின் நடுவில் கலக்கும் ஆவி
யை வரப்பண்ணினார்;
ஆகவே வெறியன் வாந்திபண்ணித் தள்
ளாடித் திரிவதுபோல
அவர்கள் எகிப்து செய்யும் யாவற்றிலும்
அதைத் தள்ளாடித் திரியப்பண்ணுகிறார்
கள்.
15 எகிப்தியரில் தலையோ வாலோ கிளையோ
நாணலோ
யார் எது செய்தாலும் வாய்க்காது.
16 அக்காலத்திலே எகிப்தியர் பெண்டுகளைப்
போலிருப்பார்கள், சேனைகளின் யெகோவா
தங்கள்மேல் கை அசைக்கவே அவர்கள்
அஞ்சி நடுங்குவார்கள். 17 சேனைகளின் யெ
கோவா எகிப்துக்கு விரோதமாக நிர்ணயித்
துக்கொண்ட ஆலோசனையினிமித்தம் யூதா
தேசம் எகிப்தியருக்குப் பயங்கரமாகும்;

ஒருவன் அதை இணைப்பூட்டும்போதெல்லாம் நடுக்கிடுவார்கள்.

18 அக்காலத்தில் எகிப்து தேசத்திலே ஐந்து பட்டணங்கள் கானான் பாஷையைப் பேசிச் சேனைகளின் யெகோவாவின் பேரால் ஆணையிடும்; அவைகளில் ஒன்று ஈர்க்கேரேஸ் என்னப்படும்.

19 அக்காலத்திலே எகிப்து தேசத்தின் நடுவிலே யெகோவாவுக்கு ஒரு பலிபீடமும் அதின் எல்லையருகே யெகோவாவுக்கு ஒரு

20 ஸ்தம்பமும் இருக்கும். அது எகிப்து தேசத்திலே சேனைகளின் யெகோவாவுக்கு அடையாளமும் சாட்சியுமாயிருக்கும்; ஒடுக்குகிறவர்களினிமித்தம் அவர்கள் யெகோவாவை நோக்கிக் கூப்பிடும்போது அவர்களுக்கு அவர் ஒரு ரட்சகனை அனுப்புவார், அவன் போர் செய்து அவர்களை விடுவிப்பான்.

21 இவ்விதமாய் யெகோவா எகிப்தியர் தம்மை அறியும்படி செய்வார்; அக்காலத்திலே எகிப்தியர் யெகோவாவை அறிந்து இரத்த பலிகளையும் போஜன பலிகளையும் செலுத்தி அவரைச் சேவிப்பார்கள்; யெகோவாவுக்குப் பொருத்தனைகளை நேர்ந்துகொண்டு

22 அவைகளைச் செலுத்துவார்கள். யெகோவா எகிப்தியரை வாதிப்பார்; வாதித்து குணமாக்குவார், அவர்கள் யெகோவாவினிடமாய்த் திரும்புவார்கள்; அவர்கள் விண்ணப்பத்தை அவர் கேட்டு அவர்களைக் குணமாக்குவார்.

23 அக்காலத்திலே எகிப்திலிருந்து அசீரியாவுக்குப் போகப் பெரும் பாதை ஒன்றிருக்கும்; அசீரியர் எகிப்துக்கும் எகிப்தியர் அசீரியாவுக்கும் போவார்கள்; எகிப்தியரும் அசீரியரும் சேர்ந்து ஆராதனை செய்வார்

24 கள். அக்காலத்திலே இஸ்ரவேல் எகிப்தோடும் அசீரியாவோடும் சேரவே அம்மூன்றும் பூமியின் நடுவில் ஆசீர்வாதமா

25 யிருக்கும். சேனைகளின் யெகோவா அவர்களை ஆசீர்வதித்து: எகிப்தியராகிய என் ஜனமும் அசீரியராகிய என் கரத்தின் கிரியையும் இஸ்ரவேலராகிய என் சுதந்தரமும் ஆசீர்வாதம் பெற்றவர்கள் என்று சொல்லுகிறார்.

**20** அசீரியா ராஜாவாகிய சர்கோனுலே தர்தான் அஸ்தோத்துக்கு அனுப்பப்பட்ட வருஷத்திலே—அவன் அஸ்தோத்தின்மேல் யுத்

2 தம்பண்ணி அதைப் பிடித்தான்—அக்காலத்திலே யெகோவா ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயாவின் மூலமாய்ப் பேசிவரும்பி அவனிடம்: நீ போய் உன் அரையிலிருக்கிற இரட்டை அவிழ்த்து உன் காலணி லிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிவிடு என்றார்; அவன் அப்படியே செய்து வஸ்திரமில்லாமல் வெறுங்காலாய் நடக்கத் தொடங்கினான்.

3 பின்பு யெகோவா அவனோடு பேசி: என் ஊழியனாகிய ஏசாயா மூன்று வருஷமளவும் வஸ்திரமில்லாமல் வெறுங்காலாய் நடந்தானே, அது எகிப்தியருக்கும் எத்தியோப்பியருக்கும் ஆச்சரிய அடையாளமாம்;

4 அவன் அப்படி நடந்ததுபோல, அசீரியா ராஜா தான் சிறைபிடிக்கும் எகிப்தியரையும் தான் கொண்டுபோகும் எத்தியோப்பியரையும், இளைஞரையும் கிழவரையும், வஸ்திரமில்லாமல் வெறுங்காலாய் எகிப்தியருக்கு வெட்கமுண்டாகும்படி இருப்பிடம் மூடப்படாதவர்களாய் நடத்திக்கொண்டு போவான். அப்பொழுது

5 ஜனங்கள் திகில் கொண்டு வெட்கித் தாங்கள் நம்பிக்கையாயிருந்த எத்தியோப்பியாவையும் தாங்கள் பெருமையாய்ப் பாராட்டிவந்த எகிப்தையும் விட்டுத் திரும்புவார்கள்.

6 இந்தக் கடற்கரை நாட்டில் குடியிருப்பவரும், இதோ, அசீரியா ராஜாவுக்குத் தப்புவிக்கும்படி நாங்கள் சகாயத்துக்கென்று ஓடிவந்து நம்பி அண்டினவன் இப்படியானானே; இனி நாங்கள் எப்படி விடுவிக்கப்படுவோம் என்று அக்காலத்திலே சொல்லுவார்கள் என்று சொன்னார்.

கடல் வனாந்தரத்தின்மேல் விழுந்த **21**
கடினவாக்கு:
சுழல்காற்று தென்னாட்டிலிருந்து எழும்பிக் கடந்துவருவதுபோல
வனாந்தரத்திலிருந்து, பயங்கர தேசத்திலிருந்து,
இது வருகிறது.
கொடிய தரிசனம் எனக்குத் தெரிவிக்கப்பட்டது; 2
துரோகி துரோகம்பண்ணுகிறான்,
பாழாக்குகிறவன் பாழாக்கிக்கொண்டே இருக்கிறான்;
ஏலாமே எழும்புவா,
மேதியாவே முற்றுகைபோடு;
அதினாலே உண்டான தவிப்பையெல்லாம் ஒழியப்பண்ணினேன்.
நான் இதைக் கேட்கவே, என் இடுப்பு 3
நடுக்கங்கொண்டது;
பிள்ளை பெறுபவளின் வேதனைகளுக்கு
ஒத்த வேதனைகள் என்னைப் பிடித்தன;
மனங்கலங்கிச் செவிடன்போலானேன்,
திகில்கொண்டு குருடன்போலானேன்.
புத்தி மயங்கினவன்போலானேன்; 4

ஓதில் என்னைத் திடுக்கிடப்பண்ணிற்று;
நான் விரும்பும் இரவு எனக்குப் பயங்கரமாயிற்று.
5 பள்ளி ஆயத்தமாகிறது, சமுக்காளம் விரித்தாயிற்று,
புசித்துக் குடிக்கிறார்கள்;
அதிபதிகளே, எழுந்து பரிசைகளுக்கு எண்ணெய் பூசுங்கள்.
6 ஆண்டவர் என்னோடு பேசி:
நீ போய், காவல் காப்பவனை வை,
காணப்படுவதை அவன் தெரிவிக்க வேண்டும்.
7 சைனிய வீரரை, ஜோடு ஜோடாய் வருகிற குதிரைவீரரையும்
கழுதைகளின்மேல் ஏறிவருகிறவர்களையும்
ஒட்டகங்களின்மேல் ஏறிவருகிறவர்களையும் கண்டால்
கவனித்துக்கொள்ளவேண்டும், மிகுந்த கவனமாகவே பார்க்கவேண்டும் என்றார்.
8 காவல்காரன் சிங்கம்போல் சத்தமிட்டுக் கூப்பிட்டு:
ஆண்டவரே, நான் பகல்முழுதும் என் காவலிலே நின்று
இராமுழுதும் நான் என் காவலிடத்திலே தரித்திருக்கிறேன்,
9 இதோ, இப்பொழுது சைனியவீரர் வருகிறார்கள்,
குதிரைவீரர் ஜோடு ஜோடாய் வருகிறார்கள் என்றார்.
பின்னும் அவன்: பாபிலோன் விழுந்தது, விழுந்தது;
அதின் தேவர்களின் விக்கிரகங்களெல்லாம் முறிபட்டுத் தரையில் விழுந்தன
என்று சொன்னான்.
10 போரடிப்பின் தானியம்போன்ற என் ஜனமே,
களத்தின் கோதுமைபோன்றவர்களே,
இஸ்ரவேலின் கடவுளாகிய சேனைகளின் தெகோவாவினிடமிருந்து
நான் கேள்விப்பட்டதை உங்களுக்கு அறிவித்தேன்.
11 தூமாவின்மேல் விழுந்த கடினவாக்கு.
சேயீரிலிருந்து ஒருவன் என்னைக் கூப்பிட்டு:
சாமக்காரனே, இரவு எவ்வளவு சென்றது?
சாமக்காரனே, இரவு எவ்வளவு சென்றது என்று கேட்கச்
சாமக்காரன் பதிலுரைத்து: 12
விடியற்காலம் வருகிறது, இராக்காலமும் வருகிறது;
நீங்கள் கேட்க விரும்பினால் கேளுங்கள்,
திரும்பி வரலாம் என்று சொல்லுகிறான்.
அரபியாவின்மேல் விழுந்த கடினவாக்கு: 13
தெதானியராகிய வர்த்தகக் கூட்டத்தாரே,
நீங்கள் அரபியாவில், வனச்சிலேயே, இராத்தங்குங்கள்.
தேமா தேசத்தின் குடிகளே, 14
நீங்கள் தாகமுள்ளவரை எதிர்கொண்டு
அவர்களுக்குத் தண்ணீர் கொடுங்கள்;
தப்பி ஓடுகிறவர்களைக் கிட்டி
அவர்களுக்கு ஆகாரங்கொடுங்கள்.
அவர்கள் பட்டயங்களுக்குத் தப்ப ஓடி 15
கிறார்கள்;
உருவின பட்டயத்துக்கும் நாணேற்றின வில்லுக்கும்
யுத்தத்தின் கொடுமைக்கும் பயந்து ஓடிகிறார்கள்
ஆண்டவர் என்னோடு பேசி: ஒரு கூலிக் 16
காரன் நிட்டமாய்க் கணக்குப்பார்க்கும் வருஷத்துக்கொத்த ஒரே வருஷத்திற்குள்
கேதாருடைய மகிமையெல்லாம் அற்றுப் போம். கேதார் புத்திரராகிய பராக்கிரம 17
வில்வீரரின் தொகையில் மீந்தவர்கள் சொற்பமானவர்களே; இது இஸ்ரவேலின்
கடவுளாகிய யெகோவாவே உரைத்தது என்றார்.

தரிசனப் பள்ளத்தாக்கின்மேல் **22**
விழுந்த கடினவாக்கு:
உனக்கு இப்பொழுது நேரிட்டது என்ன?
உன்னில் உள்ளவர்கள் யாவரும் வீடுகளின்மேல் ஏறியிருக்கிறார்களே.
சந்தடி நிறைந்து ஆரவாரம்பண்ணிக் 2
களிகூர்ந்திருந்த நகரமே,
உன்னிடத்தில் கொலையுண்டோர் பட்டயத்தால் கொலை யுண்டதில்லை,
யுத்தத்தில் செத்ததும் இல்லை.
உன் அதிபதிகள் எல்லாரும் ஏகமாய் 3
ஓடினார்கள்,
வில்வீரர் அம்பு எய்யா முன்னரே கட்டப்பட்டார்கள்;
உன்னில் இருந்த யாவரும் தூரத்துக்கு ஓடினாலும்
ஏகமாய்க் கட்டப்பட்டார்கள்.
ஆகையால் நான்: நீங்கள் என்னைப் 4
பார்த்துக்கொண்டிருக்கவேண்டாம்;

21 நான் மனங்கசந்து அழும்படி என்னை
விட்டுவிடுங்கள்,
என் ஜன குமாரத்தி பாழானதினிமித்தம்
எனக்கு ஆறுதல் சொல்ல அவசரப்பட
வேண்டாம் என்கிறேன்.
5 அமளியும் மிதியும் கலக்கமும் சம்பவிக்
கும் நாள்,
சேனைகளின் யெகோவாவாகிய ஆண்ட
வராலே
தரிசனப் பள்ளத்தாக்கிலே ஆயத்தமாகக்
கப்பட்டிருக்கிறது;
அலங்கம் தகர்க்கப்படும்,
பர்வதத்துக்கு நேரே கூக்குரல் எழும்.
6 ஏலாமியன் அம்பறாத்தூணியை எடுத்
தான்,
காலாட்களும் குதிரைவீரரும் சேர்ந்த
சைனியம் அவனோடு வந்தது,
கீர் கேடகத்தை வெளியே எடுத்து வந்
தது.
7 மகா சிறந்த உன் பள்ளத்தாக்குகளில்
இரதங்கள் நிறைந்தன,
குதிரை வீரர் வாசல்கள்மட்டும் வந்து
அணிவகுத்து நின்றார்கள்.
8 யூதாவைக் காக்கும் போர்வையை அவன்
நீக்கிப்போட்டான்;
அந்நாளிலே வனபவனமாகிய ஆயுத
9 சாலையை நோக்கினீர். நீங்கள் தாவீது
நகரம் பல இடங்களில் இடிபட்டதைக்
கண்டு கீழ்க்குளத்துத் தண்ணீர்களைக் கட்டி
10 வைத்து | எருசலேமின் வீடுகளை எண்ணி
அலங்கத்தைப் பலப்படுத்தும்படி வீடுகளை
11 இடித்து | இரண்டு மதில்களுக்கு நடுவே
பழைய குளத்துத் தண்ணீர்களுக்கு ஒரு
அகழைச் செய்தீர்கள்;
இவையெல்லாம் செய்தவரையோ நீங்
கள் நோக்கவில்லை;
இவற்றை முற்காலத்திலேயே ஏற்படுத்
தினவரைக் கவனியாமற் போனீர்
கள்.
12 அழவும் புலம்பவும் மொட்டையிடவும்
இரட்டுடுத்தவும்
சேனைகளின் யெகோவாவாகிய ஆண்ட
வர் உங்களை அழைத்தார்.
13 நீங்களோ சந்தோஷித்துக்களித்து ஆடு
மாடுகளை அடித்து
இறைச்சியைச் சாப்பிட்டுத் திராட்சரசத்
தைக் குடித்து:
நாளைக்குச் சாகப்போகிறபடியால் புசிப்
போம் குடிப்போம்
என்று சொல்லிவிட்டீர்கள்.
14 நீங்கள் சாகுமட்டும் மெய்யாகவே இந்த
அக்கிரமத்திற்கு
உங்களுக்குப் பிராயசித்தமிராது
என்று சேனைகளின் யெகோவாவாகிய
ஆண்டவர் சொல்லுகிறார் என்பது என்
செவிகேட்கச்
சேனைகளின் யெகோவாவினால் தெரிவிக்
கப்பட்டது.
சேனைகளின் யெகோவாவாகிய ஆண் 15
டவர் எனக்குச் சொன்னதைக்
கேளுங்கள்:
அரமனையை மேல்பார்க்கும் விசாரணைக்
காரனுகிய
செப்னாவினிடம் நீ போய்:
உனக்கு இங்கே என்ன இருக்கிறது? 16
உனக்கு இங்கே யார் உண்டு?
உயர்ந்த ஸ்தலத்திலே தன் கல்லறையை
வெட்டிக்
கன்மலையிலே தனக்கு வாசஸ்தலத்தைத்
தோண்டுகிறவனைப்போல
நீ இங்கே கல்லறையை வெட்டுகிறாயே;
இதோ, மானிடனே யெகோவா உன் 17
னைப் பலமாய் எறிந்துவிடுவார்;
அவர் உன்னைச் சுருட்டி மடக்கிக்கட்டி
உண்டைபோல் உன்னை உருட்டி 18
மிகவும் விஸ்தாரமான ஒரு தேசத்திலே
பந்துபோல் உன்னை எறிந்துவிடுவார்.
அங்கேயே நீ சாவாய்;
உன் மகிமைக்குரிய ரதங்கள் அங்கே
வரும்;
உன் ஆண்டவன் வீட்டுக்கு அவமான
மாய் இருந்தவனே!
உன்னை உன் ஸ்தானத்திலிருந்து துரத்தி 19
விடுவேன்; உன் உத்தியோகத்திலிருந்து தள்
ளப்படுவாய். அந்நாளிலே என் ஊழியக் 20
காரனை, இல்க்கியாவின் குமாரனுகிய எலி
யாக்கீமை நான் அழைத்து, | உன் வஸ்தி 21
ரத்தை எடுத்து அவனுக்குத் தரித்து, உன்
கச்சையால் அவனை இடைகட்டி, உன் அதி
காரத்தை அவன் கையிலே கொடுப்பேன்;
எருசலேமின் குடிகளுக்கும் யூதாவின் வம்
சத்துக்கும் அவன் தகப்பனுவான். தாவீதின் 22
வீட்டுத்திறவுகோலை அவன் தோளின்மேல்
வைப்பேன்; எவரும் பூட்டாதபடி அவன்
திறப்பான், எவரும் திறவாதபடி அவன்
பூட்டுவான். உறுதியான இடத்திலே 23
அவனை ஆணியாகக் கடாவுவேன்; அவன்
தன் தகப்பன் வீட்டுக்கு மகிமைக்குரிய
சிங்காசனமாயிருப்பான். அவன் தகப்பன் 24
வம்சத்தாராகிய புத்திரர் பெளத்திரருடைய
பாரம், அணைத்தும், சிறிதும் பெரிதுமான
சகல பானபாத்திரங்களும் சிறிய பாத்திரங்
களாகிய கிண்ணங்கள், செம்புகள்கூட
அதன்மேல் தொங்கவருமானால் | , உறுதி 25

யான இடத்தில் கடாவப்பட்டிருந்த ஆணி அக்காலிலே பிடுங்கப்பட்டு முறித்துவிழும்; இது சேனைகளுடைய யெகோவாவின் திருவாக்கு; அதின்மேல் தொங்கினபாரம் அப்பொழுது விழுந்து அழிக்கப்படும்; யெகோவாவே இதை உரைத்தார் என்று சொல் என்றார்.

**23** தீருவின்மேல் விழுந்த கடினவாக்கு:
தர்ஷீஸ் கப்பல்களே, அலறுங்கள்;
அது பாழாக்கப்பட்டது,
வீடுகளுமில்லை, வருவாருமில்லை;
கித்தீம் தேசத்திலிருந்து
இந்தச்செய்தி அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.
2 கடற்கரை நாட்டாரே, மவுனமாயிருங்கள்;
சமுத்திர யாத்திரை செய்த
சீதோன் வர்த்தகர் உன்னை நிரப்பினார்கள்.
3 சிகோர் நதியின் விளைவையும் ஆற்றங்கரையின் அறுப்பையும்
கடல் தாண்டிக்கொண்டுபோவதினால்
அதின் வருமானம் பெருகுகிறது;
பல ஜாதிகளோடு வர்த்தகஞ்செய்தார்களே.
4 சீதோனே, வெட்கப்படு;
சமுத்திரம், சமுத்திரக்கோட்டை, புலம்பி:
கர்ப்பவேதனையும் பிள்ளைப்பேறும் எனக்கு நின்றுபோயிற்று,
நான் இளைஞரைப் பாலிக்கிறதுமில்லை,
பெண்களை வளர்க்கிறதுமில்லையே
என்று சொல்லுகிறதே.
5 இச்செய்தி எகிப்துக்கு எட்டவே
தீருவைப்பற்றிக் கேள்விப்பட்டவைகளினாலே
அவர்கள் நடுநடுங்குவார்கள்.
6 கடற்கரை நாட்டாரே,
நீங்கள் தர்ஷீஸ்மட்டும் கடந்துசென்று அலறுங்கள்.
7 மகிழ்ந்து களித்திருந்த உங்கள் நகரம் இதுதானோ?
அது பூர்வநாள்முதலே நிலைபெற்றிருந்ததே.
தூரத்திலுள்ள பிறதேசங்களிலே குடியிருப்பதற்குத்
தாங்களாகவே கூடிக்கொண்டிருந்தார்களே.
8 கிரீடங்களைத் தரிப்பிக்கும் தீருவுக்கு விரோதமாக
இதை நிர்ணயித்தவர் யார்?
பூமியிலே அதின் வர்த்தகர் பிரபுக்கள்,
அதின் வியாபாரிகள் மதிப்புள்ளவர்கள்.
9 இதை நிர்ணயித்தவர் சேனைகளின் யெகோவாவே;
அகந்தையான மேன்மையைக் குலைக்கவும்
பூமியிலே மதிப்புள்ள யாவருக்கும் அவமதிப்பு உண்டாக்கவும்
இப்படிச் செய்தார்.
10 தர்ஷீஸின் குமாரத்தியே,
நதிபோல நீ தேசமெங்கும் பரவியிரு;
இப்போது கரையில்லை.
11 யெகோவா தமது கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டி
ராஜ்யங்களைக் குலுங்கப்பண்ணினார்;
கானானுக்கு விரோதமாய்க் கட்டளை பிறப்பித்து
அதின் அரண்களை அழிக்க உத்தரவு கொடுத்தார்.
12 ஒடுங்குண்ட கன்னியாகிய சீதோன் குமாரத்தியே,
இனி உனக்குக் களிப்பில்லை;
எழுந்து கித்தீமுக்குக் கடந்துபோ,
அங்கும் உனக்கு அமைதியில்லை,
என்று சொன்னார்.
13 கல்தேயரின் தேசத்தைப் பார்;
அந்த ஜனம் முன்னிருந்ததில்லை;
வனாந்தரத்தாருக்கென அசீரியர் அதைக் காட்டுமிருகக் குடியிருப்பாக்கினார்கள்;
அவர்கள் அதற்கெதிரே கொத்தளங்களை எழுப்பி
அதின் அரமனைகளை இடித்தார்கள்;
அவரோ அதைப் பாழ்மேடாக்கினார்.
14 தர்ஷீஸ் கப்பல்களே, அலறுங்கள்;
உங்கள் அரண் பாழாக்கப்பட்டதே.
15 அக்காலத்திலே தீரு எழுபது வருஷம், ஒரு ராஜ அரசாட்சி காலமெல்லாம், மறக்கப்பட்டிருக்கும்; எழுபது வருஷங்களின் முடிவிலே தீருவுக்குச் சம்பவிப்பது வேசியைப்பற்றிய பாடலுக்கு ஒப்பாம்.
16 மறக்கப்பட்ட வேசியே,
நீ தம்புரு எடுத்து நகரத்தைச் சுற்றித் திரி;
ஜனம் உன்னை நினைப்பதற்கு அதை இனிதாக வாசி,
பாடிக்கொண்டேயிரு.
17 எழுபது வருஷங்களின் முடிவிலே யெகோவா தீருவைப் பார்க்க வருவார், அப்பொழுது அது தன் பணயத்துக்குத் திரும்பி வந்து அகன்ற பூமியிலுள்ள சகல ராஜ்யங்களோடும் வேசித்தனம்பண்ணும்.
18 அதின் லாபமும் அதின் பணயமும் யெகோ

வாவுக்கென்று பிரதிஷ்டை செய்யப்படும்; அது பொக்கிஷமாய்ச் சேர்க்கப்படுவதுமில்லை, பூட்டிவைக்கப்படுவதும் இல்லை, யெகோவாவின் சமீபத்தில் வாசமாயிருக்கிறவர்கள் திருப்திபாகச் சாப்பிடவும் நல்ல வஸ்திரங்களைத் தரிக்கவும் அதின் லாபம் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

**24** இதோ, யெகோவா உலகத்தை வெறுமையும் பாழுமாக்கி,
அதைக் கவிழ்த்து அதின் குடிகளைச் சிதறடிப்பார்.
2 அப்பொழுது ஜனத்துக்கு எப்படியோ அப்படியே ஆசாரியனுக்கும்,
வேலைக்காரனுக்கு எப்படியோ அப்படியே எஜமானுக்கும்,
வேலைக்காரிக்கு எப்படியோ அப்படியே எஜமாட்டிக்கும்,
கொண்டவனுக்கு எப்படியோ அப்படியே விற்றவனுக்கும்,
கடன் கொடுக்கிறவனுக்கு எப்படியோ அப்படியே கடன் வாங்குகிறவனுக்கும்,
வட்டி வாங்குகிறவனுக்கு எப்படியோ அப்படியே வட்டி கொடுக்கிறவனுக்கும்,
எல்லாருக்கும் சமமாகவே நடக்கும்
3 உலகம் முற்றிலும் கொள்ளையாகி முற்றிலும் வெறுமையாகும்;
இது யெகோவா சொன்ன வார்த்தை.
4 உலகம் துக்கத்தினால் வாடும்,
பூச்சகரம் சோர்ந்து வாடிப்போகும்,
உலகத்து ஜனங்களிலே உயர்ந்தவர்கள் சோர்ந்துபோவார்கள்.
5 உலகம் தன் குடிகளினாலே தீட்டுப்பட்டது;
அவர்கள் பிரமாணங்களை மீறி நியமத்தைக் கடந்து,
நித்திய உடன்படிக்கையைத் தள்ளினார்கள்.
6 இதினிமித்தம் சாபம் உலகத்தைப் பட்சிக்கிறது;
அதின் குடிகள் குற்றத்துக்குத் தக்கபடி தண்டிக்கப்படுகிறார்கள்;
உலகத்தார் தகிக்கப்படுகிறார்கள்,
மனுப்புத்திரரில் சிலரே மீந்திருக்கிறார்கள்.
7 திராட்சரசம் துக்கிக்கிறது, திராட்சச்செடி வாடுகிறது;
மனக்களிப்பாயிருந்தவர்கள் எல்லாரும் பெருமூச்சுவிடுகிறார்கள்.
8 மேளசந்தோஷம் ஒய்கிறது,
களிகூருவோரின் சந்தடி ஒழிகிறது,
சுரமண்டலக் கள்ப்பு ஒய்கிறது.
திராட்சரசம் பாடிக்குடியார், 9
மதுபானம் குடிக்கிறவர்களுக்கு அது கசப்பாகும்.
வெறுமையாய்ப்போன நகரம் நொறுங்கிக் 10
கிடக்கிறது,
எவரும் உள் நுழையாதபடி வீடுகளெல்லாம் அடைபட்டுக்கிடக்கின்றன.
திராட்சரசத்தினிமித்தம் வீதிகளிலே கூக் 11
குரல் உண்டு,
எல்லாச் சந்தோஷமும் மங்கிப்போயிற்று,
தேசத்தின் மகிழ்ச்சி அகன்றது.
நகரத்தில் மீதியாயிருப்பது பாழே, 12
வாசல்கள் இடிபட்டுச் சுக்கு சுக்காய் விழுந்தன.
ஒலிவமரத்தை உலுக்கிய பின்னும் 13
திராட்சப் பழங்களைப் பறித்துத் தீர்ந்து பின்பறிப்பு நடக்கும்போதும்
இருப்பதுபோலவே
உலகத்திலும் ஜாதியார் நடுவிலும் கொஞ்சம் மீந்திருக்கும்.
மீந்தவர்கள் சத்தமிட்டுக் கெம்பீரித்து 14
யெகோவாவின் மகத்துவத்தினிமித்தம்
மேல்திசையினின்று கூவி:
இதினிமித்தம் கீழ்திசையில் யெகோவா 15
வையும்
சமுத்திர தீவுகளில் இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவின் திருநாமத்தையும்
மகிமைப்படுத்துங்கள் என்று சொல்லுகிறார்கள்.
நீதிமான்களுக்கு மேன்மை கிடைக்கும் 16
எனப் பாடும் கீதங்களை
பூமியின் கடையாந்தரங்களிலிருந்து
கேட்கிறோம்.
நானே புலம்பி:
அதமானேன், அதமானேன், ஐயோ
எனக்குக் கேடே!
மோசக்காரர் மோசம்செய்கிறார்கள்,
மோசக்காரர் மோசமே செய்கிறார்கள்.
உலகில் குடியிருப்பவர்களே, 17
உங்களுக்குக் கடுங்திகிலும் குழியும் கண்ணியுமே;
திகிலுக்குத்தப்பி ஓடுபவன் குழியில் விழு 18
வான்;
குழியினின்று ஏறுபவன் கண்ணியில் சிக்குவான்;
உயர இருக்கும் மதகுகள் திறவுண்டு
பூமியின் அஸ்திபாரங்கள் அதிரும்.
பூமி நொறுங்கும், நொறுங்கும்; 19
பூலோகம் முறியும், முறியும்;
பூமண்டலம் அசையும், அசையும்.
வெறித்தவனைப்போல் பூமி தள்ளாடும், 20

ஒரு பரண்போல ஆடிப்போம்,
அதின் பாதகம் அதின்மேல் பாரமாயிருப் பதினால்
அது விழுந்துபோம் இனி எழுந்திராது என்று சொல்லுகிறேன்.

21 அக்காலத்தில் யெகோவா உன்னத மான சேனையை உன்னதத்திலும்
பூமியின் ராஜாக்களைப் பூமியிலும் தண் டிப்பார்.

22 அவர்கள் கட்டுண்டவர்களாகக் கெபி யில் ஏகமாய்ச் சேர்க்கப்பட்டுக்
காவலில் அடைக்கப்படுவார்கள்;
பலநாள் சென்றபின் தண்டனை பெறு வார்கள்.

23 அப்பொழுது சேனைகளின் யெகோவா சீயோன் மலையிலும் எருசலேமிலும் ஆ ளுகைசெய்யவே
சந்திரன் வெட்கிச் சூரியன் நாணமுறும்;
அவரைச்சேர்ந்த பெரியோரின் கண் னுக்கு எதிரே மகிமையே.

**25** யெகோவாவே, நீரே என் கடவுள்;
உம்மை உயர்த்தி உமது திருநாமத்தைத் துதிப்பேன்;
நீர் அதிசயமானவைகளைச் செய்தீர்;
பூர்வகால ஆலோசனைகள் சத்தியமும் உறுதியுமானவைகள்.

2 நீர் நகரத்தை மண்மேடாக்கினீர்,
அரணான பட்டணத்தைப் பாழாக்கி னீர்;
அந்நியரின் அரண் ஊராயிராதபடி செய் தீர்;
அது என்றைக்கும் கட்டப்படாதிருக் கும்.

3 ஆகவே பலத்த ஜனம் உம்மை மகிமைப் படுத்தும்,
கொடுமையான ஜாதிகளின் நகரம் உமக்குப் பயப்படும்.
கொடுமையானவர்களின் உக்கிரகோபம்
மதிலை மோதியடிக்கும் பெருமழைபோல் வருகையில்

4 நீர் சிறுமையுற்றவனுக்கும் ஏழைக்கும் அவர்கள் இடுக்கத்தில் அரணானீர்;
பெருமழைக்குத் தப்பும் அடைக்கலமும் வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர்;

5 வறட்சியான இடத்தின் காங்கையைப் போல
அந்நியரின் மும்முரத்தை மேற்கொள்ளு வீர்;
மேகத்தின் நிழலினால் வெயில் தணிவது போல்
கொடியரின் ஆரவாரம் ஒழியும்.

இந்த மலையிலே சகல ஜனங்களுக்கும் 6
ஒரு விருந்தைச்
சேனைகளின் யெகோவா ஆயத்தப்படுத் துவார்;
அதிலே கொழும் பதார்த்தங்களும் பழஞ் திராட்சரசமும் நிறைந்திருக்கும்;
கொழும் பதார்த்தங்கள் ஊன் மிருந்த வை;
பழஞ்திராட்சரசம் வடிகட்டப்பட்டது.

சகல தேசத்தாரையும் மறைத்திருக்கிற 7
மூக்காட்டையும்
சகல ஜாதிகளையும் மேலே மூடியிருக்கிற தையும்
இந்த மலையிலே அகற்றிப்போடுவார்.

அவர் மரணத்தை என்றுமாக விழுங்கு 8
வார்;
யெகோவாவாகிய கடவுள் எல்லா முகங் களிலுமிருந்து கண்ணீரைத் துடைத் துத் தமது ஜனத்தின் நிந்தையைப் பூமியி லிராதபடி முற்றிலும் நீக்கிவிடுவார்;
யெகோவாவே இதைச் சொன்னார்.

அக்காலத்திலே ஜனங்கள்: இதோ, 9
இவரே நமது கடவுள்,
இவருக்கென்று காத்திருந்தோம், இவர் நம்மை ரட்சிப்பார்;
இவரே யெகோவா இவருக்கென்றே காத்திருந்தோம்;
இவருடைய ரட்சிப்பில் களிகூர்ந்து மகி ழுவோம்
என்று சொல்லுவார்கள்.

யெகோவாவின் கரம் இந்த மலையிலே 10
தங்கும்,
கூளம் எருக்கள நீரில் மிதிக்கப்படுவது போல
மோவாப் அவர்கள் இருக்குமிடத்திலே மிதிக்கப்பட்டுப்போம்.

நீந்துகிறவன் நீந்தத் தன் கைகளை விரிப் 11
பதுபோல்
அவர்கள் தங்கள் கைகளை அதன் நடு விலே விரிப்பார்கள்:
அவர்கள் கைகள் சதி சர்ப்பணைகளைச் செய்தாலும்,
அவர்கள் பெருமையை அவர் தாழ்த்தி விடுவார்.

உயர்ந்த மதில்களையுடைய உன் அரண் 12
அவர் இடித்து விழப்பண்ணுவார்;
தரையோடு தாழ்த்தித் தூளில் போடு வார்.

அக்காலத்திலே யூதா தேசத்திலே **26**
இப்பாட்டைப் பாடுவார்கள்:
பலமான நகரம் நமக்குண்டு,

அவர் ஏற்படுத்திய பாதுகாவலே அதற்கு அலங்கமும் வெளிமதிலுமாம்,
2 சத்தியத்தைக் காக்கும் நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிக்கும்படி வாசல்களைத் திறவுங்கள்.
3 உம்மீது சார்ந்திருப்பதால் நிலையான சிந்தையுள்ளோரானவர்களைப் பூரண சமாதானத்திலே காக்கிறீர்.
4 யெகோவாவின்மேல் என்றுமாகச் சார்ந்திருங்கள்; ஆண்டவராகிய யெகோவாவிலே நித்திய கன்மலையுண்டு.
5 உயரத்திலே வாசமாயிருப்பவர்களை அவர் தாழ்ந்துபோகப்பண்ணினார்; உயர்வான நகரத்தைத் தாழ்த்துகிறார்; அதைத் தரைமட்டும் தாழ்த்தித் தூளிலே கிடக்கச் செய்கிறார்.
6 கால் அதை மிதிக்கும், சிறுமையானவர்களின் காலும் எளிமையானவர்களின் அடிகளுமே.
7 நீதிமானுடைய வழி சுமையானது, சுமையுள்ளவரே, நீதிமானுடைய பாதையைச் செம்மையாக்குகிறீர்.
8 யெகோவாவே, நீர் நியாயந்தீர்க்கும் வழியிலே உமக்குக் காத்திருக்கிறோம்; எங்கள் ஆத்துமா வாஞ்சை உமது திருநாமமும் உம்மை நினைப்பதற்குரிய பேருமே.
9 என் ஆத்துமாவில் இரவிலே உம்மை வாஞ்சிக்கிறேன், எனக்குள் இருக்கிற என் ஆவியில் கருத்தாய் உம்மைத் தேடுகிறேன்; உமது நியாயத்தீர்ப்புகள் பூமியின்மேல் வரும்போது பூச்சக்கரத்துக் குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்.
10 தெய்வபயமிலாதவனுக்கு இரக்கம் காட்டினால் நீதியைக் கற்றுக்கொள்ளான்; புண்ணிய பூமியில் அவன் அநியாயஞ் செய்கிறான், யெகோவாவின் மகத்துவத்தை அவன் காண்கிறதில்லை.
11 யெகோவாவே, உமது கை ஓங்கியிருக்கிறது, அவர்களோ அதைக் காண்கிறதில்லை; ஜனத்தைப்பற்றிய உமது வைராக்கியத்தைக் கண்டு வெட்கப்படுவார்கள்; உமது சத்துருக்களுக்கென்று ஏற்படுத்திய அக்கினி அவர்களைப் பட்சிக்கும்.
12 யெகோவாவே, எங்களுக்குச் சமாதானம் உண்டாகச் செய்வீர், நாங்கள் செய்பவைகளையெல்லாம் எங்களுக்கென்று செய்துவருகிறவர் நீரே.
13 எங்கள் கடவுளாகிய யெகோவாவே, உம்மையல்லாமல் வேறே ஆண்டவன் மாரும் எங்களை ஆளுகைசெய்தார்கள்; இனி உம்மைமாத்திரம், உமது திருநாமத்தையே, பிரஸ்தாபப்படுத்துவோம்.
14 செத்தவர்கள் பிழைக்கமாட்டார்கள்; மாண்டவர் திரும்ப எழுந்திரார்; நீர் அவர்களைத் தண்டித்துச் சங்காரித்தீர்; அவர்கள் பேரை முற்றிலும் அழியப் பண்ணினீர்.
15 யெகோவாவே, இந்த ஜாதியைப் பெருகப்பண்ணினீர்; இந்த ஜாதியைப் பெருகப்பண்ணி உமது மகத்துவத்தை விளங்கச்செய்தீர், தேசத்தின் எல்லையை எப்புறமும் நெடுந்தூரம் அகலமாக்கினீர்.
16 யெகோவாவே, நெருக்கத்தில் உம்மைத் தேடினார்கள், உமது தண்டனை அவர்கள்மேல் விழவே அவர்கள் சத்தமின்றி ஜெபித்தார்கள்.
17 பேறுகாலம் சமீபிக்கவே வேதனைப்பட்டுத் தன் அம்பாயத்திலே கூப்பிடுகிற கர்ப்பவதியைப்போல, யெகோவாவே, நாங்கள் உமக்குமுன்பாக இருந்தோம்.
18 நாங்கள் கர்ப்பமாகி வேதனைப்பட்டோம், பெற்றதோ காற்றே; தேசத்தை நாங்கள் ரட்சிக்கவேயில்லை; பூச்சக்கரத்தில் குடியிருப்பதற்கு எவரும் பிறக்கவில்லை.
19 மரித்துப்போன உமது ஜனங்கள் பிழைப்பார்கள், பிரேதமான என்னுடைய ஜனங்கள் எழுந்திருப்பார்கள்; மண்ணிலே படுத்திருக்கிறவர்களே விழித்துக் கெம்பீரியுங்கள்; உமது பனி ஒளிவீசும் பனிபோல் இருக்கும்; மரித்தோரைப் பூமி திரும்ப வரச்செய்யும்.
20 என் ஜனமே, நீ போய் உன் அறைகளுக்குள்ளே புகுந்து உன் கதவுகளைப் பூட்டிக்கொண்டு சினம் கடந்துபோகுமட்டும் கொஞ்ச நேரம் ஒளித்துக்கொள்.
21 இதோ, பூமியில் குடியிருப்போரின் அக்கிரமத்தினிமித்தம்

அவர்களைத் தண்டிப்பதற்கு
யெகோவா தமது ஸ்தானத்திலிருந்து
வெளிப்பட்டு வருவார்;
பூமி தன்னில் சிந்துண்ட இரத்தத்தை
மறையாதிருக்கும்;
தன்னிடத்தில் கொல்லப்பட்டவர்களை
இனி மூடாதிருக்கும்.

**27** அக்காலத்திலே யெகோவா லிவியா
தான் என்னும் விரைந்தோடும் பாம்பை,
லிவியாதான் என்னும் வளைந்தோடும்
சர்ப்பத்தையே,
கடிதும் பெரிதும் பலத்ததுமான தமது
பட்டயத்தால் தண்டிப்பார்;
சமுத்திரத்தில் இருக்கிற வலுசர்ப்பத்
தைக் கொன்றுபோடுவார்.
2 அக்காலத்திலே மிகுதியான திராட்சரசம்
தரும்
திராட்சத்தோட்டத்தைப் பற்றிப் பாடுங்
கள்:
3 யெகோவாவாகிய நானே அதைக் காக்
கிறேன்,
அடிக்கடி அதற்குத் தண்ணீர் பாய்ச்சுகி
றேன்,
ஒருவரும் அதைச் சேதப்படுத்தாதபடி
அதை இரவும் பகலும் காத்துக்கொள்ளு
கிறேன்;
4 நான் அதன்மேல் கோபங்கொள்வதில்லை,
முட்செடியும் நெருஞ்சிலும் எனக்கு
விரோதமாய் யுத்தத்திற்கு வந்தால்
நான் அவைகளை எதிர்த்துச்சென்று
அவைகளை ஏகமாய்க் கொளுத்திவிடு
வேன்.
5 அப்படிச் செய்யாமல்
என்னிடம் அடைக்கலம் புகுந்து
என்னோடு சமாதானஞ் செய்தால் நல
மாம்,
என்னோடு சமாதானமே செய்யவேண்
டும்.
6 வருங்காலத்தில் யாக்கோபு வேர்கொள்
ளும்,
இஸ்ரவேல் துளிர்த்துப் பூக்கும்,
பூச்சக்கர முழுதையும் அவை தம் கனி
களால் நிரப்பும்
7 அவர் இஸ்ரவேலை அடித்தது
இஸ்ரவேலை அடித்தவர்களை அவர் அடித்
ததுபோலவோ?
இவன் கொலையுண்டது
கடவுளால்கொலையுண்டவர்போலவோ?
8 அவர் அவர்களைத் துரத்தி அகற்றிவிட்ட
காலத்தில்
அவர்களோடே வழக்காடினதும்
கீழ்காற்றுகாளிலே தமது கடுங்காற்றினால்
அவர் அவர்களை ஓட்டிவிட்டதும் உண்
மையே,
ஆயினும் அப்படிச் செய்ததினாலே 9
யாக்கோபின் அக்கிரமத்துக்குப் பிராயச்
சித்தம் உண்டாகும்,
பலிபீடக்கற்களெல்லாம் நொறுக்கப்
பட்ட சுண்ணாம்புக் கற்கள் போலாக்
கப்படுவதும்,
மரச் சிலைகளும் சூரியவணக்கச் சிலை
களும் இன்னும் ஸ்தாபிக்கப்படாதிருப்
பதும்
அவனுடைய பாவநிவாரணத்தினால்
விளையும் பூரணபலனும்.
அரணான நகரம் அவாந்தரையாகும், 10
அது ஜனமில்லா இடமாகி விடப்பட்டு
வனாந்தரமாகும்;
கன்றுக்குட்டிகள் அங்கே மேய்ந்து
அங்கே படுத்துக்கொண்டு
அதிலுள்ள தழைகளைத் தின்னும்.
அதின் கிளைகள் உலரும்போது ஒடிக்கப் 11
படும்,
ஸ்திரீகள் வந்து அவைகளை அடுப்பு
நெருப்புக்காய் உபயோகிப்பார்கள்;
அது உணர்வுள்ள ஜனமல்ல;
ஆகவே அதைப் படைத்தவர் அதற்கு
இரங்கார்,
அதை உருவாக்கினவர் அதற்குக் கிரு
பை காட்டார்.
அக்காலத்திலே யெகோவா வெள்ள 12
மாய் ஓடும் ஆற்றங்கரை தொடங்கி
எகிப்தின் சிற்ருறுமட்டுமுள்ள விளை
வைப் போரடிப்பார்;
இஸ்ரவேல் புத்திரரே, நீங்கள் ஒவ்வொ
ருவராய்ச் சேர்க்கப்படுவீர்கள்.
அக்காலத்திலே பெரிய எக்காளம் ஊதப் 13
படும்,
அப்பொழுது அசீரியாதேசத்திலே காண
மற்போனவர்களும்
எகிப்து தேசத்திலே துரத்திவிடப்பட்ட
வர்களும் வந்து
எருசலேமிலுள்ள பரிசுத்த பர்வதத்தி
லே யெகோவாவைப் பணிந்துகொள்
ளுவார்கள்.

**28** எப்பிராயீமுடைய வெறியின் பெரு
மையான கிரீடத்துக்கு ஐயோ ஆபத்து!
அவர்களுடைய மேன்மையான அலங்
காரம் வாடிப்போன புஷ்பமே!
அது மதுபானத்தால் மயங்கினவர்களின்
செழிப்பான பள்ளத்தாக்கின்மேலே சிக
ரத்திலுள்ளது;

2 இதோ, வல்லமையுள்ள பராக்கிரமசாலி
ஒருவன்
ஆண்டவரிடமிருக்கிறான்;
அவன் கல்மழைபோலவும் சங்காரப்
புசல்போலவும்
புரண்டுவருகிற பெருவெள்ளம்போல
வும் வந்து
வலிமையொடு அதைத் தரையில் வீழ்த்
திவிடுவான்.
3 எப்பிராயீமிலுள்ள வெறியரின் பெரு
மையான கிரீடம்
காலால் மிதியுண்டுபோம்.
4 செழிப்பான பள்ளத்தாக்கின்மேலே கெ
ரத்திலுள்ள
மேன்மையான அலங்காரமாகிய வாடிய
புஷ்டம்,
பருவகாலத்தின்முன் பழுத்த அத்திப்
பழத்தின் கதிபோறும்;
அப்பழத்தை ஒருவன் காணவே அதைப்
பறித்துக்
கையிலெடாமுன் விழுங்கிவிடுகிறான்.
5 அக்காலத்திலே சேனைகளின்
யெகோவா
தமது ஜனத்தில் மீந்தவர்களுக்கு மகி
மைக் கிரீடமும்
அலங்காரமுடியுமாவார்.
6 நியாயாசனத்திலிருப்பவனுக்கு நியாயத்
தின் ஆவியாகவும்
சத்துருவை ஊர்வாசலுக்கு வெளியே
திருப்பி ஓட்டுகிறவர்களின் பராக்கிரம
மாகவும் இருப்பார்.
7 அப்படியிருந்தும் இவர்களும் திராட்
சரசத்தால் மயங்கி
மதுபானத்தால் தள்ளாடுகிறார்கள்;
ஆசாரியனும் தீர்க்கதரிசியும் மதுபா
னத்தால் மதிமயங்கித்
திராட்சரசத்தால் மேற்கொள்ளப்பட்டு
மதுபானத்தினால் தள்ளாடுகிறார்கள்.
தீர்க்கதரிசனம் சொல்லுகையிலும் தீர்
மயக்கம்,
நியாயம் விசாரிக்கையிலும் உடல் ஆட்
டமே.
8 சாப்பிடுமிடமெல்லாம் அசுசியான வாந்
தியே,
சுத்தமான இடமென்றில்லை.
9 அவர்கள் வாய் குழறி:
அவர் யாருக்குப் போதனை செய்வார்?
கேட்பதை உணரும்படி யாருக்குப்
புத்திசொல்லுவார்?
நாங்கள் பால் மறந்தவர்களா?
தாய் மூலையிலிருந்து பிரிக்கப்பட்ட
குழந்தைகளா?
10 கட்டளைமேல் கட்டள கட்டளைமேல் கட்ட
ளை மட்டளவ்மேல் மட்டளவ் மட்டளவ்மேல்
மட்டளவ்
இங்கே கொஞ்சம் அங்கே கொஞ்சமாம்
என்கிறார்கள்.
11 சரி, மிலேச்சர் வாயாலும் அந்திய
பாஷையாலும்
அவர் இந்த ஜனத்தினிடம் பேசுவார்.
12 அவர் முன்னமே அவர்களோடே பேசி:
இதுவே இளைப்பாறுமிடம்,
தளர்ந்தவனை இளைப்பாறச் செய்யுங்கள்;
இதுவே அமர்ந்திருக்குமிடம், என்று
சொன்னார்;
அவர்களுக்கோ கேட்க மனமில்லை.
13 ஆகவே யெகோவாவும் இவ்வார்த்தை
களையே சொல்லுவார்,
கட்டளைமேல் கட்டளை, கட்டளைமேல்
கட்டளை;
மட்டளவின்மேல் மட்டளவு, மட்டள
வின்மேல் மட்டளவு;
இங்கே கொஞ்சம் அங்கே கொஞ்சம்,
அவர்கள் இப்படிச் சொல்வதினால்
அவர்கள் பின்னுக விழுந்து நொறுங்
குண்டுபோவார்கள்;
சிக்குண்டு பிடிபடுவார்கள்.
14 ஆகையால் பரியாசக்காரரே, எருச
லேமிலுள்ள இந்த ஜனத்தை ஆளுகிற
வர்களே,
யெகோவாவின் வார்த்தையைக் கேளுங்
கள்.
15 நீங்கள்: மரணத்தோடே உடன்படிக்
கையையும்
பாதாளத்தோடே ஒப்பந்தமும் பண்ணி
னோம்
வாதை பெருவெள்ளமாய்ப் புரண்டு
வரும்போது
அது எங்களை அணுகாது;
நாங்கள் பொய்யை எங்களுக்கு அடைக்
கலமாக்கினோம்,
வஞ்சனை மறைவிலே வந்து அடைந்
தோம் என்கிறீர்களே.
16 ஆகவே யெகோவாவாகிய ஆண்டவர்
உரைக்கிறார்:
இதோ, அஸ்திபாரக்கல் ஒன்றை நான்
சீயோனிலே வைக்கிறேன்;
அது பரீட்சிக்கப்பட்டதும் விலைமதிப்
பில்லாததும்
அசையாததுமான கோடிக்கல்;
நம்பிக்கையாயிருப்பவன் பயந்தோடிப்
போகான்.
17 நான் நியாயத்தை அளவு நூலும்,
நீதியைத் தூக்கு நூலுமாக வைப்பேன்;

பொய் என்னும் அடைக்கலத்தைக் கல்
மழை அழித்துவிடும்;
மறைவிடத்தின்மேல் வெள்ளம் புரண்டு
போகும்.
18 நீங்கள் மரணத்தோடு செய்த உடன்
படிக்கை அற்றுப்போம்;
நீங்கள் பாதாளத்தோடு செய்த ஒப்பந்
தம் நிற்காதேபோம்;
வாதை புரண்டு வரும்போது அதின் கீழ்
மிதிக்கப்படுவீர்கள்.
19 அது புரண்டு வரும்போதெல்லாம் அதில்
அகப்படுவீர்கள்;
அது காலைதோறும் புரண்டுவரும்,
இரவும் பகலும் வந்துவிடும்,
அச்செய்தியைக் கவனித்துச் சிந்திப்பது
பயங்கரமே.
20 கால் நீட்டப் படுக்கையின் நீளம் போ
தாது,
சுற்றி மூடப் போர்வையின் அகலமும்
போதாது.
21 யெகோவா பெராசீம் மலையிலேபோல
எழும்புவார்,
கிபியோன் பள்ளத்தாக்கிலேபோலக்
கோபங்காட்டுவார்,
அவர் தமது செயலை, அபூர்வச்செயலை
யே, செய்வார்,
அவர் தமது வேலையை, ஆச்சரிய வேலை
யையே, நிறைவேற்றுவார்.
22 இப்பொழுதும் பரியாசம் பண்ணுகிறவர்
கள்;
பண்ணினால் உங்கள் கட்டுகள் பலப்
பட்டுப்போம்;
உலகமெங்கும் நிர்ணயிக்கப்பட்ட
சங்கார செய்தியைச்
சேனைகளின் யெகோவாவாகிய ஆண்டவ
ரிடமிருந்து கேள்விப்பட்டிருக்கிறேன்.
23 செவிகொடுங்கள், என் குரலைக்
கேளுங்கள்;
நான் சொல்வதைக் கவனித்துக் கேளுங்
கள்.
24 விதைப்பதற்கு உழுகிறவன் நாள்தோறும்
உழுதுகொண்டேயிருப்பானோ?
தன் நிலத்தைக்கிளறிப் பரம்படித்துக்
கொண்டே இருப்பானோ?
25 அவன் அதை மட்டமாக நிரவினபின்பு
உளுந்தைத்தெளித்து, சீரகத்தைத் தூவி
அதற்கேற்ற இடத்திலே
கோதுமை, கேழ்வரகு, வாற்கோதுமை
இவற்றைப் போட்டு
ஓரங்களிலே கம்பையும் விதைக்கிறான்
அல்லவா?
26 அவனுடைய கடவுள்
அவனுக்குச் சரியாகவே போதித்துக்
காட்டுகிறார்.
27 உளுந்து போரடி கருவியாலே போரடிக்
கப்படுகிறதில்லை,
சீரகத்தின்மேல் வண்டி உருளையை உருட்
டுவதுமில்லை;
உளுந்து கோலினாலும் சீரகம் தடியினா
லும் அடிக்கப்படும்.
28 ஆகாரத்துக்குரிய தானியம் இடிக்கப்
படுகிறதா?
இடைவிடாமல் அவன் அதைப் போ
ரடிக்கிறதில்லை,
தன் வண்டியின் உருளையையும் தன் குதி
ரையையும்
அதின்மேல் செல்லச் செய்கிறதில்லை;
அதை நசுக்கிவிடமாட்டார்கள்.
29 இதுவும் சேனைகளின் யெகோவாவினிட
மிருந்து வந்த அறிவே,
அவர் ஆலோசனையில் அதிசயமானவர்,
ஞானத்தில் மகத்துவமானவர்.

29 தாவீது பாளயமிறங்கியிருந்த நகர
மாகிய
அரியேலே, அரியேலே, ஐயோ உனக்குக்
கேடாம்!
வருஷம் கடந்து, அதின் உற்சவங்க
ளெல்லாம் முடிந்தபின்
2 அரியேலுக்கு இடுக்கண் வரச்செய்
வேன்;
அப்பொழுது துயரும் சஞ்சலமும் உண்
டாகும்,
எனக்கோ அது அரியேலாகவே இருக்
கும்.
3 உன்னைச் சூழப் பாளயமிறங்கி,
மேடுகள் எழுப்பி உன்னை வளைந்து,
உனக்கு விரோதமாகக் கொத்தளங்களை
எடுப்பிப்பேன்.
4 அப்பொழுது நீ தாழ்த்தப்பட்டுத் தரையி
லிருந்து பேசுவாய்;
நீ தாழ்ந்துகுரலாய் மண்ணிலிருந்து பேசு
வாய்;
உன் சத்தம் அஞ்சனம்பார்க்கிறவனு
டைய சத்தம்போல் தரைகின்று வரும்,
உன் சொற்கள் மண்ணிலிருந்து கசகு
சென்று கேட்கும்.
5 உன்மேல் வருகிற அந்நியரின் திரள் புழு
தித்தூள்போலவும்
கொடியரின் திரள் பறக்கும் பதர்களைப்
போலவும்
பரவியிருக்கும்;
அது திடீரென்று சடுதியாய்ச் சம்பவிக்
கும்.

6 இடிமுழக்கம், பூமி அதிர்ச்சி, பேரிரைச்சல்,
புசல், பெருங்காற்று, பட்சிக்கிற அக்கினி ஜ்வாலை
இவற்றினால் சேனைகளின் யெகோவா உன்னைத் தண்டிப்பார்.
7 அரியேலின்மேல் யுத்தம்பண்ணுகிற திரளான சகல ஜாதிகளும்
அதின்மேலும் அதின் அரண்மேலும் யுத்தம்பண்ணி
அதற்கு இடுக்கண்செய்கிற அனைவரும்
இராக்கால சொப்பன தரிசனம்போலாவார்கள்.
8 பசியாயிருக்கிறவன் தான் புசிக்கிறதாகச் சொப்பனம் கண்டு
விழிக்கும்போதோ வெறுமையாயிருக்கிறதுபோலவும்,
தாகமாயிருக்கிறவன் தான் குடிக்கிறதாகச் சொப்பனம்கண்டு
விழிக்கும்போதோ விடாய்த்து தவனமாயிருக்கிறதுபோலவும்,
சீயோன்மலைக்கு விரோதமாக யுத்தம் பண்ணுகிற
திரளான சகலஜாதியாரும் இருப்பார்கள்.
9 பிரமித்து நில்லுங்கள், பிரமிப்படையுங்கள்;
கண்ணிலார்போலிருங்கள், கண்ணிலாரேயாகுங்கள்;
வெறித்திருக்கிறார்கள், திராட்சரசத்தினால் அல்ல;
தள்ளாடுகிறார்கள், மதுபானத்தினால் அல்ல.
10 யெகோவா உங்கள்மேல் கனநித்திரையின் ஆவியை வரப்பண்ணி,
தீர்க்கதரிசிகளாகிய உங்கள் கண்களை அடைத்து
ஞானதிருஷ்டிகராகிய தலைவரை மூடிப்போடுவார்.
11 இதைப்பற்றிய தரிசனமெல்லாம்
முத்திரையிடப்பட்ட புஸ்தகத்தின் வசனங்கள்போல் உங்களுக்காகும்;
வாசிக்கத் தெரிந்த ஒருவனிடம் அதைக் கொடுத்து,
நீ இதை வாசி என்றால்,
அவன், முடியாது, இது முத்திரையிட்டிருக்கிறது என்பான்.
12 வாசிக்கத் தெரியாதவனிடம் புஸ்தகத்தைக்கொடுத்து,
நீ இதை வாசி என்றால்,
அவன், எனக்கு வாசிக்கத் தெரியாது என்பான்.

13 இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேருகிறார்கள்;
தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்;
அவர்கள் இருதயத்துக்கும் எனக்குமோ வெகுதூரம்;
அவர்கள் எனக்குப் பயப்படுகிறபயம்
அவர்கள் மனப்பாடம் செய்த மனுஷகற்பனையே.
14 ஆதலால், இதோ, நான் இந்த ஜனங்களுக்குள்ளே மறுபடியும் ஒரு அதிசயத்தைச் செய்வேன்;
அது அற்புதமும் ஆச்சரியமுமானது;
அவர்களுடைய ஞானிகளின் ஞானம் அற்றுப்போம்,
அவர்களுடைய விவேகிகளின் விவேகம் மறைந்துபோம்
என்று ஆண்டவர் சொல்லுகிறார்.
15 யெகோவாவுக்கு மறைவாயிருக்கும்படி
ஆழத்தில் ஆலோசிக்கிறவர்களுக்கு ஐயோ கேடாம்!
அவர்கள் செய்கைகள் இருளிலே நடைபெறுகின்றன.
நம்மைக் காண்பவர்யார்? நம்மை அறிபவர்யார் என்கிறார்களே.
16 தாறுமாறுள்ளவர்களே!
களிமண்ணுக்குச் சமானமாகக் குயவனை எண்ணலாமோ?
செய்யப்பட்டது தன்னைச் செய்தவனைப் பற்றி:
அவன் என்னைச் செய்யவில்லை என்று சொல்லலாமோ?
உருவாக்கப்பட்டது தன்னை உருவாக்கினவனைப்பற்றி:
அவனுக்குப் புத்தியில்லையென்று சொல்லலாமோ?
17 இன்னும் கொஞ்சக்காலத்தில் லீபனோன் ஒரு பழமரத் தோப்பாகும்;
தோப்பு காடாக எண்ணப்படும்.
18 அக்காலத்திலே செவிடர் வாசிக்கப்படும் வசனங்களைக் கேட்பார்கள்;
குருடரின் கண்கள் இருளுக்கும் அந்தகாரத்துக்கும் நீங்கலாகிப் பார்க்கும்.
19 சிறுமையானவர்கள் யெகோவாவுக்குள் முன்னிலும் மகிழ்வார்கள்;
மனுஷரில் ஏழையானவர்கள் இஸ்ரவேலின் பரிசுத்தருக்குள் களிகூருவார்கள்.
20 கொடியன் அற்றுப்போவான்,
பரியாசக்காரன் இல்லாமற்போவான்.
அக்கிரமத்தை யோசிக்கிற யாவரும் சங்கரிக்கப்படுவார்கள்;

21 தங்கள் பேச்சினால் ஒருவனைக் குற்ற
வாளியாக்கி
நியாயஸ்தலத்திலே விசாரணைசெய்பவனை
ஏமாற்றி
நீதிமான் வழக்கைப் பொய்யால் புரட்டு
கிறார்களே.
22 ஆகையால் ஆபிரகாமை மீட்டுக்கொண்
ட யெகோவா
யாக்கோபின் வம்சத்தைப் பற்றிப்பேசி:
இனி யாக்கோபு வெட்கத்துக்காளாவ
தில்லை,
இனி அவன் முகம் செத்துப்போவது
மில்லை.
23 அவன் பிள்ளைகள் என் கரங்களின் செய
லைத்
தங்கள் நடுவிலே காணும்போது
என் நாமத்தைப் பரிசுத்தப்படுத்துவார்
கள்;
யாக்கோபின் பரிசுத்தரை அவர்கள் பரி
சுத்தப்படுத்தி
இஸ்ரவேலின் கடவுளுக்குப் பயப்படு
வார்கள்.
24 தடுமாறும் மனதுடையவர்கள் உணர்
வடைவார்கள்,
முறுமுறுக்கிறவர்கள் போதனையை ஏற்
றுக்கொள்வார்கள்
என்று சொன்னார்.

**30** முரட்டாட்டமுள்ள பிள்ளைகளுக்கு
ஐயோ கேடாம்!
இது யெகோவாவின் திருவாக்கு.
என்னை அல்லாமல் ஆலோசனைபண்ணு
கிறார்கள்,
என் ஆவியை அல்லாமல் உடன்படிக்
கை செய்கிறார்கள்,
இப்படிச் செய்து பாவத்தோடே பாவத்
தைக் கூட்டுகிறார்கள்.
2 என் வாய்ப்பிறப்பைக் கேளாமல்
அவர்கள் எகிப்துக்குப் போகிறார்கள்;
பார்வோனின் பலத்தினால் பலம் பெறவும்
எகிப்தின் நிழலிலே அடைக்கலம் புகவும்
விரும்புகிறார்கள்.
3 பார்வோனின் பலம் உங்களுக்கு வெட்க
மாகும்,
எகிப்து நிழல் அடைக்கலம் உங்களுக்கு
இலச்சையாகும்.
4 அவர்கள் அதிபதிகள் சோவானுக்கு வந்
தாலும்
அவர்கள் ஸ்தானபதிகள் கானேஸ்மட்டும்
வந்தாலும்
5 அந்த ஜனத்தின் நிமித்தம் யாவரும் வெட்
கமுறுவார்கள்;
அவர்கள் உதவிசெய்ய மூடியாதவர்கள்,
அவர்களால் சகாயமுமில்லை, உதவியு
மில்லை;
அவர்களால் வருவது வெட்கமும் அவ
மானமுமே.
6 தென் னாட்டு மிருகங்களின்மேல்
விழுந்த கடினவாக்கு:
அந்த நாடு நெருக்கமும் இடுக்கணும்
உள்ளது;
பெண் சிங்கம், வீரசிங்கம், விரியன்,
பறக்கிற விஷப்பாம்பு இவை நிறைந்த
து;
இப்படிப்பட்ட நாட்டின் வழியாக,
அவர்கள் தங்கள் கழுதைகளுடைய மு
தின்மேல் தங்கள் ஆஸ்திகளையும்
ஒட்டகத்திமில்மேல் தங்கள் பொக்கி
ஷங்களையும் ஏற்றி,
உதவிசெய்ய மூடியாத ஜனத்தினிடம்
கொண்டு போகிறார்கள்.
7 எகிப்தியர் சகாயமென்பது வெறுங்காற்
றும் வீணுமாம்;
ஆகவே அதற்குச் சும்மா இருக்கும் ரா
காப்
என்று பேர் வழங்கும்.
8 இப்பொழுது நீ போய்,
இது பிற்காலத்துக்கு என்றைக்கும் இ
ருக்கும்படி
இதை அவர்கள் பார்க்க ஒரு பலகை
யில் எழுதி
ஒரு புஸ்தகத்திலே வரை.
9 இவர்கள் முரட்டாட்டமுள்ள ஜனம்,
பொய்பேசுகிற பிள்ளைகள்,
யெகோவாவின் பிரமாணத்தைக் கேட்க
மனதில்லாத புத்திரர்.
10 இவர்கள் ஞானதிருஷ்டிகாரிடம்:
ஞானதிருஷ்டி வேண்டாம் என்றும்,
தரிசனங்காண்டுரைப்பவரிடம்:
நியாயமான தரிசனம் எங்களுக்கு
உரைக்கவேண்டாம்;
எங்களுக்கு இதமான சொற்களையே
உரையுங்கள்;
மாயமானவைகளைக்கண்டு சொல்லுங்கள்
என்றும்
11 நீங்கள் வழியை விட்டுப்போங்கள்,
பாதையினின்று விலகுங்கள்
இஸ்ரவேலின் பரிசுத்தர் எங்கள் முன்
பாக இராதபடி செய்யுங்கள்
என்றும் சொல்லுகிறார்கள்.
12 இஸ்ரவேலின் பரிசுத்தரோ பதிலுரைத்
து:
நீங்கள் இந்த வார்த்தையை அசட்டை
செய்து

கொடுமை, மாறுபாடு இவற்றில் நம்பிக்கைவைத்து இவற்றைச் சார்ந்துகொள்ளுகிறபடியால்,

13 இந்த அக்கிரமம் உங்களுக்கு உயர்ந்த சுவரில் விழப் பிதுங்கி நிற்கிற வெடிப்பைப்போல இருக்கும்; அது திடீரென க்ஷணநேரத்தில் இடிந்து விழும்.

14 இடிந்துவிழவே குயக்கலம்போல் கொறுங்குண்டுபோம்; ஒன்றும் தப்பாது, எல்லாம் உடைந்துபோம்; அடுப்பிலே நெருப்பு எடுக்கிறதற்கும் குளத்திலே தண்ணீர் மொள்ளுகிறதற்கும் உடைந்த துண்டுகளில் ஒரு ஓடாகிலும் அகப்படாதே போம் என்று சொல்லுகிறார்.

15 இஸ்ரவேலின் பரிசுத்தரெனும் யெகோவாவாகிய ஆண்டவர் உங்களை எச்சரித்து: நீங்கள் மனந்திரும்பி அமர்ந்திருந்தால் ரட்சிக்கப்படுவீர்கள், அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்களுக்கு பலமாகும் என்று சொன்னார்; நீங்களோ அப்படிச்செய்ய மனதற்று,

16 அப்படியல்ல, குதிரைகளின்மேல் ஏறி ஓடிப்போவோம் என்றீர்கள், —அப்படியே நீங்கள் ஓடவேவேண்டும்.— வேகமான வாகனங்களின்மேல் ஏறிப் போவோம் என்றீர்கள், —உங்களைத் துரத்துகிறவர்கள் வேகமாகவே வருவார்கள்

17 ஒருவன் பயமுறுத்த உங்களில் ஆயிரம் பேர் ஓடுவார்கள், ஐந்துபேர் பயமுறுத்தவே மலையுச்சியிலுள்ள தனிக்கம்பத்தைப் போலவும் மேட்டின்மேலுள்ள கொடியொன்றைப் போலவும் மீந்திருக்குமட்டும் நீங்கள் ஓடுவீர்கள்.

18 ஆனாலும் உங்களுக்கு இரக்கம்பாராட்டும்படி யெகோவா காத்திருப்பார்; உங்கள்மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்; யெகோவா நியாயம்செய்யும் கடவுள்; அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்.

19 சீயோனிலுள்ள ஜனமே! எருசலேமில் வாசம்பண்ணுகிறவர்களே, நீங்கள் அழவேவேண்டாம், நீங்கள் கூப்பிடும்போது அவர் இரங்கிக் கேட்பது நிச்சயம்; அதைக் கேட்கவே உங்களுக்குப் பதில் அருளுவார்.

20 ஆண்டவர் உங்களுக்கு இடுக்கத்தின் அப்பத்தையும் ஒடுக்கத்தின் தண்ணீரையும் கொடுத்தாலும் உன் போதகர்கள் இனி மறைந்திருக்க மாட்டார்கள், உன் கண்கள் உன் போதகர்களை நோக்கிக்கொண்டே யிருக்கும்.

21 நீங்கள் வலதுபுறம் விலகும்போதும் இடதுபுறம் விலகும்போதும், வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப்பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்.

22 உன் சுரூபங்களை மூடிய வெள்ளித் தகட்டையும் உன் வார்ப்பு விக்கிரகங்களை மூடிய பொன்னையும் தீட்டாக எண்ணி, அவைகளைத் தீட்டுப்பட்ட வஸ்திரம்போல் எறிந்துவிட்டுச் சீ! போ என்பாய்.

23 அப்பொழுது நீ நிலத்தில் விதைக்கும் உன் விதைக்கு அவர் மழையைத் தருவார்; நிலத்தின் விளைவினால் ஆகாரத்தைக் கொடுப்பார்; அது திருப்தியையும் பலத்தையும் கொடுக்கும்; அக்காலத்திலே உன் மந்தைகளுக்கு விஸ்தாரமான மேய்ச்சலிருக்கும்.

24 நிலத்தை உழுகிற எருதுகளும் கழுதை மறிகளும் முறத்தினாலும் தூற்றுக்கூடையினாலும் தூற்றப்பட்டு, உப்பிட்ட தானியங்களைத் தின்னும்.

25 கோபுரங்கள் விழுகிற மகா சங்காரத்தின் நாளிலே உன்னதமான சகல மலைகளின்மேலும் உயரமான சகல மேடுகளின்மேலும் ஆறுகளும் நீரோடைகளும்உண்டாகும்.

26 யெகோவா தமது ஜனத்தின் முறிவைக் கட்டி அதின் அடிக்காயத்தைக் குணமாக்கும் நாளிலே, சந்திரவெளிச்சம் சூரியவெளிச்சம்போலவும் சூரியவெளிச்சம் ஏழத்தனையாகி,

ஏழுபகலின் வெளிச்சம்போலாம்.
27 இதோ, யெகோவாவின் நாமம் தூரத்திலிருந்து வருகிறது,
அது கோபத்தினால் எரிந்து
மண்டி எழும் புகையோடு வருகிறது,
அவருடைய உதடுகள் சினம் நிறைந்தன,
அவருடைய நாவு பட்சிக்கிற அக்கினி போலிருக்கும்.
28 அவர் ஊதும் சுவாசம் கழுத்தளவாய்ப் புரண்டோடும்
ஆற்றுவெள்ளம்போலிருக்கும்;
நாசம் என்னும் சல்லடையிலே அவர் ஜாதிகளை அரிப்பார்;
தப்புவழி நடத்தும் கடிவாளத்தை
ஜாதியாரின் வாயிலே போடுவார்.
29 நீங்களோ திருஉற்சவம் கொண்டாடும் இரவிலே
பாடுவதுபோலப் பாடுவீர்கள்;
யெகோவாவின் பர்வதமாகிய இஸ்ரவேலின் கன்மலையண்டைக்குப் போக
நாகசுரத்தோடே நடந்துவருகிறபோது மகிழுவதுபோல்
இதயத்திலே மகிழுவீர்கள்.
30 யெகோவா தமது மகத்துவமான சத்தத்தைக் கேட்கப்பண்ணுவார்;
உக்கிரகோபம், பட்சிக்கிற அக்கினி ஜ்வாலை, வெள்ளம்,
பெருமழை, கல்மழை இவற்றினால்
தமது புயத்தின் அடி காணப்படும்படி செய்வார்.
31 அப்பொழுது யெகோவாவின் சத்தத்தினாலே அசீரியன் நிலைபடுவான்,
அவர் அவனைத் தடியினால் அடிப்பார்.
32 யெகோவா தாம் குறித்த தடியினாலே
அவனை ஒவ்வொரு அடி அடிக்குந்தோறும்
மேளமும் தம்புரும் கூடவே முழங்கும்;
அவர் கையை ஓங்கி யசைத்து அவர்களோடு போர்செய்வார்.
33 வெகுகாலத்தின் முன்னே
தோப்பேத் என்னும் ஸ்தலம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது,
மோளேகுக்கென்றே அது ஆயத்தமானது;
அதை ஆழமும் அகலமுமாக்கினார்;
அக்கினிக்குண்டத்திலே நெருப்பும் மிகுந்த விறகுமுண்டு;
யெகோவாவின் சுவாசம் கந்தகவெள்ளமாகி அதைக் கொளுத்தும்.

**31** சகாயம் பெறும்படி எகிப்துக்குப் போகிறவர்களுக்கு ஐயோ கேடாம்!
அவர்கள் குதிரைகள்மேல் சார்ந்திருக்கிறார்கள்.
இரதங்கள் அநேகம் உண்டென்றும்
குதிரைவீரர் மிகப் பலரென்றும்
அவற்றில் நம்பிக்கையாயிருக்கிறார்கள்;
இஸ்ரவேலின் பரிசுத்தரையோ சார்ந்திருக்கவில்லை;
யெகோவாவைத் தேடவில்லை.
அவரும் ஞானமுள்ளவர்; 2
அவர் தம்முடைய வார்த்தைகளை மாற்றுமல் தீங்கை வரச்செய்வார்;
தீமைசெய்கிறவர்களின் வீட்டுக்கும்
அக்கிரமக்காரரின் சகாயத்துக்கும்
விரோதமாக எழும்புவார்.
எகிப்தியர் மனுஷரே, தெய்வம் அல்ல; 3
அவர்கள் குதிரைகள் மாம்சமே, ஆவியல்ல;
யெகோவா தமது கரத்தை நீட்டவே
சகாயம் செய்கிறவன் இடறுவான்,
சகாயம் பெறுகிறவனும் விழுவான்;
அனைவரும் ஏகமாய் அழிந்துபோவார்கள்.
யெகோவா என்னோடு பேசி: 4
சிங்கமும் பாலசிங்கமும்
தங்கள் இரையைப் பிடித்திருக்கும்போது
கெர்ச்சித்துத்
தங்களுக்கு விரோதமாய்க் கூடுகிற
திரளான மேய்ப்பரின் சத்தத்தினாலே
திகில்கொள்ளாமலும்
அவர்கள் கூக்குரலினாலே பயந்தோடாமலும் இருக்கும்;
அதுபோலவே சேனைகளின் யெகோவா
சீயோன் மலையிலும் அதின் மேட்டின்
மேலும் யுத்தம்பண்ண இறங்குவார்.
பறந்துகாக்கிற பட்சிகளைப்போலச் 5
சேனைகளின் யெகோவா எருசலேமைக் காப்பார்;
அவர் காத்துத் தப்பப்பண்ணுவார்;
அவர் அழிக்காமல் கடந்துவந்து விடுவிப்பார்.
இஸ்ரவேல் புத்திரர் முற்றிலும் விட்டு 6
விலகினவரிடம்
நீங்கள் திரும்பி வாருங்கள்.
அக்காலத்தில் உங்களில் ஒவ்வொருவரும் 7
தங்கள் வெள்ளி விக்கிரகங்களையும்
பொன் விக்கிரகங்களையும் வெறுத்துவிடுவீர்கள்;
உங்களுக்குப் பாவமாக உங்கள் கைகள்
அவற்றைச் செய்திருந்தனவே.
அப்பொழுது பட்டயத்தாலே அசீரியன் 8
விழுவான்;

விழச்செய்யும் பட்டயம் வீரனுடைய
தல்ல,
அவனைப் பட்சிக்கும் பட்டயம் மானிட
பட்டயமல்ல,
பட்டயத்துக்கு அஞ்சி அவன் ஓடுவான்;
அவன் வாலிபர் அடிமைகளாவார்கள்.
9 அவனுடைய கன்மலை பயத்தினால்
ஒழிந்துபோம்,
அவர்களுடைய அதிபதிகள் திகில்
கொண்டு கொடியைவிட்டு ஓடுவார்கள்,
இது யெகோவாவின் திருவாக்கு;
அவர் நெருப்பு சீயோனிலும்
அவர் சூளை எருசலேமிலும் இருக்கிறது.

**32** இதோ, ஒரு ராஜா நீதியாக
அரசாளுவார்;
அதிபதிகளும் நியாயமாக அதிகாரம் செ
லுத்துவார்கள்.
2 அவர்களில் ஒவ்வொருவரும் காற்றுக்கு
ஒதுக்கைப்போலவும்,
பெருமழைக்கு ஒதுங்குமிடம்போலவும்,
வறண்ட நிலத்துக்கு நீரோடைபோல
வும்,
விடாய்த்த பூமியில் பெருங் கன்மலையின்
நிழல்போலவும் இருப்பார்.
3 அப்பொழுது காண்கிறவர்களின் கண்கள்
பார்வையற்றிராது;
கேட்கிறவர்களின் செவிகள் கவனித்தே
இருக்கும்;
4 பதற்றமுள்ளவர்களின் இருதயம் புத்தி
யும் உணர்வும் பெறும்;
தெற்றுவாயரின் நாவு தடையின்றித் தெ
ளிவாய்ப்பேசும்.
5 மதிகேடன் இனி பெருந்தன்மையுள்ள
வன் எனப்படான்;
மோசக்காரன் இனி சிறப்புள்ளவன்
எனப்படுவதுமில்லை.
6 மதிகேடன் மதிகேடானதைப் பேசுகி
றானே,
அவன் இருதயம் அக்கிரமத்தை நடப்
பிக்கும்;
அவன் கேடுபண்ணி யெகோவாவுக்கு
விரோதமாய் மாறானவைகளைப் பேசிப்
பசியுள்ளவனைப் பட்டினியாக விட்டுத்
தாகமுள்ளவன் தாகத்தைத் தீர்க்காதிருக்
கிறான்.
7 வஞ்சகனின் எத்தனங்களும் பொல்லாத
வைகளே,
ஏழைகள் நியாயமாய் வழக்காடுகையில்
அவன் தன் கள்ள வார்த்தைகளாலே
எளியவர்களைக் கெடுக்கும்படி
தீயயோசனை செய்கிறான்.
பெருந்தன்மையுள்ளவன் பெருந்தன்மை 8
யானவைகளை யோசிக்கிறான்,
பெருந்தன்மையானவைகளிலே நிலைத்
தும் இருக்கிறான்.
சுகஜீவிகளான ஸ்திரீகளே, எழுந்தி 9
ருந்து என் வார்த்தைகளைக் கேளுங்கள்;
கவலையற்ற பெண்களே, என் வசனத்துக்
குச் செவிகொடுங்கள்.
கவலையற்ற பெண்களே, 10
ஒருவருஷம் செல்லலாம், சிலகாட்களும்
செல்லலாம்,
அப்பொழுது நீங்கள் தத்தளிப்பீர்கள்;
திராட்சையில் பலன் சேர்ப்பது நீங்து
போம்,
மரங்களிலே பழப்பறிப்பு இல்லாமற்
போம்;
சுகஜீவிகளான ஸ்திரீகளே, நடுங்குங்கள்; 11
கவலையற்ற பெண்களே, தத்தளியுங்கள்;
உடையை உரிந்து களைந்துபோட்டு,
அரையைக் கட்டிக்கொள்ளுங்கள்.
மாரடித்துப் புலம்புங்கள்; 12
செழிப்பான வயல்களினிமித்தமும் கனி
தரும் திராட்சச்செடிகளினிமித்தமும்,
முட்செடியும் நெருஞ்சிலும் முளைத்திருக் 13
கும் என் ஜனத்தினுடைய நிலத்தினிமித்
தமும்,
களிகூர்ந்திருந்த நகரத்திலுள்ள சந்தோ
ஷம் நிறைந்த எல்லா வீடுகளினிமித்த
மும் புலம்புங்கள்.
அரமனை பாழாகவிடப்படும், 14
ஜனம் நிறைந்த நகரம் வெறுமையாகும்;
மேடும் துருக்கமும் என்றைக்கும் கெபிக
ளாகும்,
அங்கே காட்டுக்கழுதைகள் களிக்கும்;
மந்தைகள் இரைமேயும்.
உன்னதத்திலிருந்து நம்மேல் ஆவி ஊற்றப் 15
படுமட்டும்
அப்படியே இருக்கும்;
அப்பொழுது வனாந்தரம் பழமரத் தோப்
பாகும், தோப்பு வனமாக எண்ணப்ப
டும்.
வனாந்தரத்திலே நியாயம் வசிக்கும் 16
தோப்பிலே நீதி குடியிருக்கும்.
நீதியால் விளைவது சமாதானம், 17
நீதியின் பலன் என்றுமுள்ள கவலையற்ற
அமரிக்கையாம்.
என் ஜனம் சமாதான வாசஸ்தலங்களிலும் 18
கவலையற்ற வீடுகளிலும்
சுகவாழ்வுள்ள இடங்களிலும் குடியிருக்
கும்.
வனம் அழியக் கல்மழை பெய்யும் 19
நகரம் மகா தாழ்வாய்த் தாழ்ந்துபோம்.

20 நீர்வளம் பொருந்திய சகல இடங்களிலும் விதைவிதைத்து
மாடுகளையும் கழுதைகளையும் தடையின்றிப் போகவிடுகிற
நீங்கள் பாக்கியவான்கள்.

**33** கொடுமை செய்யப்படாதிருந்தும்
கொடுமை செய்கிறவனே,
கொள்ளை யிடப்படாதிருந்தும் கொள்ளை
யிடுகிறவனே,
ஐயோ உனக்குக் கேடாம்!
நீ கொடுமைசெய்து தீர்ந்தபின்
உனக்குக் கொடுமை செய்யப்படும்.
நீ கொள்ளையிட்டு முடிந்தபின்
நீ கொள்ளையிடப்படுவாய்.
2 யெகோவாவே, எங்களுக்கு இரங்கும்,
உமக்குக் காத்திருக்கிறோம்,
தேவரீர் காலைதோறும் அவர்களுக்கு பலமும்
இக்கட்டிக் காலத்தில் எங்களுக்கு ரட்சிப்புமாயிரும்.
3 அமளியின் சத்தத்திற்கு அஞ்சி தேசத்தார் ஓடிவிடுவார்கள்.
நீர் எழும்பிருக்கும்போது ஜாதிகள் சிதறடிக்கப்படுவார்கள்.
4 பச்சைப்புழுக்கள் சேர்க்கிறதுபோல
நீங்கள் கொள்ளையைச் சேர்ப்பீர்கள்;
வெட்டுக்கிளிகள் பாய்ந்து வருவது போல
ஆட்கள் அதின்மேல் பாய்ந்து வருவார்கள்.
5 யெகோவா உயர்ந்தவர், அவர் உன்னதத்தில் வாசமாயிருக்கிறார்;
அவர் சீயோனை நியாயத்தினாலும் நீதியினாலும் நிரப்புகிறார்.
6 பயமற்ற காலங்கள் உனக்கு வரும்,
ஞானமும் அறிவும் பூரண ரட்சிப்பைக் கொடுக்கும்;
யெகோவாவுக்குப் பயப்படுவதே அவர்கள் பொக்கிஷம்.
7 இதோ, அவர்கள் பராக்கிரமவீரர் வெளியிலே அலறுகிறார்கள்;
சமாதானத்து ஸ்தானாபதிகள் மனங்கசந்து அழுகிறார்கள்.
8 பெரும் பாதைகள் பாழாயின, வழிப்போக்கர் இல்லை;
உடன்படிக்கையை மீறுகிறான்,
நகரங்களை இகழுகிறான், மனுஷனையும் மதிக்கிறதில்லை.
9 தேசம் துக்கத்தால் சோர்ந்துபோகிறது,
லீபனோன் வெட்கிவாடுகிறது, சாரோன் வனாந்தரத்திற்கு ஒப்பாகிறது;
பாசானும் கர்மேலும் இலையுதிர்ந்த மரம் போலாயின.
10 இப்பொழுது எழுந்தருளுவேன், இப்பொழுது உயருவேன்,
இப்பொழுது மகிமை விளங்கச்செய்வேன்
என்று யெகோவா சொல்லுகிறார்.
11 பதரைக் கர்ப்பந்தரித்துத் தாளடியைப் பெறுவீர்கள்;
உங்கள் கோபம் அக்கினிபோல் உங்களையே பட்சிக்கும்.
12 ஜனங்கள் சுண்ணாம்பாக நீற்றப்படுவார்கள்;
வெட்டப்பட்ட முட்செடிகளைப்போல தீயில் எரிக்கப்படுவார்கள்.
13 தூரத்திலுள்ளவர்களே, நான் செய்கிறதைக் கேளுங்கள்;
சமீபத்திலுள்ளவர்களே, என் வல்லமையை அறிந்துகொள்ளுங்கள் என்கிறார்.
14 சீயோனிலுள்ள பாவிகள் திகைக்கிறார்கள்;
தெய்வமறந்தோரை நடுக்கம் பிடிக்கிறது;
நம்மில் யார் பட்சிக்கும் அக்கினிக்கு எதிரே தங்குவான்?
நம்மில் யார் நித்திய ஜ்வாலிக்கு எதிரே தங்குவான்?
15 நீதியாய் நடந்துவந்து நேர்மையானவைகளைப்பேசி
இடுக்கண் செய்வதால் வரும் லாபத்தை வெறுத்துப்
பரிதானங்களை வாங்காதபடி தன் கைகளை உதறி
இரத்தஞ் சிந்துவதற்கான யோசனைகளைக் கேளாதபடி தன் செவியை அடைத்துத்
தீங்கைக் காணாதபடி தன் கண்களை மூடுகிறவனெவனோ
16 அவன் உயர்ந்த இடங்களில் வாசம் பண்ணுவான்;
கன்மலை அரண்கள் அவன் உயர்ந்த அடைக்கலமாகும்;
அவனுக்கு வேண்டிய ஆகாரம் கொடுக்கப்படும்;
அவனுக்குவேண்டிய தண்ணீர் இடைப்படுவது நிச்சயமாமே.
17 உன் கண்கள் ராஜாவை மகிமை பொருந்தினவராகக் காணும்,
விசாலமான தேசத்தைப் பார்க்கும்.
18 உன் மனம் பயங்கரத்தை நினைவுகூரும்;
கணக்கன் எங்கே? தண்டல்காரன் எங்கே?
கோபுரங்களை எண்ணினவன் எங்கே?

19 விளங்காத பாஷையையும் அறிதற்கரிய
பேச்சையுமுடைய
அந்நிய குரூஜனங்களை இனி நீ காணாய்.
20 நாம் உற்சவங்கொண்டாடும் நகரமாகிய
சீயோனை நோக்கிப்பார்;
உன் கண்கள் எருசலேமைச் சுகவாழ்
வுள்ள வாசஸ்தலமும்
பெயர்க்கப்படாத கூடாரமுமாகக் கா
ணும்;
இனி அதன் மூலைகள் என்றைக்கும்
பிடுங்கப்படுவதுமில்லை,
அதின் கயிறுகளில் ஒன்றும் அறுந்து
போவதுமில்லை.
21 யெகோவா அங்கே நமக்கு மகிமையோடு
விளங்குவார்,
அது அகன்ற நதிகளும் ஆறுகளுமுள்ள
ஸ்தலமாகும்;
வலிக்கிற படகு அங்கே ஓடுவதும்
இல்லை;
பெரிய கப்பல் கடந்து வருவதும் இல்லை.
22 யெகோவாவே நமது நியாயாதிபதி
யெகோவாவே நமது சட்ட நிரூபணர்,
யெகோவாவே நமது ராஜா,
நம்மை ரட்சிப்பவர் அவரே.
23 உன் கயிறுகள் தளர்ந்துபோம்;
பாய்மரத்தைக் கெட்டிப்படுத்தவும் பா
யை விரிக்கவும் முடியாமற்போம்;
அப்பொழுது திரளான கொள்ளைப்பொ
ருள் பங்கிடப்படும்;
சப்பாணிகளும் கொள்ளையாடுவார்கள்.
24 தனக்கு பலவீனம் என்று குடிகளில்
எவனும் சொல்வதில்லை;
அதில் வாசமாயிருக்கிற ஜனத்தின் அக்
கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும்.

**34** ஜாதிகளே, கேட்கிறதற்குக் கிட்டி
வாருங்கள்;
ஜனங்களே, கவனியுங்கள்;
பூமியும் அதின் நிறைவும்
பூச்சக்கரமும் அதிலே தோன்றும் யாவும்
கேட்கக்கடவது.
2 சகல ஜாதிகளின்மேலும் யெகோவாவின்
கடுங்கோபமும்
அவைகளுடைய சகல சேனைகளின்மே
லும்
அவருடைய உக்கிரமும் மூளுகிறது;
தெய்வசாபம் நிறைவேற அவர்களைச் சங்
காரத்துக்கு நியமித்து
கொல்லப்படுவதற்கு அவர்களை ஒப்புக்
கொடுக்கிறார்.
3 அவர்களிலே கொல்லப்பட்டவர்கள் எறி
யுண்டு கிடப்பார்கள்;
அவர்களுடைய பிரேதங்கள் நாற்றமெ
டுக்கும்;
அவர்களுடைய ரத்தத்தினாலே மலைகளும்
கரைந்துபோம்.
4 வானத்தின் சர்வசேனையும் கரைந்து,
வானம் புஸ்தகச் சுருளைப்போல் சுருட்
டப்பட்டுத்
திராட்சச்செடியின் இலையும் அத்திமரத்
தின் இலையும் உதிர்வதுபோல
வானத்தின் சர்வசேனையும் உதிர்ந்து
போம்.
5 வானங்களில் என் பட்டயம் வெறிக்கக்
குடிச்சது;
இதோ, ஏதோமின்மேலும் என் சாபத்
திற்குட்பட்ட ஜனத்தின்மேலும்
தீர்ப்புச் செய்வதற்கென அது இறங்
கும்.
6 யெகோவாவுக்கு ஒரு பட்டயம் உண்டு,
அது இரத்தத்தால் நிறைந்து முழுதும்
நிணம் செறிந்தது,
ஆட்டுக்குட்டிகள் கடாக்களுடைய ரத்த
மும்
ஆட்டுக்கடாக்களுடைய குண்டிக்காய்
களின் நிணமுமே.
பொஸ்ருவிலே யெகோவாவுக்கு ஒரு
யாகம்,
ஏதோம் தேசத்திலே திரண்ட மிருகசங்
காரம்.
7 சங்காரத்திலே காட்டெருதுகளும் கொல்
லப்படும்,
எருதுகளோடே காளைகளும் வந்து மடி
யும்;
அவர்கள் தேசம் ரத்தத்தை வெறிக்கக்
குடிக்கும்,
அவர்கள் மண் நிணத்தினால் கொழுத்
தப்போம்.
8 அது யெகோவா பழிவாங்கும் நாள்,
சீயோனுக்காக வழக்காடிப் பதிலளிக்
கும் வருஷம்.
9 ஏதோமின் நீரோடைகள் பிசினாகவும்
அதின் மண் கந்தகமாகவும் மாறி
அதின் நிலம் எரிகிற கீலாய்ப்போம்.
10 இரவும் பகலும் அது அவியாது;
அதின் புகை என்றென்றும் எழும்பும்;
தலைமுறை தலைமுறையாக அது பாழா
யிருக்கும்;
சதாகாலங்களாக அதை ஒருவரும்
கடந்துபோவதில்லை,
11 நாரையும் கொக்கும் அதைச் சொந்த
மாக்கிக்கொள்ளும்.
கோட்டானும் காக்கையும் அதிலே குடி
யிருக்கும்;

உருவமற்றதாக்கும்படி அதன்மேல் தூலியும்
வெறுமையாக்கும்படி அதன்மேல் தூக்கு தூலியும் பிடிப்பார்.
12 ராஜ்யபாரம் பண்ணும்படி அழைக்கப்படுதற்கு அவர்கள் மேன்மக்களில் ஒருவரும் அங்கே இரார்;
அதின் அதிபதிகள் அனைவரும் இல்லாமற்போவார்கள்.
13 அதின் அரமனைகளில் முட்செடிகளும்
அதின் கோட்டைகளில் காஞ்சொறிகளும் முட்பூண்டுகளும் மூளைக்கும்;
அது நரிகளின் குடியிருப்பும்
நெருப்புக்கோழிகளின் வாசஸ்தலமுமாகும்.
14 அங்கே மற்றக் காட்டுமிருகங்களும்
ஓனாய்களும் ஒன்றுய்க் கூடிவரும்,
காட்டாடுகள் ஒன்றையொன்று கூப்பிடும்,
அங்கே லீலித் தங்கி இளைப்பாறும் இடம் பெறும்.
15 அங்கே நெடுவிரியன் இருப்பிடமாக்கி
முட்டையிட்டுக் குஞ்சுபொரித்து,
அவைகளைத் தன் நிழலிலே கூட்டிக் கொள்ளுப்;
அங்கே பருந்துகளும் ஜோடிஜோடாகச் சேரும்.
16 யெகோவாவின் புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்;
இம்மிருகங்களில் ஒன்றும் குறையாது;
இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது;
இதைக் கட்டளையிட்டது அவருடைய வாயே;
அவைகளைச் சேர்ப்பது அவருடைய ஆவியே.
17 அவரே அவைகளுக்கென்று சீட்டுப் போட்டார்;
அவருடைய கையே அதை அவைகளுக்கு அளவுநூல் போட்டுப் பகிர்ந்து கொடுத்தது;
அவைகள் என்றைக்கும் அதைச் சொந்தமாக்கிக்கொள்ளும்,
தலைமுறை தலைமுறையாக அதிலே சஞ்சரிக்கும்.

**35** வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழும்;
கடுவெளி களித்து லீலிபோல பூக்கும்.
2 அது மிகுதியாய்ச் செழித்துப் பூத்து
ஆனந்தக்களிப்புடன் பாடும்;
லீபனோனின் மகிமையும்
கர்மேல் சாரோன் என்பவைகளின் அழகும்
அதற்கு அளிக்கப்படும்;
அவர்கள் யெகோவாவின் மகிமையையும்
நமது கடவுளின் அழகையும் காண்பார்கள்.
தளர்ந்த கைகளைத் திடப்படுத்தித் 3
தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள்.
மனோதைரியமற்றவர்களைப் பார்த்து: 4
நீங்கள் பயப்படாதிருங்கள், திடன்கொள்ளுங்கள்;
இதோ, உங்கள் கடவுள் பழிவாங்க வருவார்;
செயல்களுக்குத் தக்க பலன் கடவுளிடமிருந்து வரும்;
அவரே வருவார், வந்து உங்களை ரட்சிப்பார்
என்று சொல்லுங்கள்.
அப்பொழுது குருடரின் கண்கள் திறக் 5
கப்படும்,
செவிடரின் செவிகளும் திறவுண்டுபோம்.
சப்பாணி மானைப்போல் குதிப்பான், 6
ஊமையன் நாவு களித்துப் பாடும்;
அவாந்தர வெளியிலே தண்ணீர்களும்
வனாந்தரத்திலே ஆறுகளும் பாய்ந்தோடும்.
கானல் பறக்கும் இடம் தண்ணீர்த் தடா 7
கமும்
வறண்ட நிலம் நீரூற்றுகளுமாகும்;
நரிகள் படுத்துக்கிடந்த இடங்களிலே
கோரையும் கொறுக்கையும் நாணலும் உண்டாகும்.
அங்கே பெரும்பாதையான ஒரு வழி 8
இருக்கும்,
அது பரிசுத்த வழி என்னப்படும்;
அப்படிப்பட்டவர்களுக்கே உரியது,
தீட்டுள்ள எவனும் அதிலே நடந்துவருவதில்லை;
அந்த வழியில் நடப்பவர்கள் பேதையரேயாயினும் திசை கெட்டுப்போவதில்லை.
அங்கே சிங்கம் இருப்பதில்லை; 9
பீறு மிருகங்கள் அங்கே போவதில்லை,
அங்கே காணப்படுவதுமில்லை;
மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள்.
யெகோவாவினால் மீட்கப்பட்டவர்கள் 10
திரும்பி
மகிழ்ச்சியாய்ப் பாடிக்கொண்டு சீயோனுக்கு வருவார்கள்;

அவர்கள் தலையின்மேல் நித்திய ஆனந்தம் சூட்டப்படும்;
சந்தோஷமும் ஆனந்தமும் அடைவார்கள்;
சஞ்சலமும் பெருமூச்சும் ஓடிப்போம்.

**36** ஏசேக்கியாராஜாவின் பதினாலாம் வருஷத்திலே அசீரியா ராஜாவாகிய சனகெரிப் யூதா விலிருந்த அரணான சகல ஊர்களுக்கும் விரோதமாய் வந்து அவைகளைப் பிடித்தான்.
2 அப்பொழுது அசீரியாராஜா லாகீஷிலிருந்து ரப்சாக்கேயைப் பெரிய சேனையோடே எருசலேமுக்கு எசேக்கியா ராஜாவினிடம் அனுப்பினான்; அவன் வந்து வண்ணர் வயலின் வழியிலே மேலேயுள்ள குளத்துவாய்க் காலண்டையிலே நின்றுகொண்டிருந்தான்.
3 அப்பொழுது இல்க்கியாவின் குமாரனாகிய எலியாக்கீம் என்னும் அரமனை உக்கிராணக்காரனும், செப்ன என்னும் சம்பிரதியும், ஆசாப்பின் குமாரனாகிய யோவாகு என்னும்
4 மந்திரியும் அவர்களிடம் போனார்கள். ரப்சாக்கே அவர்களைப் பார்த்து, நீங்கள் எசேக்கியாவினிடம் போய், அசீரியா ராஜாவாகிய மகாராஜாவானவர் இப்படிச் சொல்லுகிறார் என்று சொல்லுங்கள்: உனக்குள்ள நம்பிக்
5 கையை என்ன சொல்ல! யுத்தத்திற்கு உன்னிடமுள்ள மந்திராலோசனையும் வல்லமையும் வாய்ப்பேச்சேயன்றி வேறல்லவென்று நான் உனக்குச் சொல்லுகிறேன். நீ யாரை நம்பிக்கொண்டு என்னை விரோதிக்கிறாய்?
6 இதோ, எகிப்தை, நெரிந்த அந்த நாணல் கோலை, நம்புகிறாய்; அதின்மேல் ஒருவன் சாய்ந்தால் அது அவன் உள்ளங்கையில் பட்டு உருவிப்போம்; எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் தன்னை நம்புகிற யாவருக்கும்
7 இப்படியே இருப்பான். எங்கள் கடவுளாகிய யெகோவாவையே நம்புகிறோம் என்று என்னிடம் சொல்வாயாகில், எசேக்கியா அகற்றிவிட்ட கோவில் மேடைகளும் பலிபீடங்களும் அவருடையவைகளேயல்லவா? இந்தப் பலிபீடத்தின்முன் பணியுங்கள் என்று அவன் யூதாவிலும் எருசலேமிலு
8 முள்ளவர்களுக்குச் சொன்னானே. இதோ, அசீரியாவின் ராஜாவாகிய என் ஆண்டவனுடனே பந்தயம்போடு, அவர் உனக்கு இரண்டாயிரம் குதிரைகளைக் கொடுப்பார்; அவைகள்மேல் ஏறுகிற ஆட்களைச் சம்பாதிப்பா
9 யா? சம்பாதியாதேபோனால் நீ என் ஆண்டவனுடைய சிறிய ஊழியரில் ஒரே ஒரு தலைவனைக் கூடத்திருப்பி ஒட்டிவிடுவதெப்படி? இரதங்களும் குதிரைவீரரும் வருவார்கள்
10 என்று எகிப்தை நம்புகிறாயோ? இப்போதும் யெகோவாவையன்றி இந்தத் தேசத்தை அழிக்க வந்தேனே? இந்தத் தேசத்திற்கு விரோதமாய்ப் போய் அதை அழித்துப் போடு என்று எனக்குச் சொன்னவர் யெகோவாவே என்றான்.

11 அப்பொழுது எலியாக்கீமும் செப்னவும் யோவாகும் ரப்சாக்கேயைப் பார்த்து: உமது அடியாரோடே அரமேய பாஷையிலே பேசும்; அது எங்களுக்குத் தெரியும்; அலங்கத்திலிருக்கிற ஜனங்கள் கேட்கிறார்கள், எங்களோடே யூதருடைய பாஷையிலே பேசவேண்டாம் என்றார்கள்.
12 அதைக் கேட்ட ரப்சாக்கே: இந்த வார்த்தைகளைப் பேசும்படி என்னை அனுப்பினது உங்கள் ஆண்டவனண்டைக்கும் உங்களண்டைக்குமா? உங்களோடே அலங்கத்திலிருக்கிறவர்களும், தங்கள் மலத்தைத் தின்று தங்கள் நீரைக் குடிக்கப்போகிறவர்களுமாகிய இந்த ஜனங்களண்டைக்கேயல்லவா என்னை அனுப்பியிருக்கிறார் என்று சொல்லி,
13 ரப்சாக்கே எழுந்து நின்றுகொண்டு யூதர் பாஷையிலே உரத்த சத்தமாய்ப் பேசி: அசீரியா ராஜாவாகிய மகாராஜா சொல்வதைக் கேளுங்கள்.
14 எசேக்கியா உங்களை வஞ்சியாதபடி பாருங்கள்; அவன் உங்களைத் தப்புவிக்கமுடியாது.
15 யெகோவா நம்மை நிச்சயமாய்த் தப்புவிப்பார்; இந்த நகரம் அசீரியா ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லி, எசேக்கியா உங்களை யெகோவாவை நம்பப் பண்ணுவான்; அதற்கு இடங்கொடாதிருங்கள் என்று ராஜா சொல்லுகிறார்.
16 எசேக்கியாவின் சொல்லைக் கேளாதிருங்கள்; அசீரியா ராஜா சொல்வதைக் கேளுங்கள்: நீங்கள் என்னோடே இராசியாகி என்னிடம் வாருங்கள்; அவனவன் தன் தன் திராட்சச் செடியின் கனியையும் தன் தன் அத்திமரத்தின் கனியையும் புசித்து, அவனவன் தன் தன் கிணற்றின் தண்ணீரைக் குடித்துக்கொண்டிருங்கள். பின்பு நான் வந்து உங்கள்
17 தேசத்துக்கு ஒப்பான தானியமும் திராட்சத்தோட்டமுமுள்ள தேசமும், அப்பமும் திராட்சரசமுமுள்ள தேசமுமாகிய நாட்டுக்கு உங்களை அழைத்துக்கொண்டுபோவேன்; யெகோவா நம்மைத் தப்புவிப்
18 பார் என்று சொல்லி எசேக்கியா உங்களைத் தப்புவழியில் நடத்தாதபடி எச்சரிக்கையாயிருங்கள். பற்பல ஜாதிகளின் தேவர்களில் யாராவது தங்கள் தேசத்தை அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவித்ததுண்டோ? ஆமாத், அர்பாத் பட்டணங்களின்
19 தேவர்கள் எங்கே? செப்பர்வாயீமின் தேவர்

கள் எங்கே? சமாரியா என் கைக்குத் தப்பு
20 விக்கப்பட்டதண்டோ? அந்தந்த தேசங்க
ளின் சகல தேவர்களிலும் தங்கள் தேசத்தை
என் கைக்குத் தப்புவித்தது யார்? அப்படி
யிருக்க யெகோவா எருசலேமை என் கைக்
குத் தப்புவிப்பார் என்று சொல்வதெப்படி
என்று ராஜா சொல்லுகிறார் என்றான்.
21 அவர்களோ அவனுக்கு ஒரு வார்த்தை
யும் சொல்லாமல் மவுனமாயிருந்தார்கள்;
அவனுக்குப் பதிற் சொல்லவேண்டாம்
22 என்று ராஜா கட்டளையிட்டிருந்தான். அப்
பொழுது இல்க்கியாவின் குமாரனாகிய எலி
யாக்கீம் என்னும் அரமனை உக்கிராணக்கார
னும், செப்னா என்னும் சம்பிரதியும், ஆசாப்
பின் குமாரன் யோவாகு என்னும் மந்திரி
யும், தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்
கொண்டு எசேக்கியாவினிடம் வந்து, ரப்
சாக்கேயின் வார்த்தைகளை அவனுக்குத்
தெரிவித்தார்கள்.

**37** எசேக்கியா ராஜா அதைக் கேட்ட
போது தன் வஸ்திரங்களைக் கிழித்து இரட்டு
உடுத்திக்கொண்டு யெகோவாவின் ஆலயத்தி
2 னுட்சென்றான். அரமனை உக்கிராணக்
காரனாகிய எலியாக்கீமையும் சம்பிரதியாகிய
செப்னாவையும் ஆசாரியரின் மூப்பரையும்
இரட்டுடுத்தினவர்களாய், ஆமோத்சின் குமா
ரனாகிய ஏசாயா தீர்க்கதரிசியினிடம் அனுப்
3 பினான். இவர்கள் அவனைக் கண்டு,
எசேக்கியா ராஜா எங்களை உம்மிடம்
அனுப்பி: இது இடுக்கமான், சிட்சைக்கும்
நிந்தனைக்கும் உட்படும் நாள், பிள்ளைப்பேறு
நோக்கியிருக்கிறது, பெறவோ பலமில்லை.
4 ஜீவனுள்ள கடவுளை நிந்திக்கும்படி அசீரியா
ராஜாவாகிய தன் ஆண்டவனால் அனுப்பப்
பட்ட ரப்சாக்கே சொன்ன வார்த்தைகளை
உமது கடவுளாகிய யெகோவா ஒரு
வேளை கவனிப்பார்; உமது கடவு
ளாகிய யெகோவா கேட்டு கவனித்த
வார்த்தைகளினிமித்தம் தண்டனை செய்
வார்; ஆகவே இன்னும் மீதியாயிருக்
கிறவர்களுக்காக விண்ணப்பஞ் செய்யும்
படி எசேக்கியா ராஜா கேட்கச் சொன்னார்
5 என்றார்கள். இந்தப்படியே எசேக்கியா
ராஜாவின் ஊழியர் ஏசாயாவினிடம் வந்து
6 சொன்னார்கள். அப்பொழுது ஏசாயா
அவர்களிடம்: யெகோவா இப்படிச் சொல்
லுகிறார் என்று உங்கள் ஆண்டவனிடம்
சொல்லுங்கள், அசீரியா ராஜாவின் ஊழியர்
என்னைத் தூஷித்துப் பேசின வார்த்தை
7 களைக் கேட்டு பயப்படவேண்டாம். இதோ,
ஒரு ஆவியை அவனுக்குள் அனுப்புவேன்,
அவன் ஒரு செய்தியைக் கேட்டுத் தன்
தேசத்துக்குத் திரும்புவான்; அங்கே, அவன்
தேசத்திலே அவனைப் பட்டயத்தால் விழப்
பண்ணுவேன் என்கிறார் என்று சொன்
னான்.
ரப்சாக்கே திரும்பிப் போனபோது அசீரி 8
யா ராஜா லாகீசைவிட்டுப் போய்விட்
டான் என்று கேள்விப்பட்டுச் சென்று
அவன் லிப்னாவின்மேல் யுத்தம்பண்ணிக்
கொண்டிருக்கும்போது அவனைக் கண்
டான். எத்தியோப்பியா ராஜாவாகிய 9
திராக்கா தன்னோடு யுத்தப்பண்ண வருகி
றான் என்று அசீரியா ராஜா கேள்விப்
பட்டவுடனே அவன் திரும்பவும் எசேக்கியா
வினிடம் தூதுவரை அனுப்பி: நீங்கள் 10
யூதா ராஜாவாகிய எசேக்கியாவினிடம்
சென்று, நீ நம்பியிருக்கிற உன் கடவுள்
உன்னை வஞ்சியாதபடி பார்த்துக்கொள்.
எருசலேம் அசீரியா ராஜாவின் கையில் ஒப்
புக்கொடுக்கப்படுவதில்லையென்று நினையா
தே. இதோ, அசீரியா ராஜாக்கள் 11
சகல தேசங்களையும் சங்காரித்த செய்தி
உனக்குத் தெரியுமே, நீயா தப்பப்போகி
றாய்? என் பிதாக்கள் அழித்துவிட்ட 12
கோசான், காரான், ரேத்சேப்பு என்பவர்
தையும், தெலாசாரிலிருந்த ஏதேன் புத்தி
ரையும் அவர்கள் தேவர்கள் தப்புவித்த
துண்டோ? ஆமாத்தின் ராஜாவும் அர்பாத் 13
தின் ராஜாவும் செப்பர்வாயீம் பட்டணத்து
ராஜாவும் ஏனா, இவ்வா என்பவற்றின்
ராஜாக்களும் எங்கே என்று சொல்லுங்கள்
என்றான்.
எசேக்கியா தூதுவரின் கையிலிருந்து 14
நிருபத்தை வாங்கி வாசித்தபின்பு, அவன்
யெகோவாவின் ஆலயத்திற்குப்போய் அதை
யெகோவாவின் சந்நிதியில் விரித்தான்.
எசேக்கியா யெகோவாவின் சந்நிதியிலே 15
விண்ணப்பஞ்செய்து: சேனைகளின் யெகோ 16
வாவே, கேருபுகள்மீது வீற்றிருக்கிற இஸ்ர
வேலின் கடவுளே, பூமியின் சகல ராஜ்ய
களுக்கும் நீர் ஒருவரே கடவுள், வானத்தை
யும் பூமியையும் உண்டாக்கினவர் நீரே.
யெகோவாவே, உமது திருச்செவியைச் 17
சாய்த்துக் கேட்டருளும்; யெகோவாவே,
உமது திருக்கண்களைத் திறந்து பார்த்தரு
ளும்; ஜீவனுள்ள கடவுளை நிந்தித்துச் சன
கெரிப் சொல்லியனுப்பின வார்த்தைகளை
யெல்லாம் நீரே கேளும். யெகோவாவே, 18
அசீரியா ராஜாக்கள் அந்த ஜாதிகளையும்
அவர்கள் தேசத்தையும் நாசமாக்கி, அவர் 19
கள் தேவர்களை நெருப்பிலே போட்டுவிட்
டது மெய்யே; அவைகள் தேவர்கள்

அல்ல, மனுஷர் கைவேலையான மரமும்
கல்லுந்தானே; ஆகவே அவைகளை அழித்து
20 விட்டார்கள். இப்போதும் யெகோவாவே,
எங்கள் கடவுளே, எங்களை அவன் கைக்கு
நீங்கலாக்கி இரட்சித்தருளும்; யெகோவா
வாகிய நீரே தனிமுதல் என்று பூமியின்
ராஜ்யங்கள் எல்லாம் அறியும்படி இப்படிச்
செய்தருளும் என்று பிரார்த்தித்தான்.
21 அப்பொழுது ஆமோத்சின் குமாரனாகிய
ஏசாயா எசேக்கியாவுக்கு ஆள் அனுப்பி,
இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா
இதைச் சொல்லுகிறார்: அசீரியா ராஜாவா
கிய சனகேரிப்பைப்பற்றி நீ என்னை நோக்கி
விண்ணப்பம்பண்ணினாயே.
22 அவனைக்குறித்து யெகோவா சொல்வது
இதுவே.
சீயோன் குமாரி, கன்னிகையானவள்,
உன்னை இகழ்ந்தாள், உன்னைப் பரிகசித்
தாள்;
எருசலேமின் குமாரியவளே
நீ ஓடிடத் தன் தலையசைத்தாளே.
23 நிந்தனை தூஷணை மொழிந்தாய் யாரை
யோ?
உன் குரல் உயர்த்தினாய், எவர்மேல்
விரோதம்?
மாறாய் இஸ்ரேல் பரிசுத்தர்க்கு
பெருமையில் உனது கண்களை உயர்த்
தினாய்.
24 ஊழியராலே நீ ஆண்டவரை
நிந்தனைசெய்து பின்னரும் பேசி:
மலைகளின் முகடும் லீபனோன் அந்த
மும்
நான் வந்தேறினேன் என் இரதத்திர
ளால்,
உயர்கேதுருவும் நல்தேவதாரும்
அங்குள்ளவற்றை வெட்டி எறிவேன்
எட்டிடுவேன் அதன் கடைச் சிகரம்
மட்டும்
செழுமையிலோங்கும் வனமதுவரையும்;
25 கிணறு வெட்டி நீரைக் குடித்தேன்,
எகிப்திற்பாயும் நீர்ப்பெருக்கனைத்தும்
உள்ளங்காலால் வறளவும் செய்தேன்
என்று கூறிப் பிதற்றி நின்றாய்.
26 அரண்நகரைப் பாழ் மண்மேடாக்கிட
நீ என் கருவியாயினை, வேறல.
ஊழி ஊழிமுன் நான் அதைக்குறித்
தேன்,
பூர்வகாலிலே நான் அதை விளித்தேன்,
இதுபொழுது அது நிறைவேறிடச் செய்
தேன்,
நீயோ அதனைக் கேட்டிலேபோலும்;
27 ஆகவே அந்நகர்க்குடிகள் இனைத்துக்
கலங்கினர், வெட்கினர்; வெளிப்புல்
பூண்டும்
கூரையில் முளைக்கும் சிறுபுல்லதுவும்
வளருமுன் தீய் பயிரும் போலாயினர்.
நாளே அறிந்தேன் உனது நிலைமை, 28
உனது போக்கும் வரத்தும் தெரிந்தேன்;
என்மேற் குமுறும் உன் மனமதும் கண்
டேன்.
என்மேற் குமுறும் உன் வீம்புப் 29
பேச்சு
என் செவிப்பட்டது, எடுத்தேன் துறட்
டை,
பாய்ச்சினேன் மூக்கில், கடிவாளமதை
வாயிலிட்டு வலிதில் திருப்பி
வந்த வழியே சென்றிடச் செய்வேன்
என்று சொல்லுகிறார். பின்னும் கேள், 30
உனக்கு அடையாளம் இதுவே: இந்த வரு
ஷம் தப்பிப் பயிராகிறதையும் இரண்டாம்
வருஷத்திலே தானாய் விளைகிறதையும் சாப்
பிடுவீர்கள்; மூன்றும் வருஷத்திலே
விதைத்து அறுத்துத் திராட்சத்தோட்டங்
களை நாட்டி அவைகளின் கனிகளைப் புசிப்
பீர்கள்.
யூதவம்சத்தில் தப்பி மீந்தது 31
தாழே வேர் விடும், மேலே கனிதரும்;
மீந்தோர் எருசலேமின்றும், தப்பினோர் 32
சீயோன் மலையில் நின்றும் வந்திடுவர்.
சேனைகளின் யெகோவா வைராக்கியம்
இதை முடிக்கும்.
ஆகவே யெகோவா அசீரியா ராஜாவைப் 33
பற்றி இதைச் சொல்லுகிறார்:
அவன் இந்நகருள் புகுந்திடமாட்டான்;
இதன்மேல் அம்பு அவன் எய்வது
மில்லை;
கேடகம் தாங்கி எதிர்வந்து நில்லான்,
கொத்தளம் போட்டிதை எதிர்ப்பது
மில்லை.
வருவழி மீள்வான், நகர் குறையானே, 34
தெய்வத்திருவாக்கு இதுவாகும்மே.
இந்நகரதற்கு நானே காவல், 35
நானே இதனை இரட்சித்திடுவேன்;
எனது நிமித்தமும் எனது ஊழியனும்
தாவீது நிமித்தமும் இதைச் செய்திடு
வேன்
என்றார் என்று சொன்னான்.
பின்பு யெகோவாவின் தூதன் வந்து 36
அசீரியரின் பாளயத்திலே லட்சத்தெண்பத்
தையாயிரம் பேரைச் சங்கரித்தான்; அதி
காலமே எழுந்திருந்தபோது, இதோ, அவர்
கள் அனைவரும் செத்த பிரேதங்களாய்க்
கிடந்தார்கள். அதுகண்ட அசீரியா ராஜா 37
வாகிய சனகேரிப் பிரயாணமாகித் திரும்பிப்

38 போய் நினிவேயில் இருந்தவிட்டான். ஒரு நாள் அவன் தன் தேவனுடைய நிஸ்ரோகின் கோவிலிலே தொழுதுகொள்ளுகையில், அவன் குமாரராகிய அத்ரமேலேக்கும் சரேத் சேரும் அவனைப் பட்டயத்தினால் வெட்டிப் போட்டு, அராராத் தேசத்திற்குத் தப்பி ஓடிப்போனார்கள்; அவன் குமாரனாகிய ஏசர்கத்தோன் அவன் ஸ்தானத்திலே ராஜாவானான்.

**38** அக்காட்களில் ஏசேக்கியா வியாதிப் பட்டு மரணத்தறுவாயிலிருந்தான்; அப் பொழுது அவனைப் பார்க்க வந்த ஆமோத் சின் குமாரனாகிய ஏசாயா தீர்க்கதரிசி அவனிடம்: யெகோவா சொல்வதைக்கேளும், நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர்; உமது வீட்டுக் காரியத்தை ஒழுங்குபடுத்தும் என் 2 ரான். அதைக் கேட்கவே ஏசேக்கியா தன் முகத்தைச் சுவர்ப்புறமாகத் திருப்பிக் கொண்டு, யெகோவாவை நோக்கி விண் 3 ணப்பஞ்செய்து: யெகோவாவே, நான் உமக்கு முன்பாக முழுமனதோடும் உண்மையாய் நடந்தேன், உமது பார்வையில் நல மானதைச் செய்தேன், இதை நினைத்தருளும் என்று சொன்னான், மிகவும் அழுதான்.

4 அப்பொழுது யெகோவாவின் வார்த்தை 5 ஏசாயாவுக்கு வந்தது: நீ போய் ஏசேக்கியாவைப் பார்த்து: உன் தகப்பனாகிய தாவீதின் கடவுளாகிய யெகோவா இதைச் சொல்லுகிறார், உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்; உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, உன் நாட்களோடே பதினைந்து வரு 6 ஷம் கூட்டுவேன். நான் உன்னையும் இந்த நகரத்தையும் அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவிப்பேன், இந்த நகரத்துக்குக் காவ 7 லாயிருப்பேன். யெகோவா தாம் சொன்ன வார்த்தையின்படியே செய்வாரென்பதற்கு யெகோவா உனக்குக் கொடுக்கும் அடை 8 யாளம் இதுவே: இதோ, ஆகாசுடைய சூரிய கடியாரத்தில் பாகைக்குப் பாகை இறங்கின சாயையைப் பத்துப் பாகை பின்னிட்டுத் திருப்புவேன் என்கிறார் என்று சொல் என்றார். அப்படியே கடியாரத்தில் இறங்கியிருந்த சூரிய சாயை பத்துப் பாகை திரும்பிற்று.

9 யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா வியாதியாயிருந்த காலத்தில் அவன் வியாதி நீங்கிச் சொன்னதமானபோது எழுதிய பாடல்:

10 நடுவயதளவாய் நான் இருக்கையில்,
பாதாளவாசலுட் புகுவேன்,
மேல் வருஷங்கள் அற்றுப்போம் எனக்கு
என்று நான் என் மனதிலே சொன்னேன்.
பின்னும் நான் என் மனதிற் சிந்தித்து: 11
ஜீவனுளோர் தேசத்தில் நான் யெகோவாவை,
யெகோவாவையே தரிசிப்பதில்லை,
பூமியின் குடிகளோடேயிருந்து
மனிதரை இனி நான் பார்ப்பதில்லை,
எனது கூடாரம் என்னிலிட்டு 12
மேய்ப்போர் குடில்போல் பெயர்க்கப்படுமே;
நெய்பவர் பாவெனச் சுருட்டி என் ஆயுளை
தரியினின்று அறுத்துவிடுவார்;
பகற்பின் இரவு வராமுன் எனை முடிப்பீர்.
காலைவரை நான் கூப்பிட்டிருந்தேன், 13
சிங்கம்போல் அவர் என் எலும்பெலாம் கொறுக்குவார்,
பகற்பின் இரவு வராமுன் எனை முடிப்பீர் என்றிருந்தேன்.
தகைவிலான்போலும் கொக்குப்போலும் 14
கூவினேன்,
புருவைப்போல் புலம்பினேன்,
உயர நோக்கி என் கண்களும் பூத்தன,
ஆண்டவரே நான் துன்பத்துக்காளானேன்,
என் காரியம் மேற்போட்டுக்கொள்ளும் என்றேன்.
இப்பொழுதோ என்னென்று சொல்வேன்! 15
வாக்கு எனக்கு அருளினார், அவரே செய்தார்,
நான் அனுபவித்த கசப்பை நினைத்து
ஆயுள்காலெல்லாம் அடங்கி நடப்பேன்;
ஆண்டவரே, மனுஷர் பிழைத்தற்கு 16
இவை காரணமாம்,
என்றும் இவை என் உயிர்க்கு உயிராகின்றன;
எனைக் குணமாக்கிப் பிழைக்கச்செய்யும்.
நான் அனுபவித்த கசப்புகளெல்லாம் 17
என் சமாதானத்திற் கேதுவாயின;
தேவரீரே எனை நேசித்து
அழிவின் குழிக்கு எனை விலக்கிவிட்டீர்.
என்னுடைய பாவங்கள் எல்லாவற்றையும்
உமது முதுகுக்குப்பின்னே எறிந்துவிட்டீரே.
பாதாளம் உமக்கு நன்றிசெலுத்தாது, 18
மரணம் உம்மைத் துதிக்கவுமாட்டாதே;

குழியிறங்கினோர் உமது உண்மையில்
நம்பிக்கையாயிருத்தற்கு இடமிருக்குமோ?
19 உயிருளான், உயிருள்ளவனே, இன்று நான்
செய்வதுபோல் உமக்கு நன்றி செலுத்துவான்.
பிதாக்கள் தம் மக்கட்கு உமது உண்மை அறிவிப்பார்.
20 என்னை ரக்ஷிப்பாரே யெகோவா,
யெகோவாவின் ஆலயத்தில் எங்கள் ஆயுள்நாளெலாம்
வாத்தியங்கள் வாசித்து என் பாடலைப் பாடுவோம்
என்பதே எசேக்கியா எழுதிய பாடல்.
21 ஏசாயா: அத்திப்பழ அடையைக் கொண்டுவந்து பிளவையின்மேல் பற்றுப்
22 போட்டால் பிழைப்பார் என்று சொல்லியிருந்தான். எசேக்கியா: நான் யெகோவாவின் ஆலயத்துக்குப் போவேன் என்பதற்கு அடையாளம் என்ன என்று கேட்டிருந்தான்.

**39** அக்காலத்திலே பலாதானின் குமாரனாகிய மெரோதாக் பலாதான் என்னும் பாபிலோனின் ராஜா எசேக்கியா வியாதியாயிருந்து ஆரோக்கியமானதாகக் கேள்விப்பட்டு, அவனிடத்துக்கு நிருபங்களையும்
2 வெகுமானத்தையும் அனுப்பினான். எசேக்கியா அவர்களைக் கண்டு சந்தோஷப்பட்டுத் தன் அரிய பொருட்களை வைத்திருந்த இடத்தையும் வெள்ளியையும் பொன்னையும் கந்தவர்க்கங்களையும், நல்ல சிறந்த எண்ணெயையும், தன் ஆயுதசாலை அனைத்தையும், தன் பொக்கிஷசாலைகளிலிருந்த யாவற்றையும் காண்பித்தான்; தன் அரமனையிலும் தன் ராஜ்யத்தில் எங்கும் எசேக்கியா அவர்களுக்குக் காண்பியாத பொருள்
3 ஒன்றும் இல்லை. அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசி எசேக்கியா ராஜாவினிடம் வந்து, அந்த மனுஷர் என்ன சொன்னார்கள், எங்கிருந்து உம்மிடம் வந்தார்கள் என்று கேட்க எசேக்கியா: அவர்கள் தூர தேசத்திலிருந்து, பாபிலோனிலிருந்தே, என்
4 னிடம் வந்தார்கள் என்றான். அதைக் கேட்ட ஏசாயா: அவர்கள் உமது வீட்டிலே என்ன பார்த்தார்கள் என்று கேட்டான். அதற்கு எசேக்கியா: என் வீட்டிலுள்ள யாவற்றையும் பார்த்தார்கள், நான் அவர்களுக்குக் காண்பியாத பொருள் ஒன்றும் என் பொக்கிஷசாலைகளில் இல்லை என்
5 றான். அப்பொழுது ஏசாயா எசேக்கியாவைப்பார்த்து: சேனைகளுடைய யெகோவாவின் வார்த்தையைக் கேளும். இதோ, 6
உமது வீட்டில் உள்ளவற்றிலும் உமது பிதாக்கள் இந்நாள்வரை சேர்த்தவற்றிலும் யாதொன்றும் மீதியாக வைக்கப்படாமல் யாவும் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்படும் நாட்கள் வரும் என்று யெகோவா சொல்லுகிறார். உமது சந்தானமாய்ப் பிறக் 7
கும் உமது குமாரரிலும் சிலர் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கே ராஜாவின் அரமனையிலே அண்ணகராய் வேலை செய்வார்கள் என்று சொன்னான்.
இதைக் கேட்கவே எசேக்கியா ஏசாயாவி 8
னிடம்: யெகோவா உரைப்பதாக நீர் சொல்வதெல்லாம் நல்லதே என்று சொல்லி, என் நாட்களிலாவது சமாதானமும் நிலையான வாழ்வும் இருக்குமே என்றான்.

தேற்றுங்கள் என் ஜனத்தை, தேற்றுங்கள்; **40**
எருசலேமுடன் பட்சமாய்ப்பேசி 2
அதின் போர்மூடிந்தது, அதின் அக்கிரமம் தீர்ந்துபோயிற்று,
அது தன் சகல பாவங்களுக்கும்
யெகோவாவின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்று
அதற்குக் கூறுங்கள் என
உங்கள் கடவுள் சொல்லுகிறார்.
யெகோவாவின் வழியை ஆயத்தப் 3
படுத்துங்கள்,
அவாந்தர வெளியிலே நமது கடவுளுக்குப் பாதையைச் செவ்வைபண்ணுங்கள்,
பள்ளத்தாக்கெல்லாம் உயர்வாக்கப் படும்,
ஒவ்வொரு மலையும் குன்றும் தாழ்வாகும், 4
முரடானது செம்மையாக்கப்படும்,
கரடானது சமமாகும்,
யெகோவாவின் மகிமை வெளிப்படும், 5
மாம்சமான யாவரும் அதை ஏகமாய்க் காண்பார்கள்,
யெகோவாவின் வாய் இதைச் சொல்லிற்று என்று
வனாந்தரத்திலே கூப்பிடுகிற சத்தம் பிறந்தது.
பின்னும், கூப்பிட்டுச்சொல் 6
என்று ஒரு சத்தம் பிறந்தது,
எதைக் கூப்பிட்டுச் சொல்வேன் என்றேன்.
அதற்கு: மாம்சமெல்லாம் புல்லைப்போன்றது,
அதின் மகிமையெல்லாம் வெளியின் பூ போன்றது.

7 யெகோவாவின் சுவாசம் அதின்மேல் ஊதவே
புல் உலரும், பூவும் உதிரும்;
8 ஜனம் புல்லே,
புல் உலரும், பூவும் உதிரும்;
நமது கடவுளின் வசனமோ என்றென்றும் நிற்கும் என்றது.
9 சீயோனுக்கு நற்செய்தி உரைப்பவளே,
நீ உயர்ந்த பர்வதத்தில் ஏறு;
எருசலேமுக்கு நற்செய்தி உரைப்பவளே,
நீ உரத்த சத்தமிட்டுக் கூப்பிடு,
பயப்படாமல் சத்தமிட்டு, இதோ, உங்கள் கடவுள்
என்று யூதா பட்டணங்களிடம் சொல்.
10 இதோ, யெகோவாவாகிய ஆண்டவர் பராக்கிரமத்தோடு வருவார்;
அவர் தமது புயத்தினால் அதிகாரம் செலுத்துவார்;
இதோ, வெற்றியாய் அவர் அடைந்த பலன் அவரோடே வருகிறது;
அவர் சம்பாதித்தன அவருக்குமுன் செல்லுகின்றன.
11 மேய்ப்போனைப்போல தமது மந்தையை மேய்ப்பார்;
ஆட்டுக்குட்டிகளைத் தமது கரத்தினால் சேர்த்துத்
தமது மடியிலே சுமந்து
கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்.
12 தண்ணீர்களைத் தமது உள்ளங்கையால் அளந்தவர் யார்?
வானங்களைச் சாணளவால் கணக்கிட்டவர் யார்?
பூமியின் மண்ணை உழக்கால் அளந்தவர் யார்?
மலைகளை நிறைகோலாலும் குன்றுகளைத் தராசாலும் நிறுத்தவர் யார்?
13 யெகோவாவின் ஆவிக்குப் பிரமாணம் விதித்தவன் யார்?
அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்து அவருக்குப் போதித்தவன் யார்?
14 தாம் உணர்வைப்பெறவும் நியாயவழியைக் கற்றுக்கொள்ளவும்
அறிவைக் கற்றுக்கொள்ளவும் உணர்வின் வழியைத் தெரிந்துகொள்ளவும்
அவர் யாரோடே ஆலோசனை பண்ணினார்?
15 இதோ, ஜாதிகள் ஏற்றச்சாலில் தொங்கும் துளிபோலவும்
தராசிலே படியும் தூசிபோலவும் எண்ணப்படுகிறார்கள்;
இதோ, தீவுகளை ஒரு அணுவைப்போல் தூக்குகிறார்.
16 லீபனோன் எரிக்கும் விறகுக்குப் போதாது,
அதிலுள்ள மிருகங்கள் தகனபலிக்குப் போதாது,
17 சகல ஜாதிகளும் அவருக்கு முன்பாக ஒன்றுமில்லை,
அவர் பார்வையில் அவர்கள் சூனியத்திலும் சூனியமாகவும்
வெறுமையிலும் வெறுமையாகவும் எண்ணப்படுகிறார்கள்.
18 இப்படியிருக்க, கடவுளை யாருக்கு ஒப்பிடுவீர்கள்?
எந்தச் சாயலை அவருக்கு இணையாக வைப்பீர்கள்?
19 ஒரு சிற்பத்தையோ? கன்னான் அதை வார்க்கிறான்,
தட்டான் பொன்தகட்டால் அதை மூடி
அதற்கு வெள்ளிச் சங்கிலிகளைச் செய்கிறான்.
20 அவ்வளவு கொடுத்துச்செய்ய வகையில்லாதவன்
உளுத்துப்போகாத மரத்தைத் தெரிந்துகொண்டு
விழுந்துபோகாத ஒரு சிற்பத்தைச் செய்யும்படி
நிபுணனை ஒரு தச்சனைத் தேடுகிறான்.
21 நீங்கள் அறியீர்களா? நீங்கள் கேள்விப்படவில்லையா?
ஆதிமுதல் உங்களுக்குத் தெரிவிக்கப்படவில்லையா?
பூமியின் அஸ்திபாரங்கள் உங்களை உணர்த்தவில்லையா?
22 அவர் ஆகாயவிரிவின்மேல் வீற்றிருக்கிறவர்;
பூமியின் குடிகள் வெட்டுக்கிளிகளைப் போன்றவர்கள்;
அவர் வானங்களை மெல்லியதிரையாகப் பரப்பி,
அவற்றைக் குடியிருக்கும் கூடாரமாக விரிக்கிறார்.
23 அவர் அதிகாரிகளை இல்லாதவர்களாக்கி,
பூமியின் நியாயாதிபதிகளைச் சூன்ய சூனியமாக்குகிறார்.
24 அவர்கள் நாட்டப்பட்டு, விதைக்கப்பட்டு
அவர்கள் அடிமரம் பூமியிலே வேர்விட்ட மாத்திரத்தில்
அவர்கள்மேல் அவர் ஊதவே பட்டுப்போவார்கள்;

புசற்காற்று ஒரு சுரும்பைப்போல்
அவர்களை அடித்துக்கொண்டுபோம்.
25 இப்படியிருக்க என்னை யாருக்கு ஒப்பிடு
வீர்கள்?
யாருக்கு நான் சமமாவேன்
என்று பரிசுத்தர் சொல்லுகிறார்.
26 உங்கள் கண்களை உயரநிமிர்த்திப் பாருங்
கள்;
அவைகளைச் சிருஷ்டித்தவர் யார்?
அவர் அவைகளின் சேனையை இலக்கப்
படியே புறப்படப்பண்ணி
அவைகளையெல்லாம் பேர்பேராக
அழைக்கிறவராமே;
அவர் மகா பலமும் மிகுந்த வல்லமை
யும் உள்ளவராயிருப்பதால்
அவற்றில் ஒன்றும் குறையாதிருக்கிறது.
27 யாக்கோபே, நீ சொல்லுகிறதென்ன!
இஸ்ரவேலே, நீ பேசுகிறதென்ன!
என் வழி யெகோவாவுக்கு மறைவா
யிற்று,
என் நியாயம் அவர் பார்வைக்கு அப்பா
லாயிற்று
என்று சொல்லுகிறாயே!
28 பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்
டித்த யெகோவாவாகிய அநாதி கடவுள்
சோர்ந்துபோவதுமில்லை, இளைப்படை
வதுமில்லை;
இதை நீ அறிந்திலையோ, இதை நீ
கேட்டதிலையோ?
அவருடைய அறிவை ஆராய்ந்து முடி
யாது.
29 சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பலம்
கொடுக்கிறார்,
சக்தியில்லாதவனுக்கு வல்லமையைப்
பெருகப்பண்ணுகிறார்.
30 இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோ
வார்கள்,
வாலிபரும் விழுவார்களே.
31 யெகோவாவுக்குக் காத்திருக்கிறவர்களோ
புதுப்பலம் அடைந்து
கழுகுகளைப்போலச் செட்டைகளை
அடித்து எழும்புவார்கள்;
அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்
கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.

**41** தீவுகளே, எனக்கு முன்பாக மவுன
மாயிருங்கள்;
ஜனங்கள் புதுப்பலம் அடைந்து
கொண்டு
கிட்டிச் சேர்ந்து பேசட்டும்;
நாம் ஒருமிக்க நியாயாசனத்துக்கு முன்
பாகச் செல்லுவோம்.

செல்லுமிடமெல்லாம் வெற்றிபெறும் 2
இவனைக்
கிழக்கிலிருந்து எழுப்பிவிட்டவர் யார்?
ஜாதிகளை அவனுக்கு ஒப்புக்கொடுத்து
ராஜாக்களுக்கு அவனை ஆண்டவனுக்
கினவர் யார்?
அவர்கள் பட்டயம் தூசிபோலாகவும்
அவர்கள் வில் பறக்கடிக்கப்படும் பதர்
போலாகவும்
செய்தவர் யார்?
அவன் அவர்களைத் தரத்திக்கொண்டு 3
வெற்றியோடு செல்லுகிறான்;
நடக்கும் பாதையில் அவன் நடக்கிற
தில்லையே.
அதைச்செய்து நிறைவேற்றினவர் யார்? 4
ஆதிமுதற்கொண்டு தலைமுறைகளை வர
வழைக்கிறவரே,
ஆதிமுதலிருக்கிற யெகோவாவாகிய நா
னே,
அந்தத்தில் இருப்பவர்களோடும் மாறு
தலிருக்கிறவராகிய நானே.
தீவுகள் அதைக்கண்டு பயப்படும், 5
பூமியின் கடையாந்தரங்கள் நடுங்கும்;
அவர்கள் கிட்டிவந்து சேருகிறார்கள், 6
அவர்கள் ஒருவருக்கொருவர் உதவி
செய்து,
சகோதரனே, தைரியமாயிரு என்று
சொல்லுகிறார்கள்.
கன்னான் தட்டானையும் 7
சுத்தியாலே தட்டுகிறவன் அடைகல்லின்
மேல் அடிக்கிறவனையும் தைரியப்படுத்தி
இசைவைப்பார்த்து அது நல்லதென்று
சொல்லி
அது விழாதபடி ஆணிகளால் இறுக்கு
கிறான்.
நீயோ இஸ்ரவேலே, என் தாசனே, 8
நான் தெரிந்தெடுத்த யாக்கோபே,
என் சிநேகிதனான ஆபிரகாமின் சந்ததி
யே,
நான் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து 9
உன்னை எடுத்து,
அதின் மூலைகளிலிருந்து அழைத்து
வந்து:
நீ என் தாசன், நான் உன்னைத் தெரிந்
தெடுத்தேன்;
நான் உன்னைத் தள்ளிவிடவில்லை என்று
சொன்னேன்.
நீ பயப்படாதே, நானே உன்னோடிருக் 10
கிறேன்;
திகையாதே, நான் உன் கடவுள்,
நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச்
சகாயம்பண்ணுவேன்;

என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத்
தாங்குவேன்.
11 இதோ, உன்மேல் விரோதிக்கிற யாவரும்
வெட்கி இலச்சையடைவார்கள்;
உன்னோடே வழக்காடுகிறவர்கள் நாச
மாகி இல்லாமற்போவார்கள்;
12 உன்னோடே போராடினவர்களைத் தேடி
யும் காணாதிருப்பாய்;
உன்னோடே யுத்தம்பண்ணின மனுஷர்
இல்லாதவர்களாகி ஒழிந்துபோவார்கள்.
13 யெகோவாவாகிய நானே, உன் கடவு
ளே,
உன் வலதுகையைப் பிடித்து:
பயப்படாதே, நான் உனக்குத் துணை நிற்
கிறேன்
என்று சொல்லுகிறேன்.
14 யாக்கோபே, புழுவே, இஸ்ரவேலின் சிறு
கூட்டமே,
பயப்படாதே, நான் உனக்குத் துணை
நிற்கிறேன்;
இது யெகோவாவின் திருவாக்கு.
இஸ்ரவேலின் பரிசுத்தரே உன்னை மீட்
பவர்.
15 இதோ, நான் உன்னைப் பற்கள் நிறைந்த
புதிதும் கூர்மையுமான போரடிக்கும்
கருவியாக்குவேன்;
நீ மலைகளைப் போரடித்து நொறுக்குவாய்,
குன்றுகளைப் பதரைப்போலாக்கிவிடு
வாய்.
16 அவைகளைத் தூற்றுவாய், காற்று அவை
களைக் கொண்டுபோம்,
புசற்காற்று அவைகளைப் பறக்கடிக்கும்;
நீயோ யெகோவாவில் களிகூர்ந்திருப்
பாய்,
இஸ்ரவேலின் பரிசுத்தரில் மேன்மை
பாராட்டிக்கொண்டிருப்பாய்.
17 சிறுமையும் எளிமையுமானவர்கள் தண்
ணீரைத் தேடுவார்கள்,
அது கிடையாமல் அவர்கள் நாவு தாகத்
தால் வறளும்;
அச்சமயத்தில் யெகோவாவாகிய நான்
அவர்களுக்குச் செவிகொடுப்பேன்,
இஸ்ரவேலின் கடவுளாகிய நான் அவர்
களைக் கைவிடாதிருப்பேன்.
18 காய்ந்துகிடந்த மேடுகளில் ஆறுகளையும்
பள்ளத்தாக்குகளின் நடுவே ஊற்றுகளை
யும் வரச்செய்வேன்;
வனாந்தரத்தைத் தண்ணீர்த் தடாகமும்
வறண்ட பூமியை நீரூற்றுகளுமாச்சு
வேன்.
19 வனாந்தரத்திலே கேதுரு மரங்களையும்
வாகை மரங்களையும்
மிருதுச் செடிகளையும் ஒலிவமரங்களையும்
நடுவேன்;
அவாந்தர வெளியிலே தேவதாரு விருட்
சங்களையும்
சவுக்கு மரங்களையும் புன்னை மரங்களை
யும் வைப்பேன்.
20 யெகோவாவின் கரமே அதைச் செய்தது
என்றும்
இஸ்ரவேலின் பரிசுத்தர் அதைப் படைத்
தார் என்றும்
யாவரும் கண்டு உணர்ந்து சிந்தித்து அறி
யும்படி அப்படிச் செய்வேன்.
21 உங்கள் வழக்கைக் கொண்டுவாருங்
கள்
என்று யெகோவா சொல்லுகிறார்;
உங்கள் நியாயங்களை எடுத்துக் காட்டுங்
கள்
என்று யாக்கோபின் ராஜா உரைக்கிறார்.
22 அவர்கள் அவைகளை எடுத்துக் காட்டிச்
சம்பவிக்கப்போகிறவைகளை நமக்குத் தெ
ரிவிக்கட்டும்;
முன் அறிவித்திருக்கிறவைகள் எவை?
அவற்றை நமக்கு அறிவிக்கட்டும்;
நாம் அவற்றைச் சிந்தித்து நிகழ்ந்தன
இன்னவென்று அறிவோம்,
அன்றேல் வரப்போகிறவற்றை நமக்குத்
தெரிவிக்கட்டும்.
23 இனி வரப்போகிறவற்றை அறிவிக்கட்
டும்,
அறிவித்தால் நீங்கள் தேவர்கள் என்று
அறிவோம்;
நாங்கள் எல்லாரும் திகைப்புற்றுப் பார்க்
கும்படி,
நன்மையோ தீமையோ, ஏதாவது செய்
யுங்கள்.
24 இதோ, நீங்கள் ஒன்றுமில்லை,
உங்கள் செயல்கள் சுத்த சூனியமே,
உங்களைத் தெரிந்துகொள்வோன் அரு
வருப்பே.
25 நான் வடக்கேயிருந்து ஒருவனை
எழும்பிவரச்செய்தேன், வந்துவிட்டான்;
சூரியோதய திசையிலிருந்து ஒருவனை
அழைக்கிறேன்,
என் நாமத்தையே தொழுதுகொள்ளு
கிறான்;
களிமண்ணை மிதிக்கும் குயவனைப்போல
அவன் தேசாதிபதிகளைச் சேருக எண்ணி
அவர்கள்மேல் நடப்பான்.
26 நாம் அதை அறியும்படியாக முன்னமே
தெரிவித்தவன் யார்?
அவன் தெரிவித்தது மெய்யென்று சொல்
லும்படி.

பூர்வகாலத்தில் அறிவித்தவன் யார்?
அறிவித்தவன் ஒருவனும் இல்லையே,
உரைத்தவனும் இல்லையே;
நீங்கள் அதைப்பற்றிப் பேசக் கேட்டவனும் இல்லையே.
27 இதோ, இவைகளைப் பார் என்று
சீயோனுக்கு முதலாவது சொல்லி
இந்த நற்செய்தியை எருசலேமுக்குச்
சொல்லியனுப்பினது நானே.
28 நான் சுற்றிப் பார்க்கிறேன், ஒருவனுமில்லை,
அவர்களில் ஆலோசனை சொல்பவன்
எவனுமில்லை,
நான் கேட்பதற்குப் பதிலுரைப்பவனுமில்லை.
29 இதோ, அவர்கள் எல்லாரும் சுத்த
சூனியமே,
அவர்கள் கிரியைகள் ஒன்றுமில்லை,
அவர்கள் விக்கிரகங்கள் காற்றும் வெறுமையுமே.

**42** இதோ, நான் ஆதரிக்கிற எனது
தாசன்,
நான் தெரிந்தெடுத்தவரும் என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும் இவரே;
என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணினேன்;
அவர் புறஜாதியாருக்குள் நியாயம் பரவச்செய்வார்;
2 அவர் கூக்குரலிடமாட்டார்,
தம்முடைய சத்தத்தை உயர்த்தி அதை
வீதியிலே கேட்கப்பண்ணமாட்டார்.
3 அவர் நெரிந்த நாணலை முறியார்
மங்கியெரிகிற திரியை அணையார்,
உண்மையோடு நியாயத்தைப் பரவச்செய்வார்.
4 அவர் நியாயத்தைப் பூமியிலே நிலைநாட்டுமட்டும்
சோர்ந்துபோவதுமில்லை, தளர்ந்துபோவதுமில்லை,
அவருடைய போதனையைப் பெறும்படி
தீவுகள் காத்திருக்கும்.
5 வானங்களைச் சிருஷ்டித்து அவைகளை
விரித்தவரும்,
பூமியை, அதிலே உண்டானவைகளோடு, பரப்பினவரும்,
அதிலுள்ள ஜனங்களுக்குச் சுவாசத்தையும்
அதில் நடக்கிறவர்களுக்கு ஆவியையும்
கொடுத்தவருமான
யெகோவாவாகிய கடவுள் சொல்லுகிறதைக் கேளுங்கள்:
யெகோவாவாகிய நான் நீதியில் உம்மை 6
அழைத்தேன்;
உமது கையைப்பிடித்து உம்மைக் காத்து
உம்மை ஜனத்திற்கு உடன்படிக்கையாகவும்
புறஜாதியாருக்கு ஒளியாகவும் வைக்கிறேன்.
நீர் குருடர் கண்களைத் திறக்கவும் 7
கட்டுண்டவர்களைக் காவலிலிருந்தும்
இருளிலிருப்பவர்களைச் சிறையிலிருந்தும்
வெளியே கொண்டுவரவும் இப்படிச்
செய்தேன்.
நானே யெகோவா, என் நாமம் இதுவே; 8
என் மகிமையை மற்றவர்களுக்கும்
என் புகழை விக்கிரகங்களுக்கும்
கொடேன்.
பூர்வகாலத்தில் தெரிவிக்கப்பட்டவை 9
கள், இதோ, நிறைவேறலாயின;
புதியவைகளையும் நானே இப்பொழுது
அறிவிக்கிறேன்;
அவை தோன்றுமுன்னே அவற்றை உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.
சமுத்திரத்தில் யாத்திரைபண்ணுகிற 10
வர்களே,
சமுத்திரங்களிலுள்ள தீவுகளே, அவற்றில்
குடியிருப்பவர்களே,
யெகோவாவுக்குப் புதுப் பாட்டைப் பாடுங்கள்;
பூமியின் கடையாந்தரத்திலிருந்து அவருடைய புகழைப் பாடுங்கள்.
வனாந்தரமும் அதின் ஊர்களும் 11
கேதாரியர் பாளையங்களும் உரத்த சத்தமிடுவார்கள்;
கன்மலைகளிலே குடியிருக்கிறவர்கள்
கெம்பீரிப்பார்கள்,
பர்வதங்களின் கொடுமுடியிலிருந்து
ஆர்ப்பரிப்பார்கள்.
யெகோவாவுக்கு மகிமையைச் செலுத்து 12
வார்கள்,
அவர் புகழைத் தீவுகளில் பிரஸ்தாபிப்பார்கள்.
யெகோவா பராக்கிரமசாலியைப்போல் 13
புறப்பட்டு,
யுத்தவீரனைப்போல் வைராக்கியமூண்டு
முழங்கி ஆரவாரஞ்செய்து,
தமது சத்துருக்கள்மேல் தமது பராக்கிரமத்தைக் காட்டுவார்.
நான் வெகுகாலம் மவுனமாயிருந்தேன்; 14
சும்மாயிருந்து என்னை அடக்கிக்கொண்டிருந்தேன்;
இப்பொழுதோ பிள்ளைபெறுகிறவளைப்போலச் சத்தமிட்டு

அருமூச்செடுத்துச் சிறுமூச்சுவிடுகிறேன்.
15 நான் மலைகளையும் குன்றுகளையும் காயச்செய்து,
அவைகளிலுள்ள பூண்டுகளையெல்லாம் வாடப்பண்ணி,
ஆறுகளைத் திட்டுகளாக்கி, ஏரிகளை வற்றிப்போகப்பண்ணுவேன்.
16 குருடரை அவர்கள் அறியாத வழியிலே நடத்தி,
அவர்களுக்குத் தெரியாதபாதைகளில் அவர்களை அழைத்துக்கொண்டுவந்து,
அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும் கரடுமுரடானதைச் செவ்வையுமாக்குவேன்;
இக்காரியங்களை நான் செய்வேன், சொன்னதைச் செய்யாதிரேன்.
17 தெய்வங்களையான விக்கிரகங்களை நம்பி
வார்ப்பிக்கப்பட்ட சிலைகளிடம்:
நீங்கள் எங்கள் தேவர்கள் என்று சொல்லுகிறவர்களோ
பின்னிட்டு மிகவும் வெட்கத்துக்காளாவார்கள்.
18 செவிடரே, கேளுங்கள்;
குருடரே, கவனித்துப் பாருங்கள்.
19 என் தாசனைப்பார்க்கிலும் குருடன் யார்?
நான் அனுப்பிய தூதனைப்போல செவிடன் யார்?
எனது அடியானைப் போல குருடன் யார்?
யெகோவாவின் ஊழியனைப்போல குருடன் யார்?
20 நீ அநேக காரியங்களைக் கண்டும் கவனியாதிருக்கிறாய்;
திறந்த காதுடையவனாயிருந்தும் கேளாதே போகிறான்.
21 தமது பிரமாணத்தைச் சிறப்பும் மகத்துவமுமுள்ளதாக்கும்படி
யெகோவா தமது நீதியினிமித்தம் பிரியங்கொண்டார்.
22 இந்த ஜனமோ கொள்ளையிடப்பட்டும் சூறையாடப்பட்டும் இருக்கிறது,
அவர்கள் வாலிபர் அனைவரும் கட்டப்பட்டவர்களாய்க்
காவலறைகளிலே ஒளிக்கப்பட்டிருக்கிறார்கள்;
தப்புவிப்பார் இல்லாமல் கொள்ளையாகி,
மீட்டுவிடு என்பார் இல்லாமல் சூறையாவார்கள்.
23 உங்களில் இதற்குச் செவிகொடுத்து
வருங்காலத்தில் இதைக் கவனித்துக் கேட்பவன் யார்?
24 யாக்கோபைச் சூறையாகவும்
இஸ்ரவேலைக் கொள்ளையாகவும் ஒப்புக்கொடுத்தவர் யார்?
நாம் பாவஞ்செய்து விரோதித்த யெகோவாவே அல்லவோ!
அவருடைய வழிகளில் நடக்கவும் அவருடைய பிரமாணத்துக்குச் செவிகொடுக்கவும்
ஜனங்கள் மனதற்றுப் போனார்களே.
அவர் தமது கோபத்திலே அவர்கள்மேல் 25
உக்கிரத்தையும் யுத்தத்தின் கொடுமையையும் வரப்பண்ணினார்;
அவர்களைச் சூழ அக்கினிஜ்வாலைகளைக் கொளுத்தியிருந்தும்
அவர்கள் உணராதிருந்தார்கள்;
அது அவர்களைத் தகித்தும் அதை மனதிலே வைக்காதேபோனார்கள்.

43 இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும்
இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய
யெகோவா சொல்லுகிறதைக் கேள்:
பயப்படாதே, உன்னை மீட்டுக்கொண்டேன்;
உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்;
நீ என்னுடையவன்.
2 நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடிருப்பேன்;
நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை;
நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்;
அக்கினிஜ்வாலை உன்மேலே பற்றுவதுமில்லை.
3 நானே யெகோவா, உன் தேவன்,
இஸ்ரவேலின் பரிசுத்தர், உன் இரட்சகர்;
உன்னை மீட்கும் பொருளாக எகிப்தையும்
உனக்கு ஈடாக எத்தியோப்பியாவையும்
சேபாவையும் கொடுத்தேன்.
4 நீ என் பார்வைக்கு அருமையானவன், மதிப்புப்பெற்றவன்,
என்னால் நேசிக்கப்பட்டவன்;
ஆதலால் உனக்குப்பதிலாக மனுஷரையும்
உன் ஜீவனுக்கு ஈடாக ஜனங்களையும்
கொடுப்பேன்.
5 பயப்படாதே, நான் உன்னோடே இருக்கிறேன்;
கிழக்கிலிருந்து நான் உன் சந்ததியை வரப்பண்ணி,
மேற்கிலிருந்தும் உன்னைக் கூட்டிச் சேர்ப்பேன்.

6 நான் வடக்கை நோக்கி கொடுத்துவிடு என்றும்
தெற்கைநோக்கி, வைத்திராதே என்றும் சொல்லித்
தூரத்திலிருந்து என் குமாரரையும்,
பூமியின் கடையாந்தரத்திலிருந்து என் குமாரத்திகளையும்,
7 நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிச் செய்தவர்களான
என் நாமந்தரிக்கப்பட்ட யாவரையும்
கொண்டுவா என்பேன்.
8 கண்களிருந்தும் குருடாயிருக்கிற ஜனத்தையும்
காதுகளிருந்தும் செவிடாயிருக்கிறவர்களையும் வரப்பண்ணுங்கள்.
9 சகல ஜாதிகளும் ஏகமாய்ச் சேர்ந்து கொண்டு
சகல ஜனங்களும் கூடிவரட்டும்;
இப்படிப்பட்டவைகளை அறிவிப்பது அவர்களில் யார்?
முன் அறிவித்திருக்கிறவைகளை இப்போது சொல்பவன் யார்?
கேட்பவர்கள் உண்மையென்று சொல்லும்படி
அவர்கள் தங்கள் சாட்சிகளைக் கொண்டு வந்து
தங்களைக் குற்றமற்றவர்களென்று காட்டட்டும்.
10 நீங்களே என் சாட்சிகள்,
நீங்கள் நான் தெரிந்தெடுத்த என் தாசன்,
இது யெகோவாவின் திருவாக்கு.
நானே அவரென்று நீங்கள் அறிந்து நம்பி உணரவேண்டும்;
எனக்குமுன் உண்டான தெய்வம் இல்லை;
எனக்குப்பின் இருப்பதும் இல்லை.
11 நான், நானே யெகோவா;
ரட்சிப்பவர் என்னைத்தவிர இல்லை.
12 அறிவித்தவரும் இரட்சித்தவரும் சொன்னவரும் நானே;
இப்படியெல்லாம் செய்தது உங்களிலுள்ள அந்நிய தெய்வமல்ல.
ஆகவே நீங்களே என் சாட்சிகள், நானே கடவுள்;
இது யெகோவாவின் திருவாக்கு.
13 இந்நாள்முதல் இருக்கப்போகிறவரும் நானே,
என் கையினின்று விடுவிப்பவன் இல்லை,
நான் செய்வதைத் தடுப்பவன் யார்?
14 உங்களை மீட்கிறவரும் இஸ்ரவேலின் பரிசுத்தருமாகிய
யெகோவா சொல்லுகிறதைக் கேளுங்கள்:
நான் உங்கள்பொருட்டுப் பாபிலோனுக்கு ஆட்களை
அனுப்புகிறேன்;
அங்கிருப்பவர்கள் யாவரையும் ஓடிவிடச் செயவேன்,
தாங்கள் மகிழ்ந்திருந்த படகுகளிலேயே
கல்தேயர் ஏறத் தப்பியோடச் செய்வேன்.
15 நானே உங்கள் பரிசுத்தராகிய யெகோவா,
இஸ்ரவேலை உண்டாக்கினவர், உங்கள் ராஜா.
16 சமுத்திரத்திலே வழியையும்
வலிய தண்ணீர்களிலே பாதையையும் உண்டாக்கி,
17 இரதங்களையும் குதிரைகளையும்,
இராணுவவீரரையும் பராக்கிரமசாலிகளையும் வரச்செய்து,
எழுந்திராதபடி அவர்கள் ஒன்றாய் விழுந்துகிடக்கவும்
ஒரு திரி அவிந்துபோவதுபோல் அவர்கள் அணைந்துபோகவும் செய்த
யெகோவா சொல்லுகிறதைக் கேளுங்கள்:
18 முன்னவைகளை நினைக்கவேண்டாம்;
பூர்வகாலத்தில் நடந்தவைகளைச் சிந்திக்கவேண்டாம்.
19 இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்,
இப்பொழுதே அது தோன்றுகிறது;
அது உங்களுக்கு தெரியவில்லையா?
நான் வனாந்தரத்திலே வழியும்
அவாந்தர வெளியிலே ஆறுகளும் உண்டாகும்படி செய்வேன்.
20 நான் தெரிந்தெடுத்த என் ஜனத்தின் தாகத்துக்கு
வனாந்தரத்திலே தண்ணீர்களையும்
அவாந்தரவெளியிலே ஆறுகளையும் வரச்செய்வதினால்
காட்டு மிருகங்களும் நரிகளும்
நெருப்புக்கோழிகளும் என்னை மகிமைப்படுத்தும்,
21 எனக்கென்று நான் படைத்த ஜனம்
என் புகழைப் பிரஸ்தாபிக்கும்.
22 யாக்கோபே, நீயோ என்னை நோக்கிக் கூப்பிடவில்லை;
இஸ்ரவேலே, நீ என்னைப்பற்றி மனஞ்சலித்தாய்.
23 உன் ஆடுகளைத் தகனபலிகளாக நீ எனக்குச் செலுத்தவில்லை;
உன் இரத்தபலிகளாலே நீ என்னைக் கனப்படுத்தவுமில்லை;

போஜனபலிகளைச் செலுத்தும்படி நான்
உன்னைத் தொந்தரவு செய்பவில்லை,
தூபங்காட்டும்படி உன்னை நான் வருத்
தப் படுத்தவுமில்லை.
24 நீ பணங்கொடுத்து எனக்கெனச் சுகந்த
வசம்பு வாங்கவில்லை,
உன் பலிகளின் நிணத்தைக் கொடுத்து
என்னைத் திருப்தி செய்யவில்லை,
உன் பாவங்களினால் நீயே என்னைக்
கஷ்டப்படுத்தினாய்,
உன் அக்கிரமங்களினால் என்னை வருத்
தப்படுத்தினாய்.
25 நான், நானே உன் மீறுதல்களை என்
நிமித்தமாகவே குலைத்துவிடுகிறேன்;
உன் பாவங்களை நினையாதிருப்பேன்.
26 உன் மனதில் உள்ளதை எனக்கு வெளி
யிடு, நாம் வழக்காடுவோம்,
உன்னைக் குற்றமற்றவனெனத் தீர்ப்ப
தற்கு ஆதாரமானதைச் சொல்,
27 உன் ஆதித் தகப்பன் பாவஞ்செய்தான்,
உன் மத்தியஸ்தரும் எனக்கு விரோத
மாய்த் துரோகம் பண்ணினார்கள்.
28 ஆகவே நான் பரிசுத்த ஸ்தலத்தின் தலை
வரைப்
பரிசுத்தமற்றவராக நடத்துவேன்,
யாக்கோபைச் சாபத்துக்கும்
இஸ்ரவேலை நிந்தனைக்கும் ஒப்புக்கொடுப்
பேன்.

**44** இப்போதும் என் தாசனாகிய யாக்
கோபே,
நான் தெரிந்தெடுத்த இஸ்ரவேலே,
கேள்.
2 உன்னை உண்டாக்கினவரும், தாயின்
கர்ப்பத்தில் உன்னை உருவாக்கினவரும்
உனக்குத் துணைசெய்கிறவருமாகிய யெ
கோவா சொல்வதைக் கேள்:
என் தாசனாகிய யாக்கோபே,
நான் தெரிந்தெடுத்த யெஷுரூனே,
பயப்படாதே.
3 தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும்
வறண்ட நிலத்தின்மேல் நீரோடைகளை
யும் ஊற்றுவேன்;
உன் சந்ததியின்மேல் என் ஆவியையும்
உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்
வாதத்தையும் ஊற்றுவேன்.
4 இதினால் அவர்கள் நீர்க்கால்களின் ஓரத்
திலுள்ள
புல்லின் நடுவே அலரிச்செடிகளைப்
போல வளருவார்கள்.
5 ஒருவன், நான் யெகோவாவுடையவன்
என்பான்,
ஒருவன் யாக்கோபின் பேரைத் தரித்துக்
கொள்வான்;
ஒருவன் தன் கையில் யெகோவாவினு
டையவனென எழுதிவைப்பான்,
இஸ்ரவேல் என்பதைத் தன் சிறப்புப்
பெயராகத் தரித்துக்கொள்வான்.
6 இஸ்ரவேலின் ராஜாவாகிய யெகோ
வாவும்
சேனைகளின் யெகோவாவாகிய அவனு
டைய மீட்பரும்
சொல்வதைக் கேளுங்கள்:
நானே முதலும் இறதியுமானவர்,
என்னைத்தவிர வேறே தெய்வம் இல்லை.
7 ஆதி ஜனங்களை நான் ஸ்தாபித்தது முதற்
கொண்டு
என்னைப்போல் அதிகாரத்தோடு பேசின
வன் யார்?
அவன் வந்து அறிவித்து எனக்கு ஒழுங்
குபடுத்தி வைக்கட்டும்,
வரப்போகிறவைகளையும் சம்பவிக்கப்
போகிறவைகளையும்
அவன் அறிவிக்கட்டும்.
8 நீங்கள் திகைக்கவும் பயப்படவும் வேண்
டாம்,
வெகுகாலத்தின்முன்னே நான் அதை
உனக்குச்
சொல்லி அறிவிக்கவில்லையோ?
நீங்களே என் சாட்சிகள், என்னைத்தவிர
வேறே தெய்வமுண்டோ?
வேறொரு கன்மலையும் இல்லை, எனக்குத்
தெரிந்தது இல்லையே.
9 விக்கிரகங்களை உருவாக்குகிற யாவ
ரும் வீணனவர் களே,
அவர்கள் அருஞ்சிலைகள் ஒன்றுக்கும்
உதவா;
அவர்கள் தாமே அவற்றின் சாட்சிகள்,
ஒன்றையும் காணார், ஒன்றையும் அறி
யார்,
அவர்கள் வெட்கத்துக்காளாவார்களே.
10 சித்திரவேலை உருவத்தையும் வார்ப்பு
விக்கிரகத்தையும்
செய்பவனை என்ன சொல்ல! அது ஒன்
றுக்கும் உதவாதே.
11 இதோ, அவன் கூட்டாளிகளெல்லாரும்
வெட்கத்துக்குள்ளாவார்கள்,
தொழிலாளிகள் மனுஷரிலுள்ளவர்தானே;
அவர்கள் எல்லாரும் கூடி முன்வந்து
நிற்கட்டும்;
அவர்கள் எல்லாரும் திகைத்து வெட்கத்
துக்குள்ளாவார்கள்.
12 கொல்லன் தன் ஆயுதத்தை எடுத்துக்
கரிநெருப்பிலே இரும்பைக் காய்ச்சிச்

சுத்திகளால் அதை அடித்துத்
தன் பலமான கைகளால் அதை உருப்
படுத்துகிறான்;
அவன் பட்டினியாயிருந்து பலமற்றுப்
போகிறான்,
தாகமாயிருந்து தளர்ந்துபோகிறான்.
13 தச்சன் நூல்பிடித்துக் கூராணியால் மரத்
துக்குக் குறிபோட்டு
உளிகளினால் அதில் வேலைசெய்து
கவராசத்தினால் அதை வகுத்து
மனுஷ சாயலாக நரவடிவுப்படியே உரு
வமாக்குகிறான்;
அதைக் கோவிலிலே வைக்கும்படி அப்
படிச் செய்கிறான்.
14 அவன் தனக்குக் கேதுருக்களை வெட்டு
கிறான்,
ஒரு மருதமரக் கன்றையாவது
ஒரு கருவாலிமரக் கன்றையாவது தெ
ரிந்து
காட்டு மரங்களோடே அதைத் தனக்
காக வளர்க்கிறான்;
அல்லது ஒரன்மரத்தை நடுகிறான்,
மழை அதை வளரச்செய்யும்.
15 அவைகள் மனுஷனுக்கு விறகாகிறது,
அவன் அவைகளில் கொஞ்சம் எடுத்துக்
குளிர் காய்கிறான்;
நெருப்பை மூட்டி அப்பமும் சுடுகி
றான்;
அதில் ஒரு தண்டு எடுத்து ஒரு தெய்
வத்தையும் செய்து அதைப்பணிந்து
கொள்ளுகிறான்;
ஒரு விக்கிரகத்தையும் அதிலுலே செய்து
அதை வணங்குகிறான்.
16 ஒரு தண்டை அடுப்பில் எரிக்கிறான்;
ஒரு தண்டினால் இறைச்சியைச் சமைத்
துப் புசிக்கிறான்;
பொரியலைப் பொரித்துத் திருப்தியாகச்
சாப்பிடுகிறான்;
குளிருங்காய்ந்து: ஆ ஆ அனலானேன்,
கணப்பால் சுகித்தேன் என்று சொல்லு
கிறான்.
17 அதில் மீதியான தண்டைத் தனக்குத்
தெய்வமாக, உருவமாகச் செய்து,
அதன்முன் விழுந்து, அதை வணங்கிப்
பிரார்த்தித்து:
நீயே என் தெய்வம், என்னை ரட்சிக்க
வேண்டும்
என்று சொல்லுகிறான்.
18 அவர்களுக்கு அறிவில்லை, உணர்வில்லை;
காணதபடி அவர்கள் கண்களும்
உணராதபடி அவர்கள் இருதயமும்
அடைபட்டன;
அவர்கள் தங்கள் மனதில் யோசிக்கிற 19
தில்லை:
அதில் ஒரு தண்டை அடுப்பில் எரித்
தேன்,
அதின் தழலிலே அப்பத்தைச்சுட்டு,
இறைச்சியையும் பொரித்துப் புசித்தேன்;
அதில் மீதியான தண்டை நான் அரு
வருப்பான விக்கிரகமாக்கலாமா?
ஒரு மரக்கட்டையைப் பணிந்து வணங்
கலாமா
என்று சொல்வதற்கு அறிவும் உணர்வும்
இல்லை;
சாம்பலைத் தின்கிறவன்; 20
வஞ்சிக்கப்பட்ட மனம் அவனை மோசப்
படுத்தும்,
தன் ஆத்துமாவைத் தப்புவிக்கவும்
என் வலதுகையிலே அபத்தம் அல்
லவோ இருக்கிறதென்று சொல்லவும்
அவனுக்குப் புத்தியில்லை.
யாக்கோபே, இஸ்ரவேலே, இவற்றை 21
நினை;
நீ என் தாசன், நான் உன்னை உருவாக்கி
னேன்;
நீ எனக்கேயுரிய தாசன், இஸ்ரவேலே,
நீ என்னால் மறக்கப்படுவதில்லை.
உன் மீறுதல்களைக் கார்மேகத்தைப் 22
போலவும்
உன் பாவங்களை மேகத்தைப்போலவும்
கலைத்துவிட்டேன்;
என்னிடம் திரும்பிவா, உன்னை மீட்டுக்
கொண்டவர் நானே.
வானங்களே, மகிழுங்கள்; யெகோவா 23
வின் செயலே நடக்கிறது;
பூமியின் ஆழங்களே, ஆர்ப்பரியுங்கள்;
மலைகளே, காடே, காட்டிலுள்ள சகல
மரங்களே, மகிழ்ச்சியோடு முழங்குங்
கள்;
யெகோவா யாக்கோபை விடுவித்து இஸ்
ரவேலிலே மகிமையோடு விளங்குகிறார்.
உன் மீட்பரும் தாயின் கர்ப்பத்தில் 24
உன்னை உருவாக்கினவருமான
யெகோவா சொல்லுகிறதைக் கேள்:
நானே யாவற்றையும் படைத்த யெகோ
வா,
நானே ஒருவராய் வானங்களை விரித்
தேன்,
நானே பூமியைப் பரப்பினேன்,
எனக்குத் துணைகின்றவர் யார்?
பொய் பிணைப்போர் காட்டிய அடை 25
யாளங்களை நான் அபத்தமாக்கிக்
குறிசொல்லுகிறவர்களை மூடராக்கி,
ஞானிகளை வெட்கிப்போகச்செய்து

அவர்கள் அறிவை மதியீனமாக்குகி
றேன்.
26 நான் என் ஊழியக்காரரின் வார்த்தை
யை நிலைப்படுத்தி,
என் தூதுவரின் ஆலோசனையை நிறை
வேற்றி,
எருசலேமைப்பற்றி, இதிலே ஜனங்கள்
குடியேறுவார்கள் என்றும்
யூதாவின் ஊர்களைப்பற்றி, இவை கட்
டப்படுமென்றும் சொல்லி
அவைகளின் பாழான ஸ்தலங்களைத்
திரும்பக்கட்டுவேன்.
27 நான் ஆழத்தைப் பார்த்து, வற்றிப்போ
என்றும்
உன் நதிகளை வறண்டுபோகச் செய்கி
றேன் என்றும் சொல்லுகிறேன்.
28 கோரேசைப்பற்றி:
அவன் என் மேய்ப்பன், எனக்கு இஷ்ட
மானதை அவன் நிறைவேற்றிமுடிப்பான்
என்று சொல்லுகிறேன்;
எருசலேமைப்பற்றி, அது கட்டப்படும்
என்றும்
தெய்வாலயத்தைப்பற்றி, அதற்கு அஸ்தி
பாரம் போடப்படும்
என்றும் சொல்லுகிறேன்.

**45** நான் அபிஷேகம்பண்ணின கோரே
சுக்கு முன்பாக
ஜாதிகளை அடக்கி ராஜாக்களின் இடைக்
கட்டுகளை அவிழ்க்கும்படிக்கும்
அவனுக்கு முன்பாக வாசல்கள் பூட்டப்
படாமல் கதவுகளைத் திறந்துவைக்கும்
படிக்கும்
நான் அவன் வலதுகையைப் பிடித்துக்
கொண்டேன்
என்று உரைத்த யெகோவா
கோரேசுக்குச் சொல்வதைக் கேளுங்கள்:
2 நான் உனக்கு முன்னேபோய்
கரடுமுரடானவைகளைச் செம்மையாக்கு
வேன்.
3 செப்புக் கதவுகளை உடைத்து,
இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து,
அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்
களையும்
ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களை
யும்
உனக்குக் கொடுப்பேன்;
உன்னைப் பெயர்சொல்லி அழைக்கிற
இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா
நானே
என்று நீ அறியும்படி இப்படிச் செய்
வேன்.

என் தாசனாகிய யாக்கோபினிமித்தமும் 4
நான் தெரிந்தெடுத்த இஸ்ரவேலினிமித்
தமும்
நான் உன்னைப்பெயர்சொல்லி அழைத்து,
நீ என்னை அறியாதிருந்தும் உனக்குச்
சிறப்புப் பெயரொன்றைத் தரித்தேன்.
நானே யெகோவா, வேறொருவருமில்லை; 5
என்னைத் தவிர வேறே தெய்வம் இல்லை.
என்னைத்தவிர ஒருவரும் இல்லையென்று 6
சூரியன் உதிக்கிற திசையிலும் அது அஸ்
தமிக்கிற திசையிலும் அறியப்படும்
படிக்கு
நீ என்னை அறியாதிருந்தும் நான் உனக்கு
இடைக்கட்டு கட்டினேன்;
நானே யெகோவா, வேறொருவருமில்லை.
ஒளியைப்படைத்து இருளையும் உண்டா 7
க்கினேன்,
வாழ்வைப்படைத்துத் தாழ்வையும்
உண்டாக்குகிறவர் நானே;
இவைகளையெல்லாம் செய்கிறவர் யெகோ
வாவாகிய நானே.
வானங்களே, உயர இருந்து துளியுங் 8
கள்;
மேகங்கள் நீதியைப்பொழிக;
பூமி திறக்கவே இரட்சிப்பின் கனி
தோன்றுக, நீதியுங்கூட விளைக;
இவற்றைச் செய்பவர் யெகோவாவாகிய
நானே.
தன்னை உருவாக்கினவரோடே வழக் 9
காடுகிறவனுக்கு ஐயோ கேடாம்!
அவன் மண்ணோடுகளில் ஒரு ஓடே,
களிமண் தன்னை உருவமாக்கினவனி
டம்:
நீ செய்கிறதென்னவென்று சொல்லத்
தகுமோ?
உன்னால் செய்யப்பட்டது, அவனுக்குக்
கைகள் இல்லையென்று சொல்லத்தகு
மோ?
தகப்பனிடம், நீ ஜநிப்பிக்கிறது என்ன 10
என்றும்
தாயினிடம், நீ பெறுகிறது என்ன என்
றும் சொல்லுகிறவனுக்கு ஐயோ கே
டாம்!
இஸ்ரவேலின் பரிசுத்தரும் அவனை உரு 11
வாக்கினவருமாகிய
யெகோவா சொல்லுகிறதைக் கேளுங்
கள்:
வருங் காரியங்களைப்பற்றி என்னிடம்
விசாரிக்கிறீர்களே!
என் பிள்ளைகளைப்பற்றியும் என் கைகள்
செய்கிறவைகளைப்பற்றியும்
நீங்கள் எனக்குக் கட்டளையிடுவீர்களோ?

12 நான் பூமியை உண்டுபண்ணினேன்,
நானே அதின்மேல் இருக்கிற மனுஷனைச்
சிருஷ்டித்தேன்;
என் கைகளாலேயே நான் வானங்களை
விரித்தேன்;
அவைகளின் சர்வ சேனையையும் நான்
கட்டளையிட்டேன்.
13 நான் நீதியாகவே இவனை எழுப்பினேன்,
அவன் வழிகளையெல்லாம் செம்மை
யாக்குவேன்,
அவன் என் நகரத்தைக் கட்டுவான்,
சிறைப்பட்டுப்போன என் ஜனங்களைக்
கிரயமும் பரிதானமும் இல்லாமல் விடு
தலையாக்குவான்
என்று சேனைகளின் யெகோவா சொல்லு
கிறார்.
14 யெகோவா சொல்வதைக் கேள்:
எகிப்தின் சம்பாத்தியமும் எத்தியோப்பி
யாவின் வர்த்தகலாபமும்
வளர்ந்த ஆட்களாகிய சபேயரின் வர்த்
தகலாபமும்
உன்னிடம் வந்து, உன்னுடையதாகும்;
அவர்கள் உன்பின்னே சென்று விலங்
கிடப்பட்டு நடந்துவருவார்கள்,
அவர்கள் உன்னைப் பணிந்துகொண்டு
உன்னிடம் விண்ணப்பஞ்செய்து:
உன்னிடந்தான் கடவுள் இருக்கிறார்
என்றும்
அவரைத் தவிர வேறே தெய்வம் இல்லை
யென்றும் சொல்வார்கள்.
15 இஸ்ரவேலின் கடவுளும் இரட்சகருமா
கியவரே,
மெய்யாக நீர் உம்மை மறைத்துக்கொண்
டிருக்கிற தெய்வம்.
16 விக்கிரகங்களைச் செய்கிற அனைவரும்
வெட்கப்பட்டு இலச்சையடைந்து ஏக
மாய் இலச்சைக்குள்ளாவார்கள்.
17 இஸ்ரவேலோ யெகோவாவினால் இரட்
சிக்கப்பட்டு நித்திய ரட்சிப்பைப் பெறு
வான்;
நீங்கள் என்றுமுள்ள சதாகாலங்களிலும்
வெட்கப்படாமலும் இலச்சையடையா
மலும் இருப்பீர்கள்.
18 வானங்களைச் சிருஷ்டித்தவரும், கட
வுளாயிருப்பவரும்
பூமியை வெறுமையாயிருக்கச் சிருஷ்டி
யாமல் அதைக் குடியிருப்புக்காகச்
செய்துபடைத்து
அதை உருவாக்கி நிலைப்படுத்தினவரு
மாகிய
யெகோவா சொல்வதைக் கேளுங்கள்;
நானே யெகோவா, வேறொருவருமில்லை.
நான் பேசினது மறைவிலும் பூமியின் 19
இருளான இடத்திலுமல்ல;
வீணானவற்றின் வழியாக என்னைத் தே
டுங்களென்று நான் யாக்கோபின் சந்த
தியைக் சொன்னதில்லை;
நான் நியாயமானதைப் பேசி உண்மை
யானவைகளை அறிவிக்கிற யெகோவா.
ஜாதிகளில் தப்பினவர்களே, 20
கூட்டங்கூடி வாருங்கள், ஏகமாய்ச் சே
ருங்கள்;
தங்கள் விக்கிரகமாகிய மரத்தைச் சுமந்து
திரிந்து
இரட்சிக்கமாட்டாத தெய்வத்தைத் தொ
ழுதுகொள்ளுகிறவர்கள் அறிவீனர்.
நீங்கள் சேர்ந்து ஏகமாய் யோசனைப 21
ணிப் பதிற்சொல்லுங்கள்,
இதைப் பூர்வகாலத்திலேயே தெரிவித்து
முன்னமே அறிவித்தவர் யார்?
யெகோவாவாகிய நான் அல்லவா?
என்னைத்தவிர வேறே தெய்வம் இல்லை.
என்னையன்றி, நீதியுள்ளவரும் ரட்சிக்கிற
வருமாகிய கடவுள் இல்லையே;
பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, 22
என்னிடம் திரும்பி ரட்சிப்புப்பெறுங்
கள்;
நானே கடவுள், வேறொருவருமில்லை.
முழங்கால் யாவும் என்முன் முடங் 23
கும்,
நாவு யாவும் என் பேரால் ஆணையிடும்
என்று நான் என்னைக்கொண்டே ஆணை
யிட்டிருக்கிறேன்;
இந்த உண்மையான வார்த்தை என்
வாயிலிருந்து வந்தது,
இது மாறுவதேயில்லை என்கிறார்.
யெகோவாவினிடத்திலேயே நீதியும் வல் 24
லமையுமுண்டு
என்று ஒவ்வொருவனும் சொல்லி அவ
ரிடம் வந்து சேருவான்;
அவரை விரோதித்த யாவரும் வெட்கத்
துக்குள்ளாவார்கள்.
இஸ்ரவேலின் சந்ததியாகிய யாவரும் 25
யெகோவாவில் நியாயம்பெற்று மேன்மை
பாராட்டுவார்கள்.

46 பேல் மடங்கும், நேபோ குனியும்,
அவைகளின் விக்கிரகங்கள் காட்டு மிரு
கங்களுக்கும் நாட்டுமிருகங்களுக்குமே
யாம்,
நீங்கள் சுமந்து திரிந்தவைகள் இளைத்
துப்போன மிருகங்கள்மேல் பாரமாய்ச்
சுமத்தப்படும்.
அவைகள் ஏகமாய்க் குனிந்து மடங்கும், 2

எந்தச் சுமையையும் அவைகள் தப்புவிக்கமாட்டா,
அவைகள் தாமே சிறைப்பட்டுப்போகும்.
3 யாக்கோபின் சந்ததியாரே, இஸ்ரவேல் சந்ததியில் தப்பி மீந்த சகல ஜனங்களே,
எனக்குச் செவிகொடுங்கள்;
தாயின் வயிற்றில் தோன்றினதுமுதல் உங்களை ஏந்தினேன்,
கர்ப்பத்தில் உற்பத்தியானதுமுதல் உங்களைச் சுமந்தேன்.
4 உங்கள் முதிர்வயதுவரைக்கும் நான் மாறுமல் அப்படியே இருப்பேன்,
நரைவயது மட்டும் நான் உங்களைத் தாங்குவேன்;
நான் அப்படியே செய்துவந்தேன்;
நானே சுமப்பேன்; நானே தாங்கி விடுவிப்பேன்.
5 யாருக்கு என்னை ஒப்பிட்டுச் சமமாக்குவீர்கள்?
நான் ஒப்பாயிருப்பதாக யாருக்கு என்னை உவமிப்பீர்கள்?
6 பையிலிருந்து பொன்னைக் கொட்டுகிறார்கள்,
வெள்ளியைத் தராசிலே நிறுக்கிறார்கள்,
தட்டானிடம் கூலிபேசிக்கொள்ளுகிறார்கள்,
அவன் ஒரு தேவதையை உண்டாக்குகிறான்;
அதை வணங்கிப் பணிந்துகொள்ளுகிறார்கள்.
7 அதை எடுத்துத் தோளின்மேல் சுமந்து நிறுத்து,
அதின் ஸ்தானத்திலே வைக்கிறார்கள்;
அங்கேயே அது நிற்கும், அந்த இடம் விட்டுப் பெயராது;
ஒருவன் அதை நோக்கிக் கூப்பிட்டால்
அது பதிலுரைப்பதுமில்லை, அவன் இக்கட்டினின்று அவனை rரட்சிப்பதுமில்லை.
8 இதை நினைத்து ஸ்திரமாயிருங்கள்;
துரோகிகளே, இதை மனதில் வையுங்கள்.
9 பூர்வகாலமிருந்தே முன்குறிக்கப்பட்டு நடந்தவைகளை நினையுங்கள்;
நானே கடவுள், வேறொருவரும் இல்லை;
நானே கடவுள், எனக்கு ஒப்பானவரில்லை.
10 பின் நடக்கப்போகிறவைகளை முன்னமே அறிவிக்கிறேன்,
இன்னும் சம்பவியாதிருப்பவற்றை பூர்வத்திலிருந்தே அறிவிக்கிறேன்;
என் ஆலோசனை நிலைநிற்கும்,
எனக்கு இஷ்டமானவற்றை யெல்லாம் செய்வேன் எனறுசொல்லி,
ஒரு குரூர பட்சியைக் கிழக்கிலிருந்தும், 11
என் ஆலோசனையை நிறைவேற்றும் மனுஷனைத்
தூரதேசத்திலிருந்தும் வரவழைக்கிறேன்,
ஆம், சொன்னேன், அப்படியே நிறைவேற்றுவேன்,
தீர்மானித்தேன், அப்படியே செய்துமுடிப்பேன்.
நெஞ்சுரமுள்ளவர்களே, நியாயம் 12
தூரம் என்றிருப்பவரே,
எனக்குச் செவிகொடுங்கள்.
நியாயத்தை நான் கிட்டிவரச்செய்கி 13
றேன்,
அது தூரமல்ல, என் ரட்சிப்புத் தாமதிப்பதுமில்லை;
நான் சீயோனிலே rரட்சிப்பையும் இஸ்ரவேலுக்கு என் மகிமையையும் கட்டளையிடுவேன்.

பாபிலோன் குமாரத்தியாகிய கன்னி **47**
கையே
நீ இறங்கி மண்ணிலே உட்காரு;
கல்தேயரின் குமாரத்தியே,
தரையிலே உட்காரு, உனக்குச் சிங்காசனமில்லை;
சம்பிரமவாழ்வுள்ளவள், சுகபோஜனச் செல்வி
என்று இனி நீ அழைக்கப்படுவதில்லை.
2 வஸ்திரத்தை எடுத்து மாவரை;
உன் முக்காட்டை நீக்கிவிடு;
வெறுங்காலும் அம்மணத்தொடையுமாய் ஆறுகளைக் கடந்துபோ.
3 உன் நிர்வாணம் வெளிப்படும், உன் இலச்சை காணப்படும்;
நான் ஒருவனையும் விடாமல் பழிவாங்குவேன்.
4 எங்களை மீட்பவரின் திருநாமம்
சேனைகளின் யெகோவா, இஸ்ரவேலின் பரிசுத்தர்.
5 கல்தேயரின் குமாரத்தியே,
நீ அந்தகாரத்தினுட்புகுந்து மவுனமாய் உட்காரு;
rராஜ்யங்களின் நாயகியென்று இனி நீ அழைக்கப்படுவதில்லை.
6 நான் என் ஜனத்தின்மேல் கடுங்கோபங் கொண்டு
என் சுதந்தரத்தைப் பரிசுத்தமற்றதாக்கி
அவர்களை உன் கையில் ஒப்புக்கொடுத்தேன்;

நீ அவர்களுக்கு இரக்கங்காட்டவில்லை,
முதிர்வயதுள்ளவர்கள்மேல் உன் பார
மான நுகத்தை வைத்தாய்.
7 என்றைக்கும் நாயகியாய் நிலைப்பே
னென்று சொல்லி
இந்தக் காரியங்களை இதுவரைக்கும்
உன் மனதிலே வையாமலும்
முடிவை நினையாமலும் போனாய்.
8 இப்பொழுதும் சுகசெல்வியே, விசார
மின்றி வாழ்கிறவளே,
நான்தான், என்னைத்தவிர ஒருவருமில்லை;
நான் விதவையாகிவிடுவதில்லை,
நான் சந்தான சேதத்தை அறிவதில்லை
என்று உன் இருதயத்திலே சொல்லுகிற
வளே,
நான் சொல்வதைக் கேள்:
9 சந்தான சேதம், விதவை நிலைமை இவ்
விரண்டும்
சடுதியாக ஒரே நாளில் உனக்கு வரும்,
உன் திரளான பில்லி சூனியங்களின் நடு
விலும்
அதிக பலமான உன் மந்திரங்களின் நடு
விலும்
அவைகள் பூரணமாய் உன்மேல் வரும்.
10 உன் தீயவழியிலே நீ திடநம்பிக்கையா
யிருந்து,
என்னைப் பார்க்கிறவர் ஒருவரும் இல்லை
யென்றாய்;
உன் ஞானமும் உன் அறிவுமே உன்னை
மோசம்போக்கினது;
நான்தான், என்னைத்தவிர ஒருவருமில்லை
என்று உன் இருதயத்தில் சொல்லிக்
கொண்டாய்.
11 ஆதலால் தீங்கு உன்மேல் வரும்,
அதை விலக்க மந்திரம் அறியாய்;
மோசம் உன்மேல் வரும்,
நீ அதை நிவர்த்தியாக்க முடியாது;
நீ அறியாத நேரத்தில் சடுதியாய் அழிவு
உன்மேல்வரும்.
12 சிறுவயதுமுதல் நீ பழகிக் கனத்த
உன் மந்திரங்களையும் உன் மிகுதியான
பில்லி சூனியங்களையும்
கைக்கொண்டு எதிரே நில்;
அவற்றால் உனக்கு உதவி வருமோ?
பயப்படுத்தி மோசங்களை விலக்குவா
யோ, பார்ப்போம்;
13 பலவிதயோசனைகளைச்செய்து நீ இளைத்
துப்போனாய்,
வானநூல் கணிப்பவரும் நட்சத்திரம்
பார்ப்பவரும்
உனக்கு நேரிடப்போகிறவற்றை மாதந்
தோறும் கணிப்பவரும்
வந்து நின்று உன்னை ரட்சிக்கட்டும்.
இதோ, அவர்கள் தாளடியைப்போல 14
இருப்பார்கள்,
நெருப்பு அவர்களைச் சுட்டெரிக்கும்;
அவர்கள் தங்கள் பிராணனை அக்கினி
ஜ்வாலையினின்று விடுவிப்பதில்லை,
அது குளிர்காயத்தக்க தழலுமல்ல,
எதிரே உட்காரத்தக்க நெருப்புமல்ல.
நீ கனக்கக் கனக்கப் பழகிச் சார்ந்த 15
விஷயத்தில் உனக்கு இப்படியாகும்:
உன் சிறுவயதுமுதல் நீ வர்த்தகம்பண்
ணினவர்களோ
ஆளாளாய்த் தத்தம் வழிகளிலே தள்
ளாடிப் போய்விடுவார்கள்;
உன்னை இரட்சிப்பதற்கு எவரும் இரார்.

**48**

யாக்கோபின் வம்சத்தாரே,
நீங்கள் இஸ்ரவேலின் பெயரால் அழைக்
கப்பட்டு
யூதாவின் நீரூற்றிலிருந்து வந்தவர்கள்.
நீங்கள் யெகோவாவின் நாமத்தின்மேல்
ஆணையிட்டு
இஸ்ரவேலின்கடவுளைப் புகழுகிறவர்கள்;
ஆயினும் நீங்கள் உண்மையிலும் நீதியி
லும் செய்வதில்லை.
பரிசுத்த நகரத்தார் என்று சொல்லிக் 2
கொண்டு
இஸ்ரவேலின் கடவுளை ஆதாரமாய்க்
கொண்டவர்கள்.
சேனைகளின் யெகோவா என்பதே அவர்
திருநாமம்.
நீங்கள், இதைக்கேளுங்கள்:
முன்காலத்தில் நடந்தவைகளைப் பூர்வத் 3
திலிருந்தே அறிவித்தேன்;
அவைகள் என் வாயிலிருந்து பிறந்தன,
அவைகளைத் தெரிவித்தேன்;
அவைகளைச் சடுதியில் செய்தேன்,
அவைகள் நடந்தன.
நீ கடினமுள்ளவன், 4
உன் பிடரி இரும்பு நரம்பு;
உன் நெற்றி செம்பு, இவை எனக்குத்
தெரியும்.
ஆகையால் நான் அவைகளை முன்னமே 5
உனக்கு அறிவித்து,
அவைகள் வராததற்கு முன்னே உனக்
குத் தெரியப்படுத்தினேன்;
என் விக்கிரகம் அவைகளைச் செய்தது,
நான் செதுக்கவேலையாய்ச் செய்த சுரூப
மும் நான் வார்ப்பித்த விக்கிரகமும்
அவைகளைக் கட்டளையிட்டது
என்று நீ சொல்லாதபடியே அப்படிச்
செய்தேன்.

6 அவைகளைக் கேள்விப்பட்டாயே, அவற்றையெல்லாம் பார்;
இப்பொழுது நீங்களும் அவைகளை ஒப்புக்கொள்ளமாட்டீர்களா?
இதுமுதல் புதியவைகளையும் நீ அறிவதற்கு வெளிப்படாதிருந்தவைகளையும் உனக்குத் தெரிவிக்கிறேன்.
7 அவைகள் முற்காலத்திலல்ல, இப்பொழுதே உண்டாக்கப்பட்டன;
இந்நாட்களுக்கு முன்னே நீ அவைகளைக் கேள்விப்பட்டதில்லை;
இதோ, அவைகளை அறிந்திருக்கிறேன் என்று நீ சொல்வதற்கு இடமில்லை.
8 நீ அவைகளைக் கேள்விப்படவுமில்லை அறியவுமில்லை;
முற்காலத்திலிருந்தே அவைகள் உன் செவிக்கு எட்டவுமில்லை;
நீ பெருந்துரோகி என்பதும்
தாயின் கர்ப்பத்திலிருந்த நாள்முதல் நீ மீறிநடக்கிறவன் எனப்பெயர் பெற்றவன் என்பதும்
எனக்குத் தெரியும்.
9 என் நாமத்தினிமித்தம் என் கோபத்தைக் காட்டாதிருந்தேன்,
என் புகழ்ச்சியினிமித்தமே உன்மேல் பொறுமையாயிருந்தேன்;
உன்னைச் சங்காரியாதபடி அப்படிச்செய்தேன்.
10 இதோ, உன்னைப் புடமிட்டேன், வெள்ளியோ கிடைக்கவில்லை;
உபத்திரவத்தின் குகையிலே உன்னைப் பரீட்சைசெய்தேன்.
11 என்னிமித்தம், என்னிமித்தமே, இப்படிச் செய்கிறேன்;
என் நாமம் பரிசுத்தமற்றதுபோலாகும்படி விடுவேனோ?
என் மகிமையை நான் மற்றவர்களுக்குக் கொடேன்.
12 யாக்கோபே, நான் அழைத்திருக்கிற இஸ்ரவேலே, எனக்குச் செவிகொடு;
நானே அவர், நானே முதலும் இறுதியுமானவர்.
13 பூமிக்கு அஸ்திபாரமிட்டது என் கரமே,
வானங்களை விரித்தது என் வலதுகரமே,
நான் அவைகளுக்குக் கட்டளையிடவே,
அவைகள் அனைத்தும் வந்துநிற்கும்.
14 நீங்களெல்லாரும் கூடிவந்து கேளுங்கள்;
யெகோவாவுக்குப் பிரியமானவன் அவருக்கு இஷ்டமானதைப் பாபிலோனில் செய்வான்,
கல்தேயரின்மேல் அவன் அவருடைய புயமாவான்;
இவற்றை அவர்களில் அறிவித்தவன் யார்?
15 நான், நானே, அதைச் சொன்னேன்;
நான் அவனை அழைத்தேன், அவனை வரப்பண்ணினேன்;
அவன் வழி வாய்க்கும்.
16 நீங்கள் கிட்டிச்சேர்ந்து இதைக் கேளுங்கள்:
நான் ஆதியிலிருந்தே மறைவில் பேசவில்லை;
பேசினவை நேரிடும்போதெல்லாம் நான் அங்கேயே இருந்தேன்.
இப்பொழுது யெகோவாவாகிய ஆண்டவர்
என்னையும் தமது ஆவியையும் அனுப்புகிறார்.
17 இஸ்ரவேலின் பரிசுத்தரும் உன்னை மீட்பவருமான
யெகோவா சொல்வதைக் கேள்:
உன் கடவுளாகிய யெகோவா நானே,
பிரயோஜனமானவற்றை நான் உனக்குப் போதிக்கிறேன்;
நீ செல்லவேண்டிய வழியிலே உன்னை நடத்துகிறேன்.
18 நீ என் கட்டளைகளைக் கவனித்திருந்தாயானால் எவ்வளவோ நலம்;
அப்பொழுது உனக்குச் சமாதானம் நதியைப்போலவும்
நியாயம் சமுத்திரத்தின் அலைகளைப்போலவும் பாய்ந்து வருமே.
19 அப்பொழுது உன் சந்ததி மணலத்தனையாகவும்
உனக்குப் பிறப்பது அதின் தூளத்தனையாகவும் இருக்கும்;
அப்பொழுது அதின் பெயர் என்னை விட்டு அறுபட்டுப் போகாமலும்
அழிக்கப்படாமலும் இருக்கும்.
20 பாபிலோனிலிருந்து வந்துவிடுங்கள்; கல்தேயரைவிட்டு ஓடிவாருங்கள்;
நீங்கள் கெம்பீரசத்தமிட்டு
இதை அறிவித்துத் தெரியப்படுத்துங்கள்;
பூமியின் கடையாந்தரமட்டும் அதைப் பிரஸ்தாபப்படுத்துங்கள்.
தமது தாசனாகிய யாக்கோபை யெகோவா மீட்டுக்கொண்டாரென்று சொல்லுங்கள்.
21 அவர் அவர்களை வனாந்தரங்களில் நடத்தினபோது
அவர்கள் தாகத்தினால் விடாய்த்ததில்லை;
கன்மலையிலிருந்து தண்ணீரை அவர்களுக்குச் சுரக்கப்பண்ணினார்;
கன்மலையைப் பிளக்கவே தண்ணீர் ஓடிவந்தது

என்று சொல்லுங்கள்.
22 தெய்வபயமற்றவருக்கோ சமாதானம் இல்லை
என்று யெகோவா சொல்லுகிறார்.

**49** தீவுகளே, எனக்குச் செவிகொடுங்கள்;
தூரத்திலிருக்கிற ஜனங்களே, கவனியுங்கள்;
தாயின் கர்ப்பத்திலிருந்தபோதே யெகோவா என்னை அழைத்து,
நான் என் தாயின் வயிற்றில் இருக்கையில் என் நாமத்தைச் சொன்னார்.
2 அவர் என் வாயைக்கூர்மையான பட்டயமாக்கித்
தமது கரத்தின் நிழலினால் என்னை மறைத்து,
என்னைத் துலக்கமான அம்பாக்கி
என்னைத் தமது அம்பறாத்தூணியிலே வைத்துக்கொண்டார்.
3 அவர் என்னிடம்: நீ என் தாசன்;
இஸ்ரவேலே, நான் உன்னில் மகிமையடைவேன் என்றார்.
4 நானோ: விருதாவாய் உழைத்தேன்,
வீணும் வியர்த்தமுமாய் என் பலத்தைச் செலவழித்தேன்,
ஆகிலும் என் நியாயம் யெகோவாவினிடமும்
என் பலன் என் கடவுளினிடமும் இருக்கிறது என்று சொன்னேன்.
5 யாக்கோபைத் தம்மிடம் திருப்பவும்,
இஸ்ரவேலைத் தம்மிடம் சேர்த்துக்கொள்ளவும்,
என்னை, நான் கர்ப்பத்திலிருந்த நாள் முதலே,
தமக்குத் தாசனாக உருவாக்கின யெகோவா
இப்போது என்னோடு பேசி:
—நான் யெகோவாவின் மகிப்புப்பெற்றவன்,
என் கடவுளே என் பலம்—
இதைச் சொல்லுகிறார்:
6 நீ என் தாசனாயிருக்கிறதே,
யாக்கோபின் கோத்திரங்களைத் தூக்கி நிறுத்துவதும்
இஸ்ரவேலில் காக்கப்பட்டவர்களைத் திரும்பக் கொண்டுவருவதும் மாத்திரம் போதுமானதல்லவே.
பூமியின் கடைசிபரியந்தமும்
என்னால் வரும் இரட்சிப்பாயிருக்கும்படி
உன்னைப் புறஜாதியாருக்கு வெளிச்சமாக ஏற்படுத்தினேன்.
7 இஸ்ரவேலை மீட்பவரும் அதின் பரிசுத்தருமாகிய யெகோவா,
மனுஷரால் அசட்டைபண்ணப்பட்டு
ஜாதியாரால் அருவருக்கப்பட்டிருந்த
கொடிய அதிகாரிகளின் அடிமைக்கு
இதைச் சொல்லுகிறார்:
உண்மையுள்ள யெகோவாவின் நிமித்தமும்
உன்னைத் தெரிந்தெடுத்த இஸ்ரவேலின் பரிசுத்தரின் நிமித்தமும்
ராஜாக்கள் கண்டு எழுவார்கள், அதிபதிகள் பணிந்துகொள்வார்கள்.
8 பின்னும் யெகோவா சொல்வதைக்கேள்:
தகுதியான காலத்திலே நான் உனக்குச் செவிசாய்த்து
ரட்சணிய நாளிலே உனக்கு உதவிசெய்தேன்;
தேசத்தைத் தூக்கி நிறுத்திப்
பாழான இடங்களைப் பங்கிட்டுக்கொடுக்கும்படி
நான் உன்னைக்காத்து
ஜனத்துக்கு உடன்படிக்கையாக உன்னை வைக்கிறேன்.
9 கட்டுண்டவர்களிடம், புறப்பட்டுவாருங்கள் என்றும்
இருளில் இருப்பவர்களிடம், வெளியே வாருங்கள் என்றும் நீ சொல்வாய்;
அவர்கள் போகும் வழியெல்லாம் மேய்வார்கள்;
காய்ந்துகிடந்த சகல மேடுகளிலும் அவர்களுக்கு மேய்ச்சல் கிடைக்கும்.
10 அவர்கள் பசித்து வருந்தார்கள், தாகித்து வருந்தார்கள்;
கானலாகிலும் வெயிலாகிலும் அவர்களைச் சேதப்படுத்துவதில்லை;
அவர்களுக்கு இரக்கங்காட்டுகிறவர் அவர்களை நடத்தி,
நீரூற்றுகளிடத்திற்கு அவர்களை மெதுவாய் நடத்துவார்.
11 என் மலைகளையெல்லாம் வழிகளாக்குவேன்;
என் பாதைகள் உயரமாக்கப்படும்.
12 இதோ, சிலர் தூரத்திலிருந்து வருவார்கள்;
இதோ, சிலர் வடக்கிலும் மேற்கிலுமிருந்து வருவார்கள்;
மற்றும் சிலர் சீனீம் தேசத்திலிருந்தும் வருவார்கள் என்கிறார்.
13 வானங்களே, மகிழுங்கள்; பூமியே, களிகூறு;
பர்வதங்களே, மகிழ்ச்சியோடு முழங்குங்கள்;

யெகோவா தமது ஜனத்தை ஆற்றித்தேற்றினார்;
சிறுமைப்பட்டிருக்கிற தமது ஜனங்களுக்கு இரக்கங்காட்டுவார்.

14 சீயோனே: யெகோவா என்னைக் கைவிட்டார்,
ஆண்டவர் என்னை மறந்தார் என்கிறாள்.

15 ஒரு ஸ்திரீ தான் பெற்ற பிள்ளைக்கு இரங்காமல்
பால் குடிக்கும் தன் குழந்தையை மறப்பாளோ?
இவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை.

16 இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்;
உன் மதில்கள் எப்போதும் என் முன் இருக்கின்றன.

17 உன் குமாரர் விரைந்து வருவார்கள்;
உன்னை அழித்தவர்களும் உன்னைப் பாழாக்கினவர்களும் உன்னைவிட்டுப் போய்விடுவார்கள்.

18 உன் கண்களை நிமிர்த்திச் சுற்றிலும் பார்,
அவர்களெல்லாரும் கூடி உன்னிடம் வருகிறார்கள்;
நீ அவர்களெல்லாரையும் ஆபரணமாகத் தரித்து
மணமகள் இடைக்கச்சை கட்டுவது போல்
நீ அவர்களை அணிந்துகொள்வாய்
என்று என் ஜீவன்மேல் ஆணையாகச் சொல்லுகிறேன்;
இது யெகோவாவின் திருவாக்கு.

19 உன்னிலே பாழும் வெறுமையுமான இடங்களிருந்தன,
உன் தேசம் நிர்மூலமாயிற்று,
இப்பொழுதோ உன்னில் குடிகள் நெருங்கவே இடமில்லாமற்போம்;
உன்னை விழுங்கினவர்கள் தூரமாய் அகல்வார்கள்.

20 பிள்ளைகளை இழந்திருந்த காலத்தில் உனக்குப் பிறந்த பிள்ளைகள்:
இடம் எங்களுக்கு நெருக்கம்,
நாங்கள் குடியிருக்கும்படி இடம்தா
என்று சொல்வதை உன் காதுகள் கேட்கும்.

21 அப்பொழுது நீ, உன் இருதயத்திலே,
இவர்களை எனக்குப் பிறப்பித்தவர் யார்?
நான் பிள்ளைகளில்லா மலடியும் சிறைப்பட்டு அலைந்து திரிந்தேன்;
இவர்களை எனக்கு வளர்த்தவர் யார்?
இதோ, நான் தனியாகவே விடப்பட்டிருந்தேனே,
இவர்கள் எங்கிருந்து வந்தார்கள்
என்று சொல்லுவாய்.

22 யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வதைக் கேள்:
இதோ, ஜாதிகளுக்கு நேராக என் கையை உயர்த்துவேன்,
தேசத்தாருக்கு என் கொடியை ஏற்றுவேன்;
அப்பொழுது உன் குமாரரைக் கொடுங்கைகளில் ஏந்திக்கொண்டு வருவார்கள்;
உன் குமாரத்திகள் தோளின்மேல் எடுத்துக்கொண்டு வரப்படுவார்கள்.

23 ராஜாக்கள் உன்னை வளர்க்கும் தகப்பனாவார்கள்,
அவர்கள் நாயகிகள் உன் செவிலித்தாய்களாவார்கள்;
தரையிலே முகங்குப்புற விழுந்து உன்னைப் பணிந்து,
உன் கால்களின் தூசியை நக்குவார்கள்;
நானே யெகோவா, எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கத்துக்காளாவதில்லை
என்பதை அப்பொழுது அறிந்துகொள்வாய்.

24 பராக்கிரமன் கையிலிருந்து கொள்ளைப்பொருளைப் பறிக்கலாகுமோ?
ஜெயித்தவன் கையில் சிறையானவர்களை விடுவிக்கலாகுமோ?

25 யெகோவா சொல்வதைக் கேள்:
இதோ, பராக்கிரமசாலியிடம் சிறையானவர்களைப் பறிக்கலாகும்,
கொடியவன் கையிலிருந்து கொள்ளைப்பொருளை விடுவிக்கலாகும்,
உன்னுடைய விரோதிகளை நானே எதிர்த்து,
உன் பிள்ளைகளை நானே ரட்சித்துக்கொள்ளுவேன்.

26 உன்னை ஒடுக்கினவர்கள் தங்கள் மாம்சத்தையே தின்னும்படி செய்வேன்,
திராட்சைப் புதுரசம் குடித்து வெறிகொள்வதுபோல்
தங்கள் ரத்தத்தையே குடித்து வெறிகொள்வார்கள்;
யெகோவாவாகிய நான் உன் ரட்சகர்,
யாக்கோபின் வல்லவர் உன்னை மீட்பவர்
என்பதை மாம்சமான யாவரும் அறிந்துகொள்வார்கள்.

**50** 1 யெகோவா சொல்வதைக் கேளுங்கள்: நான் உங்கள் தாயை அகற்றி,

அவளுக்குத் தள்ளுதற்சீட்டைக் கொடுத்ததுண்டோ?
கடனினிமித்தம் நான் எவனுக்காவது உங்களை விற்றுப்போட்டதுண்டோ?
இதோ, உங்கள் அக்கிரமங்களினிமித்தமே நீங்கள் விலைப்பட்டீர்கள்,
உங்கள் பாதகங்களினிமித்தமே உங்கள் தாய் தள்ளுண்டுபோனாள்.
2 நான் வந்தபோது ஒருவனும் இல்லாமற்போனதென்ன?
நான் கூப்பிட்டபோது பதிலுரைக்க எவனும் இல்லாமற் போனதென்ன?
மீட்கமுடியாதபடி என் கரம் குறுகிற்றோ?
விடுவிக்க எனக்குப் பலமில்லாமற்போயிற்றோ?
இதோ, நான் பயமுறுத்திக் கடலை வற்றப்பண்ணுகிறேன்,
நதிகளை வனாந்தரமாக்கிவிடுகிறேன்,
அவற்றிலுள்ள மீன் தண்ணீரின்றித் தாகத்தால் செத்து நாறுகின்றது.
3 வானங்கள் துக்க உடையாகிய காரிருளைத் தரிக்கச் செய்கிறேன்,
இரட்டை அவைகளின் மூடுசீலையாக்குகிறேன்.
4 சோர்ந்தவனை நன்மொழிசொல்லி ஆதரிப்பதற்கு
யெகோவாவாகிய ஆண்டவர் எனக்குப் பாடங்கேட்டுச் சொல்பவனின் நாவைத் தந்தார்;
காலைதோறும் என்னை எழுப்பிப் பாடங்கேட்பவர்போல் நான் கேட்பதற்கு
என் செவி கவனிக்கும்படி செய்கிறார்.
5 யெகோவாவாகிய ஆண்டவர் என் செவியைத் திறந்தார்;
நான் எதிர்க்கவுமில்லை, அவரைவிட்டுத் திரும்பவுமில்லை.
6 அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும்
தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்;
அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை.
7 யெகோவாவாகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார்;
ஆதலால் நான் அவமானத்தை உணரவில்லை,
நான் வெட்கத்துக் காளாகேன் என்பது எனக்குத் தெரியும்,
ஆகவே என் முகத்தைக் கடுங்கல்லாக்கினேன்.
8 என்னை நீதிமானாகத் தீர்ப்பவர் சமீபமாயிருக்கிறார்;
ஒருவன் என்னோடு வழக்காடுவானானால்
நானும் அவனும் முன்வந்து நிற்போம்;
ஒருவன் என்மேல் குற்றஞ் சுமத்துவானானால்
அவன் என்னிடம் வந்து சேரட்டும்.
9 இதோ, யெகோவாவாகிய ஆண்டவரே எனக்குத் துணை நிற்கிறார்;
என்னைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவன் யார்?
இதோ, அவர்கள் எல்லாரும் ஒரு வஸ்திரத்தைப்போல் பழங்கந்தையாவார்கள்;
பொட்டுப்பூச்சி அவர்களை அரித்துவிடும்.
10 உங்களில் ஒருவன் யெகோவாவுக்குப் பயந்து,
அவருடைய தாசன் சொல்வதைக் கேட்பானாகில்,
அவன் வெளிச்சங்காணுமல் இருளிலே நடந்தாலும்
யெகோவாவின் நாமத்தில் நம்பிக்கை வைத்துத்
தன் கடவுளைச் சார்ந்துகொள்ளட்டும்.
11 இதோ, நெருப்பைக்கொளுத்தி
அக்கினி அம்புகளை வைத்து இடைகட்டிக்கொள்ளுகிறவர்களே,
நீங்கள் அனைவரும் நீங்கள் மூட்டின அக்கினிக்குள்ளும்
நீங்கள் கொளுத்தின அக்கினி அம்புகளுக்குள்ளும் செல்லுங்கள்;
என் கரத்தினால் இது உங்களுக்கு உண்டாகும்,
நீங்கள் வேதனையில் கிடப்பீர்கள்.

51 நீதியை அநுசரித்து யெகோவாவைத்
தேடுகிறவர்களே,
நீங்கள் எனக்குச் செவிகொடுங்கள்;
உங்களை வெட்டி எடுத்த கன்மலையையும்
உங்களைத் தோண்டி எடுத்த துரவின் குழியையும் நோக்கிப்பாருங்கள்,
2 உங்கள் தகப்பனாகிய ஆபிரகாமையும்
உங்களைப்பெற்ற சாராளையும் நோக்கிப் பாருங்கள்;
அவன் ஒருவனாயிருக்கையில் நான் அவனை அழைத்து,
அவனை ஆசீர்வதித்து அவனைப் பெருகப் பண்ணினேன்.
3 யெகோவா சீயோனைத் தேற்றுகிறார்,
அவர் அதின் பாழான இடங்களையெல்லாம் தேறுதல்படுத்தி,
அதின் வனாந்தரத்தை ஏதேனைப்போலவும்

அதின் அவாந்தரவெளியை யெகோவாவின் தோட்டத்தைப்போலவும் ஆக்குகிறார்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் நன்றிசெலுத்தி ஸ்தோத்திரப் பாட்டுப் பாடும் சத்தமும் அதில் இருக்கும்.

4 என் ஜனங்களே, நான் சொல்வதைக் கவனியுங்கள்; என் தேசத்தாரே, எனக்குச் செவி கொடுங்கள்; போதகம் என்னிலிருந்து வெளிப்படும்; எனது நியாயத்தைப் புறதேசத்தாருக்கு வெளிச்சமாக ஏற்படுத்துவேன்.

5 என் நீதி சமீபம், என் ரட்சிப்பு வெளிப்படும்; என் புயங்கள் புறதேசத்தாரை நியாயந்தீர்க்கும்; தீவுகள் எனக்குக் காத்திருந்து என் புயத்தின்மேல் நம்பிக்கையாயிருக்கும்.

6 உங்கள் கண்களை வானத்துக்கு நேராக நிமிர்த்துங்கள், கீழே பூமியை நோக்கிப்பாருங்கள்; வானம் புகையைப்போல் ஒழிந்துபோம், பூமி வஸ்திரத்தைப்போல் பழங்கந்தையாகும், அதின் குடிகளும் அப்படியே மடிந்துபோவார்கள்; என் ரட்சிப்போ என்றைக்கும் நிலைக்கும்; என் நீதி அற்றுப்போவதில்லை.

7 நீதியை அறிந்தவர்களே, இதயத்திலே என் பிரமாணத்தையுடைய ஜனமே, எனக்குச் செவிகொடுங்கள்; மனுஷ நிந்தனைக்கு நீங்கள் பயப்பட வேண்டாம், அவர்கள் தூஷிப்பதைக் கேட்டுத் திகைக்கவேண்டாம்.

8 பொட்டுப்பூச்சி அவர்களை வஸ்திரத்தைப்போல் அரிக்கும்; புழு ஆட்டுமயிரைப்போல் அவர்களைத் தின்னும்; என்னுடைய நீதியோ என்றைக்கும் நிலைக்கும், என் ரட்சிப்பு தலைமுறை தலைமுறையாக இருக்கும்.

9 யெகோவாவின் புயமே, எழும்பு, எழும்பு, பலத்தைத் தரித்துக்கொள்; முன்னைநாட்களிலும் பூர்வ தலைமுறைகளிலும் எழும்பினதுபோல் எழும்பு; இராகாபை வெட்டினதும் வலுசர்ப்பத்தை உருவக்குத்தினதும் நீதானில்லையோ?

மகா ஆழத்தின் தண்ணீர்களாகிய சமுத்திரத்தை வற்றிப்போகப்பண்ணினதும் 10
விடுவிக்கப்பட்டவர்கள் கடந்துபோகக் கடலின் ஆழங்களை வழியாக்கினதும் நீ தானல்லவோ?
அப்படியே யெகோவாவினால் மீட்கப் 11
பட்டவர்கள் திரும்பி மகிழ்ச்சியாய்ப் பாடிக்கொண்டு சீயோனுக்கு வருவார்கள், அவர்கள் தலையின்மேல் நித்திய ஆனந்தம் சூட்டப்படும்; சந்தோஷமும் ஆனந்தமும் அடைவார்கள்; சஞ்சலமும் பெருமூச்சும் ஓடிப்போம்.
நான், நானே, உங்களைத் தேற்றுகிறவர், 12
சாகும் மனுஷனுக்கும் புல்லைப்போலும் மனுப்புத்திரனுக்கும் நீ பயப்படுவதென்ன?
உன்னைப்படைத்த யெகோவாவை நீ 13
மறப்பதென்ன? அவர் வானங்களை விரித்துப் பூமியை அஸ்திபாரப்படுத்தினாரே. ஒடுக்குகிறவன் அழித்துவிடப்போகிறான் என, நாளெல்லாம் ஓய்வின்றி அவன் உக்கிரகோபத்திற்கு நீ பயந்திருப்பதென்ன? ஒடுக்குகிறவனின் உக்கிரகோபம் எங்கே?
சிறைப்பட்டுக் குனிந்திருப்பவன் விரை 14
வில் விடுதலை பெறுவான், அவன் மரித்துக் குழி இறங்குவதில்லை, அவனுக்கு ஆகாரம் குறையாது.
உன் கடவுளாகிய யெகோவா நானே; 15
அலைகள் கொந்தளிக்கச் சமுத்திரத்தைக் குலுக்குகிறேன், சேனைகளின் யெகோவா என்பது என் நாமம்.
நான் ஒரு வானத்தை நிலைப்படுத்தி, ஒரு 16
பூமியை அஸ்திபாரப்படுத்திச் சீயோனிடம், நீ என் ஜனமென்று சொல்லும்பொருட்டு நான் என் வார்த்தைகளை உன் வாயிலே அருளி என் கரத்தின் நிழலில் உன்னைக் காத்திருக்கிறேன்.
எழும்பு, எழும்பு, எருசலேமே, 17
எழுந்து நில், யெகோவாவின் உக்கிரகோபபாத்திரத்தை அவர்கையில் வாங்கிக் குடித்தாய்,

தத்தளிக்கச்செய்யும் பாத்திரத்தை முழு
வதுமாய் உறிஞ்சிக் குடித்தாய்.
18 அவன் பெற்ற பிள்ளைகளெல்லாரிலும்
அவனை நடத்துவார் ஒருவருமில்லை;
அவள் வளர்த்த பிள்ளைகளெல்லாரிலும்
அவளுக்குக் கைலாகு கொடுப்பார் ஒரு
வருமில்லை.
19 இவ்விரண்டும் உனக்குச் சம்பவித்தன;
உனக்குப் பரிதபிக்கிறவன் யார்?
கொடுமை சங்காரங்களும், பஞ்சம் பட்ட
யங்களும் வந்தன;
யாரைக்கொண்டு உன்னைத் தேற்றுவேன்.
20 உன் குமாரர் மூர்ச்சித்து விழுந்தார்கள்;
அவர்கள், வலையிலே சிக்குண்ட சருகு
மானைப்போல
எல்லா வீதிகளின் முனையிலும் கிடக்கி
றார்கள்;
யெகோவாவின் உக்கிரத்தினாலும்
உன் கடவுளின் கண்டிதத்தினாலும்
நிறைந்திருக்கிறார்கள்.
21 ஆதலால் சிறுமைப்பட்டவளே,
மதுபானங்குடியாமல் வெறிகொண்ட
வளே, கேள்.
22 யெகோவாவாகிய உன் ஆண்டவர், தமது
ஜனத்துக்காக வழக்காடுகிற உன் கடவுள்,
சொல்வதைக் கேள்:
இதோ, தத்தளிக்கச்செய்யும் பாத்திரத்
தை உன் கையினின்று எடுத்துவிடு
கிறேன்,
இனி என் உக்கிரபாத்திரத்தை நீ குடிப்ப
தேயில்லை.
23 உன்னை வாதித்தவர்களின் கையில்
அதைக் கொடுப்பேன்,
அவர்கள் உன்னிடம்: நாங்கள் கடந்து
போவதற்கு நீ குனிந்துகிட என்று
சொன்னார்கள்,
கடந்துபோகிறவர்களுக்கு நீ உன் முது
கைத் தரையும் வீதியுமாக்கினையே.

**52** எழும்பு, எழும்பு, சீயோனே, உன்
பலத்தைத் தரித்துக்கொள்;
பரிசுத்த நகரமாகிய எருசலேமே, உன்
அலங்கார வஸ்திரங்களைத் தரித்துக்கொள்;
விருத்தசேதனமில்லாதவனும் அசுத்த
னும் இனி உனக்குள்ளே வருவதில்லை.
2 எருசலேமே, தூசியை உதறிவிட்டு
எழுந்திருந்து வீற்றிரு;
சிறைப்பட்டுப்போன சீயோன் குமாரத்
தியே,
உன் கழுத்திலுள்ள கட்டுகளை அவிழ்த்து
விடு.
3 விலையின்றி விற்கப்பட்டீர்கள்,
பணமின்றி மீட்கப்படுவீர்கள் என்று
யெகோவா சொல்லுகிறார்.
4 பூர்வகாலத்தில் என் ஜனம் எகிப்துக்குப்
போய்
அங்கே அந்நியராய்த் தங்கினார்கள்,
பிற்பாடு அசீரியரும் காரணமின்றி அவர்
களை ஒடுக்கினார்கள்
என்று யெகோவாவாகிய ஆண்டவர்
சொல்லுகிறார்.
5 இப்பொழுது எனக்கு இங்கே என்ன
வேலை,
—இது யெகோவாவின் திருவாக்கு—,
என் ஜனங்கள் காரணமின்றியே
கொண்டுபோகப்பட்டார்களே;
அவர்களை ஆளுகிறவர்கள் பெருமை
பாராட்டுகிறார்கள்
—இது யெகோவாவின் திருவாக்கு—;
நாளெல்லாம் ஒய்வின்றி என் நாமம்
தூஷிக்கப்படுகிறது.
6 இதினாலேயே என் ஜனம் என் நாமத்தை
அறிந்துகொள்ளும்;
இதைச் சொல்லுகிறவர் நானே என்று
இதினாலே அக்காலத்தில் அறியும்;
இதோ, இங்கே இருக்கிறேன்.
7 நற்செய்தியை அறிவித்துச் சமாதா
னத்தைக்கூறி
நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறி
வித்து ரட்சிப்பைத் தெரியப்படுத்தி
உன் கடவுள் அரசாளுகிறார் என்று
சீயோனுக்குச் சொல்லுகிறவனுடைய
பாதங்கள்
மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்
கின்றன.
8 உன் காமக்காரரின் சத்தம் கேட்கும்,
அவர்கள் சத்தமிட்டு ஏகமாய்க் கெம்பீ
ரிப்பார்கள்;
யெகோவா சீயோனுக்குத் திரும்பிவருகிற
தைக் கண்ணாரக் காண்கிறார்கள்.
9 எருசலேமின் பாழான ஸ்தலங்களே,
மகிழ்ச்சியோடு ஏகமாய் முழங்குங்கள்;
யெகோவா தமது ஜனத்தைத்தேற்றி எருச
லேமை மீட்டுக்கொண்டார்.
10 சகல ஜாதிகளும் காண
யெகோவா தமது திருக்கரத்தைத் நிரைக்
கிறார்;
பூமியின் கடையாந்தரமனைத்தும் நமது
கடவுளின் ரட்சிப்பைக் காணும்.
11 அகலுங்கள், அகலுங்கள், அவ்விடம்
விட்டுப்போங்கள்;
அசுத்தமான எதையும் தொடாதிருங்கள்;
யெகோவாவின் பாத்திரங்களைச் சுமக்கிற
வர்களே,

அதின் நடுவிலிருந்து புறப்பட்டு உங்களைச் சுத்திகரியுங்கள்.
12 நீங்கள் விரைந்து புறப்படுவதில்லை;
தப்பி ஓடிப்போவதுபோல் போவதுமில்லை;
யெகோவா உங்கள் முன்னேபோவார்;
இஸ்ரவேலின் கடவுள் உங்கள் பின்னுக வந்து காப்பார்.
13 இதோ, என் தாசன் சித்திபெறுவார்,
அவர் எழும்புவார், உயர்த்தப்படுவார், மகா உன்னதமாவார்.
14 உம்மைக்கண்டு அநேகர் பிரமித்தார்கள்!
—மனிதர் முகப்பார்வைபோலிராதபடி அவர் முகப்பார்வையும்
மனுப்புத்திரர் சாயல்போலிராதபடி அவர் சாயலும்
அழகு இழந்து இருந்தன—
15 இப்படியே பலஜாதிகள் தம்மைப்பற்றிப் பிரமிக்கச்செய்வார்,
தங்களுக்குச் சொல்லப்பட்டிராததைக் கண்டு
தாங்கள் கேள்விப்பட்டிராததைக் கேட்டறிந்து
ராஜாக்கள் வாய்மூடி மௌனமாவார்கள்.

**53** எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை நம்பினவன் யார்?
யெகோவாவின் புயம் யாருக்கு வெளிப்பட்டது?
2 இளங்கிளையைப்போலவும் வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும்
அவருக்கு முன்பாக எழும்பினார்;
அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை;
அவரைப் பார்த்தபோது
விரும்பத்தக்க தோற்றம் அவருக்கு இல்லை.
3 அவர் அசட்டைபண்ணப்பட்டவரும் மனுஷரால் விட்டுவிடப்பட்டவரும்,
வேதனையுற்றவரும் நோய் அனுபவமுள்ளவருமாய் இருந்தார்;
கண்டோர் முகந்திருப்பும் தோற்றமுள்ளவன்போன்றார்;
அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்;
நாம் அவரை மதிக்கவில்லை.
4 மெய்யாகவே, அவர் ஏற்றுக்கொண்டது நமது நோய்கள்,
அவர் சுமந்தது நமது வேதனைகள்,
நாமோ, அவர் வாதிக்கப்பட்டவர், கடவுளால் அடிக்கப்பட்டவர்
சிறுமைப்பட்டவர் என்று மதித்தோம்.
5 அவர் காயப்பட்டது நமது மீறுதல்களினிமித்தமே,
அவர் நொறுக்கப்பட்டது நமது அக்கிரமங்களினிமித்தமே,
நமது சமாதானத்துக்கான சிட்சை அவர்மேல் வந்தது.
அவருடைய தழும்புகளால் குணமாக்கப்பட்டோம்.
6 நாமெல்லாரும் ஆடுகளைப்போல் வழிதப்பித்திரிந்து,
அவனவன் தன்தன் வழியிலே போகத் திரும்பினோம்;
யெகோவாவோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.
7 அவர் வாதிக்கப்பட்டபோது தம்மைத் தாழ்த்தி
வாய் திறவாதிருந்தார்;
அடிப்பதற்குக் கொண்டுபோகப்படும் ஒரு ஆட்டுக்குட்டியைபோலவும்
மயிர் கத்தரிக்கிறவன்முன் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும் இருந்தார்;
அவர் தமது வாயைத் திறக்கவில்லை.
8 இடுக்கம் நியாயத்தீர்ப்பு இவற்றின் மூலமாய் அவர் எடுக்கப்பட்டார்;
ஜீவனுள்ளோர் தேசத்திலிருந்து அவர் அகற்றப்பட்ட காலத்தில்
என் ஜனத்தின் மீறுதலினிமித்தமே அவர் வாதிக்கப்பட்டார் என்று
அவர் தலைமுறையாட்களில் சிந்தித்தவன் யார்?
9 தெய்வபயமிலாரோடே அவருக்குப் பிரேதக்குழியைக் கொடுத்தார்கள்,
மரித்தபின்போ அவர் ஐசுவரியவானோடே இருந்தார்;
அவர் கொடுமை செய்யவில்லை, அவர் வாயில் வஞ்சனை காணப்படவுமில்லை.
10 யெகோவா அவரை நோயினால் வாதிக்கச் சித்தங்கொண்டார்;
அவருடைய ஆத்துமா தன்னைக் குற்ற நிவாரண பலியாக ஒப்புக்கொடுக்கும்போது
அவர் சந்தானம் கண்டு தெடுநாளாயிருப்பார்,
யெகோவா சித்தங்கொண்டது அவர் கையினால் வாய்க்குமே.
11 அவர் தமது ஆத்ம உழைப்பின் பலனைக் கண்டு திருப்தியாவார்;
என் தாசனுடைய நீதிபரரை அறிவதினால்
அநேகர் அவர் மூலமாய் நீதிமான்களாக்கப்படுவார்கள்;

அவர்களுடைய அக்கிரமங்களை அவர் தாமே சுமந்துகொள்வார்.
12 ஆதலால் நான் பெரியோர்களுடனே அவருக்குப் பங்கு கொடுப்பேன்; பலவான்களோடு அவர் கொள்ளைப் பொருளைப் பங்கிட்டுக் கொள்வார்; அவர் தமது ஆத்துமாவை மரணத்திற்கு ஊற்றிவிட்டு, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காகப் பிரார்த்தித்தது நிமித்தம் இப்படிச் செய்வேன்.

**54** பிள்ளைபெறுத மலடியே, மகிழ்ந்து பாடு; கர்ப்பவேதனைப் படாதவளே, மகிழ்ச்சியோடு முழங்கு, ஆனந்த சத்தமிடு; வாழ்க்கைப் பட்டவளுடைய பிள்ளைகளைப்பார்க்கிலும் ஆதரவற்ற ஸ்திரீயினுடைய பிள்ளைகள் அதிகம் என்று யெகோவா சொல்லுகிறார்.
2 உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு; உன் வாசஸ்தலத்திரைகள் விரிவாகட்டும், குறைக்கவேண்டாம்; உன் கயிறுகளை நீளமாக்கி, உன் முளைகளை உறுதிப்படுத்து.
3 நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் பரவுவாய்; உன் சந்ததியார் ஜாதிகளை வசப்படுத்திக்கொள்வார்கள்; பாழாய்க்கிடந்த பட்டணங்களில் குடியேறச் செய்வார்கள்.
4 பயப்படாதே, நீ வெட்கத்திற்குள்ளாகாய்; மனக்கலக்கத்துக்கு இடங்கொடேல்; இலச்சையடையாய்; உன் வாலிபத்தின் வெட்கத்தை நீ மறந்து, உன் விதவையிருப்பின் இலச்சையை இனி நினையாதே.
5 உன் சிருஷ்டிகரே உன் நாயகர், சேனைகளின் யெகோவா என்பது அவர் திருநாமம், இஸ்ரவேலின் பரிசுத்தரே உனை மீட்பவர், அவர் பூமியனைத்துக்கும் கடவுள் என்னப்படுவார்.
6 கைவிடப்பட்டு மனம் நொந்தவளான ஸ்திரீயைப் போலவும் இளம்பிராயத்தில் விவாகஞ்செய்து தள்ளப்பட்ட மனையாளைப்போலவும் இருக்கும் உன்னை யெகோவா அழைத்தார் என்று உன் கடவுள் சொல்லுகிறார்.
7 இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன்; எனினும் மிகுந்த இரக்கத்தினால் உன்னைச் சேர்த்துக்கொள்வேன்.
8 புரண்டோடுங்கோபத்தினால் என் முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தேன்; எனினும் நித்திய இருபையுடன் உனக்கு இறங்குவேன் என்று உன்னை மீட்பவராகிய யெகோவா சொல்லுகிறார்.
9 நான் நோவாகால வெள்ளத்தில் செய்ததுபோல் செய்வேன், நோவாவின் காலத்திலுண்டான வெள்ளம் இனி பூமியின்மேல் புரண்டுவருவதில்லை என்று நான் அப்பொழுது ஆணையிட்டேனே, உன்மேல் நான் கோபங்கொள்வதில்லை யென்றும் உன்னை நான் கடிந்துகொள்வதில்லை யென்றும் இப்போது ஆணையிடுகிறேன்.
10 மலைகள் விலகினாலும் குன்றுகள் அசைந்துபோனாலும் என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும் என் சமாதானத்தின் உடன்படிக்கை அசையாமலும் இருக்கும் என்று உன்மேல் மனதுருகுகிற யெகோவா சொல்லுகிறார்.
11 சிறுமைப்பட்டவளே, பெருங்காற்றில் அடிபட்டவளே, தேற்றுவாரிலாதவளே, இதோ, களப சாந்துவைத்து உன் கற்களைக் கட்டுவேன், நீல ரத்தினங்களை உன் அஸ்திபாரமாக்குவேன்;
12 உன் சுவர்க்கோடிகளை மாணிக்கத்தாலும் உன் வாசல்களைப் பளிங்குக் கற்களாலும் கட்டுவேன்; உன் வெளி மதில்களையெல்லாம் அருங்கற்களால் அமைப்பேன்.
13 உன் பிள்ளைகளெல்லாரும் யெகோவாவால் போதிக்கப்படுவார்கள்; உன் பிள்ளைகளுக்குப் பெரிய சமாதானமிருக்கும்.
14 நீதியினால் ஸ்திரப்பட்டிருப்பாய்,

கொடுமை உனக்குத் தூரமாகும்; நீ பயப்
படவேண்டாம்;
நிகைப்பு உனக்குத் தூரமாகும், அது
உன்னை அணுகாது.
15 இதோ, ஒருவன் உனக்கு விரோதமாய்
வந்தால் அது என்னுலே நடப்பதல்ல,
எவன் உனக்கு விரோதமாய் வருகிறு
னே அவன் உன்னிமித்தம் விழுவான்.
16 இதோ, கரிகெருப்பை ஊதித் தன் வேலை
யினுலே
ஆயுதத்தைச் செய்கிற கொல்லனை நான்
படைக்கிறேன்;
கெடுத்து அழிப்பவனையும் நான் படைக்
கிறேன்.
17 உனக்கு விரோதமாய்ச் செய்யப்படும்
எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்;
உன்னோடு நியாயஸ்தலத்தில் வாதாடும்
எந்த நாவையும் நீ குற்றவாளியாக்கு
வாய்;
அது யெகோவாவின் தாசருடைய சுதந்
தரமும்
என்னுல் அவர்களுக்குக் கிடைக்கும்
நியாயமுமாகும்;
இது யெகோவாவின் திருவாக்கு.

**55** ஓ தாகமாயிருப்போரே, எல்லாரும்
தண்ணீரண்டை வாருங்கள்;
பணமில்லாதவரே, வாருங்கள், வாங்கிச்
சாப்பிடுங்கள்;
வாருங்கள், பணமுமின்றி வீலையுமின்
றித்
திராட்சரசமும் பாலும் வாங்கிக்கொள்
ளுங்கள்;
2 உணவாகாத பொருளுப் பெறப் பணம்
செலவிடுவானேன்?
உழைத்துஞ் சம்பாதித்ததைத் திருப்தி
செய்யாப் பொருளுப்பெறச் செலவிடுவா
னேன்?
நான் சொல்வதை நீங்கள் கவனித்துக்
கேளுங்கள்,
அப்பொழுது நலமானதைச் சாப்பிடுவீர்
கள்;
நீங்கள் கொழுப்பான பதார்த்தத்தை
உண்டு களிப்பீர்கள்.
3 உங்கள் செவியைச் சாய்த்து என்னிடம்
வாருங்கள்,
கேளுங்கள், அப்பொழுது நீங்கள் பிழைப்
பீர்கள்;
தாவீதுக்கு அருளிய நிச்சயமான கிருபை
வரங்கள் உங்களுக்குக் கிடைக்குமென்று
உங்களோடு நித்திய உடன்படிக்கை
செய்கிறேன்.
இதோ, அவரைப் பல தேசத்தாருக்குச் 4
சாட்சியாகவும்
பல ஜாதியாருக்குத் தலைவராகவும் அதி
பதியாகவும் ஏற்படுத்தினேன்.
இதோ, நீ அறியாதிருந்த ஜாதியை வர 5
வழைப்பாய்,
உன்னை அறியாதிருந்த ஜாதி
உன் கடவுளாகிய யெகோவாவின் நிமித்
தமும் இஸ்ரவேலுடைய பரிசுத்தரின்
நிமித்தமும்
உன்னிடத்திற்கு ஓடிவரும்;
அவர் உன்னை மகிமைப்படுத்தினரே.
யெகோவாவைக் கண்டடையத்தக்க 6
சமயத்திலேயே
அவரைத் தேடுங்கள்;
அவர் சமீபமாயிருக்கையிலேயே அவ
ரை நோக்கிக் கூப்பிடுங்கள்.
தெய்வபயமற்றவன் தன் வழியையும் 7
அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும்
விட்டு
யெகோவாவினிடம் திரும்புக,
அவர் அவன்மேல் மனதுருகுவார்;
நமது கடவுளினிடமே திரும்புக,
அவர் மன்னிப்புக்கு அளவில்லை.
ஏனெனில் என் நினைவுகள் உங்கள் 8
நினைவுகள் அல்ல;
உங்கள் வழிகள் என் வழிகளுமல்ல;
இது யெகோவாவின் திருவாக்கு.
பூமியிலும் வானம் உயர்ந்திருப்பதுபோல 9
உங்கள் வழிகளிலும் என் வழிகளும்
உங்கள் நினைவுகளிலும் என் நினைவுகளும்
உயர்ந்திருக்கின்றன,
மாரியும் உறைந்த மழையும் வானத்தி 10
லிருந்து இறங்கி,
அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை
நனைத்து,
அதில் முளைவிளம்பி வீலையும்படி செ
ய்து,
விதைக்க விதையையும் புசிக்க ஆகார
தையும் கொடுக்கிறது.
என் வாயிலிருந்து வரும் வசனமும் அப் 11
படியே இருக்கிறது,
அது வெறுமையாய் என்னிடம் திரும்பா
மல்
அது நான் விரும்புகிறதைச் செய்து,
நான் அதை அனுப்பிய நோக்கத்தை
நிறைவேற்றுகிறது.
நீங்கள் மகிழ்ச்சியோடு வெளியேறிச் 12
சமாதானமாய்க் கொண்டுபோகப்படுவீர்
கள்;
மலைகளும் குன்றுகளும் உங்களுக்கு
முன்பாக மகிழ்ந்து முழங்கும்;

காட்டின் மரங்களெல்லாம் கைகொட்டும்.
13 முட்செடிக்குப் பதிலாக தேவதாருவிருட்சம் முளைக்கும்;
காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச்செடி எழும்பும்;
அது யெகோவாவுக்குப் பேரும்
நிர்மூலமாகாத நித்திய அடையாளமும் ஆகும்.

**56** யெகோவா சொல்வதைக் கேளுங்கள்:
நீங்கள் நியாயத்தைக் கைக்கொண்டு நீதியை அனுசரியுங்கள்;
சீக்கிரத்தில் என் ரட்சிப்பு வரும், என் நீதி வெளிப்படும்.
2 இப்படிச்செய்கிற மனுஷனும் இதில் நிலைத்திருக்கிற மனுப்புத்திரனும் பாக்கியவான்,
அவன் ஓய்வுநாளை ஆசரிப்பான், அதைப் பரிசுத்தமற்றதாக்கான்;
தீமையானது எதையும் செய்யாமல் தன் கையைக் காத்துக்கொள்வான்.
3 யெகோவாவைச் சேர்ந்த அந்நியன்:
யெகோவா என்னைத் தமது ஜனத்திலிருந்து
முற்றிலும் பிரித்துப்போடுவாரென்று சொல்லாதிருக்க;
அண்ணகனும், இதோ, நான் பட்டமரமென்று சொல்லாதிருக்க.
4 யெகோவா சொல்வதைக் கேளுங்கள்:
என் ஓய்வுநாட்களை ஆசரித்து,
எனக்கு இஷ்டமானவைகளைத் தெரிந்துகொண்டு,
என் உடன்படிக்கையில் நிலைத்திருக்கிற அண்ணகருக்கு
5 என் ஆலயத்தில் என் மதில்களுக்குள்ளே,
குமாரரிலும் குமாரத்திகளிலும் சிறந்ததாக மதிக்கப்படும்
இடத்தையும் பேரையும் கொடுப்பேன்;
என்றும் அழியாத நித்திய நாமத்தை அவர்களுக்கு அருளுவேன்.
6 யெகோவாவைச் சேவிக்கவும் அவர் நாமத்தை நேசிக்கவும்
அவர் தாசராயிருக்கவும் அவரைச் சேர்ந்துகொள்ளுகிற அந்நியரையும்
ஓய்வுநாளைப் பரிசுத்தமற்றதாக்காமல் ஆசரிக்கிற யாவரையும்
என் உடன்படிக்கையில் நிலைத்திருக்கிறவர்களையும்
7 நான் பரிசுத்த பர்வதத்துக்குக் கொண்டுவந்து,
என் ஜெபவீட்டிலே அவர்களை மகிழப்பண்ணுவேன்;
அவர்களுடைய தகனபலிகளும் அவர்களுடைய இரத்தபலிகளும்
என் பலிபீடத்தின்மேல் உகந்தனவாகும்;
என் வீடு சகல ஜாதியாருக்கும் ஜெபவீடு என்னப்படும்
8 இஸ்ரவேலில் துரத்துண்டவர்களை நான் சேர்க்கும்போது
அவர்களில் சேர்க்கப்பட்டவர்களோடு மற்றவர்களையும் சேர்ப்பேன்;
இது ஆண்டவராகிய யெகோவாவின் திருவாக்கு.
9 வெளியில் சஞ்சரிக்கிற சகல மிருகங்களே,
காட்டிலுள்ள சகல மிருகங்களே,
பட்சிக்க வாருங்கள்.
10 அவனுடைய காமக்காரர் எல்லாரும் குருடர், ஒன்றும் அறியாதவர்கள்;
அவர்களெல்லாரும் ஊமை நாய்கள், குலைக்கமாட்டாதவர்கள்;
படுத்துக்கொண்டு கனவுகாண்கிறவர்கள், நித்திரைப்பிரியர்;
11 பெருவயிற்று நாய்கள் திருப்தியறியாதவர்கள்;
இவர்களே மேய்ப்பர்! இவர்களுக்கு அறிவுமில்லை, உணர்வுமில்லை;
அவர்களில் ஒவ்வொருவனும் தன்தன் வழியிலே திரும்பிப் போகிறான்;
அவன் யாராயினும் சரி, தன்தன் லாபத்தையே நோக்குகிறான்.
12 வாருங்கள், திராட்சரசம் கொண்டுவருகிறேன், மது அருந்துவோம்;
நாளையதினமும் இன்றையதினம் போலவே இருக்கும்,
அளவு கடந்த கொண்டாட்டமாகும் என்பார்கள்.

**57** நீதிமான் மடிந்துபோகிறான், ஒருவரும் அதைக் கவனிக்கிறதில்லை;
பக்தியுள்ளோர் வாரிக்கொள்ளப்படுகிறார்கள்,
தீங்குவராமுன்னே நீதிமான் வாரிக்கொள்ளப்படுகிறான்
எனச் சிந்திப்பாரில்லை.
2 அவர்கள் சமாதானத்துக்குள்ளாகித் தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள்;
அவர்கள் நேர்மையாளராய் நடந்தார்களே.
3 சகுனம் பார்க்கிறவளின் பிள்ளைகளே,

விபசாரனுக்கும் வேசிக்கும் பிறந்த சந்
ததியாரே,
நீங்கள் இங்கே கிட்டிவாருங்கள்.
4 நீங்கள் யாரைக் கேலிபண்ணுகிறீர்கள்?
யாரைப்பார்த்து வாயைத்திறந்து, நாக்
கை நீட்டுகிறீர்கள்?
நீங்கள் துரோகத்தில் பிறந்தவர்கள்,
பொய்யில் முளைத்தவர்களல்லவா?
5 கர்வாலி மரங்களண்டையில் மோகாக்
கினியில் உங்களை வேக எழுப்பிப்
பச்சையான சகல மரங்களின் கீழும்
பள்ளத்தாக்குகளிலே கன்மலை வெடிப்பு
களின் கீழும்
பிள்ளைகளைக் கொன்றுபோடுகிறவர்கள்
அல்லவா.
6 நீரோடை பாயும் இடங்களிலுள்ள
வழுவழுப்பான கற்களே உன் பங்கு;
அவைகள், அவைகளே, உனக்கு விழுந்த
பங்கு;
அவைகளுக்கு நீ பானபலியை வார்த்து,
போஜனபலியையும் செலுத்துகிறாய்;
இவைகள் எனக்குத் திருப்தியாகுமோ?
7 நீ உயரமும் உன்னதமுமான மலைகளின்
மேல் உன் மஞ்சத்தை வைக்கிறாய்;
பலியிடும்படியாகவும் அங்கே ஏறுகிறாய்.
8 கதவுக்கும் நிலைக்கும் பின்புற உன்
அடையாளத்தை வைக்கிறாய்;
நீ என்னை விட்டுவிட்டாய், உன் ஆடை
யைக் கழற்றி மஞ்சத்திலேறினாய்,
அதில் பிறர்க்கு இடங்கொடுத்து அவர்க
ளோடு ஒப்பந்தம்பண்ணினாய்;
அவர்களோடு மஞ்சத்திலிருக்கப் பிரியங்
கொண்டாய்,
அவர்கள் அவமானத்தைக் கண்டாய்.
9 நீ தலைத்தைப் பூசிக்கொண்டு மோளேகி
னிடம் போனாய்;
மிகுந்த பரிமளங்களோடு சென்றாய்,
உன் ஆட்களைத் தூரத்துக்கு அனுப்பி
னாய்,
பாதாளமட்டும் தாழ்ந்து இழிவானாய்.
10 வழிதூரமானதால் நீ களைத்துப்போயினும்
அது வீணென்று நீ சொன்னதில்லை,
உற்சாகத்தினால் பலங்கொண்டு நீ
சோர்த்துபோகாதிருந்தாய்.
11 நீ யாருக்கு அஞ்சிப் பயந்தாய்,
நீ துரோகஞ்செய்து
என்னை நினையாமலும் மனதில் சிந்தனை
செய்யாமலும் போனாயே,
நான் வெகுகாலம் மவுனமாயிருந்துவிட்
டேன்,
நீ பயப்படாமற்போனது அதினாலேதா
னல்லவா?
12 உன் நீதியும் உன் கிரியைகளும் இவ்
வளவுதான் என்பதை விளங்கச் செய்
தேன்,
அவை உனக்கு உதவியாகா.
13 நீ கூப்பிடும்போது உன் கணங்கள் உன்
னைத் தப்புவிக்கட்டும்,
அவைகளையெல்லாம் காற்று தூக்கிப்
போம், மூச்சு அடித்துக்கொண்டுபோம்;
என்னில் நம்பிக்கையாயிருக்கிறவனோ
தேசத்தைச் சுதந்தரிப்பான்,
என் பரிசுத்த பர்வதம் அவனுக்குச்
சொந்தமாகும்.
14 வழி ஒன்றைச் செய்யுங்கள், செய்யுங்
கள்; அதைச் செம்மையாக்குங்கள்;
தடையானவற்றை என் ஜனத்தின் வழியி
லிருந்து எடுத்துப்போடுங்கள்
என்று சத்தம் தொனிக்கிறது.
15 உயர்ந்தவரும் உன்னதரும் நித்தியவாசி
யும்
பரிசுத்தர் எனும் திருநாமம் உள்ளவரு
மானவர்
சொல்வதைக் கேளுங்கள்:
உன்னதத்திலும் பரிசுத்தத்திலும் வாசம்
பண்ணுகிற நான்
தாழ்மையுள்ளோரின் ஆவியை உயிர்ப்
பிப்பதற்கும்
உடைந்த இருதயமுள்ளவரை உயிர்ப்
பிப்பதற்கும்
நைந்து தாழ்ந்த ஆவியுள்ளவர்களிடத்
திலும் வசிக்கிறேன்.
16 நான் எப்போதுமாக வழக்காடுவதில்லை;
நான் என்றைக்குமாகக் கோபமாயிருப்
பதுமில்லை;
ஆவியும் நான் படைத்த ஆத்துமாக்க
ளும்
எனக்கு எதிரே சோர்ந்துபோகுமே.
17 பொருளாசையென்னும் அவர்கள் அக்
கிரமத்தினிமித்தம்
நான் கடுங்கோபங்கொண்டு அவர்களை
அடித்து,
கடுங்கோபத்திலேமறைத்துகொண்டேன்;
தங்கள் மனம்போன போக்கிலே மாறு
பாடாய் நடந்தார்களே.
18 அவர்கள் வழிகளை நான் கண்டேன்,
இப்பொழுதோ அவர்களைக் குணமாக்கு
வேன்;
அவர்களை வழிநடத்துவேன்,
அவர்களையும் அவர்களிலே துக்கப்படு
கிறவர்களையும்
திரும்பவும் ஆற்றித்தேற்றுவேன்.
19 தூரமாயிருப்பவருக்கும் சமாதானம்,
சமீபமாயிருப்பவருக்கும் சமாதானம்

என்று கூறும் உதடுகளின் கனியைப்
படைக்கிறேன்,
நானே அவர்களைக் குணமாக்குவேன்
என்று யெகோவா சொல்லுகிறார்.
20 தெய்வபயமற்றவர்களோ கொந்தளிக்கும்
கடல்போன்றவர்கள்;
அது அமர்ந்திருக்க முடியாது,
அதின் தண்ணீர் சேற்றையும் அழுக்கை
யும் மேலே வரச்செய்யும்.
21 தெய்வபயமற்றவருக்குச் சமாதானம்
இல்லை
என்று என் கடவுள் சொல்லுகிறார்.

**58** சத்தமிட்டுக் கூப்பிடு, அடக்கிக்
கொள்ளாதே;
எக்காளத்தைப்போல் உன் சத்தத்தை
உயர்த்தி
என் ஜனத்துக்கு அவர்கள் அக்கிரமத்
தையும்
யாக்கோபின் வம்சத்தாருக்கு அவர்கள்
பாவங்களையும் அறிவிப்பாய்.
2 கடவுளின் நியாயத்தை விட்டுவிலகாமல்
நீதியை அனுசரித்துவருகிற ஜாதியார்
செய்வதுபோல
அவர்கள் நாடோறும் என்னைத்தேடி என்
வழிகளை அறிய விரும்புகிறார்கள்;
நீதி நியாயங்களை என்னிடம் விசாரித்துக்
கடவுளை அண்டிக்கொள்ளவேண்டுமென
விரும்புகிறார்கள்.
3 நாங்கள் உபவாசிக்கையில் நீர் நோக்கா
திருப்பதென்ன?
எங்களை ஒடுக்குகையில் நீர் கவனியா
திருப்பதென்ன என்கிறார்கள்;
இதோ, நீங்கள் உபவாசிக்கும் நாளிலும்
லாபத்தைத் தேடி
உங்கள் வேலையாட்களை யெல்லாம் கொ
டுமையாய் நடத்துகிறீர்கள்.
4 இதோ, வழக்கிட்டு வாதாடிக்கொண்டும்
துஷ்டக் கையிலே குத்திக்கொண்டும்
உபவாசிக்கிறீர்கள்;
நீங்கள் இப்போது உபவாசிப்பதுபோல்
உபவாசித்தால்
உங்கள் அபயசத்தம் பரத்திலே கேட்
காது.
5 இதுவா நான் விரும்பும் உபவாசம்!
ஒருவன் தன்னை ஒடுக்கும் நாள் இப்ப
டியா!
நாணல்போல் தலைகுனிவதும் இரட்டை
யும் சாம்பலையும் பரப்பி உட்காருவதும்
இதையே உபவாசமென்றும்
யெகோவாவுக்குப் பிரியமான நாளென்
றும் சொல்லுகிறாயோ?
நான் விரும்பும் உபவாசம் இதுவே: 6
அக்கிரமக் கட்டுகளை அவிழ்ப்பதும், நு
கத்தடியின் பிணையல்களை நெகிழ்ப்பதும்
ஒடுக்கப்பட்டவர்களை விடுதலையாக்கிவிடு
வதும்,
எந்த நுகத்தடியையும் உடைத்துப்போ
டுவதும்,
பசித்தவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர் 7
ந்துகொடுப்பதும்,
தங்குமிடமில்லாத சிறுமையானவரை
வீட்டிலே சேர்த்துக்கொள்வதும்,
ஆடையில்லாதவனைக் கண்டால் அவ
னுக்கு ஆடைகொடுப்பதும்,
உன் தேசத்தானுக்கு உன்னை ஒளிக்கா
திருப்பதுமே.
இப்படிச் செய்யவே, உன் வெளிச்சம் 8
விடியற்கால வெளுப்பைப்போல எழும்
பும்,
உன் காயம் சீக்கிரம் சதைமூடும்;
உன் நீதி உனக்குமுன்னுகச் செல்லும்,
யெகோவாவின் மகிமை உனக்குப்
பின்னுகவந்து காக்கும்.
அப்பொழுது நீ கூப்பிடவே, யெகோவா 9
பதிலளிப்பார்;
நீ அபயமிடவே
இதோ, நான் இருக்கிறேன் என்று சொ
ல்லுவார்.
நுகத்தடியையும் விரல்நீட்டிப் பரிகசிப்ப
தையும் தீமை பேசுவதையும்
நீ உன் நடுவிலிருந்து அகற்றி,
உன் பசிக்கு வேண்டிய ஆகாரமாவதைப் 10
பசியுள்ளவனுக்குக் கொடுத்துச்
சிறுமையுற்றவனைத் திருப்திசெய்வாயா
னுல்,
இருளில் உன் வெளிச்சம் உதிக்கும்;
உன் காரிருள் மத்தியானத்தைப்போலா
கும்.
யெகோவா நித்தமும் உன்னை நடத்தி, 11
மகா வறட்சியான இடங்களிலும் உன்
னைத் திருப்தியாக்கி,
உன் எலும்புகளை பலமுள்ளதாக்குவார்;
நீர்பாயும் தோட்டம்போலவும் வற்றுத
நீரூற்றுபோலவும் நீ இருப்பாய்.
உன்னைச் சேர்ந்தவர்கள் பூர்வமுதல் 12
பாழாய்க்கிடந்த இடங்களைக் கட்டுவார்
கள்;
தலைமுறை தலைமுறையாயுள்ள அஸ்தி
பாரங்களை நிலைப்படுத்துவாய்,
இடிந்ததைக் கட்டுகிறவன், குடியிருப்
போர் செல்வதற்குப் பாதைகளைத் திருத்
துகிறவன்
என்று நீ பெயர்பெறுவாய்.

13 பரிசுத்த நாளிலும் உன் லாபத்தைத்
தேடாமல்
ஓய்வுநாளில் உன் காலை விலக்கி
ஓய்வுநாளைப் பிரியதினம் என்றும்
யெகோவாவின் பரிசுத்தநாளைச் சிறந்த
நாள் என்றும் சொல்லி
உனக்கிஷ்டமானதைச் செய்யாமலும்
உன் சொந்த லாபத்தைத் தேடாமலும்
வீண்பேச்சுப்பேசாமலும்
அதை மேன்மையாய் மதிப்பாயானால்
14 யெகோவாவில் மகிழ்ந்திருப்பாய்;
பூமியின் உயர்ந்த ஸ்தலங்களில் உன்னை
ஏறியிருக்கச்செய்து,
உன் தகப்பனாகிய யாக்கோபின் சுதந்த
ரத்தைக் கொடுத்து உன்னைப் போஷிப்
பேன்;
யெகோவாவின் வாய் இதைச் சொல்
லிற்று.

**59** இதோ, இரட்சிக்கக்கூடாதபடி யெ
கோவாவின் கரம் குறுகிப்போகவுமில்லை,
கேட்கமுடியாதபடி அவருடைய செவி
மந்தமாகவுமில்லை.
2 உங்களையும் உங்கள் கடவுளையும் பிரித்
துவிடுவது உங்கள் அக்கிரமங்களே;
அவர் செவிகொடாதபடி அவருடைய
முகத்தை உங்களுக்கு மறைப்பது உங்
கள் பாவங்களே.
3 உங்கள் கைகள் இரத்தத்தாலும் உங்கள்
விரல்கள் அக்கிரமத்தாலும் கறைப்பட்
டன;
உங்கள் உதடுகள் பொய்யைப் பேசுகின்
றன,
உங்கள் நாவு நியாயக்கேட்டை வெளி
யிடுகிறது.
4 நியாயவழக்கைக் கொண்டுவருகிறவனு
மில்லை,
சத்தியத்தின்படி வழக்காடுகிறவனு
மில்லை;
வீணனதை நம்பி வஞ்சனையானதைப்
பேசுகிறார்கள்,
துன்பத்தைக் கர்ப்பந்தரித்து அக்கிரமத்
தைப் பெறுகிறார்கள்.
5 கட்டுவிரியன் முட்டைகளை அடைகாத்
துச் சிலந்தியின் நெசவுகளை நெய்கிறார்
கள்;
அவைகளின் முட்டைகளைச் சாப்பிடுகிற
வன் சாவான்,
அவைகள் நசுக்கப்பட்டதேயானால் விரி
யன் வெளிப்படும்.
6 அவைகளின் நெசவுகள் வஸ்திரங்க
ளாகா,
தாங்கள் செய்தவைகளாலே தங்களை
மூடிக்கொள்ளமாட்டார்கள்,
அவர்கள் செய்கிறவைகள் அக்கிரமச்
செயல்கள்,
அவர்கள் கைகளிலிருப்பது கொடுமை
யான செய்கையே.
7 அவர்கள் கால்கள் தீங்குசெய்வதற்கு
ஓடும்,
குற்றமில்லாத இரத்தம் சிந்த விரை
யும்;
அவர்கள் எண்ணங்கள் அக்கிரம எண்
ணங்கள்,
நாசமும் அழிவும் அவர்கள் வழிகளி
லுண்டு.
8 சமாதான வழியை அவர்கள் அறிந்து
கொள்ளவில்லை,
அவர்கள் கால்வைத்த இடங்களிலே
நியாயமில்லை,
தங்கள் பாதைகளைத் தாங்களே கோண
லாக்கிக்கொண்டார்கள்;
அவைகளில் நடக்கிற எவனும் சமாதா
னத்தை அறியான்.
9 ஆதலால் நியாயம் எங்களுக்குத் தூரமா
யிற்று, நீதி எங்களுக்கு எட்டவில்லை;
வெளிச்சத்துக்குக் காத்திருந்தோம், இ
தோ, இருள்;
சூரிய ஒளிக்குக்காத்திருந்தோம், நடக்க
நேரிட்டதோ காரிருளிலேயே.
10 நாங்கள் குருடர்போல் சுவரைப்பிடித்
துத்தடவி நடக்கிறோம்,
கண்ணில்லாதவர்போலவே தடவுகி
றோம்;
இரவிலேயேபோலப் பட்டப் பகலிலும்
இடறுகிறோம்;
பலமுள்ள நற்பிராயத்திலும் செத்தவர்
போலிருக்கிறோம்.
11 நாங்கள் அனைவரும் கரடிகள்போல்
உறுமி, புருக்கள்போல் குமுறிக்கொண்
டிருக்கிறோம்;
நியாயத்துக்குக் காத்திருந்தோம், அதைக்
காணோம்;
இரட்சிப்புக்குக் காத்திருந்தோம், அது
எங்களுக்குத் தூரமாயிற்று.
12 எங்கள் அக்கிரமங்கள் உமது பார்வை
யில் மிகுதியாயின,
எங்கள் பாவங்கள் எங்களுக்கு விரோத
மாய்ச் சாட்சி சொல்லுகின்றன;
எங்கள் அக்கிரமங்கள் எங்களுக்கு
எதிரே இருக்கின்றன, எங்கள் குற்றங்
களை அறிந்திருக்கிறோம்.
13 யெகோவாவுக்கு விரோதமாய்த் துரோகம்
பண்ணி மறுதலித்து,

எங்கள் கடவுளிவிட்டுப் பின்னேபோ
னேம்;
நாங்கள் பேசினது கொடுமையும் கலக
முமே,
நாங்கள் இதயத்தில் யோசித்து வெளி
யிட்டது பொய் வார்த்தைகளே.
14 நியாயம் தள்ளுண்டு அகல்கிறது, நீதி
தூரத்தில் நிற்கிறது;
சத்தியம் வீதியிலே இடறிவிழுகிறது,
நேர்மை முன்னேறி வருதற்கு இட
மில்லே.
15 சத்தியத்தை எங்கும் காணவில்லே, தீமை
யின்று விலகுவோன் கொள்ளேயாகிறுன்,
இவற்றையெல்லாம் யெகோவா பார்
க்கவே,
அது அவர் பார்வையில் நீயதாயிருந்தது,
நியாயத்தைக் காணவேயில்லே.
16 முன்வர ஒருவரும் இல்லே, சகாயம்
செய்ய எவரும் இல்லே
என்று கண்டு ஆச்சரியப்பட்டார்;
ஆதலால் அவருடைய புயமே அவருக்
குத் தூணுகின்று அவருடைய நீதியே
அவரைத் தாங்கிற்று.
17 அவர் நீதியை மார்க்கவசமாக அணிந்து,
இரட்சணியத் தலேச்சீராவைத் தமது
சிரசில் தரித்துப்,
பழிவாங்குதலென்னும் வஸ்திரங்களை
உடுப்பாக உடுத்து,
வைராக்கியத்தை அங்கியாகப் போர்த்
துக்கொண்டார்.
18 செய்கைகளுக்குத் தக்கபடியே பலனை
அளிப்பார்;
தமது சத்துருக்களுக்கு உக்கிரகோபத்
தையும்
தமது பகைஞருக்கு அவர்களுக்குரிய
பலனையும்
தீவுகளுக்கு அவற்றுக்குரிய பலனையும்
அளிப்பார்.
19 ஆகவே சூரியன் அஸ்தமிக்கும் திசை
தொடங்கி யெகோவாவின் நாமத்துக்கும்
சூரியன் உதிக்குந்திசை தொடங்கி அவ
ருடைய மகிமைக்கும் பயப்படுவார்கள்;
வெள்ளம்போல் சத்துரு வரும்போது
யெகோவாவின் சுவாசம் அவனை அகற்றி
விடும்.
20 சியோனிடத்துக்கும் யாக்கோபிலே அக்
கிரமத்தைவிட்டுத் திரும்புகிறவர்களிடத்
துக்கும் மீட்கிறவர் வருவார்,
இது யெகோவாவின் திருவாக்கு.
21 நானே அவர்களோடு செய்யும் எனது
உடன்படிக்கை இதுவே
என்று யெகோவா சொல்லுகிறார்.

உன்மேல் இருக்கிற என் ஆவியும்
நான் உன் வாயில் அருளிய என் வார்த்
தைகளும்,
இதுமுதல் என்றென்றைக்கும் உன் வாயி
லிருந்தும், உன் சந்ததியார் வாயிலிருந்
தும்,
உன் சந்ததியாரின் சந்ததியின் வாயிலி
ருந்தும்
நீங்குவதில்லேயென்று யெகோவா சொல்
லுகிறார்.

60 எழும்பி ஒளிவீசு, உன் ஒளி வந்தது,
யெகோவாவின் மகிமை உன்மேல் உதித்
தது.
2 இதோ, இருள் பூமியையும், காரிருள்
ஜாதியாரையும் மூடும்;
உன்மேலோ யெகோவா உதிப்பார்;
அவருடைய மகிமை உன்மேல் காணப்
படும்.
3 உன் ஒளியினிடத்துக்கு ஜாதியாரும்
உன்மேல் உதிக்கும் பிரகாசத்தினிடத்
துக்கு ராஜாக்களும் நடந்துவருவார்கள்.
4 உன் கண்களே நிமிர்த்திச் சுற்றிலும்
பார்;
அவர்கள் எல்லாரும் ஏகமாய்க்கூடி உன்
னிடம் வருகிறார்கள்;
உன் குமாரர் தூரத்திலிருந்து வருகிறார்
கள்,
உன் குமாரத்திகள் இடுப்பிலே தூக்கப்
பட்டு வருகிறார்கள்.
5 அப்பொழுது நீ அதைக்கண்டு முக
மலர்வாய்;
உன் இருதயம் மகிழ்ந்து பூரிக்கும்;
சமுத்திரத்தின் ஐஸ்வரியம் உன் வசம்
திரும்பும்.
ஜாதியாரின் செல்வம் உன்னிடம்
வரும்;
6 ஒட்டகங்களின் திரளும் மீதியான ஏப்
பாத்தேசங்களின் ஒட்டகக்குட்டிகளும்
உன் நாட்டை மூடும்;
அவர்கள் யாவரும் ஷேபாவிலிருந்து வரு
கிறார்கள்;
பொன்னையும் தூபவர்க்கத்தையும் கொ
ண்டுவருவார்கள்;
யெகோவாவின் புகழை நற்செய்தியாகக்
கூறுவார்கள்.
7 கேதாரின் ஆடுகளெல்லாம் உன்னிடம்
சேர்க்கப்படும்
நெபாயோத்தின் கடாக்கள் உன்னைச்
சேவிக்கும்,
அவை அங்கீகரிக்கப்பட்டு என் பலி
பீடத்தின்மேல் ஏறும்,

இவ்விதமாய் என் மகிமைக்குரிய ஆல
யத்தை மகிமைப்படுத்துவேன்.
8 மேகம்போலவும் தங்கள் கூடுகளுக்கு
விரையும் புறாக்கள்போலவும்
பறந்துவருகிற இவர்கள் யார்?
9 எனக்குக் காத்திருக்கிற தீவுகளிலுள்ள
வர்கள்
தூரத்திலிருந்து உன் பிள்ளைகளையும்
அவர்களோடேகூட அவர்கள் வெள்ளி
யையும்
அவர்கள் பொன்னையும் தர்ஷீஸ் கப்பல்
களிலே முதல் முதல் ஏற்றி
உன் கடவுளாகிய யெகோவாவின் நாமத்
துக்கென்றும்
இஸ்ரவேலின் பரிசுத்தருக்கென்றும்
கொண்டுவருகிறார்கள்;
அவர் உன்னை மகிமைப்படுத்தினாரே.
10 அந்நியர் உன் மதில்களைக் கட்டுவார்
கள்,
அவர்கள் ராஜாக்கள் உன்னைச் சேவிப்
பார்கள்;
என் கடுங்கோபத்தில் உன்னை அடித்
தேன்,
என் இரக்கத்தினாலோ உனக்கு இரக்கம்
காட்டுகிறேன்.
11 உன்னிடத்துக்கு ஜாதிகளின் ஐசுவரியத்
தைக் கொண்டுவரும்படிக்கும்,
அவர்கள் ராஜாக்களைச் சிறைப்
பட்டவர்களாய்க் கொண்டுவரும்படிக்
கும்
உன் வாசல்கள் இரவும் பகலும் பூட்
டப்படாமல் எப்பொழுதும் திறந்
திருக்கும்.
12 உன்னைச் சேவியாத ஜாதியும் ராஜ்யமும்
அழியும்,
அந்த ஜாதிகள் பாழாகிறார்.
13 என் பரிசுத்த ஸ்தலத்தைச் சிங்காரிக்கும்படி
லீபனோனின் மகிமையும், தேவதாரு
விருட்சங்களும், சவுக்கு மரங்களும்
புன்னைமரங்களுங்கூட உன்னிடத்திற்
குக் கொண்டுவரப்படும்;
என் பாத ஸ்தானத்தை மகிமைப்படுத்து
வேன்.
14 உன்னை ஒடுக்கினவர்களின் பிள்ளைக
ளும் குனிந்து உன்னிடம் வருவார்கள்,
உன்னை அசட்டைபண்ணின யாவரும்
உன் காலில் விழுந்து பணிவார்கள்,
யெகோவாவின் நகரம் என்றும், இஸ்ர
வேலுடைய பரிசுத்தரின் சீயோன் என்
றும்
உனக்குப் பேரிடுவார்கள்.
15 நீ கைவிடப்பட்டும் வெறுக்கப்பட்டு
மிருந்தாய்,
எவரும் உன் வழியாய்க் கடந்துபோக
வில்லை.
அப்படியிருந்த உன்னை நித்திய மாட்சி
மைக்கும்
தலைமுறை தலைமுறையாயிருக்கும்
மகிழ்ச்சிக்கும்
உரிய இடமாக வைப்பேன்.
16 நீ ஜாதிகளுக்குரிய பாலைக் குடித்து,
ராஜாக்களுக்குரிய முலைப்பாலையுண்
பாய்;
யெகோவாவாகிய நானே உன்னை ரட்
சிப்பவரென்றும்,
யாக்கோபின் வல்லவரே உன்னை மீட்பவ
ரென்றும் அறிந்துகொள்வாய்.
17 நான் செம்புக்குப்பதிலாகப் பொன்னை
யும், இரும்புக்குப்பதிலாக வெள்ளி
யையும்,
மரங்களுக்குப்பதிலாகச் செம்பையும்,
கற்களுக்குப் பதிலாக இரும்பையும்
வரப்பண்ணிச்
சமாதானம் உன்னை ஆளவும்
நீதி உன்மேல் அதிகாரம் செலுத்தவும்
அருளுவேன்.
18 இனி கொடுமை என உன் தேசத்திலும்
அழிவு, நாசம் என உன் எல்லைகளிலும்
கேள்விப்படுவதில்லை;
உன் மதில்களுக்கு ரட்சிப்பென்றும்
உன் வாசல்களுக்குத் துதியென்றும்
பேரிடுவாய்.
19 பகலிலே வெளிச்சம்தரச் சூரியன் இனி
உனக்குத் தேவையில்லை,
தன் பிரகாசத்தினால் உனக்கு வெளிச்சம்
தரச் சந்திரனும் தேவையில்லை;
யெகோவாவே உனக்கு நித்திய வெளிச்
சமும், உன் கடவுளே உனக்கு மகிமையு
மாவார்.
20 உன் சூரியன் இனி அஸ்தமிப்பதுமில்லை;
உன் சந்திரன் தேய்வதுமில்லை;
யெகோவாவே உனக்கு நித்திய வெளிச்ச
மாவார்,
உன் துக்க நாட்கள் முடிந்துபோம்.
21 உன் ஜனத்தில் யாவரும் நீதிமான்களா
யிருப்பார்கள்,
அவர்கள் என்றைக்குமாகப் பூமியைச்
சொந்தமாக்கிக்கொள்வார்கள்
நான் நட்ட செடியும் என் கரங்களின்
கிரியையுமாகி
என் மகிமைக்கேதுவாயிருப்பார்கள்.
22 சின்னவன் ஆயிரமும் அற்பமானவன்
திரள் ஜாதியுமாவான்,

யெகோவாவாகிய நானே ஏற்ற காலத்தில் இதைச் சீக்கிரமாய்ச் செய்வேன்.

**61** யெகோவாவாகிய ஆண்டவரின் ஆவி என்மேல் இருக்கிறது,
தரித்திரருக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க யெகோவா என்னை அபிஷேகம் பண்ணினாரே;
இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டவும்,
சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையாயிற் றென்றும்
கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்க்கப் பட்டதென்றும் கூறவும்,
2 யெகோவாவின் அதுக்கிரக வருஷத்தையும்
நமது கடவுள் பழிவாங்கும் நாளையும் பிரசித்தப்படுத்தவும்,
துயரப்பட்ட அனைவரையும் தேற்றவும்,
3 சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சந்தோஷப்படுத்தும்படி
சாம்பலுக்குப் பதிலாக அலங்காரப் பாகையையும்,
துக்க உடைக்குப்பதிலாக ஆனந்த தைலத்தையும்,
ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியாகிய உடையையும் கொடுக்கவும்
அவர் என்னை அனுப்பினார்;
அவர்கள் யெகோவா தமது மகிமைக்கென நாட்டினவர்கள்,
நீதி விருட்சங்கள் என்று பெயர் பெறுவார்கள்.
4 நெடுங்காலம் இடிந்து கிடந்தவைகளை அவர்கள் கட்டி,
பூர்வமுதலே பாழான பட்டணங்களை எடுப்பித்துத்
தலைமுறைகளாக இடிந்து கிடந்த பாழானவைகளைப் புதிதாய்க் கட்டுவார்கள்.
5 புறஜாதியார் வந்து நின்று உங்கள் மந்தைகளை மேய்ப்பார்கள்,
அந்நியர் உங்கள் வயல்களிலும் உங்கள் திராட்சத் தோட்டங்களிலும் வேலைசெய்வார்கள்.
6 நீங்களோ யெகோவாவின் ஆசாரியரெனப்படுவீர்கள்;
நமது கடவுளின் பணிவிடைக்காரரெனப் பேர்பெறுவீர்கள்;
நீங்கள் ஜாதிகளின் செல்வத்தை அநுபவித்து,
அவர்கள் மகிமையைக்கொண்டு மேன்மைபாராட்டுவீர்கள்.
உங்கள் வெட்கத்துக்குப்பதிலாக இரண்டத்தனை கற்பலன் வரும்;
7 இலச்சைக்குப் பதிலாகத் தங்களுக்குக் கிடைத்த பாகத்தில் மகிழ்வார்கள்;
தங்கள் தேசத்தில் இரட்டைப்பங்கு பெறுவார்கள்;
நித்திய ஆனந்தம் அவர்களுக்குக் கிடைக்கும்.
8 யெகோவாவாகிய நான் நியாயத்தை ஆசிக்கிறேன்,
அநியாயக் கொள்ளையை வெறுக்கிறேன்,
அவர்கள் செய்தபடியே அவர்களுக்கு உண்மையாய்த் தருவேன்,
நித்திய உடன்படிக்கை அவர்களோடே செய்வேன்.
9 அவர்கள் சந்ததி ஜாதிகளின் நடுவிலும்
அவர்கள் சந்தானம் புறதேசத்தார் நடுவிலும் மதிப்புப்பெறும்;
அவர்களைப் பார்க்கிற யாவரும்,
அவர்கள் யெகோவாவின் ஆசீர்வாதத்தைப் பெற்ற சந்ததியென்று அறிந்துகொள்வார்கள்.
10 யெகோவாவுக்குள் மிகவும் மகிழுகிறேன்,
என் கடவுளுக்குள் என் ஆத்துமா களிகூருகிறது,
மணவாளன் அலங்காரப்பாகை தரித்துக்கொள்ளுகிறதற்கும்
மணவாட்டி நகைகளைத்தரித்துத் தன்னைச் சிங்காரித்துக்கொள்ளுகிறதற்கும் ஒப்பாக
அவர் இரட்சணியம் என்னும் வஸ்திரத்தை எனக்கு உடுத்தி,
நீதி என்னும் அங்கியை எனக்குத் தரிப்பித்தார்.
11 பூமி மூளைகளை வெளிக்கிளம்பச் செய்வதுபோலவும்
தோட்டம் தன்னில் விதைக்கப்பட்ட வைகளை முளைக்கச் செய்வது போலவும்
யெகோவாவாகிய ஆண்டவர் எல்லா ஜாதிகளுக்கும் முன்பாக
நீதியையும் துதியையும் முளைக்கச்செய்வார்.

**62** என் நகரத்தின் நியாயம் சூரியவெளிச்சம்போலவும்
அதின் ரட்சிப்பு எரிகிற நீவட்டியைப் போலவும் வெளிப்படுமட்டும்
சீயோனினிமித்தம் நான் மவுனமாயிரேன்
எருசலேமினிமித்தம் நான் அமர்ந்திரேன்.

2 ஜாதிகள் உன் நியாயத்தையும் சகல
ராஜாக்களும் உன் மகிமையையும் காண்
பார்கள்.
யெகோவாவின் வாய் சொல்லும் புதிய
நாமத்தை நீ பெறுவாய்.
3 நீ யெகோவாவின் கையில் அலங்கார
மான கிரீடமாவாய்,
உன் கடவுளின் கரத்தில் ராஜபாகையா
வாய்.
4 இனி நீ கைவிடப்பட்டவள் என்னப்
படமாட்டாய்,
இனி உன்தேசம் பாழான தேசம் என்
னப்படாது;
நீ, எனக்குப் பிரியமானவள் என்
றும்
உன் தேசம், கணவனையுடையாள் என்
றும் சொல்லப்படுவாய்;
யெகோவா உன்னில் பிரியமானார், உன்
தேசம் கணவனைப்பெறும்.
5 வாலிபன் கன்னிகையை விவாகம்பண்
ணுவதுபோல,
உன் மக்கள் உன் நாட்டை விவாகம்
பண்ணுவார்கள்;
மணவாளன் மணவாட்டியில் மகிழ்வது
போல,
உன் கடவுள் உன்னில் மகிழ்வார்.
6 எருசலேமே, உன் மதில்களின்மேல்
காமக்காரரை ஏற்படுத்தினேன்;
அவர்கள் பகல்முழுதும் இராமுழுதும்
ஒருக்காலும் மவுனமாயிருப்பதில்லை,
யெகோவாவினிடம் பரிந்துபேசுகிறவர்
களே, அமர்ந்திராதேயுங்கள்.
7 அவர் எருசலேமைக்கட்டி, பூமியிலே
அதைப்புகழாக்கும் வரைக்கும்
அவரை அமர்ந்திருக்கவிடாதிருங்கள்.
8 யெகோவா தமது வலதுகரத்தின்மேலும்
தமது வல்லமையுள்ள புயத்தின்மேலும்
ஆணையிட்டு:
இனி நான் உன் தானியத்தை உன் சத்
துருக்களுக்கு ஆகாரமாகக் கொடேன்,
நீ உழைத்த வினைவித்த திராட்சரசத்தை
அந்நியர் குடிப்பதில்லை,
9 அதை அறுத்துச்சேர்த்தவர்களே அதைப்
புசித்து யெகோவாவைத் துதிப்பார்கள்;
அதைப்பறித்துச் சேர்த்தவர்களே என்
பரிசுத்த ஸ்தலத்தின் பிரகாரங்களில்
அதைக்குடிப்பார்கள்.
10 வாசல்கள் வழியே செல்லுங்கள்,
செல்லுங்கள்:
ஜனத்துக்கு வழியைச் செம்மையாக்குங்
கள்,
வழி ஒன்றைச்செய்யுங்கள், செய்யுங்கள்,
அதிலுள்ள கற்களைப் பொறுக்கிப்போ
டுங்கள்;
புறதேசத்தாருக்கென கொடியை ஏற்றுங்
கள்.
11 யெகோவா பூமியின் கடையாந்தரம்
வரை கேட்கும்படி முழங்கி:
இதோ, உன் ரட்சிப்பு வருகிறது,
இதோ, வெற்றியாய் அவர் அடைந்த
பலன் அவரோடே வருகிறது,
அவர் சம்பாதித்தன அவருக்கு முன்
செல்லுகின்றன
என்று சீயோன் குமாரியிடம் சொல்லுங்
கள் என்கிறார்.
12 பரிசுத்த ஜனமென்றும் யெகோவாவினால்
மீட்கப்பட்டவர்களென்றும்
அவர்களுக்குப் பெயரிடுவார்கள்.
நீயோ தேடிக்கொள்ளப்பட்டவள் என்
றும்
கைவிடப்படாத நகரம் என்றும் பெயர்
பெறுவாய்.

63 ஏதோமிலிருந்து, இரத்தவர்ண வஸ்
திரங்களுடையவராய்ப் பொஸ்ரா வி
லிருந்து வருகிற இவர் யார்?
மகத்துவமாய் உடுத்திருக்கிறாரே,
தமது மகத்தான வல்லமையில் கம்பீர
மாய் எழுந்தருளுகிறாரே,
நியாயமானவற்றைப்பேசி ரட்சிக்கவல்ல
வராகிய நான் தானே.
2 உமது உடுப்புச் சிவப்பாகவும்
உமது வஸ்திரங்கள் ஆலைமிதிப்பவன்
வஸ்திரங்கள் போலவும் இருப்பானேன்?
3 நான் ஒருவனுய் ஆலையை மிதித்தேன்,
புறதேசத்தாரில் ஒருவனும் என்னோ
டிருக்கவில்லை;
நான் என் கோபத்திலே அவர்களை
மிதித்தேன்,
என் உக்கிரத்திலே அவர்களை நசுக்கி
விட்டேன்;
அவர்கள் இரத்தம் என் வஸ்திரங்களின்
மேல் தெறித்தது,
என் உடுப்பையெல்லாம் கறைப்படுத்திக்
கொண்டேன்.
4 பழிவாங்கும் நாளைத் தீர்மானித்திருந்
தேனே,
என்னால் மீட்கப்பெறுவோரின் வருஷம்
வந்தது.
5 நான் சுற்றிப்பார்த்தேன், துணைசெய்வார்
எவருமில்லை;
ஆச்சரியமுற்று நின்றேன், தாங்குவார்
எவருமில்லை;
என் புயமே எனக்குத் துணைநின்றது,

என் உக்கிரமே என்னைத் தாங்கிற்று.
6 நான் என் கோபத்திலே புறதேசத்தாரை மிதித்துப்போட்டேன், என் உக்கிரத்திலே அவர்களை வெறிக்கச் செய்தேன், அவர்கள் இரத்தம் தரையிலே சிந்தும் படி செய்தேன்.
7 யெகோவா நமக்குச் செய்தருளிய எல்லாவற்றிற்கும் தக்கபடி நான் யெகோவாவின் திருபவரங்களைப் பிரஸ்தாபம் பண்ணி யெகோவாவைத் துதிப்பேன், அவர் இஸ்ரவேல் வீட்டாருக்கு மிகுந்த நன்மைசெய்தாரே, தமது இரக்கங்களின்படியும் தமது மிகுந்த திருபையின்படியும் அவர்களுக்குச் செய்தருளினார்.
8 அவர்கள் என் ஜனமே, வஞ்சனையறியாத பிள்ளைகளே என்று சொல்லி அவர்களுக்கு ரட்சகராஞர்.
9 அவர்களுடைய சகல நெருக்கங்களிலும் அவருக்கே நெருக்கம்; அவருடைய சமுகத்தின் தூதன் அவர்களை ரட்சித்தான்; அவர் தமது அன்பு, தமது பரிதாபம் இவற்றினிமித்தம் அவர்களை மீட்டுப் பூர்வ நாட்களிலெல்லாம் அவர்களைத் தூக்கிச் சுமந்து வந்தார்.
10 அவர்களோ துரோகஞ்செய்து அவருடைய பரிசுத்தமான ஆவியை விசனப் படுத்தினார்கள்; ஆதலால் அவர் அவர்களுக்குச் சத்துருவாய் மாறினார், அவரே அவர்களுக்கு விரோதமாய் யுத்தம் பண்ணினார்.
11 அப்பொழுது அவர் ஜனம் பூர்வ நாட்களையும் மோசேயையும் நினைத்து: நமது முன்னேரையும் தமது மந்தையை மேய்ப்பவர்களையும் சமுத்திரத்திலிருந்து ஏறப்பண்ணினவர் இப்பொழுது எங்கே?
12 அவர்கள் உள்ளத்தில் தமது பரிசுத்தமான ஆவியை அருளியவர் எங்கே? தமது மகிமையான புயம் மோசேயின் வலதுகரத்தோடு செல்லும்படிசெய்து என்றும் நிலைக்கும் பெயரைத் தமக்கு உண்டாக்க அவர்களுக்கு முன்பாகத் தண்ணீரைப் பிரித்து,
13 ஒரு குதிரை வனாந்தர வெளியிலே நடக்கிறதுபோல அவர்கள் இடருதபடி அவர்களை ஆழங்களில் நடக்கச் செய்தவர் எங்கே?
14 ஆடுமாடுகள் பள்ளத்தாக்கிலே இறங்கி இளைப்பாறுவதுபோல் யெகோவாவின் ஆவி அவர்களை இளைப் பாறப் பண்ணினது, இப்படியே தேவரீர் உமக்கு மகிமையான பெயரை உண்டாக்கும்படி உமது ஜனத்தை நடத்தினீர்.
15 தேவரீர் பரலோகத்திலிருந்து நோக்கிப் பரிசுத்தமும் மகிமையுமுள்ள உமது வாசஸ்தலத்திலிருந்து பாரும், உமது வைராக்கியமும் உமது வல்லமையும் எங்கே? உமது உள்ளத்திலே எழும் அன்பும் உருக்கமும் என் விஷயமாய் அடக்கிக்கொள்ளுகிறீரே.
16 தேவரீரே எங்கள் பிதா, ஆபிரகாம் எங்களை அறியான், இஸ்ரவேலுக்கு நாங்கள் அறியப்பட்டவர்களல்ல; யெகோவாவே, நீரே எங்கள் பிதா, எங்களை மீட்பவர்; பூர்வகாலமுதலே இது உமது திருநாமம்.
17 யெகோவாவே, நீர் எங்களை உமது வழிகளைவிட்டுத் தப்பிப்போகப்பண்ணுவதேன்? உமக்குப் பயப்படாதபடி எங்கள் இருதயத்தைக் கடினப்படுத்துவதேன்? உமது தாசரினிமித்தமும் உமது சுதந்தரமான கோத்திரங்களினிமித்தமும் திரும்பியருளும்.
18 உமது பரிசுத்த ஜனத்துக்குக் கொடுக்கப் பட்டதைக் கொஞ்சக்காலமாத்திரம் அவர்கள் சொந்தமாக்கியிருந்தார்கள்; எங்கள் சத்துருக்கள் உமது பரிசுத்த ஸ்தலத்தை மிதித்துப்போட்டார்கள்.
19 என்றும் உமது ஆட்சிக்கு உட்படாதவர்கள்போலாகி உமது திருநாமத்தைத் தரித்துக்கொள்ளாதவர்கள்போலானோம்.

64 தேவரீர் வானங்களைக் கிழித்து இறங்கிடின் நன்றும்!
அப்பொழுது கிறுதருப்புகள் அக்கினியில் எரிவதுபோலவும், தண்ணீர் அக்கினியால் பொங்கிவடிவதுபோலவும் மலைகள் உமக்கு முன்பாக உருகிப்போம்.

2 அப்பொழுது உமது திருநாமத்தைச் சத்
துருக்களுக்குத் தெரியப்பண்ணு
வீர்,
புறஜாதிகள் உமது சந்நிதிமுன் நடுங்கு
வார்கள்.
3 நாங்கள் எதிர்பார்த்திராத பயங்கரச் செ
யல்களை நீர் செய்து இறங்கவே
உமக்கு முன்பாக மலைகள் உருகிப்போ
யின.
4 அதை ஜனங்கள் பூர்வமுதல் கேட்டது
மில்லை,
செவியால் கேள்விப்பட்டு அறிந்தது
மில்லை;
தனக்கெனக் காத்திருப்போருக்கு
இப்படிப்பட்டவைகளைச் செய்த வே
றொரு தெய்வத்தைக்
கண் கண்டதுமில்லையே.
5 மகிழ்ந்து நீதி செய்கிறவர்களையும்
உமது வழிகளில் உம்மை நினைக்கிறவர்
களையும் நீர் கண்ணோக்குகிறீர்;
இதோ, நீர் கோபங்கொண்டீர்,
நாங்கள் பாவிகளாகவே இருந்தோம்,
நெடுநாளாக அப்படியே இருந்தோம்,
நாங்கள் இரட்சிக்கப்படுவோமோ?
6 நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்
போல் இருக்கிறோம்;
எங்கள் நீதிகளெல்லாம் கறைப்பட்ட
வஸ்திரம்போல் இருக்கிறது,
நாங்கள் அனைவரும் இலைகள்போல்
உதிருகிறோம்,
எங்கள் அக்கிரமங்கள் காற்றைப் எங்
களை அடித்துக்கொண்டுபோகிறது.
7 உமது திருநாமத்தை நோக்கிக் கூப்பிடு
கிறவனும்
உம்மைப் பற்றிக்கொள்ளும்படி ஊக்
ரெதைப்படுகிறவனும் இல்லை;
தேவரீர் உமது திருமுகத்தை எங்களை
விட்டு மறைத்து
எங்கள் அக்கிரமங்களினிமித்தம் எங்க
ளைக் கரைந்துபோகப் பண்ணுகிறீர்.
8 இப்பொழுதும் யெகோவாவே, நீர் எங்
கள் பிதா,
நாங்கள் களிமண், நீர் எங்களை உரு
வாக்குகிறவர்;
நாங்கள் அனைவரும் உமது கரத்தின்
செயலே.
9 யெகோவாவே, அதிகமாய்க் கடுங்கோபங்
கொள்ளாதிரும்,
என்றைக்கும் அக்கிரமத்தை நினைத்துக்
கொள்ளாதிரும்;
இதோ, பாரும், நாங்கள் அனைவரும்
உமது ஜனமே.
10 உமது பரிசுத்த பட்டணங்கள் வனாந்தர
மாயின,
சீயோன் வனாந்தரமாயிற்று, எருசலேம்
பாழாய்க்கிடக்கிறது.
11 எங்கள் பிதாக்கள் உம்மைத் துதித்த
பரிசுத்தமும் மகிமையுமான எங்கள் ஆல
யம் அக்கினிக்கு இரையாயிற்று,
அருமையான எங்கள் ஸ்தானங்களெல்
லாம் பாழாயின.
12 யெகோவாவே, இவைகள் இப்படி
யிருக்க உம்மை அடக்கிக்கொண்டிருப்
பீரோ?
மவுனமாயிருந்து அதிகமாய் எங்களைச்
சிறுமைப்படுத்துவீரோ?

65 என்னைக்குறித்து விசாரியாதவர்களுக்
குப் பதில் கிடைக்கச் செய்தேன்,
என்னைத் தேடாதவர்களாலே கண்டறி
யப்பட்டேன்;
என்னுடைய நாமத்தைத் தரியாதிருந்த
ஜாதியாரினிடம்,
இதோ, இங்கே இருக்கிறேன், இதோ,
இங்கே இருக்கிறேன் என்றேன்.
2 நலமல்லாத வழியிலே தங்கள் எண்ணங்
களின்படி நடக்கிற
முரட்டு ஜனத்தை நாள்முழுதும் என்
கைகளை நீட்டி யழைத்தேன்.
3 அந்த ஜனம் என் கோபத்திற்கேதுவான
வற்றை என் கண்ணெதிரே நித்தம்
செய்து,
தோட்டங்களிலே பலியிட்டு, செங்கற்
களின்மேல் தூபங்காட்டிப்
4 பிரேதக் குழிகளினடுவே இருந்து மறை
விடங்களில் இராத்தங்கிப்
பன்றியிறைச்சியைத் தின்று, தங்கள் பாத்
திரங்களில் அருவருப்பான ஆணத்தை
வைத்துக்கொண்டு,
5 நீ உன்மட்டிலிரு, என்னைக்கிட்டிவராதே,
நான் பரிசுத்தம், தொட்டால் உனக்கு
மோசம்
என்று சொல்லுகிறார்கள்;
இவர்கள் என் மூக்குக்குப் புகை, நாள்
முழுதும் எரிகிற அக்கினி.
6 இதோ, அது எனக்குமுன் எழுதி வைத்
திருக்கிறது,
நான் மவுனமாயிரேன், அவர்களுக்குரிய
பலனைக் கொடுப்பேன்
மடிநிறையக் கொடுப்பேன்.
7 உங்கள் அக்கிரமங்களுக்கும் அதோடே
கூட
மலைகளில் தூபங்காட்டிக் குன்றுகளின்
மேல் என்னைத் தூஷித்த

உங்கள் பிதாக்களுடைய அக்கிரமங்களுக்கும் தக்கபடியே கொடுப்பேன்; அவர்கள் முற்காலத்திலே செய்தவைகளின் பலனையும் மடியிலே அளந்து கொடுப்பேன் என்று யெகோவா சொல்லுகிறார்.

8 யெகோவா சொல்வதைக் கேளுங்கள்: ஒரு திராட்சக்குலையில் இரசம் உண்டாயிருக்கையில், அதை அழிக்காதே, அதிலே ஆசீர்வாதம் உண்டென்று சொல்லுகிறார்களே, அப்படியே நான் என் தாசரினிமித்தம் செய்வேன், முற்றிலும் அழித்துவிடேன்.

9 யாக்கோபிலிருந்து சந்தானத்தை, யூதாவிலிருந்து என் மலைகளைச் சுதந்தரிப்பவரை, எழும்பப் பண்ணுவேன்; நான் தெரிந்தெடுத்தவர்கள் அதைச் சொந்தமாக்கிக்கொள்வார்கள், என் தாசர் அங்கே வாசம்பண்ணுவார்கள்.

10 என் ஜனம் என்னைத் தேடும்போது அவர்களுக்கு சாரோன் ஆட்டுக்கிடையாகவும் ஆகோரின் பள்ளத்தாக்கு மாடு மடங்கு மிடமாகவும் இருக்கும்.

11 யெகோவாவைவிட்டு என் பரிசுத்த பர்வதத்தை மறந்தவர்களே, நீங்கள் அதிஷ்டம் என்னும் தேவதைக்குப் படைப்புப்போட்டு, விதி என்னும் தெய்வத்துக்குப் பானபலியை வார்க்கிறீர்கள்.

12 பட்டயமே உங்களுக்கு விதியாகச் செய்வேன், நீங்கள் அனைவரும் கொல்லப்படக் குனிவீர்கள்; நான் கூப்பிட்டும் நீங்கள் பதிலுரைக்கவில்லையே, நான் பேசியும் நீங்கள் கேட்கவில்லையே; என் பார்வையில் தீமையானதைச் செய்து, எனக்குப் பிரியமல்லாததை விரும்பித் தெரிந்துகொண்டீர்கள்.

13 இப்படியிருப்பதால் யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வதைக் கேளுங்கள்: இதோ, என் தாசர் உண்பார்கள், நீங்களோ பசியாயிருப்பீர்கள்; இதோ, என் தாசர் பானம்பண்ணுவார்கள், நீங்களோ தாகமாயிருப்பீர்கள். இதோ, என் தாசர் சந்தோஷப்படுவார்கள், நீங்களோ வெட்கத்துக்காளாவீர்கள்.

14 இதோ, என் தாசர் மனமகிழ்ந்து ஒன்பீரிப்பார்கள், நீங்களோ மனகொந்து அலறி ஆவி தளர்ந்து புலம்புவீர்கள், நான் தெரிந்தெடுத்தவர்களுக்கு 15 நீங்கள் உங்கள் நாமத்தைச் சாபவார்த்தையாகப் பின்வைத்துப்போவீர்கள்; யெகோவாவாகிய ஆண்டவர் உனக்குச் சாப மரணம் வரச்செய்வார், தம்முடைய தாசருக்கோ வேறே நாமத்தைத் தரிப்பார்.

16 பூமியிலே தனக்கு ஆசீர்வாதம் தேடுகிறவன் உண்மையுள்ள கடவுளுக்குள் அதைத் தேடிக்கொள்வான், பூமியிலே ஆணையிடுகிறவன் உண்மையுள்ள கடவுளின்பேரில் ஆணையிடுவான்; பூர்வகாலத்துன்பங்கள் மறக்கப்பட்டு அவை என் கண்களுக்கு மறைந்துபோயினவே.

17 இதோ, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன், முன்னினவை இனி நினைக்கப்படுவதில்லை, மனதிலே தோன்றுவதுமில்லை, 18 நான் சிருஷ்டிப்பவற்றிலே நீங்கள் என்றைக்கும் மகிழ்ந்து களிகூர்ந்திருங்கள்; இதோ, எருசலேமைக் களிப்பாகவும் அதின் ஜனத்தை மகிழ்ச்சியாகவும் சிருஷ்டிக்கிறேன். 19 நான் எருசலேமில் களிகூர்ந்து என் ஜனத்தில் மகிழுவேன், அழுகுரலும் அலறுசத்தமும் அதில் இனிக் கேட்பதில்லை.

20 அங்கே இனி அற்ப ஆயுசுள்ள பாலகனும் தன் நாட்கள் பூரணமாகாமுன் மரிக்கும் கிழவனும் இரார்; வாலிபத்தில் மரிப்பவன் நூறுவயதுள்ளவனாகவே மரிப்பான், பாவி சாபத்திற்குள்ளாவது நூறு வயதிலேதான்.

21 வீடுகளைக்கட்டி அவற்றில் குடியிருப்பார்கள், திராட்சத்தோட்டங்களை நாட்டி அவற்றின் பலனை அநுபவிப்பார்கள். 22 அவர்கள் கட்ட வேறொருவர் குடியிரார், அவர்கள் நாட்ட வேறொருவர் அநுபவியார், விருட்சத்தின் நாட்களைப்போல என் ஜனத்தின் நாட்களும் நீடித்திருக்கும், நான் தெரிந்தெடுத்தவர்கள் தங்கள் கைகளால் செய்தவைகளைத் தாங்களே அநுபவிப்பார்கள்.

23 அவர்கள் விருதாவாக உழைப்பதில்லை,
அவர்கள் அகால மரணமுறும் பிள்ளை
களைப் பெறுவதுமில்லை;
அவர்களும் அவர்களோடேகூட அவர்
கள் சந்தானமும்
யெகோவாவால் ஆசீர்வதிக்கப்பட்ட சந்
ததியாயிருப்பார்கள்.
24 அவர்கள் கூப்பிடுமுன்னே நான் பதி
லளிப்பேன்,
அவர்கள் பேசுகையிலேயே நான் கேட்
பேன்.
25 ஓனாயும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்து
மேயும்;
சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல்
தின்னும்;
சர்ப்பம் புழுதியைத் தின்னும்;
என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு
செய்வாருமில்லை சங்காரம் செய்வாரு
மில்லை
என்று யெகோவா சொல்லுகிறார்.

66 யெகோவா சொல்வதைக் கேளுங்கள்:
வானம் என் சிங்காசனம், பூமி என்
காலுக்குப் பாதபடி,
எனக்கு நீங்கள் எப்படிப்பட்ட வீட்
டைக் கட்டுகிறீர்கள்?
நான் இளைப்பாறும் ஸ்தலம் எது?
2 இவைகள் யாவற்றையும் என் கரம்
சிருஷ்டித்ததினால் இவைகளெல்லாம்
உண்டாயின;
இது யெகோவாவின் திருவாக்கு;
நான் கண்ணோக்கிப் பார்ப்பவன்
சிறுமைப்பட்டு நைந்த ஆவியுள்ளவ
னும் என் வசனத்துக்கு நடுங்குகிறவனே.
3 காளையைப் பலியிடுவோன் மனிதனைக்
கொல்பவன்,
ஆட்டைப் பலியிடுவோன் நாயைக்
கழுத்தறுப்பவன்,
போஜன பலி படைப்போன் பன்றி
இரத்தத்தைப் படைப்பவன்,
தூபங்காட்டுகிறவன் விக்கிரகத்தைப்
புகழ்பவன்;
இவர்கள் தங்கள் வழிகளையே விரும்பி
அவற்றில் நடக்கிறார்கள்;
அவர்கள் அருவருப்புகளே அவர்களுக்
குப் பிரியம்.
4 நானும் அவர்கள் வேதனைக்கேதுவான
வைகளை விரும்பி
அவர்கள் திகிலுக்கு ஏதுவானவைகளை
அவர்கள்மேல் வரப்பண்ணுவேன்,
நான் கூப்பிட்டும் அவர்கள் பதிலுரைக்க
வில்லையே,
நான் பேசியும் அவர்கள் கேட்கவில்
லையே,
அவர்கள் என் பார்வையில் தீமையான
தைச் செய்து
நான் பிரியப்படாததை விரும்பித்
தெரிந்துகொண்டார்களே.
5 யெகோவாவின் வார்த்தைக்கு நடுங்கு
கிறவர்களே,
அவருடைய வார்த்தையைக் கேளுங்
கள்;
என் நாமத்தினிமித்தம் உங்களைப் பகை
த்து உங்களை அகற்றிவிடுகிற உங்கள்
சகோதரர்
நாங்கள் உங்கள் சந்தோஷத்தைக் கா
ணும்படி
யெகோவா தமது மகிமை விளங்கச் செய்
யட்டும் என்கிறார்கள்,
அவர்களே வெட்கத்துக்குள்ளாவார்கள்.
6 நகரத்திலே அமளி இரைச்சல் கேட்கி
றது, தெய்வாலயத்திலே முழங்குகிறது,
தமது சத்துருக்களுக்குரிய பலனையளிக்
கும் யெகோவாவின் முழக்கமே அது.
7 சீயோன் பிரசவவேதனைப்படுமுன் பெற்
றாள்,
கர்ப்பவேதனை அவளுக்கு உண்டாகா
முன்னே ஆண்பிள்ளை பெற்றுவிட்டாள்.
8 இது போன்றவற்றை கேள்விப்பட்டது
யார்?
இப்படிப்பட்டவைகளைக் கண்டது யார்?
ஒரு தேச ஜனம் ஒரே நாளில் உற்பத்தி
யாய் விடுமோ?
ஷணநேரத்தில் ஒரு ஜாதி பிறக்குமோ?
சீயோனே வேதனையுற்றவுடன் தன் பிள்
ளைகளைப் பெற்றாளே.
9 கர்ப்பத்தைத் திறக்கும் நான் பிரசவிக்கச்
செய்யாதிருப்பேனே
என்று யெகோவா சொல்லுகிறார்;
பிரசவிக்கச்செய்யும் நான் கர்ப்பத்தை
அடைப்பேனே
என்று உன் தேவன் சொல்லுகிறார்.
10 எருசலேமை நேசிக்கிற நீங்களெல்லா
ரும்
அவளோடு மகிழ்ந்து, அவளைப்பற்றிக்
களிகூருங்கள்;
அவள் நிமித்தம் துக்கித்திருந்த நீங்க
ளெல்லாரும்
அவளோடேகூட மிகவும் சந்தோஷப்
படுங்கள்.
11 அப்பொழுது உங்களை ஆற்றும் அவள்
முலைப்பாலை நீங்கள் உண்டு திருப்தியாகி,
நீங்கள் வாயாரக்குடித்து அவள் மகிமை
யின் திரளினால் மகிழுவீர்கள்.

12 யெகோவா சொல்வதைக் கேளுங்கள்:
இதோ, நான் சமாதானத்தை ஒரு நதி
யைப்போலவும்
புறஜாதியாரின் மகிமையைப் புரண்டு
ஓடும் ஆற்றைப் போலவும்
அவளிடமாகப் பாயும்படி செய்கிறேன்;
அப்பொழுது நீங்கள் முலைப்பால் குடிப்
பீர்கள்,
உங்களை இடுப்பில் வைத்துச் சுமப்பார்
கள்,
முழங்காலில் வைத்துத் தாலாட்டுவார்
கள்.
13 பிள்ளையைத் தாய் தேற்றுவதுபோல்
நான் உங்களைத் தேற்றுவேன்;
நீங்கள் எருசலேமிலே தேற்றப்படுவீர்
கள்.
14 நீங்கள் அதைக்காணும்போது உங்கள்
இருதயம் மகிழும்,
உங்கள் எலும்புகள் பசும்புல்லைப்போல்
செழிக்கும்;
அப்பொழுது யெகோவாவின் கரம் அவர்
தாசர்மேலும்
அவர் கோபம் அவர் சத்துருக்கள்மேலும்
இருப்பது தெரியவரும்.
15 இதோ, யெகோவா அக்கினியில் எழுந்
தருளியாவார்,
அவர் ரதங்கள் பெருங்காற்றைப் போன்
றவை,
தமது கோபத்தைத் தணிக்கும் வெம்மை
யாகவும்
தமது கண்டிதத்தை அக்கினி ஜ்வாலை
யாகவும் விளங்கச்செய்வார்.
16 யெகோவா அக்கினியாலும் தமது பட்
டயத்தாலும்
மாம்சமான யாவரையும் நியாயம் விசா
ரிப்பார்,
யெகோவாவினால் கொல்லப்படுவோர்
பலராவார்.
17 தங்கள் நடுவிலுள்ள ஒருவன் செய்து
காட்டுவதுபோல் செய்து,
தங்களைத் தோப்புகளுக்கென பிரதிஷ்
டைசெய்து சுத்திகரித்துப்
பன்றியிறைச்சியையும் அருவருப்பான
தையும் எலியையும் சாப்பிடுகிறவர்கள்
ஒன்றாய் அழிவார்கள்,
இது யெகோவாவின் திருவாக்கு.
18 அவர்கள் செயல்களும் அவர்கள் எண்
ணங்களும்
எனக்குத் தெரியும்.
நான் சகல ஜாதியாரையும் பாஷைக்கார
ரையும் கூட்டிச் சேர்க்குங்காலம் வரும்;
அவர்கள் வந்து என் மகிமையைக் காண்
பார்கள். 19 நான் அவர்கள் நடுவில் ஒரு
அடையாளத்தைக் கட்டளையிடுவேன்; அவர்
களில் தப்பிமீந்தவர்களை, தர்ஷீஷியர், வில்
வீரரான பூல், லூத் என்பவர்கள், தூபால்,
யாவான் என்பவர்களாகிய புறஜாதியாரிடத்
துக்கும், என் பேரைக்கேளாமலும் என்
மகிமையைக் காணுமலுமிருந்த தூர தீவு
களுக்கும் அனுப்புவேன்; அவர்கள் என்
மகிமையைப் புறஜாதிகளுக்குள்ளே அறி
விப்பார்கள். 20 இஸ்ரவேல் புத்திரர் சுத்த
மான பாத்திரத்தில் காணிக்கையை யெகோ
வாவின் ஆலயத்துக்குக் கொண்டுவருவது
போல, புறஜாதியார் உங்கள் சகோதரரெல்
லாரையும் குதிரைகளின்மேலும் இரதங்
களின்மேலும் பல்லக்குகளின்மேலும் கோ
வேறு கழுதைகளின்மேலும் வேகமான ஒட்
டகங்களின்மேலும் சகல ஜாதிகளிடத்திலு
மிருந்தும் எருசலேமிலுள்ள என் பரிசுத்த
பர்வதத்துக்கு யெகோவாவுக்குக் காணிக்
கையாகக் கொண்டுவருவார்கள் என்று
யெகோவா சொல்லுகிறார். 21 அவர்களிலும்
சிலரை ஆசாரியராகவும் லேவியராகவும்
தெரிந்தெடுப்பேன் என்று யெகோவா
சொல்லுகிறார். 22 நான் படைக்கப்போகிற
புதிய வானமும் புதிய பூமியும் என் பார்
வையில் நிலைத்திருப்பதுபோல உங்கள் சந்
ததியும் உங்கள் நாமமும் நிலைநிற்கும்; இது
யெகோவாவின் திருவாக்கு. 23 அமாவாசை
தோறும் ஓய்வுநாள்தோறும் மாம்சமான
யாவரும் எனக்கு முன்பாகத் தொழுது
கொள்வார்களென்று யெகோவா சொல்லு
கிறார். 24 அவர்கள் வெளியேபோய், எனக்கு
விரோதமாய்ப் பாதகஞ்செய்த மனுஷரு
டைய பிரேதங்களைப் பார்ப்பார்கள்; அவர்
கள் புழு சாகாமலும், அவர்கள் அக்கினி
அவியாமலும் இருக்கும்; மாம்சமான
யாவருக்கும் அவர்கள் அரோசிகமாயிருப்
பார்கள்.

JEREMIAH

# எரேமியா

1 இல்க்கியாவின் குமாரனுகிய எரேமியா
வின் வார்த்தைகள், இவன் பென்யமீன்
நாட்டிலே ஆனதோத் ஊரிலிருந்த ஆசாரி
2 யரில் ஒருவன். ஆமோனின் குமாரனுகிய
யோசியா என்னும் யூதா ராஜாவின் நாட்
களில், அவன் அரசாண்ட பதின்மூன்றும்
வருஷத்திலே, எரேமியாவுக்கு யெகோவா
3 வின் வார்த்தை வந்தது. பின்பு யோசியா
வின் குமாரனுகிய யோயாக்கீம் என்னும்
யூதா ராஜாவின் நாட்களிலும் யோசியாவின்
குமாரனுகிய சிதெக்கியா என்னும் யூதா
ராஜாவின் பதினேராம் வருஷத்து முடிவு
மட்டாகவும், எருசலேம் ஊரார் ஐந்தாம்
மாதத்தில் சிறைப்பட்டுப் போகும் வரைக்
கும், யெகோவாவின் வார்த்தை அவனுக்கு
வந்துகொண்டிருந்தது.

4 யெகோவாவின் வார்த்தை எனக்கு
வந்து:

5 நான் உன்னைத் தாயின்வயிற்றில் உரு
வாக்குமுன்னே உன்னைத் தெரிந்து
கொண்டேன்,
நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே
நான் உன்னைப் பிரதிஷ்டைசெய்து,
புறஜாதியாருக்குத் தீர்க்கதரிசியாக
உன்னை நியமித்தேன் என்று சொல்ல,

6 நான்: ஐயோ, யெகோவாவாகிய ஆண்ட
வரே, நான் பேச அறியேன்,
நான் சிறுவன் என்று பதிலுரைத்தேன்;

7 யெகோவா என்னிடம்: நான் சிறுவ
னென்று நீ சொல்லவேண்டாம், நான்
உன்னை அனுப்புகிற இடமெல்லாம் நீ
போய், நான் உனக்குக் கட்டளையிடுகிறவை
8 களையெல்லாம் நீ பேசவேண்டும். நீ அவர்
களுக்குப் பயப்படவேண்டாம், உன்னைக்
காப்பதற்கு நானே உன்னோடிருக்கிறேன்
என்று யெகோவா சொல்லுகிறார் என்றார்.

9 இதைச் சொல்லி யெகோவா தமது கரத்தை
நீட்டி, என் வாயைத் தொட்டு: இதோ,
என் வார்த்தைகளை உன் வாயில் அருளு
10 கிறேன். இதோ, பிடுங்கவும் இடிக்கவும்
அழிக்கவும் கவிழ்க்கவும் கட்டவும் நாட்ட
வும் உன்னை நான் இன்றையதினம் ஜாதி
களின்மேலும் ராஜ்யங்களின்மேலும் ஏற்
படுத்தினேன் என்று யெகோவா என்னிடம்
சொன்னார்.

11 பின்னும் யெகோவாவின் வார்த்தை
எனக்கு வந்தது; அவர்: எரேமியாவே, நீ
என்ன காண்கிறாய் என்று கேட்க, நான்,
வாதமை மரக்கிளையைக் காண்கிறேன்என்
12 றேன். அப்பொழுது யெகோவா: நீ கண்
டது சரிதான், என் வார்த்தையை நிறை
வேற்ற அதைக் கவனித்துக்கொண்
டிருக்கிறேன் என்றார். யெகோவாவின்
13 வார்த்தை இரண்டாந்தரம் எனக்கு வந்தது,
அவர்: நீ காண்கிறது என்ன என்று கேட்க,
நான், பொங்குகிற பானையைக் காண்கி
றேன், வாய் வடதிசை நோக்குகிறது என்
றேன். அப்பொழுது யெகோவா என்னி
14 டம்: வடக்கேயிருந்து தீங்கு தேசத்தின்
குடிகள் எல்லார்மேலும் வந்துவிடும்.
15 இதோ, நான் வடதிசை ராஜ்யங்களின் வம்
சங்களையெல்லாம் கூப்பிடுவேன்—இது யெ
கோவாவின் திருவாக்கு—அவர்கள் வந்து
அவனவன் தன்தன் ஆசனத்தை எருசலே
மின் வாசல்களண்டையிலும் சுற்றிலும்
அதின் மதில்களுக்கு விரோதமாகவும், யூதா
வின் சகல ஊர்களுக்கும் விரோதமாகவும்
16 வைப்பார்கள். என் ஜனம் என்னைவிட்டு
அந்நிய தேவர்களுக்குத் தூபங்காட்டித்
தங்கள் கைகள் செய்தவற்றைப் பணிந்து
கொண்டு செய்த எல்லாத் தீமையினிமித்த
மும் நான் அவர்களுக்குத் தீர்ப்பிடுவேன்.
17 நீ உன் அரையைக் கட்டிக்கொண்டு வந்து
நில், நான் உனக்குக் கட்டளையிடுகிறவை
களையெல்லாம் அவர்களுக்குச் சொல்; நீ
அவர்களுக்குமுன் பயப்படாதிரு, பயந்தால்
நீ பயப்படத்தக்கதை அவர்கள் காண உன்
18 மேல் வரச்செய்வேன். இதோ, தேசமனைத்
தற்கும் யூதா ராஜாக்களுக்கும் அதின் அதி
பதிகளுக்கும் அதின் ஆசாரியருக்கும் தேசத்
தின் ஜனங்களுக்கும் எதிராக நான் உன்னை
இன்றையதினம் அரணிப்பான பட்டணமும்
இருப்புத்தூணும் செப்பு அலங்கமும் ஆக்
19 குகிறேன். அவர்கள் உனக்கு விரோதமாக

யுத்தம் பண்ணுவார்கள், உன்னையோ மேற்
கொள்ளமாட்டார்கள்; உன்னைக் காப்ப
தற்கு நானே உன்னோடிருக்கிறேன், இது யெ
கோவாவின் திருவாக்கு என்று சொன்னார்.

**2** 2 யெகோவாவின் வார்த்தை எனக்கு
வந்தது: நீ போய்
எருசலேமின் செவிகேட்கக் கூறி இப்
படிச்சொல்:
யெகோவா சொல்வதைக் கேள்:
உன் இளவயதின் அன்பை உன்பொ
ருட்டு நினைக்கிறேன்,
நீ வாழ்க்கைப்பட்டபோது நேசத்தைக்
காட்டினையே,
விதைக்கப்படாத தேசமாகிய வனாந்தரத்
திலே
நீ என் பின்னே வந்தாயே.
3 இஸ்ரவேல் யெகோவாவுக்குப் பரிசுத்த
மும்,
அவர் விளைச்சலின் முதற்பலனுமாயிருந்
தது;
அதைப் பட்சித்த யாவரும் குற்றவாளி
களானார்கள்;
தீங்கு அவர்கள்மேல் வந்தது,
இது யெகோவாவின் திருவாக்கு.
4 யாக்கோபின் வீட்டாரே, இஸ்ரவேல்
வீட்டாரின் வம்சங்களே,
நீங்கள் எல்லாரும் யெகோவாவின் வார்த்
தையைக் கேளுங்கள்;
5 யெகோவா சொல்வது இதுவே:
உங்கள் பிதாக்கள் என்னிடம் என்ன
அநியாயத்தைக் கண்டு
எனக்குத் தூரமாக விலகி
வீணனவற்றைப் பின்பற்றி வீணரானார்
கள்.
6 எங்கே எகிப்து தேசத்திலிருந்து வரப்
பண்ணினவரும்
அவாந்தரவெளியும் பள்ளங்களுமுள்ள
தேசமும்
வறட்சியும் காரிருளுமுள்ள தேசமும்
ஒருவனும் செல்லாமலும் ஒரு மனுஷ
னும் குடியிராமலும் இருக்கிற தேசமு
மான வனாந்தரத்திலே
எங்கே நடத்தினவருமாகிய யெகோவா
எங்கே
என்று உங்கள் பிதாக்கள் கேட்கவில்லை
யே.
7 பழமரத்தோப்புகளுள்ள தேசத்தின் கனி
களையும் நலமானவைகளையும் சாப்பிடும்
படி,
நான் உங்களை அவ்விடத்துக்கு அழைத்
துக்கொண்டு வந்தேன்;
நீங்களோ அதற்குள் வந்தபோது,
என் தேசத்தைத் தீட்டுப்படுத்தி, என்
சுதந்தரத்தை அருவருப்பாக்கினீர்கள்.
8 யெகோவா எங்கேயென்று ஆசாரியர்கள்
சொல்லவில்லை,
நியாயப்பிரமாணத்தை வைத்திருந்தவர்
கள் என்னை அறிந்துணரவில்லை,
மேய்ப்பர்கள் எனக்குத் துரோகம்பண்
ணினார்கள்;
தீர்க்கதரிசிகள் பாகாலின் நாமத்தைக்
கொண்டு தீர்க்கதரிசனஞ்சொல்லி,
சகாயஞ்செய்யத் திராணியற்றவைகளைப்
பற்றிக்கொண்டார்கள்.
9 ஆதலால் இன்னும் நான் உங்களோடு
வழக்காடுவேன்,
—இது யெகோவாவின் திருவாக்கு—
உங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளோடும்
வழக்காடுவேன்.
10 நீங்கள் கித்தீமின் தீவுகள்மட்டும்
சென்று பார்த்துக்
கேதாரினிடம் ஆள் அனுப்பித் தீர
விசாரித்து,
இப்படிப்பட்ட காரியம் உண்டோ
என்று பாருங்கள்.
11 எந்த ஜாதியாராவது தங்கள் தேவர்களை
மாற்றினது உண்டோ,
அவர்கள் தேவதைகள் தெய்வங்களல்ல
வே;
என் ஜனமோ சகாயஞ்செய்யத் திராணி
யற்றவைகளுக்குத் தங்கள் மகிமையை
மாற்றினார்கள்.
12 வானங்களே, இதினிமித்தம் பிரமிப்
படையுங்கள்,
மிகவும் பயந்து திடுக்கிடுங்கள்,
இது யெகோவாவின் திருவாக்கு.
13 என் ஜனங்கள் இரண்டு தீய காரியங்
களைச் செய்தார்கள்;
ஜீவதண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டு
விட்டார்கள்;
தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய
வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு
வெட்டிக்கொண்டார்கள்.
14 இஸ்ரவேல் வாங்கப்பட்ட ஒரு அடி
மையோ?
வீட்டிலே பிறந்த அடிமையோ?
அவன் கொள்ளையானது ஏன்?
15 பாலசிங்கங்கள் அவன்மேல் கெர்ச்சித்து
முழங்கின;
அவன் தேசம் பாழாக்கப்பட்டது,
அவன் ஊர்கள் சுட்டெரிக்கப்பட்டன,
குடியிருப்பாரில்லை.
16 நோப், தக்பானேஸ் என்னும் ஊராரும்

உன் தலைமேல் ஏறி மேய்வார்கள்.
17 உன் கடவுளாகியயெகோவாஉன்னை வழி
யிலே நடத்திக்கொண்டுபோன காலத்தில்
நீ அவரை விட்டுவிட்டதினால் அல்லவோ
இதை உனக்கு நேரிடப்பண்ணினாய்?
18 இப்போதும் சீகோரின் தண்ணீரைக்
குடிப்பதற்கென
நீ எகிப்துக்குப் போவானேன்?
நதியின் தண்ணீரைக் குடிப்பதற்கென
நீ அசிரியாவுக்குப் போவானேன்?
19 உனக்கு சிட்சை வருவிப்பது நீ செய்த
தீமையே,
உனக்குத் தண்டனை வருவிப்பது நீ
செய்த மாறுபாடே;
நீ உன் கடவுளாகிய யெகோவாவை
விட்டுவிடுவதும்
எனக்கு நீ பயப்படாமற்போவதும்
எவ்வளவு தீங்கும் கசப்புமானது என்
பதைக் கவனித்துப் பார்;
இது சேனைகளின் யெகோவாவாகிய
ஆண்டவரின் திருவாக்கு.
20 பூர்வகாலந்துவக்கி நீ உன் நுகத்தடியை
முறித்து, உன் கட்டுகளை அறுத்தாய்;
நான் அடிமைவேலை செய்யமாட்டேன்
என்று நீ சொன்னாய்;
ஆகிலும் உயரமான எந்த மேட்டின்
மேலும்
பச்சையான சகல மரங்களின் கீழும் நீ
படுத்து வேசித்தனம் செய்கிறாயே.
21 முற்றிலும் உயர்குலமான உத்தம திராட்
சச்செடியாக
நான் உன்னை நாட்டினேன்;
நீ எனக்குக் காட்டுத் திராட்சச்செடியின்
ஆகாத கொடிகளாய் மாறிப்போனது
என்ன?
22 நீ உன்னை உவர் மண்ணிலே கழுவி,
அதிக சவுக்காரத்தை உபயோகித்தாலும்
உன் அக்கிரமத்தின் கறைகள் எனக்கு
முன்பாக இருக்கும்,
—இது யெகோவாவாகிய ஆண்டவரின்
திருவாக்கு—
23 நான் தீட்டுப்படவில்லை, நான் பாகால்
களைத் தொழுதுகொள்ளவில்லை
என்று நீ சொல்வதெப்படி?
பள்ளத்தாக்கிலே நீ நடந்துகொண்ட
விதத்தைப் பார்;
நீ செய்ததைக் கவனித்துப்பார்;
இங்குமங்கும் ஓடுகிற வேகமான பெண்
ஒட்டகம் நீ.
24 வனாந்தரத்திலே பழகினதும், தன் இச்
சையின் மதவெறியிலே மோப்பம் பிடிக்
கிறதுமான காட்டுக்கழுதை நீ,
அதின் ஆசையை அடக்குகிறவன் யார்?
அதைத் தேடிக் கஷ்டப்படவேண்டிய
தில்லை,
அதின் மாசத்தில் அதைக் கண்டுகொள்ள
லாகும்.
நீ செருப்புத்தேயத் தொண்டை வறள 25
அலையவேண்டாமென்றால்,
அது முடியாது, மாட்டேன்,
அந்நியர்மேல் ஆசைகொண்டேன்,
அவர்கள் பிறகே போவேன் என்கிறாய்.
திருடன் அகப்பட்டு எப்படி வெட்கத் 26
துக்குள்ளாகிறானோ,
அப்படியே இஸ்ரவேல் வம்சத்தார்,
அவர்களும் அவர்கள் ராஜாக்களும்
அவர்கள் அதிபதிகளும்
அவர்கள் ஆசாரியரும் அவர்கள் தீர்க்க
தரிசிகளும், வெட்கத்துக்குள்ளாவார்
கள்;
மரக்கட்டையைப் பார்த்து, நீ என் 27
தகப்பனென்றும்,
கல்லைப்பார்த்து, நீ என்னைப் பெற்றவள்
என்றும் சொல்லுகிறார்களே.
அவர்கள் தங்கள் முகத்தையல்ல, தங்
கள் முதுகை எனக்குக் காட்டுகிறார்
கள்;
தங்கள் ஆபத்துக்காலத்திலோ, எழுந்து
எங்களை ரட்சியும் என்கிறார்கள்.
நீ உனக்குச் செய்துகொண்ட தேவர்கள் 28
எங்கே?
உன் ஆபத்துக்காலத்தில் உன்னை ரட்சிக்
கச் சக்தியிருந்தால் அவைகள் எழுந்து
வரட்டும்;
யூதாவே உன் ஊர்கள் எத்தனையோ,
உன் தேவர்களும் அத்தனையாம்.
என்னோடே நீங்கள் வழக்காடுவா 29
னேன்,
நீங்கள் அனைவரும் எனக்கு விரோத
மாய்க் குற்றஞ்செய்தீர்கள்
—இது யெகோவாவின் திருவாக்கு—
நான் உங்கள் பிள்ளைகளை அடித்தது விரு 30
தா, சிட்சையை ஏற்றுக்கொள்ளவில்லை
யே;
அழிக்கிற சிங்கம்போல உங்கள் பட்ட
யம் உங்கள் தீர்க்கதரிசிகளைப் பட்சித்
தது.
பொல்லாத சந்ததியாரே, நீங்கள் யெகோ 31
வாவின் வார்த்தையைக் கவனித்துப்பா
ருங்கள்;
நான் இஸ்ரவேலுக்கு வனாந்தரமாயிருந்
தேனோ?
காரிருளான பூமியாயிருந்தேனோ?
பின்னை ஏன் என் ஜனங்கள் என்னிடம்:

எங்கள் இஷ்டப்படி போகிறோம், இனி
உம்மிடம் நாங்கள் வருவதில்லை
என்று சொல்லுகிறார்கள்?
32 ஒரு கன்னிகை தன் ஆபரணத்தையும்
ஒரு மணவாட்டி தன் இடைக்கச்சை
யையும் மறப்பாளோ?
என் ஜனமோ எண்ணிமுடியாத நாட்
களாய் என்னை மறந்துவிட்டது.
33 இச்சித்ததைத் தேடிக்கொள்வதில் நீ
கெட்டிக்காரி,
இவ்விதமாகத் துர்க்காரியங்களைச் செய்
யும் பழக்கமே உன் வழியானது.
34 உன் வஸ்திர ஓரங்களிலும் குற்றமில்லாத
ஏழைகளின் இரத்தம் காணப்படுகிறது;
அது கன்மிட்டவனைக்கொன்ற இரத்த
மல்ல,
உன் சகல இச்சைகளினிமித்தமும் இந்த
இரத்தம் காணப்பட்டது.
35 நீயோ, நான் குற்றவாளியாகத் தீர்க்கப்
படவில்லை,
அவர் கோபம் என்னை விட்டுத் திரும்
பிற்று
என்று சொல்லுகிறாய்;
நான் பாவஞ்செய்யவில்லையென்று நீ
சொல்வதினிமித்தம்
இதோ, நான் உன்னோடே வழக்காடு
வேன்.
36 நீ உன் வழியை மாற்றிமாற்றி இப்படி
விலகிப்போவது என்ன?
நீ அசீரியாவினால் வெட்கத்துக்குள்ளான
தபோல எகிப்தினாலும் வெட்கத்துக்
குள்ளாவாய்.
37 நீ உன் கைகளை உன் தலைமேல் வைத்துக்
கொண்டு இவ்விடமிருந்தும் போவாய்;
நீ நம்பியிருந்தவர்களை யெகோவா தள்ளி
விட்டாரே,
அவர்களால் நீ சித்திபெறுவதில்லை.

**3** ஒரு புருஷன் தன் மனைவியைத் தள்ளி
விடவே,
அவள் அவனை விட்டுப்போய் வேறொரு
வனுக்கு மனைவியானால்,
அவன் அவளிடம் இனித் திரும்பப்போ
வானோ?
அந்தத் தேசம் மிகவும் தீட்டாகுமல்
லவோ
என்று மனுஷர் சொல்லுவார்கள்;
நீயோ பல விடபுருஷரோடே வேசித்
தனம் பண்ணினாய்;
அப்படியிருக்க நீ என்னிடம் திரும்பு
வதோ!
இது யெகோவாவின் திருவாக்கு

நீ உன் கண்களை நிமிர்த்திப் பாழ்மேடு 2
களை நோக்கி,
நீ வேசித்தனம்பண்ணாத இடம் ஒன்று
உண்டோ என்று பார்;
வனாந்தரத்திலே அரபியன் காத்துக்
கொண்டிருக்கிறதுபோல,
நீ வழி ஓரங்களில் புருஷருக்குக் காத்
திருந்து,
உன் வேசித்தனங்களாலும் உன் தீய
செயல்களாலும் தேசத்தைத் தீட்டுப்
படுத்தினாய்.
அதினிமித்தம் மழைபெய்யாமலும் பின் 3
மாரியில்லாமலும் போயிற்று;
உனக்கோ சோரஸ்திரீயின் நெற்றியிருக்
கிறது,
நாணம் என்பது உனக்குத் தெரியாது.
நீ இப்பொழுது என்னிடம்: 4
என் பிதாவே, தேவரீர் என் இளவயதின்
நாயகன், என்று சொல்லிச்
சதாகாலமும் கோபத்தை வைப்பாரோ? 5
அதை என்றைக்குமாகக் காப்பாரோ
என்கிறாயே;
இதோ, இப்படி நீ சொல்லியும் தீமை
யானவற்றைச் செய்து அவற்றையே
நிறைவேற்றுகிறாய் என்கிறார்.
யோசியா ராஜாவின் நாட்களிலே 6
யெகோவா என்னோடு பேசினார்:
மாறுபட்டுப்போன இஸ்ரவேல் என்ப
வள் செய்ததைக் கண்டாயா?
அவள் உயரமான சகல மலையின்மேலும்
பச்சையான சகல மரத்தின் கீழும்போய்,
அங்கே வேசித்தனம்பண்ணினாள்.
அவள் இப்படியெல்லாம் செய்தபிறகும்: 7
நீ என்னிடம் திரும்பிவா என்று நான்
சொன்னேன், அவளோ திரும்பவில்லை;
இதைத் துரோகியாகிய அவள் சகோதரி
யூதா கண்டாள்.
மாறுபட்டுப்போன இஸ்ரவேல் என்ப 8
வள் செய்த விபசாரங்களினிமித்தமே
நான் அவளை அனுப்பிவிட்டு, அவளு
டைய தள்ளுதற் சீட்டை அவளுக்குக்
கொடுத்திருந்தும்
துரோகியாகிய அவள் சகோதரி யூதா
பயப்படவில்லை,
இவளும்போய் வேசித்தனம்பண்ணினாள்,
இதை நான் கண்டேன்.
மேலெழுச்சியான அவள் வேசித்தனத்தி 9
னாலே தேசம் தீட்டுப்பட்டுப்போயிற்று;
கல்லோடும் மரத்தோடும் விபசாரம்பண்
ணிக்கொண்டிருந்தாள்.
இவற்றையெல்லாம் கண்டும் துரோகியா 10
கிய அவள் சகோதரி யூதா

முழு இருதயத்தோடும் என்னிடம்
திரும்பவில்லை,
கள்ளத்தனமாகவே திரும்பினாள்,
இது யெகோவாவின் திருவாக்கு.
11 பின்னும் யெகோவா என்னோடு பேசி:
துரோகியான யூதாவிலும் மாறுபட்டுப்
போன இஸ்ரவேல் என்பவள்
தன்னை நீதியுள்ளவளாகக் காட்டினாள்.
12 நீ போய் வடதிசையை நோக்கி இவ்
வார்த்தைகளைச் சொல்:
மாறுபட்டுப்போன இஸ்ரவேலே, நீ
திரும்பு,
—இது யெகோவாவின் திருவாக்கு—
நான் உங்கள்மேல் என் கோபத்தை வர
விடுவதில்லை;
நான் இரக்கமுள்ளவர், இது யெகோவா
வின் திருவாக்கு;
நான் என்றைக்குமாகக் கோபம் வைக்க
மாட்டேன்.
13 நீயோ, உன் கடவுளாகிய யெகோவா
வுக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணிப்
பச்சையான சகல மரத்தின்கீழும் அந்நிய
ரோடே இங்குமங்கும் ஓடித்திரிந்து,
என் சத்தத்திற்குச் செவிகொடாமற்போன
உன் அக்கிரமத்தை ஒத்துக்கொள்,
இது யெகோவாவின் திருவாக்கு.
14 மாறுபட்டுப்போன பிள்ளைகளே,
திரும்புங்கள்,
—இது யெகோவாவின் திருவாக்கு—
நான் உங்கள் நாயகர்;
நான் உங்களை ஊருக்கு ஒருவனும் வம்
சத்திற்கு இருவருமாகத் தெரிந்தெடுத்து,
உங்களைச் சீயோனுக்கு அழைத்துக்
கொண்டு வருவேன்.
15 என் இருதயத்துக்கு ஏற்ற மேய்ப்பர்களை
உங்களுக்குக் கொடுப்பேன்,
அவர்கள் உங்களைப் புத்தியோடும் யுக்தி
யோடும் மேய்ப்பார்கள்.
16 நீங்கள் தேசத்திலே பலுகிப் பெருகும்
நாட்களிலே,
—இது யெகோவாவின் திருவாக்கு—
அவர்கள் யெகோவாவின் உடன்படிக்
கைப் பெட்டகத்தைப்பற்றி
இனிப்பேசுவதில்லை, அது அவர்கள் மன
தில் எழும்புவதும் இல்லை;
அது அவர்கள் நினைவில் வருவதும்
இல்லை, அதைக்குறித்து விசாரிப்பது
மில்லை;
இனி வேறொரு பெட்டகம் செய்வது
மில்லை.
17 அக்காலத்திலே எருசலேமை யெகோவா
வின் சிங்காசனம் என்பார்கள்;
யெகோவாவின் நாமத்திற்கென்று சகல
ஜாதியாரும்
எருசலேமிலே கூடுவார்கள்;
அவர்கள் இனி தங்கள் தீய இருதயக்
கடினத்தின்படியே நடப்பதில்லை.
18 அந்நாட்களிலே யூதா வம்சத்தார் இஸ்ர
வேல் வம்சத்தாரிடம் போகவே,
அவர்கள் ஒன்றுசேர்ந்து வடதே
சத்தை விட்டு,
நான் அவர்கள் பிதாக்களுக்குச் சுதந்தர
மாகக் கொடுத்த தேசத்திற்கு வருவார்கள்.
19 நான் பிள்ளைகளோடே உன்னை வைத்து,
இன்பமான நாட்டை, புறஜாதியாரு
டைய சுதந்தரங்களிற் சிறந்ததை,
உனக்குக் கொடுப்பேன் என்று நினைத்
தேன்;
நீ என்னை, பிதாவே என்று கூப்பிடுவாய்
நீ என்னை விட்டு விலகாதிருப்பாய் என்று
நினைத்தேன்.
20 ஆயினும் ஒரு மனைவி தன் நாயகனுக்குத்
துரோகம் செய்வதுபோல,
இஸ்ரவேல் வம்சத்தாராகிய நீங்கள்
எனக்குத் துரோகம் செய்தீர்கள்;
இது யெகோவாவின் திருவாக்கு.
21 இஸ்ரவேல் புத்திரர் மாறுபாடான வழி
யில் நடந்து
தங்கள் கடவுளாகிய யெகோவாவை
மறந்தபடியினாலே
அழுதுகொண்டு விண்ணப்பஞ்செய்யும்
சத்தம்
பாழான குன்றுகளிலே கேட்கப்படும்.
22 மாறுபட்டுப்போன பிள்ளைகளே, திரும்
புங்கள்;
உங்கள் மாறுபாடுகளைக் குணமாக்கு
வேன் என்றார்.
இதோ, உம்மிடம் வருகிறோம்,
நீரே எங்கள் கடவுளாகிய யெகோவா.
23 குன்றுகளிலிருந்து திரளான
பார்த்திருந்ததும்
மலைகளிலே செய்த ஆரவாரமும் மெய்
யாகவே விருதா;
இஸ்ரவேலின் இரட்சிப்பு மெய்யாகவே
எங்கள் கடவுளாகிய யெகோவாவிலே
இருக்கிறது.
24 இலச்சையானது எங்கள் பிதாக்கள்
உழைத்துச் சம்பாதித்தவைகளையும்
அவர்கள் ஆடுகளையும் மாடுகளையும் அவர்
கள் குமாரரையும் குமாரத்திகளையும்
எங்கள் சிறுவயது முதலே பட்சித்துப்
போட்டது.
25 எங்கள் இலச்சையே எங்கள் படுக்கை,
எங்கள் அவமானமே எங்கள் போர்வை,

நாங்களும் எங்கள் பிதாக்களும் எங்கள் சிறுவயதுமுதல் இந்நாள்வரைக்கும் எங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோமே, எங்கள் கடவுளாகிய யெகோவா சொன்னதைக் கேட்காமற்போனோமே.

**4** இஸ்ரவேலே, நீ திரும்புவாயானால் —இது யெகோவாவின் திருவாக்கு— என்னிடம் திரும்பு,
நீ உன் அருவருப்புகளை அகற்றிவிட்டால்,
என் சமுகத்தை விட்டு நீ அலைந்து திரிவதில்லை.
2 நீ உண்மையோடும் நியாயத்தோடும் நீதியோடும்
யெகோவாவின் ஜீவன்மேல் ஆணையிடுவாய்;
புறஜாதிகளும் தங்களை அவர் பேரால் ஆசீர்வதித்து
அவரில் மேன்மைபாராட்டுவார்கள்.
3 யூதா நாட்டாருக்கும் எருசலேமியருக்கும் யெகோவா சொல்வதைக் கேளுங்கள்:
நீங்கள் தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள்,
முட்களுக்குள்ளே விதையாதிருங்கள்.
4 யூதாநாட்டாரே, எருசலேமின் குடிகளே,
நீங்கள் யெகோவாவுக்கென்று உங்களை விருத்தசேதனம்பண்ணி,
உங்கள் இருதயத்தின் முனித்தோலை நீக்கிவிடுங்கள்;
அப்படிச் செய்யாவிட்டால் உங்கள் தீய செயல்களினிமித்தம்
என் உக்கிரம் அக்கினியைப்போல எழும்பி,
அவிப்பார் இல்லாமல் எரியுமே.
5 யூதாவிலே அறிவித்து, எருசலேமிலே பிரசித்தப்படுத்தித்
தேசமெங்கும் எக்காளம் ஊதி;
கூடிவாருங்கள், அரணான நகரங்களுக்குள் செல்லுவோம்
என்று சத்தமிட்டுக் கூறுங்கள்.
6 சீயோன் திசையாய்க் கொடியேற்றுங்கள்,
தப்பியோடிப்போங்கள், நிற்கவேண்டாம்;
நான் வடக்கேயிருந்து தீங்கையும் மகா சங்காரத்தையும் வரப்பண்ணுகிறேன்.
7 ஒரு சிங்கம் தன் புதரிலிருந்து எழும்புகிறது;
ஜன சங்காரன் தன் இடத்திலிருந்து கிளம்பிவருகிறான்;
உன் தேசத்தைப் பாழாக்குவான், உன் ஊர்களைக் குடியில்லாமல் அழிப்பான்.
இதினிமித்தம் இரட்டைக் கட்டிக் 8
கொள்ளுங்கள், புலம்பி அலறுங்கள்;
யெகோவாவின் உக்கிரகோபம் நம்மை விட்டுத் திரும்பவில்லையே.
அந்நாளிலே—இது யெகோவாவின் 9
திருவாக்கு—
ராஜாவும் அதிபதிகளும் தைரியமற்றுப் போவார்கள்;
ஆசாரியர்கள் திடுக்கிடுவார்கள், தீர்க்கதரிசிகள் திகைத்து நிற்பார்கள்.
அப்பொழுது நான்: ஐயோ யெகோவா 10
வாகிய ஆண்டவரே,
உங்களுக்குச் சமாதானமிருக்கும் என்று
இந்த ஜனத்துக்கும் எருசலேமுக்கும் சொல்லி
மெய்யாகவே அவர்களை வஞ்சித்துவிட்டீர்,
பிராணமோசமாகப் பட்டயம் கிட்டினதே என்றேன்.
அக்காலத்திலே இந்த ஜனத்துக்கும் 11
எருசலேமுக்கும் இது சொல்லப்படும்:
வனாந்தரப் பாழ்ங் குன்றுகளிலிருந்து,
ஒரு தீக்காற்று என் ஜன குமாரிக்கு நேராக அடிக்கும்;
அது தூற்றவும் சுத்திகரிக்கவும் வருங் காற்றல்ல.
என் கட்டளையால் வரும் காற்று இவை 12
செய்யும் காற்றிலும் பலமானது,
இப்பொழுது நானும் அவர்களுக்குத் தீர்ப்புகளை உரைப்பேன்.
இதோ, மேகங்களைப்போல வருகிறான்; 13
அவனுடைய இரதங்கள் பெருங்காற்றுப் போன்றவை;
அவன் குதிரைகள் கழுகுகளிலும் வேகமானவை;
ஐயோ நமக்குக் கேடாம்! நாம் பாழாகிறோமே.
எருசலேமே, உன் இருதயத்தைத் தீமை 14
யறக் கழுவு,
அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய்;
எத்தமட்டும் அக்கிரம எண்ணங்கள்
உன் உள்ளத்திலே தங்கும்.
தாணிலிருந்து செய்தியறிவிப்போன் சத் 15
தம் கேட்கிறது;
எப்பிராயீமின் மலையிலிருந்து ஒருவன்
கேடானதைப் பிரசித்தம்பண்ணுகிறான்;
புறஜாதியாருக்கு அதை நீங்கள் பிரஸ்தா 16
பம்பண்ணி,
எருசலேமுக்கு இதை அறிவித்தால்:

இதோ, முற்றுகை போடுவோர் தூரதே
சத்திலிருந்து வந்து,
யூதாவின் ஊர்களுக்கு விரோதமாய்
உரத்த சத்தமிடுவார்கள்
என்று சொல்லுங்கள்.
17 வயல்வெளிகளின் காவற்காரர் நிற்பது
போல் அவர்கள் அதைச் சுற்றி நிற்பார்
கள்;
அது எனக்குத்துரோகம் செய்ததே,
இது யெகோவாவின் திருவாக்கு.
18 இவற்றை உனக்கு வருவித்தவை உன்
நடக்கையும் உன் செயல்களுமே,
அது உன் தீமையினால் வந்தது; அது
எத்தனை கசப்பு!
வாதை உன் இதயத்தை எட்டியிருக்
கிறதே.
19 என் உள்ளம், என் உள்ளமே! எத்
தனை வேதனை!
என் இதயச்சுவரே! என் இதயம்கதறும்!
நான் இனி பேசாதிருக்கமுடியாது!
எக்காள சத்தம், யுத்த ஆரவாரம், என்
மனமே, உனக்குக் கேட்கிறதே.
20 அழிவின்மேல் அழிவெனக் கூறப்படுகி
றது,
தேசமெலாம் பாழ், திடீரென என் கூடா
ரங்களும்,
கூணநேரத்தில் என் திரைகளும் பாழ்
பட்டன.
21 எதுவரை கொடியைப் பார்த்திருப்பேன்,
எதுவரை எக்காளசத்தம் கேட்டிருப்
பேன்.
22 என் ஜனம் மதியீனர், என்னை அறிய
வில்லை,
புத்தியிலாப் பிள்ளைகள், உணர்விலாத
வர்கள்,
தீமைசெய்யச் சமர்த்தர், நன்மைசெய்ய
அறியாதவர்.
23 பூமியைப் பார்த்தேன், அது உருவ
மற்று வெறுமையாயிருந்தது;
வானங்களை நோக்கினேன், அவைகளு
க்கு ஒளியில்லை.
24 பர்வதங்களைப் பார்த்தேன், அவைகள்
அதிர்ந்தன;
எல்லாக் குன்றுகளும் அசைந்தன.
25 பின்னும் நான் பார்க்கவே, ஒரு மனுஷ
னுமில்லை,
ஆகாயப் பறவைகளெல்லாம் பறந்து
போயின.
26 பின்னும் நான் பார்க்கவே,
யெகோவாவினால், அவருடைய உக்கிர
கோபத்தினாலே, செழிப்புநிலம் வனாந்த
ரமாயிற்று;
அதின் பட்டணங்களெல்லாம் இடிந்து
போயின.
யெகோவா சொல்வதைக் கேளுங்கள்: 27
தேசமெல்லாம் பாழாய்ப்போம், எனி
னும் சர்வசங்காரம் செய்யேன்.
இதினிமித்தம் பூமி துக்கிக்கும், உயர் 28
வானம் கரிய உடை தரிக்கும்;
நானே அதைச் சொன்னேன், நானே
அதை நிர்ணயித்தேன்;
நான் மனஸ்தாபப்படுவதும் இல்லை,
அதை விட்டுத் திரும்புவதும் இல்லை.
குதிரைவீரரும் வில்வீரரும் இடும் சத் 29
தத்தைக் கேட்டு,
ஊராரெல்லாம் ஓடி, அடர்த்தியான காடு
களில் புகுந்து கன்மலைகளிலும் ஏறுவார்
கள்;
ஊரெல்லாம் விடப்பட்டது, குடியிருக்க
எவனுமில்லை.
பாழாய்ப்போன நீ இப்பொழுது என்ன 30
செய்வாய்?
நீ இரத்தாம்பரம் உடுத்துப் பொன்னுபர
ணங்களால் உன்னைச் சிங்காரித்து
உன் கண்களில் மையிட்டுக்கொண்டா
லும்
உன்னை அழகுபடுத்தச் செய்வதெல்லாம்
வீணே;
சோரநாயகர் உன்னை அசட்டைபண்ணி
உன் பிராணனை வாங்கத் தேடுவார்கள்.
கர்ப்பவேதனைப்படுகிறவளின் சத்தம் 31
போன்றதைக் கேட்டேன்,
தலைப்பிள்ளை பெறுகிறவளின் வியாகுல
சத்தம்போன்றதைக் கேட்டேன்;
அது சீயோன் குமாரத்தியின் சத்தமே,
அவள் பெருமூச்சுவிட்டுத் தன் கைகளை
விரித்து:
ஐயோ எனக்கு ஆபத்து!
கொலைபாதகரின் எதிரே நான் சோர்ந்து
போகிறேனே என்கிறாள்.

எருசலேமின் தெருக்களிலே திரிந்து **5**
பார்த்து, அதின் வெளிகளிலே தேடி,
நியாயஞ்செய்கிற மனுஷன் அகப்படுவா
னே, உண்மையைத் தேடுகிறவன் உண்
டோ
என்று விசாரியுங்கள்;
உண்டென்றால் அதற்கு மன்னிப்புத்
தருவேன்.
அவர்கள், யெகோவாவின் ஜீவன்மேல் 2
ஆணையென்று சொன்னாலும்,
அவர்கள் இடும் ஆணை பொய்யே.
யெகோவாவே உமது கண்கள் உண்மை 3
யை அல்லவோ தேடுகின்றன;

அவர்களை அடிக்கிறீர், அவர்களுக்கோ
நோகாது;
அவர்களை அழிக்கிறீர், அவர்களுக்கோ
சிட்சையை ஏற்றுக்கொள்ள மன
மில்லை;
தங்கள் முகங்களைக் கன்மலையிலும் கடி
னமாக்கித்
திரும்ப மனமற்றுப்போனார்கள்.
4 அப்பொழுது நான்: இவர்கள் இழிவான
வர்களாமே, இவர்கள் மதியற்றவர்
கள்;
யெகோவாவின் வழியையும் தங்கள் கட
வுளின் நியாயத்தையும் அறியாதிருக்கிறார்
கள்,
5 நான் பெரியோரிடம்போய் அவர்களோ
டே பேசுவேன்,
அவர்களே யெகோவாவின் வழியையும்
தங்கள் கடவுளின் நியாயத்தையும் அறி
வார்கள்
என்று சொல்லிக்கொண்டேன்;
அவர்களோ ஏகமாய் நுகத்தடியை முறித்
துக் கட்டுகளை அறுத்துப்போட்டார்கள்.
6 ஆகவே காட்டிலிருந்து வரும் சிங்கம்
அவர்களைக் கொல்லும்,
வனாந்தர ஓநாய்கள் அவர்களை அழிக்கும்,
சிவிங்கி அவர்கள் பட்டணங்களைப்
பார்த்துப் பதிவிருக்கும்;
அவைகளிலிருந்து வெளிப்படுகிறவன்
எவனும் பீறப்படுவான்;
அவர்கள் மீறுதல்கள் பெருகின, அவர்
கள் மாறுபாடுகள் அதிகரித்தன.
7 இவைகளை நான் உனக்கு மன்னிப்பது
எப்படி?
உன் குமாரர் என்னை விட்டு விலகி
தெய்வம் அல்லாதவைகள்பேரில் ஆணை
யிடுகிறார்கள்;
நான் அவர்கள் குறைவுகளை நீக்கும்போ
து அவர்கள் விபசாரம்பண்ணி,
வேசி வீட்டிற்குக் கூட்டங்கூட்டமாய்ப்
போகிறார்கள்.
8 குறையின்றித் தீனிதின்னும் அடங்காக்
குதிரைகள்போல
அவனவன் தன்தன் அயலான் பெண்
ஜாதியின் பின்னே கனைக்கிறான்.
9 இப்படிப்பட்டவற்றின் நிமித்தம் நான்
தண்டியாதிருப்பேனே?
—இது யெகோவாவின் திருவாக்கு—
இப்படிப்பட்ட ஜாதியின்மேல் நான்
பழிவாங்காதிருப்பேனே?
10 அதின் தோட்டச்சுவர்கள்மேல் ஏறி
அழித்துப்போடுங்கள்;
சர்வசங்காரம் செய்யவேண்டாம்,
அதின் கொடிகளை எடுத்துப்போடுங்கள்;
அவைகள் யெகோவாவுக்குரியவைகள்
அல்ல.
11 இஸ்ரவேல் வீட்டாரும் யூதா வீட்டாரும்
எனக்கு விரோதமாய் மிகுதியும் துரோ
கம்பண்ணினார்கள்,
இது யெகோவாவின் திருவாக்கு.
12 அவர்கள் யெகோவாவை மறுதலித்து:
அவர் ஒன்றுமில்லை, தீங்கு நம்மேல்
வராது,
பட்டயத்தையாகிலும் பஞ்சத்தையாகி
லும் நாம் காண்பதில்லை,
13 தீர்க்கதரிசிகள் காற்றாவார்கள்; திரு
வாக்கு அவர்களில் இல்லை;
அவர்கள் சொல்வது அவர்களுக்கே
நேரிடட்டும்
என்று சொல்லுகிறார்கள்.
14 ஆகவே சேனைகளின் கடவுளாகிய யெ
கோவா இப்படிச் சொல்லுகிறார்:
நீங்கள் இப்படிப் பேசினபடியினால்,
இதோ, நான் உன் வாயிலிட்ட என்
வார்த்தைகளை அக்கினியும்
இந்த ஜனத்தை விறகும் ஆக்குவேன்,
அது இவர்களைப் பட்சிக்கும்.
15 இஸ்ரவேல் வீட்டாரே, இதோ, தூரத்தி
லிருந்து
நான் உங்கள்மேல் ஒரு ஜனத்தைக்
கொண்டுவருவேன்,
—இது யெகோவாவின் திருவாக்கு—
அது பலத்த ஜனம், அது வெகுகாலா
யுள்ள ஜனம்,
நீ அறியாத பாஷையைப் பேசும் ஜனம்,
அந்த ஜனம் பேசுவது உனக்கு விளங்
காது.
16 திறந்த பிரேதக்குழிகளைப்போல் அவர்
கள் அம்பறாத்தூணிகள் இருக்கும்;
அவர்கள் அனைவரும் பராக்கிரம வீரர்.
17 உன் குமாரரும் உன் குமாரத்திகளும்
சாப்பிடவேண்டிய உன் விளைச்சலையும்
உன் ஆகாரத்தையும் அவர்கள் சாப்
பிட்டு,
உன் ஆடுகளையும் உன் மாடுகளையும் பட்
சித்து;
உன் திராட்சப்பழங்களையும் உன் அத்திப்
பழங்களையும் சாப்பிட்டு,
நீ நம்பிக்கையாயிருந்த அரணான பட்ட
ணங்களைப் பட்டயத்தாலே அழித்துவிடு
வார்கள்.
18 ஆகிலும் நான் அந்நாட்களிலும்—இது
யெகோவாவின் திருவாக்கு—
உங்களைச் சர்வசங்காரம் செய்யாதிருப்
பேன்.

19 எங்கள் கடவுளாகிய யெகோவா எங்களுக்கு இவைகளையெல்லாம் எதினிமித்தம் செய்தார் என்று நீங்கள் கேட்டால்
நீங்கள் என்னை விட்டு விலகி
உங்கள் தேசத்திலே அந்நியதேவர்களைச் சேவித்ததுபோல்
உங்கள் தேசமல்லாததிலே நீங்கள் அந்நியர்களைச் சேவிப்பீர்கள்
என்று நீ அவர்களிடம்சொல்.
20 நீங்கள் யாக்கோபின் வீட்டிலே இதை அறிவித்து, யூதாவிலே இதைத் தெரியப்படுத்துங்கள்:
21 கண்கள் இருந்தும் காணுமலும், காதுகள் இருந்தும் கேளாமலுமிருக்கிற அறிவில்லாத மதிகெட்ட ஜனங்களே, கேளுங்கள்.
22 எனக்குப் பயப்படாதிருக்கிறீர்களோ? இது யெகோவாவின் திருவாக்கு.
நீங்கள் எனக்குமுன் நடுங்காதிருப்பீர்களோ?
அலைகள் மோதியடித்தாலும் மேற்கொள்ளாதபடிக்கும்,
அவைகள் இரைந்தாலும் கடவாதபடிக்கும்,
கடக்கமுடியாத நித்திய நியமமாக மணலைச் சமுத்திர எல்லையாய் வைத்தேனே.
23 இந்த ஜனமோ அடங்காத முரட்டு இருதயமுள்ளது;
அவர்கள் அடங்காமல் விலகிப்போயிருக்கிறார்கள்.
24 அவர்கள் தங்கள் இருதயத்திலே சிந்தித்து:
தக்ககாலத்திலே எங்களுக்கு மழையை, முன்மாரியையும் பின்மாரியையும், கொடுத்து
அறுப்புக்கு நியமித்த வாரங்களை எங்களுக்கெனக் காத்து வருகிற
எங்கள் கடவுளாகிய யெகோவாவுக்குப் பயந்திருப்போம் என்று சொல்லுகிறதில்லை.
25 இவற்றைத் தடுப்பது உங்கள் அக்கிரமங்களே,
உங்களுக்கு நன்மையை வரவொட்டாதிருப்பது உங்கள் பாவங்களே
26 என் ஜனத்தில் தெய்வபயமற்றவர்கள் இருக்கிறார்கள்;
குருவி பிடிக்கிறவர்கள் பதுங்குகிறதுபோல் அவர்கள் பதிவிருந்து,
மனுஷரைப் பிடிக்கக் கண்ணிகளை வைக்கிறார்கள்.
27 கூண்டிலே குருவி நிறைந்திருப்பதுபோல
அவர்கள் வீடுகளில் வஞ்சனை நிறைந்திருக்கிறது;
அதினால் அவர்கள் பெரியவர்களும் ஐசுவரியவான்களுமானார்கள்.
28 கொழுத்துத் தளதளவென் றிருக்கிறார்கள்;
அவர்களுடைய தீயவார்த்தைகளுக்கு முடிவில்லை.
திக்கற்றவனும் வாழும்படி அவன் வழக்கை விசாரிப்பதில்லை,
ஏழைகளுக்கு நியாயங்கிடைக்கச் செய்கிறதில்லை.
29 இவைகள் நிமித்தம் தண்டியாதிருப்பேனே? இது யெகோவாவின் திருவாக்கு.
இப்படிப்பட்ட ஜாதியின்மேல் நான் பழிவாங்காதிருப்பேனே.
30 திகைத்துப் பயப்படும் காரியம் தேசத்திலே நடந்துவருகிறது.
31 தீர்க்கதரிசிகள் கள்ளத் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்;
ஆசாரியர்கள் அவர்கள் உதவியால் அதிகாரம் செலுத்துகிறார்கள்;
இப்படியிருப்பது என் ஜனத்துக்குப் பிரியம்,
முடிவிலோ என்ன செய்வீர்கள்?

**6** பென்யமீன் புத்திரரே, நீங்கள் எருசலேமின் நடுவிலிருந்து ஓடிப்போய்
தெக்கோவாவில் எக்காளம் ஊதிப்
பேத்கேரேமின்மேல் அடையாளம் காட்டுங்கள்;
ஒரு தீங்கும் மகா சங்காரமும் வடக்கேயிருந்து எழும்பி வருகிறது.
2 சுகபோஜனச் செல்வமும் அழகுமுடைய சீயோன் குமாரத்தியை அழித்துவிடுவேன்.
3 மேய்ப்பவர் தங்கள் மந்தைகளோடே அவளிடம் வருவார்கள்;
அவர்கள் அவளுக்கு விரோதமாய்ச் சுற்றிலும் கூடாரம் போட்டுத்தன்தன் இடத்திலே மேய்ப்பார்கள்.
4 அவளுக்கு விரோதமாய் யுத்தப் பிரதிஷ்டை செய்யுங்கள்,
எழுந்திருங்கள், மத்தியானத்திலேயே நாம் போய் ஏறுவோம்,
ஐயோ! பொழுது சாய்ந்து அந்தி நிழல் நீண்டுபோகிறதே;
5 எழுந்திருங்கள், நாம் இராக்காலத்தில் போயேறி,

அவள் அரமனைகளை அழிப்போம் என்று சொல்லுவார்கள்.
6 சேனைகளின் யெகோவா சொல்வதைக் கேளுங்கள்:
மரங்களை வெட்டி எருசலேமுக்கு விரோதமாய்க் கொத்தளம் போடுங்கள்,
அதுவே தண்டிக்கப்படவேண்டிய நகரம்;
அதின் உள்ளிருப்பதெல்லாம் கொடுமை.
7 ஊற்று தன் தண்ணீரைச் சுரக்கப்பண்ணுவதுபோல்
அதன் தீங்கு சுரந்துகொண்டேயிருக்கிறது;
கொடுமை என்பதும் அழிவு என்பதும் அதிலே கேட்கப்படுகிறது;
காயங்களும் அடிகளும் நித்தமும் என் கண்முன் இருக்கிறது.
8 எருசலேமே, நான் உன்னை விட்டுப் பிரியாதபடிக்கும்
நான் உன்னைக் குடியற்ற பாழான தேசம் ஆக்காதபடிக்கும்
என் சிட்சையை ஏற்றுக்கொள்.
9 சேனைகளின் யெகோவா சொல்வதைக் கேளுங்கள்:
திராட்சத்தோட்டத்தில் பின்பறிப்பைச் சேர்ப்பதுபோல
இஸ்ரவேலில் மீதியானவர்களை ஜாக்கிரதையாய்ச் சேர்த்துக்கொள்வார்கள்,
திராட்சக்குலைகளை அறுக்கிறவனைப்போல உன் கையைத் திரும்பத் திரும்பக் கொடிகளின்மேல் வீட்டு.
10 அவர்கள் கேட்கும்படி நான் யாரோடே பேசி எச்சரிப்பேன்?
அவர்கள் செவி விருத்தசேதனமில்லாதது, அவர்கள் கேட்கமுடியாதவர்கள்;
யெகோவாவின் வார்த்தை அவர்களுக்கு நிந்தையாயிற்று,
அதிலே அவர்களுக்குப் பிரியமில்லை.
11 நான் யெகோவாவின் உக்கிரத்தால் நிறைந்திருக்கிறேன்;
அதை அடக்கி இளைத்தேன்;
வீதியிலுள்ள பிள்ளைகள்மேலும் கூடிவரும் சகல வாலிபர்மேலும் அதை ஊற்றிவிடு;
புருஷரும் ஸ்திரீகளும், கிழவரும் பூரண வயதுள்ளவர்களுங்கூடப் பிடிக்கப்படுவார்கள்.
12 அவர்கள் வீடுகளும் அவர்களுடைய காணி பூமிகளும்
அவர்கள் மனைவிகளுங்கூட அந்நியர் வசமாகும்;
என் கையை இந்தத் தேசத்தின் குடிகளுக்கு விரோதமாக நீட்டுவேன்,
இது யெகோவாவின் திருவாக்கு.
13 அவர்களில் சிறியோர்முதல் பெரியோர் வரைக்கும்
ஒவ்வொருவரும் அநியாய லாபம் தேடுவோர்,
தீர்க்கதரிசிகள் ஆசாரியர்களிலுங்கூட ஒவ்வொருவரும் மாய்மால முடையவர்.
14 சமாதானமில்லாதிருந்தும், சமாதானம், சமாதானம் என்று சொல்லி
என் ஜனத்தின் காயங்களைக் குணமாக்குவது எளிதென்பதுபோல் நடக்கிறார்கள்.
15 அவர்கள் அருவருப்பானதைச் செய்ததினிமித்தம் வெட்கத்துக்குள்ளாவார்கள்;
அவர்களுக்கு வெட்கம் ஞாணம் என்பது இப்போது தெரியாது;
ஆதலால் விழுகிறவர்களோடே விழுவார்கள்,
நான் அவர்களை விசாரிக்குங்காலத்தில் இடறுண்டு போவார்கள்
என்று யெகோவா சொல்லுகிறார்.
16 வழிகளிலே நின்று பூர்வபாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து,
நல்வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்;
அது உங்கள் ஆத்துமாவை இளைப்பாறச் செய்யும்
என்று யெகோவா சொல்லுகிறார்;
அவர்களோ நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்.
17 நான் உங்கள்மேல் ஜாமக்காரரை வைத்து,
எக்காள சத்தத்தைக் கவனித்துக்கேளுங்கள் என்று சொன்னேன்;
அவர்களோ, நாங்கள் கேட்கமாட்டோம் என்கிறார்கள்.
18 இப்படியிருப்பதால் புறஜாதியாரே, கேளுங்கள்;
ஜனக்கூட்டமே, அவர்களுக்குள் நடக்கிறதை அறிந்துகொள்.
19 பூமியே, கேள்; இந்த ஜனத்தின்மேல் அவர்கள் எண்ணங்களின் பலனாகிய
ஒரு தீங்கை வரப்பண்ணுவேன்;
இவர்கள் என் வார்த்தைகளைக் கவனித்துக் கேளாமல்
என் நியாயப் பிரமாணத்தைத் தள்ளிவிட்டார்களே.
20 ஷேபாவிலிருந்து வரும் தூபவர்க்கமும், தூரதேச சுகந்த வசம்பும் எனக்கு எதற்கு?

உங்கள் தகனபலிகள் எனக்குப் பிரிய மல்ல, உங்கள் இரத்த பலிகள் எனக்கு இனிதாயிராது.

21 ஆகையால், இதோ, நான் இடறச்செய்யும் தடைகளை இந்த ஜனத்துக்கு வைப்பேன்; அவைகளில் பிதாக்களும் பிள்ளைகளும் இடறுவார்கள், ஒரு வீட்டுக்காரன் தன் அடுத்த வீட்டுக்காரனோடே அழிவான் என்று யெகோவா சொல்லுகிறார்.

22 யெகோவா சொல்வதைக் கேளுங்கள்: இதோ, வடதேசத்திலிருந்து ஒரு ஜனம் வரும், பூமியின் கடையாந்தரங்களிலிருந்து ஒரு பெரிய ஜாதி எழும்பிவரும்;

23 அவர்கள் வில்லும் எறிவல்லயமும் பிடித்து வருவார்கள், அவர்கள் கொடியர், இரக்கம் அறியாதவர்கள்: அவர்கள் பேசும் சத்தம் சமுத்திர இரைச்சல்போலிருக்கும்; சீயோன் குமாரத்தியே, அவர்கள் உனக்கு விரோதமாக யுத்த சந்நத்தராகிக் குதிரைகளின்மேலேறி வருவார்கள் என்று சொல்லுகிறார்.

24 அவர்கள் வருகிற செய்தியைக்கேட்டோம், நமது கைகள் தளர்ந்தன; துயரமும் கர்ப்பவலியின் அவஸ்தையும் நம்மைப் பிடித்தன;

25 வயலில் வெளியேருதிருங்கள், வழியிலும் நடவாதிருங்கள்; சத்துரு பட்டயம் எடுத்தான், எப்புறமும் திகில்.

26 என் ஜனகுமாரியே, நீ இரட்டுடுத்திச் சாம்பலில் புரண்டு ஏக புத்திரனிமித்தம் துக்கங் கொண்டாடுவதுபோல மனங்கசந்து புலம்பு; பாழாக்குகிறவன் சடுதியாய் நம்மேல் வருவான்.

27 என் ஜனத்தில் உன்னை அரணான பட்டணமாக வைக்கிறதோடுகூட நீ அவர்கள் வழியை அறிந்துகொள்ளவும் சோதித்துப் பார்க்கவும் நான் உன்னைப் பரிசோதகனாகவும் வைக்கிறேன்.

28 அவர்களெல்லாரும் விலகிப்போன துரோகிகள், தூற்றித் திரிகிறவர்கள்; அவர்கள் செம்புபோ இருப்புமே, அவர்களெல்லாரும் கேடு செய்பவர்கள்.

29 துருத்தியை ஊத ஊத ஈயமே உருகிவந்தது.

புடமிடுகிறவன் பிரயாசம் வீணாயிற்று, கெட்டவர்கள் நீக்கப்படவில்லை.

30 தள்ளுபடியான வெள்ளி என்று அவர்களை அழையுங்கள்; யெகோவாவே அவர்களைத் தள்ளிவிட்டார்.

**7** யெகோவாவினிடமிருந்து எரேமியாவுக்கு வந்த வார்த்தை:

2 நீ யெகோவாவின் ஆலயத்தின் வாசலிலே நின்று, அங்கே கூறியறிவிக்கவேண்டிய வார்த்தை இதுவே, யெகோவாவைப் பணிந்துகொள்ள இந்த வாசல்களுக்குள்ளே பிரவேசிக்கிற யூத ஜனங்களாகிய நீங்களெல்லாரும் யெகோவாவின் வார்த்தையைக் கேளுங்கள்.

3 இஸ்ரவேலின் கடவுளாகிய சேனைகளின் யெகோவா சொல்லுகிறார்: உங்கள் வழிகளையும் உங்கள் செய்கைகளையும் சீர்ப்படுத்துங்கள், அப்பொழுது உங்களை இந்த ஸ்தலத்திலே குடியிருக்கப் பண்ணுவேன்.

4 இதுவே யெகோவாவின் ஆலயம், யெகோவாவின் ஆலயம், யெகோவாவின் ஆலயம் என்று சொல்லிப் பொய் வார்த்தைகளில் நம்பிக்கையாயிருங்கள்.

5 நீங்கள் உங்கள் வழிகளையும் உங்கள் செய்கைகளையும் குறைவறச் சீர்ப்படுத்தி, ஒருவனுக்கும் அவன் அயலானுக்கு மூள்ள வழக்கை நியாயமாகவே தீர்த்து

6 அந்நியனையும் திக்கற்றவனையும் விதவையையும் ஒடுக்காமலும் குற்றமில்லாத இரத்தத்தை இந்த ஸ்தலத்திலே சிந்தாமலும், உங்களுக்குக் கேடுண்டாக அந்நிய தேவர்களைப் பற்றிக் கொள்ளாமலும் இருப்பீர்களேயாகில்,

7 உங்கள் பிதாக்களுக்கு நான் கொடுத்த இந்த ஸ்தலத்தில், இந்த தேசத்தில் உங்களைச் சதாகாலமுமாகக் குடியிருக்கப்பண்ணுவேன்.

8 இதோ, ஒன்றுக்கும் உதவாத பொய் வார்த்தைகளில் நீங்கள் நம்பிக்கை வைக்கிறீர்கள்.

9 நீங்கள் திருடிக் கொலைசெய்து விபசாரம் பண்ணிப் பொய்யாணையிட்டுப் பாகாலுக்குத் தூபங்காட்டி, நீங்கள் அறியாத அந்நிய தேவர்களைத்தொழுது,

10 பிற்பாடுவந்து, என் நாமம்வழங்கும் இந்த
ஆலயத்திலே என் சந்நிதியில் நின்று,
நாங்கள் விடுதலையானோம் என்று சொல்
லிப்
பின்னும் இந்த அருவருப்புகளையெல்
லாம் செய்து வருகிறீர்களே.
11 என் நாமம் வழங்கும் இந்த ஆலயம்
உங்களுக்குக் கள்ளர் குகையாயிற்றோ?
இதோ, நான் கண்டுகொண்டேன்;
இது யெகோவாவின் திருவாக்கு.
12 நான் முற்காலத்தில் என் நாமம் விளங்
கப்பண்ணின
சீலோவிலுள்ள என் ஸ்தலத்துக்கு நீங்
கள்போய்,
இஸ்ரவேல் ஜனத்தின் தீமையினிமித்தம்
நான் அதற்குச் செய்ததைப் பாருங்கள்.
13 நீங்கள் இந்தச் செய்கைகளையெல்லாம்
செய்து,
—இது யெகோவாவின் திருவாக்கு—
நான் உங்களுக்குத் திரும்பத்திரும்பச்
சொன்னவைகளையும் பேசியவைகளையும்
நீங்கள் கேளாமலும்
நான் உங்களைக் கூப்பிட்டும் நீங்கள்
பதில் சொல்லாமலும் போனபடியினால்,
14 என் நாமம் வழங்குவதும் நீங்கள் நம்பி
யிருப்பதுமான இந்த ஆலயத்துக்கும்,
உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும்
நான் கொடுத்த ஸ்தலத்துக்கும்
நான் சீலோவுக்குச் செய்ததுபோலச்
செய்வேன்.
15 எப்பிராயீமின் சந்ததியார் அனைவருமா
கிய உங்கள் சகோதரர் அனைவரையும்
நான் அகற்றிவிட்டதுபோல
உங்களையும் என் சமுகத்திலிருந்து
அகற்றிவிடுவேன்.
16 நீ இந்த ஜனத்துக்காகப் பிரார்த்தனை
செய்யவேண்டாம்,
அவர்களுக்காக மன்றாடவும் பிரார்த்திக்
கவும் வேண்டாம்,
என்னிடத்தில் அவர்களுக்காகப் பரிந்து
பேசவும் வேண்டாம்,
நான் உனக்குச் செவிகொடுப்பதில்லை.
17 யூதா ஊர்களிலும் எருசலேமின் வீதி
களிலும் அவர்கள் செய்கிறதை நீ காண
வில்லையா?
18 பிள்ளைகள் விறகு பொறுக்குகிறார்கள்,
பிதாக்கள் நெருப்பு மூட்டுகிறார்கள்,
ஸ்திரீகள் மாப்பிசைகிறார்கள்,
அவர்கள் வானராக்கினிக்குப் பணியா
ரம் சுட்டுத்
தேவர்களுக்குப் பானபலிகளை வார்க்கி
றார்கள்;
இப்படிச் செய்து எனக்கு மனவருத்த
முண்டாக்குகிறார்கள்;
19 அவர்கள் வருத்தம் உண்டாக்குவது
எனக்கா?
—இது யெகோவாவின் திருவாக்கு—
அவர்கள் முகங்கள் வெட்கும்படி
தங்களுக்கேயல்லவா வருத்தமுண்டாக்
கிக் கொள்ளுகிறார்கள்.
20 ஆதலால் யெகோவாவாகிய ஆண்டவர்
இப்படிச் சொல்லுகிறார்:
இதோ, என் கோபமும் என் உக்கிரமும்
இந்த ஸ்தலத்தின்மேலும் மனுஷர்மே
லும்
மிருகங்கள்மேலும் வெளியின் மரங்கள்
மேலும் பூமியின் விளைச்சல்மேலும் ஊற்
றப்படும்;
அது அவியாமல் எரியும்.
21 இஸ்ரவேலின் கடவுளாகிய சேனைக
ளின் யெகோவா சொல்வதைக் கேளுங்
கள்:
உங்கள் தகனபலிகளை இரத்த பலிக
ளோடும் சேர்த்து இறைச்சியைச் சாப்
பிடுங்கள்.
22 நான் உங்கள் பிதாக்களை எகிப்து தேசத்
திலிருந்து அழைத்துவந்த நாளிலே,
தகனபலி, இரத்தபலி, இவ்விஷயங்களைப்
பற்றி
நான் அவர்களோடு பேசவுமில்லை, அவர்
களுக்குக் கட்டளையிடவுமில்லை.
23 நான் அவர்களுக்குக் கட்டளையிட்ட
விஷயம் இதுவே:
என் சொல்லுக்குச் செவிகொடுங்கள்,
அப்பொழுது நான் உங்கள் கடவுளா
யிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்
பீர்கள்;
நான் உங்களுக்குக் கட்டளையிடும் எல்லா
வழியிலும் நடவுங்கள்;
நடந்தால் நீங்கள் வாழ்ந்திருப்பீர்கள்
என்று சொன்னேன்.
24 அவர்களோ அதைக்கேட்கவில்லை, செவி
கொடுக்கவில்லை;
தங்கள் யோசனைகளின்படி தங்கள் தீய
இருதயகடினத்திலே நடந்தார்கள்,
முன்னிட்டல்ல பின்னிட்டே போனார்
கள்.
25 உங்கள் பிதாக்கள் எகிப்து தேசத்திலி
ருந்து புறப்பட்ட நாள்முதல் இந்நாள்
மட்டும்
தீர்க்கதரிசிகளாகிய என் ஊழியரையெல்
லாம்
நான் திரும்பத்திரும்ப நாடோறும் உங்க
ளிடம் அனுப்பிக்கொண்டிருந்தேன்.

26 அவர்களோ என் சொல்லைக் கேட்க
வில்லை, செவிகொடுக்கவில்லை;
வணங்காக் கழுத்துள்ளவர்களாகித்
தங்கள் பிதாக்களைப் பார்க்கிலும் அதிக
மாய்க் கேடுசெய்தார்கள்.
27 இந்த வார்த்தைகளையெல்லாம் நீ
அவர்களுக்குச் சொல்லவேண்டும்,
அவர்களோ உனக்குச் செவிகொடுக்க
மாட்டார்கள்;
நீ அவர்களைக் கூப்பிடவேண்டும்,
அவர்களோ பதிற்சொல்லமாட்டார்கள்.
28 நீ அவர்களோடு பேசி:
தங்கள் கடவுளாகிய யெகோவாவின்
சொல்லைக் கேளாமலும்
சிட்சையை ஏற்றுக்கொள்ளாமலும் இ
ருக்கிற ஜாதி இது தான்;
உண்மை அழிந்துவிட்டது, அது அவர்
கள் வாயிலிருந்து அற்றுப்போயிற்று
என்று சொல்.
29 நீ உன் தலைமயிரைச்சிரைத்து எறிந்த
விட்டுப் பாழான குன்றுகளிலே புலம்பிக்
கொண்டிரு;
தமது கோபத்துக்கு இலக்கான சந்ததியை
யெகோவா தள்ளிக் கைவிட்டார்.
30 யூதா புத்திரர் என் பார்வையில் தீமை
யானதைச் செய்தார்கள்,
—இது யெகோவாவின் திருவாக்கு—
என் நாமம் வழங்கும் ஆலயத்திலே,
தங்கள் அருவருப்புகளை வைத்து அதைத்
தீட்டுப்படுத்தினார்கள்.
31 தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்தி
களையும் அக்கினியிலே தகனிப்பதற்
கென
அவர்கள் இன்னோம் குமாரரின் பள்ளத்
தாக்கிலே
தோப்பேத் கோவில் மேடைகளைக் கட்டி
னார்கள்;
அதை நான் கட்டளையிடவுமில்லை, அது
என் மனதில் தோன்றவுமில்லை.
32 ஆதலால், இதோ நாட்கள் வரும்,
—இது யெகோவாவின் திருவாக்கு—
அப்பொழுது அது தோப்பேத் என்றும்
இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்கென்
றும் இனி சொல்லப்படுவதில்லை;
சங்காரப் பள்ளத்தாக்கெனப் பெயர்
பெறும்,
தோப்பேத்திலே இடங்கிடையாமற்போ
குமட்டும் சவங்களை அடக்கம் பண்ணு
வார்கள்.
33 இந்த ஜனத்தின் பிணங்கள் ஆகாயத்தின்
பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்
கும் இரையாகும்;
அவைகளை வெருட்டுவாரும் இரார்.
34 நான் யூதா ஊர்களிலும் எருசலேமின்
வீதிகளிலும்
களிப்பின் சத்தத்தையும் மகிழ்ச்சியின்
சத்தத்தையும்,
மணவாளனின் சத்தத்தையும் மணவாட்
டியின் சத்தத்தையும்
ஓயப்பண்ணுவேன், தேசம் பாழாகுமே.

8 அக்காலத்திலே—இது யெகோவாவின்
திருவாக்கு—
யூதா ராஜாக்களின் எலும்புகளையும்
அதின் அதிபதிகளின் எலும்புகளையும்
ஆசாரியரின் எலும்புகளையும் தீர்க்கதரிசி
களின் எலும்புகளையும்
எருசலேம் குடிகளின் எலும்புகளையும்
அவர்கள் பிரேதக்குழிகளிலிருந்து எடுத்
து,
2 அவர்கள் நேசித்ததும் சேவித்ததும் பற்
றிக்கொண்டதும்
நாடினதும் பணிந்துகொண்டதுமா
யிருந்த
சூரியனுக்கும் சந்திரனுக்கும் வானத்தின்
சர்வசேனைக்கும் எதிரே
அவைகளைப் பரப்பிப்போடுவார்கள்;
அவைகள் வாரி அடக்கம்பண்ணப்படா
மல் பூமியின்மேல் எருவாகும்.
3 இந்தத் துஷ்டவம்சத்தில் மீந்து தப்பி
என்னால் எல்லா இடங்களிலும் துரத்தி
விடப்பட்டு மீந்திருக்கிற யாவரும்
ஜீவனைப்பார்க்கிலும் மரணத்தையே வி
ரும்புவார்கள்,
இது சேனைகளுடைய யெகோவாவின்
திருவாக்கு.
4 நீ அவர்களோடு பேசி,
யெகோவா சொல்வதைக் கேளுங்கள்:
விழுந்தவர் எழுந்திருப்பதில்லையோ?
வழிதப்பிப்போனவர் திரும்புவதில்லை
யோ?
5 எருசலேமியராகிய இந்த ஜனமோ என்
றைக்கும் திரும்பாமல் வழிதப்பிப் போ
வதென்ன?
வஞ்சனையைப் பிடித்திருக்கிறார்களே,
திரும்ப மாட்டோம் என்கிறார்களே.
6 நான் கவனித்துக் கேட்டேன், அவர்கள்
யதார்த்தம் பேசவில்லை;
என்ன செய்தேனென்று சொல்லித் தான்
செய்த தீமையை நினைத்து மனஸ்
தாபப்படுகிறவன் எவனுமில்லை,
யுத்தத்துக்குள் பாய்ந்தோடுகிற குதிரை
போல அவனவன் தன் தன் வழியே
ஓடுகிறான்.

7 ஆகாயத்திலுள்ள கொக்குங்கூட தன் வேனையை அறியும்,
காட்டுப்புருவும் தகைவிலாணும் நாரை யும் தாங்கள் வரவேண்டிய காலத்திலே யே வரும்;
என் ஜனமோ யெகோவா நியமித்ததை அறியவில்லே.
8 நாங்கள் ஞானிகள், யெகோவாவின் பிர மாணம் எங்களிடமே இருக்கிறதென நீங்கள் சொல்லுகிறதெப்படி?
மெய்யாகவே, இதோ, வேதபாரகரின் கள்ள எழுத்தாணி அதைக் கள்ளப் போதனையாக்குகிறது.
9 ஞானிகள் வெட்கி கடுகடுங்கிப் பிடிபடு வார்கள்;
இதோ, யெகோவாவின் சொல்லைத் தள் ளிப்போட்டார்கள், அவர்களுக்கு ஞான மேது?
10 ஆகவே அவர்கள் ஸ்திரீகளே அந்நியருக் கும்
அவர்கள் வயல்களே அவைகளே எடுத்துக் கொள்பவருக்கும் கொடுப்பேன்;
அவர்களிலே சிறியோர்முதல் பெரியோர் வரைக்கும் ஒவ்வொருவரும் அநியாய லாபம் தேடுவோர்;
தீர்க்கதரிசிகள் ஆசாரியரிலும்கூட ஒவ் வொருவரும் பொய்யொழுக்கமுடைய வர்.
11 சமாதானமில்லாதிருந்தும், சமாதானம் சமாதானம் என்று சொல்லி,
என் ஜனகுமாரியின் காயங்களைக் குண மாக்குவது எளிதென்பதுபோல் நடக்கி றார்கள்.
12 அவர்கள் அருவருப்பானதைச் செய்ததி னிமித்தம் வெட்கத்துக்குள்ளாவார்கள்;
அவர்களுக்கு வெட்கம் ஞாணம் என்பது இப்போது தெரியாது,
ஆதலால் விழுகிறவர்களோடே விழுவார் கள்;
அவர்கள் விசாரிக்கப்படுங்காலத்தில் இடறுண்டுபோவார்கள்
என்று யெகோவா சொல்லுகிறார்.
13 அவர்களே முற்றிலும் வாரிப்போடுவேன்,
இது யெகோவாவின் திருவாக்கு.
திராட்சச் செடியிலே குலேகள் இராது,
அத்திமரத்திலே பழங்கள் இராது, இலே யும் உதிரும்;
நான் அவர்களுக்கென நியமித்தவர்கள் அவர்கள் தேசத்தின்மேல் வருவார்கள் என்று சொல்.
14 நாம் சும்மாயிருப்பானேன்? கூடிவா ருங்கள்;
நாம் அரணுன பட்டணங்களுக்குள் பு குந்து அங்கேயே அழிவோம்;
நாம் யெகோவாவுக்கு விரோதமாய்ப் பா வஞ்செய்தபடியால்,
நமது கடவுளாகிய யெகோவா நம்மை அழித்து
விஷங்கலந்த தண்ணீரை நமக்குக் குடிக் கக் கொடுக்கிறார்.
15 சமாதானத்துக்குக் காத்திருந்தோம், நன்மை வரவில்லே;
சுகம் கிடைக்கும் காலத்துக்குக் காத்தி ருந்தோம், இதோ திகைப்பு.
16 தானிலிருந்து அவர்கள் குதிரைகள் மூச் செறிவது கேட்கிறது;
அவர்களுடைய பலத்த குதிரைகள் கனைக்கிற சத்தத்தினுல் தேசமெல்லாம் அதிருகிறது;
அவர்கள் வந்து தேசத்தையும் அதில் உள்ள யாவற்றையும்
பட்டணத்தையும் அதின் குடிகளையும் பட்சிப்பார்கள்.
17 இதோ, தடைகட்டப்படாத சர்ப்பங் கோயும் கட்டுவிரியன்களேயும்
உங்களுக்குள் அனுப்புகிறேன்,
அவைகள் உங்களைக் கடிக்கும். இது யெகோவாவின் திருவாக்கு.
18 என் சஞ்சலம் எப்படி ஆறும்!
என் இருதயம் தளர்ந்ததே.
19 இதோ, என் ஜனகுமாரி தூரதேசத்தி லிருந்து அலறும் சத்தம் கேட்கிறது;
சீயோனில் யெகோவா இல்லையோ? அ தில் ராஜா இல்லையோ என்கிறுள்;
பின்னை ஏன் அவர்கள் தங்கள் சுரூபங் களினுலும் அந்நியரின் வீண் விக்கிரகங் களினுலும்
எ ன க் கு க் கோபமூண்டாக்குகிறார்கள் என்கிறார்.
20 அறுப்புக்காலம் சென்றது, கோடைகால மும் முடிந்தது,
நாமோ ரட்சிக்கப்படவில்லே.
21 என் ஜனகுமாரி நொறுங்குண்டதுகண்டு நானும் நொறுங்குண்டேன்,
துக்கமாய்க் கறுப்பானேன், திகைப்பு என்னைப் பிடித்தது.
22 கிலெயாத்திலே பிசின் தைலம் இல்லை யோ?
வைத்தியனும் அங்கே இல்லையோ?
என் ஜனகுமாரியின் காயம் ஆறுமற் போனதென்ன?

9 என் தலே தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானுல் நன்று;

அப்பொழுது என் ஜனகுமாரியில் கொ
லையுண்டோர் நிமித்தம்
நான் இரவும் பகலும் அழுவேன்.
2 வனாந்தரத்திலே இராத்தங்குமிடம்
ஒன்று எனக்கிருந்தால் நன்று;
அப்பொழுது நான் என் ஜனத்தைவிட்டு
அவர்களிடம் இராதபடி போய்விடு
வேன்;
அவர்களெல்லாரும் விபசாரர், துரோகக்
கூட்டத்தார்.
3 பொய்யாகிய அம்பை எய்யத் தங்கள்
நாவாம் வில்லை வளைக்கிறார்கள்;
அவர்கள் இந்தத் தேசத்திலே பலத்தை
வழங்குவது உண்மைக்கென்றல்ல;
தீமையிலிருந்து தீமைக்கே முன் செல்
கின்றார்கள், என்னையோ அறியவில்லை;
இது யெகோவாவின் திருவாக்கு.
4 நீங்கள் அவனவன் தன் தன் அயலா
னுக்குஞ் எச்சரிக்கையாயிருங்கள், எந்தச்
சகோதரனையும் நம்பவேண்டாம்;
எந்தச் சகோதரனும் மோசம்போக்கு
கிறான், எந்த அயலானும் தூற்றித்திரி
கிறான்.
5 ஒவ்வொருவனும் தன் அயலானை வஞ்சிக்
கிறான்; அவர்கள் மெய்பேசுவதில்லை;
பொய்பேசத் தங்கள் நாவைப்பழக்கு
கிறார்கள், அக்கிரமஞ்செய்து இளைத்துப்
போகிறார்கள்.
6 வஞ்சனையின் நடுவிலே குடியிருக்கி
றாய்,
தாங்கள் வஞ்சனையிலிருப்பதால் என்னை
அறிய அவர்களுக்கு மனமில்லை.
இது யெகோவாவின் திருவாக்கு.
7 ஆகையால் சேனைகளின்
யெகோவா சொல்லுகிறார்:
இதோ, நான் அவர்களைப் புடமிட்டுப்
பரிசோதிப்பேன்,
என் ஜனகுமாரிக்கு நான் வேறென்ன
செய்வேன்?
8 அவர்கள் நாவு மரணம் விளைக்கும் அம்பு,
அது வஞ்சனை பேசுகிறது;
ஒருவன் தன் அயலானோடே தன் வாயி
னலே சமாதானமாய்ப் பேசுகிறான்,
தன் உள்ளத்திலுலேயோ அவனுக்குப்
பதிவிடை வைக்கிறான்.
9 இவைகளினிமித்தம் அவர்களைத் தண்
டியாதிருப்பேனோ?
—இது யெகோவாவின் திருவாக்கு—
இப்படிப்பட்ட ஜாதியின்மேல் பழி
வாங்காதிருப்பேனோ?
10 மலைகள் நிமித்தம் ஒப்பாரியிட்டு அழு
வேன்,
வனாந்தர மேய்ச்சல் காடுகளினிமித்தம்
புலம்புவேன்;
அவைகள் பாழ்பட்டுக் கிடக்கின்றன,
ஒருவனும் அவைகளைக் கடந்துபோவ
தில்லை,
ஆடுமாடுகளின் சத்தம் கேட்பதில்லை,
ஆகாயப்பறவைகளும் மிருகங்களும் எல்
லாம் ஓடிப்போயின.
11 நான் எருசலேமை மண்மேடுகளும் நரி
வசிக்குமிடமுமாக்குவேன்;
யூதா பட்டணங்களைப் பாழாக்குவேன்,
எவனும் குடியிரான்.
12 இதை உணரும் விவேகி யார்?
யெகோவாவின் வாய் தன்னிடம் சொல்ல
அதைக்கேட்டு அறிவிப்பவன் யார்?
எவனும் கடந்துபோகாதபடி தேசம்
அழிந்து பாழானதேன்?
13 நான் அவர்களுக்கு விதித்த என் நியாயப்
பிரமாணத்தை அவர்கள் விட்டு விட்
டார்கள்,
என் சொல்லைக் கேட்கவில்லை, அதின்
படி நடக்கவில்லை;
14 தங்கள் இருதயக்கடினத்தின்படியே
நடந்து,
தங்கள் பிதாக்கள் தங்களுக்குக் கற்றுக்
கொடுத்தபடியே பாகால்களின் பின்னே
சென்றார்களே
என்று யெகோவா சொல்லுகிறார்.
15 ஆதலால், இஸ்ரவேலின் கடவுளாகிய
சேனைகளின் யெகோவா இப்படிச்
சொல்லுகிறார்:
இதோ, நான் இந்த ஜனத்துக்குப் புசிக்க
எட்டியையும்
குடிக்க விஷங்கலந்த தண்ணீரையும்
கொடுப்பேன்;
16 அவர்களும் அவர்கள் பிதாக்களும் அறி
யாத புறஜாதியாருக்குள்ளே அவர்களைச்
சிதறடிப்பேன்,
அவர்களை நிர்மூலமாக்குமட்டும் பட்ட
யத்தை அவர்களுக்குப் பின்னுக அனுப்பு
வேன்.
17 நீங்களே யோசனைசெய்யுங்கள், புலம்
புகிற பெண்களை வரவழையுங்கள்,
அதிலே பழகின ஸ்திரீகளைக் கூப்பிடுங்கள்
என்று சேனைகளின் யெகோவா சொல்லு
கிறார்.
18 அவர்கள் விரைந்து வந்து ஒப்பாரி
சொல்லட்டும்,
நமது கண்கள் கண்ணீராய்ச் சொரியும்,
நமது இமைகள் தண்ணீராய் ஓடும்.
19 எத்தனையாய்ப் பாழாக்கப்பட்டோம்!
மிகுந்த வெட்கத்துக்குள்ளானோம்,

நாங்கள் தேசத்தை விட்டகன்றோமே,
எங்கள் வாசஸ்தலங்களே அவர்கள்
கவிழ்த்துப்போட்டார்களே
என்று சீயோனிலிருந்து ஒப்பாரி சத்தம்
கேட்கிறது.
20 ஆமாம், ஸ்திரீகளே, யெகோவாவின்
வார்த்தையைக் கேளுங்கள்;
உங்கள் செவி அவருடைய வாயின்
வார்த்தையைக் கவனித்துக்கொள்ளட்
டும்,
நீங்கள் உங்கள் குமாரத்திகளுக்கு ஒப்
பாரியையும்
அவளவள் தன்தன் அயலாளுக்குப்
புலம்பலையும் கற்றுக்கொடுங்கள்.
21 மரணம் நமது பலகணிவழியே வந்தது,
நமது அரமனைகளில் பிரவேசித்தது;
ஊர் வெளிகளிலே குழந்தைகளையும்
வீதிகளிலே வாலிபரையும் சங்காரம் பண்
ணும்.
22 இதைச்சொல்: மனிதர் சவங்கள் வயல்
வெளியின்மேல் எருவைப்போலவும்
அறுக்கிறவனுக்குப் பின்னாலே ஒருவ
னும் வாரிக்கொள்ளாதிருக்கிற அரியைப்
போலவும் கிடக்கும்
இது யெகோவாவின் திருவாக்கு.
23 யெகோவா சொல்வதைக் கேளுங்கள்:
ஞானி தன் ஞானத்தைப்பற்றிப் பெருமை
பாராட்டவேண்டாம்;
பராக்கிரமவீரன் தன் பராக்கிரமத்தைப்
பற்றிப் பெருமை பாராட்டவேண்டாம்;
செல்வன் தன் செல்வத்தைப்பற்றிப்
பெருமை பாராட்டவேண்டாம்.
24 பெருமைபாராட்டுகிறவன்,
யெகோவாவாகிய நான் பூமியிலே கிரு
பையையும் நியாயத்தையும் நீதியையும்
செய்கிறேன்
என்று என்னை அறிந்துகொள்ளும் புத்தி
தனக்கு இருக்கிறதைப்பற்றியே பெருமை
பாராட்டவேண்டும்.
இவைகளே எனக்குப் பிரியம், இது
யெகோவாவின் திருவாக்கு.
25 இதோ நாட்கள் வரும்;—இது யெகோ
வாவின் திருவாக்கு—
அப்பொழுது விருத்தசேதனமில்லாமை
யில் நடக்கும் விருத்தசேதனமுள்ள
யாவரையும் தண்டிப்பேன்;
26 எகிப்தையும் யூதாவையும், ஏதோமையும்
அம்மோன்புத்திரரையும் மோவாபையும்
சுற்றி ஒதுக்கிய தலைமயிருள்ள வனாந்த
வாசிகள் யாவரையும் தண்டிப்பேன்;
புறஜாதியார் அனைவரும் விருத்தசேதன
மில்லாதவர்கள்;
இஸ்ரவேல் வீட்டார் அனைவரும் இரு
தயத்திலே விருத்தசேதனமில்லாதவர்கள்.

10 இஸ்ரவேல் வீட்டாரே, யெகோவா உங்
களுக்குச் சொல்லுகிற வார்த்தையைக்
கேளுங்கள்:
2 புறஜாதியார் ஒழுக்கத்தைக் கற்றுக்
கொள்ளாதிருங்கள்,
வானத்தின் அடையாளங்களுக்குப்
பயந்து புறஜாதியார் திகைக்கிறபடியி
னாலே
நீங்களும் அப்படித் திகைக்கவேண்டாம்.
3 புறதேசத்தாரின் வழிபாடுகள் வீணான
வைகள்;
அவர்கள் காட்டிலே மரத்தை வெட்டு
கிறார்கள்,
தச்சன்கை வாச்சியால் பணிசெய்கிறார்
கள்.
4 வெள்ளியினாலும் பொன்னினாலும் அதை
அலங்கரித்து,
அது அசையாதபடி அதை ஆணிகளா
லும் சுத்திகளாலும் ஸ்திரமாக்குகிறார்கள்.
5 அவைகள் வெள்ளரித் தோட்டத்தில்
வைத்திருக்கும் மிரட்டு பொம்மைபோ
லிருக்கும்;
அவைகள் பேசமுடியாதவைகள்,
அவைகளைச் சுமப்பதே அவசியம், அவை
கள் நடக்கமாட்டாதவைகள்,
அவைகளுக்குப் பயப்படவேண்டாம்;
தீமைசெய்யவும் நன்மை செய்யவும்
அவைகளுக்குச் சக்தி இல்லை
என்று யெகோவா சொல்லுகிறார்.
6 யெகோவாவே, உமக்கு நிகரானவன்
இல்லை;
நீரே பெரியவர், உமது நாமமே வல்ல
மையில் பெரியது.
7 ஜாதியாரின் ராஜாவே, உமக்குப் பயப்
படாதிருப்பவன் யார்?
பயபக்திக்குரியவர் நீரே.
புறஜாதியாரின் சகல ஞானிகளிலும்
அவர்களுடைய சகல ராஜ்யங்களிலும்
உமக்கு நிகரானவன் இல்லை.
8 அவர்கள் யாவரும் மிருக குணமுள்ள
மூடர்;
வீண்விக்கிரக போதனையே! மரக்
கட்டை!
9 வெள்ளித்தகடுகளிலிருந்தும் பொன் ஊசி
யிருந்தும் கொண்டுவரப்படுகின்றன;
தொழிலாளரும் தட்டாரும் கைகளால்
அவற்றைச் செய்கிறார்கள்;
இளநீலமும் இரத்தாம்பரமும் அவை
களின் உடை;

அவையெல்லாம் தேறினவர்களின் கை வேலையே.

10 யெகோவா மெய்யான தெய்வம்,
அவர் ஜீவனுள்ள தெய்வம், நித்தியராஜா;
அவர் கோபத்தினால் பூமி நடுங்கும்;
அவர் உக்கிரத்தைப் புறஜாதியார் சகிக்க முடியாது.

11 வானத்தையும் பூமியையும் படைக்காத தேவர்கள்
பூமியிலும் இந்தவானத்தின் கீழும் இராதபடி அழிந்துபோவார்கள்
என்பதை அவர்களுக்குச் சொல்லுங்கள்.

12 அவரே பூமியைத் தமது வல்லமையினாலும்
பூச்சக்கரத்தைத் தமது ஞானத்தினாலும் படைத்தார்,
வானத்தைத் தமது பேரறிவினால் விரித்தார்.

13 அவர் சத்தமிடவே ஆகாயத்தில் தண்ணீர் இரைச்சல் கேட்கிறது;
அவர் பூமியின் கடையாந்தரத்திலிருந்து மேகங்களை எழும்பப்பண்ணுகிறார்.
மழையோடே மின்னல்களை வரச்செய்து,
காற்றைத் தமது பண்டசாலைகளிலிருந்து புறப்படப் பண்ணுகிறார்.

14 மனுஷர் அனைவரும் அறிவிலா மிருககுணமுள்ளவர்கள்,
தட்டார் அனைவரும் வார்ப்பு விக்கிரகங்களினிமித்தம் வெட்கிப்போகிறார்கள்,
அவர்கள் வார்ப்பிக்கிறவைகள் பொய்யே,
அவைகளில் ஆவி இல்லை.

15 அவை வெறுங்காற்றே, மகா ஏமாற்றமான செய்கையே;
அவைகளின் தண்டனை காலிலே அவை அழியும்.

16 யாக்கோபின் பங்காயிருப்பவர் அவைகளைப்போன்றவர் அல்ல,
அவர் யாவற்றையும் உருவாக்கினவர்,
இஸ்ரவேல் அவருடைய சுதந்தரக்கோத்திரம்;
சேனைகளின் யெகோவா என்பது அவருடைய திருநாமம்.

17 முற்றுகையிடப்பட்டவளே,
உன் சாமான்களைச் சேர்த்துக்கொண்டு தேசத்தைவிட்டுப்போ.

18 யெகோவா சொல்வதைக் கேள்:
இதோ, நான் இந்தமுறை தேசத்தின் குடிகளைக் கவண்கொண்டெறிவேன்,
அவர்கள் உணரும்படி அவர்களுக்கு நெருக்கமுண்டாக்குவேன்.

19 ஐயோ! நான் நொறுங்கிப்போனேன்,
என் காயம் கொடிதாயிற்று;
எனினும் இது நான் சகிக்கவேண்டிய நோயே என்று நான் சொல்லுவேன்.

20 என் கூடாரம் அழிந்துபோயிற்று,
கயிறுகளெல்லாம் அறுந்தன;
என் பிள்ளைகள் என்னை விட்டுப் போய்விட்டார்கள், அவர்களில் ஒருவனுமில்லை;
இனி என் கூடாரத்தை விரித்து, என் திரைகளைத் தூக்கிக் கட்டுவாரில்லை.

21 மேய்ப்பவர்கள் மிருககுணமுள்ளவர்களாகி, யெகோவாவை நாடி விசாரியாமற்போனார்கள்;
ஆகையால் அவர்கள் செழிப்பெறவில்லை,
அவர்கள் மந்தையெல்லாம் சிதறிப்போகிறது.

22 கேளுங்கள் ஒரு செய்தி வருகிறது,
இதோ, வடதேசத்திலிருந்து ஒரு அமளி சத்தம் கேட்கிறது,
யூதாவின் ஊர்கள் பாழும் நரிகள் வசிக்கும் இடமுமாக்கப்படும் என்கிறது.

23 யெகோவாவே, மனுஷனுடைய வழி அவன் வசத்தில் இல்லை யென்றும்
தன் நடையை நடத்துவது நடக்கிறவன் வசத்தில் இல்லையென்றும் அறிவேன்.

24 யெகோவாவே, என்னைச் சிட்சியும்; எனினும் உமது கோபத்திலேயல்ல மட்டாய்ச் சிட்சியும்;
என்னை முற்றிலும் அழித்துவிடாதேயும்.

25 உம்மை அறியாத புறஜாதியாரின்மேலும்
உமது திருநாமத்தைத் தொழுதுகொள்ளாத வம்சங்களின்மேலும்
உம்முடைய உக்கிரத்தை ஊற்றிவிடும்;
அவர்கள் யாக்கோபைப் பட்சித்தார்கள்,
அவனைப் பட்சித்து நிர்மூலமாக்கினார்கள், அவன் குடியிருப்பைப் பாழாக்கினார்களே.

**11** யெகோவாவினிடமிருந்து எரேமியாவுக்கு வந்த வார்த்தை:

2 நீங்கள் இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளைக் கேளுங்கள்,
யூதா மனுஷருக்கும் எருசலேம் குடிகளுக்கும் சொல்லுங்கள்.

3 அவர்களுக்கு நீ சொல்லவேண்டியது இதுவே:
இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா சொல்வதைக் கேளுங்கள்,
இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளைக் கேளாத மனுஷன் சாபத்திற்குரியவன்.

4 நான் உங்கள் பிதாக்களை இருப்புக்காள வாயாகிய

எகிப்து தேசத்திலிருந்து வரச்செய்த நாளிலே அவர்களுக்கு இந்த உடன்படிக்கையைக் கட்டளையிட்டு,
நான் சொல்வதை நீங்கள் கேட்டு நான் உங்களுக்குக் கட்டளையிட்டபடியே எல்லாக்காரியங்களையும் செய்யுங்கள்;
அப்பொழுது நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் கடவுளாயிருப்பேன்.
5 பாலும் தேனும் ஓடுகிற தேசத்தை உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று நான் அவர்களுக்கு இட்ட ஆணையை நான் உறுதிப்படுத்துவேன் என்றேன்,
இப்பொழுதும் அது அப்படியே ஆயிற்று என்று சொன்னார்.
அதற்கு நான், ஆமேன் யெகோவாவே என்றேன்.
6 அப்பொழுது யெகோவா என்னிடம்:
நீ யூதாவின் ஊர்களிலும் எருசலேமின் தெருக்களிலும்
இந்த வார்த்தைகளையெல்லாம் கூறி அறிவித்து:
இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளை நீங்கள் கேட்டு அவைகளின்படியே செய்யுங்கள்.
7 நான் உங்கள் பிதாக்களைத் திட்டமாய் எச்சரித்தேன்,
அவர்களை நான் எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின நாள் முதல் இந்நாள் மட்டும்
திரும்பத் திரும்ப எச்சரித்து,
நான் சொல்வதைக் கேளுங்கள் என்றேன்.
8 அவர்களோ கேட்கவுமில்லை, செவிகொடுக்கவுமில்லை;
அவரவர் தம்தம் தீய இருதயத்தின் கடினத்திலே நடந்தார்கள்;
ஆகையால் இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளையெல்லாம் அவர்கள்மேல் வரப்பண்ணினேன்;
அவற்றைச் செய்யும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டிருந்தேன்,
அவர்களோ செய்யாமற்போனார்களே என்று சொன்னார்.
9 பின்னும் யெகோவா என்னோடே பேசி:
யூதா மனுஷருக்குள்ளும் எருசலேமின் குடிகளுக்குள்ளும்
ஒரு கட்டுப்பாடு இருக்கிறதென எனக்குத் தெரிகிறது.
என் வார்த்தைகளைக் கேட்க மறுத்து, 10
அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி அவைகளின் பின்னேசென்ற
தங்கள் முற்பிதாக்களின் அக்கிரமங்களுக்குத் திரும்பிவிட்டார்கள்;
நான் அவர்கள் பிதாக்களோடே பண்ணின உடன்படிக்கையை
இஸ்ரவேல் வீட்டாரும் யூதா வீட்டாரும் மீறிப்போட்டார்கள்.
ஆகவே யெகோவா இப்படிச் சொல்லுகிறார்: 11
இதோ, அவர்கள் தப்பமுடியாத தீங்கை அவர்கள்மேல் வரப்பண்ணுவேன்;
அப்பொழுது என்னை நோக்கி அபயமிடுவார்கள்,
நானோ அவர்களுக்குச் செவிகொடேன்.
அப்பொழுது யூதா ஊர்களின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் சென்று, 12
தாங்கள் தூபங்காட்டிவந்த தேவர்களை நோக்கி அபயமிடுவார்கள்;
அந்தத் தேவர்களோ அவர்களுடைய ஆபத்துக்காலத்தில் அவர்களை ரட்சிப்பதேயில்லை.
யூதாவே, உன் ஊர்கள் எத்தனையோ, 13
உன் தேவர்களும் அத்தனையாம்,
எருசலேம் வீதிகள் எத்தனையோ,
நீங்கள் பாகாலுக்குத் தூபங்காட்டும்படி
இந்த இலச்சையானதற்கு ஸ்தாபித்த பீடங்களும் அத்தனையாம்.
ஆதலால் நீ இந்த ஜனத்துக்காகப் 14
பிரார்த்தனை செய்யவேண்டாம்,
அவர்களுக்காக மன்றாடவும் பிரார்த்திக்கவும் வேண்டாம்,
அவர்கள் தங்கள் ஆபத்தினிமித்தம்
என்னை நோக்கிக் கூப்பிடுங்காலத்திலே
நான் அவர்களுக்குச் செவிகொடுப்பதில்லை.
என் பிரியை என் வீட்டினுள் வருவ 15
தென்ன?
தனது துர்யோசனைப்படியே நடக்கிறாளே;
பொருத்தனையும் பரிசுத்தபலிமாமிசமும்
குற்றத்தை உன்னைவிட்டு நீங்கச் செய்யுமோ?
நீ தீமை செய்யும்போது களிக்கிறாயே.
யெகோவா உனக்கு இட்டபேர் நற்கனி 16
அலங்கரிக்கும் பச்சை ஒலிவ மரம் என்பது,
எனினும் பேரிரைச்சலிடும் தொனியாய்
அதைச்சுற்றி நெருப்பைக் கொளுத்தினார்;
அதின் கிளைகள் கெட்டுப்போயின.

17 உன்னை நாட்டின சேனைகளின் யெகோ
வா உன்மேல் தீங்கை வரச்செய்வேன்
என்றார்;
இஸ்ரவேல் வீட்டாரும் யூதா வீட்டா
ரும் தீமைசெய்துகொண்டு,
பாகாலுக்குத் தூபங்காட்டி எனக்குக்
கோப மூட்டினபடியால்
அப்படிச் செய்வேன் என்று சொன்னார்.
18 யெகோவா எனக்கு அதை அறிவிக்க
வே நான் அறிந்துகொண்டேன்;
அவர்கள் செய்கைகளை எனக்குத் தெரி
யக்காட்டினீர்.
19 அடிக்கக் கொண்டுபோகும் சாதுவான
ஆட்டுக்குட்டியைப்போல நான் இருந்
தேன்;
அவர்கள் எனக்கு விரோதமாய் யோ
சனைசெய்து,
மரத்தை அதின் கனிகளோடுங்கூட
அழித்துப்போடுவோமென்றும்
அவன் ஜீவனுள்ளோரின் தேசத்திலிராம
லும்
அவன்பேர் இனி நினைக்கப்படாமலும்
போக அவனைச் சங்கரிப்போமென்றும்
பேசிக்கொண்டது எனக்குத் தெரியாது.
20 சேனைகளின் யெகோவா, நீதியுள்ள நியா
யாதிபதி,
நினைவுகளையும் இருதயத்தையும் ஆராய்ந்
தறிகிறவர்,
நீர் அவர்களிடம் பழிவாங்குவதைப்
பார்ப்பேன்;
என் வழக்கை உமக்கு முழுவதுமாய்
வெளியிட்டேன்.
21 ஆதலால், யெகோவா எனக்கு இப்படிச்
சொன்னார்,
யெகோவாவின் நாமத்தில் நீர்க்கதரிச
னம் சொல்லவேண்டாம்,
சொன்னால் எங்கள் கையினாலே சாவாய்
என்று சொல்லி
உன் பிராணனை வாங்கத்தேடுகிற ஆன
தோத்தின் மனுஷரைப்பற்றிய
எனது தீர்மானம் இதுவே:
22 இதோ, அவர்களைத் தண்டிப்பேன்,
வாலிபர் பட்டயத்தாலே சாவார்கள்;
அவர்கள் குமாரரும் அவர்கள் குமாரத்தி
களும் பஞ்சத்தாலே சாவார்கள்,
23 அவர்களில் தப்பிமீந்தவர் இல்லை;
நான் ஆனதோத்தின் மனுஷரைத் தண்
டிக்கும் வருஷத்திலே
அவர்கள்மேல் தீங்கைவரப்பண்ணுவேன்
என்று சேனைகளின் யெகோவா சொல்லு
கிறார்.

12 யெகோவாவே, உம்மோடே நான்
வழக்காடப்போனால், தேவரீரே நீதியுள்
ளவர்;
அப்படியிருந்தும் நியாயமானவைகளைப்
பற்றி உம்மோடே நான் பேசுவேன்,
தெய்வபயமற்றோரின் வழி தித்தியாவ
தேன்?
துரோகஞ்செய்துகொண்டே வருகிற
அனைவரும் சுகித்திருப்பதேன்?
2 நீர் அவர்களை நாட்டினீர், வேருன்றி
வளர்ந்துவிட்டார்கள், கனியும் கொடுக்
கிறார்கள்;
நீர் அவர்கள் வாய்க்குச் சமீபம், அவர்
கள் நினைவுகளுக்கோ தூரம்;
3 யெகோவாவே, நீர் என்னை அறிந்திருக்
கிறீர், என்னைக் காண்கிறீர்;
என் இருதயம் உமது விஷயமாய் எப்
படியிருக்கிறதென ஆராய்ந்து அறிகிறீர்;
அடிக்கும் ஆடுகளைப்போல அவர்களைப்
பறித்துப்போய்க்
கொலைநாளுக்கென அவர்களைப் பிரதிஷ்
டை செய்யும்.
4 எத்தமட்டும் தேசம் புலம்பி, வயல்புல்
லனைத்தும் வாடவேண்டும்,
தேசத்தில் குடியிருப்போரின் தீமையி
னிமித்தம் மிருகங்களும் பறவைகளும்
அழிந்தனவே.
எங்கள் முடிவை அவன் காண்பதில்லை
யென்கிறார்கள்.
5 நீ கால் நடையாய்ச் செல்வாரோடு ஓடும்
போதே இளைத்துப்போவாயானால்
குதிரைகளோடே ஓட எப்படி முந்து
வாய்?
சமாதானமுள்ள தேசத்திலே நீ பயமிலா
திருக்கலாம்,
யோர்தான் கரையிலுள்ள அடர்த்தியான
காடுகளில் நீ என்ன செய்வாய்?
6 உன் சகோதரரும் உன் தகப்பன் வீட்டா
ரும் உனக்குத் துரோகம் பண்ணி,
அவர்களுங்கூட உனக்குப் பின்னே சத்த
மிட்டுக் கூச்சலிட்டார்கள்,
அவர்கள் உன்னோடே இனிய வார்த்தை
களைப் பேசினாலும் அவர்களை நம்பவேண்
டாம்.
7 நான் என் வீட்டை விட்டுவிட்டேன்,
என் சுதந்தரத்தைத் தள்ளிவிட்டேன்,
என் பிராணப்பிரியையை அவள் சத்
துருவின் கையிலே ஒப்புக்கொடுத்தேன்.
8 என் சுதந்தரம் எனக்குக் காட்டுச் சிங்க
மாயிற்று;
அது எனக்கு விரோதமாய்க் கெர்ச்சித்
திறது, அதைப் பகைக்கிறேன்.

9 என் சுதந்தரம் பட்சிக்கும் பலவர்ணப்
பறவையாயிற்றே?
பட்சிக்கும் பறவைகள் அதைச்சுற்றிக்
கூடுகின்றன.
காட்டிலுள்ள சகலமிருகங்களே, கூடி
வாருங்கள், பட்சிக்கக் கிட்டுங்கள்.
10 மேய்ப்பவர் பலர் என் திராட்சத்தோட்
டத்தை அழித்து, என் பங்கைமிதித்து
எனதினிய பங்கைப்பாழ்வன மாக்கினார்
கள்.
11 அதைப் பாழாக்கி விட்டார்கள், அது
பாழாய்க்கிடந்து எனக்கெதிரே புலம்பு
கிறது;
தேசமெல்லாம் பாழாயிற்று, ஒருவனும்
அதை மனதிலே வைக்கிறதில்லை.
12 அழிப்பவர் வனாந்தரப் பாழ்நின்றுகள்
மேலெல்லாம் வருகிறார்கள்.
யெகோவாவுக்கு ஒரு பட்டயமுண்டு,
அது தேசத்தின் ஒரு முனைதொடங்கி
மறுமுனைமட்டும் பட்சிக்கிறது,
மாம்சமான ஒன்றும் தப்புவதில்லை.
13 கோதுமை விதைத்தார்கள், முள்ளுகளே
அறுத்தார்கள்;
உழைத்தார்கள், பயன்பெறவில்லை;
யெகோவாவின் உக்கிரகோபத்தினால் தங்
களுக்கு வந்த பலனைப்பற்றி வெட்கத்
துக்குள்ளானார்கள்.
14 யெகோவா இப்படிச் சொல்லுகிறார்:
இதோ, நான் என் ஜனமாகிய இஸ்ரவே
லுக்குச் சொந்தமாகக்கொடுத்த
என் சுதந்தரத்தைத் தொடுகிற என்னு
டைய துஷ்ட அயலார் அனைவரையும்
அவர்கள் தேசத்திலிருந்து பிடுங்கிப்
போடுவேன், யூதா வீட்டாரையும் அவர்
கள் நடுவிலிருந்து பிடுங்கிப்போடுவேன்.
15 அவர்களை நான் பிடுங்கிப்போட்டபின்
நான் திரும்பவும் அவர்கள்மேல்
இரங்கி,
அவர்களைத் தங்கள் தங்கள் சுதந்தரத்
துக்கும் தங்கள் தங்கள் தேசத்துக்கும்
திரும்பப் பண்ணுவேன்.
16 அவர்கள் என் ஜனத்தின் வழிகளைக் கற்
றுக்கொண்டு,
பாகாலின்மேல் ஆணையிட அவர்கள்
என் ஜனத்துக்குக் கற்றுக்கொடுத்தது
போல,
யெகோவாவின் ஜீவன்மேல் என்று
சொல்லி என் நாமத்தினால் ஆணையிடு
வார்களேயானால்,
அவர்கள் என் ஜனத்தின் நடுவிலே நிலை
யாய்க் கட்டப்பட்டிருப்பார்கள்.
17 எந்த ஜாதி கேளாதிருக்குமோ
அதை நான் முற்றிலுமாய்ப் பிடுங்கி
அழித்துவிடுவேன்,
இது யெகோவாவின் திருவாக்கு.

13 யெகோவா என்னோடு பேசி,
2 நீ போய் உனக்கு ஒரு சணல் கச்சை
யை வாங்கி,
அதை உன் அரையிலே கட்டிக்
கொள்;
அதைத் தண்ணீரிலே படவொட்டாதே
என்றார்.
3 நான் யெகோவாவின் வார்த்தைப்படியே
ஒரு கச்சையை வாங்கி
அதை என் அரையிலே கட்டிக்கொண்
டேன்.
4 இரண்டாம்விசை யெகோவாவின் வார்த்
தை எனக்கு வந்தது;
5 நீ வாங்கி உன் அரையிலே கட்டியிருக்
கிற கச்சையை எடுத்துக்கொண்டு
எழுந்து,
ஐப்பிராத்து நதிக்குப்போய் அங்கே ஒரு
கன்மலை வெடிப்பிலே அதை ஒளித்து
வை என்றார்.
6 நான் போய் யெகோவா எனக்குக் கட்
டளையிட்டபடியே
அதை ஐப்பிராத்து நதியண்டையில்
ஒளித்துவைத்தேன்.
7 அநேகநாள் சென்றபின்பு யெகோவா
என்னைக் கூப்பிட்டு:
நீ எழுந்து ஐப்பிராத்து நதிக்குப்போய்
அங்கே ஒளித்துவைக்க நான் உனக்குக்
கட்டளையிட்ட கச்சையை
அவ்விடத்திலிருந்து எடுத்துக்கொண்டு
வா என்றார்.
நான் ஐப்பிராத்து நதிக்குப்போய், கச்
சையை ஒளித்துவைத்த இடத்திலே
தோண்டி அதை எடுத்தேன்;
இதோ, அந்தக் கச்சை கெட்டு ஒன்
றுக்கும் உதவாமற்போயிற்று.
8 அப்பொழுது யெகோவாவின் வார்த்தை
எனக்கு வந்தது.
9 யெகோவா இப்படிச் சொல்லுகிறார்:
இவ்விதமாகவே நான் யூதாவின் பெரு
மையையும்
எருசலேமின் மிகுந்த பெருமையையும்
கெட்டுப்போகப்பண்ணுவேன்.
10 என் வார்த்தைகளைக் கேட்கமாட்டோம்
என்று மறுத்துத்
தங்கள் இருதயத்தின் கடினத்திலே
நடந்து,
அந்நிய தேவர்களைச் சேவிக்கவும்
தொழுது கொள்ளவும்

அவைகளின் பின்னே செல்லுகிற இந்த
ப் பொல்லாத ஜனம்
ஒன்றுக்கும் உதவாமற்போன இந்தக்
கச்சையைப்போலாகும்.
11 கச்சை மனுஷன் அரையில் ஒட்டிச்
சேர்ந்திருப்பதுபோல,
இஸ்ரவேல் வீட்டார் அனைவரும் யூதா
வீட்டார் அனைவரும்
என்னோடு ஒட்டிச் சேர்ந்திருக்கும்படி
செய்தேன்;
இது யெகோவாவின் திருவாக்கு.
அவர்கள் எனக்கு ஒரு ஜனமாகவும்
பேரும் துதியும் சிறப்புமாகவும் இருக்க
வேண்டுமென்றிருந்தேன்,
அவர்களோ கேளாதே போயினர்.
12 ஆதலால் நீ அவர்களோடு பேசி:
சகல ஜாடிகளிலும் திராட்சரசம் நிரப்பப்
படுமென்று
இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா
உரைக்கிறார் எனச்சொல்,
அவர்களோ, சகல ஜாடிகளிலும் திராட்ச
ரசம் நிரப்பப்படுவது எங்களுக்குத் தெரி
யாதா
என்று உன்னுடனே சொல்லுவார்கள்.
13 அப்பொழுது நீ அவர்களிடம்:
யெகோவா சொல்வதைக் கேளுங்கள்,
இதோ, இந்தத் தேசத்தின் குடிகளெல்
லாரையும்
தாவீதின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்
கிற ராஜாக்களையும்
ஆசாரியர்களையும் தீர்க்கதரிசிகளையும்
எருசலேமின் குடிகள் எல்லாரை
யும்
நான் வெறிகொள்ள நிரப்பி,
14 ஒருவரோடொருவர், பிதாக்களும் பிள்ளை
களும்கூட,
மோதி நொறுங்கும்படி செய்வேன்,
—இது யெகோவாவின் திருவாக்கு—
நான் மன்னிப்பதுமில்லை, தப்பவிடுவது
மில்லை,
அவர்களுக்கு இரங்குவதுமில்லை, அவர்
களை அழித்தே விடுவேன்
என்கிறார் என்று சொல் என்றார்.
15 விளம்பினவர் யெகோவா,
ஆகவே பெருமையின்றிச் செவிகொடுத்
துக் கேளுங்கள்.
16 அவர் அந்தகாரத்தை வரப்பண்ணுவ
தற்கு முன்னும்,
இருண்ட மலைகளிலே உங்கள் கால்கள்
இடறுவதற்கு முன்னும்,
உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்கு
மகிமையைச் செலுத்துங்கள்;
நீங்கள் வெளிச்சத்துக்குக் காத்திருக்கை
யில்
அவர் அதை அந்தகாரமாக்கிக் காரிரு
ளாக மாற்றுவார்.
17 நீங்கள் இதைக் கேளாமற் போவீர்களா
னால்,
என் ஆத்துமா மறைவிடங்களில் உங்
கள் பெருமையினிமித்தம் துக்கிக்கும்,
யெகோவாவின் மந்தை சிறைப்பட்டுப்
போனதென்று என் கண் மிகவும் அழுது
கண்ணீர்சொரியும்.
18 நீங்கள் ராஜாவினிடமும் ராஜமாதாவி
னிடமும் சென்று,
தாழவந்து உட்காருங்கள்,
உங்கள் சிரசை மகிமைக்கேதுவாய் அலங்
காரிக்கும் கிரீடம் விழுந்தது
என்று சொல்லுங்கள்.
19 தென்னாட்டு ஊர்கள் அடைபட்டன,
அவற்றைத் திறப்பார் இல்லை;
யூதா அனைத்தும் சிறைப்பட்டது, முழுது
மாய்ச் சிறைப்பட்டுப்போயிற்று.
20 உங்கள் கண்களை நிமிர்த்து வடதிசையி
லிருந்து வருகிறவர்களைப் பாருங்கள்;
உனக்குக் கொடுக்கப்பட்டிருந்த மந்தை,
உனக்கு மகிமையாயிருந்த மந்தை எங்
கே?
21 உனது பிரியராக உன்னிடம் வரும்படி
நீ பழக்கினவர்களை
அவர் உன்மேல் அதிகாரிகளாக நியமிக்
கும்போது நீ என்ன சொல்லுவாய்?
பிரசவவேளையில் கர்ப்பவதிக்கு உண்டா
வதுபோன்ற
வேதனைகள் உன்னைப் பிடிக்காதோ?
22 நீ உன் இதயத்தில் சிந்தித்து, இவை ஏன்
எனக்கு நேரிட்டது என்பாயோ?
உன் மிகுதியான அக்கிரமத்தினிமித்தமே
உன் வஸ்திரத்து ஓரங்கள் விலக்கப்பட்
டன,
உன் பாதங்கள் அவமானப்படுத்தப்படு
கின்றன.
23 எத்தியோப்பியன் தன் தோலையும்,
சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றுமோ?
மாற்றினால் தீமைசெய்யப்பழகின நீங்
களும் நன்மை செய்வீர்கள்.
24 ஆகவே வனாந்தரக் காற்றால் பறக்கடிக்
கப்படும் தூரும்பைப்போல
நான் அவர்களைச் சிதறடிப்பேன்.
25 நீ என்னை மறந்து பொய்யானவற்றில்
நம்பிக்கை வைத்தபடியினால்
—இது யெகோவாவின் திருவாக்கு—
இதுவே உன் வீதமும் என்னால் உனக்கு
அளக்கப்படும் உன் பங்குமாகும்.

26 உன் மானம் காணப்பட நான் வஸ்தி
ரத்து ஓரங்களை
எடுத்து உன் முகத்தில் போடுவேன்.
27 உன் விபசாரங்கள், உன் கனைப்புகள்,
காட்டிலே மேடுகளின்மேல் நீ செய்த
வேசித்தன தோஷங்களாகிய அருவருப்பு
களை நான் கண்டேன்;
எருசலேமே, ஐயோ உனக்குக்கேடாம்!
நீ சுத்திகரிக்கப்படமாட்டாயா!
இன்னும் எத்தனை காலம் செல்லும்!

**14** மழைத்தாழ்ச்சியைப்பற்றி எரேமியா
வுக்கு வந்த யெகோவாவின் வார்த்தை:
2 யூதா துக்கிக்கிறது, அதின் வாசல்கள்
சோர்ந்துகிடக்கின்றன,
கரிய உடைதரித்துத் தரையில் உட்
கார்ந்தார்கள்,
எருசலேமின் கூக்குரல் எழும்புகிறது.
3 அவர்களில் பெரியோர் தங்கள் வேலை
யாட்களைத் தண்ணீருக்கு அனுப்புகிறார்
கள்;
இவர்கள் தரவுகளுக்குப்போய் தரைக்
காணுமல் வெறும் பாத்திரங்களோடே
திரும்பிவருகிறார்கள்;
வெட்கி நாணித் தங்கள் தலையை மூடிக்
கொள்ளுகிறார்கள்.
4 தேசத்தின்மேல் மழை இல்லாததினால்
தரை வெடித்திருப்பது கண்டு
பயிர்செய்கிறவர்கள் வெட்கித் தங்கள்
தலையை மூடிக்கொள்ளுகிறார்கள்.
5 காட்டிலே குட்டி போடும் பெண்மா
னும்
புல்லில்லாததினால் குட்டியை விட்டு
ஓடிப்போகும்.
6 காட்டுக்கழுதைகள் பாழ்ங்குன்றுகளில்
நின்று நரிகளைப்போல் இளைத்துக்
கொண்டு கிறு மூச்சுவிடும்,
புல் இல்லாமையினால் அவற்றின் கண்
கள் பூத்துப்போகிறது.
7 யெகோவாவே, எங்கள் அக்கிரமங்கள்
எங்களுக்கு விரோதமாய்ச் சாட்சியிட்
டாலும்
உமது திருநாமத்தினிமித்தம் உதவிசெய்
தருளும்;
எங்கள் மாறுபாடுகள் அநேகம், உமக்கு
விரோதமாய்ப் பாவஞ்செய்தோம்.
8 இஸ்ரவேலின் நம்பிக்கையே, ஆபத்
துக்காலத்தில் அதை இரட்சிப்பவரே,
நீர் தேசத்திலே அந்நியன்போலவும்
இராத்தங்கவந்த வழிப்போக்கன் போல
வும் இருப்பானேன்?
9 நீர் மதிமயங்கின மனுஷனைப்போலவும்
உதவிசெய்ய முடியாத வீரனைப்போல
வும் இருப்பானேன்?
யெகோவாவே, நீர் எங்கள் நடுவில்
இருப்பவர்,
உமது திருநாமம் எங்களுக்கு வழங்குகிற
தே, எங்களை விட்டுப் போகாதிரும்.
10 யெகோவா இந்த ஜனத்தைப்பற்றி:
அவர்கள் தங்கள் கால்களை அடக்கிக்
கொள்ளாமல் இப்படி அலைய விரும்பு
கிறார்கள்,
ஆகையால் யெகோவா அவர்கள்மேல்
பிரியமாயிருப்பதில்லை;
இப்பொழுதோ அவர்கள் அக்கிரமத்தை
நினைத்து,
அவர்கள் பாவங்களை விசாரிப்பார் என்று
சொல்லுகிறார்.
11 பின்னும் யெகோவா என்னோடே பேசி:
நீ இந்த ஜனத்துக்கு நன்மையுண்டாகப்
பிரார்த்தனை செய்யவேண்டாம்.
12 அவர்கள் உபவாசித்தாலும் நான் அவர்
கள் மன்றாட்டைக் கேட்பதில்லை;
அவர்கள் தகனபலிகளையும் போஜனபலி
களையும் செலுத்தினாலும்
நான் அவர்கள்மேல் பிரியமாயிருப்ப
தில்லை;
பட்டயம், பஞ்சம், கொள்ளைநோய்
இவற்றினால் நான் அவர்களை நிர்மூலமாக்
குவேன் என்றார்.
13 அதைக் கேட்கவே நான்: ஐயோ, யெகோ
வாவாகிய ஆண்டவரே
இதோ, தீர்க்கதரிசிகள் அவர்களிடம்:
நீங்கள் பட்டயத்தைக் காண்பதில்லை
உங்களுக்குப் பஞ்சம் வருவதில்லை;
நிலையான சமாதானத்தையே இவ்விடத்
தில் உங்களுக்குத் தருவார்
என்று சொல்லுகிறார்களே என்றேன்.
14 அப்பொழுது யெகோவா என்னிடம்:
தீர்க்கதரிசிகள் என் நாமத்தைக்கொண்டு
சொல்லுகிற தீர்க்கதரிசனம் பொய்,
நான் அவர்களை அனுப்பினதுமில்லை,
அவர்களுக்குக் கட்டளையிட்டதுமில்லை,
அவர்களோடே பேசினதுமில்லை;
கள்ளத்தரிசனம், பில்லிசூனியம், வீண்
காரியம், தங்கள் இதயவஞ்சனை
ஆகிய இவைகளையே அவர்கள் உங்களுக்
குரைக்கும் தீர்க்கதரிசனம் என்றார்.
15 ஆதலால், யெகோவா அந்தத் தீர்க்கதரி
சனைப்பற்றிச் சொல்வதைக் கேளுங்
கள்:
என் நாமத்தைக்கொண்டு தீர்க்கதரிச
னஞ் சொல்லுகிற இவர்களை நான்
அனுப்பவில்லை

அவர்களோ, இந்தத் தேசத்திலே பட்டயமும் பஞ்சமும் வருவதில்லையென்று சொல்லுகிறார்கள்:
ஆனாலும் இந்தத் தீர்க்கதரிசிகளே பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் மடிந்துபோவார்கள்.
16 அவர்கள் தீர்க்கதரிசனம் கேட்கும் ஜனங்களும், பட்டயத்துக்கும் பஞ்சத்துக்கும் இரையாகி எருசலேமின் தெருக்களிலே எறியுண்பார்கள். அவர்களையும் அவர்கள் மனைவிகளையும் அவர்கள் குமாரரையும் அவர்கள் குமாரத்திகளையும் அடக்கம்பண்ணுவாரிராரார்; அவர்கள் தீமையை அவர்கள்மேலேயே ஊற்றிவிடுவேன்.
17 நீயோ இந்த ஜனங்களுக்கு இப்படிச் சொல்:
என் கண்கள் இரவும் பகலும் ஓயாமல் கண்ணீர் சொரியும்; என் ஜனகுமாரியாகிய கன்னிகை பெருஞ்சேதமுற்றுச் சிதைந்தாள், மகா கொடிய காயம்!
18 நான் வெளியே போனால், இதோ, பட்டயத்தால் கொல்லப்பட்டவர்கள்; நகரத்துள் வந்தால், இதோ, பஞ்சத்தின் வருத்தம்; தீர்க்கதரிசிகளும் ஆசாரியர்களும் அலைந்து திரிந்து, தாங்கள் அறியாத தேசத்துக்குப் போகிறார்கள்.
19 யூதாவை முற்றிலும் தள்ளிவிட்டீரோ? நீயோன் உமது ஆத்துமாவுக்கு அரோசகமாயிற்றோ? ஒருவரும் குணமாக்கமுடியாதபடி எங்களை ஏன் அடித்தீர்? சமாதானத்துக்குக் காத்திருந்தோம் நன்மை வரவில்லை; சுகம் கிடைக்கும் காலத்திற்குக் காத்திருந்தோம், இதோ, திகைப்பு.
20 யெகோவாவே, எங்கள் தீமையையும் எங்கள் பிதாக்களின் அக்கிரமத்தையும் நாங்கள் ஒத்துக்கொள்ளுகிறோம், உமக்கே விரோதமாய்ப் பாவஞ்செய்தோம்.
21 உமது திருநாமத்தினிமித்தம் எங்களை அருவருக்காதிரும், உமது மகிமையின் சிங்காசனத்தைக் கனவீனப்படுத்தாதேயும்; எங்களோடே உமக்கு இருக்கிற உடன்படிக்கையை நினைத்தருளும், அது அபத்தமாக வேண்டாம்.

புறஜாதியாரின் வீணான தேவர்களுள் 22
மழைபெய்யச் செய்பவர்கள் உண்டோ?
வானம் தானாகவே மழையைக் கொடுக்குமோ?
யெகோவாவென்னும் நீரே யல்லவா எங்கள் கடவுள்!
உமக்கே நாங்கள் காத்திருப்போம்,
தேவரீரே இவற்றையெல்லாம் செய்தவர்.

யெகோவா என்னோடு பேசி: **15**
மோசேயும் சாமுவேலும் எனக்கு எதிரே நின்றாலும், என் மனம் இந்த ஜனங்கள் பட்சமாய்ச் சாராது;
என் சமுகத்தை விட்டுப்போகும்படி இவர்களை அகற்றிவிடு;
எங்கேபோவோம் என்று இவர்கள் உன் 2
னைக் கேட்டால், நீ அவர்களிடம்:
சாவுக்குரியவன் சாவுக்கும், பட்டயத்துக்குரியவன் பட்டயத்துக்கும்,
பஞ்சத்துக்குரியவன் பஞ்சத்துக்கும்,
சிறையிருப்புக்குரியவன் சிறையிருப்புக்கும்
போகவேண்டுமென்று யெகோவா உரைக்கிறார் எனச்சொல்.
கொன்றுபோடப் பட்டயமும், பிடித்தி 3
ழுக்க நாய்களும்,
பட்சித்து அழிக்க ஆகாயத்துப்பறவைகளும் பூமியின் மிருகங்களும்,
ஆகிய நான்குவிதமான வாதைகளை நான் அவர்கள்மேல் வரக்கட்டளையிடுவேன்,
இது யெகோவாவின் திருவாக்கு.
எசேக்கியாவின் குமாரனும் யூதா ராஜாவு 4
மாகிய மனாசேயினிமித்தம்,
அவன் எருசலேமிலே செய்தவற்றினிமித்தம்,
அவர்களைப் பூமியின் சகல ராஜ்யங்களுக்கும் பயங்கரக்காட்சியாக்குவேன்.
எருசலேமே, உனக்கு இரங்குகிறவன் 5
யார்? உனக்குப் பரிதபிக்கிறவன் யார்?
உன்னிடம் திரும்பி உன் சுகசெய்தியை விசாரிக்கிறவன் யார்?
நீ என்னைத் தள்ளிவிட்டாய்—இது யெ 6
கோவாவின் திருவாக்கு—
பின்னிட்டாய், ஆகவே, என் கையை உனக்கு விரோதமாய் நீட்டி உன்னை அழிப்பேன்;
நான் உனக்கு இரக்கங்காட்டிக் காட்டி இளைத்துப்போனேன்.
தேசத்தின் வாசல்களிலே அவர்களைத் 7
தூற்றுக்கூடையால் தூற்றிப்போடுகிறேன்;

நான் என் ஜனத்தைப் பிள்ளைகள் அற்ற
வர்களாக்கி அழிக்கிறேன்,
அவர்கள் தங்கள் வழிகளைவிட்டு என்னி
டம் திரும்பவில்லையே.
8 கடற்கரை மணலைப்பார்க்கிலும் அதிக
விதவைகள் அவர்களில் இருப்பார்கள்;
பட்டப்பகலிலே பாழாக்குகிறவனை வா
லிபனின் தாய்மேல் வரச்செய்வேன்,
திகிலையும் பயங்கரமானவைகளையும் திடீ
ரென அவர்கள்மேல் விழச்செய்வேன்.
9 ஏழுபிள்ளைகளைப் பெற்றவளும் உதவி
யின்றிச் சோர்ந்து தன் பிராணனை விடு
கிறாள்;
இன்னும் பகலாயிருக்கையிலேயே
அவள் சூரியன் அஸ்தமிக்கிறது;
வெட்கி இலச்சைக்குள்ளாகிறாள்;
அவர்களில் மீதியாயிருப்பவர்களையோ
அவர்கள் சத்துருக்களுக்கு எதிரே பட்ட
யத்துக்கு இரையாக்குவேன்;
இது யெகோவாவின் திருவாக்கு.
10 என் தாயே, ஐயோ எனக்கு ஆபத்து!
உலகுக்கெல்லாம் வழக்குக்கும் வாதுக
கும் உள்ளானவனாயிருக்கும்படி என்னை
நீ பெற்றாயே,
நான் மற்றவர்களுக்கு வட்டிக்குக் கொ
டுத்தில்லை, அவர்களும் எனக்கு வட்
டிக்குக் கொடுத்தில்லை,
எனினும் எல்லாரும் என்னைச் சபிக்கி
றார்கள்.
11 யெகோவா இப்படிச் சொன்னார்:
நன்மையுண்டாக மெய்யாகவே நான்
உன்னைப் பலப்படுத்தி ஆபத்துக்காலத்தி
லும் நெருக்ககாலத்திலும்
உன் சத்துருக்கள் உன்னிடம் வந்து
விண்ணப்பம்பண்ணும்படி செய்வேன்.
12 இரும்பை, வடக்கேயிருந்து வரும்
இரும்பை, செம்பையும் நொறுக்குவார்
யார்?
13 நீ உன் சகல எல்லைகளிலும் செய்த சகல
பாவங்களினிமித்தமும்
நான் உன் ஆஸ்தியையும் உன் பொக்கி
ஷங்களையும் கிரயமில்லாமல் சூறையிடு
விப்பேன்.
14 நீ அறியாத தேசத்தில் உன் சத்துருக்க
ளுக்கு உன்னை அடிமையாக்குவேன்;
என் கோபத்தினாலே அக்கினிமூண்டது,
அது உங்கள்மேல் எரியும்.
15 யெகோவாவே நீர் இதை அறிவீர்;
தேவரீர் என்னை நினைத்து என்னைப் பாது
காத்தருளும்,
என்னை இம்சைப்படுத்தினவர்களிடம்
என்னிமித்தம் பழிவாங்கும்;
உமது நீடிய பொறுமையினிமித்தம்
என்னை வாரிக்கொள்ளாதிரும்,
நான் உமது நிமித்தம் நிந்தையைச் சகிக்
கிறேன் என்பதை நினைத்தருளும்.
உமது வார்த்தைகள் கிடைத்தவுடனே 16
அவை என் ஆகாரமாயிற்று,
உமது வார்த்தைகள் எனக்குச் சந்தோ
ஷமும் என் இதயத்துக்கு மகிழ்ச்சியுமா
யிற்று;
சேனைகளின் கடவுளாகிய யெகோவாவே,
உமது திருநாமம் எனக்கு வழங்குகிறதே.
நான் களிப்பார் கூட்டத்தில் உட்கார்ந்து 17
மகிழ்ந்ததில்லை;
உமது கரம் என்மேற்பிடிக்கவே தனித்து
உட்கார்ந்தேன்;
உமது உக்கிரத்தினால் என்னை நிரப்பினீர்.
என் நோவு நீடித்தகாலமாகவும் என் 18
காயம் ஆறுத கொடிய புண்ணாகவும்
இருப்பானேன்!
நீர் எனக்கு நம்பப்படா நீரோடைபோல
வும் வற்றிப்போம் நீரைப்போலவும்
இருப்பீரோ?
இதற்கு யெகோவா இப்படிப் பதில் 19
சொல்கிறார்:
நீ திரும்பினால் நான் உன்னைத் திரும்பி
வரச் செய்வேன்,
என் சந்நிதியில் நீ வந்து நிற்பாய்,
நீ இழிப்பானதை நீக்கி அருமையானதை நீ
வெளியிட்டால் என் வாயாகவிருப்பாய்,
நீ அவர்களிடம் திரும்புவதில்லை, அவர்க
ளே உன்னிடம் திரும்புவார்கள்.
உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே பல 20
மான செப்பு அலங்கமாக்குவேன்,
அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம்
பண்ணினாலும் உன்னை மேற்கொள்ள
மாட்டார்கள்;
உன்னை ரட்சிக்கவும் உன்னை விடுவிக்க
வும் நான் உன்னோடிருக்கிறேன்,
இது யெகோவாவின் திருவாக்கு.
நான் உன்னைத் துஷ்டரின் கையினின்று 21
விடுவித்து,
கொடியரின் கையினின்று உன்னை மீட்
டுக்கொள்வேன்.

16 யெகோவாவின் வார்த்தை எனக்கு
வந்தது:
2 அவர்: நீ பெண்தேடி விவாகம் செய்து
கொள்ளவேண்டாம்,
இவ்விடத்தில் உனக்குக் குமாரரும் குமா
ரத்திகளும் இருக்கவேண்டாம் என்றார்.
3 இவ்விடத்திலே பிறக்கிற குமாரரையும்
குமாரத்திகளையும்

இந்த தேசத்தில் அவர்களைப்பெற்ற தாய்
களையும் அவர்களைப்பெற்ற பிதாக்களையும்
பற்றி
யெகோவா இப்படிச் சொல்லுகிறார்:
4 மகா கொடிய வியாதிகளால் சாவார்கள்,
அவர்கள் நிமித்தம் புலம்புவாரும்
அவர்களை அடக்கம்பண்ணுவாருமிரார்,
பூமியின்மேல் எருவாவார்கள், பட்டயத்
தாலும் பஞ்சத்தாலும் மடிந்துபோவார்
கள்;
அவர்கள் பிரேதங்கள் ஆகாயத்துப்பற
வைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும்
இரையாகும்.
5 யெகோவா சொல்வதைக் கேள்:
நீ துக்கவீட்டில் பிரவேசியாதே, புலம்
பப்போகாதே, அவர்கள் நிமித்தம் பரித
பியாதே.
என் சமாதானத்தை இந்த ஜனத்திலிருந்
து அகற்றிவிட்டேன்,
—இது யெகோவாவின் திருவாக்கு—
இரக்கத்தையும் இரக்கத்தையும் அப்ப
டியே அகற்றிவிட்டேன்.
6 இத்தேசத்திலே பெரியோரும் சிறியோ
ரும் சாவார்கள், அவர்களை அடக்கம்செய்
வாரில்லை;
அவர்கள் நிமித்தம் புலம்புவாருமில்லை,
கீறிக்கொள்வாருமில்லை, மொட்டையடித்
துக் கொள்வாருமில்லை.
7 செத்தவனிமித்தம் துக்கிக்கிறவர்களை ஆற்
ற அவர்களுக்கு ஆகாரம் பங்கிடுவது
மில்லை;
தன் தகப்பனிமித்தமாவது தன் தாயினி
மித்தமாவது துக்கிக்கிறவனுக்குத்
துக்கம் ஆற்றும் பாத்திரத்தைக் குடிக்கக்
கொடுப்பதுமில்லை.
8 நீ அவர்களோடே புசித்துக் குடிக்க உட்
காரும்படி விருந்துவீட்டிற்கும் போக
வேண்டாம்;
9 இதோ, இவ்விடத்திலே நான் உங்கள்
கண்காண உங்கள் நாட்களிலே
களிப்பின் சத்தத்தையும் மகிழ்ச்சியின்
சத்தத்தையும்
மணவாளனின் சத்தத்தையும் மணவாட்
டியின் சத்தத்தையும் ஒயப்பண்ணுவேன்
என்று இஸ்ரவேலின் கடவுளாகிய சேனை
களின் யெகோவா சொல்லுகிறாரே.
10 நீ இந்த வார்த்தைகளையெல்லாம் இந்த
ஜனத்துக்கு அறிவிக்கும்போது அவர்கள்
உன்னிடம்:
யெகோவா எங்கள்மேல் இத்தனை பெரிய
தீங்கைக் கூறுவானேன்? நாங்கள் செய்த
அக்கிரமம் என்ன?
நாங்கள் எங்கள் கடவுளாகிய யெகோ
வாவுக்கு விரோதமாகச் செய்த எங்கள்
பாவம் என்ன
என்று கேட்பார்களானால் | நீ அவர் 11
களுக்குப் பதில் உரைத்து:
உங்கள் பிதாக்கள் என்னைவிட்டு விலகி,
அந்திய தேவர்களின் பின்னே சென்று,
—இது யெகோவாவின் திருவாக்கு—
அவர்களைச் சேவித்து, அவர்களைத் தொ
ழுதுகொண்டு,
என் நியாயப்பிரமாணத்தைக் கைகொ
ள்ளாமல் என்னை விட்டு விலகினார்கள்;
நீங்களும் உங்கள் பிதாக்களைப்பார்க்கி 12
லும் அதிகமாய்க் கேடுசெய்தீர்கள்;
இதோ, உங்களில் ஒவ்வொருவரும் தம்
தம் தீய இருதயத்தின் கடினத்திலே
நடந்து
என் சொல்லைக் கேளாதே போனீர்கள்.
ஆதலால், உங்களை இந்த தேசத்திலிருந்து 13
எடுத்து
நீங்களும் உங்கள் பிதாக்களும் அறியாத
தேசத்திலே எறிந்துவிடுவேன்;
அங்கே இரவும் பகலும் அந்திய தேவர்
களைச் சேவிப்பீர்கள்;
அவ்விடத்திலே நான் உங்களுக்கு இரக்
கங்காட்டுவதில்லை
என்கிறார் என்று சொல்.
இதோ நாட்கள்வரும்,—இது யெகோ 14
வாவின் திருவாக்கு—
அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரை
எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவந்த
யெகோவாவின் ஜீவன்மேல் ஆணையென்று
சொல்லாமல்,
இஸ்ரவேல் புத்திரரை வடதேசத்திலும் 15
தாம் அவர்களைத் துரத்திவிட்ட சகல
தேசங்களிலுமிருந்து அழைத்துவந்த
யெகோவாவின் ஜீவன்மேல் ஆணையென்
று சொல்லுவார்கள்;
அவர்கள் பிதாக்களுக்கு நான் கொடுத்த
அவர்கள் தேசத்துக்கு அவர்களைத் திரும்
பி வரப்பண்ணுவேன்.
இதோ, நான் மீன் பிடிக்கிற அநே 16
கரை அழைத்தனுப்புவேன்,—இது யெ
கோவாவின் திருவாக்கு—
இவர்கள் அவர்களைப் பிடிப்பார்கள்;
அதன்பின் வேட்டையாடும் அநேகரை
அழைத்தனுப்புவேன்,
இவர்கள் எல்லா மலைகளிலும் எல்லாக்
குன்றுகளிலும் கன்மலைகளின் வெடிப்பு
களிலும்
அவர்களை வேட்டையாடித் துரத்துவார்
கள்.

17 என் கண் அவர்கள் வழிகளையெல்லாம்
பார்த்துக்கொண்டே யிருக்கிறது;
அவைகள் எனக்கு மறைந்திருப்பதில்லை;
அவர்கள் அக்கிரமம் என் பார்வைக்கு
மறைவாயிருப்பதுமில்லை.
18 நான் முதலாவது அவர்கள் அக்கிரமத்
துக்கும் அவர்கள் பாவத்துக்கும் இரட்
டிப்பாய் பலனளிப்பேன்;
அவர்கள் என் தேசத்தைத் தீட்டுப்
படுத்தி,
அருவருப்பும் அரோசகமுமான தங்கள்
விக்கிரகங்களின்
உயிரற்ற உருவங்களால் என் சுதந்தரத்
தை நிரப்பினார்களே.
19 யெகோவாவே, என் பலமே, என்
கோட்டையே,
ஆபத்துநாளில் என் அடைக்கலமே,
புறஜாதியார் பூமியின் கடையாந்தரங்களி
லிருந்து உம்மிடம் வந்து:
எங்கள் பிதாக்கள் சுதந்தரித்தது பொய்
யே,
வீண் காரியங்களே, அவற்றில் ஒன்றும்
பயன்படாது என்பார்கள்.
20 மனுஷன் தனக்கு தேவர்களை உண்டு
பண்ணலாகுமோ?
அவைகள் தேவர்கள் அல்லவே.
21 ஆதலால், இதோ, நான் அவர்களுக்குத்
தெரியப்பண்ணுவேன்;
என் கரத்தையும் என் பலத்தையுமே
இந்த முறை அவர்களுக்குத் தெரியப்
பண்ணுவேன்;
என் நாமம் யெகோவா என்று அறிந்து
கொள்வார்கள்.

**17** யூதாவின் பாவம் இரும்பெழுத்தாணி
யினாலும் வைரமுனியினாலும் எழுதப்
பட்டு,
அவர்கள் இதயப் பலகையிலும் உங்கள்
பலிபீடங்களின் கொம்புகளிலும் பதிந்
திருக்கிறது.
2 உயர்ந்த மேடுகளின்மேல் பச்சையான
மரங்களண்டையில் இருந்த
அவர்கள் பலிபீடங்களையும் அவர்கள்
தோப்புகளையும்
அவர்கள் பிள்ளைகள் நினைக்கும்போதெல்
லாம் இது விளங்கும்.
3 வயல் வெளியிலுள்ள என் மலையே, நீ
உன் எல்லைகளிலெல்லாம் செய்த பாவத்
தினிமித்தம்
நான் உன் ஆஸ்தியையும் உன் எல்லாப்
பொக்கிஷங்களையும் உன் கோவில் மே
டைகளையுங்கூடச் சூறையிடுவிப்பேன்.
அப்படியே நான் உனக்குக் கொடுத்த 4
சுதந்தரத்தை நீயாகவே விட்டுவிடுவாய்,
நீ அறியாத தேசத்தில் உன்னை உன் சத்
துருக்களுக்கு அடிமையாக்குவேன்;
என் கோபாக்கினியை மூட்டிவிட்டீர்
கள், அது என்றுமாக எரியுமே.
யெகோவா சொல்வதைக் கேளுங் 5
கள்:
மனுஷனில் நம்பிக்கை வைப்பவன்
சாபத்திற்குட்பட்டவன்;
மாம்சத்தை அவன் தன் புயபலமாக்கு
கிறான்;
அவன் இதயம் யெகோவாவை விட்டு
விலகுகிறது.
அவன் அவாந்தரவெளியில் கனியாய்ப் 6
போன செடிபோலாவான், நன்மை வரு
வதைக் காணான்;
வனாந்தரத்திலே காய்ந்துபோன இடங்
களிலும் குடியில்லாத உவர்நில நாட்டி
லும் தங்குவான்.
யெகோவாவில் நம்பிக்கைவைத்து, 7
யெகோவாவையே தன் நம்பிக்கையாகக்
கொண்டிருக்கிற மனுஷனே பாக்கிய
வான்.
அவன் தண்ணீரண்டையிலே நடப் 8
பட்ட மரம்போலாவான்,
அது கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை
விடும்;
உஷ்ணம் வந்தாலும் அதற்குப் பய
மில்லை, அதன் இலை பசுமையாயிருக்
கும்;
மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் கவ
டமின்றித் தப்பாமல் கனிகொடுக்கும்.
இருதயமே எல்லாவற்றிலும் வஞ்சனை 9
யுள்ளது, மிகவும் கெட்டுப்போனது;
அதை அறிபவன் யார்?
யெகோவாவாகிய நானே இருதயத்தை 10
ஆராய்ந்து நினைவுகளைச் சோதித்தறி
கிறேன்,
ஒவ்வொருவனுக்கும் அவனவன் வழிக
ளுக்கும் அவன் செயல்களால் விளைந்த
தற்கும் தக்கபடியே கொடுப்பேன்.
அநியாயமாய்ச் செல்வம் சம்பாதிப்பவன் 11
தான் இடாத முட்டையின்மேல் அவ
யங்காத்துக் குஞ்சுபொரிக்கும்
கௌதாரியைப் போன்றவன்;
அவன் தன் பாதிவயதிலே அதைவிட்டு
விட்டுத்
தன் ஆயுள் முடிவிலே மூடன்போலிருப்
பானே.
மகிமைச் சிங்காசனம், ஆதிகால உன் 12
னதம்;

இதுவே எங்கள் பரிசுத்தஸ்தலம்.
13 யெகோவாவே, இஸ்ரவேலின் நல்நம்பிக்கையே,
உம்மைவிட்டு விலகுகிற யாவரும் வெட்கத்துக்குள்ளாவார்கள்;
ஆம், என்னைவிட்டு அகல்வோரின் பெயர் புழுதியில் எழுதப்படும்;
அவர்கள் ஜீவதண்ணீர் ஊற்றாகிய யெகோவாவைவிட்டு விலகினார்களே.
14 யெகோவாவே, என்னைக் குணமாக்கும், அப்பொழுது குணமாவேன்;
என்னை ரட்சியும், அப்பொழுது ரட்சிக்கப்படுவேன்;
தேவரீரே என் துதி.
15 இதோ, இவர்கள் என்னோடு பேசி:
யெகோவாவின் வார்த்தை எங்கே? அது இப்பொழுது வரட்டும் என்கிறார்கள்.
16 நானே உமது சொல்வழியே நடந்த மேய்ப்பன், அதற்கு மிஞ்சி நடந்தவனல்ல;
ஆபத்து நாளை நான் விரும்பினதுமில்லை, இதை நீர் அறிவீர்;
நான் வாய்திறந்து பேசியவெல்லாம் உமது சமுகத்திலேயே பேசப்பட்டன.
17 திங்குநாளில் என் அடைக்கலமே, நீர் எனக்குத் திகிலாகவேண்டாம்.
18 என்னை இம்சைப்படுத்துகிறவர்களே வெட்கத்துக்காளாக, நான் வெட்காதிருக்க;
அவர்களே திகில்படுக, நான் திகில்படாதிருக்க;
தேவரீர் திங்குநாளை அவர்கள்மேல் வரப்பண்ணும்;
அவர்களை நொறுக்கும், இரண்டாமுறையும் நொறுக்கிவிடும்.
19 யெகோவா என்னோடு பேசி:
நீ போய் யூதாவின் ராஜாக்கள் வந்து போய்க்கொண்டிருக்கிற
ஜனத்தின் வாசலிலும் எருசலேமின் சகல வாசல்களிலும் நின்றுகொண்டு,
20 அவர்களிடம் சொல்லவேண்டியது இதுவே:
இந்த வாசல்கள் வழியாய் வருகிற யூதாவின் ராஜாக்களே, சகல யூதாக்களே, எருசலேமின் சகல குடிகளே,
யெகோவாவின் வார்த்தையைக் கேளுங்கள்,
21 யெகோவா இப்படிச் சொல்லுகிறார்;
உங்கள் ஜீவனைப்பற்றி ஜாக்கிரதையாயிருந்துகொள்ளுங்கள்;
நீங்கள் ஓய்வுநாளில் சுமை எடுத்து அதை எருசலேமின் வாசல்களுக்குள் கொண்டுவரவேண்டாம்.
22 ஓய்வுநாளில் உங்கள் வீடுகளிலிருந்து சுமையை வெளியே கொண்டுபோகவேண்டாம்;
எந்த வேலையையும் செய்யவேண்டாம்,
ஓய்வுநாளைப் பரிசுத்தப்படுத்துங்கள்;
இப்படியே உங்கள் பிதாக்களுக்குக் கட்டளையிட்டேன்.
23 அவர்களோ கேட்கவுமில்லை, செவிகொடுக்கவுமில்லை;
அவர்கள் வணங்காக் கழுத்துள்ளவர்களாகிக்
கேளாமலும் சிட்சையை ஏற்றுக்கொள்ளாமலும் போனார்கள்.
24 நீங்கள் என் சொல்லைக் கவனித்துக் கேட்டு,
—இது யெகோவாவின் திருவாக்கு—
ஓய்வுநாளில் இந்த நகரவாசல்களுக்குள்ளே சுமையைக் கொண்டுவராமலும்
ஓய்வுநாளில் எந்த வேலையையும் செய்யாமலும்
அதைப் பரிசுத்தப்படுத்துவீர்களானால்,
25 தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் ராஜாக்களும் அதிபதிகளும்,
இரதங்களின்மேலும் குதிரைகளின்மேலும் ஏறி இந்த நகரவாசல்களுக்குள் பிரவேசிப்பார்கள்;
அவர்களும் அவர்கள் அதிகாரிகளும் யூதா மனுஷரும்
எருசலேமின் குடிகளும் அப்படியே உட்செல்லுவார்கள்;
இந்த நகரம் என்றைக்கும் குடியுள்ளதாயிருக்கும்.
26 யூதா ஊர்களிலும் எருசலேமின் சுற்றுப்புறங்களிலும் பென்யமீன் நாட்டிலும்
சமனிலநாட்டிலும் மலைநாட்டிலும் தென்னாட்டிலுமிருந்து
ஜனங்கள் தகனபலிகளையும் இரத்தபலிகளையும் போஜனபலிகளையும்
தூபவர்க்கங்களையும் கொண்டுவருவார்கள்;
யெகோவாவின் ஆலயத்திலே ஸ்தோத்திரம் செலுத்தவும் வருவார்கள்.
27 நீங்கள் என் சொல்லைக் கேளாதுபோய் ஓய்வுநாளைப் பரிசுத்தப்படுத்தாமல் ஓய்வுநாளிலே சுமையை எருசலேமின் வாசல்களுக்குள் எடுத்து வருவீர்களானால்,
நான் அதின் வாசல்களில் தீக்கொளுத்துவேன்;
அது எருசலேமின் அரமனைகளைப் பட்சிக்கும், அவிந்துபோகாது
என்று சொன்னார்.

**18** யெகோவாவினிடமிருந்து எரேமியாவுக்கு வந்த வார்த்தை:
2 நீ எழுந்து, குயவன் வீட்டிற்குப்போ; அங்கே என் வார்த்தைகளை உனக்குத் தெரிவிப்பேன் என்றார்.
3 அப்படியே நான் குயவன் வீட்டிற்குப் போனேன்; இதோ, அவன் சக்கரத்திலிலே வேலை செய்துகொண்டிருந்தான்.
4 குயவன் வேலைசெய்துகொண்டிருந்த ஒரு மண்பாண்டம் அவன் கையிலே கெட்டுப்போகவே குயவன் திரும்பவும் ஆரம்பித்துத்தன் பார்வைக்குச் சரியெனத் தோன்றியபடியே அதை வேறே பாண்டமாக வேலைசெய்தான்.
5 அப்பொழுது யெகோவாவின் வார்த்தை எனக்கு வந்தது,
6 அவர்: இஸ்ரவேல் வீட்டாரே, இந்தக் குயவன் செய்ததுபோல நான் உங்களுக்குச் செய்யலாகாதோ? இது யெகோவாவின் திருவாக்கு. இதோ, இஸ்ரவேல் வீட்டாரே, களிமண் குயவன் கையில் இருக்கிறதுபோல நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்.
7 நான் ஒரு சமயத்திலே, பிடுங்குவேன், இடிப்பேன், அழிப்பேன் என்று ஒரு ஜனத்தைப்பற்றியும் ஒரு ராஜ்யத்தைப்பற்றியும் சொல்லுவேன்.
8 அவர்களோ, நான் அவர்கள் விஷயமாய்ப்பேசி எச்சரித்த தீமையை விட்டுத்திரும்பினால், நானும் அவர்களுக்குச் செய்ய நினைத்த தீங்கினிமித்தம் மனஸ்தாபப்பட்டு அதைச் செய்யாது விடுவேன்.
9 மற்றொரு சமயத்தில், ஒரு ஜனத்தையும் ஒரு ராஜ்யத்தையும் பற்றிக் கட்டுவேன், நாட்டுவேன் என்று சொல்லுவேன்.
10 அவர்கள் நான் சொன்னதைக் கேளாமல் என் பார்வையில் தீமையானதைச் செய்வார்களானால், நான், அவர்களுக்கு அருள்செய்வேன் என்று சொன்ன நன்மையினிமித்தம் மனஸ்தாபப்பட்டு அதைச் செய்யாது விடுவேன்.
11 இப்பொழுதும் நீ யூதா மனுஷரோடும் எருசலேமின் குடிகளோடும் பேசி: யெகோவா சொல்வதைக் கேளுங்கள், இதோ, நான் உங்களுக்கு விரோதமாக ஒரு தீங்கை ஏற்படுத்தி, உங்களுக்கு விரோதமாக ஒரு யோசனையை யோசிக்கிறேன்; உங்களில் ஒவ்வொருவரும் தன்தன் தீய வழியை விட்டுத் திரும்பி, உங்கள் வழிகளையும் உங்கள் செய்கைகளையும் சீர்ப்படுத்துங்களென்று சொல்.
12 அவர்களோ: அது முடியாது, நாங்கள் எங்கள் யோசனைகளின்படியே நடப்போம், அவரவர் தம்தம் தீய இருதயத்தினுடைய கடினத்தின்படியே செய்வோம் என்கிறார்கள்.
13 ஆதலால் யெகோவா இப்படிச்சொல்லுகிறார்: இப்படிப்பட்டவைகளைக் கேள்விப்பட்டவன் உண்டோ என்று புறஜாதியாருக்குள்ளே விசாரித்துப் பாருங்கள்; மிகவும் பயங்கரமான காரியத்தை இஸ்ரவேல் கன்னிகை செய்கிறாள்.
14 லீபனோனின் உறைந்தமழை காட்டுக்கற்பாறையிலிருந்து நீங்குவதுண்டோ? தூரத்திலிருந்து ஓடிவரும் குளிர்ந்த நீர் வற்றிப்போவதுண்டோ?
15 என் ஜனமோ என்னை மறந்து பொய்யான வைகளுக்குத் தூபங்காட்டுகிறார்கள்; அவைகள் அவர்களைப் பூர்வபாதைகளாகிய அவர்கள் வழிகளிலிருந்து விலகும்படி செய்கிறது, வழியாக்கப்படாத பாதைகளில் நடக்கிறார்கள்.
16 இப்படிநடந்து, தங்கள் தேசத்தைப் பிரமிப்பும் நீங்காப் பழிப்புமாகச் செய்கிறார்கள், அதைக் கடந்துபோகிறவன் எவனும் பிரமித்துத் தன் தலையைத்துலுக்குவான்.
17 கீழ் காற்றுப் பறக்கடிப்பதுபோல் நான் அவர்களை அவர்கள் சத்துருக்களுக்கு முன்பாகப் பறக்கடிப்பேன்; அவர்களுடைய ஆபத்தின் நாளிலே, அவர்கள் என் முகத்தையல்ல என் முதுகையே காணச்செய்வேன் என்கிறார்.
18 அவர்களோ: எரேமியாவுக்கு விரோதமாக ஆலோசனை செய்வோம் வாருங்கள்; ஆசாரியரிடத்திலே நியாயப்பிரமாணமும் ஞானிகளிடத்திலே ஆலோசனையும் தீர்க்கதரிசிகளிடத்திலே வசனமும் ஒழிந்துபோவதில்லை; நாவினாலே அவனை அடித்துப்போடுவோம் வாருங்கள், அவன் வார்த்தைகளை நாம் கவனிக்கவேண்டியதில்லை என்றார்கள்.
19 யெகோவாவே, நீர் என்னைக் கவனித்தருளும்,

என்னுடே வழக்காடுகிறவர்கள் சொல்
வதைக்கேளும்.
20 நன்மைக்குப் பதிலாகத் தீமைசெய்யலா
மோ? எனக்குப்படுகுழியை வெட்டுகிறார்
களே;
அவர்களது நன்மையை நாடிப் பரிந்து
பேசி
உமது உக்கிரத்தை அவர்களை விட்டுத்
திருப்பும்படி
உமக்கு முன் நின்றதை நினைத்தரு
ளும்.
21 ஆகவே அவர்கள் பிள்ளைகளைப் பஞ்சத்
துக்கு ஒப்புக்கொடும்,
அவர்களைப் பட்டயத்துக்கு இரையாக்கி
விடும்,
அவர்கள் மனைவிகள் பிள்ளைகளற்றவர்
களும் விதவைகளுமாகட்டும்,
அவர்கள் புருஷர்கள் மரணத்துக்காளா
கட்டும்,
அவர்கள் வாலிபர்கள் யுத்தத்திலே பட்
டய வெட்டால் மடியட்டும்.
22 நீர் சடுதியில் அவர்கள்மேல் கொள்ளைக்
கூட்டத்தை வரப்பண்ணும்போது
கூக்குரல் அவர்கள் வீடுகளிலிருந்து
கேட்கட்டும்;
என்னைப் பிடிக்கப் படுகுழியை வெட்டி
என் கால்களுக்குக் கண்ணிகளை வைத்
தார்களே.
23 யெகோவாவே, அவர்கள் எனக்கு விரோ
தமாய்ச் செய்யும் கொலைபாதக யோசனை
யனைத்தும் உமக்குத் தெரியுமே;
அவர்கள் அக்கிரமத்தை மன்னிக்கவேண்
டாம்,
அவர்கள் பாவத்தை உமது கண்ணுக்
கு எதிரே கிலுத்துப் போடாதிரும்.
உமது சந்நிதியில் அவர்கள் இடறிவிழச்
செய்யும்,
உமது கோபகாலத்திலே நீர் யோசிப்ப
தை அவர்களுக்குச் செய்யும்.

**19** யெகோவா இப்படிச் சொன்னார்:
நீ போய்க் குயவனிடம் ஒரு மட்கலத்
தை வாங்கி,
ஜனத்தில் பிரதானமானவரிலும் ஆசாரி
யரில் பிரதானமானவரிலும் சிலரைக்
கூட்டிக்கொண்டு,
2 இன்னும் குமாரனின் பள்ளத்தாக்குக்
குச்சென்று, உடையோட்டு வாசலருகே
நின்று,
நான் உனக்குச் சொல்லும் வார்த்தை
களை அங்கே சத்தமிட்டுக் கூறு:
3 யூதாவின் ராஜாக்களே, எருசலேமின்
குடிகளே, யெகோவாவின் வார்த்தை
களைக் கேளுங்கள்;
இஸ்ரவேலின் கடவுளாகிய சேனைகளின்
யெகோவா சொல்லுகிறார்:
இதோ, நான் இந்த ஸ்தலத்தின்மேல்
ஒரு தீங்கை வரப்பண்ணுவேன்,
அதைக் கேட்கிற யாவருடைய காதுக
ளிலும் அது தொனித்துக்கொண்டே
யிருக்கும்.
4 அவர்கள் என்னை விட்டுவிட்டு இந்த
ஸ்தலத்தை அந்திய ஸ்தலமாக்கி,
தாங்களும் தங்கள் பிதாக்களும் யூதா
வின் ராஜாக்களும் அறியாதிருந்த அந்
திய தேவர்களுக்கு அதிலே தூபங்
காட்டி,
இந்த ஸ்தலத்திலே குற்றமில்லாதவர்
களின் இரத்தத்தை நிரப்பினார்களே.
5 தங்கள் பிள்ளைகளைப் பாகாலுக்குத் தகன
பலிகளாக அக்கினியில் தகனிக்கும்படி
பாகாலின் மேடைகளைக் கட்டினார்களே.
இவைகளை நான் கட்டளையிட்டதுமில்லை,
சொன்னதுமில்லை,
இவைகள் என் இருதயத்தில் தோன்றின
துமில்லை.
6 ஆதலால், இதோ நாட்கள் வரும்,
அப்பொழுது இந்த ஸ்தலம் தோப்பேத்
தென்றும் இன்னும் குமாரனின் பள்
ளத்தாக்கென்றும் வழங்காமல்
சங்காரப் பள்ளத்தாக்கென்று பெயர்பெ
றும்.
7 அப்பொழுது நான் யூதாவையும் எருச
லேமையும் இந்த ஸ்தலத்திலே ஆலோச
னையற்றவர்களாக்கி,
அவர்கள் சத்துருக்களுக்குமுன்பாக
அவர்களைப் பட்டயத்திலும்
அவர்கள் பிராணனை வாங்கத் தேடுகிற
வர்களின் கையிலும் விழப்பண்ணி,
அவர்கள் பிரேதங்களை ஆகாயத்தின் பற
வைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்
கும் இரையாகக்கொடுத்து,
8 இந்த நகரத்தை பிரமிப்பும் பழிப்புமா
கச் செய்வேன்;
அதைக் கடந்துபோகிறவன் எவனும்
பிரமித்து, அதின் சகல வாதைகளி
னிமித்தமும் ஈசலிடுவான்.
9 அவர்கள் சத்துருக்களும் அவர்கள் பிரா
ணனை வாங்கத் தேடுகிறவர்களும்,
அவர்களை முற்றுகைபோட்டு இடுக்கஞ்
செய்யும்போது
அவர்கள் தங்கள் குமாரரின் மாம்சத்தை
யும் தங்கள் குமாரத்திகளின் மாம்சத்தை
யும் தின்னும்படி செய்வேன்;

அவனவன் தன்தன் அயலான் மாம்சத்
10 தைத் தின்பான் என்று சொல்லி, உன்
னோடேகூட வந்த மனுஷர் கண்காண
அந்த மட்கலத்தை உடைத்துப்போட்டு,
அவர்களைப் பார்த்து:
11 சேனைகளின் யெகோவா சொல்வதைக்
கேளுங்கள்,
திரும்பச் செப்பனிடமுடியாத மட்கலத்
தை உடைப்பதுபோல
நான் இந்த ஜனத்தையும் இந்த நகரத்
தையும் உடைத்துப்போடுவேன்;
அடக்கம்பண்ணுவதற்கு வேறே இட
மில்லாதபடியினால் தோப்பேத்திலே சவங்
களை அடக்கம்பண்ணுவார்கள்.
12 இவ்விதமாக நான் இந்த ஸ்தலத்துக்கும்
இந்தக் குடிகளுக்கும் செய்து
—இது யெகோவாவின் திருவாக்கு—
இந்த நகரத்தைத் தோப்பேத்தைப்போ
லாகச் செய்வேன்.
13 எருசலேமின் வீடுகளும் யூதா ராஜாக்க
ளின் வீடுகளும் தோப்பேத்தாகிய ஸ்தலத்
தைப்போல் இட்டுப்பட்டவைகளாகும்;
அந்த வீடுகளனைத்தின்மேலும் வானத்
தின் சகல சேனைக்கும் தூபங்காட்டி,
அந்திய தேவர்களுக்குப் பானபலிகளை
வார்த்தார்களே
என்று சொல் என்றார்.
14 பின்பு எரேமியா, யெகோவா தன்
னைத் தீர்க்கதரிசனஞ்சொல்ல அனுப்
பின தோப்பேத்திலிருந்து திரும்பி,
யெகோவாவின் ஆலய பிராகாரத்திலே
வந்து நின்று, ஜனமனைத்துக்கும் இதைச்
சொன்னான்:
15 இஸ்ரவேலின் கடவுளாகிய சேனைகளின்
யெகோவா சொல்வதைக் கேளுங்கள்,
நீங்கள் வணங்காக் கழுத்துள்ளவர்க
ளாகி என் வார்த்தைகளைக் கேளாதபடி
யினால்,
இதோ, நான் இந்த நகரத்துக்கு விரோத
மாய்ப் பேசின எல்லாத் தீங்கையும்
இதின்மேலும் இதற்கடுத்த ஊர்களின்
மேலும் வரப்பண்ணுவேன்
என்கிறார்.

**20** எரேமியா இந்த வார்த்தைகளைத்
தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறதை
இம்மேரின் குமாரனும் யெகோவாவின்
ஆலயத்தைப் பிரதான விசாரிப்புக்காரனு
மாகிய
ஆசாரியன் பஷ்கூர் கேட்டபோது,
2 அவன் எரேமியா தீர்க்கதரிசியை
அடித்து,
அவனை யெகோவாவின் ஆலயத்தினுட்
செல்லும்
மேலேயுள்ள பென்யமீன் வாசலண்டை
யிலே தொழுவிலடித்தான்.
3 மறுநாளில் பஷ்கூர் எரேமியாவைத்
தொழுமரத்திலிருந்து விடுவித்தபோது
எரேமியா அவனிடம்: யெகோவா உன்
பேரை பஷ்கூர் என்று சொல்லாமல்
மாகோர் மீசாபீப் என்று சொல்லுகி
றார்.
4 யெகோவா உனக்குச் சொல்வதைக்
கேள்:
இதோ, நான் உன்னை, உனக்கும் உன்
சகல நேசிதருக்கும் திகில் உண்டாக்
கும் ஏதுவாக்குவேன்;
உன் கண்காண இவர்கள் சத்துருக்
களின் பட்டயத்தால் விழுவார்கள்;
யூதா அனைத்தையும் நான் பாபிலோன்
ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பேன்;
அவன் அவர்களைச் சிறைபிடித்துப் பாபி
லோனுக்குக் கொண்டுபோய்ப் பட்டயத்
தால் வெட்டிப்போடுவான்.
5 இந்த நகரத்தின் எல்லாச் செல்வத்தை
யும், அதின் எல்லாச் சம்பத்தையும்,
அதின் அருமையான சகல பொருட்களை
யும், யூதா ராஜாக்களின் சகல பொக்
கிஷங்களையும்,
நான் அவர்கள் சத்துருக்கள் கையில்
ஒப்புக்கொடுப்பேன்;
அவர்கள் அவைகளைக் கொள்ளையிட்டு
பாபிலோனுக்குக் கொண்டுபோவார்கள்.
6 பஷ்கூரே, நீயும் உன் வீட்டில் வசமா
யிருக்கிற யாவரும் சிறைபோகிப்போவீர்
கள்;
நீ பாபிலோனுக்குப்போய் அங்கே
மரித்து, அங்கேயே அடக்கம்பண்ணப்
படுவாய்,
நீ கள்ளத் தீர்க்கதரிசனம் சொல்லிவந்த
உன் நேசிதர் யாவருக்கும் அப்படியே
நேரிடும்
என்கிறார் என்றான்.
7 யெகோவாவே என்னை இணங்கச்
செய்தீர், நான் இணங்கினேன்.
நீர் என்னிலும் பலமுடையவராய்
என்னை மேற்கொண்டீர்;
நாளெல்லாம் நகைப்புக்கு இடமா
னேன், எல்லாரும் என்னைப் பரிகாசம்
செய்கிறார்கள்.
8 நான் வாய்திறக்கும்போதெல்லாம் கதறு
கிறேன்;
கொடுமையே, அழிவே என்று சத்த
மிட்டு அலறுகிறேன்;

யெகோவாவினால் வந்த வார்த்தை எனக்கே நிந்தையாயிற்று, நாளெல்லாம் பரிகாசமுமாயிற்று.

9 இனி நான் அவரை நினைக்கவும், அவர் நாமத்தில் பேசவுமாட்டேன் என்பேனாகில் என் எலும்புகளில் அடைபட்ட அக்கினியாய் என் இருதயத்திலே எரிந்தது; அதைப் பொறுத்துப் பொறுத்து இளைத்தேன், என்னால் சகிக்க முடியாமற்போயிற்று.

10 அநேகர் சொல்லும் அவதூறைக் கேட்டேன், எப்புறமும் திகிலானது; குற்றஞ்சாட்டுங்கள் என்கிறார்கள், நாங்கள் குற்றஞ்சாட்டுவோம் என்கிறார்கள்; என் சிநேகிதர் அனைவரும் நான் தவறி விழும்படி காத்திருக்கிறார்கள்; ஒருவேளை மருண்டுபோவான், நாம் அவனை மேற்கொண்டு, அவனிடம் பழிவாங்குவோம் என்கிறார்கள்.

11 யெகோவாவோ என்னோடிருக்கிறார், அவர் வல்லமை மிகுந்த பராக்கிரமசாலி; ஆதலால் என்னைப் பிடிக்கத்தொடருவோர் மேற்கொள்ளாமல் இடறுவார்கள்; அவர்கள் புத்தியில்லாதவர்களானதால் மிகுந்த வெட்கத்துக்குள்ளாவார்கள்; அழியா இலச்சை அவர்களுக்கு உண்டாகும், அது மறக்கப்படுவதில்லை.

12 சேனைகளின் யெகோவாவே, நீர் நீதிமானை ஆராய்ந்தறிகிறவர், நினைவுகளையும் இருதயத்தையும் பார்த்தறிகிறவர், நீர் அவர்களிடம் பழிவாங்குவதை நான் காண்பேனாக; என் வழக்கை உம்மிடம் விவரித்துச் சொல்லிவிட்டேனே.

13 யெகோவாவைப் பாடுங்கள், யெகோவாவைத் துதியுங்கள்; அவர் எளியவனுடைய ஆத்துமாவைத் தீயோர்கைக்குத் தப்புவிக்கிறாரே.

14 நான் பிறந்த நாள் சபிக்கப்படுக; என் தாயார் என்னைப்பெற்ற நாளுக்கு ஆசீர்வாதமில்லாதேபோக.

15 என் தகப்பனின் மனங்களிக்கும்படி, உமக்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்ததென்று நற்செய்தியாக அறிவித்தவன் சாபத்திற்குள்ளாக.

16 பரிதாபமின்றி யெகோவா கவிழ்த்துப்போட்ட பட்டணங்களைப்போல் அவன் ஆக;

காலமே கூக்குரலையும் மத்தியான வேளையிலே யுத்த ஆரவாரத்தையும் அவன் கேட்க.

17 கர்ப்பத்திலேயே நான் என் கொல்லப்படவில்லை, என் தாயாரே எனக்குப் பிரேதக்குழியாகி, என்னை என்றும் கர்ப்பத்திலேயே சுமந்திருந்தால் நன்றாம்!

18 நான் உழைப்பையும் சஞ்சலத்தையும் அநுபவித்து, என் நாட்களை வெட்கத்தில் கழிக்கும்படி கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டதேன்?

**21** சிதெக்கியா ராஜா மல்கியாவின் குமாரன் பஷ்கூரையும் மாசேயாவின் குமாரனாகிய ஆசாரியன் செப்பனியாவையும் எரேமியாவினிடம் அனுப்பி:

2 நீர் எங்களுக்காக யெகோவாவினிடம் விசாரியும்; பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எங்களுக்கு விரோதமாய் யுத்தஞ் செய்கிறான்; ஒருவேளை யெகோவா தமது எல்லா அற்புதச்செயலின்படியேயும் எங்களுக்குச் செய்து, அவனை எங்களை விட்டுப்போகப்பண்ணுவார் என்று சொன்னபோது

3 யெகோவாவின் வார்த்தை எரேமியாவுக்கு வரவே அவன் அவர்களுக்குப் பதிலுரைத்த,

4 நீங்கள் சிதெக்கியாவினிடம் இப்படிச் சொல்லுங்கள்: இஸ்ரவேலின் தேவனாகிய யெகோவா சொல்வது இதுவே, உங்களை அலங்கத்துக்குவெளியே முற்றுகைபோட்ட பாபிலோன் ராஜாவோடும் கல்தேயரோடும், நீங்கள் யுத்தம்பண்ணும்படி உங்கள் கைகளில் பிடித்திருக்கிற யுத்தஆயுதங்களை, இதோ, நான் திருப்பிவிடுவேன், அவைகளை இந்த நகரத்தினுள்ளே வரச்செய்வேன்;

5 நான் நீட்டின கரத்தினாலும் புஜபலத்தினாலும் கோபத்தோடும் உக்கிரத்தோடும் கடுங்கோபத்தோடும் உங்களுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுவேன்.

6 இந்நகரத்தின் குடிகளை, மனுஷரையும் மிருகங்களையும், சங்கரிப்பேன்; மகா கொள்ளைநோயால் சாவார்கள்.

7 அதன்பின்பு — இது யெகோவாவின் திரு
வாக்கு —
நான் யூதா ராஜாவாகிய சிதெக்கியாவை
யும், அவன் ஊழியரையும், இந்த ஜனத்
தையும்,
இந்நகரத்திலே கொள்ளைநோய்க்கும் பட்
டயத்துக்கும் பஞ்சத்துக்கும் தப்பி மீந்த
வர்களையும்,
பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்
சாரின் கையிலும், அவர்கள் சத்துருக்
களின் கையிலும்,
அவர்கள் பிராணனை வாங்கத்தேடுகிற
வர்களின் கையிலும் ஒப்புக்கொடுப்
பேன்;
அவன் அவர்களை வாள்வாய்க்கு இரை
யாக்குவான்;
அவன் அவர்களைத் தப்பவிடுவதுமில்லை,
மன்னிப்பதுமில்லை, அவர்களுக்கு இரங்
குவதுமில்லை என்கிறார்.
8 இந்த ஜனத்துக்கு அறிவிக்கும்படி
யெகோவா பின்னும் சொல்வது இதுவே:
இதோ, நான் உங்கள்முன்னே ஜீவவழி
யையும் மரண வழியையும் வைக்கி
றேன்.
9 இந்த நகரத்திலே தரித்திருக்கிறவன் பட்
டயத்தாலும் பஞ்சத்தாலும் கொள்ளை
நோயாலும் சாவான்;
உங்களை முற்றுகைபோடும் கல்தேயர்
வசமாக வெளியேறிப் போய்விடுகிறவ
னே பிழைப்பான்;
அவன் பிராணனே அவனுக்குக்கிடைக்
கும் கொள்ளைப்பொருளாகும்.
10 என் முகத்தை இந்த நகரத்துக்குநேராய்
நன்மைக்கென்றல்ல,
தீமைக்கென்றே திருப்பினேன், இது
யெகோவாவின் திருவாக்கு.
அது பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்
புக்கொடுக்கப்படும்;
அவன் அக்கினியால் அதைச் சுட்டெரிப்
பான் என்கிறார்.
11 யூதா ராஜாவின் வீட்டாரைப்பற்றிய
யெகோவாவின் வார்த்தையைக் கேளுங்
கள்;
12 தாவீதின் வீட்டாரே, காலைதோறும் நியா
யத்தை விசாரித்து,
ஒடுக்குபவன் கையினின்று கொள்ளை
யிடப்பட்டவனை விடுவியுங்கள்;
அப்படிச் செய்யாவிட்டால் உங்கள் தீய
செயல்களினிமித்தம்
என் உக்கிரம் அக்கினிபோல் எழும்பி,
அவிப்பார் இல்லாமல் எரியுமே
என்று யெகோவா சொல்லுகிறார்.

இதோ, பள்ளத்தாக்கில் வாசம்பண்
ணுகிறவளே, 13
சமனிலக் கன்மலைபோன்றவளே,
— இது யெகோவாவின் திருவாக்கு —
எங்களுக்கு விரோதமாய் வருகிறவன்
யார்?
எங்கள் வாசஸ்தலங்களுக்குள் வருகிற
வன் யார் என்று சொல்லுகிறீர்களே,
உங்கள் செயல்களின் விகிதப்படியே 14
நான் உங்களைத் தண்டிப்பேன்;
— இது யெகோவாவின் திருவாக்கு —
நான் அவள் காட்டிலே தீக்கொளுத்து
வேன்;
அவளுக்கு எப்புறத்திலுமுள்ளவற்றை
அது பட்சிக்கும் என்கிறார்.

யெகோவா இப்படிச் சொன்னார்; **22**
நீ யூதா ராஜாவின் அரமனைக்குப்போய்
அங்கே இதைச் சொல்லவேண்டும்,
தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிற 2
யூதா ராஜாவே,
நீரும் உமது ஊழியரும் இந்த வாசல்கள்
வழியாய் உட்செல்லும் உமது ஜன
மும்
யெகோவாவின் வார்த்தையைக் கேளுங்
கள்.
யெகோவா சொல்வது இதுவே, 3
நீங்கள் நியாயமும் நீதியும்செய்து,
ஒடுக்குபவன் கையினின்று கொள்ளை
யிடப்பட்டவனை விடுவியுங்கள்;
நீங்கள் அந்நியனையும் திக்கற்றவனையும்
விதவையையும் ஒடுக்கிக் கொடுமை
செய்யவேண்டாம்;
இவ்விடத்திலே குற்றமில்லாத இரத்தத்
தைச் சிந்தவும் வேண்டாம்.
இவ்வார்த்தையின்படியே நீங்கள் செய் 4
வீர்களாகில்,
தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கும்
ராஜாக்கள் ரதங்கள்மேலும் குதிரைகள்
மேலும் ஏறித்
தங்கள் ஊழியரோடும் தங்கள் தங்கள்
ஜனத்தோடும்
இந்த அரமனை வாசல்களின் வழியாய்
உட்பிரவேசிப்பார்கள்.
நீங்கள் இந்த வார்த்தைகளைக் கேளாமற் 5
போவீர்களேயாகில்
என் பேரில் நான் ஆணையிட்டு — இது
யெகோவாவின் திருவாக்கு —
இந்த அரமனை பாழாய்ப்போம் என்கி
றேன்.
யூதா ராஜாவின் வீட்டைப்பற்றி யெகோ 6
வா சொல்வது இதுவே:

நீ எனக்குக் கிலெயாத்தைப்போலவும்
லீபனோனின் உச்சியைப்போலவும் இரு
க்கிறாய்;
நானோ உன்னை மெய்யாகவே வனாந்தர
த்தைப்போலவும் குடியில்லாத பட்டணங்
களைப்போலவும் ஆக்கிவிடுவேன்.
7 உனக்கு விரோதமாகப் பிரதிஷ்டை
செய்வேன்;
உன் சிறந்த கேதுருக்களை அவர்கள்
வெட்டி அக்கினியில் போடுவார்கள்.
8 இந்த நகரத்தைக் கடந்துசெல்லும் பல
ஜாதியார் ஒருவரோடொருவர் பேசி:
இந்தப் பெரிய நகரத்துக்கு யெகோவா
ஏன் இப்படிச் செய்தார் என்று கேட்
கவே,
9 அவர்கள் தங்கள் கடவுளாகிய யெகோ
வாவின் உடன்படிக்கையை விட்டு
விட்டு,
அந்திய தேவர்களைத் தொழுதுகொண்டு,
அவைகளைச் சேவித்தபடியினாலே
இப்படியாயிற்று என்று சொல்வார்கள்.
10 மரித்தவனிமித்தம் அழவேண்டாம்,
அவனிமித்தம் பரிதபிக்கவும் வேண்
டாம்,
கொண்டுபோகப்பட்டவனிமித்தமே அ
ழுங்கள்;
அவன் இனித் திரும்பி வருவதுமில்லை,
தான் பிறந்த இடத்தைக் காண்பது
மில்லை.
11 யோசியாவின் குமாரனுகிய சல்லூம் என்
னும் யூதா ராஜா
தன் தகப்பனுகிய யோசியாவின் பட்டத்
துக்கு வந்து அரசாண்டு,
இவ்விடத்தை விட்டுப்போனானே,
அவனைப்பற்றி யெகோவா இப்படிச்
சொல்லுகிறார்:
அவன் இனி இங்கே திரும்பிவருவதில்லை,
12 தான் சிறைப்பட்டுப்போன இடத்திலே
யே மரிப்பான்;
இந்த தேசத்தை அவன் இனிக் காண்ப
தேயில்லை.
13 அநீதியினாலே தன் வீட்டையும் அநி
யாயத்தினாலே தன் மேலறைகளையும்
கட்டுகிறவனுக்கு ஐயோ கேடாம்!
அவன் தன் அயலானைச் சும்மா உழைக்
கச் செய்கிறான், அவனுக்குக் கூலி கொ
டுக்கிறதில்லை.
14 அவன் தனக்கு விஸ்தாரமான வீட்டை
யும், காற்று வீசும் விசாலமான அறை
களையும்,
கட்டுவேனென்று சொல்லுகிறான்;
தனக்கெனப் பலகணிகளை அமைத்துக்
கேதுரு பலகைகளால் சுவரை மூடிச்
சிவப்புவருணம் பூசுகிறான்.
15 நீ கேதுரு மரங்களைவைத்துக் கட்டுவதில்
முதன்மையாயிருப்பதினாலேயே ராஜா
வோ?
உன் தகப்பன் எல்லாரையும்போலவே
புசித்துக் குடித்துவந்தான்.
நியாயமும் நீதியும் செய்துவந்ததினாலே
அவன் சுகமாய் வாழ்ந்திருந்தான்.
16 அவன் சிறுமையும் எளிமையுமானவ
னின் நியாயத்தை விசாரித்தான்;
அப்பொழுது சுகவாழ்விருந்தது,
அதுவே என்னை அறிகிற அறிவல்ல
வா,
இது யெகோவாவின் திருவாக்கு.
17 உன் கண்களும் உன் மனதுமோ அநி
யாய லாபத்தின்மேல் நோக்கமாயிருக்
கின்றன,
குற்றமிலா இரத்தத்தைச் சிந்தவும் ஒடுக்
கவும் கொறுக்கவும், நோக்குவதேயன்றி
வேறல்ல.
18 ஆகையால் யோசியாவின் குமாரனுகிய
யோயாக்கீம் என்கிற யூதா ராஜாவைப்
பற்றி
யெகோவா இப்படிச் சொல்லுகிறார்:
ஐயோ! என் சகோதரனே, ஐயோ! சகோ
தரியே என்று அவனிமித்தம் புலம்புவ
தில்லை,
ஐயோ! ஆண்டவனே, ஐயோ! அவரு
டைய மகத்துவமே என்று அவனிமித்
தம் புலம்புவதில்லை.
19 ஒரு கழுதை புதைக்கப்படுவதுபோல
அவன் புதைக்கப்படுவான்;
அவனை எருசலேமின் வாசல்களுக்கு
அப்பால் இழுத்தெறிவார்கள்.
20 லீபனோன் மேலேறி அலறு,
பாசானில் உரத்த சத்தமிடு, அபாரீமி
லிருந்து அலறிக்கொண்டிரு;
உனக்கு அருமையானவர் அனைவரும்
அழிந்தார்கள்.
21 நீ சுகமாய் வாழ்ந்திருக்கும்போதே நான்
உனக்குச் சொன்னேன், நீ கேளேன் என்
றாய்;
உன் சிறுவயதுமுதல் நீ என் சத்தத்தைக்
கேளாமற் போகிறதே உன் வழக்
கம்.
22 உன் மேய்த்து நடத்துவோரைக் கடுங்
காற்றே மேய்த்து நடத்தும்,
உனக்கு அருமையானவர்கள் சிறைப்
பட்டுப் போவார்கள்;

அப்போதல்லவோ உன் சகல தீமையினிமித்தமும் நீ இலச்சைக்கும் அவமானத்துக்கும் உள்ளாவாய்.

23 லீபனோனில் வசித்துக் கேதுரு மரங்களில் கூடு கட்டிக்கொண்டிருக்கிறவளே, வேதனைகளும் பிள்ளை பெறுகிறவர்களுக்கொத்த வாதையும் உனக்கு வருகையில், ஐயோ, உனக்கு எவ்வளவு பரிதாபம்!

24 என் ஜீவன்மேல் ஆணையாகச் சொல்லுகிறேன், — இது யெகோவாவின் திருவாக்கு— யூதா ராஜாவாகிய கொனியா, யோயாக்கீமின் குமாரன், என் வலதுகையில் முத்திரை மோதிரமாயிருந்தாலும், அதிலிருந்து உன்னைக் கழற்றி எறிவேன்.

25 உன் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையிலும் நீ பயப்படுகிறவர்களின் கையிலும் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கையிலும் கல்தேயரின் கையிலும் உன்னை ஒப்புக்கொடுப்பேன்.

26 உன்னையும் உன்னைப்பெற்ற தாயையும் நீங்கள் பிறந்த இடமல்லாத அந்திய தேசத்திலே துரத்திவிடுவேன், அங்கேயே சாவீர்கள்.

27 திரும்பவேண்டுமெனத் தங்கள் ஆத்துமா வாஞ்சிக்கும் தேசத்துக்கு அவர்கள் திரும்பி வருவதில்லை.

28 கொனியா என்கிற இந்த மனுஷன் மதிப்பற்ற உடைந்த பானையோ? ஒருவரும் விரும்பாத சட்டியோ? அவனும் அவன் சந்ததியாரும் தள்ளுண்டு தாங்கள் அறியாத தேசத்திலே துரத்திவிடப்பட்டதேன்?

29 தேசமே! தேசமே! தேசமே! யெகோவாவின் வார்த்தையைக் கேள்.

30 யெகோவா இப்படிச் சொல்லுகிறார்: இந்தப் புருஷன் சந்தானமற்றவன், தன் நாட்களில் வாழ்வடையாதவன் என்று இவனைப்பற்றி எழுதிவிடுங்கள்; அவன் சந்ததியாரில் ஒருவனுகிலும் வாழ்ந்து தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருப்பதில்லை, யூதாவிலே இனி அரசாளப் போவதுமில்லை.

**23** என் மேய்ச்சலின் ஆடுகளைக் கெடுத்துச் சிதறடிக்கிற மேய்ப்போருக்கு ஐயோ கேடாம்! இது யெகோவாவின் திருவாக்கு.

2 ஆதலால் இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா தமது ஜனத்தை மேய்க்கிற மேய்ப்பரைப் பற்றி இப்படிச் சொல்லுகிறார்: நீங்கள் என் ஆடுகளைச் சிதறடித்து அவைகளைத் துரத்திவிட்டீர்கள், நீங்கள் அவைகளைப் பார்த்துக்கொள்ளவில்லை, இதோ, உங்கள் செயல்களின் தீமைக்குத் தக்கபடி நான் உங்களைப் பார்த்துக்கொள்வேன்; இது யெகோவாவின் திருவாக்கு.

3 என் ஆடுகளில் மீந்திருப்பவைகளைத் துரத்தியிருந்த சகல தேசங்களிலுமிருந்து நான் சேர்த்துக்கொள்ளுவேன், அவைகளைத் திரும்ப அவைகளின் தொழுவங்களுக்குக் கொண்டுவரவே அவைகள் பலுகிப்பெருகும்.

4 நான் அவைகள்மேல் மேய்ப்பவர்களை ஏற்படுத்துவேன், அவர்கள் அவைகளை மேய்த்து நடத்துவார்கள்; இனி அவைகள் பயப்படுவதுமில்லை, திகில்படுவதுமில்லை, காணமற்போவதுமில்லை; இது யெகோவாவின் திருவாக்கு.

5 இதோ நாட்கள் வரும்— இது யெகோவாவின் திருவாக்கு— அப்பொழுது தாவீதுக்கு நீதியுள்ள ஒன்றை எழும்பப்பண்ணுவேன்; அவர் ராஜாவாக அரசாண்டு சித்தி பெறுவார், பூமியிலே நியாயத்தையும் நீதியையும் செய்வார்.

6 அவர் நாட்களில் யூதா இரட்சிக்கப்படும், இஸ்ரவேல் பயமின்றிக் குடியிருக்கும்; யெகோவா நமது நீதி என்பதுவே அவருக்குத் தரிக்கப்படும் நாமம்.

7 ஆதலால், இதோ நாட்கள் வரும்,— இது யெகோவாவின் திருவாக்கு— அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துவந்த யெகோவாவின் ஜீவன்மேல் ஆணை என்று சொல்லாமல்

8 இஸ்ரவேல் வீட்டின் சந்ததியாரை வடதேசத்திலும் நான் அவர்களைத் துரத்திவிட்ட சகல தேசங்களிலுமிருந்து அழைத்துக்கொண்டுவந்த யெகோவாவின் ஜீவன்மேல் ஆணையென்று சொல்வார்கள், அப்பொழுது அவர்கள் தங்கள் சுயதேசத்தில் குடியிருப்பார்களே என்றார்.

9 தீர்க்கதரிசிகளைப்பற்றியது:
என் இருதயம் எனக்குள்ளே நொறுங்குகிறது, என் எலும்புகளெல்லாம் பலமற்றுப்போகின்றன;
யெகோவாவினிமித்தமும் அவருடைய பரிசுத்த வார்த்தைகளினிமித்தமும் நான் வெறித்திருக்கிற மனுஷனைப்போலவும் திராட்சரசம் மேற்கொண்டவனைப் போலவும் இருக்கிறேன்.
10 தேசத்திலே விபசாரக்காரர் நிறைந்தார்கள், தேசம் சாபத்தினிமித்தம் துக்கிக்கிறது,
வனாந்தர மேய்ச்சல்கள் வாடிப்போகின்றன;
அவர்கள் ஓடித்தேடுவது தீமையே, அநியாயஞ்செய்வதில் அவர்கள் வலிமையுள்ளவர்கள்.
11 தீர்க்கதரிசியும் ஆசாரியனும் தெய்வ பிகழ்வோரே,
என் ஆலயத்திலும் அவர்கள் தீமையைக் கண்டேன்;
இது யெகோவாவின் திருவாக்கு.
12 ஆதலால், அவர்கள் வழி அவர்களுக்கு இருண்ட சறுக்குப்பாதையாம்,
அதிலே தள்ளுண்டு விழுவார்கள்,
தண்டனை வருஷமெனும் தீங்கை நான் அவர்கள்மேல் வரப்பண்ணுவேன்;
இது யெகோவாவின் திருவாக்கு.
13 சமாரியாவின் தீர்க்கதரிசிகளில் கேடானதைக் கண்டேன்;
பாகாலைக்கொண்டு தீர்க்கதரிசனஞ் சொல்லி என் ஜனமாகிய இஸ்ரவேலைத் தவறிப்போகச் செய்தார்கள்.
14 எருசலேமின் தீர்க்கதரிசிகளிலும் பயங்கரமான காரியத்தைக் கண்டேன்;
விபசாரம் பண்ணிப் பொய்யிலே நடந்து,
எவனும் தன் தீமையை விட்டுத் திரும்பாதபடி
தீமைசெய்வோரைத் தைரியப்படுத்துகிறார்கள்;
அவர்கள் எல்லாரும் எனக்குச் சோதோமைப்போலவும்
அதில் வசிப்போர் கொமோராவைப்போலவும் இருக்கிறார்கள்.
15 ஆதலால் சேனைகளின் யெகோவா தீர்க்கதரிசிகளைப்பற்றி இப்படிச் சொல்லுகிறார்:
இதோ, நான் அவர்களுக்குப் புசிக்க எட்டியையும்
குடிக்க விஷங்கலந்த தண்ணீரையும் கொடுப்பேன்;
எருசலேமின் தீர்க்கதரிசிகளிலிருந்து தெய்வத்தை இகழும் தீயொழுக்கம் தேசமெங்கும் பரவினதே.
16 யெகோவா சொல்வதைக் கேளுங்கள்:
உங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேட்கவேண்டாம்,
அவர்கள் உங்களுக்கு வீணானவற்றைப் போதிக்கிறார்கள்;
அவர்கள் உரைப்பது யெகோவாவின் வாக்கல்ல, தாங்கள் யூகித்த தரிசனமே.
17 அவர்கள் என்னை அசட்டைபண்ணுகிறவர்களிடம்:
உங்களுக்கு வாழ்வுண்டாகுமென யெகோவா சொன்னரென்று சொல்லி வருகிறார்கள்;
தங்கள் இதயக்கடினத்திலே நடக்கிற யாவரிடமும்,
உங்களுக்குத் தீங்குவராதெனச் சொல்லுகிறார்கள்.
18 யெகோவாவின் ஆலோசனைச் சபையிலே நின்று அவர் வார்த்தையைக் கேட்டறிந்தவன் யார்?
அவர் வார்த்தையைக் கவனித்துக் கேட்டவன் யார்?
19 இதோ, யெகோவாவின் உக்கிரப்பெருங் காற்று வெளிப்பட்டது, அது சுழல் காற்றே;
தெய்வபயமற்றோர் தலைமேல் அது பலமாய் மோதும்.
20 தமது இதய யோசனைகளைச் செய்து நிறைவேற்றுமளவும் யெகோவாவின் கோபம் தணியாது;
கடைசி நாட்களில் அதைச் சரியாய் உணருவீர்கள்.
21 அந்தத் தீர்க்கதரிசிகளை நான் அனுப்பாதிருந்தும் அவர்கள் ஓடினார்கள்;
அவர்களுக்குச் சொல்லாதிருந்தும் அவர்கள் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள்.
22 அவர்கள் என் ஆலோசனைச் சபையிலே நின்றிருந்தார்களேயாகில்
அவர்கள் என் வார்த்தைகளை என் ஜனத்துக்குத் தெரிவித்து,
அவர்களைத் தங்கள் தீயவழிகளையும் தங்கள் செய்கைகளின் தீமையையும் விட்டுத் திரும்பச்செய்வார்கள்.
23 நான் சமீபத்திற்கு மாத்திரமா கடவுள்? இது யெகோவாவின் திருவாக்கு;
நான் தூரத்திற்கும் கடவுள் அல்லவோ?
24 எவனாகிலும் தன்னை நான் காணுதபடி மறைவிடங்களில் ஒளித்துக்கொள்ளலாகுமோ?

இது யெகோவாவின் திருவாக்கு;
நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ?
இது யெகோவாவின் திருவாக்கு.
25 சொப்பனங்கண்டேன், சொப்பனங்கண்டேன் என்று
என் நாமத்தைச்சொல்லிப்பொய்த்தீர்க்கதரிசனம் உரைக்கிற தீர்க்கதரிசிகள்
சொல்லுகிறதைக் கேட்டேன்.
26 எதுவரைக்கும் இப்படியிருக்கும்?
பொய்த் தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் இருதயத்தில் ஏதாகிலும் உண்டோ?
இவர்கள் தங்கள் இதய வஞ்சனையையே தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறவர்கள்.
27 என் ஜனத்தின் பிதாக்கள் பாகாலினிமித்தம்
கொண்டிருந்து என் நாமத்தை மறந்தது போல,
இவர்கள் தங்கள் அயலாருக்குச் சொல்லுகிற தங்கள் சொப்பனங்களினாலே
என் ஜனம் என் நாமத்தை மறந்துவிடும்படி செய்யப்பார்க்கிறார்கள்.
28 சொப்பனங்கண்ட தீர்க்கதரிசி சொப்பனத்தையே சொல்லவேண்டும்,
என் வார்த்தையைப் பெற்றவனே என் வார்த்தையையே உண்மையாய்ச் சொல்லவேண்டும்;
வைக்கோல் கூளம் கோதுமைக்கொப்பாமோ?
இது யெகோவாவின் திருவாக்கு.
29 என் வார்த்தை அக்கினிபோன்றதல்லவா?
இது யெகோவாவின் திருவாக்கு.
கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைபோன்றதல்லவா?
30 ஆகையால், ஒருவரிடமிருந்தொருவர் என் வார்த்தைகளைத் திருடும்
தீர்க்கதரிசிகளுக்கு, இதோ, நான் விரோதமாயிருக்கிறேன்; இது யெகோவாவின் திருவாக்கு.
31 இதோ, அந்த தீர்க்கதரிசிகளுக்கு நான் விரோதமாயிருக்கிறேன்,
இது யெகோவாவின் திருவாக்கு.
அவர்கள் தங்கள் நாவின் சொல்லையே வழங்கி,
திருவாக்கு என்று சொல்லுகிறார்களே.
32 இதோ, பொய்ச் சொப்பனங்களைத் தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறவர்களுக்கு நான் விரோதமாயிருக்கிறேன்,
இது யெகோவாவின் திருவாக்கு.
அவர்கள் அவைகளைச் சொல்லித் தங்கள் பொய்களினாலும் தங்கள் வீம்புகளினாலும் என் ஜனத்தைத் தவறிப்போகச் செய்கிறார்களே.
நான் அவர்களை அனுப்பினதுமில்லை, அவர்களுக்குக் கட்டளையிட்டதுமில்லை;
அவர்கள் இந்த ஜனத்துக்குச் சிறிதும் பிரயோஜனமாய் இருப்பதுமில்லை,
இது யெகோவாவின் திருவாக்கு.
33 இந்த ஜனம், தீர்க்கதரிசியோ ஆசாரியனோ உன்னைப் பார்த்து,
யெகோவாவுடைய கடினவாக்கின் பாரம் என்ன என்று உன்னைக்கேட்டால்,
நீங்களே அந்த பாரம், உங்களைத் தள்ளிவிடுவேன்
என்று அவர்களுக்குச் சொல்; இது யெகோவாவின் திருவாக்கு.
34 யெகோவாவுடைய கடினவாக்கின் பாரம் என்று சொல்லுகிறவன்,
தீர்க்கதரிசியானாலும் ஆசாரியனானாலும் ஜனத்திலொருவனானாலும் சரியே,
அந்த மனுஷனையும் அவன் வீட்டாரையும் தண்டிப்பேன்.
35 யெகோவா பதிலுரைத்ததென்ன? யெகோவா சொன்னதென்ன?
என்பதே நீங்கள் ஒவ்வொருவரும் தன் அயலானுக்கும்
தன் சகோதரனுக்கும் சொல்லவேண்டியது.
36 யெகோவாவின் கடினவாக்கின் பாரம் என்பதை இனி நினைக்கவேண்டாம்,
அவனவன் வார்த்தையே அவனவனுக்குப் பாரமாகும்;
நமது கடவுளாகிய சேனைகளின் யெகோவா என்கிற
ஜீவனுள்ள கடவுளின் வார்த்தைகளைப் புரட்டுகிறீர்களே.
37 யெகோவா பதிலுரைத்ததென்ன?
யெகோவா சொன்னதென்ன என்பதை
நீ தீர்க்கதரிசிக்குச் சொல்லவேண்டியது.
38 யெகோவாவின் கடினவாக்கு என்று நீங்கள் சொல்வீர்களானால்,
யெகோவா உரைப்பது இதுவே:
யெகோவாவின் கடினவாக்கு என்று சொல்லாதிருங்களென்று நான் உங்களுக்குச் சொல்லி அனுப்பியும்,
நீங்கள் கடினவாக்கு என்கிற இந்த வார்த்தையையே சொல்லுகிறீர்கள்.
39 ஆதலால், உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் நான் கொடுத்த நகரத்தோடுகூட,
இதோ, நான் உங்களைத் தூக்கி
என் சமுகத்தினின்று எறிந்துவிடுவேன்.

40 மறக்கப்படாத நித்திய நிந்தையையும் நித்திய இலச்சையையும் உங்கள்மேல் வரப்பண்ணுவேன்.

**24** பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், யோயாக்கீமின் குமாரனாகிய எகொனியா என்கிற யூதாவின் ராஜாவையும், யூதாவின் அதிபதிகளையும் எருசலேமிலுள்ள தச்சரையும் கொல்லரையும் சிறைபிடித்துப் பாபிலோனுக்குக் கொண்டுபோனபின்பு, இதோ, யெகோவாவின் ஆலயத்தின்முன் வைக்கப்பட்டிருந்த அத்திப்பழங்களுள்ள இரண்டு கூடைகளை யெகோவா எனக்குக் காண்பித்தார்.

2 ஒரு கூடையிலே மிகவும் நல்ல அத்திப்பழங்களிருந்தன, இவை முன் பழுத்த அத்திப்பழங்களைப் போன்றவை; மற்றக் கூடையிலே மிகவும் கெட்ட அத்திப்பழங்கள் இருந்தன, இவைகள் புசிக்கமுடியாதவைகள், அவ்வளவு கெட்டவைகள்.

3 யெகோவா என்னோடு பேசி: எரேமியாவே, நீ காண்கிறதென்ன என்றார்; அதற்கு நான்: அத்திப்பழங்களைக் காண்கிறேன்; நல்லவைகளான அத்திப்பழங்கள் மிகவும் நல்லவைகள்; கெட்டவைகளோ புசிக்கத்தகாதவைகள், அவ்வளவு கெட்டவைகள் என்றேன்.

4 அப்பொழுது யெகோவாவின் வார்த்தை எனக்கு வந்தது:

5 இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா இப்படிச் சொல்லுகிறார், இந்த நல்ல அத்திப்பழங்கள் மதிக்கப்படுவதுபோல, அவர்களின் நன்மைக்கென்று, இவ்விடமிருந்து கல்தேயர் தேசத்துக்குச் சிறையாக அனுப்பியிருந்த யூதரை நான் மதிக்கிறேன்.

6 அவர்களின் நன்மைக்கென்றே நான் என் கண்களை அவர்கள்மேல் வைத்து அவர்களை இந்த தேசத்துக்குத் திரும்பி வரப்பண்ணுவேன்; அவர்களைக் கட்டுவேன், அவர்களை இடிக்கமாட்டேன்; அவர்களை நாட்டுவேன், அவர்களைப் பிடுங்கமாட்டேன்.

7 நான் யெகோவா என்று என்னை அறியும் இருதயத்தை அவர்களுக்குக் கொடுப்பேன்; அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் கடவுளாயிருப்பேன்; அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் என்னிடம் திரும்பும்போது அப்படியாகும்.

8 புசிக்கத்தகாத கெட்ட அத்திப்பழங்களைத் தள்ளிவிடுவதுபோல, நான் சிதெக்கியா என்கிற யூதாவின் ராஜாவையும் அவனுடைய அதிபதிகளையும் எருசலேமியரிலே மீதியாகி இந்த தேசத்திலே மீந்திருக்கிறவர்களையும் எகிப்து தேசத்தில் குடியிருக்கிறவர்களையும் தள்ளிவிடுவேன்.

9 தீமைக்கென்றே அவர்களைப் பூமியின் சகல ராஜ்யங்களுக்கும் பயங்கர காட்சியாகும்படி செய்வேன்; நான் அவர்களைத் துரத்திவிடும் சகல இடங்களிலும் அவர்களை நிந்தையும் பழமொழியும் பரியாச வார்த்தையும் சாபச் சொல்லும் ஆக்குவேன்.

10 அவர்களுக்கும் அவர்கள் பிதாக்களுக்கும் நான் கொடுத்த தேசத்தில் அவர்கள் இராதபடி நிர்மூலமாகுமட்டும், பட்டயம் பஞ்சம் கொள்ளைநோய் இவற்றை அவர்களுக்குள்ளே அனுப்புவேன் என்று யெகோவா சொல்லுகிறார்.

**25** யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்கிற யூதா ராஜாவின் நாலாம் வருஷத்தில் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் முதலாம் வருஷத்திலே, யூதா ஜனம் அனைத்தையும்பற்றி எரேமியாவுக்கு வந்த வார்த்தை;

2 அதை எரேமியா தீர்க்கதரிசி யூதா ஜனம் அனைத்துக்கும் எருசலேமில் குடியிருந்த யாவருக்கும் அறிவித்தான்.

3 ஆமோனின் குமாரனாகிய யோசியா என்னும் யூதா ராஜாவின் பதின்மூன்றாம் வருஷம்துவக்கி இந்நாள்மட்டும், இந்த இருபத்துமூன்றுவருஷமாக, யெகோவாவின் வார்த்தை எனக்கு வந்துகொண்டிருந்தது; அதை நான் உங்களுக்குத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டுவந்தும் நீங்கள் கேளாமற்போனீர்கள்;

4 யெகோவா, தீர்க்கதரிசிகளாகிய தமது சகல ஊழியரையும் திரும்பத் திரும்ப உங்களிடம் அனுப்பிக் கொண்டே யிருந்தும் நீங்கள் கேளாமலும், கேட்கும்படி உங்கள் செவிகளைச் சாய்க்காமலும் போனீர்கள்.
5 அவர்களைக்கொண்டு அவர்: உங்களில் ஒவ்வொருவனும் தன்தன் தீய வழியையும் உங்கள் செய்கைகளின் தீமையையும் விட்டுத் திரும்புங்கள்; திரும்பினால் யெகோவா உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் கொடுத்த தேசத்தில் சதாகாலமும் குடியிருப்பீர்கள்.
6 அந்திய தேவர்களைப் பற்றிக்கொள்ளாமலும், அவைகளைச் சேவிக்காமலும், அவைகளைத் தொழுதுகொள்ளாமலுமிருங்கள்; நான் உங்களுக்குத் தீங்குசெய்யாதபடி உங்கள் கைகளின் செய்கைகளால் எனக்குக் கோபமூட்டாமலும் இருங்கள் என்றேன்.
7 நீங்களோ கேளாமற்போனீர்கள்—இது யெகோவாவின் திருவாக்கு—உங்களுக்குத் தீங்குண்டாக உங்கள் கைகளின் செய்கைகளால் எனக்குக் கோபமூட்டினீர்கள் என்று சொன்னார்.
8 ஆதலால் சேனைகளின் யெகோவா இப்படிச் சொல்லுகிறார்: நீங்கள் என் வார்த்தைகளைக் கேளாமற்போனபடியினால்,
9 இதோ, நான் வடக்கேயுள்ள சகல வம்சங்களையும்,—இது யெகோவாவின் திருவாக்கு—என் ஊழியனாகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவையும் அழைத்தனுப்பி, அவர்களை இந்த தேசத்துக்கு விரோதமாகவும் இதில் குடியிருக்கிறவர்களுக்கு விரோதமாகவும் சுற்றிலுமுள்ள இந்த சகல ஜாதியாருக்கும் விரோதமாகவும் வரப்பண்ணி, அவைகளைச் சங்காரத்துக்கு ஒப்புக்கொடுத்து, அவைகளைப் பிரமிப்பும் பழிப்பும் நித்திய பாழ்வனமுமாகச் செய்வேன்.
10 களிப்பின் சத்தத்தையும் மகிழ்ச்சியின் சத்தத்தையும் மணவாளனின் சத்தத்தையும் மணவாட்டியின் சத்தத்தையும் ஏந்திர சத்தத்தையும் விளக்கு வெளிச்சத்தையும் அவர்களிடமிருந்து ஒழிந்துபோகச்செய்வேன்.
11 இந்த தேசமெல்லாம் பாழ்வனமும் பிரமிப்புமாகும்; இந்த ஜாதியாரோ எழுபதுவருஷமாக பாபிலோன் ராஜாவைச் சேவிப்பார்கள்.
12 எழுபதுவருஷம் நிறைவேறினபின்பு, நான் பாபிலோன் ராஜாவையும் அந்த ஜாதியாரையும் —இது யெகோவாவின் திருவாக்கு— அவர்கள் அக்கிரமத்தினிமித்தம் தண்டிப்பேன்; கல்தேய தேசத்தையும் தண்டித்து நித்திய பாழ்வனமாக்குவேன்;
13 நான் அந்த தேசத்துக்கு விரோதமாய் உரைத்த என் வார்த்தைகளையெல்லாம் அதின்மேல் வரப்பண்ணுவேன், அவற்றையெல்லாம் எரேமியா சகல ஜாதியாருக்கும் விரோதமாய்த் தீர்க்கதரிசனமாகச் சொன்னான்; அவையெல்லாம் இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது.
14 அவர்களையும் அநேகம் ஜாதியாரும் பெரிய ராஜாக்களும் அடிமைகளாக்கி வேலைகொள்வார்கள்; நான் அவர்களுக்கு அவர்கள் கிரியைகளின்படியும் அவர்கள் கைகளின் செய்கைகளின்படியும் பதில் அளிப்பேன் என்று சொன்னார்.
15 இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா என்னோடு பேசி: நீ இந்த உக்கிர மதுவின் பாத்திரத்தை என் கையிலிருந்து வாங்கி, நான் உன்னை அனுப்பப்போகிற சகல ஜாதியாருக்கும் குடிக்கக்கொடு,
16 அவர்கள் குடித்து, நான் அவர்களுக்குள் அனுப்பும் பட்டயத்தினிமித்தம் பைத்தியம் பிடித்தவர்கள்போல் தள்ளாடுவார்கள் என்றார்.
17 நான் அந்தப்பாத்திரத்தை யெகோவாவின் கையிலிருந்து வாங்கி, யெகோவா என்னை அனுப்பின சகல ஜாதியாருக்கும் குடிக்கக் கொடுத்தேன்.
18 எருசலேமுக்கும் யூதாவின் ஊர்களுக்கும் அதின் ராஜாக்களுக்கும் அதின் அதிபதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தேன்; அவர்களை இந்நாளிலிருக்கிறபடி வனாந்தரமும் பிரமிப்பும் பழிப்பும் சாபச்சொல்லும் ஆக்கும்படி கொடுத்தேன்.

19 அன்றியும் எகிப்தின் ராஜாவாகிய பார்
வோனுக்கும் அவன் ஊழியருக்கும்
அவன் அதிபதிகளுக்கும் அவன் ஜன
மனிதருக்கும்,
20 பல ஜாதியாரான திரள் ஜனங்களுக்கும்,
ஊத்ஸ் தேசத்தின் சகல ராஜாக்களுக்கும்,
பெலிஸ்தியரின் தேசத்திலுள்ள சக ல
ராஜாக்களுக்கும்,
அஸ்கலோனுக்கும் காசாவுக்கும் எக்ரோ
னுக்கும் அஸ்தோத்தில் மீதியானவர்களுக்
கும்,
21 ஏதோமுக்கும், மோவாபுக்கும், அம்
மோன் புத்திரருக்கும்,
22 தீருவின் சகல ராஜாக்களுக்கும், சீதோ
னின் சகல ராஜாக்களுக்கும்,
சமுத்திரத்தின் அப்புறக்கரைநாட்டு ரா
ஜாக்களுக்கும்,
23 தெதானுக்கும், தேமாவுக்கும், பூசுக்கும்,
சுற்றி ஒதுக்கிய தலைமயிருள்ள அனை
வருக்கும்,
24 அரபிதேசத்து சகல ராஜாக்களுக்கும்,
வனாந்தரத்தில் குடியிருக்கிற திரள் ஜனங்
களின் சகல ராஜாக்களுக்கும்,
25 சிம்ரியின் சகல ராஜாக்களுக்கும்,
ஏலாமின் சகல ராஜாக்களுக்கும், மேதி
யாவின் சகல ராஜாக்களுக்கும்,
26 சமீபத்திலும் தூரத்திலுமிருக்க சகல
வடதேச ராஜாக்களுமாகிய ஒவ்வொரு
வருக்கும்,
பூமியின் மீது சகல தேசங்களின் ராஜ்
யங்களுக்கும்
குடிக்கக் கொடுத்தேன்;
ஷேஷாகின் ராஜாவும் அவர்களுக்குப்
பிற்பாடு குடிப்பான்.
27 இஸ்ரவேலின் கடவுளாகிய சேனை
களின் யெகோவா உரைப்பதை அவர்
களுக்குச் சொல்:
நீங்கள் குடித்து வெறித்து வாந்திபண்ணி
எழுந்திராமல் விழுங்கள்;
நான் உங்களுக்குள் அனுப்பும் பட்ட
யத்தின்முன் விழுவீர்களே.
28 அவர்கள் உன் கையில் அந்தப் பாத்தி
ரத்தை வாங்கிக்குடிக்க மறுத்தால்
நீ அவர்களிடம், நீங்கள் குடிக்கவே
வேண்டும்
என்று சேனைகளின் யெகோவா உரைக்கி
றார் என்று சொல்.
29 என் நாமம் வழங்கும் நகரத்திலே,
இதோ, தீங்கை வருவிக்க நான் துவக்கு
வேன்;
நீங்கள் தண்டனைக்குத் தப்புவீர்களோ?
தப்புவதில்லை;
பூமியிலே குடியிருக்கிற யாவர்மேலும்
நான் பட்டயத்தை வரவழைக்கிறேனே;
இது சேனைகளுடைய யெகோவாவின்
திருவாக்கு.
30 ஆகவே நீ அவர்களுக்கு விரோதமாக
இந்த வார்த்தைகளையெல்லாம் தீர்க்க
தரிசனமாக உரைத்து:
யெகோவா உயரத்திலிருந்து கெர்ச்சித்துத்
தமது பரிசுத்த வாசஸ்தலத்திலிருந்து
தமது சத்தம் தொனிக்கச் செய்து,
தமது தொழுவத்துக்கு விரோதமாய்ப்
பலமாய்க் கெர்ச்சித்து
பூமியில் குடியிருக்கும் எல்லாருக்கும்
விரோதமாக ஆலியாட்டுவார்போல்
ஆர்ப்பரிப்பார்.
31 ஆரவாரம் பூமியின் கடையாந்தர மட்டும்
போய் எட்டும்,
ஜாதியாரோடே யெகோவாவுக்கு வழக்
குண்டு; மாம்சமான யாவரையும் அவர்
நியாயம் விசாரிப்பார்;
தெய்வபயமற்றவரைப் பட்டயத்துக்கு
ஒப்புக்கொடுப்பார்.
—இது யெகோவாவின் திருவாக்கு—
என்று சொல்லென்றார்.
32 சேனைகளின் யெகோவா சொல்லுகிற
தைக் கேளுங்கள்:
இதோ, ஜாதியிடமிருந்து ஜாதிக்கு ஆபத்
து பரவும்,
பூமியின் எல்லைகளிலிருந்து பெரும்புசல்
எழும்பும்.
33 அக்காலத்திலே பூமியின் ஒருமூனைதுவக்
கி மறுமூனைமட்டும்
யெகோவாவினால் கொல்லப்பட்டவர்கள்
இடப்பார்கள்;
அவர்கள் நிமித்தம் புலம்புவாரும், அவர்
களைச் சேர்ப்பாரும் அடக்கம் பண்ணு
வாருமிரார்;
அவர்கள் பூமியின்மேல் எருவாவார்கள்.
34 மேய்ப்பவர்களே, அலறிக்கதறுங்கள்,
மந்தையில் பெரியவர்களே, சாம்பலில்
புரளுங்கள்;
நீங்கள் கொல்லப்படும் நாட்கள் வந்து
விட்டன,
அருமையான பாத்திரம்போல் விழுந்து
நொறுங்கிச் சிதறடிக்கப்படுவீர்கள்.
35 மேய்ப்பவர்கள் ஓடிப்போவதற்கும், மந்
தையின் பெரியோர்
தப்பிப்போவதற்கும் இடமிராது.
36 மேய்ப்பவர்கள் கூப்பிடுவதும் மந்தையில்
பெரியவர்கள் அலறுவதும் கேட்கும்;
தங்கள் மேய்ச்சலை யெகோவா பாழாக்கி
னாரே.

37 அவர்கள் சுகித்திருந்த தொழுவங்கள்
யெகோவாவுடைய உக்கிரகோபத்தினி
மித்தம் சங்காரமாயின.
38 அவர் கெபியிலிருந்து வெளிப்படும் சிங்
கம்போலிருப்பார்,
ஓடுக்குகிறவனின் உக்கிரத்தினிமித்த
மும்
அவருடைய உக்கிரகோபத்தினிமித்த
மும் அவர்கள் தேசம் பாழாயிற்று.

**26** யோசியாவின் குமாரனுகிய யோயாக்
கீம் என்னும்
யூதா ராஜாவுடைய அரசாட்சியின் துவக்
கத்திலே
இந்த வார்த்தை யெகோவாவினிடமி
ருந்து வந்தது,
யெகோவா இப்படிச் சொன்னார்:
2 நீ யெகோவாவின் ஆலயப்பிராகாரத்திலே
போய் நின்று,
யெகோவாவின் ஆலயத்திலே தொழுது
கொள்ள வருகிற யூதா ஊரார் அனை
வருக்கும் சொல்லும்படி
நான் உனக்குக் கட்டளையிடும் எல்லா
வார்த்தைகளையும் அவர்களுக்குச் சொல்
லு;
ஒரு வார்த்தையையும் விட்டுவிடவேண்
டாம்.
3 ஒருவேளை அவர்கள் கேட்டுத் தம்தம்
தீயவழியை விட்டுத் திரும்புவார்கள்,
அப்படிச் செய்தால், அவர்கள் செய்கை
களின் தீமையினிமித்தம்
நான் அவர்களுக்குச் செய்ய நினைக்கிற
தீங்குக்கு நான் மனஸ்தாபப்படுவேன்.
4 நீ அவர்களோடு பேசி, யெகோவா இப்
படிச் சொல்லுகிறார்:
நீங்கள் என் சொல்லைக்கேட்டு,
நான் உங்கள்முன் வைத்த என் நியாயப்
பிரமாணத்திலே நடக்கவும்,
5 நான் உங்களிடம் திரும்பத் திரும்ப
அனுப்பியிருந்தும் நீங்கள் செவிகொடா
மற்போன
என் ஊழியரான தீர்க்கதரிசிகளின்
வார்த்தைகளைக் கேட்கவும் வேண்டும்.
6 கேளாமற்போனுல், நான் இந்த ஆலயத்
தைச் சீலோவைப்போலாக்கி,
இந்த நகரத்தைப் பூமியினுள்ள சகல
ஜாதிகளுக்கு முன்பாகச் சாபச் சொல்
லாக்குவேன்
என்று சொல் என்றார்.
7 எரேமியா இந்த வார்த்தைகளையெல்
லாம் யெகோவாவின்ஆலயத்திலே சொல்
லும்போது
ஆசாரியரும் தீர்க்கதரிசிகளும் முழு
ஜனமும் கேட்டார்கள்.
8 முழு ஜனத்துக்கும் சொல்லும்படி
யெகோவா தனக்குக் கட்டளையிட்ட
வைகளையெல்லாம் எரேமியா சொல்லி
முடிக்கவே
ஆசாரியரும் தீர்க்கதரிசிகளும் சகல
ஜனங்களும் அவனைப் பிடித்து:
நீ சாகவே வேண்டும்.
9 இந்த ஆலயம் சீலோவைப்போலாகி
இந்த நகரம் குடியில்லாமல் பாழாம்
என்று நீ யெகோவாவின் நாமத்தைக்
கொண்டு தீர்க்கதரிசனம் சொல்வானேன்
என்று சொல்லி,
ஜனங்கள் எல்லாரும் யெகோவாவின்
ஆலயத்திலே எரேமியாவுக்கு விரோத
மாய்க் கூடினார்கள்.
10 யூதாவின் அதிபதிகள் இவைகளைக்
கேட்டு,
ராஜாவின் வீட்டிலிருந்து யெகோவா
வின் வீட்டுக்குப்போய்,
யெகோவாவின் புது வாசலில் உட்கார்ந்
தார்கள்.
11 அப்பொழுது ஆசாரியரும் தீர்க்கதரிசி
களும் அதிபதிகளோடும் முழு ஜனத்தோ
டும் பேசி:
இந்த மனுஷன் மரண தண்டனைக்கா
ளாகவேண்டும்,
உங்கள் செவிகளாலே நீங்கள் கேட்ட
படி இந்த நகரத்துக்கு விரோதமாகத்
தீர்க்கதரிசனம் சொன்னானே என்றார்
கள்.
12 எரேமியா அதைக்கேட்டு சகல அதிபதி
களையும் முழு ஜனத்தையும் பார்த்து:
நீங்கள் கேட்ட எல்லா வார்த்தைகளை
யும்
இந்த ஆலயத்துக்கும் இந்த நகரத்துக்கும்
விரோதமாகத் தீர்க்கதரிசனமாய்ச் சொ
ல்ல யெகோவா என்னை அனுப்பினார்.
13 இப்பொழுதும் நீங்கள் உங்கள் வழிகளை
யும் உங்கள் செய்கைகளையும் சீர்ப்படுத்தி,
உங்கள் தேவனாகிய யெகோவா சொல்
வதைக் கேளுங்கள்;
அப்பொழுது யெகோவா உங்களுக்கு
விரோதமாய்ச் சொன்ன தீங்கைப்பற்றி
மனஸ்தாபப்படுவார்.
14 நானேவெனில், இதோ, உங்கள் கையில்
இருக்கிறேன்,
உங்கள் பார்வையில் நலமும் நியாயமு
மாயிருப்பதை எனக்குச் செய்யுங்கள்.
15 ஒரு காரியத்தையோ நிட்டமாய் அறிந்
துகொள்ளுங்கள்;

நீங்கள் என்னைக் கொன்றுபோட்டால் குற்றமில்லாத இரத்தப்பழியை உங்கள்மேலும் இந்த நகரத்தின்மேலும் இதின் குடிகள்மேலும் சுமத்திக்கொள் வீர்கள், இந்த வார்த்தைகளையெல்லாம் உங்கள் காது கேட்கச் சொல்லும்படி, யெகோவா மெய்யாகவே என்னை உங்களிடம் அனுப்பினார் என்று சொன்னேன்.

16 அதைக் கேட்கவே அதிபதிகளும் முழு ஜனமும் ஆசாரியரையும் தீர்க்கதரிசிகளையும் பார்த்து: இந்த மனுஷன் மரண தண்டனைக்கு ஆளாகவேண்டியவனல்ல, நமது கடவுளாகிய யெகோவாவின் நாமத்திலேயே நம்மிடம் பேசினான் என்றார்கள்.

17 தேசத்திலே பிரதானமானவர்களில் சிலர் எழும்பி, ஜனசபை முழுதையும் பார்த்து இப்படிச் சொன்னார்கள்:

18 யூதா ராஜாவாகிய எசேக்கியாவின் நாட்களில் மொரேஷெத் ஊரானாகிய மீகா தீர்க்கதரிசனஞ்சொல்லி யூதாவின் முழு ஜனத்தையும் பார்த்து: சீயோன் வயல் வெளியாக உழப்பட்டு, எருசலேம் மண்மேடுகளாய்ப்போம்; இந்த ஆலயத்தின் பர்வதம் காட்டு மேடுகளாய்ப்போம் என்று சேனைகளின் யெகோவா உரைத்தார் என்று சொன்னான்.

19 யூதா ராஜாவாகிய எசேக்கியா எல்லா யூதரோடும் சேர்ந்து அவனைக் கொன்று போட்டானா? அவன் யெகோவாவுக்குப் பயந்து, யெகோவாவின் தயவை நாடிக் கெஞ்சினானல்லவா? யெகோவாவும் அவர்களுக்கு விரோதமாகச் சொல்லியிருந்த தீங்குக்கு மனஸ்தாபப்பட்டார்; இப்போதும் நாம் நமதுமேல் மகா தீங்கை வரப்பண்ணுகிறவர்களாயிருப்போமே.

20 ஷெமாயாவின் குமாரனும் கீரியாத்யெயாரீம் ஊரானுமான உரியா என்னும் ஒரு மனுஷனும் யெகோவாவின் நாமத்திலே தீர்க்கதரிசனம் சொல்லிவந்தான்; அவன் எரேமியா சொல்லுகிறதைப்போலவே இந்த நகரத்துக்கும் இந்த தேசத்துக்கும் விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொன்னான்.

21 யோயாக்கீம் ராஜாவும் அவன் சகல பராக்கிரமசாலிகளும் சகல அதிபதிகளும் அவன் வார்த்தைகளைக் கேட்டபோது, ராஜா அவனைக் கொன்றுபோட வகை தேடினான், அதை உரியா கேட்டு பயந்து ஓடிப்போய் எகிப்திலே சேர்ந்தான்.

22 அப்பொழுது யோயாக்கீம் ராஜா ஆட்களை எகிப்துக்கு அனுப்பினான்; எகிப்துக்கு அனுப்பப்பட்டவர்கள் அக்போரின் குமாரனாகிய எல்நாத்தானும் மற்றும் சிலருமே.

23 இவர்கள் உரியாவை எகிப்திலிருந்து அழைத்து வந்து, அவனை யோயாக்கீம் ராஜாவினிடம் கொண்டுபோய்விடவே ராஜா இவனைப் பட்டயத்தாலே வெட்டினான், அவன் உடலைப் பொதுஜனப் பிரேதக் குழிகளிலே எறிந்துவிட்டான்.

24 சாப்பானின் குமாரனாகிய அகிக்காம் எரேமியாவுக்குத் துணையாயிருந்தான்; அவனைக்கொல்ல ஜனங்களின் கையில் ஒப்புக்கொடாதபடி செய்தான்.

**27** யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்னும் யூதாராஜாவுடைய அரசாட்சியின் துவக்கத்திலே இந்த வார்த்தை யெகோவாவினிடமிருந்து எரேமியாவுக்கு வந்தது,

2 யெகோவா என்னிடம் இப்படிச் சொன்னார்: நீ உனக்குக் கயிறுகளையும் நுகத்தையும் செய்து அதை உன் கழுத்திலே பூட்டிக்கொண்டு,

3 அதை எருசலேமுக்குச் சிதெக்கியா ராஜாவினிடம் வந்திருக்கிற ஸ்தானாபதிகள் மூலமாய் ஏதோமின் ராஜாவுக்கும் மோவாபின் ராஜாவுக்கும் அம்மோன் புத்திரரின் ராஜாவுக்கும் தீருவின் ராஜாவுக்கும் சீதோனின் ராஜாவுக்கும் அனுப்பி,

4 அவர்கள் தங்கள் ஆண்டவன்மாருக்குச் சொல்லும்படி கட்டளையிடவேண்டியது இதுவே, இஸ்ரவேலின் கடவுளாகிய சேனைகளின் யெகோவா இப்படி உரைக்கிறார் என்று உங்கள் ஆண்டவன்மாருக்குச் சொல்லுங்கள்:

5 நான் பூமியையும் மனுஷரையும் பூமியின்மேலுள்ள மிருகங்களையும் என் மகா வல்லமையினாலும் நீட்டிய புயத்தினாலும் படைத்தேன்; சரியானவன் என எனக்குத் தோன்றுகிறவனுக்கு அதைக் கொடுக்கிறேன்.
6 இப்பொழுதும் நான் இந்தத் தேசங்களையெல்லாம் என் ஊழியனாகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவின் கையிலே கொடுத்தேன்; அவனுக்கு ஊழியம் செய்யும்படி காட்டு மிருகங்களையும் கொடுத்தேன்.
7 அவனுடைய தேசத்துக்குக் காலம் வருகிறவரையில் சகல ஜாதியாரும் அவனுக்கும் அவனுடைய புத்திர பௌத்திரருக்கும் அடங்கியிருப்பார்கள்; அதின்பின்பு பல ஜாதியாரும் பெரிய ராஜாக்களும் அவனை அடக்கி ஆளுவார்கள்.
8 எந்த ஜாதியாவது எந்த ராஜ்யமாவது பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு அடங்காமலும் தன் கழுத்தைப் பாபிலோன் ராஜாவின் நுகத்துக்குக் கீழ்ப்படுத்தாமலும் போனால், அந்த ஜாதியாரைப் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் கொள்ளைநோயாலும் தண்டிப்பேன்; இது யெகோவாவின் திருவாக்கு. அவன் கையாலே அவர்களை நான் நிர்மூலமாக்கும் வரைக்கும் அப்படிச் செய்வேன்.
9 நீங்களோவெனில், உங்கள் தீர்க்கதரிசிகளுக்கும் குறி சொல்லுவோருக்கும் உங்கள் சொப்பனங்களுக்கும் சகுனம் சொல்லுகிறவர்களுக்கும் உங்கள் மந்திரக்காரருக்கும் செவிகொடுக்கவேண்டாம்; நீங்கள் பாபிலோன் ராஜாவுக்கு அடங்கியிருக்க நேரிடுவதில்லை என்று அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிறார்களே.
10 அவர்கள் உங்களுக்குத் தீர்க்கதரிசனமாகச் சொல்வது பொய்; நான் உங்களை உங்கள் தேசத்திலிருந்து தூரமாய் அகற்றுவதற்கும் உங்களைத் துரத்திவிடுவதற்கும் நீங்கள் அழிந்துபோவதற்கும் அது ஏதுவாகும்.
11 தன் கழுத்தை பாபிலோன் ராஜாவின் நுகத்துக்குக் கீழ்ப்படுத்தி அவனுக்கு அடங்கும் ஜாதி எதுவோ அந்த ஜாதியைத் தன் தேசத்தில் கிலேத்திருக்கச்செய்வேன்; இது யெகோவாவின் திருவாக்கு; அந்த ஜாதி தன் தேசத்தைப் பயிரிட்டு அதிலே குடியிருக்கும் என்று சொல் என்றார்.
12 இந்த எல்லா வார்த்தைகளின்படியே நான் யூதா ராஜாவாகிய சிதெக்கியாவினிடம் பேசி: உங்கள் கழுத்தை பாபிலோன் ராஜாவின் நுகத்துக்குக் கீழ்ப்படுத்தி, அவனையும் அவன் ஜனத்தையும் சேவியுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்.
13 நீயும் உன் ஜனமும் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் கொள்ளைநோயாலும் சாவானேன்? பாபிலோன் ராஜாவுக்கு அடங்காதிருக்கிற ஜாதிக்கு விரோதமாக யெகோவா இப்படிச் சொல்லியிருக்கிறாரே.
14 நீங்கள் பாபிலோன் ராஜாவைச் சேவிக்க நேரிடாது என்று உங்களுக்குச் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேட்கவேண்டாம், அவர்கள் உங்களுக்குத் தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறது பொய்.
15 நான் அவர்களை அனுப்பவில்லை,—இது யெகோவாவின் திருவாக்கு— இவர்கள் என் நாமத்தைக்கொண்டு பொய்யையே தீர்க்கதரிசனமாக உரைக்கிறார்கள், ஆதலால் நான் உங்களைத் துரத்திவிடவும், நீங்களும் உங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளும் அழிந்துபோகவும் நேரிடும் என்று சொன்னேன்.
16 மேலும் நான் ஆசாரியரிடமும் இந்த முழு ஜனத்தினிடமும் பேசி: இதோ, யெகோவாவின் ஆலயப்பணிமுட்டுகள் இப்பொழுது சீக்கிரத்திலே பாபிலோனிலிருந்து திரும்பிக் கொண்டுவரப்படும் என்று உங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற உங்கள் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேட்கவேண்டாம்; அவர்கள் உங்களுக்குத் தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறது பொய்.
17 அவர்களுக்குச் செவிகொடாதிருங்கள்;

பாபிலோன் ராஜாவைச் சேவியுங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள்; இந்த நகரம் பாழாய்ப் போவானேன்?
18 அவர்கள் தீர்க்கதரிசிகளாயிருந்து அவர்களிடத்திலே யெகோவாவின் வார்த்தையிருக்குமேயானால், அவர்கள் சேனைகளின் யெகோவாவை நோக்கி, யெகோவாவின் வீட்டிலும் யூதாராஜாவின் வீட்டிலும் எருசலேமிலும் மீதியாயுள்ள பணிமுட்டுகள் பாபிலோனுக்குப் போகாதபடி மன்றாடட்டுமே.
19 பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யோயாக்கீமின் குமாரனாகிய எகொனியா என்னும் யூதாராஜாவையும், யூதாவிலும் எருசலேமிலுமிருந்த பெரியோர் அனைவரையும், எருசலேமிலிருந்து பாபிலோனுக்குச் சிறைபிடித்துக் கொண்டுபோகையில்,
20 எடுக்காமல்விட்ட ஸ்தம்பங்களையும் கடல் தொட்டியையும் ஆதாரங்களையும் இந்த நகரத்தில் மீதியாயுள்ள மற்றப் பணிமுட்டுகளையும்பற்றிச் சேனைகளின் யெகோவா சொல்வதைக் கேளுங்கள்,
21 யெகோவாவின் வீட்டிலும் யூதா ராஜாவின் வீட்டிலும் எருசலேமிலும் மீதியாயுள்ள பணிமுட்டுகள் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்படும்.
22 நான் அவைகளைத் திரும்பக்கொண்டுவரும் நாள்வரைக்கும் அவைகள் அங்கே இருக்கும்; இது யெகோவாவின் திருவாக்கு; பின்பு அவைகளைத் திரும்ப இந்த ஸ்தலத்திற்குக் கொண்டுவரச் செய்வேன் என்று இஸ்ரவேலின் கடவுளாகிய சேனைகளின் யெகோவா சொல்லுகிறார் என்று சொன்னேன்.

**28** அதே வருஷத்திலே யூதா ராஜாவாகிய செதெக்கியா அரசாட்சியின் துவக்கத்தில், நாலாம் வருஷம் ஐந்தாம் மாதத்திலே,
அசூரின் குமாரனாகிய கனனியா தீர்க்கதரிசி, கிபியோன் ஊரான், யெகோவாவின் ஆலயத்திலே ஆசாரியரும் முழு ஜனமும் பார்க்க என்னோடு பேசி:
2 இஸ்ரவேலின் கடவுளாகிய சேனைகளின் யெகோவா சொல்வதைக் கேள், பாபிலோன் ராஜாவின் நுகத்தை முறித்தேன்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் இவ்விடத்திலிருந்து எடுத்துப் பாபிலோனுக்குக் கொண்டுபோன யெகோவாவின் ஆலயப்பணிமுட்டுகளெல்லாம் நான் இன்னும் இரண்டுவருஷகாலத்திலே இவ்விடத்துக்குத் திரும்ப வரும்படி செய்வேன்.
4 யோயாக்கீமின் குமாரனாகிய எகொனியா என்கிற யூதா ராஜாவையும் பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டுபோகப்பட்ட யூதர் அனைவரையும் நான் இவ்விடத்துக்குத் திரும்பிவரச் செய்வேன்—இது யெகோவாவின் திருவாக்கு—பாபிலோன் ராஜாவின் நுகத்தை முறிப்பேன் என்கிறார் என்று சொன்னார்.
5 அப்பொழுது எரேமியா தீர்க்கதரிசி ஆசாரியரும் யெகோவாவின் ஆலயத்தில் நின்றிருந்த முழு ஜனமும் பார்க்க கனனியா தீர்க்கதரிசிக்குப் பதிலுரைத்து:
6 அப்படியே ஆவதாக, யெகோவா அப்படியே செய்வாராக; யெகோவாவின் ஆலயப்பணிமுட்டுகளையும் சிறைப்பட்டுப்போன அனைவரையும் பாபிலோனிலிருந்து இவ்விடம் திரும்பி வரச் செய்வாரென்று நீ தீர்க்கதரிசனமாகச்சொல்லும் உன் வார்த்தைகளை யெகோவா நிறைவேற்றுவாராக.
7 ஆகிலும், உன் செவிகளும் முழு ஜனத்தின் செவிகளும் கேட்க நான் சொல்லும் இவ்வார்த்தையைக் கேள்.
8 பூர்வகாலமுதலே எனக்கு முன்னும் உனக்கு முன்னும் இருந்த தீர்க்கதரிசிகள் அநேக தேசங்களுக்கு விரோதமாகவும் பெரிய ராஜ்யங்களுக்கு விரோதமாகவும் யுத்தத்தையும் கேட்டையும் கொள்ளைநோயையும்பற்றித் தீர்க்கதரிசனம் சொன்னார்கள்.
9 அப்படியிருக்க, ஒரு தீர்க்கதரிசி சமாதானத்தைப்பற்றித் தீர்க்கதரிசனம் சொல்வானானால் அவன் மெய்யாகவே யெகோவாவினால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசி என்பது அவன் சொன்ன தீர்க்கதரிசன வார்த்தையின்படி நடந்தால்தான் தெரியவரும் என்று சொன்னான்.
10 அதைக் கேட்கவே கனனியா தீர்க்கதரிசி,

எரேமியா தீர்க்கதரிசியின் கழுத்திலிருந்த நுகத்தை எடுத்து அதை முறித்துவிட்டான்.

11 பின்பு கனனியா முழு ஜனமும் பார்க்க:

யெகோவா சொல்வதைக் கேளுங்கள், இப்படியே இன்னும் இரண்டுவருஷ காலத்திலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருடைய நுகத்தைச் சகல ஜாதியாரின் கழுத்திலுமிருந்து முறித்து அகற்றிவிடுவேன் என்கிறார் என்றான்.

எரேமியா தீர்க்கதரிசியோ தன் வழியே போனான்.

12 கனனியா தீர்க்கதரிசி, எரேமியா தீர்க்கதரிசியின் கழுத்து நுகத்தை முறித்தகற்றியபின் யெகோவாவின் வார்த்தை எரேமியாவுக்கு வந்தது,

13 நீ கனனியாவிடம்போய்: யெகோவா சொல்வதைக் கேள், நீ மரநுகத்தை முறித்தாய், அதற்குப்பதிலாக இருப்பு நுகம் உண்டாகச்செய்கிறாயே.

14 நான் இருப்புநுகத்தை இந்தச் சகல ஜாதியாரின் கழுத்திலும் போட்டு பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரைச் சேவிக்கும்படி செய்வேன்; அவர்கள் அவனைச் சேவிப்பார்கள்; காட்டுமிருகங்களையும் அவனுக்கு ஒப்புக்கொடுப்பேன் என்று இஸ்ரவேலின் கடவுளாகிய சேனைகளின் யெகோவா சொல்லுகிறாரே என்று சொல் என்றார்.

15 பின்பு எரேமியா தீர்க்கதரிசி கனனியா தீர்க்கதரிசியைப் பார்த்து: இதோ, கனனியாவே கேள், யெகோவா உன்னை அனுப்பவில்லை; நீ இந்த ஜனம் பொய்யை நம்பும்படி செய்தாய்.

16 ஆதலால், இதோ, உன்னைப் பூமியின் மேல் இராதபடி அகற்றிவிடுவேன்; யெகோவாவுக்கு விரோதமாய்த் துரோகப் பேச்சு பேசினபடியால் இந்த வருஷத்திலே நீ சாவாய் என்று யெகோவா சொல்லுகிறார் என்றான்.

17 அப்படியே கனனியா தீர்க்கதரிசி அவ்வருஷத்திலேதானே ஏழாம் மாதத்தில் செத்துப்போனான்.

**29** எகொனியா ராஜாவும் ராஜமாதாவும் அரமனை உத்தியோகஸ்தரும் யூதாவிலும் எருசலேமிலுமுள்ள அதிபதிகளும் தச்சரும் கொல்லரும் எருசலேமைவிட்டுப் போனபிற்பாடு, எரேமியா தீர்க்கதரிசி, சிறைப்பட்டுப் 2 போன பிரதானிகளில் மீதியானவர்களுக்கும், ஆசாரியருக்கும், தீர்க்கதரிசிகளுக்கும், நேபுகாத்நேச்சார் சிறைப்படுத்தி எருசலேமிலிருந்து பாபிலோனுக்குக் கொண்டுபோன முழு ஜனத்துக்கும் நிருபம் எழுதி, யூதா ராஜாவாகிய செதெக்கியா பாபிலோன் 3 ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரிடம் அனுப்பின சாப்பானின் குமாரனாகிய எலியாசா, இல்க்கியாவின் குமாரனாகிய கெமரியா என்பவர்கள் கையில் கொடுத்து, எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு அனுப்பினான்: இஸ்ரவேலின் கடவுளாகிய சேனைகளின் 4 யெகோவா, தாம் எருசலேமிலிருந்து பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போகப்பண்ணின அனைவருக்கும் சொல்வதைக் கேளுங்கள், நீங்கள் வீடுகளைக் கட்டிக் குடியிருங்கள், 5 தோட்டங்களை நாட்டி அவற்றின் கனியைச் சாப்பிடுங்கள். நீங்கள் பெண்களை விவாகம்பண்ணிக் 6 குமாரரையும் குமாரத்திகளையும் பெற்று, உங்கள் குமாரருக்குப் பெண்கொண்டு, உங்கள் குமாரத்திகளைப் புருஷருக்குக் கொடுங்கள்; இவர்களும் குமாரரையும் குமாரத்திகளையும் பெறுவார்கள்; நீங்கள் அங்கே சிறுகிப்போகாமல் பெருகுவீர்கள். நான் உங்களைச் சிறையாகப் போகச் 7 செய்த ஊரின் வாழ்வை நாடி அதற்காக யெகோவாவை நோக்கி விண்ணப்பம் பண்ணுங்கள்: அது வாழவே நீங்களும் வாழ்வீர்கள். மேலும் இஸ்ரவேலின் கடவுளாகிய 8 சேனைகளின் யெகோவா சொல்வதைக் கேளுங்கள்: உங்கள் நடுவிலிருக்கிற உங்கள் தீர்க்கதரிசிகளும் குறி சொல்லுகிறவர்களும், உங்களை மோசம்போக்க வொட்டாதிருங்கள், நீங்கள் கண்டுவருகிற சொப்பனங்களைக் கவனிக்கவேண்டாம்;

9 அவர்கள் என் நாமத்தைக்கொண்டு உங்களுக்குத் தீர்க்கதரிசனமாகச் சொல்வது பொய்யே,
நான் அவர்களை அனுப்பினதில்லை, இது யெகோவாவின் திருவாக்கு.
10 யெகோவா சொல்வது இதுவே:
பாபிலோனுக்கு எழுபதுவருஷம் நிறைவேறின பின்னே நான் உங்களைக் கண்ணோக்குவேன்,
உங்களிடம் என் நல்வாக்கை நிறைவேற்றி,
உங்களை இவ்விடத்துக்குத் திரும்பிவரச் செய்வேன்.
11 உங்கள் விஷயமாக நான் கொண்டிருக்கும் எண்ணங்களை நான் அறிவேன்,
இது யெகோவாவின் திருவாக்கு,
அவைகள் கேட்டையல்ல வாழ்வையே குறித்தவை;
வருங்கால நல்நம்பிக்கையை உங்களுக்குக் கொடுப்பதே என் நோக்கம்.
12 அக்காலத்தில் நீங்கள் என்னைக் கூப்பிடுவீர்கள்,
நீங்கள்போய் என்னைநோக்கி விண்ணப்பம் பண்ணவே
நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன்.
13 உங்கள் முழு இருதயத்தோடும் என்னை நாடுகிறபடியால்
என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்.
14 நான் உங்களுக்குக் காணப்படுவேன்,
இது யெகோவாவின் திருவாக்கு;
நான் உங்கள் துன்பநிலைமையை மாற்றி,
நான் உங்களைத் துரத்திவிட்ட எல்லா ஜாதியாரிலும் எல்லா இடங்களிலுமிருந்து உங்களைச் சேர்த்து,
—இது யெகோவாவின் திருவாக்கு—
நான் உங்களை அகற்றியிருந்த ஸ்தலத்துக்கே உங்களைத் திரும்பி வரப்பண்ணுவேன்.
15 யெகோவா எங்களுக்குப் பாபிலோனிலும் தீர்க்கதரிசிகளை எழுப்பினார் என்று சொல்லுகிறீர்களே.
16 தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிற ராஜாவைப்பற்றியும்
உங்களோடேகூடச் சிறைப்பட்டுப் போகாமல்
இந்தநகரத்தில் குடியிருக்கிற உங்கள் சகோதரராகிய எல்லா ஜனங்களைப்பற்றியும்
யெகோவா சொல்வதைக் கேளுங்கள்.
17 சேனைகளின் யெகோவா சொல்லுகிறது இதுவே:

இதோ, நான் பட்டயத்தையும் பஞ்சத்தையும் கொள்ளை நோயையும் அவர்களுக்குள் அனுப்புவேன்,
புசிக்கத்தகாத கெட்ட அத்திப்பழங்களுக்கு அவர்களை ஒப்பாக்குவேன்.
18 நான் அவர்களைப் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் கொள்ளைநோயாலும் தொடர்ந்துபிடித்து,
அவர்களைப் பூமியிலுள்ள சகல ராஜ்யங்களுக்கும் பயங்கரக்காட்சியாக்கி,
நான் அவர்களைத் துரத்துகிற எல்லா ஜாதிகளிடத்திலும்
சாபச்சொல்லும் பிரமிப்பும் பழிப்பும் நிந்தையுமாகச் செய்வேன்.
அவர்கள் என் வார்த்தைகளைக் கேளாமற்போனார்களே,
இது யெகோவாவின் திருவாக்கு.
19 நான் உங்களிடத்திற்கு என் வார்த்தைகளைத் தீர்க்கதரிசிகளாகிய என் ஊழியர் மூலமாய்த்
திரும்பத்திரும்ப அனுப்பிக்கொண்டேயிருந்தும் நீங்கள் செவிகொடாமற்போனீர்களே,
இது யெகோவாவின் திருவாக்கு.
20 இப்போதும் எருசலேமிலிருந்து பாபிலோனுக்குச் சிறையாக நான் அனுப்பிவிட்ட
நீங்களெல்லாரும் யெகோவாவின் வார்த்தையைக் கேளுங்கள்.
21 என் நாமத்தைக்கொண்டு உங்களுக்குத் தீர்க்கதரிசனமாகப் பொய்யை உரைக்கிற
கொலாயாவின் குமாரன் ஆகாபையும்,
மாசேயாவின் குமாரன் சிதெக்கியாவையும் பற்றி
இஸ்ரவேலின் கடவுளாகிய சேனைகளின் யெகோவா சொல்வதைக் கேளுங்கள்:
இதோ, நான் அவர்களைப் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கையிலே ஒப்புக்கொடுக்கிறேன்;
அவன் அவர்களை உங்கள் கண்களுக்கு எதிரே கொன்றுபோடுவான்.
22 அவர்களிலிருந்து உண்டான ஒரு சாபச்சொல்
பாபிலோனிலே சிறைப்பட்டுப்போன யூதர் அனைவருக்குள்ளும் வழங்கும்;
பாபிலோன் ராஜா அக்கினியிலே சுட்டுப்போட்ட
சிதெக்கியாவுக்கும் ஆகாபுக்கும் யெகோவா உன்னைச் சமானமாக்குக என்பார்கள்.
23 அவர்கள் இஸ்ரவேலிலே மதிகேடானதைச் செய்து,

தங்கள் அயலாருடைய பெண்ஜாதிகளோடே விபசாரம் பண்ணி,
நான் அவர்களுக்குக் கட்டளையிடாத பொய்வார்த்தையை என் நாமத்தைக்கொண்டு உரைத்தார்களே;
அதை அறிகிறவரும் சாட்சியிடுகிறவரும் நானே,
—இது யெகோவாவின் திருவாக்கு—
என்று எழுதியிருந்தான்.
24 நெகெலாமியனுடைய ஷெமாயாவுக்கு நீ சொல்லவேண்டியது இதுவே,
25 இஸ்ரவேலின் கடவுளாகிய சேனைகளின் யெகோவா இப்படிச் சொல்லுகிறார்:
நீ எருசலேமிலிருக்கிற முழு ஜனத்துக்கும்,
மாசேயாவின் குமாரனுடைய செப்பனியா என்னும் ஆசாரியனுக்கும், மற்ற எல்லா ஆசாரியருக்கும்,
உன் நாமத்திலேயே நிருபங்களையனுப்பி:
26 ஆசாரியனாயிருந்த யோயாதாவின் ஸ்தானத்திலே யெகோவா உம்மை ஆசாரியனாக வைத்தாரே,
யெகோவாவின் ஆலயத்திலே விசாரணை செய்து,
பைத்தியங்கொண்டு தீர்க்கதரிசனம் உரைக்கும் எவனையும்
தொழுவிலடித்துக் கழுத்தையும் இரும்பிலே மாட்டுகிறவர்கள் இருக்கவேண்டுமென்றாரே.
27 இப்படியிருக்க, உங்களுக்குத் தீர்க்கதரிசனம் கூறிவருகிற ஆனதோத் ஊராகிய எரேமியாவை
நீர் கண்டியாமற் போனதென்ன?
28 நீர் கண்டியாமற்போனபடியால் அவன், பாபிலோனிலுள்ள எங்களுக்கு நிருபம் எழுதி:
இந்தச் சிறையிருப்பு நெடுங்காலமாக இருக்கும்;
நீங்கள் வீடுகளைக்கட்டிக் குடியிருங்கள்,
தோட்டங்களை நாட்டி அவைகளின் கனிகளைச் சாப்பிடுங்கள்
என்கிறான் என்று எழுதினானே.
29 இந்த நிருபத்தைச் செப்பனியா என்கிற ஆசாரியன் எரேமியா தீர்க்கதரிசியின் காதுகள் கேட்க வாசித்திருந்தான்.
30 அப்பொழுது யெகோவாவின் வார்த்தை எரேமியாவுக்கு வந்தது:
31 சிறையிலிருக்கிற அனைவருக்கும் நீ சொல்லியனுப்பவேண்டியது இதுவே,

நெகெலாமியனாகிய ஷெமாயாவைப் பற்றி யெகோவா இப்படிச் சொல்லுகிறார்
ஷெமாயாவை நான் அனுப்பாதிருந்தும் அவன் உங்களுக்குத் தீர்க்கதரிசனஞ் சொல்லி
உங்களைப் பொய்யை நம்பப்பண்ணினபடியினால்,
யெகோவா இப்படிச் சொல்லுகிறார்: 32
இதோ, நான் நெகெலாமியனாகிய ஷெமாயாவையும் அவன் சந்ததியையும் தண்டிப்பேன்;
இந்த ஜனத்தின் நடுவிலே குடியிருப்பவன் ஒருவனும் அவனுக்கு இல்லாதிருப்பான்;
நான் என் ஜனத்துக்கு அருளுகல்வாழ்வை அவன் காண்பதில்லை,
இது யெகோவாவின் திருவாக்கு.
யெகோவாவுக்கு விரோதமாய்த் துரோகப் பேச்சு பேசினானே என்று சொல்.

யெகோவாவினிடமிருந்து எரேமியாவுக்கு வந்த வார்த்தை, 30
இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா 2
இப்படிச் சொல்லுகிறார்:
நான் உன்னிடம் சொன்ன எல்லா வார்த்தைகளையும் ஒரு புஸ்தகத்தில் எழுதிக்கொள்.
இதோ நாட்கள் வரும்—இது யெகோ 3
வாவின் திருவாக்கு—
அப்பொழுது நான் இஸ்ரவேலும் யூதாவுமாகிய என் ஜனத்தின் சன்பாக்கியத்தை மாற்றி,
நான் அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரப்பண்ணுவேன்;
அது அவர்களுக்குச் சொந்தமாகும்
என்று யெகோவா சொல்லுகிறார்.
இஸ்ரவேலையும் யூதாவையும்பற்றி 4
யெகோவா சொன்ன வார்த்தைகள் இவைகளே;
யெகோவா இப்படிச் சொல்லுகிறார், 5
தத்தளிக்கும் சத்தம் கேட்கிறது; திகில்!
சமாதானமில்லை.
ஆணுப்பிறந்தவன் பிரசவிக்கிறதுண்டோ என்று கேட்டுப் பாருங்கள்; 6
பிரசவிக்கிற ஸ்திரீயைப்போல் புருஷர் யாவரும் தங்கள் இடுப்புகளின்மேல் கைகளை வைத்திருக்கிறதையும்
முகங்களெல்லாம் மாறி வெளுத்திருக்கிறதையும் நான் காண்கிறதென்ன?
ஐயோ! அந்த நாள் பெரியது, அதைப் 7
போன்ற நாளில்லை;

அது யாக்கோபுக்கு இக்கட்டுக் காலம்;
அவனே அதிலிருந்து ரட்சிக்கப்படுவான்.
8 அந்நாளிலே—இது சேனைகளுடைய யெகோவாவின் திருவாக்கு—
நுகத்தை உன் கழுத்திலிருந்து முறித்து,
உன் கட்டுகளை அறுப்பேன்;
அந்நியர் இனி அவர்களை அடிமையாக்கி வேலைகொள்வதில்லை.
9 தங்கள் கடவுளாகிய யெகோவாவையும்,
நான் அவர்களுக்கு எழுப்பப்போகிற தங்கள் ராஜாவாகிய தாவீதையுமே சேவிப்பார்கள்.
10 ஆகையால் என் தாசனாகிய யாக்கோபே,
நீ பயப்படாதே, இது யெகோவாவின் திருவாக்கு.
இஸ்ரவேலே, நீ திகிலடையாதே;
இதோ, நான் உன்னைத் தூரத்திலும்
உன் சந்ததியாரை அவர்கள் சிறைப்பட்டுப்போன தேசத்திலும் இராதபடி ரட்சிப்பேன்;
யாக்கோபு திரும்பிவந்து அமர்ந்து சுகித்திருப்பான்; அவனைத் தத்தளிக்கப்பண்ணுகிறவனில்லை.
11 நான் உன்னோடே இருக்கிறேன், இது யெகோவாவின் திருவாக்கு;
உன்னை ரட்சிப்பேன், என்னால் நீ சிதறுண்டு தங்கியிருந்த எல்லா ஜாதியாரையும் நான் சர்வ சங்காரம் செய்வேன்;
உன்னையோ சர்வ சங்காரம் செய்யேன்,
மட்டாய்த் தண்டிப்பேன்;
முற்றிலும் தண்டியாமல் விடமுடியாது.
12 யெகோவா சொல்வதைக் கேள்:
உன் காயம் ஆறாதது, உன் புண் கொடியது;
13 உன் வழக்கில் துணைநிற்பவனில்லை,
உன் புண்ணுக்கு ஔஷதமுமில்லை, உன் காயம் ஆறுவதுமில்லை.
14 உன் நேசர் யாவரும் உன்னை மறந்தார்கள், அவர்கள் உன்னைத்தேடுவதில்லை;
உன் அக்கிரமம் பெரிதாகி, உன் பாவங்கள் அநேகமானபடியினாலே
சத்துரு அடிப்பதுபோலவும் கொடியவன் தண்டிப்பதுபோலவும் நான் உன்னைச் சிட்சித்தேன்.
15 உன் காயத்தினிமித்தம் நீ கூக்குரலிடுவானேன்? உன் புண் ஆறாதே,
உன் அக்கிரமம் பெரிதாகி, உன் பாவங்கள் அநேகமானபடியினாலே இவற்றை உனக்குச் செய்தேன்.
16 ஆதலால் உன்னைப் பட்சிக்கிறவர்கள் யாவரும் பட்சிக்கப்படுவார்கள்;
உன் சத்துருக்களெல்லாரும் சிறைப்பட்டுப் போவார்கள்;
உன்னைச் சூறையாடுகிறவர்கள் சூறையாடப்படுவார்கள்;
உன்னைக் கொள்ளையிடும் அனைவரையும் கொள்ளைக்கு ஒப்புக்கொடுப்பேன்.
17 அவர்கள் உன்னைத் தேடுவாரற்ற சீயோன் என்று சொல்லி, உனக்கு, தள்ளுண்டவள் என்று பேரிட்டார்களே;
நானே உன் காயத்தை ஆற்றுவேன், உன் புண்ணை சொஸ்தமாக்குவேன்,
இது யெகோவாவின் திருவாக்கு.
18 யெகோவா சொல்வது இதுவே:
இதோ, நான் யாக்கோபுடைய கூடாரங்களின் துன்ப நிலைமையை மாற்றி,
அவன் வாசஸ்தலங்களுக்கு இரக்கங் காட்டுவேன்;
நகரம் தன் மண்மேட்டின்மேல் கட்டப்படும்,
அரமனை முன்னிருந்த இடத்தில் நிலைப்படும்.
19 அவைகளிலிருந்து நன்றிசெலுத்துவோர், ஆடிப்பாடுவோர் இவர்களின் சத்தம் கேட்கும்;
அவர்களைப் பெருகப்பண்ணுவேன், அவர்கள் சிறுகிப்போவதில்லை;
அவர்களை மகிமைப்படச் செய்வேன், அவர்கள் சிறுமைப்படுவதில்லை.
20 அவர்கள் பிள்ளைகள் முன்போலிருப்பார்கள்;
அவர்கள் சபை எனக்கு முன்பாக நிலைத்திருக்கும்;
அவர்களை ஒடுக்கின யாவரையும் தண்டிப்பேன்.
21 அவர்களுடைய அதிபதி அவர்களில் ஒருவனாயிருப்பான்,
அவர்களை ஆளுகிறவன் அவர்கள் நடுவிலிருந்து தோன்றுவான்;
அவனைச் சமீபித்துவரச்செய்வேன், அவன் என்னிடத்தில் கிட்டிவருவான்;
வேறுயார் தன் இதயத்தைத் தைரியப்படுத்தி என்னிடத்தில் கிட்டிவருவான்?
இது யெகோவாவின் திருவாக்கு.
22 நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்,
நான் உங்கள் கடவுளாயிருப்பேன்.
23 இதோ, யெகோவாவின் உக்கிரப் பெருங்காற்று வெளிப்பட்டது,
அது அடித்துக்கொண்டுபோம் காற்றே, தெய்வபயமற்றோர் தலைமேல் அது பலமாய் மோதும்.
24 கர்த்தருடைய உக்கிரமானது அவருடைய இதய யோசனைகளை நிறைவேற்றுமளவும்

யெகோவாவின் உக்கிரகோபம் தணியாது,
கடைசிநாட்களில் அதை உணர்வீர்கள்.

**31** அக்காலத்திலே — இது யெகோவாவின் திருவாக்கு — நான் இஸ்ரவேலின் வம்சங்களுக்கெல்லாம் கடவுளாயிருப்பேன்,
அவர்கள் எனக்கு ஜனமாயிருப்பார்கள்.

2 யெகோவா சொல்வதைக் கேளுங்கள்:
பட்டயத்திற்குத் தப்பி மீந்த ஜனம்
வனாந்தரத்தில் இரக்கம் பெற்றது;
இஸ்ரவேல் இளைப்பாறும் இடம்போய்ச் சேர்ந்தது.

3 தூரத்திலிருந்து யெகோவா எனக்குத் தரிசனமாகி:
அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்;
ஆதலால் கிருபையாய் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்.

4 இஸ்ரவேல் என்னும் கன்னிகையே,
மறுபடியும் உன்னை நகரமாய்க் கட்டுவேன், நீ கட்டப்படுவாய்;
மறுபடியும் நீ மேளவாத்திய அலங்காரத்துடன்
சந்தோஷங்கொண்டாடுவாரோடு சேர்ந்து ஆடிப்பாடி வெளிப்படுவாய்.

5 சமாரியாவின் மலைகளிலே மறுபடியும் திராட்சத்தோட்டங்களை நடுவாய்;
அதை நடுகிறவர்களே அதின் பலனை அநுபவிப்பார்கள்.

6 எழுந்திருங்கள், நமது கடவுளாகிய யெகோவாவினிடம் சீயோனுக்குப்போவோம் வாருங்கள்
என்று எப்பிராயீமின் மலைகளிலுள்ள காவற்காரர் கூறுங்காலம் வரும் என்று சொன்னார்.

7 யெகோவா இப்படிச் சொல்லுகிறார்:
யாக்கோபினிமித்தம் மகிழ்ச்சியாய்க் கெம்பீரியுங்கள்;
ஜாதியாரில் சிறந்தவனினிமித்தம் ஆர்ப்பரியுங்கள்;
நீங்கள் சத்தமிட்டு ஸ்தோத்திரப்பாட்டுப் பாடி:
யெகோவாவே, உமது ஜனத்தை, இஸ்ரவேலில் மீதியானதை,
ரட்சியும் என்று சொல்லுங்கள்.

8 இதோ, நான் அவர்களை வடதேசத்திலிருந்து வரச்செய்து
அவர்களைப் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து கூட்டிவருவேன்;
குருடரும் சப்பாணிகளும் கர்ப்பவதிகளும்
பிரசவ ஸ்திரீகளும் அவர்களில் இருப்பார்கள்;
மகா கூட்டமாய் இவ்விடத்துக்குத் திரும்பிவருவார்கள்.

9 அவர்கள் அழுகையோடு விண்ணப்பஞ் செய்துகொண்டு வரவே,
நான் அவர்களை வழிநடத்துவேன்;
இடருத செம்மையான வழியிலே அவர்களை நீரோடைகளண்டைக்கு நடத்தி வருவேன்; இஸ்ரவேலுக்கு நான் பிதா,
எப்பிராயீம் என் ஜேஷ்ட புத்திரன்.

10 ஜாதியாரே, நீங்கள் யெகோவாவின் வார்த்தையைக் கேளுங்கள்,
இஸ்ரவேலைச் சிதறடித்தவர் அதைச் சேர்த்துக்கொண்டு
மேய்ப்பவன் தன் மந்தையைக் காப்பது போல அதைக் காப்பார் என்று
தூரத்திலுள்ள தீவுகளிலே பிரஸ்தாபித்துச் சொல்லுங்கள்.

11 யெகோவா யாக்கோபை மீட்டார்,
அவனிலும் பலத்தவனுடைய கையினின்று அவனை விடுவித்தார்.

12 அவர்கள் வந்து, சீயோன் மலையிலே கெம்பீரிப்பார்கள்;
யெகோவா அருளும் நன்மைகளாகிய தானியம், திராட்சரசம், எண்ணெய், ஆட்டுக்குட்டிகள், கன்றுக்குட்டிகள்
என்பவைகளுள்ள இடத்திற்கு ஓடிவருவார்கள்;
அவர்கள் ஆத்துமா நீர்பாயும் தோட்டம் போலிருக்கும்;
அவர்கள் இனித் தொய்ந்துபோவதில்லை.

13 அப்பொழுது கன்னிகைகள் ஆடிப்பாடி மகிழ்வார்கள்;
வாலிபரும் மூதியோருங் கூடவே அவரோடு சேர்ந்துகொள்வார்கள்;
நான் அவர்கள் துக்கத்தைச் சந்தோஷமாக மாற்றி அவர்களைத் தேற்றுவேன்;
அவர்கள் சஞ்சலம் நீங்க அவர்களைச் சந்தோஷப்படுத்துவேன்.

14 ஆசாரியரைக் கொழுமையானவைகளால் பூரிப்பாக்குவேன்;
என் ஜனங்கள் நான் அளிக்கும் நலமான வைகளினால் திருப்தியாவார்கள்;
இது யெகோவாவின் திருவாக்கு.

15 யெகோவா இப்படிச் சொல்லுகிறார்:
ராமாவிலே சத்தம் கேட்கிறது, புலம்பல்! கசப்பான அழுகை!
ராகேல் தன் பிள்ளைகள் நிமித்தம் அழுது,

அவைகளில்லாதபடியால் ஆறுதலடைய மனமில்லாதிருக்கிறாள்.

16 யெகோவா சொல்வதைக் கேள்:
நீ சத்தமிட்டு அழாதே, கண்ணீர் விடாதே;
உன் உழைப்புக்குப் பலன் உண்டு;
இது யெகோவாவின் திருவாக்கு.
சத்துருவின் தேசத்திலிருந்து அவர்கள் திரும்பிவருவார்கள்.

17 வருங்காலத்துக்கு உனக்கு நல்நம்பிக்கை யுண்டு;
இது யெகோவாவின் திருவாக்கு;
உன் பிள்ளைகள் தங்கள் தேசத்துக்குத் திரும்பிவருவார்கள்.

18 எப்பிராயீம் துக்கித்துப் புலம்பி:
நீர் என்னை சிட்சித்தீர், நான் வசங்காத இளங்காளைபோல் சிட்சிக்கப்பட்டேன்;
என்னைத் திருப்பும் அப்பொழுது திரும்புவேன்;
நீரே என் கடவுளாகிய யெகோவா.

19 நான் திரும்பின பின்பு மனஸ்தாபப்பட்டேன்,
நான் அறிவடைந்த பின் என் மார்பில் அடித்துக்கொண்டேன்;
என் இளவயதின் நிந்தையைச் சுமந்தவனாய் வெட்கி நாணிவந்தேன்
என்று சொன்னதை நான் நிட்டமாய்க் கேட்டேன்.

20 எப்பிராயீம் எனக்கு அருமையான குமாரனல்?
அவன் எனக்கு இனிய பிள்ளையா?
அவனுக்கு விரோதமாய்ப்பேசியும் அவனை நினைத்துக்கொண்டே இருக்கிறேன்;
என் உள்ளம் அவனிமித்தம் சஞ்சலப்படுகிறது, அவனுக்கு இரங்கவே இரங்குவேன்,
இது யெகோவாவின் திருவாக்கு.

21 உனக்குக் குறிப்படையாளங்களை நிறுத்து, வழி குறிக்கும் கற்களை நாட்டு;
நீ நடந்துபோன பாதையாகிய வழியைக் கவனித்துப்பார்;
இஸ்ரவேல் கன்னிகையே, திரும்பு; உன் ஊர்களாகிய இந்த இடங்களுக்கே திரும்பு.

22 விலகிப்போன குமாரத்தியே, எந்த மட்டும் அலைந்து திரிவாய்?
யெகோவா பூமியிலே ஒரு புதிய காரியத்தைச் சிருஷ்டிப்பார்,
ஸ்திரீயானவள் புருஷனைப் பரிபாலனம் பண்ணுவாள்.

23 இஸ்ரவேலின் கடவுளாகிய சேனைகளின் யெகோவா சொல்வது இதுவே:
நான் அவர்கள் துன்பநிலைமையை மாற்றும்போது, அவர்கள் மறுபடியும்:
நீதியின் வாசஸ்தலமே, பரிசுத்த பர்வதமே, யெகோவா உன்னை ஆசீர்வதிப்பார்
என்கிற இந்த வார்த்தை யூதா நாட்டிலும் அதின் ஊர்களிலும் சொல்லுவார்கள்.

24 அதிலே தன் சகல ஊர்களோடுங்கூட யூதாவும்
பயிரிடுவோரும் மந்தை மேய்ப்போரும் குடியிருப்பார்கள்.

25 நான் விடாய்த்தவர்களை ஆற்றித்தேற்றித்
தொய்ந்துபோன யாவரையும் திருப்தியாக்குவேன்.

26 — இச்சமயத்தில் நான் நித்திரைதெளிந்து பார்த்தேன்,
என் நித்திரை எனக்கு இனியதே —

27 இதோ நாட்கள் வரும், இது யெகோவாவின் திருவாக்கு;
அப்பொழுது இஸ்ரவேல் வீடு, யூதாவீடு எனும் நாடுகளில் மனுஷனையும் மிருகத்தையும் விதையென விதைப்பேன்.

28 அப்பொழுது நான் பிடுங்கவும் இடிக்கவும் கவிழ்க்கவும் அழிக்கவும்
தீங்கு செய்யவும் அவர்களை எப்படிக் கவனித்துக்கொண்டிருந்தேனோ
அப்படியே கட்டவும் நாட்டவும் அவர்களைக் கவனித்துக்கொண்டிருப்பேன்,
— இது யெகோவாவின் திருவாக்கு —.

29 பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்னுர்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின
என்று அக்காட்களிலே சொல்லமாட்டார்கள்.

30 அவனவன் தன் தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான்;
எந்த மனுஷன் திராட்சக்காய்களைத் தின்பானோ அவனுடைய பற்களே கூசிப்போகும்.

31 இதோ நாட்கள் வரும், இது யெகோவாவின் திருவாக்கு;
அப்பொழுது இஸ்ரவேல் வீட்டாரோடும் யூதா வீட்டாரோடும் புது உடன்படிக்கை செய்வேன்.

32 நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து கைபிடித்து அழைத்துவந்த நாளிலே,
அவர்களோடே செய்த உடன்படிக்கை போன்றதல்ல;
நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும்
என் உடன்படிக்கையை அவர்கள் மீறிப்போட்டார்களே,

இது யெகோவாவின் திருவாக்கு.
33 அந்நாட்களுக்குப் பின்பு நான் இஸ்ரவேல் வீட்டாரோடே செய்யும் உடன்படிக்கை இதுவே, இது யெகோவாவின் திருவாக்கு; என் பிரமாணத்தை நான் அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதுவேன், நான் அவர்கள் கடவுளாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்.
34 இனி எவனும் தன் அயலானுக்கும் எவனும் தன் சகோதரனுக்கும் போதனை செய்து, யெகோவாவை அறிந்துகொள்ளுங்கள் எனச் சொல்வதில்லை; அவர்கள் எல்லாரும், சிறியவன் முதல் பெரியவன் வரைக்கும் என்னை அறிந்து கொள்வார்கள்; இது யெகோவாவின் திருவாக்கு. நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னிப்பேன், அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்.
35 யெகோவா சொல்வதைக் கேளுங்கள்; அவர் பகலிலே வெளிச்சம் தரச் சூரியனையும், இரவிலே வெளிச்சந்தர ஒழுங்குப்படியே சந்திர நட்சத்திரங்களையும் ஏற்படுத்தினவர், அலைகள் கொந்தளித்தெழச் சமுத்திரத்தைக் குலுக்குகிறவர், சேனைகளின் யெகோவா என்பது அவர் திருநாமம், அவர் சொல்வது இதுவே:
36 இந்த நியமங்கள் எனக்குமுன் இராதபடி ஒழிந்துபோமானால் — இது யெகோவாவின் திருவாக்கு — அப்பொழுது இஸ்ரவேல் சந்ததியும் எனக்கு முன் என்றைக்கும் ஒரு ஜனமாயிராதபடி அற்றுப்போம்.
37 யெகோவா இப்படிச் சொல்லுகிறார், மேலேயுள்ள வானங்களை அளக்கவும் கீழேயுள்ள பூமியின் அஸ்திபாரங்களை ஆராயவும் கூடியதாயிருந்தால் நான் இஸ்ரவேல் வம்சத்தார் அனைவரையும் அவர்கள் செய்த எல்லாவற்றினிமித்தமும் வெறுத்துவிடுவேன், இது யெகோவாவின் திருவாக்கு.
38 இதோ நாட்கள் வரும், — இது யெகோவாவின் திருவாக்கு — அப்பொழுது இந்த நகரம் களனையேலின் கோபுரமுதல் மூலைவாசல்மட்டும் யெகோவாவுக்கென்று கட்டப்படும்.
39 அப்புறம் அளவுநூல் அதற்கு நேரே காரேப் மேட்டிற்குச்சென்று கோவா புறமாகத் திரும்பும்.
40 பிரதேசங்களும் சாம்பலுமுள்ள பள்ளத்தாக்கனைத்தும் தேரோன் ஓரோடைக்கு இப்பால் கிழக்கே இருக்கிற குதிரைவாசலின் கோடி மட்டுமுள்ள சகல வயல்களும் யெகோவாவுக்குப் பிரதிஷ்டையாகும். அப்புறம் அது என்றென்றைக்கும் பிடுங்கப்படுவதுமில்லை, கவிழ்க்கப்படுவதுமில்லை.

**32** யூதா ராஜாவாகிய சிதெக்கியாவின் பத்தாம்வருஷத்தில், நேபுகாத்நேச்சாரின் பதினெட்டாம் வருஷத்திலே, யெகோவாவினிடமிருந்து எரேமியாவுக்கு வார்த்தைவந்த காலத்தில், 1 பாபிலோன் ராஜாவின் சேனை 2 எருசலேமை முற்றுகைபோட்டிருந்தது; எரேமியா தீர்க்கதரிசியோ, யூதா ராஜாவின் அரமனையிலுள்ள காவற்சாலை முற்றத்திலே அடைபட்டிருந்தான். யூதாராஜாவாகிய 3 சிதெக்கியா எரேமியாவைக் கூப்பிட்டு: நீ சொல்லுகிற தீர்க்கதரிசனமென்ன? இதோ, இந்த நகரத்தைப் பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கிறேன்; அவன் இதைப் பிடிப்பான் என்று யெகோவா சொல்லுகிறார்; யூதாராஜாவாகிய சிதெக்கியா 4 கல்தேயரின் கைக்குத் தப்பிப்போகாமல், பாபிலோன் ராஜாவின் கையில் நிச்சயமாக ஒப்புக்கொடுக்கப்படுவான்; இருவரும் முகமுகமாய்ப் பேசுவார்கள், ஒருவரையொருவர் கண்ணாலே பார்ப்பார்கள். அவன் 5 சிதெக்கியாவைப்பாபிலோனுக்குக் கொண்டுபோவான், நான் வந்து அவனைப் பார்த்துக்கொள்ளுமட்டும் அங்கே அவன் இருப்பான்; இது யெகோவாவின் திருவாக்கு, நீங்கள் கல்தேயரோடே யுத்தம்பண்ணுவீர்களானால் உங்களுக்கு ஜெயப்படுவில்லை என்கிறார் என்று சொல்லி எரேமியாவைச் சிறையிலடைத்திருந்தான்.

யெகோவாவின் வார்த்தை தனக்கு வந்ததென எரேமியா சொன்னான்: 6 இதோ, 7 மெயேல், உன் பெரிய தகப்பனுடைய சல்லூமின்குமாரன், உன்னிடம் வந்து ஆனதோத்திலிருக்கிற என் நிலத்தை நீ வாங்கிக்கொள்; அதைக் கொள்வதற்கென மீட்கும் உரிமை உடையவன் நீயே என்று சொல்வான் என்று உரைத்தார். அப்படியே என் 8

பெரிய தகப்பன் மகனுகிய கனமெயேல், யெகோவாவின் வார்த்தையின்படி காவற்சாலே முற்றத்தில் என்னிடம் வந்து: பென்யமீன்நாட்டு ஆனதோத்தூரிலுள்ள என் நிலத்தை நீர் வாங்கிக்கொள்ளும்; சுதந்தர பாத்தியம் உமக்குண்டு, அதை மீட்கும் உரிமை உடையவர் நீரே, அதை வாங்கிக் கொள்ளும் என்றான்; அப்பொழுது அது யெகோவாவின் வார்த்தை என்று அறிந்து கொண்டேன். ஆகவே என் பெரியதகப்பன் மகனுகிய கனமெயேலிடம் நான் ஆனதோத்திலுள்ள அவனுடைய நிலத்தை வாங்கி, அதின் கிரயமாகிய பதினேழு சேக்கலெடை வெள்ளியை அவனுக்கு நிறுத்துக் கொடுத்தேன். நான் பத்திரத்தில் கையெழுத்தையும் முத்திரையையும் போட்டுச் சாட்சிகளேவைத்து வெள்ளியைத் தராசிலே நிறுத்துக்கொடுத்தேன். பின்பு நான் நியமங்களையும் விபரங்களும் அடங்கிய முத்திரை போடப்பட்ட கிரயப்பத்திரத்தையும் முத்திரை போடாத பிரதியையும் எடுத்து, என் பெரிய தகப்பன் மகனுகிய கனமெயேலின் கண்களுக்கு முன்பாகவும், கிரயப்பத்திரத்தில் கையெழுத்துப்போட்ட சாட்சிகளின் கண்களுக்கு முன்பாகவும், காவற்சாலே முற்றத்திலிருந்த எல்லா யூதரின் கண்களுக்கு முன்பாகவும், கிரயப்பத்திரத்தை மகசேயாவின் குமாரனுகிய நேரியாவின் மகன் பாருக்கினிடம் கொடுத்து, அவர்கள் கண்களுக்கு முன்பாகப் பாருக்குக்குக் கட்டளையிட்டு: இஸ்ரவேலின் கடவுளாகிய சேனைகளின் யெகோவா சொல்வதைக்கேள், நீ முத்திரை போட்ட கிரயப்பத்திரமும் முத்திரை போடாத பிரதியுமாகிய இந்தச் சாசனங்களே வாங்கி, அவைகள் அநேகநாளிருக்கும்படி அவைகளே ஒரு மண்பாண்டத்திலே வை. இனி இந்த தேசத்தில் மறுபடியும் வீடுகளும் நிலங்களும் திராட்சத்தோட்டங்களும் கொள்ளப்படுமென்று இஸ்ரவேலின் கடவுளாகிய சேனைகளின் யெகோவா சொல்லுகிறார் என்றேன்.

நான் கிரயப்பத்திரத்தை நேரியாவின் குமாரனுகிய பாருக்கினிடம் கொடுத்த பின்பு, நான் யெகோவாவை நோக்கிப் பிரார்த்தனைசெய்து: யெகோவாவாகிய ஆண்டவரே, இதோ, தேவரீர் உமது மகாவல்லமையினுலும் நீட்டிய உமது புயத்தினுலும் வானத்தையும் பூமியையும் படைத்தீர். உமக்கு ஆகாதகாரியம் ஒன்றுமில்லே. நீர் ஆயிரம் தலைமுறைகளுக்கும் கிருபைசெய்கிறவர், பிதாக்களுடைய அக்கிரமத்தின் பலனே அவர்களுக்குப்பின் அவர்கள் பிள்ளைகளின் மடியிலே கொடுக்கிறவர்; மகத்துவமும் வல்லமையுமுள்ள கடவுள், சேனைகளின் யெகோவா என்னும் திருநாமமுடையவர். ஆலோசனையிலே பெரியவர், செயலிலே வல்லமையுள்ளவர்; உமது கண்கள் மனுபுத்திரருடைய எல்லா வழிகளின்மேலும் நோக்கமாயிருக்கின்றன; அவனவனுக்கு அவனவனுடைய வழிக்குத் தக்கபடியும் அவனவன் செயல்களால் விளைந்ததற்குத் தக்கபடியும் கொடுக்கிறீர். அடையாளங்களேயும் அற்புதங்களேயும் தேவரீர் எகிப்து தேசத்திலே செய்தீர், இஸ்ரவேலிலும் மற்ற மனுஷருக்குள்ளும் இக்நாள்வரைக்கும் அப்படியே செய்கிறீர். இக்நாளிலும் நிலைத்திருக்கிற பேரை உமக்கு உண்டாக்கிக்கொண்டீர்; இஸ்ரவேலாகிய உமது ஜனத்தை அடையாளங்களினுலும் அற்புதங்களினுலும் பலத்த கரத்தினுலும் நீட்டிய புயத்தினுலும் மகா பயங்கரத்தினுலும் எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினீர். அவர்களுடைய பிதாக்களுக்குக் கொடுப்பதாக நீர் ஆணையிட்ட இந்த தேசத்தை, பாலும் தேனும் ஒடுகிற தேசத்தையே, அவர்களுக்குக் கொடுத்தீர். அவர்கள் அதற்குள் வந்து அதைச் சொந்தமாக்கிக்கொண்டார்கள்; ஆனுலும் நீர் சொன்னதை அவர்கள் கேட்காமலும், உமது நியாயப்பிரமாணத்தில் நடவாமலும், செய்யும்படி நீர் அவர்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் செய்யாமலும் போனுர்கள்; ஆதலால் இந்தத் தீங்கையெல்லாம் அவர்களுக்கு நேரிடப்பண்ணினீர். இதோ, நகரம்வரைக்கும் கொத்தளங்கள் அமைத்துவிட்டார்கள், நகரத்தைப் பிடிக்க வருகிறார்கள்; பட்டயம், பஞ்சம், கொள்ளைநோய் இவற்றினுல் இந்த நகரம் அதற்கு விரோதமாய் யுத்தம்செய்கிற கல்தேயரின் கையிலே ஒப்புக்கொடுக்கப்படுகிறது; நீர் சொன்னபடியே சம்பவிக்கிறது, இதோ, நீர் அதைக் காண்கிறீர். யெகோவாவாகிய ஆண்டவரே, நீர் என்னிடம், உனக்கு ஒரு நிலத்தைக் கிரயத்துக்கு வாங்கிக்கொண்டு அதற்குச் சாட்சிகளே வையென்று சொன்னீரே, நகரத்தையோ நீர் கல்தேயரின் கையில் ஒப்புக்கொடுத்துவிட்டீரே என்றேன்.

அப்பொழுது யெகோவாவின் வார்த்தை எரேமியாவுக்கு வந்தது: இதோ, நானே யெகோவா, மாம்சமான யாவருக்கும் கடவுள், என்னுலே ஆகாத காரியமுண்டோ? ஆதலால் யெகோவா இப்படிச் சொல்லுகிறார்: இதோ, நான் இந்த நகரத்தைக் கல்தேயரின் கையிலும், பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கையிலும் ஒப்புக்

கொடுக்கிறேன், அவன் இதைப்பிடிப்பான்.
29 இந்த நகரத்துக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிற கல்தேயர் இதனுட்பிரவேசித்து இந்த நகரத்தையும் அதன் வீடுகளையும் சுட்டெரிப்பார்கள், எனக்குக் கோபமுண்டாக அவற்றின்மேல் பாகாலுக்குத் தூபங்காட்டி, அந்திய தேவர்களுக்குப் பானபலிகளை வார்த்
30 தார்களே. இஸ்ரவேல் புத்திரரும் யூதா புத்திரரும் தங்கள் சிறுவயதுமுதல் என் பார்வையில் தீமையானதையே செய்துவந்தார்கள்; இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கைகளின் செய்கையினாலே எனக்குக் கோபமுண்டாக்கி வந்தார்களே, இது யெகோவாவின் திரு
31 வாக்கு. அவர்கள் இந்த நகரத்தைக்கட்டின நாள்முதல் இந்நாள்வரைக்கும் அது எனக்குக் கோபத்தையும் உக்கிரத்தையும்
32 உண்டாக்கி வந்தது. எனக்குக் கோபமுண்டாக இஸ்ரவேல் புத்திரரும் யூதா புத்திரரும் அவர்கள் ராஜாக்களும் அவர்கள் அதிபதிகளும் அவர்கள் ஆசாரியர்களும் அவர்கள் தீர்க்கதரிசிகளும், யூதா மனுஷரும் எருசலேமின் குடிகளும் செய்த எல்லாத் தீமையும் நான் அதை என் சமுகத்
33 தை விட்டகற்றுவதற்கு ஏதுவாயிற்று. தங்கள் முகத்தையல்ல, முதுகை எனக்குக் காட்டினார்களே; நான் திரும்பத்திரும்ப அவர்களுக்குப் போதித்தும் அவர்கள் செவிகொடாமலும் சிட்சையை ஏற்றுக்
34 கொள்ளாமலும் போனார்கள். அவர்கள் என் நாமம் வழங்கும் ஆலயத்திலே தங்கள் அருவருப்புகளை வைத்து அதைத் தீட்டுப்
35 படுத்தினார்கள். அவர்கள் மோளேகுக்கென்று தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் அக்கினி தகனமாகப் படைக்க இன்னோமுடைய குமாரனின் பள்ளத்தாக்கிலே பாகாலின் கோவில் மேடைகளைக் கட்டினார்கள்; அவர்கள் இந்த அருவருப்பான காரியத்தைச்செய்து யூதாவைப் பாவஞ்செய்யப்பண்ணவேண்டுமென்று நான் அவர்களுக்குக் கட்டளையிடவுமில்லை, அது என் மனதில் தோன்றவுமில்லை.
36 இப்படியிருக்க, பட்டயம், பஞ்சம், கொள்ளைநோய் இவற்றால் பாபிலோன் ராஜாவின்கையில் ஒப்புக்கொடுக்கப்பட்டுப்போம் என்று நீங்கள் சொல்லுகிற இந்த நகரத்தைப்பற்றி இஸ்ரவேலின் கடவுளாகிய யெ
37 கோவா சொல்வதைக் கேளுங்கள்: என் கோபத்தினாலும் என் உக்கிரத்தினாலும் என் கடுங்கோபத்தினாலும் நான் அவர்களைத்துரத்தியிருந்த சகல தேசங்களினுமிருந்து, இதோ, அவர்களைச் சேர்த்துக்கொண்டு, அவர்களை இந்த ஸ்தலத்துக்குத் திரும்பிவரவும் இதிலே பயமின்றிக் குடியிருக்கவும் பண்ணுவேன்.
38 அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான்
39 அவர்கள் கடவுளாயிருப்பேன். அவர்களும் அவர்களுக்குப்பின் அவர்கள் பிள்ளைகளும் சேமமாயிருப்பதற்கேதுவாகச் சகல நாட்களிலும் அவர்கள் எனக்குப் பயந்து நடக்கும்படி நான் அவர்களுக்கு ஒரே இருதயத்தையும் ஒரே வழியையும் கட்டளையிடுவேன்; நான் அவர்களை விட்டு விலகாமல் அவர்களுக்கு நன்மைசெய்வேன் என்கிற நித்திய உடன்படிக்கையை அவர்களோடே செய்வேன்; அவர்கள் என்னை விட்டு விலகாதபடி எனக்குப் பயப்படும்
40 பயத்தை அவர்கள் இருதயத்திலே வைப்பேன்; நான் அவர்கள்மேல் சந்தோஷமாகி
41 அவர்களுக்கு நன்மைசெய்வேன்; என் முழு இருதயத்தோடும் என் முழு ஆத்துமாவோடும் அவர்களை இந்த தேசத்திலே மெய்யாகவே நிலைநாட்டுவேன்.
42 யெகோவா இப்படிச் சொல்லுகிறார்: நான் இந்த ஜனத்தின்மேல் இத்தப்பெரிய தீங்கையெல்லாம் வரப்பண்ணினதுபோல, அவர்களைப்பற்றிச் சொன்ன சகல நன்மையையும் அவர்கள்மேல் வரப்பண்ணுவேன்.
43 மனுஷனும் மிருகமுமில்லாதபடி பாழாய்ப் போயிற்று என்றும் கல்தேயரின் கையிலே ஒப்புக்கொடுக்கப்பட்டுப்போயிற்று என்றும் நீங்கள் சொல்லுகிற இந்த தேசத்திலே நிலங்கள் கொள்ளப்படும். பென்யமீன்நாட்
44 டிலும் எருசலேமின் சுற்றுப்புறங்களிலும் யூதாவின் ஊர்களிலும் மலைநாட்டு ஊர்களிலும் சமநிலநாட்டு ஊர்களிலும் தென்னாட்டு ஊர்களிலும் நிலங்கள் கிரயமாகக் கொள்ளப்படும், பத்திரங்களில் கையெழுத்துப்போட்டு முத்திரையிட்டுச் சாட்சிகளை வைப்பார்கள்; அவர்கள் தன்பங்கிலைமையை மாற்றுவேன்; இது யெகோவாவின் திருவாக்கு.

33 எரேமியா இன்னும் காவற்சாலையின் முற்றத்திலே அடைக்கப்பட்டிருக்கையில், யெகோவாவின் வார்த்தை இரண்டாமுறை அவனுக்கு வந்தது:
2 செய்வன செய்கிற யெகோவா, அவற்றை உருவாக்கி ஸ்திரப்படுத்துகிற யெகோவா, யெகோவா என்னும் திருநாமமுள்ளவரே, இப்படிச் சொல்லுகிறார்: என்னை
3 நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்குப் பதிலளிப்பேன், நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன். கொத்தளம், பட்
4 டயம் இவற்றின்முன் இடிபட்ட இந்த நகரத்தின் வீடுகளையும், யூதா ராஜாக்களின் வீடு

கனேயும்பற்றி இஸ்ரவேலின் கடவுளாகிய
5 யெகோவா சொல்வது இதுவே: அவர்கள் கல்தேயரோடே யுத்தம்பண்ணப்போகையில் நான் என் கோபத்தினும் உக்கிரத்தினும் அடித்த மனுஷ பிரேதங்களினால் வீடுகள் நிரம்பும்; அவர்களின் சகல தீமையினிமித்தமும் இந்த நகரத்துக்கு நான் என் முகத்
6 தை மறைத்துக்கொண்டேன். எனினும், இதோ, நான் அவர்கள் காயத்தை ஆற்றிச் சுகப்படுத்தி அவர்களைக் குணமாக்குவேன், சமாதானமும் நிலையான வாழ்வும் அவர்களுக்குச் சம்பூரணமாய்க் கிடைக்கச்செய்
7 வேன். நான் யூதாவின் துன்பநிலைமையையும் இஸ்ரவேலின் துன்பநிலைமையையும் மாற்றி ஆதியிலிருந்ததுபோல அவர்களைக்
8 கட்டுவிப்பேன்; அவர்கள் எனக்கு விரோதமாய்ச் செய்த அவர்களுடைய சகல பாவங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் அவர்களை நீங்கலாக்கிச் சுத்திகரிப்பேன்; அவர்கள் எனக்கு விரோதமாகப் பாவங்களையும் துரோகங்களையும்செய்து நடப்பித்த சகல அக்கிர
9 மங்களையும் மன்னிப்பேன்; நான் அவர்களுக்குச் செய்யும் நன்மையனைத்தையும் கேட்கப்போகிற பூமியின் சகல ஜாதியாரின் பார்வையிலும் அது எனக்குச் சந்தோஷகரமான பேரும் புகழும் சிறப்புமாகும்; நான் அவர்களுக்கு அருளிச்செய்யும் சகல நன்மையையும் சகல சுகவாழ்வையும்கண்டு அந்த ஜாதியார் பயந்து நடுங்குவார்கள்.
10 யெகோவா இப்படிச் சொல்லுகிறார்: மனுஷனில்லாமலும் மிருகமில்லாமலும் அவாந்தர வெளியாய்க் கிடக்கிறதென்று நீங்கள் சொல்லுகிற இந்த இடத்திலும் யூதாவின் ஊர்களிலும், மனுஷனுவது குடியிருப் போராவது மிருகமாவது இல்லாத பாழான
11 எருசலேமின் வீதிகளிலும், | இன்னும் களிப்பின் சத்தமும் மகிழ்ச்சியின் சத்தமும் மணவாளனின் சத்தமும் மணவாட்டியின் சத்தமும், சேனைகளின் யெகோவாவுக்கு நன்றிசெலுத்துங்கள், யெகோவா நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளதென்று சொல்லுகிறவர்களின் சத்தமும், யெகோவாவின் ஆலயத்துக்கு ஸ்தோத்திரபலிகளைக் கொண்டு வருகிறவர்களின் சத்தமும் கேட்கும்; தேசத்தின் துன்ப நிலைமையைமாற்றி ஆதியிலிருந்ததுபோலாகும்படி செய்வேன் என்று யெகோவா சொல்லுகிறார்.
12 சேனைகளின் யெகோவா சொல்வது இதுவே: மனுஷனும் மிருகமும் இல்லாமல் அவாந்தர வெளியாய்க்கிடக்கிற இந்த இடத்திலும், இதைச்சேர்ந்த ஊர்களிலும் மேய்ப்பர்கள் ஆடுகளை மடக்குகிற இடம் இருக்
கும். மலைநாட்டு ஊர்களிலும், சமனிலநாட்டு 13
ஊர்களிலும், தென்னாட்டு ஊர்களிலும், பென்யமீன் நாட்டிலும் எருசலேமின் சுற்றுப்புறங்களிலும், யூதாவின் ஊர்களிலும் மறுபடியும் ஆடுகள் தங்களைத் தொகையிடுகிறவனுடைய கையின்கீழ் கடந்துவரும் என்று யெகோவா சொல்லுகிறார்.

இதோ, நாட்கள் வரும்— இது யெகோ 14
வாவின் திருவாக்கு— அப்பொழுது நான் இஸ்ரவேல் வீட்டாரையும் யூதா வீட்டாரையும்பற்றிச் சொன்ன நல்வார்த்தையை நிறைவேற்றுவேன். அந்நாட்களிலும் அக்காலத் 15
திலும் தாவீதுக்கு நீதிமுளையை முளைக்கப் பண்ணுவேன்; அவர் பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார். அந்நாட் 16
களில் யூதா இரட்சிக்கப்படும், எருசலேம் பயமின்றிக் குடியிருக்கும்; யெகோவா நமது நீதி என்பதுவே அவளுக்குத் தரிக்கப்படும் நாமம். யெகோவா இப்படிச் சொல்லுகி 17
றார்: இஸ்ரவேல் வீட்டாரின் சிங்காசனத்தின்மேல் உட்காரும் ஒருவன் தாவீதுக்கு இல்லாமற்போவதில்லை. நாள்தோறும் 18
தகனபலியிட்டு, போஜனபலி தகித்து, இரத்த பலிசெலுத்தும் ஒருவன் எனக்கு முன்பாக ஆசாரியருக்கும் லேவியருக்கும் இல்லாமற் போவதுமில்லை.

யெகோவாவின் வார்த்தை எரேமியா 19
வுக்கு வந்தது, யெகோவா சொல்வதைக் கேளுங்கள்: குறித்த நேரங்களில் பகற்கால 20
மும் இராக்காலமும் வராதபடி நீங்கள், பகற்காலத்தைப்பற்றி நான் செய்த ஏற்பாட்டையும் இராக்காலத்தைப்பற்றி நான் செய்த ஏற்பாட்டையும் அவமாக்குவீர்களானால், | என் தாசனுகிய தாவீதோடே 21
நான் செய்த உடன்படிக்கையையும் அவன் சிங்காசனத்தில் அரசாளும் குமாரன் அவனுக்கு இல்லாமற்போகும்படியாக அவமாகும்; எனக்குப் பணிவிடை செய்கிற லேவிய ஆசாரியரோடு நான் செய்த உடன்படிக்கையும் அப்பொழுது அவமாகும். வானத்து நட்சத்திர சேனைகள் எண்ண 22
முடியாததும் கடற்கரை மணல் அளக்க முடியாததுமாயிருப்பதுபோல, நான் என் தாசனுகிய தாவீதின் சந்ததியையும் எனக்குப் பணிவிடை செய்கிற லேவியரையும் பெருகப்பண்ணுவேன் என்றார்.

பின்னும் யெகோவாவின் வார்த்தை 23
எரேமியாவுக்கு வந்தது, இந்த ஜனங்கள் பேசுகிறதை நீ கவனிக்கவில்லையோ? தாம் 24
தெரிந்துகொண்ட இரண்டு வம்சங்களையும் யெகோவா தள்ளிவிட்டாரென்று சொல்லுகிறார்கள், இவ்விதமாக, தங்கள் பார்வை

யில் என் ஜனம் இனி ஒரு ஜாதியல்ல
வென்று அதை அசட்டைசெய்கிறார்களே.
25 யெகோவா இப்படிச் சொல்லுகிறார்: பகற்
காலத்தையும் இராக்காலத்தையும்பற்றி
நான் செய்த ஏற்பாடும் வானத்துக்கும்
பூமிக்கும் கொடுத்த நியமங்களும் அற்றுப்
26 போகுமேயானால், | அப்பொழுது நான்யாக்
கோபின் சந்ததியையும், என் தாசனுடைய தா
வீதின் சந்ததியையும் தள்ளி, ஆபிரகாம்
ஈசாக்கு யாக்கோபு என்பவர்களின் சந்ததி
யை ஆளத்தக்கவர்கள் அதிலிருந்து எழும்
பாதபடி செய்வேன்; உள்ளபடியோ நான்
அவர்கள் துன்ப நிலைமையைமாற்றி அவர்
களுக்கு இரக்கங்காட்டுவேன்.

**34** பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்
சாரும் அவனுடைய சர்வ சேனையும் அவ
னுடைய ஆளுகைக்குட்பட்ட பூமியின்
சகல ராஜ்யங்களும் சகல ஜனங்களும்,
எருசலேமுக்கும் அதைச்சேர்ந்த சகல ஊர்
களுக்கும் விரோதமாக யுத்தம்பண்ணுகை
யில் யெகோவாவின் வார்த்தை எரேமியா
2 வுக்கு வந்தது: இஸ்ரவேலின் கடவுளாகிய
யெகோவா இப்படிச் சொல்லுகிறார், நீ
போய், யூதா ராஜாவாகிய சிதெக்கியாவோடு
பேசி: யெகோவா சொல்வதைக் கேள்,
இதோ, நான் இந்த நகரத்தைப் பாபிலோன்
ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கிறேன்,
அவன் இதை அக்கினியால் சுட்டெரிப்
3 பான். நீ அவன் கைக்குத் தப்பிப்போகா
மல் நிச்சயமாகவே பிடிபட்டு அவன்
கையில் ஒப்புக்கொடுக்கப்படுவாய்; நீயும்
பாபிலோன் ராஜாவும் ஒருவரையொருவர்
கண்ணுலே பார்ப்பீர்கள், இருவரும் முக
முகமாய்ப் பேசுவீர்கள்; நீ பாபிலோனுக்
4 குப் போவாய். ஆகிலும் யூதாவின் ராஜா
வாகிய சிதெக்கியாவே, யெகோவாவின்
வார்த்தையைக் கேள்; உன்னைப்பற்றி
யெகோவா சொல்வது இதுவே, நீ பட்ட
யத்தாலே சாவதில்லை; சமாதானமாய்ச்
5 சாவாய். உனக்கு முன்னிருந்த ராஜாக்க
ளாகிய உன் பிதாக்களினிமித்தம் கந்தவர்க்
கங்களைக் கொளுத்தினதுபோல் உன்னிமித்த
மும் கொளுத்தி, ஐயோ! ஆண்டவனே,
என்று சொல்லி, உன்னிமித்தம் புலம்பு
வார்கள்; இது நானே சொன்ன வார்த்தை,
இது யெகோவாவின் திருவாக்கு என்று
6 சொல் என்றார். இந்த வார்த்தைகளையெல்
லாம் தீர்க்கதரிசியாகிய எரேமியா எருச
லேமிலே யூதா ராஜாவாகிய சிதெக்கியாவி
7 னிடம் சொன்னான். அக்காலத்தில் பாபி
லோன் ராஜாவின் சேனைகள் எருசலேமுக்கு
விரோதமாகவும் யூதாவின் சகல பட்டணங்
களிலும் மீந்த பட்டணங்களாகிய லாகி
ஷுக்கும் அசேக்காவுக்கும் விரோதமாக
வும் யுத்தம்பண்ணிக்கொண்டிருந்தன; யூதா
வின் அரணிப்பான பட்டணங்களில் மீந்
திருந்தவைகள் இவைகளே.

8 எருசலேமிலுள்ள சகல ஜனங்களும்
தங்களுக்குள்ளே விடுதலையைப் பிரசித்தம்
பண்ண வேண்டுமென்று சிதெக்கியா ராஜா
எருசலேமிலுள்ள முழுஜனத்தோடும் உடன்
படிக்கை செய்தபின்பு யெகோவாவின்
9 வார்த்தை எரேமியாவுக்கு வந்தது; ஒருவ
னும் யூதஜாதியானகிய தன் சகோதரனை
அடிமையாக்கி வேலைகொள்ளாதபடி அவ
னவன் தன்தன் எபிரேய வேலைக்காரனையும்
எபிரேய வேலைக்காரியையும் விடுதலையாக்கி
அனுப்பிவிடவேண்டுமென்று உடன்படிக்
கை செய்யப்பட்டது. ஒவ்வொருவனும், 10
தன் வேலைக்காரனையும் தன் வேலைக்காரியை
யும் இனி அடிமையாக்கி வேலைகொள்ளா
மல் விடுதலையாக்கிவிட வேண்டுமென்னும்
உடன்படிக்கைக்கு உட்பட்ட சகல அதி
பதிகளும் சகல ஜனங்களும் அதன் நிபந்
தனைக்கு இணங்கினார்கள், இணங்கி அவர்
களை அனுப்பிவிட்டார்கள். பின்போ அவர் 11
கள் தங்கள் மனதைமாற்றி, தாங்கள் விடு
தலையாக்கி அனுப்பிவிட்ட வேலைக்காரரை
யும் வேலைக்காரிகளையும் திரும்பிவரச்செய்து
அவர்களை வேலைக்காரரும் வேலைக்காரி
களுமாயிருக்கும்படி அடிமைப்படுத்திக்
கொண்டார்கள். அக்காலத்தில் யெகோ 12
வாவினிடமிருந்து எரேமியாவுக்கு வந்த
வார்த்தை இதுவே, இஸ்ரவேலின் கடவுளா 13
கிய யெகோவா இப்படிச் சொல்லுகிறார்:
நான் உங்கள் பிதாக்களை அடிமைத்தன
வீடாகிய எகிப்துதேசத்திலிருந்து அழைத்து
வந்த நாளிலே அவர்களோடே உடன்
படிக்கைசெய்து, | அவனவன் தனக்கு விற் 14
கப்பட்ட தன் எபிரேய சகோதரனை முடி
வில் ஏழாம்வருஷத்திலே நீங்கள் அனுப்பி
விடவேண்டும் என்றும் அவன் உனக்கு
ஆறுவருஷம் அடிமை வேலைசெய்தபின்பு
அவனை உன்னிடம் வைத்துக்கொள்ளாமல்
விடுதலையாக்கி அனுப்பிவிடவேண்டும் என்
றும் சொன்னேன்; உங்கள் பிதாக்களோ
என் சொல்லைக் கேளாமலும் தங்கள் செவி
யைச் சாயாமலும் போனார்கள். நீங்களோ 15
இப்பொழுது மனந்திரும்பி, அவனவன்
தன்தன் அயலானுக்கு விடுதலையைப் பிர
சித்தப்படுத்தி என் பார்வையில் நேர்மை
யானதைச் செய்து, என் நாமம் வழங்கும்
ஆலயத்திலே என் சந்நிதியில் உடன்படிக்

16 கை செய்தீர்கள். பின்போ நீங்கள் மனதை மாற்றி என் நாமத்தைப் பரிசுத்தமற்றது போலாகும்படி செய்தீர்கள், நீங்கள் அவனவன் விடுதலையாக்கி அவர்கள் இஷ்டம் போல் அனுப்பிவிட்ட தன் வேலைக்காரனையும் தன் வேலைக்காரியையும் திரும்பிவரச் செய்து, அவர்களை உங்களுக்கு வேலைக்காரரும் வேலைக்காரிகளுமாயிருக்கும்படி அடிமைப்படுத்தினீர்கள்.

17 ஆதலால் யெகோவா இப்படிச் சொல்லுகிறார்: நீங்கள் அவனவன் தன்தன் சகோதரனுக்கும் அவனவன் தன்தன் அயலானுக்கும் விடுதலையைப் பிரசித்தப்படுத்தும் விஷயத்தில் என் சொல்லைக் கேளாமற்போனீர்களே; இதோ, நான் உங்களுக்குப் பிரசித்தப்படுத்தும் விடுதலை இதுவே,—இது யெகோவாவின் திருவாக்கு—உங்களைப் பட்டயத்துக்கும் கொள்ளைநோய்க்கும் பஞ்சத்துக்கும் ஒப்புக்கொடுத்துவிடுவேன்; பூமியின் ராஜ்யங்களுக்கெல்லாம் உங்களைப் பயங்
18 கரக்காட்சியாக்குவேன். கன்றுக்குட்டியை இரண்டாகத் துண்டித்துத் துண்டங்களின் நடுவே கடந்துசென்று என் சந்நிதியிலே செய்த உடன்படிக்கையின் வார்த்தைகளை நிறைவேற்றாமல், என் உடன்படிக்கையை
19 மீறின மனுஷரை, | கன்றுக்குட்டியின் துண்டுகளின் நடுவே கடந்துபோன யூதாவின் அதிபதிகள், எருசலேமின் அதிபதிகள், அரமனைப்பிரதானிகள், ஆசாரியர், தேசத்தின் சகல ஜனங்கள் என்னும் இவர்களை, |
20 அவர்கள் சத்துருக்களின் கையிலும் அவர்கள் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையிலும் ஒப்புக்கொடுப்பேன்; அவர்கள் பிரேதங்கள் ஆகாயத்துப் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும்.
21 யூதாராஜாவாகிய சிதெக்கியாவையும் அவன் அதிபதிகளையும் அவர்கள் சத்துருக்களின் கையிலும் அவர்கள் பிராணனை வாங்கத் தேடுகிறவர்களின் கையிலும் உங்களைவிட்டுப் போர்ந்துபோன பாபிலோன் ராஜாவினுடைய சேனைகளின் கையிலும் ஒப்புக்
22 கொடுப்பேன். இதோ, நான் கட்டளையிட்டு—இது யெகோவாவின் திருவாக்கு—அவர்களை இந்த நகரத்துக்குத் திரும்பவரச் செய்வேன்; அவர்கள் அதற்கு விரோதமாக யுத்தம்பண்ணி அதைப்பிடித்து, அதை அக்கினியால் சுட்டெரிப்பார்கள்; யூதாவின் ஊர்களை ஒருவரும் அவைகளில் குடியிராதபடி பாழாகச்செய்வேன்.

**35** யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்னும் யூதா ராஜாவின் நாட்களில் யெகோவாவினிடமிருந்து எரேமியாவுக்கு வந்த வார்த்தை இதுவே: 2 நீ ரேகாபியருடைய வீட்டுக்குப்போய், அவர்களோடே பேசி, அவர்களை யெகோவாவின் ஆலய அறைகளில் ஒன்றுக்கு அழைத்து வந்து, அவர்களுக்குத் திராட்சரசம் குடிக்கக் கொடு என்றார். 3 அப்பொழுது நான் யசினியாவின் குமாரனான எரேமியாவின் மகனான யாசனியாவையும் அவனுடைய சகோதரரையும் அவனுடைய குமாரர் எல்லாரையும் ரேகாபிய வீட்டார் அனைவரையும் அழைத்து, 4 யெகோவாவின் ஆலயத்திலே அதிபதிகளுடைய அறையின் அருகேயும் வாசல்படியில் காவல்காக்கிற சல்லூமின் குமாரனான மாசேயாவினுடைய அறையின் மேலுமுள்ள யித்தலியாவின் குமாரனும் தேவனின் மனுஷனுமான ஆனானின் புத்திரருடைய அறைக்கு அவர்களைக் கூட்டிக் கொண்டு வந்து | திராட்சரசம் நிறைந்த 5 குடங்களையும் கிண்ணங்களையும் ரேகாபிய வம்ச புத்திரர் முன்னேவைத்து அவர்களைப் பார்த்து, திராட்சரசம் குடியுங்கள் என்று அவர்களுக்குச் சொன்னேன். 6 அதற்கு அவர்கள்: நாங்கள் திராட்சரசம் குடிக்கிறதில்லை, ரேகாபின் குமாரனாகிய எங்கள் தகப்பன் யோனதாப் எங்களுக்குக் கட்டளையிட்டு: நீங்களும் உங்கள் பிள்ளைகளும் என்றைக்கும் திராட்சரசம் குடிக்கவேண்டாம், வீட்டைக் கட்டவேண்டாம், | விதை விதைக்கவேண்டாம், திராட்சத் 7 தோட்டம் நாட்டவும் வைத்துக்கொள்ளவும் வேண்டாம், உங்களுடைய சகல நாட்களிலும் கூடாரங்களிலே குடியிருங்கள், அப்படிச் செய்வீர்களானால் நீங்கள் பரதேசிகளாய்த் தங்குகிற தேசத்தில் நெடுநாளிருப்பீர்கள் என்று சொன்னான். 8 ரேகாபின் குமாரனாகிய எங்களுடைய தகப்பன் யோனதாப் எங்களுக்குக் கட்டளையிட்ட எல்லாவற்றிலும் அவன் சொன்னதைக்கேட்டு எங்களுடைய சகல நாட்களிலும் நாங்களும் எங்கள் மனைவிகளும் எங்கள் குமாரரும் எங்கள் குமாரத்திகளும் திராட்சரசம் குடியாமலும் | 9 நாங்கள் குடியிருக்க வீடுகளைக் கட்டாமலுமிருக்கிறோம்; எங்களுக்குத் திராட்சத்தோட்டமும் வயலும் விதையுமில்லை. 10 நாங்கள் கூடாரங்களில் குடியிருந்து, எங்கள் தகப்பனாகிய யோனதாப் எங்களுக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் கீழ்ப்படிந்து செய்துவருகிறோம். 11 பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் இந்த தேசத்தில் வந்தபோதோ, நாம் கல்தேய ராணுவத்துக்கும் சீரிய ராணுவத்துக்கும்

தப்பும்படி எருசலேமுக்குப் போவோம் வாருங்கள் என்று சொன்னேம்; அப்படியே எருசலேமில் வந்து குடியிருக்கிறோம் என் 12 றார்கள். அப்பொழுது யெகோவாவின் வார்த்தை 13 எரேமியாவுக்கு வந்தது: இஸ்ரவேலின் கடவுளாகிய சேனைகளின் யெகோவா இப் படிச் சொல்லுகிறார், நீ போய் யூதா மனு ஷரையும் எருசலேம் குடிகளையும் பார்த்து, நீங்கள் சிட்சையை ஏற்றுக்கொண்டு என் வார்த்தைகளைக் கேட்கமாட்டீர்களோ? இது 14 யெகோவாவின் திருவாக்கு. நிராட்சரசம் குடியாதபடி ரேகாபின் குமாரனுகிய யோன தாப் தன் புத்திரருக்குக் கட்டளையிட்ட வார்த்தைகள் கைக்கொள்ளப்பட்டு வரு கின்றன; அவர்கள் இந்நாள்மட்டும் குடி யாமல் தங்கள் தகப்பனுடைய கட்டளைக் குக் கீழ்ப்படிகிறார்கள்; நீங்களோ, நான் திரும்பத் திரும்பப் பேசியும் நான் சொன்ன 15 தைக் கேளாமற்போனீர்கள். தீர்க்கதரிசி களாகிய என் ஊழியரையெல்லாம் நான் உங்களிடம் திரும்பத் திரும்ப அனுப்பி, உங்களில் ஒவ்வொருவரும் தன்தன் தீய வழியைவிட்டுத் திரும்பி உங்கள் செய்கை களைச் சீர்ப்படுத்துங்கள்; நீங்கள் அந்நிய தேவர்களைத் தொழுது சேவிக்கவேண்டாம்; அப்பொழுது, உங்களுக்கும் உங்கள் பிதாக் களுக்கும் நான் கொடுத்த தேசத்திலே நீங்கள் குடியிருப்பீர்கள் என்று சொன் னேன்; நீங்கள் உங்கள் செவியைச் சாயாம லும் எனக்குக் கீழ்ப்படியாமலும் போனீர் 16 கள். இப்போதும், ரேகாபின் குமாரனுகிய யோனதாபின் புத்திரர் தங்கள் தகப்பன் தங்களுக்குக் கட்டளையிட்ட கற்பனையைக் கைக்கொண்டிருக்க, இந்த ஜனங்கள் எனக் 17 குக் கீழ்ப்படியாமற் போனார்களே. ஆத லால் இஸ்ரவேலின் கடவுளும் சேனைகளின் கடவுளுமாகிய யெகோவா இப்படிச் சொல் லுகிறார்: நான் அவர்களிடம் பேசியும் அவர்கள் கேளாமலும் நான் அவர்களை நோக்கிக் கூப்பிட்டும் அவர்கள் பதிலுரை யாமலும் போனபடியினால், இதோ, யூதா வின்மேலும் எருசலேமின் குடிகள் எல்லா ரின்மேலும் நான் அவர்களுக்கு விரோத மாய்ப் பேசின எல்லாத் தீங்கையும் வரப் பண்ணுவேன் என்று சொல் என்கிறார். 18 பின்பு எரேமியா ரேகாபிய வீட்டாரோடு பேசி, இஸ்ரவேலின் கடவுளாகிய சேனை களின் யெகோவா சொல்வதைக் கேளுங் கள், நீங்கள் உங்கள் தகப்பனுகிய யோன தாபின் கட்டளைக்குச் செவிகொடுத்து அவ னுடைய கற்பனைகளையெல்லாம் கைக் கொண்டு அவன் உங்களுக்குக் கட்டளை யிட்டபடியெல்லாம் செய்துவந்தபடியால், சகல நாட்களிலும் எனக்கு முன்பாக 19 நிற்கும் ஒருவன் ரேகாபின் குமாரனுகிய யோனதாபுக்கு இல்லாமற் போவதில்லை யென்று இஸ்ரவேலின் கடவுளாகிய சேனை களின் யெகோவா சொல்லுகிறார் என் றான்.

**36** யோசியாவின் குமாரனுகிய யோயாக்கீம் என்னும் யூதாராஜாவின் நாலாம் வருஷத் திலே யெகோவாவினிடமிருந்து எரேமியா வுக்கு இந்த வார்த்தை வந்தது: நீ ஒரு புஸ்த 2 கச்சுருளை எடுத்து யோசியாவின் நாட்களி லே நான் உன்னோடே பேசத்தொடங்கின நாள்முதற்கொண்டு இந்நாள்மட்டும் இஸ்ர வேலைப்பற்றியும் யூதாவைப்பற்றியும் சகல ஜாதியாரைப்பற்றியும் உனக்குச் சொன்ன எல்லா வார்த்தைகளையும் அதிலே எழுது. ஒருவேளை யூதாவீட்டார், நான் அவர்களுக் 3 குச் செய்ய நினைத்திருக்கிற தீங்குகளனைத் தையும் பற்றிக் கேட்டுக் கவனித்து ஒவ் வொருவனும் தன் தீய வழியைவிட்டுத் திரும்பினால் நான் அவர்கள் அக்கிரமத்தை யும் அவர்கள் பாவத்தையும் மன்னிப் பேன் என்று சொன்னார். அப்பொழுது 4 எரேமியா நேரியாவின் குமாரனுகிய பாருக்கை அழைத்தான். யெகோவா எரேமியாவுக்குச் சொல்லிவந்த சகல வார்த்தைகளையும் எரேமியா சொல்லச் சொல்லப் பாருக்கு ஒரு புஸ்தகச்சுருளில் எழுதினான். பின்பு எரேமியா பாருக்கைப் 5 பார்த்து: நான் யெகோவாவின் ஆலயத்தி னுட் செல்லாதபடி தடைபட்டிருக்கி றேன். நீ உள்ளே போய், நான் சொல்ல 6 நீ எழுதின சுருளிலுள்ள யெகோவாவின் வார்த்தைகளை யெகோவாவின் ஆலயத்தில் உபவாசநாளிலே ஜனங்கள் கேட்க வாசி; தங்கள் ஊர்களிலிருந்து வருகிற யூதா நாட் டாரனைவரும் கேட்கவும் அவைகளை வாசிக் கவேண்டும். ஒருவேளை அவர்கள் யெகோ 7 வாவின் சந்நிதியில் விண்ணப்பம்பண்ணி, எல்லாரும் தங்கள் தங்கள் தீய வழியை விட்டுத் திரும்புவார்கள்; யெகோவா இந்த ஜனத்துக்கு விரோதமாகக் கூறியிருக்கிற கோபமும் உக்கிரமும் பெரிது என்று சொன்னான். நேரியாவின் குமாரனுகிய 8 பாருக்கு அப்படியே செய்தான்; எரேமியா தீர்க்கதரிசி தனக்குக் கட்டளையிட்டபடி யெல்லாம் அவன் யெகோவாவின் ஆலயத் திலே யெகோவாவின் வார்த்தைகளைப் புஸ்த கத்திலிருந்து வாசித்தான்.

9 யோசியாவின் குமாரனுகிய யோயாக்கீம் என்னும் யூதாராஜாவின் ஐந்தாம் வருஷம் ஒன்பதாம் மாதத்திலே, யெகோவாவின் சந்நிதியிலே உபவாசம் செய்யவேண்டுமென்று எருசலேமிலுள்ள முழு ஜனமும் யூதாவின் ஊர்களிலிருந்து எருசலேமுக்குவந்தவர்கள் 10 யாவரும் பிரசித்தம்பண்ணினார்கள். அப்பொழுது பாருக்கு யெகோவாவின் ஆலயத்தின் மேற்பிராகாரத்தில், யெகோவாவின் ஆலயப் புதுவாசலுக்கு அருகே, சாப்பானுடைய குமாரனுகிய கெமரியா என்னும் சம்பிரதியின் அறையிலே, அந்தப் புஸ்தகத்திலுள்ள எரேமியாவின் வார்த்தைகளே ஜனங்கள் எல்லாரும் கேட்க வாசித்தான். 11 சாப்பானுடைய குமாரனுகிய கெமரியாவின் மகன் மிகாயா யெகோவாவின் வார்த்தைகளேயெல்லாம் அந்தப் புஸ்தகத்திலிருந்து 12 வாசிக்கக் கேட்டபோது, | அவன் ராஜாவின் அரமனைக்குப்போய்ச் சம்பிரதியின் அறைக்குட் சென்றான்; இதோ, அங்கே எல்லா அதிபதிகளும் சம்பிரதியாகிய எலிஷாமாவும் ஷெமாயாவின் குமாரனுகிய தெலாயாவும் அக்போரின் குமாரனுகிய எல்நாத்தானும் சாப்பானின் குமாரனுகிய கெமரியாவும் கனனியாவின் குமாரனுகிய சிதெக்கியாவும் மற்ற எல்லா அதிபதிகளும் 13 உட்கார்ந்திருந்தார்கள். பாருக்கு ஜனங்கள் கேட்கப் புஸ்தகத்திலுள்ளவைகளே வாசிக்கையில் கேட்டுக்கொண்டிருந்த மிகாயா, அவ்வார்த்தைகளேயெல்லாம் அவர்களுக்குத் தெரிவித்தான்.

14 அப்பொழுது எல்லா அதிபதிகளும் கூஷியின் குமாரனுகிய ஷெலேமியாவின் மகனை நெத்தனியாவினுடைய குமாரனுயிருக்கிற யெகூதியைப் பாருக்கினிடம் அனுப்பி, ஜனங்கள்கேட்க நீ வாசித்துக் கொண்டிருந்த சுருளே உன் கையில் எடுத்துக்கொண்டுவா என்று சொல்லச்சொன்னார்கள்; அப்படியே நேரியாவின் குமாரனுகிய பாருக்கு அந்தச் சுருளைத் தன் கையில் எடுத்துக்கொண்டு அவர்களிடம் வந்தான். 15 அவர்கள் அவனைப் பார்த்து: நீ உட்கார்ந்து கொண்டு நாங்கள் கேட்க வாசியென்றார்கள், பாருக்கு அவர்கள் கேட்க வாசித்தான். 16 அவர்கள் எல்லாவார்த்தைகளையும் கேட்கவே திகிலுற்றவர்களாய் ஒருவரை யொருவர் பார்த்துப் பாருக்கினிடம் திரும்பி, இந்த வார்த்தைகளே யெல்லாம் ராஜாவுக்கு 17 அறிவிக்கவேவேண்டும் என்றார்கள். அவன் சொல்லச்சொல்ல நீ இந்த வார்த்தைகளே யெல்லாம் எழுதியதெப்படி? அதை எங்களுக்குச் சொல் என்று பாருக்கைக் கேட்க, | அவன், அவர்தாமே இந்த வார்த்தைகளேயெல்லாம் எனக்குச் சொல்லச் சொல்ல நான் மையினுலே புஸ்தகத்தில் எழுதினேன் என்றான். 18 அப்பொழுது அதிபதிகள் பாருக்கைப்பார்த்து: நீயும் எரேமியாவும் போய் ஒளித்துக்கொள்ளுங்கள்; நீங்கள் இருக்கும் இடத்தை ஒருவரும் அறியவேண்டாம் என்று சொல்லிச் | சுருளைச் 19 சம்பிரதியாகிய எலிஷாமாவின் அறையிலே வைத்துவிட்டுப் பிராகாரத்திலிருந்த ராஜாவினிடம் போய், ராஜாவின் செவிகளுக்கு இந்த வார்த்தைகளேயெல்லாம் அறிவித்தார்கள்.

20 ராஜா அந்தச் சுருளை எடுத்துக்கொண்டு வர யெகூதியை அனுப்பினுன், யெகூதி அதைச் சம்பிரதியாகிய எலிஷாமாவின் அறையிலிருந்து எடுத்துவந்து, ராஜா கேட்கவும் ராஜாவைச் சுற்றிநின்ற அதிபதிகள் அனைவரும் கேட்கவும் வாசித்தான். 21 ராஜா குளிர்காலத்துக்குத் தங்கும் வீட்டிலிருந்தான், அது வருஷத்தின் ஒன்பதாம்மாதம், அவனுக்கு முன்பாகக் கணப்பு மூட்டியிருந்தது. 22 யெகூதி மூன்று நாலு பத்திகளே வாசிக்க வாசிக்க, ராஜா ஒரு சூரிக்கத்தியினுல் அதை அறுத்துக் கணப்பிலிருந்த அக்கினியில் எறிந்துவந்தான்; அந்தச் சுருளனைத்தும் கணப்பு நெருப்பிலே அழியுமட்டும் இப்படிச்செய்தான். 23 ராஜாவும் அந்த வார்த்தைகளேயெல்லாம் கேட்ட அவனுடைய சகல ஊழியரும் திகில்கொள்ளவுமில்லை, தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்ளவுமில்லை. 24 அந்தச்சுருளைச் சுட்டெரிக்கவேண்டாமென்று எல்நாத்தானும் தெலாயாவும் கெமரியாவும் ராஜாவினிடம் விண்ணப்பம் பண்ணியும் அவன் அவர்களுக்குச் செவிகொடுக்கவில்லை. 25 பாருக்கு என்னும் சம்பிரதியையும் எரேமியா தீர்க்கதரிசியையும் பிடிக்கும்படி ராஜா ராஜகுமாரனுகிய யெராமெயேலுக்கும், அஸ்ரியேலின் குமாரனுகிய செராயாவுக்கும், அப்தெயேலின் குமாரனுகிய ஷெலேமியாவுக்கும் கட்டளைகொடுத்தான்; யெகோவாவோ அவர்களை மறைத்துவிட்டார்.

26 அந்தச்சுருளையும் அதிலே எரேமியா சொல்லப் பாருக்கு எழுதியிருந்த வார்த்தைகளையும் ராஜா சுட்டெரித்த பின்பு, எரேமியாவுக்கு யெகோவாவின் வார்த்தைவந்தது: 27 நீ திரும்ப வேறெரு சுருளை எடுத்து, யூதா ராஜாவாகிய யோயாக்கீம் சுட்டெரித்த முதல் சுருளிலிருந்த முன்னை வார்த்தைகளெல்லாம் அதிலே எழுது. 28 மேலும் நீ யூதா ராஜாவாகிய யோயாக்கீமைப்பற்றி இப்படிச்

சொல்: யெகோவா சொல்வதைக்கேள், நீ அந்தச்சகரியைச் சுட்டெரித்து, பாபிலோன் ராஜா வரவே வருவான், அவன் இந்த தேசத்தை அழித்து அதிலிருந்து மனுஷரையும் மிருகங்களையும் ஒழியப்பண்ணுவான் என்று அதில் எழுதியதென்ன என்றார். ஆகையால் யூதாராஜாவாகிய யோயாக்கீமைப்பற்றி யெகோவா இப்படிச்சொல்லுகிறார்: தாவீதின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்க அவனுக்கு ஒருவனும் இரான்; அவனுடைய பிரேதமோ பகலின் உஷ்ணத்துக்கும் இரவின் குளிருக்கும் எறிந்துவிடப்பட்டுக்கிடக்கும். நான் அவனையும் அவன் சந்ததியாரையும் அவன் ஊழியரையும் அவர்கள் அக்கிரமத்தினிமித்தம் தண்டித்து, அவன்மேலும் எருசலேமின் குடிகள்மேலும் யூதா மனுஷர்மேலும் நான் அவர்களுக்குச் சொன்ன தீங்கனைத்தையும் வரப்பண்ணுவேன்; அவர்கள் கேளாமற்போனார்களே என்றார். அப்பொழுது எரேமியா வேறொரு சுருளை எடுத்து, அதை நேரியாவின் குமாரனாகிய பாருக்கு என்னும் சம்பிரதியினிடம் கொடுத்தான்; அவன் யூதாராஜாவாகிய யோயாக்கீம் அக்கினியால் சுட்டெரித்த புஸ்தகத்திலிருந்த வார்த்தைகளையெல்லாம் எரேமியா சொல்லச்சொல்ல அதிலே எழுதினான்; இன்னும் அவைகளைப்போன்ற அநேக வார்த்தைகளும் அவைகளோடே சேர்க்கப்பட்டன.

**37** யோயாக்கீமின் குமாரனாகிய கொனியாவின் ஸ்தானத்திலே யோசியாவின் குமாரனாகிய சிதெக்கியா ராஜாவாகி அரசாண்டான், இவனை பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யூதா தேசத்தில் ராஜாவாக்கினான். எரேமியா தீர்க்கதரிசியைக்கொண்டு யெகோவா சொன்ன வார்த்தைகளுக்கு சிதெக்கியாவும் அவன் ஊழியரும் தேசத்தின் ஜனங்களும் செவிகொடுக்கவில்லை. சிதெக்கியா ராஜாவோவெனில் செலேமியாவின் குமாரன் யூகாலையும் மாசேயாவின் குமாரன் செப்பனியா என்னும் ஆசாரியனையும் எரேமியா தீர்க்கதரிசியினிடம் அனுப்பி, நமது கடவுளாகிய யெகோவாவினிடம் நீர் எங்களுக்காக விண்ணப்பம்பண்ணவேண்டுமென்று சொல்லச் சொன்னான். அக்காலத்திலே எரேமியா ஜனத்தின் நடுவே வரத்தும் போக்குமாயிருந்தான்; அவனை இன்னும் காவல்வீட்டில் போடவில்லை. பார்வோனின் சேனை எகிப்திலிருந்து புறப்பட்டதை, எருசலேமை முற்றுகைபோட்டிருந்த கல்தேயர் கேட்டபோது அவர்கள் எருசலேமைவிட்டுப் போய்விட்டார்கள்.

அப்பொழுது யெகோவாவின் வார்த்தை எரேமியா தீர்க்கதரிசிக்கு வந்தது, இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா சொல்வது இதுவே: என்னிடம் விசாரிக்கும்படி உங்களை என்னிடத்திற்கு அனுப்பின யூதா ராஜாவினிடம் நீங்கள் போய், இதோ, உங்களுக்குத் துணையாகப் புறப்பட்டுவந்த பார்வோனின் சேனை தன் தேசமாகிய எகிப்துக்கே திரும்பிவிடும். கல்தேயரோ திரும்பி வந்து இந்த நகரத்துக்கு விரோதமாக யுத்தம்பண்ணி அதைப்பிடித்து அக்கினியால் சுட்டெரிப்பார்கள். யெகோவா சொல்வதைக் கேளுங்கள், கல்தேயர் நம்மைவிட்டுப் போய்விடுவது நிச்சயம் என்று சொல்லி உங்களை வஞ்சித்துக்கொள்ளவேண்டாம், அவர்கள் போவதில்லை. உங்களோடே யுத்தம்பண்ணுகிற கல்தேய சேனையிலே காயம்பட்டவர்கள் மாத்திரம் மீந்திருக்கும்படி நீங்கள் அதை முறியடித்தாலும் மீந்திருப்பவர்கள் தங்கள் கூடாரங்களிலிருந்து வெளியேறி இந்த நகரத்தை அக்கினியால் சுட்டெரிப்பார்கள் என்று சொல்லுங்கள்.

பார்வோனின் சேனை வருகிறதென்று கல்தேய சேனை எருசலேமை விட்டுப்போனபோது | எரேமியா எருசலேமைவிட்டுப் பென்யமீன் தேசத்திலே தனக்குரிய பாகத்தைக் கைக்கொள்ளும்படி அங்கே போனான். அவன் பென்யமீன் வாசலில் வந்த சமயத்தில் காவற்சேனையின் அதிபதியாகிய யிரீயா என்னும் ஒருவன் அங்கே இருந்தான்; அவன் கனனியாவின் குமாரனாகிய செலேமியாவின் மகன்; அவன், நீ கல்தேயரைச் சேர்ந்துகொள்ளப் போகிறவன் என்று சொல்லி எரேமியா தீர்க்கதரிசியைப் பிடித்தான்; பிடிக்கவே, எரேமியா, அது பொய், நான் கல்தேயரைச் சேரப்போகிறவனல்ல என்றார்; யிரீயாவோ எரேமியாவின் சொல்லைக்கேளாமல் அவனைப்பிடித்து அதிபதிகளிடம் கொண்டுபோனான். அதிபதிகள் எரேமியாவின்மேல் கடுங்கோபங்கொண்டு அவனை அடித்து, அவனைச் சம்பிரதியாகிய யோனத்தான் வீட்டிலே சிறையிலடைத்தார்கள்; அந்த வீட்டை அவர்கள் சிறைச்சாலையாக்கியிருந்தார்கள்.

எரேமியா காவற்கிடங்கின் நிலவறைகளில்போய் அங்கே அநேக நாள் இருந்தான். பின்பு சிதெக்கியா ராஜா அவனை அழைத்தனுப்பி, யெகோவாவினிடமிருந்து வந்த வார்த்தை உண்டோ என்று அவனைத் தன் வீட்டிலே இரகசியமாய்க் கேட்டான்; அதற்கு எரேமியா: உண்டு, பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவீர்

18 என்று சொன்னான். பின்னும் எரேமியா சிதெக்கியா ராஜாவினிடம்: நீங்கள் என்னைக் காவல்வீட்டிலே அடைத்தீர்களே, நான் உமக்கும் உமது ஊழியருக்கும் இந்த ஜனத்துக்கும் விரோதமாக என்ன பாவஞ்
19 செய்தேன்? பாபிலோன் ராஜா உங்களுக்கும் இந்த தேசத்துக்கும் விரோதமாக வருவதில்லையென்று உங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொன்ன உங்கள் தீர்க்கதரிசிகள் எங்கே?
20 இப்போதும், ராஜாவாகிய என் ஆண்டவனே, எனக்குச் செவிகொடுத்து என் விண்ணப்பத்தைத் தயவாய்க்கேளும், சம்பிரதியாகிய யோனத்தான் வீட்டிற்கு என்னைத் திரும்ப அனுப்பவேண்டாம்; அனுப்பினால் நான் அங்கே செத்துப்போவேன் என்றான்.
21 அப்பொழுது சிதெக்கியா ராஜா, எரேமியாவைக் காவற்சாலையின் முற்றத்திலே காவல் செய்யும் நகரத்திலே அப்பமிருக்குமட்டும் அப்பஞ்சுடுகிறவர்களின் வீதியிலே தினம் ஒரு அப்பத்தை வாங்கி அவனுக்குக் கொடுக்கவும் கட்டளையிட்டான்; அப்படியே எரேமியா காவற்சாலையின் முற்றத்திலே இருந்துவந்தான்.

**38** மாத்தானின் குமாரன் ஷெபத்தியாவும், பஷ்கூரின் குமாரன் கெதலியாவும், ஷெலேமியாவின் குமாரன் யூகாலும், மல்கியாவின் குமாரன் பஷ்கூரும் எரேமியா எல்லா ஜனத்துக்கும் சொன்ன வார்த்தைகளைக்
2 கேட்டார்கள். யெகோவா சொல்வதைக் கேளுங்கள், இந்த நகரத்திலே தரித்திருக்கிறவன் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் கொள்ளைநோயாலும் சாவான்; வெளியேறிக் கல்தேயரிடம் போகிறவனே பிழைப்பான்; அவன் பிராணனே அவனுக்குக் கிடைக்கும் கொள்ளைப்பொருளாகும், அவன்
3 பிழைப்பான். யெகோவா இப்படிச் சொல்லுகிறார், இந்த நகரம் பாபிலோன் ராஜாவினுடைய ராணுவத்தின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவது நிச்சயம்; அவன் அதைப் பிடிப்பான் என்று எரேமியா
4 சொல்லியிருந்தான். அதிபதிகள் அதைக் கேட்டு ராஜாவினிடம் போய்: இந்த மனுஷன் கொல்லப்பட உத்தரவாகவேண்டும்; இந்த நகரத்தில் மீதியாயிருக்கிற யுத்தவீரரிடத்திலும் மற்றுமுள்ள சகல ஜனங்களிடத்திலும் இவன் இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லுகிறதினாலே அவர்களை அதைரியப்படுத்துகிறான்; இவன் இந்த ஜனத்தின் க்ஷேமத்தைத் தேடாமல் அவர்கள் கேட்டையே தேடுகிறான் என்றார்கள்.
5 அதைக் கேட்கவே சிதெக்கியா ராஜா: இதோ, அவன் உங்கள் கைகளில் இருக்கிறான், உங்களுக்கு மாறுக ராஜா ஒன்றும் செய்யமுடியாதே என்றான். அப்பொழுது 6
அவர்கள் எரேமியாவைப் பிடித்து அவனைக் காவற்சாலையின் முற்றத்தில், ராஜகுமாரனாகிய மல்கியாவின் தூரவிலே, போட்டார்கள்; கயிறுகளினால் எரேமியாவை அதிலே இறக்கிவிட்டார்கள்; அந்தத் தூரவிலே தண்ணீர் இல்லை, சேறுயிருந்தது, அந்தச் சேற்றிலே எரேமியா அமிழ்ந்தினான்.

அவர்கள் எரேமியாவைத் தூரவிலே 7
போட்டதை ராஜா அரமனையிலிருந்த எத்தியோப்பியனாகிய ஏபெத்மேலெக் என்னும் ஒரு பிரதானி கேள்விப்பட்டபோது, ராஜா பென்யமீன் வாசலிலே உட்கார்ந்திருந்தான். அப்பொழுது ஏபெத்மேலெக் 8
அரமனையைவிட்டு ராஜாவினிடம் போய், | ராஜாவாகிய என் ஆண்டவனே, இந்த மனு 9
ஷர் எரேமியா தீர்க்கதரிசியைத் தூரவிலே போட்டுச் செய்தது எல்லாம் தீமையானது, அவன் இருக்கிற இடத்திலே பட்டினியாய்ச் சாவானே, நகரத்திலே இனி ஆகாரமில்லையே என்றான். அதைக் கேட்கவே 10
ராஜா ஏபெத்மேலெக் என்னும் எத்தியோப்பியனிடம், நீ இவ்விடத்திலிருந்து மூப்பது ஆட்களை உன்னோடு கூட்டிக்கொண்டு போய் எரேமியா தீர்க்கதரிசி சாகாமுன்னே அவனைத் தூரவிலிருந்து தூக்கிவிடு என்று கட்டளையிட்டான். அப்படியே 11
ஏபெத்மேலெக் அந்த ஆட்களைத் தன்னுடனே கூட்டிக்கொண்டு, ராஜா அரமனைப் பொக்கிஷசாலையின் கீழிருந்த அறைக்குள் புகுந்து பழமையாகக் கிழிந்த கந்தைத் துணிகளை எடுத்துக்கொண்டுபோய் அவைகளைக் கயிறுகளினால் எரேமியாவுக்குத் தூரவிலே இறக்கிவிட்டு, | எரேமியாவைக்கூப் 12
பிட்டு, பழமையாகக் கிழிந்துபோன இந்தக் கந்தைகளை உமது அக்குளில் கயிறுபடாமல் வைத்துக்கொள்ளும் என்று எத்தியோப்பியனாகிய ஏபெத்மேலெக் சொன்னான், எரேமியா அப்படியே செய்தான். அப்பொழுது அவர்கள் எரேமியாவைக் 13
கயிறுகளால் தூக்கி அவனைத் தூரவிலிருந்து எடுத்துவிட்டார்கள்; எரேமியா மறுபடியும் காவற்சாலை முற்றத்திலே இருந்தான்.

பின்பு சிதெக்கியா ராஜா, எரேமியா 14
தீர்க்கதரிசியை யெகோவாவின் ஆலயத்தில் மூன்றாம் வாசலிலே தன்னிடத்திற்கு வரவழைத்தான்; அங்கே ராஜா எரேமியாவோடு பேசி: நான் உன்னிடம் ஒரு காரியம் கேட்கிறேன், நீ எனக்கு ஒன்றும்

மறைக்கவேண்டாம் என்று சொல்ல;
15 எரேமியா சிதெக்கியாவினிடம்: நான் அதை
உமக்கு அறிவித்தால் நீர் என்னைக் கொலை
செய்யவே போகிறீரல்லவா? நான் உமக்கு
ஆலோசனை சொல்வேனெனில் என் சொல்
16 லைக் கேட்கமாட்டீரே என்றான். அப்பொ
ழுது சிதெக்கியா ராஜா எரேமியாவுக்கு
ஆணையிட்டு நான் உன்னைக் கொல்லமாட்
டேன், உன் பிராணனை வாங்கத்தேடுகிற
இந்த மனுஷர் கையில் உன்னை ஒப்புக்
கொடுக்கமாட்டேன், நமக்கு இந்த ஆத்து
மாவைப் படைத்துக்கொடுத்த யெகோவா
வின் ஜீவன்மேல் ஆணை என்று இரகசிய
17 மாய்ச் சொன்னான். அதைக்கேட்ட எரே
மியா சிதெக்கியாவினிடம்: இஸ்ரவேலின்
கடவுளும் சேனைகளின் கடவுளுமாகிய யெ
கோவா சொல்வதைக் கேளும், நீர் வெளி
யேறி பாபிலோன் ராஜாவின் அதிபதிக
ளிடம் போவீரேயானால் நீரும் பிழைத்
திருப்பீர், இந்தப் பட்டணமும் அக்கினி
யால் சுட்டெரிக்கப்படுவதில்லை, நீரும்
18 உமது வீட்டாரும் பிழைப்பீர்கள். நீர்
வெளியேறி பாபிலோன் ராஜாவின் அதிபதி
களிடம் போகாதிருந்தால் இந்த நகரம் கல்
தேயர் கையில் ஒப்புக்கொடுக்கப்படும்,
அவர்கள் இதை அக்கினியால் சுட்டெரிப்
பார்கள், நீர் அவர்கள் கைக்குத் தப்பிப்
போவதில்லை என்கிறார் என்று சொன்னான்.
19 அப்பொழுது சிதெக்கியா ராஜா எரேமியா
வினிடம்: தங்களைச் சேர்ந்தகொண்ட
யூதர் என்னை அவமானப்படுத்தும்படி அவர்
கள் கையிலே கல்தேயர் என்னை ஒப்புக்
கொடுப்பார்கள் என்று நான் பயப்படு
20 கிறேன் என்று சொல்லவே | எரேமியா:
உம்மை ஒப்புக்கொடார்கள், நான் உமக்
குச் சொல்லுகிற யெகோவாவின் வார்த்
தைக்குச் செவிகொடும், அது உமது க்ஷேமத்
21 திற்கு ஏதுவாகும், நீர் பிழைத்திருப்பீர். நீர்
வெளியேறிப்போக மறுப்பீரேயானால், யெ
கோவா எனக்கு வெளிப்படுத்தின வார்த்
22 தை இதுவே: இதோ, யூதா ராஜாவின் வீட்
டாரிலே மீந்திருக்கிற சகல ஸ்திரீகளும்
பாபிலோன் ராஜாவின் அதிபதிகளிடம்
கொண்டுபோகப்படுவார்கள்; அப்பொழுது
அந்த ஸ்திரீகளே:

உமது சிநேகிதர்கள் உம்மை வஞ்
சித்து
உம்மை மேற்கொண்டார்கள்,
உமது கால்கள் சேற்றிலே அமிழ்ந்
தினபின்பு
அவர்கள் உம்மைவிட்டுப் பிரிந்து
போனார்கள்

என்று புலம்புவார்கள். உமது எல்லா 23
ஸ்திரீகளையும் உமது பிள்ளைகளையும் கல்தேய
ரிடம் கொண்டுபோவார்கள்; நீரும் அவர்
கள் கைக்குத் தப்பமாட்டீர், பாபிலோன்
ராஜாவின் கையில் பிடிபடுவீர், இந்த நக
ரம் அக்கினியால் சுட்டெரிக்கப்படக்
காரணமாயிருப்பீர் என்றான். அதைக் 24
கேட்டு சிதெக்கியா எரேமியாவினிடம்:
இந்த வார்த்தைகளை ஒருவருக்கும் அறி
விக்கவேண்டாம்; அப்பொழுது நீ சாவ
தில்லை. நான் உன்னோடே பேசினேனென்று 25
அதிபதிகள் கேள்விப்பட்டு உன்னிடம்
வந்து, நீ ராஜாவுக்குச் சொன்னதை எங்க
ளுக்குத் தெரிவி, எங்களுக்கு ஒன்றையும்
மறைக்கவேண்டாம், அப்பொழுது உன்
னைக் கொல்லாதிருப்போம், ராஜா உன்னி
டம் என்ன சொன்னார் என்று உன்னைக்
கேட்பார்களேயாகில், | நான் யோனத்தா 26
னுடைய வீட்டிலே சாகாதபடி ராஜா
என்னை அங்கே திரும்ப அனுப்பவேண்
டாம் என்று அவர் சந்நிதியில் விண்ணப்
பம் பண்ணினேன் என்று அவர்களிடம்
சொல் என்றான். சகல அதிபதிகளும் எரே 27
மியாவினிடம் வந்து அவனைக் கேட்ட
போது அவன், ராஜா தனக்குக் கட்டளை
யிட்ட இந்த வார்த்தைகளின்படியெல்லாம்
அவர்களுக்குச் சொன்னான்; இந்தக் காரி
யம் வெளிவரவில்லையாதலால் அவனோடே
பேசாமலிருந்துவிட்டார்கள். ஆகவே எரே 28
மியா, எருசலேம் பிடிபடும் நாள்வரைக்
கும் காவற்சாலை முற்றத்தில் இருந்தான்.

எருசலேம் பிடிபட்டபோது—யூதா **39**
ராஜாவாகிய சிதெக்கியாவின் ஒன்பதாம்வரு
ஷம் பத்தாம் மாதத்திலே பாபிலோன் ராஜா
வாகிய நேபுகாத்நேச்சாரும், அவனுடைய
எல்லா ராணுவமும் எருசலேமுக்கு விரோத
மாய் வந்து அதை முற்றுகை போட்டார்
கள். சிதெக்கியாவின் பதினோராம் வருஷம் 2
நாலாம்மாதம் ஒன்பதாம் தேதியிலே நக
ரமதிலில் திறப்புகண்டது—பாபிலோன் ரா 3
ஜாவின் அதிபதிகளாகிய நேர்கல் சரேத்
சேர், சம்கர்நேபோ, அரமணைப் பிரதானி
களின் தலைவனாகிய சர்செகீம், மந்திரவாதி
களின் தலைவனாகிய நேர்கல் சரேத்சேர்
என்பவர்களும், பாபிலோன் ராஜாவின்
மற்ற எல்லா அதிபதிகளும் உட்பிரவேசித்து
நடுவாசலில் இருந்தார்கள். அப்பொழுது 4
யூதாராஜாவாகிய சிதெக்கியாவும் சகல யுத்த
வீரரும் அவர்களைக் கண்டபோது ஓட்டம்
பிடித்து இரவு நேரத்தில் நகரத்தைவிட்டு
இரண்டு மதில்களுக்கு நடுவே ராஜாவின்

தோட்டத்துக்குப் போகிற வாசல்வழியாக வெளியே போனார்கள்; அவன் அராபாவுக்குச் செல்லும் வழியே போனான். கல்தேய ராணுவமோ அவர்களைப் பிடிக்கத் தொடர்ந்து எரிகோவின் சமவெளியில் சிதெக்கியாவைக்கிட்டி அவனைப்பிடித்து அவனை ஆமாத்துநாட்டின் ஊராகிய ரிப்லாவுக்கு, பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரிடம் கொண்டுபோனார்கள்; அங்கே இவன் அவனுக்குத் தீர்ப்புச்செய்தான். பின்பு பாபிலோன் ராஜா ரிப்லாவிலே சிதெக்கியாவின் குமாரரை அவன் கண்களுக்கு முன்பாக வெட்டினான்; யூதாவின் பெரியோர் அனைவரையும் பாபிலோன் ராஜா வெட்டிவிட்டான். சிதெக்கியாவின் கண்களைக் குருடாக்கி, அவனை பாபிலோனுக்குக் கொண்டுபோக அவனுக்கு இரண்டு செப்பு விலங்குகளைப் போட்டான். ராஜ அரமனையையும் ஜனங்களின் வீடுகளையும் கல்தேயர் அக்கினியால் சுட்டெரித்து, எருசலேமின் மதில்களை இடித்துப்போட்டார்கள். நகரத்தில் மீந்திருந்த ஜனங்களையும் தன்னிடம் வந்து சேர்ந்துகொண்டவர்களையும் மீதியான மற்ற ஜனங்களையும் மெய்காவலரின் அதிபதியாகிய நெபூசரதான் பாபிலோனுக்குச் சிறைகளாகக் கொண்டுபோனான். மெய்காவலரின் அதிபதியாகிய நெபூசரதான் ஒன்றுமில்லாத ஏழைகளில் சிலரை யூதாதேசத்திலே இருக்கவிட்டு அவர்களுக்கு அந்நாளிலே திராட்சத்தோட்டங்களையும் வயல்களையும் கொடுத்தான்.

எரேமியாவைப்பற்றி பாபிலோன் ராஜா வாகிய நேபுகாத்நேச்சார் மெய்காவலரின் அதிபதியாகிய நெபூசரதானுக்குக் கட்டளையிட்டு, நீ அவனை அழைப்பித்து அவனுக்கு ஒரு தீங்கும் செய்யாமல் அவனைப் பத்திரமாய்ப் பார்த்து, அவன் உன்னைக் கேட்டுக்கொள்ளுகிறபடியெல்லாம் அவனுக்குச் செய் என்று சொல்லியிருந்தான். அப்படியே மெய்காவலர் அதிபதியாகிய நெபூசரதானும் அரமனைப் பிரதானிகளின் தலைவனாகிய நெபுசஸ்பான், மந்திரவாதிகளின் தலைவனாகிய நேர்கல் சரேத்சேர் என்பவர்களும் பாபிலோன் ராஜாவின் தலைவர்களும் அனுப்பி, எரேமியாவைக் காவற்சாலை முற்றத்திலிருந்து வரவழைத்து அவனை வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோகும்படி அகிக்காமின் மகனான கெதலியாவினிடம் ஒப்புவித்தார்கள்; அப்படியே அவன் ஜனங்களின் நடுவில் தங்கியிருந்தான்.

எரேமியா இன்னும் காவற்சாலை முற்றத்திலே அடைக்கப்பட்டிருக்கையில் அவனுக்கு யெகோவாவினிடமிருந்து இந்த வார்த்தை வந்தது, நீ போய் எத்தியோப்பியனாகிய ஏபெத்மேலெக்குக்கு இப்படிச் சொல்: இஸ்ரவேலின் கடவுளாகிய சேனைகளின் யெகோவா சொல்வது இதுவே, இதோ, என் வார்த்தைகளை இந்த நகரத்தின்மேல் நன்மைக்கென்றல்ல தீமைக்கென்றே வரப்பண்ணுவேன், அவைகள் அந்நாளிலே உன் கண்காண நிறைவேறும்; அந்நாளிலோ உன்னைத் தப்புவிப்பேன், இது யெகோவாவின் திருவாக்கு, நீ பயப்படுகிற மனுஷரின் கையிலே நீ ஒப்புக்கொடுக்கப்படுவதில்லை. உன்னை விடுவிக்கவே விடுவிப்பேன், நீ பட்டயத்துக்கு இரையாவதில்லை, நீ என்னில் நம்பிக்கை வைத்தபடியால் உன் பிராணன் உனக்குக் கிடைக்கும் கொள்ளைப்பொருளாயிருக்கும், இது யெகோவாவின் திருவாக்கு என்று சொன்னார்.

**40** எரேமியாவை மெய்காவலர் அதிபதியாகிய நெபூசரதான் விடுதலையாக்கி ராமாவிலிருந்து அனுப்பிவிட்ட பின்பு எரேமியாவுக்கு யெகோவாவினிடமிருந்து வார்த்தை வந்தது பாபிலோனுக்குக் கொண்டுபோகும்படி எருசலேமிலும் யூதாவிலும் சிறைகளாய்ப் பிடித்து வைக்கப்பட்ட ஜனங்களுக்குள்ளே விலங்கிடப்பட்டிருந்த எரேமியாவை அதிபதி அழைப்பித்து, | உன் கடவுளாகிய யெகோவா இந்த ஸ்தலத்தின்மேல் இந்தத் தீங்கைக் கூறியிருந்தார். யெகோவா அதை வரப்பண்ணி தாம் சொன்னபடியே செய்தார், நீங்கள் யெகோவாவுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து அவர் சொல்லுக்குச் செவிகொடாமற் போனீர்கள்; ஆகையால் உங்களுக்கு இந்தக் காரியம் நேரிட்டது. இப்போதும், இதோ, உன் கைகளிலிடப்பட்ட விலங்குகளை இன்று நீக்கிப்போடுகிறேன்; என்னோடேகூட பாபிலோனுக்கு வருவது உனக்கு நலமாய்த்தோன்றினால் வா, நான் உன்னைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்வேன்; என்னோடேகூட பாபிலோனுக்கு வருவது உனக்கு நலமாய்த் தோன்றுவிட்டால் இங்கே இருந்துவிடு; இதோ, தேசமெல்லாம் உனக்கு முன்பாக இருக்கிறது. எவ்விடத்துக்குப்போக உனக்கு நலமும் நியாயமுமாய்த் தோன்றுகிறதோ அவ்விடத்துக்குப் போ என்றான். அவன் இன்னும் போகாமல் தாமதிக்கவே: நீ பாபிலோன் ராஜா யூதா ஊர்களின்மேல் அதிகாரியாக நியமித்த சாப்பானுடைய குமாரனாகிய அகீக்

காமின் மகன் கெதலியாவினிடம் போய், அவனோடே ஜனங்கள் நடுவில் வசித்துக் கொண்டிரு; அல்லவென்றால் எவ்விடத்துக்குப்போவது உனக்குச் சரியாய்த் தோன்றுகிறதோ அவ்விடத்துக்குப்போ என்று சொல்லி மெய்காவலர் அதிபதி அவனுக்குப் பிரயாண உணவையும் வெகுமானத்தையும் கொடுத்து அவனை அனுப்பிவிட்டான். 6 அப்படியே எரேமியா மிஸ்பாவுக்கு அகீக்காமின் குமாரனாகிய கெதலியாவினிடம் போய், தேசத்தில் மீந்திருந்த ஜனங்களின் நடுவே அவனோடு வசித்துக்கொண்டிருந்தான்.

7 பாபிலோன் ராஜா அகீக்காமின் குமாரனாகிய கெதலியாவை தேசத்தின்மேல் அதிகாரியாக்கினான் என்றும், பாபிலோனுக்குச் சிறைகளாகக் கொண்டுபோகப்பட்டிராத புருஷரையும் ஸ்திரீகளையும் குழந்தைகளையும் ஏழைகளையும் அவனுடைய விசாரணைக்கு ஒப்புவித்தான் என்றும் வெளியூர்களிலிருந்த ராணுவத்தலைவர் அனைவரும் அவர்கள் ஆட்களும் கேள்விப்பட்ட 8 போது | அவர்கள் மிஸ்பாவுக்குக் கெதலியாவினிடம் வந்தார்கள்; வந்தவர்கள் இவர்களே, நெதனியாவின் குமாரனாகிய இஸ்மவேல், கரேயாவின் குமாரர் யோகனானும் யோனத்தானும், தன்கூமேத்தின் குமாரன் செராயா, நெத்தோபாத்தியனாகிய ஏப்பாயின் குமாரர், மாகாத்தியனான ஒருவனுடைய குமாரன் யெசனியா என்பவர்களும் அவர் 9 கள் ஆட்களுமே. அப்பொழுது சாப்பானுடைய குமாரனாகிய அகீக்காமின் மகன் கெதலியா, அவர்களோடும் அவர்கள் ஆட்களோடும் பேசி ஆணையிட்டு: நீங்கள் கல்தேயருக்கு அடங்கியிருக்கப் பயப்படவேண்டாம், நீங்கள் இந்த தேசத்திலேயேயிருந்து பாபிலோன் ராஜாவைச் சேவியுங்கள்; அப்பொழுது உங்களுக்கு க்ஷேமம் உண்டாகும். 10 நானேவெனில் மிஸ்பாவிலே குடியிருந்து, நம்மிடம் வருகிற கல்தேயருக்கு முன்நிற்பேன்; நீங்கள் போய்த் திராட்சரசத்தையும் பழங்களையும் எண்ணெயையும் சேர்த்து, உங்கள் பாண்டங்களில் வைத்து, நீங்கள் வசமாக்கிக்கொள்ளுகிற ஊர்களில் குடி 11 யிருங்கள் என்று சொன்னான். மோவாபியரும் அம்மோன் புத்திரரிடத்திலும் ஏதோமிலும் சகல தேசங்களிலும் இருந்த யூதரும், பாபிலோன் ராஜா யூதாவில் சிலரை மீதியாக விட்டுப்போனானென்றும், சாப்பானுடைய குமாரனாகிய அகீக்காமின் மகனான கெதலியாவை அவர்கள்மேல் அதிகாரியாக்கினானென்றும் கேள்விப்பட்டபோது | எல்லா யூதரும் தாங்கள் துரத்துண்ட 12 எல்லா இடங்களிலுமிருந்து யூதா தேசத்திலே கெதலியாவினிடம் மிஸ்பாவுக்கு வந்து, திராட்சரசத்தையும் பழங்களையும் மிகவும் அதிகமாய்ச் சேர்த்துவைத்தார்கள்.

அப்பொழுது கரேயாவின் குமாரனாகிய 13 யோகனானும் வெளியூர்களிலிருந்த சகல ராணுவத்தலைவரும் கெதலியாவினிடம் மிஸ்பாவுக்கு வந்து: உம்மைக் கொன்றுபோடும் 14 படிக்கு அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய பாலீஸ் என்பவன், நெதனியாவின் குமாரனாகிய இஸ்மவேலை அனுப்பினது உமக்குத் தெரியுமோ என்றார்கள்; அகீக்காமின் குமாரனாகிய கெதலியாவோ அவர்களை நம்பவில்லை. பின்னும் கரேயாவின் குமாரனாகிய 15 யோகனான் மிஸ்பாவிலே கெதலியாவோடே இரகசியமாய்ப்பேசி: எனக்கு உத்தரவு கொடும், நான் போய், ஒருவருக்கும் தெரியாமல் நெதனியாவின் குமாரன் இஸ்மவேலைக் கொன்றுபோடுகிறேன், அவன் உம்மைக் கொல்லவேண்டியதென்ன? உம்மைக் கொன்று போட்டால் உம்மிடம் வந்து சேர்ந்த யூதரெல்லாம் சிதறிப்போவார்களே, யூதாவில் மீந்திருப்பவர்களும் அழிவார்களே என்றான். அகீக்காமின் குமாரன் கெதலி 16 யாவோ: நீ இந்தக் காரியத்தைச்செய்யாதே, நீ இஸ்மவேலைப்பற்றிச் சொல்வது பொய் என்று கரேயாவின் குமாரனாகிய யோகனானுக்குச் சொல்லிவிட்டான்.

**41** ராஜவம்சத்தில் பிறந்தவனும் எலிஷாமாவின் குமாரனாகிய நெதனியாவின் மகனுமான இஸ்மவேலும் அவனுடனேகூட ராஜாவின் பிரபுக்களான பத்துப்பேரும் ஏழாம் மாதத்திலே மிஸ்பாவுக்கு அகீக்காமின் குமாரனாகிய கெதலியாவினிடம் வந்து அங்கே ஒன்றாய் உட்கார்ந்து போஜனம்பண்ணினார்கள். அப்பொழுது நெதனியாவின் குமார 2 னாகிய இஸ்மவேலும் அவனோடிருந்த பத்துப்பேரும் எழும்பி, பாபிலோன் ராஜா தேசத்தின்மேல் அதிகாரியாக வைத்த சாப்பானின் குமாரனாகிய அகீக்காமின் மகன் கெதலியாவைப் பட்டயத்தால் வெட்டினார்கள். மிஸ் 3 பாவிலே கெதலியாவோடிருந்த எல்லா யூதரையும் அங்கே இருந்த ராணுவவீரரையும் கல்தேயரையும் இஸ்மவேல் வெட்டிப் போட்டான்.

அவன் கெதலியாவைக் கொன்ற மறு 4 நாளில், அதை ஒருவரும் இன்னும் அறியாதிருக்கையிலே, | சீகேமிலும் சீலோவிலும் 5 சமாரியாவிலுமிருந்து எண்பதுபேர், தங்கள் தாடியைச் சிறைத்துத் தங்கள் வஸ்திரங்களைக்

இழித்துத் தங்களைக் கேலிக்கொண்டவர்களாய் வந்தார்கள்; அவர்கள் தங்கள் கைகளில் போஜனபலிகளையும் தூபவர்க்கங்களையும் எடுத்துக்கொண்டு யெகோவாவின் ஆலயத்துக்குப் போகும்படி வந்தார்கள். அப்பொழுது நெதனியாவின் குமாரனுகிய இஸ்மவேல் அவர்களை அழைத்துவர மிஸ்பாவிலிருந்து வெளியேறி அழுதுகொண்டே நடந்து சென்று அவர்களைச் சந்தித்து அவர்களிடம், அகிக்காமின் குமாரனுகிய கெதலியாவினிடம் வாருங்கள் என்றான். அவர்கள் நகரத்துக்குள் வரவே, நெதனியாவின் குமாரனுகிய இஸ்மவேலும் அவனோடிருந்த மனுஷரும் அவர்களை வெட்டித் தரவிலே தள்ளிப்போட்டார்கள். அவர்களிலே பத்துப்பேரோ இஸ்மவேலினிடம்: எங்களைக் கொல்லவேண்டாம், கோதுமையும் வாற்கோதுமையும் எண்ணெயும் தேனுமுள்ள புதையல்கள் எங்களுக்கு நிலத்தின்கீழ் இருக்கிறது என்றார்கள்; அதைக்கேட்டு அவர்களை அவர்கள் சகோதரரோடுங்கூடக் கொலைசெய்யாமல் விட்டுவைத்தான். இஸ்மவேல் கெதலியாவோடே வெட்டின மனுஷரின் பிரேதங்களையெல்லாம் எறிந்துவிட்ட தரவு, ஆசா என்னும் ராஜா இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷாவுக்குப் பயந்துவெட்டின தரவே. அதை நெதனியாவின் குமாரனுகிய இஸ்மவேல் வெட்டுண்ட பிரேதங்களைப் போட்டு நிரப்பினான். பின்பு இஸ்மவேல் மிஸ்பாவிலே மீந்திருந்த ஜனங்களையெல்லாம் சிறைப்படுத்திக்கொண்டுபோனான்; ராஜகுமாரத்திகளையும் மெய்காவலர் அதிபதியாகிய நெபூசரதான் அகிக்காமின் குமாரனுகிய கெதலியாவின் விசாரணையில் விட்டுப்போன மிஸ்பாவிலுள்ள மீதியான சகல ஜனங்களையும் நெதனியாவின் குமாரனுகிய இஸ்மவேல் சிறைப்படுத்திக்கொண்டு அம்மோன் புத்திரரோடு சேர்ந்துகொள்ளப்போனான்.

11 நெதனியாவின் குமாரனுகிய இஸ்மவேல் செய்த தீங்கையெல்லாம் கரேயாகின் குமாரனுகிய யோகனனும் அவனோடிருந்த எல்லா ராணுவத்தலைவரும் கேள்விப்பட்டபோது,

12 அவர்கள் ஆட்களையெல்லாம் கூட்டிக்கொண்டு நெதனியாவின் குமாரனுகிய இஸ்மவேலோடே யுத்தம்பண்ணப்போய் அவனைக் கிபியோனிலுள்ள பெருங்குளத்தண்டையிலே கண்டார்கள். 13 அப்பொழுது இஸ்மவேலோடிருந்த சகல ஜனங்களும் கரேயாகின் குமாரனுகிய யோகனனையும் அவனோடிருந்த எல்லா ராணுவத்தலைவரையும் கண்டு சந்தோஷப்பட்டார்கள். 14 இஸ்மவேல் மிஸ்பாவிலிருந்து சிறைபிடித்துக்கொண்டுபோன சகல ஜனங்களும் பின்னிட்டுத் திரும்பிக் கரேயாகின் குமாரனுகிய யோகனனிடம் வந்துவிட்டார்கள். 15 நெதனியாவின் குமாரனுகிய இஸ்மவேலோ எட்டுப்பேரோடுகூட யோகனனின் கைக்குத்தப்பி அம்மோன் புத்திரரிடம்போய்ச் சேர்ந்தான். 16 கரேயாகின் குமாரனுகிய யோகனனும் அவனோடிருந்த எல்லா ராணுவத் தலைவரும் அகிக்காமின் குமாரனுகிய கெதலியாவை வெட்டிப்போட்ட நெதனியாவின் குமாரனுகிய இஸ்மவேல் மிஸ்பாவிலிருந்து கொண்டுபோன மீதியான யாவருமாகிய யுத்தவீரரும், ஸ்திரீகளும் குழந்தைகளும் அண்ணகருமானவர்களை, கிபியோனிலே விடுதலையாக்கித் திரும்பப்பண்ணினார்கள். 17 எகிப்துக்குப்போகும் எண்ணத்தோடு பெத்லகேமுக்கு அருகான கிம்காம் சத்திரத்துக்குப் போய் அங்கே தங்கியிருந்தார்கள். 18 பாபிலோன் ராஜா தேசத்தின்மேல் அதிகாரியாக்கின அகிக்காமின் குமாரனுகிய கெதலியாவை நெதனியாவின் குமாரனுகிய இஸ்மவேல் வெட்டிப்போட்டபடியினாலே கல்தேயருக்குப் பயந்து அந்த எண்ணங்கொண்டார்கள்.

**42** அப்பொழுது எல்லா ராணுவத்தலைவரும் கரேயாகின் குமாரனுகிய யோகனனும் ஓசாயாவின் குமாரனுகிய யெசனியாவும் சிறியோர் முதல் பெரியோர் மட்டும் சகல ஜனங்களும் எரேமியா தீர்க்கதரிசியினிடம் வந்து: நீர் எங்கள் விண்ணப்பத்தை அங்கீகரித்து மீந்திருக்கிற எங்களனைவருக்காகவும் உமது கடவுளாகிய யெகோவாவை நோக்கிப் பிரார்த்தனைசெய்யும்; திரளாயிருந்தவர்களில், இப்போது உமது கண்களே காண்கிறபடி, சிலரே மீந்திருக்கிறோம். 3 உமது கடவுளாகிய யெகோவா, நாங்கள் நடக்கவேண்டிய வழியையும் செய்யவேண்டிய காரியத்தையும் எங்களுக்குத் தெரிவிப்பாராக என்று சொன்னார்கள். 4 அதைக்கேட்ட எரேமியா தீர்க்கதரிசி: நீங்கள் சொன்னதைக் கேட்டேன், இதோ, உங்கள் வார்த்தையின்படியே உங்கள் கடவுளாகிய யெகோவாவை நோக்கிப் பிரார்த்திப்பேன்; யெகோவா உங்களுக்குப் பதில் சொல்லும் எல்லா வார்த்தைகளையும் நான் உங்களுக்குத் தெரிவிப்பேன், ஒன்றையும் மறைத்து வைக்கமாட்டேன் என்று அவர்களுக்குச் சொன்னான். 5 அப்பொழுது அவர்கள் எரேமியாவினிடம்: உமது கடவுளாகிய யெகோவா உம்மைக்கொண்டு எங்களுக்குச் சொல்லியனுப்பும் எல்லா வார்த்

தைகளின்படியும் நாங்கள் செய்யாதே
போனால் யெகோவா எங்களுக்கு விரோத
மாய் நம்பத்தக்க உண்மையான சாட்சியா
6 யிருக்கட்டும். அது நன்மையானாலும் சரி
தீமையானாலும் சரி, நாங்கள் உம்மை
அனுப்புகிற எங்கள் கடவுளாகிய யெகோ
வாவின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடப்
போம்; எங்கள் கடவுளாகிய யெகோவா
வின் சத்தத்துக்கு நாங்கள் கீழ்ப்படிவதி
னால் எங்களுக்கு க்ஷேமமுண்டாகும் என்று
7 சொன்னார்கள். பத்துநாளானபின் யெகோ
வின் வார்த்தை எரேமியாவுக்கு வந்தது:
8 அப்பொழுது அவன், கரேயாகின் குமாரனு
கிய யோகனானையும் அவனோடிருந்த எல்லா
ராணுவத்தலைவரையும், சிறியோர் முதல்
பெரியோர் மட்டும் சகல ஜனங்களையும்
9 அழைத்து | அவர்களோடு பேசி: உங்களுக்
காக விண்ணப்பஞ்செய்யும்படிக்கு நீங்கள்
என்னை அனுப்பின இஸ்ரவேலின் கடவு
ளாகிய யெகோவா சொல்வதைக் கேளுங்
10 கள்: நீங்கள் இந்த தேசத்திலே தரித்திருந்
தால் நான் உங்களைக் கட்டுவேன், உங்களை
இடிக்கமாட்டேன்; உங்களை நாட்டுவேன்,
உங்களைப் பிடுங்கமாட்டேன்; நான் உங்க
ளுக்குச் செய்திருக்கிற தீங்குக்கு மனஸ்தா
11 பப்படுகிறேன். நீங்கள் பயப்படுகிற பாபி
லோன் ராஜாவுக்குப் பயப்படவேண்டாம்,
அவனுக்குப் பயப்படாதிருங்கள்; இது
யெகோவாவின் திருவாக்கு; நான் உங்களோ
டிருந்து உங்களை ரட்சிப்பேன்; உங்களை
12 அவன் கையிலிருந்து விடுவிப்பேன். உங்
களுக்கு இரக்கங்கிடைக்கும்படி செய்
வேன், அவன் உங்களுக்கு இரங்குவான்,
உங்கள் தேசத்துக்கு உங்களைத் திரும்பிவரப்
13 பண்ணுவான். நீங்கள் உங்கள் கடவுளா
கிய யெகோவா சொல்வதைக் கேளாமல்,
நாங்கள் இந்த தேசத்திலே இருக்கமாட்
14 டோம்; நாங்கள் யுத்தத்தைக் காணமலும்,
எக்காள சத்தத்தைக் கேளாமலும் ஆகார
மின்மையினால் பட்டினியா யிராமலும்
வாழும் எகிப்துதேசத்துக்கே போவோம்,
அங்கே தரித்திருப்போம் என்று சொல்வீர்
15 களேயானால், | யூதாவில் மீந்திருக்கிறவர்
களே, அதைப்பற்றி யெகோவா சொல்வ
தைக் கேளுங்கள், இஸ்ரவேலின் கடவுளா
கிய சேனைகளின் யெகோவா சொல்வது
இதுவே: நீங்கள் எகிப்துக்குப் போக
. வேண்டுமென்றே தீர்மானித்து அங்கே அந்
16 நியராகத் தங்கப்போவீர்களானால் | நீங்கள்
பயப்படுகிற பட்டயம் எகிப்து தேசத்திலே
உங்களைப் பிடிக்கும்; நீங்கள் அஞ்சுகிற
பஞ்சம் உங்களோடே எகிப்துக்கு வரும்,
அங்கே சாவீர்கள். எகிப்துக்குப் போய் 17
அங்கே அந்நியராகத் தங்கவேண்டுமெனத்
தீர்மானிக்கும் யாவருக்கும் சம்பவிப்பது
இதுவே, பட்டயத்தாலும் பஞ்சத்தாலும்
கொள்ளைநோயாலும் சாவார்கள்; நான்
அவர்கள்மேல் வரப்பண்ணும் தீங்கினின்று
தப்பி மீதியாகிறவர்கள் அவர்களுக்கு
இரார். இஸ்ரவேலின் கடவுளாகிய சேனை 18
களின் யெகோவா இப்படிச் சொல்லு
கிறார்: என் கோபமும் என் உக்கிரமும்
எருசலேமின் குடிகள்மேல் ஊற்றப்பட்
டதுபோலவே, நீங்கள் எகிப்துக்குப்
போகும்போது என் உக்கிரம் உங்கள்மேலும்
ஊற்றப்படும்; நீங்கள் சாபச்சொல்லும்
பிரமிப்பும் பழிப்பும் நிந்தையுமாயிருப்பீர்
கள், இவ்விடத்தை இனிக் காணமாட்டீர்
கள். யூதாவில் மீந்திருக்கிறவர்களே, 19
நீங்கள் எகிப்துக்குப் போகவேண்டா
மென்று யெகோவா உங்களுக்குச் சொன்
னார், இந்நாளில் உங்களை எச்சரித்தேன்,
அறிந்துகொள்ளுங்கள். என்னை உங்கள் 20
கடவுளாகிய யெகோவாவினிடம் அனுப்பி:
நீ எங்கள் கடவுளாகிய யெகோவாவை
நோக்கி எங்களுக்காக விண்ணப்பம்
பண்ணி, எங்கள் கடவுளாகிய யெகோவா
சொல்வதையெல்லாம் எங்களுக்கு அறி
விக்கவேண்டும், அதின்படியே செய்வோம்
என்று சொன்னீர்கள்; நான் இந்நாளில் 21
அதை உங்களுக்கு அறிவித்தேன்; நீங்களோ
உங்கள் கடவுளாகிய யெகோவாவின்
சொல்லுக்கும், அவர் என்னைக்கொண்டு
உங்களுக்குச் சொல்லியனுப்பிய எதற்கும்
செவிகொடாமற்போனீர்கள்; இப்படிச்
செய்து உங்களுக்கு மோசமுண்டாக உங்
களை வஞ்சித்துக்கொண்டீர்கள். இப்போ 22
தும் நீங்கள் நிட்டமாய் அறிந்துகொள்ள
வேண்டியது இதுவே, அந்நியராய்த் தங்கி
யிருப்பதற்கு நீங்கள் போக விரும்புகிற
இடத்திலேயே நீங்கள் பட்டயத்தாலும்
பஞ்சத்தாலும் கொள்ளைநோயாலும் சாவீர்
கள் என்று சொன்னேன்.

எரேமியா சகல ஜனங்களுக்கும் அவர் **43**
கள் கடவுளாகிய யெகோவா தன்னைக்
கொண்டு சொல்லியனுப்பிய அவர்கள் கட
வுளாகிய யெகோவாவின் வார்த்தைகளை
யெல்லாம், மேலே காட்டியுள்ளவைகளையே,
சொல்லி முடித்த பின்பு | ஓசாயாவின் 2
குமாரனுகிய அசரியாவும் கரேயாகின் குமார
னுகிய யோகனானும் அகங்காரிகளான
எல்லா மனுஷரும் எரேமியாவினிடம்
வந்து: நீ சொல்லுகிறது பொய்; அந்திய

ராய்த் தங்கும்படி எகிப்துக்குப் போக வேண்டாமென்று சொல்ல எங்கள் கடவுளாகிய யெகோவா உன்னை எங்களிடம் 3 அனுப்பவில்லை. கல்தேயர் எங்களைக் கொன்றுபோடவோ, எங்களைப் பாபிலோனுக்குச் சிறைகளாகக் கொண்டுபோகவோ, எங்களை அவர்கள் கையில் ஒப்புக்கொடுக்கும்படி, நேரியாவின் குமாரனுகிய பாரூக் குத்தானே உன்னை எங்களுக்கு விரோதமாக 4 ஏவினன் என்று சொன்னார்கள். இப்படியாக, யூதாவின் தேசத்திலே தரித்திருக்க வேண்டும் என்னும் யெகோவாவின் சொல்லுக்குக் கரேயாகின் குமாரனுகிய யோகனனும் சகல ராணுவத்தலைவரும் சகல ஜனங் 5 களும் செவிகொடாமற்போனார்கள். யூதா தேசத்தில் தங்கியிருக்கும்படி, தாங்கள் துரத்துண்டிருந்த சகல ஜாதியாரிடத்திலு மிருந்து திரும்பிவந்த மீதியான யூதரெல்லாரையும், புருஷரையும், ஸ்திரீகளையும் குழந்தைகளையும் ராஜகுமாரத்திகளையும், | 6 மெய்காவலர் அதிபதியாகிய நெபூசரதான் சாப்பானின் குமாரனுகிய அகிக்காமின் மகன் கெதலியாவினிடம் விட்டுப்போன சகல ஜனங்களையும், தீர்க்கதரிசியாகிய எரேமியாவையும், நேரியாவின் குமாரனுகிய பாரூக்கையும் கரேயாகின் குமாரனுகிய யோகனனும் சகல ராணுவத்தலைவரும்கூட 7 டிக்கொண்டு | யெகோவா சொல்லிக்கேளாமல் எகிப்துதேசத்துக்குப் போனார்கள், அதிலுள்ள தக்பானேஸ் ஊர்போய்ச் சேர்ந்தார்கள்.

8 தக்பானேசிலே யெகோவாவின் வார்த்தை 9 எரேமியாவுக்கு வந்தது: நீ உன் கையிலே பெரிய கற்களை எடுத்துக்கொண்டுபோய் யூத ஜனங்களுக்கு முன்பாக அவைகளைத் தக்பானேசிலுள்ள பார்வோனுடைய அரமனை வாசல் தளத்தின் காரையிலே பதித்து 10 வைத்து, | அவர்களைப் பார்த்து: இதோ, இஸ்ரவேலின் கடவுளாகிய சேனைகளின் யெகோவா சொல்லுகிறதைக் கேளுங்கள், என் ஊழியனுகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவை நான் அழைத்தனுப்பி, நான் பதிப்பித்த இந்தக் கற்களின் மேல் அவன் சிங்காசனத்தை வைப்பேன்; அவன் தன் ரத்னக் கம்பளத்தை அவை 11 களின்மேல் விரிப்பான். அவன் வந்து எகிப்துதேசத்தை ஜெயித்துச் சாவுக்குரியவனைச் சாவுக்கும் சிறையிருப்புக்குரியவனைச் சிறையிருப்புக்கும் பட்டயத்துக்குரியவனைப் பட்டயத்துக்கும் உள்ளாக்குவான். 12 எகிப்தின் தேவர்களுடைய கோவில்களில் அக்கினியைக் கொளுத்துவேன்; அவன் அவைகளைச் சுட்டெரித்து, அவைகளைச் சிறைபிடித்துப்போவான்; மேய்ப்பவன் ஒருவன் தன் கம்பளியைப் போர்த்துக்கொள்வதுபோல எகிப்துதேசத்தைப் போர்த்துக்கொண்டு சமாதானமாய் அவ்விடத்தைவிட்டுப் போவான். 13 அவன் எகிப்துதேசத்தில் இருக்கிற பேத்ஷேமேசின் சிலைகளை உடைத்து, எகிப்தின் தேவர்களுடைய கோவில்களை அக்கினியால் சுட்டெரிப்பான் என்று சொல் என்றார்.

**44** எகிப்துதேசத்தில்குடியேறி, மிக்தோல், தக்பானேஸ், நோப், பத்ரோஸ்நாடு இவற்றில் வசித்த எல்லா யூதரையும்பற்றி எரேமியாவுக்கு வந்த வார்த்தை இதுவே; 2 இஸ்ரவேலின் கடவுளாகிய சேனைகளின் யெகோவா சொல்வதைக் கேளுங்கள்: நான் எருசலேமின்மேலும் யூதாவின் சகல ஊர்களின் மேலும் வரப்பண்ணின தீங்கையெல்லாம் நீங்களே கண்டீர்கள்; அவைகள் இந்நா 3 ளில் பாழாய்க் கிடக்கின்றன, அவைகளில் குடியிருப்போன் எவனுமில்லை. அவர்களும் நீங்களும் உங்கள் பிதாக்களும் அறியாத அந்திய தேவர்களுக்கு அவர்கள் தூபங்காட்டி அவைகளைச் சேவித்து எனக்குக் கோபமூண்டாகச் செய்தார்கள், அவர்கள் செய்த அந்தத் தீமையினிமித்தம் இப்படி ஆயிற்று. நான் பகைக்கிற இந்த 4 அருவருப்பான காரியத்தைச் செய்யவே வேண்டாமென்று தீர்க்கதரிசிகளாகிய என் சகல ஊழியரையும் திரும்பத்திரும்ப உங்களிடம் அனுப்பிச் சொல்லிக்கொண்டிருந்தேன். அவர்களோ என் சொல்லைக் கேளா 5 மலும் தங்கள் தீமையை விட்டுத் திரும்பும்படி செவிகொடாமலும் போய் அந்திய தேவர்களுக்குத் தூபங்காட்டினார்கள். ஆகையால் என் உக்கிரமும் என் கோப 6 மும் ஊற்றப்பட்டு யூதாவின் ஊர்களிலும் எருசலேமின் வீதிகளிலும் பற்றியெரிந்தது; அவைகள் இந்நாளில் இருக்கிறபடி பாழும் வனாந்தரமுமாயின. இப்போதும் இஸ்ர 7 வேலின் கடவுளும் சேனைகளின் கடவுளுமாகிய யெகோவா இப்படிச் சொல்லுகிறார்: நீங்கள் ஏன் இந்தப் பெரிய கேட்டை உங்களுக்குச்செய்து, யூதாவிலே ஒருவரையும் உங்களுக்கு மீதியாக வைக்காமல், உங்களில் புருஷனையும் ஸ்திரீயையும் பிள்ளையையும் பால் குடிக்கிற குழந்தையையும் நிர்மூலமாகச் செய்கிறீர்கள். உங்கள் கை 8 களின் செய்கைகளாலே எனக்குக் கோபமூட்டி, நீங்கள் அந்தியராய்த் தங்க வந்த எகிப்து தேசத்திலே அந்திய தேவர்களுக்

குத் தூபங்காட்டுகிறீர்களே. நீங்கள் இப்
படிச் செய்து உங்களை நிர்மூலமாக்கி பூமி
யின் சகல ஜாதிகளுக்குள்ளும் சாபச்சொல்
லும் நிந்தையுமாக்கிக்கொள்ளுகிறீர்கள்.
9 யூதா தேசத்திலும் எருசலேமின் வீதிகளி
லும் உங்கள் பிதாக்கள் செய்த தீமைகளை
யும் யூதா ராஜாக்கள் செய்த தீமைகளையும்
அவர்கள் ஸ்திரீகள் செய்த தீமைகளையும்
நீங்கள் செய்த தீமைகளையும் உங்கள் ஸ்திரீ
கள் செய்த தீமைகளையும் மறந்துபோனீர்
10 களோ? அவர்கள் இந்நாள்மட்டும் தங்க
ளைத் தாழ்த்தவுமில்லை, அவர்கள் பயப்படவு
மில்லை; நான் உங்கள் முன்பாகவும் உங்கள்
பிதாக்கள் முன்பாகவும் வைத்த என் நியா
யப்பிரமாணத்திலும் என் நியமங்களிலும்
11 நடக்கவுமில்லை. ஆகையால் இஸ்ரவேலின்
கடவுளாகிய சேனைகளின் யெகோவா
சொல்வது இதுவே, இதோ, நான் தீங்குக்
கென்றே என் முகத்தை உங்களுக்கு
விரோதமாய்த் திருப்பி யூதாவனைத்தையும்
12 சங்கரிப்பேன். எகிப்து தேசத்துக்குப்
போய் அங்கே அந்நியராய்த் தங்கும்படி
தீர்மானித்த மீதியான யூதரை வாரிக்கொள்
வேன், அவர்கள் அனைவரும் எகிப்துதேசத்
திலே நிர்மூலமாவார்கள்; அவர்களில் சிறிய
வன் முதல் பெரியவன்வரைக்கும் பட்டயத்
தாலும் பஞ்சத்தாலும் இரையாகி நிர்மூல
மாவார்கள்; அவர்கள் பட்டயத்தாலும் பஞ்
சத்தாலுமே சாவார்கள்; சாபச்சொல்லும்
பிரமிப்பும் பழிப்பும் நிந்தையுமாவார்கள்.
13 நான் எருசலேமைத் தண்டித்ததுபோலவே
எகிப்து தேசத்தில் குடியிருக்கிறவர்களையும்
பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் கொள்ளை
14 நோயாலும் தண்டிப்பேன். எகிப்து தேசத்
திலே அந்நியராய்த் தங்கும்படி வந்த யூத
ரிலே எவனும் தப்பிமீந்து, தாங்கள் குடி
யிருக்கவேண்டுமென்று திரும்பும்படி
ஆசைப்படுகிற யூதா நாட்டுக்குத் திரும்புவ
தில்லை, தப்பிப்போகிற சிலரேயொழிய
வேறெருவரும் அங்கே திரும்புவதில்லை
என்கிறார் என்று சொன்னேன்.
15 அப்பொழுது எல்லாப் புருஷரும்—
இவர்கள் தங்கள் ஸ்திரீகள் அந்நிய தேவர்
களுக்கு தூபங்காட்டினதாக அறிந்தவர்
கள்,—பெரிய கூட்டமாய் நின்றுகொண்டி
ருந்த எல்லா ஸ்திரீகளும் எகிப்துதேசத்தில்
பத்ரோசிலே குடியிருந்த சகல ஜனங்களும்
16 எரேமியாவுக்குப் பதிலுரைத்து: நீ யெகோ
வாவின் நாமத்தில் எங்களுக்குச் சொன்ன
விஷயத்திலே நாங்கள் உனக்குச் செவி
17 கொடுப்பதில்லை, | எங்கள் வாய் சொன்ன
எல்லா வார்த்தைகளின்படியேதான் நாங்
கள் செய்வோம், வானராக்கினிக்கு தூப
காட்டி அவளுக்குப் பானபலிகளை வார்ப்
போம்; நாங்களும் எங்கள் பிதாக்களும்
எங்கள் ராஜாக்களும் எங்கள் அதிபதிகளும்
யூதா ஊர்களிலும் எருசலேமின் வீதிகளி
லும் செய்ததுபோலவே செய்வோம்; அப்
படிச் செய்துவந்த காலத்தில் எங்களுக்கு
ஆகாரம் குறைவின்றியிருந்தது, நாங்கள்
க்ஷேமமாயிருந்தோம், ஒரு தீங்கையும்
அனுபவித்ததில்லை. நாங்கள் வானராக் 18
கினிக்கு தூபங்காட்டாமலும் அவளுக்குப்
பானபலிகளை வார்க்காமலும் போனதுமுதல்
எல்லாம் எங்களுக்குக் குறைவுபட்டது;
பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் அழிந்து
போனோம். மேலும் நாங்கள் வானராக் 19
கினிக்கு தூபங்காட்டி அவளுக்குப் பான
பலிகளை வார்க்கும்போது அவள் உரு
மான பணியாரங்களை அவளுக்குச் சுட்டு
பானபலிகளை வார்கிறது எங்கள் புருஷ
ருக்குத் தெரியாதா என்றார்கள்.
அதைக் கேட்கவே எரேமியா சகல 20
ஜனங்களையும், தனக்கு இவ்விதமாய்ப் பதி
லுரைத்த ஸ்திரீ புருஷர் யாவரையும்
பார்த்து: யூதாவின் ஊர்களிலும் எருசலே 21
மின் வீதிகளிலும் நீங்களும் உங்கள்
பிதாக்களும் உங்கள் ராஜாக்களும் உங்கள்
அதிபதிகளும் தேசத்தின் ஜனங்களும்
காட்டின தூபங்களை யெகோவா நினைத்
தும் தமது மனதிலே வைத்துக்கொள்ள
வில்லையோ? உங்கள் தீயசெயல்களையும் 22
நீங்கள் செய்த அருவருப்புகளையும்
யெகோவா இனி பொறுக்க முடியாமற்
போகவே உங்கள் தேசம் இந்நாளில் இருக்
கிறபடி குடியற்ற அவாந்தரவெளியும்
பழிப்பும் சாபச்சொல்லுமாயிற்று. நீங்கள் 23
தூபங்காட்டி யெகோவாவுக்கு விரோத
மாகப் பாவஞ்செய்து யெகோவாவின்
சொல்லுக்குச் செவிகொடாமலும் அவரு
டைய நியாயப்பிரமாணத்திலும் அவரு
டைய நியமங்களிலும் அவருடைய சாட்
சியங்களிலும் நடவாமலும் போனபடி
யினாலே இந்நாளில் இருக்கிறபடி இந்தத்
தீங்கு உங்களுக்கு நேரிட்டது என்று
சொன்னான்.
பின்னும் எரேமியா சகல ஜனங்களையும் 24
சகல ஸ்திரீகளையும் பார்த்து: எகிப்து தேசத்
தில் இருக்கிற யூதராகிய நீங்கள் அனை
வரும் யெகோவாவின வார்த்தையைக் கேளுங்
கள். இஸ்ரவேலின் கடவுளாகிய சேனை 25
களின் யெகோவா சொல்லுவது இதுவே,
வானராக்கினிக்கு தூபங்காட்டவும் அவ
ளுக்குப் பானபலிகளை வார்க்கவும் நாங்கள்

நேர்ந்துகொண்ட பொருத்தனைகளைச் செலுத்
தாமலிரோமென்று நீங்களும் உங்கள் ஸ்திரீ
களும், உங்கள் வாயினாலே சொன்னதை
உங்கள் கைகளினாலே நிறைவேற்றினீர்
கள்; சரி, உங்கள் பொருத்தனைகளை நிறை
வேற்றுங்கள், உங்கள் பொருத்தனைகளைச்
26 செலுத்துங்கள். எனினும் எகிப்து தேசத்
தில் குடியிருக்கிற யூதராகிய நீங்கள் எல்
லாரும் யெகோவாவின் வார்த்தையைக்
கேளுங்கள்: யெகோவா இப்படிச் சொல்லு
கிறார், யெகோவாவாகிய ஆண்டவருடைய
ஜீவன்மேல் ஆணை என்று எகிப்து தேசமெங்
கும் ஒரு யூதனின் வாயிலும் இனி என்
நாமம் வழங்கப்படுவதில்லையென்று, இதோ,
நான் என் மகத்தான நாமத்தைக்கொண்டு
27 ஆணையிடுகிறேன். இதோ, நன்மைக்கென்
றல்ல தீமைக்கென்றே நான் அவர்களைக்
கவனித்துக்கொண்டிருப்பேன்; எகிப்து
தேசத்திலிருக்கிற யூதர் அனைவரும் ஒழிந்து
தீருமளவும் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும்
28 சங்காரமாவார்கள். பட்டயத்துக்குத் தப்பி
எகிப்து தேசத்திலிருந்து யூதா தேசத்துக்
குப் போகிறவர்கள் சிலரே. யூதாவிலே
மீந்து எகிப்து தேசத்திலே தங்கியிருக்க வந்
தவர்கள் அனைவரும், தங்களுடைய வார்த்
தையோ என் வார்த்தையோ யாருடைய
வார்த்தை மெய்யென்பதை அக்காலத்திலே
29 அறிந்துகொள்வார்கள். நான் இவ்விடத்
தில் உங்களைத் தண்டிப்பேன் என்று உங்க
ளுக்கு விரோதமாய்ச் சொன்ன என் வார்த்
தைகள் மெய்யாகுமென்று நீங்கள் அறி
வதற்கு—இது யெகோவாவின் திருவாக்கு—
30 உங்களுக்கு அடையாளம் இதுவே: இதோ,
நான் யூதா ராஜாவாகிய செதெக்கியாவை,
அவன் பிராணனை வாங்கத்தேடின சத்துரு
வாகிய நேபுகாத்நேச்சார் என்னும் பாபி
லோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுத்
ததுபோல, நான் பார்வோன் கொப்ரா என்
னும் எகிப்தின் ராஜாவையும் அவன் பிரா
ணனை வாங்கத்தேடுகிற சத்துருக்களின்
கையில் ஒப்புக்கொடுப்பேன் என்று
யெகோவா சொல்லுகிறார் என்று சொன்
னான்.

**45** யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம்
என்னும் யூதா ராஜாவின் நாலாம் வருஷத்
திலே நேரியாவின் குமாரனாகிய பாருக்
இந்த வசனங்களை எரேமியா சொல்லச்
சொல்ல ஒரு புஸ்தகத்தில் எழுதின காலத்
தில் எரேமியா தீர்க்கதரிசி அவனுக்குச்
2 சொன்ன வார்த்தை இதுவே: பாருக்கே,
உன்னைப்பற்றி இஸ்ரவேலின் கடவுளாகிய
யெகோவா சொல்வதைக்கேள், | நீ உனக் 3
குள் பேசி, இப்பொழுது ஐயோ எனக்கு
ஆபத்து, யெகோவா என் வாதையோடு
சஞ்சலத்தையும் சேர்த்தார்; என் பெருமூச்
சினால் இளைத்தேன், இளைப்பாற எனக்கு
இடமில்லை என்று சொன்னாய் என்கிறார்.
இதோ, நான் கட்டினதையே நான் இடிக் 4
கிறேன்; நான் நாட்டினதையே நான் பிடுங்
குகிறேன்; இந்த முழுதேசத்திலும் இப்
படியே நடக்கும். நீ உனக்குப் பெரிய காரி 5
யங்களைத் தேடுகிறாயே! தேடாதே; இதோ,
மாம்சமான யாவர்மேலும் தீங்கை வரப்
பண்ணுகிறேன், இது யெகோவாவின் திரு
வாக்கு; உன் பிராணனையோ நீ போகும்
சகல ஸ்தலங்களிலும் உனக்குக் கிடைக்
கும் கொள்ளைப் பொருளாகத் தருகிறேன்.
இதுவே யெகோவாவின் வார்த்தை என்று
அவனுக்குச் சொல் என்கிறார்.

புறஜாதியாரைப்பற்றி எரேமியா தீர்க்க **46**
தரிசிக்கு வந்த யெகோவாவின் வார்த்தை
இதுவே, | எகிப்தைப்பற்றிய வார்த்தை: 2
ஐப்பிராத்து நதியண்டையில் கர்கெமீஷிலே
இருந்ததும் பாபிலோன் ராஜாவாகிய நேபு
காத்நேச்சார், யோசியாவின் குமாரனாகிய
யோயாக்கீம் என்னும் யூதாராஜாவின்
நாலாம் வருஷத்திலே, முறியடித்ததுமான
பார்வோன் நேகோ என்னும் எகிப்து ராஜா
வின் ராணுவத்தைப் பற்றியது:
கேடகங்களையும் பரிசைகளையும் ஆயத் 3
தம்பண்ணி
யுத்தத்துக்கு வாருங்கள்.
குதிரைகளின்மேல் சேணங்களை வையுங் 4
கள்,
குதிரைகளின்மேல் ஏறுங்கள்,
தலைச்சிராவை அணிந்துகொண்டு நில்லுங்
கள்,
ஈட்டிகளைத் தலைக்குக் கவசங்களைத் தரித்
துக்கொள்ளுங்கள்.
அவர்கள் திகில்கொண்டு பின்னிடுவதை 5
நான் காண்கிறதென்ன?
அவர்கள் பராக்கிரமசாலிகள் முறி
யுண்டு, திரும்பிப்பாராமல் ஓட்டம் பிடிக்
கிறார்கள்.
எப்புறமும் திகில், இது யெகோவாவின்
திருவாக்கு.
வேகமாய் ஓடுகிறவன் ஓடித்தப்புவதில்லை, 6
பராக்கிரமசாலி தப்பிக்கொள்வதில்லை;
வடக்கே ஐப்பிராத்து நதியண்டையிலே
அவர்கள் இடறிவிழுவார்கள்.
நீல நதிப்பெருக்குப்போல் புரண்டுவரு 7
கிற இவன் யார்?

அலைகள் மோதியடிக்கிற நதிகள்போல் எழும்பிவருகிற இவன் யார்?
8 நதிப்பெருக்குப்போல் புரண்டுவருகிறவன் எகிப்தியனே,
அவனே அலைகள் மோதியடிக்கிற நதிகள் போல் எழும்பிவருகிறான்;
நான் போய் தேசத்தை மூடி,
நகரத்தையும் அதில் குடியிருக்கிறவர்களையும் அழிப்பேன் என்கிறான்.
9 குதிரைகளே, போய் ஏறுங்கள்; இரதங்களே கடகட என்று ஓடுங்கள்;
பராக்கிரம வீரரான கேடகம் பிடிக்கிற எத்தியோப்பியரும் பூத்தியரும்
வில்லைப்பிடித்து நாணேற்றுகிற லூதியரும் புறப்படுக.
10 இந்த நாள் சேனைகளின் யெகோவாவாகிய ஆண்டவர் பழிவாங்கும் நாள்,
அவர் தமது சத்துருக்கள்மேல் பழிவாங்குவார்;
பட்டயம் திருப்தியாகப் பட்சிக்கும்,
அவர்கள் இரத்தத்தைக் குடித்து வெறிகொள்ளும்.
வடதேசத்தில் ஐப்பிராத்து நதியண்டையிலே,
சேனைகளின் யெகோவாவாகிய ஆண்டவருக்கு ஒரு யாகம் உண்டு.
11 எகிப்தின் குமாரத்தியாகிய கன்னிகையே,
நீ கிலெயாத்துக்குப் போய்ப் பிசினைதலம் வாங்கு;
பல அவிழ்தங்களே நீ சேர்த்தும் பயனில்லை, உன் காயம் ஆறுது.
12 ஜாதியார் உன் இலச்சையைக் கேள்விப்படுகிறார்கள்;
உன் கூக்குரல் பூமியெங்கும் நிறைந்திருக்கிறது;
பராக்கிரம வீரனின்மேல் பராக்கிரம வீரன் இடறி, இருவரும் ஒன்றாய் விழுகிறார்கள்.
13 எகிப்துதேசத்தை ஜயிக்க பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் வருவதைப்பற்றி எரேமியா தீர்க்கதரிசிக்கு வந்த யெகோவாவின் வார்த்தை:
14 எகிப்திலே அறிவித்து, மிக்தோலிலே பிரசித்தம்பண்ணி,
நோப்பிலும் தக்பானேசிலும் பிரசித்தம் பண்ணுங்கள்;
ஆயத்தப்பட்டு முன்வந்து நில்,
உனக்குச் சுற்றிலும் உள்ளவற்றைப் பட்டயம் பட்சிக்குமென்று சொல்லுங்கள்.
15 உன் பலவான் வாரிக்கொள்ளப்படுவதென்ன?

யெகோவா அவனைத் தள்ளினதால் அவன் நிலைநிற்கவில்லை.
16 அநேகரை இடறப்பண்ணுகிறார், அவனவன் தனக்கடுத்தவன்மேல் விழுகிறான்;
அவர்கள்: எழுந்திருங்கள், கொடிய பட்டயத்துக்குத் தப்ப
நமது ஜனத்தண்டைக்கும் நாம் பிறந்த தேசத்துக்கும் திரும்பிப்போவோம் என்கிறார்கள்.
17 அவர்கள் அங்கே சத்தமிட்டு,
எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் வெறும் ஆரவாரமே,
அவன் தன் சமயத்தைத் தப்பவிட்டான் என்கிறார்கள்.
18 என் ஜீவன்மேல் ஆணையாகச் சொல்லுகிறேன்,
— இது சேனைகளின் யெகோவா என்னும் நாமமுள்ள ராஜாவின் திருவாக்கு,—
மலைகளில் தாபோரைப்போலவும் சமுத்திரத்தின் அருகேயுள்ள கர்மேலைப்போலவும்
ஒருவன் வருவான்.
19 எகிப்து தேசவாசியாகிய குமாரத்தியே,
சிறையாகிப் போவதற்குவேண்டிய சாமான்களை ஆயத்தப்படுத்திக்கொள்;
நோப்பு பாழாகும், அது குடியில்லாமல் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கும்.
20 எகிப்து மகா நேர்த்தியான கடாரி,
மாட்டு ஈ வடக்கேயிருந்து வருகிறது, வருகிறது;
கொழுத்த காளைகள்போல் அதின் கூலிப்படைகளும்
அதில் நிலைநிற்காமல் திரும்பி ஏகமாய் ஓடிவிடும்;
அவர்கள் தண்டனைக்குரிய ஆபத்துநாள் அவர்கள்மேல் வந்தது.
22 எகிப்து பாம்பைப்போல் தீறி நழுவிவிடும்,
சத்துருக்கள் சேனைகளாய் வருவார்கள்,
காடுவெட்டிகள்போல் கோடரிகளோடு அதின்மேல் வருவார்கள்.
23 அவர்கள் அதின் காட்டை வெட்டிவார்கள்,
இது யெகோவாவின் திருவாக்கு,
அது ஆள் அழையாக்காடு,
அவர்கள் வெட்டுக்கிளிகளிலும் அதிகமானவர்கள், அவர்களை எண்ணமுடியாது.
24 எகிப்தின் குமாரத்தி வெட்கத்துக்குள்ளாவாள்;
வடதிசை ஜனத்தின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவாள்.

25 இஸ்ரவேலின் கடவுளாகிய சேனை
களின் யெகோவா சொல்வது இதுவே:
இதோ, நான் நோ என்னும் பட்டணத்தி
லுள்ள ஆமோனையும், பார்வோனையும் எகிப்
தையும் அதின் தேவர்களையும் அதின் ராஜாக்
களையும், பார்வோனையும் அவனை நம்பியிருக்
26 கிறவர்களையும் தண்டித்து, | அவர்கள் பிரா
ணனை வாங்கத் தேடுகிறவர்களின் கையிலும்
பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சா
ரின் கையிலும் அவனுடைய ஊழியக்காரர்களின்
கையிலும் அவர்களை ஒப்புக்கொடுப்பேன்;
பிற்காலத்திலே அது பூர்வ நாட்களில் இருந்
ததுபோல் குடியேற்றப்படும்; இது யெகோ
வாவின் திருவாக்கு.

27 என் தாசனாகிய யாக்கோபே, நீ பயப்
படாதே;
இஸ்ரவேலே, நீ திகிலடையாதே;
இதோ, நான் உன்னைத் தூரத்திலும்
உன் சந்ததியாரை அவர்கள் சிறைப்பட்
டுப்போன தேசத்திலுமிருந்து விடுவித்து
ரட்சிப்பேன்;
அப்பொழுது யாக்கோபு திரும்பி வந்து
அமர்ந்து சுகித்திருப்பான்;
அவனைத் தத்தளிக்கப் பண்ணுகிறவ
னில்லை.

28 என் தாசனாகிய யாக்கோபே, நீ பயப்ப
டாதே, இது யெகோவாவின் திருவாக்கு.
நான் உன்னுடனே இருக்கிறேன், நீ
துரத்தியடித்து தங்கியிருந்த எல்லா ஜாதி
யாரையும் நான் சர்வ சங்காரம்செய்
வேன்;
உன்னையோ சர்வ சங்காரஞ்செய்யேன்,
மட்டாய்த் தண்டிப்பேன்,
முற்றிலும் தண்டியாமல் விடேன் என்
கிறார்.

**47** பார்வோன் காத்சாவை ஜெயிக்கு முன்
னே பெலிஸ்தியரைப்பற்றி எரேமியா
தீர்க்கதரிசிக்கு வந்த யெகோவாவின்
வார்த்தை:

2 யெகோவா இப்படிச் சொல்லுகிறார்:
இதோ, வடக்கேயிருந்து தண்ணீர்கள்
பொங்கிப் புரண்டோடும் நதியாகி,
தேசத்தின்மேலும் அதிலுள்ள எல்லாவற்
றின்மேலும்
நகரத்தின்மேலும் அதில் குடியிருக்கிறவர்
களின்மேலும் புரண்டு ஓடும்;
அப்பொழுது மனுஷர் கூக்குரலிட்டு,
தேசத்தின் குடிகளெல்லாரும் அலறுவார்
கள்.

3 அவர்களுடைய பலத்த குதிரைகளுடைய
குளம்புகளின் சத்தத்தையும்
அவர்களுடைய இரதங்களின் கடகடப்
பையும் அவர்களுடைய சக்கரங்களின்
இரைச்சலையும் கேட்டு,
தகப்பன்மார் அதைரியப்பட்டுத் தங்கள்
பிள்ளைகளைத் திரும்பிப் பாராதிருப்பார்
கள்.

4 பெலிஸ்தியரை யெல்லாம் அழிக்கவும்
தீருவுக்கும் சீதோனுக்கும் மீதியாயிருக்
கிற சகாயரையெல்லாம் சங்காரம்பண்
ணவும்
வருகிற நாளிலே இப்படியாகும்;
கப்தோர் என்னும் தீவாரில் மீதியானவ
ராகிய பெலிஸ்தியரையும் யெகோவா
அழிப்பார்.

5 காத்சா மொட்டையடிக்கப்படும்;
அவர்கள் பள்ளத்தாக்கிலே மீதியாயிருக்
கிற அஸ்கலோன் சங்காரமாகும்;
நீ எந்த மட்டுந்தான் உன்னைக் கீறிக்
கொள்ளுவாய்.

6 யெகோவாவின் பட்டயமே, ஐயோ, நீ
எதுவரை அமராதிருப்பாய்?
உன் உறைக்குள் திரும்பி ஒய்ந்து அமர்ந்
திரு.

7 அது எப்படி அமர்ந்திருக்கும்?
அஸ்கலோனுக்கு விரோதமாகவும் கடற்
கரை நாட்டுக்கு விரோதமாகவும்
யெகோவா அதற்குக் கட்டளை கொடுத்து,
அவ்விடங்களுக்கென்று அதை நியமித்
தாரே.

மோவாபைப்பற்றியது:

**48**

இஸ்ரவேலின் கடவுளாகிய சேனைகளின்
யெகோவா இப்படிச் சொல்லுகி
றார்:
நேபோவுக்கு ஐயோ கேடு, அது அழிக்
கப்பட்டது;
கிரியத்தாயீம் வெட்கத்துக்குள்ளாகிப்
பிடிபட்டது;
துருக்கம் வெட்கத்துக்குள்ளாகித் திகி
லடைந்தது.
2 மோவாபுக்கு இனிப் புகழ் இல்லை,
அதற்குவிரோதமாய் எஸ்போனிலே துரா
லோசனை செய்து,
வாருங்கள், அதைச் சங்கரிப்போம்,
இனி அது ஒரு ஜாதியாயிராதபடி செய்
வோம் என்கிறார்கள்;
மத்மேனே, நீயும் சங்காரமாவாய், பட்ட
யம் உன்னைத் தொடரும்.
3 ஐயோ, கொடுமை, பெருஞ்சங்காரம் என்
றலறும் சத்தம்
கொரோனயிமிலிருந்து கேட்கிறது.
4 மோவாப் நொறுக்கப்பட்டது,

அதிலுள்ள சிறுவர் சத்தமிட்டலறுகிறார்கள்.
5 லூகித்துக்கு ஏறும் வழியிலே அழுது கொண்டே ஏறுகிறார்கள்;
கொரோனயிமுக்கு இறங்கிப்போகிற வழியிலே
சங்காரத்தால் கொறுங்கியலறும் கூக்குரலைக் கேட்கிறார்கள்.
6 உங்கள் பிராணன் தப்ப ஓடிப்போங்கள்,
வனாந்தரத்திலுள்ள கறனீயாய்ப்போன செடிபோலிருப்பீர்கள்;
7 நீ உன் செய்கைகளிலும் உன் பொக்கிஷங்களிலும்
நம்பிக்கை வைக்கிறபடியினால் நீயும் பிடிபடுவாய்;
கெமோஷ் சிறையாகும், அதின் ஆசாரியரும் அதிபதிகளும் கூடவே சிறைப்படுவார்கள்.
8 பாழாக்குவோன் ஒவ்வொரு ஊரின்மேலும் வருவான், ஒரு ஊரும் தப்புவதில்லை;
பள்ளத்தாக்கு கேடாகும், சமவெளிநாடு அழியும்,
யெகோவா சொன்னபடியேயாகும்.
9 மோவாபு பறந்துபோகும்படி அதற்குச் செட்டைகளைக் கொடுங்கள்,
அதின் ஊர்கள் குடியின்றிப் பாழாகும்.
10 யெகோவாவின் வேலையை அசதியாய்ச் செய்பவன் சாபத்திற்குரியவன்,
இரத்தம் சிந்தாமல் தன் பட்டயத்தை அடக்கிக் கொள்ளுகிறவன் சாபத்திற்குரியவன்.
11 மோவாப் தன் சிறுவயதுமுதல் மோசமின்றி வாழ்ந்தது,
தன் வண்டல்களின்மேல் அமர்ந்திருந்தது,
அது ஒரு பாத்திரத்திலிருந்து மறு பாத்திரத்தில் வார்க்கப்பட்டதில்லை;
அது சிறைப்பட்டுப்போனதில்லை,
ஆதலால் அதின் ருசி அதில் நிலைத்திருக்கிறது, அதின் வாசனை மாறவில்லை.
12 ஆதலால், இதோ நாட்கள் வரும், இது யெகோவாவின் திருவாக்கு,
அப்பொழுது கவிழ்த்துப்போடுகிற ஆட்களை அதற்கு அனுப்புவேன்;
அவர்கள் அதைக் கவிழ்த்து அதின் பாத்திரங்களை வெறுமையாக்கி
அதின் ஜாடிகளை உடைத்துப்போடுவார்கள்.
13 அப்பொழுது இஸ்ரவேல் வீட்டார் தங்கள் நம்பிக்கையாயிருந்த பேதேலைப் பற்றி வெட்கப்பட்டதுபோல மோவாப் கெமோஷைப்பற்றி வெட்கப்படும்.
14 நாங்கள் பராக்கிரமவீரரென்றும் நாங்கள் யுத்தசன்னத்தரென்றும் நீங்கள் சொல்லுகிறதெப்படி?
15 மோவாப் அழியுண்டது? அதின் ஊர்கள் எரிந்துபோயின,
அதின் சிறந்த வாலிபர் கொல்லப்படுவதற்கு இறங்குகிறார்கள்,
இது சேனைகளின் யெகோவா என்னும் ராமுள்ள ராஜாவின் திருவாக்கு.
16 மோவாபின் ஆபத்து சீக்கிரம் வருகிறது;
அதின் தீங்கு மிகவும் விரைந்துவருகிறது.
17 அதைச்சுற்றிக் குடியிருக்கிறவர்களும் அதின் பேரை அறிந்தவர்களுமாகிய நீங்களெல்லாரும்
அதினிமித்தம் பரிதபித்து:
பலமானகோலும் அலங்காரமான தண்டும்
எப்படி உடைந்ததென்று சொல்லுங்கள்.
18 தீபோன் பட்டணவாசியான குமாரத்தியே,
நீ உன் மகிமையை விட்டிறங்கி, வறண்ட இடத்திலே உட்கார்ந்திரு;
மோவாபைப் பாழாக்குகிறவன் உனக்கு விரோதமாய் வந்து உன் அரண்களை அழித்துப்போடுவான்.
19 அரோவேரில் குடியிருக்கிறவளே, நீ வழியிலே நின்று பார்த்துக்கொண்டிரு;
நடந்ததென்னவென்று ஓடிவருகிறவனையும் தப்பி வருகிறவனையும் கேள்.
20 மோவாப் வெட்கத்துக்காளானது, அது திகிலடைந்ததே;
கூக்குரலிட்டு அலறுங்கள்,
மோவாப் பாழாக்கப்பட்டதென்று அர்னோனில் அறிவியுங்கள்.
21 சமவெளி நாட்டின்மேலும், கோலோன், யாகசா, மேபாகாத்,
22 தீபோன், நேபோ, பேத்திப்லாதாயிம்,
23 கிரியத்தாயிம், பேத்காமூல், பேத்மெயோன்,
24 கெரியோத், பொஸ்ரு, இவற்றின்மேலும்
மோவாப் தேசத்திலே தூரத்திலும் சமீபத்திலுமுள்ள எல்லா ஊர்களின்மேலும் தண்டனை வந்துவிட்டது.
25 மோவாபின் கொம்பு வெட்டுண்டது,
அவன் புயம் முறிக்கப்பட்டது;
இது யெகோவாவின் திருவாக்கு.
26 அவனை வெறிகொள்ளச் செய்யுங்கள்,
யெகோவாவுக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டினான்;

மோவாப் தான் வாந்திபண்ணினதிலே புர
ளுவான்;
அவனும் நகைப்புக்கிடமாவான்.
27 இஸ்ரவேல் உனக்கு நகைப்புக்கிடமாக
வில்லையோ?
அவன் திருடருக்குள் கண்டுபிடிக்கப்பட்
டானோ?
நீ அவனைப்பற்றி பேசும்போதெல்லாம்
தலையைத் துலுக்குகிறாயே.
28 மோவாப் தேசத்தின் குடிகளே,
நீங்கள் ஊர்களை விட்டுப்போய்க் கன்
மலையில் குடியேறி
மலைவெடிப்பு ஓரங்களில் கூடுகட்டுகிற
புறாவுக்கு ஒப்பாயிருங்கள்.
29 மோவாபின் பெருமையைப்பற்றிக்
கேட்டோம்,
அவன் மிகவும் பெருமைக்காரன்;
அவன் அகங்காரத்தையும் அவன் பெரு
மையையும் அவன் மேட்டிமையையும்
அவன் இதய வீறுப்பையும்பற்றிக் கேட்
டோம்.
30 அவன் இறுமாப்பை நான் அறிவேன்,
இது யெகோவாவின் திருவாக்கு,
அதனால் ஒன்றும் விளையாது, அவன்
வீம்புசெல்லாது.
31 ஆகையால் மோவாபினிமித்தம் நான்
கூக்குரலிடுவேன்,
மோவாப்தேசம் அனைத்தினிமித்தமும்
அலறுவேன்;
கீர்கேரேஸ் ஊராரினிமித்தம் பெரு
மூச்சு விடப்படும்.
32 சிப்மாவூரின் திராட்சச்செடியே,
யாசேரினிமித்தம் நான் அழுததைப்
பார்க்கிலும் உன்னிமித்தம் அதிகமாய்
அழுவேன்;
உன் கொடிகள் கடலைக் கடந்துபோ
யின,
அவைகள் யாசேர் கடல்மட்டும் போய்
எட்டின;
பாழாக்குகிறவன் உன் கோடைகாலப்
பழங்கள்மேலும் உன் திராட்சப்பழ
அறுப்பின்மேலும் விழுந்தான்.
33 மோவாபின் பழமரத்தோப்பிலும் முழு
தேசத்திலுமிருந்து
சந்தோஷமும் களிப்பும் அற்றுப்போ
யின;
திராட்சரசம் ஆலைகளிலிருந்து ஓயப்பண்
ணினேன்,
ஆரவாரஞ்செய்து ஆலை மிதிப்பவரில்லை,
கேட்கும் ஆரவாரம் ஆரவாரமல்ல.
34 எஸ்போனின் கூக்குரல் எலெயாலேமட்
டும் கேட்கிறது,
யாகாஸ் வரைக்கும் அவர்கள் சத்தமிடு
கிறார்கள்;
சோவார்துவக்கி கொரோனயிம் எகலத்
ஷெலிஷீயாமட்டும் சத்தம் கேட்கிறது,
நிம்ரீமின் நீர்நிலைகள் பாழாய்ப்
போம்.
மோவாப்தேசத்து கோவில்மேடைகளில் 35
பலியிடுகிறவனும்
தன் தேவர்களுக்கு தூபங்காட்டுகிறவ
னும் இல்லாதபடி செய்வேன்,
இது யெகோவாவின் திருவாக்கு.
ஆதலால் மோவாபினிமித்தம் என் இரு 36
தயம் நாகசுரம்போல் துயரமாய்த் தொ
னிக்கும்;
கீர்கேரேஸ் ஊராரினிமித்தமும் என்
இருதயம் நாகசுரம்போல் துயரமாய்த்
தொனிக்கும்;
அவர்கள் சேர்த்துவைத்ததெல்லாம் அழி
ந்துபோகிறதே.
தலைகள் எல்லாம் மொட்டையாயின, 37
தாடிகள் எல்லாம் க்ஷத்திரிக்கப்பட்டன,
கைகளில் எல்லாம் கீறல்காயம், அரை
களில் இரட்டு.
மோவாபின் சகல வீடுகளின்மேலும் 38
அதின் தெருக்களிலேயும் ஏகப்புலம்பல்,
ஒருவரும் விரும்பாத சட்டிபோல் மோ
வாபை உடைத்துவிட்டேன்
இது யெகோவாவின் திருவாக்கு.
மோவாப் எவ்வளவாய் முறிந்துபோயிற் 39
று, அலறுங்கள்,
அது வெட்கத்துக்குள்ளாகி எவ்வளவாய்
முதுகைக்காட்டிற்று,
மோவாப் தனக்குச் சுற்றிலுமிருப்பவருக்
கெல்லாம்
நகைப்பும் திகைப்புமாயிற்றே.
யெகோவா சொல்வதைக் கேளுங்கள், 40
இதோ, ஒருவன் கழுகைப்போல் செட்
டைகளை விரித்து,
மோவாபின்மேல் பறந்து வருகிறான்.
கெரியோத் பிடிக்கப்படும், கோட்டை 41
கள் கைவசமாகும்;
அந்நாளிலே மோவாபின் பராக்கிரமவீர
ரின் இருதயம்
பிரசவவேதனைப்படுகிற ஸ்திரீயின் இரு
தயம்போலாகும்.
மோவாப் யெகோவாவுக்கு விரோதமாய்ப் 42
பெருமை பாராட்டினபடியால்,
அது அழிக்கப்படும், ஒரு ஜனமாயிராது.
மோவாப்தேசத்தில் குடியிருக்கிறவனே, 43
உனக்குக் கடுந்திகிலும் குழியும் கண்ணி
யுமே,
இது யெகோவாவின் திருவாக்கு.

44 திகிலுக்குத்தப்பி ஓடுபவன் குழியில் விழுவான்;
குழிநின்று ஏறுபவன் கண்ணியில் சிக்குவான்;
அதன்மேல், மோவாபின்மேலேயே,
தண்டனை வருஷத்தை வரப்பண்ணுவேன்,
இது யெகோவாவின் திருவாக்கு.
45 தப்பி ஓடிப்போகிறவர்கள் பலமற்றவர்களாய் எஸ்போனின் நிழலில் வந்து நிற்பார்கள்,
நெருப்பு எஸ்போனிலும் அக்கினிஜ்வாலை சீகோன் நடுவிலுமிருந்து வருகிறது,
மோவாபின் மண்டையையும் இரைச்சலிடுவோரின் உச்சந்தலையையும் பட்சிக்கிறது.
46 மோவாபே, ஐயோ உனக்குக்கேடு!
கெமோஷின் ஜனம் அழியும், உன் குமாரரும் சிறையாவார்கள்;
உன் குமாரத்திகளும் சிறையாவார்கள்.
47 கடைசிநாட்களிலோ மோவாபின் துன்பநிலைமையை மாற்றுவேன்,
இது யெகோவாவின் திருவாக்கு,
மோவாபின்மேல் வரும் தீர்ப்பின்விவரம் இதோடே முடிந்தது.

**49** அம்மோன் புத்திரரைப் பற்றியது.
யெகோவா இப்படிச் சொல்லுகிறார்:
இஸ்ரவேலுக்குப் பிள்ளைகள் இல்லையோ?
அவனுக்குச் சுதந்தரவாளி இல்லையோ?
மல்காம் காத்நாட்டைக் கைப்பற்றிக் கொள்வானேன்?
அவன் ஜனம் காத் ஊர்களில் குடியிருப்பானேன்?
2 இப்படியிருப்பதால், இதோ நாட்கள் வரும்,
இது யெகோவாவின் திருவாக்கு,
அப்பொழுது அம்மோன் புத்திரர் பட்டணமாகிய ரப்பாவுக்கு விரோதமாய் யுத்த ஆரவாரம் கேட்கப்பண்ணுவேன்,
அது பாழான மண்மேடாகும், அதைச் சேர்ந்த ஊர்களும் அக்கினியால் சுட்டெரிக்கப்படும்;
இஸ்ரவேலோ தன் நாட்டைக் கைக்கொண்டவரைத் தான் கைக்கொண்டுவிடும்
என்று யெகோவா சொல்லுகிறார்.
3 எஸ்போனே, அலறு; ஆய் பாழாக்கப்பட்டது;
ரப்பாவின் குமாரத்திகளே, ஓலமிடுங்கள்;
இரட்டைக் கட்டிக்கொண்டு புலம்பி,
வேலிகளிலே சுற்றித் திரியுங்கள்;
மல்காம் சிறைப்பட்டுப்போவான்,
அவன் ஆசாரியரும் அதிபதிகளும் கூடவே போவார்கள்.
4 விலகிப்போன குமாரத்தியே, தன் செல்வங்களில் நம்பிக்கையாயிருந்தவளே,
உன் பள்ளத்தாக்குகளைப்பற்றி, நீர் பொழிந்தோடும் பள்ளத்தாக்கையே பற்றி,
நீ பெருமை பாராட்டி, எனக்கு விரோதமாய் வருபவன் யார்
என்று சொல்லிக்கொண்டிருப்பதேன்?
5 இதோ, உன் சுற்றுப்புறத்தார் அனைவரும் உன்மேல் திகில் வரப்பண்ணுவேன்,
இது சேனைகளின் யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு;
நீங்கள் அவரவர் இருக்கும் வழியே ஓடத்துரத்தப்படுவீர்கள்;
ஒடிப்போகிறவர்களைச் சேர்ப்பார் ஒருவருமில்லை.
6 அதன் பின்பு அம்மோன் புத்திரரின் துன்பநிலைமையை மாற்றுவேன்,
இது யெகோவாவின் திருவாக்கு.
ஏதோமைப் பற்றியது.
7 சேனைகளின் யெகோவா இப்படிச் சொல்லுகிறார்:
தேமானிலே இனி ஞானமில்லையோ?
ஆலோசனை விவேகிகளை விட்டு ஒழிந்ததோ?
அவர்களுடைய ஞானம் கெட்டுப்போயிற்றே?
8 தெதானின் குடிகளே, ஓடுங்கள், திரும்புங்கள், குழிதோண்டிப் பதுங்கிக்கொள்ளுங்கள்;
ஏசாவின் தண்டனை காலமாகிய அவன் ஆபத்தை அவன்மேல் வரப்பண்ணுவேன்.
9 திராட்சப் பழங்களைப் பறிக்கிறவர்கள் உன்னிடம் வருவார்களானால்
பின்பறிப்புக்கென்றே சிறிதும் விடாரே.
இரவில் திருடர் வருவார்களானால்
மனங்கொண்டமட்டும் அழிப்பார்களே.
10 நானோ ஏசாவை ஆதரவில்லாதவனாக்கி
அவன் மறைவிடங்களை வெளிப்படுத்துவேன்;
அவன் ஒளித்திருக்க முடியாமற்போம்,
அவன் சந்ததியாரும் அவன் சகோதரரும் அவன் அயலாரும்
அழிக்கப்படுவார்கள், அவன் இல்லாமற்போவானே.
11 திக்கற்றவர்களாய்ப்போகும் உன் பிள்ளைகளை விட்டுவிடு,
நான் அவர்களைப் பிழைத்திருக்கச் செய்வேன்;

உன் விதவைகள் என்னில் நம்பிக்கையா
யிருக்க.
12 யெகோவா சொல்வது இதுவே:
பாத்திரத்திலே குடிப்பதற்கேதுவான குற்
றம் செய்யாதவர்களும் குடித்துவிட்டார்
களே,
நீ தண்டனைக்குத் தப்புவாயோ?
நீ தப்பமாட்டாய், அதில் குடிக்கவே
வேண்டும்.
13 நான் என்னைக்கொண்டு ஆணையிட்டு,—
இது யெகோவாவின் திருவாக்கு—
பொஸ்ரா பிரமிப்பும் நிந்தையும் பாழும்
சாபச்சொல்லும் ஆகும்,
அதைச்சேர்ந்த ஊர்கள் எல்லாம் நித்திய
அவாந்தர வெளிகளாகும் என்கிறேன்.
14 ஜாதிகளிடம் தூதுவரை அனுப்பி,
நீங்கள் கூடிக்கொண்டு அதற்கு விரோத
மாக வந்து யுத்தம்பண்ண எழும்புங்
கள்
என்று சொல்லும் செய்தியை யெகோவா
வினிடம் கேட்டேன்.
15 இதோ, உன்னை ஜாதியாருக்குள்ளே சிறிய
வனும்
மனுஷருக்குள்ளே அசட்டைபண்ணப்
பட்டவனுமாக்குகிறேன் என்கிறார்.
16 கன்மலை வெடிப்புகளில் வாசம்பண்ணி,
மேடுகளின் உச்சியைப் பிடித்திருக்கிற
வனே,
நீ வினைத்தபயங்கரமும் உன் இருதயத்தின்
அகந்தையும் உன்னை மோசம்போக்கின;
கழுகைப்போல் உயரத்திலே நீ உன்
கூட்டைக் கட்டினாலும்
அங்கிருந்து உன்னை விழப்பண்ணுவேன்,
இது யெகோவாவின் திருவாக்கு.
17 ஏதோம் பாழாகும்; அதைக் கடந்து
போகிறவன் எவனும் பிரமித்து,
அதின் சகல வாதைகளினிமித்தமும் ஈச
லிடுவான்.
18 சோதோமும்கொமோராவும் அவைகளின்
சுற்றுக்கிராமங்களும்
கவிழ்க்கப்பட்டதுபோல இதுவும் கவிழ்க்
கப்படும்
என்று யெகோவா சொல்லுகிறார்;
அங்கே எவனும் குடியிருப்பதில்லை, அதில்
ஒரு மனுப்புத்திரனும் தங்குவதில்லை.
19 இதோ, யோர்தான் கரையிலுள்ள அடர்த்
தியான காட்டிலிருந்து
காயாத மேய்ச்சல் காட்டுக்குவரும் சிங்
கம் துரத்தப்படுவதுபோல்
நான் அவர்களைத் துரத்திவிடுவேன்;
வந்தக்ஷணமே அவர்களை ஓடிவிடச்செய்
வேன்,
நான் தெரிந்தெடுப்பவனை அதன்மேல்
ஏற்படுத்துவேன்,
எனக்கு நிகரானவன் யார்?
என்னை வரவழைத்துக் கேள்விகேட்ப
வன் யார்?
எனக்கு எதிரே நிற்க வல்ல மேய்ப்பன்
யார்?
20 ஆகவே யெகோவா ஏதோமுக்கு விரோத
மாகச் செய்த ஆலோசனையையும்,
அவர் தேமானின் குடிகளுக்கு விரோத
மாகக்கொண்ட எண்ணங்களையும் கே
ளுங்கள்;
மந்தையில் சிறியவைகள் இழுத்துக்
கொண்டு போகப்படுமே;
அவைகள் இருக்கும் மேய்ச்சல் வெளி
அவைகளைப்பற்றிப் பிரமிப்படையும்.
21 அவைகள் விழும் சத்தத்தினாலே பூமி
அதிரும்,
கூக்குரலின் சத்தம் செங்கடல்மட்
டும் கேட்கும்.
22 இதோ, ஒருவன் கழுகுபோல் செட்டை
களை விரித்து எழும்பி,
பொஸ்ராவின்மேல் பறந்து வருகி
றான்.
அக்காலிலே ஏதோமுடைய பராக்கிரம
வீரரின் இருதயம்
பிரசவவேதனைப்படுகிற ஸ்திரீயின் இரு
தயம் போலாகும்.
தமஸ்குவைப்பற்றியது. 23
ஆமாத்தும் அர்ப்பாத்தும் வெட்கத்துக்
குள்ளாகின்றன;
துர்ச்செய்தி கேட்டு அவர்கள் கரைந்து
போகிறார்கள்;
சமுத்திரத்திலே சலனமிருக்க அது அமர்
ந்திராது.
24 தமஸ்கு தளர்ந்துபோம், பின்னிட்டு ஓடிப்
போம், திகில் அதைப் பிடித்தது;
பிரசவ ஸ்திரீயைப்போல சஞ்சலமும்
வேதனைகளும் அதைப் பிடித்தன.
25 என் சந்தோஷத்திற்குரிய ஊர், புகழ்
பெற்ற நகரம், இதைவிட்டுவிடாததென்
ன!
26 அதின் வாலிபர் அதின் வீதிவெளிகளில்
விழுகிறார்களே,
யுத்தவீரர் எல்லாரும் அக்காலிலே சங்
காரமாவார்கள்;
இது சேனைகளுடைய யெகோவாவின்
திருவாக்கு.
27 தமஸ்குவின் மதில்களில் தீக்கொளுத்து
வேன்,
அது பெனதாத்தின் அரமனைகளைப் பட்
சிக்கும்.

28 பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் முறியடித்த கேதாரையும் காத்சோரு டைய ராஜ்யங்களையும் பற்றியது.
யெகோவா சொல்வதைக்கேளுங்கள்:
எழும்புங்கள், கேதாருக்கு விரோதமாய்ச் சென்று கீழ்த்திசைப்புத்திரரைச் சங்காரியுங்கள்.
29 அவர்கள் கூடாரங்களையும் அவர்கள் மந்தைகளையும் பிடித்து,
அவர்கள் திரைகளையும் அவர்கள் எல்லாத் தட்டுமுட்டுகளையும் அவர்கள் ஒட்டகங்களையும்
அவர்களிடமிருந்து எடுத்துக்கொண்டு போகவே
எப்புறமும் திகில் என்று அவர்களை நோக்கிச் சத்தமிட்டுக் கூறுவார்கள்.
30 காத்சோரின் குடிகளே, ஓடி அலைந்து கொண்டேயிருங்கள்;
குழிதோண்டிப் பதுங்கிக்கொள்ளுங்கள்,
இது யெகோவாவின் திருவாக்கு.
பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் உங்களுக்கு விரோதமாக ஆலோசனைசெய்து,
உங்களுக்கு விரோதமான எண்ணங் கொண்டிருக்கிறான்.
31 பயமின்றிச் சுகமாய்க் குடியிருக்கிற ஜாதிக்கு விரோதமாக எழும்பிப்போங்கள்,
இது யெகோவாவின் திருவாக்கு.
அதற்கு வாசல்களுமில்லை, தாழ்ப்பாள்களுமில்லை, அவர்கள் தனியே தங்கியிருக்கிறார்கள்.
32 அவர்கள் ஒட்டகங்கள் கொள்ளையாகும்,
அவர்கள் திரளான ஆடுமாடுகள் சூறையாகும்;
சுற்றி ஒதுக்கிய தலைமயிருள்ளவர்களைக் காற்றடிக்கும் திசையெங்கிலும் சிதறடிப்பேன்;
சகல பக்கங்களிலுமிருந்து ஆபத்துவரச் செய்வேன், இது யெகோவாவின் திருவாக்கு.
33 காத்சோர் நரிகள் வசிக்கும் இடமாகி
என்றென்றும் பாழாய்க்கிடக்கும்;
அங்கே ஒருவனும் குடியிருப்பதில்லை,
அதில் ஒரு மனுப்புத்திரனும் தங்குவதில்லை என்கிறார்.
34 யூதா ராஜாவாகிய சிதெக்கியாவினுடைய அரசாட்சியின் துவக்கத்திலே ஏலாமைப்பற்றி எரேமியா தீர்க்கதரிசிக்கு வந்த யெகோவாவின் வார்த்தை இதுவே:
35 சேனைகளின் யெகோவா இப்படிச் சொல்லுகிறார்:

இதோ, நான் ஏலாமின் வில்லை, அவர்கள் சிறந்த பராக்கிரமத்தை முறித்துப் போட்டு,
36 வானத்தின் நாலுதிசைகளிலுமிருந்து நாலு காற்றுகளை ஏலாமின்மேல் வரச் செய்து
காற்றடிக்கும் திசையெல்லாம் அவர்களைச் சிதறடிப்பேன்;
ஏலாம் தேசத்திலிருந்து துரத்துண்டவர்கள் போயிராத ஒரு ஜாதியுமில்லை.
37 நான் ஏலாமியரை அவர்கள் சத்துருக்களுக்கு முன்பாகவும்
அவர்கள் பிராணனை வாங்கத் தேடுகிறவர்களுக்கு முன்பாகவும் திகில்கொள்ளச் செய்வேன்;
தீங்கை, என் உக்கிரகோபத்தை, அவர்கள்மேல் வரப்பண்ணுவேன்,
இது யெகோவாவின் திருவாக்கு.
நான் அவர்களைச் சர்வசங்காரம் செய்யுமட்டும்
பட்டயத்தை அவர்களுக்குப்பின்னே அனுப்புவேன்.
38 என் சிங்காசனத்தை ஏலாமிலே வைத்து
அங்கேயிருந்து ராஜாவையும் அதிபதிகளையும் அழித்துப்போடுவேன்,
இது யெகோவாவின் திருவாக்கு.
39 கடைசிநாட்களிலோ நான் ஏலாமின் துன்ப நிலைமையை மாற்றுவேன்,
இது யெகோவாவின் திருவாக்கு.

**50** யெகோவா பாபிலோனுக்கும் கல்தேயர் தேசத்துக்கும் விரோதமாக எரேமியா தீர்க்கதரிசிக்கு உரைத்தவார்த்தை:
2 ஜாதியாருக்குள்ளே பிரசித்தம்பண்ணுங்கள்
தெரியப்படுத்துங்கள், கொடியேற்றுங்கள்,
மறைக்காமல் தெரியப்படுத்துங்கள்:
பாபிலோன் பிடிபட்டது, பேல் வெட்கத்துக்குள்ளானது, மெரொதாக் திகில் கொண்டது;
அதின் சிலைகள் வெட்கத்துக்குள்ளாயின,
அதின் கேவலமான விக்கிரகங்கள் திகில் கொண்டன.
3 அதற்கு விரோதமாய் வடக்கேயிருந்து ஒரு ஜாதிவந்து அதின் தேசத்தைப் பாழாக்கிப்போடும், அதிலே குடியிருப்பாரில்லை;
மனுஷரோடே மிருகங்களும் ஓடிப் போய்விடும்.
4 அந்நாட்களிலும் அக்காலத்திலும்—
இது யெகோவாவின் திருவாக்கு—

இஸ்ரவேல் புத்திரர் வருவார்கள், அவர்களும் யூதா புத்திரரும் கூடவே வருவார்கள்;
அவர்கள் அழுதுகொண்டே சென்று தங்கள் கடவுளாகிய யெகோவாவைத் தேடுவார்கள்.
5 சீயோனுக்குப் போகிறவழி எதுவென்று கேட்டு விசாரித்து,
சீயோனுக்கு நேராய்த் தங்கள் முகங்களைத் திருப்பி,
மறக்கப்படாத நித்திய உடன்படிக்கையினால் நாம் யெகோவாவைப் பற்றிக் கொள்வோம் வாருங்கள் என்பார்கள்.
6 என் ஜனம் காணாமற்போன ஆடுகள்,
அவர்களை மேய்ப்பவர்கள் அவர்களை வழி தப்பச்செய்து மலைகளில் அலையவிட்டார்கள்;
மலைக்கும் குன்றுக்கும் சென்று தங்கள் தொழுவத்தை மறந்துவிட்டார்கள்.
7 அவர்களைக் கண்டுபிடித்தவர்கள் எல்லாரும் அவர்களைப் பட்சித்தார்கள்;
அவர்கள் சத்துருக்கள், நாங்கள் குற்றவாளிகள் அல்ல என்கிறார்கள்.
நீதியின் வாசஸ்தலமாகிய யெகோவாவுக்கு விரோதமாக,
தங்கள் பிதாக்களின் நம்பிக்கையாயிருந்த யெகோவாவுக்கு விரோதமாகவே, பாவஞ்செய்தபடியினால் இப்படி நடந்தது.
8 பாபிலோனின் நடுவிலிருந்தோடி, கல்தேயரின் தேசத்தைவிட்டுப் புறப்படுங்கள்,
மந்தையின்முன் நடக்கும் கடாக்களைப் போல் இருங்கள்.
9 இதோ, நான் வடதேசத்தில் இருந்து பெரிய ஜாதியாரின் கூட்டத்தை எழுப்பி,
அதை பாபிலோனுக்கு விரோதமாக வரப்பண்ணுவேன்;
அவர்கள் அதற்கு விரோதமாக அணிவகுப்பார்கள்,
அங்கிருந்து வருகிறவர்களால் அது பிடிக்கப்படும்;
அவர்கள் அம்புகள் சாமர்த்தியமுள்ள பராக்கிரம வீரரின் அம்புகளைப்போல் இருக்கும்;
அவைகள் ஒயங்கொண்டன்றித் திரும்புவதில்லை.
10 கல்தேயா கொள்ளையாகும்,
அதைக் கொள்ளையிடுவோர் அனைவரும் திருப்தியடைவார்கள்;
இது யெகோவாவின் திருவாக்கு.

என் சுதந்தரத்தைச் சூறையாடிய நீங்கள் சந்தோஷிக்கிறீர்களே, களிக்கிறீர்களே, போரடிக்கவந்த கடாரிபோல் துள்ளி ஓடுகிறீர்கள்; வலுகுதிரைகள்போல் கனைக்கிறீர்களே. 11
உங்கள் தாயோ மிகவும் வெட்கி, உங்களைப்பெற்றவள் அவமானத்துக்குள்ளாவாள்;
இதோ, ஜாதியாருக்குள்ளே கடையானவள்,
வனாந்தரமும் வறண்ட நிலமும் அராபாந்தரவெளியுமானவள்!
யெகோவாவின்கடுங்கோபத்தினாலே அது குடியற்றுப்போம், எல்லாம் பாழாகும்; 13
பாபிலோனைக் கடந்துபோகிறவன் எவனும்
பிரமித்து அதின் சகல வாதைகளினிமித்தமும் ஈசலிடுவான்.
நீங்கள் எல்லாரும் பாபிலோனுக்கு விரோதமாய்ச் சுற்றிலும் அணிவகுத்து நின்று, 14
வில்லை நாணேற்றி அதின்மேல் அம்புகளை எய்யுங்கள்;
வேண்டியமட்டும் அம்புகளை எய்யுங்கள்;
யெகோவாவுக்கு விரோதமாக அது பாவஞ்செய்ததே.
சுற்றி நின்று அதற்கு விரோதமாய் ஆர்ப்பரியுங்கள், அது தன்னைக் கையளித்தது; 15
அதின் மூட்டுச் சுவர்கள் விழுந்தன,
அதின் மதில்கள் இடிபட்டன;
இது யெகோவா வாங்கும் பழி, அதனிடம் பழிவாங்குங்கள்;
அது செய்தது போலவே நீங்களும் அதற்குச் செய்யுங்கள்.
விதைக்கிறவனையும் அறுப்புக்காலத்தில் அரிவாளைப் பிடிக்கிறவனையும் 16
பாபிலோனில் இராதபடி சங்காரம் பண்ணுங்கள்;
கொடிய பட்டயத்துக்குத் தப்ப அவரவர் தத்தம் ஜனத்தண்டை திரும்புவார்கள்,
தத்தம் தேசத்துக்கு ஓடிப்போவார்கள்.
இஸ்ரவேல் தெறிபட்டுப்போன ஆடு, 17
சிங்கங்கள் அதைத் துரத்தின;
முதலில் அசீரியாராஜா அதைப் பட்சித்தான்;
இப்போது கடையில் பாபிலோன் ராஜா
வாகிய இந்த நேபுகாத்நேச்சார் அதின் எலும்புகளைக் கறித்தான்.
ஆகையால் இஸ்ரவேலின் கடவுளாகிய 18
சேனைகளின் யெகோவா இப்படிச் சொல்லுகிறார்:

இதோ, நான் அசீரியாராஜாவைத் தண்டித்ததுபோல் பாபிலோன் ராஜாவையும் அவன் தேசத்தையும் தண்டிப்பேன்;
19 இஸ்ரவேலை அதின் சொந்தமேய்ச்சலுக்குத் திரும்பி வரச்செய்வேன்; அப்பொழுது அது கர்மேலிலும் பாசானிலும் மேயும்; எப்பிராயீமின் மலைகளிலும் கிலெயாத்திலும் அதின் பசி தீரும்.
20 அந்நாட்களிலும் அக்காலத்திலும்—இது யெகோவாவின் திருவாக்கு— இஸ்ரவேலின் அக்கிரமம் தேடினாலும் காணமுடியாது, யூதாவின் பாவங்கள் தேடினாலும் கிடையாமற்போம்; நான் மீந்திருக்கச் செய்கிறவர்களுக்கு மன்னிப்பேன்.
21 மெராதாயிம் தேசத்துக்கு விரோதமாகப் போ, அதற்கு விரோதமாகவும் பெகோடு குடிகளுக்கு விரோதமாகவும் நீ போய் யாவையும் பாழாக்கி யாவையும் சங்காரம் பண்ணி, இது யெகோவாவின் திருவாக்கு, நான் உனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் செய்.
22 தேசத்திலே யுத்தசத்தம் கேட்கிறது, மகா சங்காரம்!
23 சர்வபூமியின் சம்மட்டி எப்படி முறித்து உடைக்கப்பட்டது! ஜாதியாருக்குள்ளே பாபிலோன் எப்படிப் பாழாய்ப்போயிற்று!
24 பாபிலோனே, உனக்குக் கண்ணியை வைத்தேன், நீ அதை அறியவில்லை, அதிலே அகப்பட்டுப் பிடிபட்டாய்; நீ யுத்தம் கலந்தது யெகோவாவோடே.
25 யெகோவா தமது ஆயுதசாலையைத் திறந்து தமது கோபத்தின் ஆயுதங்களை வெளியே எடுத்துக்கொண்டு வந்தார்; கல்தேயர் தேசத்திலே சேனைகளின் யெகோவாவாகிய ஆண்டவருக்கு ஒரு வேலையுண்டு.
26 சகல திசைகளிலுமிருந்து அதற்கு விரோதமாக வந்து, அதின் களஞ்சியங்களைத் திறந்து தானியக் குவியல்கள்போல் குவித்து, அதைச் சாபத்துக்குட்படுத்திச் சங்காரம் பண்ணுங்கள், அதில் ஒன்றையும் மீதியாக வைக்கவேண்டாம்;

அதின் காளைகளையெல்லாம் வெட்டுங்கள், 27
அவைகள் கொலைக்களம் சேரச்செய்யுங்கள்;
ஐயோ அவர்களுக்கு ஆபத்து! அவர்கள் நாள், அவர்கள் தண்டனை காலம், வந்ததே.
பாபிலோன் தேசத்திலிருந்து தப்பியோடி 28
வந்தவர்களின் சத்தம் கேட்கிறது,
நமது கடவுளாகிய யெகோவா பழிவாங்கினதை,
அவர் தமது ஆலயத்தினிமித்தம் பழிவாங்கினதையே, சீயோனிலே அறிவிக்கிறார்கள்.
பாபிலோனுக்கு விரோதமாய் வரும்படி 29
வில்வீரரை,
வில் நாணேற்றுகிறவர்களையெல்லாம் அழையுங்கள்;
நீங்கள் அதற்கு விரோதமாய்ச் சுற்றிலும் பாளயமிறங்குங்கள், ஒருவரையும் தப்பவிடாதிருங்கள்;
அதின் செயலுக்குத் தக்கபலனை அதற்குக் கொடுங்கள்;
அது செய்ததின்படியெல்லாம் அதற்குச் செய்யுங்கள்;
அது இஸ்ரவேலின் பரிசுத்தராகிய யெகோவாவுக்கு விரோதமாகக் கர்வம் காட்டினது.
ஆதலால் அதின் வாலிபர் அதின் வீதி 30
களில் விழுவார்கள்;
அதின் யுத்தவீரர் எல்லாரும் அந்நாளிலே சங்காரமாவார்கள்; இது யெகோவாவின் திருவாக்கு.
இதோ, கர்வமே, நான் உனக்கு விரோத 31
மாக வருகிறேன்;
இது சேனைகளின் யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு.
தண்டனை காலமாகிய உன்னுடைய நாள் வந்துவிட்டது.
கர்வம் இடறிவிழும், அதை எடுத்து 32
நிறுத்துவாரில்லை;
நான் அதன் ஊர்களிலே அக்கினியைக் கொளுத்துவேன்,
அதைச்சுற்றிலுமுள்ள யாவற்றையும் அது பட்சிக்கும்.
சேனைகளின் யெகோவா இப்படிச் 33
சொல்லுகிறார்:
இஸ்ரவேல் புத்திரரும் அவர்களோடுகூட யூதா புத்திரரும் ஒடுக்கப்பட்டார்கள்;
அவர்களைச் சிறையாக்கின யாவரும் அவர்களைப் பிடித்துவைத்துக்கொண்டுவிடமாட்டோம் என்கிறார்கள்.

34 அவர்களை மீட்பவரோ வல்லமையுள்ளவர்,
சேனைகளின் யெகோவா என்பது அவருடைய திருநாமம்;
அவர்கள் வழக்கை அவர் நடத்தித்தீர்ப்பார்;
பூமியைத் தவிப்பாற்றிப் பாபிலோன் குடிகளைத் தவிக்கப் பண்ணுவார்.

35 பட்டயம் கல்தேயர்மேலும்—இது யெகோவாவின் திருவாக்கு,—
பாபிலோன் குடிகள்மேலும் அதின் அதிபதிகள்மேலும் அதின் ஞானிகள்மேலும் வரும்.

36 பொய் பிணைப்போர்மேலும் பட்டயம் வரும், அவர்கள் மூடராகி நிற்பார்கள்;
அதின் பராக்கிரம வீரர்மேலும் பட்டயம் வரும், அவர்கள் திகில் கொள்வார்கள்.

37 அதின் குதிரைகள்மேலும் அதின் இரதங்கள்மேலும்
அதின் நடுவில் இருக்கிற பல ஜாதியாரான திரள் ஜனங்கள்மேலும்
பட்டயம் வரும், அவர்கள் பேடிகளாவார்கள்;
அதின் பொக்கிஷங்கள்மேல் பட்டயம் வரும், அவைகள் கொள்ளையாகும்.

38 அதின் தண்ணீர்கள்மேல் வறட்சி வரும்,
அவைகள் காய்ந்துபோம்;
அது சுரூபங்கள் நிறைந்த தேசம்; பயங்கர தேவதைகளைப் பைத்தியகாரராய்த் தொழுகிறார்கள்.

39 ஆகையால் ஓநாய்களும் மற்றக் காட்டு மிருகங்களும் அதிலே குடியிருக்கும்;
நெருப்புக்கோழிகள் அதிலே தங்கும்;
இனி என்றைக்கும் அது குடியேற்றப் படுவதில்லை;
தலைமுறை தலைமுறையாக ஒருவரும் அதில் சஞ்சரிப்பதுமில்லை.

40 சோதோமையும் கொமோராவையும் அதின் சுற்றுப்புறங்களையும்
கடவுள் கவிழ்த்துப்போட்டது போலாகும்,
இது யெகோவாவின் திருவாக்கு,
அங்கே எவனும் குடியிருப்பதில்லை, அதில் ஒரு மனுப்புத்திரனும் தங்குவதில்லை.

41 இதோ, வடதேசத்திலிருந்து ஒரு ஜனம் வரும்,
பெரிய ஜாதியும் பல அரசரும் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து எழும்பிவருவார்கள்.

42 அவர்கள் வில்லும் எறிவல்லியமும் பிடித்துவருவார்கள்;
அவர்கள் கொடியர், இரக்கம் அறியாதவர்கள்;
அவர்கள் பேசும் சத்தம் சமுத்திர இரைச்சல்போலிருக்கும்;
பாபிலோன் குமாரத்தியே, அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தசன்னத்தராகிக் குதிரைகளின்மேல் ஏறி வருவார்கள்.

43 அவர்கள் வருகிற செய்தியைப் பாபிலோன் ராஜா கேட்கவே அவன் கைகள் தளரும்;
துயரமும் கர்ப்பவலியின் நடுக்கமும் அவனைப்பிடிக்கும்.

44 இதோ, யோர்தான் கரையிலுள்ள அடர்த்தியான காட்டிலிருந்து
காயாத மேய்ச்சல்காட்டுக்கு வரும் சிங்கம் துரத்தப்படுவதுபோல்
நான் அவர்களைத் துரத்திவிடுவேன்;
வந்தகணமே அவர்களை ஓடிவிடச்செய்வேன்,
நான் தெரிந்தெடுப்பவனை அதன்மேல் ஏற்படுத்துவேன்,
எனக்கு நிகரானவன் யார்?
என்னை வரவழைத்துக் கேள்விகேட்பவன் யார்?
எனக்கு எதிரே நிற்கவல்ல மேய்ப்பன் யார்?

45 ஆகவே யெகோவா பாபிலோனுக்கு விரோதமாகச் செய்த ஆலோசனையையும்
அவர் கல்தேயர் தேசத்துக்கு விரோதமாகக்கொண்ட எண்ணங்களையும் கேளுங்கள்:
மந்தையில் சிறியவைகள் இழுத்துக் கொண்டு போகப்படுமே,
அவைகள் இருக்கும் மேய்ச்சல் வெளி அவைகளைப்பற்றிப் பிரமிப்படையும்.

46 பாபிலோன் பிடிபட்ட சத்தத்தினால் பூமி அதிரும்,
கூக்குரல் ஜாதியாருக்கெல்லாம் கேட்கும்.

51 யெகோவா இப்படிச் சொல்லுகிறார்:
இதோ, நான் பாபிலோனுக்கு விரோதமாகவும்
லேப்காமாயின் குடிகளுக்கு விரோதமாகவும்
அழிக்கும் காற்றை எழும்பப்பண்ணுவேன்,

2 அந்நிய தேசத்தாரை பாபிலோனுக்கு அனுப்புவேன்,
அவர்கள் அதைத்தூற்றி தேசத்தை வெறுமையாக்குவார்கள்;
ஆபத்துநாளிலே சுற்றிலும் அதற்கு விரோதமாய் வருவார்கள்.

3 அதிலே வில்லை நாணேற்றுகிறவனுக்கு விரோதமாகவும்

தன் கவசத்தைத் தரித்துப் பெருமை
பாய்ப் போகிறவனுக்கு விரோதமாகவும்
வில்வீரன் தன் வில்லை நாணேற்றுக;
அதின் வாலிபரைத் தப்பவிடாமல்,
அதின் சேனையை எல்லாம்
சாபத்துக்குட்படுத்திச் சங்காரம்பண்
ணுங்கள்.
4 கொல்லப்பட்டவர்கள் கல்தேயரின்
தேசத்திலும்
குத்திப்போடப்பட்டவர்கள் அதின் வீதி
களிலும் விழுவார்கள்.
5 இஸ்ரவேல் யூதா என்பவர்களின் தேசத்
தில் இஸ்ரவேலின் பரிசுத்தருக்கு விரோ
தமான அக்கிரமம் நிறைந்திருந்தும்,
அவர்கள் தங்கள் கடவுளாகிய சேனை
களின் யெகோவாவினால் கைவிடப்பட
வில்லை.
6 நீங்கள் பாபிலோனின் நடுவிலிருந்து
ஓடி, ஒவ்வொருவனும் தன் தன் உயி
ரைத் தப்புவியுங்கள்;
அதின் அக்கிரமத்தினால் நீங்கள் அழிந்து
போகவேண்டாம்,
இது யெகோவா பழிவாங்கும் காலம்;
அது செய்ததற்குத் தக்கபடி அவர்
அதற்குச் செய்வார்.
7 பாபிலோன் யெகோவாவின் கையிலே
பொற்பாத்திரமாயிருந்தது;
அது பூமி அனைத்தையும் வெறிக்கப்
பண்ணினது; அதின் மதுவை ஜாதியார்
குடித்தார்கள்;
ஆகவே ஜாதியார் பைத்தியரேயானார்கள்;
8 பாபிலோன் சடுதியில் விழுந்து நொறுங்
கினது, அதினிமித்தம் கூக்குரலிடுங்கள்;
அதின் காயத்துக்குப் பிசின்தைலம் கொ
ண்டுவாருங்கள், ஒருவேளை குணமாகும்.
9 பாபிலோனைக் குணமாக்கும்படி பார்த்
தோம், அது குணமாகவில்லை;
அதை விட்டுவிடுங்கள், நாம் தத்தம்
தேசங்களுக்குப் போவோம்;
அதின் ஆக்கினைத்தீர்ப்பு வானமட்டும்
ஏறி மேகமண்டலங்களுக்கு எட்டினது.
10 யெகோவா நமது நீதி நியாயத்தை வெளி
ப்படச் செய்தார்;
நமது கடவுளாகிய யெகோவாவின் செய
லைச் சீயோனில் விவரிப்போம் வாருங்
கள்.
11 அம்புகளைக் கூராக்குங்கள், கேடகங்
களைப் பிடித்துக்கொள்ளுங்கள்;
யெகோவா மேதியருடைய ராஜாக்களின்
கோபத்தை எழுப்பினார்;
பாபிலோனை அழிக்கவேண்டுமென்பதே
அவருடைய நோக்கம்;

இது யெகோவா வாங்கும் பழி, இது
தமது ஆலயத்தினிமித்தம் அவர் வாங்
கும் பழி.
பாபிலோனின் மதில்களுக்கு விரோத 12
மாய்க் கொடியேற்றுங்கள், காவலைப்
பலப்படுத்துங்கள்;
சாமங்காக்கிறவர்களை நிறுத்துங்கள், பதி
விருப்பாரை ஏற்படுத்துங்கள்;
பாபிலோனின் குடிகளைப்பற்றி
யெகோவா தாம் சொன்னவைகளைச்
செய்யத் தீர்மானித்தார்.
அநேக தண்ணீர்களின்மேல் உட்கார்ந் 13
திருப்பவளே, திரண்ட சம்பத்துடைய
வளே,
உன்முடிவு வந்தது, உன் அநியாய லாப
மும் முடிந்தது.
சேனைகளின் யெகோவா தமது ஜீவனைக் 14
கொண்டு ஆணையிட்டு,
பச்சைப்புழுக்களைப்போல் திரளான மனு
ஷர் உன்னில் நிரம்பப்பண்ணுவேன்;
அவர்கள் உன்மேல் ஆலியில்போல் ஆர
வாரஞ்செய்வார்கள் என்றார்.
அவரே பூமியைத் தமது வல்லமை 15
யினாலும்
பூச்சக்கரத்தைத் தமது ஞானத்தினாலும்
படைத்தார்,
வானத்தைத் தமது பேரறிவினால் விரித்
தார்.
அவர் சத்தமிடவே ஆகாயத்தில் தண் 16
ணீர் இரைச்சல் கேட்கிறது;
அவர் பூமியின் கடையாந்தரத்திலிருந்து
மேகங்களை எழும்பப்பண்ணுகிறார்;
மழையோடே மின்னல்களை வரச்செய்து,
காற்றைத் தமது பண்டசாலைகளிலிருந்து
புறப்படப்பண்ணுகிறார்.
மனுஷர் அனைவரும் அறிவிலா மிருக 17
குணமுள்ளவர்கள்,
தட்டார் அனைவரும் வார்ப்பு விக்கிரகங்
களினிமித்தம் வெட்கிப்போகிறார்கள்;
அவர்கள் வார்ப்பிக்கிறவைகள் பொய்
யே, அவைகளில் ஆவி இல்லை.
அவை வெறுங்காற்றே, மகா ஏமாற்ற 18
மான செய்கையே,
அவைகளின் தண்டனை காலிலே அவை
அழியும்.
யாக்கோபின் பங்காயிருப்பவர் அவை 19
களைப்போன்றவர் அல்ல,
அவர் யாவற்றையும் உருவாக்கினவர்,
இஸ்ரவேல் அவருடைய சுதந்தரக்கோத்
திரம்;
சேனைகளின் யெகோவா என்பது அவரு
டைய திருநாமம்.

20 நீ எனக்குத் தண்டாயுதமும் யுத்தா
யுதமுமாயிருந்தாய்,
நான் உன்னைக்கொண்டு ஜாதியாரை
நொறுக்கினேன்,
உன்னைக்கொண்டு ராஜ்யங்களை அழித்
தேன்.
21 உன்னைக்கொண்டு குதிரையையும் குதி
ரைவீரனையும் நொறுக்கினேன்,
உன்னைக்கொண்டு இரதத்தையும் இரத
வீரனையும் நொறுக்கினேன்,
22 உன்னைக்கொண்டு புருஷனையும் ஸ்திரீ
யையும் நொறுக்கினேன்,
உன்னைக்கொண்டு கிழவனையும் இள
ஞனையும் நொறுக்கினேன்,
உன்னைக்கொண்டு வாலிபனையும் கன்னி
கையையும் நொறுக்கினேன்;
23 உன்னைக்கொண்டு மேய்ப்பவனையும்
அவன் மந்தையையும் நொறுக்கினேன்,
உன்னைக்கொண்டு உழுகிறவனையும்
அவன் உழவுகாளைகளையும் நொறுக்கி
னேன்,
உன்னைக்கொண்டு அதிபதிகளையும் அதி
காரிகளையும் நொறுக்கினேன்.
24 பாபிலோனுக்கும் கல்தேயர் தேசத்
தின் சகல குடிகளுக்கும்,
அவர்கள் உங்கள் கண்களுக்கு முன்
பாகச் சீயோனில் செய்த
சகல தீமைக்கென்றும் பதிற்செய்வேன்,
இது யெகோவாவின் திருவாக்கு.
25 நாசமலையே, இதோ, நான் உனக்கு
விரோதம், இது யெகோவாவின் திரு
வாக்கு,
நீ பூமியனைத்தையும் நாசப்படுத்தினாய்,
நானே என் கையை உனக்கு விரோத
மாக நீட்டி,
கல்மலைகளிலிருந்து உன்னை உருட்டி,
உன்னை எரிந்த மலையாக்கிவிடுவேன்.
26 மூலைக்கென்றாகிலும் அஸ்திபாரத்துக்
கென்றாகிலும் ஒரு கல்லையும் உன்னி
லிருந்து எடுக்கமாட்டார்கள்;
நீ என்றென்றும் பாழாய்க்கிடக்கிற
ஸ்தலமாவாய்,
இது யெகோவாவின் திருவாக்கு.
27 தேசத்திலே கொடியேற்றுங்கள், ஜாதி
யாருக்குள் எக்காளம் ஊதுங்கள்;
ஜாதியாரை அதற்கு விரோதமாய் யுத்த
பிரதிஷ்டை செய்யுங்கள்;
அராராத், மின்னி, அஸ்கெனஸ் என்னும்
ராஜ்யங்களை அதற்கு விரோதமாக அழை
யுங்கள்;
அதற்கு விரோதமாய்த் தலைவனை ஏற்
படுத்துங்கள்,
சிலிர்க்கும் மயிருடைய வெட்டுக்கிளிகள்
போன்ற குதிரைகளை வரப்பண்ணுங்கள்.
28 மேதியாதேசத்தின் ராஜாக்களும் அதின்
அதிபதிகளும் அதின் சகல அதிகாரி
களும்
அவரவர் அரசாட்சிக்குக் கீழ்ப்பட்ட
சகல தேசத்தாருமாகிய ஜாதியாரை
அதற்கு விரோதமாக யுத்த பிரதிஷ்டை
செய்யுங்கள்.
29 அப்பொழுது தேசம் அதிர்ந்து வேத
னைப்படும்;
பாபிலோன் தேசத்தைக் குடியில்லாத
படி பாழாக்க
பாபிலோனுக்கு விரோதமாய் யெகோவா
கொண்ட எண்ணங்கள் நிறைவேறும்.
30 பாபிலோனின் பராக்கிரமவீரர் யுத்தத்தை
விட்டுக் கோட்டைகளில் இருந்துவிட்
டார்கள்;
அவர்கள் பராக்கிரமம் அழியவே பேதிக
ளானார்கள்;
அதின் வாசஸ்தலங்கள் கொளுத்தப்பட்
டன, அதின் தாழ்ப்பாள்கள் முறிக்கப்
பட்டன.
31 அஞ்சற்காரன்மேல் அஞ்சற்காரனும்
தூதன்மேல் தூதனும்
பாபிலோன் ராஜாவினிடம் ஓடி,
ஒருபுறம் துவக்கி மறுபுறம் வரைக்கும்
அவன் பட்டணம் பிடிபட்டது,
32 இறங்கு துறைகளைப் பிடித்துக்கொண்
டார்கள், கோட்டைகளை அக்கினியால்
சுட்டெரித்தார்கள்,
யுத்தவீரரைத் திகில்பிடித்தது என்று
அறிவிக்கிறார்கள்.
33 இஸ்ரவேலின் கடவுளாகிய சேனை
களின் யெகோவா இப்படிச் சொல்லு
கிறார்:
பாபிலோன் குமாரத்தி மிதிக்கப்படும்
களம்போன்றாள்,
இன்னும் கொஞ்சக்காலத்திலே அதற்கு
அறுப்புக்காலம் வரும்.
34 பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச
ர் என்னைப் பட்சித்தான், என்னை
நொறுக்கினான்;
அவன் என்னை வெறும் பாத்திரமாக்கி
விட்டான்;
வலுசர்ப்பம்போல என்னை விழுங்கினான்;
என் இனிய உணவுகளால் தன் வயிற்றை
நிரப்பினான், என்னைத் துரத்திவிட்டான்,
35 எனக்கு நேரிட்ட கொடுமை, எனக்குச்
செய்யப்பட்ட இம்சை,
பாபிலோன்மேல் வருகவென்று சீயோ
னில் வசிப்பவள் சொல்லுவாள்;

என் இரத்தப்பழி கல்தேயர் தேசத்துக் குடிகளின்மேல் வருகவென்று எருசலேம் சொல்லும்.

36 ஆகையால் யெகோவா இப்படிச் சொல்லுகிறார்:
இதோ, உன் வழக்கை நான் நடத்துவேன், உன்னிமித்தம் பழிவாங்குவேன்; அதின் கடலை வறளவும் அதின் ஊற்றைச் சுவறவும் பண்ணுவேன்.

37 அப்பொழுது பாபிலோன் மண்மேடுகளும் நரிகள் வசிக்குமிடமுமாகும், பிரமிப்புக்கும் பழிப்புக்கும் இடமாம், அதில் குடியிருப்பாருமில்லை.

38 அவர்கள் ஒருமித்து பால சிங்கங்களைப் போல் கெர்ச்சிப்பார்கள், சிங்கக்குட்டிகளைப்போல உறுமுவார்கள்.

39 அவர்கள் ஆசைமூண்டவர்களாயிருக்கையில் நான் அவர்களுக்கு விருந்து செய்து
அவர்களை வெறிகொள்ளப்பண்ணுவேன்; அவர்கள் களித்திருந்து நீங்கா நித்திரைக் குள்ளாவார்கள், என்றும் விழியார்; இது யெகோவாவின் திருவாக்கு.

40 ஆட்டுக்குட்டிகளைப்போலவும்
ஆட்டுக்கடாக்கள் வெள்ளாட்டுக்கடாக்களோடு செல்வதுபோலவும்
அவர்களை அடிக்குமிடத்துக்குக் கொண்டுபோவேன்.

41 ஷேஷாக் பிடிபட்டது எப்படி? பூமியனைத்துக்கும் புகழானது பிறர்கையில் அகப்பட்டது எப்படி?
ஜாதியாருக்குள்ளே பாபிலோன் பிரமிப்பானது எப்படி?

42 சமுத்திரம் பாபிலோன்மேல் புரண்டு வந்தது;
முழங்கும் அலைகளினால் அது மூடப்பட்டது.

43 அதின் ஊர்கள் பாழாயின, அவை வறண்டபூமியும் அவாந்தர வெளியுமாயின,
தேசத்தில் எவனும் குடியிரான், மனுப்புத்திரனெவனும் அதைக் கடந்துசெல்லான்.

44 நான் பாபிலோனில் இருக்கிற பேலைத் தண்டிப்பேன்,
அவன் விழுங்கினதை அவன் வாயிலிருந்து கக்கப்பண்ணுவேன்,
ஜாதியார் இனி அவனிடம் ஓடிவரமாட்டார்கள், பாபிலோனின் மதிலும் விழும்.

என் ஜனங்களே, நீங்கள் அதின் நடுவிலிருந்து புறப்படுங்கள்; 45
யெகோவாவின் உக்கிர கோபத்தினின்று ஒவ்வொருவனும் தன் உயிரைவிடுவித்துக் காத்துக்கொள்க.

உங்கள் இருதயம் துவளவேண்டாம், 46
தேசத்தில் கேட்கும் செய்தியினிமித்தம் நீங்கள் பயப்படவேண்டாம்;
ஒரு வருஷம் ஒரு செய்தி கேட்டாலும்
அதற்கடுத்த வருஷம் மற்றொரு செய்தியைக் கேட்டாலும்
தேசத்திலே கொடுமைகடந்தாலும் ஆளுகிறவன்மேல் ஆளுகிறவன் வந்தாலும்
நீங்கள் பயப்படவேண்டாம்.

இதோ நாட்கள்வரும், நான் பாபிலோ 47
னின் சிலைகளைத் தண்டிப்பேன்,
அப்பொழுது அதின்தேசம் எல்லாம் வெட்கத்துக்குள்ளாகும்,
அதில் கொல்லப்படும் யாவரும் அதின் நடுவில் விழுந்து கிடப்பார்கள்.

வானமும் பூமியும் அவைகளிலுள்ள 48
யாவும் பாபிலோன்மேல் கெம்பீரிக்கும்,
பாழாக்குகிறவர்கள் வடக்கேயிருந்து அதன்மேல் வருவார்கள்,
இது யெகோவாவின் திருவாக்கு.

இஸ்ரவேலில் கொல்லப்பட்டவர்களே, 49
பூமியனைத்திலும் கொல்லப்பட்டவர்கள் பாபிலோனுக்கென விழுந்ததுபோல
பாபிலோனும் விழவேண்டியதே.

பட்டயத்துக்குத் தப்பினவர்களே, 50
போய்விடுங்கள் நிற்கவேண்டாம்,
தூரத்திலே யெகோவாவை நினையுங்கள்,
எருசலேமை உங்கள் மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஐயோ, நாங்கள் வெட்கத்துக்குள்ளா 51
னோம், நிந்தையைக் கேட்டோம்;
நாணம் எங்கள் முகங்களை மூடிற்று,
யெகோவாவின் ஆலயத்திலுள்ள பரிசுத்தமானவைகளின்மேல் அந்நியர் வந்தார்களே.

அப்படியிருப்பதால், இதோ நாட்கள் 52
வரும்
—இது யெகோவாவின் திருவாக்கு—
அப்பொழுது நான் அவர்கள் விக்கிரகங்களைத் தண்டிப்பேன்;
அவர்கள் தேசமெங்கும் கொல்லப்படுகிறவர்கள் கதறுவார்கள்.

பாபிலோன் வானபரியந்தம் ஏறினாலும் 53
தன் அரணைப் பலப்படுத்தி உயர்த்தினாலும்,
பாழாக்குகிறவர்கள் என்னிடமிருந்து அதன்மேல் வருவார்கள்;

இது யெகோவாவின் திருவாக்கு.
54 பாபிலோனிலிருந்து அலறு சத்தம் கேட்கும்,
கல்தேயர் தேசத்திலே மகா சங்காரம்;
55 அதிலுள்ள பெரிய சத்தம் இல்லாமற் போகும்படி யெகோவா பாபிலோனைப் பாழாக்குவார்,
அவர்கள் அலைகள் பெருவெள்ள இரைச்சல்போல் இரையும்,
அவர்கள் இரைச்சல் அமளியாயிருக்கும்.
56 அதின்மேல், பாபிலோன்மேலேயே, பாழாக்குகிறவன் வருகிறான்,
அதன் பராக்கிரமவீரர் பிடிபடுவார்கள்,
அவர்கள் வில்லுகள் முறிந்துபோம்,
யெகோவா பலனையளிக்கிற தெய்வம்,
அவர் சரிக்குச்சரி செய்யாமலிரார்.
57 அதின் அதிபதிகளையும் அதின் ஞானிகளையும் அதின் தலைவரையும் அதின் அதிகாரிகளையும்
அதின் பராக்கிரமவீரரையும் வெறிகொள்ளச் செய்வேன்;
அவர்கள் நீங்கா நித்திரைக்குள்ளாவார்கள், என்றும் விழியார்;
இது சேனைகளின் யெகோவா என்னும் நாமமுள்ள ராஜாவின் திருவாக்கு.
58 சேனைகளின் யெகோவா சொல்வதைக் கேளுங்கள்:
விஸ்தாரமான பாபிலோனின் மதில்கள் முற்றிலும் இடிக்கப்படும்,
அதின் உயரமான வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்படும்;
ஜனங்கள் உழைப்பது வீணுக்கே,
ஜாதியார் இளைத்துப் பிரயாசப்பட்டதெல்லாம் அக்கினிக்கே என்கிறார்.
59 யூதா ராஜாவாகிய சிதெக்கியா அரசாண்ட நாலாம் வருஷத்திலே, மகசேயாவின் குமாரனான நேரியாவின் மகன் செராயா சிதெக்கியாவோடு பாபிலோனுக்குப் போன சமயத்தில் எரேமியா தீர்க்கதரிசி செராயாவுக்குக் கட்டளையிட்டுப் பேசினான், ராஜ பிரயாணத்தில் தங்குமிட வசதி செய்
60 பவன் செராயா. பாபிலோன்மேல் வரும் எல்லாத் தீங்கையும், பாபிலோனுக்கு விரோதமாக எழுதப்பட்ட இந்த எல்லா வசனங்களையும் எரேமியா ஒரே புஸ்தகத்
61 தில் எழுதியிருந்தான். எரேமியா செராயாவோடு பேசி: நீ பாபிலோன் போய்ச்சேரவே சமயம் பார்த்து இந்த எல்லா வார்த்
62 தைகளையும் வாசித்துச் சொல். பின்பு நீ கடவுளே நோக்கி: யெகோவாவே, நீர் இந்த இடத்தைப்பற்றிப் பேசி, அது சங்காரிக்கப்படவேண்டும் என்றும் அதில் மனுஷனாவது மிருகமாவது தங்கியிராது, அது என்றைக்கும் பாழாய்க்கிடக்கும் என்றும் உரைத்தீரே என ஜெபிக்கவேண்டும். இத்
63 தப் புஸ்தகத்தை நீ வாசித்துத் தீர்ந்தபின் அதிலே ஒரு கல்லைக்கட்டி அதை ஐப்பி
64 ராத்து நடுவில் எறிந்துவிட்டு, | இப்படியே பாபிலோன் முழுகிப்போகும், அவர்கள் பிரயாசப்பட்டு இளைக்கையிலேயே நான் அவர்கள்மேல் வரப்பண்ணும் தீங்கினால் எழுந்திருக்கமாட்டாமல் விழுவார்கள் என்றார் என்று சொல் என்றான். எரேமியாவின் வார்த்தை இதோடே முடிந்தது.

**52** சிதெக்கியா ராஜாவானபோது அவனுக்கு இருபத்தொரு வயது, அவன் பதினொரு வருஷம் எருசலேமிலே அரசாண்டான்; அவன் தாயின் பேர் கமூதாள், அவள் லிப்னா ஊரானாகிய எரேமியாவின் குமாரத்தி. யோயாக்கீம் செய்தபடியெல் 2
லாம் அவனும் யெகோவாவின் பார்வையில் தீமையானதைச் செய்தான். எருசலேமுக் 3
கும் யூதாவுக்கும் நடந்தவெல்லாம் யெகோவாவின் கோபத்தினாலேயே நடந்தன; அவர்களைத் தமது சமுகத்திலிருந்து அகற்றித் தீருமட்டும் இப்படிச் செய்தார்.
சிதெக்கியா பாபிலோன் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம் பண்ணினான். அவன் 4
ராஜ்யபாரம்பண்ணும் ஒன்பதாம் வருஷம் பத்தாம் மாதம் பத்தாந்தேதியிலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தன் முழு ராணுவத்தோடும் எருசலேமுக்கு விரோதமாய் வந்து, அதற்கு எதிரே பாளயமிறங்கிச் சுற்றிலும் அதற்கு எதிராகக் கொத்தளங்களைக் கட்டினான். சிதெக்கியா 5
ராஜாவின் பதினொராம் வருஷமட்டும் நகரம் முற்றுகை போடப்பட்டிருந்தது. நாலாம் 6
மாதம் ஒன்பதாந்தேதியிலே நகரத்திலே பஞ்சம் கொடிதாயிற்று, தேசத்தின் ஜனத்திற்கு ஆகாரமில்லாமற்போயிற்று. நகரமதிலில் 7
திறப்புக்கண்டது, அப்பொழுது கல்தேயர் நகரத்தைச் சூழ்ந்திருக்கையிலேயே, உள்ளிருந்த யுத்தவீரர் எல்லாரும் இரவுநேரத்தில், இரண்டு மதில்களுக்கு நடுவே ராஜாவின் தோட்டத்திற்குப்போகிற வாசல் வழியாகத் தப்பி அராபாவுக்குச் செல்லும் வழியாய் ஓடிப்போனார்கள். கல்தேய சேனை 8
வீரர் ராஜாவைப் பிடிக்கத்தொடர்ந்து எரிகோவின் சமவெளியிலே சிதெக்கியாவைக் கிட்டினார்கள்; அதற்குமுன்னே அவன் சேனையெல்லாம் அவனைவிட்டுச் சிதறிப்போயிற்று. அவர்கள் ராஜாவைப்பிடித்து 9

அவனை ஆமாத்நாட்டின் ஊராகிய ரிப்லாவுக்கு, பாபிலோன் ராஜாவினிடம் கொண்டுபோனார்கள்; அங்கே அவனுக்குத் தீர்ப்புச் 10 செய்யப்பட்டது. பாபிலோன் ராஜா சிதெக்கியாவின் குமாரரை அவன் கண்களுக்கு முன்பாக வெட்டினான்; யூதாவின் அதிபதிகளெல்லாரையும் ரிப்லாவிலே வெட்டிவிட்டான். சிதெக்கியாவின் கண்க 11 ளைக் குருடாக்கி, | அவனுக்கு இரண்டு செப்புவிலங்குகளைப் போட்டான்; பின்பு பாபிலோன் ராஜா அவனை பாபிலோனுக்குக் கொண்டுபோய், அவன் மரணமடையும் நாள்மட்டும் அவனைக் காவல்வீட்டில் அடைத்து வைத்தான்.

12 ஐந்தாம்மாதம் பத்தாந்தேதியிலே, நேபுகாத்நேச்சார் என்னும் பாபிலோன் ராஜாவின் பத்தொன்பதாம் வருஷத்திலே, பாபிலோன் ராஜாவின் ஊழியனுமாகிய நெபூசரதான் என்னும் மெய்காவலரின் அதிபதி 13 எருசலேமுக்கு வந்து, | யெகோவாவின் ஆலயத்தையும் ராஜ அரமனையையும் சுட்டெரித்தான்; எருசலேமின் சகல கட்டடங்களையும், விசேஷமாய்ப் பெரிய வீடுகள் அனைத்தையும், அக்கினியால் சுட்டெரித்து 14 விட்டான். காவலர் அதிபதியோடிருந்த கல்தேய சேனைவீரரெல்லாரும் எருசலேமைச் சுற்றிலும் இருந்த அலங்கங்களையெல் 15 லாம் இடித்துப்போட்டார்கள். ஜனத்தில் ஏழைகளான சிலரையும் நகரத்தில் மீதியாயிருந்த மற்ற ஜனங்களையும் பாபிலோன் ராஜாவின் பட்சமாக ஓடிவந்துவிட்டவர்களையும் ஜனக்கூட்டத்தில் மீதியாயிருந்தவர்களையும் காவலர் அதிபதியாகிய நெபூசரதான் 16 சிறைகளாகக் கொண்டுபோனான். தேசத்திலுள்ள ஏழைகளில் சிலரைக் காவலர் அதிபதியாகிய நெபூசரதான் திராட்சத்தோட்டங்களையும் வயல்களையும் பயிரிடுவதற்கு விட்டுவிட்டான்.

17 யெகோவாவின் ஆலயத்திலிருந்த செப்புத் தூண்களையும் யெகோவாவின் ஆலயத்திலிருந்த ஆதாரங்களையும் செப்புக்கடல் தொட்டியையும் கல்தேயர் உடைத்துப் போட்டு அவைகளின் செம்பையெல்லாம் பாபிலோனுக்கு எடுத்துக்கொண்டுபோனார் 18 கள். சட்டிகளையும் கரண்டிகளையும் திரிவெட்டிகளையும் கலங்களையும் கலயங்களையும் ஆராதனைக்குரிய மற்ற செப்புப்பணிமுட்டுகள் அனைத்தையும் எடுத்துக்கொண்டார்கள். சுத்தப்பொன்னும் சுத்த வெள்ளியுமான கிண்ணங்களையும் தூபகலசங்களையும் கலங்களையும் சட்டிகளையும் விளக்குத்தண்டுகளையும் கலயங்களையும் காசங்களையும் காவலர் அதிபதி எடுத்துக்கொண்டான். சாலொமோன் ராஜா யெகோவா 20 வின் ஆலயத்துக்கென்று செய்திருந்த தூண்கள் இரண்டு, கடல்தொட்டி ஒன்று, ஆதாரங்களின்கீழ் நின்ற செப்புரிஷபங்கள் பன்னிரண்டு ஆகிய இவற்றின் செம்பிற்கு நிறையில்லை. அந்தத் தூண்களில் ஒவ் 21 வொன்றும் பதினெட்டுமுழ உயரம், சுற்றளவு பன்னிரண்டுமுழம், கனம் நாலு விரற்கடை, உள்ளே குழலாயிருந்தது. அதின்மேல் ஐந்துமுழ உயரமான செப்புக் 22 கும்பம் இருந்தது; கும்பத்தைச்சுற்றி செய்யப்பட்டிருந்த வலைப்பின்னலும் மாதளம் பழங்களும் எல்லாம் செம்பாகவே இருந்தன. இரண்டாவது தூணும் அதின் மாதளம்பழங்களும் இதைப்போலவே இருந்தன. தொண்ணூற்றுறு மாதளம்பழங்கள் 23 நான்கு பக்கங்களிலும் இருந்தன; வலைப்பின்னலைச் சுற்றியிருந்த மாதளம்பழங்களெல்லாம் நூறு.

காவலர் அதிபதி, பிரதான ஆசாரியனு 24 மாகிய செராயாவையும் இரண்டாம் ஆசாரியனுமாகிய செப்பனியாவையும் வாசல் காக்கும் மூன்று காவற்காரரையும் பிடித்தான். நக 25 ரத்திலே யுத்தவீரரின் விசாரணைக்காரனுமாகிய அரமனை உத்தியோகஸ்தன் ஒருவனையும், ராஜசமுக ஊழியரிலே நகரத்தில் அகப்பட்ட ஏழுபேரையும், தேசத்தின் ஜனத்தைச் சேனையில் சேர்க்கிற ராணுவத்தலைவனின் சம்பிரதியையும் வெளியிலிருந்து வந்தவர்களிலே நகரத்தின் நடுவில் அகப்பட்ட அறுபதுபேரையும் பிடித்தான். இவர்களைக் 26 காவலர் அதிபதியாகிய நெபூசரதான் பிடித்து அவர்களை ரிப்லாவிலிருந்த பாபிலோன் ராஜாவினிடம் கொண்டுபோனான். பாபி 27 லோன் ராஜா ஆமாத் தேசத்தில் ரிப்லா ஊரிலே அவர்களை வெட்டிக் கொன்று போட்டான்; இவ்வாறாக யூதா ஜனங்கள் தங்கள் தேசத்திலிருந்து சிறையாகக் கொண்டுபோகப்பட்டார்கள்.

நேபுகாத்நேச்சார் சிறைபிடித்துப்போன 28 ஜனங்களின் தொகை இதுவே: ஏழாம் 29 வருஷத்தில் மூவாயிரத்து இருபத்துமூன்று யூதர்; நேபுகாத்நேச்சாரின் பதினெட்டாம் வருஷத்தில் எருசலேமிலிருந்து கொண்டு போகப்பட்டவர்கள் எண்ணூற்று முப்பத்திரண்டுபேர். நேபுகாத்நேச்சாரின் இரு 30 பத்துமூன்றும் வருஷத்தில் காவலர் அதிபதியாகிய நெபூசரதான் சிறைபிடித்துக் கொண்டுபோனவர்கள் எழுநூற்று நாற்பத்தைந்து யூதர்; ஆகமொத்தம் நாலாயிரத்து அறுநூறுபேர்.

31 யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனு
டைய சிறையிருப்பின் முப்பத்தேழாம் வரு
ஷம் பன்னிரண்டாம் மாதம் இருபத்தைந்
தாந் தேதியிலே, எவீல் மெரொதாக் என்
னும் பாபிலோன் ராஜா தான் அரசாண்ட
முதல்வருஷத்திலே, யூதாவின் ராஜாவாகிய
யோயாக்கீனுக்குத் தலை காட்டி அவனைச்
சிறைச்சாலையிலிருந்து வெளிப்படப்பண்ணி
32 னான். அவனோடே அன்பாய்ப் பேசி அவ
னுடைய ஆசனத்தைத் தன்னோடே பாபி
லோனில் இருந்த ராஜாக்களின் ஆசனங்
களிலும் உயரமாக வைத்து | அவனுடைய 33
சிறைச்சாலை வஸ்திரங்களை மாற்றினான்; யோ
யாக்கின் உயிரோடிருந்த சகல நாளும் நித்
தம் அவனோடே போஜனம்பண்ணி வந்தான்.
அவன் உயிரோடிருந்த நாளெல்லாம், அவ 34
னுடைய மரணநாள் பரியந்தம், அவனு
டைய அதினச் செலவுக்கு வேண்டியது
பாபிலோன் ராஜாவினிடமிருந்து அதினம்
மும் அவனுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது.

---

# LAMENTATIONS

# பிரலாபப்பாடல்

1 அமர்ந்தாள், ஐயோ, தனியே ஜனம்
பெருத்த நகரியவள்,
விதவைக்கு ஒப்பானாள் ஜாதிகளிலே
பெரியாள்,
நாடாண்ட நாயகியாள் அடிமை நிலை
யுற்றாளே.
2 பிக அழுவாள் இரவே, கன்னமெல்
லாம் நீர்வடியும்,
தேற்றவந்தார் எவருமிலர் அவள் நேசர்
அனைவரிலும்,
நண்பரெல்லாம் துரோகிகளாய் அவ
ளோப்பகைத்தாரே.
3 சிறையானார் யூதஜனம் இம்சையுற்று
அடிமைப் பெருவேலைக்காளாய பின்
னே,
புறஜாதியாரின் நடுவிருப்பாள், இளைப்
பாறதலுக்கிடம் இல்லை அவட்கே,
தொடர்ந்து வந்தவர் பிடித்தார் அவளை
அவள் நெருக்கமுற்றகாலத்தே.
4 சீயோன் வழிகளெத்தியர்மூடும் உற்சவம்
செல்வோர் இலராக,
பாழ்பட்டன அவள் வாசல்களே, ஆசா
ரியர் பெருமூச்செறிந்தார்.
கன்னியர்தியரில் ஆழ்ந்தார்கள், அவ
ளே மனக்கசப்பதை நுகித்தாள்.
5 அவள் சத்துருக்கள் மேலானார்கள்,
அவள் பகைவர்மிகச் சுகிப்பாரே,
யெகோவா அவளை வாதித்தார் அவள்
திரள் பாதகங்களினிமித்தம்;
அவள் மக்கள் சிறையானார்கள், ஒட்டிச்
சென்றார் சத்துருக்கள்.
6 சீயோன் குமாரியின் சிறப்பெல்லாம்
அகன்றது அவளினிடமிருந்து,
மேய்ச்சலைக் காணா மான்களைப்போல்
அவள் பிரபுக்கள் ஆனார்கள்.
தளர்ந்து மெலிந்துபோனார்கள் பிடிக்கத்
தொடர்வார்க்குப் பயந்து.
7 சிறுமையில் தரித்தண்டலையும் இங்காட்
களில் பூர்வநாள் இன்பெலாம் நினைக்
கின்றாள் எருசலேம்.
உதவியின்றி அவள் ஜனங்கள் பகைவர்
கையில் விழுந்திடவே
பகைவர்பார்த்து, அவள் பாழாய் ஒய்ந்
திட்டாள் என நகைத்தார்.
8 பாவமிகப்புரிந்து எருசலேம் விலக்கமா
னாள்,
மதித்தோரெலாம் அவளை அவமதித்தார்,
அவள் மானத்தைக் கண்டாரே;
தானும் பெருமூச்சு இட்டவளாய் அவள்
பின்னிட்டுத் திரும்புவளே.
9 அவள் அருசம் முந்தானையிலே, தனக்
குறு முடிவை நினைத்திலளே;
எனவே தாழ்ந்தாள், ஆச்சரியம்! தேற்று
தற்கென யாருமிலை.
பாரும் என்சிறுமை, யெகோவாவே,
பகைவன் பாராட்டுவான் பெருமை.
10 அவளது இனியவைகளின்மேலே தனதை
னப் பகைவன் கைவைத்தான்,
தனது திருஸ்தலமதன் உள்ளே புறஜாதி
யார் புகுவது கண்டாள்,
உமது திருச்சபை வரலாகாதென நீர்
அவரை விலக்கினீரே.
11 அவள் ஜனமனைத்தும் பெருமூச்சோடு
உணவுதேடித் தவிக்கின்றார்,
தமதுயிர் காக்கும் உணவுக்காகத் தமது
இனியவற்றைக் கையளித்தார்;

கண்ணுக்கிப்பாரும், யெகோவாவே,
மதிப்பிழந்தவள் ஆனேனே.
12 ஜனங்களே, வழிகடந்து செல்வோரே,
உமக்கு இதைப்பற்றிக் கவையிலதோ?
நோக்கிடும், எனைப்பார்த்திடுங்கள், எனக்
குற்ற வேதனை போலுண்டோ?
தமது உக்கிரகோப நாளதிலே யெகோ
வா எனைவாதித்தாரே.
13 வானின்று என் எலும்பில் அக்கினி
கொளுந்தார், முழுவதுமாய் அதைத் தகிக்
கிறதே;
விரித்தார் வலையை என் கால்களுக்கே,
பின்னே திரும்பிவிடச்செய்தார்;
நித்தம் அவரெனைப் பாழாக்கிப் பலமற்
றவளாக்குகின்றாரே.
14 என் பாதகங்களின் நுகத்தடியை அவர்
தம் கையால் பூட்டிவிட்டார்,
அவை பிணைந்து சுற்றின என்கழுத்தை,
என் பலம் சாய்ந்துவிழச்செய்தார்,
நான் எதிர்த்துநிற்கமுடியாதவர் கையில்
ஆண்டவர் எனை ஒப்படைத்தாரே.
15 என்னில் உள்ளவலியார் தமையெல்லாம்
அவர் அவமாக்கி விட்டாரே,
என் வாலிபரை மிதித்தழிக்க உற்சவம்
போல் திரள் ஜனத்தை அழைத்தாரே.
ஆலமிதிபழம்போல் ஆண்டவர்தாம் யூத
குமாரியாம் கன்னிகையை மிதித்தார்.
16 இவற்றை நினைந்து நான் அழுவேன்,
கண் நீர்சொரியும் என் கண்ணே;
என் உயிர்காத்து எனைத்தேற்றுபவர்
எனக்குத் தூரமாயினாரே.
என் பிள்ளைகள் பாழானார்கள், பகை
வன் மிகவும் பலங்கொண்டான்.
17 சீயோன் கைவிரித்து அபயமிட்டாள்,
அவளைத் தேற்றுவார் வெருமிலர்,
யாக்கோபைச் சூழ்ந்திருப்பார் அவனுக்
குச் சத்துருவாவது யெகோவா கட்டளை
யாம்.
அவர்கள் பார்வையிலே எருசலேம்
விலக்கமானவளுக்கு ஒப்பாளுள்.
18 யெகோவா நீதிபரர், அவர்தம் கட்டளை
மீறி நான் நடந்தேன்;
இதைக்கேளும், ஜனங்களே, நீங்களெல்
லாம் எனது வேதனைபாருங்கள்;
எனது கன்னியர் வாலிபரும் சிறைப்
பட்டு, ஐயோ, போனார்கள்.
19 என் நேசரைக் கூவியழைத்திட்டேன்,
அவரோ எனை மோசம் போக்கிவிட்டார்;
என் மூப்பரும் ஆசாரியரும் நகரத்திலே
யே மாண்டொழிந்தார்,
தம் உயிர்காக்கத் தங்களுக்கு உணவு
தேடுகையில் மாண்டுபோனார்.

பாரும், யெகோவாவே, நெருக்கமுற் 20
றேன், என் வயிறெலாம் எரிகிறதே;
என் மனம் குழம்பியலைகிறது, நான்
பெருந்துரோகஞ் செய்தேனே,
வெளியிலே பட்டயம், பிள்ளையற்றேன்;
வீட்டினுள்ளேயும் மரணம்.
நான் தவித்தேன், பலர் கேட்கின்றார், 21
எனைத்தேற்றுதற்கோ எவருமிலர்;
பகைவரெல்லாம் என் ஆபத்தைக்
கேள்வியுற்றார், தேவரீர் இது செய்தீர்
என மகிழ்ந்தார்.
நீர் கூறிய நாள்வந்திடுமே, அவரும்
எனைப்போலாவாரே.
அவர்கள் செய் தீமைகள் அனைத்தும் 22
உமது கண்முன் வந்திடுக,
என் பாதகங்கள் நிமித்தமெல்லாம்
எனக்களித்தவாறே அவர்க்களியும்;
என் பெருமூச்சுகள் பெருகினவே, என்
இதயம் பலமற்றதுவே.

ஆண்டவர், ஐயோ, தமது கோபத்தில் 2
மூடினார் சீயோன் குமாரியை இருளால்,
இஸ்ரவேலின் மகிமையதனை வானின்று
பூமியில் தள்ளிவிட்டார்;
தமது கோபநாளதில் தம் பாதபடியை
நினைத்திலரே.
ஆண்டவர் யாக்கோபின் வாசல்தலம் 2
அனைத்தையும் அழித்தார் இரக்கமின்றி,
யூதா குமாரியின் அரண் அனைத்தும் தன்
சினத்திலிடித்துத் தரையாக்கிவிட்டார்;
ராஜ்யத்தையும் அதிபதிகளையும் நீச
நிலைக்குக் கொண்டுவந்தார்.
தமது உக்கிரகோபமதில் இஸ்ரவேல் 3
கொம்பை அறத்தறித்தார்,
சத்துரு வரவே தமது வலக்கரத்தைப்
பின்னே இழுத்துக்கொண்டார்;
சூழ்ந்துளதை எரித்துவிடும் அக்கினி
போல் யாக்கோபினிலே அவர் எரிந்
தார்.
பகைவனெனத் தம் வில் நாணேற்றினார், 4
சத்துருவெனத் தம் வலக்கை நீட்டி
நின்று
கண்ணுக்கினியாரையெல்லாம் கொன்
றார்.
சீயோன் குமாரியின் கூடாரத்திலே தமது
உக்கிரத்தை நெருப்பெனச் சொரிந்தார்.
ஆண்டவர் பகைவன்போலேவந்து இஸ்ர 5
வேலை அழித்துவிட்டார்,
அதின் அரமனைகள் அனைத்தும் அழித்து
அதின் அரண்களனைத் தகர்த்துவிட்டார்;
சஞ்சலத்தின்மேற் சஞ்சலத்தை யூதாகுமா
ரிக்குப் பெருக்கிவிட்டார்.

6 தமது கூடாரம் பரண்போல் தகர்த்துத்
தமது உற்சவ ஸ்தலம் அழித்துவிட்
டார்;
உற்சவம் ஓய்வுநாள் இவற்றை யெகோ
வா சீயோனிலே மறக்கச்செய்தார்;
தமது உக்கிரகோபத்திலே அரசனையும்
ஆசாரியனையும் தூரத்திவிட்டார்.
7 ஆண்டவர் தம் பலிபீடம் ஒழித்தார்,
தமது பரிசுத்த ஸ்தலம் வெறுத்தார்;
அரணுடைய அரமனை மதில்களைச் சத்
துரு கையிலே ஒப்புக்கொடுத்தார்;
உற்சவநாளின் ஆரவாரம்போல் யெகோ
வாவின் ஆலயத்தில் அவர்கள் ஆர்ப்பரித்
தார்கள்.
8 சீயோன் குமாரியின் அலங்கமதனை
யெகோவா நிர்மூலமாக்க நினைத்தார்;
நூலிப்போட்டார், அழிக்காதபடி தமது
கையை முடக்கவில்லை.
வெளிமதிலும் அரணும் துயருறச்செய்
தார், அனைத்தும் ஒருங்கே சோர்வுற்றன.
9 அவள் வாசல்கள் பூமிக்குள் அமிழ்ந்
தின, தாழ்ப்பாள்களை முறித்தழித்தார்;
அவள் அரசனும் அதிபதிகளும் நியாயப்
பிரமாணமில்லா ஜாதிகளுள் வசிக்கின்
றார்,
அவளிடமுள்ள தீர்க்கதரிசிகளும் யெ
கோவாவினால் தரிசனம் பெற்றிலர்.
10 சீயோன் குமாரியினுடைய மூப்பர் தரை
யில் அமர்ந்து மௌனம் பூண்டார்,
தலைமேல் புழுதியைப் போட்டுக்கொண்
டார், இரட்டை உடுத்திக்கொண்டார்;
எருசலேமின் கன்னிபரோ தரைநோக்
கிக் குனிந்து தலைகவிழ்ந்தார்.
11 கண்ணீர் சொரிந்து என்கண் பூத்து
உள்ளமெல்லாம் கொதிக்கிறதே,
என் ஜனகுமாரியின் அழிவுகண்டு என்
ஈரல் இளகித்தான் ஓடும்,
பாலகர் குழந்தைகள் மூர்ச்சித்து நகர
வீதிகளில் கிடப்பார்.
12 உணவு தாராட்சரசம் எங்கே எனத் தாய்
மாரைக் கேட்பார்கள்,
குத்துண்டவர்போல் மூர்ச்சித்து நகர்
வீதியிலே கிடப்பார்கள்;
தாய்மார் மடிகளிலேயிருந்து தங்கள் உயி
ரைவிடுவார்கள்.
13 எருசலேம் குமாரியே, உனக்கு உவமா
னமெது? உன்னை எதற்கொப்பிடு
வேன்?
சீயோன் குமாரி கன்னிகையே, உனைத்
தேற்றுதற்கெதை நிகர்சொல்வேன்?
உன் அழிவு சமுத்திரம்போற் பெரிதாம்,
உனக்குணமாக்குபவன் யாரே?
14 உன் தீர்க்கதரிசிகள் உன்பொருட்டுத்
தரிசித்தன வீணும்வியர்த்தமுமே;
உன் துன்பநிலைமையை மாற்றுமாறு
உன் அக்கிரமத்தை உனக்கெடுத்துக்
காட்டவில்லை;
அவர்கள் உனக்குரைத்த தரிசனங்கள்
வீணும் வஞ்சகமுமானவையே.
15 வழிகடந்து செல்வோர் எல்லாரும்
உனைப்பார்த்துக் கைகொட்டுகின்றார்,
எருசலேம் குமாரியைப் பார்த்துப் பகடி
யாய் ஈசலிட்டுத் தலை துலுக்கி:
நிறையழகும் பூமிமுழுதுக்கும் மகிழ்ச்சி
யுமான நகரிதுதானே என்பார்கள்.
16 உன் பகைவர் எல்லாரும் பரிகாசமாய்
உன்மேல் வாய் திறப்பார்,
ஈசலிட்டுப் பற்கடித்து: நாங்கள் அதை
விழுங்கினோம், காத்திருந்த நாள்
இதுவே, வந்துவிட்டது, அதைக்கண்டு
கொண்டோம் என்பார்கள்.
17 தாம் நினைத்தனசெய்தார் யெகோவா,
தொன்றுதொட்டே தாமளித்த
தமது திருவாக்கை நிறைவேற்றினார்;
இரக்கமின்றியே அழித்துவிட்டார்,
உன் பகைவன் உனைக்கண்டு மகிழச்
செய்தார், உனது சத்துரு கொம்பை
உயர்த்திவிட்டார்.
18 ஜனத்தின் இதயம் ஆண்டவரை நோக்கிக்
கதறுகிறது.
சீயோன் குமாரியின் மதிலே, நீ நதியள
வாய்ப் பகலிரவு கண்ணீர்விடு,
ஓயேல், கண் கறுப்புவிழி சும்மாயிருக்க
வொட்டேல்.
19 எழுந்திரு, இரவின் முதற்சாமம் கதறி
டுவாய்,
ஆண்டவரின் சந்நிதியிலே உன் இத
யம் நீரென ஊற்றிடுவாய்;
உன் குழந்தைகளின் உயிர்வேண்டி
உன்கை அவர்பால் உயர்த்திடுவாய்,
எல்லாச் சந்திகளிலும் அவை பசியால்
மூர்ச்சித்துக் கிடக்கின்றனவே.
20 யெகோவாவே, பார்த்தருளும் யாரு
க்கு இதை நீர் செய்துவிட்டீர்!
ஸ்திரீகள் தம் கைக்குழந்தைகளாம் கர்ப்
பக்கனியை புணவேண்டுமோ?
ஆசாரியர் தீர்க்கதரிசியர் ஆண்டவர் தி
ருஸ்தலத்தே கொல்லப்படவேண்டுமோ?
21 இளைஞனும் முதியனும் தெருத்தரையில்
கிடக்கின்றார்,
என் கன்னியரும் வாலிபரும் பட்டயத்
தாலே விழுந்தார்கள்,
கோபநாளிலே கொன்றுவிட்டீர், இரக்க
மின்றியே வெட்டிவிட்டீர்.

22 பண்டிகைக்கு அழைப்பதுபோற் சுற்றி
யிருந்து பயங்கரங்களே என்பால் வர
வழைத்தீர்.
யெகோவாவின் கோபநாளதிலே தப்பி
மீதியானவன் இல்லை.
கைகளிலே நான் ஏந்தி வளர்த்தவரை
எனது பகைஞன் நாசமாக்கினனே.

3 ஆண்டவரின் கோபதண்டத்தாலே தன்
பத்தையனுபவித்தவன் நானே.
2 என்னை நடத்தினார் போகும்படிசெய்தார்
வெளிச்சத்திலேயல்ல இருளிலே.
3 அவர் தம் கரத்தை மாறிமாறி
எனக்கு விரோதமாய் நாளெல்லாம்
திருப்பினார்.
4 என் சதைதோலும் கழியச்செய்தார்,
என் எலும்புகளை நொறுக்கிவிட்டார்.
5 எனக்கு விரோதமாய்க் கொத்தளங்கட்
டிக்
கசப்பு கஷ்டம் இவற்றால் என்னை
வளைந்தார்.
6 என்னைக்கிடத்தினார் இருள் இடங்களிலே,
வெகுகாலமுன்னே மாண்டொழிந்தார்
போலானேன்.
7 என்னைச்சூழ மதிலிட்டார், வெளியேற வழி
யில்லை;
பாரவிலங்கைப் பூட்டிவிட்டார்.
8 கூப்பிட்டேன் கூவி அபயமிட்டேன்
என்றாலும்
என் ஜெபத்துக்கோ செவியடைத்துக்
கொண்டாரே.
9 பெருங்கற்களைக்கொண்டு வழியடைத்
தார்,
என் பாதைகளைத் தாறுமாறாக்கிவிட்
டார்.
10 ஒளிந்து பிடிக்க வருகரடி எனக்கானார்,
மறைவிடந்தங்கும் சிங்கமே அவர்
எனக்கு.
11 என் வழி புரட்டி என்னைப்பீறிவிட்டார்,
அவர் என்னை முழுதும் பாழாகவிட்
டார்.
12 தம்முடைய வில்லை நாணேற்றி என்னை
அம்புக்கு இலக்காக்கினாரே.
13 தமது அம்பறுத்தூணியினுள்ளவற்றை
என் மார்பினுள்ளே பதியும்படிசெய்தார்.
14 நகைப்புக்கிடமானேன் என் இனத்தார்
யாவருக்கும்,
நாளெலாம் நான் அவர்க்குப் பாட
லாகிவிட்டேன்.
15 கசப்பாம் உணவால் என்னை நிரப்பினார்,
விஷ பானத்தாலே எனை வெறிக்கச்
செய்தாரே.
16 பருக்கைக் கற்கொடுத்துப் பற்களைத்
தகர்த்தார்,
சாம்பலிலே என்னை அமிழ்த்திவிட்டார்.
17 ஆன்ம சமாதானம் எனைவிட்டகற்றினீர்;
சுகவாழ்வென்பதைமறந்துவிட்டேன்.
18 என் பலமும் யெகோவாவால் வருமெ
னும் நன்னம்பிக்கையும்
அழிந்துபோயினவென்று சொன்
னேன்.
19 துரத்துண்டு அலையும் என் சிறுமை
நினைத்தருளும்,
எட்டியும் பிச்சும் ஆயிற்று அது எனக்கே.
20 ஓயா நினைவாலே என் ஆத்மா எனக்குள்
மிகவும் தளர்ந்துபோகும்.
21 இவற்றை என் மனதில் வைத்துச் சிந்
திக்கவே
எனக்கு நன்னம்பிக்கையது வருமே.
22 நாம் அழியாதிருப்பது யெகோவா கிரு
பையே,
அவர் இரக்கங்களுக்கொரு மூடிவி
லையே.
23 காலைக்குக் காலை அவை புதியனவாம்,
உமது உண்மை மிகவும் பெரிது.
24 யெகோவாவே என் பங்கு என்றெனது
ஆத்துமா சொல்லும்,
ஆதலின் என் நன்னம்பிக்கை அவரா
லேயே.
25 யெகோவா நல்லவர் தமக்குக் காத்
திருப்பவர்க்கும்
தம்மைத் தேடுகின்றவர்க்குமே.
26 யெகோவாவினிடமிருந்து வரும்
ரகஷிப்பை
எதிர்நோக்கி அமர்ந்திருப்பது நன்றும்.
27 நுகத்தை இளமைப்பருவமே சுமப்பது
மனிதனுக்கு நன்றாகும்.
28 அதைத் தன் தோள்மேல் சுமத்தினாலும்
அவனை
அவன் தனியே மோனமாய் இருப்
பது நலமாம்.
29 வாயைப் புழுதியதிலே தாழ்த்திடுக,
நம்பிக்கைக்கிடமுண்டாகலாமே.
30 அடிக்க வருவோனுக்குத் தன் கன்னம்
காட்டுக,
நிந்தனை நிரம்பினும் வாய்பேசா
திருக்க.
31 என்றுமாகக் கைவிடாரே ஆண்டவர்.
32 சஞ்சலமுறும்படி செய்வாராயினும்
தமது மிகு கிருபையின்படி இரங்கு
வார்.
33 மனுப்புத்திரனைச் சிறுமைப்படுத்திச் சஞ்
சலமுறச்

செய்வதவருக்குப் பிரியமல்ல.
34 பூமியிலே சிறைப்பட்டவர் யாரையும்
ஒருவன் தன் கால் கீழ் மிதிக்கின்ற
தையும்,
35 உன்னதமானவர் திருச்சந்நிதியில்
ஒருவனின் நியாயமதைப் புரட்டுவ
தையும்,
36 ஒருவனுடைய வழக்கைக் கெடுப்பதை
யும்,
ஆண்டவர் பாராதிருக்கிறாரோ?
37 ஆண்டவர் கட்டளையிடாதிருக்க
காரியம் நிகழுமாறு உரைப்பவன்
யாரே?
38 தீயன நல்லன பாவும் உன்னதர்
வாயினின்று வருவனவல்லவோ?
39 உயிருள மனிதன் முறையிடுவானேன்?
முறையிடத் தன் பாவமல்லால் வே
றென்னுண்டு?
40 நமது வழிகளை ஆராய்ந்து சோதிப்
போம்,
யெகோவாவினிடம் திரும்பிடு
வோம்.
41 பரலோகத்தின் கடவுளவர்பால்
நமது கரங்களோடு இதயமும் உயர்த்
துவோம்.
42 பாவஞ்செய்து துரோகிகளானோம்,
தேவரீர் எங்களை மன்னியாதிருந்தீர்.
43 கோபத்தால் உமை மூடிக்கொண்டு
தொடர்ந்துபிடித்து எங்களைக்கொன்
றீர் இரக்கமின்றி.
44 எங்கள் ஜெபம் உட்புகாதவண்ணம்
மேகத்தால் உமை மூடிக்கொண்டீர்.
45 எங்களைக் குப்பையும் கூளமுமாக
வைத்துவிட்டீர் இனங்களின் நடுவே.
46 பகைவர் எல்லாரும் எங்கள்மேலே
பரிகாசமாய் வாய் திறந்தாரே.
47 திகில், படுகுழி, பாழ், சங்காரம்
இவையே எங்கள் சகியாயினவே.
48 என் ஜனகுமாரியின் சங்காரங் கண்டு
என் கண்ணில் ஆறாய் நீர் வடிகிறதே.
49 பரலோகத்திலேயிருந்து யெகோவா
நோக்கி என்னைப் பார்க்குமட்டும்
50 இடைவிடாமல் என் கண் நீர் சொரியும்
அது ஒய்ந்திடுவதென்பதில்லை.
51 என் நகர்க்குமாரிகள் அனைவர் நிமித்த
மும்
என் கண் எனக்கு நோவுண்டாக்கும்.
52 காரணமிலாதெனைப் பகைப்பவர்கள்
பட்சிபோலெனை வேட்டையாடினரே.
53 குழியிலே எனது உயிரை ஒடுக்கிக்
கல்லை என்மீது போடுகின்றார்;
54 எனது தலைமேல் வெள்ளம் புரண்டது,
நான் அதமானேன் என்று சொன்
னேன்.
55 ஆழக்குழியினின்று, யெகோவாவே,
உமது திருநாமத்திற்கு அபயமிட்
டேன்;
56 என் சத்தம் கேட்டீர், எனது பெருமூச்
சுக்கும்
அபயகூலுக்கும் உமது செவியை
அடையாதிரும்.
57 உமக்கு அபயமிட்ட நாளிலே கிட்டி
வந்து
பயப்படாதே என்றுரைத்தீரே.
58 ஆண்டவரே, என் வழக்கை நீர் நடத்தி
னீர்,
என் உயிரை நீரே மீட்டுக்கொண்டீர்.
59 யெகோவாவே, எனக்குற்ற அநியாயங்
கண்டிருந்தீர்,
எனது வழக்கிலே நியாயம் செய்யும்.
60 கண்டிருந்தீர், அவர்கள் பழிவாங்கு
வதையெல்லாம்,
எனக்கு மாறாய் யோசித்த அனைத்தை
யும்.
61 யெகோவாவே, கேட்டீர் அவர் பேசுகிற
நிந்தனையும்
எனக்கு மாறாய் யோசித்தன அனைத்
தும்.
62 எனக்குப் பகையாய் எழும்பினோர் வாய்
மொழியும்,
நாளெல்லாம் அவருடைய விரோத
யோசனையனைத்தும்.
63 நோக்கிடும் அவர்கள் இருப்பதையும்
எழுவதையும்,
நான் அவர்களுக்குப் பாடலானே
னே.
64 யெகோவாவே, அவர்கள் செய்கைக்குத்
தக்கபடி
அவர்களுக்கு நீரே பலனளிப்பீர்;
65 உணர்விலா இதயம் அவர்க்குக் கொடுப்
பீர்,
உமது சாபம் அவர்கள்மேலே.
66 கோபத்தில் அவரைத்தொடர்ந்து யெகோ
வாவின்
வான்கீழ் இராதபடி யழித்திடுவீர்.

4 பொன், ஐயோ, மங்கினதே, பசும்பொன்
னும் மாறினதே;
திருஸ்தலக்கற்கள் சந்தியெல்லாம் சிதறி
னவே.
2 சீயோன் குமாரர், பொன்போல் அருமை
யுள்ளோர்,
ஐயோ, குயவன்செய் மட்கலத்திற் கொப்
பானார்.

3 குட்டிக்குப் பால்கொடுக்கும் நரியு முலை
காட்டி, எந்தன்
ஜனகுமரி கொடிதானுள் வனத்துள தீக்
கோழியைப்போல்.
4 பால்குழந்தை நாவறண்டு மேல்வாயோடு
ஒட்டிவிடும்,
பிள்ளைகள் அப்பங்கேட்கப் பிட்டு அளிப்
பார் யாருமில்லை.
5 இனிய உண்டோர் வீதியிலே கிடந்தாரே
பாழாகி,
இரத்தாம்பரம் உடுத்தோர் குப்பைய
னைத்தே படுத்தார்.
6 சோதோம் பவத்திற்பெரிது என் ஜனகுமரி
அக்கிரமம்,
அழிந்தது அதுவோ நிமிஷம், மானிடர்
கை செய்ததல்ல.
7 அவள் பெரியர் உறைமழையிற் சுத்தர்,
பாலில் வெளியர்,
நீல நரம்புள மேனி பவளத்திலே சிவப்
பாம்.
8 முகம் கரியிற் கறுத்திருப்போ, அறியாரே
வீதியிலே,
தோல் எலும்பிலேடொட்டிக் காய்ந்த
பட்டையாயினதே.
9 பட்டயம் கொன்றோர் பஞ்சம் கொன்று
ரிற் பாக்கியரே,
வயலில் விளைச்சலின்றி உயிர் குன்றி ஓய்
வாரே.
10 ஈரநெஞ்சுப் பெண்களும் தம் பிள்ளை
களைத் தாம் சமைத்தார்,
என் ஜனகுமரியின் அழிவில் அவை
அவர்க்குணவாம்.
11 யெகோவா தம் கோபத்தீ ஊற்றினர் தம்
பெருங்கோபம்,
சியோனில் மூட்டினார், தகித்தது
அஸ்திபாரங்களே.
12 சத்துரு பகைவர் எருசலேம் வாசலுட்
புகுவார்.
பூவரசர், பூவில் எவரும் இதை நம்பாரே.
13 தீர்க்கதரிசியர் பாவம், ஆசாரியர் அக்கிர
மமே,
காரணம்; நீதியரின் உதிரம் அதினூடுவே
சிந்தினரே.
14 குருடர்போல் வீதிகளில் அலைவார், இரத்
தக்
கறைப்பட்டார், எவரும் அவர் துணியும்
தீண்டாரே.
15 அகல, தீட்டுப்பட்டோனுளான், அகன்றிடுக,
அகலுக, தொடேல் என்று ஜனங்கட்
குரைப்பாரே,
பறந்தோடி அவர்கள் அலைந்து திரிவாரே,
இனித் தரிக்கவொட்டோம் என்று
உரைப்பாரே ஜாதியருள்.
16 யெகோவாவே அவரைச் சிதறினர், இனி
நோக்கார்,
மதித்திலர் ஆசாரியரை, இரங்கிலரே மூப்
பருக்கு.
17 வருமுதவியென்று வீண்நோக்கி இன்
னும் கண்பூத்தோம்,
கோபுரமீதேறி எதிர்பார்த்த ஜனம் வந்து
உதவா.
18 வீதி நடவாமல் எங்கள் அடியை வேட்
டையாடினரே,
முடிவு அருகாம், நாள் முற்றிற்று, முடிவு
நமக்கு ஆயிற்றே.
19 பின்தொடர்வார் வான்பறக்கும் கழுகி
லுமே விரைவார்,
மலைமேல் தொடர்ந்து வந்தார், காட்டில்
பதிவிருந்தார்.
20 யெகோவாபிஷேகன், எமக்கு பிரான்,
அவர் குழிகளிலே பட்டானே,
அவன் நிழலில் ஜாதிகளுள் பிழைப்போ
மென்றுரைத்தோமே.
21 ஊத்ஸ் தேச ஏதோம் குமாரியே,
களித்துக்கொள்,
உனக்கும் வரும் பாத்திரம், நீ வெறித்து
மானமிழந்திடுவாய்.
22 சியோன்குமாரி, தண்டம் தீர்ந்தது, இனி
றைபணிப்பார்;
ஏதோம் குமாரி, உன் அக்கிரமம் விசா
ரிப்பார், பாவம் வெளியிடுவார்.

5 யெகோவா, நினையும் எங்கட்கு உற்
றதை,
எங்கள் நிந்தையை நோக்கிப்பார்த்திடும்.
2 எங்கள் சுதந்தரம் அந்நியர் வசமாயிற்று,
எங்கள் வீடுகள் புறநாட்டார் வசமாம்.
3 திக்கற்றவராளேம், தந்தையில்லை,
எந்தாய்மார் விதவைகள் போலிருக்கின்
றார்.
4 பணம்கொடுத்துத் தண்ணீர் வாங்கிக் குடி
க்கிறோம்,
எங்கள் விறகுக்கும் விலையே கொடுக்கி
றோம்.
5 தொடர்ந்து வருவோர் பிடரிபிடித்தார்,
களைத்தோம், இளைப்பாறுதற்கிடமில்லை.
6 எகிப்தியருக்குக் கைகொடுத்தடங்கினோம்,
அசீரியருக்குமே, எங்கள் பசிதீர்க்க.
7 நமது பிதாக்கள் பாவஞ்செய்து மாண்ட
னர்,
நாமோ அவர் அக்கிரமத்தைச் சுமக்
கிறோம்.
8 நம்மை ஆளுகின்றவர்கள் அடிமைகள்,

அவர்கரம் நின்றெமை விடுவிப்பாரிலை.
9 வஞ்தரப் பட்டயத்தாலுயிர்மோசத் திற்கு
உட்பட்டு உணவைப் பெறுகின்றேமே.
10 பஞ்சக்கொடுமையால் நம்தோல்கள்
அடுப்பேபோல வெப்பமாயிற்றே.
11 சியோன் பெண்டிரையும் யூதா நகரின்
கன்னியரையும் அவமானப்படுத்தினர்.
12 பகைவர் தம்கையால் பெரியரைத் தூக்
கினர்,
முதியோரெனவும் மதித்தாரில்லை.
13 வாலிபர்கள் ஏற்திரக்கல்லைச் சுமந்தார்,
இளைஞர் விறகுச் சுமையால் இடறி
னர்.
14 முதியோர் இனி வாசலிலே யமரார்,
வாலிபர்கினி ஆட்ட பாட்ட மில்லை.
15 நமது மனதின் மகிழ்ச்சி அற்றது,
நம்குதிப்பாட்டமும் துக்கமாயிற்றே.
தலையில் நின்று நம்கிரீடம் வீழ்ந்திட் 16
டது,
ஆபத்து, ஐயோ, பாவஞ்செய்தோமே.
இதனால் நமது இதயம் தளர்ந்தது, 17
இவற்றால் நமது கண்களும் இருண்டன.
சீயோன்மலை, இதோ, பாழாயக் கிடக்கும் 18
அதின்மேல் நரிகள் ஓடித்திரியும்.
யெகோவாவே, நீர் என்றுமுள்ளவர், 19
உமது ஆசனம் தலைமுறைகளாய் நிற்கும்.
தேவரீர் எமை என்றும் மறப்பதேனோ? 20
நெடுநாள் ஏனோ கைவிட்டிருப்பீர்;
யெகோவா எமை உம்பால் திருப்பும், 21
திரும்பிடுவோம்;
பூர்வநாட்போல எம் நாட்களைப் புதுப்பி
யும்.
முற்றிலும் எமை நீர் வெறுத்திட்டீரோ? 22
எங்கள்பால் அவ்வளவு கோபங்கொண்
டீரோ?

---

# EZEKIEL

# எசேக்கியேல்

1 முப்பதாம் வருஷம் நாலாம் மாதம் ஐந்தாந் தேதியிலே நான் கேபார் நதியண்டையிலே சிறைப்பட்டவர்கள் நடுவில் இருக்கும்போது, வானம் திறக்கப்படவே நான் கடவுளால் வந்த தரிசனங்களைக் கண்டேன்.
2 அந்த ஐந்தாந்தேதியிலே—அது யோயாக்கின் ராஜா சிறைப்பட்ட ஐந்தாம் வரு
3 ஷம்— | கல்தெயர் தேசத்திலுள்ள கேபார் நதியண்டையிலே பூசியென்னும் ஆசாரியனுடைய குமாரனுகிய எசேக்கியேலுக்கு யெகோவாவின் வார்த்தை வந்தது, அங்கே யெகோவாவின் கரம் அவன்மேல் இருந்தது.
4 இதோ, வடக்கேயிருந்து பெருங்காற்று வரக்கண்டேன், பெரிய மேகமும் இருந்தது, அக்கினியும் மின்னிக்கொண்டிருந்தது; சுற்றிலும் பிரகாசம், அதின் நடுவில், அக்கினியின் நடுவிலே, பிரகாசிக்கும் வெண்கலம்
5 போன்றது காணப்பட்டது. அதின் நடுவில் நாலு ஜீவிகள் போன்றவை தோன்றின; அவைகளைப் பார்த்தால், அவை மனுஷ
6 சாயல்போலிருந்தன. அவற்றில் ஒவ்வொன்றுக்கும் நான்கு முகங்களும் ஒவ்வொன்றுக்கும் நான்கு செட்டைகளு
7 மிருந்தன. அவற்றின் கால்கள் நேரானவை, அவற்றின் உள்ளங்கால்களோ கன்றுக்குட்டியின் உள்ளங்கால்கள் போன்றன; அவை துலக்கப்பட்ட செம்புபோல் பளபளப்பாய்த் தோன்றின. அவற்றின் 8
செட்டைகளின்கீழ் நாலு பக்கங்களிலும் மனுஷகைகள் இருந்தன, அந்த நாலு பிராணிகளின் முகங்களும் செட்டைகளுமோவெனில், | ஒவ்வொன்றின் செட்டை 9
களும் மற்றதின் செட்டைகளைத் தொட்டன, அவை செல்லுகையில் திரும்பவேண்டிய தில்லை, ஒவ்வொன்றும் நேர்முகமாகவே சென்றன. அவற்றின் முகங்கள் நாலு 10
பிராணிகளுக்கும் முன்பக்கம் மனுஷமுகம், வலதுபக்கம் சிங்கமுகம், நாலு பிராணிகளுக்கும் இடதுபக்கம் எருதுமுகம், நாலு பிராணிகளுக்கும் பின்பக்கம் கழுகுமுகம்.
அவற்றின் முகங்கள் இப்படியிருந்தன, 11
அவற்றின் செட்டைகள் மேலே விரிந்திருந்தன, ஒவ்வொன்றுக்கும் மற்றப்பிராணியின் செட்டைகளைத்தொடும் இரண்டு செட்டைகளும், தத்தம் உடலைமூடும் இரண்டு செட்டைகளும் இருந்தன. அவை ஒவ்வொன் 12
றும் தன் தன் முகத்துக்கு நேராய்ச்செல்லும், ஆவி விரும்பும் திசைக்கெல்லாம் அவை

செல்லும், செல்லுகையில் அவை திரும்ப
13 வேண்டியதில்லை. பிராணிகளின் சாயல் எரிகிற அக்கினித்தழலையும் தீவர்த்திகளையும் போல் தோன்றினது, ஜீவிகளின் நடுவிலே அக்கினி இங்குமங்குமாய் மின்னிக்கொண்டிருந்தது, அக்கினிக்குப் பிரகாசமிருந்தது; அக்கினியிலிருந்து மின்னல் வந்துகொண்
14 டேயிருந்தது. ஜீவிகள் முன்னும் பின்னும் ஓடும், அவை மின்னல்போல் தோன்றும்.

15 பின்னும் நான் அந்தப் பிராணிகளைப் பார்க்கையில், இதோ, பூமியில் பிராணிகளண்டையிலே நாலு முகங்களுக்கும் முகத்
16 துக்கொரு சக்கரத்தைக் கண்டேன். சக்கரங்கள் பத்மராகம் போன்றதொன்றால் செய்யப்பட்டனபோல் காணப்பட்டன; அவை நாலும் ஒரே சாயலாயிருந்தன; சக்கரத்துக்குள் சக்கரம் இருப்பதுபோல் அவை அமைக்கப்பட்டதாகக் காணப்பட்டன.
17 அவை நாலுபக்கங்களுக்கும் ஓடக்கூடியவை; ஓடுகையில் அவை திரும்பவேண்
18 டியதில்லை. அவற்றின் வட்டங்கள் உயரமும் பயங்கரமுமானவை, அந்தச் சக்கரங்களின் நாலுவட்டங்களும் சுற்றிலும் கண்
19 கள் நிறைந்தன. பிராணிகள் செல்லும்போது சக்கரங்களும் அவற்றின் அருகே செல்லும், பிராணிகள் பூமியிலிருந்து எழும்
20 பும்போது சக்கரங்களும் எழும்பும். ஆவி விரும்பும் திசைக்கெல்லாம் அவை செல்லும், ஆவி விரும்பும் திசைக்கே; சக்கரங்களும் அவற்றோடே எழும்பும், பிராணியின் ஆவி
21 சக்கரங்களிலிருந்ததே. பிராணிகள் செல்லவே சக்கரங்களும் செல்லும், அவை நிற்க இவையும் நிற்கும்; அவை பூமியிலிருந்து எழும்பவே சக்கரங்களும் அவற்றோடே எழும்பும்; பிராணியின் ஆவி சக்கரங்களில் இருந்ததே.

22 பிராணிகளின் தலைகள்மேல் ஆகாயமண்டலம் போன்றதொன்று காணப்பட்டது, அது ஆச்சரியமான பளிங்குபோல் தோன்றியது, அது உயரத்தில் அவற்றின் தலைகள்
23 மேல் விரிந்திருந்தது. மண்டலத்தின்கீழ் அவற்றின் செட்டைகள் ஒன்றுக்கொன்று நேராய் விரிந்திருந்தன; தத்தம் உடல்களை மூடிக்கொள்ளும் இரண்டிரண்டு செட்டை
24 களும் ஒவ்வொன்றுக்கும் இருந்தன. அவை செல்லும்போது அவற்றின் செட்டைகளுடைய சத்தத்தைக் கேட்டேன்; அது பெருவெள்ள இரைச்சல்போலவும் சர்வவல்லவரின் சத்தம்போலவும் ராணுவ இரைச்சலையொத்த ஆரவார சத்தம்போலவுமிருந்தது; அவை நிற்கும்போது தங்கள் செட்டைகளைத் தளரவிட்டிருந்தன. அவற்றின் தலை 25
களுக்குமேலான மண்டலத்திலிருந்து ஒரு சத்தம் பிறந்தது; அவை நிற்கும்போது தங்கள் செட்டைகளைத் தளரவிட்டிருந்தன.

அவற்றின் தலைகளுக்குமேலுள்ள மண் 26
டலமீதில் சிங்காசனம்போலொன்று காணப்பட்டது. அது நீலரத்தினம்போல் தோன்றியது, சிங்காசனம்போல் காணப்பட்டதன் மேல் ஒரு தோற்றம்கண்டேன், சிங்காசனத்தின்மேல் தோன்றினது மனுஷன்போல் காணப்பட்டது. அவருடைய இடுப்பாகக் 27
காணப்பட்டதற்குமேல் அக்கினி போல் தோன்றியதொன்றினால் சூழப்பட்ட பிரகாசிக்கும்வெண்கலம் போன்றதைக்கண்டேன்; அவருடைய இடுப்பாகக் காணப்பட்டதற்குக்கீழ் அக்கினிபோல் தோன்றியதைக் கண்டேன், சுற்றிலும் ஜோதி. மழைநாளிலே 28
மேகத்தில் வானவில் தோற்றுவதுபோல் சுற்றிலும் அந்தப்பிரகாசம் தோன்றினது; யெகோவாவினுடைய மகிமையின் தோற்றம் இப்படிக் காணப்பட்டது. அதை நான் காணவே முகங்குப்புறவிழுந்தேன்; அப்பொழுது பேசும் ஒருவருடைய சத்தத்தைக் கேட்டேன்.

அவர் என்னோடு பேசி: மனுஷகுமார 2
னே, உன் காலூன்றிநில்; உன்னோடு பேசுவேன் என்றார். இப்படி அவர் என்னோ 2
டே பேசும்போது ஆவி எனக்குள்வந்து என்னைக் காலூன்றி நிற்கச்செய்தது; அப்பொழுது அவர் என்னோடு பேசக்கேட்டேன். அவர் எனக்குச் சொன்னது இதுவே: 3
மனுஷகுமாரனே, எனக்கு விரோதமாய்க் கலகஞ்செய்தகலகஜாதியாராகிய இஸ்ரவேல் புத்திரரிடம் நான் உன்னை அனுப்புகிறேன், அவர்களும் அவர்கள் பிதாக்களும் இந்நாள் வரைக்கும் எனக்குத் துரோகஞ்செய்தார்கள். அவர்கள் பிள்ளைகள் கடினமுகமும் 4
உணரா இருதயமுமுள்ளவர்கள், அவர்களிடத்திற்கு நான் உன்னை அனுப்புகிறேன், யெகோவாவாகிய ஆண்டவர் இன்னின்ன படி உரைக்கிறார் என்று அவர்களுக்குச் சொல். அவர்கள் கேட்டாலும்சரி, கேளா 5
விட்டாலும்சரி,—அவர்கள் கலக வீட்டார்—தங்களுக்குள்ளே ஒரு தீர்க்கதரிசி வந்தான் என்பதை அவர்கள் அறியவேண்டும். நீயோ மனுஷகுமாரனே, அவர்களுக் 6
குப் பயப்படவேண்டாம், அவர்கள் வார்த்தைகளுக்குப் பயப்படவேண்டாம்; நெருஞ்சில்களுக்குள்ளும் முட்செடிகளுக்குள்ளும் நீ தங்கியிருந்தாலும் நீ தேள்களுக்குள் வாசம்பண்ணினாலும் நீ அவர்கள் வார்த்தை

களுக்குப் பயப்படவேண்டாம், அவர்கள் முகத்துக்கு நிகில்படவேண்டாம், அவர்கள் கலகம் செய்யும்வீட்டார். அவர்கள் கேட்
7 டாலும்சரி, கேளாவிட்டாலும்சரி,—அவர்கள் கலகக்காரர்—நீ என் வார்த்தைகளை
8 அவர்களுக்குச் சொல். நீயோ மனுஷகுமாரனே, நான் உனக்குச் சொல்வதைக்கேள், அந்தக் கலகவீட்டாரைப்போலக் கலகக்காரனுயிராதே, உன் வாயைத்திறந்து நான் உனக்குக் கொடுப்பதைத் தின்றுவிடு என்றார்.

9 நான் பார்க்கவே, இதோ, என்னிடம் ஒரு கை நீட்டப்பட்டது, அந்தக்கையிலே, இதோ, ஒரு புஸ்தகச்சுருள் இருந்தது.
10 அவர் அதை எனக்கு முன்பாக விரித்தார்; அதில் உட்புறமும் பிற்புறமும் எழுதப்பட்டிருந்தது; அதிலே புலம்பலும், பெருமூச்சும், ஐயோ என்பதும் எழுதியிருந்தது.

**3** அவர் என்னோடுபேசி: மனுஷகுமாரனே, நீ காண்கிறதைத் தின்றுவிடு, இந்தச் சுருளை நீ தின்றுவிட்டு இஸ்ரவேல் வீட்டாரிடம்
2 போய் அவர்களோடு பேசு என்றார். அப்படியே என் வாயைத் திறக்தேன், அவர் அந்தச் சுருளை எனக்குத் தின்னக்கொடுத்து:
3 மனுஷகுமாரனே, நான் உனக்குக் கொடுக்கிற இந்தச் சுருளை நீ உன் வயிற்றிலே உட்கொண்டு அதினால் உன் குடல்களை நிரப்பு என்றார்; நான் அதைத் தின்றேன், அது என் வாய்க்குத் தேனைப்போல் இத்திப்பாயிருந்தது.

4 பின்னும் அவர் என்னோடு பேசி: மனுஷகுமாரனே, நீ இஸ்ரவேல் வீட்டாரிடம் போய் என் வார்த்தைகளைச் சொல்லி அவர்
5 களோடே பேசு. விளங்காத பாஷையும் கடினமான பேச்சுமுள்ள ஜனத்தண்டைக்கல்ல, இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கே நீ
6 அனுப்பப்படுகிறாய். விளங்காத பாஷையும் தாங்கள் சொல்லும் வார்த்தைகளை நீ அறியாத கடினமான பேச்சுமுள்ள பல ஜனங்களிடத்திற்கு நீ அனுப்பப்படவில்லை; அப்படிப்பட்டவர்களிடம் நான் உன்னை அனுப்பினால் அவர்கள் உனக்குச் செவி
7 கொடுப்பார்கள். இஸ்ரவேல் வீட்டாரோ உனக்குச் செவிகொடுக்கமாட்டார்கள், அவர்கள் எனக்குச் செவிகொடுக்க மனமற்றவர்கள், இஸ்ரவேல்வீட்டார் அனைவரும் இரும்பு நெற்றியும் கடின இருதயமுமுள்
8 ளவர்கள். இதோ, உன் முகத்தை அவர்கள் முகத்தைப்போலவும் உன் நெற்றியை அவர்கள் நெற்றியைப்போலவும் கடின
9 மாக்குவேன்; உன் நெற்றியைக் கடுங்கல்லினும் கடினமான வச்சிரக்கல்லைப்போலாக்குவேன், நீ அவர்களுக்குப்பயப்படவேண்டாம் அவர்கள் முகத்துக்கு நிகில்படவேண்டாம்; அவர்கள் கலகவீட்டாரே என்றும் சொன்னார். பின்னும் அவர் என்னோடுபேசி: மனு 10
ஷகுமாரனே, நான் உனக்குச் சொல்லும் என் வார்த்தைகளையெல்லாம் நீ உன் செவிகளாலேகேட்டு உன் இருதயத்தில் ஏற்றுக் கொண்டு | சிறைப்பட்டவர்களாகிய உன் 11
ஜனத்தின் புத்திரரிடத்திலே போய், அவர்களோடே பேசி—அவர்கள் கேட்டாலும் சரி, கேளாவிட்டாலும் சரி—யெகோவாவாகிய ஆண்டவர் இன்னின்னபடி உரைக்கிறார் என்று அவர்களுக்குச் சொல் என்றார்.

அப்பொழுது ஆவி என்னை உயர எடுத் 12
துக்கொண்டது; யெகோவாவின் ஸ்தானத்திலிருந்து விளங்கிய அவருடைய மகிமைக்கு ஸ்தோத்திரம் என்று எனக்குப் பின்னே மகாசத்தமான இரைச்சலைக் கேட்டேன். ஒன்றையொன்று தொட்டுக்கொண்டிருக்கிற 13
ஜீவிகளுடைய செட்டைகளின் சத்தமும் அதனோடு சக்கரங்களின் சத்தமும் மகாசத்தமான இரைச்சலும் கேட்டது. ஆவி 14
என்னை உயர எடுத்துக்கொண்டது; நான் என் ஆவியின் உக்கிரத்தினாலே மனங்கசந்து வருப்போய்விட்டேன்; யெகோவாவின் கரம் என்மேல் பலமாக இருந்தது. கேபார் 15
நதியண்டையிலே தெலாபீபிலே இருந்த சிறைப்பட்டவர்களிடம், அவர்கள் குடியிருந்த இடத்துக்கு, நான் வந்து ஏழுநாள் அவர்கள் நடுவிலே மலைத்துப்போனவனைப்போல் தங்கினேன்.

ஏழுநாள் முடிந்தபின்பு யெகோவாவின் 16
வார்த்தை எனக்கு வந்தது: மனுஷகுமார 17
னே, உன்னை இஸ்ரவேல் வீட்டாருக்குக் காவலாளாக வைத்தேன், நீ என் வாயின் வார்த்தையைக்கேட்டு என் நாமத்தினாலே அவர்களை எச்சரிக்கவேண்டும். சாகவே 18
சாவாய் என்று நான் தெய்வபயமற்றவனுக்குச் சொல்லுகையில், நீ அவனை எச்சரிக்காமலும், தெய்வபயமற்றவன் தன் தீயவழியினின்று விலகித் தன்னை உயிரோடே காக்கும்படி அதை அவனுக்கு எச்சரிப்பாகச் சொல்லாமலும் போவாயானால், அந்த தெய்வபயமற்றவன் தன் அக்கிரமத்திலே சாவான்; அவன் இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன். நீ தெய்வபயமற்ற 19
வனை எச்சரித்தும் அவன் தன் துன்மார்க்கத்தையும் தன் தீயவழியையும்விட்டுத் திரும்பாமற்போவானேயாகில் அவன் தன் அக்கிரமத்திலே சாவான்; நீயோ உன் ஜீவனைத் தப்புவிப்பாய். அப்படியே நீதிமான் 20
தன் நீதியைவிட்டுவிலகி நியாயக்கேடு செய்

யும்போது அவன் இடறிவிழச்செய்வேன், அவன் சாவான்; நீ அவனை எச்சரிக்காதிருந்தால் அவன் தன் பாவத்திலே சாவான், அவன் செய்த நீதியானவைகள் நினைக்கப்படுவதில்லை, அவனுடைய இரத்தப்பழியை 21 யோ உன்கையிலே கேட்பேன். நீதிமான் பாவஞ்செய்யாதபடி நீ நீதிமானை எச்சரிக்கும்போது அவன் பாவஞ்செய்யாவிட்டால் அவன் பிழைக்கவே பிழைப்பான், அவன் எச்சரிப்பை ஏற்றுக்கொண்டான்; நீயும் உன் ஜீவனைத் தப்புவித்தாய் என்று சொன்னார்.

22 அவ்விடத்திலே யெகோவாவின் கரம் என்மேல் இருந்தது, நீ எழுந்து பள்ளத்தாக்குக்குப்போ, அங்கே உன்னோடு பேசுவேன் என்று என்னிடம் சொன்னார். அப்
23 படியே நான் எழுந்து பள்ளத்தாக்குக்குப் போனேன்; இதோ, கேபார் நதியண்டையிலே நான் கண்ட மகிமையைப்போலவே அங்கே யெகோவாவின் மகிமை விளங்கினது, அதைக் கண்டு நான் முகங்குப்புற
24 விழுந்தேன். உடனே ஆவி எனக்குள்ளே புகுந்து, என்னைக் காலூன்றி நிற்கச் செய்தது, அப்பொழுது அவர் என்னோடு பேசி: நீ போய், உன் வீட்டுக்குள்ளே உன்னை
25 அடைத்துக்கொண்டிரு. மனுஷகுமாரனே, இதோ, உன்மேல் கயிறுகளைப்போட்டு அவைகளால் உன்னைக் கட்டுவார்கள், நீ
26 அவர்களுக்குள்ளே போகாதிருப்பாய். நான் உன் நாவை உன் மேல்வாயோடே ஒட்டிக்கொள்ளப்பண்ணுவேன், நீ ஊமையாவாய், அவர்களைக் கண்டித்துப்பேச மாட்டாய்,
27 அவர்கள் கலகவீட்டார். நான் உன்னோடே பேசும்போது உன் வாயைத் திறப்பேன், திறக்கவே, யெகோவாவாகிய ஆண்டவர் இன்னின்னபடி உரைக்கிறார் என்று அவர்களுக்குச் சொல்லவேண்டும்; கேட்கிறவன் கேட்கட்டும், கேளாதவன் கேளாதிருக்கட்டும்; அவர்கள் கலகவீட்டாரே.

**4** மனுஷகுமாரனே, நீ ஒரு செங்கலை எடுத்து அதை உன் முன் வைத்து, அதின்மேல் ஒரு நகரத்தை, எருசலேமையே, வரைந்து
2 அதற்கு விரோதமாக முற்றுகைபோட்டு அதற்கு விரோதமாகக் கொத்தளங்களைக் கட்டி, அதற்கு விரோதமாக மண்மேடு போட்டு, அதற்கு விரோதமாக ராணுவங்களை நிறுத்தி, அதற்கு விரோதமாக மதிலிடிக்கும் யந்திரங்களைச் சுற்றிலும் வை.
3 மேலும் நீ ஒரு இருப்புத்தட்டை வாங்கி அதை உனக்கும் நகரத்துக்கும் நடுவாக இருப்புச் சுவராக்கி உன் முகத்தை அதற்கு நேராய்த்திருப்பு, அது முற்றுகை யிடப்பட்டிருக்கும், நீ அதை முற்றுகை போடுவாய்; இது இஸ்ரவேல் வீட்டாருக்கு ஒரு அடையாளம்.

நீ உன் இடதுபக்கமாய்ப் படுத்து உன் 4
மேல் இஸ்ரவேல் வீட்டாரின் அக்கிரமத்தைச் சுமந்திக்கொள், நீ அந்தப் பக்கமாய்ப் படுத்திருக்கும் நாட்களெல்லாம் அவர்கள் அக்கிரமத்தைச் சுமப்பாய். அவர்கள் அக் 5
கிரமத்தின் வருஷங்கள் எத்தனையோ அத்தனை நாட்களை நியமிக்கிறேன்; முந்நூற்றுத் தொண்ணூறு நாட்கள் வரைக்கும் நீ இஸ்ரவேல் வீட்டாரின் அக்கிரமத்தைச் சுமக்க வேண்டும். நீ இதைச் செய்து முடித்த 6
பின்பு உன் வலது பக்கமாய்ப் படுத்து, யூதா வீட்டாரின் அக்கிரமத்தைச் சுமக்க வேண்டும்; வருஷத்துக்கு ஒரு நாளாக நாற்பது நாட்களை நியமிக்கிறேன். நீ திரைத்த 7
புயத்தையுடையவனாய் முற்றுகையிடப்பட்ட எருசலேமுக்கு நேராக முகத்தைத் திருப்பி நின்று அதற்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொல். இதோ, அதை முற்றுகைபோடும் நாட்கள் தீருமட்டும் நீ மறு 8
பக்கம் புரளமுடியாதபடி உன்னைக் கயிறுகளால் கட்டுவேன்.

நீ கோதுமையையும் வாற்கோதுமையை 9
யும் பெரும்பயற்றையும் சிறு பயற்றையும் சாமையையும் கம்பையும் வாங்கி, அவைகளை ஒரே பாத்திரத்திலேபோட்டு அவைகளால் உனக்கு அப்பஞ்சுடுவாய்; நீ ஒரு பக்கமாய்ப் படுக்கும் நாட்களாகிய முந்நூற்றுத்தொண்ணூறு நாளும் அதில் எடுத்துச் சாப்பிடு. நீ சாப்பிடும் போஜனத்தை 10
நிறை பார்த்து நாள் ஒன்றுக்கு இருபது சேக்கல் நிறை சாப்பிடவேண்டும்; வேளைக்கு வேளை அதைச் சாப்பிடவேண்டும். தண் 11
ணீரையும் அளவுபார்த்து ஹீன் என்னும் படியில் ஆறிலொரு பங்கைக் குடிக்கவேண்டும், வேளைக்கு வேளை அதைக் குடிக்கவேண்டும். அதை வாற்கோதுமை அடையைப் 12
போல் சாப்பிடு, அதை மனுஷனிலிருந்து கழிந்த மலத்தின் வறட்டிகளைக்கொண்டு அவர்கள் கண்களுக்கு முன்பாகச் சுட வேண்டும். இதைப்போலவே இஸ்ரவேல் 13
புத்திரர் நான் அவர்களைத் துரத்துகிற புறஜாதியாருக்குள்ளே தங்கள் அப்பத்தைத் தீட்டுள்ளதாகச் சாப்பிடுவார்கள் என்று யெகோவா சொன்னார். அதற்கு நான்: ஆ 14
யெகோவாவாகிய ஆண்டவரே, இதோ, நான் தீட்டானதைத் தொட்டதில்லை; தானாய்ச் செத்ததையாவது பீறுண்டதை

யாவது நான் என் சிறுவயதுமுதல் இதுவரைக்கும் சாப்பிட்டதில்லை; அருவருப்பான இறைச்சி என் வாயில் பட்டதுமில்லை என்
15 றேன். அப்பொழுது அவர் என்னோடு பேசி: பார், மனுஷ மலத்தின் வறட்டிக்குப் பதிலாக உனக்கு மாட்டுச்சாணி வறட்டியைக் கட்டளையிடுகிறேன்; அதைக்கொண்டு உன் அப்பத்தைச் சுடுவாய் என்று சொல்
16 லிப் | பின்னும், மனுஷகுமாரனே, இதோ, நான் எருசலேமிலே ஆகாரம் என்னும் பிராணதாங்கியைத் தகர்த்துப்போடுகிறேன்; அவர்கள் அப்பத்தை நிறை பார்த்து விசாரத்தோடே சாப்பிட்டுத் தண்ணீரை அளவு
17 பார்த்துத் திகிலோடே குடிப்பார்கள். அப்பமும் தண்ணீரும் அவர்களுக்குக் குறைந்து போம், ஒருவரோடொருவர் திகிலடைந்து தங்கள் அக்கிரமத்திலே வாடிப்போவார்கள் என்று சொன்னார்.

**5** பின்னும் அவர்: மனுஷகுமாரனே, கருக்கான பட்டயமொன்றை வாங்கி அதைச் சவரகன் கத்திபோல் உபயோகித்து அதினால் உன் தலையையும் உன் தாடியையும் சிரைத்துக்கொண்டு, பின்பு நிறுக்கும் தராசை எடுத்து அந்த மயிரைப் பாகம் பாகமாகப்
2 பிரிப்பாய். மூன்றில் ஒரு பாகத்தை எடுத்து, முற்றுகை நாட்கள் தீரும்போது நகரத்தின் நடுவிலே அக்கினியால் சுட்டெரித்து, மூன்றில் ஒரு பாகத்தை எடுத்து நகரத்துக்குச் சுற்றிலும் அதைப் பட்டயத்தாலே வெட்டி, மூன்றில் ஒரு பாகத்தை எடுத்துக் காற்றிலே தூற்றிவிடுவாய்; நான் பட்டயத்தை உருவி அவர்களைத் தொடருவேன்.
3 அதில் கொஞ்சம் எடுத்து அதை உன் வஸ்திரத்தோங்களில் முடிந்து வைத்
4 துக்கொள், இதில் கொஞ்சம் எடுத்து அதைத் தீயின் நடுவில் எறிந்து அதை அக்கினியால் சுட்டெரி, அதிலிருந்து இஸ்ரவேல் வீட்டார் அனைவருக்கும் விரோதமாக அக்கினி புறப்படும் என்று சொன்னார்.

5 யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச் சொல்லுகிறார்: இதுவே எருசலேம், புறஜாதியாரின் நடுவிலே நான் அதை வைத்தேன், அதற்குச்சுற்றிலும் தேசங்கள் இருக்
6 கின்றன. அது தெய்வபயமற்றதாகிப் புறஜாதியாரைப் பார்க்கிலும் என் நீர்ப்புகளுக்கும் தனக்குச் சுற்றிலுமுள்ள தேசங்களைப் பார்க்கிலும் என் நியமங்களுக்கும் துரோகஞ் செய்தது; அவர்கள் என் நீர்ப்புகளை அசட்டைசெய்து என் நியமங்களில் நடவாமற்
7 போனார்கள். ஆகவே யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே, உங்களைக் சுற்றிலுமுள்ள புறஜாதியாரைப்பார்க்கிலும் அதிகமாய்க் கொந்தளித்தெழும்பி நீங்கள் என் நியமங்களிலே நடவாமலும் என் நீர்ப்புகளின்படி செய்யாமலும் உங்களைச் சுற்றி இருக்கிற புறஜாதியாரின் நீர்ப்புகளின்
8 படியாவது நடவாமலும் போனீர்களே; ஆதலால், இதோ, நான், நானே உனக்கு விரோதமாவேன், புறஜாதியாரின் கண்காண
9 உன் நடுவிலே நீதிசெலுத்துவேன்; நான் முன்னே செய்யாததும் இனிச்செய்யாதிருப்பதுமான விதமாய் உனக்கு உன் எல்லா அருவருப்புகளினிமித்தமும் செய்வேன்.
10 உன் நடுவிலே பிதாக்கள் பிள்ளைகளைத் தின்பார்கள், பிள்ளைகள் பிதாக்களைத் தின்பார்கள், நான் உனக்கு விரோதமாய் நீதிசெலுத்தி உன்னில் மீந்திருப்பவர்களையெல்லாம் சகல திசைகளிலும் சிதறிப்போகப்பண்ணுவேன் என்று யெகோவாவாகிய ஆண்டவர்
11 சொல்லுகிறார். நான் என் ஜீவனைக்கொண்டு ஆணையிடுகிறேன், இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு; அரோசிகமும் அருவருப்புமான உன் வஸ்துக்களாலே நீர் என் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தின படியால் நானும் பரிதாபமின்றி என் கண்ணோவிலக்குவேன், இரக்கங்காட்டேன்.
12 உன்னிலே மூன்றில் ஒரு பங்கு கொள்ளை நோயால் சாவார்கள், உன் நடுவிலே பஞ்சத்தாலும் மடிவார்கள்; மூன்றில் ஒரு பங்கு உனக்குச்சுற்றிலும் பட்டயத்தால் விழுவார்கள்; மூன்றில் ஒரு பங்கை நான் சகல திசைகளுக்கும் சிதறடித்துப் பட்டயத்தை உருவி
13 அவர்களைத்தொடர்வேன். இப்படியாக என் கோபம் தீரும், அவர்கள்மேலுள்ள என் உக்கிரத்தை ஆற்றிக்கொண்டு பழிவாங்குவேன்; நான் என் உக்கிரத்தை அவர்கள் மேல் தீர்த்துக்கொள்ளும்போது, யெகோவாவாகிய நான் என் எரிச்சலிலே இதைப் பேசினேன் என்று அறிவார்கள்.
14 உனக்குச் சுற்றிலுமுள்ள புறஜாதியார் நடுவிலும் கடந்துபோகிற யாவருடைய கண்களுக்குமுன் பாகவும் நான் உன்னைப் பாழும் நிந்தையுமாக்குவேன்.
15 நான் கோபத்தாலும் உக்கிரத்தாலும் உக்கிரதண்டனைகளாலும் உனக்குத் தீர்ப்புச் செய்யும்போது உனக்குச் சுற்றிலுமுள்ள புறஜாதியாருக்கு அது நிந்தையும் தூஷிப்பும் எச்சரிப்பும் பிரமிப்புமாகும்; யெகோவாவாகிய நான் இதைச் சொன்னேன்.
16 அழிவுக்கேதுவான பஞ்சத்தின் கொடிய அம்புகளை நான் அவர்களுக்குள்ளே எய்யும்போது, உங்களை அழிப்பதற்கென அவற்றை எய்யும்போதே, நான் பஞ்சத்தை உங்கள்மேல் அதிகரிக்கப்பண்ணி

ஆகாரம் என்னும் உங்கள் பிராணதாங்கி
17 யைத் தகர்த்துப்போடுவேன். பஞ்சத்தையும்
உங்களைப் பிள்ளையற்றவர்களாக்கும் துஷ்ட
மிருகங்களையும் உங்களுக்கு விரோதமாக
அனுப்புவேன், கொள்ளைநோய் உன்னில்
சுற்றித்திரியும், எங்கும் இரத்தம் சிந்தப்
படும்; பட்டயத்தை உன்மேல் வரப்பண்ணு
வேன்; யெகோவாவாகிய நானே இதைச்
சொன்னேன் என்றார்.

**6** யெகோவாவின் வார்த்தை எனக்கு வந்
2 தது, மனுஷகுமாரனே, நீ இஸ்ரவேலின்
பர்வதங்களுக்கு நேராக உன் முகத்தைத்
திருப்பி, அவைகளுக்கு விரோதமாக தீர்க்க
3 தரிசனம் உரைத்து இப்படிச் சொல்: இஸ்ர
வேலின் பர்வதங்களே, யெகோவாவாகிய
ஆண்டவரின் வார்த்தையைக் கேளுங்கள்;
யெகோவாவாகிய ஆண்டவர் பர்வதங்களை
யும் குன்றுகளையும் ஓடைகளையும் பள்ளத்
தாக்குகளையும் பார்த்துச் சொல்வது இதுவே,
இதோ, உங்கள்மேல் நானே பட்டயத்தை
வரப்பண்ணி உங்கள் கோவில் மேடைகளை
4 அழித்துப்போடுவேன். உங்கள் பலிபீடங்
கள் பாழாக்கப்படும், உங்கள் சூரியவணக்
கச் சிலைகள் தகர்க்கப்படும்; உங்களில்
கொல்லப்படுகிறவர்களை உங்கள் கேவலமா
ன விக்கிரகங்களுக்கு முன்பாக விழப்பண்
5 ணுவேன். நான் இஸ்ரவேல் புத்திரரின் பிரே
தங்களை அவர்களுடைய கேவலமான விக்
கிரகங்களின்முன்னே கிடக்கப்பண்ணி, உங்
கள் பலிபீடங்களுக்குச் சுற்றிலும் உங்கள்
6 எலும்புகளைச் சிதறப்பண்ணுவேன். நீங்கள்
குடியிருக்கும் சகல இடங்களிலுமுள்ள
ஊர்கள் பாழாகும், உங்கள் கோவில் மேடை
கள் அழிந்துபோம்; இப்படியாகவே உங்
கள் பலிபீடங்கள் பாழாகி அழியும், உங்
கள் கேவலமான விக்கிரகங்கள் தகர்க்கப்
பட்டு இல்லாமற்போம், உங்கள் சூரிய
வணக்கச் சிலைகள் வெட்டுண்டுபோம், உங்
7 கள் கிரியைகள் அழிந்தொழியும். கொல்
லப்பட்டவர்கள் உங்கள் நடுவில் விழுவார்
கள்; நானே யெகோவா என்று அப்பொழுது
அறிந்துகொள்வீர்கள்.
8 நீங்கள் தேசங்களில் சிதறடிக்கப்படும்
போது புறஜாதியாருக்குள்ளே பட்டயத்
துக்குத் தப்பி மீந்தவரையே உங்களுக்கு
9 மீதியாகவைப்பேன். உங்களில் தப்பி மீந்
தவர்கள் தாங்கள் சிறைப்பட்டிருக்கும் புற
ஜாதியாருக்குள்ளே என்னை நினைத்துக்
கொள்வார்கள்; என்னைவிட்டு விலகிச்
சோரம்போன அவர்கள் இருதயத்தையும்
தங்கள் கேவலமான விக்கிரகங்களின் பின்
சென்று சோரம்போன அவர்கள் கண்களை
யும் நான் நொறுங்கச் செய்யும்போது தாங்
கள் செய்த தீமைகளினிமித்தமும் தங்கள்
சகல அருவருப்புகளினிமித்தமும் தங்க
ளையே வெறுப்பார்கள். நானே யெகோவா 10
என்றும் இந்தத் தீங்குகளையெல்லாம் அவர்
களுக்குச் செய்வேன் என நான் சொன்னது
வீணல்லவென்றும் அறிந்துகொள்வார்கள்
என்று சொன்னார்.

யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது 11
இதுவே: நீ உன் கையைத் தட்டிக் காலை
உதறி இஸ்ரவேல் வீட்டாரின் சகல பொல்
லாத அருவருப்புகளையும் நினைத்து, ஐயோ
கேடாம் என்று சொல்; அவர்கள் பட்ட
யத்தாலும் பஞ்சத்தாலும் கொள்ளைநோயா
லும் விழுவார்கள். தூரத்திலிருக்கிறவன் 12
கொள்ளைநோயால் சாவான், சமீபத்திலிருக்
கிறவன் பட்டயத்தால் விழுவான்; காக்கப்
பட்டு மீந்திருப்பவன் பஞ்சத்தால் சாவான்;
இப்படியாக அவர்களில் என் உக்கிரத்தைத்
தீர்த்துக்கொள்ளுவேன். கேவலமான அவர் 13
கள் விக்கிரகங்களின் நடுவிலும் அவர்கள்
பலிபீடங்களுக்குச் சுற்றிலும் சகல உயர்ந்த
மேடுகளிலும் சகல மலைச்சிகரங்களிலும்
பச்சையான சகல விருட்சங்களின் கீழும்
தழைத்திருக்கிற சகல கர்வாலி மரங்களின்
கீழும், அவர்களுடைய கேவலமான விக்கிர
கங்களுக்கெல்லாம் சுகந்தவாசனை காட்டிய
இடங்களிலே, அவர்களில் கொல்லப்பட்
டவர்கள் கிடக்கும்போது, நானே யெகோ
வா என்று அறிந்துகொள்வார்கள். நான் 14
என் கையை அவர்களுக்கு விரோதமாக
நீட்டி, அவர்கள் குடியிருக்கும் இடங்களி
லெல்லாம் தேசத்தை திப்லாவண்டையி
லிருக்கும் வனாந்தரத்தைப் பார்க்கிலும்
அதிகப்பாழும் அவாந்தர வெளியுமாக்கு
வேன், நானே யெகோவா என்று அப்பொ
ழுது அறிந்துகொள்வார்கள் என்றார்.

பின்னும் யெகோவாவின் வார்த்தை **7**
எனக்கு வந்தது, மனுஷகுமாரனே, இஸ்ர 2
வேல் தேசத்தைப்பற்றி யெகோவாவாகிய
ஆண்டவர் சொல்வது இதுவே: இதோ
முடிவு! தேசத்தின் நாலு மூலைகளின்மேலும்
முடிவு வருகிறது. இப்போதே உன்மேல் 3
முடிவு வருகிறது; நான் என் கோபத்தை
உன்மேல் வரச்செய்து உன் வழிகளின்படி
யே உனக்குத் தீர்ப்புச்செய்து, உன் சகல
அருவருப்புகளையும் உன்மேல் வரப்பண்
ணுவேன். நான் உன்னை இரக்கத்தோடு 4
பார்க்கமாட்டேன், பரிதாபங் காட்டமாட்
டேன், உன் வழிகளின்படியே உனக்குத்

கொடுப்பேன், உன் அருவருப்புகள் உன் நடுவிலே இருக்கும்; நானே யெகோவா என்று அப்பொழுது அறிந்துகொள்வீர்கள்.
5 யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே: ஒரு தீங்கு! என்றுமிலாத் தீங்கு!
6 இதோ வருகிறது. முடிவுவருகிறது, வருகிறது முடிவே! அது விழித்தெழுவது உனக்கு விரோதமாகவே, இதோ வருகிறது.
7 தேசத்தில் குடியிருக்கிறவனே, உனக்குக் கேடுகாலம் வந்துவிட்டது, வேள வந்தது நாள் சமீபித்தது; அமளியே! மலைகளிலே
8 யுள்ள அறுப்பின் ஆரவாரமல்ல. இப் பொழுது சீக்கிரத்தில் என் உக்கிரத்தை உன்மேல் ஊற்றுவேன், உன்மேலுள்ள என் கோபத்தைத் தீர்த்துக்கொள்வேன், உன் வழிகளின்படியே உனக்குத் தீர்ப் புச்செய்வேன், உன் சகல அருவருப்புகளே
9 யும் உன்மேல் வரப்பண்ணுவேன். நான் உன்னை இரக்கத்தோடு பார்க்கமாட்டேன், பரிதாபங்காட்டமாட்டேன், உன் வழி களின்படியே உனக்குக் கொடுப்பேன்; உன் அருவருப்புகள் உன் நடுவிலே இருக்கும்; யெகோவாவாகிய நானே அடிக்கிறவர் என்று அப்பொழுது அறிந்துகொள்வீர்கள்.
10 இதோ உன்நாள், இதோ வருகிறது, உனக்குக் கேடுகாலம் கிட்டிவிட்டது, கோல் பூக்
11 கிறது, அகந்தை தளிர்க்கிறது. துன்மார்க்கத்தையடிக்கும் கோலாகக்கொடுமை எழும்புகிறது; அவர்களிலும் அவர்கள் திரள்கூட்டத்திலும் அவர்கள் ஆஸ்தியிலும் ஒன்றும் மீந்திருப்பதில்லை; அவர்களில் மேன்மை
12 காண்பதில்லை. வேளைவந்துவிட்டது, நாள் கிட்டின; கொள்ளுகிறவன் சந்தோஷப்பட வேண்டாம், விற்கிறவன் துக்கப்படவேண்டாம், அதின் திரள்கூட்டமனைத்தின்மேலும்
13 உக்கிரம் வரும். அவர்கள் ஜீவனுள்ளோருக்குள்ளே இன்னும் உயிரோடிருந்தாலும் விற்றவன் விற்கப்பட்டதற்குத் திரும்பி வருவதில்லை; அதின் திரள்கூட்டமனைத்திற்கும் விரோதமாய்க்கண்ட தரிசனம் திரும்பாது; தன் அக்கிரமத்திலே ஜீவிக்கிற எவனும்
14 நிலைநிற்கமாட்டான். அவர்கள் எக்காளம் ஊதி யாவற்றையும் ஆயத்தப்படுத்தினாலும் யுத்தத்துக்குப் போகிறவனில்லை; என் உக்கிரம் அதின் திரள்கூட்டமனைத்தின்மேலும்
15 வருகிறது. வெளியே பட்டயம், உள்ளே கொள்ளைநோய், பஞ்சம்; வயல்வெளியில் இருக்கிறவன் பட்டயத்தால் சாவான்; நகரத்தில் இருக்கிறவனைப் பஞ்சமும் கொள்ளை
16 நோயும் பட்சிக்கும். அவர்களில் சிலர் தப்பி மீந்தாலும், அவர்கள் மலைகளுக்குச்சென்று தங்கிக் கன்மலைவெடிப்பிலுள்ள புறாக்கள் குமுறுகிறதுபோல் தத்தம் அக்கிரமத்தினிமித்தம் துக்கித்துப் புலம்புவார்கள். எல்
17 லாக்கைகளும்தளர்ந்துபோம், எல்லாமுழங்கால்களும் அலையும் தண்ணீரைப்போலாகும். இரட்டை உடுத்திக்கொள்வார்
18 கள், திகில் அவர்களைமூடும், எல்லாமுகங்களிலும் வெட்கம், எல்லாத் தலைகளும் மொட்டை. தங்கள் வெள்ளியைத் தெருக்
19 களில்எறிந்துவிடுவார்கள், அவர்கள் பொன் தீண்டாப்பொருளாம், யெகோவாவுடைய கடுங்கோபத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களை விடுவிக்க முடியாமற்போம், அவர்கள் அதினால் திருப்தியாவதுமில்லை, தங்கள் வயிறுகளை நிரப்புவதுமில்லை; அவர்கள் அக்கிரமமே
20 அவர்களை விழச்செய்தது. அவற்றை மகிமையான ஆபரணங்களாக்கிப் பெருமை பாராட்டினார்கள், தங்கள் அருவருப்பான உருவங்களை, அரோசிகமான விக்கிரகங்களை, அதனால் செய்தார்கள்; ஆதலால் நான் அதை அவர்களுக்குத் தீண்டாப்பொருட்களாகச் செய்வேன். அதை
21 அந்நியர் கையிலே சூறையாகவும், பூமியில் தெய்வபயமற்றவருக்குக் கொள்ளையாகவும் கொடுப்பேன்; அவர்கள் அதைப் பரிசுத்தமற்றதாக்குவார்கள். என் முகத்தை அவர்
22 களை விட்டுத் திருப்பவே அவர்கள் என் அரும்பொருளைப் பரிசுத்தமற்றதாக்குவார்கள், கொள்ளைக்காரர் அதற்குள் புகுந்து அதைப் பரிசுத்தமற்றதாக்குவார்கள்.
23 ஒரு சங்கிலியைச் செய்துகொள், தேசத்தில் இரத்தப்பழிகள் நிறைந்தன, நகரத்திலே கொடுமை நிறைந்தது. ஆகையால்
24 புறஜாதியாரிலுள்ள அதிக துஷ்டரை வரப்பண்ணுவேன், அவர்கள் இவர்கள் வீடுகளைச் சொந்தமாக்கிக்கொள்வார்கள்; வலியவர்களின் பெருமையை ஒழியப்பண்ணுவேன், அவர்கள் பரிசுத்த ஸ்தலங்கள் பரி
25 சுத்தமற்றதாகும். திகில் வருகிறது, சமாதானத்தைத் தேடுவார்கள்; அது கிடையாது.
26 தீங்கின்மேல் தீங்கு வரும், தூர்ச்செய்தியின் மேல் தூர்ச்செய்தி பிறக்கும்; தீர்க்கதரிசியினிடம் தரிசனத்தைத் தேடுவார்கள், ஆசாரியனிடத்திலே போதனை கிடையாது, மூப்பரிடத்திலே ஆலோசனையும் இல்லாமற்
27 போம். ராஜா துக்கிப்பான், அதிபதி திகிலால் மூடிக்கொள்வான், நாட்டு ஜனங்களின் கைகள் தளர்ந்துபோம், அவர்கள் வழிகளின்படியே நான் அவர்களுக்குச் செய்வேன், அவர்கள் செய்த தீர்ப்புகளின்படியே அவர்களை நியாயந்தீர்ப்பேன்; நானே யெகோவா என்று அப்பொழுது அறிந்துகொள்வார்கள்.

**8** ஆறும் வருஷம் ஆறும் மாதம் ஐந்தாந் தேதியிலே, நான் என் வீட்டில் உட்கார்ந் திருக்கையில் யூதாவின் மூப்பர் எனக்கு முன்பாக உட்கார்ந்திருக்கும்போது யெகோ வாவாகிய ஆண்டவரின் கரம் அங்கே என் 2 மேல் வந்தது. நான் பார்க்கவே, இதோ, அக்கினிபோல் காணப்பட்ட ஒரு தோற் றம்! அவருடைய இடுப்பாகக் காணப்பட்ட தற்குக்கீழ் அக்கினி, அவருடைய இடுப் புக்குமேல் ஜோதி போன்றது, அது பிரகா சிக்கும் வெண்கலம்போல் காணப்பட்டது. 3 கடவுளால் வந்த தரிசனத்திலே கைபோல் தோன்றினதை அவர் நீட்டி என் தலை மயிரைப் பிடித்து என்னைத் தூக்கினார்; ஆவி என்னைப் பூமிக்கும் வானத்துக்கும் நடுவே எடுத்துச்சென்று என்னை எருச லேமுக்குக் கொண்டுபோய் வடக்கே பார்த்த உள் வாசலண்டையிலே விட்டது; அது தெய்வ எரிச்சல்மூட்டும் எரிச்சல் விக் 4 கிரகம் இருக்குமிடம். இதோ, நான் பள் ளத்தாக்கிலே கண்ட தரிசனத்தைப்போல வே இஸ்ரவேலின் கடவுளுடைய மகிமை 5 அங்கே விளங்கினது. அவர் என்னோடு பேசி: மனுஷகுமாரனே, உன் கண்களை நிமிர்த்து வடக்கே பார் என்றார், நான் என் கண்களை நிமிர்த்து வடக்கே பார்த்தேன்; இதோ, பலிபீட வாசலுக்கு வடக்கே, உட் செல்லுமிடத்திலே அந்த எரிச்சல் விக்கிர 6 கம் இருந்தது. அவர் என்னோடு பேசி: மனுஷகுமாரனே, அவர்கள் செய்கிறதை நீ காண்கிறாயா? இஸ்ரவேல்வீட்டார் இந்தப் பெரிய அருவருப்புகளைச் செய்து, என் பரி சுத்தஸ்தலத்தைவிட்டு என்னைத் தூரமாய்ப் போகப் பண்ணுகிறார்களே; இதிலும் அதிக அருவருப்புகளை இன்னமும் காண்பாய் என்று சொன்னார்.

7 பின்பு என்னைப் பிராகார வாசலுக்குக் கொண்டுபோனார்; நான் பார்க்கவே, இதோ, சுவரில் ஒரு துவாரம்! அவர் என்னோடு 8 பேசி: மனுஷகுமாரனே, நீ சுவரிலே கன்ன மிடு என்றார்; நான் சுவரிலே கன்னமிடவே, 9 இதோ, ஒரு வாசல்! அவர் என்னோடு பேசி: நீ உள்ளேபோய் அவர்கள் இங்கே செய் கிற பொல்லாத அருவருப்புகளைப் பார் 10 என்றார். நான் உள்ளேபோய்ப் பார்க் கவே, இதோ, சகலவித ஊரும் பிராணி களும் அருவருப்பான மிருகங்களுமாகிய இவைகளின் உருவங்களும் இஸ்ரவேல் வீட் டாரின் சகல கேவலமான விக்கிரகங்களும் சுவரிலே சுற்றிலும் வரையப்பட்டிருந்தன. 11 இஸ்ரவேல் வீட்டாரின் மூப்பரில் எழுபது பேரும், அவர்களின் நடுவிலே சாப்பானின் குமாரன் யாசனியாவும், அவனவன் தன் தன் கையிலே தன் தன் தூபகலசத்தைப் பிடித்துக்கொண்டு அவற்றின் எதிரே நின் றார்கள்; தூபவர்க்கப் புகையினின்று வா சனை எழும்பிற்று. அப்பொழுது அவர் 12 என்னோடு பேசி: மனுஷகுமாரனே, இஸ்ர வேல் வீட்டாரின் மூப்பர் அந்தகாரத்திலே தங்கள் சித்திர அறைகளிலே செய்கிறதை நீ காண்கிறாயா? யெகோவா எங்களைப் பார்க் கிறதில்லை, யெகோவா தேசத்தைக் கைவிட் டார் என்று சொல்லுகிறார்களே என்றார். பின்னும் அவர் என்னோடு பேசி: அவர்கள் 13 செய்கிற அதிக அருவருப்புகளை இன்னமும் காண்பாய் என்று சொன்னார்.

பின்பு அவர் என்னை யெகோவாவின் 14 ஆலய வடக்குவாசல் நடைக்குக் கொண்டு போனார்; இதோ, அங்கே தம்மூசினிமித் தம் அழுதுகொண்டிருந்த ஸ்திரீகள் உட் கார்ந்திருந்தார்கள். அவர் என்னோடு பேசி: 15 மனுஷகுமாரனே, இதைக் கண்டாயா? இதி லும் அதிக அருவருப்புகளை இன்னமும் காண்பாய் என்று சொன்னார்.

பின்பு அவர் என்னை யெகோவாவின் 16 ஆலய உட்பிராகாரத்துக்குக் கொண்டுபோ னார்; இதோ, யெகோவாவின் ஆலய வாச லண்டையிலே மண்டபத்துக்கும் பலிபீடத் துக்கும் நடுவே, ஏறக்குறைய இருபத்தைந்து பேர், தங்கள் முதுகை யெகோவாவின் ஆல யத்துக்கும் தங்கள் முகத்தைக் கீழ்திசைக் கும் நோக்காகத்திருப்பி நின்று கிழக்கே நோக் கிச் சூரியனை நமஸ்கரித்தார்கள். அப்பொ 17 ழுது அவர் என்னோடு பேசி: மனுஷகுமா ரனே, இதைக் கண்டாயா? இங்கே யூதா வீட்டார் இந்த அருவருப்புகளைச் செய்வது போதாதா? தேசத்தை அவர்கள் கொடுமை யினால் நிரப்பி என்னைப் பின்னும் அதிக மாய்க் கோபமூட்டுகிறார்களே; இதோ பார், அவர்கள் தங்கள் மூக்கின் முன்னே கிளை யைப் பிடிக்கிறார்கள். ஆகையால் நானும் 18 என் உக்கிரத்தைக் காட்டுவேன், நான் இரக் கத்தோடே பார்க்கமாட்டேன், பரிதாபங் காட்டமாட்டேன்; அவர்கள் மகா சத்த மாய் என் செவிகள்கேட்கக் கூப்பிட்டாலும் அவர்களுக்கு நான் செவிகொடுப்பதில்லை என்றார்.

**9** பின்பு அவர் என் காதுகள்கேட்க மிக வும் சத்தமிட்டு: நகரவிசாரணைக்காரர் தங் கள் தங்கள் சங்கார ஆயுதங்களைத் தங்கள் கைகளில் பிடித்துக்கொண்டு வருக என்று சொன்னார். இதோ, ஆறுபேர் தண்டாயு 2 தங்களைத் தங்கள் கைகளில் பிடித்துக்

கொண்டு வடக்கேபார்த்த மேலேயுள்ள வாசலிலிருந்து வந்தார்கள், அவர்களில் சணல்நூல் வஸ்திரம் தரித்துத் தன் அரையில் சம்பிரதியின் மைக்கூட்டை வைத்திருந்த ஒருவன் இருந்தான்; அவர்கள் உள்ளே சென்று செப்புப் பலிபீடத்தண்
3 டையிலே நின்றார்கள். அப்பொழுது இஸ்ரவேலின் கடவுளினுடைய மகிமை, அது இருந்த இடமாகிய கேருபுகள் மேலிருந்து தெழும்பி ஆலய வாசற்படியிலே வந்து, சணல்நூல் வஸ்திரம் தரித்துத் தன் அரையிலே சம்பிரதியின் மைக்கூட்டை வைத்திருந்தவனைக் கூப்பிட்டது; அப்பொழுது
4 யெகோவா அவனைநோக்கி: நீ நகரத்தின் நடுவில், எருசலேமின் நடுவிலேயே, திரிந்து அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சுவிட்டு அலறுகிறவர்களின் நெற்றிகளில் அடை
5 யாளம்போடு என்றார். பின்பு அவர் என் காதுகள்கேட்க மற்றவர்களோடுபேசி: நீங்கள் இவன் பின்னே நகரத்திலே திரிந்து அடித்துக்கொல்லுங்கள்; நீங்கள் இரக்கத்தோடே பார்க்கவேண்டாம், பரிதாபங்
6 காட்டவேண்டாம். முதியோரையும் வாலிபரையும் கன்னிகைகளையும் குழந்தைகளையும் ஸ்திரீகளையும் அடித்துச் சங்காரியுங்கள்; அடையாளம் போடப்பட்டிருக்கிற எவனையும் கிட்டவேண்டாம்; என் பரிசுத்த ஸ்தலத்திலே துவக்குங்கள் என்று என் காதுகள் கேட்கச்சொன்னார்; அப்படியே அவர்
7 கள் ஆலயத்துக்குமுன்னே இருந்த மூப்பரிடத்தில் துவக்கவே | அவர் அவர்களோடு பேசி: நீங்கள் ஆலயத்தைத் தீட்டுப்படுத்திப் பிராகாரங்களைக் கொல்லப்பட்டவர்களாலே நிரப்புங்கள், அப்புறம் போங்கள் என்றார்; அவர்கள் நகரத்திற்குள்போய் அடித்துக்
8 கொன்றார்கள்.

அவர்கள் அடித்துக்கொண்டுபோகையில் தனித்திருந்த நான் முகங்குப்புற விழுந்து: ஐயோ, யெகோவாவாகிய ஆண்டவரே, தேவரீர் எருசலேமின்மேல் உமது உக்கிரத்தை ஊற்றுகையில் இஸ்ரவேலில் மீந்திருப்பவர்களை யெல்லாம் அழித்துப்
9 போடுவீரோ என்று அபயமிட்டேன். அவரோ: இஸ்ரவேலும் யூதாவுமாகிய வீட்டாரின் அக்கிரமம் மிகவும் அதிகமாய்ப் பெருகினது, தேசத்திலே இரத்தப்பழிகள் நிறைந்தன; நகரத்திலே நியாயக்கேடு நிறைந்தது; யெகோவா தேசத்தைக் கைவிட்டார்; யெகோவா பார்ப்பதில்லை என்று சொல்லு
10 கிறார்கள். ஆகவே நானும் இரக்கத்தோடே பார்க்கமாட்டேன், பரிதாபங்காட்டமாட்டேன், அவர்கள் வழிகளின்படியே அவர்கள் சிரசின்மேல் வரப்பண்ணுவேன் என்று
11 எனக்குச் சொன்னார். இதோ, சணல்நூல் வஸ்திரம் தரித்துத் தன் அரையில் மைக்கூட்டை வைத்திருந்தவன் வந்து, நீர் எனக்குக்கட்டளையிட்டபடியே செய்தேன் என்று அறிவித்தான்.

10 நான் பார்க்கவே, இதோ கேருபுகளின் தலைக்கு மேலிருந்த மண்டலத்தில் நீலரத்தினம் போன்றதும் சிங்காசனம் போன்றதுமானதொன்று தோன்றியது, அது அவைகளுக்குமேல் காணப்பட்டது. சணல்நூல்
2 வஸ்திரம் தரித்திருந்தவனை அவர் பார்த்து: நீ கேருபுகளின் கீழிருக்கிற உருளைகளுக்கு நடுவாகச்சென்று, கேருபுகளின் நடுவே இருக்கிற அக்கினித் தழலில் இரண்டு கை நிறைய எடுத்து அதை நகரத்தின்மேல் இறையென்றார், என் கண்காண அவன் அப்படியே போனான். அவன் செல்லுகை
3 யில் கேருபுகள் ஆலயத்தின் வலதுபுறத்தில் நின்றன; மேகம் உட்பிராகாரத்தை நிரப்பிற்று. யெகோவாவின் மகிமை கேருபு
4 களின்மேலிருந்து எழும்பி ஆலயத்தின் வாசற்படியிலே வந்தது, ஆலயத்தில் மேகம் நிறைந்திருந்தது, பிராகாரத்திலே யெகோவாவுடைய மகிமையின் பிரகாசம் நிறைந்தது. கேருபுகளின் செட்டைகளாலுண்
5 டான சத்தம் வெளிப்பிராகாரமட்டும் கேட்டது; அது சர்வ வல்லவரான கடவுள் பேசுகையில்கேட்கும் சத்தம் போலிருந்தது.
6 அவர் சணல்நூல் வஸ்திரம் தரித்திருந்தவனிடம், நீ கேருபுகளுக்குள் உருளைகளின் நடுவிலிருந்து அக்கினியை எடு என்று கட்டளையிடவே, அவன் சென்று ஒரு சக்கரத்
7 தண்டையிலே நின்றான். அப்பொழுது அந்தக் கேருபு தன் கையைக் கேருபுகளின் நடுவே நீட்டி, கேருபுகளின் நடுவிலிருந்த அக்கினியில் கொஞ்சம் எடுத்துச் சணல்நூல் வஸ்திரம் தரித்திருந்தவன் கையில் கொடுத்தது; அவன் அதை வாங்கிக்கொண்டு வெளியே வந்தான்.

8 கேருபுகளுடைய செட்டைகளின்கீழ் மனுஷர் கை போன்றதொன்று காணப்பட்டது. நான் பார்க்கவே, இதோ, கேருபுக
9 ளண்டையில் நாலு சக்கரங்கள், ஒவ்வொரு கேருபிண்டையிலும் ஒவ்வொரு சக்கரம் இருந்தது; சக்கரங்கள் பத்மராகம்போல் தோன்றின.
10 அவைகளின் தோற்றமோவெனில், நாலும் ஒரே சாயலாயிருந்தன; சக்கரத்துக்குள் சக்கரம் இருப்பதுபோல் காணப்பட்டது.
11 அவை நாலு பக்கங்களிலும்

ஓடக்கூடியவை; ஓடுகையில் அவை திரும்ப வேண்டியதில்லை; முன்செல்லும் சக்கரம் நோக்கும் திசைக்கு மற்றவைகள் அதின் பின்னே ஓடும், ஓடுகையில் அவை திரும்ப
12 வேண்டியதில்லை. அவற்றின் உடல் அனைத்தும், அவற்றின் முதுகுகளும் அவற்றின் கைகளும் அவற்றின் செட்டைகளும், சக்கரங்களும் சுற்றிலும் கண்கள் நிறைந்தன; அவைகள் நாலுக்குமுரிய சக்கரங்களிலும்
13 அப்படியே. அந்தச் சக்கரங்களுக்கு உருளைகள் எனப்பேர் வழங்கக்கேட்டேன்.
14 ஒவ்வொன்றுக்கும் நான்கு முகங்கள் இருந்தன; முதலாம் முகம் கேருபு முகம், இரண்டாம் முகம் மனுஷமுகம், மூன்றாம் முகம் சிங்க முகம், நாலாம் முகம் கழுகு
15 முகம். கேருபுகள் மேலே எழும்பின; இதுவே நான் கேபார் நதியண்டையிலே
16 கண்ட ஜீவி. கேருபுகள் செல்லுகையில் சக்கரங்களும் அவற்றின் அருகே ஓடின; பூமியிலிருந்து எழும்பக் கேருபுகள் தங்கள் செட்டைகளை எடுத்தபோது சக்கரங்கள் அவற்றைவிட்டு விலகிப்போகவில்லை.
17 அவைகள் நிற்கையில் இவைகளும் நின்றன; அவைகள் எழும்புகையில் இவைகளும் எழும்பின; பிராணியின் ஆவி இவற்றில் இருந்தது. யெகோவாவின் மகிமை
18 ஆலய வாசற்படியை விட்டுப்போயிற்று;
19 அது கேருபுகளின்மேல் அமர்ந்தது. அவைகளும் அவைகளோடு கூடவே சக்கரங்களும் புறப்படுகையில் கேருபுகள் தங்கள் செட்டைகளை எடுத்து என் கண்காணப் பூமியைவிட்டு எழும்பின; அவை யெகோவாவினுடைய ஆலயத்தின் கிழக்கு வாசலிலேபோய் நிற்க, இஸ்ரவேலின் கடவுளுடைய மகிமை அவைகளுக்கு மேலிருந்
20 தது. நான் கேபார் நதியண்டையிலே இஸ்ரவேலின் கடவுளுக்குக் கீழே இருக்கக்கண்ட பிராணி இதுவே, அவைகள் கேருபுகள் என்று அறிந்துகொண்டேன்.
21 அவற்றில் ஒவ்வொன்றுக்கும் நான்கு முகங்களும் ஒவ்வொன்றுக்கும் நான்கு செட்டைகளும் இருந்தன; அவற்றின்
22 செட்டைகளின்கீழ் மனுஷகைகள் போன்றவை இருந்தன. அவற்றின் முகங்கள் நான் கேபார் நதியண்டையிலே கண்ட முகங்களைப்போன்றவை, இவை அப்படியே தோன்றின, அப்படியே இருந்தன, அவற்றில் ஒவ்வொன்றும் நேர்முகமாகச் சென்றது.

**11** பின்பு ஆவி என்னை எடுத்து என்னை யெகோவாவுடைய ஆலயத்தில் கீழ்திசை பார்த்த கிழக்கு வாசலுக்குக் கொண்டுபோனது; இதோ, அந்த வாசல் பக்கத்தில் இருபத்தைந்துபேர் இருந்தார்கள்; அவர்களின் நடுவே ஜனத்தின் அதிபதிகளாகிய அசூரின் குமாரனுகிய யாசனியாவையும் பெனாயாவின் குமாரனுகிய பெலத்தியாவையும் கண்டேன். அப்பொழுது அவர் என்னோடு 2
பேசி: மனுஷகுமாரனே, இவர்கள் இந்த நகரத்திலே அக்கிரம எண்ணங்களை நினைத்து, துராலோசனை சொல்லுகிற மனுஷர். 3
வீடுகட்டவேண்டிய காலம் சமீபமல்ல, இந்த நகரம் பானை, நாம் அதிலுள்ள இறைச்சியென்று சொல்லுகிறார்கள். ஆகவே 4
அவர்களுக்கு விரோதமாய்த் தீர்க்கதரிசனம் சொல்லு, மனுஷகுமாரனே, தீர்க்கதரிசனஞ்சொல்லு என்றார்.

யெகோவாவின் ஆவி என்மேல் இறங் 5
கவே அவர் என்னோடுபேசி: யெகோவா இப்படிச் சொல்லுகிறார் என்று அவர்களுக்குச் சொல்: இஸ்ரவேல்வீட்டாரே, நீங்கள் இப்படிப்பேசுகிறீர்கள், உங்கள் மனதில் எழும்புகிறது எனக்குத்தெரியும். இந்த 6
நகரத்தில் உங்களால் கொல்லப்பட்டவர்கள் அநேகர்; கொல்லப்பட்டவர்கள் அதின் வீதிகளிலே நிறைந்திருக்கச் செய்தீர்கள். ஆகையால் யெகோவாவாகிய ஆண்டவர் 7
சொல்வதைக்கேளுங்கள், நீங்கள் கொன்று அதின் நடுவிலே போட்டுவிட்டவர்களே இறைச்சியும் இந்த நகரம் பானையுமாம்; உங்களையோ அதின் நடுவிலிருந்து கொண்டுபோய்விடுவேன். பட்டயத் 8
துக்குப் பயப்பட்டீர்கள், பட்டயத்தையே உங்கள்மேல் வரப்பண்ணுவேன், இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு.
நான் உங்களை அதின் நடுவிலிருந்து கொண் 9
டுபோய் அந்நியர் கையில் உங்களை ஒப்புக்கொடுத்து உங்களுக்கு விரோதமாய்த் தீர்ப்புச்செய்வேன். பட்டயத்தால் விழுவீர்கள், 10
இஸ்ரவேல் தேசத்தின் எல்லையிலே உங்களை நியாயந்தீர்ப்பேன்; நானே யெகோவா என்று அப்பொழுது அறிந்துகொள்வீர்கள்.
இந்த நகரம் உங்களுக்குப் பானையாயிருப் 11
பதுமில்லை, நீங்கள் அதிலுள்ள இறைச்சியாயிருப்பதுமில்லை; இஸ்ரவேல் தேசத்தின் எல்லையிலே உங்களை நியாயந்தீர்ப்பேன்.
என் நியமங்களின்படி நடவாமலும் என் 12
தீர்ப்புகளின்படி செய்யாமலும் உங்களுக்குச் சுற்றிலுமிருக்கிற புறஜாதியாரின் தீர்ப்புகளின்படி செய்தபடியினால் நானே யெகோவா என்று அப்பொழுது அறிந்துகொள்வீர்கள் என்று சொல் என்றார்.
நான் அந்தப்படியே தீர்க்கதரிசனஞ்சொல் 13

லுகையில் பெனுயாவின் குமாரனுகிய பெல
த்தியா செத்தான்; நான் முகங் குப்புற விழு
ந்து மகாசத்தமிட்டு, ஐயோ யெகோவாவா
கிய ஆண்டவரே, தேவரீர் இஸ்ரவேலில்
மீந்திருப்பவர்களைச் சர்வசங்காரம் செய்வீ
ரோ என்று முறையிட்டேன்.

14 யெகோவாவின் வார்த்தை எனக்கு வந்
15 தது: மனுஷ குமாரனே, எருசலேமில் குடி
யிருக்கிறவர்கள், உன் சகோதரரைப்பற்றி,
உன் கெருங்கிய பந்துக்களாகிய சகோதர
ரையும் இஸ்ரவேல் வீட்டார் அனைவரையும்
பற்றி, அவர்கள் யெகோவாவைவிட்டுத் தூர
மாய் அகன்றுபோனார்கள், இந்த தேசம்
எங்களுக்கே சொந்தமாய்க் கொடுக்கப்பட்
16 டது என்று சொல்லுகிறார்கள். ஈயோ
யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச்
சொல்லுகிறார் என்று சொல், நான் அவர்
களைத் தூரமாகப் புறஜாதியாருக்குள்ளே
தூற்றிப்போட்டு நான் அவர்களை தேசங்
களிலே சிதறடித்திருந்தேன், அவர்கள்
போயிருக்கிற தேசங்களிலே நான் அவர்
களுக்குச் சிறிதளவே பரிசுத்தஸ்தலமாக
17 இருந்தேன்; ஆயினும் யெகோவாவாகிய
ஆண்டவர் சொல்வதை அவர்களுக்குச்
சொல்: நான் உங்களைப் புறஜாதிகளிடத்தி
லிருந்து சேர்த்து, நீங்கள் சிதறடிக்கப்பட்ட
தேசங்களிலிருந்து உங்களைக் கூட்டிக்
கொண்டு, இஸ்ரவேல் தேசத்தை உங்களுக்
18 குக்கொடுப்பேன். அவர்கள் அங்கேவந்து,
அதில் அரோசிகமும் அருவருப்புமான
யாவற்றையும் அதிலிருந்து நீக்கிவிடுவார்
19 கள். நான் அவர்களுக்கு ஒரே இருதயத்
தைத்தந்து அவர்கள் உள்ளத்தில் புதிய
ஆவியைக்கொடுத்துக் கல்லான இருதயத்
தை அவர்கள் சரீரத்திலிருந்து எடுத்துப்
போட்டுச் சதையான இருதயத்தை அவர்
20 களுக்கு அருளுவேன்; அப்பொழுது அவர்
கள் என் நியமங்களின்படிநடந்து என்
நீர்ப்புகளைக் கைக்கொண்டு அவற்றின்படி
செய்வார்கள்; அவர்கள் என் ஜனமாயிருப்
பார்கள், நான் அவர்கள் கடவுளாயிருப்
21 பேன். ஆனால் எவர்கள் இருதயம் அரோ
சிகமும் அருவருப்புமான விக்கிரகங்களின்
இருதயத்தின்படி நடக்கிறதோ அவர்கள்
வழிகளின்படியே அவர்கள் தலைகளின்மேல்
வரப்பண்ணுவேன், இது யெகோவாவாகிய
ஆண்டவரின் திருவாக்கு என்று சொல்
என்றார்.

22 அப்பொழுது கேருபுகள் தங்கள் செட்
டைகளை எடுத்து எழும்பின, சக்கரங்களும்
கூடவே சென்றன; இஸ்ரவேலின் கடவுளு
டைய மகிமை அவைகளுக்குமேல் இருந்
தது. யெகோவாவின் மகிமை நகரத்தின் 23
நடுவிலிருந்தெழும்பி நகரத்துக்குக் கிழக்கே
யுள்ள மலையின்மேல்போய் நின்றது. பின்பு 24
கடவுளின் ஆவிக்குள்ளாகி நான் கண்ட
என் தரிசனத்திலே, ஆவி என்னை எடுத்துக்
கல்தேயாவுக்குச் சிறைப்பட்டுப்போனவர்
கள் இடம் கொண்டுபோய் விட்டது; நான்
கண்ட தரிசனம் அப்பொழுது என்னி
லிருந்து மறைந்தது. யெகோவா எனக்குக் 25
காண்பித்தவைகள் யாவற்றையும் சிறைப்
பட்டிருந்தவர்களுக்குச் சொன்னேன்.

யெகோவாவின் வார்த்தை எனக்கு வந் **12**
தது: மனுஷ குமாரனே, நீ கலக வீட்டாரின் 2
நடுவிலே வசிக்கிறாய்; காண அவர்களுக்குக்
கண்கள் இருந்தும் காண்கிறதில்லை; கேட்க
அவர்களுக்குக் காதுகள் இருந்தும் கேட்கிற
தில்லை; அவர்கள் கலக வீட்டாரே. இப் 3
போதும் மனுஷகுமாரனே நீ சிறைப்பட்டுப்
போவோருக்குரிய சாமான்களை ஆயத்தப்
படுத்திப் பகற்காலத்திலே அவர்கள் கண்
களுக்கு முன்பாகப் பிரயாணப்படு; உன்
இடத்தைவிட்டு வேறே இடத்துக்கு அவர்
கள் கண்காண சிறைப்பட்டவன்போல்
போ; அவர்கள் கலக வீட்டாராயிருந்தும் 4
ஒரு வேளை கண்டு உணருவார்கள். சிறைப்
பட்டுப்போகிறவனைப்போல் நீ உன் சாமான்
களைப் பகற்காலத்திலே அவர்கள் காண
வெளியேவை, நீ யோ சாயங்காலத்திலே
அவர்கள் காணச் சிறைப்பட்டுப்போகிற
வனைப்போல் புறப்படு. அவர்கள் காண 5
நீ சுவரிலே கன்னமிட்டு அதின்வழியாய்
அவைகளை வெளியே கொண்டுபோ. அவர் 6
கள் காண நீ அவைகளை உன் தோள்மேல்
எடுத்து இருட்டானபின்பு வெளியே
கொண்டுபோ, நீ தேசத்தைப் பாராதபடி
உன் முகத்தை மூடிக்கொள்; இஸ்ரவேல்
வீட்டாருக்கு உன்னை அடையாளமாக்கி
னேன் என்று சொன்னார். எனக்குக் கட் 7
டளையிட்டபடியே நான் செய்தேன், சிறைப்
பட்டுப்போகிறவனைப்போல என் சாமான்
களைப் பகற்காலத்தில் வெளியே வைத்தேன்,
சாயங்காலத்திலே கையிலே சுவரிலேகன்ன
மிட்டு இருட்டானபின்பு அவைகளை
வெளியே கொண்டுபோய் அவர்கள் காண
அவைகளைத் தோளின்மேல் எடுத்துக்
கொண்டு போனேன்.

விடியற்காலத்திலே யெகோவாவின் வார்த் 8
தை எனக்கு வந்தது: மனுஷகுமாரனே, 9
கலக வீட்டாராகிய இஸ்ரவேல் வீட்டார்
உன்னைப் பார்த்து, நீ செய்கிறது என்ன
வென்று உன்னைக் கேட்கவில்லையோ. நீ 10

அவர்களிடம், யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வதைக் கேளுங்கள், இந்தக் கடின வாக்கு எருசலேமில் இருக்கிற அதிபதியையும் அதின் நடுவில் இருக்கிற இஸ்ரவேல் வீட்டாரையும் பற்றியது என்று சொல்.
11 பின்னும் நீ அவர்களிடம்: நான் உங்களுக்கு ஒரு அடையாளம், நான் செய்தது போலவே அவர்களுக்குச் செய்யப்படும், சிறைப்பட்டு
12 அந்திய தேசத்துக்குப் போவார்கள். அவர்கள் நடுவில் இருக்கிற அதிபதி தோளின் மேல் சுமைசுமந்து இருட்டிலே புறப்படுவான், சுமையை வெளியே கொண்டுபோகச் சுவரிலே கன்னமிடுவார்கள்; தேசத்தைக் கண்ணினால் பாராதபடி தன் முகத்தை
13 மூடிக்கொள்வான். நான் என் வலையை அவன்மேல் வீசுவேன், அவன் என் கண்ணியிலே பிடிபடுவான்; அவனைக் கல்தேயர் நாட்டுக்கு, பாபிலோனுக்குக் கொண்டுபோவேன், அங்கே அவன் சாவான், அந்த
14 தேசத்தையோ அவன் பார்ப்பதில்லை. அவனுக்குச் சுற்றிலும் உதவியாக இருக்கிற யாவரையும் அவனுடைய எல்லா ராணுவக் கூட்டத்தையும் நான் சகல திசைகளிலும் சிதறிப்பட்டயத்தை உருவி அவர்களைத் தொடருவேன். அப்படி நான் அவர்களைப் புறஜாதியாருக்குள்ளே தூற்றிப்போட்டு அவர்களை தேசங்களிலே சிதறடிப்பேன்; நானே
15 யெகோவா என்று அப்பொழுது அறிந்துகொள்வார்கள். தாங்கள் போய்ச் சேரும்
16 புறஜாதியாருக்குள்ளே தங்கள் அருவருப்புகளையெல்லாம் அறிவிக்கும்படி, நான் அவர்களில் கொஞ்சப்பேரைப் பஞ்சத்துக்கும் பட்டயத்துக்கும் கொள்ளைநோய்க்கும் தப்பி மீந்திருக்கப்பண்ணுவேன்; நானே யெகோவா என்று அப்பொழுது அறிந்துகொள்வார்கள் என்று சொல் என்றார்.
17 பின்னும் யெகோவாவின் வார்த்தை
18 எனக்கு வந்தது: மனுஷகுமாரனே, நீ உன் ஆகாரத்தை நடுக்கத்தோடே புசித்து, உன் தண்ணீரைத்தயரத்தோடும் விசாரத்தோடும்
19 குடித்து | தேசத்திலுள்ள ஜனங்களோடு பேசி: இஸ்ரவேல் தேசத்திலே எருசலேமில் குடியிருக்கிறவர்களைப்பற்றி யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே, தங்கள் ஆகாரத்தை விசாரத்தோடே புசித்துத் தங்கள் தண்ணீரைத் திகிலோடே குடிப்பார்கள்; அவர்கள் தேசத்தின் சகல குடிகளுடைய கொடுமைகளினிமித்தமும் அதிலுள்ளதெல்லாம் அழியவே அது பாழாகும். குடியேறியிருக்கிற ஊர்கள் வனந்தரங்களாகும், தேசம் பாழாய்ப்போகும், நானே யெகோவா என்று அப்பொழுது அறிந்துகொள்வீர்கள் என்று சொல் என்றார்.

பின்னும் யெகோவாவின் வார்த்தை 21
எனக்கு வந்தது: மனுஷகுமாரனே, நாட் 22
கள் செல்லுகின்றன, தரிசனங்கள் எல்லாம் அவமாயின என்று இஸ்ரவேல் தேசத்திலே உங்களுக்குள் வழங்கும் பழமொழி என்ன? ஆகவே நீ அவர்களோடே பேசி, யெகோவா 23
வாகிய ஆண்டவர் சொல்லுவதைக் கேளுங்கள்: அவர்கள் இனி இஸ்ரவேலிலே இந்தப் பழமொழியைச் சொல்லாதபடி நான் அதை ஒழியப்பண்ணுவேன்; நாட்களும் எல்லாத்தரிசனத்தின் பொருளும் சமீபித்தன என்று அவர்களுக்குச் சொல். இஸ்ரவேல் 24
வீட்டாரின் நடுவிலே எந்தக் கள்ள தரிசனமும் இச்சகமாய்க் குறிசொல்வதும் இனி இரா. யெகோவாவாகிய நான் சொல்ல 25
மனதாயிருக்கிற வார்த்தைகளே யெல்லாம் சொல்லுகிறேன்; அது நிறைவேறும், இனித் தாமதியாது; கலகவீட்டாரே, உங்கள் நாட்களிலேயே ஒரு வார்த்தையைச் சொல்லுவேன், அதை நிறைவேறவும் பண்ணுவேன், இது யெகோவாவின் திருவாக்கு என்று சொல் என்றார்.

பின்னும் யெகோவாவின் வார்த்தை 26
எனக்கு வந்தது: மனுஷகுமாரனே, இஸ்ர 27
வேல் வீட்டார் சொல்லுகிறதைக் கேட்கிறாயா? இதோ, இவன் காண்கிற தரிசனம் நிறைவேற அநேக நாள்செல்லும்; தூரமாயிருக்கிற காலங்களைப்பற்றி இவன் தீர்க்கதரிசனம் சொல்லுகிறான் என்கிறார்களே. ஆதலால் நீ அவர்களோடு பேசி, யெகோவா 28
வாகிய ஆண்டவர் சொல்வதைக் கேளுங்கள்; என் வார்த்தைகளில் ஒன்றுகூடினித் தாமதிப்பதில்லை; நான் சொன்ன வார்த்தை நிறைவேறும், இது யெகோவாவின் திருவாக்கு என்று சொல் என்றார்.

யெகோவாவின் வார்த்தை எனக்கு வந் 13
தது: மனுஷகுமாரனே, தீர்க்கதரிசனம் 2
சொல்லுகிற இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகளுக்குவிரோதமாகநீ தீர்க்கதரிசனம்உரைத்துத் தங்கள் இருதயத்தில் இருப்பதையே தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறவர்களோடு நீ சொல்லவேண்டியது இதுவே: யெகோவாவின் வார்த்தையைக் கேளுங்கள். யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச் 3
சொல்லுகிறார்: தாங்கள் ஒன்றும் தரிசியாதிருந்தும் தங்களுடைய ஆவியினாலேயே ஏவப்பட்டு நடக்கிற மதிகேடான தீர்க்கதரிசிகளுக்கு ஐயோ கேடாம்! இஸ்ரவேலே, 4
உன் தீர்க்கதரிசிகள் பாழான இடங்களி

5 லுள்ள நரிகளைப்போன்றவர்கள். நீங்கள் யெகோவாவின் நாளிலே யுத்தத்தில் நிலை நிற்கும்படி திறப்புகளிலே ஏறினதுமில்லை இஸ்ரவேல் வீட்டாருக்காக அவைகளை
6 அடைத்ததுமில்லை. அவர்கள் யெகோவாவின் திருவாக்கென்று சொல்லிக் கள்ள தரிசனத்தையும் பொய்குறியையும் காண்கிறார்கள், யெகோவா தங்களை அனுப்பாதிருக்கும் தங்கள் வார்த்தைகள் நிறைவேறு
7 மென்று நம்பிக்கையாயிருக்கிறார்கள். நீங்கள் கண்டது கள்ள தரிசனமும் நீங்கள் சொன்னது பொய்குறியுமல்லவோ? நான் உரைக்காதிருந்தும் யெகோவாவின் திருவாக்கு என்று சொல்லுகிறீர்களே.

8 ஆதலால் யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச் சொல்லுகிறார்: நீங்கள் கள்ள வார்த்தையைச் சொல்லிப் பொய்யானதைத் தரிசிக்கிறபடியினால், இதோ, நான் உங்களுக்கு விரோதமாய் வருவேன், இது யெகோ
9 வாவாகிய ஆண்டவரின் திருவாக்கு. கள்ள தரிசனம்கண்டு பொய்குறி சொல்லுகிற தீர்க்கதரிசிகளுக்கு என் கை விரோதமாகும், அவர்கள் என் ஜனத்தின் சபையில் இருப்பதுமில்லை, இஸ்ரவேல் வீட்டாரின் அட்டவணையில் எழுதப்படுவதுமில்லை, இஸ்ரவேல் தேசத்துக்குள் வருவதுமில்லை; நானே யெகோவாவாகிய ஆண்டவரென்று
10 அப்பொழுது அறிந்துகொள்வீர்கள். சமாதானமில்லாதிருந்தும் சமாதானமென்று சொல்லி அவர்கள் என் ஜனத்தை மோசம் போக்குகிறார்கள்; மண் சுவர்கட்டி, இதோ, அதற்கு வெள்ளையடிக்கிறார்கள்.
11 அப்படியெல்லாம் செய்வதினாலேயே, வெள்ளையடிக்கிறவர்களிடம் இதைச் சொல்லிவிடு, அது இடிந்துவிழும், வெள்ளமாக அடிக்கிற மழைபெய்யும். மகா கல்மாரியே நீ சொரிவாய்; பெருங்காற்றே அதை
12 இடித்துவிடு. இதோ, சுவர் விழும்போது, நீங்கள் வெள்ளையடித்தது என்னவாயிற்றென்று உங்களிடம் சொல்லமாட்டார்களா? ஆகவே யெகோவா சொல்வதைக்
13 கேளுங்கள்: என் உக்கிரத்திலே பெருங்காற்றை எழும்பச் செய்வேன், என் கோபத்திலே வெள்ளமாக அடிக்கிற மழையும் என் உக்கிரத்திலே சர்வசங்காரம் செய்யும்
14 பெருங்கல்மாரியும் வரும். நீங்கள் வெள்ளையடித்த சுவரை நான் அப்போது இடித்து, அதின் அஸ்திபாரம் வெளித்தோன்ற அதைத் தரையிலே விழப்பண்ணுவேன்; அது விழும் போது உள்ளே இருக்கிற நீங்கள் சர்வசங்காரமாவீர்கள்; நானே யெகோவா என்று
15 அப்பொழுது அறிந்துகொள்வீர்கள். இவ்விதமாகச் சுவரிலும் அதற்கு வெள்ளையடித்தவர்களிடத்திலும் நான் என் உக்கிரத்தைத் தீர்த்துக்கொண்டு உங்களுக்கு இப்படிச் சொல்வேன்: சுவருமில்லை, அதற்கு
16 வெள்ளையடித்தவர்களுமில்லை; எருசலேமைப்பற்றி தீர்க்கதரிசனஞ்சொல்லிச் சமாதானமில்லாதிருந்தும் அதன் நன்மைக்கெனச் சமாதானத்தைத் தரிசனங் காண்கிற இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகளே இல்லாமற் போவார்கள்; இது யெகோவாவின் திருவாக்கு.

17 மனுஷகுமாரனே, தங்கள் இதயத்திலுள்ளதையே தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிற உன் ஜனத்தின் குமாரத்திகளுக்கு நேராக என் முகத்தைத் திருப்பி, அவர்களுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் உரைத்துச்
18 சொல்லவேண்டியது இதுவே: யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வதைக் கேளுங்கள், ஆத்துமாக்களை வேட்டையாடும்படி சகல மணிக்கட்டுகளிலும் மந்திரத்தாயித்துத்தைத்துக் கட்டிச் சகல தலைகளுக்கும், நெட்டையும் கட்டையுமான வைகளுக்கும், பொருந்தும் தலைமூடிகளைச் செய்கிற தீர்க்கதரிசினிகளுக்கு ஐயோ கேடாம்! நீங்கள் என் ஜனத்திற்குரிய ஆத்துமாக்களை வேட்டையாடி உங்கள் நன்மைக்கென
19 ஆத்துமாக்களை உயிரோடே காத்துக்கொள்வீர்களோ? சில சேரங்கை வாற்கோதுமையையும் அப்பத்துண்டுகளையும் பெறும்படி என்னை என் ஜனத்துக்குள்ளே பரிசுத்தமற்றவராக்குவீர்களோ? பொய்க்குச் செவிகொடுக்கிற என் ஜனத்தினிடம் பொய்சொல்லுகிற சாகத்தகாத ஆத்துமாக்களைக் கொன்று உயிரோடே இருக்கத்தகாத ஆத்துமாக்களைக் காத்துக்கொள்வீர்களோ என்கிறார். இப்படியிருப்பதால் யெகோவாவா
20 கிய ஆண்டவர் இப்படிச் சொல்லுகிறார்: இதோ, நீங்கள் ஆத்துமாக்களைப் பறவைகளைப்போல் வேட்டையாடுகிற உங்கள் தாயித்துகளுக்கு விரோதமாக நான் வந்து, அவைகளை உங்கள் கைகளிலிருந்து பிடுங்கிக் கிழித்து, நீங்கள் பறவைகளைப்போல் வேட்டையாடுகிற ஆத்துமாக்களை நான் விடுதலைபண்ணி | உங்கள் தலைமூடிகளைக்
21 கிழித்து, என் ஜனத்தை உங்கள் கைகளினின்று விடுவிப்பேன்; அவர்கள் இனி வேட்டையாகஉங்கள் கைகளில் அகப்படமாட்டார்கள்; நானே யெகோவா என்று
22 அப்பொழுது அறிந்துகொள்வீர்கள். நான் துன்பப்படுத்தாத நீதிமானின் இருதயத்தைப் பொய்யின் மூலமாய் நீங்கள் துன்பப்படுத்தினபடியினாலும் தெய்வபயமற்றவன் தன்

திய வழியை விட்டுத்திரும்பி என்னில் உயி
ரோடே காக்கப்படாதபடி நீங்கள் அவனைத்
23 தரியப்படுத்தினபடியினாலும் | நீங்கள்
இனிக் கள்ள தரிசனம் காண்பதுமில்லை
குறிசொல்வதுமில்லை, நான் என் ஜனத்தை
உங்கள் கைகளினின்று விடுவிப்பேன்;
நானே யெகோவா என்று அப்பொழுது
அறிந்துகொள்வீர்கள்.

**14** இஸ்ரவேல் மூப்பரில் சிலர் என்னிடம்
வந்து, எனக்கு முன்பாக உட்கார்ந்தார்கள்.
2 அப்பொழுது யெகோவாவின் வார்த்தை
3 எனக்கு வந்தது: மனுஷகுமாரனே, இந்த
மனுஷர் தங்கள் கேவலமான விக்கிரகங்
களுக்குத் தங்கள் இருதயத்திலே இடங்
கொடுத்துத் தங்களை அக்கிரமத்திலே இடறி
விழச் செய்கிறவைகளைத் தங்கள் முகத்
துக்கு எதிராக வைத்துக்கொண்டிருக்கிறார்
களே; இவர்கள் என்னிடம்வந்து விசாரிக்க
4 இடங்கொடுப்பேனோ? நீ அவர்களோடே
பேசி இப்படிச்சொல், யெகோவாவாகிய
ஆண்டவர் சொல்வதைக்கேளுங்கள்: இஸ்ர
வேல் வீட்டாரிலே தன்னுடைய கேவல
மான விக்கிரகங்களுக்குத் தன் இருதயத்
திலே இடங்கொடுத்து, தன்னை அக்கிரமத்
திலே இடறிவிழச்செய்கிறவைகளைத் தன்
முகத்துக்கு எதிராக வைத்துக்கொண்டிருக்
கிற எவனாகிலும் தீர்க்கதரிசியினிடம் வந்
தால் யெகோவாவாகிய நான் அவனுடைய
பல கேவல விக்கிரகங்களுக்குத் தக்கபடியே
5 பதில்கொடுப்பேன்; இப்படியாக நான் இஸ்ர
வேல் வீட்டாரின் இருதயங்களில் படும்படி
செய்வேன். அவர்கள் எல்லாரும் தங்கள்
கேவலமான விக்கிரகங்கள் மூலமாக என்னை
6 விட்டு விலகிப்போனார்களே. ஆதலால் நீ
இஸ்ரவேல் வீட்டாரோடு பேசி, யெகோவா
வாகிய ஆண்டவர் இப்படிச்சொல்லுகிறார்:
திரும்புங்கள், உங்கள் கேவலமான விக்கிர
கங்களை விட்டுத்திரும்புங்கள்; உங்கள் சகல
அருவருப்புகளையும் விட்டு உங்கள் முகங்
7 களைத் திருப்புங்கள். இஸ்ரவேல் வீட்டாரி
லும் இஸ்ரவேலில் தங்குகிற அந்நியரிலும்
என்னை விட்டுவிலகித் தன் கேவலமான
விக்கிரகங்களுக்குத் தன் இருதயத்தில்
இடங்கொடுத்துத் தன் அக்கிரமத்திலே
இடறிவிழச் செய்கிறவைகளைத் தன் முகத்
துக்கு எதிரே வைத்துக்கொண்டிருக்கிற
எவனாகிலும் என்னிடம் விசாரித்துக்
கொள்ள தீர்க்கதரிசியினிடத்தில் வந்தால்,
அவனுக்கு யெகோவாவாகிய நானே பதில்
8 கொடுப்பேன்; அந்த மனுஷனுக்கு விரோத
மாக என் முகத்தைத்திருப்பி, அவனை
அடையாளமாகவும் பழமொழியாகவும்
வைத்து, அவனை என் ஜனத்தின் நடுவில்
இராதபடி அழித்துவிடுவேன்; நானே
யெகோவா என்று அப்பொழுது அறிந்து
கொள்வீர்கள். ஒரு தீர்க்கதரிசி மருண்டு 9
ஒரு வார்த்தையைச் சொல்வானானால் அந்த
தீர்க்கதரிசியை யெகோவாவாகிய நானே
மருளப்பண்ணினேன்; நான் அவனுக்கு
விரோதமாக என் கையை நீட்டி, அவனை
இஸ்ரவேல் ஜனத்தின் நடுவில் இராதபடிக்கு
அழிப்பேன். அவர்கள் தங்கள் குற்றத் 10
தைச் சுமப்பார்கள்; விசாரிக்க வந்தவனு
டைய குற்றம் எப்படியோ அப்படியே
தீர்க்கதரிசியின் குற்றமும் இருக்கும். அப் 11
பொழுது இஸ்ரவேல்வீட்டார் இனி என்னை
விட்டு வழிதப்பமாட்டார்கள்; தங்கள்
எல்லா துரோகங்களினாலும் இனித்தங்களை
அசுத்தப்படுத்திக் கொள்ளமாட்டார்கள்,
அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான்
அவர்கள் கடவுளாயிருப்பேன்; இது யெகோ
வாவின் திருவாக்கு என்று சொல் என்றார்.
யெகோவாவின் வார்த்தை எனக்கு வந் 12
தது: மனுஷகுமாரனே, ஒருதேசம் எனக்கு 13
விரோதமாய்த் துரோகம் பண்ணிக்கொண்
டேயிருந்து பாவஞ் செய்யவே, நான் அதற்கு
விரோதமாக என் கையை நீட்டி ஆகாரம்
என்னும் பிராணதாங்கியை முறித்து அதில்
பஞ்சத்தை அனுப்பி மனுஷரையும் மிருகங்
களையும் அதில் இராதபடி அழிக்கும்
போது | நோவா, தானியேல், யோபு என் 14
னும் இந்த மூன்றுபேரும் அதின்நடுவில்
இருந்தாலும் அவர்கள் தங்கள் நீதியினால்
தங்கள் ஆத்துமாக்களைமாத்திரமே தப்புவிப்
பார்கள்; இது யெகோவாவாகிய ஆண்ட
வரின் திருவாக்கு. நான் தேசத்தில் துஷ்ட 15
மிருகங்களை அனுப்பி நிர்மூலம்செய்வதினால்
அது குடியற்றதாகி, மிருகங்களுக்குப்பயந்து
எவரும் அதில் நடவாதபடி அது பாழாகும்
போது | அந்த மூன்றுபேரும் அதின் நடு 16
வில் இருந்தாலும்—என் ஜீவன்மேல் ஆணை
யாகச்சொல்லுகிறேன், இது யெகோவா
வாகிய ஆண்டவரின் திருவாக்கு,—தாங்கள்
மாத்திரம் தப்புவார்களேயல்லாமல் குமார
ரையாகிலும் குமாரத்திகளையாகிலும் தப்பு
விக்கமாட்டார்கள், தேசம் பாழாகவே
போகும். நான் அந்த தேசத்தின்மேல் 17
பட்டயத்தை வரப்பண்ணி, பட்டயமே,
தேசத்தின் நடுவே செல் என்று சொல்லி,
அதிலுள்ள மனுஷரையும் மிருகங்களையும்
அழிப்பேனானால் | அச்சமயத்தில் அந்த 18
மூன்றுபேரும் அதின் நடுவில் இருந்தா
லும்—என் ஜீவன்மேல் ஆணையாகச் சொல்

லுகிறேன், இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு—தாங்கள்மாத்திரம் தப்புவார்களேயல்லாமல், குமாரரையாகிலும் குமாரத்திகளையாகிலும் தப்புவிக்கமாட்டார்
19 கள். நான் அந்த தேசத்தில் கொள்ளை நோயை அனுப்பி, அதிலுள்ள மனுஷரையும் மிருகங்களையும் அழிக்கும்படி இரத்தம் சிந்த என் உக்கிரத்தை ஊற்றுவேனுமானால்,
20 அச்சமயத்தில் நோவாவும் தானியேலும் யோபும் அதின் நடுவில் இருந்தாலும்—என் ஜீவன்மேல் ஆணையாகச்சொல்லுகிறேன், இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு—அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களைமாத்திரம் தப்புவிப்பார்களேயல்லாமல், குமாரனையாகிலும் குமாரத்தியை
21 யாகிலும் தப்புவிக்கமாட்டார்கள். யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வதைக்கேளுங்கள்: நான் மனுஷரையும் மிருகங்களையும் அழிக்கும்படி எருசலேமுக்கு விரோதமாகப் பட்டயம், பஞ்சம், துஷ்டமிருகங்கள், கொள்ளைநோய் என்னும் எனது நான்கு கொடிய தீர்ப்புகளையும் அனுப்பும்போது
22 எப்படியாகும்! ஆகிலும், இதோ, அதிலே தப்பிமீந்த சிலர் இருப்பார்கள், குமாரரும் குமாரத்திகளுமாக வெளியே கொண்டுவரப்படுவார்கள்; இதோ, அவர்கள் அங்கிருந்து உங்களண்டைக்கு வருவார்கள்; அப்பொழுது நீங்கள் அவர்கள் நடத்தையையும் அவர்கள் செய்கைகளையும்கண்டு, நான் எருசலேமின்மேல் வரப்பண்ணின தீங்கின் விஷயமாய், அதின்மேல் நான் வரப்பண்ணின எல்லாவற்றின் விஷயமாகவும்
23 தேற்றப்படுவீர்கள். நீங்கள் காணும் அவர்கள் நடத்தையும் அவர்கள் செய்கையுமே நீங்கள் தேற்றப்படுவதற்குக் காரணமாகும்; நான் அதிலே செய்த எல்லாவற்றையும் காரணமின்றிச் செய்யவில்லையென்று அப்பொழுது அறிந்துகொள்வீர்கள், இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு என்று சொன்னார்.

**15** யெகோவாவின் வார்த்தை எனக்கு வந்
2 தது: மனுஷகுமாரனே, காட்டுச்செடிகளில் ஒன்றுகிய திராட்சச்செடி மற்றச்செடிகளைப் பார்க்கிலும் எவ்விஷயத்தில் மேன்மையுள்
3 ளது? யாதொரு வேலைசெய்ய அதிலே ஒரு கட்டை எடுப்பார்களா? ஏதாவது தட்டுமுட்டைத் தொங்க வைக்கும்படி ஒரு முளையை அதினால் செய்வார்களோ?
4 இதோ, நெருப்பில் எரிவதற்கே அது போடப்பட்டது, அதின் இரண்டு முனைகளையும் அக்கினி எரித்துப்போட்டது, அதின் நடுத்துண்டும் கரிந்துபோயிற்று; அது எந்த வேலைக்காவது உதவுமோ? இதோ, அது 5
சேதமாகாதிருக்கும்போதே ஒரு வேலைக்கும் உதவாதிருக்க, அக்கினி அதை எரித்து அது கரிந்துபோனபின்பு அது இனி ஒரு வேலைக்கு உதவுவதெப்படி?

ஆதலால், யெகோவாவாகிய ஆண்டவர் 6
இப்படிச் சொல்லுகிறார்: காட்டுச்செடிகளில் ஒன்றுகிய திராட்சச்செடியை நான் நெருப்பு எரிப்பதற்கு ஒப்புக்கொடுத்தது போல எருசலேமின் குடிகளையும் ஒப்புக்கொடுப்பேன்; என் முகத்தை அவர்களுக்கு 7
விரோதமாகத் திருப்புவேன்; அவர்கள் அக்கினியிலிருந்து தப்பினார்கள், அக்கினியோ அவர்களைப் பட்சிக்கும்; இப்படியாக நான் என் முகத்தை அவர்களுக்கு விரோதமாய்த் திருப்பும்போது நானே யெகோவா என்று அறிந்துகொள்வீர்கள். அவர்கள் 8
துரோகம்பண்ணினபடியினால் நான் தேசத்தைப் பாழாக்கிவிடுவேன், இது யெகோவாவின் திருவாக்கு.

**16** யெகோவாவின் வார்த்தை எனக்கு வந்
2 தது: மனுஷகுமாரனே, நீ எருசலேமின் அருவருப்புகளை அதற்குத்தெரியக்காட்டி |
3 இப்படிச் சொல்: யெகோவாவாகிய ஆண்டவர் எருசலேமுக்குச் சொல்வதைக் கேளுங்கள்; கானான் தேசமே நீ உற்பத்தியாகிப் பிறந்த இடம், உன் தகப்பன் எமோ
4 ரியன், உன் தாய் ஏத்திய ஸ்திரீ; நீ பிறந்த விவரம் இதுவே, நீ பிறந்தநாளிலே உன் தொப்புள் அறுக்கப்படவில்லை, நீ சுத்தமாவதற்குத் தண்ணீரில் குளிப்பாட்டப்படவில்லை, உப்புக்கலந்து தேய்க்கப்படவில்லை, துணிகளில் சுற்றப்படவில்லை. உனக்கா 5
கப் பரிதபித்து உன்னைக் கண்ணோக்கி இவற்றில் ஒன்றையும் எவரும் உனக்குச் செய்ததுமில்லை, உனக்கு இரக்கங்காட்டினதுமில்லை; நீ அருவருக்கப்பட்டதினால் பிறந்த நாளில் வெளியில் எறிந்துவிடப்பட்டாய்.
நான் உன் பக்கமாய் நடந்துபோகும்போது, 6
காலை உதறிக்கொண்டு நீ உன் இரத்தத்திலே கிடக்கிறதைக்கண்டு, இரத்தத்தில் கிடக்கிற நீ பிழைத்திருப்பாய் என்று உனக்குச் சொன்னேன்; ஆம், இரத்தத்தில் கிடக்கிற 7
நீ பிழைத்திருப்பாய்; வயலில் மூளைப்பவைகளைப்போல உன்னை லக்ஷக்கணக்காய்ப் பெருகப்பண்ணுவேன் என்று உனக்குச் சொன்னேன்; நீ வளர்ந்து பெரியவளாகி மகா சௌந்தரியவதியானாய், உன் ஸ்தனங்கள் எழும்பின, உன் மயிர் வளர்ந்தது, ஆனாலும், நீ நிர்வாணமும் அம்மணமுமா

8 யிருந்தாய். நான் உன் பக்கமாய் நடந்து போனபோது உன்னைப் பார்த்தேன், இதோ, நீ பருவகாலப் பிராயமாயிருந்தாய்; அப் பொழுது என் வஸ்திரத்தை உன்மேல் விரித்து உன் நிர்வாணத்தைமூடி, உனக்கு ஆணையிட்டுக் கொடுத்து உன்னோடு உடன் படிக்கை செய்துகொண்டேன் — இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு — இவ்விதமாக நீ என்னுடையவளானாய். 9 நான் உன்னை நீரில் முழுக்காட்டி உன்னை இரத்தமற ஸ்நானம் பண்ணுவித்து, உனக்கு 10 எண்ணெய் பூசினேன்; பலநிறச் சித்திரத் தையலாடையை உனக்கு உடுத்தித் தகசுத் தோல் பாதரட்சைகளை உனக்குத் தரித்து மெல்லிய வஸ்திரம் சுற்றிக்கட்டி மூடிக் கொள்ளப் பட்டுச் சால்வையையும் உனக் 11 குக் கொடுத்தேன்; உன்னை ஆபரணங்க ளால் அலங்கரித்து, உன் கைகளிலே கட கங்களையும் உன் கழுத்திலே சரப்பணியை 12 யும் போட்டேன்; உன் மூக்கில் மூக்குத்தி யையும் உன் காதுகளில் காதணியையும் உன் தலையின்மேல் அழகிய கிரீடத்தையும் 13 தரித்தேன். பொன்னிலும் வெள்ளியி லும் நீ அலங்கரிக்கப்பட்டாய், உன் உடை மெல்லியதுணியும் பட்டும் பலநிறச் சித்திரத் தையலாடையுமாயிருந்தது; மெல் லிய மாவையும் தேனையும் நெய்யையும் சாப் பிட்டாய்; நீ மிகவும் பேரழகுள்ளவளாகி ராணியாகும் லௌக்கியத்தையும் பெற்றாய். 14 உன் அழகினாலே உன் கீர்த்தி புறஜாதிகளுக் குள்ளே பிரசித்தமாயிற்று; நான் உன்மேல் வைத்த என் மகிமையினாலே அது பூரணமா யிற்று; இது யெகோவாவாகிய ஆண்டவ ரின் திருவாக்கு.

15 நீயோ உன் அழகில் நம்பிக்கை வைத் துக் கீர்த்தியினிமித்தம் சோரமார்க்கமாய் நடந்து வழிப்போக்கரில் எவனேடும் வேசி த்தனம்பண்ணினாய்; அது அவனவனுக்கே 16 உரியது. உன் வஸ்திரங்களில் சிலவற்றை எடுத்துப் பலவருண மேடைகளை உனக்கு உண்டாக்கி அவைகளின்மேல் வேசித்த னம் பண்ணினாய்; அப்படிப்பட்ட காரியங் கள் ஒருக்காலும் சம்பவித்ததுமில்லை, சம் 17 பவிப்பதுமில்லை. நான் உனக்குக் கொடுத்த என் பொன்னும் என் வெள்ளியுமான உன் அழகிய ஆபரணங்களை நீ எடுத்து, உனக்கு ஆண் சொரூபங்களைச் செய்து அவைகளோடு வேசித்தனம் பண்ணி 18 னாய்; உன் சித்திரத் தையலாடைகளை எடுத்து அவைகளை மூடி, என் எண் ணெயையும் என் தூபவர்க்கத்தையும் அவைகளின்முன் படைத்தாய்; நான் உனக்குக் கொடுத்த என் ஆகாரத்தை — நீ 19 சாப்பிடும்படி உனக்கு மெல்லிய மாவை யும் நெய்யையும் தேனையும் கொடுத்தேன் —, நீ அவைகளின்முன் சுகந்த வாசனையாகப் படைத்தாய், ஆம், இப்படித்தான் ஆயிற்று, இது யெகோவாவாகிய ஆண்டவரின் திரு வாக்கு. நீ எனக்கெனப் பெற்ற உன் குமா 20 ரரையும் உன் குமாரத்திகளையும் எடுத்து அவர்களை அவைகளுக்கு இரையாகப் பலி யிட்டாய். நீ செய்த வேசித்தனங்கள் போ 21 தாதா? என் பிள்ளைகளையும் அவைகளுக்கு அக்கினிதகனமாகப்படைத்து அவர்களைக் கொன்றுவிட்டாயே. நீ உன் எல்லா அரு 22 வருப்புகளிலும் வேசித்தனங்களிலும் நடந்து கொண்டிருக்கையில் உன் சிறு வயதின் நாட் களை நினையாமற்போனாய், அக்காலத்தில் நீ நிர்வாணமும் அம்மணமுமாயிருந்து உன் இரத்தத்திலே காலை உதறிக்கொண்டிருந் தாய். நீ செய்த இந்தத் தீங்குகளுக்கெல் 23 லாம் மேலாக — ஐயோ, ஐயோ உனக்குக் கேடாம்! இது யெகோவாவின் திருவாக்கு — நீ உனக்குப் பீடங்களைக் கட்டிச் சகல வீதி 24 வெளிகளிலும் உனக்குப் பூஜை மேடைகளை யமைத்தாய். நீ சகல வழிச் சந்துகளிலும் 25 உன் பூஜைமேடைகளைக் கட்டி, உன் அழ கை அருவருப்பாக்கி, வழிப்போக்கர் யாவ ருக்கும் உன் கால்களை விரித்து மிகவும் அதி கமாய் வேசித்தனம்பண்ணினாய். தடிய 26 ரான உன் அயல் தேசத்தாராகிய எகிப்திய புத்திரரோடே வேசித்தனம் பண்ணி எனக் குக் கோபம் உண்டாகும்படி மிகவும் அதி கமாய் வேசித்தனம் பண்ணினாய். ஆதலால், 27 இதோ, நான் என் கையை உனக்கு விரோ தமாக நீட்டி, உனக்குரிய ஆகாரத்தைக் குறைத்து, உன் முறைகேடான நடத்தை யைப்பற்றி வெட்கப்பட்ட உன் பகையாளி களாகிய பெலிஸ்திய குமாரத்திகளின் இஷ் டத்துக்கு உன்னை ஒப்புக்கொடுத்தேன். நீ 28 திருப்தியடையாததினால் அசிரிய புத்திரரோ டும் வேசித்தனம்பண்ணினாய்; அவர்களோ டே வேசித்தனம்பண்ணியும் நீ திருப்தி யடையவில்லை. உன் வேசித்தனத்தை வர்த் 29 தகதேசமாகிய கல்தேயாமட்டும் பெருகி எட்டச்செய்தாய்; அப்படிச்செய்தும் நீ திருப்தியடையாமற்போனாய். உன் மோக 30 விகாரத்தை என்ன சொல்ல! இது யெகோ வாவின் திருவாக்கு. மானங்கெட்ட வேசி யே செய்யும் இக்காரியங்களையெல்லாம் நீ செய்து | சகல வழிச் சந்தியிலும் உன் 31 பீடங்களைக் கட்டி சகல வீதி வெளிகளிலும் உன் பூஜை மேடைகளையமைத்தாயே; நீ பணயத்தை அசட்டை செய்கிறதினால்

32 வேசியைப்போன்றவளுமல்ல; நீ விபசார
மனையாள், புருஷனுக்குப் பதிலாக அந்திய
33 ரைச் சேர்த்துக்கொள்பவள். எல்லா வேசி
களுக்கும் பணயங்கொடுக்கப்படுகிறது;
நீயோ உன் நேசர்களுக்கெல்லாம் பணயங்
கொடுக்கிறாய்; சுற்றுப்புறங்களிலிருந்து
உன்னிடம் வேசித்தனஞ்செய்ய வரும்படி
34 அவர்களுக்கு நன்கொடையளிக்கிறாய். இவ்
விதமாய் நீ வேசித்தனம் செய்வதில் மற்ற
ஸ்திரீகளுக்கு நேர்மாறாய்ச் செய்கிறாய்;
வேசித்தனம் பண்ண உன்னைத் தேடி வரு
கிறதில்லை, நீ பணயம் பெறுகிறதில்லை, நீயே
பணயத்தைக் கொடுக்கிறாய், இது நேர்மாறு
னது!
35 ஆகவே வேசியே, யெகோவாவின் வார்த்
36 தையைக் கேள். யெகோவாவாகிய ஆண்
டவர் இப்படிச் சொல்லுகிறார்: நீ நாண
மற்றவளாய் உன் நேசரோடு விபசாரஞ்
செய்து உன் நிர்வாணத்தைக் காட்டினாய்,
அருவருப்பாகிய உன் சகல கேவலமான
விக்கிரகங்களையும் தொழுதவந்தாய், இவை
களுக்கு உன் பிள்ளைகளைப் படைத்து இரத்
37 தத்தைச் சிந்தினாய். இதினிமித்தம், இதோ, நீ
இஷ்டமாயிருந்த உன் நேசரனைவரையும், நீ
நேசித்தவரையும் வெறுத்தவரையும், நான்
கூடி வரச்செய்வேன்; சுற்றிலுமிருந்து அவர்
களை உனக்கு விரோதமாகக் கூட்டிச்சேர்த்து
உன் நிர்வாணத்தைக் காட்டுவேன், அவர்
கள் உன் நிர்வாணத்தையெல்லாம் காண்
38 பார்கள். விபசாரிகளையும் இரத்தஞ் சிந்தின
பெண்களையும் தீர்க்கிறபடியே உன்னை நியா
யந்தீர்த்து உக்கிரத்திலும் எரிச்சலிலும் இர
39 த்தத்தைச் சிந்துவேன். உன்னை அவர்கள்
கையில் ஒப்புக்கொடுப்பேன், அவர்கள் உன்
பீடங்களை இடித்து உன் பூஜை மேடைக
ளைத் தகர்த்து உன் வஸ்திரங்களை உரிந்து
உன் அழகிய ஆபரணங்களை எடுத்துக்கொ
ண்டு உன்னை அம்மணமும் நிர்வாணமுமாக
40 விட்டுப்போவார்கள்; அவர்கள் உனக்கு
விரோதமாகச் சபை கூடிவரச்செய்து உன்
னைக் கல்லெறிந்து உன்னைத் தங்கள் பட்ட
41 யங்களால் வெட்டிப்போடுவார்கள்; உன்
வீடுகளை அக்கினியால் சுட்டெரித்து
அநேக ஸ்திரீகளின் கண்களுக்கு முன்பாக
உன்னை நியாயந்தீர்ப்பார்கள்; உன் வேசித்
தனத்தை ஒழியப்பண்ணுவேன், நீ இனிப்ப
42 ணயங்கொடுப்பதுமில்லை. இவ்விதமாக உன்
மேலுள்ள என் உக்கிரத்தை ஆற்றிக்கொள்
வேன், என் எரிச்சல் உன்னைவிட்டு நீங்கும்,
இனி கோபங்கொள்ளாமல் அமர்ந்திருப்
43 பேன். நீ உன் இளவயதின் நாட்களை நினை
யாமல் இவைகளெல்லாவற்றினாலும் என்
கோபத்தை எழுப்பினபடியினால், இதோ,
நான் உன் வழிகளின்படியே உன் தலையின்
மேல் வரப்பண்ணுவேன்; இது யெகோவா
வாகிய ஆண்டவரின் திருவாக்கு. அதினாலே
இனி உன் எல்லா அருவருப்புகளோடும்
இந்த முறைகேட்டையும் செய்யமாட்
டாய்.
44 இதோ, பழமொழி வழங்குகிறவர்கள்
எல்லாரும், தாயைப்போல மகள் என்று
உன்னைப்பற்றிப் பழமொழி சொல்லுவார்
45 கள். நீ புருஷனையும் பிள்ளைகளையும் அ
ரோசித்த உன் தாய்க்கு மகள்; நீ தங்கள்
புருஷரையும் பிள்ளைகளையும் அருவருத்த
உன் சகோதரிகளுக்குச் சகோதரி, உங்கள்
தாய் ஏத்திய ஸ்திரீ, உங்கள் தகப்பன் எமோ
ரியன். தானும் தன் குமாரத்திகளுமாய்
46 உனக்கு வடபக்கத்தில் குடியிருந்த சமாரியா
உன் தமக்கை; தானும் தன் குமாரத்திகளு
மாய் உனக்குத் தென்பக்கத்தில் குடியிருந்த
சோதோம் உன் தங்கை. எனினும் நீ அவர்
47 கள் வழிகளிலே நடப்பதும் அவர்கள்
அருவருப்புகளின்படி செய்வதும் போதா
தென்று அவர்களைப்பார்க்கிலும் அதிகக்
கேடாய் உன் சகல வழிகளிலும் நடந்தாய்.
48 என் ஜீவன்மேல் ஆணையாகச் சொல்லுகிறே
ன், — இது யெகோவாவாகிய ஆண்டவரின்
திருவாக்கு — நீயும் உன் குமாரத்திகளும் செ
ய்ததுபோல உன் சகோதரியாகிய சோதோ
மும் அவள் குமாரத்திகளும் செய்யவேயில்லை.
49 உன் சகோதரியாகிய சோதோமின் குற்றம்
இதுவே: மேன்மை, செழிப்பு, அமைதியான
சுகவாழ்வு இவை அவளுக்கும் அவள் குமா
ரத்திகளுக்கும் இருந்தும் சிறுமையும் எளி
மையுமானவனுக்கு உதவி செய்யவில்லை.
50 அவர்கள் பெருமைபாராட்டி எனக்கு அரு
வருப்பானதைச் செய்தார்கள்; அதை நான்
கண்டபோது அவர்களை நீக்கிவிட்டேன்.
51 நீ செய்த பாவங்களில் அரைவாசியும் சமா
ரியா செய்யவில்லை; நீ உன் சகோதரிகளைப்
பார்க்கிலும் மிகவும் அதிகமான அருவருப்பு
களைச்செய்தாய்; நீ செய்த உன் சகல அரு
வருப்புகளினாலும் அவர்களை நீதியுள்ளவர்க
ளென்று விளங்கப்பண்ணினாய். இப்போ
52 தும் உன் சகோதரிகளைக் குற்றமற்றவர்க
ளாகத்தீர்த்த நீ உன் இலச்சையைச் சுமந்
துகொள்; அவர்களைப் பார்க்கிலும் நீ செய்த
உன் அருவருப்பான பாவங்களினாலே உன்
னிலும் அவர்கள் நீதியுள்ளவர்களாக விளங்
குகிறார்கள்; நீயோ, உன் சகோதரிகளை நீதி
யுள்ளவர்களாக விளங்கப்பண்ணினபடி
யால், வெட்கி உன் இலச்சையைச் சுமந்து
கொள். ஆகவே நான் இவர்களுடைய
53

துன்பநிலைமையை—சோதோம் அவள் குமாரத்திகள் இவர்கள் துன்பநிலைமையையும், சமாரியா அவள் குமாரத்திகள் இவர்கள் துன்பநிலைமையையும்—மாற்றுவேன், உன் துன்பநிலைமையையும் அவர்கள் நடுவில் 54 மாற்றுவேன். மாற்றவே, நீ உன் இலச்சையைச்சுமந்து, நீ செய்த எல்லாவற்றிலும் வெட்கமடைவாய், நீ அவர்கள் மனது 55 ஆறும்படி செய்தாயே. உன் சகோதரிகளாகிய சோதோமும் அவள் குமாரத்திகளும் தங்கள் முன்னிலைமைக்குத் திரும்புவார்கள்; சமாரியாவும் அவள் குமாரத்திகளும் தங்கள் முன்னிலைமைக்குத் திரும்புவார்கள், நீயும் உன் குமாரத்திகளும் உங்கள் முன்னிலைமைக்குத் திரும்புவீர்கள். 56 நீ மேன்மையாயிருந்தகாலத்தில் உன் சகோ 57 தரியாகிய சோதோமின் பேரை உன் வாயால் சொன்னதில்லை; அக்காலத்தில் உன் தீமை இன்றையதினம்போல் வெளிப்படவில்லை. இப்பொழுதோ சீரியாவின் குமாரத்திகளுக்கும் அவளுக்குச் சுற்றிலும் இருக்கிறயாவருக்கும் பெலிஸ்தியரின் குமாரத்திகளுக்கும் நிந்தையாயிருக்கிறாய், அவர்கள் சுற்றி 58 லும் உன்னை நிந்திக்கிறார்களே. இப்பொழுதோ, உன் முறைகேட்டையும் உன் அருவருப்புகளையும் நீ சுமப்பாய்; இது யெகோவாவின் திருவாக்கு.

59 யெகோவா சொல்வதைக் கேளுங்கள்: ஆணையை அசட்டைபண்ணி உடன்படிக்கையை முறித்த நீ செய்ததுபோலவே 60 நானும் உனக்குச் செய்வேன். ஆகிலும் உன் இளவயதில் உன்னுடே நான் செய்த உடன்படிக்கையை நினைத்து, நித்திய உடன்படிக்கையை உனக்கு ஏற்படுத்துவேன். 61 அப்பொழுது உன் தமக்கைகளையும் உன் தங்கைகளையும் நீ சேர்த்துக்கொள்ளுகையில் உன் வழிகளை நினைத்து நாணுவாய்; அவர்களை நான் உனக்குக் குமாரத்திகளாகக் கொடுப்பேன்; உன்னுடைய உடன்படிக் 62 கையைப் பார்த்துக் கொடுப்பதில்லை. உன்னுடே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன், நானே யெகோவா என்று அப் 63 பொழுது அறிந்துகொள்வாய். நீ செய்த எல்லாவற்றையும் நான் மன்னித்தருளும்போது நீ நினைத்து வெட்கி நாணங்கொண்டு உன் வாயை இனித் திறவாதிருப்பாய், இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு என்கிறார்.

**17** யெகோவாவின் வார்த்தை எனக்கு வந் 2 தது: மனுஷகுமாரனே, நீ இஸ்ரவேல் வீட்டாருக்கு ஒரு விடுகதையையும் உவமையையும்கூறி | இப்படிச் சொல்: யெகோவா 3 வாகிய ஆண்டவர் சொல்வதைக் கேளுங்கள், ஒரு பெரிய கழுகு லீபனோனுக்கு வந்தது, அது பெரிய செட்டைகளையும் நீளமான இறகுகளையும் உடையது, பல வருணத்தாவிகள் நிறைந்தது; அது ஒரு கேதுருவின் நுனிக்கிளையைப் பிடித்து | அதின் 4 இளங்கிளையிலுள்ள கொழுந்துகளைக் கொய்து, அதை வர்த்தகதேசத்துக்குக் கொண்டுபோய் அதை வியாபாரிகளின் நகரத்திலே போட்டது; தேசத்தின் விதைமுளைகளில் 5 ஒன்றை எடுத்து, அதைப் பயிர் நிலத்திலே போட்டு, அதை எடுத்து மிகுந்த தண்ணீர் ஓரத்திலே அலரிச்செடிகளோடே நட்டது. அது துளிர்த்துக் குறுகிவளர்ந்து படரும் 6 திராட்சச்செடியாயிற்று, அதின் கொடிகள் அந்தக் கழுகுக்கு நேராகவும் அதின் வேர்கள் அதின் கீழாகவும் இருந்தன; இவ்விதமாய் அது திராட்சச் செடியாகிக் கிளைகளை விசிக் கொப்புகளை விட்டது. அன்றியும் 7 பெரிய செட்டைகளையும் மிகுந்த இறகுகளையும் உடைய வேறொரு பெரிய கழுகு இருந்தது; இதோ, தனக்கு அதிகமான தண்ணீர் பாய்ச்சும்படி அந்தத் திராட்சச்செடி தன் நடவு பாத்தியிலிருந்து இந்தப் பெருங் கழுகுக்கு நேராகத் தன் வேர்களைவிட்டு அதற்கு நேராகத் தன் கொடிகளை வீசினது. அது நடப்பட்டிருந்த இடம் நல்ல நிலம், 8 அங்கேயும் தண்ணீர்க்குக் குறைவில்லை; கொப்புகளைவிட்டுக் கனியைத்தந்து சிறந்த திராட்சச்செடியாகிறதற்கு ஏதுவான இடமே. நீ அவர்களுக்குச் சொல்லவேண் 9 டியது இதுவே, யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வதைக் கேளுங்கள், இது செழிக்குமா? ஒருவன் இதின் வேர்களைப்பிடுங்கி இதின் கனியை வெட்டிவிடமாட்டானோ? அப்படிச் செய்தால் அது பட்டுப்போமே, துளிர்த்த எல்லா இலைகளோடும் இது பட்டுப்போகும்; இதை வேரோடே பிடுங்குவதற்கு பலத்த புயத்தோடும், திரண்ட ஜனத்தோடும் வரத்தேவையில்லை. இதோ, நடப் 10 பட்டிருந்தும் இது செழிக்குமோ? கீழ்காற்று இதின்மேல் படும்போது இது வாடி உலர்ந்துபோகாதோ? இது மூளைத்திருக்கும் பாத்திகளிலே வாடிப்போமே என்கிறார்.

பின்பு யெகோவாவின் வார்த்தை எனக்கு 11 வந்தது: இப்போதும் இவைகளின் தாற்பரி 12 யம் தெரிகிறதா என்று நீ கலக வீட்டாரைக் கேட்டு அவர்களுக்கு இதைச்சொல்: இதோ, பாபிலோன் ராஜா எருசலேமுக்கு வந்து, அதின் ராஜாவையும் அதின் அதிபதிகளையும் பிடித்து அவர்களை பாபிலோனுக்

குத் தன்னிடம் கொண்டுபோகும்போது |
13 அவன் ராஜ வம்சத்திலே ஒருவனைத் தெரிந்
தெடுத்து அவனுடனே உடன்படிக்கைசெய்து
அவனை ஆணைப் பிரமாணத்துக்கு உட்படுத்
தினான்; தேசத்தின் பெரியோரைக் கொண்டு
14 போய்விட்டான். ராஜ்யம் தாழ்ந்திருக்க
வேண்டுமென்றும், அது தன்னை உயர்த்தா
திருக்கவேண்டுமென்றும், தன் உடன்படிக்
கையைக் கைக்கொண்டு நிலைத்திருக்கவேண்
15 டுமென்றும் இப்படிச் செய்தான். இவனோ
அவனுக்கு விரோதமாய்க் கலகஞ்செய்து,
தனக்குக் குதிரைகளையும் அநேக ஆட்களை
யும் கொடுக்கவேண்டுமென்று தன் ஸ்தானா
திபனை எகிப்துக்கு அனுப்பினான்; இப்
படிப்பட்டவன் சித்திபெறுவானோ? இப்
படிச் செய்கிறவன் தப்பித்துக்கொள்வானோ?
உடன்படிக்கையை முறித்துத் தப்பித்துக்
16 கொள்வானோ? என் ஜீவன்மேல் ஆணையாகச்
சொல்லுகிறேன்—இது யெகோவாவாகிய
ஆண்டவரின் திருவாக்கு—தன்னை ராஜா
வாக ஏற்படுத்திய ராஜாவின் ஆணையை
அசட்டைசெய்து அவன் உடன்படிக்
கையை முறித்துப்போட்டவன், அந்த
ராஜாவின் ஸ்தானமாகிய பாபிலோனின்
நடுவிலேயே அவனண்டையில் இருந்து
17 மரணமடைவான். அவன் அநேக ஜனங்
களை அழிக்கும்படி மண் மேடுகளைப்போட்
டுக் கொத்தளங்களைக் கட்டும்போது பார்
வோன் பெரிய சேனையோடும் திரள் கூட்டத்
தோடும் வந்து இவனுக்காக யுத்தத்தில்
18 உதவி செய்யமாட்டான். இவன் ஆணையை
அசட்டைசெய்து உடன்படிக்கையை
முறித்துவிட்டான்; கையடித்துக்கொடுத்தி
ருந்தும் இப்படியெல்லாம் செய்தவன் தப்
19 புவதில்லை. அதினிமித்தம் யெகோவாவாகிய
ஆண்டவர் இப்படிச் சொல்லுகிறார், அவன்
என் ஆணையை அசட்டைபண்ணினதையும்
என் உடன்படிக்கையை முறித்துப்போட்
டதையும் நான் அவனுடைய தலையின்மேல்
வரப்பண்ணுவேன்; என் ஜீவன்மேல் ஆணை.
20 நான் என் வலையை அவன்மேல் வீசுவேன்,
அவன் என் கண்ணியிலே பிடிபடுவான்;
நான் அவனை பாபிலோனுக்குக் கொண்டு
போய் அவன் எனக்கு விரோதமாய்ச் செய்த
துரோகத்தினிமித்தம் அவனை அங்கே நியா
21 யம் தீர்ப்பேன். அவனுடைய எல்லா
ராணுவங்களிலும் அவனோடேகூட ஓடிப்
போகிற யாவரும் பட்டயத்தால் விழுவார்
கள், மீந்திருப்பவர்களோ சகல திசைகளுக்
கும் சிதறடிக்கப்படுவார்கள்; யெகோவாவா
கிய நானே இதைச்சொன்னேன் என்று
அப்பொழுது அறிந்துகொள்வீர்கள்.

22 யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வ
தைக் கேளுங்கள்: நான் உயர்ந்த கேதுரு
வின் தளிர்களில் ஒன்றை எடுத்து
அதை நடுவேன், அதின் இளங்கிளையிலுள்ள
கொழுந்துகளில் இளசாயிருக்கிற ஒன்றைக்
கொய்து அதை உயரமும் உன்னதமுமான
23 ஒரு பர்வதத்தின்மேல் நாட்டுவேன். இஸ்ர
வேலின் சிறந்த பர்வதத்திலே அதை நாட்டு
வேன்; அது கொப்புகளைவிட்டுக் கனிதந்து
சிறப்பான கேதுருவாகும், அதின் கீழே சகல
விதப் பட்சிகளும் தங்கி அதின் கிளைகளின்
நிழலிலே தாபரிக்கும். இப்படியாக,
24 உயர்ந்த மரத்தைத் தாழ்த்தித் தாழ்ந்த
மரத்தை உயர்த்துகிறவரும் பச்சை மரத்
தைப் பட்டுப்போகப் பண்ணிப் பட்ட
மரத்தைத் தழைக்கப் பண்ணுகிறவரும்
யெகோவாவாகிய நானே என்று காட்டு
மரங்களுக்கெல்லாம் தெரியவரும்; யெகோ
வாவாகிய நானே இதைச் சொன்னேன்,
நானே இதைச் செய்வேன் என்று சொல்
என்றார்.

**18** யெகோவாவின் வார்த்தை எனக்கு வந்
2 தது: பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்
கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின
என்னும் பழமொழியை நீங்கள் இஸ்ரவேல்
3 தேசத்தைப்பற்றிச் சொல்வானேன்? இனி
இஸ்ரவேலில் இந்தப் பழமொழியைச்
சொல்வது இல்லை, என் ஜீவன்மேல் ஆணை,
இது யெகோவாவாகிய ஆண்டவரின் திரு
4 வாக்கு. இதோ, எல்லா ஆத்துமாக்களும்
என்னுடையவைகள்; தகப்பனின் ஆத்துமா
வும் மகனின் ஆத்துமாவும் என்னுடையதே;
5 பாவஞ்செய்கிறவனே சாவான். ஒருவன்
நீதிமானாயிருந்து நியாயத்தையும் நீதியையும்
6 செய்து | மலைகளின்மேல் படைத்துச் சாப்
பிடாமலும், இஸ்ரவேல் வீட்டாரின் கேவல
மான விக்கிரகங்களை நோக்காமலும், தன்
அயலான் மனைவியைத் தீண்டாமலும், தூர
ஸ்திரீயோடே சேராமலுமிருந்து | ஒருவனை
7 யும் ஒடுக்காமல் கடன் வாங்கினவனுக்கு
அடைமானத்தைத் திரும்பக்கொடுத்து,
கொள்ளையிடாமல் தன் ஆகாரத்தைப் பசித்
தவனுக்குக் கொடுத்து, ஆடையில்லாதவ
னுக்கு ஆடை கொடுத்து, | வட்டிக்குக்
8 கொடாமலும் பொலிசை வாங்காமலும் அநி
யாயத்துக்குத் தன் கையை விலக்கி மனி
தருக்குள்ள வழக்கை உண்மையாய்த்
தீர்த்து, | என் நியமங்களின்படி நடந்து
9 என் தீர்ப்புகளைக் கைக்கொண்டு உண்மை
யானவற்றைச் செய்வானாகில் அவனே நீதி
மான்; அவன் பிழைக்கவே பிழைப்பான்;

இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு.

10 அவனுக்குப்பிறக்கும் குமாரன் கள்ளனும் இரத்தஞ் சிந்துகிறவனுமாயிருந்து
11 இவைகளில் எதையாவது செய்து | தகப்பனே இவைகளையெல்லாம் செய்யவில்லை— மலைகளின்மேல் படைத்துச் சாப்பிட்டுத் தன் அயலானுடைய மனைவியைத் தீண்டிச்
12 சிறுமையும் எளிமையுமானவனை ஒடுக்கிக் கொள்ளையிட்டு அடைமானத்தைத் திரும்பக் கொடாமல் கேவலமான விக்கிரகங்களை நோக்கி அருவருப்பானதைச்செய்து, |
13 வட்டிக்குக் கொடுத்துப் பொலிசை வாங்குவானுகில் அவன் பிழைப்பானோ? அவன் பிழைப்பதில்லை; இந்த எல்லா அருவருப்புகளையும் செய்தானே, அவன் சாகவேசாவான்; அவன் இரத்தப்பழி அவன்மேல் இருக்கும்.
14 பின்னும் இவனுக்குப் பிறக்கும் குமாரன் தன் தகப்பன் செய்த எல்லாப்பாவங்களையும் கண்டு தான் அவைகளின்படி செய்யாத
15 படி பயந்து விலகி | மலைகளின்மேல் படைத்துச் சாப்பிடாமலும் இஸ்ரவேல் வீட்டாரின் கேவலமான விக்கிரகங்களை நோக்காமலும் தன் அயலான் மனைவியைத்
16 தீண்டாமலும் | ஒருவனையும் ஒடுக்காமலும் அடைமானத்தை வைத்துக்கொண்டிராமலும் கொள்ளையிடாமலுமிருந்து தன் ஆகாரத்தைப் பசித்தவனுக்குக் கொடுத்து ஆடை
17 யில்லாதவனுக்கு ஆடை கொடுத்துச் | சிறுமையானவனுக்குத் தீங்கு செய்யாமல் கையை விலக்கி வட்டியும் பொலிசையும் வாங்காமலிருந்து என் தீர்ப்புகளின்படி செய்து என் நியமங்களின்படி நடப்பானுகில் அவன் தன் தகப்பனுடைய அக்கிரமத்தினிமித்தம் சாவதில்லை, பிழைக்கவே
18 பிழைப்பான். அவன் தகப்பனே கொடுமை செய்து சகோதரனைக் கொள்ளையிட்டுத் தகாததை தன் ஜனத்தின் நடுவிலே செய்தபடியினால், இதோ, அவன் தன் அக்கிரமத்
19 திலே சாவான். நீங்கள் ஆகூ பித்து, இதெப்படி, குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமக்கிறதில்லையா என்று சொல்லுகிறீர்கள்! குமாரன் நியாயத்தையும் நீதியையும் செய்து என் நியமங்களைக் கைக்கொண்டு அவைகளின்படி செய்தபினால்
20 அவன் பிழைக்கவே பிழைப்பான். பாவஞ் செய்கிறவனே சாவான்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை; நீதிமான் தன் நீதியை அனுபவிப்பான், துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்தை அனுபவிப்பான்.

21 துன்மார்க்கன் தான் செய்த சகல பாவங்களையும் விட்டுத் திரும்பி என் நியமங்களையெல்லாம் கைக்கொண்டு நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில் அவன் பிழைக்கவே பிழைப்பான், அவன் சாவதில்லை. அவன் செய்த எல்லா பாதகங்களும்
22 அவனுக்கு விரோதமாய் நினைக்கப்படுவதில்லை; தான் செய்த நீதியிலே அவன் பிழைப்பான். துன்மார்க்கனின் மரணத்தை நான் விரும்புவேனோ?— இது யெகோவாவின் திருவாக்கு—அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையல்லவோ
23 நான் விரும்புகிறேன்.

24 நீதிமான் தன் நீதியை விட்டுவிலகி அநியாயம் செய்து துன்மார்க்கன் செய்கிற சகல அருவருப்புகளின்படியும் செய்வானேயாகில் அவன் பிழைப்பானோ? அவன் செய்த நீதியனைத்தும் நினைக்கப்படுவதில்லை; தான் செய்த துரோகத்திலேயும் தான் செய்த பாவத்திலேயும் சாவான்.
25 நீங்களோ, ஆண்டவரின் வழி சரியானதல்ல என்கிறீர்கள்; இஸ்ரவேல் வீட்டாரே, கேளுங்கள்; சரியாயிராதது என் வழியோ? சரியாயிராதன உங்கள் வழிகளே அல்லவோ?
26 நீதிமான் தன் நீதியை விட்டுவிலகி அநியாயம் செய்தால் அதினிமித்தம் சாவான்; தான் செய்த அநியாயத்திலே சாவான்.

27 துன்மார்க்கன் தான் செய்த துன்மார்க்கத்தைவிட்டு விலகி, நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில், அவன் தன்னை உயிரோடே காப்பான்.
28 அவன் பயந்து விலகித் தான் செய்த பாதகங்களனைத்தையும்விட்டுத் திரும்பினபடியினாலே அவன் பிழைக்கவே பிழைப்பான், அவன் சாவதில்லை.
29 இஸ்ரவேல் வீட்டாரோ, ஆண்டவரின் வழி சரியானதல்ல என்கிறார்கள்; இஸ்ரவேல் வீட்டாரே சரியாயிராதது என் வழிகளோ? சரியாயிராதன உங்கள் வழிகளேயல்லவோ?

30 ஆகையால் இஸ்ரவேல் வீட்டாரே, நான் உங்களில் ஒவ்வொருவனையும் அவனவன் வழிகளின்படியே நியாயந்தீர்ப்பேன், இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு. நீங்கள் மனந்திரும்புங்கள், உங்களுடைய பாதகங்கள் அனைத்தையும் விட்டுத்திரும்புங்கள்; அப்பொழுது நீங்கள் இடறிவிழுவதற்கு அக்கிரமம் ஏதுவாகாது.
31 நீங்கள் மீறி நடந்த உங்கள் பாதகங்கள் அனைத்தையும் உங்கள்மேல் இராதபடி எறிந்து விலக்கி உங்களுக்குப் புது இருதயத்தையும் புது ஆவியையும் படைத்துக்கொள்ளுங்கள்; இஸ்ரவேல் வீட்டாரே, நீங்கள்

32 சாவதேன்? மரிக்கிறவனுடைய மரணத்தை
நான் விரும்புகிறதில்லை; இது யெகோவா
வாகிய ஆண்டவரின் திருவாக்கு. ஆகவே
மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்
பீர்கள்.

**19** நீ இஸ்ரவேல் அதிபதிகளைப்பற்றி ஒரு
பிரலாபப் பாடல் பாடு.
2 உன் தாய் என்ன! அவள் ஒரு பெண்
சிங்கமாயிருந்தாளே!
அவள் சிங்கங்களுக்குள்ளே படுத்து
பாலசிங்கங்கள் நடுவே தன் குட்டிகளை
வளர்த்தாள்.
3 அவள் தன் குட்டிகளில் ஒன்றை
வளர்க்கவே அது பாலசிங்கமாகி,
இரைபிடிக்கப்பழகி மனுஷரைப் பட்
சித்தது.
4 புறஜாதியாரும் அதைப்பற்றிக் கேள்விப்
பட்டார்கள்,
அது அவர்கள் படுகுழியில் அகப்பட்
டது;
முள் துறட்டைப்போட்டு அதை எகிப்து
தேசத்திற்குக் கொண்டுபோனார்கள்.
5 தான் எதிர்பார்த்த நம்பிக்கை அபத்தமா
யிற்றென்று தாய்சிங்கம் கண்டு
தன் குட்டிகளில் வேறொன்றை எடுத்து
அதைப் பாலசிங்கமாக்கிற்று.
6 அது சிங்கங்களுக்குள்ளே திரிந்து பால
சிங்கமாகி,
இரைபிடிக்கப்பழகி மனுஷரைப் பட்
சித்தது.
7 அவர்கள் அரமனைகளை அழித்து அவர்
கள் பட்டணங்களைப் பாழாக்கிற்று;
அது கெர்ச்சிக்கும் சத்தம் கேட்டு தேச
மும் அதிலுள்ள யாவும் திகைத்தது.
8 அப்பொழுது சுற்றுப்புற நாட்டு ஜாதி
யார் அதற்கு விரோதமாக எழுப்பப்பட்
டார்கள்,
தங்கள் வலையை அதின்மேல் வீசினார்கள்;
அது அவர்களுடைய படுகுழியிலே
அகப்பட்டது.
9 அவர்கள் அதை முள் துறடுபோட்டு
ஒரு கூட்டிலடைத்து
அதை பாபிலோன் ராஜாவினிடம்
கொண்டுபோனார்கள்;
அதின் சத்தம் இனி இஸ்ரவேல் மலை
களின்மேல் கேட்கப்படாதபடி
அதை அரணான இடங்களில் கொண்டு
போய் அடைத்தார்கள்.
10 நீ க்ஷமமாயிருக்கையில்
உன் தாய் தண்ணீர் ஓரமாய் நடப்பட்ட
திராட்சச்செடிபோலிருந்தாள்;
அது மிகுதியான நீர்ப்பாய்ச்சலால் கனி
தந்து தழைத்திருந்தது
11 ஆளுகிறவர்களின் செங்கோலாகத்தக்க
பலத்த கொப்புகள் அதற்கு இருந்தன;
அது உயர ஓங்கி வளர்ந்தது, சுற்றிலும்
அடர்த்தியான கிளைகளுள்ளது;
அது மிகவும் உயர்ந்ததினால் தன் திர
ளான கொடிகளோடு நன்றாய்த் தெரி
யும்.
12 அப்படியிருந்தும் அது உக்கிரமாய்ப்
பிடுங்கப்பட்டுத் தரையிலே தள்ளுண்
டது,
கீழ்காற்றினால் அதின் கனி காய்ந்துபோ
யிற்று;
அதின் பலத்த கொப்புகள் முறியுண்டு
பட்டுப்போயின, அக்கினி அவைகளைப்
பட்சித்தது.
13 இப்பொழுது அது வறண்டதும் வீரற்றது
மான வனாந்தர பூமியிலே நடப்பட்டி
ருக்கிறது.
14 அதின் கொடிகளிலுள்ள கொப்பிலிருந்து
அக்கினி எழும்பி அதின் கனியைப் பட்
சித்தது;
ஆளுகிற செங்கோலாகத்தக்க பலத்த
கொப்பு இனி அதில் இல்லை.
இது வே பிரலாபப்பாடல், பிரலாபப்
பாடலாயிற்று.

**20** ஏழாம் வருஷம் ஐந்தாம்மாதம் பத்
தாந்தேதியிலே இஸ்ரவேலின் மூப்பரில்
சிலர் யெகோவாவினிடம் விசாரிக்கும்படி
வந்து எனக்கு முன்பாக உட்கார்ந்தார்கள்.
2 அப்பொழுது யெகோவாவின் வார்த்தை
3 எனக்கு வந்தது: மனுஷகுமாரனே, நீ இஸ்ர
வேல் மூப்பரோடே பேசி இப்படிச்சொல்:
யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வதைக்
கேளுங்கள், நீங்கள் என்னிடம் விசாரிக்க
வோ வந்தீர்கள்? நீங்கள் என்னிடம் விசா
ரிக்க இடங்கொடேன், என் ஜீவன்மேல்
ஆணை, இது யெகோவாவாகிய ஆண்டவ
ரின் திருவாக்கு.
4 மனுஷகுமாரனே, நீ அவர்களுக்குத்
தீர்ப்பிடுவாயோ? தீர்ப்பிடுவாயானால், நீ
அவர்கள் பிதாக்களின் அருவருப்புகளை
அவர்களுக்குத் தெரியக்காட்டி. 5 இப்படிச்
சொல்: யெகோவாவாகிய ஆண்டவர் சொல்
வது இதுவே, நான் இஸ்ரவேலைத் தெரிந்
தெடுத்த நாளிலே யாக்கோபு வம்சத்து
ஜனங்களுக்கு நான் ஆணையிட்டு எகிப்து
தேசத்தில் என்னை அவர்களுக்கு வெளிப்
படுத்தி, நான் உங்கள் கடவுளாகிய யெகோ
வா என்று ஆணையிட்டேன். அந்நாளிலே 6

நான் அவர்களுக்கு ஆணையிட்டு, நான் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி அவர்களுக்கென நான் பார்த்து வைத்ததும், பாலும் தேனும் ஒடுகிறதும் எல்லா தேசங்களிலும் சிறந்ததுமான தேசத்திலே அவர்களைக் கொண்டுவந்துவிடுவேன் 7 என்றேன். பின்னும் அவர்களோடு பேசி, உங்களில் அவரவர் தம்தம் கண்கள் நோக்கும் அருவருப்புகளைத் தள்ளிவிட்டு, எகிப்தின் கேவலமான விக்கிரகங்களால் உங்களைத் தீட்டுப்படுத்தாதிருங்கள், நானே உங்கள் கடவுளாகிய யெகோவா என்றேன். 8 அவர்களோ எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணி என் சொல்லைக் கேட்க மனதில்லாமற்போனார்கள்; அவரவர் தங்கள் கண்கள் நோக்கின அருவருப்புகளைத் தள்ளிப் போடவில்லை, எகிப்தின் கேவலமான விக்கிரகங்களை விட்டுவிடவில்லை; ஆதலால் என் உக்கிரத்தை அவர்கள்மேல் ஊற்றி எகிப்துதேசத்தின் நடுவிலே என் கோபத்தை அவர்கள்மேல் தீர்த்துக்கொள்ளுவேன் 9 என்றேன். நான் செய்ததையோ ஜாதியாரின் பார்வையில் என் நாமம் பரிசுத்தமற்றதுபோலாகாதபடி என் நாமத்தினிமித்தமே செய்தேன், அந்த ஜாதியாரின் நடுவில் அவர்கள் வாசமாயிருந்தார்கள், நான் எகிப்துதேசத்திலிருந்து இவர்களை வரப்பண்ணினதிலுலே அந்த ஜாதியாரின் பார்வையில் இவர்களுக்கு என்னை வெளிப் 10 படுத்தினேன். ஆகவே நான் அவர்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணி அவர்களை வனாந்தரத்திற்குள் அழைத்துப் 11 போனேன். என் நியமங்களை அவர்களுக்குக் கொடுத்து என் தீர்ப்புகளை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்; அவைகளின்படி செய்கிற மனுஷன் அவைகளால் பிழைப் 12 பான். என் ஓய்வுநாட்களையும் அவர்களுக்கு ஏற்படுத்தினேன், அவைகள் எனக்கும் அவர்களுக்கும் இடையில் அடையாளமாகி அவர்களைப் பரிசுத்தம்பண்ணுகிறவர் யெகோவாவாகிய நானே என்று அறிவதற்கு ஏதுவாகும்.

13 இஸ்ரவேல் வீட்டாரோ வனாந்தரத்தில் எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணினார்கள்; அவர்கள் என் நியமங்களின்படி நடவாமல் என் தீர்ப்புகளை அசட்டை செய்தார்கள்—அவைகளின்படி செய்கிற மனுஷன் அவைகளால் பிழைப்பான்—; அவர்கள் என் ஓய்வுநாட்களை மிகவும் பரிசுத்தமற்றதாகும்படி செய்தார்கள், ஆதலால் அவர்களை அழிக்கும்படி, வனாந்தரத்திலே என் உக்கிரத்தை அவர்கள்மேல் ஊற்றுவேன் என்றேன். நான் செய்ததையோ 14 ஜாதியாரின் பார்வையில் என் நாமம் பரிசுத்தமற்றதுபோலாகாதபடி என் நாமத்தினிமித்தமே செய்தேன், அந்த ஜாதியாரின் பார்வையில் இவர்களைப் புறப்படப்பண்ணினேன். அவர்கள் இருதயம் அவர்களுடைய கேவலமான விக்கிரகங்களைப் பற்றிக் 15 கொள்ளவே அவர்கள் என் தீர்ப்புகளை அசட்டைசெய்து என் நியமங்களின்படி நடவாமற்போய் என் ஓய்வுநாட்களைப் பரிசுத்தமற்றதாக்கினார்கள். ஆதலால், நான் 16 கொடுத்ததும் பாலும் தேனும் ஒடுகிறதும் எல்லா தேசங்களிலும் சிறந்ததுமான தேசத்திற்குள் அவர்களைக் கொண்டுவந்து சேர்ப்பதில்லை என்று வனாந்தரத்திலே ஆணையிட்டு அவர்களுக்குச் சொன்னேன். எனினும் 17 நான் அவர்கள்மேல் பரிதாபங்கொண்டு, அவர்களை அழிக்காமல் விட்டேன்; நான் அவர்களை வனாந்தரத்தில் சர்வசங்காரம் செய்யவில்லை. வனாந்தரத்தில் நான் அவர் 18 கள் பிள்ளைகளோடு பேசி: நீங்கள் உங்கள் பிதாக்களின் முறைமைகளில் நடக்கவேண்டாம், அவர்களுடைய தீர்ப்புகளைக் கைக்கொள்ளவேண்டாம், அவர்களுடைய கேவலமான விக்கிரகங்களால் உங்களைத் தீட்டுப்படுத்திக் கொள்ளவேண்டாம். நானே உங்கள் கடவுளாகிய யெகோவா, 19 நீங்கள் என் நியமங்களின்படி நடந்து என் தீர்ப்புகளைக் கைக்கொண்டு அவைகளின்படியே செய்யுங்கள். என் ஓய்வுநாட்களைப் 20 பரிசுத்தமாக்குங்கள், அவைகள் எனக்கும் உங்களுக்கும் இடையில் அடையாளமாகி உங்கள் கடவுளாகிய யெகோவா நானே என்று அறிவதற்கு ஏதுவாகும் என்றேன். எனினும் பிள்ளைகளும் எனக்குத் துரோகம் 21 செய்தார்கள்; அவர்கள் என் நியமங்களின்படி நடவாமலும் என் தீர்ப்புகளின்படி செய்ய அவைகளைக் கைக்கொள்ளாமலும் போய்—அவைகளின்படி செய்கிற மனுஷன் அவைகளால் பிழைப்பான்,—என் ஓய்வுநாட்களைப் பரிசுத்தமற்றதாக்கினார்கள்; ஆகவே வனாந்தரத்திலே என் உக்கிரத்தை அவர்கள்மேல் ஊற்றி என் கோபத்தை அவர்களில் தீர்த்துக்கொள்ளுவேன் என்றேன். எனினும் நான் என் கையைத் 22 திருப்பினேன்; நான் செய்ததை ஜாதியாரின் பார்வையில் என் நாமம் பரிசுத்தமற்றது போலாகாதபடி என் நாமத்தினிமித்தமே செய்தேன், அந்த ஜாதியாரின் பார்வையில் அவர்களை விடுவித்து வந்தேன். ஆனாலும் 23 அவர்கள் என் தீர்ப்புகளின்படி செய்யாமல் என் நியமங்களை அசட்டைசெய்து என்

ஒய்வுநாட்களைப் பரிசுத்தமற்றதாக்கினபடியாலும் அவர்களுடைய கண்கள் அவர்கள் பிதாக்களின் கேவலமான விக்கிரகங்களை நோக்கினபடியாலும் | நான் வனாந்தரத்திலே அவர்களுக்கு ஆணையிட்டு நான் அவர்களைப் புறஜாதியாருக்குள்ளே சிதறடித்து அவர்களை தேசங்களிலே தூற்றிப்போடுவேன் என்றேன். ஆகவே நன்மைக்கேதுவாகாத நியமங்களையும் ஜீவனுக்கேதுவாகாத தீர்ப்புகளையும் நான் அவர்களுக்குக் கொடுத்தேன். அவர்கள் கர்ப்பந்திறந்து பிறக்கிறதையெல்லாம் அக்கினிதகனமாகப் படைக்கும் தங்கள் பலிகளினாலே அவர்களைத் தீட்டுப்படப்பண்ணினேன்; நானே யெகோவா என்று அவர்கள் அறியும்படி நான் அவர்களைத் திகைக்கச்செய்வேன் என்றேன்.

ஆகையால் மனுஷகுமாரனே, நீ இஸ்ரவேல் வீட்டாரோடே பேசி இப்படிச் சொல், யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வதைக் கேளுங்கள்: உங்கள் பிதாக்கள் பின்னும் எனக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணி எனக்கு நிந்தனையான காரியங்களைச் செய்தார்கள். அவர்களுக்குக் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்திலே நான் அவர்களைக் கொண்டுவந்து சேர்த்தேன்; அவர்களோ எங்கெங்கே உயர்ந்த மேட்டையும் தழைத்த மரத்தையும் கண்டார்களோ அங்கெல்லாம் தங்கள் இரத்த பலிகளைச் செலுத்தினார்கள், அவ்விடங்களிலெல்லாம் தங்கள் காணிக்கைகளைப் படைத்து எனக்குக் கோபமூட்டினார்கள்; சுகந்த வாசனை காட்டித் தங்கள் பானபலிகளை வார்த்தார்கள். அப்பொழுது நான் அவர்களிடம், நீங்கள் போம் பாமா என்னவென்று கேட்டேன்; அதினால் இந்நாள்வரைக்கும் அதற்குப் பாமா என்று பேர்.

ஆகையால் நீ இஸ்ரவேல் வீட்டாருக்கு இதைச்சொல், யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வதைக் கேளுங்கள்: நீங்களும் உங்கள் பிதாக்களின் வழியிலே நடந்து உங்களைத் தீட்டுப்படுத்திக்கொண்டு அவர்களுடைய அருவருப்புகளைப் பற்றிக்கொண்டு சோரம் போகிறீர்களோ? நீங்கள் உங்கள் பிள்ளைகளை அக்கினியிலிட்டு உங்கள் படைப்புகளைச் செலுத்துகிறபோது இந்நாள்வரைக்கும் உங்களுடைய சகல கேவலமான விக்கிரகங்களாலும் நீங்கள் தீட்டுப்படுகிறீர்களே; இஸ்ரவேல் வீட்டாரே, நீங்கள் என்னிடம் விசாரிக்கும்பொருட்டு இடங்கொடுப்பேனோ? நீங்கள் என்னிடம் விசாரிக்கும்படி இடங்கொடுப்பதில்லை, என் ஜீவன்மேல் ஆணை, இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு. உங்கள் மனதில் எழும்புகிற நினைவின்படி ஆவதே இல்லை, மரத்துக்கும் கல்லுக்கும் ஆராதனை செய்து புறஜாதியாரைப்போலவும் மற்ற தேசங்களின் வம்சங்களைப்போலவும் இருப்போம் என்று சொல்லுகிறீர்களே.

என் ஜீவன்மேல் ஆணை—இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு—புஜபலத்தினாலும் நீட்டிய கரத்தினாலும் ஊற்றப்பட்ட உக்கிரத்தினாலும் உங்களை ஆளுவேன். ஜாதியாரின் நடுவிலிருந்து உங்களை வரச்செய்து நீங்கள் சிதறியிருக்கிற தேசங்களிலிருந்து பலத்த கரத்தினாலும் நீட்டிய கையினாலும் ஊற்றப்பட்ட உக்கிரத்தினாலும் நான் உங்களைக்கூட்டிச்சேர்த்து | பல ஜாதியாருள்ள வனாந்தரத்திற்கு உங்களைக் கொண்டுபோய் அங்கே உங்களோடே முகமுகமாய் வழக்காடுவேன். நான் எகிப்து தேசத்தையடுத்த வனாந்தரத்தில் உங்கள் பிதாக்களோடு வழக்காடினதுபோல உங்களோடும்வழக்காடுவேன்; இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு. நான் உங்களைக் கோலின்கீழ் செல்லச்செய்து, உங்களை உடன்படிக்கையின் கட்டுக்குட்படுத்திக் | கலகக்காரரையும் துரோகிகளையும் உங்களைவிட்டுப் பிரித்துப்போடுவேன்; அவர்கள் தங்கும் தேசத்தைவிட்டு அவர்களை வரச்செய்வேன்; இஸ்ரவேல் தேசத்திலோ அவர்கள் வருவதில்லை; நானே யெகோவா என்று அப்பொழுது அறிந்துகொள்வீர்கள்.

இப்போதும் இஸ்ரவேல் வீட்டாரே, யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வதைக் கேளுங்கள். நீங்களோ போய் அவனவன் தன்தன் கேவலமான விக்கிரகங்களைச் சேவியுங்கள்; பின்போ நான் சொல்வதைக் கேட்பீர்கள், என் பரிசுத்த நாமத்தை உங்கள் படைப்புகளாலும் உங்கள் கேவலமான விக்கிரகங்களாலும் இனிப் பரிசுத்தமற்றதாகமாட்டீர்கள். இஸ்ரவேலின் உயர்ந்த மலையாகிய என் பரிசுத்த மலையிலே—இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு—இஸ்ரவேலரின் சகல வம்சத்தாரும் தேசத்திலுள்ள அனைவரும் அங்கே என்னைச் சேவிப்பார்கள், அங்கேயே அவர்கள்மேல் பிரியம் வைப்பேன், நீங்கள் பிரதிஷ்டைபண்ணும் யாவற்றையும், உங்கள் படைப்புகளையும் உங்கள் முதற்பலன்களாகிய காணிக்கைகளையும், அங்கேயே விரும்பித்தேடுவேன். ஜாதியாரின் நடுவிலிருந்து நான் உங்களை வரச்செய்து நீங்கள் சிதறி

யிருக்கிற தேசங்களிலிருந்து உங்களைச் சேர்த்துக்கொள்ளும்போது சுகந்த வாசனை எழவே நான் உங்களைப் பிரியமாய் அங்கீகரிப்பேன்; அப்பொழுது புறஜாதியார் பார்வையில் உங்கள் மூலமாய் என்னைப் பரி
42 சுத்தராய்க் காட்டுவேன். உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசமாகிய இஸ்ரவேல் தேசத்திலே நான் உங்களைத் திரும்பிவரச்செய்யும்போது நானே யெகோவா என்று நீங்கள் அறிந்துகொள்
43 வீர்கள். அங்கேயே உங்கள் வழிகளையும் உங்களைத் தீட்டுப்படுத்திக்கொண்ட உங்கள் சகல செய்கைகளையும் நினைத்து நீங்கள் செய்திருந்த உங்களுடைய எல்லாத் தீமைகளினிமித்தமும் உங்களை நீங்களே அரு
44 வருப்பீர்கள். இஸ்ரவேல் வீட்டாரே, நான் உங்களுக்குச் செய்வதெல்லாம் உங்கள் தீயவழிகளுக்கும் உங்கள் சீர்கெட்ட செய்கைகளுக்கும் தக்கபடியல்ல, என் நாமத்தினிமித்தமே நான் உங்களுக்குச் செய்யும்போது நானே யெகோவா என்று அறிந்துகொள்வீர்கள், இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு.

45 யெகோவாவின் வார்த்தை எனக்கு வந்
46 தது, மனுஷகுமாரனே, நீ உன் முகத்தைத் தென்திசைக்கு நேரே திருப்பி, தெற்குக்கு விரோதமாக உன் வசனத்தைப் பொழிந்து தென்னாட்டு வயல்வெளியின் காட்டுக்கு
47 விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்து | தென்னாட்டுக்காட்டுக்கு இதைச்சொல், யெகோவாவின் வார்த்தையைக் கேள், யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே: இதோ, நான் உன்னில் அக்கினியைக் கொளுத்துவேன், அது உன்னிலுள்ள பச்சையான சகல மரங்களையும் பட்டுப்போன சகல மரங்களையும் பட்சிக்கும்; ஜ்வாலிக்கிற ஜ்வாலை அவிக்கப்படமாட்டாது, தெற்கு துவக்கி வடக்கு மட்டுமுள்ள சகல முகங்களும் அதினால்
48 கரிந்துபோகும். யெகோவாவாகிய நான் அதைக் கொளுத்தினேன் என்பதை மாம்சமான யாவரும் காண்பார்கள்; அது அவிக்
49 கப்படுவதில்லை என்கிறார். அதைக்கேட்கவே, நான்; ஐயோ யெகோவாவாகிய ஆண்டவரே, இவன் உவமைகளையல்லவோ கூறுகிறான் என்று அவர்கள் என்னைப்பற்றிச் சொல்லுகிறார்கள் என்றேன்.

**21** அப்பொழுது யெகோவாவின் வார்த்தை
2 எனக்கு வந்தது, மனுஷகுமாரனே, நீ உன் முகத்தை எருசலேமுக்கு நேராகத் திருப்பி பரிசுத்த ஸ்தலங்களுக்கு விரோதமாக உன் வசனத்தைப் பொழிந்து, இஸ்ரவேல் தேசத்துக்கு விரோதமாக தீர்க்கதரிசனம்
3 உரைத்து | இஸ்ரவேல் தேசத்துக்கு இதைச் சொல், யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே: இதோ, நான் உனக்கு விரோதமாக வந்து என் பட்டயத்தை அதின் உறையிலிருந்து உருவி உன்னிலுள்ள நீதிமானையும் துன்மார்க்கனையும் சங்காரம் பண்ணுவேன். நான் உன்னிலுள்ள நீதிமானை
4 யும் துன்மார்க்கனையும் சங்காரம்பண்ணப் போகிறபடியினால் தெற்கு துவக்கி வடக்கு மட்டுமுள்ள மாம்சமான யாவருக்கும் விரோதமாய் என் பட்டயம் அதின் உறையிலிருந்து வெளிப்படும். யெகோவாவாகிய
5 நானே என் பட்டயத்தை அதின் உறையிலிருந்து உருவினேன் என்பதை அப்பொழுது மாம்சமான யாவரும் அறிந்துகொள்வார்கள்; அது இனி உறைக்குள் திரும்புவ
6 தில்லை. ஆதலால் மனுஷகுமாரனே, உன் இடுப்பு கொறுங்கினதுபோல் பெருமூச்சுவிடு; அவர்கள் பார்வையில் மனங்கசந்து பெருமூச்சுவிடு. நீ ஏன் பெருமூச்சுவிடு
7 கிறாய் என்று அவர்கள் உன்னிடம் கேட்டால் நீ அவர்களிடம், நான் கேள்விப்பட்டதினிமித்தமே, அது வரும்போது இருதயங்களெல்லாம் உருகிக் கைகளெல்லாம் தளர்ந்து மனமெல்லாம் தியங்கி முழங்கால்களெல்லாம் தண்ணீரைப்போல் அலையும், இதோ, அது வரும், அது சம்பவிக்கும், இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு என்று சொல் என்றார்.

8 யெகோவாவின் வார்த்தை எனக்கு வந்தது, மனுஷகுமாரனே, நீ தீர்க்கதரிச
9 னம் உரைத்துச்சொல்லவேண்டியது இதுவே, யெகோவா இப்படிச்சொல்லுகிறார்.

பட்டயம்!
கூர்மையாக்கப்பட்ட பட்டயம்! தலைக்கப்பட்ட பட்டயம்!
10 மகாசங்காரத்திற்கென அது கூர்மையாக்கப்பட்டது,
மின்னுதற்கென அது தலைக்கப்பட்டது,
அது நமக்குச் சந்தோஷமாகுமோ?
அது என் குமாரனைச் சிட்சிக்கும் கோல்,
அதன்முன் நிற்கும் மரம் ஒன்றுமில்லை.
11 கையாடுவதற்கென அது தலைக்கப்பட்டது,
கொல்லுகிறவன் கையிலே கொடுப்பதற்கென
அந்தப்பட்டயம் கூர்மையாக்கப்பட்டது,
தலைக்கப்பட்டது.
12 மனுஷகுமாரனே, நீ கதறு, அலறு;

அந்தப்பட்டயம் என் ஜனத்தின்மேல் வரும்;
அது இஸ்ரவேல் அதிபதிகள் எல்லார் மேலும் வரும்,
அவர்கள் என் ஜனத்தோடு பட்டயத்துக்கு ஒப்புவிக்கப்பட்டார்கள்;
ஆகையால் உன் மார்பிலே அடித்துக்கொள்.

13 விசாரணை செய்தாயிற்று, எதையும் நிற்க விடாதகோலே வராதோ?
இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு.

14 ஆகையால் மனுஷகுமாரனே, நீ தீர்க்கதரிசனம் சொல்லிக்கையைத்தட்டு;
பட்டயம் இருமுறைவருக, மும்முறை வருக,
அது மரணகாயம்பட அடித்த பட்டயம்,
அது மரணகாயம் பட்ட பெரியவனையும் அடித்த பட்டயம்,
அது சுற்றிலும் அவர்கள்மேல் வரும்.

15 இதயங்கள் கரையவும் அநேகர் இடறி விழவும்
அவர்கள் சகல வாசல்களுக்கும் விரோதமாகக்
கூரிய பட்டயத்தை நியமிப்பேன்;
ஐயோ அது மின்னுதற்கெனச் செய்யப்பட்டது,
சங்காரத்திற்கெனத் தீட்டிவைக்கப்பட்டது.

16 ஏகபலமாய் வலதுபுறமாக வெட்டு,
திரும்பி இடதுபுறமாகவும் வெட்டு;
கருக்குமுனை செல்லும் இடமெல்லாம் வெட்டு.

17 நானும் கையோடே கையைத்தட்டி என் உக்கிரத்தை ஆற்றிக்கொள்வேன்.
யெகோவாவாகிய நானே இதைச்சொன்னேன்.

18 பின்னும் யெகோவாவின் வார்த்தை எனக்கு வந்தது,

19 மனுஷகுமாரனே, பாபிலோன் ராஜாவின் பட்டயம் வருவதற்கென இரண்டுவழிகளைக் குறித்துக்கொள்; இரண்டும் ஒரே தேசத்திலிருந்து வரவேண்டும், நீ ஒரு கைகாட்டியைச் செய்துவை, நகரத்துக்குப்போகிற வழிபிரியும் இடத்தில் அதைச் செய்துவை.
20 பட்டயம் வரும்படி அம்மோன்புத்திரரின் பட்டணமாகிய ரப்பாவுக்கு ஒரு வழியையும் அரணுள்ள எருசலேமுள்ள யூதாவுக்கு
21 ஒரு வழியையும் குறித்துக்கொள். பாபிலோன் ராஜா இரண்டு வழிகளும் பிரிகிற முனையாகிய இடத்திலே சகுனம் பார்க்கிறதற்கென நிற்கிறான், அம்புகளை ஆட்டுகிறான், வீட்டுவிக்கிரகங்களை உசாவுகிறான், ஈரலால் குறிபார்க்கிறான். 22 அவனுடைய வலதுகரத்திலே எருசலேம் சீட்டுவருகிறது, இடிக்கும் யந்திரங்களை வைத்துக் கூக்குரலிட வாய்திறந்து யுத்த ஆரவாரம்செய்து வாசல்களை இடிக்கும் யந்திரங்களை வைத்து மண்மேடுபோட்டுக் கொத்தளங்களைக் கட்ட வேண்டுமென்று சீட்டுகுறிக்கிறது. 23 இஸ்ரவேலர் பார்வையில் அது பொய்ச் சீட்டாகத் தோன்றுகிறது, அவர்கள் இட்ட ஆணைகளோ அவர்கள்மேல் இருக்கின்றன, அவர்கள் அக்கிரமத்தை யெகோவாஞாபகப்படுத்திக்கொள்வார், ஆகவே அவர்கள் பிடிபடுவார்கள்.

24 ஆகையால் யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச்சொல்லுகிறார்: உங்கள் துரோகங்கள் வெளியாகிறதினாலும், உங்கள் செய்கைகளிலெல்லாம் உங்கள் பாவங்கள் காணப்படுகிறதினாலும், நீங்கள் உங்கள் அக்கிரமத்தை நினைக்கப் பண்ணுகிறீர்களே; நீங்கள் இப்படி நினைக்கப்படுகிறபடியால் பலவந்தமாய்ப் பிடிக்கப்படுவீர்கள். 25 இஸ்ரவேலை ஆளுகிறவனே, மரணகாயம்பட்ட தெய்வபயமற்ற அதிபதியே, அக்கிரமம் எல்லைவரையைத் தொடவே உன் நாள் வரும். 26 யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வதைக்கேள், பாகையைக்கழற்று, கிரீடத்தை எடுத்துப்போடு; இனி முன்போலிராது; தாழ்வு உயர்வாக, உயர்வு தாழ்வாக கவிழ்த்துக் கவிழ்த்துக் கவிழ்த்துவிடுவேன்; 27 உரிமையாளர் வருமட்டும் அது இல்லாதிருக்கும், அவருக்கே அதைக் கொடுப்பேன்.

28 பின்னும் மனுஷகுமாரனே, நீ தீர்க்கதரிசனம் சொல், அம்மோன் புத்திரரையும் அவர்கள் சொல்லும் நிந்தனையையும்பற்றி யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச் சொல்லுகிறார், நீ சொல்லவேண்டியது இதுவே: ஒரு பட்டயம்! பட்டயம் உருவப்பட்டது, வெட்டித் திருப்தியாகவும் மின்னவும் வேண்டுமென்று தலைக்கப்பட்டது; 29 அம்மோனே, உன்னைப்பற்றிப் பொய்த்தரிசனம்கண்டு வஞ்சனையாய் நிமித்தம்பார்த்து மரணகாயம்பட்ட தெய்வபயமற்றவரின் பிடரியின்மேல் நீ வைக்கப்படுவாய், அக்கிரமம் எல்லைவரையைத் தொடவே அவர்கள் நாள்வரும் என்று சொல்லுகிறார்கள். 30 பட்டயத்தைத்திரும்ப அதின் உறையிலேபோடு; நீ சிருஷ்டிக்கப்பட்ட இடத்தில், உன் உற்பத்திதேசத்திலே, நான் உன்னை நியாயந்தீர்த்து, | என் கோபத்தை உன்மேல் ஊற்றுவேன்; நான் என் மூர்க்கத்தின் அக்கினியை 31 உன்மேல் ஊதி, மிருககுணமுள்ளவர்களும் அழிக்கச் சமர்த்தருமான மனுஷரின்

32 கையில் உன்னை ஒப்புக்கொடுப்பேன். நீ அக்கினிக்கு இரையாவாய்; உன் இரத்தம் உன் தேசத்தின் நடுவில் சிந்திக்கிடக்கும், நீ இனி நினைக்கப்படுவதில்லை, யெகோவா வாகிய நான் இதைச்சொன்னேன் என்றார்.

**22** பின்னும் யெகோவாவின் வார்த்தை
2 எனக்கு வந்தது: மனுஷகுமாரனே, இரத்தஞ் சிந்தின நகரத்துக்கு நீ தீர்ப்பிடுவாயோ? தீர்ப்பிடுவாயானால் நீ அதின் அருவருப்பு களையெல்லாம் அதற்குத் தெரியக்காட்டி |
3 இப்படிச்சொல், யெகோவாவாகிய ஆண்ட வர் சொல்வது இதுவே: தன் காலம் வரும் படி தன் நடுவிலே இரத்தஞ் சிந்துகிற பட்ட ணம் அது; தன்னைத் தீட்டுப்படுத்தும்படி தனக்கே கேடாக அது கேவலமான விக்கிர
4 கங்களைச் செய்கிறது. நீ சிந்தின உன் இரத்தத்தினால் நீ குற்றத்திற்காளாகி, நீ செய்த உன் கேவலமான விக்கிரகங்களால் நீ தீட்டுப்பட்டு உன் நாட்களைச் சமீபிக்கப் பண்ணி உன் வருஷங்களின் முடிவுக்கு வந் தாய்; ஆகையால் நான் உன்னைப் புறஜாதி யாருக்கு நிந்தையாகவும் தேசங்களுக்கெல்
5 லாம் பரியாசமாகவும் வைக்கிறேன். உனக் குச் சமீபத்திலும் உனக்குத் தூரத்திலுமுள்ள தேசங்களின் குமாரத்திகள், நீ பேர் கெட்டுப் போனவளென்றும் அமளி பெருத்தவளென் றும் உன்னைப் பரியாசம் பண்ணுவார்கள்.
6 இதோ, உன்னிடத்திலுள்ள இஸ்ரவேலின் அதிபதிகள் தத்தம் புஜபலத்தில் நம்பிக்கை
7 வைத்து இரத்தம் சிந்துகிறார்கள். உன்னில் தாய்தந்தைகள் அற்பமாய் மதிக்கப்பட்டார் கள்; உன் நடுவில் அந்நியருக்குக் கொடுமை செய்தார்கள்; திக்கற்றவனையும் விதவையை
8 யும் உன்னில் ஒடுக்கினார்கள். எனக்குப் பரிசுத்தமானவைகளை நீ அசட்டை பண்ணி என் ஓய்வுநாட்களைப் பரிசுத்தமற்றதாக்கி
9 னாய். கோள் சொல்லுகிறவர்கள் இரத்தஞ் சிந்தும்படி உன்னிடம் வந்தார்கள், அவர் கள் உன்னிலுள்ள மலைகளின்மேல் படைத் துச் சாப்பிட்டார்கள், உன் நடுவில் முறை
10 கேடானதைச் செய்தார்கள். தகப்பனுக்கு அவமானம் உண்டாக்கினவர்களும் தூரஸ்தி ரீயைப் பலவந்தப்படுத்தினவர்களும் உன்
11 னில் உண்டு. தன் அயலான் மனைவி யோடே அருவருப்பானதைச் செய்தவர்க ளும் முறைகேடாய் மருமகளைத் தீட்டுப்ப டுத்தினவர்களும் சொந்தத் தகப்பனுக்குப் பிறந்த சகோதரியைப் பலவந்தம் பண்ணின
12 வர்களும் உன்னில் உண்டு. இரத்தஞ் சிந் தும்படி பரிதானம் வாங்கினவர்கள் உன்னில் உண்டு; வட்டியையும் பொலிசையையும் வாங்கினாய், உன் அயலானுக்குக் கொடுமை செய்து அநியாய லாபத்தைத் தேடினாய் என்னை மறந்துபோனாய், இது யெகோவா வாகிய ஆண்டவரின் திருவாக்கு.

13 இதோ, நீ அநியாயமாய்ச் சம்பாதித்த பொருளையும் உன் நடுவில் நீ சிந்தின இரத் தத்தையும்கண்டு நான் கையைத்தட்டுகி
14 றேன். நான் உன்னைத்தண்டிக்கும் நாட் களில் உன் இருதயம் நிலைநிற்குமோ? உன் கைகள் பலமாயிருக்குமோ? யெகோவாவா கிய நானே இதைச்சொன்னேன், நானே
15 இதைச்செய்வேன். நான் உன்னைப் புற ஜாதியாருக்குள்ளே சிதறடித்து உன்னை தேசங்களிலே தூற்றிப்போட்டு உன் அசுத் தத்தை உன்னிலிருந்து ஒழியப்பண்ணு
16 வேன். நீ செய்தவைகளினாலேயே நீ புற ஜாதியாரின் கண்களுக்குமுன்பாகப் பரிசுத்த மற்றிருப்பாய், நானே யெகோவா என்று அறிந்துகொள்வாய் என்றார்.

17 யெகோவாவின் வார்த்தை எனக்கு வந்
18 தது: மனுஷகுமாரனே, இஸ்ரவேல் வீட் டார் எனக்குக் களிம்பாய்ப் போனார்கள். அவர்களெல்லாரும் குகையிலுள்ள செம்பும் வெள்ளீயமும் இரும்பும் காரீயமுமானார்கள்; அவர்கள் களிம்புவெள்ளியாய்ப்போனார் கள். ஆதலால் யெகோவாவாகிய ஆண்ட
19 வர் இப்படிச்சொல்லுகிறார்: நீங்களெல்லா ரும் களிம்பாய்ப் போனபடியினால், இதோ, நான் உங்களை எருசலேமின் நடுவில் சேர்ப் பேன். வெள்ளியையும் செம்பையும் இரும் 20 பையும் காரீயத்தையும் வெள்ளீயத்தையும் அக்கினியில் ஊதி உருக்குவதற்கெனக் குகைக்குள் சேர்க்கிறதுபோல நான் என் கோபத்தினாலும் என் உக்கிரத்தினாலும் உங்களைச் சேர்த்துவைத்து உருக்குவேன். நான் உங் 21 களைக்கூட்டி என் கோபாக்கினியை உங்கள் மேல் ஊதுவேன், அதற்குள்ளே நீங்கள் உருகுவீர்கள். குகைக்குள் வெள்ளி உருகு 22 வதுபோல நீங்கள் அதற்குள் உருகுவீர்கள்; யெகோவாவாகிய நானே என் உக்கிரத்தை உங்கள்மேல் ஊற்றிவிட்டேன் என்று அப் பொழுது அறிந்துகொள்வீர்கள் என்றார்.

23 யெகோவாவின் வார்த்தை எனக்கு வந்
24 தது: மனுஷகுமாரனே, நீ தேசத்தைப் பார்த்து, நீ சுத்தம்பண்ணப்படாததேசம், கோபத்தின் காலத்தில் மழைபெய்யாத தேசம் என்று அதற்குச்சொல்; அதினுள்ள 25 தீர்க்கதரிசிகள் கட்டுப்பாடிபண்ணி கொச் சிக்கிற சிங்கம் இரை கவ்வுகிறதுபோல ஆத்துமாக்களைப் பட்சிக்கிறார்கள்; திரவியத் தையும் அரும்பொருட்களையும் பறித்துக் கொள்ளுகிறார்கள்; அதின் நடுவில் அநே

26 கரை விதவைகளாக்குகிறார்கள். அதின் ஆசாரியர்கள் என் நியாயப்பிரமாணத்தைக் கொடுமையாய்த் தள்ளி எனக்குப் பரிசுத்த மானவைகளைப் பரிசுத்தமற்றவைகளாக்கு கிறார்கள்; பரிசுத்தமானதற்கும் சாமானிய மானதற்கும் வித்தியாசம்பண்ணுகிறதில்லை, அசுத்தமானதையும் சுத்தமானதையும்பற்றி அவர்கள் போதிக்கிறதில்லை; என் ஓய்வு நாட்கள் விஷயத்தில் கண்மூடித்தனமாயி 27 ருக்கிறார்கள், அவர்கள் நடுவிலே நான் கனவீனம் பண்ணப்படுகிறேன். அதில் இருக்கிற அதின் அதிபதிகள் இரைகவ்வுகிற ஓநாய்கள்போன்றவர்கள்; அநியாய லாபத் தைத்தேடி இரத்தஞ் சிந்துகிறார்கள், உயிர்க் 28 கொலைசெய்கிறார்கள். அதின் தீர்க்கதரிசி கள் வீண்தரிசனங்களையுரைத்துப் பொய்க் குறி சொல்லுகிறார்கள், யெகோவா உரைக் காதிருக்க யெகோவாவாகிய ஆண்டவரே உரைத்தாரென்று அவர்களுக்குச் சொல்லி 29 மேல்பூச்சு பூசுகிறார்கள். தேசத்தின் ஜனங் கள் கொடுமைசெய்து கொள்ளையடித்துச் சிறுமையும் எளிமையுமானவனை ஒடுக்கி அ ந் நி ய னை நியாயவிரோதமாய் நடத்திக் 30 கொடுமைசெய்கிறார்கள். நான் தேசத்தை அழிக்காதபடி திறப்பிலேநிற்கவும் மதிலை அடைக்கவும் முன்வரும் ஒரு மனுஷனை அவர்களுக்குள் தேடினேன், ஒருவனையும் 31 காணவில்லை. ஆகவே நான் அவர்கள்மேல் என் உக்கிரத்தை ஊற்றி என் கோபாக்கினி யால் அவர்களைச் சங்கரித்து அவர்கள் வழி களின்படியே அவர்கள் தலையின்மேல் சுமரப் பண்ணுவேன், இது யெகோவாவாகிய ஆண் டவரின் திருவாக்கு என்றார்.

**23** யெகோவாவின் வார்த்தை எனக்கு வந் 2 தது: மனுஷகுமாரனே, ஒரே தாய்பெற்ற 3 இரண்டு ஸ்திரீகள் இருந்தார்கள். அவர்கள் எகிப்திலே வேசித்தனம்பண்ணினார்கள், தங்கள் இளம்பிராயத்திலே வேசித்தனம் பண்ணினார்கள், அங்கே அவர்கள் ஸ்தனங் கள் அமுக்கப்பட்டு அவர்களுடைய கன் னிமையின் கொங்கைகள் தொடப்பட்டன. 4 அவர்களில் தமக்கை பெயர் ஒகோலாள், தங்கை பெயர் ஒகோலிபாள்; அவர்கள் என்னுடையவர்களாகிக் குமாரரையும்குமா ரத்திகளையும் பெற்றார்கள்; இப்பெயர்களில் ஒகோலாள் என்பது சமாரியாவையும் ஒகோலிபாள் என்பது எருசலேமையும் குறிக்கும்.

5 ஒகோலாள் என்னிடம் வருவதற்குப் பதிலாகச் சோரம் போய்த் தன் நேசர்மேல், தன் அயலாராகிய அசீரியர் மேலே, மோகங் கொண்டாள்: அவர்கள் நீலாம்பரந்தரித்த 6 வர்கள், அதிபதிகள், அதிகாரிகள், அனை வரும் சௌந்தரிய வாலிபர், குதிரை ஏறும் வீரர். அசீரியரின் புத்திரரில் சிரேஷ்ட 7 மான அனைவரோடும் தான் மோகித்த அனை வரோடும் தன் வேசித்தனங்களை நடப்பித்து, அவர்களுடைய கேவலமான சகல விக்கிர கங்களாலும் தீட்டுப்பட்டுப்போனாள். தான் 8 எகிப்திலே தொடங்கின வேசித்தனங்களை அவள் விடவில்லை; அவளுடைய வாலிபத் திலே அவர்கள் அவளோடே சயனித்து அவளுடைய கன்னிமையின் கொங்கை களைத்தொட்டு அவளோடே விபசாரம் செய்துகொண்டே வந்தார்கள். ஆகையால் 9 அவளுடைய நேசரின் கையில், அவள் மோகித்திருந்த அசீரிய புத்திரரின் கையிலே நான் அவளை ஒப்புக்கொடுத்தேன். அவர் 10 கள் அவளை நிர்வாணமாக்கினார்கள், அவ ளுடைய குமாரரையும் அவளுடைய குமா ரத்திகளையும் சிறைபிடித்து அவளையோ பட் டயத்தினால் கொன்றுபோட்டார்கள்; அவள் ஸ்திரீகளுக்குள்ளே வசையாளானாள், இப்படி யாக அவள் ஆக்கினையை அவர்கள் நிறை வேற்றினார்கள்.

அவளுடைய தங்கையாகிய ஒகோலிபாள் 11 இதைக்கண்டும் தன் மோக விகாரத்தில் அவளைப்பார்க்கிலும் மிஞ்சினவளானாள், அவள் சகோதரியின் வேசித்தனங்களிலும் அவள் வேசித்தனங்கள் அதிகமாயின. அசீ 12 ரிய புத்திரர்மேல் மோகங்கொண்டாள், அவர்கள் அயலாரானவர்கள், அதிபதிகள், அதிகாரிகள், மகா அலங்கார ஆடையுள்ள வர்கள், குதிரை ஏறும் வீரர், அனைவரும் சௌந்தரிய வாலிபர். அவளும் அசுத்த 13 மானாளென்றும் அவர்கள் இருவரும் ஒரே வழியில் போனார்களென்றும் கண்டேன். அவள் தன் வேசித்தனங்களில் அதிகரித் 14 தாள்; சுவரில் வரையப்பட்ட புருஷ சரூ பங்களைக் காண்பாள், அவைகள் கல்தேயர் உருவங்கள், சிவப்பாய் வரையப்பட்டன; அவர்கள் தங்கள் அரைகளில் கச்சை கட் 15 டினவர்கள், தங்கள் தலைகளில் மூனை தொங் கும் பெரிய பாகைகளைத் தரித்தவர்கள், எல்லாரும் சிறந்த வீரர் போன்றவர்கள், தங்கள் ஜென்மதேசமாகிய கல்தேயாவிலுள்ள பாபிலோன் புத்திரரின் சாயலானவர்கள். அவளுடைய கண்கள் சித்திரங்களைப் பார்த்த 16 வுடனே அவள் அவர்கள்மேல் மோகங்கொ ண்டுகல்தேயாவுக்கு அவர்களிடம்தூது அனு ப்பினாள். அப்பொழுது பாபிலோன் புத்திரர் 17 அவளிடம் காதற்சயனத்துக்கு வந்து, தங் கள் விபசாரங்களால் அவளை அசுத்தப்படுத்

தினர்கள்; அவள் இவர்களால் அசுத்தப்
பட்டுப்போனபின்பு அவள் மனது அவர்க
18 ளைவிட்டுப் பிரிந்தது. இவ்விதமாய் அவள்
தன் வேசித்தனங்களை வெளியேகாட்டித்
தன்னை நிர்வாணமாக்கினபோது என் மனம்
அவளுடைய சகோதரியை விட்டுப் பிரிந்
தது போல அவளையும்விட்டுப் பிரிந்தது.
19 அவள் எகிப்துதேசத்திலே வேசித்தனம்பண்
ணின தன் வாலிபத்தின் நாட்களை நினைத்துத்
தன் வேசித்தனங்களில் மிஞ்சிப்போ
20 னாள். இவள் விடபுருஷர்மேல் மோகங்
கொண்டாள், அவர்கள் மாம்சம் கழுதை
மாம்சம் போன்றது, அவர்கள் இந்திரியம்
21 குதிரை இந்திரியம் போன்றது. எகிப்தியர்
உன் இளம்பிராய ஸ்தனங்களினிமித்தம்
உன் கொங்கைகளைத் தொட்டகாலத்திலே,
நீ உன் இளம்பிராயத்தில் செய்த முறை
கேடுகளை நாடி விரும்பினாய்.

22 ஆகையால் ஒகோலிபாளே, யெகோவா
வாகிய ஆண்டவர் சொல்வதைக்கேள்:
இதோ, உன் மனது விட்டுப்பிரிந்த உன்
நேசரை நான் உனக்கு விரோதமாக எழு
ப்பி, சுற்றிலும் அவர்களை உனக்கு விரோத
23 மாக வரப்பண்ணுவேன். அவர்களோடு
கூட பாபிலோன் புத்திரரையும் கல்தேயர்
எல்லாரையும், பெகோடு, ஷோவா, கோவா
என்னும் இடங்களின் மனுஷரையும் அசி
ரிய புத்திரர் எல்லாரையும் வரப்பண்ணு
வேன், அவர்கள் யாவரும் சௌக்கிய
வாலிபர், அதிபதிகள், அதிகாரிகள், பராக்
கிரமவீரர், பேர் பெற்றவர்கள்; யாவரும்
24 குதிரை ஏறும் வீரர். அவர்கள் திரளான
வண்டிகளோடும் இரதங்களோடும் ஜனக்
கூட்டத்தோடும் கேடகங்களும் பரிசை
களும் தலைச்சீராக்களும் தரித்தவர்களாய்
உனக்கு விரோதமாய் வருவார்கள், சுற்றி
லும் உனக்கு விரோதமாய் வருவார்கள்;
நியாயந்தீர்ப்பதற்கு அவர்களை நியமிப்
பேன், அவர்கள் தங்கள் தீர்ப்புகளின்
25 படி உனக்குத் தீர்ப்பிடுவார்கள். உன்
மேல் என் எரிச்சலை வரப்பண்ணுவேன்;
அவர்கள் உன்னை உக்கிரமாய் நடத்தி
உன் மூக்கையும் உன் காதுகளையும்
அறுத்துப் போடுவார்கள்; உன்னில்
மீதியாயிருப்பவர்கள் பட்டயத்தால் வெட்
டுண்டுபோவார்கள், அவர்கள் உன் குமார
ரையும் உன் குமாரத்திகளையும் பிடித்துக்
கொள்ளுவார்கள், உன்னில் மீதியாயிருப்ப
26 வர்கள் அக்கினிக்கு இரையாவார்கள். அவர்
கள் உன் வஸ்திரங்களை உரிந்து உன் அழ
கிய ஆபரணங்களைப் பறித்துக்கொள்ளுவார்
27 கள். இவ்விதமாய் உன் முறைகேட்டை
யும் நீ எகிப்துதேசத்தில் துவக்கின உன்
வேசித்தனத்தையும் ஒழியப்பண்ணுவேன்,
நீ கண்களை நிமிர்த்து அவர்களை நோக்குவ
தில்லை, எகிப்தை இனி நினைப்பதுமில்லை.
யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச் 28
சொல்லுகிறார்; இதோ, நீ பகைக்கிறவர்
களின் கையிலும் உன் மனம் விட்டுப்பிரிந்த
வர்களின் கையிலும் நான் உன்னை ஒப்புக்
கொடுப்பேன். அவர்கள் உன்னைப்பகைத்து 29
நடத்தி நீ உழைத்துச் சம்பாதித்தவற்றை
யெல்லாம் எடுத்துக்கொண்டு உன்னை அம்
மணமும் நிர்வாணமுமாக்கிவிடுவார்கள்;
இப்படியாக உன் முறைகேடு வேசித்தனம்
இவற்றோடு உன் வேசித்தன நிர்வாணமும்
காட்டப்படும். நீ புறஜாதியாரின் பின் 30
சென்று சோரம்போய் அவர்களுடைய கேவ
லமான விக்கிரகங்களால் உன்னைத் தீட்டுப்
படுத்திக்கொண்டதினிமித்தம் இவைகள்
உனக்குச் செய்யப்படும். உன் சகோதரி 31
யின் வழியிலே நீ நடந்தபடியால் அவளு
டைய பாத்திரத்தை உன் கையிலே கொடுப்
பேன். யெகோவாவாகிய ஆண்டவர் சொல் 32
வது இதுவே: நீ உன் சகோதரியின் பாத்
திரத்தைக் குடிப்பாய், அது ஆழமும் அக
லமுமானது, அதிகம் கொள்வது, நகைப்புக்
கும் பரியாசத்துக்கும் ஆளாவாய். நீ வெறி 33
கொண்டு நிறை சஞ்சலத்துக்குள்ளாவாய்,
உன் சகோதரியாகிய சமாரியாவின் பாத்
திரம் பிரமிப்பும் பாழும் நிறைந்த பாத்திரம்.
நீ அதில் இருக்கிறதை உறிஞ்சிக் குடித்து 34
அதை ஓடுகளாக உடைத்து நக்கி உன்
ஸ்தனங்களைக் கீறிக்கொள்வாய்; நானே
இதைச் சொன்னேன். இது யெகோவாவா
கிய ஆண்டவரின் திருவாக்கு. ஆகவே யெ 35
கோவாவாகிய ஆண்டவர் சொல்வதைக்
கேள், நீ என்னை மறந்து, என்னை உனக்குப்
பின்னே அகற்றிவிட்டதினிமித்தம் நீயே
உன் முறைகேட்டையும் உன் வேசித்தனங்
களையும் சுமப்பாய்.

பின்னும் யெகோவா எனக்குச் சொன் 36
னது இதுவே: மனுஷகுமாரனே, நீ ஒகோ
லாளுக்கும் ஒகோலிபாளுக்கும் தீர்ப்பிடுவா
யானால் அவர்களுடைய அருவருப்புகளை
அவர்களுக்குத் தெரியக்காட்டு. அவர்கள் 37
விபசாரம் பண்ணினார்கள், அவர்கள் கை
களில் இரத்தம் இருக்கிறது, அவர்கள்
தங்கள் கேவலமான விக்கிரகங்களோடே
விபசாரம் பண்ணித் தாங்கள் எனக்குப்
பெற்ற தங்கள் பிள்ளைகளையும் அவைக
ளுக்கு அக்கினி தகனமாகப் படைத்தார்
கள். மேலும் அவர்கள் இதையும் செய் 38
தார்கள்: அவர்கள் ஒரே நாளிலேயே என்

பரிசுத்தஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தி என் ஓய்வு நாட்களையும் பரிசுத்தமற்றதாக்கினார்
39 கள். அவர்கள் ஒரே நாளிலேயே தங்கள் பிள்ளைகளைத் தங்கள் கேவலமான விக்கிரகங்களுக்குப் பலியிட்டு என் பரிசுத்தஸ்தலத்துக்கு வந்து அதைப் பரிசுத்தமற்றதாக்கினார்கள்; இதோ, என் ஆலயத்தின் நடுவிலே
40 இப்படிச்செய்தார்கள். இதுவுமன்றி தூரத்திலிருந்து வரவேண்டியவர்களுக்கு ஆட்களை அனுப்பினார்கள், தூதுவர் போகவே அவர்கள் வந்தார்கள்; அவர்களுக்கென்று நீ குளித்து உன் கண்களில் மையிட்டுக் கொண்டு ஆபரணங்களால் உன்னைச் சிங்
41 காரித்துச் | சிறந்த மஞ்சத்தின்மேல் உட்கார்ந்துகொண்டாய், அதின் முன்னே ஒரு மேசை போடப்பட்டிருந்தது, என் தூபவர்க்கத்தையும் என் எண்ணெயையும்
42 அதின்மேல் வைத்தாய். அவளிடத்திலே சகபோஜிகளின் அமளிசத்தம் கேட்டது, அங்கிருந்த இழிவான மனிதரோடே வனாந்தரத்திலிருந்து வெறிகாரரும் அழைக்கப்பட்டார்கள்; இவர்கள் அச்சகோதரிகளின் கைகளில் கடகங்களையும் அவர்களுடைய தலைகளில் அழகிய கிரீடங்களை
43 யும் போட்டார்கள். விபசாரங்களில் கிழவியானவளைப்பற்றி, அவள் இன்னும் தன் வேசித்தனங்களைச் செய்வாளோ என்றேன்.
44 பரஸ்திரீயினிடம் செல்வதுபோல அவளிடத்தில் சென்றார்கள், இவ்விதமான முறைகேடான ஸ்திரீகளாகிய ஒகோலாளிடத்திலும் ஒகோலிபாளிடத்திலும் சென்றார்கள்.
45 ஆகையால் விபசாரஞ்செய்யும் ஸ்திரீகளையும் இரத்தஞ்சிந்தும் ஸ்திரீகளையும் நியாயந்தீர்க்கிறபடியே நீதியுள்ளவர்கள் அவர்களை நியாயந்தீர்ப்பார்கள்; அவர்கள் விபசாரிகள், அவர்கள் கைகளில் இரத்தம் இருக்கிறது.
46 யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச் சொல்லுகிறார்: நான் அவர்களுக்கு விரோதமாகச் சபை கூடிவரச்செய்து அவர்களைக் கொடுமைக்கும் கொள்ளைக்கும் ஒப்புக்
47 கொடுப்பேன். அந்தக் கூட்டத்தார் அவர்களைக் கல்லெறிந்து தங்கள் பட்டயங்களால் வெட்டிப்போடுவார்கள்; அவர்கள் குமாரரையும் அவர்கள் குமாரத்திகளையும் கொன்றுவிட்டு அவர்கள் வீடுகளை அக்கி
48 னியால் சுட்டெரிப்பார்கள். இவ்விதமாக முறைகேடு தேசத்தைவிட்டு ஒழியும்படி செய்வேன்; எல்லா ஸ்திரீகளும் எச்சரிப்படைந்து உங்கள் முறைகேட்டின்
49 படி செய்யாதிருப்பார்கள். உங்கள் முறைகேடு உங்கள்மேல் சுமத்தப்படும், நீங்கள் உங்கள் கேவலமான விக்கிரகங்களைச் சேவித்த பாவங்களைச் சுமப்பீர்கள்; நானே யெகோவாவாகிய ஆண்டவர் என்று அறிந்து கொள்வீர்கள்.

**24** ஒன்பதாம் வருஷம் பத்தாம்மாதம் பத்
தாந்தேதியிலே யெகோவாவின் வார்த்தை
2 எனக்கு வந்தது: மனுஷகுமாரனே, இந்
நாளின் பேரை, இதே நாளின் பேரை,
எழுதிவை, இதே நாளிலேயே பாபிலோன்
ராஜா எருசலேமுக்கு விரோதமாய் வந்
3 திருக்கிறான்; இப்போதும் நீ கலக வீட்
டாருக்கு ஒரு உவமையைக் கூறிச்
சொல்லவேண்டியது இதுவே: யெகோவா
வாகிய ஆண்டவர் இப்படிச் சொல்லுகிறார்,
ஒரு பானையை அடுப்பிலே வை, அதை
அடுப்பிலே வைத்து அதிலே தண்ணீரை
4 விடு. அதிலே போடவேண்டிய கண்டங்
கனை, பின்னந்தொடையும் முன்னந்
தொடையுமாகிய நல்ல கண்டம் ஒவ்வொன்
றையும், அதிலே சேர்த்துவை; நல்ல எலும்
5 புகளைப் போட்டு அதை நிரப்பு. ஆட்டு
மந்தையிலே சிறந்ததைக் கொண்டு வந்து
விறகுகளை அதின் கீழே குவித்து எரிக்க
வேண்டும்; அதிலுள்ள எலும்புகளும்
வேகும்படி அதைப் பொங்கப் பொங்கக்
காய்ச்சவேண்டும்.

6 யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச்
சொல்லுகிறார்: இரத்தஞ்சிந்திய நகரத்துக்கு
ஐயோ கேடாம்! அது துருபிடித்திருக்கிற
பானை, துரு நீங்காத பானை, அதிலுள்ளவை
களைக் கண்டங்கண்டமாக எடுத்துவிடு
7 சீட்டுப்போடவேண்டாம். நகரத்தின் இரத்
தம் அவள் நடுவில் இருக்கிறது, அது
வெறுங் கற்பாறையின்மேல் ஊற்றப்பட்
டது, மண்ணில் மறையும்படி மண்தரை
8 யில் ஊற்றப்படவில்லை. பழி வாங்குவதற்
காகவாய் உக்கிரகோபம் எழும்படி நான்
அவள் இரத்தத்தை மறைக்காமல் வெறுங்
கற்பாறையின்மேல் ஊற்றினேன். ஆகவே
9 யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது
இதுவே: இரத்தஞ் சிந்திய நகரத்துக்கு
ஐயோ கேடாம்! நான் மிகுதியான விறகு
களைக் குவித்து வைப்பேன். மிகுதியான
10 விறகுகளை அதிகமாய்ச் சேர்த்துத் தீயை
மூட்டி, இறைச்சியை அழிய வேகவைத்து
வற்றப்போடு, எலும்புகளைக் கருக்கிவிடு.
11 பின்பு அதை வெறுமையாகத் தழலின்
மேல் வை; பானை காய்ந்து அதின் களிம்பு
வெந்து அதற்குள் இருக்கிற அதின்
அழுக்கு உருகி அதின் துரு நீங்கும். அதிகக்
12 கஷ்டப்பட்டும் அதின் மிகுதியான துரு
அதைவிட்டு நீங்கவில்லை; அதின் துரு அக்

13 கினிக்கு உள்ளாக! உன் அசுத்தம் முறை
கேடு; நான் உன்னைச் சுத்திகரிக்க முயன்
றும் நீ உன் அசுத்தம் நீங்கச் சுத்திகரிக்கப்
படவில்லை, ஆதலால் என் உக்கிரகோபத்
தை உன்மேல் தீர்த்துக்கொள்ளும்மட்டும்
14 நீ சுத்திகரிக்கப்படாதிருப்பாய். யெகோவா
வாகிய நானே இதைச் சொன்னேன், இது
நிறைவேறும், நான் இதைச்செய்து முடிப்
பேன், முடியாது விடேன், தப்பவிடேன்,
மனஸ்தாபப்படேன்; உன் வழிகளின்படி
யும் உன் செய்கைகளின்படியும் உனக்குத்
தீர்ப்பிடுவார்கள், இது யெகோவாவாகிய
ஆண்டவரின் திருவாக்கு.
15 பின்னும் யெகோவாவின் வார்த்தை
16 எனக்கு வந்தது: மனுஷகுமாரனே, இதோ,
நான் உன் கண்களுக்கு அருமையானவனைத்
திடீரென உன்னைவிட்டு எடுத்துக்கொள்ளு
வேன்; நீயோ புலம்பாமலும் அழாமலும்
கண்ணீர்விடாமலும் இருக்கவேண்டும்.
17 அமைதியாயிருந்து பெருமூச்சுவிடு, இழவு
கொண்டாடவேண்டாம்; உன் பாகையை
உன் தலையிலேயே தரித்துக்கொள், உன்
பாதரட்சைகளை உன் கால்களில்
தொடுத்துக்கொள், உன் தாடியை
மூடிக்கொள்ளவேண்டாம்; துக்கங்கொண்
டாடுவோர் உண்ணும் ஆகாரத்தை
உண்ணவேண்டாம் என்று சொன்னார்.
18 காலையிலே நான் ஜனங்களோடே பேசி
னேன்; அன்று மாலை என் மனைவி மரித்துப்
போனாள்; எனக்குக் கட்டளையிட்டபடியே
19 காலையிலே செய்தேன். அப்பொழுது ஜனங்
கள் என்னிடம் வந்து, நீர் செய்கிறவைகள்
எங்களுக்கு எதைக் குறிக்கும் என்பதை
எங்களுக்குத் தெரிவிக்கமாட்டீரா என்று
20 கேட்டார்கள். நான் அவர்களுக்குப்
பதிலுரைத்து: யெகோவாவின் வார்த்
21 தை எனக்கு வந்தது, நீ இஸ்ரவேல்
வீட்டாருக்கு இப்படிச் சொல்: யெகோ
வாவாகிய ஆண்டவர் சொல்வது
இதுவே: உங்கள் பலத்தின் பெருமையும்
உங்கள் கண்களுக்கு அருமையும் உங்கள்
ஆத்துமாவின் வாஞ்சையுமாகிய என் பரி
சுத்த ஸ்தலத்தை, இதோ, நான் பரிசுத்த
மற்றதாக்குகிறேன்; நீங்கள் விட்டுவந்த
உங்கள் குமாரரும் குமாரத்திகளும் பட்ட
22 யத்தால் விழுவார்கள். அப்பொழுது நான்
செய்ததுபோல நீங்களும் செய்வீர்கள்;
தாடியை மூடிக்கொள்ளாமலும் துக்கங்
கொண்டாடுவோர் உண்ணும் ஆகாரத்தை
23 உண்ணுமலும் இருப்பீர்கள். உங்கள்
பாகைகள் உங்கள் தலைகளிலும் உங்கள்
பாதரட்சைகள் உங்கள் கால்களிலும்
இருக்கும், நீங்கள் புலம்பாமலும் அழாமலும்
இருப்பீர்கள், உங்கள் அக்கிரமங்களில்
வாடிப்போய் ஒருவரையொருவர் பார்த்துப்
பெருமூச்சுவிடுவீர்கள். அப்படியாக எசேக் 24
கியேல் உங்களுக்கு அடையாளமாவான்,
அவன் செய்தபடியெல்லாம் நீங்களும் செய்
வீர்கள்; இது நடக்கும்போது நானே
யெகோவாவாகிய ஆண்டவர் என்று
அறிந்துகொள்வீர்கள் என்று சொன்னார்
என்றேன்.

பின்னும், மனுஷகுமாரனே நீ இதைக் 25
கவனித்துக்கொள், அவர்களுக்கு பலமும்
அவர்களுடைய சிறந்த மகிழ்ச்சியும் அவர்
களுடைய கண்களுக்கு அருமையும் அவர்
கள் ஆத்துமாவின் வாஞ்சையுமான அவர்
கள் குமாரரையும் அவர்கள் குமாரத்திகளை
யும் எந்தநாளில் நான் அவர்களிடமிருந்து
எடுத்துக்கொள்ளுகிறேனே | அந்தநாளில் 26
தப்பி மீந்த ஒருவன் உன்னிடம் வந்து உன்
காதுகள் கேட்க இதைத் தெரிவிப்பான்.
அந்நாளிலேயே உன் வாய் திறக்கப்படும், 27
நீ தப்பிவந்தவனோடே பேசுவாய், இனி
மவுனமாயிருக்கமாட்டாய்; இவ்விதமாக
நீ அவர்களுக்கு அடையாளமாவாய்; நானே
யெகோவா என்று அப்பொழுது அறிந்து
கொள்வார்கள் என்று சொன்னார்.

**25** யெகோவாவின் வார்த்தை எனக்கு வந்
தது, மனுஷகுமாரனே, நீ அம்மோன் புத்திர 2
ருக்கு நேராக உன் முகத்தைத்திருப்பி,
அவர்களுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம்
உரைத்து | அம்மோன் புத்திரருக்கு இப் 3
படிச்சொல்: யெகோவாவாகிய ஆண்டவர்
சொல்வதைக்கேளுங்கள், யெகோவாவாகிய
ஆண்டவர்சொல்வது இதுவே, என் பரிசுத்த
ஸ்தலம் பரிசுத்தமற்றதாக்கப்பட்டபோதும்,
இஸ்ரவேல்தேசம்பாழாக்கப்பட்டபோதும்,
யூதாவீட்டார் சிறைப்பட்டுப்போனபோ
தும், நீ அவர்களுக்கு விரோதமாக ஆ, ஆ
என்று சொன்னபடியினால், | இதோ, நான் 4
உன்னைக் கீழ்திசையாருக்குச் சொந்தமாக
ஒப்புக்கொடுப்பேன்; அவர்கள் உன்னில்
தங்கள் கூடாரங்களைப்போட்டு உன்னில்
தங்கள் வாசஸ்தலங்களை அமைப்பார்கள்;
அவர்களே உன் கனிகளைப்புசித்து உன்
பாலைக் குடிப்பார்கள். நான் ரப்பாவை 5
ஒட்டகக்கொட்டகையும் அம்மோன் புத்
திரரின் தேசத்தை ஆட்டுக்கிடையுமாக்கு
வேன்; நானே யெகோவா என்று அப்பொ
ழுது அறிந்துகொள்வீர்கள். யெகோவா 6
வாகிய ஆண்டவர் சொல்வது இதுவே:
இஸ்ரவேல் தேசத்துக்கு விரோதமாக நீ

கையைத்தட்டிக் காலி உதறி மன கர்வத்
7 தோடு களித்தபடியினால், | இதோ, உனக்கு
விரோதமாக நான் என் கையைநீட்டுவேன்,
உன்னைப் புறஜாதியாருக்குக் கொள்ளையாக
ஒப்புக்கொடுப்பேன், தேசத்தாருக்
குள் இராதபடி உன்னை வேரற்றுப் போகப்
பண்ணுவேன், தேசங்களிலிராதபடி உன்னை
அழிப்பேன், உன்னை நிர்மூலமாக்குவேன்;
நானே யெகோவா என்று அப்பொழுது
அறிந்துகொள்வாய்.
8 யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது
இதுவே: இதோ, யூதாவீட்டார் எல்லா
ஜாதியாரையும் போன்றவர்களே என்று
மோவாபும், சேயீரும் சொல்லுகிறபடியி
9 னால், | இதோ, நான் மோவாபின் மலைச்சரி
வைக் கீழ்திசையாருக்குத் திறப்பாக்கி, ஒரு
முனைதொடங்கி மறுமுனைமட்டுமுள்ளவை
களும் தேசத்தின் திறப்பாயிருப்பவைகளு
மான பேத்யெஷிமோத், பாகால்மெயோன்,
கிரியத்தாயிம் என்னும் பட்டணங்களை
10 அழிப்பேன். அம்மோன் புத்திரரோடேகூட
மோவாபியரையும்கீழ்திசையாருக்குச் சொந்
தமாக ஒப்புக்கொடுப்பேன், அம்மோன் புத்
திரரின்பேர் ஜாதியாருக்குள் நினைக்கப்படுவ
11 தில்லை. மோவாபையும் நான் தியாயத்தீர்ப்
பேன், நானே யெகோவா என்று அப்பொ
முது அறிந்துகொள்வார்கள்.
12 யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது
இதுவே: ஏதோம் யூதாவீட்டாரிடத்தில் பழி
வாங்க நினைத்துப் பழிவாங்கித் தங்கள்மேல்
பெரியகுற்றஞ்சுமத்திக்கொண்டபடியினால் |
13 யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச்
சொல்லுகிறார்: நான் ஏதோமுக்கு விரோத
மாக என் கையை நீட்டி, அதில் இராதபடி
மனுஷரையும் மிருகங்களையும் சங்காரம்
பண்ணி அதைத் தேமான் துவக்கித் தெதான்
மட்டும் வனாந்தரமாக்குவேன்; பட்டயத்
14 தால் விழுவார்கள். நான் என் ஜனமாகிய
இஸ்ரவேலின் கையினால் ஏதோமினிடம்
பழிவாங்குவேன்; அவர்கள் என் கோபத்
தின்படியும் என் உக்கிரத்தின்படியும் ஏதோ
முக்குச் செய்வார்கள், அப்பொழுது நான்
பழிவாங்குவது இன்னதென்று அறிந்து
கொள்வார்கள், இது யெகோவாவாகிய ஆண்
டவரின் திருவாக்கு.
15 யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது
இதுவே: பெலிஸ்தியர் பழிவாங்க நினைத்துத்
தங்கள் மன கர்வத்தில் பழிவாங்கிப் பழம்
16 பகைதீரக் கேடுசெய்தபடியினால் | யெகோ
வாவாகிய ஆண்டவர் இப்படிச் சொல்லு
கிறார், இதோ, நான் பெலிஸ்தியருக்கு விரோ
தமாக என் கையை நீட்டிக் கிரேத்தியரைச்
சங்காரித்துக் கடற்கரையில் மீதியானவர்களை
அழித்து | உக்கிரகோபத்தில் அவர்களைத் 17
தண்டித்து அவர்களிடம் கொடிதாய்ப் பழி
வாங்குவேன்; நான் அவர்களிடம் பழி
வாங்கும்போது நானே யெகோவா என்று
அறிந்துகொள்வார்கள்.

பதினேராம் வருஷம் முதலாந்தேதி 26
யிலே யெகோவாவின் வார்த்தை எனக்கு
வந்தது: மனுஷகுமாரனே, தீரு எருசலே 2
முக்கு விரோதமாகப்பேசி, ஆ, ஆ, தேசத்
தாருக்கு வாசலாயிருந்த நகரம் இடிபட்
டது, வாசல் என் முகமாகத் திரும்பினது,
அது பாழானது, நான் நிரம்பிச் செழிப்
பேன் என்று சொன்னபடியினால் | யெகோ 3
வாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே:
தீருவே, இதோ, நான் உனக்கு விரோதமாக
வருகிறேன்; சமுத்திரம் தன் அலைகள் எழும்
பிவரப்பண்ணுவதுபோல் நான் பல ஜாதி
யாரை உனக்கு விரோதமாக எழும்பிவரப்
பண்ணுவேன். அவர்கள் தீருவின் மதில் 4
களை அழித்து அதின் கோபுரங்களை இடித்
துப்போடுவார்கள், அதின் மண்ணும் அதில்
இராதபடி நான் அதைப்பெருக்கி வாரி
அதை வெறும் கற்பாறையாக்கிவிடுவேன்.
அது சமுத்திரத்தின் நடுவிலே வலைகளை 5
விரித்து உலர்த்தும் இடமாயிருக்கும்; நானே
இதைச் சொன்னேன்,—இது யெகோவாவா
கிய ஆண்டவரின் திருவாக்கு—அது ஜாதி
யாருக்குக் கொள்ளையாகும். அதைச்சார்ந்த 6
வெளி ஊர்களாகிய அதின் குமாரத்திகளும்
பட்டயத்தால் கொன்றுபோடப்படுவார்கள்;
நானே யெகோவா என்று அப்பொழுது
அறிந்துகொள்வார்கள்.
யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது 7
இதுவே: இதோ, நான் ராஜாதி ராஜாவாகிய
நேபுகாத்நேச்சார் என்னும் பாபிலோன்
ராஜாவை வடக்கேயிருந்து குதிரைகளோடும்
இரதங்களோடும் குதிரைவீரரோடும் கூட்
டத்தோடும் திரளான சேனையோடும் தீரு
வுக்கு விரோதமாக வரப்பண்ணுவேன்.
அவன் வெளியூர்களாகிய உன் குமாரத்தி 8
களைப் பட்டயத்தினால் கொன்று, உனக்கு
விரோதமாகக் கொத்தளங்களைக்கட்டி,
உனக்கு விரோதமாக மண்மேடு போட்டு,
உனக்கு மறைத்திருக்கக் கேடயங்களை உயர்
த்தி, | இடிக்கும் யந்திரங்களை உன் மதில்களு 9
க்கு எதிரேவைத்துத் தன் இருப்பாயுதங்க
ளால் உன் கோபுரங்களை இடித்துப்போடு
வான். அவன் குதிரைத் திரளினால் தூள் 10
எழும்பி உன்னை மூடும்; பிடிபட்ட பட்ட
ணத்தில் பிரவேசிப்பதுபோல் அவன் உன்

வாசல்கள் வழியாய் வருகையில் குதிரை வீரரும் வண்டிகளும் இரதங்களும் இரை கிற சத்தத்தினாலே உன் மதில்கள் அதிரும்.
11 தன் குதிரைகளின் குளம்புகளினால் உன் வீதிகளெல்லாம் பொடிபட மிதிப்பான்; உன் ஜனத்தைப் பட்டயத்தினால் கொன்று போடுவான்; உன் சிறந்த தூண்கிலைகள்
12 தரையிலே விழுந்துபோகும். அவர்கள் உன் ஆஸ்தியைக் கொள்ளையிட்டு உன் சரக்குகளைச் சூறையாடி உன் மதில்களை இடித்து உனக்கு அருமையான வீடுகளை அழித்து, உன் கல்லுகளையும் உன் மரங்களையும் உன் மண்ணையும் கடலின் நடுவிலே போட்டுவிடு
13 வார்கள். உன் சங்கீத தொனியை ஒயப் பண்ணுவேன், உன் சுரமண்டலங்களின்
14 சத்தம் இனிக்கேட்கப்படுவதில்லை. உன்னை வெறும் கற்பாறையாக்கி விடுவேன்; நீ வலை களை விரித்து உலர்த்தும் இடமாயிருப்பாய், இனிக்கட்டப்படாய்; யெகோவாவாகிய நானே இதைச் சொன்னேன், இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு.
15 தீருவுக்கு யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே: காயம்பட்டோர் அலற உன் நடுவில் சங்காரம் நடக்கும்போது நீ விழுகிற சத்தத்தினால் தீவுகள் அதிராதோ?
16 கடலரசர் அனைவரும் தங்கள் சிங்காசனங்களை விட்டு இறங்கித்
தங்கள் அங்கிகளைக் கழற்றித்
தங்கள் சித்திரத் தையலாடைகளை உரிந்துபோடுவார்கள்;
திகிலே அவர்கள் ஆடையாம்;
தரையில் உட்கார்ந்து நிமிஷந்தோறும் திகில்கொண்டு,
உன்னை நினைத்து பிரமிப்பார்கள்.
17 அவர்கள் உன்னைப்பற்றிப் பிரலாபப்பாடல் பாடி:
சமுத்திரவாசிகள் நிறைந்தவளே, ஐயோ அழிந்தாயே!
பேர்பெற்ற நகரியே, சமுத்திரபலம் பெற்றவளே!
நீயும் உன் குடிகளும் திகில் வினைத்தீர் உன்னில் தங்கின யாவருக்கும்.
18 நீ விழும் நாளில் தீவுகள் திகில்கொள்ளும்,
நீ அற்றுப்போம்போது சமுத்திரத்தீவுகள் திடுக்கிடும் என்று புலம்புவார்கள்.
19 யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே: குடியில்லா நகரங்களைப்போல் நான் உன்னைப் பாழ் நகரமாக்கும்போதும், நான் ஆழங்களை உன்மேல் வரப்பண்ணவே பல தண்ணீர்கள் உன்னை மூடும்போதும்,
20 பூர்வகால ஜனத்தினிடம் குழியில் இறங்குகிறவர்களோடே நான் உன்னை இறங்கப் பண்ணுவேன்; குழியில் இறங்கினவர்களோடே, பூர்வகாலமுதல் பாழாயிருக்கிறவைகளைப்போல பூமியின் தாழ்விடங்களிலே உன்னை இருக்கச்செய்வேன்; உன்னில் எவரும் குடியேறுவதில்லை, ஜீவனுள்ளோர் தேசத்திலே மகிமை விளங்கச்செய்வேன்.
21 உனக்குப் பயங்கரமான முடிவு வரச்செய்வேன், இனி நீ இருப்பதில்லை; உன்னைத் தேடினாலும் இனி என்றைக்கும் உன்னைக் காண்பதில்லை; இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு.

**27** யெகோவாவின் வார்த்தை எனக்கு வந்
2 தது: மனுஷகுமாரனே, நீ இப்போது தீருவைப்பற்றிப் பிரலாபப்பாடல் பாடு;
3 தீருவுக்கு இதைச்சொல், சமுத்திரக்கரை துறையிலே குடியிருப்பவளே, அநேக தீவுகள் வரைக்கும் பல தேசத்தாரோடு வியாபாரம் செய்கிறவளே, யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வதைக் கேள்:
தீருவே, நீ உன்னைப்பற்றி,
நான் நிறை அழகி என்று சொல்லிக் கொள்கின்றாய்.
4 நடுக் கடல்மட்டும் உன் எல்லைகள் எட்டும்;
உன்னை அமைத்தவர் உன்னை நிறையழகியாக்கிவிட்டார்;
5 செனீர்த் தேவதாருவினால்
உனது கப்பற்பலகைகளைச் செய்தார்கள்,
பாய்மரத்தைச் செய்வதற்கு
லீபனோன் கேதுரு கொண்டுவந்தார்கள்.
6 பாசான் கர்வாலியால் உன் துடுப்புகளைச் செய்தார்கள்,
கித்தீம் தீவுகளின் சவுக்கமரத்தில்
யானைத்தந்தம் அழுத்தி அதினால்
உனது கப்பல் மேல்தட்டு அமைத்தார்கள்.
7 எகிப்தின் சித்திரத்தையலுள்ள
சணல்நூல் துணி நீ விரித்த பாயாம்,
அதுவே உனக்குக் கொடியுமானது.
எலிசாதீவுகளின் இளநீலமும்
இரத்தாம்பரமும் உன் விதானமாயிற்று.
8 சீதோன் அர்வாத் ஊர்களின் குடிகள்
உனக்குத் தண்டுவலிப்பவராளுர்,
தீருவே உன்னிலிருந்த அறிவாளர்
உனது மாலுமிகளாயினுர்கள்.
9 கெபலூர் முதியோரும் அதின் அறிவாளரும்
உன்னில் பழுதுபார்ப்பவர்கள் ஆனுரே.
சமுத்திரத்தின சகல கப்பல்களும் அவைகளிலுள்ள கப்பற்காரரும் உன் சரக்குகளை

வியாபாரம்பண்ண உனக்குத் துணையாயிருந்
10 தார்கள். பாரசீகரும் லூதியரும் பூத்தியரும் உன் இராணுவத்தில் யுத்தவீரராயிருந்தார்கள், அவர்கள் கேடகமும் தலைச்சிராவும் உன்னில் தொங்கவைத்து உன்னை
11 அலங்கரித்தார்கள். அர்வாத்புத்திரரும் உன் இராணுவவீரரும் உன் மதில்கள்மேல் சுற்றிலும் இருந்தார்கள்; கம்மாத்தியர் உன் கோபுரங்களில் இருந்தார்கள், இவர்கள் உன் மதில்கள்மேல் சுற்றிலும் தங்கள் பரிசைகளைத் தொங்கவைத்து, உன்னை நிறையழகி
12 யாக்கினார்கள். பலவித சரக்குகள் உன்னில் ஏராளமாயிருந்தபடியினால் தர்ஷீஸ் ஊழியர் உன்னுடே வியாபாரத்தோழராயிருந்தார்கள்; உன் சரக்குகளை வாங்க வெள்ளியையும் இரும்பையும் வெள்ளீயத்தையும்
13 காரீயத்தையும் கொண்டுவந்தார்கள். யாவான், தூபால், மேசேக்கு என்னும் ஜாதியார் உன்னுடே வியாபாரம்பண்ணி அடிமைகளையும் செப்புப்பாத்திரங்களையும் உனக்
14 குக்கொடுத்து மாற்றினார்கள். தொகர்மா வம்சத்தார் வண்டிக்குதிரைகளையும் சவாரிக்குதிரைகளையும் கோவேறு கழுதைகளையும்
15 கொடுத்து மாற்றினார்கள். தேதான் புத்திரர் உன் வியாபாரிகளானார்கள், பல தீவுகளின் வர்த்தகச் சரக்குகள் உன் வசமாகச் சேர்ந்தன; யானைத்தந்தங்களையும் கருங்காலி
16 மரங்களையும் வெகுமானமாகக் கொண்டுவந்தார்கள். நேர்த்தியான பல பொருட்களை நீ செய்தபடியினால் சீரியர் உன்னுடே வியாபாரத்தோழராகி மாணிக்கங்களையும் இரத்தாம்பரங்களையும் சித்திரத்தையலாடைகளையும் மெல்லிய துணிகளையும் பவளங்களையும்
17 படிகத்தையும் உனக்குக் கொடுத்து மாற்றினார்கள். யூதரும் இஸ்ரவேல் தேசத்தாரும் உன்னுடே வியாபாரம்பண்ணி மின்னீத்தி லிருந்து வரும் கோதுமையையும் பலகாரம், தேன், எண்ணெய், பிசின்தைலம் இவற்றையும் உனக்குக் கொடுத்து மாற்றினார்
18 கள். நீ செய்த பல பொருட்களும் மிகுதியான பலசரக்குகளும் உன்னிடமிருந்தபடியினால் தமஸ்கு ஊழியர் உனது வியாபாரத்தோழராகி கெல்போனின் திராட்சரசத்தையும் சாகாரின் ஆட்டுமயிரையும் உன்னி
19 டம் கொண்டுவந்தார்கள். வேதான் தேசத்தாரும் யாவான் தேசத்தாரும் ஊசாலிலிருந்து உனக்குச் சரக்குகளைக்கொண்டுவந்து அடித்த இருப்புச் சாமான்களையும் இலவங்கத்தையும் வசம்பையும் உனக்குக்
20 கொடுத்து மாற்றினார்கள். தேதானியார் உன்னுடே வியாபாரம்பண்ணிச் சேணங்களுக்குப் போடுகிற மேன்மையான இரத்தினக்கம்பளங்களைக் கொண்டுவந்தார்கள்.
21 அரபியரும் கேதாரின் சகல அதிபதிகளும் உனக்கு வசமான வியாபாரத்தோழராகி ஆட்டுக்குட்டிகளையும் ஆட்டுக்கடாக்களையும் வெள்ளாட்டுக்கடாக்களையும் கொண்டு
22 வந்து உன்னுடே வியாபாரம்பண்ணினார்கள். ஷேபா, ராமா என்னும் நாடுகளிலுள்ள வியாபாரிகள் உன்னுடே வியாபாரம்பண்ணிச் சகலவித சம்பாரங்களிலும் சிறந்ததையும் சகலவித இரத்தினங்களையும் பொன்னையும் உனக்குக் கொடுத்து மாற்றினார்கள். காரான், கன்னே, ஏதேன் என்
23 னும் ஊழாரும் ஷேபாவின் வியாபாரிகளும் அசிரியரும் கில்மாத்தியரும் உன்னுடே
24 வியாபாரம் பண்ணினார்கள். இவர்கள் உயர்ந்த துணிகளையும் இளநீல அங்கிகளையும் விசித்திரத்தையலாடைகளையும் பல நிறக் கம்பளிகளையும் பலமான பின்னல் கயிறுகளையும் உன் சந்தைகளுக்குக்
25 கொண்டுவந்தார்கள். தர்ஷீஸ் கப்பல்கள் உன் சரக்குகளை ஏற்றிவந்தன.

சமுத்திர நடுவிலே நிறைசரக்கு ஏற்றினாய்,
மிகுந்த பாரமாயிற்று.
26 தண்டுவலிப்போர் கொண்டுபோனார்
உன்னைப் பரந்த வெளிக் கடலுள்;
நடுக்கடலில் கீழ்காற்று உன்னை உடைத்தது.
27 நீ சேதமாகின்ற நாளில்
உன் ஆஸ்தி சரக்கு வர்த்தகப்பொருளோடு
உன் கப்பற்காரர், மாலுமிகள், கப்பல் பழுதுபார்ப்போர்,
வியாபாரிகள், உன்னிலுள்ள சகல யுத்த வீரர்,
உன் நடுவிலுள்ள சகல கூட்டத்தாரும்
நடுச் சமுத்திரத்திலே ஆழ்ந்துபோவார்கள்.
28 உன் மாலுமிகள் ஓலமிடும் சத்தங் கேட்டு
வயல்வெளிகளும் அதிர்ந்துபோகும்.
29 தண்டுவலிப்போர் யாவரும் கப்பற்காரரும்
கடல்வேலைசெய்யும் மாலுமிகள் எல்லோரும்
தத்தம் கப்பல்விட்டு இறங்கிக் கரை நின்று
30 உன்னிமித்தம் சத்தமிட்டு மனங்கசந்து தழுது
தலைமேல் புழுதியிட்டுச் சாம்பலில் புரள்வார்;
31 உன்னிமித்தம் மொட்டையிட்டு இரட்டுடுத்தி

உன்னிமித்தமாக மனங்கசந்தழுது
மனதாரத் துக்கங்கொண்டாடுவார்.
32 தாம் கொண்ட துயரில் உன்னைப்பற்றிப்
பிரலாப ஒப்பாரி சொல்லிப் புலம்பி:
தீருவுக்குச் சமானமான நகரமுண்டோ!
ஐயோ அவளும் நடுக்கடலுள் அமிழ்ந்தாளே!
33 கடல்தாண்டிக் கொண்டுவந்த சரக்குகளிலேலே
பற்பல நாட்டார்க்கு மனதிருப்தி
வினைத்துவந்தாய்;
உன் செல்வம், வர்த்தகம் இவற்றின்
பெருக்கால்
பூமியின் மன்னர் நிறை செல்வரானார்.
34 கடல் அலைகள் மோதி நீ ஆழ்கடலில்
அமிழ்ந்திடவே
உன் சரக்கனைத்தும் உடன் ஆழ்ந்தது
வே,
உன் நடுவிலிருந்தாரும் ஆழ்ந்துவிட்டார்
என்றழுவார்.
35 தீவுகளின் குடிகளெலாம் திகைப்பாரே
உன்னிமித்தம்,
அவர் அரசர் திடுக்கிட்டுத் திகில்கொண்ட
முகமாவார்.
36 பல ஜாதி வர்த்தகர் ஈசலிடுவார் உன்னை
நினைத்து
பயங்கரமாய் நீ முடிந்தாய் இனி என்றும் இருப்பதில்லை.

**28** யெகோவாவின் வார்த்தை எனக்கு வந்
2 தது: மனுஷகுமாரனே, நீ தீருவின் அதி
பதியினிடம் இப்படிச் சொல், யெகோவா
வாகிய ஆண்டவர் சொல்வது இதுவே:
உன் இருதயம் பெருமைகொண்டு, நான்
தெய்வம், நான் சமுத்திரத்தின் நடுவே தெய்
வாசனத்தில் வீற்றிருக்கிறேன் என்று
சொல்லுகிறாய்; உன் உள்ளத்தில் நீ உன்னை
தெய்வம்போல் எண்ணினாலும் நீ மனுஷ
3 னே, தெய்வமல்ல; இதோ, நீ தானியேலி
லும் அறிவாளி; இரகசியமானதொன்றும்
4 உனக்கு மறைபொருள் அல்ல. நீ உன்
ஞானத்தினாலும் உன் உணர்வினாலும் பொ
ருள் சம்பாதித்துப் பொன்னையும் வெள்ளி
யையும் உன் பொக்கிஷசாலைகளில் சேர்த்
5 துக்கொண்டாய். உன் மகா ஞானத்தினா
லும் உன் வியாபாரத்தினாலும் உன் செல்வத்
தைப் பெருகப்பண்ணினாய், உன் இருதயம்
உன் செல்வத்தினால் பெருமைகொண்டது.
6 அப்படி யிருப்பதினால் யெகோவாவாகிய
ஆண்டவர் இப்படிச் சொல்லுகிறார்: நீ உன்
உள்ளத்தில் உன்னை தெய்வம்போல் எண்
ணினபடியினால், | இதோ, நான் அந்நிய 7
ரை, ஜாதிகளில் மகா கொடியரை, உனக்கு
விரோதமாய் வரப்பண்ணுவேன்; அவர்கள்
உன் சிறந்த ஞானத்திற்கு விரோதமாய்த்
தங்கள் பட்டயங்களை உருவி உன் மினுக்
கைக் குலைத்துப்போடுவார்கள். உன்னைக் 8
குழியிலே விழத்தள்ளுவார்கள், கொலை
யுண்டு சாகிறவர்களைப்போல் நீ சமுத்திரங்
களின் நடுவே சாவாய். உன்னைக் கொல்லு 9
கிறவனுக்கு முன்பாக, நான் தெய்வமென்று
நீ சொல்வாயோ? உன்னைக் குத்திப்போடு
கிறவன் கைக்கு நீ மனுஷனே, தெய்வமல்
லவே. அந்நியரின் கையிலுல் விருத்தசே 10
தனமில்லாதவர்கள் சாவதுபோல் நீ சா
வாய்; நானே இதைச் சொன்னேன், இது
யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு.
பின்னும் யெகோவாவின் வார்த்தை 11
எனக்கு வந்தது: மனுஷகுமாரனே நீ தீரு 12
ராஜாவைப்பற்றிப் பிரலாபப்பாடல் பாடி
அவனுக்கு இப்படிச்சொல், யெகோவாவா
கிய ஆண்டவர் சொல்வது இதுவே: சகல
நல்ல லட்சணங்களுக்கும் நீயே மாதிரி;
நீ ஞானம் நிறைந்தவன், குறையிலா நிறை
அழகன். நீ தெய்வதோட்டமாகிய ஏதே 13
னில் இருந்தவன்; பத்மராகம், புஷ்பரா
கம், வைரம், சுவர்ணரத்தினம், கோமேத
கம், படிகப்பச்சை, நீலம் மாணிக்கம், மர
கதம் முதலான சகலவித ரத்தினங்களும்
உன்னை ஆடைபோல் மூடுகின்றன; ரத்தி
னங்களை இழைத்தது பொன்னினாலே, நீ
பிறந்த நாளிலேயே இவை ஆயத்தமாயிருந்
தன. நீ காவலாக அபிஷேகம்பண்ணப் 14
பட்ட கேரூபு; பரிசுத்த தெய்வ பர்வதத்
தில் உன்னை வைத்தேன்; அக்கினிமயமான
கற்களின் நடுவே நடந்து திரிந்தாய். நீ 15
சிருஷ்டிக்கப்பட்ட நாள்துவக்கி உன்னில்
அநியாயம் கண்டுபிடிக்கப்பட்டதுமட்டும்
உன் வழிகளில் குறையற்றிருந்தாய். உன் 16
வியாபாரத்தின் மிகுதியினால் நீ கொடுமை
நிறைந்தவனாகிப் பாவஞ்செய்தாய்; ஆகவே
நான் உன்னை தெய்வ பர்வதத்திலிருந்து
ஆகாதவனென்று தள்ளிக் காவல் கேரூபா
யிருந்த உன்னை அக்கினிமயமான கற்களின்
நடுவே இராதபடி அழித்துப்போட்டேன்.
உன் அழகினால் உன் இருதயம் பெருமை 17
கொண்டது, உன் மினுக்கினால் உன் ஞா
னத்தை இழந்தாய், உன்னைத் தரையிலே
தள்ளிப்போட்டேன், ராஜாக்கள் உன்னைப்
பார்த்துப் பரிகசிக்கும்படி உன்னை அவர்
களுக்கு முன்பாக வைத்தேன். உன் 18
ஏராளமான அக்கிரமங்களினாலும் உன் அநி
யாய வியாபாரத்தினாலும் உன் பரிசுத்த

ஸ்தலங்களைப் பரிசுத்தமற்றதாக்கினாய்; ஆகையால் ஒரு அக்கினி உன்னிலிருந்து வெளிப்படச் செய்தேன் அது உன்னைப்பட்சித்தது; உன்னைப்பார்த்த எல்லாருடைய கண்களுக்கு முன்பாகவும் உன்னைப் பூமியின்மேல் சாம்பலாக்கினேன். 19 ஜனங்களில் உன்னை அறிந்த அனைவரும் உன்னைப்பற்றித் திடுக்கிட்டார்கள்; பயங்கரமாய் நீ முடிந்தாய், இனி என்றும் இருப்பதில்லை. 20 பின்னும் யெகோவாவின் வார்த்தை 21 எனக்கு வந்தது: மனுஷகுமாரனே, நீ உன் முகத்தைச் சீதோனுக்கு எதிராகத் திருப்பி அதற்கு விரோதமாக தீர்க்கதரிசனம் 22 உரைத்து | இப்படிச்சொல்: யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வதைக்கேள், சீதோனே, இதோ, நான் உனக்கு விரோதமாக வந்து, உன் நடுவிலே மகிமைப்படுவேன்; நான் அதற்குத் தீர்ப்பிட்டு அதிலே பரிசுத்தரென்று விளங்கும்போது நானே யெகோவா என்று அறிந்துகொள்வார் 23 கள். நான் அதிலே கொள்ளைநோயையும் அதின் வீதிகளிலே இரத்தத்தையும் அனுப்புவேன்; மரணகாயம் பட்டவர்கள் அதற்கு விரோதமாய்ச் சுற்றிலுமிருந்துவரும் பட்டயத்தினாலே அதின் நடுவிலே விழுவார்கள்; நானே யெகோவா என்று அப்பொழுது 24 அறிந்துகொள்வார்கள். இஸ்ரவேல் வீட்டாரை இகழ்ந்த அவர்களுடைய சுற்றுப்புறத்தார் அனைவரிலும் இனி அவர்களைத் தைக்கிறமுள்ளும் குத்துகிற கெருஞ்சிலும் இராது; நானே யெகோவாவாகிய ஆண்டவரென்று அப்பொழுது அறிந்துகொள்வார்கள்.

25 யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே, நான் இஸ்ரவேல் வீட்டாரை, அவர்கள் சிதறுண்டிருக்கிற தேசத்தாரிடமிருந்து சேர்த்துக்கொண்டுவந்து அவர்களால் ஜாதியாரின் கண்களுக்கு முன்பாகப் பரிசுத்தரென்று விளங்கும்போது அவர்கள் தங்கள் தேசத்தில், என் தாசனாகிய யாக்கோபுக்கு நான் கொடுத்த தேசத்திலே, குடியிருப்
26 பார்கள். அவர்கள் பயமின்றி அதிலே குடியிருப்பார்கள்; அவர்களுடைய சுற்றுப்புறத்தாரில் அவர்களை இகழ்ந்த அனைவருக்கும் நான் தீர்ப்பிடும்போது, அவர்கள் வீடுகளைக் கட்டித் திராட்சத் தோட்டங்களை நாட்டிப் பயமின்றிக் குடியிருப்பார்கள்; நானே தங்கள் கடவுளாகிய யெகோவா என்று அறிந்துகொள்வார்கள்.

**29** பத்தாம் வருஷம் பத்தாம் மாதம் பன்னிரண்டாந்தேதியிலே யெகோவாவின் வார்த்தை எனக்கு வந்தது: மனுஷகுமாரனே, நீ எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுக்கு எதிராக உன் முகத்தைத் திருப்பி, அவனுக்கும் எகிப்து முழுதுக்கும் விரோதமாய்த் தீர்க்கதரிசனம் உரைப்பாய், | அவனோடே பேசி இப்படிச்சொல், யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வதைக் கேள்:

எகிப்தின் ராஜாவாகிய பார்வோனே,
நீ உன் நதிகளின் நடுவிலே படுத்துக்கொண்டு,
என் நதி என்னுடையது, நானே அதை உண்டாக்கினேன்
என்று சொல்லுகிற வலுசர்ப்பம்;
இதோ, நான் உனக்கு விரோதமாய் வந்து
உன் கன்னங்களில் துறடுகளை மாட்டி,
உன் நதிகளின் மீன்களை உன் செதில்களில் ஒட்டிக்கொள்ளும்படிசெய்து
உன்னையும் உன் செதில்களில் ஒட்டிக்கொண்டிருக்கும் உன் நதிகளின் மீன்களனைத்தையும்
உன் நதிகளின் நடுவிலிருந்து தூக்கிவிடுவேன்.
உன்னையும் உன் நதிகளின் எல்லாமீன்களையும் வனாந்தரத்திலே எறிந்துவிடுவேன்,
வெட்டவெளியிலே விழுவாய், நீ சேர்த்துக்கொள்ளப்படுவதுமில்லை, கூட்டப்படுவதுமில்லை;
உன்னை பூமியின் மிருகங்களுக்கும் ஆகாயத்தின் பறவைகளுக்கும் இரையாகக்கொடுப்பேன்.
நானே யெகோவா என்று அப்பொழுது
எகிப்து தேசத்தின் குடிகளெல்லாரும் அறிந்துகொள்வார்கள்.
அவர்கள் இஸ்ரவேல் வீட்டாருக்கு
நாணற்கோலாயிருந்தார்களே;
இஸ்ரவேலர் உன்னைக்கையாற் பற்றிக்கொள்ளவே
நீ ஒடிந்து அவர்கள் விலாவையெல்லாம் குத்திஞாய்;
அவர்கள் உன்மேல் சாயவே
நீ முறிந்து அவர்கள் இடுப்புமுழுவதையும் தள்ளாடச் செய்தாய்.

ஆகவே யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச்சொல்லுகிறார்: இதோ, நான் உன்மேல் பட்டயத்தை வரப்பண்ணி, உன்னிலிராதபடி மனுஷரையும் மிருகங்களையும் சங்காரம் பண்ணுவேன். எகிப்துதேசம் பாழும் வனாந்தரமுமாகும்; நானே யெகோவா என்று அப்பொழுது அறிந்துகொள்வார்கள்: நதி என்னுடையது, நானே அதை உண்டாக்கினேன் என்று சொன்னதினாலே,

10 ஆதலால், இதோ, நான் உனக்கும் உன் நதிகளுக்கும் விரோதமாக வந்து, மிக்தோல் முதல் செவேனேவரைக்கும், எத்தியோப்பியாவின் எல்லைவரைக்குமே, எகிப்துதேசத்தை அவாந்தரமும் பாழான வனாந்தரமுமாக்குவேன். 11 மனுஷனின் கால் அதைக் கடப்பதில்லை, மிருகத்தின் காலும் அதைக் கடப்பதில்லை; அது நாற்பதுவருஷம் குடிபற்றிருக்கும். 12 எகிப்து தேசத்தைப் பாழாக்கப்பட்ட தேசங்களின் நடுவிலே பாழாகச் செய்வேன்; அதின் பட்டணங்கள் அவாந்தரமாக்கப்பட்ட பட்டணங்களின் நடுவிலே நாற்பதுவருஷம் பாழாய்க் கிடக்கும்; நான் எகிப்தியரை ஜாதியாருக்குள்ளே சிதறடித்து அவர்களை தேசங்களிலே தூற்றிப்போடுவேன்.

13 யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே: நாற்பது வருஷமானபின் நான் எகிப்தியரை அவர்கள் சிதறுண்டிருக்கிற தேசத்தாரிடமிருந்து சேர்த்துக்கொண்டு, 14 எகிப்தியரின் துன்பநிலைமையைமாற்றி அவர்களை அவர்களுடைய ஜென்மதேசமாகிய பத்ரோஸ் தேசத்திலே திரும்பி வரப்பண்ணுவேன்; அங்கே அவர்கள் அற்பராஜ்யமாயிருப்பார்கள். 15 அது இனி பிறஜாதியாரின்மேல் தன்னை உயர்த்தாமல் மற்ற ராஜ்யங்களிலும் அற்பமானதாயிருக்கும்; அவர்கள் இனி மற்ற ஜாதியாரை ஆளாதபடி அவர்களைக் குறுக்கிவிடுவேன். 16 எகிப்து இனி இஸ்ரவேல் வீட்டாரின் நம்பிக்கைக்கு ஆதாரமாயிராது; இவர்கள் எகிப்தியரிடம் திரும்புவதினால் தங்கள் அக்கிரமத்தை எனக்குநினைப்பூட்டிக்காட்டுவதில்லை; நானே யெகோவாவாகிய ஆண்டவர் என்று அப்பொழுது அறிந்துகொள்வார்கள்.

17 இருபத்தேழாம் வருஷம் முதலாம்மாதம் முதலாந்தேதியிலே யெகோவாவின் வார்த்தை 18 எனக்கு வந்தது: மனுஷகுமாரனே, பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தீருவுக்கு எதிரே தன் சேனையைக்கொண்டு செய்தவேலை மிகப்பெரிது; தலையெல்லாம் மொட்டையாயிற்று, தோளெல்லாம் உரிந்துபோயிற்று, அவன் தீருவுக்கு எதிரே செய்த பெரியவேலைக்கோ அவனுக்கும் அவன் சேனைக்கும் தீருவிலிருந்து கூலி 19 கிடைக்கவில்லை. ஆகையால் யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே: இதோ, நான் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்குஎகிப்துதேசத்தைக்கொடுக்கிறேன்; அவன் அதின் ஆஸ்தியைக் கைப்பற்றி அதைச் சூறையாடிக் கொள்ளையிடுவான்; இது அவனுடைய சேனைக்குக்கூலியாகும். அவன் செய்தவேலைக்கு எகிப்து 20 தேசத்தை நான் அவனுக்குப் பிரதிபலனாகக் கொடுத்தேன்; எனக்கென்றே அவர்கள் வேலைசெய்தார்கள்; இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு.

அந்நாளிலே நான் இஸ்ரவேல் வீட்டா 21 ருக்கு ஒரு கொம்பை முளைக்கப்பண்ணுவேன், அவர்கள் நடுவிலே நீ வாய்திறந்து பேசும்படியருளுவேன், நானே யெகோவா என்று அப்பொழுது அறிந்துகொள்வார்கள்.

30 யெகோவாவின் வார்த்தை எனக்கு வந் 2 தது: மனுஷகுமாரனே, நீ தீர்க்கதரிசனம் உரைத்து இப்படிச் சொல், யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே: ஐயோ! எப்படிப்பட்ட நாளென்று அலறுங்கள். நாள் சமீபம்! ஆம், யெகோவாவின் 3 நாள் சமீபமே; அது மந்தாரமான நாள், அது புறஜாதியாருக்குக் குறித்த காலம். பட் 4 டயம் எகிப்தின்மேல் வரும்; எகிப்திலே மரணகாயம் பட்டவர்கள் விழும்போது எத்தியோப்பியாவிலே மகா நடுக்கம் உண்டாகும், அதின் ஆஸ்தியை எடுத்துக்கொண்டு போவார்கள்; அதின் அஸ்திபாரங்கள் இடிக்கப்படும். எத்தியோப்பியரும் பூத்தியரும் 5 லூதியரும் பல ஜாதியாரான கிரள் ஜனங்களும் கூபியரும் உடன்படிக்கைக்குள்ளான தேசத்தின் புத்திரரும் அவர்களோடே பட்டயத்தால் விழுவார்கள்.

யெகோவா சொல்வது இதுவே: எகிப் 6 தின் தூணிவரும் விழுவார்கள், அதினுடைய பலத்த பெருமையும் தாழ்ந்துபோம், அதிலே மிக்தோல்முதல் செவேனே வரைக்கும் பட்டயத்தால் விழுவார்கள், இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு. பாழாக்கப்பட்ட தேசங்களின் நடுவிலே 7 பாழாவார்கள்; அவாந்தரமாக்கப்பட்ட பட்டணங்களில் அவர்கள் பட்டணங்களும் அவாந்தரமாகும். நான் எகிப்திலே தீக் 8 கொளுத்தவே அதற்குத் தூணின்ற யாவரும் முறிக்கப்படும்போது நானே யெகோவா என்று அறிந்துகொள்வார்கள். கவலையற்ற 9 எத்தியோப்பியரைத் தத்தளிக்கப்பண்ண அந்நாளிலே என்னிடமிருந்து தூதாட்கள் கப்பல்களிலே போவார்கள்; அப்பொழுது அவர்களுக்குள்ளே எகிப்தின் நாளில் மகா நடுக்கம் உண்டாகும்; இதோ, அந்நாள் வருகிறது.

யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது 10 இதுவே: பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரைக்கொண்டு எகிப்தின் செல்வத்தை ஒழியப்பண்ணுவேன். இவனும் இவனே 11

டேகூட ஜாதிகளில் மகா பலசாலிகளான இவனுடைய ஜனமும் தேசத்தை அழிப்பதற்கெனக் கொண்டுவரப்படுவார்கள், அவர்கள் தங்கள் பட்டயங்களை எகிப்துக்கு விரோதமாக உருவித் தேசமெங்கும் மரணகாயம் பட்டவர்கள் நிறையும்படி செய்வார்கள். அப்பொழுது நான் நதிகளை வறண்ட நிலமாக்கி தேசத்தை துஷ்டர் கையிலே விற்று தேசத்தையும் அதிலுள்ள யாவையும் அந்நியரின்கையால் பாழாக்கிப்போடுவேன், யெகோவாவாகிய நானே இதைச் சொன்னேன்.

13 யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே: நான் கேவலமான விக்கிரகங்களை அழித்து நோப்பின் வீண் தெய்வங்களை ஒழியப்பண்ணுவேன்; இனி எகிப்து தேசத்திலிருந்து ஒரு அதிபதியும் எழும்பான்; நான் எகிப்து தேசத்தில் பயமுண்டாக்குவேன்.

14 பத்ரோசைப் பாழாக்கிச் சோவானிலே தீக்கொளுத்தி நோ பட்டணத்திற்குத் தீர்ப்

15 பிடுவேன். எகிப்திற்கு அரணுயிருக்கிற சீனின்மேல் என் உக்கிரத்தை ஊற்றி நோ பட்டணத்தின் ஏராளமான ஜனத்தைச் சங்

16 காரிப்பேன். எகிப்தில் தீக்கொளுத்துவேன், சீன் மகா வேதனைக்குள்ளாகும், நோ பட்டணம் தகர்ந்து இடிந்துபோம், நோபுக்கு

17 நித்தம் நெருக்கமே. ஆவென், பிபேசெத் என்கிற ஊர்களின் வாலிபர் பட்டயத்தால் விழுவார்கள்; அவைகளின் குடிகளே சிறை

18 யிருப்புக்குப் போவார்கள். எகிப்தின் நுகங்களை நான் முறிக்கும்போதும் அதினுடைய பலத்தபெருமை அதிலே ஒயும் போதும் தக்பானேசிலே பகல் இருண்டு போகும், மந்தாரம் அதை மூடும்; அதின் குமாரத்திகள் சிறைப்பட்டுப்போவார்கள்.

19 இப்படியாக எகிப்திற்குத் தீர்ப்பிடுவேன்; நானே யெகோவா என்று அப்பொழுது அறிந்துகொள்வார்கள்.

20 பதினேராம் வருஷம் முதலாம் மாதம் ஏழாந்தேதியிலே யெகோவாவின் வார்த்தை

21 எனக்கு வந்தது: மனுஷகுமாரனே, எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுடைய புயத்தை முறித்துப்போடுவேன்; இதோ, அது கட்டப்படுவதில்லை, மருந்து போடப்படுவதுமில்லை; பட்டயம் பிடிக்கப் பலப்படுத்தும்படி பத்தைவைத்துக் கட்டுவதுமில்லை.

22 ஆதலால் யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே: இதோ, நான் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுக்கு விரோதமாக வந்து அவனுடைய புயங்களை, பலமுள்ளதையும் முறிந்ததையும், முறித்துப்போடுவேன்; பட்டயத்தை நான் அவன் கையிலிருந்து விழப்பண்ணி | எகிப்தியரை 23
ஜாதியாருக்குள்ளே சிதறடித்து அவர்களை தேசங்களில் தூற்றிப்போடுவேன். பாபி 24
லோன் ராஜாவின் புயங்களைப் பலப்படுத்தி அவன் கையிலே என் பட்டயத்தைக் கொடுத்துப் பார்வோனின் புயங்களை முறித்து விடுவேன்; அப்பொழுது அவன் மரணகாயம்பட்டவன் தவிக்கிறதுபோல அவனுக்கு முன்பாகத் தவிப்பான். பாபி 25
லோன் ராஜாவின் புயங்களைப் பலப்படுத்துவேன்; பார்வோனின் புயங்களோ விழுந்து போம்; என் பட்டயத்தை நான் பாபிலோன் ராஜாவின் கையில் கொடுக்கவே அவன் அதை எகிப்துதேசத்தின்மேல் ஏட்டும்போது நானே யெகோவா என்று அறிந்துகொள்வார்கள். நான் எகிப்தியரை ஜாதியாருக் 26
குள்ளே சிதறடித்து அவர்களை தேசங்களில் தூற்றிப்போடுவேன்; நானே யெகோவா என்று அப்பொழுது அறிந்துகொள்வார்கள்.

பதினேராம் வருஷம் மூன்றாம் மாதம் **31**
முதலாந்தேதியிலே யெகோவாவின் வார்த்தை எனக்கு வந்தது: மனுஷகுமாரனே, எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுக்கும் 2
அவனுடைய திரள் ஜனத்துக்கும் நீ சொல்ல வேண்டியது இதுவே:

மகத்துவத்திலே உனக்கு நிகரானவன் யார்?

இதோ, நீ லீபனோனிலே சிறந்த கேதரு 3
வாயிருந்தாய்,
உன் கொப்புகள் அழகாயிருந்தன, உன் தழைகள் நிழலிட்டன,
உயரமாய் வளர்ந்து நின்றது, அதன் நுனி மேகத்தினுள்ளிருந்தது.
தண்ணீரால் அது பெரிதாகி ஆழ ஊற் 4
றால் உயரமாயிற்று;
ஆழ ஊற்றின் ஆறுகள் அது இருந்த இடத்தைச்சுற்றி ஓடின;
அப்பால் தன் வாய்க்கால்களைக் காட்டிலிருந்த மரங்களுக்கெல்லாம் பாயவிட்டது.
காட்டிலிருந்த சகல மரங்களிலும் அது 5
மிகவும் உயர்ந்தது,
அது துளிர்க்கும்போது தண்ணீர் மிகுதியாயிருந்தபடியினால்
அதின் கிளைகள் மிகப்பலவாகி அதின் கொப்புகள் நீளமாயின.
அதின் கிளைகளில் ஆகாயத்துப் பறவைக 6
ளெல்லாம் கூடுகட்டின;
அதின் கொப்புகளின்கீழ் காட்டு மிருகங்களெல்லாம் குட்டிபோட்டன;
பெரிதான சகல ஜாதியாரும் அதின் நிழலிலே குடியிருந்தார்கள்.

7 இப்படியாக அது பெரிதாகி நீண்ட கொப்புகளைவிட்டு அழகாயிருந்தது, அதின் வேர் தெரள் தண்ணீரண்டை இருந்ததே.
8 தெய்வவனக் கேதுருக்களும் அதற்கு நிகரல்ல; தேவதாரு விருட்சங்கள் அதின் கிளைகளுக்குச் சமானமல்ல, அர்மோன் மரங்கள் அதின் கொப்புகளுக்கு இணையல்ல; தெய்வ வனத்திலுள்ள எந்த மரமும் அழகிலே அதற்குச் சமானமல்ல.
9 அதற்கு மிகப்பல கொப்புகளைக் கொடுத்து அதை அழகாக்கினேன்; தெய்வவனமாகிய ஏதேனிலுள்ள மரங்களெல்லாம் அதன்மேல் பொறுமை கொண்டன.
10 ஆதலால் யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வதைக் கேள்: அது உயரமாய் வளர்ந்து தன் தூனியை மேகங்களுக்குள் நீட்டித் தன் இதயத்தில் தன் வளர்த்தியைப்
11 பற்றிப் பெருமைகொண்டபடியால் | நான் அதை ஜாதியாரில் அதிக வல்லமையுள்ளவன் கையிலே ஒப்புக்கொடுப்பேன், அதற்குச்செய்யவேண்டியதை அவன் செய்வான்; அதினுடைய அக்கிரமத்தினிமித்தம் நானே
12 அதைத் தள்ளிவிட்டேன். ஜாதியாரில் கொடியவராகிய அந்நியர் அதை வெட்டி எறிந்துவிட்டார்கள்; அதின் கிளைகள் மலைகளின்மேலும் சகல பள்ளத்தாக்குகளிலும் விழுந்தன; அதின் கொப்புகள் தேசத்தின் சகல பள்ளமான ஓடைகளிலும் முறிந்து கிடந்தன; பூமியின் தேசத்தாரெல்லாரும் அதின் நிழலை
13 விட்டுக் கலைந்துபோனார்கள். விழுந்து கிடந்த மரத்தின்மேல் ஆகாயத்துப் பறவைகளெல்லாம் தங்கின; அதின் கொப்புகளில்
14 காட்டுமிருகங்களெல்லாமிருந்தன. தண்ணீர் ஓரமான எந்தமரமும் தன் உயரத்தைப் பற்றிப் பெருமைகொள்ளாமலும் தன் கொப்புகளை மேகங்களுக்குள்ளே நீட்டாமலும் இருக்கவும் மிகுதியாகத் தண்ணீர் பெறும் எந்தமரமும், பலமுள்ளமரமாயினும் சரியே, நிமிர்ந்துநின்று பெருமைகாட்டாமல் இருக்கவும் இப்படிச்செய்கிறேன்; அவைகள் எல்லாம் மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டன, குழியில் இறங்கினவர்களிடம் மனுப்புத்திரர் நடுவே பூமியின் தாழ்விடங்களுக்குப் போகும்.
15 யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே: அவன் பாதாளத்தில் இறங்கும் நாளிலே ஆழங்கள் அவனிமித்தம் புலம்பித் துக்க ஆடை தரிக்கும்படிசெய்வேன்; தெரள் தண்ணீர்கள் ஓடாதபடி அதின் ஆறுகளை அடைத்து அவனிமித்தம் லீபனோனை இருளடையச்செய்வேன், காட்டிலுள்ள மரங்களெல்லாம் அவனிமித்தம் பட்டுப்போம். நான் அவனைக் குழியில் இறங்குகிறவர்களோடே பாதாளத்தில் இறங்கப்பண்ணுகையில் அவன் விழுகிற சத்தத்தினால் ஜாதியாரை அதிரப்பண்ணுவேன்; அப்பொழுது ஏதேனின் சகல மரங்களும் லீபனோனின் உத்தமமான சிறந்த மரங்களும் வேண்டிய தண்ணீர் குடிக்கும் சகல மரங்களும் பூமியின் தாழ்விடங்களிலே தங்களை ஆறுதல்படுத்திக்கொள்ளும். அவனோடே 17 கூட இவர்களும் பாதாளத்திலே மரணகாயம்பட்டவர்களிடம் இறங்குவார்கள்; அவர்கள் ஜாதியாரின் நடுவில் அவன் நிழலில் குடியிருந்து அவனுக்குப் புஜபலமாயிருந்தார்களே.

16

18 சிறப்பிலும் வளர்த்தியிலும் ஏதேனின் மரங்களில் எந்த மரம் உனக்கு ஒப்பானது? எனினும் நீ ஏதேனின் மரங்களோடு பூமியின் தாழ்விடங்களில் தள்ளப்பட்டு பட்டயத்தாலே மரணகாயம் பட்டவர்களோடே விருத்தசேதனமில்லாதவர்களின் நடுவிலே கிடப்பாய்; பார்வோனுக்கும் அவன் கூட்டத்திற்கும் நடப்பது இதுவே; இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு.

**32** பன்னிரண்டாம் வருஷம் பன்னிரண்டாம் மாதம் முதலாம் தேதியிலே யெகோவாவின் வார்த்தை எனக்கு வந்தது: மனுஷகுமாரனே, நீ எகிப்தின் ராஜாவாகிய பார்வோனைப்பற்றிப் பிரலாபப் பாடல் பாடி அவனுக்கு இப்படிச் சொல்:
2 ஜாதியாரின் பாலசிங்கமே! நீ ஒழிந்தாய், நீ கடலிலுள்ள வலுசர்ப்பம் போன்றாய்; நீ உன் நதிகளில் கிளம்பிவந்து உன் கால்களினால் தண்ணீரைக் கலக்கி அதன் ஆறுகளைக் குழப்பிவிட்டாய்.
3 யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வதைக் கேள்: நான் வெகுஜனக்கூட்டத்தைக் கொண்டு உன்மேல் என் வலையை வீசுவேன்; அவர்கள் என் வலையில் உன்னை இழுத்துக்கொள்வார்கள்;
4 உன்னைத் தரையிலே போட்டுவிடுவேன், நான் உன்னை வெட்டவெளியில் எறிந்துவிட்டு ஆகாயத்துப் பறவைகளையெல்லாம் உன்மேல் இறங்கித் தங்கப்பண்ணிப் பூமியனைத்திலுமுள்ள மிருகங்கள் உன்னிடம் வந்து உண்டு திருப்தியுறச்செய்து

5 உன் சதையை மலைகளின்மேல் எறிந்து விட்டு,
உன் உடலைப்போட்டுப் பள்ளத்தாக்கு களை நிரப்பி
6 நீ தீட்டுப்படுத்தின தேசத்தின்மேல்
உன் இரத்தத்தை மலைகள்வரைக்கும் பாயச்செய்வேன்;
பள்ளமான ஓடைகள் உன்னாலே நிரம்பும்;
7 உன்னை நான் அணைத்துப்போடுகையில்
வானத்தை மூடி அதின் நட்சத்திரங்களை இருண்டு போகப்பண்ணுவேன்;
8 சூரியனை மேகத்தினால் மூடுவேன், சந்திரனும் தன் ஒளியைக் கொடாதிருக்கும்.
நான் வானத்திலுள்ள சுடர்களையெல்லாம் உன்னிமித்தம் இருண்டுபோகப்பண்ணி,
உன் தேசத்தின்மேல் அந்தகாரத்தை வரப்பண்ணுவேன்;
இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு.
9 உன் சங்கார செய்தியை ஜாதிகள்மட்டும்,
நீ அறியாத தேசங்கள்மட்டும், நான் எட்டப்பண்ணுகையில் அநேக தேசத்தாரின் இருதயத்தை திகில்படச் செய்வேன். அநேகம்
10 தேசத்தாரை உன்னிமித்தம் திடுக்கிடச்செய்வேன், அவர்களின் ராஜாக்கள் அவர்கள் முகங்களுக்கு முன்பாக என் பட்டயத்தை நான் வீசுகையில் மிகவும் நிகைப்பார்கள்;
நீ விழும் நாளில் அவரவர் தத்தம் பிராணனின் பொருட்டு நிமிஷந்தோறும் திகில்
11 கொள்வார்கள். யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே:
பாபிலோன் ராஜாவின் பட்டயம் உன்மேல் வரும்;
12 பராக்கிரமசாலிகளின் பட்டயங்களால் உன் ஜனத்திரளை விழப்பண்ணுவேன்;
அவர்களெல்லாரும் ஜாதிகளில் கொடிய வர்கள்;
அவர்கள் எகிப்தின் மகிமையைக் கெடுப்பார்கள்;
அதின் திரள்கூட்டம் அழிக்கப்படும்.
13 மிகுந்த தண்ணீர்களண்டையில் இருக்கும் அதின் ஆடுமாடுகளையெல்லாம் அழிப்பேன்;
மனுஷனின் கால் இனி அவைகளைக் கலக்குவதில்லை,
ஆடுமாடுகளின் குளம்புகளும் அவைகளைக் கலக்குவதில்லை.
14 அப்பொழுது அவர்களுடைய தண்ணீரை தெளியப்பண்ணுவேன்,
அவர்கள் ஆறுகளை எண்ணெய்போல் ஓடப்பண்ணுவேன்,
இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு.
15 நான் எகிப்து தேசத்தைப் பாழாக்கி தேசம் தன்னிலுள்ளவற்றை இழந்து வெறுமையாகச் செய்து
அதில் குடியிருக்கிற யாவரையும் சங்கரிக்கும்போது
நானே யெகோவா என்று அறிந்துகொள்வார்கள்.
16 இது அவர்கள் புலம்பிப்பாடும் பிரலாபப் பாடல்; ஜாதியாரின் குமாரத்திகள் இப்படிப் பாடிப் புலம்புவார்கள், எகிப்தைப்பற்றியும் அதன் ஜனத்திரளைப்பற்றியும் இப்படிப் பாடிப் புலம்புவார்கள்; இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு.
17 பின்னும் பன்னிரண்டாம் வருஷம் அதே மாதத்தின் பதினைந்தாந்தேதியிலே யெகோவாவின் வார்த்தை எனக்கு வந்தது:
18 மனுஷகுமாரனே, நீ எகிப்தின் திரள் ஜனத்தினிமித்தம் புலம்பி, அவர்களையும் சிறந்த ஜாதியாரின் குமாரத்திகளையும் குழியில் இறங்கினவர்களிடம் பூமியின் தாழ்விடங்களில் இறங்கச்சொல். அவர்களில் எவரொருவரிலும் நீ அழகில் சிறந்தவளோ? நீ இழே போய் விருத்தசேதனமில்லாதவர்களிடத்திலே கிட.
20 உன் ஜனங்களும் பட்டயத்தால் வெட்டுண்டவர்களின் நடுவிலே விழுவார்கள்; பட்டயம் ஆயத்தம், அவளையும் அவளுடைய ஜனத்திரள் அனைத்தையும் இழுத்துக்கொண்டு போங்கள்.
21 பராக்கிரம சாலிகளில் வல்லவர்கள் பார்வோனையும் அவனுக்குத் துணைநின்றவர்களையும் பாதாளத்தின் நடுவிலிருந்து கண்டு: இவர்கள் இங்கே இறங்கிப் பட்டயத்தால் வெட்டுண்டவர்களாகவும் விருத்தசேதனமில்லாதவர்களாகவும் கிடக்கவேண்டியதே என்பார்கள்.
22 அங்கே அசீரிய ராஜாவும் அவனுடைய ஜனக்கூட்டம் அனைத்தும் இருக்கிறார்கள்; அவனுக்குச் சுற்றிலும் அவர்களுடைய பிரேதக்குழிகள் இருக்கின்றன; அவர்கள் எல்லாரும் பட்டயத்தால் வெட்டுண்டு விழுந்தவர்களே.
23 பாதாளத்தின் கடைமுனைகளில் அவனுக்குரிய பிரேதக்குழிகள் இருக்கின்றன; அவனுடைய பிரேதக்குழிக்குச் சுற்றிலும் அவனுடைய ஜனக்கூட்டம் கிடக்கிறது, அவர்களெல்லாரும் பட்டயத்தால் வெட்டுண்டு விழுந்தவர்கள், ஜீவனுள்ளோர் தேசத்தில் திகில் விளைத்தவர்கள் அவர்களே.
24 அங்கே ஏலாம் ராஜாவும் அவனுடைய பிரேதக்குழிக்குச் சுற்றிலும் அவனுடைய ஜனத்திரள் அனைத்தும் கிடக்கிறார்கள்; அவர்கள் எல்லாரும் பட்டயத்தால் வெட்டுண்டு

விழுந்தவர்கள், விருத்தசேதனமில்லாதவர்களாய்ப் பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார்கள்; ஜீவனுள்ளோர் தேசத்திலே திகில் வினைத்தவர்கள் அவர்களே; குழியில் இறங்கினவர்களைப்போல இவர்களும் தங்கள் 25 அவமானத்தைச் சுமக்கிறார்கள். வெட்டுண்டவர்களின் நடுவே அவனை அவனுடைய எல்லா ஜனத்திரளோடும் கிடத்தினார்கள்; அவனுக்குச் சுற்றிலும் அவனுக்குரிய பிரேதக்குழிகள் இருக்கின்றன; அவர்களெல்லாரும் விருத்தசேதனமில்லாதவர்கள், பட்டயத்தால் வெட்டுண்டவர்கள்; ஜீவனுள்ளோர் தேசத்திலே அவர்கள் தங்களைப்பற்றித் திகில் வினைத்தார்களெனினும் குழியில் இறங்கினவர்களைப்போல அவர்களும் தங்கள் அவமானத்தைச் சுமக்கிறார்கள்; அவன் வெட்டுண்டவர்களின் நடுவே வைக்கப்பட் 26 டிருக்கிறான். அங்கே மேசேக்கும் தூபாலும் அவர்களுடைய ஜனத்திரள் அனைத்தும் கிடக்கிறார்கள்; அவர்களுக்குச் சுற்றிலும் அவர்களுக்குரிய பிரேதக்குழிகள் இருக்கின்றன; அவர்களெல்லாரும் விருத்தசேதனமில்லாதவர்கள், பட்டயத்தால் வெட்டுண்டவர்கள்; ஜீவனுள்ளோர் தேசத்திலே அவர்கள் தங்களைப்பற்றித் திகில் வினைத்தார்களே. 27 விருத்தசேதனமில்லாதவர்களாய் விழுந்து தங்கள் யுத்த ஆயுதங்களோடு பாதாளத்திலிறங்கித் தங்கள் பட்டயங்களைத் தங்கள் தலைகளின்கீழ் வைத்திருக்கிற பராக்கிரமசாலிகளோடே இவர்கள் கிடத்தப்படவில்லை; அவர்கள் அக்கிரமம் இவர்கள் எலும்புகளின்மேல் இருக்கும்; ஜீவனுள்ளோர் தேசத்திலே இவர்களும் பராக்கிரமசாலிகளைப்போல் திகில் வினைத்தவர்கள். 28 நீயும் விருத்தசேதனமில்லாதவர்களின் நடுவே கொறுங்குண்டு பட்டயத்தால் வெட் 29 டுண்டவர்களோடே கிடப்பாய். அங்கே ஏதோமும் அதின் ராஜாக்களும் அதின் எல்லா அதிபதிகளும் இருக்கிறார்கள், பட்டயத்தால் வெட்டுண்டவர்களோடு இவர்கள் தங்கள் பராக்கிரமத்திலேயே கிடத்தப்பட்டார்கள், இவர்கள் விருத்தசேதனமில்லாதவர்களிடத்திலும் குழியில் இறங்கினவர்களிடத்திலும் கிடக்கிறார்கள். 30 அங்கே வடதிசை அதிபதிகள் அனைவரும் எல்லாச் சீதோனியரும் கிடக்கிறார்கள்; இவர்கள் வெட்டுண்டவர்களிடம் இறங்கினார்கள், தங்கள் பராக்கிரமத்தினால் திகில் வினைத்தவர்களாயிருந்தும் வெட்கத்துக்குள்ளாகிப் பட்டயத்தால் வெட்டுண்டவர்களோடு விருத்தசேதனமில்லாதவர்களாய்க் கிடக்கிறார்கள்; குழியில் இறங்கினவர்களைப்போல இவர்களும் தங்கள் அவமானத்தைச் சுமக்கிறார்கள். 31 இவர்களைப்பார்த்து பார்வோன் தன் ஜனத்திரள் அனைத்தையும் பற்றித் தன்னை ஆற்றிக்கொள்வான்; ஐயோ! பார்வோனும் அவன் சேனையனைத்தும் பட்டயத்தால் வெட்டுண்டார்களே, இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு. 32 ஜீவனுள்ளோர் தேசத்திலே அவனைப்பற்றிய திகிலை உண்டாக்கினேன், இப்பொழுதோ பார்வோனும் அவனுடைய ஜனத்திரளும் பட்டயத்தால் வெட்டுண்டவர்களோடு விருத்தசேதனமில்லாதவர்களின் நடுவே கிடத்தப்பட்டார்கள்; இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு.

33 யெகோவாவின் வார்த்தை எனக்கு வந் 1 தது: மனுஷகுமாரனே, நீ உன் ஜனத்தின் 2 புத்திரரோடு பேசி அவர்களுக்கு இப்படிச் சொல்: நான் ஒரு தேசத்தின்மேல் பட்டயத்தை வரப்பண்ணுகையில் தேசத்தின் ஜனம் தங்கள் நடுவிலிருந்து ஒருவனை அழைத்து அவனைத் தங்களுக்கு காவலாளனாக வைத்திருக்க | இவன் தேசத்தின்மேல் பட் 3 டயம் வருவதைக் கண்டு எக்காளம் ஊதி ஜனத்தை எச்சரிக்கும்போது, | எக்காள 4 சத்தத்தைக் கேட்டும் எச்சரிப்புக்குச் செவிகொடாதவனைப் பட்டயம் வந்து வாரிக்கொள்ளுமானால் அவனுடைய இரத்தப்பழி அவன் தலையின்மேலிருக்கும். அவன் எக் 5 காள சத்தத்தைக்கேட்டும் எச்சரிப்புக்குச் செவிகொடுக்கவில்லை; அவனுடைய இரத்தப்பழி அவன்மேலே இருக்கும்; எச்சரிப்புக்குச் செவிகொடுத்திருந்தானானால் தன் ஜீவனைத் தப்புவித்திருப்பான். ஆனாலும் 6 பட்டயம் வருவதைக்கண்டும் எக்காளம் ஊதாமற்போக எச்சரிப்படையாத ஜனத்தில் பட்டயம் வந்து ஒருவனை வாரிக்கொண்டுபோனால் அவன் தன் அக்கிரமத்திலே வாரிக்கொள்ளப்படுகிறான்; அவன் இரத்தப்பழியையோ காவலாளன் கையிலே கேட்பேன். 7 மனுஷகுமாரனே, நான் உன்னை இஸ்ரவேல் வீட்டாருக்கு காவலாளனாக வைத்தேன்; நான் சொல்வதை நீ கேட்டு என் பேராலே அவர்களை எச்சரிக்கவேண்டும். நான் துன் 8 மார்க்கனிடம், துன்மார்க்கனே, நீ சாகவே சாவாய் என்று சொல்லுகையில், நீ துன்மார்க்கனை எச்சரித்து அவன் தன் வழியை விட்டு நீங்கும்படி அதை அவனுக்குச் சொல்லாமற்போனால் அந்தத் துன்மார்க்கன் தன் அக்கிரமத்திலே சாவான்; அவன் இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன். 9 துன்மார்க்கன் தன் வழியை விட்டுத் திரும்

பும்படி நீ அவனை எச்சரித்தும் அவன் தன் வழியைவிட்டுத் திரும்பாமற்போனால் அவன் தன் அக்கிரமத்திலே சாவான்; நீயோ உன் ஜீவனைத் தப்புவிப்பாய்.

10 மனுஷகுமாரனே, நீ இஸ்ரவேல் வீட்டாரோடு பேசி, எங்கள் தரோகங்களும் எங்கள் பாவங்களும் எங்கள்மேல் இருக்கின்றன, நாங்கள் அவற்றினால் சோர்ந்துபோகிறோம், நாங்கள் பிழைப்பது எப்படியென்று
11 நீங்கள் சொல்லுகிறீர்கள்; யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கே இது: என் ஜீவன்மேல் ஆணை, நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல் துன்மார்க்கன் தன் வழியைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன்; இஸ்ரவேல் வீட்டாரே, உங்கள் தீய வழிகளை விட்டுத் திரும்புங்கள், திரும்புங்கள்; நீங்கள் ஏன் சாக
12 வேண்டும் என்கிறார் என்று சொல். மனுஷகுமாரனே, நீ உன் ஜனத்தின் புத்திரருக்கு இப்படிச் சொல்: நீதிமான் தரோகம்பண்ணும்போது அவனுடைய நீதி அவனைத் தப்புவிப்பதில்லை, துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்தை விட்டுத் திரும்பும்போது அவன் தன் துன்மார்க்கத்தினால் விழுந்துபோவதில்லை; நீதிமான் பாவஞ்செய்யும்போது தன் நீதியினால் பிழைக்க முடியாமற்போ
13 வதுபோலாம். பிழைக்கவே பிழைப்பாய் என்று நான் நீதிமானுக்குச் சொல்லும்போது அவன் தன் நீதியில் நம்பிக்கைவைத்து அநியாயஞ்செய்தால் அவனுடைய நீதியெல்லாம் நினைக்கப்படுவதில்லை; அவன் செய்த தன் அநியாயத்தினாலேயே சாவான்.
14 பின்னும் சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லும்போது அவன் தன் பாவத்தை விட்டுத் திரும்பி நியாயமும்
15 நீதியுஞ் செய்து, தான் வாங்கின அடைமானத்தையும் தான் கொள்ளையிட்ட பொருளையும் திரும்பக்கொடுத்துவிட்டு ஜீவ நியமங்களில் நடந்து அநியாயத்தைச் செய்யாதுபோனால் அவன் சாகாமல் பிழைக்கவே
16 பிழைப்பான். அவன் செய்த அவனுடைய எல்லாப் பாவங்களும் அவனுக்கு விரோதமாக நினைக்கப்படுவதில்லை; அவன் நியாயமும் நீதியும் செய்தான், பிழைக்கவே
17 பிழைப்பான். உன் ஜனத்தின் புத்திரரோ, ஆண்டவருடைய வழி சரியானதல்ல என்கிறார்கள்; சரியாயிராதது அவர்களுடைய
18 வழியே. நீதிமான் தன் நீதியைவிட்டுத் திரும்பி அநியாயஞ்செய்தால் அவன் அதி
19 னால் சாவான். துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்தை விட்டுத் திரும்பி நியாயமும் நீதியும் செய்தால் அவன் அவைகளினாலே பிழைப்பான். ஆண்டவருடைய வழி சரி 20
யானதல்ல என்று நீங்கள் சொல்லுகிறீர்கள், நானே, இஸ்ரவேல் வீட்டாரே, உங்களில் ஒவ்வொருவனுக்கும் அவனவன் வழிகளின்படியே தீர்ப்பிடுவேன்.

நாங்கள் சிறைப்பட்டுப்போன பன்னி 21
ரண்டாம் வருஷம் பத்தாம்மாதம் ஐந்தாந் தேதியிலே எருசலேமிலிருந்து தப்பின ஒருவன் என்னிடம் வந்து, நகரம் பிடிபட்டது என்றான். தப்பினவன் வருவதற்குமுன்னே 22
சாயங்காலத்திலே யெகோவாவின் கரம் என்மேல் இருந்தது, அவன் காலையில் என்னிடத்தில் வருமுன் அவர் என் வாயைத்திறந்தார்; என் வாய்திறக்கப்பட்டபின்பு நான் மௌனமாயிருக்கவில்லை.

அப்பொழுது யெகோவாவின் வார்த்தை 23
எனக்கு வந்தது: மனுஷகுமாரனே, இஸ்ர 24
வேல் தேசத்திலே பாழான இடங்களில் குடியிருக்கிறவர்கள்: ஆபிரகாம் ஒருவனாயிருந்து தேசத்தைச் சொந்தமாக்கிக்கொண்டான், நாங்களோ பலராயிருக்கிறோம், எங்களுக்கு இந்த தேசம் சொந்தமாய்க் கொடுக்கப்படவேண்டாமோ என்கிறார்கள். ஆகவே 25
நீ அவர்களிடம், யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வதைக்கேளுங்கள்: நீங்கள் இரத்தமுள்ளதைத் தின்கிறீர்கள், உங்கள் கேவலமான விக்கிரகங்களுக்குநேராக உங்கள் கண்களை நிமிர்த்துகிறீர்கள், இரத்தத்தைச் சிந்துகிறீர்கள், நீங்கள் தேசத்தைச் சொந்தமாக்கிக்கொள்வீர்களோ? நீங்கள் உங்கள் 26
பட்டயத்தில் நம்பிக்கைவைக்கிறீர்கள். அருவருப்பானதைச் செய்கிறீர்கள், உங்களில் அவனவன் தன்தன் அயலான் மனைவியைத் தீண்டுகிறீர்கள்; நீங்கள் தேசத்தைச் சொந்தமாக்கிக்கொள்வீர்களோ என்று சொல். மேலும் நீ அவர்களிடம் யெகோ 27
வாவாகிய ஆண்டவர் இப்படிச்சொல்லுகிறார்: என் ஜீவன்மேல் ஆணை, பாழான இடங்களில் இருக்கிறவர்கள் பட்டயத்தால் விழுவார்கள்; வயல்வெளிகளில் இருக்கிறவனை மிருகங்களுக்கு இரையாக ஒப்புக்கொடுப்பேன்; துருக்கங்களிலும் கெபிகளிலும் இருக்கிறவர்கள் கொள்ளைநோயால் சாவார்கள். நான் தேசத்தைப்பாழும் 28
அவாந்தரவெளியுமாக்குவேன்; அப்பொழுது அதினுடைய பலத்தின் பெருமை ஒழிந்துபோகும்; அப்பொழுது இஸ்ரவேலின் மலைகள் கடந்துபோவாரில்லாமல் அவாந்தரமாய்க்கிடக்கும். அவர்கள் செய்த அவர் 29
களுடைய சகல அருவருப்புகளினிமித்தமும் நான் தேசத்தைப்பாழும் அவாந்தரவெளியுமாக்கும்போது நானே யெகோவா

என்று அறிந்துகொள்வார்கள் என்று
30 சொல். மேலும் மனுஷகுமாரனே, உன்
ஜனத்தின் புத்திரர் சுவர் ஓரங்களிலும் வீட்டு
வாசல்களிலும் உன்னைப்பற்றிப்பேசி, யெ
கோவாவினிடமிருந்து வரும் வார்த்தை
என்னவென்று கேட்போம் வாருங்கள் என்
று ஒருவரோடொருவரும் சகோதரனோடே
31 சகோதரனும் சொல்லிக்கொண்டு | ஜனங்கள்
சபையாய்க்கூடி வருகிறபடியே உன்னிடம்
வந்து, உனக்கு முன்பாக என் ஜனம்போல்
உட்கார்ந்து உன் வார்த்தைகளைக் கேட்கி
றார்கள், எனினும் அவர்கள் அவைகளின்
படி செய்கிறதில்லை; தங்கள் வாயினாலே
அதிகச் சிநேகம் காட்டுகிறார்கள், அவர்கள்
இருதயத்தையோ பொருளாசை இழுக்
32 கிறது. இதோ, நீ இனிய குரலும் கீதவாத்
தியம் வாசிப்பதில் சாமர்த்தியமுமுடைய
வனுய்ச் சிங்காரரசம் பாடுகிறவன்போலிருக்
கிறாய்; அவர்கள் உன் வார்த்தைகளைக்
கேட்கிறார்கள், அவற்றின்படியோ செய்கிற
33 தில்லை. இது சம்பவிக்கும்போது — இதோ,
அது சம்பவிக்கும் — தங்கள் நடுவிலே ஒரு
தீர்க்கதரிசி வந்திருந்தான் என்று அறிந்து
கொள்வார்கள்.

**34** யெகோவாவின் வார்த்தை எனக்கு வந்
2 தது: மனுஷகுமாரனே, இஸ்ரவேலின் மேய்ப்
பருக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம்
உரை; நீ தீர்க்கதரிசனம் உரைத்து, அவர்
களுக்கு, மேய்ப்பவர்களுக்கே, இப்படிச்
சொல், யெகோவாவாகிய ஆண்டவர் சொல்
வதைக் கேளுங்கள்: இஸ்ரவேலின் மேய்ப்
பருக்கு ஐயோ கேடாம்! அவர்கள் தங்க
ளையே மேய்த்துக்கொள்ளுகிறார்கள்; மேய்ப்
பவர் மேய்க்கவேண்டியது மந்தையல்லவா?
3 நீங்கள் கொழுப்பானதைச் சாப்பிட்டு ஆட்
டுமயிரை உடுப்பாக்கிக்கொள்ளுகிறீர்கள்;
கொழுத்த வளர்த்ததை அடிக்கிறீர்கள்,
4 மந்தையையோ மேய்க்கிறதில்லை. நீங்கள்
பலவீனமானவைகளைப் பலப்படுத்தாமலும்
நோய்கொண்டவைகளைக் குணமாக்காமலும்
கால்ஒடிந்தவைகளைக் கட்டாமலும் சிதறிப்
போனவைகளைத் திருப்பிக்கொண்டு வராம
லும் காணமற்போனவைகளைத் தேடாமலும்
போய், வல்லமையோடு கொடுமையாய்
5 அவைகளை ஆண்டீர்கள். மேய்ப்பவன் இல்
லாதபினால் அவைகள் சிதறிப்போயின, காட்
டுமிருகங்களுக்கெல்லாம் இரையாயின, ஆம்
6 சிதறியிருந்தனவே. என் ஆடுகள் சகல மலை
களிலும் உயரமான சகல மேடுகளிலும்
அலைந்தன, பூமியின் மீதெங்கும் என் ஆடு
கள் சிதறிப்போயின; விசாரிக்கிறவனு
மில்லை, தேடுகிறவனுமில்லை. ஆகையால் 7
மேய்ப்பவரே யெகோவாவின் வார்த்தை
யைக் கேளுங்கள். என் ஜீவன்மேல் 8
ஆணை, — இது யெகோவாவாகிய ஆண்ட
வரின் திருவாக்கு — மேய்ப்பவன் இல்லா
மையினால் என் ஆடுகள் சூறையாகி, என்
ஆடுகள் காட்டுமிருகங்களுக்கெல்லாம்
இரையாயின, என் மேய்ப்பர்கள் என்
ஆடுகளை விசாரிக்கவில்லை, மேய்ப்பவர்கள்
மந்தையை மேய்க்காமல் தங்களையே மேய்த்
தார்கள். ஆதையால் மேய்ப்பவர்களே, 9
யெகோவாவின் வார்த்தையைக் கேளுங்கள்.
யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச் 10
சொல்லுகிறார்: இதோ, நான் மேய்ப்பவ
ருக்கு விரோதமாக வந்து, என் ஆடுகளைப்
பற்றி அவர்களிடம் கணக்குக்கேட்டு,
மேய்ப்பவர் இனித் தங்களையே மேய்க்காத
படி மந்தை மேய்க்கும் தொழிலில் நின்று
அவர்களை நீக்குவேன், என் ஆடுகள் அவர்
களுக்கு ஆகாரமாயிராதபடி அவைகளை
அவர்கள் வாய்க்குத் தப்பப்பண்ணுவேன்.
யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது 11
இதுவே: இதோ நானே வந்து, என் ஆடு
களை விசாரித்து அவைகளைத் தேடிக்கொண்டு
வருவேன். தன் ஆடுகள் தனக்குச் சுற்றி 12
லும் சிதறியிருக்கும்போது மேய்ப்பவன்
அவற்றைத் தேடிக்கொண்டு வருகிறது
போல நான் என் ஆடுகளைத் தேடிக்கொண்டு
வருவேன்; மப்பும் மந்தாரமுமான நாளிலே
அவைகள் சிதறிப்போன சகல இடங்களிலு
மிருந்து அவைகளைத் தப்புவித்து வருவேன்;
அவைகளை ஜாதியாரிடமிருந்து வரச்செய் 13
வேன், தேசங்களிலிருந்து சேர்த்துக்கொள்
ளுவேன்; அவைகளுடைய சுயதேசத்திலே
அவைகளைக் கொண்டுவந்து இஸ்ரவேல்
மலைகளின்மேலும் பள்ளமான ஓடைகள்
அண்டையிலும் தேசத்திலே ஜனங்கள் குடி
யிருக்கும் சகல இடங்களிலும் அவைகளை
மேய்ப்பேன். அவைகளை நல்ல மேய்ச்ச 14
ுள்ள இடங்களிலே மேய்ப்பேன், இஸ்ர
வேலுடைய உயர்ந்த மலைகளிலே அவை
களின் தொழுவம் இருக்கும், அங்கே அவை
கள் நல்ல தொழுவத்தில் படுத்துக்கொள்
ளும், இஸ்ரவேலின் மலைகள்மேல் கொழு
மையான மேய்ச்சலை மேயும். நானே என் 15
ஆடுகளை மேய்த்து நானே அவைகளை மடக்
குவேன்; இது யெகோவாவாகிய ஆண்டவ
ரின் திருவாக்கு. காணமற்போனதை 16
நான் தேடிச் சிதறிப்போனதைத் திருப்
பிக்கொண்டு வந்து கால்ஒடிந்ததைக் கட்டி
பலவீனமானதைப் பலப்படுத்துவேன்;
புஷ்டியும் பலமுமுள்ளவைகளை அழிப்

பேன், நியாயமானபடி அவைகளை மேய்ப்
பேன்.
17 என் மந்தையே, யெகோவாவாகிய ஆண்
டவர் சொல்வதைக்கேள்: இதோ, ஆட்டுக்
கும் ஆட்டுக்கும் ஆட்டுக்கடாக்களுக்கும்
வெள்ளாட்டுக் கடாக்களுக்கும் நான் வழக்
18 குத் தீர்ப்பேன். நீங்கள் நல்ல மேய்ச்சலை
மேய்வது போதாதோ? உங்கள் மேய்ச்சல்
களில் மீதியானதை உங்கள் கால்களால்
மிதித்துப்போடுகிறீர்களே; தெளிந்த தண்
ணீரைக்குடிப்பது போகாதோ? மீதியாயிருக்
கிறதை உங்கள் கால்களால் குழப்பிப்
19 போடுகிறீர்களே. என் ஆடுகள் உங்கள்
கால்களால் மிதிக்கப்பட்டதை மேய்கின்
றனவே; உங்கள் கால்களால் குழப்பப்பட்
20 டதைக் குடிக்கின்றனவே. ஆகையால்
யெகோவாவாகிய ஆண்டவர் அவைகளுக்
குச் சொல்வது இதுவே: இதோ நானே
வந்து, கொழுத்த ஆடுகளுக்கும் இளைத்த
21 ஆடுகளுக்கும் வழக்குத் தீர்ப்பேன். நீங்
கள் பலவீனமாயிருக்கிறவைகளையெல்லாம்
பக்கத்தினாலும் முன்னந்தொடையினாலும்
தள்ளி உங்கள் கொம்புகளினால் முட்டி
22 வெளியேவிரட்டிச் சிதறடித்தீர்கள். நான்
என் ஆடுகளைக் காப்பாற்றுவேன், இனி
அவை சூறையாகா; ஆடுகளுக்கும் ஆடு
களுக்கும் நான் வழக்குத் தீர்ப்பேன்.
23 அவைகளை மேய்க்கும்படி மேய்ப்பவன்
ஒருவனை, என் தாசனாகிய தாவீதை, ஏற்
படுத்துவேன், இவன் அவைகளை மேய்ப்
பான், இவனே அவைகளுக்கு மேய்ப்பனா
24 யிருப்பான். யெகோவாவாகிய நானே
அவர்களுக்குக் கடவுளாயிருப்பேன், என்
தாசனாகிய தாவீது அவர்கள் நடுவில் அதி
பதியாயிருப்பான்; யெகோவாவாகிய நானே
25 இதைச் சொன்னேன். நான் அவர்களோடு
சமாதான உடன்படிக்கைசெய்து துஷ்ட
மிருகங்களைத் தேசத்தில் இராதபடி ஒழியப்
பண்ணுவேன்; அவர்கள் பயமின்றி வனாந்
தரத்தில் தங்கிக் காடுகளில் நித்திரைபண்ணு
26 வார்கள். நான் அவர்களையும் என் மலை
யின் சுற்றுப்புறங்களையும் ஆசீர்வாதமாக்கி
ஏற்றகாலத்திலே மழையைப் பெய்யப்பண்
ணுவேன், ஆசீர்வாதத்துக்கேதுவான மழை
27 பெய்யும். வெளியிலுள்ள மரங்கள் தங்
கள் கனியைத்தரும், பூமி தன் விளைச்சலைக்
கொடுக்கும், அவர்கள் தங்கள் தேசத்தில்
பயமின்றியிருப்பார்கள்; நான் அவர்கள்
நுகத்தடிகளை முறித்து அவர்களை அடிமை
யாக்கினவர்களின் கைக்கு அவர்களை நீங்க
லாக்கி விடுவிக்கும்போது, நானே யெகோ
28 வா என்று அறிந்துகொள்வார்கள். இனி
அவர்கள் புறஜாதியாருக்குக் கொள்ளையாக
இல்லை, பூமியின் மிருகங்கள் அவர்களைப்
பட்சிப்பதுமில்லை; திடுக்கிடப்பண்ணுவார்
இல்லாமல் பயமின்றி வசிப்பார்கள். 29
அவர்களுக்குக் கீர்த்திவிளைக்கும் ஒரு நாற்
றை எழும்பப்பண்ணுவேன், தேசத்திலே
இனிப்பஞ்சத்தால் வாரிக்கொள்ளப்படுப
வர் இரார், இனிப் புறஜாதியாரின் நிந்தை
யை அவர்கள் சுமப்பதில்லை. 30
தங்கள் கடவு
ளாகிய யெகோவாவாகிய நான் தங்களோ
டிருக்கிறேன் என்றும் இஸ்ரவேல் வீட்டா
ராகிய தாங்களே என் ஜனமென்றும் அவர்
கள் அறிந்துகொள்வார்கள், இது யெகோ
வாவாகிய ஆண்டவரின் திருவாக்கு. 31
என்
மந்தையும் என் மேய்ச்சலின் ஆடுகளுமாகிய
நீங்கள் மனுஷர், நானே உங்கள் கடவுள்,
இது யெகோவாவாகிய ஆண்டவரின் திரு
வாக்கு.

யெகோவாவின் வார்த்தை எனக்கு **35**
வந்தது: மனுஷகுமாரனே, நீ உன் முகத் 2
தைச் சேயீர்மலைக்கு நேராகத் திருப்பி
அதற்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம்
உரைத்து | அதற்கு இப்படிச் சொல், 3
யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வதைக்
கேள்: சேயீர் மலையே, இதோ, நான் உன்
மேல் வந்து என் கையை உனக்கு விரோத
மாக நீட்டி உன்னைப் பாழும் அவாந்தர
வெளியுமாக்குவேன். உன் ஊர்களைப் 4
பாழாக்கிப்போடுவேன்; நீ அவாந்தரவெளி
யாவாய்; நானே யெகோவா என்று அறிந்து
கொள்வாய். நீ நீராப் பகையை வைத்து 5
இஸ்ரவேல் புத்திரருடைய அக்கிரமம்
எல்லைவரையைத் தொட்டகாலத்தில், அவர்
களின் ஆபத்துநாளிலே, அவர்களை நீ பட்
டயத்துக்கு ஒப்புக்கொடுத்தபடியினால் |
என் ஜீவன்மேல் ஆணை,—இது யெகோவா 6
வாகிய ஆண்டவரின் திருவாக்கு—நான்
உன்னை இரத்தமாகச் செய்வேன், இரத்தம்
உன்னைத் தொடர்ந்து பிடிக்கும்; நீ இரத்
தத்தை வெறுக்காதபடியினால் இரத்தம் உன்
னைத் தொடர்ந்துபிடிக்கும். நான் சேயீர் 7
மலையைப் பாழும் அவாந்தர வெளியுமாக்கு
வேன், அதிலே போய்வருவாரில்லாதபடி
சங்காரஞ் செய்வேன்; அதின் மலைகளில் 8
வெட்டுண்டவர்கள் நிரம்பச்செய்வேன்;
உன் மேடுகளிலும் உன் பள்ளத்தாக்குகளி
லும் உன் பள்ளமான சகல ஓடைகளிலும்
பட்டயத்தால் வெட்டுண்டவர்கள் விழு
வார்கள். நீ என்றைக்கும் அவாந்தர 9
வெளியாயிருக்கும்படி செய்வேன்; உன் பட்
டணங்கள் குடியேற்றப்படுவதில்லை; நானே

யெகோவா என்று அப்பொழுது அறிந்து
10 கொள்வீர்கள். யெகோவா அங்கிருந்தும் நீ இந்த இரண்டு ஜாதிகளும் இந்த இரண்டு தேசங்களும் என்னுடையவைகளாகும், நான் அவைகளைச் சொந்தமாக்கிக்கொள்ளு
11 வேன் என்று சொன்னபடியினால், | என் ஜீவன்மேல் ஆணை—இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு—நீ உன் பகையினிமித்தம் உன் கோபத்தினும் எரிச்சலினும் அவர்களுக்குச் செய்ததுபோல் நானும் செய்வேன்; நான் உனக்குத் தீர்ப்பிடும் போது நான் அவர்களுக்குள் அறியப்படு
12 வேன். இஸ்ரவேலின் மலைகள் பாழாக்கப் பட்டு எங்களுக்கு இரையாகக் கொடுக்கப் பட்டன என்று நீ அவைகளுக்கு விரோதமாய்ச் சொன்ன நிந்தைமொழிகளெல்லாம் யெகோவாவாகிய நான் கேட்டேன் என்று அப்பொழுது அறிந்துகொள்வாய்.
13 நீங்கள் உங்கள் வாயினால் எனக்கு விரோதமாகப் பெருமை பாராட்டி எனக்கு விரோதமாக உங்கள் வார்த்தைகளைக் குவித்தீர்கள்; அதை நான் கேட்டேன்.
14 யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வதைக் கேள்: பூமியெல்லாம் மகிழ நீ பாழா
15 யிருக்கும்படி செய்வேன். இஸ்ரவேல் வீட்டாரின் சுதந்தரம் பாழாய்ப்போனதைக் கண்டு மகிழ்ந்தாயே, உனக்கும் அப்படியே செய்வேன்; சேயீர் மலையே, முழு ஏதோமே, அனைத்தும் பாழாவாய்; நானே யெகோவா என்று அறிந்துகொள்வார்கள்.

**36** மனுஷகுமாரனே, நீ இஸ்ரவேல் மலைகளை நோக்கித் தீர்க்கதரிசனம் உரைத்து இப்படிச் சொல்: இஸ்ரவேல் மலைகளே, யெகோவாவின் வார்த்தையைக் கேளுங்கள்.
2 யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே: பகைஞன் உங்களைப்பற்றி ஆ ஆ, பூர்வீக மேடுகள் எங்கள் வசமாயின என்று
3 சொல்லுகிறபடியினால் | நீ தீர்க்கதரிசனம் உரைத்து இப்படிச்சொல், யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே: நீங்கள் புறஜாதியாரில் மீதியானவர்களுக்குச் சொந்தமாயிருக்கும்படி அவர்கள் சுற்றிலும் இருந்து உங்களைப் பாழாக்கி உங்களை மிதித்தபடியினாலும் நீங்கள் வாயாடிகளுக்குப் பேச்சும் ஜனங்களுக்கு அவதூறுமான
4 படியினாலும் | இஸ்ரவேல் மலைகளே, நீங்கள் யெகோவாவாகிய ஆண்டவரின் வார்த்தையைக் கேளுங்கள், மலைகளுக்கும் குன்றுகளுக்கும் பள்ளமான ஓடைகளுக்கும் பள்ளத்தாக்குகளுக்கும் பாழாக்கப்பட்ட அவாந்தர இடங்களுக்கும் வெறுமையாய் விடப்பட்ட பட்டணங்களுக்கும், சுற்றிலும் மீதியாயிருக்கிற புறஜாதியாருக்குக் கொள்ளையும் நிந்தையுமான இடங்களுக்கே, யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது
5 இதுவே: யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச் சொல்லுகிறார், நான் என் எரிச்சலின் அக்கினியில் புறஜாதியாரில் மீதியானவர்களுக்கு விரோதமாகவும் ஏதோம் அனைத்துக்கும் விரோதமாகவும் திட்டமாகவே பேசுகிறேன், அவர்கள் தங்கள் முழு இருதய சந்தோஷத்தோடும் மன கர்வத்தோடும் என் தேசத்தைத் தங்களுக்குச் சொந்தமாக நியமித்துக்கொண்டு ஜனம் கொள்ளையாகும்படி அதை வெளியே துரத்திவிட்டார்கள்.
6 ஆதலால் நீ இஸ்ரவேல் தேசத்தைப்பற்றித் தீர்க்கதரிசனம் உரைத்து, மலைகளுக்கும் குன்றுகளுக்கும் பள்ளமான ஓடைகளுக்கும் பள்ளத்தாக்குகளுக்கும் சொல்லவேண்டியது இதுவே, யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச் சொல்லுகிறார்: இதோ, நீங்கள் புறஜாதியாரால் வரும் நிந்தையைச் சுமந்தபடியினால் நான் என் எரிச்சலிலும் என் உக்கிரத்திலும் பேசுகிறேன்.
7 ஆகவே யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச் சொல்லுகிறார்: நான் என் கரத்தை உயர்த்தி, உங்களைச்சுற்றிலும் இருக்கிற புறஜாதியார் தாங்களே தங்கள் நிந்தையைச் சுமப்பார்கள் என்று ஆணையிடுகிறேன்.
8 இஸ்ரவேல் மலைகளே, நீங்கள் உங்கள் கொப்புகளை விட்டு என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு உங்கள் கனிகளைக் கொடுப்பீர்கள்; அவர்கள் சீக்கிரம் வந்துவிடுவார்கள்.
9 இதோ, நான் உங்களிடம் வந்து உங்களைக் கண்ணோக்குவேன், உங்களைப் பண்படுத்தி விதைப்பார்கள்.
10 நான் உங்களில் ஏராளமான மனுஷரை, இஸ்ரவேல் வீட்டார் அனைவரையும், இருக்கச்செய்வேன்; பட்டணங்கள் குடியேற்றப்படும், அவாந்தரமான இடங்கள் கட்டப்படும்.
11 உங்களில் ஏராளமான மனுஷரையும் மிருகங்களையும் இருக்கச்செய்வேன்; அவர்கள் பலுகிப்பெருகுவார்கள்; பூர்வ காட்களிலேபோல நாடு குடியேற்றப்படும்படி செய்வேன்; முற்காலத்தைப் பார்க்கிலும் உங்களுக்கு அதிக நன்மை செய்வேன்; நானே யெகோவா என்று அதினாலே அறிந்துகொள்வீர்கள்.
12 நான் மனுஷரை, என் ஜனமாகிய இஸ்ரவேலை, உங்கள்மேல் நடமாடச்செய்வேன்; அவர்கள் உன்னைச் சொந்தமாக்கிக்கொள்ளுவார்கள்; நீ அவர்களுக்குச் சுதந்தரமாயிருப்பாய்; நீ இனி அவர்களைப் பிள்ளையற்றிராக்குவதில்லை. யெகோவா
13

வாகிய ஆண்டவர் இப்படிச் சொல்லுகிறார்: ஜனங்கள் உன்னைப் பார்த்து, நீ மனுஷரைப் பட்சிக்கிற தேசம், நீ உன் ஜனங்களைப் பிள்ளையற்றுராக்குகிற தேசம் என்று
14 சொல்லுகிறபடியினால் | நீ இனி உன் ஜனங்களைப் பட்சிப்பதுமில்லை, இனி அவர்களைப் பிள்ளையற்றுராக்குவதுமில்லை; இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு.
15 புறஜாதியாரால் வரும் நிந்தையை இனி நீ கேளாதிருக்கச் செய்வேன், தேசத்தாரால் வரும் இலச்சையை இனி நீ சுமப்பதில்லை; உன் ஜனங்களை இனி நீ பிள்ளையற்றுராக்குவதில்லை, இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு.
16 பின்னும் யெகோவாவின் வார்த்தை
17 எனக்கு வந்தது: மனுஷகுமாரனே, இஸ்ரவேல் வீட்டார் தங்கள் தேசத்திலே குடியிருந்தபோது அதைத் தங்கள் நடக்கையினாலும் தங்கள் செய்கைகளினாலும் தீட்டுப்படுத்தினார்கள், என் முகத்துக்கு முன்பாக அவர்கள் நடந்தவழி தூர ஸ்திரீயின் தீட்
18 டைப்போல் இருந்தது. ஆகையினால் தேசத்திலே அவர்கள் ஊற்றின இரத்தத்தினிமித்தமும் தேசத்தைத் தங்கள் கேவலமான விக்கிரகங்களால் தீட்டுப்படுத்தினதினிமித்தமும் நான் என் உக்கிரகோபத்தை அவர்கள்
19 மேல் ஊற்றினேன். அவர்களைப் புறஜாதியாருக்குள்ளே சிதறடித்தேன், தேசங்களில் தூற்றிப்போடப்பட்டார்கள்; அவர்கள் நடக்கையின்படியும் அவர்களுடைய செய்கைகளின்படியும் அவர்களை நியாயத்
20 தீர்த்தேன். அவர்கள் சிதறிப்போன புறஜாதியாரிடம் வந்தபோது அந்த ஜனங்கள் இவர்களைப்பற்றிப் பேசி, இவர்கள் யெகோவாவின் ஜனம், இவர்கள் தங்கள் தேசத்தை விட்டு வரவேண்டியதாயிற்று என்று சொன்னதினால் இவர்கள் என் பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தமற்றதுபோலாக்கினார்
21 கள். ஆனாலும் இஸ்ரவேல் வீட்டார் தாங்கள் வந்து சேர்ந்த புறஜாதியாருக்குள் பரிசுத்தமற்றதுபோலாக்கின என் பரிசுத்த நாமத்தினிமித்தமாகவே பரிதாபங்கொண்
22 டேன். ஆதலால் நீ இஸ்ரவேல் வீட்டாருக்கு இப்படிச் சொல், யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வதைக் கேளுங்கள்: இஸ்ரவேல் வம்சத்தாரே நான் இப்படிச் செய்கிறது உங்கள் நிமித்தம் அல்ல, நீங்கள் வந்து சேர்ந்த புறஜாதியாருக்குள் பரிசுத்தமற்றதுபோலாக்கின என் பரிசுத்த நாமத்தினிமித்தமே.
23 புறஜாதியாருக்குள் பரிசுத்தமற்றதுபோலாக்கப்பட்ட என் மகத்தான நாமத்தை நான் பரிசுத்தம் பண்ணுவேன், நீங்களே அதைப் புறஜாதியார் நடுவில் பரிசுத்தமற்றதுபோலாக்கினீர்கள்; இப்படியாகப் புறஜாதியாரின் கண்களுக்கு முன்பாக நான் உங்களுக்குள் பரிசுத்தமாக விளங்குகையில் நானே யெகோவா என்று அவர்கள் அறிந்துகொள்வார்கள், இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு. நான் உங்களைப் 24
புறஜாதியாரிடத்திலிருந்து அழைத்து உங்களைச் சகல தேசங்களிலுமிருந்து சேர்த்து உங்கள் சுய தேசத்திற்கு உங்களைக் கொண்டுவருவேன். அப்பொழுது நான் உங்கள்மேல் 25
சுத்தமான ஜலம் தெளிப்பேன், நீங்கள் சுத்தமாவீர்கள்; நான் உங்களுடைய சகல அசுத்தங்களையும் உங்களுடைய சகல கேவலமான விக்கிரகங்களையும் நீக்கி உங்களைச் சுத்தமாக்குவேன். உங்களுக்குப் புதிய 26
இருதயத்தைக் கொடுத்து உங்கள் உள்ளத்திலே புதிய ஆவியைவைத்துக் கல்லான இருதயத்தை உங்கள் சரீரத்திலிருந்து எடுத்துப்போட்டுச் சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். உங்கள் உள்ளத்தில் 27
என் ஆவியை வைத்து நீங்கள் என் நியமங்களில் நடந்து என் தீர்ப்புகளைக் கைக்கொண்டு அவைகளில் நடக்கும்படி செய்வேன். உங்கள் பிதாக்களுக்கு நான் 28
கொடுத்த தேசத்திலே நீங்கள் குடியிருப்பீர்கள், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்; நான் உங்கள் கடவுளாயிருப்பேன். உங் 29
களை சகல அசுத்தங்களிலுமிருந்து நான் உங்களைத் தப்புவிப்பேன்; நான் பயிருக்குக் கட்டளையிட்டு அதைப் பெருகப்பண்ணுவேன், பஞ்சத்தை உங்கள்மேல் வரவிடேன். மரங்களின் கனிகளையும் வய 30
லின் விளைச்சலையும் பெருகப்பண்ணுவேன்; பஞ்சத்தினால் வரும் நிந்தனையை நீங்கள் இனி ஜாதியாருக்குள் சுமப்பதில்லை. அப் 31
பொழுது நீங்கள் உங்கள் தீயவழிகளையும் உங்கள் தகாத செயல்களையும் நினைத்து உங்கள் அக்கிரமங்களினிமித்தமும் உங்கள் அருவருப்புகளினிமித்தமும் உங்களை நீங்களே அரோசிப்பீர்கள். நான் இப்படிச் செய் 32
வது உங்கள் நிமித்தம் அல்ல—இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு—இது உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும்; இஸ்ரவேல் வீட்டாரே, நீங்கள் வெட்கி உங்கள் வழிகளைவிட்டு விலகிநடவுங்கள்.

யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச் 33
சொல்லுகிறார்: நான் உங்கள் அக்கிரமங்களெல்லாம் நீங்க உங்களைச் சுத்திகரிக்கும் காலத்திலே உங்களைப் பட்டணங்களில் குடியேற்றுவிப்பேன்; பாழாவ இடங்களும் கட்டப்படும். பாழாக்கப்பட்ட தேசம் 34

பண்படுத்தப்படும், அவ்வழியாய்ப் போகிற யாவருடைய பார்வையிலும் அது பாழாய்க்
35 கிடந்தது. அப்பொழுது ஜனங்கள் பாழாக்கப்பட்டுக் கிடந்த இத்தேசம் ஏதேன் தோட்டத்தைப் போலாயிற்றென்றும் இடிக்கப்பட்டு அவாந்தரமும் பாழுமாய்க் கிடந்த பட்டணங்கள் குடியேற்றப்பட்ட அரண்களாயின என்றும் சொல்லு
36 வார்கள். யெகோவாவாகிய நானே இடிக்கப்பட்டவைகளைக் கட்டுகிறேன் என்றும் பாழாக்கப்பட்டதைப் பயிர் நிலமாக்குகிறேன் என்றும் அப்பொழுது உங்களுக்குச் சுற்றிலுமுள்ள மீதியான ஜாதியார் அறிந்து கொள்வார்கள்; யெகோவாவாகிய நானே இதைச் சொன்னேன், நானே இதைச் செய்வேன்.

37 யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச் சொல்லுகிறார், இஸ்ரவேல் வீட்டார் என்னிடம் விண்ணப்பம்பண்ணவே நான் இதையும் அவர்களுக்குச் செய்வேன்: மனிதர் ஆட்டுமந்தைகள்போல் பெருகும்படி செய்
38 வேன். பாழாக்கப்பட்ட பட்டணங்களில் நிரம்பியிருக்கும் மனித மந்தைகள் பலி ஆடுகளையும் எருசலேமின் உற்சவகால ஆடுகளையும் போல ஏராளமாயிருக்கும், நானே யெகோவா என்று அப்பொழுது அறிந்துகொள்வார்கள்.

**37** யெகோவாவின் கரம் என்மேல் வந்தமர்ந்தது, யெகோவா என்னை ஆவியினால் வெளியே கொண்டுபோய் எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கின் நடுவில்
2 நிறுத்தி, | என்னை அவைகளைச்சுற்றி நடக்கப்பண்ணினார்; இதோ, பள்ளத்தாக்கின் பரப்பெல்லாம் அந்த எலும்புகள் மகா ஏராளமாய்க் கிடந்தன; அவைகள் மிகவும்
3 உலர்ந்து போயிருந்தன. அவர் என்னிடம், மனுஷகுமாரனே, இந்த எலும்புகள் உயிரடையுமா என்று கேட்க, நான், யெகோவாவாகிய ஆண்டவரே, தேவரீ
4 ருக்கே அது தெரியும் என்றேன். அப்பொழுது அவர்: நீ இந்த எலும்புகளைப்பற்றித் தீர்க்கதரிசனம் உரைத்து அவைகளுக்கு இப்படிச் சொல்: உலர்ந்த எலும்புகளே, யெகோவாவின் வார்த்தையைக் கேளுங்கள்.
5 யெகோவாவாகிய ஆண்டவர் இந்த எலும்புகளுக்குச் சொல்வது இதுவே: இதோ, நான் உங்களுக்குள் ஆவியை வரச்செய்
6 வேன், நீங்கள் உயிரடைவீர்கள். நான் உங்கள்மேல் நரம்புகளை வைத்து உங்கள் மேல் சதையை உண்டாக்கி உங்களைத் தோலினால்மூடி உங்களில் ஆவியையருளு
வேன்; அப்பொழுது நீங்கள் உயிரடைந்து நானே யெகோவா என்று அறிந்துகொள்வீர்களென்று சொல் என்றார்.

7 எனக்குக் கட்டளையிட்டபடியே நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன்; நான் தீர்க்கதரிசனம் உரைக்கையில் ஒரு சத்தம் உண்டாயிற்று, இதோ, அசைவுண்டானது, ஒவ்வொரு எலும்பும் தனக்குரிய எலும்போடே
8 சேர்ந்துகொண்டது. நான் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே, இதோ, அவைகள்மேல் நரம்புகளும் சதையும் உண்டாயின, மேற்புறமெங்கும் தோல் மூடினது; ஆவியோ அவற்றில் இல்லை. அப்பொழுது
9 அவர் என்னோடு பேசி, நீ ஆவியை நோக்கித் தீர்க்கதரிசனம் உரை, மனுஷகுமாரனே, நீ தீர்க்கதரிசனம் உரைத்து ஆவியினிடம், யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே, ஆவியே, நீ நான்கு திசைகளிலுமிருந்து வந்து கொல்லப்பட்டோர் இவர்கள் உயிரடையும்படி இவர்கள்மேல் ஊது என்று சொல் என்றார். எனக்குக் கட்டளை
10 யிட்டபடியே நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன், உரைக்கவே ஆவி அவர்களுக்குள் வந்தது, அவர்கள் உயிரடைந்து மகா பெரிய சேனையாய்க் காலூன்றி நின்றார்கள்.

11 அவர் என்னோடு பேசி: மனுஷகுமாரனே, இந்த எலும்புகள் இஸ்ரவேல் வீட்டார் அனைவருமே; இதோ, அவர்கள், எங்கள் எலும்புகள் உலர்ந்துபோயின, எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று, நாங்களும் இல்லாமற்போனோம் என்கிறார்கள். ஆகவே
12 நீ தீர்க்கதரிசனம் உரைத்து அவர்களுக்கு இப்படிச் சொல்: யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வதைக் கேளுங்கள், இதோ, என் ஜனமே, நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படப்பண்ணி, உங்களை இஸ்ரவேல் தேசத்துக்கு வரச்செய்வேன்.
13 என் ஜனமே, நான் உங்கள் பிரேதக்குழிகளைத்திறந்து உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படப் பண்ணும்போது, நானே யெகோவா என்று அறிந்துகொள்வீர்கள். என் ஆவியை உங்களுக்குள் வைப்
14 பேன், நீங்கள் உயிரடைவீர்கள்; நான் உங்களை உங்கள் தேசத்தில் அமர்ந்திருக்கச் செய்வேன்; யெகோவாவாகிய நானே இதைச் சொன்னேன் என்று அப்பொழுது அறிந்து கொள்வீர்கள்; நானே இதைச் செய்வேன், இது யெகோவாவின் திருவாக்கு என்று சொல் என்றார்.

15 பின்னும் யெகோவாவின் வார்த்தை
16 எனக்கு வந்தது: மனுஷகுமாரனே, நீ ஒரு

கோலை எடுத்து, அதிலே, யூதாவுக்கும் இஸ்ர
வேல் வீட்டாரில் அதைச்சேர்ந்தவருக்கும்
உரியது என்று எழுது, பின்னும் வேறொரு
கோலை எடுத்து, அதிலே, யோசேப்புக்குரி
யது, எப்பிராயீமுக்கும் இஸ்ரவேல் வீட்
டாரில் அவனைச்சேர்ந்த அனைவருக்கும்
17 உரிய கோலென்று எழுதி, | அவைகள்
ஒரே கோலாக ஒன்றோடொன்று சேரும்
படிசெய், அவைகள் உன் கையில் ஒன்று
18 கும். இவைகளைச் செய்வதில் உமது கருத்
தென்ன? எங்களுக்குச் சொல்லுமென்று
உன் ஜனத்தின் புத்திரர் உன்னைக் கேட்
19 டால், | நீ அவர்களிடம் யெகோவாவாகிய
ஆண்டவர் சொல்வது இதுவே: இதோ,
நான் யோசேப்பின் கோலை, எப்பிராயீமுக்
கும் இஸ்ரவேல் கோத்திரத்தாரில் அவனைச்
சேர்ந்தவருக்கும் உரிய கோலை, எடுத்து அத
னோடே யூதாவின் கோலைச் சேர்த்து அவை
களை ஒரே கோலாக்குவேன்; அவைகள் என்
20 கையில் ஒன்றாகும் என்று சொல். நீ எழு
தின கோல்கள் அவர்களுடைய கண்களுக்கு
முன்பாக உன் கையில் இருக்கவேண்டும்.
21 பின்பு நீ அவர்களுக்கு இப்படிச்சொல்:
யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வதைக்
கேளுங்கள்: இதோ, நான் இஸ்ரவேல் வீட்
டாரை அவர்கள் போயிருக்கும் ஜாதியாரிட
மிருந்து அழைத்துச் சுற்றிலுமிருந்து அவர்
களைச் சேர்த்து அவர்களை அவர்கள் சுய
22 தேசத்திலே வரப்பண்ணி, அந்த தேசத்தில்
இஸ்ரவேலின் மலைகளிலே, அவர்களை ஒரே
ஜாதியாக்குவேன்; அவர்கள் எல்லாருக்கும்
ஒரே ராஜா இருப்பான், அவர்கள் இனி
இரண்டு ஜாதிகளாக இருப்பதில்லை, அவர்
கள் இனி இரண்டு ராஜ்யங்களாகப் பிரிப
23 படுவதில்லை. அவர்கள் இனித்தங்கள் கேவல
மான விக்கிரகங்களினாலும் அருவருப்பான
வைகளாலும் தங்கள் சகல துரோகங்களினாலும்
தங்களைத் தீட்டுப்படுத்துவதில்லை; அவர்கள்
பாவஞ்செய்த சகல வாசஸ்தலங்களிலு
மிருந்து நான் அவர்களை இரட்சித்து அவர்களைச் சுத்தம்பண்ணுவேன்; அப்
பொழுது அவர்கள் என் ஜனமாயிருப்பார்
கள்; நான் அவர்கள் கடவுளாயிருப்பேன்.
24 என் தாசனாகிய தாவீது அவர்கள்மேல் ராஜா
வாக இருப்பார்; அவர்கள் எல்லாருக்கும்
ஒரே மேய்ப்பர் இருப்பார், அவர்கள் என்
தீர்ப்புகளில் நடந்து என் நியமங்களைக் கைக்
கொண்டு அவைகளின்படியே செய்வார்கள்.
25 நான் என் தாசனாகிய யாக்கோபுக்குக்
கொடுத்ததும் உங்கள் பிதாக்கள் குடியிருந்
ததுமான தேசத்திலே குடியிருப்பார்கள்;
அவர்களும் அவர்கள் பிள்ளைகளும் அவர்
கள் பிள்ளைகளின் பிள்ளைகளும் அதிலே என்
றென்றுமாகக் குடியிருப்பார்கள்; என் தாச
னாகிய தாவீது என்றென்றுமாக அவர்களுக்கு
அதிபதியாவார். நான் அவர்களோடே சமா 26
தான உடன்படிக்கை செய்வேன், அது
அவர்களுக்கு நித்தியஉடன்படிக்கையாகும்;
நான் அவர்களை நிலைப்படுத்தி அவர்களைப்
பெருகப்பண்ணி, அவர்கள் நடுவிலே என்
பரிசுத்த ஸ்தலத்தை என்றென்றுமாக ஸ்தா
பிப்பேன். என் வாசஸ்தலம் அவர்களிடம் 27
இருக்கும், நான் அவர்கள் கடவுளாயிருப்
பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்.
இப்படியாக என் பரிசுத்தஸ்தலம் அவர்கள் 28
நடுவிலே என்றென்றுமாக இருக்கும்போது
இஸ்ரவேலைப் பரிசுத்தம்பண்ணுகிறவர்
யெகோவாவாகிய நானே என்று புறஜாதியார்
அறிந்துகொள்வார்கள்.

யெகோவாவின் வார்த்தை எனக்கு வந் **38**
தது: மனுஷகுமாரனே, ரோஷ், மேசேக்கு 2
தூபால் ஜாதியாரின் அதிபதியாகிய கோக்
என்னும் மாகோக் தேசத்தானுக்கு எதிராக
நீ உன் முகத்தைத்திருப்பி அவனுக்கு
விரோதமாக தீர்க்கதரிசனம் உரைத்து |
இப்படிச்சொல், யெகோவாவாகிய ஆண்ட 3
வர் சொல்வது இதுவே, ரோஷ், மேசேக்கு,
தூபால் ஜாதிகளின் அதிபதியாகிய கோகே,
இதோ, நான் உனக்கு விரோதமாக வரு
வேன். நான் உன்னைத்திருப்பி உன் கன் 4
னங்களில் தூறுகளைமாட்டி உன்னையும்
உன் சகல சேனையையும் குதிரைகளையும்
குதிரைவீரரையும் சர்வாயுதந்தரித்த யாவ
ரையும் பரிசையும் கேடகமும் பிடித்த
திரள்கூட்டத்தையும் புறப்படப்பண்ணு
வேன், அவர்கள் எல்லாரும் பட்டயங்களைப்
பிடித்தவர்கள். அவர்களோடேகூடப் பார 5
சீகரும் எத்தியோப்பியரும் பூத்தியரும்
இருப்பார்கள்; அவர்களெல்லாரும் கேடகம்
பிடித்துத் தலைச்சீராதரித்தவர்கள். கோ 6
மேரும் அதன் சகல ராணுவங்களும் வட
திசைக் கடைகோடியிலுள்ள தொகர்மா
வம்சத்தாரும் அவர்களுடைய சகல ராணு
வங்களுமாகிய திரள் ஜனங்கள் உன்னோ
டிருப்பார்கள். நீ ஆயத்தப்படு, உன்னை 7
யும் உன்னோடேகூடின கூட்டம் அனைத்
தையும் ஆயத்தப்படுத்து, அவர்களைப்பார்த்து
வரவேண்டியவன் நீயே. வெகு நாளான 8
பின் நீ அழைக்கப்படுவாய், பட்டயத்துக்கு
நீங்கலாகிப் பற்பல தேசத்தாரிடமிருந்து
சேர்த்துக்கொள்ளப்பட்டு வந்தவர்களின்
தேசத்தில் கடைசிக்காலங்களிலே வருவாய்;
இஸ்ரவேலின் மலைகளுக்கு விரோதமாய் வரு

வாய், அத்தேசம் நெடுநாள் பாழாய்க்கிடந்தது; பிற்பாடு அதின் ஜனங்கள் பல ஜாதியாரிடமிருந்து கொண்டுவரப்பட்டு அங்கே யா
9 வரும் பயமின்றி வசித்தார்கள். நீ பெருங்காற்றைப்போல் எழும்பி வருவாய்; நீயும் உன் சகல ராணுவங்களும் உன்னோடிருக்கும் பலதேசத்தாரும் மேகம்போல் தேசத்தை மூடுவீர்கள்.
10 யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே: அந்நாளிலே உன் மனதின் யோசனைகள் எழும்பவே நீ தீய எண்ணங்களை
11 எண்ணி: மதில்களில்லாத கிராமங்களுள்ள தேசத்துக்கு விரோதமாய்ப் போவேன், கவலையும் பயமுமின்றி இருக்கிறவர்களின்மேல் வருவேன், அவர்கள் எல்லாரும் மதில்களில்லாமல் குடியிருக்கிறார்கள், அவர்களுக்குத் தாழ்ப்பாளும் இல்லை, கதவுகளும்
12 இல்லை; பாழாய்க்கிடந்து பின்பு குடியேற்றப்பட்ட இடங்களுக்கு விரோதமாகவும் ஜாதியாரிடமிருந்து சேர்க்கப்பட்டு ஆடுமாடுகளையும் பொருட்களையும் சம்பாதித்து, உலகின் மத்தியில் குடியிருக்கிற ஜனத்துக்கு விரோதமாகவும் என் கையைத்திருப்பிக் கொள்ளையிடவும் சூறையாடவும் போவேன்
13 என்பாய். ஷேபாதேசத்தாரும் தெதான் தேசத்தாரும் தர்ஷீசுவர்த்தகரும் அதினுடைய பாலசிங்கங்களான அனைவரும் உன்னைப்பார்த்து, நீ கொள்ளையிட வருகிறாயோ? சூறையாடி, வெள்ளியையும் பொன்னையும் எடுத்துக்கொள்ளுகிறதற்கும், ஆடுமாடுகளையும் பொருட்களையும் பிடித்துக்கொண்டு போவதற்கும், பெருங்கொள்ளையை எடுத்துக்கொண்டு போவதற்கும் உன் பெருங்கூட்டத்தைக் கூட்டினாயோ என்று கேட்பார்கள்.
14 ஆதலால் மனுஷகுமாரனே, நீ தீர்க்கதரிசனம் உரைத்துக் கோகுக்கு இப்படிச் சொல், யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே: அக்காலத்தில் என் ஜனமாகிய இஸ்ரவேல் பயமின்றிக் குடியிருக்கும்
15 போது அது உனக்குத் தெரியவருமே; அப்பொழுது நீயும் உன்னோடே திரள் ஜனங்களும் வடதிசைக் கடைகோடியிலுள்ள உன் ஸ்தானத்திலிருந்து வருவீர்கள்; எல்லாரும் குதிரைகளின்மேல் ஏறுகிறவர்கள்; அவர்
16 கள் பெரியகூட்டம், திரள்சேனை. நீ தேசத்தை மேகம்போல்மூட என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாக எழும்பி வருவாய்; கடைசிக்காலங்களிலே இது சம்பவிக்கும்; கோகே ஜாதியாரின் கண்களுக்கு முன்பாக உன்னைக்கொண்டு நான் பரிசுத்தர் என்று விளங்கப்பண்ணுகிறதினால் அவர்கள் என்னை அறியவேண்டுமென்று உன்னை என் தேசத்துக்கு விரோதமாக வரப்பண்ணுவேன். யெகோவாவாகிய ஆண்டவர் சொல் 17
வது இதுவே: உன்னை அவர்களுக்கு விரோதமாக வரப்பண்ணுவேன் என்று பூர்வநாட்களிலே இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகளாகிய என் ஊழியரைக்கொண்டு நான் குறித்துச் சொன்னவன் நீயே, அவர்கள் அந்நாட்களிலே பல வருஷங்களாகத் தீர்க்கதரிசனம் உரைத்துவந்தார்கள்.

இஸ்ரவேல் தேசத்துக்கு விரோதமாக 18
கோக் வருங்காலத்தில்—இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு—அக்காலத்திலேயே என் உக்கிரகோபம் என் நாசியில் ஏறும். என் எரிச்சலிலும் என் கோபாக் 19
கினியிலும் நான் பேசி, அந்நாளிலே இஸ்ரவேல் தேசத்திலே பெரிய அதிர்ச்சி உண்டாகும்என்று சொல்லுகிறேன். என்பிரசன்னத் 20
திலுல் சமுத்திரத்து மீன்களும் ஆகாயத்துப் பறவைகளும்காட்டுமிருகங்களும் தரையில் ஊறுகிற சகல பிராணிகளும் பூமியின்மேலுள்ள சகல நரஜீவன்களும் அதிரும், மலைகள் இடிந்துபோம், செங்குத்தானவைகள் விழும், எல்லா மதில்களும் தரையிலே விழுந்துபோம். என் சகல மலைகளிலும் 21
பட்டயத்தை அவனுக்கு விரோதமாக வரவழைப்பேன், இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு; ஒவ்வொருவன் பட்டயமும் அவன் சகோதரனுக்கு விரோதமாயிருக்கும். கொள்ளோநோயினாலும் இரத் 22
தத்தினாலும் நான் அவனோடே வழக்காடி அவன்மேலும்அவன் ராணுவங்களின்மேலும் அவனோடிருக்கும் பலதேசத்தாரின்மேலும் வெள்ளமாக அடிக்கும் மழையையும்பெருங் கல்மழையையும் அக்கினியையும் கந்தகத்தையும் வருஷிக்கப் பண்ணுவேன். இவ் 23
விதமாய் நான் பல ஜாதியாரின் கண்களுக்கு முன்பாக என் மகத்துவத்தையும் என் பரிசுத்தத்தையும் விளங்கப்பண்ணி அவர்கள் என்னை அறியும்படி செய்வேன்; நானே யெகோவா என்று அப்பொழுது அறிந்து கொள்வார்கள்.

இப்போதும் மனுஷகுமாரனே, நீ கோ **39**
குக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்து இப்படிச் சொல், யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே: ரோஷ், மேசேக்கு, தூபால் நாகிகளின் அதிபதியாகிய கோகே, இதோ, நான் உனக்கு விரோதமாக வருகிறேன். நான் உன்னைத்திருப்பி உன்னை 2
நடத்தி உன்னை வடதிசைக் கடைகோடிகளிலிருந்து இஸ்ரவேல் மலைகளில் எழும்பி

3 வரப்பண்ணுவேன். உன் வில்லை உன் இடதுகையிலிருந்து தட்டிவிட்டு உன் அம்புகளை உன் வலதுகையிலிருந்து விழப்பண்ணுவேன். 4 நீயும் உன் எல்லா ராணுவங்களும் உன்னோடிருக்கிற ஜனங்களும் இஸ்ரவேல் மலைகளில் விழுவீர்கள்; சகலவித குரூர பட்சிகளுக்கும் காட்டு மிருகங்களுக்கும் உன்னை இரையாகக் கொடுப்பேன். 5 திறந்த வெளியிலே விழுந்து கிடப்பாய்; நானே இதைச் சொன்னேன், இது யெகோவா 6 வாகிய ஆண்டவரின் திருவாக்கு. நான் மாகோகிடத்திலும் தீவுகளில் பயமின்றி வசிக்கிறவர்களிடத்திலும் அக்கினியை அனுப்புவேன்; நானே யெகோவா என்று அப்பொழுது அறிந்துகொள்வார்கள். 7 இவ்விதமாக நான் என் ஜனமாகிய இஸ்ரவேலின் நடுவிலே என் பரிசுத்த நாமத்தை விளங்கப்பண்ணுவேன்; என் பரிசுத்த நாமத்தை இனிப் பரிசுத்தமற்றது போலாக்கவொட்டேன்; அதினால் இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற யெகோவா நானே என்று புறஜாதியார் அறிந்துகொள்வார்கள். 8 இதோ, அது வரும், அது சம்பவிக்கும்; இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு; நான் சொன்ன நாள் இதுவே.

9 இஸ்ரவேல் பட்டணங்களின் குடிகள் வெளியேபோய்க் கேடகங்கள், பரிசைகள், வில்லுகள், அம்புகள், வேதடிகள், ஈட்டிகள் ஆகிய ஆயுதங்களை எடுத்து நெருப்பிலிட்டு எரிப்பார்கள்; ஏழு வருஷமாக 10 அவைகளை எரிப்பார்கள். அவர்கள் வெளியிலிருந்து விறகு கொண்டுவருவதில்லை, காடுகளில் வெட்டுவதில்லை; ஆயுதங்களையே எடுத்து எரிப்பார்கள்; தங்களைக் கொள்ளையிட்டவர்களை அவர்கள் கொள்ளையிட்டுத் தங்களைச் சூறையாடினவர்களைச் சூறையாடுவார்கள்; இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு.

11 அந்நாளில் இஸ்ரவேல் தேசத்திலே கடலுக்குக் கிழக்கே வழிப்போக்கரின் பள்ளத்தாக்கைப் புதைக்கிற இடமாக கோகுக்குக் கொடுப்பேன்; வழிப்போக்கருக்கு அது தடையாம்; அங்கே கோகையும் அவனுடைய ஜனத்திரளையும் புதைப்பார்கள்; அதைக் கோகின் ஜனத்திரள் பள்ளத்தாக்கு 12 என்பார்கள். இஸ்ரவேல் வீட்டார் அவர்களைப் புதைத்துத் தேசத்தைச் சுத்தம்பண்ணித்தீர ஏழுமாதம் செல்லும். 13 தேசத்தின் ஜனங்களெல்லாரும் புதைத்துக்கொண்டிருப்பார்கள், நான் மகிமைப்படும் நாளிலே அது அவர்களுக்குப் பேராகும், இது யெகோ 14 வாவாகிய ஆண்டவரின் திருவாக்கு. தேசத்தில் நித்தமும் சுற்றித்திரியும்படி ஆட்களைப் பிரித்தெடுப்பார்கள், இவர்கள் பிரயாணக்காரில் பூமியின்மேல் பிரேதங்களாக இன்னும் கிடப்பவர்களைப் புதைத்துத் தேசத்தைச் சுத்திகரிப்பார்கள்; ஏழுமாதமானபின் 15 இப்படித்தேட ஆரம்பிப்பார்கள். சுற்றித் திரிகிறவர்கள் தேசத்திலே திரிகையில் ஒரு மனுஷ எலும்பைக்கண்டால் அதன் பக்கத்திலே ஒரு கல்லை நிறுத்திவைக்கவேண்டும்; புதைக்கிறவர்கள் அதைக் கோகின் ஜனத்திரள் பள்ளத்தாக்கிலே புதைக்குமளவும் 16 இந்தக் கல் அங்கே இருக்கும். அமோனா என்னும் நகர மொன்றும் இருக்கும்; இவ்விதமாக தேசத்தைச் சுத்தம் பண்ணுவார்கள்.

17 மனுஷகுமாரனே, யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே: நீ சகலவித பறவைகளையும் காட்டிலுள்ள சகல மிருகங்களையும் கூப்பிட்டு, நீங்கள் கூடிவந்து இஸ்ரவேலின் மலைகளில் நான் உங்களுக்கென அடிக்கும் பலிக்கு, பெரிய பலிக்கு, சுற்றிலுமிருந்து வந்து சேருங்கள்; நீங்கள் மாம்சம் 18 புசித்து இரத்தம் குடிப்பீர்கள். நீங்கள் பராக்கிரமசாலிகளின் மாம்சத்தைத்தின்று பூமியிலுள்ள அதிபதிகளின் இரத்தத்தைக் குடிப்பீர்கள்; அவர்கள் எல்லாரும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் வெள்ளாட்டுக் கடாக்களும் காளைகளும் பாசானிலே கொழுப்பாக வளர்த்த மிருகங்களுமாம். 19 நான் உங்களுக்கென அடிக்கும் பலியிலே நீங்கள் தெவிட்டுமளவும் கொழுப்பைத்தின்று வெறியாகுமளவும் இரத்தம் குடிப்பீர்கள். 20 இவ்விதமாய் என் பந்தியிலே குதிரைகளையும் இரதவீரர்களையும், பராக்கிரமசாலிகளையும் சகல யுத்தவீரர்களையும் தெவிட்டுமளவும் தின்பீர்கள், இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு என்று சொல்.

21 இவ்விதமாக என் மகிமையை நான் புறஜாதியாருக்குள்ளே விளங்கப்பண்ணுவே, நான் செய்யும் என் நியாயத்தீர்ப்பையும் அவர்கள்மேல் நான் வைக்கும் என் கையையும் எல்லா ஜாதியாரும் காண்பார்கள். 22 நானே தங்கள் கடவுளாகிய யெகோவா என்று இஸ்ரவேல் வீட்டார் அன்று முதல் அறிந்துகொள்வார்கள். 23 இஸ்ரவேல் வீட்டார் தங்கள் அக்கிரமத்தினிமித்தமே சிறைப்பட்டுப்போனார்கள் என்றும் அவர்கள் எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணினபடியால் என் முகத்தை நான் அவர்களுக்கு மறைத்தேன் என்றும் அவர்கள் சத்துருக்களின்கையில் அவர்களை ஒப்புக்

கொடுக்கவே அவர்கள் அவைவரும் பட்ட யத்தால் விழுந்தார்களென்றும் புறஜாதியார்
24 அப்பொழுது அறிந்துகொள்வார்கள். அவர் களுடைய அசுத்தத்துக்கும் துரோகங்களுக் கும் தக்கபடி நான் அவர்களுக்குச்செய்து என் முகத்தை அவர்களுக்கு மறைத்தேன்.
25 ஆதலால் யெகோவாவாகிய ஆண்டவர்
26 சொல்வது இதுவே: இப்பொழுது நான் யாக் கோபின் துன்பநிலைமையை மாற்றுவேன், இஸ்ரவேல் வீட்டார் அவைவருக்கும் இரங்கு வேன்; என் பரிசுத்த நாமத்தைப்பற்றி வை ராக்கியங்காட்டுவேன், அவர்கள் தங்கள் தேசத்திலே பயப்படுத்துவாரின்றிச் சுகமாய் வசிக்கும்போது அவர்கள் அவமானமும் அவர்கள் எனக்கு விரோதமாய்ச்செய்த
27 சகல துரோகங்களும் நீக்கப்படும். நான் அவர்களை தேசத்தார்களிடமிருந்து திரும்பி வரப்பண்ணி அவர்களுடைய பகைஞரின் தேசங்களிலிருந்து அவர்களைக் கூட்டிக் கொண்டு வரும்போது பல ஜாதியாருடைய கண்களுக்குமுன்பாக அவர்களுக்குள் நான்
28 பரிசுத்தர் என்று விளங்குவேன். தங்களைப் புறஜாதியாரிடத்தில் சிறைப்பட்டுப்போகப் பண்ணின நான் தங்களில் ஒருவரையும் அங்கே வைத்து விடாமல் தங்கள் சுயதே சத்திற்கே தங்களைக் கூட்டிக்கொண்டு வந்த தினாலே நானே தங்கள் கடவுளாகிய யெகோவா என்று அறிந்துகொள்வார்கள்.
29 நான் என் முகத்தை இனி அவர்களுக்கு மறைக்கமாட்டேன்; இஸ்ரவேல் வீட்டார் மேல் என் ஆவியை ஊற்றுவேன், இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு.

**40** நாங்கள் சிறைப்பட்டுப்போன இரு பத்தைந்தாம் வருஷத்தின் ஆரம்பத்தில் பத் தாந்தேதி — அது நகரம் பிடிபட்ட பதி னாலாம்வருஷம் — அன்றையதினமே யெகோ வாவின் கரம் என்மேல் வந்தமர்ந்தது, அவர்
2 என்னை அவ்விடத்துக்குக் கொண்டுபோனார். கடவுளால் வந்த தரிசனங்களில் அவர் என்னை இஸ்ரவேல் தேசத்துக்குக் கொண்டு போய் என்னை மகா உயரமான ஒரு மலையின் மேல் நிற்கச்செய்தது கண்டேன்; அதின் மேல் தெற்கே கட்டியிருந்த நகரம் போன்ற
3 தொன்றிருந்தது. அவர் என்னை அங்கே கொண்டுபோனார், இதோ, அங்கே ஒருவர் இருந்தார்; அவருடைய தோற்றம் செம் பைப்போல் தோன்றியது, அவர் கையில் சணல் நூலும் ஒரு அளவுகோலும் இருந்
4 தது, அவர் வாசலிலே நின்றார். அவர் என்னைக்காணவே, மனுஷகுமாரனே, நீ உன் கண்ணாலே கண்டு உன்காதாலே கேட்டு நான் உனக்குக் காண்பிக்கும் யாவற்றையும் கவ னித்துக்கொள்; நான் உனக்கு அவைகளைக் காண்பிக்கவேண்டுமென்றே நீ இங்கே கொண்டுவரப்பட்டாய்; நீ காண்பவற்றை யெல்லாம் இஸ்ரவேல் வீட்டாருக்குத் தெரி விக்கவேண்டும் என்று சொன்னார்.

இதோ, ஆலயத்துக்குப் புறம்பே சுற்றி 5
லும் ஒரு மதில் இருந்தது, அவர் கையிலே ஆறுமுழ நீளமான ஒரு அளவுகோல் இருந் தது, இந்த முழம் நமது கை முழத்திலும் நாலு விரற்கடை அதிகமானது; அவர் அந்த மதிலை அளந்தார்; அகலம் ஒரு கோல், உய ரம் ஒரு கோல். பின்பு அவர் கிழக்குமுக 6
வாசலுக்கு வந்து அதின் படிகளின்மேல் ஏறி, வாசற்படியை அளந்தார், அதன் அக லம் ஒரு கோல்; மறுவாசற்படியை அளந் தார், அதன் அகலம் ஒரு கோல். ஒவ் 7
வொரு காவல் அறையும் ஒரு கோல் நீளம், ஒரு கோல் அகலம்; அறைகளுக்கு இடையே ஐந்துமுழ இடம் விட்டிருந்தது; வாசல் மண்டபத்தையடுத்த உள் வாசற்படி ஒரு கோலளவு. வாசல் மண்டபத்தின் 8
உட்புறத்தை அளந்தார், அது ஒரு கோல்; பின்பு வாசல் மண்டபத்தை அளந்தார், 9
அது எட்டு முழம், அதின் தூண்சுவர்கள் இரண்டு முழம், வாசலின் மண்டபம் உட் புறத்தை நோக்கியது. கிழக்குமுக வாச 10
லின் காவலறைகள் இருபக்கங்களிலும் மும் மூன்றிருந்தன; அவைகள் மூன்றும் ஒரே அளவு, இருபக்கங்களிலும் இருந்த தூண் சுவர்களும் ஒரே அளவு. பின்பு வாசல் 11
நடைபாதையின் அகலத்தை அளந்தார், அது பத்துமுழம்; வாசலின் நீளத்தை அளந் தார், அது பதின்மூன்று முழம். அறை 12
களுக்கு முன்னே இடம் விடப்பட்டிருந் தது, அது இப்புறம் ஒரு முழம், அப்புறம் ஒரு முழம்; ஒவ்வொரு அறையும் இப்புறம் ஆறு முழம், அப்புறம் ஆறு முழம். பின்பு 13
வாசல் அறை மெத்தையின் கடைகோடியி லிருந்து எதிர் அறை மெத்தையின் கடை கோடிவரைக்கும் அளந்தார், அது இருபத் தைந்து முழம்; கதவுக்கு எதிரே கதவு இருந் தது. தூண்சுவர்களை அளந்தார், அது அறு 14
பது முழம்; பிராகாரத் தூண்சுவர்மட்டும் இருந்ததெல்லாம் முன் வாசலைச்சேர்ந்தது. பிரவேச வாசலின் முகப்புத் துவக்கி உள் 15
வாசல் மண்டப முகப்புமட்டும் ஐம்பது முழம். வாசலுக்கு உட்புறமாகச் சுற்றிலு 16
முள்ள அறைகளிலும் அவைகளின் தூண் சுவர்களிலும் உள்ளே விசாலமும் வெளியே ஒடுக்கமுமான பலகணிகள் இருந்தன, மண் டபங்களிலும் அப்படியே இருந்தன; உட்

புறமாய்ச் சுற்றிலும் அந்தப் பலகணிகளும் தூண்சுவர்களில் செதுக்கப்பட்ட பேரீச்ச மரங்களும் இருந்தன.

17 பின்பு என்னை வெளிப்பிராகாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோனார்; இதோ, அறை வீடுகளும் பிராகாரத்தின் சுற்றிலும் பதித்த தளவரிசையும் இருந்தன; அந்தத் தளவரிசையின்மேல் முப்பது அறைகள் இருந்தன.

18 வாசல்களின் அருகிலிருந்த மதிலியொட்டித் தளவரிசையிருந்தது; அது வாசல்களின் நீளத்துக்கொத்த அகலமுடையது,

19 அது தாழ்வான தளவரிசை. பின்பு அவர் கீழ்வாசலின் உள் முகப்புத் துவக்கி உட்பிராகாரத்து வெளிமுகப்பு மட்டுமுள்ள அகலத்தை அளந்தார்; அது கிழக்கிலும் வடக்கிலும் நூறுமுழம்.

20 வெளிப்பிராகாரத்தை அடுத்த வடதிசை நோக்கிய வாசலின் நீளத்தையும் அகலத்

21 தையும் அளந்தார். அதற்கு இப்புறத்தில் மூன்று காவல் அறைகளும் அப்புறத்தில் மூன்று காவல் அறைகளும் இருந்தன; அதின் தூண்சுவர்களும் அதின் மண்டபமும் முதல்வாசலின் அளவுக்குச் சரியாயிருந்தன; அதின் நீளம் ஐம்பதுமுழம், அக

22 லம் இருபத்தைந்துமுழம். அதின் பலகணிகளும் அதின் மண்டபமும் அதின்மேல் செதுக்கப்பட்ட பேரீச்சமரங்களும் கீழ்திசை நோக்கிய வாசலின் அளவுக்குச் சரியாயிருந்தன, அதில் ஏறுகிறதற்கு ஏழு படிகளிருந்தன, அதின் மண்டபம் அவை

23 களுக்கு முன்னாக இருந்தது. வடதிசை வாசலுக்கும் கீழ்திசை வாசலுக்கும் எதிராக உட்பிராகாரத்துக்கும் வாசல்கள் இருந்தன; ஒரு வாசல்துவக்கி மறுவாசல்மட்டும் அளந்தார், அது நூறுமுழம்.

24 பின்பு என்னைத் தென்திசைக்கு அழைத்துக்கொண்டு போனார்; இதோ, தென்திசை வாசல் இருந்தது, அதின் தூண்சுவர்களையும் அதின் மண்டபத்தையும் அளந்தார், அது முன்னினவற்றின் அளவுப்படியே இருந்

25 தது. அதற்கும் அதின் மண்டபத்துக்கும் எப்புறமும் பலகணிகள் இருந்தன, அவை முன்ன பலகணிகளேப்போன்றவை, நீளம் ஐம்பதுமுழம், அகலம் இருபத்தைந்து

26 முழம். அதில் ஏறுகிறதற்கு ஏழு படிகளிருந்தன, அதற்கு முன்னாக அதின் மண்டபம் இருந்தது; அதின் தூண்சுவர்களில் செதுக்கப்பட்ட பேரீச்சமரங்கள் இருந்தன; இப்புறம் ஒன்று, அப்புறம்

27 ஒன்று. உட்பிராகாரத்துக்கும் தென்திசை நோக்கிய வாசல் ஒன்று இருந்தது; தென்திசை நோக்கிய ஒரு வாசல் துவக்கி மறு வாசல் மட்டும் அளந்தார், அது நூறு முழம்.

28 பின்பு அவர் தென்திசை வாசல்வழியாய் என்னை உட்பிராகாரத்துக்கு அழைத்துக் கொண்டுபோய்த் தென்திசை வாசலையும் அளந்தார், அது முன்னினவற்றின் அளவுக்குச் சரியாயிருந்தது. அதின் காவல் அறை

29 களும் அதின் தூண்சுவர்களும் அதின் மண்டபமும் முன்னினவற்றின் அளவுக்குச் சரியாய் இருந்தன; அதற்கும் அதின் மண்டபத்துக்கும் எப்புறமும் பலகணிகள் இருந்தன; நீளம் ஐம்பதுமுழம் அகலம் இருபத்தைந்துமுழம். இருபத்தைந்துமுழ நீள

30 மும் ஐந்துமுழ அகலமுமான மண்டபங்கள் எப்புறமும் இருந்தன. அதின் மண்

31 டபம் வெளிப்பிராகாரத்தை நோக்கியது, அதின் தூண்சுவர்களில் செதுக்கப்பட்ட பேரீச்சமரங்கள் இருந்தன; அதில் ஏறுகிறதற்கு எட்டுப்படிகள் இருந்தன.

32 பின்பு அவர் கீழ்திசை வாசல்வழியாய் என்னை உட்பிராகாரத்துக்கு அழைத்துக் கொண்டுபோய் அந்த வாசலையும் அளந்தார்; அது முன்னினவற்றின் அளவுக்குச் சரியாயிருந்தது. அதின் காவல் அறைகளும்

33 அதின் தூண்சுவர்களும் அதின் மண்டபமும் முன்னினவற்றின் அளவுக்குச் சரியாக இருந்தன; அதற்கும் அதின் மண்டபத்துக்கும் எப்புறமும் பலகணிகள் இருந்தன, நீளம் ஐம்பதுமுழம், அகலம் இருபத்தைந்து முழம். அதின் மண்டபம் வெளிப் 34 பிராகாரத்தை நோக்கியது; அதின் தூண்சுவர்களில் இப்புறமும் அப்புறமும் செதுக்கப்பட்ட பேரீச்சமரங்கள் இருந்தன; அதில் ஏறுகிறதற்கு எட்டுப்படிகள் இருந்தன.

35 பின்பு அவர் என்னை வடக்கு வாசலுக்கு அழைத்துக்கொண்டுபோய் அதை அளந்தார், அது முன்னினவற்றின் அளவுக்குச் சரியாயிருந்தது. அதின் காவல் அறைகளும் 36 அதின் தூண்சுவர்களும் அதின் மண்டபமும் அளக்கப்பட்டன; எப்புறமும் அதற்குப் பலகணிகள் இருந்தன; நீளம் ஐம்பது முழம், அகலம் இருபத்தைந்து முழம். அதின் தூண்சுவர்கள் வெளிப்பிராகாரத்தை 37 நோக்கியன, இப்புறமும் அப்புறமும் அதின் தூண்சுவர்களில் பேரீச்சமரங்கள் செதுக்கப்பட்டிருந்தன; அதில் ஏறுகிறதற்கு எட்டுப்படிகள் இருந்தன.

38 ஒரு அறையும் அதின் கதவும் வாசல்களின் தூண்சுவருக்குப் பக்கத்தில் இருந்தது; அங்கே தகனபலிகளைக் கழுவுவார்கள்.

39 வாசல் மண்டபத்திலே இப்புறம் இரண்டு மேசைகளும் அப்புறம் இரண்டு மேசை

களும் இருந்தன; அவைகளின்மேல் தகன பலியையும் பாவநிவாரணபலியையும் குற்ற நிவாரணபலியையும் அடிப்பார்கள்.
40 வடக்கு வாசலுக்குள் செல்வதற்கு ஏறிப் போகும் வெளிச்சுவர்ப் பக்கத்தில் இரண்டு மேசைகளும் வாசல் மண்டபத்தின் மறு சுவர்ப்பக்கத்தில் இரண்டு மேசைகளும்
41 இருந்தன. வாசல் சுவர்ப்பக்கத்தில் இங்கே நாலு மேசைகளும் அங்கே நாலு மேசைகளும் ஆக எட்டுமேசைகள் இருந்தன; அவைகளின்மேல் பலிகளை அடிப்பார்
42 கள். தகனபலிக்குரிய நாலு மேசைகள் வெட்டின கல்லாலானவை; அவைகளின் நீளம் ஒன்றரை முழம், அகலம் ஒன்றரை முழம், உயரம் ஒரு முழம்; அவைகளின் மேல் தகனபலிகளையும் மற்றப்பலிகளையும்
43 அடிக்கிற ஆயுதங்களை வைப்பார்கள். நாலு விரற்கடையான மூலைகள் உள்ளே சுற்றிலும் வரிசையாய் அடிக்கப்பட்டிருந்தன; பலிகளின் மாம்சம் மேசைகளின்மேல் வைக்கப்படும்.
44 உட்பிராகாரத்திலே உள் வாசலுக்கு வெளியே பாடகரின் அறைகள் இருந்தன, அவைகளில் வடக்குவாசல் பக்கத்தில் இருந்தது தென்திசை நோக்கியது, கிழக்கு வாசல் பக்கத்தில் இருந்த மற்றொரு அறை
45 வடதிசை நோக்கியது. அவர் என்னோடு பேசி, தென்திசை நோக்கிய இந்த அறை ஆலயத்தில் சேவிக்கிற ஆசாரியருக்குரியது;
46 வடதிசை நோக்கும் அறையோ பலிபீடத்தில் சேவிக்கிற ஆசாரியருக்குரியது; இவர்கள் லேவியின் புத்திரரில் யெகோவாவைச் சேவிப்பதற்கெனக் கிட்டிச் சேருகிற
47 சாதோக்கின் புத்திரர் என்றார். அவர் பிராகாரத்தை அளந்தார், அதன் நீளம் நூறு முழம், அகலம் நூறுமுழம், அது சதுரமானது; பலிபீடமோ ஆலயத்துக்கு முன்பாக இருந்தது.
48 பின்பு அவர் என்னை ஆலயமண்டபத்துக்கு அழைத்துப் போய் மண்டபத்தின் தூண்சுவர்களை அளந்தார்; இப்புறத்திலுள்ளது ஐந்துமுழம், அப்புறத்திலுள்ளது ஐந்து
49 முழம்; வாசலின் அகலம் இப்புறம் மூன்று முழம், அப்புறம் மூன்றுமுழம். அதில் ஏறிப்போகிற படிகளின் அளவுப்படி மண்டபத்தின் நீளம் இருபது முழம், அகலம் பதினொருமுழம்; தூண்சுவர்களை யொட்டி இப்புறத்தில் ஒரு தூணும் அப்புறத்தில் ஒரு தூணும் இருந்தன.

**41** பின்பு அவர் என்னை தெய்வாலயத்திற்குள் அழைத்துப்போய்த் தூண்சுவர்களை அளந்தார்; அவற்றின் அகலம் இப்புறம் ஆறுமுழம், அப்புறம் ஆறுமுழம், அதுவே வாசஸ்தலத்தின் அகல அளவாம். வாசலின் 2
அகலம் பத்து முழம்; வாசலுக்கு இப்புறம் சுவர் ஐந்துமுழம், அப்புறம் சுவர் ஐந்து முழம்; நீளத்தை அளந்தார், நாற்பது முழம்; அகலத்தை அளந்தார், இருபது முழம்.
பின்பு அவர் உள்ளறைக்குப்போய் வாச 3
லின் சுவர்களை அளந்தார், அவை இரண்டு முழம்; வாசல் ஆறுமுழம், வாசலுக்கு இப்புறம் ஏழுமுழம், அப்புறம் ஏழுமுழம்.
அவர் உள்ளறையின் நீளத்தை அளந்தார், 4
அது இருபது முழம்; பரிசுத்தஸ்தலத்தை ஒட்டியிருந்தபடி அதின் அகலத்தை அளந்தார், அது இருபது முழம்; இதுவே மகா பரிசுத்தஸ்தலம் என்று எனக்குச் சொன்னார்.
பின்பு அவர் ஆலயத்தின் சுவரை அளந் 5
தார், அதின் கனம் ஆறு முழம்; ஆலயத்துக்குச் சுற்றிலும் அமைத்திருந்த அறைகளின் அகலம் நாலு முழம். அவை ஒன்றின் 6
மேலொன்றாய் மூன்றடுக்காய்க் கட்டப்பட்டிருந்தன, முப்பது அறைகளிருந்தன; அறைகளின் உத்தரங்கள் ஆலயச்சுவருக்குள் செல்லாமல் சுவரில்தாங்கி வைக்கப்படும்படி சுவர் படிப்படியாய்க் கனம் குறைவாகக் கட்டப்பட்டிருந்தது. இப்படியாகச் 7
சுற்று அறைகள் மேலே போகப் போக அதிக அகலமாயிருந்தன; சுற்று அறைகள் ஆலயத்துக்குச் சுற்றிலும் ஒன்றின் மேலொன்றாய் அமைத்திருந்தன; ஆகவே உயர ஏறஏற வீட்டின் உள்ளகலம் அதிகப்பட்டது; அடி அறைகளிலிருந்து உச்சி அறைகளுக்கு நடு அறைகளின் வழியே ஏறவேண்டும். ஆலய 8
த்துக்கு எப்புறத்திலும் உயரமான தளவரிசையைக் கண்டேன், சுற்று அறைகளின் தளம் ஒரு முழுக்கோலளவு உயரம், தளவரிசை ஆறுமுழ உயரம். சுற்று அறை 9
களின் வெளிச்சுவர்க்கனம் ஐந்து முழம், சுற்று அறைகளையடுத்திருந்த காலியிடம் அந்த வீட்டைச்சேர்ந்தது. ஆலயத்துக்குச் 10
சுற்றிலும் அறை வீடுகளுக்கு நடுவாக இருந்த இடம் இருபதுமுழ அகலம். சுற்று 11
அறைகளின் வாசல்கள் காலியிடத்தை நோக்கி ஒன்று வடக்கேயும் ஒன்று தெற்கேயும் இருந்தன; காலியிடத்தின் அகலம் எப்புறமும் ஐந்து முழம்.
மேல்பக்கத்தில் பிடித்தியேகமாக்கி வைத் 12
திருந்த இடத்துக்கு எதிரே இருந்த கட்டடத்தின் அகலம் எழுபது முழம், அதின் சுவரின் அகலம் எப்புறமும் ஐந்துமுழம், அதின் நீளம் தொண்ணூறு முழம்.

13 அவர் ஆலயத்தை அளந்தார், அதின் நீளம் நூறுமுழம், பிரத்தியேகமாக்கி வைத்திருந்த இடமும் கட்டடமும் அதின் சுவரும் நூறுமுழ நீளம். ஆலயத்தின் முன்னிருந்த இடமும் இழக்கே பிரத்தியேகமாக்கி வைத்திருந்த இடமும் நூறுமுழம் அகலம்.
15 பிரத்தியேகமாக்கிவைத்திருந்த இடத்திற்குப் பின்புறம் எதிரே இருந்த கட்டடத்தின் நீளத்தையும் அதற்கு இப்புறத்திலும் அப்புறத்திலுமிருந்த நடை காவணங்களையும் அளந்தார், அவற்றின் நீளம் நூறுமுழம்; உட்புறத்தில் தெய்வாலயத்தையும் பிராகார மண்டபங்களையும் அளந்தார்.
16 வாசற்படிகளும் ஒடுக்கமான பலகணிகளும் சுற்றிலும் மூன்று அடுக்காயிருந்த நடைகாவணங்களும் வாசற்படிக்கு எதிரே எப்புறமும் தரை துவக்கிப் பலகணிகள் மட்டாகப் பலகை அடித்திருந்தது; பலகணிகள்
17 மூடப்பட்டிருந்தன. வாசலின் மேலே துவக்கி ஆலயத்தின் உட்புறமும் வெளிப்புறமும் சுற்றிலும் சுவரின் உட்புறமும் வெளிப்புறமும் எல்லாம் அளவிட்டுக் குறிக்கப்
18 பட்டிருந்தன. கேரூபுகளும் பேரீச்சமரங்களும் செதுக்கப்பட்டிருந்தன, கேரூபுக்கும் கேரூபுக்கும் நடுவாக ஒவ்வொரு பேரீச்சமரம் இருந்தது; ஒவ்வொரு கேரூபுக்கும்
19 இரண்டிரண்டு முகங்கள் இருந்தன. பேரீச்சமரத்தை நோக்கி இப்புறம் மனுஷமுகமும் அப்புறம் சிங்கமுகமும் இருந்தது; இப்படியே ஆலய முழுவதுக்கும் சுற்றிலும் செய்திருந்தது.
20 தரை துவக்கி வாசலின் மேற்புறமட்டும் கேரூபுகளும் பேரீச்சமரங்களும் செதுக்கப்பட்டிருந்தன; தெய்வாலயத்தின் சுவர்கள்
21 இப்படியே இருந்தன. தெய்வாலயத்தின் கதவு நிலைகள் சதுரம், பரிசுத்த ஸ்தலத்தினுடைய முகப்பின் உருவம் அந்தச் சதுர
22 உருவத்துக்குப் பொருந்தியிருந்தது. மரத்தினால் செய்யப்பட்ட பீடத்தின் உயரம் மூன்று முழம், அதின் நீளம் இரண்டு முழம்; அதற்கு மூலைகளிருந்தன, அதின் அடிப்புறமும் அதின் பக்கங்களும் மரத்தினால் செய்யப்பட்டிருந்தன. அவர் என்னிடம், இது யெகோவாவின் சந்நிதியிலி
23 ருக்கிற மேசை என்றார். தெய்வாலயத்துக்கும் பரிசுத்த ஸ்தலத்துக்கும் இரட்
24 டைக் கதவுகளிருந்தன. ஒவ்வொரு கதவும் இரு பாகங்களாலான மடக்குக் கதவு, ஒரு வாசலுக்கு இரட்டைக் கதவுகளும் மற்ற வாசலுக்கு இரட்டைக் கதவுகளும்
25 இருந்தன. சுவர்களில் செதுக்கப்பட்டிருந்ததுபோல் ஆலயத்தின் கதவுகளிலும் கேரூபுகளும் பேரீச்சமரங்களும் செதுக்கப்பட்டிருந்தன; புறம்பே மண்டபத்தின் முகப்பில் உத்திரங்கள் வைத்திருந்தன.
26 மண்டபத்தின் பக்கங்களில் இப்புறத்திலும் அப்புறத்திலும் ஒடுக்கமான பலகணிகளும் செதுக்கப்பட்ட பேரீச்சமரங்களும் உத்திரங்களும் இருந்தன; ஆலயத்தின் சுற்று அறைகளும் உத்திரங்களும் அப்படியே இருந்தன.

42 பின்பு அவர் என்னை வடதிசையின் வழியாக வெளிப் பிராகாரத்திலே போகச்செய்து பிரத்தியேகமாக்கி வைத்திருந்த இடத்துக்கு எதிராக வடபுறமுள்ள கட்டடத்துக்கு எதிரே இருந்த அறைவீடுகளண்டை, |
2 நூறுமுழ நீளமுள்ள அதன் பக்கத்துக்கு என்னை அழைத்துக்கொண்டு போனார், அதன் வாசல் வடக்கே இருந்தது, அந்த
3 இடத்தின் அகலம் ஐம்பது முழம். உட் பிராகாரத்தண்டையில் இருந்த இருபது முழ இடத்துக்கும் வெளிப்பிராகாரத்தண்டையில் இருந்த தளவரிசைக்கும் எதிரே ஒன்றுக்கொன்று எதிரான மூன்று அடுக்குள்ள நடைகாவணங்கள் இருந்தன.
4 அறைவீடுகளின் முன்னே உட்புறம் செல்லும் ஒரு பாதை இருந்தது; அது பத்துமுழ அகலம், நூறுமுழ நீளம், அவைகளின்
5 வாசல்கள் வடக்கே இருந்தன. மேல் அறைகள் அகலக் கட்டையாயிருந்தன, மேல் அறைகளுக்குமுன் நடைகாவணங்கள் அதிக இடம்கொண்டன, கீழ் அறைகளுக்கும் நடு அறைகளுக்கும் முன் அவ்வளவு இடங்கொள்ளவில்லை.
6 அவைகள் மூன்று அடுக்காயிருந்தன; பிராகாரங்களுக்குத் தூண்களிருந்ததுபோல அவைகளுக்குத் தூண்களில்லை; மேல் அறைகளோ கீழ் அறைகளையும் நடு அறைகளையும் பார்க்கிலும் உள்ளடங்கியிருந்தன.
7 வெளிப்பக்கம் அறை வீடுகளின் ஓரமாய் வெளிப்பிராகாரத்திசையாக ஒரு மதில் இருந்தது, அறைவீடுகளின் முன்பாக அதின் நீளம் ஐம்பது முழம்.
8 வெளிப்பிராகாரப் பக்கத்திலுள்ள அறைவீடுகளின் நீளம் ஐம்பதுமுழம், தெய்வாலயத்துக்கு எதிரே இருந்தவற்றின் நீளமோ நூறுமுழம். வெளிப்பிராகாரத்தில்
9 இருந்து அந்த அறைகளுக்குள் செல்லுகிற நடை கிழக்கே அடிஅறையில் இருந்தது.
10 பிராகாரமதில் அதிக அகலமாயிருந்த இடத்தில் கீழ்திசையிலுங்கூட பிரத்தியேகமாக்கி வைத்திருந்த இடத்திற்குப் பக்கத்தில் அறைகளிருந்தன; பின் கட்டடத்திற்குப்
11 பக்கத்திலும் அப்படியே. இவற்றின் முன்

னேயும் ஒரு பாதை இருந்தது, வடபக்கத்திலுள்ள அறைகளுக்கு முன்னிருந்த பாதையைப்போன்றது, நீளமும் அகலமும் ஒன்றே; வெளிச்செல்லும் வாசல்களின் ஒழுங்குகளும் திறப்புகளும் அப்பக்கத்து வாசல்
12 களைப் போன்றவை. தென்திசை அறைகளுக்கு வாசல் இருந்ததுபோலவே இப்பக்கத்திலும் ஒரு வாசல் இருந்தது; அந்த வாசலிலிருந்து ஒரு பாதை தொடங்கிற்று, அது மதிலுக்கு நேர் எதிரே இருந்த அறைகளுக்கு வரவே அது கீழ்திசைநோக்கியிருந்தது.

13 அவர் என்னோடுபேசி: பிரத்தியேகமாக்கிவைத்திருந்த இடத்துக்கு எதிரேயுள்ள வடபுற அறைகளும் தென்புற அறைகளும் பரிசுத்த அறைகள்; யெகோவாவைக் கிட்டிச்சேருகிற ஆசாரியர் அங்கே மகாபரிசுத்தமானவற்றைப் புசிப்பார்கள், அவ்விடத்தில் மகாபரிசுத்தமானவற்றையும் போஜனபலியையும் பாவநிவாரணபலியையும் குற்றநிவாரண பலியையும்வைத்துவைப்பார்கள்;
14 அந்த ஸ்தலம் பரிசுத்தமானது. ஆசாரியர் உள்ளே வந்தபின், அவர்கள் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வெளிப்பிராகாரத்துக்குப் போகக்கூடாது, தாங்கள் ஊழியஞ்செய்யும்போது உடுத்தியிருந்த வஸ்திரங்களை அவ்வறைகளில் கழற்றிவைப்பார்கள்; அவ்வஸ்திரங்கள் பரிசுத்தமானவைகள், வேறே வஸ்திரங்களை உடுத்திக்கொண்டுதான் ஜனங்களுக்குரிய இடத்திற்குப் போவார்கள் என்றார்.
15 அவர் உள்வீட்டை அளந்து தீர்ந்தபின்பு, கீழ்திசை நோக்கிய வாசல்வழியாய் என்னை வெளியே அழைத்துக்கொண்டுபோய் நாலு பக்கத்தையும் அளந்தார்.
16 கீழ்திசைப் பக்கத்தை அளவுகோலால் அளந்தார்; அது முழுவதும் அளவுகோ
17 லின்படியே ஐந்நூறுகோல். வடதிசைப் பக்கத்தை அளந்தார், அது முழுவதும் அளவுகோலின்படியே ஐந்நூறுகோல்.
18 தென்திசைப்பக்கத்தை அளந்தார், அது முழுவதும் அளவுகோலின்படியே ஐந்நூறு
19 கோல். மேற்றிசைப் பக்கத்துக்குத் திரும்பி அதை அளந்தார், அது முழுவதும் அளவுகோலின்படியே ஐந்நூறுகோல். நாலு பக்கங்களிலும் அதை அளந்தார்; சுற்றிலும் அதற்கு ஒரு மதிலிருந்தது, அதன் நீளம் ஐந்நூறுகோல், அதன் அகலம் ஐந்நூறுகோல், அது பரிசுத்தமானதையும் சாமானியமானதையும் பிரிக்கவேண்டியது.

**43** பின்பு அவர் என்னைக் கீழ்திசை நோக்கிய வாசலுக்கு அழைத்துக்கொண்டு போனார். இதோ இஸ்ரவேலின் கடவுளு 2
டைய மகிமை கீழ்திசையிலிருந்து வந்தது; அவர் வரும் சத்தம் பெருவெள்ளம் வரும் சத்தம்போலிருந்தது, அவருடைய மகிமையினால் பூமி பிரகாசித்தது. நான் 3
கண்ட இந்த தரிசனம் நகரத்தை அழிக்க வந்தபோது கண்ட தரிசனம்போலிருந்தது; இந்த தரிசனங்கள் கேபார் நதியண்டையிலே நான் கண்ட தரிசனத்தைப் போன்றவை; நான் முகங்குப்புறவிழுந்தேன். யெ 4
கோவாவின் மகிமை கீழ்திசைநோக்கிய வாசல்வழியாய் ஆலயத்துக்குள் வந்தது. அப்பொழுது ஆவி என்னை உயர எடுத்து 5
உட்பிராகாரத்திலே கொண்டுபோய்விட்டது; இதோ, யெகோவாவின் மகிமை ஆலயத்தை நிரப்பிற்று. ஆலயத்திலிருந்து 6
என்னோடே பேசும் ஒருவரைக் கேட்டேன்; ஒருவர் என்னண்டையில் நின்றிருந்தார். அவர் என்னோடு பேசி: மனுஷகுமாரனே, 7
இது வே என் சிங்காசனத்தைவைக்கும் இடம், என் பாதங்கள் நிற்கும் ஸ்தானம், இங்கேயே இஸ்ரவேல்புத்திரர் நடுவில் நான் என்றென்றும் வாசம்பண்ணுவேன்; இனி இஸ்ரவேல் வீட்டார் என் பரிசுத்த நாமத்தைத் தீட்டுப்படுத்துவதில்லை; அவர்களும் அவர்கள் ராஜாக்களும் தங்கள் வேசித்தனத்தினாலும் தங்கள் ராஜாக்களின் பிரேதங்களினாலும் தங்கள் மேடைகளினாலும் தீட்டுப்படுத்துவதில்லை. அவர்கள் 8
எனக்கும் தங்களுக்கும் நடுவே ஒரு சுவர் மாத்திரம் இருக்கையில் தங்கள் வாசற்படியை என் வாசற்படியோடும் தங்கள் வாசல்நிலைகளை என் வாசல் நிலைகளின் பக்கத்திலும் வைத்தார்கள்; என் பரிசுத்த நாமத்தைத் தாங்கள் செய்த அருவருப்புகளினால் தீட்டுப்படுத்தினார்கள்; ஆகவே என் கோ
பத்திலே அவர்களை அழித்துவிட்டேன்; இப்பொழுதோ அவர்கள் தங்கள் வேசித் 9
தனத்தையும் தங்கள் ராஜாக்களின் பிரேதங்களையும் என் சமுகத்தினின்று அகற்றிவிடுவார்களாகில், நான் என்றென்றைக்கும் அவர்கள் நடுவே வாசமாயிருப்பேன்.

மனுஷகுமாரனே, இஸ்ரவேல் வீட்டார் 10
தங்கள் அக்கிரமங்களினிமித்தம் வெட்கப்படும்படி நீ அவர்களுக்கு இந்த ஆலயத்தைத் தெரியப்படுத்திச் சொல்; அமைப்பை அளந்து கவனிக்கட்டும். அவர்கள் செய்த 11
எல்லாவற்றினிமித்தமும் வெட்கப்பட்டால் அப்பொழுது இந்த ஆலயத்தின் உருவத்தையும் அதின் ஒழுங்கையும் அதின் முன் வாசல்களையும் அதின் பின் வாசல்களையும் அதின் முழு உருவத்தையும் அதின்

சகல நியமங்களையும் அதின் சகல உருவங்களையும் சட்டங்களையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தி அவர்கள் அதினுடைய சகல உருவங்களையும் சகல நியமங்களையும் கவனித்து அவைகளின்படி செய்வதற்கு அதை அவர்கள் கண்களுக்கு முன்பாக
12 எழுதிவை. ஆலயத்தின் பிரமாணமாவது, மலையுச்சியின்மேல் சுற்றிலும் உள்ளனவெல்லாம் மிகவும் பரிசுத்தமானவை; இதோ, இதுவே ஆலயத்தின் பிரமாணம்.
13 பலபீடத்தின் முழ அளவுகள் இவைகளே;—ஒரு கை முழமும் நாலு விரற்கடையும் கொண்டது ஒரு முழம்—சுற்றாரம் உயரம் ஒரு முழம், சுற்று ஓரத்தின் அகலம் ஒரு முழம்; அதின் ஓரத்தைச் சுற்றியுள்ள விளிம்பு ஒரு ஜாண்; இது பலிபீடத்
14 தின் ஆதாரம். தரையில் இருக்கிற ஆதாரந்துவக்கிக் கீழ்நிலைமட்டுமுள்ள உயரம் இரண்டு முழம், சுற்று ஓரத்தின் அகலம் ஒரு முழம்; சின்ன நிலை துவக்கிப் பெரிய நிலைமட்டுமுள்ள உயரம் நாலுமுழம், சுற்று
15 ஓரத்தின் அகலம் ஒரு முழம். பலிபீடத்தின் சிகரம் நாலுமுழ உயரம், பலிபீடத்தின் சிகரத்துக்குமேலே நாலு கொம்புகள்
16 இருக்கவேண்டும். பலிபீடத்தின் சிகரம் பன்னிரண்டுமுழ நீளம், பன்னிரண்டு முழ அகலம், தன் நாலு பக்கங்களிலும் ஒரே
17 அளவான சதுரம். நாலு பக்கங்களிலும் பெரிய நிலை பதினலுமுழ நீளமும் பதினலு முழ அகலமுமுள்ளது; சுற்றிலுமிருந்த விளிம்பு அரைமுழம், அதின் அடி ஓரம் ஒரு முழம், பலிபீடத்தின் படிகள் கிழக்கில் இருக்கவேண்டும் என்றார்.
18 பின்னும் அவர் என்னோடு பேசி: மனுஷகுமாரனே, யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே: பலிபீடத்தில் தகனபலி களையிடவும் அதிலே இரத்தம் தெளிக்கவும்
பலிபீடத்தைச் செய்யும் நாளிலே இவைகளே அதற்குரிய நியமங்கள்: சாதோக்கின் வம்சத்தைச் சேர்ந்த லேவியரான ஆசாரியருக்கு, பாவநிவாரண பலிக்கென நீ ஒரு
19 இளங்காளையைக் கொடுக்கவேண்டும்; அவர்களே என்னைக் கிட்டிச்சேர்ந்து—இது யெகோவாவின் திருவாக்கு—சேவிக்கிறவர்கள்.
20 அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, அதின் நாலு கொம்புகளிலும் நிலையின் நாலு மூலைகளிலும் சுற்றிலுமிருக்கிற விளிம்பிலும் பூசி அதைச் சுத்திகரித்து அதற்கென்ப
21 பிராயச்சித்தம் செய்யவேண்டும். பின்பு பாவநிவாரண பலியின் காளையைக்கொண்டு போய் அதை ஆலயத்தில் குறிக்கப்பட்ட இடத்திலே, பரிசுத்த ஸ்தலத்துக்கு வெளியே சுட்டெரிக்கவேண்டும். இரண்டாம் 22
நாளிலே பழுதற்ற ஒரு வெள்ளாட்டுக்கடாவைப் பாவ நிவாரணமாகப் பலியிடவேண்டும்; அவர்கள் இளங்காளையிலூலே பலிபீடத்தைச் சுத்திகரித்தது போலவே அதைச் சுத்திகரிக்கவேண்டும். நீ சுத்திகரித்து 23
முடித்த பின்பு பழுதற்ற ஒரு இளங்காளையையும் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவையும் மந்தையிலிருந்தெடுத்துப் பலியிடவேண்டும். அவைகளை யெகோவாவின் சந்நிதியில் கிட் 24
டிச்சேரப்பண்ணவே ஆசாரியர் அவைகளின்மேல் உப்பைத் தூவி, அவைகளை யெகோவாவுக்கென தகனபலியிடவேண்டும். ஏழுநாளாகத் தினந்தினம் சுத்திகரிப் 25
புக்குரிய ஒரு வெள்ளாட்டுக்கடாவைப் படைக்கவேண்டும்; பழுதற்றவைகளான இளங்காளையையும் மந்தையிலிருந்தெடுத்த ஆட்டுக்கடாவையும் படைக்கவேண்டும். ஏழுநாளாகப் பலிபீடத்துக்கெனப் பிராயச் 26
சித்தம்செய்து அதைச் சுத்திகரித்துப் பிரதிஷ்டை பண்ணவேண்டும். அந்நாட்கள் 27
முடிந்தபின்பு எட்டாம்நாள் முதல் ஆசாரியர்கள் பலிபீடத்தின்மேல் உங்கள் தகன பலிகளையும் உங்கள் சமாதான பலிகளையும் படைப்பார்கள், அப்பொழுது உங்களை அங்கீகரிப்பேன்; இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு.

**44** பின்பு அவர் என்னைப் பரிசுத்த ஸ்த
லத்தில் கிழக்கு நோக்கிய வெளிவாசல் வழியே திரும்பப்பண்ணினார்; அது பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது யெகோவா என் 2
னோடு பேசி: இந்த வாசல் பூட்டப்பட்டிருக்கவேண்டும், திறக்கப்படவேண்டாம்; ஒருவரும் இதின் வழி பிரவேசிப்பதில்லை; இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா இதின் வழியே பிரவேசித்தார், ஆகவே இது பூட்டப்பட்டிருக்கவேண்டும். அதிபதி 3
யோ, அவன் அதிபதியாயிருப்பதினால், யெகோவாவின் சந்நிதியில் போஜனம் பண்ணுவதற்கு இதில் உட்காருவான்; அவன் வாசல் மண்டபத்தின்வழியாய் உட்சென்று மறுபடியும் அவ்வழியே வெளியே போவான் என்றார்.
பின்பு அவர் என்னை வடக்கு வாசல்வழி 4
யாய் ஆலயத்தின் முகப்பிலே அழைத்துக் கொண்டுபோனார்; இதோ, யெகோவாவின் மகிமை யெகோவாவின் ஆலயத்தை நிரப்பியதை நான் கண்டு முகங்குப்புறவிழுந்தேன். அப்பொழுது யெகோவா என்னோடு 5
பேசி: மனுஷகுமாரனே, யெகோவாவினுடைய ஆலயத்தின் சகல நியமங்களையும்

னேயும் ஒரு பாதை இருந்தது, வட பக்கத்தி
லுள்ள அறைகளுக்கு முன்னிருந்த பாதை
யைப்போன்றது, நீளமும் அகலமும் ஒன்
றே; வெளிச்செல்லும் வாசல்களின் ஒழுங்கு
களும் திறப்புகளும் அப்பக்கத்து வாசல்
12 களைப் போன்றவை. தென்திசை அறை
களுக்கு வாசல் இருந்ததுபோலவே இப்
பக்கத்திலும் ஒரு வாசல் இருந்தது; அந்த
வாசலிலிருந்து ஒரு பாதை தொடங்கிற்று,
அது மதிலுக்கு நேர் எதிரே இருந்தது
அறைகளுக்கு வரவே அது கீழ்திசைநோக்கி
யிருந்தது.

13 அவர் என்னோடுபேசி: பிரத்தியேகமாக்கி
வைத்திருந்த இடத்துக்கு எதிரேயுள்ள வட
புற அறைகளும் தென்புற அறைகளும் பரி
சுத்த அறைகள்; யெகோவாவைக் கிட்டிச்
சேருகிற ஆசாரியர் அங்கே மகாபரிசுத்த
மானவற்றைப் புசிப்பார்கள், அவ்விடத்தில்
மகாபரிசுத்தமானவற்றையும் போஜனபலி
யையும் பாவநிவாரணபலியையும் குற்ற
நிவாரண பலியையும்வைத்துவைப்பார்கள்;
14 அந்த ஸ்தலம் பரிசுத்தமானது. ஆசாரியர்
உள்ளே வந்தபின், அவர்கள் பரிசுத்த ஸ்த
லத்திலிருந்து வெளிப்பிராகாரத்துக்குப் போ
கக்கூடாது, தாங்கள் ஆராதனை செய்யும்
போது உடுத்தியிருந்த வஸ்திரங்களை அவ்
வறைகளில் கழற்றிவைப்பார்கள்; அவ்வஸ்
திரங்கள் பரிசுத்தமானவைகள், வேறே வஸ்
திரங்களை உடுத்திக்கொண்டுதான் ஜனங்களுக்
குரிய இடத்திற்குப் போவார்கள் என்றார்.

15 அவர் உள்வீட்டை அளந்து தீர்ந்த
பின்பு, கீழ்திசை நோக்கிய வாசல்வழியாய்
என்னை வெளியே அழைத்துக்கொண்டு
போய் நாலு பக்கத்தையும் அளந்தார்.
16 கீழ்திசைப் பக்கத்தை அளவுகோலால்
அளந்தார்; அது முழுவதும் அளவுகோ
17 லின்படியே ஐந்நூறுகோல். வடதிசைப்
பக்கத்தை அளந்தார், அது முழுவதும்
அளவுகோலின்படியே ஐந்நூறுகோல்.
18 தென்திசைப்பக்கத்தை அளந்தார், அது
முழுவதும் அளவுகோலின்படியே ஐந்நூறு
19 கோல். மேற்திசைப் பக்கத்துக்குத் திரும்பி
அதை அளந்தார், அது முழுவதும் அளவு
கோலின்படியே ஐந்நூறுகோல். நாலு
பக்கங்களிலும் அதை அளந்தார்; சுற்றிலும்
அதற்கு ஒரு மதிலிருந்தது, அதன் நீளம்
ஐந்நூறுகோல், அதன் அகலம் ஐந்நூறு
கோல், அது பரிசுத்தமானதையும் சாமா
னியமானதையும் பிரிக்கவேண்டியது.

**43** பின்பு அவர் என்னைக் கீழ்திசை நோக்
கிய வாசலுக்கு அழைத்துக்கொண்டு போ
னார். இதோ இஸ்ரவேலின் கடவுளி 2
ன்உடைய மகிமை கீழ்திசையிலிருந்து வந்
தது; அவர் வரும் சத்தம் பெருவெள்ளம்
வரும் சத்தம்போலிருந்தது, அவருடைய
மகிமையினால் பூமி பிரகாசித்தது. நான் 3
கண்ட இந்த தரிசனம் நகரத்தை அழிக்க
வந்தபோது கண்ட தரிசனம்போலிருந்தது;
இந்த தரிசனங்கள் கேபார் நதியண்டையி
லே நான் கண்ட தரிசனத்தைப் போன்ற
வை; நான் முகங்குப்புறவிழுந்தேன். யெ 4
கோவாவின் மகிமை கீழ்திசைநோக்கிய வா
சல்வழியாய் ஆலயத்துக்குள் வந்தது.
அப்பொழுது ஆவி என்னை உயர எடுத்து 5
உட்பிராகாரத்திலே கொண்டுபோய்விட்
டது; இதோ, யெகோவாவின் மகிமை ஆல
யத்தை நிரப்பிற்று. ஆலயத்திலிருந்து 6
என்னோடே பேசும் ஒருவரைக் கேட்டேன்;
ஒருவர் என்னண்டையில் நின்றிருந்தார்.
அவர் என்னோடு பேசி: மனுஷகுமாரனே, 7
இது வே என் சிங்காசனத்தைவைக்கும்
இடம், என் பாதங்கள் நிற்கும் ஸ்தானம்,
இங்கேயே இஸ்ரவேல்புத்திரர் நடுவில்
நான் என்றென்றும் வாசம்பண்ணுவேன்;
இனி இஸ்ரவேல் வீட்டார் என் பரிசுத்த
நாமத்தைத் தீட்டுப்படுத்துவதில்லை; அவர்
களும் அவர்கள் ராஜாக்களும் தங்கள் வே
சித்தனத்தினாலும் தங்கள் ராஜாக்களின்
பிரேதங்களினாலும் தங்கள் மேடைகளினா
லும் தீட்டுப்படுத்துவதில்லை. அவர்கள் 8
எனக்கும் தங்களுக்கும் நடுவே ஒரு சுவர்
மாத்திரம் இருக்கையில் தங்கள் வாசற்படி
யை என் வாசற்படியோடும் தங்கள் வா
சல்நிலைகளை என் வாசல் நிலைகளின் பக்கத்
திலும் வைத்தார்கள்; என் பரிசுத்த நாமத்
தைத் தாங்கள் செய்த அருவருப்புகளினால்
தீட்டுப்படுத்தினார்கள்; ஆகவே என் கோ
பத்திலே அவர்களை அழித்துவிட்டேன்;
இப்பொழுதோ அவர்கள் தங்கள் வேசித் 9
தனத்தையும் தங்கள் ராஜாக்களின் பிரேதங்
களையும் என் சமுகத்தினின்று அகற்றிவிடு
வார்களாகில், நான் என்றென்றைக்கும்
அவர்கள் நடுவே வாசமாயிருப்பேன்.

மனுஷகுமாரனே, இஸ்ரவேல் வீட்டார் 10
தங்கள் அக்கிரமங்களினிமித்தம் வெட்கப்
படும்படி நீ அவர்களுக்கு இந்த ஆலயத்
தைத் தெரியப்படுத்திச் சொல்; அமைப்பை
அளந்து கவனிக்கட்டும். அவர்கள் செய்த 11
எல்லாவற்றினிமித்தமும் வெட்கப்பட்
டால் அப்பொழுது இந்த ஆலயத்தின் உரு
வத்தையும் அதின் ஒழுங்கையும் அதின்
முன் வாசல்களையும் அதின் பின் வாசல்
களையும் அதின் முழு உருவத்தையும் அதின்

சகல நியமங்களையும் அதின் சகல உருவங்களையும் சட்டங்களையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தி அவர்கள் அதினுடைய சகல உருவங்களையும் சகல நியமங்களையும் கவனித்து அவைகளின்படி செய்வதற்கு அதை அவர்கள் கண்களுக்கு முன்பாக
12 எழுதிவை. ஆலயத்தின் பிரமாணமாவது, மலையுச்சியின்மேல் சுற்றிலும் உள்ளனவெல்லாம் மிகவும் பரிசுத்தமானவை; இதோ, இதுவே ஆலயத்தின் பிரமாணம்.

13 பலபீடத்தின் முழு அளவுகள் இவைகளே;—ஒரு கை முழமும் நாலு விரற்கடையும் கொண்டது ஒரு முழம்—சுற்றாரம் உயரம் ஒரு முழம், சுற்று ஓரத்தின அகலம் ஒரு முழம்; அதின் ஓரத்தைச் சுற்றியுள்ள விளிம்பு ஒரு ஜாண்; இது பலிபீடத்
14 தின் ஆதாரம். தரையில் இருக்கிற ஆதாரத்துவக்கிக் கீழ்நிலமட்டுமுள்ள உயரம் இரண்டு முழம், சுற்று ஓரத்தின் அகலம் ஒரு முழம்; சின்ன நிலைதுவக்கிப் பெரிய நிலைமட்டுமுள்ள உயரம் நாலுமுழம், சுற்று
15 ஓரத்தின் அகலம் ஒரு முழம். பலிபீடத்தின் சிகரம் நாலுமுழ உயரம், பலிபீடத்தின் சிகரத்துக்குமேலே நாலு கொம்புகள்
16 இருக்கவேண்டும். பலிபீடத்தின் சிகரம் பன்னிரண்டுமுழ நீளம், பன்னிரண்டு முழ அகலம், தன் நாலு பக்கங்களிலும் ஒரே
17 அளவான சதுரம். நாலு பக்கங்களிலும் பெரிய நிலை பதினலுமுழ நீளமும் பதினலு முழ அகலமுமுள்ளது; சுற்றிலுமிருந்த விளிம்பு அரைமுழம், அதின் அடி ஓரம் ஒரு முழம், பலிபீடத்தின் படிகள் கிழக்கில் இருக்கவேண்டும் என்றார்.

18 பின்னும் அவர் என்னோடு பேசி: மனுஷகுமாரனே, யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே: பலிபீடத்தில் தகனபலிகளையிடவும் அதிலே இரத்தம் தெளிக்கவும் பலிபீடத்தைச் செய்யும் நாளிலே இவைகளே அதற்குரிய நியமங்கள்: சாதோக்கின் வம்சத்தைச் சேர்ந்த லேவியரான ஆசாரியருக்கு, பாவநிவாரண பலிக்கென நீ ஒரு
19 இளங்காளையைக் கொடுக்கவேண்டும்; அவர்களே என்னைக் கிட்டிச்சேர்ந்து—இது யெகோவாவின் திருவாக்கு—சேவிக்கிறவர்கள்.
20 அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, அதின் நாலு கொம்புகளிலும் நிலையின் நாலு மூலைகளிலும் சுற்றிலுமிருக்கிற விளிம்பிலும் பூசி அதைச் சுத்திகரித்து அதற்கென்ப
21 பிராயச்சித்தம் செய்யவேண்டும். பின்பு பாவநிவாரண பலியின் காளையைக்கொண்டு போய் அதை ஆலயத்தில் குறிக்கப்பட்ட இடத்திலே, பரிசுத்த ஸ்தலத்துக்கு வெளியே சுட்டெரிக்கவேண்டும். இரண்டாம் 22
நாளிலே பழுதற்ற ஒரு வெள்ளாட்டுக்கடாவைப் பாவநிவாரணமாகப் பலியிடவேண்டும்; அவர்கள் இளங்காளையினாலே பலிபீடத்தைச் சுத்திகரித்ததுபோலவே அதைச் சுத்திகரிக்கவேண்டும். நீ சுத்திகரித்து 23
முடித்த பின்பு பழுதற்ற ஒரு இளங்காளையையும் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவையும் மந்தையிலிருந்தெடுத்துப் பலியிடவேண்டும். அவைகளை யெகோவாவின் சந்நிதியில் கிட் 24
டிச்சேரப்பண்ணவே ஆசாரியர் அவைகளின்மேல் உப்பைத் தூவி, அவைகளை யெகோவாவுக்கென தகனபலியிடவேண்டும். ஏழுநாளாகத் தினந்தினம் சுத்திகரிப் 25
புக்குரிய ஒரு வெள்ளாட்டுக்கடாவைப் படைக்கவேண்டும்; பழுதற்றவைகளான இளங்காளையையும் மந்தையிலிருந்தெடுத்த ஆட்டுக்கடாவையும் படைக்கவேண்டும். ஏழுநாளாகப் பலிபீடத்துக்கெனப் பிராயச் 26
சித்தம்செய்து அதைச் சுத்திகரித்துப் பிரதிஷ்டை பண்ணவேண்டும். அந்நாட்கள் 27
முடிந்தபின்பு எட்டாம்நாள் முதல் ஆசாரியர்கள் பலிபீடத்தின்மேல் உங்கள் தகன பலிகளையும் உங்கள் சமாதான பலிகளையும் படைப்பார்கள், அப்பொழுது உங்களை அங்கீகரிப்பேன்; இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு.

**44** பின்பு அவர் என்னைப் பரிசுத்த ஸ்தலத்தில் கிழக்கு நோக்கிய வெளிவாசல் வழியே திரும்பப்பண்ணினார்; அது பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது யெகோவா என் 2
னோடு பேசி: இந்த வாசல் பூட்டப்பட்டிருக்கவேண்டும், திறக்கப்படவேண்டாம்; ஒருவரும் இதின் வழி பிரவேசிப்பதில்லை; இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவா இதின் வழியே பிரவேசித்தார், ஆகவே இது பூட்டப்பட்டிருக்கவேண்டும். அதிபதி 3
யோ, அவன் அதிபதியாயிருப்பதினால், யெகோவாவின் சந்நிதியில் போஜனம் பண்ணுவதற்கு இதில் உட்காருவான்; அவன் வாசல் மண்டபத்தின்வழியாய் உட்சென்று மறுபடியும் அவ்வழியே வெளியே போவான் என்றார்.

பின்பு அவர் என்னை வடக்கு வாசல்வழி 4
யாய் ஆலயத்தின் முகப்பிலே அழைத்துக் கொண்டுபோனார்; இதோ, யெகோவாவின் மகிமை யெகோவாவின் ஆலயத்தை நிரப்பியதை நான் கண்டு முகங்குப்புறவிழுந்தேன். அப்பொழுது யெகோவா என்னோடு 5
பேசி: மனுஷகுமாரனே, யெகோவாவினுடைய ஆலயத்தின் சகல நியமங்களையும்

அதின் சகல சட்டங்களையும்பற்றி நான் உனக்குச் சொல்வதையெல்லாம் உன் கண்களினாலே பார்த்து, உன் காதுகளினாலே கேட்டு மனதிலே கவனிக்கவேண்டும்; பரிசுத்த ஸ்தலத்தினுடைய எல்லா வாசல்களின் வழியாகவும் ஆலயத்துக்குள் செல்லவேண்டிய வகையை நீ கவனித்துக் 6 கொள்ளவேண்டும். இஸ்ரவேல் வீட்டாராகிய கலகக்காரரோடே சொல்லவேண்டியது இதுவே; யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச்சொல்லுகிறார்: இஸ்ரவேல் வீட்டாரே, நீங்கள் செய்த சகல அருவருப்பு 7 களும்போதும். நீங்கள் என் ஆகாரமாகிய நிணத்தையும் இரத்தத்தையும் படைக்கையில் என் ஆலயத்தைப் பரிசுத்தமற்றதாக்கும்படி விருத்தசேதனமில்லாத இருதயமும் விருத்தசேதனமில்லாத மாம்சமுமுள்ள அந்நியரை என் பரிசுத்த ஸ்தலத்துக்குள் இருப்பதற்கு அழைத்துக்கொண்டுவந்தீர்கள்; இவ்வாறுக என் உடன்படிக்கை மீறப்பட்டது; அதற்கு மேலும் நீங்கள் செய்த சகலவித அருவருப்புகளும் உண் 8 டே. எனக்குரிய பரிசுத்த பணிவிடையை நீங்களே செய்யாமல் என் பரிசுத்த ஸ்தலத்தில் என் பணிவிடையைச் செய்ய உங்களுக்குப் பதிலாக மற்றவர்களை வைத்தீர்கள். 9 யெகோவாவாகிய ஆண்டவர் இதுவே: இஸ்ரவேலரின் நடுவில் இருக்கிற சகல அந்நியரிலும் விருத்தசேதனமில்லாத இருதயமும் விருத்தசேதனமில்லாத மாம்சமுமுள்ள அந்நியன் ஒருவனும் என் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கவேண் 10 டாம். இஸ்ரவேல் வழி விலகிப்போகையில் என்னைவிட்டுத் தூரமாகித் தங்கள் கேவலமான விக்கிரகங்களைப் பற்றிக் கொள்ள என்னை விட்டு வழிவிலகிப் போன லேவியர் தங்கள் அக்கிரமத்தைச் 11 சுமப்பார்கள். எனினும் அவர்கள் என் பரிசுத்த ஸ்தலத்திலே பணிவிடைசெய்து என் ஆலயத்தின் வாசல்களைக்காத்து ஆலயத்திலே மற்றப்பணிவிடைகளையும் செய்வார்கள்; அவர்கள் ஜனங்களுக்கென தகன பலிகளையும் இரத்தபலிகளையும் அடித்து ஜனங்களுக்குமுன் நின்று சேவிப்பார்கள். 12 அவர்கள் இவர்களுடைய கேவலமான விக்கிரகங்களுக்குமுன்பாக நின்று இவர்களைச் சேவித்து இஸ்ரவேல் வீட்டாரை அக்கிரமத்திலே இடறிவிழச்செய்தபடியினால் நான் என் கையை உயர்த்தி,—இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு—அவர்கள் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள் 13 என்கிறேன். எனக்கு ஆசாரிய பணிவிடை செய்வதற்கோ அவர்கள் என்னைக் கிட்டிச் சேர்வதில்லை, எனக்குரிய பரிசுத்தமானவைகளையெல்லாம், மகாபரிசுத்தமானவைகளை, அவர்கள் கிட்டிச்சேர்வதில்லை; அவர்கள் தங்கள் அவமானத்தையும் தாங்கள் செய்த அருவருப்புகளையும் சுமப்பார்கள். ஆல 14 யத்தின் சகல பணிவிடையிலும் அதில் நடத்தப்படவேண்டிய எல்லாவற்றிலும் கவனித்துச் செய்யவேண்டியவற்றை செய்யும்படி அவர்களை நியமிக்கிறேன்.

இஸ்ரவேல் புத்திரர் என்னைவிட்டு வழி 15 விலகிப் போகையில் என் பரிசுத்த ஸ்தலத்தின் பணிவிடையைச் செய்த சாதோக்கின் புத்திரராகிய லேவியரான ஆசாரியர்களே என்னைச் சேவிக்கும்படி என்னைக்கிட்டிச் சேர்ந்து நிணத்தையும் இரத்தத்தையும் எனக்குப் படைக்க என் சந்நிதியில் நிற்பார்கள், இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு. இவர்களே என் பரி 16 சுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிப்பார்கள்; இவர்களே என்னைச் சேவிக்க என் பீடத்தைக் கிட்டிவந்து என் பணிவிடையைச் செய்வார்கள்.

உட்பிராகாரத்தின் வாசல்களுக்குள் பிர 17 வேசிக்கும்போது சணல்நூல் வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளவேண்டும்; அவர்கள் உள் பிராகாரத்தின் வாசல்களிலும் ஆலயத்தினுள்ளேயும் ஆராதனை செய்கையில் ஆட்டுமயிர் உடுப்பைத் தரிக்கலாகாது. அவர்கள் தலை 18 களில் சணல்நூல் குல்லாக்களும் அவர்களுடைய இடைகளில் சணல்நூல் சல்லடங்களும் இருக்கவேண்டும்; வேர்வையுண்டாக்கும் எதையும் அரையில் கட்டலாகாது. அவர்கள் வெளிப்பிராகாரத்துக்கு, 19 வெளிப்பிராகாரத்திலிருக்கும் ஜனங்களிடத்திற்கு, போகும்போது அவர்கள் தங்கள் ஆராதனைசெய்யும் சமயத்தில் உடுத்தியிருந்த தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி அவைகளைப் பரிசுத்த அறைகளில் வைத்துவிட்டு வேறே வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளவேண்டும்; தங்கள் வஸ்திரங்களாலே ஜனங்களைப் பரிசுத்தப்படுத்தலாகாது. அவர்கள் தங்கள் தலைகளை மொட்டை 20 யடிக்க வேண்டாம்; தங்கள் தலைமயிரை நீளமாய் வளரவிடவேண்டாம், தங்கள் தலைமயிரைக் கத்தரிக்கவே வேண்டும். ஆசாரியரில் எவனும் திராட்சரசம் குடித்து 21 உட்பிராகாரத்தினுள் செல்லவேண்டாம். விதவையையும் தள்ளப்பட்டவளையும் 22 அவர்கள் விவாகம்பண்ணவேண்டாம்; இஸ்ரவேல் வம்சத்தைச்சேர்ந்த கன்னிகையையாகிலும் ஒரு ஆசாரியனுக்கு மனைவியா

யிருந்து விதவையானவளையாகிலும் விவாகம்
23 பண்ணலாம். அவர்கள் பரிசுத்தமானதற்
கும் சாமானியமானதற்கும் உள்ள பேதத்
தை என் ஜனத்துக்குப் போதித்து அசுத்த
மானதற்கும் சுத்தமானதற்கும் இருக்கும்
வித்தியாசத்தை அவர்களுக்குத் தெரியப்
24 பண்ணவேண்டும். வழக்கிருந்தால் அவர்
களே அதைத் தீர்க்கிறவர்களாய் என் நியாய
சட்டங்களின்படியே அதைத் தீர்க்கவேண்
டும்; என் உற்சவங்களில் எல்லாம் என் பிர
மாணங்களையும் என் நியமங்களையும் அவர்
கள் கைக்கொண்டு என் ஓய்வுநாட்களைப்
25 பரிசுத்தமாக ஆசரிக்கவேண்டும். இறந்த
வர்களிடம் ஆசாரியன்போய்த் தன்னைத்
தீட்டுப்படுத்தக் கூடாது; எனினும் தகப்
பன், தாய், குமாரன், குமாரத்தி, சகோதரன்,
புருஷனுக்கு வாழ்க்கைப்படாத சகோதரி
என்னும் இவர்களுடைய சவத்தினால் அவர்
26 கள் தீட்டுப்படலாம். அவன் சுத்திகரிக்
கப்பட்ட பின்பு அவனுக்குப் பின்னும்
27 ஏழுநாள் எண்ணப்படவேண்டும். அவன்
ஆராதனை செய்யும்படி பரிசுத்த ஸ்தலத்திற்
குள், உட்பிராகாரத்துக்குள் செல்லும் நாளி
லே, அவன் தனது பாவநிவாரணபலியைச்
செலுத்த வேண்டும், இது யெகோவாவாகிய
ஆண்டவரின் திருவாக்கு.

28 அவர்களுக்குரிய சுதந்தரமுண்டு, நானே
அவர்கள் சுதந்தரம்; இஸ்ரவேலில் அவர்
களுக்குக் காணியாட்சியைக் கொடுக்க
வேண்டாம்; நானே அவர்கள் காணியாட்சி.
29 போஜன பலியையும் பாவநிவாரண பலியை
யும் குற்றநிவாரண பலியையும் அவர்
களே புசிப்பார்கள்; இஸ்ரவேலிலே நேர்ந்து
விடப்பட்டதெல்லாம் அவர்களுக்குரிய
30 தாம். சகலவித முதற்கனிகளில் எல்லாம்
முதற்பாகமும், நீங்கள் கொண்டுவரும் சகல
காணிக்கைகளும், காணிக்கையாக நீங்கள்
எதைக் கொண்டுவந்தாலும், அவை ஆசா
ரியருக்குரியதாகும்; உங்கள் வீட்டிற்கு
ஆசீர்வாதம் வருவிக்கும்படிக்கு நீங்கள்
பிசைந்த மாவில் முதற்பாகத்தையும் ஆசா
31 ரியனுக்குக் கொடுக்கவேண்டும். பறவை
யாயினும் மிருகமாயினும் சரி, தானாய்ச் செத்
ததும் பீறுண்டதுமான ஒன்றையும் ஆசா
ரியர் புசிக்கக்கூடாது.

**45** நீங்கள் சீட்டுப்போட்டுத் தேசத்தைச்
சுதந்தரமாகப் பங்கிடும்போது தேசத்தில்
ஒரு பரிசுத்த பாகத்தை யெகோவாவுக்குக்
காணிக்கையாகப் படைக்கவேண்டும், அது
இருபத்தையாயிரமுழம் நீளமும், இருபதி
னாயிர முழம் அகலமுமாய் இருக்கவேண்
டும், அதன் பரப்பெல்லாம் அதன் எல்லை
எட்டுமிடம் எங்கும் பரிசுத்தமாயிருக்கும்.
இதிலே பரிசுத்த ஸ்தலத்துக்கென்று ஐந் 2
நூறுமுழ நீளமும் ஐந்நூறுமுழ அகலமு
மான சதுரம் அளக்கப்பட வேண்டும்;
அதற்குச் சுற்றிலும் ஐம்பதுமுழமான
வெளி நிலம் இருக்கவேண்டும். அளக் 3
கப்பட்ட அந்த நிலத்தில் இருபத்தையா
யிரம் முழ நீளமும் பதினாயிரம்முழம் அக
லமான பாகத்தை அளக்கவேண்டும், அதில்
பரிசுத்த ஸ்தலமிருக்கவேண்டும்; அது மகா
பரிசுத்தம். தேசத்தில் பரிசுத்த பங்காகிய 4
இது யெகோவாவைச் சேவிக்கக் கிட்டிச்
சேருகிறவர்களும் பரிசுத்த ஸ்தலத்தில்
சேவிக்கிறவர்களுமான ஆசாரியருக்குரியது;
இது அவர்களுக்கு வீடுகளுக்கான இடமும்
பரிசுத்த ஸ்தலத்துக்கான பரிசுத்த இடமு
மாயிருக்கவேண்டும். பின்னும் இருபத் 5
தையாயிரம் முழம் நீளமும் பதினாயிரம்
முழம் அகலமான இடம் ஆலயத்தில்
சேவிக்கிற லேவியருக்குரியதாகும்; அது
அவர்களுடைய காணியாட்சி; அதில் இரு
பது அறைவீடுகள் இருக்கவேண்டும்.
பரிசுத்த பங்காகப் படைக்கப்பட்டதற்கு 6
ஒத்ததாக நகரத்தின் காணியாட்சியாய் ஐயா
யிரம் முழம் அகலமும் இருபத்தையாயிரம்
முழம் நீளமுமான நிலத்தைக் கொடுக்க
வேண்டும்; அது இஸ்ரவேல் வீட்டார் அனை
வருக்கும் உரியதாகும். பரிசுத்த பங்காகப் 7
படைக்கப்பட்டதற்கும் நகரத்தின் காணி
யாட்சிக்கும் இந்தப்புறத்திலும் அந்தப்புறத்
திலும் பரிசுத்த படைப்புக்குப் பக்கத்திலும்
நகரத்தின் காணிக்கைப் பக்கத்திலும் மேற்கி
லும் கிழக்கிலும் அதிபதியினுடைய பங்கு
இருக்கவேண்டும்; அதின் நீளம் மேல் எல்லை
துவக்கிக் கீழ் எல்லைமட்டும் கோத்திரப்
பங்குகளில் ஒவ்வொன்றுக்கும் சமமாயிருக்
கவேண்டும். இது அவனுக்கு இஸ்ரவேலி 8
லே காணிபூமியாக இருக்கும்; என் அதிபதி
கள் இனி என் ஜனத்தை ஒடுக்கவேண்
டாம்; தேசத்தை இஸ்ரவேல் வீட்டாருக்கு
அவர்களுடைய கோத்திரங்களுக்குத் தக்க
படி விட்டுவிடவேண்டும்.

யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச் 9
சொல்லுகிறார்: இஸ்ரவேலின் அதிபதிகளே,
நீங்கள் செய்தது போதும்; நீங்கள் கொடு
மையையும் அழிவையும் அகற்றி நியாயத்
தையும் நீதியையும் செய்யுங்கள்; உங்கள்
அநியாயங்களை என் ஜனத்தைவிட்டு நீக்
குங்கள்; இது யெகோவாவாகிய ஆண்ட
வரின் திருவாக்கு. சுமுத்திரையான தரா 10
சும் சுமுத்திரையான மரக்காலும் சுமுத்திரை

யானஅளவுகுடமும் உங்களுக்கு இருக்க
11 வேண்டும். மரக்காலும் அளவுகுடமும் ஒரே அளவாயிருக்கவேண்டும், மரக்கால் கலத்திலே பத்தில் ஒரு பங்கும், அளவுகுடம் கலத்திலே பத்தில் ஒரு பங்கும் பிடிக்கவேண்டும்; கலத்தின்படியே அதின்
12 அளவு நிருணயிக்கப்படவேண்டும். சேக்கல் இருபதுகேரா, இருபது சேக்கலும் இருபத்தைந்து சேக்கலும் பதினைந்து சேக்கலும் உங்களுக்கு ஒரு இராத்தலாகும்.
13 நீங்கள் படைக்கவேண்டிய காணிக்கை இதுவே: ஒரு கலம் கோதுமையிலே ஒரு மரக்காலில் ஆறிலொருபங்கையும், ஒரு கலம் வாற்கோதுமையிலே ஒரு மரக்காலில் ஆறிலொருபங்கையும் படைக்கவேண்டும்.
14 அளவுகுடத்தால் அளக்கிற எண்ணெயைப் பற்றி நியமிக்கப்பட்டது: பத்துக்குடம் பிடிக்கிற கலத்துக்குச் சரியான ஒரு ஜாடி எண்ணெயிலே குடத்தில் பத்தில் ஒரு பங்கைப் படைக்கவேண்டும்; பத்துக்குடம்
15 ஒரு கலம். இஸ்ரவேல் தேசத்திலே நல்ல மேய்ச்சலே மேய்கிற மந்தையிலே இருநூறு ஆடுகளில் ஒரு ஆடு அவர்களுக்கென பிராயச்சித்தம் செய்வதற்குப் போஜனபலியாகவும் தகனபலியாகவும் சமாதான பலியாகவும் படைக்கவேண்டும்: இது யெகோவா
16 வாகிய ஆண்டவரின் திருவாக்கு. தேசத்தின் ஜனங்களெல்லாரும் இஸ்ரவேலின் அதிபதிக்கு இந்தக் காணிக்கையைக் கொண்டு
17 வரக் கடமைப்பட்டவர்கள். உற்சவங்களிலும் மாதப் பிறப்புகளிலும் ஓய்வுநாட்களிலும் இஸ்ரவேல் வீட்டார் கூடிவரும் சகல திருநாட்களிலும் தகன பலிகளையும் போஜன பலிகளையும் பானபலிகளையும் செலுத்துவது அதிபதியின் கடனும்; அவன் இஸ்ரவேல் வீட்டாருக்கெனப் பிராயச்சித்தம் செய்வதற்குப் பாவநிவாரண பலியையும் போஜன பலியையும் தகன பலியையும் சமாதான பலியையும் படைக்கவேண்டும்.
18 யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச் சொல்லுகிறார்: முதலாம்மாதம் முதலாந் தேதியிலே நீ பழுதற்ற ஒரு காளையைக் கொண்டுவந்து பரிசுத்த ஸ்தலத்தைச் சுத்தி
19 கரிக்கவேண்டும். பாவநிவாரண பலியின் இரத்தத்திலே ஆசாரியன் கொஞ்சம் எடுத்து ஆலயத்தின் வாசல்நிலைகளிலும் பலிபீடத்து நிலையின் நாலுமூலைகளிலும் உட்பிராகாரத்
20 தின் வாசல் நிலைகளிலும் பூசவேண்டும். தப்பிதம் செய்தவனுக்காகவும் அறியாமல் குற்றம் செய்தவனுக்காகவும் அந்தப்பிரகாரமாக ஏழாந்தேதியிலும் செய்யவேண்டும்; இவ்விதமாய் ஆலயத்துக்கெனப்
21 பிராயச்சித்தம் செய்யவேண்டும். முதலாம்மாதம் பதினாலாந்தேதியிலே புளிப்பில்லாத அப்பம் புசிக்கும் ஏழுநாள் உற்சவமாகிய பஸ்கா ஆரம்பமாகும். அந்நாளிலே அதிபதி தனக்காக
22 வும் தேசத்து முழுஜனத்துக்காகவும் பாவநிவாரணபலியாக ஒரு காளையைப் படைக்கவேண்டும். உற்சவநாட்கள் ஏழிலும் அவன்
23 யெகோவாவுக்கு தகனபலியாகப் பழுதற்ற ஏழுகாளைகளையும் ஏழு ஆட்டுக்கடாக்களையும் அந்த ஏழு நாளும் தினந்தோறும் படைக்கவேண்டும்; பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் தினந்தோறும் படைக்கவேண்டும். போஜனபலியாக
24 ஒரு காளையோடே ஒரு மரக்கால் மாவையும் ஒரு ஆட்டுக்கடாவோடே ஒரு மரக்கால் மாவையும் ஒரு மரக்கால் மாவோடே ஒருபடி எண்ணெயையும் படைக்கவேண்டும். ஏழாம்மாதம் பதினைந்தாந்தேதியில்
25 ஆரம்பமாகிற உற்சவத்திலும் அவன் அதுபோலவே ஏழுநாளும் பாவநிவாரணபலிகளையும் தகனபலிகளையும் போஜனபலிகளையும் எண்ணெயையும் படைக்கவேண்டும்.

**46** யெகோவாவாகிய ஆண்டவர் சொல்வது இதுவே: வேலைசெய்கிற ஆறுநாட்களிலும் கிழக்கு நோக்கும் உட்பிராகார வாசல் பூட்டியிருக்கவேண்டும், ஓய்வுநாளிலும் மாதப்பிறப்பிலும் அது திறந்திருக்கவேண்டும்.
2 அப்பொழுது அதிபதி வெளிவாசல் மண்டபத்தின்வழியாய் உட்சென்று வாசல் நிலையண்டையிலே நிற்பான்; ஆசாரியர்கள் அவனுடைய தகனபலியையும் அவனுடைய சமாதான பலிகளையும் படைப்பார்கள்; அவன் வாசற்படியிலேயே பணிந்துகொண்டு பின்பு வெளியே போவான், சாயங்காலமட்டும் அந்த வாசல் பூட்டப்படாதிருக்கும்.
3 தேசத்து ஜனங்களும் ஓய்வுநாட்களிலும் மாதப்பிறப்புகளிலும் அந்த வாசலின் நடையிலே யெகோவாவின் சந்நிதியில் பணிந்துகொள்ளவேண்டும்.
4 அதிபதி ஓய்வுநாளிலே யெகோவாவுக்குச் செலுத்தும் தகனபலி, பழுதற்ற ஆறு ஆட்டுக்குட்டிகளும்
5 பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவுமே. போஜனபலி ஆட்டுக்கடாவோடே ஒரு மரக்கால், ஆட்டுக்குட்டிகளோடே போஜனபலியாக அவன் தகுதிக்கு ஏற்றபடியாம், ஒரு மரக்கால் மாவோடு ஒரு படி எண்ணெய்.
6 மாதப்பிறப்பு நாளிலோ பழுதற்ற ஒரு இளங்காளை, பழுதற்ற ஆறு ஆட்டுக்குட்டிகள், பழுதற்ற ஒரு ஆட்டுக்கடா;
7 போஜனபலியாக இளங்காளையோடே ஒரு மரக்கால் மாவையும் ஆட்டுக்கடாவோடே ஒரு மரக்

கால் மாவையும் ஆட்டுக்குட்டிகளோடே அவன் தகுதிக்குத் தக்கபடியும் படைக்க வேண்டும்; ஒரு மரக்கால் மாவோடே ஒரு
8 படி எண்ணெய். அதிபதி வருகிறபோது வாசல் மண்டபத்தின்வழியாய் உட்சென்று, அந்த வழியாகவே திரும்ப வெளியே போக
9 வேண்டும். தேசத்து ஜனங்கள் திருநாட்களில் யெகோவாவின் சந்நிதியில் வரும் போது பணிந்துகொள்வதற்கென வடக்கு வாசல்வழியாய் உட்செல்லுகிறவன் தெற்கு வாசல் வழியாகவும் தெற்குவாசல் வழியாய் உட்செல்லுகிறவன் வடக்கு வாசல் வழியாகவும் வெளியேபோகவேண்டும்; தான் உட்சென்ற வாசல் வழியாய்த் திரும்பிப்போகாமல் அதற்கு எதிர்வாசல்வழியாக வெளியே
10 போகவேண்டும். அதிபதியோ அவர்கள் உட்செல்லும்போது அவர்களோடே உட்சென்று அவர்கள் வெளியே போகும்போது
11 அவனும் வெளியேபோகவேண்டும். உற்சவங்களிலும் திருநாட்களிலும் படைக்கும் போஜனபலி காளையோடே ஒரு மரக்கால் மாவு, ஆட்டுக்கடாவோடே ஒரு மரக்கால் மாவு, ஆட்டுக்குட்டிகளோடே அவன் தகுதிக்கு ஏற்றபடியாம், ஒரு மரக்கால் மாவோ
12 டே ஒருபடி எண்ணெய். அதிபதி யெகோவாவுக்கு மனப்பூர்வகாணிக்கை செலுத்தும் போது—அந்த மனப்பூர்வகாணிக்கை தகன பலியானாலும் சரி, சமாதானபலியானாலும் சரி—கிழக்குநோக்கும் வாசல் அவனுக்கெனத் திறக்கப்படும்; அப்பொழுது அவன் ஓய்வுநாளில் செய்வதுபோலவே தன் தகன பலியையும் தன் சமாதானபலியையும் செலுத்திப் பின்பு வெளியே போவான்; அவன் வெளியே போனபின்பு வாசல் பூட்
13 டப்படவேண்டும். தினந்தோறும் ஒரு வயதான பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டியை யெகோவாவுக்குத் தகனபலியாகச் செலுத்துவாய், காலைதோறும் அதைச் செலுத்துவாய்.
14 அதினோடே காலைதோறும் போஜனபலியாக ஒரு மரக்கால் மாவிலே ஆறிலொருபங்கையும் மெல்லியமாவில் தெளிக்கும்படி ஒரு படி எண்ணெயிலே மூன்றிலொருபங்கையும் படைப்பாய்; அது யெகோவாவுக்கு போஜனபலி; இது என்றென்றுமான நித்திய
15 நியமம். இப்படியே காலைதோறும் என்று முள்ள தகனபலியாக ஆட்டுக்குட்டியையும் போஜனபலியையும்எண்ணெயையும்நீங்கள் செலுத்தவேண்டும்.
16 யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச் சொல்லுகிறார்: அதிபதி தன் குமாரரில் ஒருவனுக்கு எதையேனும் ஈவாகக்கொடுத்தால் அது அவன் குமாரருக்குச் சுதந்தரமாகும்
17 அது சுதந்தரமாகவே அவர்களுக்குச் சொந்தமாகும். அவன் தன் ஊழியக்காரரில் ஒருவனுக்குத் தன் சுதந்தரத்தில் எதையேனும் ஈவாகக் கொடுத்தாலோ, அது விடுதலை வருஷமட்டும் ஊழியனுடையதாயிருந்து பின்பு திரும்ப அதிபதியின் வசமாய்ச் சேரும், அது அவன் சுதந்தரம், அது அவன் குமாரருக்கே உரியதாகும். அதிபதியான
18 வன் ஜனங்களின் சுதந்தரத்திலிருந்து எதையும் பறித்துக்கொண்டு அவர்களின் சொந்த மானதிலிருந்து கொடுமைசெய்து அவர்களைத் துரத்தவேண்டாம், தனக்குச் சொந்தமானதில் எடுத்துத் தன் குமாரருக்குச் சுதந்தரம் கொடுக்கவேண்டும்; என் ஜனத்தில் எவனும் தனக்குச் சொந்தமானதிலிருந்து துரத்தப்படவேண்டாம்.

19 பின்பு அவர் வாசலின் பக்கத்துச் சுவரண்டையிலிருந்த நடைவழியாய் என்னை வடக்கு நோக்கிய ஆசாரியரின் பரிசுத்த அறைகளுக்கு அழைத்துக்கொண்டு போனார்; அவற்றின் பின்பக்கத்தில் மேற்கே
20 ஒரு இடம் இருந்தது. அவர் என்னைநோக்கி: ஆசாரியர் குற்றநிவாரணபலியையும் பாவநிவாரணபலியையும் வேகவைக்கும் இடமும் போஜனபலியைச் சுடும் இடமும் இதுவே; அவர்கள் அவற்றை வெளிப்பிராகாரத்திற்குக் கொண்டுபோய் ஜனங்களைப் பரிசுத்தப்படுத்தக்கூடாது
21 என்றார். பின்பு அவர் என்னை வெளிப்பிராகாரத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் என்னைப் பிராகாரத்தின் நாலுமூலைகளையும் கடந்து போகப்பண்ணினார்; இதோ, பிராகாரத்து ஒவ்வொரு மூலையிலும் ஒவ்வொரு
22 முற்றம் இருந்தது. பிராகாரத்தின் நாலு மூலைகளிலும் நான்கு அடைப்பான முற்றங்களிருந்தன; ஒவ்வொன்றும் நாற்பதுமுழ நீளம், முப்பது முழ அகலம்; இந்த நாலு மூலை முற்றங்களும் ஒரே அளவே.
23 இந்த நாலிலும் உள்ளே ஒரு சுற்றுக்கட்டுச் சுவர் இருந்தது; அந்தச் சுவரின் அடியில் சுற்றிலும் அடுப்புகள் போடப்பட்டிருந்தன.
24 அவர் என்னைப்பார்த்து, ஜனங்கள் இடும் பலிகளை ஆலயத்தின் பணிவிடைக்காரர் சமைக்கிற இடங்கள் இவைகளே என்றார்.

**47** பின்பு அவர் என்னை ஆலயத்தின் வாசலுக்குத் திரும்பிவரப்பண்ணினார்; இதோ, வாசற்படியின் கீழிருந்து தண்ணீர் வெளிப்பட்டுக் கிழக்கே ஓடிக்கொண்டிருந்தது; ஆலயத்தின் முகப்பு கிழக்கு நோக்கியிருந்தது, அந்தத் தண்ணீர் ஆலயத்துக்குத் தென்

புறமாய்ப் பலிபீடத்திற்குத் தெற்கே பாய்ந்
2 தது. அவர் என்னை வடக்கு வாசல் வழி
யாய் வெளியேறச்செய்து என்னை வெளிவழி
யாகக் கீழ்திசை நோக்கிய புறவாசல்மட்டும்
சுற்றி நடத்திக்கொண்டுபோனார்; இதோ,
அங்கே தண்ணீர் தென்புறத்திலிருந்து ஒடிக்
3 கொண்டிருந்தது. அவர் தமது கையில்
நூலைப்பிடித்துக்கொண்டு கிழக்கே வெளி
யேறுகையில் ஆயிரமுழதூரம் அளந்து
என்னைத் தண்ணீரைக் கடக்கப்பண்ணினார்;
4 தண்ணீர் கணுக்கால் அளவாயிருந்தது. பின்
னும் அவர் ஆயிரமுழதூரம் அளந்து என்
னைத் தண்ணீரைக் கடக்கப்பண்ணினார்;
அங்கே தண்ணீர் முழங்கால் அளவாயிருந்
தது; பின்னும் அவர் ஆயிரமுழதூரம்
அளந்து என்னைக் கடக்கப்பண்ணினார்,
அங்கே தண்ணீர் இடுப்பளவாயிருந்தது,
5 பின்னும் அவர் ஆயிரமுழதூரம் அளந்
தார், அங்கே அது நான் கடக்கமுடியாத
நதியாயிருந்தது; தண்ணீர் நீச்சாழமாய்ப்
பெருகிக் கடக்கமுடியாத நதியாயிருந்தது.
6 அவர் என்னைப்பார்த்து, மனுஷகுமாரனே,
இதைக் கண்டாயா என்று சொல்லி, என்னை
நதி யோரமாய்த் திரும்ப நடத்திக்கொண்டு
7 போனார். நான் திரும்பி வருகையில்,
இதோ, நதியோரத்தில் இக்கரையிலும் அக்
கரையிலும் வெகு திரளான மரங்கள் இருந்
8 தன. அவர் என்னைப்பார்த்து: இந்தத்
தண்ணீர் கீழ்நாட்டுக்குச் சென்று அராபா
வுக்கு இறங்கிக் கடலில் விழும், வெளிப்
பாய்ந்துவந்த தண்ணீர் கடலுக்கே செல்
லும், அதினால் கடல் தண்ணீர் ஆரோக்கிய
9 மாகும். இந்த நதி போகுமிட மெங்கும்
சஞ்சரிக்கும் பிராணிகள் யாவும் பிழைக்கும்,
இத்தத் தண்ணீர் அங்கே வந்தபடியினால்
வெகு ஏராளமான மீன்களும் உண்டாகும்;
இந்த நதி போகுமிடமெங்குமுள்ள யாவும்
10 ஆரோக்கியமாகிப் பிழைக்கும். அப்பொ
ழுது என்கேதி துவக்கி ஏனெக்லாயிம் மட்
டும் மீன்பிடிக்கிறவர்கள் அதின் கரையிலே
நிற்பார்கள்; அதெல்லாம் வலைகளை விரித்து
லர்த்தும் இடமாகும்; அதின் மீன்கள் பெரிய
சமுத்திர மீன்களைப்போலப் பல ஜாதியும்
11 மகா ஏராளமுமாயிருக்கும். ஆனாலும்
அதைச்சார்ந்த உளையான பள்ளங்களும்
மடுக்களும் ஆரோக்கியமாகா; உப்பெடுக்
12 கவே விட்டு விடப்படும். நதியோரமாய்
அதின் இக்கரையிலும் அக்கரையிலும் சகல
வித பழ மரங்களும் வளரும்; அவைகளின்
இலைகள் உதிர்வதுமில்லை, அவைகளின்
கனிகள் அற்றுப்போவதுமில்லை; அவை
களுக்குப் பாயும் தண்ணீர் பரிசுத்த ஸ்தலத்
திலிருந்து பாய்கிறபடியினால் மாதந்தோறும்
புதுக்கனிகளைக் கொடுத்துக்கொண்டேயிருக்
கும்; அவைகளின் கனிகள் ஆகாரமாகும்,
அவைகளின் இலைகள் அவிழ்தமாகும்.

13 யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச்
சொல்லுகிறார்: நீங்கள் இஸ்ரவேலின் பன்
னிரண்டு கோத்திரங்களுடைய இலக்கத்
தின்படியே தேசத்தை இந்த எல்லைமுதல்
சுதந்தரித்துக்கொள்ளுங்கள்; யோசேப்
புக்கு இரண்டு பங்கு. 14 ஒவ்வொருவனும்
மற்றொருவனுக்கே சரிபங்காக அதைச்
சுதந்தரித்துக்கொள்ளவேண்டும், அதை
உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன்
என்று நான் ஆணையிட்டுக் கொடுத்தேன்;
ஆகையால் இந்த தேசம் உங்களுக்குச் சுதந்
தரமாகக் கிடைக்கும். 15 தேசத்தின் எல்லை
இதுவே: வடபுறம் பெரிய சமுத்திரம்
துவக்கிக் கெத்லோன் வழியில் சேதாதுக்குத்
திரும்புகிற இடம் வரைக்கும், 16 காமாத்து,
பேரோத்தா | தமஸ்குவின் எல்லைக்கும்
காமாத்தின் எல்லைக்கும் நடுவான ஹப்ராயிம்
கவ்தானின் எல்லையோடே சேர்ந்த நடுகாத்
சேர் வரைக்குமுள்ளது. அப்படியே 17 சமுத்
திரத்திலிருந்து போகிற எல்லை வடபக்கமா
யிருக்கிற காத்சேர் ஏனனும் தமஸ்குவின்
எல்லையும் காமாத்தின் எல்லையுமே; இது வட
புறம். 18 கீழ்புறத்தை கவ்தானுக்கும் தமஸ்
குவுக்கும் நடுவாகவும் கிலெயாத்துக்கும்
யோர்தானின் ஓரமான இஸ்ரவேல் தேசத்துக்
கும் நடுவாகவும் கீழ் கடல்மட்டும் இருக்
கும் எல்லையாய் அளக்கவேண்டும், இது கீழ்
புறம். தென்புறம் தாமார் துவக்கி 19
காதேசிலுள்ள மெரீபோத்தின் தண்ணீர்கள்
வரைக்கும் ஆறுவரைக்கும் பெரிய சமுத்
திரம் வரைக்கும் இருப்பது, இது தென்
புறம். மேல்புறம் அந்த எல்லை துவக்கி 20
காமாத்துக்கு எதிராக வந்து சேரு
மட்டுமுள்ள பெரிய சமுத்திரமே,
இது மேல்புறம். இந்த தேசத்தை நீங்கள் 21
இஸ்ரவேல் கோத்திரங்களின்படியே உங்
களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ளவேண்டும்.
உங்களுக்கும், உங்களுக்குள்ளே தங்கி உங் 22
களுக்குள்ளே பிள்ளைகளைப் பெறுகிற அந்நி
யர்களுக்கும், நீங்கள் அதைச் சீட்டுப்
போட்டுச் சுதந்தரமாக்கிக்கொள்ளவேண்
டும்; இவர்கள் உங்களுக்கு இஸ்ரவேல் புத்
திரரில் பிறந்தவர்களைப்போல் இருந்து உங்
களோடேகூட இஸ்ரவேல் கோத்திரங்களின்
நடுவே சுதந்தரத்தைப் பெறுவார்கள். அந் 23
நியன் எந்தக் கோத்திரத்தோடே தங்கியிருக்
கிறானோ, அதிலேயே அவனுடைய சுதந்தி
ரத்தை அவனுக்குக் கொடுக்கவேண்டும்,

இது யெகோவாவாகிய ஆண்டவரின் திரு வாக்கு.

**48** கோத்திரங்களின் நாமங்கள் இவை களே: வடமுனை துவக்கிக் காமாத்துக்குப் போகிற கெத்லோன் வழியின் ஓரத்துக்கும் காத்சேர் ஏனானுக்கும் காமாத்தருகே வடக் கேயிருக்கிற தமஸ்குவின் எல்லைக்கும் உள் ளாகக் கீழ்திசை துவக்கி மேல்திசைமட்டும் 2 தானுக்கு ஒருபங்கும், தானின் எல்லைய ருகே கீழ்திசை துவக்கி மேல்திசைமட்டும் 3 ஆசேருக்கு ஒரு பங்கும், ஆசேரின் எல்லை யருகே கீழ்திசை துவக்கி மேல்திசைமட்டும் 4 நப்தலிக்கு ஒரு பங்கும், நப்தலியின் எல்லை யருகே கீழ்திசை துவக்கி மேல்திசைமட்டும் 5 மனாசேக்கு ஒரு பங்கும், மனாசேயின் எல்லை யருகே கீழ்திசை துவக்கி மேல்திசைமட்டும் 6 எப்பிராயீமுக்கு ஒரு பங்கும், எப்பிராயீ மின் எல்லையருகே கீழ்திசை துவக்கி மேல் 7 திசைமட்டும் ரூபேனுக்கு ஒரு பங்கும், ரூபே னின் எல்லையருகே கீழ்திசை துவக்கி மேல் திசைமட்டும் யூதாவுக்கு ஒரு பங்கும் இருக் கவேண்டும்.

8 யூதாவின் எல்லையருகே கீழ்திசை துவக்கி மேல்திசைமட்டும் நீங்கள் அர்ப்பிதமாக்க வேண்டிய பங்கு இருக்கும்; அது இருபத் தையாயிரங்கோல் அகலமும் கீழ்திசை துவக்கி மேல்திசைமட்டும் இருக்கிற பங்கு களில் ஒவ்வொன்றுக்கும் சரியான நீளமு மாம்; பரிசுத்த ஸ்தலம் அதின் நடுவிலே 9 இருக்கவேண்டும். இதிலே யெகோவா வுக்கு நீங்கள் அர்ப்பிதமாக்கவேண்டிய பங்கு இருபத்தையாயிரங்கோல் நீளமும் பதினையிரங்கோல் அகலமுமா யிருக்கவேண் 10 டும். வடக்கே இருபத்தையாயிரங்கோல் நீளமும், மேற்கே பதினையிரங்கோல் அகல மும், கிழக்கே பதினையிரங்கோல் அகலமும், தெற்கே இருபத்தையாயிரங்கோல் நீளமு மாகிய இத்தப் பரிசுத்த அர்ப்பிதநிலமானது ஆசாரியருக்குரியதாகும்; யெகோவாவின் பரிசுத்த ஸ்தலம் அதின் நடுவிலே இருக்க 11 வேண்டும். இஸ்ரவேல் புத்திரர் வழிவில கிப்போகையில் லேவியர் வழிவிலகிப்போ னதுபோல வழிவிலகிப் போகாமல் என் பணிவிடையைச் செய்த சாதோக்கின் புத்தி ராகிய பரிசுத்தமாக்கப்பட்ட ஆசாரிய 12 ருக்கு அது உரியதாகும். அப்படியே தேசத்தில் அர்ப்பிதமாக்கப்படுகிறதிலே மகா பரிசுத்தமான பங்கு அவர்களுக்கு லேவியரு 13 டைய எல்லையருகே இருக்கும். ஆசாரிய ரின் எல்லைக்கு எதிராக லேவியர் பெறும் பங்கு இருபத்தையாயிரங்கோல் நீளமும் பதினையிரங்கோல் அகலமுமாயிருக்கவேண் டும்; நீளம் இருபத்தையாயிரங்கோல், அக லம் பதினையிரங்கோல். அவர்கள் அதில் 14 ஒன்றையும் விற்கவும் தேசத்தின் முதல் விளைவைமாற்றவும் மற்றவர்களுக்குக் கொடுக்கவும் தகாது; அது யெகோவாவுக் குப் பரிசுத்தமானது. இருபத்தையாயிரங் 15 கோலுக்கு எதிராக அகலத்தில் மீதியாயிருக் கும் ஐயாயிரங்கோலோவென்றால் பரிசுத்த மாயிராமல் குடியேறும் நகரத்துக்கும் வெளி நிலங்களுக்கும் விடவேண்டும்; நகரம் அதின் நடுவில் இருக்கும். அதின் அளவு 16 கள்: வடபுறம் நாலாயிரத்தைந்நூறு கோல், தென்புறம் நாலாயிரத்தைந்நூறுகோல், கீழ் புறம் நாலாயிரத்தைந்நூறுகோல், மேல்புறம் நாலாயிரத்தைந்நூறுகோல். நகரத்தின் 17 வெளிநிலங்கள் வடக்கே இருநூற்றைம்பது கோல், தெற்கே இருநூற்றைம்பதுகோல், கிழக்கே இருநூற்றைம்பதுகோல், மேற்கே இருநூற்றைம்பதுகோல். பரிசுத்த அர்ப் 18 பித நிலத்துக்கு எதிரே நீளத்தில் மீதியா னது கிழக்கே பதினையிரங்கோல் மேற்கே பதினையிரங்கோல்; அது பரிசுத்த அர்ப்பித நிலத்துக்கு எதிராயிருக்கும்; அதின் வருமா னம் நகரத்திலே ஊழியஞ்செய்கிறவர்க ளுக்கு ஆகாரத்திற்காகும். இஸ்ரவேலின் 19 சகல கோத்திரங்களினுமிருந்து குறிக்கப் பட்ட சிலர் நகரத்திலே பணிவிடை செய் வார்கள். அர்ப்பித நிலமனைத்தும் இருபத் 20 தையாயிரங்கோல் நீளமும், இருபத்தையா யிரங்கோல் அகலமுமாய் இருக்கவேண் டும்; பட்டணத்தின் காணி உட்பட இத்தப் பரிசுத்த அர்ப்பிதநிலம் சதுரமாயிருக்க வேண்டும்.

பரிசுத்த அர்ப்பித நிலத்துக்கும் நகரத் 21 தின் காணிக்கும் இத்தப்புறத்திலும் அத்தப் புறத்திலும் அர்ப்பித நிலத்தினுடைய இரு பத்தையாயிரங்கோலின் முன்பாகக் கிழக்கு எல்லைமட்டுக்கும் மேற்கிலே இருபத்தை யாயிரங்கோலின் முன்பாக மேற்கு எல்லை மட்டுக்கும் மீதியாயிருப்பது அதிபதியி னுடையது; பங்குகளுக்கு எதிரான அது அதிபதியினுடையதாயிருக்கவேண்டும்; அதற்கு நடுவாகப் பரிசுத்த அர்ப்பித நில மும் ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலமும் இருக் கும். அதிபதியினுடையதற்கு நடுவேயிருக் 22 கும் லேவியரின் காணி துவக்கியும் நகரத் தின் காணி யூதாவின் எல்லைக் கும் பென்யமீனின் எல்லைக்கும் நடுவே யிருக்கிறது அதிபதியினுடையது.

மற்றக் கோத்திரங்களுக்குரிய பங்குகள் 23 இவைகளே: கீழ்திசை துவக்கி மேல்திசை

மட்டும் பென்யமீனுக்கு ஒரு பங்கும்,
24 பென்யமீன் எல்லையருகே கீழ்திசை துவக்கி
மேல்திசைமட்டும் சிமியோனுக்கு ஒரு பங்
25 கும், சிமியோனின் எல்லையருகே கீழ்திசை
துவக்கி மேல்திசைமட்டும் இசக்காருக்கு
26 ஒரு பங்கும், இசக்காரின் எல்லையருகே
கீழ்திசை துவக்கி மேல்திசைமட்டும் செபு
27 லோனுக்கு ஒரு பங்கும், செபுலோனின்
எல்லையருகே கீழ்திசை துவக்கி மேல்திசை
மட்டும் காத்துக்கு ஒரு பங்கும் இருக்க
28 வேண்டும். காத்தின் எல்லையருகே தென்
மூலையாகிய தெற்கு எல்லை தாமார் துவக்கிக்
காதேசிலுள்ள மேரீபாத் மட்டாகவும் பெ
29 ரிய சமுத்திரமட்டாகவும் போகும். சுதந்
தரித்துக்கொள்ளும்படி இதுவே நீங்கள்
இஸ்ரவேல் கோத்திரங்களுக்குச் சீட்டுப்
போட்டுப் பங்கிடும் தேசம், இவைகளே
அவர்களின் பங்குகள்; இது யெகோவா
வாகிய ஆண்டவரின் திருவாக்கு.
30 நகரத்தினின்று புறப்படும் வழிகள்
இவைகளே: வடபுறத்திலே நாலாயிரத்
தைந்நூறு கோலளவு இருக்கும்; நகரத் 31
தின் வாசல்கள் இஸ்ரவேல் கோத்திரங்க
ளுடைய நாமங்களின்படியே பெயர்பெற
வேண்டும், வடக்கே ரூபேனுக்கு ஒரு வா
சல், யூதாவுக்கு ஒரு வாசல், லேவிக்கு ஒரு
வாசல், ஆக மூன்று வாசல்கள் இருக்க
வேண்டும். கீழ்புறத்திலே நாலாயிரத்தைந் 32
நூறுகோல், அதில் யோசேப்புக்கு ஒரு வா
சல், பென்யமீனுக்கு ஒரு வாசல், தானுக்கு
ஒரு வாசல், ஆக மூன்று வாசல்கள் இருக்க
வேண்டும். தென்புறத்திலே நாலாயிரத் 33
தைந்நூறு கோல், அதில் சிமியோனுக்கு
ஒரு வாசல், இசக்காருக்கு ஒரு வாசல்,
செபுலோனுக்கு ஒரு வாசல், ஆக மூன்று
வாசல்கள் இருக்கவேண்டும். மேல்புறத்தி 34
லே நாலாயிரத்தைந்நூறுகோல், அதில்
காத்துக்கு ஒரு வாசல், ஆசேருக்கு ஒரு வா
சல், நப்தலிக்கு ஒரு வாசல், ஆக மூன்று
வாசல்கள் இருக்கவேண்டும். சுற்றிலும் 35
அதின் அளவு பதினெண்ணாயிரங்கோலாகும்;
அந்நாள்முதல் நகரம் யெகோவாஷம்மா
என்னும் பெயர்பெறும்.

# DANIEL

# தானியேல்

**1** யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீம் அர
சாண்ட மூன்றும் வருஷத்திலே பாபிலோ
னின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருச
லேமுக்கு வந்து அதை முற்றுகை போட்
2 டான். அப்பொழுது ஆண்டவர் யூதாவின்
ராஜாவாகிய யோயாக்கீமையும் கடவுளின்
ஆலயத்திற்குரிய பாத்திரங்களில் சிலவற்றை
யும் அவன் கையில் ஒப்புக்கொடுத்தார்;
அவன் அந்தப் பாத்திரங்களை ஷிநெயார்
தேசத்திலிருந்த தன் தெய்வத்தின் கோவி
லுக்குக் கொண்டுபோய் அவைகளைத் தன்
தெய்வத்தின் கருவூலத்தினுள் வைத்தான்.
3 அப்பொழுது ராஜா தன் அரமனை உத்தி
யோகஸ்தரின் தலைவனுகிய அஷ்பெனா
சோடு பேசி, இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே
ராஜ வம்சத்தாரிலும் உயர்குலத்தாரிலும்
4 யாதொரு மாசும் இல்லாதவர்களும் அழ
குள்ளவர்களும் சகல ஞானத்திலும் தேறின
வர்களும் அறிவில் சிறந்தவர்களும் கல்வி
கற்பதில் நிபுணரும் ராஜ அரமனையிலே
சேவிக்கும் திறமையுள்ளவர்களுமாகிய சில
வாலிபரை அழைத்துவரவும் அவர்களுக்குக்
கல்தேயரின் வித்தையையும் பாஷையை
யும் கற்றுக்கொடுக்கவும் கட்டளையிட்டான்.
5 ராஜா தான் உண்ணும் போஜனத்திலேயும்
தான் குடிக்கும் திராட்சரசத்திலேயும் அன்
றுடப்பங்கை அவர்களுக்கு நியமித்து,
அவர்களை மூன்றுவருஷம் போஷித்து
வளர்க்கக் கட்டளையிட்டான்; அதன்பின்
அவர்கள் ராஜசந்நிதியில் சேவிக்கவேண்டும்.
6 அவர்களுக்குள் யூதா புத்திரராகிய தானி
யேல், கனனியா, மீஷாவேல், அசரியா
7 என்பவர்கள் இருந்தார்கள். அரமனை
உத்தியோகஸ்தரின் தலைவன், தானியேலுக்கு
பெல்தெஷாத்சார் என்றும் கனனியாவுக்கு
ஷாத்ராக் என்றும் மீஷாவேலுக்கு மேஷாக்
என்றும் அசரியாவுக்கு ஆபேத்நேகோ என்
றும் மறுபெயரிட்டான்.
8 ராஜபோஜனத்தினாலும் ராஜா பானம்
பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத்

தீட்டுப்படுத்த வேண்டாமென்று தானியேல் தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்திக் கொள்ளாதிருக்கும்படி அவன் அரமனை உத்தியோகஸ்தரின் தலைவனை வேண்டிக்
9 கொண்டான். கடவுள் தானியேலுக்கு அரமனை உத்தியோகஸ்தரின் தலைவனிடம் தயவும் இரக்கமும் கிடைக்கும்படி செய்
10 தார். அரமனை உத்தியோகஸ்தரின் தலைவன் தானியேலைப்பார்த்து: உங்களுக்குப் போஜனத்தையும் பானத்தையும் நியமித்திருக்கிற ராஜாவாகிய என் ஆண்டவன் உங்கள் வயதுள்ள மற்ற வாலிபரின் முகங்களைப்பார்க்கிலும் உங்கள் முகங்கள் வாடிப் போயினதாகக் காண்பாரே என்று நான் பயப்படுகிறேன், அப்படியிருந்தால் ராஜாவின் பார்வையில் நீங்கள் என் தலைமேல் குற்றஞ்சுமரப்பண்ணுவீர்களே என்றான்.
11 அப்பொழுது, அரமனை உத்தியோகஸ்தரின் தலைவனாலே தானியேல், கனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்கள்மேல் நியமிக்கப்பட்டிருந்த விசாரணைக்காரனோடு தானி
12 யேல் பேசி: பத்துநாள் உமது அடியாருக்கு இப்படிச் செய்துபாரும்; எங்களுக்குப் புசிக்கப் பருப்பு முதலான மரக்கறிகளையும் குடிக்கத் தண்ணீரையும் கொடுக்கச்
13 சொல்லும்; அதன்பின் எங்கள் முகங்களையும் ராஜபோஜனத்தில் புசிக்கிற வாலிபருடைய முகங்களையும் ஒத்துப்பாரும்; அப்போது நீர் காண்கிறதற்குத் தக்கபடி உமது
14 அடியாருக்குச் செய்யும் என்றான். இந்த விஷயத்திலே அவன் அவர்களுக்குச் செவி கொடுத்துப் பத்துநாளளவும் அப்படியே
15 செய்துபார்த்தான். பத்துநாள் சென்ற பின்பு ராஜபோஜனம் புசித்த எல்லா வாலிபரைப் பார்க்கிலும் அவர்கள் முகம் களையுள்ளதாயும் சரீரம் புஷ்டியுள்ளதாயும்
16 காணப்பட்டது. ஆகவே விசாரிப்புக்காரன் அவர்களுக்கு நியமிக்கப்பட்ட போஜனத்தையும் திராட்சரசபானத்தையும் நிறுத்திவிட்டு அவர்களுக்குப் பருப்பு முதலானவைகளைக் கொடுத்தான்.
17 இந்த நாலு வாலிபருக்கும் கடவுள் சகல வித்தையிலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார்; தானியேலோ சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியும் திறமையுள்ளவனுக்கினார்.
18 அவர்களை அழைத்துவரும்படி ராஜா குறித்த நாள் வரவே அரமனை உத்தியோகஸ்தரின் தலைவன் அவர்களை நேபுகாத்நேச்சாரின் சந்
19 நிதியில் கொண்டுவந்துவிட்டான். ராஜா அவர்களோடே பேசினான், அவர்கள் எல்லாருக்குள்ளும் வேறெவரும் தானியேல், கனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்களுக்குச் சமானமாய்க் காணப்படவில்லை; ஆகவே இவர்களே ராஜ சந்நிதியில் சேவித்தார்கள். ஞானமும் விவேகமும் வேண் 20
டிய எந்த விஷயத்தில் ராஜா அவர்களைக் கேட்டு விசாரித்தாலும் அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும் ஜோசியரிலும் அவர்களைப் பத்துமடங்கு சமர்த்தராகக் கண்டான். கோரேஸ் ராஜா அரசாண்ட முதலாம் வருஷமட்டும் தானியேல் அங்கே இருந்தான்.

நேபுகாத்நேச்சார் அரசாண்ட இரண் **2**
டாம் வருஷத்திலே நேபுகாத்நேச்சார் சொப்பனங்களைக் கண்டான், அதினால் அவன் மனம் கலங்கினது, அவன் நித்திரை கலைந்தது. அப்பொழுது ராஜா தன் சொப 2
பனங்களைத் தனக்குத் தெரிவிக்கும் பொருட்டு சாஸ்திரிகளையும் ஜோசியரையும் சூனியக்காரரையும் கல்தேயரையும் அழைக்கச்சொன்னான்; அவர்கள் வந்து ராஜசமுகத்தில் நின்றார்கள்.

ராஜா அவர்களைப் பார்த்து: ஒரு சொப 3
பனம் கண்டேன், அந்தச் சொப்பனத்தை அறியவேண்டுமென்று என் மனம் கலங்கியிருக்கிறது என்றான். அப்பொழுது கல் 4
தேயர் அரமேய பாஷையில் ராஜாவோடு பேசி: ராஜாவே நீர் என்றும் வாழ்க, சொப்பனத்தை உமது அடியாருக்குச் சொல்லும், அப்பொழுது அதின் அர்த்தத்தை விடுவிப்போம் என்றார்கள். ராஜா கல்தே 5
யருக்குப் பதிலுரைத்து: நான் திட்டமாய் நிர்ணயித்தது இதுவே, நீங்கள் சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் எனக்கு அறிவியாமற்போனால் துண்டித்துப்போடப்படுவீர்கள்; உங்கள் வீடுகள் குப்பைமேடுகளாக்கப்படும். சொப்பனத்தையும் அதின் 6
அர்த்தத்தையும் தெரிவித்தீர்களேயாகில் என்னிடம் வெகுமதிகளையும் பரிசுகளையும் அதிக மேன்மையையும் பெறுவீர்கள்; ஆகவே சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் எனக்குத் தெரிவியுங்கள் என்று சொன்னான். அவர்கள் திரும்பவும் பேசி: 7
ராஜா அடியேங்களுக்குச் சொப்பனத்தைச் சொல்வாராக, அப்பொழுது அதின் அர்த்தத்தை விடுவிப்போம் என்றார்கள். அதைக்கேட்கவே ராஜா: நான் நிர்ணயித் 8
தது திட்டமாயிற்று என்று நீங்கள் கண்டு காலதாமசம்பண்ணப் பார்க்கிறீர்களென்று எனக்குத் தெளிவாய்த் தெரிகிறது. நீங்கள் 9
சொப்பனத்தை எனக்கு அறிவிக்காமற்போ

ஞல் உங்களுக்கு நியமித்த தீர்ப்பு ஒன்றே, அது மாறுதது, காலம் செல்லச்செல்ல மாறுதல் உண்டாகலாம் என்று நினைத்து என் சமுகத்தில் பொய்யும் புரட்டுமானவைகளைச் சொல்ல நீங்கள் உடன்பட்டிருக்கிறீர்கள்; ஆகவே சொப்பனத்தை எனக்குச் சொல்லுங்கள், அப்பொழுது அதின் அர்த்தத்தையும் நீங்கள் தெரிவிப்பீர்கள் என்று
10 அறிந்துகொள்ளுவேன் என்றான். கல்தேயர் ராஜசமுகத்தில் மறுபடியும்பேசி: ராஜா கேட்கும் காரியத்தைத் தெரிவிக்கும் மனுஷன் பூமியில் ஒருவனும் இல்லை; எந்த ராஜாவும், அவன் எவ்வளவு மகத்துவமும் வல்லமையுமுள்ளவனுயிருந்தாலும் சரி, இப்படிப்பட்ட காரியத்தை ஒரு சாஸ்திரியினிடமாவது ஜோசியனிடமாவது கல்தேயனிட
11 மாவது கேட்டதில்லை. ராஜா கேட்கிறது மிகவும் அரிதான காரியம், மாம்சமாயிருக்கிறவர்களோடே வாசம் பண்ணுத தேவர்களேயொழிய ராஜ சந்நிதியில் அதைத் தெரிவிக்கத்தக்கவர் ஒருவரும் இல்லை என்றார்கள்.
12 இதினிமித்தம் ராஜா மகா கோபமும் உக்கிரமுங்கொண்டு, பாபிலோனிலுள்ள எல்லா ஞானிகளையும் அழித்துவிடக் கட்டளை
13 யிட்டான். ஞானிகளைக் கொல்லவேண்டுமென்கிற கட்டளை வெளியானபோது தானியேலையும் அவன் தோழரையும் கொல்ல
14 வேண்டுமென்று தேடினார்கள். பாபிலோனின் ஞானிகளைக் கொல்ல வெளியேறின ராஜாவின் மெய்காவலாளர் தலைவனுகிய அரியோகினிடம் தானியேல் யோசனையும்
15 புத்தியுமாய்ப்பேசி: இந்தக் கட்டளை ராஜாவினுல் இத்தனை அவசரமாய்ப் பிறந்ததற்குக் காரணம் என்ன என்று ராஜாவின் உத்தியோகஸ்தனுகிய அரியோகினிடம் கேட்டான்; அப்பொழுது அரியோகு தானியே
16 லுக்குக் காரியத்தை அறிவித்தான். தானியேல் ராஜாவினிடம்போய், சொப்பனத்தின் அர்த்தத்தை ராஜாவுக்குத் தெரிவிக்கும்படி தனக்குத் தவணைகொடுக்க விண்ணப்பம்பண்ணினான்.
17 பின்பு தானியேல் தன் வீட்டுக்குப் போய்க் கனனியா, மீஷாவேல், அசரியா என்னும் தன்னுடைய தோழருக்கு இந்தக்
18 காரியத்தை அறிவித்தான். தானும் தன் தோழரும் பாபிலோனின் மற்ற ஞானிகளோடேகூட அழியாதபடி இந்த மறைபொருளைக்குறித்துப் பரலோகத்தின் கடவுளை நோக்கி இரக்கம்கேட்கவேண்டுமெனச்
19 சொன்னான். பின்பு இராக்காலத்தில் தரிசனத்திலே தானியேலுக்கு அந்த மறைபொருள் வெளிப்படுத்தப்பட்டது; அப்பொழுது தானியேல் பரலோகத்தின் கடவுளை ஸ்தோத்திரித்து:

கடவுளின் திருநாமத்துக்கு 20
என்றென்றுமுள்ள சதா காலங்களிலும்
ஸ்தோத்திர முண்டாக;
ஞானமும் வல்லமையும் அவருக்கே உரியது.
காலங்களையும் நேரங்களையும் மாற்றுகிற 21
வர் அவரே;
அவரே ராஜாக்களைத் தள்ளி ராஜாக்களை
ஏற்படுத்துகிறார்;
ஞானிகளுக்கு ஞானத்தையும் அறிவாளி
களுக்கு அறிவையும் கொடுக்கிறார்.
அவரே ஆழமும் மறைபொருளுமான 22
வற்றை வெளிப்படுத்துகிறவர்;
இருளில் இருக்கிறதை அவர் அறிவார்,
வெளிச்சம் அவரிடம் வசிக்கும்.
என் பிதாக்களின் கடவுளே, உமக்கு 23
நன்றி செலுத்தி ஸ்தோத்திரிக்கிறேன்;
நீரே எனக்கு ஞானமும் வல்லமையும்
கொடுத்தீர்,
நாங்கள் உம்மிடம் வேண்டிக்கொண்ட
தைஇப்பொழுது எனக்கு அறிவித்தீர்;
ராஜா அறிய விரும்பிய காரியத்தை எங்
களுக்குத் தெரிவித்தீரே

என்று சொன்னான்.

அதன்பின்பு தானியேல் பாபிலோனின் 24
ஞானிகளை அழிக்க ராஜா கட்டளையிட்ட அரியோகினிடம் சென்று: பாபிலோனின் ஞானிகளை அழிக்கவேண்டாம், என்னை ராஜாவின் சமுகத்துக்கு அழைத்துக்கொண்டுபோம்; ராஜாவுக்குச் சொப்பனத்தின் அர்த்தத்தைத் தெரிவிப்பேன் என்று சொன்னான்.
அப்பொழுது அரியோகு விரைவாகத் தானி 25
யேலை ராஜசந்நிதிக்கு அழைத்துப்போய்: சிறைப்பட்டு வந்த யூதேயா தேசத்தாரில் ஒருவனைக் கண்டுபிடித்தேன்; அவன் ராஜாவுக்கு அர்த்தத்தைத் தெரிவிப்பான் என்று சொன்னான். ராஜா பெல்தெஷாத்சாரென் 26
னும் பேர்கொண்ட தானியேலைப் பார்த்து: நான் கண்ட சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் நீ எனக்கு அறிவிப்பாயா என்று கேட்க | தானியேல் ராஜாவுக்குப் 27
பதிலுரைத்து: ராஜா கேட்கிற மறைபொருளை ராஜாவுக்குத் தெரிவிக்க ஞானிகளாலும் ஜோசியராலும் சாஸ்திரிகளாலும் குறிசொல்லுகிறவர்களாலும் முடியாது. பரலோகத் 28
திலிருக்கிற கடவுளோ மறைபொருட்களை வெளிப்படுத்துகிறவர், வரும் நாட்களில் சம்பவிக்கப்போவதை ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு அறிவித்திருக்கிறார்; உமது சொப்பனமும் உமது படுக்கையின்மேல் நீர்

29 கண்ட தரிசனங்களும் இவைகளே: ராஜாவே, உமது படுக்கையின்மேல் நீர் படுத்திருக்கையில் இனிமேல் சம்பவிப்பது என்ன வென நினைத்துக்கொண்டிருந்தீர், அப்பொழுது மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவர் சம்பவிக்கப்போகிறது இன்ன
30 தென்று உமக்கு அறிவித்தார். நாளே உயிரோடிருக்கிற எல்லாரைப் பார்க்கிலும் அதிக ஞானமுடையவன் என்பதினாலல்ல; சொப்பனத்தின் அர்த்தம் ராஜாவுக்குத் தெரியவேண்டுமென்றும், உமது இருதயத்தின் நினைவுகளை நீர் அறியவேண்டுமென்றும் இந்த மறைபொருள் எனக்கு வெளியாக்கப்பட்டது.

31 ராஜாவே நீர் பார்த்துக்கொண்டிருந்தபோது, இதோ, ஒரு பெரிய சிலை காணப்பட்டது, அந்தச் சிலை மிகுந்த உயரமும் மகா பிரகாசமுமுள்ளதாய் உமக்கு எதிரே நின்றது; அதின் தோற்றம் பயங்கரமாயிருந்
32 தது. அந்தச் சிலையின் தலை பசும்பொன்; அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளி, அதின் வயிறும் அதின் இடுப்பும் செம்பு,
33 அதின் கால்கள் இரும்பு, அதின் பாதங்கள்
34 பாதி இரும்பு, பாதி களிமண். நீர் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டு வந்து, அது அந்தச் சிலையை இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதி, அவைகளை நொறுக்கிப்போட்
35 டது. அஃதாவது அந்த இரும்பும் களிமண்ணும் செம்பும் வெள்ளியும் பொன்னும் நொறுங்குண்டு கோடைகாலத்திலே போரடிக்கிற களத்திலிருந்து பறந்துபோம் பதர் போலாயின; காற்று அவைகளை அடித்துக்கொண்டு போகவே, அவை போன இடம் தெரியாமற் போயின; சிலையை மோதிய கல் லோவெனில் ஒரு பெரிய மலையாகிப் பூமி
36 யனைத்தையும் நிரப்பிற்று; சொப்பனம் இதுவே, அதின் அர்த்தத்தையும் ராஜாவுக்குத் தெரிவிப்போம்.

37 ராஜாவே, நீர் ராஜாதி ராஜா; பரலோகத்தின் கடவுள் உமக்கு அரசாட்சி, பராக்கிரமம், வல்லமை, மகிமை இவற்றை அருளி
38 னார். சகல இடங்களிலும் வசிக்கும் மனுப்புத்திரரையும் வெளியின் மிருகங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் அவர் உமது கையில் ஒப்புக்கொடுத்தார், அவைகளையெல்லாம் நீரே ஆளும்படி செய்தார்;
39 பொன்னான அந்தத்தலை நீரே. உமக்குப் பிறகு உமது ராஜ்யத்திலும் கீழ்த்தரமான வேறொரு ராஜ்யம் தோன்றும்; பின்பு செம்பான மூன்றாம் ராஜ்யம் ஒன்று எழும்பும்; அது பூமியனைத்தையும் ஆண்டுகொள்ளும்.
40 நாலாவது ராஜ்யமும் ஒன்று எழும்பும்; அது இரும்பைப்போல பலமாயிருக்கும்; இரும்பு எல்லாவற்றையும் உடைத்து நொறுக்கிப் போடுகிறது, இரும்பு அழித்துப் போடுகிறதுபோல இது அவற்றையெல்லாம் உடைத்து அழித்துவிடும். பாதங்களும்
41 கால்விரல்களும் பாதி குயவனின் களிமண்ணும், பாதி இரும்புமாயிருக்க நீர் கண்டதே, நீர் இப்படிக் கண்டது பிரிவுள்ள ராஜ்யம் என்பதைக் குறிக்கும்; எனினும் இரும்பினுடைய பலத்தில் கொஞ்சம் அதிலே இருக்
42 கும்; களிமண்ணோடே இரும்பு கலந்திருக்கக் கண்டீரே, கால்விரல்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தபடியே அந்த ராஜ்யம் பலமும் பலவீனமுமாயிருக்கும். இரும்பைக் களிமண்ணோடே கலந்
43 திருக்க நீர் கண்டபடியே அவர்கள் மற்ற ஜாதியாரோடே சம்பந்தங்கலப்பார்கள்; எனினும், இதோ, களிமண்ணோடே இரும்பு கலவாததுபோல அவர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக்கொள்வதில்லை.
44 அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் கடவுள் என்றென்றும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி அழித்துவிடும்; தானே என்றென்றுமாக நிலைநிற்கும். ஒரு கல் கை
45 யால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து உருண்டுவந்து இரும்பையும் செம்பையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, இனிமேல் சம்பவிக்கப்போகிறதை மகத்தான கடவுள் ராஜாவுக்கு அறிவித்திருக்கிறார்; சொப்பனம் நிச்சயம் அதின் அர்த்தம் உண்மை என்று சொன்னான்.

46 அப்பொழுது ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் முகங்குப்புற விழுந்து தானியேலை வணங்கி அவனுக்குப்போஜனபலி செலுத்தவும் தூபங்காட்டவும் கட்டளையிட்டான்.
47 ராஜா தானியேலைப்பார்த்து: மெய்யாகவே உங்கள் கடவுளே தேவாதி தேவன், ராஜாக்களை ஆளுகிறவர், மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவர், இந்த மறைபொருள்களை வெளிப்படுத்தத் திறமையுள்ளவனை
48 யே என்றான். பின்பு ராஜா தானியேலை மிகவும் உயர்த்தி, அவனுக்கு அநேகம் சிறந்த வெகுமதிகளைக் கொடுத்து அவனை பாபிலோன் மாகாணம் முழுதுக்கும் அதிபதியாகவும் பாபிலோனிலுள்ள சகல ஞானிகளுக்கும் பிரதான தலைவனாகவும் நியமித்

49 தான். தானியேல் ராஜாவைக் கேட்டுக்
கொண்டதின்படியே ராஜா ஷாத்ராக்கையும்
மேஷாக்கையும் ஆபேத்நேகோவையும் பாபி
லோன் மாகாணத்துக் காரியங்களைப் பார்க்
கும்படி வைத்தான்; தானியேலோ ராஜா
வின் அரமனையில் இருந்தான்.

**3** 1 ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அறுபது
முழ உயரமும் ஆறுமுழ அகலமுமான
ஒரு பொற்சிலையைச்செய்து பாபிலோன்
மாகாணத்திலுள்ள தூரா என்னும் சமபூமி
2 யிலே நிறுத்தினான். பின்பு ராஜாவாகிய
நேபுகாத்நேச்சார் தேசாதிபதிகளையும் அதி
காரிகளையும் தலைவரையும் நியாயாதிபதிக
ளையும் பொக்கிஷக்காரரையும் நீதி சாஸ்திரி
களையும் மணியகாரரையும் நாடுகளிலுள்ள
உத்தியோகஸ்தர் யாவரையும் நேபுகாத்நேச்
சார் ராஜா நிறுத்தின சிலையின் பிரதிஷ்
டைக்கு வந்து சேரும்படி அழைத்தனுப்பி
3 னான். அப்பொழுது தேசாதிபதிகளும் அதி
காரிகளும் தலைவரும் நியாயாதிபதிகளும்
பொக்கிஷக்காரரும் நீதி சாஸ்திரிகளும்
மணியகாரரும் நாடுகளிலுள்ள உத்தியோ
கஸ்தர் யாவரும் ராஜாவாகிய நேபுகாத்நேச்
சார் நிறுத்தின சிலையின் பிரதிஷ்டைக்கு
வந்து சேர்ந்து நேபுகாத்நேச்சார் நிறுத்தின
4 சிலைக்கு எதிரே நின்றார்கள். கட்டியக்கா
ரன் உரத்த சத்தமிட்டு: ஜனங்களே, ஜாதி
யாரே, பாஷைக்காரரே, உங்களுக்கு அறி
5 விப்பதைக் கேளுங்கள்: எக்காளம், நாக
சுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்
புரு முதலான சகலவித தேவாத்தியங்களின்
சத்தத்தை நீங்கள் கேட்கும்போது நீங்கள்
தாழ விழுந்து, ராஜாவாகிய நேபுகாத்நேச்
சார் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து
6 கொள்ளவேண்டும். எவனெவனும் தாழ
விழுந்து அதைப் பணிந்துகொள்ளாமற்
போனால் அவன் அக்ஷணமே எரிகிற அக்
7 கினிச்சூளையின் நடுவிலே போடப்படுவான்
என்றான். ஆகவே சகல ஜனங்களும் எக்
காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுர
மண்டலம் முதலான சகலவித தேவாத்தி
யங்களின் சத்தத்தைக் கேட்டவுடனே
சகல ஜனத்தாரும் ஜாதியாரும் பாஷைக்
காரரும் தாழவிழுந்து, ராஜாவாகிய நேபு
காத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையைப்
8 பணிந்துகொண்டார்கள்.
அச்சமயத்திலே கல்தேயரில் சிலர் கிட்டி
9 வந்து யூதர்பேரில் குற்றஞ்சாட்டி, | ராஜா
10 வாகிய நேபுகாத்நேச்சாரைப் பார்த்து: ராஜா
வே, நீர் என்றும் வாழ்க, எக்காளம், நாக
சுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்
புரு முதலான சகலவித தேவாத்தியங்களின்
சத்தத்தையும் கேட்கிற எந்த மனுஷனும்
தாழவிழுந்து பொற்சிலையைப் பணிந்து
கொள்ள வேண்டுமென்றும் | எவனெவனும் 11
தாழவிழுந்து பணிந்துகொள்ளாமற்
போனால் அவன் எரிகிற அக்கினிச் சூளை
யின் நடுவிலே போடப்படவேண்டுமென்
றும் ராஜாவே, நீர் கட்டளையிட்டீரே. பாபி 12
லோன் மாகாணத்தின் காரியங்களைப்
பார்க்கும்படி நீர் ஏற்படுத்தின ஷாத்ராக்,
மேஷாக், ஆபேத்நேகோ என்னும் யூதஜாதி
மனிதர் இருக்கிறார்களே; அந்த மனிதர்
ராஜாவாகிய உம்மை மதிக்கவில்லை, அவர்
கள் உமது தேவர்களுக்கு ஆராதனை செய்
யாமலும் நீர் நிறுத்தின பொற்சிலையைப்
பணிந்துகொள்ளாமலும் இருக்கிறார்கள்
என்றார்கள்.
அப்பொழுது நேபுகாத்நேச்சார் உக்கிர 13
கோபங்கொண்டு ஷாத்ராக்கையும் மேஷாக்
கையும் ஆபேத்நேகோவையும் அழைத்துக்
கொண்டுவரக் கட்டளையிட்டான்; அவர்
கள் அந்த மனிதரை ராஜாவின் சமுகத்தில்
கொண்டுவந்து விடவே | நேபுகாத்நேச்சார் 14
அவர்களைப் பார்த்து: ஷாத்ராக், மேஷாக்
ஆபேத்நேகோ என்பவர்களே, நீங்கள் என்
தேவர்களுக்கு ஆராதனை செய்யாமலும்
நான் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து
கொள்ளாமலும் இருந்தீர்களே, வேண்டு
மென்றே அப்படியிருந்தீர்களா? இப்போ 15
தும் எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை,
சுரமண்டலம், தம்புரு முதலான சகலவித
தேவாத்தியங்களின் சத்தத்தையும் நீங்கள்
கேட்கும்போது தாழவிழுந்து, நான் செய்து
வைத்திருக்கிற சிலையைப் பணிந்துகொள்ள
ஆயத்தமாயிருந்தால் நன்றும், பணிந்து
கொள்ளாதிருப்பீர்களேயாகில் அக்ஷணமே
எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே
போடப்படுவீர்கள்; உங்களை என் கைக்குத்
தப்புவிக்கப்போகிற தெய்வம் எது என்றான்.
அதைக் கேட்கவே ஷாத்ராக், மேஷாக், 16
ஆபேத்நேகோ என்பவர்கள் ராஜாவைப்
பார்த்து: நேபுகாத்நேச்சாரே, இந்தக் காரி
யத்தைப்பற்றி நாங்கள் உத்தரவு சொல்வது
அவசியமில்லை. நீர் சொல்லுகிறபடி சம்ப 17
வித்தால் நாங்கள் வணங்குகிற எங்கள் கட
வுள் எங்களைத் தப்புவிக்க வல்லவர்; அவர்
எரிகிற அக்கினிச்சூளைக்கும் ராஜாவாகிய
உமது கைக்கும் எங்களை நீங்கலாக்கி விடு
விப்பார். அப்படிச் செய்யாதேபோனா 18
லும் நாங்கள் உமது தேவர்களை வணங்கு
வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப்
பணிந்துகொள்வதுமில்லை, இது ராஜாவா

கிய உமக்குத் தெரிந்திருக்கட்டும் என்றார்கள்.

19 அப்பொழுது நேபுகாத்நேச்சார் ஷாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுக்கு விரோதமாய்க் கடுங்கோபங்கொள்ளவே அவன் முகம் வேறுபட்டது; சூளையைச் சாதாரணமாய்ச் சூடாக்குவதைப் பார்க்கிலும் ஏழுமடங்கு அதிகமாய்ச் சூடாக்
20 கும்படி உத்தரவுகொடுத்து | ஷாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களை எரிகிற அக்கினிச் சூளையிலே போடுவதற்கு அவர்களைக் கட்டும்படி தன் இராணுவத்தில் பலசாலிகளான ஆட்களுக்குக் கட்டளையிட்
21 டான். அப்படியே அவர்கள் தங்கள் அங்கிகள், உள்ளாடைகள், பாகைகள், மற்ற வஸ்திரங்கள் தரித்திருந்தபடியே கட்டப்பட்டு, எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே போ
22 டப்பட்டார்கள். ராஜகட்டளை கடுமையாகவும் சூளை மிகவும் சூடாகவும் இருந்தபடியினால் ஷாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்னும் அந்த மூவரும் கட்டுண்டவர்களாய் எரிகிற அக்கினிச் சூளையின் நடுவிலே தள்ளப்படுகையில் | அக்கினி ஜ்வா
23 லையானது ஷாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களைக் கொண்டுபோன ஆட்களைக் கொன்றுபோட்டது

24 அபபொழுது நேபுகாத்நேச்சார் ராஜாதிகில்கொண்டு பரபரப்புடன் எழுந்து தன் மந்திரிமாரைப் பார்த்து: நாம் கட்டி அக்கினியிலேபோட்டது மூன்று ஆட்களையல்லவா என்று கேட்க அவர்கள், ஆம் ராஜா
25 வே அப்படித்தான் என்றார்கள். அப்பொழுது அவன்: இதோ, கட்டப்படாதவர்களாய் நாலுபேர் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன்; அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை, நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனைப்போலிருக்கிறது என்
26 றான். பின்பு நேபுகாத்நேச்சார் எரிகிற அக்கினிச்சூளையின் வாசலண்டைபோய், ஷாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களே, உன்னதமான கடவுளின் அடியாரே, வெளியே வாருங்கள் என்றான்; அப்பொழுது ஷாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் அக்கினியின் நடுவிலி
27 ருந்து வெளியே வந்தார்கள். தேசாதிபதிகளும் அதிகாரிகளும் தலைவரும் ராஜாவின் மந்திரிகளும் கூடிவந்து அந்த ஆட்களைப் பார்க்கவே அவர்கள் சரீரங்களில் அக்கினி தீங்கொன்றும் செய்யவில்லையென்று கண்டார்கள்; அவர்கள் தலைமயிர் கருகவில்லை, அவர்களுடைய அங்கிகள் சேதப்படவில்லை, நெருப்பு மணம் அவர்களிடம் வீசவில்லை.

அப்பொழுது நேபுகாத்நேச்சார் பேசத் 28
தொடங்கி: ஷாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களின் கடவுளுக்கு ஸ்தோத்திரம்; அவர் தமது தூதனை அனுப்பித் தமது அடியாரை விடுவித்தார், அவர்கள் தங்களுடைய கடவுளைத் தவிர வேறொரு தெய்வத்தையும் சேவித்து வணங்காதபடி அவரையே நம்பி ராஜகட்டளையைமீறித் தங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுத்தார்கள். ஆதலால் நான் பிறப்பிக்கும் கட்டளை இதுவே, 29
ஷாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய கடவுளுக்கு விரோதமாகத் தூஷணவார்த்தையைச் சொல்லுகிற எந்த ஜனத்தானும் எந்த ஜாதியானும் எந்த பாஷைக்காரனும் துண்டிக்கப்படுவான்; அவன் வீடு குப்பைமேடாக்கப்படும்; இவ்விதமாய் ரட்சிக்கும் கடவுள் வேறெவருமில்லையென்று சொன்னான். பின்பு ராஜா 30
ஷாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுக்குப் பாபிலோன் மாகாணத்திலே உயர்ந்த பதவிகள் அளித்தான்.

**4** ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் பூமியெங்கும் குடியிருக்கிற சகல ஜனத்தாருக்கும் ஜாதியாருக்கும் பாஷைக்காரருக்கும் எழுதுகிறதாவது: உங்களுக்குச் சமாதானம் பெருக. உன்னதமான கடவுள் எனக்குக் 2
காட்டின அடையாளங்களையும் அற்புதங்களையும் பிரசித்தப்படுத்துவது நலமென எனக்குத் தோன்றுகிறது.

அவருடைய அடையாளங்கள் எவ்வ 3
ளவு மகத்துவம்!
அவருடைய அற்புதங்கள் எவ்வளவு
வல்லமை!
அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம்;
அவருடைய ஆளுகை தலைமுறை தலை
முறையாம்.

நேபுகாத்நேச்சாராகிய நான் என் வீட்டி 4
லே சவுக்கியமாயிருந்து என் அரமனையிலே வாழ்ந்துகொண்டிருந்தேன். ஒரு சொப்ப 5
னம்கண்டேன், அது எனக்குத் திகிலை உண்டாக்கிற்று; என் படுக்கையின்மேல் எனக்குண்டான நினைவுகளும் நான் கண்ட தரிசனங்களும் என்னைப் பயமுறுத்தின. ஆகை 6
யால் சொப்பனத்தின் அர்த்தத்தை எனக்கு அறிவிப்பதற்கெனப் பாபிலோன் ஞானிகளையெல்லாம் என்னிடம் அழைத்துவரக் கட்டளை பிறப்பித்தேன். அப்பொழுது சாஸ்திரி 7
களும் ஜோசியரும் கல்தேயரும் குறி சொல்லுகிறவர்களும் என்னிடத்திலே வந்தார்கள்; சொப்பனத்தை நான் அவர்களுக்குச் சொன்னேன்; அவர்களோ அதின் அர்த்

8 தத்தை எனக்கு அறிவிக்கவில்லை. கடைசியிலே என் தெய்வத்தினுடைய நாமத்தின்படியே பெல்தெஷாத்சார் என்னும் பெயரிடப்பட்டவனும் பரிசுத்த தேவர்களின் ஆவியையுடையவனுமான தானியேலை என்னிடம் அழைத்துவந்தார்கள், அவனுக்கு நான்
9 சொப்பனத்தை விவரித்து: சாஸ்திரிகளின் தலைவனுகிய பெல்தெஷாத்சாரே, பரிசுத்த தேவர்களுடைய ஆவி உனக்குள் இருக்கிறதென்றும் எந்த மறைபொருளையும் அறிவது உனக்கு அரிதல்லவென்றும் நான் அறிவேன்; நான் கண்ட என் சொப்பனத்தின் தரிசனங்களையும் அதின் அர்த்தத்தையும் சொல்லு.
10 என் படுக்கையிலே நான் கண்ட தரிசனங்கள் இவைகளே: இதோ பூமியின் மத்தியிலே மிகவும் உயரமான ஒரு மரத்தைக்
11 கண்டேன். அந்த மரம் வளர்ந்து பலத்தது, அது உயரமாகி வானபரியந்தம் எட்டினது, பூமியின் கடைமுனைமட்டும் தெரிந்
12 தது. அதின் இலைகள் நேர்த்தியானவை, அதின் கனி ஏராளம், சகல பிராணிகளுக்கும் அதில் ஆகாரமிருந்தது; அதின் கீழே காட்டுமிருகங்கள் நிழலுக்கு ஒதுங்கின; அதின் கொப்புகளில் ஆகாயத்துப் பறவைகள் தங்கின; மாமிசமான யாவும் அதினால்
13 போஷிக்கப்பட்டன. நான் படுத்திருக்கையில் நான் கண்ட தரிசனங்களிலே, இதோ, பரிசுத்தனுதன் ஒருவன் வானத்திலிருந்து
14 இறங்கி வரக்கண்டேன். அவன் உரத்த சத்தமிட்டு, இந்த மரத்தை வெட்டி இதின் கொப்புகளைத் தறித்துப்போடுங்கள்; இதின் இலைகளைப்பறித்து இதின் கனிகளைச் சிதறிவிடுங்கள்; இதின் கீழுள்ள மிருகங்களும் இதின் கொப்புகளிலுள்ள பறவைகளும்
15 போய்விடட்டும். எனினும் இதின் அடி மரம் வேர்களோடு பூமியில் இருக்கட்டும்; இரும்பும் செம்புமான விலங்கு இடப்பட்டு வெளியின் பசும்புல்லிலே நிற்கட்டும்; ஆகாயத்துப் பனியிலே நனைந்து மிருகங்களோடே பூமியின் பூண்டிலே அவன் பங்கு
16 பெறுவான். அவனுடைய இருதயம் மனுஷ இருதயமாயிராமல் மாறும்படி மிருக இருதயம் அவனுக்குக் கொடுக்கப்படும், இப்படியே அவன்மேல் ஏழு காலங்கள் கடந்து
17 போகவேண்டும். தூதரின் தீர்மானத்தினால் ஏற்படுத்தப்பட்டது, பரிசுத்தமுள்ளவர்களின் கட்டளையினால் நியமிக்கப்பட்டது; உன்னதமானவர் மானிட ராஜ்யத்தில் ஆளுகைசெய்து தமக்கு இஷ்டமானவனுக்கு அதைக் கொடுத்து மனுஷரில் தாழ்வானவனையும் அதின்மேல் அதிகாரியாக்குகிறார் என்று இதின் மூலமாய் உயிருள்ள யாவும் அறிந்துகொள்ளும் என்று சொன்னேன். நேபுகாத்நேச்சார் ராஜாவாகிய நான் 18
கண்ட சொப்பனம் இதுவே; இப்போதும் பெல்தெஷாத்சாரே, நீ இதின் அர்த்தத்தைச் சொல்லு; என் ராஜ்யத்திலுள்ள ஞானிகள் எல்லாரும் இதின் அர்த்தத்தை எனக்கு அறிவிக்கமுடியாமற் போனார்கள்; நீயே இதை அறிவிக்கும் திறமையுடையவன், பரிசுத்த தேவர்களின் ஆவி உனக்குள் இருக்கிறதே என்றான்.

அப்பொழுது பெல்தெஷாத்சரென்னும் 19
பெயர்கொண்ட தானியேல் சிறிதுநேரம் திகைத்து நின்றான், அவன் நினைவுகள் அவனைப் பயமுறுத்தின, அது கண்ட ராஜா அவனைப் பார்த்து, பெல்தெஷாத்சாரே, சொப்பனமும் அதின் அர்த்தமும் உன்னைப் பயமுறுத்தவேண்டாம் என்று சொல்லவே பெல்தெஷாத்சார் பதிலுரைத்து: என் ஆண்டவனே, அந்தச் சொப்பனம் உமது பகைவரிடத்திலும் அதின் அர்த்தம் உம்முடைய சத்துருக்களிடத்திலும் பலிப்பதாகுல் நன்றும். நீர் கண்ட மரம் வளர்ந்து பலத்தது, 20
அது உயரமாகி வானபரியந்தம் எட்டினது, அது பூமியின் கடைமுனைமட்டும் தெரிந்தது. அதின் இலைகள் நேர்த்தியானவை, 21
அதின் கனி ஏராளம், சகல பிராணிகளுக்கும் அதில் ஆகாரமிருந்தது; அதின்கீழே காட்டுமிருகங்கள் தங்கின, அதின் கொப்புகளில் ஆகாயத்துப் பறவைகள் கூடுகட்டின. ராஜாவே, அந்த மரம் நீரே; நீர் பெரி 22
யவர், பலத்தவர்; உமது மகத்துவம் பெருகி வானபரியந்தம் எட்டுகிறது, உமது அரசாட்சி பூமியின் கடைமுனைமட்டும் செல்லுகிறது. ராஜாவாகிய நீர் வானின்று இறங்கிய 23
பரிசுத்த தூதன் ஒருவனைக் கண்டீரே, அவன் பேசி, இந்த மரத்தை வெட்டி அழித்துப்போடுங்கள்; எனினும் இதின் அடிமரம் வேர்களோடு பூமியில் இருக்கட்டும், இரும்பும் செம்புமான விலங்கு இடப்பட்டு வெளியின் பசும்புல்லிலே நிற்கட்டும், ஆகாயத்துப் பனியிலே நனைந்து மிருகங்களோடே அவன் பங்குபெறுவான், ஏழு காலங்கள் அவன்மேல் கடந்துபோகுமட்டும் அப்படியே இருக்கும் என்று சொன்னான். ராஜாவே அதின் அர்த்தம் இதுவே—ராஜா 24
வாகிய என் ஆண்டவன்பேரில் வந்த உன்னதமானவருடைய தீர்மானம் இதுவே:—நீர் மனுஷரினின்று தள்ளிவிடப்பட்டு வெளியின் மிருகங்களோடே வசிப்பீர், மாடுகளைப் போலப் புல் மேய்ந்து, ஆகாயத்துப் பனியிலே நனைவீர். ஏழுகாலங்கள் உம்முடைய 25
பேரில் கடந்துபோகவேண்டும், உன்னதமா

னவர் மானிட ராஜ்யத்தில் ஆளுகைசெய்து தமக்கு இஷ்டமானவனுக்கு அதைக்கொடுக்கிறார் என்பதை நீர் அறிந்துகொள்ளுமட்டும்
26 அப்படியிருக்கும். அடிமரம் வேர்களோடு பூமியில் இருக்கட்டும் என்று சொல்லப்பட்டபடியே, பரலோகமே ஆளுகை செய்கிறதென்று நீர் அறிந்தவுடன் ராஜ்யம் உம்மு
27 டையதாகும். ஆகையால் ராஜாவே, நான் சொல்லும் ஆலோசனையை நீர் அங்கீகரித்துக்கொள்ளும்; நீதியைச் செய்து உமது பாவங்களை அகற்றும், சிறுமையானவர்களுக்கு இரங்கி உமது அக்கிரமங்களை அகற்றிவிடும்; இப்படிச் செய்வதினால் உமது வாழ்வு நிலைநிற்கலாம் என்று சொன்னான்.
28 இதெல்லாம் ராஜாவாகிய நேபுகாத்நேச்
29 சாரின்மேல் வந்தது. பன்னிரண்டுமாதம் சென்றபின்பு, ராஜா பாபிலோன் ராஜ்யத்தின் அரமனைமேல் உலாவிக்கொண்டிருக்
30 கும்போது அவன் பேசத்தொடங்கி, இது என் மிகுந்த பலத்தினால் என் மகத்துவத்தின் மகிமைக்கென்று ராஜ்ய அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா
31 என்று சொன்னான். இந்த வார்த்தை ராஜாவின் வாயில் இருக்கையிலேயே வானத்திலிருந்து ஒரு சத்தம் பிறந்து: நேபுகாத்நேச்சார் ராஜாவே, அரசாட்சி உன்னைவிட்டு
32 அகன்றது; மனுஷரினின்று தள்ளப்படுவாய், வெளியின் மிருகங்களோடே வசிப்பாய்; மாடுகளைப்போல் புல் மேய்வாய், ஏழு காலங்கள் உன்மேல் கடந்துபோகும்; உன்னதமானவர் மானிட ராஜ்யத்தில் ஆளுகை செய்து தமக்கு இஷ்டமானவனுக்கு அதைக் கொடுக்கிறாரென்பதை நீ அறிந்துகொள்ளுமட்டும் இப்படியிருக்கும் என்று உனக்குச்
33 சொல்லப்படுகிறது என்றுவிளம்பினது. அந்நேரமே இந்த வார்த்தை நேபுகாத்நேச்சாரிடத்தில் நிறைவேறிற்று; அவன் மனுஷரினின்று தள்ளப்பட்டு மாடுகளைப்போல் புல்மேய்ந்தான்; அவன் தலைமயிர் கழுகு இறகுகளைப் போலவும் அவன் நகங்கள் பறவை நகங்களைப்போலவும் வளருமட்டும் அவன் சரீரம் ஆகாயத்துப் பனியிலே நனைந்தது.
34 அந்த நாட்கள் சென்றபின்பு நேபுகாத்நேச்சாராகிய நான் கண்ணிமிர்ந்து வானத்தை நோக்கினேன், என் புத்தி எனக்குத் திரும்பிவந்தது, அப்பொழுது நான் உன்னதமானவரை ஸ்தோத்திரித்து நித்திய ஜீவியாயிருப்பவரைப் புகழ்ந்து மகிமைப்படுத்தினேன்; அவருடைய ஆளுகையே நித்திய ஆளுகை, அவருடைய ராஜ்யமே தலைமுறை
35 தலைமுறையாக நிற்கும். பூமியின் குடிகள் எல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணப்படுகிறார்கள்; அவர் தமது இஷ்டப்படியே வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார்; அவருடைய கையைத் தடுத்து, என்ன செய்கிறீரென்று சொல்பவன் ஒருவனும் இல்லை என்றேன்.
36 அவ்வேளையில் என் புத்தி எனக்குத் திரும்பி வந்தது; என் ராஜ்யத்தின் மேன்மைக்கென்று என் மகிமையும் என் சிறப்பும் எனக்குத் திரும்பி வந்தது; என் மந்திரிமாரும் என் பிரபுக்களும் என்னைத் தேடிவந்தார்கள்; என் ராஜ்யத்திலே நான் ஸ்திரப்படுத்தப்பட்டேன், அதிக மகத்துவமும் எனக்குக்
37 கிடைத்தது. ஆகையால் நேபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தின் ராஜாவைப் புகழ்ந்து, உயர்த்தி மகிமைப்படுத்துகிறேன்; அவருடைய செயல்களெல்லாம் உண்மை; அவருடைய வழிகள் நியாயம்; அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று எழுதினான்.

5 பெல்ஷாத்சார் என்னும் ராஜா தன்
பிரபுக்களாகிய ஆயிரவருக்கு ஒரு பெரிய விருந்துசெய்து அந்த ஆயிரவரோடு
2 சேர்ந்து திராட்சரசம் குடித்தான். பெல்ஷாத்சார் திராட்சரசம் ருசித்திருக்கையில் அவன் தன் தகப்பனாகிய நேபுகாத்நேச்சார் எருசலேம் தெய்வாலயத்திலிருந்து கொண்டுவந்த பொன் வெள்ளிப் பாத்திரங்களில் ராஜாவாகிய தானும் தன் பிரபுக்களும் தன் மனைவிகளும் தன் மறுமனையாட்டிகளும் குடிப்பதற்கென்று அவைகளைக் கொண்டுவரக் கட்டளையிட்டான்.
3 அப்பொழுது எருசலேமிலே கடவுளின் வீடாகிய ஆலயத்திலிருந்து எடுக்கப்பட்ட பொற்பாத்திரங்களைக் கொண்டுவந்தார்கள்; அவைகளில் ராஜாவும் அவன் பிரபுக்களும் அவன் மனைவிகளும் அவன் மறுமனையாட்டிகளும் குடித்தார்கள்.
4 அவர்கள் திராட்சரசம் குடித்துப் பொன்னும் வெள்ளியும் செம்பும் இரும்பும் மரமும் கல்லுமான தேவர்களைப் புகழ்ந்தார்கள்.
5 அந்நேரத்தில் மானிட கைவிரல்கள் தோன்றி விளக்குக்கு எதிரே ராஜ அரமனையில் வெள்ளையடித்த சுவரிலே எழுதின, எழுதின அந்தக் கையை ராஜா கண்டான்.
6 காணவே ராஜாவின்முகம் வேறுபட்டது; அவன் நினைவுகள் அவனுக்குத் திகில் விளைத்தன, அவனுடைய இடுப்பு நடுங்கினது, அவனுடைய முழங்கால்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டன.
7 ராஜா உரத்த சத்தமிட்டு, ஜோசியரையும் கல்

தேயரையும் குறிசொல்லுகிறவர்களையும் உள்ளே அழைத்துவரும்படி சொன்னான். ராஜா பாபிலோன் ஞானிகளைப் பார்த்து: இந்த எழுத்தை வாசித்து இதின் அர்த்தத்தை எனக்கு வெளிப்படுத்துகிறவன் எவனோ அவன் இரத்தாம்பரமும் கழுத்திலே பொற் சரப்பணியும் தரிக்கப்பட்டு, ராஜ்யத்திலே மூன்றும் அதிபதியாய் இருப்பான் என்று 8 சொன்னான். அப்பொழுது ராஜாவின் ஞானிகளெல்லாரும் வந்து சேர்ந்தார்கள்; ஆனாலும் அவர்கள் அந்த எழுத்தை வாசிக்கவும் அதின் அர்த்தத்தை ராஜாவுக்கு அறிவிக்கவும் முடியாமற்போனார்கள்.

9 அப்பொழுது ராஜாவாகிய பெல்ஷாத்சார் மிகவும் பயங்கொண்டான், அவனுடைய முகம் வேறுபட்டது, அவன் பிர 10 புக்கள் திகில்கொண்டார்கள். ராஜாவும் அவன் பிரபுக்களும் செய்த சத்தத்தைக் கேட்டு அரசமாதா விருந்துசாலைக்குள் வந்தாள். அவள் பேசத்தொடங்கி: ராஜாவே, நீர் என்றும் வாழ்க; உமது நினைவுகள் உமக்குத் திகில் வினைக்கவேண்டாம், உமது 11 முகம் வேறுபடவும் வேண்டாம். உம்முடைய ராஜ்யத்திலே ஒரு மனிதன் இருக்கிறான், அவனுக்குள் பரிசுத்த தேவர்களின் ஆவி இருக்கிறது, உமது பிதாவின் நாட்களில் புத்தியும் விவேகமும் தேவர்களின் ஞானத்துக்குச் சமானமான ஞானமும் அவனிடம் காணப்பட்டன; உமது பிதாவாகிய நேபுகாத்நேச்சார் ராஜா, உமது பிதாவே, அவனைச் சாஸ்திரிகளுக்கும் ஜோசியருக்கும் கல்தேயருக்கும் குறிசொல்லுகிறவர்களுக்கும் 12 தலைவனாக நியமித்தார். ராஜா பெல்தெஷாத்சாரென்று பெயரிட்ட அந்த தானியேலுக்குள் சொப்பனங்களை வியாக்கியானம்பண்ணுகிறதும் மறைபொருள்களை வெளிப்படுத்துகிறதும் கருகலானவைகளைத் தெளிவிக்கிறதுமான விசேஷித்த ஆவியும் அறிவும் விவேகமும் உண்டென்று காணப்பட்டது; இப்போதும் தானியேல் அழைக்கப்படட்டும், அவன் அர்த்தத்தைதெரிவிப்பான் என்றார்.

13 அப்பொழுது தானியேலை ராஜசந்நிதியில் அழைத்து வந்தார்கள்; ராஜா தானியேலைப் பார்த்து: என் பிதாவாகிய ராஜா யூதாவிலிருந்து சிறை பிடித்துவந்த யூதரில் தானி 14 யேல் என்பவன் நீதான் அல்லவா? உனக்குள்ளே தேவர்களின் ஆவி உள்ளதென்றும் புத்தியும் விவேகமும் விசேஷித்த ஞானமும் உன்னிடத்தில் காணப்பட்டதென்றும் உன் 15 னைப்பற்றிக் கேள்விப்பட்டேன். இப்போதும் இந்த எழுத்தை வாசிக்கிறதற்கும் அதின் அர்த்தத்தை எனக்கு அறிவிக்கிறதற்கும் ஞானிகளும் ஜோசியரும் என் சந்நிதியில் அழைத்துக்கொண்டுவரப்பட்டார்கள்; இந்த எழுத்தின் அர்த்தத்தை தெரிவிக்கவோ அவர்களால் முடியாமற்போயிற்று. பொருளை வெளிப்படுத்தவும் கருகலானவை 16 களைத் தெளிவிக்கவும் உன்னாலாகுமென்று உன்னைப்பற்றிக் கேள்விப்பட்டேன்; இப்போதும் இந்த எழுத்தை வாசிக்கவும் இதின் அர்த்தத்தை எனக்கு அறிவிக்கவும் உன்னாலாகுமானால் நீ இரத்தாம்பரமும் கழுத்திலே பொற்சரப்பணியும் தரிப்பிக்கப்பட்டு ராஜ்யத்திலே மூன்றும் அதிபதியாய் இருப்பாய் என்றார்.

அப்பொழுது தானியேல் ராஜாவுக்கு பதி 17 லுரைத்து: உமது வெகுமானங்கள் உம்மிடத்திலேயே இருக்கட்டும், உமது பரிசுகளை வேறொருவனுக்குக் கொடும்; ஆயினும் இந்த எழுத்தை நான் ராஜாவுக்கு வாசித்து இதின் அர்த்தத்தை அறிவிப்பேன். ராஜா 18 வே, உன்னதமான கடவுள் உமது பிதாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு ராஜ்யத்தையும் மகத்துவத்தையும் மேன்மையையும் மகிமையையும் கொடுத்தார். அவருக்குக் கொ 19 டுக்கப்பட்ட மகத்துவத்தினாலே சகல ஜனங்களும் ஜாதியாரும் பாஷைக்காரரும் அவருக்கு முன்பாகப் பயந்து நடுங்கியிருந்தார்கள்; அவர் தமது இஷ்டப்படியே ஒருவனைக்கொன்றுபோடுவார், தமது இஷ்டப்படியே ஒருவனை உயிரோடே வைப்பார்; தமது இஷ்டப்படியே ஒருவனை உயர்த்துவார், தமது இஷ்டப்படியே ஒருவனைத் தாழ்த்துவார். அவருடைய இருதயம் பெருமை 20 கொண்டு அவருடைய மனது கர்வத்தினாலே கடினப்பட்டபோது அவர் தமது சிங்காசனத்திலிருந்து தள்ளப்பட்டார்; அவருடைய மேன்மை அவரைவிட்டு அகன்று போயிற்று. அவர் மனுஷரினின்று தள் 21 ளப்பட்டார்; அவருடைய இருதயம் மிருக இருதயம் போலாயிற்று, காட்டுக் கழுதைகளோடே வசித்தார், மாடுகளைப்போல் புல் மேய்ந்தார், அவர் சரீரம் ஆகாயத்துப்பனியில் நனைந்தது; உன்னதமான கடவுள் மனுஷரின் ராஜ்யத்தில் ஆளுகை செய்து தமக்கு இஷ்டமானவனை அதின்மேல் அதிகாரியாக்குகிறார் என்று அவர் உணர்ந்துகொள்ளுமட்டும் அப்படியே இருந்தார். அவரு 22 டைய குமாரனாகிய பெல்ஷாத்சார் என்னும் நீரோ இவற்றையெல்லாம் அறிந்திருந்தும் உமது இருதயத்தைத் தாழ்த்தாமல், பரலோகத்தின் ஆண்டவருக்கு விரோதமாக 23 உம்மை உயர்த்தினீர், அவருடைய ஆலயத்தின் பாத்திரங்கள் உமது சமுகத்தில்

கொண்டுவரப்பட்டன; நீரும் உமது பிரபுக்களும் உமது மனைவிகளும் உமது மறுமனையாட்டிகளும் அவைகளில் திராட்சரசம் குடித்தீர்கள்; இதுவுமன்றிக் காணுமலும் கேளாமலும் உணராமலும் இருக்கிற வெள்ளியும் பொன்னும் செம்பும் இரும்பும் மரமும் கல்லுமான தேவர்களைப் புகழ்ந்தீர்; தமது கையில் உமது சுவாசத்தை வைத்திருக்கிறவரும் உமது வழிகளுக்கு எல்லாம் அதிகாரியுமாகிய கடவுளையோ 24 நீர் மகிமைப்படுத்தவில்லை. ஆகவே அவரால் அனுப்பப்பட்ட அந்தக் கை இந்த 25 எழுத்தை எழுதினது. எழுதப்பட்ட எழுத்து இதுவே, மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின் என்பதே. இந்த வசனத்தின் அர்த்தமாவது: மெனே என்பதற்கு கடவுள் உன் ராஜ்யத்தின் நாட்களை எண்ணிக்கையிட்டு அதற்கு முடிவுண்டாக்கினார் 27 என்று அர்த்தம்; தெக்கேல் என்பதற்கு, நீர் தராசிலே நிறுக்கப்பட்டுக் குறையக் கா 28 ணப்பட்டாய் என்று அர்த்தம்; பெரேஸ் என்பதற்கு, உன் ராஜ்யம் பிரிக்கப்பட்டு மேதியருக்கும் பாரசீகருக்கும் கொடுக்கப்பட்டது என்று அர்த்தமாம் என்றான். 29 பெல்ஷாத்சார் கட்டளையிட்டிருந்தபடியே அப்பொழுது அவர்கள் தானியேலுக்கு இரத்தாம்பரத்தையும் அவனுடைய கழுத்தில் பொற்சரப்பணியையும் தரிப்பித்தார்கள்; ராஜ்யத்திலே அவன் மூன்றாம் அதிபதி என்று அவனைப்பற்றிப் பறைசாற்றப்பட் 30 டது. அன்று இரவிலேயே கல்தேயரின் ராஜாவாகிய பெல்ஷாத்சார் கொலைசெய்யப் பட்டான்.

31 மேதியனாகிய தரியு தன் அறுபத்திரண்டாம் வயதில் ராஜ்யத்தை ஏற்றுக்கொண்டான்.

**6** ராஜ்யம் முழுவதிலும் இருக்கும்படிக்குத் தன் ராஜ்யத்தின்மேல் நூற்றிருபது தேசாதிபதிகளை ஏற்படுத்துவது தரியுவுக்கு 2 நலமெனக்கண்டது. அவர்களுக்குமேலாக மூன்று பிரதானிகளை நியமித்தான்; இவர்களில் தானியேல் ஒருவன்; ராஜாவுக்கு நஷ்டம் வராதபடி அந்த தேசாதிபதிகள் இவர்களுக்குக் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். 3 இப்படியிருக்கையில் தானியேலுக்குள் உத்தம ஆவி இருந்தமையால் அவன் பிரதானிகளுக்கும் தேசாதிபதிகளுக்கும் மேலானவனாய் விளங்கினான்; முழு ராஜ்யத்தின்மேலும் அவனை ஏற்படுத்த ராஜா நினைத்தான். 4 அப்பொழுது பிரதானிகளும் தேசாதிபதிகளும் ராஜ்யவிஷயத்திலே தானியேலைக் குற்றப்படுத்தும்படியான முகாந்தரத்தைத் தேடினார்கள்; தேடியும் ஒரு முகாந்தரத்தையேனும் குற்றத்தையேனும் கண்டுபிடிக்க முடியாமற்போயிற்று; அவன் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் அவன்மேல் சுமத்தியாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை. அப்பொழுது அந்த மனுஷர்: 5 நாம் இந்த தானியேலை அவனுடைய தெய்வ வணக்க விஷயமாய்க் குற்றப்படுத்தும் முகாந்தரத்தைக் கண்டுபிடித்தாலொழிய அவனை வேறொன்றிலும் குற்றப்படுத்தும் முகாந்தரத்தைக் கண்டுபிடிக்க முடியாது என்றார்கள். பின்பு அந்தப் பிரதானி 6 களும் தேசாதிபதிகளும் அவசரமாய் ராஜாவிடம்சென்று அவனோடுபேசி: தரியு ராஜாவே நீர் என்றும் வாழ்க. எவனாகிலும் 7 முப்பதுநாளாக ராஜாவாகிய உம்மைத்தவிர எந்த தேவனையாகிலும் மனுஷனையாகிலும் நோக்கி யாதொரு காரியத்தைப்பற்றி விண்ணப்பம்பண்ணினால் அவன் சிங்கங்களின் கெபியிலே போடப்படவேண்டுமென ராஜா கட்டளையிட்டு விலக்குச்சட்டம் உறுதிப்படுத்த வேண்டுமென்று ராஜ்யத்தின் சகல பிரதானிகளும் அதிகாரிகளும் தேசாதிபதிகளும் மந்திரிமாரும் தலைவரும் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆதலால் 8 இப்போதும் ராஜாவே, மேதியர் பாரசீகருடைய மாறாத பிரமாணத்தின்படியே அந்தச் சட்டம் மாற்றப்படாதபடி நீர் அதைக் கட்டளையிட்டு அதற்குக் கையெழுத்து வைக்கவேண்டும் என்றார்கள். அப்படி 9 யே ராஜாவாகிய தரியு அந்தச் சட்டத்துக்குக் கையெழுத்து வைத்தான்.

தானியேலோ அந்தச் சட்டத்துக்குக் 10 கையெழுத்து வைக்கப்பட்டது என்று அறிந்தும் தினம் மூன்றுவேளையும் தன் வீட்டிற்குள்போய்த் தன் மேல்அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே முழங்காற்படியிட்டுத் தன் கடவுளினிடம் ஜெபம்பண்ணி ஸ்தோத்திரம் செலுத்தினான். அப்பொழுது அந்த மனுஷர் 11 அவசரமாய் வந்து தானியேல் தன் கடவுளினிடம் ஜெபம்பண்ணி விண்ணப்பம் செய்கிறதைக் கண்டார்கள். பின்பு அவர்கள் 12 ராஜாவினிடம் வந்து, ராஜாவின் சட்டத்தைப்பற்றிப் பேசி, எந்த மனுஷனாகிலும் முப்பதுநாளாக ராஜாவாகிய உம்மைத்தவிர எந்தக்கடவுளையாகிலும் மனுஷனையாகிலும் நோக்கி யாதொரு காரியத்தைப்பற்றி விண்ணப்பம்பண்ணினால் அவன் சிங்கங்களின் கெபியிலே போடப்படவேண்டும்

என்று ஈர் பிறப்பித்த சட்டத்திற்குக் கை
யெழுத்து வைத்தீர் அல்லவா என்றார்கள்.
அதற்கு ராஜா ஆம், அந்தக் காரியம் மே
தியர் பாரசீகருடைய மாறுத பிரமாணத்
13 தின்படியே நிலைநிற்கிறதே என்றான். அப்
பொழுது அவர்கள் ராஜாவைப்பார்த்து:
சிறைப்பட்டுவந்த யூதேயா தேசத்தாரில்
தானியேல் என்பவன் உம்மையும் ஈர் பிறப்
பித்துக் கையெழுத்துவைத்த சட்டத்தை
யும் மதியாமல் தினம் மூன்றுவேளையும் தன்
வழக்கப்படியே விண்ணப்பம் பண்ணு
கிறான் என்றார்கள்.
14 ராஜா இதைக்கேட்டபோது தனக்குள்
மிகவும் வருத்தப்பட்டுத் தானியேலை எப்
படிக் காப்பாற்றலாமென்று ஆலோசனை
செய்து அவனைத் தப்புவிப்பதற்காகச் சூரி
யன் அஸ்தமிக்குமட்டும் வகைதேடிக்
15 கொண்டிருந்தான். அப்பொழுது அந்த
மனுஷர் ராஜாவினிடம் அவசரமாய் வந்து:
ராஜா கட்டளையிட்ட எத்தச்சட்டமும் கட்
டளையும் மாற்றப்படுவதில்லையென்பது மே
தியர் பாரசீகருடைய மாறுத பிரமாணம்
என்று நினைத்துக்கொள்ளும் என்றார்கள்.
16 அப்பொழுது ராஜா கட்டளையிட்டபடியே
அவர்கள் தானியேலைக்கொண்டுபோய்ச்
சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள்.
போடுகையில் ராஜா தானியேலைப்பார்த்து:
நீ இடைவிடாமல் சேவிக்கிற உன் கடவுள்
17 உன்னைத் தப்புவிப்பார் என்றான். ஒரு
கல்லைக்கொண்டுவந்து கெபியினுடைய வாச
லின்மேல் வைத்தார்கள்; தானியேலின்
விஷயமாய்ச் செய்யப்பட்டதில் ஒன்றும்
மாற்றப்படாதபடி ராஜா தன் மோதிரத்தி
னாலும் தன் பிரபுக்களின் மோதிரத்தினாலும்
அதின்மேல் முத்திரைபோட்டான்.
18 பின்பு ராஜா தன் அரமனைக்குப்போனான்,
இரவு போஜனம் பண்ணவில்லை, நாட்டிய
மாதரைத் தன்முன் வரவிடவில்லை; அவ
19 னுக்கு நித்திரையும் வராமற்போயிற்று. கா
லமே விழக்கு வெளுக்கும்போது ராஜா
எழுந்திருந்து சிங்கங்களின் கெபிக்கு
20 விரைந்துசென்றான். ராஜா கெபியைக்
கிட்டினபோது துயரசத்தமாய்த் தானியே
லைக் கூப்பிட்டு: தானியேலே, ஜீவனுள்ள
கடவுளின் அடியானே, நீ இடைவிடாமல்
சேவிக்கிற உன் கடவுள் உன்னைச் சிங்கங்
களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தா
21 ரோ என்று தானியேலைக் கேட்டான். அப்
பொழுது தானியேல் ராஜாவுக்குப் பதில்
22 சொன்னான்: ராஜாவே, நீர் என்றும் வாழ்க,
சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடி
கடவுள் தமது தூதனை அனுப்பி அவை
களின் வாயைக் கட்டிப்போட்டார்; அவ
ருக்குமுன்பாக நான் குற்றமற்றவனாய்க்
காணப்பட்டேன், ராஜாவாகிய உமக்குமுன்
பாகவும் நான் தீங்குசெய்ததில்லை என்றான்.
அப்பொழுது ராஜா தனக்குள் மிகவும் சந் 23
தோஷப்பட்டுத் தானியேலைக் கெபியி
லிருந்து தூக்கிவிடச் சொன்னான்; அப்
படியே தானியேல் கெபியிலிருந்து தூக்கி
விடப்பட்டான்; அவன் தன் கடவுளில்
நம்பிக்கை வைத்திருந்தபடியால் அவனில்
ஒரு சேதமும் காணப்படவில்லை. தானி 24
யேலின்மேல் குற்றஞ்சாட்டின மனுஷரை
போ ராஜா கொண்டுவரச்சொன்னான்; அவர்
களையும் அவர்கள் குமாரரையும் அவர்கள்
மனைவிகளையும் சிங்கங்களின் கெபியிலே
போட்டார்கள்; அவர்கள் கெபியின் அடியி
லே சேருமுன்னே சிங்கங்கள் அவர்கள்மேல்
பாய்ந்து அவர்கள் எலும்புகளையெல்லாம்
கொறுக்கிப்போட்டன.
பின்பு தரியு ராஜா பூமியெங்கும் குடி 25
யிருந்த சகல ஜனங்களுக்கும் ஜாதியாருக்கும்
பாஷைக்காரருக்கும் நிருபம் அனுப்பி:
உங்களுக்குச் சமாதானம் பெருக, நான்
பிறப்பிக்கும் கட்டளை இதுவே: என் ராஜ் 26
யத்தின் ஆளுகைக்குள் எங்குமுள்ளவர்கள்
யாவரும் தானியேலின் கடவுளுக்கு நடுங்
கிப் பயப்படவேண்டுமென்று என்னாலே
தீர்மானிக்கப்படுகிறது; அவர் ஜீவனுள்ள
கடவுள், அவர் என்றென்றுமாக நிலைத்திருக்
கிறவர், அவருடைய ராஜ்யம் அழியாதது,
அவருடைய அரசாட்சி முடிவுபரியந்தம்
நிற்கும். தானியேலைச் சிங்கங்களுக்குத் 27
தப்புவித்த அவரே தப்புவிக்கிறவர், ரட்சிக்
கிறவர், வானத்திலும் பூமியிலும் அடை
யாளங்களையும் அற்புதங்களையும் செய்கிற
வர் என்று எழுதினான். தரியுவின் அர 28
சாட்சி காலத்திலும் பாரசீகனாகிய கோரே
சுடைய அரசாட்சி காலத்திலும் தானியேல்
உயர்பதவிபெற்று வாழ்ந்தான்.

பாபிலோன் ராஜாவாகிய பெல்ஷாத் 7
சாரின் முதலாம் வருஷத்திலே தானியேல்
ஒரு சொப்பனத்தைக்கண்டு தன் படுக்கை
யின்மேல் தனக்குத் தோன்றின தரிசனங்
களையும் கண்டான். பின்பு அவன் அந்தச்
சொப்பனத்தை எழுதிக் காரியங்களை இப்
படித் தொகுத்து வரைந்தான்: இரவிலே 2
எனக்குத் தோன்றின தரிசனத்திலே நான்
கண்டது இதுவே, இதோ, வானத்தின் நாலு
காற்றுகளும் பெரிய சமுத்திரத்தின்மேல்
அடித்தன. அப்பொழுது வெவ்வேறு ரூப 3
முள்ள நாலு பெரிய மிருகங்கள் சமுத்

4 திரத்திலிருந்து எழும்பின. முதல் மிருகம் சிங்கத்தைப்போன்றது, அதற்குக் கழுகுச் செட்டைகள்; நான் பார்த்துக்கொண்டிருக்கையிலே அதின் இறகுகள் பிடுங்கப்பட்டன; அது தரையிலே மனுஷனைப்போல இரண்டு காலில் நிமிர்ந்து நிற்கும்படி தூக்கப்பட்டது; மனுஷ இருதயம் அதற்குக் 5 கொடுக்கப்பட்டது. இதோ, கரடியைப் போன்ற வேறே இரண்டாம் மிருகத்தைக் கண்டேன்; அது ஒரு பக்கமாய்ச் சாய்ந்து நின்று தன் வாயின் பற்களுக்குள்ளே மூன்று விலாவெலும்புகளைக் கவ்விக்கொண்டிருந்தது; எழும்பி மிகுதியாய் மாம்சம் தின்னென்று அதற்குச் சொல்லப்பட்டது. 6 அதின் பின்பு நான் பார்க்கவே, இதோ சிவிங்கியைப்போன்ற வேறொரு மிருகம்; அதின் முதுகின்மேல் பறவைச் செட்டைகள் நாலு இருந்தன; அந்த மிருகத்துக்கு நாலு தலைகளுமிருந்தன; ஆளும் அதிகாரம் 7 அதற்கு அளிக்கப்பட்டது. அதற்குப் பின்பு நான் இராத்தரிசனங்களில் பார்க்கவே, இதோ, நாலாம் மிருகம் காணப்பட்டது; அது பயமும் திகிலும் விளைக்கும் மிகவும் பலத்த மிருகம்; அதற்குப் பெரிய இருப்புப்பற்கள் இருந்தன; அது பட்சித்து நொறுக்கி மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டது; அது தனக்கு முன்னிருந்த எந்த மிருகத்தையும் போன்றதல்ல; அதற்குப் பத்துக் கொம்புகளிருந்தன. 8 அந்தக் கொம்புகளை நான் கவனித்திருக்கையிலேயே, இதோ, அவைகளுக்கு மத்தியிலே வேறொரு சிறிய கொம்பு எழும்பிற்று; அதற்கு இடம் உண்டாக முந்தின கொம்புகளில் மூன்று பிடுங்கப்பட்டன; இதோ, அந்தக் கொம்பிலே மனுஷ கண்களைப் போன்ற கண்களும் பெருமையானவை களைப் பேசும் வாயும் இருந்தன.

9 நான் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே சிங்காசனங்கள் வைக்கப்பட்டன; நீண்ட ஆயுளுள்ளவர் வீற்றிருந்தார், அவருடைய வஸ்திரம் உறைந்த மழைபோல் வெண்மையாகவும் அவருடைய தலைமயிர் சுத்தமான பஞ்சைப்போலவும் இருந்தது; அவருடைய சிங்காசனம் அக்கினி ஜ்வாலை, அதின் சக் 10 கரங்கள் எரிகிற நெருப்பு. அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடினது; ஆயிரமாயிரம்பேர் அவரைச் சேவித்தார்கள்; கோடாகோடிப்பேர் அவருக்கு முன்பாக நின்றார்கள்; நியாயவிசாரணை ஆரம்பித்தது, 11 புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. அப்பொழுது நான் பார்த்துக்கொண்டிருக்கையில் அந்தக் கொம்பு பெருமையான வார்த்தை களைப் பேசினதினிமித்தம்—நான் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே—அந்த மிருகம் கொலைசெய்யப்பட்டது; அதின் உடல் அழிக்கப்பட்டு அக்கினியின் ஜ்வாலைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது. மற்ற மிருகங் 12 களின் ஆளுகையும் அவைகளைவிட்டு நீக்கப் பட்டது; அவைகள் உயிரோடிருக்கும் காலம் நிட்டவட்டமாய்க் குறிக்கப்பட்டிருந்தது.

இராத் தரிசனங்களிலே நான் பார்த்துக் 13 கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரன் சாயலான ஒருவர் வானத்து மேகங்களோடு வந்தார்; அவர் நீண்ட ஆயுளுள்ளவர் இடமட்டும் வரவே அவர் சந்நிதியில் கொண்டுவரப்பட்டார். சகல ஜனங்களும் 14 ஜாதியாரும் பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி அவருக்கு ஆளுகையும் மகிமையும் ராஜ்யமும் கொடுக்கப்பட்டன; அவருடைய ஆளுகை நீங்காத நித்திய ஆளுகை, அவருடைய ராஜ்யம் அழியாதது.

தானியேலாகிய எனக்கோ, என் ஆவி 15 என்னுள் கலங்கினது, நான் கண்ட தரிசனங்கள் எனக்குத் திகில் விளைத்தன. சமீ 16 பத்தில் நின்றவர்களில் ஒருவனிடம் நான் போய் இவையெல்லாவற்றையும் திட்டமாய் விளக்கி எனக்குச் சொல்லும்படி அவனை வேண்டிக்கொண்டேன்; அவன் அவற்றின் அர்த்தத்தை எனக்கு அறிவித்து: அந்த நாலு பெரிய மிருகங்களும் பூமியில் 17 ருந்து எழும்புகிற நாலு ராஜாக்கள். பின் 18 போ உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள் ராஜ்யத்தைப்பெற்று என்றென்றைக்கு முள்ள சதாகாலங்களாக ராஜ்யத்தைச் சொந்தமாக்கிக்கொள்வார்கள் என்றான்.

அப்பொழுது நாலாம் மிருகத்தைப்பற்றி 19 எனக்குத் திட்டமாய்ச் சொல்லும்படி விரும்பினேன், அது மற்ற முந்தின எந்த மிருகத்தையும் போன்றதல்ல, மிகவும் பயங்கரமானது; அதற்கு இருப்புப் பற்களும் செப்பு நகங்களுமிருந்தன; அது பட்சித்து நொறுக்கி மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப் போட்டது. அதன்மேலிருந்த பத்துக் 20 கொம்புகளைப்பற்றியும் பின்பு எழும்பின புதிய கொம்பைப்பற்றியும் விசாரித்தேன், இந்த புதிய கொம்புக்கு இடமுண்டாக முன்னிருந்த மூன்று கொம்புகள் விழுந்து போயின, இது கண்களையும் பெருமையான வைகளைப்பேசும் வாயையுமுடையது; மற்ற வைகளிலும் பெரிதாய்த்தோன்றினது. இந் 21 தக் கொம்பு பரிசுத்தவான்களோடே யுத்தம் பண்ணி அவர்களை மேற்கொண்டது என்று கண்டேன். நீண்ட ஆயுளுள்ளவர் வருமள 22

வும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களின் நியாயம் விசாரிக்கப்பட்டபின் பரிசுத்தவான்களுக்கு ராஜ்யம் சொந்தமாகும் காலம் வருமளவும் இந்த யுத்தம் நடந்து கொண்டிருந்தது.

23 அவன் சொன்னது இதுவே: நாலாம் மிருகம் பூமியிலே உண்டாகும் நாலாம் ராஜ்யமாம்; அது மற்றெந்த ராஜ்யத்தையும் போன்றதல்ல, அது பூமியை எல்லாம் பட்சித்து அதை மிதித்து அதை நொறுக்கிப்
24 போடும். அந்தப் பத்துக் கொம்புகளோ வெனில் அந்த ராஜ்யத்திலே எழும்பும் பத்து ராஜாக்களைக்குறிக்கும்; அவர்களுக்குப் பின்பு வேறொருவன் எழும்புவான்; அவன் முன்னவர்களில் எவரையும் போன்றவனல்ல, அவன் மூன்று ராஜாக்களை வீழ்த்
25 திப்போட்டு | உன்னதமானவருக்கு விரோதமாகப் பேசி உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை அழித்து, திருநாட்களையும் திருப்பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்; அவர்கள் ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமுமாக அவன் கையில் ஒப்புக்
26 கொடுக்கப்படுவார்கள். பின்போ நியாய விசாரணை நடக்கும்; அப்பொழுது அவனுடைய ஆளுகை அவனிடமிருந்து நீங்கி
27 முற்றிலும் அழிந்து சங்காரமாகும். வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரீகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனத்துக்குக் கொடுக்கப்படும்; அந்த ஜனத்தின் ராஜ்யம் நித்திய ராஜ்யம்; சகல துரைத்தனங்களும் அதைச் சேவித்து அதற்குக் கீழ்ப்படிந்து நடப்பார்கள் என்று சொன்னான்.
28 இதோடே அக்காரியம் முடிந்தது; தானியேலாகிய எனக்கு என் நினைவுகள் திகில் விளைத்தன, என் முகம் வேறுபட்டது; இந்தக் காரியத்தையோ என் இருதயத்திலே வைத்துக் காத்துக்கொண்டேன்.

**8** தானியேலாகிய எனக்கு முதலில் காணப்பட்ட தரிசனத்துக்குப் பின்பு ராஜாவாகிய பெல்ஷாத்சார் அரசாண்ட மூன்றாம் வருஷத்திலே வேறொரு தரிசனம் எனக்குக்
2 காணப்பட்டது. தரிசனத்திலே நான் கண்டது இதுவே: நான் தரிசனத்தில் பார்த்துக் கொண்டிருக்கையில் ஏலாம் நாட்டிலுள்ள சூசான் கோட்டையில் இருந்தேன்; அங்கே நான் ஊலாய் நதிக்கரையில் இருந்ததாகக்
3 கண்டேன். நான் என் கண்களை நிமிர்ந்து பார்க்கவே, இதோ, இரண்டு கொம்புகளுள்ள ஒரு ஆட்டுக்கடா ஆற்றின் ஓரத்தில் நின்றது; இரண்டு கொம்புகளும் உயர்ந்த வைகள், ஒரு கொம்போ மற்றதைப்பார்க்கிலும் அதிக உயரம்; அதிக உயரமான கொம்பு பின்தி மூளைத்தெழும்பிற்று. அந்த ஆட்டுக்
4 கடா மேற்கும் வடக்கும் தெற்கும் பாய்கிறதைக் கண்டேன்; ஒரு மிருகமும் அதின் முன்னேநிற்க முடியாதிருந்தது; அதின் கைக்குத் தப்புவிப்பாருமில்லை; அது தன் இஷ்டப்படியே செய்து பெருமைகொண்டது.

நான் அதைக் கவனித்துக்கொண்டிருக்
5 கையிலேயே, இதோ, மேற்கேயிருந்து ஒரு வெள்ளாட்டுக்கடா நிலத்திலே கால் பாவாமல் பூமியின் மீதெங்கும் சென்றது; அந்த வெள்ளாட்டுக்கடாவின் கண்களுக்கு நடுவே சிறந்த ஒரு கொம்பு இருந்தது. நான்
6 ஆற்றோரம் நிற்கக்கண்ட இரண்டு கொம்புகளுள்ள ஆட்டுக்கடாவினிடமட்டும் அது வந்து தன் பலத்த உக்கிரத்தோடே அதற்கு
7 எதிரே பாய்ந்தது. அது ஆட்டுக்கடாவைக் கிட்டிச் சேரவே, ஆட்டுக்கடாவைக் கடுங்கோபமாய் முட்டி அதின் இரண்டு கொம்புகளையும் முறித்துப்போடக் கண்டேன்; அதின்முன் நிற்க ஆட்டுக்கடாவுக்குப் பலமில்லாமையால் வெள்ளாட்டுக்கடா அதைத் தரையிலே தள்ளி மிதித்துப்போட்டது; அதின் கைக்கு ஆட்டுக்கடாவைத் தப்புவிப்பார் இல்லை.

அப்பொழுது வெள்ளாட்டுக்கடா மிகுதி
8 யும் பெருமைகொண்டது; அது பலங்கொண்டிருக்கையில் அந்தப்பெரிய கொம்பு முறிந்துபோயிற்று; அதற்குப் பதிலாக ஆகாயத்தின் நாலு திசைகளுக்கும் எதிராக சிறந்த
9 நாலு கொம்புகள் மூளைத்தெழும்பின. அவற்றில் ஒன்றிலிருந்து மூதலில் சிறிதாயிருந்த ஒரு கொம்பு வெளிப்பட்டு தெற்குக்கும் கிழக்குக்கும் எதிராகவும் சிறப்பான நாட்டுக்கு நேராகவும் மிகவும் பெரியதாயிற்று.
10 அது வானத்தின் சேனை பரியந்தம் வளர்ந்து அதின் சேனையாகிய நட்சத்திரங்களில் சிலவற்றை பூமியிலே விழப்பண்ணி அவைகளை மிதித்தது.
11 அது சேனையின் அதிபதி பரியந்தமும் தன்னை உயர்த்தி அவரிடமிருந்து அன்றாட பலியை நீக்கிற்று; அவருடைய பரிசுத்த ஸ்தானம் தள்ளுண்டது.
12 அன்றாட பலியோடுங்கூடச் சேவைச் சேனையும் பாதகத்தினால் அதற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது; அது சத்தியத்தைத் தரையிலே தள்ளிற்று; அது செய்தவற்றில் சித்திபெற்றது.

13 பரிசுத்தவானாகிய ஒருவன் பேசக்கேட்டேன்; அப்பொழுது வேறொரு பரிசுத்தவான் பேசினவனைப் பார்த்து: அன்றாட பலியையும் பாழாக்கும் பாதகத்தையும் பரிசுத்த

ஸ்தலமும் சேனையும் மிதிபட ஒப்புக்கொடுக்
கப்படுவதையும்பற்றிய தரிசனம் எது
14 வரை குறிக்கும் என்று கேட்டான். அவன்
பதினுரைத்து, இரண்டாயிரத்து முந்நூறு
இராப்பகல் செல்லும் வரையுள்ள காலத்
தைக் குறிக்கும்; பின்பு பரிசுத்த ஸ்தலம்
அதற்குரிய சரியான நிலைமைக்கு வரும்
என்றான்.

15 தானியேலாகிய நான் இந்த தரிசனத்
தைக்கண்டு அதின் அர்த்தத்தை அறியத்
தேடுகையில், இதோ, மனுஷசாயலைப்
போன்றவன் ஒருவன் எனக்கு எதிரே நின்
16 றான். அன்றியும் காபிரியேலே இவனுக்
குத் தரிசனத்தை விளக்கிச் சொல்லென்று
ஊலாயின் அக்கரையிலே கூப்பிட்டுச்
சொன்ன ஒரு மனுஷ சத்தத்தையும் கேட்
17 டேன். அப்பொழுது அவன் நான் நின்ற
இடத்துக்கு வந்தான், அவன் வருகையில்
நான் திடுக்கிட்டு முகங்குப்புற விழுந்தேன்;
அவன் என்னைப் பார்த்து: மனுஷகுமாரனே
கவனித்துக்கொள், இந்தத் தரிசனம் முடிவு
18 காலத்தைக் குறித்தது என்றான். அவன்
என்னோடு பேசுகையில் நான் தரையில்
முகங்குப்புற விழுந்து அறிவு மயங்
கினவனுய்க் கிடந்தேன்; அவனே என்னைத்
தொட்டு நான் காலூன்றி நிற்கும்படி செய்
தான்.

19 அவன் விளக்கி எனக்குச் சொன்னது
இதுவே: இதோ, கோபத்தின் முடிவுகாலத்
திலே சம்பவிப்பதை உனக்குத் தெரிவிப்
பேன்; இது குறிக்கப்பட்ட முடிவுகாலத்
20 துக்குரியது. நீ கண்ட இரண்டு கொம்
புள்ள ஆட்டுக்கடா மேதியா பாரசீக
21 தேசங்களின் ராஜாக்கள்; ரோமமுள்ள அந்த
வெள்ளாட்டுக்கடா கிரேக்க தேசத்தின்
ராஜா; அதின் கண்களுக்கு நடுவே இருந்த
பெரிய கொம்பு அதின் முதலாம் ராஜா;
22 அது முறிந்துபோனபின்பு அதற்குப் பதி
லாக நான்கு கொம்புகள் எழும்பின, அந்த
ஜாதியிலே எழும்பும் நான்கு ராஜ்யங்களைக்
குறிக்கும்; இவைகளுக்கோ அவனுக்கு
23 இருந்த வல்லமை இராது; இவர்களுடைய
அரசாட்சியின் கடைசிக் காலத்திலோ, பாத
கர் தங்கள் பாதகத்தை நிறைவாக்கும்
போது கடினமுகமும் கபடமனமுமுள்ள
சாமர்த்தியமான ஒரு ராஜா எழும்புவான்.
24 அவனுடைய வல்லமை பெருகும்; முன்னை
வனுக்கு இருந்த வல்லமையோ இவனுக்கு
இல்லை, இவன் அதிசயமான அளவாக அழி
வுண்டாக்கித் தன் செயல்களில் சித்திபெற்
றுப் பலவான்களையும் பரிசுத்த ஜனத்தை
25 யும் அழிப்பான். அவன் தான் யோசிக்கும்

வஞ்சனையைத் தன் உபாயத்தினுல் வாய்க்
கச் செய்வான்; தன் இருதயத்தில் பெரிய
வைகளை எண்ணுவான்; பயமின்றியிருக்கும்
அநேகரை அழிப்பான்; அதிபதிகளுக்கு அதி
பதியாயிருக்கிறவருக்கு விரோதமாய் எழும்
புவான்; அவன் முறித்துப் போடப்படு
வான், மானிட கையாலல்ல. இப்பொழுது 26
சொல்லப்பட்ட இராப்பகல்களின் தரிச
னம் சத்தியம்; நீ இந்தத் தரிசனத்தை
மறைத்துவை, அதற்கு இன்னும் அநே
நாள் செல்லும் என்றான்.

தானியேலாகிய நான் தளர்ச்சியுற்றுச் 27
சிலநாள் வியாதிப்பட்டிருந்தேன்; பின்பு
நான் எழுந்திருந்து ராஜாவின் வேலையைச்
செய்து அந்தத் தரிசனத்தைப்பற்றித் திகில்
கொண்டிருந்தேன், அதின் அர்த்தத்தை
எனக்கு அறிவிப்பாரில்லை.

அகஸ்வேருவின் குமாரனுகிய தரியு அர 9
சாண்ட முதல் வருஷத்தில்—இவன் மேதிய
குலத்தான், கல்தேய ராஜ்யத்தின்மேல் ராஜா
வாக்கப்பட்டிருந்தான்,— இவன் அரசாண் 2
ட முதல் வருஷத்திலே தானியேலாகிய
நான், எருசலேமின் மேல்வரும் பெரிய
அழிவு நிறைவேறித்தீர எழுபது வருஷம்
செல்லுமென்று யெகோவா எரேமியா
தீர்க்கதரிசியோடே சொல்லிய வருஷங்
களின் தொகையை நூல்களில் கண்டு கவ
னித்தேன். நான் என் முகத்தைக் கடவு 3
ளாகிய ஆண்டவருக்கு நேராக்கி உபவாசம்
பண்ணி இரட்டும் சாம்பலுமாய் உட்கார்ந்து
ஜெபத்தினுலும் விண்ணப்பத்தினுலும் அவ
ரைத்தேடினேன்.

என் கடவுளாகியயெகோவாவை நோக்கி 4
ஜெபம்பண்ணிப் பாவ அறிக்கை செய்து:
ஆண்டவரே, மகத்துவமும் பயங்கரமுமான
கடவுளே, உம்மில் அன்புகூர்ந்து உமது
கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள்
விஷயத்தில் உடன்படிக்கையையும் இரு
பையையும் காக்கிறவரே, நாங்கள் பாவஞ் 5
செய்து அக்கிரமக்காரரும் தெய்வபயமற்ற
வருமாய் நடந்து துரோகஞ்செய்து உமது
கட்டளைகளையும் உமது நீர்ப்புகளையும்
விட்டு விலகிப்போனேம். எங்கள் ராஜாக் 6
களோடும் எங்கள் அதிபதிகளோடும் எங்
கள் பிதாக்களோடும் தேசத்தின் முழு ஜனத்
தோடும் உமது நாமத்தில் பேசின தீர்க்க
தரிசிகளாகிய உமது ஊழியருக்குச் செவி
கொடாமற் போனேம். ஆண்டவரே, நீதி 7
உமக்கே உரியது, எங்களுக்கோ, இந்நாளி
லிருக்கிறபடியே வெட்கம் உரியது; அப்
படியே அது யூதேயா நாட்டாருக்கும் எருச

லேமின் குடிகளுக்கும், உமக்கு விரோத
மாய்ச் செய்த துரோகத்தினிமித்தம் சமீப
மும் தூரமுமான சகல தேசங்களிலும் உம்
மாலே துரத்தப்பட்டிருக்கிற சகல இஸ்ர
8 வேலருக்குமுரியது. யெகோவாவே எங்
களுக்கும் எங்கள் ராஜாக்களுக்கும் எங்
கள் அதிபதிகளுக்கும் எங்கள் பிதாக்
களுக்கும் வெட்கம் உரியது, நாங்கள்
உமக்கு விரோதமாயப் பாவஞ்செய்தோம்.
9 நமது கடவுளாகிய ஆண்டவருக்கோ
மிகுந்த இரக்கமும் மன்னிப்பும் உரியது,
நாம் அவருக்கு விரோதமாய்த் துரோகஞ்
10 செய்தோம். நமது கடவுளாகிய யெகோ
வாவின் சொல்லுக்குச் செவிகொடாமற்
போனோம், தமது ஊழியராகிய தீர்க்கதரிசி
களைக் கொண்டு அவர் நமக்கு முன்பாக
வைத்த அவருடைய பிரமாணங்களின்படி
11 நாம் நடக்கவில்லை. அப்படியே இஸ்ரவே
லர் எல்லாரும் உமது நியாயப்பிரமாணத்
தை மீறி உமது சொல்லுக்குச் செவிகொடா
மல் விலகிப்போனார்கள். அவருக்கு
விரோதமாகப் பாவஞ்செய்தபடியால் கடவு
ளின் ஊழியனாகிய மோசேயின் நியாயப்பிர
மாணப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடி
ஆணையிட்டுக் குறித்த சாபம் நமதுமேல்
12 ஊற்றப்பட்டது. அவர் நமக்கும் நம்மை
நியாயந்தீர்த்த நியாயாதிபதிகளுக்
கும் விரோதமாகச் சொல்லியிருந்த தமது
வார்த்தைகளை நிறைவேற்றி நமதுமேல்
பெரிய தீங்கை வரப்பண்ணினார், எருசலே
முக்குச் சம்பவித்ததுபோல வானத்தின்கீழ்
13 எங்கும் சம்பவித்ததில்லை. மோசேயின்
நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி
யே இத்தத் தீங்கெல்லாம் நமதுமேல் வந்
தது; நாமோ நமது கடவுளாகிய யெகோவா
வின் தயவை நாடிக் கெஞ்சினதில்லை. எங்
கள் அக்கிரமத்தை விட்டுத்திரும்பி உமது
14 சத்தியத்தைக் கவனிக்கவில்லை. ஆதலால்
யெகோவா அந்தத் தீங்கைக் கவனமாய்
நினைத்து அதை நம்மேல் வரப்பண்ணினார்;
நமது கடவுளாகிய யெகோவா தாம் செய்து
வருகிற தமது செயல்களில் எல்லாம் நீதி
யுள்ளவர்; நாமோ அவருடைய சொல்லுக்
குச் செவிகொடாமற் போனோம்.
15 இப்போதும் எங்கள் கடவுளாகிய ஆண்
டவரே, உமது ஜனத்தைப் பலத்த கையி
னால் எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி
இந்நாளில் இருக்கிறபடியே உமக்குப் பேர்
உண்டாக்கினீர்; நாங்களோ பாவஞ்செய்து
தெய்வ பயமற்றவர்களாய் நடந்தோம்.
16 ஆண்டவரே, உமது சர்வ நீதியின்படியே
உமது கோபமும் உமது உக்கிரமும் உமது
பரிசுத்த பர்வதமாகிய எருசலேம் என்னும்
உமது நகரத்தை விட்டுத் திரும்பும்படி
செய்தருளும், எங்கள் பாவங்களினாலும்
எங்கள் பிதாக்களின் அக்கிரமங்களினாலும்
எருசலேமும் உமது ஜனமாகிய நாங்களும்
எங்கள் சுற்றுப்புறத்தார் யாவருக்கும் நிந்
தையானோம். இப்போதும் எங்கள் கடவு 17
ளே, நீர் உமது அடியானின் ஜெபத்துக்கும்
அவனுடைய விண்ணப்பத்துக்கும் செவி
சாய்த்துப் பாழாய்க்கிடக்கிற உமது பரி
சுத்த ஸ்தலத்தின்மேல் ஆண்டவரே உமது
நிமித்தம் உமது திருமுகத்தைப் பிரகாசிக்
கப்பண்ணும். என் கடவுளே, உமது 18
செவியைச் சாய்த்துக் கேட்டருளும், உமது
கண்களைத் திறந்து எங்கள் பாழிடங்களையும்
உமது திருநாமம் வழங்கும் நகரத்தையும்
பார்த்தருளும்; நாங்கள் எங்கள் நீதியை
நினைத்தல்ல உமது மிகுந்த இரக்கத்தை
நினைத்தே எங்கள் விண்ணப்பங்களை உமக்கு
முன்பாகச் செலுத்துகிறோம். ஆண்டவரே 19
கேளும், ஆண்டவரே மன்னியும், ஆண்ட
வரே கவனித்து உதவிசெய்தருளும், என்
கடவுளே, உமது நிமித்தமாகவே தாமதியா
மல் செய்தருளும்; உமது நகரத்திலும் உமது
ஜனத்திலும் உமது திருநாமம் வழங்குகிறதே
என்றேன்.

இப்படி நான் சொல்லி ஜெபம்பண்ணி 20
என் பாவத்தையும் என் ஜனமாகிய இஸ்ர
வேலின் பாவத்தையும் அறிக்கையிட்டு என்
கடவுளின் பரிசுத்த பர்வதத்துக்காக என்
விண்ணப்பத்தை என் கடவுளாகிய யெகோ
வாவுக்குமுன்பாகச் செலுத்துகையில், |
என் ஜெபத்தில் நான் இப்படிச் சொல்லுகை 21
யில், முதலிலே தரிசனத்தில் நான் கண்ட
வனாகிய காபிரியேல் பறகும் வேகமாய்
வந்து என்னைத் தொட்டான், அப்போது
அந்திப்பலிவேளை. அவன் எனக்குப் 22
போதித்து என்னோடு பேசி: தானியேலே,
உனக்கு உணர்வைத் தரும்படி இப்போது
வந்தேன். நீ மிகவும் பிரியமானவன், ஆத 23
லால் நீ விண்ணப்பஞ்செய்யத்தொடங்கின
போதே கட்டளை வெளிப்பட்டது, நான்
அதை அறிவிக்க வந்தேன்; இப்போதும்
சொல்லுகிற வார்த்தையின்மேல் நீ கவன
மாகித் தரிசனத்தைக் கவனித்துக்கொள்.

பாதகம் முடிவாவதற்கும் பாவங்கள் 24
மூற்றுப்பெருவதற்கும் அக்கிரமம் நீங்கப்
பிராயச்சித்தம் செய்வதற்கும் நித்திய நீதியை
வருவிக்கிறதற்கும் தரிசனமும் தீர்க்கதரி
சனமும் முத்திரிக்கப்படுவதற்கும் மகா பரி
சுத்தமானதை அபிஷேகம் பண்ணுவதற்கும்
உன் ஜனத்திற்கும் உன் பரிசுத்த நகரத்திற்

கும் எழுபது வாரங்கள் குறிக்கப்பட்டிருக்
25 கின்றன. இப்போதும் நீ அறிந்து உணர்ந்து
கொள்ளவேண்டியது இதுவே: எருசலே
மைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுவதற்குக்
கட்டளை பிறந்ததுமுதல் அபிஷேகம் பண்
ணப்பட்டவனுகிய அதிபதி வருமட்டும்
ஏழுவாரம் செல்லும்; அறுபத்திரண்டு
வாரங்களில் வீதிகளும் அகழிகளும் மறுபடி
யும் கட்டப்படும்; அவைகள் கஷ்டகாலங்
26 கள். அபிஷேகம் பண்ணப்பட்டவன்
அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப்பின்பு
சங்கரிக்கப்படுவான்; அவன் பட்டத்துக்கு
வருபவனில்லை; நகரத்தையும் பரிசுத்த ஸ்த
லத்தையும் வரப்போகிற பிரபுவின் சேனை
அழித்துப்போடும்; அவன் முடிவு ஜலப்பிர
வாகமாம், முடிவுபரியந்தம் யுத்தம் நடக்
கும், குறிக்கப்பட்ட பெரிய நாசமே.
27 அவன் ஒரு வாரமாக அநேகரோடு பலத்த
உடன்படிக்கை செய்வான், அந்தவாரம்
பாதி சென்றபின் பலியையும் போஜனபலி
யையும் ஒழியப்பண்ணுவான்; அருவருப்
பின் செட்டைகள்மேல் பாழாக்கும் ஒரு
வன் வருவான், அழிவும் குறித்த நாசமும்
பாழாக்குகிறவன்மேல் கடையில் ஊற்றப்
படும் என்றார்.

**10** பாரசீக ராஜாவாகிய கோரேஸ் அர
சாண்ட மூன்றாம் வருஷத்திலே பெல்தெ
ஷாத்சார் என்று பெயரிட்ட தானியே
லுக்கு ஒரு காரியம் வெளிப்படுத்தப்பட்
டது; அந்தக் காரியம் சத்தியம், பெரிய
கஷ்டத்தைக் குறித்தது; அந்தக் காரியத்
தின்மேல் அவன் கவனமாகித் தரிசனத்
தைக் கவனித்துக்கொண்டான்.
2 அந்நாட்களில் தானியேலாகிய நான்
3 மூன்றுவாரமாகத்துக்கமாயிருந்தேன். அந்த
மூன்று வாரங்கள் முடியுமட்டும் ருசிகர
மான ஆகாரத்தை நான் புசிக்கவுமில்லை,
இறைச்சியும் திராட்சரசமும் என் வாய்க்
குள் போகவுமில்லை, நான் தைலம் பூசிக்
4 கொள்ளவுமில்லை. முதலாம்மாதம் இருபத்து
நாலாந்தேதியிலே நான் ஒரு பெரிய நதிக்
கரையிலிருந்தேன், அந்த நதி ஹிதெக்கேல்.
5 நான் என் கண்களை நிமிர்ந்து நோக்குகை
யில், இதோ, ஒரு மனிதன்; அவர் சணல்
நூல் வஸ்திரந்தரித்துத் தமது அரையில்
ஊபாசின் தங்கத்தினாலான கச்சையைக்
6 கட்டிக்கொண்டிருந்தார். அவருடைய சரீ
ரம் பத்மராகம்போன்றது, அவருடைய
முகம் மின்னலைப்போல் தோன்றியது, அவ
ருடைய கண்கள் எரிகிற தீவர்த்திகள்
போன்றன, அவருடைய புயங்களும் அவ
ருடைய கால்களும் துலக்கப்பட்ட செம்பு
போல் தோன்றின, அவருடைய வார்த்தை
களின் சத்தம் ஜனக்கூட்டத்தின் ஆரவாரம்
போன்றது. தானியேலாகிய நான் மாத்திரம் 7
அந்தத் தரிசனத்தைக்கண்டேன்; என்
னோடிருந்த மனுஷர் அந்தத் தரிசனத்தைக்
காணவில்லை; அவர்கள் மிகவும் நடுநடுங்கி
ஓடி ஒளித்துக்கொண்டார்கள். நான் தனி 8
மையாய் விடப்பட்டு அந்தப் பெரிய தரி
சனத்தைக்கண்டேன்; என் பலமெல்லாம்
போயிற்று, என் உருவம் மாறி வாடிப்போ
யிற்று, பலமற்றுப்போனேன். அவருடைய 9
வார்த்தைகளின் சத்தத்தைக்கேட்டேன்;
அவருடைய வார்த்தைகளின் சத்தத்தை
நான் கேட்கவே நான் முகங்கவிழ்ந்து
அறிவுமயங்கினவனுய்த் தரையிலே முகங்
குப்புற விழுந்துகிடந்தேன்.
இதோ, ஒருவன் கை என்னைத்தொட்டு, 10
என் முழங்கால்களும் என் உள்ளங்கை
களும் தரையில் நடுங்கி ஊன்ற என்னைத்
தூக்கிவைத்தது. அவன் என்னோடு பேசி; 11
தானியேலே, மிகப் பிரியமானவனே, நான்
உனக்குச்சொல்லும் வார்த்தைகளைக் கவன
மாய்க் கேட்டுக் கால் ஊன்றி நில்; நான்
இப்போது உன்னிடத்திற்கு அனுப்பப்பட்
டேன் என்றார்; இந்த வார்த்தையை
அவன் என்னிடத்தில் சொல்லவே நான்
நடுக்கத்தோடே எழுந்து நின்றேன். அப் 12
பொழுது அவன் என்னைப்பார்த்து: தானி
யேலே, பயப்படாதே; நீ அறிவை அடை
வதற்கும் உன்னை உன் கடவுளுக்கு முன்
பாகத் தாழ்த்துவதற்கும் உன் மனதில் தீர்
மானித்த முதல் நாள் துவக்கி உன் வார்த்
தைகள் கேட்கப்பட்டன; உன் வார்த்தை
களினிமித்தம் நான் வந்தேன். பாரசீக 13
ராஜ்யத்தின் அதிபதி இருபத்தொரு நாட்க
ளாக என்னை எதிர்த்து நின்றார்; பிரதான
அதிபதிகளில் ஒருவனுகிய மிகாவேலோ
எனக்குத் துணையாக வந்தான்; நான்
அங்கே அவனைப் பாரசீக ராஜாக்களோடு
விட்டுவந்தேன். இப்போதும் கடைசி நாட் 14
களில் உன் ஜனங்களுக்குச் சம்பவிப்பதை
உனக்குத் தெரியப்பண்ணும்படி வந்தேன்,
இந்தத் தரிசனம் நிறைவேற இன்னும்
நாள் செல்லும் என்றார்.
அவன் இப்படி என்னோடே பேசவே, 15
நான் தலைகுனிந்து தரையை நோக்கிப்
பேச்சற்றுப்போனேன். இதோ, மனுப்புத் 16
திரின் சாயலான ஒருவன் என் உதடுகளைத்
தொட்டான்; உடனே நான் என் வாயைத்
திறந்து பேசி, எனக்கு எதிரே நின்றவனைப்
பார்த்து: என் ஆண்டவனே, தரிசனத்தி

ஞல் வேதனைகளுக்காளானேன், பலமற்றுப்
17 போனேன். ஆண்டவனுடைய அடியேன் அற்பனுயிருக்க மகத்துவமான என் ஆண்ட வனுடனே பேசுவதெப்படி? இனி என்னில் பலமில்லே, என்னில் மூச்சுமில்லே
18 என்றேன். அப்பொழுது மனுஷ சாயலானவன் திரும்ப என்னைத் தொட்டு, என்னைப்
19 பலப்படுத்தி, | மிகப் பிரியமானவனே, பயப்படாதே, உனக்குச் சமாதானமுண்டாக, மனேபலங்கொள், மனேபலங்கொள் என்ருன்; இப்படி அவன் என்னேடு பேசுகையில் எனக்கு மனேபலம் வந்தது, நான் அவனைப்பார்த்து, என் ஆண்டவன் பேசுக, என்னைப் பலப்படுத்தினீரே என்றேன்.
20 அப்பொழுது அவன்: நான் உன்னிடத்திற்கு வந்த காரணம் இன்னதென்று உனக்குத் தெரியுமோ? இப்போது நான் பாரசீக அதிபதியோடே யுத்தம்பண்ணத் திரும்பிப்போகிறேன்; நான் அதை முடித்துவிட்ட பின்பு கிரேக்கு தேசத்தின் அதிபதி
21 வருவான். போகுமுன் சத்திய தூலிலே எழுதியிருக்கிறதை நான் உனக்குத் தெரிவிப்பேன்; உங்கள் அதிபதியாகிய மிகாவேலைத் தவிர என்னேடுகூட அவர்களுக்கு விரோதமாய் எனக்குத் துணைநிற்கும்
**11** வேறெருவருமில்லே. நானே அவனுக்கு, மேதியனுகிய தரியு அரசாண்ட முதலாம் வருஷத்திலே, துணையாகவும் பலமாகவும் நின்றேன்.

2 இப்போது நான் உண்மையானதை உனக்கு அறிவிப்பேன்; இதோ, இன்னும் மூன்று ராஜாக்கள் பாரசீகத்தில் எழும்புவார்கள்; நாலாம் ராஜாவாயிருப்பவன் எல்லாரிலும் மகா ஐசுவரிய சம்பன்னனுயித் தன் ஐசுவரியத்தினுல் பலங்கொண்டு, கிரேக்கு ராஜ்யத்துக்கு விரோதமாகத் தனக்குள்ள யாவற்றையும் கூட்டிக்கொண்டு
3 வருவான். அப்பொழுது பராக்கிரமமுள்ள ஒரு ராஜா எழும்பி அதிக வல்லமையோடு அரசாண்டு தனக்கு இஷ்டமானபடி செய்
4 வான். அவன் நிற்கிறபோதே அவனுடைய ராஜ்யம் உடைந்துபோய் வானத்தின் நாலு திசைகளிலும் பகுக்கப்படும்; அது அவனுடைய சந்ததியாருக்கோ அல்ல, அவன் அரசாட்சி செய்த காலத்திலிருந்த வல்லமையும் அதற்கிராது; அவனுடைய ராஜ்யம் அழிந்து அவன் சந்ததியாரல்லாதவர்களுக்குச் சொந்தமாம்.

5 தென்தேச ராஜா பலவானுயிருப்பான்; அவனுடைய அதிபதிகளில் ஒருவனே அவனிலும் பலவானுகி ஆளுவான்; இவனுடைய ஆளுகை பலத்த ஆளுகையாகும்.
சிலவருஷங்களுக்கப்பால் அவர்கள் ஒரு 6
வரோடொருவர் உடன்படிக்கை பண்ணுவார்கள், தென்தேச ராஜாவின் குமாரத்தி வடதேச ராஜாவினிடம் சமாதானம்பண்ணப்போவாள்; புயபலமோ அற்றுப் போம், அவனும் அவனுடைய புயமும் நிலைநிற்பதில்லே; அவளும் அவளை அழைத்துவந்தவர்களும் அவளைப் பெற்றவனும் முற்காலத்தில் அவளுக்கு ஆதரவானவனும் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள். ஆனுலும் அவ 7
ளுடைய வேர்களின் மூலியாகிய ஒருவன் தன் ஸ்தானத்தில் எழும்பி இராணுவத்தோடே வந்து வடதேச ராஜாவின் கோட்டைக்குள் புகுந்து அவர்களோடு யுத்தம் செய்து மேற்கொள்வான். அவர்களுடைய 8
தெய்வங்களேயும், அவர்களுடைய விக்கிரகங்களேயும், அருமையான பொன், வெள்ளிப் பாத்திரங்களேயும்கூடக் கொள்ளையாடி எகிப்துக்குக் கொண்டுபோவான்; சிலவருஷங்கள் மட்டும் வடதேச ராஜாவைப்பார்க்கிலும் நிலையாய் நிற்பான். இவன் தென்தேச 9
ராஜாவின் ராஜ்யத்துக்கு விரோதமாக வருவான், எனினும் தன் தேசத்துக்குத் திரும்ப வேண்டியதாகும்.

அவனுடைய குமாரர் யுத்தஞ்செய்ய 10
எத்தனித்துத் திரளான சேனையைக் கூட்டுவார்கள், அச்சேனை போகப்போக வெள்ளம்போல் கடந்துசெல்லும், அது திரும்பி வந்து அவன் கோட்டை வரைக்கும் யுத்தஞ்செய்யும். அப்பொழுது தென்தேச 11
ராஜா கடுங்கோபங்கொண்டு புறப்பட்டுப் போய் வடதேச ராஜாவோடு யுத்தம்பண்ணுவான்; இவன் திரளான சேனையைச் சேர்ப்பான், இந்தச் சேனையோ மற்றவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படும். இந்தச் 12
சேனை அழிக்கப்படவே அவன் இருதயம் கர்வங்கொள்ளும், அவன் ஆயிரக்கணக்கானவரை வீழ்த்துவான், எனினும் மேற்கொள்ளமாட்டான். வடதேச ராஜா திரும்ப 13
முந்தின சேனையிலும் திரளான சேனையைச் சேர்ப்பான், சிலவருஷங்கள் சென்ற பின்பு பெரிய சேனையோடும் வெகு தளவாடத்தோடும் வருவான். அக்காலங்களில் தென் 14
தேச ராஜாவுக்கு விரோதமாக அநேகர் எழும்புவார்கள்; அப்பொழுது உன் ஜனத்திலுள்ள கொடுமைக்காரரும் தரிசனத்தை நிறைவேற்றவேண்டுமென எழும்பிவருவார்கள். வடதேச ராஜா வந்து கொத்தளம் 15
போட்டு அரணுன நகரத்தை பிடிப்பான், தென்தேசத்தின் ராணுவங்களும் அதின் சிறந்த சேனையும் நிலைநிற்காது, புயபலங்களும் அவன் தெரிந்துகொண்ட ஜனமும்

நில்லாமற்போம்; நிலைநிற்கும் பலமிராது.
16 ஆகவே அவனுக்கு விரோதமாக வருகிற வன் தன் இஷ்டப்படி செய்வான், அவ னுக்கு முன்பாக நிலைநிற்பவனில்லை, அவன் சிறப்பான தேசத்திலே வந்து நிலைப்பான்;
17 அவன் கையால் விளைவது அழிவே. தன் முழு ராஜ்யத்தின் வல்லமையோடும் யுத்தத் திற்குப்போக மனமாயிருப்பான்; எனினும் மற்றவளுடனே சமாதானம் பண்ணுவான், தன் குமாரத்திகளில் ஒருத்தியை அவனுக்கு மனைவியாகக் கொடுப்பான், அவளுக்கோ அது அழிவாகும்; அக்காரியம் நிலைநிற் காது, அது இவனுக்குப் பயன்படாது.
18 பின்பு இவன் தன் முகத்தைத் தீவுகளுக்கு நேராகத்திருப்பி அநேகத் தீவுகளைப் பிடிப் பான்; ஒரு சேனாபதியோ இவன் செய்த நிந்தையை ஒழியப்பண்ணுவதுமல்லாமல் அந்நிந்தை அவன் மேலேயே வரச்செய் வான். பின்பு தன் முகத்தைத் தன் தேசத்து அரண்களுக்கு நேராகத் திருப்பு வான், அங்கே இடறிவிழுந்து காணப்படா மற்போவான். ராஜ்யத்தின் செழிப்பான பாகத்தில் எங்கும் தண்டல்காரனைப் போகச் செய்கிற ஒருவன் தன் ஸ்தானத்தில் எழும்பு வான்; ஆகிலும் சில நாளைக்குள்ளோ கோப மும் யுத்தமுமில்லாதிருக்க நாசமடை வான்.
21 அவன் ஸ்தானத்தில் அவமதிப்புள்ள ஒரு வன் எழும்புவான்; இவனுக்கு ராஜமகி மையை எவரும் கொடுப்பதில்லை, ஜனங் கள் சுகவாழ்வில் கவலையின்றியிருக்கும் போது இவன் அழைந்து இச்சகப்பேச்சால்
22 ராஜ்யத்தை அபகரிப்பான். வெள்ளம்போல் வருகிற சேனைகள் அவனுக்குமுன் அடித் துக்கொண்டு போகப்பட்டு அழியும்; உடன் படிக்கையின் தலைவனும் அப்படியே அழி
23 வான். அவனோடே உடன்படிக்கை செய் யப்பட்டபின் அவன் சூதாய் நடப்பான், கொஞ்ச ஜனங்களோடே வந்தும் மேற்
24 கொள்ளுவான். தேசம் சுகவாழ்வில் இருக் கும்போது அதன் செழிப்பான பாகங்களில் சென்று தன் பிதாக்களும் தன் பிதாக்களின் பிதாக்களும் செய்யாததைச் செய்வான்; அவன் சூறையாடிச் சேர்த்த கொள்ளையை யும் பொருளையும் தன் ஆட்களுக்கு ஏராள மாய்ப் பங்கிட்டு அரண்களுக்கு விரோதமா கத் தனக்குள் சதியோசனை செய்வான்; சில
25 காலமட்டும் இப்படியிருக்கும். பின்னும் தென்தேச ராஜாவுக்கு விரோதமாகப் பெரிய சேனையோடே போர்செய்யத் தன் வல்லமை யோடும் மன உறுதியோடும் எழும்புவான்; அப்பொழுது தென்தேச ராஜா மிகவும் பலத்த பெரிய சேனையோடே போய் யுத் தங்கலப்பான்; அவனுக்கு விரோதமாகச் செய்யப்பட்ட சதியோசனைகளினிமித்தம் அவன் நிலைநிற்கமாட்டான். அவனோடு 26 போஜனம்பண்ணினவர்கள் அவனை நாசப் படுத்துவார்கள்; அவன் சேனை அடித்துக் கொண்டு போகப்படும், அநேகர் கொல்லப் பட்டு விழுவார்கள். இந்த இரண்டு ராஜாக் 27 களின் மனமும் தீமைசெய்ய நினைக்கும், ஒரே பந்தியிலிருந்துகொண்டு பொய் பேசு வார்கள், எனினும் அது வாய்ப்பதில்லை, குறித்த காலம் வருமட்டும் முடிவு இன்னும் தாமதிக்கிறது. அவன் மிகுந்த பொரு 28 ளோடே தன் தேசத்துக்குத் திரும்பிப் போகையில் தன் மனதில் பரிசுத்த உடன் படிக்கைக்கு விரோதமாக சதியோசனை செய்து அதை நிறைவேற்றித் தன் தேசத் துக்குத் திரும்பிப்போவான்.

குறித்த காலத்திலே திரும்பவும் அவன் 29 தென் தேசத்திற்கு விரோதமாய்ப் போவான்; எனினும் முதல்தரம் நடந்ததுபோல் இரண் டாந்தரம் நடவாமற்போம். அவனுக்கு 30 விரோதமாகக் கித்தீமின் கப்பல்கள் வரும்; அதினால் அவன் அதைரியப்பட்டு திரும்பிப் போய்ப் பரிசுத்த உடன்படிக்கைக்கு விரோதமாகக் குரோதங்கொண்டு அப்படியே நடந்து, பரிசுத்த உடன்படிக் கையைவிட்டு நீங்கினவர்கள் சொற்கேட் பான். அவனிடத்திலிருந்து புறப்பட்ட 31 சேனைகளோ எழும்பி அரணை பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தி அன்றுட பலியை ஒழியச்செய்து பாழாக்கும் அரு வருப்பை அங்கே வைப்பார்கள். உடன் 32 படிக்கைக்கு விரோதமாய் நடக்கிறவர்களை இச்சகப்பேச்சுகளினால் முற்றிலும் துரோகி களாக்குவான்; தங்கள் தேவனை அறிந்திருக் கிற ஜனங்கள் மனோபலங்கொண்டு நிலைப் பார்கள். ஜனங்களில் விவேகசாலிகள் 33 அநேகருக்குப் போதிப்பார்கள்; சிலகாலம் பட்டயத்தினாலும் அக்கினியினாலும் சிறை யிருப்பினாலும் கொள்ளையினாலும் துன்பப் படுவார்கள். இப்படி அவர்கள் துன்பப் 34 படுகையில் கொஞ்சம் சகாயம் பெறுவார் கள்; அப்பொழுது அநேகர் இச்சக வார்த் தைகள் பேசி அவர்களை ஒட்டிக்கொள்வார் கள். விவேகிகளைப் புடமிட்டுச் சுத்திகரித்து 35 வெண்மையாக்குவதற்கென அவர்களிலும் சிலர் துன்பப்படுவார்கள்; முடிவுகாலமட் டும் இப்படியிருக்கும், குறித்தகாலம் வர இன்னும் நாள் செல்லும்.

ராஜா தனக்கு இஷ்டமானபடிசெய்து 36 தன்னை உயர்த்தி ஏற்ற தேவனுக்கு விரோத

மாகவும் பெருமைபாராட்டி தேவாதி தேவனுக்கு விரோதமாக ஆச்சரியங்களைப் பேசுவான்; கோபம் தீருமட்டும் அவன் சித்தி
37 பெறுவான்; குறித்தது நிறைவேறும். அவன் தன் பிதாக்களின் தேவர்களை மதியான், ஸ்திரீகளின் இஷ்டதேவதையையும் எந்த தேவனையும் மதியான், எல்லாவற்றிற்கும் விரோ
38 தமாகப் பெருமை பாராட்டுவான். அரண்களின் தேவதையை மாத்திரம் மற்றவைகளின் ஸ்தானத்திலே மகிமைப்படுத்தித் தன் பிதாக்கள் அறியாத ஒரு தேவனைப் பொன்னிலுலும் வெள்ளியிலுலும் இரத்தினங்களிலுலும் மற்றும் அருமையானவைகளிலு
39 லும் மகிமைப்படுத்துவான். அவன் அந்திய தேவதையின் சகாயத்தினால் அரணான கோட்டைகளுக்குத் தன் இஷ்டப்படி செய்வான், உடன்படுகிறவர்களுக்கு அதிக மேன்மைகொடுத்து அவர்களை அநேகர்மேல் அதிகாரிகளாக்கி அவர்களுக்கு நிலத்தை இலாமாகப் பங்கிடுவான்.

40 முடிவுகாலத்திலே தென்தேச ராஜா அவனோடே சண்டைக்கு நிற்பான், வடதேச ராஜாவும் இரதங்களோடும் குதிரைவீரரோடும் அநேகம் கப்பல்களோடும் சூறைக் காற்றுபோல் அவனுக்கு விரோதமாய் வருவான்; அவன் பல தேசங்களுக்குட் சென்று அவைகள்மேல் வெள்ளம்போல்
41 புரண்டு பரவிப்போவான். சிறப்பான தேசத்திலும் அவன் வருவான், இன்னும் பலதேசங்கள் கவிழ்ந்தபோம், ஏதோமும் மோவாபும் அம்மோன் புத்திரரின் சிறந்த பாகங்களுமோ அவன் கைக்குத் தப்பிப்
42 போம். அவன் அந்திய தேசங்களின்மேல் தன் கையை நீட்டுவான், எகிப்துதேசமும்
43 தப்புவதில்லை. எகிப்தின் பொன்னும் வெள்ளியுமான செல்வங்களையும் அருமையான சகல பொருட்களையும் கைப்பற்றுவான்; லீபியரும் எத்தியோப்பியரும் அவனுக்குப்
44 பின்செல்லுவார்கள். ஆனாலும் கிழக்கிலும் வடக்கிலும் இருந்துவரும் செய்திகள் அவனுக்குத் திகில் விளைக்கும், அப்பொழுது அவன் அநேகரை அழிக்கவும் சங்காரம் பண்ணவும் மகா உக்கிரத்தோடே போய்
45 விடுவான்; சமுத்திரத்திற்கும் சிறப்பான பரிசுத்த பர்வதத்திற்கும் இடையிலே தன் அரமனையாகிய கூடாரங்களைப் போடுவான்; எனினும் அவனுக்கு ஒத்தாசை செய்வாரின்றித் தன் முடிவுக்குச் செல்வான்.

**12** உன் ஜனத்தின் புத்திரருக்கென்று நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்பி வருவான்; மனுஷஜாதி தோன்றியது முதல் இக்காலமட்டும் நேரிட்டிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள். பூமியின் தூளிலே நித்திரை 2 செய்யும் அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கெனவும் சிலர் நித்திய நிந்தைக்கெனவும் இகழ்ச்சிக்கெனவும் விழித்தெழுந்திருப்பார்கள். பக்திவிவேகமுள்ளவர்கள் ஆகாய 3 மண்டலத்தின் ஒளியைப்போலவும் அநேகரை நீதிமான்களாகும்படி செய்கிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றுமுள்ள சதா காலங்களிலும் பிரகாசிப்பார்கள். தானியேலாகிய நீயோ முடிவுகாலமட்டும் 4 இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து இந்தப் புஸ்தகத்தை முத்திரை போடு; அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி விசாரிப்பார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான்.

அப்பொழுது தானியேலாகிய நான் 5 பார்க்கையில், இதோ, ஆற்றுக்கு இக்கரையில் ஒருவனும் ஆற்றுக்கு அக்கரையில் ஒருவனுமாக வேறே இரண்டுபேர் நின்றார்கள். சணல்வஸ்திரம் தரித்து ஆற்றின் தண்ணீர் 6 மேல் நின்றவனை அவர்களில் ஒருவன் பார்த்து: இந்த ஆச்சரியமானவைகளின் முடிவுவர எவ்வளவு காலம் செல்லும் என்று கேட்கச் | சணல்வஸ்திரம் தரித்து 7 ஆற்றின் தண்ணீர்மேல் நின்றவன் தனது வலது கரத்தையும் தனது இடது கரத்தையும் வானத்துக்கு நேராக உயர்த்தி, நித்திய ஜீவியானவரின்மேல் ஆணையிட்டு: ஒரு காலமும் காலங்களும் அரைக்காலமும் செல்லும், பரிசுத்த ஜனத்தின் வல்லமை நொறுக்கப்பட்டுத் தீரும் முடிவுபெறும்போதே இவைகளெல்லாம் நிறைவேறுமென்று சொல்லக்கேட்டேன். நான் அதைக்கேட் 8 டும் அது எனக்கு விளங்கவில்லை; ஆகவே: என் ஆண்டவனே, இவைகளின் முடிவு என்னவாகும் என்று கேட்டேன். அதற்கு 9 அவன்: தானியேலே, நீ போய்விடு; இந்த வார்த்தைகள் முடிவுகாலவரையும் புதை பொருளாக வைக்கப்பட்டு முத்திரிக்கப் பட்டிருக்கும். அநேகர் சுத்திகரிக்கப்பட்டு 10 வெண்மையாகிப் புடமிடப்பட்டவர்களாய் விளங்குவார்கள்; தெய்வ பயமற்றவர்களோ தெய்வபயமற்றவர்களாகவே நடப்பார்கள்; தெய்வபயமற்றவரில் ஒருவனும் இதை உணரான், பக்திவிவேகமுள்ளவர்களோ உணர்ந்துகொள்ளுவார்கள். அன்றுட பலி 11 ஒழிந்து பாழாக்கும் அருவருப்பு வைக்கப்பட்ட காலமுதல் ஆயிரத்திருநூற்றுத்

12 தொண்ணூறு நாள் செல்லும். ஆயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து நாள்வரைக்கும் 13 நிலைநிற்பவன் பாக்கியவான். நீயோ முடிவைநோக்கிப் போய்விடு; நீ இளைப்பாறிக் கொண்டிருந்து நாட்களின் முடிவிலே உன் சுதந்தரத்தைப்பெற எழுந்திருப்பாய் என்றான்.

---

# HOSEA

---

# ஓசியா

1 யூதாவின் ராஜாக்களாகிய உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்பவர்களின் நாட்களிலும் யோவாசின் குமாரனாகிய இஸ்ரவேலின் ராஜாவாகிய யெரொபெயாமின் நாட்களிலும் பெயேரியின் குமாரனாகிய ஓசேயாவுக்கு வந்த யெகோவாவின் வார்த்தை இதுவே.

2 யெகோவா ஓசேயாவைக்கொண்டு பேசத்தொடங்கினபோது யெகோவா ஓசேயாவைப் பார்த்து: நீ போய் ஒரு சோரஸ்திரீயையும் சோரப்பிள்ளைகளையும் உன்னிடம் சேர்த்துக்கொள், தேசம் யெகோவாவை விட்டு விலகிச் சோரம்போகிறது என்றார்.

3 அப்படியே அவன்போய், திப்லாயிமின் குமாரத்தியாகிய கோமேரை மனைவியாகச் சேர்த்துக்கொண்டான்; அவள் கர்ப்பந்தரித்து அவனுக்கு ஒரு குமாரனைப்பெற்றாள். 4 அப்பொழுது யெகோவா அவனோடே பேசி: இவனுக்கு யிஸ்ரெயேல் என்னும் பேரிடு; இன்னும் கொஞ்சக்காலத்தில் நான் யேகூவின் வம்சத்தாரிடத்திலே யிஸ்ரெயேலின் இரத்தப்பழியை விசாரித்து இஸ்ரவேல் வீட்டாரின் ராஜ்யத்தை ஒழியப்பண்ணுவேன். 5 அந்நாளில் யிஸ்ரெயேலின் பள்ளத்தாக்கிலே இஸ்ரவேலின் வில்லை முறிப்பேன் என்றார். 6 அவள் திரும்பக் கர்ப்பந்தரித்து ஒரு குமாரத்தியைப்பெற்றாள்; அப்பொழுது அவர் அவளோடே பேசி: இவளுக்கு லோருகாமா என்னும் பேரிடு, நான் இனி இஸ்ரவேல் வீட்டாருக்கு இரக்கங்காட்டி அவர்களுக்கு மன்னிப்புத் தருவதேயில்லை. 7 யூதாவின் வீட்டாருக்கோ நான் இரக்கங்காட்டுவேன்; வில், பட்டயம், யுத்தம், குதிரைகள், குதிரைவீரர் இவற்றினால் நான் அவர்களை ரட்சியாமல் அவர்களுடைய கடவுளாகிய யெகோவாவினாலே ரட்சிப்புக் கிடைக்கச்செய்வேன் என்றார். 8 அவள் லோருகாமாவைப் பால்குடி மறக்கப்பண்ணின பிற்பாடு கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப்பெற்றாள். 9 அப்பொழுது அவர்: இவனுக்கு லோஅம்மீ என்னும் பேரிடு, நீங்கள் என் ஜனமல்ல, நான் உங்கள் கடவுளாயிருப்பதில்லை.

10 எனினும் இஸ்ரவேல் புத்திரரின் தொகை அளக்கவும் எண்ணவுமுடியாத கடற்கரை மணல்போலாகும்; நீங்கள் என் ஜனமல்ல என்று அவர்களுக்குச் சொல்வதற்குப் பதிலாக நீங்கள் ஜீவனுள்ள கடவுளின் பிள்ளைகள் என்று அவர்களுக்குச் சொல்லப்படும்.

11 அப்பொழுது யூதா புத்திரரும் இஸ்ரவேல் புத்திரரும் ஏகமாய்க் கூட்டப்பட்டுத் தங்களுக்கு ஒரே தலைவனை ஏற்படுத்தி, நாட்டிப்புறங்களிலிருந்து வருவார்கள்; யிஸ்ரெயேலின் நாள் பெரிதாகும்.

2 1 உங்கள் சகோதரருக்கு அம்மீ என்றும் உங்கள் சகோதரிகளுக்கு ருகாமா என்றும் பேரிடுங்கள்.

2 உங்கள் தாயோடே வழக்காடுங்கள், வழக்காடுங்கள், அவள் எனக்கு மனைவியுமல்ல, நான் அவளுக்குப் புருஷனுமல்ல; அவள் தன் வேசித்தனக் குறிகளைத் தன் முகத்தினின்றும் தன் விபசாரக் குறிகளைத் தன் மார்பிலிருந்தும் விலக்குக.

3 இல்லாவிட்டால் நான் அவளை நிர்வாணமாக உரிந்து, அவள் பிறந்தநாளில் இருந்தவண்ணமாக அவளை நிறுத்தி, அவளை வனாந்தரம்போலாக்கி, வறண்ட பூமிபோல்விட்டு,

அவளைத் தாகத்தால் சாகப்பண்ணுவேன்;
4 அவள் பிள்ளைகள் சோரப்பிள்ளைகள்,
அவர்களுக்கு இரங்காதிருப்பேன்;
5 அவர்கள் தாய் சோரம்போனாள்,
அவர்களைக் கர்ப்பந்தரித்தவள் இலச்சை
யானவைகளைச் செய்தாள்;
எனக்குவேண்டிய ஆகாரம், தண்ணீர்,
ஆட்டுமயிர், சணல், எண்ணெய், மது
பானம் இவற்றைக்
கொடுத்துவருகிற என் நேசர்களோடு
போவேன் என்றாள்.
6 ஆதலால், இதோ, நான் உன்வழியை
முள்ளால் அடைப்பேன்;
அவள் தன் பாதைகளைக் கண்டுபிடிக்க
முடியாதபடி மதில் எழுப்புவேன்.
7 அவள் தன் நேசர்களைத் தொடர்ந்தும்
அவர்களைச் சேருவதில்லை,
அவர்களைத் தேடியும் கண்டுபிடிப்ப
தில்லை;
அப்பொழுது அவள்: முதலில் எனக்
கிருந்த புருஷனிடம் திரும்பிப்போ
வேன்,
இப்பொழுது இருப்பதிலும் அப்பொழுது
எனக்கு நலமாயிருந்தது என்பாள்.
8 தனக்குத் தானியம், திராட்சரசம், எண்
ணெய் இவற்றைக் கொடுத்தவர் நானே
என்றும்
தனக்கு வெள்ளி, பொன், இவற்றைப்
பெருகப்பண்ணினவர் நானே என்றும்
அவள் அறியாமற்போனாள்;
இந்த வெள்ளியையும் பொன்னையும்
கொண்டு அவர்கள் பாகாலின் உருவத்
தைச் செய்தார்கள்.
9 ஆதலால் நான் என் தானியத்தை அதின்
காலத்திலும் என் திராட்சரசத்தை
அதின் பருவத்திலும் திரும்ப எடுத்துக்
கொண்டு
அவளுடைய நிர்வாணத்தை மூடுகிற
தற்கு நான் கொடுத்திருந்த
ஆட்டுமயிரையும் சணலையும் பறித்துக்
கொள்வேன்.
10 இப்போதும் அவளுடைய நேசர்காண
அவளுடைய அவலட்சணத்தை வெளிப்
படுத்துவேன்;
என் கையினின்று அவனை விடுவிப்பார்
இரார்.
11 அவளுடைய எல்லாக் களிப்புகளையும்
அவளுடைய உற்சவங்களையும்
அவளுடைய மாதப்பிறப்புகளையும் அவ
ளுடைய ஓய்வு நாட்களையும்
சபைகூடும் அவளுடைய எல்லாத் திரு
நாட்களையும் ஒழியப்பண்ணுவேன்.

என் நேசர் எனக்குக் கொடுத்த பணயம் 12
என்று அவள் சொன்ன அவளுடைய
திராட்சச்செடிகளையும் அவளுடைய
அத்திமரங்களையும்
நான் பாழாக்கி அவைகளைக் காடாகச்
செய்வேன்;
காட்டு மிருகங்கள் அவைகளைத்தின்னும்.
அவள் பாகால்களுக்குத் தூபங்காட்டித் 13
தன் நெற்றிப் பட்டங்களினாலும் தன்
ஆபரணங்களினாலும் தன்னைச் சிங்காரித்
துக்கொண்டு
தன் நேசரோடு சென்று என்னை மறந்து
போன நாட்களினிமித்தம் அவளை
விசாரிப்பேன்;
இது யெகோவாவின் திருவாக்கு.
ஆதலால், இதோ, நான் அவளுக்கு 14
நயங்காட்டி,
அவளை வனாந்தரத்தில் அழைத்துப்போய்
அவளோடே பட்சமாய்ப் பேசி,
அக்காலந்தொடங்கி அவளுக்கு அவ 15
ளுடைய திராட்சத்தோட்டங்களையும்
நம்பிக்கை வாசலாக ஆகோரின் பள்ளத்
தாக்கையும் கொடுப்பேன்;
அப்பொழுது அவள் அங்கே தன் இள
வயதின் நாட்களிலும்
தான் எகிப்து தேசத்திலிருந்து வந்த நா
ளிலும் பாடினதுபோல் பாடுவாள்.
அக்காலமுதல்—இது யெகோவாவின் 16
திருவாக்கு—
நீ என்னை என் பாகால் என்று சொல்
லாமல் என் புருஷன் என்று சொல்லு
வாய்.
பாகால்களின் நாமங்கள் அவள் வாயில் 17
வராதபடி
இனி அவற்றின் பேரை நினைத்துச்
சொல்வதில்லை.
அக்காலத்தில் நான் அவர்களுக்கெனக் 18
காட்டு மிருகங்களோடும் ஆகாயத்துப்
பறவைகளோடும் பூமியில் ஊரும்
பிராணிகளோடும்
ஒரு உடன்படிக்கை பண்ணுவேன்;
வில், பட்டயம், யுத்தாயுதம் இவற்றைத்
தேசத்திலே இராதபடி முறித்து
அவர்களைப் பயமின்றிப் படுத்திருக்கச்
செய்வேன்.
நித்திய விவாகத்துக்கென்று உன்னை 19
எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்;
நீதியும் நியாயமும் இரக்கமும் உருக்க
இரக்கமுமாய் உன்னை எனக்கு நியமித்
துக்கொள்ளுவேன்.
உண்மையாகவே உன்னை எனக்கு நிய 20
மித்துக்கொள்ளுவேன்;

நீ யெகோவாவை அறிந்துகொள்ளுவாய்.
21 அக்காலத்தில் நான் விண்ணப்பங்
களுக்குப் பதிலளிப்பேன்;
இது யெகோவாவின் திருவாக்கு.
நான் வானங்களுக்குப் பதிலளிப்பேன்,
அவைகள் பூமிக்குப் பதிலளிக்கும்.
22 பூமி தானியத்துக்கும் திராட்சரசத்துக்
கும் எண்ணெய்க்கும் பதிலளிக்கும்.
இவைகள் யிஸ்ரெயேலுக்கும் பதிலளிக்
கும்.
23 நான் அவனை எனக்கென்று பூமியிலே
விதைத்து
இரக்கம் பெறாதவளுக்கு இரங்குவேன்;
என் ஜனமல்லாதவர்களிடம், நீயே என்
ஜனமென்று சொல்லுவேன்;
அவர்கள், என் கடவுளே என்று சொல்லு
வார்கள் என்றார்.

**3** பின்பு யெகோவா என்னை நோக்கி: அந்
நிய தேவர்களிடம் திரும்பித் திராட்ச அடை
களை ஆசிக்கிறவர்களான இஸ்ரவேல் புத்தி
ரர்பேரில் யெகோவா வைத்திருக்கிற அன்
புக்கு ஒப்பாக நீ இன்னும் போய்த் தன்
நேசர்களால் நேசிக்கப்பட்டவளும் விபசா
ரியுமான ஒரு ஸ்திரீக்கு அன்பு காட்டு
2 என்று சொன்னார். அப்பொழுது நான்
அவனை எனக்குப் பதினைந்து வெள்ளிக்
காசும் ஒன்றரைக்கலம் வாற்கோதுமையும்
3 கொடுத்துவாங்கி: நீ வேசித்தனம் பண்ணுமை
னும் ஒருவனையும் சேராமலும் அநேகநாள்
எனக்கெனக் காத்திரு, உனக்கென நானும்
காத்திருப்பேன் என்று சொன்னேன்.
4 இஸ்ரவேல் புத்திரர் அநேகநாள் ராஜா
இல்லாமலும் அதிபதி இல்லாமலும்
பலி இல்லாமலும் சிலை இல்லாமலும்
ஏபோத் இல்லாமலும்
வீட்டு விக்கிரகங்கள் இல்லாமலும் இருப்
பார்கள்.
5 பின்பு இஸ்ரவேல் புத்திரர் திரும்பித்
தங்கள் கடவுளாகிய யெகோவாவையும்
தங்கள் ராஜாவாகிய தாவீதையும் தேடி
கடைசி நாட்களில் யெகோவாவையும்
அவருடைய தயவையும் நாடி ஓடிக்கத்
தோடி வருவார்கள்.

**4** இஸ்ரவேல் புத்திரரே, யெகோவாவின்
வார்த்தையைக் கேளுங்கள்;
தேசத்தின் குடிகளோடே யெகோவா
வுக்கு வழக்குண்டு;
அதற்குக் காரணம் தேசத்திலே உண்மை
யும் இல்லை, இரக்கமும் இல்லை;
கடவுளை அறியும் அறிவும் இல்லை.
ஆணையிட்டுப் பொய்சொல்லிக் கொலை 2
செய்து திருடி விபசாரம் பண்ணுகிறார்
கள்;
கொள்ளையிடுகிறார்கள்; இரத்தம்! எங்
கும் இரத்தமே!
இதினிமித்தம் தேசம் துக்கிக்கும்; 3
அதில் குடியிருப்பதெல்லாம், மிருகங்
களும் ஆகாயத்துப் பறவைகளும்கூடத்
தோய்ந்துபோகும்,
கடலின் மீன்களும் வாரிக்கொள்ளப்
படும்.
ஆகிலும் எவனும் வழக்காடவேண் 4
டாம், எவனும் கண்டித்துப்பேசவேண்
டாம்;
உன் ஜனங்கள் ஆசாரியனோடே வழக்
காடுகிறவர்களைப்போல இருக்கிறார்கள்.
ஆகையால் நீ பகலிலே இடறி விழுவாய்; 5
இரவிலே தீர்க்கதரிசியும் உன்னோடே
இடறிவிழுவான்;
உன் தாயையோ நான் சங்காரம்பண்ணு
வேன்.
என் ஜனம் அறிவில்லாமையினால் சங்காரிக் 6
கப்படுகிறது,
நீ அறிவை அசட்டைசெய்தாய், ஆகவே
நீ என் ஆசாரியனுயிராதபடி நானும்
உன்னை அசட்டைசெய்து தள்ளுவேன்;
நீ உன் கடவுளின் பிரமாணத்தை மறந்
தாய்,
நானும் உன்பிள்ளைகளை மறந்துவிடுவேன்.
அவர்கள் எவ்வளவு பெருகினார்களோ 7
அவ்வளவு எனக்கு விரோதமாய்ப் பா
வஞ்செய்தார்கள்;
அவர்கள் சிறப்பை இலச்சையாக மா
றப்பண்ணுவேன்.
அவர்கள் என் ஜனத்தின் பாவத்தைத் 8
தின்று பிழைத்து
அதின் அக்கிரமத்தில் ஆசையாயிருக்
கிறார்கள்.
ஜனங்களுக்கு நேரிடுவதுபோல ஆசாரிய 9
னுக்கும் நேரிடும்;
அவர்கள் வழிகளை நான் அவர்களில்
விசாரித்து,
அவர்கள் செயல்களின்படி அவர்களுக்
குப் பலனளிப்பேன்.
அவர்கள் யெகோவாவைக் கவனியாமல் 10
விலகியிருக்கிறபடியினால்
அவர்கள் தின்றாலும் திருப்தியடையா
திருப்பார்கள்,
அவர்கள் வேசித்தனம் பண்ணினாலும்
பலுகாதிருப்பார்கள்.
வேசித்தனமும் திராட்சரசமும் மதுபான 11
மும் புத்தியைக் கெடுக்கும்.

12 என் ஜனம் விசாரிப்பது மரக்கட்டையையே;
அவர்களுக்குப் பதிலளிப்பது அவர்கள் கோலே,
வேசித்தன ஆவி அவர்களை வழிதப்பப் பண்ணிற்று;
அவர்கள் தங்கள் கடவுளுக்கு அடங்காமல் சோரமார்க்கம் போனார்கள்.
13 அவர்கள் மலையுச்சியில் பலியிட்டு,
மேடுகளிலே கர்வாலிமரங்களின் கீழும்
புன்னை மரங்களின் கீழும் அரச மரங்களின் கீழும்
அவைகளின் நிழல் நல்லதென்று தூபங்காட்டுகிறார்கள்;
இதினாலே உங்கள் குமாரத்திகள் வேசித்தனமும் உங்கள் மருமக்கள்மார் விபசாரமும் செய்கிறார்கள்.
14 உங்கள் குமாரத்திகள் வேசித்தனம் செய்கிறதினிமித்தமும்
உங்கள் மருமக்கள்மார் விபசாரம் செய்கிறதினிமித்தமும்
நான் அவர்களைத் தண்டியாதிருப்பேன்;
புருஷரே விலகி வேசிகளோடே போய்த்
தாசிகளோடே பலியிடுகிறார்கள்;
உணர்வில்லாத ஜனம் சிக்குண்டு அழியும்.
15 இஸ்ரவேலே, நீ சோரம்போனாலும் யூதா
வாகிலும் அந்தப் பாவத்துக்குள்ளாகாதிருப்பதாக;
கில்காலுக்குச் செல்லாமலும் பேதாவேனுக்குப்போகாமலும்
யெகோவாவின் ஜீவன்மேலாணை என்று
ஆணையிடாமலுமிருங்கள்.
16 இஸ்ரவேல் அடங்காக் கடாரியைப்போல் அடங்காதிருக்கிறது,
இப்போதும் யெகோவா அவர்களை விஸ்தாரமான வெளியிலே
ஆட்டுக்குட்டியைப்போல் மேய்த்து அலையப்பண்ணுவாரோ?
17 எப்பிராயீம் விக்கிரகங்களோடு இணைந்திருக்கிறான்,
அவனைப் போகவிடு.
18 அவர்களுடைய மதுபானம் விருந்து அளவு கடந்தது, அவர்கள் சோரம்போய்க்கொண்டேயிருக்கிறார்கள்;
அவர்கள் அதிபதிகள் அவமானமானவற்றை ஆசித்துவருகிறார்கள்.
19 காற்று இவர்களைத் தன் செட்டைகளில் இறுகப்பிடிக்கும்;
அவர்கள் தங்கள் பலிகளால் வெட்கத்துக்குள்ளாவார்கள்.

5 ஆசாரியரே, இதைக் கேளுங்கள்;
இஸ்ரவேல் வீட்டாரே, கவனியுங்கள்;
ராஜாவின் வீட்டாரே, செவிகொடுங்கள்;
இந்த நியாயவிசாரணை உங்களைப்பற்றியதாம்.
நீங்கள் மிஸ்பாவில் ஒரு கண்ணியும்
தாபோரின்மேல் விரிக்கப்பட்ட வலையுமானீர்கள்;
2 துரோகிகள் கொலைத்தொழிலில் ஆழ்ந்தார்கள்,
அவர்கள் எல்லாரையும் சிட்சிப்பது நானே.
3 எப்பிராயீமை நான் அறிவேன், இஸ்ரவேல் எனக்கு மறைவானதல்ல;
இப்போதும் எப்பிராயீமே, நீ சோரம்போனாயே, இஸ்ரவேல் தீட்டுப்பட்டதே.
4 அவர்கள் தங்கள் கடவுளினிடம் திரும்புவதற்கு முயல்கிறதில்லை;
வேசித்தன ஆவி அவர்கள் உள்ளத்தில் இருக்கிறது, யெகோவாவை அறியார்கள்.
5 இஸ்ரவேலின் அகந்தை அவர்களுக்கு விரோதமாய்ச் சாட்சியிடுகிறது;
ஆகவே இஸ்ரவேலும் எப்பிராயீமும் தங்கள் அக்கிரமத்தினால் இடறுண்டுவிழுவார்கள்;
அவர்களோடே யூதாவும் இடறுண்டு விழுவான்.
6 அவர்கள் யெகோவாவைத் தேடும்படி தங்கள் ஆடுகளோடும் தங்கள் மாடுகளோடும் போனாலும்
அவரைக் காணமாட்டார்கள், அவர் அவர்களைவிட்டு விலகினாரே.
7 யெகோவாவுக்கு விரோதமாகத் துரோகம் பண்ணினார்கள், அந்நிய பிள்ளைகளைப் பெற்றார்கள்;
இப்போதும் மாதப்பிறப்பானது அவர்களை அவர்களுக்குரிய நிலங்களோடே பட்சிக்கும்.
8 கிபியாவிலே எக்காளத்தையும் ராமாவிலே பூரிகையையும் ஊதுங்கள்;
பேதாவேனிலே ஆரவாரஞ்செய்யுங்கள்;
பென்யமீனே உனக்குப் பின்னே!
9 தண்டனையின் நாளிலே எப்பிராயீம் பாழாவான்;
வரப்போகிறதை நான் இஸ்ரவேலின் கோத்திரங்களுக்கு அறிவிப்பது உண்மையானதே.
10 யூதாவின் பிரபுக்கள் எல்லைகளை ஒற்றிப்போடுகிறவர்களுக்கு ஒப்பானார்கள்;
அவர்கள்மேல் என் உக்கிரகோபத்தைத் தண்ணீரைப்போல ஊற்றுவேன்.

11 எப்பிராயீம் வீண்கற்பனையை அனு
சரிக்க மனதாயிருந்தபடியால்
அவன் ஒடுங்குண்டு நியாயவிசாரணையில்
நொறுக்கப்பட்டுப்போகிறான்.
12 நான் எப்பிராயீமுக்குப் பொட்டரிப்
பைப்போலவும்
யூதாவின் வீட்டுக்கு உளுப்பைப்போல
வும் இருப்பேன்.
13 எப்பிராயீம் தன் வியாதியையும் யூதா
தன் காயத்தையும் கண்டபோது
எப்பிராயீம் அசீரியாவுக்குப் போய் யா
ரேப் ராஜாவினிடம் ஆள அனுப்பினான்;
உங்களைக் குணமாக்கவும் உங்களில்
இருக்கிற காயத்தை ஆற்றவும்
அவனால் முடியாது.
14 நான் எப்பிராயீமுக்குச் சிங்கம்போல
வும், யூதாவின் வீட்டாருக்குப் பால
சிங்கம்போலவும் இருப்பேன்;
நான்தானே பறித்துப்போவேன்,
தப்புவிப்பார் இல்லாமல் எடுத்துக்
கொண்டுபோவேன்.
15 அவர்கள் தங்கள் குற்றங்களுக்குத் தக்க
படி தண்டிக்கப்பட்டு என் முகத்தைத்
தேடுமட்டும்
நான் என் இடத்துக்குத் திரும்பிப்போய்
விடுவேன்;
தங்கள் ஆபத்திலே என்னைத் தேடுவார்
கள்.

6 யெகோவாவினிடம் திரும்புவோம்
வாருங்கள்,
நம்மைப் பீறினவர் அவரே, நம்மைக்
குணமாக்குகிறவரும் அவரே;
நம்மை அடித்தவர் அவரே, நமது காயங்
களைக் கட்டுகிறவரும் அவரே.
2 இரண்டு நாளானபின்பு அவர் நம்மை
உயிர்ப்பிப்பார்;
மூன்றாம் நாளில் நம்மை எழுந்திருக்கச்
செய்வார்,
அப்பொழுது நாம் அவர் சமுகத்தில்
ஜீவிப்போம்.
3 நாம் அறிவடைவோமாக, யெகோவாவை
அறியும்படி முன்செல்வோமாக,
அவர் வருகை அருணோதயம்போல் நிச்
சயம்,
அவர் மழைபோல் நம்மிடம் வருவார்;
பூமியை நனைக்கும் பின்மாரிபோலவே.
4 எப்பிராயீமே, உனக்கு என்னசெய்
வேன்? யூதாவே, உனக்கு என்னசெய்
வேன்?
உங்கள் பக்தி காலையில் காணும் மேகம்
போலவும்
அதிகாலையில் தோன்றும் பனிபோலவும்
ஒழிந்துபோகிறது.
5 ஆகையால் தீர்க்கதரிசிகளைக்கொண்டு
அவர்களை வெட்டினேன்;
என் வாய்மொழிகளைக்கொண்டு அவர்
களைக் கொன்றுபோட்டேன்;
உன்மேல் வரும் தீர்ப்புகள் பட்டப்பகல்
போல் வெளிப்படும்.
6 பலியை அல்ல இரக்கத்தையும்
தகனபலிகளைப் பார்க்கிலும் கடவுளை அறி
கிற அறிவையும் விரும்புகிறேன்.
7 அவர்களோ மானிடவண்ணமாய் உடன்
படிக்கையை மீறினார்கள்,
அதிலே எனக்கு விரோதமாய்த் துரோ
கம்பண்ணினார்கள்.
8 கிலெயாத் அக்கிரமம் செய்கிறவர்களின்
பட்டணம்,
அது இரத்தத்தினால் கறைபட்டது.
9 ஆசாரியரின் கூட்டம் ஒருவன் வரக்காத்
திருக்கிற கொள்ளைக்காரர் கூட்டம்
போன்றது,
ஆசாரியர் சிகேமுக்குப்போகிற வழி
யிலே கொலைசெய்கிறார்கள்;
வெட்கக்கேடான காரியங்களையே செய்
கிறார்கள்.
10 பயங்கரமானதை இஸ்ரவேல் வீட்டா
ரில் கண்டேன்,
அங்கே எப்பிராயீம் வேசித்தனம் செய்
கிறது, இஸ்ரவேல் தீட்டுப்பட்டது.
11 யூதாவே, உனக்கும் ஒரு அறுப்புக்காலம்
நியமிக்கப்பட்டிருக்கிறது,
என் ஜனத்தின் துன்பநிலையை நான் மாற்
றும்போது அதுவரும்.

7 நான் இஸ்ரவேலைக் குணமாக்க வரும்
போது
எப்பிராயீமின் அக்கிரமமும் சமாரியா
வின் தீமைகளும் வெளிப்படுகின்றன;
அவர்கள் வஞ்சனை செய்கிறார்கள்;
திருடன் உள்ளே நுழைகிறான், பறிகாரர்
கூட்டம் வெளியே கொள்ளையிடுகிறது.
2 அவர்கள் செய்த தீமையெல்லாம் நான்
நினைவில்வைத்திருக்கிறேன்
என்று அவர்கள் தங்கள் இருதயத்தில்
நினைக்கிறதில்லை;
இப்போதும் அவர்கள் செய்கைகளே
அவர்களைச் சூழ்ந்துகொண்டன;
அவைகள் என் கண் எதிரே இருக்கின்
றன.
3 ராஜாவைத் தங்கள் தீமையினாலும்
அதிபதிகளைத் தங்கள் பொய்களினாலும்
சந்தோஷப்படுத்துகிறார்கள்.

4 அவர்கள் எல்லாரும் விபசாரக்கள்
ளர்;
அப்பஞ்சுடுகிறவன் எரிக்கும் அடுப்
பைப்போன்றவர்கள்;
அவன் மாவைப்பிசைந்துமுதல் அது
உப்பிப்போகுமட்டும் அனலை மூட்டா
மல் ஒய்ந்திருக்கிறான்.
5 நமது ராஜாவின் நாளில் அதிபதிகள்
திராட்சரசவெப்பால் வியாதியுண்டாக்கிக்
கொள்ளுகிறார்கள்;
அவனே அகந்தைக்காரரைத் தன் பக்க
மாக இழுத்துக்கொள்ளுகிறான்.
6 தங்கள் சதியோசனைகளால் தங்கள் இரு
தயத்தை அடுப்பைப்போலாக்கினபின்
இரவெல்லாம் அப்பஞ்சுடுகிறவன் தூங்
குகிறதுபோலிருந்தும்
காலையிலே அது ஜ்வாலிக்கிற அக்கினி
யாய் எரியும்.
7 அவர்கள் எல்லாரும் அடுப்பைப்போல
அனலாகித் தங்கள் அதிகாரிகளைப் பட்
சிக்கிறார்கள்;
அவர்கள் ராஜாக்கள் எல்லாரும் விழுகி
றார்கள்;
அவர்களில் என்னை நோக்கிக் கூப்பிடு
கிறவன் எவனும் இல்லை.
8 எப்பிராயீம் அந்நிய ஜனங்களோடே
கலந்திருக்கிறான்,
எப்பிராயீம் திருப்பிப்போடாத அப்பம்.
9 அந்நியர் அவன் பலத்தைத் தின்கிறார்கள்,
அவனோ அதை அறியான்;
நரைமயிரும் அவனில் தெளித்திருக்கி
றது, அவனோ அதை அறியாதிருக்கி
றான்.
10 இஸ்ரவேலின் அகந்தை அவர்களுக்கு
விரோதமாய்ச் சாட்சியிட்டும்
அவர்கள் தங்கள் கடவுளாகிய யெகோ
வாவினிடம் திரும்பவில்லை,
இவையெல்லாம் அப்படியிருந்தும் அவ
ரைத் தேடவில்லை.
11 எப்பிராயீம் பேதையான புருவைப்
போல் இருக்கிறான், அவனுக்குப் புத்தி
யில்லை;
எகிப்தைக் கூப்பிடுகிறார்கள், அசீரியா
வுக்குப் போகிறார்கள்.
12 அவர்கள் போகையிலேயே என் வலையை
அவர்கள்மேல் வீசுவேன்;
ஆகாயத்துப் பறவைகளைப்போல் அவர்
களைக் கீழே விழப்பண்ணுவேன்;
நான் அவர்களைத் தண்டிப்பேன், அவர்
கள் சபையிலும் அது தெரிந்திருக்கிற
தே.
13 ஐயோ! அவர்களுக்குக் கேடாம்!
அவர்கள் என்னைவிட்டு அலைந்து திரிகி
றார்கள்,
அவர்களுக்கு அழிவே! எனக்கு விரோத
மாகத் துரோகம் பண்ணினார்கள்;
அவர்கள் எனக்கு விரோதமாகப் பொய்
பேசுகிறார்களே, நான் அவர்களை விடு
விப்பேனே!
14 அவர்கள் தங்கள் இருதயத்தில் என்னை
நோக்கி அபயமிடுகிறதில்லை,
தங்கள் படுக்கைகளில் அலறுகிறார்
களே;
அவர்கள் தானியத்தையும் திராட்ச ரசத்
தையும்பற்றிக் கவலைப்படுகிறார்கள்;
என்னையோ விட்டுவிலகிப்போகிறார்கள்.
15 அவர்களுக்குப் போதித்து அவர்கள்
புயங்களைப் பலப்படுத்துகிறவர் நானே
எனினும்
அவர்கள் எனக்கு விரோதமாகத் தீமை
நினைக்கிறார்கள்.
16 திரும்புகிறார்கள் எனினும் உன்னதமான
வரிடத்திற்கல்ல;
மோசம்போக்கும் வில்லைப்போலிருக்
கிறார்கள்;
அவர்கள் அதிபதிகள் தங்கள் நாவின்
உக்கிரத்தினிமித்தம் பட்டயத்தால்
விழுவார்கள்;
இதுவே எகிப்துதேசத்திலே அவர்
களுக்கு நிந்தையாம்.

**8** உன் வாயிலே எக்காளத்தை வை!
சத்துரு கழுகைப்போல் யெகோவாவின்
வீட்டின்மேல் பாய்ந்துவருகிறான்!
அவர்கள் என் உடன்படிக்கையை மீறி
என் நியாயப்பிரமாணத்துக்கு விரோத
மாகத் துரோகம் பண்ணினார்கள்;
2 அவர்கள் என்னிடம் அபயமிட்டு,
எங்கள் கடவுளே, இஸ்ரவேலராகிய
நாங்கள் உம்மை அறிந்திருக்கிறோம்
என்கிறார்கள்.
3 இஸ்ரவேலரோ நலமானதை வெறுத்து
விட்டார்கள், சத்துரு அவர்களைப் பிடிக்
கத்தொடருக.
4 அவர்கள் ராஜாக்களை ஏற்படுத்திக்கொண்
டார்கள், அது என்னாலேயானதல்ல;
அதிபதிகளை வைத்துக்கொண்டார்கள்,
அது எனக்குத் தெரிந்ததல்ல;
தங்கள் வெள்ளியினாலும் தங்கள் பொன்
னினாலும் தங்களுக்கு விக்கிரகங்களைச்
செய்தார்கள்,
அது அவர்கள் அழிவுக்கு ஏதுவாகும்.
5 சமாரியாவே, உன் கன்றுக்குட்டி அவ
ருக்கு வெறுப்பு;

என் கோபம் அவர்கள்மேல் மூண்டது;
எதுவரைக்கும் அது!
அவர்கள் தண்டனைபெறுது போவ
தில்லை.
6 அந்தக் கன்றுக்குட்டி இஸ்ரவேலரிட
மிருந்து வந்ததே,
தட்டான் அதைச் செய்தான், அது தெய்
வம் அல்லவே,
சமாரியாவின் கன்றுக்குட்டி துண்டு
துண்டாய்ப் போகும்.
7 அவர்கள் காற்றை விதைத்துப் பெருங்
காற்றை அறுப்பார்கள்;
பயிர் அவர்களுக்கு இல்லை;
விளைச்சல் மாவைக் கொடாது, கொடுத்
தாலும் அந்நியர் அதை விழுங்குவார்
கள்.
8 இஸ்ரவேலர் விழுங்கப்பட்டாயிற்று;
இப்பொழுது அவர்கள் புறஜாதியாருக்
குள்ளே விரும்பாத வெறும் பாத்திரம்
போலிருக்கிறார்கள்.
9 அவர்கள் தனித்துத்திரிகிற காட்டுக் கழு
தைபோல் அசீரியாவுக்குப் போனார்கள்;
எப்பிராயீமர் பணயம் கொடுத்து வருகி
றார்கள்.
10 அவர்கள் புறஜாதியாருக்குப் பணயம்
கொடுத்தாலும்
இப்பொழுது நான் அவர்களைக் கூட்டிச்
சேர்ப்பேன்,
அதிபதிகளுக்கு மேற்பட்ட ராஜா சுமத்
தும் சுமையினால் அவர்கள் கொஞ்சக்
காலத்தில் துன்பமுறத் துவக்குவார்கள்.
11 பாவஞ்செய்வதற்கேதுவாய் எப்பிராயீ
மர் பலிபீடங்களைப் பெருகப்பண்ணி
னார்கள்;
அந்த பலிபீடங்களே அவர்கள் பாவஞ்
செய்வதற்கு ஏதுவாகும்.
12 என் நியாயப்பிரமாணத்தை ஆயிரங்க
ளாக அவர்களுக்கு எழுதிக்கொடுத்
தாலும்
அவர்கள் அவைகளை அந்நிய காரிய
மாக எண்ணுவார்கள்.
13 எனக்குச் செலுத்தும் பலிகளின் மாம்சத்
தை அவர்களே புசிக்கிறார்கள்;
யெகோவா அவர்கள்மேல் பிரியங்கொள்
ளார்;
இப்பொழுதும் அவர்கள் அக்கிரமத்தை
அவர் நினைத்து, அவர்கள் பாவத்தைத்
தண்டிப்பார்;
அவர்கள் எகிப்துக்கே திரும்பிப்
போவார்கள்.
14 இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரை
மறந்து அரமனைகளைக் கட்டுகிறார்;
யூதா அரணான பட்டணங்களைப் பெரு
கப்பண்ணுகிறான்;
நானே அதின் நகரங்களில் அக்கினியை
எறிவேன்,
அது அவைகளின் அரமனைகளைப் பட்
சிக்கும்.

9 இஸ்ரவேலே, மகிழ்ச்சியாயிராதே;
மற்ற ஜனங்களைப் போல் களிகூராதே;
உன் கடவுளைவிட்டு நீ சோரம்போனாய்;
தானியம் போரடிக்கிற சகல களங்களி
லும் பணயத்தை நாடுகிறாய்.
2 தானியக்களமும் திராட்சத் தொட்டியும்
அவர்களைப் பிழைப்பூட்டுவதில்லை,
புதுத் திராட்சரசம் அவர்களுக்கு ஒழிந்து
போகும்.
3 அவர்கள் யெகோவாவின் தேசத்தில் குடி
யிருப்பதில்லை;
எப்பிராயீமர் திரும்ப எகிப்துக்குப்
போவார்கள்;
அசீரியாவில் தீட்டுள்ளதைப் புசிப்பார்
கள்.
4 அவர்கள் யெகோவாவுக்குத் திராட்சரச
பானபலியை வார்ப்பதுமில்லை, அவரால்
அங்கீகரிக்கப்படுவதுமில்லை;
அவர்களுடைய பலிகள் அவர்களுக்குத்
துக்கங்கொண்டாடுகிறவர்களின் ஆகா
ரம்போலிருக்கும்;
அதைப் புசிக்கிற யாவரும் தீட்டுப்படு
வார்கள்;
அவர்களுடைய ஆகாரம் அவர்கள் பசிக்
கே, அது யெகோவாவின் ஆலயத்தில்
வருவதில்லை.
5 திருநாளிலும் யெகோவாவின் உற்சவ
நாளிலும்
நீங்கள் என்ன செய்வீர்கள்?
6 இதோ, அவர்கள் அழிவுக்குத் தப்பிப்
போவார்களானால்
அவர்களை எகிப்து சேர்த்துக்கொள்ளுவது
அவர்களை அடக்கம்பண்ணுவது மோப்
பட்டணமே;
அவர்களுடைய அரிய வெள்ளிப்
பொருட்கள் காஞ்சொறிகளுக்குச் சொந்
தமாகும்,
அவர்கள் கூடாரங்களில் முட்செடிகளே.
7 தண்டனை நாட்கள் வரும், மனித
செயலுக்குப் பதிலளிக்கும் நாட்கள்
வரும்,
இது இஸ்ரவேலருக்குத் தெரியவரும்;
உன் மிகுதியான அக்கிரமத்தினாலும்
பெரும் பகையினாலும்

தீர்க்கதரிசிகள் மூடர்போலும் ஆவியைப்
பெற்றவர்கள் பைத்தியங்கொண்டவர்
போலுமிருக்கிறார்கள்.
8 எப்பிராயீம் என் கடவுளுக்கு விரோத
மாய்ப் பதிவிருக்கிற சத்துருவாயிற்று,
தீர்க்கதரிசியின் வழிகளிலெல்லாம் குழு
வினின் கண்ணியிருக்கிறது,
அவனுடைய கடவுளின் ஆலயத்திலே
பகையே.
9 கிபியாவின் நாட்களில் நடந்ததுபோல
அவர்கள் தங்களை மிகவும் கெடுத்துக்
கொண்டார்கள்;
அவர்களுடைய அக்கிரமத்தை அவர்
நினைப்பார், அவர்களுடைய பாவங்
களைத் தண்டிப்பார்.
10 வனாந்தரத்தில் திராட்சக் குலைகளைக்
கண்டாற்போல இஸ்ரவேலைக் கண்டு
பிடித்தேன்,
அத்திமரத்தில் முதல்தரம் பழுத்த முதற்
கனிகளைப்போல உங்கள் பிதாக்களைக்
கண்டுபிடித்தேன்,
அவர்களோ பாகால்பெயோர் அண்
டைக்குப்போய் இலச்சையானதற்குத்
தங்களைப் பரிஷ்டைசெய்து
தாங்கள் நேசித்தவைகளைப்போலவே
தாங்களும் அருவருப்புள்ளவர்களானார்
கள்.
11 எப்பிராயீம் மகிமை ஒரு பறவைபோல்
பறந்துபோம்,
அவர்களுக்குள் பிறப்பதுமில்லை, வயிற்
றிலிருப்பதுமில்லை, கர்ப்பந்தரிப்பது
மில்லை.
12 அவர்கள் தங்கள் பிள்ளைகளை வளர்த்தா
லும்
அவர்களுக்கு ஒரு மனுஷனுமிராதபடி
அவர்களைப் பிள்ளைகள் அற்றவர்களாக்கு
வேன்;
நான் அவர்களைவிட்டுப் போகவே,
ஐயோ, அவர்களுக்குக் கேடாம்!
13 நான் தீருவில் கண்டபடியே
எப்பிராயீம் நல்ல வசதியான இடத்திலே
நடப்பட்டிருக்கிறது;
ஆயினும் எப்பிராயீமர் தங்கள் குமார
ரைக் கொலைசெய்கிறவனிடம் வெளி
யே கொண்டுபோய் விடுவார்கள்.
14 யெகோவாவே, நீர் அவர்களுக்குக்
கொடும்,
—எதைக் கொடுப்பீர்?
விழுந்துபோகிற கர்ப்பத்தையும் பாலற்ற
முலைகளையும் கொடும்.
15 அவர்கள் தீமையெல்லாம் கில்காலி
லே,
அங்கேயே நான் அவர்களைப் பகைக்கத
தொடங்கினேன்;
அவர்கள் செய்த தீமையினிமித்தம்
அவர்களை என் வீட்டினின்று துரத்து
வேன்;
இனி அவர்களில் அன்புகூரமாட்டேன்,
அவர்கள் அதிபதிகள் எல்லாரும்துரோகி
கள்.
16 எப்பிராயீமர் வெட்டுண்டு போனார்கள்;
அவர்கள் வேர் உலர்ந்துபோயிற்று,
கனி கொடுக்கமாட்டார்கள்;
அவர்கள் பிள்ளைகளைப் பெற்றாலும்
அவர்களுடைய கர்ப்பத்தின் அரிய கனி
களை அழித்துவிடுவேன்.
17 அவர்கள் அவருக்குச் செவிகொடாமற்
போனபடியால் என் கடவுள் அவர்
களைத் தள்ளிவிடுவார்;
அவர்கள் புறஜாதியாருக்குள்ளே
அலைந்து திரிவார்கள்.

10 இஸ்ரவேல் செழித்துப் படர்ந்த
திராட்சச்செடி, அது தன் கனியைக்
கொடுக்கிறது;
கனி அதிகரிக்கவே அவன் பலிபீடங்
களை அதிகமாக்குகிறான்;
தேசத்தின் செழிப்பு அதிகரிக்கவே அவர்
கள் சிறப்பான சிலைகளைச் செய்கிறார்
கள்.
2 அவர்கள் இருதயம் கபடமுள்ளது, இப்
போதும் தங்கள் செயலுக்குத்தக்க பலன்
பெறுக.
அவர் தாமே அவர்கள் பலிபீடங்களை
இடித்து அவர்கள் சிலைகளை நாசமாக்கு
வார்.
3 நாம் யெகோவாவுக்குப் பயப்படாமற்
போனபடியினால்
நமக்கு ராஜா இல்லை, ராஜா இருந்தா
லும் நமக்காக என்ன செய்வான்
என்று இப்போது சொல்லுவார்கள்.
4 வீண்வார்த்தைகளைப்பேசிப் பொய்
யாணையிட்டு உடன்படிக்கை செய்கிறார்
கள்,
ஆகையால் வயல்வெளியின் படைச்சால்
களில் விஷப்பூண்டுகளைப்போல நியா
யத்தீர்ப்பு முளைக்கும்.
5 சமாரியாவின் குடிகள் பேதாவேனி
லுள்ள கன்றுக்குட்டியைப்பற்றிக் கவ
லைப்படுவார்கள்;
அதினிமித்தம் அதின் ஜனம் துக்கிக்
கும்;
அதின் மகிமை போய்விட்டதென்று
அதன் பூசாரிகள் புலம்புவார்கள்.

6 அதுவும் அசீரியாவிலுள்ள யாரேப் ராஜாவுக்கு வெகுமதியாகக்கொண்டு போகப்படும்;
எப்பிராயீம் இலச்சையுறுவான், இஸ்ரவேல் தன் ஆலோசனையினிமித்தம் வெட்கப்படுவான்.
7 சமாரியாவின் ராஜா தண்ணீரின்மேலுள்ள துரும்புபோல் ஒழிந்துபோவான்.
8 இஸ்ரவேலின் பாவமாகிய ஆவேனின் மேடைகள் அழிக்கப்படும்;
முள்ளும் குருக்கும் அவர்கள் பலிபீடங்களின்மேல் முளைத்துமூடும்;
மலைகளைப்பார்த்து எங்களை மூடுங்கள் என்றும்
குன்றுகளைப்பார்த்து எங்கள்மேல் விழுங்கள் என்றும் சொல்லுவார்கள்.
9 இஸ்ரவேலே, நீ கிபியாவின் நாட்கள் முதல் பாவஞ்செய்து வந்தாய்;
அக்கிரமக்காரர்மேல் வரும் யுத்தம் அவர்களைக் கிபியாவிலே கிட்டாதோ?
அங்கேயே அவர்கள் நிலைத்துநின்றார்கள்.
10 எனக்கு இஷ்டமானபோது நான் அவர்களைத் தண்டிப்பேன்;
அவர்கள் செய்த இரண்டு அக்கிரமங்களோடே இணைக்கப்பட்டிருக்கும்போது ஜாதியார் அவர்களுக்கு விரோதமாய்க் கூடுவார்கள்.
11 எப்பிராயீம் நன்றாய்ப் பழக்கப்பட்டுப் போரடிக்க இஷ்டப்படுகிற கடாரி;
நானே அவன் அழகான கழுத்தின்மேல் நுகத்தடியை வைப்பேன்;
எப்பிராயீமை நுகத்தில் மாட்டுவேன்,
யூதா உழுவான், யாக்கோபு அவனுக்குப் பரம்படிப்பான்.
12 நீங்கள் நீதிபாக விதைவிதையுங்கள்,
இரக்கமாக அறுப்பு அறுங்கள்,
உங்கள் தரிசுநிலத்தைப் பண்படுத்துங்கள்,
யெகோவா வந்து உங்கள்மேல் நீதியைப் பொழியும்படி அவரைத்தேடக் காலம் வந்தது.
13 நீங்கள் உழுத்து துன்மார்க்கம், அறுத்தது தீவினை, புசித்தது பொய்யின் கனி;
உங்கள் வழியிலும் உங்கள் பல பராக்கிரமசாலிகளிலும் நம்பிக்கை வைத்தீர்களே.
14 எனினும் உங்கள் ஜாதியாருக்குள் அமளி எழும்பும்,
உங்கள் எல்லா அரண்களும் அழிக்கப்படும்;
யுத்தநாளில் சல்மான் பேத்தார்பேலை அழித்ததுபோலாகும்;
அக்காலத்தில் பிள்ளைகளோடு தாய்மாரும் மோதியடிக்கப்பட்டார்களே.
15 உங்கள் கொடிய தீமையினிமித்தம் பேதேல் இப்படிப்பட்டதை உங்களுக்குச் செய்யும்,
அதிகாலமே இஸ்ரவேலின் ராஜா முற்றிலும் சங்காரிக்கப்படுவான்.

11 இஸ்ரவேல் இளைஞனாயிருந்தபோது நான் அவனில் அன்பாயிருந்தேன்;
எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்.
2 அவர்கள் எவ்வளவாய் அழைக்கப்பட்டார்களோ அவ்வளவாய்த் தூரவிலகிப் போனார்கள்;
பாகால்களுக்குப் பலியிட்டுச் சொரூபங்களுக்குத் தூபங்காட்டினார்கள்.
3 நானே எப்பிராயீமை நடக்கப்பழக்கினேன், என் கைகளில் அவர்களை ஏந்தினேன்;
எனினும் தங்களைக்குணமாக்குகிறவர் நானே என்று அவர்கள் அறியாமற் போனார்கள்.
4 மானிடக் கட்டுகளாலும் அன்பின் கயிறுகளாலும் நான் அவர்களை இழுத்துவந்தேன்,
நுகத்தடி அவர்கள் கன்னங்களில் படாமல் பத்திரமாய் அதை நீக்கிவிட்டேன்.
அவர்களிடம் குனிந்து அவர்களுக்கு ஆகாரங்கொடுத்தேன்.
5 மனந்திரும்ப மாட்டோமென்றதினால் அவர்கள் எகிப்து தேசத்துக்குத் திரும்பவேண்டாமோ?
அசீரியா அவர்களை ஆளுகை செய்யும் ராஜா.
6 அவர்கள் ஆலோசனைகளினிமித்தம் பட்டயம் அவர்கள் பட்டணங்களுக்குள் பாயும்,
அவர்கள் தாழ்ப்பாள்களை அழித்து அவர்களைப் பட்சிக்கும்.
7 என் ஜனம் என்னைவிட்டு விலகிப்போக வேண்டுமென்றிருக்கிறார்கள்;
அவர்களை உன்னதமானவரிடம் வரவழைத்தாலும் ஒருவனும் எழும்புகிறதில்லை.
8 எப்பிராயீமே நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்?
இஸ்ரவேலே, நான் உன்னை எப்படி ஒப்புக்கொடுப்பேன்?

நான் உன்னை எப்படி அத்மாவைப்போ
லாக்குவேன்?
உன்னை எப்படிச் செபோயிமைப்போல
வைப்பேன்?
என் இருதயம் எனக்குள் குழம்புகிறது,
என் பரிதாபமெல்லாம் எழுப்பப்படு
கிறது.
9 என் உக்கிரகோபத்தின்படியே செய்ய
மாட்டேன்,
எப்பிராயீமைத் திரும்பவும் அழிக்கமாட்
டேன்,
நான் கடவுள். மனுஷனல்ல, உன் நடுவி
லுள்ள பரிசுத்தர்;
நான் கடுங்கோபமாய் வரமாட்டேன்.
10 யெகோவாவையே அவர்கள் பின்பற்று
வார்கள், அவர் சிங்கத்தைப்போல்
கெர்ச்சிக்கிறார்;
அவர் கெர்ச்சிக்கவே அவர்கள் சந்ததி
யார் மேல்திசையிலிருந்து நடுங்கிவரு
வார்கள்.
11 எகிப்திலிருந்து குருவிகளைப்போலவும்
அசீரியா தேசத்திலிருந்து புறாக்களைப்
போலவும் நடுங்கி வருவார்கள்;
அவர்களை அவர்கள் வீடுகளில் குடியிருக்
கச் செய்வேன்; இது யெகோவாவின்
திருவாக்கு.
12 எப்பிராயீமர் பொய்களினாலும் இஸ்ர
வேல் வீட்டார் வஞ்சகத்தினாலும்
என்னைச் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள்;
உண்மையுள்ளவராகிய பரிசுத்தர் விஷ
யத்தில்,
கடவுள் விஷயத்தில், யூதா இன்னும்
தன் இஷ்டப்படி நடக்கிறான்.

**12** எப்பிராயீம் காற்றை மேய்ந்து கீழ்
காற்றைப் பிடிக்க ஓடுகிறான்;
அவன் நாளெல்லாம் பொய்யையும்
கொடுமையையும் பெருகச் செய்கி
றான்;
அசீரியாவோடே உடன்படிக்கை செய்
கிறான், எகிப்துக்கு எண்ணெய்
கொண்டுபோகப்படுகிறது.
2 யூதாவோடும் யெகோவாவுக்கு வழக்
குண்டு,
அவர் யாக்கோபை அவன் வழிகளுக்
குத் தக்கபடி தண்டிக்கப் போகிறார்,
அவன் செய்கைகளுக்குத் தக்கபடியே
அவனுக்குப் பதிலளிப்பார்.
3 தன் தாயின் கர்ப்பத்திலே தன் சகோ
தரன் குதிகாலைப் பிடித்தான்;
தனது ஆற்பிராய பலத்தில் கடவுளோடே
போராடினான்.
4 அவன் தூதனோடே போராடி மேற்
கொண்டான்,
கண்ணீரோடே அவரைக் கெஞ்சினான்;
பேதேலிலே அவன் அவரைக் கண்டு
கொண்டான்,
அவ்விடத்திலும் அவர் நம்மோடே பேசி
னார்.
5 யெகோவாவாகிய அவர் சேனைகளின்
கடவுள்,
யெகோவா என்பதே அவர் திருநாமம்.
6 ஆகவே நீ உன் கடவுளினிடம் திரும்பு,
இரக்கத்தையும் நியாயத்தையும் கைக்
கொண்டு இடைவிடாமல் உன் கடவுளை
நோக்கிக் காத்திரு.
7 கானானியன் கையில் கள்ளத்தராசு
இருக்கிறது;
அநியாய லாபத்தை ஆசிக்கிறான்.
8 எப்பிராயீம் இப்படிச் சொல்லுகிறான்:
நான் ஐசுவரியவானானேன், நான் பொ
ருள் சம்பாதித்தேன்;
என் பிரயத்தனங்களிலெல்லாம் பாவ
மான குற்றம் என்னிடம் கண்டுபிடிக்
கப்படுவதில்லை யென்கிறான்.
9 உன்னை எகிப்து தேசத்திலிருந்து
அழைத்து வந்தது முதல்
நானே உன் கடவுளாகிய யெகோவா,
உற்சவ நாட்களில் செய்யப்படுவது
போலத்
திரும்பவும் உன்னைக் கூடாரங்களில்
வசிக்கச்செய்வேன்.
10 தீர்க்கதரிசிகளுக்குப் பேசினவர் நானே.
நான் அநேகம் தரிசனங்களை அருளி
னேன்,
தீர்க்கதரிசிகளைக்கொண்டு உவமைக
ளால் பேசினேன்.
11 கிலெயாத் அக்கிரமமாயிற்றே?
ஆம், அவர்கள் வெறும் பொய்யே,
காலிலே காளைகளைப் பலியிடுகிறார்கள்;
அவர்களுடைய பீடங்கள் வயல்வெளி
யின் படைச்சால்களிலுள்ள கற்குவி
யல்களைப்போலிருக்கிறது.
12 யாக்கோபு சீரியா நாட்டுக்கு ஓடிப்போ
னான்,
இஸ்ரவேல் ஒரு பெண்ணுக்காக ஊழி
யஞ்செய்து ஒரு பெண்ணுக்காக ஆடு
மேய்த்தான்.
13 ஒரு தீர்க்கதரிசியைக்கொண்டு யெகோ
வா இஸ்ரவேலை எகிப்திலிருந்து
அழைத்துவந்தார்;
ஒரு தீர்க்கதரிசியினால் காக்கப்பட்டான்.
14 எப்பிராயீமோ மிகவும் கோபமூட்டி
னான்;

அவன் ஆண்டவர் அவனுடைய இரத்தப்பழியை அவன்மேல் சுமத்துவார், அவன் செய்த நிந்தையை அவன்மேல் வரச்செய்வார்.

**13** 1 எப்பிராயீம் பேசினபோதெல்லாம் நடுநடுங்கினார்கள், அவன் இஸ்ரவேலிலே தன்னை உயர்த்தினான், அவன் பாகாலினால்கொண்டு குற்றத்தில் குள்ளாகி மடிந்துபோனான்.

2 இப்போதும் அவர்கள் அதிகமதிகமாய்ப் பாவஞ்செய்து தங்கள் வெள்ளியினால் வார்ப்பித்த சொரூபங்களைச் செய்தார்கள், அவர்கள் புத்திக்கேற்றபடியுள்ள விக்கிரகங்களே, இவைகளெல்லாம் தட்டாருடைய கைவேலை; இவர்கள் அவைகளைப்பற்றிப்பேசி: பலியிடுகிற மனுஷர் கன்றுக்குட்டியை முத்தமிடுக என்று சொல்லுகிறார்கள்.

3 இப்படிச் செய்கிறபடியால் அவர்கள் காலையில் காணும் மேகத்தைப் போலவும் அதிகாலையில் ஒழிந்துபோம் பனியைப் போலவும் களத்திலிருந்து பறக்கடிக்கப்படும் பதரைப்போலவும் புகை போக்கியின் வழியாய்ப்போம் புகையைப் போலவும் இருப்பார்கள்.

4 எகிப்து தேசத்திலிருந்து உன்னை அழைத்துவந்த உன் கடவுளாகிய யெகோவா நானே. நீ என்னையன்றி வேறே கடவுளை நினைத்தறியவேண்டாம்; என்னையன்றி ரட்சகர் ஒருவரும் இல்லை.

5 நான் உன்னை மகாவறட்சியான தேசமாகிய வனாந்தரத்திலே நினைத்துக் கவனித்தேன்.

6 தங்களுக்கு மேய்ச்சல் கிடைத்தபடி திருப்தியானார்கள்; திருப்தியானபின்பு அவர்கள் இருதயம் கர்வங்கொண்டது, அதினாலே என்னை மறந்தார்கள்.

7 ஆகையால் நான் அவர்களுக்குச் சிங்கம் போல்வேன், சிவிங்கிபோல் வழியருகே பதிவிருப்பேன்.

8 குட்டி பறிகொடுத்த கரடிபோல் அவர்கள்மேல் வந்து அவர்கள் நெஞ்சைக் கிழிப்பேன்; அவர்களை அங்கேயே பெண் சிங்கம் போல் பட்சிப்பேன்; காட்டுமிருகம் அவர்களைப் பீறிப்போடும்.

9 உன் துணையாகிய எனக்கு விரோதமாவது, இஸ்ரவேலே, உனக்குக் கேடாம்!

10 இப்போதும் உன் சகல பட்டணங்களிலும் உன்னை ரட்சிக்கும் ராஜா எங்கே? எனக்கு ராஜாவையும் அதிபதிகளையும் ஏற்படுத்தவேண்டும் என்று அவர்களையே நினைத்துச் சொன்னாயே.

11 உன்னை ஆளுகிறவர்கள் எங்கே? நான் கோபத்திலே உனக்கு ராஜாவைக் கொடுத்தேன்; என் உக்கிரத்திலே அவனை எடுத்துக் கொண்டேன்.

12 எப்பிராயீமின் அக்கிரமம் கட்டி வைத்திருக்கிறது; அவன் பாவம் பத்திரப்படுத்தப்பட்டிருக்கிறது.

13 பிரசவ ஸ்திரீயின் வேதனை அவனுக்கு வரும், அவன் புத்தியிலாப்பிள்ளை, பிறக்கவேண்டிய நேரத்திலே பிறக்கிறதில்லை.

14 நான் பாதாளத்தின் வல்லமைக்கு அவர்களை மீங்கலாக்குவேனோ? மரணத்தினின்று அவர்களை விடுவிப்பேனோ? மரணமே உன் வாதைகள் எங்கே? பாதாளமே உன் சங்காரம் எங்கே? நான் மனம் மாறி இரக்கம் காட்டேன்.

15 இவன் சகோதரருக்குள்ளே கனிதரும் மரம் போலிருந்தாலும் யெகோவாவின் புசலாகிய கீழ்காற்று வனாந்தரத்திலிருந்து எழும்பிவரும்; அவன் ஊற்று சுவறிப்போம், அவன் துரவுகள் வற்றிப்போம்; அவன் தனக்குப் பொக்கிஷமாய் வைத்திருந்த சகல அரும் பொருட்களையும் அந்தக் காற்று வாரிக்கொண்டுபோம்.

**14** சமாரியா தன் கடவுளுக்கு விரோதமாகச் செய்த துரோகத்துக்குத் தக்கபலன் அதற்கு அளிக்கப்படும் அவர்கள் பட்டயத்தால் விழுவார்கள்; அவர்கள் குழந்தைகள் மோதியடிக்கப்படும்,

அவர்கள் கர்ப்பவதிகள் கீறப்படுவார்கள்.
2 இஸ்ரவேலே, உன் கடவுளாகிய யெ
கோவாவினிடம் திரும்பு;
நீ உன் அக்கிரமத்தினால் விழுந்தாய்.
3 மனஸ்தாப வார்த்தைகளோடுகொண்டு
யெகோவாவினிடம் திரும்புங்கள்;
அவரை நோக்கி: தேவரீர் எல்லா அக்கி
ரமத்தையும் மன்னித்து எங்களைத் தய
வாய் அங்கீகரித்தருளும்;
காளைகள் பலியிடப்படுவதுபோல் அப்
பொழுது நாங்கள் எங்கள் உதடுகளின்
பலிகளைச் செலுத்துவோம்.
4 அசீரியாவின் துணை எங்களுக்கு வேண்
டாம்,
நாங்கள் குதிரைகளின்மேல் ஏறமாட்
டோம்;
எங்கள் கைவேலைகளைப்பார்த்து,
நீங்கள் எங்கள் தேவர்கள் என்று இனிச்
சொல்லமாட்டோம்;
திக்கற்றவன் உம்மிடம் இரக்கம் பெறுகி
றானே என்று சொல்லுங்கள்.
5 அவர்கள் மாறுபட்டுப்போன குற்றத்
தைக் குணமாக்குவேன்,
அவர்களில் மனதார அன்புகூருவேன்,
என் கோபம் அவர்களைவிட்டு நீங்கிற்று.
6 நான் இஸ்ரவேலுக்குப் பனிபோலிருப்
பேன்;
அவன் லீலி புஷ்பத்தைப்போல் மலரு
வான்; லீபனோன் மரம்போல் வேரூன்றி
நிற்பான்.
அவன் கிளைகள் நீண்டு பரவும், 7
அவன் அழகு ஒலிவமரத்தின் அலங்
காரம்போலும், அவன் வாசனை லீபனோன்
வாசனைபோலும்.
அவன் நிழலில் வசிக்கிறவர்கள் திரும்ப 8
வும் தானியம் விளைவித்து
திராட்சச்செடிபோல் செழிப்பார்கள்;
அவன் புகழ் லீபனோன் திராட்சரசம்
போலிருக்கும்.
எப்பிராயீமே, இனி எனக்கும் விக்கிரகங் 9
களுக்கும் என்ன?
நானே அவனுக்குச் செவிசாய்த்து அவன்
மேல் நோக்கமாயிருக்கிறேன்,
நானே பச்சையான தேவதாரு மரம்
போலிருக்கிறேன்,
என்னிடமிருந்து உன் கனி இடைக்கும்.
விவேகமுள்ளவன் யார்? அவனே 10
இவற்றை உணருவான்;
புத்தியுள்ளவன் யார்? அவனே இவற்
றை அறிவான்;
யெகோவாவின் வழிகள் நேரானவை,
நீதிமான்கள் அவைகளில் நடப்பார்கள்;
துரோகிகளோ அவைகளில் இடறிவிழு
வார்கள்.

---

JOEL

# யோவேல்

1 பெத்தூவேலின் குமாரனாகிய யோவே
லுக்கு வந்த யெகோவாவின் வார்த்தை:
2 மூப்பர்களே, இதைக்கேளுங்கள்;
தேசத்தின் சகல குடிகளே, செவிகொடுங்
கள்;
உங்கள் நாட்களிலாவது உங்கள் பிதாக்
களின் நாட்களிலாவது
இப்படிப்பட்டது சம்பவித்ததுண்டா?
3 இதைப்பற்றி உங்கள் பிள்ளைகளுக்குச்
சொல்லுங்கள்;
இதை உங்கள் பிள்ளைகள் தங்கள் பிள்
ளைகளுக்கும்
அவர்களுடைய பிள்ளைகள் பின்வரும்
சந்ததியாருக்கும் சொல்லவேண்டும்.
4 பச்சைப்புழு விட்டதை வெட்டுக்
கிளி தின்றது;
வெட்டுக்கிளி விட்டதைப் பச்சைக்கிளி
தின்றது;
பச்சைக்கிளி விட்டதை முசுக்கட்டைப்
பூச்சி தின்றது.
வெறியரே, விழித்து அழுங்கள்; 5
திராட்சரசம் குடிக்கிற சகல ஜனங்களே
அலறுங்கள்;
புதுதிராட்சரசம் உங்கள் வாய்க்கு விலக்
கப்பட்டதினிமித்தம் அப்படிச் செய்
யுங்கள்.
ஒருஜனம் என் தேசத்தின்மேல் வருகி 6
றது,
அது எண்ணிமுடியாத பலத்த ஜாதி;
அதின் பற்கள் சிங்கப்பற்கள்;
துஷ்டசிங்கத்தின் கடைவாய்ப்பற்கள்
அதற்கு உண்டு.

7 அது என் திராட்சச்செடியைப் பாழாக்கி
என் அத்திமரத்தை முறித்து,
அதின் பட்டையை முற்றிலும் உரித்து
எறிந்தது;
அதின் கிளைகள் வெண்மையாய் நிற்கின்
றன.
8 தன் பாலிய வயதின் புருஷனுக்காக
இரட்டுடுத்தியிருக்கிற பெண்போல்
புலம்பு.
9 யெகோவாவின் ஆலயத்திலே போஜன
பலியும் பானபலியும் இல்லையாயின,
யெகோவாவின் ஊழியராகிய ஆசாரியர்
துக்கிக்கின்றனர்.
10 வயல்வெளி பாழாயிற்று, பூமி துக்கிக்
கிறது;
வினைச்சல் பாழ்பட்டது, புது திராட்ச
ரசம் வற்றியது, எண்ணெய் வறண்டது.
11 பயிரிடுவோர் வெட்கத்துக்குள்ளாவார்,
திராட்சத்தோட்ட முடையோர் அலறு
வார்;
கோதுமையும் வாற்கோதுமையும் இல்
லாமற்போயின;
வயல்வெளியின் அறுப்பு அழிந்துபோ
யிற்று.
12 திராட்சச்செடி வதங்கி, அத்திமரம் சார
மற்றுப்போகிறது;
மாதளை, பேரீந்து, பன்னீர்ப்பழ முதலிய
வெளியிலுள்ள செடிகளெல்லாம் வாடிப்
போயின;
சந்தோஷம் மனுப்புத்திரரைவிட்டு
ஒழிந்து போயிற்று.
13 ஆசாரியரே, இரட்டுடுத்திப் புலம்புங்
கள்;
பலிபீடத்தில் பணிவிடை செய்வோரே,
அலறுங்கள்;
என் கடவுளுக்குப் பணிவிடைசெய்
வோரே, நீங்கள் வந்து இரவெலாம்
இரட்டுடுத்தியிருங்கள்;
உங்கள் கடவுளின் ஆலயத்தில் போஜன
பலியும் பானபலியும் அற்றுப்போயின.
14 பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள்,
விசேஷித்த ஆசரிப்புக்கெனக் கூடிவரக்
கூறுங்கள்;
மூப்பரையும் தேசத்தின் எல்லாக்குடி
களையும்
உங்கள் கடவுளாகிய யெகோவாவின்
ஆலயத்திலே கூடிவரச்செய்து யெகோ
வாவினிடம் அபயமிடுங்கள்.
15 ஐயோ, என்னநாள்! யெகோவாவின்
நாள் சமீபம்;
அது சர்வவல்லவரிடமிருந்துவரும் சங்
காரம்போன்றது.
16 நமது கண்களின்முன் ஆகாரமும்
நமது கடவுளின் ஆலயத்திலே சந்தோஷ
மும் மகிழ்ச்சியும் இல்லாமற் போக
வில்லையோ?
17 விதையானது மண்கட்டிகளின்கீழ் மக்
கிப்போயிற்று;
பண்டசாலைகள் பாழாயின, களஞ்சியங்
கள் இடிந்தன,
பயிர் தியங்துபோயிற்று.
18 ஐயோ, மிருகங்களின் தவிப்பை என்ன
சொல்ல!
மாட்டுமந்தைகள் மேய்ச்சலின்றித்
திகைக்கின்றன;
ஆட்டுமந்தைகளும் தண்டனைக்குட்பட்
டுத் தவிக்கின்றன.
19 யெகோவாவே, உம்மைநோக்கிக் கூப்பிடு
கிறேன்;
அக்கினி வனாந்தரத்தின் மேய்ச்சலிடங்
களைப் பட்சிக்கிறது,
ஜ்வாலை வெளியின் மரங்களை எல்லாம்
எரித்துப்போடுகிறது.
20 வெளியின் மிருகங்களும் உம்மை நோக்
கிக் கதறுகின்றன,
நீரோடைகள் வறண்டுபோயின;
அக்கினி வனாந்தரத்தின் மேய்ச்சலிடங்
களைப் பட்சித்துப்போட்டது.

2 சீயோனிலே எக்காளம் ஊதுங்கள்,
என் பரிசுத்த பருவத்திலே சத்தமிட்டுக்
கதறுங்கள்;
தேசத்தின் சகல குடிகளும் நடுங்குக,
இதோ, யெகோவாவின் நாள்வருகிறது,
அது சமீபம்.
2 அது இருளும் காரிருளுமான நாள்;
அது மப்பும் மந்தாரமுமான நாள்;
விடியற்கால வெளுப்பு பர்வதங்களிலே
எல்லாவிடத்தும் பரவுவதுபோலாம்;
ஏராளமான பலத்த ஒரு சேனை!
அதுபோன்றது ஆதிமுதல் வந்ததுமில்லை,
இனித் தலைமுறை தலைமுறையான வரு
ஷங்களிலும் வருவதுமில்லை.
3 அதற்குமுன்னே அக்கினி பட்சிக்கும்,
அதற்குப்பின்னே ஜ்வாலை எரிக்கும்;
அது வருமுன் தேசம் ஏதேன் தோட்டம்
போலிருக்கும்,
அது போனபின் பாழ்வனாந்தரம்போலா
கும், அதற்கு ஒன்றும் தப்பிப்போவ
தில்லை.
4 பார்வைக்கு அவைகள் குதிரைகள்
போன்றன,
அவைகள் போர்க் குதிரைகள்போலவே
ஓடும்.

5 அவைகள் ரதங்களின் இரைச்சல்போல வும்
செத்தைகளை எரிக்கிற அக்கினி ஜ்வாலையின் இரைச்சல்போலவும்
யுத்தத்துக்கு அணிவகுத்த பலத்த சேனை யின் இரைச்சல்போலவும்
மலைச் சிகரங்களின்மேல் குதித்துச் செல் லும்.
6 அவைகளைக்கண்டு ஜனங்கள் நடுங்குவார் கள்;
எல்லா முகங்களும் கருகிப்போம்.
7 அவைகள் பராக்கிரம வீரரைப்போல ஓடும், யுத்த வீரரைப்போல மதிலே றும்;
வரிசை பிசகாமல் தன்தன் அணியிலே செல்லும்.
8 ஒன்றையொன்று நெருக்காது, ஒவ் வொன்றும் தன்தன் பாதையிலே செல் லும்;
அவைகள் ஆயுதங்களுக்குள் விழுந்தா லும் காயம்படாமற்போகும்.
9 அவைகள் ஊருக்குள் பாய்ந்துசெல்லும், மதில்மேல் ஓடும், வீடுகள்மேல் ஏறும்; பலகணிவழியாய்த் திருடன்போல் உள் நுழையும்.
10 அவைகளுக்குமுன்பாகப் பூமி அதிரும், வானங்கள் அசையும்;
சூரியனும் சந்திரனும் அந்தகாரப்படும், நட்சத்திரங்கள் ஒளி கொடாதிருக்கும்.
11 யெகோவா தமது சேனைக்குமுன் சத்த மிடுவார்;
அவருடைய பாளயம் மகா பெரிது,
அவருடைய வார்த்தையை நிறைவேற்று கிறவன் வல்லமையுள்ளவன்;
யெகோவாவின் நாள் பெரிது, மகா பயங்கரமானது; அதைச் சகிப்பவன் யார்?
12 இப்பொழுதும் நீங்கள்—இது யெ கோவாவின் திருவாக்கு—
உங்கள் முழு இருதயத்தோடும் என்னி டத்தில் திரும்புங்கள்,
உபவாசித்து அழுது புலம்பி வாருங்கள்.
13 நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல உங் கள் இருதயத்தையே கிழித்து,
உங்கள் கடவுளாகிய யெகோவாவினி டம் திரும்புங்கள்,
அவர் இரக்கமும் உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த திருபையுமுள்ளவர்;
அவர் தீங்கைப்பற்றி மனஸ்தாபப்படுகிற வர்.
14 யாருக்குத் தெரியும், ஒருவேளை அவர் திரும்பி மனஸ்தாபப்பட்டு
உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்குப் போஜனபலிகளையும் பானபலிகளையும் செலுத்துகிறதற்கான
ஆசீர்வாதத்தை மீதியாக விடுவார்.
15 சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், பரிசுத்த உபவாசகாலை நியமியுங்கள், விசேஷித்த ஆசரிப்புக்கெனக் கூடி வரக் கூறுங்கள்.
16 ஜனத்தைக் கூட்டுங்கள், சபையைப் பரி சுத்தப்படுத்துங்கள்;
மூதியோரைச் சேருங்கள், பிள்ளைகளையும் பாலுண்கிற குழந்தைகளையும் கூட்டுங் கள்;
மணவாளன் தன் அறையையும் மண வாட்டி தன் மணவறையையும் விட்டுப் புறப்படுக.
17 யெகோவாவின் ஊழியராகிய ஆசாரியர் மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடு வே அழுது:
யெகோவாவே உமது ஜனத்தைத் தப்ப விடும்,
உமது சுதந்தரத்தை நிந்தையாகவும் புற ஜாதியாருக்குள் பழமொழியாகவும் ஒப் புக்கொடாதிரும்;
உங்கள் கடவுள் எங்கே என்று புறதே சத்தாருக்குள் சொல்லப்படுவானேன் என்று சொல்லுக.
18 அப்பொழுது யெகோவா தமது தேசத் தைப்பற்றி வைராக்கியங்கொண்டு தமது ஜனத்துக்கு இரக்கங்காட்டினார்.
19 யெகோ வா தமது ஜனத்துக்குப் பதிலுரைத்து இப் படிச்சொன்னார்:
இதோ, நான் உங்களுக்குத் தானியத் தையும் திராட்சரசத்தையும் எண்ணெய யும் கொடுக்கிறேன், நீங்கள அதினால் திரு ப்தியாவீர்கள்; இனி உங்களைப் புறஜாதியா ருக்குள் நிந்தையாகவிடேன்.
20 வடதிசைச் சேனையை உங்களுக்குத் தூரமாக விலக்கி அதை வறட்சியும் பாழுமான தேசத்துக்குத் துரத்திவிடுவேன்; அதின் முன்தண்டு கீழ் கடலுக்கும் அதின் பின்தண்டு மேல்கடலுக் கும் போகும்படி செய்வேன், அங்கே அதின் நாற்றம் எழும்பும், அதின் துர்க்கந்தம் வீசும்; அது பெரியவற்றைச் செய்தது.
21 தேசமே பயப்படாதே, மகிழ்ந்து களி கூரு;
யெகோவாவே பெரியவற்றைச் செய் தார்;
22 வெளியின் மிருகங்களே பயப்படாதே யுங்கள்,
வனாந்தர மேய்ச்சலிடங்கள் பசுமையா கும்;

மரங்கள் காய் காய்க்கும், அத்திமரமும் திராட்சச்செடியும் பூரண பலன் தரும்.

23 சீயோன் குமாரரே மகிழுங்கள், உங்கள் கடவுளாகிய யெகோவாவுக்குள் களி கூருங்கள்;
வேண்டியபடி அவர் உங்களுக்கு முன் மாரியைக்கொடுப்பார்,
உங்களுக்கு முன்மாரியையும் பின்மாரியையும் முன்போலவே வருஷிக்கப் பண்ணுவார்.

24 களங்களில் தானியம் நிரம்பும்;
ஆலைகளில் திராட்சரசமும் எண்ணெயும் வழிந்தோடும்.

25 நான் உங்களுக்கு விரோதமாய் அனுப்பின என் பெரிய சேனையாகிய வெட்டுக்கிளிகளும் பச்சைக்கிளிகளும் முசுக்கட்டைப் பூச்சிகளும் பச்சைப் புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன்.

26 நீங்கள் வேண்டியமட்டும் சாப்பிட்டுத் திருப்தியடைந்து,
உங்கள் கடவுளாகிய யெகோவாவின் நாமத்தைத் துதிப்பீர்கள்;
அவர் உங்களை அதிசயமாய் நடத்திவந்தாரே;
என் ஜனம் ஒருபோதும் வெட்கத்துக்குள்ளாவதில்லை.

27 நானே இஸ்ரவேலின் நடுவில் இருக்கிறேனென்றும்
உங்கள் கடவுளாகிய யெகோவா நானே,
என்னையன்றி வேறொருவர் இல்லை என்றும் அறிந்து கொள்வீர்கள்;
என் ஜனம் ஒருபோதும் வெட்கத்துக்குள்ளாவதில்லை.

28 அதற்குப்பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்,
அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்;
உங்கள் முதியோர் சொப்பனங்களையும்
உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்.

29 என் அடிமைகளான ஆண்கள்மேலும்
பெண்கள்மேலும்
அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன்.

30 வானத்திலும் பூமியிலும் அற்புதங்களைக் காட்டுவேன்,
இரத்தம், அக்கினி, புகைஸ்தம்பங்களே.

31 யெகோவாவின் பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே
சூரியன் இருளாகவும் சந்திரன் இரத்தமாகவும் மாறும்.

32 அப்பொழுது யெகோவாவின் நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ
அவன் ரட்சிக்கப்படுவான்;
யெகோவா சொன்னபடி
சீயோன் பர்வதத்திலும் எருசலேமிலும்
ரட்சிக்கப்பட்டவர்கள் இருப்பார்கள்,
தப்பி மீந்தவர்களில் யெகோவா அழைத்தவர்கள் இருப்பார்கள்.

**3** இதோ, அக்காலத்தில்,
யூதா, எருசலேம் இவற்றின் துன்பகரமை நான் மாற்றும் அந்நாட்களிலே,

2 நான் சகல புறஜாதியாரையும் கூட்டி,
யோசபாத்தின் பள்ளத்தாக்கிலே அவர்களை இறங்கிப் போகப்பண்ணி,
என் ஜனமும் சுதந்தரமுமாகிய இஸ்ரவேலைப்பற்றி அங்கே அவர்களோடு வழக்காடுவேன்;
அவர்கள் இஸ்ரவேலைப் புறஜாதியாருக்குள்ளே சிதறடித்து என் தேசத்தைப் பங்கிட்டுக்கொண்டார்கள்.

3 அவர்கள் என் ஜனத்தின்மேல் சீட்டுப் போட்டார்கள்,
ஆண் குழந்தைகளை வேசிப்பணையமாகக் கொடுத்தார்கள்,
பெண் குழந்தைகளைத் திராட்சரசத்துக்குக் கிரயமாகக்கொடுத்து,
திராட்சரசம் வாங்கிக் குடித்தார்கள்.

4 தீருவே, சீதோனே, பெலிஸ்தியாவின் சகல எல்லைகளே,
என்னோடு உங்களுக்கு என்ன? எனக்குப் பதிற்செய்வீர்களோ?
இப்படி எனக்குப் பதிற்செய்வீர்களாகில்
நீங்கள் செய்ததே உங்கள் தலையின்மேல் தாமதமின்றி அதிசீக்கிரமாகத் திரும்பும்படி செய்வேன்.

5 நீங்கள் என் வெள்ளியையும் என் பொன்னையும் எடுத்து,
என் அருமையான சிறந்த பொருள்களை உங்கள் அரமனைகளுக்குக் கொண்டுபோனீர்கள்.

6 யூதாவின் குமாரரையும் எருசலேமின் குமாரரையும்
அவர்களுடைய எல்லைகளுக்குத் தூரமாக்கும்படி கிரேக்கரிடம் விற்றுப்போட்டீர்கள்.

7 இதோ, நீங்கள் அவர்களை விற்றுவிட்ட இடத்திலிருந்து நான் அவர்களை எழும்பி வரப்பண்ணுவேன்;

நீங்கள் செய்தது உங்கள் தலையின்மேல்
திரும்பும்படி செய்வேன்.
8 உங்கள் குமாரரையும் உங்கள் குமாரத்தி
களையும் யூதா புத்திரரிடம் விற்பேன்;
இவர்கள் அவர்களைத் தூரதேசத்தாரா
கிய ஷேபாவியரிடம் விற்றுப்போடு
வார்கள்;
யெகோவாவே இதைச் சொன்னார்.
9 இதைப் புறஜாதியாருக்குள்ளே பிரசித்
தப்படுத்துங்கள்,
யுத்த பிரதிஷ்டை செய்யுங்கள், பராக்
கிரமவீரரை எழுப்புங்கள்;
யுத்தவீரர் எல்லாரும் முன்னேறிக் கிட்டி
வருக.
10 உங்கள் கலப்பைக் கொழுக்களைப் பட்
டயங்களாகவும்,
உங்கள் அரிவாள்களை ஈட்டிகளாகவும்
அடியுங்கள்;
பலவீனனும் தன்னைப் பலவான் என்று
எண்ணிக்கொள்ளுக.
11 சகல ஜாதியாரே, நீங்கள் சுற்றிலுமிருந்து
விரைந்துவந்து கூடுங்கள்;
யெகோவாவே, உமது பராக்கிரமவீரரை
அங்கே இறங்கப்பண்ணும்.
12 புறஜாதியார் எழுந்து யோசபாத்தின்
பள்ளத்தாக்குக்கு வருக;
சுற்றிலுமுள்ள ஜாதியார் யாவரையும்
நியாயந்தீர்க்க அங்கே நான் வீற்றிருப்
பேன்.
13 அரிவாளையெடுத்து அறுங்கள், பயிர்
முதிர்ந்தது;
வந்து மிதியுங்கள், ஆலை நிரம்பியிருக்கி
றது;
ஆலையின் தொட்டிகள் வழிந்தோடுகிறது,
அவர்கள் செய்த தீமை அதிகம்.
14 நியாயத்தீர்ப்பின் பள்ளத்தாக்கிலே ஜனங்
கள் திரள் திரளாய்க் கூடியிருக்கிறார்கள்;
நியாயத்தீர்ப்பின் பள்ளத்தாக்கிலே
யெகோவாவின் நாள் சமீபம்.
15 சூரியனும் சந்திரனும் அந்தகாரப்படும்;
நட்சத்திரங்கள் ஒளிகொடாதிருக்கும்.
16 யெகோவா சீயோனிலிருந்து கெர்ச்சித்து
எருசலேமிலிருந்து சத்தமிடுவார்;
வானமும் பூமியும் அசையும்;
யெகோவா தமது ஜனத்துக்கு அடைக்
கலம்,
இஸ்ரவேல் புத்திரருக்கு அரணான
கோட்டை.
17 என் பரிசுத்த பர்வதமாகிய சீயோனிலே
வாசமாயிருக்கிற நானே
உங்கள் கடவுளாகிய யெகோவா என்று
அப்பொழுது அறிந்துகொள்வீர்கள்;
அப்பொழுது எருசலேம் பரிசுத்தஸ்தல
மாகும், அந்நியர் இனி அதைக்கடந்து
போவதில்லை.
18 அக்காலத்தில் மலைகள் புதுரசம்பொழி
யும், குன்றுகள் பாலாய் ஓடும்;
யூதாவின் பள்ளமான ஓடையெல்லாம்
நீராய் ஓடும்;
ஒரு ஊற்று யெகோவாவின் ஆலயத்தி
லிருந்து தோன்றிச்சென்று
சித்தீம் என்னும் பள்ளத்தாக்கை நீர்ப்
பாய்ச்சலாக்கும்.
19 எகிப்து பாழாம், ஏதோம் பாழ்வனாந்த
ரமாம்;
அவர்கள் யூதா புத்திரருக்குள் கொடுமை
செய்து
தங்கள் தேசத்தில் குற்றமிலா இரத்தத்
தைச் சிந்தினார்கள்.
20 யூதாவோ சதாகாலமாகவும்
எருசலேம் தலைமுறை தலைமுறையாக
வும் குடியேற்றப்பட்டிருக்கும்.
21 நான் மன்னித்து நீக்காமல் விட்டிருந்த
அவர்கள் இரத்தப்பழியை மன்னித்து
நீக்கிவிடுவேன்;
யெகோவா சீயோனிலே வாசமாயிருக்
கிறார்.

AMOS

# ஆமோஸ்

1 தெக்கோவா ஊரிலே ஆடு மேய்ப்போ
ரில் ஒருவனான ஆமோஸின் வார்த்தைகள்:
யூதாவின் ராஜாவாகிய உசியாவின் நாட்களி
லும் யோவாசின் குமாரனும் இஸ்ரவேலின்
ராஜாவுமாகிய யெரொபெயாமின் நாட்களி
லும் பூமி அதிர்ச்சி உண்டாக இரண்டு
வருஷத்துக்குமுன்னே இஸ்ரவேலைப்பற்றி
அவன் தரிசனங்கண்டு சொன்னதாவது:

2 யெகோவா சியோனிலிருந்து கெர்ச்சித்து
எருசலேமிலிருந்து சத்தமிடுவார்;
மேய்ப்போரின் மேய்ச்சல் காடுகள் துக்
கிக்கும்;
கர்மேலின் சிகரமும் காய்ந்துபோம்.
3 யெகோவா இப்படிச் சொல்லுகிறார்:
தமஸ்குவின் மூன்று பாதகங்களினிமித்த
மும் நாலு பாதகங்களினிமித்தமும்
திருப்பமாட்டேன் வரப்போவதை;
அவர்கள் கிலெயாத்தை இருப்புக்கருவி
களினால் போரடித்தார்களே.
4 அசாவேலின் வீட்டின்மேல் அக்கினி
யைப் போடுவேன்;
அது பெனதாதின் அரமனைகளைப் பட்
சிக்கும்.
5 நான் தமஸ்குவின் தாழ்ப்பாள்களை
உடைத்துக்
குடிகள் ஆவேன் பள்ளத்தாக்கிலும்
செங்கோல் செலுத்துகிறவன் பேதேதே
னிலும் இராதபடி சங்காரிப்பேன்,
அப்பொழுது சீரியாவின் ஜனம் கீருக்குச்
சிறைப்பட்டுப்போம்
என்று யெகோவா சொல்லுகிறார்.
6 யெகோவா இப்படிச் சொல்லுகிறார்:
காத்சாவின் மூன்று பாதகங்களினிமித்த
மும் நாலு பாதகங்களினிமித்தமும்
திருப்பமாட்டேன் வரப்போவதை;
யாவரையும் அவர்கள் சிறைபிடித்து
ஏதோமியரிடம் ஒப்புவித்தார்களே,
7 காத்சாவின் மதிலின்மேல் அக்கினியைப்
போடுவேன்.
அது அதின் அரமனைகளைப் பட்சிக்கும்.
8 குடிகள் அஸ்தோத்திலும்
செங்கோல் செலுத்துகிறவன் அஸ்கலோ
னிலும் இராதபடி நான் சங்காரித்து
என் கையை எக்ரோனுக்கு விரோதமா
கத் திருப்புவேன்;
அப்பொழுது பெலிஸ்தியரில் மீதியான
வர்கள் அழிவார்கள்
என்று யெகோவாவாகிய ஆண்டவர்
சொல்லுகிறார்.
9 யெகோவா இப்படிச் சொல்லுகிறார்:
தீருவின் மூன்று பாதகங்களினிமித்த
மும் நாலு பாதகங்களினிமித்தமும்
திருப்பமாட்டேன் வரப்போவதை;
சகோதரர் உடன்படிக்கையை அவர்கள்
நினையாமல்
யாவரையும் சிறை பிடித்து ஏதோமியர்
கையில் ஒப்பித்தார்களே.
10 தீருவின் மதிலின்மேல் அக்கினியைப்
போடுவேன்,
அது அதின் அரமனைகளைப் பட்சிக்கும்.

யெகோவா இப்படிச் சொல்லுகிறார்: 11
ஏதோமின் மூன்று பாதகங்களினிமித்த
மும் நாலு பாதகங்களினிமித்தமும்
திருப்பமாட்டேன் வரப்போவதை;
அவன் பட்டயம் எடுத்துத் தன் சகோத
ரனைப் பிடிக்கத்தொடர்ந்து,
தன் மன இரக்கத்தைக் கெடுத்துவிட்
டான்;
அவன் கோபம் என்றும் பீறிக்கொண்டி
ருந்தது;
தன் மூர்க்கத்தை நித்திய காலமாக வைத்
திருக்கிறானே.
தேமானிலே அக்கினியைப் போடுவேன், 12
அது பொஸ்ரவின் அரமனைகளைப் பட்
சிக்கும்.
யெகோவா இப்படிச் சொல்லுகிறார்: 13
அம்மோன் புத்திரரின் மூன்று பாதகங்க
ளினிமித்தமும் நாலு பாதகங்களினிமித்
தமும்
திருப்பமாட்டேன் வரப்போவதை;
அவர்கள் தங்கள் எல்லைகளை விஸ்தார
மாக்கும்படி கிலெயாத்தின் கர்ப்பஸ்திரீ
களைக் கீறிப்போட்டார்களே.
ரப்பாவின் மதிலின்மேல் அக்கினியைப் 14
போடுவேன்,
அது அதின் அரமனைகளைப் பட்சிக்
கும்;
யுத்த நாளிலே முழக்கம், பெருங்காற்று
நாளிலே புசல்;
அவர்கள் ராஜாவும் அவன் அதிபதிகளும் 15
கூடவே சிறைப்பட்டுப் போவார்கள்
என்று யெகோவா சொல்லுகிறார்.

யெகோவா இப்படிச் சொல்லுகிறார்: **2**
மோவாபின் மூன்று பாதகங்களினிமித்
தமும் நாலு பாதகங்களினிமித்தமும்
திருப்பமாட்டேன் வரப்போவதை;
அவன் ஏதோம் ராஜாவின் எலும்புகளை
நீருகச் சுட்டுப் போட்டானே;
மோவாபின்மேல் அக்கினியைப் போடு 2
வேன்,
அது கெரியோத்தின் அரமனைகளைப் பட்
சிக்கும்;
மோவாபியர் அமளி, ஆர்ப்பரிப்பு, எக்
காளசத்தம் இவற்றின் நடுவில் சாவார்
கள்.
நியாயாதிபதியை அவர்கள் நடுவிலிருந்து 3
சங்காரம் பண்ணி
அவனோடேகூட அவர்கள் அதிபதிகளை
யெல்லாம் கொன்றுபோடுவேன்
என்று யெகோவா சொல்லுகிறார்.
யெகோவா இப்படிச் சொல்லுகிறார்: 4

யூதாவின் மூன்று பாதகங்களினிமித்த
மும் நாலு பாதகங்களினிமித்தமும்
திருப்பமாட்டேன் வரப்போவதை;
அவர்கள் யெகோவாவின் நியாயப்பிரமா
ணத்தைத் தள்ளிவிட்டு
அவருடைய நியமங்களைக் கைக்கொள்
ளாமல்
தங்கள் பிதாக்கள் பற்றிநடந்த பொய்
யானவற்றினால் மோசம்போனார்களே.
5 யூதாவிலே நான் அக்கினியைப்போடு
வேன்;
அது எருசலேமின் அரமனைகளைப் பட்
சிக்கும்.
6 யெகோவா இப்படிச் சொல்லுகிறார்:
இஸ்ரவேலின் மூன்று பாதகங்களினிமித்
தமும் நாலு பாதகங்களினிமித்தமும்
திருப்பமாட்டேன் வரப்போவதை;
அவர்கள் நீதிமானைப் பணத்துக்கும்
ஏழையை ஒரு ஜோடு செருப்புக்கும்
விற்றுப்போட்டார்களே.
7 அவர்கள் தரித்திரர் தலையின்மேல் மண்
விழ ஆத்திரமாய்க் காத்திருந்து
சிறுமையானவர்களின் வழக்கிலே நியா
யத்தைப் புரட்டுகிறார்கள்;
மகனும் தகப்பனும் ஒரே பெண்ணினி
டம் சென்று
என்பரிசுத்த நாமத்தைப் பரிசுத்த மற்
றதுபோலாக்குகிறார்கள்;
8 அவர்கள் சகல பீடங்களருகிலும் அடை
மானமாய் வாங்கின வஸ்திரங்களின்மேல்
படுத்துக்கொள்ளுகிறார்கள்;
தண்டம் விதிக்கப்பட்டவர்களின் திராட்
சரசத்தைத்
தங்கள் கடவுளின் கோவிலிலே குடிக்கி
றார்கள்.
9 எனினும் நான் எமோரியனே அவர்
கள் கண்களுக்கு முன்பாக அழித்தேன்,
அவன் கேதுருமரம்போல் உயர்ந்தவன்
கர்வாலிமரம்போல் வைரமுள்ளவன்,
உயர இருந்த அவன் கனியையும்
தாழ இருந்த அவன் வேர்களையும் அழித்
துப்போட்டேன்;
10 நான் உங்களை எகிப்துதேசத்திலிருந்து
வரப்பண்ணி,
உங்களை நாற்பதுவருஷமாக வனாந்தரத்
திலே வழிநடத்தி,
நீங்கள் எமோரியரின் தேசத்தைக் கட்
டிக்கொள்ளும்படி செய்தேன்.
11 உங்கள் பிள்ளைகளில் சிலரைத் தீர்க்கதரி
சிகளாகவும்
உங்கள் வாலிபரில் சிலரை நசரேயராகவும்
எழும்பப்பண்ணினேன்;

இஸ்ரவேல் புத்திரரே, எல்லாம் இப்படி
யேயல்லவா,
இது யெகோவாவின் திருவாக்கு.
12 நீங்களோ நசரேயருக்குத் திராட்சரசம்
குடிக்கக்கொடுத்தீர்கள்,
தீர்க்கதரிசிகளிடம், தீர்க்கதரிசனம்
சொல்லவேண்டாம் என்று கட்டளையிட்
டீர்கள்.
13 இதோ, சோதுமைக் கட்டுகள் நிறைய
ஏற்றப்பட்ட வண்டி இடுக்கமானபாதை
நெருக்குகிறதுபோல
நான் உங்களை நீங்கள் இருக்கிற இடத்
திலே நெருக்குவேன்;
14 அப்பொழுது வேகமுள்ளவன் தப்பி
யோட இடமில்லை;
பலவானின் வலிமையும் அவனுக்குப்
பயன்படாது,
பராக்கிரமசாலி தன்னைத் தப்புவிப்பது
மில்லை.
15 வில்லைப் பிடிக்கிறவன் நிற்பதுமில்லை,
வேகமுள்ளவன் தன் கால்களால் தப்பிப்
போவதுமில்லை;
குதிரையின்மேல் ஏறுகிறவன் தன்னைத்
தப்புவிப்பது மில்லை.
16 பராக்கிரமசாலிகளில் தைரியவானும்
அந்நாளிலே நிர்வாணியாய் ஓடிப்போ
வான்;
இது யெகோவாவின் திருவாக்கு.

**3** இஸ்ரவேல் புத்திரரே, இந்த வசனத
தைக் கேளுங்கள்,
யெகோவாவாகிய நான் உங்களுக்கு
விரோதமாக,
எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின
மூழுக்குடும்பத்துக்கும் விரோதமாக,
அதைச் சொல்லுகிறேன்:
2 பூமியின் சகல வம்சங்களிலும் உங்களை
யே சொந்தமென அறிந்தேன்;
ஆகவே உங்கள் சகல அக்கிரமங்களி
னிமித்தமும் உங்களைத் தண்டிப்பேன்.
3 இருவர் ஒத்திருந்தாலொழிய ஒன்றாய்
நடப்பார்களோ?
4 தனக்கு இரை அகப்படாமலிருக்கக்
காட்டிலே சிங்கம் கெர்ச்சிக்குமோ?
இரை பிடியாமல் இருக்கும்போது பால
சிங்கம் தன் கெபியிலிருந்து சத்தமிடு
மோ?
5 சருக்குப் போடப்படாதிருந்தால் குருவி
கண்ணியில் அகப்பட்டுத் தரையில்விழு
மோ?
ஒன்றும் படாதிருக்கையில் பொறி தட்டி
விடுமோ?

6 ஊரில் எக்காளம் ஊதினால் ஜனங்கள் பயப்படாதிருப்பார்களோ? யெகோவாவின் செயலின்றி ஊரில் தீங்கு உண்டாகுமோ?

7 யெகோவாவாகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தமது ஊழியருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்.

8 சிங்கம் கெர்ச்சிக்கும்போது பயப்படாதிருப்பவன் யார்? யெகோவாவாகிய ஆண்டவர் பேசும்போது தீர்க்கதரிசனம் சொல்லாதிருப்பவன் யார்?

9 அஸ்தோத்திலே அரமனைகள்மேலும் எகிப்துதேசத்திலே அரமனைகள்மேலும் இதைப் பிரசித்தப்படுத்திக் கூறுங்கள்: நீங்கள் சமாரியாவின் மலைகளில் வந்து கூடி அதின் நடுவிலுள்ள குழப்பங்களையும் அதற்குள் ஜனங்கள் ஒடுக்கப்படுவதையும் பாருங்கள்.

10 அவர்கள் நேரானதைச் செய்ய அறியாமல் —இது யெகோவாவின் திருவாக்கு— தங்கள் அரமனைகளிலே கொடுமையையும் கொள்ளையையும் குவித்துக்கொள்ளுகிறார்கள்.

11 ஆதலால் யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச் சொல்லுகிறார்: சத்துரு வந்து தேசத்தைச் சூழ்ந்து கொண்டு உன் கோட்டையைத் தரைமட்டமாக்குவான், உன் அரமனைகள் கொள்ளையிடப்படும்.

12 யெகோவா இப்படிச் சொல்லுகிறார்: மேய்ப்பவன் ஒருவன் இரண்டு கால்களையாவது ஒருகாதின் தண்டையாவது சிங்கத்தின் வாயிலிருந்து பிடுங்கித் தப்புவிப்பதுபோல் சமாரியாவிலே, படுக்கையின் மூலையிலும் மஞ்சத்தின் பஞ்சணையிலும் அமர்ந்திருக்கும் இஸ்ரவேல் புத்திரர் அவ்வளவே தப்புவிக்கப்படுவார்கள்.

13 நீங்கள் கேட்டு, யாக்கோபு வீட்டாருக்கு விரோதமான சாட்சியாக இதை அறிவியுங்கள்:—இது சேனைகளின் கடவுள் என்னும் யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு—

14 நான் இஸ்ரவேலின் பாதகங்களினிமித்தம் அவனைத் தண்டிக்கும் நாளிலே நான் பேதேலின் பலிபீடங்களைத் தண்டிப்பேன்; பலிபீடத்தின் கொம்புகள் வெட்டுண்டு தரையிலே விழும்.

15 மாரிகால வீட்டையும் கோடைகால வீட்டையும் இடிப்பேன், யானைத்தந்தத்தால் செய்யப்பட்ட வீடுகள் அழியும்; பெரிய வீடுகளுக்கு முடிவுவரும்; இது யெகோவாவின் திருவாக்கு.

4 சமாரியாவின் மலைகளிலுள்ள பாசானின் பசுக்களே, தரித்திரரை ஒடுக்கி ஏழைகளை நொறுக்குகிறவர்களே, குடிப்போம், கொண்டுவாருங்கள் என்று உங்கள் எஜமான்களிடம் சொல்லுகிறவர்களே,

2 இந்த வார்த்தையைக் கேளுங்கள்: யெகோவாவாகிய ஆண்டவர் தமது பரிசுத்தத்தின்பேரில் ஆணையிட்டுச் சொல்லியிருக்கிறார், உங்களைத் துறடுகளாலும் உங்களில் மீந்திருப்பவரை மீன்பிடிக்கிற தூண்டில்களாலும் இழுத்துக்கொண்டுபோகும் நாட்கள் வரும்.

3 அப்பொழுது நீங்கள் ஒவ்வொருத்தியும் தனக்கு எதிரேயுள்ள பிளப்பின் வழியாய் வெளியேறி அர்மோனுக்குத் துரத்தப்படுவீர்கள்; இது யெகோவாவின் திருவாக்கு.

4 பேதேலுக்கு வந்து தரோகம்பண்ணுங்கள், கில்காலுக்கு வந்து அதிகத் தரோகம் பண்ணுங்கள், காலைதோறும் உங்கள் பலிகளைக் கொண்டுவாருங்கள், மூன்றுநாளைக்கொருமுறை உங்கள் தசமபாகங்களைச் செலுத்துங்கள்;

5 புளிப்புள்ளதை ஸ்தோத்திர பலியாகத் தகனியுங்கள், மனப்பூர்வ பலிகளைப் பிரசித்தப்படுத்திக் கூறுங்கள், இஸ்ரவேல் புத்திரரே, இப்படிச் செய்வதே உங்களுக்குப் பிரியம், இது யெகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு.

6 நான் உங்கள் ஊர்களில் எல்லாம் உணவிலா வாயும் உங்கள் இடங்களில் எல்லாம் ஆகாரக்குறைவும் இருக்கும்படி செய்தேன்,

நீங்களோ என்னிடம் திரும்பாமற்போ
னீர்கள்,
இது யெகோவாவின் திருவாக்கு.
7 இதுவுமன்றி, அறுப்புக்காலம்வர இன்
னும் மூன்று மாதம் இருக்கும்போதே
மழையை நான் தடுத்தேன்;
ஒரு ஊரில் மழை பெய்யவும் ஒரு
ஊரில் மழைபெய்யாதிருக்கவும் செய்
தேன்,
ஒரு வயலின்மேல் மழைபெய்தது, மழை
பெய்யாத வயல் காய்ந்துபோயிற்று.
8 இரண்டுமூன்று ஊர் ஜனங்கள்
தண்ணீர்தேடி ஒரே ஊருக்குப்போய்
அலைந்தும் தாகந் தீர்த்துக்கொள்ள
வில்லை;
நீங்களோ என்னிடம் திரும்பாமற்போ
னீர்கள்,
இது யெகோவாவின் திருவாக்கு.
9 கருக்காயிலும் விஷப்பனியிலும் உங்
களை வாதித்தேன்,
உங்கள் ஏராளமான சோலைகளையும்
திராட்சத்தோட்டங்களையும்
அத்திமரங்களையும் ஒலிவமரங்களையும்
பச்சைப்புழு அரித்துப்போட்டது;
நீங்களோ என்னிடம் திரும்பாமற்போ
னீர்கள்,
இது யெகோவாவின் திருவாக்கு.
10 எகிப்திலே உண்டானதுபோன்ற
கொள்ளைநோயை உங்களுக்குள் அனுப்பி
னேன்,
உங்கள் வாலிபரைப் பட்டயத்தாலே
கொன்றேன்,
உங்கள் குதிரைகளும் கொண்டுபோகப்
பட்டன;
உங்கள் பாளையங்களின் நாற்றத்தை உங்
கள் நாசிகளில் ஏறப்பண்ணினேன்;
நீங்களோ என்னிடம் திரும்பாமற்
போனீர்கள்.
இது யெகோவாவின் திருவாக்கு.
11 சோதோமையும் கொமோராவையும் கட
வுள் கவிழ்த்ததுபோல்
உங்களிலும் பலரைக் கவிழ்த்தேன்;
நீங்கள் அக்கினியினின்று பறிக்கப்
பட்ட கொள்ளிபோலானீர்கள்,
நீங்களோ என்னிடம் திரும்பாமற்
போனீர்கள்,
இது யெகோவாவின் திருவாக்கு.
12 ஆதலால் இஸ்ரவேலே, நான் உனக்கு
இப்படிச்செய்வேன்;
இஸ்ரவேலே, நான் உனக்கு இப்படிச்
செய்யப்போகிறபடியினால்
உன் கடவுளைச் சந்திக்க ஆயத்தப்படு.
மலைகளை உருவாக்கினவரும், காற்றைச் 13
சிருஷ்டித்தவரும்,
மனுஷனின் நினைவுகள் இன்னவென்று
அவனுக்குத் தெரியப்படுத்துகிறவரும்,
விடியற்காலத்தை அந்தகாரமாக்குகிற
வரும்
பூமியின் மேடுகள்மேல் நடந்துசெல்பவரு
மான
அவருடைய திருநாமம் சேனைகளின்
கடவுளாகிய யெகோவா என்பதே.

இஸ்ரவேல் வீட்டாரே, உங்களைப் 5
பற்றி நான் புலம்பிச்சொல்லும் இந்த வச
னத்தைக் கேளுங்கள்.
இஸ்ரவேல் என்னும் கன்னிகை 2
விழுந்தாள், அவள் இனி எழுந்திராள்;
தன் தேசத்திலே பூமிமேல் எறியுண்டு
கிடக்கிறாள்,
அவளை எழுந்திருக்கச் செய்வாரில்லை.
யெகோவாவாகிய ஆண்டவர் இப்படிச் 3
சொல்லுகிறார்:
இஸ்ரவேல் வீட்டாருக்குள்
ஆயிரம்பேர் புறப்பட்ட நகரத்துக்கு
நூறு பேரும்,
நூறு பேர் புறப்பட்ட நகரத்துக்குப்
பத்துபேரும் மீந்திருப்பார்கள்.
யெகோவா இஸ்ரவேல் வீட்டாருக்குச் 4
சொல்லுகிறது இதுவே:
என்னைத் தேடுங்கள், அப்பொழுது
பிழைப்பீர்கள்.
பேதேலைத் தேடவேண்டாம், கில்காலுக் 5
குப் போகவேண்டாம்,
பெயேர்செபாவுக்குக் கடந்து செல்ல
வேண்டாம்;
கில்கால் சிறையாகும், பேதேல் வெறு
மையாகும்.
யெகோவாவைத் தேடுங்கள், அப் 6
பொழுது பிழைப்பீர்கள்;
தேடாவிட்டால் ஜோவாலித்துப் பட்சிக்
கும் அக்கினி
யோசேப்பின் வீட்டார்மேல் பற்றிக்
கொள்ளும்;
பேதேலிலே அதை அவிப்பாரில்லை.
நியாயத்தை எட்டியாக மாற்றுகிறீர்கள்; 7
நீதியைத் தரையிலே எறிந்துவிடுகிறீர்கள்;
கார்த்திகையையும் மிருகசீரிஷத்தையும் 8
உண்டாக்கினவரும்
காரிருளை விடியற்காலமாக மாற்றிப் பகலை
இரவாக அந்தகாரப்படுத்துகிறவரும்
சமுத்திரத்தின் நீரை வரவழைத்து
அதைப் பூமியின்மேல் ஊற்றுகிறவரு
மான

அவருடைய திருநாமம் யெகோவா என் பதே.

9 அரணான ஸ்தலத்தின்மேல் திடீரெனச் சேதம் வருவிக்கிறார்,
கோட்டையின்மேல் சேதம் வருகிறது.

10 ஊர் வாசலிலே நியாயம் பேசுகிறவனை அவர்கள் பகைத்து,
யதார்த்தம் பேசுகிறவனை வெறுக்கிறார் கள்.

11 நீங்கள் அப்படியே தரித்திரனை மிதித்து,
அவனிடம் தானியத்தை வரி வாங்குகிற படியினால்
வெட்டின கற்களால் நீங்கள் வீடுகளைக் கட்டினாலும்
அவைகளிலே நீங்கள் குடியிருப்பதில்லை;
அருமையான திராட்சத் தோட்டங்களை நாட்டினாலும்
அவைகளின் ரசத்தை நீங்கள் குடிப்ப தில்லை.

12 உங்கள் துரோகங்கள் மிகுதியென்றும்
உங்கள் பாவங்கள் அதிகமென்றும் அறி வேன்;
நீதிமானை ஒடுக்கிப் பரிதானம் வாங்கி
ஊர்வாசலில் ஏழைகளின் வழக்கிலே நியாயத்தைப் புரட்டுகிறீர்கள்.

13 அப்படியிருப்பதால் புத்திமான் அக்கா லத்திலே மௌனமாயிருப்பான்;
அது தீய காலம்.

14 பிழைக்கும்படி நீங்கள் தீமையை அல்ல நன்மையைத்தேடுங்கள்;
அப்படிச்செய்தால் நீங்கள் சொல்லுகிற படியே சேனைகளின் கடவுளாகிய யெகோவா உங்களோடிருப்பார்.

15 நீங்கள் தீமையைப் பகைத்து நன்மை யை ஆசித்து,
ஊர்வாசலில் நியாயத்தை நிலைப்படுத்துங் கள்;
ஒருவேளை சேனைகளின் கடவுளாகிய யெகோவா யோசேப்பிலே மீதியானவர் களுக்கு இரங்குவார்.

16 ஆதலால் ஆண்டவர், சேனைகளின் கடவு ளாகிய யெகோவா, இப்படிச்சொல்லு கிறார்:
எல்லா வீதிகளிலும் புலம்புவார்கள்,
எல்லாத்தெருக்களிலும் ஐயோ! ஐயோ! என்பார்கள்;
பயிரிடுகிறவர்களைத் துக்கங்கொண்டாடு வதற்கும்
ஒப்பாரி பாட அறிந்தவர்களைப் புலம்பு வதற்கும் வரவழைப்பார்கள்.

17 எல்லாத் திராட்சத்தோட்டங்களிலும் புலம்பல்,
நான் உன் நடுவே கடந்துபோவதால் அப்படி நடக்கும்
என்று யெகோவா சொல்லுகிறார்.

18 யெகோவாவின் நாளை விரும்புகிறவர் களுக்கு ஐயோ கேடாம்!
யெகோவாவின் நாளை நீங்கள் விரும்புவ தேன்?
அந்த நாள் வெளிச்சமல்ல அந்தகாரமே.

19 சிங்கத்துக்குத் தப்பியோடுகையில் கர டிக்கு எதிர்ப்பட்டவன்
வீட்டினுள் வந்து சுவரின்மேல் கை வைத்தவே பாம்பால் கடியுண்டது போ லாகும்.

20 யெகோவாவின் நாள் வெளிச்சமல்லவே,
அது அந்தகாரமல்லவா, பிரகாசமற்ற காரிருளல்லவா?

21 உங்கள் உற்சவங்களைப் பகைத்து வெறுக் கிறேன்;
நீங்கள் ஆசரிக்கும் திருநாட்களில் எனக் குப் பிரியமில்லை;

22 தகனபலிகளையும் உங்கள் போஜனபலி களையும் நீங்கள் எனக்குப் படைத்தாலும்
நான் அங்கீகரிக்கமாட்டேன்;
நீங்கள் ஸ்தோத்திரபலியாகப் படைக்கிற உங்கள் கொழுத்த மிருகங்களையும்
நான் நோக்கிப் பார்க்கமாட்டேன்.

23 உன் பாட்டுகளின் இரைச்சலை என்னை விட்டு அகற்று,
உன் வீணைகளின் ஓசையை நான் கேட்க மாட்டேன்.

24 நியாயம் தண்ணீரைப்போலவும்
நீதி வற்ற நீரோடைபோலவும் புரண்டு ஓடுக.

25 இஸ்ரவேல் வீட்டாரே, வனாந்தரத்திலே நாற்பது வருஷகாலமாய்
யாகங்களையும் பலிகளையும் எனக்குச் செலுத்தினீர்களோ?

26 நீங்கள் உங்கள் ராஜாவாகிய சிக்கூதை யும்
உங்கள் சொரூபமாகிய கீயூன் என்னும் நட்சத்திர தேவதையையும் சுமப்பீர் கள்;
இவைகள் நீங்கள் உங்களுக்கெனச் செய்துகொண்டவைகள்.

27 ஆகையால் உங்களைத் தமஸ்குவுக்கு அப் பால் குடிபெயரச் செய்வேன்
என்று யெகோவா சொல்லுகிறார்.
சேனைகளின் கடவுள் என்பதே அவர் திருநாமம்.

6 சீயோனிலே சுகஜீவிகளாயிருக்கிறவர் களுக்கும்

சமாரியா மலையில் கவலையற்றவர்களா
யிருக்கிறவர்களுக்கும்
ஐயோ கேடாம்!
ஜாதியாருள் சிறந்த ஜனத்திலே நீங்களே
மேன்மையுள்ளவர்கள்,
இஸ்ரவேல்வீட்டார் உங்களிடம் வருகி
றார்களே.
2 வருகிறவர்களிடம் நீங்கள்: கல்னேமட்
டும் போய்
அங்கிருந்து பெரிய ஆமாத்துக்குச்
சென்று
அப்பால் பெலிஸ்திய ஊராகிய காத்துக்
குப்போய்
அவைகள் இந்த ராஜ்யங்களைப் பார்க்
கிலும் நல்லவைகளோ
அவைகளின் எல்லைகள் உங்கள் எல்லை
களைப்பார்க்கிலும் விஸ்தாரமானவை
களோ
என்று பாருங்கள் என்கிறீர்கள்.
3 தீங்குநாள் தூரமென்றெண்ணிக்
கொடுமை இட்டிவந்து வீற்றிருக்கச்
செய்கிறீர்கள்.
4 தந்தக் கட்டில்களில் படுத்து மஞ்சங்
களில் சவுக்கியமாய்ச் சாய்ந்திருக்கிறீர்
கள்,
மந்தையிலே தெரிந்தெடுத்த ஆட்டுக்
குட்டிகளையும்
மாட்டுத் தொழுவத்திலே கொழுக்க
வளர்த்த கன்றுக் குட்டிகளையும் தின்
கிறீர்கள்;
5 தம்புருவாசித்துப் பெருஞ் சத்தமிடுகிறீர்
கள்,
தாவீதைப்போல் கீதவாத்தியங்களை உங்க
ளுக்குச்செய்ய நினைக்கிறீர்கள்,
6 பெரும் பாத்திரங்களில் மதுபானத்தைக்
குடிக்கிறீர்கள்,
சிறந்த தைலங்களைப் பூசிக் கொள்ளு
கிறீர்கள்;
யோசேப்பின் ஆபத்தைப்பற்றியோ கவ
லைப்படாமற்போகிறீர்கள்.
7 இப்படிச் செய்கிறவர்கள் சிறைப்பட்டுப்
போகிறவர்களின் முன்னணியிலே போ
வார்கள்;
இப்படியே செல்வமாகச் சயனித்தவர்
களின் கொண்டாட்டம் நின்று போகும்.
8 யெகோவாவாகிய ஆண்டவர் தமது
ஜீவன்பேரில் ஆணையிட்டு
—இது சேனைகளின் கடவுளாகிய
யெகோவாவின் திருவாக்கு—
நான் யாக்கோபின் மேன்மையை
வெறுத்து, அவன் அரமனைகளைப் பகைக்
கிறேன்;
நகரத்தையும் அதிலுள்ள யாவற்றையும்
ஒப்புக்கொடுத்து விடுவேன் என்கிறார்.
9 ஒரு வீட்டிலே பத்துப்பேர் மீதியாயிருந்
தாலும்
அவர்கள் மாண்டுபோவார்கள்.
10 அவர்களுடைய இனத்தானாவது பிரே
தத்தைத் தகனிக்கிறவனாவது
எலும்புகளை வீட்டிலிருந்து வெளியே
கொண்டுபோகும்படி அவைகளை எடுத்து
வீட்டின் உட்புறத்திலே இருக்கிறவனி
டம்,
உன்னிடத்தில் இன்னும் உண்டோ
என்று கேட்க
அவன், இல்லையென்பான்;
அப்பொழுது இவன்: நீ மௌனமாயிரு,
யெகோவாவின் நாமத்தைச் சொல்லலா
காது என்பான்.
11 இதோ, யெகோவா கட்டளையிட்டிருக்
கிறார்;
பெரிய வீடு உடைந்து துண்டு துண்டா
கவும்
சிறிய வீடு வெடித்துச் சுக்கல் சுக்கலாக
வும் அடிப்பார்.
12 கற்பாறையின்மேல் குதிரைகள் ஓடுமோ? 12
அங்கே ஒருவன் மாடுகளால் உழு
வானோ?
நியாயத்தை நஞ்சாகவும் நீதியின் கனியை
எட்டியாகவும் மாற்றுகிறீர்கள்.
13 வீண் காரியத்தைப்பற்றி மகிழுகிறீர்கள், 13
எங்கள் பலத்தினாலே எங்களுக்குக்
கொம்புகளை எடுத்துக் கொள்ளவில்லை
யோ என்கிறீர்கள்.
14 இஸ்ரவேல் வீட்டாரே, இதோ, ஒரு 14
ஜாதியை உங்களுக்கு விரோதமாக எழுப்
புவேன்;
இது சேனைகளின் கடவுளாகிய யெகோ
வாவின் திருவாக்கு.
ஆமாத்துக்குப் போகிறவழி தொடங்கி
அராபாவின் ஓடைமட்டாக அவர்
கள் உங்களை ஒடுக்குவார்கள்.

7 யெகோவாவாகிய ஆண்டவர் எனக்குக் 7
காண்பித்தது இதுவே:
இதோ, ராஜாவின் புல்லறுப்புக்குப்
பின்பு
இரண்டாம் விசை புல்முளைக்கத் தொ
டங்குகையில்
அவர் வெட்டுக்கிளிகளை உண்டாக்கினார்.
2 அவைகள் தேசத்தின் புல்லைத்தின்று 2
தீர்ந்தபோது:
யெகோவாவாகிய ஆண்டவரே மன்னித்
தருளும்;

யாக்கோபு எப்படி எழுந்திருப்பான்?
அவன் சிறியவன் என்றேன்.
3 யெகோவா அதைப்பற்றி மனஸ்தாபப்
பட்டு அப்படி ஆவதில்லை என்றார்.
4 யெகோவாவாகிய ஆண்டவர் எனக்
குக் காண்பித்தது இதுவே:
இதோ, யெகோவாவாகிய ஆண்டவர்
தண்டிக்கும்படி அக்கினியை வரவழைத்
தார்,
அது மகா ஆழத்தைப் பட்சித்தது;
அது வயல் நிலத்தைப் பட்சிக்க வரவே
5 நான்: யெகோவாவாகிய ஆண்டவரே,
நிறுத்தியருளும், யாக்கோபு எப்படி
எழுந்திருப்பான்?
அவன் சிறியவன் என்றேன்.
6 யெகோவா அதைப்பற்றி மனஸ்தாபப்
பட்டு இதுவும் ஆவதில்லை
என்று யெகோவாவாகிய ஆண்டவர்
சொன்னார்.
7 பின்பு அவர் எனக்குக் காண்பித்தது
இதுவே:
இதோ, தூக்குநூல் பிரமாணத்தின்
படியே கட்டப்பட்ட
ஒரு மதிலுக்கு மேலாக ஆண்டவர் நின்
றார்;
அவர் கையில் தூக்குநூல் இருந்தது.
8 யெகோவா என்னைக் கூப்பிட்டு:
ஆமோசே, நீ என்ன காண்கிறாய் என்று
கேட்க
தூக்குநூலைக் காண்கிறேன் என்றேன்,
அப்பொழுது ஆண்டவர்: இதோ, என்
ஜனமாகிய இஸ்ரவேலின் நடுவே தூக்கு
நூலை விடுவேன்;
இனி அவர்களுக்கு மன்னிக்கமாட்
டேன்.
9 ஈசாக்கின் மேடைகள் பாழாகும்,
இஸ்ரவேலின் பரிசுத்த ஸ்தலங்கள்
அவாந்தரமாகும்
நான் யெரொபெயாம் வீட்டாருக்கு
விரோதமாய்ப் பட்டயத்தோடே எழும்பி
வருவேன் என்றார்.
10 அப்பொழுது பேதேலில் ஆசாரியனா
யிருந்த அமத்சியா இஸ்ரவேலின் ராஜாவா
கிய யெரொபெயாமுக்கு ஆள் அனுப்பி:
ஆமோஸ் இஸ்ரவேல் வீட்டாரின் நடுவே
உமக்கு விரோதமாகக் கட்டுப்பாடுபண்ணு
கிறார்; தேசம் அவன் வார்த்தைகளையெல்
11 லாம் சகிக்கமுடியாது. ஆமோஸ் சொல்
லுகிறது இதுவே, யெரொபெயாம் பட்டயத்
தினால் சாவான், இஸ்ரவேல் தன் தேசத்தி
லிருந்து சிறைப்பட்டேபோகும் என்கிறான்
12 என்று சொல்லச்சொன்னான். பின்னும்
அமத்சியா ஆமோசினிடம், தரிசனக்
காரனே, நீ போய்விடு, யூதாதேசத்துக்குத்
தப்பியோடு, அங்கேயே சாப்பிட்டுக்
கொண்டு அங்கே தீர்க்கதரிசனம் சொல்.
13 பேதேலிலே இனித் தீர்க்கதரிசனம் சொல்
லாதே; அது ராஜாவின் பரிசுத்தஸ்தலம்,
ராஜ்யத்தின் ஆலயம் என்றான். அதைக்
14 கேட்ட ஆமோஸ்: நான் தீர்க்கதரிசியுமல்ல,
தீர்க்கதரிசன சிஷ்யனுமல்ல; நான் ஆடு
மேய்க்கிறவன், அத்திமரத்தோப்பு பார்க்
கிறவன். ஆடு மேய்த்துக்கொண்டிருந்த
15 என்னை யெகோவா அழைத்து, நீ போய்
என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோத
மாகத் தீர்க்கதரிசனம் சொல் என்று
யெகோவா உரைத்தார். இப்போதும் நீ
16 யெகோவாவின் வார்த்தையைக் கேள்.
இஸ்ரவேலுக்கு விரோதமாய்த் தீர்க்கதரி
சனம் சொல்லாதே,
ஈசாக்கின் வீட்டாருக்கு விரோதமாக
வசனத்தைப் பொழியாதே
என்று சொல்லுகிறாயே.
17 ஆதலால் யெகோவா இப்படிச் சொல்லு
கிறார்: உன் பெண்ஜாதி நகரத்தில் வேசி
யாவாள்,
உன் குமாரரும் உன் குமாரத்திகளும்
பட்டயத்தால் விழுவார்கள்;
உன் வயலை அளவுநூல் போட்டுப் பங்கிட்
டுக்கொள்வார்கள்,
நீயோ அசுத்தமான தேசத்திலே மாண்டு
போவாய்;
இஸ்ரவேலும் தன் தேசத்திலிருந்து சிறைப்
பட்டே போய்விடும்
என்று அமத்சியாவுக்குச் சொன்னான்.

8 பின்பு யெகோவாவாகிய ஆண்டவர்
எனக்குக் காண்பித்தது இதுவே: இதோ,
கனிந்த பழங்களுள்ள ஒரு கூடை இருக்
2 தது. அவர் ஆமோசே, நீ காண்கிறதென்ன
என்று கேட்க, நான் கனிந்த பழங்க
ளுள்ள ஒரு கூடையை என்றேன். அப்
பொழுது யெகோவா என்னிடம்: என் ஜன
மாகிய இஸ்ரவேலுக்கு முடிவுகாலம் வந்
தது, இனி அவர்களுக்கு மன்னிக்கமாட்
டேன்:
அக்காளிலே அரமனைப் பாடல்கள் 3
அலறுதலாக மாறும்
—இது யெகோவாவாகிய ஆண்டவரின்
திருவாக்கு—
பிணக்குவியல்! எங்கும் எறியுண்டன,
மௌனம்!
ஏழைகளை மிதித்துத் 4
தேசத்தின் சிறியோரை ஒழியப்பண்ணி,

5 நாங்கள் தவசம் விற்க அமாவாசை எப்
போது முடிவாகும்,
தானியப் பண்டசாலைகளைத் திறக்க
ஓய்வுநாள் எப்போது தீரும்,
அப்பொழுது நாங்கள் மரக்காலைக்
குறைத்துச்
சேக்கல் நிறையை அதிகமாக்கிக் கள்ளத்
தராசைவைத்து மோசம்செய்வோம்,
6 தரித்திரரைப் பணத்துக்கும்
ஏழைகளை ஒரு ஜோடு செருப்புக்கும்
வாங்குவோம்,
உதவாத தானியத்தை விற்போம்
என்று சொல்லுகிறவர்களே இதைக்
கேளுங்கள்:
7 யெகோவா யாக்கோபின் மகிமையின்
பேரில் ஆணையிட்டு அவர்கள் செய்த
வற்றையெல்லாம் நான் ஒருபோதும்
மறப்பதில்லை,
8 இதினிமித்தம் தேசம் அதிராதோ? குடிக
ளெல்லாம் துக்கியாரோ?
பூமியெல்லாம் நீலநதிபோல் உயர்ந்து
பொங்கிக்கொதித்து
எகிப்தின் நதிபோல் இறங்கிவிடும்.
9 அந்நாளிலே—இது யெகோவாவாகிய
ஆண்டவரின் திருவாக்கு—
நான் மத்தியானத்திலே சூரியனை அஸ்த
மிக்கப்பண்ணிப்
பட்டப்பகலிலே தேசத்தை அந்தகாரப்
படுத்துவேன்.
10 உங்கள் உற்சவ நாட்களைத் துக்கநாட்க
ளாகவும்
உங்கள் பாட்டுகளையெல்லாம் புலம்ப
லாகவும் மாற்றுவேன்,
சகல அரைகளிலும் இரட்டையும் சகல
தலைகளிலும் மொட்டையையும் வருவிப்
பேன்;
ஒரே பிள்ளைக்காகத் துக்கிப்பதுபோலாகச்
செய்வேன்,
முடிவு கசப்புநாளாகும்.
11 இதோ நாட்கள் வரும்,
—இது யெகோவாவாகிய ஆண்டவரின்
திருவாக்கு—
அப்போது தேசத்திலே பஞ்சம் வரச்
செய்வேன்,
அது ஆகாரப்பஞ்சமல்ல, ஜலதாகமு
மல்ல,
யெகோவாவின் வசனத்தைக் கேட்க
வேண்டுமெனத்
தவிக்கிற பஞ்சமே.
12 அப்பொழுது அவர்கள் ஒரு சமுத்திரந்
தொடங்கி மறு சமுத்திரமட்டும்
வடதிசை தொடங்கிக் கீழ்திசைமட்டும்
யெகோவாவின் வசனத்தைத் தேடியலைந்
தும்
அதைக் கண்டடையாமற் போவார்கள்.
13 வாலிபரும் சௌந்தரியமுள்ள கன்னி
கைகளும்
அந்நாளிலே தாகத்தினால் சோர்ந்து
போவார்கள்.
14 சமாரியாவின் பாவத்தின்மேல் ஆணை
யிட்டு,
தாணே, உன் தெய்வத்தின் ஜீவன்பேரி
லும்
பெயேர்செபாவில் தொழப்படுவோன்
ஜீவன் பேரிலும்
என்று சொல்லுகிறவர்கள் விழுவார்கள்,
இனி ஒருபோதும் எழுந்திரார் என்று
சொன்னார்.

9 ஆண்டவரைப் பலிபீடத்தின்மேல் நிற்கக்கண்டேன்;
அவர் இப்படிப் பேசினார்: நீ வாசல்நிலை
கள் அசையும்படி தலைப்பை அடித்து
அவர்கள் எல்லாருடைய தலையின்
மேலும்விழ உடைத்துப்போடு;
இன்னும் மீந்திருப்பவர்களை நான் பட்ட
யத்தினால் கொன்றுபோடுவேன்;
அவர்களில் எவனும் தப்பி ஓடிவதில்லை,
அவர்களில் எவனும் ரட்சிக்கப்படுவது
மில்லை.
2 அவர்கள் பாதாளபரியந்தம் தோண்டி
இறங்கினாலும்,
என் கை அவ்விடத்திலிருந்து அவர்களைப்
பிடித்துக்கொண்டுவரும்;
அவர்கள் வானபரியந்தம் ஏறினாலும்
அவ்விடத்திலிருந்து அவர்களைத் தள்ளி
இறங்கப்பண்ணுவேன்;
3 அவர்கள் கர்மேலின் உச்சிமுடியிலே
ஒளித்துக்கொண்டாலும்
அங்கே அவர்களைத் தேடிப்பிடிப்பேன்;
அவர்கள் சமுத்திரத்தின் ஆழத்திலே
போய் என் கண்களுக்கு மறைந்து
கொண்டாலும்
அங்கே அவர்களைக்கடிக்கப் பாம்புக்குக்
கட்டளையிடுவேன்.
4 அவர்கள் தங்கள் சத்துருக்களுக்குமுன்
பாகச் சிறைப்பட்டுப்போனாலும்
அங்கே அவர்களைக் கொன்றுபோடப்
பட்டயத்துக்கு நான் கட்டளையிடுவேன்,
என் கண்களை அவர்கள்மேல் நன்மைக்
கல்ல தீமைக்கென்றே வைப்பேன்.
5 சேனைகளின் யெகோவாவாகிய ஆண்ட
வர் பூமியைத் தொடவே அது உருகிப்
போம்;

அதின் குடிகளெல்லாரும் துக்கிப்பார்கள்;
பூமியெல்லாம் நீலநதிபோல் உயர்ந்து
எகிப்தின் நதிபோல் இறங்கிவிடும்.
6 வானத்தில் தமது மேலறைகளைக் கட்டுகிறவரும்
பூமியிலே தமது ஆகாயமண்டலத்தை
அஸ்திபாரப்படுத்துகிறவரும்
சமுத்திரத்தின் தண்ணீர்களை வரவழைத்து
அவைகளைப் பூமியின்மேல் ஊற்றுகிறவருமான
அவருடைய திருநாமம் யெகோவா என்பதே.
7 இஸ்ரவேல் புத்திரரே, நீங்கள் எனக்கு
எத்தியோப்பியரின் புத்திரரைப் போன்றவர்களே,
இது யெகோவாவின் திருவாக்கு,
நான் இஸ்ரவேலை எகிப்துதேசத்திலிருந்தும் பெலிஸ்தியரைக் கப்தோரிலிருந்தும்
கீரியரைக் கீரிலிருந்தும் அழைத்துவரவில்லையோ?
8 இதோ, யெகோவாவாகிய ஆண்டவரின் கண்கள் பாவமுள்ள ராஜ்யத்துக்கு
விரோதம்,
பூமியின்மேல் இராதபடி அதை அழித்துப்போடுவேன்;
எனினும் யாக்கோபின் வீட்டாரை முற்றிலும் அழிக்கமாட்டேன்;
இது யெகோவாவின் திருவாக்கு.
9 இதோ, நான் கட்டளையிடுவது இதுவே:
சல்லடையினால் சலித்தரிக்கிறதுபோல்
இஸ்ரவேல் வம்சத்தாரை எல்லா ஜாதிகளுக்குள்ளும் சலித்தரிப்பேன்;
ஒரு கோதுமை மணியும் தரையிலே விழுவதில்லை.
10 என் ஜனத்திலுள்ள பாவிகள் யாவரும்
பட்டயத்தால் சாவார்கள்,
தீங்கு எங்களைப்பிடிப்பதில்லை, மறிப்பதில்லை என்கிறார்களே.

விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை 11
அந்நாளிலே நான் திரும்ப எடுத்துக்கட்டி
அதின் திறப்புகளை அடைத்து
அதில் பழுதாய்ப்போனதை மறுபடியும்
எடுத்துக்கட்டி
பூர்வநாட்களில் இருந்ததுபோல் கட்டுவேன்.
அப்பொழுது அவர்கள் ஏதோமில் மீதி 12
யானதையும்
எனது நாமம் தரிக்கப்பெற்ற புறஜாதி
யார் யாவரையும் சொந்தமாக்கிக் கொள்வார்கள்
—இது யெகோவாவின் திருவாக்கு—
அவரே இவற்றைச் செய்பவர்.
இதோ நாட்கள்வரும்,—இது யெகோ 13
வாவின் திருவாக்கு—
அப்பொழுது உழுகிறவன் அறுக்கிறவனைத் தொடர்ந்து பிடிப்பான்,
திராட்சப்பழங்களை ஆலியில் மிதிக்கிறவன் விதைக்கிறவனைத் தொடர்ந்துபிடிப்பான்;
மலைகள் புதுரசம் பொழியும், மேடுகளெல்லாம் கரைந்துபோம்.
என் ஜனமாகிய இஸ்ரவேலின் சிறை 14
யிருப்பைத் திருப்புவேன்;
அவர்கள் பாழாய்ப்போன நகரங்களைக் கட்டி, அவைகளில் குடியிருந்து,
திராட்சத் தோட்டங்களை நாட்டி அவைகளின் ரசத்தைக் குடித்துத்
தோட்டம் போட்டுக் கனிகளைப் புசிப்பார்கள்.
அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டு 15
வேன்,
நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லை
என்று உன் கடவுளாகிய யெகோவா சொல்லுகிறார்.

# OBADIAH

# ஒபதியா

1 ஒபதியாவின் தரிசனம்:
யெகோவாவாகிய ஆண்டவர் ஏதோமைப்பற்றிச் சொல்லுகிறது இதுவே:
எழும்புங்கள், அதற்கு விரோதமாக யுத்தம்பண்ண எழும்புவோம் வாருங்கள்
என்று அறிவிக்கத் தூதுவன் ஜாதிகளிடம் அனுப்பப்பட்டதாக
யெகோவாவினிடமிருந்து ஒரு செய்தியைக் கேட்டோம்,
2 இதோ, நான் உன்னை ஜாதியாருக்குள்ளே சிறியவனுக்குகிறேன்;
நீ மிகவும் அசட்டைபண்ணப்பட்டிருக்கிறாய்.
3 கன்மலை வெடிப்புகளில் வாசம்பண்ணி
உயரத்தில் உன் ஆசனத்தை வைத்திருப்பவனே;
என்னைத் தரையிலே விழத்தள்ளுகிறவன் யார் என்று
உன் இருதயத்தில் சொல்லுகிறவனே,
உன் இருதயத்தின் அகந்தை உன்னை மோசம்போக்குகிறது.
4 நீ கழுகைப்போல் உயரப்போனாலும்,
நீ நட்சத்திரங்களுக்குள்ளே உன் கூட்டைக் கட்டினாலும்,
அங்கிருந்தும் உன்னை விழப்பண்ணுவேன்;
இது யெகோவாவின் திருவாக்கு.
5 திருடரோ இரவில் கொள்ளையிடுகிறவர்களோ உன்னிடம் வந்தால்
—ஐயோ உனக்கு எவ்வளவு அழிவு!—
தங்களுக்கு வேண்டிய அளவுக்குமேல் திருடுவார்களோ?
திராட்சப்பழங்களை அறுக்கிறவர்கள் உன்மேல் வந்தால்
அவர்கள் பின்பறிப்புப் பழத்தை விட்டுப் போகாட்டார்களோ?
6 ஏசாவுக்குரியவைகளோ எவ்வளவாய்த் தேடிப் பார்க்கப்படும்,
அவனுடைய அந்தரங்கப் பொக்கிஷங்கள் எவ்வளவாய் ஆராய்ந்தெடுத்துக் கொள்ளப்படும்.
7 உன்னோடு உடன்படிக்கைசெய்த எல்லா மனுஷரும் உன்னை எல்லைமட்டும் துரத்திவிடுவார்கள்;
உன்னோடு சிநேகமாயிருந்த மனுஷர் உன்னை மோசம்போக்கி உன்மேல் மேற்கொள்வார்கள்;
உனக்கு ஆகாரத்தைக் கொடுத்து
உனக்குத் தெரியாமலே கண்ணிவைப்பார்கள்.
8 அந்நாளிலேயே—இது யெகோவாவின் திருவாக்கு—
நான் ஏதோமிலுள்ள ஞானிகளையும் ஏசாவின் மலையிலுள்ள விவேகிகளையும் அழியாதிருப்பேனே?
9 தேமானே, உன் பராக்கிரமசாலிகள் திகைப்பார்கள்;
ஏசாவின் மலையிலுள்ள மனுஷர் யாவரும் கொல்லப்பட்டு அழிவார்கள்.
10 உன் சகோதரனாகிய யாக்கோபுக்குச் செய்யப்பட்ட கொடுமையினிமித்தம்
அவமானம் உன்னை மூடும், நீ என்றுமாக அழிக்கப்பட்டுப் போவாய்.
11 நீ விலகிநின்ற நாளிலே,
அந்நியர் அவன் பொருளைக் கொள்ளையிட்டபோது,
பிறநாட்டார் அவன் வாசல்களுக்குள் பிரவேசித்து
எருசலேமின்பேரில் சீட்டுப்போட்ட காலத்தில்
நீயும் அவர்களில் ஒருவனைப்போல் நடந்துகொண்டாய்.
12 உன் சகோதரனுடைய உபத்திரவநாளை நீ பார்த்துக் களிக்கவேண்டாம்;
யூதா புத்திரரின் அழிவுநாளிலே அவர்களைப் பார்த்துக் களிக்கவேண்டாம்,
அவர்கள் நெருக்க நாளிலே நீ பெருமையாய்ப் பேசவேண்டாம்.
13 என் ஜனத்தின் ஆபத்துநாளிலே நீ அவர்கள் வாசலுக்குள் செல்லவேண்டாம்,
அவர்கள் ஆபத்துநாளிலே அவர்கள் தீங்கைப்பார்த்து நீ களிக்கவேண்டாம்,

அவர்கள் ஆபத்துநாளிலே அவர்கள் ஆஸ்தியில் கைபோடவேண்டாம்.
14 அவர்களில் தப்பினவர்களைச் சங்கரிக்கும்படி வழிச்சந்துகளிலே நிற்கவேண்டாம், நெருக்கநாளிலே அவர்களில் மீதியான வர்களைக் காட்டிக்கொடுக்கவேண்டாம்.
15 எல்லா ஜாதியார்மேலும் வர யெகோவாவின் நாள் கிட்டியிருக்கிறது, நீ செய்தபடியே உனக்கும் செய்யப்படும்; நீ செய்ததற்குப் பலன் உன் தலையின் மேல் வரும்.
16 நீங்கள் என் பரிசுத்த பர்வதத்தின்மேல் தெய்வ கோபபாத்திரத்தில் பானம்பண்ணினபடியே எல்லா ஜாதியாரும் எப்பொழுதும் பானம்பண்ணுவார்கள், தீருமட்டும் அவர்கள் பானம்பண்ணி இல்லாதவர்களே யாவார்கள்.
17 சீயோன் மலையிலே, தப்பினவர்கள் இருப்பார்கள், அது பரிசுத்த ஸ்தலமாகும்; யாக்கோபின் வீட்டார் தங்களுக்குச் சொந்தமானவைகளைச் சொந்தமாக்கிக் கொள்வார்கள்.
18 யாக்கோபின்வீடு அக்கினியும் யோசேப் பின்வீடு அக்கினி ஜுவாலையுமாகும், ஏசாவின் வீடோ வைக்கோல் தரும் பாகும், அவர்கள் இவர்களைக் கொளுத்தி இவர் களைப் பட்சிப்பார்கள்; ஏசாவின்வீட்டில் மீதியானவர் இரார், இதைச் சொன்னவர் யெகோவாவே.
19 தென்னாட்டார் ஏசாவின் மலையையும் சமனிலநாட்டார் பெலிஸ்தியரின் தேசத்தையும் சொந்தமாக்கிக்கொள்வார்கள்; அவர்கள் எப்பிராயீம் வயல்வெளியையும் சமாரியா வயல்வெளியையும் சொந்தமாக்கிக் கொள்வார்கள், அப்படியே பென்யமீனியர் கிலெயாத்தை.
20 இஸ்ரவேல் புத்திரராகிய இந்த சேனியத்தில் சிறைப்பட்டுப்போனவர்களாய்ச் சாரபாத்மட்டும் காணானியருக்குள்ளிருப்பவர்களும் எருசலேமிலிருந்து சிறைப்பட்டுப்போய்ச் செபாராத்திலிருப்பவர்களும் தென்னாட்டின் ஊர்களைச் சொந்தமாக்கிக்கொள்வார்கள்.
21 ஏசாவின் மலையை நியாயந்தீர்க்கும்படி இரட்சிப்பவர்கள் சீயோன் பர்வதத்தில் வந்தேறுவார்கள்; அப்பொழுது ராஜ்யம் யெகோவாவினுடையதாகும்.

---

# JONAH

# யோனா

1 அமித்தாயின் குமாரனாகிய யோனாவுக்கு
2 யெகோவாவின் வார்த்தை வந்தது: நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய் அங்குள்ளவர்களுக்கு விரோதமாய்ப் பிரசங்கித்துக்கூறு, அவர்கள் செய்த தீமை என் சமுகத்தில் வந்து எட்டினது என்றார்.
3 அப்பொழுது யோனா யெகோவாவின் சமுகத்தைவிட்டுத் தர்ஷீசுக்குத்தப்பி ஓடும்படி எழுந்து யோப்பாவுக்குப்போய்த் தர்ஷீசுக்குப்போகிற ஒரு கப்பலைக்கண்டு கூலிகொடுத்துத் தான் யெகோவாவின் சமுகத்தைவிட்டுத் தப்பி ஓடும்படி அவர்களோடே தர்ஷீசுக்குப்போகக் கப்பல் ஏறினான்.
4 யெகோவாவோ சமுத்திரத்தின்மேல் பெருங்காற்றை வரவிட்டார், அதினால் கடலிலே பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று; கப்பல் உடைந்துபோகுமோவென்று நினைக்க
5 வேண்டியதாயிற்று. அப்பொழுது கப்பற்காரர் பயந்து அவனவன் தன் தன் தெய்வத்தை நோக்கி அபயமிட்டுப் பாரத்தை லகுவாக்கும்படி கப்பலில் இருந்த சரக்குகளைச் சமுத்திரத்தில் எறிந்துவிட்டார்கள்; யோனாவோ கப்பலின் கீழ்த்தட்டுக்கு இறங்கிப்போய்ப் படுத்துக்கொண்டு அயர்ந்த நித்திரைபண்ணினான்.
6 அப்பொழுது மாலுமி அவனிடம் வந்து: நீ நித்திரைபண்ணுகிறதென்ன? எழுந்திருந்து உன் தேவனை நோக்கிக் கூப்பிடு, நாம் அழிந்துபோகாதபடி சுவாமி ஒருவேளை நம்மை நினைத்தருளுவார் என்றான்.
7 அவர்கள் ஒருவரோடொருவர் பேசி, யார் நிமித்தம் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டதென்று நாம் அறியும்படி சீட்டுப் போடுவோம் வாருங்கள் என்றார்கள், அவர்கள் அப்படியே சீட்டுப்போடவே அது யோனாவின் பேருக்கு விழுந்தது.
8 அப்பொ

மூது அவர்கள் அவனிடம்: யார் நிமித்தம் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டதென்று நீ எங்களுக்குச் சொல்லவேண்டும்; உன் தொழிலென்ன? நீ எங்கேயிருந்து வருகிறாய்? உன் தேசம் எது? நீ எந்த ஜனத்தைச் 9 சேர்ந்தவன் என்று கேட்டார்கள். அதற்கு அவன்: நான் எபிரேயன்: பரலோகத்தின் கடவுளாகிய யெகோவாவினிடம் பயபக்தி யுள்ளவன், சமுத்திரத்தையும் பூமியையும் 10 உண்டாக்கினவர் அவரே என்றான். தான் யெகோவாவின் சமுகத்தினின்று தப்பி ஓடிப்போகிறவன் என்று அவன் அறிவித் தான்; அதை அறியவே அந்த மனுஷர் மிக வும் பயந்தவர்களாய் அவனிடம், நீ ஏன் 11 இதைச் செய்தாய் என்றார்கள். பின்னும் சமுத்திரம் அதிகமாய்க் கொந்தளித்துக் கொண்டிருக்கவே அவர்கள் அவனிடம் வந்து: சமுத்திரம் நமக்கு அமரும்படி நாங் கள் உனக்கு என்ன செய்யவேண்டும் என்று 12 கேட்டார்கள். அதற்கு அவன்: நீங்கள் என்னை எடுத்துச் சமுத்திரத்திலே எறிந்து விடுங்கள், அப்பொழுது சமுத்திரம் உங்க ளுக்கு அமர்ந்திருக்கும்; என்னிமித்தமே இந்தப் பெரிய கொந்தளிப்பு உங்களமேல் வந்ததென்று எனக்குத் தெரியும் என்றான். 13 அந்த மனுஷர் கரைசேரும்படி பலமாய்த் தண்டுவலித்தார்கள்; சமுத்திரமோ அவர் களுக்கு மாறுய அதிகமதிகமாய்க் கொந் தளித்துக் கொண்டேயிருந்தபடியால் அவர் 14 களால் முடியாமற்போயிற்று. அப்பொ ழுது அவர்கள் யெகோவாவை நோக்கி அபயமிட்டு: ஐயோ, யெகோவாவே, இந்த மனுஷனுடைய ஜீவனிமித்தம் எங்களை அழித்துவிடாதேயும், குற்றமில்லாத இரத் தப்பழியை எங்கள்மேல் சுமத்தாதேயும், தேவரீரே யெகோவா; உமது சித்தப்படியே 15 செய்கிறீர் என்று சொல்லி | யோனாவை எடுத்துச் சமுத்திரத்திலே எறிந்துவிட்டார் கள், சமுத்திரம் தன் மும்முரத்தைவிட்டு 16 அமர்ந்தது. அப்பொழுது அந்த மனுஷர் யெகோவாவுக்கு மிகவும் பயந்தவர்களாய் யெகோவாவுக்குப் பலியிட்டுப் பொருத் தனைகளைப் பண்ணினார்கள்.

17 யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனுக்கு யெகோவா கட்டளையிட்டிருந்தார்; அந்த மீன் வயிற்றிலே யோனா இராப்பகல் **2** மூன்று நாள் இருந்தான். அந்த மீனின் வயிற்றிலிருந்து யோனா தன் கடவுளாகிய யெகோவாவை நோக்கிப் பிரார்த்தனை பண்ணி:

2 என் நெருக்கத்திலே நான் யெகோவாவை நோக்கிக் கூப்பிட்டேன், அவர் எனக்கு உத்தரவு அருளினார்; நான் பாதாளத்தின் ஆழத்திலிருந்து கூக் குரலிட்டேன், நீர் என் சத்தத்தைக் கேட்டீர்.
3 சமுத்திர நடுவே ஆழத்திலே, நீர் என் னைத் தள்ளிவிட்டீர், வெள்ளம் என்னைச் சூழ்ந்துகொண்டது; உமது அலைகளும் திரைகளும் எல்லாம் என்மேல் புரண்டன.
4 அப்பொழுது, நான் உமது கண்முன் இராதபடி தள்ளுண்டேன்; ஆகிலும் இன்னமும் உமது பரிசுத்த ஆலயத்தை நோக்கிப் பார்ப்பேன் என் றேன்.
5 உயிர்போகும்படி தண்ணீர்கள் என்னை நெருக்கின; ஆழம் என்னைச் சூழ்ந்தது, கடற்பாசி என் தலையைச்சுற்றிப் பிடித்துக்கொண் டது.
6 மலைகளின் அடிவாரங்கள் பரியந்தமும் இறங்கிவிட்டேன், பூமியின் தாழ்ப்பாள்கள் என்றுமாக என்னை அடைத்தன; என் கடவுளாகிய யெகோவாவே, நீரோ, என் பிராணனை அழிவுக்குத் தப்புவித் தீர்.
7 என் ஆத்துமா என்னில் தொய்ந்து போகையில் யெகோவாவை நினைத்தேன்; அப்பொழுது என் பிரார்த்தனை உமது பரிசுத்த ஆலயத்திலே உம்மிடம் வந்து சேர்ந்தது.
8 பொய்யான விக்கிரகங்களைப் பற்றி கொள்ளுகிறவர்கள் தங்களுக்குக் கிருபைபாராட்டுகிறவரை விட்டுவிடுகிறார்கள்.
9 நானோ நன்றிசெலுத்தும் சத்தத்தோடே உமக்குப் பலியிடுவேன்; நான் பண்ணின பொருத்தனையைச் செலுத்துவேன்; யெகோவாவினிடமே ரட்சிப்பு என்று சொன்னான்.
10 யெகோவா மீனுக்குக் கட்டளையிடவே அது யோனாவைக் கரையிலே கக்கிவிட்டது.

**3** இரண்டாமுறை யெகோவாவின் வார்த் தை யோனாவுக்கு வந்தது: நீ எழுந்து மகா 2 நகரமாகிய நினிவேக்குப்போய் நான் உனக் குக்கூறிச் சொல்வதை அதற்குப் பிரசங்கித் துக்கூறு என்றார். யோனா எழுந்து யெகோ 3 வாவின் வார்த்தையின்படியே நினிவேக்குப் போனான்; நினிவே மூன்றுநாள் பிரயாண விஸ்தாரமுள்ள நகரம், கடவுளின் பார்வை

4 யிலும் மகாபெரியது. யோனா நகரத்தினுட் செல்லத் தொடங்கி, ஒருநாள் பிரயாணம் செய்து இன்னும் நாற்பதுநாளிலே நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று கூறிவந்தான்.

5 அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் கடவுளில் நம்பிக்கைவைத்து, நகரத்திலே உபவாசத்தைக் கூறினார்கள்; பெரியோர் முதல் சிறியோர்மட்டும் இரட்டுடுத்திக்

6 கொண்டார்கள். இந்தச்செய்தி நினிவே யின் ராஜாவுக்கு எட்டினபோது, அவன் தன் சிங்காசனத்தை விட்டெழுந்து, தன் ராஜ உடையைக் கழற்றிவிட்டு இரட்டை உடுத்திக்கொண்டு சாம்பலிலே உட்கார்ந்

7 தான். மேலும் ராஜா தானும் தன் பிரதானி களும் நிர்ணயம்பண்ணின கட்டளையாக நினிவேயிலே பிரசித்தம்செய்து: நினிவேயி லெங்கும் மனுஷர் எதையும் ருசிபார்க்க வேண்டாம், மிருகங்கள், மாடுகளும் ஆடு களும், மேயவும் தண்ணீர் குடிக்கவும் வேண்

8 டாம்; மனுஷரும் மிருகங்களும் இரட்டி னால் மூடிக்கொண்டுகடவுளை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவேண்டும், அவரவர் தம்தம் தீய வழியையும் தம்தம் கைகளின் கொடுமையையும் விட்டுத் திரும்பவும் வேண்

9 டும். யாருக்குத்தெரியும், நாம் அழிந்து போகாதபடி கடவுள் மனஸ்தாபப்பட்டுத் தமது உக்கிரகோபத்தைவிட்டுத் திரும்ப மாட்டாரோ என்று கூறச்சொன்னான்.

10 கடவுள் அவர்கள் செய்தவைகளைப் பார்த்து அவர்கள் தங்கள் தீயவழியைவிட் டுத் திரும்பினார்களென்று கண்டு தாம் அவர்களுக்குச் செய்வதாகச் சொல்லி யிருந்த தீங்கைப்பற்றிக் கடவுள் மனஸ்தா பப்பட்டு அதைச் செய்யாதிருந்தார்.

**4** யோனாவுக்கு இது மிகவும் தகாததாய்க் கண்டது, அவன் கடுங்கோபம்கொண்டான்.

2 அவன் யெகோவாவை நோக்கிப் பிரார்த் தித்து: ஐயோ யெகோவாவே, என் தேசத் தில் இருக்கையிலேயே நான் சொன்னது இதுதானே, இதினிமித்தமே நான் முதலில் தர்ஷீசுக்கு ஓடிப்போக விருந்தேன்; நீர் இரக்கமும் உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ள கடவுள், தீங்கைப் பற்றி மனஸ்தாபப்படுகிறவர் என்பது எனக் குத் தெரிந்ததே. இப்போதும் யெகோ 3 வாவே, என் பிராணனை என்னிடமிருந்து எடுத்துக்கொள்ளும்; நான் உயிரோடிருப் பதிலும் சாவது நலம் என்றான். அதற்கு 4 யெகோவா, நீ கோபங்கொள்வது நியா யமோ என்றார்.

பின்பு யோனா நகரத்திலிருந்து வெளி 5 யேறி நகரத்துக்குக் கிழக்கே தங்கினான். அங்கே தனக்கு ஒரு குடிசையைப்போட்டு, நகரத்துக்குச் சம்பவிக்கப்போவதைத் தான் பார்க்குமளவும் அதின் நிழலில் தங்கியிருந்தான். கடவுளாகிய யெகோவா 6 ஒரு ஆமணக்குச்செடி முளைக்கும்படி கட் டளையிட்டு யோனாவுடைய தலையின்மேல் நிழலுண்டாக்கவும் அவனை அவனுடைய மனமடிவுக்கு நீங்கலாக்கவும் அதை அவன் மேல் ஒங்கிவளரப்பண்ணினார்; அந்த ஆம ணக்கைக்கண்டு யோனா மிகவும் சந்தோ ஷப்பட்டான்.

மறுநாளிலோ கிழக்கு வெளுக்கும் நேரத் 7 தில் கடவுள் ஒரு பூச்சி வரும்படி கட் டளையிட்டார்; அது ஆமணக்குச் செடியை அரித்துப் போடவே செடி காய்ந்து போயிற்று. சூரியன் உதித்தபோது கட 8 வுள் அக்கினிக் கிழக்காற்று வரும்படி கட் டளையிட்டார்; அப்பொழுது வெயில் யோனாவின் தலையில்பட்டது, அவன் தளர்ந்துபோனான்; அவன் தனக்குச் சாவை விரும்பி: நான் உயிரோடிருப்பதிலும் சாவது நலம் என்றான்.

அப்பொழுது கடவுள் யோனாவைப் 9 பார்த்து, ஆமணக்கைப்பற்றி நீ கோபங் கொள்வது நியாயமோ என அவன், நான் சாவை விரும்பிக் கோபங்கொள்வது நியா யந்தான் என்றான். அதற்கு யெகோவா: 10 நீ உழைத்து வளர்க்காத ஆமணக்கைப் பற்றிப் பரிதபிக்கிறாயே, அது ஒரே இரவில் முளைத்து ஒரே இரவில் அழிந்துபோனது. மகா நகரமாகிய நினிவேயைப்பற்றி நான் 11 பரிதபியாமலிருப்பேனோ; வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத இலட் சத்து இருபதினாயிரம்பேருக்கு அதிகமான வர்கள் அதில் இருக்கிறார்களே, அநேக மிருக ஜீவன்களும் அதில் உண்டே என்றார்.

MICAH

# மீகா

1 போதாம், ஆகாஸ், எசேக்கியா என்னும் யூதா ராஜாக்களின் நாட்களிலே, மொரே ஷெத் ஊராஞ்சிய மீகாவுக்கு வந்த யெகோவாவின் வார்த்தை; அவன் கண்டது சமாரியாவையும் எருசலேமையும் பற்றியது.

2 சகல ஜாதிபாரே, கேளுங்கள்; பூமியே, அதில் நிறைந்துள்ளவைகளே, கவனித்துக்கேளுங்கள்; யெகோவாவாகிய ஆண்டவர், தமது பரிசுத்த ஆலயத்திலிருக்கிற ஆண்டவரே, உங்கள் மேலில் சாட்சியாய் இருப்பார்.

3 இதோ, யெகோவா தமது ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருகிறார்; அவர் இறங்கிவந்து பூமியின் உயர் மேடுகள்மேல் மிதித்து நடப்பார்.

4 மலைகள் அவர் கீழே உருகும், பள்ளத்தாக்குகள் பிளந்துபோகும்; அக்கினிமுன் மெழுகுபோலும், செங்குத்துச் சரிவில் பாயும் நீர்போலுமாம்.

5 இவையெல்லாம் யாக்கோபின் துரோகத்தினிமித்தமும், இஸ்ரவேல் வீட்டாரின் பாவங்களினிமித்தமும் சம்பவிக்கும்; யாக்கோபின் துரோகத்துக்குக் காரணமென்ன? சமாரியா அல்லவோ? யூதாவின் பூஜை மேடைகளுக்குக் காரணமென்ன? எருசலேம் அல்லவோ?

6 ஆகவே நான் சமாரியாவை மண்மேடும் திராட்சத்தோட்ட நிலமுமாக்குவேன், அதின் கற்களைப் பள்ளத்தாக்கிலே புரண்டு விழப்பண்ணி, அதின் அஸ்திபாரங்கள் வெளிப்படச் செய்வேன்.

7 அதின் சொரூபங்கள் எல்லாம் நொறுக்கப்படும், அதின் பணையங்கள் எல்லாம் அக்கினியால் எரித்துப்போடப்படும்; அதின் விக்கிரகங்கள் எல்லாம் பாழாகும்படி செய்வேன்; அவை வேசிப்பணையத்தால் வந்தன, வேசிப்பணையமாய்ப் போகும்.

இதினிமித்தம் நான் புலம்பி அலறுவேன்; 8
வெறுங்காலாய் வஸ்திரமின்றி நடப்பேன்;
நான் நரிகள்போல் ஊளையிட்டு, நெருப்புக்கோழிகள்போல் கதறுவேன்.

அதின் புண் ஆறாதது, யூதாமட்டும் இது வந்தது; 9
என் ஜனத்தின் வாசலாகிய எருசலேமட்டும் வந்தெட்டினது

அதைக் காத்பட்டனத்திலே அறிவிக்க வேண்டாம், அழவே வேண்டாம்; 10
பேத் அப்ராவில் புழுதியிலே புரளு.

ஷாப்பீரில் குடியிருக்கிறவளே, வெட்கத்துடன் வஸ்திரமின்றி அப்பாலேபோ; 11
சானனில் குடியிருக்கிறவள் வெளியே வருவதில்லை;
பேத் ஏசேலின் புலம்பல் உங்களை அங்கே நிற்கவொட்டாது.

மாரோத்தில் குடியிருக்கிறவள் நலமானதை 12
வர ஆவலோடு காத்திருப்பாள்;
தீங்கு யேகோவாவினிடமிருந்து எருசலேமின் வாசல் வரைக்கும் வந்து விட்டதே.

லாகீஷில் குடியிருக்கிறவளே, வேகமான குதிரைகளை ரதத்திலே பூட்டு; 13
நீயே சீயோன் குமாரியின் பாவத்துக்குக் காரணி,
உன்னிடமே இஸ்ரவேலின் பாதகங்கள் முதலில் காணப்பட்டன.

ஆகவே மொரேஷெத் காத்துக்கு அதின் சீதனத்தைக் கொடுத்துவிடுவாய், 14
அக்சிபின் வீடுகள் இஸ்ரவேலின் ராஜாக்களுக்கு நம்பப்படாதேயாம்.

மரேஷாவில் குடியிருக்கிறவளே, உன்னைப் பிடித்துக்கொள்ளும் ஒருவனை இன்னும் வரப்பண்ணுவேன்; 15
இஸ்ரவேலின் மகிமை அதுல்லாம்மட்டும் வந்துவிடும்.

உனக்கு அருமையான உன் பிள்ளைகளைப் 16
பற்றி உன் தலையைச் சிரைத்து மொட்டையிட்டுக்கொள்;

கழுகைப்போல் முழு மொட்டையாயிரு,
அவர்கள் உன்னைவிட்டுச் சிறைப்பட்டுப்
போவார்கள்.

2 தங்கள் படுக்கைகளின்மேல் அக்கிர
மத்தை யோசித்துத் தீமைசெய்ய எத்தனம்
பண்ணுகிறவர்களுக்கு ஐயோ கேடாம்!
தங்கள் கையில் வல்லமை இருக்கும்
போதெல்லாம்
விடியற் காலமானவுடன் அதை நடப்
பிப்பார்கள்;
2 வயல்களை ஆசித்து அபகரிக்கிறார்கள்;
வீடுகளை இச்சித்து எடுத்துக்கொள்ளு
கிறார்கள்;
புருஷனையும் அவன் வீட்டையும் மனு
ஷனையும் அவன் சுதந்தரத்தையும் ஒடுக்
குகிறார்கள்.
3 ஆகவே யெகோவா இப்படிச் சொல்லு
கிறார்:
நான் இந்த வம்சத்தாருக்கு விரோத
மாய்த் தீங்கை யோசிக்கிறேன்;
அதினின்று நீங்கள் கழுத்தை நீக்கிக்
கொள்ளமாட்டீர்கள்;
நீங்கள் மேட்டிமையாய் நடப்பதில்லை;
தீயகாலம் இது.
4 அந்நாளில் உங்கள்பேரில் பரியாச
மாய்ப் பாடி ஒப்பாரிசொல்லி:
நாம் முற்றிலும் பாழாஞ்ேம், என் ஜனத்
தின் சுதந்தரம் வேறொருவர்க்கானது;
ஐயோ, என்னைவிட்டு அது நீக்கப்படுகிற
தே!
விலகிப்போனவருக்கு நமது வயல்கள்
பகிர்ந்து கொடுக்கப்படுகின்றனவே
என்று புலம்புவார்கள்.
5 இப்படியாக, சீட்டுப்போட்டு அளவு
நூலால் பகிர்ந்து கொடுப்பவர்கள்
யெகோவாவின் சபையில் உனக்கு இல்
லாமற்போவார்கள்.
6 இவ்விதமானவற்றைப் பற்றிப் பொழிய
வேண்டாம்,
நிந்தைகளுக்கு முடிவில்லையே
என்று அவர்கள் வார்த்தைகளைப் பொழி
கிறார்கள்.
7 யாக்கோபின் வீட்டாரே, இவை சொல்
லத்தக்கனவோ?
யெகோவா சீக்கிரம் கோபங்கொள்பவ
ரோ?
அவர் செய்வது இப்படியோ?
நேர்மையாய் நடப்பவனுக்கு என் வார்த்
தைகள் நலமாகாதோ?
8 இப்பொழுதோ சிலநாட்களாக என்னைம்
சத்துருவைப்போல் எழும்புகிறது,
யுத்த நினைவின்றி வழியில் அஞ்சாமல்
போகிறவர்களுடைய
வஸ்திரத்திலிருந்து மேலங்கியை உரித்து
கொண்டீர்கள்.
9 என் ஜனத்தின் ஸ்திரீகளை
அவர்களுடைய அருமையான வீடுகளி
லிருந்து துரத்திவிடுகிறீர்கள்,
அவர்கள் குழந்தைகளுக்கு இருந்த என்
மகிமையை
என்றுமாக இராதபடி பறித்துக்கொள்ளு
கிறீர்கள்.
10 எழுந்திருந்து போங்கள், இது உங்க
ளுக்கு இளைப்பாறும் இடமல்ல;
நீங்கள் செய்த அசுத்தமே காரணம், அது
நாசம் விளைவிக்கும்;
அந்த நாசம் மிகவும் கொடியது.
11 வெறுங் காற்றுக்கொப்பான வார்த்தை
களைப் பேசி
வஞ்சனையாக நடக்கும் பொய்யனொரு
வன் வந்து,
திராட்சரசம், மதுபானம் இவற்றைப்
பற்றி
நான் உனக்குத் தீர்க்கதரிசனம் பொழி
வேனென்றால்
அவனே இந்த ஜனத்துக்கு ஏற்றபடி
தீர்க்கதரிசனம் பொழிபவனாவான்.
12 யாக்கோபே, உன்னைச் சேர்ந்தவர்க
ளெல்லாரையும் நான் கூட்டவே கூட்டு
வேன்;
இஸ்ரவேலில் மீதியானவர்களைச் சேர்க்க
வே சேர்ப்பேன்;
தொழுவத்தில் ஆடுகளைப்போல், மேய்ச்
சல்காட்டின் நடுவில் மந்தையைப்போல,
நான் அவர்களை ஒரே கூட்டமாக்கு
வேன்;
ஜனங்கள் மிகுதியாகவே இரைச்சல்
இருக்கும்.
13 மதிலில் திறப்பு உண்டாக்குகிறவர் அவர்
களுக்கு முன்பாகச் செல்லுகிறார்,
திறப்பு உண்டாக்கிக் கடந்துபோகிறார்
கள்;
ஊர் வாசல்வழியாய் வெளியேறுகிறார்
கள்;
அவர்கள் ராஜா அவர்களுக்குமுன்
பாகப் போவான்,
யெகோவா அவர்கள் முன்னணியில்
நடந்துபோவார்.

3 அப்பொழுது நான் இப்படிச் சொன்
னேன்:
யாக்கோபின் தலைவரே, இஸ்ரவேல் வீட்
டாரின் அதிபதிகளே,

நியாயத்தை அறிவது உங்களுக்கு அல்ல
வோ அடுத்தது.
2 எனினும் நன்மையைப் பகைத்துத்
தீமையை ஆசிக்கிறீர்கள்;
மனிதர்மேலிருந்து அவர்கள் தோலையும்
அவர்கள் எலும்புகளிலிருந்து சதையை
யும் பிடுங்குகிறீர்கள்,
3 என் ஜனத்தின் சதையைப் பட்சிக்கிறீர்
கள்,
அவர்கள்மேலுள்ள தோலை உரிந்து
கொள்ளுகிறீர்கள்,
அவர்கள் எலும்புகளை முறிக்கிறீர்கள்;
பானையிலே போடப்படுவதைப்போலவும்
கொப்பரையில் போடும் இறைச்சியைப்
போலவும் துண்டிக்கிறீர்கள்.
4 அப்படியிருப்பதால் அவர்கள் யெகோ
வாவை நோக்கி அபயமிடும்போது
அவர் அவர்களுக்குப் பதில்கொடார்,
அவர்கள் தீமையானவற்றைச் செய்கிற
படியினால்
அக்காலத்திலே அவர் தமது முகத்தை
அவர்களுக்கு மறைப்பார்.
5 உண்ணக்கொடுத்தவனுக்குச் சமாதா
னங்கூறி
வாய்க்கு ஒன்றும்கொடாத எவனுக்கும்
விரோதமாக யுத்தப்பிரதிஷ்டை செய்து
என் ஜனத்தைமோசம்போக்குகிற தீர்க்க
தரிசிகளுக்கு விரோதமாய்
யெகோவா சொல்வதைக் கேளுங்கள்.
6 தரிசனம் வராத இரவும் குறிபாராத அந்த
காரமும் உங்களுக்கு வரும்;
தீர்க்கதரிசிகளின்மேல் சூரியன் அஸ்த
மித்து அவர்கள்மேல் பகல் இருளாகும்.
7 தரிசனம் பார்க்கிறவர்கள் வெட்கத்துக்
குள்ளாவார்கள்,
குறிசொல்லுகிறவர்கள் நாணமுறுவார்
கள்,
உத்தரவுகொடுக்கிற தெய்வம் இல்லாதி
னால் அவர்கள் எல்லாரும் வாய்பொத்
திக்கொள்வார்கள்.
8 நானோ, யாக்கோபுக்கு அவன் துரோ
கத்தையும் இஸ்ரவேலுக்கு அவன் பாவத்
தையும் அறிவிக்கும்படி
யெகோவாவின் ஆவியோடு வரும்
பலமும் நியாயமும் தைரியமும் நிறைந்த
வன்.
9 யாக்கோபு வீட்டாரின் தலைவரே, இஸ்ர
வேல் வீட்டாரின் அதிபதிகளே,
நியாயமானதை அருவருத்து நேர்மை
யானதைக் கோணலாக்குகிறவர்களே,
10 சீயோனை இரத்தப்பழியோடும் எருசலே
மை அநியாயத்தோடும் கட்டுகிறவர்களே,
இதைக் கேளுங்கள்.
அதின் தலைவர்கள் பரிதானம் வாங்கி 11
நியாயந்தீர்க்கிறார்கள்,
அதின் ஆசாரியர்கள் கூலிக்கு உபதேசிக்
கிறார்கள்,
அதின் தீர்க்கதரிசிகள் பணத்துக்குக் குறி
சொல்லுகிறார்;
அப்படிச்செய்தும், அவர்கள் யெகோவா
வின்மேல் சார்ந்து,
யெகோவா எங்கள் நடுவில் இல்லையோ?
தீங்கு எங்கள்மேல் வராது
என்று சொல்லுகிறார்கள்.
ஆகையால் உங்கள் நிமித்தம் சீயோன் 12
வயல்வெளியைப்போல் உழப்படும்,
எருசலேம் மண்மேடுகளாய்ப் போம்,
ஆலயத்தின் பர்வதம் காடான குன்றுகும்.

கடைசிநாட்களில் யெகோவாவின் 4
ஆலயமூள்ள பர்வதம்
பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்
கப்பட்டு மலைகளுக்குமேலாய் உயர்த்தப்
படும்;
எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்
கள்.
பல ஜாதிகள் புறப்பட்டு வந்து: 2
நாம் யெகோவாவின் பர்வதத்துக்கும்
யாக்கோபின் கடவுளுடைய ஆலயத்துக்
கும்போவோம் வாருங்கள்,
அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்
பார், நாம் அவர் பாதைகளில் நடப்
போம் என்பார்கள்;
சீயோனிலிருந்து போதகமும் எருசலே
மிலிருந்து யெகோவாவின் வசனமும்
வெளிப்படும்.
அவர் அநேக ஜாதியாருக்குள் நியாயந் 3
தீர்த்து, தூரத்திலுள்ள பல தேசத்தாருக்
குத் தீர்ப்புச்செய்வார்;
அப்பொழுது அவர்கள் தங்கள் பட்ட
யங்களைக் கலப்பைக் கொழுக்களாகவும்
தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும்
அடிப்பார்கள்;
ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம்
எடுப்பதில்லை;
இனி அவர்கள் யுத்தம் கற்பதுமில்லை.
அவனவன் தன்தன் திராட்சச்செடியின் 4
நிழலிலும்
தன்தன் அத்திமரத்தின் நிழலிலும் பயப்
படுத்துவார் இலலாமல் உட்காருவான்;
சேனைகளின் யெகோவாவினுடைய வாய்
இதைச் சொல்லிற்று.
சகல தேசத்தாரும் தங்கள் தங்கள் தெய் 5
வத்தின் நாமத்தில் நடப்பார்கள்;

நாங்களும் எங்கள் கடவுளாகிய யெகோவாவின் நாமத்திலே
என்றென்றுமுள்ள சதாகாலங்களிலும் நடப்போம்.

6 அந்நாளிலே — இது யெகோவாவின் திருவாக்கு—
நான் கொண்டியானவர்களைச் சேர்த்துத் தள்ளுண்டவர்களையும் நான் தீங்கு அது பவிக்கச்செய்தவர்களையும்கூட்டிக்கொள்வேன்;

7 கொண்டியானவர்களை மீதியானவர்களாகவும்
தூரமாய்த் தள்ளுண்டுபோனவர்களைப் பலத்த ஜனமாகவும் வைப்பேன்;
அவர்கள்மேல் யெகோவா சீயோன் பர்வதத்திலே இது முதல் என்றுமாக ராஜாவாயிருப்பார்.

8 மந்தையின்காவல்கோபுரமே,சீயோன் குமாரத்தியின் மலையே,
அது உன்னிடம் வரும், முன்னை ஆளுகையே வரும்;
எருசலேம் குமாரத்திக்குரிய ராஜரிகம் வரும்.

9 இப்போதும் நீ சத்தமிட்டுக் கதறுவானேன்?
பிரசவிக்கிற ஸ்திரீயைப்போல் நீ வேதனைக்குட்படுகையில்
ராஜா உன்னிடத்தில் இல்லையோ?
உன் ஆலோசனைக்காரன் அற்றுப்போனானோ?

10 சீயோன் குமாரத்தியே, பிரசவ ஸ்திரீயைப்போல அம்பாயப்பட்டு வேதனைப்படு;
நீ இப்போது நகரத்திலிருந்து புறப்பட்டு வயல்வெளிகளில் தங்கிப்
பாபிலோன் வரைக்கும் போவாய், அங்கே விடுவிக்கப்படுவாய்;
அங்கே யெகோவா உன்னை உன் சத்துருக்களின் கையினின்று மீட்டு ரட்சிப்பார்.

11 அநேக ஜாதியார் உனக்கு விரோதமாய்க் கூடி,
சீயோன் தீட்டுப்படுவாள், எங்கள் கண் அவளைக்கண்டு களிக்கும்
என்று சொல்லுகிறார்கள்.

12 அவர்களோ யெகோவாவின் எண்ணங்களை அறியவில்லை, அவருடைய யோசனையை உணரவில்லை;
களத்திலே அரிக்கட்டுகளைப்போல அவர்களைச் சேர்ப்பார்.

13 சீயோன் குமாரத்தியே நீ எழுந்து போரடி,
இருப்புக்கொம்புகளையும் செப்புக்குளம்புகளையும் உனக்குத்தருவேன்;
நீ பல தேசத்தாரை நொறுக்கிப்போடுவாய்;
அவர்களிடம் நீ கொள்ளையிடுவதை யெகோவாவின் சாபத்திற்கும்
அவர்கள் பொருளைச் சர்வபூமிக்கும் ஆண்டவராயிருப்பவரின் சாபத்திற்கும் உட்படுத்துவாய்.

திரள்ஜன நகரமே, இப்போது திரள் **5**
திரளாய்க் கூடிக்கொள்;
நமக்கு விரோதமாக முற்றுகை போடப்படும்,
இஸ்ரவேலின் நியாயாதிபதியைக் கோலினால் கன்னத்திலே அடிப்பார்கள்.

2 பெத்லெகேம் எப்பிராத்தாவே, யூதாவின் ஆயிரங்களுள் எண்ணப்படுவதற்கு நீ சிறியதாயிருந்தும்
இஸ்ரவேலில் ஆளுகை செய்யப்போகிறவர்
எனக்கென உன்னிடத்திலிருந்து புறப்பட்டு வருவார்;
அவருடைய உற்பத்தி அநாதிநாட்களாகிய பூர்வத்திலிருந்ததே.

3 ஆகவே பிரசவிக்கிறவள் பிரசவிக்கிற நாள்மட்டும் அவர்களை ஒப்புக்கொடுப்பார்,
அப்பொழுது அவருடைய சகோதரரில் மீதியானவர்கள்
இஸ்ரவேல் புத்திரரோடு கூடும்படி திரும்புவார்கள்.

4 அவர் வந்து யெகோவாவின்பலத்தோடும் தமது கடவுளாகிய யெகோவாவின் நாமத்தின் மகத்துவத்தோடும் மேய்ப்பார்;
ஆகவே அவர்கள் நிலைத்திருப்பார்கள்;
இனி பூமியின் கடையாந்தரமட்டும் அவருடைய மேன்மை விளங்கும்.

5 இவரே சமாதான காரணர்,
அசீரியன் நமது தேசத்திலே வரும்போதும்
நமது அரமனைகளை மிதிக்கும்போதும்
ஏழு மேய்ப்பரையும் அதிபதிகளான எட்டுப்பேரையும்
அவனுக்கு விரோதமாக நிறுத்துவோம்.

6 இவர்கள் அசீரியா தேசத்தையும் நிம்ரோதின் தேசத்திலே அதின் வாசல் மட்டுமுள்ளதையும்
பட்டயத்தால் ஆளுவார்கள்;
அசீரியன் நமது தேசத்தில் வரும்போதும் நமது எல்லைகளை மிதிக்கும்போதும்
அவனுக்கு நம்மைத் தப்புவிப்பார்.

7 யாக்கோபிலே மீதியானவர்கள் யெகோவாவால் வருகிற பனியைப்போலவும் மனுஷனுக்குக் காத்திராமலும் மனுபுத்திரருக்குத் தரித்து நிற்காமலும் புல்லின்மேல் வருகிற மழையைப்போலவும் பல தேசத்தாரின் நடுவிலே இருப்பார்கள்.

8 யாக்கோபிலே மீதியானவர்கள் சிங்கம் காட்டுமிருகங்களுக்குள்ளே இருப்பதுபோலவும் கடந்துபோய் மிதித்துத் தப்புவிப்பார் இல்லாமல் பீறிப்போடுகிற பாலசிங்கம் ஆட்டுமந்தைகளுக்குள்ளே இருப்பதுபோலவும் ஜாதியாருக்குள்ளே, பல தேசத்தாரின் நடுவிலே, இருப்பார்கள்.

9 உன்னுடைய கை உன் விரோதிகளின்மேல் உயரும், உன் சத்துருக்களெல்லாரும் சங்காரிக்கப்படுவார்கள்.

10 அந்நாளிலே—இது யெகோவாவின் திருவாக்கு—உன் நடுவிலிருந்து நான் உன் குதிரைகளைச் சங்காரிப்பேன், உன் இரதங்களை அழித்துவிடுவேன்.

11 உன் தேசத்தின் பட்டணங்களைச் சங்காரித்து உன் அரண்களையெல்லாம் நிர்மூலமாக்குவேன்,

12 சூனிய வித்தைகள் உன் கையில் இராதபடி அகற்றுவேன், சகுனம் பார்க்கிறவர்கள் உன்னிடம் இல்லாமற்போவார்கள்.

13 உன் சொரூபங்களையும் உன் சிலைகளையும் உன் நடுவிலிருந்து சங்காரிப்பேன், உன் கை செய்ததை நீ இனிப் பணிந்துகொள்ளாய்.

14 உன் மரச்சிலைகளை நான் உன் நடுவிலிருந்து பிடுங்கி, உன் பட்டணங்களை அழித்துவிடுவேன்,

15 செவிகொடாத புறஜாதியார்மேல் கோபத்தோடும் உக்கிரத்தோடும் பழிவாங்குவேன்.

**6** யெகோவா சொல்லுகிறதைக் கேளுங்கள்: நீ எழுந்து மலைகளுக்குமுன் உன் வழக்கைச் சொல், குன்றுகள் உன் சத்தத்தைக் கேட்க.

2 மலைகளே, பூமியின் உறுதியான அஸ்திபாரங்களே, யெகோவாவின் வழக்கைக் கேளுங்கள்; யெகோவாவுக்கு அவர் ஜனத்தோடே வழக்குண்டு, இஸ்ரவேலை அவர் கண்டிப்பார்.

3 என் ஜனமே, நான் உனக்குச் செய்தது என்ன? நான் எதினால் உன்னைத் துன்பப்படுத்தினேன்? எனக்கு உத்தரவு சொல்.

4 நான் உன்னை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணி அடிமைத்தன வீட்டிலிருந்த உன்னை மீட்டுக்கொண்டேன்; மோசே, ஆரோன், மிரியாம் என்பவர்களை உனக்கு முன்பாக அனுப்பினேன்.

5 என் ஜனமே மோவாபின் ராஜாவாகிய பாலாக் செய்த யோசனையையும் பெயோரின் குமாரனாகிய பிலேயாம் அவனுக்குச்சொன்ன பதிலையும் சித்தீம் தொடங்கி கில்கால்மட்டும் நடந்ததையும் நினைத்துக்கொண்டு யெகோவாவின் நீதிச் செயல்களை அறிந்துகொள்வாய்.

6 எதைக்கொண்டு நான் யெகோவாவின் சந்நிதியில் வந்து உன்னதமான கடவுளுக்கு முன்பாகப் பணிந்துகொள்வேன்? தகனபலிகளோடும் ஒரு வயது கன்றுக்குட்டிகளோடும் அவர் சந்நிதியில் வரவேண்டுமோ?

7 ஆயிரக்கணக்கான ஆட்டுக்கடாக்களின் பேரிலும் லக்ஷக்கணக்கான ஆறுகளாய் ஓடும் எண்ணெயின் பேரிலும் யெகோவா பிரியங்கொள்வாரோ? என் அக்கிரமத்தைப்போக்க என் மூதற்பேறானவனையும் என் ஆத்துமாவின் பாவத்தைப்போக்க என் சொந்தப் பிள்ளையையும் கொடுக்கவேண்டுமோ?

8 மனிதனே, நலமானது இன்னதென அவர் உனக்குத் தெரிவித்திருக்கிறார், நியாயஞ்செய்து மனதார இரக்கத்தைப் பாராட்டி உன் கடவுளுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடக்கவேண்டுமெனக் கேட்பதேயல்லாமல் வேறே எதை யெகோவா உன்னிடம் கேட்கிறார்.

9 கேளுங்கள், யெகோவா நகரத்தை நோக்கிக் கூப்பிடுகிறார்;—

— அவர் திருநாமத்துக்குப் பயந்து நடப்பதே யுக்தி —
தண்டனைக் கோலைப்பற்றியும் அதை நியமித்தவரைப்பற்றியும் சொல்வதைக் கேளுங்கள்.
10 தன்மார்க்கன் வீட்டிலே துன்மார்க்கத்திலுல் சேர்ந்த பொக்கிஷங்களும்
சபிக்கப்படும் குறைமரக்காலும் இன்னும் உண்டா?
11 கள்ளத்தராசையும் கள்ளப்படிக்கற்களுள்ள பையையும் நான் பொறுப்பேனுல்
நான் நீதியுள்ளவரோ?
12 நகரத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் கொடுமை நிறைந்தவர்கள்;
அதில் வாசமாயிருக்கிறவர்கள் பொய் பேசுகிறவர்கள்;
அவர்கள் வாயிலுள்ள நாவு கபடமே.
13 அப்படியிருப்பதால் நான் உன்னைக் கொடுமையாய் அடிக்கிறேன்,
உன் பாவங்களினிமித்தம் உன்னைப் பாழாக்குகிறேன்
14 நீ புசித்தும் திருப்தியடையாதிருப்பாய்,
வெறுமையே உனக்குள்ளிருக்கும்;
நீ பதனம்பண்ணியும் தப்புவிப்பதில்லை,
நீ தப்புவிப்பதைப் பட்டயத்துக்கு ஒப்புக்கொடுப்பேன்.
15 நீ விதைத்தும் அறுக்காமற் போவாய்,
நீ ஒலிவப்பழங்களை ஆலியாடினபோதிலும் எண்ணெய் பூசிக்கொள்வதில்லை.
திராட்சப்பழங்களை ஆலியாடின போதிலும் இரசம் குடிப்பதில்லை,
16 உம்ரியின் நியமங்களும் ஆகாப் வீட்டார் செய்தவைகளனைத்தும் கைக்கொள்ளப்படுகின்றன;
அவர்கள் ஆலோசனைகளிலே நடக்கிறீர்கள்;
ஆதலால் நான் உன்னைப் பிரமிப்பும் உன் குடிகளைப் பழிப்புமாகச் செய்வேன்;
நீங்கள் என் ஜனத்தின் நிந்தையைச் சுமப்பீர்கள்.

**7** ஐயோ எனக்கு ஆபத்து!
கோடைகாலப் பழங்களைப் பறித்துத்
திராட்சப் பழங்களை அறுத்தபின்பு வந்த வனைனேன்!
புசிக்க ஒரு திராட்சக் குலையும் நான் ஆசித்த முன்பழுத்த முதற்கனியுமில்லை.
2 தேசத்திலே பக்தியுள்ளவன் அற்றுப் போனான்,
மனுஷரில் நேர்மையானவன் இல்லை;
அவர்களெல்லாரும் இரத்தஞ்சிந்தப் பதிவிருக்கிறார்கள்;
ஒருவனை யொருவன் வலையிலே பிடிக்க வேட்டையாடுகிறான்.
3 அவர்கள் தீமை செய்வதில் கைதேர்ந்தவர்கள்,
அதிபதி கொடு என்கிறான், நியாயாதிபதி கைக்கூலி கேட்கிறான்,
பெரியவன் தான் ஆசிப்பதை வாய்விட்டுச் சொல்லுகிறான்;
இவ்விதமாய்க் கோணலானவற்றைச் செய்கிறார்கள்.
4 அவர்களில் நல்லவன் முட்செடிபோன்றவன்,
நேர்மையாளன் முள்வேலியிலும் கடினமானவன்;
உன் காவற்காரர் அறிவித்த உன் தண்டனையின் நாள் வருகிறது,
இப்பொழுதே அவர்களுக்குத் திகைப்பு.
5 அயலானை நம்பவேண்டாம், சிநேகிதனில் நம்பிக்கைவைக்கவேண்டாம்,
உன் மடியிலே படுத்துக்கொள்ளுகிறவளுக்கு முன்பாக உன் வாய்க்குக் காவல்வை.
6 மகன் தகப்பனை அசட்டை செய்கிறான்,
மகள் தன் தாய்க்கு விரோதமாகவும்
மருமகள் தன் மாமிக்கு விரோதமாகவும் எழும்புகிறார்கள்,
ஒருவனுடைய சத்துருக்கள் அவன் வீட்டாரே.
7 நானோ யெகோவாவை நோக்கியவண்ணமாய்
என் ரட்சிப்பின் கடவுளுக்குக் காத்திருப்பேன்,
என் கடவுள் எனக்குச் செவிசாய்த்தருளுவார்.
8 என் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச் சந்தோஷப்படாதே;
நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன்,
நான் இருளிலே உட்கார்ந்தால் யெகோவா எனக்கு வெளிச்சமாயிருப்பார்.
9 நான் யெகோவாவுக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேன்,
அவர் எனக்காக வழக்காடி எனக்கு நியாயம் செய்யுமட்டும்
அவருடைய கோபத்தைச் சுமப்பேன்;
அவரோ என்னை வெளிச்சத்திலே கொண்டுவருவார், அவருடைய நீதியைக் கண்டு களிப்பேன்.
10 உன் கடவுளாகிய யெகோவா எங்கே என்று

என்னிடம் சொல்லுகிற என் சத்துருக்கள் அதைப் பார்க்கும்போது வெட்கம் அவர்களை மூடும், என் கண்கள் அவர்களைக் கண்டுகளிக்கும்; இனி தெருக்களின் மண்ணைப்போல் மிதிக்கப்படுவார்கள்.

11 உன் மதில்களை எடுப்பிக்கும் நாள் வருகிறது; அந்நாளிலே எல்லை வெகு விஸ்தீரணமாகும்.

12 அந்நாளிலே அசீரியாவிலும் எகிப்திலுமிருந்து, எகிப்துமுதல் நதிவரைக்கும் ஒரு சமுத்திரமுதல் மறு சமுத்திரம்வரைக்கும், ஒரு மலைமுதல் மறுமலைவரைக்குமுள்ள ஜனங்கள் உன்னிடத்திற்கு வருவார்கள்.

13 அவர்கள் செய்தவைகளுக்குப் பலனாகப் பூமியும் அதின் குடிகளும் பாழாகும்.

14 உமது சுதந்தரமான மந்தையாகிய உமது ஜனத்தை உமது கோலினால் நடத்தி மேய்த்தருளும், அது கர்மேலின் நடுவில் தனியாய் வனவாசமாயிருக்கிறதே; பூர்வ நாட்களிற்போலவே அவர்கள் பாசானிலும் கிலெயாத்திலும் மேய்வார்கள்.

15 நீ எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளிற்போலவே அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்.

16 புறஜாதியார் கண்டு தங்கள் எல்லா பராக்கிரமத்தையும்பற்றி வெட்கப்படுவார்கள்; கையை வாயின்மேல் வைத்துக்கொள்வார்கள், அவர்கள் காதுகள் செவிடாய்ப் போகும்.

17 பாம்பைப்போல மண்ணை நக்குவார்கள்; பூமியின் ஊரும் பிராணிகளைப்போல் தங்கள் கோட்டைகளிலிருந்து நடுநடுங்கி வெளிப்படுவார்கள்; அவர்கள் திகைப்புற்று நமது கடவுளாகிய யெகோவாவினிடம் சேர்ந்து உனக்குப் பயந்திருப்பார்கள்.

18 தமது சுதந்தரத்தில் மீதியானவர்கள் அக்கிரமத்தைப் பொறுத்துத் துரோகத்தை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தெய்வம் யார்? அவர் என்றென்றுமாகக் கோபங்கொண்டிரார்; கிருபைசெய்வதே அவருக்குப் பிரியம்;

19 அவர் திரும்ப நமக்கு இரக்கங்காட்டுவார், நமது அக்கிரமங்களை மிதித்தடக்கி நமது பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் எறிந்துவிடுவார்.

20 தேவரீர் பூர்வநாட்கள்முதல் எங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்டபடியே யாக்கோபுக்கு உண்மையையும் ஆபிரகாமுக்குக் கிருபையையும் பாராட்டுவீர்.

---

# NAHUM

---

# நாகூம்

1 நினிவேயைப்பற்றிய கடினவாக்கு எல்கோஷியனான நாகூமின்தரிசனப் புஸ்தகம்.

2 யெகோவா எரிச்சலுள்ள கடவுள் பழிவாங்குகிறவர்; யெகோவா பழிவாங்குகிறவர், உக்கிரகோபமுள்ளவர்; யெகோவா தமது சத்துருக்களிடம் பழிவாங்குகிறவர்; அவர் தமது பகைஞருக்கெனக் கோபத்தைவைத்து வைக்கிறவர்.

3 யெகோவா நீடிய சாந்தமும் மிகுந்த வல்லமையுமுள்ளவர்; எவரையும் தண்டியாமல் விடார்; யெகோவாவின் வழி, சுழல்காற்றிலும் பெருங்காற்றிலுமே, மேகங்கள் அவருடைய பாதத்தூள்,

4 அவர் சமுத்திரத்தை அதட்டி அதை வற்றிப்போகப்பண்ணுகிறார், சகல ஆறுகளையும் வறண்டுபோகச் செய்கிறார், பாசானும் கர்மேலும் சோர்ந்து, லீபனோனின் பசுமை வாடிப்போகும்.

5 அவர் சமுகத்தில் பர்வதங்கள் அதிரும், மலைகள் கரைந்துபோம்;

அவர் பிரசன்னத்தினால் பூமியும் பூச்சக்
கரமும் அதில் குடியிருக்கிற அனைவரோ
டும் குலுங்கும்.
6 அவருடைய கோபத்துக்குமுன்பாக நிற்
பவன் யார்?
அவருடைய உக்கிரகோபத்திலே தரிப்ப
வன் யார்?
எரிகிற அவருடைய கோபம் அக்கினி
யைப்போல் ஊற்றப்படுகிறது;
அவராலே கல்மலைகள் உடைக்கப்
படும்.
7 யெகோவா நல்லவர், இக்கட்டுநாளிலே
அரணான கோட்டை;
தம்மில் நம்பிக்கையாயிருக்கிறவர்களைக்
கவனித்துக்கொள்வார்.
8 புரண்டுவருகிற வெள்ளத்தினால் அந்த
நகரமிருக்கும் இடத்தைச் சர்வசங்கா
ரம் பண்ணுவார்;
அவர் தமது சத்துருக்களைத் தொடர்ந்து
இருளினுள் துரத்துவார்.
9 நீங்கள் யெகோவாவுக்கு விரோதமாக
எண்ணுவதென்ன?
அவர் சர்வசங்காரம் பண்ணுகிறவர்,
இடுக்கம் மறுபடியும் நேரிடாது.
10 அவர்கள் சன்னல்பின்னலாயிருக்கிற
முட்செடிகளைப் போலிருந்தாலும்
தங்கள் மதுபானத்தில் முழுதும் முழுகி
னவர்களாயிருக்கையில்
அவர்கள் முற்றிலும் காய்ந்துபோன
செத்தையைப்போல எரிந்துபோவார்
கள்.
11 யெகோவாவுக்கு விரோதமாகத் தீயவற்
றை எண்ணியிருக்கிற
கேடான ஆலோசனைக்காரன் ஒருவன்
உன்னிடத்திலிருந்து புறப்பட்
டான்.
12 யெகோவா சொல்லுகிறது இதுவே:
அவர்கள் எவ்வளவு பலமுடையவர்க
ளாயிருந்தாலும்
எத்தனை திரளானவர்களாயிருந்தாலும்
அறுப்புண்டு போய்விடுவார்கள்;
உன்னை நான் சிறுமைப்படுத்தினேனெனி
னும் இனி உன்னைச் சிறுமைப்படுத்தா
திருப்பேன்.
13 இப்போதும் நான் உன்மேல் இருக்கிற
அவன் நுகத்தை முறித்து,
உன் கட்டுகளை அறுப்பேன்.
14 உன்னைப்பற்றி யெகோவா கட்டளையிடு
வது இதுவே: உன் பேர்தரிக்கும் சந்
ததியார் இனி முளைப்பதில்லை;
உன் தேவர்களின் கோவிலிலுள்ள
வெட்டு விக்கிரகத்தையும் வார்ப்பு விக்
கிரகத்தையும் நான் நிர்மூலம் பண்ணு
வேன்;
உனக்குப் பிரேதக்குழி ஆயத்தம் பண்ணு
கிறேன், நீ இழிவடைந்தாயே.
நற்செய்தியை அறிவித்துச் சமாதா 15
னத்தைக் கூறுகிறவனுடைய கால்கள்,
இதோ, மலைகளின்மேல்.
யூதாவே உன் உற்சவங்களை ஆசரி, உன்
பொருத்தனைகளைச் செலுத்து,
கேடானவன் இனி உன் வழியாய்க்
கடந்துவருவதில்லை, அவன் முற்றிலும்
சங்கரிக்கப்பட்டான்.

சிதறடிக்கிறவன் உனக்கு விரோத 2
மாய் வருகிறான்;
அரணைக் காத்துக்கொள், வழியைக்
காவல்பண்ணு,
அரையைக் கட்டிக்கொள், உன் முழு
பலத்தையும் வழங்கு.
இஸ்ரவேலின் மகிமையைப்போலவே 2
யெகோவா யாக்கோபின் மகிமையைத்
திரும்பி வரப்பண்ணுவார்;
வெறுமையாக்குகிறவர்கள் அவர்களை
வெறுமையாக்கி அவர்களுடைய திராட்
சக்கொடிகளைக் கெடுத்துப் போட்டார்
களே.
அவனுடைய பராக்கிரமசாலிகளின் 3
கேடகம் இரத்தமயமானது,
அவனுடைய யுத்தவீரர் இரத்தநிற
ஆடை தரித்தவர்கள்;
அவன் ரதங்களை ஆயத்தம்பண்ணும்
நாளிலே
அவற்றிலிருந்து அக்கினிப்பொறி பறக்
கும்,
சவுக்கு மரமென நீண்ட ஈட்டிகள் குலுங்
கும்.
ரதங்கள் தெருக்களில் கடகடவென் 4
றோடி வீதிகளில் ஒன்றையொன்று மூர்
க்கி கடக்கும்,
அவைகள் தீவர்த்திகளைப்போல் தோன்
றும், மின்னலென வேகமாய் ஓடும்.
அவன் தனக்குள்ள சிறந்தவரை அறிந்து 5
அழைப்பான்,
அவர்கள் ஓடியோடி இடறுவார்
கள்,
நகரத்தின் அலங்கத்துக்கு விரைந்து ஓடி
வார்கள்;
காக்கும் மறைவு ஆயத்தமாகும்.
நதியோர வாசல்கள் திறக்கும், 6
அரமனை கரைந்துபோம்.
தீர்மானித்தாயிற்று, அவள் ஆடையின் 7
றிக் கொண்டுபோகப்படுவாள்,

அவள் தாதிமார்கள் தங்கள் மார்பிலே அடித்துக்கொண்டு புருக்கனைப்போல் துக்க சத்தமிட்டுக் கூடவே போவார்கள்.

8 நினிவே இருந்த காலமெல்லாம் தண்ணீர்த்தடாகம்போல் இருந்தது; இப்போதோ அவர்கள் தப்பும்படி ஓடிப் போகிறார்கள்; நில்லுங்கள் நில்லுங்கள் என்றாலும் ஒருவனும் திரும்புகிறதில்லை.

9 வெள்ளியைக் கொள்ளையிடுங்கள், பொன்னைக் கொள்ளையிடுங்கள்; சம்பத்துக்கு முடிவில்லை, அருமையான எவ்வகைப்பொருளும் ஏராளமாய் உண்டு.

10 எங்கும் வெறுமையே, வெட்ட வெளியே, பாழே; இதயம் கரைந்துபோகிறது, முழங்கால்கள் தள்ளாடுகிறது; எல்லா இடுப்புகளிலும் மிகுந்த நடுக்கம்; முகங்கள் எல்லாம் கருகின.

11 சிங்கங்களின் கெபி எங்கே? பாலசிங்கம் இரை தின்கிற இடம் எங்கே? சிங்கமும் பெண்சிங்கமும் சிங்கக்குட்டிகளும் பயப்படுத்துவாரின்றித் திரியும் இடம் எங்கே?

12 சிங்கம் தன் குட்டிகளுக்குத் தேவையானதைப் பீறித் தன் பெண்சிங்கங்களுக்கு வேண்டியதைத் தொண்டையை நெறித்துக்கொன்று, தன் கெபிகளிலே இரைகளையும் தான் தாபரிக்குமிடத்தில் பீறிப்போட்ட வைகளையும் நிரப்பும்.

13 இதோ, நான் உனக்கு விரோதமாக வந்து —இது சேனைகளையுடைய யெகோவாவின் திருவாக்கு— ரதங்களைப் புகையெழும்ப எரித்துப் போடுவேன், பட்டயம் உன் பாலசிங்கங்களைப் பட்சிக்கும், நீ இரையாகப் பிடிக்கும் வேட்டையை தேசத்தில் அற்றுப்போகப்பண்ணுவேன், உன் ஸ்தானாபதிகளின் சத்தம் இனிக் கேட்கப்படுவதில்லை.

**3** இரத்தப்பழி நகரத்திற்கு ஐயோ ஆபத்து! அதிலே பொய்யும் கொடுமையும் நிறைந்திருக்கின்றன; கொள்ளை ஓயாமல் நடக்கிறது.

இதோ, சவுக்குகளின் ஓசை, சக்கரங்கள் உருண்டோடும் சப்தம்! 2
குதிரைகள் பாய்ந்தோடும், இரதங்கள் கடகடவென்று ஓடும்.
குதிரைவீரர் விரைந்து வருகின்றார், 3
பட்டயங்கள் துலங்கும், ஈட்டிகள் மின்னும்;
வெட்டுண்டவர்கள் மிகப்பலர், பிரேதங்கள் ஏராளம்!
பிணங்களுக்குக் கணக்கில்லை, அவர்கள் பிணங்களில் இடறிவிழுகிறார்கள்.
இவையெல்லாம் நேரிட்ட காரணம், 4
தன் வேசித்தனங்களினால் ஜாதியாரையும்
தன் சூனியங்களினாலே வம்சங்களையும்
விற்றுப்போட்ட
மகா சூனியக்காரியும் சூபவதியுமாகிய
வேசியின் திராளான வேசித்தனங்களே.
இதோ, நான் உனக்கு விரோதம், 5
—இது சேனைகளுடைய யெகோவாவின் திருவாக்கு—
நான் உன் வஸ்திரத்து ஓரங்களை எடுத்து
உன் முகத்தின்மேல் போட்டு
ஜாதியாருக்கு உன் நிர்வாணமும்
ராஜ்யங்களுக்கு உன் மானமும் காணப்படப்பண்ணி,
உன்மேல் அருவருப்பான வைகளை 6
எறிந்து உன்னைக் கனவீனப்படுத்தி,
உன்னை வேடிக்கையாக்கிப் போடுவேன்.
அப்பொழுது உன்னைக்காணும் எவனும் 7
உன்னை விட்டோடி,
நினிவே பாழாய்ப்போனாள், அவளுக்காகப் பரிதபிக்கிறவர் யார்
என்று சொல்லுவான்,
உன்னை ஆறுதல் படுத்துகிறவர்களை எங்கிருந்து தேடுவேன்.
நதிகள் மத்தியில் வீற்றிருந்த நோ அம் 8
மோனைப்பார்க்கிலும் நீ சிரேஷ்டமோ?
அதைச் சுற்றிலும் தண்ணீர் இருந்தது,
சமுத்திரம் அதின் அரண், கடலே அதின் மதில்.
அதின் பலம் எத்தியோப்பியாவும் எகிப் 9
துமே, அவர்களுக்குக் கணக்கில்லை,
பூத்தியரும் லீபியரும் உனக்குச் சகாயம்.
அவள் குடிவிலக்கப்பட்டுச் சிறையாகக் 10
கொண்டுபோகப்பட்டாள்,
அவள் குழந்தைகள் எல்லா வீதிகளின்
முனைகளிலும் மோதியடிக்கப் பட்டார்கள்;
அவளுடைய கனவான்கள் பேரில் சீட்டுப்போட்டார்களாகள்,

அவளுடைய பெரியவர்கள் எல்லாரும் சங்கிலிகளால் கட்டப்பட்டார்கள்.
11 நீயும் வெறிகொண்டு அறிவு மயங்குவாய்,
நீயும் உன் சத்துருவுக்குத்தப்ப பலமான கோட்டையைத் தேடுவாய்.
12 உன் அரண்களெல்லாம் முன்னமே பழுக்கும் பழங்களுள்ள அத்திமரங்கள் போல் இருக்கும்;
அவைகள் குலுக்கப்பட்டால் அவைகளின் பழம் தின்பவன் வாயிலே விழும்.
13 இதோ, உன் நடுவிலுள்ள சேனைவீரர் பேடிகள்,
உன் தேசத்தின் வாசல்கள் உன் சத்துருக்களுக்குத் திறவுண்டுபோகும்,
அக்கினி உன் காழ்ப்பாள்களைப் பட்சிக்கும்.
14 முற்றுகைக் காலத்துக்கெனத் தண்ணீர் மொண்டுவை, உன் அரண்களைப் பலப்படுத்து,
சேற்றைக் குழை, களிமண்ணை மிதி,
செங்கல் அறுக்கும் சட்டத்தை எடுத்துக்கொள்.
15 நீ இருக்குமிடத்திலேயே அக்கினி உன்னைப் பட்சிக்கும், பட்டயம் உன்னைச் சங்காரிக்கும்;
அது பச்சைக்கிளிகளைப்போல் உன்னைப் பட்சித்துப்போடும்;
பச்சைக்கிளி வெட்டுக்கிளி இவற்றின் திரளைப்போல்
நீ ஜனங்களைச் சேர்த்துக்கொண்டாலும்
16 உன் வர்த்தகர் வானத்து நட்சத்திரங்களிலும் அதிகமாகலும் அப்படியாகும்.
பச்சைக்கிளிகள் வெடித்து வெளிவந்து பறந்துபோகும்.
17 உன் தலைவர் வெட்டுக்கிளிகளையும் உன் அதிபதிகள் கிளித்திரளையும் போன்றவர்கள்;
காளின் குளிர்ந்த வேளையிலே அவைகள் வேலிகளில் தரித்திருந்து
சூரியன் உதித்தமாத்திரத்தில் தப்பியோடிப்போம்;
பின்பு அவைகள் இருக்குமிடம் தெரியாது.
18 அசீரியா ராஜாவே, உன் மேய்ப்பர்கள் உறங்கினார்கள்,
உன் பராக்கிரம வீரர் படுத்திருந்தார்கள்;
உன் ஜனம் மலைகளின்மேல் சிதறியிருக்கிறது, கூட்டிச்சேர்ப்பவன் இல்லை.
19 நீ தொறுங்கினுப், பரிகாரமில்லை, உன் காயம் கொடியது;
உன்னைப்பற்றிய செய்தியைக் கேட்பவர் யாவரும் கை கொட்டுவார்கள்;
நீ செய்த தீமை எப்போதும் எவர்மேலும் பாய்ந்ததே.

## HABAKKUK

# ஆபகூக்

1 ஆபகூக் என்னும் தீர்க்கதரிசிக்குத் தரிசனமாகவந்த கடினவாக்கு:
2 யெகோவாவே நீர் கேளாமலிருக்க,
நான் எதுவரைக்கும் உம்மைநோக்கிக் கூப்பிடுவேன்,
நீர் ரட்சியாமலிருக்க,
கொடுமையினிமித்தம் நான் எதுவரைக்கும் உம்மை நோக்கி அபயமிடுவேன்.
3 நீர் என்னை ஏன் அக்கிரமத்தைக் காணச் செய்கிறீர்?
கேடானதை நீர் பார்த்துக்கொண்டிருப்பதெப்படி?
அழிவும் கொடுமையும் என் கண்முன் நிற்கிறது;
அதினால் வழக்கும் சண்டையும் எழும்புகின்றன.
இப்படியிருப்பதால் நியாயப்பிரமாணம் 4
பலமற்றதாகிறது,
நியாயம் ஒருபோதும் வெளிவருகிறதில்லை;
தெய்வபயமற்றவன் நீதிமானை வளைந்து கொள்ளவே
வெளிவருகிற நியாயம் கோணலாகிறது.
நீங்கள் புறஜாதியாருக்குள் நோக்கிப் 5
பாருங்கள், ஆச்சரியப்பட்டுப் பிரமியுங்கள்;
உங்கள் நாட்களில் நான் ஒரு செயல் செய்வேன்,
விவரித்துச் சொன்னாலும் நீங்கள் அதை நம்பமுடியாது.
இதோ, நான் கல்தேய ஜாதியாரை எழுப் 6
புவேன்,

அவர்கள் விரைந்துசெல்லும் கொடியர்,
அவர்கள் தங்களுடையதல்லாத வாசஸ்தலங்களைக் கட்டிக்கொள்ளப்
பூமியின் தூரஸ்தலங்களுக்கெல்லாம் போவார்கள்.
7 அவர்கள் திகிலும் பயமும் விளைவிப்பவர்கள்,
தங்களுக்குரிய நியாயத்தையும் மேன்மையையும் தாங்களே வகித்துக்கொள்ளுகிறார்கள்.
8 அவர்களுடைய குதிரைகள் சிவிங்கிகளிலும் வேகமுள்ளவை,
மாலையில் திரிகிற ஓநாய்களிலும் தீவிரமுள்ளவை;
அவர்கள் குதிரைவீரர் பாய்ந்துவருவார்கள்,
அவர்களுடைய குதிரைவீரர் தூரத்திலிருந்து வருவார்கள்;
இரைமேல் பாயும் கழுகுகளைப்போல் பறந்துவருவார்கள்.
9 அவர்களெல்லாரும் கொடுமையைச் செய்ய வருவார்கள்,
யுத்தப்பிரியமே அவர்களை முன்செல்லத் தூண்டும்,
மணல்போல் திரளான ஜனங்களைச் சேர்த்து அவர்கள் சிறையாகக் கொண்டு போவார்கள்.
10 ராஜாக்கள் அவர்களுக்குப்பரியாசம்,
அதிபதிகள் சிரிப்பு,
அரண்களையெல்லாம் பார்த்து அவர்கள் சிரித்து
மண்மேடுகளைக் குவித்து அவைகளைப் பிடிப்பார்கள்.
11 அவர்கள் காற்றுப்போல் பாய்ந்து சென்று குற்றவாளிகளாவார்கள்,
தங்கள் பலமே அவர்களுக்கு தேவன்.
12 யெகோவாவே, என் கடவுளே, என் பரிசுத்தரே,
நீர் ஆதிமுதலுள்ளவரல்லவா?
நாங்கள் சாவதில்லை.
யெகோவாவே, நியாயத்தீர்ப்புச்செய்ய வென்றே அவனை வைத்தீர்;
கன்மலையே, தண்டனை செய்யவே அவனை நியமித்தீர்.
13 தீமையைப்பார்க்க நாணும் சுத்தக் கண்ணரே,
கேட்டை நோக்கிப்பார்க்கச் சகியாதவரே,
துரோகிகளை நீர் நோக்கிப் பார்ப்பதென்ன?
தெய்வ பயமற்றவன் தன்னிலும் நீதிமானை விழுங்கும்போது
நீர் மௌனமாயிருக்கிறதென்ன?
மனுஷரைச் சமுத்திரத்து மீன்களுக்கும் 14
அதிகாரியில்லாத ஊர்வனவற்றிற்கும்
சமானமாக்குகிறீரே.
அவர்களெல்லாரையும் தூண்டிலினால் 15
இழுத்துக்கொள்ளுகிறான்;
அவர்களைத் தன் வலையினால் பிடித்துத்
தன் பறியிலே சேர்த்துக்கொண்டு
சந்தோஷப்பட்டுக் களிகூருகிறான்.
ஆகையால் அவன் தன் வலைக்குப் பலி 16
யிட்டுத் தன் பறிக்குத் தூபங்காட்டுகிறான்;
அவற்றினாலே அவன் பங்கு கொழுப்பும்
அவன் போஜனம் ருசிகரமுமாயிற்றே.
இதன்பொருட்டு அவன் தன் வலையை 17
இழுத்து
அதிலுள்ளவைகளைக் கொட்டிக்கொண்டிருந்து
இரக்கமில்லாமல் ஜாதிகளை எப்போதும்
கொன்றுபோடவேண்டுமோ?

நான் என் காவலிலே தரித்து, காவற் 2
கோபுரத்திலே நிலைகொண்டிருப்பேன்,
அவர் என்னைக்கொண்டு என்ன சொல்லுவாரென்றும்
நான் பதிலளிப்பதற்கென என் முறைப்பாட்டிற்கு அவர் என்ன உரைப்பாரென்றும்
கண்டறியும்படி நோக்கிப் பார்ப்பேன்.
அப்பொழுது யெகோவா எனக்குப் பதி 2
லுரைத்து:
நீ தரிசனத்தை எழுதி
ஓடுகிறவனும் அதை வாசிக்கும்படி பலகைகளிலே தீர்க்கமாக வரை.
குறித்தகாலத்துக்கெனத் தரிசனம் இன் 3
னும் காத்திருக்கிறது,
அது ஆவலாய் முடிவை நோக்குகிறது,
மோசம் போக்காது.
அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு,
அது கவருமல் வரும், வராமற்போகாது.
இதோ, அவன் மனம் அகங்கையா 4
யிருக்கிறதே, அவன் மனம் அவனுக்குள் நேர்மையானதல்ல;
நீதிமானோ தன் விசுவாசத்தினாலே பிழைப்பான்.
மேலும் அவன் மதுபானத்தினால் மயங்கு 5
கிறவன்,
அவன் பெருமைக்காரன், வீட்டிலே தரியாதவன்,
அவன் தன் ஆசையைப் பாதாளத்தைப்போல் விரிவாக்குகிறவன்,

மரணத்துக்குச் சமானமாய்த் திருப்தி யடையாதவன்,
சகல ஜாதியாரையும் தன் வசமாகச் சேர்த்துச் சகல தேசத்தாரையும் தன்னிட மாகக் கூட்டிக்கொள்ளுகிறவன்.
6 இவர்களெல்லாருமோ அவன்பேரில் ஒரு நிந்தையான பழமொழியையும் அவனுக்கு விரோதமான வசைச்சொல்லை யும் இப்படிச் சொல்லுவார்கள்:
தன்னுடைய தல்லாத்தைத் தனக்கெனச் சேர்த்துக்கொள்ளுகிறவனுக்கு ஐயோ கேடாம்!
அது எதுவரைக்கும்! அவன் தன்மேல் அடைமானங்களையல்லவா சுமத்திக் கொள்ளுகிறான்.
7 உனக்குக் கடன்கொடுத்தவர்கள் சடுதி யாய் எழும்பாரோ?
உன்னை அலைகழிப்பவர்கள் விழியாரோ?
நீ அவர்களுக்குச் சூறையாகியாயோ?
8 நீ அநேகம் ஜாதியாரைக் கொள்ளையிட்ட படியினால்
தேசத்தாரில் மீதியான யாவரும் உன்னைக் கொள்ளையிடுவார்கள்;
நீ சிந்தின மனுஷரத்தத்தினிமித்தமும் தேசங்களுக்கும் பட்டணங்களுக்கும் அவைகளிலுள்ள குடிகள் யாவருக்கும் விரோதமாக
நீ செய்த கொடுமையினிமித்தமும் அப் படிச் செய்வார்கள்.
9 பலத்த தீங்குக்குத் தப்பவேண்டு மென்று
தன் கூட்டை உயரத்திலே வைக்கும்படி கன் வீட்டுக்கு அநியாய லாபத்தைத் தேடு கிறவனுக்கு ஐயோ கேடாம்!
10 நீ செய்த ஆலோசனையினால் உன் வீட் டுக்கு அவமானம் வரும்,
பல தேசத்தாரை அழித்துவிட்டாய், உனக்கு விரோதமாகவே பாவஞ்செய் தாய்.
11 கல் சுவரிலிருந்து கூப்பிடும்,
உத்திரம் மச்சிலிருந்து சாட்சியிடும்.
12 இரத்தம் சிந்திப் பட்டணத்தைக்கட்டி அநியாயம்செய்து நகரத்தைப் பலப் படுத்துகிறவனுக்கு ஐயோ கேடாம்!
13 இதோ, அக்கினிக்கு இரையாக தேசத் தார் உழைப்பதும்
ஜாதியார் வீணாக இளைத்தப்போவதும் யெகோவாவினாலேயே யல்லவோ?
14 சமுத்திரத்திலே தண்ணீர் நிறைந்திருப் பதுபோல
பூமியிலே யெகோவாவின் மகிமையை அறியும் அறிவு நிறைந்திருக்கும்.
உன் விஷத்தைக்கலந்து உன் அய 15
லானுக்குக் குடிக்கக் கொடுப்பவனே,
ஐயோ உனக்கு கேடாம்!
அவர்களுடைய நிர்வாணத்தைப் பார்க் கும்படி அவர்களை வெறிக்கப் பண்ணுகி றாயே.
நீ மகிமையினால் நிரப்பப்படுவதற்குப் 16
பதிலாக
இலச்சையினால் நிரப்பப்படுவாய்;
உன் தனித்தோல் வெளிப்படையாய்க் காணப்படும்படி நீயும் குடித்து வெறிப் பாய்;
யெகோவாவின் வலதுகைப் பாத்திரம் உன்னிடம் திரும்பும்,
உன் மகிமையின்மேல் இலச்சையை வரு விப்பாய்.
லீபனோனுக்குச் செய்த கொடுமையும் 17
மிருகங்களுக்குத் திகிலுண்டாக நீ செய்த கொடுமையும் உன்னை மூடும்;
நீ சிந்தின மனுஷரத்தத்தினிமித்தமும் தேசங்களுக்கும் பட்டணங்களுக்கும் அவைகளிலுள்ள குடிகள் யாவருக்கும் விரோதமாக
நீ செய்த கொடுமையினிமித்தமும் அப் படியாகும்.
வெட்டு விக்கிரகத்தாலாவதென்ன? 18
அதை உருவாக்குகிறவனே அதை வெட்டுவதேன்?
வார்ப்பு விக்கிரகத்தாலாவதென்ன?
அது போதிப்பது பொய்,
அதை உருவாக்குகிறவன் அதிலேயே நம்பிக்கையாயிருந்து
ஊமையான வீண்விக்கிரகங்களைத் தனக் கெனச் செய்வான்.
மரத்தைப்பார்த்து விழியென்றும், ஊமை 19
யான கல்லைப்பார்த்து எழுந்திரு என் றும்
சொல்லுகிறவனுக்கு ஐயோ கேடாம்!
அது போதிக்குமோ?
இதோ, அது பொன்னும் வெள்ளியுமான தகட்டால் மூடப்பட்டிருக்கிறது;
அதற்குள்ளே சுவாசமே இல்லை.
யெகோவாவோ தமது பரிசுத்த ஆலயத் 20
தில் இருக்கிறார்;
பூமியெல்லாம் அவருக்குமுன்பாக மௌனமாயிருக்க என்று சொன்னார்.

ஆபகூக் தீர்க்கதரிசி சிகியோனோத்தில் **3**
பாடின பிரார்த்தனை:
யெகோவாவே, உம்மைப்பற்றிய சங் 2
கதியை நான் கேட்டேன், எனக்குப்பய முண்டாயிற்று;

யெகோவாவே, வருஷங்களின் நடுவிலே
உமது செயலை உயிர்ப்பியும்,
வருஷங்களின் நடுவிலே அதை விளங்
கப்பண்ணும்.
கோபத்திலும் இரக்கத்தைக்காட்ட மற
வாதிரும்.
3 கடவுள் தேமானிலிருந்தும் பரிசுத்தர்
பாரான் பர்வதத்திலிருந்தும் வருகிறார்;—
சேலா.
அவருடைய மகிமை வானங்களை மூடி
கிறது;
அவர் துதி பூமியிலே நிறைகிறது.
4 அவருடைய பிரகாசம் சூரியனைப்போ
லிருக்கிறது;
அவரிலிருந்து கிரணங்கள் வீசுகின்றன,
அங்கே அவருடைய பராக்கிரமம் மறைந்
திருக்கிறது.
5 அவருக்கு முன்பாகக் கொள்ளைநோய்
செல்லுகிறது;
அவர் அடிகளைத் தொடர்ந்து எரிபந்த
மான காய்ச்சல் புறப்படுகிறது.
6 அவர் வந்து நிற்கவே, பூமியை அசை
யப்பண்ணுகிறார்;
அவர் நோக்கிப் பார்க்கவே, புறஜாதி
யாரைத் திடுக்கிடச் செய்கிறார்;
ஆதி மலைகள் சிதறுகின்றன, நித்திய
குன்றுகள் தாழ்கின்றன;
அவர் நடப்பது நித்திய பாதைகளில்.
7 கூஷான் கூடாரங்கள் வருத்தத்தில் அகப்
படுவதைக் காண்கிறேன்;
மீதியான் தேசத்தின் கூடாரத்திரைகள்
நடுங்குகின்றன.
8 யெகோவா நதிகளின்மேல் கடுங்கோபங்
கொண்டாரோ?
உமது கோபம் நதிகளுக்கும் உமது கோபம்
சமுத்திரத்திற்கும் விரோதமாயிற்றோ?
தேவரீர் உமது குதிரைகளின்மேலும்
உமது ஜெயரதங்களின்மேலும் ஏறி வருகி
றீரே.
9 வில் திறந்து வெளியாகிறது,
ஆணையிட்டுக்கொடுத்த திருவாக்கின்
அம்புகளும் அப்படியே.—சேலா.
நீர் பூமியைப்பிளந்து ஆறுகளை ஓடச்
செய்கிறீர்.
10 மலைகள் உம்மைக்கண்டு நடுங்குகின்றன;
மழைபெய்து பெருவெள்ளமாய் ஓடி
கிறது;
ஆழம் இரைகிறது, தன் கைகளை உயர
எடுக்கிறது.
11 சந்திரனும் சூரியனும் தன்தன் இடத்தில்
நிற்கின்றன,
உமது அம்புகளின் ஜோதிக்கும், உமது
ஈட்டியின் மின்னல் பிரகாசத்திற்கும்
பயந்தொதுங்குகின்றன.
12 நீர் கோபத்தோடே பூமியில் நடக்கிறீர்,
சினத்தோடே ஜாதியாரைப் போரடிக்கி
றீர்.
13 உமது ஜனத்தின் ரட்சிப்புக்காகவும்
நீர் அபிஷேகம்பண்ணினவனின் ரட்சிப்
புக்காகவுமே நீர் புறப்படுகிறீர்;
தெய்வபயமற்றவனின் வீட்டின் முகட்
டைத் தகர்த்துக் கழுத்தளவாக அதின்
அஸ்திபாரத்தைத் திறப்பாக்குகிறீர்.—
சேலா.
14 என்னைச் சிதறடிப்பதற்குப் பெருங்காற்
றைப்போல் வருகிறார்கள்,
சிறுமையானவனை மறைவிடத்திலே பட்
சிக்கவேண்டுமென்பதுபோல் வருகிறார்
கள்;
நீரோ அவன் அதிபதியின் தலையை
அவன் ஈட்டியினாலேயே உருவக்குத்து
கிறீர்.
15 நிரை தண்ணீர்க்குவியலிலே, சமுத்திரத்
தினூடே,
உமது குதிரைகளோடே நடந்துபோகிறீர்.
16 நான் கேட்கவே என் உள்ளம் நடுங்கு
கின்றது,
அந்தச் சத்தத்தினால் என் உதடுகள்
துடிக்கின்றன;
என் எலும்புகள் உக்கிப்போகின்றன;
நிற்கும் இடத்தே நான் நடுங்குகிறேன்;
எங்களை நெருக்கும் ஜனத்திற்கு வரும்
உபத்திரவநாளை நினைத்து
நான் பேசாதமர்ந்திருக்க வேண்டுமே.
17 அத்திமரம் துளிர்விடாமற்போனாலும்
திராட்சச்செடிகளில் பழம் உண்டா
காமற்போனாலும்
ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனா
லும், வயல்கள் தானியத்தை விளையா
மற்போனாலும்
கிடையில் ஆட்டுமந்தைகள் அற்றுப்
போனாலும், தொழுவங்களிலே மாடு
இல்லாமற்போனாலும்
18 நான் யெகோவாவுக்குள் மகிழ்ந்திருப்
பேன்,
என் ரட்சிப்பின் கடவுளுக்குள் களிகூரு
வேன்.
19 ஆண்டவராகிய யெகோவா என் பலம்,
அவர் என் கால்களை பெண்மான் கால்
களைப்போலாக்கி
என் உயர்மேடுகள்மேல் என்னைச் செல்
லச்செய்வார்.

பாடகர் தலைவனுக்கு; வாத்தியம்: செமினோத்.

ZEPHANIAH

# செபனியா

1 ஆமோனின் புத்திரன் யோசியா என்னும் யூதா ராஜாவின் நாட்களிலே, கூஷியின் குமாரன் செபனியாவுக்கு வந்த யெகோவாவின் வார்த்தை; கூஷி கெதலியாவின் குமாரன், இவன் அமரியாவின் குமாரன், இவன் எசேக்கியாவின் குமாரன்.

2 பூமியின் மேலுள்ளவற்றையெல்லாம்
நான் அகற்றிவிடுவேன்;
இது யெகோவாவின் திருவாக்கு.

3 மனிதரையும் மிருகங்களையும் அகற்றி
விடுவேன்;
நான் ஆகாயத்துப் பறவைகளையும் சமுத்
திரத்து மச்சங்களையும் அகற்றிவிடுவேன்,
நிலையிலாராஜியத்தை தெய்வபயமிலாக்
குடிகளோடுகூட அகற்றிவிடுவேன்;
பூமியின்மேல் மனிதரிராதபடி அவர்
களைச் சங்கரிப்பேன்;
இது யெகோவாவின் திருவாக்கு.

4 நான் யூதாவின்மேலும் எருசலேமிலுள்ள
எல்லாக் குடிகளின்மேலும் என் கையை
நீட்டுவேன்;
பாகாலுக்கு மீதியாயிருப்பதையும்
ஆசாரியர்களோடே கூடப் பூசாரிகளின்
பேரையும்

5 வீடுகளின்மேல் வான்சேனையைப் பணி
கிறவர்களையும் யெகோவாபேரில் ஆணை
யிட்டு மல்காமின்பேரிலும் ஆணையிட்டுப்
பணிகிறவர்களையும்

6 யெகோவாவை விட்டு விலகினவர்களை
யும்
யெகோவாவைத் தேடாமலும் அவரைப்
பற்றி விசாரியாமலும் இருக்கிறவர்களையும்
இவ்விடத்திலிருந்து சங்கரிப்பேன்.

7 யெகோவாவாகிய ஆண்டவருக்கு
முன்பாக மௌனமாயிருங்கள்,
யெகோவாவின் நாள் சமீபம்;
யெகோவா ஒரு யாகத்தை ஆயத்தம்பண்ணித்
தாம் அழைத்தவர்களைப் பிரதிஷ்டை
செய்திருக்கிறார்.

8 யெகோவாவுடைய யாகத்தின் நாளிலே
நான் அதிபதிகளையும் ராஜ குமாரரையும்
மறுதேச வஸ்திரம் தரிக்கிற யாவரை
யும் தண்டிப்பேன்.

9 வாசற்படியை மிதியாமல் தாண்டிக்
கொடுமையினாலும் வஞ்சகத்தினாலும் தங்
கள் எஜமான்களின் வீடுகளை நிரப்புகிற
வர்களை
அந்நாளிலே தண்டிப்பேன்.

10 அந்நாளிலே—இது யெகோவாவின்
திருவாக்கு—
மீன் வாசலிலிருந்து கூக்குரல் கேட்
கும்,
நகரத்தின் புதுப்பேட்டையிலிருந்து அல
றுவது கேட்கும்,
குன்றுகளிலிருந்து மகா சங்காரத்தின்
இரைச்சல் கேட்கும்.

11 மக்தேஷின் குடிகளே அலறுங்கள்,
வர்த்தக ஜனமெல்லாம் அழிந்துபோயி
ற்று,
தனவர்த்தகர் யாவரும் சங்கரிக்கப்பட்
டனர்.

12 அக்காலத்திலே நான் எருசலேமை
விளக்குக் கொளுத்திச் சோதிப்பேன்,
வண்டல்களின்மேல் அமர்ந்திருந்து
யெகோவா நன்மைசெய்வதும் இல்லை
தீமைசெய்வதும் இல்லையென்று
தங்கள் இருதயத்தில் சொல்லுகிறவர்
களைத் தண்டிப்பேன்.

13 அவர்கள் ஆஸ்தி கொள்ளையாகும், அவர்
கள் வீடுகள் பாழாய்ப்போம்;
அவர்கள் வீடுகளைக்கட்டியும் அவைக
ளில் குடியிருக்க மாட்டார்கள்;
அவர்கள் திராட்சத்தோட்டங்களை நாட்
டியும் அவைகளின் ரசத்தைக் குடிப்ப
தில்லை.

14 யெகோவாவின் மகத்தான நாள் சமீ
பம்,
அது மிகவும் விரைந்து கிட்டிச்சேருகி
றது;
யெகோவாவுடைய நாளின் சத்தம் கேட்
கிறது,
கேட்கவே பராக்கிரமசாலிகளும் மனங்
கசந்து அலறுவார்கள்.

15 அந்த நாள் உக்கிரமான நாள், அது
வியாகுலமும் இடுக்கமுமான நாள்;
அது அழிவும் பாழுமான நாள்,
அது இருளும் காரிருளுமான நாள்;
அது மப்பும் மந்தாரமுமான நாள்.
16 அது அரணான நகரங்களுக்கும் உயர
மான கொத்தளங்களுக்கும் விரோதமாக
எக்காள சத்தமும் யுத்த ஆரவாரமும்
கேட்கும் நாள்.
17 மனிதர் யெகோவாவுக்கு விரோதமாய்ப்
பாவம்செய்தபடியால்
அவர்கள் குருடர் போல் நடக்கும்படி
அவர்களை உபத்திரவப்படுத்துவேன்;
அவர்கள் இரத்தம் புழுதியைப்போலவும்
அவர்கள் மாம்சம் எருவைப்போலவும்
கொட்டப்படும்.
18 யெகோவாவின் உக்கிரமான நாளிலே
அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்
னும் அவர்களைத் தப்புவியாது;
அவருடைய எரிச்சலின் அக்கினியினால்
பூமியெல்லாம் பட்சிக்கப்படும்;
பூமியின் குடிகளையெல்லாம் திகிலுண்
டாக நிர்மூலம் பண்ணுவார்.

**2** மானமிலாத ஜாதியே,
தீர்ப்பு நிறைவேறுமுன்னும் — பதர் பறக்
கிறதுபோல் அந்நாள் விரைந்து செல்
லும் —
யெகோவாவின் உக்கிரகோபம் உங்கள்
மேல் இறங்கு முன்னும்,
யெகோவாவுடைய கோபத்தின் நாள்
உங்கள்மேல் வருமுன்னும்
2 நீங்கள் கூடிவந்து சேருங்கள்.
3 தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையான
வர்களே,
யெகோவாவின் நியாயத்தை நடப்பிக்கிற
வர்களே, அவரைத்தேடுங்கள்;
நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத்
தேடுங்கள்;
அப்பொழுது ஒருவேளை யெகோவாவு
டைய கோபத்தின் நாளிலே மறைக்கப்
படுவீர்கள்.
4 காத்சா கைவிடப்பட்டு, அஸ்கலோன்
பாழாகும்;
அஸ்தோத்தைப் பட்டப்பகலிலே பறக்
கடிப்பார்கள்;
எக்ரோன் வேரோடே பிடுங்கப்படும்.
5 கடற்கரைக் குடிகளாகிய கிரேத்தியருக்கு
ஐயோ கேடாம்!
பெலிஸ்தியரின் தேசமாகிய கானானே,
யெகோவாவின் வார்த்தை உங்களுக்கு
விரோதமாயிருக்கிறது;
இனி உன்னில் குடிகளிராதபடி உன்னை
அழிப்பேன்.
6 கடற்கரை நாடானது மேய்ப்போர் இணை
றுகளும்
ஆட்டுத் தொழுவங்களுமுள்ள மேய்ச்ச
லிடங்களாகும்.
7 அந்த நாடு யூதா வீட்டாரில் மீதியான
வர்களின் வசமாகும்;
அவர்கள் அவ்விடங்களில் மந்தை மேய்
ப்பார்கள்;
அஸ்கலோனின் வீடுகளிலே சாயங்காலத்
திலே படுத்துக்கொள்வார்கள்;
அவர்கள் கடவுளாகிய யெகோவா அவர்
களை விசாரித்து,
அவர்கள்துன்பநிலைமையை மாற்றுவார்.
8 மோவாப் செய்த நிந்தனையையும்
அம்மோன் புத்திரர் பேசின தூஷணங்
களையும் கேட்டேன்;
அவர்கள் என் ஜனத்தை நிந்தித்த',
அவர்கள் எல்லையைக் கடந்து பெருமை
பாராட்டினார்கள்.
9 ஆகவே என் ஜீவன்மேல் ஆணையாகச்
சொல்லுகிறேன்,
— இது இஸ்ரவேலின் கடவுளாகிய
சேனைகளுடைய யெகோவாவின் திருவா
க்கு —
மோவாப் சோதோமைப்போலும் அம்
மோன் புத்திரரின் தேசம் கொமோரா
வைப் போலுமாகும்;
காஞ்சொறி படரும் இடமும் உப்புப்
பள்ளமும் நித்திய பாழுமாகும்;
என் ஜனத்தில் மீந்தவர்கள் அவர்களைக்
கொள்ளையிட்டு என் ஜாதியாரில் மீதிபா
னவர்கள் அவர்களைச் சுதந்தரமாகக்
கொள்வார்கள்.
10 இது அவர்கள் அகங்காரத்திற்கு வரும்
பலன்;
அவர்கள் சேனைகளுடைய யெகோவா
வின் ஜனத்துக்கு விரோதமாய்ப்
பெருமைபாராட்டி அவர்களை நிந்தித்தார்
களே.
11 யெகோவா அவர்களுக்குப் பயங்கரமா
யிருப்பார்,
பூமியிலுள்ள தேவர்களையெல்லாம் அற்
றுப்போகப் பண்ணுவார்;
அப்பொழுது தீவுகளிலுள்ள சகல புற
ஜாதியாரும்
அவரவர் தத்தம் இடத்திலேயே அவ
ரைப் பணிந்துகொள்வார்கள்.
12 எத்தியோப்பியராகிய நீங்களும்
என் பட்டயத்தினால் அடியுண்டு கிடப்
பீர்கள்.

13 அவர் தமது கையை வடதேசத்துக்கு விரோதமாய் நீட்டி,
அசீரியாவை அழித்து,
நினிவேயை வனாந்தரம்போன்ற வறண்ட பாழிடமாக்குவார்.
14 அதின் நடுவில் மந்தைகளும் ஜாதி ஜாதியான சகல மிருகங்களும் படுத்துக்கொள்ளும்,
அதின் தூண் தலைப்புகளின்மேல் நாரையும் கொக்கும் இராத்தங்கும்,
பலகணிகளில் கூவுகிற சத்தம் பிறக்கும்;
வாசற்படிகள் பாழாகும்;
கேதுரு மரங்களின் மச்சைத் திறப்பாக்கிப் போடுவார்.
15 நானே, என்னைத்தவிர வேறெவரும் இல்லை
என்று தன் இருதயத்தில் சொல்லி
பயமின்றி வாழ்ந்து களிகூர்ந்திருந்த நகரம் இதுவே;
ஐயோ, இது பாழாயிற்றே!
மிருகங்கள் படுக்குமிடமாய் விட்டதே!
அதின் வழிசெல்லும் எவனும் ஈசலிட்டுக் கையசைப்பான்.

**3** கலகஞ்செய்து தீட்டுப்பட்டவளுக்கு ஐயோ கேடாம்!
கொடிய நகரமே அவள்.
2 அந்நகரம் சொல்லப்படுவதைக் கேட்கிறதில்லை,
சிட்சையை ஏற்றுக் கொள்ளுகிறதில்லை,
யெகோவாவில் நம்பிக்கை வைக்கிறதில்லை,
அது தன் தெய்வத்தினிடமும் கிட்டிச் சேருகிறதில்லை.
3 அதற்குள்ளே இருக்கிற அதின் அதிபதிகள் கொச்சிக்கிற சிங்கங்கள்,
அதின் நியாயாதிபதிகள் மாலையில் திரிந்து தலையும் ஓநாய்கள்,
விடியற்காலமட்டும் எதையும் மீதியாக வைக்கிறதில்லை.
4 அதின் தீர்க்கதரிசிகள் நம்பத்தகாதவர், வஞ்சகர்;
அதின் ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தி
நியாயப்பிரமாணத்தை அநியாயமாய் மாற்றுகிறார்கள்.
5 யெகோவா அதற்குள் நீதிபரராகவேயிருக்கிறார், அவர் அநியாயஞ்செய்வதில்லை;
அவர் காலைதோறும் தமது நியாயத்தை விளங்கப்பண்ணுகிறார், அது தவறுவதில்லை,
அநியாயக்காரன் வெட்கம் அறியான்.
ஜாதியாரைச் சங்கரித்தேன், அவர்கள் 6
காவற்கோபுரங்கள் பாழாயின,
அவர்கள் தெருக்களைப் பாழ்ப்படுத்தினேன், எவனும் கடந்துபோகான்;
அவர்கள் பட்டணங்கள் அவாந்தரவெளிகளாயின,
அவற்றில் குடிகளில்லை, ஒரு மனிதனுமில்லை.
உன் வாசஸ்தலம் நிர்மூலமாகாதபடி 7
நீ எனக்குப்பயந்து, சிட்சையை ஏற்றுக்கொள் என்றேன்;
அப்படிச் செய்திருந்தால் அவள் வாசஸ்தலமும்
நான் அவள்வசம் விட்டிருந்த யாவும்
பாழாகாதிருக்கும்;
அவர்களோ ஆத்திரத்தோடு தீமையான
வற்றையே செய்துவந்தார்கள்.
ஆகையால் நான் கொள்ளையாட வரும் 8
காள்மட்டும் எனக்குக் காத்திருங்கள்;
இது யெகோவாவின் திருவாக்கு.
நான் தீர்மானித்தது இதுவே,
ஜாதியாரைச் சேர்த்து ராஜ்யங்களைக் கூட்டிக்கொண்டு
என் கோபத்தை,
என் உக்கிரகோபத்தையெல்லாம், அவர்கள்மேல் ஊற்றுவேன்;
பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் பட்சிக்கப்படும்.
அப்பொழுது சுத்த உதடுகளைத் தேசத் 9
தாருக்குக் கொடுத்து
அவர்கள் எல்லாரும் யெகோவாவின்
நாமத்தைத் தொழுதுகொண்டு
ஒரே கருத்தாய் அவரைச் சேவிக்கும்படி
செய்வேன்.
எத்தியோப்பியாவின் நதிகளுக்கு அப்பா 10
லிருந்து
என்னைத் தொழுதுகொள்ளுகிறவர்களாகிய சிதறடிக்கப்பட்டவர்களின் குமாரத்தி,
என்னைத் தொழுதுகொள்ளுகிறவர்களே,
எனக்குக்
காணிக்கை கொண்டுவருவார்கள்.
எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணி 11
நீ செய்தயாவற்றினிமித்தமும் நீ அந்நாளிலேவெட்கத்திற்காளாகாதிருப்பாய்;
உன்னிலே பெருமையோடு களித்திருந்தவர்களை
அப்பொழுது நான் உன் நடுவிலிருந்து
அகற்றிவிடுவேன்;
நீ இனி என் பரிசுத்த பர்வதத்தில் அகங்காரமாய் நடக்கமாட்டாய்.
சிறுமையும் எளிமையுமான ஜனத்தை 12
உன் நடுவில் மீதியாகவைப்பேன்,

அவர்கள் யெகோவாவின் நாமத்தின்மேல்
நம்பிக்கையாயிருப்பார்கள்.
13 இஸ்ரவேலில் மீந்திருப்பவர்கள் அநியா
யஞ்செய்வதில்லை,
அவர்கள் பொய் பேசுவதுமில்லை,
வஞ்சகநாவு அவர்கள் வாயில் காணப்
படுவதுமில்லை,
தங்களைப் பயப்படுத்துவாரின்றி அவர்
கள் மந்தைபோல மேய்ந்து படுத்துக்
கொள்வார்கள்.
14 சீயோன் குமாரத்தியே மகிழ்ந்து பாடு;
இஸ்ரவேலரே ஆர்ப்பரியுங்கள்;
எருசலேம் குமாரத்தியே, நீ முழு இரு
தயத்தோடும் சந்தோஷித்துக் களிகூரு.
15 யெகோவா உன் ஆக்கினைத்தீர்ப்புகளை
அகற்றி, உன் சத்துருக்களைத் துரத்தி
விட்டார்;
இஸ்ரவேலின் ராஜாவாகிய யெகோவா
உன் நடுவிலே இருக்கிறார்;
இனித் தீங்குக்குப் பயப்படவேண்டாம்.
16 அந்நாளிலே எருசலேமினிடம்:
பயப்படாதே; சீயோனே, உன் கைகளைத்
தளரவிடாதே.
17 உன் கடவுளாகிய யெகோவா உன் நடு
வில் இருக்கிறார்;
அவர் பராக்கிரமமுள்ளவர், இரட்சிக்
கிறவர்;
அவர் உன்னைப்பற்றிச் சந்தோஷமாய்
மகிழ்ந்திருப்பார்,
தமது அன்பிலே மௌனமாயிருப்
பார்,
அவர் உன்னைப்பற்றி மகிழ்ந்து களிப்பார்
என்று சொல்லப்படும்.
18 உற்சவங்களை ஆசரிக்கமுடியாமல்
விசனப்பட்டவர்களை
நான் கூட்டிக்கொள்ளுவேன்,
அவர்கள் உன்னைவிட்டுப் பிரிந்திருந்தார்
கள்,
நிந்தையின் பாரத்தை நீயே சுமந்தாய்.
19 இதோ, உன்னைச் சிறுமைப்படுத்தின யா
வருக்கும் அக்காலத்திலே தகுந்தபடி
செய்வேன்;
கொண்டியானவரை இரட்சித்துத் தள்
ளுண்டவரைச் சேர்த்துக்கொள்ளுவேன்;
உலகமெங்கும் வெட்கம் அடைந்த
அவர்கள்
புகழும் கீர்த்தியும் அடையும்படி செய்
வேன்.
20 அக்காலத்திலே உங்களை அழைத்துக்
கொண்டு வருவேன்,
அந்நேரத்திலே உங்களைச் சேர்த்துக்கொள்
ளுவேன்;
உங்கள் கண்காண நான் உங்கள் துன்ப
நிலைமையை மாற்றும்போது
பூமியிலுள்ள சகல ஜனங்களுக்குள்ளும்
நீங்கள் கீர்த்தியும் புகழும் அடையும்படி
செய்வேன்
என்று யெகோவா சொல்லுகிறார்.

---

# HAGGAI

---

# ஆகாய்

1 தரியுராஜா அரசாண்ட இரண்டாம்
வருஷம் ஆறாமாதம் முதலாந்தேதியிலே,
யெகோவாவின் வார்த்தை ஆகாய் என்னும்
தீர்க்கதரிசியின் மூலமாய் ஷெயல்தியேலின்
குமாரனாகிய செருபாபேல் என்னும் யூதா
வின் அதிபதிக்கும், யோத்சதாக்கின் குமார
னாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரி
2 யனுக்கும் வந்தது; சேனைகளின் யெகோவா
இப்படிச் சொல்லுகிறார்: இந்த ஜனம் யெ
கோவாவின் ஆலயத்தைக் கட்டுகிறதற்குக்
காலம் இன்னும் வரவில்லை என்கிறார்கள்.
3 யெகோவாவின் வார்த்தையோ ஆகாய் தீர்க்க
4 தரிசியின்மூலமாய் வந்துசொன்னது, | இந்த
வீடு பாழாய்க் கிடக்கையில் மச்சுப்பாவப்
பட்ட உங்கள் வீடுகளில் நீங்கள் குடி
யிருப்பதற்குக் காலம் வந்துவிட்டதா? இப் 5
போதும் சேனைகளின் யெகோவா சொல்
வதைக் கேளுங்கள்: உங்கள் செயல்களால்
விளைகிறவைகளைக் கவனித்துப் பாருங்கள்.
நீங்கள் விதைப்பது அதிகம், அறுத்துக் 6
கொண்டு வருவதோ கொஞ்சம், நீங்கள்
புசித்தும் திருப்தியாகிறதில்லை, குடித்தும்
தாகந் தீருகிறதில்லை, நீங்கள் வஸ்திரம் உடுத்
தியும் ஒருவனுக்கும் குளிர்விடுகிறதில்லை,
கூலியைச்சம்பாதிக்கிறவன் தான் சம்பாதித்த
தைப் பொத்தலான பையிலே போடுகிறான்.
சேனைகளின் யெகோவா இப்படிச் சொல்லு 7
கிறார், உங்கள் செயல்களால் விளைகிறவை

8 கீழைக் கவனித்துப் பாருங்கள்; நீங்கள் மலை மேல் ஏறிப்போய் மரம் வெட்டிக்கொண்டு வந்து ஆலயத்தைக் கட்டுங்கள்; அதில் நான் பிரியங்கொண்டு மகிமைப்படுவேன் 9 என்று யெகோவா சொல்லுகிறார். அதிகம் கிடைக்குமென்று நீங்கள் எதிர்பார்த்திருந்தும், இதோ, கிடைத்தது கொஞ்சம்; நீங்கள் அறுத்து வீட்டுக்குக் கொண்டுவந்தபோது நான் அதை ஊதிப்போட்டேன்; காரணமென்ன! என் வீடோ — இது சேனைகளுடைய யெகோவாவின் திருவாக்கு — அது பாழாய்க்கிடக்கிறது, நீங்களோ அவனவன் தன்தன் வீட்டிற்கென ஓடிப்போகிறீர்கள். 10 ஆகவே உங்கள் நிமித்தம் வானம் பனியைப் பெய்யாதிருந்துவிட்டது, பூமி தன் 11 பலனைக் கொடாதிருந்துவிட்டது. நான் நிலத்தின்மேலும் மலைகளின்மேலும் தானியத்தின்மேலும் புதுத் திராட்சரசத்தின்மேலும் எண்ணெயின்மேலும் பூமியில் விளைகிற எல்லாவற்றின்மேலும் மனுஷரின்மேலும் மிருகங்களின்மேலும் கைப்பாடு அனைத்தின் மேலும் வறட்சியை வருவித்தேன்.

12 அப்பொழுது செயல்தியேலின் குமாரனாகிய செருபாபேலும் யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியனும் ஜனத்தில் மீதியான அனைவரும் தங்கள் கடவுளாகிய யெகோவாவின் சொல்லுக்கும் தங்கள் கடவுளாகிய யெகோவா அனுப்பின ஆகாய் தீர்க்கதரிசியின் வார்த்தைகளுக்கும் செவிகொடுத்தார்கள், ஜனங்கள் யெகோவாவுக்குமுன்பாகப் பயந்திருந்தார்கள். 13 அப்பொழுது யெகோவாவின் தூதனாகிய ஆகாய், யெகோவா தூதனுப்பிக் கட்டளையிட்டபடியே ஜனங்களிடம் பேசி, நான் உங்களோடே இருக்கிறேன் என்று 14 யெகோவா சொல்லுகிறார் என்றான். பின்பு யெகோவா செயல்தியேலின் குமாரனாகிய செருபாபேல் என்னும் யூதாவின் அதிபதியினுடைய ஆவியையும் யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியனுடைய ஆவியையும் ஜனத்தில் மீதியாயிருந்த எல்லாருடைய ஆவியையும் எழுப்பினார்; அவர்கள் போய்த் தங்கள் கடவுளாகிய சேனைகளுடைய யெகோவாவின் ஆலயத்திலே வேலை செய்தார்கள். 15 தரியு ராஜாவின் இரண்டாம் வருஷம் ஆறாம் மாதம் இருபத்துநாலாந்தேதியிலே இது நடந்தது.

**2** ஏழாம் மாதம் இருபத்தோராந் தேதியிலே ஆகாய் தீர்க்கதரிசியின் மூலமாய் 2 யெகோவாவின் வார்த்தை வந்தது: நீ செயல்தியேலின் குமாரனாகிய செருபாபேல் என்னும் யூதாவின் அதிபதிக்கும் யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியனுக்கும் ஜனத்தில் மீதியானவர்களுக்கும் சொல்லவேண்டியது இது வே: 3 இந்த ஆலயத்தின் முன்னின மகிமையைக் கண்டவர்கள் யாராவது உங்களில் மீந்திருக்கிறார்களா? இப்பொழுது இது உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? இது உங்கள் பார்வையில் ஒன்றுமில்லாதது போல் தோன்றவில்லையா? 4 எனினும் செருபாபேலே, மனோபலங்கொள் — இது யெகோவாவின் திருவாக்கு — யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியனே, மனோபலங்கொள்; தேசத்திலுள்ள முழு ஜனமே,— இது யெகோவாவின் திருவாக்கு — மனோபலங்கொண்டு வேலையை நடத்துங்கள்; நான் உங்களோடிருக்கிறேன், இது சேனைகளுடைய யெகோவாவின் திருவாக்கு. 5 நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டபோது நான் உங்களோடே செய்த உடன்படிக்கையை நினைத்துக்கொள்ளுங்கள்; என் ஆவி உங்கள் நடுவில் நிலைத்திருக்கிறது, பயப்படாதேயுங்கள். 6 சேனைகளின் யெகோவா இப்படிச் சொல்லுகிறார்: கொஞ்சக் காலத்துக்குள்ளே இன்னும் ஒருதரம் நான் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் வெட்டாந்தரையையும் அசையப்பண்ணுவேன். 7 சகல ஜாதியாரையும் அசையப்பண்ணுவேன், சகல ஜாதியாரின் அருமையானவைகளும் வரும்; இந்த ஆலயத்திலே மகிமைநிறையப்பண்ணுவேன் என்று சேனைகளின் யெகோவா சொல்லுகிறார். 8 வெள்ளியும் எனக்குரியது, பொன்னும் எனக்குரியது, இது சேனைகளுடைய யெகோவாவின் திருவாக்கு. 9 முன்னின ஆலயத்தின் மகிமையிலும் பின்னின இந்த ஆலயத்தின் மகிமை பெரிதாகும் என்று சேனைகளின் யெகோவா சொல்லுகிறார்; இவ்விடத்திலே சமாதானத்தைக் கட்டளையிடுவேன், இது சேனைகளுடைய யெகோவாவின் திருவாக்கு.

10 தரியுவின் இரண்டாம் வருஷம் ஒன்பதாம் மாதம் இருபத்துநாலாந்தேதியிலே ஆகாய் தீர்க்கதரிசிக்கு யெகோவாவின் வார்த்தை வந்தது: 11 சேனைகளின் யெகோவா சொல்லுவது இதுவே, நீ ஆசாரியரிடம் நியாயப்பிரமாணத்தைப்பற்றி விசாரித்து, ஒருவன் தன் வஸ்திரத்திலே பரிசுத்த மாம்சத்தைக் கொண்டுபோகையில் அவன் தன் வஸ்திர ஓரத்தால் அப்பத்தையோ குழம்பையோ திராட்சரசத்தையோ எண்ணெயையே மற்

றெந்த போஜன பதார்த்தத்தையோ தொட்டால் அது பரிசுத்தமாகுமோ என்று கேள்
12 என்றார். அவன் அப்படிக் கேட்கவே
ஆசாரியர் அவனிடம், பரிசுத்தமாகாது
13 என்றார்கள். பின்னும் ஆகாய், பிணத்தால் தீட்டுப்பட்டவன் அவைகளில் எதையாகிலும் தொட்டால் அது தீட்டுப்படுமோ என்று கேட்க ஆசாரியர்கள், தீட்டுப்படும்
14 என்றார்கள். அப்பொழுது ஆகாய்: என் பார்வையில் இந்த ஜனம் அப்படித்தான், இந்த ஜாதியார் அப்படித்தான், இது யெகோவாவின் திருவாக்கு; தங்கள் கைகளால் அவர்கள் செய்வதெல்லாம் அப்படித்தான், அவர்கள் அங்கே கொண்டுவந்து படைப்
15 பதும் தீட்டுள்ளது. இப்போதும், இந்நாள் முதல் நடக்கப்போவதையும் யெகோவாவின் ஆலயத்தைக் கட்டுவதற்கு ஒரு கல்லின்மேல் ஒரு கல் வைத்ததற்குமுன் நடந்ததையும் நீங்கள் கவனித்துப்பாருங்கள்.
16 அந்த நாட்களிலே ஒருவன் இருபது மரக்காலிருக்குமென நினைத்து அம்பாரத்தினிடம் போனபோது பத்து மரக்கால் மாத்திரம் இருந்தது; ஒருவன் ஆலியின் தொட்டியில் ஐம்பதுகுடம் மொள்ள ஆலியினிடத்திலே போனபோது இருபது குடம் மாத்திரம்
17 இருந்தது. கருக்காயினாலும் விஷப்பனியினாலும் கல்மழையினாலும் உங்களை, உங்கள் கைகள் செய்தவற்றையெல்லாம், அடித்தேன்; நீங்களோ என்னிடம் மனதைத்திருப்பாமல் போனீர்கள், இது யெகோவாவின்
18 திருவாக்கு. ஒன்பதாம் மாதம் இருபத்து நாலாந்தேதியாகிய இந்நாள் முதல் நடக்கப்போவதைக் கவனித்துப்பாருங்கள், யெகோவாவின் ஆலயம் அஸ்திபாரம் போடப்பட்ட அந்நாள்முதல் நடக்கப்போவதைக்
19 கவனித்துப்பாருங்கள். களஞ்சியத்தில் இன்னும் விதைத்தானியம் உண்டோ? திராட்சச்செடியும் அத்திமரமும் மாதளஞ்செடியும் ஒலிவமரமும் கனிகொடுக்கவில்லையே; இன்றுமுதல் நான் உங்களை ஆசீர்வதிப்பேன்.

அம்மாதம் இருபத்துநாலாந்தேதி யெ 20
கோவாவின் வார்த்தை இரண்டாம்விசை
ஆகாய் என்பவனுக்கு வந்தது: நீ யூதாவின் 21
அதிபதியாகிய செருபாபேலிடம் சொல்ல
வேண்டியது இதுவே: நான் வானத்தையும்
பூமியையும் அசையப்பண்ணி, ராஜ்யங் 22
களின் சிங்காசனத்தைக் கவிழ்த்து, புற
ஜாதியார் ராஜ்யங்களின் பலத்தை அழித்து
இரதத்தையும் அதில் ஏறியிருக்கிறவர்களையும் கவிழ்த்துப்போடுவேன்; குதிரைகளும்
அவைகளின்மேல் ஏறியிருப்பவர்களும் ஒருவர் பட்டயத்தால் ஒருவர் விழுவார்கள்.
அந்நாளிலே—இது சேனைகளுடைய யெ 23
கோவாவின் திருவாக்கு—ஷெயல்தியேலின்
குமாரன் செருபாபேல் என்னும் என் ஊழியனே, உன்னை நான் பிரித்தெடுத்து—இது
யெகோவாவின் திருவாக்கு—உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன், நான் உன்னையே தெரிந்தெடுத்தேன், இது சேனைகளுடைய யெகோவாவின் திருவாக்கு.

---

# ZECHARIAH

# சகரியா

1 தரியு அரசாண்ட இரண்டாம் வருஷம்
எட்டாம் மாதத்திலே இத்தோவின் மகனான
பெரகியாவின் குமாரன் சகரியா என்னும்
தீர்க்கதரிசிக்கு வந்த யெகோவாவின் வார்த்
2 தை: யெகோவா உங்கள் பிதாக்களின்மேல்
3 மிகவும் கோபங்கொண்டார். நீ அவர்களோடு பேசி, சேனைகளின் யெகோவா
சொல்வது இதுவே: என்னிடம் திரும்புங்கள்,—இது சேனைகளுடைய யெகோவாவின் திருவாக்கு—அப்பொழுது நான் உங்களிடம் திரும்புவேன் என்று சேனைகளின்
4 யெகோவா சொல்லுகிறார். உங்கள் பிதாக்களைப்போலிருக்கவேண்டாம்; முன்னின தீர்க்கதரிசிகள் அவர்களுக்குப் பிரசங்கித்து,
சேனைகளின் யெகோவா சொல்வதைக்
கேளுங்கள், உங்கள் தீயவழிகளையும் உங்கள் தீயசெயல்களையும் விட்டுத்திரும்புங்கள் என்று சொல்லியும் அவர்கள் எனக்குச்
செவிகொடாமலும் என்னைக் கவனியாமலும் போனார்கள்; இது யெகோவாவின்
திருவாக்கு. உங்கள் பிதாக்கள் எங்கே? 5
தீர்க்கதரிசிகள் நித்தியகாலமாக உயிரோடிருப்பார்களோ? தீர்க்கதரிசிகளாகிய என் 6
ஊழியருக்கு நான் கட்டளையிட்ட என்

வார்த்தைகளும் என் நியமங்களுமோ உங்கள் பிதாக்களிடம் பலித்தனவே. எங்கள் வழிகளுக்கும் எங்கள் செயல்களுக்கும் தக்கபடி சேனைகளின் யெகோவா எங்களுக்குச் செய்யத்தீர்மானித்தார், அப்படியே எங்களுக்குச் செய்தார் என்று அவர்கள் திரும்பிச் சொல்லவேண்டியதாயிற்று என்று அவர்களுக்குச்சொல்.

7 தரியு அரசாண்ட இரண்டாம் வருஷம் ஷெபாத் என்னும் பதினோராம் மாதம் இருபத்துநாலாந் தேதியிலே யெகோவாவின் வார்த்தை இத்தோவின் மகனான பெரகியாவின் குமாரன் சகரியா என்னும்
8 தீர்க்கதரிசிக்கு வந்தது. இதோ, இன்று இரவு சிவப்புக் குதிரைமேல் ஏறியிருந்த ஒருவனைக்கண்டேன், அவன் பள்ளத்தாக்கிலிருந்த மிருதுச் செடிகளுக்குள்ளே நின்றான்; அவனுக்குப் பின்னே சிவப்பும் கபிலியும் வெண்மையுமான குதிரை
9 கள் இருந்தன. அப்பொழுது நான், என் ஆண்டவனே, இவர்கள் குறிப்பதென்ன என்று கேட்க, என் மூலமாய்ப் பேசின தூதன், இவர்கள் குறிப்பதின்னதென நான் உனக்குக் காண்பிப்பேன் என்று சொன்
10 னான். அப்பொழுது மிருதுச் செடிகளுக்குள்ளே நின்றவன் பதிலுரைத்து, இவர்கள் பூமியெங்கும் சுற்றித்திரிந்துவர யெகோவா
11 அனுப்பினவர்கள் என்றான். பின்பு அவர்கள் மிருதுச் செடிகளுக்குள்ளே நின்ற யெகோவாவின் தூதனிடம்: நாங்கள் பூமியெங்கும் சுற்றித்திரிந்து வந்தோம்; இதோ, பூமிமுழுவதும் அமர்ந்து அமைதியாயிருக்
12 கிறது என்றார்கள். அப்பொழுது யெகோவாவின் தூதன்பேசி: சேனைகளின் யெகோவாவே, எருசலேமுக்கும் யூதாபட்டணங்களுக்கும் எதுவரை இரங்காதிருப்பீர்? இந்த எழுபதுவருஷமாய் நீர் கோபத்தைப் பாராட்டிவருகிறீரே என்று சொல்லவே |
13 யெகோவா என் மூலமாய்ப்பேசின தூதனுக்குப் பதிலுரைத்து நல்ல வார்த்தைகளையும் ஆறுதல் மொழிகளையும் சொன்னார்.
14 என் மூலமாய்ப்பேசின தூதன் அப்பொழுது என்னிடம்: நீ கூறி அறிவிக்கவேண்டியது இதுவே: சேனைகளின் யெகோவா இப்படிச் சொல்லுகிறார், எருசலேமின் மேலும் சீயோன்மேலும் எனக்கு மிகுந்த
15 வைராக்கியமுண்டு. சுகமாய் வாழுகிற புறஜாதியார்பேரில் நான் அதிகக்கோபமாயிருக்கிறேன்; என் கோபம் சிறிதளவாயிருந்தபோது கேட்டை அவர்கள் அதிக
16 ரிக்கச் செய்தார்களே. ஆகவே யெகோவா சொல்வதைக் கேளுங்கள், இரக்கத்தோடே எருசலேமினிடம் திரும்புகிறேன், என் வீடு அதிலே கட்டப்படும்—இது சேனைகளுடைய யெகோவாவின் திருவாக்கு—எருசலேமின்மேல் அளவுநூல் பிடிக்கப்படும்.
17 பின்னும் நீ கூறியறிவிக்கவேண்டியது இதுவே, சேனைகளின் யெகோவா இப்படிச் சொல்லுகிறார், என் ஊர்களில் வாழ்வு பொழியும், யெகோவா இன்னும் சீயோனைத் தேற்றுவார், இன்னும் எருசலேமைத் தெரிந்தெடுப்பார் என்று சொல் என்றான்.
18 நான் கண்ணெடுத்துப் பார்த்தபோது, இதோ, நாலுகொம்புகளைக் கண்டேன்.
19 இவைகள் என்னவென்று என் மூலமாய்ப் பேசிக்கொண்டிருந்த தூதனைக் கேட்க, அவன் என்னிடம், இவைகள் யூதாவையும் இஸ்ரவேலையும் எருசலேமையும் சிதறடித்த கொம்புகள் என்றான். பின்பு
20 யெகோவா நான் நாலு கருமான்களைக் காணும்படி செய்தார்.
21 இவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்று கேட்டேன்; அதற்குத் தூதன்: ஒருவனும் தன் தலையை நிமிர்த்தாதபடி அந்தக்கொம்புகள் யூதாவைச் சிதறடித்ததே; அவைகளுக்குத் திகில் வினைப்பதற்கும் யூதாநாட்டாரைச் சிதறடிக்கும்படி கொம்பை உயர்த்திவந்த ஜாதியாரின் கொம்புகளைத் தகர்ப்பதற்கும் இவர்கள் வந்தார்கள் என்று சொன்னான்.

**2** நான் கண்ணெடுத்துப் பார்த்தபோது, இதோ, தன்கையிலே அளவுநூல் பிடித்திருந்த ஒருவனைக்கண்டேன். நீர் எவ்விடத்துக்குப் போகிறீர் என்று நான் கேட்க அவன்: எருசலேமின் அகலம் நீளம் இவ்வளவு என்று அறியும்படி அதை அளக்கப் போகிறேன் என்றான். என் மூலமாய்ப் பேசின தூதன் போகும்போது, இதோ, வேறொரு தூதன் அவனுக்கு எதிரே வந்தான்; வந்தவன் அவனைப்பார்த்து: நீ ஓடி அந்த வாலிபனிடம் இப்படிச் சொல், எருசலேமின் நடுவிலே திரளான மனிதரும் மிருகங்களும் இருப்பதினாலே அது மதிலில்லாத ஊர்களே போலாகும். நானே அதற்கு — இது யெகோவாவின் திருவாக்கு—சுற்றிலும் அக்கினி மதிலாயிருப்பேன், அதின் நடுவில் என் மகிமைவிளங்கும். ஆகாயத்து நான்கு திசைகளுக்கும் நான் சிதறடித்தவர்களே—இது யெகோவாவின் திருவாக்கு,—எழுந்து எழுந்து வடதேசத்திலிருந்து ஓடிவாருங்கள்,—இது யெகோவாவின் திருவாக்கு. பாபிலோன் குமாரத்தியிடம் குடியிருக்கிற சீயோனே, எழுந்து உன்னை விடுவித்துக்கொள். என்னைத் தமது மகிமைக்

கென்று அனுப்பின சேனைகளின் யெகோ
வா உங்களைக் கொள்ளையிட்ட ஜாதிகளைப்
பற்றி இப்படிச்சொல்லுகிறார் — உங்களைத்
தொடுகிறவன் அவருடைய கண்மணியைத்
9 தொடுகிறான் — இதோ, நான் கையை அவர்
களுக்கு விரோதமாக அசைப்பேன், அதி
னால் அவர்கள் தங்களைச் சேவித்தவர்க
ளுக்குக் கொள்ளையாவார்கள், சேனைகளின்
யெகோவா என்னை அனுப்பினாரென்று
அப்பொழுது அறிந்துகொள்வீர்கள்.
10 சீயோன் குமாரத்தியே, சந்தோஷமாய்
மகிழ்ந்துபாடு; இதோ, நான்வந்து உன் நடு
வில் வாசம்பண்ணுவேன்; இது யெகோவா
11 வின் திருவாக்கு. அந்நாளிலே அநேகம்
ஜாதியார் யெகோவாவினிடம்சேர்ந்து என்
ஜனமாவார்கள், நான் உன் நடுவில் வாச
மாயிருப்பதால் சேனைகளின் யெகோவா
என்னை உன்னிடம் அனுப்பினாரென்று
12 அறிவாய். யெகோவா பரிசுத்தபூமியிலே
யூதாவைத் தமது சுதந்தரபாகமாகக் கொள்
வார்; திரும்பவும் எருசலேமைத் தெரிந்
13 தெடுப்பார். மாம்சமான சகல மனிதரே,
யெகோவாவுக்கு முன்பாக மௌனமா
யிருங்கள்; அவர் தமது பரிசுத்த வாசஸ்
தலத்திலிருந்து எழுந்தருளினார்.

**3** பிரதான் ஆசாரியனாகிய யோசுவாவை
நான் காணும்படி செய்தார்: அவன் யெ
கோவாவின் தூதனுக்கு முன்பாக நின்றான்;
அவன்மேல் குற்றஞ்சாட்டும்படி சாத்
தான் அவன் வலது பக்கத்திலே நின்றான்.
2 அப்பொழுது யெகோவா சாத்தானைப்பார்த்
து, சாத்தானே, யெகோவா உன்னைக்
கடிந்துகொள்ளுக, எருசலேமைத் தெரிந்
தெடுத்த யெகோவா உன்னைக் கடிந்து
கொள்ளுக; இவன் அக்கினியினின்று தப்பு
விக்கப்பட்ட கொள்ளியல்லவா என்றார்.
3 யோசுவாவோ அழுக்குவஸ்திரம் தரித்தவ
னாய்த் தூதனுக்குமுன்பாக நின்றிருந்தான்.
4 அவர் அங்கு நின்ற பணிவிடைக்காரரைப்
பார்த்து, இவன் உடுத்தியிருக்கிற அழுக்கு
வஸ்திரங்களைக் களைந்துபோடுங்கள் என்றார்.
5 பின்பு அவனைப்பார்த்து, இதோ, நான்
அக்கிரமத்தை உன்னிலிருந்து அகற்றி
விட்டு உனக்கு விலைத வஸ்திரங்களைத்
தரிப்பித்தேன் என்றார். அவன் தலையில்
சுத்தமான பாகையை வைத்தால் நல்
லது என்று நான் சொல்லச் சுத்தமான
பாகையை அவன் தலையில் வைத்து அவ
னுக்கு வேறு வஸ்திரங்களைத் தரிப்பித்தார்
கள்; யெகோவாவின் தூதன் அங்கே நின்
றார்.

யெகோவாவின் தூதன் யோசுவாவுக்குச் 6
சாட்சியாகப் பேசி: சேனைகளின் யெகோ 7
வா இப்படிச் சொல்லுகிறார், நீ என் வழி
களில் நடந்து காக்கும்படி நான் கட்டளை
யிட்டவைகளைக் காத்து நடந்தால் நீ என்
வீட்டிலே ஆளுகை செய்வாய்; என் பிரா
காரங்களுக்கும் காவலாவாய், இங்கே நிற்
கிறவர்களில் ஒருவனுயிருக்கும் சிலாக்கியத்
தை நான் உனக்குக் கட்டளையிடுவேன்
என்று சொன்னான். இப்போதும் பிர 8
தான ஆசாரியனுகிய யோசுவாவே, நீயும்
உனக்குமுன்பாக உட்கார்ந்திருக்கிற உன்
தோழருங் கேட்க. இவர்கள் அடையாள
மானவர்கள்; இதோ, மூன்னென்பட்ட
என் ஊழியனை நான் வரப்பண்ணுவேன்.
நான் யோசுவாவுக்குமுன்பாக வைத்த கல் 9
லைப் பார்; இதோ, ஒரே கல்லின்மேல் ஏழு
கண்கள்; இதோ, அதற்குரிய எழுத்துக்களை
நானே அதில் வெட்டுவேன்; இது சேனை
களுடைய யெகோவாவின் திருவாக்கு; இந்
தத் தேசத்தின் அக்கிரமத்தை ஒரே நாளிலே
அகற்றுவேன். அந்நாளிலே — இது சேனை 10
களுடைய யெகோவாவின் திருவாக்கு — நீங்
கள் ஒருவரையொருவர் திராட்சச் செடி
யின்கீழும் அத்திமரத்தின்கீழும் விருந்துக்கு
அழைப்பீர்கள்.

என் மூலமாய்ப் பேசின தூதன் திரும் **4**
பிவந்து, நித்திரையிலிருக்கிற ஒருவனை எழுப்
புவதுபோல் என்னை எழுப்பி, | நீ காண்கி 2
றது என்னவென்று கேட்டான்; அதற்கு
நான்: இதோ, முழுவதும் பொன்னினால்
செய்யப்பட்ட குத்துவிளக்கை காண்கி
றேன்; அதின் உச்சியில் அதின் கிண்ணமும்,
விளக்கின்மேல் அதின் ஏழு அகல்களும்
உச்சியிலிருந்து ஏழு அகல்களுக்கும் போ
கிற ஏழு குழாய்களும் இருக்கின்றன.
அதின் பக்கத்தில் கிண்ணத்திற்கு வலது 3
புறம் ஒன்றும் அதற்கு இடதுபுறம் ஒன்று
மாக இரண்டு ஒலிவமரங்கள் இருக்கின்றன
என்றேன்.
நான் என் மூலமாய்ப் பேசின தூதனி 4
டம்: ஆண்டவனே, இவை என்னவென்று
கேட்க | என் மூலமாய்ப் பேசினதூதன் 5
பதிலுரைத்து, இவைகள் இன்னவென்று
உனக்குத் தெரியாதா என்றான்; ஆண்ட
வனே, எனக்குத் தெரியாது என்றேன்.
திரும்பவும் அவன் என்னோடு பேசி, செருபா 6
பேலுக்குச் சொல்லப்படும் யெகோவாவின்
வார்த்தை இதுவே, பலத்தினுலுமல்ல, பராக்
கிரமத்தினுலுமல்ல, என்னுடைய ஆவியினு
லேயே என்று சேனைகளின் யெகோவா

7 சொல்லுகிறார். செருபாபேலுக்கு எதிரே நிற்கும் பெரும்மலையே, நீ யாராலும் சம பூமியாவாய்; தலைக்கல்லை அவன் கொண்டுவருவான்; கொண்டுவரவே, அதற்குக் கிருபை, கிருபை என்று ஆர்ப்பரிப்பார்கள்
8 என்று சொன்னான். பின்னும் யெகோவா
9 வின் வார்த்தை எனக்கு வந்தது: இந்த ஆல யத்துக்கு அஸ்திபாரம்போட்டது செருபா பேலின் கைகளே, இதை முடித்துத் தீர்ப்பதும் அவன் கைகளே. சேனைகளின் யெகோவா என்னை உங்களிடம் அனுப்பினாரென்று
10 அதினாலே அறிவாய். பூமியெங்கும் சுற்றிப் பார்க்கும் யெகோவாவின் கண்களாகிய இவைகள் ஏழும் செருபாபேலின் கையிலிருக்கிற தூக்கு தூலை மகிழ்ந்து பார்க்குமானால் அற்பஆரம்பதினத்தை யார் அசட்டைபண்ணுவார்!
11 பின்பு நான் அவனிடம் பேசி, குத்துவிளக்குக்கு வலதுபுறமும் அதற்கு இடதுபுறமும் இருக்கிற இந்த இரண்டு ஒலிவ
12 மரங்கள் என்னவென்று கேட்டேன். இரண்டாமுறையும் நான் அவனிடம் பேசி: அந்த இரண்டு ஒலிவப்பொடிக்கிளைகள் என்ன? அவை அந்த இரண்டு பொற் குழாய்களின் பக்கத்தில் தொங்குகின்றன, அவற்றின் வழியாய்ப் பொன்னிற எண்ணெய் ஊற்றப்படுகிறதே என்றேன். அதற்கு அவன் என்னிடம், இவைகள் இன்னவென உனக்குத் தெரியாதா என, நான், ஆண்டவனே, எனக்
14 குத் தெரியாது என்றேன். அப்பொழுது அவன், இவைகள் எண்ணெய் பூசி அபிஷேகம் பெற்ற இருவர், சர்வலோக ஆண்டவரின் சமுகத்தில் நிற்கிறவர்கள் என்றார்.

**5** நான் திரும்பவும் கண்ணிமிர்ந்து பார்க்கையில், இதோ, பறக்கும் ஒரு புஸ்தகச் சுரு
2 ளைக் கண்டேன். தூதன், நீ காண்கிறது என்னவென்று கேட்க, பறக்கும் ஒரு புஸ்தகச் சுருளைக் காண்கிறேன், அதின் நீளம் இருபதுமுழம், அதின் அகலம் பத்துமுழம்
3 என்றேன். அப்பொழுது அவன் இது பூமியின்மீதெங்கும் செல்லுகிற சாபம், திருடரெல்லாரும் வெகுகாலம் தண்டனைபெறுதேபோனார்கள், ஆணையிடுவோரெல்லாரும் வெகுகாலம் தண்டனைபெறுதே போனார்
4 கள்; நான் அதை வெளிச்செல்லச்செய்தேன், இது சேனைகளுடையயெகோவாவின் திருவாக்கு; இது திருடன் வீட்டிற்கும் என் நாமத்தினாலே பொய்யாணையிடுகிறவன் வீட்டிற்கும்சென்று அவனவன் வீட்டின் நடுவிலே தங்கி, அதை அதின் மரங்களோடும் அதின் கற்களோடும் நிர்மூலமாக்கும் என்று சொன்னான்.

5 பின்பு என்னோடே பேசின தூதன் வெளியேபோய் என்னிடம்: நீ கண் ணிமிர்ந்து, வருவது இன்னதெனப்பார் என்றான். அது என்னவென்று நான் கேட்க 6 அவன் அது வெளிவரும் ஒரு மரக்கால் என்றான். பின்னும் அவன், பூமியெங்கும் இதுதான் அவர்கள் அக்கிரம நிலைமை என்றான். இதோ, ஈயமூடி ஒன்று உயர்த் 7 தப்பட்டது, அப்பொழுது காணப்பட்டது மரக்காலின் நடுவிலே உட்கார்ந்திருந்த ஒரு ஸ்திரீ. அப்பொழுது அவன், இவள் அக் 8 கிரமக்காரி என்று சொல்லி அவளை மரக்காலுக்குள்ளே தள்ளிப் பாரமான ஈயமூடியை அதின் வாயிலே போட்டான். அப்பொழுது நான் கண்ணிமிர்ந்து, இதோ, 9 வெளிவருகிற இரண்டு ஸ்திரீகளைக் கண்டேன்; அவர்களுக்கு நாரையின் செட்டைகள் போன்ற செட்டைகள் இருந்தன; அவர்கள் செட்டைகளில் காற்றிருந்தது; இவர்கள் மரக்காலைப் பூமிக்கும் வானத்துக்கும் நடுவாய்த் தூக்கிக்கொண்டு போனார்கள். நான் என்னோடே பேசின 10 தூதனைப்பார்த்து: இவர்கள் மரக்காலை எங்கே கொண்டுபோகிறார்கள் என்று கேட்டேன். அதற்கு அவன், சினெயார் 11 தேசத்திலே அவளுக்கு ஒரு வீட்டைக் கட்டும்படி அதைக் கொண்டுபோகிறார்கள்; அங்கே அது ஆயத்தமாகும்போது அவளுக்குரிய ஸ்தானத்திலே அவள் வைக்கப்படுவாள் என்றான்.

**6** நான் திரும்பவும் கண்ணிமிர்ந்துபார்த்து, இதோ, இரண்டு மலைகளின் நடுவாகப் புறப்பட்டுவருகிற நாலு ரதங்களைக் கண்டேன்; அந்த மலைகள் செப்புமலைகள். முதலாம் 2 ரதத்தில் செவ்புக்குதிரைகளும் இரண்டாம் ரதத்தில் கறுப்புக்குதிரைகளும் | மூன்றாம் 3 ரதத்தில் வெள்ளைக்குதிரைகளும் நாலாம் ரதத்தில் பலவர்ணமுடைய பலத்த குதிரைகளும் பூட்டியிருந்தன. நான் அதைக்கண்டு, 4 என்னோடே பேசின தூதனைப்பார்த்து, ஆண்டவனே இவைகள் என்னவென்று கேட்க | அந்தத் தூதன் எனக்குப் பதில் 5 சொல்லி: இவைகள் சர்வலோகத்துக்கும் ஆண்டவராயிருக்கிறவருடைய சமுகத்தில் நின்று புறப்படுகிற வானத்தின் நாலு காற்றுகள். கறுப்புக்குதிரைகள் பூட்டியிருந்த 6 ரதம் வடதேசத்துக்குப் புறப்பட்டுப்போகும்; வெண்மையான குதிரைகள் அவைகளின் பின்னே புறப்பட்டுப் போகும்; பல

வருணக் குதிரைகள் தென்தேசத்துக்குப்
7 புறப்பட்டுப்போகும் என்றார். பலத்த குதி
ரைகள் புறப்பட்டுப்போகையில் பூமியிலே
சுற்றித் திரியும்படி கேட்டுக்கொண்டன;
அதற்கு அவன், போய் பூமியிலே சுற்றித்
திரியுங்கள் என்றார்; அப்படியே பூமி
8 யிலே சுற்றித் திரிந்தன. பின்பு அவன்
என்னைக் கூப்பிட்டு: பார், வடதேசத்துக்
குப் புறப்பட்டுப் போனவைகளைக்கொண்டு
வடதேசத்திலே என் கோபத்தை ஆற்றிக்
கொள்ளுவேன் என்று என்னிடம் சொன்
னான்.

9 பின்பு யெகோவாவின் வார்த்தை எனக்கு
10 வந்தது: சிறையிருப்போரின் காணிக்கை
களைக் கெல்தாய், தொபியா, யெதாயா என்ப
வர்களிடமிருந்து வாங்கிக்கொள், நீ இன்
றையதினமே வந்து செபனியாவின் குமார
னாகிய யோசியாவின் வீட்டுக்குப்போ, அங்
கே அவர்கள் பாபிலோனிலிருந்து வந்திருக்
11 கிறார்கள். அவர்களிடம் வெள்ளியையும்
பொன்னையும் வாங்கிக் கிரீடங்களைச்செய்து
யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவா என்
னும் பிரதான ஆசாரியனுடைய சிரசிலே
12 வைத்து | அவனிடம் இப்படிச்சொல்,
சேனைகளின் யெகோவா சொல்வது இதுவே,
இதோ பார், மூனே என்னும் திருநாமமுடை
யவர்! அவர் செல்லுமிடமெல்லாம் மூனே
எழும்பும்; அவர் யெகோவாவின் ஆலயத்
13 தைக் கட்டுவார். யெகோவாவின் ஆலயத்
தைக் கட்டுபவர் அவரே; அவர் மகிமை
பொருந்தினவராய்த் தமது சிங்காசனத்தின்
மேல் வீற்றிருந்து ஆளுகைசெய்வார்; ஆசா
ரியனும் தனது சிங்காசனத்தின்மேல் இருப்
பான்; இவ்விருவருக்கும் நடுவே சமாதான
14 ஆலோசனை விளங்கும். இந்தக் கிரீடங்
களோ யெகோவாவின் ஆலயத்திலே
கேலெம், தொபியா, யெதாயா, செபனியா
வின் குமாரனாகிய கேன் என்பவர்களின்
ஞாபகார்த்தமாக வைக்கப்படவேண்டும்.
15 தூரத்திலுள்ளவர்கள் வந்து யெகோவாவின்
ஆலயத்தைக் கூட இருந்து கட்டுவார்
கள்; சேனைகளின் யெகோவாவே என்னை
உங்களிடம் அனுப்பினாரென்று அப்
பொழுது அறிந்துகொள்வீர்கள், நீங்கள்
உங்கள் கடவுளாகிய யெகோவா சொல்
வதைக்கேட்டு நடந்தீர்களானால் இது நிறை
வேறும்.

**7** தரியுராஜா அரசாண்ட நாலாம் வருஷம்
கிஸ்லேவ் என்னும் ஒன்பதாம் மாதம் நாலா
ந்தேதியிலே சகரியாவுக்கு யெகோவாவின்
2 வார்த்தை வந்தது.—பேதேலிலிருந்து
சரேத்சேரும் ரேகெம்மேலேகும் அவனு
டைய ஆட்களும் அனுப்பப்பட்டு யெகோ
வாவின் தயவைத் தேடிக்கொள்ளவும் |
3 நாங்கள் இத்தனை வருஷகாலமாகச் செய்து
வந்ததுபோல ஐந்தாம் மாதத்திலே அழுது
எங்களை ஒடுக்கிக்கொள்ள வேண்டுமோ
என்று சேனைகளுடைய யெகோவாவின்
ஆலயத்திலிருக்கும் ஆசாரியரிடமும் தீர்க்க
தரிசிகளிடமும் கேட்கவும் வந்திருந்தார்
4 கள்.—அப்பொழுது சேனைகளுடைய
யெகோவாவின் வார்த்தை எனக்கு வந்தது:
5 தேசத்தின் முழு ஜனத்திற்கும் ஆசாரியருக்
கும் நீ சொல்லவேண்டியது இதுவே, நீங்
கள் இந்த எழுபது வருஷமாக ஐந்தாம்
மாதத்திலும் ஏழாம் மாதத்திலும் உபவாசம்
பண்ணித் துக்கங்கொண்டாடி வந்தபோது
நீங்கள் எனக்கென்றே உபவாசம்பண்ணி
னீர்களா? நீங்கள் புசிக்கும்போதும் குடிக்
6 கும்போதும் உங்களுக்கென்றல்லவோ புசிக்
கிறீர்கள் உங்களுக்கென்றல்லவோ குடிக்
கிறீர்கள். எருசலேமும் அதற்குச் சுற்றிலு
7 மிருந்த ஊர்களும் குடிநிறைந்து சுகமாயி
ருந்த காலத்திலும் தென்னாடும் சமனிலமாடும்
குடியேறியிருந்த காலத்திலும் முன்னை தீர்க்
கதரிசிகளைக்கொண்டு யெகோவா கூறின
வார்த்தைகளை நீங்கள் மறந்துவிட்டீர்
களோ?

8 பின்பு யெகோவாவின் வார்த்தை சகரி
9 யாவுக்கு வந்தது: சேனைகளின் யெகோவா
சொன்னதைக் கவனியுங்கள்: நீங்கள் உண்
மையான தீர்ப்புகளைச் செய்யுங்கள், ஒருவ
னுக்கொருவன் தயவும் இரக்கமும் பாராட்
டுங்கள்; விதவையையும் திக்கற்ற பிள்ளை
10 யையும் அந்நியனையும் சிறுமையானவனை
யும் ஒடுக்காதிருங்கள்; உங்களில் ஒருவ
னுக்கு விரோதமாய் ஒருவன் தன் இருதயத்
தில் தீமை நினைக்கவேண்டாம் என்று
சொன்னார். ஆனாலும் கவனிக்க மனதற்
11 றுப்போனார்கள், தோள் கொடுக்க இசை
யாமல் முரட்டுத்தனங் காட்டினார்கள்,
கேளாதபடி தங்கள் காதுகளை மந்தமாக்கி
னார்கள். அவர்கள் தங்கள் இருதயத்தை
12 வைரம்போல் கடினமாக்கி நியாயப்பிரமா
ணத்தையும் சேனைகளின் யெகோவா தமது
ஆவியினால் முன்னை தீர்க்கதரிசிகளைக்
கொண்டு சொல்லியனுப்பின வார்த்தைகளை
யும் கேளாதேபோனார்கள். ஆகவே மகா
கடுங்கோபம் சேனைகளின் யெகோவாவினி
டமிருந்து வந்தது, நான் கூப்பிட்டபோது
13 அவர்கள் எப்படிக் கேளாமற்போனார்களோ
அப்படியே அவர்கள் கூப்பிடும்போது
நானும் கேளாதிருப்பேன். அவர்கள் அறி
14

யாத புறஜாதியாருக்குள்ளே அவர்களைப் பறக்கடிப்பேன் என்று சேனைகளின் யெகோவா சொன்னார். ஆதலால் அவர்கள் போனவழியெல்லாம் போவாரும் வருவாரும் மின்றித் தேசம் பாழாய்ப்போயிற்று. இனிய தேசத்தை அவர்கள் பாழாக்கிவிட்டார்கள்.

**8** பின்னும் சேனைகளுடைய யெகோவாவின் 2 வார்த்தை வந்தது: சேனைகளின் யெகோவா இப்படிச் சொல்லுகிறார், நான் சீயோனைப் பற்றி மிகுந்த வைராக்கியங்கொண்டேன்; அதிக உக்கிரத்தோடே அதைப்பற்றி வைராக்கியங்கொண்டேன்.

3 யெகோவா சொல்வது இதுவே, நான் சீயோனிடம் திரும்பி எருசலேமின் நடுவிலே வாசம்பண்ணுவேன்; எருசலேம்உண்மைவிளங்கும் நகரம் என்றும் சேனைகளுடைய யெகோவாவின் பர்வதம், பரிசுத்த பர்வதம் என்றும் அழைக்கப்படும் என்கிற 4 ார். சேனைகளின் யெகோவா இப்படிச் சொல்லுகிறார், திரும்பவும் எருசலேமின் வீதிகளில் கிழவரும் கிழவிகளும் குடியிருப்பார்கள், வயோதிகராயிருப்பதினாலே அவர் 5 கள் கோல்பிடித்து நடப்பார்கள். நகரத்தின் தெருக்களிலே விளையாடுகிற ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் அதின் வீதிக 6 ளில் நிறைந்திருக்கும். சேனைகளின் யெகோவா இப்படிச் சொல்லுகிறார்: அது இந்த ஜனத்தில் மீதியானவர்களின் பார்வைக்கு இந்நாட்களில் ஆச்சரியமாயிருந்தாலும்என் பார்வைக்கும் ஆச்சரியமாயிருக்குமோ? இது சேனைகளுடைய யெகோவாவின் திரு 7 வாக்கு. சேனைகளின் யெகோவா இப்படிச் சொல்லுகிறார், இதோ, கிழக்கு தேசத்திலும் மேற்கு தேசத்திலுமிருந்து என் ஜனங்களை 8 நான் ரட்சித்து | அவர்களை அழைத்துக் கொண்டுவருவேன்; அவர்கள் எருசலேமின் நடுவிலே குடியிருப்பார்கள்; உண்மையிலும் நீதியிலும் அவர்கள் எனக்கு ஜனமாயிருப்பார்கள், நான் அவர்களுக்குக் கடவுளாயிருப்பேன்

9 சேனைகளின் யெகோவா இப்படிச் சொல்லுகிறார்: சேனைகளுடைய யெகோவாவின் வீடாகிய ஆலயம் கட்டப்படும்படி அதின் அஸ்திபாரங்கள் போடப்பட்ட நாள் முதற்கொண்டு பேசின தீர்க்கதரிசிகளின் வாயினால் இந்த வார்த்தைகளை இந்நாட்களில் கேட்டு வருகிறவர்களே, 10 தைரியங்கொள்ளுங்கள். இந்நாட்களுக்கு முன்னே மனிதனின் உழைப்பும் மிருகங்களின் உழைப்பும் பயன்படவில்லை; போவாரும் வருவாரும் சமாதானமாயிருப்பதற்குச் சத்துருக்கள் விடவில்லை. எல்லா மனிதரையும் ஒருவருக்கு விரோதமாக ஒருவரைத் தூண்டிவிட்டேன். இப்போ 11 தோ இந்த ஜனத்தில் மீதியானவர்களுக்கு நான் முன்னின நாட்களில் செய்ததுபோல் செய்யமாட்டேன்; இது சேனைகளுடைய யெகோவாவின் திருவாக்கு. விதைப்பது 12 சமாதானம்; திராட்சச்செடி தன் கனியைத் தரும், பூமி தன் பலனைத்தரும், வானம் தன் பனியைத்தரும், இந்த ஜனத்தில் மீதியானவர்கள் இவற்றையெல்லாம் சுதந்தரமாய்ப்பெறக் கட்டளையிடுவேன். யூதா 13 வீட்டாரே, இஸ்ரவேல் வீட்டாரே, நீங்கள் புறஜாதியாருக்குள்ளே சாபச்சொல்லாயிருந்ததுபோலவே ஆசீர்வாதச் சொல்லாகும்படி நான் உங்களை ரட்சிப்பேன்; பயப்படாதிருங்கள், தைரியங்கொள்ளுங்கள்.

சேனைகளின் யெகோவா இப்படிச் சொல் 14 லுகிறார்: உங்கள் பிதாக்கள் எனக்குக் கோபமூட்டினபோது நான் உங்களுக்குத் தீங்குசெய்யத் தீர்மானித்துப் பரிதபியாமலிருந்ததுபோல—இது சேனைகளின் யெகோவாவே சொல்வது—இப்படியே நான் 15 இக்காலத்தில் திரும்பி எருசலேமுக்கும் யூதாவீட்டாருக்கும் நன்மைசெய்யத் தீர்மானித்திருக்கிறேன்; பயப்படாதிருங்கள். நீங்கள் செய்யவேண்டியவைகள் இவைக 16 ளே: ஒருவரோடொருவர் உண்மைபேசுங்கள், உங்கள் வாசல்களில் சமாதானத்துக்கேதுவான உண்மைத் தீர்ப்புகளைச் செய்யுங்கள். ஒருவனுக்கு விரோதமாய் ஒரு 17 வன் தன் இருதயத்தில் தீமை பிணைக்கவேண்டாம், பொய்யாணையில் பிரியங்கொள்ளாதிருங்கள், இவையெல்லாம் நான் பகைக்கும் காரியங்கள்; இது யெகோவாவின் திருவாக்கு.

சேனைகளுடைய யெகோவாவின் 18 வார்த்தை எனக்கு வந்தது: சேனைகளின் 19 யெகோவா இப்படிச் சொல்லுகிறார், நாலாம் மாதத்தின் உபவாசமும் ஐந்தாம் மாதத்தின் உபவாசமும் ஏழாம் மாதத்தின் உபவாசமும் பத்தாம் மாதத்தின் உபவாசமும் யூதா வீட்டாருக்கு மகிழ்ச்சியாகவும் சந்தோஷமாகவும் நல்ல திருநாட்களாகவும் மாறிப்போகும்; சத்தியத்திலும் சமாதானத்திலும் பிரியங்கொள்ளுங்கள். சேனைகளின் 20 யெகோவா இப்படிச் சொல்லுகிறார்: ஜாதியாரும் அநேக ஊர்களின் குடிகளும் இன்னும் வருவார்கள். ஒரு ஊரின் குடிகள் 21 மறு ஊரின் குடிகளிடம் போய், நாம் யெகோவாவின் தயவை நாடவும் சேனை

களின் யெகோவாவைத் தேடவும் விரை
ந்து செல்வோம் வாருங்கள், நாங்களும்
22 வருவோம் என்று சொல்வார்கள். அநே
தேசத்தாரும் பல ஜாதியாரும் எருசலேமி
லே சேனைகளின் யெகோவாவைத் தேடவும்
யெகோவாவின் தயவை நாடவும் வருவார்
23 கள். சேனைகளின் யெகோவா இப்படிச்
சொல்லுகிறார், அந்நாட்களிலே பலவித
பாஷைக்காராகிய புற ஜாதியாரில் பத்து
மனிதர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தின்
ஓரத்தைப் பிடித்துக்கொண்டு: கடவுள் உங்
களோடிருக்கிறார் என்று நாங்கள் கேள்விப்
பட்டபடியால் நாங்கள் உங்களோடேபோ
வோம் என்று சொல்லி அவனைப் பிடித்துக்
கொள்வார்கள்.

**9** காதிராக் தேசத்துக்கு விரோதமாக
வரும்
யெகோவாவின் வார்த்தை யென்னும்
கடினவாக்கு.
அது தமஸ்குவின் மேலும் வந்து இறங்
கித்தங்கும்;
யெகோவா இஸ்ரவேலின் சகல கோத்
திரங்கள் மேலும் கண்ணுயிருப்பதுபோல
வே
மற்ற மனிதர் மேலுமிருக்கிறார்.
2 தமஸ்குவின் எல்லையை யடுத்த ஆமாத்
தின்மேலும் அது வரும்;
விவேகமிகுந்த தீரு சீதோன் பட்ட
ணங்களின் மேலும் அது வரும்.
3 தீரு தனக்கு அரணைக்கட்டி
தூசிப்போல் வெள்ளியையும் வீதிகளின்
சேற்றைப்போல் பசும் பொன்னையும்
சேர்த்து வைத்தது.
4 இதோ, ஆண்டவர் அதைப் பறித்துக்
கொண்டு
சமுத்திரத்திலே அதின் பலத்தகோட்டை
யை அழித்துப்போடுவார்.
அது அக்கினிக்கு இரையாகும்.
5 அஸ்கலோன் அதைக்கண்டு பயப்படும்,
காத்சாவும் அதைக்கண்டு மிகவும் நடுங்
கும்,
எக்ரோனும் அப்படியே, அதுகொண்ட
நம்பிக்கை அற்றுப்போயிற்று;
காத்சாவில் ராஜா அழிந்துபோவான்,
அஸ்கலோன் குடியற்றிருக்கும்.
6 அஸ்தோத்தில் கலப்பு ஜாதிப்பிள்ளைகள்
வாசம் பண்ணுவார்கள்;
நான் பெலிஸ்தியரின் கர்வத்தை அழிப்
பேன்.
7 அவனுடைய் ரத்த உணவை அவன்
வாயிலிருந்தும்
அவன் அருவருப்புகளை அவன் பற்களி
லிருந்தும் நீக்கிப்போடுவேன்;
அவர்களிலும் சிலர் நமது கடவுளுக்
கென்று மீதியாக வைக்கப்பட்டு
யூதாவிலே கோத்திரத்தலைவர் போலிருப்
பார்கள்,
எக்ரோனியர் எபூசியர்போலிருப்பார்
கள்.
8 போவதும் வருவதுமான சேனைகளைத்
தடுத்து
என் ஆலயத்தைக் காக்கும்படி பாளய
மிறங்குவேன்,
ஒடுக்குகிறவன் எவனும் இனி அவர்கள்
மேல் வருவதில்லை;
அதை என் கண்களினால் பார்த்துக்
கொண்டேயிருக்கிறேன்.
9 சீயோன் குமாரத்தியே, மிகவும் களி
கூரு, எருசலேம் குமாரத்தியே ஆர்ப்பரி;
இதோ, உன் ராஜா உன்னிடம் வருகிறார்:
அவர் நீதிபரர், வெற்றிவேந்தர், சாந்த
முள்ளவர்;
கழுதையின்மேல், கழுதைக் குட்டியா
கிய மறியின்மேல் ஏறிவருகிறவர்.
10 எப்பிராயீமினின்று ரதங்களையும் எருச
லேமினின்று குதிரைகளையும் அழித்து
விடுவேன்,
யுத்தவில்லும் அழிந்துபோகும்;
அவர் புறஜாதியாருக்குச் சமாதானங்
கூறுவார்;
அவருடைய ஆளுகை ஒரு சமுத்திரந்
தொடங்கி மறு சமுத்திரம் வரைக்கும்
நதி தொடங்கிப் பூமியின் எல்லைகள்
வரைக்கும் செல்லும்.
11 உனக்கும் ஒரு காரியம் செய்வேன்,
நீரில்லாக் குழியில் சிறைப்பட்டிருக்கிற
உன்னுடையவர்களை
நான் உன் உடன்படிக்கையின் ரத்தத்
தினிமித்தம் விடுதலை பண்ணுவேன்,
12 நன்னம்பிக்கையுடையவர்களாய்ச்
சிறைப்பட்டவர்களே,
அரணுக்குத் திரும்புங்கள்,
இரட்டிப்பான நன்மையைத் தருவே
னென்று
இன்றைதினம் உனக்கு அறிவிக்கப்படு
கிறது.
13 நான் எனக்கென்று யூதாவை வில்லாய்
வளைத்து
எப்பிராயீமை அம்பாகவைத்துச்
சீயோனே, உன் புத்திரரைக் கிரேக்கு
தேசப்புத்திரருக்கு விரோதமாய் எழுப்பி
உன்னைப் பராக்கிரமவீரரின் பட்டயம்
போலாக்குவேன்.

14 அவர்கள் மேலாக யெகோவா காணப்படுவார்,
அவருடைய அம்பும் மின்னல்போல் செல்லும்;
யெகோவாவாகிய ஆண்டவர் எக்காளம் ஊதிப்
பலத்த தென்காற்றுகளோடே வருவார்.
15 சேனைகளின் யெகோவா அவர்களைக்காப்பாற்றுவார்,
அவர்கள் சத்துருக்களைப் பட்சிப்பார்கள்.
கவண் கற்களை மிதித்துப்போடுவார்கள்;
சத்துருக்களைத் திராட்சரச மெனப் பருகி
ஆரவாரிப்பார்கள்;
கலங்கள் போலவும் பலிபீடமூலைகளைப் போலவும்
ரத்தம் நிறைந்திருப்பார்கள்.
16 அந்நாளிலே அவர்கள் கடவுளாகிய யெகோவா
அவர்களைத் தமது ஜனமான மந்தையாக இரட்சிப்பார்.
கிரீடத்திலே பதிந்த கற்களாய்
அவர்கள் அவருடைய தேசத்தின்மேல் விளங்குவார்கள்.
17 எவ்வளவு நலம்! எவ்வளவு அழகு!
தானியம் வாலிபரையும்
புதுத்திராட்சரசம் கன்னிகைகளையும் செழிக்கப்பண்ணும்.

**10** பின்மாரிகாலத்திலே யெகோவாவினிடம் மழையை வேண்டிக்கொள்ளுங்கள்.
மின்னல்களை உண்டாக்குகிறவர் யெகோவா,
வயல்வெளியில் அவரவருக்குப்பயிருண்டாக
அவர்களுக்கு மழையைக் கட்டளையிடுகிறவர் அவரே.
2 வீட்டு விக்கிரகங்கள் பேசுவது வீண்,
குறிசொல்லுகிறவர்கள் தரிசிப்பதுபொய்.
அவர்கள் பேசுவன அபத்த சொப்பனங்கள்;
அவர்கள் சொல்லும் ஆறுதல் மொழிகள் வெறுமையே.
ஆகவே ஜனங்கள் ஆடுகள்போல் விட்டோடுகிறார்கள்.
மேய்ப்பவனில்லாமையால் துன்பமுறுகிறார்கள்.
3 மேய்ப்பவருக்கு விரோதமாக என் கோபம் மூண்டது,
கடாக்களைத் தண்டிப்பேன்.
சேனைகளின் யெகோவா யூதா வீட்டாராகிய தமது மந்தையையோ கண்ணோக்கி
அவர்களை யுத்தத்திற்குரிய தமது சிறந்த குதிரையாக்குவார்.
4 அவர்களிலிருந்து கோடிக்கல்லும் அவர்களிலிருந்து கூடார மூளியும்
அவர்களிலிருந்து யுத்த வில்லும் வரும்;
ஆளுகிறயாவரும் அவர்களிலிருந்தே வருவார்கள்.
5 வீதிகளின் சேற்றை மிதிப்பதுபோல்
யுத்தத்தில் முன்செல்லும் பராக்கிரம வீரர் போன்றவர்கள்,
யெகோவா அவர்களோடிருப்பதால் யுத்தஞ் செய்வார்கள்;
குதிரைகளின்மேல் ஏறிவருகிறவர்கள் வெட்கத்துக்குள்ளாவார்கள்.
6 நான் யூதா வீட்டாரைப் பலப்படுத்தி
யோசேப்பு வீட்டாரை இரட்சிப்பேன்;
நான் அவர்களுக்கு இரங்கி அவர்களைத் திரும்பி வரப்பண்ணுவேன்;
அவர்கள் ஒருக்காலும் என்னால் தள்ளிவிடப்படாதவர்கள் போலிருப்பார்கள்;
நான் அவர்கள் கடவுளாகிய யெகோவா,
அவர்களுக்குச் செவி கொடுப்பேன்.
7 எப்பிராயீமர் பராக்கிரம வீரரைப் போலிருப்பார்கள்,
மதுபானத்தால் களிப்பதுபோல் அவர்கள் இருதயம் களிக்கும்;
அவர்கள் பிள்ளைகளும் அதைக்கண்டு மகிழுவார்கள்;
அவர்கள் இருதயம் யெகோவாவில் களிகூரும்.
8 நான் ஒசைகாட்டி அவர்களை அழைத்துச் சேர்த்துக்கொள்வேன்.
அவர்களை மீட்டுக்கொள்பவர் நானே.
அவர்கள் முன் பெருகியிருந்ததுபோலவே பெருகுவார்கள்.
9 நான் அவர்களை ஜாதியாருக்குள்ளே விதைக்கும்போது
அவர்கள் தூரதேசத்திலே என்னை நினைப்பார்கள்;
தங்கள் பிள்ளைகளோடு பிழைத்துத் திரும்புவார்கள்.
10 நான் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து திரும்பிவரப்பண்ணி
அவர்களை அசீரியாவிலிருந்து கூட்டிக்கொண்டு
அவர்களைக் கிலெயாத் தேசத்துக்கும் லீபனோனுக்கும் அழைத்து வருவேன்;
அவர்களுக்கு இடம் போதாமற்போகும்.
11 இடுக்கமென்கிற சமுத்திரத்தைக் கடக்கையில்
அவர் சமுத்திரத்தின் அலைகளை அடிப்பார்;

நீல நதியின் ஆழங்களெல்லாம் வறண்டு போம்:
அசீரியாவின் கர்வம் தாழ்த்தப்படும்;
எகிப்தின் கொடுங்கோல் விலகிப்போகும்.
12 நான் அவர்களை யெகோவாவில் பலப்படுத்துவேன்,
அவருடைய திருநாமத்திலே அவர்கள் நடந்துகொள்வார்கள்;
இது யெகோவாவின் திருவாக்கு.

**11** லீபனோனே, உன் வாசல்களைத்திற,
அக்கினி உன் கேதுருமரங்களைப் பட்சிக்கும்.
2 தேவதாரு விருட்சங்களே புலம்புங்கள்,
கேதுரு மரங்கள் விழுந்தன, சிறந்தவைகள் பாழாக்கப்பட்டன;
பாசானின் கர்வாலி மரங்களே புலம்புங்கள்,
ஆள் நுழையாக்காடு கீழேதள்ளுண்டது.
3 மேய்ப்பவர் அலறும் சத்தம் கேட்கிறது,
அவர் மேன்மை அழிந்தது,
பால சிங்கங்கள் கர்ச்சிக்கிற சத்தம் கேட்கிறது,
யோர்தானின் அடர்த்தியான காடுகள் அழிந்தனவே.
4 என் கடவுளாகிய யெகோவா இப்படிச் சொன்னார்:
5 அடிக்கப்படப்போகிற ஆடுகளை மேய்ப்பாய்; அவைகளை வாங்குகிறவர்கள் குற்றத்தை உணராமல் அவைகளை அடிக்கிறார்கள். அவைகளை விற்கிறவர்கள், யெகோவாவுக்கு ஸ்தோத்திரம், எங்களுக்கு ஐசுவரியம் கிடைத்தது என்கிறார்கள்; அவைகளை மேய்க்கிறவர்கள் அவைகளுக்கு இரங்குகிறதில்லை. 6 நான் இனித் தேசத்தின் குடிகளுக்கு இரங்காமல்—இது யெகோவாவின் திருவாக்கு—இதோ, மனிதர் யாவரையும் அவனவன் அயலான் கையிலும் அவனவன் ராஜாவின் கையிலும் அகப்படப்பண்ணுவேன்; ராஜாக்கள் தேசத்தை அழித்துவிடுவார்கள்; நான் எவரையும் அவர்கள் 7 கைக்குத்தப்புவிப்பதில்லை என்றார். அப்படியே நான் அடிக்கப்படப்போகிற மந்தையை ஆட்டு வியாபாரிகளுக்கென மேய்த்துவந்தேன், நான் இரண்டு கோல்களை எடுத்து ஒன்றிற்கு இனிமை என்றும் ஒன்றிற்கு ஒற்றுமை என்றும் பேரிட்டு மந் 8 தையை மேய்த்துவந்தேன். ஒரே மாதத்திலே மூன்று மேய்ப்பரையும் அகற்றினேன்; நான் அவர்களைப் பொறுக்க முடியாமற் 9 போயிற்று. அவர்கள் என்னையும் வெறுத்தார்கள், அப்பொழுது நான், இனி நான் உங்களை மேய்ப்பதில்லை, சாகிறது சாகட்டும், அழிகிறது அழியட்டும், மீதியானவைகளோ ஒன்றின் மாம்சத்தை ஒன்று தின்னட்டும் என்று சொல்லி | இனிமை என்னப்பட்ட 10 என் கோலை எடுத்து, நான் சகல ஜாதியாரோடும் செய்திருந்த என் உடன்படிக்கை அற்றும்போகும்படி அதை முறித்துப்போட்டேன். அக்காளிலே அது அற்றுப்போ 11 யிற்று; ஆகவே என்னைக் கவனித்துவந்த ஆட்டு வியாபாரிகள் அது யெகோவாவின் வார்த்தையென்று அறிந்து கொண்டனர். அப்பொழுது நான் அவர்களிடம்: உங்கள் 12 பார்வைக்கு நலமெனக் கண்டால் என் கூலியைத்தாருங்கள், இல்லாவிட்டால் இருக்கட்டும் என்று சொன்னேன். அவர்கள் எனக்குக் கூலியாக முப்பது வெள்ளிக் காசை நிறுத்துக் கொடுத்தார்கள். யெகோ 13 வா என்னிடம்: அதைக் கருவூலத்தில் எறிந்துவிடு, இதுவே அவர்கள் என்னை மதித்த சிறந்த மதிப்பு என்றார். அப்படியே நான் அந்த முப்பது வெள்ளிக்காசை எடுத்து அவைகளை யெகோவாவின் ஆலயத்தில் கருவூலத்திலே எறிந்துவிட்டேன். நான் 14 யூதாவுக்கும் இஸ்ரவேலுக்குமுள்ள சகோதர ஒற்றுமையை அற்றுப்போகப் பண்ணும்படி ஒற்றுமை என்னப்பட்ட என் இரண்டாம் கோலையும் முறித்தேன்.

பின்பு யெகோவா என்னிடம்: நீ மதி 15 கெட்ட ஒரு மேய்ப்பனுடைய ஆயுதங்களை இன்னும் எடுத்துக்கொள். இதோ, நான் 16 தேசத்திலே மேய்ப்பவனை ஒருவனை எழும்பப்பண்ணுவேன்; அவன் அழிந்துபோகிறவைகளைப் பராமரியான், சிதறிப்போவதைத் தேடான், தொறுங்குண்டதைக் குணமாக்கான், சுகமாயிருக்கிறதை ஆதரியாமல் கொழுத்தவற்றின் மாம்சத்தைத் தின்கிறான், அவைகளின் குளம்புகளை உடைத்துப் போடுவான்.

மந்தையைக் கைவிடுகிற மதிகெட்ட 17
மேய்ப்பனுக்கு ஐயோ கேடாம்!
பட்டயம் அவன் புயத்தின்மேலும்
அவன் வலது கண்ணின்மேலும் வரும்;
அவன் புயம் முற்றிலும் சும்பிப்போம்,
அவன் வலதுகண் முற்றிலும் இருண்டு போம்

என்று சொன்னார்.

இஸ்ரவேலைப்பற்றிய யெகோவாவின் **12**
வார்த்தை என்னும் கடினவாக்கு.
வானங்களை விரித்துப் பூமியை அஸ்தி
பாரப்படுத்தி மனிதனுடைய ஆவியை அவ

னுக்குள் உண்டாக்குகிற யெகோவாவின்
2 திருவாக்கு இதுவே: இதோ, சுற்றிலுமுள்ள
சகல ஜாதியாருக்கும் நான் எருசலேமை
வெலித்துத் தத்தளிக்கும் பாத்திரமாக்கு
கிறேன்; எருசலேமுக்கு விரோதமாகப்
போடப்படும் முற்றுகையிலே யூதாவுக்கும்
3 அப்படியேயாகும். அந்நாளிலே நான்
எருசலேமைச் சகல ஜாதியாருக்கும் பத்த
யத் தூக்குக்கல்லாக்குவேன், அதைத் தூக்
குகிற யாவரும் காயமுறுவது நிண்ணம்;
பூமியிலுள்ள ஜாதியார் எல்லாரும் அதற்கு
விரோதமாய்க் கூடிக்கொள்வார்கள்

4 அந்நாளிலே—இது யெகோவாவின் திரு
வாக்கு—நான் குதிரைகளையெல்லாம்திகைப்
பிலும் அவற்றின்மேல் ஏறியிருக்கிறவர்
களை யெல்லாம் புத்தி மயக்கத்திலும் வா
திப்பேன்; ஜாதியாரின் எல்லாக் குதிரைகளை
யும் குருட்டாட்டத்திலும் வாதிக்கும்
போது யூதா வீட்டார்மேல் கண்ணோக்கமா
5 யிருப்பேன். அப்பொழுது யூதா கோத்
திரத் தலைவர் தங்கள் இருதயத்திலே பேசி,
எருசலேமின் குடிகள், சேனைகளின் யெ
கோவாவாகிய தங்கள் கடவுளில் எங்கள்
6 பலம் என்று சொல்லுவார்கள்: அந்நாளில்
யூதாவின் கோத்திரத்தலைவரை விறகுகளுக்
குள்ளே எரிகிற நெருப்புச்சட்டியையும்
வைக்கோல் கட்டுகளுக்குள்ளே எரிகிற
தீவர்த்தியையும் போலாக்குவேன்; அவர்
கள் வலது புறமும் இடது புறமும் சுற்
றிலுமுள்ள சகல ஜாதியாரையும் பட்சிப்
பார்கள்; எருசலேம் இப்போதிருக்கும் தன்
ஸ்தானத்திலேயே இனிமேலும் வீற்றிருக்
7 கும்: தாவீது வீட்டாரின் மகிமையும் எருச
லேமின் குடிகளுடைய மகிமையும் யூதா
வின் மகிமையிலும் அதிகமாகாதபடி யெகோ
வா யூதாவின் கூடாரங்களை முதல் முதல்
8 இரட்சிப்பார். அந்நாளிலே யெகோவா
எருசலேமின் குடிகளைக் காப்பாற்றுவார்;
அவர்களில் தள்ளாடுபவன் அந்நாளிலே தா
வீதைப் போலிருப்பான்; தாவீது வீட்டார்
தெய்வத்தைப்போலும் அவர்களுக்கு முன்
சென்ற யெகோவாவின் தூதனைப்போலு
9 மிருப்பார்கள். அந்நாளிலே எருசலே
முக்கு விரோதமாய் வருகிற சகல ஜாதியா
ரையும் அழிக்கப்பார்ப்பேன்.

10 நான் தாவீது வீட்டாரின் மேலும் எருச
லேமின் குடிகள்மேலும் கிருபையின் ஆவி
யையும் விண்ணப்பங்களின் ஆவியையும்
ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்
கள் குத்தினவனை நோக்கிப்பார்த்து, ஒரு
வன் தன் ஒரே பேருனவனைப்பற்றிப்புலம்பு
கிறதுபோல அவனைப்பற்றிப் புலம்பி ஒரு
வன் தன் தலைப்பிள்ளையைப்பற்றித் துக்கிக்
கிறதுபோல அவனைப்பற்றி மனங்கசந்து
துக்கிப்பார்கள். அந்நாளிலே மெகிதோன் 11
பள்ளத்தாக்கின் ஊராகிய அதாத்rமோ
னின் புலம்பலைப்போல எருசலேமிலே
புலம்பல் பெரிதாயிருக்கும். தேசம் புலம் 12
பிக்கொண்டிருக்கும் ஒவ்வொரு வம்சமும்
தனித்தனியாகப் புலம்பும்; தாவீது வீட்டு
வம்சத்தார் தனியேயும் அவர்கள் ஸ்திரீகள்
தனியேயும், நாத்தான்வீட்டு வம்சத்தார்
தனியேயும் அவர்கள் ஸ்திரீகள் தனியே
யும், | லேவிவீட்டு வம்சத்தார் தனியேயும் 13
அவர்கள் ஸ்திரீகள் தனியேயும், சிமேயி
வீட்டு வம்சத்தார் தனியேயும் அவர்கள்
ஸ்திரீகள்தனியேயும் | மீதியான மற்ற சகல 14
வம்சங்களிலும் ஒவ்வொரு வம்சத்தார்
தனித்தனியேயும் அவர்கள் ஸ்திரீகள் தனித்
தனியேயும் புலம்புவார்கள்.

அந்நாளிலே பாவத்தையும் அழுக்கை **13**
யும் நீக்கத் தாவீதின் வீட்டாருக்கும் எருச
லேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு
ஊற்று இருக்கும். அந்நாளிலே—இது 2
சேனைகளுடைய யெகோவாவின் திரு
வாக்கு—நான் விக்கிரகங்களின் நாமங்
களும் தேசத்தில் இராதபடி அழிப்பேன்,
அவைகள் இனி நினைக்கப்படுவதில்லை;
தீர்க்க தரிசனம் சொல்லுகிறவர்களையும்
அசுத்தத்தின் ஆவியையும் தேசத்திலிருந்து
அகற்றிவிடுவேன். இனி ஒருவன் தீர்க்க 3
தரிசனம் சொல்வானாலும் அவனைப்பெற்ற
அவன் தகப்பனும் அவன் தாயும் அவனைப்
பார்த்து, நீ யெகோவாவின் நாமத்திலே
பொய் பேசுகிறபடியால் நீ உயிரோடிருக்கப்
படாது என்று சொல்லி, அவனைப்பெற்ற
அவன் தகப்பனும் அவன் தாயும் அவன்
தீர்க்கதரிசனம் சொல்லுகையிலேயே அவ
னைக் குத்திப்போடுவார்கள். அந்நாளிலே 4
தீர்க்கதரிசனம் சொல்லுகிற எவனும், தீர்க்க
தரிசனம் சொல்லுகையிலேயே தான் கண்ட
தரிசனத்தினால் வெட்கத்துக்குள்ளாவான்;
பொய் சொல்லும்படி இனி அவன் மயிரினா
லான அங்கியைப் போர்த்துக்கொள்ளான்.
நான்தீர்க்கதரிசியல்ல பயிரிடுகிறவன், சிறு 5
வயது முதலே அடிமையாகக் கொள்ளப்
பட்டவன் என்று சொல்லுவான். அப்பொ 6
ழுது இனங்கள்அவனைப் பார்த்து, உன் மார்பி
லிருக்கிற இந்த வடுக்கள் எதென்று கேட்
டால்,என் சிநேகிதரின் வீட்டிலே காயம்பட்
டதினால் வந்தவைகள் என்று சொல்வான்.

பட்டயமே, என் மேய்ப்பன் மேலும் 7
எனது நெருங்கியதோழன்மேலும் எழும்பு;

இது சேனைகளுடைய யெகோவாவின்
திருவாக்கு.
மேய்ப்பவனை வெட்டு, ஆடுகள் சிதறடிக்
கப்படும்,
என் கரத்தையோ சிறுவர்மேல் திரும்ப
வைப்பேன்.
8 தேசத்திலெங்கும்—இது யெகோவாவின்
திருவாக்கு—
மூன்றில் இரண்டுபங்கு மனிதர் சங்கரிக்
கப்பட்டு மாண்டுபோவார்கள்,
மூன்றும் பங்கே அதில் மீதியாயிருக்
கும்.
9 அந்த மூன்றும்பங்கை நான் அக்கினிக்
குட்படப்பண்ணி
வெள்ளியைச் சுத்திகரிக்கிறதுபோல
அவர்களைச் சுத்திகரித்துப்
பொன்னைப் புடமிடுகிறதுபோல அவர்
களைப் புடமிடுவேன்.
அவர்கள் என் நாமத்தைத் தொழுது
கொள்வார்கள்,
நான் அவர்களுக்குச் செவிசாய்ப்பேன்;
இது என் ஜனமென்று நான் சொல்லு
வேன்,
யெகோவா எங்கள் கடவுள் என்று
அவர்கள் சொல்லுவார்கள்.

**14** இதோ யெகோவாவுக்குரிய நாளொன்று
வருகிறது.
உன்னில் கொள்ளையானது உன் நடு
2 விலே பங்கிடப்படும். எருசலேமுக்கு
விரோதமாக யுத்தம்பண்ணச் சகல ஜாதியா
ரையும் கூட்டுவேன், நகரம் பிடிபடும், வீடு
கள் கொள்ளையாகும், ஸ்திரீகள் அவமானத்
துக்குள்ளாவார்கள், நகரத்தில் பாதி மனிதர்
சிறைப்பட்டுப்போவார்கள், மீதியான ஜன
மோ நகரத்திலிருந்து அழிக்கப்படுவதில்லை.
3 யெகோவா புறப்பட்டு யுத்தகாளிலே போ
ராடுவதுபோல் அந்த ஜாதியாரோடே போ
4 ராடுவார். அந்நாளிலே அவருடைய பாதங்
கள் எருசலேமுக்கு எதிரே கிழக்கே இருக்
கிற ஒலிவமலையின்மேல் நிற்கும்; அப்
பொழுது ஒலிவமலை நடுமையத்திலே கிழக்கு
மேற்காய்ப் பிளந்துபோம், மகாபெரிய
பள்ளத்தாக்கு உண்டாகும். பாதிமலை
வடபக்கத்திலும் பாதிமலை தென்பக்கத்திலும்
5 விலகிப்போம். அப்பொழுது என் மலை
களின் பள்ளத்தாக்கு வழியாய்த் தப்பும்படி
ஓடிப்போவீர்கள், மலைகளின் பள்ளத்தாக்கு
ஆத்சல்மட்டும் போகும், நீங்கள் யூதா
ராஜாவாகிய உசியாவின் நாட்களிலே பூமி
யதிர்ச்சிக்குத் தப்ப ஓடிப்போனது போல
ஓடிப்போவீர்கள், என் கடவுளாகிய யெ
கோவா தமது சகல பரிசுத்தவான்களோடும்
வருவார்.
அந்நாளில் சுடர்களின் வெளிச்சம் 6
இராது, அவை இருண்டுபோம். அது 7
விபரீதமானநாள், அது யெகோவாவுக்குத்
தான் தெரியும்; பகலுமிராது, இரவுமிராது;
சாயங்காலத்திலே வெளிச்சமிருக்கும். அந் 8
நாளிலே ஜீவதண்ணீர்கள் எருசலேமிலி
ருந்து புறப்பட்டுப் பாதி கீழ்சமுத்திரத்திற்
கும் பாதி மேல்சமுத்திரத்திற்கும் போகும்,
மாரிகாலத்திலும் கோடைகாலத்திலும் அப்
படியிருக்கும். யெகோவா பூமியின் மீ 9
தெங்கும் ராஜாவாயிருப்பார், அந்நாளில்
யெகோவா ஒருவரே இருப்பார், அவரு
டைய திருநாமம் ஒன்றேயிருக்கும். தேச 10
மெல்லாம் கேபாதொடங்கி எருசலேமுக்
குத் தெற்கே இருக்கிற ரிம்மோன்வரைக்
கும் சமபூமியாகிவிடும்; எருசலேமோ
உயர்ந்ததாகி, அது இருக்குமிடத்திலேயே
பென்யமீன் வாசல்தொடங்கி மூன்னைவாச
லிருந்த இடமட்டும், மூலைவாசல், கனனே
யேல் கோபுரம், ராஜாவின் திராட்ச ஆலை
கள் இவைமட்டும் குடியேற்றப்பட்டிருக்
கும். அதிலே ஜனங்கள் வாசம்பண்ணுவார் 11
கள், இனிச்சாபத்துக்குட்படுவதில்லை, எரு
சலேம் பயமின்றியிருக்கும்.
எருசலேமுக்கு விரோதமாக யுத்தம் 12
பண்ணவந்த சகல ஜாதியார்மேலும் யெ
கோவா அனுப்பும் வாதை இதுவே: அவர்
கள் காலூன்றி நிற்கையிலேயே அவர்கள்
சதை அழுகிப் போகச்செய்வார், அவர்கள்
கண்கள் தங்கள் குழிகளிலே அழுகிப்போ
கும்; அவர்கள் நாவு அவர்கள் வாயிலே
அழுகிப்போகும். அந்நாளிலே யெகோவா 13
பெரிய கலக்கத்தை அவர்களுக்குள் அனுப்
புவார். ஒவ்வொருவனும் தன்தன் அயலான்
மேல் கைபோடுவான், ஒவ்வொருவன்
கையும் அவனவன் அயலான் கைக்கு
விரோதமாக எழும்பும். யூதாவும் எரு 14
சலேமிலே யுத்தம்பண்ணும், அப்பொழுது
சுற்றிலுமுள்ள சகல ஜாதியாரின் ஆஸ்தியா
கிய பொன்னும் வெள்ளியும் வஸ்திரங்களும்
மகாதிரளாகக் கூட்டப்படும். அந்தப் 15
பாளயங்களில் இருக்கும் குதிரைகள்,
கோவேறுகழுதைகள், ஒட்டகங்கள், கழு
தைகள் முதலிய எல்லாமிருகங்களுக்கும்
வரும் வாதையும் அந்த வாதைபோலவே
இருக்கும்.
எருசலேமுக்கு விரோதமாக வந்திருந்த 16
சகல ஜாதியாரிலும் மீதியான யாவரும்
சேனைகளின் யெகோவாவாகிய ராஜாவைத்
தொழுதுகொள்வதற்கும் கூடார உற்சவத்

தை ஆசரிப்பதற்கும் வருஷாவருஷம் வரு
17 வார்கள். அப்பொழுது பூமியின் வம்சங்களிலே சேனைகளின் யெகோவாவாகிய ராஜாவைத் தொழுதுகொள்வதற்கு எருசலேமுக்கு வராதவர்கள் எவர்களோ அவர்
18 கள்மேல் மழைபெய்வதில்லே. எகிப்தியவம்சத்தார் வராதிருப்பார்களானால் அவர்கள்மேலும் மழைபெய்வதில்லே; கூடார உற்சவத்தை ஆசரிக்கவராத ஜாதியார்மேல் யெ
19 கோவா அனுப்பும் வாதை இதுவே. எகிப்தியருக்கும் கூடார உற்சவத்தை ஆசரிக்க வராத சகல ஜாதியாருக்கும் வரும் ஆக்கினை இதுவே.

அக்காலிலே குதிரைகளின் மணிகளிலே 20
யெகோவாவுக்குப் பரிசுத்தடை என்பது எழுதியிருக்கும்; யெகோவாவின் ஆலயத்திலுள்ள பாண்கள் பலிபீடத்தின் முன்னிருக்கிற பாத்திரங்களைப்போலிருக்கும். எருசலேமிலும் யூதாவிலுமுள்ள எல்லாப் 21
பாண்களும் சேனைகளின் யெகோவாவுக்குப் பரிசுத்தடையென்றிருக்கும். பலியிடுகிறவரும்வந்து அவைகளில் எடுத்து அவைகளில் சமைப்பார்கள்; அக்காலமுதல் சேனைகளுடைய யெகோவாவின் ஆலயத்திலே யாதொரு காலனியனும் வருவதில்லே.

---

# MALACHI

# மலாகி

**1** மலாகியின் மூலமாய் இஸ்ரவேலுக்கு வந்த யெகோவாவின் வார்த்தையென்னும் கடினவாக்கு.

2 நான் உங்களில் அன்புகூர்ந்தேன் என்று யெகோவா சொல்லுகிறார்; நீங்களோ, உமது அன்பை எப்படிக் காட்டினீர் என்று சொல்லுகிறீர்கள், ஏசா யாக்கோபுக்குச்
3 சகோதரன் அல்லவோ? — இது யெகோவாவின் திருவாக்கு — ஆகிலும் யாக்கோபில் நான் அன்புகூர்ந்தேன். ஏசாவையோ நான் பகைத்தேன்; அவனுடைய மலைகளைப் பாழாக்கி, அவன் சுதந்தரத்தை வனந்தர
4 நரிகளுக்குக் கொடுத்தேன். ஏதோமியர்: நாம் அழிக்கப்பட்டோம், எனினும் பாழானவைகளைத் திரும்பக் கட்டுவோம் என்று சொல்லுகிறார்கள்; அதற்குச் சேனைகளின் யெகோவா, அவர்கள் கட்டுவார்கள் நான் இடிப்பேன்; அவர்களுக்குத் தெய்வ பயமற்ற நாடு என்றும், யெகோவா என்றைக்கும் சினமவைக்கிற ஜனமென்றும்
5 பேரிடப்படும் என்கிறார். உங்கள் கண்களே இதைக்காணும்; இஸ்ரவேலின் எல்லைக்கு அப்பாலும் யெகோவாவின் மகிமை விளங்கும் என்று நீங்களே சொல்வீர்கள்.

6 குமாரன் தன் பிதாவைக் கனம்பண்ணுகிறான், அடிமையும் தன் எஜமானைக் கனம்பண்ணுகிறான்; நான் பிதாவானால் எனக்குரிய கனம் எங்கே? நான் எஜமானனால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே என்று சேனைகளின் யெகோவா தமது திருநாமத்தை அசட்டைபண்ணுகிற ஆசாரியராகிய உங்களிடம் சொல்லுகிறார்; நீங்களோ, உமது நாமத்தை எதினாலே அசட்டைபண்ணினோம் என்கிறீர்கள். என் பீடத்தின்மேல் 7
தகாத அப்பத்தைப் படைக்கிறீர்களே என்கிறார், நீங்களோ, தகாத எதை உமக்குச் செய்தோம் என்கிறீர்கள்; யெகோவாவின் மேசை அசட்டைபண்ணத்தக்கது என்று சொல்லுகிறீர்களே, | குருடானதைப் 8
பலியிடக் கொண்டுவரும்போது, அது தீமையல்ல என்றும் முடமானதையும் நோய்கொண்டதையும் கொண்டுவரும்போது, அது தீமையல்ல என்றும் சொல்லுகிறீர்களே; அப்படிப்பட்டதை நீ உன் அதிபதிக்குச் செலுத்திப்பார், அவன் உன்மேல் பிரியமாயிருப்பானோ? உனக்குத் தயை காட்டுவானோ என்று சேனைகளின் யெகோவா சொல்லுகிறார். இப்போதும் கட 9
வுள் நமக்கு இரங்கும்படி அவருடைய தயவைநாடிக் கெஞ்சிப்பாருங்கள்; இது உங்களாலேயே வந்தது, அவர் உங்களுக்குத் தயை காட்டுவாரோ என்று சேனைகளின் யெகோவா சொல்லுகிறார். என் 10
பலிபீடத்தின்மேல் வீணாய் அக்கினியைப் போடாதபடி எவனாகிலும் ஆலயவாசலைப் பூட்டினால் எத்தனை நன்றாம்! உங்கள்பேரில் எனக்குப் பிரியமில்லையென்று சேனைகளின் யெகோவா சொல்லுகிறார்; உங்கள் கைகளின் காணிக்கையை நான் அங்கீகரியேன்.
சூரியன் உதிக்கிற திசைதொடங்கி அது 11

அஸ்தமிக்கிற திசைவரைக்கும் ஜாதியாருக்குள்ளே என் நாமமே பெரிது; சகல இடங்களிலும் என் நாமத்துக்குத் தூபமும் சுத்தமான காணிக்கையும் செலுத்தப்படுகிறது; ஜாதியாருக்குள்ளே என் நாமமே பெரிது என்று சேனைகளின் யெகோவா சொல்லுகி 12 றார். நீங்களோ என் நாமத்தைப் பரிசுத்த மற்றதுபோலாக்குகிறீர்கள், யெகோவாவின் மேசை விசேஷமற்றது என்றும், அதில் ஆகாரமாகப் படைக்கும் பலன் அசட்டை பண்ணத்தக்கது என்றும் சொல்லுகிறீர் 13 களே. இதோ, என்ன வருத்தமென்று சொல்லி, அதை ஒரு நிரணமாய்ப்பேசி, பறித்ததையும் முடமானதையும் நோய் கொண்டதையும்காணிக்கையாகக்கொண்டு வருகிறீர்கள் என்று சேனைகளின் யெகோவா சொல்லுகிறார்; அதை உங்கள் கைகளில் அங்கிகரித்துக்கொள்வேனோ என்று யெ 14 கோவா சொல்லுகிறார். அவன் மந்தையில் பழுதற்ற கடா இருக்கையிலே பழுதானதை ஆண்டவருக்கு நேர்ந்துகொண்டு பலியிடுகிறகபடஸ்தன், அவன் சாபத்திற்குரியவன்; நானே மகத்துவமான ராஜா, என் நாமம் ஜாதியாருக்குள்ளே பயங்கரமானது என்று சேனைகளின் யெகோவா சொல்லுகிறார்.

**2** இப்போதும் ஆசாரியர்களே, இந்தக் 2 கட்டளை உங்களுக்குரியது. நீங்கள் செவி கொடாமலும் என் நாமத்தை மகிமைப்படுத்தும்படி இதைக் கவனியாமலுமிருந்தால் நான் உங்களுக்குள்ளே சாபத்தை அனுப்பி உங்கள் ஆசீர்வாதங்களையும் சாபமாக்குவேன்; நீங்கள் கவனியாமற்போனதினால் அவைகளைச் சபித்துவிட்டேன் என்று சேனைகளின் யெகோவா சொல்லுகிறார்.
3 இதோ, நான் உங்கள் சந்ததியாரைக் கெடுத்து உங்கள் உற்சவங்களின் குப்பைகளையே உங்கள் முகங்களில் இறைப்பேன், அதனோடுகூட நீங்களும் எறியுண்டு போவீர் 4 கள். லேவியோடே பண்ணின என் உடன்படிக்கை நிலைத்திருக்கும்படி இந்தக் கட்டளையை உங்களிடத்திற்கு அனுப்பினேன் என்கிறதை அப்பொழுது அறிந்துகொள்வீர்கள் என்று சேனைகளின் யெகோவா 5 சொல்லுகிறார். அவனோடே நான் செய்த உடன்படிக்கை ஜீவனையும் சமாதானத்தையும் பற்றியது; நான் அவனுக்குப் பயபக்தியைக் கட்டளையிட்டேன், அவன் என்னிடத்தில் பயபக்தியாயிருந்து என் நாமத்துக்கு 6 நடுங்கி நடந்தான். உண்மை உபதேசம் அவன் வாயில் இருந்தது, அவன் உதடுகளில் அநியாயம் காணப்படவில்லை, அவன் என்னோடே சமாதானமும் நேர்மையுமாய் நடந்து அநேகரை அக்கிரமத்தினின்று திருப்பினான். ஆசாரியன் உதடுகள் அறிவைக் 7 காக்கவேண்டும், அவன் வாயினின்று உபதேசம் வரத்தேடுவார்கள்; அவனே சேனைகளுடைய யெகோவாவின் தூதன். நீங்களோ 8 வழியைவிட்டு விலகி அநேகரை உபதேசத்தில் இடறப்பண்ணினீர்கள், லேவியின் உடன்படிக்கையைக் கெடுத்துவிட்டீர்கள் என்று சேனைகளின் யெகோவா சொல்லுகிறார். நீங்கள் என் வழிகளைக் காத்து 9 நடவாமல் உபதேசத்திலே பட்சபாதம் பண்ணினபடியினால் நானும் உங்களை எல்லா ஜனத்துக்கு முன்பாகவும் அசட்டை பண்ணத்தக்கவர்களும் தாழ்வானவர்களுமாக்கினேன்.

நம்மெல்லாருக்கும் ஒரே பிதா இல்லை 10 யோ? நம்மைப் படைத்தவர் ஒரே கடவுளல்லவோ? அவனவன் தன்தன் சகோதரனுக்குத் துரோகம்பண்ணி நம் பிதாக்களின் உடன்படிக்கையைப் பரிசுத்த மற்றதுபோலாக்குவானேன்? யூதா துரோகம் 11 பண்ணினது; இஸ்ரவேலிலும் எருசலேமிலும் அருவருப்பானது செய்யப்பட்டது, யெகோவா பிரியப்படுகிற அவருடைய பரிசுத்தஸ்தலத்தை யூதா நாட்டார் பரிசுத்த மற்றதுபோலாக்கி, அந்திய தேவதைகளை வணங்கும் பெண்களை விவாகம் பண்ணினார்கள். இப்படிப்பட்டவைகளைச் செய்கிற 12 வனுக்கென யாக்கோபின் கூடாரங்களில் விழித்துக் காக்கிறவனும் பரிந்து பேசுகிறவனும் சேனைகளின் யெகோவாவுக்குக் காணிக்கை படைக்கிறவனும் இராதபடி யெகோவா சங்காரம்பண்ணுவார். நீங்கள் 13 செய்கிற மற்றொன்றுமுண்டு, யெகோவாவின் பீடத்தைக் கண்ணீரினாலும் அழுகையினாலும் பெருமூச்சியினாலும் மூடுகிறீர்கள்; ஆகவே அவர் இனிக் காணிக்கையை மதியார், அதை உங்கள் கைகளில் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளவுமாட்டார். காரணம் 14 என்னவென்று நீங்கள் கேட்கிறீர்கள், யெகோவா உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருந்தார்; உன் தோழியும் உன் உடன்படிக்கையின் மனைவியுமாயிருக்க அவளுக்கு நீ துரோகம்பண்ணினாயே. நம்மைப் படைத்தவரும் நம்மில் 15 ஜீவிகள் இருந்துகொண்டே இருக்கச்செய்பவரும் ஒருவரேயல்லவா? ஒருவராகிய அவர் கருதித் தேடுவதென்ன? கடவுளுக்குகந்த சந்ததி இருக்கவேண்டுமென்பதே, ஆகையால் ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம் பண்ணுதபடி உங்

கள் ஆவிக்குள்ளேயே எச்சரிக்கையாயிருங்
16 கள். மனிஷியைத் தள்ளிவிடுவது எனக்கு
வெறுப்பு என்று இஸ்ரவேலின் கடவுளா
கிய யெகோவா சொல்லுகிறார்; அப்படிச்
செய்கிறவன் தன் வஸ்திரத்தின்மேல் கொடு
மையைப்போட்டு மூடுகிறான் என்று சேனை
களின் யெகோவா சொல்லுகிறார்; ஆகை
யால் நீங்கள் துரோகம் பண்ணுதபடி உங்
கள் ஆவிக்குள்ளேயே எச்சரிக்கையாயிருங்
கள்.

17 உங்கள் வார்த்தைகளினாலே யெகோ
வாவை வருத்தப்படுத்துகிறீர்கள், எப்படி
வருத்தப்படுத்துகிறோம் என்று கேட்கிறீர்
கள், தீமைசெய்கிறவன் எவனும் யெகோவா
வின் பார்வையில் நல்லவன் என்றும் அப்
படிப்பட்டவர்களில் அவர் பிரியங்கொள்ளு
கிறானென்றும் அப்படியில்லையென்றால் நியா
யந்தீர்க்கிற கடவுள் எங்கே யென்றும் நீங்
கள் சொல்லுகிறதினாலேயே.

**3** இதோ, என் தூதனை அனுப்புகிறேன்,
அவன் எனக்கு முன்பாகப்போய் வழியை
ஆயத்தம்பண்ணுவான்; அப்பொழுது நீங்
கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்
புகிற உடன்படிக்கையின் தூதனுமான
வர் தமது ஆலயத்துக்கு விரைந்துவருவார்;
இதோ, வருகிறார் என்று சேனைகளின்
2 யெகோவா சொல்லுகிறார். அவர் வரும்
காலைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படு
கையில் நிலைநிற்பவன் யார்? அவர் புடமிடு
கிறவனுடைய அக்கினிபோலவும் வண்ண
ருடைய சவுக்காரம்போலவும் இருப்பார்.
3 அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்
டுச் சுத்திகரித்துக்கொண்டிருப்பார்; லேவி
புத்திரர் யெகோவாவுக்குரியவர்களாகி நீதி
யிலே காணிக்கை செலுத்தும்படி அவர்
அவர்களைச் சுத்திகரித்துப் பொன்னைப்போல
வும் வெள்ளியைப்போலவும் அவர்களைப்
4 புடமிடுவார். அப்பொழுது பூர்வ நாட்
களிலும் முன்னை வருஷங்களிலும் இருந்
ததுபோல யூதாவும் எருசலேமும் செலுத்
தும் காணிக்கை யெகோவாவுக்குகந்த
5 தாகும். நான் நியாயத்தீர்ப்புசெய்யும்படி
உங்களிடம் வருவேன்; சூனியக்காரர், விப
சாரக்காரர், பொய்யாணை இடுகிறவர்கள்,
எனக்குப் பயப்படாமல் கூலிக்காரரின்
கூலியை அபகரித்துக்கொள்ளுகிறவர்கள்,
விதவைகளையும் திக்கற்றவர்களையும் ஒடுக்கு
கிறவர்கள், அந்நியரின் நியாயத்தைப்
புரட்டுகிறவர்கள் ஆகிய இவர்களுக்கு
விரோதமாய் விரைந்துவரும் சாட்சியாவேன்
என்று சேனைகளின் யெகோவா சொல்லுகி
றார்.

6 யெகோவாவாகிய நான் மாறுதலர், நீங்
7 களும் குணம் மாறுமல் இன்னும் யாக்கோ
பின் புத்திரராகவே இருக்கிறீர்கள். உங்
கள் பிதாக்களின் நாட்கள் தொடங்கி நீங்
கள் என் நியமங்களைக் கைக்கொள்ளாமல்
அவைகளைவிட்டு விலகிப்போனீர்கள்; என்
னிடத்திற்குத் திரும்புங்கள் நானும் உங்க
ளிடத்திற்குத் திரும்புவேன் என்று சேனைக
ளின் யெகோவா சொல்லுகிறார்; நீங்களோ
எவ்விதமாய் நாங்கள் திரும்பவேண்டும் என்
8 கிறீர்கள். மனிதன் கடவுளை வஞ்சிப்
பானோ? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள்,
எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்?
தசமபாகத்திலும் காணிக்கைகளிலுமே.
9 சாபம் உங்கள்மேல் வந்தது, நீங்கள் முழு
10 ஜனமும் என்னை வஞ்சித்தீர்கள். என்
வீட்டில் ஆகாரம் இருக்கும்படி தசமபாகங்
களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு
வாருங்கள்; அப்படிச்செய்து என்னைப்
பரீட்சித்து நான் வானத்தின் பலகணிகளைத்
திறந்து இடங்கொள்ளாமற்போகுமட்டும்
உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க
மாட்டேனெனப் பாருங்கள் என்று சே
11 னைகளின் யெகோவா சொல்லுகிறார். பூமி
யின் கனியைப் பட்சித்துப்போடுகிறவை
களை உங்களுக்கெனக் கண்டிப்பேன்;
அவைகள் உங்கள் நிலத்தின் பலனை அழிப்ப
தில்லை, வயலிலுள்ள திராட்சச்செடி பழமற்
றுப்போவதுமில்லை என்று சேனைகளின்
12 யெகோவா சொல்லுகிறார். அப்பொழுது
சகல ஜாதியாரும் உங்களைப் பாக்கியர் என்
பார்கள்; உங்கள் தேசம் இனியதாகும்
என்று சேனைகளின் யெகோவா சொல்லுகி
றார்.

13 நீங்கள் கடின வார்த்தைகளை எனக்கு
விரோதமாய்ப் பேசினீர்கள் என்று யெகோ
வா சொல்லுகிறார்; நீங்களோ, உமக்கு
விரோதமாக நாங்கள் எங்களுக்குள் பேசிய
14 தென்ன என்கிறீர்கள். கடவுளைச் சேவிப்
பது வீணே, அவர் கட்டளையிட்டவைகளைக்
கைக்கொள்ளுகிறதினாலும் சேனைகளின்
யெகோவாவுக்குமுன்பாகத் துக்க ஆடை
தரித்து நடக்கிறதினாலும் பலன் என்ன?
15 இப்போதும் அகந்தையுள்ளவரையே பாக்கி
யர் என்போம், தெய்வபயமற்றவர்களாய்
நடப்போர் பலத்துச் செழிக்கிறார்கள்;
அவர்கள் கடவுளைச் சோதித்துப்பார்த்தாலும்
விடுவிக்கப்படுகிறார்களே என்று சொல்லு
கிறீர்கள்.

16 இப்படியிருக்கையிலேயே யெகோவாவுக்
குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர்
பேசிவந்தார்கள், யெகோவா கவனித்துக்

கேட்டார்; யெகோவாவுக்குப் பயந்து நடக்கிறவர்களுக்கெனவும் அவருடைய திருநாமத்தை நினைக்கிறவர்களுக்கெனவும் ஞாபகப்புஸ்தகம் ஒன்று அவருக்குமுன்பாக
17 எழுதப்பட்டிருக்கிறது. என் வேலையைச் செய்யும்நாளிலே அவர்கள் எனக்குச் சொந்தமாவார்கள் என்று சேனைகளின் யெகோவா சொல்லுகிறார்; ஒருமனிதன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனுக்கு இரக்கங்காட்டுகிறதுபோல நான் அவர்களுக்கு இரக்கங்காட்டுவேன்.
18 அப்பொழுது நீங்கள் நீதிமானுக்கும் தெய்வபயமற்றவனுக்கும் கடவுளைச் சேவிக்கிறவனுக்கும் அவரைச் சேவியாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் கண்டறிவீர்கள்.

**4** இதோ, சூளையைப்போல் எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகந்தைக்காரர் யாவரும் தெய்வபயமற்றவராய் நடப்போர் யாவரும் தரும்பாவார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அவர்களுக்கு வேரும் கொப்பும் வைக்கப்படுவதில்லை என்று சேனைகளின் யெகோவா
2 சொல்லுகிறார். என் நாமத்துக்குப் பயப்படுகிற உங்கள்மேலேயே நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஒளஷதம் இருக்கும்; நீங்கள் வெளியேறிப் போய்த் தொழுவினின்று வெளிவந்த கொழுத்த கன்றுகளைப்போல் துள்ளுவீர்கள். 3 தெய்வபயமற்றவரை மிதித்துப்போடுவீர்கள், நான் என் வேலையைச்செய்யும் நாளிலே அவர்கள் உங்கள் உள்ளங்கால்களின்கீழ் சாம்பல்போலிருப்பார்கள் என்று சேனைகளின் யெகோவா சொல்லுகிறார்.

4 ஒரேபிலே சமஸ்த இஸ்ரவேலருக்கெனவும் என் ஊழியனுகிய மோசேக்கு நான் கட்டளையிட்ட நியாயப்பிரமாணமாகிய நியமங்களையும் நியாயங்களையும் நினைத்துக் கொள்ளுங்கள்.

5 இதோ, யெகோவாவின் பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். 6 நான் வந்து பூமியைச் சாபத்துக்குட்படுத்தாதபடி அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும் பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்.

பழைய ஏற்பாடு முற்றிற்று.

# புதிய ஏற்பாடு

இது மூலபாஷையாகிய கிரேக்குக் கிரைசயத்

திருத்திய மொழிபெயர்ப்பு



சென்னை

பிரித்தானிய சர்வதேச வேதாகமச் சங்கத்து

சென்னை உதவிச் சங்கம்

—

1936

# புதிய ஏற்பாட்டில் அடங்கிய ஆகமங்களின் பெயர், முறை, பக்கம்


| ஆகமம் | பக்கம் |
|---|---|
| மத்தேயு ... ... ... ... | 3 |
| மார்க்கு ... ... ... ... | 42 |
| லூக்கா ... ... ... ... | 67 |
| யோவான் ... ... ... ... | 109 |
| அப்போஸ்தலர் வர்த்தமானம் ... | 140 |
| ரோமர் ... ... ... ... | 181 |
| I. கொரிந்தியர் ... ... ... | 198 |
| II. கொரிந்தியர் ... ... ... | 214 |
| கலாத்தியர் ... ... ... ... | 225 |
| எபேசியர் ... ... ... ... | 231 |
| பிலிப்பியர் ... ... ... ... | 237 |
| கொலோசேயர் ... ... ... | 241 |
| I. தெசலோனிக்கேயர் ... ... | 245 |
| II. தெசலோனிக்கேயர் ... ... | 248 |

| ஆகமம் | பக்கம் |
|---|---|
| I. தீமோத்தேயு ... ... ... | 251 |
| II. தீமோத்தேயு ... ... ... | 255 |
| தீத்து ... ... ... | 259 |
| பிலேமோன் ... ... ... | 261 |
| எபிரேயர் ... ... ... | 262 |
| யாக்கோபு ... ... ... | 274 |
| I. பேதுரு ... ... ... | 279 |
| II. பேதுரு ... ... ... | 283 |
| I. யோவான் ... ... ... | 286 |
| II. யோவான் ... ... ... | 290 |
| III. யோவான் ... ... ... | 291 |
| யூதா ... ... ... | 292 |
| யோவானின் தரிசனம் ... ... | 293 |

THE GOSPEL OF MATTHEW

# மத்தேயு சுவிசேஷம்

1 ஆபிரகாமின் குமாரனும் தாவீதின்
குமாரனுமான இயேசுகிறிஸ்துவின் வம்ச
அட்டவணை:
2 ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான்; ஈசாக்கு
யாக்கோபைப் பெற்றான்; யாக்
கோபு யூதாவையும் அவன் சகோதரரையும்
3 பெற்றான்; யூதா பாரேசையும் சாராவையும்
தாமாரினிடம் பெற்றான்; பாரேஸ் எஸ்ரோ
மைப் பெற்றான்; எஸ்ரோம் ஆராமைப்
4 பெற்றான்; ஆராம் அம்மினதாபைப் பெற்
றான்; அம்மினதாப் நகசோனைப் பெற்றான்;
5 நகசோன் சல்மோனைப் பெற்றான்; சல்
மோன் போவாசை ராகாபினிடம் பெற்
றான்; போவாஸ் இயோபேதை ரூத்தினி
6 டம் பெற்றான்; | இயோபேத் ஈசாயைப்
பெற்றான்; ஈசாய் தாவீதரசனைப் பெற்றான்
தாவீது உரியாவின் மனைவியினிடம்
7 சாலொமோனைப் பெற்றான்; சாலொமோன்
ரெகொபெயாமைப் பெற்றான்; ரெகொபெ
யாம் அபியாவைப் பெற்றான்; அபியா
8 ஆசாப்பைப் பெற்றான்; | ஆசாப் யோச
பாத்தைப் பெற்றான்; யோசபாத் யோரா
மைப் பெற்றான்; யோராம் உசியாவைப்
9 பெற்றான்; உசியா யோதாமைப் பெற்றான்;
யோதாம் ஆகாசைப் பெற்றான்; ஆகாஸ்
10 எசேக்கியாவைப் பெற்றான்; எசேக்கியா
மனாசேயைப் பெற்றான்; மனாசே ஆமோ
சைப் பெற்றான்; ஆமோஸ் யோசியாவைப்
11 பெற்றான்; பாபிலோனுக்குச் சிறைப்பட்
டுப்போகுங் காலத்தில் யோசியா எகொனி
யாவையும் அவன் சகோதரரையும் பெற்
றான்.
12 பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போன
பின் எகொனியா சலாத்தியேலைப் பெற்
றான்; சலாத்தியேல் சொரொபாபேலைப்பெற்
13 றான்; சொரொபாபேல் அபியூதைப் பெற்
றான்; அபியூத் எலியாக்கீமைப் பெற்றான்;
எலியாக்கீம் ஆசோரைப் பெற்றான்; ஆசோர்
14 சாதோக்கைப் பெற்றான்; சாதோக்கு
ஆகீமைப் பெற்றான்; ஆகீம் எலியூதைப்
15 பெற்றான்; எலியூத் எலெயாசாரைப் பெற்
றான்; எலெயாசார் மாத்தானைப் பெற்றான்;
மாத்தான் யாக்கோபைப் பெற்றான்; யாக்
16 கோபு மரியம்மாளின் புருஷனாகிய யோ
சேப்பைப் பெற்றான்; அவளிடம் கிறிஸ்து
எனப்படுகிற இயேசு பிறந்தார்.
17 ஆகவே இத்தக் தலைமுறைகளெல்லாம்:
ஆபிரகாம்முதல் தாவீதுவரைக்கும் பதினான்கு;
தாவீது முதல் பாபிலோனுக்குச் சிறைப்
பட்டுப்போன காலம்வரைக்கும் பதினான்கு;
பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன
காலமுதல் கிறிஸ்துவரைக்கும் பதினான்கு.
18 இயேசுகிறிஸ்துவினுடைய பிறப்பின்
விவரம்: அவருடைய தாயாராகிய மரியம்
மாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்
கையில் அவர்கள் கூடி வாழுமுன் அவள்
கர்ப்பந்தரித்ததாகத் தெரியவந்தது; அது
வோ பரிசுத்த ஆவியினால் உண்டானது.
19 அவள் புருஷன் யோசேப்பு நீதிமானாயி
ருந்து அவளை அவமானத்துக்குள்ளாக்க மன
தில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளி
20 விட யோசனையாயிருந்தான். அவன் இப்
படி யோசித்துக் கொண்டிருக்கையில்,
இதோ, கர்த்தரின் தூதன் சொப்பனத்தில்
அவனுக்குத் தோன்றி: தாவீதின் குமாரனே
ய யோசேப்பே, உன் மனைவியாகிய மரி
யாளைச் சேர்த்துக்கொள்ளப் பயப்படாதே;
அவளிடம் உற்பவித்திருக்கிறது பரிசுத்த
21 ஆவியினால் உண்டானது. அவள் ஒரு
குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு
என்று பேரிடுவாயாக; தமது ஜனத்தின்
பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பவர்
அவரே என்றான்.
22 இதோ, கன்னிகையானவள் கர்ப்பவதி
யாகி
ஒரு குமாரனைப் பெறுவாள்;
அவருக்கு இம்மானுவேல் என்று பே
ரிடுவார்கள்
என்று தீர்க்கதரிசியின் மூலமாய் கர்த்தர்
உரைத்தது நிறைவேற இதெல்லாம் நடந்
23 தது. இம்மானுவேல் என்பதற்குக் கட
வுள் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்.
24 யோசேப்பு நித்திரை தெளிந்தெழுந்து
கர்த்தரின் தூதன் தனக்குக் கட்டளையிட்ட

படியே தன் மனைவியைச்சேர்த்துக்கொண்
25 டான்; அவள் குமாரனைப் பெற்றெடுக்கு
மளவும் அவனை அறியாதிருந்தான்; அவ
ருக்கு இயேசு என்று பேரிட்டான்.

**2** ஏரோதரசன் நாட்களில் யூதேயாவி
லுள்ள பெத்லெகேமில் இயேசு பிறந்தபின்
சாஸ்திரிகள் கிழக்கிலிருந்து எருசலேமுக்கு
2 வந்து: யூதருக்கு அரசனாகப் பிறந்தவர் எங்
கே இருக்கிறார்? கிழக்கிலே அவருடைய
நட்சத்திரத்தைக் கண்டு அவரைப் பணிந்து
3 கொள்ள வந்தோம் என்றார்கள். அதைக்
கேட்டபோது ஏரோதரசன் கலங்கினான்.
அவனோடுகூட எருசலேம் முழுதும் கலங்
4 கிற்று. அவன் ஜனத்தின் பிரதான ஆசாரி
யர் வேதபாரகர் எல்லாரையும் கூடிவரச்
செய்து: கிறிஸ்து பிறப்பது எங்கே என்று
5 அவர்களிடம் விசாரிக்க | அவர்கள் அவ
னிடம்: யூதேயாவிலுள்ள பெத்லெகேமி
லேயே;

6 யூதேயா நாடே, பெத்லெகேமே, யூதா
வின் பிரபுக்களில் நீ சிறியதேயல்ல;
என் ஜனமாகிய இஸ்ரவேலை மேய்த்து
நடத்தும் பிரபு
உன்னிடத்திலிருந்து புறப்படுவார்
என்று தீர்க்கதரிசியினால் எழுதப்பட்டிருக்
கிறதே என்றார்கள்.

7 அப்பொழுது ஏரோது சாஸ்திரிகளை
இரகசியமாயழைத்து, நட்சத்திரம் காணப்
பட்ட காலத்தைக்குறித்து அவர்களிடம்
8 திட்டமாய் விசாரித்தான். அவர்களைப்
பெத்லெகேமுக்கு அனுப்புகையில்: நீங்கள்
போய்ப் பிள்ளையைக் குறித்துத் திட்டமாய்
விசாரியுங்கள்; நீங்கள் அதைக் கண்ட
பின்பு நானும் வந்து அதைப் பணிந்து
கொள்ளும்படி எனக்கு அறிவியுங்கள்
9 என்று சொன்னான். ராஜா சொன்னதை
அவர்கள் கேட்டுப்போனார்கள். இதோ,
அவர்கள் கிழக்கிலே கண்ட நட்சத்திரம்
பிள்ளையிருந்த ஸ்தலத்திற்குமேல் வந்து நிற்
கும் வரைக்கும் அவர்கள் முன் சென்றது.
10 அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்ட
போது மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்
11 தார்கள். அவர்கள் அந்த வீட்டுக்குள் பிர
வேசித்துத் தாயாராகிய மரியம்மாளிட
மிருந்த பிள்ளையைக்கண்டு சாஷ்டாங்கமாய்
விழுந்து அதைப் பணிந்துகொண்டு தங்கள்
பொக்கிஷங்களைத் திறந்து பொன்னையும்
சாம்பிராணியையும் வெள்ளைப்போளத்தை
யும் அதற்கு காணிக்கையாகப் படைத்தார்
12 கள். பின்பு அவர்கள் ஏரோதினிடத்திற்
குத் திரும்பிப் போகவேண்டாமென்று
சொப்பனத்தில் கடவுளால் எச்சரிக்கப்
பட்டு வேறு வழியாய்த் தங்கள் தேசத்திற்
குப் போய்விட்டார்கள்.

அவர்கள்போனபின், இதோ, கர்த்தரு 13
டைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்
குத் தோன்றி: ஏரோது பிள்ளையைக் கொலை
செய்யத் தேடுவான்; ஆதலால் நீ எழுந்து
பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்
கொண்டு எகிப்துக்குத் தப்பியோடிப்போய்,
நான் உனக்குச் சொல்லும் வரைக்கும் அங்
கே இரு என்றான். அவன் எழுந்து இரவி 14
லேயே பிள்ளையையும் அதின் தாயாரையும்
கூட்டிக்கொண்டு எகிப்துக்குப் போய் |
ஏரோதின் மரணபரியந்தம் அங்கே இருந் 15
தான். எகிப்திலிருந்து என்னுடைய குமா
ரனை வரவழைத்தேன் என்று தீர்க்கதரிசி
யின் மூலமாய்க் கர்த்தர் உரைத்தது நிறை
வேற இப்படி நடந்தது.

அப்பொழுது, சாஸ்திரிகள் தன்னை வஞ்சித் 16
ததை ஏரோது கண்டு மிகுந்த கோபங்
கொண்டு ஆட்களையனுப்பித் தான் சாஸ்திரி
களினிடம் திட்டமாய் விசாரித்த காலத்தின்
படியே இரண்டு வயதும் அதற்குட்பட்ட
தாமாய்ப் பெத்லெகேமிலும் அதின் சகல
எல்லைகளிலுமிருந்த சகல ஆண் குழந்தை
களையும் கொலைசெய்தான்.

ராமாவிலே சத்தம் கேட்டது, 17
அழுகை! மிகுந்த புலம்பல்!
ராகேல் தன் பிள்ளைகள் நிமித்தம் அழுது
அவைகள் இல்லாதபடியால்
தனக்கு ஆறுதல
அடைய மனமில்லா திருந்தாள்
என்று | எரேமியா தீர்க்கதரிசியின் மூல 18
மாய் வந்தவாக்கு அப்பொழுது நிறைவே
றிற்று.

ஏரோது இறந்தபின், இதோ, கர்த்தரு 19
டைய தூதன் எகிப்திலே யோசேப்புக்குச்
சொப்பனத்தில் தோன்றி: நீ எழுந்து பிள்ளை 20
யையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு
இஸ்ரவேல் தேசத்துக்குப் போ; பிள்ளையின்
பிராணனை வாங்கத்தேடினவர்கள் இறந்
தார்கள் என்றான். அவன் எழுந்து பிள்ளை 21
யையும் அதின் தாயாரையும் கூட்டிக்
கொண்டு இஸ்ரவேல் தேசத்துக்கு வந்தான்.
ஆகிலும், தன் தகப்பனாகிய ஏரோதின் ஸ்தா 22
னத்தில் அர்கெலாவு பட்டத்துக்கு வந்து
யூதேயாவில் அரசாளுகிறான் என்று கேள்
விப்பட்டு அங்கே போகப் பயந்தான். அப்
பொழுது அவன் சொப்பனத்தில் கடவு
ளால் எச்சரிப்படைந்து கலிலேயா நாட்
டின் புறங்களுக்கு விலகிப்போய் | நாச 23
ரேத்து என்னும் ஊரில் வந்து வாசஞ்செய்
தான். நசரேயன் எனப்படுவார் என்று

தீர்க்கதரிசிகளின் மூலமாய் வந்தவாக்கு நிறைவேற இப்படி நடந்தது.

**3** அந்நாட்களில் யோவான்ஸ்நானகன் 2 வந்து: மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று யூதேயாவின் வனாந்தரத்தில் பிரசங்கம் பண்ணினான். 3 கர்த்தரின் வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவர் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள்

என வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம்

என்று ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டவன் இவனே. 4 இந்த யோவான் ஒட்டகமயிர் உடைதரித்துத் தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக்கொண்டிருந்தான்; வெட்டுக்கிளியும் காட்டுத்தேனும் அவன் ஆகாரம். 5 அப்பொழுது எருசலேமிலும் யூதேயா முழுவதிலும் யோர்தானுக்கு அடுத்த சுற்றுப்புறம் அனைத்திலு 6 மிருந்தவர்கள் அவனிடம் போய்த் | தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்று 7 வந்தார்கள். பரிசேயரிலும் சதுசேயரிலும் அநேகர் ஞானஸ்நானம் பெற வருகிறதை அவன் கண்டு: விரியன்பாம்புக்குட்டிகளே! வருங்கோபத்துக்குத் தப்பிக்கொள்ள உங் 8 களுக்கு வகை காட்டினவன் யார்? மனந்திரும்புதலுக்கேற்ற கனி கொடுங்கள். 9 ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள் சொல்லிக்கொள்ள நினைக்க வேண்டாம். கடவுள் இந்தக் கற்களிலிருந்து ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை எழுப்ப வல்லவர் என்று உங்களுக்குச் 10 சொல்லுகிறேன். இப்பொழுதே கோடரி மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது. ஆகவே, நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப் 11 படும். மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப் பின் வருகிறவரோ என்னிலும் வல்லவர், அவர் பாதரட்சைகளைக் கழற்ற நான் பாத்திரனல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுப் 12 பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை முற்றும் விளக்கித் தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்.

அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் 13 பெறுவதற்கு இயேசு கலிலேயாவைவிட்டு யோர்தானுக்கருகே அவனிடம் வந்தார். அவனோ: நான் உம்மாலே ஞானஸ்நானம் 14 பெற வேண்டியவனாயிருக்க, நீர் என்னிடம் வருகிறீரே என்று சொல்லி அவரைத் தடுத்தப்பார்த்தான். இயேசுவோ: இப்பொ 15 ழுது இடங்கொடும், நீதியையெல்லாம் இப்படி நிறைவேற்றுவது நமக்கு ஏற்றது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான். இயேசு ஞானஸ்நானம் பெற்ற 16 உடனே ஜலத்திலிருந்து கரையேறினார். இதோ, வானம் திறவுண்டது; தெய்வாவி புறாவைப்போல இறங்கி [1]அவர்மேல் வருகிறதைக் கண்டான். அன்றியும், இதோ, 17 வானத்திலிருந்து ஒரு சத்தம் பிறந்து: இவர் என் நேசகுமாரன், [2]இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.

அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக் **4** கப்படுவதற்கு ஆவியினாலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார். அவர் இரவு 2 பகல் நாற்பதுநாள் உபவாசித்தபின் அவருக்குப் பசித்தது. அப்பொழுது சோத 3 னைக்காரன் அவரிடம் வந்து: நீர் தெய்வகுமாரனேயானால், இந்தக் கற்கள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். அவரோ: 4 மனுஷன் ஆகாரத்தினால் மாத்திரமல்ல, கடவுள் வாயிலிருந்து பிறக்கும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறது என்றார். அப்பொழுது 5 பிசாசு அவரைத் திருநகரத்திற்குக் கொண்டுபோய்த் தெய்வாலயத்து உப்பரிகையின் மேல் அவரை நிறுத்தி: நீர் தெய்வகுமாரனே 6 யானால் இதே குதித்துவிடும்;

அவர் உம்மைக்குறித்துத்
தமது தூதர்களுக்குக் கட்டளையிடுவார்;
உமது பாதம் கல்லில் படாதபடி
அவர்கள் உம்மைத் தங்கள் கைகளில்
ஏந்திக்கொள்வார்கள்

என்று எழுதியிருக்கிறது என்றான். இயேசு 7 அவனிடம்:

உன் கர்த்தராகிய கடவுளைச் சோதியாதே

என்றும் எழுதியிருக்கிறதே என்றார். பின் 8 னும் பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலை மேல் கொண்டுபோய் உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து: நீர் சாஷ் 9 டாங்கமாய் விழுந்து என்னைப் பணிந்து கொண்டால் இவைகளெல்லாவற்றையும்

1 தம்மேல் வருகிறதைக் கண்டார் என்றும் திருப்புலம். 2 இவரில் பிரியங்கொண்டேன் என்றும் திருப்புலம்.

உமக்குத் தருவேன் என்று சொன்னான்.
10 அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் ஆண்டவராகிய கடவுளைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய் என்று எழுதியிருக்கிறதே என்
11 ஞர். அப்பொழுது பிசாசு அவரை விட்டுப் போனான். இதோ, தெய்வதூதர் வந்து அவருக்குப் பணிவிடை செய்தார்கள்.
12 யோவான் சிறையில் வைக்கப்பட்டானென்று அவர் கேள்விப்பட்டுக் கலிலேயா
13 வுக்குப் போய் | நாசரேத்தை விட்டுச் செபுலோன் நப்தலி என்னும் நாடுகளின் எல்லைகளிலிருக்கும் கடற்கரைக்கருகான கப்பர்நகூமுக்கு வந்து வாசஞ்செய்தார்.
14 செபுலோன் நாடு, நப்தலி நாடு, கடற்கரைப் பாதை யோர்தானுக்கப்புறம்,
15 புறஜாதியார் கலிலேயா!
இருளில் உட்கார்ந்திருந்த ஜனங்கள்
பெரு வெளிச்சங் கண்டார்கள்;
மரண [1]இருளின் திசையில்
உட்கார்ந்திருந்தோர்க்கு வெளிச்சம்
உதித்தது
16 என்று | ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாய் வந்த வாக்கு நிறைவேற இப்படி நடந்தது.
17 அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்.
18 அவர் கலிலேயாக் கடலோரமாய் நடந்து போகையில் சகோதரர் இருவரைக் கண்டார். அவர்கள், பேதுரு எனப்பட்ட சீமோனும் அவன் சகோதரன் அந்திரேயாவுமே. இவர்கள் மீன் பிடிக்கிறவர்கள்; கடலில் வலை வீசிக்கொண்டிருந்தார்கள்.
19 அவர்களிடம்: என் பின்னே வாருங்கள்; உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்கு
20 வேன் என்றார். உடனே அவர்கள் வலைகளைவிட்டு அவரைப் பின்பற்றினார்கள்.
21 அவ்விடம்விட்டு அப்பால் போகவே வேறு இரண்டு சகோதரரைக்கண்டார். அவர்கள், செபெதேயுவின் மகன் யாக்கோபும் அவன் சகோதரன் யோவானுமே. இவர்கள் தங்கள் தகப்பன் செபெதேயுவுடன் படவிலிருந்து வலைகளைப் பழுதுபார்த்துக்கொண்டிருந்
22 தார்கள். அவர்களையும் அழைக்க அவர்கள் உடனே தங்கள் படவையும் தகப்பனையும் விட்டு அவரைப் பின்பற்றினார்கள்.
23 பின்பு அவர் கலிலேயா எங்கும் சுற்றி நடந்து அவர்கள் ஜெபாலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் நற்செய்தியைப் பிரசங்கித்து ஜனங்களில் காணப்பட்ட சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிக் குணமாக்கினார். அவருடைய கீர்த்தி சிரியா 24
எங்கும் பிரபல்யமாயிற்று. அப்பொழுது பல வியாதிகளும் வேதனைகளுமுள்ள சகல பிணியாளிகளையும் அவரிடம் கொண்டுவந்தார்கள்; அவர்கள் பிசாசு பிடித்தவர்கள், சந்திரரோகிகள், திமிர்வாதக்காரர்; அவர்களைக் குணமாக்கினார். கலிலேயாவிலும் 25
தெக்கப்போலியிலும் எருசலேமிலும் யூதேயாவிலும் யோர்தானுக்கு அப்புறத்திலுமிருந்து திரள்திரளாய் ஜனங்கள் வந்து அவருக்குப் பின்சென்றார்கள்.

அவர் ஜனத்திரளைக் கண்டு மலையின்மேல் **5**
ஏறினார்; அவர் உட்காரவே, அவருடைய சீஷர் அவரிடம் வந்தார்கள். அப்பொழுது 2
அவர் அவர்களுக்கு உபதேசமாகத் திருவாய்மலர்ந்தருளினதாவது:—
ஆவியில் தரித்திரர் பாக்கியர்; பரலோக 3
ராஜ்யம் அவர்களுடையது.
துயரப்படுவோர் பாக்கியர்; அவர்கள் 4
தேற்றப்படுவார்கள்.
சாந்தகுணமுடையோர் பாக்கியர்; அவர் 5
கள் பூமியைச் சுதந்தரிப்பார்கள்.
நீதியின்மேல் பசிதாகமுடையோர் பாக்கி 6
யர்; அவர்கள் திருப்தியடைவார்கள்.
இரக்கமுடையோர் பாக்கியர்; அவர்கள் 7
இரக்கம் பெறுவார்கள்.
இருதயத்தில் சுத்தமுடையோர் பாக்கி 8
யர்; அவர்கள் கடவுளைத் தரிசிப்பார்கள்.
சமாதானம்பண்ணுவோர் பாக்கியர்; 9
அவர்கள் கடவுளின் பிள்ளைகள் எனப்படுவார்கள்.
நீதியினிமித்தம் இம்சையனுபவிப்பவர் 10
பாக்கியர்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.
என்னிமித்தம் உங்களை நிந்தித்து இம் 11
சைப்படுத்தி எல்லாவிதத் தீமைகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களாலே நீங்கள் பாக்கியவான்கள்.
சந்தோஷப்பட்டுக் களிகூறுங்கள்; பர 12
லோகத்தில் உங்கள் பலன் மிகுதியாகும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே இம்சைப்படுத்தினார்கள்.
நீங்களே பூமிக்கு உப்பு; உப்பு சாரமற் 13
றுப்போனால் எதினால் சாரமேற்றப்படும்? மனுஷர் அதை வெளியே கொட்டி மிதிப்பதற்கேயொழிய வேறெதற்கும் உதவாது.
நீங்களே உலகத்துக்கு வெளிச்சம்; மலை 14
யின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்தி

1 நிழல்.

15 ராது. விளக்கைக்கொளுத்தி மரக்காலின்கீழ் வைக்காமல் விளக்குத்தண்டின்மேல் வைப்
பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள
16 யாவருக்கும் வெளிச்சந்தரும். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு பர
லோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகி
மைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம்
அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.
17 நியாயப்பிரமாணத்தையாவது தீர்க்கதரி
சனங்களையாவது குலைத்துப்போட வந்தே
னென்று எண்ணவேண்டாம்; குலைத்துப்
போடவல்ல நிறைவேற்றவே வந்தேன்.
18 வானமும் பூமியும் ஒழியாதிருக்குமட்டும்
நியாயப்பிரமாணத்திலுள்ளவை எல்லாம்
நிறைவேறுமேயல்லாமல் அதில் ஒரு சிறு
எழுத்தாகிலும் ஒரு எழுத்தின் உறுப்பாகி
லும் ஒழிந்துபோகாதென்று மெய்யாகவே
19 உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால்,
மிகச் சிறிதான இந்தக் கற்பனைகளில் ஒன்
றை மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப்
போதிக்கிறவன் எவனும் பரலோகராஜ்யத்
தில் எல்லாரிலும் சிறியவன் எனப்படுவான்;
இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவன்
எவனே அவன் பரலோகராஜ்யத்தில் பெரி
20 யவன் எனப்படுவான். வேதபாரகர் பரி
சேயர் என்பவர்கள் நீதியிலும் உங்கள் நீதி
அதிகமாயிராவிட்டால் நீங்கள் பரலோகராஜ்
யத்தில் பிரவேசிப்பதேயில்லை என்று உங்க
ளுக்குச் சொல்லுகிறேன்.
21 கொலை செய்யாதே; கொலைசெய்கிறவன்
நியாயவிசாரணைக்கு ஆளாவான் என்று பூர்
வத்தாருக்கு உரைத்ததாகக் கேட்டிருக்கி
22 றீர்கள். நான் உங்களுக்குச் சொல்வதோ:
தன் சகோதரன்மேல் கோபங்கொள்ளும்
எவனும் நியாயவிசாரணைக்கு ஆளாவான்.
தன் சகோதரனை உதவாதவனே என்று
சொல்லுகிறவன் ஆலோசனைச்சங்க விசார
ணைக்கு ஆளாவான். மதிகேடனே என்று
சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஆளா
23 வான். இப்படியிருப்பதினால், பலிபீடத்
தின்மீது உன் காணிக்கையைச் செலுத்த
வந்திருக்கும்போது உன் சகோதரனுக்கு
உன்மேல் மனவருத்தம் உண்டென்று
24 அங்கே நினைத்துக்கொண்டால் | அவ்விடத்
தில் பலிபீடத்தின் முன்னேயே உன்
காணிக்கையை வைத்துவிட்டுப்போய் முத
லில் உன் சகோதரனோடு சமாதானஞ் செய்து
கொண்டு பின்பு வந்து உன் காணிக்கை
25 யைச் செலுத்து. உன் எதிரி உன்னை நியா
யாதிபதியினிடம் ஒப்புக்கொடாமலும் நியா
யாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக்
கொடாமலும் நீ சிறையில் வைக்கப்படா
மலு மிருக்கும்படி நீ வழியிலிருக்கும்
போதே சீக்கிரம் உன் எதிரியோடு நல்மனம்
பொருந்திக்கொள். நீ கடைசிக் காசைக் 26
கொடுத்துத் தீர்க்குமட்டும் அவ்விடத்தி
லிருந்து வெளியேறவேமாட்டாய் என்று
மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.

விபசாரஞ் செய்யாதே என்று உரைத் 27
திருப்பதாகக் கேட்டிருக்கிறீர்கள். நான் 28
உங்களுக்குச் சொல்வதோ. ஒரு ஸ்திரீயை
இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இரு
தயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தா
யிற்று. நீ இடதிவிழ உன் வலதுகண் 29
ஏதுவாயிருந்தால் அதைப் பிடுங்கி எறிந்து
போடு; உன் சரீரம் முழுவதும் நரகத்
தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும் உன்
அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது
உனக்கு நலமாகும். நீ இடறிவிழ உன் 30
வலதுகை ஏதுவாயிருந்தால் அதைத்
தறித்து எறிந்துபோடு; உன் சரீர முழுவ
தும் நரகத்துக்குப் போவதைப்பார்க்கிலும்
உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போ
வது உனக்கு நலமாகும்.

தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும் 31
தள்ளுதற்சீட்டை அவளுக்குக் கொடுக்கக்
கடவன் என்று உரைக்கப்பட்டது. நான் 32
உங்களுக்குச் சொல்வதோ: விபசாரத்தி
னிமித்தமேயன்றித் தன் மனைவியைத் தள்ளி
விடுகிறவன் எவனும் அவள் விபசாரியாகும்
படி செய்கிறான்; தள்ளப்பட்டவளை விவா
கஞ் செய்கிறவனும் விபசாரஞ் செய்கிறவ
னுவான்.

அன்றியும், பொய்யாணையிடாதே; நீ 33
ஆணையிட்டுச்செய்த பொருத்தனைகளைக் கர்த்
தருக்குச் செலுத்தவேண்டும் என்று பூர்வத்
தாருக்கு உரைத்ததாகக் கேட்டிருக்கிறீர்
கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: 34
ஆணையிடவே வேண்டாம்; வானத்தின்
பேரிலும் வேண்டாம், அது கடவுளின் சிங்
காசனம். பூமியின்பேரிலும் வேண்டாம், 35
அது அவருடைய பாதபடி; எருசலேமை
நோக்கியும் வேண்டாம், அது பரமராஜாவின்
நகரம். உன் சிரசின்பேரிலும் ஆணையிட 36
வேண்டாம். தலைமயிரில் ஒன்றையாவது
வெண்மைபாக்கவோ கறுப்பாக்கவோ உன்
னாலியலாதே. உங்கள் பேச்சில் ஆம் என்ப 37
தை ஆம் எனவும் இல்லை என்பதை இல்லை
எனவும் சொல்லுங்கள், இதற்கு மிஞ்
சினதெல்லாம் [1]தீயோனால் விளைவதேயாம்.

[1] தீமையால்

38 கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்
என்று உரைத்ததாகக் கேட்டிருக்கிறீர்கள்.
39 நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்:
[1]தீமையால் எதிர்த்துநிற்கவேண்டாம்; உன்
னை வலதுகன்னத்தில் அறைகிறவனுக்கு மறு
40 கன்னத்தையும் திருப்பிக்காட்டு. உன்மேடு
வழக்காடி உன் உள் வஸ்திரத்தை எடுத்துக்
கொள்ள விரும்புகிறவனுக்கு உன் மேல்
41 வஸ்திரத்தையும் விட்டுவிடு. ஒருவன் உன்னை
ஒரு மைல்தூரம் வரக் கட்டாயஞ் செய்
தால் அவனோடு இரண்டு மைல் தூரம்
42 போ. உன்னிடம் கேட்கிறவனுக்குக்
கொடு, உன்னிடம் கடன் வாங்க விரும்பு
கிறவனுக்கு முகங் கோணாதே.
43 உன் அயலானில் அன்புகூரு, உன் சத்
துருவையோ பகை என்று சொல்லப்பட்ட
44 தாகக் கேட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்
குச் சொல்வதோ: உங்கள் சத்துருக்களில்
அன்புகூருங்கள்; உங்களை இம்சைப்படுத்து
45 கிறவர்களுக்காக ஜெபஞ்செய்யுங்கள். இப்
படிச்செய்தால் பரலோகத்திலிருக்கிற உங்
கள் பிதாவுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்;
அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது
சூரியனை உதிக்கச்செய்து நீதியுள்ளவர்கள்
மேலும் நீதியில்லாதவர்கள்மேலும் மழை
46 பெய்யச்செய்கிறார். உங்களைச் சிநேகிக்கிற
வர்களையே நீங்களும் சிநேகிப்பீர்களானால்
உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும்
47 அப்படியே செய்கிறார்களல்லவா? உங்கள்
சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால்
நீங்கள் விசேஷமாய்ச் செய்கிறதென்ன?
புறஜாதியாரும் அப்படிச் செய்கிறார்களல்
48 லவா? ஆகையால் பரலோகத்திலிருக்கிற
உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது
போல நீங்களும் பூரண சற்குணராயிருங்
கள்.

**6** மனுஷர் காணவேண்டுமென்று அவர்
கள்முன் உங்கள் தர்மத்தை நிறைவேற்றுத
படி எச்சரிக்கையாயிருங்கள்; நிறைவேற்றி
னால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவி
னிடத்தில் உங்களுக்குப் பலனில்லை.
2 ஆகையால், நீ தானதர்மம் செய்யும்
போது மனுஷர் புகழவேண்டுமென்று
மாயக்காரர் ஆலயங்களிலும் தெருக்களிலும்
செய்வதுபோல உனக்குமுன் தாரை ஊது
வியாதே; அவர்கள் தங்கள் பலனை அடைந்
தாயிற்றென்று மெய்யாகவே உங்களுக்குச்
3 சொல்லுகிறேன். நீயோ தானதர்மம் செய்யும்
போது உன் தர்மம் மறைந்திருக்கும்படி,
உன் வலதுகை செய்கிறதை உன் இடது
கை அறியாதிருக்கக் கடவது. அப்பொ 4
ழுது மறைந்திருக்கிறதைப் பார்க்கிற உன்
பிதாவே உனக்குப் பதிலளிப்பார்.

அன்றியும், நீ ஜெபஞ் செய்யும்போது 5
மாயக்காரரைப்போலிருக்கவேண்டாம்;
மனுஷர் காணும்படி ஜெபாலயங்களிலும்
வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபஞ்
செய்வதே அவர்களுக்குப் பிரியம்; அவர்
கள் தங்கள் பலனை அடைந்தாயிற்றென்று
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
நீயோ ஜெபஞ் செய்யும்போது உன் அறைக் 6
குள் போய் உன் கதவைப் பூட்டி மறைவா
யிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபஞ்
செய்; அப்பொழுது, மறைந்திருக்கிறதைப்
பார்க்கிற உன் பிதாவே உனக்குப் பதிலளிப்
பார். அன்றியும், நீங்கள் ஜெபஞ்செய்யும் 7
போது புறஜாதிகளைப்போல வீண் வார்த்தை
களை அலப்பவேண்டாம்; சொல் மிகுதியி
னிமித்தம் தங்கள் ஜெபம் கேட்கப்படு
மென்று அவர்கள் நினைக்கிறார்கள். நீங் 8
களோ அவர்கள்போல் இருக்கவேண்டாம்;
நீங்கள் உங்கள் பிதாவைக் கேட்குமுன்
னமே உங்களுக்கு இன்னின்னது தேவை
என்பதை அவர் அறிந்திருக்கிறார். ஆத 9
லால் நீங்கள் ஜெபஞ் செய்யவேண்டிய
விதமாவது:

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள்
பிதாவே,

உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. 10
உம்முடைய ராஜியம் வருவதாக.
உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே
செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும்
செய்யப்படுவதாக.

அன்றன்று வேண்டிய எங்கள் ஆகா 11
ரத்தை இன்றும் எங்களுக்குத் தாரும்.
எங்கள் கடன்களுக்கு நாங்கள் மன் 12
னித்திருக்கிறதுபோல எங்கள் கடன்களை
எங்களுக்கு மன்னியும்.
எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணு 13
மல் [2]தீயோனினின்று எங்களை இரட்சியும்
என்பதே.

மனுஷர் மீறுதல்களை நீங்கள் அவர் 14
களுக்கு மன்னித்தால் உங்கள் பரம பிதா
உங்களுக்கும் மன்னிப்பார்; மனுஷருக்கு 15
நீங்கள் மன்னியாதிருந்தால் உங்கள் பிதா
உங்கள் மீறுதல்களையும் மன்னியார்.

நீங்கள் உபவாசிக்கும் போதெல்லாம் 16
முக வாடலாய் மாயக்காரரைப் போலாக

1 தீமைக்கு 2 தீமையினின்று

வேண்டாம்; தாங்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும்பொருட்டு முகங்களை விகாரப்படுத்துகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்தாயிற்றென்று மெய்யாகவே 17 உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ உபவாசிக்கும்போது உபவாசிக்கிறதாக மனுஷருக்கல்ல, மறைவாயிருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படி உன் தலைக்கு எண் 18 ணெய் தடவி உன் முகத்தைக் கழுவு. அப்பொழுது மறைந்திருக்கிறதைப் பார்க்கும் உன் பிதாவே உனக்குப் பலிலளிப்பார்.

19 பூமியிலே உங்களுக்கு ஐசுவரியங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அழிக்கும்; இங்கே திருடரும் 20 கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்கு ஐசுவரியங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது அழிக்கிறதுமில்லை, அங்கே திருடர் 21 கன்னமிட்டுத் திருடுகிறதுமில்லை. உங்கள் ஐசுவரியம் எங்கே இருக்கிறதோ அங்கே 22 உங்கள் இருதயமும் இருக்கும். கண்ணே சரீரத்தின் விளக்கு; உன் கண் தெளிவாயிருந்தால் உன் முழுச் சரீரத்திலும் வெளிச்ச 23 மிருக்கும். உன் கண் பொல்லாததாயிருந்தால் உன் முழுச் சரீரத்திலும் இருளிருக்கும்; இப்படியிருக்க, உன்னிலுள்ள வெளிச்சமே இருண்டுபோனால் இருள் எவ்வளவு 24 அதிகமாகும்! ஒருவன் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்யமுடியாது; ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைச் சார்ந்துகொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான்; நீங்கள் கடவுளுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ் 25 செய்யமுடியாது. இதினிமித்தம், எதை உண்போம் எதைக் குடிப்போமென்று உங்கள் உயிருக்காகவும், எதை உடுப்போமென்று உங்கள் உடலுக்காகவும் கவலைப்படாதிருங்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். உணவைவிட உயிரும் உடையை 26 விட உடலும் முக்கியமல்லவா? ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கி 27 லும் நீங்கள் விசேஷித்தவர்களல்லவா? கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் ஆயுளின் அளவோடு ஒரு முழத்தைக் கூட் 28 டுவான்? உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப்புஷ்பங்கள் எப்படி வளருகின்றனவென்று கவனித்துப் பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை நூற்கிறதுமில்லை; என்றாலும், சாலொ 29 மோனே தன் சர்வ மகிமையிலும் இவைகளில் ஒன்றைப்போல் உடுத்தியிருந்ததில்லை யென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இன்றைக்கிருந்து நாளைக்கு அடுப்பிலே 30 போடப்படும் காட்டுப்புல்லைக் கடவுள் இவ்விதமாய் உடுத்தினாரானால், அற்பவிசுவாசிகளே, உங்களை உடுத்துவது அதிக நிச்சயமல்லவா? ஆதலால், எதை உண்போம் 31 எதைக் குடிப்போம் எதை உடுப்போமென்று கவலைப்படவேண்டாம். இவற்றை 32 யெல்லாம் புறஜாதியார் நாடித்தேடுகிறார்கள். இவையெல்லாம் உங்களுக்குத் தேவையென்று உங்கள் பரமபிதா அறிவார். முத 33 லாவது கடவுளுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையுந் தேடுங்கள், அப்பொழுது இவையெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். ஆகையால், நாளைய 34 தினத்திற்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையதினம் தனக்காக கவலைப்பட்டுக்கொள்ளும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.

நீங்கள் தீர்ப்புப்பெறுதபடி நீங்களும் **7** தீர்ப்புச்செய்யாதிருங்கள். நீங்கள் செய்கிற 2 தீர்ப்பின்படியே நீங்களும் தீர்ப்புப்பெறுவீர்கள்; நீங்கள் அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும். நீ உன் 3 கண்ணிலிருக்கிற உத்திரத்தைக் கவனியாமல் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன? அல்லது, உன் சகோதரனிடத்தில்: நான் உன் கண்ணி 4 லிருக்கிற துரும்பை எடுத்துப் போடுகிறேன், பொறு என்று நீ சொல்வதெப்படி? இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கிறதே. மாயக்காரனே, முன்பு உன் கண்ணிலிருக் 5 கிற உத்திரத்தை எடுத்துப்போடு, பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போடத் தெளிந்த பார்வையடைவாய்.

பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடா 6 தேயுங்கள்; உங்கள் முத்துக்களைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள்; போட்டால் தங்கள் கால்களால் அவற்றை மிதித்துத் திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிவிடும்.

கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் 7 கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். கேட் 8 கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுவானல்லவா; தேடுகிறவன் கண்டடைவானே; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். தன்னி 9 டம் அப்பத்தைக் கேட்கும் மகனுக்குக் கல்

லைக் கொடுக்கும் மனிதன் எவனுகிலும் உங்
10 களில் உண்டோ? மீனைக் கேட்டால் அவ
னுக்குப் பாம்பைக் கொடுப்பதுண்டோ?
11 ஆகவே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்
கும் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக்
கொடுக்க அறிந்திருக்க, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடம் கேட்
கிறவர்களுக்கு நலமானவைகளைக் கொடுப்
பது எவ்வளவு அதிக நிச்சயம்!
12 ஆதலால், மனிதர் உங்களுக்கு எதே
தைச்செய்யவிரும்புவீர்களோ அவற்றை நீங்
களும் அவர்களுக்குச் செய்யுங்கள். நியாயப்
பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் இதுவே.
13 இடுக்கமான வாசல்வழியாய் உட்செல்
லுங்கள். அழிவுக்குப் போகும் வழி அக
லம், வாசலும் விரிவு; அதின் வழியாய் உட்
14 செல்கிறவர்கள் பலர். ஜீவனுக்குப் போகும்
வாசலோ இடுக்கம், வழியும் நெருக்கம்;
அதைக் கண்டுகொள்ளுகிறவர்கள் சிலர்.
15 கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கை
யாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப்
போர்த்துக்கொண்டு உங்களிடம் வருவார்
கள்; உள்ளத்திலோ அவர்கள் பீறுகிற
16 ஓநாய்கள். அவர்களுடைய கனிகளினாலே
அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில்
திராட்சப்பழங்களையும் நெரிஞ்சில்களில் அத்
17 திப்பழங்களையும் பறிப்பார்களுண்டோ? அப்
படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக்
கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனி
18 களைக் கொடுக்கும். நல்ல மரம் கெட்ட
கனிகளைக் கொடுக்கமுடியாது; கெட்ட மரம்
19 நல்ல கனிகளைக் கொடுக்கமுடியாது. நல்ல
கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு
20 நெருப்பிலே போடப்படும். ஆதலால் அவர்
களுடைய கனிகளினாலே அவர்களை அறிந்து
21 கொள்வீர்கள். ஆண்டவரே, ஆண்டவரே
என்று என்னிடம் சொல்லுகிற ஒவ்வொரு
வனுமல்ல, பரலோகத்திலிருக்கிற என் பிதா
வின் சித்தத்தைச் செய்கிறவனே பரலோக
22 ராஜ்யத்திற்குட் பிரவேசிப்பான். அக்காலில்
அநேகர் என்னை நோக்கி: ஆண்டவரே,
ஆண்டவரே, உமது நாமத்தினாலே தீர்க்க
தரிசனம் உரைத்தோமல்லவா? உமது நாமத்
தினாலே பேய்களைத் துரத்தினோமல்லவா?
உமது நாமத்தினாலே அநேக வல்ல செயல்
23 களைச் செய்தோமல்லவா என்பார்கள். அப்
பொழுது: நான் ஒருக்காலும் உங்களை அறிய
வில்லை; அக்கிரமச்செய்கைக்காரரே, என்னை
விட்டு அகன்றுபோங்களென்று அவர்களும்
சம்மதப்படச் சொல்வேன்.
24 ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்
தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்
கிறவன் எவனை அவன் கற்பாறையின்மேல்
தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனு
ஷனுக்கு ஒப்பாவான். 25 பெரு மழை
சொரிந்து பெரு வெள்ளம் வந்து காற்ற
டித்து அந்த வீட்டின்மேல் மோதியும், அது
கற்பாறையின்மேல் அஸ்திபாரம் போடப்
பட்டிருந்ததால் விழுவில்லை. 26 நான் சொல்
லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவை
களின்படி செய்யாதிருக்கிறவன் எவனை
அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்
டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பா
வான். பெரு மழை சொரிந்து பெரு வெள் 27
ளம் வந்து காற்றடித்து அந்த வீட்டின்மேல்
மோதினபோது அது விழுந்தது; அழிவும்
பெரியதாயிற்று.
இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி 28
முடித்தபோது அவர் வேதபாரகரைப்போல்
போதியாமல் அதிகாரமுடையவராய் அவர்
களுக்குப் போதித்துவந்தபடியால் | ஜனங் 29
கள் அவருடைய போதகத்தைத் குறித்துப்
பிரமித்தார்கள்.

அவர் மலையிலிருந்து இறங்கினபோது **8**
திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்
றார்கள். அப்பொழுது குஷ்டரோகி ஒரு 2
வன் வந்து அவரைப் பணிந்து: ஐயனே,
உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க
உம்மாலாகும் என | அவர் தமது கையை 3
நீட்டி அவனைத் தொட்டு: எனக்குச் சித்தங்
தான், சுத்தமாகு என்றார். உடனே குஷ்ட
ரோகம் நீங்கி அவன் சுத்தமானான். இயேசு 4
அவனை நோக்கி: இதை நீ ஒருவருக்கும்
சொல்லாதபடி பார்; ஆயினும், நீ போய்
ஆசாரியனுக்கு உன்னைக்காண்பித்து மோசே
கட்டளையிட்ட காணிக்கையை அவர்களுக்
குச் சாட்சியாகச் செலுத்து என்றார்.
அவர் கப்பர்நகூமுக்குட் சென்றபோது 5
நூற்றுக்கதிபதி ஒருவன் அவரிடம் வந்து:
ஐயனே, வீட்டிலே என் வேலைக்காரன் திமிர் 6
வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப்படு
கிறான் என்று அவரை வேண்டிக்கொண்
டான். அவர்: நான் வந்து அவனைச் சொஸ்த 7
மாக்குவேன் என்று அவனிடம் சொன்னார்.
நூற்றுக்கதிபதியோ: ஐயனே, நீர் என் வீட் 8
டினுட்பிரவேசிக்க நான் பாத்திரனல்ல;
வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது
என் வேலைக்காரன் சொஸ்தமாவான்.
நானும் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்ட மனு 9
ஷன், எனக்குக் கீழே சேவகருமுண்டு;
நான் ஒருவனைப் போவென்றால் போகிறான்,
மற்றொருவனை வாவென்றால் வருகிறான்,
என் அடிமையை இதைச் செய்யென்றால்

10 செய்கிறான் என்றான். இயேசு இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டுத் தமக்குப் பின் செல்லுகிறவர்களை நோக்கி: இப்படிப்பட்ட விசுவாசத்தை நான் இஸ்ரவேலிலுங் கண்டதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் 11 சொல்லுகிறேன். அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்துவந்து பரலோகராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடு 12 பந்தியிருப்பார்கள். ராஜ்யத்தின் பிள்ளைகளோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்புமாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகி 13 றேன் என்றார். பின்பு இயேசு தூற்றுக்கதியைப் பார்த்து: நீ போ, உன் விசுவாசத்தின்படியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலேயே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான்.

14 இயேசு பேதுருவின் வீட்டுக்கு வந்த போது அவன் மாமி காய்ச்சலாய்க் கிட 15 கிறதைக் கண்டார். அவர் அவள் கையைத் தொடவே காய்ச்சல் அவளைவிட்டு நீங்கிற்று; அவள் எழுந்திருந்து அவருக்குப் பணி 16 விடை செய்தாள். அஸ்தமனமானபோது பேய்பிடித்திருந்த அநேகரை அவரிடம் கொண்டு வந்தார்கள்; வார்த்தையினாலே அவர் ஆவிகளைத் துரத்திப் பிணியாளிக 17 ளெல்லாரையும் குணமாக்கினார். அவர் நமது பலவீனங்களைத் தாமே எடுத்துக் கொண்டு நமது நோய்களைச் சுமந்தார் என்று ஏசாயா தீர்க்கதரிசியின்மூலமாய் வந்த வாக்கு நிறைவேற இப்படி நடந்தது.

18 இயேசு தம்மைச்சுற்றி ஜனக்கூட்டம் இருக்கக்கண்டு அக்கரைக்குப் போகக் கட் 19 டளையிட்டார். அப்பொழுது வேதபாரகன் ஒருவன் வந்து: போதகரே, நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றிவருவேன் என | 20 இயேசு அவனிடம்: நரிகளுக்குக் குழிகளுண்டு, ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளுண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க 21 இடமில்லை என்றார். சீஷரில் வேறொருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, முதலில் நான் போய் என் தகப்பனை அடக்கம் பண்ண எனக்கு உத்தரவு கொடுமென்று 22 சொல்ல | இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும், நீயோ என்னைப் பின்பற்றிவா என்றார்.

23 அவர் படவில் ஏறவே சீஷரும் பின் 24 சென்று ஏறினார்கள். இதோ, பெரும் புயல் காற்று கடலில் எழும்பிற்று, அதினால் அலைகள் படவை மூடிவிடும்போலிருந்தது. அவர் நித்திரையாயிருந்தார். அவர்கள் 25 வந்து அவரை எழுப்பி: ஆண்டவரே, எங்களை ரட்சியும், மடிந்துபோகிறோம் என, | அவர்: அற்பவிசுவாசிகளே, ஏன் பயப்படு 26 கிறீர்கள் என்று சொல்லி எழுந்து காற்றையுங் கடலையும் அதட்டினார்; உடனே மிகுந்த அமைதல் உண்டாயிற்று. அந்த 27 மனுஷர் ஆச்சரியப்பட்டு: இவர் எப்படிப்பட்டவரோ! காற்றுங் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே என்றார்கள்.

அவர் அக்கரையில் கதரேனர் நாட்டுக்கு 28 வந்தபோது பேய்பிடித்திருந்த இருவர் கல்லறைகளிலிருந்து வெளிப்பட்டு அவருக்கு எதிரே வந்தார்கள்; அவர்கள் மிகக் கொடியராயிருந்தபடியால் எவனும் அந்த வழிச் செல்ல இயலாதிருந்தது. இதோ, அவர்கள் 29 சத்தமிட்டுக் கூப்பிட்டு: கடவுளின் குமாரனே, எங்களுக்கும் உமக்கும் என்ன? காலம் வருமுன்னே எங்களை வேதனைப்படுத்தவா இங்கே வந்தீர் என்றார்கள். அவர் 30 களுக்குத் தூரத்தில் ஒரு பெரிய பன்றிக் கூட்டம் மேய்ந்துகொண்டிருந்தது. அப் 31 பொழுது பேய்கள்: நீர் எங்களைத் துரத்துவீரானால் அந்தப் பன்றிக்கூட்டத்திற்குள் எங்களை அனுப்பிவிடுமென்று அவரை வேண்டிக்கொண்டன. அதற்கு அவர்: போங்கள் என்றார். அவைகள் வெளிப் 32 பட்டுப் பன்றிகளுக்குள் போகவே; இதோ, அப்பன்றிக்கூட்டம் முழுவதும் மேட்டிலிருந்து கடலில் பாய்ந்து தண்ணீரில் மாண்டது. அவைகளை மேய்த்துக்கொண்டிருந்த 33 வர்கள் ஓட்டம்பிடித்து ஊருக்குட் சென்று நடந்தவற்றையும் பேய்பிடித்திருந்தவர்களுக்குச் சம்பவித்தவைகளையும் அறிவித்தார்கள். இதோ, ஊரார் யாவரும் இயேசுவைக் காண ஊருக்கு வெளியே வந்தார்கள். அவரைக் கண்டு, தங்கள் நிசையைவிட்டுப் போகும்படி வேண்டிக்கொண்டார்கள்.

**9** அப்பொழுது அவர் படவிலேறிக் கட 2 லைக் கடந்து தமது சொந்த ஊருக்கு வந்தார். இதோ, படுக்கையில் கிடந்த ஒரு திமிர்வாதக்காரனை அவரிடங் கொண்டுவந்தார்கள். இயேசு அவர்கள் விசுவாசத்தைக் கண்டு திமிர்வாதக்காரனிடம்: மகனே, தைரியமாயிரு, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்றார். இதோ, வேதபாரகரில் சிலர்: 3 இவன் தெய்வ தூஷணம் பேசுகிறானென்று தங்களுக்குள் சொல்லிக்கொண்டார்கள். இயேசு அவர்கள் சிந்தனைகளையறிந்து: உங் 4 கள் இருதயங்களில் பொல்லாதவைகளைச் சிந்திக்கிறதென்ன? உன் பாவங்கள் மன்னிக் 5 கப்பட்டனவென்று சொல்வதோ. எழுந்து

6 நடவென்று சொல்வதோ, எது எளிது? ஆயி
னும், பூமியிலே பாவங்களே மன்னிக்க மனு
ஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை
நீங்கள் அறியவேண்டுமென்று சொல்லித்
திமிர்வாதக்காரனிடம்: நீ எழுந்திரு, உன்
படுக்கையை எடுத்துக்கொள், உன் வீட்டுக்
7 குப்போ என்றார். அவனும் எழுந்து தன்
8 வீட்டுக்குப் போனான். அதைக்கண்ட திரள்
கூட்டத்தார் திகிலடைந்து மனுஷருக்கு
இப்படிப்பட்ட அதிகாரங் கொடுத்த கட
வுளை மகிமைப்படுத்தினார்கள்.

9 இயேசு அவ்விடம் விட்டு அப்பால்
போகையில் ஆயக்காவடியில் உட்கார்ந்தி
ருந்த ஒருவனைக் கண்டார். அவன் பேர்
மத்தேயு. அவர் அவனிடம்: என்னைப் பின்
பற்றி வா என்றார். அவன் எழுந்து அவ
ரைப் பின்பற்றிப் போனான்.

10 பின்பு, வீட்டிலே அவர் பந்தியிருக்கை
யில், இதோ, ஆயக்காரரும் பாவிகளும்
அநேகர் வந்து இயேசுவோடும் அவர் சீஷ
11 ரோடும் பந்தியிருந்தார்கள். அதைக்கண்ட
பரிசேயர் அவர் சீஷரிடத்தில்: உங்கள் போ
தகர் ஆயக்காரரோடும்பாவிகளோடும் போஜ
12 னம் பண்ணுகிறதென்ன என்றார்கள். அவர்
அதைக்கேட்டு: பிணியாளிகளுக்கு வைத்தி
யன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்
13 களுக்கு வேண்டியதில்லை. நீங்களோ போய்,
பலியையல்ல இரக்கத்தையே விரும்புகி
றேன் என்பதின் பொருளைக் கற்றுக்கொள்
ளுங்கள்; நீதிமான்களையல்ல பாவிகளையே
அழைக்க வந்தேன் என்றார்.

14 அப்பொழுது யோவானுடைய சீஷர்
அவரிடம் வந்து: நாங்களும் பரிசேயரும்
உபவாசிக்கிறோமே; உம்முடைய சீஷர்
உபவாசியாமல் இருக்கிறதென்னவென்று
15 கேட்டார்கள். அதற்கு இயேசு: மண
வாளன் தங்களோடிருக்குமட்டும் மணவாள
னுடைய தோழர் துயரப்படுவதெப்படி?
மணவாளன் அவர்களை விட்டு எடுபடும்
நாட்கள் வரும், அப்பொழுது உபவாசிப்
16 பார்கள். ஒருவனும் கோடித்துண்டைப்
பழைய வஸ்திரத்தோடே இணைக்கமாட்
டான்; இணைத்தால், அதினாலே இணைத்த
துண்டு வஸ்திரத்தை அதிகமாய்க் கிழிக்கும்,
17 பீறலும் பெரிதாகும். புதுத்திராட்சரசத்
தைப் பழந்துருத்திகளில் வார்த்து வைக்
கிறதுமில்லை; வார்த்துவைத்தால் துருத்திகள்
கிழிய இரசமும் சிந்திப்போம், துருத்திகளுங்
கெட்டுப்போம்; புது ரசத்தைப் புதுத்
துருத்திகளில் வார்த்து வைப்பார்கள்,
அப்பொழுது இரண்டும் பத்திரமாய்க் காக்
கப்படும் என்றார்.

18 அவர் இவைகளைப்பற்றி அவர்களோடு
பேசிக்கொண்டிருக்கையில், இதோ, தலை
வன் ஒருவன் வந்து அவரைப்பணிந்து:
என் மகள் இப்பொழுதுதான் இறந்து
போனாள்; ஆகிலும் நீர் வந்து அவள்மேல்
உமது கையை வையும், அவள் பிழைப்
பாள் என்றான். 19 இயேசு எழுந்து தமது
சீஷரோடுகூட அவன் பின்னே போனார்.

20 அப்பொழுது, பன்னிரண்டு வருஷமாய்ப்
பெரும்பாட்டினால் வருந்தின ஒரு ஸ்திரீ:
21 நான் அவர் வஸ்திரத்தையாகிலும் தொட்
டால் சொஸ்தமாவேனென்று தனக்குள்
எண்ணிக்கொண்டு அவர்பின் வந்து அவர்
வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்.
22 இயேசு திரும்பி அவளைப் பார்த்து: மகளே,
தைரியமாயிரு, உன் விசுவாசம் உன்னைக்
குணமாக்கினது என்றார். அந்நேரமே
அந்த ஸ்திரீ குணமானாள்.

23 இயேசு தலைவன் வீட்டுக்குள் வந்து
தாரை ஊதுகிறவர்களையும் சந்தடி செய்
24 கிற கூட்டத்தையுங்கண்டு: விலகுங்கள், இச்
சிறு பெண் சாகவில்லை, நித்திரையா
யிருக்கிறாள் என்றார்; அவர்களோ அவ
ரைப்பார்த்து நகைத்தார்கள். 25 கூட்டத்தை
வெளியே துரத்திவிட்டு அவர் உள்ளே
போய் அந்தச் சிறு பெண்ணின் கையைப்
பிடித்தார்; உடனே அவள் எழுந்திருந்தாள்.
26 இச்செய்தி அத்தேசமெங்கும் பரவிற்று.

27 இயேசு அவ்விடம் விட்டு அப்பால்
போகையில் குருடர் இருவர் அவர் பின்னே
சென்று: தாவீதின் குமாரனே, எங்களுக்
கிரங்கும் என்று சத்தமிட்டுக் கூப்பிட்
டார்கள். அவர் வீட்டிற்குள் வந்த பின்பு
28 அந்தக் குருடர் அவரிடம் வந்தார்கள்.
இயேசு அவர்களை நோக்கி: இதைச்செய்ய
எனக்கு வல்லமை உண்டென நம்புகிறீர்
களா என்று கேட்டார். அதற்கு அவர்
கள்: ஆம், ஐயனே என்றார்கள். 29 அப்
பொழுது அவர்கள் கண்களை அவர் தொட்டு:
நீங்கள் நம்புகிறபடி உங்களுக்கு ஆகக்
கடவதென்று சொல்லவே | 30 அவர்கள் கண்
கள் திறக்கப்பட்டன. இது ஒருவருக்குந்
தெரியாதபடி பாருங்கள் என்று இயேசு
அவர்களுக்குக் கண்டிப்பாய்ச் சொன்னார்.
31 அவர்களோ புறப்பட்டுத் தேசமெங்கும்
அவருடைய கீர்த்தியைப் பிரசித்தம்பண்ணி
னார்கள்.

32 அவர்கள் புறப்படுகையில், இதோ, பேய்
பிடித்த ஊமையன் ஒருவனை அவரிடங்
33 கொண்டுவந்தார்கள். பேயைத் துரத்தின
பின் ஊமையன் பேசினான். ஜனக்கூட்டத்
34 தார் ஆச்சரியப்பட்டு: இஸ்ரவேலில் இப்

படி ஒருக்காலும் கண்டதில்லை என்றார்கள். பரிசேயரோ: இவன் பேய்களின் தலைவனாலே பேய்களை ஓட்டுகிறானென்று சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

35 இயேசு சகல கிராமங்களையும் ஊர்களையுஞ் சுற்றிப்போய் அவர்கள் ஜெபாலயங்களில் உபதேசித்து ராஜ்யத்தின் நற்செய்தியைப் பிரசங்கித்துச் சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி அவர்களைக் குணமாக்கிவந்தார். 36 அவர் ஜனத்திரளைக் கண்ட பொழுது அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகள்போல் ஒடுக்கப்பட்டு அலைக்கழிந்து போயிருந்தமையால் அவர்கள்மேல் மனதுருகி: 37 அறுப்பு மிகுதி, வேலையாட்களோ 38 கொஞ்சம்; ஆதலால் அறுப்பின் எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்று தமது சீஷரைப்பார்த்துச் சொன்னார்.

**10** அப்பொழுது அவர் தமது சீஷர் பன்னிருவரையும் தம்மிடம் அழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்தவும் சகல வியாதிகளையும் சகல நோய்களையும் குணமாக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.

2 அப்பன்னிரு [1]அப்போஸ்தலர் நாமங்களாவன: முந்தினவனாகிய பேதுரு எனப்பட்ட சீமோன், அவன் சகோதரன் அந்திரேயா, செபெதேயுவின் குமாரன் யாக்கோபு, அவன் சகோதரன் யோவான், 3 பிலிப்பு, பர்த்தொலொமேயு, தோமா, ஆயக்காரனாகிய மத்தேயு, அல்பேயுவின் குமாரன் யாக்கோபு, தததேயு, [2]கானனியனாகிய சீமோன், 4 அவரைக் காட்டிக்கொடுத்த [3]யூதாஸ்காரியோத்து என்பவைகளே.

5 இந்தப் பன்னிருவரையும் இயேசு அனுப்பினார். அனுப்புகையில் அவர்களுக்கு கட்டளையிட்டுச் சொன்னதாவது: நீங்கள் புறஜாதியார் இடங்களுக்குப் போகாமலும் சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், 6 காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள். 7 போகும்போது, பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறதென்று பிரசங்கியுங்கள். 8 வியாதியுள்ளவர்களைக் குணமாக்குங்கள், மரித்தோரை எழுப்புங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தமாக்குங்கள், பேய்களைத் துரத்துங்கள்; இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்; 9 உங்கள் கச்சையில் பொன் வெள்ளி செம்புக்காசு இவற்றைச் சம்பாதித்து வைத்துக்கொண்டு போகவேண்டாம். 10 வழிக்குப் பை, இரண்டு அங்கி, பாதரட்சை, தடி ஒன்றும் வேண்டாம்; வேலையாள் தன் ஆகாரத்துக்குப்பாத்திரன். 11 எந்த ஊருக்கு அல்லது கிராமத்துக்குப் போனாலுஞ் சரி, அங்கே தகுந்த மனிதன் யாரென விசாரித்தறிந்து அவ்வூரை விடுமளவும் அவனுடன் தங்கியிருங்கள். 12 வீட்டுக்குள் போகும்போது அதை வாழ்த்துங்கள். 13 அந்த வீடு தகுதியுள்ளதாயிருந்தால் நீங்கள் கூறின சமாதானம் அவ்வீட்டின்மேல் வரட்டும்; தகுதியற்றதாயிருந்தால் நீங்கள் கூறின சமாதானம் உங்களிடமே திரும்பட்டும். 14 எவனாகிலும் உங்களை ஏற்றுக்கொள்ளாமலும் நீங்கள் சொல்லுகிறதைக் கேளாமலும் போனால் அந்த வீட்டையாவது ஊரையாவது விட்டுப் புறப்படும்போது உங்கள் கால்களில் படிந்த தூசியையும் உதறிவிடுங்கள். 15 நியாயத்தீர்ப்புநாளில் சோதோம் கொமோராவுக்கு நேரிடுவதைப் பார்க்கிலும் இதற்கு நேரிடுவது அதிகக் கடினமாகுமென்று உண்மையாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

16 இதோ, ஓநாய்கள் மத்தியில் ஆடுகளைப் போல நான் உங்களை அனுப்புகிறேன். ஆகையினால் பாம்புகளைப்போல் விவேகமுள்ளவர்களும் புருக்களைப்போல் கபடற்றவர்களுமாயிருங்கள். 17 மனுஷருக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக்கொடுத்துத் தங்கள் ஜெபாலயங்களில் உங்களை வாரினால் அடிப்பார்கள். 18 என் நிமித்தம் நீங்கள் அதிகாரிகளிடத்திற்கும் ராஜாக்களிடத்திற்கும் கொண்டுபோகப்பட்டு அவர்களுக்கும் புறஜாதியாருக்கும் முன்பாகச் சாட்சிகளாயிருப்பீர்கள். 19 அவர்கள் உங்களை ஒப்புக்கொடுக்கும்போது எதை எப்படிப் பேசுவோமென்று கவலைப்படவேண்டாம். நீங்கள் பேசவேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும்; 20 பேசுகிறவர்கள் நீங்களல்ல, உங்களிலிருந்து பேசுகிறவர் உங்கள் பிதாவின் ஆவியே. 21 சகோதரன் தன் சகோதரனை மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பான்; தகப்பன் தன் பிள்ளையை ஒப்புக்கொடுப்பான்; பெற்றோருக்கு விரோதமாய்ப் பிள்ளைகள் எழும்பி அவர்களைக் கொலைசெய்வார்கள். 22 என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்; முடிவுபரியந்தம்

---

[1] அனுப்பப்பட்டவர்கள் எனப் பொருள்படும். [2] தேச பக்தன் எனப் பொருள்படும்.
[3] கரியோத்து ஊராகிய யூதா.

நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்.
23 ஓர் ஊரில் உங்களை இம்சைப்படுத்தினால் மறு ஊருக்கு ஓடிப்போங்கள்; மனுஷகுமாரன் வருவதற்குள்ளாக நீங்கள் இஸ்ரவேலின் ஊர்களையெல்லாம் சுற்றித்தீரா
24 தென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். சீஷன் தன் குருவிலும் வேலைக்காரன் தன் எஜமானிலும் மேலானவனல்ல.
25 சீஷன் தன் குருவைப்போலவும் வேலைக்காரன் தன் எஜமானைப்போலவும் ஆவது போதும். வீட்டெஜமானையே பெயல்செபூல் என்று சொன்னார்களானால் அவன் வீட்டாரை எத்தனை அதிகம் சொல்வார்கள்!
26 அவர்களுக்குப் பயப்படாதிருங்கள்; வெளியாக்கப்படாத மறைபொருளுமில்லை; அறி
27 யப்படாத இரகசியமுமில்லை. நான் உங்களுக்கு இருளிலே சொல்லுகிறதை வெளிச்சத்திலே சொல்லுங்கள்; நீங்கள் காதுகுள் கேட்கிறதை வீடுகளின்மேல் நின்று பிரசித்தஞ் செய்யுங்கள்.
28 சரீரத்தைக் கொல்லுகிறவர்களுக்கு அஞ்சவேண்டாம்; ஆத்துமாவைக் கொல்லும் வல்லமை அவர்களுக்கில்லையே. ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்.
29 ஒருகாசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகள் விற்கின்றனவல்லவா? ஆயினும் உங்கள் பிதாவையன்றி அவைகளில் ஒன்றும்
30 நிலும் தரையிலே விழாது. உங்கள் விஷயத்திலோ, உங்கள் தலைமயிரெல்லாம்
31 எண்ணப்பட்டிருக்கிறது. ஆதலால் அஞ்சவேண்டாம்; அநேக அடைக்கலான் குருவிகளிலும் நீங்கள் விசேஷித்தவர்கள்.
32 மனுஷர்முன் என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனே அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின்முன் அறிக்கை
33 பண்ணுவேன். மனுஷர்முன் எவனாகிலும் என்னை மறுதலிப்பானால் அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன் மறுதலிப்பேன்.
34 பூமியின்மேல் சமாதானத்தைப்போட வந்தேனென்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; சமாதானத்தையல்ல பட்டயத்தையே
35 நீகி யெறியவந்தேன். மகனைத் தகப்பனுக்கும் மகளைத் தாய்க்கும் மருமகனை மாமிக்கும் விரோதமாய்ப் பிரித்துவிட வந்
36 தேன். ஒரு மனுஷனுடைய சத்துருக்கள்
37 அவன் வீட்டாரே. என்னை நேசிப்பதிலும் தகப்பனையாவது தாயையாவது அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரனல்ல; என்னை நேசிப்பதிலும் மகனையாவது மகளை யாவது அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் 38
பாத்திரனல்ல. தன் சிலுவையை எடுத்துக்
கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரனல்ல. தன் ஜீவனைக் கண் 39
டடைந்தவன் அதை இழந்துபோவான்;
என்னிமித்தம் தன் ஜீவனை இழந்தவனே
அதைக் கண்டடைவான்.

உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை 40
ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்
கொள்கிறவனே என்னை அனுப்பினவரை
ஏற்றுக்கொள்ளுகிறான். தீர்க்கதரிசியின் 41
நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்
கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்குரிய பல
னைப் பெறுவான். நீதிமானின் நாமத்தி
னிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிற
வன் நீதிமானுக்குரிய பலனைப் பெறு
வான். சீஷனின் நாமத்தினிமித்தம் இச் 42
சிறியரில் ஒருவனுக்கு ஒரு செம்பு தண்
ணீர்மாத்திரம் தாகத்திற்குக் கொடுக்கிற
வனும் தன் பலனைப் பெறுமற்போகா
னென்று மெய்யாகவே உங்களுக்குச்
சொல்லுகிறேன் என்றார்.

11 இயேசு தமது சீஷர் பன்னிருவருக்கும் கட்டளை கொடுத்து முடித்த பின்பு அவர்களுடைய ஊர்களில் உபதேசிக்கவும் பிரசங்கிக்கவும் அவ்விடம் விட்டுப் போனார்.

2 கிறிஸ்துவுக்குரிய செயல்களைச் சிறைச் சாலையில் கேள்விப்பட்ட யோவான் தன் 3 சீஷரையனுப்பி: வருகிறவர் நீர்தானே? அல்லது வேறொருவரை நாங்கள் எதிர் பார்க்கவோ என்று கேட்டான். இயேசு 4 அவர்களிடம்: நீங்கள் கேட்கிறவைகளையும் காண்கிறவர்களையும் யோவானிடம் போய் அறிவியுங்கள்; குருடர் பார்வையடை 5 கிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுப்பப் படுகிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. என்னிமித்தம் இட 6 றல்படாதவன் எவனே அவன் பாக்கியவான் என்றார்.

அவர்கள் போகையில், இயேசு யோவா 7 னைக் குறித்து ஜனக்கூட்டத்தாரிடம் பேசத்தொடங்கி: எதைப் பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்? காற்றினலைகையும் காணலையோ? அல்லவென்றால் எதைப் பார்க்கப் போனீர்கள்? மெல்லிய வஸ்திரந் 8 தரித்த மனுஷனையோ? மெல்லிய வஸ்திரந் தரித்திருக்கிறவர்கள் அரசர் மாளிகைகளில் இருக்கிறார்கள். அல்லவென்றால் 9 எதற்காகப் போனீர்கள்? தீர்க்கதரிசியைப்

பார்க்கவோ? ஆம், தீர்க்கதரிசியிலும் மேன்
மையுள்ளவனேயே என்று உங்களுக்குச்
சொல்லுகிறேன்.
10 இதோ, நான் என் தூதனை
உமக்கு முன்பாக அனுப்புகிறேன்;
அவன் உமக்கு முன்னே போய்
உமது வழியை ஆயத்தம்பண்ணுவான்
என்று எழுதிய வாக்கியத்தால் குறிக்கப்
11 பட்டவன் இவனே. ஸ்திரீகளிடம் பிறந்த
வர்களில் யோவான் ஸ்நானகனைப் பார்க்
கிலும் பெரியவன் ஒருவனுந் தோன்றின
தில்லை; பரலோகராஜ்யத்திலுள்ள சிறிய
னே அவனிலும் பெரியவன் என்று மெய்
யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
12 யோவான் ஸ்நானகன் நாட்கள் தொடங்கி
இதுவரைக்கும் பரலோகராஜ்ய விஷய
மாய்ப் பலவந்தஞ் செய்கிறார்கள்; பலவந்
தஞ் செய்கிறவர்கள் அதைப் பறித்துக்
13 கொள்ளுகிறார்கள். சகல தீர்க்கதரிசி
களும் நியாயப்பிரமாணமும் யோவான்
வரைக்கும் தீர்க்கதரிசனமாகவே உரைத்
14 துக்கொண்டிருந்தார்கள். நீங்கள் ஒத்துக்
கொள்ள மனதாயிருந்தால் வரப்போகிறவ
15 னாகிய எலியா இவன்தான். காதுள்ளவன்
கேட்கக்கடவன்.
16 இந்தச் சந்ததியை யாருக்கு ஒப்பிடு
வேன்? சந்தை வெளிகளில் உட்கார்ந்து
எதிர்ப்பக்கத்தாரைப் பார்த்து:
17 உங்களுக்குக் குழல் ஊதினேம், நீங்கள்
கூத்தாடவில்லை;
ஒப்பாரி வைத்தோம், நீங்கள் மாரடிக்க
வில்லை
என்று சொல்லுகிற பிள்ளைகளுக்கு ஒப்பா
18 யிருக்கிறது. யோவான் போஜனபானம்
பண்ணுதவனாய் வந்தான்; அவன் பேய்
19 பிடித்திருக்கிறவன் என்கிறார்கள். மனுஷ
குமாரன் போஜனபானம் பண்ணுகிறவராய்
வந்தார்; இதோ, போஜனப்பிரியன் மதுபா
னப்பிரியன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்
கும் சிநேகிதன் என்கிறார்கள். ஞானமோ
தன் செயல்களால் நியாயமென்று தீர்க்
கப்பட்டது என்றார்.
20 பின்பு, தமது வல்ல செயல்களில் பல
வற்றைச் செய்யக்கண்ட ஊர்கள் மனந்
திரும்பாதலினால் அவைகளைக் கண்டித்துப்
21 பேசத்தொடங்கி: கொராசினே, ஐயோ,
உனக்குக்கேடாம்! பெத்சாயிதானே, ஐயோ,
உனக்குக் கேடாம்! உங்களில் செய்யப்
பட்ட வல்ல செயல்கள் தீருவிலும் சீயோ
னிலும் செய்யப்பட்டிருந்ததாலல் அப்
பொழுதே இரட்டும் சாம்பலுமாய் மனந்
22 திரும்பியிருப்பார்கள். நியாயத் தீர்ப்பு
நாளிலே தீரு சீதோன் ஊர்களுக்கு நேரிடு
வதைப்பார்க்கிலும் உங்களுக்கு நேரிடுவது
அதிகக் கடினமாகுமென்று உங்களுக்குச்
சொல்லுகிறேன். நீயோ, கப்பர்கூமே, 23
வானபரியந்தம் உயர்த்தப்படுவாயோ?
பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய். உன்
னில் செய்யப்பட்ட வல்ல செயல்கள்
சோதோமிலே செய்யப்பட்டிருந்ததாலல்
அது இந்நாள்வரைக்கும் நிலைத்திருக்கும்?
நியாயதீர்ப்புநாளில் சோதோம் நாட்டுக்கு 24
நேரிடுவதைப் பார்க்கிலும் உனக்கு நேரிடு
வது அதிகக் கடினமாகுமென்று உனக்குச்
சொல்லுகிறேன் என்றார்.
அந்தச் சமயத்தில் இயேசு இதற்கிசை 25
யத் திருவுளம்பற்றினதாவது: பிதாவே,
வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே,
இவைகளை ஞானிகளுக்கும் விவேகிகளுக்
கும் மறைத்துப் பாலகருக்கு வெளிப்படுத்
தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்.
ஆம், பிதாவே, இதுவே உமது திருவுளத் 26
துக்குப் பிரியமாயிருந்தது. சகலமும் 27
என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்
கப்பட்டிருக்கிறது; பிதா தவிர வேறொருவ
னும் குமாரனை முற்றும் அறியான்; குமார
னும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்
படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனுந்
தவிர வேறொருவனும் பிதாவை அறியான்.
வருந்தியுழைத்துப் பாரஞ் சுமக்கிறவர்க 28
ளே, நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்
கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல்
தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ் 29
மையுமாய் இருப்பதால் என் நுகத்தை
உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்
தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது நீங்
கள் உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறு
தல் கண்டடைவீர்கள். என் நுகம் நல்லது,
என் சுமை இலேசு என்றார்.

அக்காலத்தில் இயேசு ஓய்வுநாளில் பயிர் **12**
வழியே போனார்; அவருடைய சீஷர் பசி
யாயிருந்து கதிர்களைக் கொய்து தின்னத்
தொடங்கினார்கள். பரிசேயர் அதைக் 2
கண்டு அவரிடம்: இதோ, ஓய்வுநாளில்
செய்யத்தகாததை உமது சீஷர் செய்கிறார்
களே என்று சொல்ல | அவர்: தாவீதும் அவ 3
னோடிருந்தவர்களும் பசியாயிருந்தபோது
அவன் செய்ததை நீங்கள் வாசித்ததில்லையா.
அவன் கடவுளின் வீட்டிற்குட்சென்று 4
ஆசாரியர் மாத்திரமே தவிர அவனும் அவ
னோடிருந்தவர்களும் புசிக்கக்கூடாத தெய்
வசமுகத்து அப்பங்களைப் புசித்தானே.
அன்றியும், ஓய்வுநாட்களில் ஆசாரியர்கள் 5

தெய்வாலயத்தில் ஒய்ந்திராமல் ஒய்வுநாளே
வேலைநாளாக்கினாலும் குற்றமில்லாதிருக்கி
ருர்கள் என்று நீங்கள் வேதத்தில் வாசித்த
6 தில்லையா? தெய்வாலயத்திலும் பெரிய
தொன்று இங்கே இருக்கிறதென்று உங்க
7 ளுக்குச் சொல்லுகிறேன். பலியையல்ல
இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின்
கருத்த இன்னதென்று அறிந்தீர்களானால்
குற்றமில்லாதவர்களை நீங்கள் குற்றப்
8 படுத்த மாட்டீர்கள். ஒய்வுநாளுக்கு ஆண்
டவர் மனுஷகுமாரனே என்றார்.
9 அவர் அவ்விடம் விட்டு அப்பாற்போய்
அ வ ர் க ள் ஜெபாலயத்துக்குட்சென்றார்.
10 இதோ, அங்கே சூம்பின கையையுடைய
மனுஷன் ஒருவனிருந்தான். அப்பொழுது
அவர்மேல் குற்றஞ்சாட்டும் நோக்கமுடை
யவர்களாய்: ஒய்வுநாளில் குணமாக்குகிறது
11 நியாயமா என்று கேட்டார்கள். அதற்கு
அவர்: உங்களில் எந்த மனுஷனுக்கு
தனக்கிருந்த ஒரே ஆடு ஒய்வுநாளில் குழி
யில் தவறிவிழுந்தால் அதைத் தூக்கி வெளி
12 யே விடாமலிருப்பானே? ஆட்டைப்பார்க்
கிலும் மனுஷன் எவ்வளவோ விசேஷித்த
வன்! ஆதலால், ஒய்வுநாளில் நன்மை செய்
13 வது நியாயந்தானென்று சொன்னார். பின்பு
அந்த மனுஷனை நோக்கி: உன் கையை
நீட்டு என்றார். அவனும் நீட்டினான்;
அது சுகப்பட்டு மறுகையைப்போலா
14 யிற்று. பரிசேயரோ வெளியே போய்,
அவரை எப்படிக் கொலைசெய்யலாமென்று
அவருக்கு விரோதமாய் ஆலோசித்தார்கள்.
15 இயேசு அதையறிந்து அவ்விடம் விட்டு
விலகிப்போனார். அநேகர் அவருக்குப்
பின்சென்றார்கள். அவர்களெல்லாரையும்
16 அவர் குணமாக்கினார். தம்மைப் பிரசித்
தம் பண்ணுதபடி அவர்களுக்குக் கண்டிப்
பாய்க் கட்டளையிட்டார்.
17 இதோ, நான் தெரிந்தெடுத்தஎனதுதாசன்,
என் ஆத்துமாவுக்குப் பிரியமாயிருக்கிற
எனது நேசன்,
என் ஆவியை அவர்மேல் அமரப்பண்
ணுவேன்,
அவர் புறஜாதியாருக்கு நியாயத்தைக்
கூறி அறிவிப்பார்.
18 வாக்குவாதஞ் செய்யவுமாட்டார், கூக்
குரலிடவுமாட்டார்;
அவர் சத்தத்தை ஒருவனும் வீதிகளில்
கேட்பதுமில்லை.
19 அவர் நியாயத்தை ஜெயத்துக்குக்
கொண்டுவரும்வரைக்கும்
நெறிந்த நாணலை முறியார்;
மங்கியெரிகிற திரியை அணையார்
புறஜாதியார் நன்னம்பிக்கை அவர் 20
நாமத்தின்மேலிருக்கும்
என்று | ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாய் 21
வந்த வாக்கு நிறைவேற இப்படி நடந்
தது.
அப்பொழுது, பேய்பிடித்த ஒருவனை 22
அவரிடங் கொண்டுவந்தார்கள்; அவன்
குருடன், ஊமையன்; ஊமையன் பேசவும்
பார்க்கவுந் தக்கதாக அவனைக் குணமாக்கி
னார். ஜனங்களெல்லாரும் பிரமித்து: தாவீ 23
தின் குமாரன் இவர்தானே என்றார்கள்.
பரிசேயரோ அதைக்கேட்டு: இவன் பேய் 24
களின் தலைவனுகிய பெயல்செபூலினாலே
பேய்களை ஓட்டுகிறானேயல்லாமல் மற்றப்
படியல்ல என்றார்கள். அவர் அவர்களு 25
டைய சிந்தனைகளையறிந்து அவர்களைப்
பார்த்து: தனக்குத்தானே விரோதமாய்ப்
பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்
போம்; தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்
திருக்கிற எந்த ஊரும் எந்த வீடும் நிலைநிற்
காது. [1]சாத்தானைச் சாத்தான் துரத்தினால் 26
தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்
கிறதாகுமே; அப்படியானால் அவன் ராஜ்
யம் எப்படி நிலைநிற்கும்? நான் பெயல்செ 27
பூலினாலே பேய்களைத் துரத்தினால் உங்கள்
பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகி
ருர்கள்? ஆகையால், உங்களை நியாயந்தீர்ப்
பவர்கள் அவர்களே. நான் கடவுளுடைய 28
ஆவியினாலே பேய்களைத் துரத்தினால் கடவு
ளின் ராஜ்யம் உங்களிடம் வந்தாயிற்று.
அன்றியும், பலவானை முந்திக் கட்டினாலொ 29
ழிய பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன்
புகுந்து அவன் உடைமைகளைக் கொள்ளை
யிடுவது எப்படி? கட்டினானேயாகில் அவன்
வீட்டைக் கொள்ளையடித்துவிடுவான். என் 30
னோடே இராதவன் எனக்கு விரோதி; என்
னோடுகூடிச் சேர்க்காதவன் சிதறடிக்கிறவன்.
ஆதலால் நான் உங்களுக்குச் சொல்லுகி 31
றேன்: எந்தப் பாவமும் எந்தத் தூஷண
மும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்; ஆவி
யானவரை நிந்திக்கும் தூஷணமோ மன்
னிக்கப்படாது. எவனுகிலும் மனுஷ 32
குமாரனுக்கு விரோதமாக ஒரு வார்த்தை
சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்
படும்; எவனுகிலும் பரிசுத்த ஆவிக்கு
விரோதமாகப் பேசுவானுனால் அவன் இம்
மையிலும் மறுமையிலும் மன்னிப்படை
யான். நீங்கள் மரத்தை நல்லதாக்குங்கள், 33

1 விரோதி எனப் பொருள்படும்.

அப்பொழுது அதன் களையும் நல்லதாகும்; மரத்தைக் கெட்டதாக்குங்கள், அப்பொழுது அதன் களையும் கெட்டதாகும். களை
34 யிலேலே மரம் அறியப்படும். விரியன்பாம்புக்குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளைப் பேசுவதெப்படி? இருதயத்தின் நிறைவிலிருந்து வாய்
35 பேசும். நல்ல மனுஷன் நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான்; பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை
36 எடுத்துக்காட்டுகிறான். மனுஷர் பேசும் ஒவ்வொரு வீண்வார்த்தைக்கும் நியாயத்தீர்ப்புநாளிலே கணக்குக் கொடுக்கவேண்டுமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.
37 நீ குற்றமற்றவனென்று தீர்க்கப்பெறுவதும் உன் வார்த்தைகளிலிருந்தே, நீ குற்றமுள்ளவனென்று தீர்க்கப்பெறுவதும் உன் வார்த்தைகளிலிருந்தே என்றார்.

38 அப்பொழுது வேதபாரகரிலும் பரிசேயரிலும் சிலர் அவரிடம் வந்து: போதகரே, நீர் எங்களுக்கு ஓர் அடையாளம் காட்ட வேண்டுமென்று விரும்புகிறோமென்று
39 சொல்ல | அவர்: இந்தப் பொல்லாத விபசார சந்ததியார் அடையாளந் தேடுகிறார்கள்; ஆயினும், யோனா தீர்க்கதரிசியின் அடையாளத்தையே யன்றி வேறே அடையாளத்தை இவர்களுக்குக் கொடுப்பதில்லை.
40 யோனா இரவும் பகலும் மூன்றுநாள் பெரிய மீனின் வயிற்றில் இருந்ததுபோல மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்று நாள்
41 பூமியின் இருதயத்தில் இருப்பார். நினிவே பட்டணத்தார் நியாயத்தீர்ப்பில் இச்சந்ததியாரோடெழுந்துநின்று இவர்கள்மேல் குற்றஞ்சாட்டுவார்கள். அவர்கள் யோனாவின் பிரசங்கத்துக்கிணங்கி மனந்திரும்பினார்
42 களே. இதோ, இங்கிருக்கிறது யோனாவிலும் பெரியது. தென்தேசத்து அரசி இச்சந்ததியாரோடெழுந்துநின்று நியாயத்தீர்ப்பில் இவர்கள்மேல் குற்றஞ்சாட்டுவாள். இவள் பூமியின் கடையாந்திரங்களிலிருந்து சாலொமோனின் ஞானத்தைக் கேட்கவந்தாள். இதோ, இங்கிருக்கிறது சாலொமோனிலும் பெரியது. அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப் போகும்போது வறண்ட
43 இடங்களில் அலைந்து இளைப்பாறுதல் தேடி
44 யுங் கண்டடையாமல்: நான் விட்டு வந்த என் வீட்டுக்குத் திரும்பிப்போவேனென்று சொல்லி வந்து அந்த வீடு வெறுமையாகவும் பெருக்கி ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கக்கண்டு | திரும்பிப்போய்த்
45 தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னிலே கூட்டிக்கொண்டு வந்து உட்புகுந்து அங்கே குடியிருக்கும். அப்பொழுது அந்த மனுஷனின் முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிகக்கேடுள்ளதாகும். இந்தப் பொல்லாத சந்ததியாருக்கும் இப்படியேயாகும் என்றார்.

46 அவர் ஜனங்களோடே இன்னும் பேசிக் கொண்டிருக்கையில் அவர் தாயாரும் சகோதரரும் அவரிடம் பேசவேண்டுமென்று
47 வெளியே நின்றுகொண்டிருந்தார்கள். அப் பொழுது ஒருவன் அவரிடம்: இதோ, உமது தாயாரும் உமது சகோதரரும் உம்மோடே பேசவேண்டுமென்று வெளியே நிற்கிறார்கள் என்றான். அவரோ தம்மிடம் இப்
48 படிச் சொன்னவனுக்கு: என் தாயார் யார்? என் சகோதரர் யார் என்று சொல்லித் |
49 தமது கையைத் தமது சீஷருக்கு நேரே நீட்டி: இதோ, என் தாயும் என் சகோதரரும் இவர்களே. பரலோகத்திலிருக்கிற
50 என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனே அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாம் என்றார்.

**13** இயேசு அன்றையதினமே வீட்டிலிருந்து வெளியே போய்க் கடலோரத்தில்
2 உட்கார்ந்தார். திரளான ஜனங்கள் அவரிடம் கூடிவந்தபடியால் அவர் ஒரு படவிலேறி உட்கார்ந்தார்; ஜனங்களெல்லாரும்
3 கரையிலே நின்றார்கள். அவர் பல காரியங்களை உவமைகளாக அவர்களுக்குச் சொன்னார்:

இதோ, விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் போனான். அவன் விதைக்கையில் சில
4 விதைகள் பாதையில் விழுந்தன; பறவைகள் வந்து அவற்றைப் பட்சித்துப்போட்டன.
5 சில விதைகள் அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தன; ஆழமான மண்ணில்லாததினால் அவை சீக்கிரம்
6 முளைத்தன; வெயில் ஏறினபோதோ அவை தீய்ந்துபோய் வேரில்லாமையால் உலர்ந்து
7 போயின. சில விதைகள் முள்ளுள்ள இடங்களில் விழுந்தன; முள் வளர்ந்து அவற்றை நெருக்கிப்போட்டது.
8 சில விதைகளோ நல்ல நிலத்தில் விழுந்து சில நூறுகவும் சில அறுபதாகவும் சில முப்பதாகவும் பலன் தந்தன. காதுள்ளவன்
9 கேட்கக்கடவன் என்றார்.

10 சீஷர் அவரிடம் வந்து: ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர் என்று
11 கேட்க | அவர்: பரலோகராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ அருளப்பட

12 வில்லே. உள்ளவன் எவனே அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமுமாகும்; இல்
லாதவன் எவனே அவனிடத்தில் உள்ள
13 தும் எடுத்துக்கொள்ளப்படும். அவர்கள்
கண்டும் காணுதவர்களாயும் கேட்டும்
கேளாதவர்களாயும் உணர்ந்துகொள்ளாத
வர்களாயும் இருக்கிறபடியினால் நான் உவ
மைகளாக அவர்களோடே பேசுகிறேன்.

14 காதாரக் கேட்டும் உணரமாட்டீர்கள்,
கண்ணாரக் கண்டும் அறியமாட்டீர்கள்;
15 இந்த ஜனத்தின் இருதயம் கொழுத்துப்
போயிற்று,
காதுகள் கேளாதபடி மந்தமாயின;
அவர்கள் கண்களால் காணுமலும்
காதுகளால் கேளாமலும்
இருதயத்தால் உணராமலும்
மனந்திரும்பாமலு மிருக்கும்படி
தங்கள் கண்களே மூடிக்கொண்டார்கள்.
நானே அவர்களைக் குணமாக்க மனதா
யிருக்கிறேன்

என்ற ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்க
16 ளிடம் நிறைவேறுகிறது. உங்கள் கண்
களோ பாக்கியமுள்ளவைகள்; அவைகள்
காண்கின்றன. உங்கள் காதுகளும் பாக்கி
யமுள்ளவைகள்; அவைகள் கேட்கின்றன.
17 அநேக தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும் நீங்
கள் காண்கிறவைகளைக் காணவும் நீங்கள்
கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும்
காணுமலும் கேளாமலும் போனார்களென்று
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகி
றேன்.

18 ஆகையால், விதைக்கிறவனைப்பற்றிய
19 உவமையை நீங்கள் கேளுங்கள்: ஒருவன்
ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணரா
திருக்கும்போது, தீயோன் வந்து அவன் இரு
தயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக்
கொள்ளுகிறான்; அவனே பாதையில்
20 விதைக்கப்பட்டவன். கற்பாறை இடங்
களில் விதைக்கப்பட்டவன் வசனத்தைக்
கேட்டு உடனே அதைச் சந்தோஷத்தோடே
21 ஏற்றுக்கொள்ளுகிறவன்; ஆகிலும், தன்னில்
வேரில்லாதவனுய்க் கொஞ்சக்காலமாத்தி
ரம் நிலைத்திருப்பான்; வசனத்தினிமித்தம்
உபத்திரவமும் இம்சையும் உண்டான
22 வுடனே இடறிவிழுகிறான். முள்ளுள்ள
இடங்களில் விதைக்கப்பட்டவன் வசனத்
தைக் கேட்கிறவனுயிருந்தும், பிரபஞ்சத்
தின் கவலையும் ஐசுவரியத்தின் வஞ்சகமும்
வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால் அவ
23 னும் பலனற்றுப்போகிறான். நல்ல நிலத்
தில் விதைக்கப்பட்டவனே, வசனத்தைக்
கேட்டு உணருகிறவனுய் ஒன்று நூறுகவும்
ஒன்று அறுபதாகவும் ஒன்று முப்பதாகவும்
பலன் தருகிறான் என்றார்.

24 வேறொரு உவமையை அவர்களுக்குச்
சொல்லிக்காட்டினார்: பரலோக ராஜ்யம்
தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த
25 மனுஷனுக்கு ஒப்பாகும். மனுஷர் நித்
திரை பண்ணுகையில் அவன் சத்துரு வந்து
கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப்
26 போனான். பயிர் வளர்ந்து கதிர்விட்ட
27 போது களைகளும் காணப்பட்டன. வீட்
டெஜமானுடைய வேலைக்காரர் அவனிடம்
வந்து: ஐயா, நீர் உமது நிலத்தில் நல்ல
விதையை விதைத்தில்லையோ? அதில் களை
கள் உண்டானதெப்படி என்றார்கள்.
28 அதற்கு அவன்: அதைச் சத்துரு செய்
தான் என, வேலைக்காரர்: நாங்கள் போய்
அவைகளைப் பிடுங்கிப்போடுவது உமக்கு
29 இஷ்டமா என்று கேட்டார்கள். அதற்கு
அவன்: வேண்டாம், களைகளைப் பிடுங்கும்
போது நீங்கள் கோதுமையையுங்கூட
30 வேரோடே பிடுங்கிவிடாதபடிக்கு | இரண்
டையும் அறுப்புமட்டும் வளரவிடுங்கள்.
அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களி
டம்: முதலாவது களைகளைப் பிடுங்கி அவை
களைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக்
கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்
சியத்தில் சேர்த்துவையுங்கள் என்பேன்
என்றார் என்றார்.

31 வேறொரு உவமையை அவர்களுக்கு
எடுத்துக்காட்டினார்: பரலோக ராஜ்யம்
கடுகுவிதைக்கு ஒப்பாகும்; அதை ஒரு மனு
ஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்
தான். அது சகல விதைகளிலும் சிறிது; வள
32 ரும்போதோ செடிகளைப்பார்க்கிலும் பெரி
தாகி ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளை
களில் வந்தடையத்தக்க மரமாகும் என்
றார்.

33 வேறொரு உவமையை அவர்களுக்குச்
சொன்னார்: பரலோகராஜ்யம் புளித்தமா
வுக்கு ஒப்பாகும்; ஒரு ஸ்திரீ அதை எடுத்து
மூன்றுபடி மாவில் புதைத்துவைத்தாள்;
அது முழுதும் புளித்தது என்றார்.

34 இவைகளையெல்லாம் இயேசு ஜனக்கூ
டத்தாரிடத்தில் உவமைகளாகப் பேசினார்;
உவமைகளினாலேயன்றி அவர்களிடம் ஒன்
றையும் பேசவில்லை.

35 உவமைகளைப் பேச என் வாயைத் திறப்
பேன்,
உலகத்தோற்றமுதல் மறைந்திருந்தவை
களை வெளியாக்கிவிடுவேன்
என்று தீர்க்கதரிசியின்மூலமாய் வந்த
வாக்கு நிறைவேற இப்படி நடந்தது.

36 அப்பொழுது அவர் ஜனக்கூட்டத்தாரை அனுப்பிவிட்டு வீட்டுக்கு வந்தார்; அவருடைய சீஷர் அவரிடம் வந்து: நிலத்தில் களைகளை விதைத்த உவமையை எங்களுக்குத் தெளிவாக்கவேண்டுமென்று கேட்க |
37 அவர்: நல்ல விதையை விதைக்கிறவர்
38 மனுஷகுமாரன்; நிலம் உலகம்; நல்ல விதை ராஜ்யத்தின் பிள்ளைகள்; களைகள் தீயோனின்
39 பிள்ளைகள்; அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு; அறுப்பு யுகமுடிவு; அறுக்கிறவர்
40 கள் தெய்வதூதர். களைகளைச் சேர்த்து அக்கினியால் சுட்டெரிக்கிறதுபோல யுக
41 முடிவில் நடக்கும். மனுஷகுமாரன் தமது தூதரை யனுப்புவார்; அவர்கள் அவர் ராஜ்யத்தில் இடறிவிழக் காரணமாயிருக்கிற யாவற்றையும் அக்கிரமஞ்செய்கிறவர்களை
42 யும் சேர்த்து | அவர்களை அக்கினிச்சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகையும்
43 பற்கடிப்புமாயிருக்கும். அப்பொழுது நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றார்.
44 பின்னும் அவர்: பரலோகராஜ்யம் நிலத்தில் மறைந்திருக்கிற புதையலுக்கு ஒப்பாகும்; அதை ஒரு மனுஷன் கண்டு மறைத்து வைத்து அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய்த் தனக்குரிய யாவற்றையும் விற்று அந்த நிலத்தைக் கொள்ளுகிறான்.
45 மேலும், பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாகும்;
46 அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு போய்த் தனக்குரிய யாவற்றையும் விற்று அதை வாங்குகிறான்.
47 அன்றியும், பரலோகராஜ்யம் கடலில் போடப்பட்டுச் சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பா
48 கும்; அது நிறைந்தபோது அதைக் கரையில் இழுத்து உட்கார்ந்து நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்துக்கொண்டு ஆகாதவைகளை எறிந்துபோடுவார்கள். இப்படியே யுக
49 முடிவில் நடக்கும். | தெய்வதூதர் புறப்பட்டு நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்
50 லாதவர்களைப் பிரித்து | அவர்களை அக்கினிச்சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்புமாயிருக்கும் என்றார்.
51 இவைகளையெல்லாம் அறிந்துகொண்டீர்களா என்று அவர் கேட்க அவர்கள்: ஆம்,
52 அறிந்துகொண்டோம் என்றார்கள். அவரோ அவர்களிடம்: இப்படியிருக்கிறபடியால், பரலோகராஜ்யத்துச் சீஷனாகித் தேறின வேதபாரகன் எவனும் தன் பண்டகசாலையிலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக்கொடுக்கிற வீட்டெஜமான் ஒருவனுக்கு ஒப்பாவான் என்றார்.

53 இயேசு இந்த உவமைகளைச் சொல்லி முடித்தபின்பு
54 அவ்விடம் விட்டுத் | தம் சொந்த ஊருக்கு வந்து அவர்களுடைய ஜெபாலயத்திலே அவர்களுக்கு உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தார். அவர்கள் பிரமித்து: இவனுக்கு இந்த ஞானமும் வல்ல
55 செயல்களும் எங்கிருந்து வந்தன? இவன் தச்சன் மகன் அல்லவோ? இவன் தாயின் பேர் மரியாளல்லவோ? யாக்கோபு யோசேப்பு சீமோன் யூதா என்பவர்கள் இவன்
56 சகோதரரல்லவோ? இவன் சகோதரிகளெல்லாரும் நம்மிடம் இருக்கிறார்களல்லவோ? இப்படியிருக்க இவை யெல்லாம் இவனுக்கு எங்கிருந்து வந்தனவென்று
57 சொல்லி | அவரைக் குறித்து இடறல்பட்டார்கள். இயேசுவோ அவர்களிடம்: ஒரு தீர்க்கதரிசி தன் ஊரிலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனமடையாதிருப்பதில்லை என்றார்.
58 அவர்களுடைய அவநம்பிக்கையினிமித்தம் அவர் அங்கே அநேக வல்ல செயல்களைச் செய்யவில்லை.

**14** அக்காலத்தில் ஏரோது [1]சிற்றரசன் இயேசுவின் பிரஸ்தாபத்தைக் கேள்விப்பட்டுத் | தன் ஊழியக்காரரிடம்: இவன்
2 யோவான்ஸ்நானகன்; இவன் மரித்தோரிலிருந்து எழுந்தான்; ஆகையால் இவனிடம் வல்ல செயல்கள் விளங்குகின்றன என்றான். ஏரோது தன் சகோதரனுடைய பிலிப்
3 பின் மனைவி ஏரோதியாளினிமித்தம் யோவானைப் பிடித்துக் கட்டிக் காவலில் வைத்திருந்தான். ஏனெனில், நீர் அவளை வைத்துக்
4 கொண்டிருப்பது நியாயமல்லவென்று யோவான் அவனுக்குச் சொல்லிவந்தான்.
5 ஏரோது அவனைக் கொலைசெய்ய மனதாயிருந்தும் ஜனங்கள் அவனைத் தீர்க்கதரிசியென்று எண்ணிவந்தபடியால் அவர்களுக்குப் பயந்திருந்தான். அப்படியிருக்க,
6 ஏரோதின் ஜென்மநாள் கொண்டாடப்படுகிறபோது ஏரோதியாளின் குமாரத்தி அவர்கள் நடுவே நடனஞ் செய்தாள். அது ஏரோதுக்குப் பிரியமாயிருந்தது.
7 அதினிமித்தம் அவள் எதைக் கேட்டாலும் தான் தருவதாக அவளுக்கு ஆணையிட்டு வாக்குக் கொடுத்தான்.
8 அவள், தன் தாய் தூண்டி

[1] சிற்றரசன் என்னும் பதம் கிரேக்கில் தேசாதிபதி எனப் பொருள்படும்.

விட்டபடியே: யோவான்ஸ்நானகனின்
தலையை இங்கேதானே ஒரு தட்டில் எனக்
9 குத் தாருமென்று கேட்டாள். | அரசன்
மனவருத்தப்பட்டான். ஆயினும் ஆணை
களினிமித்தமும் பந்தியில் கூட இருந்தவர்
களினிமித்தமும் அதைக் கொடுக்கக் கட்
10 டளையிட்டு | ஆள் அனுப்பிக் காவற்கூடத்
திலே யோவானைச் சிரச்சேதம் பண்ணுவித்
11 தான். அவனுடைய சிரசை ஒரு தட்டிலே
கொண்டுவந்து அச்சிறு பெண்ணுக்குக்
கொடுத்தார்கள்; அவள் அதைத் தன் தாயி
12 னிடத்தில் கொண்டுபோனாள். அவன்
சீஷர் வந்து உடலை எடுத்து அடக்கம்பண்
ணிப் பின்பு போய் அந்தச் சங்கதியை
இயேசுவுக்கு அறிவித்தார்கள்.
13 இயேசு அதைக்கேட்டு அவ்விடம் விட்
டுப் படவிலேறி வனாந்தரமான ஓர் இடத்
துக்குத் தனியே போனார். ஜனக்கூட்டத்
தார் அதைக் கேள்விப்பட்டு ஊர்களிலி
ருந்து கால்நடையாய் அவரைத் தொடர்ந்து
14 போனார்கள். அவர் வெளியே வந்து திரள்
கூட்டத்தைக் கண்டு அவர்கள்மேல் மன
துருகி அவர்களில் வியாதியஸ்தரைக் குண
15 மாக்கினார். சாயங்காலமானபோது சீஷர்
அவரிடம் வந்து: இது வனாந்தரமான இடம்,
நேரமுமாயிற்று; ஜனங்கள் கிராமங்களுக்
குப் போய்த் தங்களுக்கு போஜன பதார்த்
தங்களைக் கொள்ளும்படி அவர்களை அனுப்
16 பிவிடவேண்டும் என்றார்கள். இயேசுவோ:
அவர்கள் போக அவசியமில்லை; நீங்களே
அவர்களுக்குப் போஜனங் கொடுங்கள் என்
17 றார். அதற்கு அவர்கள்: இங்கே எங்களி
டத்தில் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்
களுமேயல்லாமல் வேறொன்றுமில்லை என்
18 றார்கள். அவர்: அவைகளை என்னிடம்
19 கொண்டுவாருங்கள் என்றார். அப்பொழுது
அவர் ஜனங்களைப் புல்லின்மேல் பந்தியிருக்
கக் கட்டளையிட்டு அந்த ஐந்து அப்பங்களை
யும் இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்
தை அண்ணாந்துபார்த்து, ஆசீர்வதித்து, அப்
பங்களைப் பிட்டுச் சீஷரிடத்தில் கொடுத்
தார்; சீஷர் ஜனங்களுக்குக் கொடுத்தார்
20 கள். எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தி
யடைந்தார்கள்; மிஞ்சின துணிக்கைகளைப்
பன்னிரண்டு கூடைநிறைய எடுத்தார்கள்.
21 சாப்பிட்டவர்கள், ஸ்திரீகள் பிள்ளைகள்
தவிர, ஏறக்குறைய ஐயாயிரம்புருஷர்.
22 அவர் தமது சீஷரை உடனே படவிலேற்
றித் தாம் ஜனங்களை அனுப்பிவிடுமட்டும்
அவர்கள் தமக்குமுன்னே அக்கரைக்குப்
23 போகும்படி அவசரப்படுத்தினார். அவர்
ஜனங்களையனுப்பிவிட்ட பின்பு தனியே
ஜெபம்பண்ண ஒரு மலையின்மேல் ஏறி
இருட்டியபோது அங்கே தனிமையாயிருந்
தார். அதற்குள்ளாகப் படவு கரையிலிருந்து 24
வெகுதூரம் போயிருந்தது; எதிர்காற்றடிக்
கவே அது அலைகளினால் அலைவுபட்டது.
இரவின் நாலாம் ஜாமத்தில் அவர் கடலின் 25
மேல் நடந்து அவர்களிடம் வந்தார். அவர் 26
கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர் கண்டு
கலங்கி ஆவேசமென்று சொல்லிப் பயத்தி
னால் அலறினார்கள். உடனே இயேசு அவர் 27
களோடே பேசி: தைரியமாயிருங்கள், நான்
தான், பயப்படாதிருங்கள் என்றார். அதற் 28
குப் பேதுரு: ஆண்டவரே, நீரேயானால்
நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடம்
வரக் கட்டளையிடுமென | அவர்: வா என் 29
றார். அப்பொழுது பேதுரு படவைவிட்டி
றங்கி ஜலத்தின்மேல் நடந்து இயேசுவைக்
கிட்டிவந்தான். காற்றைக் கண்டபோதோ 30
பயந்து அமிழப்போகையில்: ஆண்டவரே,
என்னை இரட்சியுமென்று கதறிக் கூப்பிட்
டான். உடனே இயேசு கையை நீட்டி 31
அவனைப்பிடித்து: அற்பவிசுவாசியே, என்
சந்தேகப்பட்டாய் என்றார். அவர்கள் பட 32
வில் ஏறவே காற்று அமர்ந்தது. அப்பொ 33
ழுது படவில் உள்ளவர்கள்: மெய்யாகவே
நீர் தெய்வகுமாரன் என்று சொல்லி அவ
ரைப் பணிந்துகொண்டார்கள்.

பின்பு அவர்கள் கடலைக் கடந்து கெனே 34
சரேத்து நாட்டில் கரை சேர்ந்தார்கள். அவ் 35
விடத்து மனுஷர் அவரை இன்னாரென்று
அறிந்து சுற்றுப்புறமெங்கும் செய்தி அனுப்
பிப் பிணியாளிகளெல்லாரையும் அவரிடங்
கொண்டுவந்து | அவர் வஸ்திரத்தின் ஓரத் 36
தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தர
வாகவேண்டுமென்று அவரை வேண்டிக்
கொண்டார்கள்; தொட்டவர்களாவரும் முற்
றும் குணமானார்கள்.

**15** அப்பொழுது எருசலேமிலிருந்து பரி
சேயரும் வேதபாரகரும் இயேசுவினிடம்
வந்து: உமது சீஷர் முன்னோரின் பாரம் 2
பரை முறைமையை மீறி நடக்கிறதென்ன?
கை கழுவாமல் போஜனம் பண்ணுகிறார்
களே என | அவர்: நீங்கள் உங்கள் பாரம் 3
பரை முறைமையினிமித்தம் கடவுளுடைய
கற்பனையை மீறி நடக்கிறதென்ன? உன் 4
தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ண
வேண்டுமென்றும் தகப்பனையாவது தாயை
யாவது நிந்திக்கிறவன் சாகவேண்டுமென்
றும் கடவுள் சொல்லியிருக்கிறாரே. நீங் 5
களோ, எவனாகிலும் தகப்பனையாவது தாயை
யாவது நோக்கி: உனக்கு உதவியாகக்

கொடுக்கக்கூடியதைக் . கடவுளுக்குப்
படைத்தாயிற்றென்று சொல்வாளுனால் |
6 அவன் தன் தகப்பனியாவது தாயையாவது
கனம்பண்ண வேண்டுவதில்லையென்று
சொல்லி உங்கள் பாரம்பரை முறைமையி
னிமித்தம் கடவுள் வார்த்தையை அவமாக்
கினீர்கள்.
7 இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால்
என்னைக் கனம்பண்ணுகிறார்கள்;
அவர்கள் இருதயத்துக்கும் எனக்குமோ
வெகு தூரம்;
8 மனுஷ கற்பனைகளை உபதேசங்களாக
உபதேசித்து
வீணாக எனக்கு ஆராதனை செய்கிறார்
கள்
9 என்று | மாயக்காரராகிய உங்களைப்பற்றி
ஏசாயா நன்றாய்த் தீர்க்கதரிசனம் உரைத்
தான் என்றார்.
10 பின்பு அவர் ஜனங்களை வரவழைத்து
அவர்களை நோக்கி: நீங்கள் கேட்டு உண
11 ருங்கள். வாய்க்குள்ளே போகிறது மனு
ஷனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து
வெளிப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்
12 தும் என்றார். அப்பொழுது சீஷர் அவரி
டம் வந்து: பரிசேயர் இந்த வார்த்தையைக்
கேட்டு இடறல் பட்டார்கள் என்பது உமக்
13 குத் தெரியுமா என | அவர்: என் பர
மபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே
14 பிடுங்கப்படும். அவர்களை விட்டுவிடுங்கள்,
அவர்கள் குருடருக்கு வழி காட்டுகிற குரு
டர்; குருடனுக்குக் குருடன் வழி காட்டு
வானால் இருவரும் குழியில் விழுவார்
15 களே என்றார். பேதுரு: இந்த உவமையை
எங்களுக்கு விளக்கிக் காட்டவேண்டு
16 மென்று கேட்க | அவர்: நீங்களும் இன்
17 னும்உணர்வில்லாதவர்களா? வாய்க்குள்ளே
போகிறதெல்லாம் வயிற்றில் சென்று வெளி
யே கழிந்துபோம் என்பது உங்களுக்குத்
18 தெரியாதா? வாயிலிருந்து வெளிப்படுகிற
வைகளோ இருதயத்திலிருந்து புறப்பட்டு
வரும்; அவைகளே மனுஷனைத் தீட்டுப்
19 படுத்தும். எப்படியெனில், பொல்லாத சிந்
தனைகள் கொலைபாதகங்கள் விபசாரங்கள்
வேசித்தனங்கள் களவுகள் பொய்ச்சாட்சி
கள் தூஷணங்களாகிய இவைகள் இருத
20 யத்திலிருந்து வெளிப்பட்டுவரும். இவை
களே மனுஷனைத் தீட்டுப்படுத்துகிறவை
கள்; கை கழுவாமல் சாப்பிடுகிறது மனுஷ
னைத் தீட்டுப்படுத்தாது என்றார்.
21 இயேசு அவ்விடம்விட்டு விலகித் தீரு
சீதோன் பட்டணங்களின் திசைகளுக்குப்
22 போனார். அப்பொழுது, அந்தத் திசைகளில்
குடியிருந்த கானான் நாட்டு ஸ்திரீ ஒருத்தி
அவரிடம் வந்து: ஆண்டவரே, தாவீதின்
குமாரனே, எனக்கு இரங்கும்; என் மகள்
பேயினால் கொடிய வேதனைப்படுகிறாள்
என்று சொல்லிக்கூப்பிட்டாள். அவளுக்கு 23
அவர் ஒரு வார்த்தையும் பதில் சொல்ல
வில்லை. அப்பொழுது அவர் சீஷர் வந்து:
இவள் நம்மைப் பின்தொடர்ந்து கூப்பிடுகி
றாளே, இவளை அனுப்பிவிடுமென்று அவரை
வேண்டிக்கொண்டார்கள். அதற்கு அவர்: 24
இஸ்ரவேல் வீட்டாரில் காணாமற்போன
ஆடுகளிடம் அனுப்பப்பட்டேனேயன்றி
மற்றப்படியல்லவென்றார். அவள் வந்து: 25
ஆண்டவரே, எனக்கு உதவிசெய்யுமென்று
அவரைப் பணிந்துகொள்ள | அவர்: பிள் 26
ளைகளின் ஆகாரத்தை எடுத்து நாய்க்குட்டி
களுக்குப் போடுகிறது அழகல்ல என்றார்.
அவள்: மெய்தான், ஆண்டவரே, என்று 27
ம் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின்
மேசையிலிருந்து விழும் துணிக்கைகளைத்
தின்னுமே என்றாள். இயேசு அதைக் 28
கேட்டு: ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது;
நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது
என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்
கியமானாள்.

இயேசு அவ்விடம் விட்டுக் கலிலேயாக் 29
கடற்கரைவழியே போய் ஒரு மலையின்மேல்
ஏறி அங்கே உட்கார்ந்தார். அப்பொழுது 30
சப்பாணிகள் ஊனர் குருடர் ஊமையர் முத
லிய அநேகரைத் திரளான ஜனங்கள் அவர்
பாதத்தில் கொண்டுவந்து விட்டார்கள்;
அவர்களை அவர் குணமாக்கினார். ஊமையர் 31
பேசுகிறதையும் ஊனர் சொஸ்தமடைகிற
தையும் சப்பாணிகள் நடக்கிறதையும், குரு
டர் பார்க்கிறதையும் ஜனங்கள் கண்டு ஆச்
சரியப்பட்டு இஸ்ரவேலின் கடவுளை மகி
மைப்படுத்தினார்கள்.

பின்பு இயேசு தமது சீஷரையழைத்து: 32
ஜனங்கள்மேல் பரிதாபங் கொள்ளுகிறேன்,
இவர்கள் என்னிடம் மூன்றுநாள் தங்கி
யிருந்து சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்
கள்; இவர்களைப் பட்டினியாய் அனுப்பி
விட எனக்கு மனதில்லை, வழியில் சோர்ந்து
போவார்களே என்றார். அதற்குச் சீஷர்: 33
இத்தனை திரளான ஜனங்களைத் திருப்தி செய்
வதற்கு வேண்டிய ஆகாரம் இந்த வனாந்த
ரத்திலே நமக்கு எப்படியகப்படுமென |
இயேசு: உங்களிடம் எத்தனை அப்பங்கள் 34
உண்டென்று கேட்டார். அவர்கள்: ஏழு
அப்பங்களும் சில சிறு மீன்களுமுண்டு
என்றார்கள். அப்பொழுது அவர் ஜனங்க 35
ளைத் தரையில் பந்தியிருக்கக் கட்டளை

36 யிட்டு | அந்த ஏழு அப்பங்களையும் அந்த மீன்களையும் எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்திப் பிட்டுச் சீஷரிடங்கொடுத்தார்;
37 சீஷர் ஜனங்களுக்குப் பரிமாறினார்கள். எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்; மிஞ்சின துணிக்கைகளை ஏழு கூடை நிறைய
38 எடுத்தார்கள். சாப்பிட்டவர்கள், ஸ்திரீகள் பிள்ளைகள் தவிர, நாலாயிரம் புருஷர்.
39 அவர் ஜனங்களை யனுப்பிவிட்டுப் படவி லேறி மகதாவின் எல்லைகளில் வந்து சேர்ந்தார்.

**16** அப்பொழுது பரிசேயரும் சதுசேயரும் அவரிடம் வந்து: வானத்திலிருந்து ஓர் அடையாளத்தைத் தங்களுக்குக் காண்பிக்க வேண்டுமென்று சோதித்துக் கேட்க |
2 அவர்: மாலையில் செவ்வானமிட்டிருக்கிறது, அதினால் வெளிவாங்குமென்று சொல்லு
3 கிறீர்கள். காலையில் செவ்வானமும் மந்தாரமுமாயிருக்கிறது, இன்றைக்குக் காற்றும் மழையும் வருமென்று சொல்லுகிறீர்கள். வானத்தின் தோற்றத்தை நிதானிக்க உங்களுக்குத் தெரியுமே, காலங்களின் அடையாளங்களை நிதானிக்க உங்களால்
4 கூடாதா? இந்தப் பொல்லாத விபசார சந்ததியார் அடையாளந் தேடுகிறார்கள்; யோனுவின் அடையாளத்தையேயன்றி வேறே அடையாளத்தை இவர்களுக்குக் கொடுப்பதில்லையென்று சொல்லி அவர்களை விட்டுப் போனார்.
5 அவருடைய சீஷர் அக்கரை சேர்ந்தபோது அப்பங்களைக் கொண்டுவர மறந்துபோயிருந்
6 தார்கள். இயேசு அவர்களிடம்: பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்தமாவுக்கு
7 எச்சரிக்கையாயிருங்கள் என்றார். நாம் அப்பங்களைக் கொண்டுவரவில்லையே என்று அவர்கள் தங்களுக்குள்ளே யோசனை பண்
8 ணிக்கொண்டார்கள். இயேசு அதையறிந்து: அற்பவிசுவாசிகளே, உங்களிடம் அப்பங்கள் இல்லாததைக்குறித்து நீங்கள் உங்களுக்குள்ளே யோசனைபண்ணுகிறதென்ன?
9 உங்களுக்கு இன்னும் உணர்வில்லையா? ஐந்து அப்பங்களை ஐயாயிரம்பேருக்குப் பகிர்ந்து மிஞ்சினதை எத்தனை கூடை
10 நிறைய எடுத்தீர்களென்பதும் | ஏழு அப்பங்களை நாலாயிரம்பேருக்குப் பகிர்ந்து மிஞ்சினதை எத்தனை கூடை நிறைய எடுத்தீர்களென்பதும் உங்களுக்கு ஞாபகமில்லையா?
11 பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்த மாவுக்கு எச்சரிக்கையாயிருக்கவேண்டு
மென்று நான் சொன்னது ஆகாரத்தைக் குறித்தல்லவென்று நீங்கள் உணராதிருக்
12 கிறதெப்படி என்றார். அப்பொழுது, எச் சரிக்கையாயிருங்களென்று அவர் சொன்னது அப்பத்துப் புளித்த மாவைக்குறித்துச் சொல்லாமல் பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் உபதேசத்தைக் குறித்தே சொன்னரென்று அறிந்துகொண்டார்கள்.
13 பின்பு இயேசு பிலிப்புச் செசரியாவின் திசைகளுக்கு வந்தபோது தம் சீஷரிடம் மனுஷகுமாரனை யார் என்று ஜனங்கள் சொல்லுகிறார்களென்றுகேட்க | அவர்கள்:
14 சிலர் யோவான்ஸ்நானகன் என்றும் சிலர் எலியாவென்றும் வேறு சிலர் எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவரென்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். அப்பொ
15 முது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்களென்று கேட்கச் | சீமோன்
16 பேதுரு: நீர் ஜீவனுள்ள கடவுளின் குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவனிடம்: யோனாவின் குமாரன் சீமோனே,
17 நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதாவே இதை உனக்கு வெளிப்படுத்தினார். நான் உனக்
18 குச் சொல்லுகிறதைக் கேள்; நீ [1]பேதுரு, இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.
19 பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை உனக்குத் தருவேன். பூலோகத்தில் நீ கட்டுகிறதெதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டதாகும். பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பதெதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டதாகும் என்றார்.
20 அப்பொழுது, தாம் கிறிஸ்து என்று ஒருவருக்கும் சொல்லாதபடி சீஷருக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்.
21 அதுமுதல் இயேசுகிறிஸ்து தாம் எருசலேமுக்குப்போய் மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டுக் கொலையுண்டு மூன்றாம் நாளில் எழுப்பப்பட வேண்டுமென்பதைத் தமது சீஷர்களுக்கு எடுத்துக்காட்டத் தொடங்கினார்.
22 அப்பொழுது பேதுரு அவரைத் தனியே அழைத்து: [2]வேண்டாம், ஆண்டவரே! இது உமக்கு ஒருபோதும் நேரிடாதென்று அவரைக் கண்டிக்கத் தொடங்கினான்.
23 அவரோ திரும்பிப் பேதுருவைப் பார்த்து: எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே,

---

1 கல் பேரன்றவன் எனப் பொருள்படும். 2 இரக்கம் உமதுபேரில் இருக்க என்பது கிரேக்கின் பதப்பொருள்.

நான் இடறல்பட எதுவாயிருக்கிறாய்; கடவுளுக்குரியவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்குரியவைகளைச் சிந்திக்கிறாய் என்றார்.
24 அப்பொழுது இயேசு தமது சீஷரைப் பார்த்து: ஒருவன் எனக்குப் பின்னேவர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு
25 என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவனோ அதைக் கண்டடை
26 வான். ஒருவன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும் தன் [1]ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபமென்ன; மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக
27 எதைக் கொடுப்பான்? மனுஷகுமாரன் தமது பிதாவின் மகிமையால் தம்முடைய தூதரோடு வரப்போகிறார்; அப்பொழுது அவனவன் செய்கைக்குத்தக்கபடி அவனவ
28 னுக்குப் பலனளிப்பார். இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனுஷகுமாரன் தமது ராஜியத்தில் வருவதைக் காணுமுன் மரணத்தை ருசி பார்ப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

**17** ஆறுநாளைக்குப்பின்பு இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவன் சகோதரன் யோவானையுங் கூட்டிக்கொண்டு தனியே ஓர் உயர்ந்த மலையின்மேல் போய்,
2 அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார், அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரங்கள் வெளிச்சத்தைப்
3 போல வெண்மையாயின. இதோ, மோசேயும் எலியாவும் அவரோடு பேசுகிறவர்க
4 ளாகச் சீஷருக்குத் தோன்றினார்கள். அப்பொழுது பேதுரு இயேசுவினிடம்: ஆண்டவரே, நாம் இங்கே யிருக்கிறது நல்லது; உமக்குச் சித்தமானால், இங்கே உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களைப் போடு
5 வேன் என்றார். அவன் பேசுகையில், இதோ, ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள் மேல் நிழலிட்டது. இவர் என் நேசகுமாரன், இவரில் [2]பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்களென்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தமுண்டாயிற்று.
6 சீஷர் அதைக்கேட்டு முகங்குப்புற விழுந்து
7 மிகவும் பயந்தார்கள். அப்பொழுது இயேசு வந்து அவர்களைத் தொட்டு: எழுந்திருங்
8 கள், பயப்படாதேயுங்கள் என்றார். அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்க்கையில் இயேசு ஒருவரைத் தவிர வேறொருவரையும் காணவில்லை.
9 அவர்கள் மலையிலிருந்து இறங்குகிறபோது இயேசு அவர்களிடம்: மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுப்பப்படும்வரைக்கும் இந்தத் தரிசனத்தை ஒருவருக்கும் சொல்லவேண்டாமென்று கட்டளையிட்டார். அப்பொழுது சீஷர் அவரை
10 நோக்கி: எலியா முந்தி வரவேண்டுமென்று வேதபாரகர் சொல்லுகிறார்களே, அதெப்
11 படியென்று கேட்க, அவர்: எலியா வந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான். ஆனாலும் எலியா வந்தாயிற்றென்று
12 உங்களுக்குச் சொல்லுகிறேன்; அவனை அறியாமல் தங்கள் இஷ்டப்படியே அவனுக்குச் செய்தார்கள்; இவ்விதமாய் மனுஷகுமாரனும் அவர்களால் பாடுபடப்போகிறார் என்றார். அவர் யோவான்ஸ்நானனைக்
13 குறித்துத் தங்களிடம் பேசினாரென்று சீஷர்கள் அப்பொழுது அறிந்துகொண்டார்கள்.
14 அவர்கள் ஜனங்களிடத்தில் வந்தபோது ஒருவன் அவரிடம் வந்து அவர்முன் முழங்கால்படியிட்டு:
15 ஐயனே, என் மகனுக்கு இரங்கும், அவன் சந்திரரோகியாய்க் கொடிய வேதனைப்படுகிறான்; அடிக்கடி தீயிலும் அடிக்கடி ஜலத்திலும் விழுகிறான்.
16 அவனை உமது சீஷரிடத்தில் கொண்டுவந்தேன்; அவனைச் சொஸ்தமாக்க அவர்களால் முடியாமற்போயிற்று என்றான்.
17 இயேசுவோ அதைக்கேட்டு: விசுவாசமில்லாத மாறுபாடுள்ள சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடிருப்பேன்? எதுவரைக்கும் உங்களிடத்தில் பொறுமையாயிருப்பேன்? அவனை இங்கே என்னிடங்
18 கொண்டுவாருங்கள் என்றார். இயேசு பேயை அதட்ட அது அவனைவிட்டு வெளிப்பட்டது; அந்நேரமே அந்த இளைஞன் சொஸ்தமானான். அப்பொழுது
19 சீஷர் இயேசுவினிடம் தனியே வந்து: அதைத் துரத்திவிட நாங்களால் முடியாமற்போயிற்றென்று கேட்க,
20–21 அவர்: உங்கள் விசுவாசக்குறைவினாலேதான்; கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கிருந்தால் நீங்கள் இந்த மலையைப்பார்த்து இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம்போம்; உங்களால் முடியாத காரியம் ஒன்றுமிராதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

---

1 ஒரேக்க பதம் ஜீவனென்றும் ஆத்துமாவென்றும் பொருள்படும். 2 பிரியங்கொண்டேன் என்றும் திருப்பலாம்.

22 அவர்கள் கலிலேயாவிலே கூடிவருகை
யில் இயேசு அவர்களிடம்: மனுஷ குமா
ரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்
23 படுவார். அவர்கள் அவரைக் கொலைசெய்
வார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே உயிர்த்
தெழுந்திருப்பார் என்றார். அவர்கள் மிகுந்த
துக்கமடைந்தார்கள்.

24 அவர்கள் கப்பர்நகூமுக்கு வந்தபோது
கோவில் வரி வாங்குகிறவர்கள் பேதுருவி
னிடம் வந்து: உங்கள் போதகர் கோவில்
வரி செலுத்துகிறதில்லையோ என்று கேட்
25 டார்கள்; செலுத்துகிறார் என்றான். அவன்
வீட்டிற்குள் வந்தபோது அவன் பேசுகிற
தற்கு முன்னமே இயேசு அவனிடம்:
சீமோனே, உனக்கு எப்படித் தோன்று
கிறது? பூமியின் ராஜாக்கள் தீர்வையை
யும் வரியையும் யாரிடம் வாங்குகிறார்கள்,
தங்கள் பிள்ளைகளிடமோ அந்நியரிடமோ
26 என்று கேட்டார். அதற்குப் பேதுரு:
அந்நியரிடமே என இயேசு: அப்படி
யானால் பிள்ளைகள் அதைச் செலுத்தவேண்
27 டுவதில்லை. ஆகிலும் நாம் அவர்களுக்குத்
தடையாயிராதபடி நீ கடலுக்குப் போய்த்
தூண்டில் போட்டு முதலாவது படுகிற
மீனைப் பிடித்து அதின் வாயைத் திறக்கவே
ஒரு [1]ஸ்தாத்திரிய நாணயத்தைக் காண்பாய்;
அதை எடுத்து எனக்காகவும் உனக்காகவும்
அவர்களிடத்தில் கொடு என்றார்.

**18** அவ்வேளையிலே சீஷர் இயேசுவினிடம்
வந்து: பரலோகராஜ்யத்தில் எவன் பெரியவ
2 னென்று கேட்டார்கள். அவர் ஒரு பிள்ளை
யைத் தம்மிடம் அழைத்து அதை அவர்கள்
3 நடுவே நிறுத்தி: நீங்கள் மனந்திரும்பிப்
பிள்ளைகளைப் போலாகாவிட்டால் பரலோக
ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்களென்று
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
4 ஆகையால், இந்தப் பிள்ளையைப் போலத்
தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ அவனே
5 பரலோகராஜ்யத்தில் பெரியவன். இப்ப
டிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினி
மித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை
6 ஏற்றுக்கொள்ளுகிறான். என்பேரில் நம்
பிக்கையாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒரு
வன் இடறிவிழக் காரணமாயிருக்கிறவன்
எவனோ அவன் கழுத்தில் பெரிய எந்திரக்
கல்லைக் கட்டிச் சமுத்திரத்தின் ஆழத்திலே
அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நல
7–8 மாம். இடறச்செய்யும் காரணங்களினி
மித்தம் உலகத்துக்கு ஐயோ ஆபத்து! அக்
காரணங்கள் வராமற்போகாது, என்றாலும்
எந்த மனுஷனால் அவைகள் வருகின்ற
னவோ அவனுக்கு ஐயோ பரிதாபம்! உன்
கையாவது உன் காலாவது நீ இடறிவிழ
ஏதுவாயிருந்தால் அதைத் தறித்து எறிந்து
போடு; நீ இரண்டு கையுடையவனாய் அல்
லது இரண்டு காலுடையவனாய் நித்திய
அக்கினியிலே தள்ளப்படுவதைப் பார்க்
கிலும் ஊனனாய் அல்லது சப்பாணியாய்
நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு
நலம். உன் கண் நீ இடறிவிழ ஏதுவா 9
யிருந்தால் அதைப் பிடுங்கி எறிந்துபோடு;
இரண்டு கண்ணுடையவனாய் எரிநரகில்
தள்ளப்படுவதைப்பார்க்கிலும் ஒற்றைக்
கண்ணனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது
உனக்கு நலம். இத்தச் சிறியரில் ஒரு 10–11
வனை அற்பமாய் எண்ணாதபடி பாருங்கள்;
பரலோகத்தில் அவர்கள் தெய்வ தூதர்கள்.
பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சமு
கத்தை எப்போதும் தரிசித்துக்கொண்டிருக்
கிறார்களென்று உங்களுக்குச் சொல்லு
கிறேன். உங்களுக்கு எப்படித் தோன்று 12
கிறது? ஒரு மனுஷனுக்கு நூறு ஆடுக
ளிருக்க, அவைகளில் ஒன்று தப்பிப்
போனால் அவன் மற்றத் தொண்ணூற்றொன்
பது ஆடுகளையும் மலைகளில் விட்டுப் போய்த்
தப்பிப்போனதைத் தேடாமலிருப்பானோ?
அவன் அதைக் கண்டுபிடித்தால் தப்பிப் 13
போகாத தொண்ணூற்றொன்பது ஆடுகளைக்
குறித்துச் சந்தோஷப்படுகிறதைப் பார்க்கி
லும் அதைக்குறித்து அதிகமாய்ச் சந்தோ
ஷப்படுவானென்று மெய்யாகவே உங்களுக்
குச் சொல்லுகிறேன். அதுபோலவே இந் 14
தச் சிறியரில் ஒருவனாகிலும் அழிந்துபோவது
பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின்
சித்தமல்ல.

உன் சகோதரன் குற்றஞ்செய்தால் அவ 15
னிடம் போய் நீயும் அவனும் தனித்திருக்
கையில் அவன் குற்றத்தை அவனுக்கு
உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்
தால் உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்
கொண்டாய். அவன் செவிகொடாமற் 16
போனால் இரண்டு மூன்று சாட்சிகளுடைய
வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்
படும்படி இரண்டொருவரை உன்னுடனே
கூட்டிக்கொண்டு போ. அவர்களுக்கும் 17
அவன் செவிகொடாமற்போனால் அதைச்
சபைக்குத் தெரியப்படுத்து; சபைக்கும்
செவி கொடாதிருப்பானானால் அவன்
உனக்கு புறஜாதியான்போலவும் ஆயக்காரன்

---

1 ஒரு ஸ்தாத்திரியம்: ஒரு ஷேக்கல். (கோவில் வரி–அரை ஷேக்கல் சுமார் ஒரு ரூபாய்).

18 போலவுமிருப்பானுக. பூலோகத்திலே நீங்
கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள்
பரலோகத்திலும் கட்டப்பட்டனவாம்;
பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்ட
விழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலுங்
கட்டவிழ்க்கப்பட்டனவாமென்று மெய்யா
19 கவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அல்
ல்லாமலும் உங்களில் இரண்டுபேர் தாங்கள்
வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்
தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்
பட்டிருந்தால் பரலோகத்திலிருக்கிற என்
பிதாவினால் அது அவர்களுக்கு அருளப்படு
மென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு
20 கிறேன். இரண்டுபேராவது மூன்றுபேரா
வது என் நாமத்திலே எங்கே கூடியிருக்
கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலிருக்
கிறேன் என்றார்.
21 அப்பொழுது பேதுரு அவரிடத்தில்
வந்து: ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு
விரோதமாய்க் குற்றஞ் செய்துவந்தால் நான்
எத்தனைதரம் மன்னிக்கவேண்டும்? ஏழுதர
22 மட்டுமோ என்று கேட்க | இயேசு: ஏழு
தரம் மாத்திரமல்ல ஏழெழுபதுதரமட்டும்
23 என்று உனக்குச் சொல்லுகிறேன். அத
னிமித்தம் பரலோகராஜ்யம் தன் ஊழியக்
காரரிடத்தில் கணக்குப் பார்க்கவேண்டு
மென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாகும்;
24 அவன் கணக்குப் பார்க்கத் தொடங்கின
போது [1]பதினாயிரம் தாலந்து கடன்பட்ட
வன் ஒருவனை அவன் முன் கொண்டுவந்
25 தார்கள். கடனைத் தீர்க்க அவனுக்கு நிர்
வாகம் இல்லாதபடியால் அரசன் அவனை
யும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும் அவ
னுக்குண்டான யாவற்றையும் விற்றுக் கட
26 னைத் தீர்க்கும்படி கட்டளையிட்டான். அப்
பொழுது அந்த ஊழியக்காரன் பணிந்து
வணங்கி: என்மீது பொறுமையாயிரும்,
எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத்
27 தீர்ப்பேன் என்றான். அந்த ஊழியக்கார
னுடைய எஜமான் மனதிரங்கி அவனை விடு
தலைபண்ணிக் கடனையும் அவனுக்கு மன்
28 னித்துவிட்டான். அப்படியிருக்க, அந்த
ஊழியக்காரன் வெளியே போகையில் தன்
னிடத்தில் [2]நூறுதினாரியம் கடன்பட்டிருந்த
உடன் வேலைக்காரரில் ஒருவனைக் கண்டு
அவனைப் பிடித்துத் தொண்டையை
நெரித்து: நீ பட்ட கடனைத் தீர்த்துவிடு
29 என்று சொல்ல | அவன் உடன் வேலைக்
காரன் அவன் காலில் விழுந்து: என்மீது
பொறுமையாயிரும், உமக்குக் கொடுத்துத்
தீர்ப்பேனென்று அவனை வேண்டிக்கொண்
டான். அவனோ சம்மதியாமல் போய் 30
அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்கு
மளவும் அவனைச் சிறையில் வைத்தான்.
அவன் உடன்வேலைக்காரர் நடந்ததைக் 31
கண்டு மிகவும் துக்கப்பட்டுத் தங்கள் எஜ
மானிடம் வந்து நடந்ததையெல்லாம் அறி
வித்தார்கள். அப்பொழுது அவனுடைய 32
எஜமான் அவனை யழைப்பித்து: பொல்லாத
ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்
கொண்டபடியினால் அந்தக் கடன் முழு
வதையும் உனக்கு மன்னித்துவிட்டேன்.
நான் உனக்கு இரங்கினதுபோல நீயும் உன் 33
உடன்வேலைக்காரனுக்கு இரங்கவேண்
டாமோ என்று சொல்லிக் | கோபமடைந்து 34
அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக்
கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்
களிடம் அவனை ஒப்புக்கொடுத்தான். உங் 35
களில் ஒவ்வொருவனும் தன் தன் சகோதர
னுக்கு மனப்பூர்வமாய் மன்னியாமற்போ
னால் என் பரமபிதாவும் உங்களுக்கு இப்
படியே செய்வார் என்றார்.

**19** இயேசு இந்த வசனங்களைச் சொல்லி
முடித்தபின்பு கலிலேயாவைவிட்டு யூதேயா
வின் எல்லைகளுக்கு யோர்தானைக் கடந்து
வந்தார். திரளான ஜனங்கள் அவருக்குப் 2
பின் சென்றார்கள்; அவ்விடத்தில் அவர்
களைக் குணமாக்கினார்.
அப்பொழுது பரிசேயர் அவரிடம் வந்து: 3
ஒருவன் தன் மனைவியை எக்காரணத்தினா
லாகிலும் தள்ளிவிடுவது நியாயமா என்று
சோதித்துக் கேட்க | அவர்: 4
ஆதியிலே சிருஷ்டிகர்த்தா
அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்
டாக்கினார்
என்பதையும்,
இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனை 5
யுந் தாயையும்விட்டுத்
தன் மனைவியோடே இசைந்திருப்பான்,
இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்
என்று அவர் சொன்னதையும் நீங்கள்
வாசிக்கவில்லையா? ஆகவே, இனி அவர்கள் 6
இருவரல்ல, ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்;
இப்படியிருக்க, கடவுள் இணைத்ததை மனு
ஷன் பிரிக்கவேண்டாம் என்றார். அதற்கு 7
அவர்கள்: அப்படியானால், தள்ளுதற்சீட்
டைக் கொடுத்து அவனைத் தள்ளிவிடலா
மென்று மோசே ஏன் கட்டளையிட்டா
ரென்று கேட்க | அவர்: உங்கள் மனைவி 8

[1] சுமார் நாலு கோடி ரூபாய். [2] சுமார் எழுபது ரூபாய்.

னேத் தள்ளிவிடலாமென்று உங்கள் இரு
தயக் கடினத்தினிமித்தம் மோசே உங்க
ளுக்கு இடங் கொடுத்தார்; ஆதிமுதல் அப்
9 படியிருந்ததில்லை. ஆதலால் உங்களுக்குச்
சொல்லுகிறேன்: எவனுகிலும் விபசாரத்தி
னிமித்தமேயன்றித் தன் மனைவியைத் தள்ளி
விட்டு வேறொருத்தியை விவாகம்பண்ணி
னால் அவன் விபசாரஞ்செய்கிறான் என்றார்.
10 அவருடைய சீஷர் அவரிடம்: மனிவிக்கும்
புருஷனுக்குமுள்ள காரியம் இப்படியிருக்
தால் விவாகம் பண்ணுகிறது நல்லதல்ல
11 வென | அவர்: வரம்பெற்றவர்களே தவிர
மற்ற எவரும் இந்த வசனத்தை அங்கீகரிப்ப
12 தில்லை. தாயின் வயிற்றிலிருந்து அண்ண
காராய்ப் பிறந்தவர்களுமுண்டு; மனுஷரால்
அண்ணகராக்கப்பட்டவர்களுமுண்டு; பர
லோகராஜ்யத்தினிமித்தம் தங்களே அண்ணக
ராக்கிக்கொண்டவர்களுமுண்டு. இதை
அங்கீகரிக்க வல்லவன் அங்கீகரிக்கக்கட
வன் என்றார்.

13 அப்பொழுது சிறுபிள்ளைகளின்மேல்
அவர் கைகளை வைத்து ஜெபம்பண்ணும்படி
அவர்களை அவரிடங் கொண்டுவந்தார்கள்;
கொண்டுவந்தவர்களைச் சீஷர்கள் அதட்டி
14 னார்கள். இயேசுவோ: சிறுபிள்ளைகள் என்
னிடம் வருவதற்கு இடங்கொடுங்கள்;
அவர்களைத் தடைபண்ணுதிருங்கள்; பர
லோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடைய
15 தென்று சொல்லி | அவர்கள்மேல் கைகளை
வைத்துப் பின்பு அவ்விடம்விட்டுப் புறப்
16 பட்டுப் போனார். அப்பொழுது ஒருவன்
அவரிடம் வந்து: போதகரே, நித்திய ஜீவனை
அடைவதற்கு நலமான எதை நான் செய்ய
17 வேண்டுமென்று கேட்க | அவர் நலமான
தைப்பற்றி நீ என்னிடங் கேட்பானேன்?
நல்லவர் என்பவர் ஒருவரே; நீ ஜீவனில்
பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக்
கைக்கொள் என்றார். எவை என்று அவன்
18 கேட்க | இயேசு: கொலைசெய்யாதே, விப
சாரஞ்செய்யாதே, களவு செய்யாதே,
19 பொய்ச்சாட்சி சொல்லாதே, உன் தகப்ப
னையும் உன் தாயையும் கனம்பண்ணவேண்
டும், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல
அயலானிடத்திலும் அன்புகூரு என்பவை
20 களே என்றார். அந்த வாலிபன் அவரிடம்:
இவைகளையெல்லாம் கைக்கொண்டிருக்கி
றேன்; இன்னும் என்னிடத்தில் குறை
21 வென்ன என்றான். அதற்கு இயேசு: நீ
பூரண சற்குணனாக விரும்பினால் போய
உனக்குண்டானவற்றை விற்றுத் தரித்திர
ருக்குக் கொடு; அப்பொழுது பரலோகத்தில்
உனக்கு ஐசுவரியமிருக்கும்; அப்பால் வந்து
என்னைப் பின்பற்று என்றார். அந்த வாலி 22
பன் மிகுந்த ஆஸ்திபுள்ளவனுய் இருந்தபடி
யால் இந்த வார்த்தையைக் கேட்டபொழுது
துக்கத்தோடு போய்விட்டான்.

அப்பொழுது இயேசு தமது சீஷரிடம்: 23
ஐசுவரியவான் பரலோகராஜ்யத்தில் பிரவே
சிப்பது அரிதென்று மெய்யாகவே உங்க
ளுக்குச் சொல்லுகிறேன். மேலும் ஐசு 24
வரியவான் கடவுளுடைய ராஜ்யத்தில்
பிரவேசிப்பதைப்பார்க்கிலும் ஒட்டகம்
ஊசியின் காதில் நுழைவது எளிதென்று
உங்களுக்குச் சொல்லுகிறேன் என்
றார்.

சீஷர் அதைக்கேட்டு மிகவும் பிரமிப் 25
படைந்து: அப்படியானுல் யார் இரட்சிக்
கப்படக்கூடுமென்று கேட்க | இயேசு 26
அவர்களை உற்றுப்பார்த்து: மனுஷரால்
இது ஆகாததுதான்; கடவுளாலே எல்லா
மாகும் என்றார். அப்பொழுது பேதுரு 27
அவரிடம்: இதோ, நாங்கள் எல்லாவற்றை
யும் விட்டு உம்மைப் பின்பற்றினுமே;
எங்களுக்கு என்ன கிடைக்குமென்று
கேட்க | இயேசு அவர்களிடம்: சமஸ்தமும் 28
புதிதாக்கப்படுங் காலத்தில் மனுஷகுமாரன்
தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல்
வீற்றிருக்கும்போது, என்னைப் பின்பற்றின
நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்
திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப்
பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்
றிருப்பீர்களென்று மெய்யாகவே உங்களுக்
குச் சொல்லுகிறேன். என் நாமத்தினிமித் 29
தம் வீட்டையாவது சகோதரரையாவது
சகோதரிகளையாவது தகப்பனையாவது தாயை
யாவது பிள்ளைகளையாவது நிலங்களையாவது
விட்டவன் எவனே அவன் பலமடங்கு
பெற்று நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக்
கொள்ளுவான்; ஆகிலும் முந்தினோர் அநே 30
கர் பிந்தினோரும் பிந்தினோர் அநேகர் முந்தி
னோரும் ஆவார்கள்.

பரலோகராஜ்யம் திராட்சத்தோட்டத் **20**
தையுடைய வீட்டெஜமான் ஒருவனுக்கு
ஒப்பாகும்; அவன் தன் தோட்டத்துக்கு
வேலையாட்களை அமர்த்த அதிகாலையிலே
போனான். வேலையாட்களுடன் நாளொன் 2
றுக்கு ஒரு [1]திநாரியம் கூலி பேசி அவர்களைத்
தன் திராட்சத்தோட்டத்துக்கு அனுப்பினான்.
மூன்றுமணிவேளையிலும் அவன் போய்க் 3

---

1 திநாரியம் எறக்குறைய அரை ரூபாய்க்குச் சமம்.

கடைத்தெருவில் சும்மா நிற்கிற வேறு சில
4 ரைக் கண்டு: நீங்களும் திராட்சத்தோட்டத்
துக்குப் போங்கள், நியாயமானபடி உங்க
ளுக்குக் கூலி கொடுப்பேன் என்றார்; அவர்
5 களும் போனார்கள். மறுபடியும் ஆறும்
ஒன்பதாம்மணி வேளைகளிலும் அவன் போய்
6 அப்படியே செய்தான். பதினோராம் மணி
வேளையிலும் அவன் போய்ச் சும்மா நிற்கிற
வேறு சிலரைக் கண்டு: நீங்கள் பகல்முழு
வதும் இங்கே சும்மா நிற்கிறதென்னவென்று
7 கேட்க | அவர்கள்: எவரும் எங்களை
வேலைக்கு அமர்த்தவில்லை என்றார்கள்.
அவன் அவர்களிடம்: நீங்களும் திராட்சத்
தோட்டத்துக்குப் போங்கள் என்றான்.
8 சாயங்காலத்தில் திராட்சத் தோட்டத்து எஜ
மான்தன் காரியக்காரனிடம்: நீ வேலையாட்
களை அழைத்துப் பின்னினவர்கள் தொடங்கி
முந்தி வந்தவர்கள் வரைக்கும் கூலிகொடு
9 என்றான். அப்படியே பதினோராம்மணி
வேளையில் அமர்த்தப்பட்டவர்கள் வந்து
ஆளுக்கு ஒவ்வொரு திநாரியம் வாங்கினார்
10 கள். முந்தி அமர்த்தப்பட்டவர்கள் வந்த
போது தங்களுக்கு அதிகம் கிடைக்கு
மென்று எண்ணினார்கள், அவர்களும்
ஆளுக்கு ஒவ்வொரு திநாரியமே வாங்கினார்
11 கள். வாங்கவே, எஜமானுக்கு விரோத
12 மாய் முறுமுறுத்து: கடைசியில் வந்த
இவர்கள் ஒரு மணிநேரம் வேலைசெய்தார்
கள், நாங்களோ நாள்முழுவதும் வெயிலில்
கஷ்டப்பட்டு உழைத்தோம், ஆயினும்
அவர்களையும் எங்களுக்குச் சமமாக்கினீரே
13 என்றார்கள். அவனே அவர்களில் ஒருவ
னிடம்: சிநேகிதனே, நான் உனக்கு அநியா
யஞ் செய்யவில்லை; நீ என்னிடம் ஒரு திநா
14 ரியத்துக்குச் சம்மதிக்கவில்லையோ? உன்
னுடையதை நீ வாங்கிக்கொண்டு போ,
உனக்குக் கொடுத்ததுபோல் கடைசியில்
வந்த இவனுக்குங் கொடுப்பது என்னிஷ்
15 டம். என்னுடையதை என் இஷ்டப்படி
செய்ய எனக்கு அதிகாரமில்லையா? நான்
தயாளனையிருப்பதினால் நீ வன்கண்ண
16 னனையோ என்றான். இவ்விதமாகப் பிந்தி
னோர் முந்தினோரும் முந்தினோர் பிந்தினோ
ரும் ஆவார்கள் என்றார்.

17 இயேசு எருசலேமுக்குப் போகிறபோது
பன்னிருவரையும் தனியே அழைத்து வழி
18 யிலே அவர்களிடம்: இதோ, எருசலேமுக்
குப் போகிறோம்; மனுஷகுமாரன் பிரதான
ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும்
ஒப்புக்கொடுக்கப்படுவார்; அவர்கள்
அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத்
19 தீர்த்து | அவரைப் பரியாசஞ்செய்து வாரி
னால் அடித்துச் சிலுவையில் அறையும்படி
புறஜாதியாரிடம் ஒப்புக்கொடுப்பார்கள்.
அவரோ மூன்றாம்நாளிலே எழுப்பப்படு
வார் என்றார்.

அப்பொழுது செபெதேயுவின் குமார 20
ருடைய தாய் தன் குமாரரோடுகூட அவ
ரைப் பணிந்து ஒரு விண்ணப்பஞ் செய்து
கொள்ள அவரிடம் வந்தாள். அவர் அவ 21
ளிடம்: உனக்கு என்ன வேண்டுமென்று
கேட்க அவள்: உம்முடைய ராஜ்யத்திலே
என் குமாரராகிய இவ்விரண்டுபேரில் ஒரு
வன் உமது வலதுபாரிசத்திலும் ஒருவன்
உமது இடதுபாரிசத்திலும் உட்கார்ந்திருக்
கும்படி அருள்செய்யவேண்டும் என்றாள்.
அதற்கு இயேசு: நீங்கள் கேட்டுக்கொள்ளு 22
கிறது இன்னதென்று உங்களுக்குத் தெரிய
வில்லை; நான் குடிக்கப்போகிற பாத்திரத்தில்
குடிக்க உங்களாலாகுமா என்று கேட்க
அவர்கள்: ஆகும் என்றார்கள். அப்போது 23
அவர்: என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்
கள், ஆயினும் என் வலதுபாரிசத்திலும்
என் இடதுபாரிசத்திலும் உட்கார்ந்திருக்
கும்படி அருளுவது என் காரியமல்ல; என்
பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம் பண்
ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கே உரிய
தென்றார். மற்றப் பத்துப்பேரும் அதைக் 24
கேட்டு அந்த இரண்டு சகோதரர்பேரிலும்
கோபங்கொண்டார்கள். அப்பொழுது 25
இயேசு அவர்களைக் கிட்டவரச் செய்து:
புறஜாதியாரின் அதிகாரிகள் அவர்களைக்
கடினமாய் ஆளுகை செய்கிறார்களென்றும்
பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய்
அதிகாரஞ் செலுத்துகிறார்களென்றும் நீங்
கள் அறிவீர்கள். உங்களுக்குள்ளேயோ 26
அப்படியல்ல; உங்களில் பெரியவனாயிருக்க
விரும்புகிற எவனும் உங்களுக்குப் பணி
விடைக்காரனாயிருப்பான்; உங்களில் தலை 27
வனாயிருக்க விரும்புகிற எவனும் உங்க
ளுக்கு அடிமையாயிருப்பான். அப்படியே 28
மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி
வராமல் ஊழியஞ்செய்யவும் அநேகரை
மீட்கும்பொருளாகத் தமது ஜீவனைக்
கொடுக்கவும் வந்தார் என்றார்.

அவர்கள் எரிகோவைவிட்டுப் போகை 29
யில் பெரிய ஜனக்கூட்டம் அவருக்குப்
பின் சென்றது. அப்பொழுது வழியோரம் 30
உட்கார்ந்திருந்த இரண்டு குருடர், இயேசு
அவ்வழியே வருகிறாரென்று கேள்விப்பட்டு:
ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்க
ளுக்கு இரங்குமென்று கூப்பிட்டார்கள்.
அவர்கள் பேசாதிருக்கும்படி ஜனங்கள் 31
அவர்களை அதட்டினார்கள். அவர்களோ:

ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்குமென்று இன்னும் அதிக
32 மாய்க் கூப்பிட்டார்கள். இயேசு நின்று அவர்களை அழைத்து: நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறீர்க
33 ளென்று கேட்க | அவர்கள்: ஆண்டவரே, எங்கள் கண்களைத் திறக்கவேண்டும் என்றார்
34 கள். இயேசு மனதருகி அவர்கள் கண்களைத் தொட்டார்; உடனே அவர்கள் பார்வையடைந்து அவருக்குப் பின்சென்றார்கள்.

**21** அவர்கள் எருசலேமைச் சமீபித்து ஒலிவமலையில் பெத்பகேயுக்கு வந்தபோது இயேசு சீஷரில் இரண்டு பேரையனுப்பி:
2 உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள்; போனவுடனே, அங்கே ஒரு கழுதையையும் அதனுடனே குட்டியையும் கட்டியிருக்கக் காண்பீர்கள், அவிழ்த்து
3 என்னிடம் கொண்டுவாருங்கள். ஒருவன் உங்களுக்கு ஏதாகிலுஞ் சொன்னால்: இவைகள் ஆண்டவருக்குத் தேவையென்று சொல்லுங்கள்; உடனே அவைகளை அனுப்பிவிடுவானென்று அவர்களுக்குச் சொன்னார்.

4 இதோ, உன் ராஜா சாந்தகுணமுள்ளவராய்க்
கழுதையின்மேல், பொதி மிருகக்குட்டியாகிய மறியின்மேல், ஏறிக்கொண்டு
உன்னிடம் வருகிறாரென்று
சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள்
5 என்று | தீர்க்கதரிசியின் மூலமாய் வந்த
6 வாக்கு நிறைவேற இது நடந்தது. சீஷர் போய் இயேசு தங்களுக்குக் கட்டளையிட்ட
7 படியே செய்து | கழுதையையும் குட்டியையும் கொண்டுவந்து அவைகள்மேல் தங்கள் வஸ்திரங்களைப்போடவே அவர் அவைகளின்
8 மேல் உட்கார்ந்தார். திரள்கூட்டத்தார் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்; மற்றவர்கள் மரக்கிளைகளைத் தறித்து
9 வழியிலே பரப்பினார்கள். முன் நடப்பாரும் பின் நடப்பாருமாகிய திரளான ஜனங்கள்:

தாவீதின் குமாரனுக்கு [1]ஓசன்னா!
கர்த்தரின் நாமத்தில் வருகிறவர் ஆசீர்
வதிக்கப்பட்டவர்,
உன்னதத்திலே ஓசன்னா
என்று சொல்லி ஆரவாரஞ் செய்தார்கள்.

10 அவர் எருசலேமுக்குள் பிரவேசிக்கவே நகரம் முழுதும் இவர் யார் என்று சொல்லி
அசைந்தது; ஜனங்களோ: இவர் கலிலேயா 11
நாட்டு நாசரேத்தூர் இயேசுவென்னும் தீர்க்கதரிசி என்றார்கள்.

இயேசு தெய்வாலயத்திற்குள் பிரவேசித்து 12
ஆலயத்திலே விற்கிறவர்களும் கொள்ளுகிறவர்களுமாகிய யாவரையும் வெளியே துரத்திக் காசுக்காரருடைய மேசைகளையும் புறு
விற்கிறவர்களின் ஆசனங்களையுங் கவிழ்த்து:
என்னுடைய வீடு ஜெபவீடு எனப்படு 13
மென்று எழுதியிருக்கிறது, நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்குகிறீர்களே என்றார். அப்பொழுது குருடரும் சப்பாணி 14
களும் தெய்வாலயத்திலே அவரிடம் வந்தார்கள்; அவர்களைக் குணமாக்கினார். அவர் 15
செய்த அதிசயங்களையும், தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! என்று தெய்வாலயத்திலே ஆர்ப்பரிக்கிற பிள்ளைகளையும் பிரதான
ஆசாரியரும் வேதபாரகரும் கண்டு கோபப்பட்டு | அவரை நோக்கி: இவர்கள் சொல்லு 16
கிறது உமக்குக் கேட்கிறதா என இயேசு: ஆம், கேட்கிறது. பாலகருடைய வாயினாலும் குழந்தைகளுடைய வாயினாலும் துதியை நிறைவாக்கிக்கொண்டீர் என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா
வென்று சொல்லி | அவர்களைவிட்டு நகரத் 17
திற்கு வெளியே பெத்தானியாவுக்குப்போய் அங்கே இராத் தங்கினார்.

காலையில் அவர் நகரத்துக்குத் திரும்பி 18
வருகையில் அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது வழியருகே ஒரு அத்திமரத் 19
தைக் கண்டு அதினண்டைபோய் அதிலே இலைகளையேயன்றி வேறொன்றையுங் காணாமல்: இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருப்பதாக என்றார்; உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று. சீஷர் இதைக்கண்டு பிரமிப்படைந்து: 20
இந்த அத்திமரம் இத்தனை சீக்கிரமாய்ப் பட்டுப் போனதெப்படி என்று சொல்ல | இயேசு: மெய்யாகவே நான் உங்களுக்குச் 21
சொல்லுகிறேன், நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால் இந்த அத்திமரத்திற்கு நேரிட்டதை நீங்கள் செய்வதுமல்லாமல் இந்த மலையைப்பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டு போவென்று சொன்னாலும் அப்படியுமாகும்.
மேலும், நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் 22
ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்.

அவர் தெய்வாலயத்திற்குட் சென்று உப 23
தேசித்துக் கொண்டிருக்கையில் பிரதான

[1] இரட்சித்தருளும், காப்பாற்றியருளும் எனப் பொருள்படும்.

ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அவரிடம் வந்து: நீர் எந்த அதிகாரத்தினால் இவை களைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக் குக் கொடுத்தவர் யாரென்று கேட்க | 24 இயேசு: நானும் உங்களிடத்தில் ஒரு காரி யத்தைக் கேட்கிறேன், அதை எனக்குச் சொல்வீர்களானால் நானும் இன்ன அதிகா ரத்தினால் இவைகளைச் செய்கிறேனென்று 25 உங்களுக்குச் சொல்லுவேன். யோவானு டைய ஸ்நானம் எங்கிருந்து வந்தது? பர லோகத்திலிருந்தோ மனுஷரிடத்திலிருந்தோ என்று கேட்டார். அவர்களோ: பரலோ கத்திலிருந்தென்று சொல்லுவோமானால் பின் ஏன் அவனை நம்பவில்லையென்று நம்மைக் 26 கேட்பார்; மனுஷரிடத்திலிருந்தென்று சொல்லுவோமானால் ஜனங்களுக்குப் பயப் படுகிறோம், எல்லாரும் யோவானைத் தீர்க்க தரிசியென்று எண்ணுகிறார்களே என்று 27 தங்களுக்குள்ளே ஆலோசித்து | இயேசுவி னிடம்: எங்களுக்குத் தெரியாது என்றார் கள். அப்பொழுது அவர்: நானும் இன்ன அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறே 28 னென்று உங்களுக்குச் சொல்லேன். உங் களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரரிருந்தார்கள்; மூத்தவனிடத்தில் அவன் வந்து: மகனே, நீ போய் இன்றைக்குத் திராட்சத்தோட்டத் 29 தில் வேலைசெய் என | அவனோ: போகி றேன் ஐயா என்றான்; எனினும் போக 30 வில்லை. இரண்டாம் மகனிடத்திலும் அவன் வந்து அப்படியே சொல்ல அவன்: போக மாட்டேனென்று சொல்லியும் பின்பு மனஸ் 31 தாபப்பட்டுப் போனான். இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தப்படி செய்தவ னென்று கேட்டார்; அதற்கு அவர்கள்: பிந்தினவன்தான் என்றார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முந்திக் கடவு ளுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்க ளென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல் 32 லுகிறேன். ஏனென்றால், யோவான் நீதி மார்க்கமாய் உங்களிடம் வந்திருந்தும் நீங் கள் அவனை நம்பவில்லை, ஆயக்காரரும் வேசிகளுமோ அவனை நம்பினார்கள்; அதை நீங்கள் கண்டும் அவனை நம்பும்படி பின்பா தும் மனஸ்தாபப்படவில்லையே.

33 இன்னும் ஒரு உவமையைக் கேளுங்கள். வீட்டெஜமானான ஒரு மனுஷனிருந்தான். அவன் திராட்சத்தோட்டம் போட்டு அதைச் சுற்றி வேலியடைத்து அதில் ஆலையை நாட் டிக் கோபுரத்தையும் கட்டிக் குடியானவர் களுக்கு அதைக் குத்தகையாக விட்டுப் புறதேசத்துக்குப் போயிருந்தான். 34 காலம் சமீபித்தபோது கனிகளை வாங்கி வரும்படி தன் ஊழியக்காரரைக் குடியான வர்களிடம் அனுப்பினான். 35 அவர்களோ அந்த ஊழியக்காரரைப் பிடித்து, ஒருவனை அடித்தார்கள், ஒருவனைக் கொலைசெய்தார் கள், ஒருவனைக் கல்லெறிந்தார்கள். 36 பின்னும் அவன் முன்னவர்களிலும் அதிகமான வேறே ஊழியக்காரரை யனுப்பினான்; அவர் களையும் அப்படியே செய்தார்கள். 37 கடைசியிலே அவன்: என் குமாரனை மதிப்பார்க ளென்று சொல்லித் தன் குமாரனை அவர் களிடத்தில் அனுப்பினான். 38 குடியானவர் களோ குமாரனைக் கண்டபோது: இவன் சுதந்தரவாளி, இவனைக் கொன்று இவன் சுதந்தரத்தை எடுத்துக்கொள்வோம் வாருங் களென்று ஒருவரோடொருவர் சொல்லிக் 39 கொண்டு | அவனைப் பிடித்துத் திராட்சத் தோட்டத்திற்குப் புறம்பே தள்ளிக் கொலை 40 செய்தார்கள். அப்படியிருக்கத் திராட்சத் தோட்டத்து எஜமான் வரும்போது குடி யானவர்களை என்ன செய்வானென்று கேட்க | அவர்கள்: அந்தக் கொடியரைக் 41 கொடுமையாய் அழித்துவிட்டு ஏற்ற காலங் களில் தனக்குக் கனிகளைக் கொடுக்கும் வேறே குடியானவர்களிடம் தோட்டத்தை விடுவான் என்றார்கள். இயேசு அவர்களி 42 டம்:

வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்
ளின கல்லே
கோடிக்குத் தலைக்கல்லாயிற்று;
அது கர்த்தராலே ஆயிற்று,
அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரி
யம்

என்று நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா? 43 ஆகையால் நான் உங் களுக்குச் சொல்லுகிறேன் கேளுங்கள்: கடவுளின் ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு அதன் கனிகளைத் தரும் ஜனத் 44 தினருக்குக் கொடுக்கப்படும். இந்தக் கல்லின் மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான்; இது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப் போடும் என்றார். 45 பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அவருடைய உவமைகளைக் கேட்டுத் தங்களைக் குறித்துச் சொல்லுகிறா ரென்று அறிந்து | 46 அவரைப் பிடிக்க வகை தேடினார்கள்; ஆகிலும் ஜனங்கள் அவரைத் தீர்க்கதரிசியென்று எண்ணினபடியினால் அவர்களுக்குப் பயந்திருந்தார்கள்.

22 இவைகளுக்கிசைய இயேசு மறுபடியும் அவர்களோடே உவமைகளாய்ப்

2 பேசிச் சொன்னது என்னவென்றால்: பர
லோகராஜ்யம் தன் குமாரனுக்குக் கலியா
ணஞ்செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாகும்.
3 அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்திற்கு
வரச்சொல்லும்படி அவன் தன் வேலைக்
காரரை யனுப்பினான்; அவர்களோ வரமன
4 தில்லாதிருந்தார்கள். மறுபடியும் அவன்
வேறு வேலைக்காரரை யனுப்பி: நீங்கள்
போய், இதோ, என் விருந்தை ஆயத்தம்
பண்ணினேன், என் எருதுகளும் கொழுக்க
வைத்த ஜந்துக்களும் அடிக்கப்பட்டன,
எல்லாம் ஆயத்தமாயிற்று, கலியாணத்திற்கு
வாருங்கள் என்று அழைக்கப்பட்டவர்
களுக்குச் சொல்லுங்களென்று சொன்னான்.
5 அவர்களோ அதை அசட்டைபண்ணி ஒரு
வன் தன் வயலுக்கும் ஒருவன் தன் வியா
6 பாரத்துக்கும் போய்விட்டார்கள். மற்றவர்
களோ அவன் வேலைக்காரரைப் பிடித்து
அவமானப்படுத்திக் கொலைசெய்தார்கள்.
7 ராஜா கோபங்கொண்டு தன் சேனைகளை
யனுப்பி அந்தக் கொலைபாதகரையழித்து
8 அவர்கள் ஊரையுஞ் சுட்டெரித்தான். அப்
பொழுது அவன் தன் வேலைக்காரரிடம்:
கலியாண விருந்து ஆயத்தமாயிற்று, அழைக்
கப்பட்டவர்களோ அதற்கு அபாத்திரராய்ப்
9 போனார்கள். ஆகையால் நீங்கள் வழிச்சந்
திகளிலே போய்க் காணும் யாவரையும் கலி
யாணத்திற்கு அழைத்துக்கொண்டு வாருங்
10 கள் என்றான். அந்த வேலைக்காரர் வழிக
ளிலே போய்த் தாங்கள் கண்ட நல்லார்
பொல்லார் யாவரையும் கூட்டிக்கொண்டு
வந்தார்கள். கலியாணச் சாலையில் விருந்
தாளிகள் நிறைந்தார்கள்.
11 விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா
உள்ளே வந்தபோது கலியாண வஸ்திரம்
தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு:
12 சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவ
னாய் இங்கே எப்படி வந்தாயென்று கேட்க,
13 பதில் சொல்ல அவனுக்கு வாயில்லை. அப்
பொழுது ராஜா பணிவிடைக்காரரிடம்: இவ
னைக் கையும் காலுங்கட்டிக் கொண்டு
போய்ப் புறம்பான இருளிலே போடுங்கள்,
அங்கே அழுகையும் பற்கடிப்புமாயிருக்கும்
14 என்றான். இப்படியாக, அழைக்கப்பட்ட
வர்கள் அநேகர், தெரிந்தெடுக்கப்பட்டவர்
களோ சிலர் என்றார்.
15 அப்பொழுது பரிசேயர் போய்ப் பேச்
சிலே அவரை அகப்படுத்தும்படி யோசனை
16 பண்ணித் | தங்கள் சீஷரை ஏரோதியரோடு
அவரிடம் அனுப்பினார்கள். அவர்கள்
வந்து: போதகரே, நீர் சத்தியமுள்ளவரா,
கடவுளுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப்
போதிக்கிறவர், நீர் முகதாட்சணியம் இல்
லாதவர், எவனைக் குறித்தும் உமக்குக் கவை
யில்லை, இது எங்களுக்குத்தெரியும். ஆகவே 17
உமக்கு எப்படித் தோன்றுகிறது? இராய
னுக்கு வரிசெலுத்துகிறது நியாயமோ, அல்
லவோ? அதை எங்களுக்குச் சொல்லு
மென்று கேட்டார்கள். இயேசு அவர்கள் 18
தூர்க்குணத்தையறிந்து:மாயக்காரரே,நீங்கள்
என்னைச் சோதிக்கிறதென்ன? வரிக்காசை
எனக்குக் காட்டுங்கள் என்றார்; அவர்கள் 19
ஒரு தினாரியத்தை அவரிடங் கொண்டுவந்
தார்கள். அப்பொழுது அவர் அவர்களி 20
டம்: இந்தச் சாயலும் மேலெழுத்தும் யாரு
டையதென்று கேட்க, இராயனுடையது
என்றார்கள். அதற்கு அவர்: அப்படியா 21
னால் இராயனுடையதை இராயனுக்கும்
கடவுளுடையதைக் கடவுளுக்கும் செலுத்
துங்கள் என்றார். அவர்கள் அதைக்கேட்டு 22
ஆச்சரியப்பட்டு அவரை விட்டுப் போய்
விட்டார்கள்.
உயிர்த்தெழுதல் இல்லை எனச் சாதிக்கிற 23
சதுசேயர் அன்றையதினம் அவரிடம் வந்து
போதகரே, ஒருவன் பிள்ளை இல்லாமல் 24
இறந்துபோனால் அவனுடைய சகோதரன்
அவன் மனைவியை விவாகம்பண்ணித் தன்
சகோதரனுக்குச் சந்தானம் உண்டாக்க
வேண்டுமென்று மோசே சொன்னாரே. எங் 25
களுக்குள்ளே சகோதரர் ஏழுபேர் இருந்
தார்கள்; மூத்தவன் விவாகஞ்செய்து மரித்
துச் சந்தானமில்லாதிருந்தால் தன் மனைவி
யைத் தன் சகோதரனுக்கு விட்டுப் போ
னான். அப்படியே இரண்டாம் மூன்றும் 26
சகோதரன்முதல் ஏழாம் சகோதரன்வரைக்
கும் செய்தார்கள். எல்லாருக்கும் பின்பு 27
அந்தஸ்திரீயும் இறந்துபோனாள். இப்படியி 28
ருக்க, உயிர்த்தெழுதலில் அவ்வேழுபேரில்
எவனுக்கு அவள் மனைவியாவாள்? அவர்
கள் எல்லாரும் அவளை விவாகஞ்செய்திருந்
தார்களே என்று கேட்க | இயேசு: நீங்கள் 29
வேதாகமங்களையும் கடவுளுடைய வல்ல
மையையும் அறியாமல் மோசம்போகிறீர்
கள். உயிர்த்தெழுதலில் கொள்வினையுங் 30
கொடுப்பினையுமில்லை; அவர்கள் பரலோகத்
திலே தூதரைப்போல் இருப்பார்கள். மரித் 31
தோர் உயிர்த்தெழுதலைப்பற்றி: நான் ஆபிர
காமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்
கோபின் கடவுள் என்று கடவுள் உங்க
ளுக்கு உரைத்ததை நீங்கள் வாசிக்கவில்
லையா? அவர் மரித்தோரின் கடவுளல்ல, ஜீவ 32
னுள்ளோரின் கடவுளே என்றார். ஜனங் 33
கள் இதைக்கேட்கவே அவருடைய
போதகத்தைக் குறித்துப் பிரமித்தார்கள்.

34 அவர் சதுசேயரை வாயடைத்தாரென்று
பரிசேயர் கேள்விப்பட்டு ஒன்றுய்க் கூடி
35 னார்கள். அவர்களில் நியாயசாஸ்திரி ஒரு
36 வன் அவரைச் சோதிக்கும்படி: போதகரே,
நியாயப்பிரமாணத்தில் எந்தக் கற்பனை பிர
37 தான மானதென்று கேட்க | அவர்: உன்
ஆண்டவராகிய கடவுளிடம் உன் முழு இரு
தயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும்
உன் முழு மனதோடும் அன்புகூரவேண்டும்.
38 இதுவே பிரதானமும் முதன்மையுமான கற்
39 பனை. இதற்குச் சமானமாயிருக்கிற இரண்
டாம் கற்பனையோ, உன்னிடத்தில் நீ அன்
புகூருவதுபோல அயலானிடத்திலும் அன்பு
40 கூரவேண்டும் என்பதே. இவ்விரண்டு கற்
பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமை
யும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கின்
றன என்றார்.
41 பரிசேயர் கூடியிருக்கையில் இயேசு
அவர்களைப் பார்த்து: கிறிஸ்துவைக் குறித்து
42 நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர் யாரு
டைய குமாரன் என்றுகேட்க, அவர் தாவீ
43 தின் குமாரன் என்றார்கள். அதற்கு அவர்:
அப்படியானால், தாவீது ஆவியினாலே அவ
ரை ஆண்டவர் என்று சொல்லுகிறது எப்
படி?
44 கர்த்தர் என் ஆண்டவரிடம்: நான்
உமது சத்துருக்களை உமது பாதத்தின்
கீழ் போடுமட்டும்
நீர் என் வலதுபாரிசத்தில் உட்காரும்
என்றார்
45 என்று சொன்னானே. தாவீது அவரை ஆண்
டவரென்று சொல்லியிருக்க, அவனுக்கு
அவர் குமாரனுயிருப்பதெப்படி என்றார்.
46 ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும்
பதில் சொல்ல முடியாதிருந்தது. அன்று
முதல் ஒருவனும் அவரிடம் கேள்விகேட்
கத் துணியவில்லை.

**23** பின்பு இயேசு ஜனக்கூட்டத்தாரையும்
2 சீஷரையும் பார்த்து: வேதபாரகரும் பரி
சேயரும் மோசேயின் ஆசனத்தில் உட்கார்ந்
3 திருக்கிறார்கள்; ஆகவே, அவர்கள் உங்களுக்
குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு
செய்யுங்கள்; அவர்கள் செய்கைகளின்படி
யோ செய்யாதிருங்கள்; அவர்கள் சொல்லு
கிறார்கள், சொல்லியும் செய்யாதேபோகி
4 றார்கள்; பாரமான சுமைகளைக் கட்டி மனு
ஷர் தோள்களின்மேல் வைக்கிறார்கள்,
தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத்
5 தொடமாட்டார்கள். தங்கள் கிரியைகளெ
யெல்லாம் மனுஷர் காணவேண்டுமென்று
செய்கிறார்கள்; தங்கள் [1]காப்பு நாடாக்களை
அகலமாக்கி வஸ்திரத்தொங்கல்களைப் பெரி
தாக்குகிறார்கள். விருந்துகளில் முதல் 6
இடங்களையும் ஜெபாலயங்களில் முதல் ஆச
னங்களையும் | சந்தைவெளிகளில் வந்தனங் 7
களையும் மனுஷரால் ரபீ என்று அழைக்கப்
படுவதையும் விரும்புகிறார்கள். நீங்களோ 8
ரபீ என்று அழைக்கப்படவேண்டாம்;
உங்களுக்குக் குருவாயிருக்கிறவர் ஒருவரே,
நீங்கள் எல்லாரும் சகோதரர். பூலோகத் 9
தில் ஒருவனையும் உங்கள் பிதா என்று
அழைக்கவேண்டாம்; பரலோகத்திலிருக்
கிற ஒருவரே உங்களுக்குப் பிதா. நீங்கள் 10
போதகரென்றும் அழைக்கப்பட வேண்
டாம்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப்
போதகர். உங்களில் பெரியவன் உங்களுக் 11
குப் பணிவிடைக்காரனுயிருப்பான். தன்னை 12
உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்
னைத் தாழ்த்துகிறவனே உயர்த்தப்படுவான்.

மாயக்காரராகிய வேதபாரகரே, பரி 13-14
சேயரே, ஐயோ உங்களுக்குக் கேடாம்!
மனுஷர் பிரவேசியாதபடி பரலோக ராஜ்யத்
தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்கள் அதில்
பிரவேசிக்கிறதுமில்லை; பிரவேசிக்கிறவர்
களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை.

மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேய 15
ரே, ஐயோ உங்களுக்குக்கேடாம்! ஒருவனை
உங்கள் மார்க்கத்தில் சேர்த்துக்கொள்ளும்
படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்
திரிகிறீர்கள்; அவனை உங்கள் மார்க்கத்தில்
சேர்த்துக்கொள்ளும்போது அவனை உங்க
ளிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனுக்கு
கிறீர்கள்.

குருட்டு வழிகாட்டிகளே, ஐயோ உங்க 16
ளுக்குக் கேடாம்! எவனாகிலும் தெய்வால
யத்தின்பேரில் ஆணையிட்டால் அது ஒன்று
மில்லையென்றும் எவனாகிலும் தெய்வாலயத்
தின் பொன்னின்பேரில் ஆணையிட்டால்
அவன் கட்டுப்பட்டவனென்றும் சொல்லுகி
றீர்கள். மதிகேடரே, குருடரே, எது பெரிது? 17
பொன்னே, பொன்னைப் பரிசுத்தமாக்குகிற
தெய்வாலயமோ? மேலும், எவனாகிலும் பலி 18
பீடத்தின்பேரில் ஆணையிட்டால் அது ஒன்று
மில்லையென்றும் எவனாகிலும் அதின்மேலி
ருக்கிற காணிக்கையின்பேரில் ஆணையிட்
டால் அவன் கட்டுப்பட்டவனென்றும்
சொல்லுகிறீர்கள். குருடரே, எது பெரிது? 19
காணிக்கையோ, காணிக்கையைப் பரிசுத்த
மாக்குகிற பலிபீடமோ? ஆகையால் பலிபீ 20

---

1 (எண். 15: 38, 39) பார்க்கவும்.

டத்தின்பேரில் ஆணையிடுகிறவன் அதின் பேரிலும் அதின்மேலுள்ள எல்லாவற்றின்
21 பேரிலும் ஆணையிடுகிறான். தெய்வாலயத்தின்பேரில் ஆணையிடுகிறவன் அதின்பேரிலும் அதில் வாசமாயிருக்கிறவர்பேரிலும்
22 ஆணையிடுகிறான். வானத்தின்பேரில் ஆணையிடுகிறவன் கடவுளுடைய சிங்காசனத்தின் பேரிலும் அதில் வீற்றிருக்கிறவர்பேரிலும் ஆணையிடுகிறான்.

23 மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, ஐயோ உங்களுக்குக் கேடாம்! நீங்கள் புதினாவிலும் வெந்தயத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி நியாயப்பிரமாணத்தில் விசேஷித்தவைகளாகிய நியாயத்தையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டு விட்டீர்கள்; இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டும்.
24 குருட்டு வழிகாட்டிகளே, நீங்கள் கொசுகை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்கள்.

25 மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, ஐயோ உங்களுக்குக் கேடாம்! போஜனபான பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்; உட்புறத்திலோகொள்ளையும் துர் ஆசாபாசமும் நிறைந்திருக்கின்
26 றன. குருட்டுப் பரிசேயனே, பாத்திரத்தின் வெளிப்புறம் சுத்தமாகும்படி அதின் உட்புறத்தை முதலாவது சுத்தமாக்கு.

27 மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, ஐயோ உங்களுக்குக் கேடாம்! வெள்ளையடித்த கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள். அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளும் சகல அசுத்தங்களும்
28 நிறைந்திருக்கின்றன. அப்படியே நீங்களும் புறம்பே மனுஷருக்கு நீதிமான்களென்று காணப்பட்டும் உள்ளேயோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்.

29 மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, ஐயோ உங்களுக்குக் கேடாம்! நீங்கள் தீர்க்கதரிசிகளின் கல்லறைகளைக் கட்டி நீதி
30 மான்களின் சமாதிகளைச் சிங்காரித்து: எங்கள் பிதாக்களின் நாட்களில் இருந்திருந்தோமானால் அவர்களோடே நாங்கள் தீர்க்கதரிசிகளின் இரத்தப்பழிக்கு உடந்தையா
31 யிருக்கமாட்டோம் என்கிறீர்கள். ஆகவே, நீங்கள் தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தவர்களின் மக்களென்பதற்கு நீங்களே சாட்சி
32 கள். நீங்களும் உங்கள் பிதாக்களின் அக
33 கிரம அளவை நிரப்புங்கள். சர்ப்பங்களே, விரியன் பாம்புக்குட்டிகளே, நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வீர்கள்?

இதினிமித்தம், இதோ, தீர்க்கதரிசிகளையும் 34
ஞானிகளையும் வேதபாரகரையும் உங்களிடம் அனுப்புகிறேன்; அவர்களில் சிலரைக் கொல்லுவீர்கள், சிலுவையில் அறைவீர்கள், சிலரை உங்கள் ஜெபாலயங்களில் வாரிலுலடித்து ஊருராய் இம்சைப்படுத்துவீர்கள்; நீதிமானுகிய ஆபேலின் இரத்த 35
முதல் தெய்வாலயத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே நீங்கள் கொலைசெய்த பரகியாவின் குமாரனுகிய சகரியாவின் இரத்தம்வரைக்கும் பூமியில் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் உங்கள்மேல் வரும் படியாக இப்படிச் செய்வீர்கள். இவைக 36
ளெல்லாம் இந்தச் சந்ததியின்மேல் வரு மென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசி 37
களைக் கொலைசெய்து உன்னிடம் அனுப்பப் பட்டவர்களைக் கல்லெறிகிறவளே, கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; நீங்களோ மனதில்லாதிருந்தீர்கள். இதோ, உங் 38
கள் வீடு உங்களுக்கே விடப்படும். கர்த்த 39
ருடைய நாமத்தில் வருகிறவர் ஆசீர்வதிக்கப் பட்டவரென்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணுதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

**24** இயேசு தெய்வாலயத்தை விட்டுப் போகையில் அவருடைய சீஷர் தெய்வாலயத்தின் கட்டடங்களை அவருக்குக் காண்பிக்க அவரிடம் வந்தார்கள். அவர் அவர் 2
களைப் பார்த்து: இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் கல்லின்மேல் கல் லிராதபடி எல்லாம் இடிபட்டுப்போமென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந் 3
திருக்கையில் சீஷர் அவரிடம் தனித்து வந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும் யுகமுடிவுக்கும் அடையாளமென்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்க, இயேசு அவர்களைப் பார்த்துப் பேசி: ஒருவ 4
னும் உங்களை வஞ்சியாதபடி எச்சரிக்கையாயிருங்கள். நானே கிறிஸ்து என்று என் 5
னாமத்தைத் தரித்துக்கொண்டு அநேகர் வருவார்கள், அநேகரை வஞ்சிப்பார்கள். யுத் 6
தங்களையும் யுத்த செய்திகளையும் கேட்கப்

போகிறீர்கள், கலங்காதபடி பாருங்கள்; இவைகள் சம்பவிக்கவேண்டியதே, முடி
7 வோ இன்னும் இல்லை. ஜனத்துக்கு விரோத மாய் ஜனமும் ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; இங்குமங்கும் பஞ்
8 சங்களும் பூமி யதிர்ச்சிகளும் உண்டாகும். இவையெல்லாம் வேதனைகளின் ஆரம்பமே.
9 அப்பொழுது உங்களை உபத்திரவத்துக்கு ஒப்புக்கொடுத்துக் கொலைசெய்வார்கள்; என் நாமத்தினிமித்தம் புறஜாதியார் யாவரும்
10 உங்களைப் பகைப்பார்கள். அப்பொழுது அநேகர் இடறல் படுவார்கள்; ஒருவரை யொருவர் காட்டிக்கொடுப்பார்கள்; ஒரு
11 வரையொருவர் பகைப்பார்கள். கள்ளத் தீர்க்கதரிசிகள் அநேகர் எழும்பிப் பலரை
12 வஞ்சிப்பார்கள். அக்கிரமம் மிகுதியாவ தினால் பெரும்பான்மையோரில் அன்பு
13 தணிந்துபோம். முடிவுபரியந்தம் நிலைநிற்
14 பவனே இரட்சிக்கப்படுவான். ராஜ்யத் துக்குரிய இந்தச் சுவிசேஷம் பூலோக மெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சி யாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது தான் முடிவு வரும்.
15 ஆகவே, தானியேல் தீர்க்கதரிசி பேசின பாழாக்கும் அருவருப்பு பரிசுத்த ஸ்தலத் தில் நிற்கக் காணும்போது — வாசிக்கிறவன்
16 கவனிக்கக்கடவன்— யூதேயாவில் உள்ள
17 வர்கள் மலைகளுக்கு ஓடிப்போகட்டும். வீட் டின்மேல் இருக்கிறவன் தன் வீட்டில் உள்ளவைகளை எடுப்பதற்கு இறங்கவேண்
18 டாம். வயலில் இருக்கிறவன் தன் வஸ் திரத்தை எடுப்பதற்குத் திரும்பவேண்டாம்.
19 அந்நாட்களில் கர்ப்பவதிகளுக்கும் பால் கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ பரிதாபம்!
20 நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது ஓய்வுநாளிலாவது நேரிடாதபடி வேண்டிக்
21 கொள்ளுங்கள். அக்காலத்தில் மிகுந்த உபத்திரவமுண்டாயிருக்கும்; அ ப் ப டி ப் பட்ட உபத்திரவம் உலகமுண்டானது முதல் இந்நாள்வரையும் நேரிட்டதுமில்லை,
22 இனி நேரிடப்போவதுமில்லை. அந்நாட் கள் குறுக்கப்படாதிருந்தால் மாம்சமான தெதவும் தப்பிப்போவதில்லை. தெரிந்தெடுக் கப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்
23 கள் குறுக்கப்படும். அப்பொழுது எவனு கிலும் உங்களிடம்: இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார்
24 என்று சொன்னால் நம்பாதேயுங்கள். ஏனெனில் கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்க தரிசிகளும் எழும்பிக் கூடுமானால் தெரிந் தெடுக்கப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்க தாகப் பெரிய அடையாளங்களையும் அற் புதங்களையும் செய்வார்கள். இ தோ, 25
முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கி றேன். ஆகையால்: அதோ, வனாந்தரத்தில் 26
இருக்கிறாரென்று உங்களுக்குச் சொல்லு வார்களானால் புறப்படாதிருங்கள்; இதோ, உள்ளறைகளில் இருக்கிறாரென்று சொல் வார்களானால் நம்பாதிருங்கள். மின்னல் 27
கிழக்கில் தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறதுபோல மனுஷகுமாரன் வருகையு மிருக்கும். பிணம் எங்கேயோ அங்கே 28
கழுகுகள் வந்து கூடும்.

அந்நாட்களில் உபத்திரவம் முடிந்த 29
உடனே சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் தன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத் திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத் தின் சத்துவங்கள் அசைக்கப்படும். அப் 30
பொழுது மனுஷகுமாரனுடைய அடையா ளம் வானத்தில் தோன்றும்; தோன்றவே பூமியிலுள்ள சகல ஜாதியாரும் மாரடிப் பார்கள்; மனுஷகுமாரன் மிகுந்த வல்லமை யோடும் மகிமையோடும் வானத்தின் மேகங் களின்மேல் வருகிறதைக் காண்பார்கள். பெரிய எக்காள சத்தத்தோடே அவர் தமது 31
தூதரை யனுப்புவார்; அவர்கள் வானத்தின் ஒரு முனைமுதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலுதிசைகளிலுமிருந்து அவரால் தெரிந் தெடுக்கப்பட்டவர்களைக் கூட்டிச் சேர்ப் பார்கள்.

அத்திமரத்திலிருந்து வரும் உவமையைக் 32
கற்றுக்கொள்ளுங்கள்; அது இளங்கினி யாகி இலை துளிர்க்கும்போது வசந்தகாலம் சமீபமென்று அறிவீர்கள். அப்படியே 33
நீங்களும் இவைகளையெல்லாம் காணும் போது [1]அவர் சமீபமாய் வாசலருகே வந் திருக்கிறாரென்று அறிந்துகொள்ளுங்கள். இவையெல்லாம் சம்பவித்துத் தீரும்வரை 34
இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று மெய் யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். வானமும் பூமியும் ஒழிந்துபோம், என்வார்த் 35
தைகளோ ஒழிந்துபோவதேயில்லை. அந்த 36
நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒரு வர் தவிர மற்றொருவனும் அறியான்; பர லோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனுங்கூட அறியார். நோவாவின் நாட் 37
கள் எப்படியோ அப்படியே மனுஷகுமா ரன் வருகையுமிருக்கும். எப்படியெனில், 38
ஜலப்பிரளயத்துக்கு முன்னை நாட்களில் நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள்

1 அது சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறதென்றும் திருப்பலாம்.

வரை ஜனங்கள் புசித்தும் குடித்தும் பெண் கொண்டும் பெண் கொடுத்தும் வந்தார்கள்.
39 ஜலப்பிரளயம் வந்து அவரையும் வாரிக் கொண்டு போகுமட்டும் அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. அப்படியே மனுஷகுமா
40 ரன் வருகையுமிருக்கும். அப்போது வய லில் இரண்டுபேர் இருப்பார்கள்; ஒருவ னைக் கூட்டிக்கொண்டு போவார்கள், மற்ற
41 வனைக் கைவிடுவார்கள். எந்திரம் அரைக் கும் இரண்டு ஸ்திரீகள் இருப்பார்கள்; ஒருத்தியைக் கூட்டிக்கொண்டு போவார்
42 கள், மற்றவளைக் கைவிடுவார்கள். ஆகவே உங்கள் ஆண்டவர் இன்ன நாளிலே வருவா னென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால்
43 விழித்திருங்கள். திருடன் இன்ன ஜாமத் தில் வருவானென்று வீட்டெஜமான் அறிந் திருந்தால் தன் வீட்டைக் கன்னமிடவொட் டாதபடி விழித்திருப்பான் என் ப தை
44 அறிந்துகொள்ளுங்கள். அப்படியே நீங் களும் ஆயத்தமாயிருங்கள்; நீங்கள் நினை யாத நாழிகையில் மனுஷகுமாரன் வரு கிறார்.
45 ஏற்ற வேளையிலே தன் வீட்டாருக்குப் போஜனங் கொடுக்கும்படி எஜமான் நிய மித்த உண்மையும் விவேகமுமுள்ள வேலைக்
46 காரன் யார்? எஜமான் வரும்போது அப்ப டியே செய்யக்காணும் வேலைக்காரன் பாக்
47 கியவான். தனக்குள்ள யாவற்றின்மேலும் அவனை நியமிப்பானென்று மெய்யாகவே
48 உங்களுக்குச் சொல்லுகிறேன். அந்தப் பொல்லாத வேலைக்காரனே: என் எஜமான் வர நாள் செல்லுமென்று தன் உள்ளத்திலே
49 சொல்லிக்கொண்டு | தன் உடன் வேலைக் காரரை அடிக்கத் தொடங்கி வெறியரோடே புசிக்கவும் குடிக்கவுந் தலைப்பட்டால் |
50 அந்த வேலைக்காரன் எதிர்பாராத நாளிலும் அறியாத நாழிகையிலும் அவன் எஜமான்
51 வந்து | அ வ னை த் துண்டித்துப்போட்டு மாயக்காரரோடே அவனுக்குப் பங்கை நிய மிப்பான்; அங்கே அழுகையும் பற்கடிப்பு மாயிருக்கும்.

**25** அப்பொழுது பரலோகராஜ்யம் தங்கள் தீவர்த்திகளைப் பிடித்துக்கொண்டு மண
வாளனை எதிர்கொண்டழைக்கப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாகும்.
2 அவர்களில் ஐந்துபேர் புத்தியில்லாதவர்
3 கள், ஐந்துபேர் புத்தியுள்ளவர்கள். புத்தி யில்லாதவர்கள் தங்கள் தீவர்த்திகளை எடுத் துக்கொண்டு போகும்போது எண்ணெயை
4 யும் கூடக்கொண்டுபோகவில்லை. புத்தி யுள்ளவர்களோ தங்கள் தீவர்த்திகளோடு
கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெ யையுங் கொண்டுபோனார்கள். மணவாளன் 5
வரத் தாமதித்தபோது அவர்கள் எல்லாரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கிவிட்டார் கள். நடுராத்திரியிலே: அதோ, மணவாளன், 6
அவரை எதிர்கொண்டழைக்கப் புறப்படுங் கள் என்ற பெருஞ் சத்தமுண்டாயிற்று.
அப்பொழுது அந்தக் கன்னிகைகள் எல்லா 7
ரும் எழுந்திருந்து தங்கள் தீவர்த்திகளை ஆயத்தப்படுத்தினார்கள். புத்தியில்லாதவர் 8
கள் புத்தியுள்ளவர்களை நோக்கி: உங்கள் எண்ணெயில், எங்களுக்குக் கொஞ்சங் கொடுங்கள், எங்கள் தீவர்த்திகள் அணைந்து போகின்றனவே எனப் | புத்தியுள்ளவர் 9
கள்: அப்படியல்ல, எங்களுக்கும் உங்க ளுக்கும் போதாதே; விற்கிறவர்களிடம் போய் உங்களுக்கு வாங்கிக்கொள்ளுங்கள் என்றார்கள். அப்படியே அவர்கள் வாங் 10
கப்போகையில் மணவாளன் வந்துவிட்டார்; ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடுகூடக் கலியாண வீட்டிற்குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப்பட்டது. பின்பு மற் 11
றக் கன்னிகைகளும் வந்து: ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்கவேண்டும் என | அவர்: உங்களை அறியேன் என்று 12
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். ஆகவே, விழித்திருங்கள்; அந்த 13
நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியமாட்டீர்களே.

இது எப்படியெனில், புறதேசத்துக் 14
குப் பிரயாணமாய்ப் போகிற ஒரு மனுஷன் தன் ஊழியக்காரரையழைத்துத் தன் ஆஸ் திகளை அவர்கள் வசமாய் ஒப்புக்கொடுத் ததுபோலாகும். அவனவனுடைய திறமைக் 15
குத் தக்கபடி ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும் ஒருவனிடத்தில் இரண்டு தாலந் தும் ஒருவனிடத்தில் ஒரு தாலந்துமாகக் கொடுத்துப் பிரயாணப்பட்டுப் போனான். ஐந்து தாலந்து வாங்கினவன் உடனே 16
போய் அதை வைத்து வியாபாரம்பண்ணி வேறு ஐந்து சம்பாதித்தான். அப்படியே 17
இரண்டு வாங்கினவனும் வேறு இரண்டு சம்பாதித்தான். ஒன்று வாங்கினவனோ 18
போய் நிலத்தைத் தோண்டித் தன் எஜ மான் பணத்தைப் புதைத்து வைத்தான். வெகு காலமானபின் அந்த ஊழியக்காரரு 19
டைய எஜமான் திரும்பிவந்து அவர்கள் கணக்கைப் பார்த்தான். அப்பொழுது 20
ஐந்து தாலந்து வாங்கினவன் வேறு ஐந்து தாலந்தும் கொண்டுவந்து: ஐயா, ஐந்து தாலந்து என்னிடம் ஒப்புவித்தீரே; இதோ, வேறு ஐந்து தாலந்து சம்பாதித்தேன் என்

21 ருன். அவனுடைய எஜமான் அவனிடம்: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அதிகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்ருன்.
22 இரண்டு தாலந்து வாங்கினவனும் வந்து: ஐயா, இரண்டு தாலந்து என்னிடம் ஒப்புவித்தீரே; இதோ, வேறு இரண்டு தாலந்து
23 சம்பாதித்தேனென | அவனுடைய எஜமான்: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அதிகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிர
24 வேசி என்ருன். ஒரு தாலந்து வாங்கினவனும் வந்து: ஐயா, நீர் கடினமான மனுஷனென்று அறிவேன். நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவர்; தூற்றாத இடத்
25 தில் சேர்க்கிறவர். ஆகவே, நான் பயந்து சென்று உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன்; இதோ, உம்முடைய
26 பொருள் என | எஜமான்: பொல்லாத ஊழியனே, சோம்பேறீ, நான் விதைக்காத இடத்தில் அறுக்கிறவனென்றும் தூற்றாத இடத்தில் சேர்க்கிறவனென்றும் அறிந்தி
27 ருந்தாயே. அப்படியானுல் நீ என் பணத்தைக் காசுக்காரர் வசம்விட்டு வைத்திருக்க வேண்டும்; அப்பொழுது நான் வந்து என்னுடையதை வட்டியோடே வாங்கிக்
28 கொள்வேனே என்று சொல்லி: அவனிடமிருந்து தாலந்தை எடுத்துப் பத்துத் தா
29 லந்துள்ளவனுக்குக் கொடுங்கள்; உள்ளவனெவனே அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் ஆகும்; இல்லாதவனிடமிருந்தோ, உள்ளதும் எடுத்துக்கொள்ளப்
30 படும். பிரயோஜனமற்ற இந்த ஊழியக்காரனைப் புறம்பான இருளிலே தள்ளிவிடுங்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்புமாயிருக்கும் என்ருன்.
31 அன்றியும், மனுஷகுமாரன் தமது மகிமையில் சகல தூதரோடும் வரும்போது தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்
32 றிருப்பார். அப்பொழுது சகல ஜாதியாரும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள், மேய்ப்பன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேருகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்துச்
33 | செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்திலும் வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்தில்
34 லும் நிறுத்துவார். அப்பொழுது ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப்

பார்த்து: வாருங்கள் என் பிதாவினுடைய வர்களாய் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். பசி 35
யிருந்தேன், எனக்குப் போஜனங் கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனுயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்; வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங் 36
கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் என் பார். அதைக் கேட்டு நீதிமான்கள்: ஆண் 37
டவரே, உம்மை நாங்கள் எப்பொழுது பசியுள்ளவராகக் கண்டு போஜனங்கொடுத்தோம்? உம்மை எப்பொழுது தாகமுள்ளவராகக் கண்டு தாகத்தைத் தீர்த்தோம்? உம் 38
மை எப்பொழுது அந்நியராகக் கண்டு சேர்த்துக்கொண்டோம்? உம்மை எப்பொழுது வஸ்திரமில்லாதவராகக்கண்டு வஸ்திரங்கொடுத்தோம்? உம்மை எப்பொழுது வியாதி 39
யுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவுங் கண்டு உம்மைப் பார்க்கவந்தோம் என் பார்கள். அப்பொழுது ராஜா: இந்த 40
மிகச் சிறியரான என் சகோதரரில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் 41
பார்த்து அவர்: சாபத்துக்குட்பட்டவர்களே, என்னைவிட்டுப் பிசாசுக்கும் அவன் தூதருக்கும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினிக்குள் போங்கள். பசி 42
யாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போஜனங்கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை; அந் 43
நியனுயிருந்தேன், நீங்கள் என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை; வஸ்திரமில்லாதிருந்தேன், நீங்கள் வஸ்திரங்கொடுக்கவில்லை; வியாதியுள்ளவனும் காவலிலடைபட்டவனுமாயிருந்தேன், நீங்கள் விசாரிக்க வரவில்லையென்பார். அதற்கு அவர்கள்: 44
ஆண்டவரே, உம்மைப் பசியுள்ளவராகவும் தாகமுள்ளவராகவும் அந்நியராகவும் வஸ்திரமில்லாதவராகவும் வியாதிப்பட்டவராகவும் காவலிலடைபட்டவராகவும் நாங்கள் எப்பொழுது கண்டு உதவிசெய்யாதிருந்தோம் என்பார்கள். அப்பொழுது அவர் அவர்க 45
ளிடம்: மிகச்சிறியராகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ அதை எனக்கே செய்யாதிருந்தீர்க

ளென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்
46 லுகிறேன் என்பார். அப்படியே இவர்
கள் நித்திய ஆக்கினைக்குப்போவார்கள்; நீதி
மான்களோ நித்திய ஜீவனுக்குள் போவார்
கள் என்றார்.

**26** இயேசு இந்த வசனங்களையெல்லாம்
சொல்லி முடித்தபின்பு தமது சீஷரிடம்:
2 இரண்டு நாளைக்குப்பிறகு பஸ்காபண்டிகை
வருமென்று அறிவீர்கள்; அப்பொழுது
மனுஷகுமாரன் சிலுவையில் அறையப்
படுவதற்கு ஒப்புக்கொடுக்கப்படுவார் என்
றார்.
3 அப்பொழுது பிரதான ஆசாரியரும்
ஜனத்தின் மூப்பரும் காய்பா என்ற பிர
தான ஆசாரியன் அரமனையில் கூடிவந்து |
4 இயேசுவைத் தந்திரமாய்ப் பிடித்துக் கொலை
5 செய்ய ஆலோசனை பண்ணினார்கள். ஆகி
லும், ஜனத்தில் கலகமுண்டாகாதபடி பண்
டிகையிலே அப்படிச் செய்யலாகாது என்
றார்கள்.
6 இயேசு பெத்தானியாவில் குஷ்டரோகி
யான சீமோன் வீட்டில் இருக்கையில் |
7 ஒரு ஸ்திரீ விலையுயர்ந்த பரிமளதைல
முள்ள வெண்கல பரணியைக்கொண்டு
வந்து அவர் போஜனபந்தியிலிருக்கும்
போது அந்தத் தைலத்தை அவர் சிரசின்
8 மேல் ஊற்றினாள். சீஷர் அதைக்கண்டு
கோபங்கொண்டு: இந்த வீண் செலவு என்
9 னத்திற்கு? இதை அதிக விலைக்கு விற்று
ஏழைகளுக்குக் கொடுக்கலாமே என்றார்
கள். இயேசுவோ இதையறிந்து அவர்
10 களிடம்: நீங்கள் இந்த ஸ்திரீயை ஏன்
தொந்தரவு செய்கிறீர்கள்? நல்ல செய்கை
11 எனக்குச் செய்தாளே. ஏழைகள் எப்
போதும் உங்களோடு இருக்கிறார்கள்;
நானோ எப்போதும் உங்களோடிரேன்.
12 இவள் இந்தத் தைலத்தை என் சரீரத்தின்
மேல் ஊற்றினது என்னை அடக்கம்
பண்ணுவதற்கு எத்தனமான செய்கையா
13 கும். இந்தச் சுவிசேஷம் உலக முழுவதிலும்
எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்
கே இவள் செய்ததும் இவள் ஞாபகார்த்த
மாய்ச் சொல்லப்படுமென்று மெய்யாக
வே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.
14 அப்பொழுது பன்னிருவரில் ஒருவனு
கிய யூதாஸ்காரியோத்து என்பவன் பிரதான
15 ஆசாரியரிடத்திற்குப் போய்: நான் அவரை
உங்களுக்குக் காட்டிக்கொடுக்கிறேன்; நீங்
கள் எனக்கு என்னகொடுக்கிறீர்கள் என்
றான். அவர்கள் அவனுக்கு முப்பது வெள்
16 ளிக்காசை நிறுத்துக் கொடுத்தார்கள். அது
முதல் அவன் அவரைக் காட்டிக்கொடுப்ப
தற்குச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான்.
17 புளிப்பில்லாத அப்பப்பண்டிகையின்
முதல் நாளிலே சீஷர் இயேசுவினிடம்
வந்து: பஸ்காவைப் புசிப்பதற்கு நாங்கள்
எங்கே உமக்கு ஆயத்தம்பண்ண விரும்பு
கிறீர் என்று கேட்க | அவர்: நீங்கள் நக
18 ரத்திலே இன்னனிடத்திற்குப் போய்: என்
வேளை சமீபமாயிருக்கிறது, உன் வீட்டிலே
என் சீஷரோடு பஸ்காவை ஆசரிப்பேன்
எனப் போதகர் சொல்லுகிறாரென்று அவ
னுக்குச் சொல்லுங்கள் என்றார். இயேசு
19 தங்களுக்குக் கட்டளையிட்டபடியே சீஷர்
செய்து பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள்.
20 சாயங்காலமானபோது பன்னிரு சீஷ
ரோடுங்கூட அவர் பந்தியிருந்தார். அவர்
21 கள் போஜனம்பண்ணுகையில் அவர்: உங்
களிலொருவன் என்னைக் காட்டிக்கொடுப்
பானென்று மெய்யாகவே உங்களுக்குச்
சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது
22 அவர்கள் மிகவும் துக்கங்கொண்டு அவரை
நோக்கி: ஆண்டவரே, நான்தானே என்று
ஒவ்வொருவராய்க் கேட்கத்தொடங்க |
23 அவர்: என்னோடேகூடத் தாலத்தில் கை
யிடுகிறவனே என்னைக் காட்டிக்கொடுப்
24 பான். மனுஷகுமாரன் தம்மைக்குறித்து
எழுதியிருக்கிறபடியே போகிறார்; எனினும்
மனுஷகுமாரனை எந்த மனுஷன் காட்டிக்
கொடுக்கிறானோ, ஐயோ அவனுக்கு ஆபத்
தே! அந்த மனுஷன் பிறவாதிருந்தானால்
அவனுக்கு நலம் என்றார். அவரைக்
25 காட்டிக்கொடுக்கிற யூதாசும் அவரிடம்:
ரபீ, நான்தானே என அவர்: நீ சொன்ன
படிதான் என்றார்.
26 அவர்கள் போஜனம்பண்ணுகையில்
இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து
அதைப் பிட்டுச் சீஷருக்குக் கொடுத்து:
வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய
சரீரம் என்றார். பின்பு பாத்திரத்தை
27 எடுத்து நன்றி செலுத்தி, அவர்களுக்குக்
கொடுத்து: எல்லாரும் இதிலே பானம் பண்
ணுங்கள்; இது உடன்படிக்கைக்குரிய
28 என்னுடைய இரத்தம்; பாவமன்னிப்புக்
கென்று அநேகருக்காகச் சிந்தப்படுகிறது.
29 இந்தத் திராட்சப்பழரசத்தை என் பிதா
வின் ராஜ்யத்திலே நான் உங்களோடு
கூடப் புதிதாய்ப் பானம்பண்ணும் நாள்
வரைக்கும் இதுமுதல் இதைப் பானம்பண்
ணுவதில்லை யென்று உங்களுக்குச் சொல்லு
கிறேன் என்றார்.
30 அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டுப் பாடி
முடித்துப் புறப்பட்டு ஒலிவ மலைக்குப்

31 போனார்கள். அப்பொழுது இயேசு அவர்களிடம்:
மேய்ப்பனை வெட்டுவேன்,
மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும்
என்று எழுதியிருக்கிறபடி இந்த இரவிலே
நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறல்
32 படுவீர்கள். ஆகிலும் நான் உயிரோடெ
முப்பப்பட்டபின் உங்களுக்குமுன் கலி
33 லேயாவுக்குப் போவேன் என்றார். இதைக்
கேட்ட பேதுரு: உமதுநிமித்தம் எல்லாரும்
இடறல்பட்டாலும் நான் ஒருக்காலும்
34 இடறல் படமாட்டேன் என | இயேசு
அவனிடம்: இந்த இரவிலேயே சேவல்
கூவுகிறதற்குமுன் நீ என்னை மூன்றுதரம்
மறுதலிப்பாயென்று மெய்யாகவே உனக்
குச்சொல்லுகிறேன் என்றார். அதற்குப்
35 பேதுரு: நான் உம்மோடே மரிக்கவேண்
டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கவே
மாட்டேன் என்றான். சீஷர் எல்லாரும்
அப்படியே சொன்னார்கள்.

36 அப்பொழுது இயேசு அவர்களோடே
கெத்செமனே என்னும் இடத்திற்கு வந்து
சீஷரை நோக்கி: நான் அங்கே போய்
ஜெபித்து வருமளவும் நீங்கள் இங்கே உட்
37 கார்ந்திருங்கள் என்று சொல்லிப் | பேதுரு
வையும் செபெதேயுவின் குமாரர் இருவரை
யும் கூட்டிக்கொண்டுபோய்த் துக்கமுறவும்
38 வியாகுலப்படவும் தொடங்கினார். அப்
பொழுது அவர் அவர்களிடம்: என் ஆத்
துமா மரணத்துக்கேதுவான பெருந் துக்கங்
கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி
என்னோடு விழித்திருங்கள் என்று சொல்
39 லிச் | சற்று அப்பால்போய் முகங்குப்புற
விழுந்து: என் பிதாவே, கூடுமானால் இந்தப்
பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கடவது; ஆகி
லும் எனது சித்தமல்ல, உமது சித்தமே
40 ஆவதாகவென்று ஜெபித்தார். பின்பு அவர்
சீஷரிடம் வந்து அவர்கள் நித்திரை செய்
கிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி: நீங்
கள் ஒரு மணிநேரமாவது என்னோடு விழித்
41 திருக்கமுடியாதோ? நீங்கள் சோதனைக்குட்
படாதபடி விழித்திருந்து ஜெபஞ்செய்யுங்
கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்
42 சமோ பலமற்றது என்றார். அவர் மறுபடி
யும் இரண்டாந்தரம் போய்: என் பிதாவே,
இதில் நான் பானம் பண்ணினாலொழிய
இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாகில் உமது
சித்தமே ஆவதாகவென்று ஜெபித்துத் |
43 திரும்பவும் வந்து அவர்கள் நித்திரை செய்
கிறதைக் கண்டார்; அவர்களுடைய கண்
கள் மிகுந்த நித்திரைமயக்கமாயிருந்தது.
44 அவர் மறுபடியும் அவர்களை விட்டுப்போய்
மூன்றுதரமும் அந்த வார்த்தைகளையே மறு
45 படியும் சொல்லி ஜெபித்துத் | தமது சீஷ
ரிடம் வந்து: இனி நித்திரைசெய்து இளைப்
பாறுங்கள்; இதோ, மனுஷகுமாரன் பாவிக
ளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படும்
46 வேளைவந்தது. எழுந்திருங்கள், போவோம்;
இதோ, என்னைக் காட்டிக்கொடுக்கிறவன்
வந்துவிட்டான் என்றார்.

47 அவர் இன்னும் பேசிக்கொண்டிருக்கை
யில் பன்னிருவரில் ஒருவனாகிய யூதா வந்
தான்; அவனோடு பிரதான ஆசாரியரும்
ஜனத்தின் மூப்பரும் அனுப்பின திரளான
ஜனங்கள் பட்டயங்களையும் தடிகளையும்
48 பிடித்துக்கொண்டு வந்தார்கள். அவரைக்
காட்டிக்கொடுக்கிறவன்: நான் எவனை
முத்தமிடுவேனோ அவன்தான், அவனைப்
பிடித்துக்கொள்ளுங்களென்று அவர்களுக்கு
49 அடையாளம் சொல்லியிருந்தான். உடனே
அவன் இயேசுவினிடம் போய்: ரபீ, வாழ்க
என்று சொல்லி அவரைத் திரும்பத் திரும்ப
50 முத்தமிட்டான். இயேசு அவனை நோக்கி:
சிநேகிதனே, எதற்காக வந்திருக்கிறாய் என்
றார். அப்பொழுது அவர்கள் கிட்டவந்து
இயேசுவின்மேல் கைபோட்டு அவரைப்
51 பிடித்தார்கள். இதோ, இயேசுவோடிருந்த
வர்களில்ஒருவன் கையை நீட்டித் தன் பட்ட
யத்தை உருவிப் பிரதான ஆசாரியனுடைய
வேலைக்காரனைக் காதற வெட்டினான். அப்
52 பொழுது இயேசு அவனிடம்: உன் பட்ட
யத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு;
பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்
தால் மடிந்துபோவார்கள். பன்னிரண்டு
53 [1]லெகியோனுக்கு அதிகமான தூதரை இப்
பொழுதே எனக்கு உதவியாக அனுப்பும்
படி என் பிதாவினிடம் நான் கேட்டுப்
பெற்றுக்கொள்ள முடியாதென்று நினைக்
54 கிறீரோ? அப்படிச் செய்வேனானால் இவ்
விதமாய்ச் சம்பவிக்கவேண்டுமென்கிற வேத
வாக்கியங்கள் எப்படி நிறைவேறும் என்
55 றார். அந்த வேளையிலே இயேசு ஜனங்களை
நோக்கி: கள்ளனைப் பிடிக்கப்போகிறது
போல நீங்கள் பட்டயங்களையும் தடிகளை
யும் எடுத்துக்கொண்டு என்னைப் பிடிக்க
வந்தீர்களே! நான் தினந்தோறும் தெய்வா
லயத்தில் உட்கார்ந்து உபதேசித்துக்கொண்
டிருந்தேன்; அப்பொழுது நீங்கள் என்னைப்
பிடிக்கவில்லையே. ஆகிலும், தீர்க்கதரிசி
56 களின் வேதவாக்கியங்கள் நிறைவேறும்படி

1 6,500 போர்ச்சேவகர் அடங்கிய சேனைப் பிரிவு.

இவைகளெல்லாம் சம்பவித்திருக்கின்றன
57 என்றார். அப்பொழுது சீஷரெல்லாரும்
அவரைவிட்டு ஓடிப்போனார்கள்.

இயேசுவைப் பிடித்தவர்கள் அவரைப்
பிரதான ஆசாரியன் காய்பாவினிடம்
கொண்டுபோனார்கள்; அங்கே வேதபார
கரும் மூப்பரும் கூடிவந்திருந்தார்கள்.
58 பேதுரு தூரத்திலே அவருக்குப் பின்
சென்று பிரதான ஆசாரியனுடைய அர
மனைவரைக்கும் வந்து உட்சென்று முடி
வைப் பார்க்கும்படி சேவகரோடே உட்
கார்ந்தான்.

59 பிரதான ஆசாரியரும் ஆலோசனைச் சங்
கத்தார் அனைவரும் இயேசுவைக் கொலை
செய்யும்படி அவருக்கு விரோதமாய்ப்
60 பொய்ச்சாட்சி தேடினார்கள். அநேக
பொய்ச்சாட்சிகள் வந்தும் தேடிய சாட்சி
யம் கிடைக்கவில்லை; கடைசியில் இருவர்
61 வந்து: கடவுளின் ஆலயத்தை இடித்துப்
போட்டு மூன்று நாளைக்குள்ளே அதைக்
கட்ட என்னால் ஆகுமென்று இவன் சொன்
62 னான் என்றார்கள். அப்பொழுது பிரதான
ஆசாரியன் எழுந்திருந்து அவரைப்பார்த்து:
நீ ஒன்றும் பதில் சொல்லுகிறதில்லையா?
இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சொல்லு
கிற சாட்சி என்னவென்றான். இயேசுவோ
63 பேசாமலிருந்தார். அப்பொழுது பிரதான
ஆசாரியன் அவரிடம்: நீ தெய்வ குமார
னாகிய கிறிஸ்துதானா? ஜீவனுள்ள கடவுள்
பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன்;
64 அதை எங்களுக்குச் சொல் என | இயேசு:
ஆம், நீர் சொன்னபடிதான்; அன்றியும்,
மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலது
பாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின்
மேகங்கள்மேல் வருவதையும் இதுமுதல்
காண்பீர்களென்று உங்களுக்குச் சொல்லு
65 கிறேன் என்றார். அப்பொழுது பிரதான
ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்
கொண்டு: இவன் பேசினது தெய்வதூஷ
ணம்; இனி நமக்குச் சாட்சிகள் எதற்கு?
பாருங்கள், இப்பொழுது இவன் தூஷணத்
தைக் கேட்டீர்களே; உங்களுக்கு எப்படித்
66 தோன்றுகிறது என்று கேட்க | அவர்கள்
மரணதண்டனை பெறத்தக்கவன் என்றார்
67 கள். அப்பொழுது அவர் முகத்தில் துப்பி,
68 அவரைக் குட்டினார்கள்; சிலர் அவரை
அறைந்து: கிறிஸ்துவே, உம்மையடித்தவன்
யார்? அதை ஞானதிருஷ்டியினால் எங்களுக்
குச் சொல்லும் என்றார்கள்.

69 பேதுரு வெளியே அரமனை முற்றத்தில்
உட்கார்ந்திருந்தான். அப்பொழுது வேலைக்
காரியொருத்தி அவனிடம் வந்து: நீயும் கலி
லேயனாகிய இயேசுவோடிருந்தாய் என்று
சொல்ல | அவன்: நீ சொல்லுகிறது எனக் 70
குத் தெரியவில்லை என்று எல்லாருக்கு
முன்பாக மறுதலித்தான். அவன் வாசல் 71
மண்டபத்திற்குப் போனபொழுது வேறொ
ருத்தி அவனைக்கண்டு: இவனும் நசரேய
னாகிய இயேசுவோடிருந்தானென்று அங்கே
இருந்தவர்களுக்குச் சொன்னாள். அவனோ: 72
அந்த மனுஷனை நான் அறியேனென்று
மறுபடியும் ஆணையிட்டு மறுதலித்தான்.
சற்று நேரத்துக்குப்பின் அங்கே நின்றவர் 73
கள் பேதுருவினிடம் வந்து: மெய்யாகவே
நீயும் அவர்களிலொருவன்; உன் பேச்சு
உன்னைக் காட்டிக்கொடுக்கிறதே என்றார்
கள். அப்பொழுது அவன்: அந்த மனு 74
ஷனையறியேன் என்று சொல்லிச் சபித்துக்
கொள்ளவும் சத்தியம் பண்ணவும் தொடங்
கினான். உடனே சேவல் கூவிற்று. அது 75
கேட்ட பேதுரு: சேவல் கூவுகிறதற்குமுன்
நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாயென்று
இயேசு தன்னிடம் சொன்ன வசனத்தை
நினைத்துக்கொண்டு வெளியே போய் மனங்
கசந்து அழுதான்.

விடியற்காலமானபோது சகல பிரதான **27**
ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் இயேசு
வைக் கொலை செய்யும்படி அவருக்கு
விரோதமாக ஆலோசனை செய்து | அவ 2
ரைக்கட்டி நடத்திக்கொண்டுபோய்த் தேசா
திபதி பிலாத்துவினிடம் ஒப்புக்கொடுத்தார்
கள்.

அப்பொழுது அவரைக் காட்டிக் 3
கொடுத்த யூதா, அவர் ஆக்கினைக்குள்ளாகத்
தீர்க்கப்பட்டதைக் கண்டு, மனஸ்தாபப்
பட்டு, அந்த முப்பது வெள்ளிக்காசைப்
பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்ப
ரிடத்திற்கும் திரும்பக் கொண்டுபோய்:
குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் 4
கொடுத்துப் பாவஞ்செய்தேன் என்றான்.
அவர்களோ: எங்களுக்கென்ன, அது உன்
பாடு என்றார்கள். அப்பொழுது அவன் 5
அந்த வெள்ளிக்காசைத் தெய்வாலயத்திலே
எறிந்துவிட்டுப் போய் நான்றுகொண்டான்.
பிரதான ஆசாரியர் அந்த வெள்ளிக்காசை 6
எடுத்து: இது இரத்தக்கிரயமானதால்
காணிக்கைப் பெட்டியிலே இதைப் போட
லாகாதென்று சொல்லி | ஆலோசனை பண் 7
ணினபின்பு, அந்நியரை அடக்கம்பண்ணும்
இடமாகக் குயவனுடைய நிலத்தை அதி
னாலே கொண்டார்கள். இதினிமித்தம் 8
அந்த நிலம் இந்நாள் வரைக்கும் இரத்த
நிலம் எனப்படுகிறது.

9 இஸ்ரவேலின் புத்திரருக்குள் விலைபேசி மதிக்கப்பட்டவரின் விலையாகிய முப்பது வெள்ளிக்காசை எடுத்துக் | 10 குயவனுடைய நிலத்தை வாங்கக் கொடுத்தார்கள்; கர்த்தர் எனக்குக் கட்டளையிட்டது இதுவே என்று எரேமியாவின் தீர்க்கதரிசியின்மூல மாய் வந்த வாக்கு அப்பொழுது நிறை வேறிற்று.

11 இயேசு தேசாதிபதிக்குமுன் நின்றார். தேசாதிபதி அவரைப் பார்த்து: நீயா யூத ருடைய ராஜாவென்று கேட்க இயேசு: ஆம், நீர் சொல்லுகிறபடிதான் என்றார். 12 பிரதான ஆசாரியரும் மூப்பரும் அவர்மேல் குற்றஞ்சாட்டுகையில் அவர் பதில் ஒன்றும் 13 சொல்லவில்லை. அப்பொழுது பிலாத்து அவரைப்பார்த்து: இவர்கள் உன்மேல் எத் தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே, நீ அவைகளைக் கேட்கவில்லையா என்றான். 14 அவரோ ஒரு வார்த்தைக்கும் பதில் சொல்ல வில்லை; அதைக்கண்டு தேசாதிபதி மிகவும் ஆச்சரியப்பட்டான்.

15 உற்சவகாலத்தில் ஜனங்கள் விரும்பும் கைதி ஒருவனைத் தேசாதிபதி அவர்களுக்கு 16 விடுதலைசெய்வது வழக்கம்; அச்சமயத்தில் பரபாஸ் என்னும் பேர்போன கைதி யொரு 17 வனிருந்தான். அவர்கள் கூடிவந்திருந்த போது பிலாத்து அவர்களிடம்: எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்க விரும்பு கிறீர்கள்? பரபாசையோ, கிறிஸ்து எனப் படுகிற இயேசுவையோ என்று கேட்டான். 18 பொறாமையினாலே அவரை ஒப்புக்கொடுத் தார்களென்று அறிந்திருந்தான்.

19 அவன் நியாயாசனத்தில் உட்கார்ந்திருக் கையில் அவன் மனைவி அவனிடம் ஆள் அனுப்பி: அந்த நீதிமான் காரியத்தில் உமக் குச் சம்பந்தமே வேண்டாம்; இன்றைக்குச் சொப்பனத்தில் அவர்நிமித்தம் வெகு பாடு பட்டேனென்று சொல்லச் சொன்னாள்.

20 பரபாசை விடுதலைசெய்யக் கேட்டுக் கொள்ளவும் இயேசுவைக் கொலை செய் விக்கவும் பிரதான ஆசாரியரும் மூப்பரும் 21 ஜனங்களைத் தூண்டிவிட்டார்கள். தேசாதி பதி அவர்களிடம்: இவ்விருவரில் எவனை நான் உங்களுக்கு விடுதலை செய்யவேண்டு 22 மென்று கேட்க | அவர்கள்: பரபாசை என்றார்கள். அப்போது பிலாத்து: அப்படி யானால் கிறிஸ்து எனப்பட்ட இயேசுவை நான் என்ன செய்யவேண்டுமென்று கேட் டான். அவனைச் சிலுவையில் அறையும் 23 என்று எல்லாரும் சொன்னார்கள். தேசாதி பதியோ: ஏன், என்ன பொல்லாப்புச் செய் தானென்று கேட்க அவர்கள்: அவன் சிலு வையில் அறையப்படட்டும் என்று பின் னும் அதிகமாய்க் கூக்குரலிட்டுச் சொன்னார் 24 கள். தன்னால் ஒன்றும் ஆகவில்லையென் றும் கலகமே அதிகமாகிறதென்றும் பிலாத்து கண்டு தண்ணீரையள்ளி ஜனங்கள் முன் னிலையில் கைகளைக் கழுவி: இந்த இரத்தப் பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே 25 பார்த்துக்கொள்ளுங்கள் என்றான். அதற்கு ஜனங்களெல்லாரும்: இவன் இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் 26 இருக்கட்டும் என்றார்கள். அப்பொழுது அவன் பரபாசை அவர்களுக்கு விடுதலை செய்து, இயேசுவையோ வாரினால் அடிப் பித்துச் சிலுவையில் அறையும்படிக்கு ஒப் புக்கொடுத்தான்.

27 அப்பொழுது தேசாதிபதியின் போர்ச் சேவகர் இயேசுவைக் கோட்டைமாளிகைக் குள்ளே கொண்டுபோய் முழுப் பட்டா 28 ளத்தையும் அவரிடங்கூட்டி, அவர் வஸ்தி ரங்களைக் கழற்றிச் சிவப்பான மேலங்கியை 29 அவருக்கு உடுத்தி, முள்ளுகளால் ஒருமுடி யைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலதுகையில் ஒரு நாணற்கோலைக் கொடுத்து, அவர் முன்பாக முழங்காற் படியிட்டு: யூதருடைய ராஜாவே, வாழ்க என்று அவரைப் பரியாசஞ்செய்து, அவர் 30 மேல் துப்பிக் கோலை எடுத்து, அவரைச் சிரசில் அடித்தார்கள். அவரைப் பரியா 31 சஞ்செய்தபின்பு, அவருக்கு உடுத்தின மேலங்கியைக் கழற்றி, அவருடைய வஸ் திரங்களையே அவருக்கு உடுத்தி அவரைச் சிலுவையில் அறைய நடத்திக்கொண்டு போனார்கள்.

போகையில் சிரேனே ஊராகிய 32 சீமோன் என்பவனை அவர்கள் கண்டு, அவ ருடைய சிலுவையைச் சுமக்கும்படி அவனைக் கட்டாயப்படுத்தினார்கள். கபா 33 லஸ்தலம் என்று அர்த்தங்கொள்ளும் கொல் கொதா என்னும் இடத்துக்கு அவர்கள் வந்தபோது | கசப்புக்கலந்த காடியை 34 அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்; அவரோ அதை ருசி பார்த்துக் குடிக்கச் சம்மதிக்கவில்லை. அவரைச் சிலுவையில் 35 அறைந்துவிட்டு சீட்டுப்போட்டு அவரு டைய வஸ்திரங்களை அவர்கள் பங்கிட் டுக்கொண்டார்கள். அவர்கள் அங் 36 கே உட்கார்ந்து அவரைக் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள். அன்றியும், அவர் 37 குற்றத்தைக் சாட்டும்படி: இவன் யூதரு

டைய ராஜாவாகிய இயேசு என்று எழுதி
38 அவர் சிரசுக்குமேல் வைத்தார்கள். அப்
பொழுது அவருடைய வலதுபக்கத்தில் ஒரு
வனும் அவருடைய இடதுபக்கத்தில் ஒரு
வனுமாக இரண்டு கொள்ளைக்காரர் அவ
ரோடுகூடச் சிலுவைகளில் அறையப்பட்
39 டார்கள். அந்த வழியாய் நடந்துபோகிற
40 வர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி: தெய்
வாலயத்தை இடித்து மூன்று நாட்களில்
கட்டுகிறவனே, நீ தெய்வ குமாரனுனால்
உன்னை நீயே இரட்சித்துக்கொள்; சிலுவை
யிலிருந்து இறங்கிவா என்று அவரைத்
41 தூஷித்தார்கள். பிரதான ஆசாரியரும்
அப்படியே வேதபாரகரோடும் மூப்ப
42 ரோடும் சேர்ந்து பரியாசம்பண்ணி: மற்ற
வர்களை இரட்சித்தான்; தன்னைத்தான்
இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை;
இவன் இஸ்ரவேலின் ராஜாவாமே! இப்
பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்
டும், அப்பொழுது இவனை நம்புவோம்.
43 கடவுள்மேல் நம்பிக்கையா யிருக்தானே;
அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்
பொழுது இவனை மீட்டுவிடட்டும், இவன்
தன்னைக் கடவுளின் குமாரனென்று
44 சொல்லிக்கொண்டானே என்றார்கள். அவ
ரோடுகூடச் சிலுவைகளில் அறையப்பட்ட
கொள்ளைக்காரரும் அப்படியே அவரை
நிந்தித்தார்கள்.

45 ஆறுமணிநேரமுதல் ஒன்பதாமணி நேரம்
வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரமுண்
46 டாயிற்று. ஏறக்குறைய ஒன்பதாமணி
நேரத்தில் இயேசு: ஏலீ, ஏலீ, லமா சபக்
தானி என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்
பிட்டார்; அதற்கு, என் கடவுளே, என்
கடவுளே, ஏன் என்னைக் கைவிட்டீர்
47 என்று அர்த்தமாம். அங்கே நின்றவர்
களில் சிலர் இதைக் கேட்டபொழுது:
இவன் எலியாவைக் கூப்பிடுகிறான் என்
48 றார்கள். உடனே அவர்களில் ஒருவன்
ஓடிக் கடற்காளானை எடுத்து காடியிலே
தோய்த்து, அதை ஒரு கோலில் மாட்டி
49 அவருக்குக் குடிக்கக் கொடுத்தான். மற்ற
வர்களோ: பொறு, எலியா இவனை இரட்
சிக்க வருவானே பார்ப்போம் என்றார்கள்
50 இயேசு மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்
பிட்டு, ஆவியைவிட்டார்.
51 இதோ, தெய்வாலயத்தின் திரை மேலே
தொடங்கிக் கீழே வரைக்கும் இரண்டாகக்
கிழிந்தது; பூமியும் அதிர்ந்தது; கன்மலைக
52 ளும் பிளந்தன; கல்லறைகளும் திறந்தன;
நித்திரை யடைந்திருந்த அநேக பரிசுத்த
வான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தன.
அவர் உயிர்த்தெழுந்தபின்பு இவர்கள் கல் 53
லறைகளைவிட்டு வெளிப்பட்டுத் திருநகரத்
தினுட் சென்று அநேகருக்குக் காணப்
பட்டார்கள். நூற்றுக்கதிபதியும் அவ 54
ரோடு இயேசுவைக் காவல் காத்திருந்தவர்
களும் பூமியதிர்ச்சியையும் சம்பவித்தவை
களையுங் கண்டு மிகவும் பயந்து: மெய்யாக
வே இவர் தெய்வ குமாரன் என்றார்கள். 55
தூரத்தின்று பார்த்துக்கொண்டிருந்த அநேக
ஸ்திரீகளும் அங்கே இருந்தார்கள். இவர்
கள் கலிலேயாவிலிருந்து இயேசுவைத்
தொடர்ந்து வந்து அவருக்குப் பணிவிடை
செய்தவர்கள். அவர்களுக்குள்ளே மகத 56
லேனா மரியாளும் யாக்கோபுக்கும் யோ
சேப்புக்கும் தாயாகிய மரியாளும் செபெ
தெயுவின் குமாரருடைய தாயும் இருந்தார்
கள்.

சாயங்காலமானபோது அரிமத்தியா ஊரா 57
னாகிய யோசேப்பு என்னும் ஐசுவரியவான்
ஒருவன் வந்தான். இவனும் இயேசுவுக்குச்
சீஷனானவன். இவன் பிலாத்துவினிடம் 58
போய் இயேசுவின் சரீரத்தைக்கேட்டான்.
அதைக் கொடுக்கப் பிலாத்து கட்டளையிட்
டான். யோசேப்பு சரீரத்தைஎடுத்துத் தூய்ய 59
தான மெல்லிய துணியிலே சுற்றித் | தான் 60
கற்பாறையில் வெட்டியிருந்த தன் புதிய கல்
லறையிலே அதை வைத்துக் கல்லறையின்
வாசலில் ஒரு பெரிய கல்லை உருட்டி
வைத்துப் போனான். மகதலேனா மரியா 61
ளும் மற்ற மரியாளும் அங்கே கல்லறைக்கு
எதிராக உட்கார்ந்திருந்தார்கள்.

அடுத்தநாளில், அதாவது ஆயத்த 62
நாளின் மறுநாளில், பிரதான ஆசாரியரும்
பரிசேயரும் பிலாத்துவினிடங் கூடிவந்து:
ஐயா, அந்த மோசக்காரன் உயிரோடிருக் 63
கும்போது மூன்றுநாளுக்குப்பின் எழுந்
திருப்பேனென்று சொன்னது எங்களுக்கு
ஞாபகமிருக்கிறது: ஆகையால் அவனு 64
டைய சீஷர் வந்து அவனைத் திருடிக்
கொண்டுபோய் மரித்தோரிலிருந்து எழுந்
தானென்று ஜனங்களுக்குச் சொல்லாதபடிக்
கும் முன்னை மோசத்தைப்பார்க்கிலும் பிந்
தின மோசம் கொடிதாகாதபடிக்கும் நீர்
மூன்றும் நாள்வரைக்கும் கல்லறையைப்
பத்திரப்படுத்தக் கட்டளையிடவேண்டும்
என்றார்கள். அதற்குப் பிலாத்து: உங்க 65
ளுக்குக் காவல் சேவகர் உண்டே, போய்
உங்களுக்குத் தோன்றுகிறபடி பத்திரப்
படுத்திக்கொள்ளுங்கள் என்றான். அவர் 66
கள் போய்க் கல்லுக்கு முத்திரைபோட்டுக்
காவல் வைத்துக் கல்லறையைப் பத்திரப்
படுத்தினார்கள்.

**28** ஓய்வுநாள் முடிந்தது. வாரத்தின் முதலாம்நாள் விடிந்துவருகையில் மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள். இதோ, பெரிய பூமி அதிர்ச்சியுண்டாகும்படி கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கி வந்து வாசலிலிருந்த கல்லை உருட்டித் தள்ளி அதின்மேல் உட்கார்ந்தான். அவன் ரூபம் மின்னல்போலவும் அவன் வஸ்திரம் உறைந்த மழைபோல் வெண்மையாகவும் இருந்தன. அவனைப்பற்றிய பயத்தினால் காவலாளர் நடுநடுங்கிச் செத்தவர்கள்போலானார்கள். தெய்வதூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி: நீங்கள் பயப்படவேண்டாம்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்களென்று அறிவேன். அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; அவரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்; சீக்கிரமாய்ப் போய் அவர் மரித்தோரிலிருந்து எழுந்தாரென்று அவருடைய சீஷருக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்குமுன் கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள்; இதோ, உங்களுக்குச் சொன்னேன் என்றான். அவர்கள் சீக்கிரமாய்க் கல்லறையை விட்டுப் பயத்தோடும் மகா சந்தோஷத்தோடும் அவருடைய சீஷருக்கு அறிவிக்க ஓடினார்கள். அப்பொழுது இயேசுதாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு: வாழ்க என்றார். அவர்கள் கிட்டவந்து அவர் பாதங்களைத் தழுவி அவரைப் பணிந்துகொண்டார்கள். இயேசு அவர்களிடம்: பயப்படாதிருங்கள்; நீங்கள் போய்க் கலிலேயாவுக்குப் போகும்படி என் சகோதரருக்குச் சொல்லுங்கள்; அங்கே என்னைக் காண்பார்கள் என்றார்.

அவர்கள் போகையில் காவலாளரில் சிலர் நகரத்துக்குள் போய் நடந்த யாவற்றையும் பிரதான ஆசாரியருக்கு அறிவித்தார்கள். இவர்கள் மூப்பரோடே கூடி வந்து ஆலோசனை செய்து, சேவகருக்குப் போதுமான பணங்கொடுத்து: நாங்கள் நித்திரை செய்கையில் அவனுடைய சீஷர் இரவில் வந்து அவனைக் களவாய்க்கொண்டு போய்விட்டார்களென்று சொல்லுங்கள்; இது தேசாதிபதியின் காதுக்கெட்டினால் நாங்கள் அவருக்குச் சமாதானஞ்சொல்லி உங்களைத் தப்புவிப்போம் என்றார்கள். அவர்கள் பணத்தை வாங்கிக்கொண்டு தங்களுக்குக் கற்பிக்கப்பட்டபடியே செய்தார்கள். யூதருக்குள்ளே இந்தப்பேச்சு உண்டாகி இந்நாள்வரைக்கும் பிரசித்தமாயிருக்கிறது.

பதினொரு சீஷருமோ இயேசு தங்களுக்குக் குறித்திருந்தபடி கலிலேயாவிலுள்ள மலைக்குப் போனார்கள். அங்கே அவர்கள் அவரைக்கண்டு பணிந்துகொண்டார்கள்; சிலரோ சந்தேகப்பட்டார்கள். அப்பொழுது இயேசு கிட்ட வந்து அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய்ச் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள், பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்திற்குள்ளாக அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுங்கள், நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி உபதேசியுங்கள். இதோ, யுகமுடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்.

THE GOSPEL OF MARK

# மார்க்கு சுவிசேஷம்

1 தெய்வகுமாரனுகிய இயேசுகிறிஸ்துவினு
டைய சுவிசேஷத்தின் ஆரம்பம்.
2 இதோ, நான் என் தூதனை உமக்கு முன்
பாக அனுப்புகிறேன்;
அவன் உமக்கு வழியை ஆயத்தம் பண்
ணுவான்.
கர்த்தரின் வழியை ஆயத்தப்படுத்துங்
கள்,
3 அவர் பாதைகளைச் செவ்வைபண்ணுங்
கள் என
வனந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய
சத்தம்
என்று ஏசாயா தீர்க்கதரிசன ஆகமத்தில்
4 எழுதியிருக்கிறபடி | யோவான்ஸ்நானகன்
வந்து வனந்தரத்தில் பாவமன்னிப்புக்
கென்று மனந்திரும்புதலுக்குரிய ஞானஸ்
நானத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணிக்
5 கொண்டிருந்தான். யூதேயா தேசமுழுதும்
எருசலேம் நகரத்தார் யாவரும் அவனிடம்
போய்த் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு
யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம்
6 பெற்று வந்தார்கள். யோவான் ஒட்டக
மயிர் உடைதரித்துத் தன் அரையில் வார்க்
கச்சையைக் கட்டிக்கொண்டிருந்தான்.
வெட்டுக்கிளியையும் காட்டுத் தேனையும்
7 புசித்து வந்தான். அவன்: என்னிலும் வல்
லவர் எனக்குப்பின் வருகிறார், அவர் பாத
ரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்க்
8 கவும் நான் பாத்திரனல்ல. நான் ஜலத்தி
னால் உங்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்
தேன்; அவரோ பரிசுத்த ஆவியினால் உங்க
ளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பாரென்று
பிரசங்கித்தான்.
9 அந்த நாட்களில் இயேசு கலிலேயாவி
லுள்ள நாசரேத்தூரிலிருந்து வந்து யோர்
தான் நதியில் யோவானால் ஞானஸ்நானம்
10 பெற்றார். அவர் ஜலத்திலிருந்து கரையே
றினவுடனே வானம் பிளவுண்டு ஆவியான
வர் புறாவைப்போல் தம்மேல் இறங்குகிற
11 தைக்கண்டார். நீர் என் நேசகுமாரன்,
உம்மில் [1]பிரியமாயிருக்கிறேன் என்று
வானத்திலிருந்து சத்தம் பிறந்தது.
12 உடனே ஆவியானவர் அவரை வனாந்த
ரத்திற்குப் போகும்படி துரிதப்படுத்தவே,
13 அவர் அங்கே நாற்பதுநாள் தங்கிச் சாத்தா
னால் சோதிக்கப்படுகிறவராய்க் காட்டுமிரு
கங்களின் நடுவிலே சஞ்சரித்துக்கொண்டி
ருந்தார். தெய்வதூதர் அவருக்குப் பணிவி
டைசெய்தார்கள்.
14 யோவான் சிறைக்கு ஒப்புவிக்கப்பட்ட
பின்பு இயேசு கலிலேயாவுக்கு வந்து கடவு
15 ளின் நற்செய்தியைப் பிரசங்கித்து: காலம்
நிறைவேறியிருக்கிறது, கடவுளின் ராஜியம்
சமீபித்திருக்கிறது; மனந்திரும்பி நற்செய்
தியை நம்புங்கள் என்றார்.
16 அவர் கலிலேயாக் கடலோரமாய்ப்
போகையில் சீமோனையும் அவன் சகோத
ரன் அந்திரேயாவையும் கண்டார். இவர்
கள் மீன் பிடிக்கிறவர்கள்; கடலில் வலை
வீசிக்கொண்டிருந்தார்கள். இயேசு அவர்
17 களைப்பார்த்து: என் பின்னே வாருங்கள்,
நீங்கள் மனுஷரைப் பிடிக்கிறவர்களாகும்
படி செய்வேனென்றார். உடனே அவர்கள்
18 வலைகளைவிட்டு அவரைப் பின்பற்றினார்கள்.
19 அவர் சற்று அப்பாற்போகவே செபெதேயு
வின் மகன் யாக்கோபையும் அவன் சகோத
ரன் யோவானையும் கண்டார். அவர்களும்
படவிலே வலைகளைப் பழுதுபார்த்துக்கொண்
டிருந்தார்கள். உடனே அவர்களையும்
20 அழைக்க அவர்கள் தங்கள் தகப்பன் செ
பெதேயுவைக் கூலியாட்களோடு படவிலே
விட்டு அவரைப் பின்பற்றினார்கள்.
21 அப்பால் கப்பர்நகூமுக்குட் போனார்கள்.
உடனே அவர் ஓய்வுநாளில் ஜெபாலயத்தில்
22 பிரவேசித்துப் போதகம் பண்ணினார். அவர்
வேதபாரகரைப்போலப் போதியாமல் அதி
காரமுடையவராய் அவர்களுக்குப் போதித்
துவந்தபடியால் அவருடைய போதகத்தைக்
குறித்து ஜனங்கள் பிரமித்தார்கள். அந்
23 நேரம் அவர்களுடைய ஜெபாலயத்திலே

[1] பிரியங்கொண்டேன் என்றும் திருப்பலாம்.

அசுத்த ஆவிபிடித்த ஒரு மனுஷனிருக்
24 தான். அவன்: நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்குமென்ன? எங்களைக் கெடுக்க வந்தீர்! உம்மை இன்னாரென்று அறிவேன், நீர் கடவுளின் பரிசுத்தரென்று
25 சத்தமிட்டுச் சொன்னான். இயேசு: நீ பேசாதே, இவனை விட்டு வெளியே போ என்று அதை அதட்டவே அந்த அசுத்த ஆவி
26 அவனை அலைக்கழித்து | மிகுந்த சத்தமிட்டு
27 அவனை விட்டுப் போய்விட்டது. எல்லாரும் பிரமித்து: இது என்ன? இது புதிய உபதேசம், அதிகாரமுடையது. இவர் அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், அவைகளும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே என்று தங்களுக்குள் சொல்லிக்கொண்
28 டார்கள். உடனே அவருடைய பிரஸ்தாபம் கலிலேயாவின் சுற்றுப்புறமெங்கும் எட்டினது.

29 அவர்கள் ஜெபாலயத்தைவிட்டு வெளியே வந்து, உடனே யாக்கோபோடும் யோவானோடுங்கூட சீமோன் அந்திரேயா என்பவர்
30 கள் வீட்டுக்குப் போனார்கள். அங்கே சீமோனுடைய மாமி காய்ச்சலாய்க் கிடந்தாள்; உடனே அவளைப்பற்றி அவருக்குச் சொன்
31 னார்கள். அவர் கிட்டப்போய்க் கையைப் பிடித்து அவளைத் தூக்கிவிடவே காய்ச்சல் அவளைவிட்டு நீங்கிற்று; அவளும் அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்.

32 சாயங்காலமாகிச் சூரியன் அஸ்தமிக்கவே சகல பிணியாளிகளையும் பேய் பிடித்தவர்களையும் அவரிடங் கொண்டுவந்தார்
33 கள். ஊர் முழுதும் வீட்டு வாசலுக்குமுன்
34 வந்து கூடிவிட்டது. பலவித வியாதிகளினால் உபத்திரவப்பட்ட அநேகரை அவர் குணமாக்கி அநேகம் பேய்களையுந் துரத்திவிட்டார். அந்தப் பேய்கள் அவரை அறிந்திருந்தபடியால் அவைகள் பேச அவர் இடங்கொடுக்கவில்லை.

35 அதிகாலையில் இருட்டோடே அவர் எழுந்து வனாந்தரமான இடத்திற்குப் போய் அங்
36 கே ஜெபித்துக்கொண்டிருந்தார். சீமோனும் அவனோடே இருந்தவர்களும் அவரைப்
37 பின்தொடர்ந்துபோனார்கள். அவரைக் கண்டபோது: உம்மை எல்லாரும் தேடுகிறார்க
38 ளென்று சொல்ல | அவர்: இவ்விடம் விட்டு அடுத்த ஊர்ப்புறங்களுக்குப் போகலாம், அங்கும் நான் பிரசங்கிக்கவேண்டும்; இதற்காகவே நான் வந்தேனென்று சொன்
39 னார். கலிலேயா நாடெங்கும் போய் அவர்களுடைய ஜெபாலயங்களில் பிரசங்கித்துக் கொண்டும் பேய்களைத் துரத்திக்கொண்டு மிருந்தார்.

குஷ்டரோகி ஒருவன் அவரிடம் வந்து 40
அவர் முன் முழங்கால்படியிட்டு: உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மாலாகும் என்று வேண்டிக்கொண்டான். அவர் 41
மனதுருகித் தமது கையை நீட்டி அவனைத் தொட்டு: எனக்குச் சித்தந்தான், சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் அவனை 42
விட்டு நீங்கிற்று, அவன் சுத்தமானான்.
அவர் அவனுக்குக் கண்டிப்பாய்க் கட்டளை 43
யிட்டு: நீ ஒருவருக்கும் ஒன்றும் சொல்லாதபடி பார்; ஆயினும் நீ போய் ஆசாரியனுக்கு 44
உன்னைக் காண்பித்து நீ சுத்தமானதினிமித்தம் மோசே கட்டளையிட்டவைகளை அவர்களுக்குச் சாட்சியாகச் செலுத்து என்று சொல்லி உடனே அவனைத் துரிதப்படுத்தி அனுப்பினார். அவனோ போய் வெகுவாய்ப் 45
பிரஸ்தாபப்படுத்தி இச்செய்தியைப் பரவச் செய்தான். அதினிமித்தம் அவர் பகிரங்கமாய் எந்த ஊருக்குள்ளும் செல்லக்கூடாதிருந்தது, வெளியே வனாந்தரமான இடங்களில் தங்கிவந்தார். எத்திசையிலுமிருந்து ஜனங்கள் அவரிடம் வந்துகொண்டிருந்தார்கள்.

சில நாட்களுக்குப்பின்பு அவர் மறு **2**
படியும் கப்பர்நகூமுக்கு வந்தார். அவர் 2
வீட்டிலிருக்கிறாரென்று கேள்விப்பட்டு அநேக ஜனங்கள் வந்து கூடினார்கள்; வாசலுக்கு முன்னும் இடமில்லை; அவர்களுக்கு வசனத்தைச் சொல்லிக்கொண்டிருந்தார்.
அப்பொழுது நாலுபேர் ஒரு திமிர்வாதக் 3
காரனை அவரிடம் சுமந்துகொண்டு வந்தார்கள்; ஜனக்கூட்டமிருந்தால் அவனை அவர் 4
முன் கொண்டுபோய் வைக்கமுடியாமல் அவர் இருந்த இடத்தில் மேல்தட்டைப் பிரித்துத் திறப்பாக்கித் திமிர்வாதக்காரன் படுத்திருந்த படுக்கையை இறக்கினார்கள்.
இயேசு அவர்கள் விசுவாசத்தைக் கண்டு 5
திமிர்வாதக்காரனிடம்: மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன என்றார்.
அங்கே சில வேதபாரகர் உட்கார்ந்திருந் 6
தார்கள். இவன் இப்படிப் பேசுகிறதென்ன? 7
தெய்வதூஷணம் சொல்லுகிறானே; கடவுள் ஒருவரேயன்றிப் பாவங்களை மன்னிக்க வல்லவர் யார் என்று தங்கள் இருதயங்களில் சிந்தித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் 8
தங்களுக்குள்ளே இப்படிச் சிந்திக்கிறார்களென்று இயேசு உடனே தமது ஆவியில் அறிந்து: நீங்கள் உங்கள் இருதயங்களில் இப்படிச் சிந்திக்கிறதென்ன? இந்தத் திமிர் 9
வாதக்காரனிடம், உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டனவென்று சொல்வதோ, எழுந்து

உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட
10 வென்று சொல்வதோ, எது எளிது? என்ரு
லும், பூமியிலே பாவங்களே மன்னிக்க மனுஷ
குமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை
நீங்கள் அறியவேண்டுமென்று சொல்லித்
11 திமிர்வாதக்காரனிடம்: நீ எழுந்து உன்
படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்
டுக்குப்போ என்று உனக்குச் சொல்லுகி
12 றேன் என்ரூர். அவனும் எழுந்து உடனே
தன் படுக்கையை எடுத்துக்கொண்டு எல்
லாருக்கு முன்பாக வெளியே போனான்.
இதைக்கண்டு யாவரும் பிரமித்து: நாம்
ஒருக்காலும் இப்படிக் கண்டதில்லையே
யென்று சொல்லிக் கடவுளே மகிமைப்படுத்
தினார்கள்.

13 அவர் மறுபடியும் கடலோரம் போகவே
ஜனங்களெல்லாரும் அவரிடம் வந்தார்கள்;
அவர்களுக்குப் போதித்துக்கொண்டிருந்தார்.
14 அவர் அப்பால் போகையில் அல்பேயுவின்
குமாரன் லேவி ஆயச்சாவடியில் உட்கார்ந்
திருக்கிறதைக் கண்டு: என்னைப் பின்பற்றி
வா என்ரூர்; அவன் எழுந்து அவரைப் பின்
15 பற்றிப்போனான். அவன் வீட்டில் அவர்
பந்தியிருக்கையில் ஆயக்காரர் பாவிகள்
அநேகர் இயேசுவோடும் அவர் சீஷரோடும்
பந்தியிருந்தார்கள். இப்படிப்பட்டவர்களில்
அவரைப் பின்பற்றினவர்கள் அநேகர்.
16 அவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும்
போஜனம்பண்ணுகிறதைப் பரிசேயரைச்
சேர்ந்த வேதபாரகர் கண்டு அவருடைய
சீஷரிடம்: அவர் ஆயக்காரரோடும் பாவிக
ளோடும் போஜனம் பண்ணுகிறதென்ன
17 வென்று சொல்லிக்கொண்டார்கள். இயேசு
அதைக் கேட்டு: பிணியாளிகளுக்கு வைத்தி
யன் வேண்டியதே யல்லாமல் சுகமுள்ள
வர்களுக்கு வேண்டியதில்லை; நீதிமான்களை
யல்ல பாவிகளையே அழைக்கவந்தேனென்று
அவர்களிடம் சொன்னார்.

18 யோவானுடைய சீஷரும் பரிசேயரு
டைய சீஷரும் உபவாசித்து வந்தார்கள்.
அவர்கள் அவரிடம் வந்து: யோவானு
டைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும்
உபவாசிக்கிறார்களே, உம்முடைய சீஷர்
உபவாசியாமலிருக்கிறதென்னவென்று கேட்
19 டார்கள். அதற்கு இயேசு: மணவாளன்
தங்களோடிருக்கையில் மணவாளனுடைய
தோழர் உபவாசிப்பதெப்படி? மணவாளன்
தங்களுடன் இருக்குமளவும் உபவாசிக்க
20 முடியாது. மணவாளன் அவர்களை விட்டு
எடுபடும் நாட்கள் வரும், அந்நாளிலே உப
21 வாசிப்பார்கள். ஒருவனும் கோடித்துண்
டைப் பழைய வஸ்திரத்தோடே இணைக்க
மாட்டான். இணைத்தால் அதினாலே
இணைத்த புதுத்துண்டு பழையதை அதிக
மாய்க் கிழிக்கும், பீறலும் பெரிதாகும். ஒரு
வனும் புதுத் திராட்சரசத்தைப் பழந்துருத் 22
திகளில் வார்த்து வைக்கமாட்டான்; வார்த்து
வைத்தால் இரசம் துருத்திகளைக் கிழித்
துப்போடும், இரசமும் துருத்திகளும் கெட்
டுப்போம்; புது இரசத்தைப் புதுத் துருத்தி
களில் வார்த்து வைப்பார்கள் என்ரூர்.

பின்பு அவர் ஓய்வுநாளில் பயிர்வழியே 23
போனபோது அவருடைய சீஷர் கதிர்களைக்
கொய்துகொண்டு நடந்துபோகத் தொடங்கி
னார்கள். பரிசேயர் அவரைப்பார்த்து: 24
இதோ, செய்யத்தகாததை இவர்கள் ஓய்வு
நாளில் செய்கிறதென்னவென்று சொல்ல |
அவர்: தாவீதுக்குக் குறையுண்டானபோது 25
அவனும் அவனோடிருந்தவர்களும் பசியா
யிருக்கையில் அவன் செய்ததை நீங்கள்
ஒருக்காலும் வாசிக்கவில்லையா? அபியத்தார் 26
என்னும் பிரதான ஆசாரியன் காலத்தில்
கடவுளுடைய வீட்டிற்குட்சென்று ஆசாரி
யர் தவிர வேறொருவரும் புசிக்கக்கூடாத
தெய்வசமுகத்து அப்பங்களைத் தானும் புசித்
துத் தன்னோடிருந்தவர்களுக்குங் கொடுத்
தானே என்று சொல்லிப் | பின்னும், ஓய்வு 27
நாள் மனுஷனுக்காகப் படைக்கப்பட்டது,
மனுஷன் ஓய்வுநாளுக்காகப் படைக்கப்
படவில்லை; ஆகவே மனுஷகுமாரன் ஓய்வு 28
நாளுக்கும் ஆண்டவர் என்ரூர்.

திரும்பவும் அவர் ஜெபாலயத்துக்குட் 3
போனார். அங்கே சூம்பின கையையுடைய
மனுஷன் ஒருவனிருந்தான். அவர்மேல் 2
குற்றஞ்சாட்டும் நோக்கமுடையவர்களாய்,
ஓய்வுநாளில் இவனைக் குணமாக்குவாரோ
என்று அவரைக் கவனித்துப் பார்த்துக்
கொண்டிருந்தார்கள். அவர் சூம்பின 3
கையனைப் பார்த்து: எழுந்து நடுவே வா
என்று சொல்லி | அவர்களைப் பார்த்து: 4
ஓய்வுநாளில் நன்மை செய்வதோ தீமை
செய்வதோ, ஜீவனைக் காப்பதோ கொல்
வதோ, எது நியாயம் என்ரூர்; அவர்களோ
பேசாமலிருந்தார்கள். அவர்களுடைய 5
இருதயகடினத்தினிமித்தம் அவர் விசனப்
பட்டுக் கோபத்துடனே சுற்றிப் பார்த்து,
அந்த மனுஷனை நோக்கி: உன் கையை
நீட்டு என்ரூர், அவனும் நீட்டினான்;
அவன் கை சொஸ்தமாயிற்று. பரிசேயர் 6
வெளியேபோய், அவரை எப்படிக் கொலை
செய்யலாமென அவருக்கு விரோதமாய்
உடனே ஏரோதியரோடு ஆலோசனை செய்
தார்கள்.

7 இயேசுவோ விலகித் தமது சிஷ்யரோடு
கடலோரத்துக்குப் போனார். கலிலேயா
விலிருந்து வந்திருந்த திரள் ஜனங்கள் அவ
8 ருக்குப் பின்சென்றார்கள். யூதேயாவிலும்
எருசலேமிலும் இதுமேயாவிலும் யோர்தா
னுக்கு அப்புறத்திலும் தீருசீதோன் சுற்றுப்
புறங்களிலுமிருந்து திரள் ஜனங்கள் அவர்
செய்தவைகளையெல்லாம் கேள்விப்பட்டு
9 அவரிடம் வந்தார்கள். அவர் அநேகரைச்
சொஸ்தமாக்கினார்; நோயாளிகளெல்லாரும்
அவரைத் தொடவேண்டுமென்று அவர்மேல்
10 விழுந்து நெருக்கினார்கள். கூட்டம் மிகுதியா
யிருக்கவே அவர்கள் தம்மை நெருக்கி
விடாதபடி தமக்கு ஒரு படவை ஆயத்தம்
11 பண்ணச் சீஷரிடம் சொன்னார். அசுத்த
ஆவிகளும் அவரைக் கண்டபோதெல்லாம்
அவர் காலில் விழுந்து: நீர் தெய்வகுமார
12 னென்று சத்தமிட்டன. அவைகள் தம்
மைப் பிரசித்தம்பண்ணுதபடி வெகு கண்
டிப்பாய்க் கட்டளையிட்டார்.
13 பின்பு அவர் மலையின்மேல் ஏறித் தமக்
குச் சித்தமானவர்களைத் தம்மிடம் வர
வழைத்தார். அவர்கள் அவரிடத்திற்கு
14 வந்தார்கள். அப்பொழுது அவர் பன்னி
ரண்டு பேரை நியமித்து, அவர்கள் தம்
மோடுகூட இருக்கவும் பிரசங்கம் பண்ணும்
15 படி தாம் அவர்களை அனுப்பவும் | பேய்
களைத் துரத்தும் அதிகாரமுடையவர்களாய்
16 அவர்கள் இருக்கவும் ஏற்படுத்தினார். அவர்
கள்: சீமோன், இவனுக்குப் பேதுரு என்
17 கிற பெயரிட்டார்; செபெதேயுவின் குமா
ரன் யாக்கோபு, யாக்கோபின் சகோதரன்
யோவான், இவ்விருவருக்கும் இடிமுழக்க
மக்களென அர்த்தங்கொள்ளும் போவனேர்
18 கெஸ் என்று பெயரிட்டார்; அந்திரேயா,
பிலிப்பு, பர்த்தொலொமேயு, மத்தேயு,
தோமா, அல்பேயுவின் குமாரன் யாக்கோபு,
19 thaddaeus, காநானியனாகிய சீமோன், | அவ
ரைக் காட்டிக்கொடுத்த யூதஸ்காரியோத்து
என்பவர்களே.
20 பின்பு வீட்டுக்கு வந்தார்; அவர்கள் சாப்
பிடுவதற்கும் சமயமில்லாதபடி அநேக
ஜனங்கள் மறுபடியும் வந்து கூடினார்கள்.
21 அதைக் கேள்விப்பட்ட அவருடைய வீட்
டார் அவர் மதிமயங்கியிருக்கிறாரென்று
சொல்லி அவரைப் பிடித்துக்கொள்ள வந்
22 தார்கள். எருசலேமிலிருந்து வந்த வேத
பாரகர்: இவன் பெயல்செபூல் பிடித்த
வன், பேய்களின் தலைவனாலே பேய்களை
23 ஓட்டுகிறான் என்றார்கள். அவர்களைத் தம்
மிடம் அழைத்து உவமைகள்மூலமாய்
அவர்களோடு பேசினார்: சாத்தானைச் சாத்
தான் துரத்துவதெப்படி? ஒரு ராஜ்யம் தனக் 24
குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருந்தால்
அந்த ராஜ்யம் நிலைநிற்கமுடியாதே. ஒரு 25
வீடு தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்
திருந்தால் அந்த வீடு நிலைநிற்கமுடியாதே.
சாத்தான் தனக்குத்தானே விரோதமாய் 26
எழும்பிப் பிரிந்திருந்தால் அவன் நிலைநிற்க
மாட்டான், அவனுக்கு முடிவு வந்தா
யிற்று. பலவானை முந்திக் கட்டினாலொழிய 27
ஒருவனும் பலவானுடைய வீட்டுக்குள்
புகுந்து அவன் உடைமைகளைக் கொள்ளை
யிடமுடியாது; கட்டினானேயாகில் அவன்
வீட்டைக் கொள்ளையடித்துவிடுவான். மெய் 28
யாகவே நான் உங்களுக்குச் சொல்லு
கிறேன்: மனுப்புத்திரர் செய்யும் எல்லாப்
பாவங்களும் அவர்கள் பேசும் எத்தத்
தூஷணமும் அவர்களுக்கு மன்னிக்கப்
படும்; ஒருவன் பரிசுத்த ஆவிக்கு விரோத 29
மாகத் தூஷணம் பேசுவானாகில் அவன்
என்றென்றைக்கும் மன்னிப்படை
யாமல் என்றும் தொலையாப் பாவத்திற்கு
ஆளாவான் என்றார். அசுத்த ஆவி பிடித் 30
திருக்கிறவன் என்று அவர்கள் சொன்
னபடியினால் அவர் இப்படிச் சொன்
னார்.
அப்பொழுது அவர் தாயாரும் சகோதர 31
ரும் வந்து வெளியே நின்று அவரை
அழைக்கும்படி அவரிடம் ஆள் அனுப்பி
னார்கள். அவரைச் சுற்றிலும் ஜனங்கள் 32
உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள்: இதோ, 33
உமது தாயாரும் உமது சகோதரரும் உமது
சகோதரிகளும் வெளியே நின்று உம்மைத்
தேடுகிறார்களென்று சொல்ல அவர்: என்
தாயாரும் என் சகோதரரும் யார் என்று
சொல்லித் | தம்மைச் சூழ உட்கார்ந்திருந்த 34
வர்களைச் சுற்றிப்பார்த்து: இதோ, என்
தாயும் என் சகோதரரும் இவர்களே; கடவு 35
ளின் சித்தப்படி செய்கிறவன் எவனோ
அவனே என் சகோதரனும் என் சகோதரி
யும் என் தாயுமாம் என்றார்.

4 அவர் மறுபடியும் கடலோரத்தில் போத
கம்பண்ணத் தொடங்கினார். மிகுந்த ஜனத்
திரள் அவரிடங் கூடிவந்தபடியால் அவர்
கடலிலே நின்ற ஒரு படவிலேறி உட்கார்ந்
தார்; ஜனங்களெல்லாரும் கரையில் நின்றார் 2
கள். அவர் பல காரியங்களை உவமை
களாக அவர்களுக்குப் போதித்தார். போதிக் 3
கிறபொழுது: கேளுங்கள், இதோ, விதைக்
கிறவன் ஒருவன் விதைக்கப் போனான்.
அவன் விதைக்கையில் சில விதைகள் 4
பாதையில் விழுந்தன; பறவைகள் வந்து

5 அவற்றைப் பட்சித்துப்போட்டன. சில
விதைகள் அதிக மண்ணில்லாத கற்பாறை
நிலத்தில் விழுந்தன; ஆழமான மண்ணில்
6 லாதபடியால் சீக்கிரம் முளைத்தன; வெயில்
ஏறினபோதோ அவை தீய்ந்துபோய் வேரில்
7 லாமையால் உலர்ந்துபோயின. சில விதை
கள் முள்ளுக்குள் விழுந்தன; முள் வளர்ந்து
அவற்றை நெருக்கிப்போட்டது; அவை
8 பலன் கொடுக்கவில்லை. மற்றும் விதை
களோ நல்ல நிலத்தில் விழுந்தன; அவை
முளைத்து வளர்ந்து பலன் தந்தன; முப்ப
9 தும் அறுபதும் நூறுமாக விளைந்தன. கேட்
கக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று
அவர்களுக்குச் சொன்னார்.

10 அவர் தனித்திருக்கும்போது அவரைச்
சூழ்ந்திருந்தவர்கள் பன்னிருவரோடுங்கூட
உவமைகளைப்பற்றி அவரிடங் கேட்க |
11 அவர்: கடவுள் ராஜ்யத்தின் இரகசியம் உங்
களுக்கு அருளப்பட்டது; வெளியே இருக்
கிறவர்களோ,

12 ஒருக்காலும் மனந்திரும்பி மன்னிப்புப்
பெறுதிருப்பதற்கேதுவாய்க்
கண்ணாரக் கண்டும் அறியாமலும் காதா
ரக்கேட்டும் உணராமலுமிருக்கும்படி

எல்லாவற்றையும் உவமைகளாகப் போதிக்
13 கப்பெறுகிறார்களென்று சொன்னார். பின்
னும் அவர்களிடம்: இந்த உவமையை நீங்
கள் அறியவில்லையா? அறியாவிட்டால்
மற்ற உவமைகளெல்லாம் எப்படி அறி
14 வீர்கள்? விதைக்கிறவன் வசனத்தை
15 விதைக்கிறான். பாதையில் வசனம் விதைக்
கப்பெறுகிறவர்கள் இவர்களே; வசனத்
தைக் கேட்டவுடனே சாத்தான் வந்து
அவர்களுக்குள் விதைக்கப்பட்ட வச
16 னத்தை எடுத்துவிடுகிறான். கற்பாறை
இடங்களில் விதைக்கப்பெறுகிறவர்களோ
வசனத்தைக் கேட்கும்போதெல்லாம் அதை
உடனே சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்ளு
17 கிறார்கள். ஆகிலும் தங்களில் வேர் இல்
லாதவர்களாய்க் கொஞ்சகால மாத்திரம்
நிலைத்திருப்பார்கள், வசனத்தினிமித்தம்
உபத்திரவமும் இம்சையும் உண்டான
18 வுடனே இடறிவிழுகிறார்கள். முள்ளுள்ள
இடங்களில் விதைக்கப் பெறுகிறவர்கள்
19 வசனத்தைக் கேட்கிறார்கள்; ஆயினும் பிர
பஞ்சக் கவலைகளும் ஐசுவரியத்தின் வஞ்சக
மும் மற்றவைகளைப்பற்றிய இச்சைகளும்
உட்புகுந்து வசனத்தை நெரிக்கிப்போடு
கின்றன; ஆதலால் அது பலனற்றுப்
20 போகும். நல்ல நிலத்தில் விதைக்கப்பெற்ற
வர்களோ வசனத்தைக் கேட்டு ஏற்றுக்
கொண்டு முப்பதும் அறுபதும் நூறு
மாகப் பலன் தருகிறார்களென்று சொன்
னார்.

21 பின்னும் அவர் அவர்களிடம்: விளக்
கைக் கொண்டுவருவது எதற்கு? மரக்கா
லின் கீழாகிலும் கட்டிலின் கீழாகிலும்
வைப்பதற்கா? தண்டின்மேல் வைப்பதற்
22 கல்லவா? பகிரங்கமாவதற்கன்றி அந்தரங்க
மானது ஒன்றுமில்லை, வெளிப்படுவதற்கல்
23 லாத மறைபொருளுமில்லை. கேட்க ஒரு
வனுக்குக் காதிருந்தால் அவன் கேட்கக்கட
வன் என்றார். 24 பின்னும் அவர் அவர்களி
டம்: நீங்கள் எதைக் கேட்கிறீர்கள் என்ப
தைப்பற்றி எச்சரிக்கையாயிருங்கள். நீங்
கள் அளக்கிற அளவின்படியே உங்களுக்கு
அளக்கப்படும், அதிகமுங் கொடுக்கப்படும்,
25 உள்ளவனெவனே அவனுக்குக் கொடுக்கப்
படும், இல்லாதவனெவனே அவனிடத்தில்
உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்என்றார்.

26 பின்னும் அவர்: கடவுளின் ராஜ்யம், ஒரு
மனுஷன் நிலத்தில் விதையை விதைத்து |
27 இரவும் பகலும் தூங்கியும் விழித்துமிருக்க
அவனுக்குத் தெரியாத விதமாய் விதை
28 முளைத்துப் பயிராகிறதுபோலாகும். நிலம்
முன்பு முளையையும் பின்பு கதிரையும் கதி
ரிலே நிறைந்த மணியையும் பலனுகத் தா
னுய்க் கொடுக்கிறது. 29 பயிர் விளைந்திருக்கும்
போதோ அறுப்பு வந்துவிட்டதென்று
அறுக்கிறதற்கு ஆள் விடுகிறான் என்றார்.

30 பின்னும்: கடவுளின் ராஜ்யத்தை எதற்கு
ஒப்பிடுவோம்? அல்லது எந்த உவமையைச்
சொல்லி அதைக் காட்டுவோம்? 31 அது ஒரு
கடுகு விதையைப்போலாகும்; இது பூமி
யில் விதைக்கப்படும்போது பூமியிலுள்ள
32 சகல விதைகளிலும் சிறியதே; விதைக்கப்
பட்டபின்போ வளர்ந்து சகல செடிகளிலும்
பெரிதாகி ஆகாயத்துப் பறவைகள் அதின்
நிழலின்கீழ் வந்தடையத்தக்க பெரிய கிளை
களை விடுமென்று சொன்னார்.

33 அவர்கள் கேட்டறியும் பிராணிக்குத்
தக்கதாக அவர் இப்படிப்பட்ட அநேக
உவமைகளினாலே அவர்களுக்கு வசனத்
34 தைப் போதித்துவந்தார். உவமையினாலே
யன்றி அவர்களிடம் பேசவில்லை; தமது
சீஷருக்கோ எல்லாவற்றையும் தனியே
விளக்கிக் காட்டிவந்தார்.

35 அதேநாளில் சாயங்காலமாகவே அவர்
அவர்களைப்பார்த்து: அக்கரைக்குப் போ
வோமென்று சொல்ல | 36 அவர்கள் ஜனங்
களையனுப்பிவிட்டு அவர் படவிலிருந்தபடி
யே அவரைக்கொண்டுபோனார்கள். வேறே
37 படவுகளும் அவரோடு போயின. அப்
பொழுது பலத்த சுழல்காற்றுண்டானது.

அலைகள் படவின்மேல் மோதவே படவு
38 நிரம்ப ஆம்பித்தது. அவரோ படவின்
அமரத்தில் தலையணையை வைத்து நித்திரை
செய்துகொண்டிருந்தார். அவர்கள் அவரை
எழுப்பி: போதகரே, நாங்கள் மடிந்துபோ
கிறது உமக்குக் கவையில்லையா என்ஞர்
39 கள். அவர் எழுந்து காற்றை அதட்டி
னார்; கடலைப் பார்த்து: இரையாதே, அமை
தலாயிரு என்ஞர். அப்பொழுது காற்று
நின்றுவிட்டது; மிகுந்த அமைதல் உண்
40 டாயிற்று. அவரோ அவர்களிடம்: இப்
படிப் பயப்படுவானேன்? உங்களுக்கு நம்
பிக்கை இல்லாமற் போகிறதெப்படி என்
41 ஞர். அவர்கள் மிகவும் பயந்து: இவர்
யாரோ! காற்றுங் கடலும் இவருக்குக்
கீழ்ப்படிகின்றனவே என்று ஒருவரோடொ
ருவர் சொல்லிக்கொண்டார்கள்.

**5** அவர்கள் கடலுக்கு அக்கரையில் கெர
சேனர் நாட்டில் வந்து சேர்ந்தார்கள்.
2 அவர் படவிலிருந்து இறங்கினவுடனே
அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் கல்ல
றைகளிலிருந்து அவருக்கு எதிராக வந்தான்.
3 கல்லறைகளே அவன் தங்குமிடம். சங்
கிலிகளினலுங்கூட ஒருவனும் அவனைக்
4 கட்டிவைக்க முடியாமலிருந்தது. அவன்
பலமுறை விலங்குகளினலும் சங்கிலிகளி
னலும் கட்டப்பட்டிருந்தும் சங்கிலிகளை
முறித்து விலங்குகளை ஒடித்துப் போடுவான்.
அவனையடக்க ஒருவனலும் முடியவில்லை.
5 அவன் இராப்பகல் எப்பொழுதும் கல்ல
றைகளிலும் மலைகளிலும் அலறிக் கற்களால்
தன்னைக் காயப்படுத்திக்கொண்டிருந்தான்.
6 அவன் தூரத்திலிருந்து இயேசுவைக் கண்டு
ஓடிவந்து அவரைப் பணிந்துகொண்டு
7 இயேசுவே, உன்னதமான கடவுளின் குமா
ரனே, எனக்கும் உமக்கும் என்ன? கட
வுள் ஆணை, என்னை வேதனைப்படுத்த வேண்
டாமென்று மிகுந்த சத்தமிட்டு அலறிச்
8 சொன்னன். அவர் அவனைப்பார்த்து:
அசுத்த ஆவியே, இந்த மனுஷனை விட்டு
வெளியே வா என்று சொன்னதினலே இப்
9 படிச் சொன்னன். அவர்: உன் பேர்
என்னவென்று அவனைக் கேட்க அவன்:
நாங்கள் அநேகராதலால் என் பேர் [1]லேகி
10 யோன் என்று சொல்லித் | தங்களை அந்த
நாட்டிலிருந்து அனுப்பிவிடாதபடி அவ
11 ரை மிகவும் வேண்டிக்கொண்டான். அவ்
விடத்தில் மலைச்சரிவில் பெரிய பன்றிக்
12 கூட்டம் மேய்ந்துகொண்டிருந்தது. அந்தப்
பேய்கள்: பன்றிகளுக்குள் போகும்படி
எங்களை அவைகளிடம் அனுப்புமென்று
அவரிடம் வேண்டிக்கொள்ள, இயேசு 13
அவைகளுக்கு உத்தரவு கொடுத்தார். உட
னே அசுத்த ஆவிகள் வெளிப்பட்டுப் பன்
றிகளுக்குள் புகுந்தன; புகவே பன்றிக்
கூட்டம் மேட்டிலிருந்து கடலில் பாய்ந்து
அமிழ்ந்து மாண்டது. பன்றிகள் ஏறக்கு
றைய இரண்டாயிரம். அவைகளை மேய்த் 14
துக்கொண்டிருந்தவர்கள் ஓட்டம்பிடித்து
இதை ஊரிலும் சுற்றுப்புறங்களிலும் அறி
வித்தார்கள். அறிவிக்கவே, சம்பவித்தது
இன்னதென்று பார்க்கும்படி ஜனங்கள் வந்
தார்கள். அவர்கள் இயேசுவினிடம் வந்து 15
பேய் பிடித்திருந்தவன், லேகியோன் பிடித்
திருந்த அவனே, வஸ்திரந் தரித்துப் புத்தி
தெளிந்து உட்கார்ந்திருக்கிறதைக் கண்டு
திகிலடைந்தார்கள். பேய் பிடித்திருந்தவ 16
னுக்கு நேரிட்டதையும் பன்றிகள் சங்கதி
யையும் பார்த்துக்கொண்டிருந்தவர்கள்
அவர்களுக்கு விவரித்துச் சொன்னர்கள்.
அதைக் கேட்கவே அவர் தங்கள் திசையை 17
விட்டுப்போகும்படி அவரை வேண்டிக்
கொள்ளத் தொடங்கினர்கள். அப்படி 18
யே அவர் படவில் ஏறும்பொழுது பேய்
பிடித்திருந்தவன் அவரோடே இருக்கும்படி
உத்தரவு கேட்க | இயேசு அவனுக்கு உத்த 19
ரவு கொடாமல்: நீ உன் வீட்டிற்குப்போய்
ஆண்டவர் உனக்கு எவ்வளவு பெரிய காரி
யங்களைச் செய்து இரக்கம் பாராட்டினர்
என்று உன் பந்துக்களுக்கு அறிவியென்று
சொன்னர். அப்படியே அவன் போய் 20
இயேசு தனக்கு எவ்வளவு பெரிய காரியங்
களைச் செய்தாரென்று தெக்கப்போலி நாடு
முழுவதும் பிரசித்தம்பண்ணத் தொடங்கி
னன்; எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்.

இயேசு படவிலேறி மறுபடியும் இக்க 21
ரைக்கு வந்தபோது திரளான ஜனங்கள்
அவரிடம் வந்து கூடினர்கள். அவர் கட
லோரத்திலிருந்தார். அப்பொழுது ஜெபா 22
லயத் தலைவரில் ஒருவன், யவீரு என்பவன்,
அங்கு வந்து அவரைக் காணவே அவர்
பாதத்தில் விழுந்து: என் மகள் மரண 23
அவஸ்தையில் இருக்கிருள்; அவள் குண
மாகிப் பிழைக்கும்படி நீர் வந்து அவள்
மேல் உமது கைகளை வைத்தருளுமென்று
அவரை மிகவும் வேண்டிக்கொண்டான்.
அவர் அவனுடனேகூடப் போனர். திரள் 24
ஜனங்கள் அவருக்குப்பின் சென்று அவரை
நெருக்கினர்கள்.

[1] மத். 26: 53 பார்க்க.

25 பன்னிரண்டு வருஷம் பெரும்பாடுள்ள
26 ஒரு ஸ்திரீ இருந்தாள். இவள் அநேக
வைத்தியர்களால் பல பாடுபட்டவள்; தனக்
குண்டானவைகளெ யெல்லாம் செலவழித்
தும் சற்குறுகிலும் குணமடையவில்லை; வியாதி
27 அதிகப்பட்டது. இவள் இயேசுவைப்
பற்றிக் கேள்விப்பட்டு: நான் அவருடைய
வஸ்திரங்களையாகிலும் தொட்டால் குண
மடைவேனென்று சொல்லிக் கொண்டு |
28 ஜனக்கூட்டத்தில் அவருக்குப் பின்னாக
வந்து அவர் வஸ்திரத்தைத் தொட்டாள்.
29 உடனே அவளுடைய உதிரப்பெருக்கு
நின்றுபோயிற்று; தன் பாடு நீங்கிச் சுக
மடைந்ததை அவள் சரீரத்தில் உணர்ந்தாள்.
30 உடனே இயேசு தம்மிலிருந்து வல்லமை
புறப்பட்டதைத் தமக்குள் அறிந்து ஜனக்
கூட்டத்தில் திரும்பி: என் வஸ்திரங்களைத்
31 தொட்டது யாரென்று கேட்டார். அதைக்
கேட்ட அவருடைய சீஷர்: திரள் ஜனங்
கள் உம்மை நெருக்கிக்கொண்டிருக்கிற
தை நீர் காண்கிறீர்; அப்படியிருக்க என்
னைத் தொட்டது யாரென்று கேட்கிறீரே
32 என்றார்கள். இதைச் செய்தவளைக் காணும்
படி அவர் சுற்றிலும் பார்த்துக்கொண்டி
33 ருந்தார். அந்த ஸ்திரீயோ தனக்குச் சம்ப
வித்ததை யறிந்து பயந்து நடுங்கி அவர்
முன்பாக வந்து விழுந்து உண்மையை
34 யெல்லாம் அவருக்குச் சொன்னாள். அவர்
அவளைப்பார்த்து: மகளே, உன் விசுவாசம்
உன்னைக் குணமாக்கினது, சமாதானத்
தோடே போய் உன் பாடு நீங்கிச் சுகமா
யிரு என்றார்.
35 அவர் இன்னும் பேசிக்கொண்டிருக்கை
யில் ஜெபாலயத்தலைவன் வீட்டிலிருந்து
சிலர் வந்து: உமது மகள் மரித்துப்போ
னாள், இனிப் போதகரைத் தொந்தரவு
36 செய்வானேன் என்றார்கள். அவர்கள்
சொன்ன வார்த்தையைக் கேளாதவர்போல்
இயேசு ஜெபாலயத்தலைவனைப் பார்த்து:
பயப்படாதே, நம்பிக்கையுள்ளவனாகவே
37 இரு என்று சொன்னார். பின்பு பேதுரு,
யாக்கோபு, யாக்கோபின் சகோதரன் யோ
வான் இவர்கள் தவிர வேறொருவரும் தம்
38 மோடி வருகிறதற்கு இடங்கொடாமல், ஜெ
பாலயத்தலைவன் வீட்டுக்கு வந்து சந்தடி
யையும் மிகவும் அழுது புலம்புகிறவர்களை
39 யும் கண்டு | உள்ளே சென்று: நீங்கள் சந்
தடிபண்ணி அழுகிறதென்ன? பிள்ளை
மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறா
40 னென்று சொன்னார்; சொல்லவே அவர்கள்
அவரைப்பார்த்து நகைத்தார்கள். எல்லா
ரையும் அவர் வெளியே தூத்திவிட்டு பிள்
ளையின் தகப்பனையும் தாயையும் தம்மோடு
வந்தவர்களையும் அழைத்துக்கொண்டு
பிள்ளையிருந்த அறைக்குட்சென்று | பிள்ளை 41
யின் கையைப் பிடித்து: தலித்தாகூம் என்
றார்; அதற்குச் சிறு பெண்ணே, எழுந்திரு
என்று உனக்குச் சொல்லுகிறேனென்று
அர்த்தமாம். உடனே சிறு பெண் எழுந்து 42
நடந்தாள்; அவள் பன்னிரண்டு வயதுள்ள
வள். அவர்கள் மிகுந்த ஆச்சரியப்பட்டுப் 43
பிரமித்தார்கள். அதை ஒருவரும் அறிய
வேண்டாமென்று அவர்களுக்குக் கண்டிப்
பாய்க் கட்டளையிட்டார். அவளுக்கு ஆகா
ரங்கொடுக்கும்படி சொன்னார்.

அவர் அவ்விடம்விட்டுத் தம் சொந்த 6
ஊருக்கு வந்தார்; அவர் சீஷரும் அவ
ரைத் தொடர்ந்துவந்தார்கள். ஓய்வுநாள் 2
வந்தபோது ஜெபாலயத்தில் உபதேசம்
பண்ணத்தொடங்கினார். அநேகர் கேட்
டுப் பிரமிப்படைந்து: இவைகள் இவ
னுக்கு எங்கேயிருந்து வந்தன? இவனுக்
குக் கொடுத்திருக்கும் ஞானம் எப்படிப்
பட்டது? இவன் கைகளால் இவ்விதை வல்
லசெயல்கள் நடந்தேறிவருகின்றனவே
இதென்ன? இவன் தச்சனல்லவோ? மரி 3
யாளுடைய மகனல்லவோ? யாக்கோபு
யோசே யூதா சீமோன் என்பவர்களுக்குச்
சகோதரன் அல்லவோ? இவன் சகோதரி
களும் இங்கே நம்மிடம் இருக்கிறார்கள்
அல்லவோ என்று சொல்லி அவரைக்
குறித்து இடறல்பட்டார்கள். அதையறிந்த 4
இயேசு: தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும்
தன் சுற்றத்தாரிலும் தன் வீட்டிலுமேயன்றி
வேறெங்கும் கனமடையாதிருப்பதில்லை
யென்றார். அங்கே அவர் சில நோயாளி 5
கள்மேல் கைகளை வைத்து அவர்களைக்
குணமாக்கினதேயன்றி வேறொரு வல்ல
செயலும் செய்ய முடியாமற்போயிற்று.
அவர்களுடைய அவநம்பிக்கையைப்பற்றி 6
ஆச்சரியப்பட்டார்.

அவர் கிராமங்களிலே சுற்றித்திரிந்து 7
உபதேசஞ் செய்துகொண்டு வந்தார். பன்
னிருவரையும் தம்மிடம் அழைத்து இரு
வர் இருவராய் அவர்களை அனுப்பத்தொ
டங்கி அசுத்த ஆவிகள்மீது அவர்களுக்கு
அதிகாரங் கொடுத்தார். வழிக்குத் தடிதவிர 8
ஆகாரம் பை கச்சையில் காசு இவைகளைக்
கொண்டுபோக வேண்டாமெனவும் | பாத 9
ரட்சைகளைப் போட்டுக்கொண்டு போவ
தன்றி இரண்டு அங்கிகளைத் தரித்துக்
கொண்டு போகவேண்டாமெனவும் அவர்
களுக்குக் கட்டளையிட்டார். பின்பு அவர் 10

கனைப் பார்த்து: நீங்கள் எங்கேயாகிலும் ஒரு வீட்டுக்குப் போனால் அவ்விடத்தை விட்டுப் போகுமளவும் அங்கேயே தங்கி
11 யிருங்கள். எந்த ஊரிலாகிலும் உங்களை ஏற்றுக்கொள்ளாமலும் நீங்கள் சொல்வதைக் கேளாமலும் போனால் நீங்கள் அவ்விடம் விட்டுப் போகும்போது அவர்களுக்குச் சாட்சியாக உங்கள் கால்களில் படிந்த
12 தூசியை உதறிப்போடுங்கள் என்றார். அப்படியே அவர்கள் போய் மனந்திரும்ப
13 வேண்டுமென்று பிரசங்கித்துப் | பல பேய்களைத் துரத்திப் பல நோயாளிகளை எண்ணெய் பூசிக் குணமாக்கினார்கள்.

14 அவருடைய பேர் பிரசித்தமானது; ஏரோது ராஜாவும் அவரைப்பற்றிக் கேள்விப்பட்டான். யோவான்ஸ்நானகன் மரித்தோரிலிருந்து எழுந்துவிட்டான்; ஆகையால் இவனிடம் இந்த வல்ல செயல்கள்
15 விளங்குகின்றன என்றார்கள். சிலரோ அவன எலியா என்றார்கள். வேறு சிலர்: அவன் தீர்க்கதரிசிகளில் ஒருவனைப்போன்ற ஒரு தீர்க்கதரிசி என்று சொன்னார்கள்.
16 ஏரோது அதைக் கேட்டபொழுது: அவன் நான் சிரச்சேதம்பண்ணின யோவான்தான்;
17 அவன் எழுந்தான் என்றான். ஏரோது தனக்கு மணவியாக்கிக்கொண்ட தன் சகோதரனுடைய பிலிப்பின் மனைவி ஏரோதியாளினிமித்தம் சேவகரை யனுப்பி யோவானைப் பிடித்துக் கட்டிக் காவலில் வைத்திருந்
18 தான். நீர் உமது சகோதரன் மனைவியை வைத்துக்கொள்வது நியாயமல்லவென்று யோவான் ஏரோதுக்குச் சொல்லிக்கொண்
19 டிருந்தான். ஏரோதியாளும் அவன்மேல் குரோதங்கொண்டு அவனைக்கொன்றுபோட
20 விரும்பினாள். ஏரோதோ, யோவான் நீதியும் பரிசுத்தமுமுள்ளவனென்று அறிந்து அவனுக்குப் பயந்து அவனைப் பாதுகாத்துவந்தான். யோவான் பேசுவதைக் கேட்டு மிகவும் மனங்கலங்குவான்; எனினும் விருப்பத்தோடே கேட்டுவந்தான். ஆதலால்
அவள் விரும்பினபடி செய்யமுடியாமற்
21 போயிற்று. ஆயினும், ஏரோது தன் ஜென்ம நாளிலே தன் பிரபுக்களுக்கும் சேனாபதிகளுக்கும் கலிலேயாநாட்டுப் பிரதானிகளுக்கும் ஒரு விருந்துபண்ணினபோது
22 சமயம் வாய்த்தது. எப்படியெனில், ஏரோதியாளின் குமாரத்தி உள்ளே வந்து நடனஞ் செய்தாள்; அது ஏரோதுக்கும் அவனோடு கூடப் பந்தியிருந்தவர்களுக்கும் பிரியமாயிருந்தது. அப்பொழுது ராஜா அந்தச் சிறு பெண்ணினிடம்: நீ விரும்பியது எதுவானாலும் அதை என்னிடம் கேள், உனக்
குத் தருவேனென்று சொன்னதுமல்லா
மல் | நீ என்னிடத்தில் எதைக் கேட்டா 23
லும், அது என் ராஜியத்தில் பாதியானாலும், அதை உனக்குத் தருவேனென்று அவளுக்கு ஆணையும் இட்டான். அவள் 24
வெளியே போய், நான் என்ன கேட்க வேண்டுமென்று தன் தாயினிடங் கேட்டாள். அவள்: யோவான்ஸ்நானகனுடைய தலையைக் கேள் என்றாள். அவள் உடனே 25
திரும்பி ராஜாவினிடம் விரைந்துவந்து: நீர் இந்தக்ஷணமே ஒரு தட்டில் யோவான்ஸ்நானகனுடைய தலையை எனக்குத் தர வேண்டுமென்று கேட்டாள். அதைக் 26
கேட்கவே ராஜா மிகவும் மனவருத்தப்பட்டான். ஆயினும் ஆணைகளினிமித்தமும் பந்தியிருந்தவர்களினிமித்தமும் அவளுக்கு அதை மறுக்க மனதில்லாமல் | அரசன் 27
உடனே சேவகனை யனுப்பி அவனுடைய தலையைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். அப்படியே அவன் போய்க் காவற் 28
கூடத்திலே அவனைச் சிரச்சேதம்பண்ணி அவன் சிரசை ஒரு தட்டிலே கொண்டுவந்து அந்தச் சிறுபெண்ணுக்குக் கொடுத்தான்; சிறு பெண் அதைத் தாயினிடம் கொடுத்தாள். அவனுடைய சீஷர் அதைக் 29
கேள்விப்பட்டு வந்து அவன் உடலை யெடுத்து ஒரு கல்லறையில் வைத்தார்கள்.

அப்போஸ்தலர் இயேசுவினிடங் கூடி 30
வந்து தாங்கள் செய்தவைகள் உபதேசித்தவைகள் யாவற்றையும் அவருக்கு அறிவித்தார்கள். அவர் அவர்களிடம்: தனியே 31
சற்று இளைப்பாறும்படி வனாந்தரமான ஓர் இடத்திற்குப் போவோம் வாருங்கள் என்றார். அநேகர் வருவதும் போவதுமாயிருந்தபடியினால் போஜனம் பண்ணுகிறதற்கும் அவர்களுக்குச் சமயமில்லை. அப் 32
படியே படவிலேறி வனாந்தரமான ஓர் இடத்திற்குத் தனியே போனார்கள்.

அவர்கள் போகிறதை ஜனங்கள் கண் 33
டார்கள். அநேகர் இதையறிந்துகொண்டு சகல ஊர்களினுமிருந்து கால் நடையாய் அவ்விடத்திற்கு ஓடி அவர்களுக்குமுன்னே அங்கே சேர்ந்தார்கள். அவர் வெளியே 34
வந்து திரள்கூட்டத்தைக் கண்டு அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகள்போலிருந்தபடியால் அவர்கள்மேல் மனதுருகிப் பற்பல காரியங்களை அவர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார். இதற்குள் நேரமாய்விடவே 35
சீஷர் அவரிடம் வந்து: இது வனாந்தரமான இடம், வெகு நேரமுமாயிற்று; அவர் 36
கள் சுற்றியிருக்கிற கிராமங்களுக்கும் ஊர்களுக்கும் போய்த் தங்களுக்கு ஆகாரஞ்

களைக் கொள்ளும்படி இவர்களை அனுப்பி
37 விடவேண்டும்என | அவர்: நீங்களே அவர்
களுக்குப் போஜனங் கொடுங்கள் என்றார்.
அதற்கு அவர்கள்: நாங்கள் போய் இரு
நூறு திநாரியத்துக்கு அப்பங்களை வாங்கி
இவர்களுக்குப் புசிக்கும்படி கொடுக்கவோ
38 என | அவர்: உங்களிடம் எத்தனை அப்
பங்களுண்டு, போய்ப் பாருங்களென்றார்.
அவர்கள் பார்த்து வந்து ஐந்து அப்பங்
களும் இரண்டு மீன்களுமுண்டு என்றார்
39 கள். அப்பொழுது எல்லாரையும் பசும்
புல்லின்மேல் பந்தி பந்தியாக உட்காரவைக்
கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார்.
40 அப்படியே வரிசை வரிசையாய் நூறுநூறு
பேராகவும் ஐம்பதைம்பது பேராகவும் உட்
41 கார்ந்தார்கள். அவர் அந்த ஐந்து அப்பங்
களையும் இரண்டு மீன்களையும் எடுத்து
வானத்தை அண்ணாந்து பார்த்து, ஆசீர்
வதித்து, அப்பங்களைப் பிட்டு அவர்களுக்
குப் பரிமாறும்படி சீஷரிடங் கொடுத்தார்.
அப்படியே இரண்டு மீன்களையும் எல்லாருக்
42 கும் பங்கிட்டார். எல்லாரும் சாப்பிட்டுத்
43 திருப்தியடைந்தார்கள். பன்னிரண்டு கூடை
நிறையத் துணிக்கைகளையும் மீன்களில்
44 மிஞ்சினதையும் எடுத்தார்கள். அப்பங்
களைச் சாப்பிட்டவர்கள் ஐயாயிரம்
புருஷர்.
45 அவர் தமது சீஷரை உடனே படவி
லேற்றித் தாம் ஜனங்களை யனுப்பிவிடுகை
யில் தமக்குமுன்னே அக்கரையில் பெத்சா
யிதாவுக்குப் போகும்படி அவர்களை அவ
46 சரப்படுத்தினார். ஜனங்களை அனுப்பிவிட்ட
பின்பு ஜெபம்பண்ண மலையின்மேல் ஏறி
47 னார். இருட்டானபோது படவு நடுக்கடலி
லிருந்தது; அவரோ கரையில் தனித்திருந்
48 தார். அப்பொழுது எதிர்காற்றாயிருந்தபடி
யினால் அவர்கள் தண்டுவலிக்க வருத்தப்
படுகிறதை அவர் கண்டு, இராத்திரியில்
நாலாம் ஜாமத்தில் கடலின்மேல் நடந்து
அவர்களிடம் வந்து அவர்களைக் கடந்து
அப்பால் போகவேண்டுமென்றிருந்தார்.
49 அவர் கடலின்மேல் நடக்கிறதை அவர்
கள் கண்டு ஆவேசமென்று எண்ணிச் சத்த
மிட்டு அலறினார்கள். அவர்களெல்லாரும்
50 அவரைக்கண்டு கலங்கிவிட்டார்கள். உட
னே அவர் அவர்களோடு பேசி: தைரியமா
யிருங்கள், நான்தான், பயப்படாதிருங்க
51 ளென்று சொல்லி | அவர்கள் இருந்த
படவிலேறினார். ஏறவே காற்றும் அமர்ந்
தது; அதினால் அவர்கள் தங்களுக்குள்ளே
மிகவும் அதிகமாய் ஆச்சரியப்பட்டார்கள்.
52 அவர்கள் இருதயம் கடினமுள்ளதாயிருந்த
படியினால் அப்பங்களைப்பற்றியதை அவர்
கள் உணராமற்போனார்கள்.

53 அவர்கள் கடலைக் கடந்து கெனேச
ரேத்து நாட்டிற்கு வந்து கரைபிடித்தார்
54 கள். அவர்கள் படவிலிருந்து இறங்கின
வுடனே ஜனங்கள் அவரை இன்னாரென்று
55 அறிந்து | அந்தச் சுற்றுப்புறமெங்கும் ஓடித்
திரிந்து அவர் வந்திருக்கிறாரென்று கேள்
விப்பட்ட இடங்களிலெல்லாம் பிணியாளி
களைப் படுக்கைகளில் கிடத்திச் சுமந்துவரத்
தொடங்கினார்கள். அல்லாமலும், அவர்
56 சென்ற கிராமங்கள் ஊர்கள் பட்டிகள்
எவைகளோ அவைகளின் சந்தைவெளி
களிலே வியாதிக்காரரை வைத்து அவர் வஸ்
திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள்
தொடும்படி உத்தரவாக வேண்டுமென்று
அவரை வேண்டிக்கொண்டார்கள்; அவ
ரைத் தொட்ட யாவரும் குணமடைந்தார்
கள்.

7 எருசலேமிலிருந்து வந்த பரிசேயரும்
வேதபாரகரில் சிலரும் அவரிடங் கூடிவந்
2 தார்கள். அவர் சீஷரில் சிலர் தீட்டான,
அதாவது கழுவாத, கைகளால் போஜனம்
பண்ணுகிறதை அவர்கள் பார்த்தார்கள்.
3 பரிசேயர் முதலிய யூதர் அனைவரும் மூன்
னோரின் பாரம்பரை முறைமையை யனு
சரித்து நன்றாய்க் கைகழுவினாலொழியச்
4 சாப்பிடமாட்டார்கள்; கடையிலிருந்து
வரும்போது தண்ணீர் தெளித்துக்கொள்ளா
மல் சாப்பிடமாட்டார்கள்; அப்படியே
இன்னங்கள் காடிகள் செப்புக்குடங்
களைக் கழுவுகிறதுமல்லாமல் வேறு அநேக
ஆசாரங்களையும் கைக்கொண்டு வருவார்
5 கள். ஆகவே, பரிசேயரும் வேதபாரகரும்
அவரிடம்: உம்முடைய சீஷர் முன்னோ
ரின் பாரம்பரை முறையின்படி நடவாமல்
இருக்கிறதென்ன? தீட்டான கைகளால்
போஜனம் பண்ணுகிறார்களே என்று
6 கேட்க | அவர் அவர்களிடம்: மாயக்கார
ராகிய உங்களைப்பற்றி ஏசாயா நன்றாய்த்
தீர்க்கதரிசனம் உரைத்து:

இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால்
என்னைக் கனம்பண்ணுகிறார்கள்;
அவர்கள் இருதயத்திற்கும் எனக்குமோ
வெகுதூரம்;
7 மனுஷ கற்பனைகளை உபதேசங்களாக
உபதேசித்து
வீணாக எனக்கு ஆராதனை செய்கிறார்கள்
என்றார். 8 நீங்கள் கடவுளின் கட்டளை
யைத் தள்ளிவிட்டு மனுஷ பாரம்பரை
முறைமையை அனுசரித்து வருகிறீர்கள்

9 என்றார். பின்னும் அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உங்கள் பாரம்பரை முறைமையைக் கைக்கொள்ளும்படி கடவுளின் கட்டளையை அசட்டை செய்கிறது நன்று!
10 நன்று! உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணவேண்டுமென்றும் தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் சாகவே சாகவேண்டுமென்றும் மோசே சொல்லி
11 யிருக்கிறார். நீங்களோ, ஒருவன் தன் தகப்பனையாவது தாயையாவது பார்த்து: உனக்கு உதவியாகக் கொடுக்கக்கூடியது கொர்பான், அதாவது தேவார்ப்பணம்,
12 என்று சொல்வானானால் | பின்பு அவன் தன் தகப்பனுக்கும் தாய்க்கும் ஒன்றும் கொடுக்கவேண்டாமென்று தடுக்கிறீர்கள்.
13 இவ்வாறாக, நீங்கள் போதிக்கிற இந்தப் பாரம்பரை முறைமையினால் கடவுளின் வசனத்தை அவமாக்குகிறீர்கள். இவற்றைப்போன்ற மற்றும் அநேக காரியங்களையும் செய்கிறீர்களென்று சொன்னார்.
14 பின்பு அவர் ஜனங்களை மறுபடியும் வரவழைத்து அவர்களை நோக்கி: நீங்கள் எல்லாரும் எனக்குச் செவிகொடுத்து உணருங்
15 கள். மனுஷனுக்கு வெளியேயிருந்து அவனுக்குள் போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தமுடியாது; மனுஷனுக்குள்ளிருந்து வெளிப்படுகிறவைகளே அவனைத் தீட்டுப்படுத்துகிறவைகளாம் என்றார்.
17 அவர் ஜனங்களைவிட்டு வீட்டுக்குள் வந்த போது அவர் சீஷர் இந்த உவமையைப்
18 பற்றி அவரிடம் விசாரிக்கவே | அவர்: நீங்களும் இவ்வளவு உணர்வில்லாதவர்களா? வெளியேயிருந்து மனுஷனுக்குள் போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தமுடியாதென்று நீங்கள் அறிந்துகொள்ளவில்லையா?
19 அது அவன் இருதயத்திலுள் போகாமல் வயிற்றில் சென்று வெளியே கழிந்துபோமென்று சொன்னார். இப்படிச் சொல்லிச் சகல உணவுகளையும் சுத்தமெனத் தீர்த்தார்.
20 பின்னும் அவர்: மனுஷனுக்குள்ளிருந்து வெளிப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்
21 படுத்தும். எப்படியெனில், மனுஷருடைய இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகள்
22 வெளிப்படுகின்றன: வேசித்தனம் களவு கொலை விபசாரம் பொருளாசை பொல்லாப்பு கபடு காமவிகாரம் வன்கண் நிந்தனை பெருமை மதிகேடுகள் என்கிறவை
23 களே. பொல்லாங்கான இவையெல்லாம் உள்ளத்திலிருந்து வெளிப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்.
24 பின்பு அவர் எழுந்து அவ்விடம் விட்டு விலகித் தீருவின் திசைகளுக்குப் போனார். அங்கே ஒரு வீட்டுக்குள் சென்று ஒருவரும் அதை அறியாதிருக்க விரும்பியும் அவர் மறைவாயிருக்க முடியாமற்போயிற்று.
25 அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு சிறு பெண் இருந்தாள். அவள் தாய் உடனே அவரைப்பற்றிக் கேள்விப்பட்டு வந்து அவர்
26 பாதங்களில் விழுந்தாள். இவள் கிரேக்க ஸ்திரீ, சீரோபேனிக்கியா ஜாதியாள். அவள் தன் மகளைப் பிடித்திருந்த பேயைத் துரத்திவிடும்படி அவரை வேண்டிக்கொண்டாள்.
27 அவர் அவளைப்பார்த்து: முந்திப் பிள்ளைகள் திருப்தியடையட்டும், பிள்ளைகளின் ஆகாரத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது அழகல்ல என | அவள் பின்னும்:
28 மெய்தான், ஆண்டவரே, ஆகிலும் மேசையின் கீழிருக்கும் நாய்க்குட்டிகள் குழந்தைகள் சிந்துகிற துணிக்கைகளை தின்னுமே
29 என்றாள். அப்பொழுது அவர்: நீ சொன்ன அந்த வார்த்தையினிமித்தம் போகலாம்; பேய் உன் மகளை விட்டு நீங்கிப்போயிற்றென்
30 றார். அவள் தன் வீட்டுக்கு வந்தபொழுது தன் மகள் கட்டிலில் படுத்திருக்கிறதையும் பேய் நீங்கிவிட்டதையும் கண்டாள்.
31 மறுபடியும் அவர் தீருவின் எல்லைகளை விட்டுச் சீதோன் வழியாகச் சென்று தெகப்போலியின் எல்லைகளைக் கடந்து கலிலேயாக் கடலருகே வந்தார். அங்கே கொண்டு
32 வாயனை ஒரு செவிடனை அவரிடங் கொண்டுவந்து, அவர் தமது கைகளை அவன் மேல் வைக்கும்படி வேண்டிக்கொண்டார்
33 கள். அவர் அவனை ஜனக்கூட்டத்தைவிட்டுத் தனியே அழைத்துக்கொண்டு போய்த் தமது விரல்களை அவன் காதுகளில் இட்டு, உமிழ்ந்து, அவன் நாவைத் தொட்டு |
34 வானத்தை அண்ணாந்து பார்த்துப் பெருமூச்சுவிட்டு எப்பத்தா என்றார். அதற்குத்
35 திறவுண்டுபோ என்று அர்த்தமாம். அவன் செவிகள் திறவுண்டன; உடனே அவன் நாவின் கட்டும் அவிழ்ந்து செவ்வையாய்ப்
36 பேசினான். அதை ஒருவருக்குஞ் சொல்ல வேண்டாமென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்; ஆகிலும் எவ்வளவு அதிகமாய் அவர்களுக்குக் கட்டளையிட்டாரோ அவ்வளவு அதிகமாய் அவர்கள் அதைப் பிரசித்தம்
37 பண்ணி | எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்திருக்கிறார்; செவிடர் கேட்கவும் ஊமையர் பேசவும் செய்கிறாரென்று சொல்லி மிகவும் அதிகமாய்ப் பிரமித்தார்கள்.

**8** அந்த நாட்களிலே திரள் ஜனங்கள் மறுபடியும் கூடியிருந்தார்கள். அவர்கள் சாப்பிடுகிறதற்கு ஒன்றுமில்லாதிருக்கவே |

2 இயேசு தமது சீஷரையழைத்து: ஜனங்
கள்மேல் பரிதாபங்கொள்ளுகிறேன், இவர்
கள் இப்பொழுது என்னிடம் மூன்றுநாள்
தங்கியிருந்து சாப்பிட ஒன்றுமில்லாதிருக்
3 கிறார்கள்; இவர்களில் சிலர் தூரத்திலிருந்து
வந்தவர்களாகையால் நான் இவர்களைப்
பட்டினியாய் வீட்டிற்கு அனுப்பிவிட்டால்
வழியில் சோர்ந்துபோவார்களே என்றார்.
4 அதற்கு அவர் சீஷர்: இந்த வனாந்தரத்திலே
ஒருவன் எங்கேயிருந்து ஆகாரங் கொண்டு
வந்து இவர்களைத் திருப்தி செய்யலாமென்று
5 சொல்ல | அவர்: உங்களிடம் எத்தனை அப்
பங்களுண்டு என்று கேட்டார். அவர்கள்:
6 ஏழு அப்பங்களுண்டு என்றார்கள். அவர்
ஜனங்களைத் தரையிலே பந்தியிருக்கக் கட்ட
னையிட்டு அந்த ஏழு அப்பங்களையும் எடுத்
துக் கடவுளுக்கு நன்றிசெலுத்திப் பிட்டுப்
பரிமாறும்படி தமது சீஷரிடங் கொடுத்துக்
கொண்டிருந்தார்; அவர்கள் ஜனங்களுக்குப்
7 பரிமாறினார்கள். சில சிறு மீன்களும் அவர்
களிடம் இருந்தன; அவர் அவைகளையும்
ஆசீர்வதித்து அவர்களுக்குப் பரிமாறும்படி
8 சொன்னார். அவர்கள் சாப்பிட்டுத் திருப்தி
யடைந்தார்கள்; மிஞ்சின துணிக்கைகளை
9 ஏழு கூடைநிறைய எடுத்தார்கள். அங்கி
ருந்தவர்கள் ஏறக்குறைய நாலாயிரம்பேர்.
10 அவர்களை அனுப்பிவிட்டு அவர் தமது சீஷ
ரோடு உடனே படவிலேறித் தல்மனுத்தா
வின் புறங்களுக்கு வந்தார்.
11 அப்பொழுது பரிசேயர் வந்து அவரோ
டே தர்க்கிக்கத் தொடங்கி அவரைச் சோ
திக்கும்படி வானத்திலிருந்து ஒரு அடையா
ளத்தை அவரிடம் தேடிக்கேட்க, அவர்
12 தமது ஆவியில் பெருமூச்சுவிட்டு: இந்தச்
சந்ததியார் அடையாளந் தேடுகிறதென்ன?
இந்தச் சந்ததிக்கு ஒரு அடையாளத்தையுங்
கொடுப்பதில்லையென்று மெய்யாகவே உங்க
ளுக்குச் சொல்லுகிறேனென்று சொல்லி |
13 அவர்களைவிட்டு மறுபடியும் படவிலேறி
அக்கரைக்குப் போய்விட்டார்.
14 சீஷர் அப்பங்களைக் கொண்டுவர மறந்து
போயிருந்தார்கள்; படவில் அவர்களிடம்
15 ஒரு அப்பம்மாத்திரம் இருந்தது. அவர்
அவர்களைப்பார்த்து: நீங்கள் பரிசேயரு
டைய புளித்தமாவுக்கும் ஏரோதின் புளித்த
மாவுக்கும் எச்சரிக்கையாயிருக்கப் பாருங்
16 கள் என்று கட்டளையிட | அவர்கள்: நம்
மிடம் அப்பங்களில்லையே என்று தங்களுக்
குள்ளே யோசனை பண்ணிக்கொண்டார்கள்.
17 அவர் அதையறிந்து அவர்களைநோக்கி: உங்
களிடம் அப்பங்களில்லையே என நீங்கள்
யோசனை பண்ணுகிறதென்ன? இன்னும்
சிந்தியாமலும் உணராமலும் இருக்கிறீர்களா?
உங்கள் இருதயம் கடினப்பட்டுப்போ
யிற்றோ? உங்களுக்குக் கண்களிருந்தும் காண 18
திருக்கிறீர்களா? காதுகளிருந்தும் கேளா
திருக்கிறீர்களா? நினைவுகூராமலுமிருக்கிறீர்
களா? நான் ஐந்து அப்பங்களை ஐயாயிரம் 19
பேருக்குப் பகிர்ந்தபோது மிஞ்சின துணிக்
கைகளை எத்தனை கூடைநிறைய எடுத்தீர்க
ளென்று கேட்டார்; பன்னிரண்டு என்றார்
கள். நான் ஏழு அப்பங்களை நாலாயிரம் 20
பேருக்குப் பகிர்ந்தபோது மிஞ்சின துணிக்
கைகளை எத்தனை கூடைநிறைய எடுத்தீர்க
ளென்று கேட்டார்; ஏழு என்றார்கள். அப் 21
படியிருக்க, நீங்கள் இன்னும் உணர்ந்து
கொள்ளவில்லையா என்றார்.
அவர்கள் பெத்சாயிதா ஊருக்கு வந்தார் 22
கள்; அப்பொழுது ஒரு குருடனை அவரி
டம் கொண்டுவந்து அவனைத் தொடும்படி
அவரை வேண்டிக்கொண்டார்கள். அவர் 23
குருடனுடைய கையைப்பிடித்து அவனைக்
கிராமத்துக்கு வெளியே கூட்டிக்கொண்டு
போய் அவன் கண்களில் உமிழ்ந்து அவன்
மேல் தமது கைகளை வைத்து: உனக்கு ஏதா
கிலும் தெரிகிறதா என்று கேட்டார். அவன் 24
ஏறிட்டுப் பார்த்து: நான் ஆட்களைப்பார்க்கி
றேன், அவர்கள் மரங்கள்போல் அசைவது
தெரிகிறது எனறான். பின்பு அவர் மறுபடி 25
யும் அவன் கண்களின்மேல் கைகளை
வைக்கவே, அவன் தன் கண்களை விழித்துப்
பார்த்தான். நல்ல பார்வையடைந்து எல்
லாவற்றையுந் தெளிவாய்க் கண்டான். அவர் 26
அவனிடம்: நீ கிராமத்திற்குள் போகவேண்
டாமென்று சொல்லி அவனை வீட்டிற்கு
அனுப்பிவிட்டார்.
பின்பு இயேசுவும் அவருடைய சீஷரும் 27
புறப்பட்டுப் பிலிப்புச்செசரியா பட்டணத்
தையடுத்த கிராமங்களுக்குப் போனார்கள்.
வழியிலே அவர் தமது சீஷரைப் பார்த்து:
ஜனங்கள் என்னை யார் என்று சொல்லு
கிறார்களென்று கேட்க | அவர்கள்: யோ 28
வான் ஸ்நானகன் என்று சொல்லுகிறார்கள்;
சிலரோ எலியா என்றும் வேறு சிலரோ
தீர்க்கதரிசிகளில் ஒருவனென்றும் சொல்லு
கிறார்கள் என்றார்கள். அவர்: நீங்கள் 29
என்னை யாரென்று சொல்லுகிறீர்கள்
என்று கேட்கப் பேதுரு: நீரே கிறிஸ்து
என்றான். தம்மைப்பற்றி எவருக்கும் 30
சொல்லாதபடி அவர்களுக்குக் கண்டிப்
பாய்க் கட்டளையிட்டார். அப்பொழுது 31
அவர் அவர்களிடம்: மனுஷகுமாரன் பல
பாடுகள்பட்டு மூப்பராலும் பிரதான ஆசாரி
யராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று

தள்ளப்பட்டுக் கொலையுண்டு மூன்றுநாளைக்குப்பின்பு உயிர்த்தெழுந்திருக்கவேண்டுமென்று போதிக்கத் தொடங்கினார். இந்தச் சங்கதியை அவர் வெளிப்படையாகவே சொல்லிவந்தார். அப்பொழுது பேதுரு அவரைத் தனியே அழைத்து அவரைக் கண்டித்துப்பேசத் தொடங்கினான். அவரோ திரும்பித் தமது சீஷரைப்பார்த்துப் பேதுருவைக் கண்டித்து: எனக்குப் பின்னகப்போ, சாத்தானே, கடவுளுக்குரியவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்குரியவைகளைச் சிந்திக்கிறாயென்று சொன்னார்.

பின்பு அவர் ஜனங்களையும் தமது சீஷர்களையும் தம்மிடம் அழைத்து: ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்துத் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்துபோகிறவனே அதை இரட்சித்துக்கொள்ளுவான். மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபமென்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக எதைக் கொடுப்பான்? விபசாரமும் பாவமுமுள்ள இந்தச் சந்ததியில் என்னைப்பற்றியும் என் வார்த்தைகளைப்பற்றியும் எவன் வெட்கப்படுவானோ அவனைப் பற்றி மனுஷகுமாரனும் தமது பிதாவின் மகிமையில் பரிசுத்த தூதர்களோடு வரும்போது வெட்கப்படுவார்.

**9** இங்கே நிற்கிறவர்களில் சிலர் கடவுளின் ராஜ்யம் வல்லமையோடு வருவதைக் காணுமுன் மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சொல்லிமுடித்தார்.

ஆறுநாளைக்குப்பின்பு இயேசு பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் மாத்திரம் கூட்டிக்கொண்டு தனியே ஓர் உயர்ந்த மலையின்மேல் போய் அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார். அவர் வஸ்திரங்கள் அதிகப் பிரகாசமான வெண்மையாயின. பூமியிலே ஒரு வண்ணான் அவ்வளவு வெண்மையாக்கமுடியாது. அப்பொழுது மோசேயோடு எலியா அவர்களுக்குத் தோன்றினான்; அவர்கள் இயேசுவோடு பேசிக்கொண்டிருந்தார்கள். பேதுரு இயேசுவினிடம்: ரபீ, நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களைப் போடுவோமென்றான். அவர்கள் மிகவும் பயந்திருந்தபடியால் தான் சொல்லவேண்டியது இன்னதென்று அறியாமல் இப்படிச் சொன்னான். அப்பொழுது ஒரு மேகம்வந்து அவர்கள்மேல் நிழலிட்டது. இவர் என் நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் பிறந்தது. உடனே அவர்கள் சுற்றிலும் பார்த்தார்கள். இயேசு ஒருவரைத் தவிர வேறொருவரையுங் காணவில்லை.

அவர்கள் மலையிலிருந்து இறங்குகிறபோது அவர்: மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் வரைக்கும் கண்டவைகளை ஒருவருக்கும் சொல்லவேண்டாமென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். மரித்தோரிலிருந்து எழுந்திருப்பது என்ன வென்று அவர்கள் ஒருவரோடொருவர் விசாரித்துக்கொண்டு அந்த வார்த்தையை மனதில் வைத்துக்கொண்டார்கள். எலியா முந்தி வரவேண்டுமென்று வேதபாரகர் சொல்லுகிறதேதென்று அவரிடங்கேட்க | அவர்: எலியா முந்தி வந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான். என்றாலும் மனுஷகுமாரன் பலபாடுகள் பட்டு அலட்சியம் செய்யப்படுவாரென்று அவரைப்பற்றி எழுதியிருக்கிறதே, அது எப்படி? எலியா வந்தாயிற்று, அவனைக்குறித்து எழுதியிருக்கிறபிரகாரம் தங்கள் இஷ்டப்படியே அவனுக்குச் செய்தார்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

அவர்கள் சீஷரிடம் வந்தபோது, அவர் கனேச்சுற்றி திரளானங்கள் இருப்பதையும் அவர்களோடே வேதபாரகர் வாதாடுவதையுங் கண்டார்கள். ஜனங்களெல்லாரும் அவரைக் கண்டவுடனே மிகவும் பிரமித்து ஓடிவந்து அவரை உபசரித்தார்கள். அவர் அவர்களிடம்: நீங்கள் இவர்களோடு எதைப்பற்றி வாதாடுகிறீர்களென்று கேட்க | ஜனக்கூட்டத்தில் ஒருவன் அவரைப் பார்த்து: போதகரே, ஊமை ஆவிபிடித்த என் மகனை உம்மிடங் கொண்டுவந்தேன்; அது அவனை எங்கே பிடித்தாலும் அங்கே அவனைக் கீழே தள்ளுகிறது; அப்பொழுது அவன் நுரைதள்ளிப் பல்லைக்கடித்துச் சோர்ந்துபோகிறான்; அதைத் துரத்திவிடும்படி உமது சீஷரிடங் கேட்டேன்; அவர்களால் முடியாமற்போயிற்று என்றான். அவரோ இதைக்கேட்டு அவர்களிடம்: விசுவாசமில்லாத சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடிருப்பேன்? எதுவரைக்கும் உங்களிடத்தில் பொறுமையாயிருப்பேன்? அவனை என்னிடம் கொண்டுவாரும்

20 கள் என்ரூர். அவனை அவரிடங் கொண்டு வந்தார்கள். அந்த ஆவி அவரைக் காணவே அவனுக்கு இழுப்பு வலிப்பு உண்டாக்கினது; அவன் தரையிலே விழுந்து நுரை
21 தள்ளிப் புரண்டான். அவர் அவனுடைய தகப்பனைப்பார்த்து: இது இவனுக்கு வந்து எவ்வளவு காலமாயிற்றென்று கேட்டார். அதற்கு அவன்: சிறுவயது முதற்கொண்டே
22 இருக்கிறது; இவனைக் கொன்றுவிடும்படி அது அநேகந்தரம் நீயிலும் தண்ணீரிலும் தள்ளினதுண்டு; உம்மால் ஏதாகிலும் செய்ய முடியுமானால் எங்கள்மேல் மனதிரங்கி எங்களுக்கு உதவி செய்யுமென்று கெஞ்சினான்.
23 இயேசு அவனிடம்: செய்யமுடியுமானால் என்ரூயோ! நம்பிக்கையுள்ளவனுக்கு
24 முடியாததொன்றுமில்லை என்ரூர். உடனே பிள்ளையின் தகப்பன்: எனக்கு நம்பிக்கையுண்டு. என் அவநம்பிக்கை நீங்கும்படி உதவி செய்யுமென்று சத்தமிட்டுக் கேட்
25 டான். ஜனக்கூட்டம் ஓடிவருகிறதை இயேசு கண்டு அந்த அசுத்த ஆவியை அதட்டி: ஊமையும் செவிடுமான ஆவியே, இவனைவிட்டு வெளியே போ, இனி இவனுக்குள் போகாதே என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேனென்று சொன்னார்.
26 சொல்லவே, அது சத்தமிட்டு அவனுக்கு இழுப்பு வலிப்பு உண்டாக்கி வெளிப்பட்டது. அவன் செத்தவன்போல் கிடந்தான்; அநேகர் அவன் செத்துப்போனானென்றும்
27 சொன்னார்கள். இயேசுவோ அவன் கையைப்பிடித்து அவனைத் தூக்கினார்;
28 அவன் எழுந்து நின்ரூன். அவர் வீட்டுக்குள் செல்லவே அவருடைய சீஷர்கள், அதைத் துரத்திவிட எங்களால் முடியாமற் போனதென்னவென்று அவரிடம் தனித்துக்
29 கேட்டார்கள். அதற்கு அவர்: இவ்வகைப் பேய் ஜெபத்தினாலன்றி மற்றெவ்விதத்தினும் போகாதென்ரூர்.
30 அவ்விடம் விட்டுக் கலிலேயாவில் பிரயாணஞ் செய்துகொண்டிருந்தார்கள்; அதை
31 ஒருவரும் அறியாதிருக்கவேண்டுமென்று விரும்பினார். ஏனெனில் அவர் தமது சீஷருக்குப் போதகம்பண்ணி: மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிரூர், அவர்கள் அவரைக் கொலைசெய்வார்கள்; கொல்லப்பட்ட மூன்ரும்நாளிலே உயிர்த்தெழுந்திருப்பாரென்று சொல்லிக்
32 கொண்டு வந்தார். அவர் சொன்னது அவர்களுக்கு விளங்கவில்லை; அவரிடங் கேட்கவும் பயந்தார்கள்.
33 அவர்கள் கப்பர்நகூமுக்கு வந்தார்கள். அவர் வீட்டில் இருக்கும்போது அவர்களிடம்: நீங்கள் வழியில் எதைப்பற்றி விவாதஞ் செய்துகொண்டு வந்தீர்களென்று கேட்டார். அவர்கள் பேசாமலிருந்தார்கள்; அவர் 34
கள் வழியில் ஒருவரோடொருவர் செய்த விவாதம் எவன் பெரியவன் என்பதே. அவர் 35
உட்கார்ந்து பன்னிருவரையும் அழைத்து: எவனிலும் தலைவனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாரிலுங் கடையானவனாயும் எல்லாருக்கும் பணிவிடைக்காரனாயு மிருப்பானென்று சொல்லி | ஒரு சிறு பிள்ளையை 36
எடுத்து அதை அவர்கள் நடுவே நிறுத்தி அதை அணைத்துக்கொண்டு: இப்படிப்பட்ட 37
சிறு பிள்ளைகளில் ஒன்றை, என் நாமத்தில் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக் கொள்ளுகிரூன்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னையல்ல என்னை அனுப்பினவரையே ஏற்றுக்கொள்ளுகிரூன் என்ரூர்.

யோவான் அவரிடம்: போதகரே, நம் 38
மைப் பின்பற்ருதவன் ஒருவன் உமது நாமத்தினாலே பேய்களைத் துரத்துகிறதைக் கண்டோம்; அவன் நம்மைப் பின்பற்ருதவனாதலால் அவனைத் தடுக்கப் பார்த்தோம் என்ரூன். இயேசுவோ: அவனைத் தடுக்க 39
வேண்டாம்; என் நாமத்தினாலே வல்ல செயலைச் செய்கிறவன் எளிதாய் என்னைப்பற்றித் தீது பேசமாட்டான். நமக்கு விரோதமாயிராதவன் நமக்குச் சார்பானவன். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாயிருப்பதினிமித்தம் உங்களுக்கு ஒரு செம்பு தண்ணீர் தாகத்திற்குக் கொடுக்கிறவனும் தன் பலனைப் பெறுமற்போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். 40 41

விசுவாசமுள்ள இந்தச் சிறியரில் ஒரு 42
வன் இடறிவிழக் காரணமாயிருக்கிறவன் எவனோ அவன் கழுத்தில் பெரிய ஏந்திரக் கல்லைக் கட்டிச் சமுத்திரத்தில் அவனைத் தள்ளிப்போடுகிறது அவனுக்கு நலம். உன் 43
கை நீ இடறிவிழ ஏதுவாயிருந்தால் அதைத் தறித்துப்போடு; நீ இரண்டு கையுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்துக்குப் போவதைப்பார்க்கிலும் ஊனனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது நலம். உன் கால் 45
நீ இடறிவிழ ஏதுவாயிருந்தால் அதைத் தறித்துப் போடு, நீ இரண்டு காலுடையவனாய் நரகத்திலே தள்ளப்படுவதைப்பார்க்கிலும் சப்பாணியாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது நலம். உன் கண் நீ இடறிவிழ 47
ஏதுவாயிருந்தால் அதைப் பிடுங்கிப்போடு, நீ இரண்டு கண்ணுடையவனாய் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும் ஒற்றைக் கண்ணனாய்க் கடவுளின் ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பது நலம். நரகத்தில் அவர்கள் 48

49 புழு சாகாது, அக்கினியும் அவியாது. எவனும் அக்கினியினால் உப்பிடப்பெறுவான்.
50 உப்பு நல்லதுதான், எனினும் உப்பு சாரமற்றப்போனால் அதை எதினால் சாரமாக்குவீர்கள்? உங்களில் உப்புடையவர்களாயிருங்கள்; ஒருவரோடொருவர் சமாதானமாயுமிருங்கள் என்றார்.

**10** அவர் எழுந்து அவ்விடம்விட்டு யூதேயாவின் எல்லைகளுக்கு யோர்தானைக் கடந்துவந்தார், திரளானங்கள் மறுபடியும் அவரிடங் கூடிவந்தார்கள். அவர் தமது வழக்கப்படியே மறுபடியும் அவர்களுக்கு உப
2 தேசித்தார். பரிசேயர் அவரிடம் வந்து: புருஷன் மனைவியைத் தள்ளிவிடுவது நியாயமாவென்று அவரைச் சோதிக்கிறவர்
3 களாய்க் கேட்டார்கள். அதற்கு அவர்: மோசே உங்களுக்குக் கட்டளையிட்டிருக்
4 கிறது என்னவென்று கேட்டார். அவர்கள்: தள்ளுதற் சீட்டை எழுதிக்கொடுத்து அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே உத்தரவு கொடுத்திருக்கிறார் என்றார்கள்.
5 இயேசு அவர்களிடம்: உங்கள் இருதயக் கடினத்தினிமித்தம் இந்தக் கட்டளையை
6 உங்களுக்கு எழுதிக்கொடுத்தார். சிருஷ்டிப்பு முதல்
அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார்;
7 இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு நீங்குவான்,
8 அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்;
ஆகவே இனி அவர்கள் இருவரல்ல ஒரே
9 மாம்சமாயிருக்கிறார்கள். இப்படி இருக்கக் கடவுள் இணைத்ததை மனுஷன் பிரிக்க
10 வேண்டாமென்றார். வீட்டுக்குள் செல்லவே, அவருடைய சீஷர் இந்தக் காரியத்தைப்பற்றி மறுபடியும் அவரிடம் விசாரித்
11 தார்கள். அவர் அவர்களிடம்: எவனாகிலும் தன் மனைவியைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகஞ்செய்தால் அவன் மனைவிக்குத் துரோகியாய் விபசாரஞ் செய்கிறான்.
12 அவளும் தன் புருஷனைத் தள்ளிவிட்டு வேறொருவனை விவாகஞ்செய்தால் அவள் விபசாரஞ் செய்கிறவள் என்றார்.
13 அப்பொழுது சிறு பிள்ளைகளை அவர் தொடும்படி அவரிடங்கொண்டுவந்தார்கள்; கொண்டுவந்தவர்களைச் சீஷர் அதட்டினார்
14 கள். இயேசுவோ அதைக் கண்டு விசனப்பட்டு: சிறு பிள்ளைகள் என்னிடம் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடை பண்ணாதிருங்கள்; கடவுளின் ராஜ்யம் அப்
படிப்பட்டவர்களுடையது. சிறு பிள்ளை 15
யைப்போல் கடவுளின் ராஜ்யத்தை ஏற்றுக் கொள்ளாதவன் எவனும் அதில் பிரவேசிக்கவேமாட்டானென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சொல்லி | அவர்களை அணைத்துக்கொண்டு அவர்கள்மேல் 16
கைகளை வைத்து அவர்களை ஆசீர்வதித்தார்.
அவர் வழிநடந்து வெளியே செல்லுகை 17
யில் ஒருவன் அவரிடம் ஓடிவந்து முழங்கால்படியிட்டு: நல்ல போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரிப்பதற்கு நான் என்ன செய்யவேண்டுமென்று கேட்டான். அதற்கு 18
இயேசு: நீ என்னை நல்லவர் என்று சொல்வானேன்? கடவுள் ஒருவரே தவிர நல்லவர் ஒருவருமில்லையே. நீ கற்பனைகளை யறி 19
வாய்: கொலை செய்யாதே, விபசாரஞ் செய்யாதே, களவு செய்யாதே, பொய்ச்சாட்சி சொல்லாதே, வஞ்சனை செய்யாதே, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணு என்பவைகளே என்று சொல்ல | அவன்: 20
போதகரே, இவைகளையெல்லாம் என் சிறு வயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேனென்றான். இயேசு அவனை உற்றுநோக்கி அவ 21
னில் அன்புகூர்ந்து: உன்னிடம் ஒரு குறைவு உண்டு, நீ போய் உனக்குண்டான வைகளை விற்றுத் தரித்திரருக்குக்கொடு; அப்பொழுது பரலோகத்தில் உனக்கு ஐசுவரியமிருக்கும்; அப்பால் வந்து என்னைப் பின்பற்று என்றார். அவன் மிகுந்த ஆஸ்தி 22
யுள்ளவனாயிருந்தபடியால் இந்த வார்த்தையைக் கேட்டு முகம் வாடித் துக்கத்தோடே போய்விட்டான்.
அப்பொழுது இயேசு சுற்றிப்பார்த்துத் 23
தமது சீஷரிடம்: ஐசுவரியமுள்ளவர்கள் கடவுளின் ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிது என்றார். சீஷர் அவருடைய 24
வார்த்தைகளைக் கேட்டுப் பிரமித்துப் போனார்கள். இயேசு பின்னும் அவர்களைப் பார்த்து: பிள்ளைகளே, கடவுளின் ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிது. ஐசு 25
வரியவான் கடவுளின் ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும் ஒட்டகம் ஊசியின் காதில் நுழைவது எளிது என்றார். அவர் 26
கள் மிகவும் பிரமிப்படைந்து, அப்படியானால் யார் இரட்சிக்கப்படக்கூடுமென்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டார்கள்.
இயேசு அவர்களை உற்று நோக்கி: மனுஷ 27
னால் ஆகாததுதான், கடவுளாலோ ஆகாததல்ல; கடவுளால் எல்லாமாகும் என்றார்.
பேதுரு அவரிடம்: இதோ, நாங்கள் எல்லா 28
வற்றையுமிட்டு உம்மைப் பின்பற்றினோமே என்று சொல்லத் தொடங்கினான்.

29 அதற்கு இயேசு: என்னிமித்தமாகவும் சுவி
சேஷத்தினிமித்தமாகவும் வீட்டையாவது
சகோதரரையாவது சகோதரிகளையாவது
தாயையாவது தகப்பனையாவது பிள்ளைக
ளையாவது நிலங்களையாவது விட்டவன் எவ
30 னும் | இப்பொழுது இம்மையிலே இம்சை
களோடுகூட நூறத்தனையாக வீடுகளையும்
சகோதரரையும் சகோதரிகளையும் தாய்கள
யும் பிள்ளைகளையும் நிலங்களையும் மறுமை
யிலே நித்திய ஜீவனையும் அடைவானென்று
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
31 ஆகிலும் முந்தினோர் அநேகர் பிந்தினோரும்,
பிந்தினோர் அநேகர் முந்தினோரும் ஆவார்
கள் என்றார்.

32 பின்பு அவர்கள் எருசலேமுக்குப் பிர
யாணம் போகும் வழியில் இயேசு சீஷருக்
குமுன் நடந்துகொண்டிருந்தார்; அவர்கள்
திகைத்தவர்களாய்ப் போனார்கள், பின்வந்த
வர்களோ பயந்தார்கள். அப்பொழுது
அவர் பன்னிருவரையுந் தம்மிடம் அழைத்
துத் தமக்குச் சம்பவிக்கப்போகிறவைகளை
அவர்களுக்கு மறுபடியுஞ் சொல்லத்
33 தொடங்கினார்: இதோ, எருசலேமுக்குப்
போகிறோம்; மனுஷகுமாரன் பிரதான
ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும்
ஒப்புக்கொடுக்கப்படுவார்; அவர்கள் அவ
னை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துப்
புறஜாதியாரிடம் ஒப்புக்கொடுப்பார்கள்.
34 அவர்கள் அவரைப் பரியாசஞ்செய்து
அவர்மேல் துப்பி அவரை வாரினால் அடித்
து அவரைக் கொலைசெய்வார்கள்; மூன்று
நாளைக்குப்பின் அவர் உயிரோடே எழுந்
திருப்பார் என்றார்.

35 செபெதேயுவின் குமாரர் யாக்கோபும்
யோவானும் அவரிடம் வந்து: போதகரே,
நாங்கள் கேட்டுக்கொள்ளப் போகிறது
எதுவோ அதை நீர் எங்களுக்குச் செய்ய
வேண்டுமென்று விரும்புகிறோம் என்றார்
36 கள். அவர் அவர்களிடம்: நான் உங்க
ளுக்கு என்ன செய்யவேண்டுமென்று
37 விரும்புகிறீர்களென்று கேட்டார். அதற்கு
அவர்கள்: உமது மகிமையிலே எங்களில்
ஒருவன் உமது வலதுபாரிசத்திலும் ஒரு
வன் உமது இடதுபாரிசத்திலும் உட்கார்ந்
திருக்கும்படி எங்களுக்கு அருள்செய்ய
38 வேண்டும் என்றார்கள். இயேசுவோ அவர்
களிடம்: நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது
இன்னதென்று உங்களுக்குத் தெரியவில்லை.
நான் குடிக்கும் பாத்திரத்தில் குடிக்கவும்
நான் பெறும் ஸ்நானத்தைப் பெறவும் உங்
களாலாகுமா என்றார். அதற்கு அவர்கள்: 39
ஆகும் என்றார்கள். இயேசு அவர்களைப்
பார்த்து: நான் குடிக்கும் பாத்திரத்தில்
குடிப்பீர்கள்; நான் பெறும் ஸ்நானத்தை
யும் பெறுவீர்கள். ஆயினும் என் வலது 40
பாரிசத்திலும் என் இடது பாரிசத்திலும்
உட்கார்ந்திருக்கும்படி அருளுவது என்
காரியமல்ல. எவர்களுக்கு ஆயத்தம்பண்
ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கே
யுரியது என்றார். மற்றப் பத்துப்பேரும் 41
அதைக் கேட்டு யாக்கோபு யோவான்
இவர்கள்மேல் கோபங்கொள்ளத் தொடங்
கினார்கள். இயேசு அவர்களைக் கிட்டவரச் 42
செய்து: புறஜாதியாருக்கு அதிகாரிகளாக
எண்ணப்பட்டவர்கள் அவர்களைக் கடின
மாய் ஆளுகைசெய்கிறார்களென்றும் அவர்
களில் பெரியவர்கள் அவர்கள்மேல் கடின
மாய் அதிகாரஞ் செலுத்துகிறார்களென்றும்
நீங்கள் அறிவீர்கள். உங்களுக்குள்ளே 43
யோ அப்படியல்ல; உங்களில் பெரியவனா
யிருக்க விரும்புகிற எவனும் உங்களுக்குப்
பணிவிடைக்காரனாயிருப்பான்; உங்களில் 44
தலைவனாயிருக்க விரும்புகிற எவனும் எல்
லாருக்கும் அடிமையாயிருப்பான். மனுஷ 45
குமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல்
ஊழியஞ்செய்யவும் அநேகரை மீட்கும்
பொருளாகத் தமது ஜீவனைக் கொடுக்கவும்
வந்தார் என்றார்.

அவர்கள் எரிகோவுக்கு வந்தார்கள். 46
அவரும் அவருடைய சீஷரும் பெரிய
ஜனக்கூட்டமும் எரிகோவை விட்டுப்
போகும்போது திமேயுவின் மகன் பர்திமேயு
என்னும் குருடனான பிச்சைக்காரன் வழி
யோரம் உட்கார்ந்திருந்தான். நசரேயனா 47
கிய இயேசு வருகிறாரென்று அவன் கேள்
விப்பட்டு: இயேசுவே, தாவீதின் குமாரனே,
எனக்கிரங்கும் என்று கூப்பிடத்தொடங்கி
னான். அவன் பேசாதிருக்கும்படி அநே 48
கர் அவனை அதட்டினார்கள். அவனோ:
தாவீதின் குமாரனே, எனக்கிரங்கும் என்று
மிகவும் அதிகமாய்க் கூப்பிட்டான். இயேசு 49
நின்று அவனை அழைத்துவரச் சொன்னார்.
அவர்கள் குருடனையழைத்து: தைரியமா
யிரு, எழுந்திரு, உன்னை அழைக்கிறார் என்
றார்கள். உடனே அவன் தன் மேல்வஸ்திரத் 50
தை எறிந்துவிட்டுக் குதித்தெழுந்து இயேசுவி
னிடம் வந்தான். இயேசு அவனை நோக்கி: 51
நான் உனக்கு என்ன செய்யவேண்டுமென்
றிருக்கிறாய் என்றார். அதற்குக் குருடன்:
[1]ரபூனி, நான் பார்வையடையவேண்டு

[1] ரபூனி என்பது என் குருவே எனப் பொருள்படும்.

52 மென்ருன். இயேசு அவனிடம்: நீ போக
லாம்; உன் நம்பிக்கை உன்னைக் குணமாக்
கினது என்ருர். உடனே அவன் பார்வை
யடைந்து வழியிலே அவருக்குப் பின்சென்
ருன்.

**11** அவர்கள் எருசலேமைச் சமீபித்து ஒலி
வமலையில் பெத்பகே பெத்தானியாவென்
னும் ஊர்களுக்கு வந்தபோது அவர் தமது
2 சீஷரில் இருவரையனுப்பி: உங்களுக்கு
எதிரே யிருக்கிற கிராமத்துக்குப் போங்கள்;
அதனுட்சென்றவுடனே ஒரு மனுஷனும்
ஒருக்காலும் ஏறியிராத ஒரு கழுதைக்குட்டி
கட்டியிருக்கக் காண்பீர்கள், அ தை
3 அவிழ்த்துக்கொண்டு வாருங்கள். என்
இப்படிச் செய்கிறீர்களென்று ஒருவன் உங்
களிடங் கேட்டால், இது ஆண்டவருக்குத்
தேவையென்றும் உடனே அதை இவ்
விடத்திற்குத் திரும்ப அனுப்பிவிடுவாரென்
4 றும் சொல்லுங்கள் என்ருர். அவர்கள்
போய் வெளியே தெருவில் வாசலருகே கட்
டியிருந்த அந்தக் குட்டியைக் கண்டு
5 அதை அவிழ்த்தார்கள். அவிழ்க்கவே
அங்கே நின்றவர்களில் சிலர்: நீங்கள் என்ன
செய்கிறீர்கள்? குட்டியை அவிழ்க்கிறீர்களே
6 என்ருர்கள். இயேசு சொல்லியிருந்தபடி
அவர்களுக்குச் சொல்லவே இவர்களைப்
7 போகவிட்டார்கள். அந்தக் குட்டியை
இயேசுவினிடங் கொண்டுவந்து அதின்
மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டார்
கள்; அவர் அதன்மேல் உட்கார்ந்தார்.
8 அநேகர் தங்கள் வஸ்திரங்களை வழியிலே
விரித்தார்கள்; வேறு சிலர் வயல் வெளி
களில் அறுத்த இலைதழைகளை வழியிலே
9 பரப்பினர்கள். முன் நடப்பாரும் பின்
நடப்பாரும்:

ஓசன்னா!
கர்த்தரின் நாமத்தில் வருகிறவர் ஆசீர்
வதிக்கப்பட்டவர்;

10 வருகிற ராஜ்யம் ஆசீர்வதிக்கப்பட்டது;
அது நமது பிதாவாகிய தாவீதின் ராஜ்யமே.
உன்னதத்திலே ஓசன்னா!

என்று சொல்லி ஆரவாரஞ்செய்தார்கள்.
11 அவர் எருசலேமுக்கு வந்து தெய்வாலயத்
திற்குட்சென்று எல்லாவற்றையும் சுற்றிப்
பார்த்துச் சாயங்காலமாய்விட்டதால் பன்
னிருவரோடுங் கூடப் பெத்தானியாவுக்
குப்போனர்.
12 மறுநாளில் அவர்கள் பெத்தானியாவி
லிருந்து வருகையில் அவருக்குப் பசியுண்
13 டாயிற்று. இலைகளுள்ள ஒரு அத்திமரத்
தைத் தூரத்திலே கண்டு அதில் ஏதாகிலும்
அகப்படுமோ வென்று வந்தார். அவர் அதி
னண்டை போய் அதிலே இலைகளேயன்றி
வேறொன்றையுங் காணவில்லை; அது அத்
14 திப்பழக்காலமல்ல. இயேசு அதைப்
பார்த்து: இனி ஒருக்காலும் ஒருவனும்
உன்னிடம் கனியைப் புசியாதிருக்கக்கட
வன் என்ருர்; அதை அவருடைய சீஷர்
கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் எருசலேமுக்கு வந்தார்கள்; 15
இயேசு தெய்வாலயத்திற்குட் பிரவேசித்து
ஆலயத்திலே விற்கிறவர்களையும் கொள்ளு
கிறவர்களையும் துரத்தத் தொடங்கினர்.
காசுக்காரருடைய மேசைகளையும் புறு விற்
கிறவர்களின் ஆசனங்களையுங் கவிழ்த்துப்
போட்டார். ஒருவனும் தெய்வாலயத்தின் 16
வழியாகப் பண்டம்பாடி எதையும் கொண்
டுபோக இடங்கொடுக்கவில்லை. அவர் 17
களுக்கு உபதேசித்து: என் வீடு சகல ஜாதி
யாருக்கும் ஜெப வீடெனப்படும் என்று
எழுதியிருக்கவில்லையா? நீங்களோ அதைக்
கள்ளர் குகையாக்கினீர்களே என்று
சொன்னர். அதைப் பிரதான ஆசாரிய 18
ரும் வேதபாரகரும் கேட்டு அவரைக்
கொலைசெய்ய வகை தேடினர்கள்; ஆகி
லும் ஜனமெல்லாம் அவருடைய உபதேசத்
தைப் பற்றி ஆச்சரியப்பட்டபடியினல்
அவருக்குப் பயந்திருந்தார்கள்.

சாயங்காலந்தோறும் அவர்கள் நகரத் 19
தைவிட்டுப் போவார்கள். மறுநாள் காலை 20
யிலே அவர்கள் அவ்வழியாய்ப் போகும்
போது அந்த அத்திமரம் வேரோடே பட்
டுப்போயிருக்கக் கண்டார்கள். பேதுரு 21
வுக்கு ஞாபகம் வரவே அவன் அவரிடம்:
ரபீ, இதோ, நீர் சபித்த அத்திமரம் பட்டுப்
போயிற்றென்ருன். இதைக் கேட்ட 22
இயேசு: கடவுள்மேல் நம்பிக்கையாயிருங்
கள். எவனுகிலும் இந்த மலையைப் 23
பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்
ளுண்டுபோவென்று சொல்லித் தான்
சொன்னபடியே ஆகுமென்று தன் இரு
தயத்தில் சந்தேகப்படாமல் நம்பினல் அப்
படியே ஆகுமென்று மெய்யாகவே உங்க
ளுக்குச் சொல்லுகிறேன். ஆதலால் நீங் 24
கள் எவைகளை ஜெபித்துக் கேட்டுக்கொள்
வீர்களோ அவைகளைப் பெற்றுக்கொண்
டோமென்று நம்புங்கள், அப்பொழுது
அவைகள் உங்களுக்குக் கிடைக்குமென்று
சொல்லுகிறேன். நீங்கள் ஜெபித்து நிற் 25
கும்போதெல்லாம் ஒருவன்பேரில் உங்க
ளுக்கு ஏதேனும் குறையிருக்குமானல்,
பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும்
உங்கள் மீறுதல்களை உங்களுக்கு மன்னிக்

கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள் என்று சொன்னார்.
27 அவர்கள் மறுபடியும் எருசலேமுக்கு வந்தார்கள். அவர் தெய்வாலயத்தில் உலாவிக்கொண்டிருக்கையில் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் அவரிடம்
28 வந்து: நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இவைகளைச் செய்ய உமக்கு இந்த அதிகாரங் கொடுத்தவர்
29 யாரென்று கேட்க | இயேசு: நானும் உங்களிடம் ஒரு காரியத்தைக் கேட்கிறேன், நீங்கள் எனக்குப் பதில் சொல்லுங்கள், அப்பொழுது நானும் இன்ன அதிகாரத்தினாலே இவைகளைச் செய்கிறேனென்று உங்க
30 ளுக்குச் சொல்லுவேன். யோவானுடைய ஸ்நானம் பரலோகத்திலிருந்து வந்ததோ? மனுஷரிடத்திலிருந்து வந்ததோ? எனக்குப்
31 பதில் சொல்லுங்களென்றார். அவர்கள் தங்களுக்குள்ளே ஆலோசிக்கிறவர்களாய்: பரலோகத்திலிருந்தென்று சொல்வோமானால் பின்னை ஏன் அவனை நம்பவில்லை
32 யென்று கேட்பார்; மனுஷரிடத்திலிருந்தென்று சொல்வோமா—ஜனங்களுக்குப் பயந்துகொண்டிருந்தார்கள்; எல்லாரும் யோவானை மெய்யாகத் தீர்க்கதரிசியென்று
33 எண்ணினார்கள். ஆகவே, அவர்கள் இயேசுவினிடம், எங்களுக்குத் தெரியாதென்று சொல்லிவிட்டார்கள். அப்பொழுது இயேசு: இன்ன அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறேனென்று நானும் உங்களுக்குச் சொல்லேன் என்றார்.

**12** பின்பு அவர் உவமைகள் மூலமாய் அவர்களோடு பேசத் தொடங்கினார்: ஒரு மனுஷன் ஒரு திராட்சத்தோட்டம் போட்டு அதைச்சுற்றி வேலியடைத்து ஆலையை நாட்டிக் கோபுரத்தையும் கட்டிக் குடியானவர்களுக்கு அதைக் குத்தகையாக விட்டுப்
2 புறத்தேசத்துக்குப் போயிருந்தான். குடியானவர்களிடம் திராட்சத்தோட்டத்துக் கனிகளில் தன் பாகத்தை வாங்கிவரும்படி பருவகாலத்தில் அவர்களிடம் ஒரு ஊழியக்
3 காரனை அனுப்பினான். அவர்களோ அவனைப்பிடித்து அடித்து வெறுங்கையாய்
4 அனுப்பிவிட்டார்கள். பின்பு அவன் வேறொரு ஊழியக்காரனை அவர்களிடம் அனுப்பினான்; அவர்கள் அவனைத் தலையில்
5 அடித்து அவமானப்படுத்தினார்கள். வேறொருவனை அனுப்பினான்; அவனையோ கொலை செய்தார்கள். வேறு அநேகரையும் அனுப்பினான்; அவர்களில் சிலரை யடித்துச் சில
6 ரைக் கொலை செய்தார்கள். இன்னும் அவனிடம் ஒருவனே இருந்தான், அவனது அருமையான குமாரன்; என் குமாரனை மதிப்பார்களென்று சொல்லி அவனையும் கடைசியிலே அவர்களிடத்தில் அனுப்பி
7 னான். அந்தக் குடியானவர்களோ: இவன் சுதந்தரவாளி, இவனைக் கொன்றுபோடுவோம் வாருங்கள்; அப்பொழுது சுதந்தரம் நம்முடையதாகுமென்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு |
8 அவனைப் பிடித்துக் கொலைசெய்து திராட்சத்தோட்டத்திற்குப் புறம்பே எறிந்துவிட்டார்கள். இப்படி
9 யிருக்கத் திராட்சத்தோட்டத்து எஜமான் என்ன செய்வான்? அவன் வந்து குடியானவர்களையழித்து மற்றவர்களிடம் தோட்டத்தை விடுவான்.
10 வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே
கோடிக்குத் தலைக்கல்லாயிற்று,
11 அது கர்த்தராலே ஆயிற்று,
அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியம்
என்னும் வாக்கியத்தை நீங்கள் வாசிக்கவில்லையா என்றார். இந்த உவமையைத்
12 தங்களைக் குறித்துச் சொன்னதென்று அவர்கள் அறிந்து அவரைப் பிடிக்க வகைதேடினார்கள்; ஆகிலும் ஜனத்துக்குப் பயந்து அவரைவிட்டுப் போய்விட்டார்கள்.
13 அவர்கள் பேசினதை அவரை அகப்படுத்தும்படி பரிசேயரிலும் ஏரோதியரிலும் சிலரை அவரிடம் அனுப்பினார்கள். அவர்
14 கள் வந்து: போதகரே, நீர் சத்தியமுள்ளவர். நீர் முகதாட்சணியம் இல்லாதவர்; ஆகையால் எவனைக் குறித்தும் உமக்குக் கவையில்லை, கடவுளின் மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறவர்; இது எங்களுக்குத் தெரியும். இராயனுக்கு வரி செலுத்துகிறது நியாயமோ அல்லவோ? நாம்
15 கொடுக்கலாமோ கொடுக்கக்கூடாதோ என்று கேட்டார்கள். அவர்கள் மாயமாலத்தை அவர் அறிந்து அவர்களைப் பார்த்து: நீங்கள் என்னைச் சோதிக்கிறதென்ன? ஒரு திநாரியத்தை என்னிடங்
16 கொண்டுவந்து காண்பியுங்களென்றார். அவர்கள் அதைக் கொண்டுவந்தார்கள். அப்பொழுது அவர்: இந்தச் சாயலும்
17 மேலெழுத்தும் யாருடையதென்று கேட்க, இராயனுடையது என்றார்கள். அதற்கு இயேசு: இராயனுடையவைகளை இராயனுக்கும் கடவுளுடையவைகளைக் கடவுளுக்குஞ் செலுத்துங்கள் என்றார். அவர்கள் அவரைப்பற்றி மிகவும் ஆச்சரியப்பட்டார்கள்.

18 உயிர்த்தெழுதல் இல்லையெனச் சாதிக்கிற
19 சதுசேயர் அவரிடம் வந்து: போதகரே,
ஒருவனுடைய சகோதரன் பிள்ளையில்லா
மல் தன் மனைவியைவிட்டு இறந்துபோனால்
அவனுடைய சகோதரன் அவன் மனைவியை
விவாகஞ்செய்து தன் சகோதரனுக்குச் சந்
தானம் உண்டாக்கவேண்டுமென்று மோசே
20 எங்களுக்கு எழுதிவைத்திருக்கிறாரே. ஏழு
பேர் சகோதரர் இருந்தார்கள்; மூத்தவன்
ஒரு பெண்ணை விவாகஞ்செய்து சந்தான
21 மில்லாமல் இறந்துபோனான். இரண்டாம்
சகோதரன் அவளை விவாகஞ்செய்து அவ
னும் சந்தானமில்லாமல் இறந்துபோனான்.
22 மூன்றாம் சகோதரனும் அப்படியே. ஏழு
பேருக்கும் சந்தானமில்லை. எல்லாருக்கும்
கடைசியில் அந்த ஸ்திரீயும் இறந்து
23 போனாள். உயிர்த்தெழுதலில் அவர்களில்
எவனுக்கு அவள் மனைவியாவாள்? ஏழு
பேரும் அவளை மனைவியாகக் கொண்டிருந்
24 தார்களே என்று கேட்க | இயேசு அவர்
களிடம்: நீங்கள் வேதாகமங்களையும் கடவு
ளின் வல்லமையையும் அறிந்துகொள்ளாத
25 தினாலல்லவா மோசம் போகிறீர்கள். மரித்
தோர் உயிரோடெழுந்திருக்கும்போது கொள்
வினையும் கொடுப்பினையுமில்லை. அவர்கள்
பரலோகத்திலே தூதரைப்போலிருப்பார்
26 கள். மரித்தோர் எழுப்பப்படுவார்கள்
என்பதைப்பற்றிக் கடவுள் கூறியிருக்கிறதை
மோசேயின் ஆகமத்தில் முட்செடியைப்
பற்றிய பாகத்தில் நீங்கள் வாசிக்கவில்லையா?
நான் ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கட
வுள், யாக்கோபின் கடவுள் என்று சொல்லி
27 யிருக்கிறாரே. அவர் மரித்தோரின் கடவுள்
அல்ல, ஜீவனுள்ளோரின் கடவுளே. நீங்
கள் மிகவும் மோசம் போகிறீர்கள் என்
றார்.
28 அவர்கள் தர்க்கித்ததைக் கேட்டிருந்த
வேதபாரகரில் ஒருவன் அவர்களுக்கு மிக
நன்றாய் உத்தரவு சொன்னானென்று கண்டு
அவரிடம் வந்து: கற்பனைகளிலெல்லாம்
முதன்மையான கற்பனை எதுவென்று கேட்
29 டான். இயேசு அவனிடம்: இஸ்ரவேலே
கேள், கர்த்தரே நமது கடவுள், கர்த்தர் ஒரு
30 வரே; உன் கர்த்தராகிய கடவுளிடம் உன்
முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமா
வோடும் உன் முழு மனதோடும் உன் முழு
பலத்தோடும் அன்புகூரவேண்டுமென்பதே
31 முதன்மையான கற்பனை. உன்னிடத்தில்
நீ அன்புகூருவதுபோல அயலானிடத்திலும்
அன்புகூரவேண்டுமென்பது இரண்டாங்
கற்பனை. இவைகளிலும் பெரிய கற்பனை
32 வேறொன்றுமில்லை என்றார். அதுகேட்ட
வேதபாரகன்: சரிதான் போதகரே, நீர்
சொன்னது உண்மை; ஒருவரே இருக்கிறார்,
அவரன்றி வேறொருவருமில்லை. முழு இரு 33
தயத்தோடும் முழு அறிவோடும் முழு பலத்
தோடும் அவரிடம் அன்புகூருகிறதும் தன்
னிடத்தில் அன்புகூருகிறதுபோல் அயலா
னிடத்தில் அன்புகூருகிறதுமே சகல சர்
வாங்க தகன முதலிய பலிகளைப்பார்க்கிலும்
சிரேஷ்டமென்றான். அவன் விவேகமாய் 34
உத்தரவு சொன்னதை இயேசு கண்டு: கட
வுளின் ராஜ்யத்துக்கும் உனக்கும் வெகு தூர
மில்லை என்றார். அதன்பின் ஒருவரும்
அவரிடம் யாதொரு கேள்வியுங் கேட்கத்
துணியவில்லை.
இயேசு தெய்வாலயத்திலே உபதேசம் 35
பண்ணுகையில் அவர்: கிறிஸ்து தாவீதின்
குமாரனென்று வேதபாரகர் சொல்வதெப்
படி? தாவீதுதானே பரிசுத்த ஆவியினால் 36
சொல்லியிருக்கிறதென்ன?
கர்த்தர் என் ஆண்டவரிடம்:
நான் உமது சத்துருக்களை
உமது பாதத்தின்கீழ்ப் போடுமட்டும்
நீர் என் வலது பாரிசத்தில் உட்காரும்
என்று சொன்னார்
என்பதல்லவா? தாவீதுதானே அவரை 37
ஆண்டவரென்று சொல்லியிருக்க, அவ
னுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி
என்று சொன்னார். அநேக ஜனங்கள் அவ
ருடைய உபதேசத்தை விருப்பத்தோடே
கேட்டுவந்தார்கள்.
அவர் உபதேசம்பண்ணுகையில்: வேத 38
பாரகரைப்பற்றி எச்சரிக்கையாயிருங்கள்.
அவர்கள் நீண்ட அங்கிகளைத் தரித்துக்கொ
ண்டு திரிய விரும்புகிறார்கள். சந்தைவெளி 39
களில் வந்தனங்களையும் ஜெபாலயங்களில்
முதல் ஆசனங்களையும் விருந்துகளில் முதல்
இடங்களையும் விரும்புகிறார்கள். விதவை 40
களின் வீடுகளையோ பட்சித்துப் பார்வைக்கு
நீண்ட ஜெபஞ் செய்கிறார்கள். அவர்கள்
அதிகத் தண்டனை பெறுவார்கள் என்றார்.
இயேசு காணிக்கைப்பெட்டிக்கு எதிராக 41
உட்கார்ந்து ஜனங்கள் பெட்டியில் பணம்
போடுகிறதைப் பார்த்துக்கொண்டிருந்தார்;
ஐசுவரியவான்கள் அநேகர் அதிகமாய்ப்
போட்டார்கள். ஏழையான ஒரு விதவை 42
யும் வந்து ஒரு துட்டுக்குச் சரியான
இரண்டு காசைப்போட்டாள். அவர் தமது 43
சீஷரை யழைத்து: காணிக்கைப் பெட்டி
யில் பணம்போட்ட மற்றெல்லாரிலும் இந்த
ஏழை விதவை அதிகமாய்ப் போட்டா
ளென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்
லுகிறேன்; அவர்களெல்லாரும் தங்கள் செல் 44

வப் பெருக்கத்திலிருந்தெடுத்துப் போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தனக்குரிய யாவற்றையும், தன் ஜீவனத்துக்கானதையெல்லாம், போட்டுவிட்டாள் என்றார்.

**3** அவர் தெய்வாலயத்தை விட்டுப் போகையில் அவருடைய சீஷர்களில் ஒருவன் அவரைப் பார்த்து: போதகரே, பாரும், என்னென்ன கற்கள்! என்னென்ன கட்டடங்
2 கள் என்று சொல்ல | இயேசு அவனிடம்: இத்தப் பெரிய கட்டடங்களைப் பார்க்கிறாயே; இவ்விடத்தில் கல்லின்மேல் கல்லிராத படி எல்லாம் இடிக்கப்பட்டுப்போம் என்றார்.

3 அவர் தெய்வாலயத்துக்கு எதிராக ஒலிவ மலையின் மேல் உட்கார்ந்திருக்கையில் பேதுரு யாக்கோபு யோவான் அந்திரேயா என்பவர்கள் அவரிடம் தனித்து வந்து:
4 இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? இவைகளெல்லாம் நிறைவேறித் தீருங்காலத்துக்கு அடையாளமென்ன? எங்களுக்
5 குச் சொல்லும் என்றார்கள். இயேசு அவர்களோடு பேசத்தொடங்கி: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடி எச்சரிக்கையாயிருங்
6 கள். நானே அவர் என்று என் நாமத்தைத் தரித்துக்கொண்டு அநேகர் வருவார்கள்;
7 அநேகரையும் வஞ்சிப்பார்கள். யுத்தங்களையும் யுத்த செய்திகளையும் கேள்விப்படும் போது கலங்காதேயுங்கள்; இவைகள் சம்பவிக்கவேண்டியதே; முடிவு இன்னுமில்லை.
8 ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும் ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; இங்குமங்கும் பூமியதிர்ச்சிகள் உண்டாகும்; பஞ்சங்களும் உண்டாகும்; இவைகள் வேதனைகளின் ஆரம்பமே.

9 நீங்களோ உங்களை எச்சரிக்கையாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள். உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக்கொடுப்பார்கள். ஜெபாலயங்களில் அடிக்கப்படுவீர்கள்; என்னிமித்தம் அதிபதிகளுக்கும் ராஜாக்களுக்குமுன் அவர்களுக்குச் சாட்சியாகவே
10 நிறுத்தப்படுவீர்கள். முதலாவது சகல ஜாதியாரிடத்திலும் சுவிசேஷம் பிரசங்கிக்
11 கப்படவேண்டும். அவர்கள் உங்களைக் கொண்டுபோய் ஒப்புக்கொடுக்கும்போது என்ன பேசுவோமென்று முன்னதாகவே கவலைப்படாதிருங்கள். அந்நாழிகையிலே உங்களுக்கு எது அருள்செய்யப்படுமோ அதையே பேசுங்கள்; பேசுகிறவர்கள் நீங்களல்ல, பரிசுத்த ஆவியே.
12 சகோதரன் சகோதரனையும், தகப்பன் பிள்ளையையும் மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பார்கள்; பெற்றோருக்கு விரோதமாய்ப் பிள்ளைகள் எழும்பி அவர்களைக் கொலைசெய்வார்கள். 13
எனினும் நாமத்தினிமித்தம் எல்லாரும் உங்களைப் பகைப்பார்கள். முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.

மேலும், பாழாக்கும் அருவருப்பு நிற்கத் 14
தகாத இடத்தில் நிற்கக் காணும்போது — வாசிக்கிறவன் கவனிக்கக்கடவன் — யூதேயாவில் உள்ளவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகட்டும். வீட்டின்மேல் இருக்கிறவன் 15
இறங்கவும் தன் வீட்டிலே எதையாகிலும் எடுத்துக்கொள்ள உள்ளே போகவும் வேண்டாம். வயலில் இருக்கிறவன் தன் வஸ்திரத்தை எடுத்துவர வீட்டுக்குத் திரும்பவேண்டாம். 16
அந்நாட்களில் கர்ப்பவதிகளுக்கும் 17
பால் கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ பரிதாபம்! நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்தில் 18
நேரிடாதபடி வேண்டிக்கொள்ளுங்கள். அந்த நாட்கள் உபத்திரவ நாட்களாம். கடவுள் உலகத்தைச் சிருஷ்டித்ததுமுதல் 19
இதுவரைக்கும் இப்படிப்பட்ட உபத்திரவம் நேரிட்டதுமில்லை, இனி நேரிடப்போவதுமில்லை. கர்த்தர் அந்நாட்களைக் குறுக் 20
காதிருந்தால் மாம்சமான எதுவும் தப்பிக்கொள்வதில்லை; தாம் தெரிந்தெடுத்தவர்களினிமித்தமோ அவர் அந்த நாட்களைக் குறுக்கியிருக்கிறார். அப்பொழுது எவனாகிலும் 21
உங்களிடம்: இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று சொன்னால் நம்பாதேயுங்கள். ஏனெனில், 22
கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பிக் கூடுமானால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக அடையாளங்களையும் அற்புதங்களையுஞ் செய்வார்கள். நீங்களோ எச்சரிக்கையா 23
யிருங்கள்; எல்லாவற்றையும் முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன்.

அந்நாட்களிலே அந்த உபத்திரவத்திற் 24
குப்பின்பு சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் தன் வெளிச்சத்தைக் கொடாதிருக்கும்;
நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழுந்து 25
கொண்டிருக்கும், வானத்திலுள்ள சத்துவங்களும் அசைக்கப்படும். அப்பொழுது மனுஷ 26
குமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகங்களில் வருகிறதைக் காண்பார்கள். அப்பொழுது அவர் தமது தூத 27
ரையனுப்பிப் பூமியின் கடைமூலை முதற்கொண்டு வானத்தின் கடைமூலைமட்டுமுள்ள நாலு திசைகளிலுமிருந்து தாம் தெரிந்தெடுத்தவர்களைக் கூட்டிச் சேர்ப்பார்.

அத்திமரம் கற்பிக்கும் உவமையை அதி 28
லிருந்து கற்றுக்கொள்ளுங்கள்; அதின் இளங்

இனியாகி இலை துளிர்க்கும்போது வசந்த
29 காலம் சமீபமென்று அறிவீர்கள். அப்ப
டியே நீங்களும் இவைகள் சம்பவிக்கிற
தைக் காணும்போது [1]அவர் சமீபமாய் வாச
லருகே வந்திருக்கிறார் என்று அறிந்து
30 கொள்ளுங்கள். இவையெல்லாம் சம்பவித்
துத் தீரும்வரைக்கும் இந்தச் சந்ததி ஒழிந்து
போகாதென்று மெய்யாகவே உங்களுக்குச்
31 சொல்லுகிறேன். வானமும் பூமியும் ஒழிந்
தாலும், என் வார்த்தைகளோ ஒழிந்து
32 போவதேயில்லை. அந்த நாளையும் அந்த
நாழிகையையும் பிதா தவிர மற்றொருவனும்
அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும்
அறியார்கள், குமாரனுங்கூட அறியார்.
33 அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால்
எச்சரிக்கையாயிருங்கள், விழித்திருங்கள்.
34 இது எப்படியெனில், தன் வீட்டைவிட்டுப்
புறத்தேசத்துக்குப் பிரயாணம்போன ஒரு
மனுஷன் தன் ஊழியக்காரருக்கு அதிகாரம்
கொடுத்து, அவனவனுக்கு அவனவன்
வேலையையும் நியமித்து, விழித்திருக்கும்படி
காவல் காக்கிறவனுக்குக் கட்டளையிட்டது
35 போலாகும். ஆகையால் விழித்திருங்கள்;
வீட்டெஜமான் எப்பொழுது வருவானென்று
நீங்கள் அறியீர்கள். சாயங்காலமோ நடு
இராத்திரியோ சேவல் கூவும் நேரமோ காலை
36 யோவென்று அறியமாட்டீர்கள். அவர் திடீ
ரென்று வந்து உங்களைத் தூங்குகிறவர்க
ளாகக் கண்டுபிடியாதபடி பார்த்துக்கொள்
37 ளுங்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிற
தை எல்லாருக்கும் சொல்லுகிறேன், விழித்
திருங்கள் என்று சொல்லிமுடித்தார்.

**14** பஸ்காவும் புளிப்பில்லாத அப்பப்பண்
டிகையும் வர இரண்டு நாளிருந்தது. பிர
தான ஆசாரியரும் வேதபாரகரும் அவரைத்
தந்திரமாய்ப் பிடித்துக் கொலைசெய்யும் வழி
2 தேடினார்கள். ஜனத்தில் கலகமுண்டாகா
தபடி பண்டிகையிலே அப்படிச் செய்யலா
காது என்றார்கள்.

3 அவர் பெத்தானியாவில் குஷ்டரோகி
யான சீமோன் வீட்டில் போஜனபந்தியிருக்
கையில் ஒரு ஸ்திரீ விலையுயர்ந்த நறுது என்
னும் சுயமான தைலமுள்ள வெள்ளைக்கல்
ஜாடியைக் கொண்டுவந்து உடைத்து அந்
4 தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றி
னாள். அப்பொழுது சிலர் தங்களுக்குள்ளே
கோபங்கொண்டு: இந்தத் தைலவீண்செலவு
5 என்னத்திற்கு? இந்தத் தைலத்தை முந்நூறு
தினாரியத்துக்கு அதிகமான கிரயத்துக்கு
விற்று ஏழைகளுக்குக் கொடுக்கலாமே
என்று சொல்லி அவள்மேல் சினங்கொண்
டார்கள். இயேசுவோ: அவளை விடுங்கள்; 6
அவளை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்?
நல்ல செய்கை எனக்குச் செய்தாளே.
ஏழைகள் எப்போதும் உங்களோடிருக் 7
கிறார்கள், நீங்கள் விரும்பும்போதெல்லாம்
அவர்களுக்கு நன்மை செய்யலாம்; நானோ
எப்போதும் உங்களோடிரேன். இவள் தன் 8
னால் கூடியதைச் செய்தாள்; என் அடக்கத்
திற்கென்று என் சரீரத்தில் தைலம்பூச முந்
திக்கொண்டாள். சுவிசேஷம் உலகமுழு 9
வதிலும் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ
அங்கங்கே இவள் செய்ததும் இவள் ஞாப
கார்த்தமாய்ச் சொல்லப்படுமென்று மெய்யா
கவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்காரி 10
யோத்து என்பவன் அவரைப் பிரதான
ஆசாரியருக்குக் காட்டிக்கொடுக்க அவர்க
ளிடம் போனான். அவர்கள் அதைக்கேட் 11
டுச் சந்தோஷப்பட்டு அவனுக்குப் பணங்
கொடுக்க வாக்களித்தார்கள். தகுந்த சம
யத்தில் அவரைக் காட்டிக்கொடுக்கும் வகை
தேடினான்.

பஸ்கா பலியிடும் நாளில், அதாவது 12
புளிப்பில்லாத அப்பப்பண்டிகையின்
முதல்நாளில், அவர் சீஷர் அவரிடம் வந்து:
நீர் பஸ்காவைப் புசிப்பதற்கு நாங்கள் எங்
கே போய் ஆயத்தம்பண்ண விரும்புகிறீ
ரென்று கேட்க | அவர் தம்முடைய சீஷ 13
ரில் இருவரையனுப்பி: நீங்கள் நகரத்திற்
குள் போங்கள்; தண்ணீர்க்குடம் சுமந்து
வருகிற ஒரு மனுஷன் அங்கே உங்களுக்கு
எதிர்ப்படுவான், அவனைத் தொடர்ந்து
போங்கள். அவன் எந்த வீட்டிற்குள் 14
செல்லுகிறானோ அந்த வீட்டெஜமானிடம்:
நான் என் சீஷரோடு பஸ்காவைப் புசிக்கும்
என் அறை எங்கேயென்று போதகர் கேட்
கிறாரென்று சொல்லுங்கள். கம்பளம் முத 15
லானவைகள் விரித்து ஆயத்தம் பண்ணப்
பட்டிருக்கிற பெரிய மேல் அறையை அவ
னே உங்களுக்குக் காண்பிப்பான்; அங்கே
நமக்காக ஆயத்தம் பண்ணுங்களென்று
சொன்னார். அப்படியே சீஷர் அவரை 16
விட்டு நகரத்தினுட்சென்று தங்களுக்கு
அவர் சொன்னபடியே கண்டு பஸ்காவை
ஆயத்தம் பண்ணினார்கள்.

சாயங்காலமானபோது அவர் பன்னிருவ 17
ரோடுங்கூட வந்தார். அவர்கள் பந்தி 18
யமர்ந்து போஜனம்பண்ணுகையில் இயேசு:

[1] அது சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறது என்றும் திருப்பலாம்.

உங்களில் ஒருவன், என்னோடு போஜனம்
பண்ணுகிறவனே, என்னைக் காட்டிக்கொடுப்
பானென்று மெய்யாகவே உங்களுக்குச்
19 சொல்லுகிறேனென்றார். இதைக் கேட்கவே
அவர்கள் துக்கங்கொண்டு, நான்தானோ
வென்று ஒருவன் ஒருவனுப் அவரிடம்
20 கேட்கத்தொடங்கினர்கள். அவரோ அவர்
களிடம்: பன்னிருவருள் ஒருவனே, என்
னோடுகூடத் தாலத்தில் கையிடுகிறவனே.
21 மனுஷகுமாரன் தம்மைக்குறித்து எழுதியி
ருக்கிறபடியே போகிறார், எனினும் மனுஷ
குமாரனை எந்த மனுஷன் காட்டிக்கொடுக்
கிறானோ, ஐயோ அவனுக்கு ஆபத்தே! அந்த
மனுஷன் பிறவாதிருந்தானால் அவனுக்கு
நலம் என்றார்.

22 அவர்கள் போஜனம் பண்ணுகையில்
அவர் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து,
அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து:
நீங்கள் வாங்கிக்கொள்ளுங்கள், இது என்
23 னுடைய சரீரம் என்றார். பின்பு பாத்தி
ரத்தை எடுத்து ஸ்தோத்திரஞ்செலுத்தி அவர்களுக்
குக் கொடுத்தார். அவர்களெல்லாரும் அதில்
24 பானம்பண்ணினார்கள். அப்பொழுது அவர்:
இது உடன்படிக்கைக்குரிய என்னுடைய
இரத்தம், அநேகருக்காகச் சிந்தப்படுகிறது.
25 நான் திராட்சப்பழரசத்தைப் புதிதாய்க் கட
வுளின் ராஜ்யத்திலே பானம்பண்ணும் நாள்
வரைக்கும் இனி இதில் பானம்பண்ணுவ
தில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச்
சொல்லுகிறேன் என்றார்.

26 அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டுப் பாடி
முடித்துப் புறப்பட்டு ஒலிவ மலைக்குப்
27 போனார்கள். அப்பொழுது இயேசு அவர்
களிடம்: நீங்கள் எல்லாரும் இடறல் படு
வீர்கள்.

மேய்ப்பனை வெட்டுவேன்,
ஆடுகள் சிதறடிக்கப்படும்

28 என்று எழுதியிருக்கிறதே. நான் உயி
ரோடெழுப்பப்பட்ட பின்போ உங்களுக்கு
முன் கலிலேயாவுக்குப் போவேனென்றார்.
29 இதைக்கேட்ட பேதுரு: எல்லாரும் இட
றல்படினாலும் நான் இடறல்படேன் என்று
30 சொன்னான். இயேசு அவனிடம்: இன்
றையதினமே, இந்த இரவிலேயே, சேவல்
இரண்டுதரம் கூவுகிறதற்குமுன் நீ என்னை
மூன்றுதரம் மறுதலிப்பாயென்று மெய்யா
கவே உனக்குச் சொல்லுகிறேனென்றார்.
31 அவனோ: நான் உம்மோடே மரிக்கவேண்
டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கவே
மாட்டேன் என்று வற்புறுத்திச் சொன்
னான். எல்லாரும் அப்படியே சொல்லிக்
கொண்டிருந்தார்கள்.

பின்பு கெத்செமனே என்னும் இடத்
32 திற்கு வந்தார்கள். அவர் தம்முடைய சீஷரை
நோக்கி: நான் ஜெபித்துவருமளவும் இங்கே
உட்கார்ந்திருங்களென்று சொல்லிப்
பேதுருவையும் யாக்கோபையும் யோவா
33 னையுங் கூட்டிக்கொண்டுபோய்த் திகைக்க
வும் வியாகுலப்படவும் தொடங்கினார்.
34 அப்பொழுது அவர்களிடம்: என் ஆத்துமா
மரணத்துக்கேதுவான பெருந்துக்கங்கொண்
டிருக்கிறது. நீங்கள் இங்கே தங்கி விழித்
35 திருங்களென்று சொல்லிச் சற்று அப்பால்
போய்த் தரையிலே விழுந்து, கூடுமானால்
அந்த நாழிகை தம்மைவிட்டு நீங்கிப்போ
36 கும்படி வேண்டிக்கொண்டு: அப்பா பிதா
வே, எல்லாம் உம்மாலே ஆகும்; இந்தப்
பாத்திரத்தை என்னிடமிருந்து எடுத்து
விடும்; ஆகிலும் எனது சித்தத்தின்படியல்ல,
உமது சித்தத்தின்படியே ஆகக்கடவது என்
37 றார். பின்பு அவர் வந்து அவர்கள் நித்
திரை செய்கிறதைக் கண்டு பேதுருவை
நோக்கி: சீமோனே, நித்திரை செய்கிறாயா?
ஒருமணி நேரமாவது விழித்திருக்கமுடி
38 யாதோ? நீங்கள் சோதனைக்குட்படாதபடி
விழித்திருந்து ஜெபஞ்செய்யுங்கள். ஆவி
உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பல
39 வீனம் என்றார். அவர் மறுபடியும் போய்
அந்த வார்த்தைகளையே சொல்லி ஜெபித்
40 தார். அவர் திரும்பவும் வந்து அவர்கள்
நித்திரை செய்கிறதைக் கண்டார்; அவர்கள்
கண்கள் மிகுந்த நித்திரை மயக்கமாயிருந்
தன, அவருக்கு மறுமொழியாக இன்னது
சொல்வதென்று அறியாதிருந்தார்கள்.
41 அவர் மூன்றாந்தரம் வந்து: இனி நித்திரை
செய்து இளைப்பாறுங்கள். ஆயிற்று, வேளை
வந்துவிட்டது; இதோ, மனுஷகுமாரன்
பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்
42 கப்படுகிறார். எழுந்திருங்கள் போவோம்;
இதோ, என்னைக் காட்டிக்கொடுக்கிறவன்
வந்துவிட்டான் என்றார்.

43 உடனே, அவர் இன்னும் பேசிக்கொண்
டிருக்கையில், பன்னிருவரில் ஒருவனாகிய
யூதா வந்தான்; அவனோடே பிரதான ஆசாரி
யரும் வேதபாரகரும் மூப்பரும் அனுப்
பின திரளான ஜனங்கள் பட்டயங்களையும்
தடிகளையும் பிடித்துக்கொண்டுவந்தார்கள்.
44 அவரைக் காட்டிக்கொடுக்கிறவன்: நான்
எவனை முத்தமிடுவேனோ அவன்தான், அவ
னைப்பிடித்துப் பத்திரமாய்க் கொண்டுபோங்
களென்று அவர்களுக்குக் குறிப்புச் சொல்
லியிருந்தான். அவன் வந்தவுடனே அவ
45 னண்டையில் சேர்ந்து, ரபீ என்று சொல்லி,
அவரைத் திரும்பத்திரும்ப முத்தமிட்டான்.

46 அப்பொழுது அவர்கள் அவர்மேல் கை
47 போட்டு அவரைப் பிடித்தார்கள். கூட
நின்றவர்களில் ஒருவன் பட்டயத்தை உரு
விப் பிரதான ஆசாரியனுடைய வேலைக்கார
48 னைக் காதற வெட்டினான். இயேசு அவர்
களைப்பார்த்து: கள்ளனைப் பிடிக்கப்போகி
றதுபோல நீங்கள் பட்டயங்களையும் தடிக
ளையும் எடுத்துக்கொண்டு என்னைப் பிடிக்க
49 வந்தீர்களே. நான் தினந்தோறும் உங்கள்
நடுவிலே தெய்வாலயத்தில் உபதேசித்துக்
கொண்டிருந்தேன், அப்பொழுது நீங்கள்
என்னைப் பிடிக்கவில்லையே; ஆயினும், வேத
வாக்கியங்கள் நிறைவேறும்படி இது நட
50 கிறது என்றார். அப்பொழுது எல்லாரும்
அவரைவிட்டு ஓடிப்போனார்கள்.
51 வாலிபன் ஒருவன் ஒரு துப்பட்டியை
மாத்திரம் தன்மேல் போர்த்துக்கொண்டு
அவர் பின்னே போனான்; அவனையும்
52 பிடிக்க வந்தார்கள். அவனோ துப்பட்டி
யைப் போட்டுவிட்டு ஆடையில்லாமலே
ஓட்டம்பிடித்தான்.
53 இயேசுவை அவர்கள் பிரதான ஆசாரிய
னிடம் கொண்டுபோனார்கள்; அப்பொழுது
ஆசாரியர் மூப்பர் வேதபாரகர் எல்லாரும்
54 கூடவந்தார்கள். பேதுரு தூரத்திலே அவ
ருக்குப் பின்சென்று பிரதான ஆசாரிய
னுடைய அரமனை முற்றத்திற்கு வந்து சேவ
கரோடே உட்கார்ந்து நெருப்பு வெளிச்
சத்தில் குளிர்காய்ந்துகொண்டிருந்தான்.
55 அப்பொழுது பிரதான ஆசாரியரும் ஆலோ
சனைச் சங்கத்தாரனைவரும் இயேசுவைக்
கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமா
கச் சாட்சி தேடினார்கள்; தேடியுங் கிடைக்
56 கவில்லை. அநேகர் அவருக்கு விரோதமா
கப் பொய்ச்சாட்சி சொல்லியும் சாட்சியங்
கள் ஒன்றுக்கொன்று பொருந்தவில்லை.
57 சிலர் எழுந்து: கை வேலையாகிய இந்தத்
தெய்வாலயத்தை நான் இடித்துப்போட்டுக்
கைவேலையல்லாத வேறொன்றை மூன்று
நாளைக்குள்ளே கட்டுவேனென்று இவன்
சொன்னதை நாங்கள் கேட்டோமென்று |
58 அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி
59 சொன்னார்கள். அப்படியிருந்தும் அவர்
60 கள் சாட்சி பொருந்தாமற்போயிற்று. அப்
பொழுது பிரதான ஆசாரியன் எழுந்து
நடுவே நின்று இயேசுவைப் பார்த்து: நீ
ஒன்றும் பதில் சொல்லுகிறதில்லையா? இவர்
கள் உனக்கு விரோதமாய்ச் சொல்லுகிற
61 சாட்சி என்னவென்று கேட்டான். அவரோ
பேசாமலிருந்தார், பதில் ஒன்றுஞ் சொல்ல
வுமில்லை. மறுபடியும் பிரதான ஆசாரி
யன் அவரைப் பார்த்து: நீ ஸ்தோத்திரத்துக்
குரியவரின் குமாரனாகிய கிறிஸ்துதானா
வென்று கேட்க | இயேசு: நான்தான் அவர் 62
என்று சொல்லிப் பின்னும்: மனுஷகுமா
ரன் சர்வவல்லவருடைய வலது பாரிசத்தில்
வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்க
ளோடு வருவதையும் நீங்கள் காண்பீர்கள்
என்றார். பிரதான ஆசாரியன் தன் வஸ் 63
திரங்களைக் கிழித்துக்கொண்டு: இனி நமக்
குச் சாட்சிகள் எதற்கு? இந்தத் தெய்வ 64
தூஷணத்தைக் கேட்டீர்களே, உங்களுக்கு
எப்படித் தோன்றுகிறது என்றான். அதைக்
கேட்ட யாவரும்: இவன் மரண தண்ட
னையே பெறத்தக்கவன் என்று தீர்த்தார்கள்.
அப்பொழுது சிலர் அவர்மேல் துப்பவும் 65
அவருடைய முகத்தை மூடி அவரைக்
குட்டி, ஞானதிருஷ்டியினால் பார்த்துச்
சொல்லென்று சொல்லவும் தொடங்கினார்
கள். அவரைச் சேவகர்வசம் ஒப்புவிக்
கவே அவர்களும் அவரை அறைந்தார்கள்.
பேதுரு கீழே அரமனைமுற்றத்திலிருக் 66
கையில் பிரதான ஆசாரியனுடைய வேலைக்
காரிகளில் ஒருத்தி வந்து | குளிர்காய்ந்து 67
கொண்டிருந்த பேதுருவைக்கண்டு அவனை
உற்றுப்பார்த்து: நீயும் இயேசுவென்னும் நச
ரேயனோடே இருந்தாயென்றாள். அதற்கு 68
அவன்: நான் அறியேன்; நீ சொல்லுகிறது
எனக்கு விளங்கவில்லையென்று மறுதலித்து
வெளியேவாசல்மண்டபத்திற்குப் போனான்.
அந்த வேலைக்காரி அவனைக் கண்டு: இவன் 69
அவர்களில் ஒருவனே என்று அருகே நின்ற
வர்களுக்குத் திரும்பவும் சொல்ல ஆரம்பிக்க
அவன் மறுபடியும் மறுதலித்தான். அருகே 70
நிற்கிறவர்கள் சற்று நேரத்துக்குப் பின்புமறு
படியும் பேதுருவினிடம்: மெய்யாகவே நீ
அவர்களில் ஒருவன், நீ கலிலேயன் என்
றார்கள். அவனோ: நீங்கள் சொல்லுகிற 71
இந்த மனுஷனை யறியேனென்று சபித்துக்
கொள்ளவும் சத்தியம் பண்ணவும் தொடங்
கினான். உடனே சேவல் இரண்டாந்தரம்
கூவிற்று. சேவல் இரண்டுதரங் கூவுகிற 72
தற்கு முன் நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்
பாயென்று இயேசு தன்னிடத்தில் சொன்ன
வார்த்தையைப் பேதுரு நினைவுகூர்ந்து
கோவெனக் கதறி அழுதுகொண்டிருந்தான்.

15 விடியற்காலமானவுடனே மூப்பர் வேத
பாரகர் சேர்ந்த பிரதான ஆசாரியரும்
ஆலோசனைச் சங்கத்தாரனைவரும் ஆலோ
சனைசெய்து இயேசுவைக் கட்டிக்கொண்டு
போய்ப் பிலாத்துவினிடம் ஒப்புக்கொடுத்
தார்கள். பிலாத்து அவரைப்பார்த்து: நீயா 2
யூதருடைய ராஜாவென்று கேட்க, அவர்:

ஆம், நீர் சொல்லுகிறபடிதான் என்றார்.
3 பிரதான ஆசாரியர்கள் அவர்மேல் அநேக
4 குற்றங்களைச் சாட்டினார்கள். அப்பொழுது
பிலாத்து மறுபடியும் அவரைப்பார்த்து:
நீ பதில் ஒன்றுஞ் சொல்லுகிறதில்லையா?
இதோ பார், இவர்கள் உன்மேல் எத்த
னையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே
5 என்று கேட்டான். இயேசுவோ அதன்
பின் ஒன்றும் பதில் சொல்லவில்லை;
பிலாத்து ஆச்சரியப்பட்டான்.
6 உற்சவகாலத்தில் ஜனங்கள் கேட்டுக்
கொள்ளும் ஒரு கைதியை அவர்களுக்கு
7 விடுதலை செய்துவருவான். பரபாஸ் என்
னும் ஒருவனிருந்தான். கலகத்தில் கொலை
செய்த கலகக்காரரோடு கட்டுண்டவன்.
8 ஜனங்கள் வந்து வழக்கத்தின்படியே தங்க
ளுக்குச் செய்யவேண்டுமென்று கேட்டுக்
9 கொள்ளத் தொடங்கினார்கள். பிலாத்து
அவர்களிடம்: நான் யூதருடைய ராஜாவை
உங்களுக்கு விடுதலைசெய்யவேண்டுமென்று
விரும்புகிறீர்களா என்று கேட்டான்.
10 பொறாமையினாலே பிரதான ஆசாரியர்
அவரை ஒப்புக்கொடுத்தார்களென்று
11 அவன் அறிந்திருந்தான். பிரதான ஆசாரி
யரோ பரபாசையே தங்களுக்கு விடுதலை
செய்வது நல்லதென்று ஜனங்களை எழுப்பி
12 விட்டார்கள். இதைக்கேட்ட பிலாத்து திரும்
பவும் அவர்களிடம்: அப்படியானால் யூத
ருடைய ராஜாவென்று நீங்கள் சொல்லுகிற
வனை நான் என்ன செய்யவேண்டுமென்று
13 கேட்டான். அவனைச் சிலுவையில் அறை
யும் என்று மறுபடியுஞ் சத்தமிட்டுச்
14 சொன்னார்கள். அதற்குப் பிலாத்து: ஏன்,
என்ன பொல்லாப்புச் செய்தான் என்றான்.
அவர்களோ: அவனைச் சிலுவையில் அறை
யும் என்று பின்னும் அதிகமாய்க் கூக்குர
15 லிட்டுச் சொன்னார்கள். பிலாத்து ஜனங்
களைத் திருப்திசெய்யும் மனதுள்ளவனாய்ப்
பரபாசை அவர்களுக்கு விடுதலைசெய்தான்.
இயேசுவையோ வாரினால் அடிப்பித்துச் சிலு
வையில் அறையும்படி ஒப்புக்கொடுத்தான்.
16 அப்பொழுது போர்ச்சேவகர் அவரைக்
கோட்டைமாளிகைக்குள்ளே கொண்டு
போய் முழுப்பட்டாளத்தையுங் கூட்டினார்
17 கள். சிவப்பான மேலங்கியை அவருக்கு
உடுத்தி முள்ளுகளால் ஒரு முடியைப்
18 பின்னி அவருக்குச் சூட்டி: யூதருடைய
ராஜாவே, வாழ்க என்று அவரை வாழ்த்தி,
19 அவரைச் சிரசில் கோலால் அடித்து அவர்
மேல் துப்பி, முழங்கால்படியிட்டு அவரை
20 வணங்கினார்கள். அவரைப் பரிகாசப்
பண்ணினபின்பு சிவப்பான அங்கியைக்
கழற்றி அவருடைய வஸ்திரங்களை அவ
ருக்கு உடுத்தி அவரைச் சிலுவையில் அறை
யும்படி வெளியே நடத்திக்கொண்டு
போனார்கள்.
21 சிரேனே ஊரானும் அலெக்சந்தருக்கும்
ரூப்புவுக்கும் தகப்பனுமாகிய சீமோன்
எனப்பட்ட ஒருவன் வயல் வெளியிலிருந்து
அவ்வழியே வருகையில் அவருடைய சிலு
வையைச் சுமக்கும்படி அவனைக் கட்டா
யப்படுத்தினார்கள். 22 கபாலஸ்தலம் என்று
அர்த்தங்கொள்ளும் கொல்கொதா என்னும்
இடத்துக்கு அவரைக் கொண்டுபோய்,
23 வெள்ளைப்போளங் கலந்த திராட்சரசத்தை
அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்; அவ
ரோ அதை வாங்கிக்கொள்ளவில்லை. 24 அவ
ரைச் சிலுவையில் அறைந்தார்கள். அவர்
வஸ்திரங்களில் ஒவ்வொருவனுக்கு இன்ன
தெனச் சீட்டுப்போட்டுத் தெரிந்து பங்கிட்
டுக்கொண்டார்கள். 25 அவரைச் சிலுவையில்
அறைந்தது மூன்றுமணி நேரம். 26 யூதரு
டைய ராஜா என்று அவர் குற்றத்தைக்
காட்டும் விலாசம் மேலே எழுதியிருந்தது.
27 அவருடைய வலது பாரிசத்தில் ஒருவனும்
அவருடைய இடது பாரிசத்தில் ஒருவனு
மாக இரண்டு கொள்ளைக்காரரை அவரோடு
கூடச் சிலுவைகளில் அறைந்தார்கள்.
28, 29 அந்த வழியாய் நடந்துபோகிறவர்கள்
தங்கள் தலைகளைத் துலுக்கி: ஆ! ஆ! தெய்வா
லயத்தை இடித்து மூன்று நாட்களில் கட்டு
கிறவனே, 30 சிலுவையிலிருந்திறங்கி உன்னை
நீயே இரட்சித்துக்கொள் என்று அவரைத்
தூஷித்தார்கள். 31 அப்படியே பிரதான ஆசா
ரியரும் வேதபாரகரோடு சேர்ந்து பரியா
சம் பண்ணி: மற்றவர்களை இரட்சித்தான்,
தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் தெரி
யாமல்லே. 32 நாம் கண்டு நம்பும்படி இஸ்ர
வேலுக்கு ராஜாவாகிய கிறிஸ்து இப்பொழுது
சிலுவையிலிருந்து இறங்கி வரட்டுமென்று
சொல்லிக்கொண்டிருந்தார்கள். அவரோடு
கூடச் சிலுவைகளில் அறையப்பட்டவர்
களும் அவரை நிந்தித்தார்கள்.
33 ஆறுமணி நேரமாகவே பூமியெங்கும்
அந்தகாரமுண்டாயிற்று. ஒன்பதாமணி
நேரம்வரைக்கும் அப்படியே யிருந்தது.
34 ஒன்பதாமணிநேரத்திலே இயேசு: எலோயீ!
எலோயீ! லமா சபக்தானி என்று மிகுந்த
சத்தமிட்டுக் கூப்பிட்டார். அதற்கு என்
கடவுளே, என் கடவுளே, ஏன் என்னைக்
கைவிட்டீர் என்று அர்த்தமாம். 35 அங்கே
நின்றவர்களில் சிலர் அதைக் கேட்ட
பொழுது: பாருங்கள், எலியாவைக் கூப்
பிடுகிறான் என்றார்கள். 36 ஒருவன் ஓடிக்

கடற்காளாணைக் காடியிலே தோய்த்து அதை
ஒரு ாணற்கோலில் மாட்டி அவருக்குக்
குடிக்கக்கொடுத்து: பொறுங்கள், எலியா
இவனை இறக்க வருவானே பார்ப்போம்
37 என்ருன். இயேசு மகா சத்தமிட்டு ஜீவனை
38 விட்டார். அப்பொழுது தெய்வாலயத்தின்
திரை மேலேதொடங்கிக் கீழேவரைக்கும்
39 இரண்டாகக் கிழிந்தது. அவருக்கு எதிரே
நின்ற நூற்றுக்கதிபதி அவர் இப்படி ஜீவனை
விட்டதைக் கண்டபோது: மெய்யாகவே
இந்த மனுஷன் தெய்வ குமாரன் என்ருன்.
40 தூரநின்று பார்த்துக்கொண்டிருந்த ஸ்திரீ
களும் இருந்தார்கள்; அவர்களுக்குள் மகத
லேனே மரியாளும் சின்ன யாக்கோபுக்கும்
யோசேக்கும் தாயாகிய மரியாளும் சலோமே
41 என்பவளும் இருந்தார்கள்; அவர் கலிலே
யாவிலிருந்தபோதே இவர்கள் அவரைத்
தொடர்ந்துவந்து அவருக்குப் பணிவிடை
செய்தவர்கள். அவரோடுகூட எருசலே
முக்கு வந்திருந்த வேறே அநேக ஸ்திரீ
களும் இருந்தார்கள்.
42 அரிமத்திய ஊரானகிய யோசேப்பு என்
னும் ஒருவனிருந்தான். இவன் கனம்
பொருந்திய ஆலோசனைச் சங்கத்தான். கட
வுளின் ராஜ்யம் வரக் காத்திருந்தவன்.
43 சாயங்காலமானபோது ஒய்வுநாளுக்கு முந்
தின ஆயத்த நாளானதால் இவன் பிலாத்து
வினிடம் துணிந்துபோய் இயேசுவின் சரீ
44 ரத்தைக் கேட்டான். அவர் இதற்குள் மரித்
துப்போனரோ வென்று பிலாத்து ஆச்சரி
யப்பட்டு, நூற்றுக்கதிபதியை அழைப்பித்து:
அவர் மரித்து நேரமாயிற்றே என்று விசா
45 ரித்தான். நூற்றுக்கதிபதியினாலே அதை
அறிந்துகொண்டு சரீரத்தை யோசேப்பினி
46 டங்கொடுத்தான். அவன்போய் மெல்லிய
துணியை வாங்கிக்கொண்டுவந்து அவரை
இறக்கி அந்தத் துணியிலே சுற்றிக் கற்பாறை
யில் வெட்டியிருந்த கல்லறையிலே அவரை
வைத்துக் கல்லறையின் வாசலில் ஒரு
47 கல்லை உருட்டிவைத்தான். அவரை வைத்த
இடத்தை மகதலேனே மரியாளும் யோசேப்
பின் தாயாகிய மரியாளும் பார்த்துக்கொண்
டிருந்தார்கள்.

**16** ஒய்வுநாள் முடிந்தபின் மகதலேனே மரி
யாளும் யாக்கோபின் தாயாகிய மரியாளும்
சலோமே என்பவளும் அவருக்குப் பூச
வேண்டுமென்று சுகந்தவர்க்கங்களை வாங்கி
2 னார்கள். வாரத்தின் முதல்நாள் அதிகாலை
யில் சூரியோதயத்திலே அவர்கள் கல்ல
3 றைக்கு வந்தார்கள். கல்லறையின் வாசலி
லிருந்து கல்லை நமக்காக எவன் புரட்டித்

தள்ளுவானென்று ஒருவரோடொருவர்
சொல்லிக்கொண்டார்கள். அந்தக்கல் மிக 4
வும் பெரிது; அவர்கள் வந்து ஏறிட்டுப்
பார்த்தபோது அது தள்ளப்பட்டிருக்கக்
கண்டார்கள். அவர்கள் கல்லறைக்குள் 5
சென்று வெள்ளையங்கி தரித்திருந்த ஒரு
வாலிபன் வலதுபக்கம் உட்கார்ந்திருக்கிற
தைக்கண்டு திகைத்தார்கள். அவனே அவர் 6
களைப்பார்த்து: திகைக்கவேண்டாம்; சிலு
வையில் அறையுண்ட நசரேயனகிய இயே
சுவைத் தேடுகிறீர்கள்; அவர் உயிர்த்தெழுந்
தார்; அவர் இங்கேயில்லை; இதோ, அவரை
வைத்த இடம். நீங்கள் போய்: உங்க 7
ளுக்குமுன் கலிலேயாவுக்குப் போகிறார்,
அவர் உங்களுக்குச் சொன்னபடியே அங்கே
அவரைக் காண்பீர்களென்று அவர் சீஷ
ருக்கும் பேதுருவுக்கும் சொல்லுங்கள் என்
ருன். நடுக்கமும் திகைப்பும் அவர்களைப் 8
பிடித்தபடியால் அவர்கள் வெளியே வந்து
கல்லறையைவிட்டு ஓடிப்போனர்கள்;
அவர்கள் ஒருவருக்கும் ஒன்றுஞ் சொல்ல
வில்லை; பயந்திருந்தார்கள்.

வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே 9
இயேசு எழுந்திருந்தபின்பு மகதலேனே மரி
யாளுக்கு முதல்முதல் தரிசனமானார். அவ
ளிடத்திலிருந்து அவர் ஏழு பேய்களைத்
துரத்தியிருந்தார். அவள் போய் அவரோடு 10
கூடச் சஞ்சரித்திருந்தவர்களுக்கு அதை
அறிவித்தாள். அவர்கள் துக்கப்பட்டு
அழுதுகொண்டிருந்தார்கள். அவர் உயி 11
ரோடிருக்கிறரென்றும் அவள் அவரைக்
கண்டாளென்றும் அவர்கள் கேட்டபொ
ழுது நம்பாமற்போனர்கள்.

அதன்பின்பு அவர்களில் இரண்டு பேர் 12
ஒரு கிராமத்துக்கு வழிநடந்து போகிற
பொழுது அவர்களுக்கு வேறு ரூபமாய்த்
தரிசனமானார். அவர்களும் போய் அதை 13
மற்றவர்களுக்கு அறிவித்தார்கள்; அவர்
களையும் அவர்கள் நம்பாமற்போனர்கள்.

பதினெருவரும் போஜன பந்தியிலிருக் 14
கும்போது அவர்களுக்கு அவர் தரிசனமாகி,
உயிர்த்தெழுந்திருந்த தம்மைக்கண்டவர்களை
அவர்கள் நம்பாமற்போனதினிமித்தம் அவர்
கள் அவநம்பிக்கையைப்பற்றியும் இருதயக்
கடினத்தைப்பற்றியும் அவர்களைக் கடிந்து
கொண்டார்.

அவர் அவர்களிடம்: நீங்கள் உலகமெங் 15
கும் போய்ச் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்
தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுடைய 16
வனுய் ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்
கப்படுவான். விசுவாசமில்லாதவனே ஆக்
கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். விசு 17

வாசமுடையவர்களிடம் இவ்வடையாளங்கள் விளங்கும்: என் நாமத்தில் பேய்களைத் துரத்துவார்கள்; புதிய பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அவர்கள் சேதமடையார்கள்; வியாதியஸ்தர்மேல் கைகளை வைக்க அவர்கள் குணமடைவார்கள் என்றார்.

19 ¶ அவர்களுடனே பேசினபின்பு ஆண்டவராகிய இயேசு பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுக் கடவுளின் வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். அவர்களோ புறப்பட்டுப்போய் எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். ஆண்டவரும் அவர்களுடனே கூடக் கிரியை நடப்பித்து அவர்களிடம் விளங்கும் அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்.

அறிவிக்கப்பட்ட யாவற்றையும் அவர்கள் பேதுருவோடிருந்தவர்களுக்குச் சுருக்கமாய்த் தெரிவித்தார்கள். அப்பால் இயேசுதாமே அவர்கள் மூலமாய் நித்திய இரட்சிப்பைப்பற்றிய அழிவில்லாத பரிசுத்த செய்தியைக் கீழ்திசை தொடங்கி மேல்திசை வரைக்கும் எங்கும் பரவச்செய்தார்.

THE GOSPEL OF LUKE

# லூக்கா சுவிசேஷம்

1 கனம்பொருந்திய தெயோப்பிலுவே, நமக்குள்ளே நிறைவேறித் தீர்ந்த காரியங்
2 களை, ஆதிமுதல் கண்ணாரக் கண்டவர்களும் வார்த்தையின் ஊழியருமானவர்கள் நமக்கு
ஒப்புக்கொடுத்தபடியே, அநேகர் கிரமப்
படுத்திச் சரித்திரம் எழுத முயன்றிருக்கிறார்
3 கள். ஆகையால் அவற்றையெல்லாம்
ஆரம்பமுதல் திட்டமாய் ஆராய்ச்சி செய்
திருக்கிற் நானும், உமக்கு உபதேசிக்கப்
பட்ட விஷயங்கள் முழு நிச்சயமே என்
பதை நீர் முற்றும் அறிந்துகொள்ளவேண்டு
4 மென்று | அவைகளை ஒழுங்காய் உமக்கு
எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று.
5 யூதேயா தேசத்தின் ராஜாவாகிய ஏரோ
தின் நாட்களில் அபியாவின் ஆசாரிய வகுப்
பைச் சேர்ந்த சகரியாவென்னும் பேர்
கொண்ட ஆசாரியன் ஒருவனிருந்தான்.
அவன் மனைவி ஆரோனுடைய குமாரத்தி
களில் ஒருத்தி, அவள் பேர் எலிசபெத்து.
6 அவர்கள் இருவரும் கடவுளுக்குமுன் நீதி
மான்கள், கர்த்தருடைய சகல கற்பனை
களின்படியும் நியமங்களின்படியும் குற்ற
மற்றவர்களாய் நடந்துகொண்டு வந்தவர்
7 கள். அவர்களுக்குப் பிள்ளையில்லை; எலிச
பெத்து மலடி, இருவருமோ வயது சென்ற
வர்கள்.
8 அப்படியிருக்க, அவன் தன் ஆசாரிய
வகுப்பின் முறைப்படி கடவுள் சந்நிதா
னத்தில் ஆசாரிய ஊழியஞ் செய்துவரு
9 கிறபோது | ஆசாரிய ஊழியத்தின் வழக்கப்
படி தூபங்காட்ட அவன் பேருக்குச் சீட்டு
விழ அவன் கர்த்தருடைய ஆலயத்திற்குள்
10 பிரவேசித்தான். தூபங்காட்டுகிற வேளை
யிலே ஜனங்களெல்லாருங் கூட்டமாய்
வெளியே ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்
11 கள். அப்பொழுது கர்த்தருடைய தூதன்
ஒருவன் தூப பீடத்தின் வலது பக்கத்திலே
12 நின்று அவனுக்குத் தோன்றினான். சக
ரியா அவனைக்கண்டு கலங்கினான், பயமும்
13 அவனைப் பிடித்தது. தூதனே அவனை
நோக்கி: சகரியாவே, பயப்படாதே, உன்
ஜெபம் கேட்கப்பட்டது; உன் மனைவியாகிய
எலிசபெத்து உனக்கு ஒரு மகனைப் பெறு
வாள், அவனுக்கு யோவான் என்று பெய
ரிடுவாய்: உனக்கு சந்தோஷமும் மகிழ்ச்சி 14
யுமுண்டாகும், அநேகர் அவன் பிறப்பைப்
பற்றிச் சந்தோஷப்படுவார்கள். அவன் 15
கர்த்தரின் பார்வையில் பெரியவனாயிருப்
பான், திராட்சரசமும் மதுவும் குடியான்,
தன் தாயின் கர்ப்பத்திலிருந்தே பரிசுத்த
ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான். அவன் 16
இஸ்ரவேலின் புத்திரரில் அநேகரை அவர்
கள் கர்த்தராகிய கடவுளிடத் திருப்புவான்.
அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடை 17
யவனாய் அவருக்கு முன்னே நடந்து பிதாக்
களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்
திற்கும் கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களின்
விவேகத்திற்கும் திருப்பிக் கர்த்தருக்குத்
தகுதியான ஒரு ஜனத்தை அவருக்கு ஆயத்
தப்படுத்துவா னென்றான். அப்பொழுது 18
சகரியா தெய்வதூதனை நோக்கி: இதை
நான் எதினால் அறிவேன்; நான் கிழவன்,
என் மனைவியும் வயதுசென்றவளாயிற்றே
எனத் | தெய்வதூதன் அவனிடம்: நான் 19
கடவுள் சந்நிதியில் நிற்கும் காபிரியேல்;
உன்னிடம் பேசவும் உனக்கு இந்த நற்
செய்தியை அறிவிக்கவும் அனுப்பப்பட்டு
வந்தேன்; தகுந்த காலத்தில் நிறைவேறப் 20
போகிற என் வார்த்தைகளை நீ நம்பாதபடி
யினால் இவைகள் சம்பவிக்கும் நாள்மட்
டும், இதோ, நீ பேசமுடியாமல் மௌனமா
யிருப்பாய் என்றான். ஜனங்கள் சகரியா 21
வுக்குக் காத்திருந்து அவன் தெய்வாலயத்
தில் தாமதிக்கவே ஆச்சரியப்பட்டார்கள்.
அவன் வெளியேவந்தபோதோ அவர்களி 22
டத்தில் பேசமுடியாமலிருந்தான்; அதினாலே
ஆலயத்தில் ஒரு தரிசனங்கண்டானென்று
அறிந்தார்கள். அவனும் அவர்களுக்குச்
சைகை காட்டி ஊமையாயிருந்தான். அவ 23
னுடைய பணிவிடை நாட்கள் முடியவே
தன் வீட்டுக்குப் போனான்.
அந்நாட்களுக்குப் பின்பு அவன் மனைவி 24
எலிசபெத்து கர்ப்பந்தரித்து: ஜனங்களுக்
குள்ளே எனக்குண்டாயிருந்த நிந்தையை

நீக்கும்படி கர்த்தர் இந்த நாட்களில் கண்
25 ணோக்கமாகி | எனக்கு இப்படிச் செய்தரு
ளினரென்று சொல்லி ஐந்து மாதம் வெளிப்
படாதிருந்தாள்.
26 ஆறுமாதத்திலே கலிலேயாவிலுள்ள நாச
27 ரேத் ஊரில் | தாவீதின் வம்சத்தான் யோ
சேப்பு என்கிற நாமமுள்ள புருஷனுக்கு
நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னிகையி
னிடம் காபிரியேல் தூதன் கடவுளாலே
அனுப்பப்பட்டான்; அந்தக் கன்னிகையின்
28 பேர் மரியம்மாள். அவளிருந்த இடத்
தில் தெய்வதூதன் பிரவேசித்து: கிருபை
பெற்றவளே, வாழ்க, ஆண்டவர் உன்னு
29 டனே இருக்கிறார் [1]என்றான். அவளோ
அவன் வார்த்தையினால் கலங்கி, இந்த
வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று சிந்
30 தித்துக்கொண்டிருந்தாள். தூதன் அவளை
நோக்கி: மரியாளே, பயப்படாதே, நீ கடை
31 வுளிடத்தில் கிருபை பெற்றாய். இதோ,
நீ கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப்பெற்று
வாய், அவருக்கு இயேசு என்று பெயரிடு
32 வாய். அவர் பெரியவராயிருப்பார், உன்
னதமானவருடைய குமாரன் எனப்படுவார்;
ஆண்டவராகிய கடவுள் அவருடைய பிதா
வாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்
33 குக் கொடுப்பார். அவர் யாக்கோபின்
வம்சத்தை என்றென்றைக்கும் அரசாளு
வார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவி
34 ராது என்றான். மரியம்மாள் தூதனிடம்:
இது எப்படியாகும்? புருஷனை அறியேனே
35 எனத் | தெய்வதூதன்: பரிசுத்த ஆவி உன்
மேல் வரும்; உன்னதமானவருடைய வல்
லமை உன்மேல் நிழலிடும், ஆதலால் உன்
னிடத்தில் பிறக்கும் பரிசுத்த முள்ளது
36 தெய்வகுமாரன் எனப்படும். இதோ, உன்
இனத்தாளாகிய எலிசபெத்தும் தன் முதிர்
வயதிலே ஒரு மகனைக் கர்ப்பந்தரித்திருக்கி
றாள்; மலடியெனப்பட்ட அவளுக்கு இது
37 ஆறுமாதம். [2]கடவுளால் ஆகாத காரியம்
38 ஒன்றுமில்லை என்றான். மரியம்மாளும்:
இதோ, நான் ஆண்டவரின் அடிமை, உம்
முடைய சொல்லின்படி எனக்கு ஆகட்டு
மென்றாள். அப்பொழுது தெய்வதூதன்
அவளைவிட்டுப் போனான்.
39 அந்நாட்களில் மரியம்மாள் எழுந்து
மலைநாட்டுக்குத் தீவிரமாய்ப் போய் யூதாவில்
40 ஓர் ஊரில் | சகரியாவின் வீட்டுக்குள்
41 சென்று எலிசபெத்தை வாழ்த்தினாள். எலிச
பெத்து மரியம்மாளுடைய வாழ்த்துதலைக்
கேட்டபொழுது அவளுடைய கர்ப்பத்திலி
ருந்த பிள்ளை துள்ளிற்று; எலிசபெத்து பரி
சுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு | உரத்த 42
சத்தமாய்: ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்
கப்பட்டவள், உன் கர்ப்பத்தின் கனியும்
ஆசீர்வதிக்கப்பட்டது. என் ஆண்டவரின் 43
தாயார் என்னிடம் எழுந்தருளிவர எனக்
குக் கிடைத்ததெப்படி? இதோ, நீ வாழ்த் 44
தின சத்தம் என் காதில் விழுந்தவுடனே என்
கர்ப்பத்திலுள்ள பிள்ளை களிப்பாய்த்
துள்ளிற்று. நம்பினவளே பாக்கியவதி, 45
ஆண்டவர் அவளுக்குச் சொன்னவைகள்
நிறைவேறித்தீரும் என்றாள். அதைக் 46
கேட்ட மரியம்மாள்:

என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்
துகிறது;
என் ஆவி என் இரட்சகராகிய கடவுளில் 47
களிகூர்ந்திருக்கிறது.
தமது அடிமையின்தாழ்வைக் கண்ணோக் 48
கினார்;
இதோ, இது முதல் எல்லாச் சந்ததிக
ளும் என்னைப் பாக்கியவதி யென்பார்கள்.
வல்லமையுடையவர் பெரிதானவைகளை 49
எனக்குச் செய்தார்; அவர் நாமம் பரிசுத்
தமுள்ளது.
அவருடைய இரக்கம் அவருக்குப் பயந் 50
தவர்களுக்குத் தலைமுறை தலைமுறைக்கு
முள்ளது.
தமது புயத்தினாலே பராக்கிரமஞ் செய் 51
தார்;
தங்கள் இருதய சிந்தையில் இறுமாப்பு
டையவர்களைச் சிதறடித்தார்.
பலவான்களைச் சிங்காசனங்களிலிருந்து 52
தள்ளித் தாழ்வானவர்களை உயர்த்தினார்.
பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி 53
ஐசுவரியவான்களை வெறுமையாய் அனு
ப்பிவிட்டார்.
நமது பிதாக்களுக்கு அவர் சொன்னபடி 54
யே, ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும்
என்றென்றைக்கும்
இரக்கம் பாராட்ட வேண்டுமென்று 55
தமது தாசனாகிய இஸ்ரவேலை ஆதரித்தார்
என்றாள். மரியம்மாள் ஏறக்குறைய மூன் 56
றுமாதம் அவளுடனே இருந்து தன் வீட்டுக்
குத் திரும்பிப்போனாள்.
எலிசபெத்துக்குப் பிரசவகாலம் வந்த 57
போது அவள் ஒரு குமாரனைப் பெற்றாள்.
கர்த்தர் அவளிடம் தமது இரக்கத்தைப் 58
பெரிதாக்கினாரென்று அவளுடைய அயல

---

1 ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவர் என்பதும் சில பிரதிகளில் உண்டு. 2 கடவுளின் சொல்லும் எந்தக்காரியமும் ஆகாமற்போகாது என்றும் திருப்பலாம்.

கத்தாரும் பந்துஜனங்களும் கேள்விப்பட்டு
59 அவளுடனே சந்தோஷப்பட்டார்கள். எட்
டாம் நாளிலே அவர்கள் பிள்ளைக்கு விருத்
தசேதனஞ்செய்ய வந்து தகப்பனுடைய
காமத்தின்படி அதற்குச் சகரியாவென்று
60 பேரிடப்போனார்கள். அப்பொழுது அதின்
தாய்: அப்படியல்ல, அதற்கு யோவான்
61 என்று பேரிடவேண்டும் என்றாள். அதற்கு
அவர்கள்: உன் சுற்றத்தாரில் இப்பேருள்ள
வன் ஒருவனும் இல்லையே என்று சொல்லி !
62 அதின் தகப்பனை நோக்கி: குழந்தைக்கு
என்ன பேரிடுவது உனக்குப் பிரியமென்று
63 சைகையினால் கேட்டார்கள். அவன் எழுத்
துப் பலகையைக் கேட்டு வாங்கி: இவன்
பேர் யோவான் என்று எழுதினான்; எல்லா
64 ரும் ஆச்சரியப்பட்டார்கள். உடனே அவ
னுடைய வாயையும் நாவையும் கட்டியி
ருந்த கட்டு நீங்கவே அவன் கடவுளைத்
65 துதித்துப்பேசினான். அதினால் அவர்களைச்
சுற்றி வாசமாயிருந்த யாவருக்கும் பயமுண்
டாயிற்று. யூதேயாவின் மலைநாடெங்கும்
இந்த வர்த்தமானங்களெல்லாவற்றையுங்
66 குறித்துப் பேசிக்கொண்டார்கள். அவைக
ளைக் கேள்விப்பட்டவர்களெல்லாரும் தங்
கள் மனதிலே அவைகளை வைத்துக்
கொண்டு, இந்தப்பிள்ளை எப்படிப்பட்டதா
குமோ என்றார்கள். கர்த்தருடைய கரம்
அதனோடேயிருந்தது.
67 பிள்ளையின் தகப்பன் சகரியா பரிசுத்த
ஆவியினால் நிறைந்து தீர்க்கதரிசனமாகச்
சொன்னதாவது:
68 இஸ்ரவேலின் கர்த்தராகிய கடவுள்
ஸ்தோத்திரத்திற்குரியவர்; அவர் தமது
ஜனத்தைச் சந்தித்து அதற்கு மீட்பை
உண்டுபண்ணினாரே;
69 பூர்வத்திலிருந்து தமது பரிசுத்த தீர்க்க
தரிசிகள் மூலமாய்க் கூறியபடியே,
70 தமது தாசனாகிய தாவீதின் வம்சத்திலே
நமக்கு இரக்ஷணியக் கொம்பை ஏற்படுத்
தினார்.
71 இது நமது சத்துருக்களினின்றும் நம்
மைப் பகைக்கிற யாவருடைய கையி
னின்றும் தப்புவிக்கும் இரட்சிப்பு.
72 தமது பரிசுத்த உடன்படிக்கையை
நினைத்தருளி நமது பிதாக்கள் பேரில்
வைத்த இரக்கத்தைக் காட்டி,
73 நமது பிதாவாகிய ஆபிரகாமுக்கு இட்ட
ஆணையை நிறைவேற்றுவதற்கும்,
74 நமது சத்துருக்களின் கைகளினின்று
நாம் விடுதலையாக்கப்பட்டு,
75 உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்
லாமல் அவருக்கு முன்பாகப் பக்தியோ
டும் நீதியோடும் ஊழியஞ் செய்ய அரு
ளுவதற்குமே அப்படிச் செய்தார்.
76 நீயோ பாலகனே, உன்னதமானவரு
டைய தீர்க்கதரிசி எனப்படுவாய்.
நமது கடவுளுடைய உருக்கமான இரக்
77 கத்தினிமித்தம் பாவமன்னிப்பினால்
வரும் இரட்சிப்பைக் கர்த்தருடைய
ஜனத்துக்குத் தெரியப்படுத்தும் பொ
ருட்டு
அவருக்கு முன்னாக நடந்துபோய் அவர்
வழிகளை ஆயத்தஞ்செய்வாய்.
அவ்விரக்கத்தினால் உன்னதத்திலிருந்து
78 தோன்றிய அருணோதயம்
அந்தகாரத்திலும் மரண இருளிலும்
79 உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சந்
தரவும்
நம்முடைய கால்களைச் சமாதான வழி
யில் நடத்தவும் நம்மைச் சந்திக்கும்
என்பதே.
80 பிள்ளையோ வளர்ந்து ஆவியிலே பலங்
கொண்டது. இஸ்ரவேலுக்குத் தன்னைக்
காண்பிக்கும் நாள்வரைக்கும் வனாந்தரங்
களிலே இருந்தான்.

**2** அந்நாட்களில் உலகமெங்கும் ஜனத்
தொகைக் கணக்குப் பார்க்க வேண்டு
மென்று அகுஸ்துராயனால் கட்டளை பிறந்
தது. சீரியா நாட்டிலே சிரேனியு என்ப
2 வன் தேசாதிபதியாயிருந்தபோது இத முத
லாம் கணக்காகப் பதிவுசெய்யப்பட்டது.
அந்தப்படியே பதிவுசெய்யும் பொருட்டு
3 எல்லாரும் தங்கள்தங்கள் ஊர்களுக்குப்
போனார்கள். அப்பொழுது யோசேப்பும்,
4 தான் தாவீதின் குடும்பத்தானும் வம்சத்தா
னுமாயிருந்தபடியினாலே, தனக்கு மணவி
யாக நியமிக்கப்பட்டிருந்த மரியம்மாளு
டனே கணக்கில் பதிவு செய்வதற்காகக்
கலிலேயா நாட்டினுள்ள நாசரேத்தூரிலி
5 ருந்து யூதேயா நாட்டினுள்ள பெத்லெகே
மென்னும் தாவீதின் ஊருக்குப் போனான்.
6 அவள் கர்ப்பவதியாயிருந்தாள். அவ்விடத்
தில் அவர்கள் இருக்கையில் அவளுக்குப் பிர
சவகாலம் வந்துவிட்டது. அவள் தன் முதற்
7 பேரான குமாரனைப் பெற்றுச் சத்திரத்திலே
அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால்
பிள்ளையைத் துணிகளில் சுற்றிப் பசுந்தொட்
டியில் படுக்கவைத்தாள்.
8 அப்பொழுது அந்தப் பக்கங்களிலே
மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி இரவி
லே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டி
ருந்தார்கள். கர்த்தருடைய தூதன் அவர்
9 களிடம் வந்து நின்றான், கர்த்தருடைய மகி

மை அவர்களைச் சுற்றிப் பிரகாசித்தது; அவர்
10 கள் மிகவும் பயந்தார்கள். தெய்வதூதன் அவர்களிடம்: பயப்படாதிருங்கள்; இதோ, பெரிய சந்தோஷத்தை உங்களுக்கு நற் செய்தியாக அறிவிக்கிறேன்; அந்த சந்தோஷம் ஜனத்துக்கெல்லாம் உரியதாகும்.
11 இன்று ஆண்டவராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே
12 பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றிப் பசுத்தொட்டியில் படுக்கவைத்திருக்கக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு
13 அடையாளம் என்றான். அந்தக்ஷணமே பரமசேனைக் கூட்டத்தார் அந்த தூதனுடனே சேர்ந்து:

14 உன்னதத்தில் கடவுளுக்கு மகிமை;
பூமியில் மனிதருக்குள் சமாதானம்,
அவர்கள்மேல் பிரியமாயிருக்கிறார்
என்று சொல்லிக் கடவுளைத் துதித்தார்கள்.

15 தெய்வதூதர்கள் அவர்களைவிட்டுப் பரலோகத்துக்குப் போனபின்பு மேய்ப்பர்கள் ஒருவரை யொருவர் நோக்கி: கர்த்தர் நமக்கு அறிவித்திருக்கிற இச்சம்பவத்தை நாம் பெத்லகேமுக்குப் போய்ப் பார்ப்போம் வா
16 ருங்களென்று சொல்லித் | தீவிரமாய் வந்து மரியம்மாளையும் யோசேப்பையும் பசுத்தொட்டியில் படுத்திருக்கிற குழந்தையை
17 யுங் கண்டார்கள். கண்டு அந்தப் பிள்ளையைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லப்
18 பட்ட செய்தியை அறிவித்தார்கள். இதைக் கேட்ட யாவரும் மேய்ப்பர் தங்களுக்குச் சொன்னவற்றைக்குறித்து ஆச்சரியப்பட்
19 டார்கள். மரியம்மாளோ அந்தச் செய்திகள் எல்லாவற்றையும் தன் இருதயத்திலே வைத்துச் சிந்தித்துக்கொண்டிருந்தாள்.
20 மேய்ப்பரும் தங்களுக்குச் சொல்லப்பட்டதின்படியே கேட்டுக் கண்ட எல்லாவற்றையும்பற்றிக் கடவுளை மகிமைப்படுத்தித் துதித்துக்கொண்டு திரும்பிப்போனார்கள்.

21 பிள்ளைக்கு விருத்தசேதனஞ் செய்ய வேண்டிய எட்டாம்நாளிலே, அது கர்ப்பத்தில் உற்பவிக்கிறதற்குமுன் தெய்வதூதன் சொல்லியிருந்தபடியே அதற்கு இயேசு என்று பேரிட்டார்கள்.

22 மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படியே அவர்களுடைய சுத்திகரிப்பு நாட்கள்
23 நிறைவேறினபோது | முதற்பேறான எந்த ஆணும் கர்த்தருக்குப் பரிசுத்தமானதெனப்படும் என்று கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி அவரைக் கர்த்
24 தருக்கென்று ஒப்புக்கொடுக்கவும் | கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் சொல்லியிருக்கிறபடி ஒரு ஜோடு காட்டுப் புறாவையாவது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது பலியாகச் செலுத்தவும் அவரை எருசலே
25 முக்குக் கொண்டுபோனார்கள். அப்பொழுது சிமியோன் என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் எருசலேமிலிருந்தான்; அவன் நீதியும் பக்தியும் உள்ளவன், இஸ்ரவேலின் ஆறுதல் வரக் காத்திருந்தவன்;
26 அவன்மேல் பரிசுத்த ஆவி இருந்தார். கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணத்தைக் காணமாட்டாயென்று பரிசுத்த ஆவியினாலே அவனுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவன் ஆவியின் ஏவுதலினால்
27 தெய்வாலயத்திலே வந்திருந்தான். இயேசு என்னும் பிள்ளையின் விஷயமாய் நியாயப்பிரமாண முறைமையின்படி செய்வதற்குப் பெற்றோர் அவரை உள்ளே கொண்டுவருகையில் | அவன் அவரைத் தன் கைகளில்
28 ஏந்திக்கொண்டு கடவுளை ஸ்தோத்திரித்து:

29 ஆண்டவரே, இப்பொழுது உமது வார்த்தையின்படி
உமது அடியேனைச் சமாதானமாய்ப் போகவிடுகிறீர்;
30 புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும்
உமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும்
31 சகல ஜனங்களுக்கு முன்பாக
32 நீர் ஆயத்தம்பண்ணின உமது இரட்சணியத்தை
என் கண்கள் கண்டன
என்றான்;

33 அவரைக்குறித்துச் சொல்லப்பட்டவைகளைப்பற்றி அவருடைய தாயும் [1]தகப்பனாரும் ஆச்சரியப்பட்டார்கள். சிமியோன்
34 அவர்களை ஆசீர்வதித்து அவருடைய தாயாராகிய மரியம்மாளை நோக்கி: இதோ, அநேகருடைய இருதய சிந்தனைகள் பகிரங்கமாகும் வண்ணம் இஸ்ரவேலில் அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும் எதிர்பேசப்படும் அடையாளமாவதற்கும் இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். உன் ஆத்து
35 மாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும் என்றான். ஆசேருடைய கோத்திரத்தானும்
36 பானுவேலின் மகளுமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசினி இருந்தாள்; அவள் கன்னிப்பிராயத்தில் விவாகமானது முதல் ஏழு வருஷம் புருஷனோடு வாழ்ந்த
37 வள்; அதிக வயதுசென்றவள், எண்பத்து

---

1 யோசேப்பு என்பதும் சில பிரதிகளில் உண்டு.

காலு வருஷ விதவை. அவள் தெய்வால
யத்தைவிட்டு நீங்காமல் இரவும்பகலும்
உபவாசித்து ஜெபம்பண்ணி ஆராதனை
38 செய்துகொண்டிருந்தாள். அவளும் அந்
நேரத்திலே வந்து நின்று கடவுளைப்
புகழ்ந்து எருசலேமுக்கு மீட்புண்டாகக்
காத்திருந்த யாவருக்கும் அவரைக்குறித்
39 துப் பேசினாள். கர்த்தருடைய நியாயப்
பிரமாணத்தின்படி எல்லாவற்றையும் அவர்
கள் செய்து முடித்தபின்பு கலிலேயா நாட்
டிலுள்ள தங்கள் ஊராகிய நாசரேத்துக்
குத் திரும்பிப்போனார்கள்.
40 பிள்ளையோ வளர்ந்து பலங்கொண்டு
ஞானத்தினால் நிறைந்தது. கடவுளுடைய
கிருபையும் அவர்மேல் இருந்தது.
41 அவர் பெற்றோர் வருஷந்தோறும் பஸ்
காபண்டிகைக்கு எருசலேமுக்குப் போ
42 வார்கள். அவருக்குப் பன்னிரண்டு வய
தானபோது அவர்கள் அந்தப் பண்டிகை
43 முறைமையின்படிபோய்ப் | பண்டிகை
நாட்கள் முடிந்தபின் திரும்புகையில்
இயேசுவென்னும் பிள்ளையாண்டான் எருச
லேமில் இருந்துவிட்டார்; இது அவர்
பெற்றோருக்குத் தெரியாதுபோயிற்று.
44 அவர் பிரயாணக்காரர் கூட்டத்தில் இருப்
பாரென்று அவர்கள் நினைத்து ஒருநாள்
பிரயாணம் வந்து உறவின் முறையாரிடத்
திலும் அறிமுகமானவர்களிடத்திலும் அவ
45 ரைத் தேடினார்கள். காணுதலினாலே அவ
ரைத் தேடிக்கொண்டே எருசலேமுக்குத்
46 திரும்பிப்போனார்கள். மூன்றுநாளைக்குப்
பின் அவர் தெய்வாலயத்தில் போதகர் நடு
வில் உட்கார்ந்திருக்கவும் அவர்கள் பேசு
கிறதைக் கேட்கவும் அவர்களை விசுவாசம்
47 கண்டார்கள். அவர் பேசக்கேட்ட யாவ
ரும் அவர் அறிவையும் அவர் பகர்ந்த
விடைகளையும் பார்த்துப் பிரமித்தார்கள்.
48 தாய் தகப்பன்மாரும் அவரைக்கண்டு ஆச்
சரியப்பட்டார்கள். அப்பொழுது அவரு
டைய தாயார் அவரை நோக்கி: மகனே,
ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்?
இதோ, உன் தகப்பனும் நானும் விசாரத்
தோடே உன்னைத் தேடினோமே என்றாள்.
49 அதற்கு அவர்: நீங்கள் ஏன் என்னைத் தேடி
னீர்கள்? என் [1]பிதாவின் வீட்டில் நான்
இருக்கவேண்டியதென்று அறியீர்களோ
50 என்றார். அவர் தங்களுக்குச் சொன்ன
வார்த்தையை அவர்கள் உணர்ந்துகொள்
51 ளவில்லை. பின்பு அவர்களோடு போய்
நாசரேத்தூரில் சேர்ந்து அவர்களுக்கு
அடங்கி நடந்துவந்தார். அவர் தாயாரோ
இந்தச் சங்கதிகளையெல்லாம் தன்னிருதயத்
திலே வைத்துக் காத்துக்கொண்டாள்.
52 இயேசு ஞானத்திலும் தேகவளர்த்தியிலும்
அதிகரித்துக் கடவுளுக்கும் மனிதருக்கும்
பிரியராக மென்மேலும் வளர்ந்துவந்தார்.

**3** திபேரியுராயன் ராஜ்யபாரம் பண்ணின
பதினைந்தாம் வருஷம் வனந்தரத்திலே சகரி
யாவின் குமாரன் யோவானுக்குக் கடவுளின்
2 வார்த்தை வந்தது. அக்காலத்தில் பொந்தியு
பிலாத்து யூதேயாவில் தேசாதிபதியும் ஏரோ
து கலிலேயாவில் [2]சிற்றரசனும் அவன்
சகோதரனுமாகிய பிலிப்பு இத்துரேயா திரா
கோனித்தி நாடுகளில் சிற்றரசனும் லிசா
னியா அபிலேனேயில் சிற்றரசனுமாயிருக்
தார்கள்; அன்னாவும் காய்பாவும் பிரதான
ஆசாரியராயிருந்தார்கள். யோவான்
3 யோர்தானுக்கடுத்த சுற்றுப்புறமெங்கும்
போய்ப் பாவ மன்னிப்புக்கென்று மனந்தி
ரும்புதலுக்குரிய ஞானஸ்நானத்தைக் குறித்
துப் பிரசங்கித்து வந்தான். அவன் பிரசங்
4 கித்தது ஏசாயா தீர்க்கதரிசியினுடைய
வாக்கியங்களின் ஆகமத்தில் எழுதியிருக்கிற
பிரகாரமே. அதாவது:

கர்த்தரின் வழியை ஆயத்தப்படுத்துங்
கள்,
அவர் பாதைகளைச் செவ்வை பண்ணுங்
கள்,
5 பள்ளங்களெல்லாம் நிரப்பப்படும், சகல
மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்படும்,
கோணலானவைகள் செவ்வையாகும்,
கரடானவைகள் சமவழிகளாகும்,
6 மாம்சமான யாவரும் கடவுளின் இரட்
சிப்பைக் காண்பார்கள்

என்று வனந்தரத்திலே கூப்பிடுகிறவனு
டைய சத்தம்

7 என்பதே. அவன் தன்னிடம் ஞானஸ்
நானம் பெறும்படிக்குப் புறப்பட்டு வந்த
திரளான ஜனங்களைப்பார்த்து: விரியன்
பாம்புக்குட்டிகளே! வருங்கோபத்துக்குத்
தப்பித்துக்கொள்ள உங்களுக்கு வகை
8 காட்டினவன் யார்? மனந்திரும்புதலுக்கு
ஏற்ற கனிகளைக் கொடுங்கள்; ஆபிரகாம்
எங்களுக்குத் தகப்பனென்று உங்களுக்குள்
ளே சொல்லிக்கொள்ளத் தொடங்கவேண்
டாம்; கடவுள் இந்தக் கற்களிலிருந்து
ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை எழுப்பவல்ல

---

1 பிதாவுக்குரியவைகளில் என்னும் திருப்பலாம்.

2 சிற்றரசன் என்னும் பதம் கிரேக்கில் தால் பங்கு தேசாதிபதியெனப் பொருள்படும்.

வர் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.
9 இப்பொழுதே கோடரி மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; நல்ல கனி கொ
டாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியி
10 லேபோடப்படும் என்றான். இதைக்கேட்ட ஜனங்கள்: அப்படியானால் நாங்கள் என்ன
11 செய்யவேண்டுமென்று கேட்க | அவன் அவர்களிடம்: இரண்டு அங்கிகளையுடைய வன் இல்லாதவனுக்குக் கொடுக்கவேண்டும்; ஆகாரத்தையுடையவனும் அ ப் ப டி ே ய
12 செய்யவேண்டும் என்றான். ஆயக்காரரும் ஞானஸ்நானம் பெற வந்து அவனிடம்: போதகரே, நாங்கள் என்ன செய்யவேண்டு
13 மென்று கேட்க | அவன்: உங்களுக்குக் குறித்திருக்கிறதற்கு அதிகமாய் ஒன்றும்
14 வாங்காதிருங்கள் என்றான். போர்ச்சேவகரும் அவனை நோக்கி: நாங்கள் என்ன செய்யவேண்டுமென்று கேட்க அவன்: நீங்கள் இடுக்கண் செய்து பொய்க்குற்றஞ் சாட்டிப் பொருள் பறிக்காமல் உங்கள் சம்பளமே போதுமென்றிருங்கள் என்றான்.
15 ஜனங்கள் எதிர்பார்த்திருக்கவே, யோவான் கிறிஸ்துதானே என்று எல்லாரும் தங்கள் இருதயங்களில் ஆலோசித்துக்
16 கொண்டிருக்கையில் | யோவான் எல்லாரையும் பார்த்து: நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரனல்ல, அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுப்
17 பார். அவர் களத்தை முற்றும் விளக்கத் தூற்றுக்கூடை அவர் கையிலிருக்கிறது, கோதுமையைத் தமது களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினி
18 யினால் சுட்டெரிப்பார் என்றான். வேறு அநேக புத்திமதிகளையுஞ் சொல்லி ஜனங்களுக்கு நற்செய்தியைப் பிரசங்கித்தான்.
19 ஏரோது சிற்றரசன் தன் சகோதரன் மனைவி ஏரோதியாளினிமித்தமாகவும் தான் செய்த மற்றப் பொல்லாங்குகளினிமித்தமாகவும் யோவானாலே கண்டிக்கப்பட்ட
20 போது, தான் செய்த மற்றெல்லாப் பொல்லாங்குகளோடுங்கூட யோவானையும் காவலில் அடைத்துவைத்தான்.
21 ஜனங்களெல்லாரும் ஞானஸ்நானம் பெற்றபோது இயேசுவும் ஞானஸ்நானம் பெற்று ஜெபம் பண்ணுகையில் வானம் திறவுண்
22 டது; பரிசுத்த ஆவி புருஷரூபங்கொண்டு அவர்மேல் இறங்குகையில் வானத்திலிருந்து ஒரு சத்தம் பிறந்து: நீர் என் நேசகுமாரன்; உம்மில் [1]பிரியமாயிருக்கிறேன் என் று உரைத்தது.

ஊழிய ஆரம்பகாலத்தில் இயேசு ஏறக் 23
குறைய முப்பது வயதுள்ளவராயிருந்தார். அவர் யோசேப்பின் குமாரன் என்று எண்ணப்பட்டார்; அந்த யோசேப்பு ஏலியின் குமாரன்; ஏலி மாத்தாத்தின் குமாரன்; மாத் 24
தாத்து லேவியின் குமாரன்; லேவி மெல்கியின் குமாரன்; மெல்கி யன்னையின் குமாரன்; யன்னை யோசேப்பின் குமாரன்; யோ 25
சேப்பு மத்தத்தியாவின் குமாரன்; மத்தத்தியா ஆமோசின் குமாரன்; ஆமோஸ் நாகூமின் குமாரன்; நாகூம் எஸ்லியின் குமாரன்; எஸ்லி நங்காயின் குமாரன்; நங்காய் மாகாத் 26
தின் குமாரன்; மாகாத் மத்தத்தியாவின் குமாரன்; மத்தத்தியா சேமேயின் குமாரன்; சேமேய் யோசேக்கின் குமாரன்; யோசேக்கு யோதாவின் குமாரன்; யோ 27
தா யோவனானின் குமாரன்; யோவனான் ரேசாவின் குமாரன்; ரேசா சொரொபாபேலின் குமாரன்; சொரொபாபேல் சலாத்தியேலின் குமாரன்; சாலாத்தியேல் நேரியின் குமாரன்; நேரி மெல்கியின் குமாரன்; 28
மெல்கி அத்தியின் குமாரன்; அத்தி கோசாமின் குமாரன்; கோசாம் எல்மாதாமின் குமாரன்; எல்மாதாம் ஏரின் குமாரன்; | ஏர் ஏசுவின் குமாரன்; ஏசு எலியேசரின் 29
குமாரன்; எலியேசர் யோரீமின் குமாரன்; யோரீம் மாத்தாத்தின் குமாரன்; மாத்தாத் லேவியின் குமாரன்; லேவி சிமியோனின் 30
குமாரன்; சிமியோன் யூதாவின் குமாரன்; யூதா யோசேப்பின் குமாரன்; யோசேப்பு யோனானின் குமாரன்; யோனும் எலியாக்கீமின் குமாரன்; எலியாக்கீம் மெலெயாவின் 31
குமாரன்; மெலெயா மென்னாவின் குமாரன்; மென்னா மாத்தாத்தாவின் குமாரன்; மாத்தாத்தா நாத்தாமின் குமாரன்; நாத்தாம் தாவீதின் குமாரன்; தாவீது ஈசாயின் குமா 32
ரன்; ஈசாய் யோபேதின் குமாரன்; யோபேத் போவாசின் குமாரன்; போவாஸ் சாலாவின் குமாரன்; சாலா நகசோனின் குமாரன்; நகசோன் அமினதாபின் குமாரன்; அமின 33
தாப் அத்மீனின் குமாரன்; அத்மீன் ஆர்னியின் குமாரன்; ஆர்னி எஸ்ரோமின் குமாரன்; எஸ்ரோம் பாரேசின் குமாரன்; 34
பாரேஸ் யூதாவின் குமாரன்; யூதா யாக்கோபின் குமாரன்; யாக்கோப் ஈசாக்கின் குமாரன்; ஈசாக்கு ஆபிரகாமின் குமாரன்;

[1] பிரியங்கொண்டேன் என்றும் திருப்பலாம்.

ஆபிரகாம் தேராவின் குமாரன்; தேரா
35 நாகோரின் குமாரன்; | நாகோர் சேரூக்
கின் குமாரன்; சேரூக் ராகெளவின் குமா
ரன்; ராகெள பாலேக்கின் குமாரன்; பா
லேக் ஏபேரின் குமாரன்; ஏபேர் சாலா
36 வின் குமாரன்; | சாலா காயினனின் குமா
ரன்; காயினன் அர்ப்பகசாத்தின் குமாரன்;
அர்ப்பகசாத் சேமின் குமாரன்; சேம் நோ
வாவின் குமாரன்; நோவா லாமேக்கின் குமா
37 ரன்; லாமேக்கு மெத்தூசலாவின் குமாரன்;
மெத்தூசலா ஏனேக்கின் குமாரன்; ஏனே
க்கு யாரேதின் குமாரன்; யாரேத் மலேலெயே
லின் குமாரன்; மலேலெயேல் காயினனின்
குமாரன்; காயினன் ஏனேசின் குமாரன்; |
38 ஏனேஸ் சேத்தின் குமாரன்; சேத் ஆதா
மின் குமாரன்; ஆதாம் கடவுளின் குமாரன்.

**4** இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்த
வராய் யோர்தானிலிட்டுத் திரும்பினார்.
2 நாற்பதுநாள் பிசாசு அவரைச் சோதிக்கை
யில் ஆவியானவர் அவரை வனாந்தரத்தில்
நடத்திவந்தார். அந்நாட்களில் அவர் ஒன்
றுஞ் சாப்பிடவில்லை; அவை முடியவே அவ
3 ருக்குப் பசித்தது. அப்பொழுது பிசாசு
அவரிடம்: நீர் தெய்வகுமாரனேயானால் இந்
தக் கல் அப்பமாகும்படி சொல்லும் என |
4 இயேசு: மனுஷன் பிழைப்பது ஆகாரத்
தினால் மாத்திரமல்ல என்று எழுதியிருக்
5 கிறது என்றார். பின்பு பிசாசு அவரை
[1]உயரக் கொண்டுபோய் உலகத்தின் சகல
ராஜ்யங்களையும் ஒரு கணப்பொழுதிலே
6 அவருக்குக் காட்டி: இந்த அதிகாரம் முழு
மையையும் இவற்றின் மகிமையையும் உமக்
குத் தருவேன்; அது எனக்கு ஒப்புக்கொடுக்
கப்பட்டிருக்கிறது; எனக்கு இஷ்டமான
7 வனுக்கு அதைக் கொடுக்கிறேன். நீர்
என்னை விழுந்து பணிந்துகொண்டால் எல்
லாம் உம்முடையதாகும் என்று சொன்
8 னான். அதற்கு இயேசு: உன் கர்த்தராகிய
கடவுளைப் பணிந்துகொண்டு அவர் ஒருவ
ருக்கே ஆராதனை செய் என்று எழுதியிருக்
9 கிறதே யென்றார். அப்பொழுது அவன்
அவரை எருசலேமுக்குக் கொண்டுபோய்த்
தெய்வாலயத்தி உப்பரிகையின்மேல்
அவரை நிறுத்தி: நீர் தெய்வ குமாரனே
யானால் இங்கிருந்து கீழே குதித்துவிடும்.
10 உம்மைப் பாதுகாக்கும்படி
தமது தூதருக்கு உம்மைக் குறித்துக்
கட்டளையிடுவார்
என்றும்
11 உமது பாதம் கல்லில் படாதபடி
அவர்கள் உம்மைத் தங்கள் கைகளில்
ஏந்திக்கொள்வார்கள்
என்றும் எழுதியிருக்கிறதென்று சொல்ல |
12 இயேசு அவனிடம்: உன் கர்த்தராகிய கட
வுளைச் சோதியாதே என்றும் சொல்லியிருக்
13 கிறதே என்றார். பிசாசு சோதனையெல்
லாம் முடித்தபின்பு [2]சிலகாலம் அவரை
விட்டு விலகிப்போனான்.
14 பின்பு இயேசு ஆவியின் வல்லமையுடை
யவராய்க் கலிலேயாவுக்குத் திரும்பிப்
போனார். அவர் பிரஸ்தாபம் சுற்றுப்புற
15 மெங்கும் எட்டினது. அவர்களுடைய
ஜெபாலயங்களில் அவர் உபதேசித்துவந்
தார்; எல்லாரும் அவரைப் புகழ்ந்தார்கள்.
16 தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு
அவர் வந்து தமது வழக்கத்தின்படியே
ஓய்வுநாளில் ஜெபாலயத்தினுட்சென்று
17 வாசிக்க எழுந்து நின்றார். ஏசாயா தீர்க்க
தரிசியின் புஸ்தகத்தை அவரிடங் கொடுத்
தார்கள். அவர் புஸ்தகத்தை விரித்து:
18 கர்த்தருடைய ஆவி என்மேலிருக்கிறது;
தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்
கிக்க அவர் என்னை அபிஷேகம் பண்ணி
னாரே.[3]
சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும்
குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்
படுத்தவும்
நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்
19 கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப்
பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்பினார்
என்று எழுதியிருக்கிற இடத்தை அவர்
20 கண்டு | வாசித்துப் புஸ்தகத்தைச் சுருட்
டிப் பணிவிடைக்காரனிடங் கொடுத்து
உட்கார்ந்தார். ஜெபாலயத்திலுள்ள எல்லா
21 ருடைய கண்களும் அவர்மேலேயே நோக்
கமாயிருந்தன. அப்பொழுது அவர் அவர்
களோடே பேசத் தொடங்கி: உங்கள் காது
22 கள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றை
யதினம் நிறைவேறிற்று என்றார். எல்லா
ரும் அவரை மெச்சி அவருடைய வாயி
லிருந்து வந்த அருள்மொழிகளைக் கேட்டு
ஆச்சரியப்பட்டு: இவன் யோசேப்பின்
23 குமாரனல்லவா என்றார்கள். அவர் அவர்
களிடம்: வைத்தியனே, உன்னைத்தானே
குணமாக்கிக்கொள் என்கிற பழமொழியை
நீங்கள் சொல்லி, நாங்கள் கேள்விப்பட்ட
படி கப்பர்நகூமில் செய்த கிரியைகள்

---

[1] உயர்ந்த மலையின்மேல் என்பது சில பிரதிகளில் உண்டு. [2] சமயம் வரக்கும்வரை என்றும் இருப்ப
லாம். [3] இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும் என்பதும் சில பிரதிகளில் உண்டு.

எவைகளோ அவைகளே உன் சொந்த ஊராகிய இவ்விடத்திலும் செய் என்று என்னிடம் சொல்லுவீர்களென்பது நிச்சயம்.
24 நானே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்: தீர்க்கதரிசி ஒருவனும் சொந்த
இடத்தில் அங்கீகரிக்கப்படமாட்டான்.
25 உண்மையில் உங்களுக்குச் சொல்லுகிறேன்; எலியாவின் நாட்களிலே மூன்று வருஷமும் ஆறுமாதமும் வானம் அடைபட்டுத் தேச மெங்கும் மிகுந்த பஞ்சமுண்டாயிருந்த போது இஸ்ரவேலருக்குள் அநேக விதவை
26 களிருந்தார்கள். ஆயினும் அவர்களுள் ஒருத்தியிடமும் எலியா அனுப்பப்படாமல் சீதோன் நாட்டிலுள்ள சரெப்தா ஊரிலிருந்த ஒரு விதவையினிடத்திற்கே அனுப்
27 பப்பட்டான். அல்லாமலும், எலிசா தீர்க்கதரிசியின் காலத்தில் இஸ்ரவேலருக்குள்ளே அநேகம் குஷ்டரோகிகள் இருந்தார்கள்; அவர்களிலோ ஒருவனும் சுத்தமாக்கப்படவில்லை, சீரியா தேசத்தானாகிய நாகமானே
28 சுத்தமாக்கப்பட்டான் என்றார். ஜெபாலயத்திலிருந்த யாவரும் இவைகளைக் கேட்ட
29 பொழுது கோபமூண்டு | எழுந்திருந்து தங்கள் ஊர் கட்டியிருந்த மலையில் ஊருக்கு வெளியே செங்குத்தான இடமட்டும் அவரைத் தள்ளிக்கொண்டுபோய் அங்கிருந்து
30 கீழே தள்ளிவிடப் பார்த்தார்கள். அவரோ அவர்கள் நடுவே நடந்துபோய்விட்டார்.
31 பின்பு அவர் கலிலேயாவிலுள்ள கப்பர்நகூம் ஊருக்கு வந்து ஓய்வுநாட்களில் ஜனங்
32 களுக்குப் போதகம் பண்ணினார். அவர் பேசினது அதிகாரமுள்ளதாயிருந்தபடியால் அவருடைய போதகத்தைக்குறித்து
33 அவர்கள் பிரமித்தார்கள். ஜெபாலயத்திலே அசுத்தப் பேய் என்னும் ஆவி பிடித்திருந்த
34 ஒரு மனுஷன் இருந்தான். அவன்: ஐயோ! நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்குமென்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னாரென்று அறிவேன், நீர் கடவுளின் பரிசுத்தர் என்று சத்தமிட்
35 டுச் சொல்லவே | இயேசு: நீ பேசாதே, இவனைவிட்டு வெளியே போ என்று அதை அதட்டினார்; அப்பொழுது பேய் அவனை மத்தியில் விழுத்தள்ளி அவனுக்கு ஒரு சேத முஞ் செய்யாமல் அவனைவிட்டுப் போய்
36 விட்டது. எல்லாரும் பிரமித்து: இது என்ன வார்த்தையோ! அதிகாரத்தோடும் வல்லமையோடும் அசுத்த ஆவிகளுக்குங் கட்டளையிடுகிறார்; அவைகளும் வெளியேறுகின்றனவே என்று ஒருவரோடொருவர்
37 பேசிக்கொண்டார்கள். அவர் பிரஸ்தாபம் சுற்றுப்புறமெங்கும் எட்டினது.

பின்பு அவர் எழுந்து ஜெபாலயத்தை 38
விட்டுப்போய்ச் சீமோன் வீட்டிற்குட்சென்றார்; சீமோனுடைய மாமி கொடிய காய்ச்சலாய்ப் படுத்திருந்தாள். அவளுக்காக
அவரை வேண்டிக்கொள்ள | அவர் அவ 39
ளிடங் குனிந்து நின்று காய்ச்சல் நீங்கும்படி அதட்டினார், அது அவளைவிட்டு நீங்கிற்று; உடனே அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்.
சூரியன் அஸ்தமித்தது; அப்பொழுது 40
நானாவித வியாதிகளால் வருந்தினவர்கள் எவர்களிடம் இருந்தார்களோ அவர்கள் அந்நோயாளிகளை அவரிடங் கொண்டுவந்தார்கள். அவர் அவர்கள் ஒவ்வொருவர் மீதும் தமது கரங்களை வைத்து அவர்களைக் குணமாக்கிவந்தார். பேய்களும்: நீர் தெய்வ 41
குமாரன் என்று சத்தமிட்டு அநேகரை விட்டு வெளிப்பட்டன. அவரைக் கிறிஸ்து என்று பேய்கள் அறிந்திருந்தபடியால் அவைகளைப் பேசவொட்டாமல் அதட்டினார்.
உதயமானபோது அவர் வீட்டைவிட்டு 42
வனாந்தரமான ஓரிடத்திற்குப் போனார். திரளான ஜனங்கள் அவரைத் தேடி அவரிடம் வந்து தங்களைவிட்டுப் போகாதபடி நிறுத்திக்கொள்ளப் பார்த்தார்கள். அவரோ 43
அவர்களை நோக்கி: நான் மற்ற ஊர்களிலும் கடவுளின் ராஜிய நற்செய்தியைப் பிரசங்கிக்கவேண்டும், இதற்காகவே அனுப்பப்பட்டேனென்று சொல்லிப்போய் | யூதேயா 44
வின் ஜெபாலயங்களில் பிரசங்கித்துவந்தார்.

பின்பு அவர் கெனேசரேத்துக் கட **5**
லருகே நின்றபோது திரளான ஜனங்கள் கடவுளின் வசனத்தைக் கேட்கும்படி அவரிடம் நெருங்கி வந்தார்கள். அப்பொழுது 2
கடற்கரையிலே நின்ற இரண்டு படவுகளைக் கண்டார். மீன் பிடிக்கிறவர்கள் அவைகளை விட்டிறங்கி வலைகளை அலசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அந்தப் படவு 3
களில் ஒன்றில் ஏறினார்; அது சீமோனுடையது, அதைக் கரையிலிருந்து சற்றே தள்ளும்படி அவனைக் கேட்டுக்கொண்டு அந்தப் படவிலுட்கார்ந்து ஜனங்களுக்குப்
போதகம்பண்ணினார். அவர் போதகம் 4
பண்ணி முடித்தபின்பு சீமோனிடம்: ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய் மீன்பிடிக்கும்படி உங்கள்வலைகளைப்போடுங்கள் எனச் |
சீமோன்: ஐயனே இராமுழுவதும் நாங் 5
கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை, ஆகிலும் உமது சொற்படியே வலை
களைப் போடுகிறேனென்றான். அந்தப் 6

படியே அவர்கள் செய்து மிகுதியான மீன்
கனைப் பிடித்தார்கள்; வலைகளும் கிழியத்
7 தொடங்குகையில் | வேறே படவிலிருந்த
கூட்டாளிகள் வந்து தங்களுக்கு உதவிசெய்
யும்படி சைகை காட்டினார்கள்; அவர்கள்
வந்து இருபடவுகளும் அமிழத்தக்கதாக
8 நிரப்பினார்கள். அவர்கள் திரளான மீன்
கனைப் பிடித்தது கண்டு சீமோன் பேதுருவும்
9 அவனோடிருந்த யாவரும் | மற்றும் அவன்
கூட்டாளிகளான செபெதேயுவின் குமாரர்
யாக்கோபும் யோவானும் பிரமித்துப்போ
10 னார்கள். பேதுருவோ இயேசுவின் காலில்
விழுந்து: ஐயனே, நான் பாவியான மனு
ஷன், நீர் என்னைவிட்டுப் போகவேண்டும்
என இயேசு: பயப்படாதே இதுமுதல் நீ
மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்று
11 அவனிடம் சொன்னார். அப்போது அவர்
கள் படவுகனைக் கரையில் கொண்டுபோய்
நிறுத்தி எல்லாவற்றையும் விட்டு அவரைப்
பின்பற்றினார்கள்.

12 பின்பு அவர் ஓர் ஊரில் இருக்கையில்,
இதோ, குஷ்டரோகம் நிறைந்த ஒரு மனு
ஷன் வந்தான். அவன் இயேசுவைக் கண்டு
முகங்குப்புற விழுந்து: ஐயனே, உமக்குச்
சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மா
லாகும் என்று அவரை வேண்டிக்கொண்
13 டான். அவர் தமது கையை நீட்டி அவ
னைத் தொட்டு: எனக்குச் சித்தந்தான், சுத்த
14 மாகு என்றார். உடனே குஷ்டரோகம்
அவனைவிட்டு நீங்கிற்று. அவர் அவனை
நோக்கி: நீ இதை ஒருவருக்குஞ் சொல்லா
மல் போய் உன்னை ஆசாரியனுக்குக் காண்
பித்து நீ சுத்தமானதினிமித்தம் மோசே கட்
டளையிட்டபடியே அவர்களுக்குச் சாட்சி
யாகச் செலுத்து என்று கட்டளையிட்டார்.
15 எனினும், அவர் பிரஸ்தாபம் அதிகமாகப்
பரவிற்று. திரள் ஜனங்கள் அவர் உப
தேசத்தைக் கேட்கவும் அவரால் தங்கள்
பிணிகளை நீக்கிக்கொள்ளவும் கூடிவந்தார்
16 கள். அவரோ விலகிப்போய் வனாந்
தரத்தில் ஜெபம்பண்ணிக்கொண்டிருந்
தார்.

17 ஒருநாள் அவர் உபதேசித்துக்கொண்டி
ருக்கும்போது கலிலேயா யூதேயா நாடுகளி
லுள்ள சகல கிராமங்களிலும் எருசலேம்
நகரத்திலுமிருந்து வந்த பரிசேயரும் நியாய
சாஸ்திரிகளும் உட்கார்ந்திருக்கையில் பிணி
யாளிகளைக் குணமாக்கும்படி கர்த்தரின்
18 வல்லமை அவரில் விளங்கிற்று. இதோ,
சில மனுஷர் திமிர்வாதக்காரன் ஒருவனைப்
படுக்கையோடே சுமந்துகொண்டுவந்து
அவனை உள்ளே கொண்டுபோகவும் அவர்
முன்பாக வைக்கவும் வகைதேடினார்கள்.
19 ஜனக்கூட்டத்தினிமித்தம் அவனை உள்ளே
கொண்டுபோக வழிகாணாமல் வீட்டின்மேல்
ஏறித் தட்டோடுகள் வழியாய் இயேசுவுக்கு
முன்பாக அவனைப் படுக்கையோடே மத்தி
20 யில் இறக்கினார்கள். அவர்கள் விசுவா
சத்தை அவர் கண்டு: அப்பா, உன் பாவங்
கள் உனக்கு மன்னிக்கப்பட்டன வென்
21 றார். இதைக் கேட்ட வேதபாரகரும் பரி
சேயரும்: தெய்வதூஷணம் பேசுகிற இவன்
யார்? கடவுள் ஒருவரே யன்றிப் பாவங்
களை மன்னிக்க வல்லவர் யார் என்று சிந்
22 திக்கத் தொடங்கினார்கள். இயேசு அவர்
கள் சிந்தனைகளை யறிந்து அவர்களிடம்:
உங்கள் இருதயங்களில் நீங்கள் சிந்திக்கிற
23 தென்ன? உன் பாவங்கள் உனக்கு மன்
னிக்கப்பட்டனவென்று சொல்வதோ
24 எழுந்து நடவென்று சொல்வதோ, எது
எளிது? என்றார்; பூமியிலே, பாவங்களை
மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகார
முண்டென்பதை நீங்கள் அறியவேண்டு
மென்று சொல்லித் திமிர்வாதக்காரனிடம்:
நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்
கொண்டு உன் வீட்டுக்குப்போ என்று
உனக்குச் சொல்லுகிறேன் என்றார். உடனே
25 அவனும் அவர்கள் முன்பாக எழுந்து தன்
படுக்கையை எடுத்துக்கொண்டு கடவுளை
மகிமைப்படுத்திக்கொண்டு தன் வீட்டுக்குப்
26 போனான். எல்லாரும் திகைத்துப்போனார்
கள், கடவுளை மகிமைப்படுத்தினார்கள்; அல்
லாமலும், அவர்கள் பயம் நிறைந்தவர்
களாகி, விபரீதமான காரியங்களை இன்று
கண்டோமென்றார்கள்.

27 இதன்பின் அவர் வெளியே போனபோது
ஆயச்சாவடியில் உட்கார்ந்திருந்த லேவி
என்னும் ஆயக்காரன் ஒருவனைக்கண்டு:
28 என்னைப் பின்பற்றிவா என்றார். அவன்
எல்லாவற்றையும் விட்டு எழுந்து அவரைப்
29 பின்பற்றிப்போனான். இந்த லேவி தன்
வீட்டிலே அவருக்குப் பெரிய விருந்து
செய்தான். அநேக ஆயக்காரரும் மற்றவர்
களும் அவர்களோடு பந்தியிருந்தார்கள்.
30 அதைக்கண்ட பரிசேயரும் அவர்களைச்
சேர்ந்த வேதபாரகரும் அவர் சீஷரிடம்
முறுமுறுத்து: நீங்கள் ஆயக்காரரோடும்
பாவிகளோடும் போஜனபானம் பண்ணுகிற
31 தென்னவென்றார்கள். இயேசு அவர்களி
டம்: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்
டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு
32 வேண்டியதில்லை. நீதிமான்களையல்ல பாவி
களையே மனந்திரும்ப வேண்டுமென்று
அழைக்க வந்தேன் என்றார்.

33 அவர்களோ அவரிடம்: யோவானுடைய சீஷர் பலமுறை உபவாசித்து ஜெபம்பண்ணிக்கொண்டு வருகிறார்கள், பரிசேயருடைய சீஷரும் அப்படியே செய்கிறார்கள்; உம்முடைய சீஷரோ போஜனபானம் பண்ணுகிறார்களே, அதெப்படியென்று
34 கேட்டார்கள். அதற்கு இயேசு: மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாள
35 ஜுடைய தோழர்களை நீங்கள் உபவாசிக்கச் செய்யலாகுமா? மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும், அந்நாட்
36 களிலே உபவாசிப்பார்கள் என்றார். அவர்களுக்கு ஒரு உவமையையுஞ் சொன்னார்; ஒருவனும் புதிய வஸ்திரத்திலிருந்து ஒரு துண்டைக் கிழித்து அதைப் பழைய வஸ்திரத்தோடு இணைக்கமாட்டான், இணைத்தால் புதியதைக் கிழிப்பான்; புதிய துண்டும்
37 பழைய வஸ்திரத்துக்கு ஒவ்வாது. ஒருவனும் புதுத் திராட்சரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்துவைக்கமாட்டான்; வார்த்துவைத்தால் புதுரசம் துருத்திகளைக் கிழித்துவிடும், கிழிந்துவிடவே இரசமுஞ் சிந்திப்
38 போம் துருத்திகளுங் கெட்டுப்போம். புது ரசத்தைப் புதுத் துருத்திகளில் வார்த்து
39 வைக்கவேண்டும். பழையதைக் குடித்துப் பழகினவன் புதியதை விரும்பமாட்டான், பழையதே நல்லதென்று சொல்லுவான் என்றார்.

**6** ஓர் ஓய்வுநாளிலே அவர் பயிர்வழியே போகையில் அவருடைய சீஷர் கதிர்களைக் கொய்து கைகளினால் நிமிட்டித் தின்றார்
2 கள். பரிசேயரில் சிலர் அவர்களிடம்: ஓய்வுநாளில் செய்யத்தகாததை நீங்கள் செய்
3 கிறதென்னவென்றார்கள். இதைக்கேட்ட இயேசு அவர்களிடம்: தாவீதும் அவனோடிருந்தவர்களும் பசியாயிருந்தபோது அவன் செய்ததை நீங்கள் வாசிக்கவில்லையா? அவன் கடவுளின் வீட்டிற்குட்சென்று ஆசாரியர் மாத்திரமே தவிர வேறெருவரும் புசிக்கத்தகாத தெய்வசமுகத்து அப்பங்களை வாங்
4 கித் | தானும் புசித்துத் தன்னோடிருந்தவர்களுக்குங் கொடுத்தானே என்று கூறி |
5 ஓய்வுநாளுக்கு ஆண்டவர் மனுஷகுமாரனே என்றும் சொன்னார்.
6 வேறெரு ஓய்வுநாளில் அவர் ஜெபாலயத்துக்குட்போய் உபதேசித்தார். அங்கே சூம்பின வலது கையையுடைய ஒரு மனு
7 ஷனிருந்தான். வேதபாரகரும் பரிசேயரும் அவர்மேல் குற்றஞ்சாட்டும் நோக்கமுடையவர்களாய், ஓய்வுநாளில் குணமாக்குவாரோ என்று அவரைக் கவனித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவரோ அவர் 8
கள் சிந்தனைகளையறிந்து சூம்பின கையனைப் பார்த்து: எழுந்து நடுவே நில் என்று சொல்ல அவனும் எழுந்து நின்றான். அப் 9
பொழுது இயேசு அவர்களிடம்: ஓய்வுநாளில் நன்மை செய்வதோ தீமை செய்வதோ, ஜீவனைக் காப்பதோ கொல்வதோ, எது நியாயமென்று உங்களையே கேட்கிறேனென்று சொல்லி | அவர்களெல்லாரையுஞ் 10
சுற்றிப்பார்த்து அந்த மனுஷனிடம்: உன் கையை நீட்டு என்றார்; அவனும் நீட்டினான்; அவன் கை சொஸ்தமாயிற்று. அவர் 11
களோ மூர்க்கவெறிகொண்டு இயேசுவை என்னசெய்யலாமென்று ஒருவரோடொருவர் ஆலோசித்தார்கள்.

அந்நாட்களில் அவர் ஜெபம்பண்ணும் 12
படி ஒரு மலைக்குப்போய் இராமுழுவதும் கடவுளை நோக்கி ஜெபித்துக்கொண்டிருந்தார். பொழுது விடிந்தபோது அவர் தமது 13
சீஷரை வரவழைத்து அவர்களில் பன்னிருவரைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார். அவர்கள்: 14
பேதுரு என்று அவர் பேரிட்ட சீமோன், அவன் சகோதரன் அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு, பர்த்தொலொமேயு, | மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரன் 15
யாக்கோபு, செலோத்தே என்ற சீமோன், | யாக்கோபின் சகோதரன் யூதா, அவரைக் 16
காட்டிக்கொடுத்த யூதா ஸ்காரியோத்து என்பவர்களே.

இவர்களுடனே அவர் இறங்கிச் சம 17
மான ஒரு இடத்திலே நின்றார். அவருடைய சீஷரில் அநேகரும் யூதேயா முழுமையிலும் எருசலேமிலும் தீருசீதோன் கடற்கரைகளிலுமிருந்து ஏராளமான ஜனங்களும் அங்கிருந்தார்கள். அவர் உபதேசத்தைக் கேட்கவும் தங்கள் பிணிகளைத் தீர்த்துக் கொள்ளவும் இவர்கள் எல்லாரும் வந்திருந்தார்கள். அசுத்த ஆவிகளால் வாதிக்கப் 18
பட்டவர்களும் வந்து ஆரோக்கியமடைந்தார்கள். அவரிடமிருந்து வல்லமை புறப் 19
பட்டு எல்லாரையுங் குணமாக்கினபடியினாலே ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படி பிரயாசப்பட்டார்கள்.

அப்பொழுது அவர் கண்களை ஏறெடுத்து 20
தமது சீஷரைப்பார்த்து:

தரித்திரராகிய நீங்கள் பாக்கியவான்கள், கடவுளின் ராஜ்யம் உங்களுடையது.

இப்பொழுது பசியாயிருக்கிற நீங்கள் 21
பாக்கியவான்கள், நீங்கள் திருப்தியடைவீர்கள்.

இப்பொழுது அழுகிற நீங்கள் பாக்கிய
வான்கள், நீங்கள் நகைப்பீர்கள்.
22 மனுஷகுமாரன் நிமித்தமாக ஜனங்கள்
உங்களைப் பகைத்து, உங்களை விலக்கி
வைத்து, உங்களை நிந்தித்து, உங்கள் நாமத்
தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்போது
23 நீங்கள் பாக்கியவான்கள். அந்நாளிலே மன
மகிழ்ந்து துள்ளிக் குதியுங்கள்; பரலோகத்
தில் உங்கள் பலன் மிகுதியாம். அவர்கள்
பிதாக்கள் தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே
செய்தார்கள்.
24 ஆனாலோ, ஐசுவரியவான்களே, ஐயோ
உங்களுக்குக் கேடாம், நீங்கள் உங்கள்
ஆறுதலை அடைந்து தீர்ந்தது.
25 இப்பொழுது நிறைவுள்ளவர்களே,
ஐயோ உங்களுக்குக் கேடாம், பசியாயிருப்
பீர்கள்.
இப்பொழுது நகைக்கிறவர்களே, ஐயோ
உங்களுக்குக் கேடாம், இனித் துக்கப்பட்டு
அழுவீர்கள்.
26 எல்லா மனுஷரும் உங்களைப் புகழ்ந்து
பேசும்போது, ஐயோ உங்களுக்குக் கேடாம்;
அவர்கள் பிதாக்கள் கள்ளத்தீர்க்கதரிசி
27 களுக்கும் அப்படியே செய்தார்கள். கேட்டு
நிற்கும் உங்களுக்கோ நான் சொல்லுகி
றேன்: உங்கள் சத்துருக்களில் அன்புகூருங்
கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்
28 மைசெய்யுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை
ஆசீர்வதியுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்
29 களுக்காக ஜெபம்பண்ணுங்கள். உன்னை
ஒரு கன்னத்தில் அறைகிறவனுக்கு மறு கன்
னத்தையுந் திருப்பிக்கொடு. உன் மேலா
டையை எடுத்துக்கொள்ளுகிறவனை உன்
உள்ளாடையையும் எடுத்துக்கொள்ளத்
30 தடைபண்ணாதே; உன்னிடங் கேட்கிற
வன் எவனுக்குங் கொடு; உன்னுடையதை
எடுத்துக்கொள்ளுகிறவனிடத்தில் அதைத்
31 திரும்பக் கேளாதே. மனுஷர் உங்களுக்கு
எப்படிச் செய்யவேண்டுமென்று விரும்பு
கிறீர்களோ அப்படியே நீங்களும் அவர்
32 களுக்குச் செய்யுங்கள். உங்களிடம் அன்பு
கூருகிறவர்களில் நீங்களும் அன்புகூர்ந்தால்
உங்களுக்குக் கிடைக்கும் நன்றியென்ன?
பாவிகளும் தங்களிடம் அன்புகூருகிறவர்
33 களில் அன்புகூருகிறார்களே. உங்களுக்கு
நன்மைசெய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மை
செய்தால் உங்களுக்குக் கிடைக்கும் நன்றி
யென்ன? பாவிகளும் அப்படியே செய்கி
34 றார்கள். திரும்பக் கொடுப்பார்களென்று
எதிர்பார்த்து நீங்கள் கடன் கொடுத்தால்
உங்களுக்குக் கிடைக்கும் நன்றியென்ன?
பாவிகள் சரியளவாய்த் திரும்பப் பெற்றுக்
கொள்ளும்படி பாவிகளும் பாவிகளுக்குக்
கடன் கொடுக்கிறார்களே. நீங்களோ உங் 35
கள் சத்துருக்களில் அன்புகூருங்கள். நன்
மைசெய்யுங்கள், திரும்பக் கிடைக்கு
மென்று கருதாமல் கடன் கொடுங்கள்; அப்
பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்
கும். நீங்கள் உன்னதமானவருடைய பிள்
ளைகளாயிருப்பீர்கள்; நன்றிகெட்டவர்களுக்
கும் பொல்லாதவர்களுக்கும் அவர் நன்மை
செய்கிறாரே. உங்கள் பிதா இரக்கமுள்ள 36
வராயிருக்கிறதுபோல நீங்களும் இரக்க
முள்ளவர்களாயிருங்கள். நீங்கள் தீர்ப்புச் 37
செய்யாதிருங்கள்; அப்பொழுது நீங்களும்
தீர்ப்புப்பெறவேமாட்டீர்கள். மற்றவர்களை
ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காதிருங்கள், அப்
பொழுது நீங்களும் ஆக்கினைக்குள்ளாகத்
தீர்க்கப்படாதிருப்பீர்கள். விடுதலை பண்
ணுங்கள், அப்பொழுது நீங்களும் விடுதலை
பண்ணப்படுவீர்கள். கொடுங்கள், அப்பொ 38
முது உங்களுக்குங் கொடுக்கப்படும்; அமுக்
கிக் குலுக்கிச் சரிந்துவிழும்படி நன்றாய்
அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள்.
நீங்கள் அளக்கிற அளவின்படியே உங்க
ளுக்கும் அளக்கப்படும் என்றார்.
பின்னும் அவர் ஒரு உவமையை அவர் 39
களுக்குச் சொன்னார்: குருடனைக் குருடன்
வழிநடத்துவானோ? இருவரும் குழியில்
விழுவார்களல்லவா? சீஷன் தன் குருவிலும் 40
மேலானவனல்ல, தேறினவன் எவனும் தன்
குருவைப்போலிருப்பான். நீ உன் கண்ணி 41
லிருக்கிற உத்திரத்தைக் கவனியாமல் உன்
சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப்
பார்க்கிறதென்ன? அல்லது நீ உன் கண்ணி 42
லிருக்கிற உத்திரத்தைப் பாராமலிருந்து
கொண்டு உன் சகோதரனிடத்தில்: சகோத
ரனே, நான் உன் கண்ணிலிருக்கிற துரும்
பை எடுத்துப்போடுகிறேன் பொறு என்று
நீ சொல்வதெப்படி? மாயக்காரனே, முன்பு
உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்
துப்போடு, பின்பு உன் சகோதரன் கண்ணி
லிருக்கிற துரும்பை எடுத்துப்போடத் தெளி
வாய்ப் பார்ப்பாய். நல்ல மரம் கெட்ட 43
கனி கொடாது, கெட்டமரம் நல்ல கனி
கொடாது. அந்தந்த மரம் அதனதன் கனி 44
யினால் அறியப்படும்; முட்செடிகளில் அத்
திப்பழங்களை பறிப்பாருமில்லை, நெருஞ்சில்
செடியில் திராட்சப்பழங்களை அறுப்பாரு
மில்லை. நல்ல மனுஷன் இருதயமாகிய 45
நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்
துக் காட்டுகிறான்: பொல்லாத மனுஷன்
பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்
லாததை எடுத்துக் காட்டுகிறான். இருத

யத்தின் நிறைவிலிருந்து அவனவன் வாய் பேசும்.
46 நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமலிருந்துகொண்டு என்னை ஆண்டவரே,ஆண்
47 டவரே என்று அழைக்கிறதென்ன? என்னிடம் வந்து என் வார்த்தைகளைக் கேட்டு அவைகளின்படி செய்கிறவன் எவனும் யாருக்கு ஒப்பாவானென்று உங்களுக்குக்
48 காட்டுவேன். ஆழமாய்த் தோண்டிக் கற்பாறையின்மேல் அஸ்திபாரம்போட்டு வீடு கட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாவான்; வெள்ளம் வந்து நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும் அதை அசைக்கமுடியாமற்போயிற்று; அது நன்றாய்க் கட்டப்பட்டிருந்
49 ததே. என் வார்த்தைகளைக்கேட்டும் அவைகளின்படி செய்யாதவனே அஸ்திபாரமில்லாமல் பூமியின்மேலே வீடு கட்டினவனுக்கு ஒப்பாவான்; நீரோட்டம் அதின்மேல் மோதவே அது விழுந்தது; வீட்டுச்சேதமும் அதிகமாயிற்று என்றார்.

**7** அவர் தமது வார்த்தைகளையெல்லாம் ஜனங்கள் காது கேட்கச் சொல்லிமுடித்தபின் கப்பர்நகூமுக்குட் சென்றார்.
2 அங்கே நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் ஒருவன் வியாதிப்பட்டு மரண அவஸ்தையிலிருந்தான்; அவன் எஜமானுக்கு அரு
3 மையானவன். அவன் இயேசுவைப்பற்றிக் கேள்விப்பட்டபோது அவர் வந்து தன் வேலைக்காரனைக் குணமாக்கவேண்டுமென்று அவரை வேண்டிக்கொள்ளும்படி யூதரின் மூப்பரிற் சிலரை அவரிடம் அனுப்பினான்.
4 அவர்கள் இயேசுவினிடம் வந்து வருந்தி யழைத்து: நீர் இந்தத் தயவுசெய்கிறதற்கு
5 அவன் பாத்திரன். அவன் நமது ஜனத்தை நேசிக்கிறான், நமக்கு ஒரு ஜெபாலயத்தை
6 யும் கட்டினான் என்றார்கள். இயேசு அவர்களோடு போனார். வீட்டுக்குச் சமீபமான போது நூற்றுக்கதிபதி தன் சிநேகிதர் சிலரையழைத்து: ஐயனே, உமக்கு இந்தத் தொந்தரவுவேண்டாம், நீர் என் வீட்டினுட்
7 பிரவேசிக்க நான் பாத்திரனல்ல; நான் உம்மிடத்தில் வரவும் என்னைப் பாத்திரனாக எண்ணவில்லை; வார்த்தை மாத்திரம் சொல்லும், என் வேலைக்காரன் சொஸ்தமாவான்.
8 நானும் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்ட மனுஷன், எனக்குக் கீழே சேவகருமுண்டு; நான் ஒருவனைப் போவெனப் போகிறான், மற்றொருவனை வாவென வருகிறான்; என் அடிமையை இதைச் செய்யெனச் செய்கிறான் என்று அவரிடஞ் சொல்லும்படி
9 அனுப்பினான். இயேசு இவைகளைக் கேட்டு அவனைக் குறித்து ஆச்சரியப்பட்டுத் திரும்பித் தமக்குப் பின் சென்றுகிற திரள் ஜனங்களை நோக்கி: இஸ்ரவேலிலும் இப்படிப்பட்ட விசுவாசத்தை நான் கண்டதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். 10 அனுப்பப்பட்டவர்கள் வீட்டுக்குத் திரும்பிவந்தபோது வேலைக்காரன் சுகமாகி வருவதைக்கண்டார்கள்.

11 அதற்கப்பால் அவர் நாயீன் என்னும் ஓர் ஊருக்குப் போனார்; அவருடைய சீஷரும் திரளான ஜனங்களும் அவருடன் போனார்கள். 12 அவர் ஊரின் வாசலுக்குச் சமீபமாய் வந்தபோது மரித்துப்போன ஒருவனை அடக்கம்பண்ணும்படி வெளியே கொண்டு வந்தார்கள். அவன் தன் தாய்க்கு ஒரே மகன், அவளும் கைம்பெண்; ஊரில் வெகு ஜனங்கள் அவளுடன் வந்தார்கள். 13 ஆண்டவர் அவளைப்பார்த்து அவள்மேல் மனதுருகி: அழாதே என்று சொல்லிக் கிட்ட 14 வந்து பாடையைத் தொட்டார்; அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள். அப்பொழுது அவர்: வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என | மரித்தவன் 15 எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கினான்; அவனைத் தாயினிடம் ஒப்புவித்தார். 16 எல்லாரும் பயம்பிடித்தவர்களாய்: மகா தீர்க்கதரிசி ஒருவர் நமக்குள் தோன்றியிருக்கிறார், கடவுள் தமது ஜனத்தைச் சந்தித்தாரென்று சொல்லிக் கடவுளை மகிமைப்படுத்தினார்கள். 17 அவரைப்பற்றிய இந்தச் செய்தி யூதேயா நாடு முழுவதிலும் சுற்றுப்புறங்கள் யாவற்றிலும் பிரசித்தமாயிற்று.

18 இவைகளையெல்லாம் யோவானுடைய சீஷர் அவனுக்கு அறிவித்தார்கள். அதைக் கேட்ட யோவான் தன் சீஷரில் இருவரை யழைத்து, 19 ஆண்டவரிடம்: வருகிறவர் நீர் தானோ? அல்லது மற்றொருவரை நாங்கள் எதிர்பார்க்கவோ என்று கேட்க அனுப்பினான். 20 அவர்கள் அவரிடம் வந்து: வருகிறவர் நீர்தானோ, அல்லது மற்றொருவரை நாங்கள் எதிர்பார்க்கவோ என்று கேட்கும்படி யோவான்ஸ்நானகன் எங்களை உம்மிடம் அனுப்பினார் என்றார்கள். 21 அந்தச் சமயத்திலே நோய்களையும் கொடிய வியாதிகளையும் பொல்லாத ஆவிகளையுங்கொண்டிருந்த அநேகரை அவர் குணமாக்கி அநேகங் குருடருக்குப் பார்வையளித்தார். 22 அவர் அவர்களைப்பார்த்து: நீங்கள் போய்க் கண்டவைகளையுங் கேட்டவைகளையும் யோவானுக்கு அறிவியுங்கள்; குருடர் பார்வையடைகிறார்கள, சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கி

ரூர்கள், மரித்தோர் எழுப்பப்படுகிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படு
23 கிறது. என் நிமித்தம் இடறல் படாதவன் எவனே அவன் பாக்கியவான் என்றார்.

24 யோவானுடைய தூதர் போனபின்பு அவர் யோவானைக்குறித்து ஜனக்கூட்டத்தாரிடம் பேசத்தொடங்கி: எதைப்பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்? காற்றினால்
25 அசையும் நாணலையோ? அல்லவென்றால் எதைப்பார்க்கப் போனீர்கள்? மெல்லிய வஸ்திரந் தரித்த மனுஷனையோ? அலங்கார வஸ்திரந் தரித்துச் செல்வமாய் வாழ்கிறவர்கள்
26 அரசர் மாளிகைகளிலிருக்கிறார்கள். அல்லவென்றால் எதைப்பார்க்கப் போனீர்கள்? தீர்க்கதரிசியையோ? ஆம், தீர்க்கதரிசியிலும் மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

27 இதோ, என் தூதனை
உமக்குமுன்பாக அனுப்புகிறேன்,
அவன் உமக்கு முன்னே போய்
உமது வழியை ஆயத்தம்பண்ணுவான்

என்று எழுதிய வாக்கியத்தால் குறிக்கப்பட்
28 டவன் இவனே. ஸ்திரீகளிடம் பிறந்தவர்களில் யோவானிலும் பெரியவன் ஒருவனுமில்லை; கடவுளின் ராஜ்யத்திலுள்ள சிறிய
29 வனே அவனிலும் பெரியவனென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். இதைக் கேட்ட சகல ஜனங்களும் ஆயக்காரரும் கூட யோவானுடைய ஞானஸ்நானம் பெற்றவர்களாய்க் கடவுள் நீதிபரர் என்று ஒத்
30 துக்கொண்டார்கள். பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமோ அவன் ஞானஸ்நானத்தைப் பெறாமல் தங்கள்மட்டில் கடவுளின் ஆலோ
31 சனையை அவமாக்கிவிட்டார்கள். இந்தச் சந்ததியாரை எதற்கு ஒப்பிடுவேன்? இவர்
32 கள் எதைப்போலிருக்கிறார்கள்? சந்தை வெளியில் உட்கார்ந்து ஒருவரையொருவர் கூப்பிட்டு:

உங்களுக்குக் குழல் ஊதினேம், நீங்கள் கூத்தாடவில்லை;
ஒப்பாரி சொன்னேம், நீங்கள் அழவில்லை

என்று சொல்லுகிற பிள்ளைகளைப்போலிருக்
33 கிறார்கள். யோவான்ஸ்நானகன் அப்பம் புசியாதவனும் திராட்சரசம் குடியாதவனுமாய் வந்தான்; நீங்கள்: அவன் பேய்பிடித்
34 திருக்கிறவன் என்கிறீர்கள். மனுஷகுமாரன் போஜனபானம் பண்ணுகிறவராய் வந்தார்; இதோ, போஜனப்பிரியன், மதுபானப்பிரியன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும்
35 சிநேகிதன் என்கிறீர்கள். ஞானமோ தன் பிள்ளைகள் யாவராலும் நியாயமெனக் காட்டப்பட்டது என்றார்.

36 பரிசேயரில் ஒருவன் தன்னோடு போஜனம் பண்ணவேண்டுமென்று அவரைக் கேட்டுக்கொண்டான்; அவர் அந்தப் பரிசேயன் வீட்டுக்குப் போய்ப் பந்தியிருந்தார்.
37 இதோ, அந்த ஊரில் பாவியெனப் பேர் வாங்கின ஒரு ஸ்திரீ அவர் பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதையறிந்து ஒரு வெள்ளைக்கல் ஜாடியில் பரிமளதைலம் கொண்டு
38 வந்து | அவர் பாதத்தருகே பின்னாக நின்று அழுது அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைக்கத் தொடங்கித் தன் தலைமயிரினால் துடைத்து அவர் பாதங்களைத் திரும்பத்திரும்ப முத்தஞ்செய்து பரிமளதைலத்தைப் பூசினாள். அவரை யழைத்த
39 பரிசேயன் அதைக்கண்டு: இவர் தீர்க்கதரிசியென்றால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும் இப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்பார்; இவள் பாவியாயிற்றே என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.
40 இயேசு அவனிடம்: சீமோனே, உனக்கு நான் ஒரு காரியஞ் சொல்லவேண்டுமென அவன்: சொல்லும், போதகரே, என்றான்.
41 அப்பொழுது அவர்: ஒருவனிடம் இரண்டு பேர் கடன்பட்டிருந்தார்கள்; ஒருவன் ஐந்நூறு திநாரியமும் மற்றவன் ஐம்பது திநாரியமுங் கொடுக்கவேண்டியதா யிருந்தது.
42 கடனைத் தீர்க்க அவர்களுக்கு நிர்வாகமில்லாதபோது இருவருக்கும் மன்னித்துவிட்டான். இவர்களில் எவன் அவனிடம் அதிக அன்பாயிருப்பான்? அதைச் சொல்
43 எனச் | சீமோன்: எவனுக்கு அதிகம் மன்னித்துவிட்டானோ அவனே என்று நினைக்கிறேன் என்றான். அவர் அவனிடம்: சரியாய் நிதானித்தாய் என்று சொல்லி | அந்த
44 ஸ்திரீயின் பக்கமாய்த் திரும்பிச் சீமோனை நோக்கி: இந்த ஸ்திரீயைப் பார். உன் வீட்டிற்குள் வந்தேன், நீ என் கால்களுக்குத் தண்ணீர் தந்தில்லை. இவளோ தன் கண்
45 ணீரினால் என் கால்களை நனைத்துத் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள். நீ என்னை முத்தஞ்செய்தில்லை, இவளோ நான் உள்ளே வந்துமுதல் என் பாதங்களை
46 ஓயாமல் முத்தஞ்செய்தாள். நீ என் தலையில் எண்ணெய் பூசினதில்லை, இவளோ என் பாதங்களில் பரிமளதைலம் பூசினாள்.
47 ஆதலால் நான் உனக்குச் சொல்லுகிறேன்: இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டன, இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே. எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ அவன் கொஞ்சமாய் அன்பு

48 கூருவானென்று சொல்லி | அவளைப்
பார்த்து: உன் பாவங்கள் மன்னிக்கப்பட்
49 டன என்ருர். அப்பொழுது கூடப் பந்தி
யிருந்தவர்கள்: பாவங்களையும் மன்னிக்கிற
இவர் யார் என்று தங்களுக்குள்ளே சொல்
50 லிக்கொள்ளத் தொடங்கினர்கள். அவரோ
அந்த ஸ்திரீயினிடம்: உன் விசுவாசம்
உன்னை ரட்சித்தது, சமாதானமாய்ப் போ
வென்ருர்.

**8** அதற்கப்பால் அவர் ஊருராய்க் கிராமங்
கிராமமாய்ச் சுற்றித்திரிந்து கடவுளுடைய
ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைப் பிரசங்
கித்து அறிவித்துவந்தார். பன்னிருவரும்
2 அவருடன் இருந்தார்கள். அவர்களே
யன்றிப் பொல்லாத ஆவிகளையும் வியாதிகளை
யும் அவர் நீக்கிக் குணமாக்கின சில ஸ்திரீ
களுமிருந்தார்கள். இவர்கள் ஏழு பேய்
கள் நீங்கின மகதலேனள் எனப்பட்ட மரி
3 யாளும் | ஏரோதின் காரியக்காரன் கூசா
வின் மனைவி யோவன்னாளும் சூசன்னாளும்
மற்றும் அநேக ஸ்திரீகளுமே. இவர்கள்
தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்
செய்துவந்தார்கள்.

4 பற்பல ஊர்களிலிருந்து திரளானவர்கள்
அவரிடம் வந்து கூடினபோது அவர் உவ
5 மையாகச் சொன்னது: விதைக்கிறவன் ஒரு
வன் விதையை விதைக்கப்போனன்; அவன்
விதைக்கையில் சில விதைகள் பாதையில்
விழுந்து மிதியுண்டன, ஆகாயத்துப் பற
வைகள் வந்து அவற்றைப் பட்சித்துப்
6 போட்டன. சில விதைகள் கற்பாறை
யின்மேல் விழுந்தன; அவை முளைத்தபின்
7 ஈரமில்லாதிருந்தால் உலர்ந்துபோயின. சில
விதைகள் முள்ளுக்குள் விழுந்தன; முள்
கூடவே வளர்ந்து அவற்றை நெருக்கிப்
8 போட்டது. சில விதைகளோ நல்ல நிலத்
தில் விழுந்தன, அவை வளர்ந்து ஒன்று
நூருகப் பலன் தந்தன என்ருர். இவை
களைச் சொல்லி: கேட்கக் காதுள்ளவன்
கேட்கக்கடவன் என்று சத்தமிட்டுக் கூறி
னர்.

9 அவருடைய சீஷர்: இந்த உவமையின்
கருத்தென்னவென்று அவரிடங் கேட்க |
10 அவர்: கடவுளுடைய ராஜ்யத்தின் இரகசியங்
களை யறியும்படி உங்களுக்கு அருளப்பட்
டது, மற்றவர்களுக்கோ, அவர்கள் கண்டுங்
காணதவர்களாயும் கேட்டும் உணராதவர்
களாயுமிருக்க, அவைகள் உவமைகளாகச்
11 சொல்லப்படுகின்றன. அந்த உவமையின்
கருத்தாவது: விதை கடவுளின் வசனம்,
12 பாதையில் விதைக்கப்பெற்றவர்கள் வசனத்
தைக் கேட்டவர்கள்; அவர்கள் நம்பிக்கை
யுடையவர்களாய் ரட்சிக்கப்படாதபடி
பிசாசு வந்து வசனத்தை அவர்கள் இரு
தயத்திலிருந்து எடுத்துவிடுகிறன். கற் 13
பாறையின்மேல் விதைக்கப்பெற்றவர்கள்
கேட்கும்போதெல்லாம் சந்தோஷமாய் வச
னத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்கள்; ஆகி
லும் இவர்களுக்கு வேரில்லாதபடியினால்
கொஞ்சக்காலமாத்திரம் நம்பியிருந்து
சோதனை காலத்தில் வழுவிப்போகிறார்கள்.
முள்ளுக்குள் விழுந்தவைகள் வசனத்தைக் 14
கேட்டும் கவலைகளினாலும் ஐசுவரியத்தினா
லும் சிற்றின்பங்களினாலும் வரவர நெருக்கப்
பட்டுப் பலன் கொடாமற்போகிறவர்களைக்
குறிக்கும். நல்ல நிலத்தில் விழுந்தவை 15
களோ, செம்மையான நல் இருதயத்திலே
வசனத்தைக்கேட்டு அதைக் காத்து
பொறுமையுடனே பலன் தருகிறவர்களைக்
குறிக்கும்.

ஒருவனும் விளக்கைக் கொளுத்தி 16
அதைப் பாத்திரத்தினாலே மூடவுமாட்டான்,
கட்டிலின் கீழே வைக்கவுமாட்டான்;
உள்ளே வருகிறவர்களுக்கு வெளிச்சந் தெரி
யும்படி அதை விளக்குத்தண்டின்மேல்
வைப்பான். பகிரங்கமாகாத அந்தரங்கமு 17
மில்லை, அறியப்பட்டு வெளிப்படாத மறை
பொருளுமில்லை. ஆதலால், நீங்கள் எப்ப 18
டிக் கேட்கிறீர்களென்பதைக்குறித்து எச்ச
ரிக்கையாயிருங்கள்; உள்ளவனெவனே அவ
னுக்குக் கொடுக்கப்படும்; இல்லாதவ
னெவனே அவன் தனக்குண்டென்று நினைக்
கிறதும் அவனிடத்திலிருந்து எடுத்துக்கொள்
ளப்படும் என்ருர்.

அவருடைய தாயாரும் சகோதரரும் அவ 19
ரிடம் வந்தார்கள்; ஜனக்கூட்டம் இருந்த
தினால் அவரண்டையில் அவர்கள் சேர
முடியவில்லை. உம்முடைய தாயாரும் உம் 20
முடைய சகோதரரும் உம்மைப் பார்க்க
வேண்டுமென்று வெளியே நிற்கிறார்க
ளென்று அவருக்கு அறிவித்தார்கள்.
அவரோ அவர்களிடம்: கடவுளுடைய வச 21
னத்தைக் கேட்டு அதின்படி செய்யும் இவர்
களே எனக்குத் தாயும் எனக்குச் சகோதரரு
மாம் என்ருர்.

பின்பு ஒருநாள் அவர் தமது சீஷரோடு 22
படவில் ஏறியிருக்கையில்: கடலின் அக்
கரைக்குப் போவோம் என்ருர்; அப்படியே
போனார்கள். படவு ஓடுகையில் அவர் நித் 23
திரைபோனர். அப்பொழுது கடலின்மேல்
சுழல்காற்று வரவே படவில் தண்ணீர்
நிறைந்துவிடும்போலிருந்தது; அவர்கள்
அபாயத்திற்குள்ளானார்கள். அவர்கள் அவ 24

ரிடம் வந்து: ஐயனே, ஐயனே, மடிந்து போகிறோமென்று அவரை எழுப்பினார்கள்; அவர் எழுந்திருந்து காற்றையும் ஜலத்தின் கொந்தளிப்பையும் அதட்டினார்; அதட்டவே அவைகள் நின்றுபோய் அமைதலுண்டாயிற்று. அவர் அவர்களை நோக்கி: உங்கள் நம்பிக்கை எங்கே என்றார். அவர்கள் பயந்து ஆச்சரியப்பட்டு: இவர் யாரோ? காற்றுக்கும் கடலுக்கும் கட்டளையிடுகிறார், அவைகளும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

கலிலேயாவுக்கு எதிரான கெரசேனர் நாட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அவர் கரையிறங்கவும் பேய்கள் பிடித்த அந்த ஊரான் ஒருவன் அவருக்கு எதிர்ப்பட்டான்; அவன் நெடுநாளாய் வஸ்திரந் தரியாதவன், வீட்டில் தங்காமல் கல்லறைகளிலே தங்கினவன். அவன் இயேசுவைக் கண்டபோது கூக்குரலிட்டு அவருக்குமுன்பாக விழுந்து: இயேசுவே, உன்னதமான தெய்வகுமாரனே, எனக்கும் உமக்கு மென்ன? உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன், என்னை வேதனைப்படுத்தாதிருமென்று மிகவும் சத்தமிட்டுச் சொன்னான். அசுத்த ஆவி அந்த மனுஷனை விட்டுப் போகும்படி அவர் கட்டளையிட்டிருந்தார். பலமுறை அது அவனைப் பிடித்துவந்தது; அவன் சங்கிலிகளினாலும் விலங்குகளினாலுங் கட்டுண்டு காவல்பண்ணப்பட்டிருந்தும் கட்டுகளை முறித்துப்போட்டுப் பேயினால் வனாந்தரத்துக்குத் துரத்தப்பட்டிருந்தான். இயேசு அவனைப்பார்த்து: உன் பேரென்ன வென்று கேட்க அவன் [1]லேகியோன் என்றான்; பல பேய்கள் அவனுக்குள் புகுந்திருந்தபடியால் அந்தப் பேரைச் சொன்னான். தங்களைப் பாதாளவிருளிலேபோகக் கட்டளையிடாதபடி அவைகள் அவரை வேண்டிக்கொண்டன. அவ்விடத்தில் அநேகம் பன்றிகள் கூட்டமாய் மலையிலே மேய்ந்துகொண்டிருந்தன. அவைகளுக்குள் போகும்படி தங்களுக்கு உத்தரவு கொடுக்க அவரை வேண்டிக்கொண்டன; அவைகளுக்கு உத்தரவு கொடுத்தார். அப்படியே பேய்கள் அந்த மனுஷனைவிட்டு வெளிப்பட்டுப் பன்றிகளுக்குள் புகுந்தன. புகவே பன்றிக் கூட்டம் மேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து அமிழ்ந்துபோனது. அவைகளை மேய்த்துக்கொண்டிருந்தவர்கள் நடந்ததைக் கண்டு ஓட்டம்பிடித்து ஊரிலும் சுற்றுப்புறங்களிலும் அறிவித்தார்கள். சம்பவித்ததைப் பார்க்கும்படி ஜனங்கள் ஊருக்கு வெளியே இயேசுவினிடம் வந்து, பேய்கள் விட்டுப் போன மனுஷன் வஸ்திரந்தரித்துப் புத்திதெளிந்து இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்திருக்கிறதைக் கண்டு திகிலடைந்தார்கள். பேய்கள் பிடித்திருந்தவன் எவ்விதமாய்ச் சொஸ்தமானானென்பதைக் கண்டவர்களும் அதை அவர்களுக்கு அறிவித்தார்கள். அப்பொழுது கெரசேனருடைய சுற்றுப்புறத்து ஜனங்கள் யாவரும் மிகவும் திகிலடைந்து, தங்களைவிட்டுப் போகும்படி அவரை வேண்டிக்கொண்டார்கள். அப்படி அவர் படவிலேறித் திரும்பப்போகையில் பேய் நீங்கின மனுஷன் தானும் அவரோடேகூட இருக்கும்படி உத்தரவுகேட்டான். அவரோ: நீ உன் வீட்டுக்குத் திரும்பிப்போய்க் கடவுள் உனக்கு எவ்வளவு பெரிய காரியங்களைச் செய்திருக்கிறாரென்று விவரித்துச் சொல் என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டார். அப்படியே அவன் போய் இயேசு தனக்கு எவ்வளவு பெரிய காரியங்களைச் செய்தாரென்று ஊரெங்கும் பிரசித்தப்படுத்தினான்.

இயேசு திரும்பிவந்தபோது ஜனக்கூட்டம் அவரை வரவேற்றுக்கொண்டது; எல்லாரும் அவருக்காகக் காத்திருந்தார்கள். இதோ, ஜெபாலயத் தலைவனாகிய யவீரு என்னும் பேருள்ள ஒருவன் வந்து இயேசுவின் பாதத்தில் விழுந்து, பன்னிரண்டு வயதுள்ள தன் ஒரே மகள் மரண அவஸ்தையிலிருந்தபடியால் | தன் வீட்டிற்கு வரும்படி அவரை வேண்டிக்கொண்டான். அவர் போகையில் திரள் ஜனங்கள் அவரை நெருக்கிக்கொண்டு வந்தார்கள்.

அப்பொழுது பன்னிரண்டு வருஷம் பெரும்பாடுள்ளவளாய் ஒருவனாலும் குணமாக்கமுடியாதிருந்த ஒரு ஸ்திரீ அவர் பின்னாக வந்து | அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்; தொடவே அவளுடைய பெரும்பாடு நின்றுபோயிற்று. என்னைத் தொட்டது யாரென்று இயேசு கேட்டார். நாங்கள் தொடவில்லை எனஎல்லாருஞ்சொல்லவே பேதுரு: ஐயனே, திரள் ஜனங்கள் உம்மைச் சூழ்ந்துநெருக்கிக்கொண்டிருக்கிறார்களே என்றான். இயேசுவோ: ஒருவர் என்னைத் தொட்டதுண்டு, என்னிலிருந்து வல்லமை வெளிப்பட்டதை யறிந்தேன் என்றார். அந்த ஸ்திரீ தான் மறைந்திருக்கவில்லையென்று கண்டு

[1] லேகியோன், (மத். 26, 53) பார்க்க.

நடுங்கி வந்து அவர் முன்பாக விழுந்து, தான் அவரைத் தொட்ட காரணத்தையும் உடனே தான் குணமானதையும் எல்லா ஜனங்கள் முன்னிலையிலும் அவருக்கு அறி
48 வித்தாள். அவரோ அவளிடம்: மகளே, உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கினது, சமாதானமாய்ப் போ என்றார்.
49 அவர் இன்னும் பேசிக்கொண்டிருக்கையில் ஜெபாலயத் தலைவன் வீட்டிலிருந்து ஒருவன் வந்து: உமது மகள் மரித்துப் போனாள், இனிப் போதகரைத் தொந்தரவு
50 செய்யவேண்டாம் என்றான். இயேசு அதைக்கேட்டு அவனிடம்: பயப்படாதே, நம்பிக்கையுள்ளவளாகவேயிரு, அவள் சுகப்
51 படுவாள் என்றார். அவர் வீட்டுக்குள் வந்தபோது பேதுரு யாக்கோபு யோவான் பெண்ணின் தாய் தகப்பன் இவர்கள் தவிர வேறொருவரும் தம்மோடி உள்ளே போக
52 இடங்கொடுக்கவில்லை. எல்லாரும் அவளுக்காக அழுது மாரடித்துக்கொண்டிருந்தார்கள். அவரோ: அழாதேயுங்கள், அவள் மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள் என்
53 றார். அவள் மரித்துப்போனாளென்று அவர்கள் அறிந்திருந்தார்கள்.
54 அவர் அவளுடைய கையைப் பிடித்து: சிறு பெண்ணே, எழுந்திரு என்று கூப்பிட,
55 அவள் உயிர் திரும்ப வந்தது; உடனே அவள் எழுந்திருந்தாள்;
56 அவளுக்கு ஆகாரங்கொடுக்கக் கட்டளையிட்டார். அவள் பெற்றோர் பிரமித்துப் போனார்கள்; சம்பவித்ததை ஒருவருக்குஞ் சொல்லாமலிருக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

**9** அவர் பன்னிருவரையும் ஒன்றாய் வரவழைத்துச் சகல பேய்களையும் ரோகத்தையும் வியாதிகளைத் தீர்க்கவும் அவர்களுக்கு வல்
2 லமையும் அதிகாரமும் கொடுத்துக் | கடவுளின் ராஜ்யத்தைப் பிரசங்கிக்கவும் பிணியாளிகளைக் குணமாக்கவும் அவர்களை யனுப்
3 பினார். அனுப்பும்போது அவர்களிடம்: வழிக்கு ஒன்றையும் எடுத்துக்கொண்டு போகவேண்டாம். தடி பை ஆகாரம் காசு முதலிய எதுவும் வேண்டாம்; ஆளுக்கு
4 இரண்டு அங்கிகளும் வேண்டாம். எந்த வீட்டிற்குப் போவீர்களோ அங்கேயே
5 தங்கி அங்கிருந்தே புறப்படுங்கள். உங்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள் எவர்களோ அவர்களுடைய ஊரைவிட்டுப் புறப்படும் போது அவர்களுக்கு விரோதமான சாட்சியாக உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப்போடுங்களென்று சொன்னார்.
6 அவர்கள் போய்க் கிராமங்கள்தோறும் சென்று எங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துப் பிணியாளிகளைக் குணமாக்கினார்கள்.
7 ஏரோது சிற்றரசன் நடக்கிறவைகளையெல்லாம் கேள்விப்பட்டான். யோவான் மரித்தோரிலிருந்து எழுந்தான் எனச் சிலரும் எலியா தோன்றினான் எனச் சிலரும் |
8 பூர்வகாலத் தீர்க்கதரிசிகளில் ஒருவன் எழுந்துவிட்டான் எனச் சிலரும் பேசிக்கொண்டபடியால்
9 அவன் திகைத்து: யோவானை நான் சிரச்சேதஞ் செய்தேன், நான் கேள்விப்படுகிற இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிற இவர் யாரென்று சொல்லி அவரைப் பார்க்கப் பிரயத்தனப்பட்டான்.
10 அப்போஸ்தலர் திரும்பிவந்து தாங்கள் செய்த யாவற்றையும் அவருக்கு விவரித்துச் சொன்னார்கள். அவர் அவர்களைக் கூட்டிக்கொண்டு தனித்திருக்கும்படி பெத்சாயிதாவென்னும் ஊருக்குப் போனார்.
11 திரள்ஜனங்கள் அதையறிந்து அவரைத் தொடர்ந்து போனார்கள்; அவர்களை அவர் ஏற்றுக்கொண்டு கடவுளின் ராஜ்யத்தைப் பற்றி அவர்களோடுபேசிச் சுகம் வேண்டியவர்களைச் சுகமாக்கினார். பொழுது சாயும்
12 நேரமாகவே பன்னிருவரும் அவரிடம் வந்து: நாம் இருக்கிற இடம் வனாந்தரம்; ஜனங்கள் சுற்றியிருக்கிற ஊர்களுக்கும் கிராமங்களுக்கும் போய்த் தங்கவும் தங்களுக்கு ஆகாரம் பார்த்துக்கொள்ளவும் அவர்களை அனுப்பிவிடுமென | அவர்:
13 நீங்களே அவர்களுக்குப் போஜனங் கொடுங்கள் என்றார். அதற்கு அவர்கள்: எங்களிடம் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களுமாத்திரமுண்டு; இந்த ஜனங்களெல்லாருக்கும் போஜனங்கொடுக்கவேண்டியதானால் நாங்கள் போய் வாங்கிக்கொண்டு வரவேண்டுமே என்றார்கள். ஏறக்குறைய ஐயாயிரம்
14 புருஷர் இருந்தார்கள். அவர்களைப் பந்திக்கு ஐம்பதுபேராக உட்காரவையுங்கள் என்று தமது சீஷருக்குச் சொன்னார்.
15 அவர்கள் அப்படியே செய்து எல்லாரையும் உட்காரவைத்தார்கள். அப்பொழுது
16 அவர் அந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்துபார்த்து, அவைகளை ஆசீர்வதித்துப் பிட்டு ஜனங்களுக்குப் பரிமாறும்படி
17 சீஷரிடங் கொடுத்தார். எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள். அவர்கள் சாப்பிட்டு மிஞ்சின துணிக்கைகள் பன்னிரண்டு கூடைநிறைய எடுக்கப்பட்டன.
18 பின்பு அவர் தனித்து ஜெபம்பண்ணிக் கொண்டிருக்கையில் சீஷர் பக்கத்திலிருந்

தார்கள். அப்போது அவர் அவர்களிடம்:
ஜனங்கள் என்னை யாரென்று சொல்லுகிறார்
19 களென்று கேட்க | அவர்கள்: யோவான்
ஸ்நானகன் என்று சொல்லுகிறார்கள்; சில
ரோ எலியா என்றும் வேறு சிலரோ பூர்வ
காலத்துத் தீர்க்கதரிசிகளில் ஒருவர் உயிர்த்
தெழுந்தார் என்றும் சொல்லுகிறார்கள்
20 என்றார்கள். அப்பொழுது அவர்: நீங்கள்
என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்
என்று கேட்கப் பேதுரு: கடவுளின்
21 கிறிஸ்து என்றான். அவர்கள் இதை எவ
ருக்கும் அறிவியாதபடிகண்டிப்பாய்ச்சொல்
22 லிக் கட்டளையிட்டார். மேலும், மனுஷ
குமாரன் பல பாடுகள் பட்டு மூப்பராலும்
பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும்
ஆகாதவனென்று தள்ளப்பட்டுக் கொலை
யுண்டு மூன்றாம் நாளில் எழுப்பப்பட
23 வேண்டுமென்று சொன்னார். பின்பு அவர்
எல்லாரையும் நோக்கி: ஒருவன் என்னைப்
பின்பற்றிவர விரும்பினால் அவன் தன்னைத்
தான் வெறுத்துத் தன் சிலுவையை அனுதின
மும் எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்
24 றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க
விரும்புகிறவன் அதை இழந்துபோவான்;
என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து
போகிறவனோ அதை இரட்சித்துக்கொள்
25 வான். மனுஷன் உலகமுழுவதையும்
ஆதாயப்படுத்திக்கொண்டாலும் தன்னைத்
தான் கெடுத்தால் அல்லது நஷ்டப்படுத்தி
26 னால் அவனுக்கு லாபமென்ன? என்னைப்
பற்றியும் என் வார்த்தைகளைப்பற்றியும்
எவன் வெட்கப்படுவானோ அவனைப்பற்றி
மனுஷகுமாரனும் தமக்கும் பிதாவுக்கும்
பரிசுத்த தூதருக்குமுரிய மகிமையில்
27 வரும்போது வெட்கப்படுவார். இங்கே
நிற்கிறவர்களில் சிலர் கடவுளின் ராஜ்யத்
தைக் காணுமுன் மரணத்தை ருசிபார்ப்ப
தில்லையென்று உண்மையாகவே உங்களுக்
குச் சொல்லுகிறேன் என்றார்.
28 இந்த வார்த்தைகளை அவர் சொல்லி
ஏறக்குறைய எட்டு நாளான பின்பு அவர்
பேதுருவையும் யோவானையும் யாக்கோபை
யும் கூட்டிக்கொண்டு ஜெபஞ்செய்கிற
29 தற்கு ஒரு மலையின்மேல் ஏறினார். ஜெபஞ்
செய்கையில் அவர் முகரூபம் மாறிற்று,
அவருடைய வஸ்திரம் வெண்மையாய் மின்
30 னொளி வீசினது. இதோ, மோசே எலியா
என்னும் இரண்டுபேர் மகிமையில் தோன்றி
31 அவரோடு சம்பாஷித்து | அவர் எருசலே
மிலே நிறைவேற்றப்போகிற அவருடைய
மரணத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்
32 தார்கள். பேதுருவும் அவனோடிருந்தவர்க
ளும் நித்திரைமயக்கமாயிருந்தார்கள். அவர்
கள் விழித்தபோதோ அவருடைய மகிமை
யையும் அவரோடு நின்ற இருவரையுங்
கண்டார்கள். அவ்விருவரும் அவரை 33
விட்டுப் போகையில் பேதுரு இயேசுவினி
டம்: ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது
நல்லது; உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்
றும் எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடா
ரங்களைப் போடுவோம் என்றான். தான்
சொன்னது இன்னதென்று அவன் அறிய
வில்லை. இவைகளை அவன் சொல்லுகை 34
யில் ஒரு மேகம் வந்து அவர்கள்மேல் நிழ
லிட்டது; அவர்கள் அந்த மேகத்துக்குள்
வருகையில் பயந்தார்கள். அப்பொழுது: 35
இவர் என் குமாரன், நான் தெரிந்துகொண்
டவர், இவருக்குச் செவி கொடுங்கள் என்று
மேகத்திலிருந்து ஒரு சத்தம் பிறந்தது.
அந்தச் சத்தம் பிறக்கவே இயேசு தனித் 36
திருக்கக் கண்டார்கள். தாங்கள் கண்ட
வைகளில் ஒன்றையும் அவர்கள் அந்நாட்
களில் எவருக்கும் அறிவியாமல் மௌன
மாயிருந்தார்கள்.
மறுநாளில் அவர்கள் மலையிலிருந்திறங் 37
கினபோது திரளானங்கள் அவருக்கு எதிர்
கொண்டு வந்தார்கள். இதோ, ஜனக்கூட் 38
டத்திலிருந்து ஒருவன் சத்தமிட்டு: போதக
ரே, என் மகனைக் கண்ணோக்கவேண்டு
மென்று உம்மைக்கெஞ்சுகிறேன், அவன்
எனக்கு ஒரே பிள்ளை; இதோ, ஒரு ஆவி 39
அவனைப் பிடிக்கும், பிடிக்கவே அலறுகி
றான்; அவனுக்கு இழுப்புவலிப்பு வரும்,
வாய் நுரைதள்ளும்; அது அவனை விட்
டகல்வது அரிது; அதலும்போதும் அவனை
நொறுக்கி விடுகிறது. அதைத் துரத்திவிடும் 40
படி உம்முடைய சீஷரை வேண்டிக்கொண்
டேன்; அவர்களால் முடியாமற்போயிற்று
என்றான். இதைக்கேட்ட இயேசு: விசு 41
வாசமில்லாத மாறுபாடுள்ள சந்ததியே,
எதுவரைக்கும் நான் உங்களோடிருப்பேன்,
உங்களிடத்தில் பொறுமையாயிருப்பேன்,
உன் மகனை இங்கே கொண்டுவா என்றார்.
அவன் சமீபித்து வருகையில் பேய் அவ 42
னைக் கீழே தள்ளி அவனுக்கு வலிப்பு வரப்
பண்ணிற்று. இயேசுவோ அந்த அசுத்த
ஆவியை அதட்டிப் பையனைக் குணமாக்கி
அவன் தகப்பனிடம் ஒப்புக்கொடுத்தார்.
அப்பொழுது எல்லாரும் கடவுளின் மகத்து 43
வத்தைக் கண்டு பிரமித்தார்கள்.
அவர் செய்த யாவையுங் குறித்து அனை
வரும் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்க |
அவர் தமது சீஷரிடம்: நீங்கள் இந்த 44
வார்த்தைகளைக் கவனித்துக் கேளுங்கள்;

மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்
கொடுக்கப்படுவார் என்றார். அவர் சொன்
45 னது அவர்களுக்கு விளங்கவில்லை. அவர்
கள் அதை உணர்ந்துகொள்ளாதபடி மறை
வாயிருந்தது. இந்தக் காரியத்தைப்பற்றி
அவரிடங் கேட்கவும் பயந்தார்கள்.
46 தங்களில் எவன் பெரியவன் என்கிற
விவாதம் அவர்களுக்குள் உண்டாயிற்று.
47 இயேசுவோ அவர்கள் இருதயத்தின் யோ
சனையையறிந்து ஒரு சிறுபிள்ளையை எடுத்து
48 அதைத் தமதருகே நிறுத்தி | அவர்களிடம்:
இந்தச் சிறுபிள்ளையை என் நாமத்தினிமித்
தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் எவனும்
என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை
ஏற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னை
அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான்;
உங்களெல்லாரிலும் எவன் சிறியவனோ
அவனே பெரியவன் என்றார்.
49 இதைக்கேட்ட யோவான் அவரிடம்:
ஆண்டவரே, ஒருவன் உமது நாமத்தினாலே
பேய்களைத் துரத்துகிறதைக் கண்டு அவன்
எங்களோடு உம்மைப் பின்பற்றாதவ
னென்று அவனைத் தடுக்கப்பார்த்தோம் என்
50 றான். இயேசுவோ அவனிடம்: தடுக்க
வேண்டாம்; உங்களுக்கு விரோதமாயிராத
வன் உங்களுக்குச் சார்பானவன் என்றார்.
51 அவர் எடுத்துக்கொள்ளப்படும் நாட்கள்
நிறைவேறப்போகும்போது தாம் எருசலே
முக்குப் போகும்படி கொண்ட மன உறுதி
52 அவர் முகத்திலும் விளங்கினது. அவர்
தமக்கு முன்னுகத் தூதர்களை யனுப்பினார்.
அவர்கள் போய் அவருக்கு இடத்தை
ஆயத்தம்பண்ணும்படி சமாரியருடைய ஒரு
53 கிராமத்திற்குட் சென்றார்கள். அவர் எரு
சலேமுக்குப் போக நோக்கியிருந்தபடியி
னல் அவ்வூரார் அவரை ஏற்றுக்கொள்ள
54 வில்லை. அவருடைய சீஷர் யாக்கோபும்
யோவானும் இதைக் கண்டபோது: ஆண்ட
வரே, வானத்திலிருந்து அக்கினி இறங்கி
இவர்களை அழிக்கும்படி நாங்கள் சொல்
வது உமக்குச் சித்தமா என்று கேட்டார்
55 கள். அவர் திரும்பி அவர்களை அதட்டி
56 னார். அப்பொழுது அவர்கள் வேறொரு
கிராமத்துக்குப் போனார்கள்.
57 அவர்கள் வழியிலே போகையில் ஒரு
வன் அவரிடம்: நீர் எங்கே போனாலும் உம்
58 மைப் பின்பற்றிவருவேன் என | இயேசு
அவனிடம்: நரிகளுக்குக் குழிகளுண்டு,
ஆகாயத்துப் பறவைகளுக்குக்கூடுகளுண்டு,
மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இட
மில்லை என்றார். வேறொருவனை அவர் 59
பார்த்து: என்னைப் பின்பற்றிவா என்றார்.
அவனோ: முதலில் நான் போய் என் தகப்
பனை அடக்கம் பண்ண எனக்கு உத்தரவு
கொடும் என்றான். அதற்கு இயேசு: மரித் 60
தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்
ணட்டும்; நீயோ போய்க் கடவுளின் ராஜ்
யத்தைப் பிரசித்தப்படுத்து என்றார். அவரி 61
டம் வேறொருவனும்: ஆண்டவரே, உம்
மைப் பின்பற்றுவேன், ஆயினும் முதலில்
நான் போய் வீட்டிலுள்ளவர்களிடம் வழி
யனுப்பிக் கொள்ள எனக்கு உத்தரவு
கொடும் என்றான். இயேசுவோ அவனிடம்: 62
கலப்பையில் தன் கையை வைத்துப் பின்
னிருக்கிறவனைத் திரும்பிப் பார்க்கிற
எவனும் கடவுளின் ராஜ்யத்துக்கு அருக
னல்ல என்றார்.

இவைகளுக்குப் பின்பு ஆண்டவர் **10**
வேறே எழுபதுபேரை நியமித்துத் தாம்
போகவிருந்த ஒவ்வொரு ஊருக்கும் இடத்
திற்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்
டிரண்டுபேராக அனுப்பினார். அனுப்பும் 2
போது அவர் அவர்களிடம்: அறுப்பு மிகுதி,
வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால்
அறுப்பின் எஜமான் தமது அறுப்புக்கு
வேலையாட்களை யனுப்பும்படி அவரை
வேண்டிக்கொள்ளுங்கள். புறப்பட்டுப் 3
போங்கள்; இதோ, ஓநாய்கள் மத்தியில்
ஆட்டுக்குட்டிகளைப்போல உங்களை
அனுப்புகிறேன். பணப்பையையும் 4
சாமான்பையையும் பாதரட்சைகளையும்
கொண்டு போகவேண்டாம்; வழியிலே
ஒருவரையும் வாழ்த்த நிற்கவேண்டாம்.
நீங்கள் எந்த வீட்டினுட் சென்றாலும் 5
முதலாவது இந்த வீட்டுக்குச் சமா
தானமென்று சொல்லுங்கள். [1]சமாதான 6
சீலன் அங்கேயிருந்தால் நீங்கள் கூறின
சமாதானம் அவனிடம் தங்கும், இல்லாதி
ருந்தால் அது உங்களிடமே திரும்பிவிடும்.
அந்த வீட்டிலேயே நீங்கள் தங்கி அவர்கள் 7
வீட்டிலுள்ளதைச் சாப்பிடுங்கள்; வேலை
யாள் தன் கூலிக்குப் பாத்திரனே. வீட்டுக்கு
வீடு போக வேண்டாம். நீங்கள் எந்த 8
ஊருக்குச் சென்றாலும் அங்கே உங்களை
ஏற்றுக்கொண்டால் அவர்கள் உங்களுக்
குக் கொடுப்பவைகளைப் புசித்து | அவ்வி 9
டத்திலுள்ள பிணியாளிகளைக் குணமாக்கிக்
கடவுளின் ராஜ்யம் உங்களுக்குச் சமீபித்தி
ருக்கிறதென்று அவர்களுக்குச் சொல்லுங்

[1] கிரேக்கு பாஷையில்: சமாதானத்தின் மகன்.

10 கள். எந்த ஊருக்குச் சென்றாலும் அங்கே
உங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அதின்
11 வீதிகளிலே நீங்கள் போய்: எங்கள் கால்க
ளில் ஒட்டின உங்கள் ஊர்த்தூசியையும்
உங்களுக்கு விரோதமாய்த் துடைத்துப்போ
டுகிறோம்; ஆயினும் கடவுளின் ராஜ்யம்
சமீபித்திருக்கிறதென்பதை அறிந்துகொள்
12 ளுங்களென்று சொல்லுங்கள். அந்த நாளி
லே சோதோமுக்கு நேரிடுவதைப்பார்க்கி
லும் அந்த ஊருக்கு நேரிடுவது அதிகக்கடி
னமாகுமென்று உங்களுக்குச் சொல்லுகி
13 றேன். கொராசினே, ஐயோ உனக்குக்
கேடாம். பெத்சாயிதாவே, ஐயோ உனக்
குக் கேடாம். உங்களில் செய்யப்பட்ட
வல்ல செயல்கள் தீருவிலும் சீதோனிலும்
செய்யப்பட்டிருந்ததானால் அப்பொழுதே
இரட்டும் சாம்பலுமாய் உட்கார்ந்து மனந்
14 திரும்பி யிருப்பார்கள். நியாயத்தீர்ப்பில்
தீருவுக்கும் சீதோனுக்கும் நேரிடுவதைப்
பார்க்கிலும் உங்களுக்கு நேரிடுவது அதிகக்
15 கடினமாகும். நீயோ கப்பர்நகூமே, வான
பரியந்தம் உயர்த்தப்படுவாயோ? பாதாள
16 பரியந்தம் தாழ்த்தப்படுவாய். உங்களுக்குச்
செவிகொடுக்கிறவன் எனக்கே செவிகொ
டுக்கிறான்; உங்களை அசட்டை பண்ணுகிற
வன் என்னையே அசட்டை பண்ணுகிறான்;
என்னை அசட்டை பண்ணுகிறவனோ என்னை
அனுப்பினவரையே அசட்டை பண்ணுகி
றான் என்றார்.

17 அந்த எழுபதுபேரும் சந்தோஷத்தோடு
திரும்பிவந்து: ஆண்டவரே, உமது நாமத்
தில் பேய்களும் எங்களுக்குக் கீழ்ப்படிகின்
18 றன என்றார்கள். அவரோ: சாத்தான்
வானத்திலிருந்து மின்னலைப்போல விழுகிற
19 தைக் கண்டேன். இதோ, சர்ப்பங்களையும்
தேள்களையும் மிதிக்கவும் சத்துருவின் சகல
வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்க
ளுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறேன்;
20 ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தாது. ஆகி
லும் ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிற
தைப்பற்றி நீங்கள் சந்தோஷப்படாமல்
உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதி
யிருக்கிறதைப்பற்றிச் சந்தோஷப்படுங்கள்
என்றார்.

21 அந்நேரமே அவர் பரிசுத்த ஆவியில்
அகமகிழ்ந்து: பிதாவே, வானத்துக்கும்
பூமிக்கும் ஆண்டவரே, இவைகளை ஞானி
களுக்கும் விவேகிகளுக்கும் மறைத்துப்
பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்
மை ஸ்தோத்திரிக்கிறேன். ஆம் பிதாவே,
இதுவே உமது திருவுளத்துக்குப் பிரியமா
22 யிருந்தது. சகலமும் என் பிதாவினால்
எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது;
பிதா தவிர வேறொருவனும் குமாரன் இன்
னாரென்று அறியான்; குமாரனும், குமாரன்
எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்த
மாயிருக்கிறாரோ அவனுந்தவிர வேறொரு
வனும் பிதா இன்னாரென்று அறியான் என்
றார். பின்பு அவர் சீஷர்முகமாய்த் திரும்பி 23
அவர்களிடம் தனித்து: நீங்கள் காண்கிற
வைகளைக் காணுங் கண்கள் பாக்கியமுள்ள
வைகள். அநேக தீர்க்கதரிசிகளும் ராஜாக் 24
களும் நீங்கள் காண்கிறவைகளைக் காண
வும் நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும்
விரும்பியும் காணாமலுங் கேளாமலும் போ
னார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகி
றேன் என்றார்.

நியாயசாஸ்திரி ஒருவன் எழுந்திருந்து 25
அவரைச் சோதிக்கும்படி: போதகரே, நித்
தியஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி
நான் என்ன செய்யவேண்டுமென்று கேட்
டான். அதற்கு அவர்: நியாயப்பிரமாணத் 26
தில் என்ன எழுதியிருக்கிறது? நீ வாசிக்
கிறது என்னவென்று கேட்க | அவன்: உன் 27
கர்த்தராகிய கடவுளிடம் உன் முழு இருத
யத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும்
உன் முழு பலத்தோடும் உன் முழு மனதோ
டும் அன்புகூர்ந்து உன்னிடத்தில் அன்பு
கூருவதுபோல அயலானிடத்திலும் அன்பு
கூரவேண்டுமென்று எழுதியிருக்கிறது என |
அவர்: நீ சொன்னது சரி, அப்படியே 28
செய், அப்பொழுது பிழைப்பாய் என்றார்.
தான் கேள்வி கேட்டது நியாயமென்று 29
காண்பிக்க மனதாய் அவன் இயேசுவினி
டம்: எனக்கு அயலான் யார் என்று கேட்
டான். அதற்கு இயேசு: ஒரு மனுஷன் எரு 30
சலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில்
கள்ளர் கையில் அகப்பட்டான்; அவர்கள்
அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு அவ
னை அடித்துக் குற்றுயிராக விட்டுப்போனர்
கள். ஒரு ஆசாரியன் தற்செயலாய் அந்த 31
வழியே வந்து அவனைக் கண்டு ஒருபக்கமாய்
விலகிப்போனான். அப்படியே ஒரு லேவி 32
யனும் அந்த இடத்துக்கு வந்து அவனைக்
கண்டு பக்கமாய் விலகிப்போனான், பிரயா 33
ணஞ்செய்த சமாரியன் ஒருவனோ அவ்வி
டம் வரவே அவனைக்கண்டு மனதுருகிக் |
கிட்டப் போய் அவன் காயங்களில் எண் 34
ணெயும் திராட்சரசமும் வார்த்துக் காயங்க
ளைக் கட்டித் தான் சவாரிசெய்த மிருகத்
தின்மேல் அவனை ஏற்றிச் சத்திரத்துக்குக்
கொண்டுபோய் அவனைப் பராமரித்தான்.
மறுநாளிலே இரண்டு திநாரியத்தை எடுத் 35
துச் சத்திரத்தான் கையில் கொடுத்து: நீ

இவனை விசாரித்துக்கொள், அதிகமாய் ஏதாகிலும் செலவழித்தால் நான் திரும்பி வரும்போது அதை உனக்குத் தருவேனென்றான். 36 இப்படியிருக்க, கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்றுபேரில் எவன் அயலானுக உனக்குத் தோன்றுகிறான் 37 என்று கேட்க | அவன்: அவனுக்கு இரக்கஞ் செய்தவனே என்றான். அப்பொழுது இயேசு: நீயும் போய் அப்படியே செய் என்றார்.

38 அவர்கள் பிரயாணமாய்ப் போகையில் அவர் ஒரு கிராமத்திற்குட் சென்றார். அங்கே மார்த்தாள் என்னும் ஒரு ஸ்திரீ அவரைத் தன் வீட்டிலே வரவேற்று உபசரித்தாள். 39 அவளுக்கு மரியாள் என்னும் ஒரு சகோதரி இருந்தாள்; அவள் ஆண்டவர் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள். 40 மார்த்தாளோ அதிக வேலைசெய்வதில் மிகவும் வருத்தப்பட்டு அவரிடம் வந்து: ஆண்டவரே, நான் தனியே வேலைசெய்யும்படி என் சகோதரி என்னைவிட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவையில்லையா? எனக்கு உதவிசெய்ய அவளுக்குச் சொல்லும் என்றார். 41 ஆண்டவரோ அவளிடம்: மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைப்பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். 42 தேவையானது கொஞ்சமே, ஒன்றே: மரியாளோ தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார்.

**11** அவர் ஒரு இடத்தில் ஜெபஞ்செய்துகொண்டிருந்தார். ஜெபஞ்செய்துமுடிக்கவே அவர் சீஷரில் ஒருவன் அவரிடம்: ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபஞ்செய்யக் கற்றுக்கொடுத்ததுபோல நீரும் எங்களுக்குக் கற்றுக்கொடும் என்றான். 2 அதற்கு அவர்: நீங்கள் ஜெபஞ்செய்யும்போது, பிதாவே; உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய ராஜ்யம் 3 வருவதாக; அன்றன்று வேண்டிய எங்கள் ஆகாரத்தை அன்றன்று எங்களுக்குத் 4 தாரும்; எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும், நாங்களும் எங்களிடத்தில் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே; எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாதிரும் என்று சொல்லுங்கள் என்றார்.

5 பின்னும் அவர் அவர்களை நோக்கி: உங்களில் ஒருவன் தனக்குச் சிநேகிதனுயிருக்கிறவனிடம் நடுராத்திரியில் போய்: சிநேகிதனே, என் சிநேகிதன் ஒருவன் வழிப்பிரயாணமாய் என்னிடம் வந்திருக்கிறான், அவன்முன் வைக்கிறதற்கு என்னிடம் ஒன்றுமில்லை, நீ மூன்று அப்பங்களை எனக்குக் கடனுகத் தரவேண்டுமென்று கேட்டுக் 7 கொள்ள | உள்ளே இருக்கிறவன்: என்னைத் தொந்தரவு செய்யாதே, கதவு பூட்டியாயிற்று, என் பிள்ளைகளும் என்னுடே படுத்திருக்கிறார்கள், நான் எழுந்திருந்து உனக்குத் தரமுடியாதென்று சொல்வானே? 8 சொன்னாலும் அவன் தனக்குச் சிநேகிதனுயிருக்கிறதினிமித்தம் எழுந்து அவனுக்குக் கொடாவிட்டாலும் அவன் வெட்கமின்றி அலட்டுகிறதினிமித்தமாவது எழுந்திருந்து அவனுக்குத் தேவையானதைக் கொடுப்பானென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். 9 நானும் உங்களுக்குச் சொல்லுகிறேன்: கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். 10 கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுவானால்; தேடுகிறவன் கண்டடைவானே; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். 11 தன் மகன் தன்னிடம் மீனைக்கேட்க மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுக்கும் தகப்பன் உங்களில் உண்டோ? அல்லது முட்டை 12 யைக் கேட்டால் அவனுக்குத் தேளைக் கொடுப்பதுண்டோ? 13 நீங்கள் பொல்லாதவர்களாயிருந்தும் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக்கொடுக்க அறிந்திருக்கப் பரலோகத்திலிருக்கிற பிதா தம்மிடங் கேட்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது எவ்வளவு அதிக நிச்சயமென்றார்.

14 பின்பு அவர் ஊமையாயிருந்த ஒரு பேயைத் துரத்திக்கொண்டிருந்தார். பேய் போய்விடவே ஊமையன் பேசினான்; ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். 15 அவர்களில் சிலர்: இவன் பேய்களின் தலைவனுகிய பெயல்செபூலினாலே பேய்களை ஓட்டுகிறான் என்றார்கள். 16 வேறு சிலர் அவரைச் சோதிக்கும்படி வானத்திலிருந்து ஒரு அடையாளத்தை அவரிடம் கேட்டார்கள். 17 அவரோ அவர்களுடைய சிந்தனைகளையறிந்து அவர்களைப் பார்த்து: தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம், எந்த வீடும் விழுந்துபோம். 18 சாத்தானும் தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருந்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலைநிற்கும்? பெயல்செபூலினால் நான் பேய்களைத் துரத்துகிறேன் என்கிறீர்களே. 19 நான் பெயல்செபூலினாலே பேய்களைத் துரத்தினால் உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே

துரத்துகிறார்கள்? ஆகையால் உங்களை நியா
20 யத்தீர்ப்பவர்கள் அவர்களே. நான் கடவு
ளுடைய விரலினாலே பேய்களைத் துரத்தி
னால் கடவுளின் ராஜ்யம் உங்களிடம் வந்
21 தாயிற்று. ஆயுதந்தரித்த பலவான் தன்
அரமனையைக் காக்கிறபோது அவனுடைய
22 வைகள் பத்திரப்பட்டிருக்கும். அவனிலும்
அதிகப் பலவான் வந்து அவனை மேற்கொள்
வானேயாகில் அவன் நம்பியிருந்த சர்வா
யுதவர்க்கத்தையும் பறித்துக்கொண்டு அவ
னிடங் கொள்ளையிட்டபொருளைப் பங்கிடு
23 வான். என்னோடிராதவன் எனக்கு விரோதி;
என்னோடுகூடச் சேர்க்காதவன் சிதறடிக்கிற
24 வன். அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப்
போகும்போது வறண்ட இடங்களில்
அலைந்து இளைப்பாறுதல் தேடியும் கண்ட
டையாமல்: நான் விட்டுவந்த என் வீட்டுக்
குத் திரும்பிப் போவேனென்று சொல்லி |
25 வந்து, அது பெருக்கி ஜோடிக்கப்பட்டிருக்
26 கக்கண்டு | திரும்பிப்போய்த் தன்னிலும்
பொல்லாத வேறு ஏழு ஆவிகளைக் கூட்டிக்
கொண்டுவந்து உட்புகுந்து அங்கே குடி
யிருக்கும். அப்பொழுது அந்த மனுஷனு
டைய முன்னிலைமையிலும் அவன் பின்னி
லைமை அதிகக் கேடுள்ளதாகும் என்றார்.

27 அவர் இவைகளைச் சொல்லுகையில் ஜனக்
கூட்டத்தில் ஒரு ஸ்திரீ அவரை நோக்கி:
உம்மைச் சுமந்த கர்ப்பமும் நீர் பாலுண்ட
முலைகளும் பாக்கியமுள்ளவைகளென்று
28 சத்தமிட்டுச் சொன்னாள். அவரோ: சரி
தான், எனினும் கடவுளின் வார்த்தையைக்
கேட்டு அதைக் காத்துக்கொள்ளுகிறவர்
களே பாக்கியவான்கள் என்றார்.

29 ஜனங்கள் திரள்திரளாய்க் கூடிவந்து
கொண்டிருக்கிறபொழுது அவர்: இந்தச்
சந்ததியார் பொல்லாதவர்கள், அடையா
ளந் தேடுகிறார்கள்; ஆயினும் யோனாவின்
அடையாளத்தையே யன்றி வேறே அடை
யாளத்தை இவர்களுக்குக் கொடுப்பதில்லை.
30 யோனா நினிவே பட்டணத்தாருக்கு அடை
யாளமானான். அதுபோல மனுஷகுமாரனும்
31 இந்தச் சந்ததிக்கு அடையாளமாவார். தென்
தேசத்து அரசி இச்சந்ததியின் மனிதரோ
டெழுந்து நின்று நியாயத்தீர்ப்பில் இவர்கள்
மேல் குற்றஞ்சாட்டுவாள். இவள் பூமி
யின் கடையாந்தரங்களிலிருந்து சாலொமோ
னின் ஞானத்தைக் கேட்க வந்தாள். இதோ,
இங்கிருக்கிறது சாலொமோனிலும் பெரி
32 யது. நினிவே பட்டணத்தார் யோனாவின்
பிரசங்கத்துக்கிணங்கி மனந் திரும்பினர்
களே; அவர்கள் நியாயத்தீர்ப்பில் இச்சந்
ததியாரோடெழுந்துநின்று இவர்கள்மேல்
குற்றஞ்சாட்டுவார்கள். இதோ, இங்கிருக்
கிறது யோனாவிலும் பெரியது.

ஒருவனும் விளக்கைக் கொளுத்தி மறை 33
விடத்திலாவது மரக்காலின் கீழேயாவது
வைக்காமல் உள்ளே வருகிறவர்களுக்கு
வெளிச்சந் தெரியும்படி அதை விளக்குத்
தண்டின்மேல் வைப்பான். உன் கண்ணே 34
உன் சரீரத்தின் விளக்கு. உன் கண் தெளி
வாயிருந்தால் உன் முழுச்சரீரத்திலும்
வெளிச்சமிருக்கும்; உன் கண் பொல்லாத
தாயிருந்தால் உன் சரீரத்தில் இருளிருக்கும்.
இப்படியிருக்க, உன்னிலுள்ள வெளிச்சம் 35
இருளாயெனப் பார்த்துக்கொள். ஒரு 36
புறத்திலும் இருளில்லாமல் உன் முழுச்சரீ
ரத்திலும் வெளிச்சமிருந்தால் ஒரு விளக்
குத் தன் ஒளியினால் உனக்கு வெளிச்சந்
தருகிறதுபோல வெளிச்சம் முழுவதிலுமிருக்
கும் என்றார்.

அவர் இப்படிப் பேசிக்கொண்டிருக்கை 37
யில் பரிசேயன் ஒருவன் தன்னுடனேகூட
அவர் போஜனம்பண்ணவேண்டுமென்று
அவரைக் கேட்டுக்கொண்டான்; அவர்
உள்ளே வந்து உட்கார்ந்தார். அவர் போஜ 38
னம் பண்ணுகிறதற்குமுன் கை கால் கழு
வாததைப் பரிசேயன் கண்டு ஆச்சரியப்
பட்டான். ஆண்டவரோ அவனிடம்: 39
இதோ பாருங்கள், பரிசேயராகிய நீங்கள்
போஜனபான பாத்திரங்களின் வெளிப்புறத்
தைச் சுத்தமாக்குகிறீர்கள், உங்கள் உட்
புறத்திலோ கொள்ளையும் பொல்லாப்பும்
நிறைந்திருக்கின்றன. மதிகேடரே, வெளிப் 40
புறத்தை உண்டாக்கினவர் உட்புறத்தை
யும் உண்டாக்கவில்லையோ? உங்களுக்கு 41
உண்டானவைகளில் தர்மங் கொடுங்கள்,
அப்பொழுது சகலமும் உங்களுக்குச் சுத்த
மாயிருக்கும்.

பரிசேயரே, ஐயோ உங்களுக்குக் 42
கேடாம், புதினா, மருக்கொழுந்து முதலிய
சகல பூண்டுகளிலும் தசமபாகம் செலுத்தி
நியாயத்தையும் கடவுள் அன்பையும் அசட்
டையாய் விட்டுவிடுகிறீர்கள்; இவைகளை
யுஞ் செய்யவேண்டும், அவைகளையும் விடா
திருக்கவேண்டும். பரிசேயரே, ஐயோ உங் 43
களுக்குக் கேடாம், ஜெபாலயங்களில் முதல்
ஆசனத்தையும் சந்தை வெளிகளில் வந்த
னங்களையும் விரும்புகிறீர்கள். ஐயோ உங் 44
களுக்குக் கேடாம், மறைந்திருக்கிற பிரே
தக் குழிகளைப்போலிருக்கிறீர்கள், அவைகள்
மேல் நடக்கிற மனுஷருக்கு அவைகள்
தெரியாதிருக்கின்றன என்றார்.

அதைக்கேட்ட நியாயசாஸ்திரி ஒருவன் 45
அவரிடம்: போதகரே, நீர் இப்படிச்

சொல்லி எங்களேயும் அவமானப்படுத்து
46 கிறீரே என்றான். அதற்கு அவர்: நியாய
சாஸ்திரிகளே, ஐயோ உங்களுக்குக் கேடாம்,
சுமக்கிறதற்கரிய சுமைகளே மனுஷர்மேல்
சுமத்துகிறீர்கள்; நீங்களோ ஒரு விரலிலு
ம் அந்தச் சுமைகளைத் தொடவுமாட்டீர்
47 கள்; ஐயோ உங்களுக்குக் கேடாம், உங்
கள் பிதாக்கள் கொலைசெய்த தீர்க்கதரிசி
களுக்குக் கல்லறைகளே கட்டுகிறீர்கள்.
48 ஆகையால் உங்கள் பிதாக்களுடைய கிரி
யைகளுக்கு நீங்களும் சாட்சிகளாகி உடன்
படுகிறீர்கள்; அவர்கள் அவர்களைக் கொன்
49 றார்கள், நீங்கள் கட்டுகிறீர்கள். இதினி
மித்தமே: நான் தீர்க்கதரிசிகளையும் அப்
போஸ்தலரையும் அவர்களிடம் அனுப்பு
வேன்; அவர்களில் சிலரைக் கொலைசெய்து
50 சிலரை இம்சைப்படுத்துவார்கள்; இப்படிச்
செய்வதினால் ஆபேலின் இரத்தமுதல் பலி
பீடத்துக்கும் தெய்வாலயத்துக்கும் நடுவே
கொலையுண்ட சகரியாவின் இரத்தம்வரைக்
கும் உலகத்தோற்றமுதல் சிந்தப்பட்ட
சகல தீர்க்கதரிசிகளின் இரத்தமும் இந்தச்
சந்ததியினிடம் கேட்கப்படுமென்று தெய்வ
51 ஞானம் சொல்லியிருக்கிறது. நிச்சயமாகவே
இந்தச் சந்ததியினிடம் அது கேட்கப்படு
மென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.
52 நியாயசாஸ்திரிகளே, ஐயோ உங்களுக்குக்
கேடாம், அறிவின் திறவுகோலை எடுத்துவிட்
டீர்கள்; நீங்கள் அதில் பிரவேசித்ததில்லை,
பிரவேசிக்கப்போகிறவர்களையுந் தடுத்துவிட்
டீர்கள் என்றார்.
53 அவர் அவ்விடம்விட்டுப் போனபோது
வேதபாரகரும் பரிசேயரும் அவரைக்
கடுமையாய் நெருக்கி வாய்மொழிகளில்
அவரை அகப்படுத்த வேண்டுமென்று |
54 பல காரியங்களைப்பற்றிப் பேசும்படி அவ
ரைத் தந்திரமாய்த் தூண்ட ஆரம்பித்தார்
கள்.

**12** அச்சமயத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்
கள் ஒருவரையொருவர் மிதிக்கத்தக்கதாய்க்
கூடிவந்திருக்கையில் அவர் முதலாவது
தமது சீஷரோடு பேசத்தொடங்கி: மாய
மென்ற பரிசேயருடைய புளித்தமாவுக்கு
2 எச்சரிக்கையாயிருங்கள். வெளியாக்கப்ப
டாத மறைபொருளுமில்லை, அறியப்படாத
3 இரகசியமுமில்லை. ஆனபடியால், நீங்கள்
இருளிலே பேசினது எதுவோ அது வெளிச்
சத்திலே கேட்கப்படும்; நீங்கள் அறைகளில்
காதிலே சொன்னது எதுவோ அது வீடு
4 களின்மேலிருந்து கூறப்படும். என் சிநே
கிதராகிய உங்களுக்கு நான் சொல்லுகி
றேன்: சரீரத்தைக் கொலைசெய்து அதன்
பின் அதிகமொன்றுஞ் செய்யத் திராணியில்
லாதவர்களுக்கு அஞ்சவேண்டாம். நீங்கள் 5
இன்னாருக்குப் பயப்படவேண்டுமென்று
உங்களுக்குக் காண்பிக்கிறேன்; கொலை
செய்தபின்பு நரகத்திலே தள்ள அதிகார
முள்ளவருக்குப் பயப்படுங்கள்; ஆம், அவ
ருக்கே பயப்படுங்களென்று உங்களுக்குச்
சொல்லுகிறேன். இரண்டு காசுக்கு ஐந்து 6
அடைக்கலான் குருவிகளே விற்கிறார்களல்
லவா? ஆயினும் அவற்றில் ஒன்றேனும் கட
வுள் சந்நிதியில் மறக்கப்படுவதில்லை. உங் 7
கள் தலைமயிரெல்லாமே எண்ணப்பட்டிருக்
கிறது. பயப்படவேண்டாம், அநேக
அடைக்கலான் குருவிகளிலும் நீங்கள் விசே
ஷித்தவர்கள். அன்றியும் நான் உங்களுக் 8
குச் சொல்லுகிறேன்; மனுஷர்முன் என்னை
அறிக்கைபண்ணுகிறவன் எவனை அவனை
மனுஷகுமாரனும் கடவுளின் தூதர்முன்
அறிக்கை பண்ணுவார். மனுஷர்முன் 9
என்னை மறுதலிக்கிறவன் கடவுளின் தூதர்
முன் மறுதலிக்கப்படுவான். எவனுகிலும் 10
மனுஷகுமாரனுக்கு விரோதமாய் ஒருவார்த்
தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்
கப்படும்; பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்த்
தூஷணம் பேசுகிறவனுக்கோ மன்னிக்
கப்படாது. ஜெபாலயங்களுக்கும் துரைத் 11
தனங்களுக்கும் அதிகாரங்களுக்குமுன்
உங்களைக் கொண்டுபோய் விடும்போது எப்
படி, என்ன உத்தரவு சொல்லுவோமென்
றும் எதைப் பேசுவோமென்றும் கவலைப்
படவேண்டாம். நீங்கள் பேசவேண்டிய 12
வைகளைப் பரிசுத்த ஆவி அந்நேரத்திலே
உங்களுக்குப் போதிப்பார் என்றார்.
ஜனக்கூட்டத்தில் ஒருவன் அவரைப் 13
பார்த்து: போதகரே, பிதுரார்ச்சிதத்தைப்
பாகம்பிரித்து என்பங்கை எனக்குத் தரும்
படி என் சகோதரனுக்குச் சொல்லுமென்று
கேட்டுக்கொண்டான். அவர்: மனுஷனே, 14
என்னை உங்களுக்கு நியாயாதிபதியாகவும்
பங்கிடுகிறவனாகவும் வைத்தவன் யாரென்று
சொல்லி | அவர்களிடம்: எவ்விதப் பொரு 15
ளாசைக்கும் இடங்கொடாதபடி எச்சரிக்
கையாயிருக்கப்பாருங்கள். ஒருவனுடைய
ஜீவன் அவனுடைய செல்வப் பெருக்கத்தி
லில்லை என்றார். ஒரு உவமையையும் அவர் 16
களுக்குச் சொன்னார்: ஐசுவரியமுள்ள ஒரு
வனுடைய நிலம் நன்றாய் விளைந்தது.
அதைக்கண்டு அவன் தனக்குள் சிந்திப்ப 17
னாய்: நான் இப்படிச் செய்வேன், என் விளை
பொருட்களைச் சேர்த்துவைக்கிறதற்கு இட
மில்லையே; நான் ஒன்று செய்வேன், என் 18

களஞ்சியங்களே இடித்துப் பெரிதாய்க்கட்டி என் தானியம் யாவையும் என் பொருட்களையும் அங்கே சேர்த்துவைத்துப் பின்பு | 19 ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருட்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கின்றன; நீ சுகவாசியாய்ப் புசித்துக் குடித்துக் களிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேனென்று 20 சொல்லிக்கொண்டான். கடவுளோ அவனிடம்: மதிகேடனே, இந்த இராத்திரியிலே உன் உயிரை உன்னிடமிருந்து எடுத்துக் கொள்வார்கள்; அப்பொழுது நீ சேர்த்து வைத்தவைகள் யாருடையதாகும் என்றார். 21 தன் ஆஸ்தியைக் கடவுளுக்கென்றுவழங்காமல் தனக்கெனவே பொருளைச் சேர்த்துவைக்கிறவன் நிலைமை இதுவே என்றார்.

22 பின்னும் அவர் தமது சீஷரிடம்: இப்படியிருப்பதால் உங்களுக்குச் சொல்லுகிறேன், எதை உண்போமென்று உங்கள் உயிருக்காகவும் எதை உடுப்போமென்று உங்கள் உடலுக்காகவும் கவலைப்படாதிருங்கள். உணவைவிட உயிரும் உடை 24 யைவிட உடலும் முக்கியமே. காகங்களைக் கவனித்துப்பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, அவைகளுக்குப் பண்டசாலையுமில்லை, களஞ்சியமுமில்லை, எனினும் அவைகளையுங் கடவுள் பிழைப்பூட்டுகிறார். பறவைகளிலும் நீங் 25 கள் எவ்வளவோ விசேஷித்தவர்கள். கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் ஆயுளின் அளவோடு ஒரு முழத்தைக் கூட் 26 டுவான்? இவ்விதமாய் மிகவும் அற்பமான காரியத்தையும் உங்களால் செய்யமுடியாதிருக்க மற்றவைகளுக்காக நீங்கள் கவலைப் 27 படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்களைக் கவனித்துப்பாருங்கள்; அவைகள் நூற்கிறதுமில்லை நெய்கிறதுமில்லை; என்றாலும், சாலொமோனே தன் சர்வ மகிமையிலும் இவைகளில் ஒன்றைப்போல் உடுத்தியிருந்ததில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். 28 இன்றைக்கிருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப்புல்லுக்குக் கடவுள் இவ்விதமாய் உடுத்தினாரானால், அற்பவிசுவாசிகளே, உங்களுக்கு உடுத்துவது அதிக நிச்சய 29 மல்லவா? ஆதலால் எதை உண்போமோ, எதைக் குடிப்போமோ என்று நீங்கள் சந் 30 தேகப்பட்டுத் தேடவேண்டாம்; இவையெல்லாம் உலகத்தார் நாட்டமுள்ள தேட்டமுமாம்; இவை உங்களுக்குத் தேவையென்று 31 உங்கள் பிதா அறிவார். அவருடைய ராஜியத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகள் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

பயப்படாதே சிறு மந்தையே, உங்களுக்கு 32 ராஜியத்தைக்கொடுப்பது உங்கள் பிதாவுக்குப் பிரியம். உங்களுக்கு உள்ளவைகளை 33 விற்றுத் தர்மங் கொடுங்கள். பழமையாய்ப் போகாத பணப்பைகளையும் பரலோகத்திலே குறையாத ஈசுவரியத்தையும் உங்களுக்குச் சம்பாதித்துவையுங்கள்; அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை. உங்கள் ஈசுவரியம் எங்கே 34 யிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமுமிருக்கும்.

உங்கள் அரைகள் கட்டியிருக்கவேண்டும், உங்கள் விளக்குகள் எரிந்துகொண்டிருக்கவேண்டும். தங்கள் எஜமான் கலியாண விருந்திலிருந்து வந்து தட்டும்போது அவனுக்கு உடனே திறக்கும்படி எதிர் பார்த்துக் காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாயிருங்கள். எஜமான் வரும்போது விழித்திருக்கக்காணும் ஊழியக்காரரே பாக்கியவான்கள்; அவன் அரை கட்டிக்கொண்டு அவர்களை பந்தியிருக்கச்செய்து அவர்களண்டைவந்து பரிமாறுவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அவன் இரண்டாம் ஜாமத்திலாவது மூன்றாம் ஜாமத்திலாவது வந்து அவர்கள் அப்படியே இருக்கக்கண்டால் அவ்வூழியக்காரர் பாக்கியவான்கள். திருடன் இன்னநேரத்தில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால் தன் வீட்டைக் கன்னமிடவொட்டான் என்பதை அறிந்துகொள்ளுங்கள். அப்படியே நீங்கள் நினையாத நாழிகையில் மனுஷகுமாரன் வருவார்; ஆகையால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் என்றார்.

அப்பொழுது பேதுரு அவரிடம்: ஆண்டவரே, இந்த உவமையை எங்களுக்குச் சொல்லுகிறீரோ, எல்லாருக்குமோ என்று கேட்க | ஆண்டவர்: தன் ஊழியருக்கு ஏற்ற வேளையில் படியளப்பதற்கு எஜமான் அவர்கள்மேல் அதிகாரியாக நியமிக்கும் உண்மையும் விவேகமுமுள்ள உக்கிராணக்காரன் யார்? எஜமான் வரும்போது அப்படியே செய்யக்காணும் ஊழியக்காரன் பாக்கியவான். தனக்குள்ள யாவற்றின்மேலும் அவனை நியமிப்பானென்று உண்மையாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அந்த ஊழியக்காரனே: என் எஜமான் வர நாள் செல்லும் என்று தன் உள்ளத்திலே சொல்லிக்கொண்டு வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் அடிக்கவும் புசித்துக் குடித்து வெறிக்கவும் தலைப்பட்டால் | அந்த ஊழியக்காரன் எதிர்பாராதநாளிலும் அறியாத நாழிகையிலும் அவன் எஜமான் வந்து அவ

னைத் துண்டித்துப்போட்டு உண்மையில்லா
தவர்களோடே அவனுக்குப் பங்கை நிய
47 மிப்பான். தன் எஜமானுடைய சித்தத்
தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும் அவன்
சித்தத்தின்படி செய்யாமலும்போன ஊழியக்
காரனுக்கு அநேக அடிகள் கிடைக்கும்.
48 அறியாதவனுயிருந்து அடிகளுக்கு ஏதுவான
வைகளைச் செய்தவனுக்கோ கிடைக்கும்
அடிகள் சிலவே. எவனிடம் அதிகங் கொ
டுக்கப்படுகிறதோ அவனிடம் அதிகங் கேட்
கப்படும்; எவனிடம் அதிகம் ஒப்புவிப்பார்
களோ அவனிடம் இன்னும் அதிகங் கேட்
பார்கள்.

49 அக்கினியைப் பூமியின்மேல் போடவந்
தேன்; [1]அது இதற்குள் பற்றி எரிந்திருக்க
50 எவ்வளவோ விரும்புகிறேன். ஆகிலும் நான்
பெறவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது
முடிந்து தீருமளவும் எனக்கு எவ்வளவோ
51 மனநெருக்கம். சமாதானத்தைப் பூமியில்
கொடுக்கவந்தேனென்று நினைக்கிறீர்களோ?
அல்ல, பிரிவினையையே என்று உங்களுக்
52 குச் சொல்லுகிறேன். எப்படியெனில், இது
முதல் ஒரே வீட்டில் ஐந்துபேர் பிரிந்திருப்
பார்கள்; இரண்டுபேருக்கு விரோதமாய்
மூன்றுபேரும் மூன்றுபேருக்கு விரோதமாய்
53 இரண்டுபேரும் பிரிந்திருப்பார்கள். தகப்
பன் மகனுக்கும் மகன் தகப்பனுக்கும், தாய்
மகளுக்கும் மகள் தாய்க்கும், மாமி மருமக
ளுக்கும் மருமகள் மாமிக்கும் விரோதமாய்ப்
பிரிந்திருப்பார்கள் என்றார்.

54 பின்னும் அவர் ஜனங்களிடம்: மேற்கே
மேகம் எழும்புகிறதை நீங்கள் காணும்
போது மழை பெய்யுமென்று உடனே
சொல்லுகிறீர்கள்; அந்தப்படியே பெய்யும்.
55 தென்றல் அடிக்கும்போது உஷ்ணம் உண்
டாகுமென்று சொல்லுகிறீர்கள்; அப்படியே
56 உண்டாகும். மாயக்காரரே பூமியின் தோற்
றத்தையும் வானத்தின் தோற்றத்தையும்
நிதானித்தறிய உங்களுக்குத் தெரியுமே; இந்
தக் காலத்தையோ நிதானித்தறியாமற் போ
57 கிறதெப்படி? நியாயம் இன்னதென்று நீங்
களே தீர்த்துக்கொள்ளாமலிருக்கிறதென்ன?
58 உன் எதிரி உன்னை நியாயாதிபதிமுன் இழுத்
துக்கொண்டு போகாமலும் நியாயாதிபதி
உன்னைச் சேவகனிடம் ஒப்புக்கொடாமலும்
சேவகன் உன்னைச் சிறையில் வைக்காமலு
மிருக்கும்படி நீ உன் எதிரியோடு அதிகாரி
யினிடம் போகிற வழியிலேயே அவனோடு
சமாதானஞ் செய்துகொள்ளப் பிரயாசப்படு.
59 நீ கடைசிக் காசைக் கொடுத்துத் தீர்க்கு
மட்டும் சிறையிலிருந்து வெளிப்படவே
மாட்டாயென்று உனக்குச் சொல்லுகிறேன்
என்றார்.

**13** பிலாத்து சில கலிலேயருடைய இரத்
தத்தை அவர்களுடைய பலிகளோடே கலந்
திருந்தான்; அந்த வேளையிலே அங்கே இருந்
தவர்களில் சிலர் அந்தச் செய்தியை அவ
2 ருக்கு அறிவித்தார்கள். அவர் அதைக்
கேட்டு: அந்தக் கலிலேயர் இவைகளை அனு
பவித்ததினாலே எல்லாக் கலிலேயரிலும்
பெரும்பாவிகளென்று நினைக்கிறீர்களோ?
3 அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்
லுகிறேன், நீங்கள் மனந்திரும்பாமற்போனால்
எல்லாரும் அப்படியே அழிந்துபோவீர்கள்.
4 சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்
டுப்பேரைக் கொன்றதே; அவர்கள் எருச
லேமில் குடியிருக்கிற மனுஷரெல்லாரிலும்
பெருங் குற்றவாளிகளென்று நினைக்கிறீர்
5 களோ? அப்படியல்லவென்று உங்களுக்குச்
சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்
போனால் எல்லாரும் அப்படியே அழிந்து
போவீர்கள் என்றார்.

6 இந்த உவமையையும் அவர்களுக்குச்
சொன்னார்: ஒருவன் தன் திராட்சத்தோட்
டத்தில் ஒரு அத்திமரத்தை நட்டிருந்தான்;
அவன் வந்து அதிலே கனியைத் தேடின
7 போது ஒன்றுங் காணவில்லை. அப்பொழுது
அவன் தோட்டக்காரனைக் கூப்பிட்டு:
இதோ, மூன்றுவருஷமாய் இந்த அத்திமரத்
திலே கனியைத் தேடிவருகிறேன், ஒன்றை
யுங்காணவில்லை, இதை வெட்டிப்போடு;
இது ஏன் நிலத்தையும் வியர்த்தமாக்க வேண்
டுமென்றான். 8 அதற்கு அவன்: ஐயா, இது
இந்த வருஷமும் இருக்கட்டும்; நான்
இதைச் சுற்றிலும் கொத்தி எருப்போடுவேன்;
9 அடுத்த வருஷத்தில் கனி கொடுத்தால் நல்
லது, கொடாவிட்டால் இதை வெட்டிப்
போடலாமென்று சொன்னான் என்றார்.

10 ஓய்வுநாளில் அவர் ஒரு ஜெபாலயத்தில்
11 போதித்துக்கொண்டிருந்தார். இதோ, பிணி
யுண்டாக்கும் ஆவி பதினெட்டு வருஷமாய்ப்
பிடித்திருந்த ஒரு ஸ்திரீ அங்கேயிருந்தாள்.
அவள் கொஞ்சமேனும் நிமிரமுடியாத கூனி
யாய்ப் போனாள். 12 இயேசு அவளைக் கண்டு
தம்மிடம் அழைத்து: அம்மா, உன் பிணியி
னின்று விடுபட்டாய் என்று சொல்லி,
13 அவள்மேல் தமது கைகளை வைத்தார்; உட
னே அவள் நிமிர்ந்து கடவுளை மகிமைப்
14 படுத்தினாள். ஜெபாலயத்தலைவனோ இயேசு

---

[1] அது பற்றி எரிந்திருந்தால் நான் விரும்புவதென்ன என்றும் திருப்பலாம்.

ஓய்வுநாளிலே சொஸ்தமாக்கினது கண்டு
கோபமடைந்து ஜனங்களை நோக்கி: வேலை
செய்கிறதற்கு ஆறுநாள் உண்டே; அந்த
நாட்களிலே நீங்கள் வந்து குணமாக்கிக்
கொள்ளுங்கள், ஓய்வுநாளிலே அப்படிச்
15 செய்யலாகாதென்றார். ஆண்டவரோ அவ
னிடம்: மாயக்காரரே, உங்களில் ஒவ்வொரு
வனும் ஓய்வுநாளில் தன் மாட்டையாவது
தன் கழுதையையாவது தொழுவத்திலிருந்து
அவிழ்த்துக்கொண்டுபோய் அதற்குத் தண்
16 ணீர் காட்டுகிறதில்லையா? இவள் ஆபிரகா
மின் மகள்; இதோ, பதினெட்டு வருஷ
மாய்ச் சாத்தானால் கட்டப்பட்டிருந்தவள்,
இவளை ஓய்வுநாளில் இந்தக் கட்டிலிருந்து
அவிழ்த்துவிட வேண்டியதில்லையா என்றார்.
17 அவர் அப்படிச் சொன்னபோது அவரை
விரோதித்திருந்த அனைவரும் வெட்கப்பட்
டார்கள். ஜனங்களெல்லாரும் அவர் செய்த
சகல மகிமையான செய்கைகளையும்பற்றிச்
சந்தோஷித்தார்கள்.
18 அப்போது அவர்: கடவுளின் ராஜியம்
எதற்கொப்பாகும்? அதை எதற்கு ஒப்பிடு
19 வேன்? அது ஒரு கடுகுவிதைக்கு ஒப்பாகும்;
அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் தோட்
டத்திலே போட்டான்; அது வளர்ந்து மர
மாயிற்று; ஆகாயத்துப் பறவைகள் அதின்
20 கிளைகளில் வந்தடைந்தன என்றார். மேலும்
அவர்: கடவுளின் ராஜியத்தை நான் எதற்கு
ஒப்பிடுவேன்? அது புளித்தமாவுக்கு ஒப்பா
21 கும். ஒரு ஸ்திரீ அதை எடுத்து மூன்றுபடி
மா முழுதும் புளிக்கும்வரை அதிலே புதைத்
துவைத்தாள் என்றார்.
22 அவர் எருசலேமுக்குப் பிரயாணமாய்ப்
போகும்போது, ஊர்கள்தோறும் கிராமங்கள்
தோறும் உபதேசம் பண்ணிக்கொண்டு போ
23 கையில் | ஒருவன் அவரிடம் வந்து: ஆண்
டவரே, இரட்சிக்கப்படுகிறவர்கள் சிலர்தா
24 னே என்று கேட்டான். அவர் அவர்களி
டம்: இடுக்கமான வாசல்வழியாய் உட்
செல்லப் பிரயாசப்படுங்கள்; அநேகர் உட்
செல்ல வகை தேடுவார்கள், ஆயினும் அவர்
களால் முடியாமற்போகுமென்று உங்களுக்
25 குச் சொல்லுகிறேன். வீட்டெஜமான்
எழுந்து கதவைப் பூட்டினபின்பு நீங்கள்
வெளியே நின்று: ஆண்டவரே, எங்களுக்
குத் திறக்கவேண்டுமென்று சொல்லிக் கத
வைத் தட்ட ஆரம்பிக்கும்போது அவர்: நீங்
கள் எங்கிருந்து வந்தவர்களோ, உங்களையறி
யேன் என்று உங்களுக்குச் சொல்லுவார்.
26 அப்பொழுது நீங்கள்: நாங்கள் உமது சமு
கத்தில் போஜனபானம்பண்ணினோமே, நீரும்
எங்கள் வீதிகளில் போதகம் பண்ணினீரே
என்று சொல்லத்தொடங்குவீர்கள். அவ 27
ரோ: நீங்கள் எங்கிருந்து வந்தவர்களோ,
உங்களையறியேன்; அக்கிரமச் செய்கைக்கார
ராகிய நீங்களெல்லாரும் என்னைவிட்டு
அகன்றுபோங்களென்று சொல்லுவார். ஆபி 28
ரகாமும் ஈசாக்கும் யாக்கோபும் சகல தீர்க்
கதரிசிகளும் கடவுளின் ராஜியத்திலிருக்க
வும் நீங்களோ புறம்பே தள்ளப்பட்டிருக்க
வும் நீங்கள் காணும்போது அங்கே அழுகை
யும் பற்கடிப்புமாயிருக்கும். கிழக்கிலும் 29
மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலுமிருந்து
ஜனங்கள் வந்து கடவுளின் ராஜியத்தில் பந்
தியிருப்பார்கள். இதோ, பிந்தினோருள் முந் 30
தினோராவாரும் முந்தினோருள் பிந்தினோரா
வாருமுண்டு என்றார்.
அந்நேரத்தில் சில பரிசேயர் அவரிடம் 31
வந்து: நீர் இவ்விடம்விட்டுப் போய்விடும்,
ஏரோது உம்மைக்கொல்ல மனதாயிருக்கி
றான் என்று சொல்ல | அவர்: நீங்கள்போய் 32
அந்த நரியினிடம், நான் இன்றைக்கும் நா
ளைக்கும் பேய்களைத் துரத்தி வியாதியுள்ளவர்
களை குணமாக்கி மூன்றாம்நாளில் முற்றுப்
பெறுவேனென்று சொல்லுங்கள். இன்றும் 33
நாளையும் மறுநாளும் நான் நடமாடவேண்
டும்; எருசலேமுக்கு வெளியே ஒரு தீர்க்க
தரிசி மடிந்துபோவதாகாது. எருசலேமே, 34
எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து
உன்னிடம் அனுப்பப்பட்டவர்களைக் கல்
லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன்
சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்
ளும்வண்ணமாக நான் எத்தனைதரமோ உன்
பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள
மனதாயிருந்தேன்; நீங்களோ மனதில்லா
திருந்தீர்கள். இதோ, உங்கள் வீடு உங்க 35
ளுக்கே விட்டுவிடப்படும்; கர்த்தருடைய
நாமத்தில் வருகிறவர் ஆசீர்வதிக்கப்பட்ட
வர் என்று நீங்கள் சொல்லும் நாள் வரும
ளவும் என்னைக் காணாதிருப்பீர்களென்று
உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

ஓய்வுநாளில் பரிசேயரின் தலைவரில் **14**
ஒருவன் வீட்டுக்கு அவர் போஜனம்பண்
ணப் போயிருந்தபோது அவர்கள் அவரைக்
கவனித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.
நீர்க்கோவை வியாதியுள்ள ஒருவன் அவர் 2
முன் இருந்தான். இயேசு நியாயசாஸ்திரி 3
களையும் பரிசேயரையும் பார்த்து: ஓய்வு
நாளில் குணமாக்குவது நியாயமா நியாய
மில்லையா என்று கேட்டார். அவர்களோ
பேசாமலிருந்தார்கள். அப்பொழுது அவர் 4
அவனைப் பிடித்துக் குணமாக்கி அனுப்பி
விட்டு | அவர்களை நோக்கி: உங்களில் 5

ஒருவனுடைய மகனாவது மாடாவது கிணற்றிலே விழுந்தால் ஓய்வுநாளென்றாலும் அவன் உடனே தூக்கிவிடானோ என்றார்.
6 அதற்குப் பதிற்சொல்ல அவர்களால் முடியாமற்போயிற்று.
7 விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பந்தியில் முதன்மையான இடங்களைத் தெரிந்துகொண்டதை அவர் கவனித்து அவர்களுக்கு உபமானமாக: ஒருவன் உன்னைக் கலியாணத்துக்கு அழைத்திருந்தால் பந்தியில் முதன்மையான இடத்தில் உட்காராதே. உன்னிலும் மதிப்புள்ளவனை அவன் அழைத்திருந்தால், உன்னையும் அவனையும் அழைத்தவன் உன்னிடம் வந்து, இவருக்கு இடங்கொடு என்பான்; அப்பொழுது நீ வெட்கத்தோடே கடைசி இடத்திற்குப் போக வேண்டியதாகும். நீ அழைக்கப்பட்டிருக்கும்போது போய்க் கடைசி இடத்தில் உட்காரு. அப்பொழுது உன்னை அழைத்தவன் வந்து: சிநேகிதனே, உயர்ந்த இடத்தில் வாரும் என்று சொல்லும்போது உன்னுடனே பந்தியிருக்கிறவர்கள் முன்பாக நீ மதிக்கப்பெறுவாய். தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவனே உயர்த்தப்படுவான் என்று சொன்னார்.
12 அவர் தம்மை விருந்துக்கு அழைத்தவனிடம்: நீ பகலிலாவது இரவிலாவது விருந்து செய்யும்போது உன் சிநேகிதரையாகிலும் உன் சகோதரரையாகிலும் உன் பந்துஜனங்களையாகிலும் ஐசுவரியமுள்ள அயலகத்தாரையாகிலும் அழைக்கவேண்டாம்; அழைத்தால் அவர்களும் உன்னைத் திரும்ப அழைப்பார்கள், அப்பொழுது உனக்குக் கைம்மாறு
13 கிடைத்துத்தீரும். நீ விருந்து செய்யும்போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழை, அப்பொழுது
14 நீ பாக்கியனுவாய்; அவர்கள் உனக்குக் கைம்மாறுசெய்ய வகையற்றவர்கள்; நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குக் கைம்மாறு கிடைக்கும் என்றார்.
15 அவரோடு பந்தியிருந்தவர்களில் ஒருவன் இவைகளைக் கேட்டபொழுது அவரைப் பார்த்து: கடவுளின் ராஜ்யத்தில் விருந்துண்
16 கிறவன் பாக்கியன் என்றான். அவரோ அவனிடம்: ஒரு மனுஷன் பெரிய விருந்தை ஆயத்தம்பண்ணி அநேகரை அழைத்திருந்
17 தான். விருந்து நேரம்வரவே தன் ஊழியக்காரனைக் கூப்பிட்டு: அழைக்கப்பட்டவர்களிடம் நீ போய், விருந்து ஆயத்தமாயிருக்கிறது, வாருங்களென்று சொல்லென அனுப்
18 பினான். அவர்களெல்லாரும் ஒன்றுபோல் போக்குச் சொல்லத்தொடங்கினார்கள். முதலவன்: ஒரு வயலைக் கொண்டேன், நான் அவசியமாய்ப் போய் அதைப் பார்க்கவேண்டும், எனக்கு மன்னிப்புத்தரக் கேட்டுக்கொள்ளுகிறேன் என்றான். வேறொருவன்: 19
ஐந்து ஏர்மாடு கொண்டேன், அவற்றைச் சோதித்துப் பார்க்கப்போகிறேன்; எனக்கு மன்னிப்புத்தரக் கேட்டுக்கொள்ளுகிறேன் என்றான். வேறொருவன்: ஒரு பெண்ணைக் 20
கலியாணஞ் செய்திருக்கிறேன், அதினால் வர முடியாதென்றான். அந்த ஊழியக்காரன் 21
திரும்பிவந்து இவைகளைத் தன் எஜமானுக்கு அறிவித்தான். அப்பொழுது வீட்டெஜமான் கோபங்கொண்டு தன் ஊழியக்காரனிடம்: நீ பட்டணத்தின் வீதிகளிலும் தெருக்களிலும் சீக்கிரமாய்ப் போய் ஏழைகளையும் ஊனரையும் குருடரையும் சப்பாணிகளையும் இங்கே கூட்டிக்கொண்டு வா என்றான். ஊழியக்காரன்: ஐயா, நீர் கட் 22
டளையிட்டபடி செய்தாயிற்று, இன்னும் இடமிருக்கிறது என்றான். அப்பொழுது 23
எஜமான் ஊழியக்காரனிடம்: நீ பெருவழிகளிலும் வேலிகளருகிலும் போய் ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக் கொண்டுவா: என் வீடு நிறையவேண்டும். அழைத்திருந்த அந்த மனுஷரில் ஒருவனும் 24
என் விருந்தை ருசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றான் என்று சொன்னார்.
திரள்ஜனங்கள் அவரோடே வழி நடந்து 25
போகையில் அவர்கள் முகமாய் அவர் திரும்பி: என்னிடம் வருகிற ஒருவன் தன் 26
தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும் தன் சொந்த ஜீவனையுங்கூட வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமுடியாது. தனக்குரிய சிலுவை 27
யைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்சொல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமுடியாது. உங்களில் கோபுரங் 28
கட்ட விரும்பும் எந்த மனிதன் முதலாவது உட்கார்ந்து செலவைக் கணக்கிட்டு அதைக் கட்டிமுடிப்பதற்குப் போதுமான பொருள் உண்டா என்று பாராமலிருப்பான்? அஸ்தி 29
பாரமிட்டபின் கட்டிமுடிக்க வகையற்றுப் போனால் அதைக் காண்கிறவர்கள் எல்லாரும் பரியாசஞ் செய்யத்தொடங்கி: இவன் 30
கட்ட ஆரம்பித்தான், முடிக்கவோ வகையற்றுப் போனானென்று பேசுவார்களே. எந்த ராஜன் மற்றொரு அரசனோடு போர் 31
செய்யப் போகும்போது தன்னுடைய பதினாயிரம்பேரைக் கொண்டு தனக்கு

விரோதமாய் வருகிறவனுடைய இருபதி
ஞாயிரம்பேரை எதிர்க்கமுடியுமோ என்று
முதலாவது உட்கார்ந்து ஆலோசியாமலிருப்
32 பான்? எதிர்க்க முடியாதென்று கண்டால்
மற்றவன் தூரத்திலிருக்கும்போதே தன்
னுடைய பிரதிநிதிகளையனுப்பிச் சமாதான
33 நிபந்தனைகளைத் தேடுவானே. அப்படியே,
உங்களில் தனக்கு உண்டானவைகளை யெல்
லாம் விட்டுவிடாத எவனும் எனக்குச்
34 சீஷனாயிருக்க முடியாது. உப்பு நல்லது
தான்; எனினும் உப்பு சாரமற்றுப்போனால்
35 எதினால் சாரமாக்கப்படும்? அது நிலத்துக்
காகிலும் எருவுக்காகிலும் உதவாது, அதை
வெளியே கொட்டிப்போடுவார்கள். கேட்
கக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றார்.

**15** சகல ஆயக்காரரும் பாவிகளும் அவர்
சொல்வதைக் கேட்க அவரண்டை வந்து
2 கொண்டிருந்தார்கள். பரிசேயரும் வேதபார
கரும் முறுமுறுத்து: இவர் பாவிகளை ஏற்
றுக்கொண்டு அவர்களோடு சாப்பிடுகிறார்
என்றார்கள்.

அவர்களுக்கு அவர் இந்த உவமையைச்
3,4 சொன்னார்: உங்களில் நூறு ஆடுகளை
யுடைய எந்த மனுஷன் அவைகளில் ஒன்று
காணமற்போனால் தொண்ணூற்றொன்பது
ஆடுகளையுங் காட்டிலே விட்டுப்போய்க்
காணமற்போன ஆட்டைக் கண்டுபிடிக்கு
5 மளவும் தேடித்திரியான்? கண்டுபிடிக்கவே
அவன் சந்தோஷமாய் அதைத் தன் தோளின்
மேல் போட்டுக்கொண்டு வீட்டுக்கு வந்து
சிநேகிதரையும் அயலாரையுங்கூட வர
6 வழைத்து: காணமற்போன என் ஆட்
டைக் கண்டுபிடித்தேன், என்னோடு சந்
7 தோஷப்படுங்கள் என்பானே. அதுபோல
வே, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்
ணூற்றொன்பது நீதிமான்களைப்பற்றியுண்டா
கும் சந்தோஷத்திலும் மனந்திரும்பும் ஒரே
பாவியினிமித்தம் பரலோகத்தில் உண்டா
கும் சந்தோஷம் அதிகமாகுமென்று உங்
களுக்குச் சொல்லுகிறேன்.

8 அன்றியும், பத்து வெள்ளிக்காசையுடைய
எந்த ஸ்திரீ அதில் ஒரு வெள்ளிக்காசு காண
மற்போனால் விளக்கைக் கொளுத்தி வீட்
டைப் பெருக்கி அதைக் கண்டுபிடிக்கிற
வரைக்கும் கவனமாய்த் தேடாமலிருப்பாள்?
9 கண்டுபிடிக்கவே, தன் சிநேகிதைகளையும்
அயல் வீட்டுக்காரிகளையுங்கூட வரவ
ழைத்து: காணமற்போன வெள்ளிக்காசைக்
கண்டுபிடித்தேன், என்னோடு சந்தோஷப்
10 படுங்கள் என்பாளே. அதுபோலவே, மனந்
திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் கடவுளின்
தூதருக்குள் சந்தோஷமுண்டாகுமென்று
உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

பின்னும் அவர்: ஒரு மனுஷனுக்கு 11
இரண்டு குமாரரிருந்தார்கள். அவர்களில் 12
இளையவன் தகப்பனிடம் வந்து: தகப்பனே,
சொத்தில் எனக்குரிய பங்கை எனக்குத் தா
ரும் என, அவனும் அவர்களுக்குத் தன்
சொத்தைப் பங்கிட்டுக்கொடுத்தான். சில 13
நாளைக்குள் இளையமகன் எல்லாவற்றையுஞ்
சேர்த்துக்கொண்டு தூரதேசம்போய் அங்கே
துன்மார்க்க ஜீவியஞ்செய்து தன் சொத்தை
விரயஞ் செய்துவிட்டான். எல்லாவற்றை 14
யும் அவன் செலவழித்தபின்பு அத்தேசத்
திலே கொடிய பஞ்சமுண்டாயிற்று. அப்
பொழுது அவன் சாப்பாட்டுக்கும் வழியில்
லாமல் | அத்தேசத்தான் ஒருவனிடம் 15
போய் ஒட்டிக்கொண்டான். அவன் அவ
னைத் தன் வயல்களில் பன்றிமேய்க்க அனுப்
பினான். பன்றி தின்னும் தவிட்டைத்தின்று 16
தன் வயிற்றை நிரப்ப ஆசைப்பட்டான்;
அவனுக்குக் கொடுப்பாரோ இல்லை. அவ 17
னுக்குப் புத்தி தெளிந்தபோது அவன்: என்
தகப்பனுக்கு எத்தனையோ கூலிக்காரருண்டு,
அவர்களெல்லாரும் பூர்த்தியாய்ச் சாப்பிடு
கிறார்கள்; நானே இங்கே பசியினால் சாகி
றேன். நான் எழுந்து என் தகப்பனிடம் 18
போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாக
வும் உமது பார்வையிலும் பாவஞ்செய்தேன்.
இனி உமது குமாரன் எனப்பட நான் பாத் 19
திரனல்ல, உமது கூலிக்காரரில் ஒருவனைக
என்னை வைத்துக்கொள்ளுமென்பேன்
என்றுசொல்லி எழுந்து தன் தகப்பனிடம்
வந்தான். அவன் தூரத்தில் வரும்போதே 20
அவன் தகப்பன் அவனைக் கண்டு மனதுருகி
ஓடி அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு
திரும்பத்திரும்ப முத்தஞ்செய்தான். குமா 21
ரனே தகப்பனிடம்: தகப்பனே, பரத்துக்கு
விரோதமாகவும் உமது பார்வையிலும் பா
வஞ் செய்தேன், இனி உமது குமாரன்
எனப்பட நான் பாத்திரனல்ல என்று சொன்
னான். தகப்பனே தன் வேலைக்காரரைக் 22
கூப்பிட்டு: நீங்கள் சீக்கிரம்போய் உயர்ந்த
வஸ்திரம் கொண்டுவந்து இவனுக்கு உடுத்தி
இவன் கைக்கு மோதிரமும் கால்களுக்குப்
பாதரட்சைகளும் போடுங்கள். கொழுத்த 23
கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள்; நாம்
புசித்துச் சந்தோஷங் கொண்டாடுவோம்.
என் குமாரனாகிய இவன் மரித்தான், 24
திரும்பவும் உயிரோடு வந்தான்; காண
மற்போனான், திரும்பவும் காணப்பட்டான்
என்றார். அப்படியே அவர்கள் சந்தோ
ஷங்கொண்டாடத் தொடங்கினார்கள். அவ 25

னுடைய மூத்தகுமாரன் வயலிலிருந்தான். அவன் திரும்பி வீட்டுக்குச் சமீபமாய் வருகிறபோது ஆடல் பாடல்களைக் கேட்டு | 26 வேலைக்காரரில் ஒருவனையழைத்து, இது 27 என்னவென்று விசாரிக்க | அவன்: உமது சகோதரன் வந்தார், அவர் மறுபடியும் சுகத்துடனே வந்து சேர்ந்தபடியினாலே உமது தகப்பனார் கொழுத்த கன்றை அடித்தார் 28 என்றான். அப்பொழுது அவன் கோபமடைந்து உள்ளே போகமாட்டேனென்று நின்றுவிட்டான். தகப்பனே வெளியே வந்து அவனை நல் வார்த்தை சொல்லி 29 யழைக்க | அவன் தகப்பனிடம்: இதோ, இத்தனை வருஷகாலமாய் நான் உமக்குத் தொண்டுசெய்து வருகிறேன்; ஒருக்காலும் உமது கட்டளையை மீறினதில்லை. அப்படியிருந்தும், என் சிநேகிதரோடே நான் சந்தோஷங்கொண்டாடும்படி நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியையும் கொடுத்த 30 தில்லை. உம்முடைய மகனுகிய இவனே வேசிகளிடம் உமது சொத்தை அழித்து விட்டுத் திரும்பிவந்தவுடனே இவனுக்காகக் கொழுத்த கன்றை அடித்தீரே என்றான். 31 அதற்கு அவன்: மகனே, நீ எப்போதும் என் னோடிருக்கிறாய், எனக்குள்ளவைகளெல் 32 லாம் உன்னுடையவைகளே. உன் சகோதரனுகிய இவனே மரித்திருந்தான், திரும்பவும் உயிரோடி வந்தான்; காணுமற்போயிருந்தான், திரும்பவுங் காணப்பட்டான்; ஆகையால் நாம் சந்தோஷங்கொண்டாடி மனமகிழவேண்டுமே என்று சொன்னான் என்றார்.

**16** அவர் தமது சீஷரை நோக்கி: ஐசுவரியவானுகிய ஒரு மனுஷனுக்கு ஓர் உக்கிராணக்காரனிருந்தான்; இவன் தன் எஜமானுடைய சொத்துக்களை அழித்துப்போடுகிற 2 தாக அவனுக்கு அறிவித்தார்கள். அப்பொழுது எஜமான் அவனை வரவழைத்து: உன்னைக் குறித்து நான் இப்படிக் கேள்விப்படுகிறதென்ன? உன் உக்கிராணக் கணக்கை யொப்புவி, இனி நீ உக்கிராணக்காரனா 3 யிருக்கமுடியாது என்றான். உக்கிராணக்காரனே தனக்குள் யோசித்து: நான் என்ன செய்வேன், என் எஜமான் உக்கிராண வேலையிலிருந்து என்னைத் தள்ளிப்போடுகிறானே; கொத்துகிறதற்கு எனக்குச் சக்தியில்லை, 4 இரக்கவும் வெட்கப்படுகிறேன். உக்கிராண வேலையைவிட்டு என்னைத் தள்ளிவிடும்போது மற்றவர்கள் என்னைத் தங்கள் வீடுகளில் ஏற்றுகொள்ளும்படி செய்யவேண்டியது இன்னதென்று எனக்குத் தெரியவந்ததென்று சொல்லிக்கொண்டு | தன் 5 எஜமானிடம் கடன்பட்டவர்களை ஒவ்வொருவனுக வரவழைத்து, முதலாவது வந்தவனிடம்: நீ என் எஜமானிடம் பட்ட கடன் எவ்வளவென | அவன்: நூறு குடம் எண் 6 ணெய் என்றான். உக்கிராணக்காரன் அவனிடம்: நீ உன் சீட்டை வாங்கி உட்கார்ந்து ஐம்பது என்று சீக்கிரமாய் எழுது என்றான். பின்பு அவன் வேறொருவனிடம்: 7 நீ பட்ட கடன் எவ்வளவென, அவன்: நூறுகலம் கோதுமை என்றான். அவன்: நீ உன் சீட்டை வாங்கி எண்பது என்று எழுது என்றான். எஜமான் இதையறிந்து அநீத 8 உக்கிராணக்காரன் இதை யுக்தியோடு செய்தானென்று அவனை மெச்சிக்கொண்டான். வெளிச்சத்தின் பிள்ளைகளைப் பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததி நோக்கத்திற்கிசைய நடந்துகொள்வதில் யுக்தியுள்ளவர்களே. அநீதத்திற்கேதுவான 9 உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதித்துக்கொள்ளுங்கள். அப்பொருள் இல்லாமற்போகும்போது அவர்கள் உங்களை நித்திய வீடுகளில் வரவேற்பார்களென்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். கொஞ்சத்தில் உண்மையுள்ளவன் 10 அதிகத்திலும் உண்மையுள்ளவன். கொஞ்சத்தில் நேர்மையில்லாதவன் அதிகத்திலும் நேர்மையில்லாதவன். அநீதத்திற்கேதுவான 11 உலகப்பொருள் விஷயத்தில் நீங்கள் உண்மையற்றவர்களாய்ப்போனால் யார் உங்களிடம் மெய்ப்பொருளை நம்பி ஒப்புவிப்பார்கள்? மற்றவர்களுக்குரியதில் நீங்கள் நேர் 12 மையற்றவர்களாய்ப் போனால் உங்களுக்கு எதையும் சொந்தமாகக் கொடுப்பவர் யார்? எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான் 13 களுக்கு ஊழியஞ்செய்ய முடியாது; ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைச் சார்ந்துகொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான். நீங்கள் கடவுளுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ் செய்ய முடியாது என்றார்.

பணப்பிரியரான பரிசேயரும் இவைகளெல் 14 லாம் கேட்டு அவரை ஏளனஞ்செய்தார்கள். அவர் அவர்களிடம்: நீங்களே 15 மனுஷர் முன் உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள், கடவுளோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார்; மனுஷருக்குள் மேன்மையாகஎண்ணப்படுவது கடவுளுக்கு முன் அருவருப்பாம். நியாயப்பிரமாணமும் 16 தீர்க்கதரிசிகளும் யோவான் காலம்வரைக்குமே; அதுமுதல் கடவுளுடைய ராஜியம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டுவருகிறது;

எவரும் அதற்குள் பிரவேசிக்கப் பலவந்தஞ்
17 செய்கிறார்கள். தியாயப்பிரமாணத்தில் ஒரு
எழுத்தின் உறுப்பாகிலும் விழுந்துபோவ
தைப்பார்க்கிலும் வானமும் பூமியும் ஒழிந்து
18 போவது எளிதாகும். தன் மனைவியைத் தள்
ளிவிட்டு வேறொருத்தியை விவாகம்பண்ணு
கிறவன் விபசாரஞ்செய்கிறான்; புருஷனாலே
தள்ளப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவ
னும் விபசாரஞ்செய்கிறான்.

19 ஐசுவரியமுள்ள ஒரு மனுஷனிருந்தான்;
அவன் இரத்தாம்பரமும் விலையுயர்ந்த வஸ்
திரமுந் தரித்து அநுதினமும் சம்பிரமமாய்
20 வாழ்ந்துகொண்டிருந்தான். லாசரு என்
னும் பேர்கொண்ட தரித்திரன் ஒருவனு
மிருந்தான்; அவன் பருக்கள் நிறைந்தவ
னாய் அந்த ஐசுவரியவானுடைய வாசலரு
21 கே கிடந்து | அவனுடைய மேசையிலி
ருந்து விழுந்த துணிக்கைகளாலே தன் பசி
யை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்களும்
22 அவன் பருக்களை நக்கிவந்தன. அந்தத்
தரித்திரன் மரித்தான்; தெய்வதூதர் அவனை
ஆபிரகாமின் மடியிலே கொண்டுபோய் விட்
டார்கள். ஐசுவரியவானும் மரித்தான்;
23 அவனை அடக்கஞ்செய்தார்கள். இவன் பா
தாளத்திலே வேதனைப்படுகிறவனாய்த் தன்
கண்களை ஏறெடுத்தத் தூரத்திலே ஆபிரகா
மையும் அவன் மடியிலே லாசருவையுங்
24 கண்டான். காணவே அவன்: தகப்பனாகிய
ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி லாசரு
தன் விரலின் நுனியைத் தண்ணீரில்
தோய்த்து என் நாவைக் குளிரப்பண்ணும்
படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்
கினி ஜ்வாலையில் வேதனைப்படுகிறேனே
25 என்று கூப்பிட்டான். ஆபிரகாமோ: மக
னே, நீ உயிரோடிருக்குங்காலத்தில் உன்
நன்மைகளை அநுபவித்துத் தீர்ந்தது, லாச
ருவும் அப்படியே தீமைகளை அநுபவித்துத்
தீர்ந்தது, அதை நினைத்துக்கொள்; இப்பொ
ழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வே
26 தனைப்படுகிறாய். அதுவுமல்லாமல், இவ்
விடத்திலிருந்து உங்களிடத்திற்குப் போக
விரும்புகிறவர்களும் அவ்விடத்திலிருந்து
எங்களிடத்திற்கு வர விரும்புகிறவர்களும்
கடந்து போகாதபடி எங்களுக்கும் உங்
களுக்கும் நடுவே பெரும் பிளப்பு உண்
27 டாக்கப்பட்டிருக்கிறது என்றான். அவன்:
அப்படியானால், தகப்பனே, நீர் அவனை
என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி
உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்.
28 எனக்கு ஐந்துபேர் சகோதரருண்டு, அவர்
களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு
வராதபடி அவன்போய் அவர்களுக்குத் தீட்
டமாய்ச் சாட்சி பகரட்டுமென்றான். ஆபிர 29
காமோ: அவர்களுக்கு மோசேயும் தீர்க்க
தரிசிகளுமுண்டு. அவர்களுக்கு அவர்கள்
செவி கொடுக்கட்டுமென | அவன்: அப்படி 30
யல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோ
ரிலிருந்து ஒருவன் அவர்களிடம் போனால்
மனந்திரும்புவார்கள் என்றான். ஆபிரகா 31
மோ: அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசி
களுக்கும் செவிகொடாவிட்டால் மரித்தோ
ரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும் நம்ப
மாட்டார்களே என்று சொன்னான் என்றார்.

அவர் தமது சீஷரிடம்: இடறச்செய்யும் **17**
காரணங்கள் வராமல்போவது அசாத்தியம்;
எனினும் அவைகள் எவனால் வருகிறதோ,
அவனுக்கு ஐயோ பரிதாபம். அவன் இந் 2
தச் சிறியவரில் ஒருவன் இடறச்செய்வ
தைப் பார்க்கிலும் அவன் கழுத்தில் எந்திரக்
கல்லைக்கட்டி அவனைச் சமுத்திரத்தில் தள்
ளிப்போடுவது அவனுக்கு நலமாகும். உங் 3
களைப்பற்றி எச்சரிக்கையாயிருங்கள். உன்
சகோதரன் பாவஞ்செய்தால் அவனைக் கண்
டித்து பேசு. அவன் மனமாறினால் அவனுக்கு
மன்னிப்பாயாக. அவன் ஒரேநாளில் ஏழு 4
தரம் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து
ஏழுதரம் உன்னிடம் வந்து, நான் மனவருத்
தப்படுகிறேனென்று சொன்னால் அவனுக்கு
மன்னிக்கவேண்டும் என்றார்.

அதைக் கேட்ட அப்போஸ்தலர் ஆண்ட 5
வரிடம்: எங்களுக்கு அதிக விசுவாசத்தைத்
தாருமென | ஆண்டவர்: கடுகுவிதையளவு 6
விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள்
இந்தக் காட்டத்திமரத்தைப் பார்த்து, நீ வே
ரோடே பிடுங்குண்டு கடலில் நடப்படு
என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்ப்
படிந்துபோகும். மேலும் உங்களில் ஒருவ 7
னுடைய அடிமை உழுது அல்லது மந்தை
மேய்த்து வயலிலிருந்து வரும்போது எஜ
மான் அவனிடம்: உடனே வந்து சாப்பிட
உட்காரு என்பானோ? நீ எனக்குச் சாப் 8
பாடு ஆயத்தம்பண்ணி அரைகட்டிக்
கொண்டு நான் போஜனபானம்பண்ணித்
தீருமட்டும் எனக்கு பணிவிடைசெய்,
அதற்குப்பின் நீ சாப்பிடலாமென்று அவ
னுக்குச் சொல்லுவானல்லவா? தான் கட்ட 9
ளையிட்டவைகளை அந்த வேலைக்காரன் செய்
ததற்காக அவனுக்கு உபசாரவார்த்தை
சொல்வானோ? அப்படிச் செய்யமாட்டா
னே. அப்படியே நீங்களும் உங்களுக்குக் 10
கட்டளையிடப்பட்ட யாவற்றையுஞ் செய்து
முடித்தபின்பு: நாங்கள் பிரயோஜனமற்ற
அடிமைகள், செய்யக்கடமைப்பட்டிருந்த

வைகளைத் தானே செய்தோமென்று சொல்லுங்கள் என்றார்.

11 அவர் எருசலேமுக்குப் பிரயாணம் பண்ணுகையில் அவர் சமாரியா கலிலேயா என்னும் நாடுகளின் இடையே நடந்துபோ
12 னார். அவர் ஒரு கிராமத்திற்குள் போகும் போது குஷ்டரோகமுள்ள பத்துப்பேர் அவருக்கு எதிராக வந்து தூரத்திலே நின்று:
13 இயேசையனே, எங்களுக்கு இரங்கும்
14 என்று சத்தமிட்டார்கள். அவர்களை அவர் பார்த்து: நீங்கள்போய் ஆசாரியருக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். அத்தப்படி அவர்கள் போகையில் சுத்தமானார்கள்.
15 அவர்களில் ஒருவன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு திரும்பி வந்து உரத்த சத்தத்
16 தோடே கடவுளை மகிமைப்படுத்தி | அவருடைய பாதத்தில் முகங்குப்புற விழுந்து அவருக்கு நன்றிசெலுத்தினான்; அவன் ஒரு
17 சமாரியன். இயேசு அவனைக் கண்டு: பத்துப் பேரும் சுகமாகவில்லையா? மற்ற
18 ஒன்பது பேர் எங்கே? இந்த அந்நியனே ஒழிய கடவுளை மகிமைப்படுத்துகிறதற்கு வேறொருவரும் திரும்பிவரவில்லையா என்று
19 சொல்லி | அவனைப் பார்த்து: நீ எழுந்து போ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்.

20 கடவுளின் ராஜ்யம் எப்பொழுது வருமென்று பரிசேயர் அவரிடங் கேட்க அவர் கடவுளின் ராஜ்யம் கண்ணுக்காண
21 வராது. இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும் சொல்வதுமில்லை. கடவுளின் ராஜ்யம், இதோ, உங்களுக்குள்ளிருக்
22 கிறது என்று சொல்லித் | தமது சீஷரைப் பார்த்து: மனுஷகுமாரனுடைய நாட்களிலொன்றைக் காணவேண்டுமென்று நீங்கள் ஆசைப்படுங்காலம் வரும்; ஆயினும்
23 அதைக் காணமற்போவீர்கள். இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும் சிலர் உங்களிடஞ் சொல்லுவார்கள்; நீங்களோ போகாமலும் பின்தொடராமலுமிருங்
24 கள். மின்னல் மின்னும்போது வானத்தின் ஒரு திசைமுதல் மறுதிசைவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல மனுஷகுமாரனும்
25 தமது நாளில் இருப்பார்; முதலாவதோ அவர் அநேக பாடுகள்பட்டு இந்தச் சந்ததியினால் ஆகாதவனென்று தள்ளப்படவேண்
26 டியதாகும். நோவாவின் நாட்களிலிருந்தது போல மனுஷகுமாரன் நாட்களிலுமிருக்
27 கும். நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள்வரை ஜனங்கள் புசித்துக் குடித்தார்கள், பெண்கொண்டும் கொடுத்துமிருந்தார்கள். ஜலப்பிரளயம் வந்து எல்லாரையும் அழித்
துப்போட்டது. அப்படியே லோத்தினு 28
டைய நாட்களிலும் நடந்தது; ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், வீடுகட்டினார்கள். லோத்து சோதோமை விட்டுப் 29
போன நாளிலே வானத்திலிருந்து அக்கினியுங் கந்தகமுஞ் சொரிந்து எல்லாரையும் அழித்துப்போட்டது. மனுஷகுமாரன் 30
வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும். அந்த நாளிலே வீட்டின்மேலிருப்ப 31
வன் வீட்டிலுள்ள தன் சாமான்களை எடுத்துக்கொள்ள இறங்கவேண்டாம்; அப்படியே வயலிலிருக்கிறவன் பின்னிட்டுத் திரும்பவேண்டாம். லோத்தின் மனைவியை நினைத் 32
துக்கொள்ளுங்கள். தன் ஜீவனைப் பாது 33
காக்க வகைதேடுகிறவன் எவனும் அதை இழந்துபோவான், இழந்துபோகிறவன் எவனும் அதை உயிரோடு காத்துக்கொள்வான். அந்த இராத்திரியில் ஒரே படுக்கையில் 34
படுத்திருக்கிற இரண்டுபேரில் ஒருவனைக் கூட்டிக்கொண்டு போவார்கள், மற்றவனைக் கைவிடுவார்கள். இரண்டு ஸ்திரீகள் ஒன் 35
றாய் எந்திரம் அரைத்துக்கொண்டிருப்பார்கள். ஒருத்தியைக் கூட்டிக்கொண்டு போவார்கள், மற்றவளைக் கைவிடுவார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அவர்கள் அவரிடம்: எங்கே ஆண்டவரே, 37
என்று கேட்க அவர்: பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடுமென்று அவர்களுக்குச் சொன்னார்.

18 சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும் என்பதைப்பற்றி அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச்
2 சொன்னார். ஒரு ஊரில் ஒரு நியாயாதிபதி இருந்தான்; அவன் கடவுளுக்குப் பயப்படாதவன், மனுஷரை மதியாதவன். அந்த 3
ஊரில் ஒரு விதவையுமிருந்தாள்; அவள் அவனிடம் போய்: என் எதிராளியின் கைக்குத் தப்பும்படி என் வழக்கைத் தீர்மென்று விண்ணப்பஞ் செய்துகொண்டேயிருந்தாள். சிலகாலம் அவனுக்கு மனதில் 4
லாதிருந்தது. பின்பு அவன்: நான் கடவுளுக்குப் பயப்படாமலும் மனுஷரை மதியாமலுமிருந்தும் | இந்த விதவை என்னைத் 5
தொந்தரவு செய்துகொண்டேயிருக்கிறபடியினால் இவள் வழக்கைத் தீர்த்துவிடுவேன்; இல்லையானால் இவள் வந்து என்னை ஓயாமல் அலட்டிக்கொண்டேயிருப்பாள் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் என்றார். பின்னும் ஆண்டவர்: அநீதனான 6
அந்த நியாயாதிபதி சொன்னதைக் கேட்டீர்

7 களே. கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்ட
வர்களாய் இராப்பகல் அவரை நோக்கிக்
கூப்பிடுகிறவர்களுக்கு அவர் நியாயஞ்செய்
யாமலிருப்பாரோ? அவர்கள் விஷயத்தில்
8 அவர் பொறுமையுள்ளவர். சீக்கிரத்திலே
அவர்களுக்கு நியாயஞ்செய்வாரென்று உங்
களுக்குச் சொல்லுகிறேன். ஆகிலும் மனு
ஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவா
சத்தைக் காண்பாரோ என்றார்.
9 அன்றியும், தங்களே நீதிமான்களென்று
நம்பி மற்றவர்களே அற்பமாயெண்ணின
சிலரைப்பார்த்து இந்த உவமையைச்
10 சொன்னார்: இரண்டு மனுஷர் ஜெபம்பண்
ணத் தெய்வாலயத்திற்குப் போனார்கள்;
ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன்.
11 பரிசேயன் நின்று: கடவுளே, நான் மற்ற
ார், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய
மற்ற மனுஷரைப்போலவும் இந்த ஆயக்
காரனைப்போலவும் இராதபிஜல் உமக்கு
12 நன்றிசெலுத்துகிறேன். வாரத்தில் இரண்டு
தரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்தி
லெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன்
என்று தனக்குள்ளே ஜெபம் பண்ணினான்.
13 ஆயக்காரனோ தூரத்தில் நின்று தன் கண்க
ளையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியா
மல் தன் மார்பிலே அடித்துக்கொண்டு:
கடவுளே, பாவியாகிய எனக்கு இரங்கும்
14 என்றான். அவனல்ல, இவனே கடவுளால்
ஏற்றுக்கொள்ளப்பட்டவனாய்த் தன் வீட்
டுக்குத் திரும்பினானென்று உங்களுக்குச்
சொல்லுகிறேன்; தன்னை உயர்த்துகிறவனெ
வனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தாழ்த்து
கிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.
15 அவர் தொடவேண்டுமென்று குழந்தை
களை அவரிடங் கொண்டுவந்தார்கள். சீஷர்
அதைக்கண்டு, கொண்டுவந்தவர்களை அதட்
16 டினார்கள். இயேசுவோ அக்குழந்தைகளைத்
தம்மிடம் அழைத்து: சிறுபிள்ளைகள் என்
னிடம் வருகிறதற்கு இடங்கொடுங்கள்,
அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; கடவு
ளின் ராஜியம் அப்படிப்பட்டவர்களுடை
17 யது. சிறுபிள்ளையைப்போல் கடவுளின்
ராஜியத்தை ஏற்றுக்கொள்ளாதவன் எவ
னும் அதில் பிரவேசிக்கவே மாட்டானென்று
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்
என்றார்.
18 அப்பொழுது தலைவன் ஒருவன் அவரி
டம்: நல்ல போதகரே, நித்திய ஜீவனைச்
சுதந்தரிப்பதற்கு நான் என்ன செய்யவேண்
19 டுமென்று கேட்டான். அதற்கு இயேசு: நீ
என்னை நல்லவனென்று சொல்வானேன்?
20 கடவுள் ஒருவரே தவிர நல்லவர் ஒருவரு
மில்லையே. நீ கடவுளின் கட்டளைகளை யறி
வாய்; விபசாரஞ்செய்யாதே, கொலைசெய்யா
தே, களவுசெய்யாதே, பொய்ச்சாட்சி சொல்
லாதே, உன் தகப்பனையும் உன் தாயையும்
கனம்பண்ணு என்பவைகளே என்றார்.
21 அவனோ: இவைகளையெல்லாம் என் சிறு
வயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன் என்
22 றான். இயேசு அதைக் கேட்டு: இன்னும்
உன்னிடம் ஒரு குறைவு உண்டு; உனக்கு
உண்டானவைகளையெல்லாம் விற்றுத் தரித்
திரருக்குப் பங்கிட்டுக் கொடு, அப்பொழுது
பரலோகத்தில் உனக்கு ஐசுவரியமிருக்கும்;
அப்பால் வந்து என்னைப் பின்பற்று என்
23 றார். அவன் அதிக ஐசுவரியமுள்ளவனாய
படியினால் இவைகளைக் கேட்டபொழுது
24 மிகுந்த சஞ்சலமடைந்தான். இயேசு அவ
னைப் பார்த்தவராய்: ஐசுவரியமுள்ளவர்கள்
கடவுளின் ராஜியத்தில் பிரவேசிப்பது எவ்வ
25 ளவு அரிது. ஐசுவரியவான் கடவுளின்
ராஜியத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும்
ஒட்டகம் ஊசியின் காதில் நுழைவது எளிது
26 என்றார். அதைக் கேட்டவர்கள்: அப்படி
யானால் யார் இரட்சிக்கப்படக் கூடும் என்
27 றார்கள். அதற்கு அவர்: மனுஷரால்
ஆகாதவைகள் கடவுளால் ஆகும் என்
28 றார். பேதுருவோ: இதோ, நாங்கள் எங்
களுக்குரியவைகளை விட்டு உம்மைப் பின்
29 பற்றினோமே என்றான். அவர் அவர்களி
டம்: கடவுளின் ராஜியத்தினிமித்தம் வீட்
டையாவது மனைவியையாவது சகோதரரை
யாவது பெற்றோரையாவது பிள்ளைகளையா
வது விட்டவன் எவனும் | இம்மையில் 30
அதிகமானவைகளையும் மறுமையிலே நித்
திய ஜீவனையும் அடையாமற்போவதில்லை
யென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்
லுகிறேன் என்றார்.
31 பின்பு அவர் பன்னிருவரையும் தமது
பக்கமாய் அழைத்து: இதோ, எருசலேமுக்
குப் போகிறோம், மனுஷகுமாரனைப்பற்றித்
தீர்க்கதரிசிகள் எழுதியவைகளெல்லாம்
நிறைவேறும். அவர் புறஜாதியாரிடத்தில் 32
ஒப்புக்கொடுக்கப்படுவார், அவர்கள் அவ
ரைப் பரியாசஞ்செய்து அவமானப்படுத்தித்
துப்பி வாரினால் அடித்துக் கொலை செய்வார்
கள்; மூன்றாம்நாளிலே அவர் உயிரோடெ 33
முந்திருப்பார் என்றார். இவைகளில் ஒன் 34
றையும் அவர்கள் உணரவில்லை; இந்தப்
பேச்சு அவர்களுக்கு மறைந்திருந்தது;
அவர் சொன்னவைகளை அவர்கள் அறிந்து
கொள்ளவில்லை.
35 அவர் எரிகோவைச் சமீபித்தபோது
ஒரு குருடன் வழியோரம் உட்கார்ந்து பிச்

36 சை கேட்டுக்கொண்டிருந்தான். இனக்கூட்
டம் கடந்து போகிற சத்தத்தை அவன்
கேட்டு இது என்னவென்று விசாரித்தான்.
37 நசரேயனாகிய இயேசு போகிறாரென்று அவ
38 னுக்கு அறிவிக்க | அவன்: இயேசுவே, தா
வீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று
கூப்பிட்டான். முன் நடந்தவர்கள் பேசா
மலிருக்கும்படி அவனை அதட்டினார்கள்.
39 அவனோ: தாவீதின் குமாரனே, எனக்கு
இரங்கும் என்று இன்னும் மிகவும் அதிக
மாய்க் கூப்பிட்டான். இயேசு நின்று அவ
னைத் தம்மிடம் கூட்டிவரும்படி சொன்
40,41 னார். அவன் கிட்ட வரவே அவர்: நான்
உனக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்
கிறாய் என்று கேட்டார். அதற்கு அவன்:
ஆண்டவரே, நான் பார்வையடையவேண்டு
42 மென்றான். இயேசு அவனிடம்: நீ பார்
வை பெறுவாயாக, உன் நம்பிக்கை உன்
43 னைக் குணமாக்கினது என்றார். உடனே
அவன் பார்வையடைந்து கடவுளை மகிமைப்
படுத்திக்கொண்டே அவருக்குப் பின்சென்
றான். இனங்களெல்லாரும் அதைக் கண்டு
கடவுளைப் புகழ்ந்தார்கள்.

**19** அவர் எரிகோவினுட் சென்று அதின்
வழியே நடந்துபோய்க்கொண்டிருந்தார்.
2 இதோ, சகேயுவென்னும் ஒரு மனுஷனி
ருந்தான்; அவன் ஆயக்காரர் தலைவன், தன
3 வந்தான். இவன் இயேசு இன்னார் என்று
பார்க்க வகைதேடினான். அவன் குள்ள
னானபடியால் இனக்கூட்டத்தில் அவரைப்
4 பார்க்கமுடியாமல் | அவர் போகும் வழி
யில் முன்னாக ஓடிப்போய் அவரைப் பார்க்
கும்படி ஒரு காட்டத்திமரத்தில் ஏறியிருந்
5 தான். இயேசு அந்த இடத்திற்கு வரவே,
அண்ணாந்துபார்த்து: சகேயுவே, நீ சீக்கிர
மாய் இறங்கிவா, இன்று நான் உன் வீட்
டில் தங்கவேண்டுமென்று அவனிடஞ்
6 சொல்ல | அவன் சீக்கிரமாய் இறங்கிச் சந்
தோஷத்தோடே அவரை உபசாரமாய்
7 அழைத்தான். அதைக்கண்ட யாவரும்:
இவர் பாவியான மனுஷனிடம் தங்கப்
போனாரே என்று முறுமுறுத்தார்கள்.
8 சகேயு நின்று ஆண்டவரை நோக்கி:
ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை
ஏழைகளுக்குக் கொடுத்துவிடுகிறேன்.
நான் எவனையாவது வஞ்சித்து வாங்கின
தண்டனால் அதைநாலத்தனையாகத் திரும்ப
9 கொடுக்கிறேன் என்றான். இயேசு அவன்
பக்கமாய்த் திரும்பி: இன்றே இந்த வீட்
டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகா
மின் குமாரன்தானே. காணாமற்போனதைத் 10
தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன்
வந்திருக்கிறார் என்றார்.

அவர்கள் இவைகளைக் கேட்டுக்கொண் 11
டிருக்கையில், அவர் எருசலேமுக்குச் சமீ
பித்திருந்தபடியினாலும் கடவுளின் ராஜ்யம்
சீக்கிரமாய் வெளிப்படுமென்று அவர்கள்
நினைத்தபடியினாலும் ஒரு உவமையை அவர்
களுக்குச் சொன்னார்: உயர்குடியிற் பிறந்த 12
ஒருவன் ராஜாதிகாரம் பெற்றுக்கொண்டு
திரும்பி வரத் தூரதேசம்போனான். போகும் 13
போது தன் ஊழியக்காரரில் பத்துப்பேரை
யழைத்து அவர்களிடம் [1]பத்துராத்தல் திர
வியங் கொடுத்து: நான் திரும்பி வருமளவும்
இதை வைத்து வியாபாரஞ்செய்துகொண்
டிருங்களென்று சொன்னான். அவனுடைய 14
குடிகள் அவனைப் பகைத்து, இவன் எங்கள்
மேல் ராஜாவாயிருக்கிறது எங்களுக்குச் சம்
மதமில்லையென்று சொல்லும்படி அவன்
பின்னே பிரதிநிதிகளையனுப்பினார்கள். அவ 15
னே அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டு
திரும்பிவந்தான். வந்தவுடன், தன்னிடம்
பணம்வாங்கியிருந்த அந்த ஊழியக்காரரில்
அவனவன் வியாபாரஞ்செய்து சம்பாதித்தது
இவ்வளவென்று அறியும்படி அவர்களைத்
தன்னிடம் அழைத்து வரச்சொன்னான்.
அப்பொழுது முதலவன் வந்து: ஐயா, உம் 16
முடைய ராத்தலினால் பத்து ராத்தல் ஆதா
யம் கிடைத்தது என்றான். எஜமான் அவ 17
னிடம்: நல்லது, உத்தம ஊழியக்காரனே,
அற்பத்தில் நீ உண்மையுள்ளவனாயிருந்தபடி
யால் பத்து ஊர்களின்மேல் அதிகாரியாயிரு
என்றான். அப்படியே இரண்டாம் ஊழி 18
யக்காரன் வந்து: ஐயா, உம்முடைய ராத்
தலினால் ஐந்து ராத்தல் ஆதாயம் கிடைத்தது
என்றான். அவனிடமும்: நீயும் ஐந்து 19
பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு என்
றான். பின்பு மற்றவன் வந்து: ஐயா, இதோ 20
உமது ராத்தல், இதை ஒரு துணியில் முடித்
துவைத்திருந்தேன். நீர் கடினமான மனுஷ 21
னென்று உமக்குப் பயந்திருந்தேன், நீர்
வைக்காததை எடுக்கிறவர், விதைக்காததை
அறுக்கிறவர் என்றான். அதற்கு அவன்: 22
பொல்லாத ஊழியனே, உன் வாயைக்
கொண்டே உன்னை நியாயந்தீர்க்கிறேன்.
நான் வைக்காததை எடுக்கிறவனும்
விதைக்காததை அறுக்கிறவனுமான கடின
முள்ள மனுஷனென்று அறிந்திருந்தாயே.
பின்னை ஏன் நீ என் பணத்தைக் காசுக் 23

[1] ஒரு ராத்தல் ஐம்பது ரூபாவுக்குச் சமமாம்.

கடையிலே விட்டுவைக்கவில்லை? வைத்திருக்
தால் நான் வந்து அதை வட்டியோடே
வரப்பற்றிக்கொள்வேனே என்று சொல்
24 லிச் | சமீபமாய் நிற்கிறவர்களே நோக்கி:
அந்த ராத்தலை அவனையிலிருந்து வாங்கிப்
பத்து ராத்தல் உள்ளவனுக்குக் கொடுங்கள்
25 என | அவர்கள்: ஐயா, அவனுக்குப் பத்து
26 ராத்தல் இருக்கிறதே என்றார்கள். அதற்கு
அவன்: உள்ளவன் எவனுக்கும் கொடுக்கப்
படும், இல்லாதவனிடத்திலிருந்தோ உள்ள
தும் எடுத்துக்கொள்ளப்படுமென்று உங்க
27 ளுக்குச் சொல்லுகிறேன். அன்றியும், தங்
கள்மேல் நான் ராஜாவாகச் சம்மதமில்லா
திருந்த என் சத்துருக்களை இங்கே கொண்டு
வந்து என்முன் வெட்டிப்போடுங்களென்று
சொன்னான் என்றார்.
28 இவைகளைச் சொன்னபின்பு அவர் எருச
லேமுக்குப் போக முந்தி நடந்துபோனார்.
29 அவர் ஒலிவம் என்னும் மலையின் அருகான
பெத்பகே பெத்தானியா ஊர்களைச் சமீபித்த
போது தமது சீஷரில் இருவரையனுப்பி:
30 உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்
குப் போங்கள், அதினுட்செல்லும்போது
ஒரு மனுஷனும் ஒருக்காலும் ஏறியிராத
கழுதைக்குட்டியைக் கட்டியிருக்கக் காண்
பீர்கள்; அதை அவிழ்த்துக் கொண்டுவாருங்
31 கள். அதை ஏன் அவிழ்க்கிறீர்களென்று
யாராவது உங்களிடங் கேட்டால், அது
ஆண்டவருக்குத் தேவையென்று சொல்லுங்
32 கள் என்றார். அனுப்பப்பட்டவர்கள்
போய்த் தங்களுக்கு அவர் சொன்னபடியே
33 கண்டார்கள். கழுதைக்குட்டியை அவர்
கள் அவிழ்க்கும்போது அதற்கு உடைய
வர்கள்: குட்டியை ஏன் அவிழ்க்கிறீர்கள்
34 என்று கேட்க | அவர்கள்: அது ஆண்டவ
ருக்குத் தேவையென்று சொல்லிவிட்டு,
35 அதை இயேசுவினிடங் கொண்டுவந்து தங்
கள் வஸ்திரங்களைக் குட்டியின்மேல் போட்டு
இயேசுவை அதின்மேல் ஏற்றினார்கள்.
36 அவர் போகையில் தங்கள் வஸ்திரங்களை
37 வழியிலே விரித்தார்கள். அவர் சமீப
மாகவே ஒலிவமலையின் சரிவில் வருகையில்
சீஷர் கூட்டமெல்லாம் தாங்கள் கண்ட
சகல வல்லசெயல்களையுங் குறித்துச் சந்
தோஷங்கொண்டு:
38 கர்த்தரின் நாமத்தில்
வருகிறவராகிய ராஜா ஆசீர்வதிக்கப்பட்
டவர்.
பரலோகத்திலே சமாதானமும்
உன்னதத்திலே மகிமையும் உண்டாவ
தாக
என்று மிகுந்த சத்தமாய்க் கடவுளைத் துதிக்
கத் தொடங்கினார்கள். அப்பொழுது ஜனக் 39
கூட்டத்திலிருந்த பரிசேயரில் சிலர் அவரி
டம்: போதகரே, உம்முடைய சீஷரைக்
கண்டியுமென்று சொல்ல | அவர்: இவர் 40
கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடு
மென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்
றார்.
அவர் சமீபித்தபோது நகரத்தைப் 41
பார்த்து அதற்காக அழுது: இந்த நாளிலா 42
கிலும் சமாதானத்துக்கு ஏதுவானவைகளை
நீதானே அறிந்திருந்தாயானால் நலமாயிருக்
கும்; இப்பொழுதோ அவைகள் உன் கண்
களுக்கு மறைந்திருக்கின்றன. இதோ, 43
உனக்கு நாட்கள் வரும், அந்நாட்களில்
உன் சத்துருக்கள் உன்னைச்சூழ மதில்
போட்டு உன்னை வளைந்துகொண்டு எப்பக்
கத்திலும் உன்னை நெருக்கி | உன்னையும் 44
உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் நிர்
மூலமாக்கி, உன்னிடம் கல்லின்மேல் கல்
இராதபடி செய்வார்கள். கடவுள் உன்
னைச் சந்தித்த காலத்தை நீ அறியாமற்
போனதே இதற்குக் காரணமென்று சொன்
னார்.
அவர் தெய்வாலயத்திற்குள் பிரவேசித்து 45
அதிலே விற்கிறவர்களை வெளியே துரத்தத்
தொடங்கி: என்னுடைய வீடு ஜெபவீடு 46
என்று எழுதியிருக்கிறது, நீங்களோ அதைக்
கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார்.
அவர் நாடோறும் தெய்வாலயத்தில் உப 47
தேசித்துவந்தார். பிரதான ஆசாரியரும்
வேதபாரகரும் ஜனத்தின் பிரதானிகளும்
அவரைக் கொலைசெய்ய வகைதேடி
யும் | ஜனங்களெல்லாரும் அவர் உபதே 48
சத்தை ஆவலாய்க்கேட்டு அவரை அண்டிக்
கொண்டிருந்தபடியால் இன்னதுதான் செய்
யலாமென்று வகைகாணாதிருந்தார்கள்.

அந்நாட்களில் ஒன்றில் அவர் தெய்வா **20**
லயத்தில் ஜனங்களுக்குபதேசித்துச் சுவி
சேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டிருந்த
போது பிரதான ஆசாரியரும் வேதபாரகரும்
மூப்பரோடு அவரிடங்கூடிவந்து: நீர் எந்த 2
அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்?
இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர்
யார்? எங்களுக்குச் சொல்லுமென்று
கேட்க | அவர்: நானும் உங்களிடத்தில் ஒரு 3
காரியத்தைக் கேட்கிறேன், அதை எனக்
குச் சொல்லுங்கள். யோவானுடைய 4
ஸ்நானம் பரலோகத்திலிருந்து வந்ததோ
மனுஷரிடத்திலிருந்து வந்ததோ என்று
கேட்டார். அவர்கள் தங்களுக்குள்ளே 5
ஆலோசனை செய்து: பரலோகத்திலிருந்து

என்று சொல்வோமானால் பின் என் அவனை
6 நம்பவில்லீ என்று கேட்பார். மனுஷரிடத்திலிருந்தென்று சொல்வோமானால் ஜனங்களெல்லாரும் நம்மேல் கல்லெறிவார்கள்; அவர்கள் அவனைத் தீர்க்கதரிசியென்று திட்டமாய் நம்பியிருக்கிறார்களே என்று
7 சொல்லி: அது எங்கிருந்து வந்ததோ தெரியவில்லையென்று சொல்லிவிட்டார்கள். அப்
8 பொழுது இயேசு அவர்களிடம்: நானும் இன்ன அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லேன் என்றார்.

9 அவர் ஜனங்களுக்கு இந்த உவமையைச் சொல்லத் தொடங்கினார்: ஒரு மனுஷன் ஒரு திராட்சத்தோட்டம் போட்டுக்குடியானவர்களுக்கு அதைக் குத்தகையாக விட்டு நெடுநாளாகப் புறதேசத்துக்குப் போயிருந்
10 தான். பருவகாலத்தில் திராட்சத்தோட்டத்தின் கனிகளில் தன் பாகத்தைக் கொடுத்தனுப்பும்படி குடியானவர்களிடம் ஒரு ஊழியக்காரனை யனுப்பினான். அவர்களோ அவனை அடித்து வெறுங்கையாய் அனுப்பி
11 விட்டார்கள். பின்பு அவன் வேறொரு ஊழியக்காரனை யனுப்பினான்; அவனையும் அவர்கள் அடித்து அவமானப்படுத்தி வெறுங்
12 கையாய் அனுப்பிவிட்டார்கள். அவன் மூன்றுமுறையும் ஒரு ஊழியக்காரனையனுப்பினான்; இவனையும் காயப்படுத்தித் துரத்தி
13 விட்டார்கள். அப்பொழுது திராட்சத்தோட்டத்து எஜமான்: நான் என்ன செய்வேன், என் அருமையான குமாரனையனுப்புவேன், ஒருவேளை அவனை மதிப்பார்க
14 ளென்று சொல்லிக்கொண்டான். குடியானவர்களோ அவனைக் கண்டு: இவன் சுதந்தரவாளி, சுதந்தரம் நம்முடையதாகும்படி இவனைக் கொன்றுபோடுவோமென்று ஒரு
15 வரோடொருவர் பேசிக்கொண்டு | அவனைத் திராட்சத்தோட்டத்திற்குப் புறம்பே தள்ளிக் கொலைசெய்தார்கள். இப்படி யிருக்கத் திராட்சத்தோட்டத்து எஜமான் அவர்களை
16 என்ன செய்வான்? அவன் வந்து இந்தக் குடியானவர்களை அழித்து மற்றவர்களிடம் தோட்டத்தை விடுவான் என்றார். அவர்கள் அதைக்கேட்டு: ஐயோ, அப்படிவேண்
17 டாம் என்றார்கள். அவரோ அவர்களை உற்றுப்பார்த்து: அப்படியானால்

வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே
கோடிக்குத் தலைக்கல்லாயிற்று

என்று எழுதியிருக்கிற வேதவாக்கியத்தின்
18 கருத்தென்ன? அந்தக் கல்லின்மேல் விழுகிறவன் எவனும் நொறுங்கிப்போவான், அது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப் போடும் என்றார்.

19 வேதபாரகரும் பிரதான ஆசாரியரும் தங்களைக்குறித்து இந்த உவமையைச் சொன்னரென்று அறிந்து அந்நேரத்திலே அவரைப் பிடிக்க வகைதேடினார்கள்; ஆகிலும் ஜனங்களுக்குப் பயந்திருந்தார்கள். 20 அவர்கள் சமயம் பார்த்திருந்து தேசாதிபதியின் ஆளுகைக்கும் அதிகாரத்துக்கும் அவரை ஒப்புக்கொடுப்பதற்கேதுவாக அவருடைய பேச்சிலே குற்றங் கண்டுபிடிக்கும்படி தங்களை உண்மையுள்ளவர்கள்போலக் காண்பிக்கிற வேவுக்காரரை அவரிடம் அனுப்பினார்கள்.
21 அவர்கள் வந்து: போதகரே, நீர் பேசுவதிலும் உபதேசிப்பதிலும் நேர்மையானவர், முகதாட்சணியமில்லாமல் கடவுளின் மார்க்கத்தை உண்மையாய்ப் போதிக்கிறவர், இது
22 எங்களுக்குத் தெரியும். இராயனுக்கு வரி செலுத்துகிறது நியாயமோ அல்லவோ
23 என்று கேட்டார்கள். அவர்கள் தந்திரத்தை அவர் அறிந்து அவர்களைப் பார்த்து:
24 ஒரு தினாரியத்தை எனக்குக் காட்டுங்கள்; இதிலிருக்கும் சரூபமும் மேலெழுத்தும் யாருடையது என்று கேட்க அவர்கள்:
25 இராயனுடையது என்றார்கள். அதற்கு அவர்: அப்படியானால் இராயனுடையவைகளை இராயனுக்கும் கடவுளுடையவைகளைக் கடவுளுக்குஞ் செலுத்துங்களென்று சொல்லிவிட்டார். 26 ஜனங்களுக்குமுன்பாக அவரைப் பேச்சிலே குற்றங்கண்டுபிடிக்கமுடியாமல் அவர் சொன்ன உத்தரவைக் கேட்டு அவர்கள் ஆச்சரியப்பட்டு மவுனமாயிருந்தார்கள்.

27 உயிர்த்தெழுதல் இல்லையெனச் சாதிக்கிற சதுசேயரில் சிலர் அவரிடம் வந்து: போதகரே, ஒருவன் மனைவியையுடையவனாயிருந்து பிள்ளையில்லாமல் இறந்துபோனால்
28 அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகஞ்செய்து தன் சகோதரனுக்குச் சந்தானமுண்டாக்க வேண்டுமென்று மோசே எங்களுக்கு எழுதி வைத்திருக்கிறாரே. சகோதரர் ஏழுபேரிருந்தார்கள். அவர்
29 களில் மூத்தவன் ஒரு பெண்ணை விவாகஞ் செய்து பிள்ளையில்லாமல் இறந்துபோனான்.
30 பின்பு இரண்டாஞ் சகோதரனும் மூன்றாஞ்
31 சகோதரனும் முறையே அவளை விவாகஞ் செய்தார்கள். அப்படியே ஏழுபேரும் அவளை விவாகஞ்செய்து, பிள்ளையில்லாமல்
32 இறந்துபோனார்கள். கடைசியாக அந்த
33 ஸ்திரீயும் இறந்துபோனாள். இப்படியிருக்க, உயிர்த்தெழுதலில் அவர்களில் எவனுக்கு அவள் மனைவியாவாள்? ஏழுபேரும் அவளை

மனிவியாகக் கொண்டிருந்தார்களே என்று
34 கேட்க | இயேசு: இந்த யுகத்தின் பிள்ளை
கள் பெண்கொண்டும் பெண்கொடுத்தும்
35 வருகிறார்கள். அந்த யுகத்தையும் மரித்
தோரிலிருந்தெழுந்திருக்குதலையும் அடையப்
பாத்திரராக எண்ணப்படுவோர் கொள்வது
36 மில்லை கொடுப்பதுமில்லை. இனி அவர்கள்
மரிக்கவுமாட்டார்கள், அவர்கள் தெய்வ
தூதரைப்போலாவார்கள். உயிர்த்தெழுத
லின் பிள்ளைகளாகிக் கடவுளின் பிள்ளைக
37 ளுமாயிருக்கிறார்கள். மரித்தோர் எழுப்
பப்படுவார்களென்பதை மோசேயும் முட்
செடியைப்பற்றிய வாசகத்தில் தெரியக்
காட்டியிருக்கிறான். கர்த்தரை ஆபிரகா
மின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்
கோபின் கடவுள் என்று சொல்லியிருக்கி
38 றானே. அவர் மரித்தோரின் கடவுளல்ல,
ஜீவனுள்ளோரின் கடவுளே. அவருக்கு
எல்லாரும் ஜீவனுள்ளவர்களே என்றார்.
39 அப்பொழுது வேதபாரகரில் சிலர் அதைக்
கேட்டுப் போதகரே, நன்றாய்ச் சொன்னீர்
40 என்றார்கள். அதன்பின்பு அவர்கள் அவ
ரிடம் ஒன்றுங்கேட்கத் துணியவில்லை.
41 அவரோ அவர்களிடம்: கிறிஸ்து தாவீ
தின் குமாரன் என்று எப்படிச் சொல்லு
42 கிறார்கள்? தாவீது தானே சங்கீத புஸ்த
கத்தில்:

கர்த்தர் என் ஆண்டவரிடம்:
43 நான் உமது சத்துருக்களை
உமக்குப் பாதபடியாகப் போடுமட்டும்
நீர் என் வலதுபாரிசத்தில் உட்காரும்
என்றார்

44 எனச் சொல்லுகிறானே. தாவீது அவரை
ஆண்டவரென்று சொல்லியிருக்க, அவ
னுக்கு அவர் குமாரனாயிருப்பதெப்படி என்
45 றார்.
ஜனங்களெல்லாரும் கேட்க அவர் தமது
சீஷரை நோக்கி: வேதபாரகரைப்பற்றி எச்
46 சரிக்கையாயிருங்கள்; அவர்கள் நீண்ட
அங்கிகளைத் தரித்துக்கொண்டு திரிய விரும்
புகிறார்கள். சந்தைவெளிகளில் வந்தனங்
களையும் ஜெபாலயங்களில் முதல் ஆசனங்
களையும் விருந்துகளில் முதலிடங்களையும்
47 விரும்புகிறார்கள். விதவைகளின் வீடுகளை
யோ பட்சித்தப் பார்வைக்கு நீண்ட ஜெபஞ்
செய்கிறார்கள். அவர்கள் அதிகத் தண்
டனை பெறுவார்கள் என்றார்.

**21** அவர் கண்களை ஏறெடுத்து ஐசுவரிய
வான்கள் காணிக்கைப்பெட்டியிலே தங்கள்
காணிக்கைகளைப் போடுகிறதைக் கண்டார்.
ஒரு ஏழை விதவை அதிலே இரண்டு கா 2
சைப் போடுகிறதையுங் கண்டு: மற்றெல் 3
லாரிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப்
போட்டாளென்று உண்மையாக உங்களுக்
குச் சொல்லுகிறேன். அவர்களெல்லா 4
ரும் தங்கள் செல்வப் பெருக்கத்திலிருந்
தெடுத்துக் காணிக்கையில் போட்டார்கள்;
இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவ
னத்துக்கானதையெல்லாம் போட்டுவிட்
டாள் என்றார்.
சிறந்தகற்களினாலும் நேர்த்திக் கடன்களி 5
னாலும்தெய்வாலயம்அலங்கரிக்கப்பட்டிருக்
கிறதென்று சிலர் சொன்னபோது | அவர்: 6
நீங்கள் பார்க்கிற இவைகளில் கல்லின்மேல்
கல்லிராதபடி எல்லாம் இடிக்கப்படும் நாட்
கள் வருகின்றன என்றார். அவர்கள் அவ 7
ரைப்பார்த்து:போதகரே,இவைகள் எப்பொ
ழுது சம்பவிக்கும்? இவைகள் சம்பவிக்குங்
காலத்துக்கு அடையாளம் என்னவென்று
கேட்க | அவர்: நீங்கள் வஞ்சிக்கப்படாத 8
படி எச்சரிக்கையாயிருங்கள்; நானே அவர்
என்று என் நாமத்தைக்கொண்டு அநேகர்
வருவார்கள், காலம் சமீபித்தது என்றும்
சொல்லுவார்கள்; அவர்களுக்குப் பின்செல்
லாதிருங்கள். யுத்தங்களையும் கலகங்களை 9
யும்பற்றி நீங்கள் கேள்விப்படும்போது திகி
லடையாதிருங்கள். இவைகள் முன்னதா
கச் சம்பவிக்கவேண்டியதே; முடிவு உடனே
வராது என்றார்.
பின்னும் அவர் அவர்களைப் பார்த்து: 10
ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும் ராஜ்யத்
துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்.
இங்குமங்கும் மகாபூமியதிர்ச்சிகளும் கொள் 11
ளைநோய்களும் பஞ்சங்களுமுண்டாகும்; வா
னத்திலிருந்து பயங்கர தோற்றங்களும் பெ
ரிய அடையாளங்களுமுண்டாகும். இவை 12
களெல்லாம் நடப்பதற்குமுன் என் நாமத்
தினிமித்தம் அவர்கள் உங்களைப் பிடித்து
ராஜாக்கள் முன்பாகவும் அதிபதிகள் முன்
பாகவும் உங்களைக் கொண்டுபோய் ஜெபா
லயங்களுக்கும் சிறைச்சாலைகளுக்கும் ஒப்
புக்கொடுத்து இம்சைபடுத்துவார்கள். அது 13
வோ நீங்கள் சாட்சி சொல்வதற்கு ஏதுவா
யிருக்கும். ஆகையால், என்ன உத்தரவு 14
சொல்லுவோமென்று முன்னதாகவே கவ
லிப்படாதிருக்கும்படி உங்கள் மனதில் நிர்
ணயம்பண்ணிக்கொள்ளுங்கள். உங்கள் 15
விரோதிகள் யாவரும் எதிர்பேசவும் எதிர்நிற்
கவும் முடியாத வாக்கையும் ஞானத்தையும்
நானே உங்களுக்குக் கொடுப்பேன். உங்கள் 16
பெற்றோரும் சகோதரரும் பந்துஜனங்களும்
சிநேகிதரும் உங்களை ஒப்புக்கொடுப்பார்

கள்; உங்களில் சிலரைக் கொலைசெய்வார்
17 கள். என் நாமத்தினிமித்தம் எல்லாரும்
18 உங்களைப் பகைப்பார்கள். எனினும் உங்
19 கள் தலைமயிரில் ஒன்றுகிலும் அழியாது. நீங்
கள் நிலைத்திருப்பதினால் உங்கள் ஆத்துமாக்
களைக் காத்துக்கொள்வீர்கள்.
20 சேனைகள் எருசலேமைச் சூழ்ந்திருப்ப
தை நீங்கள் காணும்போது அது பாழாகுங்
21 காலம் சமீபமென்று அறியுங்கள். அப்பொ
ழுது யூதேயாவிலுள்ளவர்கள் மலைகளுக்கு
ஓடிப்போகட்டும், எருசலேமிலிருக்கிறவர்
கள் வெளியேறிப்போகட்டும்; நாட்டுப்புறங்
களிலிருக்கிறவர்கள் அதினுள் வராதிருக்கட்
22 டும். எழுதியிருக்கிற யாவும் நிறைவேறும்
படி பழிவாங்கும் நாட்கள் அவைகளே.
23 அந்நாட்களில் கர்ப்பவதிகளுக்கும் பால்
கொடுக்கிறவர்களுக்கும், ஐயோ பரிதாபம்!
பூமியின்மேல் மிகுந்த இடுக்கணும் இந்த
ஜனத்தின்மேல் கோபமும் உண்டாயிருக்கும்;
24 வாள்வாய்க்கு இரையாவார்கள்; சகல புற
ஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப்போவார்
கள்; புறஜாதியாரின் காலங்கள் நிறைவே
றும்வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால்
மிதிக்கப்பட்டதாயிருக்கும்.
25 சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்
களிலும் அடையாளங்கள் தோன்றும்; பூமி
யில் சமுத்திரமும் அலைகளும் முழங்குவ
தால் ஜனங்கள் தத்தளித்து மனங்கலங்கு
26 வார்கள். வானத்தின் சத்துவங்கள் அசைக்
கப்படும்; ஆதலால் பூமியின்மேல் வரும்
ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கி
றதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்த
27 போம். அப்பொழுது மனுஷகுமாரன்
மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும்
மேகத்தில் வருகிறதைக் காண்பார்கள்.
28 இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது,
உங்கள் மீட்பு சமீபித்ததென்று நீங்கள்
நிமிர்ந்துபார்த்து உங்கள் தலைகளை உயர்த்
துங்கள் என்றார்.
29 ஒரு உவமையையும் அவர்களுக்குச்
சொன்னார்: அத்திமரத்தையும் மற்றெல்லா
30 மரங்களையும் பாருங்கள். அவைகள் துளிர்
விடுகிறதை நீங்கள் காணும்போது வசந்த
காலம் சமீபமென்று அறிந்துகொள்ளுகிறீர்
31 கள். அப்படியே நீங்களும் இவைகள் சம்
பவிக்கிறதைக் காணும்போது கடவுளின்
ராஜ்யம் சமீபமென்று அறிந்துகொள்ளுங்
32 கள். எல்லாம் சம்பவித்துத் தீரும்வரை
இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று மெய்
யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
33 வானமும் பூமியும் ஒழிந்துபோம், என்
வார்த்தைகளோ ஒழிந்துபோவதேயில்லை.

உங்கள் இருதயங்கள் பெருந் தீனியிலு 34
லும் வெறியிலும் உலகிகக் கவலைகளிலு
லும் எப்போதாகிலும் பாரமடையாதபடி
உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.
இல்லையானால், அந்த நாள் திடீரென ஒரு
கண்ணியைப்போல் உங்கள்மேல் வரும்.
அது பூமியிலெங்கும் குடியிருக்கிற அனை 35
வர்மேலும் வந்தே தீரும். ஆகையால் இனிச் 36
சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம்
நீங்கள் தப்பவும் மனுஷகுமாரன் முன்னிலை
யில் நிற்கவும் வலிமை பெறும்படி எப்பொ
ழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்
றார்.

அவர் பகற்காலங்களில் தெய்வாலயத்தி 37
லே உபதேசம்பண்ணிக் கொண்டிருந்து
இராக்காலங்களில் வெளியேபோய் ஒலிவ
மென்னும் மலையிலே தங்குவார். ஜனங்க 38
ளெல்லாரும் அவர் உபதேசத்தைக் கேட்க
அதிகாலமே தெய்வாலயத்தில் அவரிடம்
வந்து கூடுவார்கள்.

பஸ்கா எனப்பட்ட புளிப்பில்லாத அப் **22**
பப்பண்டிகை சமீபித்தது. அப்பொழுது 2
பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவ
ரை எப்படிக் கொலை செய்யலாமென்று
வகை தேடினார்கள். ஜனங்களுக்கோ பயந்து
கொண்டிருந்தார்கள்.

பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத் 3
தென்னும் யூதாவுக்குள் சாத்தான் புகுந்
தான். அவன் பிரதான ஆசாரியரிடத்தி 4
லும் சேனைத்தலைவரிடத்திலும் போய் அவ
ரைக் காட்டிக்கொடுக்கும் வகையைக்குறித்து
அவர்களோடே ஆலோசனைபண்ணினான்.
அவர்கள் சந்தோஷப்பட்டு அவனுக்குப் 5
பணங்கொடுக்க உடன்பட்டார்கள். அவ 6
னும் அதற்குச் சம்மதித்து, ஜனக்கூட்ட
மில்லாத வேளையில் அவரைக் காட்டிக்
கொடுப்பதற்குச் சமயம் பார்த்துக்கொண்டி
ருந்தான்.

பஸ்கா ஆட்டைப் பலியிடவேண்டிய 7
புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாள்வந்
தது. அப்பொழுது அவர் பேதுருவையும்யோ 8
வானையும் அழைத்து: நாம் பஸ்காவைப் புசிக்
கும்படி நீங்கள் போய் நமக்கு ஆயத்தம்
பண்ணுங்களென்றார். அவர்கள்: நாங்கள் 9
எங்கே ஆயத்தம்பண்ணுவது? உமது சித்த
மென்னவென்று கேட்க | அவர்: இதோ, 10
நீங்கள் நகரத்திற்குட் போகும்போது தண்
ணீர்க்குடம் சுமந்துவருகிற ஒரு மனுஷன்
அங்கே உங்களுக்கு எதிர்ப்படுவான், நீங்
கள் அவனைத் தொடர்ந்துபோய் அவன்
செல்லும் வீட்டிற்குள் நீங்களும் சென்று

11 அந்த வீட்டெஜமானிடம்: நான் என் சிஷ்
ரோடு பஸ்காவைப் புசிக்கும் அறை எங்கே
என்று போதகர் உம்மிடங் கேட்கிறாரென்று
12 சொல்லுங்கள். கம்பள முதலானவைகள்
விரித்திருக்கிற பெரிய மேல்அறையை உங்
களுக்குக் காண்பிப்பான்; அங்கே ஆயத்தம்
13 பண்ணுங்களென்று சொன்னார். அவர்கள்
போய்த் தங்களுக்கு அவர் சொன்னபடியே
கண்டு பஸ்காவை ஆயத்தம்பண்ணினார்கள்.
14 வேளை வந்தபோது அவரும் அவருடன்
15 அப்போஸ்தலரும் பந்தியமர்ந்தார்கள். அப்
பொழுது அவர் அவர்களிடம்: நான் பாடு
படுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட
இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசை
16 கொண்டிருந்தேன். கடவுளின் ராஜ்யத்தில்
இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப்
புசிப்பதேயில்லையென்று உங்களுக்குச்
17 சொல்லுகிறேனென்று சொல்லிப் | பான
பாத்திரத்தை எடுத்து நன்றிசெலுத்தி: நீங்
கள் இதை வாங்கி உங்களுக்குள்ளே பங்
18 கிட்டுக்கொள்ளுங்கள். கடவுளின் ராஜ்யம்
வருமளவும் நான் திராட்சப்பழரசத்தை
இனி அருந்துவதில்லையென்று உங்களுக்குச்
19 சொல்லுகிறேன் என்றார். அப்பத்தையும்
எடுத்து, நன்றி செலுத்தி அதைப் பிட்டு
அவர்களிடம் கொடுத்து: இது உங்களுக்
காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீ
ரம்; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்
20 யுங்கள் என்றார். போஜனம் பண்ணின
பின்பு அவர் அப்படியே பாத்திரத்தையும்
கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்கா
கச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தி
னாலாகும் புதிய உடன்படிக்கை என்றார்.
21 பின்னும்: இதோ, என்னைக் காட்டிக்கொ
டுக்கிறவன் கை என்னுடனே பந்தியிலிருக்
22 கிறது. தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடியே
மனுஷகுமாரன் போகிறார், என்றாலும் அவ
ரைக் காட்டிக்கொடுக்கிற மனுஷனுக்கு
23 ஐயோ ஆபத்து என்றார். அப்பொழுது
அவர்கள்: நம்மில் யார் இப்படிச் செய்வா
னென்று தங்களுக்குள் விசாரிக்கத் தொடங்
கினார்கள்.
24 தங்களில் எவன் பெரியவனாக எண்ணப்
படுவானென்று அவர்களுக்குள்ளே வாக்கு
25 வாதமும் உண்டாயிற்று. அவரோ அவர்
களிடம்: புறஜாதியாரின் ராஜாக்கள் அவர்
கள்மேல் ஆளுகை செய்கிறார்கள், அவர்
கள்மேல் அதிகாரஞ் செலுத்துகிறவர்களும்
26 உபகாரிகள் எனப்படுகிறார்கள். உங்களுக்
குள்ளோ அப்படியல்ல; உங்களில் பெரிய
வன் சிறியவனைப்போலவும் தலைவன் பணி
விடைக்காரனைப்போலவும் இருக்கவேண்
டும். பந்தியிருக்கிறவனோ பணிவிடை 27
செய்கிறவனோ எவன் பெரியவன்? பந்தி
யிருக்கிறவனல்லவா? நானோ உங்கள் நடு
வில் பணிவிடைக்காரனைப்போலிருக்
கிறேன். எனக்கு நேரிட்ட சோதனைகளில் 28
என்னோடு நிலைத்திருந்தவர்கள் நீங்களே.
ஆகவே, என் பிதா எனக்கு அரசாட்சியை 29
ஏற்படுத்தினதுபோல நானும் உங்களுக்கு
ஏற்படுத்துகிறேன். நீங்கள் என் ராஜ்யத்தி 30
லே என் பந்தியில் போஜனபானம்பண்ணி
இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களை
யும் நியாயந்தீர்க்கிறவர்களாகச் சிங்காச
னங்களின்மேல் உட்காருவீர்கள். சீமோனே, 31
சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகி
னால் புடைக்கிறதுபோல் சாத்தான் உங்
களைப் புடைக்கவேண்டுமென்று கேட்டுக்
கொண்டான். நானோ உன் விசுவாசம் 32
ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக ஜெபித்
தேன்; நீ குணப்பட்டபின் உன் சகோத
ரரை ஸ்திரப்படுத்து என்றார். அவன்: ஆண் 33
டவரே, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்
பற்றிவர ஆயத்தமாயிருக்கிறேனென |
அவர்: பேதுருவே, இன்றைக்குச் சேவல் 34
கூவுகிறதற்குமுன் நீ என்னை அறியவில்லை
யென மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று
உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.
பின்னும் அவர் அவர்களிடம்: பணப் 35
பையும் சாமான்பையும் பாதரட்சைகளு
மில்லாமல் நான் உங்களை அனுப்பின
போது ஏதாகிலும் உங்களுக்குக் குறை
யிருந்ததா என்று கேட்க அவர்கள்: ஒரு
குறையுமிருந்ததில்லை என்றார்கள். பின்னும் 36
அவர்: இப்பொழுதோ பணப்பை உடை
யவன் அதை எடுத்துக்கொள்ளட்டும்,
சாமான்பை உடையவனும் அப்படியே
செய்யட்டும்; பட்டயமில்லாதவன் தன்
வஸ்திரத்தை விற்று ஒன்றைக் கொள்ளக்
கடவன்; அக்கிரமக்காரரில் ஒருவராக 37
எண்ணப்பட்டார் என்று எழுதியிருக்கிறது,
அது என்னிடம் நிறைவேறித் தீரவேண்டிய
தென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்;
என்னைப்பற்றியது நிறைவேறுகிறது என்
றார். அவர்களோ: ஆண்டவரே, இதோ, 38
இங்கே இரண்டு பட்டயமுண்டு என
அவர்: இந்தப் பேச்சுப் போதும் என்றார்.
அவர் வெளியே வந்து வழக்கத்தின் 39
படியே ஒலிவமலைக்குப் போனார்; சீஷரும்
அவரைத் தொடர்ந்து போனார்கள். அவ் 40
விடத்தில் சேர்ந்தபோது அவர் அவர்களைப்
பார்த்து: நீங்கள் சோதனைக்குட்படாதபடி
ஜெபஞ் செய்யுங்கள் என்று சொல்லி |
வருத்தத்தோடு அவர்களைவிட்டு நீங்கிக் கல் 41

லெறிதூரம் அப்புறம் போய் முழங்கால்
42 படியிட்டு: பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரத்தை என்னிடமிருந்து எடுத்துவிடும்; ஆயினும் என் சித்தமல்ல, உமது சித்தமே ஆவதாக என்று ஜெபித்
43 தார். அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் வந்து தோன்றி அவரைப் பலப்
44 படுத்தினான். அவர் மிகவும் வியாகுலப் பட்டு அதிக ஊக்கத்தோடு ஜெபித்துக் கொண்டிருந்தார். அவர் வேர்வை இரத்தப் பெருந்துளிகள்போல் தரையிலே விழுந்தது.
45 அவர் ஜெபஞ்செய்து முடித்து எழுந்திருந்து தமது சீஷரிடம் வந்து அவர்கள் துக்கத்தி
46 னாலே சோர்ந்து நித்திரை செய்கிறதைக் கண்டு: நீங்கள் நித்திரை செய்கிறதென்ன? சோதனைக்குட்படாதபடி எழுந்திருந்து ஜெபஞ் செய்யுங்கள் என்றார்.
47 அவர் இன்னும் பேசுகையில், இதோ, ஒரு ஜனக்கூட்டம் வந்தது. அவர்களுக்கு முன் நடந்துவந்தவன் பன்னிருவரில் ஒருவனாகிய யூதா என்பவனே. இவன் இயேசுவை
48 முத்தமிடும்படி அவரிடஞ் சேர | இயேசு அவனைப் பார்த்து: யூதாவே, முத்தத்தினாலேயோ மனுஷகுமாரனைக் காட்டிக்கொடுக்
49 கிறாய் என்றார். அவரைச் சூழநின்றவர்கள் நேரிடப்போவதைக்கண்டு: ஆண்டவரே, பட்டயத்தினாலே வெட்டலாமா என்
50 றார்கள். அப்படியே அவர்களில் ஒருவன் பிரதான ஆசாரியனின் வேலைக்காரனை வலது
51 காதற வெட்டினான். இயேசுவோ, இம்மட்டும் இடங்கொடுங்கள் என்று சொல்லி அவன் காதைத்தொட்டு அவனைச் சொஸ்தப்
52 படுத்தினார். பின்பு, இயேசு தம்மைப் பிடிக்க வந்த பிரதான ஆசாரியரையும் தெய்வாலயத்துச் சேனைத்தலைவரையும் மூப்பரையும் பார்த்து: கள்ளனைப் பிடிக்கப் போகிறதுபோல நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்து வந்தீர்களே. நான்
53 தினந்தோறும் தெய்வாலயத்தில் உங்களுடனே இருக்கையில் நீங்கள் என்னைப் பிடிக்கக் கை நீட்டவில்லை; இதுவோ உங்கள் வேளை, இது அந்தகாரத்தின் அதிகாரம் என்றார்.
54 அவர்கள் அவரைப் பிடித்துப் பிரதான ஆசாரியன் வீட்டிற்குக் கொண்டுபோனார்கள். பேதுரு தூரத்திலே பின்சென்றான்.
55 முற்றத்திலே நெருப்பை மூட்டி அதைச் சுற்றி உட்கார்ந்தவர்கள் நடுவில் பேதுருவும்
56 உட்கார்ந்தான். அப்பொழுது ஒரு வேலைக்காரி அவனை வெளிச்சத்தண்டையில் உட்கார்ந்திருக்கக்கண்டு அவனை உற்றுப் பார்த்து: இவனும் அவனோடிருந்தான
என | அவன்: அம்மா, அவனை அறியேன் 57
என்று மறுதலித்தான். சற்றுநேரத்துக்குப் 58
பின் வேறொருவன் அவனைக் கண்டு: நீயும் அவர்களில் ஒருவன் எனப் பேதுரு: மனுஷனே, நான் அவர்களில் ஒருவனல்ல என்றான். ஏறக்குறைய ஒருமணிநேரத்துக்குப் 59
பின் வேறொருவன் அவனைப் பார்த்து: மெய்யாகவே இவனும் அவனோடிருந்தான், இவன் கலிலேயன்தான் என்று சாதித்தான்.
பேதுருவோ: மனுஷனே, நீ சொல்லுகிறது 60
எனக்குத் தெரியாது என்றான். உடனே, அவன் இன்னும் பேசிக்கொண்டிருக்கும் போதே சேவல் கூவிற்று. ஆண்டவரும் 61
திரும்பிப் பேதுருவை உற்றுப்பார்த்தார். சேவல் கூவுகிறதற்குமுன் நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாயென்று ஆண்டவர் தன்னிடஞ் சொன்ன வார்த்தையைப் பேதுரு நினைத்துக்கொண்டு | வெளியேபோய் மனங் 62
கசந்து அழுதான்.
இயேசுவைப் பிடித்துக்கொண்டமனுஷர் 63
அவரைப் பரியாசம்பண்ணி அடித்து |
அவருடைய கண்களைக் கட்டி: உம்மை 64
அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் சொல்லும் என்று அவரைக் கேட்டது மன்றி | மற்றும் அநேக தூஷண வார்த்தை 65
களையும் அவருக்கு விரோதமாகச் சொன்னார்கள்.
பொழுது விடிந்தபோது ஜனத்தின் மூப் 66
பரும் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் கூட்டங்கூடித் தங்கள் ஆலோசனைச் சங்கத்தின்முன் அவரைக் கொண்டுவந்து: நீ கிறிஸ் 67
துவோ? அதை எங்களுக்குச் சொல் என்றார்கள். அவரோ: நான் உங்களுக்குச் சொன்னாலும் நம்பமாட்டீர்கள், நான் வினவினாலும் எனக்கு விடையளிக்கமாட்டீர்கள்: 68
எனினும் இதுமுதல் மனுஷகுமாரன் வல் 69
லமையுள்ள கடவுளின் வலதுபாரிசத்தில் வீற்றிருப்பார் என்றார். அதைக் கேட்ட 70
யாவரும்: அப்படியானால் நீ தெய்வ குமாரனென்று கேட்க | அவர்: ஆம், நீங்கள் 71
சொல்லுகிறபடியே நான் அவர்தான் என்றார். அப்பொழுது அவர்கள்: இனிவேறு சாட்சியும் நமக்கு வேண்டுமா? நாமே இவன் வாயிலிருந்து கேட்டோமே என்றார்கள்.

23 அவர்கள் கூட்டத்தாரனைவரும் எழுந்திருந்து அவரைப் பிலாத்துவினிடங்
2 கொண்டுபோய் | அவர்மேல் குற்றஞ்சாட்டத் தொடங்கி: இவர் எங்கள் ஜனத்துக்குள் கலகம் உண்டாக்குகிறார்; இராயனுக்கு வரி கொடுக்க வேண்டியதில்லையென்கிறார்; தன்னைக் கிறிஸ்து ராஜா என்கிறார்;

இவற்றை நாங்களே கண்டோமென்றார்கள்.
3 பிலாத்து அவரைப்பார்த்து: நீயா யூத
ருடைய ராஜா என்று கேட்க அவர் அவ
னிடம்: ஆம், நீர் சொல்லுகிறபடிதான்
4 என்றார். அப்பொழுது பிலாத்து பிரதான
ஆசாரியர்களையும் ஜனங்களையும் நோக்கி:
இந்த மனுஷனில் நான் ஒரு குற்றமும்
5 காணவில்லை என்றான். அவர்களோ: இவன்
கலிலேயா நாடு தொடங்கி இவ்விடம்
வரைக்கும் யூதேயா தேசமெங்கும் உப
தேசம்பண்ணி ஜனங்களைக் கலகத்துக்குத்
தூண்டிவிடுகிறானென்று வற்புறுத்திச்
6 சொன்னார்கள். பிலாத்து இதைக் கேட்ட
பொழுது இந்த மனுஷன் கலிலேயனே
7 என்று விசாரித்து | அவர் ஏரோதின் அதி
காரத்துக்குட்பட்டவர் என்றறிந்து அந்நாட்
களில் எருசலேமில் வந்திருந்த ஏரோதினி
8 டத்திற்கு அவரை யனுப்பினான். ஏரோது
இயேசுவைக் கண்டபோது மிகவும் சந்
தோஷப்பட்டான். அவரைப்பற்றி அநேக
காரியங்களைக் கேள்விப்பட்டிருந்தபடியால்
அவர் செய்யும் ஏதாவது அடையாளத்தைப்
பார்க்கவேண்டுமென்று விரும்பி அவரைக்
காணும்படி வெகுநாளாய் ஆசித்து நோக்கி
9 யிருந்தான். ஆகவே, அவரிடம் அநேக
கேள்விகளைக்கேட்டு விசாரித்தான். அவர்
அவனுக்கு ஒன்றும் மறுமொழி சொல்ல
10 வில்லை. பிரதான ஆசாரியரும் வேதபார
கரும் அவர்மேல் ஒரே நிலையாய் குற்றஞ்
11 சாட்டிக்கொண்டே நின்றார்கள். அப்
பொழுது ஏரோதும் அவன் போர்ச்சேவ
கருங்கூட அவரை அலட்சியஞ்செய்து பரி
யாசம்பண்ணிப் பளபளப்பான வஸ்திரத்தை
அவருக்கு உடுத்தி அவரைத் திரும்பப்
12 பிலாத்துவினிடம் அனுப்பினான். முன்னே
ஒருவருக்கொருவர் பகைவராயிருந்த பிலாத்
துவும் ஏரோதும் அன்றையதினம் சிநேகித
ராஞர்கள்.
13 பிலாத்து பிரதான ஆசாரியரையும் அதி
காரிகளையும் ஜனங்களையும் கூடிவரச்
14 செய்து | அவர்களைப் பார்த்து: ஜனங்களைக்
கலகத்துக்குத் தூண்டிவிடுகிறவனென்று
இந்த மனுஷனை என்னிடங் கொண்டுவந்
தீர்கள்; நான் உங்களுக்குமுன் விசாரித்த
போது நீங்கள் சாட்டுகிற குற்றங்களில்
ஒன்றையும் இவனிடங் காணவில்லை;
15 ஏரோதும் குற்றம் காணவில்லை; இவனை நம்
மிடந் திரும்ப அனுப்பினாரே; இதோ,
மரணத்துக்கேதுவான இவன் ஒன்றுஞ் செய்ய
16, 17 வில்லை; ஆகவே, இவனைத் தண்டித்து
18 விடுதலையாக்குவேன் என்றான். ஜனங்கள்
ஒரே சத்தமாய்: இவனைத் தொலைத்துவிடும்,
பரபாசை எங்களுக்கு விடுதலையாக்கிவிடும்
என்று கூச்சலிட்டார்கள். அந்தப் பரபா 19
சோ நகரத்தில் நடந்த ஒரு கலகத்தினிமித்த
மும் கொலைபாதகத்தினிமித்தமும் காவலிலே
வைக்கப்பட்டிருந்தான். இயேசுவை விடு 20
தலையாக்கவேண்டுமென்று பிலாத்து மறுபடி
யும் அவர்களிடம் பேச | அவர்கள்: 21
அவனைச் சிலுவையில் அறையும், சிலுவை
யில் அறையும் என்று கூக்குரலிட்டார்கள்.
அவன் மூன்றுதரம் அவர்களைநோக்கி: ஏன், 22
இவன் என்ன பொல்லாப்புச் செய்தான்?
மரணத்துக் கேதுவான குற்றமொன்றும் இவ
னிடம் நான் காணவில்லையே; நான் இவனைத்
தண்டித்து விடுதலையாக்குவேன் என்றான்.
அப்படியிருந்தும் அவரைச் சிலுவையில் 23
அறையவேண்டுமென்று அவர்கள் உரத்த
சத்தமிட்டு நெருக்கிக் கேட்டார்கள். அவர்
கள் சத்தம் மேற்கொண்டது. அவர்கள் 24
கேட்டுக்கொண்டபடியே ஆகட்டுமென்று
பிலாத்து தீர்ப்புச்செய்து | கலகத்தினிமித்த 25
மும் கொலைபாதகத்தினிமித்தமும் காவலில்
வைக்கப்பட்டிருந்தவனை அவர்கள் கேட்
டுக்கொண்டபடியே விடுதலைசெய்து இயேசு
வையோ அவர்கள் இஷ்டத்துக்கு ஒப்புக்
கொடுத்தான்.
அவர்கள் அவரைக் கொண்டுபோகையில் 26
வயல்வெளியிலிருந்து வருகிற சிரேனே
ஊரான் சீமோனைப் பிடித்துச் சிலுவையை
அவர் பின்னே சுமந்துகொண்டு வரும்படி
அதை அவன்மேல் சுமத்திவைத்தார்கள்.
திரள்கூட்டமான ஜனங்களும் அவருக் 27
காக மாரடித்துப் புலம்பி அழுகிற ஸ்திரீ
களும் அவர்பின்னே போனார்கள். இயேசு
வோ அவர்கள்முகமாய்த் திரும்பி: எருசலே 28
மின் குமாரத்திகளே, நீங்கள் என் நிமித்
தம் அழாமல் உங்கள் நிமித்தமும் உங்கள்
பிள்ளைகள் நிமித்தமும் அழுங்கள். இதோ, 29
மலடிகள் பாக்கியவதிகளென்றும் பிள்ளை
பெறுத கர்ப்பங்களும் பால்கொடாத மூலை
களும் பாக்கியமுள்ளவைகளென்றும்
சொல்லப்படும் நாட்கள் வரும். அப் 30
பொழுது மலைகளை நோக்கி, எங்கள்மேல்
விழுங்களென்றும் குன்றுகளை நோக்கி, எங்
களை மறைத்துக் கொள்ளுங்களென்றும்
சொல்லத் தொடங்குவார்கள். பச்சை 31
மரத்துக்கு இவைகளைச் செய்தால் பட்ட
மரத்துக்கு என்ன செய்யப்படும் என்றார்.
அவரோடேகூடக் கொல்லப்படுவதற்குக் 32
குற்றவாளிகளாகிய வேறே இரண்டு பேரை
யும் கொண்டுபோனார்கள்.
கபாலஸ்தலம் என்று சொல்லப்பட்ட 33
இடத்திற்கு அவர்கள் வந்தபோது அங்கே

அவரையும் அவருடைய வலதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும் அவருடைய இடது பக்கத்தில் ஒரு குற்றவாளியையும் சிலுவை
34 களில் அறைந்தார்கள். அப்பொழுது இயேசு: பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார். அவர்கள் சீட்டுப்போட்டு அவர் வஸ்திரங்களைப் பங்
35 கிட்டுக்கொண்டார்கள். ஜனங்கள் நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். அதிகாரிகளும்: இவன் மற்றவர்களை இரட்சித்தான்; இவன் கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்ட கிறிஸ்துவானால் தன்னைத்தானே இரட்சித்துக் கொள்ளட்டும் என்று இகழ்ந்து பேசினார்
36 கள். போர்ச்சேவகரும் கிட்டவந்து புளிப்
37 பான காடியை அவரிடம் நீட்டி: நீ யூதரின் ராஜாவானால் உன்னை நீயே இரட்சித்துக்கொள் என்று அவரைப் பரியாசம்
38 பண்ணினார்கள். இவன் யூதருடைய ராஜா என்று எழுதி அவருக்கு மேலே வைக்கப்பட்டிருந்தது.
39 சிலுவையில் தொங்கின குற்றவாளிகளில் ஒருவன்: நீ கிறிஸ்துதானே! உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று
40 அவரைத் தூஷித்தான். மற்றவனோ அவனை நோக்கி: நீ இதே ஆக்கினைக்குட்பட்டவனாயிருக்கிறாயே, கடவுளுக்குப் பயப்படுகிற
41 தில்லையா. நாம் நியாயமாய்த் தண்டிக்கப்படுகிறோம், நாம் செய்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாத தொன்றையுஞ் செய்யவில்லையே என்று
42 அவனைக் கண்டித்துப் | பின்னும்: இயேசுவே, நீர் உமது ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்று சொல்ல |
43 அவர்: இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.
44 ஏறக்குறைய ஆறுமணி நேரமாயிருந்தது; ஒன்பதாமணி நேரம்வரைக்கும் பூமியெங்
45 கும் அந்தகாரமுண்டாயிற்று. சூரியன் இருண்டது, தெய்வாலயத்தின் திரை நடுவில்
46 இரண்டாகக் கிழிந்தது. அப்பொழுது இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்
47 படிச் சொல்லி ஜீவனைவிட்டார். நூற்றுக் கதிபதி சம்பவித்ததைக்கண்டு: மெய்யாகவே இந்த மனுஷன் நீதிபரன் என்று சொல்லிக்
48 கடவுளை மகிமைப்படுத்தினான். இந்தக் காட்சியைப் பார்க்கக் கூடிவந்திருந்த ஜனங்களெல்லாரும் சம்பவித்தவைகளைப் பார்த்த பொழுது தங்கள் மார்பில் அடித்துக் கொண்டு திரும்பினார்கள். அவருக்கு அறி 49
முகமானவர்களெல்லாரும் கலிலேயாவிலிருந்து அவரைப் பின்தொடர்ந்துவந்த ஸ்திரீகளும் இவைகளைப் பார்த்துக்கொண்டு தூரத்திலே நின்றார்கள்.

யோசேப்பு என்னும் பேர்கொண்ட ஒருவ 50
னிருந்தான். இவன் யூதாட்டு அரிமத்தியா ஊரிலிருந்து வந்தவன், ஆலோசனைச் சங்கத்தாரில் ஒருவன், உத்தமன், நீதிமான்; மற்றவர்களுடைய ஆலோ 51
சனைக்கும் செய்கைகளுக்கும் சம்மதியாதவன்; கடவுளின் ராஜ்யம் வரக்காத்திருந்தவன். இவன் பிலாத்துவினிடம் போய் 52
இயேசுவின் சரீரத்தைக்கேட்டு | அதை 53
இறக்கி மெல்லிய துணியிலே சுற்றிக் கற்பாறையில் வெட்டியிருந்த ஒரு கல்லறையிலே அவரை வைத்தான். அதில் ஒருவனையும் ஒருக்காலும் அடக்கஞ் செய்ததில்லை. அந்த 54
நாள் ஆயத்தநாள்; ஓய்வுநாளும் ஆரம்பிக்கிற நேரமாயிற்று.

கலிலேயாவிலிருந்து அவருடனே கூட 55
வந்திருந்த ஸ்திரீகளும் பின்சென்று கல்லறையையும் அவருடைய சரீரத்தைவைத்த விதத்தையும் பார்த்துவிட்டு | திரும்பி 56
போய்க் கந்தவர்க்கங்களையும் பரிமளதைலங்களையும் ஆயத்தம்பண்ணி வைத்துவிட்டுக் கற்பனையின்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்.

வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையில் **24**
தாங்கள் ஆயத்தம்பண்ணின கந்தவர்க்கங்களை அவர்கள் எடுத்துக்கொண்டு கல்லறைக்கு வந்தார்கள். கல்லறையிலிருந்து 2
கல் புரட்டித் தள்ளப்பட்டிருக்கிறதைக் கண்டார்கள். உள்ளே சென்றபோதோ 3
ஆண்டவராகிய இயேசுவின் சரீரத்தைக் காணவில்லை. அதைப்பற்றி மிகவும் கலங் 4
கிக்கொண்டிருக்கையில், இதோ, பிரகாசமுள்ள வஸ்திரந் தரித்த இரண்டு பேர் அவர்கள் அருகே வந்து நின்றார்கள். அந்த 5
ஸ்திரீகள் பயந்து தலைகுனிந்து தரையைப் பார்த்துக்கொண்டு நிற்கையில் அந்த இருவரும் அவர்களை நோக்கி: உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை, அவர் 6
உயிர்த்தெழுந்தார். அவர் கலிலேயாவிலிருக்கும்போது உங்களுக்குச் சொன்னதை நினைத்துக்கொள்ளுங்கள். மனுஷகுமாரன் 7
பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டுச் சிலுவையில் அறையுண்டு மூன்றாம்நாள் எழுந்திருக்க வேண்டியது என்று சொன்னாரே என்றார்கள். அப் 8

பொழுது அவர் வார்த்தைகள் அவர்கள் நினை
9 வுக்கு வந்தன. உடனே அவர்கள் கல்லறை
யைவிட்டுத் திரும்பி இந்தச் சங்கதிகளெல்
லாவற்றையும் பதினெருவருக்கும் மற்ற யாவ
10 ருக்கும் அறிவித்தார்கள். இவர்கள் மகத
லேனே மரியாளும் யோவன்னாளும் யாக்கோ
பின் தாயாகிய மரியாளுமே. இவர்களுட
னே கூட இருந்த மற்ற ஸ்திரீகளும் இவை
களை அப்போஸ்தலருக்குச் சொன்னார்கள்.
11 இவ்வார்த்தைகள் அவர்களுக்கு வீண்பேச்
சாகத்தோன்றினதினால் இவர்களை நம்ப
12 வில்லை. பேதுருவோ எழுந்திருந்து, கல்
லறைக்கு ஓடி அதற்குள்ளே குனிந்து
பார்க்கையில் துணிகள் மாத்திரம் அங்கே
இருக்கக்கண்டு சம்பவித்ததைப்பற்றி ஆச்
சரியப்பட்டுக்கொண்டு வீட்டுக்குப் போய்
விட்டான்.
13 அன்றையதினமே அவர்களில் இரண்டு
பேர் எருசலேமுக்கு ஏழு எட்டு மைல்
தூரமான எம்மாவு என்னும் கிராமத்துக்குப்
14 போனார்கள். போய்க்கொண்டிருக்கையில்
இந்த வர்த்தமானங்கள் யாவையுங் குறித்து
அவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொண்
15 டார்கள். இப்படி அவர்கள் பேசிச் சம்
பாஷித்துக்கொண்டு நடக்கையில் இயேசு
தாமே சேர்ந்து அவர்களோடுகூட நடந்து
16 போனார். ஆனாலும் அவரை இன்னாரென
அறிந்துகொள்ளாதபடி அவர்கள் கண்கள்
17 மறைக்கப்பட்டிருந்தன. அவர் அவர்களி
டம்: நீங்கள் வழிநடந்துகொண்டு ஒரு
வருக்கொருவர் சொல்லிக்கொள்ளுகிற இந்
தக்காரியங்கள் என்னவென்று கேட்க
அவர்கள் முகம் வாடி நின்றுவிட்டார்கள்.
18 அவர்களில் கிலெயோப்பா எனப்பட்ட
ஒருவன்: நீர் மாத்திரம் எருசலேமில் அன்னி
யனுயிருந்து இந்நாட்களில் அங்கு நடந்த
வைகளை அறியாமலிருக்கிறீரா என்று பதில்
19 சொன்னான். அவர்: எவைகள் என்று
கேட்க அவர்கள்: நசரேயனுகிய இயேசு
வைப்பற்றிய சங்கதிகளே. அவர் கடவு
ளுக்கு முன்பாகவும் எல்லா ஜனத்துக்கு
முன்பாகவும் செய்கையிலும் வாக்கிலும் வல்
லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார்.
20 பிரதான ஆசாரியரும் நமது அதிகாரிகளும்
அவரை மரண ஆக்கினைக்குள்ளாக ஒப்புக்
கொடுத்துச் சிலுவையில் அறைந்தார்கள்.
21 நாங்களோ இஸ்ரவேலை மீட்கப்போகிறவர்
இவரே என்று எதிர்பார்த்து நம்பியிருந்
தோம். அப்படியல்லாமலும் இவைகள்
சம்பவித்து இன்று மூன்றும் நாளாகிறது.
22 அதுமாத்திரமல்ல, எங்களைச் சேர்ந்த சில
ஸ்திரீகளும் எங்களைப் பிரமிக்கப்பண்ணி
னார்கள். அவர்கள் அதிகாலமே கல்லறைக் 23
குப் போய் அவருடைய சரீரத்தைக் காண
மல் திரும்பிவந்து, அவர் உயிரோடிருக்கிற
ரென்று சொன்ன தெய்வ தூதரைத் தரிசித்
தோமென்று சொன்னார்கள். எங்களோ 24
டிருந்தவர்களில் சிலர் கல்லறைக்குப் போய்
ஸ்திரீகள் சொன்னபடியே இருக்கக்கண்டார்
கள்; அவரையோ காணவில்லை என்றார்கள்.
அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: 25
புத்தியில்லாதவர்களே, தீர்க்கதரிசிகள்
சொன்னயாவையும் நம்பமாட்டாத மந்த
இருதயமுள்ளவர்களே, கிறிஸ்து இவ்விதம் 26
மாகப் பாடுபட்டுத் தமது மகிமையில் பிர
வேசிக்கவேண்டியதில்லையா என்று சொல்லி,
மோசேயும் சகல தீர்க்கதரிசிகளும் 27
தொடங்கி எல்லா ஆகமங்களிலும் தம்மைப்
பற்றி எழுதியிருந்தவைகளை அவர்களுக்கு
விவரித்துக்காண்பித்தார். அவர்கள் போன 28
கிராமத்தைச் சமீபிக்கவே அவர் அதற்கப்
பால் போகிறவர்போல் காண்பித்தார். அவர் 29
களோ: நீர் எங்களுடனே தங்கியிரும்,
சாயங்காலமாயிற்று, பொழுதும் போயிற்று
என்று அவரை வருந்திக் கேட்டுக்கொள்ள
அவர் அவர்களுடனே தங்கும்படி உள்ளே
போனார். அவர்களோடே அவர் பந்தியிருக் 30
கையில் அவர் அப்பத்தை எடுத்து ஆசீர்
வதித்து அதைப் பிட்டு அவர்களுக்குக்
கொடுத்தார். அவர்கள் கண்கள் திறக்கப் 31
படவே அவரை இன்னாரென்று அறிந்தார்
கள். அவரோ அவர்களுக்கு மறைந்து
போனார். மறையவே அவர்கள் ஒருவரை 32
யொருவர் பார்த்து: வழியிலே அவர் நம்
மோடு பேசி வேதாகமங்களை நமக்கு விளக்
கிக்காட்டினபொழுது நமது இருதயம் நமக்
குள் அனல் மூளவில்லையா என்று சொல்
லிக்கொண்டு அந்நேரமே எழுந்திருந்து
எருசலேமுக்குத் திரும்பிப்போய்ப் பதினெரு 33
வரும் அவர்களோடிருந்தவர்களும் கூடியி
ருந்த இடத்தில் அவர்களைக் கண்டார்கள்.
அவர்கள்: ஆண்டவர் மெய்யாகவே உயிர்த் 34
தெழுந்து சீமோனுக்குத் தரிசனமானரென்று
சொன்னார்கள். இவர்களும் வழியில் நடந் 35
தவைகளையும் அவர் அப்பத்தைப் பிட்டுக்
கொடுக்கையில் தாங்கள் அவரை அறிந்து
கொண்டதையும் விவரித்துச் சொன்
னார்கள்.
அவர்கள் இவைகளைப்பற்றிப் பேசிக் 36
கொண்டிருக்கையில் அவர்தாமே அவர்கள்
நடுவிலே வந்து நின்று அவர்களைப் பார்த்து:
உங்களுக்குச் சமாதானம் என்றார். அவர் 37
கள் திகைத்துப் பயந்து ஒரு ஆவியைக்
காண்கிறதாக நினைத்தார்கள். அவரோ 38

அவர்களைப் பார்த்து: நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்? உங்கள் இருதயங்களில் சந்தேகம் 39 பிறப்பதென்ன? நான்தானே என்று என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப்பாருங்கள்; எனக்கு மாம்சமும் எலும்புகளும் இருக்கிறதாக நீங்கள் காண்கிறீர்கள்; இவைகள் ஒரு ஆவிக்கு இரா 40 தே என்று சொல்லித் | தம்முடைய கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண் 41 பித்தார். அவர்களோ சந்தோஷத்தினால் நம் பாமல் இன்னும் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கையில் அவர் அவர்களிடம்: புசிக்க ஏதாகிலும் இங்கே உண்டா என்று கேட் 42 டார். அவர்கள் பொரித்த மீன்கண்டத் 43 தை அவருக்குக் கொடுக்க | அதை அவர் வாங்கி அவர்கள் முன்னிலையில் புசித்தார்.

44 பின்பு அவர் அவர்களைப் பார்த்து: மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிவந்தவைகள் இவைகளே என்றார்.

45 அப்பொழுது வேதாகமங்களை அறிந்துகொள்ளும்படி அவர்கள் மனதை அவர் திறந்து அவர்களைப் பார்த்து: கிறிஸ்து பாடுபட்டு 46 மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவேண்டுமெனவும் | மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்திலே பிரசங்கிக்கப்படவேண்டுமென 47 வும் எழுதியிருக்கிறது. இவைகளுக்கு நீங் 48 களே சாட்சிகள். என் பிதா வாக்குத்தத் 49 தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பலத்தால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் நகரத்திலேயே இருங்கள் என்றார்.

அவர் பெத்தானியாவரைக்கும் அவர்களை 50 அழைத்துக்கொண்டுபோய்த் தம்முடைய கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களை ஆசீர்வதிக்கையிலேயே அவர்களை 51 விட்டுப் பிரிந்து பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர்கள் அவ 52 ரைப் பணிந்துகொண்டு மிகுந்த சந்தோஷமாய் எருசலேமுக்குத் திரும்பிவந்து | 53 நாடோறும் தெய்வாலயத்திலே கடவுளைப் புகழ்ந்து துதித்துக்கொண்டிருந்தார்கள்.

THE GOSPEL OF JOHN

# யோவான் சுவிசேஷம்

1 ஆதியிலே வார்த்தை இருந்தது; அந்த
வார்த்தை கடவுளோடிருந்தது; அந்த வார்த்
2 தை கடவுளுமாயிருந்தது. அவர் ஆதியிலே
3 கடவுளோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று;
உண்டானதொன்றும் அவரை யல்லாமல்
4 உண்டாகவில்லை. அவரில் ஜீவன் இருந்தது.
ஜீவனானது மனுஷருக்கு வெளிச்சமாயிருந்
5 தது. வெளிச்சம் இருளிலே பிரகாசிக்கிறது,
இருளோ அதை உணர்ந்துகொள்ளவில்லை.
6 கடவுளிடத்திலிருந்து அனுப்பப்பட்ட
ஒரு மனுஷன் தோன்றினான். அவன் பேர்
7 யோவான். அவன்மூலமாய் எல்லாருக்கும்
நம்பிக்கையுண்டாகவேண்டுமென்று அந்த
வெளிச்சத்தைக் குறித்துச் சாட்சிகொடுக்
8 கச் சாட்சியாக வந்தான். அவன் அவ்
வெளிச்சமல்ல; அந்த வெளிச்சத்தைக் குறித்
9 துச் சாட்சிகொடுக்க வந்தவனே. எந்த மனு
ஷனுக்கும் வெளிச்சத்தைத் தருகிற மெய்
யான வெளிச்சம் உலகத்தில் வந்துகொண்டி
10 ருந்தது. அது உலகத்தில் இருந்தது; உல
கம் அவர்மூலமாய் உண்டாயிற்று; உலக
மோ அவரை அறிந்துகொள்ளவில்லை.
11 அவர் தமக்குச் சொந்தமானவற்றில் வந்தார்,
அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை
12 ஏற்றுக்கொள்ளவில்லை. அவரை ஏற்றுக்
கொண்டவர் எத்தனைபேரோ அத்தனை
பேருக்கு, அதாவது அவர் நாமத்தில் விசுவா
சமுள்ளவர்களுக்கு, கடவுளின் பிள்ளைகளா
13 கும்படி அதிகாரங்கொடுத்தார். அவர்கள்
இரத்தம் மாம்சசித்தம் புருஷசித்தம் என்
றிறைவைகளிலுலல்ல கடவுளாலே பிறந்தவர்
14 கள். அந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள்
தங்கினது. அவருடைய மகிமையைப் பார்த்
துக்கொண்டிருந்தோம்; அது பிதாவுக்கு
இருக்கும் ஒரேபேறானவருடைய மகிமை
யைப்போன்றது; அவர் இருபையும் சத்திய
மும் நிறைந்தவர். யோவான் அவரைக் 15
குறித்து: அவர் எனக்கு முதல்வராதலால்
எனக்குப்பின் தோன்றியும் எனக்கு முன்
வந்தவரானார் என்று நான் முன் சொல்லி
யிருந்தவர் இவரே என்று சத்தமிட்டுச்
சாட்சிப்பகர்ந்தான். அவருடைய நிறைவி 16
லிருந்து நாம் எல்லாரும் பெற்றுக்கொண்
டோம்; பெற்றுக்கொண்டது [1]இருபையின்
மேல் இருபை. மோசேயின்மூலமாய் நியா 17
யப்பிரமாணங் கொடுக்கப்பட்டது; இயேசு
கிறிஸ்துவின் மூலமாகவோ இருபையும் சத்
தியமும் வந்தன. கடவுளை ஒருவனும் ஒருக் 18
காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்
கிற ஒரேபேறான கடவுளே அவரை வெ
ளிப்படுத்தினார்.

நீர் யார் என்று கேட்பதற்கு யூதர்கள் 19
ஆசாரியரையும் லேவியரையும் எருசலேமி
லிருந்து யோவானிடம் அனுப்பினபொழுது
அவன் கூறிய சாட்சியம்: நான் கிறிஸ்து 20
வல்ல என்று ஒப்புக்கொண்டான், மறுக்கா
மலே ஒப்புக்கொண்டான். அப்பொழுது 21
அவர்கள்: பின்னையென்ன? நீர் எலியாவோ
என்று கேட்க அவன்: நான் அவனல்ல
என்றான். நீர் தீர்க்கதரிசியானவரோ என்ற
தற்கும் அல்லவென்றான். பின்னும் அவர் 22
கள் அவனிடம்: நீர் யார்? எங்களை அனுப்
பினவர்களுக்கு நாங்கள் பதில் சொல்ல
வேண்டுமே; உம்மைக்குறித்து என்ன சொல்
லுகிறீர் என்று கேட்டார்கள். அவன்: 23
ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடி, கர்த்தரின்
வழியைச் செவ்வைபண்ணுங்களென்று
வனாந்தரத்தில் கூப்பிடுகிறவருடைய சத்த
மே நான் என்றான்.

அனுப்பப்பட்டவர்கள் பரிசேயரைச் 24
சேர்ந்தவர்கள். அவர்கள் அவனைப் பார்த்து: 25
நீர் கிறிஸ்துவுமல்ல, எலியாவுமல்ல, தீர்க்க
தரிசியானவருமல்லவென்றால் நீர் ஞானஸ்

1 இருபைக்குக் இருபை என்றும் திருப்பலாம்.

ஞானங் கொடுக்கிறதென்னவென்று கேட்
26 டார்கள். யோவான் அவர்களிடம்: நான்
ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கிறேன்;
நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடு
27 வில் நிற்கிறார். அவரே எனக்குப்பின் வரு
கிறவர்; அவர் பாதரட்சையின் வாரை
அவிழ்க்க நான் பாத்திரனல்ல என்றான்.
28 யோர்தானுக்கு அக்கரையில் யோவான்
ஞானஸ்நானங் கொடுத்துக்கொண்டிருந்த
பெத்தானியாவிலே இவைகள் நடந்தன.
29 மறுநாள் இயேசு தன்னிடம் வருகிறதை
அவன் கண்டு: இதோ, உலகத்தின் பாவத்
தைச் சுமந்துதீர்க்கிற தெய்வாட்டுக்குட்டி.
30 எனக்குப்பின் ஒருவர் வருகிறார், எனக்கு
முதல்வராதலால் எனக்குப்பின் தோன்றி
யும் முன் வந்தவராஞர் என்று நான் சொன்
31 னேனே, அவர் இவர்தான். நானும் இவரை
அறியாதிருந்தேன்; இவர் இஸ்ரவேலுக்கு
வெளிப்படும்பொருட்டாக நான் ஜலத்தினா
லே ஞானஸ்நானங் கொடுக்கிறவனாய் வந்
32 தேன் என்றான். பின்னும் யோவான் சாட்
சியாக: ஆவியானவர் புறாவைப்போல
வானத்திலிருந்து இறங்கினதைக் கண்டேன்,
33 இவர்மேல் தங்கினது. நானும் இவரை அறி
யாதிருந்தேன்; என்றாலும் ஜலத்தினால் ஞா
னஸ்நானங் கொடுக்கும்படி என்னை அனுப்
பினவரே: ஆவியானவர் இறங்கி யார்மேல்
தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரி
சுத்த ஆவியினால் ஞானஸ்நானங் கொடுக்கி
றவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார்.
34 அப்படியே நான் கண்டு, இவரே கடவுளின்
குமாரனென்று சாட்சி கொடுத்து வந்தேன்
என்றான்.
35 மறுநாள் யோவானும் அவன் சீஷரில்
இருவரும் நின்றுகொண்டிருக்கும்போது |
36 நடந்துபோகிற இயேசுவை அவன் உற்று
நோக்கி: இதோ, தெய்வாட்டுக்குட்டி என்
37 றான். அவன் சொன்னதை அவ்விரண்டு
சீஷருங்கேட்டு இயேசுவுக்குப் பின்சென்றார்
38 கள். இயேசுவோ திரும்பி அவர்கள் பின்
வருகிறதைக் கண்டு அவர்களிடம்: என்ன
தேடுகிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள்:
ரபீ, நீர் எங்கே தங்கியிருக்கிறீர் என்று
கேட்டார்கள்; ரபீ என்பதற்குக் குரு என்று
39 அர்த்தம். அவர்: வந்து பாருங்கள் என்றார்.
அவர்கள் வந்து அவர் தங்கியிருந்த இடத்
தைக்கண்டு அன்றைத்தினம் அவரோடு
தங்கினார்கள். அப்பொழுது ஏறக்குறையப்
40 பத்தாமணிவேளை. யோவான் சொன்னதைக்
கேட்டு அவருக்குப் பின்சென்ற இருவரில்
ஒருவன் சீமோன்பேதுருவின் சகோதரன்
அந்திரேயா. அவன் முதலாவது தன் சகோ 41
தரன் சீமோனைக் கண்டுபிடித்து அவனிடம்:
மேசியாவைக் கண்டுகொண்டோமென்று
சொன்னான்; மேசியா என்பதற்குக் [1]கிறிஸ்து
என்று அர்த்தம். அவனை இயேசுவினிடங் 42
கூட்டிக்கொண்டுவந்தான். இயேசு அவனை
உற்றுப்பார்த்து: நீ யோவானின் மகன்
சீமோன், நீ கேபா எனப்படுவாய் என்றார்;
கேபா என்பதற்குப் [2]பேதுரு என்று அர்த்
தம்.

மறுநாள் இயேசு கலிலேயாவுக்குப் போக 43
மனதாயிருந்து பிலிப்பைக் கண்டு: நீ என்
னைப் பின்பற்றிவா என்றார். பிலிப்பு, அந் 44
திரேயாவையும் பேதுருவையும்போலப் பெத்
சாயிதா ஊரான். பிலிப்பு நாத்தான்வேலைக் 45
கண்டு: தீர்க்கதரிசிகளும் நியாயப்பிரமா
ணத்தில் மோசேயும் எழுதியிருக்கிறவரைக்
கண்டுகொண்டோம். அவர் யோசேப்பின்
குமாரனாகிய நாசரேத்தூர் இயேசுவே என்
றான். நாத்தான்வேலோ: நாசரேத்திலிருந்து 46
யாதொரு நன்மை உண்டாகுமோ என்
றான். பிலிப்பு: வந்து பார் என்று சொன்
னான். இயேசு நாத்தான்வேல் தம்மிடம் 47
வரக்கண்டு அவனைக்குறித்து: இதோ, கப
டற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார்.
அதற்கு நாத்தான்வேல்: நீர் என்னை அறிந்த 48
தெப்படி என்றான். இயேசு அவனிடம்:
பிலிப்பு உன்னை அழைக்கிறதற்குமுன், நீ
அத்திமரத்தின் கீழிருக்கும்போதே, உன்
னைக்கண்டேன் என்றார். அதற்கு நாத் 49
தான்வேல்: ரபீ, நீர் தெய்வகுமாரன், நீர்
இஸ்ரவேலின் ராஜா என்றான். இயேசு அவ 50
னிடம்: அத்திமரத்தின் கீழே உன்னைக் கண்
டேனென்று நான் உனக்குச் சொன்னதினி
மித்தமா நம்புகிறாய்; இவற்றிலும் பெரிதா
னவைகளைக் காண்பாய் என்றார். பின்னும் 51
அவர் அவனிடம்: மெய்யாகவே மெய்யாக
வே உங்களுக்குச் சொல்லுகிறேன், வானம்
திறந்திருக்கிறதையும் தெய்வதூதர் மனுஷ
குமாரன்மீது ஏறுகிறதையும் இறங்குகிறதை
யும் நீங்கள் காண்பீர்கள் என்றார்.

மூன்றாம்நாளில் கலிலேயாவிலுள்ள 2
காலூரிலே ஒரு கலியாணம் நடந்தது;
இயேசுவின் தாயாரும் அங்கே இருந்தாள்.
இயேசுவையும் அவர் சீஷரையும் அந்தக் 2
கலியாணத்துக்கு அழைத்தார்கள். திராட்ச 3

---

1 கிறிஸ்து என்ற கிரேக்கு பதம் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று பொருள்படும்.
2 பேதுரு என்ற கிரேக்கு பதம் கற்பாறை என்று பொருள்படும்.

ரசங் குறைந்துபோனபோது இயேசுவின் தாயார் அவரிடம்: அவர்களுக்குத் திராட்ச
4 ரசமில்லை என்றாள். இயேசு அவளிடம்: அம்மாள், எனக்கும் உனக்கும் என்ன? என்வேளை இன்னும் வரவில்லை என்றார்.
5 அவர் தாயார் வேலைக்காரரைப் பார்த்து: அவர் உங்களுக்கு எதேது சொல்லுகிறாரோ அதையெல்லாம் செய்யுங்கள் என்றாள்.
6 யூதரின் சுத்திகரிப்பு முறைமைக்கிசைய ஆறு கல்தொட்டிகள் அங்கே வைத்திருந்தன; ஒவ்வொன்று இரண்டு மூன்று குடம்
7 தண்ணீர் பிடிக்கும். இயேசு அவர்களிடம்: தொட்டிகளில் தண்ணீர் நிரப்புங்கள் என்றார்; அவர்கள் அவைகளை வாய்மட்டும்
8 நிரப்பினார்கள். அவர் அவர்களிடம்: இப்பொழுது மொண்டு பந்தி விசாரிப்புக்காரனிடங் கொண்டுபோங்கள் என்றார்; அவர்
9 கள் கொண்டுபோனார்கள். பந்தி விசாரிப்புக்காரன் திராட்சரசமாய் மாறின தண்ணீரை ருசிபார்த்தான். அது எங்கிருந்து வந்ததென்று அவனுக்குத் தெரியாது, தண்ணீரை மொண்டுவந்த வேலைக்காரருக்குத்தான் தெரியும். பந்திவிசாரிப்புக்காரன் மணவா
10 ளனையழைத்து அவனிடம்: எந்த மனுஷனும் முதலில் நல்ல திராட்சரசத்தைப் பரிமாறி, ஜனங்கள் நன்றாய்க் குடித்தபின் கீழ்த்தரமானதைப் பரிமாறுவான்; நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே
11 என்றான். இதை இயேசு தமது அடையாளங்களுக்கு ஆரம்பமாகக் கலிலேயாவிலுள்ள கானாவிலே செய்து தமது மகிமையை வெளிப்படுத்தினார். அவருடைய சீஷர் அவரில் நம்பிக்கை வைத்தார்கள்.
12 அதன் பின்பு அவர் கப்பர்நகூமுக்குப் போனார். அவர் தாயாரும் அவர் சகோதரரும் அவர் சீஷரும் கூடப்போனார்கள். அங்கே அவர்கள் வெகுநாள் தங்கவில்லை.
13 யூதரின் பஸ்கா பண்டிகை சமீபிக்கவே
14 இயேசு எருசலேமுக்குப்போனார். அங்கே தெய்வாலயத்தில் ஆடு மாடு புறு இவைகளை விற்கிறவர்களையும் உட்கார்ந்திருக்கிற காசுக்
15 காரரையும் கண்டு | கயிற்றினால் ஒரு சாட்டை பண்ணி, எல்லாரையும், ஆடுமாடுகளையும் தெய்வாலயத்துக்கு வெளியே துரத்தினார். காசுக்காரருடைய காசுகளைக்கொட்டி
16 மேசைகளைக் கவிழ்த்துப்போட்டார். புறு விற்கிறவர்களைப் பார்த்து: இவைகளை இங்கிருந்து எடுத்துப்போங்கள்; என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்கவேண்டாம்
17 என்றார். உமது வீட்டைப்பற்றிய வைராக்கியம் என்னைப் பட்சித்துவிடுமென்று எழுதியிருக்கிறதை அவர் சீஷர் நினைவுகூர்ந்தார்
கள். இதைக் கண்ட யூதர் அவரிடம்: நீர் 18
இவைகளைச் செய்கிறீரே, அதற்கு என்ன அடையாளத்தை எங்களுக்குக் காண்பிக்கிறீரென்று கேட்டார்கள். அதற்கு இயேசு: 19
இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள்; மூன்றுநாளில் அதை எழுப்பிவிடுவேன் என்றார். அப்பொழுது யூதர்: இந்த ஆல 20
யத்தைக் கட்ட நாற்பத்தாறு வருஷம் சென்றதே, நீர் இதை மூன்றுநாளில் எழுப்பிவிடுவீரோ என்றார்கள். அவரோ தமது 21
சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார். அவர் மரித்தோரிலிருந்தெழுப்பப் 22
பட்டபின், அவர் சீஷர் அவர் இதைச் சொன்னதை நினைவுகூர்ந்து வேதவாக்கியத்திலும் இயேசு சொன்ன வார்த்தையிலும் நம்பிக்கைவைத்தார்கள்.

பஸ்கா பண்டிகைகாலத்தில் அவர் எருச 23
லேமிலிருக்கையில் அவர் செய்த அற்புதங்களைக் கண்ட அநேகர் அவர் நாமத்தில் நம்பிக்கைவைத்தார்கள். இயேசுவோ தாமே 24
எல்லாரையும் அறிகிறவரானபடியால் அவர்களை நம்பி இணங்கவில்லை. மனுஷரிலிருப் 25
பதை அறிந்தவராதலால் மனுஷரைக் குறித்து எவனும் சாட்சிசொல்வது அவருக்கு அவசியமில்லாதிருந்தது.

பரிசேயரில் நிக்கொதேமு என்னும் ஒரு **3**
மனுஷனிருந்தான். அவன் யூதருடைய 2
அதிகாரிகளில் ஒருவன். அவன் இராக்காலத்திலே அவரிடம் வந்து: ரபீ, நீர் கடவுளிடமிருந்து போதகராக வந்திருக்கிறீரென அறிவோம். கடவுள் தன்னோடிருந்தாலன்றி நீர் செய்கிற இந்த அடையாளங்களை எவனும் செய்யமுடியாதே என்றான். இயேசு 3
வோ அவனிடம்: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் கடவுளின் ராஜ்யத்தைக் காணமுடியாதென்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். நிக்கொ 4
தேமு அவரிடம்: ஒரு மனுஷன் முதிர் வயதாயிருக்கையில் எப்படிப் பிறக்கலாகும்? அவன் தன் தாயின் கர்ப்பத்திற்குள் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான். அதைக்கேட்ட இயேசு: ஒரு 5
வன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் கடவுளின் ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கமுடியாதென்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் 6
பிறப்பது மாம்சம், ஆவியினால் பிறப்பது ஆவி. நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டு 7
மென்று நான் உனக்குச் சொன்னதைப்பற்றி அதிசயப்படவேண்டாம். காற்று தனக்கு 8
இஷ்டமான திசையில் வீசுகிறது, அதின் சத்

தத்தைக் கேட்கிறாய்; ஆகிலும் அது எங்கி
ருந்துவருகிறதென்றும் எங்கே போகிறதென்
றும் உனக்குத் தெரியாது; ஆவியிலே பிறந்த
9 எவனும் அப்படியே என்றார். அதைக்
கேட்ட நிக்கொதேமு: இவைகள் எப்படி
10 யாகுமென | இயேசு அவனிடம் சொன்னார்:
நீ இஸ்ரவேலில் போதகனாயிற்றே, இவை
11 களை அறியாயா? மெய்யாகவே மெய்யாகவே
நான் உனக்குச் சொல்லுகிறேன், நாங்கள்
அறிந்திருக்கிறதைச் சொல்லுகிறோம், நாங்
கள் கண்டதைப்பற்றிச் சாட்சி கொடுக்கி
றோம்; நீங்களோ எங்கள் சாட்சியை ஏற்றுக்
12 கொள்ளுகிறதில்லை. பூமியிலுள்ளவைகளை
நான் உங்களுக்குச் சொல்ல நீங்கள் நம்பா
மற்போனால் பரலோகத்திலுள்ளவைகளை
உங்களுக்குச் சொல்வேனாலும் எப்படி நம்பு
13 வீர்கள்? பரலோகத்திலிருந்து இறங்கின
வராகிய மனுஷகுமாரனேயல்லாமல் பரலோ
கத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை.
14 மோசே சர்ப்பத்தை வனாந்தரத்தில் உயர்த்
15 தினதுபோல மனுஷகுமாரனும், தம்மில்
விசுவாசமாயிருக்கிறவன் எவனும் நித்திய
ஜீவனைப் பெறும்படி, உயர்த்தப்படவேண்
டும்.

16 கடவுள் தமது ஒரேபேருள குமாரனில்
விசுவாசமாயிருக்கிறவன் எவனும் கெட்டுப்
போகாமல் நித்திய ஜீவனைப் பெறும்படி
அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்
17 தில் அன்புகூர்ந்தார். உலகத்திற்குத் தீர்ப்
பிடுவதற்கென்று கடவுள் தமது குமாரனை
உலகத்தில் அனுப்பவில்லை, உலகம் அவ
ராலே இரட்சிக்கப்படுவதற்கென்றே அவ
18 ரையனுப்பினார். அவரில் விசுவாசமாயிருக்
கிறவன் தீர்ப்பிடப்படான்; விசுவாசமில்லா
தவனோ கடவுளின் ஒரேபேருள குமாரனு
டைய நாமத்தில் விசுவாசமாயிராதபடியி
19 னால் தீர்ப்பிடப்பட்டாயிற்று. வெளிச்சம்
உலகத்தில் வந்திருக்கிறது, மனுஷருடைய
செய்கைகளோ பொல்லாதவைகள். ஆத
லால் அவர்கள் வெளிச்சத்தைப் பார்க்கிலும்
இருளை அதிகமாய் விரும்பினார்கள்; இதுவே
20 அந்தத் தீர்ப்பு. தீமைமுயல்பவன் எவ
னும் வெளிச்சத்தைப் பகைக்கிறான், தன்
செய்கைகள் கண்டிக்கப்படாதபடி வெளிச்
21 சத்தினிடம் வராதிருக்கிறான். உண்மை
யைச் செய்பவனோ, தன் செய்கைகள் கடவு
ளுக்குள் செய்யப்பட்டவைகளென்று வெளி
யாகும்படி, வெளிச்சத்தினிடம் வருகிறான்.

22 இவைகளுக்குப்பின்பு இயேசுவும் அவரு
டைய சீஷரும் யூதேயா நாட்டிற்கு வந்தார்
கள்; அங்கே அவர் அவர்களோடே சஞ்
சரித்து ஞானஸ்நானங் கொடுத்துவந்தார்.

சாலிம் ஊருக்குச் சமீபமான அயினோன் 23
என்னும் இடத்தில் அதிகத் தண்ணீர் இருந்த
படியினால் யோவானும் அங்கே ஞானஸ்
நானங் கொடுத்துவந்தான்; ஜனங்கள் அவ
னிடம் வந்து ஞானஸ்நானம் பெற்றுக்
கொண்டிருந்தார்கள். யோவான் இன்னும் 24
காவலில் வைக்கப்படவில்லை. அப்பொழுது 25
யோவானுடைய சீஷருக்கு ஒரு யூதனுக்கு
சுத்திகரிப்பைப்பற்றித் தர்க்கமுண்டா
யிற்று. அவர்கள் யோவானிடம் வந்து: 26
ரபீ, உம்மோடு யோர்தானுக்கு அக்கரையில்
ஒருவர் இருந்தாரே; அவரைக்குறித்து நீரும்
சாட்சி பகர்ந்தீரே; இதோ பாரும், அவர்
ஞானஸ்நானங் கொடுக்கிறார், எல்லாரும்
அவரிடம் போகிறார்களென | யோவான் 27
சொன்னான்: பரலோகத்திலிருந்து ஒருவனுக்
குக் கொடுக்கப்பட்டாலொழிய அவன் ஒன்
றையும் எடுத்துக்கொள்ளமுடியாது. நான் 28
கிறிஸ்துவல்ல, அவருக்குமுன் அனுப்பப்
பட்டவனே என்று நான் சொன்னதற்கு
நீங்களே எனக்குச் சாட்சிகள். மணவாட் 29
டியை உடையவனே மணவாளன்; மண
வாளனுடைய தோழனே அருகே நின்று
அவனுடைய சத்தத்தைக்கேட்டு மணவாள
னுடைய குரலினால் மிகவும் சந்தோஷப்
படுகிறான்; இது என்னுடைய சந்தோஷம்,
இது சம்பூரணமுமாயிற்று. அவர் பெருக 30
வேண்டும், நானோ சிறுகவேண்டும்.

உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லா 31
ருக்கும் மேலானவர்; பூமியிலிருந்துண்டான
வன் பூமிக்குரியவன், பூமிக்குரியவைகளைப்
பேசுகிறான்; பரலோகத்திலிருந்து வருகிறவர்
எல்லாருக்கும் மேலானவர். தாம் கண்ட 32
தையும் கேட்டதையும் சாட்சியாகச் சொல்
லுகிறார்; அவருடைய சாட்சியை ஒருவனும்
ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. அவர் சாட்சி 33
யை ஏற்றுக்கொள்ளுகிறவன் கடவுள் சத்
தியமுள்ளவரென்று முத்திரைபோடுகிறான்.
கடவுள் அனுப்பினவர் கடவுளின் வார்த்தை 34
களைப் பேசுகிறார்; அவர் தமது ஆவியை
அளவுபார்த்துக் கொடுக்கிறதில்லை. பிதா 35
வானவர் குமாரனில் அன்புகூர்ந்து எல்லா
வற்றையும் அவர் கையில் ஒப்புக்கொடுத்தி
ருக்கிறார். குமாரனில் விசுவாசமாயிருக் 36
கிறவன் நித்திய ஜீவனையுடையவன்; குமார
னுக்கு அடங்காதவனோ ஜீவனைக் காண்ப
தில்லை, கடவுளின் கோபம் அவன்மேல்
நிலைக்கும்.

4 யோவானைப் பார்க்கிலும் இயேசு அநேக
ரைச் சீஷராக்கி ஞானஸ்நானங்கொடுக்கிறா
னென்று பரிசேயர் கேள்விப்பட்டதாக

2 ஆண்டவருக்குத் தெரியவந்தபோது—ஞான
ஸ்நானங்கொடுத்தவரோ இயேசுவல்ல,
3 அவர் சீஷரே—அவர் யூதேயாவை விட்டு
மறுபடியுங் கலிலேயாவுக்குப் போனார்.
4 அவர் சமாரியா வழியாய்ப் போகவேண்டிய
தாயிருந்தது.
5 சீகார் என்ற சமாரிய ஊருக்கு வந்தார்.
அது யாக்கோபு தன் குமாரன் யோசேப்புக்
குக் கொடுத்த நிலத்துக்கருகே இருந்தது.
6 அங்கே யாக்கோபின் கிணறொன்று இருந்
தது. இயேசு பிரயாணத்தினால் களைப்ப
டைந்து அந்தக் கிணற்றினருகே அப்படியே
உட்கார்ந்தார்; ஏறக்குறைய ஆறுமணிவேளை
7 யிருக்கும். அவர் சீஷர் போஜன பதார்த்
தங்களை வாங்கிவரும்படி ஊருக்குள் போயி
8 ருந்தார்கள். அப்பொழுது சமாரிய ஸ்திரீ
ஒருத்தி தண்ணீர் மொள்ள வந்தாள்.
இயேசு அவளிடம்: தாகத்துக்குத்தா என்
9 றார். சமாரிய ஸ்திரீ அவரைப்பார்த்து: நீர்
யூதன், நான் சமாரிய ஸ்திரீ; தாகத்துக்குத்
தாவென்று என்னிடங் கேட்கிறதெப்படி
என்றாள். ஏனெனில், யூதர் சமாரியருடன்
10 உறவாடுகிறதில்லை. இயேசுவோ: கடவு
ளின் ஈவையும் தாகத்துக்குத் தாவென்று
உன்னிடங் கேட்கிறவர் இன்னார் என்பதை
யும் அறிந்திருந்தாயானால் நீயே அவரிடங்
கேட்டிருப்பாய், அவரும் உனக்கு ஜீவ
தண்ணீரைக் கொடுத்திருப்பாரென்று அவ
11 ளுக்குப் பதிலுரைத்தார். அதற்கு அவள்:
ஐயா, மொள்ளுகிறதற்கு உம்மிடம் ஒன்று
மில்லை, கிணறும் ஆழம். அப்படியிருக்க
எங்கேயிருந்து உமக்கு ஜீவதண்ணீர் கிடைக்
12 கும்? நமது பிதாவாகிய யாக்கோபிலும் நீர்
பெரியவரோ? அவர் இந்தக் கிணற்றை
நமக்குத் தந்தார். அவரும் அவர் பிள்ளை
களும் அவர் மிருகங்களும் இதிலே குடித்த
13 துண்டே என்றாள். அதற்கு இயேசு: இந்
தத் தண்ணீரில் குடிக்கிற எவனும் மறுபடி
14 யும் தாகமடைவான். நான் கொடுக்குந்
தண்ணீரில் குடிக்கிறவனே ஒருகாலும் தாக
மடையான். நான் அவனுக்குக் கொடுக்
குந் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவ
னுக்கேதுவாக ஊறுகிற நீரூற்றாகும் என்
15 றார். அந்த ஸ்திரீ அவரைப் பார்த்து:
ஐயனே, எனக்குத் தாகமுண்டாகாமலும்
நான் தண்ணீர் மொள்ள இவ்வளவு தூரம்
வராமலுமிருக்கும்படி அந்தத் தண்ணீரை
16 எனக்குத் தாருமென்று சொல்ல | அவர்:
நீ போய் உன் புருஷனை அழைத்துக்
17 கொண்டு இங்கே வா என்றார். அந்த
ஸ்திரீ: எனக்குப் புருஷனில்லை என்று
18 சொல்ல | இயேசு அவளிடம்: எனக்குப்
புருஷனில்லை யென்று நீ சொன்னது சரி
தான். உனக்கு ஐந்து புருஷரிருந்தார்
கள்; இப்பொழுது உனக்கிருக்கிறவனே
உன் புருஷனல்ல; நீ சொன்னது உண்
மையே என்றார். அப்பொழுது அந்த 19
ஸ்திரீ அவரிடம்: ஐயனே, நீர் தீர்க்கதரிசி
என்று காண்கிறது. எங்கள் முன்னோர் 20
இந்த மலையில் தொழுதுகொண்டார்கள்;
நீங்களோ, தொழுதுகொள்ளவேண்டிய
ஸ்தலம் எருசலேமிலிருக்கிறது என்கிறீர்
கள் என்றாள். அதற்கு இயேசு: அம்மா, 21
என்னை நம்பு; காலம் வருகிறது, அப்போது
நீங்கள் பிதாவைத் தொழுதுகொள்வது இந்த
மலையிலுமல்ல, எருசலேமிலுமல்ல. நீங்கள் 22
அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்;
நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்
ளுகிறோம். யூதரிடமிருந்து இரட்சிப்பு
வருகிறதே. எனினும் காலம் வருகிறது, 23
அது வந்துமாயிற்று. அப்பொழுது மெய்த்
தொழும்பர் பிதாவை ஆவியிலும் உண்மை
யிலுந் தொழுதுகொள்வார்கள். அப்படிப்
பட்டவர்களையே பிதாவும் தம்மைத்
தொழுதுகொள்ளுகிறவர்களாகத் தேடுகிறார்.
கடவுள் ஆவியே; அவரைத் தொழுது 24
கொள்ளுகிறவர்களும் ஆவியிலும் உண்மை
யிலுந் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்.
அப்போது அந்த ஸ்திரீ: கிறிஸ்து எனப்படு 25
கிற மேசியா வருகிறாரென்று அறிவேன்,
அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு
அறிவிப்பாரென்று சொல்ல | இயேசு அவ 26
ளிடம்: உன்னுடனே பேசுகிற நானே அவர்
என்றார்.

அத்தருணத்தில் அவருடைய சீஷர் 27
வந்து அவர் ஒரு ஸ்திரீயோடு பேசுகிறதைக்
கண்டு ஆச்சரியப்பட்டார்கள். ஆகிலும்
என்ன தேடுகிறீரென்றாவது ஏன் அவளு
டனே பேசுகிறீரென்றாவது ஒருவனும்
கேட்கவில்லை. அப்பொழுது அந்த ஸ்திரீ 28
தன் குடத்தை வைத்துவிட்டு ஊருக்குள்ளே
போய் ஜனங்களைப்பார்த்து: வாருங்கள், 29
நான் செய்த யாவற்றையும் ஒரு மனுஷன்
எனக்கு அறிவித்தார்; அவரைப் பாருங்கள்;
அவர் கிறிஸ்துதானே என்றாள். அப்பொ 30
ழுது அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு
அவரிடம் வந்துகொண்டிருந்தார்கள்.

இதற்குள் சீஷர் அவரிடம்: ரபீ, சாப் 31
பிடும் என்று வேண்டிக்கொள்ள | அவர்: 32
நான் சாப்பிடுவதற்கு நீங்கள் அறியாத
போஜனமொன்றுண்டு என்றார். சீஷர் 33
இதைக்கேட்டு ஒருவரையொருவர் பார்த்து:
யாராவது அவருக்குச் சாப்பாடு கொண்டு
வந்திருப்பானோ என்று பேசிக்கொண்டார்

34 கள். இயேசு அவர்களிடம்: என்னை அனுப்
பினவருடைய சித்தத்தைச் செய்து அவரு
டைய வேலையை முடிப்பதே என் போஜ
35 னம். அறுப்புக்காலம் வர இன்னும் நாலு
மாதஞ் செல்லும் என்று நீங்கள் சொல்லு
கிறதில்லையா? இதோ, உங்களுக்குச் சொல்
லுகிறேன், வயல் நிலங்கள் விளைந்து இப்
பொழுதே அறுப்புக்கு வெண்மையாயிருக்
கின்றன; உங்கள் கண்களை ஏறெடுத்துப்
36 பாருங்கள். விதைக்கிறவனும் அறுக்கிற
வனும் ஒருமித்துச் சந்தோஷப்படும்படி
அறுக்கிறவன் கூலிபெற்று நித்தியஜீவனுக்
கென்று பலனைச் சேர்த்துக்கொள்ளுகிறான்.
37 விதைக்கிறவன் வேறே அறுக்கிறவன் வேறே
என்கிற பழமொழியின் உண்மை இதிலே
38 விளங்கும். நீங்கள் வருந்தி உழைக்காத
தை அறுக்க நான் உங்களை அனுப்பினேன்;
மற்றவர்கள் உழைத்தார்கள், அவர்கள்
உழைப்பின் பலனில் நீங்கள் பிரவேசித்தீர்
கள் என்றார்.
39 நான் செய்த யாவற்றையும் எனக்குச்
சொன்னாரென்று சாட்சிபகர்ந்த அந்த
ஸ்திரீயின் வார்த்தையினிமித்தம் அந்த ஊர்ச்
சமாரியரில் அநேகர் அவர்மேல் விசுவாசம்
40 வைத்தார்கள். ஆகையால் சமாரியர் அவ
ரிடம்வந்து தங்களிடம் தங்கியிருக்கவேண்டு
மென்று வேண்டிக்கொள்ள அவர் இரண்டு
41 நாள் அங்கே தங்கினார். அப்பொழுது
அவருடைய வார்த்தையினிமித்தம் இன்
னும் பல பேர் விசுவாசங்கொண்டார்கள்.
42 அவர்கள் அந்த ஸ்திரீயினிடம்: நாங்கள்
விசுவாசங்கொள்வது இனிமேல் உன்பேச்
சினிமித்தமல்ல, நாங்களே கேட்டு, இவர்
மெய்யாகவே உலகரட்சகரென்று அறிந்து
கொண்டோம் என்றார்கள்.
43 இரண்டு நாளைக்குப் பின்பு அவர் அவ்
விடம்விட்டுக் கலிலேயாவுக்குப் போனார்.
44 ஒரு தீர்க்கதரிசிக்குத் தன் சொந்த ஊரிலே
கனமில்லையென்று இயேசு தாமே சாட்சி
45 சொல்லியிருந்தாரே, அவர் கலிலேயாவில்
வந்தபோது எருசலேமில் உற்சவத்திலே
அவர் செய்த யாவற்றையும் பார்த்திருந்த
கலிலேயர் அவரை ஏற்றுக்கொண்டார்கள்;
அவர்களும் உற்சவத்துக்குப் போயிருந்
தார்கள்.
46 இயேசு தாம் தண்ணீரைத் திராட்சரச
மாக்கின கலிலேயாவிலுள்ள காநா ஊருக்கு
மறுபடியும் வந்தார். அப்பொழுது ராஜா
வின் உத்தியோகஸ்தரில் ஒருவனுடைய
மகன் கப்பர்நகூமிலே வியாதியாயிருந்தான்.
47 இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு
வந்தாரென்று அந்த மனுஷன் கேள்விப்
பட்டபோது அவரிடம்போய், அவர் வந்து
தன் மகனைக் குணமாக்கவேண்டுமென்று
வேண்டிக்கொண்டான். அவன் மகன்
மரண அவஸ்தையிலிருந்தான். அதைக் 48
கேட்ட இயேசு அவனிடம்: நீங்கள் அடை
யாளங்களையும் அற்புதங்களையுங் கண்டா
லன்றி விசுவாசங்கொள்ளவே மாட்டீர்கள்
என | உத்தியோகஸ்தன்: ஐயனே, என் 49
பிள்ளை சாகுமுன் வாரும் என்றான். இயேசு 50
அவனிடம்: நீ போ, உன் மகன் பிழைத்தி
ருக்கிறான் என்றார். இயேசு தனக்குச்
சொன்ன வார்த்தையை அந்த மனுஷன்
நம்பிப் போனான். அவன் போகையில் 51
அவனுடைய வேலைக்காரர் அவனுக்கு எதிர்
கொண்டுவந்து அவனுடைய பையன்
பிழைத்திருக்கிறதாகச் சொன்னார்கள். அப் 52
பொழுது எந்த மணிநேரத்தில் அவனுக்குக்
குணம் உண்டாயிற்றென்று அவர்களிடம்
விசாரிக்க அவர்கள்: நேற்று ஏழாமணி
நேரத்தில் ஜ்வரம் அவனை விட்டது என்றார்
கள். உன் மகன் பிழைத்திருக்கிறானென்று 53
இயேசு தன்னுடனே சொன்ன மணிநேரம்
அதுவே என்று தகப்பன் அறிந்து அவனும்
அவன் வீட்டாரனைவரும் விசுவாசங் கொண்
டார்கள். இயேசு யூதேயாவிலிருந்து கலி 54
லேயாவுக்கு வந்து மறுபடியும் செய்த இரண்
டாம் அடையாளம் இது.

இவைகளுக்குப்பின்பு யூதருக்கு ஒரு **5**
உற்சவம் வரவே இயேசுவும் எருசலேமுக்
குப் போனார். ஐந்து மண்டபங்களுடைய 2
தும் எபிரேயுபாஷையில் பெத்சாதா என
வழங்குவதுமான ஒரு குளம் எருசலேமில்
ஆட்டுவாசலினருகே உண்டு. தண்ணீர் 3
கலங்குவதை எதிர்பார்த்துக் காத்திருக்
கும் குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்
புடையவர்களான வியாதிக்காரர் பலபேர்
அந்த மண்டபங்களில் படுத்திருப்பார்கள்.
அங்கே ஒரு மனுஷனிருந்தான்; அவன் 5
முப்பத்தெட்டு வருஷம் வியாதியாயிருந்த
வன். அவன் படுத்திருப்பதை இயேசு 6
கண்டு அவன் நெடுநாள் நோயாளி என்ற
றிந்து அவனிடம்: குணமாக உனக்கு
மனமா என்று கேட்க | வியாதிக்காரன் அவ 7
ரைப் பார்த்து: ஐயனே, தண்ணீர் கலக்கப்
படும்போது குளத்தில் என்னை விடுகிறதற்கு
ஆளில்லை; நான் போகிறதற்குள் வேறொரு
வன் எனக்கு முன் இறங்கிவிடுகிறான் என்
றான். இயேசு அவனிடம்: எழுந்திரு, உன் 8
படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்துபோ
என்றார். உடனே அந்த மனுஷன் குண 9
மாகித் தன் படுக்கையை எடுத்துக்கொண்டு

நடந்துபோனான். அந்த நாள் ஓய்வுநாள்.
10 ஆதலால் யூதர்கள் சொஸ்தமாக்கப்பட்
டவனைப் பார்த்து: இது ஓய்வுநாளாயிற்றே;
நீ படுக்கையை எடுத்துக்கொண்டு போகிறது
11 நியாயமாகாதென்றார்கள். அவனோ அவர்
களிடம்: என்னைக் குணமாக்கினவரே, உன்
படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்து
போவென்று எனக்குச் சொன்னார் என்றான்.
12 எடுத்துக்கொண்டு நடந்துபோவென்று
உன்னிடம் சொன்ன மனுஷன் யார் என்று
13 அவனிடம் கேட்டார்கள். சுகமடைந்த
வனுக்கோ அவர் இன்னாரென்று தெரியாது;
அவ்விடத்தில் கூட்டம் அதிகமாயிருந்தமை
14 யால் இயேசு விலகிவிட்டார். அதற்குப்
பின்பு இயேசு அவனைத் தெய்வாலயத்தில்
கண்டு: இதோ பார், நீ குணமடைந்து விட்
டாய்; அதிகக் கேடானதொன்றும் உனக்கு
நேரிடாதபடி இனிப் பாவஞ் செய்யாதே
15 என்றார். அந்த மனுஷன் போய்த் தன்
னைக் குணமாக்கினவர் இயேசு என்று யூத
16 ருக்கறிவித்தான். இயேசு இவற்றை ஓய்வு
நாளில் செய்தபடியால் யூதர் அவரை இம்
17 சைப்படுத்தி வந்தார்கள். இயேசு இதை
யறிந்து அவர்களைப் பார்த்து: என் பிதா
இதுவரைக்கும் வேலைசெய்து வருகிறார்,
நானும் வேலைசெய்து வருகிறேன் என்றார்.
18 இதினிமித்தம் யூதர் அவரைக் கொலைசெய்ய
முன்னிலும் அதிகமாய் வகை தேடினார்கள்.
ஏனெனில் அவர் ஓய்வுநாளை மீறினதுமல்லா
மல், தம்மைக் கடவுளுக்குச் சமமாக்கிக்
கடவுளைத் தமது சொந்தப் பிதாவென்றும்
சொல்லிவந்தார்.

19 ஆகவே இயேசு அவர்களிடம்: மெய்யா
கவே மெய்யாகவே நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன், பிதா செய்யக் காண்பதை
தவோ அழையேயன்றிக் குமாரன் தாமாக
வே எதையுஞ் செய்யமுடியாது;
அவர் எவைகளைச் செய்கிறாரோ
அவைகளைக் குமாரனும் அப்படியே செய்
20 கிறார். பிதா குமாரனை நேசித்துத் தாம்
செய்கிறவற்றையெல்லாம் அவருக்குக் காண்
பிக்கிறார்; நீங்கள் ஆச்சரியப்படத்தக்கதாக
இவற்றிலும் பெரிதான செயல்களையும் அவ
21 ருக்குக் காண்பிப்பார். பிதா மரித்தோரை
எழுப்பி உயிர்ப்பிக்கிறதுபோல குமாரனும்
தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார்.
22 பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்
லாரும் குமாரனையும் கனம்பண்ணவேண்டு
மென்று பிதாவானவர் தாமாக ஒருவருக்குந்
தீர்ப்பிடாமல், தீர்ப்பிடும் அதிகாரம் முழு
வதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்
23 கிறார். குமாரனைக் கனம்பண்ணாதவன்
அவரையனுப்பின பிதாவையும் கனம்பண்
ணாதவனே. மெய்யாகவே மெய்யாகவே உங் 24
களுக்குச்சொல்லுகிறேன், என் வார்த்தை
யைக் கேட்டு என்னை யனுப்பினவரில் விசு
வாசம் வைக்கிறவன் நித்திய ஜீவனை உடைய
வன்; அவன் தீர்ப்புக்காளாகான்; அவன்
மரணத்திலிருந்து ஜீவனுக்குள் வந்தாயிற்று.
மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் 25
சொல்லுகிறேன், காலம்வருகிறது, வந்து
மாயிற்று. அப்பொழுது மரித்தோர் கடவு
ளின் குமாரனுடைய சத்தத்தைக் கேட்பார்
கள், கேட்டவர்கள் பிழைப்பார்கள். பிதா 26
தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கிறது
போல குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடை
யவராயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார்.
அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால் 27
தீர்ப்பிடும் அதிகாரத்தையும் அவருக்குக்
கொடுத்தருளினார். இதைக் குறித்து ஆச் 28
சரியப்படவேண்டாம். பிரேதக் குழிகளி
லுள்ள அனைவரும் அவர் சத்தத்தைக் கேட்
குங்காலம் வருகிறது. அப்பொழுது, நன் 29
மை செய்வோர் ஜீவனுக்கென்றும் தீமை
முயல்வோரோ ஆக்கினைக்கென்றும் எழுந்து
புறப்படுவார்கள்.

நானாகவே எதையுஞ் செய்யமுடியாது. 30
நான் கேட்கிறபடியே தீர்ப்பிடுகிறேன், என்
சித்தத்தையல்ல என்னையனுப்பின பிதாவின்
சித்தத்தையே நான் நாடுகிறபடியால் என்
தீர்ப்பு நியாயமாம். என்னைக்குறித்து நானே 31
சாட்சி சொன்னால் என் சாட்சி மெய்யா
யிராது. என்னைக்குறித்துச் சாட்சி சொல்லு
கிறவரோ வேறொருவர்; அவர் என்னைக் 32
குறித்துச் சொல்லுகிற சாட்சி உண்மை
யென்று அறிவேன். நீங்கள் யோவானிடம் 33
ஆளனுப்பி விசாரித்தீர்கள், அவன் சத்தி
யத்திற்கே சாட்சி சொன்னான். நான் அங் 34
கீகரிக்கிற சாட்சியம் மனுஷசாட்சியமல்ல;
நீங்கள் இரட்சிக்கப்படவேண்டுமென்றே
இவைகளைச் சொல்லுகிறேன். அவன் 35
எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்;
அவன் வெளிச்சத்தில் நீங்கள் கொஞ்சகா
லம் களிகூர மனதாயிருந்தீர்கள். எனக்கோ 36
யோவானுடைய சாட்சியத்திலும் மேலான
சாட்சியமுண்டு; நான் நிறைவேற்றும்படி
பிதா எனக்குக் கொடுத்தவைகளும் நான்
செய்துவருகிறவைகளுமான கிரியைகளே
பிதா என்னை யனுப்பினாரென்று என்னைக்
குறித்துச் சாட்சி கொடுக்கின்றன. என்னை 37
யனுப்பின பிதா தாமே என்னைக் குறித்துச்
சாட்சி பகர்ந்திருக்கிறார்; நீங்கள் ஒருக்கா
லும் அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை;
அவர் ரூபத்தைக் கண்டதுமில்லை, அவர் 38

வார்த்தை உங்களில் தரித்திருக்கிறதுமில்லை. அவர் அனுப்பினவரில் நீங்கள் விசுவாசம்
39 வைக்கிறதில்லையே. உங்களுக்கு வேதாக
மங்களில் நித்தியஜீவன் உண்டென்றெண்ணி
அவைகளை ஆராய்ந்து பார்க்கிறீர்கள்; என்
னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகள்
40 அவைகளே. அப்படியிருந்தும், உங்க
ளுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடம்
41 வர உங்களுக்கு மனதில்லை. மனுஷரால்
வரும் புகழை நான் அங்கீகரிக்கிறதில்லை.
42 நான் உங்களை அறிந்துகொண்டேன், கடவு
43 ளின் அன்பு உங்களிலில்லையே. நான் என்
பிதாவின் நாமத்தில் வந்தேன். நீங்கள்
என்னை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை; வெறெ
ருவன் தன் சுய நாமத்தினால் வருவானானால்
44 அவனை அங்கீகாரஞ்செய்வீர்கள். ஏக
தெய்வமாகிய கடவுளினிடமிருந்து வருகிற
மகிமையை நாடாமல் ஒருவரிடமிருந்
தொருவர் புகழை அங்கீகரித்துக்கொள்ளும்
45 நீங்கள் நம்புவதெப்படி? பிதாவினிடத்
தில் நான் உங்கள்மேல் குற்றஞ்சாட்டுவே
னென்று நினைக்கவேண்டாம்; உங்கள்மேல்
குற்றஞ்சாட்டுகிற ஒருவனுண்டு, நீங்கள்
ஆசித்து நோக்கியிருக்கிற மோசேயே அவன்.
46 நீங்கள் மோசேயை நம்பினீர்களானால் என்
னையும் நம்பியிருப்பீர்கள்; அவன் என்னைக்
47 குறித்து எழுதினான். அவன் எழுதின
வற்றை நீங்கள் நம்புகிறதில்லையானால் நான்
சொல்லுகிறவற்றை நம்புவதெப்படி
என்றார்.

**6** இவற்றின்பின் இயேசு திபேரியாக்கடல்
என்ற கலிலேயாக்கடலின் அக்கரைக்குப்
2 போனார். அவர் நோயாளிகளிடத்தில்
செய்துவந்த அடையாளங்களைத் தரிசனங்
கள் கண்டு அவருக்குப்பின்சென்றார்கள்.
3 இயேசுவோ மலையிலேறி அங்கே தமது சீஷ
4 ரோடு உட்கார்ந்தார். அப்பொழுது பஸ்கா
என்னும் யூதருடைய உற்சவம் கிட்டியிருந்
5 தது. இயேசு தமது கண்களை ஏறெடுத்து
ஜனத்திரள் தம்மிடம் வருகிறதைக் கண்டு
பிலிப்பினிடம்: இவர்கள் சாப்பாட்டுக்கு
அப்பங்களை நாம் எங்கே வாங்கலாமென்று
6 கேட்டார். அவனைப் பரீக்ஷிக்கும்படி இப்
படிக் கேட்டார்; தாம் செய்யபோகிறது
இன்னது என்பதை அவர் அறிந்திருந்தார்.
7 அதற்குப் பிலிப்பு: இவர்களில் ஒவ்வொரு
வனும் கொஞ்சங் கொஞ்சம் எடுத்துக்கொள்
வதற்கும் இருநூறு தினாரியத்து அப்பங்க
8 ளும் போதாதே என்றான். அப்பொழுது
அவர் சீஷரில் ஒருவன், சீமோன் பேதுரு
வின் சகோதரன் அந்திரேயா, அவரிடம்:
இங்கே ஒரு பையனிருக்கிறான், அவன் கை 9
யில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும்
இரண்டு மீன்களுமிருக்கின்றன. இத்தனை
பேருக்கு அவைகள் எம்மாத்திரம் என்றான்.
இயேசு, ஜனங்களைப் பந்தியமரச்செய்யுங்கள் 10
என்றார். அது கல்ல புல்தரை. பந்தி
யமர்ந்த புருஷர் ஏறக்குறைய ஐயாயிரம்பேர்.
இயேசு அந்த அப்பங்களை எடுத்து நன்றி 11
செலுத்திப் பந்தியிருந்தவர்களுக்குப் பகிர்ந்து
கொடுத்தார். அப்படியே மீன்களையும்
அவர்களுக்கு வேண்டியமட்டும் பகிர்ந்து
கொடுத்தார். அவர்கள் திருப்தியடைந்த 12
பின் அவர் தமது சீஷரிடம்: மிஞ்சின
துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள், ஒன்
றும் சேதமாகக்கூடாது என்றார். அந்தப் 13
படியே அவர்கள் சேர்த்து ஐந்து வாற்
கோதுமை அப்பங்களில் ஜனங்கள் சாப்
பிட்டு மிஞ்சின துணிக்கைகளைப் பன்னி
ரண்டு கூடை நிரப்பினார்கள். இயேசு 14
செய்த இவ்வடையாளத்தை அந்த மனுஷர்
கண்டு: மெய்யாகவே இவர் உலகில் வரு
கிறவரான தீர்க்கதரிசி என்றார்கள்.

அவர்கள் வந்து தம்மை ராஜாவாக்கும் 15
படி பிடித்துக்கொள்ளப்போகிறார்களென்று
இயேசு அறிந்து மறுபடியும் தனியே விலகி
மலையில் போய்விட்டார்.

சாயங்காலமானபோது அவருடைய 16
சீஷர் கடற்கரைக்குப் போய்ப் படவு ஏறிக்
கப்பர்நகூமுக்கு நேராய்க் கடலின் அக்க
ரைக்குப் போனார்கள். அதற்குள் இருட் 17
டிவிட்டது. இயேசு இன்னும் அவர்களி
டம் வரவில்லை. பெருங்காற்றடித்துக் கட 18
லும் கொந்தளித்தது. அவர்கள் ஏறக் 19
குறைய மூன்று நாலுமைல் தூரம் தண்டு
வலித்துப் போகுவே இயேசு கடலின்மேல்
நடந்து படவுக்குச் சமீபமாய் வருகிற
தைக் கண்டு பயந்தார்கள். அவர் அவர்க 20
ளைப் பார்த்து: நான்தான், பயப்படாதிருங்
கள் என்றார். அப்பொழுது அவரைப் பட 21
வில் ஏற்றிக்கொள்ள மனதாயிருந்தார்கள்;
உடனே படவு அவர்கள் இறங்கவேண்
டிய கரைபோய்ச் சேர்ந்தது.

மறுநாளில் கடலின் அக்கரையில் ஜனங் 22
கள் நின்றுகொண்டிருந்தார்கள். அங்கே
ஒரே ஒரு படவு தவிர வேறே படவிருந்
ததில்லையென்பதையும் அப்படவில் சீஷர்
மாத்திரம் போனதே யல்லாமல் இயேசு
போனதில்லை யென்பதையும் கண்டிருந்தார்
கள். ஆண்டவர் நன்றிசெலுத்திக் கொடுத்த 23
ஆகாரத்தை ஜனங்கள் சாப்பிட்ட இடத்
திற்குச் சமீபமாகத் திபேரியாவிலிருந்து
இப்போது வேறு படவுகள் வந்தன. இயே 24

சுவாவது அவர் சிஷ்யராவது இந்தப் பக்கத்
திலில்லையென்று கூட்டத்தாருக்குத்
தெரிந்தபோது அவர்கள் இந்தப் படவுகளி
லேறி இயேசுவைத்தேடிக் கப்பர்நகூமுக்கு
25 வந்தார்கள். கடலின் அக்கரையிலே அவர்
கள் அவரை கண்டபோது ரபீ, நீர் எப்பொ
ழுது இவ்விடம் வந்தீரென்று கேட்டார்கள்.
26 கேட்கவே இயேசு அவர்களிடம்: மெய்யா
கவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு
கிறேன், நீங்கள் என்னைத் தேடுகிறது அடை
யாளங்களைக் கண்டதினாலல்ல, ஆகாரம்
27 புசித்துத் திருப்தியானதினாலேயே. அழிந்து
போகிற போஜனத்திற்காக அல்ல, நித்திய
ஜீவனுக்கென்று நிலைக்கிற போஜனத்திற்கா
கவே உழையுங்கள்; அதை மனுஷகுமாரன்
உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதா
வாகிய கடவுள் முத்திரித்திருக்கிறார் என்
28 றார். அப்பொழுது அவர்கள் அவரிடம்:
கடவுளின் சித்தத்திற்கிசைய உழைப்பதற்கு
நாங்கள் செய்யவேண்டுவதென்ன என்றார்
29 கள் இயேசு இதைக் கேட்டு: அவர்
அனுப்பினவரில் நீங்கள் விசுவாசம் வைப்
பதே கடவுளின் சித்தத்திற்கிசைய உழைப்
30 பதாம் என்றார். அதற்கு அவர்கள்: அப்
படியானால், நாங்கள் கண்டு உம்மில் விசு
வாசம் வைக்கும்படி நீர் செய்கிற அடை
31 யாளமென்ன? நீர் உழைப்பதென்ன? வானத்
திலிருந்து அவர்களுக்கு ஆகாரம் புசிக்கக்
கொடுத்தாரென்று எழுதியிருக்கிறபடி, நம்
முடைய பிதாக்கள் வனாந்தரத்தில் மன்னா
32 வைப் புசித்தார்களே என்றார்கள். இயேசு
அவர்களிடம்: மெய்யாகவே மெய்யாகவே
உங்களுக்குச் சொல்லுகிறேன், வானத்திலி
ருந்து வந்த ஆகாரத்தை உங்களுக்குக்
கொடுத்தவன் மோசேயல்ல; வானத்திலி
ருந்து வந்த மெய்யான ஆகாரத்தை உங்க
33 ளுக்குக் கொடுக்கிறவர் என் பிதாவே. பரத்
திலிருந்திறங்கி உலகத்துக்கு ஜீவனைக் கொ
டுக்கிற ஆகாரமே கடவுள் அருளிய ஆகா
34 ரம் என்றார். அப்பொழுது அவர்கள் அவ
ரிடம்: ஆண்டவரே, இந்த ஆகாரத்தை
எப்பொழுதும் எங்களுக்குத் தாருமென்றார்
35 கள். இயேசு அவர்களைப் பார்த்து: ஜீவாகா
ரம் நானே, என்னிடம் வருகிறவன் பசிய
டையவேமாட்டான், என்னில் விசுவாசம்
வைக்கிறவன் ஒருக்காலும் தாகமடையவே
36 மாட்டான். நீங்கள் என்னைக் கண்டிருக்
கிறீர்கள்; கண்டும் விசுவாசங் கொள்ளுகிற
தில்லையென்று உங்களுக்குச் சொன்னேன்.
37 பிதா எனக்குக் கொடுக்கிறபாவும் என்னி
டம் வரும், என்னிடம் வருகிறவனை நான்
38 புறம்பே தள்ளுவதில்லை. நான் பரத்திலி
ருந்திறங்கி வந்தது என் சித்தத்தைச் செய்
வதற்கல்ல, என்னை அனுப்பினவரின் சித்தத்
தைச் செய்வதற்கே. என்னை அனுப்பின 39
வரின் சித்தமோ அவர் எனக்குத் தந்தரு
ளிய யாவற்றிலும் ஒன்றையேனும் நான்
இழந்துபோகாமல் கடைசிநாளில் அவற்
றை எழுப்பவேண்டுமென்பதுதான். குமா 40
ரனைக் கண்டு அவரிடம் விசுவாசம் வைக்கி
றவன் எவனும் நித்தியஜீவனை உடையவ
னாக வேண்டுமென்பதே என் பிதாவின் சித்
தம்; நானும் அவனைக் கடைசிநாளில் எழுப்
புவேன் என்றார்.

பரத்திலிருந்து வந்த ஆகாரம் நானே 41
என்று அவர் சொன்னதினிமித்தம் யூதர்கள்
அவரைக்குறித்து முறுமுறுத்து: இவன் 42
யோசேப்பின் குமாரன் இயேசு அல்லவா;
இவன் தகப்பனும் தாயும் நமக்குத் தெரியு
மே. அப்படியிருக்க, நான் பரத்திலிருந்து
இறங்கிவந்தேனென்று இவன் சொல்ல
தெப்படி என்றார்கள். அதைக்கேட்ட 43
இயேசு அவர்களிடம்: உங்களுக்குள்ளே
முறுமுறுக்கவேண்டாம். என்னை அனுப் 44
பின பிதா இழுத்துக்கொண்டாலொழிய
ஒருவனும் என்னிடம் வரமுடியாது;
நானும் அவனைக் கடைசிநாளில் எழுப்பு
வேன். எல்லாரும் கடவுளாலே போதிக் 45
கப்பட்டவர்களாவார்கள் என்று தீர்க்க
தரிசன ஆகமங்களில் எழுதியிருக்கிறதே.
பிதாவினிடங் கேட்டுக் கற்றுக்கொள்ளு
கிறவன் எவனும் என்னிடம் வருகிறான்.
கடவுளிடத்தினின்று வந்தவரே தவிர வே 46
றெவரேனும் பிதாவைக் கண்டிருக்கிற
னென்று சொல்லுகிறதில்லை; இவரே பிதா
வைக் கண்டிருக்கிறார். மெய்யாகவே மெய் 47
யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், விசு
வாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனையுடைய
வன். ஜீவாகாரம் நானே. உங்கள் பிதாக் 48, 49
கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்து
வந்தும் மரித்தார்கள். இதிலே புசிக்கிற 50
வன் மரியாமலிருக்கும்படி பரத்திலிருந்திறங்
கும் ஆகாரம் இதுவே. நானே பரத்திலிருந் 51
திறங்கின ஜீவனுள்ள ஆகாரம்; இந்த ஆகா
ரத்தில் புசிக்கிறவன் என்றென்றைக்கும்
ஜீவிப்பான். நான் கொடுக்கும் ஆகாரமோ
உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும்
என் மாம்சமே என்றார்.

அது கேட்ட யூதர்: இவன் தமது மாம் 52
சத்தை நமக்குப் புசிக்கக் கொடுப்பதெப்படி
யென்று தங்களுக்குள்ளே வாக்குவாதஞ்
செய்தார்கள். அதற்கு இயேசு: மெய்யா 53
கவே மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகி
றேன், மனுஷ குமாரன் மாம்சத்தை நீங்கள்

புசித்து அவர் இரத்தத்தைப் பானம் பண்ணினாலொழிய நீங்கள் உங்களுக்குள் ஜீவனுடையவர்களல்ல. என் மாம்சத்தைப் 54 புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் நித்திய ஜீவனே உடையவன்; நானும் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். 55 என் மாம்சமே மெய்யான போஜனம், என் 56 இரத்தமே மெய்யான பானம். என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னில் நிலைத்திருக்கிறான், நானும் அவனில் நிலைத்திருக்கிறேன். 57 ஜீவனுள்ள பிதா என்னை அனுப்ப நான் பிதாவினால் ஜீவித்திருக்கிறதுபோல என்னைப் 58 புசிக்கிறவனும் என்னால் ஜீவிப்பான். பரத்திலிருந்திறங்கின ஆகாரம் இதுவே; இது உங்கள் பிதாக்கள் புசித்த மன்னாவைப்போன்றதல்ல, அவர்கள் மரித்தார்களே; இந்த ஆகாரத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் ஜீவிப்பான் என்றார். 59 கப்பர்நகூமிலுள்ள ஜெபாலயத்தில் அவர் உபதேசிக்கையில் இவைகளைச் சொன்னார்.

60 அவருடைய சீஷரில் பலர் இவைகளைக் கேட்டு: இந்த உபதேசம் கடினமானது; இதைக்கேட்கச் சகிப்பவன் யார் என்றார்கள். 61 தமது சீஷர்கள் அதைக்குறித்து முறுமுறுக்கிறார்களென்று இயேசு தமக்குள் அறிந்து அவர்களிடம்: இது உங்களை இடறி 62 விழச்செய்கிறதா? மனுஷகுமாரன் தாம் முதல்முதலிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் கண்டாலோ எப்படியிருக்கும்? 63 உயிர்ப்பிக்கிறது ஆவியே, மாம்சமோ ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொன்ன வசனங்கள் ஆவியும் ஜீவனுமாம். 64 ஆகிலும் உங்களுக்குள் விசுவாசமில்லாதவர்களும் உண்டு என்றார். விசுவாசமில்லாதவர்கள் இன்னாரென்றும் தம்மைக் காட்டிக்கொடுப்பவன் இன்னானென்றும் ஆதிமுதலே இயேசு அறிந்திருந்தார். 65 பின்னும் அவர்: பிதாவின் அருளின்றி ஒருவனும் என்னிடத்திற்கு வரமுடியாதென்பதை இதினிமித்தமே உங்களுக்குச் சொன்னேன் என்றார்.

66 அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவரைவிட்டுப் பின்வாங்கிப் போனார்கள்; அப்புறம் அவரோடு சேர்ந்து நடக்கவில்லை. 67 அப்பொழுது இயேசு பன்னிருவரையும் பார்த்து: நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோவென்று கேட்கச் | சீமோன் 68 பேதுரு அவரிடம்: ஆண்டவரே, யாரிடம் போவோம், நித்திய ஜீவவசனங்கள் உம்மிடம் உண்டே; நீர் கடவுளின் பரிசுத்தர் 69 என்றும் நாங்கள் நம்பி அறிந்திருக்கிறோம் என்றான். இயேசு அவர்களிடம்: பன்னிரு 70 வராகிய உங்களை நானே தெரிந்தெடுக்கவில்லையா? ஆயினும், உங்களில் ஒருவன் பிசாசாயிருக்கிறான் என்றார். கரியோத் 71 தூர் சீமோன் மகனை யூதாவைக்குறித்து இதைச் சொன்னார்; அவனே அவரைக் காட்டிக் கொடுக்கப்போகிறவன், பன்னிருவரில் ஒருவன்.

இவைகளுக்குப் பின்பு இயேசு கலிலே 7 யாவிலே சுற்றித்திரிந்தார். யூதர் அவரைக் கொலைசெய்ய வகைதேடினபடியால் அவர் யூதேயாவில் சுற்றித்திரிய மனதில்லாதிருந்தார். கூடாரப்பண்டிகை என்னும் யூத 2 உற்சவம் சமீபமாயிருந்தது. ஆனபடியால் 3 அவருடைய சகோதரர் அவரிடம்: இவ்விடம்விட்டு யூதேயாவுக்குப் போம், உமது சீஷரும் நீர் செய்யும் செயல்களைப் பார்க்கட்டும். பிரபலமாயிருக்க விரும்புகிற 4 எவனும் அந்தரங்கத்தில் ஒன்றையும் செய்யானே; நீர் இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவராலால் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தும் என்றார்கள். அவர் சகோதரரும் 5 அவர்மேல் விசுவாசம் வைக்க வில்லை. இயேசுவோ அவர்களிடம்: என்நேரம் இன் 6 னும் வரவில்லை, உங்களுக்கோ எப்பொழுதும் நேரந்தான். உலகம் உங்களைப் பகைக் 7 கமுடியாது; என்னையோ பகைக்கிறது. அதின் செய்கைகள் பொல்லாதவைகளென்று நான் சாட்சி கொடுக்கிறதே காரணம். நீங்கள் உற்சவத்திற்குப் போங் 8 கள்; நான் இன்னும் இந்த உற்சவத்திற்குப் போகிறதில்லை; என் நேரம் இன்னும் நிறை 9 வாகவில்லையென்று சொன்னார். இவைகளை அவர்களுக்குச் சொல்லிக் கலிலேயாவிலே இருந்துவிட்டார்.

அவருடைய சகோதரர் உற்சவத்திற்குப் 10 போனபின்பு தாமும் போனார். அவர் பகிரங்கமாயல்ல அந்தரங்கமாய்ப் போகிறவர் போல் போனார். உற்சவத்தில் யூதர்: அந்த 11 மனிதன் எங்கே என்று அவரைத் தேடினார்கள். ஜனங்களுக்குள் அவரைப்பற்றி 12 உண்டாயிருந்த முணுமுணுப்புக் கொஞ்சமல்ல. சிலர், அவர் நல்லவரென்றும் வேறு சிலர், அப்படியல்லவே, அவன் ஜனங்களை வஞ்சிக்கிறவனென்றும் தங்களுக்குள் சொல்லிக்கொண்டார்கள். ஆனாலும் யூதருக் 13 குப் பயந்திருந்ததினால் ஒருவனும் அவரைக் குறித்துப் பகிரங்கமாய்ப் பேசவில்லை.

உற்சவம் பாதியானபோது இயேசு தெய் 14 வாலயத்துக்குப் போய் உபதேசஞ்செய்து வந்தார். அப்பொழுது யூதர்கள்: இவர் 15

சாஸ்திரோபதேசம் பெருதவராயிருந்தும் சாஸ்திரங்கள் இவருக்கு எப்படித் தெரிய வந்தன வென்று ஆச்சரியப்பட்டார்கள்.
16 அதைக் கேட்ட இயேசு: என் உபதேசம் என்னுடையதல்ல, என்னை அனுப்பின
17 ருடையது. ஒருவன் அவருடைய சித்தத்தைச் செய்ய மனமாயிருப்பானானால் அவன் இந்த உபதேசம் கடவுளால் உண்டாயிருக்கிறதோ நான் சுயமாய்ப் பேசுகிறேனோ
18 என்று அறிந்துகொள்வான். சுயமாய்ப் பேசுகிறவன் தன் சுயமகிமையைத் தேடுகிறான், தன்னை அனுப்பினவரின் மகிமையைத்தேடுகிறவனே உண்மையுள்ளவன், அவனில்
19 அநீதமில்லை. மோசே நியாயப்பிரமாணத்தை உங்களுக்குக் கொடுக்கவில்லையா? அப்படியிருந்தும் உங்களில் ஒருவனும் அந்த நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறதில்லை; நீங்கள் ஏன் என்னைக் கொலைசெய்யத் தேடுகிறீர்கள் என்றார்.
20 அதற்கு ஜனங்கள்: நீ பேய்பிடித்தவன்; உன்னைக் கொலைசெய்யத் தேடுகிறவன் யார்
21 என்றார்கள். அதைக்கேட்ட இயேசு அவர்களிடம்: ஒரே கிரியையைச் செய்தேன், அதைக்குறித்து எல்லாரும் ஆச்சரியப்
22 படுகிறீர்கள். பாருங்கள், மோசே உங்களுக்கு விருத்தசேதனத்தை நியமித்தான்—அது மோசேயினால் உண்டாகவில்லை, பிதாக்களால் உண்டாயிற்று—எனினும், நீங்கள் ஓய்வுநாளில் மனுஷனை விருத்தசேதனம்
23 செய்கிறீர்கள். மோசேயின் நியாயப்பிரமாணம் மீறப்படாதபடிக்கு ஓய்வுநாளில் மனுஷன் விருத்தசேதனம் பெற்றால், நான் ஓய்வுநாளில் ஒரு மனுஷனுக்குச் சர்வாங்க சுகம் அளித்ததினாலே என்மேல் எரிச்சல்
24 கொள்ளுகிறீர்களோ? தோற்றத்தின்படி தீர்ப்புச் செய்யாமல் நியாயமாய்த் தீர்ப்புச்செய்யுங்கள் என்றார்.
25 அப்பொழுது எருசலேம் நகரத்தாரில் சிலர்: இவனையல்லவா கொலை செய்யத்
26 தேடுகிறார்கள்; இதோ, இவன் பகிரங்கமாய்ப் பேசுகிறானே; இவனுக்கு ஒன்றுஞ் சொல்லுகிறதில்லையே; இவனே கிறிஸ்து என்று அதிகாரிகள் உண்மையாய் அறிந்
27 திருக்கிறார்களோ? அல்ல, இவன் இன்ன இடத்திலிருந்து வந்தவனென்று அறிந்திருக்கிறோம், கிறிஸ்து வரும்போதோ அவர் இன்ன இடத்திலிருந்து வருகிறவரென்று ஒருவனும் அறியமாட்டானே என்றார்கள்.
28 ஆகவே, இயேசு தெய்வாலயத்தில் உபதேசிக்கையில் சத்தமிட்டு: நீங்கள் என்னையும் அறிவீர்களோ! நான் எங்கே இருந்து வந்தேனென்றும் அறிவீர்களோ! நான் என்சுயமாய் வரவில்லை, என்னை அனுப்பினவர் மெய்ப்பொருளானவர், அவரை நீங்கள் அறியாதிருக்கிறீர்கள். நானே அவரை அறிந்திருக்கிறேன். நான் அவரிடமிருந்து வந்திருக்கிறேன், அவரே என்னையனுப்பினவர் என்
29 றார். இதினிமித்தம் அவரைப் பிடிக்க
30 வகைதேடினார்கள்; ஆயினும் அவருடைய வேளை இன்னும் வராதபடியினால் ஒருவனும் அவர்மேல் கைபோடவில்லை.
31 ஜனக்கூட்டத்திலோ அநேகர் அவரில் விசுவாசம் வைத்து: கிறிஸ்து வரும்போது இவர் செய்திருக்கிற அடையாளங்களைப் பார்க்கிலும் அதிகம் செய்வாரோவென்று
32 சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஜனக்கூட்டத்தார் அவரைக் குறித்து இப்படி முணுமுணுக்கிறதைப் பரிசேயர் கேட்டபொழுது அவரைப் பிடிக்கும்படி பிரதான ஆசாரியரும் பரிசேயரும் சேவகரை யனுப்பினார்கள். இயேசு அதையறிந்து: இன்னும்
33 கொஞ்சகாலம் உங்களோடிருக்கிறேன். பின்பு என்னை அனுப்பினவரிடம் போகிறேன். நீங்கள் என்னைத் தேடுவீர்கள்,
34 தேடினாலும் காணமாட்டீர்கள்; நான் எங்கேயிருப்பேனோ அங்கே நீங்கள் வரமுடியாது என்றார். அதைக்கேட்ட யூதர்: நாம்
35 கண்டுபிடிக்கமுடியாதபடி இவர் எங்கே போவார்? கிரேக்கருக்குள்ளே சிதறியிருக்கிறவர்களிடம் போய்க் கிரேக்கருக்கு உபதேசஞ் செய்வாரோ? நீங்கள் என்னைத்
36 தேடுவீர்கள், தேடினாலும் காணமாட்டீர்கள் என்றும் நான் எங்கே இருப்பேனோ அங்கே நீங்கள் வரமுடியாதென்றும் அவர் சொன்ன இவ்வார்த்தை என்னவென்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்.
37 உற்சவத்தின் கடைநாளாகிய பிரதான நாளில் இயேசு நின்று சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடம் வந்து பானம்
38 பண்ணக்கடவன். என்னில் விசுவாசம் வைக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து, வேதவாக்கியஞ் சொல்லியபடி, ஜீவதண்ணீருள்ள நதிகள் பாய்ந்தோடும் என்றார். தம்மில் விசுவாசம் வைப்பவர்
39 கள் பெறப்போகிற ஆவியானவரைக்குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் ஆவி இன்னும் அருளப்படவில்லை.
40 ஜனக்கூட்டத்தாரில் சிலர் இந்த வார்த்தைகளைக் கேட்டு: மெய்யாகவே இவர்தான் தீர்க்கதரிசி என்று
41 சொல்லிக்கொண்டார்கள். வேறு சிலர், இவர்தான் கிறிஸ்து என்று சொல்லிக் கொண்டிருக்க ஜனங்களோ: கிறிஸ்து கலிலேயாவிலிருந்தோ வருவார்?
42 தாவீதின்

சந்தேகியிலும் தாவீது இருந்த பெத்லெகேம்
ஊரிலுமிருந்து கிறிஸ்து வருவாரென்று
வேதவாக்கியம் சொல்லவில்லையா என்றார்
43 கள். இவ்விதமாக அவர் நிமித்தம் ஜனக்
44 கூட்டத்தில் பிரிவினையுண்டாயிற்று. அவர்
களில் சிலர் அவரைப்பிடிக்க மனதாயிருந்
தார்கள், இருந்தாலும் ஒருவனும் அவர்மேல்
45 கைபோடவில்லை. ஆகவே, அந்தச் சேவ
கர் பிரதான ஆசாரியர் பரிசேயரிவர்களிடம்
வந்தார்கள். இவர்கள் அவர்களைப் பார்த்து:
நீங்கள் அவனைக் கொண்டுவராமற்போன
46 தென்ன என்று கேட்கச் சேவகர்: இந்த
மனுஷன் பேசுகிறதுபோல் ஒருவனும் ஒருக்
47 காலும் பேசினதில்லை என்றார்கள். இதைக்
கேட்ட பரிசேயர்: நீங்களும் மோசம்
48 போனீர்களோ? அதிகாரிகளிலாவது பரி
சேயரிலாவது யாதொருவர் அவன்மேல் விசு
49 வாசம் வைத்ததுண்டோ? நியாயப்பி
ரமாணத்தை அறியாதவர்களாகிய இந்தக்
கூட்டத்தாரோ சாபத்துக்குள்ளானவர்கள்
50 என்றார்கள். முந்தி அவரிடம் வந்தவனும்
அவர்களிலொருவனுமாகிய நிக்கொதேமு
51 என்பவன் அவர்களைப் பார்த்து: ஒருவனை
முதலாவது விசாரித்து அவன் செய்கிறது
இன்னதென அறிந்தாலொழிய நமது பிர
மாணம் அவனைக் குற்றவாளியெனத் தீர்க்கு
52 மோவென்றான். அதற்கு அவர்கள்: நீரும்
கலிலேயனே? கலிலேயாவிலிருந்து ஒரு
தீர்க்கதரிசியும் எழும்புகிறதில்லையென்பதை
ஆராய்ந்து அறிந்துகொள்ளும் என்றார்கள்.
53 பின்பு ஒவ்வொருவரும் தங்கள் தங்கள்
வீட்டுக்குப் போனார்கள்.

**8** இயேசுவோ ஒலிவமலைக்குப் போனார்.
காலையிலே அவர் திரும்பவும் தெய்வாலயத்
2 திற்கு வந்தார். ஜனமுழுதும் அவரிடம்
வரவே, அவர் உட்கார்ந்து அவர்களுக்கு
3 உபதேசஞ் செய்தார். அப்பொழுது விப
சாரத்தில் பிடிபட்ட ஒரு ஸ்திரீயை வேத
பாரகரும் பரிசேயரும் அவரிடங் கொண்டு
4 வந்து நடுவே நிறுத்தி: போதகரே, இந்த
ஸ்திரீ விபசாரத்தில் கையுமெய்யுமாய்ப் பிடி
5 பட்டாள். இப்படிப்பட்டவர்களைக் கல்
லெறிந்து கொல்லவேண்டுமென்று மோசே
நியாயப்பிரமாணத்தில் நமக்குக் கட்டளை
யிட்டிருக்கிறாரே; நீர் சொல்லுகிறதென்ன
6 என்றார்கள். அவர்மேல் குற்றஞ் சுமத்த
வேண்டுமென்று அவரைச் சோதிக்கும்படி
இப்படிச் சொன்னார்கள். இயேசுவோ
குனிந்து விரலினால் தரையிலே எழுதிக்
7 கொண்டிருந்தார். அவர்கள் ஓயாமல் அவ
ரைக் கேட்டுக்கொண்டிருக்கையில் அவர்
நிமிர்ந்து அவர்களைப் பார்த்து: உங்களில்
பாவமில்லாதவனெவனோ அவன் முதலா
வது இவள்மேல் கல்லெறியக்கடவனென்று
சொல்லி | அவர் மறுபடியும் குனிந்து 8
தரையிலே எழுதிக்கொண்டிருந்தார். அவர் 9
களோ அதைக்கேட்டுத் தங்கள் மனச்சாட்
சியினால் கண்டிக்கப்பட்டுப் பெரி
யோர்முதல் கடையானவர் வரைக்கும் ஒவ்
வொருவராய்ப் போய்விட்டார்கள். இயேசு
அங்கே தனியே இருந்தார்; அந்த ஸ்திரீயும்
எதிரே நின்றாள். இயேசு நிமிர்ந்து அந்த 10
ஸ்திரீயைத் தவிர வேறொருவரையுங் காண
மல்: அம்மா, உன்மேல் குற்றஞ்சாட்டினவர்
கள் எங்கே? உனக்கு ஆக்கினைத் தீர்ப்பிடுவார்
ஒருவருமில்லையா என்று அவளிடஞ்சொல்ல
அவள்: ஒருவருமில்லை, ஆண்டவரே என்
றாள். இயேசு அவளிடம்: நானும் உனக்கு 11
ஆக்கினைத் தீர்ப்பிடுகிறதில்லை; நீ போ,
இனிப் பாவஞ்செய்யாதே என்றார்.

மறுபடியும் இயேசு அவர்களிடம் பேசி: 12
நானே உலகத்துக்கு வெளிச்சம்; என்னைப்
பின்பற்றுகிறவன் இருளில் நடக்கவேமாட்
டான், ஜீவவெளிச்சத்தை அடைந்திருப்பான்
என்றார். பரிசேயர் இதைக்கேட்டு அவ 13
ரிடம்: உன்னைக்குறித்து நீயே சாட்சி
சொல்லுகிறாய்; உன் சாட்சியம் உண்மை
யாகதென்று சொல்ல | இயேசு: என்னைக் 14
குறித்து நானே சாட்சி சொன்னாலும் என்
சாட்சியம் உண்மையே; ஏனெனில் நான்
எங்கிருந்து வந்தேனென்றும் எங்கே போகி
றேனென்றும் அறிந்திருக்கிறேன்; நீங்களோ,
நான் எங்கிருந்து வருகிறேனென்றும் எங்கே
போகிறேனென்றும் அறியீர்கள். நீங்கள் 15
மாம்சமுறைப்படி தீர்ப்பிடுகிறீர்கள், நான்
ஒருவனுக்கும் தீர்ப்பிடுகிறதில்லை. நான் 16
தீர்ப்பிட்டாலும் என் தீர்ப்பு யதார்த்தம்;
ஏனெனில் நான் தனிமையாயிருக்கவில்லை,
நானும் என்னை அனுப்பினவருமாயிருக்கி
றோம். இருவர் சொல்லும் சாட்சியம் உண் 17
மையென்று உங்கள் நியாயப்பிரமாணத்தி
லும் எழுதியிருக்கிறதே. என்னைக்குறித்துச் 18
சாட்சி சொல்லுகிறவன் நான் மாத்திரமல்ல,
என்னை அனுப்பின பிதாவும் என்னைக்
குறித்துச் சாட்சி சொல்லுகிறார் என்றார்.
அவர்கள்: உமது பிதா எங்கே என இயேசு 19
அவர்களிடம்: என்னையும் அறியீர்கள்,
என் பிதாவையும் அறியீர்கள்; என்னை
அறிந்திருந்தால் என் பிதாவையும் அறிந்
திருப்பீர்கள் என்றார். தெய்வாலயத்தில் 20
அவர் உபதேசிக்கையில் காணிக்கை
பெட்டியிருக்கும் இடத்தில் இந்த வசனங்
களைப் பேசினார். அவர் வேளை இன்னும்

வராதபடியினால் ஒருவனும் அவரைப் பிடிக்கவில்லை.

21 அவர் மறுபடியும் அவர்களைப் பார்த்து: நான் போய்விடுவேன்; நீங்கள் என்னைத் தேடுவீர்கள், உங்கள் பாவத்திலோ சாவீர்கள்; நான் போகிற இடத்துக்கு நீங்கள்
22 வரமுடியாது என்றார். அப்பொழுது யூதர்: நான் போகிற இடத்துக்கு நீங்கள் வர முடியாதென்கிறதனே; தற்கொலை செய்து கொள்வானோ என்று பேசிக்கொண்டார்
23 கள். அவர் அவர்களிடம்: நீங்கள் கீழேயிருந்து வந்தவர்கள், நான் மேலேயிருந்து வந்தவர்; நீங்கள் இந்த உலகத்திற்குரியவர்கள், நான் இந்த உலகத்திற்குரியவரல்ல.
24 நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று நான் உங்களுக்குச் சொன்னது இதுபற்றியேதான்; நானே அவர் என்று நீங்கள் நம்பாவிட்டால் உங்கள் பாவங்களில் சாவீர்
25 கள் என்றார். அதற்கு அவர்கள்: நீர் யார் என்று கேட்க இயேசு: [1]நான் முதலிலிருந்து உங்களுக்குச் சொல்லிவந்தேனே, அது
26 தான். உங்களைப்பற்றிப் பேசவும் தீர்ப்பிடவும் வேண்டிய காரியங்கள் அநேகம் எனக்குண்டு. என்னை அனுப்பினவரோ உண்மையுள்ளவர். நானும் அவரிடங் கேட்டவைகளையே உலகத்துக்குச் சொல்லு
27 கிறேன் என்றார். பிதாவைக்குறித்துத் தங்களிடம் பேசினரென்று அவர்கள் அறியா
28 திருந்தார்கள். ஆகையால், இயேசு அவர்களிடம்: நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தினபின், நானே அவரென்றும் நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்யாமல் பிதா எனக்குக் கற்பித்தபடியே இவற்றைப் பேசுகிறே
29 னென்றும் அறிவீர்கள். என்னை யனுப்பினவர் என்னுடே இருக்கிறார், அவர் என்னைத் தனியேவிட்டதில்லை; அவருக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கி
30 றேனே என்றார். அவர் இவற்றைப் பேசவே பலர் அவரில் நம்பிக்கைவைத்தார்கள்.
31 அதையறிந்த இயேசு தம்மை நம்பின யூதரைப் பார்த்து: என் வார்த்தையில் நிலைகொண்டிருந்தால் வாஸ்தவத்தில் நீங்கள்
32 என் சீஷர்; சத்தியத்தை அறிந்துகொள்வீர்கள், சத்தியம் உங்களைச் சுயாதீனருமாக்கும் என்றார்.
33 அதற்கு அவர்கள்: நாங்கள் ஆபிரகாமின் சந்ததியார், நாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமைகளானதில்லை; நீங்கள் சுயாதீனராவீர்களென்று நீர் சொல்வதெப்படி
34 என்று சொல்ல | இயேசு அவர்களிடம்: பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அடிமை 35
யானவன் என்றைக்கும் வீட்டிலே நிலைத்திரான்; குமாரனே என்றைக்கும் நிலைத்திருக்கிறான். ஆகையால் குமாரன் உங்களைச் சுயா 36
தீனராக்கிவிட்டால் உள்ளபடியே சுயாதீனராவீர்கள். நீங்கள் ஆபிரகாமின் சந்ததியா 37
ரென்பது எனக்குத் தெரியும். எனினும், உங்களுக்குள்ளே என் வார்த்தைக்கு நீங்கள் இடங்கொடாததினால் என்னைக் கொலை செய்யத்தேடுகிறீர்கள். நான் என் பிதா 38
வோடிருந்து கண்டவற்றைச் சொல்லுகிறேன், அப்படியே நீங்களும் உங்கள் பிதாவினிடமிருந்து கேட்டவற்றைச் செய்கிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள்: ஆபிர 39
காமே எங்கள் பிதா என்று சொல்ல இயேசு: நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளேயானால் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்யுங்கள். கடவுளிடமிருந்து கேட்ட 40
சத்தியத்தை உங்களுக்குச் சொன்ன மனுஷனாகிய என்னைக் கொல்லத் தேடுகிறீர்கள், ஆபிரகாம் இப்படிச் செய்ததில்லையே. நீங்கள் உங்கள் பிதாவின் கிரியைகளைச் 41
செய்கிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள்: நாங்கள் வேசித்தனத்தில் பிறந்தவர்களல்ல; ஒரே பிதா எங்களுக்குண்டு, அவர் கடவுளே என்றார்கள். இயேசு அவர்களிடம்: கட 42
வுள் உங்கள் பிதாவானால் என்னில் அன்பு கூருவீர்கள். நான் கடவுளிடமிருந்து புறப்பட்டு வந்திருக்கிறேனே; நான் சுயமாய் வரவில்லை, அவரே என்னை யனுப்பினார். என் 43
வசனிப்பை நீங்கள் ஏன் அறியாமலிருக்கிறீர்கள்? என் வார்த்தையைக் கேட்க மூடியாதினாலேயே. நீங்கள் உங்கள் பிதாவா 44
கிய பிசாசுக்குரியவர்கள்; உங்கள் பிதாவின் இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலைபாதகன்; சத்தியம் அவனில் இல்லாதபடியால் அவன் சத்தியத்தில் நிலைத்திருக்கவில்லை; அவன் பொய் பேசும்போதெல்லாம் தன் இயல்பின்படியே பேசுகிறான்; அவன் பொய்யன், பொய்க்குப் பிதா. நான் உங்க 45
ளுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறபடியினால் நீங்கள் என்னை நம்புகிறதில்லை. என்னில் 46
பாவமுண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்துவான்? நான் சத்தியத்தைச் சொல்லிவர நீங்கள் ஏன் என்னை நம்புகிறதில்லை? கடவுளுக்குரியவன் கடவுளின் 47
வார்த்தைகளுக்குச் செவிகொடுக்கிறான்;

---

1 ஏனே உங்களோடு பேசவேண்டும் எனவும் திருப்பலாம்.

நீங்கள் கடவுளுக்குரியவர்களல்ல, ஆதலால்
48 செவிகொடுக்கிறதில்லை யென்றார். அப்பொ
முது யூதர் அவரிடம்: உன்னைச் சமாரிய
னென்றும் பேய் பிடித்தவனென்றும் நாங்
கள் சொல்லுகிறது சரிதானல்லவா
49 என | இயேசு: நான் பேய்பிடித்தவனல்ல,
நான் என் பிதாவைக் கனம் பண்ணுகிறேன்,
நீங்களோ என்னைக் கனவீனப்படுத்துகிறீர்
50 கள். நான் என் மகிமையைத் தேடுகிற
தில்லை; அதைத் தேடுகிறவர் ஒருவர் இருக்கி
51 றார்; அவரே நியாயந்தீர்க்கிறவர். ஒருவன்
என் வார்த்தையைக் கைக்கொண்டால்
அவன் என்றென்றைக்கும் மரணத்தைக்
காண்பதில்லையென்று மெய்யாகவே மெய்யா
கவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்
52 றார். யூதர் அவரைப் பார்த்து: நீ பேய்பிடித்
தவனென்று இப்பொழுது அறிந்துகொண்
டோம். ஆபிரகாம் மரித்தார், தீர்க்கதரிசி
களும் மரித்தார்கள். நீயோ: ஒருவன் என்
வார்த்தையைக் கைக்கொண்டால் என்
றென்றைக்கும் மரணத்தை ருசிபாரான் என்
53 கிறாய். எங்கள் பிதாவாகிய ஆபிரகா
மிலும் நீ பெரியவனோ? அவர் மரித்தார்,
தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள்; உன்னை
யாரென்று பாராட்டிக்கொள்ளுகிறாய் என்
54 றார்கள். அதற்கு இயேசு: என்னை நானே
மகிமைப்படுத்துவேனானால் என் மகிமை
ஒன்றுமில்லை. என் பிதா என்னை மகி
மைப்படுத்துகிறவர்; அவரை உங்கள் கடவு
55 ளென்று நீங்கள் சொல்லுகிறீர்கள். என்ற
லும் நீங்கள் அவரை அறிந்துகொள்ள
வில்லை. நான் அவரை அறிவேன். அவரை
அறியேன் என்று சொல்லுவேனாகில் உங்
களைப்போலவே நானும் பொய்யனாயிருப்
பேன்; அவரை நான் அறிவேன், அவர்
வார்த்தையைக் கைக்கொள்ளுகிறேன்.
56 உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் எனது
நாளைக்காண ஆவல்கொண்டு மகிழ்ந்திருந்
தான்; கண்டு களிகூர்ந்தான் என்றார்.
57 அதைக்கேட்ட யூதர் அவரிடம்: உனக்கு
இன்னும் ஐம்பது வயதாகவில்லையே, நீ
ஆபிரகாமைக் கண்டாயோ என்றார்கள்.
58 அதற்கு இயேசு: ஆபிரகாம் உண்டாகிற
தற்கு முன்னமே நான் இருக்கிறேனென்று
மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச்
59 சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது
அவர்மேல் எறியும்படி கற்களை எடுத்துக்
கொண்டார்கள். இயேசுவோ மறைந்து
தெய்வாலயத்தை விட்டுப்போனார்.

**9** அவர் அப்பாற்போகையில் பிறவிக்குரு
2 டன் ஒருவனைக் கண்டார். அவர் சீஷர்
அவரிடம்: ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்
தது யார் செய்த பாவம்? இவன் செய்ததோ,
இவன் பெற்றோர் செய்ததோவென்று கேட்
டார்கள். அதற்கு இயேசு: அது இவன் 3
செய்த பாவமுமல்ல, இவன் பெற்றோர்
செய்த பாவமுமல்ல; கடவுளின் செயல்கள்
இவனிடம் வெளிப்படும்பொருட்டே இப்
படிப் பிறந்தான். பகற்காலமிருக்குமட் 4
டும் என்னை யனுப்பினவரின் கிரியைகளை
நான் செய்யவேண்டும்; ஒருவனும் வேலை
செய்யமுடியாத இராக்காலம் வருகிறது.
நான் உலகிலிருக்கும் காலமெல்லாம் நான் 5
உலகத்துக்கு வெளிச்சம் என்றார். இவை 6
களைச் சொல்லித் தரையிலே துப்பி உமிழ்
நீரிலால் சேறுண்டாக்கி அந்தச் சேற்றைக்
குருடனுடைய கண்களின்மேல் பூசி: நீ
போய்ச் சீலோவாம் குளத்திலே கழுவு என்
றார். சீலோவாம் என்பது அனுப்பப்பட்ட 7
வர் என்று பொருள்படும். அப்படியே
அவன் போய் கழுவிக் கண் தெரிந்தவனாய்த்
திரும்பினான். அப்பொழுது அயலகத் 8
தாரும் அவனைப் பிச்சைக்காரனாய் இதற்கு
முன் கண்டிருந்தவர்களும்: உட்கார்ந்து
பிச்சை கேட்டுக்கொண்டிருந்தவன் இவனே
யல்லவா என்றார்கள். சிலர்: இவன்தான்
என்றார்கள். வேறு சிலர்: அல்ல, அவன் 9
போலிருக்கிறான் என்றார்கள். அவனே:
நான்தான் அவன் என்றான். ஆகவே, 10
அவர்கள் அவனிடம்: உன் கண்கள் திற
வண்டதெப்படி என்று கேட்க | அவன்: 11
இயேசு எனப்பட்டவர் சேறுண்டாக்கி
என் கண்களில் பூசி நீ சீலோவாமுக்குப்
போய்க் கழுவு என்றார். அப்படியே நான்
போய்க் கழுவிப் பார்வையடைந்தேன் என்
றான். அப்பொழுது அவர்கள் அவனிடம்: 12
அவர் எங்கே என, எனக்குத் தெரியாது
என்றான்.

முன் குருடனாயிருந்த அவனைப் பரிசேய 13
ரிடத்திற்குக் கொண்டுபோனார்கள்.
இயேசு சேறுண்டாக்கி அவன் கண்களைத் 14
திறந்த நாள் ஓய்வுநாள். ஆதலால் பரி 15
சேயரும் அவனைப் பார்த்து: எப்படிப் பார்
வையடைந்தாயென்று திரும்பவும் கேட்டார்
கள். அதற்கு அவன்: அவர் என் கண்
களில் சேற்றைப்பூசினார், கழுவினேன்,
காண்கிறேன் என்றான். அதைக்கேட்ட 16
பரிசேயரில் சிலர்: இந்த மனுஷன் கடவு
ளிடமிருந்து வந்தவனல்ல, இவன் ஓய்வு
நாளை ஆசரிக்கவில்லையே என்றார்கள்.
வேறு சிலர்: பாவியாயிருக்கிற மனுஷன்
இவ்வகை அடையாளங்களை எப்படிச் செய்
வான் என்றார்கள். இப்படியாக அவர்

களுக்குள்ளேயே பிரிவினையுண்டாயிற்று.
17 அவர்கள் மறுபடியும் குருடனைப் பார்த்து: உன் கண்களைத் திறந்தானே, அவனைக் குறித்து நீ என்ன சொல்லுகிறாய் என அவன்: அவர் தீர்க்கதரிசி என்றான்.
18 அவன் குருடனாயிருந்து பார்வையடைந்ததை யூதர் நம்பாமல் பார்வையடைந்தவனுடைய பெற்றோரை அழைப்
19 பித்து | அவர்களிடம்: குருடனாய்ப் பிறந்தான் என நீங்கள் சொல்லுகிற உங்கள் மகன் இவன்தானா? இவனானால் இவனுக்கு இப்பொழுது கண் தெரிகிறதெப்படியென்று
20 கேட்க | அவன் பெற்றோர்: இவன் எங்கள் மகன்தான் என்றும் குருடனாய்ப் பிறந்தா
21 னென்றும் எங்களுக்குத் தெரியும். இப்பொழுது இவன் பார்வையடைந்த வகையோ எங்களுக்குத் தெரியாது; இவன் கண்களைத் திறந்தவன் இன்னான் என்பதும் எங்களுக்குத் தெரியாது; இவனைக் கேளுங்கள், இவன் வயதுள்ளவன், இவனே தன் காரி
22 யத்தைச் சொல்லுவான் என்றார்கள். அவனுடைய தாய்தகப்பன்மார் யூதருக்குப் பயந்து இப்படிச் சொன்னார்கள். ஏனெனில் அவரைக் கிறிஸ்து என்று எவனாவது அறிக்கைபண்ணுவானானால் அவனைச் சபைக்கு விலக்கிவைக்கவேண்டுமென்று
23 யூதர் அதற்கு முன்னமே கட்டுப்பாடு செய்திருந்தார்கள். இதினிமித்தம் அவன் பெற்
24 றோர்: இவன் வயதுள்ளவன், இவனைக் கேளுங்கள் என்று சொன்னார்கள். ஆகவே, அவர்கள் குருடனாயிருந்த மனுஷனை இரண்டாந்தரம் அழைத்து: நீ கடவுளுக்கு மகிமை செலுத்து, இந்த மனுஷன் பாவியென்று நாங்கள் அறிந்திருக்கிறோம் என்றார்கள்.
25 அவனை அதைக்கேட்டு: அவர் பாவியோ அல்லவோ எனக்குத் தெரியாது; ஒன்று தான் எனக்குத் தெரியும்: நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறே
26 னென்று சொல்ல | அவர்கள் அவனிடம்: உனக்கு என்ன செய்தான், உன் கண்களை
27 எப்படித் திறந்தானென்று கேட்க | அவன்: முன்னமே உங்களுக்குச் சொல்லியாயிற்று, நீங்கள் கேளாமற்போனீர்கள்; மறுபடியும் நீங்கள் அதைக் கேட்க விரும்புகிறதென்ன? நீங்களும் அவருக்குச் சீஷராக விரும்புகிறீர்
28 களோ என்று சொன்னான். அப்பொழுது அவர்கள் அவனை வைது: நீ அவனுடைய சீஷன், நாங்களோ மோசேயின் சீஷர்.
29 மோசேயோடு கடவுள் பேசினாரென்று எங்களுக்குத் தெரியும், இவன் எங்கேயிருந்து வந்தவனோ எங்களுக்குத் தெரியாது என்றார்
30 கள். அதற்கு அந்த மனுஷன்: இதுதான் ஆச்சரியம்; அவர் எங்கிருந்து வந்தாரென்று உங்களுக்குத் தெரியாதோ! அவர் என்
31 கண்களைத் திறந்தாரே. கடவுள் பாவிகளுக்குச் செவிசாய்க்கிறதில்லையென்று அறிவோம்; ஒருவன் தெய்வபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்வானானால் அவனுக்குச் செவிசாய்ப்பார்.
32 பிறவிக்குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானதுமுதல்
33 கேள்விப்பட்டதேயில்லை. அவர் கடவுளிடமிருந்து வந்திருந்தாலொழிய அவர் யாதொன்றும் செய்யமுடியாதென்றான்.
34 அதைக்கேட்ட அவர்கள்: முழுதும் பாவத்தில் பிறந்த நீயா எங்களுக்குப் போதிக்கிறதென்று சொல்லி அவனை வெளியே துரத்திவிட்டார்கள்.
35 அவனை அவர்கள் வெளியே துரத்திவிட்டதை இயேசு கேள்விப்பட்டு அவனைக் கண்டுபிடித்து: நீ மனுஷகுமாரனில் விசுவாசம் வைக்கிறாயா என்றார்.
36 அதற்கு அவன்: அவரில் நான் விசுவாசம் வைக்கும்படி அவர் யார், ஆண்டவரே என்றான்.
37 இயேசு அவனைப் பார்த்து: நீ அவரைக் கண்டிருக்கிறாய், உன்னோடு பேசுகிறவரும் அவர்தான் என்றார்.
38 உடனே அவன்: விசுவாசமாயிருக்கிறேன், ஆண்டவரே என்று சொல்லி அவரைப் பணிந்துகொண்டான்.
39 அப்பொழுது இயேசு: தீர்ப்புண்டாகவே நான் இந்த உலகத்தில் வந்தேன், காணாதவர்கள் காணவும் காண்கிறவர்கள் குருடராகவுமே வந்தேன் என்றார்.
40 அவரோடிருந்த பரிசேயர் இவைகளைக் கேட்டபொழுது: நாங்களும் குருடரோ என்று
41 சொல்ல | இயேசு அவர்களிடம்: நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்குப் பாவமிராது; இப்பொழுதோ, காண்கிறோம் என்று நீங்கள் சொல்லுகிறபடியினால் உங்கள் பாவம் நிலைநிற்கிறது என்றார்.

**10** மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல்வழியாய்ச் செல்லாமல் வேறுவழியாய் ஏறுகிறவன் திருடனும் கொள்ளைக்காரனுமாம். வாசல்வழியாய்ச் செல்லுகிறவனே
2 ஆடுகளின் மேய்ப்பன். வாசல்காக்கிறவன்
3 அவனுக்கு வாசலைத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் குரலைக் கேட்கின்றன. அவன் தன் சொந்த ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு அவைகளை வெளியே நடத்திக்கொண்டு
4 போகிறான். அவன் தன் ஆடுகள் எல்லாவற்றையும் வெளியே விட்டபின்பு அவை

களுக்கு முன்பாக நடந்துபோகிறான்; ஆடுகள் அவன் குரலை அறிந்திருக்கிறபடியினால் 5 அவனுக்குப் பின்சென்றுகின்றன. அவைகள் வேற்றாளுக்குப் பின்செல்லா; வேற்றாட்களின் குரலை அறியாதபடியினால் அவனை 6 விட்டோடிப்போம் என்றார். இதை இயேசு அவர்களுக்கு உபமானமாய்ச் சொன்னார்; அவர்களோ அவர் சொன்னது இன்னதென்று அறிந்துகொள்ளவில்லை.

7 ஆகவே இயேசு மறுபடியும் அவர்களிடம்: மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், நானே ஆடுகளுக்கு 8 வாசல். எனக்குமுன் வந்தவர்களெல்லாரும் திருடரும் கொள்ளைக்காரருமே. ஆடுகள் அவர்களுக்குச் செவிகொடுக்கவில்லை. 9 நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்சென்றால் அவன் இரட்சிப்படைவான். அவன் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச் 10 சலைக் கண்டடைவான். திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவுமேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானே அவைகள் ஜீவனைப்பெறவும் அபரிமிதமாய்ப் பெறவுமே வந்தேன்.

11 நானே நல்ல மேய்ப்பன். நல்லமேய்ப்பன் ஆடுகள்பொருட்டுத் தன் ஜீவனைக் 12 கொடுக்கிறான். கூலிக்காரனே மேய்ப்பனுமல்ல. ஆடுகளுக்குடையவனுமல்ல. இவன் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டுவிட்டு ஓடிப்போகிறான்; அப் பொழுது ஓநாய் ஆடுகளைக் கவ்விப்பிடிக்கும், 13 அவைகளைச் சிதறடிக்கும். அவன் கூலிக் காரனுகையால் ஓடிப்போகிறான், ஆடுகளைப் 14 பற்றி அவனுக்கு அக்கரையில்லை. நானே 15 நல்ல மேய்ப்பன். பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும் நான் பிதாவை அறிந்திருக்கிறது போலவும் நான் என்னுடைய வைகளை அறிந்திருக்கிறேன், என்னுடைய வைகள் என்னை அறிந்திருக்கின்றன; ஆடுகள் பொருட்டு என் ஜீவனையும் கொடுக்கிறேன். 16 இத்தொழுவத்திற்குரியவைகளல்லாத வேறே ஆடுகளும் எனக்குண்டு; அவைகளையும் நான் நடத்திக்கொண்டு வரவேண்டும், அவைகள் என் குரலைக்கேட்கும்; அப் பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும். 17 நான் என் ஜீவனைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார்; நான் அதைத் திரும்பப் பெற்றுக் 18 கொள்ளக் கொடுக்கிறேன். ஒருவனும் அதை என்னிடமிருந்து எடுத்துக்கொள்ளான், நானே அதைக் கொடுக்கிறேன்; அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரமுண்டு, அதைத்திரும்பப் பெற்றுக்கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டு. இந்த கியமத்தை என் பிதாவினிடம் பெற்றுக்கொண்டேன் என்றார்.

19 இவ்வார்த்தைகளினிமித்தம் யூதருக்குள்ளே மறுபடியும் பிரிவினையுண்டாயிற்று. 20 அவர்களில் அநேகர்: இவன் பேய் பிடித்தவன், பிதற்றுகிறான்; இவன் சொல்வதை ஏன் கேட்கிறீர்கள் என்றார்கள். 21 வேறே சிலர்: இவைகள் பேய்பிடித்தவனுடைய சொற்கள்அல்லவே; குருடருடைய கண்களைப் பேய் திறக்கக்கூடுமோ என்றார்கள்.

22 பின்பு எருசலேமிலே பிரதிஷ்டைப் பண்டிகை வந்தது; அது மாரிகாலம். 23 இயேசு தெய்வாலயத்தில் சாலொமோனுடைய மண்டபத்திலே உலாவிக்கொண்டிருக்கையில் 24 யூதர் அவரைச் சூழ்ந்துகொண்டு: எதுவரைக்கும் எங்களைச் சந்தேகத்துக்குள்ளிருக்கச் செய்வீர்? நீரே கிறிஸ்துவானால் எங்களுக்குத் தெளிவாய்ச்சொல்லிவிடுமென்று கேட்க | 25 இயேசு அவர்களிடம்: உங்களுக்குச் சொல்லிவிட்டேன், நீங்களோ நம்புகிறதில்லை. என் பிதாவின் நாமத்தில் நான் செய்கிற கிரியைகளே என்னைக் குறித்துச் சாட்சியிடுகின்றன. 26 நீங்களோ என் ஆடுகளாடு சேர்ந்தவர்களால்லாதபடியால் என்னை நம்புகிறதில்லை; 27 என் ஆடுகள் என் குரலைக் கேட்கும்; நானும் அவைகளை யறிந்திருக்கிறேன், அவைகளும் எனக்குப் பின்செல்லுகின்றன. 28 நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் அழிந்துபோவதேயில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை. 29 அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவர்; பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ளவோ ஒருவனாலும் முடியாது. 30, 31 நானும் பிதாவும் ஒன்றே என்றார். அவர் மேல் கல்லெறியும்படி யூதர் மறுபடியும் கற்களை எடுத்துக்கொண்டார்கள். 32 இயேசு அதைக் கண்டு: நான் என் பிதாவின் நற்கிரியைகள் பலவற்றை நீங்கள் காணும்படி செய்தேன். அவைகளில் எந்தக் கிரியையினிமித்தம் என்மேல் கல்லெறியப்போகிறீர்கள் என்றார். 33 அதற்கு யூதர்: நாங்கள் கல்லெறிவது நற்கிரியை பற்றியல்ல, தெய்வதூஷணம்பற்றியும் நீ மனுஷனாயிருக்க உன்னைக் கடவுளென்று சொல்லுகிறது பற்றியுமே என்றார்கள். 34 அதுகேட்ட இயேசு அவர்களிடம்: நீங்கள் தேவர்களென்று சொன்னேன் என்பதாய் உங்கள் நியாயப் 35 பிரமாணத்தில் எழுதியிருக்கிறதல்லவா? கட

வுளின் வார்த்தையைப் பெற்றுக்கொண்ட
வர்களைத் தேவர்களென்று அவர் சொல்லி
யிருக்க—வேதவாக்கியம் குலைந்துபோகாது—
36 பிதா பிரதிஷ்டைசெய்து உலகத்தில் அனுப்
பியிருக்கிற நான் என்னை தெய்வ குமார
னென்றதினாலே தெய்வதூஷணஞ் சொன்
னாய் என்று நீங்கள் சொல்லுகிறீர்களா?
37 என் பிதாவின் கிரியைகளை நான் செய்யா
திருந்தால் நீங்கள் என்னை நம்பாதிருங்கள்.
38 செய்வேனேயானால், பிதா என்னிலும் நான்
அவரிலும் இருக்கிறதை நீங்கள் அறிந்து
கண்டுகொள்ளும்படி, நீங்கள் என்னை நம்
பாமற்போனாலும் என் கிரியைகளை நம்புங்
39 கள் என்றார். இதினிமித்தம் அவர்கள்
மறுபடியும் அவரைப் பிடிக்கத் தேடினார்
கள்; அவரோ அவர்கள் கைக்குத்தப்பி
விலகிக்கொண்டார்.
40 யோர்தானுக்கு அக்கரையிலே ஆரம்பத்
தில் யோவான் ஞானஸ்நானங் கொடுத்துக்
கொண்டிருந்த இடத்துக்கு மறுபடியும்
41 போய் அங்கே தங்கினார். அநேகர் அவ
ரிடம் வந்தார்கள்; யோவான் ஒரு அடை
யாளத்தையும் செய்யவில்லை; ஆகிலும்
இவரைக்குறித்து யோவான் சொன்னவை
42 யெல்லாம் மெய்யாயின என்றார்கள். அவ்
விடத்திலே அநேகர் அவரில் நம்பிக்கை
வைத்தார்கள்.

**11** லாசரு என்ற ஒருவன் வியாதிப்பட்
டிருந்தான். அவன் பெத்தானியா
ஊரான்; அது மரியாள் அவள் சகோதரி
2 மார்த்தாள் இவர்களுடைய ஊர். ஆண்ட
வருக்குப் பரிமளதைலம் பூசித் தன் தலை
மயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்
தவள் அந்த மரியாளே; வியாதியாயிருந்த
3 லாசரு அவள் சகோதரன். அவனுடைய
சகோதரிகள்: ஆண்டவரே, நீர் நேசிக்கிற
வன் வியாதியாயிருக்கிறானென்று அவருக்
4 குச் சொல்லியனுப்பினார்கள். இயேசு
அதைக் கேட்டபொழுது: இந்த வியாதி
மரணத்துக்கேதுவானதல்ல; தெய்வகுமாரன்
அதினால் மகிமைப்படும்படி கடவுளின்
மகிமை விளங்குவதற்கேதுவாகும் என்றார்.
5 இயேசு மார்த்தாளிடத்திலும் அவளுடைய
சகோதரியினிடத்திலும் லாசருவினிடத்தி
6 லும் அன்புகூர்ந்தார். அவன் வியாதியா
யிருக்கிறதாக அவர் கேள்விப்பட்டபொழுது
தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டு
7 நாள் தங்கி | அதின்பின்பு சீஷரைப்
பார்த்து: நாம் மறுபடியும் யூதேயாவுக்குப்
போவோம் வாருங்கள் என்றார். அதற்குச் 8
சீஷர்: ரபீ, இப்பொழுது தானே யூதர் உம்
மைக் கல்லெறியப் பார்த்தார்கள், மறுபடி
யும் நீர் அங்கு போகிறீரோ என்று
சொல்ல | இயேசு: பகலுக்குப் பன்னிரண்டு 9
மணி நேரமல்லவா? ஒருவன் பகலில் நடப்
பானால் அவன் இந்த உலகத்தின் வெளிச்
சத்தைக் காண்கிறபடியினால் இடறமாட்
டான். ஒருவன் இரவிலே நடப்பானால் 10
தன்னிடம் வெளிச்சம் இல்லாதபடியினால்
இடறுவான் என்றார். இவைகளை அவர் 11
சொல்லிப் பின்னும் அவர்களிடம்: நமது
சிநேகிதன் லாசரு நித்திரைபோயிருக்கிறான்,
நான் அவனை எழுப்பும்படி போகிறேன்
என்றார். அதற்கு அவர் சீஷர்: ஆண்ட 12
வரே, நித்திரைபோயிருந்தால் குணமாவான்
என்றார்கள். இயேசு அவனுடைய மரணத் 13
தைக்குறித்து அப்படிச் சொன்னார்; அவர்
களோ, நித்திரைசெய்து இளைப்பாறுகிறதைக்
குறித்துப் பேசினாரென்று நினைத்தார்கள்.
அப்பொழுது இயேசு அவர்களிடம் லாசரு 14
மரித்துப்போனானென்று வெளிப்படை
யாய்ச் சொல்லி | நான் அங்கே இராதது 15
உங்கள் நிமித்தம் எனக்குச் சந்தோஷம்,
நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகவேண்டு
மென்பது என் விருப்பம்; ஆயினும் அவனி
டம் போவோம் வாருங்கள் என்றார். திதிமு 16
எனப்பட்ட தோமா அது கேட்டு உடன்
சீஷரைப் பார்த்து: அவரோடுகூடச் சாகும்
படி நாமும் போவோம் வாருங்கள் என்றான்.
இயேசு போய்ச் சேர்ந்தபோது அவனைக் 17
கல்லறையில் வைத்து நாலுநாளாயிற்றென்று
கண்டார். பெத்தானியா எருசலேமுக்குச் 18
சமீபம், ஏறக்குறைய இரண்டுமைல் தூர
மிருக்கும். யூதரில் அநேகர் மார்த்தாள் 19
மரியாள் என்பவர்கள் சகோதரனினிமித்
தம் அவர்களுக்கு ஆறுதல் சொல்ல வந்தி
ருந்தார்கள். இப்படியிருக்க, மார்த்தாள் 20
இயேசு வருகிறாரென்று கேள்விப்பட்டு
அவரைச் சந்திக்கப் போனாள்; மரியாளோ
வீட்டிலே உட்கார்ந்திருந்தாள். மார்த்தாள் 21
இயேசுவைக் கண்டு: ஆண்டவரே, நீர்
இங்கே இருந்தீராகில் என் சகோதரன்
மரித்திரான்; இப்பொழுதும் நீர் கடவுளிடம் 22
கேட்டுக்கொள்ளுகிறவைகள் எவைகளோ
அவைகளைக் கடவுள் உமக்குத் தருவாரென்
பது எனக்குத் தெரியுமென்றாள். இயேசு 23
அவளிடம்: உன் சகோதரன் எழுந்திருப்
பான் என்றார். அதற்கு மார்த்தாள்: 24
கடைசி நாள் உயிர்த்தெழுதலில் அவனும்

1 திதிமு என்பது கிரேக்கு பாஷையில் இரட்டைப்பின்னை என்று பொருள்படும்.

எழுந்திருப்பானென்று எனக்குத் தெரியு
25 மென்றார். இயேசு அவளிடம்: உயிர்த்
தெழுதலும் ஜீவனும் நானே; என்னில் விசு
வாசம்வைக்கிறவன் மரித்தாலும் பிழைப்
26 பான்; உயிரோடிருந்து என்னில் விசுவாசம்
வைக்கிறவனெவனும் என்றென்றைக்கும்
மரிக்கவேமாட்டான். இதை நம்புகிறயா
27 என்றார். அதற்கு அவள்: ஆம் ஆண்
டவரே, நீரே கிறிஸ்து, தெய்வகுமாரன்,
உலகத்தில் வருகிறவரென்று நம்பியேயிருக்
28 கிறேன் என்றாள். இதைச் சொன்னபின்பு
அவள் போய்த் தன் சகோதரியாகிய மரி
யாளை இரகசியமாய் அழைத்து: போதகர்
வந்திருக்கிறார், உன்னை அழைக்கிறார் என்
29 றாள். அவள் அதைக் கேட்கவே சீக்கிரம்
30 எழுந்து அவரிடம் வந்தாள். இயேசு இன்
னும் கிராமத்துக்குள் வரவில்லை, மார்த்தாள்
தம்மைக்கண்ட இடத்திலேயே இருந்தார்.
31 வீட்டில் அவளோடிருந்து அவளுக்கு ஆறு
தல் சொல்லிக்கொண்டிருந்த யூதர் மரியாள்
சீக்கிரம் எழுந்துபோகிறதைக்கண்டு, அவள்
அழுகிறதற்குக் கல்லறைக்குப் போகிறா
32 ளென்று அவள் பின்னே போனார்கள். மரி
யாள் இயேசு இருந்த இடத்திற்கு வந்து
அவரைக் கண்டு அவர் பாதத்தில் விழுந்து:
ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீராகில்
என் சகோதரன் மரித்திரான் என்றாள்.
33 அவள் அழுகிறதையும் அவளோடு வந்த
யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்ட
போது ஆவியிலே பொங்கித் துடித்துத் தமக
34 குள் கலங்கி: அவனை வைத்த இடமெங்கே
என்றார். வந்து பாரும், ஆண்டவரே என்
35 றார்கள். இயேசு கண்ணீர் விட்டார்.
36 அது கண்ட யூதர்: இதோ, இவர் அவனை
எவ்வளவாய் நேசித்தாரென்று சொல்லிக்
37 கொண்டார்கள். அவர்களில் சிலரோ:
இவர் குருடன் கண்களைத் திறந்தவரா
யிற்றே, இவனைச் சாகாதிருக்கப்பண்ணவும்
38 கூடாதா என்றார்கள். அப்பொழுது
இயேசு மறுபடியும் தமது மனம் பொங்கின
வராய்க் கல்லறையினிடம் வந்தார். அது
ஒரு குகை: அதை மூட ஒருகல் வைத்
39 திருந்தது. இயேசு: கல்லை எடுத்துவிடுங்
கள் என்றார். மரித்தவன் சகோதரி மார்த்
தாள் அவரிடம்: ஆண்டவரே, இப்பொழுது
40 நாறுமே, நானுநாளாயிற்றே என | இயேசு
அவளிடம்: நீ நம்புவாயானால் கடவுளின்
மகிமையைக் காண்பாயென்று நான் உனக்
குச் சொல்ல வில்லையா என்றார். எனவே,
41 கல்லை எடுத்துவிட்டார்கள். அப்பொழுது
இயேசு தமது கண்களை ஏறெடுத்து: பிதாவே,
நீர் எனக்குச் செவிசாய்த்தபடியால் உமக்கு
நன்றிசெலுத்துகிறேன். எப்பொழுதும் எனக் 42
குச் செவிசாய்க்கிறீர் என்பது எனக்குத்
தெரியும்; சூழ்ந்துநிற்கும் ஜனக்கூட்டத்தி
னிமித்தமே இதைச் சொன்னேன்; நீர் என்னை
அனுப்பினீரென்பதை இவர்கள் நம்பும்
படி சொன்னேன் என்றார். இவைகளைச் 43
சொல்லி: லாசருவே, வெளியே வா என்று
மகா சத்தமாய்க் கூப்பிட்டார். அப்பொழுது 44
மரித்தவன் வெளியேவந்தான். அவன் கால்
களும் கைகளும் பிரேதத் துணிகளினால்
கட்டுண்டிருந்தன, அவன் முகத்தில் துணி
சுற்றியிருந்தது. இயேசு அவர்களைப்
பார்த்து: கட்டவிழ்த்து இவனைப் போக
விடுங்கள் என்றார்.

அப்பொழுது மரியாளிடத்தில் வந்திருந்து 45
இயேசு செய்தவைகளைக் கண்ட யூதரில்
அநேகர் அவரில் நம்பிக்கைவைத்தார்கள்.
சிலரோ பரிசேயரிடம் போய் இயேசு செய் 46
தவைகளை அவர்களுக்கு அறிவித்தார்கள்.

பிரதான ஆசாரியரும் பரிசேயரும் 47
ஆலோசனைச் சங்கத்தைக் கூடிவரச்செய்து:
நாம் என்ன செய்கிறது? இந்த மனுஷன்
அநேக அடையாளங்களைச் செய்கிறானே;
நாம் இவனை இப்படியே விட்டுவிடுவோ 48
மானால் எல்லாரும் இவனில் நம்பிக்கை
வைப்பார்கள்; அப்பொழுது ரோமர் வந்து
நமது ஸ்தலத்தையும் ஜனத்தையும் கைப்
பற்றிக்கொள்வார்களே என்றார்கள். அவர் 49
களில் ஒருவனுடைய காய்பா, அந்த வருஷத்
துப் பிரதான ஆசாரியன், அவர்களைப்
பார்த்து: உங்களுக்கு ஒன்றும் தெரியாது!
ஜனமுழுவதும் அழிவதைப்பார்க்கிலும் 50
ஜனத்தின்பொருட்டு ஒரே மனுஷன் மரிப்
பது உங்களுக்கு நலம் என்கிற சிந்தனை
உங்களுக்கில்லையென்றார். இது அவன் 51
சுயமாய்ச் சொன்னதல்ல, அந்த வருஷத்துப்
பிரதான ஆசாரியனானதால் யூத ஜனத்தின்
பொருட்டும் | அந்த ஜனத்தின் பொருட்டு 52
மாத்திரமல்ல, சிதறியிருக்கிற கடவுளின்
பிள்ளைகளை ஒன்றுசேர்த்துக்கொள்ள
வேண்டுமென்று அவர்கள் பொருட்டும்,
மரிக்கப்போகிறார் என்று தீர்க்கதரிசனம்
சொன்னதாகும். ஆகவே, அவரைக் கொலை 53
செய்யும்படி அந்நாள்முதல் ஆலோசனை
செய்தார்கள்.

ஆகையால் இயேசு அதன்பின்பு பகிரங்க 54
மாய் யூதருக்குள்ளே நடமாடித் திரியாமல்
அவ்விடம்விட்டு வனாந்தரத்துக்குச் சமீப
மான நாட்டில் எப்பிராயீமென்னும் ஊருக்
குப் போய் அங்கே தமது சிஷ்யரோடு தங்கி
யிருந்தார். யூதருடைய பஸ்காபண்டிகை 55
சமீபித்திருந்தது. அதற்குமுன்னே அநேகர்

தங்களைச் சுத்திசெய்து கொள்ளும்பொருட்டு
நாட்டிலிருந்து எருசலேமுக்குப் போனார்
56 கள். அவர்கள் இயேசுவைத் தேடினார்கள்.
தெய்வாலயத்தில் நிற்கையில் ஒருவரை
யொருவர் பார்த்து: உங்களுக்கு எப்படித்
தோன்றுகிறது? அவர் உற்சவத்துக்கு வர
மாட்டாரோவென்று பேசிக்கொண்டார்கள்.
57 பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அவரைப்
பிடிக்கவிரும்பி அவர் இருக்கிற இடத்தை
எவனாவது அறிந்திருந்தால் அதை அறி
விக்கவேண்டுமென்று கட்டளையிட்டிருந்
தார்கள்.

**12** பஸ்காபண்டிகை வர ஆறுநாளுக்கு
முன்னே இயேசு பெத்தானியாவுக்கு வந்
தார். அது அவர் உயிரோடெழுப்பின லாச
2 ருவின் ஊர். அங்கே அவருக்கு விருந்து
செய்தார்கள்; மார்த்தாள் பணிவிடை
செய்துகொண்டிருந்தாள். அவரோடு பந்தி
3 யிருக்கிறவர்களில் லாசருவும் ஒருவன். அப்
பொழுது மரியாள் விலையுயர்ந்த சுயமான
நளிது என்னும் தைலம் ஒரு இராத்தல்
கொண்டுவந்து இயேசுவின் பாதங்களில்
1 ஊற்றித் தன் தலைமயிரால் அவர் பாதங்
களைத் துடைத்தாள்; வீடு முழுவதும் தைலத்
4 தின் பரிமளமாயிற்று. அப்பொழுது அவர்
சீஷரில் ஒருவனும் அவரைக் காட்டிக்
கொடுக்கப் போகிறவனுமாகிய யூதா ஸ்காரி
5 யோத்து: இந்தத் தைலத்தை முந்நூறு
தினாரியத்துக்கு விற்று ஏன் தரித்திரருக்குக்
6 கொடுக்கவில்லை என்றான். அவன் தரித்தி
ரருக்காகக் கவலைப்பட்டு இப்படிச் சொல்ல
வில்லை; தான் திருடனாகயிருந்தும் பணப்
பெட்டியை வைத்துக்கொண்டு அதிலே
போடப்பட்டதை அபகரித்துக்கொள்ளுகிற
வனாகயிருந்தும் இப்படிச் சொன்னான்.
7 இயேசு அதைக்கேட்டு: இவளை விடு,
என்னை அடக்கம்பண்ணும் நாளுக்காக
8 இதை வைத்திருந்ததாகும். தரித்திரர் எப்
பொழுதும் உங்களிடம் இருக்கிறார்கள்,
நானோ எப்பொழுதும் இரேன் என்றார்.
9 அப்பொழுது யூதரில் திரளானவர்கள்
அவர் அங்கேயிருக்கிறதை அறிந்து, இயேசு
வுக்காக மாத்திரமல்ல, அவர் மரித்தோரி
லிருந்தெழுப்பின லாசருவைக் காண்பதற்
10 காகவும் வந்தார்கள். பிரதான ஆசாரியர்
லாசருவையும் கொலைசெய்ய ஆலோசனை
11 பண்ணினார்கள். ஏனெனில் யூதரில் அநே
கர் லாசருவினிமித்தம் போய் இயேசுவி
னிடம் நம்பிக்கைவைத்தார்கள்.

உற்சவத்திற்கு வந்திருந்த திரள் ஜனங்கள் 12
இயேசு எருசலேமுக்கு வருகிறாரென்று
மறுநாள் கேள்விப்பட்டுக் | குருத்தோலை 13
களைப் பிடித்துக்கொண்டு அவருக்கு எதிர்
கொள்ளும்படி புறப்பட்டுப்போய்:

ஓசன்னா,
கர்த்தருடைய நாமத்தில் வருகிறவர்
ஆசீர்வதிக்கப்பட்டவர்,
இஸ்ரவேலின் ராஜாவானவர்

என்று ஆர்ப்பரித்தார்கள். இயேசுவோ 14
ஒரு கழுதைக்குட்டியைக் கண்டு அதின்
மேல் ஏறியுட்கார்ந்தார்.

சீயோன் குமாரத்தியே, பயப்படாதே, 15
இதோ, உன் ராஜா
கழுதைக்குட்டியின்மேல் ஏறி வருகிறார்

என்று எழுதப்பட்டுள்ளது இதைக் குறித்த
தாகும். இவைகளை அவருடைய சீஷர் 16
முதலில் அறிந்துகொள்ளவில்லை. இயேசு
மகிமையடைந்த பிற்பாடோ இப்படி அவ
ரைக்குறித்து எழுதியிருக்கிறதும் தாங்கள்
இப்படி அவருக்குச்செய்ததும் அவர்கள்
நினைவுக்கு வந்தது. அவர் லாசருவைக் 17
கல்லறையிலிருந்து வரும்படி கூப்பிட்டு
அவனை உயிரோடெழுப்பினபோது அவ
ரோடிருந்த திரள்ஜனங்கள் அதைக்குறித்துச்
சாக்ஷிபகர்ந்து வந்தார்கள். அப்படிப்பட்ட 18
அடையாளத்தை அவர் செய்தாரென்று
ஜனத்திரள் கேள்விப்பட்டதினால் அவர்கள்
அவருக்கு எதிர்கொண்டுபோனார்கள். அது 19
கண்ட பரிசேயர் ஒருவரோடொருவர்:
பாருங்கள், நீங்கள் செய்கிறதெல்லாம்
வீண்; இதோ, உலகம் அவன்பிறகே போய்
விட்டதே என்றார்கள்.

உற்சவத்தில் தொழுதுகொள்ள வந்தவர் 20
களில் சில கிரேக்கரிருந்தார்கள். அவர்கள் 21
கலிலேயா நாட்டுப் பெத்சாயிதா ஊரான்
பிலிப்பினிடம் வந்து: ஐயா, இயேசுவைக்
காணவிரும்புகிறோமென்று கேட்டுக்கொண்
டார்கள். பிலிப்பு வந்து அதை அந்திரே 22
யாவுக்குச் சொன்னான்; அந்திரேயாவும்
பிலிப்பும் அதை இயேசுவுக்குச் சொன்னார்
கள். சொல்லவே இயேசு அவர்களிடம்: 23
மனுஷகுமாரன் மகிமைப்படும் வேளை
வந்துவிட்டது. மெய்யாகவே மெய் 24
யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்,
கோதுமைமணி நிலத்தில் விழுந்து செத்தா
லொழிய தனித்திருக்கும், செத்ததேயாகில்
மிகுந்த பலனைத் தரும். தன் ஜீவனை 25
நேசிக்கிறவன் அதை இழந்துபோவான்;
இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிற

1 பூசி என்றும் அபிஷேகஞ்செய்து என்றும் திருப்பலாம்.

வனே அதை நித்திய ஜீவனுக்கென்று
26 காத்துக்கொள்ளுவான். ஒருவன் எனக்கு
ஊழியஞ்செய்வானானால் என்னைப் பின்பற்
றக்கடவன்; நான் எங்கேயிருக்கிறேனே
அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்;
ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்வானானால்
27 அவனைப் பிதா கனம்பண்ணுவார். இப்
பொழுது என் ஆத்துமா கலங்குகிறது.
நான் என்ன சொல்லுவேன்? பிதாவே, இந்த
வேளையினின்று என்னை ரட்சியும் — அப்படி
யல்ல, இதற்காகவே இந்த வேளைக்குள்
28 வந்தேன். பிதாவே, உமது நாமத்தை
மகிமைப்படுத்தும் என் றார். அப்பொ
ழுது: மகிமைப்படுத்தினேன், இன்னமும்
மகிமைப்படுத்துவேன் என்று வானத்தி
29 லிருந்து சத்தம் பிறந்தது. அங்கே நின்ற
அதைக்கேட்ட ஜனங்கள்: இடிமுழக்க
முண்டாயிற்று என்றார்கள். வேறு சிலர்:
தெய்வதூதன் அவரிடம் பேசினான் என்
30 றார்கள். இயேசுவோ: இந்தச் சத்தம் பிறந்
தது என்பொருட்டல்ல, உங்கள்பொருட்
31 டுத்தான். இப்பொழுதே இந்த உலகத்திற்
குத் தீர்ப்பாயிற்று, இப்பொழுதே இந்த
உலகத்தின் அதிபதி வெளியே எறிந்துவிடப்
32 படுவான். நானே பூமியிலிருந்து உயர்த்
தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்
னிடம் இழுத்துக்கொள்ளுவேன் என்றார்.
33 தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்
போகிறரென்பதைக் குறிக்கும்படி இப்ப
34 டிச் சொன்னார். சொல்லவே ஜனங்கள்
அவரிடம்: கிறிஸ்து என்றென்றைக்கும்
இருக்கிறார் என்று நியாயப்பிரமாணத்தில்
சொல்லியதை நாங்கள் கேட்டிருக்கிறோம்;
அப்படியிருக்க, மனுஷகுமாரன் உயர்த்தப்
படவேண்டியதென்று எப்படிச் சொல்லு
கிறீர்; இந்த மனுஷகுமாரன் யார் என்றார்
35 கள். இயேசு அவர்களிடம்: இன்னும்
கொஞ்சக்காலம் வெளிச்சம் உங்களிடமிருக்
கும்; இருளில் சிக்கள் அகப்படாதபடி
வெளிச்சம் உங்களோடிருக்கையிலேயே நட
வுங்கள்; இருளில் நடக்கிறவன் தான்போகிற
36 இடம் இன்னதென்று அறியான். வெளிச்
சம் உங்களோடிருக்கையில் வெளிச்சத்தின்
மேல் நம்பிக்கை வைத்திருங்கள். அப்பொ
ழுது வெளிச்சத்தின் பிள்ளைகளாவீர்கள் என்
றார். இவைகளை இயேசு சொல்லி அவர்
களை விட்டுப்போய் மறைந்துகொண்டார்.
37 அவர் இத்தனை அடையாளங்களை அவர்
களுக்குமுன்பாகச் செய்திருந்தும் அவர்கள்
அவரில் நம்பிக்கை வைக்கவில்லை.
38 கர்த்தாவே, எங்கள்மூலமாய்க் கேள்விப்
பட்டதை நம்பினவன் யார்?
கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்
பட்டது
என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன வசனம்
நிறைவேறும்படி இப்படி நடந்தது. அவர் 39
கள் நம்பமுடியாமலும் போயிற்று.
நான் அவர்களைக் குணமாக்க மனதா 40
யிருக்கிறேன்;
அவர்களோ கண்களால் காணுமலும்
இருதயத்தால் உணராமலும்
மனந்திரும்பாமலுமிருக்கும்படி
அவர்கள் கண்களைக் குருடாக்கி
அவர்கள் இருதயத்தைக் கடினமாக்கினார்
என்றும் ஏசாயா சொன்னானே. ஏசாயா 41
அவருடைய மகிமையைக் கண்டதினால்
அவரைக்குறித்துப் பேசி இவைகளைச்
சொன்னான். அப்படியிருந்தும், அதிகாரி 42
களிலும் அநேகர் அவரில் நம்பிக்கைவைத்
தார்கள். ஆகிலும் சபைக்கு விலக்கிவைக்
கப்படாதபடி பரிசேயர் நிமித்தம் அதை
அறிக்கைபண்ணாதிருந்தார்கள். அவர்கள் 43
கடவுளால் வருகிற மகிமையிலும் மனுஷ
ரால் வருகிற புகழை அதிகமாய் விரும்பி
னார்கள்.

இயேசுவோ சத்தமிட்டு: என்னில் விசு 44
வாசம் வைக்கிறவன் என்னிலல்ல, என்னை
அனுப்பினவரில் விசுவாசம் வைக்கிறான்.
என்னைக் காண்கிறவன் என்னையனுப்பின 45
வரைக் காண்கிறான். என்னில் விசுவாசம் 46
வைக்கிறவனெவனும் இருளில் இருந்து
விடாதபடிக்கு நான் உலகத்தில் வெளிச்ச
மாக வந்திருக்கிறேன். ஒருவன் என் வச 47
னங்களைக்கேட்டுக் கைக்கொள்ளாமற்போ
னால் அவனுக்குத் தீர்ப்பிடுவது நானல்ல;
நான் உலகத்துக்குத் தீர்ப்பிடுவதற்கென்று
வராமல் உலகத்தை இரட்சிப்பதற்கென்றே
வந்தேன். என்னைத் தள்ளி, என் வசனங் 48
களை ஏற்றுக்கொள்ளாதவனுக்குத் தீர்ப்
பிடுவது தொன்றிருக்கிறது; நான் சொன்ன
வார்த்தையே அவனைக் கடைசிநாளில் நியா
யந்தீர்க்கும். அதை நான் சுயமாய்ப் பேச 49
வில்லை, நான் சொல்லவும் பேசவும் வேண்
டியது இன்னதென்று என்னை யனுப்பிய
பிதாவே எனக்குக் கற்பித்திருக்கிறார்.
அவர் கற்பனை நித்திய ஜீவன் என்று அறி
வேன். ஆகையால் நான் பேசுகிறவைகளைப்
பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன்
என்றார்.

**13** பஸ்கா பண்டிகைக்கு முன்னே இயேசு
இவ்வுலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்
குப் போகும்படியான தமது வேளை வந்த
தென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்

நிறதம்முடையவர்களிடத்தில் அன்புகூர்ந்த படியே முடிவுபரியந்தமும் அவர்களிடத்
2 தில் அன்புகூர்ந்தார். அவர்கள் போஜனஞ் செய்துகொண்டிருந்தார்கள். அவரைக் காட்டிக்கொடுக்கும்படி சீமோன் குமாரன் யூதா ஸ்காரியோத்தின் இருதயத்தைப் பிசாசு
3 தூண்டிவிட்டிருந்தான். பிதா எல்லாவற்றையும் தமது கையில் ஒப்புக்கொடுத்தாரென்பதையும் தாம் கடவுளிடத்திலிருந்து வந்ததையும் கடவுளிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்தார். இப்படியிருக்
4 கையில் அவர் போஜனத்தை விட்டெழுந்து வஸ்திரங்களைக் கழற்றிவைத்து ஒரு துணியை யெடுத்து அரையிலே கட்டிக்
5 கொண்டு | பாத்திரத்தில் தண்ணீர் வார்த்துச் சீஷருடைய கால்களைக் கழுவவும் தாம் கட்டிக்கொண்டிருந்த துணியினால் துடைக்
6 கவுந் தொடங்கினார். அவர் சீமோன் பேதுருவினிடம் வந்தபோது அவன் அவரிடம்: ஆண்டவரே, என் கால்களை நீரோ
7 கழுவுகிறது என | இயேசு அவனிடம்: நான் செய்கிறதின்னதென்று இப்பொழுது உனக்குத் தெரியாது, இனிமேல் அறிந்து
8 கொள்வாய் என்றார். பேதுரு அவரிடம்: நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப் படாது என்றான். அதற்கு இயேசு: நான் உன்னைக் கழுவினாலொழிய என்னோடு உனக்
9 குப் பங்கில்லை என்றார். அது கேட்ட சீமோன் பேதுரு: ஆண்டவரே, என் கால்களை மாத்திரமல்ல என் கைகளையும் என் தலையையுங்கூடக் கழுவவேண்டும் என்றான்.
10 இயேசு அவனிடம்: முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவினால் போதும், மற்றப்படி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்; நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள்;
11 ஆகிலும் எல்லாருமல்ல என்றார். தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனை அவர் அறிந்திருந்தபடியால் நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்களல்ல என்றார்.
12 அவர்களுடைய கால்களை அவர் கழுவின பின்பு தமது வஸ்திரங்களைத் தரித்துக் கொண்டு திரும்ப உட்கார்ந்து அவர்களைப் பார்த்து: நான் உங்களுக்குச் செய்தது தெரி
13 கிறதா? நீங்கள் என்னைப் போதகரென்றும் ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள்; நீங்கள் சொல்லுகிறது சரி, நான் அப்படித்
14 தான். ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினேனாகில் நீங்களும் ஒருவருடைய கால்களை யொருவர் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.
15 நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரி காண்பித்தேன். மெய்யாகவே மெய்யாகவே நான் 16
உங்களுக்குச் சொல்லுகிறேன், வேலைக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல, அனுப்பப்பட்டவன் தன்னை யனுப்பினவரிலும் பெரியவனல்ல. நீங்கள் இக்காரியங் 17
களை அறிந்திருக்க, இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியவான்களே. உங்கள் 18
எல்லாரையுங்குறித்து நான் பேசவில்லை, நான் தெரிந்தெடுத்தவர்களையறிவேன்; ஆகிலும் வேதவாக்கியம் நிறைவேறும்படி என் சாப்பாட்டைச் சாப்பிடுகிறவனே என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான். அது சம்ப 19
விக்கும்போது நானே அவரென்று நீங்கள் நம்பும்பொருட்டு இப்பொழுதே, அது சம்பவிப்பதற்கு முன்னமே, அதை உங்களுக்குச் சொல்லுகிறேன். நான் அனுப்புகிறவனை ஏற் 20
றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை யனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறானென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

இயேசு இவைகளைச் சொன்ன பின்பு 21
ஆவியிலே கலங்கி: உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பானென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சாட்சியிட்டுச் சொன்னார். அப்பொழுது யாரைக் குறித்துப் பேசுகி 22
றாரோ என்று சீஷர் மனந்திகைத்து ஒருவரையொருவர் நோக்கிப் பார்த்தார்கள். இயேசுவின் சீஷரில் ஒருவன், இயேசு 23
அன்புகூர்ந்தவன், அவர் மார்பண்டையில் பந்திக்குச் சாய்ந்திருந்தான். யாரைக்குறித் 24
துப் பேசுகிறாரென்று சொல்லும்படி சீமோன் பேதுரு அவனுக்குச் சைகைகாட்டினான். அவன் இருந்தபடியே இயேசுவின் மார்பில் 25
படும்படி பின்புறம் சாய்ந்து அவரிடம்: ஆண்டவரே, யார் அது என்றான். அதற்கு 26
இயேசு நான் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ அவன்தான் என்று சொல்லித் துணிக்கையைத் தோய்த்து கரியோத்தூர் சீமோன் மகனான யூதாவுக்கு எடுத்துக் கொடுத்தார். துணிக்கையை 27
அவன் வாங்கினபின்பு சாத்தான் அவனுக்குள் புகுந்தான். அப்பொழுது இயேசு: நீ செய்கிறதைச் சீக்கிரம் செய் என்றார். அவர் எதைக் கருதி இப்படி அவனிடம் 28
சொன்னாரென்று பந்தியிருந்தவர்களில் ஒருவனும் அறியவில்லை. யூதா பணப்பெட்டியை வைத்துக்கொண்டிருந்தபடியினால் 29
அவன் போய் உற்சவத்திற்குத் தேவையான வைகளைக் கொள்ளவோ தரித்திரருக்கு ஏதாகிலும் கொடுக்கவோ இயேசு அவனிடஞ்

30 சொன்னதாகச் சிலர் நினைத்தார்கள். ஆக
வே, அவன் தணிக்கையை வாங்கிக்
கொண்டு உடனே வெளியே போனான்.
அது இராக்காலம்.
31 அவன் வெளியே போய்விடவே இயேசு:
இப்பொழுது மனுஷகுமாரன் மகிமைப்பட்
டார், கடவுளும் அவரில் மகிமைப்பட்
32 டார். கடவுள் அவரில் மகிமைப்பட்டா
ரேயானால் கடவுள் அவரைத் தம்மில் மகி
மைப்படுத்துவார். சீக்கிரம் அவரை மகி
33 மைப்படுத்துவார். பிள்ளைகளே, இன்
னுங் கொஞ்சக்காலம் உங்களோடிருப்
பேன், நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனா
லும் நான் போகிற இடத்துக்கு நீங்கள் வர
முடியாதென்று நான் யூதருக்குச் சொன்னது
போல் இப்பொழுது உங்களுக்குச் சொல்லு
34 கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்பு
கூரவேண்டுமென்னும் புதிய கற்பனையை
உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்
களில் அன்புகூர்ந்ததுபோல நீங்களும் ஒரு
35 வரிலொருவர் அன்புகூரவேண்டும். ஒரு
வரிலொருவர் அன்புகூர்ந்தால் நீங்கள் என்
சீஷரென்று எல்லாரும் அதினால் அறிந்து
கொள்வார்கள் என்றார்.
36 சீமோன் பேதுரு அவரைப் பார்த்து:
ஆண்டவரே, நீர் எங்கே போய்விடுகிறீர்
என்றான். இயேசு அவனிடம்: நான்
போகிற இடத்துக்கு இப்பொழுது நீ என்
னைத் தொடர்ந்துவரமுடியாது; பிற்பாடு வரு
37 வாய் என்றார். பேதுரு அவரிடம்: ஆண்ட
வரே, ஏன் இப்பொழுது உம்மைத்
தொடர்ந்துவரமுடியாது? உமக்காக என்
ஜீவனையுங்கொடுப்பேனே என்று சொன்
38 னான். அதைக் கேட்டு இயேசு: எனக்காக
உன் ஜீவனைக் கொடுப்பாயா! மெய்யாகவே
மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்,
சேவல் கூவுமுன்னே நீ என்னை மூன்றுதரம்
மறுதலிப்பாய் என்றார்.

**14** உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக.
கடவுளில் நம்பிக்கையாயிருக்கிறீர்களே,
2 என்னிலும் நம்பிக்கையாயிருங்கள். என்
பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்க
ளுண்டு;[1] அப்படியில்லாதிருந்தால் நான் உங்
களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்
தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்
3 போகிறேனே. நான் போய் உங்களுக்காக
ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுவேனேயானால்
நானிருக்கிற இடத்திலே நீங்களும் இருக்
கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை
என்னிடஞ் சேர்த்துக்கொள்ளுவேன். நான் 4
போகிற இடத்திற்கு வழி உங்களுக்குத்
தெரியும் என்றார். தோமா அவரிடம்: 5
ஆண்டவரே, நீர் போகிற இடமு தெரி
யாதே, வழி எப்படித் தெரியுமென்று
சொல்ல | இயேசு அவனிடம்: வழியும் 6
சத்தியமும் ஜீவனும் நானே; என்னுலேயன்றி
ஒருவனும் பிதாவினிடம் வரான். என்னை 7
யறிந்துகொண்டீர்களானால் என் பிதாவை
யும் அறிந்திருப்பீர்கள்; இதுமுதல் நீங்கள்
அவரை அறிந்துகொள்ளுகிறீர்கள்; அவ
ரைக் கண்டும் இருக்கிறீர்கள் என்றார்.
பிலிப்பு அவரிடம்: ஆண்டவரே, பிதாவை 8
எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்
குப் போதுமென | இயேசு: பிலிப்பே, இவ் 9
வளவு காலம் நான் உங்களோடிருந்தும் நீ
என்னை அறிந்துகொள்ளவில்லையா? எனனைக்
கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படி
யிருக்கப் பிதாவை எங்களுக்குக் காண்பியு
மென்று நீ சொல்வதெப்படி? நான் பிதா 10
விலும் பிதா என்னிலும் இருக்கிறதை நீ
நம்புகிறதில்லையா? நான் உங்களுக்குச்
சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ப்
பேசவில்லை. என்னில் நிலைத்திருக்கிற
பிதாவே தமது கிரியைகளைச் செய்கிறார்.
நான் பிதாவிலும் இருக்கிறேன், பிதா என் 11
னிலும் இருக்கிறார் என்று என்னை நம்புங்
கள். அப்படியில்லாவிட்டால் என் கிரியை
களினிமித்தமே நம்புங்கள்.
மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் 12
சொல்லுகிறேன், நான் பிதாவினிடம்
போகிறபடியினால் என்னில் விசுவாசம்
வைக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத்
தானுஞ் செய்வான், இவைகளைப்பார்க்கிலும்
பெரியவைகளையுஞ் செய்வான். நீங்கள் 13
என் நாமத்தில் எதைக் கேட்பீர்களோ
குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக
அதைச் செய்வேன். என் நாமத்தில் நீங் 14
கள் என்னிடம் எதைக் கேட்டாலும் அதை
நான் செய்வேன். நீங்கள் என்னில் அன்பு 15
கூர்ந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளு
வீர்கள். நான் பிதாவை வேண்டிக் 16
கொள்ளுவேன், அப்பொழுது என்றென்
றைக்கும் உங்களோடிருக்கும்படி வேறொரு
[2]சகாயரை அவர் உங்களுக்குத் தந்தருளு
வார். அவர் சத்திய ஆவியானவரே, உல 17

---

1 அப்படியில்லாதிருந்தால், ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தஞ்செய்யப் போகிறேனென்று நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேனோ என்றும் திருப்பலாம்.

2 நியாயஸ்தல முதலிய விடங்களில் ஒருவனுக்குத் துணைநின்று பேசுகிறவர் என்பது பொருள்.

கம் அவரை ஏற்றுக்கொள்ளமுடியாது, அது அவரைக் காண்கிறதுமில்லை, அறிகிறதுமில்லை; நீங்களோ அறிகிறீர்கள், அவர் உங்களோடு வசிக்கிறார், உங்களுக்குள்ளிருப்பார். 18 நான் உங்களை ஆதரவற்றவர்களாகவிடேன், உங்களிடம் வருகிறேன். 19 இன்னும் கொஞ்சகாலத்தில் உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்; ஏனெனில் நான் பிழைத்திருக்கிறேன், 20 நீங்களும் பிழைப்பீர்கள். நான் என் பிதாவிலும் நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் 21 அறிந்துகொள்வீர்கள். என் கற்பனைகளையுடையவனாய் அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னில் அன்புகூருகிறவன்; என்னிடம் அன்புகூருகிறவனில் என் பிதாவும் அன்புகூருவார், நானும் அவனில் அன்புகூர்ந்து அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார். 22 கரியோத்தூரானல்லாத யூதா அவரிடம்: ஆண்டவரே, நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்துவதற்கு நடந்ததென்ன என்றார். 23 இயேசு அதைக் கேட்டு அவனிடம்: ஒருவன் என்னில் அன்புகூர்ந்தால் என் வார்த்தையைக் கைக்கொள்ளுவான், என் பிதாவும் அவனில் அன்புகூருவார். நாங்கள் அவனிடம் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம். 24 என்னில் அன்புகூராதவன் என் வார்த்தைகளைக் கைக்கொள்ளான். நீங்கள் கேட்கிற வார்த்தை என்னுடைய தல்ல, என்னை அனுப்பின பிதாவினுடையது.

25 நான் உங்களோடு தங்கியிருக்கையிலேயே இவைகளை உங்களுக்குச் சொன்னேன். 26 என் நாமத்தில் பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய சகாயரோ எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். 27 சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என் சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகங்கொடுக்கிறது போல நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்கவும் வேண்டாம், 28 அதைரியப்படவும் வேண்டாம். நான் போவேனென்றும் திரும்ப உங்களிடம் வருவேனென்றும் நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே. நீங்கள் என்னில் அன்புகூர்ந்தால் நான் பிதாவினிடம் போகிறேனென்று சந்தோஷப்படுவீர்கள், ஏனெனில் பிதா என்னிலும் பெரியவர். 29 இது நடக்கும்போது நீங்கள் நம்பும்படியாக நடப்பதற்குமுன்னமே இதை உங்களுக்குச் சொன்னேன். 30 இனி நான் உங்களோடு அநேக காரியங்களைப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடம் ஒன்றுமில்லை. 31 நான் பிதாவில் அன்பு கூருகிறேனென்றும் பிதா எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேனென்றும் உலகம் அறியும்படி இப்படி நடக்கும். எழுந்திருங்கள், இவ்விடம்விட்டுப் போவோம் வாருங்கள் என்றார்.

**15** நான் மெய்யான திராட்சச்செடி, பயிரிடுகிறவர் என் பிதா. 2 என்னில் கனிகொடாதகொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார். கனிகொடுக்கிறகொடி எதுவோ அது அதிகக் கனி கொடுக்கும்படி அதைச் சுத்தம் பண்ணுகிறார். 3 நான் உங்களிடம் பேசியிருக்கிற வார்த்தையினால் நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள். 4 என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனி கொடுக்கமுடியாதே. என்னில் நிலைத்திராவிட்டால் நீங்களும் அப்படியே. 5 நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகொடுப்பான்; என்னையல்லாமல் நீங்கள் ஒன்றுஞ் செய்யமுடியாது. 6 ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால் கொடியைப் போல வெளியே எறியுண்டு உலர்ந்துபோவான்; அவைகளைச் சேர்த்து அக்கினியிலே போடுகிறார்கள், எரிந்துபோம். 7 நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பியதைக் கேளுங்கள், அது உங்களுக்கு ஆகும். 8 நீங்கள் மிகுந்த கனிகொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள். 9 பிதா என்னில் அன்புகூர்ந்தது போல நானும் உங்களில் அன்புகூர்ந்தேன்; என் அன்பில் நிலைத்திருங்கள். 10 நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவர் அன்பில் நிலைத்திருக்கிறதுபோல நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள். 11 என் சந்தோஷம் உங்களில் இருக்கும்படிக்கும் உங்கள் சந்தோஷம் நிறைவாகும்படிக்கும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன். 12 நான் உங்களில் அன்புகூர்ந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்புகூருங்கள்; இதுவே என் கற்பனை. 13 ஒருவன் தன் சிநேகிதர்பொருட்டுத் தன் ஜீவ

னைக் கொடுக்கிற அன்பிலும் பெரிதான
14 அன்பு யாரிடத்திலுமில்லை. நான் உங்க
ளுக்குக் கட்டளையிடுகிறதைச் செய்வீர்களா
15 னால் நீங்கள் எனக்குச் சிநேகிதர். இனி
நான் உங்களை வேலைக்காரரென்று சொல்லு
கிறதில்லை, வேலைக்காரன் தன் எஜமான்
செய்வதை அறியமாட்டான். உங்களையோ
சிநேகிதர் என்றேன், என் பிதாவினிடம்
நான்கேட்ட யாவற்றையும் உங்களுக்கு
16 அறிவித்தேனே. நீங்கள் என்னைத் தெரிந்
தெடுக்கவில்லை, நான் உங்களைத் தெரிந்
தெடுத்தேன்; நீங்கள் என் நாமத்தில் பிதா
வைக் கேட்டுக்கொள்வதெதுவோ அதை
அவர் உங்களுக்குக் கொடுக்கும்படியாக
நீங்கள் போய்க் கனி கொடுக்கவும் உங்கள்
கனி நிலைத்திருக்கவும் நான் உங்களை ஏற்
17 படுத்தினேன். நீங்கள் ஒருவரிலொருவர்
அன்பு கூரவேண்டுமென்றே இவைகளை
உங்களுக்குக் கட்டளையிடுகிறேன்.
18 உலகம் உங்களைப் பகைத்தால் அது உங்
களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப்
19 பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள்
உலகத்துக்குரியவர்களாயிருந்தால் உலகம்
தன்னுடையதை நேசித்திருக்கும். நீங்களோ
உலகத்துக்குரியவர்களல்ல. நான் உங்களை
உலகத்திலிருந்து தெரிந்தெடுத்தேன், அந்
தக் காரணத்தினாலே உலகம் உங்களைப்
20 பகைக்கிறது. வேலைக்காரன் தன் எஜமானி
னும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்
குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்
கொள்ளுங்கள். அவர்கள் என்னை இம்சைப்
படுத்தினார்களானால் உங்களையும் இம்சைப்
படுத்துவார்கள்; அவர்கள் என் வார்த்தை
யைக் கைக்கொண்டார்களானால் உங்கள்
வார்த்தையையுங் கைக்கொள்ளுவார்கள்.
21 அவர்கள் என்னையனுப்பினவரை அறியா
தபடியினால் என் நாமத்தினிமித்தமே இவற்
றையெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள்.
22 நான் வந்து அவர்களிடத்தில் பேசாதிருந்
தேனானால் அவர்களுக்குப் பாவமிராது. இப்
பொழுதோ தங்கள் பாவத்தைக் குறித்துப்
போக்குச் சொல்ல அவர்களுக்கிடமில்லை.
23 என்னைப் பகைக்கிறவன் என்பிதாவையும்
24 பகைக்கிறான். வேறெருவரும் செய்யாத கிரி
யைகளை நான் அவர்களுக்குள்ளே செய்யாதி
ருந்தேனானால் அவர்களுக்குப் பாவமிராது;
இப்பொழுதோ அவர்கள் என்னையும் என்
பிதாவையும் கண்டிருக்கிறார்கள், கண்டும்
25 பகைத்திருக்கிறார்கள். காரணமில்லாமல்
என்னைப் பகைத்தார்களென்று அவர்கள்
வேதத்தில் எழுதியிருக்கிற வார்த்தை நிறை
26 வேறும்படி இப்படியாயிற்று. பிதாவினிடத்
திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்
போகிற சகாயர், பிதாவினிட்த்திலிருந்து
புறப்பட்டு வருகிற சத்திய ஆவியானவர்,
வரும்போது அவர் என்னைக்குறித்துச் சாட்சி
பகர்வார். நீங்களும் முதலிலிருந்தே என் 27
னோடிருக்கிறபடியால் சாட்சிபகர்வீர்கள்.

நீங்கள் இடறிவிழாதபடி இவைகளை 16
உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். அவர் 2
கள் உங்களைச் சபைக்கு விலக்கிவைப்பார்
கள்; உங்களைக் கொல்லுகிற எவனும் தான்
கடவுளுக்குத் தொண்டுசெய்கிறதாய் நினைக்
குங் காலமும் வருகிறது. அவர்கள் பிதா 3
வையும் என்னையும் அறிந்துகொள்ளாத
படியினால் இவைகளைச் செய்வார்கள்.
நான் உங்களுக்குச் சொன்னேனென்று 4
அந்தக் காலம்வரும்போது நீங்கள் நினைக்கும்
படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்
கிறேன்; நான் உங்களோடிருந்தபடியினால்
ஆதிமுதலே இவைகளை உங்களுக்குச்
சொல்லவில்லை. இப்பொழுதோ என்னை 5
யனுப்பினவரிடம் போகிறேன். எங்கே
போகிறீரென்று உங்களில் ஒருவனும் என்
னைக் கேட்கிறதில்லை. நான் இவைகளை உங் 6
களுக்குச் சொன்னதினால் உங்கள் இருதயம்
துக்கம் நிறைந்திருக்கிறது. ஆனாலும் நான் 7
உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்,
நான் போய்விடுகிறது உங்களுக்கு நலம்;
நான் போகாதிருந்தால் சகாயரானவர் உங்
களிடம் வரமாட்டார், போவேனேயாகில்
அவரை உங்களிடம் அனுப்புவேன். அவர் 8
வந்து பாவம், நீதி, நியாயத்தீர்ப்பு இவற்
றைத் தெளிவாய்க்காட்டி உலகத்தைக் கண்
டித்துணர்த்துவார். பாவம், எப்படியெனில், 9
அவர்கள் என்னில் விசுவாசம் வைக்கிற
தில்லை; நீதி, எப்படியெனில், நான் பிதாவி 10
னிடம் போகிறேன், நீங்கள் இனி என்னைக்
காண்பதில்லை; நியாயத்தீர்ப்பு, எப்படியெ 11
னில், இவ்வுலகத்தின் அதிபதியை நியாயத்
தீர்த்தாயிற்று. இன்னும் அநேககாரியங் 12
களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டிய
தாயிருக்கிறது, இப்பொழுதோ நீங்கள்
அவைகளைத் தாங்கமாட்டீர்கள். சத்திய 13
ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தி
யத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர்
சுயமாய்ப் பேசாமல் தாம்கேட்கிற யாவற்
றையுஞ் சொல்லி வரப்போகிறவைகளை உங்
களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடைய 14
தில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பாராத
லால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவி 15
னுடையவைகள் யாவும் என்னுடையவை
கள், அதுபற்றித்தான் அவர் என்னுடைய

தில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்.

16 இன்னுங் கொஞ்சக்காலம், பின்பு என்னைப் பாராதிருப்பீர்கள்; மறுபடியும் கொஞ்சக்காலம், அப்பொழுது என்னைக் காண்பீர்கள் என்றார். அவர் சீஷரில் சிலர்: இன்னுங் கொஞ்சக்காலம், பின்பு என்னைப் பாராதிருப்பீர்களென்றும் மறுபடியுங் கொஞ்சக்காலம், அப்பொழுது என்னைக் காண்பீர்களென்றும் பிதாவினிடம் போகிறபடியாலென்றும் அவர் நமக்குச் சொல்லுகிறதென்னவென்று ஒருவரோடொருவர் பேசினார்கள். கொஞ்சக்காலம் என்கிறாரே, இதென்ன? அவர் சொல்லுகிறது இன்னதென்று நமக்கு விளங்கவில்லையே என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். அதைக் குறித்துத் தம்மிடம் கேட்கும்படி அவர்கள் விரும்புகிறதை இயேசு அறிந்து அவர்களைப் பார்த்து: கொஞ்சக்காலம், பின்பு என்னைப் பாராதிருப்பீர்கள்; மறுபடியும் கொஞ்சக்காலம், அப்போது என்னைக் காண்பீர்களென்று நான் சொன்னதைக்குறித்து நீங்கள் உங்களுக்குள்ளே விசாரிக்கிறீர்களோ? மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோஷப்படும்; நீங்கள் துக்கப்படுவீர்கள், உங்கள் துக்கமோ சந்தோஷமாக மாறும். ஒரு ஸ்திரீ பிரசவிக்கும்போது பேறுகாலம் வந்துவிட்டபடியால் துக்கப்படுகிறாள்; பிள்ளை பெற்றபின்போ குழந்தை உலகத்தில் பிறந்ததென்கிற சந்தோஷத்தினால் அப்புறம் வேதனையை நினையாள். அப்படியே நீங்களும் இப்பொழுது துக்கப்படுகிறீர்கள்; நான் மறுபடியும் உங்களைக் காண்பேன், அப்போது உங்கள் இருதயம் சந்தோஷப்படும்; உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப்போடமாட்டான். அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒரு கேள்வியும் கேட்கமாட்டீர்கள். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் பிதாவினிடம் கேட்டுக்கொள்வதெதுவோ அதை என் நாமத்தில் உங்களுக்குத் தருவார். இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தில் ஒன்றுங் கேட்டதில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாகுமாறு பெற்றுக்கொள்வீர்கள்.

25 இவைகளை நான் உபமானமாய் உங்களுடனே பேசினேன்; காலம் வரும், அப்பொழுது நான் உபமானமுறையாய் உங்களுடனே பேசாமல் பிதாவைக்குறித்து வெளிப்படையாகவே உங்களுக்கு அறிவிப்பேன். அந்நாளில் என் நாமத்தில் கேட்டுக்கொள்ளுவீர்கள். உங்களுக்காகப் பிதாவை நான் மன்றாடுவேனென்று உங்களுக்குச் சொல்லுகிறதில்லை. நீங்கள் என்னை நேசித்து நான் கடவுளிடமிருந்து வந்தேனென்று நம்பியிருக்கிறபடியினால் பிதாதாமே உங்களை நேசிக்கிறார். நான் பிதாவினிடமிருந்து வெளிப்பட்டு உலகத்தில் வந்தேன்; திரும்ப உலகத்தை விட்டுப் பிதாவினிடம் போகிறேன் என்றார். அது கேட்ட சீஷர்: இதோ, இப்பொழுது நீர் வெளிப்படையாய்ப் பேசுகிறீர், உபமானமாய் ஒன்றும் சொல்லுகிறதில்லை. நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர் என்றும் உம்மை ஒருவனும் கேள்வி கேட்க வேண்டுவதில்லையென்றும் இப்பொழுது அறிந்திருக்கிறோம். நீர் கடவுளிடத்திலிருந்து வெளிப்பட்டு வந்தீரென்று இதினாலே நம்புகிறோம் என்றார்கள். அதற்கு இயேசு: இப்பொழுது நம்புகிறீர்களோ! இதோ, நீங்கள் சிதறுண்டு அவனவன் தன் தன் இடத்துக்குப்போய் என்னைத் தனியே விட்டுவிடுங் காலம் வருகிறது, அது வந்து மாயிற்று. ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னோடே இருக்கிறார். என்னில் உங்களுக்குச் சமாதானம் இருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவமுண்டு, ஆனாலும் தைரியமாயிருங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்.

17 இயேசு இவைகளைப் பேசினபின்பு தமது கண்களை வானத்துக்கு ஏறெடுத்து: பிதாவே, வேளை வந்தது. குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படி நீர் உமது குமாரனை மகிமைப்படுத்தும். நீர் உமது குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்திய ஜீவனைக் கொடுக்கும்பொருட்டு மாம்சமான யாவர்மேலும் நீர் அவருக்கு அதிகாரங் கொடுத்தீரே. ஏகமெய்க்கடவுளாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன். நான் செய்யும்படி நீர் எனக்குத் தந்த வேலையைச் செய்து முடித்துப் பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன். பிதாவே, உலகம் உண்டாகிறதற்குமுன்னே உம்மிடத்தில் எனக்கிருந்த மகிமையால் இப்பொழுது நீர் என்னை உம்மிடத்தில் மகிமைப்படுத்தும். உலகத்திலிருந்து நீர் எனக்குத் தந்த மனுஷருக்கு உமது நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், உமது வார்த்தையைக் கைக்கொண்

7 டிருக்கிறீர்கள். நீர் எனக்குத் தந்தவை
களெல்லாம் உம்மிடமிருந்து வருகின்றன
வென்று இப்பொழுது அறிந்திருக்கிறீர்கள்.
8 எப்படியெனில், நீர் எனக்குத் தந்த வார்த்
தைகளே நான் அவர்களுக்குக் கொடுத்தேன்,
அவர்களும் அவைகளே ஏற்றுக்கொண்டார்
கள்; நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டு
வந்தேனென்று நிச்சயமாய் அறிந்தார்கள்;
நீர் என்னை அனுப்பினீரென்று நம்பிக்
கொண்டார்கள்.
9 நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளு
கிறேன். நான் வேண்டிக்கொள்வது உல
கத்துக்காகவல்ல, நீர் எனக்குத் தந்தவர்
களுக்காகவே; அவர்கள் உம்முடையவர்
10 கள்; என்னுடையவைகள் யாவும் உம்
முடையவைகள், உம்முடையவைகள் என்
னுடையவைகள்; அவர்களில் நான் மகி
11 மைப்பட்டிருக்கிறேன். இனி உலகத்திலி
ரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்;
நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த
பிதாவே, அவர்களும் நம்மைப்போல் ஒன்று
யிருக்கும்படி நீர் எனக்குத் தந்த உமது
நாமத்தில் அவர்களைக் காத்துக்கொள்ளும்.
12 நான் அவர்களோடிருக்கையில் நீர் எனக்
குத் தந்த உமது நாமத்தில் அவர்களைக் காத்
13 துக்கொண்டேன். வேதவாக்கியம் நிறை
வேறும்படி அழிவின் மகன் அழிந்துபோ
னேயன்றி நான் பாதுகாத்தபடியால் அவர்
களில் வேறெவனும் அழிந்துபோகவில்லை.
இப்பொழுது நான் உம்மிடம் வருகிறேன்;
அவர்கள் உள்ளத்தில் என் சந்தோஷம்
நிறைவாகும்படி உலகத்தில் இவைகளைச்
14 சொல்லுகிறேன். நான் உம்முடைய வார்த்
தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான்
உலகத்துக்குரியவனல்லாததுபோல அவர்
களும் உலகத்துக்குரியவர்களல்ல; ஆத
15 லால் உலகம் அவர்களைப் பகைத்தது. நீர்
அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்
ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர்
அவர்களைத் தீமைக்கு விலக்கிக் காக்கும்படி
16 வேண்டிக்கொள்ளுகிறேன். நான் உலகத்
துக்குரியவனல்லாததுபோல அவர்களும்
17 உலகத்துக்குரியவர்களல்ல. சத்தியத்தில்
அவர்களைப் பிரதிஷ்டை செய்யும்; உமது
18 வார்த்தையே சத்தியம். நீர் என்னை உலகத்
தில் அனுப்பினதுபோல நானும் அவர்களை
19 உலகத்தில் அனுப்பியிருக்கிறேன். அவர்
களும் சத்தியத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்
டவர்களாகும்படி அவர்களுக்காக நான்
என்னைத்தானே பிரதிஷ்டை செய்கிறேன்.
20 நான் இவர்கள்பொருட்டு வேண்டிக்
கொள்ளுகிறதுமல்லாமல் இவர்களுடைய
வார்த்தையினால் என்னில் விசுவாசம் வைக்
கிறவர்கள்பொருட்டும் வேண்டிகொள்ளு
கிறேன். பிதாவே, நீர் என்னிலும் நான் உம்
மிலும் இருக்கிறதுபோல அவர்கள் நம்மி
லிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நீர்
என்னை அனுப்பினீரென்றும் நீர் என்னில்
அன்புகூர்ந்ததுபோல் அவர்களிலும் அன்பு
கூர்ந்தீரென்றும் உலகம் அறிந்து கொள்ளு
மாறு, நாம் ஒன்றாயிருக்கிறதுபோல் அவர்
களும் ஒன்றாயிருக்கும்படி, நான் அவர்களி
லும் நீர் என்னிலுமாக அவர்கள் ஒற்றுமை
யில் பூரணப்படும்படி, நீர் எனக்குத் தந்த
மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்
தேன். பிதாவே, நீர் எனக்குத் தந்த என்
மகிமையை, உலகத்தோற்றத்துக்குமுன் நீர்
என்னில் அன்புகூர்ந்ததாகிய மகிமையை,
நீர் எனக்குத்தந்தவர்கள் காணும்படியாக
நான் எங்கே யிருக்கிறேனோ அங்கே அவர்
களும் என்னோடுகூட இருக்க விரும்பு
கிறேன். நீதியுள்ள பிதாவே, உலகம்
உம்மை அறிந்துகொள்ளவில்லை, நானோ
உம்மை அறிந்துகொண்டேன்; நீர் என்னை
யனுப்பினதை இவர்களும் அறிந்துகொண்
டார்கள். நீர் என்னில் வைத்த அன்பு
அவர்களிலிருக்கும்படிக்கும் நானும் அவர்
களிலிருக்கும்படிக்கும் உம்முடைய நாமத்
தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்;
இன்னமும் தெரியப்படுத்துவேன் என்றார்.

18 இயேசு இவைகளைச் சொன்னபின்பு
தமது சீஷரோடு கெதரோன் என்னும்
நீரோடைக்கப்புறம் போனார். அங்கே
ஒரு தோட்டமிருந்தது. அவரும் அவரு
டைய சீஷரும் அதற்குட்சென்றார்கள்.
2 இயேசுவும் அவருடைய சீஷரும் அடிக்கடி
அங்கே போய்க் கூடுவதுண்டு. ஆதலால்
அவரைக்காட்டிக்கொடுக்கிற யூதாவுக்கும்
அந்த இடந்தெரியும். 3 யூதா போர்ச்சேவ
கரையும் பிரதான ஆசாரியர் பரிசேயரு
டைய சேவகரில் சிலரையுங் கூட்டிக்
கொண்டு பந்தங்களோடும் தீவர்த்திகளோ
டும் ஆயுதங்களோடும் அவ்விடத்திற்கு வந்
தான். 4 இயேசு தமக்கு நேரிடப்போகிற
யாவற்றையும் அறிந்து எதிரே வந்து அவர்
களைப் பார்த்து: யாரைத் தேடுகிறீர்கள் என்
றார். 5 அவர்கள் அவரிடம்: நசரேயனாகிய
இயேசுவை என்றுசொல்ல, நான்தான்
என்றார். அவரைக் காட்டிக்கொடுத்த யூதா
வும் அவர்களோடு நின்றான். 6 நான்தான்
என்று அவர் அவர்களிடஞ் சொல்லவே

அவர்கள் பின்னிட்டுத் தரையில் விழுந்தார்
7 கள். அவர் மறுபடியும் அவர்களிடம்:
யாரைத் தேடுகிறீர்களென்று கேட்டார்.
அவர்கள்: நசரேயனாகிய இயேசுவை என்று
8 சொல்ல | இயேசு: நான்தான் என்று உங்
களுக்குச் சொன்னேனே; நீங்கள் என்னைத்
தேடுகிறதானால் இவர்களைப் போகவிடுங்கள்
9 என்றார். நீர் எனக்குத் தந்தவர்களில் ஒரு
வனையும் நான் இழந்துபோகவில்லையென்று
அவர் சொல்லியவார்த்தை நிறைவேறும்படி
10 இப்படி நடந்தது. சீமோன் பேதுருவி
னிடம் ஒரு பட்டயமிருந்தது. அவன்
அதை உருவிப் பிரதான ஆசாரியன் வேலைக்
காரனைத் தாக்கி அவன் வலதுகாதற வெட்டி
னான்; அந்த வேலைக்காரன் பேர் மல்கு.
11 அப்பொழுது இயேசு பேதுருவைப் பார்த்து:
பட்டயத்தை உறையில்போடு; பிதா எனக்
குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்
பண்ணாதிருப்பேனே என்றார்.
12 அப்பொழுது போர்ச்சேவகரும் 1சேனாதி
பதியும் யூதருடைய சேவகரும் இயேசு
வைப் பிடித்து அவரைக்கட்டி முதலாவது
அவரை அன்னாவினிடங் கொண்டுபோனார்
13 கள்; அவன் அந்த வருஷத்துப் பிரதான
14 ஆசாரியனாகிய காய்பாவின் மாமன். ஜனத்
தின்பொருட்டு ஒரே மனுஷன் மரிப்பது
நலமென்று யூதருக்கு ஆலோசனை சொன்ன
வன் இந்தக் காய்பாவே.
15 சீமோன் பேதுரு இயேசுவுக்குப் பின்
சென்றான், வேறொரு சீஷனும் வந்தான்.
அந்தச் சீஷன் பிரதான ஆசாரியனுக்கு
அறிமுகமானவன்; இயேசுவோடு பிரதான
16 ஆசாரியன் அரமனைக்குட் சென்றான். பேது
ருவோ வாசலருகே வெளியே நின்றான்.
அப்பொழுது பிரதான ஆசாரியனுக்கு அறி
முகமாயிருந்த மற்றச் சீஷன் வெளியே
வந்து வாசல்காக்கிறவளிடம் பேசிப் பேது
ருவை உள்ளே அழைத்துக்கொண்டு போ
17 னான். அப்பொழுது வாசல்காக்கிற வேலைக்
காரி பேதுருவினிடம்: நீயும் அந்த மனுஷ
னுடைய சீஷரில் ஒருவனோ என்று
18 சொல்ல | அவன்: அல்லவென்றான். குளி
ராயிருந்தபடியினால் வேலைக்காரரும் சேவக
ரும் கரிகெருப்பு வளர்த்து நின்று குளிர்
காய்ந்துகொண்டிருந்தார்கள்; பேதுருவும்
அவர்களோடு நின்று குளிர்காய்ந்துகொண்
டிருந்தான்.
19 பிரதான ஆசாரியன் இயேசுவினிடம்
அவர் சீஷரைக்குறித்தும் போதகத்தைக்
20 குறித்தும் விசாரித்தான். விசாரிக்கவே
இயேசு அவனிடம்: நான் பகிரங்கமாய்
உலகத்துக்குச் சொன்னேன்; சகல யூதரும்
கூடிவருகிற ஜெபாலயங்களிலேயும் தெய்வா
லயத்திலேயும் எப்பொழுதும் உபதேசித்
தேன்; அந்தரங்கத்தில் நான் ஒன்றும் பேசி
னதில்லை. 21 நீர் என்னிடம் விசாரிக்கிற
தென்ன? நான் பேசினதென்ன வென்று
அதைக் கேட்டவர்களிடம் விசாரியும்; நான்
பேசினவைகள் அவர்களுக்குத் தெரியும்
என்றார். அவர் இதைச் சொல்லவே, சமீ 22
பத்தில் நின்ற சேவகரில் ஒருவன்: பிரதான
ஆசாரியனுக்குப் பதில் சொல்லுகிறது இப்
படித்தானென்று இயேசுவை ஒரு அறை
அறைந்தான். இயேசு அவனிடம்: நான் 23
பேசினது தப்பு என்றால் அதை ஒப்புவி;
பேசினதுசரியானால்என்னை ஏன்அடிக்கிறாய்
என்றார். அப்பொழுது அன்னா பிரதான 24
ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்கு அவ
ரைக் கட்டுண்டவராக அனுப்பிவிட்டான்.
இப்படியிருக்க, சீமோன் பேதுரு குளிர் 25
காய்ந்துகொண்டிருக்கையில் சிலர் அவனி
டம்: அவனுடைய சீஷரில் நீயும் ஒருவனோ
என்றார்கள். அவனோ மறுதலித்து, அல்ல
வென்றான். பிரதான ஆசாரியனுடைய 26
வேலைக்காரரில் ஒருவன், பேதுரு காதற
வெட்டினவனுக்கு பந்து: நான் உன்னை
அவனோடு தோட்டத்தில் பார்க்கவில்லையா
என்றான். பேதுரு மறுபடியும் மறுதலித் 27
தான்; உடனே சேவலும் கூவிற்று.
அவர்கள் காய்பாவினிடத்திலிருந்து 28
இயேசுவைக் கோட்டை மாளிகைக்குக்
கொண்டுபோனார்கள். அது விடியற்காலம்.
அவர்கள் பஸ்காவைப் புசிக்கவேண்டிய
திருந்தது; தீட்டாகிவிடுமென்று கோட்டை
மாளிகையினுட் செல்லாதிருந்தார்கள்.
ஆகையால் பிலாத்து அவர்களிடம் வெளி 29
யே வந்து: இந்த மனுஷன்மேல் என்ன குற்
றஞ் சாட்டுகிறீர்களென்று கேட்க | அவர் 30
கள் அவனிடம்: இவன் குற்றவாளியாயிரா
விட்டால் இவனை உம்மிடம் ஒப்புக்கொடுத்
திருக்கமாட்டோம் என்றார்கள். அது கேட் 31
டுப் பிலாத்து அவர்களிடம்: இவனை நீங்கள்
கொண்டுபோய் உங்கள் பிரமாணத்தின்படி
தீர்ப்பிடுங்கள் என்றான். அதுகேட்ட யூதர்:
ஒருவனுக்கும் மரணத்தீர்ப்பிட எங்களுக்கு
அதிகாரமில்லை என்றார்கள். தாம் இன்ன 32
விதமான மரணமாய் மரிக்கப்போகிறோ
தைக் குறிக்கும்படி இயேசு சொல்லி
யிருந்த வார்த்தை நிறைவேற இப்படிச்
சொன்னார்கள்.

---

1 கிரேக்க பதம் ஆயிரம்பேருக்கு அதிபதி என்று பொருள்படும்.

33 பிலாத்து திரும்பவும் மாளிகைக்குட்போய் இயேசுவை அழைத்து: நீயா யூதருடைய
34 ராஜாவென்று கேட்க | இயேசு: நீர் சுயமாய் இப்படிச் சொல்லுகிறீரோ? மற்றவர்கள் என்னைக்குறித்து உம்மோடு பேசினார்களோ என்றார். அதற்குப் பிலாத்து: நான் யூதனோ? உன் ஜனங்களும் பிரதான ஆசாரியரும் உன்னை என்னிடம் ஒப்புக்கொடுத்தார்
36 கள், நீ என்ன செய்தாய் என்றான். இயேசு: என ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல; என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதா யிருந்தாலல் நான் யூதரிடம் ஒப்புக்கொடுக்கப்படாதபடி என் ஆட்கள் போராடியிருப்பார்களே; ஆகவே, என் ராஜ்யம் இவ்விடத்
37 திற்குரியதல்ல என்றார். அதைக்கேட்ட பிலாத்து அவரிடம்: பின்னை நீ ராஜாதானே என இயேசு: நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக்குறித்துச் சாட்சி சொல்ல நான் பிறந்தேன், இதற்கென்றே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியத்திற்குரியவன் எவனும் என் சத்தத்துக்குச் செவி
38 கொடுக்கிறான் என்றார். பிலாத்து அவரிடம்: சத்தியமாவது என்ன என்றான்.

இதைச் சொல்லி அவன் மறுபடியும் வெளியே யூதரிடம் வந்து: நான் அவனிடம்
39 ஒரு குற்றமும் காணேன். பஸ்கா பண்டிகையில் நான் உங்களுக்கு ஒருவனை விடுதலைசெய்கிற வழக்கமுண்டே; யூதரின் ராஜாவை நான் உங்களுக்கு விடுதலைசெய்
40 வது உங்களுக்கு இஷ்டமா என | அவர்கள் மறுபடியும் கூக்குரலிட்டு: இவனை யல்ல, பரபாசையே என்றார்கள். அந்தப் பரபாசோ கொள்ளைக்காரன்.

**19** அப்பொழுது பிலாத்து இயேசுவைப்
2 பிடித்து வாரினால் அடிப்பித்தான். போர்ச்சேவகர் முட்களினால் ஒரு முடியைப்பின்னி அவர் சிரசின்மேல் வைத்துச் சிவப்பான ஒரு மேலங்கியை அவருக்கு உடுத்தினார்
3 கள். அப்பால் அவரிடம் வந்து: யூதருடைய ராஜாவே, வாழ்கவென்று சொல்லிக் கொண்டு அவரை அறைமேல் அறைஅறைந்
4 தார்கள். பிலாத்து மறுபடியும் வெளியே வந்து அவர்களைப் பார்த்து: இதோ, இவனை வெளியே உங்களிடங் கொண்டுவருகிறேன்; நான் இவனிடம் ஒரு குற்றமும் காணவில்லை, இதை அறிந்துகொள்ளுங்கள் என்
5 றான். இயேசு முள்முடியும் சிவப்பான மேலங்கியும் தரித்தவராய் வெளியே வரவே பிலாத்து அவர்களிடம்: இதோ அந்த மனுஷன் என்றான். பிரதான ஆசாரியரும் சேவகரும் அவரைக்கண்டபோது: சிலுவையில்
6 அறையும், சிலுவையில் அறையும் என்று கூக்குரலிட்டார்கள். பிலாத்து அவர்களிடம்: நீங்களே இவனைக் கொண்டுபோய்ச் சிலுவையில் அறையுங்கள், நான் இவனிடங்குற்றம் காணேன் என்றான். அதைக் 7
கேட்ட யூதர் அவனிடம்: எங்களுக்கு ஒரு சட்டமுண்டு, அந்தச் சட்டத்தின்படி இவன் சாகவேண்டும்; இவன் தன்னை தெய்வகுமாரனாக்கினான் என்றார்கள். இந்த 8
வார்த்தையைக் கேட்டபொழுது பிலாத்து முன்னிலும் அதிகமாய்ப் பயந்து மறுபடியும் மாளிகைக்குள்ளே போய் இயேசுவினிடம்: நீ எங்கிருந்து வந்தவனென்று கேட்க 9
இயேசு பதிற்சொல்லாதிருந்தார். அப்பொ 10
ழுது பிலாத்து: நீ என்னிடம் பேசாதிருக்கிறாயா? உன்னை விடுதலைசெய்யவும் எனக்கு அதிகாரமுண்டு, உன்னைச் சிலுவையில் அறையவும் எனக்கு அதிகாரமுண்டு; இது உனக்குத் தெரியாதா என்றான். அதற்கு 11
இயேசு: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால் என்மேல் உமக்கு அதிகாரமொன்றுமிராது; ஆகவே, என்னை உம்மிடம் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிகப் பாவமுண்டு என்றார். இதைக்கேட்டதும் 12
பிலாத்து அவரை விடுதலை பண்ணப்பார்த்தான். யூதரோ கூக்குரலிட்டு: இவனை விடுதலைசெய்தால் நீர் இராயனுக்குச் சினேகிதனல்ல; தன்னை ராஜாவாக்குகிறவன் எவனும் இராயனுக்கு விரோதி என்றார்கள். பிலாத்து 13
இந்த வார்த்தைகளைக் கேட்டு இயேசுவை வெளியே கொண்டுவந்து நியாயாசனத்தில் உட்கார்ந்தான். அது கற்றளம் என்றும் எபிரேயு பாஷையில் கபத்தா என்றும் வழங்குமிடத்திலிருந்தது. அந்த நாள் பஸ் 14
காவுக்கு ஆயத்தநாள். ஏறக்குறைய ஆறு மணிநேரமாயிற்று. அவன் யூதரைப்பார்த்து: இதோ, உங்கள் ராஜா என்று சொல்லவே | அவர்கள்: இவனைத் தொலைத்துவிடும், தொ 15
லைத்துவிடும், சிலுவையில் அறையும் என்று கூக்குரலிட்டார்கள். அதற்குப் பிலாத்து: உங்கள் ராஜாவையா நான் சிலுவையில் அறைவது எனப் பிரதான ஆசாரியர்: இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே ராஜா இல்லையென்றார்கள். அப்பொழுது அவ 16
ரைச் சிலுவையில் அறையும்படி அவர்களிடம் ஒப்புக்கொடுத்தான்.

அவர்கள் இயேசுவைக் கொண்டுபோனார் 17
கள். அவர் சிலுவையைத் தாமே சுமந்து கொண்டு வெளியே கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப்போனார். அதை எபிரேயு பாஷையில் கொல்கதா என்று சொல்வார்கள். அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார் 18

கள்; அவரோடே வேறிரண்டு பேரையும் அறைந்தார்கள். அவரை மத்தியிலும் அவர் களே அவர் இருபக்கங்களிலும் அறைந்தார்
19 கள். பிலாத்து ஒரு விலாசத்தை எழுதிச் சிலுவையின்மேல் போடுவித்தான். அவன் எழுதினது: இயேசு நசரேயன் யூதரின்
20 ராஜா என்பது. இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடம் நகரத்துக்குச் சமீப மானதால் யூதரில் அநேகர் அந்த விலாசத் தை வாசித்தார்கள்; அது எபிரேயு, லத்தின், கிரேக்கு பாஷைகளில் எழுதியிருந்தது.
21 அதைக்கண்ட யூதருடைய பிரதான ஆசாரி யர் பிலாத்துவினிடம்: யூதரின் ராஜாவென எழுதாமல், தான் யூதரின் ராஜா என்று அவன் சொன்னானென எழுதும் என்றார்கள்.
22 அதற்குப் பிலாத்து, நான் எழுதினது எழுதி னதே என்றான்.
23 போர்ச்சேவகர் இயேசுவைச் சிலுவையில் அறைந்தபின்பு அவர் வஸ்திரங்களை எடுத்து ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ்வொரு பங் காக நாலுபங்கு வைத்தார்கள். அங்கியை யும் எடுத்தார்கள்; அந்த அங்கி தையலில் லாமல் மேலே தொடங்கி முழுவதும் நெய்
24 யப்பட்டிருந்தது. ஆகையால் அவர்கள்: நாம் இதைக் கிழியாமல், யாருக்கு வருமோ வென்று இதைக் குறித்துச் சீட்டுப்போடு வோமென்று ஒருவரோடொருவர் பேசிக் கொண்டார்கள்.

என் வஸ்திரங்களைத் தங்களுக்குப் பங் கிட்டுக்கொண்டு
என் உடையின்மேல் சீட்டுப் போட் டார்கள்

என்கிற வேதவாக்கியம் நிறைவேற இப்படி நடந்தது. போர்ச்சேவகர் செய்தது இது.
25 இயேசுவினுடைய சிலுவையின் பக்கத் தில் அவர் தாயாரும் அவர் தாயாரின் சகோ தரியும் கிலோப்பாவின் மரியாளும் மகத லேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்
26 கள். அப்பொழுது இயேசு தமது தாயா ரையும் தாம் அன்புகூர்ந்த சீஷனையுங் கண் டார். சீஷனை அவள் பக்கத்தில் நிற்கக் கண்டு தாயாரிடம்: அம்மா, அதோ, உன்
27 மகன் என்றார். பின்பு சீஷனிடம்: அதோ, உன் தாய் என்றார். அந்நேரமுதல் அந்தச் சீஷன் அவளைத் தன் வீட்டிலே ஏற்றுக் கொண்டான்.
28 அதன்பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேதவாக்கியம் நிறைவே றும்படி, தாகமாயிருக்கிறேன் என்றார்.
29 காடி நிறைந்த ஒரு பாத்திரம் அங்கே இருந் தது; அவர்கள் கடற்காளானைக் காடியிலே தோய்த்து ஈசோப்புத்தண்டில் மாட்டி அவர்
வாய்க்கு நீட்டினார்கள். இயேசு காடியை 30
வாங்கினபின்பு, முடிந்தது என்று சொல்லித் தலையைச் சாய்த்து ஆவியை ஒப்புக்கொடுத் தார்.

அது ஆயத்தநாள். அடுத்த நாளோ 31
விசேஷித்த ஓய்வுநாள். அந்த ஓய்வுநாளில் உடல்கள் சிலுவைகளில் இருக்கவேண்டா மென்று யூதர் பிலாத்துவினிடம் போய்க் காலெலும்புகளை முறித்து அவர்களை எடுத்து விடும்படிகேட்டுக்கொண்டார்கள். அந்தப் 32
படியே போர்ச்சேவகர் போய் அவரோடு அறையப் பட்டிருந்தவர்களில் ஒருவனு டைய காலெலும்புகளையும் மற்றவனுடைய காலெலும்புகளையும் முறித்தார்கள். அவர் 33
கள் இயேசுவினிடத்தில் வந்தபோதோ அவர் மரித்திருக்கிறதைக் கண்டார்கள், ஆகை யால் அவர் காலெலும்புகளை முறிக்கவில்லை. ஆகிலும், போர்ச்சேவகரில் ஒருவன் அவர் 34
விலாவில் ஈட்டியால் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் வெளிப்பட்டது. அதைக் கண்டவன் சாட்சி சொல்லியிருக்கி 35
றான்; அவன் சாட்சியம் உண்மை; தான் சொல்லுகிறது உண்மையென்று அவன் அறிந்திருக்கிறான்; நீங்கள் நம்பிக்கைகொள் ளும்படி இதைச் சொல்லியிருக்கிறான். அவர் எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவ 36
தில்லையென்கிற வேதவாக்கியம் நிறைவேறும் படி இவைகள் நடந்தன. வேறொரு வேத 37
வாக்கியமும்: தாங்கள் குத்தினவரை நோக் கிப்பார்ப்பார்கள் என்று சொல்லுகிறதே.

இவைகளுக்குப்பின்பு அரிமத்தியா 38
ஊரான் யோசேப்பு இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டு போகும்படி பிலாத்து வினிடம் உத்தரவு கேட்டான். இந்த யோசேப்பு இயேசுவுக்குச் சீஷன்; ஆயினும் யூதருக்குப் பயந்து அந்தரங்க சீஷனாயிருந் தான். பிலாத்து உத்தரவு கொடுக்கவே அவன் வந்து இயேசுவின் சரீரத்தை எடுத் துக்கொண்டுபோனான். நிக்கொதேமுவும் 39
வந்தான்; அவன் அவரிடம் முதல்தடவை இரவில் வந்தவன். இவன் வெள்ளைப் போளமும் கரிய போளமுங் கலந்து ஏறக் குறைய நூறு இராத்தல் கொண்டுவந்தான். அவர்கள் இயேசுவின் சரீரத்தை எடுத்து 40
யூதர்கள் அடக்கம்பண்ணும் முறைமையின் படியே அதைச் சுகந்தவர்க்கங்களோடு துணிகளில் சுற்றினார்கள். அவர் சிலுவை 41
யில் அறையப்பட்ட இடத்தில் ஒரு தோட்ட மிருந்தது. அந்தத் தோட்டத்தில் ஒருக் காலும் ஒருவனையும் வைத்திராத ஒரு புதிய கல்லறையிருந்தது. யூதருடைய ஆயத்த 42
நாளாயிருக்கவே, அந்தக் கல்லறை சமீப

மாயிருந்தபடியினால் அவ்விடத்திலேயே இயேசுவை வைத்தார்கள்.

**20** வாரத்தின் முதல்நாள் காலையில் இருட்டோடே மகதலேனே மரியாள் கல்லறைக்கு வந்தாள். கல்லறையை அடைத்திருந்த
2 கல் எடுபட்டிருக்கக் கண்டு | அவள் ஓடிச் சீமோன் பேதுருவினிடமும் இயேசு நேசித்த மற்றச் சீஷனிடமும் போய்: ஆண்டவரைக் கல்லறையிலிருந்து எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை
3 யென்றாள். அப்பொழுது பேதுருவும் மற்றச் சீஷனும் கல்லறைக்குப் போகும்படி புறப்பட்டார்கள். இருவரும் ஒருமித்து
4 ஓடவே | பேதுருவைப் பார்க்கிலும் மற்றச் சீஷன் துரிதமாயோடி முந்திக் கல்லறைக்கு
5 வந்தான். குனிந்து உள்ளே பார்த்தபோது பிரேதத்துணிகள் கிடக்கிறதைக் கண்டான்,
6 உள்ளே போகவில்லை. சீமோன் பேதுரு அவனுக்குப்பின்னே வந்து கல்லறைக்குள்
7 போனான். அங்கே பிரேதத்துணிகள் கிடக்கிறதையும் அவர் தலையை மூடியிருந்த துணி மற்றத் துணிகளுடனே வைத்திராமல் தனியே ஓரிடத்திலே சுருட்டி வைத்திருக்கிற
8 தையும் கண்டான். முந்திக் கல்லறைக்கு வந்த மற்றச் சீஷனும் அப்பொழுது உள்ளே போனான்; கண்டு நம்பிக்கொண்
9 டான். அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவேண்டுமென்று வேதவாக்கியம் சொல்வதை அவர்கள் இன்னும் அறிந்து
10 கொள்ளவில்லை. இவைகளைக் கண்டு சீஷர் தங்கள் இடத்திற்குத் திரும்பினார்கள்.

11 மரியாளோ கல்லறையினருகே வெளியே நின்று அழுதுகொண்டிருந்தாள். அப்படி அழுதுகொண்டிருக்கையில் அவள் குனிந்து
12 கல்லறைக்குள்ளே பார்த்து, இயேசுவின் சரீரத்தை வைத்திருந்த இடத்திலே வெள்ளுடை தரித்த இரண்டு தூதர் தலைமாட்டில் ஒருவனும் கால்மாட்டில் ஒருவனுமாக உட்
13 கார்ந்திருக்கக் கண்டாள். அவர்கள் அவளைப் பார்த்து: அம்மா, என் அழுகிறாய் என அவள்: என் ஆண்டவரை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை என்
14 றாள். இவைகளைச் சொல்லிப் பின்னுகத் திரும்பவே இயேசு நிற்கிறதைக் கண்டாள். ஆனாலும் அவரை இயேசு என்று அறிந்து
15 கொள்ளவில்லை. இயேசு அவளைப்பார்த்து: அம்மா, என் அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய் என்றார். அவள் அது தோட்டக்காரனென்று நினைத்து: ஐயா நீர் அவரை எடுத்துக் கொண்டுபோனதுண்டானால் அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும்; நான் போய் அவரை எடுத்துக் 16
கொள்ளுவேன் என்றாள். இயேசு அவளை நோக்கி: மரியாளே என்றார். அவள் திரும்பிப் பார்த்து எபிரேயு பாஷையில், ரபூனி என்றாள்; அதற்குக் குருவே என்று அர்த்தமாம். இயேசு அவளைப் பார்த்து: என்னைப் 17
பற்றிப்பிடித்துக்கொள்ளாதே; நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை. நீ என் சகோதரரிடம் போய், நான் என் பிதாவும் உங்கள் பிதாவும், என் கடவுளும் உங்கள் கடவுளுமாயிருக்கிறவரிடம் ஏறிப்போகிறேனென்று அவர்களுக்குச் சொல் என்றார். மகதலேனே மரியாள் 18
போய்த் தான் ஆண்டவரை கண்டதையும் அவர் தனக்கு இவைகளைச் சொன்னதையும் சீஷருக்கு அறிவித்தாள்.

வாரத்தின் முதல் நாளாகிய அன்றைத் 19
தினம் சாயங்காலம் சீஷர் கூடியிருந்த இடத்தில் யூதருக்குப் பயந்து கதவுகளைப் பூட்டியிருந்தார்கள். அப்படியிருக்கையில் இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். அவர் இதைச் 20
சொல்லித் தமது கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர் ஆண்டவரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள். இயேசு மறுபடியும் அவர்களிடம்: உங்களுக்குச் சமாதானம்; பிதா என்னை 21
யனுப்பினதுபோல நானும் உங்களையனுப்புகிறேனென்று சொல்லி | அவர்கள்மேல் 22
ஊதி: பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். எவர்களுக்குப் பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவர்களுக்கு மன்னிக்கப் 23
பட்டிருக்கும்; எவர்களுக்குப் பாவங்களை நிறுத்தி வைக்கிறீர்களோ. அவர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் என்றார்.

பன்னிருவரில் ஒருவனாகிய திதிமு எனப் 24
பட்ட தோமாவோ இயேசு வந்திருந்தபோது அவர்களோடிருக்கவில்லை. ஆகவே, மற்றச் 25
சீஷர்: ஆண்டவரைக் கண்டோமென்று அவனுக்குச் சொன்னார்கள். அவனோ அவர்களிடம்: அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான தழும்பை நான் பார்த்து ஆணியிருந்த இடத்திலே என் விரலிவிட்டு என் கையை அவருடைய விலாவிலே இட்டாலொழிய நம்பவே மாட்டேன் என்றான்.

மறுபடியும் எட்டுநாளைக்குப்பின் அவர் 26
சீஷர் முன்போலவே வீட்டுக்குள் இருந்தார்கள்; தோமாவும் அவர்களோடிருந்தான். கதவுகள் பூட்டப்பட்டிருக்க இயேசு வந்து

நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம்
27 என்றார். பின்பு அவர் தோமாவைப் பார்த்து: நீ உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப் பார், உன் கையை நீட்டி என் விலாவிலே வை; நம்பிக்கையற்றவனாகாதே, நம்பிக்கை
28 யுள்ளவனாக என்றார். இதைக்கேட்ட தோமா அவரிடம்: என் ஆண்டவரே, என்
29 கடவுளே என்றான். அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலேயோ நம்பினாய்! காணாமலே நம்புகிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்.
30 இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அடையாளங்களையும் இயேசு தமது
31 சீஷருக்குமுன்பாகச் செய்தார். இவைகளோ, இயேசு தெய்வகுமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் நம்புவதற்கும் நம்பி அவர் நாமத்தில் ஜீவனை அடைவதற்கும் எழுதப்பட்டிருக்கின்றன.

**21** இவைகளுக்குப் பின்பு இயேசு திபேரியா கடலருகே மறுபடியும் சீஷருக்குத் தரிசனந் தந்தார்; தரிசனந்தந்த விவரமாவது: சீமோன் பேதுருவும் திதிமு எனப்பட்ட
2 தோமாவும் கலிலேயாநாட்டுக் காணாவூர் நாத்தான்வேலும் செபெதேயுவின் குமாரரும் அவருடைய சீஷரில் வேறு இரண்டு
3 பேருங் கூடியிருந்தார்கள். சீமோன் பேதுரு மற்றவர்களைப் பார்த்து: மீன்பிடிக்கப்போகிறேன் என்றான். அதற்கு அவர்கள்: நாங்களும் உன்னோடு வருகிறோம் என்றார்கள். அவர்கள் போய்ப் படவேறினார்கள். அந்த இராத்திரியில் ஒன்றும் அகப்படவில்லை.
4 விடியற்காலமாகவே இயேசு கரையில் நின்றார்; நின்றவர் இயேசு என்று சீஷர்கள்
5 அறியாதிருந்தார்கள். இயேசு அவர்களைப் பார்த்து: பிள்ளைகளே, உங்களிடம் ஏதாகிலும் கறிபதார்த்தமுண்டா என அவர்கள்:
6 இல்லை என்றார்கள். அப்பொழுது அவர்: நீங்கள் படவின் வலதுபுறம் வலைபோடுங்கள், அப்பொழுது உங்களுக்கு அகப்படும் என்றார். அப்படியே போட்ட போது வலையை இழுக்க முடியாமற் போய்விட்
7 டது, மீன்கள் அத்தனை ஏராளம். இயேசு அன்புகூர்ந்த சீஷன் இதுகண்டு பேதுருவினிடம்: அது ஆண்டவர் என்றான். அது ஆண்டவர் என்று கேட்கவே, சீமோன் பேதுரு மேலாடையைக் கழற்றியிருந்தபடியினால் அதைக் கட்டிக்கொண்டு கடலில்
8 குதித்தான். மற்றச் சீஷரோ படவிலிருந்தபடியே மீனுள்ள வலையை இழுத்துக் கொண்டு வந்தார்கள். அவர்கள் இருந்த தூரம் அதிகமல்ல, அது ஏறக்குறைய இரு
நூறு முழம். அவர்கள் கரையிலே வந்திறங்கினபோது கரிநெருப்புப் போட்டிருக்கிறதையும் அதின்மேல் மீன் வைத்திருக்கிறதையும் அப்பத்தையுங் கண்டார்கள். 9
இயேசு அவர்களிடம்: நீங்கள் இப்பொழுது பிடித்த மீன்களில் சிலவற்றைக் கொண்டு வாருங்கள் என்றார். சீமோன் பேதுரு படவிலேறி வலையைக் கரையிலிழுத்தான். அதில் பெரிய மீன்கள் நிறைந்திருந்தன, இருந்த மீன்கள் நூற்றைம்பத்துமூன்று. இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை. இயேசு அவர்களிடம்: வந்து போஜனம்பண்ணுங்கள் என்றார். சீஷரில் ஒருவனும், நீர் யார் என்று அவரைக் கேட்கத் துணியவில்லை; அது ஆண்டவர் தானென்று அவர்கள் அறிந்திருந்தார்கள். இயேசு வந்து அப்பத்தை எடுத்து அவர்களுக்குக் கொடுத்தார், மீனையும் அப்படியே கொடுத்தார். இயேசு மரித்தோரிலிருந்து எழுந்து தமது சீஷருக்குத் தரிசனையானது இது மூன்றாமுறை.

அவர்கள் போஜனம்பண்ணி முடியவே இயேசு சீமோன் பேதுருவைப் பார்த்து: யோவானின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னில் அன்புகூருகிறாயா என அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆட்டுக்குட்டிகளைப் போஷிப்பாயாக என்றார். இரண்டாந்தரம் அவர் அவனிடம்: யோவானின் குமாரனாகிய சீமோனே, நீ என்னில் அன்பு கூருகிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர், என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார். மூன்றாந்தரம் அவர் அவனிடம்: யோவானின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா என்றார். மூன்றாந்தரம் என்னை நேசிக்கிறாயா என்று அவர் தன்னைக் கேட்டபடியினால் பேதுரு துக்கப்பட்டு: ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிவீர், நான் உம்மை நேசிக்கிறேனென்பதையும் நீர் அறிந்துகொள்ளுகிறீர் என்றான். இயேசு: என் ஆடுகளைப் போஷிப்பாயாக என்றார். மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், நீ வாலிபனாயிருந்தபோது உன்னை நீயே அரை கட்டிக்கொண்டு உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய்; நீ முதிர்வயதாகும்போதோ உன் கைகளை நீட்டுவாய், வேறொருவன் உன் அரையைக் கட்டி உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான்

19 என்ரூர். இன்னவிதமான மரணத்தினுலே அவன் கடவுளே மகிமைப்படுத்துவானென் பதைக் குறிக்கும்படி இப்படிச்சொன்னுர். அவர் இதைச்சொல்லி அவனிடம்: என் 20 னேப் பின்பற்றி வா என்ரூர். பேதுரு திரும்பிப் பார்த்து இயேசு அன்பு கூர்ந்த சீஷன் பின்னே வருகிறதைக் கண்டான். இராப்போஜனப் பந்தியில் அவர் மார் பண்டையில் சாய்ந்து: ஆண்டவரே, உம் மைக் காட்டிக் கொடுக்கிறவன் யார் என்று 21 கேட்டவன் இவனே. அவனேக்கண்டு பேதுரு இயேசுவினிடம்: ஆண்டவரே, 22 இவன் காரியமென்ன என்ரூன். அதற்கு இயேசு: நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானுல் உனக்கென்ன? நீ என்னேப் பின்பற்றி வா என்ரூர். ஆகை 23 யால், அந்தச் சீஷன் மரிப்பதில்லே என்கிற பேச்சு சகோதரருக்குள்ளே பரவிற்று. ஆனலும், அவன் மரிப்பதில்லே என்று இயேசு சொல்லாமல், நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானுல் உனக் கென்னவென்று சொன்னுர்.

அந்தச் சீஷன் இவைகளேக்குறித்துச் 24 சாட்சி பகர்ந்து இவைகளே எழுதினவன், அவனுடைய சாட்சியம் மெய்யென்று நமக்குத் தெரியும்.

இயேசு செய்த வேறு அநேக காரியங்க 25 ளுமுண்டு; அவைகளே ஒவ்வொன்றுகஎழுதினுல் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகந்தானும் கொள்ளாதென்று எண்ணுகிறேன்.

---

THE ACTS OF THE APOSTLES

---

# அப்போஸ்தலர் வர்த்தமானம்

---

1 தெயோப்பிலுவே, இயேசுவானவர் தாம் பரத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின யாவற்றையுங் குறித்து முத 2 லாம் பிரபந்தம் எழுதினேன். தாம் தெரிந் தெடுத்த அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியினுல் கட்டளேயிட்டபின் எடுத்துக் 3 கொள்ளப்பட்டார். தாம் பாடுபட்டபின்பு நாற்பதுநாளாய் அவர்களுக்குத் தரிசன மாகிக் கடவுளின் ராஜ்யத்துக்குரியவற்றை யுபதேசித்துப் பல தெளிவான அடையாளங் களினுல் தம்மை உயிருள்ளவராக அவர் களுக்குக் காண்பித்தார். மேலும் அவர் 4 அவர்களோடு [1]கூடிவந்திருக்கும்போது: யோவான் ஜலத்தினுல் ஞானஸ்நானங் கொடுத் தான்; நீங்களோ சில நாளேக்குள்ளே பரி சுத்த ஆவியினுல் ஞானஸ்நானம் பெறுவீர் கள்; ஆகையால் எருசலேமைவிட்டுப் 5

[1] போஜனஞ் செய்துகொண்டிருக்கும்போது என்றும் திருப்பலரம்.

போகாமல் என்னிடங் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்களென்று கட்டளையிட்டார்.

6 கூடிவந்திருந்தவர்களோ அவரிடம்: ஆண்டவரே, இக்காலத்திலா ராஜியத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுக்கிறீ
7 ரென்று கேட்க | அவர்: பிதா தமது அதீனத்தில் வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்த
8 தல்ல. பரிசுத்த ஆவி உங்கள்மேல் வரும்போதோ நீங்கள் வல்லமை பெற்று எருசலேமிலும் யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும் பூமியின் கடைசிபரியந்தமும் என்
9 சாட்சிகளாயிருப்பீர்களென்றார். இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே, அவர் உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; ஒரு மேகம் அவர்கள் கண்களுக்கு அவரை மறைத்து
10 எடுத்துக்கொண்டது. அவர் போகிறபோது அவர்கள் அண்ணாந்து வானத்தைக்கூர்ந்து பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, வெண் வஸ்திரந்தரித்த இருவர் அவர்க
11 ளருகே நின்று: கலிலேயரே, நீங்கள் ஏன் வானத்தைப் பார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள்? உங்களிடத்திலிருந்து வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசு எவ்விதமாக வானத்துக்குள் போகக் கண்டீர்களோ அவ்விதமாகவே வருவார் என்றார்கள்.

12 அப்பொழுது அவர்கள் ஒலிவமென்னும் மலையிலிருந்து எருசலேமுக்குத் திரும்பினார்கள்; அது எருசலேமுக்குச் சமீபம், ஒரு
13 ஓய்வுநாள் பிரயாண தூரம். அவர்கள் அங்கே வந்தபோது தாங்கள் தங்கியிருந்த மேல்வீட்டில் ஏறினார்கள். அவர்கள், பேதுரு யோவான் யாக்கோபு அந்திரேயா பிலிப்பு தோமா பர்த்தொலொமேயு மத்தேயு அல்பேயுவின் குமாரன் யாக்கோபு செலோத்தே என்ற சீமோன் யாக்கோபின்
14 குமாரன் யூதா என்பவர்கள். அங்கே இவர்கள் யாவரும் ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாராகிய மரியம்மாளோடும் அவர் சகோதரரோடுங்கூட ஏகமனதாய் ஜெபத்தில் தரித்திருந்தார்கள்.

15 அந்நாட்களில் ஏறக்குறைய நூற்றிருபது பேர் ஒன்றாய்க் கூடியிருந்தபோது பேதுரு
16 சகோதரர் நடுவே எழுந்து நின்று: சகோதரரே, இயேசுவைப் பிடித்தவர்களுக்கு வழிகாட்டியான யூதாவைக்குறித்துப் பரிசுத்த ஆவி தாவீதின் வாயினால் முன் உரைத்த வேதவாக்கியம் நிறைவேற வேண்டியதா
17 யிருந்தது; அவன் எங்களில் ஒருவனாக எண்ணப்பட்டான்; இந்த ஊழியத்தில் பங்குபெற்றான். அநீதத்தின் கூலியினால் 18
அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்தான், முகங்குப்புறக் கீழேவிழுந்தான், அவன் வயிறுவெடித்தது, குடல்களெல்லாம் சரிந்து போயின. இது எருசலேமிலுள்ள குடிகள் 19
யாவருக்கும் தெரியலாயிற்று; ஆகவே, அந்த நிலம் அவர்கள் சுயபாஷையிலே இரத்தநிலம் எனப் பொருள்படும் அக்கெல்தமக் என வழங்குகிறது. சங்கீத புஸ்தகத்தில்: 20

அவன் வாசஸ்தலம் பாழாவதாக,
எவனும் அதில் குடிபுகாதிருப்பானாக
என்றும்
அவன் ஆட்சியை வேறொருவன் பெறுவானாக

என்றும் எழுதியிருக்கிறது. இப்படியிருப்பதால், யோவான் ஞானஸ்நானங்கொடுத்த 21
காலமுதல் ஆண்டவராகிய இயேசு நம்மிடத்திலிருந்து உயர எடுத்துக்கொள்ளப்பட்ட நாள்வரைக்கும் | அவர் நம்மோடு 22
சஞ்சரித்த காலமெல்லாம், எங்களோடுகூடவே இருந்த மனுஷரிலொருவன் அவருடைய உயிர்த்தெழுதலுக்கு எங்களோடு சாட்சியாகவேண்டும் என்றான். அப்பொ 23
ழுது அவர்கள் யுஸ்து என்னும் மறுநாமமுள்ள பர்சபா எனப்பட்ட யோசேப்பு, மத்தியா ஆகிய இருவரை நிறுத்தி: ஆண்ட 24
வரே, எல்லாருடைய இருதயங்களையும் அறிகிறவரே, யூதாவென்பவன் தனக்குரிய இடத்தைக்குப் போகும்படி இந்த ஊழியத்திலும் இந்த அப்போஸ்தல பதவியிலும் விட்டுப்போன இடத்தைப் பெறுவதற்கு | இவ்விருவரில் தேவரீர் தெரிந்தெடுத்தவனை 25
எங்களுக்குக் காண்பித்தருளுமென்று ஜெபித்தார்கள். பின்பு அவர்களைக் குறித்து 26
சீட்டுப்போட்டார்கள், சீட்டு மத்தியாவின் பேருக்கு விழுந்தது; விழவே, அவன் பதினொரு அப்போஸ்தலரோடும் சேர்த்துக் கொள்ளப்பட்டான்.

**2** பெந்தெக்கொஸ்தே நாள் நிறைவேறுகையில் எல்லாரும் ஒன்றாய்க் கூடியிருந்தார்கள். அப்பொழுது வேகமாய் அடிக்கிற 2
பலத்த காற்றுபோல் வானத்திலிருந்து சடுதியாய் ஒரு முழக்கமுண்டாகி அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அக்கினி நாவுகள்போன்ற நாவுகள் பிரிந்து 3
வருகிறவைகளாய் அவர்களுக்குக் காணப்பட்டன; அவர்கள் ஒவ்வொருவர்மேலும் பிரிந்துவந்து அமர்ந்தது. யாவரும் பரிசுத்த 4
ஆவியினால் நிரப்பப்பட்டார்கள்; தாங்கள்

19 என்றார். இன்னவிதமான மரணத்தினாலே அவன் கடவுளை மகிமைப்படுத்துவானென் பதைக் குறிக்கும்படி இப்படிச்சொன்னார். அவர் இதைச்சொல்லி அவனிடம்: என் 20 னைப் பின்பற்றி வா என்றார். பேதுரு திரும்பிப் பார்த்து இயேசு அன்பு கூர்ந்த சீஷன் பின்னே வருகிறதைக் கண்டான். இராப்போஜனப் பந்தியில் அவர் மார் பண்டையில் சாய்ந்து: ஆண்டவரே, உம் மைக் காட்டிக் கொடுக்கிறவன் யார் என்று 21 கேட்டவன் இவனே. அவனைக்கண்டு பேதுரு இயேசுவினிடம்: ஆண்டவரே, 22 இவன் காரியமென்ன என்றான். அதற்கு இயேசு: நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்ன? நீ என்னைப் பின்பற்றி வா என்றார். ஆகை 23 யால், அந்தச் சீஷன் மரிப்பதில்லை என்கிற பேச்சு சகோதரருக்குள்ளே பரவிற்று. ஆனாலும், அவன் மரிப்பதில்லை என்று இயேசு சொல்லாமல், நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக் கென்னவென்று சொன்னார்.

அந்தச் சீஷன் இவைகளைக்குறித்துச் 24 சாட்சி பகர்ந்து இவைகளை எழுதினவன், அவனுடைய சாட்சியம் மெய்யென்று நமக்குத் தெரியும்.

இயேசு செய்த வேறு அநேக காரியங்க 25 ளுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகந்தானும் கொள்ளாதென்று எண்ணுகிறேன்.

---

# THE ACTS OF THE APOSTLES

---

# அப்போஸ்தலர் வர்த்தமானம்

**1** தேயோப்பிலுவே, இயேசுவானவர் தாம் பரத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின யாவற்றையுங் குறித்து முத 2 லாம் பிரபந்தம் எழுதினேன். தாம் தெரிந் தெடுத்த அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியினால் கட்டளையிட்டபின எடுத்துக் 3 கொள்ளப்பட்டார். தாம் பாடுபட்டபின்பு நாற்பதுநாளாய் அவர்களுக்குத் தரிசன மாகிக் கடவுளின் ராஜ்யத்துக்குரியவற்றை யுபதேசித்துப் பல தெளிவான அடையாளங் களினால் தம்மை உயிருள்ளவராக அவர் களுக்குக் காண்பித்தார். மேலும் அவர் 4 அவர்களோடு [1]கூடிவந்திருக்கும்போது: யோவான் ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுத் தான்; நீங்களோ சில நாளைக்குள்ளே பரி சுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவீர் கள்; ஆகையால் எருசலேமைவிட்டுப் 5

[1] போஜனஞ் செய்துகொண்டிருக்கும்போது என்றும் திருப்பலசம்.

போகாமல் என்னிடங் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்களென்று கட்டளையிட்டார்.

6 கூடிவந்திருந்தவர்களோ அவரிடம்: ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுக்கிறீ
7 ரென்று கேட்க | அவர்: பிதா தமது அதிகாரத்தில் வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்த
8 தல்ல. பரிசுத்த ஆவி உங்கள்மேல் வரும்போதோ நீங்கள் வல்லமை பெற்று எருசலேமிலும் யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும் பூமியின் கடைசிபரியந்தமும் என்
9 சாட்சிகளா யிருப்பீர்களென்றார். இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே, அவர் உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; ஒரு மேகம் அவர்கள் கண்களுக்கு அவரை மறைத்து
10 எடுத்துக்கொண்டது. அவர் போகிறபோது அவர்கள் அண்ணாந்து வானத்தைக்கூர்ந்து பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, வெண் வஸ்திரந்தரித்த இருவர் அவர்க
11 ளருகே நின்று: கலிலேயரே, நீங்கள் ஏன் வானத்தைப் பார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள்? உங்களிடத்திலிருந்து வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசு எவ்விதமாக வானத்துக்குள் போகக் கண்டீர்களோ அவ்விதமாகவே வருவார் என்றார்கள்.

12 அப்பொழுது அவர்கள் ஒலிவமென்னும் மலையிலிருந்து எருசலேமுக்குத் திரும்பினார்கள்; அது எருசலேமுக்குச் சமீபம், ஒரு
13 ஓய்வுநாள் பிரயாண தூரம். அவர்கள் அங்கே வந்தபோது தாங்கள் தங்கியிருந்த மேல்வீட்டில் ஏறினார்கள். அவர்கள், பேதுரு யோவான் யாக்கோபு அந்திரேயா பிலிப்பு தோமா பர்த்தொலொமேயு மத்தேயு அல்பேயுவின் குமாரன் யாக்கோபு செலோத்தே என்ற சீமோன் யாக்கோபின்
14 குமாரன் யூதா என்பவர்கள். அங்கே இவர்கள் யாவரும் ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாராகிய மரியம்மாளோடும் அவர் சகோதரரோடுங்கூட ஏகமனதாய் ஜெபத்தில் தரித்திருந்தார்கள்.

15 அந்நாட்களில் ஏறக்குறைய நூற்றிருபது பேர் ஒன்றாய்க் கூடியிருந்தபோது பேதுரு
16 சகோதரர் நடுவே எழுந்து நின்று: சகோதரரே, இயேசுவைப் பிடித்தவர்களுக்கு வழிகாட்டியான யூதாவைக்குறித்துப் பரிசுத்த ஆவி தாவீதின் வாயிலாய் முன் உரைத்த வேதவாக்கியம் நிறைவேற வேண்டியதா
17 யிருந்தது; அவன் எங்களில் ஒருவனாக எண்ணப்பட்டான்; இந்த ஊழியத்தில் பங்குபெற்றான். 18 அநீதத்தின் கூலியினால் அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்தான், முகங்குப்புறக் கீழேவிழுந்தான், அவன் வயிறுவெடித்து, குடல்களெல்லாம் சரிந்து போயின. 19 இது எருசலேமிலுள்ள குடிகள் யாவருக்கும் தெரியலாயிற்று; ஆகவே, அந்த நிலம் அவர்கள் சுயபாஷையிலே இரத்தநிலம் எனப் பொருள்படும் அக்கெல்தமக் என வழங்குகிறது. 20 சங்கீத புஸ்தகத்தில்:

அவன் வாசஸ்தலம் பாழாவதாக,
எவனும் அதில் குடிபுகாதிருப்பானாக
என்றும்
அவன் ஆட்சியை வேறொருவன் பெறுவானாக

என்றும் எழுதியிருக்கிறது. 21 இப்படியிருப்பதால், யோவான் ஞானஸ்நானங்கொடுத்த காலமுதல் ஆண்டவராகிய இயேசு நம்மிடத்திலிருந்து உயர எடுத்துக்கொள்ளப்பட்ட நாள்வரைக்கும் | 22 அவர் நம்மோடு சஞ்சரித்த காலமெல்லாம், எங்களோடு கூடவே இருந்த மனுஷரிலொருவன் அவருடைய உயிர்த்தெழுதலுக்கு எங்களோடு சாட்சியாகவேண்டும் என்றான். 23 அப்பொழுது அவர்கள் யுஸ்து என்னும் மறுநாமமுள்ள பர்சபா எனப்பட்ட யோசேப்பு, மத்தியா ஆகிய இருவரை நிறுத்தி: 24 ஆண்டவரே, எல்லாருடைய இருதயங்களையும் அறிகிறவரே, யூதாவென்பவன் தனக்குரிய இடத்துக்குப் போகும்படி இந்த ஊழியத்திலும் இந்த அப்போஸ்தல பதவியிலும் விட்டுப்போன இடத்தைப் பெறுவதற்கு | இவ்விருவரில் தேவரீர் தெரிந்தெடுத்தவனை 25 எங்களுக்குக் காண்பித்தருளுமென்று ஜெபித்தார்கள். 26 பின்பு அவர்களைக் குறித்துச் சீட்டுப்போட்டார்கள், சீட்டு மத்தியாவின் பேருக்கு விழுந்தது; விழவே, அவன் பதினொரு அப்போஸ்தலரோடும் சேர்த்துக் கொள்ளப்பட்டான்.

**2** பெந்தெக்கொஸ்தே நாள் நிறைவேறுகையில் எல்லாரும் ஒன்றாய்க் கூடியிருந்தார்கள். 2 அப்பொழுது வேகமாய் அடிக்கிற பலத்த காற்றுபோல் வானத்திலிருந்து சடுதியாய் ஒரு முழக்கமுண்டாகி அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. 3 அக்கினி நாவுகள்போன்ற நாவுகள் பிரிந்து வருகிறவைகளாய் அவர்களுக்குக் காணப்பட்டன; அவர்கள் ஒவ்வொருவர்மேலும் பிரிந்துவந்து அமர்ந்தது. 4 யாவரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள்; தாங்கள்

வசனிக்கும்படி ஆவியருளியவாறே இதர பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள்.
5 வானத்தின் கீழுள்ள சகல ஜாதியாரிலு மிருந்து வந்திருந்த பக்தியுள்ள யூதர் அப் பொழுது எருசலேமில் குடியிருந்தார்கள்.
6 அந்தச் சத்தமுண்டானபோது திரளானங் கள் கூடிவந்தார்கள். தங்கள் தங்கள் பாஷையில் அவர்கள் பேசுகிறதை அவரவர்
7 கள் கேட்டபடியினால் கலங்கினார்கள். எல் லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு: இதோ, பேசுகிற இவர்கள் யாவரும் கலிலேயரல்
8 லவா? அப்படியிருக்க, நம்மில் அவரவர் ஜென்மபாஷையில் இவர்கள் பேசக் கேட்
9 கிறோமே; இதெப்படி? பார்த்தரும் மேத ரும் எலாமீத்தரும், மெசொப்பொத்தாமியா யூதேயா கப்பத்தோக்கியா பொந்து ஆசியா
10 பிரிகியா பம்பிலியா | எகிப்து தேசங்களி லும் சிரேனே பட்டணத்துக்குச் சமீபமான லீபியாவின் திசைகளிலும் குடியிருக்கிறவர் களும், இங்கே சஞ்சரிக்கிற ரோமாபுரியா
11 ரும், யூதர் யூதமார்க்கத்திற் சேர்ந்துகொண்ட வரும் கிரேத்தர் அரபியருமாகிய நாம் நமது பாஷைகளில் இவர்கள் கடவுளின் மகத்து வங்களைப் பேசக் கேட்கிறோமே என்ஞர்
12 கள். எல்லாரும் பிரமித்துத் திகைப் படைந்து இது என்னவாகுமோ என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்
13 கள். மற்றவர்களோ: இவர்கள் தித்திப் பான மது நிறைந்தவர்களென்று பரியாசம் பண்ணினார்கள்.
14 அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங் கூட எழுந்துநின்று அவர்களைப் பார்த்து உரத்த சத்தமாய் வசனித்து: யூதரே, எரு சலேமில் குடியிருக்கிற சகல ஜனங்களே, இ தை யறிந்துகொள்வீர்களாக. என்
15 வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள். நீங் கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்ட வர்களல்ல, இது பொழுது விடிந்து மூன்று
16 மணி வேளைதானே. தீர்க்கதரிசியாகிய யோவேலின் மூலமாய் உரைக்கப்பட்டதே இது:
17 கடைசி நாட்களில்
மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்,
அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும்
தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்;
உங்கள் வாலிபர் தரிசனங்களையும்
உங்கள் முதியோர் சொப்பனங்களையுங் காண்பார்கள்;
18 என் அடிமைகளான ஆண்கள்மேலும் பெண்கள்மேலும்
அந்நாட்களில் என் ஆவியை ஊற்று வேன்,
அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்.
19 உயர வானத்திலே அற்புதங்களையும் தாழ பூமியிலே இரத்தம், அக்கினி, புகைக் காடு ஆகிய அடையாளங்களையுங் காட்டு
20 வேன்; பெரிதும் மகிமை விளங்குவது மான கர்த்தருடைய நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும் சந்திரன் இரத்த மாகவும் மாறும்.
21 அப்பொழுது கர்த்தரின் நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் ரட்சிக்கப்படுவான் என்று கடவுள் உரைக்கிறார்.
22 இஸ்ரவேலரே, இவ்வார்த்தைகளைக் கேளுங் கள்; நீங்களே அறிந்திருக்கிறபடி, நசரேய னாகிய இயேசுவைக்கொண்டு கடவுள், உங்கள் மத்தியில் வல்ல செயல்களையும் அற் புதங்களையும் அடையாளங்களையுஞ் செய் தார்; இப்படிச்செய்து அவரை இன்ன
23 தென்று உங்களுக்கு விளங்கக் காட்டினார். கடவுள் நிர்ணயித்திருந்த ஏற்பாட்டினாலும் அவர் முன்னறிவினாலும் இந்த இயேசு ஒப் புக்கொடுக்கப்படவே, நீங்கள் அக்கிரமக் காரர் கைகளால் அவரைச் சிலுவையி
24 லறைந்து கொன்றுவிட்டீர்கள். மரண உபாதைகளின் கட்டை அவிழ்த்துக் கடவுள்
25 அவரை எழுப்பினார்; மரணம் அவரைக் கட்டிவைத்துக்கொள்வது அசாத்தியம். தாவீதே அவரைக் குறித்து:
கர்த்தரை எப்பொழுதும்
எனக்கு முன் நோக்கிக்கொண்டிருந் தேன்;
நான் அசைக்கப்படாதபடி
அவர் என் வலதுபாரிசத்திலேயே இருக் கிறார்.
26 அதினிமித்தம் என் இருதயம் மகிழ்ந் தது.
என் நாவு களிகூர்ந்தது;
என் மாம்சமுங்கூட நன்னம்பிக்கையில் தங்கும்;
27 என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உமது பக்தன் அழிவைக் காணவொட் டீர்;
28 ஜீவ வழிகளை எனக்குத் தெரியப்படுத்தி னீர்;
உமது சந்நிதானத்தில்
என்னைச் சந்தோஷத்தினால் நிரப்புவீர்
என்று சொல்லுகிறார்.
29 சகோதரரே, கோத்திரத்தலைவனாகிய தாவீ தைக்குறித்து நான் உங்களோடு தாராள

மாய்ப் பேசலாம். அவன் மரணமடைந்தான், அடக்கமும் பண்ணப்பட்டான்; அவன் கல்லறை இந்நாள்வரைக்கும் நம்மிடமிருக்கிறது. அவன் தீர்க்கதரிசியானதால் தனது சந்ததியில் ஒருவரைத் தனது சிங்காசனத்தில் வீற்றிருக்கச் செய்வதாகக் கடவுள் ஆணையிட்டுச் சொன்னதை அவன் அறிந்திருந்தான். அவர் பாதாளத்திலே விடப்படுவதில்லையென்றும் அவர் மாம்சம் அழிவைக்காண்பதில்லையென்றும் முன்னறிந்தவனாக கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக்குறித்துப் பேசினான். இந்த இயேசுவைக் கடவுள் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகள். ஆகவே, அவர் கடவுளின் வலதுகரத்தில் உயர்த்தப்பட்டு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த பரிசுத்த ஆவியைப் பிதாவினிடமிருந்து பெற்று நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார். தாவீது பரலோகத்திற்கு எழுந்துபோகவில்லையே.

கர்த்தர் என் ஆண்டவரிடம்:
நான் உமது சத்துருக்களை
உமக்குப் பாதபடியாக்கிப் போடுமட்டும்,
நீர் என் வலதுபாரிசத்தில் உட்காரும்
என்றார்

என அவனே சொல்லியிருக்கிறான். ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே கடவுள் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் வீட்டாரனைவரும் நிச்சயமாய் அறிந்துகொள்வார்களாக என்று சொன்னான்.

அவர்கள் இதைக் கேட்டபொழுது இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகிப் பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டுமென்றார்கள். பேதுரு அவர்களிடம்: நீங்கள் மனந்திரும்பி உங்கள் பாவமன்னிப்புக்கென்று ஒவ்வொருவரும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தம் உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும், நமது கடவுளாகிய ஆண்டவர் வரவழைக்கும் யாவருக்குமே, உரியதென்று சொன்னான். இன்னும் அநேக வார்த்தைகளைக்கொண்டு திடச்சாட்சி கூறி: கோணலான இந்தச் சந்ததியைவிட்டு விலகி உங்களை ரட்சித்துக்கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான். அவன் வார்த்தையை ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் அப்போஸ்தலர் உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும் ஜெபங்களிலும் தரித்திருந்தார்கள்.

எல்லாருக்கும் பயமுண்டாயிற்று; அநேக அற்புதங்களும் அடையாளங்களும் அப்போஸ்தலரால் செய்யப்பட்டன. விசுவாசிகளனைவரும் ஒன்றுபடிருந்து யாவற்றையும் பொதுவாய்வைத்து அனுபவித்தார்கள். காணியாட்சிகளையும் உடைமைகளையும் விற்று அவனவன் அவசியத்துக்குத் தக்கபடி அவைகளில் எடுத்து எல்லாருக்கும் பகிர்ந்துகொடுத்தார்கள். அவர்கள் ஏகமனதாய்த் தெய்வாலயத்தில் அநுதினமும் தரித்திருந்து வீடுகள்தோறும் அப்பம் பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணிக் | கடவுளைத் துதித்து வந்தார்கள். ஜனங்களெல்லாரும் அவர்களிடத்தில் பிரியமாயிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களை ஆண்டவர் அநுதினமும் ஒன்றுசேர்த்துக்கொண்டுவந்தார்.

ஜெபவேளையாகிய ஒன்பதாமணி நேரத்தில் **3** பேதுருவும் யோவானும் தெய்வாலயத்துக்குப் போய்க்கொண்டிருக்கையில் | தாயின் கர்ப்பத்திலிருந்தே சப்பாணியாயிருந்த ஒரு மனுஷனைச் சிலர் தூக்கிக்கொண்டு வந்தார்கள்; தெய்வாலயத்திற்குள் போகிறவர்களிடம் பிச்சைகேட்கும்படி நாடோறும் அவனை அலங்காரவாசல் எனப்பட்ட தெய்வாலய வாசலண்டையில் வைப்பார்கள். தெய்வாலயத்திற்குள் பிரவேசிக்கப்போகிற பேதுருவையும் யோவானையும் அவன் கண்டு பிச்சைகேட்டான். யோவானோடு பேதுரு அவனை உற்றுப்பார்த்து: எங்களை நோக்கிப்பார் என்றான். அவர்களிடம் ஏதாகிலும் கிடைக்குமென்றெண்ணி முடவன் அவர்களைக் கவனித்துப் பார்த்தான். பேதுருவோ: வெள்ளியும் பொன்னும் என்னிடமில்லை; என்னிடமுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் நட என்று சொல்லி | வலது கையினால் அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான்; உடனே அவன் பாதங்களும் கணுக்கால்களும் பலங்கொண்டன. அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான்; நடந்து குதித்துக் கடவுளைத் துதித்துக்கொண்டு அவர்களோடு தெய்வாலயத்திற்குட் சென்றான். அவன் நடக்கிறதையும் கடவுளைத் துதிக்கிறதையும் ஜனங்களெல்லாரும் கண்டு, தெய்வாலயத்தின் அலங்கார

வாசலண்டையில் பிச்சைகேட்டு உட்கார்ந் திருந்தவன் இவனே என்றறிந்து அவனுக் குச் சம்பவித்ததைக்குறித்து மிகவும் பிர மிப்படைந்து திகைத்துப்போனார்கள்.

11 அவன் பேதுருவையும் யோவானையும் பற் றிக்கொண்டிருக்கையில் ஜனங்களெல்லா ரும் பிரமிப்புள்ளவர்களாய்ச் சாலொமோன் மண்டபமென்ற மண்டபத்தில் அவர்க

12 ளிடம் ஓடிவந்தார்கள். பேதுரு அதைக் கண்டு ஜனங்களைப்பார்த்து: இஸ்ரவேலரே, இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிற தென்ன? நாங்கள் சுயசக்தியினாலாவது சுய பக்தியினாலாவது இவனை நடக்கப்பண்ணி னோமென்று நீங்கள் எங்களை உற்றுப்பார்க்

13 கிறதென்ன? ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களின் கடவுளாகிய நமது பிதாக் களின் கடவுள் தமது [1] தாசனாகிய இயேசு வை மகிமைப்படுத்தினார்; நீங்களோ அவரை ஒப்புக்கொடுத்துப் பிலாத்து அவருக்கு விடு தலைத் தீர்ப்பிடவிருக்கையில் அவனுக்கு

14 முன்பாக அவரைமறுதலித்தீர்கள். பரிசுத்த மும் நீதியுமுள்ளவரை நீங்கள் மறுதலித்துக் கொலைபாதகனை உங்களுக்குத் தயவாய் அளிக்கவேண்டுமென்று கேட்டு ஜீவாதிபதி

15 யைக் கொலைசெய்தீர்கள்; அவரைக் கடவுள் மரித்தோரிலிருந்தெழுப்பினார்; அதற்கு நாங்

16 களே சாட்சிகள். நீங்கள் பார்க்கிறவனும் அறிகிறவனுமாகிய இந்த மனுஷனை அவர் நாமமே, அவர் நாமத்தைப் பற்றும் விசு வாசத்தினாலே, பலப்படுத்தினது; அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லா ருக்குமுன்பாக இந்தப் பூரண சுகத்தை

17 இவனுக்குக் கொடுத்தது. இப்பொழுதும், சகோதரரே, உங்கள் அதிகாரிகளைப்போல வே நீங்களும் அறியாமையினாலே இதைச்

18 செய்தீர்களென்று அறிவேன். கடவுளோ தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாயினாலும் முன்னறிவித்தவைகளை, கிறிஸ்து பாடுபட வேண்டுமென்பதை, இப்படி நிறைவேற்றி

19 னார். உங்கள் பாவங்கள் அழிக்கப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்

20 படுங்கள். அப்பொழுது ஆண்டவருடைய சமுகத்திலிருந்து இளைப்பாறுதல் காலம் வரும் படி உங்களுக்குமுன் குறிக்கப்பட்ட கிறிஸ் துவை அனுப்புவார்; அவர் இயேசுதான்.

21 யாவும் சீருக்கு வருங்காலம் வரைக்கும் பர லோகமே அவர் இருக்கவேண்டிய ஸ்தானம்; யுகாரம்பமுதலே கடவுள் தமது பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாக்கினால் இதைப்பற்றித்

22 திருவுளம் பற்றினார். மோசே:

கர்த்தராகிய கடவுள்
என்னைப்போலும் ஒரு தீர்க்கதரிசியை
உங்கள் சகோதரரிலிருந்து உங்களுக்
கென்று எழும்பப்பண்ணுவார்;
அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லா
வற்றிலும்

அவருக்குச் செவிகொடுப்பீர்களாக.

23 அந்தத் தீர்க்கதரிசிக்குச் செவிகொடா
தவனெவனோ
அவன் ஜனத்திலிராதபடி நிர்மூலமாக்கப்
படுவான்

24 என்றார். சாமுவேல்முதல் சகல தீர்க்க தரிசிகளும், பின்வந்தவர்களில் எத்தனை பேர் தீர்க்கதரிசனம் உரைத்தார்களோ அத் தனைபேரும், இந்த நாட்களையே அறிவித்தார்

25 கள். நீங்கள் அந்தத் தீர்க்கதரிசிகளுக்குப் புத்திரர்;

உன் சந்ததியினால்
பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்
வதிக்கப்படும்

என்று கடவுள் ஆபிரகாமுக்குச்சொல்லி உங்கள் பிதாக்களோடு செய்த உடன்படிக் கைக்கும் புத்திரர். முதலாவது உங்கள் 26 பொருட்டே கடவுள் தமது தாசனை எழுப்பி உங்களில் ஒவ்வொருவரையும் உங்கள் பொல்லாங்குகளிலிருந்து விலக்கி ஆசீர் வதிக்கிறவராக அவரை அனுப்பினார் என் றார்.

4 அவர்கள் ஜனங்களிடம் பேசிக்கொண் டிருக்கையில் ஆசாரியரும் தெய்வாலயச் சேனைத்தலைவனும் சதுசேயரும் அவர்க

2 ளிடம் வந்து, அவர்கள் ஜனங்களுக்கு உப தேசிக்கிறதினிமித்தமும் மரித்தோரி லிருந்து உயிர்த்தெழுவதண்டென்பதை இயே சுவை முன்னிட்டுப் பிரசங்கிக்கிறதினிமித்

3 தமும் சினங்கொண்டு அவர்களைப் பிடித் தார்கள்; அது சாயங்காலம், ஆகையினால் மறுநாள்வரைக்கும் அவர்களைக் காவலில்

4 வைத்தார்கள். வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் நம்பினார்கள்; நம்பின புருஷர் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிற்று.

5 மறுநாள் அவர்கள் அதிகாரிகளும் மூப் பரும் வேதபாரகரும் எருசலேமில் கூட்டங் கூடினார்கள். அவர்களோடு பிரதான ஆசாரி

6 யன் அன்னவும் காய்பா யோவான் அலெக் சந்தர் இவர்களும் பிரதான ஆசாரிய குடும் பத்தைச் சேர்ந்தோர் அனைவருமிருந்தார்

7 கள். அப்பொழுது அவர்களை நடுவே நிறுத்தி: நீங்கள் எந்த வல்லமையினால், எந்த

1 பிள்ளையாகிய என்றும் திருப்பலாம்

நாமத்தினால், இதைச் செய்தீர்களென்று
8 விசாரிக்கப் | பேதுரு பரிசுத்த ஆவியினாலே
நிறைந்தவனாய் அவர்களைப் பார்த்து: ஜனத்
தின் அதிகாரிகளே, மூப்பரே, பிணியாளிக்
குச் செய்யப்பட்ட நன்மை விஷயமாய் |
9 இவன் எதினாலே குணமானானென்று இன்று
10 எங்களை விசாரணை செய்கிறதானால் | உங்க
ளெல்லாருக்கும் இஸ்ரவேல் ஜனம் அனைத்
துக்கும் இது தெரிந்திருக்கட்டும்: உங்கள்
முன்னிலையில் இவன் குணமாகி நிற்கிறது,
நீங்கள் சிலுவையில் அறைந்தவரும் கடவுள்
மரித்தோரிலிருந்தெழுப்பினவருமாகிய நச
ரேயன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலேயே.
11 வீடு கட்டுகிறவர்களாகிய நீங்கள் அற்பமாய்
எண்ணின அவரே கோடிக்குத் தலைக்கல்
12 லானவர். வேறெருவராலும் இரட்சிப்
பில்லை; நாம் இரட்சிப்பைப் பெறுவதற்கு
வானத்தின்கீழ் மனுஷருக்குள் அருளப்
பட்ட வேறெரு நாமமுமில்லை என்று
சொன்னான்.
13 பேதுருவும் யோவானும் பேசுகிற தைரி
யத்தை அவர்கள் கண்டு இவர்கள் கல்வி
யறியாத சாமான்ய மனிதரென்று அறிந்து
ஆச்சரியப்பட்டார்கள். இவர்கள் இயேசு
வுடன் இருந்தவர்களென்றும் அறியலா
14 னார்கள். சுகமடைந்த மனுஷன் அவர்க
ளோடு நிற்கிறதைக் கண்டபடியால் எதிர்
15 பேச அவர்களுக்கு இடமில்லை. ஆகவே
ஆலோசனைச் சங்கத்தைவிட்டு வெளியே
போகும்படி அவர்களுக்குக் கட்டளையிட்
டுத் தங்களுக்குள்ளே யோசனைசெய்து:
16 இந்த மனுஷரை நாம் என்னசெய்யலாம்?
வெளிப்படையான அடையாளமொன்று
இவர்களால் செய்யப்பட்டது, அது எருச
லேமில் குடியிருக்கிற யாவருக்குந் தெரியும்,
17 அதை நாம் மறுக்கமுடியாது. ஆயினும்
இது ஜனத்துக்குள் இன்னும் அதிகமாய்ப்
பரவாதபடி எவரோடும் இந்த நாமத்தைப்
பற்றி இனிமேல் பேசக்கூடாதென்று அவர்
களைப் பயமுறுத்துவோமென்று சொல்லிக்
18 கொண்டு | அவர்களையழைத்து, இயேசு
வின் நாமத்தைப்பற்றி எவ்வளவும் பேச
வும் உபதேசிக்கவுங் கூடாதென்று அவர்
19 களுக்குக் கட்டளையிட்டார்கள். பேதுரு
வும் யோவானுமோ அவர்களிடம்: கடவு
ளுக்குச் செவிகொடுப்பதிலும் உங்களுக்குச்
செவிகொடுப்பது கடவுளுக்குமுன் நியாய
20 மாகுமோ, நிதானியுங்கள். கண்டவை
களையுங் கேட்டவைகளையும் பேசாமலிருக்க
எங்களால் முடியாதென்று சொன்னார்கள்.
21 ஆகிலும் அவர்களை இன்னும் பயமுறுத்தி
விடுதலைசெய்து விட்டார்கள். நடந்ததைப்
பார்த்த எல்லாரும் கடவுளை மகிமைப்
படுத்தி வந்தபடியால் அவர்களைத் தண்டிக்க
ஜனங்களினிமித்தம் வகையொன்றும் காணா
மற்போனார்கள். இந்த அடையாளத்தின் 22
மூலமாய்ச் சொஸ்தமடைந்தவன் நாற்பது
வயதுக்கு மேற்பட்டவன்.
அவர்கள் விடுதலையானபின் தங்களைச் 23
சேர்ந்தவர்களிடம் வந்து பிரதான ஆசாரிய
ரும் மூப்பரும் தங்களுக்குச் சொன்ன
யாவற்றையும் அறிவித்தார்கள். அவர்கள் 24
அதைக்கேட்டவுடனே ஏகமனதாய்க் கடவுளை
நோக்கிச் சத்தமிட்டு: ஆண்டவரே, நீரே
வானம் பூமி சமுத்திரங்களையும் அவைகளி
லுள்ள யாவற்றையும் படைத்தவர்.
புறஜாதிகள் கொந்தளிப்பானேன்? 25
ஜனங்கள் வீண் காரியங்களைச் சிந்திப்பா
னேன்?
கர்த்தருக்கும் அவர் கிறிஸ்துவுக்கும் 26
விரோதமாகப்
பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்றார்
கள்,
அதிகாரிகளும் ஒன்றாய்க் கூட்டங் கூடி
னார்கள்
என்று தேவரீர் எங்கள் பிதாவும் உமது
தாசனுமாகிய தாவீதின் வாக்கினால் பரிசுத்த
ஆவியைக்கொண்டு உரைத்தீர். அந்தப் 27
படியே ஏரோதும் பொந்தியுபிலாத்தும்
உம்மால் அபிஷேகஞ் செய்யப்பட்ட உமது
பரிசுத்த தாசன் இயேசுவுக்கு விரோதமாய்ப்
புறஜாதிகள் இஸ்ரவேல் ஜனங்கள் இவர்க
ளோடு இந்தப் பட்டணத்தில் மெய்யாகவே
கூட்டங்கூடினார்கள். நடந்தேறவேண்டு 28
மென்று உமது கரமும் ஆலோசனையும்
முன்குறித்த யாவற்றையும் இவ்விதமாய்ச்
செய்தார்கள். இப்பொழுதும், ஆண்டவரே, 29
அவர்கள் பயமுறுத்திவருவதைக் கவனித்
துக்கொள்ளும்; பிணியாளிகளைச் சொஸ்த 30
மாக்க உமது கரத்தை நீட்டியருளும், உமது
பரிசுத்ததாசனாகிய இயேசுவின் நாமத்தின்
மூலமாய் அடையாளங்களும் அற்புதங்க
ளும் நடப்பித்தருளும், இப்படிச் செய்து
உமது அடியார் உமது வார்த்தையை முழு
தைரியத்தோடும் கூறும்படி அவர்களுக்கு
அநுக்கிரகஞ் செய்தருளுமென்று ஜெபித்
தார்கள். அவர்கள் ஜெபிக்கையில் அவர் 31
கள் கூடியிருந்த இடம் அசைந்தது; அவர்க
ளெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரபப
பட்டுக் கடவுளின் வார்த்தையைத் தைரி
யத்தோடு கூறிவந்தார்கள்.
விசுவாசிகளாகிய கூட்டத்தார் ஒரே 32
இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயி
ருந்தார்கள். ஒருவனும் தனக்குள்ளவை

களில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; அனைத்தும் அவர்களுக்குப்
33 பொதுவாயிருந்தது. ஆண்டவராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைப்பற்றி அப்போஸ்தலர் மிகுந்த வல்லமையாய்ச் சாட்சிபகர்ந்து வந்தார்கள்; அவர்களெல்லாரும் மிகுந்த அருள் பெற்றவர்களாய் விளங்கினார்கள்.
34 நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்றவைகளின் கிரயத்
35 தைக் கொண்டு வந்து | அப்போஸ்தலர் பாதங்களில் வைப்பார்கள். அவனவன் அவசியத்துக்குத் தக்கபடி பகிர்ந்துகொடுக்கப்படும்; அவர்களில் ஒருவனுக்கும் ஒரு குறையுமிருந்ததில்லை.
36 யோசேப்பென்னும் லேவியனெருவனிருந்தான், அவன் சீப்புரு தீவான். இவனுக்கு அப்போஸ்தலர் பர்னபாவெனப் பேரிட்டிருந்தார்கள்; அது சகாயசீலன்
37 எனப் பொருள்படும். இவன் தன் நிலத்தை விற்றுக் கிரயத்தைக் கொண்டுவந்து அப்போஸ்தலர் பாதங்களில் வைத்தான்.

**5** அனனியா என்னும் ஒருவன் தன் மனைவி சப்பீராளோடு சேர்ந்து ஒரு நிலத்தை விற்
2 றான். அதன் கிரயத்தில் ஒரு பங்கைத் தன் மனைவியும் அறிய வஞ்சித்துவைத்துக் கொண்டு ஒரு பங்கைக் கொண்டுவந்து அப்போஸ்தலர் பாதங்களில் வைத்து விட்டான்.
3 பேதுருவோ: அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்துப் பரிசுத்த ஆவியினிடம் பொய் சொல்லும்படி சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அது இருக்கும்போதும் உன்னுடையதா யிருக்கவில்லையோ? அதை விற்ற
4 பின்னும் அதின் கிரயம் உன் வசத்திலிருந்ததல்லவோ? நீ உன் இருதயத்தில் இப்படிப்பட்ட காரியத்தைக் கொண்டதென்ன? நீ பொய் சொன்னது மனுஷரிடத்திலல்ல,
5 கடவுளிடத்திலேயே என்றான். இந்த வார்த்தைகளைக் கேட்கவே அனனியா விழுந்து ஜீவனை விட்டான்; அதைக் கேள்விப்பட்ட யாவருக்கும் மிகுந்த பயமுண்
6 டாயிற்று. வாலிபர் எழுந்து அவனைத் துணியில் சுற்றி வெளியே கொண்டுபோய்
7 அடக்கம் பண்ணினார்கள். ஏறக்குறைய மூன்று மணி நேரத்துக்குப்பின் அவன் மனைவி உள்ளே வந்தாள்; நடந்தது அவ
8 ளுக்குத் தெரியாது. பேதுரு அவளிடம்: நிலத்தை இவ்வளவுக்குத்தானே கொடுத்தீர்கள்? எனக்குச் சொல் என்று கேட்க அவள்: ஆம், இவ்வளவுக்குத்தான் என்,
9 றாள். பேதுரு அவனைப்பார்த்து: ஆண்டவரின் ஆவியைச் சோதிக்கும்படி நீங்கள் ஒருமனப்பட்டதென்ன? உன் புருஷனை அடக்கம்பண்ணினவர்களின் கால்கள், இதோ, வாசற்படியிலே வந்திருக்கின்றன, உன்னையும் வெளியே கொண்டுபோவார்கள் என்
10 றான். உடனே அவன் பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டாள். வாலிபர் உள்ளே வந்து அவள் மரித்திருக்கிறதைக் கண்டு அவளையும் வெளியே கொண்டுபோய் அவள்
11 புருஷனண்டையில் அடக்கம்பண்ணினார்கள். சபையாரெல்லாருக்கும் இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று.

12 அப்போஸ்தலர் கைகளினால் அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள் நடுவில் செய்யப்பட்டன. எல்லாரும் ஏகமனதாய்ச் சாலொமோன் மண்டபத்தில் இருந்தார்கள். மற்றவர்களில் ஒருவரும்
13 அவர்களுடன் சேர்ந்துகொள்ளத் துணியவில்லை. ஆகிலும் ஜனங்கள் அவர்களைக்
14 கொண்டாடினார்கள். ஆண்டவரிடத்தில் நம்பிக்கையுள்ள திரளான புருஷரும் ஸ்திரீகளும் இன்னுமதிகமாய்ச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். ஆகவே, பேதுரு நடந்து
15 போகையில் யார்மேலாகிலும் அவன் நிழலாவது படும்படி பிணியாளிகளைக் கட்டில்களிலும் படுக்கைகளிலுங் கிடத்தி வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைப்பார்கள்.
16 எருசலேமைச் சுற்றியிருந்த ஊர்களிலிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையுங் கொண்டுவந்து கூடினார்கள்; அவர்களெல்லாரும் சொஸ்தமாக்கப்பட்டார்கள்.

17 பிரதான ஆசாரியனும் அவனைச் சேர்ந்தவர் அனைவருமோவெனில்—இவர்கள் சதுசேய சமையத்தினர் — எழும்பிப் பொறுமையினால் நிறைந்தவர்களாய் | அப்போஸ்தல
18 ரைப் பிடித்துப் பொதுச் சிறைச்சாலையில் போட்டார்கள். ஆண்டவரின் தூதனெரு
19 வன் இரவிலே சிறைச்சாலைக் கதவுகளைத் திறந்து அவர்களை வெளியே அழைத்துவந்து:
20 நீங்கள் போய்த் தெய்வாலயத்தில் நின்று இந்த மெய் ஜீவவசனங்கள் யாவற்றையும்
21 ஜனங்களுக்குக் கூருங்கள் என்றான். அவர்கள் அதைக் கேட்டு அதிகாலையில் தெய்வாலயத்திற்குட் சென்று உபதேசஞ் செய்து கொண்டிருந்தார்கள். பிரதான ஆசாரியனும் அவனைச் சேர்ந்தவர்களும் வந்து ஆலோசனைச் சங்கத்தாரையும் இஸ்ரவேல் புத்திரரின் மூப்பர் சங்கத்தாரனைவரையுங் கூட்டி யழைத்து அப்போஸ்தலரைக்

கொண்டுவரும்படி சிறைச்சாலைக்குச் சேவ
22 கரையனுப்பினார்கள். போனவர்கள் சிறைச்
சாலையில் அவர்களைக் காணாமல் திரும்பி
23 வந்து: சிறைச்சாலை மிகுந்த பத்திரமாய்ப்
பூட்டியிருக்கக் கண்டோம், காவற்காரரும்
கதவுகளுக்கு முன் காத்து நின்றார்கள்.
திறந்த பொழுதோ உள்ளே ஒருவரையுங்
24 காணவில்லையென்று அறிவித்தார்கள். இந்த
வார்த்தைகளைக் கேட்கவே தெய்வாலயச்
சேனைத்தலைவனும் பிரதான ஆசாரியரும்
இது என்னவாகுமோவென்று அவர்களைக்
25 குறித்துத் திகைப்புற்றார்கள். அப்பொழுது
ஒருவன் வந்து: நீங்கள் காவலில் வைத்த
மனுஷர், இதோ, தெய்வாலயத்தில் நின்று
ஜனங்களுக்கு உபதேசஞ் செய்துகொண்டி
ருக்கிறார்களென்று அவர்களுக்கு அறிவித்
26 தான். அறிவிக்கவே சேனைத்தலைவன் சே
வகரோடு போய் அவர்களை அழைத்துவந்
தான்; ஜனங்கள் கல்லெறிவார்களென்று பய
ந்து அவர்களைப் பலவந்தஞ்செய்யவில்லை.
27 அவர்களை அழைத்துவந்து ஆலோசனைச்
சங்கத்தின்முன் நிறுத்தவே பிரதான ஆசா
28 ரியன் அவர்களை வினவி: நீங்கள் இந்த
நாமத்தைப்பற்றி உபதேசஞ்செய்யக்கூடா
தென்று நாங்கள் உங்களுக்குக் கண்டிப்
பாய்க் கட்டளையிட்டோமே. அப்படியி
ருந்தும், இதோ, உங்கள் உபதேசத்தினால்
எருசலேமை நிரப்பிவிட்டீர்கள். அந்த
மனுஷனின் இரத்தப்பழியை எங்கள்மேல்
சுமத்தவேண்டு மென்றிருக்கிறீர்களென்று
29 சொன்னான். அதுகேட்ட பேதுருவும் மற்ற
அப்போஸ்தலரும்: மனுஷருக்குக் கீழ்ப்படி
வதைப் பார்க்கிலும் கடவுளுக்கே கீழ்ப்படி
30 யவேண்டும். நீங்கள் சிலுவை மரத்திலே
தொங்கவைத்துக் கொலை செய்த இயே
சுவை நமது பிதாக்களின் கடவுள் எழுப்பி
31 னார். இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும்
பாவமன்னிப்பையும் அருளும்படி கடவுள்
அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும்
32 தமது வலதுகரத்தினால் உயர்த்தினார். இந்
தச் சங்கதிகளுக்கு நாங்கள் சாட்சிகள்; கட
வுள்தமக்குக்கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்த
ருளின பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்
கள்.

33 அதை அவர்கள் கேட்டபொழுது மிக
வும் மூர்க்கங்கொண்டு அவர்களைக் கொன்று
34 போட விரும்பினார்கள். ஆலோசனைச்
சங்கத்தில் கமாலியேல் என்னும் பரிசேய
னொருவனிருந்தான். இவன் சகல ஜனங்க
ளின் மதிப்பையும் பெற்ற நியாயசாஸ்திரி.
இவன் எழுந்து அம்மனிதரைச் சிறிதுநேரம்
வெளியே கொண்டுபோகச் சொல்லிச் சங்
கத்தாரைப்பார்த்து: இஸ்ரவேலரே, நீங்கள் 35
செய்யப்போகிற காரியத்தில் இந்த மனுஷ
ரைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். இந் 36
நாட்களுக்கு முன்னே தெயுதா என்பவன்
தோன்றித் தன்னை ஏதோ பெரியவனைப்
பாராட்டினான்; ஏறக்குறைய நானூறு பேர்
அவனைச் சார்ந்தார்கள்; அவன் கொலையுண்
டான், அவனை நம்பின அனைவரும் சித
றுண்டு அவமானர்கள். அவனுக்குப் 37
பின்பு, ஜனத்தொகை கணக்குப்பார்க்கும்
நாட்களில், கலிலேயன் யூதா தோன்றித்
தன்னைப் பின்பற்ற அநேக ஜனங்களை
இழுத்தான்; அவனும் அழிந்தான்; அவனை
நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப்பட்
டார்கள். இப்பொழுதும் நான் உங்களுக் 38
குச் சொல்லுகிறேன், இந்த மனுஷரைத்
தொடவேண்டாம், இவர்களை விட்டுவிடுங்
கள். இந்த யோசனையாவது இந்த வேலை
யாவது மனுஷராலுண்டாயிருந்தால்
ஒழிந்துபோம். கடவுளாலுண்டாயிருந்தா 39
லோ அதை ஒழித்துவிட உங்களால் முடி
யாதேபோம். நீங்கள் கடவுளோடு போர்
செய்கிறவர்களாகக் காணப்படவும் கூடுமே
என்றான். அவர்கள் அவன் யோசனைக்கு 40
உடன்பட்டு அப்போஸ்தலரையழைத்து
அவர்களை அடித்து இயேசுவின் நாமத்தைப்
பற்றிப் பேசக்கூடாதெனக் கட்டளையிட்டு
விடுதலைசெய்தார்கள். அவர்களோ ஆலோ 41
சனைச் சங்கத்தைவிட்டுப் போய்த் தாங்கள்
அந்த நாமத்துக்காக அவமானமடையப்
பாத்திரராய்க் காணப்பட்டபடியால் சந்தோ
ஷப்பட்டார்கள். தினந்தினம் தெய்வாலயத் 42
திலும் வீடுகள்தோறும் இடைவிடாமல்
உபதேசஞ்செய்து கிறிஸ்துவாகிய இயே
சுவை நற்செய்தியாகப் பிரசங்கித்துவந்தார்
கள்.

அந்நாட்களில் சீஷர் தொகை பெருகி 6
னபோது கிரேக்க யூதர் தங்கள் விதவைகள்
அன்றுடகப் பராமரிப்பில் சரியாய்க் கவ
னிக்கப்படவில்லையென்று எபிரேய யூத
ருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள். அப் 2
பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை
வரவழைத்து: நாங்கள் கடவுளின் வார்த்
தையைப் போதிப்பதைவிட்டுப் பந்தி விசா
ரணையிலேயே இருப்பது தகுதியல்ல. ஆத 3
லால், சகோதரரே, உங்களில் பரிசுத்த ஆவி
யும் ஞானமும் நிறைந்த நல்லவர்களென்று
மதிப்புப் பெற்றிருக்கிற ஏழு பேரைத்
தெரிந்தெடுங்கள்; அவர்களை இந்த
வேலைக்கு ஏற்படுத்துவோம்; நாங்களோ 4
ஜெபத்திலும் திருவசன ஊழியத்திலும் தரித்

5 திருப்போம் என்றார்கள். அவர்கள் சொன்னது கூட்டத்தாரனைவருக்கும் பிரியமாயிருந்தது. அப்பொழுது விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவனுகிய ஸ்தேவான் பிலிப்பு பிரொகோரு நிக்கானோர் தீமோன் பர்மெனு யூதமார்க்கத்திற் சேர்ந்துகொண்ட அந்தியோகியா பட்டணத்தான் நிக்கொலா
6 என்ற இவர்களைத் தெரிந்தெடுத்து | அப்போஸ்தலர் முன் நிறுத்தினார்கள். அவர்கள் ஜெபஞ்செய்து இவர்கள்மேல் கைகளை வைத்தார்கள்.

7 கடவுளின் வசனம் விருத்தியடைந்தது; சீஷர் தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியரிலும் திரளானவர்கள் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்து வந்தார்கள்.

8 ஸ்தேவான் கிருபையும் வல்லமையும் நிறைந்தவனுய் ஜனங்களுக்குள் அற்புதங்களையும் பெரிய அடையாளங்களையுஞ்
9 செய்துவந்தான். அப்பொழுது [1]லிபர்த்தீனர், சிரேனே பட்டணத்தார், அலெக்சந்திரியா பட்டணத்தார், சிலிசியா நாட்டார், ஆசியா நாட்டாராகிய இவர்களின் ஜெபாலயங்களைச் சேர்ந்தவர்களில் சிலர் திரும்பி ஸ்தேவானேடு தர்க்கம் பண்ணினார்கள்.

10 அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்து நிற்க அவர்களால் முடிய
11 வில்லை. முடியாமற்போகவே, மோசேக்கும் கடவுளுக்கும் விரோதமாக இவன் தூஷணவார்த்தைகளைப் பேசக் கேட்டோமென்று சொல்லும்படி மனுஷரை ஏற்ப
12 டுத்தி | ஜனங்களையும் மூப்பரையும் வேதபாரகரையுங் திரட்பிவிட்டு அவனிடம் வந்து அவனைப் பிடித்து ஆலோசனைச் சங்கத்துக்கு இழுத்துக்கொண்டுபோய்ப் பொய்
13 சாட்சிகளையும் நிறுத்தினார்கள். இவர்கள்: இந்த மனுஷன் பரிசுத்த ஸ்தலத்துக்கும் நியாயப்பிரமாணத்துக்கும் விரோதமான
14 வார்த்தைகளை ஓயாமற் பேசுகிறான்; அந்த நசரேயனுகிய இயேசு இந்த ஸ்தலத்தை அழித்து விட்டு மோசே நமக்கு ஒப்புவித்த முறைமைகளை மாற்றுவானென்று இவன்
15 சொல்லக்கேட்டோம் என்றார்கள். ஆலோசனைச் சங்கத்தில் உட்கார்ந்திருந்த அனைவரும் அவனைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருக்கவே அவன் முகம் தெய்வதூதன் முகம்போலிருக்கக் கண்டார்கள்.

**7** பிரதான ஆசாரியன் அவனிடம், காரியம் இப்படித்தானவென்று கேட்க |
2 அவன்: சகோதரரே, பிதாக்களே, கேளுங்கள். நமது பிதாவாகிய ஆபிரகாம் காரானூரில் குடியேறுகிறதற்கு முன் மெசொப்பொத்தாமியா நாட்டிலிருக்கும்போது மகிமையின் கடவுள் அவனுக்குத் தரிசனமாகி:
3 உன் தேசத்தையும் உன் இடத்தையும் விட்டு நீ புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்கு வா என்றார். அப்ப
4 டியே அவன் கல்தேயர் தேசத்தைவிட்டுப் புறப்பட்டுக் காரானூரில் வந்து குடியேறினன். அவன் தகப்பன் மரித்தபின் அவ்விடத்தை விட்டு இப்பொழுது நீங்கள் குடியிருக்கிற இத்தேசத்தில் அவனைக் குடியேறச்செய்தார். இதில் ஒரு அடி நிலத்தை
5 யாகிலும் அவனுக்குச் சுதந்தரமாகக் கொடாமலிருக்கையில், அவனுக்குப் பிள்ளையில்லாதிருக்கும்போதே: உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் இதைக் காணியாட்சியாகத் தருவேனென்று அவனுக்கு வாக்குக் கொடுத்தார். அன்றியும், அவன்
6 சந்ததியார் அந்நிய தேசத்தில் பரதேசிகளாயிருப்பார்களென்றும் அத்தேசத்தார் அவர்களை அடிமைகளாக்கி நானூறு வருஷம் துன்பப்படுத்துவார்களென்றும் கடவுள் அவனிடஞ் சொல்லிப் | பின்னும்: அவர்
7 கள் அடிமைகளாய்ச் சேவிக்கும் ஜனத்துக்கு நானே தீர்ப்பிடுவேன். அதன்பின் அவர்கள் புறப்பட்டுவந்து இவ்விடத்திலே எனக்கு ஆராதனை செய்வார்கள் என்றார்.
விருத்தசேதன உடன்படிக்கையையும் அவ
8 னுக்குத் தந்தருளினார். அந்தப்படியே அவன் ஈசாக்கைப்பெற்று எட்டாம் நாளில் அவனுக்கு விருத்தசேதனஞ் செய்தான். ஈசாக்கு யாக்கோபையும் யாக்கோபு பன்னிரு கோத்திரப்பிதாக்களையும் பெற்றார்கள்.
9 கோத்திரப்பிதாக்கள் பொறுமை கொண்டு யோசேப்பை எகிப்துக்குக் கொண்டுபோக விற்றுப் போட்டார்கள்; கடவுளோ அவனுடனிருந்தார். சகல உபத்திரவங்களினின்
10 றும் அவனை விடுவித்து எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் சமுகத்தில் அவனுக்குக் கிருபையையும் ஞானத்தையும் அருளினார்; பார்வோன் அவனை எகிப்து தேசத்திற்கும் தன் வீடனைத்திற்கும் அதிகாரியாக ஏற்படுத்தினன். பின்பு எகிப்து முழுவதிலும் கா
11 னான்தேசத்திலும் பஞ்சமும் மிகுந்த கஷ்டமும் உண்டாகவே நமது பிதாக்களுக்கு ஆகாரங் கிடையாமற்போயிற்று. அப்பொ
12 முது எகிப்திலே தானியமுண்டென்று யாக்கோபு கேள்விப்பட்டு நமது பிதாக்களை முதலாந்தரம் அனுப்பினன். அவன்
13

[1] அடிமைகளாயிருந்து சுயாதீனம் பெற்றவர்கள்

சகோதரர் இரண்டாந்தரம் சென்றபோது யோசேப்பு அவர்களுக்குத் தெரியலானான். பார்வோனுக்கும் யோசேப்பின் வம்சம்
14 தெரிய வந்தது. யோசேப்பு தன் தகப்பன் யாக்கோபும் தன் குடும்பத்தார் அனைவரு
மாகிய எழுபத்தைந்து பேரை அழைத்து
15 வரச் சொல்லியனுப்பினான். அப்படியே
16 யாக்கோபு எகிப்துக்குப்போனான். அவ னும் நமது பிதாக்களும் மரித்து அங்கே யிருந்து சிகேமுக்குக் கொண்டுவரப்பட்டுக் கல்லறையில் வைக்கப்பட்டார்கள்; அது ஆபிரகாம் சிகேமில் எமோரின் சந்ததியா
ரிடம் வெள்ளிக் கிரயங்கொடுத்து வாங்கின
17 கல்லறை. கடவுள் ஆபிரகாமுக்குக் கட டனையிட்டருளின வாக்குத்தத்தம் நிறை
18 வேறுங்காலம் சமீபித்தபோது | நமது ஜனம் எகிப்தில் பலுகிப் பெருகியிருந்தது. யோசேப்பை யறியாத வேறு வம்ச ராஜன் எகிப்திலே அரசாளத் தொடங்கினான்.
19 இவன் நமது ஜாதியாரைச் சர்ப்பனையாய் நடத்திக் குழந்தைகள் உயிரோடிராதபடி நமது பிதாக்கள் அவைகளை வெளியே போட்டுவிடச் செய்து அவர்களைத் துன்பப்
20 படுத்தினான். அக்காலத்திலே மோசே பிறந் தான்; அவன் தெய்வ சவுந்தரியமுள்ளவனாயி ருந்து மூன்று மாதமளவும் தன் தகப்பன் வீட்டிலேயே வளர்க்கப்பட்டான்.
21 அவனை வெளியே போட்டுவிட்டபோது பார்வோனுடைய குமாரத்தி அவனை எடுத்
22 துத் தனக்குப் பிள்ளையாக வளர்த்தாள். எகிப்தியரின் எல்லா ஞானமும் மோசேக்
23 குக் கற்பிக்கப்பட்டது. அவன் வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான். அவனுக்கு நாற்பது வயதாகையில் இஸ்ரவேல் புத்திர ராகிய தன் சகோதரரைக்கண்டு விசாரிக்க வேண்டுமென்று அவன் மனதில் எண்ண
24 முண்டாயிற்று. அப்பொழுது அவர்களில் ஒருவன் அநியாயமாய் நடத்தப்படுகிறதை அவன் கண்டு அவனுக்குத் துணைநின்று எகிப்தியனை வெட்டித் துன்பப்பட்டவன்
25 பொருட்டுப் பழிவாங்கினான். தன் கையி னால் கடவுள் தங்களுக்கு இரட்சிப்பைத் தந்தருளுகிறாரென்பதைத் தன் சகோதரர் அறிந்துகொள்வார்களென்று அவன் நினைத் தான்; அவர்களோ அதை அறிந்துகொள்
26 ளாமற்போனார்கள். மறுநாளிலே சண்டை செய்துகொண்டிருந்தவர்களுக்கு அவன் எதிர்ப்பட்டு: மனுஷரே, நீங்கள் சகோதரர், ஒருவருக்கொருவர் ஏன் அநியாயஞ் செய் கிறீர்களென்று அவர்களைச் சமாதானப்படுத்
27 தும்படி பேசினான். அயலானுக்கு அநியா யஞ் செய்தவன் அவனைப் பிடித்துத் தள்ளி:

எங்கள்மேல் அதிகாரியாகவும் நியாயாதிபதி யாகவும் உன்னை ஏற்படுத்தினவன் யார்?
28 நேற்று நீ எகிப்தியனைக் கொன்றதுபோல என்னையும் கொல்ல விரும்புகிறாயோ என்
29 றான். இந்த வார்த்தையைக் கேட்கவே மோசே ஓடிப்போய் மீதியான் தேசத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தான்; அங்கே அவ னுக்கு இரண்டு குமாரர் பிறந்தார்கள்.
30 பின்னும் நாற்பது வருஷம் நிறைவேறவே சீனாய் மலையின் வனாந்தரத்தில் தெய்வ தூதன் முட்செடி எரிகிற அக்கினி ஜுவாலையில் அவனுக்குத் தரிசனமானான்.
31 மோசே அந்தக் காட்சியைக் கண்டு அதிசயப் பட்டான்; அதை உற்றுப் பார்க்கும்படி
32 சமீபித்து வருகையில்: நான் உன் பிதாக்க ளின் கடவுள், ஆபிரகாம் ஈசாக்கு யாக் கோபு என்பவர்களின் கடவுள் என்று கர்த் தர் திருவுளம்பற்றின சத்தம் பிறந்தது. மோசே நடுங்கிவிட்டான், உற்றுப்பார்க்கத்
33 துணியவில்லை. கர்த்தரோ அவனிடம்: உன் கால்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றி விடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி. எகிப்
34 திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்தேன், அவர்கள் பெருமூச்சைக் கேட்டேன், அவர்களை விடு விக்கும்படி இறங்கிவந்தேன்; இப்போ தும், நீ வா, நான் உன்னை எகிப்திற்கு
35 அனுப்புவேன் என்றார். உன்னை அதிகாரி யாகவும் நியாயாதிபதியாகவும் ஏற்படுத்தின வன் யாரென்று சொல்லி அவர்கள் அவனை மறுத்துவிட்டார்கள்; இந்த மோசேயையே கடவுள், முட்செடியில் அவனுக்குத் தரிச னமான தூதன் துணையோடு, தலைவனாகவும்
36 மீட்பனாகவும் அனுப்பினார். இவன் எகிப்து தேசத்திலும் சிவந்த சமுத்திரத்திலும் வனாந் தரத்திலும் நாற்பது வருஷ காலமாய் அற்பு தங்களையும் அடையாளங்களையுஞ் செய்து அவர்களை யழைத்துக்கொண்டுவந்தான்.
37 கடவுள் என்னைப்போலும் ஒரு தீர்க்கதரி சியை உங்கள் சகோதரரிலிருந்து உங்களுக் காக எழும்பப்பண்ணுவாரென்று இஸ்ர வேல் புத்திரரிடஞ் சொன்னவன் இந்த மோசேயே. சீனாய் மலையில் தன்னிடம்
38 பேசின தூதனோடும் நமது பிதாக்களோடும் வனாந்தரத்திலே சபையிலிருந்தவனும் இவ னே; நமக்குக் கொடுக்கும்படி ஜீவனுள்ள வசனங்களைப் பெற்றுவந்தவனும் இவன்.
நமது பிதாக்களோ இவனுக்குக் கீழ்ப்
39 படிய மனதற்று இவனைத் தள்ளிவிட்டுத் தங்கள் இருதயங்களில் எகிப்தையே நினைத்
தவர்களாய் | ஆரோனைப் பார்த்து: எங்க
40 ளுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்க

ளுக்கு உண்டுபண்ணும், எகிப்திலிருந்து
எங்களையழைத்து வந்த அந்த மோசேக்கு
என்ன சம்பவித்ததோ தெரியவில்லை
41 யென்று சொல்லிக்கொண்டு | அந்நாட்க
ளில் ஒரு கன்றுக்குட்டியைச்செய்து அந்த
விக்கிரகத்திற்குப் பலியிட்டுத் தங்கள் கை
கள் உண்டாக்கினவைகளைக் கொண்டாடி
42 வந்தார்கள். கடவுளோ விலகிக்கொண்டு
வானத்தின் சேனையை வணங்கும்படி அவர்
களைக் கைவிட்டார்.

இஸ்ரவேல் வீட்டாரே,
வனாந்தரத்தில் நாற்பது வருஷகாலமாய்
யாகங்களையும் பலிகளையும்
எனக்குச் செலுத்தினீர்களோ?

43 மோலோகினுடைய கூடாரத்தையும்
ரொம்பாதேவனின் நட்சத்திரத்தையும்
சுமந்தீர்கள்;
இவைகளே நீங்கள் பணிந்துகொள்ளும்
படி உண்டாக்கின உருவங்கள்.
ஆகையால் உங்களைப் பாபிலோனுக்கப்
பால் குடிபெயரச் செய்வேன்

என்று தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் எழுதி
யிருக்கிறது இதுவே.

44 சாட்சியக்கூடாரம் வனாந்தரத்தில் நமது
பிதாக்களிடமிருந்தது. மீ பார்த்த மாதிரி
யின்படியே அதைச் செய்யவேண்டுமென்று
மோசேயோடு பேசியவர் கட்டளையிட்டி
ருந்த பிரகாரமே அது அமைக்கப்பட்டிருந்
45 தது. நமது பிதாக்கள் அதை முறையே
பெற்றுக் கடவுள் நமது பிதாக்களுக்கு
முன்பாகத் துரத்திவிட்ட புறஜாதிகளின்
காணியாட்சிக்குள் யோசுவாவோடுகூடக்
கொண்டுவந்து தாவீதின் நாள்வரைக்கும்
46 வைத்திருந்தார்கள். இவன் கடவுளினிடம்
தயவு பெற்றவனாய் யாக்கோபின் வீட்டா
ருக்கு ஒரு ஆலயத்தைத் தான் ஏற்படுத்த
வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தான்.
47 சாலொமோனே அவருக்கொரு வாசஸ்தலத்
48 தைக் கட்டினான். ஆகிலும், உன்னதமானவர்
கைகளினால் செய்யப்பட்டவைகளில் வசிப்
பதில்லை. தீர்க்கதரிசி சொல்வதும் அதுவே:

49 வானம் என் சிங்காசனம்,
பூமி என் காலுக்குப்பாதபடி,
எனக்கு நீங்கள் எப்படிப்பட்ட வீட்
டைக் கட்டுவீர்கள்?
நான் இளைப்பாறும் ஸ்தலம் எது?

50 இவைகள் யாவற்றையும் என் கரம்
உண்டாக்கவில்லையா

என்று கர்த்தர் சொல்லுகிறார்

என்பது.

51 வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருத
யத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம்
பெறாதவர்களே, உங்கள் பிதாக்களைப்போல
நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும்
எதிர்த்து நிற்கிறீர்கள். தீர்க்கதரிசிகளில் 52
யாரை உங்கள் பிதாக்கள் இம்சைசெய்யாம
லிருந்தார்கள்? நீதிபரரின் வருகையை
முன்னறிவித்தவர்களை அவர்கள் கொலைசெய்
தார்கள். இப்பொழுது நீங்கள் அந்த நீதி
பரரைக் காட்டிக்கொடுத்தவர்களும் அவ
ரைக் கொலைசெய்தவர்களுமானீர்கள். தெய் 53
வதூதர் வழியாக நியாயப்பிரமாணத்தைப்
பெற்றும் கைக்கொள்ளாமற்போனவர்கள்
நீங்களே என்று சொன்னான்.

இவைகளைக் கேட்கவே அவர்கள் தங் 54
கள் இருதயங்களில் மூர்க்கங்கொண்டு அவ
னைப் பார்த்துப் பல்லைக் கடித்தார்கள்.
அவன் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாய் 55
வானத்தைக் கூர்ந்துபார்த்துக் கடவுளின்
மகிமையையும் கடவுளின் வலதுபாரிசத்தில்
இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு:
அதோ, வானங்கள் திறந்திருக்கிறதையும் 56
மனுஷகுமாரன் கடவுளின் வலதுபாரிசத்
தில் நிற்கிறதையும் பார்க்கிறேனென்றான்.
அவர்களோ உரத்தசத்தமாய்க் கூக்குரலிட் 57
டுத் தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டு
ஏகமனதாய் அவன்மேல் பாய்ந்து, அவனை
நகரத்துக்கு வெளியே தள்ளிக் கல்லெறிந்
தார்கள். சாட்சிகள் சவுல் என்னும் ஒரு 58
வாலிபன் பாதத்தருகே தங்கள் வஸ்திரங்
களை வைத்தார்கள். அப்பொழுது: ஆண்ட 59
வராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்
கொள்ளுமென்று ஸ்தேவான் ஜெபித்து நிற்
கையில் அவனைக் கல்லெறிந்தார்கள். அவ 60
னே முழங்காற்படியிட்டு: ஆண்டவரே,
இவர்கள்மேல் இந்தப்பாவத்தைச் சுமத்தா
திருமென்று மிகுந்த சத்தமிட்டுக் கெஞ்சி
னான். இதைச் சொல்லி நித்திரையடைந்
தான்.

அவன் கொலைக்குச் சவுலும் உடன்பட **8**
டிருந்தான்.

அந்நாளில் எருசலேம் சபைக்கு மிகுந்த
இம்சையுண்டாயிற்று. அப்போஸ்தலர்
தவிர மற்ற யாவரும் யூதேயா சமாரியா
நாடுகளில் சிதறுண்டுபோனார்கள். பக்தி 2
யுள்ள மனுஷர் ஸ்தேவானை அடக்கம்
பண்ணி அவனுக்காக மிகவும் துக்கங்கொண்
டாடினார்கள். சவுலோ வீடுகள்தோறும் 3
நுழைந்து புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்
துப்போய்க் காவலில் போடுவித்துச் சபை
யைப் பாழாக்கிவந்தான்.

சிதறுண்டவர்கள் சுவிசேஷ வசனத் 4
தைப் பிரசங்கித்துத் திரிந்தார்கள். பிலிப்பு 5

சமாரியாவின் பட்டணத்திற்குப் போய் அங்
குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைப் பிரசங்
6 கித்தான். பிலிப்பு சொன்னவைகளை ஜனங்
கள் கேட்டு அவன் செய்துவந்த அடையா
ளங்களையுங் காணவே அவன் சொன்னவை
களை ஒரேமனதாய்க் கவனித்துவந்தார்கள்.
7 அசுத்த ஆவிகள் பிடித்த அநேகரிலிருந்து
அவைகள் மிகுந்த சத்தமிட்டுக்கொண்டு
வெளிப்பட்டன. அநேக திமிர்வாதக்கார
ரும் சப்பாணிகளும் சொஸ்தமானார்கள்.
8 அந்தப் பட்டணத்தில் மிகுந்த சந்தோஷ
முண்டாயிற்று.
9 சீமோன் என்னும் ஒரு மனுஷனிருந்
தான். இதுவரைக்கும் இவன் அந்தப் பட்
டணத்தில் மந்திரவித்தைக்காரனாய்த் தன்னை
யாரோ ஒரு பெரியவனென்று சொல்லிச்
சமாரியா ஜனங்களைப் பிரமிக்கப்பண்ணிக்
10 கொண்டிருந்தான். மகத்து என்னும் தெய்வ
சக்தி அவனே என்று சிறியவன் முதல்
பெரியவன்வரைக்கும் எல்லாரும் அவன்
சொல்வதைக் கவனித்துக் கேட்டுவந்தார்
11 கள். அவன் அநேக காலமாய்த் தன் மந்
திரவித்தைகளினால் அவர்களைப் பிரமிக்கப்
பண்ணினதினால் அவன் சொல்வதைக் கவ
12 னித்துக் கேட்டுவந்தார்கள். கடவுளின் ராஜ்
யத்தையும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தை
யும் நற்செய்தியாகப் பிரசங்கித்த பிலிப்பை
அவர்கள் நம்பினபோது புருஷரும் ஸ்திரீ
13 களும் ஞானஸ்நானம் பெற்றார்கள். சீமோன்
தானும் நம்பினவனாய் ஞானஸ்நானம் பெற்
றுப் பிலிப்பண்டையிலே தரித்திருந்து
அடையாளங்களும் மகத்தான வல்ல செயல்
களும் நடக்கிறதைக் கண்டு பிரமித்துப்
போனான்.
14 சமாரியர் கடவுளின் வார்த்தையை ஏற்
றுக்கொண்டதை எருசலேமிலிருந்த அப்
போஸ்தலர் கேள்விப்பட்டுப் பேதுருவை
யும் யோவானையும் அவர்களிடம் அனுப்பி
15 னார்கள். இவர்கள் வந்தபொழுது அவர்
கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்
படி அவர்களுக்காக ஜெபம் பண்ணினார்
16 கள். அவர்களில் ஒருவர்மீதும் ஆவி இன்
னும் இறங்கவில்லை. அவர்கள் ஆண்டவ
ராகிய இயேசுவின் நாமத்திற்குள்ளாக ஞான
17 ஸ்நானமாத்திரம் பெற்றிருந்தார்கள். இப்
பொழுது அவர்கள்மேல் கைகளை வைக்
கவே அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்
18 கள். சீமோனே அப்போஸ்தலர் கைகளை
வைப்பதினால் ஆவி அருளப்படுகிறதைக்
கண்டபோது அவர்களிடம் பணங்கொண்டு
19 வந்து: நான் எவன்மேல் என் கைகளை
வைக்கிறேனோ அவன் பரிசுத்த ஆவியைப்
பெறும்படி எனக்கும் இந்த அதிகாரத்தைக்
கொடுங்கள் என்றான். பேதுருவோ அவ 20
னிடம்: கடவுளின் வரத்தைப் பணத்தினால்
வாங்கிக்கொள்ளலாமென்று நீ நினைத்தபடி
யால் உன் பணம் உன்னோடுகூட நாசமாகக்
கடவது. உன் இருதயம் கடவுளின்முன் 21
நேர்மையாயிராதபடியால் இந்த விஷயத்தில்
உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை. ஆக 22
வே, நீ உன் துர்க்குணத்தை விட்டு நீங்க
மனந்திரும்பி ஆண்டவரை நோக்கி வேண்
டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின்
எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம். நீ 23
கசப்பான பிச்சிலும் பாவபந்தத்திலும் அகப்
பட்டிருக்கிறதாகக் காண்கிறது என்றான்.
சீமோன் அதைக் கேட்டு: நீங்கள் சொன்ன 24
காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாத
படி நீங்களே எனக்காக ஆண்டவரை
வேண்டிக்கொள்ளுங்கள் என்றான்.
அவர்கள் ஆண்டவரின் வார்த்தையைத் 25
திடசாட்சியாய் அறிவித்துச் சொல்லி
அநேக சமாரிய கிராமங்களில் சுவிசேஷத்
தைப் பிரசங்கித்து எருசலேமுக்குத் திரும்பி
வந்தார்கள்.
பின்பு ஆண்டவரின் தூதன் பிலிப்பினி 26
டம்: நீ எழுந்து தெற்கே சென்று எருசலே
மிலிருந்து காத்சாவுக்குப் போகிற வழி
யாய்ப் போ என்றான்; அது வனாந்தரம்.
அப்படியே அவன் எழுந்து போனான். 27
இதோ, எத்தியோப்பியனொருவன் அவ்வழி
யாய்ப் போய்க்கொண்டிருந்தான். இவன்
எத்தியோப்பிய அரசி கந்தாகே என்பவளி
டம் அதிகாரம் வகித்திருந்த ஓர் அண்ண
கன், அவள் பொக்கிஷமனைத்திற்கும் தலை
வன்; ஆராதிக்கும்படி எருசலேமுக்குப்
போயிருந்தான். இவன் ஊருக்குத் திரும் 28
பிப் போகையில் இரதத்தில் உட்கார்ந்து
ஏசாயா தீர்க்கதரிசனம் வாசித்துக்கொண்
டிருந்தான். நீ போய் அந்த இரதத்தோடு 29
சேர்ந்துகொள் என்று ஆவியானவர் பிலிப்
புக்குச் சொல்லவே, பிலிப்பு ஓடிப்போய்ச்
சேர்ந்தான். அவன் ஏசாயா தீர்க்கதரிச 30
னத்தை வாசிக்கிறது கேட்டு: நீர் வாசிக்கி
றீரே, அது உமக்கு விளங்குகிறதா என்
றான். அதற்கு அவன்: ஒருவன் எனக்கு 31
வழிகாட்டிச் சொன்னாலன்றி அது எப்படி
விளங்குமென்று சொல்லிப் பிலிப்பு ஏறித்
தன்னோடு உட்காரும்படி கேட்டுக்கொண்
டான். அவன் வாசித்துக்கொண்டிருந்த 32
வேதபாகம்:

அவர் ஒரு ஆட்டைப்போல்
அடிக்கப்படுவதற்குக் கொண்டுபோகப்
பட்டார்:

மயிர் கத்திரிக்கிறவன் முன்
ஓர் ஆட்டுக்குட்டி சத்தமிடாதிருக்கிறது போல்
அவர் தமது வாயைத் திறவாதிருந்தார்.
33 அவருடைய தாழ்வினில்
அவர் தீர்ப்பு எடுபட்டுப்போயிற்று:
அவர் சந்ததியை யாராலே விவரித்துச் சொல்லிமுடியும்?
அவர் ஜீவன் பூமியினின்று எடுத்துக் கொள்ளப்படுகிறதே
34 என்பது. அண்ணகன் பிலிப்பைப் பார்த்து: தீர்க்கதரிசி இதை யாரைக்குறித்துச் சொல்லுகிறார்? தம்மைக் குறித்தோ வேறொருவரைக்குறித்தோ? எனக்குச் சொல்லும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.
35 அப்பொழுது பிலிப்பு தன் வாயைத் திறந்து இந்த வேதவாக்கியத்திலிருந்து தொடங்கி இயேசுவை அவனுக்கு நற்செய்தியாகப் பிர
36,37 சங்கித்தான். அவர்கள் வழியே போய்க் கொண்டிருக்கையில் தண்ணீரிருந்த ஓரிடத்திற்கு வந்தார்கள். வரவே அண்ணகன்: இதோ தண்ணீர், நான் ஞானஸ்நானம் பெறத்
38 தடையென்ன வென்றான். இரதத்தை நிறுத்தக் கட்டளையிடவே பிலிப்பு அண்ணகன் இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்
39 தான். அவர்கள் தண்ணீரிலிருந்து ஏறின பொழுது ஆண்டவரின் ஆவி பிலிப்பைச் சடுதியில் கொண்டுபோய்விட்டார். அண்ணகன் சந்தோஷம் நிறைந்தவனாய்த் தன் வழியே போய்க்கொண்டிருந்தபடியால் அப்பு
40 றம் அவனைக் காணவில்லை. பிலிப்பு ஆசோத்தில் காணப்பட்டான்; அவன் செசரியாவுக்கு வரும்வரையில் சகல ஊர்களிலும் சுற்றித்திரிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டுவந்தான்.

**9** சவுல் ஆண்டவரின் சீஷரைப் பயமுறுத்துவதும் கொலை செய்வதுமாய்ச் சீறிக் கொண்டேயிருந்தான். அவன் பிரதான
2 ஆசாரியரிடம் போய் | இந்த மார்க்கத்தாரில் யாரையாவது தான் கண்டுபிடித்தால் அவர்கள் புருஷராகிலும் ஸ்திரீகளாகிலும், அவர்களைக்கட்டி எருசலேமுக்குக் கொண்டு வரும்படி தமஸ்குவிலிருந்த ஜெபாலயங்களுக்குக் கடிதங்களைக் கேட்டு வாங்கினான்.
3 பிரயாணத்தில் அவன் தமஸ்குவைச் சமீபித்தபோது சடுதியில் வானத்திலிருந்து ஓர் ஒளி அவனைச்சுற்றி மின்னல்போல் பிரகாசித்தது; அவன் தரையிலே விழுந்தான். விழ 4
வே, சவுலே, சவுலே, நீ என்னை ஏன் இம்சை செய்கிறாய் என்று தன்னிடஞ் சொல்லுகிற ஒரு சத்தங்கேட்டான். அது கேட்டு 5
அவன்: ஆண்டவரே, நீர் யார் என்று சொல்ல, நீ இம்சைசெய்கிற இயேசு நானே; நீ எழுந்திரு, பட்டணத்துக்குள்ளே போ, நீ 6
செய்யவேண்டியதின்னதென்று அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார். அவ 7
னோடு பிரயாணஞ்செய்த மனுஷர் சத்தத்தைக் கேட்டும் ஒருவரையுங் காணமல் பேச்சற்று நின்றுவிட்டார்கள். சவுல் தரை 8
யிலிருந்தெழுந்தான்; தன் கண்களைத் திறந்த போது ஒன்றுந் தெரியவில்லை. அப்பொழுது கைகளாகக்கொடுத்து அவனைத் தமஸ்குவுக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். அவன் 9
மூன்று நாளளவும் பார்வையற்று அன்ன பானம் ஒன்றும் இல்லாதிருந்தான்.

தமஸ்குவில் அனனியா என்னும் ஒரு 10
சீஷனிருந்தான். அவனுக்கு ஆண்டவர் தரிசனமாகி: அனனியாவே என்று கூப்பிட அவன்: ஆண்டவரே, இதோ அடியேன் என்றான். அப்பொழுது ஆண்டவர்: நீ 11
எழுந்து நேர்தெரு என்னும் தெருவுக்குப் போய் யூதாவின் வீட்டில் சவுல் என்னும் தர்சு பட்டணத்தான் ஒருவனைத் தேடு; இதோ, அவன் ஜெபஞ்செய்துகொண்டிருக்கிறான்; அனனியா என்னும் ஒருவன் தன் 12
னிடம்வந்து தான் பார்வை பெறும்படி தன் மேல் கை வைத்ததாகக் கண்டிருக்கிறான் என்றார். அனனியாவோ: ஆண்டவரே, 13
இந்த மனுஷன் எருசலேமில் உமது பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தானென்று அவனைக்குறித்துப் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இங் 14
கேயும் உமது நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற யாவரையுங் கட்டுவதற்கு அவன் பிரதான ஆசாரியரிடமிருந்து அதிகாரம் பெற்றுவந்திருக்கிறானே என்றான். அதற்கு 15
ஆண்டவர்: நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் எனது நாமத்தைச் சுமந்துகொண்டு போவதற்கு நான் தெரிந்தெடுத்த பாத்திரம். அவன் என் நாமத்தினிமித்தம் எவ்வள 16
வாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார். அன 17
னியா போய் அந்த வீட்டிற்குட்சென்று அவன்மேல் தன் கைகளை வைத்து: சகோதரனே, சவுலே, ஆண்டவர் என்னையனுப்

பினர்; நீ வந்த வழியில் உனக்குத் தரிசன
மான இயேசுவே அவர்; நீ பார்வை பெறும்
படிக்கும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்
படும்படிக்கும் என்னை யனுப்பினார் என்
18 ருன். உடனே அவன் கண்களிலிருந்து
செதில்கள்போன்றவை விழுந்தன; அவன்
பார்வையடைந்தான்; எழுந்திருந்து ஞான
19 ஸ்நானம் பெற்ருன். அதன்பின் போஜனம்
பண்ணிப் பலமடைந்தான்.

20 சவுல் தமஸ்குவிலுள்ள சீஷரோடு சில
நாள் தங்கியிருந்து இயேசுவைத் தெய்வ
குமாரனென்று அவரைத் தாமதமின்றி ஜெ
21 பாலயங்களில் பிரசங்கித்துவந்தான். கேட்
டவரனைவரும் பிரமித்து, இந்நாமத்தைத்
தொழுதுகொள்ளுகிறவர்களை எருசலேமில்
நாசமாக்கி இங்கேயும் அதே நோக்கமாய்
அப்படிப்பட்டவர்களைக் கட்டிப் பிரதான
ஆசாரியரிடங் கொண்டுபோகும்படி வந்
22 தவன் இவனல்லவா என்ருர்கள். சவுலோ
அதிகமதிகமாய்ப் பலங்கொண்டு இவரே
கிறிஸ்துவென்று ஸ்தாபித்துத் தமஸ்குவில்
குடியிருக்கிற யூதர் மனங் குழம்பும்படி
23 செய்தான். வெகுகாலஞ் சென்றபின் யூதர்
அவனைக் கொன்றுபோடும்படி ஆலோசனை
24 செய்தார்கள். அவர்கள் சதியோசனை சவு
லுக்குத் தெரியவந்தது. அவனைக் கொல்
லும்படி அவர்கள் இரவும் பகலும் பட்
டணத்தின் வாசல்களைக் காத்துக்கொண்டி
25 ருந்தார்கள். அவன் சீஷரோ இரவிலே
அவனைக் கொண்டுபோய் ஒரு கூடையில்
வைத்து மதில் வழியாய் இறக்கிவிட்டார்
கள்.

26 சவுல் எருசலேமுக்கு வந்தபோது சீஷ
ரோடு சேர்ந்துகொள்ளப்பார்த்தான்; அவர்
களோ அவனைச் சீஷனென்று நம்பாமல்
எல்லாரும் அவனுக்குப் பயந்திருந்தார்கள்.
27 அப்பொழுது பர்னபா அவனைச் சேர்த்துக்
கொண்டு அப்போஸ்தலரிடம் அழைத்து
வந்து, வழியிலே அவன் ஆண்டவரைக்
கண்டதையும் அவர் அவனோடு பேசினதை
யும் தமஸ்குவில் அவன் இயேசுவின் நாமத்
தில் தைரியமாய்ப் பிரசங்கித்ததையும் அவர்
28 களுக்கு விவரித்துச் சொன்னன். அவன்
எருசலேமில் அவர்களிடம் போவதும்
29 வருவதுமாயிருந்து | ஆண்டவரின் நாமத்
தில் தைரியமாய்ப் பிரசங்கித்துக் கிரேக்க
யூதருடனே பேசித் தர்க்கித்துவந்தான்;
அவர்களோ அவனைக் கொன்றுவிடப் பிர
யத்தனஞ் செய்துகொண்டிருந்தார்கள்.
30 சகோதரர் அதை அறிந்துகொண்டு அவ
னைச் செசரியாவுக்கு அழைத்துப்போய்த்
தர்சுவுக்கு அனுப்பிவிட்டார்கள்.

இப்படியிருக்கவே, யூதேயா கலிலேயே 31
சமாரியா நாடுகளிலெங்கும் திருச்சபை சமா
தானமுற்றுப் பக்தியில் தேறி ஆண்டவருக்
குப் பயப்படுகிற பயத்தில் நடந்து பரி
சுத்த ஆவியின் சகாயத்தினால் பெருகினது.

பேதுரு சகல இடங்களுக்கும் போய்ச் 32
சுற்றிவருகையில் லித்தாவில் குடியிருந்த
பரிசுத்தவான்களிடத்திற்கும் போனன்.
அங்கே எட்டு வருஷம் படுக்கையில் 33
கிடந்த ஐனேயா என்னும் ஒருவனைக்
கண்டான்; அவன் திமிர்வாதக்காரன்.
பேதுரு அவனிடம்: ஐனேயாவே, இயேசு 34
கிறிஸ்து உன்னைச் சொஸ்தமாக்குகிறார்; நீ
எழுந்து உன் படுக்கையை நீயே போட்டுக்
கொள் என்ருன். உடனே அவன் எழுந்
திருந்தான். லித்தாவிலும் சாரோனிலும் 35
குடியிருந்தவர்களனைவரும் அவனைக் கண்
டார்கள், கண்டு ஆண்டவரிடம் திரும்பி
னர்கள்.

யோப்பாவில் தபித்தாள் என்னும் சீஷி 36
ஒருத்தியிருந்தாள்; தபித்தாள் என்பதற்குத்
[1]தோர்க்காள் என்று அர்த்தம். அவள்
நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதி
யாய்ச் செய்துகொண்டிவந்தவள். அந் 37
நாட்களில் அவள் வியாதிப்பட்டு மரித்
தாள். அவளைக் குளிப்பாட்டி மேல்வீட்
டில் கிடத்திவைத்தார்கள். லித்தா யோப் 38
பாவுக்குச் சமீபம். பேதுரு அங்கே இருக்
கிறனென்று சீஷர் கேள்விப்பட்டுத் தாமத
மின்றித் தங்களிடத்திற்கு வரவேண்டு
மென்று அவனைக் கேட்டுக்கொள்ள இரண்
டுபேரை அவனிடம் அனுப்பினர்கள்.
பேதுரு எழுந்து அவர்களோடு போனன். 39
அவன் போய்ச்சேரவே அவர்கள் அவனை
மேல்வீட்டிற்கு அழைத்துப்போனர்கள்.
விதவைகளெல்லாரும் பக்கத்தில் நின்று
தோர்க்காள் தங்களோடிருக்கையில் செய்
திருந்த பல உள்ளாடைகளையும் வஸ்திரங்
களையும் காண்பித்துக்கொண்டு அழுதார்
கள். பேதுருவோ எல்லாரையும் வெளி 40
யே அனுப்பிவிட்டு முழங்காற்படியிட்டு
ஜெபித்தான். பின்பு பிரேதத்திற்கு நேரே
திரும்பி: தபித்தாளே, எழுந்திரு என்ருன்.
அவள் தன் கண்களைத் திறந்து பேதுருவைக்
கண்டு எழுந்து உட்கார்ந்தாள். அவன் 41
அவள் கையைப் பிடித்து எழுந்திருக்கச்
செய்தான். பரிசுத்தவான்களையும் விதவை
களையும் கூப்பிட்டு உயிருள்ளவளாக

[1] தோர்க்காள் என்னும் கிரேக்கு பதம் பெண்மான் என்ற பொருள்படும்.

42 அவனே அவர்கள் முன் நிறுத்தினான். இது
யோப்பாவிலெங்கும் தெரியவந்தது; அநே
கர் ஆண்டவர்மேல் நம்பிக்கை வைத்தார்
43 கள். பின்பு அவன் யோப்பாவில் தோல்
பதனிடுகிற சீமோன் என்னும் ஒருவனிடம்
அநேகநாள் தங்கியிருந்தான்.

**10** செசரியா பட்டணத்தில் கொர்நேலியு
என்னும் ஒருவனிருந்தான். இவன் இத்
தாலியா பட்டாளமென்ற படையில் நூற்
2 றுக்கதிபதி. அவன் பக்தியுள்ளவன், தன்
வீட்டாரனைவரோடுங் கடவுளுக்குப் பயந்த
வன். ஜனங்களுக்கு அதிக தானதருமம்
செய்பவன்; எப்பொழுதுங் கடவுளை நோக்கி
3 ஜெபஞ் செய்துகொண்டிருப்பவன். ஒரு
நாள் பகலில் ஏறக்குறைய ஒன்பதாமணி
நேரம் கடவுளின் தூதன் தன்னிடம் வர
வும் கொர்நேலியுவே என்று தன்னை
அழைக்கவும் பிரத்தியட்சமாய்த் தரிசனங்
4 கண்டான். அவன் தூதனை உற்றுப்
பார்த்துப் பயந்தவனாய்: என்ன ஆண்ட
வரே, என்று கேட்கத் தூதன் உன் ஜெபங்
களும் உன் தருமங்களும் கடவுளின் சந்
நிதியில் ஞாபகார்த்தமாய் எட்டியிருக்கின்
5 றன. இப்பொழுதும் நீ யோப்பாவுக்கு
ஆட்களை யனுப்பிப் பேதுரு என்னும்
மறு நாமமுள்ள சீமோனை அழைப்பி.
6 அவன் தோல் பதனிடுகிற சீமோன் என்
னும் ஒருவனிடத் தங்கியிருக்கிறான்; இவன்
வீடு கடலோரத்திலிருக்கிறது என்றான்.
7 தன்னோடு பேசின தெய்வதூதன் போன
பின்பு அவன் தன் வீட்டு வேலைக்காரரில்
இருவரையும் தன்னண்டையில் காத்து
வேலைசெயகிற போர்ச்சேவகரில்பக்தியுள்ள
8 ஒருவனையும் அழைத்து | எல்லாவற்றை
யும் அவர்களுக்கு விவரித்து அவர்களை
யோப்பாவுக்கு அனுப்பினான்.
9 அவர்கள் பிரயாணஞ்செய்து மறுநாள்
அந்த ஊருக்குச் சமீபமாய் வந்துகொண்
டிருந்த அதே நேரத்தில் பேதுரு ஜெபம்
பண்ணும்படி வீட்டின்மேல் ஏறினான்;
10 அது ஏறக்குறைய ஆறுமணி நேரம். அவ
னுக்கு அதிகப் பசியெடுத்தது, சாப்பிட
விரும்பினான். அவர்கள் ஆயத்தம் பண்ணு
11 கையில் அவன் பரவசமானான். வானம்
திறந்திருக்கிறதாகவும் பெரிய துப்பட்டி
யைப்போன்றதொன்று நான்கு மூலைக
ளாலும் பிடிபட்டதாய்ப் பூமியின்மேல்
12 இறங்கி வருகிறதாகவும் | அதில் பூமியி
லுள்ள சகலவித நாற்கால் பிராணிகளும்
ஊரும் பிராணிகளும் ஆகாயத்துப் பற
13 வைகளும் இருக்கிறதாகவும் கண்டான்.
பேதுருவே, எழுந்திரு, அடித்துச் சாப்பிடு
என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்த
மும் கேட்டது. 14 பேதுருவோ: அப்படி
யல்ல, ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமான
யாதொன்றையும் நான் ஒருகாலும் சாப்
பிட்டதில்லையே என்றான். 15 அப்பொழுது:
கடவுள் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக
எண்ணுதே என்று இரண்டாந்தரமும் ஒரு
சத்தம் அவனிடஞ் சொன்னது. 16 இது
மூன்றுந்தரமும் நேரிட்டது உடனே
அந்தத் துப்பட்டிக்கூடி வானத்துக்குத்
திரும்ப எடுத்துக்கொள்ளப்பட்டது.

17 பேதுரு தான் கண்ட தரிசனம் யாதாகு
மோவெனத் தனக்குள் நினைத்துக்கொண்
டிருக்கையில், இதோ, கொர்நேலியு அனுப்
பிய மனுஷர் சீமோன் வீட்டை விசாரித்துக்
கொண்டே வாசற்படியில் வந்து நின்று:
18 பேதுரு என்னும் மறுநாமமுள்ள சீமோன்
இங்கே தங்கியிருக்கிறாரா என்று கேட்டார்
19 கள். பேதுரு தரிசனத்தைப்பற்றிச் சிந்தித்
துக்கொண்டிருக்கையில் ஆவியானவர்
இதோ, இரண்டு மனுஷர் உன்னைத் தேடு
கிறார்கள். 20 நீ எழுந்து இறங்கி ஒன்றுக்குஞ்
சந்தேகப்படாமல் அவர்களோடு போ;
நானே அவர்களை யனுப்பினேனென்று அவ
னுக்குச் சொன்னார். 21 பேதுரு அந்த மனு
ஷரிடம் இறங்கிப்போய்: இதோ, நீங்கள்
தேடுகிறவன் நான் தான், நீங்கள் வந்த
காரியம் என்ன வென்று கேட்க | 22 அவர்
கள்: கொர்நேலியுவென்னும் நூற்றுக்கதிப
தியொருவரிருக்கிறார். அவர் நீதிமான், கட
வுளுக்குப் பயப்படுகிறவர்; யூத ஜனங்களனை
வராலும் நல்லவரென்று மதிப்புப்பெற்றவர்;
இவர் உம்மைத் தமது வீட்டுக்கு அழைப்
பித்து நீர் சொல்லும் வார்த்தைகளைக் கேட்க
வேண்டுமென்று பரிசுத்த தூதன் கற்பித்
தார் என்றார்கள். 23 ஆகவே பேதுரு அவர்
களை உள்ளே அழைத்து அவர்களுக்கு
உபசாரஞ்செய்தான்.

மறுநாளில் அவன் எழுந்து அவர்க
ளோடு புறப்பட்டான்; யோப்பாவிலிருந்த
சகோதரரில் சிலரும் அவனோடு போ
னார்கள்; 24 மறுநாள் செசரியா சேர்ந்தார்கள்.
கொர்நேலியு தன் சுற்றத்தாரையும் நெருங்
கின சிநேகிதரையுங் கூட்டிவைத்துக்
கொண்டு அவர்கள் வரவை எதிர்பார்த்திருந்
தான். 25 பேதுரு உள்ளே வரவே, கொர்
நேலியு அவனுக்கு எதிர்கொண்டுபோய்
அவன் பாதத்தில் விழுந்து பணிந்துகொண்
டான். 26 பேதுருவோ: எழுந்திரும், நானும்
ஒரு மனுஷன்தானென்று அவனைத் தூக்கி
யெடுத்தான். அவனோடு பேசிக்கொண்டே 27

உள்ளேபோய் அநேகர் கூடிவந்திருக்கிற
28 தைக் கண்டு | அவர்களைப் பார்த்து: இதர
ஜாதியாரோடு கலந்துறவாடுவதும்
அவன் வீட்டுக்குப் போவதும் யூதனல்ல
வனுக்கு அடாதென்று நீங்கள் அறிந்திருக்
கிறீர்கள்; ஆயினும், எந்த மனுஷனையும்
தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும்
சொல்லாதபடி கடவுள் எனக்குக் காண்
29 பித்தார். ஆகையால்தான் என்னை அழைப்
பித்தபோது நான் தடுத்துப்பேசாமல் வந்
தேன். இப்போதும் என்ன காரியமாய்
என்னை அழைத்தீர்களென்று கேட்கிறேன்
30 என்றான். அப்பொழுது கொர்நேலியு:
நானு தினங்களுக்குமுன் இந்நேரமட்டும்
என் வீட்டில் ஒன்பதாமணி ஜெபஞ்செய்து
கொண்டிருந்தேன். இதோ, பிரகாசமான
வஸ்திரந்தரித்த ஒரு மனுஷன் எனக்குமுன்
31 நின்று: கொர்நேலியுவே, உன் ஜெபங்
கேட்கப்பட்டது; உன் தானதருமங்கள்
தெய்வசந்நிதியில் நினைத்தருளப்பட்டன.
32 யோப்பாவுக்கு ஆள் அனுப்பிப் பேதுரு
என்னும் மறுநாமமுள்ள சிமோனை வர
வழை; அவன் கடலோரத்தில் தோல் பத
னிடுகிற சிமோன் வீட்டில் தங்கியிருக்
33 கிறான் என்றார். அப்படியே நான் தாமத
மின்றி உம்மிடத்திற்கு ஆள் அனுப்பினேன்;
நீர் வந்தது நல்ல காரியம்; ஆண்டவர்
உமக்குக் கட்டளையிட்டிருக்கிற யாவற்
றையும் கேட்கும்படி நாங்கள் எல்லாரும்
இப்பொழுது இங்கே கடவுளின் சந்நிதா
னத்தில் கூடியிருக்கிறோம் என்றான்.
34 அப்பொழுது பேதுரு வாய்திறந்து: கட
வுள் பட்சபாதமுள்ளவரல்ல என்றும் |
35 அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிற
வன் எந்த ஜாதியானாலும் அவர் அங்கி
காரத்துக்குரியவனென்றும் நிச்சயமாய்
36 அறிந்துகொள்ளுகிறேன். அவர் இயேசு
கிறிஸ்துவைக்கொண்டு — இவர் எல்லாருக்
கும் ஆண்டவர் — சமாதான நற்செய்தியைக்
கூறி இஸ்ரவேல் புத்திரருக்கு அனுப்பின
37 வார்த்தையை அறிவீர்கள். யோவான் பிர
சங்கித்த ஞானஸ்நானத்துக்குப் பின் கலிலே
யாவில் தொடங்கி யூதேயா முழுவதிலும்
38 நடந்த சங்கதி இதுவே; அதாவது, நாசரேத்
தூர் இயேசுவைப்பற்றியதே. அவரைக்
கடவுள் பரிசுத்த ஆவியினாலும் வல்லமை
யினாலும் அபிஷேகஞ்செய்தார். கடவுள்
அவரோடிருந்தபடியால் அவர் நன்மை
செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில்
அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிற
39 வராயும் சுற்றித்திரிந்தார். யூதரின் நாட்டி
லும் எருசலேமிலும் அவர் செய்தவைகள்
யாவற்றிற்கும் நாங்கள் சாட்சிகள். அவ
ரைச் சிலுவைமரத்தில் தொங்க வைத்துக்
கொலைசெய்தார்கள். அவரைக் கடவுள் 40
மூன்றாம் நாளில் எழுப்பிப் பிரத்தியட்ச
மாய்க் காணப்படச் செய்தார். முழு 41
ஜனத்துக்குமல்ல, சாட்சிகளாகக் கடவுளால்
முன்குறிக்கப்பட்டவர்களும் அவர் மரித்
தோரிலிருந்து எழுந்தபின் அவரோடு போஜ
னபானம் பண்ணினவர்களுமாகிய எங்
களுக்கே, அப்படிச் செய்தார். மேலும், 42
இவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்
தோருக்கும் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட
நியாயாதிபதியென்று ஜனங்களுக்குப் பிரசங்
கிக்கவும் திடசாட்சி பகரவும் அவர் எங்க
ளுக்குக் கட்டளை யிட்டார். இவரில் விசு 43
வாசம்வைக்கிற எவனும் இவர் நாமத்தினால்
பாவ மன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்
கதரிசிகளெல்லாரும் இவரைக் குறித்தே
சாட்சிகொடுக்கிறார்கள் என்றான்.

இந்த வார்த்தமானங்களைப் பேதுரு பேசிக் 44
கொண்டிருக்கையிலேயே வார்த்தையைக்
கேட்ட யாவர்மேலும் பரிசுத்த ஆவி இறங்
கினார். அவர்கள் நாவுகளால் பேசிக் கட 45
வுளைப் புகழ்ந்தார்கள். பேதுருவோடு வந்தி 46
ருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள்
இதைக் கேட்டுப் பரிசுத்த ஆவியின்வரம்
புறஜாதிகள்மீதும் பொழிந்தருளப்பட்ட
தைக்குறித்துப் பிரமித்தார்கள். அப்பொ 47
ழுது பேதுரு: நம்மைப்போல் பரிசுத்த
ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நா
னம் பெறுதபடி எவனாகிலும் தண்ணீரை
விலக்கலாமா என்று சொல்லி | இயேசு 48
கிறிஸ்துவின் நாமத்தில் அவர்களுக்கு ஞான
ஸ்நானங்கொடுக்கும்படி கட்டளையிட்டான்.
அப்பொழுது சிலநாள் அங்கே தங்கும்படி
அவனை வேண்டிக்கொண்டார்கள்.

**11** புறஜாதியாரும் கடவுளின் வார்த்தையை
ஏற்றுக்கொண்டார்களென்று யூதேயாவி
லிருக்கிற அப்போஸ்தலரும் சகோதரரும்
கேள்விப்பட்டார்கள். பேதுரு எருசலே 2
முக்குத் திரும்பி வந்தபோது விருத்தசேத
னக் கட்சியார்: விருத்தசேதனமில்லாத 3
மனுஷரிடம் நீர் போய் அவர்களோடே
போஜனம் பண்ணினீரென்று அவனோடு
வாதாடினார்கள். பேதுரு இந்தக் காரி 4
யத்தை முதலிலிருந்து ஒழுங்காய் அவர்
களுக்கு விவரித்து: நான் யோப்பா ஊரில் 5
ஜெபம்பண்ணிக் கொண்டிருக்கையில் பர
வசமாகி ஒரு தரிசனங் கண்டேன்; பெரிய
துப்பட்டி போன்றதொன்று நான்குமூலை
களாலும் பிடிப்பட்டதாய் வானத்திலிருந்து

6 இறங்கி என்னண்டை வந்தது. நான் அதை உற்றுக் கவனித்துப் பார்க்கவே, பூமியிலுள்ள நாற்கால் பிராணிகளையும் காட்டு மிருகங்களையும் ஊரும் பிராணிகளையும் ஆகாயத்துப் பறவைகளையும் அதில் 7 கண்டேன். பேதுருவே, எழுந்திரு, அடித்துச் சாப்பிடு என்று என்னிடஞ் சொல்லுகிற ஒரு சத்தத்தையுங் கேட்டேன். 8 நானோ: அப்படியல்ல, ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமான யாதொன்றும் ஒரு காலும் என் வாய்க்குள் போனதில்லையே 9 என்றேன். இரண்டாந்தரமும் வானத்திலிருந்து ஒரு சத்தம்: கடவுள் சுத்தமாக்கின வைகளை நீ தீட்டாக எண்ணுதேயென்று 10 மறுமொழியாகச் சொல்லிற்று. இப்படி மூன்று தரம் நடந்தது; அப்பொழுது எல்லாம் திரும்ப வானத்திற்கு எடுத்துக்கொள் 11 ளப்பட்டது. இதோ, செசரியாவிலிருந்து என்னிடம் அனுப்பப்பட்ட மூன்று மனுஷர் அந்நேரமே நான் இருந்த வீட்டின் 12 முன் வந்து நின்றார்கள். நான் ஒன்றுக்கும் சந்தேகப்படாமல் அவர்களோடு போகும்படி ஆவியானவர் எனக்குக் கட்டளையிட்டார். சகோதரராகிய இந்த ஆறுபேரும் என்னோடு வந்தார்கள்; அந்த மனுஷனுடைய வீட்டுக்குட்போனோம். அவனும், 13 தன் வீட்டில் தெய்வதூதன் நிற்கிறதைக் கண்டதாகவும் அந்தத் தூதன்: யோப்பாவுக்கு ஆள் அனுப்பிப் பேதுரு என்னும் 14 மறுநாமமுள்ள சீமோனை யழைப்பி; நீயும் உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப்படுவதற் கேதுவான வார்த்தைகளை அவன் உனக்குச் சொல்லுவானென்று தனக்குச் சொன்னதாகவும் எங்களுக்கு அறிவித்தான். 15 நான் பேசத்தொடங்கவே, பரிசுத்த ஆவியானவர் ஆதியில் நம்மேல் இறங்கினது போலவே அவர்கள்மேலும் இறங்கினார். 16 யோவான் ஜலத்திலல் ஞானஸ்நானங் கொடுத்தான், நீங்களோ பரிசுத்த ஆவியினல் ஞானஸ்நானம் பெறுவீர்களென்று ஆண்டவர் சொன்ன வார்த்தையை அப்பொழுது 17 நினைத்துக் கொண்டேன். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்த நமக்குக் கடவுள் அருளிய அதே வரத்தை அவர்களுக்கும் அருளினாரானல் கடவுளைத் தடுக்க நான் யார்? அதற்கு நான் வல்லவனு என் 18 றான். இவைகளைக் கேட்டபொழுது அவர்கள் அமர்ந்து: அப்படியானல் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைக் கடவுள் புறஜாதியாருக்கும் அருளிவிட்டதாகு மென்று சொல்லிக் கடவுளை மகிமைப்படுத்தினார்கள்.

19 ஸ்தேவான் நிமித்தமாயுண்டான உபத்திரவத்தினல் சிதறிப்போனவர்கள் திருவசனத்தை யூதருக்கேயன்றி வேறெருவருக்கும் கூறாமல் பெனிக்கியா நாடு சீப்புருதேவு அந்தியோகியா பட்டணம்வரைக்கும் சுற்றித் திரிந்தார்கள். 20 அவர்களில் சீப்புருதேவாரும் சிரேனேபட்டணத்தாருமாகிய சிலர் அந்தியோகியாபட்டணத்துக்கு வந்து ஆண்டவராகிய இயேசுவை நற்செய்தியாகப் பிரசங்கித்துக் கிரேக்கருக்கும் அறிவித்தார்கள். 21 ஆண்டவர் கரம் அவர்களோடிருந்தது; அநேக ஜனங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஆண்டவரிடந் திரும்பினர்கள். 22 இவர்களைப் பற்றிய பிரஸ்தாபம் எருசலேமிலுள்ள சபையார் காதுக்கெட்டவே அந்தியோகியாவுக்குப் போகும்படி பர்னபாவையனுப்பினர்கள். 23 அவன் போய்ச் சேர்ந்து கடவுளுடைய கிருபையைக் கண்டபோது சந்தோஷப்பட்டான்; மனநிர்ணயமாய் ஆண்டவரில் நிலைத்திருக்கும்படி எல்லாருக்கும் புத்திசொன்னன். 24 அவன் நல்லவன், பரிசுத்த ஆவியினலும் விசுவாசத்தினலும் நிறைந்தவன். அநேக ஜனங்கள் ஆண்டவரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள். 25 பின்பு சவுலைத் தேடும்படி தர்சுவுக்குப் போனன்; 26 அவனைக் கண்டு அந்தியோகியாவுக்கு அழைத்துக்கொண்டுவந்தான். ஒரு வருஷமளவும் சபையில் அவர்கள் கூடவேயிருந்து அநேக ஜனங்களுக்கு உபதேசித்துவந்தார்கள். சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் முதல் முதல் அந்தியோகியாவிலே வழங்கலாயிற்று.

27 அந்நாட்களில் எருசலேமிலிருந்து தீர்க்கதரிசிகள் அந்தியோகியாவுக்கு வந்தார்கள். 28 அவர்களில் அகபு என்னுமொருவன் எழுந்து உலகமெங்கும் கொடிய பஞ்சம் வரப்போகிறதென்று ஆவியானவராலே குறிப்பித்தான். கிலவுதியுராயன் காலத்தில் அது அப்படியே உண்டானது. 29 சீஷரில் ஒவ்வொருவனும் அவனவன் கிராணிக்குத்தக்கபடி யூதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாகப் பணஞ் சேகரித்து அனுப்பவேண்டுமென்று தீர்மானித்தார்கள். 30 அப்படியே அவர்கள் செய்து பர்னபா சவுல் என்பவர்களின் கையில் கொடுத்து மூப்பரிடம் அனுப்பினர்கள்.

**12** அக்காலத்தில் ஏரோது ராஜா சபையாரில் சிலரைப் பிடித்துத் துன்பப்படுத்தினன். 2 யோவானின் சகோதரன் யாக்கோபைப் பட்டயத்தினல் கொன்றுபோட்டான். 3 அது யூதருக்குப் பிரியமென்று அவன்

கண்டு பேதுருவையும் பிடிக்கத்தொடர்ந்
தான். அப்பொழுது புளிப்பில்லா அப்பப்
பண்டிகை நாட்கள். அப்படியே அவ
னைப் பிடித்துச் சிறையில் போட்டான்.
4 பஸ்கா பண்டிகைக்குப் பின் அவனை வெளி
யே ஜனத்தினிடங் கொண்டுவரலாமென்று
எண்ணங் கொண்டவனுய் அவனைக் காக்கும்
படி பிரிவுக்கு நான்கு போர்ச்சேவகருள்ள
நான்கு பிரிவார்வசம் ஒப்புவித்தான்.
5 பேதுரு இவ்விதமாய்ச் சிறையில் காக்கப்
பட்டிருக்கையில் சபையார் அவனுக்காகக்
கடவுளிடம் ஊக்கத்தோடு ஜெபஞ்செய்து
6 வந்தார்கள். ஏரோது அவனை வெளியே
கொண்டுவரவிருந்த நாளுக்கு முந்தின
இரவில் பேதுரு இரண்டு சங்கிலிகளினுல்
கட்டப்பட்டு இரண்டு சேவகர் நடுவே
தூங்கிக்கொண்டிருந்தான்; காவற்காரரும்
கதவுக்கு வெளியே சிறைச்சாலையைக் காத்
7 துக்கொண்டிருந்தார்கள். இதோ, ஆண்ட
வரின் தூதனெருவன் அங்கே வந்து
நின்ருன்; அறையில் வெளிச்சம் பிரகாசித்
தது. அவன் பேதுருவை விலாவிலே தட்
டிச் சீக்கிரம் எழுந்திரு என்று எழுப்பினுன்.
சங்கிலிகள் அவன் கைகளிலிருந்து கழன்று
8 விழுந்தன. தூதன் அவனிடம்: அரை
கட்டிக்கொள், பாதரட்சைகளைத் தொடுத்
துக்கொள் என்ருன். அவன் அப்படிச்
செய்யவே பின்னும் அவனிடம்: உன் வஸ்
திரத்தைப் போர்த்துக்கொண்டு என் பின்னே
9 வா என்ருன். அப்படியே அவன் புறப்
பட்டுப் பின் சென்ருன்; தூதனுல் நடந்தது
மெய்யென்று அறியவில்லை, தான் தரிசனங்
10 காண்கிறதாக நினைத்தான். அவர்கள் முதற்
காவலையும் இரண்டாங் காவலையுங் கடந்து
நகரத்திற்குள் போகிற இருப்புக்கதவுக்கு
வந்தபோது அது தானுகவே அவர்களுக்குத்
திறந்தது; அவர்கள் வெளியேறித் தெரு
வொடுக நடந்தார்கள்; உடனே தூதன்
11 அவனை விட்டகன்ருன். பேதுருவுக்குத்
தெளிவு வந்தபோது: ஆண்டவர் தமது
தூதனை யனுப்பி ஏரோதின் கைக்கும் யூத
ஜனத்தார் எண்ணிய யாவற்றிற்கும் என்னை
விடுதலையாக்கினரென்று எனக்கு இப்பொ
ழுது உண்மையாய்த் தெரிகிறதென்ருன்.
12 அவன் இப்படி நிச்சயித்துக்கொண்டு
மார்க்கு என்னும் மறுநாமமுள்ள யோவா
னின் தாய் மரியாள் வீடு வந்துசேர்ந்தான்;
அங்கே அநேகர் கூடி ஜெபஞ்செய்துகொண்
13 டிருந்தார்கள். அவன் வாசற்கதவைத்
தட்டவே ரோதையென்னும் வேலைக்காரி
14 ஒருத்தி உற்றுக்கேட்க வந்தாள். அவள்
பேதுருவின் குரலையறிந்து சந்தோஷம்
நிறைந்தவளாய்க் கதவைத் திறவாமலே
உள்ளே யோடிப் பேதுரு வாசலுக்கு
வெளியே நிற்கிறரென்று அறிவித்தாள்.
அவர்களோ: நீ பிதற்றுகிறுய் என அவள்: 15
இல்லை, நான் சொல்லுகிறது மெய்தா
னென்று சாதித்தாள். அப்பொழுது அவர்
கள்: அவருடைய தூதனுயிருக்கவேண்டும்
என்ருர்கள். பேதுருவோ தட்டிக்கொண் 16
டேயிருந்தான். அவர்கள் திறந்தபோது
அவனைக் கண்டு பிரமித்தார்கள். அவர் 17
கள் பேசாமலிருக்கும்படி அவன் கையினுல்
சைகை காட்டி, ஆண்டவர் தன்னை எப்படிச்
சிறையிலிருந்து விடுதலையாக்கினரென்று
விவரித்து, இவற்றை யாக்கோபுக்கும் சகோ
தரருக்கும் அறிவியுங்களென்று சொல்லி
விட்டு வேருெரு இடத்திற்குப் போனுன்.
பொழுது விடிந்த போதோ பேதுருவுக்குச் 18
சம்பவித்த தென்னவோவெனச் சேவகருக்
குள் உண்டான கலக்கம் கொஞ்சமல்ல.
ஏரோது அவனைத் தேடியுங் கண்டு பிடியா 19
மற்போனபோது காவலாளரை விசாரணை
செய்து அவர்களுக்குக் கொலைத்தீர்ப்பிட்
டான். அப்பால் யூதேயாவைவிட்டுச்
செசரியாவுக்குப் போய் அங்கே தங்கி
னுன்.

ஏரோது தீரியர்பேரிலும் சீதோனியர் 20
பேரிலும் மிகவுங் கோபமாயிருந்தான்.
இவர்கள் தேசத்திற்கோ ராஜாவின் தேசத்தி
லிருந்து ஆகாராதிகள் வந்துகொண்டிருந்
தன. ஆகவே, இவர்கள் ஏகமனதாய்
ஏரோது ராஜாவினிடம் வந்து அவன் வீட்
டுப் பிரதானி பிலாஸ்துவைத் தங்கள் கை
வசமாக்கிக்கொண்டு சமாதானங் கேட்டுக்
கொண்டார்கள். குறித்த ஒரு தினத்தில் 21
ஏரோது ராஜவஸ்திரம் தரித்துச் சிங்காசனத்
திலமர்ந்து அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணி
னுன். அது கேட்ட ஜனங்கள்: இது 22
மனுஷசத்தமல்ல, தெய்வசத்தமென்று ஆர
வாரஞ்செய்தார்கள். அவன் கடவுளுக்கு 23
மகிமையைச் செலுத்தாதபடியினுல் உடனே
ஆண்டவரின் தூதன் அவனை அடித்தான்;
அவன் புழுபுழுத்துச் செத்தான்.

ஆண்டவரின் வசனம் விர்த்தியடைந்து 24
பெருகிக்கொண்டே வந்தது.

பர்னபாவும் சவுலும் தங்கள் உபகார 25
ஊழியத்தைச் செய்து முடித்தபின் மார்க்கு
என்னும் மறுநாமமுள்ள யோவானைக் கூட்
டிக்கொண்டு எருசலேமிலிருந்து திரும்பி
னுர்கள்.

அந்தியோகியாவிலே, அங்குள்ள சபை 13
யில், தீர்க்கதரிசிகளும் போதகருமிருந்

தார்கள்; அவர்கள் பர்னபா, நீகர் எனப்
பட்ட சிமியோன், சிரேனே ஊரான் லூகியு,
சிற்றரசன் ஏரோதோடு வளர்ந்த மனுயீன்,
2 சவுல் என்பவர்கள். அவர்கள் ஆண்டவ
ருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக்
கொண்டிருக்கும்போது பரிசுத்த ஆவியான
வர்: பர்னபாவையும் சவுலையும் நான்
அழைத்த ஊழியத்திற்கென்று எனக்காகப்
பிரித்தியேகப் படுத்திவிடுங்களென்று திரு
3 வுளம்பற்றினர். அப்பொழுது உபவாசித்து
ஜெபம்பண்ணி அவர்கள்மேல் கைகளை
வைத்து அவர்களையனுப்பிவிட்டார்கள்.

4 அவர்கள் இப்படியாகப் பரிசுத்த ஆவி
யினால் அனுப்பப்பட்டுச் செலூக்கியா பட்
டணத்துக்கு வந்து அங்கே கப்பலேறிச்
5 சீப்புருதீவுக்குப் போனார்கள். அவர்கள்
சாலமி பட்டணத்தில் வந்து யூதரின்
ஜெபாலயங்களில் கடவுளின் வார்த்தையை
6 யறிவித்து வந்தார்கள். யோவானும் அவர்
களுக்கு உதவிக்காரனாயிருந்தான். அவர்
கள் பாப்போ பட்டணம்வரைக்கும்
தீவைக் கடந்து வந்தபோது பர்யேசு என்
னும் ஒரு யூதனைக் கண்டார்கள்; இவன்
மந்திரவித்தைக்காரன், கள்ளத் தீர்க்கதரிசி.
7 அவன் விவேகசாலியான செர்கியுபவுல்
என்னும் அதிபதியோடிருந்தான். அந்த அதி
பதி பர்னபாவையும் சவுலையும் அழைத்து
அவர்களிடங் கடவுளின் வார்த்தையைக்
8 கேட்க ஆசையாயிருந்தான். அந்த எலிமா
— இந்தப் பேருக்கு மந்திரவித்தைக்கார
னென்று அர்த்தம் — அவர்களுக்கு எதிர்த்து
நின்று அதிபதி நம்பாதபடி தடுக்கப் பிரயா
9 சப்பட்டான். அப்பொழுது பவுல் என்
னும் நாமத்தையுமுடைய சவுலோ பரிசுத்த
ஆவியினால் நிறைந்தவனாய் அவனை உற்றுப்
10 பார்த்து: எல்லாக் கபடமும் எல்லாப்
பொல்லாங்கும் நிறைந்தவனே, பிசாசின்
மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே, ஆண்ட
வரின் செம்மையான வழிகளைப் புரட்டுவதை
11 விட்டு ஓயமாட்டாயோ? இப்போதும்,
இதோ, உன்மேல் ஆண்டவரின் கை! நீ
குருடனாய், சிலகாலம் சூரியனைக் காணாய்
என்று சொல்லியவுடனே மந்தாரமும் இரு
ளும் அவன்மேல் விழுந்தது; அவன் அங்கு
மிங்கும் கைலாகு கொடுக்கிறவர்களைத்
12 தேடினான். அதிபதி சம்பவித்ததைக் கண்டு
ஆண்டவரின் உபதேசத்தைப்பற்றிப் பிர
மிப்படைந்து நம்பிக்கையுள்ளவனானான்.

13 அப்பால் பவுலும் அவனைச் சேர்ந்தவர்க
ளும் பாப்போவைவிட்டுக் கப்பலேறிப் பம்
பிலியாவிலிருக்கும் பெர்கேபட்டனத்துக்
குப் போனார்கள். யோவான் அவர்களை
விட்டுப் பிரிந்து எருசலேமுக்குத் திரும்பி
னான். அவர்கள் பெர்கேயைவிட்டுப் பிர 14
யாணஞ் செய்துகொண்டே பிசிதியா நாட்டு
அந்தியோகியாவுக்கு வந்து ஓய்வுநாளில்
ஜெபாலயத்திற்குப் போய் உட்கார்ந்தார்
கள். நியாயப்பிரமாணமும் தீர்க்கதரி 15
சன ஆகமமும் வாசித்து முடிந்தபின்பு
ஜெபாலயத்தலைவர்: சகோதரரே, நீங்கள்
ஜனங்களுக்குப் போதனையாகச் சொல்லக்
கூடியது ஏதாகிலுமிருந்தால் சொல்லுங்க
ளென்று கேட்கும்படி அவர்களிடம் ஆள்
அனுப்பினார்கள்.

அப்பொழுது பவுல் எழுந்திருந்து கை 16
யமர்த்தி: இஸ்ரவேலரே, கடவுளுக்குப்
பயந்து நடக்கிறவர்களே, கேளுங்கள்.
இஸ்ரவேலராகிய இந்த ஜனத்தின் கடவுள் 17
நமது பிதாக்களைத் தெரிந்தெடுத்து எகிப்து
தேசத்தில் அவர்கள் பரதேசிகளாயிருந்த
போது இந்த ஜனத்தை உயர்த்தித் தமது
புய பலத்தினால் அதிலிருந்து அவர்களைப்
புறப்படப்பண்ணினார். நாற்பது வருஷமாய் 18
வனாந்தரத்தில் அவர்களைச் சகித்துவந்தார்.
கானான்தேசத்தில் ஏழு ஜாதிகளையழித்து 19
அவர்கள் தேசத்தை இவர்களுக்குச் சுதந்
தரமாகப் பங்கிட்டுக் கொடுத்தார். ஏறக் 20
குறைய நானூற்றைம்பது வருஷமானது.
இவற்றின்பின் சாமுவேல் தீர்க்கதரிசி
வரைக்கும் அவர்களுக்கு நியாயாதிபதிகளை
ஏற்படுத்தினார். பின்னும், தங்களுக்கு ஒரு 21
ராஜா வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்
கள்: அப்படியே கடவுள் பென்யமீன்
கோத்திரத்தானும் கீசினுடைய குமார
மான சவுலை நாற்பது வருஷகாலம் அவர்க
ளுக்குக் கொடுத்தார். பின்பு அவர் அவ 22
னைத் தள்ளித் தாவீதை அவர்களுக்கு ராஜா
வாக ஏற்படுத்தி: ஈசாயின் குமாரன் தாவீ
தை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்
டேன்; எனக்குச் சித்தமானவற்றை யெல்
லாம் அவன் செய்வானென்று அவனைப்பற்
றிச் சாட்சியும் கொடுத்தார். இவன் சந்ததி 23
யிலிருந்து கடவுள் தமது வாக்குத்தத்தின்
படியே இஸ்ரவேலுக்கு ரட்சகராக இயே
சுவை வரப்பண்ணினார். இவர் வருகிற 24
தற்கு முன்னே மனந்திரும்புதலுக்குரிய
ஞானஸ்நானத்தை யோவான் இஸ்ரவேல்
ஜனம் அனைத்துக்கும் பிரசங்கித்தான்.
யோவான் தன் ஓட்டத்தை முடிக்கையில்: 25
நீங்கள் என்னை யாரென்று நினைக்கிறீர்கள்?
நான் அவர் அல்ல, இதோ, எனக்குப்பின்
ஒருவர் வருகிறார், அவர் பாதரட்சையை
அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரனல்ல என்
றான். சகோதரரே, ஆபிரகாம் வம்சத்தின் 26

புத்திரரே, கடவுளுக்குப் பயந்து நடக்கிற மற்றவர்களே, நமக்கே இந்த ரட்சிப்பின்
27 வார்த்தை அனுப்பப்பட்டது. எருசலேம் குடிகளும் அவர்கள் அதிகாரிகளும் அவரையும் ஒய்வுநாள்தோறும் வாசிக்கப்படுகிற தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களையும் அறியாமல் அவருக்குத் தீர்ப்பிட்டு அந்த
28 வாக்கியங்களை நிறைவேற்றினார்கள். மரணத்திற்கேதுவானதொன்றும் அவரிடங் காணாதிருந்தும் அவரைக் கொன்றுவிடும்படி
பிலாத்துவைக் கேட்டுக்கொண்டார்கள்.
29 அவரைப்பற்றி எழுதியிருக்கிறவைகள் யாவற்றையும் அவர்கள் செய்து முடித்தபின் அவரை மரத்திலிருந்து இறக்கிக் கல்லறை
30 யில் வைத்தார்கள். கடவுளோ அவரை
31 மரித்தோரிலிருந்து எழுப்பினார். தம்மோடு கலிலேயாவிலிருந்து எருசலேமுக்கு வந்தவர்களுக்கு அவர் அநேக நாளாகத் தரிசனமானார். அவர்களே ஜனத்துக்கு இப்
32 பொழுது அவருடைய சாட்சிகள். பிதாக்களுக்கு வந்த வாக்குத்தத்தத்தைக் கடவுள் இயேசுவை எழுப்பினதினால் நமது பிள்ளைகளுக்கு நிறைவேற்றினரென்பதை உங்க
33 ளுக்கு நற்செய்தியாக அறிவிக்கிறோம். அப்படியே இரண்டாம் சங்கீதத்திலும்:

நீர் எனது குமாரன்,
நானே இன்று உம்மை ஜனிப்பித்தேன்

34 என்று எழுதியிருக்கிறது. இனி அவர் அழிவுக்குத் திரும்பாதபடி கடவுள் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்பதைப் பற்றி:

தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபை வரங்களை
உங்களுக்குக் கட்டளையிடுவேன்

35 என்று திருவுளம்பற்றினார். அது காரணமாகவே:

உமது பக்தர்
அழிவைக் காணவொட்டீர்

என்று வேறொரு இடத்திலும் சொல்லி
36 யிருக்கிறது. தாவீது தன் காலத்தாருக்கு ஊழியஞ்செய்தபின் கடவுளின் சித்தப்படியே நித்திரையடைந்து தன் பிதாக்களிடஞ்
37 சேர்க்கப்பட்டு அழிவைக்கண்டான். கடவுள் எழுப்பினவரோ அழிவைக் காண
38 வில்லை. ஆதலால், சகோதரரே, நான் சொல்லுகிறது உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும்; இவர்மூலமாய் உங்களுக்குப் பாவமன்
39 னிப்பு அறிவிக்கப்படுகிறது; மோசேயின் நியாயப்பிரமாணத்தினால் நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி நீதிமான்களாகத் தீர்க்கப்பட முடியாதிருந்ததோ அவைகளினின்று, இவரில் விசுவாசம் வைக்கிற எவனும், இவராலே விடுதலையாகி நீதிமானாகத்
தீர்க்கப்படுகிறான். ஆகவே, தீர்க்கதரி 40
சனங்களில் சொல்லியிருக்கிறது உங்களுக்கு நேரிடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்:

அசட்டைக்காரரே, பாருங்கள். 41
ஆச்சரியப்படுங்கள், அழிந்து போங்கள்!
உங்கள் நாட்களில் நான் ஒரு செயல் செய்வேன்;
ஒருவன் அதை உங்களுக்கு விவரித்தாலும்
நீங்கள் நம்பமாட்டாத செயல் அது

என்று சொல்லி முடித்தான்.

அவர்கள் வெளியே போகையில், அடுத்த 42
ஒய்வுநாளிலும் இந்தக் காரியங்களைத் தங்களுக்குச் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். சபைகலைந்துபோன பின்பு 43
யூதரிலும் யூதமார்க்கத்திற் சேர்ந்துகொண்ட பக்தியுள்ளவர்களிலும் அநேகர் பவுலையும் பர்னபாவையுந் தொடர்ந்துபோனார்கள். அவர்களோடு இவர்கள் பேசிக் கடவுளின் கிருபையில் நிலைகொண்டிருக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொன்னார்கள்.

அடுத்த ஒய்வுநாளில் கொஞ்சங் குறைய 44
பட்டணமுழுவதும் கடவுளின் வார்த்தையைக் கேட்கும்படி கூடிவந்தது. யூதரோ 45
கூட்டங்களைக் கண்டபோது பொறுமை நிறைந்து தூஷணம் பேசிக்கொண்டு பவுல் சொன்னவைகளுக்கு எதிர்வாதஞ் செய்தார்கள். பவுலும் பர்னபாவுமோவெனில் 46
அவர்களிடம் தைரியமாய்ப் பேசி: உங்களுக்கே கடவுளின் வார்த்தையை முதலாவது சொல்லவேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி உங்களை நித்திய ஜீவனுக்குப் பாத்திரராகத் தீர்த்துக்கொள்ளாமலிருக்கிறபடியால், இதோ, புறஜாதியாரிடந் திரும்புகிறோம். ஆண்டவர் எங்களுக்குக் 47
கட்டளையிட்டது அதுவே:

நீர் பூமியின் கடைசிபரியந்தமும்
இரட்சிப்பாயிருக்கும்படி
உம்மைப் புறஜாதியாருக்கு
வெளிச்சமாக ஏற்படுத்தினேன்

என்றாரே என்று சொன்னார்கள். புறஜாதி 48
யார் அதைக்கேட்டுச் சந்தோஷப்பட்டு ஆண்டவர் வார்த்தையை மகிமைப்படுத்தினார்கள். நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்களனைவரும் நம்பினார்கள். ஆண் 49
டவர் வார்த்தை அந்நாடெங்கும் பிரபல்யமாயிற்று. யூதரோ பக்தியுள்ள சீமாட்டி 50
களையும் பட்டணத்துப் பெரிய மனுஷரையுங் தூண்டிவிட்டுப் பவுலையும் பர்னபாவையும் இம்சைப்படுத்தச் செய்து தங்கள்

எல்லைகளுக்கப்பால் அவர்களைத் துரத்திவிட்
51 டார்கள். இவர்களோ தங்கள் கால்களில்
படிந்ததூசியை அவர்களுக்கு விரோதமாக
உதறிவிட்டு இக்கோனியாவுக்குப் போனார்
52 கள். சீஷர் சந்தோஷத்தினாலும் பரிசுத்த
ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள்.

**14** இக்கோனியாவிலும் இப்படியே நடந்
தது. அவர்கள் யூதரின் ஜெபாலயத்திற்குப்
போய் யூதரிலும் கிரேக்கரிலும் திரள்ஜனங்
2 கள் நம்பத்தக்கதாகப் பேசினார்கள். இணங்
காத யூதரோ சகோதரருக்கு விரோதமாகப்
புறஜாதியாரின் மனதை எழுப்பிவிட்டுப்
3 பகையுண்டாக்கினார்கள். அப்படி யிருக்க,
அவர்கள் அங்கே வெகுகாலந்தங்கி ஆண்ட
வரைப்பற்றித் தைரியமாய்ப் பேசினார்கள்;
அவர் தமது கிருபையின் வார்த்தைக்குச்
சாட்சியமாக அடையாளங்களும் அற்புதங்
களும் அவர்கள் கைகளால் செய்யப்படும்
4 படி அதற்கிரகம்பண்ணினார். ஊர் ஜனங்
களோ இரண்டுபட்டுச் சிலர் யூதரையும்
சிலர் அப்போஸ்தலரையுஞ் சேர்ந்துகொண்
5 டார்கள். அப்போஸ்தலரை அவமானப்
படுத்தவும் கல்லெறியவும் புறஜாதியாரும்
யூதரும் அவர்கள் அதிகாரிகளும் மும்
6 முரித்து ஓடினார்கள். அவர்கள் அதை
அறிந்துகொண்டு லிக்கவோனியா நாட்டு
ஊர்களாகிய லிஸ்திராவுக்கும் தெர்பைக்கும்
அவைகளின் சுற்றுப்புறங்களுக்கும் தப்பி
7 யோடி, அங்கே சுவிசேஷத்தைப் பிரசங்கித்
துக்கொண்டிருந்தார்கள்.

8 லிஸ்திராவில் கால்கள் வழங்காத ஒருவ
னிருந்தான், அவன் தாயின் கர்ப்பத்திலி
ருந்தே சப்பாணி, ஒருபோதும் நடந்தறியா
9 தவன். இவன் உட்கார்ந்து பவுல் பேசு
கிறதைக் கேட்டுக்கொண்டிருந்தான். பவுல்
அவனை உற்றுப் பார்த்துக் குணமாகிறதற்
கேற்ற நம்பிக்கை அவனுக்குண்டென்று
10 கண்டு; நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்து நில்
என்று உரத்தசத்தத்தோடே சொன்னான்.
சொல்லவே, அவன் குதித்தெழுந்து நட
11 தான். பவுல் செய்ததை ஜனங்கள் கண்டு
சத்தமிட்டு, தேவர்கள் மனுஷரூபமெடுத்து
நம்மிடம் இறங்கி வந்திருக்கிறார்களென்று
லிக்கவோனியா பாஷையில் சொன்னார்கள்.
12 பர்னபாவை 1தேயுஸ் என்றும் பவுல் பிர
சங்கத்தை நடத்தினவனானபடியால் அவனை
2ஹெர்மேஸ் என்றும் சொன்னார்கள்.
13 அல்லாமலும், பட்டணத்து முகப்பிலிருந்த
தேயுஸ் கோவில் பூசாரி எருதுகளையும்
பூமாலைகளையும் வாசற்படியிலே கொண்டு
வந்து ஜனங்களோடே சேர்ந்து பலியிட மன
தாயிருந்தான். அப்போஸ்தலராகிய பவு 14
லும் பர்னபாவும் அதைக் கேட்டபொழுது
தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு
கூட்டத்துக்குள் பாய்ந்து உரத்த சத்த
மிட்டு: மனுஷரே, நீங்கள் இப்படிச் செய் 15
கிறதென்ன? நாங்களும் உங்களைப்போன்ற
சுபாவமுள்ள மனுஷர்தானே; நீங்கள் வீ
ணான இவைகளை விட்டு வானத்தையும் பூமி
யையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள
யாவற்றையும் படைத்த ஜீவனுள்ள தேவ
னிடத்தில் திரும்பவேண்டுமென்று உங்க
ளுக்கு நற்செய்தியாகக் கூறுகிறோம்.
சென்ற காலங்களில் அவர் சகல ஜனங்களை 16
யும் தங்கள் தங்கள் வழிகளிலே நடக்கவிட்
டிருந்தார். ஆயினும் அவர் தமக்குச் சாட் 17
சியில்லாமற் போகவிடவில்லை; அவர் நன்
மை செய்துவந்து வானத்திலிருந்து மழை
களையும் செழிப்புள்ள காலங்களையும் உங்க
ளுக்குத் தந்து ஆகாரத்தினாலும் சந்தோஷத்
தினாலும் உங்கள் இருதயங்களை நிரப்பினார்
என்று சொன்னார்கள். இப்படி அவர் 18
கள் சொல்லியுந் தங்களுக்குப் பலியிடாத
படி ஜனங்களை அமர்த்துகிறது அரிதாயி
ருந்தது.

பின்பு அந்தியோகியாவிலும் இக்கோனி 19
யாவிலுமிருந்து யூதர் வந்து ஜனங்களை வசப்
படுத்திப் பவுலைக் கல்லெறிந்து அவன் மரித்
துப்போனானென்றெண்ணி அவனைப் பட்
டணத்துக்கு வெளியே இழுத்துக்கொண்டு
போனார்கள். சீஷர் அவனைச் சூழ்ந்த நிற் 20
கையில் அவன் எழுந்து ஊருக்குள்
போனான். மறுநாள் பர்னபாவோடு தெர்
பைக்குப் புறப்பட்டுப் போனான். அந்த 21
ஊரில் அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்
கித்து அநேகரைச் சீஷராக்கினபின் லிஸ்தி
ராவுக்கும் இக்கோனியாவுக்கும் அந்தியோகி
யாவுக்கும் திரும்பினார்கள். சீஷர் மனதை 22
ஸ்திரப்படுத்தி, அவர்கள் விசுவாசத்தில்
நிலைத்திருக்கவேண்டுமென்று புத்தி
சொல்லி: அநேக உபத்திரவங்களின் வழி
யாய் நாம் தேவனின் ராஜ்யத்தில் பிரவேசிக்க
வேண்டுமென்றார்கள். அல்லாமலும், சபை 23
களோறும் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்
படுத்தி உபவாசித்து ஜெபம்பண்ணி அவர்
கள் விசுவாசம்வைத்த ஆண்டவருக்கு அவர்
களை ஒப்புவித்தார்கள். பின்பு பிசிதியா 24
நாட்டைக் கடந்து பம்பிலியா நாட்டிற்கு
வந்து பெர்கேயில் திருவசனத்தைக் கூறி

1 வியாழன். 2 புதன்.

அந்தாலியா ஊருக்குப் போனார்கள்.
25 அங்கே கப்பலேறி அந்தியோகியாவுக்குச்
26 சென்றார்கள். இப்பொழுது செய்துமுடித்த
வேலைக்கென்று அவர்கள் முதலில் கடவு
ளின் கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்ட இடம்
27 அதுதான். அவர்கள் அங்கே சேர்ந்த
பொழுது சபையைக் கூடிவரப்பண்ணிக்
கடவுள் தங்களோடிருந்து செய்த யாவை
யும் அவர் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின்
வாசலைத் திறந்ததையும் அறிவித்தார்கள்.
28 அவர்கள் அங்கே சீஷரோடு தங்கின காலம்
கொஞ்சமல்ல.

**15** யூதேயாவிலிருந்து சிலர் வந்து: நீங்கள்
மோசேயின் முறைமையின்படி விருத்தசே
தனஞ் செய்துகொள்ளாவிட்டால் இரட்சிக்
கப்பட முடியாதென்று சகோதரருக்குப்
2 போதித்து வந்தார்கள். அதினால் பவுலுக்
கும் பர்னபாவுக்கும் அவர்களோடு உண்
டான போராட்டமும் தர்க்கமுங் கொஞ்ச
மல்ல. இந்த வாக்குவாத விஷயத்தினி
மித்தம் பவுலும் பர்னபாவும் அவர்களில்
வேறு சிலரும் எருசலேமிலிருக்கிற அப்
போஸ்தலர் மூப்பர் இவர்களிடம் போக
3 வேண்டுமென்று நிர்மானித்தார்கள். அந்
தப்படியே அவர்கள் சபையாரால் வழி
விட்டனுப்பப்பட்டுப் புறஜாதியார் மனந்
திரும்பின செய்தியை விவரமாய் அறிவித்துக்
கொண்டு பெனிக்கியா சமாரியா நாடுகளின்
வழியாய்ப்போய் சகோதரர் எல்லாருக்கும்
மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கினார்
4 கள். அவர்கள் எருசலேமுக்கு வரவே,
சபையாரும் அப்போஸ்தலரும் மூப்பரும்
அவர்களை வரவேற்றுக்கொண்டார்கள்.
அப்போது, கடவுள் தங்களோடிருந்து
செய்தவைகளையெல்லாம் அவர்கள் அறி
5 வித்தார்கள். பரிசேய சமயத்தாரில் விசு
வாசிகளான சிலரோ எழுந்து: அவர்களுக்கு
விருத்தசேதனஞ் செய்கிறதும் மோசேயின்
நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள
அவர்களுக்குக் கட்டளையிடுகிறதும் அவ
சியம் என்றார்கள்.
6 அப்போஸ்தலரும் மூப்பரும் இந்தக்
காரியத்தைக்குறித்து ஆலோசனை செய்யும்
7 படி கூடினார்கள். மிகுந்த தர்க்கம் உண்
டானபோது பேதுரு எழுந்து அவர்களைப்
பார்த்து: சகோதரரே, புறஜாதியார் என்
வாயினாலே சுவிசேஷ வார்த்தையைக்
கேட்டு நம்பும்படி தேவன் அநேக நாட்க
ளுக்குமுன்னே உங்களுக்குள் என்னைத்
தெரிந்தெடுத்தார்; இது உங்களுக்குத் தெ
8 ரிந்த காரியம். இருதயங்களையறிகிற கட
வுள் நமக்குப் பரிசுத்த ஆவியைத் தந்தரு
ளினதுபோலவே அவர்களுக்கும் தந்தருளி
அவர்களைக்குறித்துச் சாட்சிகொடுத்தார்;
விசுவாசத்தின் மூலமாய் அவர்கள் இருத 9
யங்களை அவர் சுத்தமாக்கி நமக்கும் அவர்
களுக்கும் யாதொரு வித்தியாசமுங்காட்டா
திருந்தார். இப்படியிருக்க, நமது பிதாக்க 10
ளாகிலும் நாமாகிலுஞ் சுமக்கமுடியாத
ஜுகத்தடியைச் சீஷர் கழுத்தின்மேல்
சுமத்தி நீங்கள் கடவுளைச் சோதிப்பானேன்?
ஆண்டவராகிய இயேசுவின் கிருபையினா 11
லே அவர்கள் இரட்சிக்கப்படுகிறது எப்
படியோ அப்படியே நாமும் இரட்சிக்கப்
படுவோமென்று நம்புகிறோமே என்றான்.
அப்பொழுது கூடிவந்திருந்த யாவரும் 12
அமர்ந்திருந்து பர்னபாவும் பவுலும் தங்க
ளோக்கொண்டு கடவுள் புறஜாதிகளுக்குள்
செய்த அடையாளங்கள் அற்புதங்கள்
யாவற்றையும் விவரித்துச் சொல்லுகிற
தைக் கேட்டார்கள்.
அவர்கள் பேசிமுடிக்கவே யாக்கோபு 13
எழுந்து: சகோதரரே, நான் சொல்லுகிற
தைக் கேளுங்கள். புறஜாதிகளிலிருந்து 14
தமது நாமத்திற்காகக் கடவுள் முதல்முதல்
ஒரு ஜனத்தைப் பிரித்தெடுத்துக்கொள்ள
எப்படிக் கருணைகூர்ந்தாரென்பதைச் சிமி
யோன் விவரித்தாரே. அதற்குத் தீர்க்க 15
தரிசிகளின் வார்த்தைகளும் ஒத்திருக்கின்
றன:

இவற்றின்பின் நான் திரும்பி வந்து 16
விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை
மறுபடியும் எடுத்துக்கட்டுவேன். அதில்
பழுதாய்ப்போனவைகளை மறுபடியும்
எடுத்துக்கட்டி
அதை நேராய் நிறுத்துவேன்.
மற்ற மனுஷரும் 17
எனது நாமம் தரிக்கப்பெற்ற புறஜாதி
யார் யாவரும்
கர்த்தரைத்தேடி வந்தடையும்படி இவை
களைச் செய்வேனென்று
கர்த்தர் சகல காரியங்களையும் 18
யுகாரம்பமுதலே வெளியாக்கிக் கூறு
கிறார்

என எழுதியிருக்கிறது. ஆதலால், புற 19
ஜாதிகளில் கடவுளிடந் திரும்புகிறவர்க
ளைக் கலங்கப்பண்ணலாகாது. ஆனாலும்
விக்கிரக ஆசாரங்களுக்கும் வேசித்தனத்திற் 20
கும் நெருக்குண்டு செத்ததற்கும் இரத்
தத்திற்கும் விலகி யிருக்கும்படி அவர்
களுக்கு நாம் எழுதவேண்டும்; இதுவே
என் அபிப்பிராயம். ஏனெனில், மோ 21
சேயின் ஆகமங்கள் சகல பட்டணங்களி

லும் பூர்வ காலந்தொடங்கி ஜெபாலயங்க
ளில் ஒய்வுநாள்தோறும் வாசிக்கப்பட்டும்
பிரசங்கிக்கப்பட்டும் வருகின்றன என்றான்.
22 அப்பொழுது தங்களில் சிலரைத் தெரிந்
தெடுத்துப் பவுல் பர்னபா இவர்களோடு
அந்தியோகியாவுக்கு அனுப்புகிறது அப்
போஸ்தலருக்கும் மூப்பருக்கும் சபையா
ரெல்லாருக்கும் நலமாகக்கண்டது. சகோ
தரரில் விசேஷித்தவர்களாகிய பர்சபா
என்ற யூதாவும் சீலாவுக் தெரிந்தெடுக்கப்
23 பட்டார்கள். இவர்கள் கையில் அவர்கள்
எழுதியனுப்பின நிருபமாவது:—அப்போஸ்
தலரும் மூப்பருமான சகோதரர் அந்தியோகி
யாவிலும் சீரியாவிலும் சிலிசியாவிலுமுள்ள
புறஜாதியாரிலிருந்து வந்த சகோதரருக்கு
வாழ்த்துதல் சொல்லி எழுதிக்கொள்வது:
24 சிலர் எங்களிடமிருந்து வந்து உங்கள்
மனதைக் குழப்பித் தங்கள் வார்த்தைகளால்
உங்களைக் கலக்கினார்களென்று கேள்விப்
பட்டோம். இவர்களுக்கு நாங்கள் கட்
25 டளையொன்றும் கொடுத்ததில்லை. ஆத
லால், நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து
வின் நாமத்திற்காகத் தங்கள் பிராணனையும்
ஒப்புக்கொடுக்கத் துணிந்தவர்களும் எங்க
ளுக்குப் பிரியமானவர்களுமாகிய பர்னபா
பவுல் என்பவர்களோடுங்கூட நாங்கள் ஏக
26 மனதாகி | தெரிந்தெடுத்த சிலரை உங்களி
டம் அனுப்புகிறது நலமென்று கண்டோம்.
27 அப்படியே யூதாவையும் சீலாவையும்
அனுப்புகிறோம்; அவர்களும் இவைகளை
வாய்மொழியாக உங்களுக்கு அறிவிப்பார்
28 கள். அவசியமானவைகளையல்லாமல் பார
மான வேறொன்றையும் உங்கள்மேல் சுமத்
தாமலிருப்பது பரிசுத்த ஆவிக்கும் எங்க
29 ளுக்கும் நலமாகக்கண்டது. விக்கிரகங்க
ளுக்குப் பலியிட்டவைகளுக்கும் இரத்தத்
திற்கும் நெருக்குண்டு செத்ததற்கும் வேசித்
தனத்திற்கும் விலகியிருக்க வேண்டுமென்
பதே அவசியமானது. நீங்கள் இவைக
ளுக்கு விலகி உங்களைக் காத்துக்கொள்வது
நலம். சுகமாயிருப்பீர்களாக என்பது.
30 அப்படியே அவர்கள் விடைபெற்று
அந்தியோகியாவுக்கு வந்து சபை கூடிவரச்
செய்து நிருபத்தை ஒப்புவித்தார்கள்.
31 அதை அவர்கள் வாசித்து அதனுண்டா
கிய ஆறுதலினால் சந்தோஷப்பட்டார்கள்.
32 யூதா சீலா என்பவர்களும் தீர்க்கதரிசிகளா
யிருந்தபடியினாலே அநேகவார்த்தைகளினால்
சகோதரரைத் தைரியப்படுத்தி அவர்களை
33, 34 ஸ்திரப்படுத்தினார்கள். சிலகாலம் அங்கே
தங்கியிருந்தபின் சகோதரரிட மிருந்து
சமாதானத்தோடு விடைபெற்றுத் தங்களை
யனுப்பினவர்களிடம் போனார்கள். பவு 35
லும் பர்னபாவுமோ அந்தியோகியாவில்
தங்கி வேறே அநேகரோடும் ஆண்டவரின்
வார்த்தையை உபதேசித்து நற்செய்தியாகப்
பிரசங்கித்துக்கொண்டிருந்தார்கள்.

சில நாளைக்குப்பின் பவுல் பர்னபாவைப் 36
பார்த்து: நாம் ஆண்டவரின் வார்த்தையை
அறிவித்திருக்கிற சகல ஊர்களிலுமுள்ள
சகோதரர் எப்படி யிருக்கிறார்களென்று
திரும்பப் போய்ப் பார்ப்போம் வாரும் என்
றான். பர்னபா, மார்க்கு என்னும் யோவா 37
னைக் கூட்டிக்கொண்டு போக விரும்பினான்.
பவுலோ: பம்பிலியா நாட்டில் நம்மைவிட் 38
டுப் பிரிந்து நம்மோடு வேலைக்கு வராத
அவனைக் கூட்டிக்கொண்டு போகக்கூடா
தென்றான். இதைப்பற்றி அவர்களுக் 39
குள் மிகுந்த மனவருத்தமுண்டானபடி
யால் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்
தார்கள். பர்னபா மார்க்கைக் கூட்டிக் 40
கொண்டு கப்பலேறிச் சீப்புருவுக்குப் போ
னான். பவுலோ சீலாவைத் தெரிந்தெடுத் 41
துச் சகோதரரால் ஆண்டவரின் கிருபைக்கு
ஒப்புவிக்கப்பட்டுப் பிரயாணமாய்ப்
போய்ச் சீரியாவிலும் சிலிசியாவிலும் சுற்றித்
திரிந்து சபைகளை ஸ்திரப்படுத்தினான்.

அதற்குப் பிறகு அவன் தெர்பைக்கும் **16**
லிஸ்திராவுக்கும் போனான். அங்கே தீமோத்
தேயுவென்னும் ஒரு சீஷனிருந்தான்; அவன்
தாய் விசுவாசியான யூதஸ்திரீ, தகப்பனே
கிரேக்கன். அவன் லிஸ்திராவிலும் இக் 2
கோனியாவிலுமுள்ள சகோதரரால் நல்லவ
னென்று மதிப்புப்பெற்றவன். அவன் 3
தன்னோடு வரவேண்டுமென்று பவுல் விரும்பி
னான். அவன் தகப்பன் கிரேக்கனென்று
அவ்விடங்களிலிருந்த யூதரெல்லாரும் அறிந்
திருந்தபடியால் அவர்கள்நிமித்தம் அவ
னுக்கு விருத்தசேதனம் பண்ணினான்.
அவர்கள் ஊர்தோறும் போகையில் எருசு 4
லேமிலிருக்கும் அப்போஸ்தலரும் மூப்ப
ரும் தீர்மானித்த விதிகளைக் கைக்கொள்ளும்
படி அவர்களுக்கு ஒப்புவித்தார்கள். இத 5
னால் சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு
நாளுக்குநாள் தொகையில் பெருகின.

அவர்கள் ஆசியா நாட்டில் திருவசனத் 6
தைப் பிரசங்கியாதபடி பரிசுத்த ஆவியினால்
தடுக்கப்பட்டவர்களாய்ப் பிரிகியா கலாத்
தியா பிரதேசத்தைக் கடந்துபோனார்கள்.
மீசியா நாட்டுக்கு எதிரே வந்தபோது பித் 7
தினியா நாட்டுக்குப் போகப் பிரயாசப்
பட்டும் இயேசுவின் ஆவி அவர்களைப்
போகவொட்டாதிருந்தார். அவர்கள் மீசியா 8

பக்கமாய்ச் சென்று துரோவாவுக்கு
9 வந்தார்கள். அங்கே இரவில் பவுல் ஒரு
தரிசனங்கண்டான். அதில் மக்கெதோ
னியா தேசத்தானெருவன் வந்து நின்று: நீர்
மக்கெதோனியாவுக்குக் கடந்து வந்து எங்
களுக்கு உதவி செய்யவேண்டுமென்று
10 அவனே வேண்டிக்கொண்டான். அந்தத்
தரிசனத்தை அவன் கண்டபோது அவர்க
ளுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி
கடவுள் எங்களையழைத்தாரென்று நாங்கள்
நிர்ணயித்துக்கொண்டு உடனே மக்கெதோ
னியாவுக்குப் புறப்பட்டுப் போகப் பிரயத்
தனம்பண்ணினேம்.
11 துரோவாவில் கப்பலேறிச் சாமோத்தி
ராக்கே நேரேயோடி மறுநாளில்
நெயாப்போலி பட்டணத்துக்குப்
12 போனேம். அங்கிருந்து பிலிப்பி பட்ட
ணத்துக்கு வந்து சில நாள் அந்தப் பட்ட
ணத்தில் தங்கியிருந்தோம். அது மக்கெ
தோனியாதேசத்தில் இந்தப்பிரிவின் பிரதான
பட்டணம், அது ரோமராதீனஸ்தானம்.
13 ஓய்வுநாளில் நாங்கள் பட்டணத்து வாச
லுக்கு வெளியே ஆற்றின் ஓரமாய்ப்போ
னேம்; ஜெபம்பண்ணுகிற இடம் அங்கே
யிருக்கு மென்று எண்ணினேம். அந்த
இடத்திற்கு வந்து உட்கார்ந்து அங்கே கூடி
வந்திருந்த ஸ்திரீகளிடம் பேசிக்கொண்டிருந்
14 தோம். கேட்டுக்கொண்டிருந்தவர்களில்
லீதியாவென்னும் ஒரு ஸ்திரீயிருந்தாள்;
அவள் இரத்தாம்பரம் விற்கிறவள், தியத்
தீரா ஊராள், பக்தியுள்ளவள். பவுல் சொல்
லியவைகளைக் கவனிக்கும்படி ஆண்டவர்
அவள் இருதயத்தைத் திறந்தருளினார்.
15 அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம்
பெற்றபின் அவள் எங்களிடம்: நீங்கள்
என்னை ஆண்டவரிடம் விசுவாசமுள்ளவ
ளென்று எண்ணினால் என் வீட்டில் வந்து
தங்கியிருங்களென்று வருந்திக் கேட்டுக்
16 கொண்டாள். ஜெபம்பண்ணுகிற இடத்
துக்கு நாங்கள் போகையில் ஒரு பெண்
எங்களுக்கு எதிர்ப்பட்டாள், குறிசொல்ல
ஏவுகிற ஆவியையுடையவள், குறிசொல்லு
கிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த
17 ஆதாயங் கிடைக்கச்செய்தவள். அவள்
பவுலையும் எங்களையும் பின்தொடர்ந்து:
இந்த மனுஷர் உன்னதமான கடவுளின்
அடியார், இரட்சிப்பின்வழியை உங்களுக்கு
அறிவிக்கிறார்களென்று சத்தமிட்டாள்.
18 பல நாட்களாக இப்படியே செய்துகொண்டு
வந்தாள். பவுல் கோபங்கொண்டு திரும்
பிப் பார்த்து: நீ இவனை விட்டுப்போகும்படி
இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உனக்குக்
கட்டளையிடுகிறேனென்று அந்த ஆவியினி
டம் சொன்னான்; அந்நேரமே அது போய்
விட்டது. அவள் எஜமான்கள் தங்கள் 19
ஆதாய நம்பிக்கை அற்றுப்போயிற்றென்று
கண்டு பவுலையும் சீலாவையும் பிடித்து அம்
பலத்தில் அதிபதிகளிடம் இழுத்துக்கொண்டு
போனார்கள். அவர்களை அதிகாரிகளிடங் 20
கொண்டுபோய்: யூதராகிய இந்த மனுஷர்
நமது பட்டணத்தைக் கலகங்குழப்புகிறார்கள்;
ரோமராகிய நாம் அங்கீகரிக்கவும் அநுசரிக் 21
கவுங்கூடாத முறைமைகளைப் போதிக்கிறார்
கள் என்றார்கள். அப்பொழுது ஜனங்கள் 22
கூட்டங்கூடி அவர்களுக்கு விரோதமாய்
எழும்பினார்கள். அதிகாரிகள் அவர்கள்
வஸ்திரங்களைக் கிழித்துப்போட்டு அவர்களை
அடிக்கச் சொன்னார்கள். அவர்களை அநேக 23
அடி அடித்துச் சிறைச்சாலையிலே வைத்
தார்கள். அவர்களைப் பத்திரமாய்க் காக்கச்
சிறைச்சாலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்
கள். அவன் இப்படிப்பட்ட கட்டளை 24
பெற்று அவர்களை உட்காவலறையில்
அடைத்து அவர்கள் கால்களைத் தொழுவி
லடித்தான். பவுலும் சீலாவுமோ நடுராத்திரி 25
யில் ஜெபம்பண்ணிக் கடவுளைத் துதித்துப்
பாடினார்கள்; சிறையிலிருந்தவர்கள் அதைக்
கேட்டுக்கொண்டிருந்தார்கள். சடுதியில் 26
பூமி மிகவும் அதிர்ந்தது; அதினால் சிறைச்
சாலையின் அஸ்திபாரங்களும் அசைந்தன;
உடனே கதவுகளெல்லாம் திறவுண்டன;
எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோ
யின. சிறைச்சாலைக்காரன் திடுக்கிட்டெ 27
ழுந்து சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்
கிறது கண்டு, சிறையிலிருந்தவர்கள் ஓடிப்
போனார்களென்றெண்ணிப் பட்டயத்தை
உருவித் தன்னைக் கொன்றுகொள்ளப்போ
னான். பவுலோ மிகுந்த சத்தமிட்டு: உனக் 28
குத் தீங்கு ஒன்றுஞ் செய்துகொள்ளாதே;
நாங்கள் எல்லாரும் இங்கேயே இருக்கி
றோம் என்றான். அப்பொழுது அவன் 29
தீபங்களைக் கொண்டுவரச்சொல்லி உள்ளே
ஓடி நடுநடுங்கிப் பவுலுக்கும் சீலாவுக்கு முன்
விழுந்துபணிந்து | அவர்களை வெளியே 30
அழைத்துவந்து: ஐயன்மாரே, இரட்சிக்கப் 31
படுவதற்கு நான் என்ன செய்யவேண்டு
மென்று கேட்க அவர்கள்: ஆண்டவராகிய
இயேசுவில் நம்பிக்கையாயிரு, அப்பொழுது
நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்க
ளென்று சொல்லி | அவனுக்கும் அவன் 32
வீட்டிலிருந்தயாவருக்கும் கடவுளின் வார்த்
தையைப் போதித்தார்கள். மேலும் இரவில் 33
அந்நேரத்திலேயே அவன் அவர்களை அழைத்
துப்போய் அவர்கள் காயங்களைக் கழுவி

னுன். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்
34 றார்கள். பின்பு அவன் அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டுபோய் அவர்களுக்குப் போஜனமளித்துக் கடவுளிடம் நம்பிக்கையுள்ளவனுகித் தன் வீட்டார் அனைவரோடும் மகிழ்ச்சியாயிருந்தான்.
35 பொழுது விடியவே அதிகாரிகள் தலையாரிகளையனுப்பி: அந்த மனுஷரை விட்டுவிடு
36 என்று சொன்னார்கள். சிறைச்சாலைக் காரன் பவுலுக்கு இவ்வார்த்தைகளையறிவித்து: உங்களை விடுதலைசெய்யும்படி அதிகாரிகள் சொல்லியனுப்பி யிருக்கிறார்கள்: நீங்கள் இப்பொழுதே புறப்பட்டுச் சமா
37 தானத்தோடு போங்கள் என்றான். பவுலோ அவர்களிடம்: [1]ரோமராகிய எங்களை அவர்கள் விசாரணை செய்யாமல் பகிரங்கமாக அடித்துச் சிறைச்சாலையில் வைத்தார்கள்; இப்பொழுது இரகசியமாய் எங்களைத் துரத்தி விடுகிறார்களோ? அப்படியல்ல, அவர்களே வந்து எங்களை வெளியே அழைத்து
38 அனுப்பிவிடட்டும் என்றான். தலையாரிகள் இந்தச் சங்கதியை அதிகாரிகளுக்கு அறிவித்தார்கள். ரோமரென்று அவர்கள் கேள்
39 விப்பட்டபொழுது பயந்து வந்து | அவர்களோடு நல்லவார்த்தை சொல்லி அவர்களை வெளியே அழைத்துச் சென்று பட்டணத்திலிருந்து போய விடும்படி கேட்டுக்கொண்
40 டார்கள். அப்படியே அவர்கள் சிறைச்சாலையிலிருந்து வெளியேறி லீதியாளினிடத்திற்குப் போய்ச் சகோதரரைக் கண்டு அவர்களைத் தைரியப்படுத்தியபின் போய் விட்டார்கள்.

**17** அவர்கள் அம்பிபோலி அப்பொ
லோனியா பட்டணங்களைக் கடந்து தெச
லோனிக்கே பட்டணத்துக்கு வந்தாகள்; அங்கே யூதருக்கு ஒரு ஜெபாலயமிருந்தது.
2 பவுல் தன் வழக்கப்படியே அவர்களிடம் போய் மூன்று ஓய்வுநாட்களாக வேதவாக்கியங்களிலிருந்து நியாயங்களை எடுத்து அவர்
3 களோடு பேசிக் | கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும் தான் அறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்து என்றும் அவர்களுக்கு
4 விளக்கிக்காட்டினான். அவர்களில் சிலர் நம்பிப் பவுலையும் சீலாவையும் சேர்ந்து கொண்டார்கள். பக்தியுள்ள கிரேக்கரில் திரளானவர்களும் பிரதான ஸ்திரீகளில்
5 பலரும் சேர்ந்துகொண்டார்கள். யூதர் பொறுமைகொண்டு சோம்பேறிகளில் சில பொல்லாதவர்களைச் சேர்த்துக்கொண்டு கூட்டங்கூடிப் பட்டணத்தில் அமளியுண்டாக்கி யாசோன் வீட்டைத்தாக்கி ஜனங்களை முன் கொண்டுவரும்படி அவர்களைத் தேடினார்கள்.
அவர்களைக் காணுமல் யாசோனையும் சில 6
சகோதரரையும் பட்டணத்து அதிகாரிகளிடம் இழுத்து வந்து: உலகத்தைக் குழப்புகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள். இவர் 7
களை யாசோன் வரவேற்றுக்கொண்டான். இவர்களெல்லாரும் இயேசு என்னும் வேறொருவனை ராஜா என்று சொல்லி ராயனின் கட்டளைகளுக்கு விரோதமாய் நடக்கிறார்களென்று கூக்குரலிட்டு | இவைகளைக் 8
கேட்டுக்கொண்டிருந்த ஜனங்களையும் பட்டணத்து அதிகாரிகளையும் கலக்கினார்கள்.
பின்பு அவர்கள் யாசோனிடத்திலும் மற்ற 9
வர்களிடத்திலும் ஜாமீன் வாங்கிக்கொண்டு அவர்களை விட்டுவிட்டார்கள்.

உடனே சகோதரர் பவுலையும் சீலாவை 10
யும் இரவிலேயே பெரோயா பட்டணத்துக்கு அனுப்பிவிட்டார்கள்; அவர்கள் அங்கே சேர்ந்து யூதரின் ஜெபாலயத்திற்குப் போனார்கள். இந்த யூதர் தெசலோனிக்கே 11
யில் இருந்தவர்களைப் பார்க்கிலும் பெருந்தன்மையுடையவர்கள்; அவர்கள் மனோவாஞ்சையாய்த் திருவசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியம் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்துவந்தார்கள். ஆதலால் 12
அவர்களில் அநேகர் நம்பினார்கள். நம்பின கிரேக்க ஸ்திரீகளும் புருஷரும் கொஞ்சமல்ல. பெரோயாவிலும் கடவுளின் 13
வார்த்தை பவுலினால் அறிவிக்கப்பட்டதென்று தெசலோனிக்கேயரான யூதர் அறிந்து அங்கேயும் வந்து ஜனங்களை எழுப்பிவிட்டுக் கலக்கினார்கள் உடனே சகோ 14
தரர் பவுலைச் சமுத்திரவரைக்கும் போகும்படி அனுப்பிவிட்டார்கள். சீலாவும் தீமோத்தேயுவுமோவெனில் அங்கேயே தங்கியிருந்தார்கள். பவுலை வழியனுப்பவந்தவர் 15
கள் அத்தேனே பட்டணம் வரைக்கும் அவனைக்கூட்டிவந்து, சீலாவும் தீமோத்தேயுவும் அதிசீக்கிரம் அவனிடம் வரும்படி அவர்களுக்குச்சொல்லக் கட்டளை பெற்றுக் கொண்டு போய்விட்டார்கள்.

அத்தேனே பட்டணத்தில் பவுல் அவர் 16
கள் வரக் காத்துக்கொண்டிருக்கையில் அந்தப் பட்டணம் விக்கிரகங்கள் நிறைந்திருக்கிறதுகண்டு தன் ஆவியில் வருத்த

---

1 ரோம இலாக்கியமுடையவர் என்பது பொருள்.

17 மடைத்து | ஜெபாலயத்தில் யூதரோடும் பக்தி
யுள்ளவரோடும் சந்தைவெளியில் எதிர்ப்
பட்டவர்களோடும் தினந்தோறும் நியாயங்
18 காட்டிப் பேசிவந்தான். எப்பிக்கூரரும்
ஸ்தோயிக்கருமான தத்துவ சாஸ்திரிகளில்
சிலர் அவரோடே தர்க்கம் பண்ணிவந்தார்
கள்; சிலர்: இந்த வாயாடி சொல்ல விரும்பு
கிறதென்ன என்பார்கள். சிலர்: இவன்
அந்நிய தேவதைகளை அறிவிக்கிறவனைக்
காண்கிறதென்பார்கள். அவன் இயேசு
வையும் உயிர்த்தெழுதலையும் நற்செய்தியாக
அவர்களுக்குப் பிரசங்கித்தபடியினால் அப்
19 படிச் சொன்னார்கள். அவர்கள் அவனை
அரையோப்பாகுக்கு [1]அழைத்துப்போய்:
நீர் சொல்லுகிற புதிதான உபதேசம் இன்ன
20 தென்று நாங்கள் அறியலாமா? விபரீத
காரியங்களை எங்கள் காதுக்குக் கொண்டு
வருகிறீர்; அவற்றின் கருத்து இன்னதென்று
21 அறிய விரும்புகிறோம் என்றார்கள். நூதன
காரியங்களைச் சொல்லுகிறது கேட்கிறதென்
றால் அத்தேனே பட்டணத்தாரனைவருக்
கும் அங்கே தங்குகிற அந்நியருக்கும்
எப்பொழுதும் சாவகாசந்தான், வேறு
ஒன்றுக்கும் அவர்களுக்குச் சாவகாச
மிராது.

22 அப்பொழுது பவுல் அரையோப்பாகின்
நடுவில் நின்று: அத்தேனரே, நீங்கள்
மிகுந்த தேவதாபக்தியுள்ளவர்களென்பதை
23 நான் எப்பக்கத்திலும் காண்கிறேன். எப்
படியென்றால், நான் சுற்றித்திரிந்து நீங்கள்
வணங்குகிறவைகளைக் கவனித்துப் பார்த்த
பொழுது அறியப்படாத கடவுளுக்கு
என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக்
கண்டேன்; நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற
வஸ்துவையே நான் உங்களுக்கு அறிவிக்கி
24 றேன். உலகத்தையும் அதிலுள்ள யாவற்
றையும் படைத்த கடவுள் வானத்திற்கும்
பூமிக்கும் ஆண்டவர். கைகளினால் கட்
டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்
25 பண்ணுகிறதில்லை. எல்லாருக்கும் ஜீவனை
யும் சுவாசத்தையும் யாவற்றையும் கொடுக்
கிற அவர், தமக்கே ஏதோவொன்று தேவை
யாயிருப்பதுபோல் மனுஷர் கைகளால்
26 பணிவிடைகொள்ளுகிறதுமில்லை. பூமியின்
மீதெங்கும் குடியிருக்க மனுஷஜாதியான
சகல ஜனங்களையும் அவர் ஒன்றிலிருந்தே
உண்டுபண்ணிக் குறிக்கப்பட்ட காலங்
களையும் குடியிருப்பின் எல்லைகளையும் அவ
27 ரவருக்கு ஏற்படுத்தியிருக்கிறார், கடவுளா
கிய தம்மை அவர்கள் தடவியாகிலும்
கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்
படிக்கே அப்படிச் செய்தார். இப்படி
நாம் தேடவேண்டியவர் நம்மில் ஒருவருக்
கும் தூரமானவரல்ல. நாம் அவருக்குள் 28
பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கி
றோம்; அப்படியே உங்கள் கவிஞரிலும்
சிலர், நாம் அவர் சந்ததியாரென்று சொல்லி
யிருக்கிறார்கள். நாம் கடவுளின் சந்ததியா 29
ராயிருக்க, மனுஷரின் சித்திரவேலையினாலும்
யுக்தியினாலும் உருவாக்கின பொன் வெள்ளி
கல் இவைகளுக்குத் தெய்வம் ஒப்பாயிருக்கு
மென்று நாம் நினைக்கலாகாது. அறியாமை 30
யின் காலங்களைக் கடவுள் காணுதவர்போ
லிருந்தார்; இப்பொழுதோ எல்லா இடங்
களிலுமுள்ள யாவரும் மனந்திரும்பவேண்டு
மென்று மனுஷருக்குக் கட்டளையிடுகிறார்.
அதற்கிசைவாக ஒரு நாளையுங் குறித்திருக் 31
கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த புருஷ
னைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியா
யந்தீர்க்கப்போகிறார்; இதை எல்லாரும்
நம்புவதற்கேதுவாக அவரை மரித்தோரி
லிருந்து எழுப்பினார் என்றான்.

மரித்தோரின் உயிர்த்தெழுதல் என்பதை 32
அவர்கள் கேட்டபொழுது சிலர் பரியாசம்
பண்ணினார்கள்; வேறு சிலரோ: இன்னொரு
தடவை நீ இதைப்பற்றிப் பேசுவதைக்
கேட்போமென்றார்கள். இவ்வளவில் பவுல் 33
அவர்களைவிட்டுப் போய்விட்டான். சில 34
ரோ அவனைச் சேர்ந்துகொண்டு விசுவாசிக
ளானார்கள். அவர்களில் அரையோப்பா
கின் நியாயாதிபதிகளில் ஒருவனாகிய தியோ
னீசியுவென்பவனும் தாமரியென்னும் ஒரு
ஸ்திரீயும் இவர்களோடு வேறு சிலரும்
இருந்தார்கள்.

**18** அதன்பின்பு அவன் அத்தேனே பட்ட
ணத்தை விட்டுக் கொரிந்து பட்டணத் 2
துக்கு வந்தான். அங்கே பொந்து தேசத்
தானாகிய ஆக்கிலாவென்னும் ஒரு யூதனையும்
அவன் மனைவி பிரிஸ்கில்லாளையுங் கண்டு
அவர்களிடத்திற்குப் போனான். யூதரெல்
லாரும் ரோமாபுரியை விட்டுப் போகும்படி
கிலவுதியு ராயன் கட்டளை பிறப்பித்திருந்த
படியால் இவர்கள் இத்தாலியாவை விட்டு
அப்போதுதான் புதிதாய் வந்திருந்தார்கள்.
அவர்கள் கூடாரஞ்செய்கிற தொழிலாளி 3
கள்; தானும் அதே தொழில் செய்கிறவ
னானபடியினால் அவர்களிடத்தங்கி வேலை
செய்துகொண்டு வந்தான். ஓய்வுநாள்தோ 4
றும் அவன் ஜெபாலயத்திலே நியாயங்களை

---

1 மார்ஸ் தேவதையின் மேடை. அது ஊர்ச்சபை கூடும் இடம்.

எடுத்துப்பேசி யூதரும் கிரேக்கரும் ஒப்பும்
படிசெய்ய முயன்றான்.
5 மக்கெதோனியாவிலிருந்து சீலாவும்
தீமோத்தேயுவும் வந்தபோது பவுல், இயேசு
வே கிறிஸ்து என்று யூதருக்குத் திடச்சாட்சி
பகரும்படி திருவசனம் அவன் மனதை
6 நெருக்கினது. அவர்கள் எதிர்த்து நின்று
தூஷித்தபோது அவன் தன் வஸ்திரங்களை
உதறிவிட்டு: உங்கள் இரத்தப்பழி உங்கள்
தலைமேலேயே. நானே அதற்கு நீங்கின
சுத்தனாக இது முதல் புறஜாதியாரிடம்
போகிறேனென்று அவர்களிடஞ் சொல்லி!
7 அவ்விடத்தை விட்டுத் தெய்வபக்தியுள்
ளவனான தித்தியு யுஸ்து என்னும் ஒருவன்
வீட்டிற்கு வந்தான்; அவன் வீடு ஜெபால
8 யத்தை அடுத்திருந்தது. ஜெபாலயத் தலை
வன் கிறிஸ்பு தன் வீட்டார் அனைவரோடும்
ஆண்டவரில் நம்பிக்கையுள்ளவனானான்.
கொரிந்தியரில் அநேகரும் கேட்டு நம்பி
9 ஞானஸ்நானம் பெற்றுவந்தார்கள். இர
வினிலே ஆண்டவர் பவுலுக்குத் தரிசனமாகி:
நீ பயப்படவேண்டாம்; பேசு, மவுனமாயி
10 ராதே; நான் உன்னோடிருக்கிறேன், உனக்
குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்னைத்
தொடமாட்டான்; இந்தப் பட்டணத்தில்
எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார்.
11 கடவுளின் வார்த்தையை அவர்கள் நடுவில்
உபதேசம் பண்ணிக்கொண்டு அவன் ஒரு
வருஷமும் ஆறு மாதமும் அங்கே இருந்து
விட்டான்.
12 கல்லியோன் அகாயாநாட்டு அதிபதியாயி
ருக்கையில் யூதர் ஏகமனதாய்ப் பவுலுக்கு
விரோதமாய் எழும்பி அவனை நியாயாசனத்
13 தின்முன் கொண்டுபோய்: கடவுளை
வணங்கும் விஷயத்தில் இவன் மனுஷருக்
குப் போதிக்குமுறை நியாயப்பிரமாணத்
14 திற்கு விரோதம் என்றார்கள். பவுல் பேச
வாயெடுக்கையில் கல்லியோன் யூதரைப்
பார்த்து: யூதரே, அநியாயம் அல்லது மகா
அக்கிரமம் என்ற ஓர் விஷயமாகில் நான்
உங்களுக்குப் பொறுமையாய்ச் செவிகொ
15 டுப்பது நியாயம். இது சொற்களுக்கும்
நாமங்களுக்கும் உங்கள் வேதத்துக்கும்
அடுத்த விவாதமென்றால் நீங்களே பார்த்
துக்கொள்ளுங்கள், இவற்றை விசாரிக்க
16 எனக்கு மனதில்லையென்று சொல்லி, அவர்
களை நியாயாசனத்தினின்று துரத்திவிட்
17 டான். எல்லாரும் ஜெபாலயத் தலைவன்
சொஸ்தேனேயைப் பிடித்து நியாயாசனத்
தின்முன் அடித்துக்கொண்டிருந்தார்கள்.
இவற்றையும் கல்லியோன் கொஞ்சமேனும்
கவனிக்கவில்லை.

பவுலோ இன்னும் அநேக நாள் அங்கே 18
தங்கியபின் சகோதரரிடம் உத்தரவு பெற்
றுக்கொண்டு தனக்கு ஒரு பொருத்தனை
இருந்தபடியால் கெங்கிரேயாவில் தலைச்
சௌரம் பண்ணிக்கொண்டு சீரியா நாட்டுக்
குப் போகக் கப்பலேறினான். பிரிஸ்கில்லா
னும் ஆக்கிலாவும் அவனோடு போனார்கள்.
அவர்கள் எபேசுக்கு வந்தார்கள்; அங்கே 19
அவன் அவர்களை விட்டு நீங்கி ஜெபாலயத்
திற்குப்போய் யூதரோடு நியாயங்களை எடுத்
துப் பேசினான். அவன் இன்னுஞ் சில 20
காலம் தங்களோடு இருக்கவேண்டுமென்று
அவர்கள் கேட்டுக்கொண்டபோது அவன்
சம்மதிக்கவில்லை. கடவுளுக்குச் சித்தமா 21
னால் தான் திரும்பி அவர்களிடம் வருவதா
கச் சொல்லி விடைபெற்றுக்கொண்டு கப்ப
லேறி எபேசைவிட்டுப் போனான். செசரி 22
யாவுக்கு வந்திறங்கி எருசலேமுக்குப்
போய்ச் சபையை வினவிக்கொண்டு அந்தி
யோகியாவுக்குப் போனான். அங்கே சில 23
காலம் தங்கியபின் புறப்பட்டு முறையே
கலாத்தியா பிரதேசத்திலும் பிரிகியாவிலும்
சுற்றித்திரிந்து சீஷரெல்லாரையும் ஸ்திரப்
படுத்திக்கொண்டிருந்தான்.

அபொல்லோவென்னும் ஒரு யூதன் 24
எபேசு பட்டணத்துக்கு வந்தான். இவன்
அலெக்சந்திரியா பட்டணத்தான், சாதுரிய
வான், வேதாகமங்களில் வல்லவன். அவன் 25
ஆண்டவரின் மார்க்கத்தில் உபதேசிக்கப்
பட்டு ஆவியில் அனலுள்ளவனாய் இயேசு
வுக்கு அடுத்தவைகளைப் பேசித் திட்டமாய்ப்
போதித்துக்கொண்டு வந்தான். இவன்
யோவானின் ஞானஸ்நானத்தை மாத்திரம்
அறிந்தவன். அவன் ஜெபாலயத்தில் தைரிய 26
மாய்ப் பேசத் தொடங்கினான்; ஆக்கிலா
வும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக்
கேட்டு அவனைக் கூட்டிக்கொண்டுபோய்க்
கடவுளின் மார்க்கத்தை அதிகத் திட்டமாய்
அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்.
பின்பு அவன் அகாயாவுக்குக் கடந்துபோக 27
விரும்புகையில் சகோதரர் அவனை உற்சா
கப்படுத்தி அவனை வரவேற்றுக்கொள்ளும்
படி சீஷருக்கும் எழுதினார்கள். அவன்
அங்கே வந்து சேர்ந்து கிருபையின் மூல
மாய் விசுவாசிகளுக்கு மிகவும் உதவியா
யிருந்தான். அவன் யூதரோடு வெளியரங்க 28
மாகப் பலமாய் எதிர்வாதஞ்செய்து இயே
சுவே கிறிஸ்துவென்று வேதவாக்கியங்களைக்
கொண்டு காட்டினான்.

அபொல்லோவென்பவன் கொரிந்தில் 19
இருக்கையில் பவுல் மேட்டுப்பாகங்கள்

வழியாய்ப் போய் எபேசுக்கு வந்தான்;
2 அங்கே சில சீஷரைக் கண்டு: நீங்கள் விசு
வாசிகளானபோது பரிசுத்த ஆவியைப்
பெற்றீர்களா என்று கேட்டான். அதற்கு
அவர்கள்: பரிசுத்த ஆவி உண்டென்பதை
முதலாய் நாங்கள் கேள்விப்படவில்லை என்
3 றார்கள். அப்படியானால் நீங்கள் [1]எந்த
ஞானஸ்நானம் பெற்றீர்களென்று அவன்
கேட்க அவர்கள்: நாங்கள் பெற்றது யோ
4 வானின் ஞானஸ்நானம் என்றார்கள். அப்
பொழுது பவுல்: யோவான் தனக்குப்பின்
வருகிறவராகிய இயேசுவில் நம்பிக்கை
வைக்க வேண்டுமென்று ஜனங்களுக்குச்
சொல்லி மனந்திரும்புதலுக்குரிய ஞானஸ்
நானத்தைக் கொடுத்தானே என்றான்.
5 அதைக் கேட்டபோது அவர்கள் ஆண்டவ
ராகிய இயேசுவின் நாமத்திற்குள்ளாக
6 ஞானஸ்நானம் பெற்றார்கள். பவுல் அவர்
கள்மேல் கைகளை வைக்கவே பரிசுத்த ஆவி
அவர்கள்மீது வந்தார்; அப்பொழுது அவர்
கள் நாவுகளால் பேசித் தீர்க்கதரிசனம்
7 சொன்னார்கள். அவர்கள் எல்லாரும் சுமார்
பன்னிரண்டுபேர்.
8 அவன் ஜெபாலயத்திற்குப் போய்த் தைரிய
மாய்ப் பேசிவந்தான். மூன்று மாதமளவும்
கடவுளின் ராஜ்யத்தைப் பற்றி நியாயங்க
ளைக் காட்டி அவர்கள் இணங்கும்படி
9 செய்ய முயன்றான். சிலர் கடினப்பட்டு
இணங்காதவர்களாகிக் கூட்டத்தின்முன்
இந்த மார்க்கத்தைத் தீது பேசினபோது
அவன் அவர்களைவிட்டு விலகிச் சீஷரைப்
பிரித்தியேகப்படுத்திக்கொண்டு தி ர ன் னு
என்பவன் வித்தியாசாலையில் அதினமும்
10 நியாயங்களை எடுத்துப்பேசிவந்தான். இப்
படி இரண்டு வருஷகாலம் நடந்துவந்தது
னால் ஆசியாவில் குடியிருந்த யாவரும்,
யூதரும் கிரேக்கரும், ஆண்டவரின் வார்த்
11 தையைக் கேட்டார்கள். பவுலின் கையி
னால் கடவுள் நடப்பித்தருளின வல்ல செ
12 யல்கள் சாதாரணமானவைகளல்ல. அவன்
சரீரத்தில் பட்ட உறுமால்களையும் துணி
களையுங்கொண்டுபோய் வியாதிக்காரர்மேல்
போட வியாதிகள் அவர்களை விட்டு நீங்கிப்
போயின; பொல்லாத ஆவிகளும் அகன்
13 றன. அப்பொழுது தேசாந்திரிகளான
யூதமந்திரவாதிகளிற் சிலர் பொல்லாத ஆவி
கள் பிடித்திருந்தவர்கள்மேல் ஆண்டவரா
கிய இயேசுவின் திருநாமத்தை உச்சரிக்கத்
துணிந்து: பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின்
பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளை
யிடுகிறோம் என்றார்கள். இப்படிச் செய்த 14
வர்கள் யூத பிரதான ஆசாரியன் ஸ்கேவா
என்னும் ஒருவனின் குமாரர் ஏழுபேர்.
பொல்லாத ஆவி அவர்களை நோக்கி: இயே 15
சுவை அறிவேன், பவுலும் தெரியும், நீங்கள்
யார் என்று சொல்லவே | பொல்லாத ஆவி 16
யுடைய மனுஷன் அவர்கள்மேல் பாய்ந்து
அவர்களை அடக்கி இருவரையும் மேற்
கொண்டான். அவர்கள் காயப்பட்டவர்
களாய் ஆடைகளை இழந்து அந்த வீட்டை
விட்டு ஓட்டம்பிடித்தார்கள். இது எபே 17
சில் குடியிருந்த யூதர் கிரேக்கர் அனைவருக்
கும் தெரியவந்தது, தெரியவரவே அவர்க
ளனைவரும் பயங்கொண்டார்கள். ஆண்ட
வராகிய இயேசுவின் திருநாமம் மகிமைப்
பட்டது. விசுவாசிகளானவர்களில் அநே 18
கர் வந்து தங்கள் செய்கைகளைத் தெரிவித்து
அறிக்கையிட்டார்கள். மாயவித்தைக்கார 19
ரில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக்கொண்டு
வந்து எல்லாருக்குமுன்பாகச் சுட்டெரித்
தார்கள்; அவற்றின் கிரயத்தைத் தொகை
பார்த்து ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசென்று
கண்டார்கள். இப்படியாக ஆண்டவரின் 20
வார்த்தை பலமாய் விர்த்தியடைந்து மேற்
கொண்டது.
இவைகள் முடியவே, பவுல் மக்கெதோ 21
னியா அகாயா நாடுகளில் சுற்றி நடந்து
எருசலேமுக்குப் போகும்படி ஆவிக்குள்
நிர்ணயித்துக்கொண்டு: நான் அங்கே போன
பின்பு ரோமாபுரியையும் பார்க்கவேண்டு
மென்று சொல்லித் | தனக்கு உதவிசெய் 22
தவர்களில் இருவராகிய தீமோத்தேயுவை
யும் எரஸ்தையும் மக்கெதோனியாவுக்கு
அனுப்பிவிட்டுத் தான் பின்னுஞ் சிலகாலம்
ஆசியாவிலேயே தங்கினான்.
அக்காலத்தில் இந்த மார்க்கத்தைப் பற்றி 23
யுண்டான கலகம் கொஞ்சமல்ல. தெமேத் 24
திரியுவென்னும் ஒரு தட்டான் [2]அர்த்தெமி
தேவியின் கோவில்களை வெள்ளியினால்
செய்து தொழிலாளருக்கு மிகுந்த ஆதாயம்
வருவித்துக்கொண்டிருந்தான். இவர்களை 25
யும் இப்படிப்பட்டவைகளைச் செய்கிற மற்
றத் தொழிலாளரையும் அவன் கூடிவரச்
செய்து: மனுஷரே, இந்தத் தொழிலினால்
நமக்கு நல்ல பிழைப்பு உண்டாயிருக்கிற
தென்று உங்களுக்குத் தெரியும். இப்படி 26
யிருக்க, கைகளினால் செய்யப்பட்ட தேவர்
கள் தேவர்களல்லவென்று இந்தப் பவுல்
சொல்லி, எபேசிலேமாத்திரமல்ல, கொஞ்
சங்குறைய ஆ சி யா வெ ங் கு ம் அநேக

---

1 கிரேக்கு: எதற்குள். 2 அர்த்தெமி என்பது கிரேக்கபாஷை, தியானை என்பது லத்தீன்பாஷை.

ஜனங்களுக்குப் போதித்து அவர்களை வசப்
படித்திக்கொண்டானென்று நீங்கள் கண்டும்
27 கேட்டும் வருகிறீர்கள். இதனால் நமது
தொழில் அலட்சியமாகும்படியான அபா
யம் நேரிட்டிருக்கிறதுமல்லாமல், மகாதேவி
யாகிய அர்த்தெமியின் கோவில் எண்ணமற்
றுப் போகிறதற்கும் ஆசியா முழுமையும்
பூச்சக்கரமுஞ் சேவிக்கிற அவள் மகத்து
வங் குறைந்துபோகிறதற்கும் ஏதுவாயிருக்
28 கிறது என்றான். அவர்கள் இதைக் கேட்
டுக் கோபம் நிறைந்தவர்களாய்: எபேசிய
ரின் அர்த்தெமியே பெரியவளென்று சத்த
29 மிட்டார்கள். பட்டணமெங்கும் கலக
மாய்விட்டது. பவுலுக்கு வழித்துணையாய்
வந்திருந்த மக்கெதோனியராகிய காயுவை
யும் அரிஸ்தர்க்கையும் அவர்கள் இழுத்துக்
கொண்டு ஏகமனதாய் அரங்கசாலைக்கு ஓடி
30 னார்கள். பவுல் கூட்டத்துக்குட்போக மன
தாயிருந்தான், சீஷரோ அவனைப் போக
31 விடவில்லை. ஆசியா நாட்டுத் தலைவரில்
அவனுக்குச் சிநேகிதராயிருந்த சிலரும் அவ
னிடம் ஆள் அனுப்பி அரங்கசாலைக்குட்
பட வேண்டாமென்று எச்சரித்தார்கள்.
32 கூட்டத்தில் அமளியுண்டாகவே சிலர் இப்
படியும் சிலர் அப்படியுமாகக் கூச்சலிட்
டார்கள்; தாங்கள் கூடிவந்த காரணம் இன்
னதென்று பெரும்பாலருக்குத் தெரியாது.
33 அப்பொழுது யூதர் அலெக்சந்தர் என்ப
வனை முன்னிற்கத் தள்ளிவிட்டார்கள்; தள்
ளுகையில் கூட்டத்தில் சிலர் அவனைப்
பேசும்படி தூண்டினார்கள். அலெக்சந்தர்
கையமர்த்தி ஜனங்களுக்கு நியாயத்தை எடுத்
34 துப்பேச மனதாயிருந்தான. அவன் யூத
னென்று அவர்கள் அறிந்தபோது, எபேசிய
ரின் அர்த்தெமியே பெரியவளென்று
இரண்டு மணிநேரமளவும் எல்லாரும் ஏக
மாய்ச் சத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள்.
35 பட்டணத்துச் சம்பிரதியானவன் ஜனங்களை
யமர்த்தி: எபேசியரே, எபேசியரின் பட்ட
ணம் மகாதேவியாகிய அர்த்தெமிக்கும்
வானத்திலிருந்து விழுந்த சிலைக்கும் விசார
ணைக்கர்த்தாவென்பதை அறியாதவனுண்
36 டோ? இவை எதிர்பேசப்படாத காரியங்கள்,
நீங்கள் ஒன்றும் பதறிச் செய்யவேண்டாம்,
37 அமர்ந்திருக்கவேண்டும். இந்த மனுஷரை
இங்கே கொண்டுவந்தீர்கள்; இவர்கள்
கோவிற் கொள்ளைக்காரருமல்ல; நமது தேவி
38 யைத் தூஷிக்கிறவர்களுமல்ல, தெமேத்திரி
யுவுக்கும் அவனைச் சேர்ந்த தொழிலாளிக
ளுக்கும் ஒருவன்மேல் ஏதேனும் காரியம்
உண்டாயிருந்தால் நியாயம் விசாரிக்கும்
நாட்களுண்டு, அதிபதிகளும் இருக்கிறார்
கள்; ஒருவர்பேரிலொருவர் வழக்காடிக்
கொள்ளட்டும். நீங்கள் வேறே யாதேனு 39
மொரு காரியத்தைப்பற்றி விசாரிக்கிறதா
லும் அது கிரமமாய்க் கூடிய சபையில்
தீர்க்கப்படும். இன்றையதினத்தைப்பற்றி 40
நமதுமேல் கலகக்குற்றம் சாட்டப்பட ஏது
உண்டு; இது காரணமில்லாமல் நடந்திருக்
கிறது. ஜனங்கள் இப்படிக் கூடியதற்கு
நாம் நியாயங்காட்டவும் இடமில்லையே
என்று சொன்னான். இவற்றைச் சொல்லிக் 41
கூட்டத்தை அனுப்பிவிட்டான்.

கலகம் அமர்ந்தபோது பவுல் சீஷரை **20**
வரவழைத்துத் தைரியப்படுத்தினபின் விடை
பெற்றுக்கொண்டு மக்கெதோனியாவுக்குப்
போகப் புறப்பட்டான். அவன் அந்தத் 2
திசைகளில் சுற்றி அவர்களோடு வெகு
வாய்ப் பேசி அவர்களைத் தைரியப்படுத்தி
விட்டுக் கிரேக்கதேசம் போய்ச் சேர்ந்
தான். அங்கே மூன்று மாதம் தங்கியபின் 3
அவன் கப்பலேறிச் சீரியா தேசத்துக்குப்
போகவிருக்கையில் யூதர் அவனுக்குவிரோ
தமாய்ச் சதியோசனை செய்துகொண்டிருந்த
படியால் மக்கெதோனியா வழியாய்த் திரும்
பிப்போகத் தீர்மானித்தான். பிருவின் குமார 4
னாகிய பெரோயா ஊரான் சோபத்தர்,
தெசலோனிக்கேயரில் அரிஸ்தர்க்கு, செக்
குந்து, தெர்பையூரான் காயு, தீமோத்தேயு,
ஆசியா நாட்டாராகிய தீகிக்கு, துரோப்பீமு
என்ற இவர்கள் அவன் கூடப்போனார்கள்.
இவர்கள் முன்னதாகப் போய்த் துரோவா 5
வில் எங்களுக்காகக் காத்திருந்தார்கள்.
புளிப்பில்லா அப்பப்பண்டிகை நாட்களின் 6
பின் நாங்கள் கப்பலேறிப் பிலிப்பியை
விட்டு ஐந்து நாளைக்குள் துரோவாவுக்கு
அவர்களிடம் வந்து சேர்ந்தோம். அங்கே
ஏழுநாள் தங்கியிருந்தோம்.

வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட் 7
கும்படி நாங்கள் கூடிவந்திருக்கையில் பவுல்
மறுநாள் புறப்படவேண்டுமென்றிருந்தபடி
யால் ஜனங்களிடம் பேசி நடராத்திரிவரை
யில் நெடுநேரம் பிரசங்கித்துக்கொண்டிருந்
தான். நாங்கள் கூடியிருந்த மேல்வீட்டில் 8
அநேக விளக்குகளிருந்தன. ஐத்திகுவென் 9
னும் ஒரு வாலிபன் ஜன்னலில் உட்கார்ந்
திருந்தான். பவுல் நெடுநேரம் பேசிக்கொண்
டிருக்கையில் அவன் மிகுந்த தூக்கங்
கொண்டு நித்திரை மயக்கத்தினால் சாய்ந்து
மூன்றுமெத்தையிலிருந்து கீழே விழுந்து
விட்டான்; மரித்தவனாக எடுக்கப்பட்டான்.
பவுல் இறங்கிப்போய் அவனைக் கட்டி 10
அணைத்துக்கொண்டு: சந்தடி செய்யவேண்

டாம், இவன் உயிர் இவனுக்குள் இருக்கி
11 றது என்றான். பின்பு மேலே போய் அப்
பம் பிட்டும் போஜனஞ்செய்தும் வெகு
நேரம் விடியுமட்டும் சம்பாஷித்துக்கொண்
12 டிருந்தபின் புறப்பட்டான். வாலிபனையோ
உயிருள்ளவனாகக் கூட்டிக்கொண்டு வரவே
அவர்கள் அடைந்த ஆறுதலுக்கு அள
வில்லை.
13 பவுல் அஸ்ஸோ பட்டணம்வரைக்கும்
கரைவழியாய்ப் போகவிருந்தபடியால், அவன்
திட்டம்பண்ணியிருந்த பிரகாரம், நாங்கள்
முன்னதாகக் கப்பலேறி அவனை ஏற்றிக்
கொள்ளும்படி அங்கே போயிருந்தோம்.
14 அவன் அஸ்ஸோவில் எங்களோடு சேரவரு
கையில் நாங்கள் அவனை ஏற்றிக்கொண்டு
மித்திலேனே பட்டணத்துக்கு வந்தோம்.
15 கப்பலேறி அவ்விடம்விட்டு மறுநாளில் கீயு
தீவுக்கு எதிராக வந்து இரண்டாநாள் சாமு
தீவுக்கு நேராயோடி அடுத்த நாள் மிலேத்
துப் பட்டணத்துக்கு வந்து சேர்ந்தோம்.
16 கூடுமானால் பெந்தெகொஸ்தே நாளில் எரு
சலேமிலிருக்க வேண்டுமென்று பவுல் தீர்
மானித்திருந்தான். ஆகையால் எபேசு
பட்டணத்தைக் கடந்து போகவேண்டுமென்று
17 மிலேத்திலிருந்து அவன் எபேசுக்கு ஆள்
அனுப்பிச் சபையின் மூப்பரை வரவழைத்
18 தான். அவர்கள் தன்னிடம் வந்து சேரவே,
அவன் அவர்களிடம்: நான் ஆசியா நாட்
டில் கால்வைத்த நாள் தொடங்கி இந்நே
ரமட்டும் உங்களோடு இன்ன
விதமாய் இருந்தேனென்பது உங்களுக்குத்
19 தெரியும். மிகுந்த தாழ்மையோடும் கண்
ணீரோடும் யூதரின் சதியோசனைகளால்
எனக்கு நேரிட்ட சோதனைகளினூடும் நான்
20 ஆண்டவரைச் சேவித்தேன். பிரயோஜன
மானவைகளில் ஒன்றையும் நான் உங்க
ளுக்கு மறைத்துவைக்காமல் பகிரங்கமாக
வும் வீடுவீடாகவும் உங்களுக்கு உபதே
21 சித்து அறிவித்தேன். கடவுளிடம் மனந்
திரும்புவதைப்பற்றியும் நமது ஆண்டவரா
கிய இயேசுவில் விசுவாசம் வைப்பதைப்
பற்றியும் நான் யூதருக்கும் கிரேக்கருக்கும்
22 திடசாட்சி கூறினேன். இதோ, ஆவியில்
கட்டுண்டவனாய் இப்பொழுது எருசலே
முக்குப் போகிறேன்; அங்கே எனக்கு நேரி
23 டப்போகிற காரியங்களை யறியேன். கட்டு
களும் உபத்திரவங்களும் எனக்குக் காத்தி
ருக்கின்றனவென்று பரிசுத்த ஆவியானவர்
பட்டணந்தோறும் திட்டமாய்ச் சாட்சிகூறு
24 கிறார், அதைமாத்திரம் அறிவேன். என்

ஓட்டத்தை முடிக்கும் விஷயத்திலும் கடவு
ளுடைய கிருபையின் சுவிசேஷத்திற்குத்
திடசாட்சி கூறவேண்டுமென்று ஆண்டவ
ராகிய இயேசுவினிடமிருந்து நான் பெற்
றுக்கொண்ட ஊழியத்தை நிறைவேற்றும்
விஷயத்திலும் என் உயிரை ஒரு பொருட்
டாக மதியேன், அருமையாக எண்ணேன்.
நான் உங்களுக்குள் சுற்றித்திரிந்து ராஜ்யத் 25
தைப் பிரசங்கித்ததைக் கேட்டவர்களாகிய
நீங்களெல்லாரும் இனி என் முகத்தைக்
காணமாட்டீர்களென்று அறிவேன். கட 26
வுளின் ஆலோசனையில் ஒன்றையும் நான்
மறைத்து வைக்காமல் எல்லாவற்றையும்
உங்களுக்கு அறிவித்தேன். ஆதலால் நான் 27
எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கின
சுத்தனென்பது நான் இன்றையதினம் உங்
களுக்குக் கூறும் சாட்சி. உங்களைக்குறித் 28
தும் மந்தை முழுவதையுங் குறித்தும் எச்ச
ரிக்கையாயிருங்கள். கடவுள் தமது சுய
ரத்தத்தினால் சம்பாதித்துக்கொண்ட தமது
சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி கண்
காணிக்கிறவர்களாக உங்களை அதில் வைத்
திருக்கிறார். நான் போனபின்பு மந்தை 29
யைத் தப்பவிடாத கொடிய ஓநாய்கள் உங்
களுக்குள்ளே வரும். சீஷர்களைத் தங் 30
கள்பின்னே இழுத்துக்கொள்ளும்படி மாறு
பாடானவைகளைப் பேசுகிறவர்கள் உங்களி
லும் எழும்புவார்களென்பது எனக்குத்
தெரியும். ஆனபடியால் விழித்திருங்கள்; 31
நான் மூன்று வருஷகாலம் இரவும் பகலும்
கண்ணீரோடே இடைவிடாமல் ஒவ்வொரு
வருக்கும் புத்திசொல்லி வந்தேனென்பதை
நினைத்துக்கொள்ளுங்கள். இப்பொழுதும் 32
உங்களை ஆண்டவருக்கும் அவர் கிருபை
யின் வார்த்தைக்கும் ஒப்புவிக்கிறேன்; பக்தி
விருத்தியையும் பரிசுத்தமாக்கப்பட்ட அனை
வருக்குள்ளும் சுதந்தரத்தையும் கொடுப்ப
தற்கு இத்திருவார்த்தை வல்லமையுள்ளது.
எவனுடைய வெள்ளிக்கும் பொன்னுக்கும் 33
வஸ்திரத்துக்கும் நான் ஆசைப்படவில்லை.
எனக்கும் என்னோடிருந்தவர்களுக்கும் 34
வேண்டியவற்றுக்காக வேலை செய்தது இந்
தக் கைகளே என்பது உங்களுக்குத் தெரி
யும். இவ்விதமாய் உழைத்துப் பலவீன 35
ரைத் தாங்க வேண்டுமென்றும் வாங்குவ
தைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கிய
மென்று ஆண்டவராகிய இயேசு சொன்ன
வார்த்தைகளை நினைத்துக்கொள்ள வேண்டு
மென்றும் எல்லாவற்றிலும் உங்களுக்கு
மாதிரி காண்பித்தேனென்று சொன்னேன்.
இவைகளைச் சொன்னபின்பு அவன் 36
அவர்களெல்லாரோடும் முழங்காற்படி

37 யிட்டு ஜெபித்தான். அவர்களெல்லாரும்
மிகவும் அழுது பவுலின் கழுத்தைக் கட்
டிக்கொண்டு திரும்பத் திரும்ப முத்தமிட்
38 டார்கள். அவர்களுக்கு அதிக துக்கத்தைப்
பிறப்பித்தது என் முகத்தை நீங்கள் இனிக்
காணமாட்டீர்களென்று அவன் சொன்ன
வார்த்தையே. அவனைக் கப்பலுக்கு வழி
விட்டனுப்பினார்கள்.

**21** நாங்கள் வருத்தத்தோடு அவர்களை விட்
டுப் பிரிந்து துறைபெயர்ந்தபின் நேராயோடி
கோஸ்தீவையும் மறுநாளில் ரோதுதீவை
யும் சேர்ந்து அவ்விடம்விட்டுப் பத்தாரா
2 பட்டணத்துக்கு வந்தோம். பெனிக்கியா
நாட்டுக்குக் கடந்துபோகிற ஒரு கப்பலை
3 அங்கே கண்டு அதில் ஏறிப்போனோம். சீப்
புருதீவு எங்களுக்குத் தென்பட்டபோது
அதை இடதுபுறமாக விட்டுச் சீரியா நாட்
டிற்கு ஓடித் தீருவின் கரைபிடித்தோம்;
அங்கே கப்பலின் சரக்குகளை இறக்கவேண்
4 டியதாயிருந்தது. சீஷரைத் தேடிக் கண்டு
பிடித்து அங்கே ஏழுநாள் தங்கினோம்.
அவர்கள் ஆவியினால் ஏவப்பட்டுப் பவுலி
னிடம்: எருசலேமில் நீர் கால் வைக்க
5 வேண்டாமென்று சொன்னார்கள். அந்த
நாட்கள் முடிந்தபின் நாங்கள் புறப்பட்
டுப்போகையில் அவர்களெல்லாரும் மனை
விகளோடும் பிள்ளைகளோடுங்கூடப் பட்ட
ணத்துக்கு வெளியே வரும்வரைக்கும் எங்க
ளோடு வந்து வழிவிட்டனுப்பினார்கள்.
கடற்கரையிலே நாங்கள் முழங்காற்படி
6 யிட்டு ஜெபம்பண்ணினோம். ஒருவரிட
மொருவர் விடைபெற்றுக்கொண்டு கப்ப
லேறினோம்; அவர்கள் தங்கள் வீடுகளுக்
குத் திரும்பினார்கள்.

7 நாங்கள் தீருவை விட்டுக் கப்பல் யாத்
திரை முடித்துப் பித்தொலெமாய் பட்ட
ணத்துக்கு வந்தோம்; அங்கே சகோதரரை
வினவிக்கொண்டு அவர்களிடம் ஒருநாள்
8 தங்கினோம். மறுநாளில் நாங்கள் புறப்பட்
டுச் செசரியாவுக்கு வந்து ஏழுபேரில் ஒரு
வனாகிய பிலிப்பென்னும் சுவிசேஷகன் வீட்
9 டிற்குப் போய் அவனிடந் தங்கினோம். தீர்க்
கதரிசனஞ் சொல்லுகிற நான்கு குமாரத்திகள்
அவனுக்கு இருந்தார்கள், இவர்கள் கன்
10 னியர்கள். நாங்கள் பலநாள் அங்கே தங்கி
யிருக்கையில் அகபு என்னும் ஒரு தீர்க்க
11 தரிசி யூதேயாவிலிருந்து வந்தான். அவன்
எங்களிடம் வந்து பவுலின் கச்சையை எடுத்
துத் தன் கால்களையும் கைகளையும் கட்டிக்
கொண்டு: இந்தக் கச்சையையுடையவனை
எருசலேமில் யூதர் இவ்விதமாய்க் கட்டிப்
புறஜாதியார் கைகளில் ஒப்புக்கொடுப்பார்க
ளென்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகி
றார் என்றான். இவைகளைக் கேட்டபொ 12
ழுது, எருசலேமுக்குப் போகவேண்டா
மென்று நாங்களும் அவ்விடத்தாரும் பவுலை
வேண்டிக்கொண்டோம். அவனோ: நீங்கள் 13
செய்கிற இது என்ன? அழுது என் மனது
உடையச்செய்கிறீர்களே. நானோ ஆண்
டவராகிய இயேசுவின் நாமத்திற்காக எரு
சலேமில் கட்டப்படுவதற்குமாத்திரமல்ல,
மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்
றான். அவன் சம்மதியாதபடியினால், ஆண் 14
டவரின் சித்தம் ஆகக்கடவதென்று அமர்ந்
திருந்தோம்.

அந்த நாட்களுக்குப்பின் நாங்கள் பிர 15
யாணத்துக்கு ஆயத்தஞ் செய்துகொண்டு
எருசலேமுக்குப் போனோம். செசரியா பட் 16
டணத்துச் சீஷரில் சிலர் எங்களோடு வந்
தார்கள். சீப்புருதீவானகிய மினாசோன் என்
னும் பெடுநாட் சீஷனொருவனிடத்திற்கு
எங்களைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள்;
இவனிடம் நாங்கள் தங்கும்படி இருந்தது.

நாங்கள் எருசலேமுக்கு வந்தபோது 17
சகோதரர் எங்களைச் சந்தோஷமாய் வர
வேற்றுக்கொண்டார்கள். மறுநாள் பவுல் 18
எங்களையுங் கூட்டிக்கொண்டு யாக்கோபி
னிடத்திற்குப் போனான்; அங்கே மூப்பரெல்
லாருங் கூடிவந்தார்கள். அவர்களை அவன் 19
வாழ்த்தித் தன் ஊழியத்தின் மூலமாய்க் கட
வுள் புறஜாதிகள் நடுவில் செய்தவைகளை
ஒவ்வொன்றாய் விவரித்துச் சொன்னான்.
அவர்கள் அதைக் கேட்டுக் கடவுளை மகி 20
மைப்படுத்தினார்கள். பின்பு அவனிடம்:
சகோதரனே, யூதருக்குள் பல்லாயிரம்பேர்
விசுவாசிகளாயிருக்கிறதைக் காண்கிறீரே,
அவர்களெல்லாரும் நியாயப்பிரமாணத்தைக்
குறித்து வைராக்கியமுள்ளவர்கள். புற 21
ஜாதிகளிடத்திலிருக்கிற யூதரெல்லாரும் தங்
கள் பிள்ளைகளுக்கு விருத்தசேதனஞ் செய்
யாமலும் முறைமைகளின்படி நடவாமலு
மிருக்கச்சொல்லி அவர்கள் மோசேயை
விட்டு மாறுபட நீர் உபதேசிக்கிறீரென்று
இவர்களுக்கு உம்மைப்பற்றிப் போதனை
பண்ணப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க, 22
செய்யவேண்டியதென்ன? நீர் வந்திருக்கிறீ
ரென்று இவர்கள் கேள்விப்படுவது நிச்ச
யம். ஆகையால் நாங்கள் உமக்குச் சொல்லு 23
கிறதை நீர் செய்யும். பொருத்தனைபண்
ணிக்கொண்ட நாலுபேர் எங்களிடமிருக்கி
றார்கள்; அவர்களை நீர் சேர்த்துக்கொண்டு 24
அவர்களோடே நீரும் சுத்திகரிப்புச் செய்து
கொள்ளும். அவர்கள் தலைச்சௌரஞ்

செய்துகொள்வதற்கு அவர்களுக்காக நீரே செலவுசெய்யும். அப்படிச்செய்தால் உம்மைப்பற்றிப் போதனைபண்ணப்பட்ட காரியங்கள் அபத்தமென்றும் நீரும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு நடக்கிறவ ரென்றும் யாவரும் அறிந்துகொள்வார்கள்.
25 விசுவாசிகளான புறஜாதியாரோ, விக்கிரகங்களுக்குப் பலியிட்டது, இரத்தம், நெருக்குண்டு செத்தது, வேசித்தனம் இவைகளுக்கு விலகித் தங்களைக் காத்துக்கொள்ளவேண்டுமென்று நாங்கள் தீர்மானம்பண்ணி அவர்களுக்கு எழுதியனுப்பினோமே என்றார்கள்.
26 அப்பொழுது பவுல் அந்த மனுஷரைச் சேர்த்துக்கொண்டு மறுநாள் அவர்களோடு தானும் சுத்திகரிப்புச் செய்துகொண்டு தெய்வாலயத்தில் பிரவேசித்துச் சுத்திகரிப்பு நாட்கள் எப்பொழுது நிறைவேறுமென்றும் அவர்களில் ஒவ்வொருவனுக்காகவும் எப்பொழுது பலி செலுத்துவதென்றும் தெரிவித்தான்.
27 அந்த ஏழு நாட்களும் நிறைவேறி வருகையில் ஆசியா நாட்டிலிருந்துவந்த யூதர் அவனைத் தெய்வாலயத்திலே கண்டு ஜனங்களெல்லாரையும் எழுப்பிவிட்டு அவன்மேல் கைபோட்டு கூக்குரலிட்டு:
28 இஸ்ரவேலரே, உதவி செய்யுங்கள். ஜனத்திற்கும் நியாயப்பிரமாணத்திற்கும் இந்த ஸ்தலத்திற்கும் விரோதமாக எல்லாருக்கும் எங்கும் போதித்து வருகிறவன் இவன்தான். அது மாத்திரமல்ல, தெய்வாலயத்திற்குள் கிரேக்கரையும் கொண்டுவந்து இந்தப் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினான் என்றார்
29 கள். எபேசியனாகிய தரோப்பீமு முன்னே நகரத்தில் பவுலோடுகூட இருக்கிறதைக் கண்டிருந்தபடியால் பவுல் அவனைத் தெய்வாலயத்திற்குள் கொண்டுவந்திருப்பா
30 னென்று நினைத்துக்கொண்டார்கள். நகரமுழுவதும் அமளியுண்டாயிற்று. ஜனங்கள் கூட்டமாய் ஓடிவந்து பவுலைப்பிடித்து அவனைத் தெய்வாலயத்திற்கு வெளியே இழுத்துக்கொண்டு போனார்கள்; உடனே
31 கதவுகள் பூட்டப்பட்டன. அவர்கள் அவனைக் கொலைசெய்ய எத்தனிக்கையில், எருசலேம் முழுவதும் குழப்பமாயிருக்கிறதென்று சேனைத்தலைவனுக்குச் செய்தி வந்
32 தது. உடனே அவன் போர்ச்சேவகரையும் நூற்றுக்கதிபதிகளையும் கூட்டிக்கொண்டு அவர்களிடம் இறங்கி ஓடினான்; சேனைத்தலைவனையும் போர்ச்சேவகரையும் அவர்கள் கண்டபோது பவுலை அடிக்கிறதை நிறுத்தி
33 விட்டார்கள். அப்பொழுது சேனைத்தலைவன் கிட்டவந்து அவனைப் பிடித்து இரண்டு சங்கிலிகளினால் கட்டச்சொல்லி: இவன் யார்? என்ன செய்தானென்று கேட்டான்.
34 கூட்டத்தில் சிலர் இப்படியும் சிலர் அப்படியுமாகக் கூக்குரலிட்டார்கள். சந்தடியாயிருந்ததினால் அவன் நிச்சயத்தையறியமுடியாமல் அவனைக் கோட்டைக்குள் கொண்டுபோகும்படி கட்டளையிட்டான்.
35 அவன் படிகளண்டை வந்தபோது ஜனக்கூட்டத்தின் உக்கிரத்தினிமித்தம் போர்ச்சேவகர் அவனைத் தூக்கிக்கொண்டுபோக நேரிட்டது.
36 ஜனத்திரள் பின்தொடர்ந்து இவனைத் தொலைத்துவிடுமென்று கூச்சலிட்டார்கள்.
37 அவர்கள் பவுலைக் கோட்டைக்குள் கொண்டுபோகவிருக்கையில் அவன் சேனைத்தலைவனிடம்: நான் உம்மோடு ஒரு வார்த்தை பேசலாமாவென்று கேட்க அவன்: கிரேக்கு பாஷை உனக்குத் தெரியுமா?
38 இந்த நாட்களுக்குமுன் கலகமுண்டாக்கி நாலாயிரம் கொலைபாதகரை வனாந்திரத்திற்குக் கொண்டுபோன எகிப்தியன் நீ அல்லவோ என்றான்.
39 அதற்குப் பவுல்: நான் யூதன், சிலிசியா நாட்டுத் தர்சுபட்டணத்தான், அது அற்பமான ஊரல்ல. ஜனங்களிடம் பேச எனக்கு உத்தரவாகவேண்டுமென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.
40 உத்தரவான போது பவுல் படிகளில் நின்று ஜனங்களைக் கையமர்த்தினான்; மிகுந்த அமைதலுண்டானபோது அவன் எபிரேயு பாஷையில் பேசிச் சொன்னதாவது:

22 சகோதரரே, பிதாக்களே, நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்லப்போகிற உத்தரவைக் கேளுங்கள் என்றான்.
2 அவன் எபிரேயு பாஷையில் தங்களிடம் பேசுகிறதை அவர்கள் கேட்டபொழுது அதிக அமைதலானார்கள். அப்பொழுது அவன்:
3 நான் யூதன்; சிலிசியா நாட்டுத் தர்சுபட்டணத்தில் பிறந்தவன்; இந்த எருசலேம் நகரத்தில் வளர்ந்து கமாலியேலின் பாதத்தருகே முன்னோரின் நியாயப்பிரமாணத் திட்டவட்டத்தின்படியே பாடங்கேட்டவன்; இன்றையதினம் நீங்களெல்லாரும் கடவுள் விஷயத்தில் வைராக்கியமுள்ளவர்களாயிருக்கிறதுபோல நானும் வைராக்கியமுள்ளவனாயிருந்தேன்.
4 நான் இந்த மார்க்கத்தாரை, புருஷரையும் ஸ்திரீகளையும், கட்டிச் சிறைச்சாலைகளில் ஒப்புவித்து மரணபரியந்தம் இம்சைப்படுத்தினேன்.
5 அதற்குப் பிரதான ஆசாரியரும் மூப்பர் யாவரும் சாட்சிகள்; அவர்களிடமிருந்து நான் சகோதரருக்கு நிருபங்களைக்கேட்டு வாங்கிக்கொண்டு தமஸ்குவிலிருக்கிறவர்களையும் கட்

டித் தண்டனைக்கென்று எருசலேமுக்குக் கொண்டுவரும்படி அங்கே போகப் பிர
6 யாணமாயிருந்தேன். அப்படியே நான் போகையில் தமஸ்குவைச் சமீபித்தபோது மத்தியானவேளை சடுதியாய் வானத்திலிருந்து பேரொளி என்னைச்சுற்றி மின்னல்போல் பிரகாசித்தது; நான் தரையில் விழுந்தேன்.
7 விழுவே: சவுலே, சவுலே, என்னை ஏன் இம்சைப்படுத்துகிறாயென்று என்னிடஞ் சொன்ன ஒரு சத்தத்தைக் கேட்டேன்.
8 அதைக் கேட்டு நான் நீர் யார், ஆண்டவரே, என்றேன். அவர்: நீ இம்சைப்படுத்துகிற நசரேயன் இயேசு நானே என்றார்.
9 என்னோடிருந்தவர்கள் ஒளியைக் கண்டார்கள்; என்னிடம் பேசினவர் சத்தத்தையோ
10 அவர்கள் கேட்கவில்லை. அப்பொழுது நான்: ஆண்டவரே, நான் என்ன செய்ய வேண்டுமென்று கேட்க ஆண்டவர் என்னிடம்: நீ எழுந்து தமஸ்குவுக்குப்போ; நீ செய்யும்படி நியமிக்கப்பட்டவைகளெல்லாவற்றையும்பற்றி அங்கே உனக்குச்
11 சொல்லப்படும் என்றார். அந்த ஒளியின் மகிமையினால் நான் பார்வையற்றுப்போன படியால் என்னோடிருந்தவர்கள் எனக்குக் கைலாகு கொடுத்து என்னை வழிநடத்த
12 நான் தமஸ்குவுக்குள் வந்தேன். அங்கே அனனியா வென்னும் ஒருவனிருந்தான். இவன் நியாயப்பிரமாணத்திற்கிசைந்த பக்தியுள்ளவன், அங்கே குடியிருந்த சகல யூதராலும் நல்லவனென்று மதிப்புப்பெற்றவன்.
13 இவன் என்னிடம் வந்து நின்று: சகோதரனே, சவுலே, பார்வையடைவாயாக என்றான்; அந்நேரமே நான் பார்வையடைந்து
14 அவனை ஏறிட்டுப்பார்த்தேன். பார்க்கவே அவன்: நமது பிதாக்களின் கடவுளுடைய திருவுளத்தை நீ அறியவும் நீதிபரரைத் தரிசிக்கவும் அவருடைய திருவாய்மொழியைக் கேட்கவும் அவர்தாமே உன்னை முன்னமே
15 நியமித்தார்; நீ கண்டவைகளையுங் கேட்டவைகளையுங் குறித்துச் சகல மனுஷருக்கு முன் அவருக்குச் சாட்சியாயிருப்பாய்.
16 இப்பொழுதும், நீ தாமதிப்பானேன்? எழுந்து அவர் நாமத்தைத் தொழுது கொண்டு ஞானஸ்நானம் பெற்று உன் பா
17 வங்கள் நீங்கக் கழுவப்படு என்றான். நான் எருசலேமுக்குத் திரும்பிவந்து தெய்வாலயத்தில் ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கையில் ஞானதிருஷ்டியடைந்து அவரைத் தரிசித்
18 தேன். அவர் என்னிடம்: நீ தாமதியாமல் சீக்கிரமாய் எருசலேமை விட்டுப் போ, நீ என்னைப்பற்றிச் சொல்லும் சாட்சியத்தை இவர்கள் அங்கேகரிக்கமாட்டார்கள் என்
19 றார். அதற்கு நான்: ஆண்டவரே, உம்மில் விசுவாசம் வைத்தவர்களை நான் காவலில் போட்டு ஜெபாலயங்களில் அடித்ததையும் | உமது சாட்சியாகிய ஸ்தேவானின்
20 இரத்தம் சிந்தப்படுகிறபோது நானும் உடன்பட்டவனாய் அருகே நின்று அவனைக் கொன்றவர்களின் வஸ்திரங்களைக் காத்துக் கொண்டிருந்ததையும் இவர்கள் அறிந்திருக்கிறார்களே என்று சொல்ல | அவர்: நீ
21 போ, நான் உன்னைத் தூரமாய்ப் புறஜாதிகளிடத்தில் அனுப்புவேனென்று சொன்னார்.

22 இந்த வார்த்தைவரைக்கும் அவன் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இதைக் கேட்கவே: இப்படிப்பட்டவனைப் பூமியிலிருந்து தொலைத்துவிடும்; இவன் உயிரோடிருக்கலாகாதென்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னார்கள். இவ்விதமாய்
23 அவர்கள் கூக்குரலிட்டுத் தங்கள் வஸ்திரங்களை எறிந்துவிட்டு ஆகாயத்திலே புழுதியைத் தூற்றிக்கொண்டிருக்கையில் |
24 சேனைத்தலைவன் அவனைக் கோட்டைக்குள் கொண்டுவரக் கட்டளையிட்டு அவர்கள் அவனுக்கு விரோதமாய் இப்படிக் கூக்குரலிட்ட காரணத்தை முற்றும் அறியும்படி அவனைச் சவுக்காலடித்து விசாரிக்கச் சொன்னான். அந்தப்படியே அவர்கள்
25 அவனை வாரினால் அழுந்தக் கட்டும்போது பவுல் சமீபத்தில் நின்ற நூற்றுக்கதிபதியைப் பார்த்து: ரோமனும் விசாரணை செய்யப்படாதவனுமாயிருக்கிற மனுஷனைச் சவுக்காலடிக்கிறது உங்களுக்கு நியாயமா என்றான். நூற்றுக்கதிபதி அதைக்கேட்டுச்
26 சேனைத்தலைவனிடம் போய் இதையறிவித்து: நீர் செய்யப்போகிறதென்ன? இந்த மனுஷன் ரோமன் என்று சொல்ல |
27 சேனைத்தலைவன் பவுலினிடம் வந்து: நீ ரோமனோ? எனக்குச்சொல் என்றான். அதற்கு அவன்: ஆம், அப்படித்தான் என்றான்.
28 அதுகேட்ட சேனைத்தலைவன்: நான் மிகுந்த திரவியம் செலவுசெய்து இந்தச் சிலாக்கியத்தைச் சம்பாதித்தேன் என்றான். பவுல்: நானோ இந்தச் சிலாக்கியத்திற்குரியவனாகப் பிறந்தேன் என்றான்.
29 அவனை விசாரிக்க விருந்தவர்கள் உடனே அவனை விட்டுவிட்டார்கள். அவன் ரோமனென்றறிந்து சேனைத்தலைவனும் அவனைக் கட்டுவித்ததினிமித்தம் பயந்தான்.

30 யூதர் பவுலின்மேல் சாட்டிய குற்றமின்னதென்று அவன் திட்டமாய் அறியவிரும்பி மறுநாளில் அவனைக் கட்டவிழ்த்துப் பிரதான ஆசாரியரையும் ஆலோசனைச்

சங்கத்தார் அனைவரையுங் கூடிவரக் கட்டளையிட்டு அவனைக் கீழே கொண்டுபோய் அவர்கள் முன் நிறுத்தினான்.

**23** பவுல் ஆலோசனைச் சங்கத்தாரை உற்றுப்பார்த்து: சகோதரரே, இந்நாள்வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நன்மனச்சாட்சியோடே கடவுளின் முன்பாக
2 நடந்துவந்தேனென்று சொன்னான். பிரதான ஆசாரியன் அனனியாவோ அவனை வாயில் அடிக்கும்படி பக்கத்தில் நின்றவர்
3 களுக்குக் கட்டளையிட்டான். அப்பொழுது பவுல் அவனைப் பார்த்து: வெள்ளையடித்த சுவரே, கடவுள் உம்மை அடிக்கப்போகிறார்; நியாயப்பிரமாணத்தின்படி என்னை விசாரிக்கிறவராய் உட்கார்ந்திருக்கிற நீர் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய் என்னை யடிக்கச் சொல்லலாமா என்றான்.
4 சமீபத்தில் நின்றவர்கள்: கடவுளின் பிரதான ஆசாரியரை வைகிறியா என்றார்கள்.
5 அதற்குப் பவுல்: சகோதரரே, இவர் பிரதான ஆசாரியரென்று எனக்குத் தெரியாது; உன் ஜனத்தின் அதிபதியைத் தீது சொல்லாயாக என்று எழுதியிருக்கிறதே என்றான்.
6 அவர்களில் சதுசேயர் ஒரு பங்கும் பரிசேயர் ஒரு பங்குமாயிருக்கிறார்களென்று பவுல் அறிந்து: சகோதரரே, நான் பரிசேயன், பரிசேயருடைய மகன். மரித்தோரின் உயிர்த்தெழுதலை எதிர்பார்க்கும் நம்பிக்கையைக் குறித்து நியாயந்தீர்க்கப்படுகிறேனென்று ஆலோசனைச் சங்கத்தில்
7 சத்தமிட்டுச் சொன்னான். அவன் இதைச் சொன்னபோது பரிசேயருக்கும் சதுசேயருக்குங் கலக முண்டாயிற்று; கூட்டம்
8 இரண்டுபட்டது. சதுசேயர் உயிர்த்தெழுதலில்லையென்றும் தெய்வதூதனும் ஆவியுமில்லையென்றும் சொல்லுகிறவர்கள். பரிசேயரோ அவ்விரண்டு முண்டென்று ஒப்புக்
9 கொள்ளுகிறவர்கள். மிகுந்த கூக்குரல் உண்டாகவே பரிசேய வகுப்பைச்சேர்ந்த வேதபாரகரில் சிலர் எழுந்து வாதாடி: இந்த மனுஷனில் ஒரு பொல்லாங்கையும் காணோம்; ஒரு ஆவி அல்லது தெய்வதூதன் இவனோடு பேசியிருந்தாலோ — ? என்றார்
10 கள். மிகுந்த கலகமுண்டானபோது பவுல் அவர்களால் பீறுண்டு போவானென்று சேனைத்தலைவன் பயந்து போர்ச்சேவகர் கீழேபோய் அவனை அவர்கள் நடுவிலிருந்து இழுத்துக் கோட்டைக்குள் கொண்டுபோய் விடும்படி கட்டளையிட்டான்.
11 அந்த இரவில் ஆண்டவர் அவன் அருகே நின்று: தைரியமாயிரு. என்னைப்பற்றிய வைகளை நீ எருசலேமில் திடச்சாட்சியாய் சொன்னதுபோல நீ ரோமாவிலும் சாட்சி சொல்லவேண்டும் என்றார்.

விடியற்காலமானபோது யூதரில் சிலர் 12
ஒன்றுசேர்ந்துகொண்டு, தாங்கள் பவுலைக் கொல்லுமளவும் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லை என்று சபதம் பண்ணிக்கொண்டார்கள். இப்படிக் கட்டுப்பாடு பண்ணிக் 13
கொண்டவர்கள் நாற்பதுபேருக்கு அதிகமானவர்கள். அவர்கள் பிரதான ஆசாரிய 14
ரிடமும் மூப்பரிடமும் போய்: நாங்கள் பவுலைக் கொலைசெய்யுமளவும் ஒன்றையும் ருசிபார்ப்பதில்லையென்று உறுதியான சபதம் பண்ணிக்கொண்டோம்; ஆதலால் நீங்கள் 15
ஆலோசனைச் சங்கத்தாரோடு போய் அவன் காரியத்தை அதிகத்திட்டமாய் அறிந்து கொள்ள மனதுள்ளவர்கள்போல் சேனைத்தலைவனுக்குக் காண்பித்து அவர் அவனை உங்களிடங் கூட்டிக்கொண்டு வரும்படி கேளுங்கள்; அவன் கிட்ட வருகிறதற்குள்ளே நாங்கள் அவனைக் கொன்றுபோட ஆயத்தமாயிருக்கிறோம் என்றார்கள். இக் 16
தச் சர்ப்பணையைப் பவுலின் சகோதரி மகன் கேள்விப்பட்டுப் போய்க் கோட்டைக்குள் சென்று பவுலுக்கு அறிவித்தான். பவுல் 17
நூற்றுக்கதிபதிகளில் ஒருவனை யழைத்து: இந்த வாலிபனைச் சேனைத்தலைவனிடங் கூட்டிக்கொண்டுபோம்; அவரிடம் இவன் அறிவிக்கவேண்டிய ஒரு காரியமுண்டு என்றான். அப்படியே அவன் இவனைச் சேனைத் 18
தலைவனிடங் கூட்டிக்கொண்டுபோய்: காவலில் இருக்கிற பவுல் என்னை அழைத்து இந்த வாலிபனை உம்மிடங் கொண்டுபோகும்படி என்னைக் கேட்டுக்கொண்டான்; இவன் உமக்கொரு காரியம் சொல்ல வேண்டுமென்றிருக்கிறான் என்றான்.

அப்பொழுது சேனைத்தலைவன் அவன் 19
கையைப் பிடித்துத் தனியே அழைத்துப் போய்: நீ என்னிடம் அறிவிக்கவேண்டிய காரியமென்னவென்று கேட்க, அவன்: 20
பவுலின் காரியத்தை அதிகத்திட்டமாய் விசாரிக்கிறதுபோல நீர் நாளைக்கு அவனை ஆலோசனைச் சங்கத்தாரிடங்கொண்டுவரும்படி உம்மைக் கேட்டுக்கொள்ள யூதர் உடன்பட்டிருக்கிறார்கள். நீர் அவர்களுக்குச் 21
சம்மதிக்கவேண்டாம்; அவர்களில் நாற்பது பேருக்கு அதிகமானவர்கள் அவனைப் பிடிக்கப் பதிவிருக்கிறார்கள்; அவனைக் கொலை செய்யுமளவும் தாங்கள் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லை யென்று சபதம் பண்ணியிருக்கிறார்கள்; உமது உத்தரவுக்காக இப்பொழுது காத்துக்கொண்டு ஆயத்தமாயிருக்

கிறார்கள் என்றான். அப்பொழுது சேனைத்
22 தலைவன்: நீ இவைகளை எனக்கு அறிவித்ததாக ஒருவருக்குஞ் சொல்லாதே என்று கட்டளையிட்டு வாலிபனை யனுப்பிவிட்டான்.
23 பின்பு அவன் நூற்றுக்கதிபதிகளில் இருவரையழைத்து: செசரியாவரைக்கும் போகும்படி இருநூறு போர்ச்சேவகரையும் எழுபது குதிரைவீரரையும் இருநூறு ஈட்டிக்காரரையும் ஆயத்தப்படுத்துங்கள்;
இராத்திரியில் மூன்றுமணி வேளையில் ஆயத்
24 தமாயிருக்கவேண்டும்; பவுலை ஏற்றித் தேசாதிபதி பேலிக்ஸினிடம் பத்திரமாய்க் கொண்டுபோகும்படி குதிரைகளையும் பார்த்து
25 வையுங்கள் என்று சொன்னான். பின்வருமாறு ஒரு நிருபத்தையும் எழுதினான்:
26 கனம்பெருந்திய தேசாதிபதியாகிய பேலிக்ஸ் என்பவருக்குக் கிலவுதியு லீசியா வாழ்த்துதல் சொல்லி அறிவிக்கிறது:
27 யூதர் இந்த மனுஷனைப்பிடித்துக் கொல்லப் போகிற சமயத்தில் நான் போர்ச்சேவகரோடு போய் இவன் ரோமனென்று அறிந்து
28 இவனை விடுவித்தேன். அவர்கள் இவன் மேல் சாட்டின குற்றத்தை முற்றும் அறிய வேண்டுமென்று இவனை அவர்கள் ஆலோசனைச் சங்கத்துக்குக் கொண்டுபோனேன்.
29 இவன் அவர்கள் வேதத்திற்கடுத்த தர்க்க விஷயங்களைப் பற்றிக் குற்றஞ் சாட்டப்பட்டவனென்று விளங்கினதேயல்லாமல் மரணத்துக்காவது விலங்குக்காவது ஏதுவான குற்றமொன்றையுங் காணவில்லை.
30 இவனுக்கு விரோதமாய்ச் சதியோசனை செய்திருக்கிறார்களென்று எனக்குத் தெரிய வந்தபோது உடனே இவனை உம்மிடம் அனுப்பினேன்; குற்றஞ் சாட்டுகிறவர்களும் இவனுக்கு விரோதமாய்ச் சொல்ல வேண்டியவைகளை உமக்குமுன் சொல்லும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறேன் என்பது.
31 போர்ச்சேவகர் தங்களுக்குக் கட்டளையிடப்பட்டபடியே பவுலைக் கூட்டிக் கொண்டு இராத்திரியில் அந்திப்பத்திரி
32 ஊருக்குப் போனார்கள். மறுநாள் குதிரை வீரரை அவனோடு போகும்படி யனுப்பிவிட்டுக் கோட்டைக்குத் திரும்பிவிட்டார்
33 கள். போனவர்கள் செசரியா சேர்ந்து நிருபத்தைத் தேசாதிபதியினிடங் கொடுத்துப் பவுலையும் அவன்முன்னே நிறுத்தினார்
34 கள். தேசாதிபதி அதை வாசித்து எந்த நாட்டானென்று கேட்டுச் சிலிசியா நாட்டா
35 னென்று அறிந்தபோது: உன்மேல் குற்றஞ் சாட்டுகிறவர்களும் வந்திருக்கும்போது உன் காரியத்தைத் திட்டமாய்க் கேட்பேனென்று சொல்லி ஏரோதின் அரண்மனையில் அவனைக் காவல் பண்ணும்படி கட்டளையிட்டான்.

ஐந்துநாளைக்குப் பின்பு பிரதான ஆசா **24**
ரியன் அனனியா சில மூப்பரோடும் தெர்த்துல்லுவென்னும் ஒரு நியாய சாதுரியனோடும் போனான். இவர்கள் பவுலுக்கு விரோதமாய்த் தேசாதிபதியினிடம் பிராதுபண்ணினார்கள். அவன் அழைக்கப்பட்டபோது 2
தெர்த்துல்லு குற்றஞ்சாட்டத் தொடங்கி:
கனம்பொருந்திய பேலிக்ஸே, உம்மாலே 3
நாங்கள் மிகுந்த சமாதான சவுக்கியத்தை அனுபவிக்கிறதையும் உமது பராமரிப்பினால் இந்த ஜனத்துக்குள் சீர்திருத்தங்கள் உண்டாயிருக்கிறதையும் நாங்கள் எப்பொழுதும் எங்கும் மிகுந்த நன்றியறிதலோடு ஒப்புக்கொள்ளுகிறோம். உம்மை நான் 4
அநேக வார்த்தைகளினால் அலட்டமாட்டேன். நாங்கள் சுருக்கமாய்ச் சொல்வதை நீர் பொறுமையாய்க் கேட்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். இந்த மனு 5
ஷன் கொள்ளைநோயென்றும் பூச்சக்கரத்திலுள்ள சகல யூதருக்குள்ளும் கலகம் எழுப்புகிறவனென்றும் நசரேயர் மதப்பிரிவுக்கு முதலாளியென்றுங் கண்டோம். தெய்வா 6, 7
லயத்தையும் இவன் தீட்டுப்படுத்தப்பார்த்தான். நாங்கள் இவனைப் பிடித்துக்கொண்டோம். நீர் விசாரணை செய்வதினால் நாங் 8
கள் இவன்மேல் சாட்டுகிற குற்றங்கள் எல்லாவற்றையும்பற்றி அவனிடத்திலிருந்தே முற்றும் அறிந்துகொள்ளலாம் என்றான். இதற்கு யூதரும் இசைந்து, இவை 9
கள் யதார்த்தந்தான் என்றார்கள்.

பவுல் பேசும்படி தேசாதிபதி சைகை 10
காட்டினபோது அவன் உத்தரவாக: நீர் அநேக வருஷகாலமாய் இந்த ஜனத்துக்கு நியாயாதிபதியாயிருக்கிறீரென்றறிந்து என் காரியங்களைக்குறித்து அதிகத் தைரியமாய் உத்தரவு சொல்லுகிறேன். நான் தொழுது 11
கொள்ளும்படி எருசலேமுக்குப் போனது முதல் இதுவரைக்கும் பன்னிரண்டு நாளைக்குமேலாகவில்லை. இதை நீரே அறிந்து 12
கொள்ளலாம்: தெய்வாலயத்தில் நான் எவரோடாவது தர்க்கம்பண்ணினதையும் நான் ஜெபாலயங்களிலாகிலும் நகரத்திலாகிலும் ஜனங்களுக்குள் கலகமெழுப்பினதையும் இவர்கள் கண்டதில்லை. இப்பொழுது என் 13
மேல் சாட்டுகிற குற்றங்களை இவர்கள் நிரூபிக்கவுமுடியாது. நான் எங்கள் முன் 14
னோரின் கடவுளையே வணங்குகிறேன்; நியாயப்பிரமாணத்துக்கு ஒத்திருக்கிற யாவற்றை

யும் தீர்க்கதரிசன புஸ்தகங்களில் எழுதியி
ருக்கிறவைகளேயும் நம்புகிறேன்; இவர்க
ளும் எதிர்பார்த்து வருகிறபடி நீதருக்கும்
அநீதருக்கும் உயிர்த்தெழுதல் உண்டென்
னும் அதே நம்பிக்கையை நானும் கடவுளி
15 முன்னிட்டே கொண்டிருக்கிறேன். ஆகை
யும் இவர்கள் மதபிரிவு என்று சொல்லு
கிற மார்க்கத்தின்படியே இவற்றை நான்
அனுசரிக்கிறேன். இதை நான்
16 ஒப்புக்கொள்ளுகிறேன். இதில் நான் கடவு
ளுக்கும் மனுஷருக்கு முன்பாக எப்பொ
முதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடைய
வனாயிருக்கும்படி அப்பியாசித்து வருகி
17 றேன். நான் என் ஜனத்தாருக்குத் தர்மப்
பணத்தை ஒப்புவிக்கவும் காணிக்கைகளைச்
செலுத்தவும் அநேக வருஷங்களுக்குப்பின்
18 வந்தேன். செலுத்துகையில் கூட்டமும்
அமளியுமில்லாமல் தெய்வாலயத்தில் சுத்தி
காரித்துக்கொண்டிருக்கும்போது என்னைக்
கண்டார்கள்; கண்டவர்கள் ஆசியா நாட்
19 டாரான சில யூதர், எனக்கு விரோதமான
காரியம் ஏதாகிலும் அவர்களுக்கிருந்தால்
அவர்களே இங்கு உமக்கு முன்பாக வந்து
20 குற்றஞ்சாட்டவேண்டும். அப்படியில்லா
விட்டால், நான் ஆலோசனைச் சங்கத்தாரின்
முன்பாக நின்றபோது தாங்கள் என்ன
அக்கிரமத்தை என்னிடங் கண்டார்க
21 ளென்று இவர்களே சொல்லட்டும். நான்
அவர்கள் நடுவில் நின்றபோது, மரித்தோ
ரின் உயிர்த்தெழுதலைக் குறித்து இன்று
உங்களாலே நியாயந்தீர்க்கப்படுகிறே
னென்று சத்தமிட்டுச் சொன்ன அந்த ஒரு
சொல்லையன்றி வேறெதைக் குற்றமாகக்
கண்டார்கள் என்றான்.

22 இந்த மார்க்கத்தின் விஷயங்களைத் திட்ட
மாய் அறிந்திருந்த பேலிக்ஸ்: சேனைத்தலை
வன் லீசியா வரும்போது உங்கள் காரியங்
களைத் தீரவிசாரிப்பேனென்று சொல்லி
23 விசாரணையைத் தள்ளிவைத்துப் | பவுலைக்
காவல் பண்ணவும் கண்டிப்பில்லாமல்
நடத்தவும் அவனுடையவர்கள் அவனுக்கு
ஊழியஞ் செய்வதைத் தடைசெய்யாதிருக்
கவும் நூற்றுக்கதிபதிக்குக் கட்டளையிட்
டான்.

24 சில நாளைக்குப் பின்பு பேலிக்ஸ் யூதஸ்திரீ
யாகிய தன் மனைவி துருசில்லாளோடு
வந்து பவுலை அழைப்பித்துக் கிறிஸ்து இயே
சுவைப்பற்றும் விசுவாசத்தைக்குறித்து
25 அவன் சொல்வதைக் கேட்டான். நீதியை
யும் தன்னடக்கத்தையும் இனிவரும் நியா
யத்தீர்ப்பையும்பற்றிப் பவுல் நியாயங்காட்
டிப் பேசுகையில் பேலிக்ஸ் பயமடைந்து:
இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சம
யம் வாய்க்கும்போது உன்னை திரும்ப
அழைப்பேன் என்றான். பவுல் தனக்குப் 26
பணங்கொடுப்பானென்றும் எதிர்பார்த்திருந்
தான். அதினால் அவன் அநேகந்தரம் அவ
னையழைத்து அவனோடு சம்பாஷித்தான்.
இரண்டு வருஷஞ் சென்ற பின்பு பேலிக் 27
ஸின் ஸ்தானத்தில் பொர்கியுபெஸ்து தேசா
திபதியாக வந்தான்; அப்பொழுது பேலிக்ஸ்
யூதரின் தயவை நாடினவனாய்ப் பவுலைக்
காவலிலேயே விட்டுப்போனான்.

பெஸ்து தேசாதிபதியாக வந்து மூன்று **25**
நாளான பின்பு செசரியாவிலிருந்து எருச 2
லேமுக்குப்போனான். பிரதான ஆசாரியனும்
யூதரின் பிரதானமானவர்களும் அவனிடம்
பவுலுக்கு விரோதமாகப் பிராதுபண்ணினார்
கள்; அவனை வழியிலே பதிவிருந்து கொன்று 3
போடுவதற்கு ஏற்பாடு செய்துவிட்டுப்
பெஸ்து அவனைத் தயவுபண்ணி எருசலே
முக்கு அழைக்கும்படி வேண்டிக்கொண்
டார்கள். அது கேட்ட பெஸ்து: பவுலைச் 4
செசரியாவிலே காவல் பண்ணியிருக்கிறதே,
நானும் சீக்கிரம் அங்கே போகிறேன். உங் 5
களில் திறமையுள்ளவர்கள் கூட வந்து
அந்த மனுஷனிடம் தகாதது ஏதாகிலும்
உண்டானால் அவன்மேல் குற்றஞ் சாட்
டட்டும் என்றான்.

அவன் அவர்களிடத்தில் எட்டு அல்லது 6
பத்து நாளைக்கு மேலிராமல் செசரியாவுக்
குப் போய் மறுநாளில் நியாயாசனத்தில்
உட்கார்ந்து பவுலைக் கொண்டுவரும்படி
கட்டளையிட்டான். அவன் வந்தபோது 7
எருசலேமிலிருந்து வந்த யூதர் அவனைச்
சூழ்ந்து நின்று தாங்கள் ரூபிக்கமுடியாத
அநேக கொடிய குற்றங்களை அவன்மேல்
சாட்டினார்கள். பவுல் பிரதிவாதித்து: நான் 8
யூதரின் நியாயப்பிரமாணத்துக்காகிலும்
தெய்வாலயத்துக்காகிலும் இராயருக்காகி
லும் விரோதமாக ஒரு குற்றமுஞ் செய்த
தில்லையென்று சொன்னான். பெஸ்துவோ 9
யூதரின் தயவை நாடினவனாய்ப் பவுலினி
டம்: நீ எருசலேமுக்குப் போய் அவ்விடத்
தில் இந்தக் காரியங்களைக் குறித்து எனக்கு
முன்பாக நியாயம் விசாரிக்கப்படச் சம்ம
திக்கிறாயா என்று கேட்கப் | பவுல்: நான் 10
இராயரின் நியாயாசனத்தின்முன் நிற்
கிறேன்; அங்கேயே நான் விசாரிக்கப்பட
வேண்டும். யூதருக்கு நான் தீமையொன்
றும் செய்ததில்லை, அதை நீரும் நன்றாய்
அறிவீர். நான் தீமைசெய்து மரண தண் 11
டனைக்கேதுவான தொன்றை நடப்பித்த

துண்டானால் மரணதண்டனைக்குப் பின் வாங்கமாட்டேன் இவர்கள் என்மேல் சாட்டுகிற குற்றங்கள் முற்றிலும் அபத்தமானால் அவர்களுக்குத் தயவுகாட்ட ஒருவரும் என்னை அவர்களிடம் ஒப்புக்கொடுக்கலாகாது. இராயருக்கு அபயம் என்றான். 12 பெஸ்து தன் ஆலோசனைக்காரருடனே கலந்து பேசிக்கொண்டு: நீ இராயருக்கு அபயமிட்டாயே, இராயரிடத்திற்கே போவாயென்று உத்தரவு சொன்னான். 13 சில நாள் சென்றபின்னே அகிரிப்பா ராஜாவும் பெர்னீக்கேயாளும் பெஸ்துவைக் கண்டுகொள்ளும்படி செசரியாவுக்கு வந்தார்கள். 14 அவர்கள் அங்கே அநேக நாள் தங்கியிருக்கையில் பெஸ்து பவுலைப்பற்றிய சங்கதிகளை ராஜாவுக்கு விவரித்து: பேலிக்ஸ் காவலில் வைத்துப்போன ஒரு மனுஷனி 15 ருக்கிறான். நான் எருசலேமுக்குப் போன போது பிரதான ஆசாரியரும் யூதரின் மூப்பரும் அவனைப்பற்றி என்னிடம் பேசி அவனுக்கு விரோதமாகத் தீர்ப்புச் செய்யவேண் 16 டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவர்களுக்கு நான்: குற்றஞ்சாட்டப்பட்டவன் குற்றஞ் சாட்டினவர்களுக்கு முகமுகமாய் நின்று சாட்டப்பட்ட குற்றத்திற்குப் பிரதிவாதஞ் செய்ய அவனுக்கு இடங்கிடைக்கிறதற்குமுன் தயவுகாட்டுகிறதற்கென்று எவனையும் ஒப்புக்கொடுக்கிறது ரோமருக்கு 17 வழக்கமல்லவென்றேன். எனவே அவர்கள் இங்கே கூடி வந்தபோது நான் எவ்வளவும் தாமதியாமல் மறுநாள் நியாயாசனத்தில் உட்கார்ந்து அந்த மனுஷனைக்கொண்டு 18 வரக் கட்டளையிட்டேன். அப்பொழுது குற்றஞ்சாட்டினவர்கள் அவனைச் சூழ்ந்து நின்று, நான் நினைத்திருந்த குற்றங்களில் 19 ஒன்றையும் அவன்மேல் சுமத்தாமல் | தங்கள் மதாசாரங்களைப்பற்றியும் மரித்துப்போனவனும் இன்னும் உயிரோடிருக்கிறதாகப் பவுல் சாதிக்கிறவனுமாகிய இயேசுவென்னும் ஒருவனைப்பற்றியும் ஏதோ சில தர்க்க விஷயங்களே அவனுக்கு விரோதமாய்க் 20 கொண்டுவந்தார்கள். இவற்றை எப்படி விசாரிப்பதென்று வழிதெரியாமல்: நீ எருசலேமுக்குப் போய் அங்கே இவைகளைக் குறித்து நியாயம் விசாரிக்கப்பட விரும்பு 21 கிறாயா என்று கேட்கப் | பவுல் தான் இராயருடைய தீர்ப்புக்கென்று நிறுத்தி வைக்கப்படவேண்டுமென அப்பயமிடவே நான் அவனை இராயரிடம் அனுப்புமளவும் காவல்பண்ணும்படி கட்டளையிட்டேன் 22 என்றான். அப்பொழுது அகிரிப்பா பெஸ்துவைப்பார்த்து: அந்த மனுஷன் சொல்லுகிறதை நானும் கேட்க விரும்புகிறேனென அவன்: நாளைக்கு நீர் கேட்கலாம் என்றான்.

23 மறுநாளில் அகிரிப்பாவும் பெர்னீக்கேயாளும் மிகுந்த ஆடம்பரத்தோடு வந்து சேனாதிபதிகள் பட்டணத்துப் பிரதான மனுஷர் இவர்களோடு சபாமண்டபத்தில் பிரவேசித்தார்கள். பிரவேசிக்கவே பெஸ்துவின் கட்டளைப்படி பவுலும் கொண்டுவரப் 24 பட்டான். அப்பொழுது பெஸ்து: அகிரிப்பா ராஜாவே, எங்களோடு கூடியிருக்கிறவர்களே, நீங்கள் பார்க்கிற இந்த மனுஷனைக்குறித்து யூத ஜனங்களெல்லாரும் எருசலேமிலும் இவ்விடத்திலும் என்னை வருந்திக் கேட்டுக்கொண்டு இவன் இனி உயிரோடிருக்கிறது தகாதென்று சொல்லிக் கூக் 25 குரலிட்டார்கள். இவன் மரணதண்டனைக் கேதுவானதொன்றையும் செய்யவில்லையென்று நான் அறிந்துகொண்டேன். இவன் தானே இராயருக்கு அபயமிட்டபடியினால் அவரிடத்தில் இவனை அனுப்பத் தீர்மானம் 26 பண்ணினேன். இவனைக்குறித்து என் ஆண்டவனுக்கு எழுதுகிறதற்கு நிச்சயமான தொன்றும் எனக்குத் தெரியவில்லை. இவனை விசாரித்துக் கேட்ட பின்பு எழுதத்தக்க விசேஷம் ஏதாகிலும் எனக்கு விளங்கும்படி இவனை உங்களுக்குமுன்பாக, விசேஷமாய் அகிரிப்பா ராஜாவே உமக்குமுன்பாக, இவனைக்கொண்டு வந்திருக்கிறேன். காவல் 27 பண்ணப்பட்ட ஒருவனை, அவன்மேல் சாட்டின குற்றங்கள் எவையென்று குறிப்பித்துக் காட்டாமல் அனுப்புகிறது எனக்கு யுக்தமாய்த் தோன்றவில்லை என்றான்.

**26** அகிரிப்பா பவுலைப்பார்த்து: நீ உனக்காகப் பேச உனக்கு உத்தரவாகிறதென்று சொன்னான். சொல்லவே பவுல் கையை நீட்டித் தனக்காக எதிர்வாதஞ்செய்யத் தொடங்கினான்:

2 அகிரிப்பா ராஜாவே, யூதர் என்மேல் சாட்டுகிற சகல காரியங்களைக் குறித்தும் நான் இன்றைக்கு உமக்கு முன் எதிர்வாதம் செய்யப் போகிறபடியால் என்னைப் பாக்கியவான் என்றெண்ணுகிறேன். விசே 3 ஷமாய் நீர் யூதருக்குள் வழங்கிவரும் சகல முறைமைகளையும் தர்க்கங்களையும் அறிந்தவரானதால் அப்படி எண்ணுகிறேன்; நான் சொல்வதைப் பொறுமையோடு கேட்கும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன். 4 நான் என் சிறுவயதுமுதற்கொண்டு எருசலேமில் என் ஜனத்தாருக்குள்ளேயே இருந்தேன். ஆதி முதல் நான் நடந்த நடக்

கையை யூதரெல்லாரும் அறிவார்கள்.
5 நமது மார்க்கத்திலுள்ள அதிகக் கண்டிப்
பான பிரிவுக்கு இசைந்தபடி பரிசேயனாய்
நடந்துவந்தேனென்று முற்காலத்திலிருந்தே
என்னை அறிந்தவர்கள் சாட்சிசொல்ல மன
6 திருந்தால் சொல்லுவார்கள். கடவுள் நமது
பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்
தத்தைப்பற்றிய நன்னம்பிக்கையினிமித்தம்
நான் இப்பொழுது விசாரணைக்குக் கொண்டு
7 வரப்பட்டவனாய் நிற்கிறேன். நமது பன்
னிரண்டு கோத்திரத்தாரும் இரவு பகல்
இடைவிடாமல் அவரைச்சேவித்து அந்த
வாக்குத்தத்தம் நிறைவேற நம்பிக்கையோடு
எதிர்பார்த்துவருகிறார்கள். ராஜாவே, அந்த
நம்பிக்கையைக் குறித்தே யூதர் என்மேல்
8 குற்றஞ்சாட்டுகிறார்கள். கடவுள் மரித்
தோரை எழுப்புகிறதென்றால் அது நம்பப்
படாத காரியமென்று நீங்கள் தீர்க்கிற
தென்ன?
9 நான் நசரேயனாகிய இயேசுவின் நாமத்
திற்கு விரோதமாய் அநேக காரியங்களைச்
செய்யவேண்டுமென்று நினைத்தேன். அப்
10 படியே எருசலேமிலுஞ் செய்தேன். நான்
பிரதான ஆசாரியர்களிடம் அதிகாரம் பெற்
றுப்பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறைச்
சாலைகளில் அடைத்தேன்; அவர்கள் கொலை
செய்யப்படுகையில் நானுஞ் சம்மதிகொடுத்
11 தேன். சகல ஜெபாலயங்களிலும் நான்
அவர்களை அநேகந்தரம் தண்டித்துத் தெய்வ
தூஷணஞ் சொல்லக் கட்டாயப்படுத்தி
னேன்; அவர்கள்பேரில் மூர்க்க வெறி
கொண்டவனாய் அந்திய பட்டணங்கள்
வரைக்கும் அவர்களை இம்சைப்படுத்தி
12 வந்தேன். இப்படிச் செய்துவருகையில்
நான் பிரதான ஆசாரியரிடம் அதிகாரமும்
உத்தரவும் பெற்றுத் தமஸ்குவுக்குப் போ
13 கும்போது | மத்தியான வேளையில், ராஜா
வே, வழியில் ஒரு ஒளி வானத்திலிருந்து
என்னையும் என்னோடு பிரயாணம்பண்ணின
வர்களையும் சுற்றிப் பிரகாசிக்கக் கண்டேன்.
அதன் பிரகாசம் சூரியபிரகாசத்திலும் அதி
14 கம். நாங்களெல்லாரும் தரையிலே விழுந்த
போது: சவுலே, சவுலே, நீ ஏன் என்னை
இம்சைப்படுத்துகிறாய்? தாற்றுக்கோலுக்கு
எதிர்த்து உதைப்பது உனக்குக் கஷ்டமா
மென்று எபிரேயுபாஷையில் என்னிடஞ்
சொன்ன ஒரு சத்தத்தைக் கேட்டேன்.
15 அதைக் கேட்டு நான்: நீர் யார், ஆண்ட
வரே, என்றேன். அதற்கு ஆண்டவர்: நீ
16 இம்சைப்படுத்துகிற இயேசு நானே. இப்
பொழுது நீ எழுந்து காலூன்றியில். உன்னை
ஊழியக்காரனாகவும் நீ கண்டவைகளையும்
நான் உனக்குத் தரிசனமாகிக் காண்பிக்கப்
போகிறவைகளையுங்குறித்து உன்னைச் சாட்சி
யாகவும் நியமிப்பதற்காக உனக்குத் தரிசன
மானேன். இந்த ஜனத்தாரிடத்திற்கும் 17
புறஜாதியாரிடத்திற்கும் உன்னை யனுப்பு
கிறேன். அவர்கள் இருளைவிட்டு ஒளியினி 18
டத்திற்கும் சாத்தானின் அதிகாரத்தை விட்
டுக் கடவுளினிடத்திற்குத் திரும்பிப் பாவ
மன்னிப்பையும் என்னைப் பற்றும் விசுவா
சத்தினால் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்
குள் சுதந்தரத்தையும் பெறும்பொருட்டு
அவர்களுடைய கண்களைத் திறக்கும்படி
உன்னை யனுப்புகிறேன். அவர்கள் கைக்கு
உன்னை நீங்கலாக்கிவிடுவேன் என்றார்.
ஆகையால், அகிரிப்பா ராஜாவே, நான் அந் 19
தப் பரமதரிசனத்துக்குக் கீழ்ப்படியாமற்
போகவில்லை. முன்பு தமஸ்குவிலும் எருச 20
லேமிலும் யூதேயா நாடு முழுவதிலுமுள்ள
வர்களிடத்திற்கும் பின்பு புறஜாதியாரிடத்
திற்கும் நான் போய் அவர்கள் மனமாறிக்
கடவுளினிடத்திற்குத் திரும்பி மனமாறு
தலுக்கேற்ற கிரியைகளைச் செய்யவேண்டு
மென்று அறிவித்தேன். இவைகளினிமித் 21
தமே யூதர் தெய்வாலயத்தில் என்னைப்
பிடித்துக் கொலைசெய்யப் பிரயத்தனம்பண்
ணினார்கள். நானோ கடவுளினிடமிருந்து 22
வரும் சகாயத்தைப்பெற்று இந்நாள்வரைக்
கும் சிறியோருக்கும் பெரியோருக்கும்
சாட்சி கூறிக்கொண்டே வருகிறேன். தீர்க்க 23
தரிசிகளும் மோசேயும் முன்னமே சொல்லி
யிருந்தபடியே கிறிஸ்து பாடுபடவேண்டிய
தென்றும் மரித்தோர் உயிர்த்தெழுதலில்
அவர் முதல்வராகி இந்த ஜனத்தாருக்கும்
புறஜாதியாருக்கும் வெளிச்சத்தைப் பிரசித்
தப் படுத்துகிறவரென்றுஞ் சொல்லுகிறே
னேயன்றி வேறொன்றையும் நான் சொல்லு
கிறதில்லை என்றார்.
இவ்விதமாய் அவன் தனக்காக எதிர்வா 24
தஞ் செய்கையில் பெஸ்து உரத்தசத்தமாய்:
பவுலே, நீ பிதற்றுகிறாய், அதிகக் கல்வி
உனக்குப் பைத்தியமுண்டாக்குகிறதென்று
சொல்ல | அவன்: கனம்பொருந்திய பெஸ் 25
தவே, நான் பிதற்றுகிறவனல்ல, நான் வச
னிக்கிறவைகள் சத்தியமும் நிதானமு
முள்ள வார்த்தைகளே. இந்தச் சங்கதி 26
களை ராஜா அறிவார்; ஆகையால் தைரிய
மாய் அவர்முன் பேசுகிறேன்; இவற்றில்
ஒன்றும் அவருக்கு மறைவானதல்லவென்
பது எனக்கு நிச்சயம்; இது ஒரு மூலையில்
நடந்த காரியமல்ல. அகிரிப்பா ராஜாவே 27
தீர்க்கதரிசிகளை நம்புகிறீரா? நம்புகிறீ
ரென்று அறிவேன் என்றார். அகிரிப்பா 28

பவுலைப் பார்த்து: கொஞ்சப் பிரயாசத்தினாலேயே நீ என்னைக் கிறிஸ்தவனாக்கிவிடலாமென்றிருக்கிறாயோ என | பவுல்: நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சத்தினாலோ அதிகத்தினாலோ, இந்தக் கட்டுகள் தவிர முழுவதும் என்னைப்போலாகும்படி கடவுளை முன்னிட்டுக் கோருகிறேன் என்றான்.

30 ராஜாவும் தேசாதிபதியும் பெர்னீக்கேயாளும் அவர்களோடு உட்கார்ந்திருந்தவர்களும்
31 எழுந்து | தனியே போய், இந்த மனுஷன் மரணத்தையாவது கட்டுகளையாவது பெறுவதற்கானதொன்றையுஞ் செய்யவில்லையென்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்.
32 அகிரிப்பா பெஸ்துவினிடம்: இந்த மனுஷன் இராயருக்கு அபயமிடாதிருந்தானால் இவனை விடுதலை பண்ணலாகும் என்றான்.

**27** நாங்கள் இத்தாலியா தேசத்துக்குக் கப்பலேறிப் போகும்படி தீர்மானிக்கப்பட்டபோது பவுலையும் வேறு சில கைதிகளையும் அகஸ்து பட்டாளத்தைச்சேர்ந்த யூலியு வென்னும் பேர்கொண்ட நூற்றுக்கதிபதியினிடம் ஒப்புவித்தார்கள்.
2 ஆசியாநாட்டுக் கரையிலுள்ள துறைகள் வழியாய் ஒடும்படியிருந்த அதிரமித்தியம் ஊர்க் கப்பலில் நாங்கள் ஏறிப் புறப்பட்டோம். மக்கெதோனியா தேசத்துத் தெசலோனிக்கே பட்டணத்தான் அரிஸ்தார்க்கு எங்களோடிருந்தான்.
3 மறுநாள் சீதோன் துறைபிடித்தோம். யூலியு பவுலைப் பட்சமாய் நடத்தி அவன் தன் சிநேகிதரிடம் போய்ப் பராமரிப்படையும்படி உத்தரவு கொடுத்தான்.
4 கப்பலேறி அவ்விடம் விட்டுப் புறப்பட்டு எதிர்காற்றாயிருந்தபடியினால் சீப்புரு தீவின் ஓதுக்கிலே
5 ஓடினோம். பின்பு சிலிசியா பம்பிலியா நாடுகளின் கடலைக் கடந்தோடி லீசியாநாட்டு
6 மீராப்பட்டணம் சேர்ந்தோம். இத்தாலியாவுக்குப் போகிற அலெக்சந்திரியா பட்டணத்துக் கப்பலை நூற்றுக்கதிபதி அங்கே
7 கண்டு எங்களை அதில் ஏற்றினான். காற்று எங்களுக்கு அனுகூலமாயிராதபடியினால் நாங்கள் அநேகநாள் மெதுவாய்ச் சென்று கஷ்டத்தோடே கினீதுமுனைக்கு எதிரே வந்து சல்மோனே ஊருக்கு எதிராய்க் கிரேத்தாத் தீவின் ஓதுக்கில் ஓடினோம்.
8 அதைக் கஷ்டத்தோடு கடந்து நல்லதுறைகள் எனப்பட்ட ஒரு இடத்திற்கு வந்தோம்; லசேயபட்டணம் அதற்குச் சமீபமாயிருந்தது.

9 வெகுகாலஞ் சென்று உபவாசநாளும் கழிந்துபோகவே, இனிக் கப்பல் யாத்திரை செய்கிறது மோசத்திற்கு ஏதுவானபடியால்
10 பவுல் அவர்களைப் பார்த்து: மனுஷரே, இந்த யாத்திரையினால் சரக்குக்கும் கப்பலுக்குமாத்திரமல்ல, நமது ஜீவனுக்குங்கூடச் சேதமும் மிகுந்த நஷ்டமும் உண்டாகுமென்று காண்கிறேனென்று சொல்லி அவர்களை எச்சரித்தான்.
11 நூற்றுக்கதிபதி பவுல் சொன்னதைப் பார்க்கிலும் மாலுமியையும் கப்பல் எஜமானையும் அதிகமாய் நம்பினான்.
12 அந்தத் துறைமுகம் மழைகாலத்தில் தங்குவதற்கு வசதியாயிராதபடியினால் அவ்விடத்தை விட்டுக் கூடுமானால் கிரேத்தாத்தீவில் பேனிக்ஸ் துறைமுகம் சேர்ந்து மழைகாலத்தில் அங்கு தங்கலாமென்று அவர்களிற் பெரும்பாலார் ஆலோசனை சொன்னார்கள். அந்தத் துறைமுகம் தென்மேற்கையும் வடமேற்கையும் நோக்கியது.
13 தென்றல் மெதுவாயடித்தபடியால் தாங்கள் கோரினது கைகூடி வந்ததென்றெண்ணித் துறையை விட்டுப் பெயர்ந்து கிரேத்தாத்தீவின் கரையோரமாக ஓடினார்கள்.
14 கொஞ்ச நேரத்துக்குள் [1]யூராக்கிலோன் என்னுங் கடுங்காற்று அதிலிருந்து அடித்தது.
15 கப்பல் அதில் அகப்பட்டுக்கொண்டு காற்றுக்கு எதிர்த்துப்போக முடியாதிருந்தினாலே அதின் போக்கிலே அடித்துக்கொண்டு போகப்பட்டோம்,
16 அப்படிக் கிலவுதா என்னும் ஒரு சிறு தீவின் ஓதுக்கில் ஓடுகையில் வெகு கஷ்டத்தோடு படவை வசப்படுத்தினோம்.
17 அதை அவர்கள் தூக்கியெடுத்தபின்பு உபகரணங்களால் கப்பலின் அடியைச்சுற்றிக் கட்டினார்கள். கப்பல் சிர்த்திஸ் என்னும் சொரிமணலிலே போய் விழுந்துவிடுவோமென்ப் பயந்து பாய்களை இறக்கினார்கள். இவ்விதமாய்க் கொண்டு போகப்பட்டார்கள்.
18 மேலும், பெருங்காற்றில் நாங்கள் மிகவும் அடிபட்டபடியினால் மறுநாள் சில சரக்குகளைக் கடலில் எறிந்துவிட்டார்கள்.
19 மூன்றுநாளில் கப்பலின் தளவாடங்களைத் தங்கள் கைகளினாலே எடுத்து எறிந்தார்கள்.
20 அநேக நாளாய்ச் சூரியனாவது நட்சத்திரங்களாவது காணப்படவில்லை; அடித்த காற்றுமழை கொஞ்சமல்ல; இனித் தப்பிப் பிழைப்போமென்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப்போயிற்று.
21 அநேகநாள் அவர்கள் போஜனம் பண்ணாமல் இருக்கவே பவுல் அவர்கள் நடு

[1] வடகீழ்க்கொண்டல்.

வில் நின்று: மனுஷரே, இந்தச் சேகமும் நஷ்டமும் வராதபடி என் சொல்லுக்கேட்டுக் கிரேத்தாத்தீவை விட்டுப் புறப்படா 22 மலே இருக்கவேண்டியதாயிருந்தது. ஆகிலும் திடமனதாயிருங்களென்று இப்பொழுது உங்களுக்குத் தைரியஞ் சொல்லுகிறேன். கப்பற்சேதமேயல்லாமல் உங்களில் ஒருவனுக்கும் உயிர்ச்சேதம் வராது. 23 என்னே ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான கடவுளின் தூதன் இந்த இராத் 24 திரியில் என்னிடம் வந்து நின்று: பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்குமுன் நிற்க வேண்டும். இதோ, உன்னோடு யாத்திரை பண்ணுகிற யாவரையும் கடவுள் உனக்குத் 25 தயவுபண்ணினார் என்றான். ஆனபடியினால் மனுஷரே, தைரியமாயிருங்கள். எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கு மென்று கடவுளிடம் நம்பிக்கையாயிருக்கி 26 றேன். ஆயினும் நாம் ஒரு தீவில் விழ வேண்டியதாயிருக்கும் என்றான்.

27 பதினாலாம் இராத்திரியானபோது நாங்கள் ஆதிரியாக் கடலிலே அலைவுபட்டு ஓடுகையில் நடுஜாமத்தில் கப்பலாட்களுக்கு ஒரு கரை கிட்டிவருகிறதாகத் தோன்றிற்று. 28 உடனே அவர்கள் விழுதுவிட்டு இருபது பாகமென்று கண்டார்கள்; சற்றப்புறம் போனபொழுது மறுபடியும் விழுதுவிட்டுப் 29 பதினைந்து பாகமென்று கண்டார்கள். பாறை இடங்களில் விழுவோமென்று பயந்து அமரத்திலிருந்து நாலு நங்கூரங்களைப் போட்டுப் பொழுது எப்போது விடியுமோ என்றி 30 ருந்தார்கள். அப்பொழுது கப்பலாட்கள் அணியத்திலிருந்து நங்கூரங்களைப் போடப் போகிற பாவனையாய்ப் படவைக் கடலில் இறக்கிக் கப்பலை விட்டோடிப்போக வகை 31 தேடுகையில் | பவுல் நூற்றுக்கதிபதியையும் சேவகரையும் பார்த்து: இவர்கள் கப்பலில் இராவிட்டால் நீங்கள் தப்பிப்பிழைக்க 32 மூடியாது என்றான். அப்பொழுது போர்ச்சேவகர் படவின் கயிறுகளை யறுத்து 33 அதைத் தாழவிட்டார்கள். பொழுது விடியப்போகையில் எல்லாரும் போஜனம்பண்ணும்படி பவுல் அவர்களுக்குத் தைரியஞ் சொல்லி: என்ன நேரிடுமோவென்று நீங்கள் இன்று பதினான்காளாய் ஒன்றுஞ்சாப்பிடா 34 மல் பட்டினியாயிருக்கிறீர்கள். போஜனம் பண்ணும்படி. உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன், நீங்கள் தப்பிப் பிழைப்பதற்கு அது அநுகூலமாகும்; உங்களில் எவனுக்கும் ஒரு தலைமயிராவது சேதப்படாது என்றான். 35 இவற்றைச் சொல்லி அப்பத்தை எடுத்து எல்லாருக்குமுன்பாகவும் கடவுளுக்கு நன் மிசெலுத்தி அதைப் பிட்டுச் சாப்பிடத் தொ டங்கினான். அப்பொழுது எல்லாரும் தை 36 யமடைந்து சாப்பிட்டார்கள், கப்பலில் இரு 37 நூற்றெழுபத்தாறுபேர் இருந்தோம். திருப் 38 தியாகச் சாப்பிட்டபின்பு அவர்கள் கோதுமையைக் கடலில் எறிந்து கப்பலை இலகுவாக்கினார்கள். பொழுதுவிடிந்த பின்பு 39 இன்ன பூமியென்று அறியாதிருந்தார்கள். அப்பொழுது சமமானகரையுள்ள ஒரு குடா அவர்களுக்குத் தென்பட்டது; அதற்குள் கப்பலை ஒட்டலாகுமோவென்று ஆலோசித்து | நங்கூரங்களைக் கடலிலே விட்டுவிட் 40 டுச் சுக்கான்களின் கட்டுகளைத் தளரவிட்டு முன் பாயைக் காற்றுமுகமாய் விரித்துக் கரைக்கு நேராய் ஓடவிட்டார்கள். இரு 41 புறமுங் கடல்மோதிய ஒரு இடத்தில் கப்பல் அகப்படவே அதைக் கரைதட்டச் செய்தார்கள்; அணியம் ஊன்றி அசையாமலிருந்தது, அமரமோ அலைகளின் பலத்தினால் உடைய ஆரம்பித்தது. அப்பொழுது 42 கைதிகளில் ஒருவனும் நீந்தி ஓடிப்போகாதபடி அவர்களைக் கொன்றுபோடவேண்டுமென்பது போர்ச்சேவகரின் ஆலோசனை. நூற்றுக்கதிபதி பவுலைக் காப்பாற்ற விரும்பி 43 அவர்கள் ஆலோசனையைத் தடுத்து, நீந்தத் தெரிந்தவர்கள் முந்திக் கடலில் குதித்துக் கரையேறவும் | மற்றவர்களில் சிலர் 44 பலகைகள்மேலும் சிலர் கப்பல் துண்டுகள் மேலும் போய்க் கரையேறவும் கட்டளையிட்டான்; இவ்விதமாய் எல்லாரும் தப்பிக் கரை சேர்ந்தார்கள்.

நாங்கள் தப்பிக் கரைசேர்ந்தபின் அந் **28** தத் தீவின் பேர் மெலித்தாவென்று அறிந்து கொண்டோம். கிரேக்க நாகரீகமற்ற அந் 2 தத் தீவார் எங்களுக்குப் பாராட்டின அன்பு சாமானியமானதல்ல. அடித்த மழையினிமித்தமும் குளிரினிமித்தமும் அவர்கள் நெருப்பை மூட்டி எங்கள் அனைவரையுஞ் சேர்த்துக்கொண்டார்கள். பவுல் 3 விறகுக்குச்சிகளை வாரிச்சேர்த்து அந்த நெருப்பின்மேல் போடுகையில் ஒரு விரியன் பாம்பு அனலுறைத்து வெளிப்பட்டு அவன் கையைக் கவ்விக்கொண்டது. பூச்சி 4 அவன் கையில் தொங்குகிறதை நாகரீக மற்ற அந்த ஜனங்கள் கண்டபோது: இந்த மனுஷன் கொலைபாதகன், இதற்குச் சந்தேகமில்லை; இவன் சமுத்திரத்துக்குத் தப்பி வந்தும் பழியானது இவனைப் பிழைக்கவிடவில்லையென்று தங்களுக்குள் சொல்லிக் கொண்டார்கள். அவனோ அந்தப் பூச்சி 5 யை உதறிப்போட்டு ஒரு தீங்கும் அடை

6 யாதிருந்தான். அவனுக்கு வீக்கங்கண்டு அல்லது அவன் சடுதியாய் விழுந்து சாவா னென்று அவர்கள் பார்த்துக்கொண்டிருந் தார்கள்; நெடுநேரமாய்ப் பார்த்துக்கொண் டிருந்தும் விபரீதமானதொன்றும் அவ னுக்கு வராததைக்கண்டபோது அவர்கள் அபிப்பிராய மாறி, இவர் ஒரு தெய்வ மென்று சொல்லிக்கொண்டார்கள்.

7 தீவுக்கு முதலாளியாகிய புப்பிலியு என் பவன் நிலங்கள் அந்த இடத்திற்குச் சமீப மாயிருந்தன; அவன் எங்களை வரவேற்று 8 மூன்றுநாள் பட்சமாய் உபசரித்தான். புப் பிலியுவின் தகப்பன் ஜுரத்தினாலும் இரத்த பேதியினாலும் வருத்தப்பட்டுக் கிடந்தான்; பவுல் அவனிடம் போய் ஜெபம்பண்ணி அவன்மேல் கைகளை வைத்து அவனைக் 9 குணமாக்கினான். இது நடந்தபின்பு தீவி லிருந்த மற்ற வியாதிக்காரரும் வந்து சொஸ் 10 தமடைந்தார்கள். அவர்கள் பலவாறாக எங் களுக்கு மரியாதைசெய்து, நாங்கள் கப்ப லேறிப் போகிறபோது எங்களுக்குத் தேவை யானவைகளை ஏற்றினார்கள்.

11 மூன்று மாதம் சென்றபின் மிதுனம் என் னும் அடையாளமுடைய அலெக்சந்திரி யா கப்பலில் நாங்கள் ஏறிப் புறப்பட் டோம். அது அந்தத் தீவில் மழைகாலத் 12 திற்குத் தங்கியிருந்தது. புறப்பட்டுச் சீர குசா பட்டணஞ் சேர்ந்து அங்கே மூன்று 13 நாள் தங்கினோம். அவ்விடம் விட்டுச் சுற்றி யோடி ரேகியு துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தோம். மறுநாளில் தென்றல் காற் றெழும்பவே இரண்டாநாள் புத்தியோலி 14 பட்டணத்திற்கு வந்து | அங்கே சகோதர ரைத்தேடிக் கண்டுபிடித்தோம்; அவர்கள் ஏழுநாள் தங்களிடம் இருக்கும்படி வேண் டிக்கொண்டார்கள்; அந்தப்படியே நாங்கள் 15 ரோமாபுரிக்குப் போனோம். நாங்கள் வரு கிற செய்தியைக் கேள்விப்பட்டு அங்கிருந்த சகோதரர் அப்பியுசந்தைவரைக்கும் முச்சத் திரம்வரைக்கும் எங்களுக்கு எதிர்கொண்டு வந்தார்கள்; பவுல் அவர்களைக்கண்டு கடவு ளுக்கு நன்றிசெலுத்தித் தைரியமடைந்தான்.

16 நாங்கள் ரோமாபுரியில் சேர்ந்தபோது பவுல் தன்னைக் காத்திருக்கிற சேவகனுட னே தனித்துக் குடியிருக்கும்படி உத்தரவு பெற்றுக்கொண்டான்.

17 மூன்று நாளைக்குப்பின்பு பவுல் யூதரில் பிரதானமானவர்களை வரவழைத்தான்; அவர்கள் கூடிவந்தபோது அவன் அவர்க ளைப் பார்த்து: சகோதரரே, நமது ஜனத்துக் கும் நமது முன்னோரின் முறைமைகளுக் கும் விரோதமானதொன்றையும் நான் செய் யாமலிருந்தும் கைதியாக எருசலேமிலிருந்து ரோமர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்பட் டேன். அவர்கள் நியாயம் விசாரித்த 18 போது என்னிடம் மரணதண்டனைக்கேது வான குற்றமொன்றும் காணுதபடியினால் என்னை விடுதலைசெய்ய விரும்பினார்கள். யூதர் அதற்கு எதிர்பேசவே, நான் இராய 19 ருக்கு அபயமிடவேண்டியதாயிற்று. என் ஜனத்தார்மேல் யாதொரு குற்றஞ் சாட்ட வேண்டுமென்று நான் அப்படிச் செய்ய வில்லை. இந்தக் காரியத்தினிமித்தமே உங் 20 களைக் காணவும் உங்களோடு பேசவும் உங் களை அழைப்பித்தேன். இஸ்ரவேலர் ஆசித்து எதிர்பார்ப்பதெதுவோ அதினிமித் தமே இந்தச் சங்கிலியால் கட்டப்பட்டிருக் கிறேன் என்றான். அதற்கு அவர்கள்: 21 உன்னைக் குறித்து யூதேயாவிலிருந்து எங்க ளுக்குக் காகிதம் வரவுமில்லை, வந்த சகோ தரரில் ஒருவனும் உனக்கு விரோதமாகத் தீமையொன்றையும் அறிவிக்கவுமில்லை, பேசவுமில்லை. இந்த மதப்பிரிவுக்கு விரோத 22 மாய் எங்கும் பேசிக்கொள்ளப்படுகிறதாக நாங்கள் அறிகிறபடியால் உன் கருத்து இன்னதென்று கேட்டறிகிறது நியாயமென் றெண்ணுகிறோம் என்றார்கள்.

அவர்கள் அவனுக்குக் குறித்த ஒரு 23 நாளில் அநேகம்பேர் அவன் தங்கியிருந்த வீட்டிற்கு அவனிடம் வந்தார்கள். அவன் காலைதொடங்கி மாலை வரைக்கும் மோசே யின் நியாயப்பிரமாணத்தினும் தீர்க்கதரிசி களின் ஆகமங்களினுமிருந்து இயேசுவைப் பற்றி அவர்களுக்குப் போதித்துத் திடச் சாட்சி கூறிக் கடவுளின் ராஜ்யத்தைக் குறித்து விவரித்துப்பேசினான். சிலர் அவர் 24 சொன்னவைகளுக்கு இணங்கினார்கள், சில ரோ நம்பாமற்போனார்கள். அவர்கள் ஒருவ 25 ரோடொருவர் ஒவ்வாமல் கூட்டத்தை விட் டுப் போகையில் பவுல் அவர்களுக்கு ஒரே ஒரு காரியத்தைச் சொன்னான்; அதாவது:

காதாரக் கேட்டும் உணரமாட்டீர்கள், 26
கண்ணாரக் கண்டும் அறியமாட்டீர்கள்.
இந்த ஜனத்தின் இருதயம் கொழுத்துப் 27
போயிற்று,
காதுகள் கேளாதபடி மந்தமாயின,
அவர்கள் கண்களால் காணுமலும்
காதுகளால் கேளாமலும்
இருதயத்தால் உணராமலும்
மனந்திரும்பாமலுமிருக்கும்படி
தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள்.
நானே அவர்களைக் குணமாக்க மனதாயி
ருந்தேன்

என்று இந்த ஜனத்தினிடம்போய்ச்சொல்

எனப் பரிசுத்த ஆவி ஏசாயா தீர்க்கதரிசியின் வாயிலாய் உங்கள் பிதாக்களுக்கு நன்
28 றாய்ச் சொல்லியிருக்கிறார். ஆதலால் கடவுள் அருளும் இந்த இரட்சிப்பு புறஜாதியாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறதென்று உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும்; அவர்கள் அதற்குச் செவிகொடுப்பார்கள் என்பது.

பின்பு பவுல் தனக்கு வாடகைக்கு 30
அமர்த்தியிருந்த வீட்டில் இரண்டு வருஷ
முழுதும் தங்கித் தன்னிடம் வந்த யாவ
ரையும் ஏற்றுக்கொண்டு ; மிகுந்த தைரி 31
யத்தோடு தடையில்லாமல் கடவுளின் ராஜ்
யத்தைக்குறித்துப் பிரசங்கித்து ஆண்டவரா
கிய இயேசுகிறிஸ்துவைப் பற்றியவைகளை
உபதேசித்துகொண்டிருந்தான்.

---

## THE EPISTLE TO THE ROMANS

---

# ரோமருக்கு எழுதின நிருபம்

**1** ரோமாபுரியில் கடவுளால் அன்புகூரப்
பெற்று அழைப்பினால் பரிசுத்தரான யாவ
2 ருக்கும், கிறிஸ்து இயேசுவின் அடியானும்
அழைப்பினால் அப்போஸ்தலனுமானவனும்
கடவுளின் சுவிசேஷத்தின் பொருட்டுப்
பிரித்தியேகமாக்கப்பட்டவனுமாகிய பவுல்
3 எழுதுகிறதாவது: கடவுளின் சுவிசேஷம்
பரிசுத்த வேதவாக்கியங்களில் முன்னமே
அவருடைய தீர்க்கதரிசிகளின்மூலமாய்
வாக்களிக்கப்பட்டது; அது அவர் குமார
4 னைப் பற்றியது. இவர் மாம்சத்தின்படி
தாவீதின் வம்சத்தில் தோன்றினவர், பரிசுத்த
முள்ள ஆவியின்படி மரித்தோரிலிருந்தெ
முந்தினால் தெய்வ குமாரனென்று பலமாய்
ரூபிக்கப்பட்டவர், அவரே நமது ஆண்டவ
5 ராகிய இயேசுகிறிஸ்து. புறஜாதியார் யாவ
ருக்குள்ளும் அவர் நாமத்தின்பொருட்டு
விசுவாசத்தின் கீழ்ப்படிதலை யுண்டுபண்
ணும்படி நாங்கள் அவர்மூலமாய்க் கிருபை
யையும் அப்போஸ்தல ஊழியத்தையும்
6 பெற்றோம். அழைப்பினால் இயேசுகிறிஸ்து
வினுடையவர்களான நீங்களும் அவர்களைச்
7 சேர்ந்தவர்களே. நமது பிதாவாகிய கட
வுளிடமிருந்தும் ஆண்டவராகிய இயேசு
கிறிஸ்துவினிடமிருந்தும் உங்களுக்குக் கிரு
பையும் சமாதானமும் உண்டாவதாக.

உங்கள் விசுவாசம் உலகமெங்கும் பிர 8
சித்தமாகிறபடியினாலே முதலாவது நான்
உங்களெல்லாருக்காகவும் இயேசுகிறிஸ்து
மூலமாய் என் கடவுளுக்கு நன்றி செலுத்து
கிறேன். அவர் குமாரனின் சுவிசேஷத் 9
திலே நான் என் ஆவியில் சேவிக்கிற கட
வுளே நான் உங்களை இடைவிடாமல் எப்போ
தும் என் ஜெபங்களில் நினைத்துவருகிறேன்
என்பதற்குச் சாட்சி. கடவுளின் சித்தப் 10
படி எப்படியாவது சமீபகாலத்தில் உங்க
ளிடம் வந்துசேரப் பிரயாணம் வாய்க்க
வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.
நீங்கள் ஸ்திரப்படுவதற்கு ஆவிக்குரிய வரம் 11
ஏதேனும் உங்களுக்குக் கொடுக்கும்படி,
அதாவது நீங்களும் நானும் ஒருவர் விசுவா 12
சத்தை யொருவர் கண்டு உங்கள் நடுவில்
நாம் ஒன்றாய் உற்சாகமடையும்படி, உங்
களைக் காண ஆசையாயிருக்கிறேன். சகோ
தரரே, புறஜாதிகளான மற்றவர்களுக்குள் 13
எனக்குப் பலன் கிடைத்ததுபோலவே உங்
களுக்குள்ளும் ஏதேனும் பலன் கிடைக்கும்
படி உங்களிடம் வரப் பலமுறை யோசனை

யாயிருந்தும் இதுவரைக்கும் தடைப்பட்
டேன் என்பதை நீங்கள் அறியாதிருக்க
14 எனக்கு மனதில்லை. கிரேகருக்கும் மிலேச்
சருக்கும், ஞானிகளுக்கும் மூடருக்கும்
15 நான் கடமைப்பட்டவன். ஆதலால் ரோ
மாபுரியிலிருக்கிற உங்களுக்கும் என்மட்
டில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க மனதா
16 யிருக்கிறேன். சுவிசேஷத்தைப்பற்றி நான்
வெட்கப்படேன். விசுவாசிக்கிறவன் எவ
னுக்கும், முதலில் யூதனுக்கும் பின் கிரேக்
கனுக்குங் கூட, அது இரட்சிப்புக்கு ஏது
17 வான தெய்வ வல்லமையாம். அதிலே கட
வுளின் நீதி விசுவாசத்தில் தொடங்கி விசு
வாசம் வளருவதற்கேதுவாக வெளிப்படு
கிறது. விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்
பானென எழுதியிருக்கிறது அதுவே.

18 சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி
வைக்கிற மனுஷருடைய சகலவித அவ
பக்தி அநியாயங்களின் மேலும் கடவுளின்
கோபம் வானத்திலிருந்து வெளிப்படுகிறது.
19 கடவுளைப்பற்றி அறியக்கூடியதெதுவோ
அது அவர்களுக்குள் பிரத்தியக்ஷம், கட
வுளே அதை அவர்களுக்குப் பிரத்தியக்ஷமாக்
20 கினார். எப்படியென்றால், காணப்படாத
வைகளாகிய அவருடைய நித்திய வல்ல
மையும் தெய்வத்துவமும் படைக்கப்பட்ட
வைகளின் மூலமாய் உலக சிருஷ்டிப்பு
முதற்கொண்டு கவனிக்கிறவர்களுக்குத்
தெளிவாய்க் காணப்படும். எவரும் போக்
21 குச்சொல்வதற்கு இடமில்லை. அவர்கள்
கடவுளையறிந்தும் அவரைக் கடவுளென்று
மகிமைப்படுத்தாமலும் நன்றிசெலுத்தாம
லுமிருந்து தங்கள் சிந்தனைகளில் வீணரா
னார்கள். விவேகமில்லாத அவர்கள் இரு
22 தயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை
ஞானிகளென்று சாதித்துக்கொண்டே மூட
23 ராகி | அழிவில்லாத கடவுளின் மகிமை
யை அழிவுள்ள மனுஷர் பறவைகள் மிரு
கங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைக
ளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றி
னார்கள்.

24 இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருத
யங்களிலுள்ள இச்சைகளினாலே ஒருவரோ
டொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்
படுத்தக் கடவுள் அவர்களை அசுத்தத்திற்கு
25 ஒப்புக்கொடுத்தார். கடவுளின் சத்தியத்
தை அவர்கள் பொய்யாக மாற்றிச் சிருஷ்
டிகரை விட்டுச் சிருஷ்டியைத்தொழுது
சேவித்தார்களே. அவர் என்றென்றைக்கும்
ஸ்தோத்திரத்துக்குரியவர். ஆமேன்.

26 இதினிமித்தம் கடவுள் அவர்களை இழி
வான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக்கொ
டுத்தார். அவர்கள் பெண்கள் சுபாவ அது
போகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான
அதுபோகமாக மாற்றினார்கள். அப்படி 27
யே ஆண்களும் இயற்கையான ஸ்திரீபோ
கத்தை விட்டு ஒருவர்மேலொருவர் விர
தாபத்தினாலே பொங்கி ஆணோடு ஆண்
அவலட்சணமானதை நடப்பித்துத் தங்கள்
தப்பு நடக்கைக்குத்தக்க பிரதிபலனைத்
தங்களுக்குள் அடைந்தார்கள்.

கடவுளைத் தங்கள் முற்றறிவில் பற்றிக் 28
கொள்வதை அவர்கள் அசட்டையாயெண்
ணியபடியால் தகாதவைகளைச் செய்யும்படி
சீர்கேடான சிந்தைக்கு அவர்களை ஒப்புக்
கொடுத்தார். அவர்கள் சகலவித அநியா 29
யம் பொல்லாப்பு பொருளாசை தூர்க்கு
ணம் நிறைந்தவர்கள், பொறாமை கொலை
சண்டை வஞ்சகம் வன்மம் நிரம்பினவர்
கள், புறங்கூறுகிறவர்கள், அவதூறுபண் 30
ணுகிறவர்கள், தெய்வபகைஞர், அகந்தைக்
காரர், பெருமைக்காரர், வீம்புக்காரர்,
பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கி
றவர்கள், பெற்றோர்க்கு அடங்காதவர்
கள், | விவேகமற்றவர்கள், நம்பிக்கைத் 31
தரோகிகள், சுபாவ அன்பில்லாதவர்கள்,
இரக்கமில்லாதவர்கள். இப்படிப்பட்ட 32
வைகளை நடப்பிக்கிறவர்கள் மரண தண்
டனைக்குரியவர்களென்னும் தெய்வ நியாய
விதியை அவர்கள் நன்றாய் அறிந்திருந்தும்
அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லா
மல் அவைகளை நடப்பிக்கிற மற்றவர்களைப்
பற்றிச் சந்தோஷப்பட்டும் வருகிறார்கள்.

ஆகையால், மற்றவர்களைக் குற்றவாளிக 2
ளாகத் தீர்க்கிறவனே, நீ யாராலுஞ் சரி,
போக்குச்சொல்லுவதற்கு உனக்கு இட
மில்லை; நீ எந்தக் காரியத்தில் மற்றவனைக்
குற்றவாளியாகத் தீர்க்கிறாயோ, அந்தக்
காரியத்தில் உன்னைத்தானே ஆக்கினைக்குள்
ளாகத் தீர்த்துக்கொள்ளுகிறாய். ஏனெ
னில், தீர்ப்பிடுகிற நீயே அதே காரியங்களை
நடப்பிக்கிறாய். இப்படிப்பட்டவைகளை 2
நடப்பிக்கிறவர்கள்மேல் கடவுளின் தீர்ப்பு
சத்தியத்திற்கிசைந்த தென்று அறிவோம்.
இப்படிப்பட்டவைகளை நடப்பிக்கிறவர்க 3
ளைக் குற்றவாளிகளென்று தீர்த்தும் அவை
களைச் செய்கிறவனே, நீ கடவுளின் தீர்ப்
புக்குத் தப்பிக்கொள்ளலாமென்று நினைக்
கிறாயோ? அல்லது, நீ குணப்படும்படி கட 4
வுளின் தயாளம் உன்னை ஏவுகிறதென்று
அறியாமல் அவருடைய தயாளம் பொறுமை
நீடிய சாந்தம் இவற்றின் பெருக்கத்தை
அசட்டைபண்ணுகிறாயோ? உன் மனக் 5

கடினத்திற்கும் குணப்படாத இருதயத்திற்
கும் ஏற்றபடி கோபம் விளங்குவதும் கட
வுளின் நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படுவது
மான அந்நாளில் உனக்காகக் கோபாக்கி
6 னியைக் குவித்துக்கொள்ளுகிறாயே. அவர்
அவனவன் செய்கைகளுக்குத் தகுந்தபடி
7 அவனவனுக்குப் பலனளிப்பார். விடா
முயற்சியாய் நற்செய்கைகளைச் செய்து மகி
மையையும் கனத்தையும் அழியாமையை
யுந் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை
8 அளிப்பார். சண்டைக்காரராயிருந்து சத்
தியத்திற்குக் கீழ்ப்படியாமல் அநியாயத்திற்
குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்
9 கிர கோபாக்கினை வரும். முன்பு யூதரி
லும் பின்பு கிரேக்கரிலும் பொல்லாங்கு
செய்கிற எந்த மனுஷனின் ஆத்துமாவுக்
கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்
10 டாகும். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்
கரிலும் எவன் நன்மை செய்கிறானே அவ
னுக்கு மகிமையும் கனமும் சமாதானமும்
உண்டாகும்.

11, 12 கடவுளிடத்தில் பட்சபாதமில்லை. எத்
தனைபேர் நியாயப்பிரமாணமில்லாமல் பா
வஞ் செய்தார்களோ அத்தனை பேரும்
நியாயப்பிரமாணமில்லாமல் அழிந்துபோ
வார்கள்; எத்தனைபேர் நியாயப்பிரமாணத்
துக்குட்பட்டுப் பாவஞ்செய்தார்களோ அத்
தனைபேரும் நியாயப் பிரமாணத்தினாலே
13 தீர்ப்புப் பெறுவார்கள். கடவுளின்முன்
நீதிமான்களாயிருக்கிறவர்கள் நியாயப்பிர
மாணத்தைக் கேட்கிறவர்களல்ல, நியாயப்
பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறவர்களே
14 நீதிமான்களாகத் தீர்க்கப்படுவார்கள். அன்
றியும், நியாயப்பிரமாணமில்லாத புறஜாதி
யார் இயற்கையால் நியாயப்பிரமாணத்திற்
கிசைந்தவைகளைச் செய்யும்போது நியா
யப்பிரமாணமில்லாத இவர்கள் தங்களுக்
குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கி
15 றார்கள். அவர்கள் மனச்சாட்சியுங்கூடச்
சாட்சியிடுகிறதினாலும் குற்றமுண்டு குற்ற
மில்லையென்று அவர்கள் சிந்தனைகள் ஒன்
றையொன்று தீர்க்கிறதினாலும் நியாயப்பிர
மாணத்தின் பொருள் தங்கள் இருதயங்க
ளில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கி
16 றார்கள். என் சுவிசேஷத்தின்படி கடவுள்
கிறிஸ்து இயேசுவைக் கொண்டு மனுஷரின்
அந்தரங்கங்களை நியாயந்தீர்க்கும் நாளில்
இது விளங்கும்.

17 நீ யூதனென்று பேர்வகித்து நியாயப்
பிரமாணத்தின்மேல் சார்ந்துகொண்டு கட
18 வுளில் பெருமைபாராட்டி | நியாயப்பிர
மாண உபதேசத்தைப் பெற்றவனுய்த் திருச்
சித்தத்தை யறிந்துகொண்டு நன்மை தீமை
இன்னதென்று வகையறுக்கிறாய். நீ நியா 19
யப்பிரமாணத்தில் ஞானம் சத்தியம் என்ப
வற்றின் சட்டத்தையுடையவனாய் உன்னைக்
குருடருக்கு வழிகாட்டியாகவும் இருளிலி
ருப்பவர்களுக்கு வெளிச்சமாகவும் | பே 20
தைகளுக்குக் கற்பிக்கிறவனாகவும் குழந்தை
களுக்குப் போதகனாகவும் எண்ணுகிறாய்.
இப்படியிருக்க, மற்றவனுக்குப் போதிக்கிற 21
நீ உனக்குத்தானே போதித்துக்கொள்ளுகிற
தில்லையா? களவுசெய்யக்கூடாதென்று பிர
சங்கிக்கிற நீ களவுசெய்கிறாயா? விபசாரஞ் 22
செய்யக்கூடாதென்று சொல்லுகிற நீ விப
சாரஞ் செய்கிறாயா? விக்கிரகங்களை அரு
ருக்கிற நீ கோவில்களைக் கொள்ளையிடுகி
றாயா? நியாயப்பிரமாணத்தில் பெருமைபா 23
ராட்டுகிற நீ நியாயப்பிரமாணத்தை மீறி
நடந்து கடவுளைக் கனவீனம் பண்ணுகி
றாயா? எழுதியிருக்கிறபடி, கடவுளின் திருநா 24
மம் புறஜாதிகளுக்குள் உங்கள் நிமித்தம்
தூஷிக்கப்படுகிறதே.

நீ நியாயப்பிரமாணத்தைக் கைக் 25
கொண்டு நடந்தால் விருத்தசேதனம் பிர
யோஜனமுள்ளதுதான்; நீ நியாயப்பிரமா
ணத்தை மீறி நடக்கிறவனானால் உன் விருத்
தசேதனம் விருத்தசேதனமில்லாமையா
யிற்றே. ஆதலால், விருத்தசேதனமில்லாத 26
வன் நியாயப்பிரமாண விதிகளைக் கைக்
கொண்டால் அவன் விருத்தசேதன மில்
லாமை விருத்தசேதனமாகவே எண்ணப்
படாதோ? இயற்கையின்படி விருத்தசேதன 27
மில்லாதவனாய் நியாயப்பிரமாணத்தை
நிறைவேற்றுகிறவன் வேதமும் விருத்த
சேதனமும் உள்ளவனாய் நியாயப்பிரமா
ணத்தை மீறுகிற உன்னை நியாயந்தீர்க்கி
றானே. வெளித்தோற்றத்தில் யூதனானவன் 28
யூதனல்ல, வெளியே சரீரத்தில் செய்யப்
படும் விருத்தசேதனமும் விருத்தசேதன
மல்ல. உள்ளந்தரங்கத்தில் யூதனானவனே 29
யூதன்; எழுத்தின்படியல்ல ஆவியின்படி
இருதயத்தில் செய்யப்படும் விருத்தசேத
னமே விருத்தசேதனம்; இப்படிப்பட்ட
வனுக்குரிய புகழ் மனுஷரால்லல கடவு
ளால் வரும்.

இப்படியிருக்க, யூதனின் சிலாக்கிய **3**
மென்ன? விருத்தசேதனத்தின் பிரயோஜன
மென்ன? எவ்விதத்திலும் அதிகமே. முத 2
லாவது கடவுளின் வாக்கியங்கள் அவர்களி
டம் நம்பி யொப்புவிக்கப்பட்டன. ஆனால் 3
மென்ன? அவர்களிற் சிலர் விசுவாசமில்
லாதவர்களாய்ப் போனதினால் அவர்கள்

அவிசுவாசம் கடவுளின் உண்மையை
4 அவமாக்குமோ? இல்லவே இல்லை. கடவுளே சத்தியபரர் என்றும் எந்த மனுஷனும் பொய்யனென்றுங் காணப் படட்டும்.

நீர் உமது வார்த்தைகளில் நீதிபரராகவும் உமது நியாயம் விசாரிக்கப்படும்போது வெற்றியுடையவராகவும் விளங்கவேண்டும்

5 என்றும் எழுதியிருக்கிறது. நமது அநீதம் கடவுளின் நீதியை விளங்கப்பண்ணுமானால் என்ன சொல்லுவோம்? கோபாக்கினையைச்
6 செலுத்துகிற கடவுள் அநீதரா? — நான் மனுஷர் பேசுகிற பிரகாரம் பேசுகிறேன்— அல்லவே அல்ல; கடவுள் அநீதரானால் அவர் உலகத்தை நியாயந் தீர்ப்பதெப்படி?
7 அன்றியும், என் பொய்யினால் கடவுளின் சத்தியம் அவருடைய மகிமைக்கென்று பெருகினதுண்டானால் நான் இன்னும் பாவி
8 யென்று தீர்க்கப்படுவானேன்? நன்மை வரும்படிக்குத் தீமை செய்யலாமென நாங்கள் போதிக்கிறோமென்று சிலர் எங்களைத் தூஷித்துச் சொல்லுகிறபடி நாங்கள் ஏன் செய்யக்கூடாது? அப்படிப்பட்டவர்கள் மேல் வரும் ஆக்கினை நியாயமே.

9 ஆனாலும் என்ன? அவர்களைப் பார்க்கிலும் நாங்கள் மேலானவர்களா? எவ்வளவேனும் மேலானவர்களல்ல. யூதர் கிரேக்கர் யாவரும் பாவத்திற்குட்பட்டவர்களென்று முன்னமே குற்றப்படுத்தினோமே.

10 அந்தப்படியே:

நீதிமானில்லை, ஒருவனுமில்லை;

11 உணர்வுள்ளவனில்லை;

கடவுளைத் தேடுகிறவனில்லை;

12 எல்லாரும் வழிவிலகி ஏகமாய்ப் பயனற்றுப்போனார்கள்;

நன்மைசெய்கிறவனில்லை, ஒருவனுமில்லை.

13 அவர்கள் தொண்டை திறந்த பிரேதக் குழி,

தங்கள் நாவுகளால் வஞ்சனைசெய்கிறார்கள்;

அவர்கள் உதடுகளின் கீழே பாம்பு விஷமிருக்கிறது.

14 அவர்கள் வாய் சபிப்பும் கசப்பும் நிறைந்தது;

15 அவர்கள் கால்கள் இரத்தஞ் சிந்துவதற்கு விரைகின்றன;

16 நாசமும் நிர்ப்பந்தமும் அவர்கள் வழிகளிலுண்டு,

17 சமாதான வழியை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை.

அவர்கள் கண்களின்முன் தெய்வபயமில்லை

18 என்று எழுதியிருக்கிறதே. வாய்கள் யாவும் 19
அடைபடும்படிக்கும் உலகத்தார் யாவரும் கடவுளின் ஆக்கினைத் தீர்ப்புக்கு ஏதுவானவர்களாகும்படிக்கும் நியாயப்பிரமாணஞ் சொல்லுகிறவைகளெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிவோம். மாம்ச 20
மான எவனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே அவர் முன்பாக நீதிமானாகத் தீர்க்கப்படுவதில்லை. நியாயப்பிரமாணத்தினால் வருவது பாவத்தை அறிகிற முற்றறிவே.

இப்போதோ நியாயப்பிரமாணமில்லா 21
மலே கடவுளின் நீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; அதைக் குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகின்றன. அது இயேசுகிறிஸ்துவைப்பற்றும் 22
விசுவாசத்தினாலே பலிக்கும் தெய்வ நீதியே; விசுவாசமாயிருக்கிற எவருக்கும் அது பலிக்கும். வித்தியாசமே இல்லை. எல்லாரும் 23
பாவஞ்செய்து தெய்வமகிமையற்றவர்களாயிருக்கிறார்கள்; அவர் கிருபையினாலே 24
இலவசமாய்க் கிறிஸ்து இயேசுவினுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாகத் தீர்க்கப்படுகிறார்கள். முற்காலத்தில் நடந்த 25
பாவங்களைக் கடவுள் பொறுமையுள்ளவராய்ச் சகித்துக்கொண்டதினிமித்தம் தமது நீதியைக் காண்பிக்கவேண்டுமென்றும் |
தாம் நீதியுள்ளவரும் இயேசுவினிடம் விசுவா 26
சமாயிருக்கிறவனை நீதிமானுயத் தீர்க்கிறவருமாய் விளங்கும்படி தற்காலத்தில் தமது நீதியைக் காண்பிக்கவேண்டுமென்றும் கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாசனமாக அவரையே ஏற்படுத்தினார். இப்படியிருக்க 27
பெருமைபாராட்டுவதெங்கே? அது நீக்கப்பட்டதே. எந்தப் பிரமாணத்தினால்? கிரியையாகிய பிரமாணத்தினாலா? அல்ல; விசுவாசமாகிய பிரமாணத்தினாலேயே. மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியை 28
களில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானுகத் தீர்க்கப்படுகிறானென்று எண்ணுகிறோமே. கடவுள் யூதருக்கு மாத்திரமா 29
கடவுள்? புறஜாதிகளுக்கல்ல என்பீர்களோ? புறஜாதிகளுக்கும் அவர் கடவுள்தான். விருத்தசேதனமுள்ளவர்களை விசுவாசத்தி 30
னாலும் விருத்தசேதனமில்லாதவர்களை விசுவாசத்தின் மூலமாயும் நீதிமான்களாகத் தீர்க்கிற கடவுள் ஒருவரே. அப்படியானால், 31
விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை

அவமாக்குகிறேமா? இல்லவே இல்லை; நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துகிறேம்.

**4** அப்படியானால், மாம்சத்தின்படி நமது பிதாவாகிய ஆபிரகாம் எதைக் கண்டடைந்
2 தான் என்று சொல்லுவோம்? ஆபிரகாம் கிரியைகளினிமித்தம் நீதிமானுகத் தீர்க்கப்பட்டானுகில் பெருமைபாராட்டிக்கொள்ள அவனுக்கு இடமுண்டு; கடவுள் முன்பாக
3 வோ அதற்கு இடமில்லை. வேதவாக்கியம் என்ன சொல்லுகிறது? ஆபிரகாம் கடவுளில் விசுவாசம் வைத்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டதென்று சொல்லு
4 கிறது. வேலை செய்கிறவனுக்குக் கிடைக்குங் கூலி தயவென்றெண்ணப்படாமல் கட
5 னென்றெண்ணப்படும். ஒருவன் கிரியை செய்யாமல் அவபக்தனை நீதிமானுகத் தீர்க்கிறவரிடம் விசுவாசம் வைக்கிறவனுயிருந்தால் அவன் விசுவாசமே நீதியாக எண்
6 ணப்படும். அப்படியே கிரியைகளில்லாமல் கடவுளால் நீதிமானென்றெண்ணப்படுகிற மனுஷனின் பாக்கியத்தைக் கொண்டாடி:

7 எவர்கள் அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டனவோ,
எவர்கள் பாவங்கள் மூடப்பட்டனவோ,
அவர்கள் பாக்கியவான்கள்;
8 எவன் பாவத்தைக் கர்த்தர் எண்ணுதிருக்கிறாரோ
அவன் பாக்கியவான்
என்று தாவீதும் சொல்லுகிறான்.

9 இந்தப்பாக்கியம் வருவது விருத்தசேதனமுள்ளவனுக்கோ இல்லாதவனுக்கோ? ஆபிரகாமுக்கு அவன் விசுவாசமே நீதியாக எண்ணப்பட்டதென்று சொல்லுகிறேமே.
10 அது எப்பொழுது அவனுக்கு எண்ணப்பட்டது? அவன் விருத்தசேதனமுள்ளவனுயிருந்தபோதோ இல்லாதவனுயிருந்தபோதோ? விருத்தசேதன முள்ளவனுயிருந்தபோதல்ல இல்லாதவனுய் இருந்த
11 போதே. மேலும், விருத்தசேதனமில்லாதவனுயிருந்த காலத்தில் அவனுக்கிருந்த விசுவாச நீதிக்கு முத்திரையாக விருத்தசேதன அடையாளத்தைப் பெற்றான். விருத்தசேதனமில்லாதவராகவே விசுவாசிக்கிற யாவருக்கும் நீதி எண்ணப்பட அவர்களுக்கு
12 அவன் பிதாவாயிருக்கும்படிக்கும், விருத்தசேதனத்தைப் பெற்றவர்களாய் மாத்திரமல்ல, நமது பிதா ஆபிரகாம் விருத்தசேதனமில்லாதவனுயிருந்த காலத்தில் கொண்டிருந்த விசுவாசத்தின் அடிச்சுவடுகளில் நடக்கிறவர்களுக்குங்கூட விருத்தசேதனப் பிதாவாயிருக்கும்படிக்கும் அந்த அடையாளத்தைப் பெற்றான்.

உலகத்தைச் சுதந்தரிப்பான் என்கிற 13
வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்காவது அவன் சந்ததிக்காவது நியாயப்பிரமாணத்தின் மூலமாய்க் கிடையாமல் விசுவாச நீதியின்மூலமாய்க் கிடைத்தது. நியாயப்பிரமாணத் 14
தைச் சார்ந்தவர்களே சுதந்தரவாளிகளானுல் விசுவாசம் வீணுப்போம், வாக்குத்தத்தமும் அவமாகும். நியாயப்பிரமாணத் 15
தால் வினைவது கோபாக்கினையே; நியாயப்பிரமாணமில்லாத விடத்தில் மீறுதலுமில்லை. ஆதலால் அது கிருபைவரமாகும் 16
படி விசுவாசத்தினுல் வருகிறது. அப்பொழுதுதான் வாக்குத்தத்தம் எல்லாச் சந்ததியாருக்கும், நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்களுக்கு மாத்திரமல்ல, ஆபிரகாமின் விசுவாசத்தையுடையவர்களுக்கும், உறுதிப்படுகிறது. அநேக ஜாதிகளுக்கு உன்னைப் 17
பிதாவாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, நம்மெல்லாருக்கும் பிதாவாகிய அவன் விசுவாசித்தவரும் மரித்தோரை உயிர்ப்பிக்கிறவரும் இல்லாதவைகளை இருக்கிறவைகள்போல் அழைக்கிறவருமாகிய கடவுளுக்குமுன் அது உறுதிப்படுகிறது
உன் சந்ததி இப்படியிருக்குமென்று சொல் 18
லப்பட்டதற்கிசைய அநேக ஜாதிகளுக்குத் தகப்பனுகத்தக்கதாக அவன் எதிர்பார்ப்பதற்கிடமில்லாதிருந்தும் ஆசித்து எதிர்பார்த்து விசுவாசித்தான். ஏறக்குறைய நூறுவய 19
துள்ளவனுயிருக்கும்போது தன் சரீரம் செத்துப்போனதையும் சாராளின் கர்ப்பம் செத்துப்போனதையும் கவனித்துப்பார்த்தும் அவன் விசுவாசத்தில் பலவீனப்படவில்லை. கடவுளின் வாக்குத்தத்தத்தைக் 20
குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல் | கடவுள் வாக்குப்பண்ணினதை 21
நிறைவேற்ற வல்லவரென்று முழு நிச்சயமாய் நம்பிக் கடவுளை மகிமைப்படுத்தி விசுவாசத்தில் பலங்கொண்டான். ஆகையால் 22
அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது.
அது அவனுக்கு எண்ணப்பட்டதென்பது 23
அவனுக்காக மாத்திரமல்ல | நமக்காகவும் 24
எழுதப்பட்டிருக்கிறது. நமது ஆண்டவராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர்மேல் விசுவாசம்வைக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படப்போகிறது.
அவர் நமது மீறுதல்களின் பொருட்டு ஒப் 25
புக்கொடுக்கப்பட்டும் நாம் நீதிமான்களாகத் தீர்க்கப்படும் பொருட்டு எழுப்பப்பட்டும் இருக்கிறார்.

**5** இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே
நீதிமான்களாகத் தீர்க்கப்பட்டு நமது ஆண்
டவராகிய இயேசுகிறிஸ்து மூலமாய்க்
கடவுளோடு சமாதானமுடையவர்களா
2 யிருப்போமாக. நாம் நிலைத்திருக்கிற
இந்தக் கிருபைக்குள் பிரவேசிக்கும் சிலாக்
கியத்தையும் அவர்மூலமாய் விசுவாசத்தி
னால் பெற்றிருக்கிறோம். கடவுளின் மகி
மையை அடைவோமென்கிற நம்பிக்கை
3 யில் பெருமைபாராட்டுவோமாக. அது
மாத்திரமல்ல, உபத்திரவங்களிலும் பெருமை
பாராட்டுவோமாக. ஏனெனில், உபத்திர
வம் பொறுமையையும் பொறுமை அனுபவ
நிச்சயத்தையும் நிச்சயம் எதிர்நோக்கும்
நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று
4 அறிந்திருக்கிறோம். அந்த நம்பிக்கையோ
5 வெட்கத்துக்குட்படுத்தாது. நமக்கு அரு
ளப்பட்ட பரிசுத்த ஆவியினால் கடவுளின்
அன்பு நமது இருதயங்களில் ஊற்றப்பட்
6 டிருக்கிறதே. எப்படியெனில், நாம் பல
மற்றவர்களாயிருக்கும்போதே குறித்த
காலத்தில் கிறிஸ்து அவபக்தருக்காக மரித்
7 தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது
அரிது; நன்மை செய்தவனுக்காக ஒருவேளை
8 ஒருவன் மரிக்கத்துணிவான். நாம் இன்
னும் பாவிகளாயிருக்கும்போதே கிறிஸ்து
நமக்காக மரித்ததினால் கடவுள் நம்மேல்
வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணு
9 கிறார். இப்படியாக, நாம் அவர் இரத்தத்
தினாலே இப்பொழுது நீதிமான்களாகத் தீர்க்
கப்பட்டிருக்கக் கோபாக்கினைக்கு நீங்கலாக
அவரால் நாம் இரட்சிக்கப்படுவது அதிக
10 நிச்சயமாமே. நாம் சத்துருக்களாயிருக்கும்
போதே அவர் குமாரனின் மரணத்தினால்
அவரோடு ஒப்புரவாக்கப்பட்டோமெயா
னால் ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவர்
ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சய
11 மாமே. அதுவுமல்லாமல், இப்பொழுது
நாம் ஒப்புரவாகுதலைப் பெறக் காரணராயி
ருந்த நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து
மூலமாய் நாம் கடவுளிலும் பெருமை
பாராட்டுவோமாக.

12 இப்படியாக, ஒரே மனுஷனால் பாவ
மும் பாவத்தினால் மரணமும் உலகத்தில்
வந்ததுபோலவும் எல்லா மனுஷரும் பாவஞ்
செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் பர
வினதுபோலவும் கிறிஸ்துவினால் வந்த இரட்
13 சிப்புமிருக்கிறது. நியாயப்பிரமாணத்திற்கு
முன்னும் பாவம் உலகத்திலிருந்தது; நியா
யப்பிரமாணமில்லாத இடத்திலோ பாவம்
14 எண்ணப்படமாட்டாது. அப்படியிருந்
தும் மரணமானது ஆதாமுதல் மோசே
வரைக்கும் ஆதாமின் மீறுதலுக்கொப்
பாய்ப் பாவஞ் செய்யாதவர்களையுங்கூட
அரசாண்டுகொண்டது; அந்த ஆதாம்
வரப்போகிறவரைக் குறிப்பிக்கிறவனாயிருக்
தான். ஆயினும், கிருபைவரமோ மீறுத 15
லைப் போன்றதல்ல. எப்படியெனில்,
ஒருவனுடைய மீறுதலினால் அநேகர் மரித்
திருக்கக் கடவுளின் கிருபையும் இயேசு
கிறிஸ்து என்னும் ஒரே மனுஷனின் கிரு
பையினால் வரும் வரமும் அநேகருக்கென்று
இன்னும் அதிகமாய்ப் பெருகிற்று. இந்த 16
வரம் ஒருவனே செய்த பாவத்தின் பலனைப்
போன்றதல்ல. ஒரே மீறுதலுக்கு வந்த
தீர்ப்பு ஆக்கினைத்தீர்ப்பாகிறது; அநேக
மீறுதல்கள்மேல் வந்த கிருபைவரமோ விடு
தலைத்தீர்ப்பாகிறது. ஒருவனுடைய மீறு 17
தலினாலே அந்த ஒருவன் மூலமாய் மரணம்
அரசாண்டிருந்தால் கிருபையின் பரிபூர
ணத்தையும் நீதிவரத்தின் பரிபூரணத்தை
யும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்
னும் ஒருவராலே ஜீவனையடைந்து அரசாளு
வார்களென்பது அதிக நிச்சயமாமே. ஆகை 18
யால், ஒரே மீறுதலின் பலன் எல்லா
மனுஷருக்கும் ஆக்கினைத்தீர்ப்பானதுபோல
ஒரே நீதிச்செயலின் பலன் எல்லா மனுஷ
ருக்கும் ஜீவனையளிக்கும் விடுதலைத்தீர்ப்பா
யிற்று. எப்படியெனில், ஒரே மனுஷ 19
னின் கீழ்ப்படியாமையினால் அநேகர் பா
விகளாக்கப்பட்டதுபோல ஒருவருடைய
கீழ்ப்படிதலினால் அநேகர் நீதிமான்களாக்
கப்படுவார்கள். நியாயப்பிரமாணமோ மீறு 20
தல் பெருகும்படிக்கு இடையில் வந்து
சேர்ந்தது. பாவம் எங்கே பெருகினதோ
அங்கே கிருபை அபரிமிதமாய்ப் பெரு
கிற்று. பாவம் மரணத்தால் அரசாண்டது 21
போலக் கிருபையானது நமது ஆண்டவ
ராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதி
யைக்கொண்டு நித்திய ஜீவனுக்கேதுவாக
அரசாளவேண்டுமே.

**6** ஆகையால் என்ன சொல்லுவோம்? கிரு
பை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைத்
திருப்போமென்போமோ? அல்லவே அல்ல.
பாவத்திற்கென்று மரித்த நாம் இனி அதில் 2
எப்படிப் பிழைப்போம்? கிறிஸ்து இயேசு 3
வுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனை
வரும் அவருடைய மரணத்துக்குள்ளாக
ஞானஸ்நானம் பெற்றோமென்று அறியீர்
களா? ஆகவே, பிதாவின் மகிமையினாலே 4
கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்
டதுபோல நாமும் புதிதான ஜீவனுள்ள
வர்களாய் நடந்துகொள்ளும்படி ஞான

ஸ்நானத்தின் மூலமாய் அவரோடு மரணத்திற்குள்ளாக் அடக்கம் பண்ணப்பட்டோம். 5 அவர் மரணத்தின் சாயலில் நாம் ஒன்றித்தவர்களாஞல் அவர் உயிர்த்தெழுதலின் 6 சாயலிலும் அப்படியேயிருப்போம். நாம் இனிப் பாவத்துக்குத் தொண்டுசெய்யாத படி பாவசரீரம் அவமாகும் பொருட்டு நமது பழைய மனுஷன் அவரோடு சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். 7 மரித்தவன் இனிப் பாவத் 8 திற்குக் கடன் பட்டவனல்ல. கிறிஸ்துவோடு நாம் மரித்தோமேயாஞல் அவரோடு பிழைத்துமிருப்போமென்று நம்பு 9 கிறோம். மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்றும் மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை 10 யென்றும் அறிந்திருக்கிறோமே. அவர் மரித்தது பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது கடவுளுக் 11 கென்று பிழைத்திருக்கிறார். அப்படியே நீங்களும் உங்களைப் பாவத்திற்கென்று மரித்தவர்களாகவும் கிறிஸ்து இயேசுவுக்குள் கடவுளுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்.

12 ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளுக்குக் கீழ்ப்படிவதற்கேதுவாய்ச் சாவுக்குரிய உங்கள் சரீரத்தில் பாவம் அரசாளாதிருப்ப 13 தாக. நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல் மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாய்க் கடவுளுக்கு உங்களையும் நீதிக்குரிய ஆயுதங்களாக அவருக்கு உங்கள் அவயவங்களையும் ஒப்புக் 14 கொடுத்துவிடுங்கள். பாவம் உங்கள்மேல் ஆளுகைசெய்யமாட்டாது, நீங்கள் நியாயப்பிரமாணத்தின் ஆதீனத்திலிராமல் கிருபையின் ஆதீனத்திலிருக்கிறீர்களே.

15 இப்போதும் என்ன? நாம் நியாயப்பிரமாணத்தின் ஆதீனத்திலிராமல் கிருபையின் ஆதீனத்திலிருக்கிறபடியால் பாவஞ் செய்வோமாக என்போமோ? அல்லவே அல்ல. 16 மரணத்துக்கேதுவாகப் பாவத்துக்காஞ ஞஞ்சரி, நீதிக்கேதுவாகக் கீழ்ப்படிதலுக்காஞஞஞ்சரி, எதற்குக் கீழ்ப்படிவதற்கென்று உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, கீழ்ப்படிகிற அதற்கே அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர் 17 களா? முன்னே பாவத்திற்கு அடிமைகளாயிருந்த நீங்கள் ஏற்ற உபதேச சட்டத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டீர்களோ அந்தச் சட்டத்திற்கு இப்பொழுது மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததற்காகக் கடவுளுக்கு ஸ்தோத்திரம். 18 நீங்கள் பாவத்தினின்று விடுதலையானீர்கள், அதினால் நீதிக்கு அடிமைகளானீர்கள். 19 உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம் மனுஷர் பேசுகிற பிரகாரம் பேசுகிறேன். அக்கிரமத்துக்கேதுவாய் முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாகஒப்புக்கொடுத்ததுபோல இப்பொழுது பரிசுத்தமாகுதற்கேதுவாய் உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுத்துவிடுங்கள். 20 நீங்கள் பாவத்தின் அடிமைகளாயிருந்தபோது நீதியின் ஆதீனத்திற்குட்படாதிருந்தீர்கள். 21 இப்படியிருக்க, அப்பொழுது உங்களுக்குக் கிடைத்த பலன் என்ன? இப்பொழுது நீங்கள் வெட்கப்படுகிற காரியங்கள்தான்; அவைகளின் முடிவு மரணமே. 22 இப்பொழுதோ நீங்கள் பாவத்தினின்று விடுதலையாகிக் கடவுளுக்கு அடிமைகளான பின் பரிசுத்தமாகுதல் உங்கள் பலன், முடிவு நித்திய ஜீவனே. 23 பாவத்தின் சம்பளம் மரணம், கடவுளின் கிருபை வரமோ நமது ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் நித்திய ஜீவன்.

**7** சகோதரரே, ஒரு மனுஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகிறதென்று அறியீர்களா? நியாயப்பிரமாணம் தெரிந்தவர்களிடம் பேசுகிறேன். 2 எப்படியெனில், புருஷனையுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணத்தினால் அவனுக்குக் கட்டுண்டிருக்கிறாள்; புருஷன் மரிப்பானேயாகில் புருஷனைப்பற்றிய பிரமாண சட்டத்தினின்று விடுதலையாகிறாள். 3 ஆகையால், புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொருவனைச் சேர்ந்துகொண்டால் விபசாரியெனப்படுவாள். புருஷன் மரித்துப்போனேயாகில் அவள் பிரமாணசட்டத்தினின்று விடுதலையாகிறாள்; அப்போது வேறொருவனுக்கு அவள் மனைவியாஞலும் விபசாரியாகாள். 4 அப்படியே, என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்ட கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகிக் கடவுளுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினால் நியாயப்பிரமாணத்துக்கென்று மரித்தவர்களானீர்கள். 5 நாம் மாம்சத்திற்குட்பட்டிருந்த காலத்தில் நியாயப்பிரமாணத்தினால் வந்த பாவ இச்சைகள் மரணத்திற்கென்று கனிகொடுப்பதற்கேதுவாய் நமது அவயவங்களில் கிரியை செய்தன. 6 இப்பொழுதோ நாம் எழுத்திற்குரிய பழைய நிலைமையி

லல்ல, ஆவிக்குரிய புதிய நிலைமையில் தொண்டுசெய்யும்படி, நாம் எதிலுல் கட்டப்பட்டிருந்தோமோ அதற்கு மரித்தவர்களாகி நியாயப்பிரமாணத்திற்கு விடுதலையானோம்.

7 அப்படியிருக்க, என்ன சொல்லுவோம்? நியாயப்பிரமாணம் பாவம் என்போமோ? அல்லவே அல்ல. நியாயப்பிரமாணத்தினாலேயன்றி நான் பாவத்தை அறியவில்லை; இச்சியாதே என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால் இச்சையை நான் அறி
8 யாமலிருப்பேன். பாவம் கற்பனையையே ஏதுவாகக்கொண்டு சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது; நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் செத்த
9 தாயிருக்குமே. ஒரு காலத்தில் நான் நியாயப்பிரமாணமில்லாதவனாய் ஜீவனுள்ளவனாயிருந்தேன்; கற்பனை வந்தபோதோ பாவம்
10 உயிர்கொண்டது, நானும் மரித்தவனானேன்; ஜீவனுக்கேதுவான கற்பனையே
11 எனக்கு மரணத்துக்கேதுவானதாகக் காணப்பட்டது. பாவம் கற்பனையையே ஏதுவாகக்கொண்டு என்னை வஞ்சித்தது மல்லாமல், அதைக்கொண்டே என்னைக்
12 கொன்றும்போட்டது. ஆகவே நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதே, கற்பனை பரிசுத்தமும் நீதியும் நன்மையுமானதே.

13 இப்படியிருக்க, நன்மையானது எனக்கு மரணமாயிற்றோ? அல்லவே அல்ல; பாவமே அது பாவமாகவே விளங்கும்படி, எனக்கு மரணமாயிற்று; பாவம் கற்பனை மூலமாய் அதிகப் பாவமுள்ளதாகும்படி, நன்மையானதைக்கொண்டு எனக்கு மர
14 ணத்தை உண்டாக்கினது. நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதென்று நமக்குத் தெரியுமே. நானோ மாம்சமானவன், பாவத்துக்
15 குக் கீழாக விற்கப்பட்டவன். எப்படியெனில், நான் நடப்பிக்கிறது எனக்கே தெரியவில்லை; நான் விரும்புகிறதைச் செய்யாமல் வெறுக்கிறதையே செய்கிறேன்.
16 இப்படி நான் விரும்பாததைச் செய்கிறவனாயிருக்க, நியாயப்பிரமாணம் நல்ல
17 தென்று ஒத்துக்கொள்ளுகிறேனே. ஆகையால், அதை நடப்பிக்கிறது நான் அல்ல,
18 எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே. என்னிடத்தில், அதாவது என் மாம்சத்தில் நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்பது எனக்குத் தெரியும். விரும்புதல் என்னிடத்திலுண்டு, நன்மை செய்தலோ என்
19 னிடத்திலில்லை. எப்படியெனில், நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல் விரும்பாத தீமையையே அனுசரிக்கிறேன்.
20 இப்படியாக நான் விரும்பாததைச் செய்தால் அதை நடப்பிக்கிறது நான் அல்ல எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே.
21 ஆனபடியால் நன்மைசெய்ய விரும்புகிற என்னிடத்தில் தீமையுண்டு என்கிற ஒரு பிரமாணத்தைக் காண்கிறேன்.
22 உள்ளான மனுஷனைப் பார்த்தால், கடவுளின் நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியப்படுகிறவனாயிருக்கிறேன்.
23 என் அவயவங்களிலோ வேறொரு பிரமாணத்தைக் காண்கிறேன். அது என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடி என் அவயவங்களிலிருக்கும் பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்குகிறது.
24 நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை
25 விடுதலையாக்குவார்? நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மூலமாய்க் கடவுளுக்கு ஸ்தோத்திரம். இப்படியாக நானே என் மனதினாலே கடவுளின் நியாயப்பிரமாணத்துக்கும் மாம்சத்தினாலே பாவப்பிரமாணத்துக்கும் தொண்டுசெய்கிறவனாயிருக்கிறேன்.

**8** ஆகையால், கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பொன்றுமில்லை. ஜீவனுடைய ஆவியின்
2 பிரமாணம் கிறிஸ்து இயேசுவுக்குள் என்னைப் பாவம் மரணம் என்பவற்றின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.
3 அதெப்படியெனில், மாம்சத்தினால் பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யமுடியாததைக் கடவுள் தாமே செய்தார். தமது குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும் பாவத்தின் பொருட்டும் அனுப்பி மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.
4 மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணம் விதிக்கிற நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச்செய்தார்.
5 ஏனெனில், மாம்சத்துக்கேற்றிருக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவிக்கேற்றிருக்கிறவர்களோ ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்.
6 மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.
7 எப்படியென்றால், மாம்சசிந்தை கடவுளுக்கு விரோதமான பகை; அது கடவுளின் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படிய முடியாமலும் இருக்கிறது.
8 மாம்சத்துக்குள்ளானவர்கள் கடவுளைப் பிரியப்படுத்த முடியாது.
9 நீங்களோ, கடவுளின் ஆவி உங்களில் வாசமாயிருந்தால் மாம்சத்துக்குள்ளானவர்களல்ல, ஆவிக்குள்ளானவர்களே. ஒருவன் கிறிஸ்துவின் ஆவியில்லாதவனு

யிருந்தால் அவன் அவருடையவனல்ல.
10 மேலும், கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரம்
பாவத்தினிமித்தம் மரித்ததாயிருக்கும், ஆவி
11 யோ நீதியினிமித்தம் ஜீவனுயிருக்கும். அன்
றியும், இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்
பினவரின் ஆவி உங்களில் வாசமாயிருந்தால்
கிறிஸ்து இயேசுவை மரித்தோரிலிருந்து
எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற
தமது ஆவியினுலே சாவுக்குரிய உங்கள் சரீ
ரங்களையும் உயிர்ப்பிப்பார்.
12 ஆகையால், சகோதரரே, நாம் கட
னுளிகள், ஆயினும் மாம்சத்திற்கிசைந்து
பிழைப்பதற்கு மாம்சத்திற்கல்ல.
13 மாம்சத்திற்கிசைந்து பிழைத்தால் சாகப்
போகிறீர்கள்; ஆவியினுல் சரீரத்தின்
செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்.
14 கடவுளின் ஆவியினுலே நடத்தப்படுகிறவர்
கள் எவர்களோ அவர்களே கடவுளின்
15 புத்திரர். திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்
கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறு
மல் புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்
றீர்கள், அந்த ஆவியினுல் நாம் அப்பா பிதா
16 வே என்று கூப்பிடுகிறோம்; நாம் கடவுளின்
பிள்ளைகளென்று ஆவியானவர்தாமே நமது
ஆவியோடுகூடச் சாட்சி கொடுக்கிறார்.
17 நாம் பிள்ளைகளானுல் சுதந்தரருமாமே, கட
வுளின் சுதந்தரரும் கிறிஸ்துவுக்கு உடன்
சுதந்தரருமாமே; அவரோடுகூட நாம் மகி
மைப்படுவதற்கு அவரோடுகூடப் பாடுபட்
டால் அப்படியாகும்.
18 இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடம்
வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவை
19 கள் அல்லவென்று எண்ணுகிறேன். கடவு
ளின் புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டி
யானது பேராவலோடு காத்துக்கொண்டிருக்
20 கிறது. அதேனென்றுல், சிருஷ்டியுங்கூட
அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடு
தலையாக்கப்பட்டுக் கடவுளின் பிள்ளைகளுக்
குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்
றுக்கொள்ளுமென்கிற நம்பிக்கையோடே,
21 அந்தச் சிருஷ்டி சுய இஷ்டத்தினுலே அல்ல
கீழ்ப்படுத்தினவரினிமித்தமே, நிலையில்லா
மைக்குக் கீழ்ப்படுத்தப்பட்டிருக்கிறது.
22 இதுவரைக்கும் சர்வசிருஷ்டியும் ஏகமாய்த்
தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறதென்பது
23 நமக்குத் தெரியுமே. அது மாத்திரமல்ல,
ஆவியின் முதற்பலனைப் பெற்ற நாமுங்கூட
நமது சரீரமீட்பாகிய புத்திரசுவிகாரத்திற்
குக் காத்திருக்கிறவர்களாய் நமக்குள்ளே
24 தவித்துக்கொண்டிருக்கிறோம். இப்படி
எதிர்பார்க்கும் நம்பிக்கையில் நாம் இரட்சிக்
கப்பட்டோம். காணப்படுகிறதை எதிர்
பார்ப்பது நம்பிக்கையல்ல, ஒருவன் தான்
காண்கிறதை நம்பி எதிர்பார்க்கவேண்டுவ
தென்ன? நாம் காணுததை நம்பி எதிர்பார்ப் 25
போமாகில் அதற்குப் பொறுமையோடே
காத்திருப்போம்.

அப்படியே ஆவியானவரும் நமது பல 26
வீனத்தில் நமக்கு உதவிசெய்கிறார். நாம்
எதை ஏற்றபடி ஜெபித்துக் கேட்கவேண்டு
மென்பதை யறியோம், ஆவியானவர் தாமே
சொல்லமுடியாத பெருமூச்சுகளோடு வேண்
டுதல் செய்கிறார். இருதயங்களை ஆராய்ந்து 27
பார்க்கிறவர் ஆவியானவரின் சிந்தை இன்ன
தென்றறிவார்; அவர் கடவுள் சித்தத்திற்
கிசையப் பரிசுத்தவான்களுக்காக வேண்டு
தல் செய்கிறாரே.

அன்றியும், கடவுளிடம் அன்புகூருகிற 28
வர்களுக்கு, அவர் தீர்மானத்தின் படி
அழைக்கப்பட்டவர்களுக்கே, சகல காரி
யங்களும் நன்மைக்கேதுவாக ஒத்து நடக்
கின்றனவென்று அறிந்திருக்கிறோம்.
கடவுள் எவர்களை முன்னறிந்தாரோ அவர் 29
களைத் தமது குமாரன் அநேக சகோதரருக்
குள்ளே முதற்பேறுனவராயிருக்கவேண்டு
மென்று தமது குமாரனின் சாயலுக்கு ஒப்
பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார். எவர் 30
களை முன் குறித்தாரோ அவர்களை அழைத்து
மிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ
அவர்களை நீதிமான்களாகத் தீர்த்துமிருக்கி
றார்; எவர்களை நீதிமான்களாகத் தீர்த்தாரோ
அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்.

இப்படியிருக்கிறபடியால் இவைகளைக் 31
குறித்து நாம் என்ன சொல்லுவோம்? கட
வுள் நமது பட்சத்திலிருந்தால் நமக்கு
விரோதமாயிருப்பவன் யார்? தமது சொந் 32
தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லா
ருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர்
அவரோடுகூட எல்லாவற்றையும் நமக்கு
அருளாதிருப்பதெப்படி? கடவுள் தெரிந் 33
தெடுத்தவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன்
யார்? கடவுளே அவர்களை நீதிமான்களாகத்
தீர்க்கிறவர்; ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிற 34
வன் யார்? கிறிஸ்து இயேசுவே மரித்தவர்;
இது மாத்திரமோ, அவரே எழுப்பப்பட்டு
மிருக்கிறவர்; அவரே கடவுளின் வலதுபாரி
சத்திலும் இருக்கிறவர், நமக்காக வேண்டு
தல் செய்கிறவரும் அவரே. கிறிஸ்துவின் 35
அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?
உபத்திரவமோ வியாகுலமோ இம்சையோ
பஞ்சமோ நிர்வாணமோ ஆபத்தோ
பட்டயமோ?

உமது நிமித்தம் நாள்முழுதும் கொல்லப் 36
படுகிறோம்

அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்
ணப்பட்டோம்
37 என்று எழுதியிருக்கிறதே. ஆயினும்
இவைகளெல்லாவற்றிலேயும் நாம் நம்மில்
அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்
கொள்ளுகிறவர்களாகவே யிருக்கிறோம்.
38 மரணமோ ஜீவனே தெய்வதூதரோ துரைத்
தனங்களோ நிகழ்காரியங்களோ வருங்காரி
யங்களோ வல்லமைகளோ உயர்வோ தாழ்
வோ வேறெந்தச் சிருஷ்டியானதும் சரி,
39 நமது ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவி
லுள்ள கடவுளின் அன்பைவிட்டு நம்மைப்
பிரிக்கமுடியாதிருக்குமென்று நிச்சயித்
திருக்கிறேன்.

**9** எனக்குப் பெருந்துக்கமும் இடை
விடாத மனவேதனையுமாயிருக்கிறது.
2 கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லு
கிறேன், நான் சொல்லுகிறது பொய்யல்ல
வென்று பரிசுத்த ஆவிக்குள் என் மனச்
சாட்சியும் எனக்குச் சாட்சியாயிருக்கிறது.
3 மாம்சத்தின்படி என் சொந்தத்தாராகிய
என் சகோதரருக்காக நான் சாபத்துக்குட்
பட்டவனாய்க் கிறிஸ்துவைவிட்டு நீங்க
4 விரும்புவேனே. அவர்கள் இஸ்ரவேலரே;
புத்திரசுவிகாரமும் மகிமையும் உடன்படிக்
கைகளும் நியாயப்பிரமாணமும் தேவாரா
தனையும் வாக்குத்தத்தங்களும் அவர்க
5 ளுடையவைகளே; பிதாக்களும் அவர்க
ளுடையவர்கள்; மாம்சத்தின்படி கிறிஸ்து
வும் அவர்களில் தோன்றினாரே. [1] இவர்
சர்வத்திற்கும் மேலான கடவுள், என்றென்
றைக்கும் ஸ்தோத்திரத்துக்குரியவர்; ஆமேன்.
6 கடவுளின் வார்த்தை அவமாய்ப்போயிற்
றென்பதல்ல. இஸ்ரவேல் வம்சத்தார் அனை
7 வரும் இஸ்ரவேலரல்லவே. அவர்கள்
ஆபிரகாமின் சந்ததியாராயிருப்பதினாலேயே
எல்லாரும் பிள்ளைகளாய்விட்டார்களென்ப
தல்ல; ஈசாக்கினிடம் உன் சந்ததி விளங்கு
8 மென்று சொல்லியிருக்கிறது. அதாவது,
மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள்
கடவுளின் பிள்ளைகளல்ல, வாக்குத்த
த்தின்படி பிள்ளைகளானவர்களே அந்தச்
9 சந்ததி என்றெண்ணப்படுகிறார்கள். அந்த
வாக்குத்தத்த வார்த்தையாவது: நான் மறு
படி இந்தக் காலத்தில் வருவேன், அப்
பொழுது சாராளுக்கு ஒரு குமாரனிருப்
10 பான் என்பதே. இதுவுமல்லாமல் நமது
பிதாவாகிய ஈசாக்கென்னும் ஒருவனாலே
கர்ப்பவதியான ரெபெக்காளிடத்திலும் இது
தெரிகிறது. தெரிந்தெடுத்தலின்படியுள்ள 11
தெய்வ தீர்மானம், கிரியைகளினாலல்ல
அழைக்கிறவராலேயே, நிலைநிற்கும்படி,
பிள்ளைகள் இன்னும் பிறவாமலும் நன்மை
தீமையொன்றும் செய்யாமலுமிருக்கையில்,
மூத்தவன் இளையவனுக்குத் தொண்டுசெய் 12
வானென்று அவளிடஞ் சொல்லப்பட்
டது. அப்படியே: யாக்கோபில் அன்பு 13
கூர்ந்தேன், ஏசாவையோ பகைத்தேன் என்
றும் எழுதியிருக்கிறது.

ஆகையால் என்ன சொல்லுவோம்? கட 14
வுளிடத்தில் அநீதி இருக்குமென்போமோ?
அல்லவே அல்ல. அவர் மோசேயினிடம்: 15
எவன்மேல் இரக்கமாயிருக்கிறேனே அவன்
மேல் இரக்கமாயிருப்பேன், எவன்மேல்
உருக்கமாயிருக்கிறேனே அவன்மேல்
உருக்கமாயிருப்பேன் என்றார். ஆகை 16
யால், விரும்புகிறவனாலுமல்ல ஓடுகிறவனா
லுமல்ல இரங்குகிற கடவுளாலேயாகும். என் 17
வல்லமையை உன்னிடங் காண்பிக்கவும்
என் நாமம் பூமியில் எங்கும் பிரஸ்தாபமாக
வும் வேண்டுமென்றே உன்னைத் தோன்றச்
செய்தேன் என்பதாக வேதவாக்கியத்தில்
பார்வோனுக்குச் சொல்லுகிறது. ஆதலால் 18
அவர் தமது இஷ்டப்படியே ஒருவன்மேல்
இரக்கமாயிருக்கிறார், ஒருவனைக் கடினப்
படுத்துகிறார். இப்படியானால், அவர் இன் 19
னும் குற்றம் பிடிக்கிறதென்ன? அவர் சித்
தத்திற்கு எதிர்த்துநிற்பவன் யார் என்று
என்னிடஞ் சொல்லுவாயாகும். மனுஷ 20
னே, கடவுளோடு எதிர்த்து வாதாடுகிற நீ
யார்? உருவாக்கப்பட்ட வஸ்து உருவாக்
கினவனைப் பார்த்து: நீ என்னை என் இப்
படி அமைத்தாயென்று சொல்லுமா?
பிசைந்த ஒரே களிமண்ணிலே குயவன் 21
ஒரு பாத்திரத்தைக் கனமான காரியத்துக்
கும் ஒரு பாத்திரத்தைக் கனவீனமான காரி
யத்துக்கும் பண்ணுகிறதற்கு மண்ணின்
மேல் அவனுக்கு அதிகாரமில்லையோ?
கடவுள் தமது கோபத்தைக் காண்பிக்கவும் 22
தமது வல்லமையைத் தெரிவிக்கவும்
அதோடுகூடத் தாம் மகிமைக்காக ஆயத்த 23
மாக்கின இரக்கப் பாத்திரங்கள்மேல், அதா
வது யூதரிலிருந்து மாத்திரமல்ல புறஜாதி
களிலிருந்தும் அவர் அழைத்த நம்மேல்,
தமது மகிமையின் ஐசுவரியத்தைத் தெரிவிக்
கவும் சித்தங்கொண்டு | அழிவுக்கு எத்தன 24
மாக்கப்பட்ட கோபாக்கினைப் பாத்திரங்கள்

---

1 சர்வத்துக்கும் மேலான கடவுள் என்றென்றைக்கும் ஸ்தோத்திரத்துக்குரியவர்; ஆமேன் என்றும் திருப்
பலாம்.

மேல் மிகவும் கீடிய சாந்தத்தோடு பொறு
25 மையாயிருந்தாரானாலென்ன? அவர் ஒசே
யாவின் மூலமாய்ச் சொல்லுகிறதும்
அதுவே:
எனக்கு ஜனமல்லாதவர்களே என் ஜன
மென்றும்
நான் அன்புகூராதவனே நான் அன்பு
கூர்ந்தவனென்றும்
சொல்லியழைப்பேன்.
26 நீங்கள் என் ஜனமல்லவென்று
அவர்களுக்குச் சொல்லப்பட்ட இடத்தி
லேயே
அவர்கள் ஜீவனுள்ள கடவுளின் பிள்ளை
கள் எனப்படுவார்கள்
27 என்பது. அல்லாமலும், இஸ்ரவேல் புத்தி
ரின் இலக்கம் சமுத்திரத்தின் மணலத்தனை
யாயிருந்தாலும் மீதியாயிருப்பவர்களே
28 இரட்சிக்கப்படுவார்களென்றும் | கர்த்தர்
தமது வார்த்தையைக் காமதமில்லாமல்
முடித்துப் பூமியிலே நிறைவேற்றுவாரென்
றும் இஸ்ரவேலரைக்குறித்து ஏசாயா தீர்க்க
29 தரிசித்துச் சொல்லுகிறார். அல்லாமலும்,
ஏசாயா முன்னே சொன்னபடி:
சேனைகளின் கர்த்தர்
நமக்கு ஒரு சந்ததியை மீதியாக வைக்கா
திருந்தாரானால்
நாம் சோதோமைப்போலாகி
கொமோராவுக்கு ஒத்திருப்போம்.
30 இப்படியிருக்க, என்ன சொல்லுவோம்?
நீதியைப் பின்தொடராத புறஜாதியார்
நீதியைக் கண்டடைந்தார்கள்; அது விசுவா
31 சத்தினால் பலிக்கும் நீதியே. நீதிப்பிரமாணத்
தைப் பின்தொடர்ந்த இஸ்ரவேலரோ நீதிப்
32 பிரமாணத்துக்கு வந்தெட்டவில்லை. காரணம் என்ன? அவர்கள் அதை விசுவாசத்தினால் அல்ல கிரியைகளினால் ஆனதுபோல் தேடினார்கள்; தடுக்குக் கல்லில் தடுமாறினார்கள்.
33 இதோ, தடுக்குக் கல்லையும்
இடறுதற்கான கற்பாறையையும்
சீயோனில் வைக்கிறேன்,
அவரில் விசுவாசம்வைக்கிறவன்
வெட்கத்துக்காளாகான்
என்று எழுதியிருக்கிறபடியாயிற்று.

**10** சகோதரரே, அவர்கள் இரட்சிக்கப்பட
வேண்டுமென்பதே என் இருதயத்தின் விருப்
பமும் நான் கடவுளை நோக்கிச் செய்யும்
2 விண்ணப்பமுமாம். அவர்கள் தெய்வ
வைராக்கிய முள்ளவர்களென்று அவர்
களைக் குறித்துச் சாட்சி சொல்லுகிறேன்;
அதுவோ முற்றறிவோடுகூடிய வைராக்கிய
மல்ல. எப்படியென்றால், அவர்கள் கடவு 3
ளின் நீதியையறியாமல் தங்கள் சுயநீதியை
நிலைநிறுத்தப்பார்த்துக் கடவுளின் நீதிக்குக்
கீழ்ப்படியாதே போனார்கள்.
விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி பலிக்கும் 4
படி நியாயப்பிரமாணத்திற்குக் கிறிஸ்துவே
முடிவு. நியாயப்பிரமாணத்தினால் வரும் 5
நீதியைச் செய்கிற மனுஷன் அதினால்
பிழைப்பானென்று மோசே எழுதுகிறார்.
விசுவாசத்தினால் வரும் நீதியோ: கிறிஸ்துவை 6
இறங்கிவரப்பண்ணும்படி பரலோகத்துக்கு
ஏறுபவன் யார் என்றும் | கிறிஸ்துவை 7
மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணும்படி
பாதாளத்துக் குழியில் இறங்குபவன் யார்
என்றும் உன் இருதயத்தில் சொல்லவேண்
டாம் என்கிறது. பின்னும் சொல்வ 8
தென்ன? இந்த வசனம் உனக்குச் சமீபமாய்
உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்
கிறதென்பதே; இந்த வசனம் நாங்கள் பிர
சங்கிக்கிற விசுவாசத்தின் வசனமே. இயே 9
சுவை ஆண்டவரென்று நீ உன் வாயினால்
அறிக்கையிட்டுக் கடவுள் அவரை மரித்
தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இரு
தயத்தில் விசுவாசிப்பாயாகில் இரட்சிக்கப்
படுவாய். நீதி பலிக்கும்படி இருதயத்திலே 10
விசுவாசிக்கப்படும், இரட்சிப்பு பலிக்கும்
படி வாயினால் அறிக்கையிடப்படும். அவ 11
ரில் விசுவாசம்வைக்கிற எவனும் வெட்க
மடையானென்று வேதவாக்கியத்தில் சொல்
லியிருக்கிறதே. யூதனென்றும் கிரேக்க 12
னென்றும் வித்தியாசமே இல்லை; எல்லா
ருக்கும் ஆண்டவர் ஒருவரே. அவர் தம்
மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும்
ஐசுவரியசம்பன்னர். ஏனெனில், கர்த்தரின் 13
நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும்
இரட்சிக்கப்படுவான். தாங்கள் விசுவாசி 14
யாதவரை எப்படித் தொழுதுகொள்ளுவார்
கள்? தாங்கள் கேள்விப்படாதவரில் எப்
படி விசுவாசம்வைப்பார்கள்? பிரசங்கிக்
கிறவனில்லாமல் எப்படிக் கேள்விப்படு
வார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப் 15
படிப் பிரசங்கிப்பார்கள்? எழுதியிருக்கிற
தும் அதுவே: நற்காரியங்களைச் சுவிசேஷ
மாய்க் கூறி அறிவிக்கிறவர்களின் பாதங்கள்
எவ்வளவு அழகானவைகள் என்பதே.
ஆயினும் சுவிசேஷத்துக்கு எல்லாரும் 16
கீழ்ப்படியவில்லை. ஏசாயாவும், கர்த்தாவே,
எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை நம்
பினவன் யார் என்று சொல்லுகிறான்.
ஆகவே, விசுவாசம் கேள்வியினால் வரும், 17
கேள்வியோ கிறிஸ்துவின் வசனத்தினால்
வரும். இப்படியிருக்க, அவர்கள் கேள்விப் 18

படவில்லையோ என்கிறேன்; கேள்விப்பட்டார்களே;

அவைகளின் சத்தம் பூமியெங்கும்
அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக்கடைசிவரைக்கும் செல்லுகின்றன.

19 இஸ்ரவேல் அதை அறியவில்லையோ என்கிறேன்; மோசே முதல் முதல்:

ஜனமல்லாதவர்கள்மேல்
உங்களுக்கு எரிச்சல் உண்டாக்குவேன்;
விவேகமில்லாத ஜனத்தின்மேல்
உங்களுக்குக் கோபமூட்டுவேன்

20 என்றார். ஏசாயாவும்:

என்னைத் தேடாதவர்களாலே கண்டறியப்பட்டேன்,
என்னைக்குறித்து விசாரியாதவர்களுக்கு வெளிப்பட்டேன்

என்று தைரியமாய்ச் சொல்லுகிறார்.

21 இஸ்ரவேலரைக் குறித்தோ: கீழ்ப்படியாததும் எதிர்பேசுகிறதுமான ஜனத்திற்கு நாள் முழுதும் என் கைகளை நீட்டினேனென்று அவன் சொல்லுகிறார்.

**11** இப்படியிருக்க, கடவுள் தமது ஜனத்தைத் தள்ளிவிட்டாரோவென்று கேட்கிறேன்; இல்லவே இல்லை. நானும் இஸ்ரவேலன், ஆபிரகாமின் சந்ததியிலும் பென்ய
2 மீன் கோத்திரத்திலும் பிறந்தவன். கடவுள் தாம் முன்னறிந்துகொண்ட தமது ஜனத்தைத் தள்ளிவிடவில்லை. எலியாவைப்பற்றி வேதவாக்கியம் சொல்லுகிறதை அறியீர்களா? அவன் இஸ்ரவேலுக்கு விரோதமாய்க் கடவுளிடம் விண்ணப்பம்பண்ணினபோது:
3 கர்த்தாவே, உமது தீர்க்கதரிசிகளை அவர்கள் கொன்றுவிட்டு உமது பலிபீடங்களை இடித்துப்போட்டார்கள்; நான் ஒருவன் மாத்திரம் மீதியானேன், என் உயிரையும்
4 வாங்கத் தேடுகிறார்கள் என்றார். 'அவனுக்கு வந்த தெய்வவாக்கென்ன? முழங்கால் முடக்கிப் பாகாலைப் பணியாத ஏழாயிரம்பேரை எனக்கென்று இன்னும் மீதியாக வைத்திருக்கிறேன் என்பதல்லவா?
5 அப்படிப்போல் இக்காலத்திலும் கிருபையினால் உண்டாகும் தெரிந்தெடுத்தலின்படி
6 ஒரு பங்கு மீதியாயிருக்கிறது. அது கிருபையினாலே உண்டாயிருந்ததானால் இனிக் கிரியைகளினாலே உண்டாயிராது; அப்படியல்லவென்றால் கிருபையானது இனிக்
7 கிருபையல்லவே. அப்படியானால்என்ன? இஸ்ரவேல் தேடுகிறதை அடையவில்லை. தெரிந்தெடுக்கப்பட்டவர்களோ அதை அடைந்தார்கள், மற்றவர்கள் கடினப்பட்
8 டார்கள். எழுதியிருக்கிறதாம் இதுவே: கனநித்திரையின் ஆவியையும் காணமுடியாத கண்களையும் கேட்க முடியாத காதுகளையும் இந்நாள்வரைக்கும் கடவுள் அவர்களுக்குக் கொடுத்தார் என்பதாம். தாவீ 9
தும்:

அவர்கள் பந்தி அவர்களுக்குச் சருக்கும் கண்ணியும்
இடறலும் சரிக்குச் சரிக்கட்டுதலுமாகக் கடவது;

காணமுடியாதபடி அவர்கள் கண்கள் 10
அந்தகாரப்படக்கடவது;
அவர்கள் முதுகை
எப்போதும் குனியப்பண்ணும் என்று சொல்லுகிறார்.

இப்படியிருக்க, விழுந்துவிடவேண்டு 11
மென்றே இடறினார்களென்று கேட்கிறேன்? அல்லவே அல்ல. அவர்களுக்குள் வைராக்கியத்தை எழுப்பிவிடத்தக்கதாய் அவர்களின் விழுதல் புறஜாதியாரின் இரட்சிப்புக்காயிற்று. அவர்களின் விழுதல் உலகத்திற்கு 12
ஐசுவரியமும் அவர்களின் குறைவு புறஜாதியாருக்கு ஐசுவரியமுமாயிற்றென்றால் அவர்களின் நிறைவு எவ்வளவு அதிகமாய் அப்படியாகும்.

நான் சொல்லுகிறது புறஜாதியாராகிய 13
உங்களுக்கே: புறஜாதியாருக்கு நான் அப்போஸ்தலனாயிருக்கிறபடியினாலே என் ஊழியத்தை மேன்மைப்படுத்துகிறேன். இப்ப 14
டிச் செய்வதினால் ஒருவேளை என் சொந்த ஜனத்தாருக்குள் வைராக்கியத்தை எழுப்பி அவர்களில் சிலரை இரட்சிக்கலாமென்றிருக்கிறேன். அவர்கள் தள்ளிவிடப்படு 15
வதே உலகத்தை ஒப்புரவாக்குமேயானால் அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது எவ்விதமாயிருக்கும்? மரித்தோரில் ஜீவன் வரு 16
வதுபோலாமல்லவா! மேலும் முதற்பலன் பரிசுத்தமாயிருந்தால் பிசைந்தமா முழுவதும் பரிசுத்தமாயிருக்கும்; வேரானது பரிசுத்தமாயிருந்தால் கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும். கிளைகளில் சில தறித்துப்போ 17
டப்பட்டிருக்கக் காட்டொலிவமரமாகிய நீ அவைகளுக்குள் ஒட்டவைக்கப்பட்டு ஒலிவமரத்தின் வேருக்கும் சாரத்துக்கும் உடன்பங்காளியானாயென்றால் | நீ 18
அந்தக் கிளைகளுக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டாதே; பெருமைபாராட்டுவாயானால், நீ வேரைத் தாங்குகிறதில்லை வேர் உன்னைத் தாங்குகிறதென்று நினைத்துக் கொள். நான் ஒட்டவைக்கப்படுவதற்கு 19
அந்தக் கிளைகள் தறித்துப்போடப்பட்டனவென்று சொல்லுகிறாயே. நல்லது, அவிசு 20
வாசத்தினிமித்தம் அவைகள் தறித்துப்

போடப்பட்டன, நீயோ விசுவாசத்தினாலே நிற்கிறாய்; மேட்டிமைச் சிந்தையாயிராதே, 21 பயந்திரு. சுபாவக் கிளைகளைக் கடவுள் தப்பவிடாதிருக்க உன்னையுந் தப்பவிட 22 மாட்டார். ஆகையால், கடவுளின் தயாளத்தையுங் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பு, உன்னிடத்திலோ, நீ அவர் தயாளத்திலே நிலைத்திருப்பாயானால், கடவுளின் தயாளம்; நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டுபோவாய். 23 அன்றியும், அவர்கள் தங்கள் அவிசுவாசத்தில் நிலைத்திராதிருந்தால் அவர்களும் ஒட்டவைக்கப்படுவார்கள்; அவர்களை மறுபடியும் ஒட்டவைக்கிறதற்குக் கடவுள் வல்லவரே. 24 சுபாவத்தின்படி காட்டொலிவமரத்திலிருந்து நீ வெட்டப்பட்டுச் சுபாவத்திற்குமாறாகநல்ல ஒலிவமரமானதிலே ஒட்டவைக்கப்பட்டாயானால் சுபாவக் கிளைகளாகிய அவர்கள் தங்கள் சுய ஒலிவமரத்திலே ஒட்டவைக்கப்படுவது அதிக நிச்சயமல்லவா?

25 சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணுதபடி இந்த இரகசியத்தை நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனமில்லை. அதென்னவெனில், புறஜாதியாரின் நிறைவு வரும்வரைக்கும்இஸ்ரவேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டா 26 யிருக்கிறது. இவ்விதமாக இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்.

மீட்கிறவர் சீயோனிலிருந்து வருவார்,
அவபக்தியை யாக்கோபைவிட்டு விலக்குவார்

என்றும்

27 நான் அவர்கள் பாவங்களை நீக்கும்போது
இதுவே நான் அவர்களோடு செய்யும்
உடன்படிக்கை

என்றும் எழுதியிருக்கிறபடியாகும்.

28 சுவிசேஷத்தைப் பார்த்தால் அவர்கள் உங்கள்நிமித்தம் சத்துருக்கள், தெரிந்தெடுத்தலைப் பார்த்தால் அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்டவர்கள். 29 கடவுளின் கிருபைவரங்களும் அவர் அழைத்த அழைப்பும் மாறுதலைகளே. 30 நீங்கள் ஒரு காலத்தில் கடவுளுக்குக் கீழ்ப்படியாதிருந்து இப்பொழுது அவர்களின் கீழ்ப்படியாமையினாலே இரக்கம் பெற்றி 31 ருக்கிறதுபோல | அவர்களும் இப்பொழுது இரக்கம் பெறும்பொருட்டுத் தற்காலத்தில் உங்களுக்குக் கிடைத்த இரக்கத்துக்குக் 32 கீழ்ப்படியாமலிருக்கிறார்கள். எல்லார் மேலும் இரக்கமாயிருக்கும்பொருட்டுக் கடவுள் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள் அடைத்துப்போட்டார்.

ஆ! கடவுளின் ஞானவைராக்கியம், ஞானம், அறிவு 33 என்பவைகளின் ஆழம் எவ்வளவு பெரிது! அவர் நியாயத்தீர்ப்புகள் புத்திக்கெட்டாதவைகள், அவர் வழிகள் ஆராய்ச்சிக்கெட்டாதவைகள்.

கர்த்தரின் மனதை அறிந்தவன் யார்? 34
அவருக்கு ஆலோசனைக்காரனுயிருந்தவன் யார்?

அவர் தனக்குப் பிரதிபலனளிக்கும்படி 35
முன்னே அவருக்குக் கொடுத்தவன் யார்?

சகலமும் அவராலும் அவர் மூலமாயும் 36
அவருக்கென்றும் இருக்கிறது; அவருக்கே
மகிமை என்றென்றைக்கும் இருப்பதாக;
ஆமேன்.

**12** ஆகையால், சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் கடவுளுக்குப் பிரியமுமான ஜீவனுள்ள பலியாகச் சமர்ப்பிக்கவேண்டுமென்று கடவுளின் இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே உங்கள் ஆத்தும ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு 2 ஒத்த வேஷந் தரியாமல் கடவுளின் நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தமின்னதென்று பகுத்தறிவதற்கேதுவாய் உங்கள் மனம் புதிதாவதினால் மறுரூபமாகுங்கள்.

எனக்கு அருளப்பட்ட கிருபையினால் 3 நான் சொல்லுகிறேன்: உங்களில் எவனுகிலும் எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணிக்கொள்ளாமல், அவனவனுக்குக் கடவுள் பகிர்ந்த விசுவாச அளவின்படியே நிதானமாய் எண்ணிக்கொள்ளவேண்டும். எப்படியெனில், ஒரே சரீரத்தில் நமக்கு 4 அநேக அவயவங்களிருக்கின்றன, எல்லா அவயவங்களுக்குமோ ஒரே தொழில் இல்லை; அப்படியே, அநேகராயிருக்கிற 5 நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்கிறோம், ஒருவருக்கொருவரோ அவயவங்களாயிருக்கிறோம். நமக்கு அருளப்பட்ட 6 கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினால் தீர்க்கதரிசன வரத்தையுடையவன் விசுவாச அளவிற் கிசையத்தீர்க்கதரிசனஞ் சொல்லக்கடவன்; ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும் போதிக் 7 கிறவன் போதிக்கிறதிலும் | புத்திமதி சொல் 8 லுகிறவன் புத்திமதி சொல்லுகிறதிலும் நிலைத்திருக்கக்கடவன்; தர்மங்கொடுக்கிறவன் கபடமில்லாமல் கொடுக்கக்கடவன்; தலைமையாயிருக்கிறவன் ஜாக்கிரதையாயிருக்கக் கடவன்; இரக்கஞ் செய்கிறவன் முகமலர்ச்சியோடு செய்யக்கடவன்.

9 உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை அருவருத்து நன்மையைப் பற்
10 றிக்கொண்டிருங்கள், சகோதர சிநேகத்தில் ஒருவருக்கொருவர் உடன்பிறப்புப் பட்
சத்தைக் காட்டுங்கள், கனம்பண்ணுவதில் ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்;
11 முயற்சியில் தளராதிருங்கள், ஆவியில் அன
லாயிருங்கள், ஆண்டவருக்குத் தொண்டு
12 செய்யுங்கள்; எதிர்பார்க்கும் நம்பிக்கையில் சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்தில் பொறுமையாயிருங்கள், ஜெபத்தில் தரித்
13 திருங்கள்; பரிசுத்தவான்களின் வறுமையில் அவர்களுக்கு உதவிசெய்யுங்கள், அந்நி
14 யரை உபசரிக்கக் கருத்தாயிருங்கள்; உங்களை இம்சிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், சபிக்கவேண்டாம், ஆசீர்வதிக்கவேவேண்
15 டும்; சந்தோஷப்படுகிறவர்களோடு சந்தோ
16 ஷப்படுங்கள், அழுகிறவர்களோடு அழுங்கள்; ஒருவரோடொருவர் ஏக சிந்தையுள்ளவர்களாயிருங்கள், மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல் தாழ்மையானவைகளோடு இசைந்துபோங்கள், உங்களையே புத்திமான்களென்று எண்ணிக்கொள்ளாதிருங்கள்;
17 ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள், எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்யக் கருத்
18 தாயிருங்கள், கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதான
19 மாயிருங்கள். பிரியமானவர்களே, பழிவாங்குவது என் காரியம், பதிற் செய்வதும் நானே என்று கர்த்தர் சொல்லுகிறரென்று எழுதியிருக்கிறபடியால் நீங்கள் பழிவாங்காமல் கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்.
20 அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குச் சாப்பாடு கொடு; அவன் தாகமாயிருந்தால் அவன் தாகத்தைத் தீர்; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித் தழலை
21 அவன் தலையின்மேல் குவிப்பாய். நீ தீமையினாலே வெல்லப்படாமல் நன்மையினாலே தீமையை வெல்லு.

**13** எந்த மனுஷனும் தனக்கு மேலான அதிகாரமுள்ளவர்களுக்கு அடங்கி நடக்கக்கடவன்; கடவுளாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் கடவுளாலேயே ஏற்பட்டிருக்கின்றன.
2 ஆதலால், அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் கடவுளின் ஏற்பாட்டிற்கே எதிர்த்து நிற்கிறான்; அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை
3 வருவித்துக்கொள்ளுகிறார்கள். அதிகாரிகள் நற்செய்கைகளுக்கல்ல, தீச்செய்கைகளுக்கே பயங்கரமானவர்கள். அதிகாரிக்குப் பயப்படாதிருக்க விரும்புகிறாயோ? நன்மைசெய், அப்பொழுது அவனிடமிருந்து உனக்குப் புகழ் உண்டாகும்.
4 உனக்கு நன்மை உண்டாவதற்கென்று அவன் தெய்வ ஊழியக்காரனாயிருக்கிறானே. நீ தீமை செய்வாயானால் பயந்திரு, அவன் பட்டயத்தைப் பிடித்திருக்கிறது வீணுக்கல்ல. அவன் பழி வாங்குகிறவன், தீமை செய்கிறவன்மேல் கோபாக்கினை
5 வருவிக்கிற தெய்வ ஊழியக்காரன். ஆதலால், நீங்கள் கோபாக்கினையினிமித்தம் மாத்திரமல்ல மனச்சாட்சியினிமித்தமும் அடங்கியிருக்கவேண்டிய தவசியம். இதன்
6 பொருட்டுத்தான் நீங்கள் வரிசெலுத்துகிறீர்கள். அவர்கள் கடவுளின் பணிவிடைக்காரராய் இதற்கென்றே இருந்துவருகிறார்கள். யாவருக்கும் செலுத்தவேண்டியவை
7 களைச் செலுத்துங்கள்; எவனுக்கு வரிசெலுத்த வேண்டியதோ அவனுக்கு வரியையும் எவனுக்குத் தீர்வை செலுத்தவேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள்; எவனுக்குப் பயப்பட வேண்டியதோ அவனுக்குப் பயப்படுங்கள்; எவனைக் கனம்பண்ணவேண்டியதோ அவனைக் கனம்பண்ணுங்கள்.

8 ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல் மற்றொன்றிலும் ஒருவனுக்குங் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றியாயிற்று.
9 எப்படியென்றால், விபசாரஞ்செய்யாதே, கொலைசெய்யாதே, களவுசெய்யாதே, இச்சியாதே என்கிற இந்தக் கற்பனைகளும் வேறே எந்தக் கற்பனையும், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல அயலானிடத்திலும் அன்புகூரு என்கிற ஒரே வார்த்தையில் தொகையாய் அடங்கியிருக்கின்றன.
10 அன்பு அயலானுக்குத் தீமைசெய்யாது; ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாம்.

11 நீங்கள் நித்திரையை விட்டு எழுந்திருக்க வேளையாயிற்றென்று காலத்தை அறிந்தவர்களாய் இப்படி நடக்கவேண்டும்; நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிகச் சமீபமாயிருக்கிறது.
12 இரவின் பெரும்பாகம் சென்றுபோயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நீக்கிப் தள்ளிவிட்டு வெளிச்சத்தின் ஆயுதங்களைத் தரித்துக்
13 கொள்ளக் கடவோம். களியாட்டும் வெறியும் வேசித்தனமும் காமவிகாரமும் சண்

டையும் பொறுமையும் உள்ளவர்களாய் நடவாமல் பகலிலே நடக்கிறவர்கள்போல்
14 சீராய் நடக்கக்கடவோம். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள். தர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணுதிருங்கள்.

**14** விசுவாசத்தில் பலவீனமாயிருக்கிறவனைச் சேர்த்துக்கொள்ளுங்கள்; அவனுடைய மனச் சந்தேகங்களைக் குற்றமாய் நிர்
2 ணயிக்காமலிருங்கள். ஒருவன் எந்தப் பதார்த்தத்தையும் புசிக்கலாமென்று நம்புகிறான்; பலவீனனோ மரக்கறிகளையே புசிக்கி
3 றான். புசிக்கிறவன் புசியாதிருக்கிறவனை அற்பமாயெண்ணவேண்டாம்; புசியாதிருக்கிறவனும் புசிக்கிறவனைக் குற்றப்படுத்த வேண்டாம்; கடவுள் அவனை ஏற்றுக்
4 கொண்டாரே. வேறொரு வீட்டு வேலைக்காரனைக் குற்றப்படுத்துகிறதற்கு நீ யார்? அவன் நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய எஜமானுக்கே அவன் உத்தரவாதி; அவன் நிலைநிற்பான், ஆண்டவர் அவனை
5 நிலைநிறுத்த வல்லவராயிருக்கிறாரே. ஒருவன் ஒருநாளை மற்றொரு நாளிலும் விசேஷித்ததாக எண்ணுகிறான்; வேறொருவனோ எல்லா நாட்களையும் ஒன்றுபோல எண்ணுகிறான்; அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயம் உடையவனாயிருக்கவேண்டும்.
6 நாள் விசேஷம் கவனிக்கிறவன் ஆண்டவருக்கென்று கவனிக்கிறான். புசிக்கிறவன் ஆண்டவருக்கென்று புசிக்கிறான்; கடவுளுக்கு நன்றி செலுத்துகிறானே. புசியாதிருக்கிறவனும் ஆண்டவருக்கென்று புசியாதிருக்கிறான்; அவனும் கடவுளுக்கு நன்றி
7 செலுத்துகிறானே. நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவ
8 னும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை. நாம் பிழைத்தாலும் ஆண்டவருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலும் ஆண்டவருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால், பிழைத்தாலும் மரித்தாலும் நாம் ஆண்டவ
9 ருடையவர்களே. கிறிஸ்து மரித்தோர்மேலும் ஜீவனுள்ளோர்மேலும் ஆண்டவராயிருப்பதற்கென்றே மரித்தும் உயிர்த்துமிருக்
10 கிறார். நீ உன் சகோதரனைக் குற்றவாளியாய்த் தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாயெண்ணுகிறதென்ன? நாமெல்லாரும் கடவுளின் நியாயாசனத்திற்குமுன்
11 நிறுத்தப்படுவோமே. அந்தப்படி:

முழங்கால் யாவும் என்முன் முடங்கும்,
நாவு யாவும் கடவுளைப் புகழ்ந்து கொண்டாடும்

என்று என் ஜீவனைக்கொண்டு உரைக்கிறேன்

என்பதாய்க் கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது. ஆதலால் நம்
12 மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துக் கடவுளுக்குக் கணக்குக் கொடுப்பான்.

இப்படியிருக்க, நாம் இனிமேல் ஒரு
13 வரையொருவர் குற்றவாளிகளாய்த் தீர்க்காதிருப்போமாக. ஒருவனும் தன் சகோதரன்முன் தடுக்கலியாவது இடறலியாவது போடலாகாதென்றே தீர்மானித்துக் கொள்ளுங்கள். ஒரு பொருளும் தன்னி
14 லேயே தீட்டுள்ளதல்லவென்று ஆண்டவராகிய இயேசுவுக்குள் அறிந்து நிச்சயமாயிருக்கிறேன்; ஒரு பொருளைத் தீட்டுள்ளதென்று எண்ணிக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கே அது தீட்டுள்ளதாயிருக்கும்.
15 போஜனத்தினிமித்தம் உன் சகோதரனுக்கு விசனமுண்டாக்கினால் நீ அன்பின் வழியில் நடக்கிறவனல்ல; அவனை உன் போஜனத்தினாலே கெடுக்காதே, கிறிஸ்து அவன்பொ
16 ருட்டு மரித்தாரே. உங்கள் நன்மை தூஷிக்கப்படாதிருப்பதாக.
17 கடவுளின் ராஜ்யம் புசிப்புங் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாம்.
18 இவ்விஷயத்தில் கிறிஸ்துவுக்குப் பிரியமானவனே கடவுளுக்குப் பிரியமானவன், மனுஷருக்கு உகந்தவன்.
19 ஆனபடியால் சமாதானத்துக்கும் பரஸ்பர பக்திவிருத்திக்கும் அனுகூலமானவைகளைப் பின்தொடருகிறோம்.
20 போஜனத்தினிமித்தம் தம் கடவுளின் கிரியையை அழித்துப்போடாதே; எல்லாப் பதார்த்தங்களும் சுத்தமுள்ளவைகளே. ஆனாலும் தவறிவிழுதற்கு ஏதுவண்டாகப் புசிக்கிறவனுக்கு
21 அது தீமையாகும். மாம்சம் புசியாதிருக்கிறதும் திராட்சரசம் குடியாதிருக்கிறதும் உன் சகோதரன் தவறி விழுவதற்கு ஏதுவான எதையும் செய்யாதிருக்கிறதும் நலம்.
22 உனக்குள்ள விசுவாசம் கடவுளின்முன் உன்மட்டிலிருக்கட்டும். நல்லதென்று நிர்ணயித்துக்கொண்ட காரியத்தில் தன்னைக் குற்றவாளியாகத் தீர்த்துக்கொள்ளாதவன் பாக்கியவான்.
23 ஒருவன் மனச்சந்தேகத்தோடு புசிப்பானாலும் அவன் விசுவாசநிச்சயமில்லாமல் புசிக்கிறபடியினால் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டிருக்கிறான். விசுவாசநிச்சயத்தினால் வராத யாவும் பாவமே.

**15** அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல் பலவீனருடைய குறைவுகளைத் தாங்கக் கடமைப்பட்

டிருக்கிறோம். நம்மில் ஒவ்வொருவனும் 2
அயலானுடைய பக்திவிருத்திக்கேதுவான
நன்மையுண்டாகும்படி அவனுக்குப் பிரிய
மாய் நடக்கக்கடவன். கிறிஸ்துவும் தமக் 3
கே பிரியமாய் நடக்கவில்லையே;

உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனை
கள்
என்மேல் விழுந்தன

என்று எழுதியிருக்கிறபடியே நடந்தார்.
வேதவாக்கியங்களின் மூலமாயுண்டாகும் 4
பொறுமையினாலும் ஆறுதலினாலும் எதிர்
நோக்கும் நம்பிக்கையை நாம் அடையும்
படி முன் எழுதப்பட்டவைகளெல்லாம்
நமக்குப் போதனையாகவே எழுதப்பட்டன.
நீங்கள் ஒருமனப்பட்டவர்களாய் நமது 5
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் கடவு
ளும் பிதாவுமானவரை ஏகவாக்காய மகி
மைப்படுத்தத் தக்கதாகப் | பொறுமையை 6
யும் ஆறுதலையும் அளிக்கும் கடவுள்,
கிறிஸ்து இயேசுவுக்கொத்தவண்ணம், நீங்
கள் ஏக சிந்தையுள்ளவர்களாயிருக்கும்படி
உங்களுக்கு அனுக்கிரகஞ் செய்வாராக.
ஆதலால், கடவுளுக்கு மகிமையுண்டாக, 7
கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டதுபோல
நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக்
கொள்ளுங்கள். பிதாக்களுக்குப் பண்ணப் 8
பட்ட வாக்குத்தத்தங்களை உறுதிசெய்வதற்
குக் கடவுளின் உண்மையினிமித்தம்
கிறிஸ்து விருத்தசேதனமுள்ளவர்களுக்கு
ஊழியரானாரென்றும் | புறஜாதியாரும் கட 9
வுளை அவர் இரக்கத்தினிமித்தம் மகிமைப்
படுத்துவதற்கு வந்தாரென்றும் சொல்லுகி
றேன். அந்தப்படியே:

இதினிமித்தம் நான் புறஜாதிகளுக்குள்ளே
உம்மைப் புகழ்ந்து கொண்டாடி
உமது நாமத்தைச் சொல்லிச் சங்கீதம்
பாடுவேன்

என்று எழுதியிருக்கிறது. மேலும்: 10

புறஜாதிகளே, அவர் ஜனங்களோடு
கூடக் களிகூருங்கள்

என்கிறார். மேலும்: 11

புறஜாதிகளே, நீங்களனைவரும் கர்த்த
ரைத் துதியுங்கள்,
ஜனங்களனைவரும் அவரைப் புகழ்வார்க
ளாக

என்றும் சொல்லுகிறார். மேலும் ஏசாயா: 12

ஈசாயின் வேரும்
புறஜாதியாரை ஆளும்படி எழும்புகிற
வருமாகிய
ஒருவர் தோன்றுவார்;
புறஜாதியார் எதிர்நோக்கும் நம்பிக்கை
அவர்மேலிருக்கும்

என்று உரைக்கிறார். பரிசுத்த ஆவியின் 13
பலத்தினால் எதிர்நோக்கும் நம்பிக்கை உங்
களுக்குப் பெருகும்படி அந்த நம்பிக்கை
யின் கடவுள்தாமே விசுவாசத்தினால் உண்
டாகும் சகலவித சந்தோஷத்தினாலும் சமா
தானத்தினாலும் உங்களை நிரப்புவாராக.

என் சகோதரரே, நீங்கள் நற்குணம் 14
நிறைந்தவர்களும் சகல அறிவினாலும் நிரப்
பப்பட்டவர்களும் ஒருவர்க்கொருவர் புத்தி
சொல்ல வல்லவர்களுமாயிருக்கிறீர்க
ளென்று நானும் உங்களைக் குறித்துத் திட்ட
மாய் நம்பியிருக்கிறேன். கடவுள் எனக்கு 15
அளித்த கிருபையினிமித்தம் உங்களுக்கு
ஞாபகப்படுத்தும்படி நான் இடையிடை
யே அதிகத் தைரியமாய் எழுதியிருக்கிறேன்.
நான் கடவுளின் சுவிசேஷ ஊழியத்தை 16
நடத்தும் ஆசாரியனாயிருந்து புறஜாதிகளுக்
கென்று இயேசுகிறிஸ்துவின் பணிவிடைக்
காரனாகும்பொருட்டே இந்தக் கிருபை
எனக்கு அளிக்கப்பட்டது. புறஜாதியா
ராகிய பலி பரிசுத்த ஆவியினாலே பரிசுத்த
மாக்கப்பட்டுக் கடவுளுக்கு உகந்ததாகும்
படி அப்படியாயிற்று. ஆதலால் நான் கட 17
வுளுக்குரியவைகளில் பெருமை பாராட்டு
கிறது கிறிஸ்து இயேசுவுக்குள்ளேதான்.
புறஜாதியாரைக் கீழ்ப்படியச்செய்யும்படி 18
வார்த்தையினாலும் செய்கையினாலும் அற்புத
அடையாளங்களின் வல்லமையினாலும் பரி
சுத்த ஆவியின் வல்லமையினாலும் கிறிஸ்து
வானவர் என்னைக்கொண்டு நடப்பித்தவை
களையல்லாமல் வேறொன்றையும் நான் சொல்
லத் துணிவதில்லை. இப்படி எருசலேம் 19
துவக்கிச் சுற்றிலும் இல்லிரிக்கம் நாடுவ
ரைக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூர
ணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன்.

இதில் நான் மற்றொருவன் அஸ்திபாரத் 20
தின்மேல் கட்டாமல் கிறிஸ்துவின் நாமம்
சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசே
ஷத்தை அறிவிக்கவேண்டுமென்பதே நான்
ஆசிக்கும் மேன்மை.

அவர் செய்தியைப் பெறாதிருந்தவர்கள் 21
காண்பார்கள்,
கேள்விப்படாதிருந்தவர்கள் உணர்ந்து
கொள்ளுவார்கள்

என்று எழுதியிருக்கிறபடியே இதைச் செய்
கிறேன்.

ஆனதுபற்றியே உங்களிடம் வருகிறதற்கு 22
அநேகந்தரம் தடைப்பட்டேன். இப் 23
பொழுதோ இந்தத் தேசங்களில் எனக்கு
இனி இடமில்லை. நான் ஸ்பானியா தேசத்
திற்குப் போகும் பட்சத்தில் உங்களிடம்
வரவேண்டுமென்று அநேக வருஷகால

24 மாய் வாஞ்சித்துமிருக்கிறேன். அங்கே
போகும் வழியில் உங்களைக் காண்பேனென்
றும் கண்டு சற்றுத் திருப்தியடைந்தபின்பு
நீங்கள் என்னை அவ்விடத்திற்கு வழி விட்
டனுப்புவீர்களென்றும் ஆசையோடு நம்பி
25 யிருக்கிறேன். இப்பொழுதோ பரிசுத்த
வான்களுக்குப் பணிவிடைசெய்கிறவனாக
26 நான் எருசலேமுக்குப் போகிறேன். மக்கே
தோனியாவிலும் அகாயாவிலுமுள்ளவர்கள்
எருசலேம் பரிசுத்தவான்களில் தரித்திரருக்
காகக் கொஞ்சம் பொருளுதவி செய்ய விருப்
27 பமானார்கள். அதுமாத்திரமல்ல, இப்படிச்
செய்கிறதற்கு அவர்கள் கடனாளிகளாயும்
இருக்கிறார்கள். எப்படியென்றால், புற
ஜாதியார் அவர்களுடைய ஆத்துமஞ்சமை
களில் பங்கு பெற்றிருக்கிறதால் சரீர விஷ
யங்களில் அவர்களுக்குப் பணிவிடைசெய்ய
28 இவர்கள் கடமைப்பட்டவர்களே. இந்
தக் காரியத்தை நான் செய்துமுடித்து இந்
தப் பலனை அவர்கள் கையிலே பத்திரமாய்
ஒப்படைத்த பின்பு உங்கள் ஊர்வழியாய்
29 ஸ்பானியாவுக்குப் போவேன். நான் உங்க
ளிடம் வரும்போது கிறிஸ்துவின் சம்பூரண
ஆசீர்வாதத்தோடே வருவேனென்பது எனக்
குத்தெரியும்.

30 சகோதரரே, நமது ஆண்டவராகிய இயேசு
கிறிஸ்துவையும் ஆவியானவருடைய அன்
பையும் முன்னிட்டு உங்களிடம் ஒரு விண்
ணப்பஞ்செய்து கொள்ளுகிறேன்: கடவுளி
டம் எனக்காகச்செய்யும் ஜெபங்களில் என்
31 னோடுகூட நீங்களும் போராடுங்கள். யூதே
யாவில் அடங்காத மனமுள்ளவர்கள் கை
களிலிருந்து நான் விடுவிக்கப்படவும் நான்
எருசலேமில் செய்யப்போகிற பணிவிடை
பரிசுத்தவான்களுக்கு உகந்ததாயிருக்கவும்
32 மன்றாடுங்கள். தெய்வ சித்தத்திலால் நான்
சந்தோஷமாய் உங்களிடம் வந்து உங்க
ளோடு இளைப்பாறும்படி இப்படிச் செய்
33 யுங்கள். சமாதானத்தின் கடவுள் உங்க
ளனைவரோடும் இருப்பாராக; ஆமேன்.

**16** கெங்கிரேயா ஊர்ச்சபை உதவிக் காரி
யாகிய நமது சகோதரி பெபேயாளைப்பற்றி
2 உங்களுக்குச் சிபார்சு செய்கிறேன். நீங்
கள் அவளை ஆண்டவருக்குள் பரிசுத்த
வான்களுக்குத் தக்கபடி ஏற்றுக்கொண்டு,
எந்தக் காரியத்தில் உங்கள் உதவி அவளுக்
குத் தேவையோ அதிலே நீங்கள் அவளுக்கு
உதவிசெய்யுங்கள்; அவள் அநேகருக்கு,
எனக்குங்கூட, பேருதவியாயிருந்தவள்.

3 கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன்
ஊழியராகிய பிரிஸ்காளையும் ஆக்கிலாவை
யும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிரா
ணனுக்காகத் தங்கள் கழுத்தையுங் கொடுத்
தவர்கள்; அவர்களுக்கு நான் மாத்திர 4
மல்ல புறஜாதிச் சபையாரெல்லாருங்கூட
நன்றிசெலுத்துகிறார்கள். அவர்கள் வீட் 5
டில் கூடிவருகிற சபையையும் வாழ்த்துங்
கள். ஆசியாவில் கிறிஸ்துவுக்கு முதற்பல
னாகிய என் பிரியமான எப்பைனத்தை
வாழ்த்துங்கள். எங்களுக்காக மிகவும் 6
பிரயாசப்பட்ட மரியாளை வாழ்த்துங்கள்.
அந்திரோனிக்கையும் யூனியாவையும் 7
வாழ்த்துங்கள்; இவர்கள் என் பந்துக்கள்,
என்னோடு காவலில் கட்டுண்டிருந்தவர்கள்,
அப்போஸ்தலருக்குள் பேர்பெற்றவர்கள்;
எனக்கு முன்னேயே கிறிஸ்துவுக்குள்ளான
வர்கள். ஆண்டவருக்குள் எனக்குப் பிரிய 8
மான அம்பிலியாத்தை வாழ்த்துங்கள்.
கிறிஸ்துவுக்குள் நம் உடன் ஊழியனாகிய 9
உர்பானையும் என் பிரியமான ஸ்தாக்கியை
யும் வாழ்த்துங்கள். கிறிஸ்துவுக்குள் உத்த 10
மனாகிய அப்பெல்லேயை வாழ்த்துங்கள்.
அரிஸ்தோபூலுவின் வீட்டாரைச் சேர்ந்த
வர்களை வாழ்த்துங்கள். என் பந்துவாகிய
ஏரோதியோனை வாழ்த்துங்கள். நர்க்கிஸ்ஸு 11
வின் வீட்டாரில் ஆண்டவருக்குட்பட்ட
வர்களை வாழ்த்துங்கள். ஆண்டவருக்குள் 12
உழைத்தவர்களாகிய திரிபைனையும் திரி
போசாளையும் வாழ்த்துங்கள். ஆண்டவ
ருக்குள் மிகவும் உழைத்துவந்த பிரியமான
பெர்சியாளை வாழ்த்துங்கள். ஆண்டவருக் 13
குள் தெரிந்தெடுக்கப்பட்ட ரூபையும்
அவன் தாயையும் வாழ்த்துங்கள், அவள்
எனக்குந்தாய். அசிங்கிரீத்தையும் பிலெ 14
கோனையும் எர்மேயையும் பத்திரொபாவை
யும் எர்மாவையும் அவர்களோடிருக்கிற
சகோதரரையும் வாழ்த்துங்கள். பிலொ 15
லோகையும் யூலியாளையும் நேரேயையும்
அவன் சகோதரியையும் ஒலிம்பாவையும்
அவர்களோடிருக்கிற பரிசுத்தவான்களனை
வரையும் வாழ்த்துங்கள். ஒருவரையொரு 16
வர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள்.
கிறிஸ்துவின் சபையார் அனைவரும் உங்க
ளுக்கு வந்தனஞ் சொல்லுகிறார்கள்.

அன்றியும், சகோதரரே, உங்களுக்கு 17
நான் புத்தியாகச் சொல்லுகிறதைக் கவனி
யுங்கள். நீங்கள் கற்றுக்கொண்ட உப
தேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளை யும்
இடறல்களையும் உண்டாக்குகிறவர்கள்மேல்
கண்ணோயிருந்து அவர்களைவிட்டு விலகுங்
கள். அப்படிப்பட்டவர்கள் நமது ஆண்ட 18
வராகிய கிறிஸ்துவுக்கல்ல தங்கள் வயிற்
றுக்கே தொண்டுசெய்கிறார்கள். இவர்கள்

தங்கள் நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சி
னாலும் கபடில்லாதவர்கள் இருதயங்களை வஞ்
19 சிக்கிறார்கள். உங்கள் கீழ்ப்படிதல் யாவ
ருக்கும் தெரியவந்திருக்கிறது. ஆகையால்
உங்களைக்குறித்துச் சந்தோஷப்படுகிறேன்;
ஆயினும், நீங்கள் நன்மைக்கு ஞானிகளும்
தீமைக்கோ பேதைகளுமாயிருக்கவேண்டு
20 மென்று விரும்புகிறேன். சமாதானத்தின்
கடவுள் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள்
கால்களின்கீழே நசுக்கிப்போடுவார். நமது
ஆண்டவராகிய இயேசுவின் கிருபை உங்க
ளோடிருப்பதாக; ஆமேன்.

21 என் உடன் ஊழியனாகிய தீமோத்தேயு
வும் என் பந்துக்களாகிய லூகியும் யாசோ
னும் சொசிபத்தரும் உங்களுக்கு வந்தனஞ்
22 சொல்லுகிறார்கள். இந்த நிருபத்தை எழு
தின தெர்தியுவாகிய நான் ஆண்டவருக்குள்
உங்களுக்கு வந்தனஞ்சொல்லுகிறேன்.

என்னையும் சபையினைத்தையும் உபசரித்து 23
வருகிற காயு உங்களுக்கு வந்தனஞ் சொல்
லுகிறான். பட்டணத்துப் பொக்கிஷக்கார 24
னாகிய எரஸ்தும் சகோதரனாகிய குவர்த்தும்
உங்களுக்கு வந்தனஞ் சொல்லுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவைப்பற்றிய பிரசங்கமா 25
கிய என் சுவிசேஷத்தின்படியே உங்களை
ஸ்திரப்படுத்த வல்லவருக்கு ஸ்தோத்திரம்.
இந்தப் பிரசங்கம், அநாதி காலங்களாக 26
மறைவாயிருந்து இப்பொழுதோ தீர்க்கதரி
சன ஆகமங்களினால் நித்திய கடவுளின் நி
மப்படியே வெளியாக்கப்பட்டதும் விசுவா
சக் கீழ்ப்படிதலுக்கென்று சகல ஜாதிகளுக்
கும் அறிவிக்கப்பட்டதுமான இரகசியத்தின்
வெளிப்பாட்டுக்குப் பொருந்துவதாம்.
ஏகஞான சொரூபியாகிய கடவுளாம் அவ 27
ருக்கே இயேசுகிறிஸ்துவின் மூலமாக மகிமை
யுகாயுகங்களாயிருப்பதாக; ஆமேன்.

---

## THE FIRST EPISTLE TO THE CORINTHIANS

---

# கொரிந்தியருக்கு எழுதின

## முதலாம் நிருபம்

1 கடவுளின் சித்தப்படி அழைப்பினால்
கிறிஸ்து இயேசுவின் அப்போஸ்தலனான
பவுலும் சகோதரன் சொஸ்தேனேயும்,
2 அழைப்பினால் பரிசுத்தராகிக் கிறிஸ்து
இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்
களாகிய கொரிந்துவில் கடவுளின் திருச்
சபையாருக்கு, தங்களுக்கும் நமக்கும்
ஆண்டவராயிருக்கிற இயேசுகிறிஸ்துவின்
நாமத்தை எவ்விடத்திலும் தொழுதுகொள்
ளுகிற அனைவருக்குங்கூட எழுதுவது:
3 நமது பிதாவாகிய கடவுளிடமிருந்தும்
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினிடமி
ருந்தும் உங்களுக்குக் கிருபையும் சமாதான
மும் உண்டாவதாக.

4 கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களுக்கு
அளிக்கப்பட்ட தெய்வ கிருபையினிமித்தம்
உங்களை நினைத்துக் கடவுளுக்கு எப்பொழு
5 தும் நன்றிசெலுத்துகிறேன். ஏனெனில்,
கிறிஸ்துவைப்பற்றிய சாட்சியம் உங்களுக்
குள்ளே ஸ்திரப்படுத்தப் பட்டிருக்கிற
படியே, நீங்கள் அவருக்குள் யாவற்றிலும்
எல்லா வாக்குவரத்திலும் எல்லா அறிவிலும் 6
ஐசுவரிய சம்பன்னரானீர்கள். ஆகையால் 7
நீங்கள் யாதொரு கிருபை வரத்திலும் குறை
வில்லாதவர்களாய் நமது ஆண்டவராகிய
இயேசுகிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்துக்
கொண்டிருக்கிறீர்கள். நமது ஆண்டவரா 8
கிய இயேசுகிறிஸ்துவின் நாளிலே நீங்கள்
குற்றஞ் சாட்டப்படாதவர்களாயிருக்கும்
படி முடிவுபரியந்தம் அவரே உங்களை
ஸ்திரப்படுத்துவார். தமது குமாரனும் நமது 9
ஆண்டவருமாகிய இயேசுகிறிஸ்துவோடு
ஐக்கியமாயிருப்பதற்கு உங்களையழைத்த
கடவுள் உண்மையுள்ளவர்.

சகோதரரே, நீங்களெல்லாரும் ஒன் 10
றையே பேசவும் பிரிவினைகளின்றி ஒரே

மனதும் ஒரே கருத்துமுள்ள உத்தமராயிருக்
கவும் வேண்டுமென்று நமது ஆண்டவராகிய
இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களை
11 வேண்டிக்கொள்ளுகிறேன். என் சகோ
தரரே, உங்களுக்குள்ளே விரோதங்கள் உண்
டென்று குலோவேயாளின் வீட்டார் உங்
12 களைப்பற்றி எனக்கு அறிவித்தார்கள். உங்
களில் ஒவ்வொருவனும், நான் பவுலைச்
சேர்ந்தவனென்றுவது, நான் அபொல்
லோவைச் சேர்ந்தவனென்றுவது, நான்
கேபாவைச் சேர்ந்தவனென்றுவது, நான்
கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றுவது சொல்
13 லுகிறான் என்பதே என் கருத்து. கிறிஸ்து
பிரிக்கப்பட்டிருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச்
சிலுவையில் அறையப்பட்டான்? பவுலின்
நாமத்திற்குள்ளாகவா ஞானஸ்நானம் பெற்
14 றீர்கள்? என் நாமத்திற்குள்ளாக ஞானஸ்
நானம் பெற்றதாக எவனுஞ் சொல்லாதபடி
15 நான் கிறிஸ்புக்கும் காயுவுக்குமேயன்றி
உங்களில் வேறெவனுக்கும் ஞானஸ்நானங்
கொடுத்ததேயில்லை; இதைக்குறித்துக் கடவு
16 ளுக்கு நன்றிசெலுத்துகிறேன். ஸ்தேபனு
வின் வீட்டாருக்கும் நான் ஞானஸ்நானங்
கொடுத்துண்டு. இதுவுமல்லாமல் இன்
னும் வேறு யாருக்காவது நான் ஞானஸ்
17 நானங் கொடுத்தேனோ அறியேன். கிறிஸ்து
என்னை அனுப்பினது ஞானஸ்நானங் கொடுக்
கவல்ல, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே;
கிறிஸ்துவின் சிலுவை வியர்த்தமாகாதபடி
ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே
அனுப்பினார்.

18 சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்
போகிறவர்களுக்குப் பைத்தியம், இரட்சிக்
கப்படுகிற நமக்கோ அது தெய்வ வல்
லமை.

19 ஞானிகளின் ஞானத்தை நான் அழிப்
பேன்,
விவேகிகளின் விவேகத்தை அவமாக்கு
வேன்

20 என்று எழுதியிருக்கிறது. ஞானி எங்கே?
வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத் தர்க்க
சாஸ்திரி எங்கே? உலக ஞானத்தைக் கட
21 வுள் பைத்தியமாக்க வில்லையா? உலகம் தன்
ஞானத்தினால் கடவுளை அவர் ஞானத்தின்
படியறிந்து கொள்ளாதிருந்தபடியால் பைத்
தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே
விசுவாசிகளை இரட்சிக்கக் கடவுளுக்குப்
22 பிரியமாயிற்று. யூதர் அடையாளத்தைக்
கேட்கிறார்கள்; கிரேக்கர் ஞானத்தைத் தேடு
23 கிறார்கள்; நாங்களோ சிலுவையில் அறை
யுண்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்;
அது யூதருக்கு இடறல், புறஜாதியாருக்குப்
பைத்தியம். அழைக்கப்பட்டவர்களுக்கோ, 24
யூதருக்கும் கிரேக்கருக்கும், நாங்கள் பிரசங்
கிக்கிறவர் தெய்வ வல்லமையும் தெய்வ
ஞானமுமான கிறிஸ்துவே. கடவுளின் 25
பைத்தியம் மனுஷ ஞானத்திலும் ஞான
மாகும்; கடவுளின் பலவீனம் மனுஷ பலத்
திலும் பலமாகும்.

சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட 26
அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி
ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள்
அநேகரில்லை, உயர்குலத்தார் அநேகரில்லை.
ஞானிகளை வெட்கப்படுத்தக் கடவுள் உல 27
கில் பைத்தியமானவைகளைத் தெரிந்தெடுத்
தார். பலமுள்ளவைகளை வெட்கப்படுத்
தக் கடவுள் உலகில் பலவீனமானவைகளைத்
தெரிந்தெடுத்தார். உள்ளவைகளை அவ 28
மாக்க இல்லாதவைகளையும் உலகில் இழி
குலமானவைகளையும் அற்பமாய் எண்ணப்
பட்டவைகளையுங் கடவுள் தெரிந்தெடுத்
தார். மாம்சமான எவனும் கடவுளின் 29
முன் பெருமை பாராட்டாதபடி அப்படிச்
செய்தார். அவராலே நீங்கள் கிறிஸ்து 30
இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள்.

பெருமைபாராட்டுகிறவன் கர்த்தரைக்
குறித்தே
பெருமை பாராட்டக்கடவன்

என்று எழுதியிருக்கிறபடியே | அவரை 31
கடவுளால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்த மாகுத
லும் மீட்புமாகிய ஞானமானார்.

சகோதரரே, நான் உங்களிடம் வந்த **2**
போதோ கடவுளைப்பற்றிய சாட்சியத்தைச்
சிறந்த வசனிப்போடாவது சிறந்த ஞானத்
தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை.
இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறை 2
யுண்ட அவரையே அன்றி, வேறொன்றையும்
நான் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்
மானித்திருந்தேன். பலவீனத்தோடும் பயத் 3
தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் நான் உங்
கள் நடுவிலிருந்தேன். உங்கள் விசுவாசம் 4
மனுஷ ஞானத்திலல்ல தெய்வ வல்லமையில்
நிற்கும்படி | என் பேச்சும் என் பிரசங்க 5
மும் வசப்படுத்தும்படியான ஞானவார்த்தை
களாகவல்ல, ஆவியும் வல்லமையும் விளங்
கினவைகளாகவே யிருந்தன.

ஆயினும், தேறினவர்களுக்குள்ளே 6
ஞானத்தைப் பேசுகிறோம்; அதுவோ இந்த
உலகத்தின் ஞானமல்ல, அழிந்துபோகிறவர்
களாகிய இவ்வுகைப் பிரபுக்களின் ஞானமு
மல்ல. யுகாரம்பத்திற்கு முன்னேயே கட 7
வுள் நமது மகிமைக்கென்று தீர்மானஞ்செய்
ததும் மறைபொருளாய் வைத்திருந்ததுமான

தெய்வ ஞான ரகசியத்தையே பேசுகிறோம்.
8 அதை இவ்வுலகப் பிரபுக்களிலொருவனும்
அறிந்துகொள்ளவில்லை. அறிந்திருந்தால்
மகிமையின் ஆண்டவரை அவர்கள் சிலுவை
9 யில் அறைந்திருக்கமாட்டார்களே. எழுதி
யிருக்கிறபடி:

கண்காணுதவைகள்
காதுகேளாதவைகள்
மனுஷ இருதயத்தில் புகாதவைகள்
தம்மில் அன்புகூருகிறவர்களுக்கென்று
கடவுள் ஆயத்தம்பண்ணினவைகள்

10 என்பவற்றையே பேசுகிறோம். கடவுள்
தமது ஆவியானவரின்மூலமாய் அவற்றை
நமக்கே வெளிப்படுத்தினார். ஆவியானவர்
எல்லாவற்றையும், கடவுளின் ஆழங்களே
11 யும், ஆராய்ந்து வருகிறார். மனுஷனி
லுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன்
மனுஷனுக்குரியவற்றை அறிவான்? அப்
படியே கடவுளின் ஆவியேயன்றி ஒருவனும்
கடவுளுக்குரியவற்றை அறிந்துகொண்ட
தில்லை.

12 நாமோ பெற்றது உலகத்தின் ஆவியல்ல;
கடவுளால் நமக்கு அருளப்பட்டவைகளே
அறியும்படிக்குக் கடவுளிலிருந்து வரும்
13 ஆவியையே பெற்றோம். அவைகளே நாம்
மனுஷ ஞானம் போதிக்கும் வார்த்தைக
ளாலே பேசாமல் ஆவிக்குரியவைகளே
ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்தி
ஆவியானவர் போதிக்கும் வார்த்தைகளாலே
14 பேசுகிறோம். ஜென்மசுபாவ மனுஷனே
கடவுளின் ஆவிக்குரியவைகளே ஏற்றுக்
கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்
தியம். அவைகள் ஆவிக்குரிய பிரகாரம்
ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளாத
லால் அவைகளே அவன் அறியவுமுடியாது.
15 ஆவிக்குரியவன் எல்லாவற்றையும்
ஆராய்ந்து நிதானிக்கிறான்; அவனையோ
வேறு எவனும் ஆராய்ந்து நிதானிப்பதில்லை.
16 கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவர் சித்
தத்தை அறிந்துகொண்டவன் யார்? நாங்
களோ கிறிஸ்துவின் சித்தையுடையவர்கள்.

**3** நானே, சகோதரரே, உங்களே ஆவிக்குரி
யவர்களென்றுபாவித்து உங்களுடனே பேச
முடியாமல் மாம்சமானவர்களென்றும்
கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் பாவித்
2 துப் பேசவேண்டியதாயிற்று. நான் உங்க
ளுக்குப் பாலேக்குடிக்கக் கொடுத்தேன்;
சாப்பாட்டைக் கொடுக்கவில்லை, நீங்கள்
இதை உட்கொள்ளமுடியாதிருந்தீர்களே.
3 இப்போதுங்கூட முடியாதிருக்கிறீர்கள். நீங்
கள் இன்னும் மாம்சத்துக்குரியவர்களா
யிருக்கிறீர்களே. பொறுமையும் விரோத
மும் உங்களுக்குள் இருக்கும்போது நீங்கள்
மாம்சத்துக்குரியவர்களும் மனுஷமுறை
யாய் நடக்கிறவர்களுமாமல்லவா? ஒருவன் 4
நான் பவுலேச் சேர்ந்தவனென்றும் வேறொரு
வன் நான் அபொல்லோவைச் சேர்ந்தவ
னென்றும் சொன்னால் நீங்கள் மனுஷர்தா
னல்லவா?

பின்னே அபொல்லோ யார்? பவுல் யார்? 5
ஆண்டவர் அவனவனுக்கு அளித்தபடியே
நீங்கள் விசுவாசிகளானதற்கு ஏதுவான
ஊழியக்காரர்தானே. நான் நட்டேன், 6
அபொல்லோ நீர்ப்பாய்ச்சினான், வினையச்
செய்தவரோ கடவுள். ஆதலால் நடுகிற 7
வனும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிற
வனும் ஒன்றுமில்லை, வினையச்செய்கிற கட
வுளே எல்லாமாவார். நடுகிறவனும் நீர்ப் 8
பாய்ச்சுகிறவனுமோ ஒன்றாயிருக்கிறார்கள்.
அவனவன் தன் தன் உழைப்புக்குத்தக்க
கூலியைப் பெறுவான். நாங்கள் கடவு 9
ளின் உடன் ஊழியர்; நீங்கள் கடவுளின்
பண்ணை, கடவுளின் கட்டடம்.

எனக்கு அளிக்கப்பட்ட தெய்வ கிருபை 10
யின்படியே விவேகமுள்ள சிற்பாசாரியைப்
போல நான் அஸ்திபாரம் போட்டேன்,
அதின்மேல் கட்டுகிறவனே வேறொருவன்.
ஒவ்வொருவனும் தான் அதினமேல் இன்ன
விதமாய்க் கட்டுகிறானென்று பார்த்துக்
கொள்ளக்கடவன். போடப்பட்டிருக்கிற 11
அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவையல்லா
மல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவ
னாலுமுடியாது. ஒருவன் அந்த அஸ்திபாரத் 12
தின்மேல் பொன் வெள்ளி விலையுயர்ந்த கல்
மரம் புல் வைக்கோல் இவைகளே வைத்துக்
கட்டினால் | அவனவன் வேலைப்பாடு வெளி 13
யாகும் நாளானது அதை விளங்கப்பண்
ணும், அந்த நாள் அக்கினியினாலே
வெளிப்படுத்தப்படும்; அவனவன் வேலைப்
பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியே
பரிசோதிக்கும். மேலே ஒருவன் கட்டி 14
னது நிலைத்திருந்தால் அவன் கூலியைப்
பெறுவான். ஒருவன் கட்டினது வெந்து 15
போனால் அவன் நஷ்டப்படுவான்; அவ
னே இரட்சிக்கப்படுவான்; ஆயினும் அக்
கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலாகும்.

நீங்கள் கடவுளின் ஆலயமென்றும் கட 16
வுளின் ஆவி உங்களில் வாசமாயிருக்கிறு
என்றும் அறியீர்களா? ஒருவன் கடவுளின் 17
ஆலயத்தைக் கெடுத்தால்அவனைக் கடவுள்
கெடுப்பார்; கடவுளின் ஆலயம் பரிசுத்த
முள்ளது; நீங்கள் அப்படிப்பட்டவர்கள்
தான்.

18 ஒருவனும் தன்னைத்தானே வஞ்சித்துக்
கொள்ளவேண்டாம்; உங்களில் ஒருவன்
தன்னை இவ்வுலகத்திலே ஞானியென்று
எண்ணினால், அவன் ஞானியாகும்படிக்குப்
19 பேதையாகக்கடவன். இவ்வுலகத்தின்
ஞானம் தேவனுக்கு பார்வையில் பேதைமை
யாம்; அப்படியே ஞானிகளை அவர்களின்
20 தந்திரத்திலே பிடிக்கிறவரென்றும் | ஞானி
களின் சிந்தனைகள் வீணென்று கர்த்தர்
21 அறிவாரென்றும் எழுதியிருக்கிறது. இப்
படியிருக்க, ஒருவனும் மனுஷரைக்குறித்
துப் பெருமைபாராட்டாதிருக்கக்கடவன்;
22 எல்லாம் உங்களுடையதே. பவுலோ
அப்பொல்லோவோ கேபாவோ உலகமோ
ஜீவனே மரணமோ நிகழ்காரியங்களோ
வருங்காரியங்களோ எல்லாம் உங்களுடைய
23 வைகள். நீங்களோ கிறிஸ்துவினுடைய
வர்கள்; கிறிஸ்து கடவுளினுடையவர்.

**4** இப்படியாக, எந்த மனிதனும் எங்களை
கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும் கடவுளு
டைய இரகசியங்களின் உக்கிராணக்கார
ரென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன்.
2 மேலும், உக்கிராணக்காரரிடம் இருக்க
வேண்டுமென்று பார்க்கிற காரியம் அவன்
உண்மையுள்ளவனுகக் காணப்படவேண்டு
3 மென்பதே; என் விஷயத்திலோ, நான் உங்க
ளாலாவது மனுஷரின் நியாயவிசாரணை
யினுலாவது தீர்ப்பைப் பெறுவதென்பது
மிகவும் அற்பமான காரியம். நானும் என்
னைக் குறித்துத் தீர்ப்புச் சொல்லுகிறதில்லை.
4 என்னிடம் நான் யாதொரு குற்றத்தையும்
அறியேன்; ஆகிலும் நான் நீதிமானுகத் தீர்க்
கப்படுகிறது அதினுலல்ல; என்னை நியாயம்
5 விசாரிக்கிறவர் ஆண்டவரே. ஆனதால்,
ஆண்டவர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு
முன்னே யாதொன்றையும் குறித்துத் தீர்ப்
புச்சொல்லாதிருங்கள்; மறைந்திருக்கிற
இருளான காரியங்களை அவர் வெளிச்சத்
துக்குக் கொண்டுவந்து இருதயங்களின்
யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்
பொழுது அவனவனுக்குரிய புகழ் கடவு
ளால் வரும்.
6 ஆனுலும், சகோதரரே, நான் என்னையும்
அபொல்லோவையும் நினைத்தவனுக உங்கள்
நன்மைக்கென்றே இவைகளை எடுத்துக்
காட்டினேன். எழுதியிருப்பதற்கு மிஞ்சிப்
போகாமலும் ஒருவனுக்கென்று மற்ற
வனுக்கு விரோதமாய் ஒருவனும் இறுமாப்
புக்கொள்ளாமலுமிருக்க நீங்கள் கற்றுக்
7 கொள்ளவேண்டும். அன்றியும், உன்னை
விசேஷித்தவனுக்குகிறவர் யார்? உனக்குள்ள
வைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது?
நீ பெற்றுக்கொண்டவனேயானுல் பெற்
றுக்கொள்ளாதவன்போல் நீ பெருமை
பாராட்டுகிறதென்ன? இதற்குள்ளாகத் 8
திருப்தியடைந்து விட்டீர்களே, இதற்குள்
ளாக ஐசுவரியவான்களாகி விட்டீர்களே,
எங்களையல்லாமல் அரசராகிவிட்டீர்களே.
நீங்கள் ஆளுகிறவர்களானுல் எனக்குச் சந்
தோஷந்தான்; அப்பொழுது நாங்களும்
உங்களோடு ஆளுவோமே. கடவுள் அப் 9
போஸ்தலராகிய எங்களை மரணத்துக்குக்
குறிக்கப்பட்டவர்கள்போலக் கடையான
வர்களாய்க் காணப்படச் செய்தாரென்று
எண்ணுகிறேன்; நாங்கள் உலகத்துக்கு,
தூதருக்கும் மனுஷருக்கும், வேடிக்கைக்
காட்சியானேம். நாங்கள் கிறிஸ்துவினி 10
மித்தம் பேதைகள், நீங்கள் கிறிஸ்துவுக்குள்
விவேகிகள்; நாங்கள் பலவீனர், நீங்கள் பல
வான்கள்; நீங்கள் கனவான்கள், நாங்கள்
கனவீனர். இந்நேர பரியந்தம் நாங்கள் 11
பசியுள்ளவர்களும் தாகமுள்ளவர்களும் நிர்
வாணிகளும் குத்துண்டவர்களும் தங்க இட
மில்லாதவர்களுமாயிருக்கிறோம். எங்கள் 12
கைகளினுலேயே வேலைசெய்து உழைக்கி
றோம்; வையப்படுகிறவர்களாய் ஆசீர்வதிக்
கிறோம்; இம்சைக்குள்ளாகிறவர்களாய்ச்
சகிக்கிறோம்; நிந்திக்கப்படுகிறவர்களாய் 13
மன்றாடுகிறோம்; இந்நேரம்வரைக்கும் உல
கத்தின் குப்பையைப்போலவும் எல்லாவற்
றினும் கழிவானவைகள் போலவுமானேம்.
உங்களை வெட்கப்படுத்தும்படி நான் 14
இவற்றை எழுதவில்லை, நீங்கள் எனக்குப்
பிரியமான பிள்ளைகளென்று உங்களுக்குப்
புத்திசொல்லுகிறேன். கிறிஸ்துவுக்குள் ஆயி 15
ரக்கணக்கான உபாத்தியார் உங்களுக்கு
இருந்தாலும் தகப்பன்மார் அநேகர் உங்க
ளுக்கில்லையே; கிறிஸ்து இயேசுவுக்குள்
நானே உங்களைச் சுவிசேஷத்தினுல் பெற்
றேன். ஆகையால் என்னைப்போல் நடக் 16
கிறவர்களாகவேண்டுமென்று உங்களுக்குப்
புத்தி சொல்லுகிறேன். இதினிமித்தமே 17
ஆண்டவருக்குள் எனக்குப் பிரியமும்
உண்மையுமான குமாரன் திமோத்தேயுவை
உங்களிடம் அனுப்பியிருக்கிறேன். கிறிஸ்
துவுக்குள் நான் நடக்கும் வழிகளை எங்கும்,
எந்தச் சபையிலும், நான் போதித்து வருகிற
பிரகாரமே அவன் உங்களுக்கு ஞாபகப்
படுத்துவான். நான் உங்களிடம் வரப்போ 18
கிறதில்லை என்றுற்போல் சிலர் இறுமாப்புக்
கொண்டிருக்கிறார்கள். ஆகிலும், ஆண்ட 19
வருக்குச் சித்தமானுல் நான் சீக்கிரம் உங்க
ளிடம் வந்து இறுமாப்பாயிருக்கிறவர்கள்

பேச்சையல்ல, அவர்கள் வல்லமையையே
20 அறிந்துகொள்வேன். கடவுளின் ராஜ்யம்
பேச்சிலல்ல வல்லமையிலேயே இருக்கி
21 றது. நீங்கள் விரும்புவதென்ன? நான்
பிரம்போடு உங்களிடம் வரவேண்டுமோ?
அன்போடும் சாந்தமுள்ள ஆவியோடும்
வரவேண்டுமோ?

**5** வாஸ்தவமாகவே உங்களுக்குள் விபசா
ரம் உண்டென்பது பிரஸ்தாபமாகிறது; அது
புறஜாதியாருக்குள்ளும் கேள்விப்படாத விப
சாரமாம். ஒருவன் தன் தகப்பன் மனை
விமை வைத்துக்கொண்டிருக்கிறானும்.
2 இப்படிப்பட்ட காரியஞ் செய்தவனை உங்
களைவிட்டு நீக்கும்படி நீங்கள் தக்கப்பட
வேண்டியதாயிருக்க இறுமாப்பா யிருக்கி
3 றீர்களே. நான் சரீரத்தில் உங்களோடில்
லாதிருந்தும் ஆவியில் உங்களோடிருக்கிற
வனாய் இதை இப்படிச் செய்தவனைக்குறித்து
நான் கூடவே இருக்கிறதுபோலத் தீர்ப்புச்
4 செய்துவிட்டேன். அப்படிப்பட்டவனை
டைய ஆவி ஆண்டவரின் நாளில் இரட்சிக்
5 கப்படும்படி | மாம்சத்தின் அழிவுக்கென்று,
நீங்களும் என் ஆவியும் நமது ஆண்டவ
ராகிய இயேசுவின் வல்லமையோடு கூடிவந்
திருக்கையிலேயே, நமது ஆண்டவராகிய
இயேசுவின் நாமத்தில் அவனைச் சாத்தா
னுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டுமென்பதே
என் தீர்ப்பு.
6 நீங்கள் பெருமைபாராட்டுகிறது அழ
கல்ல; புளித்த மா கொஞ்சமேயாயினும்
பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்கி
7 விடுமென்று அறியீர்களா? நீங்கள் புளிப்
பில்லாதவர்களாயிருக்கிறபடியே புதிதான
பிசைந்தமாவா யிருக்கும்படிக்குப் பழைய
புளித்தமாவை அப்புறப்படுத்திவிடுங்கள்.
நமது பஸ்காவும் பலியிடப்பட்டிருக்கிறதே,
8 அது கிறிஸ்துதான். ஆதலால், பழைய
புளித்தமாவோடல்ல, துர்க்குணம் பொல்
லாப்பு என்னும் புளித்தமாவோடுமல்ல,
களங்கமின்மை உண்மை என்னும் புளிப்
பில்லாத அப்பத்தோடு பண்டிகையைக்
கொண்டாடுவோமாக.
9 வேசிக்கள்ளரோடு கலந்திருக்கக் கூடா
தென்று என் நிருபத்தில் உங்களுக்கெழுதி
10 னேன். நான் பொதுவாய் இவ்வுலகத்தின்
வேசிக்கள்ளர் பொருளாசைக்காரர் கொள்
ளைக்காரர் விக்கிரகாராதனைக்காரர் இவர்
களைப்பற்றி எழுதவில்லை; அப்படியானால்
நீங்கள் உலகத்தைவிட்டு நீங்கிப்போக
11 வேண்டியதாகுமே. நான் உங்களுக்கு எழு
தினதோ: சகோதரனெனப்பட்ட ஒருவன்
வேசிக்கள்ளனும் பொருளாசைக்காரனும்
விக்கிரகாராதனைக்காரனும் உதாசினனும்
வெறியனும் அல்லது கொள்ளைக்காரனுமிருக்
தால் அவனோடு கலந்திருக்கக்கூடாதென்
பதுதான். அப்படிப்பட்டவனோடு போஜ
னம் பண்ணவுங்கூடாது. புறம்பே இருக் 12
கிறவர்களை நியாயந்தீர்க்கிறது என் காரி
யமா? உள்ளே இருக்கிறவர்களையல்லவோ
நீங்கள் நியாயந்தீர்க்கிறீர்கள்? புறம்பே 13
இருக்கிறவர்களையோ நியாயந்தீர்ப்பவர் கட
வுள். அந்தப் பொல்லாதவனை உங்களை
விட்டுத் தள்ளிப்போடுங்கள்.

உங்களில் ஒருவனுக்கு வேறொருவனோடு **6**
வழக்குண்டானால் வழக்காடும்படி அவன்
பரிசுத்தவான்களிடம் போகாமல் அநீதக்
காரரிடம் போகத் துணிகிறதென்ன? பரி 2
சுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்
பார்களென்று அறியீர்களா? நீங்கள் உல
கத்தை நியாயந்தீர்க்கிறவர்களானால் அற்ப
வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா?
தெய்வதூதரை நியாயந் தீர்ப்போமென்று 3
அறியீர்களா? இந்த ஜீவனுக்குரியவைகளை
நீங்கள் தீர்ப்பதைப்பற்றிச் சொல்லவேண்
டுமோ? இந்த ஜீவனுக்குரிய வழக்குகள் 4
உங்களுக்கு இருக்குமேயானால் சபையால்
அற்பமாய் எண்ணப்படுகிறவர்களை ஏற்படுத்
திக்கொள்ளுகிறீர்களே! உங்களுக்கு வெட்க 5
முண்டாகும்படி இதைச் சொல்லுகிறேன்.
சகோதரருக்குள் உண்டான வழக்கைத்
தீர்க்கத்தக்க விவேகி ஒருவனுகிலும் உங்க
ளுக்குளில்லையா? ஆனாலோ, சகோதரனோடு 6
சகோதரன் வழக்காடுகிறான், அதுவும்
அவிசுவாசிகளுக்கு முன்பாக நீங்கள் ஒரு
வரோடொருவர் வழக்காடுகிறது உங்க
ளுக்கு முற்றிலும் குறைவே. அப்படிச் 7
செய்கிறதைவிட நீங்கள் ஏன் அநியாயத்
தைச் சகித்துக்கொள்ளக் கூடாது? ஏன்
நஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ளக்
கூடாது? நீங்களே அநியாயஞ் செய்கிறீர் 8
கள், நஷ்டப்படுத்துகிறீர்கள்; சகோதர
ருக்கே அப்படிச் செய்கிறீர்கள். அநியா 9
யக்காரர் கடவுளின் ராஜ்யத்தைச் சுதந்தரிப்
பதில்லையென்று அறியீர்களா? மோசம்போ
காதிருங்கள்; வேசிமார்க்கத்தார் விக்கிரகாரா
தனைக்காரர் விபசாரக்காரர் தற்புணர்ச்சிக்
காரர் ஆண்புணர்ச்சிக்காரர் | திருடர் 10
பொருளாசைக்காரர் வெறியர் உதாசினர்
கொள்ளைக்காராராகிய இவர்கள் கடவுளின்
ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. உங்களில் 11
சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்;
ஆயினும் நீங்கள் கழுவப்பட்டீர்கள். பரி

சுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாகத் தீர்க்கப்பட்டீர்கள், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலும் நமது கடவுளின் ஆவியினாலுமே அப்படியாக்கப்பட்டீர்கள்.

12 எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்குப் பாத்தியமுண்டு, ஆகிலும் எல்லாம் பிரயோஜனமாயிராது; எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்குப் பாத்தியமுண்டு, ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்.

13 வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்துக்கு வயிறும் உரியது; கடவுளோ இதையும் அதையும் அழியப்பண்ணுவார். ஆனாலும், சரீரம் வேசிமார்க்கத்திற்கல்ல ஆண்டவருக்கே உரியது; ஆண்டவரும் சரீரத்திற்கு

14 உரியவர். கடவுள் ஆண்டவரை எழுப்பினாரே, நம்மையும் தமது வல்லமையினால்

15 எழுப்புவார். உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயவங்களை எடுத்து வேசியின் அவயவங்களாக்

16 கலாமா? கூடவேகூடாது. வேசியோடு சேர்ந்திருக்கிறவன் அவளோடு ஒரே சரீரமாயிருக்கிறானென்று அறியீர்களா? இருவரும் ஒரே மாம்சமாவார்களென்று சொல்லியிருக்

17 கிறதே. அப்படியே ஆண்டவரோடு இசைந்திருக்கிறவனும் அவரோடு ஒரே ஆவி

18 யாயிருக்கிறான். வேசிமார்க்கத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்யும் எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பேயிருக்கும்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுய சரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான்.

19 உங்கள் சரீரம் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றதும் உங்களில் தங்கியிருக்கிறதுமான பரிசுத்த ஆவியின் ஆலயமென்றும் நீங்கள் உங்களுடையவர்களல்ல வென்றும் அறியீர்

20 களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே, ஆகவே, உங்கள் சரீரத்தில் கடவுளை மகிமைப்படுத்துங்கள்.

**7** நீங்கள் எழுதினவைகளுக்கு நான் சொல்லுகிறதாவது: ஸ்திரீயைத் தொடாமலிருப்

2 பதே மனுஷனுக்கு நலம். எனினும், வேசித்தனம் இராதபடிக்கு ஒவ்வொருவனுக்கும் சொந்த மனைவியும் ஒவ்வொருத்திக்கும் சொந்தப் புருஷனுமிருக்கட்டும்.

3 புருஷன் தன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன். அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச்

4 செய்யக்கடவள். மனைவிக்குத் தன் சுய சரீரத்தின்மேல் அதிகாரமில்லை; அதிகாரமுடையவன் புருஷனே. அப்படியே புருஷனுக்கும் தன் சுயசரீரத்தின்மேல் அதிகாரமில்லை; அதிகாரமுடையவள் மனைவியே.

5 ஜெபத்தியானத்திற்கு வசதியாகும்படி சில காலம் பிரிந்திருப்பதற்கு இருவரும் சம்மதித்தாலன்றி ஒருவரைவிட்டொருவர் பிரிய வேண்டாம்; இச்சையடக்கம் உங்களுக்கு இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டிவிடாதபடி மறுபடியுங் கூடிவாழுங்கள். இதை நான் கட்டளையாகச் சொல்ல

6 வில்லை, யோசனையாகச் சொல்லுகிறேன்.

7 எல்லா மனுஷரும் நான் இருக்கிறதுபோலவே இருக்க விரும்புகிறேன். ஆகிலும், ஒவ்வொருவனுக்கும் கடவுளால் அருளப்பட்ட அவனவனுக்குரிய வரமுண்டு; அது ஒருவனுக்கு ஒரு விதம், மற்றொருவனுக்கு வேறு விதம்.

8 விவாகமில்லாதவர்களுக்கும் விதவைகளுக்குமோ நான் சொல்வதாவது: அவர்கள் நான் இருக்கிறதுபோலவே இருந்துவிட்டால் அவர்களுக்கு நலம். ஆயினும், அவர்

9 கள் விரக்தராயிருக்கமுடியாதிருந்தால் விவாகஞ் செய்துகொள்ளட்டும். வேகிறதைப் பார்க்கிலும் விவாகஞ் செய்துகொள்ளுகிறது நலம்.

10 விவாகஞ் செய்துகொண்டவர்களுக்கோ நானல்ல, ஆண்டவரே கட்டளையிடுகிறதாவது: மனைவி தன் புருஷனை

11 விட்டு நீங்கிப்போகக்கூடாது. நீங்கிப்போனாலோ மறுவிவாகஞ் செய்துகொள்ளாமலிருக்கவேண்டும், அல்லது புருஷனோடு ஒப்புரவாகவேண்டும்; புருஷனும் தன் மனைவியைத் தள்ளிவிடக்கூடாது.

12 மற்றவர்களுக்கோ ஆண்டவரல்ல, நானே சொல்வதாவது: சகோதரன் ஒருவனுக்கு அவிசுவாசியான மனைவியிருந்து அவள் அவனோடு கூடிவாழச் சம்மதித்தால் அவன் அவளைத் தள்ளிவிடக்கூடாது.

13 அப்படியே ஒரு ஸ்திரீக்கு அவிசுவாசியான புருஷனிருந்து அவன் அவளோடு கூடிவாழச் சம்மதித்தால் அவள் அவனைத் தள்ளிவிடக்கூடாது.

14 ஏனெனில், அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்த நிலைமைக்கு வந்திருக்கிறான். அவிசுவாசியான மனைவியும் சகோதரனால் பரிசுத்தநிலைமைக்கு வந்திருக்கிறாள். இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்த நிலைமையிலிருக்குமே; இப்பொழுதோ அவைகள் பரிசுத்த நிலைமைக்கு வந்திருக்கின்றன.

15 ஆயினும், அவிசுவாசி நீங்கிப்போனால் நீங்கிப்போகட்டும். இப்படிப்பட்ட விஷயங்களில் சகோதரனாவது சகோதரியாவது அடிமைப்பட்டவர்களல்ல. சமாதானத்திற்குள்ளாகவே கடவுள் நம்மை அழைத்திருக்கிறார்.

16 மனைவியே, நீ உன் புருஷனை இரட்சிப்பாயோ அல்லவோ

உனக்கு எப்படித்தெரியும்? புருஷனே, நீ
உன் மனைவியை இரட்சிப்பாயோ அல்
17 லவோ உனக்கு எப்படித்தெரியும்? ஆண்ட
வர் அவனவனுக்குப் பகிர்ந்த தெப்படியோ,
கடவுள் அவனவனை அழைத்ததெப்படியோ
அப்படியே அவனவன் நடக்கக்கடவன்.
எல்லாச் சபைகளிலும் இப்படியே திட்டம்
18 பண்ணுகிறேன். ஒருவன் விருத்தசேதனம்
பெற்றவனாய் அழைக்கப்பட்டிருக்கிறானா?
அவன் விருத்தசேதனமில்லாதவனாக வகை
தேட வேண்டாம்; ஒருவன் விருத்தசேதன
மில்லாதவனாய் அழைக்கப்பட்டிருக்கி
றானா? அவன் விருத்தசேதனம் பெறவேண்
டாம்.
19 விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்த
சேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; கடவு
ளின் கற்பனைகளைக் கைக்கொள்வதே காரி
20 யம். அவனவன் தான் அழைக்கப்பட்ட
21 நிலைமையிலேயே நிலைத்திருக்கட்டும். நீ
அடிமையாய் அழைக்கப்பட்டிருக்கிறாயா?
கவலைப்படாதே; நீ சுயாதீனனாகக் கூடுமே
யானால் அதை அடைந்துகொள்வது நலம்.
22 ஆண்டவருக்குள் அழைக்கப்பட்ட
அடிமை ஆண்டவரின் சுயாதீனனே; அப்
படியே அழைக்கப்பட்ட சுயாதீன
23 கிறிஸ்துவின் அடிமையே. நீங்கள் கிரயத்
துக்குக் கொள்ளப்பட்டீர்கள், மனுஷருக்கு
24 அடிமைகளாகவேண்டாம். சகோதரரே,
அவனவன் தான்தான் அழைக்கப்பட்ட
நிலைமையிலே கடவுளுக்கு முன்பாக நிலைத்
திருப்பானாக.
25 கன்னிகைகளைக்குறித்தோ ஆண்டவரால்
எனக்குக் கட்டளையில்லை. ஆகிலும், நான்
உண்மையுள்ளவனாயிருக்கிறதற்கு ஆண்ட
வரால் இரக்கம் பெற்றவனாய் என் அபிப்
26 பிராயத்தைச் சொல்லுகிறேன். தற்காலத்
தின்பத்தினிமித்தம் மனுஷன் தான் இருக்
கிற நிலைமையிலேயே இருந்துவிடுவது அவ
27 னுக்கு நலமென்றெண்ணுகிறேன். நீ மனை
வியோடு கட்டப்பட்டிருக்கிறாயா? அவிழ்க்
கப்பட வகைதேடாதே; நீ மனைவியில்லாத
வனாயிருக்கிறாயா? மனைவியைத் தேடாதே.
28 நீ விவாகஞ்செய்துகொண்டாலும் பாவ
மல்ல; கன்னிகை விவாகஞ் செய்துகொண்
டாலும் பாவமல்ல. அப்படிப்பட்டவர்
களோ சரீரத்தில் உபத்திரவப்படுவார்கள்;
அதற்கு நீங்கள் தப்பவேண்டுமென்றிருக்கி
29 றேன். சகோதரரே, நான் சொல்லுகிறதா
வது: காலம் குறுகினது, இனி மனைவியுள்ள
30 வர்கள் இல்லாதவர்கள்போலவும் | அழு
கிறவர்கள் அழாதவர்கள்போலவும் சந்தோ
ஷப்படுகிறவர்கள் சந்தோஷப்படாதவர்கள்
போலவும் கொள்ளுகிறவர்கள் கொண்ட
வைகளுக்கு உரிமையில்லாதவர்கள் போல
வும் | இல்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் 31
முழுவதுமாய் அதை அனுபவியாதவர்கள்
போலவும் இருக்கவேண்டும்; இவ்வுலகத்
தின் கோலம் கடந்துபோகிறதே என்பது.
நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்பு 32
கிறேன். விவாகமில்லாதவன் ஆண்டவ
ருக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று
ஆண்டவருக்குரியவைகளுக்காகக் கவலைப்
படுகிறான். விவாகஞ் செய்துகொண்டவனோ 33
தன் மனைவிக்கு எப்படிப் பிரியமாயிருக்க
லாமென்று உலகத்திற்குரியவைகளுக்காக
கவலையுற்று இருமனப்பட்டிருக்கிறான்.
புருஷனில்லாத ஸ்திரீயும் கன்னிகையும் சரீ 34
ரத்திலும் ஆத்துமாவிலும் பரிசுத்தமாயிருக்
கும்படி ஆண்டவருக்குரியவைகளுக்காகக்
கவலைப்படுகிறார்கள். விவாகஞ்செய்து
கொண்டவளோ தன் புருஷனுக்கு எப்ப
டிப் பிரியமாயிருக்கலாமென்று உலகத்திற்
குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறாள்.
இதை உங்கள் நன்மைக்கென்றே சொல்லு 35
கிறேன். உங்களைக் கண்ணிக்குள் அகப்
படுத்தவேண்டுமென்று இதைச் சொல்லா
மல் இது தகுதியென்றும் நீங்கள் கருத்துக்
கெதருமல் ஆண்டவரைப் பற்றிக்கொண்
டிருக்கவேண்டு மென்றுஞ் சொல்லுகிறேன்.
பருவங் கடந்தபின்னும் தன் கன்னிகையை 36
விவாகமின்றி இருக்கும்படி செய்வது அவ
னுக்குத் தகுதியாகதென்றெண்ணி அவளை
விவாகஞ்செய்துகொடுப்பது கடமையென்று
ஒருவன் கண்டால் அவன் மனதின்படியே
செய்யட்டும்; அது பாவமல்ல, விவாகஞ்
செய்யட்டும். ஆயினும், ஒருவன் அதற்கு 37
அவசியத்தைக் காணுமல் தன் சுயசித்தத்
தின்படி செய்ய அதிகாரமுள்ளவனும் இரு
தயத்தில் உறுதியாய் நின்று தன் புத்திரியைக்
கன்னிகையாகவே வைக்க இருதயத்தில்
தீர்மானிப்பானானால் அவன் செய்வது நன்
றும். இப்படியிருக்கத் தன் கன்னிகையை 38
விவாகம்பண்ணிக்கொடுக்கிறவன் செய்வ
தும் நன்றும், கொடாதவன் செய்வதும்
அதிக நன்றும். புருஷன் உயிரோடிருக்கு 39
மளவும் மனைவி கட்டுக்குட்பட்டிருக்கிறாள்;
புருஷன் மரித்துப்போனாலோ தனக்கிஷ்ட
மான எவனையாகிலும் விவாகஞ் செய்து
கொள்ள விடுதலையாயிருக்கிறாள். அதை
ஆண்டவருக்குள்ளேயே செய்யவேண்டும்.
ஆனாலும், அவள் அப்படியே இருந்துவிட் 40
டால் அதிகப் பாக்கியவதியாவாள். இது
என் அபிப்பிராயம். நானே கடவுளின்
ஆவியுடையவனென்று எண்ணுகிறேன்.

**8** விக்கிரகங்களுக்குப் பலியிட்டவைகளின் விஷயத்தில் நம்மெல்லாருக்கும் அறிவு உண்டென்று நமக்குத் தெரியுமே. அறிவு இறுமாப்பை யுண்டாக்கும், அன்போ பக்தி
2 விருத்தியை யுண்டாக்கும். தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவனென்று ஒருவன் எண்ணிக்கொள்வானானால் அவன் அறியவேண்டிய பிரகாரமாக இன்னும் ஒன்றையும்
3 அறிந்துகொள்ளவில்லை. ஒருவன் கடவுளில் அன்புகூர்ந்தால் அவன் அவரால்
4 அறியப்பட்டிருக்கிறான். ஆகவே, விக்கிரகங்களுக்குப் பலியிட்டவைகளைப் புசிக்கிற விஷயத்தைப் பார்த்தால், உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லையென்றும் ஒருவரேயன்றி வேறே கடவுள் இல்லையென்றும்
5 அறிந்திருக்கிறோம். அநேக தேவர்களும் ஆண்டவன்மாரும் இருக்கிறதுபோல வானத்திலாவது பூமியிலாவது தேவர்கள் எனப்படுகிறவர்கள் இருந்தாலும் நமக்கோ
6 பிதாவாகிய ஒரே கடவுள் உண்டு; அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம்; இயேசுகிறிஸ்து என்னும் ஒரே ஆண்டவரும் நமக்குண்டு; அவர்மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர்மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்.

7 இந்த அறிவோ எல்லாரிடத்திலுமில்லை. சிலர் இற்றைவரைக்கும் விக்கிரகப்பழக்கமுடையவர்களாய் விக்கிரகத்துக்குப் பலியிட்டதென்றே புசிக்கிறார்கள்; அவர்கள் மனச்சாட்சி பலவீனமாயிருப்பதால் அசுசிப்
8 படுகிறது. போஜனம் நம்மைக் கடவுளுக்கு உகந்தவர்களாக்கமாட்டாது; புசியாதிருப்பதினால் நாம் சிறுகுவதுமில்லை, புசிப்பதி
9 னால் நாம் பெருகுவதுமில்லை. எனினும், உங்களுக்கு இருக்கிற இந்தப் பாத்தியத்தினால் பலவீனர் எவ்வித்திலும் தவறி விழாதபடிக்குப் பார்த்துக்கொள்ளுங்கள். அறி
10 வுள்ளவனுடைய உண்மை விக்கிரகக் கோவிலிலே பந்தியிருக்க ஒருவன் கண்டால், பலவீனனுடைய மனச்சாட்சி விக்கிரகங்களுக்குப் பலியிட்டவைகளைப் புசிப்பதற்குத் துணிவுகொள்ளுமல்லவா?
11 பலவீனன் உன் அறிவினால் கெட்டுப்போகிறான்; அவன் சகோதரன், அவனுக்காகவும்
12 கிறிஸ்து மரித்தாரே. இப்படிச் சகோதரருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து அவர்களுடைய பலவீன மனச்சாட்சியைப் புண்படுத்துகிறதினால் நீங்கள் கிறிஸ்துவுக்கு
13 விரோதமாய்ப் பாவஞ்செய்கிறீர்கள். ஆதலால், போஜனம் என் சகோதரனை இடறிவிழச்செய்தால் நான் என் சகோதரன் இடறிவிழாதபடி என்றைக்கும் மாம்சம் புசியாமலேயிருப்பேன்.

**9** நான் சுயாதீனனல்லவா? நான் அப்போஸ்தலனல்லவா? நமது ஆண்டவராகிய இயேசுவை நான் தரிசித்ததில்லையா? ஆண்டவருக்குள் நீங்கள் என் கிரியையல்லவா?
2 நான் மற்றவர்களுக்கு அப்போஸ்தலனல்லாதபோதிலும் உங்களுக்காகிலும் அப்போஸ்தலனாயிற்றே; என் அப்போஸ்தலீ
3 ஊழியத்திற்கு ஆண்டவருக்குள் நீங்களே முத்திரை. என்னை விசாரிக்கிறவர்களுக்கு நான் சொல்லும் நியாயமிதுவே. சாப்பிட
4 வும் பானம்பண்ணவும் எங்களுக்குப் பாத்தியமில்லையா? மற்ற அப்போஸ்தலரும்
5 ஆண்டவரின் சகோதரரும் கேபாவும் செய்கிறதுபோல நாங்களும் போகுமிடங்களுக்கு மணவியாகிய ஒரு சகோதரியைக் கூட்டிக்கொண்டுபோக எங்களுக்குப் பாத்தியமில்லையா? அல்லது வேலை செய்யாமலிருப்ப
6 தற்கு எனக்கும் பர்னபாவுக்குந்தானே பாத்தியமில்லை? தன் கைப்பணஞ் செலவிட்டுத்
7 தண்டிலே எப்போதாவது சேவிப்பவன் யார்? திராட்சத்தோட்டம் போட்டு அதின் கனியைப் புசியாதிருப்பவன் யார்? மந்தையை மேய்த்து அதின்பாலைச் சாப்பிடாதிருப்
8 பவன் யார்? இவைகளை மனுஷர் வழக்கப்படிதானே சொல்லுகிறேன்? நியாயப்பிரமாணமும் இவைகளைச் சொல்லுகிறதில்லையா?

9 போரடிக்கிற மாட்டை வாய் கட்டாதே என்று மோசேயின் பிரமாணத்தில் எழுதியிருக்கிறதே. கடவுள் மாடுகளுக்காகவே கவலையாயிருக்கிறாரோ?
10 நமக்காகத்தான் இதைச் சொல்லுகிறாரோ? ஆம், நமக்காகவே அது எழுதியிருக்கிறது: உழுகிறவன் நம்பிக்கையோடு உழவும் போரடிக்கிறவன் பங்கு
11 கிடைக்குமென்னும் நம்பிக்கையோடு போரடிக்கவும் வேண்டுமே. நாங்கள் உங்களுக்கு ஆத்தும நன்மைகளை விதைத்திருக்க உங்கள் சரீர நன்மைகளை அறுத்தால் அது
12 பெரிய காரியமா? மற்றவர்கள் உங்களிடத்தில் இப்பாத்தியத்தைக் கொண்டாடினால் நாங்கள் இன்னும் அதிகமாய்க் கொண்டாடலாமல்லவா? அப்படியிருந்தும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு எங்களால் யாதொரு இடையூறும் உண்டாகாதபடி நாங்கள் இந்தப் பாத்தியத்தைக்கொண்டாடாமல் எல்
13 லாவற்றையும் சகிக்கிறோம். தெய்வாலயத்தில் ஊழியஞ் செய்கிறவர்கள் ஆலயத்திற்குரியவைகளைச் சாப்பிடுகிறார்களென்றும் பலிபீடத்தையடித்துப் பணிவிடை செய்கிற

வர்களுக்குப் பலிபீடத்திலுள்ளவைகளில்
14 பங்குண்டென்றும் அறியீர்களா? அப்படி
யே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச்
சுவிசேஷத்திலிருந்தே பிழைப்பு உண்
டாகவேண்டுமென்று ஆண்டவரும் கட்
15 டளையிட்டிருக்கிறார். நானோ இவற்றில்
ஒன்றையும் அனுபவிக்கவில்லை; இவைகளை
நான் எழுதுகிறது இப்படியே என் விஷயத்
திலும் இருக்கவேண்டுமென்றல்ல, அதைப்
பார்க்கிலும் நான் மரிப்பது நல்லதாம். ஆனா
லோ, எனக்குரிய பெருமையை எவனும்
16 வியர்த்தமாக்குவதேயில்லை. சுவிசேஷத்தை
நான் பிரசங்கித்துவந்தாலும் பெருமை
பாராட்ட எனக்கு இடமில்லை; அது என்
மேல் விழுந்த கடமை. சுவிசேஷத்தை
நான் பிரசங்கியாதிருந்தால், ஐயோ எனக்குப்
17 பரிதாபம்! நான் மன இஷ்டத்தோடு இப்
படிச் செய்வேனாகில் எனக்குப் பலனுண்டு;
மன இஷ்டமின்றிச் செய்தாலும் உக்கிராண
ஊழியம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்
18 கிறதே. இப்படியிருக்க, எனக்குப் பலன்
என்ன? நான் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்
கையில் அதில் எனக்கு இருக்கும் பாத்தி
யத்தை முற்றிலும் பாராட்டாமல் சுவி
சேஷத்தைச் செலவில்லாததாக்குவதே
எனக்குப் பலன்.

19 நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனா
யிருந்தும் நான் அதிகமானவர்களை ஆதாயப்
படுத்திக்கொள்ளும்படிக்கு என்னையே எல்
20 லாருக்கும் அடிமையாக்கினேன். யூதரை
ஆதாயப்படுத்திக்கொள்ளும்படி யூதருக்கு
யூதனைப்போலவும் நியாயப்பிரமாணத்துக்கு
உட்பட்டவர்களை ஆதாயப்படுத்திக் கொள்
ளும்படி நான் நியாயப்பிரமாணத்துக்குஉட்
படாதவனாயிருந்தும் நியாயப்பிரமாணத்
துக்கு உட்பட்டவனைப்போலவுமானேன்.
21 கடவுளின் பிரமாணமில்லாதவனாயிராமல்
கிறிஸ்துவின் பிரமாணத்துக்கு உட்பட்டி
ருக்கிற நான் நியாயப்பிரமாணமில்லாதவர்
களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படி அவர்
களுக்கு நியாயப்பிரமாணம் இல்லாதவனைப்
22 போலவுமானேன். பலவீனரை ஆதாயப்
படுத்திக்கொள்ளும்படி பலவீனருக்குப் பல
வீனனைப்போலானேன்; எப்படியாகிலும்
சிலரை இரட்சிக்கும்படி நான் எல்லாருக்
23 கும் எல்லாமானேன். சுவிசேஷத்தினிமித்
தமே, அதில் உடன் பங்காளியாகவேண்டு
மென்றே, எல்லாவற்றையுஞ் செய்கிறேன்.
24 பந்தயச்சாலையில் ஓடுகிறவர்களெல்லா
ரும் ஓடினாலும் ஒருவனே பந்தயத்தைப்
பெறுவானென்று அறியீர்களா? பெற்றுக்
25 கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்
குப் போராடுகிற ஒவ்வொருவனும் எல்லா
வற்றிலேயும் தன்னையடக்கி மிதமாயிருப்
பான். அவர்கள் அழிவுள்ள கிரீடம் பெறு
வதற்கு அப்படிச் செய்கிறார்கள், நாம்
செய்கிறதோ அழிவில்லாத கிரீடம் பெறுவ
தற்கே. ஆதலால், நான் நிச்சயமில்லாதவ 26
னாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவ
னாகச் சிலம்பம்பண்ணேன். மற்றவர்களுக் 27
குப் பிரசங்கிக்கும் நானே ஆகாதவனாய்த்
தள்ளப்படாதபடி என் சரீரத்தை ஒடுக்கி
அடிமையாக்கிக்கொள்ளுகிறேன்.

10 சகோதரரே, நீங்கள் ஒரு காரியத்தை
அறியாதிருக்கிறது எனக்கு மனதில்லை. அதா
வது: நமது பிதாக்களெல்லாரும் மேகத்தின்
கீழிருந்தார்கள், எல்லாரும் சமுத்திர வழி
யாய் நடந்து வந்தார்கள். எல்லாரும் மோ 2
சேக்குள்ளாக மேகத்திலும் சமுத்திரத்திலும்
ஞானஸ்நானம் பெற்றார்கள். எல்லாரும் 3
ஒரே அற்புத போஜனத்தைப் புசித்தார்கள்.
எல்லாரும் ஒரே அற்புத பானத்தைக் குடித்
தார்கள். அவர்களோடு சென்றுகொண் 4
டிருந்த அற்புத கன்மலையின் தண்ணீரைக்
குடித்தார்கள். அந்தக் கன்மலை கிறிஸ்துவே. 5
அப்படியிருந்தும், அவர்களில் பெரும்பாலா
ரிடம் கடவுள் பிரியமாயிருந்ததில்லை; அவர்
கள் வனாந்தரத்தில் விழுந்து மடிந்தார்கள்.
அவர்கள் பொல்லாதவைகளை இச்சித்தது 6
போல் நாமும் இச்சியாதபடி இவைகள்
நமக்குத் திருஷ்டாந்தங்களாயின. ஜனங்கள் 7
புசிக்கவும்குடிக்கவும் உட்கார்ந்து விளையாட
எழுந்திருந்தார்களென்று எழுதியிருக்கிற
படி, அவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்
காரராஞர்கள்; நீங்களும் அப்படி ஆகாதிருங்
கள். அவர்களில் சிலர் வேசித்தனம்பண்ணி 8
ஒரே நாளில் இருபத்துமூவாயிரம்பேர்
விழுந்துபோனார்கள்; அதுபோல் நாமும்
வேசித்தனம் பண்ணாதிருப்போமாக. அவர்க 9
ளில் சிலர் ஆண்டவரைச் சோதித்துப்பார்த்
துப் பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள்.
அதுபோல் நாமும் ஆண்டவரைச் சோதித்
துப் பாராதிருப்போமாக. அவர்களில் சிலர் 10
முறுமுறுத்துச் சங்காரக்காரனால் அழிக்கப்
பட்டார்கள்; அதுபோல் நீங்களும் முறு
முறுக்காதிருங்கள். இவைகள் திருஷ்டாந் 11
தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தன;
யுகாந்தகாலங்களிலுள்ளவர்களாகிய நமக்கு
எச்சரிப்பாக எழுதப்பட்டு மிருக்கின்றன.
ஆதலால் தான் நிற்கிறதாக எண்ணுகிறவன் 12
விழாதபடி ஏச்சரிக்கையாயிருக்கக்கடவன்.
மனுஷருக்கு நேரிடுஞ் சோதனையேயல்லா 13
மல் வேறே சோதனை உங்களுக்கு நேரிட

வில்லை. கடவுள் உண்மையுள்ளவர்; உங்கள் ராணிக்கு மிஞ்சி நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் இடங்கொடார், சோதனையைத் தாங்கத்தக்கதாகச் சோதனையோடு கூடத் தப்பும் வழியையும் உண்டாக்குவார்.

14 ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, விக்கிரகாராதனைக்கு விலகியோடுங்கள். 15 உங்களை விவேகிகளென்றெண்ணிப் பேசுகிறேன். நான் சொல்லுகிறதை நீங்களே நிதானித்துப் பாருங்கள். 16 நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாத பாத்திரம் கிறிஸ்துவின் இரத்தத்தின் ஐக்கியமேயல்லவா? நாம் பிட்கும் அப்பம் கிறிஸ்துவின் சரீரத்தின் ஐக்கியமேயல்லவா? 17 அப்பம் ஒன்றாயிருக்க அந்த ஒரே அப்பத்தில் பங்கு பெறுகிற நாம் யாவரும் அநேகராயிருந்தும் ஒரே சரீரமாயிருக்கிறோம். 18 மாம்சத்தின்படி இஸ்ரவேலராயிருக்கிறவர்களைப் பாருங்கள்; பலிகளைப் புசிக்கிறவர்கள் பலிபீடத்தோடு ஐக்கியமாகவில்லையா? 19 இப்படியிருக்க, நான் சொல்லுகிறதென்ன? விக்கிரகத்துக்குப் பலியிட்டது ஒரு பொருளென்றும் விக்கிரகம் ஒரு பொருளென்றும் சொல்லுகிறேனோ? 20 அல்ல; அப்படிப் பலியிடுகிறவைகளைக் கடவுளுக்கல்ல பேய்களுக்கே பலியிடுகிறார்களென்று சொல்லுகிறேன்; நீங்கள் பேய்களோடு ஐக்கியமாவது எனக்கு மனதில்லை. 21 நீங்கள் ஆண்டவரின் பாத்திரத்திலும் பேய்களின் பாத்திரத்திலும் பானம் பண்ணமுடியாதே, நீங்கள் ஆண்டவரின் பந்திக்கும் பேய்களின் பந்திக்கும் பங்குள்ளவர்களாக முடியாதே. 22 நாம் ஆண்டவருக்கு எரிச்சலை மூட்டுகிறோமா? நாம் அவரிலும் பலவான்களா?

23 எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்குப் பாத்தியமுண்டு, ஆகிலும் எல்லாம் பிரயோஜனமாயிராது; எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்குப் பாத்தியமுண்டு, ஆகிலும் 24 எல்லாம் பக்திவிருத்திக்கேதுவாகாது. ஒருவனும் தனக்கானதையல்ல பிறனுக்கானதை 25 நாடக்கடவன். கறிக்கடையில் விற்கும் எதையும் வாங்கிச் சாப்பிடுங்கள்; மனச்சாட்சியினிமித்தம் நீங்கள் ஒன்றையும் 26 விசாரிக்கவேண்டியதில்லை. பூமியும் அதின் 27 நிறைவும் கர்த்தருடையதே. அவிசுவாசிகளில் ஒருவன் உங்களைச் சாப்பாட்டுக்கு அழைக்கும்போது போக உங்களுக்கு மனதிருந்தால் மனச்சாட்சியினிமித்தம் ஒன்றையும் விசாரியாமல், உங்கள்முன் வைக்கிறதையெதையும் சாப்பிடுங்கள். 28 ஆயினும், இது பலியிடப்பட்டதென்று ஒருவன் உங்களுக்குச் சொல்வானாலும், அப்படி அறிவித்தவனிமித்தமும் மனச்சாட்சியினிமித்தமும் அதைச் சாப்பிடாதிருங்கள். 29 மனச்சாட்சியென்று நான் சொல்வது சொந்த மனச்சாட்சியல்ல, மற்றவன் மனச்சாட்சியே. என் சுயாதீனம் அந்நியமனச்சாட்சியினால் தீர்க்கப்படுவானேன்? 30 நான் நன்றியறிந்த ஸ்தோத்திரத்தோடு சாப்பிட்டால் நான் நன்றி செலுத்தி யனுபவிக்கிற பொருளைப்பற்றி நிந்திக்கப்படுவானேன்? 31 ஆகையால், நீங்கள் புசித்தாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் கடவுளின் மகிமைக்கென்று செய்யுங்கள். 32 நீங்கள் யூதருக்கும் கிரேக்கருக்கும் கடவுளின் சபைக்கும் இடறலுண்டாக்காதிருங்கள். 33 நானும் அப்படியே என் சுய நன்மையை நாடாமல் அநேகருடைய நன்மையை நாடி அவர்கள் இரட்சிக்கப்படவேண்டுமென்று எல்லா விஷயங்களிலும் எல்லாருக்கும் பிரியமாய் நடந்துவருகிறேன்.

**11** நான் கிறிஸ்துவைப்போல் நடக்கிறபடியே நீங்களும் என்னைப்போல் நடக்கிறவர்களாகுங்கள்.

2 நீங்கள் எல்லாவற்றிலும் என்னை நினைத்துக்கொண்டு நான் உங்களுக்கு ஒப்புவித்தபடி ஒப்புவித்தவைகளை நீங்கள் கைக்கொண்டு வருகிறதுபற்றி உங்களைப் புகழுகிறேன். 3 ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்துவே தலை, ஸ்திரீக்கும் புருஷனே தலை, கிறிஸ்துவுக்குக் கடவுளே தலை என்பதை நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன். 4 ஜெபம்பண்ணும்போதாவது தீர்க்கதரிசனஞ் சொல்லும்போதாவது தன் தலையை மூடிக்கொண்டிருக்கும் எந்தப் புருஷனும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறான். 5 ஜெபம் பண்ணும்போதாவது தீர்க்கதரிசனஞ் சொல்லும்போதாவது தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கும் எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்; அது அவள் தலை சிரைக்கப்பட்டதற்குச் சரியாகுமே. 6 ஒரு ஸ்திரீ முக்காடிட்டுக் கொள்ளாவிட்டால் தலை மயிரையும் கத்தரித்துப்போடட்டும்; தலைமயிர் கத்தரிக்கப்படுவதும் சிரைக்கப்படுவதும் ஸ்திரீக்கு வெட்கமென்றால் முக்காடிட்டுக்கொண்டிருக்கட்டும். 7 புருஷன் கடவுளின் சாயலும் மகிமையுமாயிருக்கிறபடியால் தன் தலையை மூடிக்கொள்ளவேண்டுவதில்லை; ஸ்திரீயானவளோ புருஷனின் மகிமையாயிருக்கிறாள். 8 புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவனல்ல, ஸ்திரீயே புருஷனிலிருந்து தோன்றினவள். 9 புருஷன் ஸ்திரீக்

காகச் சிருஷ்டிக்கப்பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள். 10 ஆகையால், தூதர்களினிமித்தம் ஸ்திரீயானவள் தலையின்மேல் [1]முக்காடிட்டுக்கொள்ள 11 வேண்டும். ஆயினும், ஆண்டவருக்குள் புருஷனில்லாமல் ஸ்திரீயுமில்லை, ஸ்திரீயில் 12 லாமல் புருஷனுமில்லை. ஸ்திரீயானவள் புருஷனிலிருந்து தோன்றினதுபோல் புருஷனும் ஸ்திரீயினால் தோன்றுகிறான்; சகல மூலமோ கடவுளால் உண்டாயிருக்கிறது. 13 ஸ்திரீ கடவுளை நோக்கி ஜெபம்பண்ணுகையில் முக்காடிட்டுக் கொள்ளாமலிருப்பது தகுமோவென்று உங்களுக்குள்ளே நிதானித்துக்கொள்ளுங்கள். புருஷன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவனுக்குக் கனவீனமென்றும் | ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையென்றும் 14 இயற்கையாகவே உங்களுக்குத் தெரியவில்லையா? தலைமயிர் அவளுக்கு முக்காடாக 15 கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகிலும் ஒருவன் வாக்குவாதஞ்செய்ய மனதாயிருந்தால் எங்களுக்கும் கடவுளின் சபைகளுக்கும் அப்படிப்பட்ட வழக்கமில்லையென்று அறிந்துகொள்ளட்டும்.

17 நான் கட்டளையாகச் சொல்லப்போகிற காரியத்திலோ உங்களைப் புகழேன்; நீங்கள் கூடிவருவது நன்மைக்கல்ல தீமைக்கேது 18 வாயிருக்கிறதே. முதலாவது, நீங்கள் சபைகூடும்போது உங்களில் பிரிவினைகள் உண்டென்று கேள்விப்படுகிறேன்; அதை 19 ஒருவாறு நம்புகிறேன். உங்களில் உத்தமர் இன்னாரென்று வெளியாகும்படிக்கு மதப்பிரிவுகளும் உங்களுக்குள் உண்டா 20 யிருக்கவேண்டியதே. நீங்கள் ஒன்றாய்க் கூடிவரும்போது ஆண்டவருடைய ராப் 21 போஜனம் புசிக்கிறதென்பதில்லை. சாப்பிடுகையில் அவனவன் தன் தன் சொந்தப் போஜனத்தை முந்தி எடுத்துக்கொள்ளுகிறான்; ஒருவன் பசியாயிருக்கிறான், ஒரு 22 வன் வெறியாயிருக்கிறான். புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் உங்களுக்கு வீடுகளில்லையா? கடவுளின் சபையை அசட்டைபண்ணுவதோடுகூட இல்லாதவர்களையும் அவமானப்படுத்துகிறீர்களா? உங்களுக்கு நான் என்ன சொல்லுவேன்? உங்களைப் புகழ்வேனோ? இதைக்குறித்து உங்களைப் புக 23 ழேன். நான் உங்களுக்கு ஒப்புவித்ததை ஆண்டவரிடமிருந்தே பெற்றுக்கொண்டேன். அதாவது: ஆண்டவராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து | 24 நன்றி செலுத்தி, அதைப்பிட்டு: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரம்; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின 25 பின்பு அவர் அப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கை; இதைப் பானம் பண்ணும்போதெல்லாம்என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஏனெ 26 னில், நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்துப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் ஆண்டவர் வருமளவும் அவர் மரணத்தைப் பிரஸ்தாபித்து வருகிறீர்கள்.

இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய் 27 ஆண்டவரின் அப்பத்தைப் புசித்து அவர் பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ அவன் ஆண்டவரின் சரீரத்தையும் இரத்தத்தையும் பற்றிய விஷயத்தில் குற்றத்திற்காளாகிறான். ஒருவன் தன்னைதானே சோதித் 28 தறிந்து இந்த அப்பத்தில் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். ஏனெனில், போஜனபானம் பண்ணுகிறவன் 29 ஆண்டவரின் சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாதிருப்பானானால் தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறவனாவான். இதினிமித்தம் உங் 30 களில் அநேக பலவீனரும் வியாதிக்காரரும் இருக்கிறார்கள்; பலபேர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள். நம்மை நாமே 31 நிதானித்தறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப் படாதிருப்போம். நாம் நியாயந்தீர்க்கப் 32 படும்போதோ உலகத்தோடு ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடி ஆண்டவரால் சிட்சிக்கப்பட்டுவருகிறோம். ஆகையால், 33 என் சகோதரரே, நீங்கள் போஜனம் பண்ணக் கூடிவரும்போது ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள். நீங்கள் ஆக்கினைக் 34 கேதுவாகக் கூடிவராதபடி ஒருவனுக்குப் பசியிருந்தால் அவன் வீட்டிலே சாப்பிடக் கடவன். மற்றக் காரியங்களையோ நான் வரும்போது திட்டம்பண்ணுவேன்.

அன்றியும், சகோதரரே, ஆவிக்குரிய **12** வரங்களின் விஷயத்தில் நீங்கள் அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. நீங்கள் புற 2 மதஸ்தராயிருந்தபோது தூண்டப்பட்டபடியே ஊமையான விக்கிரகங்களிடம் நடத்தப்பட்டீர்களென்பது உங்களுக்குத் தெரியுமே. ஆதலால், கடவுளின் ஆவியினாலே 3

[1] அதிகாரம் (அதிகார சின்னம்) என்பது கிரேக்கு பதத்தின் பொருள்.

பேசுகிற எவனும் இயேசு சாபத்துக்குட்
பட்டவர் எனச் சொல்லமாட்டானென்றும்
பரிசுத்த ஆவியிலலேயன்றி இயேசு ஆண்ட
வர் என ஒருவனுஞ் சொல்லமுடியாதென்
றும் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.
4 வரங்களில் வித்தியாசங்களுண்டு, ஆவி
5 யானவரோ ஒருவரே. ஊழியங்களிலும்
வித்தியாசங்களுண்டு, ஆண்டவர் ஒருவரே.
6 செய்யுங் காரியங்களிலும் வித்தியாசங்க
ளுண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றை
7 யும் செய்விக்கிற கடவுள் ஒருவரே. ஆவி
யின் வெளிப்படுதலாகிய வரம் பிரயோஜ
னத்திற்கென்று அவனவனுக்கு அருளப்
8 பட்டுவருகிறது. எப்படியெனில், ஒருவ
னுக்கு ஆவியினால் ஞானவாக்கும் மற்றொரு
வனுக்கு அதே ஆவியின் சித்தப்படி அறிவு
9 வாக்கும் | வேறொருவனுக்கு அதே ஆவி
யினால் விசுவாசமும் மற்றொருவனுக்கு
அந்த ஒரே ஆவியினால் பிணிதீர்க்கும் வரங்
10 களும் | மற்றொருவனுக்கு வல்ல செயல்
களை நடப்பிக்கும் சக்தியும் மற்றொருவ
னுக்குத் தீர்க்கதரிசனமும் மற்றொருவ
னுக்கு ஆவிகளைப் பகுத்தறியும் சக்தியும்
வேறொருவனுக்குப் [1]பரவசப் பேச்சுகளும்
மற்றொருவனுக்குப் பேச்சுகளை விளங்கச்
செய்யும் சக்தியும் அளிக்கப்படுகிறது.
11 இவையெல்லாவற்றையுமோ அந்த ஒரே
ஆவியானவரே தமது சித்தத்தின்படி அவ
னவனுக்கு வெவ்வேறாகப் பகிர்ந்து
கொடுத்து நடப்பித்து வருகிறார்.
12 சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள்
அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்க
ளெல்லாம் அநேகமாயிருக்கும் சரீரம்
13 ஒன்றே. கிறிஸ்துவும் அப்படியே. நாம்
யூதராயினும் கிரேக்கராயினும் அடிமைகளா
யினும் சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே
ஆவியினால் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்
நானம் பெற்றோம். ஒரே ஆவியிலும் தாகம்
14 தீர்க்கப்பட்டோம். சரீரமும் ஒரே அவயவ
மாயிராமல் அநேக அவயவங்களாயிருக்
15 கிறது. காலானது, நான் கையல்லாதபடியி
னால் நான் சரீரத்தைச் சேர்ந்ததல்லவென்று
சொல்லுமானால் அதினாலே அது சரீரத்தைச்
16 சேராததாகுமோ? காதானது, நான் கண்
ணல்லாதபடியினால் நான் சரீரத்தைச்
சேர்ந்ததல்லவென்று சொல்லுமானால் அதி
னாலே அது சரீரத்தைச் சேராததாகுமோ?
17 சரீரம் முழுவதுங் கண்ணானால் கேள்வி
எங்கே? முழுவதுங் கேள்வியேயானால்
18 மோப்பம் எங்கே? கடவுளோ தமது சித்தப்
படியே அவயவங்களில் ஒவ்வொன்றையும்
சரீரத்தில் அமைத்துவைத்தார். அவை 19
யெல்லாம் ஒரே அவயவமாயிருந்தால் சரீர
மெங்கே? இருக்கிறபடியோ அவயவங்கள் 20
அநேகம், சரீரமே ஒன்று: கண் கையி 21
னிடம்: நீ எனக்கு வேண்டுவதில்லையென்
றும் தலை கால்களினிடம்: நீங்கள் எனக்கு
வேண்டுவதில்லையென்றுஞ் சொல்லமுடி
யாது. வாஸ்தவத்திலோ அவயவங்களில் 22
பலவீனமுள்ளவைகளாய்க் காணப்படுகிற
வைகளே மிகவும் அவசியமானவைகள்.
மேலும், சரீரத்தில் கனவீனமாய்க் காணப் 23
படுகிறவைகளுக்கே அதிகக் கனத்தைக்
கொடுக்கிறோம்; நம்மில் இலட்சணமில்
லாதவைகளே அதிக அலங்காரிப்புப்பெறும்.
நம்மில் இலட்சணமுள்ளவைகளுக்கு அது 24
வேண்டியதில்லை. கனத்தில் குறைவுள்ள
தற்குக் கடவுள் அதிகக் கனத்தைக்கொடுத்
துச் சரீரத்தைப் பொருத்தியிருக்கிறார். சரீ 25
ரத்தில் பிரிவினையுண்டாகாமல் அவயவங்
கள் ஒன்றையொன்று ஒரேவிதமான கவலை
யாய்ப் பார்க்கும்படி இப்படிச் செய்திருக்
கிறார். ஒரு அவயவம் பாடுபட்டால் 26
எல்லா அவயவங்களும் கூடவே பாடுபடும்;
ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா
அவயவங்களும் கூடவே சந்தோஷப்படும்.
நீங்களே கிறிஸ்துவின் சரீரமும் தனித் 27
தனியே அவயவங்களுமாம். சபையிலே 28
முதலாவது அப்போஸ்தலரையும் இரண்
டாவது தீர்க்கதரிசிகளையும் மூன்றாவது
போதகர்களையும் பின்பு வல்லசெயல்களையும்
பின்பு பிணிதீர்த்தல் உதவிபுரிதல் ஆளு
கைசெய்தல் ஆகிய வரங்களையும் பரவசப்
பேச்சுகளையும் கடவுள் ஏற்படுத்தினார்.
எல்லாருமே அப்போஸ்தலரோ? எல்லாரு 29
மே தீர்க்கதரிசிகளோ? எல்லாருமே போத
கர்களோ? எல்லாருமே வல்லசெயல்களைச்
செய்கிறவர்களோ? பிணிதீர்க்கும் வரங்கள் 30
எல்லாருக்குமே யுண்டோ? எல்லாருமே
பரவசமாய்ப் பேசுகிறார்களோ? எல்லா
ருமே பரவசப்பேச்சுகளை விளங்கச்செய்கி
றார்களோ? மேன்மையான வரங்களை ஆவ 31
லாய்த் தேடுங்கள். யாவற்றிலும் மேலான
வழியையும் உங்களுக்குக் காண்பிக்கி
றேன்.

மனுஷ பாஷைகளையும் தெய்வதூதர் **13**
பாஷைகளையும் நான் பேசினாலும் அன்பு
எனக்கு இராவிட்டால் சத்தமிடும் வெண்
கலமும் ஓசையிடும் கைத்தாளமும் ஆய்

1 கிரேக்கு பதம் நாவுகள் என்று பொருள்படும். அப். 10: 45; 19: 6 பார்க்க.

விட்டேன். நான் தீர்க்கதரிசன வரத்தை யுடையவனும் சகல இரகசியங்களையும் சகல அறிவையும் அறிந்தவனுமாயினும் மலைகளைப்பேர்க்கும்சகல விசுவாசமுமுள்ள வனாயினும் அன்பு எனக்கு இராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்குள்ள யாவற் றையும் நான் அன்னதானஞ் செய்தாலும் சுட்டெரிப்பதற்கு என் சரீரத்தை ஒப்புக் கொடுத்தாலும் அன்பு எனக்கு இராவிட் டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை. அன்பு நீடிய சாந்தமுள்ளது; அன்பு தயாளமுள்ளது; அது பொறுமைகொள் ளாது; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப் பாயிராது, | அயோக்கியமானதைச் செய் யாது, தனக்கானதை நாடாது, கோபங் கொள்ளாது, குற்றத்தைப் பாராட்டாது. அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத் தோடு சந்தோஷப்படும். யாவற்றையும் பொறுக்கும், யாவற்றையும் நம்பும், யாவற் றிலும் நன்னம்பிக்கைகொள்ளும், யாவற் றையும் சகிக்கும்.

அன்பு ஒருக்காலும் அழியாது. தீர்க்கதரி சனங்களானாலும் ஒழிந்துபோம், பரவசப் பேச்சுகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானா லும் ஒழிந்துபோம். நாம் அறிவதும் குறைவு, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லு வதும் குறைவு. நிறைவு வரும்போதோ குறைவு ஒழிந்துபோம். நான் குழந்தை யாயிருந்தபோது குழந்தையைப்போல் பேசினேன், குழந்தையைப்போல் சிந்தித் தேன், குழந்தையைப்போல் யோசித்தேன்; நான் புருஷனானபோதோ குழந்தைக்குரிய வைகளை ஒழித்துவிட்டேன். இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க் கிறோம், அப்பொழுதோ முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது என் அறிவு குறைவு, அப்பொழுதோ நான் முற்றிலும் அறியப்பட்டிருக்கிறபடியே முற்றிலும் அறிந்துகொள்ளுவேன். இப்பொழுதோ, விசுவாசம் நன்னம்பிக்கை அன்பு இம் மூன்றும் நிலைத்திருக்கின்றன; இவை களில் அன்பே பெரியது.

**14** அன்பை நாடுங்கள்; ஆவிக்குரிய வரங் களை, விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை யே, ஆவலாய்த் தேடுங்கள். பரவசமாய்ப் பேசுகிறவன் ஆவியில் இரகசியங்களைப்பேசு கிறபடியால் அவன் பேசுகிறதை ஒருவனும் அறிகிறதில்லை. அவன் மனுஷரோடல்ல கடவுளோடேயே பேசுகிறான். தீர்க்கதரி சனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்குப் பக்திவிருத்தியும் தைரியமும் உற்சாகமும் உண்டாகும்படி பேசுகிறான். பரவசமாய்ப் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண் டாகச்செய்கிறான்; தீர்க்கதரிசனஞ் சொல்லு கிறவனோ சபைக்குப் பக்திவிருத்தி உண் டாகச் செய்கிறான். நீங்களெல்லாரும் பரவசமாய்ப் பேசவேண்டுமென்று விரும்பு கிறேன்; நீங்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற வர்களாகவேண்டுமென்றோ அதிலும் அதிக மாய் விரும்புகிறேன். பரவசமாய்ப் பேசு கிறவன் சபையின பக்திவிருத்திக்கென்று கருத்தை விளங்கச்செய்யாவிட்டால் தீர்க்க தரிசனஞ் சொல்லுகிறவன் அவனிலும் பெ ரியவன். இப்போதும், சகோதரரே, வெ ளிப்படுதலாகவோ அறிவாகவோ தீர்க்க தரிசனமாகவோ போதனையாகவோ நான் உங்களோடு பேசினாலன்றிப் பரவச மாகவே பேசுகிறவனாக உங்களிடம் வரு வேனாகில் என்னால் உங்களுக்குப் பிரயோ ஜனமென்ன?

சத்தமிடுகிற உயிரற்ற வாத்தியங்கள் விஷயத்திலும் அப்படியே. புல்லாங்குழ லாவது சுரமண்டலமாவது தொனிகளில் வித்தியாசங் காட்டாவிட்டால் குழலாலே ஊதினதும் சுரமண்டலத்தாலே வாசித்ததும் இன்னதென்று எப்படித் தெரியும்? அந்தப் படி எக்காளமும் விளங்காத சத்தமிட் டால் எவன் யுத்தத்திற்கு ஆயத்தம் பண் ணுவான்? இப்படியே நீங்களுந் தெளிவான பேச்சை நாவினால் வசனியாவிட்டால் பேசி னது இன்னதென எப்படித்தெரியும்? ஆகா யத்தை நோக்கிப் பேசுகிறவர்களாயிருப்பீர் களே. உலகத்திலே எத்தனையோவிதமான சத்தங்களுண்டு; அவற்றில் ஒன்றும் அர்த்த மில்லாததல்ல. சத்தத்தின் கருத்தை நான் அறியாமலிருந்தால் பேசுகிறவனுக்கு நான் அந்நியனாவேன். பேசுகிறவனும் எனக்கு அந்நியனாவான். நீங்களும் ஆவிக்குரிய வரங்களை ஆவலாய்த் தேடுகிறவர்களான படியால் சபைக்குப் பக்திவிருத்தியுண்டாக அவைகளில் பெருகும்படி நாடுங்கள். ஆகையால், பரவசமாய்ப் பேசுகிறவன் அதை விளங்கச்செய்யும்படி விண்ணப்பஞ் செய்யக்கடவன். நான் பரவசமாய்ப் பேசி ஜெபஞ்செய்வேனாகில் என் ஆவி ஜெபஞ் செய்யுமேயன்றி என் மனம் பலனற்றதாயி ருக்கும். இப்படியிருக்க, செய்யவேண்டுவ தென்ன? நான் ஆவியில் ஜெபம்செய்வேன், மனதிலும் ஜெபஞ்செய்வேன்; நான் ஆவியில் பாடுவேன், மனதிலும் பாடுவேன். இல்லா விட்டால், நீ ஆவியில் ஸ்தோத்திரம் செய் யும்போது சபையில் உட்கார்ந்திருக்கும் சாமானியமான மனிதன் உன் ஸ்தோத்திரத்

தித்கு ஆமேன் என்று எப்படிச் சொல்லுவான்? நீ பேசுகிறது இன்னதென்று அவன்
17 அறியானே. நீ நன்றாகவே ஸ்தோத்திரஞ்
செய்கிறாய், மற்றவனே பக்திவிருத்தி யடை
18 யாமலிருப்பானே. உங்களெல்லாரிலும்
நான் அதிகமாய்ப் பரவசப்பட்டுப் பேசுகிறேன், இதற்காகக் கடவுளுக்கு நன்றி
19 செலுத்துகிறேன். ஆயினும், நான் சபையிலே பரவசப்பட்டுப் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும் மற்றவர்களுக்குப் போதனை செய்யும்படி என் அறிவோடு ஐந்து வார்த்தைகளைப் பேசுவதே எனக்கு அதிகவிருப்பம்.

20 சகோதரரே, நீங்கள் புத்தியிலே குழந்தைகளாகாதேயுங்கள்; தூர்க்குணத்திலே குழந்தைகளும் புத்தியிலோ பெரியவர்களுமாகுங்கள்.

21 மறுபாஷைக்காரராலும் மற்றவர்கள்
உதடுகளாலும்
இந்த ஜனத்தினிடம் பேசுவேன்;
அப்படியும் அவர்கள் எனக்குச் செவி
கொடுப்பதில்லை
என்று கர்த்தர் சொல்லுகிறார்
என்பதாக நியாயப்பிரமாணத்தில் எழுதியி
22 ருக்கிறது. ஆகவே, பரவசப்பேச்சு விசுவாசிகளுக்கல்ல அவிசுவாசிகளுக்கே அடையாளம்; தீர்க்கதரிசனமோ அவிசுவாசிகளுக்
23 கல்ல விசுவாசிகளுக்கே. ஆகையால், சபையாரெல்லாரும் ஏகமாய்க்கூடிவந்து எல்லாரும் பரவசமாய்ப் பேசிக்கொள்ளுவார்களானால் அவிசுவாசிகளோ சபையாரில் சாமானியமானவர்களோ உள்ளே வரும்போது
உங்களைப் பைத்தியம் பிடித்தவர்களென்று
24 சொல்லமாட்டார்களா? எல்லாரும் தீர்க்கதரிசனஞ்சொல்வார்களானால் அவிசுவாசியோ சாமானியமானவனே உள்ளே வரும்போது அவன் எல்லாராலும் உணர்வடைந்து எல்லாராலும் நிதானிக்கப்பெறு
25 வான். அவன் இருதய அந்தரங்கங்களும் வெளியாகும்: அவன் முகங்குப்புற விழுந்து கடவுளைப் பணிந்துகொண்டு கடவுள் மெய்யாகவே உங்களுக்குள் இருக்கிறாரென்று அறிக்கையிடுவான்.

26 இப்படியிருக்க, சகோதரரே, செய்ய வேண்டுவதென்ன? நீங்கள் கூடிவரும்போது ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு வரமுண்டு. ஒருவனுக்குச் சங்கீதம், ஒருவனுக்குப் போதகம், ஒருவனுக்கு இரகசியம் வெளிப்படுதல், ஒருவனுக்குப் பரவசப்பேச்சு, ஒருவனுக்கு அப்பேச்சின் விளக்கம். எல்லாம் பக்திவிருத்திக்கேதுவாகச் செய்யப்படக்கடவது. யாராவது பரவசமாய்ப் பேசுகிறதாண்
27 டானால் அது இரண்டுபேர் மட்டில், மிஞ்சினால் மூன்றுபேர் மட்டில், அடங்கவும் அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும் ஒருவன் விளங்கச்செய்யவும்வேண்டும். விளங்
28 கச் செய்கிறவனில்லாவிட்டால் சபையில் பேசாமல் தனக்கும் கடவுளுக்குமே பேசக்
29 கடவன். தீர்க்கதரிசிகள் இருவரோ மூவரோ பேசட்டும், மற்றவர்கள் நிதானிக்கட்
30 டும். அங்கே உட்கார்ந்திருக்கிற மற்றொருவனுக்கு ஏதாகிலும் வெளிப்படுத்தப்பட்டால் முந்திப் பேசினவன் பேசாமலிருக்கட்
31 டும். எல்லாருக்கும் அறிவும் உற்சாகமும் உண்டாவதற்கேதுவாய் நீங்கள் அனைவரும் ஒவ்வொருவராகத் தீர்க்கதரிசனஞ் சொல்ல
32 இடமுண்டு. தீர்க்கதரிசிகளின் ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கின்றனவே.
33 கடவுள் கலகத்திற்குரியவரல்ல, சமாதானத்திற்குரியவர்.

பரிசுத்தவான்களின் சகல சபைகளிலு
34 மிருக்கிறபடியே | ஸ்திரீகள் சபைகளில் பேசாமலிருக்கட்டும்; பேச அவர்களுக்கு உத்திரவில்லை, அவர்கள் அடங்கியிருக்
35 கட்டும். நியாயப்பிரமாணம் சொல்வதும் அப்படியே. அவர்கள் எதையாவது கற்றுக் கொள்ள விரும்பினால் வீட்டிலே தங்கள் புருஷரிடம் விசாரித்துக்கொள்ளட்டும்; ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அவமானமே.
36 கடவுளின் வசனம் உங்களிடமிருந்தா புறப்பட்டது? அது உங்களிடத்துக்கு மாத்திரமா வந்து சேர்ந்தது?

ஒருவன் தன்னைத் தீர்க்கதரிசியென்றாவது
37 ஆவிக்குரியவனென்றாவது எண்ணினால் நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் ஆண்டவரின் கட்டளை என்பதை அவன் அறிந்துகொள்ளட்டும்.
38 ஒருவன் அறியாமற் போவானேயானால் அவன் அறியப்படாமலே போவான்.

இப்படியிருக்க, சகோதரரே, தீர்க்கதரிச
39 னஞ் சொல்ல ஆவலாய் நாடுங்கள், பரவசமாய்ப் பேசுவதற்கும் தடைபண்ணாதிருங்
40 கள். சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது.

சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங் **15**
இத்த சுவிசேஷத்தையே உங்களுக்குத் தெரியப்படுத்திவருகிறேன்; அந்தச் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டீர்கள், அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங் 2
இத்த வார்த்தையை நீங்கள் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருந்தால்—நீங்கள் விசுவாசித்தது விருதாவாயிராதானால்—அந்தச் சுவிசேஷத்தினால் இரட்சிக்கப்பட்டும் வரு

3 கிறீர்கள். நான் பெற்றுக்கொண்டதும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களினிமித்தம்
4 மரித்து | அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாள் உயிரோ
5 டெழுப்பப்பட்டார். எழுப்பப்பட்டுக் கேபாவுக்கும் பின்பு பன்னிருவருக்குந் தரிசன
6 மானார். அதன்பின்பு அவர் ஐந்நூறுபேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார்; அவர்களில் பெரும்பாலார் இந்நாள்வரைக்கும் இருக்கிறார்கள், சிலரோ நித்திரையடைந்தார்கள்.
7 பின்பு யாக்கோபுக்கும் அப்பால் அப்போஸ்
8 தலரெல்லாருக்கும் தரிசனமானார். எல்லாருக்குங் கடைசியிலோ அகாலப்பிறவி
9 போன்ற எனக்கும் தரிசனமானார். நான் அப்போஸ்தலரில் சிறியவனே; கடவுளின் சபையை இம்சைப்படுத்தினபடியால் நான் அப்போஸ்தலனென்று பேர் பெறுவதற்குப்
10 பாத்திரனல்ல. நான் இருக்கிறதோ கடவுளின் இருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவானதில்லை; அவர்களனைவரிலும் நான் அதிகமாய் வருந்தியுழைத்தேன்; ஆகிலும், வருந்தியுழைத்தது நானல்ல என்னோடிருக்கும்
11 கடவுளின் கிருபையே. ஆகையால், நானுகிலும் அவர்களாகிலும் சரி, இப்படியே பிரசங்கித்துவருகிறோம், நீங்களும் இப்படியே விசுவாசங்கொண்டீர்கள்.
12 கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டிருக்கிறாரென்று பிரசங்கிக்கப்பட்டிருக்க, மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லையென்று உங்களில் சிலர் எப்படிச் சொல்ல
13 லாம்? மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லாவிட்டால் கிறிஸ்துவும் எழுப்பப்படவில்
14 லையே. கிறிஸ்து எழுப்பப்படவில்லையென்றால் எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள்
15 விசுவாசமும் விருதா. மரித்தோர் எழுப்பப் படவில்லையென்றால், கடவுள் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாங்கள் கடவுளுக்கு மாறாய்ச் சாட்சி சொன்னதினாலே கடவுளின் விஷயத்தில் பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்களாகவும்
16 காணப்படுவோமே. மரித்தோர் எழுப்பப்படாவிட்டால் கிறிஸ்துவும் எழுப்பப்பட
17 வில்லை. கிறிஸ்து எழுப்பப்படாவிட்டால் உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும், நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருக்கிறீர்கள்;
18 கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும்
19 அழிந்துபோனார்களே. இம்மைக்கென்று மாத்திரம் எதிர்நோக்கும் நம்பிக்கையை நாம் கிறிஸ்துவில் வைத்தவர்களாயிருந்தால் எல்லா மனுஷரிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருக்கிறோம்.

20 வாஸ்தவத்திலோ கிறிஸ்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலனாக மரித்தோரிலிருந்தெழுப்பப்பட்டார். மனுஷனால் மர
21 ணம் வந்ததுபோல மரித்தோரின் உயிர்த்தெழுதலும் மனுஷனால் வந்தது. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோலக் கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்
22 கள். அவனவன் தன்தன் வரிசையிலே
23 உயிர்ப்பிக்கப்படுவான்; முதற்பலனானவர் கிறிஸ்து, பின்பு அவருடைய வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்
24 கள். அப்பால் அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் ஒழித்துக் கடவுளும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுக்கும்போது முடிவுவரும். எல்லாச் சத்து
25 ருக்களையும் தமது பாதத்தின் கீழ்ப் போடும் வரைக்கும் அவர் அரசாளவேண்டியது.
26 ஒழிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம்.
27 எல்லாவற்றையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினாரே; ஆகிலும், எல்லாம் அவருக்குக் கீழ்ப்படுத்தப் பட்டதென்று சொல்லியிருக்கும்போது எல்லாவற்றையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினவர் கீழ்ப்படுத்தப்படவில்லையென்பது தெளிவு. எல்லாம்
28 அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போதோ கடவுளே எல்லாரிலும் எல்லாமாயிருப்பதற்குக் குமாரன் தாமும் தமக்கு எல்லாவற்றையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்.

29 இல்லாவிட்டால், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் செய்து வருகிறதென்ன? மரித்தோர் எழுப்பப்படுகிறதேயில்லையென்றால் அவர்களுக்காக ஞானஸ்
30 நானம் பெறுவானேன்? நாங்களும் எக்கேரமும் நாசமோசத்திற்கு ஏதுவாயிருப்பானேன்?
31 நான் அனுதினமும் சாகிறேன். சகோதரரே, நமது ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவில் உங்களைக்குறித்த நான் பாராட்டுகிற பெருமையைக்கொண்டு இதைச் சத்தியமாய்ச் சொல்லுகிறேன்.
32 நான் எபேசுவிலே, மனுஷ வழக்கமாய்ச் சொல்லுகிறபடி, துஷ்டமிருகங்களோடு போராடினேனெனில் அதினாலே எனக்குப் பிரயோஜனென்ன? மரித்தோர் எழுப்பப்படாவிட்டால்,

நாளைக்குச் சாகப்போகிறபடியால்
புசிப்போம் குடிப்போம்

33 எனலாமே! மோசம்போகாதிருங்கள். தீச்

சகவாசம் நல்லொழுக்கத்தைக் கெடுக்கும்.
34 நீங்கள் நீதிதெறிக்கென்று நித்திரைதெளிந்து
பாவஞ்செய்யாதிருங்கள்; சிலர் கடவுளைப்
பற்றிய அறிவில்லாதிருக்கிறார்களே! உங்க
ளுக்கு வெட்கமுண்டாகும்படி இதைச்
சொல்லுகிறேன்.
35 ஆகிலும், மரித்தோர் எப்படி எழுப்பப்
படுவார்கள், எப்படிப்பட்ட சரீரத்தோடே
வருவார்களென்று ஒருவன் கேட்பான்.
36 மதிகேடனே, நீ விதைக்கிற விதை செத்தா
37 லொழிய உயிர்பெறமாட்டாதே. நீ விதைக்
கிறதோவெனில், இனி விளையப்போகும்
மேனியையல்ல, கோதுமையின், அல்லது
மற்றொரு தானியத்தின் வெறும் விதையை
38 யே விதைக்கிறாய். அதற்குக் கடவுள் தாம்
சித்தங்கொண்டபடியே மேனியைக் கொ
டுக்கிறார்; ஒவ்வொரு வகை விதைக்கும்
அததற்குரிய மேனியையே கொடுக்கிறார்.
39 எல்லா மாம்சமும் ஒரேவித மாம்சமல்ல;
மனுஷர் மாம்சம் வேறே, மிருகங்கள் மாம்
சம் வேறே, பறவைகள் மாம்சம் வேறே,
40 மீன்கள் மாம்சம் வேறே. வானத்துக்குரிய
மேனிகளுமுண்டு, பூமிக்குரிய மேனிகளு
முண்டு; வானத்துக்குரிய மேனிகளின் மகி
மை வேறே, பூமிக்குரிய மேனிகளின் மகி
மை வேறே; சூரியனின் மகிமை வேறே,
41 சந்திரனின் மகிமை வேறே, நட்சத்திரங்க
ளின் மகிமை வேறே; மகிமையிலே நட்சத்
திரத்துக்கு நட்சத்திரம் வித்தியாசமுள்ளது.
42 மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்ப
டியே இருக்கும். அழிவில் விதைக்கப்ப
43 டும், அழிவின்மையில் எழுப்பப்படும். கன
வீனத்தில் விதைக்கப்படும், மகிமையில்
எழுப்பப்படும். பலவீனத்தில் விதைக்கப்
44 படும், வல்லமையில் எழுப்பப்படும். ஜன்ம
சுபாவ சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய
சரீரம் எழுப்பப்படும்; ஜன்மசுபாவ சரீர
முண்டென்றால் ஆவிக்குரியசரீரமுமுண்டு.
45 அப்படியே, முதல் மனுஷன் ஆதாம் உயி
ருள்ள ஆத்துமாவானான் என்றெழுதியிருக்
கிறது; கடைசி ஆதாமோ உயிர்ப்பிக்கிற
46 ஆவியானார். ஆகிலும், முன்னது ஆவிக்
குரியதல்ல ஜன்மசுபாவத்துக்குரியதே;
47 ஆவிக்குரியது பின்னது. முதல் மனுஷன்
பூமிக்குரிய மண்ணானவன்; இரண்டாம்
48 மனுஷன் பரலோகத்திற்குரியவர். மண்ணா
னவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்
களும் அப்படிப்பட்டவர்களே; பரலோகத்
திற்குரியவர் எப்படிப்பட்டவரோ பரலோ
கத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்
49 களே. மேலும், மண்ணானவனின் சாயலே
நாம் அணிந்திருக்கிறதுபோல் பரலோகத்
திற்குரியவரின் சாயலையும் அணிந்துகொள்
ளக்கடவோம்.

சகோதரரே, நான் சொல்லுகிறதென்ன 50
வெனில், மாம்சமும் இரத்தமும் கடவுளின்
ராஜியத்தைச் சுதந்தரிக்கமுடியாது; அழிவா
னது அழிவின்மையைச் சுதந்தரிப்பது
மில்லை. இதோ, ஒரு இரகசியத்தை உங்க 51
ளுக்குச் சொல்லுகிறேன்: நாமெல்லாரும்
நித்திரையடைவதில்லை; எல்லாருமோ உருவ
மாற்றப்பெறுவோம்; ஒரு நிமிஷத்திலே, 52
இமைப்பொழுதிலே, கடைசி எக்காளம்
தொனிக்கும்போது இது நடக்கும். எக்கா
ளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர்
அழிவில்லாதவர்களாய் எழுப்பப்படுவார்
கள்; நாமும் உருவமாற்றப்பெறுவோம்.
அழிவுக்குரியதாகிய இது அழிவின்மையை 53
யும், சாவுக்குரியதாகிய இது சாவாமையை
யும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுக் 54
குரியதாகிய இது அழிவின்மையையும்
சாவுக்குரியதாகிய இது சாவாமையையும்
தரித்துக்கொள்ளும்போதோ,

மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது; 55
மரணமே, உன் ஜெயம் எங்கே?
மரணமே, உன் கொடுக்கு எங்கே?

என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவே
றித் திரும். மரணத்தின் கொடுக்கு பாவம், 56
பாவத்தின் வல்லமையோ நியாயப்பிரமா
ணம். நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து 57
வின் மூலமாய் நமக்கு ஜெயங்கொடுக்கிற
கடவுளுக்கு ஸ்தோத்திரம். ஆகையால், 58
எனக்குப் பிரியமான சகோதரரே, ஆண்ட
வருக்குள் உங்கள் உழைப்பு விருதாவா
யிராதென்றறிந்து நீங்கள் ஆண்டவரின்
வேலையில் எப்பொழுதும் பெருகி உறுதியுள்
ளவர்களும் அசையாதவர்களுமாகுங்கள்.

பரிசுத்தவான்களுக்கென்று சேர்க்கப்ப **16**
டும் தர்மப் பணத்தைக்குறித்து நான் கலாத்
தியா நாட்டுச் சபைகளுக்குத்திட்டஞ்செய்த
படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந் 2
திருக்கும்போது தர்மப்பணஞ் சேர்க்காதபடி
வாரத்தின் முதல் நாள்தோறும் உங்களில்
அவனவன் தன்தன் வரவுக்குத்தக்கபடி தன்
னிடம் சேர்த்துவைக்கக்கடவன். நான் உங் 3
களிடமிருக்கும்போது தகுதியுள்ளவர்க
ளென்று நீங்கள் குறிக்கிறவர்கள் உங்கள்
உபகாரப் பணத்தை எருசலேமுக்குக்
கொண்டுபோகும்படி அவர்களை நிருபங்க
ளோடு அனுப்புவேன். நானும் போவது 4
நலமென்று கண்டால் அவர்கள் என்னோடு
போவார்கள். மக்கெதோனியா நாட்டைக் 5
கடந்தபின்பு உங்களிடம் வருவேன். நான்

மக்கெதோனியா நாட்டின் வழியாய்ப் போ
6 கிறேன். நான் எங்கே போனாலும் நீங்கள்
என்னை வழிவிட்டனுப்பும்படி நான் உங்க
ளிடம் சிலகாலம், ஒருவேளை மழைகாலம்
முடியும்வரையும், தங்கவேண்டியதாயிருக்
7 கும். இப்பொழுது வழிப்பிரயாணத்தி
லேயே உங்களைப் பார்க்க எனக்கு விருப்ப
மில்லை; ஆண்டவர் உத்தரவு கொடுத்தால்
உங்களிடம் வந்து சிலகாலம் தங்கியிருக்
கலாமென்று ஆவலாய் எதிர்பார்க்கிறேன்.
8 பெந்தக்கொஸ்தே பண்டிகை வரைக்குமோ
9 எபேசுவில் இருப்பேன். இங்கே பெரிதும்
வேலைக்கு அநுகூலமுமான வாசல் எனக்
குத் திறக்கப்பட்டிருக்கிறது; எதிர்க்கிறவர்
களும் அநேகருண்டு.
10 தீமோத்தேயு வருவானேயாகில் அவன்
உங்களிடம் பயமில்லாமல் இருந்துவரும்
படி பார்த்துக்கொள்ளுங்கள்; என்னைப்
போல் அவனும் ஆண்டவரின் ஊழியத்
11 தைச் செய்கிறானே. ஒருவனும் அவனை
அற்பமாய் எண்ணவேண்டாம். என்னிடம்
வரும்படி சமாதானத்தோடு அவனை வழி
விட்டனுப்புங்கள். அவன் சகோதரரோடு
கூட வருகிறதற்கு நான் காத்திருக்கிறேன்.
12 சகோதரனாகிய அப்பொல்லோவைக் குறித்
தோவெனில், சகோதரரோடுகூட உங்களி
டம் வரும்படிக்கு அவனை மிகவும் கேட்
டுக்கொண்டேன்; அவனுக்கோ இப்பொ
ழுது வர மனதேயில்லை; நற்சமயம் வாய்க்
கும்போது அவன் வருவான்.
13 விழித்திருங்கள், விசுவாசத்தில் நிலைத்தி
ருங்கள், புருஷராயிருங்கள், பலங்கொள்
14 ளுங்கள்; உங்கள் காரியங்களெல்லாம் அன்
பிலே செய்யப்படக்கடவது.

சகோதரரே, ஸ்தேபனாவின் வீட்டார் 15
உங்களுக்குத் தெரியும்; அவர்கள் அகாயா
நாட்டிலே முதற் பலனானவர்களென்றும்
பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்வதற்
குத் தங்களை ஒப்புவித்திருக்கிறார்களென்றும்
அறிவீர்கள். இப்படிப்பட்டவர்களுக்கும் 16
ஊழியத்தில் பங்குபெற்று உழைக்கிற ஒவ்
வொருவருக்கும் நீங்கள் அடங்கியிருக்க
வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்
ளுகிறேன். ஸ்தேபனா, பொர்த்துனாத்து, அகா 17
யுக்கு என்பவர்கள் வந்திருக்கிறதற்காகச்
சந்தோஷம். நீங்கள் இல்லாதிருந்த
குறையை அவர்கள் நிவிர்த்தி செய்தார்கள்.
அவர்கள் என் ஆவியும் உங்கள் ஆவியும் 18
ஆறுதலடையும்படி செய்தார்கள்; இப்ப
டிப்பட்டவர்களை அறிந்து கொண்டாடுங்
கள்.

ஆசியா நாட்டிலுள்ள சபையார் உங்க 19
ளுக்கு மிகவும் வந்தனஞ்சொல்லுகிறார்
கள். ஆக்கிலாவும் பிரிஸ்காளும் தங்கள்
வீட்டிலே கூடுகிற சபையோடுங்கூட ஆண்
டவருக்குள் உங்களுக்கு வந்தனஞ்சொல்லு
கிறார்கள். சகோதரரெல்லாரும் உங்களுக்கு 20
வந்தனஞ்சொல்லுகிறார்கள். ஒருவரையொ
ருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்
கள்.

பவுலாகிய நான் என் கைப்பட எழுதி 21
உங்களை வாழ்த்துகிறேன்.

ஒருவன் ஆண்டவரை நேசியாதிருப்பா 22
னானால் அவன் சாபத்துக்குள்ளாகக்கடவன்;
நமது ஆண்டவர் வருகிறார், ஆண்டவரா 23
கிய இயேசுவின் கிருபை உங்களோடிருப்ப
தாக. கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களனைவ 24
ரோடும் என் அன்பு இருப்பதாக.

---

THE SECOND EPISTLE TO THE CORINTHIANS

# கொரிந்தியருக்கு எழுதின

## இரண்டாம் நிருபம்

**1** கடவுளின் சித்தத்தினால் கிறிஸ்து இயேசு
வின் அப்போஸ்தலனான பவுலும் சகோத
ரன் தீமோத்தேயுவும் கொரிந்துவில் கடவு
ளின் திருச்சபைக்கு, அகாயாநாடு முழுவதி
லும் எல்லாப் பரிசுத்தவான்களுக்குங்கூட,
2 எழுதுவது: நமது பிதாவாகிய கடவுளிட
மிருந்தும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து
வினிடமிருந்தும் உங்களுக்குக் கிருபையும்
சமாதானமும் உண்டாவதாக.

நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து 3
வின் கடவுளும் பிதாவுமானவர் ஸ்தோத்தி
ரத்துக்குரியவர்; இவர் இரக்கங்களின் பிதா

4 எல்லாவித ஆறுதலின் கடவுள், எங்களு
டைய சகல உபத்திரவத்திலும் எங்களுக்கு
ஆறுதல் செய்கிறவர். அவர் எங்களுக்கு
அளிக்கும் அதே ஆறுதலின்மூலமாய் எவ்
வித உபத்திரவத்திலும் இருக்கிறவர்களுக்கு
நாங்கள் ஆறுதல் செய்யத் திறமையுள்ள
5 வர்களாக வேண்டுமென்றிருக்கிறார். எப்
படியெனில், கிறிஸ்துவின் பாடுகள் எங்க
ளிடம் பெருகுகிறதுபோலக் கிறிஸ்துவினால்
6 எங்கள் ஆறுதலும் பெருகுகிறது. ஆதலால்,
நாங்கள் உபத்திரவப்பட்டாலுஞ்சரி, அது
உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும்
ஏதுவாகும்; நாங்கள் ஆறுதலடைந்தாலுஞ்
சரி, அதுவும் உங்கள் ஆறுதலுக்கு ஏதுவா
கும். நாங்கள் படுகிற அதே பாடுகளை நீங்
களும் பட்டுச் சகிக்கிறதிலே அந்த ஆறுத
7 லின் பலன் விளங்குகிறது. பாடுகளில் நீங்
கள் பங்காளிகளாயிருக்கிறதுபோல் ஆறுத
லிலும் பங்காளிகளா யிருப்பீர்களென்று
நாங்கள் அறிவதினால் நாங்கள் உங்களைப்
பற்றி எதிர்நோக்கும் நம்பிக்கை உறுதி
யாகிறது.

8 சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு
நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியா
திருக்க எங்களுக்கு மனதில்லை. பிழைப்போ
மென்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்க
தாகப் பலத்திற்கு மிஞ்சின அதிகப் பாரமான
9 வருத்தம் எங்களுக்குண்டாயிற்று. நாங்
கள் எங்கள்மேலல்ல மரித்தோரை எழுப்பு
கிற கடவுள்மேல் நம்பிக்கையாயிருக்கும்
படி மரணமே எங்கள் கதியென்று தீர்மா
10 னித்துவிட்டோம். அவரே அப்படிப்பட்ட
மரணத்தினின்று எங்களைத் தப்புவித்தார்,
தப்புவித்தும் வருகிறார்; இனிமேலும் எங்க
ளைத் தப்புவிப்பாரென்று அவரையே
11 நோக்கி நம்பியிருக்கிறோம். அநேகர் மூல
மாய் எங்களுக்குக் கிடைத்த கிருபைக்காக
எங்கள் நிமித்தம் அநேகரால் நன்றிசெலுத்
தப்படும் பொருட்டு நீங்களும் உங்கள்
ஜெபத்தினால் எங்களுக்கு உதவிசெய்கிறீர்
12 கள். நாங்கள் உலகத்திலும், விசேஷமாக
உங்களிடத்திலும், மாம்சத்துக்குரிய ஞானத்
திலல்ல கடவுளிடமிருந்து வரும் பரிசுத்தத்
தோடும் கபடின்மையோடும் தெய்வகிருபை
யில் நடந்துவந்தோம், இதுவே எங்கள்
பெருமை; இதற்கு எங்கள் மனது சாட்சி
13 சொல்லுகிறது. நீங்கள் வாசித்தும் தெளி
வாய் அறிந்துமிருக்கிற காரியங்களையே
யன்றி வேறொன்றையும் நாங்கள் உங்க
ளுக்கு எழுதுகிறதில்லை; முடிவுபரியந்தமும்
அப்படியே அறிந்துகொள்வீர்களென்று
14 எதிர்நோக்கி நம்புகிறேன். நமது ஆண்டவ
ராகிய இயேசுவின் நாளிலே நீங்கள் எங்கள்
பெருமையாயிருப்பதுபோல நாங்களும் உங்
கள் பெருமையாயிருக்கிறதை ஒருவாறு
அறிந்திருக்கிறீர்களே.

இப்படிப்பட்ட நிடநம்பிக்கை எனக்கு 15
இருக்கிறபடியினால் உங்களுக்கு இரண்டு
தரம் நன்மை கிடைக்கும்படி முதலாவது
உங்களிடம் வரவும் | பின்பு உங்கள் ஊர் 16
வழியாய் மக்கெதோனியா நாட்டிற்குப்
போகவும் மக்கெதோனியாவைவிட்டு மீறு
படியும் உங்களிடத்திற்கு வரவும் உங்களால்
யூதேயா தேசத்துக்கு வழிவிட்டனுப்பப்
படவும் தீர்மானித்திருந்தேன். இப்படி 17
யிருக்க, நான் அதைத் தீர்மானித்தபோது
நிடமனதின்றியே அப்படிச் செய்தேனோ?
அல்லது ஆம் ஆம் என்பதும், அல்ல அல்ல
என்பதும் என்னில் காணப்படத்தக்கதாக
நான் யோசிக்கிறவைகளை மாம்சத்தின்படியே
யோசிக்கிறேனோ? நாங்கள் உங்களுக்குச் 18
சொன்ன வார்த்தை ஆம் என்றும் அல்ல
என்றும் இருக்கவில்லை; அதற்கு உண்மை
யுள்ள கடவுளே சாட்சி. என்னாலும் சில 19
வானுவினாலும் தீமோத்தேயுவினாலும் உங்க
ளுக்குள்ளே பிரசங்கிக்கப்பட்ட தெய்வ
குமாரனாகிய கிறிஸ்து இயேசு ஆம் என்றும்
அல்ல என்றும் இருக்கவில்லை; ஆம் என்
பதே அவரிடம் நிறைவேறிற்று. கடவுளின் 20
வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்து
வில் ஆம் என்றும் எங்கள் மூலமாய்க் கட
வுளுக்கு மகிமையுண்டாகும்படி அவரால்
ஆமேன் என்றும் இருக்கின்றனவே. உங்க 21
ளோடுகூட எங்களையும் கிறிஸ்துவுக்குள்ளாக
ஸ்திரப்படுத்தி வந்து நம்மை அபிஷேகம்
பண்ணினவர் கடவுளே. நம்மை முத்தி 22
ரித்து நமது இருதயங்களில் ஆவியென்னும்
அச்சாரத்தைக் கொடுத்தவரும் அவரே.
நானே உங்களுக்கு இரக்கம் காட்டும் 23
படிக்கே இதுவரைக்கும் கொரிந்து பட்ட
ணம் வராதிருக்கிறேனென்று என் ஆத்து
மாவில் கடவுளையே சாட்சியாகக் கோருகி
றேன். விசுவாசவிஷயத்தில் நாங்கள் உங் 24
களை ஆளுகிறவர்களல்ல, உங்கள் சந்தோ
ஷத்திற்கோ நாங்கள் உடன் ஊழியர்; விசு
வாசத்தினாலே நிலைநிற்கிறீர்கள்.

நான் மறுபடியும் துக்கத்தோடு உங்களி **2**
டம் வராதபடி எனக்குள் தீர்மானித்துக்
கொண்டேன். நான் உங்களைத் துக்கப் 2
படுத்தினால் என்னாலே துக்கமடைந்திருக்கிற
வனே தவிர என்னைச் சந்தோஷப்படுத்து
கிறவன் யாவன்? நான் இதை உங்களுக்கு 3
எழுதின நோக்கம், நான் வரும்போது என்

னைச் சந்தோஷப்படுத்தவேண்டியவர்களால் துக்கமடையாதிருக்கவேண்டும் என்பதே. என் சந்தோஷம் உங்களெல்லாருக்கும் சந்தோஷமாமென்று நான் உங்களெல்லாரையும் பற்றி நம்பிக்கையுடையவனாயிருக்கி
4 றேன். நீங்கள் துக்கப்படவேண்டுமென்றல்ல, உங்கள்மேல் நான் அதிகமாய் வைத்த அன்பை நீங்கள் அறியவேண்டுமென்றே மனதில் மிகுந்த உபத்திரவமும் இடுக்கமும் உள்ளவனாய் அதிகக் கண்ணீரோடு உங்களுக்கு எழுதினேன்.
5 ஒருவன் துக்கமுண்டாக்கினானென்றால் எனக்கல்ல ஒருவாறு உங்களெல்லாருக்குமே துக்கமுண்டாக்கினான்; அதிகப் பாரஞ் சுமத்தாதபடி இப்படிச் சொல்லுகி
6 றேன். பெரும்பாலால் உண்டான இந்தத் தண்டனையே அப்படிப்பட்டவனுக்குப்
7 போதும். ஆதலால், அவன் அதிகத் துக்கத்தில் அமிழ்ந்து போகாதபடி நீங்கள் அவனைத் தண்டிப்பதைவிட்டு அவனுக்கு மன்
8 னித்து ஆறுதல் செய்வது நலம். ஆகையால், அவன்மேலுள்ள அன்பை அவனுக்கு உறுதிப்படுத்திக் காண்பிக்கும்படி உங்களை
9 வேண்டிக்கொள்ளுகிறேன். நீங்கள் எல்லாவற்றிலேயும் கீழ்ப்படிகிறவர்களோ என்று சோதித்து உங்கள் உத்தம குணத்தை யறிய
10 வேண்டுமென்றே எழுதினேன். எவனுக்கு நீங்கள் மன்னிக்கிறீர்களோ அவனுக்கு நானும் மன்னிக்கிறேன்; எதை நான் மன்னித்திருக்கிறேனோ அதை உங்கள் நிமித்தம் கிறிஸ்துவின் சந்நிதானத்திலே மன்னித்
11 திருக்கிறேனே. நாம் சாத்தானால் வஞ்சிக்கப்படாதபடிக்கே அப்படிச் செய்திருக்கிறேன்; அவன் எண்ணங்கள் நமக்குத் தெரியாதவைகளல்ல.
12 நான் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கென்று துரோவாவுக்கு வந்தபோது ஆண்டவருக்குள் எனக்கு வாசல் திறக்கப்பட்
13 டிருக்க | என் சகோதரன் தீத்துவை நான் காணுதலினால் என் ஆவி அமைதலற்றுப் போயிற்று. நானும் அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு மக்கெதோனியாவுக்குப் போகப் புறப்பட்டேன்.
14 கிறிஸ்துவுக்குள் எப்போதும் எங்களை ஜெயகோலமாக நடத்தி ஒவ்வொரு இடத்திலும் தம்மை அறிகிற அறிவின் வாசனையை எங்களைக்கொண்டு வெளிப்படுத்துகிற கடவு
15 ளுக்கு ஸ்தோத்திரம். இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளும் கெட்டுப்போகிறவர்களுக்குள்ளும் நாங்கள் கடவுளுக்குக் கிறிஸ்து
16 வின் சுகந்தவாசனையாயிருக்கிறோம். இவர்களுக்கு மரணத்திற்கேதுவான மரண வாசனை, அவர்களுக்கோ ஜீவனுக்கேதுவான ஜீவவாசனை. இவைகளுக்குத் தகுதியான 17
வன் யார்? அநேகரைப்போல நாங்கள் கடவுளின் வார்த்தையை லாபத்திற்கென்று கலப்பாக்காமல் களங்கமற்றதாகவும் கடவுளிடமிருந்து வந்ததாகவும் காணப்படும்படி கிறிஸ்துவுக்குள் தெய்வ சந்நிதியில் பேசுகிறோம்.

3 எங்களை நாங்களே மறுபடியும் மெச்சிக் கொள்ளத் தொடங்குகிறோமோ? அல்லது சிலருக்குத் தேவையாயிருக்கிறதுபோல் உங்களிடத்திற்காவது உங்களிடத்திலிருந்தாவது சிபார்சு கடிதங்கள் எங்களுக்குத் தேவையோ? எங்கள் இருதயங்களில் எழுதப் 2
பட்டதாய்ச் சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டு வருகிற எங்கள் நிருபம் நீங்கள்தானே. நீங்கள் எங்கள் ஊழியத் 3
தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமென்று பிரத்தியட்சமாகிறது; அது மையினாலல்ல ஜீவனுள்ள கடவுளின் ஆவியினாலும், கற்பலகைகளிலல்ல சதை இருதயங்களாகிய பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது.

நாங்கள் கிறிஸ்துவின்மூலமாய்க் கடவுளி 4
னிடம் இப்படிப்பட்ட நிடம்பிக்கையுடையவர்களாயிருக்கிறோம். நாங்கள் 5
எங்களாலே எதையும் யோசித்துத் தீர்க்கிறதற்கு நாங்களாகவே தகுதியுடையவர்களென்பதல்ல; எங்கள் தகுதி கடவுளிடமிருந்து வருகிறது. புது உடன்படிக்கை 6
யின் ஊழியக்காரராகும்படி அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்; அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதல்ல ஆவிக்குரியது; எழுத்து கொல்லும், ஆவியோ உயிர்ப்பிக்கும். மோசேயின் முகத்தில் 7
தோன்றிய மகிமையினிமித்தம், அது ஒழிந்துபோகிறதாயிருந்தும், இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை உற்றுநோக்க முடியாதிருந்தார்கள்; இப்படியாகக் கற்களின் மேல் எழுதிப் பதித்திருந்த மரணத்துக்குரிய ஊழியம் அவ்வளவு மகிமையோடு வந்ததேயானால் | ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு 8
அதிக மகிமையுள்ளதாயிராது? ஆக்கினைத் 9
தீர்ப்புக்கேதுவான ஊழியம் மகிமையுள்ளதாயிருந்தால் நீதிக்கேதுவான ஊழியம் இன்னும் அதிக மகிமையுள்ளதாயிருக்குமே. இப்படியாக, மகிமைப்பட்டிருந்த அது 10
இதற்குரிய சிறந்த மகிமைக்கு முன்பாக மகிமைப்பட்டதல்ல. ஒழிந்துபோவதே 11
மகிமையுள்ளதாயிருந்ததனால் நிலைத்திருப்பது அதிக மகிமையுள்ளதாயிருக்குமே.

12 நாங்கள் இப்படி நன்னம்பிக்கையுள்ள
வர்களாயிருக்கிறபடியால் மிகவும் தைரிய
13 மாய்ப் பேசுகிறோம். மேலும், ஒழிந்து
போகிறதாயிருந்ததின் முடிவை இஸ்ரவேல்
புத்திரர் உற்றுநோக்காதபடி மோசே தன்
முகத்தின்மேல் முக்காடுபோட்டுக் கொண்
14 டதுபோல நாங்கள் போடுகிறதில்லை. அவர்
கள் மனது கடினப்பட்டது; இந்நாள்
வரைக்கும் பழைய ஏற்பாடு வாசிக்கப்
படுகையில் அதே முக்காடு நீங்காமலிருக்கி
றது; அது கிறிஸ்துவிலே ஒழிக்கப்படுமென்
பது அவர்களுக்கு வெளிப்படவில்லை.
15 மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்படும்
போது இந்நாள்வரைக்கும் முக்காடு அவர்
கள் இருதயத்தின்மேல் இருக்கிறதே.
16 அவர்கள் இருதயம் ஆண்டவரிடம் திரும்
பும்போதெல்லாம் அந்த முக்காடு எடுபட்
17 டுப்போம். ஆண்டவரே ஆவியானவர்;
ஆண்டவரின் ஆவி எங்கேயோ அங்கே
18 சுயாதீனமுண்டு. நாமெல்லாரும் முக்கா
டில்லாத முகத்தால் ஆண்டவரின் மகிமை
யைப் பிரதிபிம்பித்து, ஆவியாகிய ஆண்டவ
ரால் உண்டாவதுபோலவே, அந்தச் சாய
லாகத்தானே மகிமையின்மேல் மகிமை
யடைந்து மறுரூபமாகிறோம்.

**4** ஆனதுபற்றி, நாங்கள் இரக்கம் பெற்
றிருக்கிறபடியே இந்த ஊழியத்தை உடைய
வர்களாகையால் சோர்ந்துபோகிறதில்லை.
2 வெட்கமான அந்தரங்க காரியங்களை
வெறுத்துவிட்டோம்; நாங்கள் தந்திரமாய்
நடவாமலும் கடவுளின் வார்த்தையைப்
புரட்டாமலும் சத்தியத்தை வெளிப்படுத்து
கிறதினாலே கடவுளுக்கு முன்பாக ஒவ்
வொரு மனுஷனுடைய மனச்சாட்சிக்கும்
3 எங்களை விளங்கப் பண்ணுகிறோம். எங்
கள் சுவிசேஷம் மறைக்கப்பட்டதாயிருந்
தால் கெட்டுப்போகிறவர்களிலேதான்
4 மறைக்கப்பட்டதாயிருக்கும். கடவுளின்
சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமை விளங்
கும் சுவிசேஷத்தின் வெளிச்சம் பிரகாசமா
யிராதபடிக்கு இந்த யுகத்தின் தேவன் அவிசு
வாசிகளின் மனதைக் குருடாக்கினார்.
5 நாங்கள் எங்களையே பிரசங்கியாமல் கிறிஸ்து
இயேசுவை ஆண்டவரென்றும் எங்களையோ
இயேசுவினிமித்தம் உங்கள் அடிமைக
6 ளென்றும் பிரசங்கிக்கிறோம். கிறிஸ்துவின்
முகத்திலுள்ள தெய்வமகிமையின் அறிவா
கிய வெளிச்சம் வீசும்படி எங்கள் இரு
தயங்களில் பிரகாசித்தவர் 'இருளிலிருந்து
வெளிச்சம் பிரகாசிக்கவென்று' சொன்ன
கடவுளே.

இந்த மகா உன்னத வல்லமை எங்க 7
ளால் உண்டாகவில்லை, அது கடவுளுக்கே
உரியதென்று விளங்கும்படி இந்தப் பொக்
கிஷத்தை மண்பாண்டங்களில் உடையவர்
களாயிருக்கிறோம். நாங்கள் எவ்விஷயத் 8
திலும் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்படுகிற
தில்லை; மனங்கலங்கியும் அறக்கலங்குகிற
தில்லை; இம்சிக்கப்பட்டும் கைவிடப்படுகிற 9
தில்லை; தாழே தள்ளப்பட்டும் மடிந்து
போகிறதில்லை. இயேசுவின் ஜீவன் எங்கள் 10
சரீரத்தில் விளங்கும்படி இயேசுவின் மரண
அனுபவத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்
தில் சுமந்துதிரிகிறோம். எப்படியெனில், 11
சாவுக்குரிய எங்கள் மாம்சத்தில் இயேசு
வின் ஜீவனும் விளங்கும்படி உயிரோ
டிருக்கிற நாங்கள் எப்பொழுதும் இயேசு
வினிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்
கப்படுகிறோம். இப்படி மரணம் எங்க 12
ளிடத்திலும் ஜீவனே உங்களிடத்திலும் பிர
வர்த்திக்கிறது. விசுவாசித்தேன், ஆகை 13
யால் பேசினேனென்று எழுதியிருக்கிறபடி,
அந்த விசுவாசத்தின் ஆவியையே உடைய
வர்களாய் நாங்களும் விசுவாசிக்கிறோம்,
ஆகையால் பேசியும் வருகிறோம். ஆண்ட 14
வராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களை
யும் இயேசுவோடு எழுப்பி உங்களோடு
கூடத் தமக்கு முன்பாக நிறுத்துவாரென்று
அறிந்திருக்கிறோம். அநேகரால் பெருகி 15
வளர்ந்த கிருபை கடவுளின் மகிமை விளங்
குவதற்கேதுவாக நன்றியறிதலான ஸ்தோத்
திரத்தைப் பெருகச் செய்யும்படி எல்லாம்
உங்கள் நிமித்தமே உண்டாயிருக்கின்றன.
ஆனபடியினாலே, நாங்கள் சோர்ந்து 16
போகிறதில்லை; எங்கள் புறம்பான மனு
ஷன் அழிந்துவந்தாலும் எங்கள் உள்ளான
மனுஷன் நாளுக்கு நாள் புதிதாக்கப்பட்டு
வருகிறது. கணப்பொழுதே நிற்கும் நமது 17
இலேசான உபத்திரவம் நித்தியகாலக் கன
மகிமையை மென்மேலும் அதிகமாய் நமக்கு
உண்டாக்குகிறது. காணப்படுகிறவைகளை 18
யல்ல காணப்படாதவைகளையே நாம்
நோக்கியிருக்கிறோம்; ஏனெனில் காணப்
படுகிறவை அநித்தியம், காணப்படாத
வையோ நித்தியம்.

பூமிக்குரிய நமது கூடாரவீடு அழிந்த **5**
போகுமாயினும் கடவுளிடமிருந்து ஒரு
கட்டடம், கையாலமைக்கப்படாத நித்திய
வீடு, பரலோகத்தில் நமக்குண்டென்று
அறிந்திருக்கிறோம். எப்படியெனில், இதில் 2
நாம் தவித்து நமது பரம வாசஸ்தலத்தைப்
போர்த்துக்கொள்ள மிகவும் வாஞ்சையுள்ள

வர்களாயிருக்கிறோம்; நிர்வாணிகளாய்க் காணப்படாமல் போர்த்துக்கொண்டவர்களாகவே காணப்பட்டால் அப்படியாகும். இத்தக் கூடாரத்திலிருக்கிற நாம் பாரஞ் சுமந்தவர்களாய்த் தவிக்கிறோம்; இந்தப் போர்வையைக் களைந்துபோட விரும்பாமல், சாவுக்குரிய இது ஜீவனாலே விழுங்கப்படுவதற்காக மேற்போர்வை தரித்துக்கொள்ள விரும்புகிறோம். இதற்கென்று நம்மை ஆயத்தப்படுத்தினவர் கடவுளே, ஆவியென்னும் அச்சாரத்தை நமக்குத் தந்தவரும் அவரே. இந்தத் தேகத்தில் குடியிருக்கையில் ஆண்டவரிடம் குடியிராதவர்களாயிருக்கிறோமென்று அறிந்தும் எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம்—நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோமே; நாம் தைரியமடைந்து தேகத்தைவிட்டுக் குடிபெயர்ந்து ஆண்டவரிடம் குடிபுகுவதை உத்தமமென விரும்புகிறோம். அதினிமித்தமே சரீரத்தில் குடியிருந்தாலும் குடிபெயர்ந்தாலும் அவருக்கு உகந்தவர்களாயிருப்பதே நாம் ஆசிக்கும்மேன்மை. சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படி நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்தின்முன் வெளிப்படவேண்டும்.

ஆகையால், கர்த்தருக்குப் பயப்படுவது இன்னதென்றறிந்து மனுஷருக்குப் புத்தி சொல்லுகிறோம், கடவுளுக்கோ வெளியரங்கமாயிருக்கிறோம்; உங்கள் மனச்சாட்சிகளிலும் நாங்கள் வெளியரங்கமே என்று ஆவலாய் நம்பியிருக்கிறேன். நாங்கள் உங்கள்முன் எங்களை மறுபடியும் மெச்சிக்கொள்ளாமல், உள்ளத்திலல்ல வெளித்தோற்றத்தில் பெருமைபாராட்டுகிறவர்களுக்கு நீங்கள் பதிற்சொல்லும்படி எங்களைப்பற்றி நீங்கள் பெருமைபாராட்டுகிறதற்கு இடமுண்டாக்குகிறோம். நாங்கள் மதிமயங்கியிருந்தாலும் அது கடவுளுக்கென்றும், நிதானபுத்தியோடிருந்தாலும் அது உங்களுக்கென்றேயாம். கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; எல்லாருக்காகவும் ஒருவர் மரித்திருக்க எல்லாரும் மரித்தார்களென்றும் | பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல் தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்றே பிழைத்திருக்கும்படி அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம். ஆகையால், இதுமுதற்கொண்டு நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்; நாங்கள் கிறிஸ்துவை மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும் இனி ஒருபோதும் அவரை அப்படி அறியோம். இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையன ஒழிந்துபோயின, இதோ, புதிதாயின. இவையெல்லாம் கடவுளால் உண்டாயிருக்கின்றன. கிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தவர் அவரே. அதெப்படியெனில், கடவுள் கிறிஸ்துவுக்குள் இருந்து, உலகத்தாரின் மீறுதல்களை எண்ணாமல் உலகத்தைத் தமக்கு ஒப்புரவாக்கிக்கொண்டு ஒப்புரவாக்குதலின் வார்த்தையை எங்களிடம் ஒப்புவித்தார்.

ஆனபடியினாலே, கடவுள் எங்களைக் கொண்டு கேட்டுக்கொண்டாற்போலக் கடவுளோடு ஒப்புரவாகுங்களென்று நாங்கள் கிறிஸ்துவுக்கு ஸ்தானாபதிகளாயிருந்து கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். நாம் அவருக்குள் கடவுளின் நீதியாகும்படி பாவமறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.

நீங்கள் கடவுளின் கிருபையைப் பெறுவது வீணாய்ப்போகாதபடி நாங்கள் உடன்வேலையாட்களாக உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தகுதியான காலத்தில் நான் உனக்குச் செவிசாய்த்து
இரட்சணிய நாளில் உனக்கு உதவி செய்தேன்

என்று சொல்லியிருக்கிறாரே; இதோ, இப்பொழுதே தகுதியான காலம், இதோ, இப்பொழுதே இரட்சணிய நாள். திருப்பணியைக் குறைகூற இடமிராதபடி யாதொன்றிலும் இடறலுக்கு ஏது உண்டாக்காமல் | நாங்கள் எவ்விஷயத்திலும் எங்களைக் கடவுளின் பணிவிடைக்காரராக விளங்கப்பண்ணுகிறோம். மிகுந்த சகிப்பிலும் உபத்திரவங்களிலும் வறுமைகளிலும் இடுக்கண்களிலும் | அடிகளிலும் காவல்களிலும் கலகங்களிலும் உழைப்புகளிலும் கண் விழிப்புகளிலும் உபவாசங்களிலும் | தூய்மையிலும் அறிவிலும் நீடிய சாந்தத்திலும் தயாளத்திலும் பரிசுத்த ஆவியிலும் மாயமற்ற அன்பிலும் | சத்திய வசனத்திலும் தெய்வவல்லமையிலும் வலதிடதுபக்கத்து நீதி ஆயுதங்களிலும் | கனத்திலும் கனவீனத்திலும் துர்க்கீர்த்தியிலும் நற்கீர்த்தியிலும், எத்தரென்றாலும் நிஜஸ்தராகவும் | அறியப்படாதவர்களென்றாலும் நன்றாய் அறியப்பட்டவர்களாகவும் சாகிறவர்களென்றாலும், இதோ,

உயிரோடிருக்கிறோம், சிட்சிக்கப்படுகிற
வர்களென்றாலும் கொல்லப்படாதவர்களாக
10 வும் | துக்கத்துக் குள்ளானவர்களென்று
லும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்க
ளாகவும் தரித்திரரென்றாலும் அநேகரை
ஐசுவரியவான்க ளாக்குகிறவர்களாகவும்
ஒன்றுமில்லாதவர்களென்றாலும் எல்லாவற்
றையும் உடையவர்களாகவும் எங்களை
விளங்கப்பண்ணுகிறோம்.

11 கொரிந்தியரே, எங்கள் வாய் உங்க
ளோடு தடையின்றிப் பேசத் திறந்திருக்
கிறது, எங்கள் இருதயம் பூரித்திருக்கிறது.
12 எங்களில் நீங்கள் நெருக்குண்டு போக
வில்லை, உங்கள் உள்ளத்திலேயே நெருக்
13 குண்டவர்களாயிருக்கிறீர்கள். சரிக்குச்சரி
செய்வதற்கு — பிள்ளைகளுக்குச் சொல்லு
வதுபோல் சொல்லுகிறேன்—நீங்களும்
பூரிப்பாகுங்கள்.

14 அந்நியுகத்தில் அவிசுவாசிகளோடு
பிணைக்கப்பட்டவர்கள் ஆகாதிருங்கள்;
நீதிக்கும் அக்கிரமத்துக்கும் சம்பந்தமேது?
வெளிச்சத்துக்கும் இருளுக்கும் ஐக்கிய
15 மேது? கிறிஸ்துவுக்கும் [1]பேலியாளுக்கும்
இசைவேது? அவிசுவாசியோடு விசுவாசிக்
16 குப் பங்கேது? கடவுளின் ஆலயத்துக்கும்
விக்கிரகங்களுக்கும் இணக்கமேது? நாமே
ஜீவனுள்ள கடவுளின் ஆலயம்; அதற்கிசை
யவே கடவுள்:

நான் அவர்களுக்குள் வாசம்பண்ணி
நடமாடுவேன்,
அவர்கள் கடவுளாயிருப்பேன்,
அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்

17 என்று சொன்னாரே. ஆனபடியால்:

நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து வந்து
பிரிந்திருங்களென்று கர்த்தர் சொல்லு
கிறார்,
அசுத்தமான எதையும் தொடாதிருங்கள்,
அப்பொழுது நான் உங்களை ஏற்றுக்
கொண்டு |

18 உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்
கள் எனக்குக் குமாரருங் குமாரத்திகளு
மாயிருப்பீர்களென்று
சர்வவல்ல கர்த்தர் சொல்லுகிறார்.

**7** இவ்வாக்குத்தத்தங்கள் நமக்கு இருக்கிற
படியினால், பிரியமானவர்களே, மாம்சத்தி
லும் ஆவியிலும் உண்டான எல்லா அச
ுத்தமும் நீங்க நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு
பரிசுத்தமாகுதலைத் தெய்வபயத்தில் பூரணப்
படுத்தக்கடவோம்.

எங்களுக்கு இடங்கொடுங்கள்; நாங்கள் 2
ஒருவனுக்கும் அநியாயஞ் செய்ததில்லை,
ஒருவனையும் கெடுத்ததில்லை, ஒருவனையும்
வஞ்சித்ததில்லை. உங்களைக் குற்றப்படுத்த 3
வென்று இப்படி நான் சொல்லுகிறதில்லை;
கூடச்சாகவும் கூடப் பிழைக்கவும் தக்கதாக
எங்களிருதயங்களில் நீங்கள் இருக்கிறீர்க
ளென்று முன்னே நான் சொன்னேனே.
உங்கள் விஷயத்தில் எனக்கு மிகுந்த 4
தைரியமுண்டு, உங்களைப்பற்றி மிகவும்
பெருமைபாராட்டுகிறேன், ஆறுதலால்
நிரப்பப்பட்டிருக்கிறேன், எங்களுக்குண்
டான எல்லா உபத்திரவத்திலேயும் பரி
பூரண சந்தோஷமடைந்திருக்கிறேன்.

நாங்கள் மக்கெதோனியாவில் வந்த 5
போது எங்கள் சரீரத்திற்கு இளைப்பாறுதல்
ஒன்றுமில்லாமல் எல்லா விஷயத்திலும்
உபத்திரவப்பட்டோம்; புறம்பே போராட்
டங்கள், உள்ளே பயங்கள். ஆகிலும், 6
சிறுமைப்பட்டவர்களை ஆறுதல்படுத்துகிற
கடவுளே தீத்து வந்ததினாலே எங்களை ஆறு
தல்படுத்தினார். அவன் வந்ததினால் மாத்7
திரமல்ல, அவன் உங்கள்நிமித்தம் அடைந்த
ஆறுதலினாலும் ஆறுதல்படுத்தினார். உங்
கள் வாஞ்சையையும் உங்கள் புலம்பலையும்
என்னைப்பற்றிய உங்கள் வைராக்கியத்தை
யும் அவன் தெரியப்படுத்தினதால் அதி
னால் இன்னும் அதிகமாய்ச் சந்தோஷப்
பட்டேன். நான் நிருபத்தினால் உங்க 8
ளைத் துக்கப்படுத்தியிருந்தும் மனஸ்தாபப்
படுகிறதில்லையே; அந்த நிருபம் கொஞ்
சப்பொழுதாகிலும் உங்களைத் துக்கப்படுத்
தினதென்று கண்டு நான் மனஸ்தாபப்பட்டி
ருந்தும் இப்பொழுது சந்தோஷப்படு
கிறேன்; நீங்கள் துக்கப்பட்டதினிமித்த 9
மல்ல, மனந்திரும்புகிறதற்கேதுவாகத் துக்
கப்பட்டதினிமித்தமே சந்தோஷப்படுகி
றேன்; நீங்கள் ஒன்றிலும் எங்களால் நஷ்ட
மடையாதபடி கடவுள் சித்தத்திற்கிசைந்த
துக்கம் அடைந்தீர்களே. கடவுள் சித்தத் 10
திற்கிசைந்த துக்கம் பின்பு மனஸ்தாபப்படு
கிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேது
வான மனந்திரும்புதலை யுண்டாக்குகிறது.
லௌகீகத் துக்கமோ மரணத்தை யுண
டாக்குகிறது. பாருங்கள், நீங்கள் கடவுள் 11
சித்தத்திற்கிசைந்த துக்க மடைந்ததுண்டே;
அது உங்களிடம் எவ்வளவு ஊக்கத்தை
யும் குற்றந்தீர எவ்வளவு பிரதிவாதித்
தலையும் எவ்வளவு குற்ற வெறுப்பையும் எவ்
வளவு பயத்தையும் எவ்வளவு ஆவலையும்

[1] பேலியர்க்கும் என்றும் பாடமுண்டு.

எவ்வளவு வைராக்கியத்தையும் எவ்வளவு நியாயஞ்செய்தலையும் விரோவித்தது! இந்தக் காரியத்தில் நீங்கள் எல்லாவிதத்திலும் உங்களைச் சுத்தவான்களென்று விளங்கப் 12 பண்ணினீர்கள். ஆதலால், நான் உங்களுக்கு அப்படி எழுதியிருந்தும் அநியாயஞ் செய்தவன் பொருட்டுமல்ல, அநியாயஞ் செய்யப்பட்டவன் பொருட்டுமல்ல, எங்களைப்பற்றி உங்களுக்கு உண்டாயிருந்த ஊக்கம் கடவுள் சந்நிதியில் உங்களுக்கே வெளிப்படும்பொருட்டு அப்படி எழுதினேன். இதினிமித்தம் நாங்கள் ஆறுத 13 லடைந்தோம்; எங்கள் ஆறுதலில் தீத்துவின் சந்தோஷத்தினால் அதிகச் சந்தோஷப் பட்டோம். அவன் ஆவி உங்கள் அனைவ 14 ராலும் இளைப்பாறுதலடைந்ததே. உங்களைப்பற்றிப் பெருமைபாராட்டி நான் அவனுமி ஏதாகிலும் சொல்லியிருந்தால் வெட்கத்துக்குள்ளாகவில்லை. நாங்கள் எல்லாவற்றையும் உங்களுக்கு உண்மையாய்ச் சொன்னதுபோலத் தீத்துவினிடம் நாங்கள் உங்களைப்பற்றிப் பெருமைபாராட்டிச் சொன்னதும் உண்மையாக விளங்கிற்றே. 15 பயத்தோடும் நடுக்கத்தோடும் தன்னை ஏற்றுக்கொண்ட உங்களனைவரின் கீழ்ப் படிதலையும் அவன் நினைவுகூருகையில் அவன் அன்பு உங்கள்மேல் அதிகமாய்ப் 16 பொங்குகிறது. எவ்விஷயத்திலும் உங்களைக் குறித்து எனக்குத் திடநம்பிக்கை உண்டென்று சந்தோஷப்படுகிறேன்.

**8** சகோதரரே, மக்கெதோனியா சபைகளில் அளிக்கப்பட்ட கடவுளின் கிருபை 2 யை உங்களுக்கு அறிவிக்கிறோம். உபத்திரவத்தினால் மிகவும் பரீட்சிக்கப்பட்டும் அவர்களுடைய அதிகப் பெரிதான சந்தோஷமும் கொடிய தரித்திரமும் உதாரத்துவ 3 செல்வமாய்ப் பெருகின. திராணிக்குத்தக்கபடியும் திராணிக்கு மிஞ்சியும் சுயேச்சையாய்க் கொடுத்தார்களென்பதற்கு நான் 4 சாட்சி. இந்தக் கிருபையென்னும் உபகாரத்தைப்பற்றியும் பரிசுத்தவான்களுக்கென்று செய்யும் இந்த ஊழியத்தில் தாங்கள் பங்கு பெறுவதைப்பற்றியும் எங்களை மிகவும் 5 கெஞ்சி விண்ணப்பஞ் செய்தார்கள். நாங்கள் விரும்பி எதிர்பார்த்தபடி அவர்கள் கொடாமல் முதலாவது ஆண்டவருக்கும் பின்பு எங்களுக்கும் கடவுளின் சித்தத்தி 6 னால் தங்களையே கொடுத்தார்கள். ஆதலால், தீத்து இந்தக் கிருபையை முதலில் தொடங்கினபடியே அதை உங்களிடம் முடிக்கும்படி அவனைக் கேட்டுக்கொள்ள வேண்டியதாயிற்று. அல்லாமலும், விசுவாசம், 7 வாக்கு, வரம், அறிவு, எல்லாவித ஊக்கம், உங்கள்மேலுள்ள எங்கள் அன்பு முதலிய எல்லாக் காரியங்களிலும் நீங்கள் பெருகியிருக்கிறதுபோல இந்தக் கிருபையிலும் பெருகவேண்டும். இதை நான் கட்டளையாக 8 கச் சொல்லவில்லை. மற்றவர்களின் ஊக்கத்தினால் உங்கள் அன்பின் உண்மையைப் பரீட்சிக்கும்பொருட்டே சொல்லுகிறேன். நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் 9 கிருபை உங்களுக்குத் தெரியுமே. அவர் ஐசுவரியமுள்ளவராயிருக்க நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்பொருட்டு உங்கள்நிமித்தம் தரித்திரராளுரே. இதைக்குறித்து என் யோசனையை 10 உங்களுக்கு அறிவிக்கிறேன்; இதைச் செய்வதற்கு மாத்திரமல்ல செய்யத் தீர்மானிப்பதற்கும் கடந்த வருஷத்திலேயே முதலாவது தொடங்கிய உங்களுக்கு இது பிரயோஜனமாயிருக்கும். இப்பொழுதோ செய்வதையும் 11 முடித்து நிறைவேற்றுங்கள். தீர்மானிக்கும் மனம் இருந்ததுபோலவே செய்வதை முடித்து நிறைவேற்றுவதும் உள்ளவைகளுக்கு ஏற்றபடி இருக்கவேண்டுமே. ஒரு 12 வனுக்கு மன ஆயத்தமிருந்தால் இல்லாததின்படியல்ல உள்ளதின்படியே அங்கீகரிக்கப்படும். மற்றவர்களுக்கு இலகுவும் உங்க 13 ளுக்குக் கஷ்டமும் உண்டாகும்படியல்ல சமநிலையிருக்கும்படியாகவே சொல்லுகிறேன். மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு மிச் 14 சமுமில்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவுமில்லை என்று எழுதியிருக்கிறபடி | சமநிலையிருப்பதற்கென்று அவர்க 15 ளுக்கு மிச்சமானது உங்கள் குறைவுக்கு உதவும்படி தற்காலத்தில் உங்களுக்கு மிச்சமானது அவர்கள் குறைவுக்கு உதவுவதாக.

உங்கள்பேரில் அதே ஊக்கம் தீத்துவின் 16 இருதயத்தில் உதிக்கும்படியருளின கடவுளுக்கு ஸ்தோத்திரம். நாங்கள் கேட்டுக் 17 கொண்டதற்கு அவன் உடன்பட்டதுமல்லாமல் சுயேச்சையாய் அதிக ஊக்கமுள்ளவனாக உங்களிடம் வரப் புறப்பட்டான். சுவிசேஷ ஊழியத்தில் எல்லாச் சபைகளா 18 லும் புகழ்பெற்ற சகோதரனை அவனுடனே அனுப்பியிருக்கிறோம். அதுமாத்திரமல்ல, 19 ஆண்டவருக்கே மகிமையுண்டாகவும் எங்கள் மன ஆயத்தம் விளங்கவும் எங்கள் ஊழியத்தின்மூலமாய்ப் பரிந்த இந்தக் கிருபையின் விஷயத்தில் எங்களுக்கு வழித்துணையாக அவன் சபைகளால் தெரிந்து ஏற்படுத்தப்பட்டவன். எங்கள் ஊழியத் 20

தின்மூலமாய்க் கிடைத்த இந்த மிகுதியான தர்மப்பணத்தைப்பற்றி ஒருவனும் எங்களைக் குற்றப்படுத்தாதபடி நாங்கள் எச்சரிக்கையாயிருக்கிறோம். 21 ஆண்டவருக்குமுன்பாக மாத்திரமல்ல மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்யக் கருத்தாயிருக்கிறோம். 22 மேலும், ஊக்கமுள்ளவனென்று அநேக காரியங்களில் நாங்கள் பலமுறை கண்டறிந்தவனும் இப்பொழுதும் உங்கள்மேலுள்ள மிகுந்த திடநம்பிக்கையினாலே அதிக ஊக்கமுள்ளவனுமாகிய நமது சகோதரனை இவர்களோடே அனுப்பியிருக்கிறோம். 23 தீத்துவைக்குறித்தோ, அவன் எனக்குக் கூட்டாளி, உங்களுக்கென்று என் உடன் ஊழியன்; எங்கள் சகோதரரைக்குறித்தோ, அவர்கள் சபைகளின் அப்போஸ்தலர், கிறிஸ்துவின் மகிமை. 24 ஆதலால், உங்கள் அன்பையும் நாங்கள் உங்களைப்பற்றிப் பெருமைபாராட்டிச் சொன்னதையும் சபைகள் காண அவர்களுக்குத் திருஷ்டாந்தப்படுத்திக் காட்டுங்கள்.

**9** பரிசுத்தவான்களுக்கென்றுசெய்யும் இந்த ஊழியத்தைக் குறித்து நான் உங்களுக்கு 2 இன்னும் எழுதுவது மிகையாகும்; உங்கள் மன ஆயத்தம் எனக்குத் தெரியும், அகாயா ஒரு வருஷமாக ஆயத்தமாயிருக்கிறதென்று நான் உங்களைப்பற்றிப் பெருமைபாராட்டி மக்கெதோனியரிடம் சொன்னேன்; உங்கள் உற்சாகம் பெரும்பாலரை எழுப்பிவிட் 3 டதுமுண்டு. அப்படியிருந்தும், உங்களைக் குறித்து நாங்கள் பெருமைபாராட்டினது இந்தக் காரியத்தில் பொய்யாய்ப் போகாமலிருக்கவும் நான் சொன்னபடி நீங்கள் ஆயத்தப்பட்டவர்களாயிருக்கவும் இந்தச் 4 சகோதரரை அனுப்புகிறேன். மக்கெதோனியர் என்னோடு வந்து உங்களை ஆயத்தப்படாதவர்களாகக் கண்டால் நாங்கள் கொண்டிருந்த நிச்சயத்தினிமித்தம் நீங்கள் வெட்கத்திற்காளாவீர்களென்று நாங்கள் சொல்லாமல் நாங்களே வெட்கத்திற்காளாக 5 வேண்டியதாயிருக்கும். ஆகையால், நீங்கள் முன்னமே வாக்குப்பண்ணின உங்கள் ஆசீர்வாதமென்னும் உபகாரத்தை லோபத்தனமாகவல்ல ஆசீர்வாதமாகவே ஆயத்தப்படுத்துவதற்குச் சகோதரரை எவி உங்களிடம் முன்னதாகவே அனுப்புவது அவசியமென்று எண்ணினேன்.

6 நான் சொல்லுகிறது இதுவே: சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக 7 விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; சந்தோஷமாகக் கொடுக்கிறவனில் கடவுள் அன்புகூருகிறார். 8 நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் எல்லாத் திருப்தியுமுள்ளவர்களாய் எல்லாவித நற்கிரியைகளுக்கென்றும் பெருகும்படி எல்லாவித கிருபையும் உங்களிடம் பெருகச் செய்யக் கடவுளே வல்லவர்.

9 வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான்,

அவன் நீதி என்றென்றைக்கும் நிற்கும்

என்று எழுதியிருக்கிறபடியாகும். 10 விதைக்கிறவனுக்கு விதையையும் புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கும் விதையை அளித்து அதைப் பெருகப்பண்ணி உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச்செய்வார். 11 அப்படியே நீங்கள் எவ்விஷயத்திலும் எவ்வித உதாரத்துவத்திற்கென்றும் ஐசுவரியவான்களாவீர்கள். அது எங்கள்மூலமாய்க் கடவுளுக்கு நன்றியறிதலான ஸ்தோத்திரம் உண்டாகச் செய்யும். 12 இந்தத் திருப்பணியென்னும் உபகாரம் பரிசுத்தவான்கள் குறைவுகளை நிறைவாக்குகிறதுமல்லாமல் அநேக ஸ்தோத்திரங்களினால் கடவுளுக்கென்றும் பெருகுகிறது. 13 நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிக்கையிட்ட கீழ்ப்படிதலினிமித்தமும் தங்களுக்கும் அனைவருக்கும் நீங்கள் காட்டும் உதாரத்துவ ஐக்கியத்தினிமித்தமும் இந்த ஊழியத்தின்மூலமாய் விளங்கின உத்தமத்தினால் அவர்கள் கடவுளை மகிமைப்படுத்தி, 14 உங்களுக்காக வேண்டுதல் செய்து கடவுள் உங்கள்மேல் பாராட்டின மகா பெரிதான கிருபையினிமித்தம் உங்கள்மேல் வாஞ்சையாயிருக்கிறார்கள். 15 வாக்குக்கடங்காத தெய்வ ஈவுக்காகக் கடவுளுக்கு ஸ்தோத்திரம்.

**10** எதிரே உங்கள் நடுவில் தாழ்மையாயும் தூரத்திலோ உங்கள் விஷயத்தில் துணிவாயுமிருக்கிற பவுலாகிய நான் கிறிஸ்துவின் சாந்தத்தையும் பொறுமையையும் முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்: 2 மாம்சத்தின்படி நடக்கிறவர்களென்று எங்களை எண்ணுகிற சிலர் விஷயத்தில் நான் தைரியம் பாராட்ட எண்ணுகிறேன். அதே தைரியத்தோடு உங்கள் நடுவிலிருக்கும்போது நான் கண்டிப்புக்காட்ட நேரிடாதபடி பார்த்துக்கொள்ளவேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். 3 நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும் மாம்சத்தின்படி போர்செய்கிறவர்களல்ல. 4 எங்கள் போராயுதங்கள் மாம்சத்துக்குரிய

வைகளல்ல, அரண்களைத் தகர்க்கிறதற்குக் கடவுளின் பார்வையில் பலமுள்ளவைகள். 5 அவைகளால் நாங்கள் யுக்திகளையும் கடவுளை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் தகர்த்துக் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய எந்த எண்ணத்தையும் சிறைப்படுத்துகிறோம். 6 உங்கள் கீழ்ப்படிதல் பூரணப்படும்பட்சத்தில் எல்லாக் கீழ்ப்படியாமையையும் நியாயமாய்ச் சிக்ஷிக்க ஆயத்தமாயுமிருக்கிறோம்.

7 பிரத்தியக்ஷமாயிருக்கிறவைகளைப் பாருங்கள். தான் கிறிஸ்துவினுடையவனென்று ஒருவன் தன்னிலேயே திடநம்பிக்கையுள்ளவனுயிருந்தால் தான் கிறிஸ்துவினுடைய வனுயிருக்கிறதுபோல நாங்களும் கிறிஸ்துவினுடையவர்களென்று அவன் தானே எண்ணிக்கொள்ளட்டும். 8 உங்களைத் தகர்த்துவிடுகிறதற்கல்ல உங்களை ஊன்றக் கட்டுகிறதற்கு ஆண்டவர் எங்களுக்குக் கொடுத்திருக்கிற அதிகாரத்தைப்பற்றி நான் சற்றே அதிகமாய்ப் பெருமை பாராட்டுவேனுமென்றும் 9 வெட்கத்துக்காளாகேன். நான் நிருபங்களாலே உங்களைப் பயமுறுத்துகிறவனைப்போல் காணப்படாதபடி இதைச் சொல்லுகிறேன். 10 அவனுடைய நிருபங்கள் பாரயோசனையும் பலமுமுள்ளவைகள், நேரில் வந்தாலோ அவன் தோற்றம் பலவீனமும் வசனம் அற்பமுமாயிருக்கிறதென்கிறார்களே. 11 அப்படிச் சொல்லுகிறவன், நாங்கள் தூரத்திலிருக்கும்போது நிருபங்களின் வசனங்களில் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறோமோ அப்படிப்பட்டவர்களாகவே சமீபத்திலிருக்கும்போது செய்கையிலும் இருப்போமென்று எண்ணிக்கொள்ளட்டும்.

12 தங்களையே மெச்சிக்கொள்ளுகிறவர்களில் சிலருக்கு நாங்கள் எங்களைச் சரியாகக்கொள்ளவும் ஒப்பிடவும் துணியோம்; தங்களைக்கொண்டே தங்களை அளந்து தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக்கொள்ளுகிற 13 அவர்கள் விவேகமுள்ளவர்களல்ல. நாங்களோ எங்கள் எல்லையைக் கடந்து அப்புறத்தில் பிரவேசித்துப் பெருமைபாராட்டாமல் உங்கள்வரைக்கும் எட்டத்தக்கதாகக் கடவுள் எங்களுக்கு அளந்து பகிர்ந்த அளவாகிய எல்லையின்படியே பெருமை பாராட்டுகிறோம். 14 உங்களிடம் வந்தெட்டாதவர்கள்போல் நாங்கள் அளவுக்கு மிஞ்சிப்போகிறதில்லை. நாங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்கொண்டு உங்களிடம் வரைக்கும் 15 வந்துசேர்ந்தோமே. எங்கள் அளவுக்கு அப்புறமானவைகளில் பிரவேசித்து மற்றவர்களின் உழைப்புகளைப்பற்றிப் பெருமை பாராட்டவில்லை. ஆகிலும், எங்களுக்கு நல் நம்பிக்கையொன்றுண்டு: உங்கள் விசுவாசம் பெருகும்போது நாங்களும் எங்கள் எல்லைக்கிசைய மிகவும் அதிகமாய்ப் பெருகுவோம். 16 அப்போது உங்களுக்கு அப்புறத்திலும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது மற்றவர்கள் எல்லைக்குட்பட்டு ஆயத்தமாயிருக்கிறவைகளைப்பற்றிப் பெருமை பாராட்டுவதாகமாட்டாது. 17 பெருமை பாராட்டுகிறவன் கர்த்தரைப்பற்றியே பெருமை பாராட்டக்கடவன். 18 தன்னைத்தான் மெச்சிக்கொள்ளுகிறவனல்ல, ஆண்டவர் மெச்சிக்கொள்ளுகிறவனே அங்கீகரிப்புக்குரியவன்.

**11** சிறிது புத்தியீனத்தை நீங்கள் என்னில் பொறுத்துக்கொள்ள விரும்புகிறேன்; என்னைப் பொறுத்தும் வருகிறீர்கள். 2 நான் தெய்வ வைராக்கியத்தோடு உங்களைப்பற்றி வைராக்கியம் கொண்டிருக்கிறேன். உங்களைக் கற்புள்ள கன்னிகையைப்போல ஒரே புருஷனுக்கு, கிறிஸ்துவுக்கே, ஒப்புக்கொடுக்கிறதற்கு நியமித்திருக்கிறேன். 3 ஆகிலும், சர்ப்பம் தன் தந்திரத்தினால் ஏவாளை வஞ்சித்ததுபோல உங்கள் மனதும் கிறிஸ்துவின்மேலுள்ள கபடற்ற பக்தியினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயப்படுகிறேன். 4 ஏனெனில், ஒருவன் வந்து நாங்கள் பிரசங்கியாத வேறொரு இயேசுவைப் பிரசங்கித்தால் அல்லது நீங்கள் பெற்றிராத வேறொரு ஆவியையும் ஏற்றுக்கொள்ளாத வேறொரு சுவிசேஷத்தையும் நீங்கள் பெற்றுக்கொண்டால், 5 உங்கள் பொறுமை அழகுதான்! நானோ மகா பிரதான அப்போஸ்தலரிலும் ஒன்றிலுங் குறைவுள்ளவனல்ல வென்று எண்ணுகிறேன். 6 நான் பேச்சில் சாமானியனாயிருந்தும் அறிவில் சாமானியனல்ல; எவ்வகையிலும் எல்லாருக்குள்ளேயும் இதை உங்களுக்கு வெளிப்படையாக்கியிருக்கிறோம்.

7 நீங்கள் உயர்த்தப்படும்படி நான் என்னைத்தானே தாழ்த்திக் கடவுளின் சுவிசேஷத்தை இலவசமாய் உங்களுக்குப் பிரசங்கித்தது பாவந்தானோ? 8 உங்களுக்கு ஊழியஞ்செய்வதற்கு மற்றச் சபைகளிடம் சம்பளத்தைப் பெற்று அவர்களைக் கொள்ளையிட்டேன். 9 நான் உங்களோடிருக்கையில் எனக்குக் குறைச்சல் நேரிட்டபோதும் நான் ஒருவருக்கும் பாரமாயிருக்கவில்லை; சகோதரர் மக்கெதோனியாவிலிருந்துவந்து என் குறைவை நிறைவாக்கினார்கள்; எவ்வகையிலும் உங்களுக்குப் பாரமாயிராதபடி

பார்த்துக்கொண்டேன். இனிமேலும்
10 பார்த்துக்கொள்ளுவேன். அகாயாவின்
திசைகளில் என்னைப்பற்றிய இந்தப் புகழ்
தடுக்கப்பட்டுப்போகாதென்று என்னி
லுள்ள கிறிஸ்துவின் சத்தியத்தைக்கொண்டு
11 சொல்லுகிறேன். ஏன்? நான் உங்களில்
அன்பு கூராதபடியினாலேயோ? கடவுள்
12 அறிவார். ஆயினும், எங்களை விரோதிக்
கச் சமயம் தேடுகிறவர்களுக்குச் சமயம்
கிடையாமற்போகும்படி தாங்கள் பெருமை
பாராட்டுகிற காரியத்தில் அவர்கள் எங்
களைப்போலவே காணப்படுவதற்கு நான்
செய்கிறதையே இன்னும் செய்வேன்.
13 அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்
தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள்
கிறிஸ்துவின் அப்போஸ்தலருடைய வேஷம்
14 போட்டுக்கொள்ளுகிறவர்கள். இது ஆச்
சரியமல்ல, சாத்தான் தானும் ஒளியின்
தூதன் வேஷம் போட்டுக்கொள்ளுகிறானே.
15 ஆகவே, அவன் ஊழியக்காரர் நீதியின்
ஊழியக்காரர் வேஷம் போட்டுக்கொண்
டால் அது பெரிதல்ல. அவர்கள் முடிவு
அவர்கள் செய்கைகளுக்குத் தக்கதாகும்.
16 பின்னும் நான் சொல்லுகிறேன்: ஒரு
வனும் என்னை மதியீனனென்றெண்ண
வேண்டாம்; அப்படி எண்ணிக்கொண்டா
லும் நானும் சற்றே பெருமைபாராட்டும்படி
என்னை மதியீனனைப்போலாகிலும் ஏற்றுக்
17 கொள்ளுங்கள். இப்படி நான் பேசுகிறது
ஆண்டவருக்கேற்றபடி பேசாமல் பெருமை
பாராட்டும் என் தைரியத்தினால் மதியீன
18 னைப்போல் பேசுகிறேன். அநேகர் மாம்
சத்தின்படி பெருமை பாராட்டுகையில்
19 நானும் பெருமை பாராட்டுவேன். மதி
யுள்ள நீங்கள் மதியீனரைச் சந்தோஷமாய்ப்
20 பொறுக்கிறீர்களே. ஒருவன் உங்களை
அடிமையாக்கினாலும் ஒருவன் உங்களைப்
பட்சித்தாலும் ஒருவன் உங்களைக் கைவசப்
படுத்தினாலும் ஒருவன் தன்னை உயர்த்தினா
லும் ஒருவன் உங்களை முகத்தில் அறைந்
21 தாலும் பொறுத்து வருகிறீர்களே. நாங்
களே பலவீனராயிருந்ததுபோல அவமானப்
பட்டவனாக இதைச் சொல்லுகிறேன். ஒரு
வன் எதிலே துணிவாயிருக்கிறானே அதிலே
நானும் துணிவாயிருக்கிறேன்; மதியீனனாய்
22 இதைச் சொல்லுகிறேன். அவர்கள் எபி
ரேயரா? நானும் எபிரேயன்; அவர்கள்
இஸ்ரவேலரா? நானும் இஸ்ரவேலன்; அவர்
கள் ஆபிரகாமின் சந்ததியாரா? நானும்
23 ஆபிரகாமின் சந்ததியான். அவர்கள்
கிறிஸ்துவின் ஊழியக்காரரா? நானும் அப்
படியே, அவர்களிலும் அதிகமாய் என்று
மதிமயங்கினவனாகச் சொல்லுகிறேன்,
உழைப்பிலே அதிகமாய், காவல்களில்
அதிகமாய், அடிகளில் அதிகமாய், மரண
அவதிகளில் பலமுறை; ஒன்று குறைய 24
நாற்பதடியாக ஐந்துதரம் யூதர்களால் அடி
பட்டேன்; மூன்றுதரம் பிரம்படிபட்டேன், 25
ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம்
கப்பற்சேதத்தில் அகப்பட்டேன், நடுக்கட
லிலே ஒரு இராப்பகல் போக்கினேன்; பிர 26
யாணங்களில் பலமுறை, ஆற்று மோசங்
களில், கள்ளர் மோசங்களில், சுய ஜாதி
மோசங்களில், புறஜாதி மோசங்களில், நக
மோசங்களில், வனாந்தர மோசங்களில்,
சமுத்திர மோசங்களில், கள்ளச்சகோதரர்
மோசங்களில் | உழைப்பு கஷ்டங்களில், 27
கண் விழிப்புகளில் பலமுறை; பசிதாகங்க
ளில், உபவாசங்களில் பலமுறை; குளிர்
நிர்வாணங்களில் அதிகமாய் ஊழி
யக்காரனாக விளங்குகிறவன். வெளிக்காரி 28
யங்களாகிய இவைகளேயல்லாமல் எல்லாச்
சபைகளையும்பற்றிய கவலையும் என்னை நாள்
தோறும் நெருக்குகிறது. ஒருவன் பல 29
வீனனானால் நானும் பலவீனனாகிறதில்லை
யோ? ஒருவன் இடறிவிழுந்தால் என்
மனம் எரியாதிருக்குமோ? நான் பெருமை 30
பாராட்டவேண்டியதாயிருந்தால் என் பல
வீனத்திற்குரியவைகளைப்பற்றிப் பெருமை
பாராட்டுவேன். நான் பொய் சொல்லுகிற 31
தில்லையென்று ஆண்டவராகிய இயேசுவின்
கடவுளும் பிதாவுமானவர் அறிவார்; இவரே
என்றென்றைக்கும் ஸ்தோத்திரத்துக்குரிய
வர். தமஸ்கு பட்டணத்தில் அரேத்தா 32
ராஜாவின் அதிபதி என்னைப் பிடிக்கவேண்டு
மென்று தமஸ்கரின் பட்டணத்தைக் காவல்
வைத்துக் காத்து வருகையில் | நான் மதி 33
லின்மேலிருந்து ஜன்னல் வழியாய்க் கூடை
யில் இறக்கிவிடப்பட்டு அவன் கைக்குத்
தப்பினேன்.

நான் பெருமைபாராட்டவேண்டியது **12**
தான்; அது பிரயோஜனமாயிராதென்றாலும்
ஆண்டவர் அருளிய தரிசனங்களையும்
வெளிப்படுதல்களையும் சொல்ல வருகிறேன்.
கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனையறி 2
வேன்; அவன் பதினான்குவருஷங்களுக்குமுன்
மூன்றாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்
டான்; அவன் சரீரத்திலிருந்தானோ சரீரத்
திற்குப் புறம்பேயிருந்தானோ அதை யறி
யேன்; கடவுள் அறிவார். அந்த மனுஷன் 3
பரதீசுக்குள் எடுக்கப்பட்டான். — அவன்
சரீரத்திலிருந்தானோ சரீரத்திற்குப் புறம்பே
யிருந்தானோ அதை அறியேன், கடவுள்

4 அறிவார்.—மனுஷர் பேசக்கூடாததும் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளை அங்கே கேட்டானென்பதையும் அறிவேன்.
5 இப்படிப்பட்டவனைப்பற்றிப் பெருமை பாராட்டுவேன்; என்னைப்பற்றியோ என் பலவீனங்களிலேயன்றி வேறொன்றிலும் பெரு
6 மைபாராட்டேன். நான் பெருமைபாராட்ட விரும்புவேனெயினும் மதியீனனாகேன், நான் சொல்வது உண்மை. எனக்குண்டான வெளிப்படுதல்கள் மகத்துவமானவைகளா யிருந்தாலும் ஒருவனும் என்னிடம் காண்கிறதற்கும் கேட்கிறதற்கும் மேலாக என்னைப்பற்றி எண்ணுதபடி அப்படிச் செய்யா
7 திருப்பேன். நான் என்னை உயர்த்தாதபடி என் மாம்சத்தில் ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடி என்னைக் குட்டும் சாத்தானின் தூதனே
8 அது. அது என்னைவிட்டு நீங்கவேண்டுமென்றே நான் ஆண்டவரிடம் மூன்றுதரம்
9 அதைப்பற்றி வேண்டுதல் செய்தேன். அவரோ என்னிடம்: என் கிருபை உனக்குப் போதும், பலவீனத்தில் என் வல்லமை பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் அமர்ந்திருக்கும்படி என் பலவீனங்களைப் பற்றி நான் மிகவும் சந்தோஷமாய்ப் பெரு
10 மைபாராட்டுவேன். ஆகையால், கிறிஸ்து வினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும் அவமானங்களிலும் வறுமைகளிலும் இம்சைகளிலும் இடுக்கண்களிலும் நான் பிரியங்கொள்ளுகிறேன். நான் பலவீனனாயிருக்கும்போது வல்லமையுள்ளவனாயிருக்கிறேனே.
11 நான் மதியீனனானேன்; இதற்கு என்னைக் கட்டாயப்படுத்தினவர்கள் நீங்களே. நீங்கள்தான் என்னை மெச்சிக்கொள்ள வேண்டியதாயிருந்தது. நான் ஒன்றுமில்லாதானெனினும் மகா பிரதான அப்போஸ்தலரிலும் ஒன்றிலும் நான் எவ்வகையிலும்
12 குறைவுள்ளவனல்ல. அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள், அற்புதங்கள், அடையாளங்கள், வல்லசெயல்கள் இவைகளோடே, எல்லாச் சகிப்பிலும் உங்கள் நடுவில் செய்யப்பட்டன.
13 எதிலே மற்றச் சபைகளுக்குத் தாழ்வாயிருந்தீர்கள்? நான் உங்களுக்குப் பாரமாயிருக்கவில்லை என் பதிலேதான்; இந்த அநியாயத்தை எனக்கு மன்னியுங்கள்.
14 இதோ, மூன்றுதரமாக உங்களிடம் வர ஆயத்தமாயிருக்கிறேன்; நான் உங்களுக்குப் பாரமாயிருக்கமாட்டேன்; நான் உங்களுடையவைகளையல்ல உங்களையே ஆசிக்கிறேன்; பெற்றோருக்குப் பிள்ளைகளல்ல பிள்ளைகளுக்குப் பெற்றோரே ஆஸ்தியைச் சேர்த்துவைக்கவேண்டும். நானே உங்கள் 15
ஆத்துமாக்களுக்காக மிகவும் சந்தோஷமாய்ச் செலவுபண்ணுவேன், முழுவதும் செலவாவேன். நான் உங்கள்மேல் வைக்கும் அன்பு அதிகரிக்கிறதால் நீங்கள் என்மேல் வைக்கும் அன்பு குறைகிறதோ?
அது இருக்கட்டும்; நான் உங்களுக்குப் 16
பாரமாயிருக்கவில்லை; ஆயினும் தந்திரமுள்ளவனாயிருந்து வஞ்சகத்தினால் உங்களைப் பிடித்தேனும். நான் உங்களிடம் அனுப் 17
பினவர்களில் எவன்மூலமாயாவது உங்களிடம் லாபத்தைத் தேடியடைந்ததுண்டா?
உங்களிடம் போகும்படி நான் தீத்துவைக் 18
கேட்டுக்கொண்டு நமது சகோதரனையுங்கூட அனுப்பினேன்; தீத்து உங்களிடம் ஏதாவது லாபத்தைத் தேடியடைந்ததுண்டா? நாங்கள் ஒரே ஆவியையுடையவர்களாய் ஒரே அடிச்சுவடுகளில் நடக்கவில்லையா?

நாங்கள் உங்களிடம் பிரதிவாதஞ் செய் 19
கிறோமென்று முழு நேரமும் எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். கடவுளுக்குமுன் கிறிஸ்துவுக்குள் பேசுகிறோம். பிரியமானவர்களே எல்லாவற்றையும் உங்கள் பக்திவிருத்திக்காகச் செய்கிறோம். ஒரு பயம் 20
எனக்குண்டு: நான் வரும்போது உங்களை நான் விரும்புகிறபடி யிருக்கிறவர்களாகக் காணாமலும் நானும் நீங்கள் விரும்புகிறபடியிருக்கிறவனாக உங்களுக்குக் காணப்படாமலுமிருப்பேனோவென்றும், சண்டை பொறாமை கோபம் கட்சி புறங்கூறுதல் அவதூறுபண்ணுதல் இறுமாப்பு கலகமுதலியவைகள் உங்களிலிருக்குமோவென்றும், நான் மறுபடியும் வருகிறபோது என் கட 21
வுள் என்னை உங்கள் விஷயத்தில் தாழ்த்தவும் முன் பாவஞ்செய்தவர்களில் அநேகர் தாங்கள் நடப்பித்த அசுத்தத்தையும் வேசித்தனத்தையும் காமவிகாரத்தையும் விட்டு மனந்திரும்பாமலிருப்பதைப்பற்றி நான் துக்கப்படவும் நேரிடுமோவென்றும் பயந்திருக்கிறேன்.

நான் இப்போது உங்களிடம் வருகிறது **13**
மூன்றுந்தரம். எந்தக்காரியமும் இரண்டு அல்லது மூன்று சாட்சிகளின் வாக்கினால் நிலைவரமாகும். நான் இரண்டாந்தரம் உங 2
களிடத்திலிருந்தபோது முன்னமே சொன்னதையும் இப்பொழுது தூரத்திலிருக்கும் போது முன்னதாகவே சொல்லுகிறதையும் முன் பாவஞ்செய்தவர்களுக்கும் மற்ற யாவருக்குமே சொல்லுகிறேன்: நான் மறுபடி

யும் வருவேனுல் தப்பவிடமாட்டேன்.
3 எனக்குள் பேசுகிற கிறிஸ்துவுக்கு அத்தாட்சி
தேடுகிறீர்களே; அவர் உங்கள் விஷயத்தில்
பலவீனரல்ல, உங்களுக்குள் வல்லவரே.
அவர் பலவீனத்தினுல் சிலுவையில் அறை
யுண்டிருந்தும் கடவுளின் வல்லமையினுல்
4 பிழைத்திருக்கிறார்; அப்படியே நாங்களும்
அவருக்குள் பலவீனராயிருந்தும் உங்கள்
விஷயமாய் விளங்கிய தெய்வ வல்லமை
யினுல் அவரோடுகூட ஜீவித்திருப்போம்.
5 நீங்கள் விசுவாசத்தில் நிலைகிறீர்களோ
வென்று உங்களை நீங்களே சோதித்தறியுங்
கள், உங்களையே பரீட்சித்துப்பாருங்கள்.
இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறா
ரென்று உங்களை நீங்களே அறியாதிருக்கிறீர்
களோ? நீங்கள் ஆகாதவர்களென்று தள்
6 ளப்படாவிட்டால் அறிவீர்கள். நாங்கள்
ஆகாதவர்களென்று தள்ளப்பட்டவர்க
ளல்லவென்பதை அறிவீர்களென்று நன்னம்
7 பிக்கையாயிருக்கிறேன். நீங்கள் தீமை
யொன்றும் செய்யாதிருக்கும்படியாகக் கட
வுளை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறேன்.
நாங்கள் அங்கீகரிக்கப்பட்டவர்களென்று
காணப்படும்பொருட்டல்ல, நாங்கள் ஆகா
தவர்களென்று தள்ளப்பட்டவர்கள் போலி
ருந்தாலும் நீங்கள் நன்மையானதைச் செய்
யும்பொருட்டே விண்ணப்பம்பண்ணுகி
றேன். சத்தியத்திற்குச் சகாயமாகவேயொழி 8
யச் சத்தியத்திற்கு விரோதமாக நாங்கள்
ஒன்றுஞ் செய்யமுடியாது. நாங்கள் பல 9
வீனரும் நீங்கள் பலமுள்ளவர்களுமாயிருக்
கும்போதெல்லாம் சந்தோஷப்படுகிறோம்.
நீங்கள் உத்தமராகவேண்டுமென்பதற்கா
கவே விண்ணப்பம்பண்ணுகிறோம். ஆன 10
தால், இடித்துப் போடுவதற்கென்றல்ல
ஊன்றக் கட்டுவதற்கென்றே ஆண்டவர்
எனக்குக் கொடுத்திருக்கிற அதிகாரத்தின்படி
நான் உங்களிடம் வந்திருக்கும்போது கண்
டிப்பாயிருக்க வேரிடாதபடிக்கு நான் தூர
த்திலிருக்கையில் இவைகளை எழுதுகிறேன்.

கடையாக, சகோதரரே, சந்தோஷமா 11
யிருங்கள், உத்தமராகுங்கள், ஆறுதலடை
யுங்கள், ஏகசித்தையாயிருங்கள், சமாதான
மாயிருங்கள், அப்பொழுது அன்பு சமா
தானங்களின் கடவுள் உங்களோடிருப்பார்.
ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு 12
வாழ்த்துங்கள். பரிசுத்தவான்களனைவரும்
உங்களுக்கு வந்தனஞ் சொல்லுகிறார்கள்.
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் கிரு 13
பையும் கடவுளின் அன்பும் பரிசுத்த ஆவி
யின் ஐக்கியமும் உங்கள் அனைவரோடும்
இருப்பதாக.

---

## THE EPISTLE TO THE GALATIANS

# கலாத்தியருக்கு எழுதின நிருபம்

**1** மனுஷரிடமிருந்துமல்ல, மனுஷனுல்
மல்ல, இயேசுகிறிஸ்துவினுலும் அவரை
மரித்தோரிலிருந்தெழுப்பின பிதாவாகிய
கடவுளாலும் அப்போஸ்தலனுகிய பவு
2 லும் | என்னோடிருக்கிற சகோதரரனைவரும்
கலாத்திய நாட்டுச்சபைகளுக்கு எழுதுவது:
3 நமது பிதாவாகிய கடவுளினிடமிருந்தும்
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினிட
மிருந்தும் உங்களுக்குக் கிருபையும் சமா
4 தானமும் உண்டாவதாக: இவர் நமது கட
வுளும் பிதாவுமானவரின் சித்தப்படியே
இப்பொழுதிருக்கும் பொல்லாத யுகத்தி
னின்று நம்மை விடுவிக்கும்படி நமது
பாவங்களுக்காகத் தம்மையே ஒப்புக்
5 கொடுத்தார்; அவருக்கே மகிமை யுகாயுகங்
களாய் இருப்பதாக, ஆமேன்.

கிறிஸ்துவின் கிருபையினுல் உங்களை 6
அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிர
மாய் விட்டு வேறொரு சுவிசேஷத்திற்குத்
திரும்புவது எனக்கு ஆச்சரியம். அது 7
மற்றொரு சுவிசேஷமேயாகாது, சிலர் உங்க
ளைக் கலங்கச் செய்து கிறிஸ்துவின் சுவி
சேஷத்தைப் புரட்ட விரும்புகிறதேயன்றி
வேறல்ல. நாங்கள் உங்களுக்குப் பிரசங் 8
கித்த சுவிசேஷத்திற்கு மாறுக நாங்களாவது
வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனுவது
வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப்
பிரசங்கிப்பானேயாகில் அவன் சாபத்துக்
குள்ளாகக்கடவன். நாங்கள் முன் சொன் 9
னதையே இப்போது மறுபடியுஞ் சொல்லு
கிறேன்: நீங்கள் ஏற்றுக்கொண்டதற்கு
மாறுன சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்

குப் பிரசங்கிக்கிறதாயிருந்தால் அவன் சாபத்துக்குள்ளாகக்கடவன்.

10 இப்பொழுது நான் சம்மதப்படுத்தப் பார்க்கிறது மனுஷனையோ கடவுளையோ? மனுஷரைப் பிரியப்படுத்தப் பார்க்கிறேனோ? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்து கிறவனேயானால் நான் கிறிஸ்துவின் அடி
11 யானல்ல. சகோதரரே, நான் பிரசங்கிக்கிற சுவிசேஷம் மனுஷ யோசனையின்படியான தல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கி
12 றேன். நான் அதை ஒரு மனுஷனிடத்தி லிருந்து பெற்றதுமில்லை கற்றதுமில்லை; இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்
13 படுத்தினார். யூதமார்க்கத்திலிருந்தபோது நான் நடந்த விதத்தைப்பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்கள். கடவுளின் சபையை நான் மிகவும் இம்சித்து அதைப் பாழாக்கி
14 வந்தேன்; என் பிதாக்களின் பாரம்பரியங் களுக்காக மிகவும் பக்திவைராக்கியமுள்ள வனாய் என் ஜனத்தாரில் என் வயதுள்ள அநேகரைப்பார்க்கிலும் யூதமார்க்கத்திலே
15 அதிக சிரத்தையாயிருந்தேன். என்றாலும், என் தாயின் கர்ப்பத்திலிருந்த காலமுதல் என்னைப் பிரித்தெடுத்துத் தமது கிருபை
16 யினால் அழைத்தவர் | தமது குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக் கும்பொருட்டாக அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியங்கொண்டபோது, உடனே நான் மாம்சத்தோடும் இரத்தத்தோ
17 டும் ஆலோசனைபண்ணாமலும் | எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர்களிடம் எரு சலேமுக்குப் போகாமலும் அரபிதேசத்திற் குப் போய் மறுபடியும் தமஸ்குவுக்குத் திரும்பிவந்தேன்.

18 அப்பால் மூன்றுவருஷம் சென்ற பின்பு கேபாவைப் பார்க்கும்படி நான் எருசலே முக்குப் போய் அவனோடு பதினைந்துநாள்
19 தங்கியிருந்தேன். ஆண்டவரின் சகோதரன் யாக்கோபைத்தவிர அப்போஸ்தலரில் வேறொருவரையும் நான் காணவில்லை.
20 நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் பொய் யல்ல, இதோ கடவுளுக்குமுன் சொல்லு
21 கிறேன். அப்பால் சீரியா சிலிசியா நாடு
22 களின் புறங்களில் வந்தேன். ஆயினும், யூதேயா தேசத்தில் கிறிஸ்துவுக்குள்ளான சபைகளுக்கு முகமறியாதவனாயிருந்தேன்.
23 மூன் நம்மை இம்சைப்படுத்தினவனே தான் மூன் பாழாக்கிவந்த விசுவாசத்தை இப் பொழுது நற்செய்தியாகப் பிரசங்கிக்கிறா னென்பதை மாத்திரம் அவர்கள் கேள்விப்
24 பட்டிருந்து; என்னிமித்தம் கடவுளை மகி மைப்படுத்தினார்கள்.

அப்பால் பதினாலு வருஷம் சென்றபின் 2
நான் தீத்துவைக் கூட்டிக்கொண்டு பர்ன பாவோடு மறுபடியும் எருசலேமுக்குப் போனேன். கடவுள் வெளிப்படுத்திக் 2
காட்டியபடியே போனேன்; புறஜாதிகளுக் குள் நான் பிரசங்கித்துவருகிற சுவிசேஷத் தை அவர்களுக்கு விவரித்துக் காட்டினேன், மதிப்புள்ளவர்களுக்கோ தனிமையாய் விவ ரித்துக்காட்டினேன்; நான் ஓடுகிறதும் ஓடி னதும் வீணாகாதபடிக்கே இப்படிச் செய் தேன். ஆனாலும், என்னோடிருந்த தீத்து 3
கிரேக்கனாயிருந்தும் விருத்தசேதனஞ் செய் துகொள்ளக் கட்டாயம் பண்ணப்பட்ட தில்லை. பக்கவழியாய் நுழைந்த கள்ளச் 4
சகோதரர் நிமித்தம் இப்படியாயிற்று. இவர்கள் நம்மை அடிமைத்தனத்துக்குள் ளாக்கவேண்டுமென்று கிறிஸ்து இயேசுவில் நமக்குண்டான சுயாதீனத்தை உளவு பார்க்க நுழைந்தவர்கள். சுவிசேஷத்தின் 5
சத்தியம் உங்களிடத்தில் நிலைத்திருக்கும்படி நாங்கள் ஒரு நாழிகையேனும் அவர்களுக் குக் கீழ்ப்படிந்து இணங்கவில்லை. ஏதோ 6
விசேஷித்தவர்களாக மதிக்கப்பட்டவர் கள்—இவர்கள் முன்னே எப்படிப்பட்ட வர்களாயிருந்தாலும் சரி, அதைப்பற்றி எனக்குக் கவையில்லை, கடவுள் ஆள்முகத் தைப் பார்க்கிறவரல்ல—மதிப்புள்ளவர்கள் எனக்குப் புதியதொன்றையுங் கற்பித்த தில்லை. அதுவுமல்லாமல், விருத்தசேதன 7
முள்ளவர்களுக்கு அப்போஸ்தலனுவதற்குப் பேதுருவைப் பலப்படுத்தினவர் விருத்த சேதனமில்லாதவர்களுக்கு அப்போஸ்தலனு வதற்கு என்னையும் பலப்படுத்தினதை அவர்கள் அறிந்து | விருத்தசேதனமுள்ள 8
வர்களுக்குப் பிரசங்கிக்கும்படி சுவிசேஷத் தைப் பேதுருவினிடம் அவர் நம்பி ஒப்பு வித்ததுபோல, விருத்தசேதனம் இல்லாதவர் களுக்குப் பிரசங்கிக்கும்படி அதை என் னிடம் ஒப்புவித்ததாகக் கண்டார்கள். எனக்களிக்கப்பட்ட கிருபையை அறிந்த 9
போது தூண்களாக மதிப்புப்பெற்ற யாக் கோபும் கேபாவும் யோவானும், தாங்கள் விருத்தசேதனமுள்ளவர்களுக்கும் நாங்கள் புறஜாதியாருக்கும் பிரசங்கிக்கும்படி, அந்நி யோந்நிய ஐக்கியத்திற்கு அடையாளமாக எனக்கும் பர்னபாவுக்கும் வலதுகை கொடுத் தார்கள். தரித்திரரை நினைத்துக்கொள்ள 10
வேண்டுமென்பதை மாத்திரம் சொன்னார் கள்; நான் செய்யக் கவலைகொண்டிருந்ததும் இதுதான்.

கேபா அந்தியோகியாவுக்கு வந்தபோது 11
அவன் குற்றத்திற்காளாயிருந்ததினால் நான்

12 முகமுகமாய் அவனோடு எதிர்த்தேன். சங்
கதி யென்னவெனில், யாக்கோபினிட
மிருந்து சிலர் வருமுன்னே அவன் புறஜாதி
யாருடன் சாப்பிட்டான்; அவர்கள் வந்த
போதோ விருத்தசேதனக் கட்சியாருக்குப்
13 பயந்து விலகிப் பிரிந்துகொண்டான். மற்ற
யூதரும் அவனோடே மாயம்பண்ணவே,
அவர்கள் மாயத்தினாலே பர்னபாவும் இழுப்
14 புண்டான். இப்படி அவர்கள் சுவிசேஷ
சத்தியத்திற்கு நேராய் நடவாததை நான்
கண்டபோது எல்லாருக்குமுன்பாக நான்
பேதருவுக்குச் சொன்னேன்: யூதனாயிருக்
கிற நீர் யூதர் முறைமையாக நடவாமல்
புறஜாதியார் முறைமையாக நடந்துகொண்
டிருக்கப் புறஜாதியாரை யூதர் முறைமை
யாக நடக்கும்படி நீர் கட்டாயம் பண்ணு
15 வது எப்படி? நாம் புறஜாதியாரில் பிறந்த
16 பாவிகளல்ல, சுபாவத்தின்படி யூதர்; கிறிஸ்து
இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே
யன்றி நியாயப்பிரமாணக் கிரியைகளினால்
மனுஷன் நீதிமானாகத் தீர்க்கப்படுவதில்லை
யென்று அறிந்தவர்களாய் நியாயப்பிரமா
ணக் கிரியைகளினாலல்ல கிறிஸ்துவைப்பற்
றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாகத் தீர்க்
கப்படும்படி நாமும் கிறிஸ்து இயேசுவின்
மேல் விசுவாசம் வைத்தோம். நியாயப்பிர
மாணக் கிரியைகளினாலே மாம்சமான எவ
னும் நீதிமானாகத் தீர்க்கப்படுவதில்லையே.
17 கிறிஸ்துவுக்குள் நீதிமான்களாகத் தீர்க்கப்
படும்படி நாடுகிறதினாலே நாம் பாவிகளா
கக் கண்டுபிடிக்கப்படுவோமானால் கிறிஸ்து
பாவத்துக்கு ஊழியரோ? அல்லவே அல்ல.
18 நான் இடித்துப்போட்டவைகளையே திரும்
பக் கட்டினால் பிரமாணத்தை மீறுகிறவனாக
19 என்னை நானே காட்டுவேன். கடவுளுக்
கென்று பிழைக்கும்படி நான் நியாயப்பிர
மாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு
20 மரித்தேனே. கிறிஸ்துவோடு சிலுவையி
லறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்
கிறேன்; இனிமேலோ நான் அல்ல, கிறிஸ்
துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான்
இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிற
தோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத்
தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தெய்வ
குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலேதான்.
21 நான் கடவுளின் கிருபையை அவமாக்குகிற
தில்லை; நீதி நியாயப்பிரமாணத்தினால் வருவ
தானால் கிறிஸ்து மரித்தது வீணாயிற்றே.

**3** புத்தியில்லாத கலாத்தியரே, உங்களை
மயக்கினவன் யார்? உங்கள் கண்கள் முன்
நிற்பதுபோல் இயேசு கிறிஸ்து சிலுவையி
லறையப்பட்டவராக வரைந்து காட்டப்
பட்டிருந்தாரே. நான் உங்களிடத்தில் 2
அறிய விரும்புகிறது இது ஒன்றே: நீங்கள்
ஆவியானவரைப் பெற்றது நியாயப்பிரமா
ணக் கிரியைகளினாலா? விசுவாசக் கேள்
வியினாலா? ஆவியில் ஆரம்பம் பண்ணின 3
நீங்கள் இப்பொழுது மாம்சத்தில் முடித்
துக்கொள்ளப் போகிறீர்களோ? நீங்கள்
இத்தனை புத்தியீனரா? இத்தனை பாடுகளை 4
யும் வீணாய்ப் பட்டீர்களா? அவைகள்
வாஸ்தவத்தில் வீணாகுமோ? உங்களுக்கு 5
ஆவியானவரையளித்து உங்களுக்குள்ளே
வல்லசெயல்களை நடப்பிக்கிறவர், அதை
நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைக்கொண்
டோ விசுவாசக் கேள்வியைக்கொண்டோ,
எதைக்கொண்டு அப்படிச் செய்கிறார்?
ஆபிரகாமைப் பாருங்கள், அவன் கடவு 6
ளில் விசுவாசம் வைத்தான், அது அவ
னுக்கு நீதியாக எண்ணப்பட்டதே.

ஆகவே, விசுவாசத்துக்குரியவர்களே 7
ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிந்து
கொள்ளுங்கள். மேலும், கடவுள் விசுவா 8
சத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாகத்
தீர்க்கிறரென்று வேதவாக்கியம் முன்னு
கக் கண்டு: சகல ஜாதியாரும் உன்னில்
ஆசீர்வாதத்திற்குள்ளாவார்களென்று ஆபிர
காமுக்கு நற்செய்தியாக முன்னறிவித்தது.
ஆதலால், விசுவாசத்துக்குரியவர்கள் விசு 9
வாசமுள்ள ஆபிரகாமோடு ஆசீர்வாதம்
பெறுகிறார்கள். நியாயப்பிரமாணக் கிரி 10
யைகளுக்குரியார் அனைவரும் சாபத்திற்
குள்ளிருக்கிறார்கள்; நியாயப்பிரமாணப்
புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளெல்
லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்
திராதவன் எவனோ அவன் சாபத்திற்குள்
ளானவன் என்று எழுதியிருக்கிறதே. நியா 11
யப்பிரமாணத்தினாலே ஒருவனும் கடவுளி
டத்தில் நீதிமானாகத் தீர்க்கப்படுகிறதில்லை
யென்பது தெளிவாயிருக்கிறது. எப்படி
யெனில், விசுவாசத்தினாலே நீதிமான்
பிழைப்பான். நியாயப்பிரமாணமோ விசு 12
வாசத்திற்குரியதல்ல; அவைகளைச் செய்கிற
வனே அவைகளால் பிழைப்பான். மரத் 13
தினிலே தூக்கப்பட்ட எவனும் சாபத்திற்
குள்ளானவனென்று எழுதியிருக்கிறபடி,
கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிர
மாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி
மீட்டுக்கொண்டார். ஆவியைப்பற்றிய 14
வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே
பெறத்தக்கதாக ஆபிரகாமின் ஆசீர்வாதம்
கிறிஸ்து இயேசுவில் புறஜாதிகளுக்கு வர
வேண்டுமென்று இப்படியாயிற்று.

15 சகோதரரே, மனுஷர் முறைமையின்
படி சொல்லுகிறேன்: உறுதிபண்ணப்பட்ட
சாசனம் மனிதனுடையதே யெனினும்
அதை ஒருவனும் ரத்துப் பண்ணுகிறது
மில்லை, அதினேடே ஒன்றையுங் கூட்டு
16 கிறதுமில்லை. ஆபிரகாமுக்கும் அவன் சந்த
திக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்
டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக்
குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு
என்று ஒருவனைக்குறித்துச் சொல்லுகிறார்;
17 அந்தச் சந்ததி கிறிஸ்துவே. நான் சொல்லு
வது: வாக்குத்தத்த ஏற்பாடு கடவுளால்
முன் உறுதிபண்ணப்பட்டதாயிருக்க,
நானூற்றுமுப்பது வருஷத்திற்குப்பின் வந்த
நியாயப்பிரமாணம் வாக்குத்தத்தத்தை
வியர்த்தமாக்குவதற்கேதுவாய் அதை உறுதி
18 யில்லாததாக்காது. சுதந்தரம் நியாயப்பிர
மாணத்தினாலே உண்டானதென்றால் இனி
அது வாக்குத்தத்தத்தினால் என்பதில்லை;
ஆபிரகாமுக்கோ கடவுள் அதை வாக்குத்
19 தத்தத்தினால் அருளிச்செய்தார். அப்படி
யானால், நியாயப்பிரமாணம் எதற்கு? வாக்
குத்தத்தத்திற்குரிய சந்ததி வருமளவும் அது
மீறுதல்கள் நிமித்தமாகக் கூடச்சேர்க்கப்
பட்டுத் தெய்வதூதரைக்கொண்டு மத்தி
20 யஸ்தன் கையினால் ஏற்படுத்தப்பட்டது.
மத்தியஸ்தன் ஒருவனுக்குரியவனல்ல, கட
21 வளோ ஒருவர். அப்படியிருக்க, நியாயப்
பிரமாணம் கடவுளின் வாக்குத்தத்தங்க
ளுக்கு விரோதமா? அல்லவே அல்ல. ஜீவ
னைக்கொடுக்க வல்ல நியாயப்பிரமாணம்
அருளப்பட்டிருந்ததானால் நீதியானது
வாஸ்தவமாகவே நியாயப்பிரமாணத்தினால்
22 உண்டாயிருக்கும். அப்படியிராதபடியால்,
விசுவாசிக்கிறவர்களுக்கு வாக்குத்தத்தம்
இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தி
னாலே அளிக்கப்படும்படி வேதவாக்கியம்
எல்லாவற்றையும் பாவத்தின்கீழ்ச் சேர்த்து
23 அடைத்துப்போட்டது. விசுவாசம் வரு
முன்னே, வெளிப்படப்போகிற விசுவாசத்
திற்கென்று நாம் நியாயப்பிரமாணத்தின்
கீழ் அடைபட்டவர்களாய்க் காவல் பண்
24 ணப்பட்டோம். ஆதலால், நாம் விசுவா
சத்தினால் நீதிமான்களாகத் தீர்க்கப்படுவ
தற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்து
வினிடம் வழிநடத்துகிற உபாத்தியானது.
25 விசுவாசம் வந்தபின்போ நாம் அந்த உபாத்
26 தியக்குக் கீழ்ப்பட்டவர்களல்ல. நீங்களனை
வரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசு
வாசத்தினால் கடவுளின் பிள்ளைகளாயிருக்கி
றீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்து 27
வுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள்
எத்தனைபேரோ அத்தனைபேரும் கிறிஸ்து
வைத் தரித்துக்கொண்டீர்கள். இங்கே 28
யூதனென்றும், கிரேக்கனென்றுமில்லை, அடி
மையென்றும் சுயாதீனனென்றுமில்லை,
ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்க
ளெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்று
யிருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவினுடை 29
யவர்களானால் ஆபிரகாமின் சந்ததியார்தான்,
வாக்குத்தத்தத்தின்படி சுதந்தரருமாம்.

4 பின்னும் நான் சொல்லுகிறதென்னவெ
னில், சுதந்தரவாளி எல்லாவற்றிற்கும் ஜெ
மானியருக்கும் அவன் சிறுபிள்ளையாயிருக்
குங் காலமளவும் அவனுக்கும் அடிமைக்
கும் வித்தியாசமொன்றுமில்லை. தகப்பன் 2
குறித்த காலம்வரைக்கும் அவன் காரியக்
காரருக்கும் வீட்டு விசாரணைக்காரருக்கும்
கீழ்ப்பட்டிருக்கிறான். அப்படியே நாமும் 3
சிறுபிள்ளைகளாயிருந்த காலத்தில் இவ்வுல
கத்தின் [1]பாலபோதனைகளுக்கு அடிமைப்
பட்டவர்களாயிருந்தோம். காலம் நிறை 4
வேறினபோதோ கடவுள் தமது குமாரனை
ஸ்திரீயினிடம் பிறந்தவராகவும் நியாயப்பிர
மாணத்திற்குக்கீழ்ப்பட்டவராகவும் அனுப்
பினார்; நாம் புத்திரசுவிகாரத்தைப் பெற் 5
றுக்கொள்ளும்படி நியாயப்பிரமாணத்திற்
குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ள
வேண்டுமென்றே அப்படிச் செய்தார். நீங் 6
கள் புத்திரராயிருக்கிறபடியினால் அப்பா
பிதாவே என்று கூப்பிடும் தமது குமார
னின் ஆவியைக் கடவுள் உங்கள் இருதய
ங்களில் அனுப்பினார். ஆகையால் இனி 7
நீ அடிமையல்ல, புத்திரனே. நீ புத்திரனே
யானால் கடவுளின் மூலமாய்ச் சுதந்தரனு
மாம்.

அக்காலத்தில் நீங்கள் கடவுளை அறியா 8
மல் உள்ளபடியே கடவுளாயிராதவர்க
ளுக்கு அடிமைகளாயிருந்தீர்கள். இப் 9
பொழுதோ நீங்கள் கடவுளை அறிந்திருக்க,
அதற்குமேல் கடவுளால் அறியப்பட்டிருக்க,
பலனற்ற அற்பமான அந்தப் [2]பாலபோ
தனைகளுக்கு நீங்கள் மறுபடியும் திரும்புவா
னேன்? மறுபடியும் புதிதாய் அவைகளுக்கு
அடிமைப்பட விரும்புவானேன்? நாட்களை 10
யும் மாதங்களையும் காலங்களையும் வருஷங்
களையும் பார்க்கிறீர்களே. நான் உங்களுக்கா 11
கப்பட்ட பிரயாசம் வீணாகுமோ என்று
உங்களைப்பற்றிப் பயப்படுகிறேன்.

---

1 பஞ்சபூதியங்களுக்கு என்றும் திருப்பலசம் 2 3-ம் வச. பார்க்க.

12 சகோதரரே, என்னைப்போலாகுங்க
ளென்று உங்களை வேண்டிக்கொள்ளுகி
றேன்; நானும் உங்களைப்போலானேனே.
எனக்கு நீங்கள் அநியாயமொன்றும் செய்ய
13 வில்லை. உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி,
நான் முதலாந்தரம் உங்களுக்குச் சுவிசே
ஷத்தைப் பிரசங்கித்ததற்கு என் சரீர சுக
14 வீனமே காரணம். அப்படியிருந்தும் என்
மாம்சத்தில் உங்களுக்குச் சோதனைக்கேது
வாக நேரிட்டதை நீங்கள் அசட்டைபண்
ணவுமில்லை அரோசிக்கவுமில்லை; அதற்கு
மாறுக என்னைத் தெய்வதூதனைப்போலவும்
கிறிஸ்து இயேசுவைப்போலவும் ஏற்றுக்
15 கொண்டீர்கள். இப்பொழுதோ உங்கள்
பாக்கியக் கொண்டாட்டம் எங்கே? கூடிய
தாயிருந்தால் உங்கள் கண்களைப் பிடுங்கி
எனக்குக் கொடுத்திருப்பீர்களென்று உங்
16 களைப்பற்றிச் சாட்சி பகருகிறேன். நான்
உங்களுக்கு உள்ளதைச் சொன்னதி
னாலே உங்கள் சத்துருவாய்விட்டேனோ?
17 அவர்கள் உங்களைப்பற்றி ஆத்திரமாயிருக்கி
றார்கள்; என்றாலும் நல்மனதோடல்ல, நீங்
கள் அவர்களைப்பற்றி ஆத்திரமாயிருக்க
வேண்டுமென்றே உங்களை எங்களிடத்தி
லிருந்து பிரித்துவிட விரும்புகிறார்கள்.
18 நான் உங்களிடம் இருக்கும்பொழுது மாத்
திரமல்ல, எப்பொழுதும் நல் விஷயத்தில்
உங்களைப்பற்றி ஆத்திரமாயிருக்கிறவர்கள்
19 உண்டென்றால் நல்லதுதான். என் சிறு
பிள்ளைகளே, கிறிஸ்து உங்களில் உருவாகு
மளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்ப
20 வேதனைப்படுகிறேன்; உங்கள் விஷயத்தில்
எனக்கு வழியொன்றுந் தோன்றாதிருக்கிற
படியால் நான் இப்பொழுது உங்களிடம்
வந்திருந்து வேறு வகையாகப் பேசுவது
நலமாயிருக்குமென்றெண்ணுகிறேன்.
21 நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டி
ருக்க விரும்புகிற நீங்கள் நியாயப்பிரமா
ணம் சொல்லுகிறதைக் கேட்கவில்லையா?
22 இதை எனக்குச்சொல்லுங்கள்: ஆபிரகா
முக்கு இரண்டு குமாரர் இருந்தார்களென்று
எழுதியிருக்கிறது; ஒருவன் அடிமையான
வளிடம் பிறந்தவன், ஒருவன் சுயாதீன முள்
23 ளவளிடம் பிறந்தவன். அடிமையானவ
ளிடம் பிறந்தவன் மாம்சத்தின்படி பிறந்
தான், சுயாதீன முள்ளவளிடம் பிறந்தவன்
24 வாக்குத்தத்தத்தினால் பிறந்தான். இவை
களை உபமானங்கள்; அந்த ஸ்திரீகள் இரண்டு
உற்பாடுகளாம்: ஒன்று சீனாய்மலையிலுண்
டான ஏற்பாடு, அது அடிமைத்தனத்திற்
குள்ளாகப் பிள்ளை பெறுகிறது; அது ஆகார்
25 என்பவள்தான். ஆகார் என்பது அரபி
தேசத்திலுள்ள சீனாய்மலை; அது இப்பொழுதி
ருக்கிற எருசலேமுக்குச் சரியாகும்; இவள்
தன் பிள்ளைகளோடுகூட அடிமைப்பட்டி
ருக்கிறாள். மேலான எருசலேமோ சுயா 26
தீனமுள்ளவள், அவளே நம்மெல்லாருக்குந்
தாய்.

பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்திரு, 27
கர்ப்பவேதனையறியாதவளே, கம்பீரித்து
ஆர்ப்பரி;
வாழ்க்கைப்பட்டவள் பிள்ளைகளினும்
அனாதஸ்திரீயின் பிள்ளைகள் அதிகம்
என்று எழுதியிருக்கிறதே.

நீங்களோ, சகோதரரே, ஈசாக்கைப் 28
போல வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள்.
ஆகிலும், மாம்சத்தின்படி பிறந்தவன் ஆவி 29
யின்படி பிறந்தவனை அக்காலத்தில் எப்
படி இம்சைப்படுத்தினானோ அப்படியே
இப்பொழுதும் நடந்துவருகிறது. ஆயி 30
னும் வேதவாக்கியம் சொல்லுகிறதென்ன?
அடிமையானவனையும் அவள் மகனையும்
துரத்திவிடு; அடிமையானவளின் மகன் சுயா
தீன முள்ளவளுடைய மகனோடே சுதந்தர
வாளியாவதேயில்லை. ஆகவே, சகோதரரே, 31
நாம் அடிமையானவளின் பிள்ளைகளல்ல,
சுயாதீனமுள்ளவளின் பிள்ளைகளே.

சுயாதீனத்திற்கென்றே கிறிஸ்து நம் **5**
மைச் சுயாதீனராக்கினார்; ஆதலால் நீங்கள்
நிலைத்திருங்கள், மறுபடியும் அடிமைத்தனத்
தின் நுகத்துக்குட்படாதிருங்கள்.

இதோ, பவுலாகிய நான் உங்களுக்குச் 2
சொல்லுகிறேன்: நீங்கள் விருத்தசேதனம்
பண்ணிக்கொண்டால் கிறிஸ்துவினால் உங்க
ளுக்கு ஒரு பிரயோஜனமுமிராது. மேலும் 3
விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளுகிற
ஒவ்வொரு மனுஷனும் நியாயப்பிரமாணமுழுவ
தையும் நிறைவேற்றக் கடமைப்பட்டவ
னென்று மறுபடியும் அப்படிப்பட்டவ
னுக்குச் சாட்சியாகச் சொல்லுகிறேன்.
நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாகத் 4
தீர்க்கப்படுகிறோமென்றிருக்கிற நீங்கள்
யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்தீர்கள்.
கிருபையினின்று விழுந்தீர்கள். காங்களோ, 5
நீதி கிடைக்குமென்று ஆவியானவரைக்
கொண்டு விசுவாசத்தினால் எதிர்நோக்கி
ஆசித்துக் காத்திருக்கிறோம். கிறிஸ்து இயே 6
சுவுக்குள் விருத்தசேதனத்தினாலும் விருத்த
சேதனமில்லாமையினாலும் பலனொன்று
மில்லை, அன்பின் மூலமாய்க் கிரியை
நடப்பிக்கிற விசுவாசமே பலனுள்ளது.

நீங்கள் நன்றாய் ஓடினீர்களே; சத்தியத் 7
திற்குக் கீழ்ப்படியாமற்போக உங்களைத்

8 தடுத்தது யார்? இந்தப் போதனை உங்களை
9 அழைத்தவரால் உண்டானதல்ல. புளித்த
மாவுகொஞ்சமேயானும் பிசைந்த மாவனைத்
10 தையும் உப்பப்பண்ணும். நீங்கள் வேறு
விதமாய்ச் சிந்திக்கமாட்டீர்களென்று நான்
ஆண்டவருக்குள் உங்களைக் குறித்து நம்பிக்
கையாயிருக்கிறேன்; உங்களைக் கலங்கடிக்
கிறவன் யாராயிருந்தாலும் ஏற்ற ஆக்கினை
11 யைச் சுமப்பான். சகோதரரே, நான் இன்
னும் விருத்தசேதனத்தைப் பிரசங்கிக்கிற
வனாயிருந்தால் என் இன்னும் இம்சைக்
குள்ளாகிறேன்? அப்படியானால், சிலுவை
யைப்பற்றி வரும் இடறல் ஒழிந்துபோயி
12 ருக்குமே. உங்களைக் கலங்கடிக்கிறவர்கள்
அங்கவீனப் படுத்திக்கொள்வார்களானால்
நலமாயிருக்கும்.
13 சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்
கென்று அழைக்கப்பட்டீர்கள்; ஒன்று
மாத்திரம் கவனியுங்கள், இந்தச் சுயாதீ
னத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாகக் கை
யாடாமல் அன்பினால் ஒருவருக்கொருவர்
14 பணிவிடை செய்யுங்கள். உன்னிடத்தில்
நீ அன்பு கூருவதுபோல அயலானிடத்
திலும் அன்புகூரவேண்டுமென்கிற இந்த
ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம்
15 முழுமையும் நிறைவேறியிருக்கிறது. நீங்
கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்
தால் ஒருவராலொருவர் அழிக்கப்பட்டுப்
போகாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.
16 பின்னும் சொல்லுகிறேன்: ஆவியினால்
நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச
இச்சையை நிறைவேற்றவே மாட்டீர்கள்.
17 மாம்சம் ஆவிக்கு விரோதமாக இச்சிக்கி
றது, ஆவி மாம்சத்துக்கு விரோதமாக ஆசிக்
கிறது; நீங்கள் செய்ய விரும்புகிறவைகளைச்
செய்யாதபடிக்கு இவைகள் ஒன்றுக்
18 கொன்று விரோதமாயிருக்கின்றன. நீங்கள்
ஆவியினால் நடத்தப்படுகிறவர்களானால் நியா
யப்பிரமாணத்தின் ஆதீனத்திற்குட்பட்டவர்
19 களல்ல. மாம்சத்தின் கிரியைகளோ பிரத்தி
20 யட்சமானவை; அவையாவன: விபசாரம்
அசுத்தம் காமவிகாரம் விக்கிரகாராதனை
மாந்திரியம் பகை சண்டை வைராக்கியம்
21 கோபம் கட்சி பிரிவினை மதபேதம் | பொ
றாமைவெறிகளியாட்டு முதலானவைகளே;
இப்படிப்பட்டவைகளைச் செய்துவருகிறவர்
கள் கடவுளின் ராஜ்யத்தைச் சுதந்தரிப்ப
தில்லையென்று நான் எச்சரித்துச் சொன்னது
போல் இப்பொழுதும் உங்களுக்கு எச்சரித்
22 துச் சொல்லுகிறேன். ஆவியின் கனியோ:
அன்பு சந்தோஷம் சமாதானம் நீடிய
பொறுமை தயாளம் நற்குணம் விசுவாசம்
சாந்தம் இச்சையடக்கம்; இப்படிப்பட்ட 23
வைகளுக்கு விரோதமாகப் பிரமாண
மில்லை. கிறிஸ்து இயேசுவினுடையவர்கள் 24
தங்கள் மாம்சத்தை அதின் ஆசை இச்சைக
ளோடுகூடச் சிலுவையில் அறைந்திருக்கி
றார்கள்.
நாம் ஆவியானவரால் ஜீவித்திருந்தால் 25
ஆவியானவரால் நடக்கவும் கடவோம்.
வீண் புகழ்ச்சியை விரும்பாமலும் ஒரு 26
வரையொருவர் கோபமூட்டாமலும் ஒருவர்
மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும்
இருக்கக்கடவோம்.

சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத் **6**
தில் அகப்பட்டபோதிலுங்கூட ஆவிக்குரிய
வர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடு
அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்
ணுங்கள்; சீர்பொருந்தப்பண்ணும் நீயும்
சோதிக்கப்படாதபடி பார்த்துக்கொள். ஒரு 2
வர் பாரங்களை ஒருவர் சுமந்து இப்படியே
கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்
கள். தான் ஒன்றுமில்லாதிருந்தும் தன்னை 3
ஒருபொருட்டென்று ஒருவன் எண்ணிக்
கொண்டால் தன்னைத்தானே வஞ்சிக்கிறவ
னாவான். அவனவன் தன் தன் செய்கை 4
யையே சோதித்துப்பார்க்கக் கடவன்; அப்
பொழுது மற்றவனைப் பார்க்கும்போதல்ல
தன்னையே பார்க்கும்போது பெருமை
பாராட்ட அவனுக்கு இடமுண்டாகும்.
அவனவன் தன் தன் சுமையைச் சுமப் 5
பானே.
மேலும், திருவசன உபதேசம் பெறுகிற 6
வன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மை
களிலும் பகிர்ந்து கொடுக்கக்கடவன்.
மோசம்போகாதிருங்கள், கடவுள் தம்மைப் 7
பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன்
எதை விதைக்கிறானோ அதையே அறுப்
பான். தன் மாம்சத்தில் விதைக்கிறவன் 8
மாம்சத்திலிருந்து அழிவையறுப்பான்; ஆவி
யில் விதைக்கிறவன் ஆவியிலிருந்து நித்திய
ஜீவனையறுப்பான். நன்மை செய்கிறதில் 9
சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம்
தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்ற காலத்தில்
அறுப்போம். ஆகையால், நமக்குச் சம 10
யம் வாய்ப்பதற்குத்தக்கபடி யாவருக்கும்,
விசேஷமாக விசுவாசக்குடும்பத்தாருக்கும்,
நன்மைசெய்யக்கடவோம்.
நான் எவ்வளவு பெரிய எழுத்துக்களால் 11
என் கையாலேயே உங்களுக்கு எழுதினே
னென்று பாருங்கள். மாம்சத்தின்படி நல் 12
லவர்களாய்க் காணப்படவிரும்புகிறவர்கள்
எவர்களோ அவர்கள் தாங்கள் கிறிஸ்துவின்

சிலுவையினிமித்தம் இம்சைக்குள்ளாகாத படிக்கே விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று உங்களைக் கட்டாயம்
13 பண்ணுகிறார்கள். விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளுகிற அவர்களும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறதில்லை; அப்படியிருந்தும் அவர்கள் உங்கள் மாம்சத்தைப்பற்றிப் பெருமைபாராட்டும்படி நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள
14 வேண்டுமென்று விரும்புகிறார்கள். நாமோ நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைப்பற்றியே யல்லாமல் வேறொன்றையும்பற்றி ஒருக்காலும் பெருமைபாராட்டாதிருப்போமாக; அதன்மூலமாய் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன். விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; புது சிருஷ்டியே காரியம். இந்தப் பிரமாணத்தின்படியே நடந்துவருகிறவர்கள் எவர்களோ அவர்களுக்கும்கடவுளின் இஸ்ரவேலுக்கும் சமாதானமும் இரக்கமும் உண்டாவதாக.

இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தம் உண்டாக்காதிருப்பானாக; இயேசுவின் அக்ஷடையாளங்களை நான் என் சரீரத்தில் சுமந்துகொண்டிருக்கிறேன்.

சகோதரரே, நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியோடிருப்பதாக; ஆமேன்.

---

## THE EPISTLE TO THE EPHESIANS

# எபேசியருக்கு எழுதின நிருபம்

**1** கடவுளின் சித்தத்தினால் கிறிஸ்து இயேசுவின் அப்போஸ்தலனான பவுல் கிறிஸ்து இயேசுவுக்குள் உண்மையுள்ளவர்களாய் எபேசுவிலிருக்கிற பரிசுத்தவான்களுக்கு
2 எழுதுவது: நமது பிதாவாகிய கடவுளினிடமிருந்தும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினிடமிருந்தும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

3 நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் கடவுளும் பிதாவுமானவர் ஸ்தோத்
4 திரத்துக்குரியவர். தமது திருவுளத்திற்கிசையக் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்; தமக்குமுன்பாக நாம் பரிசுத்தமுள்ளவர்களும் மாசற்றவர்களுமாயிருப்பதற்கு அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே இவருக்குள் நம்மைத் தெரிந்
5 தெடுத்தார்; தமது தயவுள்ள சித்தத்திற்கிசைய நம்மை இயேசுகிறிஸ்துவின் மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி
6 அன்பிலே முன்குறித்தார்; பிரியமானவருக்குள் அவர் நமக்குத் தந்தருளிய தமது கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக வேண்டுமென்றே இவற்றைச்செய்தார்.

7 அவர் கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தின் மூலமாய்ப் பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு
8 உண்டாயிருக்கிறது. அந்தக் கிருபையை அவர் சகல ஞானத்தோடும் விவேகத்தோடும் நம்மிடம் பெருகப்பண்ணினார். பரலோ
9 கத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும், காலங்கள் நிறைவேறும்போது, கிறிஸ்துவுக்குள் அவர் தலைமையின்கீழ்க்கூட்டிச்சேர்க்கப்படும் உக்கிராணவிசாரணை உண்டாக வேண்டுமென்று | தமக்குள் செய்திருந்த
10 தயவுள்ள தீர்மானத்தின்படியே தமது சித்தத்தின் இரகசியத்தை நமக்கு அறிவித்தார். அவருக்குள் நாங்கள் தமது சித்தத்தின்
11 ஆலோசனைக்கிசையஎல்லாவற்றையும்நடப்பிக்கிறவருடைய தீர்மானத்தின்படியே முன்குறிக்கப்பட்டு அவருடைய சுதந்தரமாக்கப்பட்டோம். முன்னே கிறிஸ்துவை நம்பி
12 எதிர்பார்த்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாகவேண்டுமென்றே அப்படியானது. அவருக்குள் நீங்களும்
13 உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு விசுவாசிகளான போது வாக்குத்தத்தத்தின் பரிசுத்த ஆவியால் முத்திரைபோடப்பட்டீர்கள். அவ
14 ருக்குச் சொந்தமானவர்கள் மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவரே நமது சுதந்

தரத்தின் அச்சாரம்; அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக வேண்டுமென்றே அப்படியாகிறது.

15 ஆனபடியினாலே நானும் ஆண்டவராகிய இயேசுவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தையும் எல்லாப் பரிசுத்தவான்கள்மேலுமுள்ள உங்கள் அன்பையுங் கேள்விப்
16 பட்டு | இடைவிடாமல் உங்களுக்காக நன்றிசெலுத்தி என் ஜெபங்களில் உங்களை
17 நினைத்துக்கொள்ளுகிறேன். நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் கடவுளும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் முற்றும் அறிந்துகொள்வதன்மூலமாய் ஞானம் வெளிப்பாடு என்பவற்றின் ஆவியை உங்களுக்குத் தந்தருளவேண்டுமென்
18 றும், நாம் நம்மை அழைத்ததினால் நாம் நம்பி எதிர்பார்ப்பது இன்னதென்றும் பரிசுத்தவான்களிடத்தில் தமக்குள்ள சுதந்தர மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும் |
19 தமது பலத்தசத்துவத்தின் சக்திக்கிசைய விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தமது வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும் நீங்கள் அறியும்படிக்கு உங்கள் மனக்கண்களை அவர் பிரகாசிப்பிக்கவேண்டுமென்றும்
20 ஜெபஞ்செய்கிறேன். இவர் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி எல்லாத் துரைத்தனத்துக்கும் அதிகாரத்துக்கும் வல்லமைக்கும் கர்த்தத்துவத்துக்கும், இந்த யுகத்தில் மாத்திரமல்ல இனிவரும் யுகத்திலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்க
21 தாக | அவரை உன்னதங்களில் தமது வலது பாரிசத்தில் வீற்றிருக்கச்செய்து தமது வல்லமையின் மகத்துவத்தை விளங்கப்பண்ணினார். எல்லாவற்றையும் அவர் பாதங்களுக்
22 குக் கீழ்ப்படுத்தித் திருச்சபைக்கு அவரை எல்லாவற்றிற்குமேலான தலையாகத் தந்தரு
23 ளினார். அந்தத் திருச்சபை [1]எல்லா விஷயங்களிலும் எல்லாரிலும் நிரப்பப்பட்டு வருகிறவருடைய நிறைவாகிய சரீரமே.

**2** மீறுதல்களாலும் பாவங்களாலும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் உயிர்ப்பித்தார்.
2 அவைகளில் நீங்கள் ஒரு காலத்தில் இவ்வுலகத்தின் வழக்கத்திற்கேற்றபடியாகவும் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளில் இப்பொழுது பிரவர்த்திக்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்
3 துகொண்டீர்கள். அவர்களுக்குள்ளே நாமெல்லாருங்கூட ஒரு காலத்தில் நமது மாம்ச இச்சைகளில் நடந்து நமது மாம்சமும் மனதும் விரும்பினவைகளைச் செய்துவந்து சுபாவத்தினால் மற்றவர்களைப்போலவே கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். கட 4
வுளோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மிடத்தில் பாராட்டிய தமது மிகுந்த அன்பினிமித்தம் | நாம் மீறுதல்களால் 5
மரித்தவர்களாயிருக்கையிலேயே நம்மைக் கிறிஸ்துவோடுகூட உயிர்ப்பித்தார்--கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்—கிறிஸ்து 6
இயேசுவுக்குள் நம்மைக் கூடவே எழுப்பி உன்னதங்களில் கூடவே உட்காரவுஞ் செய்தார். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மி 7
டம் பாராட்டிய தயாளத்தினாலே தமது கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை இனிவரும் யுகங்களில் விளங்கப்பண்ணுவதற்காகவே இப்படிச் செய்தார்.
கிருபையினாலேயே விசுவாசத்தின் மூலமாய் 8
இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது கடவுளின் ஈவு; ஒரு 9
வரும் பெருமைபாராட்டாதபடி இது கிரியைகளினால் உண்டானதல்ல; நாம் கடவுளின் கைவேலையே; நற்கிரியைகளுக்கென்று 10
நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம், அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்.

ஆகவே, இதை நினைத்துக்கொள்ளுங் 11
கள்: ஒரு காலத்தில் மாம்சத்தின்படி புற ஜாதியாராயிருந்து மாம்சத்தில் கையினாலே செய்யப்படுகிற விருத்தசேதனமுடையவர்களால் விருத்தசேதனமில்லாதவர்களென்று சொல்லப்பட்ட நீங்கள் | அக்காலத்திலே 12
கிறிஸ்துவற்றவர்களும் இஸ்ரவேல் ஜனசமூக சிலாக்கியத்துக்குப் புறம்பானவர்களும் வாக்குத்தத்த உடன்படிக்கைகளுக்கு அந்நியரும் நன்னம்பிக்கையில்லாதவர்களும் இவ்வுலகத்திலே கடவுளற்றவர்களுமாயிருந்தீர்கள். முன்னே தூரத்திலிருந்த நீங்கள் இப் 13
பொழுதோ கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். எப் 14
படியெனில், அவரே நமது சமாதானம்; அவர் இருதிறத்தாரையும் ஒன்றாக்கிப் பகையாக நின்ற பிரிவுக்கேதுவான நடுச்சுவரைத் தகர்த்துச் | சட்டதிட்டங்களாகிய 15
நியாயப்பிரமாணத்தைத் தமது மாம்சத்தில் ஒழித்துவிட்டார்; இருதிறத்தாரையும் சமா 16
தானப்படுத்துகிறவராய்த் தமக்குள்ளே ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்துப் பகையைச்

[1] எல்லாவற்றையும் எல்லாவற்றிலும் நிரப்புகிறவருடைய என்றும் திருப்பலரகம்.

சிலுவையில் கொன்று இருநிறத்தாரையும் ஒரே சரீரத்தில் சிலுவையினால் கடவுளோடு முற்றும் ஒப்புரவாக்குவதற்கே இப்படிச்
17 செய்தார். அவர் வந்து தூரத்திலிருந்த உங்களுக்கும் சமீபத்திலிருந்தவர்களுக்கும் சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித்தார்.
18 அவர் மூலமாய் நாம் இருநிறத்தாரும் ஒரே ஆவியில் பிதாவினிடம் சேரும் பிரவேசத்தைப் பெற்றிருக்கிறோமே.
19 ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமல்ல, பரிசுத்தவான்களோடு கூட ஒரே ஜனசமூக பிரஜாமுடையவர்
20 கள், கடவுளின் வீட்டார், அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களின் அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்கள்; கிறிஸ்து
21 இயேசுதாமே கோடிக்கல். அவர்மேல் கட்டடம் ஒவ்வொன்றும் இசைவாய் இணைக்கப்பட்டு ஆண்டவருக்குள் பரிசுத்த ஆலய
22 மாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியானவரில் கடவுளின் வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள்.

**3** இதினிமித்தம், புறஜாதியாராகிய உங்கள் பொருட்டுக் கிறிஸ்து இயேசுவின் கைதி
2 யான பவுலென்ற நான்—உங்களுக்காக எனக்கு அருளப்பட்டிருக்கிற தெய்வ கிருபைக்குரிய உக்கிராண ஊழியம் இன்ன
3 தென்று கேட்டிருப்பீர்களே. அதென்னவெனில், புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரரும் ஒரே சரீரத்துக்குள்ளானவர்களும் வாக்குத்தத்தத்துக்குக் கிறிஸ்துவுக்குள் உடன்பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இரகசியம் வெளிப்பாட்டின்மூலமாய் எனக்கு அறிவிக்கப்பட்டது; இதைக்
4 குறித்து நான் மேலே சுருக்கமாய் எழுதியிருக்கிறேன்; அதை நீங்கள் வாசிக்கையில்
5 கிறிஸ்துவின் இரகசியத்தைப்பற்றிய என்
6 அறிவை அறிந்துகொள்ளலாகும்; இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவரில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல முற்காலங்களில் மனுப்புத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை.
7 கடவுளின் வல்லமையான சக்திக்கிசைய எனக்கு அருளப்பட்ட அவர் கிருபை வரத்தினால் அந்தச் சுவிசேஷத்துக்கு ஊழியக்
8 காரனானேன். கிறிஸ்துவின் ஆராயமுடியாத ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடம் சுவிசேஷமாய் அறிவிக்கிறதாகிய இந்தக் கிருபை பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய
9 எனக்கு அருளப்பட்டிருக்கிறது; கடவுள் சகல சிருஷ்டிகளையும் உண்டாக்கின தமது ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்
10 படியே | உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய நானாவித ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக,
11 எல்லாவற்றையும் சிருஷ்டித்த கடவுளுக்குள்ளே அநாதிகாலமாய் மறைபட்டிருந்த இரகசியத்தின் உக்கிராண ஊழியம் இன்னதென்று தெளிவாய்க் காட்டுவதற்கு இந்தக் கிருபை எனக்கு அருளப்பட்டிருக்கிறது.
12 கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திடநம்பிக்கையோடு கடவுளிடம் சேரும்
13 பிரவேசமுமிருக்கிறது. ஆகவே, உங்கள் நிமித்தம் நான் அநுபவிக்கிற உபத்திரவங்களினால் நீங்கள் சோர்ந்துபோகாதிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்; அவைகளே உங்கள் மகிமை—

14 இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலும் எல்லா பிதிர்த்துவத்துக்கும்
15 நாமகாரணராயிருக்கிற | பிதாவை நோக்கி
16 முழங்கால்படியிட்டு, நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும் | விசுவாசத்தி
17 னாலே உங்கள் இருதயங்களில் கிறிஸ்து வாசமாயிருக்கவும் அவர் தமது மகிமையின் ஐசுவரியத்தின்படியே உங்களுக்கு அதுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்; இதன்வழியாய் நீங்கள் அன்பிலே வேரூன்றினவர்களும் அஸ்திபாரமிடப்பட்டவர்களுமாகிச் | சகல பரிசுத்தவான்
18 களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலம் நீளம் உயரம் ஆழம் இன்னவென உணர்ந்து | அறிவுக்கெட்டாத அந்த
19 அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாக வேண்டுமென்றும் கடவுளின் சகல பரிபூரணமும் கொள்ளுமட்டும் நிரப்பப்பட வேண்டுமென்றும் இப்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

20 நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள் கிரியை நடப்பிக்கிற வல்லமையின்படி நமக்குச் செய்ய வல்லவருக்கே | திருச்
21 சபையில் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமை தலைமுறை தலைமுறைக்கும் யுகாயுகங்களாயிருப்பதாக; ஆமென்.

**4** ஆதலால், ஆண்டவருக்குள் கைதியான நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்: நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரராய் நடந்து | சகலவித மனத்தாழ்
2 மையோடும் சாந்தத்தோடும் நீடிய பொறு

மையோடும் அன்பில் ஒருவரையொருவர்
3 தாங்கிச் | சமாதானக்கட்டினால் ஆவியான
வரின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு
4 ஜாக்கிரதையாயிருங்கள். உங்கள் அழைப்
புக்குரிய ஒரே நம்பிக்கையில் நீங்கள்
அழைக்கப்பட்டதுபோல ஒரே சரீரமும்
5 ஒரே ஆவியுமுண்டு; ஒரே ஆண்டவரும்
ஒரே விசுவாசமும் ஒரே ஞானஸ்நானமும்
எல்லாருக்கும் ஒரே கடவுளும் பிதாவு
6 முண்டு; அவர் எல்லாருக்கு மேலான
வர், எல்லாரையுங்கொண்டு கிரியை நடப்
பிக்கிறவர், எல்லாருக்குள்ளும் இருக்கிற
வர்.

7 கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்
தக்கபடி நம்மில் ஒவ்வொருவனுக்கும்
8 கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்
சொல்லுகிறது இதுதான்:

அவர் உன்னதத்திற்கு ஏறிச்
சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி
மனுஷருக்கு வரங்களையளித்தார்

9 என்பதே. ஏறினார் என்பதினாலே அவர்
பூமியின் தாழ்விடங்களில் இறங்கியிருந்
10 தாரென்று விளங்குகிறதல்லவா? இறங்
கினவரும் எல்லாவற்றையும் நிரப்பும்
படி எல்லா வானங்களுக்கு மேலே உன்
11 னதமாக ஏறினவரும் ஒருவரே. அவரே
சிலரை அப்போஸ்தலராகவும் சிலரைத்
தீர்க்கதரிசிகளாகவும் சிலரைச் சுவி
சேஷகராகவும் சிலரை மேய்ப்பராகவும்
12 போதகராகவுந் தந்தருளினார். நாம் அனை
வரும் தெய்வ குமாரனைப்பற்றும் விசுவாசத்
திலும் முற்றறிவிலும் ஒருமைப்பட்டவர்க
ளாகிப் பூரண புருஷனுகும் வரைக்கும்,
கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அள
13 வுக்கு வந்தெட்டும்வரைக்குமே, திருப்பணி
விடை வேலைக்கென்று, கிறிஸ்துவின் சரீர
மாகிய சபையை ஊன்றக் கட்டுவதற்கென்
றே, பரிசுத்தவான்களைப் பக்குவப்படுத்தும்
14 பொருட்டு இவர்களைத் தந்தருளினார். நாம்
இனி மனுஷரின் சூதினாலும் வஞ்சனைக்கே
துவான தந்திரத்தினாலும் எவ்விதப் போதகக்
காற்றினும் அலைகள்போல் அடிபட்டுச்
சுழன்று திரிந்து குழந்தைகளாயிராமல்,
15 அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு
தலையாகிய கிறிஸ்துவுக்குள்ளாக எல்லாவற்
றிலேயும் நாம் வளர்ந்துவரும்படி அப்படிச்
16 செய்தார். அவரிலிருந்து முழுச் சரீரமும்
உதவிபுரிகிற ஒவ்வொரு கணுவினாலும்
இசைவாய் இணைத்து ஒன்றுபோல் சேர்க்கப்
பட்டுவருகிறது; அதினால் ஒவ்வொரு அவ
யவமும் தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியை
செய்கிறபடியே அது அன்பிலே நிலைத்து
வளரும்படி சரீர வளர்ச்சியுண்டாகச் செய்
கிறது.

17 ஆதலால் நான் ஆண்டவருக்குள் சாட்சி
பகர்ந்து சொல்லுகிறேன்: புறஜாதியார் தங்
கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல
18 நீங்கள் இனி நடக்கக்கூடாது. அவர்கள்
மனதில் அந்தகாரப்பட்டுத் தங்கள் இருத
யக் கடினத்தினிமித்தம் தங்களிலிருக்கும்
அறியாமை காரணமாகக் கடவுளின் ஜீவ
19 னுக்கு அந்நியராகி | உணர்வில்லாதவர்க
ளாய்ச் சகலவித அசுத்தங்களையும் பேரா
சையோடு நடப்பிக்கும்படி தங்களைக் காம
விகாரத்திற்கு ஒப்புக்கொடுத்துவிட்டார்கள்.
20 நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்
21 றுக்கொள்ளவில்லை. நீங்கள் அவர் வார்த்
தையைக் கேட்டு இயேசுவில் சத்தியம்
இருக்கிறபடியே அவருக்குள் போதிக்கப்
பட்டீர்களே. அந்தப்படியே மோசம்போக்
22 கும் இச்சைகளின்படி கெட்டுப்போகிற
பழைய மனுஷனை, முன்னை நடக்கைக்குரி
23 யவனையே, நீங்கள் களைந்துபோடவும் | உங்
24 கள் மனதின் ஆவியில் புதுப்பிக்கப்பட
வும் | மெய்யான நீதியிலும் பக்தியிலும் கட
வுளுக்கிசையச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய
மனுஷனைத் தரித்துக்கொள்ளவும் வேண்டு
மென்றே போதிக்கப்பட்டீர்கள்.

25 ஆகவே, நாம் ஒருவருக்கொருவர் அவய
வங்களாயிருக்கிறபடியால் நீங்கள் பொய்
யைக் களைந்து அவனவன் அயலானோடு
மெய்யைப் பேசவேண்டும். கோபங்
26 கொண்டாலும் பாவஞ் செய்யாதிருங்கள்;
சூரியன் அஸ்தமிக்குமுன் உங்கள் கோபம்
27 ஆறுவதாக. பிசாசுக்கு இடங்கொடாமலு
28 மிருங்கள். திருடுகிறவன் இனித் திருடா
மல், குறைவுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்க
தாகத் தனக்கு இருக்கும்படி, தன் கைக
ளால் நல்ல வேலைசெய்து உழைக்கக்கட
29 வன். ஆகாத வார்த்தையொன்றும் உங்
கள் வாயிலிருந்து வரவேண்டாம்; அவசி
யத்துக்கு ஏற்றபடி பக்திவிருத்திக்கேதுவான
நல்வார்த்தை உண்டானால் அதையே கேட்
கிறவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கும்படி
30 பேசுங்கள். நீங்கள் மீட்கப்படும் நாளுக்
கென்று முத்திரையாகப் பெற்றதான கட
வுளின் பரிசுத்தஆவியைத் துக்கப்படுத்தாதிருங்
31 கள். சகலவித கசப்பும் மூர்க்கமும் கோப
மும் கூக்குரலும் தூஷணமும் எவ்விததுர்க்
குணத்தோடுங்கூட உங்களை விட்டு அகற்றப்
32 படக்கடவது. ஒருவருக்கொருவர் தயாளமா
யும் மனஉருக்கமாயுமிருங்கள்; கிறிஸ்துவுக்
குள் கடவுள் உங்களுக்கு மன்னித்ததுபோல
நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

**5** ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகள்
போல் கடவுளைப் பார்த்து நடக்கிறவர்களா
2 குங்கள். கிறிஸ்து நம்மில் அன்புகூர்ந்து
நமக்காகத் தம்மைக்கடவுளுக்குச் சுகந்த
வாசனையான காணிக்கையாகவும் பலியாக
வும் ஒப்புக்கொடுத்ததுபோல நீங்களும் அன்
பிலே நடந்துகொள்ளுங்கள்.
3 வேசித்தனம் சகலவித அசுத்தம் பொரு
ளாசை ஆகிய இவற்றின் பேர் முதலாய்
உங்களுக்குள் சொல்லப்படவுங்கூடாது,
இதுவே பரிசுத்தவான்களுக்குப் பொருந்து
4 வது; அப்படியே வெட்கக்கேடும் புத்தியீனப்
பேச்சும் பரியாச வார்த்தையுந் தகாது;
5 நன்றிசெலுத்தலே தகும். வேசிக்கள்ளரா
வது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக்கா
ரனாகிய பொருளாசைக்காரனாவது கிறிஸ்து
வுக்கும் கடவுளுக்குமுரிய ராஜ்யத்தில் சுதந்
தர மடைவதில்லை யென்பது உங்களுக்குத்
6 தெரியுமே. இவைகளினிமித்தம் கீழ்ப்படி
யாமையின் பிள்ளைகள்மேல் கடவுளின்
கோபாக்கினை வரும்; ஆகவே நீங்கள் எவ
னுடைய வீண் வார்த்தைகளினாலும் மோசம்
7 போகவேண்டாம். அவர்களோடு நீங்கள்
8 பங்காளிகளாகவேண்டாம். நீங்கள் ஒரு
காலத்தில் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்
பொழுதோ ஆண்டவருக்குள் வெளிச்சமா
யிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய்
9 நடந்துகொள்ளுங்கள்—வெளிச்சத்தின் கனி
சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மை
10 யிலும் விளங்கும்—ஆண்டவருக்குப் பிரிய
மானது இன்னதென்று நீங்கள் சோதித்தறி
11 யுங்கள். கனியற்ற அந்தகாரக் கிரியை
களுக்கு உடன்பங்காளிகளாகவேண்டாம்,
அவைகளைக் கடிந்துகொள்ளவே வேண்டும்.
12 அவர்கள் மறைவில் செய்கிறவைகளைச்
13 சொல்லுகிறதும் அவலட்சணமே. வெளிச்
சத்தினால் கடிந்துகொள்ளப்படுகிறவையெல்
லாம் வெளியாக்கப்படுகின்றன; வெளியாக்
14 கப்படுகிறதெல்லாம் வெளிச்சமாம். ஆத
லால்,

தூங்குகிறவனே, விழி,
மரித்தோரைவிட்டு எழுந்திரு,
அப்பொழுது கிறிஸ்து உன்மேல் பிரகா
சிப்பார்

என்று சொல்லியிருக்கிறார்.

15 ஆதலால், நீங்கள் விவேகமற்றவர்களா
யல்ல விவேகமுள்ளவர்களாயிருந்து எப்
படி நடந்துகொள்ளுகிறீர்களென்பதைப்
பற்றித் திட்டமாய்ப் பார்த்துக்கொள்ளுங்
16 கள். காலத்தைத் தப்பவிடாமல் பிரயோ
ஜனப்படுத்திக்கொள்ளுங்கள்; நாட்கள்
17 பொல்லாதவைகள். ஆகையால் நீங்கள்
மதியற்றவர்களாயிராமல் ஆண்டவரின் சித்த
மின்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்.
18 துன்மார்க்கத்திற்கேதுவான மதுபான வெறி
கொள்ளாமல் ஆவியினால் நிரப்பப்படுங்
19 கள்; அப்பொழுது சங்கீதங்களினாலும் கீர்த்
தனைகளினாலும் அருட்பாடல்களினாலும்
ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு உங்
கள் இருதயத்தில் ஆண்டவரைப்பாடிக்
20 கீர்த்தனம்பண்ணி, நமது ஆண்டவராகிய
இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்
பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவா
21 கிய கடவுளுக்கு நன்றிசெலுத்திக் | கிறிஸ்து
வுக்குப் பயப்படும் பயத்தோடு ஒருவருக்
கொருவர் அடங்கியிருப்பீர்கள்.

22 ஆண்டவருக்கு அடங்கியிருக்கிறதுபோல
மனைவிகள் தங்கள் புருஷருக்கு அடங்கி
23 யிருக்கவேண்டும். கிறிஸ்து சபைக்குத்
தலையாயிருக்கிறது போலவே புருஷனும்
மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே
24 சரீரத்திற்கு இரட்சகர். சபை கிறிஸ்து
வுக்கு அடங்கியிருக்கிறதுபோல மனைவிக
ளும் புருஷருக்கு எக்காரியத்திலும் அடங்கி
25 யிருக்கவேண்டும். கிறிஸ்து சபையில்
அன்புகூர்ந்து தம்மைத்தாமே அதற்காக
ஒப்புக்கொடுத்ததுபோல, புருஷர்களே,
26 மனைவிகளில் அன்புகூருங்கள். திருச்சபை
யைக் கரைதிரைமுதலானவைகள் ஒன்று
மில்லாததாய்ப் பரிசுத்தமும் மாசற்றதும்
மகிமையுள்ளதுமாகத் தமக்குமுன் நிறுத்திக்
கொள்ளவேண்டுமென்று, திருவசனத்தோடு
27 கூடிய தண்ணீர் முழுக்கினால் அதைச்
சுத்திகரித்துப் பரிசுத்தமாக்குவதற்கே தம்
28 மை ஒப்புக்கொடுத்தார். அப்படியே புருஷ
ரும் தங்கள் சரீரங்களில் அன்புகூருகிறது
போலவே தாங்கள் மனைவிகளிலும் அன்பு
கூரக் கடமைப்பட்டிருக்கிறார்கள். தன்
மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்
தானே அன்புகூருகிறான். தன் சொந்த
29 மாம்சத்தை ஒருவனும் ஒருக்காலும் பகைத்
ததில்லை; கிறிஸ்து திருச்சபையைப்
போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல ஒவ்
வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்
துக் காப்பாற்றுகிறான். நாம் அவர் சரீரத்
30 தின் அவயவங்கள். இதினிமித்தம் ஒரு
31 வன் தன் தகப்பனையும் தன் தாயையும்
விட்டுத் தன் மனைவியோடு இசைந்திருப்
பான், இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்
கள். இந்த இரகசியம் பெரிது; நான்
32 சொல்வதோ கிறிஸ்துவையும் திருச்சபையை
யும் குறிப்பதாம். எப்படியும் உங்களில்
33 ஒவ்வொருவனும் தன்னில் அன்புகூருகிறது
போல் தன் மனைவியிலும் அன்புகூரக்கட

வன்; மனைவியோ புருஷனிடம் பயபக்தியா
யிருக்கக்கடவள்.

6 பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு
ஆண்டவருக்குள் கீழ்ப்படியுங்கள், இது
2 தான் நியாயம். நீ நன்றியிருப்பதற்கும் பூமி
யில் உனக்குத் தீர்க்காயுள் இருப்பதற்
3 கும் | உன் தகப்பனையும் தாயையும் கனம்
பண்ணவேண்டுமென்பதே வாக்குத்தத்தத்
4 தோடுகூடிய முதல் கற்பனை. பிதாக்களே,
நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்
படுத்தாமல் ஆண்டவரின் சிட்சையிலும்எச்
சரிப்பிலும் அவர்களை வளர்த்துவாருங்கள்.
5 வேலைக்காரரே, நீங்கள் கிறிஸ்துவுக்குக்
கீழ்ப்படிகிறதுபோல சரீரவிஷயத்தில் உங்
கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கும்
பயத்தோடும் நடுக்கத்தோடும் கபடற்ற மன
6 துள்ளவர்களாய்க் கீழ்ப்படியுங்கள். எப்
படியெனில், மனுஷருக்குப் பிரியமாயிருக்க
விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழி
யஞ்செய்யாமல் கிறிஸ்துவின் ஊழியக்கார
ராக மனப்பூர்வமாய்க் கடவுளின் சித்தப்படி
7 செய்யுங்கள். மனுஷருக்கென்றல்ல ஆண்
டவருக்கென்றே நல்மனதோடு ஊழியஞ்
8 செயயுங்கள்; அடிமையானாலும் சுயாதீனனா
னாலும் அவனவன் செய்கிற நன்மையின்
படியே ஆண்டவரிடம் பலனை அடைவா
9 னென்று அறிந்துகொள்ளுங்கள். எஜமான்
களே, நீங்களும் வேலைக்காரருக்கு அப்
படியே செய்யுங்கள்; அவர்களுக்கும் உங்க
ளுக்கும் எஜமானனவர் பரலோகத்தில்
இருக்கிறாரென்றும் அவரிடம் பட்சபாத
மில்லையென்றும் அறிந்து பயமுறுத்துவதை
விட்டுவிடுங்கள்.
10 கடைசியாக, ஆண்டவரிலும் அவர் சத்து
வத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.
11 நீங்கள் பிசாசின் தந்திரங்களுக்கு எதிர்த்து
நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி கட
வுளின் சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்
12 கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்
தோடும் இரத்தத்தோடுமல்ல துரைத்தனங்க
ளோடும் அதிகாரங்களோடும் இவ்வந்த
காரத்தின் லோகாதிபதிகளோடும் ஆகாய
மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிக
13 ளோடும் நமக்குப் போராட்டமுண்டு. ஆகை
யால் தீங்குநாளிலே நீங்கள் எதிர்த்துநிற்க
வும் எல்லாவற்றையுஞ்செய்து முடித்தவர்
களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்
படி கடவுளின் சர்வாயுதவர்க்கத்தையும்
எடுத்துக்கொள்ளுங்கள். ஆகவே, சத்தி 14
யத்தால் உங்கள் அரையைக் கட்டிக்
கொண்டவர்களாயும் நீதியின் மார்க்கவசத்
தைத் தரித்துக்கொண்டவர்களாயும் | சமா 15
தானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம்
என்னும் பாதரட்சையைக் காலில் தொடுத்
துக்கொண்டவர்களாயும் | பொல்லாங்கன் 16
எய்யும் அக்கினியஸ்திரங்களையெல்லாம்
அவித்துப்போடத்திராணியுள்ளவர்களாகும்
படி எல்லாவற்றிலும் விசுவாசமென்னும்
கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களா
யும் நில்லுங்கள். இரட்சணியமென்னும் 17
தலைச்சிராவையும் தெய்வவசனமாகிய ஆவி
யின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்
கள். எந்தச்சமயத்திலும் சகலவித ஜெபத் 18
தோடும் விண்ணப்பத்தோடும் ஆவியான
வரில் ஜெபம்பண்ணிக்கொண்டு அதின்
பொருட்டு விடாமுயற்சியோடும் சகல பரி
சுத்தவான்களுக்காகவும் செய்யும் விண்ணப்
பத்தோடும் விழித்திருங்கள். சுவிசேஷத் 19
திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற
ஸ்தானாபதியாகிய நான் பேசவேண்டியபடி
அதில் தைரியப்பட்டுப் பேசத்தக்க
தாக | நான் என் வாயைத் திறக்கும்போது 20
சுவிசேஷத்தின் இரகசியத்தைத் தைரிய
மாய் அறிவிக்கிறதற்கு வாக்குவரம் எனக்
குக் கொடுக்கப்படும்படி எனக்காகவும்
ஜெபஞ்செய்யுங்கள்.
என் காரியங்களையும் நான் என்ன செய் 21
கிறேன் என்பதையும் நீங்கள் அறியும்படி
பிரியமான சகோதரனும் ஆண்டவருக்குள்
உண்மையுள்ள ஊழியனுமாயிருக்கிற
தீகிக்கு எல்லாவற்றையும் உங்களுக்குத்
தெரிவிப்பான். இதன்பொருட்டே, நீங் 22
கள் எங்கள் செய்திகளை அறியவும் அவன்
உங்கள் இருதயங்களுக்கு ஆறுதல்செய்ய
வும் வேண்டுமென்றே, அவனை உங்களிடம்
அனுப்புகிறேன்.
பிதாவாகிய கடவுளினிடமிருந்தும் ஆண் 23
டவராகிய இயேசுகிறிஸ்துவினிடமிருந்தும்
சகோதரருக்குச் சமாதானமும் விசுவாசத்
தோடு கூடிய அன்பும் உண்டாவதாக.
நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவில் 24
அழியாத அன்புவைத்திருக்கிற யாவரோடும்
கிருபை இருப்பதாக; ஆமேன்.

# THE EPISTLE TO THE PHILIPPIANS

# பிலிப்பியருக்கு எழுதின நிருபம்

1 கிறிஸ்து இயேசுவின் அடியாரான பவுலும் தீமோத்தேயுவும் பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தவான்களாயிருக்கிற அனைவருக்கும் சபையின் அத்தியட்சருக்கும் உதவிக்காரருக்குங்கூட
2 எழுதுவது: நமது பிதாவாகிய கடவுளிடமிருந்தும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினிடமிருந்தும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.
3 நான் உங்களை நினைக்கும்போதெல்லாம்
4 என் கடவுளுக்கு நன்றிசெலுத்துகிறேன். நான் ஜெபஞ்செய்யும்போதெல்லாம் உங்கள் அனைவருக்காகவும் எப்போதும் சந்தோஷத்
5 தோடு ஜெபஞ்செய்து, முதல்நாள் தொடங்கி இந்நாள்வரைக்கும் நீங்கள் சுவிசேஷ பிரபல்யத்திற்கு உடன் பங்காளிகளானவர்க
6 ளென்று நன்றி செலுத்துகிறேன்; உங்களில் நற்கிரியை ஆரம்பித்தவர் கிறிஸ்து இயேசுவின் நாள் மட்டாக அதை முடிய நடத்துவாரென்று திடநம்பிக்கையாயிருக்கிறேன்.
7 என் கட்டுகளிலும் நான் சுவிசேஷத்திற்காக உத்தரவு சொல்லி அதை உறுதிப்படுத்துவதிலும் நீங்கள் அனைவரும் என்னோடு இருபையில் பங்குடையவர்களென்பதினிமித்தம் உங்களை என் இருதயத்தில் வைத்துக்கொண்டிருக்கிறேன்; ஆதலால் உங்களெல்லாரையும்பற்றி நான் இப்படி நினைக்கிறது
8 எனக்கு நியாயந்தான். கிறிஸ்து இயேசுவின் உருக்கமான அன்பினாலே உங்களெல்லார்மேலும் எவ்வளவோ வாஞ்சையாயிருக்கிறேன் என்பதற்கு கடவுளே என் சாட்சி.
9 நான் ஜெபித்துவருவதாவது: வேறுபடுகிறவற்றை நீங்கள் பகுத்தறியும்படி உங்கள் அன்பு முற்றறிவிலும் எல்லா உணர்விலும்
10 இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவேண்டுமென்பதே; அப்பொழுது நீங்கள், கடவுளுக்கு மகிமையும் புகழுமுண்டாக, இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால்
11 நிறைந்தவர்களாய்க் | கிறிஸ்துவின் நாளுக்கென்று களங்கமில்லாதவர்களும் இடறலுண்டாக்காதவர்களுமாயிருப்பீர்கள்.
12 சகோதரரே, எனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷ பிரபல்யத்திற்கு ஏதுவாயினவென்று நீங்கள் அறிந்துகொள்ள விரும்புகிறேன். என் கட்டுகள் கிறிஸ்துவுக்குள்
13 ளான கட்டுகளென்று ராஜசைனியத்தாருக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் பகிரங்கமாகிவிட்டது; ஆகவே சகோதரரில் மிகுதி
14 யானவர்கள் என் கட்டுகளாலே ஆண்டவரில் திடநம்பிக்கைகொண்டு பயமில்லாமல் கடவுளின் வார்த்தையைச் சொல்லும்படி முன்னிலும் அதிகத் தைரியமாயிருக்கிறார்கள். சிலர் பொறுமையினாலும் விரோதத்தி
15 னாலும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள்; சிலரோ நல்மனதோடு பிரசங்கிக்கிறார்கள்.
16 சுவிசேஷத்திற்காக நான் உத்தரவு சொல்ல ஏற்படுத்தப்பட்டவனென்று அறிந்து சிலர் அன்பினாலே கிறிஸ்துவை அறிவிக்கிறார்கள்.
17 சிலரோ என் கட்டுகளோடு உபத்திரவத்தையுங் கூட்ட நினைத்து நல்லெண்ணத்தோடு அறிவியாமல் போட்டியாக அறிவிக்கிறார்கள். இதனாலென்ன?
18 மாயத்தினாலாவது உண்மையினாலாவது எப்படியாவது கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார்; அதில் சந்தோஷப்படுகிறேன், இன்னமும் சந்தோஷப்படுவேன்.
19 அது உங்கள் வேண்டுதலினாலும் இயேசுகிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியினாலும் எனக்கு இரட்சிப்பாக முடியுமென்று அறிவேன்.
20 நான் ஒன்றிலும் வெட்கப்பட்டுப்போகாமல் எப்பொழுதும் போல இப்பொழுதும் எல்லாத் தைரியத்தோடும் ஜீவனாலாகிலும் மரணத்தினாலாகிலும் கிறிஸ்து
21 என் சரீரத்திலே மகிமைப்படுவாரென்று எனக்குண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் இசைவாய் அப்படி முடியுமென்று அறிவேன். எனக்கு ஜீவிப்
22 பது கிறிஸ்து, மரிப்பது ஆதாயம். ஆயினும் சரீரத்தில் ஜீவிப்பதே என் வேலைக்குப் பலனைத் தருமேயானால் நான் தெரிந்துகொள்ள வேண்டியது இன்னதென்று அறியேன்.
23 இருபக்கங்களிலும் நான் நெருக்கப்படுகிறேன்; தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவோடிருக்க எனக்கு ஆசையுண்டு, அது மிகவும் அதிக நலமாயிருக்கும்.
24 அப்படியிருந்தும், நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்கள் நிமித்தம் அதிக அவசியம்.
25 இந்த நிச்சயத்தையுடையவனாய் நான் அறிவது யாதெனில், நான் மறுபடியும் உங்களிடம்

வருகிறதினால் நீங்கள் என்னைப்பற்றிப்
பாராட்டும் பெருமை கிறிஸ்து இயேசுவுக்
26 குள் பெருகும்படி | உங்கள் விசுவாசத்தின்
விர்த்திக்காகவும் சந்தோஷத்துக்காகவும்
நான் தங்குவேன், உங்கள் அனைவரோடும்
கூடத் தங்கியிருப்பேன் என்பதே.
27 நான் வந்து உங்களைக் கண்டாலும் நான்
வராமலிருந்தாலும் நீங்கள் ஒரே மனதுள்ள
வர்களாய்ச் சுவிசேஷத்தின் விசுவாசத்திற்
காக ஒத்துப் போராடி, எதிர்க்கிறவர்கள்
நிமித்தம் ஒன்றிலும் மிரளாதவர்களாய்
ஒரே ஆவியில் நிலைத்திருக்கிறீர்களென்று
உங்களைப்பற்றிய சங்கதிகளை நான் கேள்
விப்படத்தக்கதாக நீங்கள் கிறிஸ்துவின்
சுவிசேஷத்திற்குப் பாத்திரராகமாத்திரம்
நடந்துகொள்ளுங்கள்.
28 நீங்கள் அப்படி மிரளாத நிலைத்திருப்பது
அவர்கள் அழிந்துபோகிறதற்கும் நீங்கள்
இரட்சிக்கப்படுகிறதற்கும் அத்தாட்சியாம்;
29 இது கடவுளின் செயலே. எப்படியெனில்,
கிறிஸ்துவில் விசுவாசம் வைக்க மாத்திரமல்ல
அவர்நிமித்தம் பாடுபடவும் நீங்கள் கிறிஸ்து
30 வினிமித்தம் அருள் பெற்றீர்கள். நீங்கள்
என்னிடத்தில் கண்டதும் எனக்குண்
டென்று இப்பொழுது கேள்விப்படுகிறது
மான அதேபோராட்டம் உங்களுக்கு
முண்டு.

**2** ஆதலால் கிறிஸ்துவுக்குள் யாதொரு
தைரியப்படுத்தலும் அன்பினால் யாதொரு
உற்சாகப்படுத்தலும் ஆவியினாலே யாதொரு
ஐக்கியமும் யாதொரு உருக்கமான பட்ச
2 மும் இரக்கமும் இருக்குமேயானால் | என்
சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். நீங்கள்
அதே சிந்தையும் அதே அன்புமுள்ளவர்க
ளாகி ஒரே மனதுடையவர்களாய் ஒன்
3 றையே சிந்தியுங்கள். கட்சியினிமித்தமாவது
வீண் பெருமையினாலாவது ஒன்றையுஞ்
செய்யாமல் மனத்தாழ்மையினாலே ஒருவரை
யொருவர் தங்களிலும் மேலானவர்களாக
4 எண்ணுங்கள். அவனவன் தனக்கானவை
களையல்ல பிறருக்கானவைகளையும் நோக்க
5 வேண்டும். கிறிஸ்து இயேசுவினுள்ள சிந்
தையே உங்களிலும் இருக்கக்கடவது;
6 அவர் கடவுளின் ரூபமாயிருக்கையில் கடவு
ளுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளைப்
7 பொருளாக எண்ணுமல் | தம்மைத்தாமே
வெறுமையாக்கி மனுஷ சாயலாக வந்து
8 அடிமையின் ரூபத்தை யெடுத்தார். அவர்
மனுஷ கோலமாய்க் காணப்பட்டு மரண
பரியந்தம், சிலுவையின் மரணபரியந்தமும்,
கீழ்ப்படிந்தவராகித் தம்மைத்தாமே தாழ்த்
தினார். ஆனதுபற்றி இயேசுவின் நாமத்தில் 9
வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோரு
டைய முழங்கால்யாவும் முடங்கும்படிக்
கும் | இயேசு கிறிஸ்து ஆண்டவரென்று 10
நாவுகள் யாவும் பிதாவாகிய கடவுளின் மகி
மைக்கென்று அறிக்கை பண்ணும் படிக்
கும் | கடவுள் அவரை உயர்த்தி எல்லா 11
நாமத்திற்கு மேலான நாமத்தை அவருக்குத்
தந்தருளினார்.
ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, 12
நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிந்ததுபோல
நான் சமீபத்திலிருக்கும்பொழுது மாத்திர
மல்ல நான் தூரத்திலிருக்கிற இப்பொழுதும்
அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள்
இரட்சிப்பு நிறைவேற உழையுங்கள். நீங 13
கள் சித்தங்கொள்ளவும் உழைக்கவும் செய்
கிறவர் கடவுளே; தமது தயவுள்ள சித்தம்
நிறைவேறவே இப்படிச் செய்கிறார். நீங்கள் 14
முறுமுறுக்காமலும் சந்தேகப்படாமலும்
எல்லாவற்றையுஞ் செய்யுங்கள். அப்படிச் 15
செய்வீர்களானால் ஜீவவசனத்தை உயர்த்து
கிறவர்களாய் உலகத்தில் சுடர்களைப்போலக்
காணப்படுகிற நீங்கள் கோணலும் மாறு
பாடுமுள்ள சந்ததியின் நடுவில் குற்றமற்ற
வர்களும் கபடற்றவர்களும் கடவுளின்
மாசற்ற பிள்ளைகளுமாவீர்கள். நான் வீணாக 16
ஓடினது மில்லை, வீணாக உழைத்ததுமில்லை
யென்று நான் கிறிஸ்துவின் நாளுக்கென்று
பெருமைபாராட்ட இதெல்லாம் வதுவாகும்.
அதுமாத்திரமல்ல, உங்கள் விசுவாசத்தின் 17
பலியோடும் ஆராதனையோடும் நான் ஊற்றப்
பட்டுப்போனாலும் நான் சந்தோஷப்பட
வேன், உங்களனைவரோடும் சந்தோஷப்பட
வேன். அப்படியே நீங்களும் சந்தோ 18
ஷப்படுங்கள், என்னோடு சந்தோஷப்
படுங்கள்.
நானும் உங்கள் செய்திகளையறிந்து தைரி 19
யங்கொள்ளும்படி தீமோத்தேயுவைச் சீக்கி
ரம் உங்களிடம் அனுப்பலாமென்று ஆண்
டவராகிய இயேசுவுக்குள் நன்னம்பிக்கை
யாயிருக்கிறேன். உங்கள் காரியங்களில் 20
உண்மையாய்க் கவலைப்படுகிறதற்கு அதே
மனதுள்ளவன் வேறெருவனும் என்னிடத்
திலில்லை. அவர்களெல்லாரும் கிறிஸ்து இயே 21
சுவுக்கானவைகளைத் தேடாமல் தங்களுக்
கானவைகளையே தேடுகிறார்கள். பிள்ளைதகப் 22
பனுக்குச் செய்வதுபோல அவன் என்னோடு
கூடச் சுவிசேஷத்தினிமித்தம் தொண்டு
செய்தானென்று அவன் உத்தமத்தை
அறிந்திருக்கிறீர்கள். ஆகவே, என் காரியங் 23
கள் எப்படி முடிவாகுமென்று நான் அறிந்த
வுடனே அவனை அனுப்பலாமென்றிருக்கி

24 நேன். நானும் சீக்கிரத்தில் வருவேனென்று
ஆண்டவருக்குள் நிடம்பிக்கையாயிருக்கி
25 நேன். எப்பாப்பிரோதித்துவை உங்களி
டம் அனுப்புவது அவசியமென்றெண்ணி
னேன். அவன் எனக்குச் சகோதரன்,
உடன் ஊழியன், உடன் சேவகன்; உங்க
ளுக்கோ ஸ்தானபதியும் என் குறைச்சலில்
26 எனக்கு உதவி செய்தவனுமானவன். உங்
கள் எல்லார்மேலும் வாஞ்சையுள்ளவன்,
தான் வியாதிப்பட்டதை நீங்கள் கேள்விப்
பட்டதினாலே மிகவும் வியாகுலப்படுகிற
27 வன். அவன் வியாதிப்பட்டு மரணத்தருவா
யிலிருந்தது மெய்தான். கடவுளோ அவ
னுக்கு இரங்கினார்; அவனுக்குமாத்திரமல்ல,
துக்கத்தின்மேல் துக்கம் உண்டாகாதபடி
28 எனக்கும் இரங்கினார். ஆகையால் நீங்கள்
அவனைக்கண்டு மறுபடியும் சந்தோஷப்பட
வும் என் துக்கங்குறையவும் அவனை அதிக
29 ஆத்திரமாய் அனுப்பினேன். நீங்கள் ஆண்
டவருக்குள் எல்லா சந்தோஷத்தோடும்
அவனை ஏற்றுக்கொள்ளுங்கள்; இப்படிப்
பட்டவர்களை மதிப்பாக எண்ணுங்கள்.
30 நீங்கள் எனக்குச் செய்யும் உதவியில் குறை
வாயிருந்ததை நிறைவாக்கும்படி அவன் தன்
பிராணனையும் பாராமல் கிறிஸ்துவின்
வேலைக்காக மரணத்தருவாயினுமிருந்தான்.

**3** கடைசியாக என் சகோதரரே, ஆண்
டவருக்குள் சந்தோஷப்படுங்கள். அதே
காரியங்களையே எழுதுவது எனக்குக் கஷ்ட
மல்ல, உங்களுக்கோ அது நலம்.
2 நாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்,
பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கை
யாயிருங்கள், சேதனஞ் செய்கிறவர்களுக்கு
3 எச்சரிக்கையாயிருங்கள்; விருத்தசேதன
முள்ளவர்கள் நாமே. நாம் தெய்வ ஆவியி
னால் ஆராதனை செய்கிறோம், கிறிஸ்து இயேசு
வில் பெருமைபாராட்டுகிறோம். மாம்சத்
4 தில் நாம் நம்பிக்கைவைக்கிறதில்லை. மாம்
சத்தில் நம்பிக்கைவைக்கிறதுண்டானால்
நானும் வைக்கலாம்; ஒருவன் மாம்சத்தில்
நம்பிக்கையாயிருக்க நினைத்தால் நான் அதிக
5 மாய் அப்படி நினைக்கலாம். நான் எட்
டாம்நாளில் விருத்தசேதனம் பெற்றவன்,
இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்
திரத்தான், எபிரேயரில் பிறந்த எபிரேயன்,
நியாயப்பிரமாண விஷயத்தில் பரிசேயன்;
6 பக்திவைராக்கிய விஷயத்தில் திருச்சபையை
இம்சைப்படுத்தினவன், நியாயப்பிரமாணத்
தற்குரிய நீதியின் விஷயத்தில் குற்றமற்ற
வன். அப்படி யெல்லாமிருந்தும் எனக்கு 7
லாபமாயிருந்தவைகளைக் கிறிஸ்துவினிமித்
தம் நஷ்டமென்றெண்ணினேன். அது 8
மாத்திரமல்ல, என் ஆண்டவராகிய கிறிஸ்து
இயேசுவை அறிகிற அறிவின் மேன்மையி
னிமித்தம் எல்லாவற்றையும் நஷ்டமென்று
எண்ணிவருகிறேன். அவர்நிமித்தம் எல்லா
வற்றையும் நஷ்டமாக இழந்தேன், அவற்
றைக் குப்பையாக எண்ணிவருகிறேன்.
நான் கிறிஸ்துவைலாபமாகப் பெற்றுக்கொள் 9
வதற்கும், நியாயப்பிரமாணத்தின் வழியாய்
வருகிற சுயநீதியை உடையவனுயிராமல்,
கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் வரு
கிறநீதியை, விசுவாசத்தின்மூலமாய்க் கடவுளி
லிருந்து வருகிற நீதியையே, உடையவனுய்க்
கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்
படுவதற்குமே இப்படி எண்ணிவருகிறேன்.
இவ்விதமாய் நான் அவருடைய மரணத்தின் 10
சாயலுக்கொப்பாகி எப்படியாயினும் மரித்
தோரின் உயிர்த்தெழுதலுக்கு வந்து சேர்வ
தற்கேதுவாய் | அவரையும் அவர் உயிர்த் 11
தெழுதலின் வல்லமையையும் அவர் பாடுக
ளின் ஐக்கியத்தையும் அறிந்துகொள்ள
வேண்டுமென்றிருக்கிறேன்.
நான் அடைந்தாயிற்று அல்லது முற்றும் 12
தேறினவனானேனென்று எண்ணுமல்,
கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப்
பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்
கொள்ளத் தொடருகிறேன். சகோதரரே, 13
அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான்
இன்னும் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்
கிறேன்: பின்னானவைகளை மறந்து முன்ன
னவைகளைப் பார்த்துத் தாவியோடிக் |
கிறிஸ்து இயேசுவுக்குள் கடவுள் அழைத்த 14
பரம அழைப்பின் பந்தயப்பொருளைப் பெறு
வதற்கு இலக்கை நோக்கித் தொடரு
கிறேன். ஆகவே, நம்மில் தேறினவர்கள் 15
யாவருக்கும் இதே சிந்தையே இருப்பதாக;
நீங்கள் ஒரு காரியத்தில் வேறே சிந்தையா
யிருந்தால் அதையும் கடவுள் உங்களுக்கு
வெளிப்படுத்துவார். ஆகிலும், நாம் எவ் 16
வளவு முன்னேறி யிருந்தாலும் அதே ஒழுங்
காய் நடப்போமாக.
சகோதரரே, [1]நான் பார்த்து நடக்கிற 17
வரையே நீங்களும் பார்த்து நடந்து நாங்
கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நட
கிறவர்களை நோக்குங்கள். அநேகர் நட 18
கும் வழியைப்பற்றிப் பலமுறை உங்க
ளோடு பேசி அவர்கள் கிறிஸ்துவின் சிலு
வைக்குப் பகைஞரென்று சொன்னேன்;

1 நீங்கள் ஒன்றுபோல் என்னைப்பார்த்து நடந்து என்றும் திருப்பலாம்.

இப்போதும் கண்ணீரோடு சொல்லுகிறேன்.
19 அவர்கள் முடிவு அழிவு, அவர்கள் வயிறே
அவர்கள் தெய்வம்; அவர்கள் இலச்சையி
லேயே அவர்கள் மகிமை; அவர்கள் பூமிக்
20 குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். நமது ஜன
சமூக சிலாக்கியம் பரலோகத்துக்குரியது.
அங்கேயிருந்து ஆண்டவராயிருக்கிற இயேசு
கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்
21 பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர் எல்
லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்
கொள்ளத்தக்க தமது சக்தியின்படியே தாழ்
வான நமது சரீரத்தை மகிமையான தமது
சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.

**4** ஆதலால், நான் வாஞ்சைகொள்ளுகிற
என் பிரியமான சகோதரரே, எனக்குச் சந்
தோஷமும் கிரீடமுமானவர்களே, பிரிய
மானவர்களே, இந்தப்படியே ஆண்டவருக்
குள் நிலைத்திருங்கள்.
2 ஆண்டவருக்குள் ஒரே சிந்தையாயிருக்க
எயோதியாளைக் கேட்டுக்கொள்ளுகிறேன்,
சிந்திகேயாளையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.
3 அன்றியும், என் உத்தமகூட்டாளியே, அவர்
களுக்கு உதவியாயிருக்கும்படி உன்னையும்
வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் கிலே
மெந்தோடும் மற்ற என் உடன் ஊழியரோ
டுங்கூடச் சுவிசேஷவிஷயத்தில் என்னோடு
ஒத்துப் போராடினார்கள்; இவர்கள் நாமங்
கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கின்றன.
4 ஆண்டவருக்குள் எப்பொழுதும் சந்தோ
ஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்க
5 ளென்று திரும்பவுஞ் சொல்லுகிறேன். உங்
கள் பொறுமை எல்லா மனுஷருக்கும்
6 தெரிந்திருப்பதாக. ஆண்டவர் சமீபமாயி
ருக்கிறார். நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்
படவேண்டாம். எல்லா விஷயத்திலும்
உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்
தோடு கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதல
ினாலும் கடவுளுக்குத் தெரியப்படுத்துங்கள்.
7 அப்பொழுது எல்லாப் புத்திக்குமேலான
தெய்வசமாதானம் உங்கள் இருதயங்களையும்
உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்
குள் காத்துக்கொள்ளும்.
8 கடைசியாக, சகோதரரே, உண்மையுள்
ளவைகளெவைகளோ ஒழுக்கமுள்ளவை
களெவைகளோ நீதியுள்ளவைகளெவை
களோ தூயவைகளெவைகளோ அன்
புக்குரியவைகளெவைகளோ நற்கீர்த்தியுள்
ளவைகளெவைகளோ புண்ணியம் எதுவோ
புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்
9 கொண்டிருங்கள். நீங்கள் என்னிடங் கற்
றும் பெற்றும் கேட்டும் கண்டுமிருக்கிற
வைகளெவைகளோ அவைகளையே செய்து
வாருங்கள்; அப்பொழுது சமாதானத்தின்
கடவுள் உங்களோடிருப்பார்.

உங்கள் மனதில் என்னைப்பற்றியுள்ள 10
எண்ணம் மறுபடியும் மலரச்செய்ததினால்
ஆண்டவருக்குள் மிகவும் சந்தோஷப்பட்
டேன்; இப்படிச் செய்ய எண்ணங்கொண்
டேயிருந்தீர்கள்; சமயமாத்திரம் உங்க
ளுக்கு வாய்க்கவில்லை. என் குறைச்சலை 11
நினைத்து நான் இப்படிச் சொல்லுகிறதில்லை;
எந்த நிலைமையிலும் நான் மனரம்மியமாயி
ருக்கக் கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்க 12
வும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும்
எனக்குத்தெரியும்; எவ்விஷயத்திலும்எல்லா
வற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியா
யிருக்கவும் நிறைவுபடவும் குறைவுபடவும்
பழகிக்கொண்டேன். என்னைப் பலப்படுத்து 13
கிறவருக்குள் எல்லாவற்றையுஞ்செய்ய
எனக்கு வல்லமையுண்டு. ஆகிலும் நீங்கள் 14
என்னோடு உபத்திரவத்தில் ஐக்கியப்பட்டது
நல்லது. பிலிப்பியரே, சுவிசேஷத்தின் 15
ஆரம்ப காலத்திலே நான் மக்கெதோனியா
வைவிட்டு வந்தபோது கொடுக்கல் வாங்
கல் காரியத்தில் நீங்கள்மாத்திரம் என்னோடு
ஐக்கியப்பட்டதேயல்லாமல் வேறெந்த
சபையும் அப்படி ஐக்கியப்படவில்லை என்
பது உங்களுக்குத்தெரியும். நான் தெசலோ 16
னிக்கேயிலிருந்தபோதும் என் குறைச்சலை
நீக்கும்படி நீங்கள் அனுப்பினது ஒருமுறை
மாத்திரமல்ல. உபகாரத்தை நான் நாட 17
வில்லை, பலன் உங்கள் கணக்கில் பெருக
வேண்டுமென்றே நாடுகிறேன். நான் எல் 18
லாவற்றையும் அடைந்தாயிற்று; அளவுக்கு
மேலும் பெற்றுக்கொண்டேன். நீங்கள்
அனுப்பினவைகளைச் சுகந்தவாசனையும் கட
வுளுக்குப் பிரியமான உகந்த பலியுமாக
எப்பாப்பிரோதித்துவின் கையில் வரப்பற்
றிக்கொண்டபடியால் நான் நிறைவடைந்
திருக்கிறேன். என் கடவுள் மகிமையான 19
தமது ஐசுவரியத்தின்படியே உங்கள் குறை
வையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள்
நிறைவாக்குவார். நமது கடவுளும் பிதாவு 20
மானவருக்கே மகிமை யுகாயுகங்களாயிருப்
பதாக. ஆமேன்.

கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தவான் 21
கள் ஒவ்வொருவரையும் வாழ்த்துங்கள்;
என்னோடிருக்கிற சகோதரர் உங்களுக்கு
வந்தனஞ் சொல்லுகிறார்கள். பரிசுத்த 22
வான்கள் அனைவரும், விசேஷமாக இராய
னின் அரமனையில் இருக்கிறவர்களும், உங்
களுக்கு வந்தனஞ் சொல்லுகிறார்கள்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் கிரு 23
பை உங்கள் ஆவியோடிருப்பதாக.

# கொலோசேயருக்கு எழுதின நிருபம்

1 கடவுளின் சித்தத்தினால் கிறிஸ்து இயேசு
வின் அப்போஸ்தலனான பவுலும் சகோ
2 தரன் தீமோத்தேயுவும், கொலோசே பட்
டணத்தில் கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்
களும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கிற
சகோதரருக்கு எழுதுவது: நமது பிதாவா
கிய கடவுளிடமிருந்து உங்களுக்குக் கிரு
பையும் சமாதானமும் உண்டாவதாக.
3 பரலோகத்தில் உங்களுக்கென்று வைத்
திருக்கிற நன்னம்பிக்கையினிமித்தம்
கிறிஸ்து இயேசுவில் உங்களுக்குள்ள விசு
வாசத்தையும் சகல பரிசுத்தவான்களுக்கும்
நீங்கள் பாராட்டும் அன்பையும் நாங்கள்
4 கேள்விப்பட்டு | எப்பொழுதும் உங்களுக்
காக ஜெபித்துவந்து நமது ஆண்டவராகிய
இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய கடவுளுக்கு
5 நன்றிசெலுத்துகிறோம். உங்களிடம் வந்த
சுவிசேஷத்தின் சத்திய வசனத்தில் அந்த
நன்னம்பிக்கையைப்பற்றி முன்னமே கேட்
6 டீர்கள். அந்தச் சுவிசேஷம் உலகமெங்கும்
பலன் தந்து விர்த்தியாகிறதுபோல நீங்கள்
கடவுளின் கிருபையைக் கேட்டு உண்மை
யில் அறிந்துகொண்ட நாள்முதல் உங்களுக்
7 குள்ளும் பலன் தந்து விர்த்தியாகிறது. எங்
களுக்குப் பிரியமான உடன் ஊழியன் எப்
பாப்பிராவினிடம் நீங்கள் அதைக் கற்றுக்
கொண்டீர்கள்; இவன் உங்களுக்கென்று
கிறிஸ்துவின் உண்மையுள்ள ஊழியக்
8 காரன். ஆவியானவருக்குள்ளான உங்கள்
அன்பை எங்களுக்குத் தெரியப்படுத்தின
வனும் அவனே.
9 இதினிமித்தம் நாங்களும் அதைக்கேட்ட
நாள்முதல் உங்களுக்காக இடைவிடாமல்
ஜெபம்பண்ணிவருகிறோம்; நீங்கள் ஆவிக்
குரிய எல்லா ஞானத்தோடும்
உணர்வோடும் அவர் சித்தத்தை அறி
கிற முற்றறிவினால் நிரப்பப்படவேண்டு
10 மென்றும் | எவ்விதத் நற்கிரியையிலுங் கனி
தந்து கடவுளையறிகிற முற்றறிவில் விர்த்தி
யடைந்துவந்து எல்லா விஷயத்திலும் ஆண்
டவருக்குப் பிரியமுண்டாக அவருக்கு
உகந்தவர்களாய் நடந்துகொள்ளவேண்டு
மென்றும் உங்களுக்காக வேண்டுதல் செய்
கிறோம். அவருக்கு உகந்தவர்களாக நட 11
கும்படி எவ்வித பொறுமையும் நீடிய சாந்
தமும் உண்டாவதற்கு மகிமையான அவர்
வல்லமையின்படி எவ்வித பலத்தினாலும்
பலப்படுத்தப்படுகிறவர்களாயும் | வெளிச் 12
சத்திலே பரிசுத்தவான்களின் சுதந்தரத்தில்
பங்கடைவதற்கு உங்களைத் தகுதியுள்ளவர்க
ளாக்கின பிதாவுக்குச் சந்தோஷத்தோடே
நன்றி செலுத்துகிறவர்களாயுமிருக்க வேண்
டும். அவரே நம்மை இருளின் அதிகாரத்தி 13
னின்று விடுதலையாக்கித் தமது அன்பின்
குமாரனுடைய ராஜ்யத்திற்குள் கொண்டு
வந்தார். குமாரனுக்குள் பாவமன்னிப் 14
பாகிய மீட்பு நமக்குண்டாயிருக்கிறது.
காணப்படாத கடவுளின் தற்சுரூபமும் 15
சர்வ சிருஷ்டிக்கும் முதற் பேறுமானவர்
அவரே. அவரில் சகலமும் சிருஷ்டிக்கப் 16
பட்டது; பரலோக பூலோகங்களிலுள்ள
வைகளும், காணப்படுகிறவைகளும் காணப்
படாதவைகளும், சிங்காசனங்களோ கர்த்தத்
துவங்களோ துரைத்தனங்களோ அதிகாரங்
களோ யாவும், அவரைக்கொண்டும் அவருக்
கென்றும் சிருஷ்டிக்கப்பட்டன. அவர் எல் 17
லாவற்றிற்கு முன்னிவர், யாவும் அவரில்
நிலைநிற்கின்றன. அவரே திருச்சபையாகிய
சரீரத்தின் தலை; எல்லாவற்றிலும் முதல்வரா 18
கும்படி அவரே ஆதியும் மரித்தோரிலிருந்
தெழுந்த முதற்பேறுமானவர். சகல பரி 19
பூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்க
வும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத் 20
தினாலே பூலோகத்திலும் பரலோகத்திலு
முள்ள யாவையும் அவர்மூலமாய்த் தம்
மோடு சமாதானப்படுத்தி ஒப்புரவாக்கிக்
கொள்ளவும் பிதாவுக்குப் பிரியமாயிற்று.
ஒருகாலத்தில் நீங்கள் புறம்பானவர்களாயும் 21
துர்க்கிரியைகளினால்மனதிலே சத்துருக்களா
யுமிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்களையுந் 22
தமது மாம்ச சரீரத்தில் மரணத்தின்மூலமாய்
ஒப்புரவாக்கினார்; உங்களைப் பரிசுத்தராக

வும் மாசற்றவர்களாகவுங் குற்றஞ்சாட்டப்
படாதவர்களாகவும் தமக்குமுன் நிறுத்த
23 வேண்டுமென்றே அப்படிச் செய்தார். நீங்
கள் அஸ்திபாரமிடப்பட்டவர்களாயும் உறு
தியுள்ளவர்களாயும் நீங்கள் கேட்ட சுவி
சேஷத்திலுள்ள நன்னம்பிக்கையைவிட்டு
அசைக்கப் படாதவர்களாயும் விசுவாசத்
தில் நிலைத்திருப்பீர்களானால் அது நிறை
வேறும். அந்தச் சுவிசேஷம் வானத்தின்
கீழ்ச் சகல சிருஷ்டிக்கும் பிரசங்கிக்கப்
பட்டு வருகிறது; அதற்கென்றே பவுலாகிய
நான் ஊழியக்காரனானேன்.
24 இப்பொழுது நான் உங்கள்நிமித்தம்
அனுபவிக்கிற பாடுகளில் சந்தோஷப்பட்
டுக் கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறை
வானவற்றை அவருடைய சரீரமாகிய
சபைக்காக என் மாம்சத்தில் நிறைவேற்றி
25 வருகிறேன். உங்கள்பொருட்டுக் கடவுளால்
எனக்களிக்கப்பட்ட உக்கிராண ஊழியத்
தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்
26 காரனானேன். அநாதிகாலமாய்த் தலைமுறை
தலைமுறைகளுக்கு மறைக்கப்பட்டிருந்து
இப்பொழுதோ அவருடைய பரிசுத்தவான்
களுக்கு வெளியாக்கப்பட்டிருக்கிற இரக
சியமாகிய தெய்வ வசனத்தை நிறைவேற்றும்
படிக்கே அந்த ஊழியம் எனக்கு அளிக்கப்
27 பட்டது. புறஜாதிகளுக்குள் விளங்கும்
இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசு
வரியமின்னதென்று கடவுள் தமது பரிசுத்த
வான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தங்
கொண்டார்; உங்களுக்குள் இருக்கிற கிறிஸ்
துவே அந்த இரகசியம்; அதுவே மகிமை
28 யின் நன்னம்பிக்கை. எந்த மனுஷனையும்
கிறிஸ்துவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படி
எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி எந்த
மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உப
தேசித்து அவரையே நாங்கள் அறிவித்து
29 வருகிறோம். அதற்கென்றே நான் எனக்
குள் வல்லமையாய்க் கிரியை செய்கிற அவ
ருடைய சக்தியின்படி போராடி உழைத்து
வருகிறேன்.

**2** உங்களுக்காகவும் லவோதிக்கேயாவி
லிருக்கிறவர்களுக்காகவும் சரீரத்தில் என்
முகத்தைக் காணாதிருக்கிற மற்றெல்லாருக்
காகவும் எவ்வளவோ போராட்டம் எனக்
குண்டென்று நீங்கள் அறியவிரும்புகிறேன்.
2 அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்
பட்டு அன்பில் ஒன்றாய்ச் சேர்க்கப்பட
வேண்டுமென்பதும் அதினால் கிறிஸ்துவாகிய
தெய்வ இரகசியத்தின் முற்றறிவுக் சேது
வான பூரண நிச்சய உணர்வின் எல்லா ஐசு
வரியத்தையும் பெறவேண்டுமென்பதும்
என் விருப்பம். அவருக்குள் ஞானம் அறிவு 3
என்பவைகளின் ஐசுவரியங்களெல்லாம்
மறைவாயிருக்கின்றன. ஒருவனும் நயவச 4
னிப்பினால் உங்களை மோசம் போக்காதபடி
இதைச் சொல்லுகிறேன். சரீரத்தில் நான் 5
உங்களோடில்லாதிருந்தும் ஆவியில் உங்க
ளோடிருந்து உங்கள் ஒழுங்கையும் கிறிஸ்
துவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தின்
உறுதியையும் பார்த்துச் சந்தோஷப்படு
கிறேன்.

ஆகையால் நீங்கள் ஆண்டவராகிய 6
கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடி
யே, அவரில் வேரூன்றினவர்களாகவும் கட் 7
டப்பட்டவர்களாகவும் நீங்கள் போதிக்கப்
பட்டபடியே விசுவாசத்தில் உறுதிப்பட்ட
வர்களாகவும் நன்றி செலுத்துவதில் பெரு
கிக்கொண்டே அவருக்குள் நடந்துகொள்
ளுங்கள்.

தத்துவசாஸ்திரம் மாயமான வஞ்சகம் 8
இவற்றினால் ஒருவனும் உங்களைக் கொள்ளை
கொண்டுபோகாதபடி எச்சரிக்கையாயிருங்
கள்; அவை மனுஷரின் பாரம்பரை முறை
மைக்கும் உலகத்தின் [1]பாலபோதனைகளுக்
கும் இசைந்தவைகளே யன்றிக் கிறிஸ்து
வுக்கு இசைந்தவைகளல்ல. தெய்வத் 9
துவத்தின் சகல பரிபூரணமும் சரீரப்பிர
காரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறதே.
சகல துரைத்தனத்துக்கும் அதிகாரத்துக்கும் 10
தலையாயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரி
பூரணமானீர்கள். நீங்கள் கையால் செய் 11
யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள்
பெற்றீர்கள்; அது மாம்ச சரீரத்தைக் களைந்
துவிடுவதாம்; அதுவே கிறிஸ்துவுக்குரிய
விருத்தசேதனம். ஞானஸ்நானத்தில் அவ 12
ரோடு அடக்கம் பண்ணப்பட்டிருக்கிறீர்
கள்; அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின
கடவுளின் வல்லமையைப்பற்றும் விசுவா
சத்தின்மூலமாய் அந்த ஞானஸ்நானத்தில்
அவரோடு எழுப்பப்பட்டும் இருக்கிறீர்கள்.
உங்கள் மீறுதல்களினாலும் மாம்சத்தின் 13
விருத்தசேதனமில்லாமையினாலும் மரித்த
வர்களாயிருந்த உங்களையும் அவரோடு
உயிர்ப்பித்து நமது மீறுதல்களெல்லாவற்
றையும் மன்னித்து | நமக்கு எதிரிடையாக 14
வும் கற்பனைகளால் நமக்கு விரோதமாகவும்
இருந்த கையெழுத்தைக் குலைத்து அதை
இடையிலிராதபடி எடுத்துச் சிலுவையில்

---

1 கலா. 4: 3 பார்க்க.

15 ஆணியடித்துவிட்டுத் | துரைத்தனங்களை
யும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு பகி
ரங்கமான கோலமாக்கிச் சிலுவையிலே
அவற்றின்மேல் வெற்றி சிறந்தார்.
16 ஆகையால், போஜனபான விஷயத்திலா
வது திருநாள் மாதப்பிறப்பு ஒய்வுநாள்
இவற்றைப்பற்றிய விஷயத்திலாவது ஒருவ
னும் உங்களைக் குறை கூறுதிருப்பாளாக.
17 அவைகள் வருங் காரியங்களின் நிழல்;
18 பொருளோ கிறிஸ்துவுக்குரியது. தாழ்மை
யிலும் தெய்வதூதருக்குச் செய்யும் ஆரா
தனையிலும் விருப்பமுற்றுத் தான் தரிசித்
திருக்கிறவைகளை ஆதாரமாகக்கொண்டு தன்
மாம்ச சிந்தையில் வீண் இறுமாப்புக்
கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப்
பொருளை நீங்கள் இழந்துபோகும்படி உங்
19 களை வஞ்சியாதிருக்கப் பாருங்கள். இப்ப
டிப்பட்டவன் தலையைப் பற்றிக்கொள்ளாத
வன். அந்தத் தலையிலிருந்தோ சரீரமுழுவ
தும் கணுக்களாலும் கட்டுகளாலும் உதவி
பெற்று ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டுத் தெய்வ
வளர்ச்சியாய் வளருகிறது.
20 நீங்கள் கிறிஸ்துவோடு உலகத்தின் பால
போதனைகளுக்கு மரித்ததுண்டானால் இன்
னும் உலகத்தில் பிழைக்கிறவர்கள்போல் |
21 மனுஷ கற்பனைகளின்படியும் போதனைக
ளின்படியும் நடந்து: பிடித்துக்கொள்ளா
தே, ருசி பாராதே, தீண்டாதே என்கிற ஏற்
22 பாடுகளுக்கு உட்படுகிறதென்ன? இவை
யெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்து
23 போகுமே. இப்படிப்பட்டவை சுய இஷ்ட
ஆராதனை தாழ்மை சரீர ஒடுக்கம் இவற்றால்
ஞான மென்கிற பேர்கொண்டிருந்தாலும்
சரீர இச்சைகளை அடக்குவதற்கு இவற்
றால் யாதொரு பிரயோஜனமுமில்லை.

**3** ஆகவே, நீங்கள் கிறிஸ்துவோடு எழுப்
பப்பட்டதுண்டானால் கிறிஸ்து கடவுளின்
வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்தி
2 லுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமி
யிலுள்ளவைகளில்லல மேலானவைகளிலே
3 யே கருத்தாயிருங்கள். நீங்கள் மரித்தீர்
கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவோடு கடவு
4 ளுக்குள் மறைந்திருக்கிறதே. நமது ஜீவனு
மாகிய கிறிஸ்து வெளிப்படும்போது நீங்களும்
அவரோடு மகிமையில் வெளிப்படுவீர்கள்.
5 ஆகையால், விபசாரம் அசுத்தம் மோகம்
தீர் இச்சை விக்கிரகாராதனையாகிய பொரு
ளாசை என்னும் பூமிக்குரிய உங்கள் அவ
6 யவங்களை அழித்துப்போடுங்கள். இவற்
றின்பொருட்டே தெய்வ கோபாக்கினை வரு
7 கிறது. ஒருகாலத்தில் இவைகளில் ஜீவித்த
போது நீங்களும் இவைகளில் நடந்துவந்
தீர்கள். இப்பொழுதோ நீங்கள் கோபம் 8
மூர்க்கம் தீர்க்குணம் தூஷணம் உங்கள்
வாயில் பிறக்கும் அவலக்ஷணப் பேச்சு
ஆகிய இவைகளெல்லாவற்றையுங்கூட விட்
டுவிடுங்கள். ஒருவரிடத்திலொருவர் பொய் 9
சொல்லவேண்டாம்; பழைய மனுஷனை
அவன் செய்கைகளோடுங் களைந்துபோட்
டுத் | தன்னைச் சிருஷ்டித்தவரின் சாயலுக் 10
கிசைவாய் முற்றறிவடையும்படி புதிதாக்
கப்படுகிற புதிய மனுஷனைத் தரித்துக்
கொள்ளுங்கள். இதிலே கிரேக்கன் யூத 11
னென்றும் விருத்தசேதனம் விருத்தசேதன
மில்லாமையென்றும் மிலேச்சன் சீத்தியன்
அடிமை சுயாதீனனென்றுமில்லை; இல்லை,
கிறிஸ்துவே எல்லாம், எல்லாரிலும் அவரே.

ஆகையால், கடவுளினுடையவர்களா 12
கிய தெரிந்தெடுக்கப்பட்டவர்களும் பரிசுத்
தரும் பிரியருமான நீங்கள் இரக்கமுள்ள
மனது தயாளம் தாழ்மை சாந்தம் நீடிய
பொறுமை இவற்றைத் தரித்துக்கொண்டு |
ஒருவரையொருவர் பொறுத்து ஒருவன் 13
மேல் ஒருவனுக்குக் குறையுண்டானால்
ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்; ஆண்ட
வர் உங்களுக்கு மன்னித்ததுபோலவே நீங்
களும் மன்னியுங்கள். இவை எல்லாவற் 14
றின்மேலும் பூரண சற்குணத்தின் கட்டா
கிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள்.
கிறிஸ்துவின் சமாதானம் உங்கள் இருதயங் 15
களில் ஆளக்கடவது; இந்தச் சமாதானத்
திற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்
கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களுமா
குங்கள். கிறிஸ்துவின் வார்த்தை உங்களுக் 16
குள் நிறைந்து வாசமாயிருப்பதாக; அப்
பொழுது நீங்கள் சகல ஞானத்தோடும்
ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்
லுகிறவர்களாய்ச் சங்கீதங்களினாலும் கீர்த்
தனைகளினாலும் அருட் பாடல்களினாலும்
உங்கள் இருதயங்களில் நன்றியறிதலோடு
கடவுளைப் பாடுவீர்கள். வார்த்தையினாலா 17
வது செய்கையினாலாவது நீங்கள் எதைச்
செய்தாலும் அதையெல்லாம் ஆண்டவரா
கிய இயேசுவின் நாமத்திலே செய்து அவர்
முன்னிலையாகப் பிதாவாகிய கடவுளுக்கு
நன்றிசெலுத்துங்கள்.

மனைவிகளே, ஆண்டவருக்குள் தகுந்த 18
படி உங்கள் புருஷருக்கு அடங்கியிருங்
கள். புருஷர்களே, உங்கள் மனைவிகளில் 19
அன்புகூருங்கள், அவர்கள்மேல் கசந்து
கொள்ளாதிருங்கள். பிள்ளைகளே, பெற்றோ 20
ருக்கு எல்லாக் காரியங்களிலும் கீழ்ப்படி
யுங்கள்; இது ஆண்டவருக்குள் உகந்தது.

21 பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் மனந்
தளர்ந்துபோகாதபடி அவர்களுக்கு எரிச்ச
22 லுண்டாக்காதிருங்கள். வேலைக்காரரே, நீங்
கள் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்பு
கிறவர்களாய்ப் பார்வைக்கு ஊழியஞ்
செய்யாமல் கபடற்ற இருதயத்தோடு ஆண்
டவருக்குப் பயப்படுகிறவர்களாய்ச் சரீரத்
தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்
களுக்கு எல்லாக் காரியங்களிலுங் கீழ்ப்
23 படியுங்கள்; சுதந்தரமாகிய பலனே ஆண்டவ
24 ரால் பெறுவீர்களென்று அறிந்து | எதைச்
செய்தாலும் அதை மனுஷருக்கென்று செய்
யாமல் ஆண்டவருக்கென்றே மனதாரச்
செய்யுங்கள்; ஆண்டவராகிய கிறிஸ்து
25 வுக்கே தொண்டுசெய்யுங்கள். அநியாயஞ்
செய்கிறவன் தான் செய்த அநியாயத்தின்
பலனையடைவான்; பட்சபாதமே இல்லை.

**4** எஜமான்களே, உங்களுக்கும் பரலோகத்
தில் எஜமான் இருக்கிறாரென்று அறிந்து
உங்கள் வேலைக்காரருக்கு நியாயமும் நே
மையுமானதைச் செய்யுங்கள்.
2 ஜெபத்தில் தரித்திருங்கள்; நன்றியறித
3 லோடு அதில் விழித்திருங்கள். கிறிஸ்துவின்
இரகசியத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற
நான் அந்த இரகசியத்தைப் பேசவேண்டிய
பிரகாரமாய்ப் பேசி வெளிப்படுத்துவதற்
4 குத் | திருவசனம் செல்லக்கூடிய வாசலைக்
கடவுள் திறந்தருளும்படி எங்களுக்காகவும்
5 ஜெபஞ்செய்யுங்கள். புறம்பேயிருக்கிறவர்
கள் விஷயத்தில் விவேகமாய் நடந்து, கா
லத்தைத் தப்பவிடாமல் பிரயோஜனப்படுத்
6 திக்கொள்ளுங்கள். ஒவ்வொருவனுக்கும் எப்
படி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்
கள் அறியும்படி உங்கள் பேச்சு எப்பொ
ழுதும் இனிதாயும் உப்பால் சாரமேறின
தாயுமிருப்பதாக.
7 பிரியமான சகோதரனும் உண்மையுள்ள
ஊழியக்காரனும் ஆண்டவருக்குள் உடன்
ஊழியனுமான தீகிக்கு என் செய்திகளே
8 யெல்லாம் உங்களுக்கு அறிவிப்பான். எங்
கள் செய்திகளே நீங்கள் அறியவேண்டு
மென்றும் உங்கள் இருதயங்களைத் தேற்ற
9 வேண்டுமென்றும் | அவனை உங்களிலொரு
வனாகிய உண்மையும் பிரியமுமுள்ள சகோ
தரன் ஒநேசிமுவோடு உங்களிடத்தில் அனுப்பி
யிருக்கிறேன்; அவர்கள் இவ்விடத்துச்
செய்திகளையெல்லாம் உங்களுக்கு அறிவிப்
பார்கள்.
10 என் உடன் கைதியாகிய அரிஸ்தார்க்கு
உங்களுக்கு வந்தனஞ் சொல்லுகிறான்; பர்ன
பாவுக்கு நெருங்கின பந்துவாகிய மார்க்
கும் வந்தனஞ் சொல்லுகிறான், இவனைக்
குறித்துக் கட்டளை பெற்றீர்களே; இவன்
உங்களிடம் வருவானாலும் இவனை ஏற்றுக்
கொள்ளுங்கள். 11 யுஸ்து என்ற இயேசுவும்
வந்தனஞ் சொல்லுகிறான். விருத்தசேதன
முள்ளவர்களில் இவர்கள்மாத்திரம் கடவு
ளின் ராஜ்யத்தின்பொருட்டு என் உடன்
ஊழியர்; இவர்கள் எனக்கு ஆறுதலானார்
கள். 12 உங்களில் ஒருவனாகிய எப்பாப்பிரா
வும் உங்களுக்கு வந்தனஞ் சொல்லுகிறான்;
இவன் கிறிஸ்து இயேசுவின் அடியான்;
நீங்கள் கடவுளுக்குச் சித்தமான எதிலும்
தேறினவர்களாயும் முழுநிச்சயமுள்ளவர்க
ளாயும் நிலைநிற்கவேண்டுமென்று தன்
ஜெபங்களில் இவன் எப்பொழுதும் உங்க
ளுக்காகப் போராடுகிறான். 13 இவன் உங்க
ளுக்காகவும் லவோதிக்கேயருக்காகவும்
இயெராப்போலியருக்காகவும் அதிகப் பாடு
படுகிறானென்பதற்கு நான் சாட்சி பகருகி
றேன். 14 பிரியமான வைத்தியன் லூக்காவும்
தேமாவும் உங்களுக்கு வந்தனஞ் சொல்லு
கிறார்கள். 15 லவோதிக்கேயாவிலிருக்கிற சகோ
தரரையும் நிம்பாளையும் அவள் வீட்டில்
கூடுகிற சபையையும் வாழ்த்துங்கள். 16 இந்த
நிருபம் உங்களிடத்தில் வாசிக்கப்பட்ட
பின்பு லவோதிக்கேயா சபையிலும் வாசிக்
கப்படும்படி செய்யுங்கள்; லவோதிக்கேயா
விலிருந்து வரும் நிருபத்தை நீங்களும் வா
சிக்கவேண்டும். 17 அர்க்கிப்பிலிடம்: நீ ஆண்
டவருக்குள் பெற்ற ஊழியத்தை நிறை
வேற்றும்படி பார்த்துக்கொள் என்று சொல்
லுங்கள்.
18 பவுலாகிய நான் என் கைப்பட எழுதி
உங்களை வாழ்த்துகிறேன்; என் கட்டுகளை
நினைத்துக்கொள்ளுங்கள்; கிருபை உங்க
ளோடிருப்பதாக.

THE FIRST EPISTLE TO THE THESSALONIANS

# தெசலோனிக்கேயருக்கு எழுதின

## முதலாம் நிருபம்

1 பவுலும் சில்வானும் தீமோத்தேயுவும் பிதாவாகிய கடவுளுக்குள்ளும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதுவது: கிருபையும் சமாதானமும் உங்களுக்கு உண்டாவதாக.

2 எங்கள் ஜெபங்களில் உங்களை நினைக்கிறவர்களாய் உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறோம். 3 உங்கள் விசுவாசத்தின் கிரியையையும் உங்கள் அன்பின் உழைப்பையும் நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிலுள்ள வரும் நன்னம்பிக்கையின் பொறுமையையும் நமது கடவுளும் பிதாவுமானவர் சந்நிதியில் நாங்கள் இடைவிடாமல் நினைவுகூர்ந்து வருகிறோம். 4 கடவுள் அன்புகூர்ந்திருக்கிற சகோதரரே, நீங்கள் தெரிந்தெடுக்கப்பட்டவர்களென்று எங்களுக்குத் தெரியும்; 5 எங்கள் சுவிசேஷம் உங்களிடம் பேச்சில் மாத்திரமல்ல வல்லமையிலும் பரிசுத்த ஆவியிலும் பூரண நிச்சயத்தோடு வந்ததே; நாங்கள் உங்கள் நடுவிலிருந்தபோது உங்கள் நிமித்தம் எப்படிப்பட்டவர்களாயிருந்தோமென்பதும் உங்களுக்குத்தெரியும். 6 நீங்கள் மிகுந்த உபத்திரவத்தில் பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடு திருவசனத்தை ஏற்றுக்கொண்டு எங்களைப்போலவும் ஆண்டவரைப்போலவும் நடக்கிறவர்களானீர்கள். 7 இவ்விதமாய் மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரியானீர்கள். 8 உங்களிடமிருந்தே ஆண்டவரின் வசனம் மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் தொனித்ததுமல்லாமல் கடவுளைப் பற்றும் உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று; அதைப்பற்றி நாங்கள் ஒன்றும் சொல்ல அவசியமில்லை. 9 உங்கள் நடுவில் எங்கள் வரவு எப்படியிருந்ததென்பதை ஜனங்களே அறிவிக்கிறார்கள்; 10 ஜீவனுள்ள மெய்யான கடவுளைச் சேவிப்பதற்கும், அவர் மரித்தோரிலிருந்து எழுப்பின வரும் இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமான அவர் குமாரனுடைய இயேசு வானத்திலிருந்து வரக் காத்திருப்பதற்கும் நீங்கள் விக்கிரகங்களை விட்டுக் கடவுளினிடம் மனந்திரும்பினதைக்கூட அவர்களே அறிவிக்கிறார்கள்.

2 சகோதரரே, உங்கள் நடுவில் நாங்கள் வந்தது வீணாய்ப்போகவில்லை என்பது உங்களுக்கே தெரியும். 2 உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, முன்னே பிலிப்பிபட்டணத்தில் நாங்கள் பாடும் நிந்தையும் அனுபவித்துக் கடவுளின் சுவிசேஷத்தை வெகு போராட்டத்தோடு உங்களுக்குச் சொல்ல நமது கடவுளில் தைரியங்கொண்டிருந்தோம். எங்கள் போதகம் வஞ்சகத்தினின்றும் அசுத்தத்தினின்றும் உற்பத்தியான 3 தல்ல, அது கபடத்திலுல் வந்ததுமல்ல. கடவுள் எங்களை நம்பி நாங்கள் தகுதியுள்ளவர்களென்று சுவிசேஷத்தை எங்கள் கையில் ஒப்புவித்தார். அதன்படியே நாங்கள் மனுஷரையல்ல, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற கடவுளையே பிரியப் 4 படுத்தப் பேசுகிறோம். நாங்கள் ஒருக்காலும் முகஸ்துதி பேசுகிறவர்களாய் வரவில்லை, உங்களுக்கே தெரியும்; பொருளாசையுள்ளவர்களாய் மாயம் பண்ணவுமில்லை, கடவுளே சாட்சி. நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலரென்று பாராட்டக் 6 கூடிய கௌரவத்தோடு மனிதரிடத்தில், உங்களிடத்திலாவது மற்றவர்களிடத்திலாவது, புகழைத் தேடவில்லை; பாலூட்டுந் 7 தாயானவள் தன் பிள்ளைகளைப் பேணுகிறதுபோல் நாங்கள் உங்கள் நடுவில் சாதுவாய் நடந்துகொண்டோம். நாங்கள் உங்கள் 8 மேல் வாஞ்சையாயிருந்து கடவுளின் சுவிசேஷத்தை மாத்திரமல்ல, நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களானபடியினாலே எங்

கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுப்பது
9 எங்களுக்குப் பிரியம். சகோதரரே, எங்
கள் உழைப்பையும் கஷ்பையும் நீங்கள்
மறந்திருக்கமாட்டீர்கள்; உங்களில் ஒருவ
னுக்கும் பாரமாயிராதபடி இரவும் பகலும்
நாங்கள் கைப்பாடுபட்டுக் கடவுளின் சுவி
சேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம்.
10 விசுவாசிகளாகிய உங்களிடத்தில் எவ்வளவு
பக்தியோடும் நீதியோடும் குற்றமற்றவர்க
ளாய் நடந்தோமென்பதற்கு நீங்களும்
11 சாட்சி, கடவுளும் சாட்சி. தகப்பன் தன்
பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல நாங்
கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தி
சொன்னோம் என்பது உங்களுக்குத் தெரி
12 யும். தமது ராஜ்யத்திற்கும் மகிமைக்
கும் உங்களை அழைத்துவருகிற கடவுளுக்கு
உகந்தவர்களாய் நீங்கள் நடக்கவேண்டு
மென்று உற்சாகப்படுத்திச் சாட்சிபகர்ந்து
உங்களுக்குப் புத்தி சொல்லிவந்தோம்.
13 இந்நிமித்தம், நீங்கள் கடவுளின் வார்த்
தையை எங்களாலே கேள்விப்பட்டுப் பெற்
றுக்கொண்டபோது அதை மனுஷ வசன
மாகவல்ல தெய்வ வசனமாகவே ஏற்றுக்
கொண்டதினால் நாங்கள் இடைவிடாமல்
கடவுளுக்கு நன்றி செலுத்துகிறோம்; அது
மெய்யாகவே தெய்வ வசனந்தான், விசுவாசிக
ளாகிய உங்களுக்குள் அது பலனும் செய்கி
14 றது. எப்படியெனில், சகோதரரே, யூதேயா
தேசத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான
கடவுளின் சபைகளைப் போலவே நீங்களும்
நடந்தீர்கள்; அவர்கள் யூதராலே எப்படிப்
பாடுபட்டார்களோ அப்படியே நீங்களும்
உங்கள் சுயஜனங்களாலே பாடுபட்டீர்கள்.
15 அந்த யூதர் ஆண்டவராகிய இயேசுவையும்
தீர்க்கதரிசிகளையும் கொன்றவர்களும் எங்
களை இம்சைப்படுத்தினவர்களும் கடவுளுக்
குப் பிரியமாய் நடவாதவர்களும் மனுஷர்
யாவருக்கும் விரோதிகளுமாயிருந்தார்கள்;
16 புறஜாதியார் இரட்சிக்கப்படுவதற்கு நாங்கள்
அவர்களோடு பேசாதபடி தடைபண்ணி
வந்தார்கள்; இவ்விதமாய் எக்காலத்திலும்
தங்கள் பாவங்களை நிறைவாக்குகிறார்கள்;
கோபாக்கினை முற்றுமுடிய அவர்கள்மேல்
வந்துவிட்டது.
17 நாங்களோ, சகோதரரே, இருதயத்தின்
படியல்ல சரீரத்தின்படி சொற்பக்காலம்
உங்களை விட்டுப் பிரிந்திருந்தபடியினாலே
உங்கள் முகத்தைப் பார்க்கவேண்டுமென்று
மிகுந்த ஆசையோடு அதிகமாய்க் கவலை
18 கொண்டிருந்தோம். ஆகையால் நாங்கள்
உங்களிடம் வர விருப்பங்கொண்டோம்;
பவுலாகிய நானே வர விருப்பங்கொண்டது
ஒருமுறைமாத்திரமல்ல; சாத்தானே எங்க
ளைத் தடுத்துவிட்டான். நமது ஆண்டவ 19
ராகிய இயேசு வருகையில் அவருக்குமுன்
எங்களுக்கு நன்னம்பிக்கையும் சந்தோஷ
மும் பெருமை பாராட்டும் கிரீடமுமாயிருக்
கிறவர்கள் யார்? நீங்கள்தான் அல்லவா?
ஆம், நீங்களே எங்களுக்கு மகிமையும் சந் 20
தோஷமுமாயிருக்கிறீர்கள்.

ஆகவே, நாங்கள் இனிப் பொறுத்துக் 3
கொண்டிருக்கமுடியாமல், அத்தேனே பட்
டணத்தில் தனித்துவிடப்படுகிறது நல
மென்று நினைத்து; இந்த உபத்திரவங்களி 2
னாலே ஒருவனும் அசைக்கப்படாதபடி
உங்களை ஸ்திரப்படுத்தவும் உங்கள் விசுவா
சத்தில் உங்களைத் தைரியப்படுத்தவும் நமது
சகோதரனும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தில்
கடவுளின் ஊழியக்காரனுமாகிய தீமோத்
தேயுவை அனுப்பினோம். இப்படிப்பட்ட 3
உபத்திரவங்களில் அசைக்கப்படாமலிருக்
கவே நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோமென்
பது உங்களுக்கே தெரியும். நமக்கு உபத் 4
திரவம் வரப்போகிறதென்று நாங்கள் உங்க
ளிடத்திலிருந்தபோது முன்னதாகவே உங்க
ளுக்குச் சொன்னோம்; அப்படியே வந்து
சம்பவித்ததென்பதும் உங்களுக்குத் தெரி
யும். ஆகையால், நான் இனிப் பொறுத் 5
துக்கொண்டிருக்கமுடியாமல் எங்கள்
உழைப்பு விருதாவாய்ப் போகும்படி சோத
னைக்காரன் உங்களைச் சோதனைக்குட்படுத்தி
விட்டானோ வென்று பயந்து உங்கள் விசு
வாசத்தை அறியும்படி தீமோத்தேயுவை
அனுப்பினேன். இப்பொழுது அவன் உங்க 6
ளிடத்திலிருந்து எங்களிடம் வந்து உங்
கள் விசுவாசத்தையும் அன்பையும் குறித்
தும் நீங்கள் எப்பொழுதும் எங்களைப் பட்ச
மாய் நினைத்துக்கொண்டு நாங்கள் உங்களைக்
காண வாஞ்சையாயிருக்கிறதுபோல நீங்க
ளும் எங்களைக் காண வாஞ்சையாயிருக்
கிறீர்களென்பதைக் குறித்தும் எங்களுக்கு
நற்செய்தி சொன்னதினாலே, சகோதரரே, 7
எங்களுக்கு நேரிட்ட எல்லா இக்கட்டிலும்
உபத்திரவத்திலும் உங்கள் விசுவாசத்தினாலே
உங்களைப்பற்றி ஆறுதலடைந்தோம். நீங்க 8
கள் ஆண்டவருக்குள் நிலைத்திருந்தால் நாங்
கள் பிழைத்திருப்போம். நமது கடவு 9
ளின் சந்நிதானத்தில் நாங்கள் உங்களைப்
பற்றி அடைந்திருக்கிற எல்லாச் சந்தோ
ஷத்திற்காகவும் நாங்கள் கடவுளுக்கு உங்
கள் நிமித்தம் தகுந்தவிதமாய் நன்றி
செலுத்துவதெப்படி? எப்பகல் முகத்தைக் 10
கண்டு உங்கள் விசுவாசத்தின் குறைவுகளை

நீக்கவேண்டுமென்று இரவும் பகலும் மிக
வும் வேண்டுதல் செய்கிறோமே.
11 நமது பிதாவாகிய கடவுள் தாமும் நமது
ஆண்டவராகிய இயேசுவும் நாங்கள் உங்க
ளிடம் வர எங்கள் வழியை நேராக்குவா
12 ராக. உங்கள்மேலுள்ள எங்கள் அன்பு
பெருகுகிறதுபோல ஒருவர்மேலொருவரும்
எல்லார்மேலும் நீங்கள் வைக்கும் அன்பு
அதிகப்பட்டுப் பெருகும்படி கடவுள்
13 கடாட்சிப்பாராக. அப்பொழுது நமது
ஆண்டவராகிய இயேசு தமது பரிசுத்த
வான்கள் அனைவரோடும் வரும்போது நமது
கடவுளும் பிதாவுமானவர் சந்நிதியில் உங்
கள் இருதயங்கள் குற்றமற்றவைகளாய்ப்
பரிசுத்தத்தில் ஸ்திரப்படுத்தப்படும்.

**4** கடையாக, சகோதரரே, நீங்கள் இன்
னின்ன பிரகாரமாய் நடக்கவும் கடவுளுக்
குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்பதை
எங்களிடங் கேட்டுப் பெற்றுக்கொண்ட
படியே—நீங்களும் அப்படியே நடந்துவரு
கிறீர்கள்—இன்னும் அதிகமாய்ப் பெருகும்
படி ஆண்டவராகிய இயேசுவுக்குள் உங்
களை வேண்டிக்கொண்டு புத்தி சொல்லு
2 கிறோம். ஆண்டவராகிய இயேசுவினால்
நாங்கள் உங்களுக்கு என்ன கட்டளைகளைக்
கொடுத்தோமென்று அறிந்திருக்கிறீர்களே.
3 நீங்கள் பரிசுத்தமாகவேண்டுமென்னுங் கட
வுளின் சித்தம் இதுவே: நீங்கள் வேசிமார்க்
4 கத்துக்கு விலகியிருக்கவும் | கடவுளை அறி
யாத புறஜாதிகளைப்போல மோக இச்சைக்
5 குட்படாமல் | உங்களில் அவனவன் தன்
தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தத்திலும்
கனத்திலும் ஆள அறிந்துகொள்ள
6 வும் | இவ்விஷயத்தில் ஒருவனும் வரம்பு
கடவாமலும் தன் சகோதரனை வஞ்சியா
மலும் இருக்கவும் வேண்டுமென்பதே. முன்
னமே நாங்கள் உங்களுக்குச் சொல்லித்
திட்டமாய்ச் சாட்சிபகர்ந்தபடியே இப்படிப்
பட்ட விஷயங்களெல்லாவற்றினிமித்தமும்
7 கர்த்தரே பழிவாங்குகிறவர். கடவுள் நம்
மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தமாவதற்கே
8 அழைத்திருக்கிறார். ஆகையால் அசட்டை
பண்ணுகிறவன் மனுஷனையல்ல தமது பரி
சுத்த ஆவியை உங்களுக்குக் கொடுத்துவரு
கிற கடவுளையே அசட்டைபண்ணுகிறான்.
9 சகோதர சிநேகத்தைப்பற்றி நான் உங்க
ளுக்கு எழுதுவது அவசியமில்லை; நீங்கள்
ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டு
மென்று கடவுளே உங்களுக்குப் போதித்தி
10 ருக்கிறார். நீங்களும் அப்படியே மக்கே
தோனியா முழுவதிலுமுள்ள சகோதரரெல்
லாருக்கும் செய்துவருகிறீர்கள். சகோ
தரரே, நீங்கள் இன்னும் இதில்
அதிகமாய்ப் பெருகவும் | நாங்கள் உங்க 11
ளுக்குக் கட்டளையிட்டபடியே அமைதி
யுள்ளவர்களாயிருப்பதை மேன்மையாக
ஆசிக்கவும் உங்கள் சொந்த அலுவல்களைப்
பார்க்கவும் உங்கள் கைகளினாலே வேலை
செய்யவும்வேண்டுமென்று உங்களைக்
கேட்டுக்கொள்ளுகிறோம். அப்படியானால், 12
புறம்பேயிருக்கிறவர்களிடம் நீங்கள் மோக்
கியமாய் நடந்து ஒன்றிலுங் குறைவில்லா
திருப்பீர்கள்.

சகோதரரே, நித்திரையடைகிறவர்கள் 13
விஷயத்தில் நீங்கள் அறிவில்லாதிருக்கிறது
எனக்குமனதில்லை; நன்னம்பிக்கையற்ற மற்
றவர்களைப்போல் நீங்கள் துக்கிக்கவேண்
டாம். இயேசுவானவர் மரித்து எழுந்திருந்தா 14
ரென்று நம்புகிறோமே, அப்படியே இயேசு
வுக்குள் நித்திரையடைந்தவர்களையுங் கட
வுள் அவரோடுகூடக் கொண்டுவருவார்.
ஆண்டவரின் வார்த்தையாக நாங்கள் உங் 15
களுக்குச் சொல்லுகிறோம்: ஆண்டவரின்
வருகைமட்டும் உயிரோடு விடப்பட்டிருக்
கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்
திக்கொள்வதேயில்லை. ஆண்டவர்தாமே 16
கட்டளை தொனிக்கப் பிரதான தூதனின்
சத்தத்தோடும் தெய்வ எக்காளத்தோடும்
வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொ
ழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலா
வது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடு 17
விடப்பட்டிருக்கும் நாமும் அவர்களோடு
ஆண்டவருக்கு எதிர்கொண்டுபோக மேகங்
கள்மேல் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்
படுவோம்; இப்படியாக எப்பொழுதும்
ஆண்டவரோடிருப்போம். ஆகையால் 18
இந்த வார்த்தைகளினால் நீங்கள் ஒருவரை
யொருவர் தேற்றிக்கொள்ளுங்கள்.

சகோதரரே, காலங்களையும் வேளைக **5**
ளையும்பற்றி உங்களுக்கு எழுதுவது அவசிய
மில்லை. இரவிலே திருடன் வருகிறவிதமாய் 2
ஆண்டவரின் நாளும் வருமென்பது உங்க
ளுக்குத் திட்டமாய்த்தெரியும். சமாதானம் 3
சுகபத்திரமென்று அவர்கள் சொல்லும்
போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை
வருவதுபோல அழிவு சடுதியாய் அவர்கள்
மேல் வரும்; அவர்கள் தப்பிக்கொள்வதே
யில்லை. சகோதரரே, நீங்கள் அந்தகாரத்தி 4
லிருக்கிறவர்களல்ல; இருந்தால் அந்த
நாள் திருடன்போல் உங்களைப் பிடித்துக்
கொள்ளும். நீங்களெல்லாரும் வெளிச்சத் 5
தின் பிள்ளைகள், பகலின் பிள்ளைகள்; நாம்

இரவுக்கும் இருளுக்கும் உரியவர்களல்ல.
6 ஆகையால் மற்றவர்கள்போல் நாமும்
தூங்காமல் விழித்துக்கொண்டு தெளிவுள்ள
7 வர்களாயிருக்கக் கடவோம். தூங்குகிற
வர்கள் இரவில் தூங்குவார்கள்; வெறி
கொள்ளுகிறவர்கள் இரவிலே வெறி
8 கொள்ளுவார்கள். பகலுக்குரியவர்களாகிய
நாமோ விசுவாசம் அன்பு என்னும் மார்க்க
வசத்தையும் இரட்சிப்பின் நன்னம்பிக்கை
யென்னும் தலைச்சீராவையும் தரித்துக்
கொண்டு தெளிவுள்ளவர்களாயிருக்கக் கட
9 வோம். கடவுள் நம்மைக் கோபாக்கினைக்
கென்று நியமிக்காமல் நமது ஆண்டவரா
கிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் இரட்சிப்
10 படைவதற்கென்று நியமித்தார். நாம்
விழித்திருக்கிறவர்களாலுலும் நித்திரைசெய்
கிறவர்களாலுலும் தம்மோடுகூட நாம்
பிழைத்திருக்கும்படி இவர் நமக்காக மரித்
11 தார். ஆகவே, நீங்கள் செய்துவருகிறது
போலவே ஒருவரையொருவர் தைரியப்
படுத்தி ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி
யுண்டாகும்படி செய்யுங்கள்.
12 சகோதரரே, உங்கள் நடுவில் உழைத்து
ஆண்டவருக்குள் உங்கள் தலைவராயிருந்து
உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்
13 கள் நிதானித்தறிந்து | அவர்களுடைய
நல்ல வேலையினிமித்தம் அன்பில் மிகவும்
அதிகமாய் அவர்களை மதிக்கும்படி உங்களை
வேண்டிக்கொள்ளுகிறோம். உங்களுக்
14 குள்ளே சமாதானமாயிருங்கள். சகோத
ரரே, நாங்கள் இன்னும் உங்களைக் கேட்டுக்
கொள்ளுகிறதாவது: ஒழுங்கில்லாதவர்களுக்
குப் புத்தி சொல்லுங்கள், மனந்தளர்ந்தவர்
களை உற்சாகப்படுத்துங்கள், பலவீனரைத்
தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடியசாந்த
மாயிருங்கள். ஒருவனும் மற்றொருவனுக் 15
குத் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாரு
ங்கள்; அதற்கு மேலாய் உங்களில் ஒவ்வொரு
வருக்கும் மற்ற யாவருக்கும் எப்பொழுதும்
நன்மையையே நாடுங்கள். எப்பொழுதும் 16
சந்தோஷமாயிருங்கள். இடைவிடாமல் 17
ஜெபம்பண்ணுங்கள். எவ்விஷயத்திலும்
நன்றிசெலுத்துங்கள்; இதுவே கிறிஸ்து 18
இயேசுவுக்குள் உங்களைப்பற்றிய கடவுளின்
சித்தமாம். ஆவியை அணைத்துப்போடா 19
திருங்கள். தீர்க்கதரிசனங்களை அசட்டை 20
பண்ணுதிருங்கள். எல்லாவற்றையும் 21
சோதித்துப்பார்த்து நலமானதைப் பிடித்துக்
கொள்ளுங்கள். எவ்வகையான பொல் 22
லாங்கையும் விட்டு விலகுங்கள்.
சமாதானத்தின் கடவுள் தாமே உங்களை 23
முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள்
ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் நமது
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வருகை
யில் குற்றமற்றதாய்க் காக்கப்படுவதாக,
உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், 24
அவரும் அதைச் செய்தருளுவார்.
சகோதரரே, எங்களுக்காக ஜெபஞ் செய் 25
யுங்கள்.
சகோதரரெல்லாரையும் பரிசுத்தமுத்தத் 26
தோடு வாழ்த்துங்கள். இந்த நிருபம் சகோ 27
தரர் யாவருக்கும் வாசிக்கப்படவேண்டு
மென்று ஆண்டவர்பேரில் ஆணையிட்டு
உங்களுக்குச் சொல்லுகிறேன்.
நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து 28
வின் கிருபை உங்களோடிருப்பதாக.

---

## THE SECOND EPISTLE TO THE THESSALONIANS

# தெசலோனிக்கேயருக்கு எழுதின

## இரண்டாம் நிருபம்

**1** பவுலும் சில்வானும் தீமோத்தேயுவும்
நமது பிதாவாகிய கடவுளுக்குள்ளும்
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும்
இருக்கிற தெசலோனிக்கேயர் சபைக்கு
2 எழுதுவது: பிதாவாகிய கடவுளிடமிருந்தும்
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினிட
மிருந்தும் உங்களுக்குக் கிருபையும் சமா
தானமும் உண்டாவதாக.
சகோதரரே, நாங்கள் எப்பொழுதும் 3
உங்களைக்குறித்துக் கடவுளுக்கு நன்றிசெலுத்
தக் கடமைப்பட்டவர்கள்; உங்கள் விசு
வாசம் மிகுதியாய் ஓங்கி வளருகிறதினாலும்

நீங்களெல்லாரும் ஒருவரிலொருவர் வைத்திருக்கிற அன்பு அதிகரிக்கிறதிலுலும் அப்
4 படிச்செய்வது தகுதியாம். அதிலுல் நீங்கள் சகிக்கிற சகல இம்சைகளிலும் உபத்திரவங்களிலும் விளங்கும் உங்கள் பொறுமையையும் விசுவாசத்தையும் பற்றி நாங்கள் உங்கள் நிமித்தம் கடவுளின் சபைகளில்
5 மேன்மைபாராட்டுகிறோம். கடவுளின் ராஜ்யத்தினிமித்தம் பாடனுபவிக்கிற நீங்கள் அந்த ராஜ்யத்திற்குப் பாத்திரராக எண்ணப்படும்படி கடவுள் நியாயமான தீர்ப்புச் செய்கிறவரென்பதற்கு அதுவே அத்தாட்சி.
6 உங்களே உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு உபத்திரவத்தையும் உபத்திரவப்படுகிற உங்களுக்கு எங்களோடு இளைப்பாறுதலையும் பிரதிபலனுகக் கொடுப்பது கடவுளுக்கு நியா
7 யமாகும். கடவுளை அறியாதவர்களுக்கும் நமது ஆண்டவராகிய இயேசுவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நியாயமான ஆக்கினையைச் செலுத்துகிறவராய் |
8 ஆண்டவராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்
9 படும்போது அப்படியாகும். அந்நாளிலே தமது பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும் விசுவாசமுள்ளவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும் அவர் வரும்போது—நாங்கள் உங்களுக்கு அறிவித்த சாட்சியத்தை நீங்கள் நம்பி ஏற்
10 றுக் கொண்டீர்களே—அவர்கள் ஆண்டவரின் சந்நிதானத்திலிருந்தும் அவருடைய வல்லமையான மகிமையிலிருந்தும் நீங்காதபடி நித்திய அழிவாகிய தண்டனையைப்
11 பெறுவார்கள். இதன்பொருட்டுக் கடவுள் உங்களைத் தமது அழைப்புக்குப் பாத்திரராக்கவும் நற்குணத்தின்மேலுள்ள எந்த விருப்பத்தையும் விசுவாசத்தின் கிரியையையும் பலமாய் நிறைவேற்றவும் வேண்டுமென்று எப்பொழுதும் உங்களுக்காக வேண்டிக்
12 கொள்ளுகிறோம். இவ்விதமாய் நமது கடவுளும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் அளிக்கும் கிருபையின்படியே நமது ஆண்டவராகிய இயேசுவின் நாமம் உங்களிலும் நீங்கள் அவரிலும் மகிமைப்படவேண்டும்.

**2** அன்றியும், சகோதரரே, நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையையும் நாம் அவரிடத்தில் சேர்க்கப்படுவதையும் பற்றி நாங்கள் உங்களே வேண்டிக்கொள்ளு
2 கிறதாவது: ஆண்டவரின் நாள் சமீபமென்று ஒரு ஆவியினுலாவது வார்த்தையினுலாவது எங்களிடமிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினுலாவது சொல்லப்பட்டால் உடனே மனங்கலங்கவும் திகிலடையவும் வேண்டாம். எவ்விதத்தினுலும் 3
ஒருவனும் உங்களே மோசம்போக்கிவிட வேண்டாம். அந்த நாள் வருமுன் விசுவாச மறுதலிப்பும் நேரிடவேண்டும், அழிவின் மகனுகிய அக்கிரம மனுஷனும் வெளிப்படவேண்டும். இவன் எதிர்த்து நிற் 4
கிறவன், தெய்வமெனப்படுவதெதுவோ ஆராதிக்கப்படுவதெதுவோ ஆவை எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவன், கடவுளின் ஆலயத்தில் உட்கார்ந்து தன்னையே கடவுளென்று காண்பிக்கிறவன். நான் 5
உங்களிடத்திலிருந்தபோதே இவைகளை உங்களுக்குச் சொல்லிக்கொண்டு வந்தது ஞாபகமில்லையா? அவன் தன் காலத்தில் 6
வெளிப்படும்படிக்கு இப்பொழுது தடை செய்கிறது இன்னதென்று அறிந்திருக்கிறீர்களே. அக்கிரமத்தின் இரகசியம் இப்பொ 7
ழுதே கிரியை செய்கிறது; ஆனுலும் தடை செய்கிறவன் இடையிலிராதபடி நீக்கப்பட வேண்டும். அப்போதே அந்த அக்கிரமக் 8
காரன் வெளிப்படுவான்; அவனை ஆண்டவராகிய இயேசு தமது வாயின் சுவாசத்தினுல் அழித்துத் தமது வருகையின் பிரசன்னத்தினுலே நாசம்பண்ணுவார். அந்த 9
அக்கிரமக்காரன் வருகை சாத்தானுடைய சக்திக்கிசையப் பொய்யான சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் அற்புதங்களோடும், அழிந்துபோகிறவர்களுக்கு அநீதத்தினுல் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடுமிருக்கும். இரட்சிக்கப்படுவதற்குச் 10
சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் போனபடியால் அப்படி நடக்கும். இதினிமித்தம், சத்தியத்தை 11
நம்பாமல் அநீதத்தில் பிரியப்படுகிற யாவரும் தீர்ப்புப்பெறுவதற்கேதுவாய் | அவர் 12
கள் பொய்யை நம்பும்படி வலுவஞ்சகத்தைக் கடவுள் அவர்களுக்கு அனுப்புகிறார்.

ஆண்டவர் அன்புகூர்ந்திருக்கிற சகோ 13
தரரே, நீங்கள் ஆவியானவரால் பரிசுத்தமாக்கப்படுவதினுலும் சத்தியத்தை நம்புவதினுலும் இரட்சிப் படையும்படி ஆதிமுதல் கடவுள் உங்களைத் தெரிந்துகொண்டபடியினுல் நாங்கள் உங்களைப்பற்றி எப்பொழுதும் கடவுளுக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். நீங்கள் நமது ஆண்ட 14
வராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டு எங்கள் சுவிசேஷத்தினுலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்.

15 ஆகையால், சகோதரரே, நீங்கள் நிலைத்
திருங்கள், வார்த்தையினாலாவது நிருபத்தினா
லாவது நாங்கள் உங்களுக்கு உபதேசித்த
16 முறைமைகளைக் கைக்கொள்ளுங்கள். நமது
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தாமும்
நம்மிடத்தில் அன்புகூர்ந்து நித்திய ஆறு
தலையும் நன்னம்பிக்கையையும் கிருபை
யாய் நமக்குக் கொடுத்து வருகிற நமது
17 பிதாவாகிய கடவுளும் | உங்கள் இருதயங்
களைத் தேற்றி எல்லா நற்செய்கையிலும்
நல்வார்த்தையிலும் உங்களை ஸ்திரப்படுத்து
வாராக.

**3** கடைசியாக, சகோதரரே, ஆண்டவரின்
வசனம் உங்களிடத்திலே பரவினதுபோல
எங்கும் ஓடிப் பரவி மகிமைப்படவும் |
2 தாறுமாறுள்ள பொல்லாத மனுஷர் கையி
னின்று நாங்கள் விடுவிக்கப்படவும் எங்க
ளுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்; விசு
வாசம் எல்லாருக்கும் உரியதல்லவே.
3 ஆண்டவரோ உண்மையுள்ளவர், அவர்
உங்களை ஸ்திரப்படுத்தித் தீயோனுக்கு விலக்
4 கிக் காத்துக்கொள்ளுவார். மேலும், நாங்
கள் கட்டளையிடுகிறவைகளை நீங்கள் செய்து
வருகிறீர்களென்றும் இனிமேலும் செய்வீர்க
ளென்றும் உங்களைப்பற்றி ஆண்டவருக்
5 குள் நிடம்பிக்கையாயிருக்கிறோம். ஆண்
டவர் உங்கள் இருதயங்களைக் கடவுளின்
மேலுள்ள அன்புக்குள்ளும் கிறிஸ்துவின்
பொறுமைக்குள்ளும் நடத்துவாராக.
6 மேலும், சகோதரரே, எங்களிடம் பெற்
றுக்கொண்ட முறைமையின்படி நடவா
மல் ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோ
தரனையும் நீங்கள் விட்டு விலகவேண்டு
மென்று நமது ஆண்டவராகிய இயேசு
கிறிஸ்துவின் நாமத்திலே உங்களுக்குக் கட்
7 டளையிடுகிறோம். எங்களைப்போல் நடக்க
வேண்டியது இன்னவிதமென்பது உங்க
ளுக்குத் தெரியுமே; நாங்கள் உங்களுக்
குள்ளே ஒழுங்கற்று நடவாமலும் | ஒருவ 8
னிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும்
உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராத
படி இரவும் பகலும் உழைப்போடும்
கஷ்டப்போடும் வேலை செய்கிறவர்களாய்ச்
சாப்பிட்டோம். எங்களுக்கு அதிகாரமில்லை 9
யென்பதினாலல்ல. நீங்கள் எங்களைப்போல்
நடக்கவேண்டுமென்று எங்களையே உங்க
ளுக்கு மாதிரியாக்கினோம். ஒருவன் வேலை 10
செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்
பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிட
மிருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்
டோமே. உங்களில் சிலர் யாதொரு வேலை 11
யுஞ் செய்யாமல் வீண் அலுவற்காரராய்
ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப்
படுகிறோம். இப்படிப்பட்டவர்கள் அமைத 12
லோடே வேலைசெய்து தங்கள் சொந்தச்
சாப்பாட்டைச் சாப்பிடவேண்டுமென்று
நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்
குள் அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்தி
சொல்லுகிறோம். நீங்களோ, சகோதரரே, 13
நன்மைசெய்வதில் சோர்ந்துபோகாதிருங்
கள். இந்த நிருபத்தில் சொல்லிய எங்கள் 14
வார்த்தைக்கு ஒருவன் கீழ்ப்படியாமற்போ
னால் அவனைக்குறித்துக்கொண்டு அவனோடு
கலவாதிருங்கள், அவன் வெட்கத்துக் காளா
கட்டும். ஆனாலும் அவனைச் சத்துருவாக 15
எண்ணாமல் சகோதரனைப்போலெச்சரியுங்கள்.

சமாதானத்தின் ஆண்டவர் தாமே எப் 16
பொழுதும் எவ்விதத்திலும் உங்களுக்குச்
சமாதானம் தந்தருளுவாராக, ஆண்டவர்
உங்களனைவரோடும் இருப்பாராக.

பவுலாகிய நான் என் கைப்பட எழுதி 17
உங்களை வாழ்த்துகிறேன்; ஒவ்வொரு நிரு
பத்திலும் இதுவே அடையாளம்; நான்
எழுதுவது இப்படியே. நமது ஆண்டவ 18
ராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்க
ளனைவரோடும் இருப்பதாக.

THE FIRST EPISTLE TO TIMOTHY

# தீமோத்தேயுவுக்கு எழுதின

## முதலாம் நிருபம்

1 நமது இரட்சகராகிய கடவுளும் நமது நன்னம்பிக்கையாகிய இறிஸ்து இயேசுவும் கொடுத்த கட்டளைப்படியே இறிஸ்து இயேசு
2 வின் அப்போஸ்தலனான பவுல், விசுவாசத்தில் உத்தமபிள்ளை தீமோத்தேயுவுக்கு எழுதுவது: பிதாவாகிய கடவுளிடமிருந்தும் நமது ஆண்டவராகிய இறிஸ்து இயேசுவினிடமிருந்தும் இருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.
3 நான் மக்கெதோனியாவுக்குப் போகும் போது உன்னை எபேசுபட்டணத்தில் தரித்
4 திருக்கக் கேட்டுக்கொண்டேன். சிலர் வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கிறார்கள். விசுவாசத்தில் நிற்கும் தெய்வீக உக்கிராண ஊழியத்திற்கு ஏதுவாயிராமல் தர்க்க விசாரணைகளுக்கு ஏதுவாயிருக்கிற கட்டுக்கதைகளையும் முடிவில்லாத வம்ச வரலாறுகளையும் கவனித்துவருகிறார்கள். அவர்கள் இப்படிச் செய்யாதபடி நீ கற்பிக்கவேண்டுமென்று உனக்குச் சொன்
5 னேன். கற்பிப்பதின் முடிவோ சுத்த இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற
6 விசுவாசத்திலும் வரையும் அன்பே. சிலர் இவற்றை விட்டு விலகி வீண்பேச்சுக்குள்
7 விழுந்தார்கள். தாங்கள் சொல்லுகிறவைகளும் தாங்கள் சாதிக்கிறவைகளும் இன்னவென அறியாதிருந்தும் நியாயப்பிரமாணப்
8 போதகராயிருக்க விரும்புகிறார்கள். நியாயப்பிரமாணம் நீதிமானுக்கு விதிக்கப்படாமல் அக்கிரமக்காரருக்கும் அடங்காதவர்களுக்கும் அவபக்தருக்கும் பாவிகளுக்கும் பக்தியற்றவர்களுக்கும் சீர்கெட்டவர்களுக்கும் தாய்தகப்பன்மாரைக் கொல்லுகிறவர்
9 களுக்கும் கொலைபாதகருக்கும் | வேசி மார்க்கத்தாருக்கும் ஆண்புணர்ச்சிக்காரருக்கும் மனுஷரைத் திருடுகிறவர்களுக்கும் பொய்யருக்கும் பொய்யாணை இடுகிறவர்க
10 ளுக்கும் | நித்தியானந்தக் கடவுள் என்னிடம் நம்பி ஒப்புவித்திருக்கிற தமது மகிமை
11 யின் சுவிசேஷத்திற்கிசைந்த ஆரோக்கியகரமான உபதேசத்திற்கு மாறுபட்ட வேறெதற்கும் விரோதமாய் விதிக்கப்பட்டிருக்கிறதென்றறிந்து | ஒருவன் நியாயப்பிரமாணத்தை நியாயமாய் வழங்கினால் நியாயப்பிரமாணம் நல்லதென்று நமக்குத் தெரியும்.
12 என்னைப் பலப்படுத்தியிருக்கிற நமது ஆண்டவராகிய இறிஸ்து இயேசு என்னை உண்மையுள்ளவனென்று ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால் அவருக்கு நன்றி
13 செலுத்துகிறேன். முன்னே நான் தூஷிக்கிறவனும் இம்சைசெய்கிறவனும் கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன்; எனினும், நான் அறியாமல் அவிசுவாசத்தில் அப்படிச் செய்தபடியினால் இரக்கம்பெற்றேன். நமது
14 ஆண்டவரின் கிருபை இறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தோடும் அன்போடும் என்னில் அபரிமிதமாய்ப் பெருகிற்று.
15 பாவிகளை இரட்சிக்கக் இறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்பது உண்மையான வார்த்தை, அது எல்லா அங்கீகரிப்புக்கும் ஏற்றது; அவர்களில் நான் பிரதான பாவி.
16 அப்படியிருந்தும், நித்திய ஜீவனுக்கேதுவாய் இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைக்கப்போகிறவர்களுக்குத் திருஷ்டாந்தமாவதற்கென்று பிரதான பாவியாகிய என்னில் அவர் எல்லா நீடிய பொறுமையையுங் காண்பிக்கும்படி இரக்கம் பெற்றேன்.
17 யுகங்களின் ராஜாவுக்கு, அழிவில்லாதவரும் காணப்படாதவருமாகிய ஒரே கடவுளுக்கே, கனமும் மகிமையும் யுகாயுகங்களாயிருப்பதாக; ஆமேன்.
18 தீமோத்தேயுவே, என் பிள்ளையே, உன் பேரில் முன்னே சொல்லப்பட்ட தீர்க்கதரிசன வசனங்களுக்கிசைய நீ அவைகளில் நின்று நல்ல போராட்டம் போராட வேண்டுமென்பதையே கட்டளையாக
19 உனக்கு ஒப்புவிக்கிறேன். விசுவாசமும் நல்மனச்சாட்சியுமுடையவனாய்ப் போராடு.

நல்மனச்சாட்சியைச் சிலர் தள்ளிவிட்டு விசுவாச விஷயத்தில் கப்பற் சேதத்திற்குள்ளானவர்கள்போல் நஷ்டமடைந்தார்கள். 20 இமெனேயும் அலெக்சந்தரும் அப்படிப்பட்டவர்கள்; இவர்கள் இனித் தூஷியாதபடி சிட்சை பெறுவதற்கேதுவாய் இவர்களைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுத்தேன்.

**2** எல்லாவற்றிற்கும் முதலாவதாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன்; எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங் 2 களையும் செய்யவேண்டும்; நாம் எல்லாபக்தியிலும் ஒழுக்கத்திலும் சமாதானமும் அமைதியுமாய் ஜீவகாலத்தைக் கழிக்கும்படி ராஜாக்களுக்காகவும் உயர்ந்த அந்தஸ்திலுள்ள யாவருக்காகவும் அப்படிச் செய்ய 3 வேண்டும். நமது இரட்சகராகிய கடவுள் சந்நிதியில் இதுவே நன்மையும் உகந்தது 4 மாம். எல்லா மனுஷரும் இரட்சிப்பைப் பெறவும் சத்தியத்தை அறிகிற முற்றறிவை அடையவும் வேண்டுமென்பது அவருடைய 5 சித்தம். கடவுள் ஒருவரே, கடவுளுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே; 6 இவர் மனுஷனுகிய கிறிஸ்து இயேசு. இவரே எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம் 7 மைத் தாமே ஒப்புக்கொடுத்தார். இதைப் பற்றிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கும். இதற்காகவே நான் பிரசங்கியாகவும் அப்போஸ்தலனுகவும் புறஜாதிகளுக்கு விசுவாசம் சத்தியம் இவற்றைப் போதிக்கிறவனுகவும் நியமிக்கப்பட்டிருக்கிறேன்; நான் அப்போஸ்தலனென்று சொல்வது உண்மையே, பொய்யல்ல.

8 ஆகவே, புருஷர் எவ்விடத்திலும் பரிசுத்தமான கைகளை உயர்த்திக் கோபமும் தர்க்கமுமின்றி ஜெபம் பண்ணவேண்டு 9 மென்பது என் விருப்பம். அப்படியே ஸ்திரீகளும் சடை பின்னுதலினலாவது பொன் முத்து விலையுயர்ந்த ஆடை இவற்றினலாவது தங்களை அலங்கரித்துக்கொள் 10 ளாமல் | நாணமும் நிதான புத்தியுமுடையவர்களாயும் தங்களைத் தெய்வபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கேற்றபடி நற்செய்கைகளைச் செய்கிறவர்களாயும் தகுதியான வஸ்திரத்தினல் தங் 11 களை யலங்கரித்துக்கொள்ளவேண்டும். ஸ்திரீயானவள் எல்லா விஷயத்திலும் அடங்கி அமைதலாயிருந்து கற்றுக்கொள்ளக்கட 12 வள். உபதேசம்பண்ணவும் புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்கவேண்டும். ஏனெனில், 13 முதலாவது உருவாக்கப்பட்டவன் ஆதாமே, பின்புதான் ஏவாள். மேலும், ஆதாம் 14 வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயே மோசம் போய் மீறுதலுக்குள்ளானுள். என்றாலும், 15 நிதானபுத்தியோடு விசுவாசத்திலும் அன்பிலும் பரிசுத்தமாகுதலிலும் நிலைத்திருந்தால் பிள்ளைப்பேற்றின் வழியாய் இரட்சிக்கப்படுவாள்.

அத்தியட்ச ஊழியத்தைப் பெற ஆசிக்கி **3** றவன் நல்ல ஊழியத்தை விரும்புகிறனென் பது உண்மையான வார்த்தை. ஆகவே, அத் 2 தியட்சனுனவன் குற்றஞ்சாட்டப்படாதவனும் ஒரே மனைவியையுடைய புருஷனும் தெளிந்த சிந்தையுள்ளவனும் நிதான புத்தியுள்ளவனும் யோக்கியதையுள்ளவனும் அந்நியரை உபசரிக்கிறவனும் போதக சமர்த்தனுமாயிருக்கவேண்டும். அவன் 3 மதபானப்பிரியனும் அடிக்கிறவனுமாயிராமல் பொறுமையுள்ளவனுஞ் சண்டை செய்யாதவனும் பண ஆசையில்லாதவனுமாயிருந்து | தன் சொந்தக் குடும்பத்தை நன் 4 றாய் நடத்துகிறவனும் தன் பிள்ளைகளை எல்லா ஒழுக்கமுமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்கவேண்டும்.— ஒருவன் தன் சொந்தக்குடும்பத்தை நடத்த 5 அறியாதிருந்தால் கடவுளின் சபையைப் பரிபாலிப்பதெப்படி? — அவன் இறுமாப் 6 படைந்து பிசாசுக்கு நேரிட்ட ஆக்கினையில் விழாதபடி புதிய சீஷனுயிருக்கக்கூடாது. அவன் நிந்தனைக்காளாகாமலும் பிசாசின் 7 கண்ணியில் விழாமலுமிருக்கும்படி புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனுயுமிருக்கவேண்டும்.

அப்படியே சபை உதவிக்காரரும் ஒழுக்க 8 முள்ளவர்களும், இருநாக்கும் மதபானப் பிரியமும் நீசத்தனமான லாப இச்சையும் இல்லாதவர்களும் | விசுவாசத்தின் இரக 9 சியத்தைச் சுத்தமனச்சாட்சியிலே உடையவர்களுமாயிருக்கவேண்டும். மேலும், 10 இவர்களை முதலாவது சோதித்தறிந்து குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருந்தால் பின்பு சபை உதவிக்காரராக வைக்கவேண்டும். ஸ்திரீகளென்றால், அவர்களும் அப்படியே 11 ஒழுக்கமுள்ளவர்களும் அவதூறுபண்ணுதவர்களும் தெளிந்த சிந்தையுள்ளவர்களும் எல்லாவற்றிலும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கவேண்டும். சபை உதவிக்காரர் ஒரே 12 மனைவியையுடைய புருஷரும் தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்கவேண்டும்.

13 இப்படிச் சபை உதவிக்காரரின் வேலையை
நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல
பதவியையும் கிறிஸ்து இயேசுவின்மேலுள்ள
விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையுஞ் சம்
பாதிக்கிறார்கள்.
14 நான் உன்னிடம் சீக்கிரம் வருவே
15 னென்று நம்புகிறேன். தாமதிப்பேனே
யாகில் தேவனுள்ள கடவுளின் சபையும் சத்
தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிற
கடவுளின் வீட்டில் நடந்துகொள்ளவேண்
டிய வகையை நீ அறியும்படி இவைகளை
16 உனக்கு எழுதுகிறேன். அன்றியும், யாவ
ரும் ஒப்புக்கொள்ளுகிறபடி, தெய்வபக்திக்
குரிய இரகசியம் மகா மேன்மையுள்ளது:

அவர் மாம்சத்தில் வெளிப்பட்டவர்,
ஆவியில் நீதியுள்ளவரென்று தீர்க்கப்பட்
டவர்,
தெய்வதூதரால் தரிசிக்கப்பட்டவர்,
புறஜாதியாருக்குள் பிரசங்கிக்கப்பட்ட
வர்,
உலகத்தில் விசுவாசிக்கப்பட்டவர்,
மகிமையில் எடுத்துக்கொள்ளப்பட்ட
வர்.

**4** ஆவியானவர் திட்டமாய்ச் சொல்லுகிற
படி, கடைசிக்காலங்களிலே தங்கள் மனச்
சாட்சியில் சூடுண்ட பொய்யரின் மாயத்தினி
மித்தம் சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும்
பேய்களுக்குரிய உபதேசங்களுக்கும் செவி
கொடுக்கிறவர்களாய் விசுவாசத்தைவிட்டு
2 விலகிப்போவார்கள். விவாகம்பண்ணுதி
ருக்கவும், விசுவாசிகளும் சத்தியத்தை
முற்றும் அறிந்தவர்களும் நன்றியறிந்தவர்க
3 ளாய் அநுபவிக்கும்படி | கடவுள் படைத்த
போஜனபதார்த்தங்களை விலக்கவும் வேண்டு
மென்று அந்தப் பொய்யர் கட்டளையிடு
4 கிறார்கள். கடவுள் படைத்ததெல்லாம் நல்
லதே; நன்றியறிதலோடு பெற்றுக்கொள்ளப்
படுமானால் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல;
5 அது தெய்வவசனத்தினாலும் ஜெபத்தினாலும்
பரிசுத்தமாக்கப்படுகிறது.
6 இவைகளை நீ சகோதரருக்குச் சொல்லிக்
கொண்டுவந்தால் விசுவாசத்திற்கும் நீ அது
சரித்துவந்திருக்கிற நற்போதகத்திற்குமுரிய
வார்த்தைகளால் வளர்த்துவந்து கிறிஸ்து
இயேசுவுக்கு நல்ல ஊழியக்காரனாயிருப்
7 பாய். சீர்கேடும் கிழவிகள் பேச்சுமாயிருக்
கிற கட்டுக்கதைகளுக்கு விலகித் தெய்வபக்
8 தியை அப்பியாசித்துக்கொண்டிரு. சரீராப்
பியாசம் கொஞ்சத்திற்கே பிரயோஜனமுள்
ளது; தெய்வபக்தியோ எல்லாவற்றிக்கும்
பிரயோஜனமுள்ளது, அது இந்த ஜீவனுக்
கும் வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தத்தை
யுடையது. இது உண்மையான வார்த்தை, 9
எல்லா அங்கீகரிப்புக்கும் ஏற்றது. எல்லா 10
மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசிகளுக்
கும், இரட்சகராயிருக்கிற ஜீவனுள்ள கட
வுள்மேல் நன்னம்பிக்கை வைத்திருக்கிறபடி
யால் இதற்கென்றே உழைத்தும் போராடி
யும் வருகிறோம்.
இவைகளை நீ கட்டளையிட்டுப் போதித் 11
துக்கொண்டிரு. உன் இளமையினிமித் 12
தம் ஒருவனும் உன்னை அவமதியாதபடி
பேச்சு நடக்கை அன்பு விசுவாசம் சுத்த
மனம் இவற்றில் விசுவாசிகளுக்கு மாதிரியா
யிரு. நான் வருமளவும் வாசிக்கிறதிலும் 13
புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும்
கருத்தாயிரு. மூப்பர் உன்மேல் கைகளை 14
வைத்தபோது தீர்க்கதரிசனத்தின் மூலமாய்
உனக்கு அளிக்கப்பட்டவரத்தைப்பற்றி
அசிரத்தையாயிராதே. உன் தேர்ச்சி 15
யாவருக்கும் விளங்கும்படி இவைகளைப்
பற்றி ஆக்கிரதையாயிருந்து இவைகளில்
நிலைத்திரு. உன் விஷயத்திலும் உபதேச 16
விஷயத்திலும் எச்சரிக்கையாயிரு, இவை
களில் நிலைகொண்டிரு; இப்படிச்
செய்வாயானால் உன்னையும் உன் உபதேசத்
தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்
கொள்ளுவாய்.
முதிர்வயதுள்ளவனைக் கண்டிப்பாய்க் **5**
கடிந்துபேசாமல் அவனைத் தகப்பனைப்போ
லவும் பாலிய புருஷரைச் சகோதரரைப்போ
லவும் | முதிர்வயதுள்ள ஸ்திரீகளைத் தாய் 2
களைப்போலவும் பாலியஸ்திரீகளைச் சுத்த
மான மனதோடு சகோதரிகளைப்போலவும்
பாவித்துப் புத்திசொல்லு.
உண்மையில் ஆதரவற்ற விதவைகளைக் 3
கனம்பண்ணு. விதவையான ஒருத்திக்குப் 4
பிள்ளைகளாவது பேரப்பிள்ளைகளாவது
இருந்தால் இவர்கள் தங்கள் தெய்வபக்
தியை முதலாவது சொந்தக் குடும்பவிஷ
யத்தில் பாராட்டிப் பெற்றோர் செய்த நன்
மைகளுக்குப் பதில் நன்மைகளைச்செய்
யக் கற்றுக்கொள்ளக்கடவர்கள்; இது
கடவுளின் சந்நிதியில் உகந்தது. ஆதர 5
வற்ற விதவையாய்த் தனிமையாயிருப்
பவள் கடவுளில் நன்னம்பிக்கையுள்ளவ
ளாய் இரவும் பகலும் வேண்டுதல்களிலும்
ஜெபங்களிலும் நிலைத்திருப்பாள். சுகபோக 6
மாய் வாழுகிறவள் உயிரோடே செத்தவள்.
அவர்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாய் 7
இருக்கும்படி இவைகளைக் கட்டளையிடு. ஒரு 8
வன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமா
கத் தன் வீட்டாரையும் பராமரியாமற்

போலவும் அவன் விசுவாசத்தை மறுதலித்த
9 வன், அவிசுவாசியிலுங் கெட்டவன். விதவை
யாகப் பேரெழுதப் படத்தக்கவள் அறுபது
வயதுக்குக் குறையாதவளும் ஒரே புருஷ
10 னுக்கு மனைவியாயிருந்தவளும் | பிள்ளைகளை
வளர்த்து அந்நியரை உபசரித்துப் பரிசுத்த
வான்களின் பாதங்களைக்கழுவி உபத்திரவப்
படுகிறவர்களுக்கு உதவிசெய்து எந்த நற்
கிரியையையும் உற்சாகமாய் நடப்பித்து
இவ்விதமாய் நற்கிரியைகளைப்பற்றிய நற்
11 சாட்சிபெற்றவளுமாயிருக்கவேண்டும். இள
வயதுள்ள விதவைகளைத் தள்ளிக் கொள்
ளாமல் விலக்கவேண்டும்; இவர்கள் கிறிஸ்து
வுக்கு விரோதமான இச்சைகளுக்குட்படும்
போது விவாகஞ் செய்துகொள்ள விரும்பு
12 கிறார்கள்; இவ்விதமாய் முதலில் கொண்
டிருந்த விசுவாசத்தை விடுவதினாலே குற்றத்
13 திற்குள்ளாகிறார்கள். அதுவுமல்லாமல்,
அவர்கள் சோம்பலுள்ளவர்களாய் வீடு
வீடாய்த் திரியப் பழகுவார்கள், சோம்ப
லுள்ளவர்களாய் மாத்திரமல்ல அலப்புகிற
வர்களாயும் பிறர்காரியங்களில் தலையிடுகிற
வர்களாயும் தகாதகாரியங்களைப் பேசுகிறவர்
14 களாயுமிருப்பார்கள். ஆகையால் இள
வயதுள்ள விதவைகள் விவாகம் பண்ணவும்
பிள்ளைகளைப் பெறவும் வீட்டை நடத்தவும்
விரோதியின் நிந்தனைக்கு இடங்கொடாம
லிருக்கவும் வேண்டுமென்றிருக்கிறேன்.
15 இதற்கு முன்னமே சிலர் வழிவிலகிச் சாத்
16 தானைத் தொடர்ந்துபோனார்கள். விசுவாசி
யாகிய ஒருத்தியிடம் விதவைகளிருந்தால்
அவள் இவர்களுக்கு உதவி செய்யக்கட
வள்; சபையின்மேல் அந்தப் பாரத்தைச்
சுமத்தக்கூடாது. அது ஆதரவற்ற விதவை
களுக்கு உதவிசெய்யவேண்டுமே.

17 நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை,
விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்
திலும் உழைக்கிறவர்களை, இரட்டிப்பான
கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும்.
18 போரடிக்கிற மாட்டை வாய்கட்டாதே
என்றும் வேலையாள் தன் கூலிக்குப் பாத்திர
னென்றும் வேதவாக்கியம் சொல்லுகிறதே.
19 மூப்பனுக்குவனுக்கு விரோதமான பிராதை
இரண்டு மூன்று சாட்சிகளில்லாமல் நீ ஏற்
20 றுக்கொள்ளக்கூடாது. பாவஞ்செய்கிறவர்
களை மற்றவர்களுக்குப் பயமுண்டாகும்படி
21 எல்லாருக்குமுன்பாகக் கடிந்துகொள். ஒர
வஞ்சகமாகவும் பட்சபாதகமாகவும் நீ ஒன்
றுஞ் செய்யாமல் இவைகளைக் காத்து நடக்க
வேண்டுமென்று கடவுளுக்கும் கிறிஸ்து
இயேசுவுக்கும் நியமிக்கப்பட்ட தூதருக்கு
22 முன் ஆணையாகச் சொல்லுகிறேன். ஒருவனை

மேலும் அவசரமாய்க் கைகளை வைக்கவேண்
டாம்; மற்றவர்கள் பாவங்களில் பங்காளி
யாகாதே; உன்னைச் சுத்தவாளாகக் காத்துக்
கொள். நீ இனித் தண்ணீர் மாத்திரம் குடி 23
யாமல் உன் வயிற்றிற்காகவும் உனக்கு
அடிக்கடி கேரிடுகிற பலவீனங்களுக்காகவும்
கொஞ்சம் திராட்சரசமும் உபயோகித்துக்
கொள். சிலருடைய பாவங்கள் வெளிப் 24
படையாயிருந்து நியாயத்தீர்ப்புக்கு முந்திக்
கொள்ளும்; சிலருடைய விஷயத்திலோ
அவைகள் பின்தொடருவதுமுண்டு. அப் 25
படியே வெளிப்படையான நற்கிரியைகளு
முண்டு; அப்படி இராதவைகளும் மறைந்
திருக்கமுடியாது.

கடவுளின் நாமமும் கிறிஸ்தவ உபதேச 6
மும் தூஷிக்கப்படாதபடி அடிமைத்திற்குட்பட்
டிருக்கிற அடிமைகள் யாவரும் தங்கள்
எஜமான்களை எல்லாக்கனத்திற்கும் பாத்திர
ராக எண்ணிக்கொள்ளக்கடவர்கள். விசு 2
வாசிகளான எஜமான்களையுடையவர்கள்
எஜமான்கள் சகோதரர்தானே என்று அவர்
களை அசட்டைபண்ணுமல், தங்கள் நல்
வேலையின் பலனைப் பெற்றுக்கொள்ளு
கிறவர்கள் விசுவாசிகளும் பிரியருமாயிருக்
கிறபடியால் அதிகமாய் வேலை செய்
யக்கடவர்கள்; இவற்றையே போதித்துப்
புத்திசொல்லு.

ஒருவன் நமது ஆண்டவராகிய இயேசு 3
கிறிஸ்துவின் ஆரோக்கியகரமான வார்த்தை
களுக்கும் தெய்வபக்திக்கேற்ற உபதேசத்திற்
கும் உடன்படாமல் வேறு உபதேசத்தைப்
போதித்துவந்தால் | அவன் இறுமாப்புள் 4
ளவனும் ஒன்றும் அறியாதவனும் தர்க்கங்
களும் வாக்குவாதங்களுமே நோயாகக்
கொண்டவனுமாயிருக்கிறான்; இவற்றினால்
பொறாமை சண்டை தூஷணம் பொல்லாத
சம்சயங்களேயன்றிச் | சீர்கெட்ட மனதுள் 5
ளவர்களும் சத்தியமிழந்தவர்களும் தெய்வ
பக்தியை ஆதாயவழியென்று எண்ணுகிற
வர்களுமாகிய மனுஷராலுண்டாகும் மாறு
பாடான தர்க்கங்களும் பிறக்கும். மன 6
திருப்தியோடுகூடிய தெய்வபக்தியே சிறந்த
ஆதாய வழி. நாம் உலகத்தைவிட்டு ஒன் 7
றையுங் கொண்டுபோகமுடியாதாகையால்
நாம் ஒன்றையும் உலகத்திற்குள் கொண்டு
வரவில்லை. ஊணும் உடையும் நமக்கி 8
ருந்தால் இவையே போதுமென்றிருப்
போம். ஐசுவரியவான்களாகவேண்டுமென்று 9
ஆசிக்கிறவர்கள் சோதனையிலும் கண்ணி
யிலும் மதிகேடும் சேதமுமான பலவித
இச்சைகளிலும் விழுகிறார்கள் மனுஷ

ரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்து
10 கின்றன. எல்லாத் தீமைக்கும் ஒருவேர்
பண ஆசை; சிலர் அந்த ஆசையால்
விசுவாசத்தைவிட்டு மோசம்போய் அநே
வேதனைகளால் தங்களை உருவக் குத்திக்
கொண்டார்கள்.
11 நீயோ, கடவுளின் மனுஷனே, இவை
களை விட்டோடி நீதியையும் தெய்வபக்தியை
யும் விசுவாசத்தையும் அன்பையும் பொறு
12 மையையும் சாந்தகுணத்தையும் நாடு. விசு
வாசத்தின் நல்ல போராட்டத்தைப்போராடு,
நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காக
வே நீ அழைக்கப்பட்டாய், அநேக சாட்சி
களுக்கு முன்பாக நல்ல அறிக்கைபண்ணி
13 னாய். நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து
பிரசன்னமாகும்வரைக்கும் நீ இந்தக் கற்ப
னையை மாசில்லாமலும் குற்றமில்லாமலும்
14 காத்துவரும்படிக்கு | எல்லாவற்றிற்கும்
உயிர்கொடுத்துவருகிற கடவுளின் சந்நிதா
னத்திலும் பொந்தியுபிலாத்துவின் மு ன்
னின்று நல்ல அறிக்கையிட்டுச் சாட்சி
பகர்ந்தவராகிய கிறிஸ்து இயேசுவின் சந்நி
தானத்திலும் உனக்குக் கட்டளையிடுகிறேன்.
15 கடவுள் தமது காலங்களில் அந்தப் பிரசன்
னத்தை காட்டுவார். அவரே நித்தியானந்த
முள்ள ஏக சக்ராதிபதி, ராஜாதி ராஜா, கர்த்
16 தாதி கர்த்தா, | தாம் ஒருவரே சாகாத்
தன்மையுடையவர், சேரக்கூடாத வெளிச்சத்
தில் வாசம்பண்ணுகிறவர், மனுஷரில் ஒருவ
னும் காணாதவர், காணவுமுடியாதவர்; அவ
ருக்கே கனமும் நித்திய வல்லமையும்
இருப்பதாக. ஆமேன்.
இந்த யுகத்திலுள்ள ஐசுவரியவான்களுக் 17
குக் கட்டளையிட்டுச் சொல்: அவர்கள்
மேட்டிமைச் சிந்தையற்றவர்களாயிருக்கவும்
நிலையற்ற ஐசுவரியத்தின்மேலல்ல, அதுபவிக்
கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்
குத் தாராளமாய்க் கொடுக்கிற கடவுளின்
மேலேயே நன்னம்பிக்கை வைக்கவும் | நன் 18
மைசெய்யவும் நற்கிரியைகளில் ஐசுவரிய
வான்களாகவும் தாராளமாய்க் கொடுக்கிற
வர்களும் உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்
கவும், | உண்மையில் ஜீவனுயிருப்பதைப் 19
பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத்
தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷ
மாக வைக்கவும் வேண்டும்.
ஓ தீமோத்தேயுவே உன்னிடம் ஒப்பு 20
விக்கப்பட்டதை நீ காத்துக்கொள், ஈர்
கேடான வீண்பேச்சுகளுக்கும்ஞானமென்று
பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற ஆக்ஷேபங்
களுக்கும் விலகு. இதைச் சிலர் பாராட்டி 21
வந்து விசுவாச விஷயத்தில் வழிதப்பிப்
போனார்கள். கிருபை உங்களோடிருப்ப
தாக.

## THE SECOND EPISTLE TO TIMOTHY

# தீமோத்தேயுவுக்கு எழுதின

## இரண்டாம் நிருபம்

1 கிறிஸ்து இயேசுவுக்குள்ளிருக்கிற ஜீவ
னைப்பற்றிய வாக்குத்தத்தத்திற்கிசையக் கட
வுளின் சித்தத்தினாலே கிறிஸ்து இயேசுவின்
2 அப்போஸ்தலனான பவுல் | பிரியமுள்ள
பிள்ளை தீமோத்தேயுவுக்கு எழுதுவது: பிதா
வாகிய கடவுளிடமிருந்தும் நமது ஆண்டவ
ராகிய கிறிஸ்து இயேசுவினிடமிருந்தும் கிரு
பையும் இரக்கமும் சமாதானமும் உண்
டாவதாக.
3 என் முன்னோர்முதல் நான் சுத்த மனச்
சாட்சியோடு சேவித்து வரும் கடவுளுக்கு
4 நன்றிசெலுத்துகிறேன். நான் இரவும் பக
லும் இடைவிடாமல் என் ஜெபங்களில்
உன்னை நினைத்து வந்து உன் கண்ணீரை
ஞாபகத்தில் வைத்தவனாய்ச் சந்தோஷத்தால்
நிரப்பப்படும்படி உன்னைக்காண வாஞ்சை
யாயிருக்கிறேன். உன்னிலுள்ள மாயமற்ற 5
விசுவாசத்தையும் நினைவுகூருகிறேன். அந்த
விசுவாசம் முதலாவது உன் பாட்டியாகிய
லோவிசாளிலும் பின்பு உன் தாயாகிய ஐனிக்
கேயாளிலும் நிலைத்திருந்தது; அது உன்னி
லும் இருக்கிறதென்பது எனக்கு நிச்சயம்.
இதினிமித்தமாக, நான் உன்மேல் என் 6
கைகளை வைத்ததினால் உன்னிலுள்ள தெய்வ
வரத்தை நீ அனல்மூட்டி எழுப்பும்படி
உனக்கு நினைப்பூட்டுகிறேன். பயப்படும் 7

ஆவியைக் கடவுள் நமக்குக் கொடாமல் வல்லமையும் அன்பும் நிதான புத்தியுமுள்ள
8 ஆவியையே கொடுத்திருக்கிறார். ஆகையால் நமது ஆண்டவரின் சாட்சியத்தைப்பற்றி யாவது அவர்நிமித்தம் கைதியாயிருக்கிற என்னைப்பற்றியாவது வெட்கப்படாமல் கடவுளின் வல்லமைக்கேற்றபடி சுவிசேஷத்திற்காக நீயும் துன்பத்தைச் சகித்திரு.
9 அவர் நம்மை இரட்சித்துப் பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்; அவர் நமது கிரியைகளின்படியல்ல தமது சொந்தத் தீர்மானத்தின்படியும் யுகாரம்பங்களுக்கு முன்னே கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும் அப்படிச்
10 செய்தார். நமது இரட்சகராகிய கிறிஸ்து இயேசு பிரசன்னமானதினாலே அந்தக் கிருபை இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டது; அவர் மரணத்தைப் பரிகரித்து ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே பகி
11 ரங்கப்படுத்தினார். அந்த சுவிசேஷத்திற்கு நான் பிரசங்கியாகவும் அப்போஸ்தலனாகவும் போதகனாகவும் நியமிக்கப்பட்டேன்.
12 அதினிமித்தம் நான் இந்தப் பாடுகளையும் அநுபவிக்கிறேன்; ஆயினும் நான் வெட்கப்படுகிறதில்லை; நான் விசுவாசம் வைத்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன், [1]நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அந்நாளுக்கென்று காத்துக்கொள்ள அவர் வல்லவரென்று நிடம்பிக்கையாயிருக்கிறேன்.
13 என்னிடம் நீ கேட்டிருக்கிற ஆரோக்கிய காரமான வார்த்தைகளின் மாதிரியைக் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தோ
14 டும் அன்போடும் வைத்துக்கொள். உன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள் வாசமாயிருக்கிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்.
15 ஆசியா நாட்டிலிருக்கிற யாவரும் என்னை விட்டு விலகிப்போனார்களென்பது உனக்குத் தெரியும்; பிகெல்லுவும் எர்மொகேனேயும் அவர்களைச் சேர்ந்தவர்கள்.
16 ஒநேசிப்போருவின் வீட்டாருக்கு ஆண்டவர் இரக்கங் கட்டளையிடுவாராக; அவன் அநேகந்தரம் என்னை இளைப்பாற்றினான்; என் விலங்கைப்பற்றி அவன் வெட்கப்
17 படவுமில்லை; அவன் ரோமாவில் வந்திருந்தபோதும் அதிகக் கருத்தாய் என்னைத் தேடிக்
18 கண்டுபிடித்தான்; அவன் எபேசுவில் செய்த பணிவிடையெல்லாம் உனக்கு நன்றாய்த் தெரியுமே. அவன் ஆண்டவரிடம் அக்காளிலே இரக்கம் கண்டடையும்படி ஆண்டவர் அவனுக்குக் கடாட்சிப்பாராக.

ஆதலால், என் பிள்ளையே, நீ கிறிஸ்து **2**
இயேசுவுக்குள்ளான கிருபையில் பலப்படு.
அநேக சாட்சிகள் முன்னிலையில் நீ என் 2
னிடங் கேட்டவைகளை மற்றவர்களுக்கும் போதிக்கக்கூடிய உண்மையுள்ள மனுஷரிடம் ஒப்புவி. கிறிஸ்து இயேசுவின் நல்ல 3
போர்ச்சேவகனாய் நீயும் துன்பத்தைச் சகித்திரு. தண்டில் சேவகம்பண்ணுகிற எவ 4
னும் தன்னைச் சேவகமெழுதிக்கொண்டவனுக்கு உகந்தவனாயிருக்கும்படி பிழைப்புக்கடுத்த வேறு அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான். அன்றியும் பந்தய ஆட்டத் 5
தில் ஒருவன் சட்டப்படி ஆடினாலன்றி முடிசூட்டப்படான். பாடுபட்டுப் பயிரிடுகிற 6
வன் பலனில் முந்திப் பங்கடையவேண்டும். நான் சொல்லுகிறதைக் கவனித்துக்கொள்; ஆண்டவர் எல்லாக் காரியங்களி 7
லும் உனக்குப் புத்தியைத் தந்தருளுவார்.
தாவீதின் சந்ததியில் பிறந்த இயேசுகிறிஸ்து 8
வை என் சுவிசேஷத்திற்கிசைய மரித்தோரிலிருந்தெழுப்பப்பட்டவராக நினைத்துக்கொள். இந்தச் சுவிசேஷத்தினிமித்தம் 9
நான் பாதகன்போலக் கட்டுக்குள்ளாகுந் துன்பத்தைச் சகிக்கிறேன். ஆயினும் கடவுளின் வார்த்தையோ கட்டப்பட்டிருக்கவில்லை, இதினிமித்தம், தெரிந்தெடுக்கப்பட் 10
டவர்கள் கிறிஸ்து இயேசுவுக்குள்ளானதும் நித்திய மகிமையோடு கூடியதுமான இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்கள் பொருட்டாக எல்லாவற்றையுஞ் சகிக்கிறேன். இது உண்மையான வார்த்தை: நாம் 11
அவரோடுகூட மரித்தால் அவரோடுகூடப் பிழைத்துமிருப்போம். பாடு சகித்தால் அவ 12
ரோடுகூட ஆளுகையும் செய்வோம்; நாம் அவரை மறுதலிப்போமேயானால் அவரும் நம்மை மறுதலிப்பார். நாம் உண்மையில் 13
லாதவர்களாயிருந்தாலும் அவர் உண்மையுள்ளவராகவே நிலைத்திருக்கிறார்; அவர் தம்மைத்தாம் மறுதலிக்கமுடியாது.
இவைகளை அவர்களுக்கு நினைப்பூட்டு; 14
ஒன்றுக்கும் பிரயோஜனமாகாததும் கேட்கிறவைகளைக் கவிழ்த்துப்போடுகிறதுமான வாக்குவாதம் செய்யாதபடி கடவுள் சந்நிதியில் அவர்களுக்குக் கண்டிப்பாகச் சாட்சி சொல்லு நீ வெட்கப்படாத ஊழியக்கார 15
னும் சத்திய வசனத்தை நேர்மையாய்ப் போதிக்கிறவனும் உண்மை உத்தமனுகக்

[1] தேவர் என்னிடத்தில் என்றும் திருப்பலாம்.

கடவுளுக்குமுன் நிறுத்திக்கொள்ளும்படி
16 கருத்துள்ளவனுமிரு. சீர்கேடான வீண்
பேச்சுகளுக்கு விலகியிரு; அவைகள் அவ
பக்தியாக மென்மேலும் விர்த்தியாகும்.
17 அவர்கள் வார்த்தை அரிபிளவைபோல் பட
ரும்; இமெநேயுவும் பிலேத்தும் அப்படிப்
18 பட்டவர்கள். இவர்கள் உயிர்த்தெழுதல்
நடந்தாயிற்றென்று சொல்லிச் சத்தியத்தை
விட்டு விலகிப்போனார்கள், சிலருடைய விசு
வாசத்தையுங் கவிழ்த்துப்போடுகிறார்கள்.
19 ஆகிலும், கடவுளின் உறுதியான அஸ்தி
பாரம் நிலைத்திருக்கிறது; கர்த்தர் தம்முடை
யவர்களே அறிவாரென்பதும் கர்த்தரின் நா
மத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்
தைவிட்டு விலகக்கடவனென்பதும் அதற்கு
20 முத்திரை. ஒரு பெரிய வீட்டிலே பொன்
வெள்ளிப் பாத்திரங்களேயல்லாமல் மரவை
களும் மண்பாத்திரங்களுமுண்டு; அவை
களில் சில கனத்திற்கும் சில கனவீனத்திற்கு
21 முரியன. ஆகையால் ஒருவன் இவைகளை
விட்டுத் தன்னைச் சுத்திகரித்துக்கொள்வா
னாகில் அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும்
எஜமானுக்கு உபயோகமானதும் எந்த நல்
வேலைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான
கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்.
22 அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைக
ளுக்கு நீ விலகியோடிச் சுத்த இருதயமுள்
ளவர்களாய் ஆண்டவரைத் தொழுதுகொள்
ளுகிறவர்களோடு நீதியையும் விசுவாசத்தை
யும் அன்பையும் சமாதானத்தையுந்
23 தொடர்ந்து நாடு. புத்தியீனமும் அயுக்தமு
மான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்கு
மென்று அறிந்து அவைகளை விலக்கிவிடு.
24 ஆண்டவரின் ஊழியக்காரன் சண்டைபண்
ணுகிறவனாயிராமல் எல்லாரிடத்திலும் சாந்த
முள்ளவனும் போதகசமர்த்தனும் தீமோ
சைச் சகிக்கிறவனுமாயிருக்கவேண்டும்.
25 எதிர்பேசுகிறவர்களுக்குச் சத்தியத்தை அறி
யும் முற்றறிவுக்கேதுவான மனந்திரும்புத
26 லைக் கடவுள் அருளத்தக்கதாகவும் | அவர்
தித்தத்தைச் செய்வதற்கென்று ஊழியக்கார
னால் பிடிக்கப்பட்டவர்களாய்ப் பிசாசின்
கண்ணியிலிருந்து தப்பி மறுபடியும் தெளி
வடையத் தக்கதாகவும் சாந்தமாய் அவர்க
ளுக்குப் போதித்துப் பயிற்றவேண்டும்.

**3** மேலும், கடைசி நாட்களில் கொடிய
காலங்கள் வருமென்று அறிந்துகொள்.
2 மனுஷர் தற்பிரியரும் பணப்பிரியரும் வீம்
புக்காரரும் அகந்தையுள்ளவர்களும்
தூஷிக்கிறவர்களும் பெற்றோருக்குக் கீழ்ப்
படியாதவர்களும் நன்றியறியாதவர்களும்
பக்தியில்லாதவர்களும் | சுபாவ அன்பில்லா 3
தவர்களும் இணங்காதவர்களும் அவதூறு
பண்ணுகிறவர்களும் அடக்கமில்லாதவர்க
ளும் கொடுமையுள்ளவர்களும் நன்மையை
ஆசியாதவர்களும் | துரோகிகளும் தணிகர 4
முள்ளவர்களும் இறுமாப்புள்ளவர்களும்
கடவுளைப்பார்க்கிலும் சுகபோகத்தை அதிக
மாய் நேசிக்கிறவர்களும் | தெய்வபக்தியின் 5
வேஷத்தைத் தரித்து அதின் வல்லமையை
யோ மறுதலிக்கிறவர்களுமாயிருப்பார்கள்;
இப்படிப்பட்டவர்களை விட்டுவிலகு. இவர் 6
களில் சிலர் வீடுகளில் நுழைந்து அற்ப
ஸ்திரீகளை வசப்படுத்திக்கொள்ளுகிறார்கள்.
இந்த ஸ்திரீகள் பாவங்களைக் குறித்துக் 7
கொண்டு பற்பல இச்சைகளால் இழுக்கப்
பட்டு, எப்போதும் கற்றாலும் ஒருபோதும்
சத்தியத்தை அறியும் முற்றறிவுக்கு வர
தெட்டமுடியாதவர்கள். யன்நேயும் யம்பி
ரேயும் மோசேக்கு எதிர்த்து நின்றதுபோல
இவர்களும் சத்தியத்துக்கு எதிர்த்து நிற்கி
றார்கள்; இவர்கள் தற்புத்தியுள்ள மனு 8
ஷர், விசுவாச விஷயத்தில் ஆகாதவர்க
ளென்று தள்ளப்படுகிறவர்கள். வெகு 9
தூரம் முன்னேறமாட்டார்கள்; ஆனாலும்
இவர்கள் மதிகேடும் அவர்கள் மதிகேட்
டைப்போல் எல்லாருக்கும் விளங்கமாகும்.
நீயோ என் போதகம் நடக்கை நோக் 10
கம் விசுவாசம் நீடிய சாந்தம் அன்பு பொ
றுமை இவற்றிலும் அந்தியோகியா இக்கோ
னியா லீஸ்திரா என்னும் பட்டணங்களில்
எனக்கு நேரிட்ட இம்சைகளிலும் பாடு
களிலும் என்னைப் பின்பற்றினாய்; இந்த இம் 11
சைகளையெல்லாம் சகித்தேன், இவையெல்
லாவற்றினின்றும் ஆண்டவர் என்னை விடு
வித்தார். அன்றியும், கிறிஸ்து இயேசுவுக்குள் 12
தெய்வபக்தியாய் ஜீவிக்க விரும்புகிற யாவ
ரும் இம்சைக்குள்ளாவார்கள். பொல்லா 13
தவர்களும் எத்தர்களும் மோசம்போக்குகிற
வர்களாகவும் மோசம்போகிறவர்களாகவும்
மென்மேலும் தீமையில் அதிகரிப்பார்கள்.
நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் 14
நிலைத்திரு; அவற்றை இன்னாரிடங் கற்றாய்
என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல்,
கிறிஸ்து இயேசுவின்மேலுள்ள விசுவாசத் 15
தினால் உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞான
முள்ளவனாக்கவல்ல பரிசுத்த ஆகமங்களை நீ
சிறுவயதுமுதல் அறிந்தவனென்றும் உனக்
குத் தெரியும். [1] தெய்வாவியினால் அருளப் 16

[1] ஒவ்வொரு வேதவாக்கியமும் தெய்வாவியினால் அருளப்பட்டதாய் என்றும் திருப்பலாம்.

பட்ட ஒவ்வொரு வேதவாக்கியமும் கட
வுளின் மனுஷன் தகுதியுள்ளவனாகி எந்த
நற்கிரியையுஞ் செய்ய முற்றிலும் தக்கவ
17 னாவதற்கேதுவாய் | அது உபதேசிப்பதற்
கும் கடிந்துகொள்வதற்கும் சீர்திருத்துவதற்
கும் நீதிபயிற்றுவதற்கும் பிரயோஜனமுள்ள
தாம்.

**4** நான் கடவுளுக்கும் உயிருள்ளோரையும்
மரித்தோரையும் நியாயந்தீர்க்கப்போகிற
கிறிஸ்து இயேசுவுக்கும் முன்பாக அவரு
டைய பிரசன்னமாகுதலையும் அவருடைய
ராஜ்யத்தையும் நினைத்தவனாய்க் கண்டிப்பா
2 கச் சாட்சி சொல்லுகிறேன்: திருவசனத்தைப்
பிரசங்கி, சமயம் வாய்த்தாலும் வாய்க்கா
விட்டாலும் அதை விட்டுவிடாதே; எல்லா
கீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடுங் குற்
றத்தை எடுத்துக்காட்டி கடிந்துகொண்டு
3 புத்திசொல்லு; அவர்கள் ஆரோக்கியகரமான
உபதேசத்தைச் சகிக்காமல் செவித்தினவுள்
ளவர்களாகித் தங்கள் சுய இச்சைகளுக்
கேற்ற போதகர்களைத் திரட்டிக் கூட்டிக்
4 கொண்டவர்களாய்ச் | சத்தியத்துக்குச்
செவியை விலக்கிக் கட்டுக்கதைகளுக்குச்
5 சாய்ந்துபோகுங்காலம் வரும். நீயோ எல்
லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு,
துன்பத்தைச் சகித்திரு, சுவிசேஷகன் வேலை
யைச் செய், உன் ஊழியத்தை முழுவதும்
நிறைவேற்று.
6 நான் இப்பொழுதே பானபலியாக ஊற்
றப்படுகிறேன்; நான் பிரிந்துபோகுங்காலம்
7 வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடி
னேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்
8 தைக் காத்துக்கொண்டேன். இனி நீதி
யின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்
கிறது; நீதியுள்ள நியாயாதிபதியாகிய ஆண்ட
வர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளு
வார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிர
சன்னமாகுதலை அன்போடு ஆசித்து வரும்
யாவருக்குந் தந்தருளுவார்.
9 நீ சீக்கிரமாய் என்னிடம் வரப் பிரயத்
10 தனப்படு. தேமா இந்தப் பிரபஞ்சத்தின்மேல்
ஆசைவைத்து என்னைவிட்டுப் பிரிந்து தெச
லோனிக்கேயுக்குப் போய்விட்டான்; கிரேஸ்
கே கலாத்தியா நாட்டிற்கும் தீத்து தல்மாத்
தியா நாட்டிற்கும் போய்விட்டார்கள்.
லூக்காமாத்திரம் என்னோடிருக்கிறான்;
மார்க்கை உன்னோடே கூட்டிக்கொண்டுவா, 11
ஊழியத்தில் அவன் எனக்கு நற்பிரயோஜன
முள்ளவன். தீகிக்கை நான் எபேசுவுக்கு 12
அனுப்பினேன். தூரோவாவிலிருக்கிற 13
கார்ப்பு என்பவன் வசம் நான் வைத்து
வந்த மேலங்கியையும் புஸ்தகங்களையும்
விசேஷமாய்த் தோற்சுருள்களையும் நீ வரு
கிறபோது எடுத்துக்கொண்டுவா. கன்னான் 14
கிய அலெக்சந்தர் எனக்கு வெகு தீமைசெய்
தான்; அவன் செய்கைகளின்படியே ஆண்
டவர் அவனுக்குப் பதிலளிப்பார். நீயும் 15
அவனைப்பற்றி எச்சரிக்கையாயிரு; அவன்
நமது வார்த்தைகளுக்கு மிகவும் எதிர்த்து
நின்றான். நான் முதல் விசாரணையில் உத் 16
தரவு சொல்ல நிற்கையில் எனக்குத் துணை
நின்றவன் ஒருவனுமில்லை, எல்லாரும் என்
னைக் கைவிட்டார்கள்; அது அவர்கள்மேல்
சுமராதிருப்பதாக. ஆண்டவர்தான் எனக் 17
குத் துணைநின்று என்னில் சுவிசேஷ வேலை
நிறைவேறுவதற்கென்றும் புறஜாதியாரெல்
லாருங் கேட்பதற்கென்றும் என்னைப் பலப்
படுத்தினார். சிங்கத்தின் வாயிலிருந்தும் விடு
விக்கப்பட்டேன். ஆண்டவர் எல்லாத் 18
தீங்கினின்றும் என்னை விடுவித்துத் தம்மு
டைய பரம ராஜ்யத்திற்குள்ளாகும்படி
இரட்சிப்பார்; அவருக்கே மகிமை யுகா
யுகங்களாயிருப்பதாக; ஆமேன்.
பிரிஸ்காளையும் ஆக்கிலாவையும் ஒநேசி 19
போருவின் வீட்டாரையும் வாழ்த்து.
எரஸ்து கொரிந்துவில் இருந்துவிட்டான்; 20
தூரோப்பீமுவை மிலேத்தில் வியாதிபட்டவ
னாக விட்டு வந்தேன். மாரிகாலத்துக்கு 21
முன் நீ வந்துசேரப் பிரயத்தனப்படு. ஐபூ
லுவும் பூதேயும் லீனுவும் கிலௌதியாளும்
மற்றெல்லாச் சகோதரரும் உனக்கு வந்த
னஞ் சொல்லுகிறார்கள்.
ஆண்டவர் உன் ஆவியோடிருப்பாராக, 22
கிருபை உங்களோடிருப்பதாக.
ஆமேன்.

# தீத்துக்கு எழுதின நிருபம்

**1** கடவுளின் அடியானும் கடவுள் தெரிந்
தெடுத்தவர்களின் விசுவாசம் தெய்வபக்திக்
கேற்ற சத்தியத்தின் முற்றறிவு இவற்றிற்
கிசைய நித்திய ஜீவனைப்பற்றிய நன்னம்பிக்
கைக்கென்று இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்
**2** தலனுமான பவுல் | பொதுவான விசுவாசத்
திலே என் உத்தமபிள்ளை தீத்துக்கு எழுது
வது: பிதாவாகிய கடவுளிடமிருந்தும்
நமது இரட்சகராகிய கிறிஸ்து இயேசுவினி
டமிருந்தும் கிருபையும் சமாதானமும்
**3** உண்டாவதாக. அந்த நித்திய ஜீவனம்பிக்
கையைப் பொய்யுரையாத கடவுள் யுகாரம்
**4** பங்களுக்கு முன்னே வாக்களுளி | நமது
இரட்சகராகிய கடவுளின் கட்டளைப்படி
என்னிடம் நம்பி ஒப்புவித்த பிரசங்கத்தி
னல் ஏற்ற வேளைகளில் தமது வார்த்தையை
வெளிப்படுத்தினார்.

**5** நான் உன்னைக் கிரேத்தாதீவில் விட்டு
வந்த நோக்கம் இது: நீ குறைவானவைக
ளைச் சரிப்படுத்தவும் நான் உனக்குக் கட்
டளையிட்டபடியே ஊர்தோறும் மூப்பரை
**6** ஏற்படுத்தவும் வேண்டுமென்பதே. குற்றஞ்
சாட்டப்படாதவனும் ஒரே மனைவியையு
டைய புருஷனும் நன்மார்க்கரென்றும்
அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத
விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவனு
மாகிய ஒருவனிருந்தால் அவனையே ஏற்
**7** படுத்தலாம். ஏனெனில், அத்தியட்சனை
வன் குற்றஞ் சாட்டப்படாதவனுயிருக்க
வேண்டும், இவன் கடவுளின் உக்கிராணக்
காரன்; இவன் சுயேஷ்டப்பிரியனும் மூர்க்
கனும் மதுபானப்பிரியனும் அடிக்கிறவ
னும் நீசத்தனமான லாபஇச்சை உடைய
**8** வனுமாயிராமல் | அந்நியரை உபசரிக்கிற
வனும் நன்மையானவற்றை ஆசிக்கிறவனும்
நிதானபுத்தியுள்ளவனும் நீதிமானும் பக்தி
யுள்ளவனும் தன்னடக்கமுள்ளவனும் |
**9** ஆரோக்கியகரமான உபதேசத்தினாலே புத்தி
சொல்லவும் எதிர்பேசுகிறவர்களுக்குக் குற்
றத்தை எடுத்துக்காட்டவும் வல்லவனுயிருக்
கும்படி உபதேசத்திற்கிசைந்த உண்மை
யான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்
ளுகிறவனுமாயிருக்கவேண்டும்.

**10** அநேகர், விசேஷமாய் விருத்தசேதன
முள்ளவர்கள், அடங்காதவர்களும் வீண்
பேச்சுக்காரரும் மனதை மயக்குகிறவர்களு
மாயிருக்கிறார்கள், அவர்கள் வாயை அடக்க
வேண்டும்; அவர்கள் நீசத்தனமான லாப **11**
இச்சையோடு தகாதவைகளை உபதேசித்து
வந்து முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப்
போடுகிறார்கள்.

கிரேத்தாதீவார் ஒயாப் பொய்யர் **12**
துஷ்டமிருகங்கள்
பெருவயிற்றுச் சோம்பேறிகள்

என்று அவர்களிலொருவனுகிய அவர்கள்
தீர்க்கதரிசியே சொல்லியிருக்கிறான். இந் **13**
தச் சாட்சியம் உண்மை; இது காரணமாய்
அவர்கள் யூதரின் கட்டுக்கதைகளுக்கும் சத்
தியத்தை விட்டுவிலகுகிற மனுஷரின் கற்
பனைகளுக்கும் செவி கொடாமல் | விசுவா **14**
சத்தில் ஆரோக்கியமுள்ளவர்களாயிருக்கும்
படி நீ அவர்களைக் கண்டிப்பாய்க் கடிந்து
கொள். சுத்தருக்கு எல்லாம் சுத்தமே, **15**
கறைப்பட்டவர்களுக்கும் அவிசுவாசிகளுக்
கும் ஒன்றுஞ் சுத்தமாயிராது. அவர்கள் **16**
புத்தியும் மனச்சாட்சியுமோ கறைப்பட்டி
ருக்கும். கடவுளை அறிந்திருக்கிறோமென்று
அவர்களும் சொல்லுகிறார்கள்; செய்கைகளி
னலோ அவரை மறுதலிக்கிறார்கள்; அவர்
கள் அருவருக்கப்படத்தக்கவர்கள், கீழ்ப்
படியாதவர்கள், எந்த நல்ல வேலைக்கு
மாகாதவர்கள்.

நீயோ ஆரோக்கியகரமான உபதேசத்துக் **2**
கேற்றவைகளைப் பேசு. முதிர்வயதுள்ள புரு **2**
ஷர் தெளிந்த சிந்தையுள்ளவர்களும் ஒழுக்க
முள்ளவர்களும் நிதான புத்தியுள்ளவர்க
ளும் விசுவாசத்திலும் அன்பிலும் பொறுமை
யிலும் ஆரோக்கியமுள்ளவர்களுமா யிருக்க
வேண்டும். முதிர்வயதுள்ள ஸ்திரீகளும் **3**
அப்படியே ஒழுக்கத்தில் பயபக்தியுள்ளவர்
களும் அவதூறுபண்ணுதவர்களும் மதுபா
னத்துக்கு அடிமைப்படாதவர்களும் நற்
காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்க
வேண்டும்; அப்படியிருந்தால் பாலிய ஸ்திரீ **4**
கள், கடவுளின் வசனம் தூஷிக்கப்படாத
படி, தங்கள் புருஷரிடத்திலும் பிள்ளைகளி
டத்திலும் அன்புள்ளவர்களும் | நிதானபுத் **5**
தியுள்ளவர்களும் கற்புள்ளவர்களும் வீட்டு
வேலை செய்கிறவர்களும் நல்லவர்களும் தங்

கள் புருஷருக்கு அடங்கி நடக்கிறவர்களு
மாயிருக்கும்படி அவர்களுக்கு நற்புத்தி
6 புகட்டக்கூடியவர்களாவார்கள். அப்படி
யே பாலிய புருஷரும் எல்லாவற்றிலும்
நிதானபுத்தியுள்ளவர்களாயிருக்க நீ புத்தி
7 சொல்லு. நீயே உன்னை நற்கிரியைகளுக்கு
8 மாதிரியாகக் காண்பி. எதிரியானவன் நம்
மைப்பற்றித் தீதொன்றும் பேச இடமின்றி
வெட்கப்படத்தக்கதாக உபதேசத்தில் தீர்
கேடின்மையும் ஒழுக்கமும் குற்றம்பிடிக்
கப்படாத ஆரோக்கியகரமான வார்த்தை
9 யும் விளங்கும்படி செய். வேலைக்காரர் தங்
கள் எஜமான்களுக்கு எல்லாவற்றிலும்
அடங்கியிருக்கவும் உகந்தவர்களாயிருக்க
10 வும் எதிர்பேசாமலும், திருடாமலும் சகல
விதத்திலும் நல்லுண்மையைக் காண்பிக்க
வேண்டும். இவ்விதமாய் அவர்கள் நமது
இரட்சகராகிய கடவுளின் உபதேசத்தை
எல்லாவற்றிலும் அலங்கரிக்கவேண்டும்.

11 எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை
அளிக்கத்தக்க தெய்வ கிருபையானது பிர
12 சன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌ
கீக இச்சைகளையும் வெறுத்து நிதானபுத்தி
யும் நீதியும் தெய்வ பக்தியும் உள்ளவர்
13 களாய் இந்த யுகத்தில் ஜீவித்து, நாம் எதிர்
பார்க்கும் ஆனந்த நம்பிக்கைக்கும் நமது
மகத்தான கடவுளும் இரட்சகருமாகிய
கிறிஸ்து இயேசுவின் மகிமை பிரசன்னமாவ
தற்கும் காத்துக்கொண்டிருக்கும்படி நம்
14 மைப் போதித்துப் பயிற்றுகிறது. அவர்
எல்லா அக்கிரமத்தினின்றும் நம்மை மீட்
டுக்கொண்டு தமக்குரிய சொந்த ஜனமாக
வும் நற்கிரியைகளைச் செய்ய வைராக்கிய
முள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்
படி நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொ
15 டுத்தார். நீ இவைகளை உபதேசித்துப் புத்தி
சொல்லி எல்லா அதிகாரத்தோடுங் கடிந்து
கொள்; ஒருவனும் உன்னை அசட்டை
பண்ண இடங்கொடாதே.

**3** துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்
கும் அடங்கிக் கீழ்ப்படிந்திருக்கவும் எல்லா
நற்கிரியையும் செய்ய ஆயத்தமாயிருக்க
2 வும், ஒருவனையும் தூஷியாமலும் வழக்
காடாமலும் பொறுமையுள்ளவர்களாய் எல்
லா மனுஷருக்கும் எவ்விஷயத்திலும் சாந்த
குணத்தைக் காண்பிக்கவும் அவர்களுக்கு
நினைப்பூட்டு.

3 ஒரு காலத்தில் நாமும் புத்தியீனரும் கீழ்ப்
படியாதவர்களும் வழிதப்பி நடக்கிறவர்
களும் பலவித இச்சைகளுக்கும் இன்பங்
களுக்கும் அடிமைப்பட்டவர்களும்
துர்க்குணத்திலும் பொறாமையிலும் ஜீவிக்
கிறவர்களும் பகைக்கப்படுகிறவர்களும் ஒரு
வரையொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்
தோம். நமது இரட்சகராகிய கடவுளின் 4
தயாளமும் மனுஷர்மீதுள்ள அன்பும் பிர
சன்னமானபோதோ, நாம் செய்த நீதியின்
கிரியைகளைப் பார்த்தல்ல, தமது இரக்கத் 5
தின்படியே மறுஜென்ம முழுக்கினாலும் பரி
சுத்த ஆவியின் புதிதாக்குதலினாலும் நம்மை
இரட்சித்தார்; தமது கிருபையினால் நாம் 6
நீதிமான்களாகத் தீர்க்கப்பட்டு நித்திய ஜீவ
னைப்பற்றிய நன்னம்பிக்கையின்படி சுதந்
தரராவதற்கென்று, அவர் நமது இரட்சக 7
ராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் அந்தப்
பரிசுத்த ஆவியை நம்மேல் மிகுதியாய்ப்
பொழிந்தருளினார். இது உண்மையான 8
வார்த்தை; ஆகவே கடவுளில் விசுவாசம்
வைத்திருக்கிறவர்கள் நற்கிரியைகளைச் செய்
வதில் கருத்தாயிருக்கும்படி நீ இவைகளைப்
பற்றித் திட்டமாய்ப் போதிக்கவேண்டு
மென்று விரும்புகிறேன்; இவைகளே மனு
ஷருக்கு நன்மையும் பிரயோஜனமுமான
வைகள். புத்தியீனமான தர்க்கங்களையும் 9
வம்சவரலாறுகளையும் சண்டைகளையும் நியா
யப்பிரமாணத்தைப்பற்றிய வாக்குவாதங்க
ளையும் விட்டு விலகு; அவைகள் அப்பிர
யோஜனமும் வீணுமாம். வேதப்புரட்டன் 10
ஒருவனை நீ இரண்டொருதரம் எச்சரித்த
பின்பு அவனை விட்டு விலகு. அப்படிப் 11
பட்டவன் வழிவிலகித் தன்னைத்தானே ஆக்
கினைத் தீர்ப்புக்குட்படுத்துகிறவனாய்ப் பா
வஞ் செய்கிறானென்று அறிந்திருக்கிறாயே.

நான் அர்த்தெமாவையாவது தீகிக்கை 12
யாவது உன்னிடம் அனுப்பும்போது நீ நிக்
கொப்போலிக்கு என்னிடம் வரப் பிரயத்
தனப்படு; மாரிகாலம் அங்கே தங்கும்படி
தீர்மானித்திருக்கிறேன். நியாயசாஸ்திரியா 13
கிய சேனவையும் அப்பொல்லோவையும்
அவர்களுக்கு ஒரு குறைவுமில்லாதபடி
ஜாக்கிரதையாய் விசாரித்து வழி விட்ட
னுப்பு. நம்முடையவர்களும் கனியற்ற 14
வர்களாயிராதபடி குறைவுகளை நீக்குவதற்
கேதுவாய் நற்கிரியைகளைச் செய்யப் பழக
வேண்டும்.

என்னோடிருக்கிற யாவரும் உனக்கு 15
வந்தனஞ் சொல்லுகிறார்கள்; விசுவாசத்தில்
நம்மை நேசிக்கிறவர்களை வாழ்த்து.

கிருபை உங்களனைவரோடுமிருப்பதாக.

THE EPISTLE TO PHILEMON

# பிலேமோனுக்கு எழுதின நிருபம்

கிறிஸ்து இயேசுவின் கைதியாகிய பவுலும் சகோதரன் தீமோத்தேயுவும் எங்களுக்குப் பிரியமுள்ளவனும் உடன் ஊழியனுமான
2 பிலேமோனுக்கும் | சகோதரி அப்பியாளுக்கும் எங்கள் உடன் போர்ச்சேவகன் அர்க்கிப்புக்கும் உன் வீட்டில்கூடிவருகிற சபைக்கும் எழுதுவது: நமது பிதாவாகிய கடவுளிடமிருந்தும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினிடமிருந்தும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.
4 உனது அன்பையும் ஆண்டவராகிய இயேசுவிலும் எல்லாப் பரிசுத்தவான்கள் விஷயத்திலுமுள்ள உனது விசுவாசத்தை
5 யும் நான் கேள்விப்பட்டு | எப்பொழுதும் என் ஜெபங்களில் உன்னை நினைத்து என்
6 கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன். நம்மிலுள்ள எல்லா நன்மையையும் முற்றும் அறிவதிலே உன் விசுவாசத்தின் அந்நியோந்நியம் கிறிஸ்துவுக்கென்று பயன்பட
7 வேண்டுமென்று ஜெபிக்கிறேன். சகோதரனே, பரிசுத்தவான்களின் உள்ளங்கள் உன்னாலே தேறுதலடைந்தபடியால் உன் அன்பினாலே மிகுந்த சந்தோஷமும் ஆறுதலும் அடைந்திருக்கிறேன்.
8 ஆகவே, செய்யத் தகுந்ததை உனக்குக் கட்டளையாகச் சொல்லக் கிறிஸ்துவுக்குள்
9 எனக்கு அதிகப் பாத்தியமிருந்தும் | பவுலாகிய நான் முதிர்வயதுள்ளவனும் இப்பொழுதோ கிறிஸ்து இயேசுவின் கைதியுமாக அன்பினிமித்தம் வருந்திக் கேட்பதே நல
10 மென்று தோன்றுகிறது. நான் கேட்பது, கைதியாயிருக்கையில் நான் பெற்றெடுத்த என் பிள்ளைக்காகத்தான், ஒநேசிமுவே அந்
11 தப் பிள்ளை. ஒரு காலத்தில் அவன் உனக்குப் பிரயோஜனமற்றவன், இப்பொழுதோ உனக்கும் எனக்கும் நற்பிரயோஜனமுள்ள
12 வன். அவனை உன்னிடம் அனுப்புகிறேன்;
13 அவன் என் உள்ளம்போல்வான். சுவிசேஷத்தினிமித்தம் நான் கைதியாயிருக்கிற நிலைமையில் உனக்குப் பதில் அவன் எனக்குப் பணிவிடைசெய்வதற்கு அவனை என்னிடம் நிறுத்திக்கொள்ள ஆசையாயிருந்தேன்.
14 ஆயினும் உனது சம்மதியின்றி ஒன்றுஞ் செய்ய எனக்கு மனதில்லை. நீ செய்யும் நன்மை கட்டாயமாயல்ல சுயேச்சையாய் விளையவேண்டும்.
15 இனி அவனை என்றென்றைக்கும் அடிமையாகவல்ல, அடிமையிலுமேலான பிரிய சகோதரனாக நீ பெறுவதற்கென்றே அவன் சிறிதுகாலம் பிரிந்துபோனானோ?
16 எனக்கே அவன் அதிகப் பிரியமான சகோதரன்; உனக்கோ மாம்சத்தின்படியும் ஆண்டவருக்குள்ளும் இன்னும் எவ்வளவு அதிகப் பிரியமானவன்.
17 ஆதலால் நீ என்னைக் கூட்டாளியென்று எண்ணினால் என்னைப்போலவே அவனை ஏற்றுக்கொள்.
18 அவன் உனக்கு யாதொரு அநியாயஞ்செய்ததும் கடன் பட்டதும் உண்டானால் அதை என் கணக்கிலே வைத்துக்கொள்.
19 பவுலாகிய நான் இதை என் கைப்படவே எழுதியிருக்கிறேன், நானே அதைச் செலுத்தித் தீர்ப்பேன்; எனக்கு நீ செலுத்தவேண்டிய கடன் நீதானென்று நான் உனக்குச் சொல்லவேண்டியதில்லையே.
20 ஆம், சகோதரனே, ஆண்டவருக்குள் உன்னால் எனக்கு ஒரு நன்மை பிறக்கட்டும், கிறிஸ்துவுக்குள் என் உள்ளத்தைத் தேற்று.
21 நான் சொல்வதிலும் அதிகமாய் நீ செய்வாயென்றறிந்து உன் கீழ்ப்படிதலில் திடநம்பிக்கையுடையவனாய் உனக்கு எழுதியிருக்கிறேன்.
22 இதுவுமல்லாமல் உங்கள் விண்ணப்பங்களின்மூலமாய் நான் உங்களுக்கு அதுக்கிரகிக்கப்படுவேனென்று நம்பியிருக்கிறபடியால் எனக்காக ஓரிடத்தை ஆயத்தம்பண்ணிவை.

23 கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் கைதியாயிருக்கிற எப்பாப்பிராவும் | என் உடன்
24 ஊழியராகிய மார்க்கும் அரிஸ்தார்க்கும் தேமாவும் லூக்காவும் உனக்கு வந்தனஞ் சொல்லுகிறார்கள்.

25 ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியோடிருப்பதாக.

# எபிரேயருக்கு எழுதின நிருபம்

**1** பூர்வகாலத்தில் கடவுள் பற்பல பங்காகவும் பற்பல வகையாகவும் தீர்க்கதரிசிகளின் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் 2 பற்றி | இந்தக் கடைசி நாட்களிலே குமாரன்மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார். இவரை யெல்லாவற்றிற்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக்கொண்டே உல 3 கங்களையும் படைத்தார். இவர் அவருடைய மகிமையின் ஜோதிவடிவும் அவர் தத்துவத்தின் சொரூபமுமாய் எல்லாவற்றையும் தமது வல்லமையான வார்த்தையினால் தாங்குகிறவராய்ப் பாவங்களை நீக்குஞ் சுத்திகரிப்பை உண்டுபண்ணி உன்னதங்களில் மகத்துவமானவரின் வலதுபாரிசத்தில் உட் 4 கார்ந்தார். இவர் தெய்வதூதரைப்பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக்கொண்டாரோ அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார்.

5 நீர் எனது குமாரன்,
நானே இன்று உம்மை ஜனிப்பித்தேன்
என்றும்
நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன்,
அவர் எனக்குக் குமாரனாயிருப்பார்
என்றும் அவர் தூதர்களில் யாருக்காவது
6 எப்போதாகிலுஞ் சொன்னதுண்டா? மேலும்,
தமது முதற் பேறானவரைத் திரும்பவும்
உலகத்தில் பிரவேசிக்கச் செய்கிறபோது:
தெய்வதூதர் யாவரும்
அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்
7 என்கிறார். தெய்வதூதரைக் குறித்து:
தமது தூதரைக் காற்றுகளாகவும்
தமது பணிவிடைக்காரரை அக்கினி
ஜ்வாலைகளாகவும் செய்கிறார்
8 என்று சொல்லியிருக்கிறார். குமாரனைக் குறித்தோ:
கடவுளே யுகாயுகங்களாய் உமது சிங்காசனம்.
அவர் ராஜ்யத்தின் செங்கோல் நேர்மையுள்ள செங்கோல்.
9 நீர் நீதியை நேசித்து அக்கிரமத்தைப் பகைத்திருக்கிறீர்;
அதினிமித்தம், கடவுளே, உமது கடவுள்
உமது தோழரைப்பார்க்கிலும்
உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார்
என்றும்,
10 கர்த்தாவே நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்;
வானங்கள் உமது கரங்களின் கிரியைகள்;
11 அவைகள் அழிந்துபோம்,
நீரோ நிலைநிற்கிறீர்;
அவைகளெல்லாம் வஸ்திரம்போலப் பழமையாய்ப்போம்,
12 ஒரு சால்வையைப்போல் அவற்றைச் சுருட்டுவீர்,
வஸ்திரம்போல் மாற்றப்பட்டும்போகும்;
நீரோ மாறுதவர்,
உமது ஆண்டுகள் முடிவடைவதில்லை
என்றும் சொல்லியிருக்கிறது. மேலும்,
13 நான் உமது சத்துருக்களை
உமக்குப் பாதபடியாக்கிப்போடுமட்டும்
நீர் என் வலதுபாரிசத்தில் உட்காரும்
என்று தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலுஞ் சொன்னதுண்டா? 14 அவர்களெல்லாரும் இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தம் ஊழியஞ் செய்யும்படி அனுப்பப்படும் பணிவிடை ஆவிகள் தானல்லவா?

**2** ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டு வழுவிப்போகாதபடி அவைகளில் அதிக கவனமாயிருக்கவேண்டும். 2 எந்த மீறுதலுக்கும் கீழ்ப்படியாமைக்கும் நியாயமான பிரதிபலன் கிடைக்கும்படி தெய்வதூதர்மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனம் உறுதியாக்கப்பட்டதே. அப்படியிருக்க, இவ்வளவு 3 பெரிதான இரட்சிப்பைப்பற்றிக் கவலையற்றுப்போனால் நாம் தப்பிக்கொள்வதெப்படி? இந்த இரட்சிப்பு முதல்முதல் ஆண்டவரால் கூறப்பட்டுப் | பிற்பாடு அடையாளங் 4 கள் அற்புதங்கள் பலவித வல்லமையான செயல்கள் இவற்றின்மூலமாகவும் தமது

சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களின்மூலமாகவும் கடவுள் தாமே சாட்சி கொடுக்கவே, கேட்டவர்களால் நமக்கு உறுதியாக்கப்பட்டது.

5 நாம் பேசிக்கொள்ளுகிறதாகிய இனி வரும் உலகத்தை அவர் தூதர்களுக்குக் கீழ்ப்படுத்தவில்லை.

6 மனுஷனே நீர் நினைப்பதற்கும்
மனுஷகுமாரனே நீர் கண்ணோக்குவதற்கும்
அவன் எம்மாத்திரம்?

7 அவனைத் தெய்வதூதரிலும் சற்றே சிறியவனாக்கினீர்;
மகிமையினாலும் கனத்தினாலும் அவனுக்கு முடிசூட்டி,

8 யாவற்றையும் அவன் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்

என்று ஒருவன் ஒரு இடத்தில் திடசாட்சியாகச் சொன்னான். யாவற்றையும் அவனுக்குக் கீழ்ப்படுத்துகையில் அவர் ஒன்றையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தாமல் விடவில்லை. அப்படியிருந்தும் இன்னும் அவனுக்கு யாவும் கீழ்ப்பட்டிருக்கக்காணோம்.

9 எனினும் தெய்வதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டிருக்கிறதைக் காண்கிறோம். அவர் மரணத்தை

10 ருசிபார்த்தது கடவுளின் கிருபையினால் ஒவ்வொருவருக்கும் பயன்படும்படியாகவே இப்படி முடிசூட்டப்பட்டார். தமக்காகவும் தம்மாலும் சகலமும் இருக்கச்செய்கிறவருக்கு, அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கும்போது, அவர்கள் இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களின் மூலமாய் பூரணப்படுத்துவது தகுதியாயிருந்

11 தது. பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ் செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படவில்லை.

12 உமது நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து
சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன்

என்றும்

13 நான் அவரில் நம்பிக்கையாயிருப்பேன்

என்றும்

இதோ, நானும் கடவுள் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும்

14 என்றும் சொல்லியிருக்கிறதே. ஆதலால், பிள்ளைகள், மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல அவற்றை உடையவரானார்; மரணவல்லமையுடைய பிசாசானவனைத் தமது மரணத்தினால் அழிக்கும்படிக்கும்

மரண பயத்தினால் ஜீவகாலமெல்லாம் அடி 15
மைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை செய்யும்படிக்கும் அப்படியானார்.

அவர் தெய்வதூதருக்கு உதவியாகக் 16
கைகொடுக்கவில்லையே, ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகவே கைகொடுத்தார்.

ஆகவே ஜனத்தின் பாவங்களுக்குப் பிராயச் 17
சித்தம் செய்வதற்கேதுவாக அவர் இரக்கமும் கடவுளுக்கடுத்த விஷயங்களில் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படி எல்லாவற்றிலும் தமது சகோதரரைப்போல் ஆகவேண்டியதாயிருந்தது. அவர் 18
தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதில் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்.

**3** இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நமது அறிக்கையின் அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாகிய இயேசுவைக் கவனித்துப் பாருங்கள்; மோசே கடவுளின் 2
வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்ததுபோல் இவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார்.

வீட்டை உண்டுபண்ணினவன் வீட்டைப் 3
பார்க்கிலும் அதிக கனத்திற் குரியவன்; அதுபோல் மோசேயைப் பார்க்கிலும் இவர் அதிக மகிமைக்குப் பாத்திரர். எந்த வீடும் 4
ஒருவனால் உண்டாக்கப்படும், எல்லாவற்றையும் உண்டுபண்ணினவரோ கடவுள்.

சொல்லப்படப்போகிற காரியங்களுக்குச் 5
சாட்சியமாக மோசே பணிவிடைக்காரனாய் அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். கிறிஸ்துவோ குமாரன் 6
என்கிற அவருடைய வீட்டின்மேல் அப்படியிருக்கிறார்; தைரியத்தையும் நன்னம்பிக்கையின் பெருமைபாராட்டலையும் முடிவு பரியந்தம் உறுதியாய் பற்றிக்கொண்டிருப்போமாகில் நாம் அவருடைய வீடாகிவிட்டோம்.

இன்று அவர் சத்தத்தைக் கேட்பீர்களா 7
கில்,

வனாந்தரத்திலே சோதனைநாளில் கோப 8
மூட்டினபோது நடந்ததுபோல
உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்;

அங்கே உங்கள் பிதாக்கள் 9
என்னைச் சோதித்துப் பரீட்சை பார்த்து

நாற்பது வருஷகாலமாய் என் கிரியை
களைக் கண்டார்கள்.
10 ஆனபடியால் நான் அந்தச் சந்ததியின்
மேல் கோபங்கொண்டு
அவர்கள் எப்பொழுதும் மனம் வழு
விப் போகிறவர்களென்று சொன்னேன்.
அவர்களோ என் வழிகளை அறிந்து
கொள்ளவில்லை.
11 ஆகவே, என் இளைப்பாறுதலில் அவர்
கள் பிரவேசிப்பதேயில்லையென்
என் கோபத்தில் ஆணையிட்டேன் என்று
பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே.
12 சகோதரரே, ஜீவனுள்ள கடவுளை விட்டு
விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள
பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்
13 குள்ளும் இராதபடி பாருங்கள். உங்க
ளில் ஒருவனிலும் பாவத்தின் வஞ்சனையி
னால் கடினப்பட்டுப்போகாதபடி இன்று
எனப்படுமளவும் நாடோறும் ஒருவருக்
14 கொருவர் புத்தி சொல்லுங்கள். நாம் ஆரம்
பத்திலே கொண்டிடமபிக்கையை முடிவு
பரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்
டிருப்போமாகில் கிறிஸ்துவில் பங்குடைய
வர்களாய்விட்டோம்.
15 இன்று அவர் சத்தத்தைக் கேட்பீர்களா
கில்
கோபமூட்டினநாளில் நடந்ததுபோல
உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தா
திருங்கள்
என்று தொனித்துக்கொண்டிருக்கிறதே.
16 கேட்டுக் கோபமூட்டினவர்கள் யார்?
மோசேயினால் எகிப்தைவிட்டு வந்த யாவ
17 ரும் அப்படிச் செய்தார்களல்லவா? மேலும்,
அவர் நாற்பது வருஷகாலமாய் யார்மேல்
கோபங்கொண்டார்? பாவஞ்செய்தவர்கள்
18 மேலல்லவா? அவர்களுடைய சவங்கள்
வனாந்தரத்தில் விழுந்துபோயிற்றே. பின்
னும், என் இளைப்பாறுதலில் பிரவேசிப்
பதேயில்லையென்று அவர் யாரைப்பற்றி
19 ஆணையிட்டார்? கீழ்ப்படியாதவர்களைப்
பற்றியல்லவா? ஆதலால், அவர்கள் பிரவே
சிக்கமுடியாமற்போனதற்கு அவிசுவாசமே
காரணமென்று பார்க்கிறோம்.

**4** ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறு
தலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்
தத்தம் இன்னுமிருக்க உங்களில் எவனும்
அதை அடையாமல் பின்றுவிட்டவனுக்குக்
காணப்படுவானே வெனப் பயந்திருக்கக்
2 கடவோம். நற்செய்தி அவர்களுக்கு அறி
விக்கப்பட்டதுபோல நமக்கும் அறிவிக்கப்
பட்டதே; கேட்ட வார்த்தையோ அவர்களில்
விசுவாசத்தோடு இணைக்கப்படாதிருந்
கேட்டவர்களுக்குப் பிரயோஜனப்பட
வில்லை. விசுவாசித்திருக்கிற நாமோ அந்த 3
இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்.
என் இளைப்பாறுதலில் அவர்கள் பிரவே
சிப்பதேயில்லையென
என் கோபத்திலே ஆணையிட்டேன்
என்று சொல்லியிருக்கிறபடியே. கிரியை
கள் யாவுமோவெனில் உலகத்தோற்ற
முதல் முடிந்திருந்தன. கடவுள் தமது 4
கிரியைகளையெல்லாம் முடித்து ஏழாம்
நாளில் ஒய்ந்திருந்தாரென்று ஏழாம்நாளைப்
பற்றி ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார்.
அன்றியும், அவர்கள் என் இளைப்பாறுதலில் 5
பிரவேசிப்பதேயில்லை என்று இந்த இடத்
தில் சொல்லியிருக்கிறது. ஆகையால், 6
சிலர் அதில் பிரவேசிப்பது இனிமேல் வரப்
போகிறதாயிருக்கிறபடியினாலும் நற்செய்
தியை முதலாவது கேட்டவர்கள் கீழ்ப்படி
யாமையினால் அதில் பிரவேசியாமற் போன
படியினாலும் இன்று எனச் சொல்லப்படும்
ஒருநாளைக் குறித்திருக்கிறார். எப்படி 7
யெனில் வெகுகாலத்திற்குப்பின்:
இன்று அவருடைய சத்தத்தைக் கேட்
பீர்களாகில்
உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தா
திருங்கள்
என்று மேலே சொல்லப்பட்டபடியே தாவீ
தின் புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறாரே.
யோசுவா அவர்களை இளைப்பாறுதலுக்கு 8
உட்படுத்தியிருந்தால் அதன்பின் அவர் வே
றொரு நாளைப்பற்றிச் சொல்லியிருக்கமாட்
டார். ஆகையால் கடவுளின் ஜனங்களுக்கு 9
ஓய்வின் காலமொன்று வரவிருக்கிறது.
ஏனெனில், அவருடைய இளைப்பாறுதலில் 10
பிரவேசித்தவன் கடவுள் தமது கிரியைகளை
முடித்து ஓய்ந்திருந்ததுபோலத் தானும்
தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருக்கிறான்.
ஆகையால், எவனும் கீழ்ப்படியாமையைக் 11
காண்பிக்கும் அந்தத் திருஷ்டாந்தப்படி
விழுந்துபோகாதிருக்க நாம் இந்த இளைப்
பாறுதலில் பிரவேசிக்க விடாமுயற்சியா
யிருப்போமாக. கடவுளின் வார்த்தை ஜீவ 12
னும் சக்தியுமுள்ளதாயும் இருபுறமும்
கருக்குள்ள எந்தப்பட்டயத்திலும் கருக்
குள்ளதாயும் ஆத்துமாவையும் ஆவியையும்
கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்க அள
வாக உருவக்குத்துகிறதாயும் இருதயத்தின்
சிந்தனைகளையும் யோசனைகளையும் வகைய
றுக்கிறதாயுமிருக்கிறது. அவர் பார்வைக்கு 13
மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; யாவும்
அவர் கண்களுக்குமுன்பாக நிர்வாணமாயு

மிருக்கிறது; நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டியவர் அவரே.

14 வானங்களை ஊடுருவிச்சென்ற தெய்வகுமாரனாகிய இயேசுவென்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால் நாம் பண்ணியிருக்கிற அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டே யிருக்கக்
15 கடவோம். நமக்கு இருக்கும் பிரதான ஆசாரியர் நமது பலவீனங்களுக்காகப் பரிதபிக்கமுடியாதவரல்ல, எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்
16 லாதவராயிருக்கிறவரே. ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும் சமய சகாயமான கிருபையைக் கண்டடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம்.

**5** மனுஷரில் தெரிந்தெடுக்கப்படும் எந்தப் பிரதான ஆசாரியனும் பாவங்களினிமித்தம் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி மனுஷருக்காகத் தெய்வ காரியங்
2 களில் நியமிக்கப்படுகிறான். தானும் பலவீனமுள்ளவனானபடியினாலே அறியாதவர்களுக்கும் தெரிதப்பிப்போகிறவர்களுக்கும் பொறுமை காட்டக்கூடியவனாயிருக்
3 கிறான். தன் பலவீனத்தினிமித்தம் அவன் ஜனத்துக்காகச் செய்வதுபோலவே தனக்காகவும் தன் பாவங்களினிமித்தம்
4 பலியிடக் கடமைப்பட்டிருக்கிறான். மேலும், ஆரோனைப்போலக் கடவுளால் அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் இந்தக் கனமான பதவிக்குத் தானாய் ஏற்படு
5 கிறதில்லை. அந்தப்படியே கிறிஸ்துவும் பிரதான ஆசாரியராகிறதற்குத் தம்மைத் தாமே உயர்த்தவில்லை;

நீர் எனது குமாரன்,
நானே இன்று உம்மை ஜனிப்பித்தேன்

என்று அவரிடம் சொன்னவரே அவரை உயர்த்தினார்.

6 அப்படியே வேறொரு இடத்திலும்:

மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நீர் என்றென்றைக்கும் ஆசாரியரே என்று
7 சொல்லியிருக்கிறார். அவர் மாம்சத்திலிருந்த நாட்களில் தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி உரத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் ஜெபஞ்செய்து வேண்டிக்கொண்டு தமது பய
8 பக்தியினிமித்தம் கேட்கப்பெற்றும், | தாம் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே
9 கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு | தாம் பூரணராக்கப்பட்ட பின்பு தம்மைக்கு கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை
10 அடைவதற்குக் காரணராகி, மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று கடவுளால் நாமம் தரிப்பிக்கப்பட்டார்.

11 இதைப்பற்றிப் பேச எங்களுக்குப் பல காரியங்களுண்டு; நீங்கள் மந்தமான செவியுள்ளவர்களானபடியால் அவற்றை விளங்
12 கப்பண்ணுவது அரிது. காலத்தைப் பார்த்தால் நீங்கள் போதகராயிருக்கவேண்டியது நியாயம்; ஆனாலோ கடவுளினுடைய வாக்கியங்களின் ஆரம்ப பாலபோதனைகளை மறுபடியும் ஒருவன் உங்களுக்கு உபதேசிப்பது அவசியமாயிருக்கிறது; நீங்கள் பலமான
13 ஆகாரத்தையல்ல பாலே உண்ணவேண்டியவர்களாய்விட்டீர்கள். பாலுண்கிறவன் நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவன், அவன்
14 குழந்தையாயிருக்கிறானே. பலமான ஆகாரம் வயதேறினவர்களுக்கே தகும். இவர்கள் நன்மை தீமை இன்னதென்று பகுத்தறியப் பயிற்சியின் மூலமாய்ப் பழகின ஞானேந்திரியங்களையுடையவர்கள்.

**6** ஆகவே, கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய ஆரம்ப உபதேச வசனங்களை நாம் விட்டு முதிர்ந்த நிலைமைக்கு முன்னேறிச் செல்வோமாக. உயிரற்ற கிரியைகளுக்கு நீங்கின மனந்திரும்புதல் கடவுள்மேலுள்ள
2 விசுவாசம் என்பவைகளும் | ஞானஸ்நானங்கள் கைகளை வைக்குதல் மரித்தோரின் உயிர்த்தெழுதல் நித்திய நியாயத்தீர்ப்பு என்பவற்றின் உபதேசமூமாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாதிருப்போமாக.
3 கடவுள் இடங்கொடுப்பாராலுல் இப்படியே செய்வோம். ஒருதரம் ஞானவெளிச்
4 சத்தைக் கண்டுணர்ந்து பரம ஈவை ருசிபார்த்துப் பரிசுத்த ஆவியின் வரத்தில் பங்கு
5 பெற்றுக் கடவுளின் நல்வாக்கையும் வரப்போகிற யுகத்தின் வல்லமைகளையும்
6 ருசிபார்த்தவர்கள் மருளவிழுந்தால் | மனந்திரும்புவதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது அசாத்தியம்; கடவுளின் குமாரனை அவர்கள் தங்களே மறுபடியும் சிலுவையிலறைந்து அவமானப்படுத்துகிறார்களே. தன்மேல் அடிக்கடி
7 பெய்கிற மழையைக் குடித்துப் பயிர்செய்விக்கிறவர்களுக்கேற்ற விளைச்சலைத் தரும் நிலம் கடவுளிடமிருந்து ஆசீர்வாதம்
8 பெறும். முட்செடிகளையும் நெரிஞ்சில்களையும் முளைப்பிக்கிற நிலமோ ஆகாதது, சாபம் அதற்குச் சீக்கிரம் வரும்; சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு.

9 பிரியமானவர்களே, நாங்கள் இப்படிப் பேசினாலும் நன்மையானவைகளும் இரட்

சிப்புக்குரியவைகளுமான காரியங்கள் உங்களிடம் உண்டென்று திடம்பிக்கையாயிருக்கிறோம். உங்கள் கிரியையையும் நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததிலும் செய்துவருகிறதிலும் தமது நாமத்திற்கெனக் காண்பித்த அன்பையும் மறந்துவிடுகிறதற்குக் கடவுள் அநீதியுள்ளவரல்லவே. உங்களுக்கு நன்னம்பிக்கையின் பூரண நிச்சயம் உண்டாகும்படி உங்களில் ஒவ்வொருவரும் முடிவுபரியந்தம் அப்படியே உற்சாகத்தைக் காண்பிக்கவேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம். நீங்கள் அசதியுள்ளவர்களாகாமல் விசுவாசத்திலும் நீடிய பொறுமையிலும் வாக்குத்தத்தங்களைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாக வேண்டுமென்றிருக்கிறோம்.

ஆபிரகாமுக்குக் கடவுள் வாக்குப் பண்ணினபோது ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவரும் இல்லாதபடியினாலே தமதுபேரில்தானே ஆணையிட்டு: நிச்சயமாக உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பேன், உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றார். அப்படியே, அவன் நீடிய பொறுமையோடு காத்திருந்து வாக்குப்பண்ணப்பட்டதைப் பெற்றான். மனுஷர் தங்களிலும் பெரியவர்பேரில் ஆணையிடுவார்கள்; அவர்களின் சகல விவாதத்திற்கும் ஆணையிடுவதே உறுதிபண்ணும் முடிவு. ஆகையால் கடவுளும் வாக்குப்பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களுக்குத் தமது திருச்சித்தத்தின் மாறுதலிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்க வேண்டுமென்று ஓர் ஆணையுமிட்டார். நம்முன் வைக்கப்பட்டிருக்கிற நன்னம்பிக்கையைப் பற்றிக்கொள்ள அடைக்கலமாய் ஓடிவந்த நமக்குக் கடவுள் எவ்வளவேனும் பொய்யராக முடியாதவராய் இரண்டு மாறுதல விசேஷங்களினால் நிறைவான தைரியம் உண்டாகும்படி அப்படிச் செய்தார். அந்த நன்னம்பிக்கையே நமக்கு நிலையும் உறுதியும் திரைக்கப்பால் போகிறதுமான ஆத்துமலங்கூரம். இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் பிரதான ஆசாரியராகி நமது முன்னோடியாக நமதுபொருட்டு அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்.

7 இந்த மெல்கிசேதேக்கு சாலேமின் ராஜாவும் உன்னதமான கடவுளின் ஆசாரியனுமானவன்; ராஜாக்களைச் சங்காரஞ்செய்து திரும்பிவந்த ஆபிரகாமுக்கு எதிர்கொண்டு 2 போய் அவனை ஆசீர்வதித்தவன்; ஆபிரகாமிடமிருந்து எல்லாவற்றிலும் தசமபாகம் பெற்றவன். முதலாவது இவன் நீதியின் ராஜா, இது அவன் பெயருக்கு அர்த்தம்; பின்பு சாலேமின் ராஜா, இதற்குச் சமாதானத்தின் ராஜா என அர்த்தம். இவன் 3 தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன், நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமில்லாதவன்; தெய்வ குமாரனுக்கு ஒப்பானவன். இவன் நித்தியகாலம் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்.

இவன் எவ்வளவு பெரியவன் பாருங்கள்! 4 கோத்திரத்தலைவனாகிய ஆபிரகாமே உசிதமான கொள்ளைப்பொருட்களில் இவனுக்குத் தசமபாகம் கொடுத்தான். மெய்தான், 5 லேவியின் புத்திரரில் ஆசாரியத்துவத்தை அடைகிறவர்களும் ஆபிரகாமின் சந்ததியில் தோன்றிய தங்கள் சகோதரரான ஜனங்களிடத்தில் நியாயப்பிரமாணத்தின்படி தசமபாகம் வாங்குகிறதற்குக் கட்டளை பெற்றிருக்கிறார்கள். ஆகிலும் அவர்கள் வம்ச 6 வரிசையில் வராதவனாகிய இவன் ஆபிரகாமிடத்தில் தசமபாகம் வாங்கி வாக்குத்தத்தங்களைப் பெற்றவனை ஆசீர்வதித்தான். சிறியவன் பெரியவனாலே ஆசீர்வதிக்கப்படு 7 வான், அதற்குச் சந்தேகமேயில்லை. இங்கே 8 தசமபாகம் வாங்குகிறவர்கள் மரிக்கும் மனிதர், அங்கேயோ உயிரோடிருக்கிறானென்று சாட்சி பெற்றவன். மேலும், தசமபாகம் 9 வாங்குகிற லேவியும் ஆபிரகாமின் மூலமாய்த் தசமபாகம் கொடுத்தானென்று ஒருவாறு சொல்லலாம். மெல்கிசேதேக்கு 10 ஆபிரகாமுக்கு எதிர்கொண்டுபோனபோது லேவி தன் முற்பிதாவாகிய ஆபிரகாமிலிருந்தானே.

லேவிய ஆசாரிய முறைமைக்குட்பட்டே 11 இஸ்ரவேல் ஜனங்கள் நியாயப்பிரமாணத்தைப் பெற்றார்கள், அந்த முறைமையினாலே பூரணஸ்திதி கிடைத்ததானால் ஆரோனின் முறைமைப்படியென்றில்லாமல் மெல்கிசேதேக்கின் முறைமைப்படி வேறொரு ஆசாரியர் எழும்பவேண்டுவதென்ன? ஆசாரிய முறைமை மாற்றப்பட்டதென் 12 றால் நியாயப்பிரமாணமும் மாற்றப்பட வேண்டியதாகுமே. எவரைக்குறித்து இவை 13 கள் சொல்லப்பட்டிருக்கிறதோ அவர் வேறொரு கோத்திரத்தைச் சேர்ந்தவர்; அந்தக் கோத்திரத்தில் ஒருவனுகிலும் பலிபீடத்தை யடுத்துத் திருப்பணிசெய்ததில்லையே. நமது ஆண்டவர் யூதாகோத்திரத்தில் உதித் 14 தாரென்பது பிரசித்தம்; அந்தக் கோத்திரத்தின் சம்பந்தமாக ஆசாரியரைப்பற்றி மோசே ஒன்றும் சொல்லவில்லையே. அல்லா 15

மலும், மாம்ச சம்பந்தமான கட்டளையா
16 கிய நியாயப்பிரமாணத்தின்படியல்ல | அழி
யாத ஜீவனுக்குரிய வல்லமையின்படி ஆசா
ரியராகும் வேறொரு ஆசாரியர் மெல்கிசே
தேக்குக்கு ஒப்பானவராக எழும்புகிறாரென்
றல் மேற்சொல்லியது இன்னும் அதிகப்
17 பிரசித்தமாகிறது. இவரைப்பற்றி:

மெல்கிசேதேக்கின் முறைமையின்படி
நீர் என்றென்றைக்கும் ஆசாரியரே

18 என்று சாட்சி சொல்லியிருக்கிறதே. முந்
தின கட்டளை பலவீனமுள்ளதும் பயனற்
றதுமாயிருந்ததினிமித்தம் தள்ளப்பட
19 வேண்டியதாயிற்று. நியாயப்பிரமாணம்
ஒன்றையும் பூரணப்படுத்தினதில்லை; மே
லான நன்னம்பிக்கையோ வருவிக்கப்படுகி
றது; அந்த நம்பிக்கையினால் கடவுளினிடம்
20 சேருகிறோம். அன்றியும் அவர்கள் ஆணை
யில்லாமல் ஆசாரியராக்கப்படுகிறவர்கள்;
21 இவரோ:

நீர் என்றென்றைக்கும் ஆசாரியரே எனக்
கர்த்தர் ஆணையிட்டார், மனமாறமலும்
இருப்பார்

என்று தம்முடனே சொன்னவராலே ஆணை
22 யோடே ஆசாரியராக்கப்பட்டவர். ஆகை
யால், இயேசுவானவர் ஆணையின்மூலமாய்
ஆசாரியரானது எவ்வளவு மேன்மையோ
அவ்வளவு மேன்மையான உடன்படிக்கைக்
23 குப் பிணையாளியானார். அப்படியிருக்க,
மரணம் அவர்களை நிலைத்திருக்கவொட்டா
தபடியால் அவர்கள் அநேகர் ஆசாரியராகி
24 வந்தார்கள். இவரோ என்றென்றைக்கும்
நிலைத்திருக்கிறபடியினாலே இவருடைய
25 ஆசாரியத்துவம் மாறாதிருக்கும். அப்படி
யிருக்கத் தமது மூலமாய்க் கடவுளிடம்
சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்
படி அவர் இப்பொழுதும் உயிரோடிருக்
கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய
இரட்சிக்க வல்லவராயும் இருக்கிறார்.
26 பக்தரும் கபடற்றவரும் மாசில்லாதவரும் பாவிகளினின்று பிரிக்கப்பட்டவரும் வானங்களிலும் மேலாக உயர்த்தப்பட்டவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரி
27 யரே நமக்கு ஏற்றவர். அவர் மற்றப் பிரதான ஆசாரியரைப்போல முன்பு சொந்தப் பாவங்களுக்காகவும் பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் நாடோறும் பலியிடவேண்டுவதில்லை; ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினால் அதை ஒரே
28 தரம் செய்துமுடித்தார். நியாயப்பிரமாணம் பலவீன மனுஷரைப் பிரதான் ஆசாரியராக ஏற்படுத்துகிறது; நியாயப்பிரமாணத்தின் பின்பு வந்த ஆணைவாக்கோ என்றென்றைக்குமாகப் பூரணராக்கப்பட்ட குமாரனை ஏற்படுத்துகிறது.

8 நான் சொல்லுகிறவைகளின் முக்கிய
மான பொருள் இதுதான்: பரலோகத்தில்
மகத்துவமானவருடைய ஆசனத்தின் வலது
பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவரும் |
2 பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரல்ல கர்த்
தரே ஸ்தாபித்த மெய்யான கூடாரத்திலும்
பணிவிடை செய்கிறவருமாகிய பிரதான
3 ஆசாரியர் நமக்குண்டு. ஒவ்வொரு பிர
தான ஆசாரியனும் காணிக்கைகளையும் பலி
களையுஞ் செலுத்தும்படி நியமிக்கப்படுகி
றான்; ஆதலால் செலுத்துவதற்கு ஏதோ
ஒன்று இவரிடத்திலும் இருக்கவேண்டியது
4 அவசியம். பூமியிலே அவர் இருந்தாரா
னால் ஆசாரியராயிரார்; நியாயப்பிரமாண
முறைமையின்படி காணிக்கைகளைச் செலுத்
துகிற ஆசாரியர்கள் இருக்கிறார்களே.
5 இவர்கள் பரலோகத்திலுள்ளவைகளின் சாய
லும் நிழலுமானவற்றில் திருப்பணி செய்
கிறார்கள். மோசே கூடாரத்தை உண்டு
பண்ணப் போகையில்: மலையிலே உனக்குக்
காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ
எல்லாவற்றையுஞ் செய்யப் பாரென்று கட
வுள் அவனுக்குக் கட்டளையிட்டாரே.
6 இவரோ மேலான வாக்குத்தத்தங்களின்
பேரில் ஸ்தாபிக்கப்பட்ட மேலான உடன்
படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கி
றாரோ அப்படியே முக்கியமான ஆசாரிய
7 ஊழியத்தையும் பெற்றிருக்கிறார். முதலாம்
உடன்படிக்கை குறையில்லாதிருந்ததானால்
இரண்டாம் உடன்படிக்கைக்கு இடந்
8 தேட வேண்டுவதில்லையே. அவர்களைக்
குற்றப்படுத்தி அவர் சொல்லுகிறார்:

இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர்
சொல்லுகிறார்,
இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்
பத்தோடும்
நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்
துவேன்;
9 அவர்களுடைய பிதாக்களை எகிப்து
தேசத்திலிருந்து கொண்டுவரும்
படி
நான் அவர்களைக் கைபிடித்த நாளில்
அவர்களோடு செய்த உடன்படிக்கை
யைப்போல் இது இருப்பதில்லை;
என் உடன்படிக்கையில் அவர்கள் நிலை
நிற்கவில்லையே,
நானும் அவர்களைக் கைவிட்டேனென்று
கர்த்தர் சொல்லுகிறார்.
10 அந்த நாட்களுக்குப் பின்பு

நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடு செய்
யும் உடன்படிக்கை இதுவே:
என் பிரமாணங்களை அவர்கள் மனதிலே
வைத்து,
அவர்கள் இருதயத்தில் அவைகளை
எழுதுவேன்;
நான் அவர்கள் கடவுளாயிருப்பேன்,
அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்;
11 ஒருத்தரை அறிந்துகொள் என்று
ஒருவன் தன் ஊராளுக்கும்
ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிப்
பதேயில்லை.
சிறியவன் முதல் பெரியவன் வரைக்கும்
எல்லாரும் என்னை அறிவார்களே;
12 நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபை
யாய்ப் பொறுத்து
அவர்கள் பாவங்களை இனி நினைக்கவே
மாட்டேன்
என்று கர்த்தர் சொல்லுகிறார்.
13 புது உடன்படிக்கையென்று அவர் சொல்லு
கிறதினாலே முன்னதைப் பழமையாக்கி
னார்; பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்
கிறது ஒழிந்துபோகிறதற்குச் சமீபித்திருக்
கிறது.

**9** மெய்தான், முதலாம் உடன்படிக்
கைக்கு ஆராதனை நியமங்களும் பூமிக்குரிய
2 பரிசுத்தஸ்தலமுமிருந்தன. எப்படியெ
னில், ஒரு கூடாரம் அமைக்கப்பட்டது,
முதல் கூடாரம்; இதில் குத்துவிளக்கும்
மேசையும் தெய்வசமுகத்தப்பங்களும்
இருந்தன, அது பரிசுத்தஸ்தலமெனப்படும்.
3 இரண்டாந்திரைக்கப்பால் மகா பரிசுத்த
4 ஸ்தலமெனப்படும் கூடாரமிருந்தது. அதில்
பொன் தூபகலசமும் முழுவதும் பொற்
றகடு பொதிந்திருந்த உடன்படிக்கைப் பெட்
டகமும் இருந்தன; அந்தப் பெட்டகத்தில்
மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும்
தளிர்த்ததாகிய ஆரோனின் கோலும் உடன்
5 படிக்கைப் பலகைகளுமிருந்தன. பெட்ட
கத்தின்மேல் மகிமையுள்ள கேருபுகள்
வைக்கப்பட்டுக் கிருபாசனத்தை நிழலிட்
டிருந்தன, இவைகளைப்பற்றி விவரமாய்ப்
6 பேச இப்பொழுது சமயமில்லை. இவை
கள் இவ்விதமாய் அமைக்கப்பட்டிருக்க
ஆசாரியர்கள் தங்கள் திருப்பணியை நிறை
வேற்றுகிறவர்களாய் முதலாங்கூடாரத்தில்
7 நித்தமும் பிரவேசிப்பார்கள். இரண்டாங்
கூடாரத்திலோ பிரதான ஆசாரியன் மாத்தி
ரம் வருஷத்திற்கொருதரம் இரத்தத்தோடே
பிரவேசித்து அந்த இரத்தத்தைத் தனக்காக
வும் ஜனங்களின் அறிவீனப் பிழைகளுக்காக
வும் படைப்பான். முதலாங்கூடாரம் நிற்கு 8
மளவும் பரிசுத்த சந்நிதானத்திற்குப் போகிற
மார்க்கம் இன்னும் பகிரங்கமாகவில்லை
யென்று பரிசுத்த ஆவியானவர் அதினால்
தெரியப்படுத்துகிறார். அந்தக் கூடாரம் 9
இக்காலத்திற்கு உபமானம்; அதற்கேற்ற
படியே படைக்கப்படுகிற காணிக்கைகளும்
பலிகளும் ஆராதனை செய்கிறவனை மனச்
சாட்சியில் பூரணப்படுத்தக் கூடாதவைக
ளாம். இவைகள் சீர்திருத்தலின் காலம் 10
வரைக்கும் நடந்தேறும்படி கட்டளையிடப்
பட்ட போஜனபானங்கள் பலவித ஸ்நானங்
கள் ஆகிய இவற்றுக்குரிய சரீர நியமங்
களேயல்லாமல் வேறல்ல. வரப்போகிற 11
நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராகக்
கிறிஸ்து வந்து இந்தச் சிருஷ்டி சம்பந்த
மில்லாததாய்க் கையினாற் செய்யப்படாத
பெரிதும் உத்தமமான கூடாரத்தின் வழி
யாய் | வெள்ளாட்டுக்கடா இளங்காளை 12
இவைகளின் இரத்தத்தைக்கொண்டல்ல
தமது சொந்த இரத்தத்தைக்கொண்டே நித்
திய மீட்பைப் பலிகச்செய்தவராய் ஒரே
தரம் பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசித்தார்.
வெள்ளாட்டுக்கடா எருது இவைகளின் 13
இரத்தமும் தீட்டுப்பட்டவர்கள்மேல்
தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும்
சரீர சுத்தியுண்டாகும்படி பரிசுத்தப்படுத்து
மானால் | நித்திய ஆவியானவரால் தம்மைத் 14
தாமே மாசற்றவராகக் கடவுளுக்குப்
படைத்த கிறிஸ்துவின் இரத்தம் ஜீவனுள்ள
கடவுளைச் சேவிப்பதற்கு உங்கள் மனச்
சாட்சியை உயிரற்ற கிரியைகளறச் சுத்தி
கரிப்பது எவ்வளவு நிச்சயம்.
முதலாம் உடன்படிக்கை காலத்தின் 15
அக்கிரமங்களை நிவிர்த்தி செய்யும்பொருட்டு
ஒரு மரணம் நேரிட்டதினால் அழைக்கப்
பட்டவர்கள் வாக்குப்பண்ணப்பட்ட நித்
திய சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ளுவ
தற்கு அவர் புது உடன்படிக்கையின் மத்தி
யஸ்தராயிருக்கிறார். எங்கே மரணசாதன 16
முண்டோ அங்கே அந்தச் சாதனத்தை
எழுதினவனுடைய மரணமும் நேரிடுவது
அவசியம். மரணம் நேரிட்டபின்பே மரண 17
சாதனம் உறுதிப்படும், அதை எழுதினவன்
உயிரோடிருக்கையில் அதற்குப் பலமில்
லையே. அப்படியே முதலாம் உடன்படிக் 18
கையும் இரத்தமில்லாமல் பிரதிஷ்டைபண்
ணப்படவில்லை. மோசே ஜனமுழுதுக்கும் 19
நியாயப்பிரமாணத்தின்படி கட்டளை ஒவ்
வொன்றையும் சொல்லி, இளங்காளை வெள் 20
ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தைத்
தண்ணீரோடும் சிவப்பான ஆட்டுமயிரோ

மும் ஈசோப்போடுங்கூட எடுத்துப் புஸ்த
கத்தின்மேலும் முழு ஜனத்தின்மேலும்
தெளித்து, இதுவே கடவுள் உங்களுக்
கென்று கட்டளையிட்ட உடன்படிக்கையின்
21 இரத்தம் என்றார். இவ்விதமாகவே கூடா
ரத்தின்மேலும் ஆராதனைக்குரிய சகல பணி
முட்டுகளின்மேலும் இரத்தத்தைத் தெளித்
22 தான். நியாயப்பிரமாணத்தின்படி ஒரு
வாறு எல்லாமே இரத்தத்தினால் சுத்திகரிக்
கப்படும்; இரத்தஞ் சிந்துதலில்லாமல் மன்
னிப்பில்லை.

23 ஆதலால், பரலோகத்திலுள்ளவைகளின்
சாயலானவைகள் இப்படிப்பட்டவைகளி
னாலே சுத்திகரிக்கப்பட வேண்டியதா
யிருந்தது; பரலோகத்திலுள்ளவைகளோ
இவற்றிலும் மேலான பலிகளால் சுத்திகரிக்
24 கப்படவேண்டியதாம். கிறிஸ்து பிரவே
சித்தது மெய்யான திருஸ்தலத்தின் அடை
யாளமானதாய்க் கையினாற் செய்யப்பட்ட
பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளல்ல பரலோகத்
திற்குள்ளேயே; இப்பொழுது நமதுபொருட்
டுக் கடவுளின் சந்நிதியில் பிரசன்னமா
யிருப்பதற்கென்றே இப்படிச் செய்தார்.
25 பிரதான ஆசாரியன் அந்நிய இரத்தத்தோடு
வருஷந்தோறும் பரிசுத்த ஸ்தலத்திற்குள்
பிரவேசிக்கிறதுபோல அவர் அநேகந்தரம்
தம்மைப் பலியிடும்படிக்குப் பிரவேசிக்க
26 வில்லை. அப்படியானால் உலகமுண்டா
னதுமுதற்கொண்டு அவர் அநேகந்தரம்
பாடுபடவேண்டியதாயிருக்குமே; இப்பொ
ழுதோ, அவர் தம்மைத்தாமே பலியிடுவதி
னால் பாவங்களைத் தொலைக்கும்பொருட்டு
இந்த உகாந்தகாலத்தில் ஒரேதரம் வெளிப்
27 பட்டார். ஒரேதரம் மரிப்பதும் பின்பு
நியாயந்தீர்க்கப்பெறுவதும் மனுஷருக்கு
28 விதிக்கப்பட்டிருக்கிறதுபோலவே | கிறிஸ்து
வும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து
தீர்க்கும்படி ஒரேதரம் பலியிடப்பட்டுத்
தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்க
ளுக்கு இரட்சிப்புக்கென்று இரண்டாந்
தரம் பாவசம்பந்தமின்றித் தரிசனமாவார்.

**10** நியாயப்பிரமாணம் வரப்போகிற நன்
மைகளின் பொருளாயிராமல் அவைகளின்
நிழலாய்மாத்திரம் இருக்கிறபடியால் வரு
ஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்
பட்டுவருகிற அதே பலிகளினாலே அண்டி
வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்த
2 முடியாது. பூரணப்படுத்தினதேயானால் ஆரா
தனை செய்கிறவர்கள் ஒருதரம் சுத்தமாக்கப்
பட்ட பின்பு பாவத்தைக் கண்டிக்கும் மனச்
சாட்சி இனி அவர்களுக்கு இல்லாதபடியால்
அந்தப் பலிகளைச் செலுத்துவது நிறுத்தப்
3 படுமல்லவா? ஆனாலோ பாவங்கள் உண்
4 டென்பது அந்தப் பலிகளினாலே வருஷந்
தோறும் நினைவுகூரப்படுகிறது. எருது
வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தம்
5 பாவங்களை நிவிர்த்திசெய்யமுடியாதே. ஆகை
யால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது:

பலியையும் காணிக்கையையும் நீர் விரும்
பவில்லை,
ஒரு சரீரத்தையே எனக்கு ஆயத்தம்
பண்ணினீர்;
6 சர்வாங்க தகனபலிகளும் பாவநிவாரண
பலிகளும் உமக்குப் பிரியமில்லை.

7 ஆகவே, நான்: கடவுளே உமது சித்தத்
தைச் செய்ய இதோ, வருகிறேன்,
புஸ்தகச்சுருளில் என்னைக்குறித்து எழுதி
யிருக்கிறதே என்று சொன்னேன்
என்றார். நியாயப்பிரமாணத்தின்படி செலுத்
8 தப்பட்டுவருகிற பலிகளைப்பற்றி: பலியை
யும் காணிக்கையையும் சர்வாங்கதகனபலி
களையும் பாவநிவாரணபலிகளையும் நீர் விரும்
பவில்லை, அவைகள் உமக்குப் பிரியமில்லை
யென்று முதலிற் சொல்லிப் பின்பு: கட
9 வுளே, உமது சித்தத்தைச்செய்ய, இதோ வரு
கிறேனென்று சொன்னார். இரண்டாவதை
நிலைநிறுத்த முதலாவதை நீக்கிப்போடுகி
ரார். இயேசுகிறிஸ்துவின் சரீரம் ஒரேதரம்
10 பலியிடப்பட்டதினால் அந்தச் சித்தத்தி
னாலேயே நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கி
றோம். எந்த ஆசாரியனும் நாடோறும்
11 பணிவிடைசெய்கிறவனும் பாவங்களை
ஒருக்காலும் நிவிர்த்தி செய்யமுடியாத
அதேபலிகளை அநேகந்தரம் செலுத்திவருகிற
வனும் நிற்கிறான். இவரோ, பாவங்களி
12 னிமித்தம் ஒரே பலியைச்செலுத்தி என்
றென்றைக்கும் கடவுளின் வலதுபாரிசத்தில்
உட்கார்ந்திருக்கிறார்; இனித்தமது சத்துருக்
13 களைத் தமது பாதபடியாக்கிப்போடுமட்டும்
காத்துக்கொண்டிருக்கிறார். பரிசுத்தமாக்
14 கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர்
என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கி
றாரே. பரிசுத்த ஆவியானவரும் நமக்குச்
15 சாட்சி சொல்லுகிறார்:

16 அந்த நாட்களுக்குப்பின்பு
நான் அவர்களோடு செய்யும் உடன்
படிக்கை இதுவே!
என் பிரமாணங்களை நான் அவர்கள் இரு
தயங்களில் வைத்து
அவைகளை அவர்கள் மனதில் எழுது
வேன்;

17 அவர்கள் பாவங்களையும் அவர்கள் அக்
கிரமங்களையும்
நான் இனி நினைப்பதேயில்லை
என்று கர்த்தர் சொல்லுகிறார்.
18 இவற்றுக்குமன்னிப்பு எங்கே இருக்கிறதோ
அங்கே பாவத்தினிமித்தம் பலி இல்லையே.
19 ஆகையால், சகோதரரே, இயேசுவான
வர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்
நமக்கென்று பிரதிஷ்டைபண்ணியிருக்கிற
புதிதும் ஜீவனுள்ளதுமான மார்க்கத்தின் வழி
20 யாய்ப் | பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்
பதற்கு அவருடைய இரத்தத்தினால் நமக்
குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினா
21 லும் | கடவுளுடைய வீட்டின்மேல் அதி
காரியான மகா ஆசாரியர் நமக்கு இருக்
22 கிறபடியினாலும் | துர்மனச்சாட்சி நீங்கத்
தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும்
சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ள
வர்களாயும் உண்மையுள்ள இருதயத்
தோடும் பூரணவிசுவாச நிச்சயத்தோடும்
23 அண்டிவரக்கடவோம். அல்லாமலும்,
நன்னம்பிக்கையை அறிக்கையிடுவதில்
அசைவில்லாமலும் உறுதியாயிருக்கக்கட
வோம்; வாக்குப்பண்ணினவர் உண்மை
24 யுள்ளவரே. மேலும், அன்புக்கும் நற்கிரி
யைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரை
25 யொருவர் கவனித்துச் | சபைகூடி
வருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல
நாமும் விட்டுவிடாமல் ஒருவரையொருவர்
உற்சாகப்படுத்தக்கடவோம்; நாளானது சமீ
பித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கி
றீர்களோ அவ்வளவு அதிகமாய் உற்சாகப்
படுத்தக்கடவோம்.
26 சத்தியத்தையறியும் முற்றறிவை அடைந்த
பின்பு நாம் வேண்டுமென்றே பாவஞ்
செய்கிறவர்களாயிருந்தால் பாவங்களினி
மித்தம் செலுத்தத்தக்க பலி இனியிராது;
27 நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடு
எதிர்பார்த்தலும் விரோதிகளைப் பட்சிக்கும்
28 கோபாக்கினியுமே இருக்கும். ஒருவன்
மோசேயின் பிரமாணத்தை அசட்டைசெய்
தால் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று
29 சாட்சிகளின் வாக்கினால் சாகிறானே. கட
வுளின் குமாரனைக் காலின்கீழ் மிதித்துத் தன்
னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின்
இரத்தத்தை அசுத்தமென்றெண்ணிக் கிரு
பையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு
கொடிதான ஆக்கினைக்கு ஆளாவானென்று
30 நினைக்கிறீர்கள். பழிவாங்குவது என் காரி
யம், பதிற்செய்வதும் நானே என்றும் கர்த்
தர் தமது ஜனத்தை நியாயந்தீர்ப்பார் என்
றும் சொன்னவர் இன்னாரென்று அறி
வோம். ஜீவனுள்ள கடவுளின் கைகளில் 31
விழுவது பயங்கரமே.

முன்னை நாட்களை நினைத்துக்கொள்ளுங் 32
கள்; அந்த நாட்களில் நீங்கள் ஞானவெளிச்
சத்தைக் கண்டுணர்ந்த பின் உபத்திரவங்க
ளாகிய மிகுந்த போராட்டத்தைச் சகித்தீர்
களே. நிந்தைகளாலும் உபத்திரவங்களாலும் 33
நீங்கள் வேடிக்கையாக்கப்பட்டதுமல்லா
மல் அவ்வித அனுபவமுடையவர்களுக்குப்
பங்காளிகளுமானீர்கள். கட்டுண்டவர்க 34
ளோடு நீங்கள் அனுதாபப்பட்டதுமன்றி
அதிமேன்மையும் நிலைவரமுமான ஐசுவரியம்
உங்களுக்குண்டென்று அறிந்து உங்களுக்
குள்ளவைகளையுஞ் சந்தோஷமாய்ப் பறி
கொடுத்தீர்கள். ஆகையால், மிகுந்த பல 35
னுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டு
விடாதிருங்கள். நீங்கள் கடவுளின் சித்தத் 36
தைச்செய்து வாக்குப் பண்ணப்பட்டதை
அடைவதற்குப் பொறுமை உங்களுக்கு
அவசியம்.

இன்னுஞ் சொற்பப்பொழுதுதான், வரு 37
கிறவர் வருவார்,
தாமதியார்;
என் நீதிமானே விசுவாசத்தால் பிழைப் 38
பான்,
பின்வாங்கிப்போவானேயாகில்
அவனில் என் ஆத்துமா பிரியங்கொள்
ளாது.
நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிற 39
வர்களல்ல, ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிற
வர்களே.

விசுவாசமானது எதிர்நோக்கி ஆசிக்கிற **11**
வைகளில் நமக்கு உறுதி, காணப்படாதவை
களில் நமக்கு நிச்சயம். இதினாலே முன் 2
னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள். காணப் 3
படுகிறவைகள் கண்ணுக்குத் தோன்றுகிற
வைகளால் உண்டாகவில்லையென்று விளங்க
உலகங்கள் கடவுளின் வார்த்தையினால்
அமைக்கப்பட்டனவென்று நாம் விசுவாசத்
தினாலே உணர்ந்துகொள்ளுகிறோம். விசு 4
வாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியி
லும் மேன்மையான பலியைக் கடவுளுக்குச்
செலுத்தினான்; அவன் நீதிமானென்று அதி
னாலே சாட்சிபெற்றான்; அவனுடைய
காணிக்கைகளைப்பற்றிக் கடவுளே சாட்சி
கொடுத்தார். அவன் மரித்தும் அந்த விசு
வாசத்தினால் இன்னும் பேசுகிறான். விசு 5
வாசத்தினாலே, ஏனோக்கு மரணத்தைக்
காணாதபடி எடுத்துக்கொள்ளப்பட்டான்;
கடவுள் அவனை எடுத்துக்கொண்டபடியி
னால் அவன் காணப்படாமற்போனான்;

அவன் கடவுளுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்குமுன் 6 னமே சாட்சிபெற்றான். விசுவாசமில்லாமல் கடவுளுக்குப் பிரியமாயிருப்பது அசாத்தியம். கடவுளினிடம் அண்டிவருகிறவன் அவர் இருக்கிறாரென்றும் அவர் தம்மை ஆவலாயத் தேடுகிறவர்களுக்குப் பலன் 7 அளிக்கிறாரென்றும் நம்பவேண்டுமே. விசுவாசத்தினாலே நோவா, இன்னும் காணப்படாதிருந்தவைகளைப்பற்றித் தெய்வ எச்சரிப்புப் பெற்றுத் தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பயபக்தியோடு பேழையை உண்டுபண்ணினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து விசுவாச நீதிக்குச் சுதந்தரவாளியானான். 8 விசுவாசத்தினாலே ஆபிரகாம், அழைக்கப்படவே கீழ்ப்படிந்து தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போனான்; தான் போகும் இடம் இன்ன 9 தென்று அறியாமலே போனான். விசுவாசத்தினாலே அவன், வாக்குத்தத்த தேசத்திலே அந்நியநாட்டில் சஞ்சரிப்பவன்போல் பரதேசியாகச் சஞ்சரித்து அதே வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்களில் குடியிருந்தான்; 10 அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்; அதின் சிற்பாசாரியும் அதைக் கட்டுகிறவரும் கடவுளே. 11 விசுவாசத்தினாலே சாராளும் வாக்குப்பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி வயது சென்றவளாயிருந்தும் கர்ப்பந்தரிக்கப் 12 பலமடைந்தாள். ஆகவே, ஒருவனுல், சரீரஞ் செத்தவனென்று எண்ணப்படத்தக்க ஒருவனுலேயே, வானத்திலுள்ள நட்சத்திரங்களைப்போல் திரளானவர்களும் கடற்கரையின் மணலைப்போல் எண்ணிறந்தவர்களும் பிறந்தார்கள்.

13 இவர்களெல்லாரும் வாக்குப்பண்ணப்பட்டவைகளை யடையாமல் தூரத்திலே அவைகளைக் கண்டு வாழ்த்திப் பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளுமென்று அறிக் 14 கையிட்டு விசுவாசத்தில் மரித்தார்கள். இப்படி அறிக்கையிடுகிறவர்கள் சுயதேசத்தை 15 நாடிப்போகிறதாகக் காட்டுகிறார்கள். தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால் அதற்குத் திரும்பிப் போக அவர்களுக்கு 16 சமயங்கிடைத்திருக்கும். அவர்கள் விரும்பினதோ அதிலும் மேன்மையானது; பரமதேசத்தையே விரும்பினார்கள். ஆகவே, கடவுள் அவர்களுடைய கடவுளெனப்படவெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே.

விசுவாசத்தினாலே ஆபிரகாம், தான் 17 சோதிக்கப்படவே, ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான். வாக்குத்தத்தங்களைப் பெற்றவன் தனக்கு ஒரேபேறானவனையே பலியாக ஒப்புக்கொடுக்கவிருந்தான். ஈசாக் 18 கினிடம் உன் சந்ததி விளங்குமென்று அவனுக்குச் சொல்லப்பட்டிருந்ததே; அவ 19 னே மரித்தோரிலிருந்தெழுப்பக் கடவுள் வல்லவரென்று எண்ணினான், அப்படியே அவனை அடையாளமாகப் பெற்றுக்கொண்டான். விசுவாசத்தினாலே ஈசாக்கு, வரும் 20 காரியங்களைக்குறித்து யாக்கோபையும் ஏசாவையும் ஆசீர்வதித்தான். விசுவாசத்தினாலே 21 யாக்கோபு, தன் மரணகாலத்தில் யோசேப்பின் குமாரர் இருவரையும் ஆசீர்வதித்துத் தன் கோலின் தலையிலே சாய்ந்து தொழுது கொண்டான். விசுவாசத்தினாலே யோ 22 சேப்பு, இஸ்ரவேல்புத்திரர் எகிப்து தேசத்தை விட்டுப் புறப்படுவதைப்பற்றித் தன் அந்தியகாலத்தில் பேசித் தன் எலும்புகளைக் குறித்துக் கட்டளைகொடுத்தான்.

மோசே பிறந்தபோது அவன் தாய்தகப் 23 பன்மார் அவன் சவுந்தரியமுள்ள பிள்ளையென்று கண்டு விசுவாசத்தினாலே, ராஜாவின் கட்டளைக்குப் பயப்படாமல், அவனை மூன்றுமாதம் ஒளித்துவைத்தார்கள். விசுவா 24 சத்தினாலே மோசே, தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் எனப்படுவதை வெறுத்துச் | சொற்ப 25 காலபாவசந்தோஷங்களை அநுபவிப்பதிலும் கடவுளின் ஜனங்களோடு துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு | எகிப்தின் 26 ஐசுவரியங்களிலும் நிந்தையினிமித்தம் வரும் நிந்தையையே அதிக செல்வமென்றெண்ணினான்; இனி வரும் பலன்மேல் 27 நோக்கமாயிருந்தான். விசுவாசத்தினாலே அவன், காணமுடியாதவரைக் காண்கிறவன்போல் உறுதியாய்ப் பற்றிக்கொண்டு ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தை விட்டுப் போனான். முதற்பேறானவைகளைச் 28 சங்கரிக்கிறவன் இஸ்ரவேலரைத் தொடாதபடி விசுவாசத்தினாலே அவன் பஸ்காவையும் இரத்தம் தூசுதலாகிய நியமத்தையும் ஆசரித்தான். விசுவாசத்தினாலே அவர்கள் வெட் 29 டாந்தரையைக் கடந்துபோவதுபோலச் சிவந்த சமுத்திரத்தைக் கடந்துபோனார்கள்; எகிப்தியரோ அப்படிச் செய்யப் பார்த்தபோது அமிழ்ந்துபோனார்கள். எரிகோவின் 30 மதில்கள் ஏழுநாள் சுற்றிவரப்பட்டு விழுந்தது விசுவாசத்தினாலேயே. விசுவாசத்தி 31 னாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு

கீழ்ப்படியாதவர்களோடுகூட அழிந்துபோ
காதிருந்தாள்.
32 பின்னும் நான் என்ன சொல்லுவேன்?
கிதியோன் பாராக் சிம்சோன் யெப்தா தாவீது
சாமுவேல் என்பவர்களையும் தீர்க்கதரிசி
களையும்பற்றி நான் விவரிக்கப்போனால்
33 காலம் போதாது. விசுவாசத்தினாலே அவர்
கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை
நடப்பித்தார்கள், வாக்குபண்ணப்பட்ட
வைகளைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்
34 களை அடைத்தார்கள்; அக்கினியின் உக்கி
ரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்
குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலங்
கொண்டார்கள், யுத்தத்தில் வல்லவர்களா
னார்கள், அந்நியர் சேனைகளை முறியடித்
35 தார்கள். மரித்தபோன தங்களுடையவர்
களை ஸ்திரீகள் உயிரோடெழுந்திருக்கப்பெற்
றார்கள்; வேறு சிலரோ மேன்மையான
உயிர்த்தெழுதலை யடையும்படிக்கு விடுதலை
பெறச் சம்மதியாமல் இழுப்புண்டு வாதிக்
36 கப்பட்டார்கள்; வேறு சிலர் நிந்தைகளையும்
அடிகளையும், கட்டுகளையும் காவலையுங்கூட
37 அனுபவித்தார்கள்; கல்லெறியுண்டார்கள்,
சோதிக்கப்பட்டார்கள், வாளால் அறுப்
புண்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்
பட்டு மரித்தார்கள், குறைவையும் உபத்திர
வத்தையும் தீங்கையும் அனுபவிக்கிறவர்க
ளாய்ச் செம்மறியாட்டுத் தோல்களையும்
வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்
38 கொண்டு திரிந்தார்கள். உலகம் அவர்க
ளுக்கு பாத்திரமாயிருக்கவில்லை; அவர்கள்
வனாந்தரங்களிலும் மலைகளிலும் குகைகளி
லும் பூமியின் வெடிப்புகளிலுஞ் சிதறியலைந்
39 தார்கள். இவர்களெல்லாரும் விசுவாசத்தி
னாலே நற்சாட்சி பெற்றும் வாக்குப்பண்
ணப்பட்டதை அடையாமற்போனார்கள்.
40 அவர்கள் நம்மையல்லாமல் பூரணராக்கப்
படாதபடிக்கு மேலான நன்மையொன்றைக்
கடவுள் நமக்கென்று முன்னதாக நியமித்
திருந்தார்.

**12** ஆகையால், மேகம்போன்ற இத்தனை
திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து
கொண்டிருக்கப் பாரமான யாவற்றையும்
நம்மை எளிதில் அகப்படுத்துகிற பாவத்
தையுந் தள்ளிவிட்டு விசுவாசத்தைத் துவக்கு
கிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவை
யே நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்
டத்தில் பொறுமையோடு ஓடக்கடவோம்.
2 அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்
தின்பொருட்டு அவமானத்தை எண்ணாமல்
சிலுவையைச் சகித்துக் கடவுளுடைய சிங்
காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கி
றார். நீங்கள் மனஞ்சோர்ந்து இளைத்துப் 3
போகாதபடிக்குத் தமக்கு விரோதமாய்ப்
பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான
விரோதத்தைச் சகித்த அவரையே சிந்தித்
துக்கொள்ளுங்கள். பாவத்துக்கு விரோத 4
மாய்ப் போராடி இரத்தஞ் சிந்தும் அளவாக
நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே.
அன்றியும்: 5

என் மகனே, கர்த்தரின் சிட்சையை
அசட்டைசெய்யாதே.
அவர் கடிந்துகொள்ளும்போது சோர்ந்து
போகாதே.

கர்த்தர் எவனிடம் அன்புகூருகிறாரோ 6
அவனைச் சிட்சிக்கிறார்;
தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனை
யும் தண்டிக்கிறார்

என்று பிள்ளைகளோடு பேசிச் சொல்லுகிறது
போல உங்களுக்குச் சொல்லுகிற புத்திமதி
யை மறந்துவிட்டீர்கள். சிட்சைக்கென்றே 7
சகிக்கிறீர்கள்; கடவுள் உங்களை மக்களா
கவே நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத
மகனுண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் 8
சிட்சையில் நீங்கள் பங்கடையாதிருந்தால்
நீங்கள் சொந்த மக்களல்ல, வேசிமக்களே.
அன்றியும், சரீரப்பிரகாரமான நமது பிதாக் 9
கள் நம்மைச் சிட்சித்துவந்தார்கள், நாம்
பயந்து நடந்தோம்; அப்படியிருக்க, நாம்
பிழைக்கத்தக்கதாக ஆவியின் பிரகாரமான
பிதாவுக்கு அதிகமாய் அடங்கி நடக்கவேண்
டியது அவசியமல்லவா? தங்களுக்கு நல 10
மெனத் தோன்றியபடி கொஞ்ச வாழ்நாளுக்
கென்று அவர்கள் நம்மைச் சிட்சித்தார்கள்;
இவரோ நமது நன்மைக்கென்று, தமது பரி
சுத்தத்தில் நாம் பங்கடைவதற்கென்றே,
நம்மைச் சிட்சிக்கிறார். எந்தச் சிட்சையும் 11
தற்காலத்தில் சந்தோஷகரமாய்க் காணாமல்
துக்ககரமாய்க் காணும்; பிற்காலத்திலோ
அதில் பயிற்றப்பட்டவர்களுக்கு அது நீதி
யாகிய சமாதான பலனைத்தரும். ஆகவே, 12
தொங்கின கைகளையும் தளர்ந்த முழங்கால்
களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி, முடமா 13
னது முளி பிசகாமல் சொஸ்தமாகும்படி
உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்
வைபடுத்துங்கள்.

யாவரோடும் சமாதானமாயிருக்கவும் பரி 14
சுத்தமாக்கப்படவும் நாடுங்கள்; பரிசுத்த
மில்லாமல் ஒருவனும் ஆண்டவரைத் தரி
சிப்பதில்லையே. ஒருவனுங் கடவுளின் இரு 15
பையை இழந்துபோகாதபடிக்கும் யாதொரு
கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்க
முண்டாக்குகிறதினால் பெரும்பாலார் தீட்

டுப்படாதபடிக்கும் ஒருவனும் வேசிக்கள்ள
16 ருகவும் | ஒரேவேளைப் போஜனத்துக்காகத்
தன் சேஷ்ட புத்திர சிலாக்கியத்தை விற்றுப்
போட்ட ஏசாவைப்போல் சீர்கெட்டவ
ருகவும் இராதபடிக்கும் பார்த்துக்கொள்
17 ளுங்கள். இவன் பிற்பாடு ஆசீர்வாதத்
தைச் சுதந்தரித்துக்கொள்ள விரும்பியும்
ஆகாதவனென்று தள்ளப்பட்டது உங்க
ளுக்குத் தெரியுமே; அவன் கண்ணீர்விட்டு
ஆலாய்த் தேடியும் மனமாறுதலுக்காண
இடமின்றிப் போயிற்றே.
18 அன்றியும், தொடக்கூடியதினிடத்திற்கும்
அக்கினி பற்றியெரிகிறதினிடத்திற்கும் மந்
தாரம் காரிருள் பெருங்காற்று ஆகிய இவை
19 களினிடத்திற்கும் | எக்காள முழக்கத்தினி
டத்திற்கும் வார்த்தைகளுடைய சத்தத்தி
னிடத்திற்கும் நீங்கள் அண்டிவரவில்லை; அந்
தச் சத்தத்தைக் கேட்டவர்கள் பின்னும் தங்
களுக்கு வார்த்தை சொல்லப்படாதபடிக்கு
20 வேண்டிக்கொண்டார்கள். ஏனெனில் மலை
யைத் தொடுவது ஒரு மிருகமேயாயினும்
அது கல்லெறியப்படவேண்டுமென்று சொல்
லப்பட்ட கட்டளையை அவர்கள் சகித்துக்
21 கொள்ளமுடியவில்லை. மிகவும் பயந்து நடுங்
குகிறேனென்று மோசேயும் சொன்னான், அவ்
22 வளவு பயங்கரம் அந்தக் காட்சி! நீங்களோ
சீயோன் மலையினிடத்திற்கும் ஜீவனுள்ள
கடவுளின் திருநகரமாகிய பரம எருசலேமி
னிடத்திற்கும் லக்ஷக்கணக்கான தெய்வ
23 தூதர்களினிடத்திற்கும் | பரலோகத்தில்
பேரெழுதியிருக்கிற முதற்பேருனவர்கள்
மகோற்சவங் கொண்டாடும் சபையினிடத்
திற்கும் யாவருக்கும் நியாயாதிபதியாகிய கட
வுளினிடத்திற்கும் பூரணராக்கப்பட்ட நீதி
மான்களுடைய ஆவிகளினிடத்திற்கும் |
24 புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய
இயேசுவினிடத்திற்கும் ஆபேலின் இரத்தம்
பேசினதைப் பார்க்கிலும் நன்மையாய்ப் பேசு
கிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்
தத்தினிடத்திற்கும் அண்டிவந்திருக்கிறீர்கள்.
25 பேசுகிறவரை வேண்டாமென்று தடுக்
காதபடி பார்த்துக்கொள்ளுங்கள். பூமி
யிலே தெய்வ வாக்காய்ப் பேசினவரை வேண்
டாமென்று தடுத்த அவர்கள் தப்பிப் போ
காமலிருக்கப் பரலோகத்திலிருந்து வந்த
வரைவிட்டு நாம் விலகினால் தப்பிப்போகாம
26 லிருப்பது அதிக நிச்சயமே. அவருடைய
சத்தம் அப்பொழுது பூமியை அசையப்பண்
ணினது; இப்பொழுதோ, இன்னும் ஒரு
தரம் நான் பூமியைமாத்திரமல்ல வானத்தை
யும் அசையப்பண்ணுவேனென்று வாக்குப்
27 பண்ணியிருக்கிறார். இன்னும் ஒருதரம்
என்கிற சொல்லோ அசையாதவைகள்
நிலைத்திருக்கும்படி அசைவுள்ளவைகள் மா
றிப்போம் என்பதைக் குறிக்கிறது, இவை
கள் உண்டாக்கப்பட்டவைகளே. ஆகவே, 28
அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்க
ளாகிய நாம் பக்தியோடும் பயத்தோடும் கட
வுளுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்
படி கன்றியறிதலுள்ளவர்களாயிருப்போ
மாக. நமது கடவுள் பட்சிக்கிற அக்கினி 29
யாயிருக்கிறாரே.

சகோதர சிநேகம் நிலைநிற்கக்கடவது | **13**
அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அந் 2
நியரை உபசரித்ததினால் சிலர் அறியாமல்
தெய்வதூதரையும் உபசரித்ததுண்டு. கட் 3
டுண்டிருக்கிறவர்களோடு நீங்களும் கட்டுண்
டவர்கள்போல் அவர்களை நினைத்துக்கொள்
ளுங்கள்; நீங்களும் சரீரத்திலிருக்கிறவர்க
ளென்பதையறிந்து துன்பதுபவிக்கிறவர்களை
நினைத்துக்கொள்ளுங்கள். விவாகம் யாவ 4
ருக்குள்ளும் கனமுள்ளதாயும் விவாக
மஞ்சம் அசுசிப்படாததாயுமிருக்கக்கடவது;
வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும்
கடவுள் நியாயந்தீர்ப்பார். நீங்கள் பண 5
ஆசையில்லாதவர்களாய் நடந்துகொள்ளுங்
கள், உங்களுக்கு இருக்கிறவைகளே போது
மென்றெண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு
விலகுவதேயில்லை, உன்னைக் கைவிடுவதே
யில்லையென்று அவர் சொல்லியிருக்கிறாரே.
அதினாலே நாம் தைரியங்கொண்டு, 6
கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்
படேன்,
மனுஷன் எனக்கு என்ன செய்வான்
என்று சொல்லலாமே.
தெய்வவசனத்தை உங்களுக்குப் போ 7
தித்து உங்களை வழிநடத்தினவர்களை நீங்கள்
நினைத்து, அவர்கள் நடக்கையின் முடிவை
நன்றாய்க் கவனித்து அவர்கள் விசுவாசத்
தைப் பின்பற்றுங்கள். இயேசுகிறிஸ்து 8
நேற்றும் இன்றும் மாறாதவர், என்றும் அப்
படியே. பலவித அந்நிய போதனைகளால் 9
அலையுண்டு திரியாதிருங்கள். போஜன
பதார்த்தங்களினாலல்ல, கிருபையினாலே
இருதயம் ஸ்திரப்படுவது நல்லது; இவை
களை யனுசரித்தவர்கள் பிரயோஜனமடைந்த
தில்லையே. நமக்கு ஒரு பலிபீடமுண்டு, 10
அதில் படைக்கப்பட்டவைகளைப் புசிக்கக்
கூடாரத்தில் திருப்பணிசெய்கிறவர்களுக்கு
அதிகாரமில்லை. எந்த மிருகங்களின் இரத் 11
தத்தைப் பாவநிவர்த்தியின்நித்தம் பிரதான
ஆசாரியன் பரிசுத்த ஸ்தலத்துக்குள்
கொண்டுவருகிறானோ அந்த மிருகங்களின்

உடல்கள் பானையத்துக்குப் புறம்பே சுட்
12 டெரிக்கப்படும். ஆகையினாலே இயேசுவும் தமது சொந்த இரத்தத்தினால் ஜனத்தைப்
பரிசுத்தஞ்செய்யும்படி நகரவாசலுக்குப்
13 புறம்பே பாடுபட்டார். ஆகவே நாமும் அவருடைய நிந்தையைச் சுமந்து பானையத்துக்குப் புறம்பே அவரிடம் புறப்பட்டுப்
14 போவோமாக. நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப்போகிறதையே ஆவ
15 லாய்த் தேடுகிறோம். அவருடைய திருநாமத்தை அறிக்கையிடும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரப்பலியை அவர்மூலமாய் எப்போதுங் கடவுளுக்குச் செலுத்தக்கட
16 வோம். நன்மைசெய்யவும் பகிர்ந்துகொடுக்கவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலி
17 கள் கடவுளுக்குப் பிரியம். உங்களை வழிநடத்துகிறவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்கியிருங்கள்; அவர்கள் கணக்கொப்புவிக்கப்போகிறவர்களாய் உங்கள் ஆத்துமாக்களுக்காக விழித்திருக்கிறார்கள்; அவர்கள் மனவேதனையோடல்ல சந்தோஷத்தோடு அப்படிச் செய்யும்படி பாருங்கள்; அவர்கள் மனவேதனையோடு அப்படிச்செய்தால் அது உங்களுக்கு நலமாகாது.
18 எங்களுக்காக ஜெபஞ்செய்யுங்கள்; நாங்கள் நல்மனச்சாட்சியுள்ளவர்களாய் எல்லாவற்றிலும் யோக்கியமாய் நடக்க விரும்புகிறோமென்று நிடனம்பிக்கையாயிருக்கிறோம்.
19 நான் அதிசீக்கிரமாய் உங்களுக்கு அநுக்கிரகிக்கப்படும்படி நீங்கள் இப்படிச்செய்ய மிகவும் கேட்டுக்கொள்ளுகிறேன்.
20 ஆடுகளின் பெரிய மேய்ப்பரான நமது ஆண்டவராகிய இயேசுவை நித்திய உடன்
படிக்கையின் இரத்தத்தோடே மரித்தோரிலிருந்து எழுவரப்பண்ணின சமாதானத்தின்
21 கடவுள், இயேசுகிறிஸ்துவைக்கொண்டு தமக்குமுன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்துவந்து நீங்கள் தமது திருஉத்தத்தையே செய்துவர நன்மையான எதிலும் உங்களைப் பூரணப்படுத்துவாராக. அவருக்கே மகிமை யுகாயுகங்களாயிருப்பதாக; ஆமேன்.
22 சகோதரரே, இந்தப் புத்திமதியான வார்த்தைகளை நீங்கள் பொறுமையாய் ஏற்றுக்கொள்ளும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்; சுருக்கமாகவே உங்களுக்கு எழுதியிருக்கிறேன். நமது சகோதரனாகிய
23 தீமோத்தேயு விடுதலையாக்கப்பட்டானென்று அறிந்துகொள்ளுங்கள். அவன் சீக்கிரமாய்வந்தால் அவனோடு நானும் உங்களைக் காண்பேன்.
24 உங்களை வழிநடத்துகிறவர்கள் பரிசுத்தவான்கள் யாவரையும் வாழ்த்துங்கள். இங்குள்ள இத்தாலியர் உங்களுக்கு வந்தனஞ் சொல்லுகிறார்கள்.
25 கிருபை உங்களனைவரோடுமிருப்பதாக.

---

## THE GENERAL EPISTLE OF JAMES

# யாக்கோபின் நிருபம்

**1** கடவுளுக்கும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் அடியானுகிய யாக்கோபு சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் வாழ்த்துதல் சொல்லி எழுதுவது:
2 என் சகோதரரே, உங்கள் விசுவாசம் பரீட்சைக்கு நின்றால் அது பொறுமையை
3 உண்டாக்குமென்றறிந்து, நீங்கள் பலவித சோதனைகளில் அகப்படும்போதெல்லாம் அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்
4 கள். பொறுமையோ, நீங்கள் ஒன்றிலும் குறைவாயிராமல் பூரணமும் நிறைவுமுள்ளவர்களாயிருக்கும்படி, பூர்ண கிரியை செய்
5 யக்கடவது. உங்களில் ஒருவனுக்கு ஞானம் குறைவாயிருந்தால் அவன் கடவுளிடங் கேட்கக்கடவன், அவனுக்குக் கொடுக்கப்படும்; அவர் உதாரத்துவமாய்க் கொடுக்கிறவர், கடிந்துகொள்ளாதவர் ஆயினும், 6
அவன் ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கவேண்டும். சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலலைக்கு ஒப்பானவன். அப்படிப் 7
பட்டமனுஷன் தான் ஆண்டவரிடம் எதையாகிலும் பெற்றுக்கொள்ளலாமென்று நினைக்கவேண்டாம்; அவன் இருமனமுள்ள 8
வன், தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவன்.
தாழ்ந்த நிலைமையிலிருக்கிற சகோதரன் 9
தான் உயர்த்தப்பட்டதைப்பற்றிப் பெருமை

10 பாராட்டக்கடவன்; ஈசுவரியவான் தான் காத்தத்தப்பட்டதைப்பற்றிப் பெருமை பாராட்டக்கடவன், புல்லின் பூவைப்போல்
11 ஒழிந்துபோவானே. உஷ்ணகாற்றோடு சூரியன் உதிக்கவே புல் உலர்ந்து அதின் பூவும் உதிர்ந்து அதின் அழகான வடிவும் அழிந்து போம்; ஈசுவரியவானும் அப்படியே தன் வழிகளில் வாடிப்போவான்.
12 சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் பரீக்ஷிக்கப்பட்டுத் தேறின பின் தம்மிடம் அன்புகூருகிறவர்களுக்கு ஆண்டவர் வாக்குப்பண்ணின ஜீவ கிரீடத்
13 தைப் பெறுவான். சோதிக்கப்படுகிற எவனும், என் சோதனை கடவுளிடமிருந்து வருகிறதென்று சொல்லவேண்டாம்; கடவுள் தீமைகளினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல.
14 அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு மயங்கி சோதனைக்குட்படுகிறான்.
15 பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்துப் பாவத்தைப் பிறப்பிக்கும்; பாவம் பூரணமாகும்
16 போதோ மரணத்தை ஜனிப்பிக்கும். என் பிரிய சகோதரரே, மோசம்போகாதிருங்கள்.
17 நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்திறங்கி ஜோதிகளின் பிதாவினிடமிருந்து வருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் வேறுபாட்டினால் வரும் யாதொரு நிழலுமில்லவேயில்லை.
18 தமது சிருஷ்டிகளில் நாம் முதற்பலன் போலாவதற்கு அவர் தாமே சித்தங்கொண்டு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜனிப்பித்தார்.
19 என் பிரியமான சகோதரரே, இதை அறிந்துகொள்ளுங்கள்: எந்த மனுஷனும் கேட்கிறதற்குத் தீவிரமாயும் பேசுகிறதற்குத் தாமதமாயும் கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவன்; மனுஷகோபம்
20 தெய்வநீதியை நடப்பிக்கிறதில்லை.
21 ஆகவே நீங்கள் எல்லாவித அழுக்கையும் தீர்க்குணப் பெருக்கத்தையும் ஒழித்துவிட்டு உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லதுமான வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்.
22 ஆயினும் நீங்கள் திருவசனத்தின்படி செய்கிறவர்களாகுங்கள், அதைக்கேட்கிறவர்களாய்மாத்திரம் இருக்கவேண்டாம்; இப்படியிருந்தால் உங்களை வஞ்சித்துக்கொள்ளுகிறீர்கள்.
23 ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதிருந்தால் அவன் கண்ணாடியிலே தன் சுபாவமுகத்தைப்
24 பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாவான். அவன் தன்னைத்தானே பார்த்து அப்பால் போனவுடனே தன் சாயல் இன்னதென்பதை மறந்துவிடுகிறான்.
25 சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப் பார்த்துக் கொண்டு அப்படியே நிலைத்திருக்கிறவனோ, கேட்கிறதை மறக்கிறவனாயிராமல் அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்.
26 ஒருவன் தன் நாவை அடக்காமல் தன் இருதயத்தை வஞ்சிக்கிறவனாய் தன்னைத் தெய்வவழிபாடுள்ளவனென்று எண்ணினால் அவன் வழிபாடு வீணும்.
27 நமது கடவுளும் பிதாவுமானவரின் முன்னிலையில் மாசற்ற சுத்தமான தெய்வவழிபாடாவதோவென்றால் ஆதரவற்ற பிள்ளைகளையும் விதவைகளையும் அவர்கள் உபத்திரவத்தில் விசாரிக்கிறதும் உலகத்தால் கறைப்படாதபடி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமேயாம்.

**2** என் சகோதரரே, நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின்மேல் விசுவாசமுள்ள நீங்கள் பட்சபாதங் காட்டக்கூடாது, இவர் மகிமையுள்ளவர்.
2 பொன் மோதிரமும் அழகானவஸ்திரமுந் தரித்த ஒருவனும் அழுக்கு வஸ்திரம் உடுத்த ஒரு தரித்திரனும் உங்கள் ஜெபாலயத்திற்குள் வரவே,
3 அழகான வஸ்திரந்தரித்தவனைப் பார்த்து: நீர் இங்கே வசதியாய் உட்காருமென்றும் தரித்திரனிடமோ: நீ அங்கே நில், அல்லது இங்கே என் பாதபடியின்கீழ் உட்காரு என்றும் நீங்கள் சொல்வீர்களானால்,
4 உங்களுக்குள்ளே இருமனதுள்ளவர்களாய்ப் பொல்லாத சிந்தனைகளோடு நிதானிக்கிறீர்களல்லவா?
5 என் பிரியமான சகோதரரே, கேளுங்கள்: கடவுள் உலகவிஷயமாய்த் தரித்திரரானவர்களை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும் தம்மிடம் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குப்பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்தெடுக்கவில்லையா?
6 நீங்களோ தரித்திரனைக் கனவீனம்பண்ணியிருக்கிறீர்கள். ஐசுவரியவான்களல்லவோ உங்களை ஒடுக்குகிறார்கள். அவர்களல்லவோ உங்களை நியாயாசனங்களுக்கு இழுக்கிறார்.
7 உங்களுக்கிடப்பட்ட நல்நாமத்தை அவர்களல்லவோ தூஷிக்கிறார்கள்.
8 ஆகிலும் உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல அயலானிடத்திலும் அன்புகூரவேண்டுமென்று வேதவாக்கியத்திற் கண்டிருக்கிற ராஜ பிரமாணத்தை நிறைவேற்றினால் நீங்கள் செய்கிறது நன்று.
9 பட்சபாதங் காட்டுகிறவர்களாயிருந்தால் நீங்கள் செய்கிறது பாவம்; மீறினவர்களென்று நியாயப்பிரமாணத்தால் தீர்க்கப்

10 படுகிறீர்கள். ஒருவன் நியாயப்பிரமாணம்
முழுவதையும் கைக்கொண்டிருந்தும் ஒன்
றிலே தவறினால் எல்லாவற்றிலுங் குற்றவாளி
11 யே. விபசாரஞ்செய்யாதே என்று சொன்ன
வரே கொலைசெய்யாதே என்றும் சொன்னார்;
எனவே நீ விபசாரஞ்செய்யாதிருந்தும் கொலை
செய்கிறதானால் நீ நியாயப் பிரமாணத்தை
12 மீறினவனே. சுயாதீனப் பிரமாணத்தினால்
நியாயந்தீர்க்கப்படப்போகிறவர்க ளென்ப
தற்கேற்றபடி பேசுங்கள், அதற்கேற்றபடி
13 செய்யுங்கள். இரக்கங்காட்டாதவனுக்கு
வரும் தீர்ப்பு இரக்கமில்லாததே; இரக்
கமோ நியாயத்தீர்ப்புக்கு அஞ்சாமல் தைரிய
மாய்ப் பெருமைபாராட்டும்.

14 என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசு
வாசமுண்டென்று சொல்லியும் கிரியைக
ளில்லாதவனாயிருந்தால் அவனுக்குப் பிர
யோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை
15 இரட்சிக்குமா? ஒரு சகோதரனாவது சகோ
தரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின
16 ஆகாரமில்லாமலுமிருக்க, உங்களிலொரு
வன் அவர்களிடம்: நீங்கள் சமாதானத்
தோடேபோங்கள், குளிர்காய்ந்து பசியா
றுங்களென்று சொல்லியும் சரீரத்திற்கு
வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடா
17 விட்டால் பிரயோஜனமென்ன? அப்படியே
விசுவாசமும் கிரியைகளில்லாததா யிருந்
18 தால் தன்னிலேதானே உயிரற்றதாகும். ஒரு
வன்: உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக்
கிரியைகளுண்டு; கிரியைகளில்லாமல் உன்
விசுவாசத்தை எனக்குக் காண்பி, நானும்
என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே
19 உனக்குக் காண்பிப்பேன் என்பானே. கட
வுள் ஒருவரே என்று நம்புகிறாயா? அப்ப
டிச் செய்கிறது நல்லதுதான்; பேய்களும்
20 நம்பி நடுங்குகின்றன. வீணனே மனுஷனே,
கிரியைகளில்லாத விசுவாசம் பயனற்ற
21 தென்று நீ அறிய விரும்புகிறாயோ? நமது
பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்
கைப் பலிபீடத்தின்மேல் ஒப்படைத்த
போது கிரியைகளினாலல்லவோ நீதிமானாகத்
22 தீர்க்கப்பட்டான்? அவன் விசுவாசமும்
கிரியைகளும் சேர்ந்து பிரவர்த்திக்கவே
கிரியைகளினால் விசுவாசம் பூரணப்பட்ட
23 தென்று காண்கிறாயே. ஆபிரகாம் கடவு
ளில் விசுவாசம்வைத்தான்; அது அவனுக்கு
நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேத
வாக்கியம் இவ்விதமாக நிறைவேறிற்று;
அவன் கடவுளின் சிநேகிதனென்றும்
24 அழைக்கப்பட்டான். மனுஷன் விசுவாசத்
தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும்
நீதிமானாகத் தீர்க்கப்படுகிறானென்பதைக்
25 கண்டுகொள்ளுங்கள். அப்படியே
தூதர்களை உபசரித்து வேறுவழியாய்
அனுப்பிவிட்ட ராகாபென்னும் வேசியும்
கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ள
26 வளாகத் தீர்க்கப்பட்டாள்? ஆவியில்லாத
சரீரம் உயிரற்றதாயிருக்கிறதுபோலவே
கிரியைகளில்லாத விசுவாசமும் உயிரற்றதா
யிருக்கிறது.

3 என் சகோதரரே, கண்டிப்பான தீர்ப்
புக் கிடைக்குமென்றறிந்து அநேகர் போதக
ராகாதிருப்பீர்களாக. நாம் எல்லாரும்
2 அநேக விஷயங்களில் தவறிப்போகிறோம்;
ஒருவன் சொல் தவறுதலானால் அவனே
உத்தம புருஷன், அவனே தன் சரீரமுழு
வதையுங் கடிவாளத்தினால் அடக்கிக்
கொள்ள வல்லவன். குதிரைகள் நமக்குக்
3 கீழ்ப்படியும்படி அவைகளின் வாய்களில்
கடிவாளம் போட்டால் அவைகளின் முழுச்
சரீரத்தையுந் திருப்பி நடத்துகிறோம்.
பாருங்கள், கப்பல்கள் மகா பெரியவை
4 களும் கடுங்காற்றுகளால் அடிபடுகிறவை
களுமென்றாலும் அவைகளை நடத்துகிறவன்
போகக்கருதுமிடம் எதுவோ அதற்கு நேராக
அவைகளும் மிகச்சிறிய சுக்கானாலே திருப்
பப்படுகின்றன. அப்படியே நாவும் சிறிய
5 அவயவமாயிருந்தும் வீம்பானவைகளைப்
பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்
வளவு பெரிய காட்டைக் கொளுத்திவிடு
கிறது! நாவும் நெருப்புத்தான், அதுவே
6 அநீத உலகம்; நமது அவயவங்களில் அமைக்
கப்பட்டிருக்கிற நாவு முழுச்சரீரத்தையும்
கறைப்படுத்தித் தானே நரகாக்கினியினால்
கொளுத்தப்படுகிறதாய் ஜீவவட்ட முழு
7 மையையுங் கொளுத்திவிடுகிறது! மிருகங்
கள் பறவைகள் ஊரும் பிராணிகள் நீர்
வாழும் ஜெந்துக்களாகிய சகல ஜாதிப்
பிராணிகளும் மனுஷ ஜாதியால் அடக்கப்
படுகிறதும் அடக்கப்பட்டதுமுண்டு.
8 நாவையடக்கவோ ஒரு மனுஷனாலு முடி
யாது, அது மாறிமாறிப் பொல்லாங்கையே
செய்யும். அது சாவுக்கேதுவான விஷம்
நிறைந்தது. அதினாலே நாம் ஆண்டவரும்
9 பிதாவுமானவரைத் துதிக்கிறோம்; தெய்வ
சாயலாய் உண்டாக்கப்பட்ட மனுஷரை
அதினாலேயே சபிக்கிறோம். துதித்தலுஞ்
10 சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படு
கின்றன; என் சகோதரரே, இப்படியிருக்க
லாகாது. ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து
11 தித்திப்புங் கசப்புமான தண்ணீர் சுரக்குமா?
12 என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப் பழங்க
ளையும் திராட்சச்செடி அத்திப்பழங்களையும்

கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்று இத்திப்பான ஜலத்தைக் கொடாது.
13 உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்
கிறவன் யார்? அவன் தன் ஞானத்திற்குரிய
சாந்தத்தோடு தன் கிரியைகளை நன்னடக்கை
14 யிலுலே காண்பிக்கக்கடவன். உங்கள் இரு
தயத்திலே கசப்பான பொறுமையையும்
விரோதத்தையும் வைத்திர்களானுல் நீங்கள்
பெருமை பாராட்டாதிருங்கள்; சத்தியத்திற்கு
விரோதமாய்ப் பொய்சொல்லாமலுமிருங்
15 கள். இப்படிப்பட்ட ஞானம் பரத்தி
லிருந்து இறங்கிவருகிற ஞானமல்ல, அது
லௌகீக சம்பந்தமானது, ஜன்மசுபாவத்துக்
16 குரியது, பேய்த்தனத்துக்கடுத்தது. பொறுமை
யும் விரோதமும் எங்கே உண்டோ அங்கே
கலகமும் சகல தூர்ச்செய்கைகளுமுண்டு.
17 பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலா
வது சுத்தமுள்ளது, பின்பு சமாதானமும்
பொறுமையும் இணக்கமுமுள்ளது, இரக்க
மும் நற்கனிகளும் நிறைந்தது, மாறுதலை
18 முள்ளது, மாயமற்றது; நீதியாகிய கனியோ
சமாதானஞ்செய்கிறவர்களுக்குச் சமாதானத்
திலே விதைக்கப்படுகிறது.

**4** உங்களுக்குள் யுத்தங்களும் சண்டை
களும் எதினுலே வருகின்றன? உங்கள் அவய
வங்களில் போர்செய்கிற இச்சைகளினு
2 லல்லவா? நீங்கள் ஆசித்தும் உங்களுக்குக்
கிடைக்கவில்லை; நீங்கள் கொலைசெய்தும்
பொறுமைப்பட்டும் அடைய முடியாமற்
போகிறீர்கள்; நீங்கள் சண்டை செய்கிறீர்
கள்; யுத்தம்பண்ணுகிறீர்கள். நீங்கள்
கேளாமலிருக்கிறபடியால் உங்களுக்குக்
3 கிடைக்கவில்லை. நீங்கள் கேட்டும் பெற்றுக்
கொள்ளுகிறதில்லை. உங்கள் ஆசைகளே
நிறைவேற்றத், செலவழிக்கவேண்டுமென்று
4 தகாத விதமாய்க் கேட்கிறீர்களே. விபசாரி
களே, உலக சிநேகம் கடவுளுக்கு விரோத
5 மான பகையென்று அறியீர்களா? எனவே,
உலகத்துக்குச் சிநேகிதனுயிருக்க விரும்பு
கிறவன் கடவுளுக்குப் பகைஞனுகிறுன்.
அவர் நம்மில் வசிக்கச் செய்திருக்கிற [1]ஆவி
யானவர் நம்மை வைராக்கிய வாஞ்சையாய்
நாடுகிறுரென்று வேதவாக்கியம் சொல்லு
6 கிறது வீணென்று நினைக்கிறீர்களா? அவர்
அளிக்குங் கிருபை மிகவும் அதிகம். ஆகவே,

கடவுள் பெருமையுள்ளவர்களுக்கு
எதிர்த்து நிற்கிறார்,
தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபைய
ளிக்கிறார்

என்று சொல்லியிருக்கிறது. ஆகையால் 7
கடவுளுக்கு அடங்கியிருங்கள்; பிசாசுக்கு
எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன்
உங்களைவிட்டு ஓடிப்போவான். கடவு 8
ளினிடம் சேருங்கள், அப்பொழுது அவ
ரும் உங்களிடம் சேருவார். பாவிகளே,
உங்கள் கைகளைச் சுத்தமாக்குங்கள்; இரு
மனமுள்ளவர்களே, இருதயங்களைப் பரி
சுத்தமாக்குங்கள். உங்கள் நிர்ப்பந்தத்தை 9
யுணர்ந்து துக்கித்து அழுங்கள்; உங்கள்
நகைப்பு துக்கிப்பாகவும் உங்கள் சந்தோ
ஷம் சஞ்சலமாகவும் மாறக்கடவது. ஆண் 10
டவருக்கு முன்பாக உங்களைத் தாழ்த்துங்
கள்; அப்பொழுது அவர் உங்களை உயர்த்து
வார். சகோதரரே, ஒருவருக்கொருவர் 11
விரோதமாய்ப் பேசாதிருங்கள்; சகோதர
னுக்கு விரோதமாய்ப் பேசித் தன் சகோதர
னுக்குத் தீர்ப்புச்செய்கிறவன் நியாயப்பிர
மாணத்திற்கு விரோதமாய்ப் பேசி நியாயப்
பிரமாணத்துக்குத் தீர்ப்புச்செய்கிறுன்.
நீ நியாயப்பிரமாணத்துக்குத் தீர்ப்புச்செய்
தால் நியாப்பிரமாணத்தைக் கைக்கொள்ளு
கிறவனல்ல, அதற்கு நியாயாதிபதியே. நியா 12
யப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவரும்
நியாயாதிபதியும் ஒருவரே, அவரே இரட்
சிக்கவும் அழிக்கவும் வல்லவர்; அயலா
னுக்குத் தீர்ப்புச்செய்கிறதற்கு நீ யார்?

நாங்கள் இன்றைக்கோ நாளைக்கோ 13
இன்ன பட்டணத்திற்குப்போய் அங்கே ஒரு
வருஷந் தங்கி வியாபாரஞ் செய்து சம்பாத்
தியம் பண்ணுவோ மென்கிறவர்களே, கே
ளுங்கள். நாளைத்தினம் உங்கள் ஜீவன் எப் 14
படிப்பட்டதாகுமென்று உங்களுக்குத்
தெரியாதே. அது கொஞ்சநேரந் தோன்
றிப் பின்பு தோன்றுமற்போகிற புகையே.
ஆகவே அப்படிச்சொல்லாமல், ஆண்டவ 15
ருக்குச் சித்தமானுல் நாங்கள் உயிரோடி
ருந்து இன்னின்னதைச் செய்வோமென்று
சொல்வது நியாயம். இப்பொழுது உங்கள் 16
வீம்புகளில் பெருமைபாராட்டுகிறீர்கள்,
இப்படிப்பட்ட பெருமை பாராட்டல்
யாவுந் தீமையே. இப்படியிருக்க நன்மை 17
செய்ய அறிந்தவன் அதைச் செய்யாமற்
போவது அவனுக்குப் பாவமாம்.

ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள் **5**
மேல் வருகிற நிர்ப்பந்தங்களினிமித்தம் அல
றியழுங்கள். உங்கள் தானியசம்பத்து மடித் 2
துப்போனது, உங்கள் வஸ்திரங்கள் பொட்
டரித்துப் போயின; உங்கள் பொன்னும் 3

[1] ஆவியானவர் நம்மை என்பதற்குப் பதிலாக ஆவியையென்றும் திருப்பலாம்.

வெள்ளியும் பாசிபிடித்தன; அவற்றின் பாசி உங்களுக்கு விரோதமாகச் சாட்சியமாகி அக்கினியைப்போல் உங்கள் மாம்சத்தைத் தின்னும். கடைசிநாட்களிலே ஈசுவரியத் 4 தைச் சேர்த்தீர்கள். இதோ, உங்கள் வயல் களையறுத்த வேலைக்காரரின் கூலியை அநியாயமாய் அபகரித்தீர்கள், அது உங்களிட மிருந்து கூப்பிடுகிறது; அறுப்பு ஆட்களின் கூக்குரல் சேனைகளின் கர்த்தருடைய செவி 5 களில் பட்டது. பூமியிலே நீங்கள் சம் பிரமமாய் வாழ்ந்து சுகபோகத்தில் உழன்றீர் கள்; பலியிடும் நாளிலே உங்கள் இருதயங் 6 களைப் போஷித்தீர்கள். நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தீர்கள், கொலை செய்தீர்கள்; அவன் உங்களோடே எதிர்த்து நிற்கிறதில்லை.

7 இப்படியிருக்க, சகோதரரே. ஆண்டவ ரின் வருகைமட்டும் நீடிய பொறுமையாயி ருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடைய வேண்டுமென்று அதற் காக முன்மாரியும் பின்மாரியும் வருமள வும் நீடிய பொறுமையோடு காத்திருக்கி 8 றான். நீங்களும் நீடிய பொறுமையாயிருங் கள், உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங் கள்; ஆண்டவரின் வருகை சமீபித்திருக்கி 9 றதே. சகோதரரே, நீங்கள் நியாயந்தீர்க்கப் படாதபடி ஒருவருக்கு விரோதமாய் ஒரு வர் முறுமுறுக்காதிருங்கள்; இதோ, நியா 10 யாதிபதி வாசலில் நிற்கிறார். என் சகோ தரரே! கர்த்தரின் நாமத்தில் பேசின தீர்க்க தரிசிகளைத் துன்பப்படுதலுக்கும் நீடியபொ றுமைக்கும் மாதிரியாக வைத்துக்கொள் 11 ளுங்கள். இதோ, பொறுத்துக்கொள்ளு கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைப்பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்கள்; கர்த்தரால் வந்த முடி வையுங் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக் கிறாரே.

விசேஷமாய், என் சகோதரரே, வானத் 12 தின் பேரிலாவது பூமியின் பேரிலாவது வேறெதின் பேரிலாவது ஆணையிடவேண் டாம். நீங்கள் ஆக்கினைத் தீர்ப்புக்காளா காதபடி உங்கள் பேச்சில் ஆம் என்பது ஆம் எனவும் இல்லை என்பது இல்லை என வும் இருக்கக்கடவது.

உங்களில் ஒருவன் துன்பப்படுகிறானா? 13 அவன் ஜெபம்பண்ணக்கடவன். ஒருவன் சந்தோஷமாயிருக்கிறானா? சங்கீதம் பாடக் கடவன். உங்களில் ஒருவன் வியாதிய 14 ாயிருக்கிறானா? அவன் சபையின் மூப்பரை வரவழைக்கட்டும், அவர்கள் ஆண்டவரு டைய நாமத்தில் அவன்மேல் எண்ணெய் பூசி ஜெபம்பண்ணட்டும். விசுவாசமுள்ள 15 ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும், ஆண் டவர் அவனை எழுப்புவார். அவன் பாவங் களைச் செய்தவனானால் அவை அவனுக்கு மன்னிக்கப்படும். ஆகவே நீங்கள் சொஸ்த 16 மடையும்படி உங்கள் பாவங்களை ஒரு வருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக் காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதி மான் செய்யும் வேண்டுதல் பலன் செய்வ தில் மிகவும் வல்லமையுள்ளது. எலியா 17 நம்மைப்போன்ற தன்மையுள்ள மனுஷ னே; மழைபெய்யாதபடி அவன் கருத்தாய் ஜெபம் பண்ணினான்; மூன்றுவருஷம் ஆறு மாதம் பூமியின்மேல் மழை பெய்யாதிருந் தது. மறுபடியும் ஜெபம்பண்ணினான், 18 வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் கனியை முளைப்பித்தது.

என் சகோதரரே, உங்களில் ஒருவன் 19 சத்தியத்தைவிட்டு விலகித் தப்பிப்போகும் போது மற்றொருவன் அவனைத் திருப்பு வானானால், தப்பு வழியிலிருந்து பாவியைத் 20 திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தி னின்று இரட்சித்துத் திரளான பாவங் களை மூடுவானென்று அறிந்துகொள்ளுங் கள்.

THE FIRST EPISTLE GENERAL OF PETER

# பேதுருவின் முதலாம் நிருபம்

1 இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு, பொந்து கலாத்தியா கப்பதோக்கியா ஆசியா பித்தினியா தேசங்களிலே சிதறி
2 யிருக்கிறவர்களில், ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினால் கீழ்ப்படிய வேண்டுமென்றும் இயேசுகிறிஸ்துவின் இரத்தந் தெளிக்கப்படவேண்டுமென்றும் பிதாவாகிய கடவுளுடைய முன்னறிவின்படி தெரிந்தெடுக்கப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுவது: கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது.
3 நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் கடவுளும் பிதாவுமானவர் ஸ்தோத்திரத்
4 துக்குரியவர். அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே ஜீவனுள்ள நன்னம்பிக்கையுண்டாகும்படி தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜனிப்பித்தார். அழியாததும் மாசற்றதும் வாடாததுமான சுதந்தரங் கிடைப்
5 பதற்கென்றே இப்படிச் செய்தார். கடைசிக்காலத்தில் வெளிப்பட ஆயத்தமாயிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு கடவுளின் வல்லமையினால் காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பூலோகத்தில் வைத்திருக்கிறது.
6 இப்பொழுது பலவித சோதனைகளினால், அவசியமானால், கொஞ்சக்காலம் துக்கத்துக்குள்ளாகியும் அந்த நன்னம்பிக்கையில்
7 களிகூருகிறீர்கள். உங்கள் விசுவாசப்பரீட்சை அழிந்துபோகிற பொன்னின் பரீட்சையினும்—பொன்னே அக்கினியால் பரீட்சிக்கப்படுவது-அதிக அருமையானதாய் இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது புகழ்ச்சிக்கும் கனத்திற்கும் மகிமைக்கும் ஏதுவாகக் காணப்படவேண்டுமென்றிருக்கிறீர்கள்.
8 அவரைக் காணுமலே அவரில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலே அவரில் விசுவாசம் வைத்துச் சொல்லி முடியாததும் மகிமை நிறைந்ததுமான சந்
9 தோஷத்தோடு களிகூர்ந்து உங்கள் விசுவாசத்தின் இலக்காகிய ஆத்தும இரட்
10 சிப்பை அடைகிறீர்கள். உங்களுக்கென்று வெளிப்பட்ட கிருபையைப்பற்றித் தீர்க்கதரிசனஞ் சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக்குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து தீர
11 விசாரித்தார்கள். தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு வரும் பாடுகளையும் அவற்றின் பின்வரும் மகிமைகளையும்பற்றி முன்னமே சாட்சிபகர்ந்தபோது, இன்ன காலத்தைக் குறித்தாரென்பதையும் அது எப்படிப்பட்ட காலமென்
12 பதையும் விசாரித்து வந்தார்கள். தங்கள் பொருட்டல்ல உங்கள் பொருட்டே இந்தத் தீர்க்கதரிசன பணிவிடை செய்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக் கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றன; இவற்றினுள் உற்றுப் பார்க்கத் தெய்வதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்.
13 ஆகவே நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு தெளிவுள்ளவர்களாயிருந்து இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குக் கிடைக்கப்போகிற கிருபையின்மேல் பூரணமாய் நன்னம்பிக்கை
14 வையுங்கள். உங்கள் அறியாமையில் உங்களுக்கிருந்த முற்கால ஆசைகளுக் கிசைந்து
15 நடவாமல் கீழ்ப்படிகிற பிள்ளைகளாய், உங்களை அழைத்த பரிசுத்தருக்கு ஒத்தபடி நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராகுங்கள்: நான் பரிசுத்
16 தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்களென்று எழுதியிருக்கிறதே. அன்றியும்
17 பட்சபாதமில்லாமல் அவனவன் கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டால் பரதேசிகளாய்ச் சஞ்சரிக்கும் காலமளவும் பயத்தோடே நடந்துகொள்ளுங்கள். உங்கள்
18 முன்னோர்களிலிருந்து பரம்பரையாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணை நடத்தையை

விட்டு நீங்க அழிவுள்ளவைகளாகிய வெள்
ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படா
19 மல் | மாசில்லாத கறையற்ற ஆட்டுக்குட்டி
யாகிய கிறிஸ்துவின் விலை மதிப்பில்லாத
இரத்தத்தினால் மீட்கப்பட்டீர்களென்று
20 அறிந்திருக்கிறீர்களே. அவர் உலகத்தோற்
றத்திற்கு முன்னே அறியப்பட்டவராய்த்
தமது மூலமாய்க் கடவுள்பேரில் விசுவாசம்
வைத்திருக்கிற உங்கள்பொருட்டுக் காலங்
21 களின் கடைசியில் வெளிப்பட்டார். உங்
கள் விசுவாசமும் நன்னம்பிக்கையும் கட
வுள் பேரிலேயேயிருக்கும்படி கடவுள் அவ
ரை மரித்தோரிலிருந்தெழுப்பி அவருக்கு
மகிமையைக் கொடுத்தார்.

22 மாயமற்ற சகோதரசிநேகத்திற் கேதுவாக
நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து உங்
கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்ட
வர்களாய் மனதார ஒருவரிலொருவர் ஊக்
23 கமாய் அன்புகூருங்கள்; அழிவுள்ள வித்தி
னாலல்ல, ஜீவனுள்ளதும் நிலைத்திருக்கிறது
மான தெய்வவசனமாகிய அழிவில்லாத வித்
தினாலேயே மறுபடியும் ஜனிப்பிக்கப்பட்டி
ருக்கிறீர்களே.

24 மாம்சமெல்லாம் புல் போன்றது, அதின்
மகிமையெல்லாம் புல்லின் பூ போன்றது;
25 புல் உலரும், அதின் பூவும் உதிரும்; கர்த்
தரின் வசனமோ என்றைக்கும் நிலைக்
கும்:
உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்
பட்ட வசனம் இதுவே

**2** இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவ
ரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டா
2 னால் | சகலதுர்க்குணத்தையும் சகல கபடத்
தையும் மாய்மாலங்களையும் பொறாமைகளை
யும் சகல புறணிகளையும் ஒழித்துவிட்டு |
3 நீங்கள் இரட்சிப்புக்கென்று வளரும்படி
புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல்
களங்கமில்லாத ஆத்மிகப்பாலின்மேல்
4 வாஞ்சையாயிருங்கள். மனுஷரால் ஆகா
தென்று தள்ளப்பட்டதே யாயினும் கடவு
ளால் தெரிந்தெடுக்கப்பட்டதும் விலைமதிப்
பில்லாததுமான ஜீவனுள்ள கல்லாகிய
5 அவரிடம் சேருகிறவர்களாய் | நீங்களும்
ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்குரிய
வீடாகவும் இயேசுகிறிஸ்துவின்மூலமாய்க்
கடவுளுக்குகந்த ஆவிக்குரிய பலிகளைச்
செலுத்தும்படி பரிசுத்த ஆசாரியக் கூட்ட
மாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள். அந்
தப்படியே:

6 இதோ, தெரிந்தெடுக்கப்பட்டதும் விலை
மதிப்பில்லாததுமாகிய சோடிக்குத் தலை
கல்லைச்
சீயோனில் வைக்கிறேன்;
அவரில் விசுவாசம் வைக்கிறவன்
வெட்கத்துக்காளாவதேயில்லை
என்று வேதவாக்கியத்தில் கண்டிருக்கிறது.
ஆகவே, விசுவாசமாயிருக்கிற உங்களுக்கோ 7
அவர் விலைமதிப்பில்லாதவர்; விசுவாசியாம
லிருக்கிறவர்களுக்கோ, வீடுகட்டுகிறவர்கள்
ஆகாதென்று தள்ளின கல் கோடிக்குத்
தலைக்கல்லாய்த் | தடுக்குக்கல்லும் இடறு 8
தற்கான கன்மலையுமாயிற்று. அவர்கள்
திருவசனத்திற்குக் கீழ்ப்படியாமல் இடறு
கிறார்கள்; அதற்கென்றே அவர்கள் நிய
மிக்கப்பட்டவர்கள்: நீங்களோ, உங்களை 9
அந்தகாரத்தினின்று தமது ஆச்சரியமான
வெளிச்சத்தினிடத்திற்கு வரவழைத்தவரின்
புண்ணியங்களை அறிவிக்கும்படி, தெரிந்தெ
டுக்கப்பட்ட சந்ததியும் ராஜரிகமான ஆசா
ரியக் கூட்டமும் பரிசுத்த ஜாதியும் அவ
ருக்குச் சொந்தமான ஜனமுமாம். முன் 10
னே நீங்கள் ஜனமல்ல, இப்பொழுதோ கட
வுளின் ஜனம், முன்னே நீங்கள் இரக்கம்
பெறாதவர்கள், இப்பொழுதோ இரக்கம்
பெற்றவர்கள்.

பிரியமானவர்களே, ஆத்துமாவுக்கு 11
விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்
சைகளை நீங்கள் விட்டு விலகிப் புறஜாதியா
ருக்குள் நன்னடக்கையுள்ளவர்களாயிருக்க
வேண்டுமென்று அந்நியரும் பரதேசிகளு
மாயிருக்கிற உங்களுக்கு எச்சரிப்பாகச்
சொல்லுகிறேன். அவர்கள் உங்களைத் தீமை 12
செய்கிறவர்களென்று விரோதமாய்ப் பேசு
கிற காரியத்தில் உங்கள் நற்கிரியைகளைக்
கண்டு கடவுள் அவர்களைச் சந்திக்கும் நாளி
லே அவற்றினிமித்தம் அவரை மகிமைப்
படுத்தும்படிக்கே இப்படியிருக்கவேண்டும்.

நீங்கள் மனுஷ ஏற்பாடுகளி யாவற்றிற் 13
கும் ஆண்டவர் நிமித்தம் அடங்கியிருங்
கள்; மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கா
னாலும் சரியே, தீமை செய்கிறவர்களுக்கு 14
ஆக்கினையும் நன்மை செய்கிறவர்களுக்குப்
புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால்
அனுப்பப்படுகிற அதிகாரிகளுக்கானாலும்
சரியே. நீங்கள் நன்மைசெய்கிறவர்க 15
ளாய்ப் புத்தியீன மனுஷரின் அறியாமை
யை வாயடைப்பது கடவுளின் சித்தம்.
சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும் உங்கள் 16
சுயாதீனத்தைத் தீர்க்குணத்திற்கு மூடலா
கக் கொண்டிராமல் கடவுளின் அடிமை
களாயிருங்கள். எல்லாரையும் கனம்பண் 17
ணுங்கள்; சகோதரக்கூட்டத்தாரில் அன்பு
கூருங்கள்; கடவுளுக்குப் பயந்திருங்கள்
ராஜாவைக் கனம்பண்ணுங்கள்.

18 வேலைக்காரரே, எல்லா பயத்தோடும் உங்கள் எஜமான்களுக்கு அடங்கியிருங்கள்; நல்லவர்களுக்கும் சாந்த குணமுள்ளவர்களுக்கு மாத்திரமல்ல, முரட்டுக்குண முள்ளவர்களுக்கும் அடங்கியிருங்கள். கடவுளைப்பற்றும் மனச்சாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையோடு சகித்தால் அதுவே
19 20 கிருபைப் பலனும். நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடு சகித்தால் கீர்த்தியென்ன? நீங்கள் நன்மை செய்து பாடுபடும்போது பொறுமையோடு சகித்தால் அதுவே கடவுளின் பார்வையில்
21 கிருபைப் பலனும். இதற்கென்றே அழைக்கப்பட்டீர்கள்; கிறிஸ்துவும்உங்கள்பொருட்டுப் பாடுபட்டு நீங்கள் தமது அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு
22 மாதிரியைப் பின்வைத்துப் போனாரே. அவர் பாவஞ்செய்யவில்லை, அவர் வாயில் வஞ்
23 சனை காணப்படவுமில்லை; அவர் வையப்படும்போது பதில் வையவில்லை, பாடுபடும்போது பயமுறுத்தவில்லை, நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம் காரியத்தை
24 ஒப்புவித்தார். நாம் பாவங்களுக்குச் செத்தவர்களாகி நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு அவர்தாமே தமது சரீரத்தில் நமது பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்? அவர் தழும்புகளால் குணமாக்கப்பட்டீர்
25 கள். ஆடுகளைப்போல் சிதறியலைந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் அத்தியட்சருமானவரிடம்திருப்பப்பட்டீர்கள்.

**3** அந்தப்படி, மனைவிகளே, உங்கள் புருஷருக்கு அடங்கியிருங்கள், புருஷரில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால் பயபக்தியோடு
2 கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்துப் | போதனையின்றித் தங்கள் மனைவிகளின் நடக்கையினாலேயே
3 ஆதாயப்படுத்திக்கொள்ளப் படவேண்டுமென்று அப்படியிருங்கள். சடைபின்னுதல்,பொன்னாபரணங்களையணிதல், உயர்ந்த வஸ்திரங்களைத் தரித்தல் ஆகிய புறம்பான
4 அலங்காரிப்பு உங்களுக்கு வேண்டாம். சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியின் அழியாத அழகாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்கள் அலங்காரமாகட்டும்; அதுவே கடவுளின் பார்வையில் விலை
5 யுயர்ந்தது. அந்தப்படியே பூர்வத்தில் கடவுளில் நன்னம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்கள் புருஷருக்கு அடங்கி நடந்தவர்களாய்த் தங்களை அலங்கரித்தார்கள். இப்படிச் சாராள் ஆபிர 6
காமை ஆண்டவன் என்று சொல்லி அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்; நீங்கள் நன்மை செய்து எந்தப் பயங்கரத்துக்கும் மனங்கலங்காதிருந்தால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்.

அந்தப்படி, புருஷர்களே, ஸ்திரீ ஜாதி 7
பலவீனபாண்டமென்றறிந்து நீங்கள் விவேகமுள்ளவர்களாய் அவர்களோடு வாழ்ந்து அவர்களும் உங்களோடு ஜீவகிருபைக்குச் சுதந்தரரென்று அவர்களுக்குரிய கனத்தைச் செலுத்துங்கள்; உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடி இப்படிச் செய்யுங்கள்.

மேலும், நீங்களெல்லாரும் ஒரே மனதும் 8
அனுதாபமும் சகோதர சிநேகமும் உருக்கமுமானமனத்தாழ்மையுமுள்ளவர்களாயிருந்து,

தீமைக்குத் தீமையையும் உதாசனத்துக்கு 9
உதாசனத்தையுஞ் சரிக்கட்டுவதற்கு மாறாக ஆசீர்வதியுங்கள்; நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளவேண்டுமென்று அழைக்கப் பட்டிருக்கிறீர்களே.

ஜீவனைச் சந்தோஷமாய் அநுபவிக்கவும் 10
நல்ல நாட்களைக் காணவும் விரும்புகிறவன்
பொல்லாப்புக்குத் தன் நாவை விலக்கிக்
கபடம் பேசாதபடி தன் உதடுகளைக்
காத்துத்
தீமையை விட்டு நீங்கி நன்மை செய்து 11
சமாதானத்தைத் தேடி அதைப் பின்
தொடரக்கடவன்.
கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் 12
மேலே நோக்கம்;
அவருடையசெவிகள் அவர்கள் வேண்டு
தலின்மேலே கவனம்;
கர்த்தருடைய முகம் தீமை செய்கிற
வர்களுக்கு விரோதம்.

நீங்கள் நலமானவற்றில் வைராக்கிய 13
முள்ளவர்களானால் உங்களுக்குத் தீமை செய்பவன் யார்? ஆனாலோ நீதியினிமித்தம் 14
நீங்கள் பாடனுபவித்தாலும் பாக்கியவான்களே; அவர்கள் பயமுறுத்துதலுக்கு நீங்கள் பயப்படாமலும் கலங்காமலுமிருந்து |
கிறிஸ்துவை உங்கள் இருதயங்களில் ஆண் 15
டவராகப் பிரதிஷ்டைசெய்யுங்கள்; உங்களிலிருக்கிற நன்னம்பிக்கையைப்பற்றி உங்களிடம் விசாரிக்கிற எவனுக்கும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள். கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் நன் 16
னடக்கையைத் தூஷிக்கிறவர்கள் உங்களுக்கு விரோதமாகப் பேசுகிற காரியத்தில் வெட்கப்பட்டுப் போகும்படி சாந்தத்தோ

டும்பயபக்தியோடும் நல்மனச்சாட்சியுடைய
17 வர்களாய் உத்தரவு சொல்லுங்கள். தீமை
செய்து பாடநுபவிப்பதிலும் கடவுளுக்குச்
சித்தமானால் நன்மைசெய்து பாடநுபவிப்
18 பதே மேன்மையாகும். நம்மைக் கடவுளி
டம் சேர்க்கும்படி கிறிஸ்துவும் அநீதியுள்ள
வர்களுக்காக நீதியுள்ளவராய்ப் பாவங்களி
னிமித்தம் ஒருதரம் மரித்தார்; அவர் மாம்
சத்தில் கொல்லப்பட்டார்; ஆவியிலோ
19 உயிர்ப்பிக்கப்பட்டார் அந்த ஆவியிலே
அவர் போய்க் காவலிலிருந்த ஆவிகளுக்குப்
20 பிரசங்கித்தார். இந்த ஆவிகள் பூர்வத்தில்,
நோவாபேழையை ஆயத்தம்பண்ணின நாட்
களிலே கடவுள் நீடிய பொறுமையோடு
காத்திருந்தபோது, கீழ்ப்படியாமல் போன
வைகள்; பேழையில் சிலர் மாத்திரம், எட்
டுப்பேரே, பிரவேசித்து ஜலத்தினாலே காக்
21 கப்பட்டார்கள். அது ஒப்பனையாகக் குறிக்
கும் ஞானஸ்நானமானது இப்பொழுது
இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால்
உங்களையும் இரட்சிக்கிறது. அது மாம்ச
அழுக்கை நீக்குவதல்ல, நல்மனச்சாட்சி
யைக் கடவுளினிடம் நாடி வேண்டிக்
22 கொள்வதேயாம். உயிர்த்தெழுந்த கிறிஸ்து
பரலோகத்திற்குப் போய்த் தெய்வ தூதர்க
ளும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவ
ருக்கு அடங்கியிருக்கக் கடவுளின் வலது
பாரிசத்தில் இருக்கிறார்.

**4** இப்படியிருக்க, கிறிஸ்து மாம்சத்தில்
பாடுபட்டபடியால் நீங்களும் அதே சிந்தை
யை ஆயுதமாகத் தரித்துக்கொள்ளுங்கள்.
2 மாம்சத்தில் பாடுபட்டவன் இனி மாம்சத்தி
லிருக்கும் காலமெல்லாம் மனுஷ இச்சை
களுக்கென்று பிழைக்காமல் தெய்வ சித்தத்
திற்கென்றே பிழைக்கத்தக்கதாகப் பாவத்
3 தை விட்டு ஓய்ந்திருப்பான். சென்ற காலத்
திலே நாம் புறஜாதிகளின் யோசனைப்படி
நடந்துவந்தது போதும்; அப்பொழுது நாம்
காமவிகாரம் தூர்இச்சை மதுபானம் களி
யாட்டு குடி அடாத விக்கிரகாராதனை
4 இவற்றில் நடந்தோம். அந்தத் துன்மார்க்க
ஊளையினுள் அவர்களோடு நீங்களும் ஓடி
விழாமலிருக்கிறதினால் அவர்கள் ஆச்சரி
5 யப்பட்டு உங்களைத் தூஷிக்கிறார்கள். உயி
ருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்
தீர்க்க ஆயத்தமாயிருக்கிறவருக்கு அவர்
6 கள் கணக்கொப்புவிப்பார்கள். மரித்தோர்
மனுஷரைப்போல் மாம்சத்தில் ஆக்கினைக்
குள்ளாக்கப்பட்டிருந்தும் கடவுளைப்போல்
ஆவியில் பிழைக்கவேண்டுமென்றே அவர்
களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது.

எல்லாவற்றின் முடிவும் சமீபித்தது; ஆக 7
வே நிதான புத்தியுள்ளவர்களாயிருங்கள்.
ஜெபம்பண்ணுவதற்கு மனத்தெளிவுள்ளவர்
களாயிருங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக 8
ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ள
வர்களாயிருங்கள்; அன்பு திரள் பாவங்களை
மூடும். முறுமுறுப்பின்றி ஒருவரையொருவர் 9
உபசரியுங்கள். கடவுளுடைய பலவிதமான 10
கிருபையின் நல்ல உக்கிராணக்காரர்போல
நீங்கள் அவனவன் பெற்ற கிருபை வரத்
தின்படியே ஒருவர்க்கொருவர் அதை உப
யோகித்து ஊழியஞ்செய்யுங்கள். ஒருவன் 11
போதித்தால் அது கடவுளின் திருவசனத்
தின்படியேயாகட்டும்; ஒருவன் ஊழியஞ்
செய்தால் அது கடவுள் தந்தருளும் சக்தி
யின்படியேயாகட்டும். எல்லாவற்றிலேயும்
இயேசுகிறிஸ்துமூலமாய்க் கடவுள் மகி
மைப்படும்படியே அப்படிச் செய்யுங்கள்.
அவருக்கே மகிமையும் வல்லமையும் யுகா
யுகங்களாயிருப்பதாக; ஆமேன்.

பிரியமானவர்களே, பரீட்சிப்பதற் 12
கென்று உங்களுக்கு நேரிட்டு உங்கள் நடு
வில் எரிகிற அக்கினியைப்பற்றி ஏதோ
புதுமையொன்று சம்பவித்ததாக நீங்கள்
ஆச்சரியப்படாமல், கிறிஸ்துவின் பாடு 13
களுக்கு நீங்கள் பங்காளிகளான அளவுக்
குத்தக்கபடி சந்தோஷப்படுங்கள்; அவர்
மகிமை வெளிப்படும்போது நீங்கள் களி
கூர்ந்து சந்தோஷப்படும்படி இப்படிச் செய்
யுங்கள். நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினி 14
மித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்
கள்; மகிமையின் ஆவியும் கடவுளின் ஆவி
யுமானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறாரே.
உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயா 15
வது திருடனாயாவது தீமை செய்தவனாயா
வது அந்நிய காரியங்களில் தலையிட்டுக்
கொண்டவனாயாவது பாடுபடவேண்டாம்.
கிறிஸ்தவனாய்ப் பாடுபட்டாலோ வெட்கப் 16
படாமல் இந்த நாமத்தினால் கடவுளை மகி
மைப்படுத்தக்கடவன். நியாயத்தீர்ப்பு கட 17
வுளின் வீட்டிலிருந்தே துவக்கும் காலம்
இது; அது முதல்முதல் நம்மிடமிருந்து
துவக்கினால் கடவுளின் சுவிசேஷத்திற்குக்
கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னவா
கும்? நீதிமானே இரட்சிக்கப்படுவது அரி 18
தானால் பக்தியில்லாதவனுக்கும் பாவிக்கும்
என்ன கதி? ஆகவே கடவுளின் சித்தப்படி 19
பாடநுபவிக்கிறவர்களும் நன்மை செய்கிற
வர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்
மையுள்ள சிருஷ்டிகர்த்தாவுக்கே ஒப்புக்
கொடுக்கக்கடவர்கள்.

5 உடன் மூப்பனும் கிறிஸ்துவின் பாடு
களுக்குச் சாட்சியும் வெளிப்படப்போகிற
மகிமைக்குப் பங்காளியுமாகிய நான் உங்
களிலுள்ள மூப்பருக்குப் புத்தி சொல்லு
2 கிறேன். உங்களிடத்திலுள்ள கடவுளின்
மந்தையை நீங்கள் மேய்த்துவாருங்கள்.
கட்டாயமாயல்ல சுயேச்சையாயும் ஈசத்
தனமான லாபத்திற்கல்ல உற்சாகமாயும் |
3 தத்தம் பங்குகளைக் கடினமாய் ஆளுகிறவர்க
ளாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாயும்
4 மேய்த்துவாருங்கள். அப்படிச் செய்தால்
பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகி
மையின் வாடாத கிரீடத்தைப் பெறுவீர்
5 கள். அந்தப்படி, இளைஞரே, மூப்பரு
ருக்கு அடங்கியிருங்கள்; நீங்களெல்லாரும்
ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்வதற்
குரிய ஆடையாக மனத்தாழ்மையை
அணிந்துகொள்ளுங்கள்;

கடவுள் பெருமையுள்ளவர்களுக்கு
எதிர்த்து நிற்கிறார்,
தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை
யளிக்கிறார்.

6 ஆகையால், ஏற்றகாலத்தில் கடவுள் உங்
களை உயர்த்தும்படிக்கு அவருடைய வல்ல
மையான கையின்கீழ் உங்களைத் தாழ்த்துங்
7 கள். அவர் உங்களுக்காகக் கவலைப்படுகிற
வரானபடியால் உங்கள் விசாரங்களையெல்
8 லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். தெ
ளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்
திருங்கள்; உங்கள் எதிராளியாகிய பிசா
சானவன் கர்ச்சிக்கிற சிங்கம்போல்
எவனை விழுங்கலாமோவென்று தேடிக்
கொண்டு சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் 9
உறுதியுள்ளவர்களாய் அவனுக்கு எதிர்த்து
நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோ
தரக்கூட்டத்தாரில் அதே பாடுகள் நிறை
வேறிவருகின்றனவென்று அறிந்திருக்கிறீர்
களே. கிறிஸ்துவுக்குள் உங்களைத் தமது நித் 10
திய மகிமைக்குள்ளாக அழைத்தவராகிய
சகல கிருபையுமுள்ள கடவுள் தாமே
கொஞ்சக்காலம் பாடநுபவித்த உங்களைப்
பூரணப்படுத்தி ஸ்திரப்படுத்திப் பலப்படுத்தி
நிலைநிறுத்துவாராக. அவருக்கே வல்லமை 11
யுகாயுகங்களாயிருப்பதாக; ஆமேன்.

உங்களை எச்சரித்து நீங்கள் வந்து நிலை 12
கொண்டு நிற்கிற கிருபை கடவுளின் மெய்
யான கிருபைதானென்று சாட்சியிடுகிறவ
னாக நான் சுருக்கமாய் உங்களுக்கு எழுதி
உங்கள் உண்மையுள்ள சகோதரனாக நான்
பாவிக்கிற சில்வானுவின் கையில் கொடுத்து
அனுப்பியிருக்கிறேன்.

உங்களோடுகூடத் தெரிந்தெடுக்கப்பட் 13
டதும் பாபிலோனிலுள்ளதுமான சபையும்
என் குமாரனாகிய மார்க்கும் உங்களுக்கு
வந்தனஞ் சொல்லுகிறார்கள். ஒருவரை 14
யொருவர் அன்பின் முத்தத்தோடு வாழ்த்
துங்கள்.

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் அனை
வருக்கும் சமாதானமுண்டாவதாக.

---

## THE SECOND EPISTLE GENERAL OF PETER

# பேதுருவின் இரண்டாம் நிருபம்

1 நமது கடவுளும் இரட்சகருமாகிய
இயேசுகிறிஸ்துவின் நீதியில் எங்களுக்கு
இருப்பதைப்போன்ற அருமையான விசுவா
சத்தைப் பெற்றவர்களுக்கு இயேசுகிறிஸ்து
வின் அடியானும் அப்போஸ்தலனுமாகிய
2 சீமோன்பேதுரு எழுதுவது: கடவுளையும்
நமது ஆண்டவராகிய இயேசுவையும் அறி
கிற முற்றறிவினால் உங்களுக்கு கிருபையும்
சமாதானமும் பெருகக்கடவது.
3 தமது மகிமையினாலும் குணவலிமையினா
லும் நம்மை அழைத்தவரை அறிகிற முற்
றறிவினால் ஜீவனுக்கும் தெய்வபக்திக்கும்
வேண்டிய யாவற்றையும் அவருடைய
தெய்வவல்லமையானது நமக்குத் தந்தருளி
னது. இச்சையினால் உலகத்திலுண்டான 4
கேட்டுக்குத் தப்பியோடித் தெய்வ சுபாவத்
துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு
அருமையும் மகாமேன்மையுமான வாக்குத்
தத்தங்களும் அவைகளினாலேயே நமக்கு
அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, 5
இவ்விஷயத்தில் நீங்கள் அதிக ஜாக்கிரதையு
முள்ளவர்களாய், உங்கள் விசுவாசத்தில்
நற்குணத்தையும் நற்குணத்தில் அறிவை
யும் | அறிவில் தன்னடக்கத்தையும் அடக் 6

கத்தில் பொறுமையையும் பொறுமையில்
7 தெய்வபக்தியையும் | தெய்வபக்தியில்
சகோதரசிநேகத்தையும் சகோதர சிநேகத்
தில் அன்பையுங்கூட்டி வழங்குங்கள்.
8 இவைகள் உங்களில் குடிகொண்டு பெரு
கும்போது உங்களை நமது ஆண்டவராகிய
இயேசுகிறிஸ்துவை அறிகிற முற்றறிவிலே
முயற்சியற்றவருங் கனியற்றவருமாயிருக்க
9 வொட்டாது. இவைகளில்லாதவன்
எவனே அவன் முன் செய்த பாவங்களைத்
தான் சுத்திகரிக்கப்பட்டதை மறக்குங்
10 குருடன், தூரப்பார்வையற்றவன். ஆகவே,
சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்டதை
யும் தெரிந்தெடுக்கப்பட்டதையும் உறுதி
செய்துகொள்வதற்கு ஊக்கிரதையாயிருங்
கள்; இவைகளைச் செய்யும்போது நீங்கள்
11 ஒருகாலும் இடறிவிழுவதேயில்லை. இவ்
விதமாய் நமது ஆண்டவரும் இரட்சகரு
மாகிய இயேசுகிறிஸ்துவின் நித்திய ராஜ்ய
த்துக்குள் பிரவேசிக்கும் சிலாக்கியம் உங்க
ளுக்குத் தாராளமாய் அளிக்கப்படும்.
12 இவற்றை நீங்கள் அறிந்திருந்தும் நீங்கள்
இப்பொழுது கொண்டிருக்கிற சத்தியத்தில்
உறுதிப்பட்டிருந்தும் உங்களுக்கு இவற்றை
எப்பொழுதும் நினைப்பூட்டி வருவேன்.
13 இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும்
உங்களை நினைப்பூட்டி எழுப்பிவிடுவது
14 நியாயமென்றெண்ணுகிறேன். நான் என்
கூடாரத்தை விட்டுப்போவது சீக்கிரம்
நேரிடுமென்று அறிவேன், நமது ஆண்டவ
ராகிய இயேசுகிறிஸ்து இதை எனக்கு அறி
15 வித்துமிருக்கிறார். நான் சென்றுபோன
பின்பும் சமயம் நேரிடும்போதெல்லாம் நீங்
கள் இவற்றை நினைத்துக்கொள்வதற்கு ஏது
வுண்டாகவேண்டுமென்று ஆவலாய் பிரயத்
16 தனப்படுகிறேன். நாங்கள் சாமர்த்தியமான
கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக
வல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்
ணாரக் கண்டவர்களாகவே நமது ஆண்டவ
ராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையை
யும் வருகையையும் உங்களுக்கு அறிவித்
17 தோம். இவர் என் நேசகுமாரன், இவரில்
[1]பிரியமாயிருக்கிறேன் என்ற சத்தம் உன்
னதமான மகிமையிலிருந்து அவருக்குண்
டாகவே பிதாவாகிய கடவுளால் அவர்
கனத்தையும் மகிமையையும் பெற்ற
18 போது | அத்திருமலையில் நாங்களும் அவ
ரோடிருந்து வானத்தினின்று வந்த அந்தச்
19 சத்தத்தைக் கேட்டோம். தீர்க்கதரிசன
வசனம் இதினால் நமக்கு அதிக உறுதியா

னது. பொழுது விடிந்து விடிவெள்ளி உங்
கள் இருதயங்களில் உதிக்குமளவும்
இருண்ட இடத்தில் பிரகாசிக்கிற விளக்
கைப்போன்ற அவ்வசனத்தை நீங்கள் கவ
னித்திருப்பது நலமாகும். வேதவாக்கியங் 20
களிற் கண்ட எந்தத் தீர்க்கதரிசனமும்
அனவனவன் வியாக்கியானத்தினால் வருவ
தல்லவென்று நீங்கள் முதல்முதல் அறிந்து
கொள்ளவேண்டும். தீர்க்கதரிசனமும் ஒரு 21
போதும் மனுஷசித்தத்தினால் வரவில்லை;
கடவுளினிடமிருந்து வந்ததையே பரிசுத்த
ஆவியினால் ஏவப்படுகிறவர்களாய் மனுஷர்
பேசினார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக் **2**
குள்ளே தோன்றினார்கள்; அப்படியே உங்க
ளுக்குள்ளும் கள்ளப் போதகர்களிருப்பார்
கள். அவர்கள் தங்களைக் கிரயத்துக்குக்
கொண்ட ஆண்டவரை மறுதலித்துத் தங்க
ளுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்
கொள்ளுகிறவர்களாய் அழிவை விளைவிக்
கும் வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் அழை
யப்பண்ணுவார்கள். அவர்களின் காம 2
விகாரங்களை அநேகர் முற்றிலும் பின்பற்று
வார்கள்; அவர்கள் நிமித்தம் சத்தியநெறி
தூஷிக்கப்படும். பொருளாசையுடையவர் 3
களாய் வஞ்சக வார்த்தைகளால் உங்களை
வைத்து வியாபாரம்பண்ணுவார்கள்; பூர்வ
காலமுதல் அவர்களுக்கு விதிக்கப்பட்ட
ஆக்கினை அயர்ந்திராது, அவர்களின் அழிவு
உறங்காது. பாவஞ்செய்த தூதர்களைக் 4
கடவுள் தப்பவிடாமல் பாதாளத்திலே
தள்ளி நியாயத்தீர்ப்புக்கென்று வைத்து
வைக்கப்பட்டவர்களாக அந்தகாரக் குழி
களுக்கு ஒப்புவித்தார். பூர்வ உலகத்தைத் 5
தப்பவிடாமல் நீதியைப் பிரசங்கித்தவனாகிய
நோவாவுட்பட எட்டுப்பேரைக் காப்பாற்
றிப் பக்தியில்லாதவர்கள் நிறைந்த உலகத்
தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி
னார். சோதோம் கொமோரா என்னும் 6
பட்டணங்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்
துச் சாம்பலாக்கிக் கவிழ்த்துப்போட்டுப்
பிற்காலத்திலே பக்தியில்லாதவர்களாயிருக்
கப்போகிறவர்களுக்கு அவைகளைத் திருஷ்
டாந்தமாக வைத்தார். அக்கிரமக்காரரின் 7
காமவிகார நடத்தையால் வருத்தம் அனுப
வித்து வந்த நீதிமானாகிய லோத்தை அவர்
விடுவித்தார்; இந்த நீதிமான் அவர்கள் நடு 8
வில் வாசம்பண்ணி அவர்கள் அக்கிரமக்
கிரியைகளைக்கண்டுங் கேட்டும் நீதியுள்ள

[1] பிரியங்கொண்டேன் என்றும் திருப்பலாம்.

தன் மனதில் நாடோறும் வாசிக்கப்பட்
9 டான். இவ்விதமாகத் தெய்வபக்தியுள்ள
வர்களைச் சோதனையினின்று விடுவிக்கவும்
அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்க
ளாக நியாயத்தீர்ப்புநாளுக்கென்று வைக்க
10 வும் கர்த்தருக்குத் தெரியும். விசேஷமாக,
அசுத்த இச்சையோடு மாம்சத்திற்கேசைய
நடந்து அதிகாரத்தை அசட்டை பண்ணு
கிறவர்களை அப்படிச் செய்வார். இவர்கள்
துணிகரக்காரர், சுய இஷ்டப்பிரியர்; மகத்து
11 வங்களைத் தூஷிக்க அஞ்சாதவர்கள். அதி
கப்பலமும் வல்லமையுமுடைய தெய்வ
தூதர்களுங்கூட கர்த்தருக்குமுன்பாக
அவற்றைத் தூஷணமாய்க் குற்றப்படுத்த
12 மாட்டார்களே. இவர்களோ பிடிபட்ட
ழிக்கப்படுவதற்கு உண்டான உடலமாத்திர
முடைய புத்தியற்ற மிருக ஜீவன்களைப்
போல் தங்களுக்குத் தெரியாதவற்றைத்
தூஷித்து அநீதத்தின் கூலியாக அநீதத்தை
யனுபவித்துத்தாங்கள் செய்த கேட்டிலேயே
13 கெட்டழிந்து போவார்கள். இவர்கள்
பகற்பொழுதில் உல்லாசமாயிருப்பதே
இன்பமென்றெண்ணுகிறார்கள், கறைகளும்
இலச்சைகளுமாகி உங்களோடு விருந்துண்
கையில் தங்கள் வஞ்சனைகளில் உல்லாசமா
14 யிருக்கிறார்கள் அவர்கள் கண்கள் வேசி
யையே நோக்கியவைகள்; பாவத்தை விட்
டோயாதவைகள். இவர்கள் உறுதியில்
லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய் வசப்
படுத்துகிறவர்கள், பொருளாசையில் பழ
கின இருதயமுடையவர்கள், சாபத்தின்
15 பிள்ளைகள். செம்மையான வழியைவிட்டுத்
தப்பி நடந்து பேயோரின் குமாரன் பிலேயா
மின் வழியை முற்றிலும் பின்பற்றினவர்
கள்; அவன் அநீதத்தின் கூலியை விரும்
16 பித் | தன் அக்கிரமத்தினிமித்தம் கடிந்து
கொள்ளப்பட்டான்; பேசாத பொதுமிரு
கம் மனுஷர் பேச்சைப் பேசித் தீர்க்க
17 தரிசியின் மதிகேட்டைத் தடுத்தது. இவர்
கள் நீரற்ற சுனைகள், சுழல்காற்றினால் அடி
யுண்டோடும் மேகங்கள்; காரிருளே இவர்
18 களுக்கு. இறுமாப்பான வீண்வார்த்தை
களைப் பேசுகிற இவர்கள் வஞ்சக வழியில்
நடக்கிறவர்களிடமிருந்து இப்போதுதான்
தப்பினவர்களை மாம்ச இச்சைகளினால் காம
விகாரங்களைக்கொண்டு தந்திரமாய் வசப்
19 படுத்திக்கொள்ளுகிறார்கள். தாங்களே
கேட்டுக்கு அடிமைகளாயிருக்கையில் அவர்
களுக்குச் சுயாதீனத்தை வாக்குப்பண்ணு
கிறார்கள்; ஒருவன் எதினால் ஜெயிக்கப்பட்
டானோ அதற்கு அவன் அடிமையானான்.
20 ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு
கிறிஸ்துவை அறிகிற முற்றறிவினால்
உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்
கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்
கொண்டு ஜெயிக்கப்பட்டால் அவர்கள்
பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்
ளதாகும். அவர்கள் நீதிமார்க்கத்தையறிந்த 21
பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரி
சுத்த கற்பனையை விட்டுவிலகுவதைப்பார்க்
கிலும் அதை அறிந்திராமற் போவதே அவர்
களுக்கு நலமாம். நாய் தான் கக்கினதைத் 22
தின்னவும் கழுவப்பட்ட பன்றி சேற்றிலே
புரளவும் திரும்பின என்கிற மெய்யான பழ
மொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்
திருக்கிறது.

பிரியமானவர்களே, இது நான் உங்க **3**
ளுக்கு இப்பொழுது எழுதியிருக்கிற இரண்
டாம் நிருபம்; இந்த நிருபங்களினால்
உங்கள் களங்கமற்ற மனதை நினைப்பூட்டி
எழுப்புகிறேன். நீங்கள் நினைவுகூரவேண் 2
டியவைகள் பரிசுத்த தீர்க்கதரிசிகளால்
முன் சொல்லப்பட்ட வார்த்தைகளும்
உங்கள் அப்போஸ்தலர்மூலமாய் வந்தகட்
டளையுமே. இந்தக் கட்டளை ஆண்டவரும்
இரட்சகருமானவருடையது. முதல்முதல் 3
நீங்கள் இதை யறிந்து கொள்ளுங்கள்:
கடைகொட்களில் பரியாசக்காரர் தங்கள்
சுயஇச்சைகளின்படியே நடந்து பரியாச
மாய்ப்பேசி: அவர் வருகையைப்பற்றிய 4
வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்தி
ரையடைந்த காலமுதல் சகலமும் சிருஷ்
டிப்பின் ஆரம்பமுதல் இருந்தபிரகாரமே
இருக்கிறதென்று சொல்லுவார்கள். கடவு 5
ளின் வார்த்தையினால் பூர்வத்தில் வான
மிருந்த தென்பதையும் பூமியும் ஜலத்தி
னின்று தோன்றி ஜலத்தினால் நிலைகொண்டி
ருந்ததென்பதையும் | அப்பொழுதிருந்த 6
உலகம் ஜலங்களால் பிரளயத்தின்மூலமாய்
அழிந்ததென்பதையும் அவர்கள் வேண்டு
மென்றே மறந்து விடுகிறார்கள். இப்பொழு 7
திருக்கிற வானமும் பூமியுமோ அந்த
வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரை
யாக வைக்கப்பட்டுத் தெய்வபக்தியில்லாத
வர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்து
போகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டு வரு
கின்றன.

பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒருநாள் 8
ஆயிரம்வருஷம்போலாகும், ஆயிரம்வரு
ஷம் ஒருநாள் போலாகுமென்கிற இந்த
ஒரே காரியத்தை நீங்கள் மறந்துவிடவேண்
டாம். தாமதிக்கிறாரென்று சிலர் எண்ணு 9
கிறபடி ஆண்டவர் தமது வாக்குத்தத்தத்

தைப்பற்றித் தாமதிக்கிறதில்லே. ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும் பவேண்டுமென்று விரும்பியே உங்கள் விஷயத்தில் நீடிய பொறுமை பாராட்டு
10 கிறார். ஆண்டவரின் நாள் திருடன் வரு கிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங் கள் மடமடவென்று அகன்றுபோம், பஞ்ச பூதங்கள் வெந்துருகிப்போம், பூமியும் அதி
11 லுள்ள கிரியைகளும் வெளியாகும். இவை களெல்லாம் இப்படி அழிந்துபோகிறவை களாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப் பட்ட பரிசுத்த நடக்கையும் தெய்வபக்தி
12 யும் உள்ளவர்களாயிருக்கவேண்டும்! கடவு ளின் நாளுக்கு ஆவலோடு காத்திருந்து அது சீக்கிரம் வரச்செய்யுங்கள்; அந்த நாளினி மித்தம் வானங்கள் எரிந்தழிந்து பூதங்கள்
13 வெந்துருகிப்போம். அவருடைய வாக்குத் தத்தத்தின்படியே நீதிவாசமாயிருக்கும் புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்.

14 ஆகவே, பிரியமானவர்களே, இவை கள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறை யற்றவர்களும் மாசற்றவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படக் கருத்தாயிருங்கள். நமது ஆண்டவரின் நீடிய பொறுமையை 15
இரட்சிப்பென்று எண்ணுங்கள், நமக்குப் பிரியமான சகோதரனுகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினுலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான்; எல்லா 16
நிருபங்களிலும் இவைகளேப்பற்றிப் பேசும் போது அப்படியே எழுதியிருக்கிறான். அவன் நிருபங்களில் சில காரியங்கள் அறி கிறதற்கு அறிதானவைகள்; கல்வியில்லாத வர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களேப் புரட்டுகிறதுபோல இவைகளேயும் புரட்டுகிறார்கள்; இதினுல் அவர்களுக்கு அழிவு வரும்.

ஆதலால், பிரியமானவர்களே, முன் 17
னமே நீங்கள் அறிந்திருக்கிறவர்களாய் அக் கிரமக்காரரின் வஞ்சகத்தினுல் இழுப்புண்டு உங்களுக்குரிய உறுதியிலிருந்து விலகி விழுந்துபோகாதபடி ஜாக்கிரதையாயிருந்து கொள்ளுங்கள். நமது ஆண்டவரும் இரட் 18
சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை யிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங் கள். அவருக்கே இப்பொழுதும் யுகாந்த பரியந்தமும் மகிமையிருப்பதாக.

---

## THE FIRST EPISTLE GENERAL OF JOHN

# யோவானின் முதலாம் நிருபம்

1 ஆதிமுதல் இருந்ததும் நாங்கள் கேட்ட தும் எங்கள் கண்களால் கண்டதும் நாங் கள் பார்த்துக்கொண்டிருந்ததும் எங்கள் கைகளால் தொட்டதுமான ஜீவவார்த்தை யைப்பற்றி உங்களுக்கு அறிவிக்கிறோம்—
2 ஜீவனுனது வெளிப்பட்டது, நாங்கள் அதைக் கண்டோம், அதைப்பற்றிச் சாட்சி யிடுகிறோம்; பிதாவோடிருந்ததும் எங்க ளுக்கு வெளிப்பட்டதுமான நித்திய ஜீவ
3 னே அது—நாங்கள் கண்டதையுங் கேட்ட தையும்பற்றி நீங்களும் எங்கள் ஐக்கியத் தில் பங்கு பெறவேண்டுமென்று உங்க ளுக்கு அறிவிக்கிறோம்; எங்கள் ஐக்கிய மோ பிதாவோடும் அவர் குமாரனுகிய
4 இயேசுகிறிஸ்துவோடுமிருக்கிறது. எங்கள் சந்தோஷம் நிறைவாகும்படி இவைகளே உங்களுக்கு எழுதுகிறோம்.

நாங்கள் அவரிடங் கேட்டு உங்களுக்கு 5
அறிவிக்கிற செய்தி இது: கடவுள் ஒளியே, இருள் அவரில் எவ்வளவேனுமில்லே.
நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்க 6
ளென்று சொல்லிக்கொண்டே இருளில் நடப்போமானுல் பொய் சொல்லுகிறோம், உண்மையைச் செய்கிறதில்லே. அவர் 7
வெளிச்சத்திலிருக்கிறதுபோல நாமும் வெ ளிச்சத்தில் நடப்போமானுல் ஒருவரோ டொருவர் ஐக்கியமுடையவர்களே; அவர் குமாரனுகிய இயேசுவின் இரத்தம் எப்பாவ மும் நீங்க நம்மைச் சுத்திகரிக்கிறது. நமக் 8
குப் பாவமில்லே யென்போமானுல் நம்மை நாமே வஞ்சித்துக்கொள்ளுகிறோம், உண்மை நமக்குள்ளில்லே. நமது பாவங்களே அறிக் 9
கையிட்டால் பாவங்களே நமக்கு மன்னித்து எல்லா அநீதமும் நீங்க நம்மைச் சுத்தி

கரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியு
10 முள்ளவர். நாம் பாவஞ் செய்யவில்லை
என்போமானால் அவரைப் பொய்யராக்கு
கிறோம், அவர் வார்த்தை நமக்குளில்லை.

**2** என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்
யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுது
கிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால்
நீதிபரரான இயேசுகிறிஸ்துவே பிதாவினிடம்
2 நமக்குச் [1]சகாயர். நமது பாவங்களுக்கு
அவரே [2]பிராயச்சித்தபலி; நமது பாவங்
களுக்குமாத்திரமல்ல சர்வலோகத்தின் பா
3 வங்களுக்குமே. அவரை அறிந்திருக்கிறோ
மென்பதை எப்படி அறிந்துகொள்ளுகி
றோம்? அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளு
4 கிறதினால்தான். அவரை அறிந்திருக்கிறே
னென்று சொல்லிக்கொண்டே அவர் கற்
பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்
5 யன், அவனுக்குள் உண்மையில்லை. அவர்
வார்த்தையைக் கைக்கொள்ளுகிறவன் எவ
னோ அவனில் கடவுளின் அன்பு மெய்யா
கப் பூரணப்பட்டாயிற்று. நாம் அவருக்
குள் இருக்கிறோமென்பதை அறிந்துகொள்
6 வது இதினால்தான். அவருக்குள் நிலைத்
திருக்கிறேனென்று சொல்லுகிறவன் கிறிஸ்து
நடந்தபடியே தானும் நடக்கக் கடமைப்
பட்டிருக்கிறான்.

7 பிரியமானவர்களே, நான் உங்களுக்கு
எழுதுகிறது புதிய கற்பனையல்ல, ஆதிமுதல்
உங்களுக்கிருந்த பழைய கற்பனையே; அந்
தப் பழைய கற்பனை நீங்கள் கேட்டிருக்
8 கிற வார்த்தைதான். மேலும், நான் உங்க
ளுக்கு எழுதுகிறது புதிய கற்பனையாம்.
இது அவரிலும் உங்களிலும் உண்மை
யானது; ஏனென்றால் இருள் நீங்கிப்போ
கிறது, மெய்வெளிச்சம் இப்பொழுதும் பிர
9 காசிக்கிறது. வெளிச்சத்தில் இருக்கிறே
னென்று சொல்லிக்கொண்டே தன் சகோ
தரனைப் பகைக்கிறவன் இன்னும் இருளிலே
10 இருக்கிறான். தன் சகோதரனில் அன்பு
கூருகிறவன் வெளிச்சத்தில் நிலைத்திருக்
கிறான்; இடறிவிழுங் காரணம் அவனிட
11 மில்லை. தன் சகோதரனைப் பகைக்கிறவன்
இருளிலிருக்கிறான், இருளிலே நடக்கிறான்;
இருள் அவன் கண்களைக் குருடாக்கினபடி
யால் தான் போகுமிடம் இன்னதென்று
அறியாதிருக்கிறான்.

12 பிள்ளைகளே, அவர் நாமத்தினிமித்தம்
உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டன,
ஆதலால் உங்களுக்கு எழுதுகிறேன்.
13 பிதாக்களே, ஆதிமுதலிருக்கிறவரை நீங்கள்
அறிந்திருக்கிறீர்கள், ஆதலால் உங்களுக்கு
எழுதுகிறேன். வாலிபரே, தீயோனை நீங்
கள் ஜெயித்திருக்கிறீர்கள், ஆதலால் உங்க
ளுக்கு எழுதுகிறேன். பிள்ளைகளே, நீங்
14 கள் பிதாவை அறிந்திருக்கிறீர்கள், ஆத
லால் உங்களுக்கு எழுதியிருக்கிறேன்.
பிதாக்களே, ஆதிமுதலிருக்கிறவரை நீங்
கள் அறிந்திருக்கிறீர்கள், ஆதலால் உங்க
ளுக்கு எழுதியிருக்கிறேன். வாலிபரேநீங்
கள் பலவான்கள், கடவுளின் வார்த்தை உங்
களில் நிலைத்திருக்கிறது, நீங்கள் தீயோனை
ஜெயித்தீர்கள், ஆதலால் உங்களுக்கு
எழுதியிருக்கிறேன். உலகத்திலும் உலகத்தி
15 லுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்.
ஒருவன் உலகத்தில் அன்புகூருவானானால்
அவனில் பிதாவின் அன்பில்லை. ஏனெ
16 னில், உலகத்திலுள்ளதெல்லாம், மாம்சத்
தின் இச்சை கண்களின் இச்சை ஜீவியத்
தின் வீண்பெருமையெல்லாம் பிதாவுக்குரிய
தல்ல உலகத்திற்கேயுரியது. உலகமும்
17 அதின் இச்சையும் ஒழிந்துபோகிறது; கட
வுளின் சித்தத்தைச் செய்கிறவனோ என்
றென்றைக்கும் நிலைத்திருக்கிறான்.

பிள்ளைகளே, இது கடைசிக்காலம் [3]அந்
18 திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்
விப்பட்டபடி இப்பொழுதும் அந்திக்
கிறிஸ்துகள் அநேகர் தோன்றியிருக்கிறார்
கள்; இது கடைசிக் காலமென்று அதினால்
அறிந்துகொள்ளுகிறோம். அவர்கள் நம்
19 மிடத்திலிருந்து வந்தவர்கள், ஆகிலும் அவர்
கள் நமக்குரியவர்களல்ல; நமக்குரியவர்க
ளாயிருந்தால் நம்மோடு நிலைத்திருப்பார்
களே. அவர்களில் எவரும் நமக்குரிய
வர்களல்லவென்று வெளியாவதற்கே இப்
படியாயிற்று. நீங்களோ பரிசுத்தரால
20 அபிஷேகம் பெற்றுக்கொண்டு அனைவரும்
அறிவடைந்திருக்கிறீர்கள். சத்தியத்தை
21 நீங்கள் அறியாததினாலல்ல, நீங்கள் அதை
அறிந்திருக்கிறதினாலும் பொய்யொன்றும்
சத்தியத்திற்குரியதல்ல வென்கிறதினாலும்
உங்களுக்கு எழுதியிருக்கிறேன். இயேசு
22 வைக் கிறிஸ்து அல்லவென்று மறுதலிக்கிற
வனேயல்லாமல் வேறே யார் பொய்யன்?
பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிற
இவனே அந்திக்கிறிஸ்து. குமாரனை மறுத
23 லிக்கிற எவனும் பிதாவையுடையவனு
மல்ல, குமாரனை அறிக்கை பண்ணுகிறவன்
பிதாவையுமுடையவன். ஆதிமுதல் நீங்
24 கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்

---

1 யோவா. 14: 16 பார்க்க. 2 திருபாதார மலியன்றும் திருப்படம். 3 கிறிஸ்துவுக்கு எதிரானி.

திருக்கக்கடவது; ஆதிமுதல் நீங்கள் கேள்
விப்பட்டது உங்களில் நிலைத்திருக்குமாஞல்
நீங்களும் குமாரனிலும் பிதாவிலும் நிலைத்
25 திருப்பீர்கள். அவர் நமக்கு அளித்த
26 வாக்குத்தத்தம் நித்திய ஜீவனே. உங்களை
வஞ்சிக்கிறவர்களைக்குறித்து இவைகளை
27 உங்களுக்கு எழுதியிருக்கிறேன். உங்கள்
விஷயத்திலோ, அவராலே பெற்ற அபி
ஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, எவ
ரும் உங்களுக்குப் போதிக்கவேண்டிய அவ
சியமில்லை. அவர் அபிஷேகம் எல்லாவற்
றையுங் குறித்து உங்களுக்குப் போதிக்கிற
படி—அது உண்மையே, பொய்யல்ல—
அது உங்களுக்குப் போதித்தபடியே அவ
28 ரில் நிலைத்திருங்கள். இப்படியிருக்க,
பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது
நாம் தைரியமுள்ளவர்களாய் அவர் வரு
கையில் வெட்கத்தோடு அவரைவிட்டுப்
போகாமலிருக்கும்படி அவரில் நிலைத்திருங்
29 கள். அவர் நீதியுள்ளவரென்று உங்களுக்
குத் தெரிந்திருந்தால் நீதியைச் செய்கிறவ
னெவனும் அவரால் பிறந்தவனென்று
அறிந்துகொள்ளுங்கள்.

**3** பாருங்கள், பிதா நமக்குப் பாராட்டின
அன்பு எவ்வளவு அதிசயம்! கடவுளின்
பிள்ளைகளென்று நாம் அழைக்கப்பட
அருள்செய்தார்; நாமிருக்கிறதும் அப்ப
டியே. ஆனதபற்றி உலகம் நம்மை அறிந்து
கொள்ளுகிறதில்லை; அது அவரையும்
2 அறிந்துகொள்ளவில்லையே, பிரியமானவர்
களே, இப்பொழுது கடவுளின் பிள்ளை
களாயிருக்கிறோம், இனிமேலுள்ள நமது
நிலைமை என்னவென்று இன்னும் வெளிப்
படவில்லை; எனினும், அவர் வெளிப்படும்
போது அவர் இருக்கிறபடியே நாம் அவ
ரைத் தரிசிப்பதினால் அவரைப்போலவே
இருப்போமென்று அறிந்திருக்கிறோம்.
3 இப்படிப்பட்ட நன்னம்பிக்கையை அவர்
மேல் வைத்திருக்கிறவனெவனும் அவர்
சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோலத் தன்னை
4 யும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான். பாவஞ்
செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்துக்
கடங்காதவன்; பாவம் நியாயப்பிரமாணத்
5 துக் கடங்காமையே. பாவங்களை நீக்கிவிட
வே அவர் வெளிப்பட்டாரென்று அறிவீர்
6 கள்; அவரில் பாவமில்லை. அவரில் நிலைத்
திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை;
பாவஞ்செய்கிற எவனும் அவரைக் கண்
7 டதுமில்லை அறிந்ததுமில்லை பிள்ளைகளே,
ஒருவனும் உங்களை வஞ்சிக்க இடங்கொ
டாதிருங்கள்: நீதியைச் செய்கிறவன் அவர்
நீதியுள்ளவராயிருக்கிறதுபோலத் தானும்
நீதியுள்ளவனாயிருக்கிறான். பாவஞ்செய்கிற 8
வன் பிசாசுக்குரியவன்; பிசாசானவன் ஆதி
முதலே பாவஞ்செய்கிறான். பிசாசின் கிரி
யைகளை அழிக்கவே தெய்வ குமாரன் வெ
ளிப்பட்டார். கடவுளால் பிறந்த எவனும் 9
பாவஞ்செய்யான், அவருடைய வித்து அவ
னுக்குள் நிலைத்திருக்கிறதே. அவன் கட
வுளால் பிறந்திருக்கிறவனுகையால் பாவஞ்
செய்யமுடியாது. கடவுளின் பிள்ளைகள் 10
இன்னரென்றும் பிசாசின் பிள்ளைகள் இன்
னரென்றும் இதினால் வெளிப்படும்: நீதி
யைச் செய்யாத எவனும் கடவுளுக்குரியவ
னல்ல, தன் சகோதரனில் அன்புகூராத
வனும் அப்படியே. நாம் ஒருவரிலொரு 11
வர் அன்புகூரவேண்டுமென்பதே நீங்கள்
ஆதிமுதல் கேள்விப்பட்ட செய்தி. தீயோ 12
னுக்குரியவனாயிருந்து தன் சகோதரனைக்
கொலைசெய்த காயீனைப்போலிருக்கவேண்
டாம். இவன் எதினிமித்தம் அவனைக்
கொலைசெய்தான்? இவன் செய்கைகள்
தீயவைகள், இவன் சகோதரன் செய்கை
கள் நீதியுள்ளவைகள். இதுவே காரணம்.
சகோதரரே, உலகம் உங்களைப்பகைத் 13
தால் ஆச்சரியப்படவேண்டாம். நாம் 14
மரணத்திலிருந்து ஜீவனுக்குள் வந்தாயிற்
றென்பதைச் சகோதரரில் அன்புகூருகிறதி
னால் அறிவோம். அன்புகூராதவன் மர
ணத்திலே நிலைத்திருக்கிறான். தன் சகோ 15
தரனைப் பகைக்கிற எவனும் மனுஷகொலை
பாதகன்; மனுஷகொலைபாதகனெவனுக்கு
அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திரா
தென்று அறிவீர்கள். அவர் தமது ஜீவனை 16
நமக்காகக்கொடுத்ததினாலே அன்பு இன்ன
தென்று அறிந்துகொண்டோம். நாமும்
சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக்கட
மைப்பட்டவர்கள். ஒருவன் இவ்வுலகப் 17
பொருள் உடையவனாயிருந்து தன் சகோ
தரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு
அவனுக்கு மனதிரங்காதிருந்தால் அவனில்
கடவுளின் அன்பு நிலைத்திருப்பதெப்படி?
பிள்ளைகளே, வார்த்தையினாலும் நாவினா 18
லல்ல கிரியையினால் சத்தியத்திலே அன்பு
கூரக்கடவோம். நாம் சத்தியத்துக்குரிய 19
வர்களென்பதை இதினாலே அறிந்துகொள்
வோம். நமது இருதயமே நம்மைக் குற்ற 20
வாளிகளாகத் தீர்க்கும்போதெல்லாம் கட
வுள் நமது இருதயத்திலும் பெரியவராய்ச்
சகலத்தையும் அறிகிறவரென்று நமது இரு
தயத்தை அவர் முன்பாக நிச்சயப்படுத்திக்
கொள்ளுகிறோம். பிரியமானவர்களே, 21
நமது இருதயம் நம்மைக் குற்றவாளிக

ளென்று தீர்க்காதிருந்தால் கடவுளைக் கிட்
22 டிச்சேரும் தைரியம் நமக்குண்டு. அவர்
கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவர்
பார்வையில் பிரியமானவைகளைச் செய்கிற
படியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெது
வோ அதை அவரிடமிருந்து பெற்றுக்கொள்
23 ளுகிறோம். அவர் கற்பனை இதுவே: அவர்
குமாரனுடைய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில்
நாம் விசுவாசமாயிருக்கவும் அவர் நமக்குக்
கற்பித்தபடி ஒருவரிலொருவர் அன்புகூர
24 வும் வேண்டுமென்பதே. அவருடைய கற்
பனைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில்
நிலைத்திருக்கிறான், அவரும் அவனில் நிலைத்
திருக்கிறார். அவர் நம்மில் நிலைத்திருக்
கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியி
னாலே அறிந்துகொள்ளுகிறோம்.

**4** பிரியமானவர்களே, உலகத்தில் அநேக
கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதி
னால் நீங்கள் ஒவ்வொரு ஆவியையும் நம்பி
விடாமல் அவைகள் கடவுளுக்குரியவை
2 களோ என்று சோதித்தறியுங்கள். கடவு
ளின் ஆவியை அறிந்துகொள்ளும் வகை
இது: இயேசுவே மாம்சத்தில் வந்த கிறிஸ்து
வென்று அறிக்கைபண்ணுகிற எந்த ஆவி
3 யும் கடவுளுக்குரியது; இயேசுவை அறிக்
கைபண்ணுத எந்த ஆவியும் கடவுளுக்குரிய
தல்ல. இதுவே அந்திக்கிறிஸ்துவின் ஆவி;
அது வரப்போகிறதாகக் கேள்விப்பட்டீர்
கள், அது இப்பொழுதும் உலகத்தில் இருக்
4 கிறது. பிள்ளைகளே, நீங்கள் கடவுளுக்குரி
யவர்கள்; அவர்களை ஜெயித்துவிட்டீர்கள்;
உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கி
5 றவர் பெரியவர். அவர்கள் உலகத்துக்குரி
யவர்கள், ஆகையால் உலகத்துக்குரியவை
களைப் பேசுகிறார்கள், உலகமும் அவர்
6 களுக்குச் செவிகொடுக்கிறது. நாம் கடவு
ளுக்குரியவர்கள்; கடவுளை அறிந்துகொள்
ளுகிறவன் நமக்குச் செவிகொடுக்கிறான்;
கடவுளுக்குரியவனல்லாதவன் நமக்குச்
செவிகொடுக்கிறதில்லை. சத்திய ஆவி இன்ன
தென்றும் வஞ்சக ஆவி இன்னதென்றும்
இதினாலே அறிந்துகொள்ளுகிறோம்:

7 பிரியமானவர்களே, ஒருவரிலொருவர்
அன்புகூருவோமாக. அன்பு கடவுளுக்குரி
யது. அன்புகூருகிறவன் எவனும் கடவு
ளால் பிறந்தவன், கடவுளை அறிந்துகொள்
8 ளுகிறான். அன்புகூராதவன் கடவுளை அறிந்
9 துகொள்ளவில்லை; கடவுள் அன்பே. கட
வுளின் அன்பு நம்மிடத்தில் இவ்வாறாக
வெளிப்பட்டது; தமது ஒரே பேறான குமா
ரனால் நாம் பிழைக்கும்படி கடவுள்

அவரை இவ்வுலகத்தில் அனுப்பினார்.
அன்பு எதிலே விளங்குகிறது? நாம் கடவுளி 10
னிடம் அன்புகூர்ந்ததினால்ல, அவர் நம்மிடம்
அன்புகூர்ந்து நமது பாவங்களை நிவிர்த்தி
செய்கிற பிராயச்சித்தபலியாகத் தமது குமா
ரனை அனுப்பினதிலேயே அன்பு விளங்கு
கிறது. பிரியமானவர்களே, கடவுள் இவ் 11
விதமாய் நம்மில் அன்புகூர்ந்திருக்க நாமும்
ஒருவரிலொருவர் அன்புகூரக் கடமைப்
பட்டிருக்கிறோம். கடவுளை ஒருவரும் ஒரு 12
போதும் கண்டதில்லை; நாம் ஒருவரிலொரு
வர் அன்புகூர்ந்தால் கடவுள் நம்மில் நிலைத்
திருக்கிறார்; அவர் அன்பும் நமக்குள் பூர
ணப்பட்டிருக்கும். நாம் அவரிலும் அவர் 13
நம்மிலும் நிலைத்திருக்கிறதை இதினால்
அறிந்துகொள்ளுகிறோம்: தமது ஆவியில்
நமக்குப் பங்கு அருளினாரே. பிதாவானவர் 14
குமாரனை உலகரட்சகராக அனுப்பியிருக்கி
றாரென்று நாங்கள் கண்ணாரக் கண்டு சாட்சி
யிடுகிறோம். இயேசுவானவர் கடவுளின் 15
குமாரனென்று அறிக்கைபண்ணுகிறவன்
எவனை அவனில் கடவுள் நிலைத்திருக்
கிறார், அவனும் கடவுளில் நிலைத்திருக்
கிறான். கடவுள் நம்மில் வைத்திருக்கிற 16
அன்பை நாம் அறிந்துமிருக்கிறோம், நம்
பியுமிருக்கிறோம். கடவுள் அன்பே; அன்
பில் நிலைத்திருக்கிறவன் கடவுளில் நிலைத்தி
ருக்கிறான்; கடவுளும் அவனில் நிலைத்திருக்
கிறார். அன்பு நம்மில் பூரணப்பட்டிருக் 17
கிறது என்பதற்கு இதுவே அத்தாட்சி:
அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுல
கில் இருந்து நியாயத்தீர்ப்புநாளில் தைரிய
முள்ளவர்களாயிருப்பதுதான். அன்பில் பய 18
மில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே
தள்ளும். பயம் தண்டனையை எதிர்
நோக்கியது; பயப்படுகிறவனோ அன்பில்
பூரணப்பட்டவனல்ல. அவர் முந்தி நம் 19
மில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அன்பு
கூருகிறோம். கடவுளில் அன்புகூருகிறே 20
னென்று ஒருவன் சொல்லிக்கொண்டிருக்
கும்போதே தன் சகோதரனைப் பகைப்பானா
னால் அவன் பொய்யன்; கண்ட சகோதர
னில் அன்புகூராமலிருக்கிறவன் காணாத
கடவுளில் அன்புகூரமுடியாது. கடவுளில் 21
அன்புகூருகிறவன் தன் சகோதரனிலும்
அன்புகூரவேண்டுமென்கிற இந்தக் கற்ப
னையை அவரிடமிருந்து பெற்றிருக்கிறோம்.

**5** இயேசுவே கிறிஸ்து என்று நம்புகிற எவ
னும் கடவுளால் பிறந்திருக்கிறான்; பிறப்
பித்தவரில் அன்புகூருகிற எவனும் அவ
ரால் பிறப்பிக்கப்பட்டவனிலும் அன்பு

2 கூருகிறேன். நாம் கடவுளில் அன்புகூர்ந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளும்போ தெல்லாம் கடவுளின் பிள்ளைகளில் அன்பு கூருகிறோமென்பதை அறிந்துகொள்ளு 3 கிறோம். நாம் கடவுளின் கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரில் அன்புகூருவதாம்; 4 அவருடைய கற்பனைகள் பாரமல்ல. கடவுளால் பிறந்ததெதுவும் உலகத்தை ஜெயிக்கும்; உலகத்தை ஜெயித்த ஜெயம் நமது 5 விசுவாசமே. இயேசுவானவர் கடவுளின் குமாரனென்று நம்புகிறவனேயன்றி உல 6 கத்தை ஜெயிக்கிறவன் யார்? இயேசுகிறிஸ்து வாகிய இவரே ஜலம் இரத்தம் இவற்றின் வழியாக வந்தவர்; ஜலத்தினால்மாத்திரமல்ல, ஜலத்தினாலும் இரத்தத்தினாலுமே வந்தார். சாட்சியிடுகிறது ஆவியானவர்; ஆவியான 7 வர் சத்தியமே. சாட்சியிடுகிறவர்கள் மூவர், ஆவி, ஜலம், இரத்தம்; இம்மூவ 8 ரும் ஒன்றையே நோக்கியவர். நாம் மனுஷ சாட்சியை அங்கீகரித்தால் அதைப்பார்க்கி லும் கடவுளின் சாட்சி பெரிது. கடவுளின் சாட்சியோ அவர் தமது குமாரனைப்பற்றிக் 10 கொடுத்த சாட்சியே. தெய்வகுமாரனிடம் விசுவாசமாயிருக்கிறவன் அந்தச் சாட்சி யைத் தனக்குள்ளே உடையவன்; கடவுளை நம்பாதவனே கடவுள் தமது குமாரனைப் பற்றிக் கொடுத்த சாட்சியை நம்பாததினால் 11 அவரைப் பொய்யராக்குகிறான். கடவுள் நமக்கு நித்திய ஜீவனைத் தந்தாரென்பதே அந்தச் சாட்சியாம்; இந்த ஜீவன் அவர் 12 குமாரனிலிருக்கிறது. குமாரனையுடையவன் ஜீவனையுடையவன், தெய்வகுமாரனில்லாத வன் ஜீவனில்லாதவன்.

13 நீங்கள் நித்திய ஜீவனையுடையவர்கள் என்னும் நிச்சயம் உங்களுக்கிருக்கும்படி தெய்வகுமாரனுடைய நாமத்தில் விசுவாச மாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதி யிருக்கிறேன். நாம் எதையாகிலும் அவரு 14 டைய சித்தத்தின்படி கேட்டுக்கொண்டால் அவர் நமக்குச் செவிசாய்த்தருளுகிறாரென் பதே அவரை நோக்கும்போது நமக்குள்ள தைரியம். நாம் எதைக் கேட்டாலும் அவர் 15 நமக்குச் செவிசாய்த்தருளுகிறாரென்று நாம் அறிந்தோமாகில் அவரிடம் நாம் கேட்டுக் கொண்டவைகளைப் பெற்றுக்கொண்டோ மென்றும் அறிந்திருக்கிறோம். மரணத்துக் 16 கேதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால் அவன் வேண்டுதல் செய்து அவனுக்கு ஜீவன் கிடைக்கச் செய் யட்டும்; மரணத்துக்கேதுவல்லாத பாவத் தைச் செய்தவர்களுக்கே இது பொருந்தும். மரணத்துக்கேதுவான பாவமுண்டு, அதைக் குறித்து வேண்டுதல்செய்யநான் சொல்லேன். அநீதமெல்லாம் பாவந்தான்; என்றாலும் 17 மரணத்துக்கேதுவல்லாத பாவமுமுண்டு.

கடவுளால் பிறந்திருக்கிற எவனும் 18 பாவஞ்செய்யானென்று அறிவோம்; கடவு ளால் பிறந்தவரே அவனைக் காக்கிறார், தீயோன் அவனைத் தொடான். நாம் கடவு 19 ளுக்குரியவர்களென்றும் உலகமுழுவதும் தீயோனுக்குள் கிடக்கிறதென்றும் அறி வோம். அன்றியும், நாம் மெய்ப்பொருளான 20 வரை அறிந்துகொள்வதற்குத் தெய்வகுமா ரன் வந்து நமக்கு விவேகத்தைத் தந்திருக் கிறாரென்றும் அறிவோம்; நாம் மெய்ப் பொருளானவரில், அவர் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவிலே, இருக்கிறோம்; இவரே மெய்க்கடவுளும் நித்திய ஜீவனுமாயிருக்கி றார். பிள்ளைகளே, விக்கிரகங்களுக்கு விலகி 21 உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்.

---

## THE SECOND EPISTLE OF JOHN

# யோவானின் இரண்டாம் நிருபம்

தெரிந்தெடுக்கப்பட்ட அம்மாளுக்கும் அவர் பிள்ளைகளுக்கும் மூப்பனாகிய நான் எழுதுகிறது:

2 நான் சத்தியத்தில் உங்களிடம் அன்பு கூறுகிறேன். நமக்குள் நிலைநிற்பதும் என் றென்றைக்கும் நம்மோடிருப்பதுமாகிய சத் தியத்தினிமித்தம், நான்மாத்திரமல்ல சத்தி யத்தை அறிந்திருக்கிற யாவரும் உங்களில் அன்புகூருகிறார்கள். பிதாவாகிய கடவு 3 ளிடமிருந்தும் பிதாவின் குமாரன் இயேசு கிறிஸ்துவினிடமிருந்தும் வரும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் சத்தியத்திலும் அன்பிலும் நம்மோடிருக்கும்.

பிதாவினிடமிருந்து நாம் கட்டளை பெற்ற 4 படியே உம்முடைய பிள்ளைகளுள் சத்தியத்தில் நடக்கிறவர்களை நான் கண்டு மிகவும் சந்

5 தோஷப்பட்டேன். இப்பொழுதும், அம்மாளே, நாம் ஒருவரிலொருவர் அன்புகூர வேண்டுமென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன். நான் இதை ஒரு புதிய கற்பனையாக எழுதாமல் ஆதிமுதல் நமக்குண்டாயிருக்கிற கற்பனையாகவே எழுதுகிறேன். 6 நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு; நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்கிறபடி அதில் நடக்கவேண்டுமென்பதே 7 இந்தக் கற்பனை. வஞ்சகர் அநேகர் உலகில் தோன்றியிருக்கிறார்கள்; இவர்கள் இயேசுவே மாம்சத்தில் வருகிற இரிஸ்துவென்று அறிக்கை பண்ணுதவர்கள்; இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக்கிறிஸ்துவுமாம். 8 நாம் பிரயாசப்பட்டுச் செய்தவைகளை நீங்கள் இழந்துபோகாமல் பூரணபலனைப் பெறும்படி எச்சரிக்கையாய்ப் பார்த்துக் 9 கொள்ளுங்கள். கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் அதற்குமேல் போகிற எவனும் கடவுளையுடையவனல்ல; உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனே பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் இந்த உப 10 தேசத்தைக் கொண்டுவராதவனாய் உங்களிடம் வந்தால் அவனை வீட்டிலே ஏற்றுக் கொள்ளவும் வேண்டாம், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லவும் வேண்டாம். அவ 11 னுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவன் தீக்கிரியைகளுக்குப் பங்காளியாகிறான்.

உங்களுக்கு எழுதவேண்டிய காரியங் 12 கள் அநேகமுண்டு; காகிதத்தினாலும் மையினாலும் அவைகளை எழுத எனக்கு மனதில்லை. நமது சந்தோஷம் நிறைவாகும்படி உங்களிடம் வந்து முகமுகமாய்ப் பேசலாமென்று எதிர்பார்க்கிறேன். தெரிந்தெடுக்கப் 13 பட்டவளாகிய உமது சகோதரியின் பிள்ளைகள் உமக்கு வந்தனஞ் சொல்லுகிறார்கள்.

---

## THE THIRD EPISTLE OF JOHN

# யோவானின் மூன்றாம் நிருபம்

மூப்பனாகிய நான் சத்தியத்தில் அன்பு கூருகிற பிரியமான காயுவுக்கு எழுதுகிறது:
2 பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்வடைந்திருக்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்வடைந்து க்ஷேமமாயிருக்கும்படி
3 பிரார்த்திக்கிறேன். நீ சத்தியத்தில் நடக்கிறபடியே உன்னில் விளங்கும் சத்தியத்தைப் பற்றிச் சகோதரர் வந்து சாட்சியிட்டபோது நான் மிகவும் சந்தோஷப்பட்
4 டேன். என் பிள்ளைகள் சத்தியத்தில் நடக்கிறார்களென்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கில்லை.
5 பிரியமானவனே, சகோதரரான அந்நியர் நிமித்தம் நீ படும் பிரயாசமெல்லாம் உண்
6 மையுள்ளதே. அவர்கள் உன் அன்பைக் குறித்துச் சபைக்குமுன் சாட்சியிட்டார்கள்; கடவுளுக்குகந்தபடி நீ அவர்களை
7 வழிவிட்டனுப்பினால் நலம். திருநாமத்தினிமித்தம் அவர்கள் புறப்பட்டுப்போனார்கள்; புறஜாதியாரிடமிருந்தும் ஒன்றும் வாங்
8 கிக்கொள்ளவில்லை. ஆகையால், நாம் சத்தியத்துக்கு உடன் ஊழியராகும்படி அப்படிப்பட்டவர்களை உபசரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நான் சபைக்குச் சிலவற்றை எழுதி 9 னேன்; அவர்களில் முதன்மையாயிருக்க விரும்புகிற தியோத்திரேப்போ எங்களை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. ஆனபடியால் 10 நான் வருவேனெனில் அவன் எங்களுக்கு விரோதமாய்ப் பொல்லாத வார்த்தைகளை அலப்பிச் செய்துவருகிற கிரியைகளை நினைவுகூரச்செய்வேன். அவன் இப்படிச் செய்துவருவதும் போதாதென்று தானே சகோதரரை ஏற்றுக்கொள்ளாமலிருக்கிறதுமன்றி ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கிறவர்களையுந் தடைசெய்து சபைக்குப் புறம்பே தள்ளுகிறான்.

பிரியமானவனே, நீ தீமையானதையல்ல 11 நன்மையானதையே பின்பற்று; நன்மை செய்கிறவன் கடவுளுக்குரியவன்; தீமை செய்கிறவன் கடவுளைக் கண்டதேயில்லை. தேமேத்திரியு எல்லாராலும் நற்சாட்சி பெற் 12 றதுமல்லாமல், சத்தியத்தாலும் நற்சாட்சி

பெற்றவன்; நாங்களும் சாட்சிசொல்லுகிறோம், எங்கள் சாட்சி மெய்யென்று அறிவாய்.

13 உனக்கு எழுதவேண்டிய காரியங்கள் அநேகமுண்டு; மையினாலும் இறகினாலும் 14 எழுத எனக்கு மனதில்லை. சீக்கிரம் உன்னைக் காணலாமென்று எதிர்பார்க்கிறேன், அப்பொழுது முகமுகமாய்ப் பேசிக்கொள்ளுவோம். உனக்குச் சமாதானம் உண்டாவதாக. சிநேகிதர் உனக்கு வந்தனஞ் சொல்லுகிறார்கள். சிநேகிதருக்குப் பேர்பேராக வாழ்த்துதல் அளிப்பாயாக. 15

## THE GENERAL EPISTLE OF JUDE

# யூதாவின் நிருபம்

இயேசுகிறிஸ்துவின் அடியானும் யாக்கோபின் சகோதரனுமான யூதா, பிதாவாகிய கடவுளின் அன்புக்கும் இயேசுகிறிஸ்துவின் பாதுகாப்புக்கும் உரியவர்களாய் அழைக்கப்பட்டவர்களுக்கு எழுதுவது: 2 உங்களுக்கு இரக்கமும் சமாதானமும் அன்பும் பெருகக்கடவது.

3 பிரியமானவர்களே, நமக்குப் பொதுவாயுள்ள இரட்சிப்பைப்பற்றி உங்களுக்கு எழுதுவது என் முழுக்கருத்தாயிருக்கையில், பரிசுத்தவான்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டுத் தீர்ந்த விசுவாச சத்தியத்தின் பொருட்டு நீங்கள் உற்சாகமாய்ப் போராட வேண்டுமென்று எழுதி உங்களைத் தூண்டு 4 வது அவசியமெனக் கண்டேன். சிலர் கள்ள வழியாய் நுழைந்துவிட்டார்களே; அவர்கள் இந்த ஆக்கினைக்கென்று பூர்வத்திலேயே குறிக்கப்பட்டவர்கள்; தெய்வபக்தியற்றவர்கள், நமது கடவுளின் கிருபையைக் காமவிகாரத்துக் கேதுவாகப் புரட்டுகிறவர்கள். நமது ஒரே எஜமானும் ஆண்டவருமாகிய இயேசுகிறிஸ்துவை மறுதலிக்கிறவர்கள்.

5 எல்லாவற்றையும் அறிந்து தீர்ந்த உங்களுக்கு ஒரு காரியத்தை நினைப்பூட்ட விரும்புகிறேன். அதாவது: கர்த்தர் தமது ஜனத்தை எகிப்து தேசத்திலிருந்து விடுதலையாக்கினாலும் விசுவாசமில்லாதவர்களைப் 6 பின்பு அழித்தார். தங்களுடைய ஆதி மேன்மையைக் காத்துக்கொள்ளாமல் தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும் மகா நாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய கட்டுகளில் அந்தகாரத்தின் 7 கீழ் அடைத்து வைத்திருக்கிறார். சோதோம் கொமோராவும் சுற்று ஊர்களும் அவர்களைப்போல் விபசாரத்தில் மிதமிஞ்சி அந்திய மாம்சத்தை நாடித் தொடர்ந்ததினாலே நித்திய அக்கினியாகிய தண்டனையடைந்து திருஷ்டாந்தமாகக் கிடக்கின்றன. இப்படியிருந்தும், மாயைக் கனவு 8 காணும் இவர்களும் அவ்வாறே மாம்சத்தை அசுசிப்படுத்திக்கொண்டு உன்னத அதிகாரத்தை அசட்டைபண்ணி மகத்துவங்களைத் தூஷிக்கிறார்கள். பிரதான தூதனுமிகா 9 வேல் மோசேயின் சரீரத்தைக் குறித்துப் பிசாசோடு வாதாடிப் பேசினபோது அவனைத் தூஷித்துக் குற்றப்படுத்தத்துணியாமல்: கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக என்று மாத்திரம் சொன்னான். இவர் 10 களோ தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூஷிக்கிறார்கள்; பகுத்தறிவில்லாத மிருகங்கள்போல் இயற்கையறிவினால் அறிந்துகொள்ளுகிறவைகளைத் தங்கள் கேட்டுக்கே கையாடுகிறார்கள். இவர்களுக்கு ஐயோ 11 ஆபத்து! இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து பிலேயாமின் வஞ்சகத்தில் கூலிக்காக விரைந்தோடுகிறார்கள்; கோராவைப் 12 போல் எதிர்த்து நிற்பதால் அழிகிறார்கள். உங்கள் அன்பின் விருந்துகளில் இவர்கள் கறைகள். பயமின்றிக்கூடவே விருந்துண்டு தங்களைத் தாங்களே போஷித்துக்கொள்ளுகிறவர்கள்; இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்கள்; இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரோடு பிடுங்குண்ட மரங்கள். தங்கள் அவமானங்களே நுரைதள்ளுகிற 13 அமளியான கடலலைகள்; வழிதப்பி யலைகிற நட்சத்திரங்கள்; காரிருளே என்றென்றைக்கும் இவர்கள் நிமித்தம் ஆதாமுக்கு ஏழாந் 14 தலைமுறையான ஏனோக்கு தனது தீர்க்கதரி

சனத்தில் இவர்களையுங் குறித்தான். இதோ, கர்த்தர் கோடாகோடியான பரிசுத்தவான்க
15 ளோடு வந்துவிட்டார்; யாவர்மேலும் தீர்ப் புச்செய்வதற்கும் தெய்வபயமில்லாதவர்கள் யாவரும் தெய்வபயமின்றிச் செய்த தெய்வ பயமில்லாத சகல கிரியைகளினிமித்தமும் தெய்வபயமற்ற பாவிகள் தமக்கு விரோத மாய்ப் பேசின கடினவார்த்தைகள் யாவற்றி னிமித்தமும் அவர்களைக் குற்றப்படுத்தித் தீர்ப்பதற்கும் வந்துவிட்டார் என்றான்.
16 இவர்கள் முறையிட்டுக் குறைகூறுகிறவர் கள், தங்கள் இச்சைகளின்படி நடக்கிற வர்கள், இவர்கள் வாய் இறுமாப்பானவை களைப் பேசும்; சுய ஆதாயத்தின் பொருட்டு முகஸ்துதி பேசுவார்கள்.
17 நீங்களோ, பிரியமானவர்களே, நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் அப்போஸ் தலர் முன்சொல்லிய வார்த்தைகளை நினைவு
18 கூருங்கள். தங்கள் இச்சைகளின்படி நடக் கிற தன்மார்க்கமான பரியாசக்காரர் கடை சிக்காலத்தில் தோன்றுவார்கள் என்று உங்
19 களுக்குச் சொல்லி வந்தார்களே. இவர் கள் பிரிவினை யுண்டுபண்ணுகிறவர்கள், ஆத்துமாவுக்குரியவர்கள்; பரம ஆவியில்லா
20 தவர்கள். நீங்களோ, பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்த விசுவாச சத்தியத்தில் ஊன்றி வளர்ந்து பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணிக் கடவுளின் அன்பில் உங்களைக் காத்துக்கொள்ளுங்கள். அதினாலே 21 நித்திய ஜீவனுக்கேதுவாக நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெற எதிர்நோக்கியிருங்கள். அன்றியும், 22 சந்தேகத்திலிருக்கிற சிலருக்கு இரக்கம்பா ராட்டி அக்கினியிலிருந்து பறித்தெடுப்பது போல அவர்களைத் தப்புவித்து இரட்சியுங் கள். மற்றும் சிலருக்கோ பயத்தோடே 23 இரக்கம்பாராட்டி மாமிசத்தால் கறைபட்ட வஸ்திரத்தையும் வெறுத்துவிடுங்கள்.

இடறிவிழாதபடி உங்களைக் காக்கவும் 24 தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மா சற்றவர்களும் மகிழ்ச்சியுள்ளவர்களுமாய் உங்களை நிறுத்தவும் வல்லமையுள்ளவ ருக்கு, ஏக தெய்வமாகிய கடவுளும் நமது இரட்சகருமாகிய அவருக்கே, நமது ஆண் 25 டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் யுகாரம்பத்தின் முன்னும் இப்பொழுதும் எப்பொழுதுமான சகாகாலங்களிலும் மகி மையும் மகத்துவமும் வல்லமையும் அதி காரமும் இருப்பதாக; ஆமேன்.

---

THE REVELATION OF JOHN

# யோவானின் தரிசனம்

1 இயேசுகிறிஸ்துவின் தரிசனம்; சீக்கிரத் தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தமது அடியாருக்குக் காட்டும்படி கடவுள் அவ ருக்கு அருளியது. இவர் தமது தூதன் மூலமாய் அனுப்பித் தமது அடியான் யோவா
2 னுக்குக் குறிப்பித்தார். இவனே கடவுளின் வார்த்தையையும் இயேசுகிறிஸ்துவின் சாட் சியத்தையும் தான் கண்ட யாவற்றையும்
3 சாட்சியாகக் கூறினான். இந்தத் தீர்க்கதரி சன வார்த்தைகளை வாசிக்கிறவனும் கேட் கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவை களைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கி யர்; காலம் சமீபம்.

4 ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும் யோ வான் எழுதுகிறதாவது: இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமானவரிடமிருந் தும் அவர் சிங்காசனத்தின்முன் இருக்கிற ஏழு ஆவிகளிடமிருந்தும் | நம்பத்தக்க 5 சாட்சியும் மரித்தோரிலிருந்து முதற் பிறந் தவரும் பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியு மாகிய இயேசுகிறிஸ்துவினிடமிருந்தும் உங் களுக்குக் கிருபையும் சமாதானமும் உண் டாவதாக. நம்மில் அன்புகூருகிறவராய்த் 6 தமது இரத்தத்தினால் நமது பாவங்களிலி ருந்து அவர் நம்மை விடுதலை செய்ததுமல் லாமல் நம்மை ஒரு ராஜ்யமாக்கித் தமது கடவுளும் பிதாவுமாயிருக்கிறவருக்கு நம்மை ஆசாரியருமாக்கினார். அவருக்கே மகிமை யும் வல்லமையும் யுகாயுகங்களாயிருப்ப தாக; ஆமேன். இதோ, மேகங்களோடே 7 வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவ

ரைக் காண்பார்கள்; காணவே பூமியின் கோத்திரத்தாரெல்லாரும்மாரடித்துப் புலம்பு வார்கள். ஆம், ஆமேன்.

8 இருக்கிறவரும் இருந்தவரும் வருகிற வருமான சர்வவல்ல கடவுளாகிய கர்த்தர்: நானே [1]அல்பா, நானே ஓமேகா என்று 9 திருவுளம்பற்றுகிறார். இயேசுவின் உபத் திரவத்திலும் ஆளுகையிலும் சகிப்பிலும் உங் கள் சகோதரனும் உடன் பங்காளனுமான யோவானுகிய நான், கடவுள் வார்த்தையி னிமித்தமும் இயேசுவின் சாட்சியத்தினி மித்தமும் பத்மு என்னும் தீவில் இருக்கலா 10 னேன். ஆண்டவரின் நாளில் ஆவிக்குட் பட்டுப் பரவசமானேன்.. அப்பொழுது எனக்குப் பின்னுலே எக்காள சத்தம்போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன். 11 அது: நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதி எபேசு, சிமிர்னு, பெர்கமு, தியத்தை ரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா என்னும் ஏழு சபைகளுக்கும் அனுப்பு 12 என்று விளம்பினது. அப்பொழுது என் னோடு பேசின சத்தத்தைப் பார்க்கத் திரும்பி 13 னேன்; திரும்பவே ஏழு பொன்விளக்குத் தண்டுகளையும் அந்த ஏழு தண்டுகளின் மத் தியில் மனுஷகுமாரனுக்கொப்பான ஒரு 14 வரையுங் கண்டேன்; அவர் நிலையங்கி தரித்து மார்பருகே பொற்கச்சை கட்டி யிருந்தார். அவருடைய சிரசும் ரோமமும் வெண்பஞ்சைப்போலவும் உறைந்த மழை யைப்போலவும் வெண்மையாயிருந்தது; 15 அவர் கண்கள் அக்கினிஜ்வாலையைப் போலிருந்தன; அவர் பாதங்கள் உலைக்களத் தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலிருந்தன; அவர் சத்தம் பெருவெள்ள 16 இரைச்சலைப்போலிருந்தது. தமது வல துகரத்தில் ஏழு நட்சத்திரங்களுடையவர்; இரு புறமும் கருக்குள்ள பட்டயம் வெளிப்படும் வாயுடையவர்; வல்லமையோடு பிரகாசிக் கும் சூரியன் போன்ற முகமுடையவர். 17 அவரைக் கண்டபோது செத்தவன்போல் அவர் பாதத்தில் விழுந்தேன். அவரோ தமது வலதுகரத்தை என்மேல் வைத்து: பயப்படாதே, முதலும் இறுதியுமானவர் 18 நான், ஜீவனுள்ளவரும் நான்; மரணத்திற் குள்ளானேன், ஆயினும், இதோ, யுகாயுகங் களுக்கும் ஜீவித்திருக்கிறேன். நான் மர ணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவு 19 கோல்களையுடையவர். நீ கண்டவைகளை எழுது; இருக்கிறவைகளையும் இவைகளுக் குப்பின்பு சம்பவிக்கப்போகிறவைகளையும் எழுது. என் வலதுகரத்தில் நீ கண்ட ஏழு 20 நட்சத்திரங்களின் இரகசியமும் ஏழு பொன் விளக்குத் தண்டுகளும் இன்னவென்று எழுது: அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம்; ஏழு விளக்குத் தண்டுகளும் ஏழு சபைகளாம்.

எபேசு சபையின் தூதனுக்கு எழுது. **2** தமது வலதுகரத்தில் ஏழு நட்சத்திரங் களையுடையவராய் ஏழு பொன்விளக்குத் தண்டுகளின் மத்தியில் நடமாடித் திரிகிறவர் சொல்லுகிறார்: உன் செய்கைகளையும் உன் 2 உழைப்பையும் உன் சகிப்பையும் அறி வேன். நீ பொல்லாதவர்களைப் பொறுக்க மாட்டாய்; அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லு கிறதை நீ பரீட்சித்து அவர்களைப் பொய்ய ரென்று கண்டறிந்தாய். நீ சகிப்புடைய 3 வன்; என் நாமத்தினிமித்தம் வருத்தப்பட் டாய், சோர்ந்துபோகவில்லை; இவைகளை யெல்லாம் அறிவேன். ஆனாலும் உன் 4 பேரில் எனக்கொரு குறையுண்டு: நீ ஆதி யில் கொண்ட அன்பை விட்டுவிட்டாய். ஆகையால், நீ எந்த நிலைமையிலிருந்து 5 விழுந்திருக்கிறுயென்பதை நினைத்து மனந் திரும்பி ஆதியில் செய்தவற்றைச் செய்; இல்லாவிட்டால் நான் உன்னிடம் வந்து நீ மனந்திரும்பாத பட்சத்தில் உன் விளக்குத் தண்டை அதின் இடத்தினின்று பெயர்த்து விடுவேன். நான் வெறுக்கிற நிக்கொ 6 லாய் மதஸ்தரின் கிரியைகளை நீயும் வெறுக் கிறாய், இது உன்னிடத்திலுண்டு. ஆவி 7 யானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்: ஜெயங் கொள்ளுகிறவனுக்கே கடவுளுடைய பர தீசிலிருக்கும் ஜீவவிருட்சத்தில் புசிக்க அரு ளுவேன்.

சிமிர்னு சபையின் தூதனுக்கு எழுது. 8 முதலும் இறுதியுமானவர், மரணத்திற் குள்ளாகிப் பிழைத்தவரே, சொல்லுகிறார்: உன் உபத்திரவத்தை அறிவேன், உன் தரித் 9 திரத்தையும் அறிவேன்—உண்மையிலோ நீ ஐசுவரியமுள்ளவன்—, தங்களை யூத ரென்று சொல்லிக்கொள்ளுகிறவர்களிட மிருந்து வருந்தூஷணத்தையும் அறிவேன். அவர்கள் யூதரல்ல சாத்தானின் சபை. நீ 10 படப்போகிற பாடுகளுக்குப் பயப்பட வேண்டாம். உங்களைப் பரீட்சிக்கும்படி இதோ, பிசாசு உங்களில் சிலரைச் சிறை யில் வைப்பான்; உங்களுக்குப் பத்துநாள்

[1] அல்பாவும் ஓமேகாவும் கிரேக்க பாஷையில் முதலெழுத்தும் கடைசி எழுத்துமாம்.

உபத்திரவமிருக்கும். நீ மரணபரியந்தம்
உண்மையாயிரு, ஜீவகிரீடத்தை உனக்குத்
11 தருவேன். ஆவியானவர் சபைகளுக்குச்
சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்
கடவன்: ஜெயங்கொள்ளுகிறவன் இரண்
டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை.
12 பேர்கமு சபையின் தூதனுக்கு எழுது.
இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை
யுடையவர் சொல்லுகிறார்: நீ வசிக்கும்
13 இடத்தை யறிவேன்; சாத்தான் சிங்காசனம்
இருக்கும் இடமே அது. என் நாமத்தில்
நீ பற்றுதலாயிருக்கிறாய். உங்கள் மத்தி
யில், சாத்தான் வசிக்கும் இடத்தில், கொலை
யுண்ட உண்மையுள்ள என் சாட்சியாகிய
அந்திப்பாவின் நாட்களிலுங்கூட என்
மீதுள்ள விசுவாசத்தை நீ மறுத்து விட்டு
14 விடவில்லை. ஆகிலும் சில காரியங்களில்
உன்மேல் எனக்குக் குறையுண்டு. பாலா
யாமின் போதகத்தில் பற்றுதலாயிருக்கிறவர்
கள் உன்னிடமிருக்கிறார்கள். விக்கிரகங்
களுக்குப் பலியிட்டவைகளைப் புசிப்பதிலும்
வேசித்தனம் பண்ணுவதிலும் இஸ்ரவேலின்
புத்திரர் இடறிவிழும்படி செய்யப் பாலாக்
15 குக்குப் போதித்தவன் இவனே, அப்
படியே நிக்கொலாய்த்தர் உபதேசத்தில்
அதுபோலவே பற்றுதலாயிருக்கிறவர்களும்
16 உன்னிடமிருக்கிறார்கள். ஆகவே, நீ மனந்
திரும்பு; இல்லாவிட்டால் நான் சீக்கிரம்
உன்னிடம் வந்து என் வாயின் பட்டயத்
தால் அவர்களோடே யுத்தம்பண்ணுவேன்.
17 ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிற
தைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்: ஜெயங்
கொள்ளுகிறவனே மறைத்திருக்கும் மன்னா
வில் பங்குபெற அருளுவேன். புதிய நாம
மொன்று எழுதிய வெண்கூழாங்கல்லையும்
அவனுக்குத் தந்தருளுவேன்; அந்த நாமத்
தைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும்
அதையறியான்.
18 தியத்தைரா சபையின் தூதனுக்கு
எழுது.
அக்கினிஜ்வாலைபோன்ற கண்களும்
பிரகாசமான வெண்கலம் போன்ற பாதங்
களுமுள்ள தெய்வகுமாரன் சொல்லுகிறார்:
19 உன் செய்கைகளையும் அன்பையும் விசுவா
சத்தையும் ஊழியத்தையும் சகிப்பையும்
அறிவேன்; நீ முன்பு செய்தவைகளிலும்
20 பின்பு செய்தவைகள் அதிகம். ஆகிலும்
உன்பேரில் எனக்கு ஒரு குறையுண்டு;
இயேசபேலென்னும் ஸ்திரீக்கு நீ இடங்
கொடுக்கிறாய்: அவள் தன்னைத் தீர்க்கதரி
சினியென்று சொல்லிக்கொண்டு என் தாச
ரை வஞ்சித்து வேசித்தனஞ்செய்யவும் வி
கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்க
வும் அவர்களுக்குப் போதிக்கிறாள். மனந் 21
திரும்பும்படியான காலம் அவளுக்குக் கொ
டுத்தேன்; தன் வேசிமார்க்கத்தை விட்டுத்
திரும்ப அவளுக்கு மனதில்லை. இதோ, 22
நான் அவளைக் கட்டில்கிடையாய்க் கிடக்
கச் செய்வேன்; அவளோடு விபசாரஞ் செய்
கிறவர்கள் அவள் கிரியைகளைவிட்டு மனந்
திரும்பாவிட்டால் அவர்களையும் மிகுந்த
உபத்திரவத்துக்கு ஆளாக்குவேன். அவள் 23
பிள்ளைகளையுங் கொல்லவே கொல்லுவேன்.
நினைவுகளையும் இருதயங்களையும் ஆராய்கிற
வர் நானே என்று அப்பொழுது எல்லாச்
சபைகளும் அறிந்துகொள்ளும். அன்றி
யும், உங்களில் ஒவ்வொருவனுக்கும் உங்
கள் செய்கைகளின்படியே பலனளிப்பேன்.
தியத்தைராவிலேயிருக்கிற மற்றவர்களாகிய 24
உங்களுக்கு, அதாவது, இந்த உபதேசத்தை
அங்கீகரியாமலும் அவர்களால் சாத்தானின்
ஆழங்களென்று சொல்லப்படுவதை அறியா
மலுமிருக்கிற உங்களுக்கு, நான் சொல்லு
கிறேன்: உங்கள்மேல் வேறொரு பாரத்தை
புஞ் சுமத்தமாட்டேன். உங்களுக்குள் 25
ளதை நான் வரும்வரைக்கும் பற்றிக்கொண்
டே யிருங்கள். ஜெயங்கொண்டு முடிவு பரி 26
யந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளு
கிறவனெவனோ அவனுக்கு ஜனங்களின்மேல்
அதிகாரங் கொடுப்பேன்; அவர்கள் மண் 27
பாண்டங்கள்போல் நொறுக்கப்படுமாறு
இருப்புக்கோலால் அவர்களை மேய்த்து
நடத்துவான்; நான் என் பிதாவினிட
மிருந்து அதிகாரம் பெற்றுக்கொண்டது
போலாகும். விடிவெள்ளியையும் அவனுக் 28
குக் கொடுப்பேன். ஆவியானவர் சபைக 29
ளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன்
கேட்கக்கடவன்.

சர்தை சபையின் தூதனுக்கு எழுது. **3**
ஏழு நட்சத்திரங்களையும் கடவுளின் ஏழு
ஆவிகளையுமுடையவர் சொல்வதாவது: உன்
செய்கைகளையறிவேன்; உயிருள்ளவனென்
னும் பெயருடையவனெனினும் நீ செத்த
வனே. நீ விழித்திருப்பவனாய்ச் சாகுந்தறு 2
வாயிலிருக்கும் மற்றவைகளை ஸ்திரப்படுத்தி
விடு. உன் செய்கைகள் என் கடவுளுக்கு
முன் பூரணப்பட்டனவாக நான் கண்ட
தில்லை. ஆகையால், நீ பெற்றுக்கொண்ட 3
தும் கேட்டிருந்ததும் எப்படியென்று நினைவு
கூர்ந்து அவற்றில் பற்றுதலாயிருந்து மனந்
திரும்பு. நீ விழித்திராவிட்டால் திருடனைப்
போல் வருவேன்; நான் உன்மேல் வரும்
வேளையை அறியமாட்டாய். ஆனாலும் தங் 4

கள் வஸ்திரங்களைக் கறைப்படுத்தாத சிலர் சர்தையில் உனக்குண்டு; வெண்வஸ்திரந் தரித்து என்னோடு நடமாடுவார்கள்; அவர் 5 கள் பாத்திரர். ஜெயங்கொள்ளுகிறவன் இவ் வாறு வெண்வஸ்திரம் தரித்தவனுவான். ஜீவபுஸ்தகத்திலிருந்து அவன் நாமத்தை நான் எடுத்துப்போடவேமாட்டேன். என் பிதா முன்பாகவும் அவர் தூதர் முன் பாகவும் அவன் நாமத்தை அறிக்கைபண் 6 ணுவேன். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன்.

7 பிலதெல்பியா சபையின் தூதனுக்கு எழுது.

பரிசுத்தரும் சத்தியரும் தாவீதின் திறவு கோலையுடையவரும் எவரும் பூட்டாதபடி திறக்கிறவரும் எவரும் திறவாதபடி பூட்டு கிறவருமானவர் சொல்லுகிறார்: உன் 8 செய்கைகளை யறிவேன்; இதோ, உனக்கு முன்பாகவாசலைத் திறந்துவைத்திருக்கிறேன்; அதை ஒருவனும் பூட்டமுடியாது. உனக் குக் கொஞ்சம் பலமுண்டு, என்வார்த்தை யைக் கைக்கொண்டாய், என் நாமத்தை 9 மறுதலிக்கவில்லை. இதோ, சாத்தானின் சபையில் சிலரைக் கொடுப்பேன்; அவர்கள் தங்களை யூதரென்று சொல்லுகிறார்கள். ஆனால் யூதரல்ல, அவர்கள் சொல்வது பொய். இதோ, அவர்கள் வந்து உன் பாதங்களில் பணியவும் நான் உன்மேல் அன்புகூர்ந்தேனென்பதை அறிந்துகொள்ள 10 வும் செய்வேன். பூமியில் குடியிருக்கிற வர்களைப் பரீட்சிக்கும்படியாகப் பூச்சக்கரத் தின் மேலெங்கும் வரப்போகிற பரீட்சை வேளைக்கு உன்னைத் தப்புவிப்பேன். சகிப் புக்குரிய என் வார்த்தையைக் கைக் கொண்டபடியினால் நானும் உன்னைக் காத் துக்கொள்ளுவேன், சீக்கிரம் வருகிறேன். 11 ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள் ளாதபடி உனக்குள்ளதைப் பற்றிக்கொண் 12 டிரு. ஜெயங்கொள்ளுகிறவனை என் கடவு ளின் ஆலயத்தில் தூணுக்குவேன்; அதி னின்று அவன் ஒருக்காலும் நீங்கவே நீங் கான். என் கடவுளின் நாமத்தையும் என் கடவுளுடைய நகரத்தின் நாமத்தையும்— என் கடவுளிடமிருந்து வானத்தினின்று இறங்குகிறதாகிய புதிய எருசலேமின் நாமத்தையும்—என் புதிய நாமத்தையும் 13 அவன்மீது எழுதுவேன். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள் ளவன் கேட்கக்கடவன்.

14 லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு எழுது.

நம்பத்தக்க மெய்ச்சாட்சியும் கடவுள் சிருஷ்டிப்புக்கு ஆதியுமான ஆமேன் என் பவர் சொல்லுகிறார். உன் செய்கைகளை யறிவேன், நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ 15 குளிராய் அல்லது அனலாயிருந்தால் நல மாம். இப்படி நீ அனலுமின்றிக் குளிரு 16 மின்றி வெதுவெதுப்பாயிருக்கிறதினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப் போடுவேன். நான் ஐசுவரியவான்; ஐசுவ 17 ரியஞ் சேர்த்துக்கொண்டவன், எனக்கு ஒரு குறைவுமில்லையென்று சொல்லுகிறாய்! நீ நிர்ப்பந்தமானவன், பரிதாபமானவன், தரித் திரன், குருடன், நிர்வாணி என்று உனக்குத் தெரியவில்லை. ஆகையால் நீ, ஐசுவரிய 18 வானகும்படி நெருப்பில் புடமிட்ட பொன் னையும் உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றுவண்ணம் உடுத்திக்கொள்ளும்படி வெண்வஸ்திரங்களையும் என்னிடத்தில் வாங்கிக்கொள்ளவும் நீ பார்வையடையும் படி உன் கண்களுக்குக் கலிக்கம்போடவும் உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன். நான் 19 நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஊக்கமாயிருந்து மனந்திரும்பு. இதோ, 20 வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒரு வன் என் சத்தத்தைக் கேட்டுக் கதவைத் திறப்பானுகில் அவனிடம் உள்ளே வரு வேன். நான் அவனோடு போஜனம்பண்ணு வேன், அவன் என்னோடு போஜனம்பண்ணு வான். நான் ஜெயங்கொண்டு என் பிதா 21 வோடு அவர் சிங்காசனத்தில் உட்கார்ந்து போல ஜெயங்கொள்ளுகிறவனும் என்னோடு என் சிங்காசனத்தில் உட்காரும்படி அருள் செய்வேன். ஆவியானவர் சபைகளுக்குச் 22 சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன்.

4 இவைகளுக்குப் பின், தரிசனங்கண் டேன்: இதோ, பரலோகத்தில் திறந்திருந்த ஒரு வாசல். மேலும், நான் முதலில் கேட்ட சத்தம் என்னோடு பேசுகிற எக்காளசத்தம் போன்றது. அது: இங்கே ஏறிவா, இவற் றின்பின் நேரிடவேண்டியவற்றை உனக்குக் காண்பிப்பேன் என்றது. உடனே ஆவிக் 2 குட்பட்டுப் பரவசமானேன். இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைத்திருந் தது, சிங்காசனத்தின்மேல் ஒருவர் வீற்றிருந் தார். வீற்றிருந்தவர் பார்வைக்கு வச்சிரக் 3 கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந் தார். சிங்காசனத்தைச்சுற்றி ஒரு வான வில்லிருந்தது; அது பார்வைக்கு மரகதத் துக்கு ஒப்பாயிருந்தது. அந்தச் சிங்காசனத் 4

தைச்சுற்றி இருபத்துநான்கு சிங்காசனங்க
ளிருந்தன. இருபத்துநான்கு சிங்காசனங்க
ளின்மீதும் இருபத்துநான்கு மூப்பர்
உட்கார்ந்திருந்தார்கள்; இவர்கள் வெண்
வஸ்திரம் தரித்தவர்கள், தலைகளில் பொற்
5 கிரீடம் சூடியவர்கள். சிங்காசனத்திலிருந்து
மின்னல்களும் சத்தங்களும் இடிமுழக்கங்
களும் வெளிப்படுகின்றன. சிங்காசனத்தின்
முன் ஏழு தீவர்த்திகள் எரிந்துகொண்டிருக்
கின்றன; அவைகள் கடவுளின் ஏழு ஆவி
6 கள். அந்தச் சிங்காசனத்தின்முன் பளிங்
குக்கொப்பான கண்ணாடிக் கடல்போன்ற
திருந்தது; சிங்காசனத்தைச் சூழ நாலுபுறத்
தின் மத்தியிலும் நான்கு ஜீவிகளிருந்தன;
அவைகள் முன்புறமும் பின்புறமும் கண்
7 கள் நிறைந்தவை. முதலாம் ஜீவி சிங்கம்
போன்றது, இரண்டாம் ஜீவி இளங்காளை
போன்றது, மூன்றும் ஜீவி மனுஷமுகம்
போன்ற முகமுடையது, நான்காம் ஜீவி
8 பறக்கும் கழுகுபோன்றது. நான்கு ஜீவி
களும் அவ்வாறு சிறகுகளுள்ளவை; சுற்றும்
உட்புறமும் கண்கள் நிறைந்தவை. அவை
கள்:

சர்வவல்ல கடவுளாகிய கர்த்தர்
பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்,
அவர் இருந்தவர், இருக்கிறவர், வருகிற
வர்

என்று இராப்பகல் ஓய்வின்றிச் சொல்லி
9 நிற்கின்றன. சிங்காசனத்தின்மேல் வீற்
றிருந்து யுகாயுகங்களாய் ஜீவிப்பவருக்கு
ஜீவிகள் மகிமையையும் கனத்தையும்
நன்றியையுஞ் செலுத்தும்போதெல்லாம்,
10 இருபத்துநான்கு மூப்பரும் சிங்கா
சனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்குமுன்
சாஷ்டாங்கமாய் விழுந்து யுகாயுகங்களாய்
ஜீவிப்பவரைத் தொழுதுகொண்டு தங்கள்
கிரீடங்களைச் சிங்காசனத்தின் முன் எறிந்து
போட்டு:

11 எங்கள் ஆண்டவரே, கடவுளே,
மகிமையையும் கனத்தையும்
வல்லமையையும் பெறப் பாத்திரர் நீரே.
யாவற்றையும் படைத்தீர்,
அவை இருந்ததற்கும் படைக்கப்பட்ட
தற்கும்
உமது சித்தமே காரணம்
என்றார்கள்.

**5** சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவரின்
வலதுகரத்தில் ஒரு புஸ்தகத்தைக் கண்
டேன், உட்புறமும் பிற்புறமும் எழுதியிருந்
2 தது. அதற்கு ஏழுமுத்திரைகளிடப்பட்டி
ருந்தன. வல்லமையுள்ள ஒருதெய்வதூதனை
யுங் கண்டேன்; அவன் உரத்த சத்தமிட்டு:
புஸ்தகத்தை விரிக்கவும் அதன் முத்திரை
களை உடைக்கவும் பாத்திரன் யார் என்று
கூறினான். வானத்திலாவது பூமியிலாவது 3
பூமியின் கீழாவது புஸ்தகத்தை விரிக்கவும்
அதைப் பார்க்கவுங் கூடியவர் ஒருவரு
மில்லை. புஸ்தகத்தை விரிக்கவும் அதைப் 4
பார்க்கவும் ஒருவரும் பாத்திரராகக் காணப்
படவில்லையே யென்று நான் மிகவும் அழு
தேன். அழவே, மூப்பரில் ஒருவன் என் 5
னைப்பார்த்து: அழாதே, இதோ, தாவீதின்
வேரென்கிற யூதாகோத்திர சிங்கமானவர்
புஸ்தகத்தை விரிக்கவும் அதின் ஏழு முத்
திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்
டாரென்றான். அன்றியும், இதோ, ஒரு 6
ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும் நான்கு
ஜீவிகளுக்கும் மூப்பர்களுக்கும் மத்தி
யிலே நிற்கக்கண்டேன்; அது அடிக்கப்பட்
டிருந்ததுபோற் காணப்பட்டது. அதற்கு
ஏழு கொம்புகளும் ஏழு கண்களு
மிருந்தன; அந்தக் கண்கள் கடவுளின்
ஏழு ஆவிகளாம், அவை பூமி யெங்கும்
அனுப்பப்பட்டவை. அது வந்து சிங்கா 7
சனத்தின்மேல் வீற்றிருந்தவரின் வலது
கரத்திலிருந்து அதை எடுத்தது. அந்தப் 8
புஸ்தகத்தை அது எடுத்தபோது நான்கு
ஜீவிகளும் இருபத்துநான்கு மூப்
பரும் ஒவ்வொருவரும் சுரமண்டலத்தை
யும் பரிசுத்தவான்களின் ஜெபங்களாகிய
தூபவர்க்கங்கள் நிறைந்த பொற்கலசங்க
ளேயு முடையவர்களாய் ஆட்டுக்குட்டியின்
முன் சாஷ்டாங்கமாய் விழுந்து; புதிய 9
பாட்டைப்பாடி:

புஸ்தகத்தை எடுக்கவும் அதின் முத்திரை
களை உடைக்கவும்
தேவரீரே பாத்திரர்.
நீர் கொல்லப்பட்டீர்,
உமது இரத்தத்தினால்
ஒவ்வொரு கோத்திரத்திலும் பாஷை
யிலும் ஜனத்திலும் ஜாதியிலுமிருந்து
கடவுளுக்கென்று மனிதரை மீட்டுக் 10
கொண்டீர்;
அவர்களை நமது கடவுளுக்கு ஒரு ராஜிய
மாக்கி
ஆசாரியருமாக்கினீர்.

அவர்கள் பூமியின்மீது அரசாளுவார்கள்
என்றார்கள். இன்னுங் கண்டேன்: சிங்கா 11
சனம் பிராணிகள் மூப்பர் அவர்களைச்சுற்றி
அநேக தூதரின் சத்தத்தைக் கேட்டேன்;
அவர்கள் கோடி கோடியானவர்கள், ஆயிர
மாயிரமானவர்கள். அவர்களும் மகா சத்த 12
மிட்டு:

அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி
வல்லமை ஜசுவரியம் ஞானம் பலம்
கனம் மகிமை துதி
இவற்றைப் பெறப் பாத்திரமானது என்று
சொல்லிவந்தார்கள்.
13 வானத்திலும் பூமியின்மீதும் பூமியின்
கீழும் சமுத்திரத்தின்மேலுமிருக்கிற சகல
சிருஷ்டியும் அவற்றிலிருக்கிற யாவும்.
சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவருக்கும்
ஆட்டுக்குட்டிக்கும்
துதியும் கனமும் மகிமையும் வல்லமை
யும்
யுகாயுகங்களாயிருப்பதாக
14 என்று சொல்லவுங்கேட்டேன். நான்கு
பிராணிகளும் ஆமென் என்று சொல்லவே,
மூப்பர் சாஷ்டாங்கமாய் விழுந்து தொழுது
கொண்டார்கள்.

**6** ஆட்டுக்குட்டி ஏழு முத்திரைகளில்
ஒன்றை உடைக்கவே; பின்னுங் கண்டேன்:
நான்கு பிராணிகளில் ஒன்று, வா என்று
இடிமுழக்கம்போற் சத்தமிட்டுச் சொல்லக்
2 கேட்டேன். பின்னுங் கண்டேன்: இதோ,
ஒரு வெண்குதிரை! அதின்மேல் ஏறியிருந்த
வர் வில்லைப் பிடித்திருந்தார்; அவருக்கு ஒரு
கிரீடங் கொடுக்கப்பட்டது; அவர் ஜெயிக்
கிறவராக ஜெயிப்பதற்கெனப் புறப்பட்டார்.
3 இரண்டாம் முத்திரையை உடைத்த
போது இரண்டாம் பிராணி: வா என்று
4 சொல்லக்கேட்டேன். அப்பொழுது அக்
கினிநிறமான வேறொரு குதிரை புறப்பட்
டது; அதின்மேல் ஏறியிருந்த அவன் மனி
தர் ஒருவரை யொருவர் கொல்லுமாறு சமா
தானத்தைப் பூமியிலிருந்து எடுத்துவிட
அதிகாரம் பெற்றான்; ஒரு பெரிய பட்டய
மும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது.
5 மூன்றாம் முத்திரையை உடைத்தபோது
மூன்றாம் பிராணி: வா என்று சொல்லக்
கேட்டேன், பின்னுங் கண்டேன்: இதோ
ஒரு கருப்புக்குதிரை; அதின்மேல் ஏறியி
ருந்தவன் ஒரு தராசைத் தன் கையிலே
6 பிடித்திருந்தான். அப்பொழுது நான்கு
பிராணிகளின் மத்தியில் ஒரு குரலோசை
போற்கேட்டது: ஒரு [1]தினாரியத்துக்கு ஒரு
படி கோதுமை, ஒரு தினாரியத்துக்கு மூன்று
படி வாற்கோதுமை; எண்ணெயையும்
திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே என்
றது.
7 நாலாம் முத்திரையை உடைத்தபோது
நாலாம் பிராணி: வா என்று சொல்லுஞ்
சத்தத்தைக் கேட்டேன். 8 பின்னுங் கண்
டேன்: இதோ, மங்கின நிறமான ஒரு குதி
ரை, அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மர
ணம் என்று பெயர்; பாதாளம் அவனோடு
வந்தது. பட்டயத்தினாலும் பஞ்சத்தினாலும்
சாவினாலும் பூமியின் துஷ்ட மிருகங்களி
னாலும் கொல்வதற்குப் பூமியின் காற்பங்
கின்மேல் அவைகளுக்கு அதிகாரங் கொடுக்
கப்பட்டது.
ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது 9
கடவுளின் வார்த்தையினிமித்தமும் தாங்
கள் பற்றியிருந்த சாட்சியத்தினிமித்தமும்
கொல்லப்பட்டவர்களின் ஆத்துமாக்களைப்
பலிபீடத்தின்கீழே கண்டேன். அவர்கள் 10
மிகுந்த சத்தமிட்டு: ஆண்டவரே, பரிசுத்த
ரே, சத்தியரே, எதுவரைக்கும் நியாயந்தீர்க்
காமலும் பூமியில் குடியிருக்கிறவர்களிடத்
தில் எங்கள் இரத்தப்பழியை வாங்காமலு
மிருப்பீரென்று கூப்பிட்டார்கள். அப் 11
பொழுது அவர்களில் ஒவ்வொருவருக்கும்
வெள்ளையங்கி கொடுக்கப்பட்டது; அன்றி
யும், அவர்களைப்போல் கொல்லப்படவேண்
டியவர்களாகிய அவர்கள் உடன் ஊழியர்
சகோதரர் என்கிறவர்களின் தொகை நிறை
வாகுமளவும் இன்னுங் கொஞ்சக்காலம்
இளைப்பாறவேண்டுமென்று அவர்களுக்குச்
சொல்லப்பட்டது.
ஆறாம் முத்திரையை உடைக்கவே 12
பின்னுங் கண்டேன்: பெரிய பூமியதிர்ச்சி
யுண்டாயிற்று. சூரியன் கருப்புக் கம்
பளியைப்போல் கருத்தது; சந்திரன் முழு
தும் இரத்தம்போலாயிற்று. பெருங் காற் 13
றினால் அசையும் அத்திமரத்தின் காய்கள்
உதிர்வது போல வானத்தின் நட்சத்திரங்க
ளும் பூமியிலே விழுந்தன. வானமும் புஸ்த 14
கச் சுருள்போல் சுருண்டு மறைந்தது. ஒவ்
வொரு மலையும் தீவும் நிலைபெயருமாறு
அசைக்கப்பட்டது. பூமியின் ராஜாக்கள் 15
பிரபுக்கள் சேனைத்தலைவர் தனவான்கள்
பலவான்கள் முதலியோரும் அடிமைகள்
சுயாதீனர் யாவரும் குகைகளிலும் மலைப்
பாறைகளிலும் ஒளித்துக்கொண்டு | மலை 16
களையும் பாறைகளையும் பார்த்து: எங்கள்
மேல் விழுந்து மறைத்துக்கொள்ளுங்கள்.
சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய
முகத்திற்கும் ஆட்டுக்குட்டியின் கோப்
திற்கும் எங்களை மறைத்துவிடுங்கள். அவர் 17
கள் கோபாக்கினையின் மகாநாள் வந்து
விட்டதே; யார் நிலைநிற்கக்கூடுமென்கிறார்
கள்.

[1] மத். 18: 28 பார்க்க.

7 இதற்குப்பின் பூமியின் நான்கு கோ
ணங்களிலும நான்கு தெய்வதூதர் நிற்கக்
கண்டேன். அவர்கள் பூமியின் மேலா
வது சமுத்திரத்தின்மேலாவது ஒரு மரத்தின்
மேலாவது காற்றடியாதபடி பூமியின்
நான்கு காற்றுகளையும் பிடித்து வைத்திருக்
2 தார்கள். வேறொரு தூதனையும் கண்
டேன், அவன் ஜீவனுள்ள கடவுளின்
முத்திரையை வைத்துக்கொண்டு சூரியன்
உதிக்கும் திசையினின்று ஏறிவரக் கண்
டேன, பூமியையும் சமுத்திரத்தையும் சே
தப்படுத்த அதிகாரம் பெற்ற அந்த நான்கு
3 தூதரையும் அவன் பார்த்து: நமது கடவு
ளுடைய அடியாரின் நெற்றிகளில் முத்
திரை போட்டுத் தீருமளவும் பூமியையும்
சமுத்திரத்தையும் மரங்களையுஞ் சேதப்படுத்
தாதிருங்களென்று மகாசத்தமிட்டுக் கூப்
4 பிட்டான். முத்திரை போடப்பட்டவர்
களின் தொகையைச் சொல்லக்கேட்டேன்.
இஸ்ரவேல் புத்திரரின் சகல கோத்திரங்க
ளிலும் முத்திரை போடப்பட்டவர்கள்
இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்.
5 யூதா கோத்திரத்தில் முத்திரை போடப்
பட்டவர்கள் பன்னீராயிரம், ரூபன் கோத்
திரத்தில் பன்னீராயிரம், காத் கோத்திரத்தில்
பன்னீராயிரம்,
6 ஆசேர் கோத்திரத்தில் பன்னீராயிரம்,
நப்தலி கோத்திரத்தில் பன்னீராயிரம்,
மனாசே கோத்திரத்தில் பன்னீராயிரம்,
7 சிமியோன் கோத்திரத்தில் பன்னீராயிரம்,
லேவிகோத்திரத்தில் பன்னீராயிரம்,
இசக்கார் கோத்திரத்தில் பன்னீராயிரம்,
8 செபுலோன் கோத்திரத்தில் பன்னீராயிரம்,
யோசேப்பு கோத்திரத்தில் பன்னீராயிரம்,
பென்யமீன் கோத்திரத்தில் பன்னீராயி
ரம்.

9 இவைகளுக்குப்பின் கண்டேன்: இதோ,
ஒருவரும் எண்ணமுடியாத திரள்கூட்டம்.
இவர்கள் சகல ஜாதிகளிலுங் கோத்திரங்களி
லும் ஜனங்களிலும் பாஷைகளிலுமிருந்து
வந்தவர்கள். வெள்ளையங்கியைத் தரித்துக்
கைகளில் குருத்தோலைகளைப் பிடித்துச் சிங்
காசனத்திற்கு முன்னும் ஆட்டுக்குட்டிக்கு
முன்னும் நின்றுகொண்டிருந்தார்கள்.
10 அவர்கள் மகா சத்தமிட்டு:
சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற நமது
கடவுளுக்கும்
ஆட்டுக்குட்டிக்கும் ஜெயமங்களம்
11 என்று ஆர்ப்பரித்தார்கள். ஆர்ப்பரிக்
கவே, தூதர் யாவரும் சிங்காசனத்தையும்
மூப்பர்களையும் நான்கு பிராணிகளையும் சூழ
நின்று சிங்காசனத்தின் முன் சாஷ்டாங்க
மாய் விழுந்து கடவுளைத் தொழுதுகொண்டு:
12 ஆமேன்,
துதி மகிமை ஞானம் நன்றி
கனம் வல்லமை பலம் யாவும்
யுகாயுகங்களாய் எங்கள் கடவுளுக்கே;
ஆமேன்,
என்றார்கள். அப்பொழுது மூப்பரிலொ
13 ருவன் என்னைப் பார்த்து: வெள்ளையங்கி
களைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்
14 கிருந்து வந்தார்களென்று கேட்க | நான்: என் ஐயனே, அது உமக்கே தெரியும் என்
றேன். அப்பொழுது அவன் என்னிடம்:
இவர்களே பெரிதான உபத்திரவத்திலிருந்து
வருகிறவர்கள்; தங்கள் அங்கிகளை ஆட்டுக்
குட்டியின் இரத்தத்தில் துவைத்து வெளுத்
15 தார்கள். ஆனபடியால் இவர்கள் கடவு
ளின் சிங்காசனத்திற்குமுன் இருந்து இர
வும் பகலும் அவருடைய ஆலயத்திலே
அவரை ஆராதிக்கிறார்கள்: சிங்காசனத்தில்
வீற்றிருக்கிறவர் இவர்கள்மேல் கூடாரம்
16 விரித்து நிழலிடுவார். இவர்கள் இனிப்
பசித்து வருந்தார்கள், தாகித்து வருந்தார்
கள்; வெயில் இவர்கள்மேல் படாது,
எந்த உஷ்ணமும் படாது, சிங்காசனத்தின்
மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியே இவர்களை
மேய்த்து ஜீவதண்ணீருள்ள ஊற்றுகளண்
டைக்கு இவர்களை வழிநடத்தும். கடவுள்
தாமே அவர்கள் கண்களிலிருந்து கண்ணீரை
எல்லாம் துடைப்பார் என்றான்.

8 ஏழாம் முத்திரையை உடைத்தபோது
பரலோகத்தில் ஏறக்குறைய அரைமணி நே
2 மளவும் அமைதலுண்டாயிருந்தது. பின்பு
கடவுளுக்குமுன் நிற்கிற ஏழு தூதர்களையும்
கண்டேன். அவர்களுக்கு ஏழு எக்காளங்
கள் கொடுக்கப்பட்டன.

3 வேறொரு தூதனும் வந்து தூபங்காட்
டும் பொற்கலசத்தைப் பிடித்துக்கொண்டு
பலிபீடத்தினண்டையில் நின்றான். சிங்
காசனத்திற்கு முன் இருந்த பொற்பீடத்
தின்மேல் சகல பரிசுத்தவான்களின் ஜெபங்க
ளோடுஞ் செலுத்தும்படி மிகுதியான தூப
வர்க்கம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது.
4 அப்படியே பரிசுத்தவான்களின் ஜெபங்க
ளோடு சேர்ந்த தூபவர்க்கத்தின் புகை
தூதனுடைய கையிலிருந்து கடவுளுக்கு
முன்பாக ஏறும்பிற்று. பின்பு தூதன்
5 தூபகலசத்தை எடுத்து அதில் பலிபீட
நெருப்பையிட்டு நிரப்பிப் பூமியில் கொட்
டினான். கொட்டவே இடிமுழக்கங்களும்
சத்தங்களும் மின்னல்களும் பூமியதிர்ச்சி
யும் உண்டாயின.

6 அப்பொழுது ஏழு எக்காளங்களையுமுடைய ஏழு தூதர்களும் எக்காளமூதத் தங்களை ஆயத்தப்படுத்தினார்கள்.
7 முதலவன் ஊதினான்: இரத்தங்கலந்த கல்மழையும் அக்கினியுமுண்டாகிப் பூமியிலே கொட்டுண்டன; பூமியில் மூன்றிலொரு பங்கு வெந்துபோயிற்று. மரங்களில் மூன்றிலொரு பங்கு வெந்துபோயிற்று; பசும்புல்லெல்லாம் வெந்துபோயிற்று.
8 இரண்டாந் தூதன் ஊதினான்: அக்கினியால் எரிகிற பெரிய மலைபோன்றதொன்று சமுத்திரத்தில் எறியுண்டது; சமுத்திரம்
9 மூன்றிலொருபங்கு இரத்தமாயிற்று. சமுத்திரத்திலிருந்த ஜீவஜெந்துக்கள் மூன்றிலொருபங்கு செத்துப்போயின; மூன்றிலொரு பங்கு கப்பல்களுஞ் சேதமாயின.
10 மூன்றாந் தூதன் ஊதினான்: ஒரு பெரிய நட்சத்திரம் பந்தம்போல் எரிந்து வானத்திலிருந்து விழுந்தது; ஆறுகளில் மூன்றிலொரு பங்கின்மேலும் நீரூற்றுகளின்மே
11 லும் விழுந்தது. அந்த நட்சத்திரத்திற்கு எட்டியென்று பெயர். தண்ணீரில் மூன்றிலொருபங்கு எட்டிக்கசப்பாயிற்று: தண்ணீர் கசந்ததினால் மனுஷரில் அநேகர் செத்தார்கள்.
12 நான்காந் தூதன் ஊதினான்: சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் இவற்றில் மூன்றிலொரு பங்கு அடிபட்டது, அடிபடவே மூன்றிலொரு பங்கு இருளாயிற்று, பகலில் மூன்றிலொரு பங்கு ஒளியற்றுப் போயிற்று; இரவிலும் அப்படியே.
13 பின்னுங் கண்டேன்: நடுவானத்தில் கழுகு ஒன்று பறந்து மிகுந்த சத்தமிட்டதைக் கேட்டேன். மீந்திருக்கும் மூன்று தூதரும் எக்காளங்களை ஊதப்போகிறார்களே! பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ ஆபத்து, ஆபத்து, ஆபத்து என்றது.

**9** ஐந்தாம் தூதன் ஊதினான்: வானத்திலிருந்து பூமியின்மேல் விழுந்துகிடந்த ஒரு நட்சத்திரத்தைக் கண்டேன். பாதாளக்
2 குழியின் திறவுகோல் அதற்குக் கொடுக்கப்பட்டது. அது பாதாளக் குழியைத் திறக்கவே அந்தக் குழியிலிருந்து புகை எழும்பிற்று; அது பெருஞ்சூளையின் புகைபோலிருந்தது. சூரியனும் ஆகாயமும் அந்தக் குழியின் புகையினால் அந்தகாரப்பட்டன.
3 அந்தப் புகையிலிருந்து வெட்டுக்கிளிகள் கிளம்பிப் பூமியின்மேல் வந்தன. அவைகளுக்குப் பூமியின் தேள்களுக்குரிய வல்லமை போன்ற வல்லமை கொடுக்கப்பட்டது. தங்கள் நெற்றிகளில் கடவுளின் 4
முத்திரையில்லாத மனுஷரையேயன்றிப் பூமியின் புல்லையும் பசுமையான எந்தப் பூண்டையும் எந்த மரத்தையும் சேதப்படுத்தக்கூடாதென்று அவைகளுக்குக் கூறப்பட்டது. மேலும், அவர்களைக் கொல்லக் 5
கூடாதெனவும் ஐந்து மாதமளவும் அவர்களை வேதனைப்படுத்தலாமெனவும் அவைகளுக்கு விதிக்கப்பட்டது. அவைகளால் வரும் வேதனை தேள் மனுஷனைக்கொட்டும் வேதனையைப்போலிருக்கும். அந் 6
நாட்களில் மனுஷர் மரணத்தைத் தேடுவார்கள், தேடியும் காணவேமாட்டார்கள்; சாக விரும்புவார்கள், சாவோ அவர்களை விட்டு ஓடிப்போம். அந்த வெட்டுக்கிளி 7
களின் தோற்றம் யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணப்பட்ட குதிரைகளுக்கு ஒப்பாயிருந்தது; அவற்றின் தலைகளின்மேல் பொன் 8
மயமான கிரீடங்கள் போன்றவையிருந்தன; அவைகளின் முகம் மனுஷமுகம்போலிருந்தது. அவைகளின் கூந்தல் ஸ்திரீகளின் கூந்தல்போலிருந்தது; அவற்றின் பற்கள் சிங்கங்களின் பற்கள்போலிருந்தன. அவை
கள் இருப்புக்கவசங்களைப்போல மார்க்கவசங்களுடையன. அவைகளுடைய சிறகுகளின் இரைச்சல் யுத்தத்திற்கு ஓடுகிற அநேக தேர்க்குதிரைகளின் இரைச்சலுக்கு ஒப்பாயிருந்தது. அவைகள் தேள்களைப் 10
போல வால்களையும் கொடுக்குகளையுமுடையன. ஐந்து மாதமளவும் மனுஷரைச் சேதப்படுத்தும் வல்லமை அவைகள் வால்களிலிருந்தது. பாதாளக் குழியின் 11
தூதன் அவற்றுக்கு அரசன்; அவன் பேர் எபிரேயுபாஷையில் [1]அபத்தோன் கிரேக்கு பாஷையில் [2] அபொல்லியோன்.

முதல் ஆபத்து கடந்துபோயிற்று; இவை 12
களுக்குப்பின்பு, இதோ, இன்னும் இரண்டு ஆபத்துகள் வருகின்றன.

ஆறாந்தூதன் ஊதினான்: கடவுளின் முன் 13
னிருந்த பொற்பீடத்தின் நான்கு கொம்புகளிலுமிருந்து வந்த ஒரு சத்தங் கேட்டேன். எக்காளம் பிடித்திருந்த ஆறாந் தூதனுக்கு, 14
ஐபிராத்தென்னும் பெரிய நதியண்டையில் கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதரையும் அவிழ்த்துவிடு என்றுரைத்தது. அப்படியே 15
அந்த நான்கு தூதரும் அவிழ்த்துவிடப்பட்டார்கள்; மூன்றிலொரு பங்கு மனுஷரைக்

1 சங்காரம். 2 சங்காரக்காரன்.

கொல்லும்படி அந்நாழிகை, நாள், மாதம், வருஷத்திற்கென அவர்கள் ஆயத்தமாய் 16 வைக்கப்பட்டிருந்தவர்கள். குதிரைச் சேனையின் தொகை கோடாகோடி; அவை களின் தொகையைச் சொல்லக் கேட்டேன். 17 குதிரைகளையும் அவைகளின்மேல் ஏறியிருந் தவர்களையும் என் தரிசனத்தில் இவ்வாறுகக் கண்டேன்: அவர்கள் அனிந்திருந்தமார்க் கவசங்கள் அக்கினி இந்திரநீலம் கந்தகம் இவற்றின் நிறமுடையவைகள். குதிரைக ளின் தலைகள் சிங்கத்தலைகள் போன்றவை; அவற்றின் வாய்களிலிருந்து அக்கினியும் புகையும் கந்தகமும் வெளிப்பட்டன. 18 அவற்றின் வாய்களிலிருந்து வெளிப்பட்ட அக்கினி 'புகை கந்தகம் என்னும் இம் மூன்று வாதைகளினாலும் மூன்றிலொரு 19 பங்கு மனுஷர் கொல்லப்பட்டார்கள். அந் தக் குதிரைகளின் வல்லமை அவற்றின் வாயிலும் வாலிலுந்தான். அவற்றின் வால் பாம்பையொத்தது. அதற்குத் தலையுண்டு; சேதப்படுத்துகிறது அந்தத்தலையினாலேதான். 20 இவ்வாதைகளால் கொல்லப்படாத மற்ற மனுஷர் தங்கள் கைகளின் கிரியைகளை விட்டு நீங்கும்படி மனந்திரும்பவில்லை. பேய் களையும் பொன் வெள்ளி செம்பு கல் மரம் என்பவற்றால் செய்யப்பட்ட விக்கிரங்களை யும் வணங்காமல் விடவுமில்லை. அந்த விக்கிரங்களோ காணவும் கேட்கவும் நடக்க 21 வும் சக்தியற்றவை. அவர்கள் தங்கள் கொலைபாதகங்கள் மாந்திரியங்கள் வேசி மார்க்கம் களவுகளாகிய இவற்றைவிட்டு மனந்திரும்பவுமில்லை.

**10** பின்பு வல்லமையுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கிவரக் கண் டேன். மேகமே அவனுக்கு ஆடை; அவன் சிரசின்மேல் வானவில்; அவன் முகம் சூரி யன்போன்றது; அவன் கால்கள் அக்கினி 2 ஸ்தம்பங்கள்போன்றன. விரிக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகம் கையில் வைத்திருந்தான். அவன் தன் வலதுபாதத்தைச் சமுத்திரத்தின் மேலும் தன் இடதுபாதத்தைப் பூமியின் 3 மேலும் வைத்தவனாய்ச் | சிங்கம் கெர்ச்சிக் கிறதுபோல மகா சத்தமாய்க் கூப்பிட்டான். அவன் கூப்பிடவே ஏழு இடிகளும் சத்த 4 மிட்டு முழங்கின. அவ்வேழு இடிகளின் சத்தமும் முழங்கினபோது நான் எழுத வேண்டுமென்றிருந்தேன். அப்பொழுதோ வானத்திலிருந்து ஒரு சத்தங்கேட்டேன்: ஏழு இடிகள் உரைத்ததை முத்திரை போட்டுவிடு, எழுதவேண்டாமென்றது. 5 சமுத்திரத்தின்மேலும் பூமியின்மேலும் நிற் கிறதாக நான்கண்ட தூதன் தன் வலதுகை யை வானத்திற்கு நேராக உயர்த்தி | யுகா 6 யுகங்களாய் ஜீவிப்பவரும் வானத்தையும் அதிலுள்ளவற்றையும் பூமியையும் அதி லுள்ளவற்றையும் சமுத்திரத்தையும் அதி லுள்ளவற்றையும்படைத்தவருமானவர்மேல் ஆணையிட்டு: இனித் தாமதமிராது, ஏழாம் 7 தூதனுடைய சத்தத்தின் நாட்களில் அவன் தன் எக்காளத்தை ஊதப்போகையில் கட வுள் தமது அடியாராகிய தீர்க்கதரிசிகளுக்கு நற்செய்தியாகக் கூறியபடியே தெய்வ ரக சியம் நிறைவேறித் தீர்ந்ததாகும் என்றான். வானத்திலிருந்து நான் கேட்ட சத்தம் மறு 8 படியும் என்னோடு பேசி: நீ போய்ச் சமுத் திரத்தின்மேலும் பூமியின்மேலும் நிற்கிற தூத னுடைய கையில் விரித்திருக்கும் சிறு புஸ்த கத்தை வாங்கிக்கொள்ளென்று சொல்ல | நான் தூதனிடம் போய்: அந்தச் சிறு புஸ்த 9 கத்தை எனக்குத் தாருமென்றேன். அதற்கு அவன்: நீ இதை வாங்கித் தின்றுவிடு; இது உன் வயிற்றிலே கசக்கும், உன் வாயிலோ தேனைப்போல் இனிக்கும் என்றான்.

நான் அந்தச் சிறுபுஸ்தகத்தை தூதனின் 10 கையிலிருந்து வாங்கி அதைத் தின்று விட்டேன். என் வாய்க்கு அது தேனைப் போல் இனிப்பாயிருந்தது; நான் அதைத் தின்றபோதோ என் வயிறு கசப்பாயிற்று. அப்போது: நீ மறுபடியும் அநேக ஜனங்க 11 களையும் ஜாதிகளையும் பாஷைக்காரரையும் ராஜாக்களையுங் குறித்துத் தீர்க்கதரிசனஞ் சொல்ல வேண்டுமென்று எனக்கு உரைக் கப்பட்டது.

**11** பின்பு ஊன்றுகோல்போன்ற ஒரு நாணற்கோல் என்னிடம் கொடுக்கப்பட் டது. கொடுக்கப்படவே: நீ எழுந்து கட வுளின் ஆலயத்தையும் பலிபீடத்தையும் அதில் தொழுதுகொள்ளுகிறவர்களையும் அளந்துவிடு; ஆலயத்திற்கு வெளியே இருக் 2 கிற பிராகாரத்தைவிட்டுவிடு, அதை அளக்க வேண்டாம்; அது புறஜாதியாருக்குக் கொடுக் கப்பட்டது. அவர்கள் திருநகரத்தை நாற்பத்திரண்டு மாதமளவும் மிதிப்பார்கள். என் இரண்டு சாட்சிகளுக்கும் அருள்செய் 3 வேன்: அவர்கள் இரட்டுடுத்தி ஆயிரத்திரு நூற்றறுபது நாளளவுந் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்களீ. பூலோகத்தின் ஆண்ட 4 வர்முன் நிற்கிற இரண்டு ஒலிவமரங்களும் இரண்டு விளக்குத்தண்டுகளும் இவர்களே. ஒருவன் அவர்களைச் சேதப்படுத்த விரும்பி 5 னால் அவர்கள் வாயிலிருந்து அக்கினி வந்து அவர்கள் சத்துருக்களைப் பட்சித்துவிடும்.

ஒருவன் அவர்களைச் சேதப்படுத்த விரும்பு
வானாலும் அவன் அப்படியே கொல்லப்பட
6 வேண்டும். அவர்கள் தீர்க்கதரிசனஞ்
சொல்லிவருகிற நாளளவும் மழை பெய்
யாதபடிக்கு வானத்தை யடைக்க அவர்க
ளுக்கு அதிகாரமுண்டு. தண்ணீரை இரத்த
மாக மாற்றவும் தாங்கள் விரும்பும்போதெல்
லாம் பூமியைச் சகலவித வாதைகளாலும்
வாதிக்கவும் அவர்களுக்கு அதிகாரமுண்டு.
7 அவர்கள் தங்கள் சாட்சியத்தைச் சொல்லி
முடிக்கும்போதோ பாதாளக்குழியிலிருந்து
ஏறிவரும் மிருகமானது அவர்களோடு யுத்
தஞ்செய்து அவர்களை ஜெயித்துக் கொன்று
8 போடும். அவர்கள் உடல்கள் மகாநகரத்
தின் விசாலமான வீதியிலே கிடக்கும். அந்த
நகரம் சோதோம் என்றும் எகிப்து என்றும்
உபமானரூபமாய்ச் சொல்லப்படும்; அவர்
கள் ஆண்டவர் சிலுவையில் அறையப்
9 பட்ட இடமும் அது. ஜனங்கள் கோத்திரங்
கள் பாஷைக்காரர் புறஜாதியார் இவர்களி
லுள்ளவர்கள் அவர்கள் உடல்களை மூன்
றரைநாள்வரைக்கும் பார்ப்பார்கள்; அவர்
கள் உடல்களைக் கல்லறைகளில் வைக்க
10 வொட்டார்கள். பூமியில் குடியிருக்கிற
வர்கள் அவர்கள்நிமித்தம் களிகூர்ந்து சந்
தோஷங் கொண்டாடி ஒருவருக்கொருவர்
வரிசைகளை அனுப்புவார்கள். அவ்விரண்டு
தீர்க்கதரிசிகளும் பூமியில் குடியிருக்கிறவர்
11 களை வேதனைப்படுத்தியிருந்தார்களே. அந்த
மூன்றரை நாளைக்குப்பின்பு கடவுளிட
மிருந்து ஒரு ஜீவ ஆவி அவர்களுக்குட்
சென்றது; அவர்கள் காலூன்றி நின்றார்கள்.
அவர்களைப் பார்த்தவர்களை மிகுந்த பயம்
12 பிடித்தது. அவ்விருவரும் வானத்திலிருந்து
ஒரு பெரிய சத்தத்தைக் கேட்டார்கள்: இங்
கே ஏறிவாருங்கள் என்றது. அவர்கள் மேகத்
தில் ஏறி வானத்திற்குப் போனார்கள்; அவர்
கள் சத்துருக்கள் அவர்களைப் பார்த்தார்கள்.
13 அந்நேரத்தில் பூமி மிகவும் அதிர்ந்தது.
நகரத்தில் பத்திலொருபங்கு இடிந்துவிழுந்
தது; மனுஷரில் ஏழாயிரம்பேர் பூமியதிர்ச்சி
யினால் மடிந்தார்கள்; மீதியானவர்கள் பய
மடைந்து வானத்தின் கடவுளுக்கு மகிமை
செலுத்தினார்கள்.
14 இரண்டாம் ஆபத்து கடந்து போயிற்று;
இதோ, மூன்றும் ஆபத்து சீக்கிரம்வருகிறது.
15 ஏழாந்தூதன் ஊதினான்; வானத்தில்
பெரிய சத்தங்கள் உண்டாகி:

உலக அரசாட்சி
நமது ஆண்டவருக்கும் அவர் கிறிஸ்து
வுக்கும கைவசமாயிற்று,
அவர் யுகாயுகங்களாய் அரசாளுவார்

என்றன. அப்பொழுது கடவுளுக்குமுன் 16
தங்கள் சிங்காசனங்கள்மேல், உட்கார்ந்தி
ருந்த இருபத்துநான்கு மூப்பரும் முகங்குப்
புற விழுந்து,

இருக்கிறவரும் இருந்தவருமான 17
சர்வவல்ல கடவுளாகிய கர்த்தாவே,
உமக்கு நன்றி செலுத்துகிறோம்;
தேவரீர் உமது மகா வல்லமையை வகித்
துக்கொண்டு
ராஜ்யபாரம்பண்ணத் தொடங்கியிருக்
கிறீர்

புறஜாதிகள் கோபங்கொண்டார்கள், 18
உமது கோபமும் வெளிப்பட்டது.
மரித்தோரை நியாயந்தீர்க்கிறதற்குக்
காலம் வந்துவிட்டது.
தீர்க்கதரிசிகளாகிய உமது அடியாருக்
கும் பரிசுத்தவான்களுக்கும்
உமது நாமத்தின்மேல் பயபக்தியாயிருக்
கிற சிறியோர் பெரியோருக்கும் பல
னளிக்கிறதற்கும்
பூமியைக் கெடுக்கிறவர்களைக் கெடுக்கிற
தற்குமே
காலம் வந்துவிட்டது

என்று சொல்லிக் கடவுளைத் தொழுது
கொண்டார்கள்.

அப்பொழுது வானத்திலுள்ள கடவுளின் 19
ஆலயம் திறக்கப்பட்டது. அவர் ஆலயத்
தில் அவருடைய உடன்படிக்கைப்பெட்ட
கம் காணப்பட்டது. மின்னல்களும் சத்தங்
களும் இடிமுழக்கங்களும் பூமியதிர்ச்சியும்
பெருங் கல்மழையும் உண்டாயின.

ஒரு பெரிய அடையாளம் வானத்தில் 12
காணப்பட்டது: அது சூரியனையணிந்த ஒரு
ஸ்திரீ. அவள் பாதங்களின்கீழ் சந்திரன்,
அவள் சிரசின்மேல் பன்னிரண்டு நட்சத்தி 2
ரங்களுள்ள கிரீடம்; அவள் கர்ப்பவதி, பிர
சவவேதனையடைந்து பேறுகாலவருத்தத் 3
தால் அலறினாள். வேறொரு அடையாளமு
மும் வானத்தில் காணப்பட்டது. இதோ,
அக்கினிமயமான பெரிய வலுசர்ப்பம்! ஏழு
தலைகளும் பத்துக்கொம்புகளும் தலைகளின் 4
மேல் ஏழு முடிகளுமுடையது. அதின்வால்
வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொரு
பங்கை இழுத்து அவைகளை பூமியில் விழத்
தள்ளிற்று; பிரசவிக்கப்போகிற ஸ்திரீயின்
முன் அந்த வலுசர்ப்பம் நின்றது. பிரசவித்த
வுடனே அவள் பிள்ளையை விழுங்கிவிட
வேண்டுமென்றிருந்தது. அவளுக்குப்
பிறந்தது, ஆண்பிள்ளை, அந்த ஆண்
சகல ஜாதிகளையும் இருப்புக்
கோலால் மேய்த்து நடத்தும். அவள் பிள்

லிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்தி
னிடத்திற்கும் விரைவில் எடுத்துக்கொள்ளப்
6 பட்டது. ஸ்திரீயோ வனாந்தரத்திற்கு ஓடிவிட்
டாள்; ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும்
அவளைப் போஷித்துக் காப்பாற்றக் கடவுள்
ஆயத்தஞ்செய்திருந்த இடம் அங்கே அவ
ளுக்கிருந்தது.
7 மேலும் வானத்திலே யுத்தமுண்டா
யிற்று; மிகாவேலும் அவன் தூதரும் வலு
சர்ப்பத்தோடு யுத்தம் பண்ணப்போகவே
வலுசர்ப்பமும் அதன் தூதரும் யுத்தம்
பண்ணினார்கள். இவர்கள் மேற்கொள்ள
8 வில்லை. வானத்தில் இவர்களுக்கிருந்த இட
9 மும் காணப்படாமற்போயிற்று. பெரிய
வலுசர்ப்பம் எறியப்பட்டது; அது பழைய
பாம்பு. அது பிசாசு என்றும் சாத்தான்
என்றும் சொல்லப்படுவது. அது உலக
மனிதரையும் வஞ்சிப்பது. அதுவே பூமி
யில் எறியப்பட்டது; அதனோடே அதன்
10 தூதரும் எறியப்பட்டார்கள். அப்பொழுது
வானத்தில் ஒரு பெரிய சத்தங்கேட்டேன்:

இப்பொழுது நமது தேவனுடைய இரட்சணியமும் வல்லமையும் ராஜ்யமும்
அவருடைய கிறிஸ்துவுக்கு அதிகாரமும் உண்டாயின,
நமது சகோதரர்மேல் குற்றஞ்சாட்டினவன் எறியப்பட்டான்;
இவன் தேவனுடைய சந்நிதானத்தில் நமது சகோதரர்மேல்
இரவும் பகலும் குற்றஞ்சுமத்திக்கொண்டிருந்தான்.
11 மரணம் வருவதாயிருந்தாலும்
உயிரைப் பொருட்படுத்தாதவர்களாய்
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தைக் கொண்டும்
தங்கள் சாட்சிய வசனத்தைக்கொண்டும்
அவனை ஜெயித்தார்கள்.
12 வானங்களே, அவற்றில் தங்குபவர்களே,
இதினிமித்தம் களிகூருங்கள்.
பூமிக்கும் சமுத்திரத்திற்கும் ஐயோ
ஆபத்து!
பிசாசு உங்களிடம் இறங்கிவிட்டான்.
தனக்குக் கொஞ்சக்காலந்தான் உண்
டென்றறிந்து
மிகுந்த கோபங்கொண்டான் என்றது.
13 வலுசர்ப்பம் தான் பூமியில் எறியப்
பட்டதைக் கண்டு ஆண்பிள்ளை பெற்ற
14 ஸ்திரீயைப் பிடிக்கத்தொடர்ந்தது. அந்த
ஸ்திரீக்கோ வனாந்தரத்திலுள்ள தன் இடத்
துக்குப் பறந்துபோகும்படி பெருங் கழு
ழு இரண்டு சிறகுகள் கொடுக்கப்பட்
பே
15 சமுத்
அங்கே அவள் அந்தப் பாம்புக்கு
விலகியிருக்க ஒரு காலமும் காலங்களும்
அரைக்காலமும் பராமரிக்கப்படுவாள்.
அப்பொழுது அந்த ஸ்திரீயை வெள்ளம் 15
அடித்துக்கொண்டு போகும்படி பாம்பு தன்
வாயிலிருந்து நதிபோன்ற வெள்ளத்தை
அவள் பின்னே ஊற்றிவிட்டது. பூமியோ 16
ஸ்திரீக்கு உதவியாக வந்து தன் வாயைத்
திறந்து வலுசர்ப்பம் வாயிலிருந்து ஊற்றின
வெள்ளத்தை உறிஞ்சிவிட்டது. அப்பொ 17
ழுது வலுசர்ப்பம் ஸ்திரீயின்மேல் கோபங்
கொண்டு அவள் சந்ததியாரில் மீதியானவர்க
ளோடு யுத்தம்பண்ணப்போயிற்று. இவர்
கள் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்
ளுகிறவர்களும் இயேசுவின் சாட்சியத்தை
யுடையவர்களுமாம். அது கடற்கரை மண 18
லின்மேல் நின்றது.

**13** சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம்
எழும்பிவரக்கண்டேன்; அதற்குப் பத்துக்
கொம்புகளும் ஏழு தலைகளுமிருந்தன,
அதின் கொம்புகள்மேல் பத்து முடிகளும்
அதின் தலைகள்மேல் தூஷண நாமங்களு
மிருந்தன. நான் கண்ட மிருகம் சிங்கி 2
யைப்போலிருந்தது; அதின் கால்கள் கரடி
யின் கால்களைப்போலவும் அதின் வாய் சிங்
கத்தின் வாயைப்போலவுமிருந்தன; வலு
சர்ப்பம் தன் வல்லமையையும் தன் சிங்கா
சனத்தையும் பெரிய அதிகாரத்தையும்
அதற்குக் கொடுத்தது. அதின் தலைகளி 3
லொன்று மரணகாயமான அடிபட்டிருக்கக்
கண்டேன். அந்த மரணகாயமோ ஆறி
விட்டது. உலகமுழுதுமே ஆச்சரியத்தோடு
அம்மிருகத்தின் பின் சென்றது. மிருகத் 4
திற்கு அதிகாரத்தைக் கொடுத்ததினிமித்தம்
வலுசர்ப்பத்தை வணங்கினார்கள். மிருகத்
திற்கு ஒப்பானவன் யார்? அதினோடு யுத்
தம்பண்ண வல்லவன் யார் என்று சொல்லி
மிருகத்தையும் வணங்கினார்கள். பெரு 5
மையானவைகளையும் தூஷணங்களையும்
பேசும் வாய் அதற்குக் கொடுக்கப்பட்டது;
அல்லாமலும், நாற்பத்திரண்டு மாதமளவும்
செயல்புரிய அதற்கு அதிகாரங் கொடுக்கப்
பட்டது. அது கடவுளுக்கு விரோதமாய்த் 6
தூஷணங்களைச் சொல்லவும் அவர் நாமத்
தையும் அவர் கூடாரத்தையும், அதாவது,
பரலோகக் கூடாரத்திலிருக்கிறவர்களையும்,
தூஷிக்கவும் தன் வாயைத் திறந்தது.
மேலும், பரிசுத்தவான்களோடு யுத்தம் 7
பண்ணி அவர்களை ஜெயிக்க இடம்பெற்றது
மல்லாமல் சகல கோத்திரங்கள் ஜனங்கள்
பாஷைக்காரர் ஜாதிகள்மேலும் அதற்கு
அதிகாரங் கொடுக்கப்பட்டது. பூமியில் 8

குடியிருக்கிறவர்கள் யாவரும், உலகத்
தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்
டியின் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டி
ராதவர்கள் எவர்களோ அவர்களே அதை
9 வணங்குவார்கள். ஒருவனுக்குக் காதிருக்
10 தால் அவன் கேட்கக்கடவன். ஒருவன்
சிறையிருப்புக்குரியவனுனால் சிறைப்
பட்டே போவான்; ஒருவன் பட்டயத்தினால்
கொல்லுவானுனால் அவன் பட்டயத்தினாலே
கொல்லப்படவேண்டும். பரிசுத்தவான்க
ளின் சகிப்பும் விசுவாசமும் இதிலேதான்.
11 பின்பு வேறொரு மிருகம் பூமியிலிருந்து
எழும்பிவரக் கண்டேன். ஆட்டுக்குட்டி
யைப்போல் அதற்கு இரண்டு கொம்புகளி
12 ருந்தன. வலுசர்ப்பத்தைப்போல் பேசினது.
முதல் மிருகத்தின் அதிகாரமுழுவதையும்
அதின்முன்பாகச் செலுத்துகிறது. மரண
காயம் ஆறிச் சொஸ்தமடைந்த முதல் மிரு
கத்தைப் பூமியும் அதின் குடிகளும் வணங்
13 கும்படி செய்கிறது. அன்றியும், அது பெ
ரிய அடையாளங்களைச் செய்கிறது. மனு
ஷர் காண வானத்திலிருந்து பூமியின்மேல்
14 அக்கினி இறங்கவும் செய்கிறது. பட்ட
யத்தினால் காயப்பட்டும் பிழைத்திருந்த மிரு
கத்திற்கு ஒப்பான ஒரு சொரூபம் பண்ண
வேண்டுமென்று பூமியில் குடியிருக்கிறவர்
களுக்குச் சொல்லி மிருகத்தின்முன் செய்
யும்படி தனக்கு அளிக்கப்பட்ட அடையா
ளங்களைக்கொண்டு பூமியில் குடியிருக்கிற
15 வர்களை வஞ்சிக்கிறது. மிருகத்தின் சொரூ
பத்திற்கு உயிர்கொடுக்கும்படி அதற்கு
அளிக்கப்பட்டது. அதினால் அம்மிருகத்
தின் சொரூபம் பேசவும் மிருகத்தின் சொ
ரூபத்தை வணங்காத எவரையுங் கொல்
16 லும்படி செய்யவுமாயிற்று. சிறியோர் பெரி
யோர் தனவந்தர் தரித்திரர் சுயாதீனர் அடி
மைகள் இவர்கள் யாவரும் தங்கள் தங்கள்
வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு
முத்திரையைப் பெறும்படி செய்கிறது,
17 அதைப் பெற்றுக்கொண்டாலன்றி ஒருவன்
கொள்ளவும் விற்கவும் முடியாமற் போகும்
படியும் செய்கிறது. இந்த முத்திரை அந்த
மிருகத்தின் நாமம், அல்லது அதின் நாமத்
18 தின் இலக்கமேயாம். இங்கேதான் ஞானம்;
விவேகமுள்ளவன் மிருகத்தின் இலக்கத்
தைக் கணித்துப் பார்ப்பானுக. அது ஒரு
மனிதனின் இலக்கம்; அவன் இலக்கம்
அறுநூற்றறுபத்தாறு.

**14** பின்னும் கண்டேன்: இதோ, சீயோன்
மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவர் நின்று
கொண்டிருந்தார். அவரோடு இலட்சத்து
நாற்பத்து நாலாயிரம்பேர் இருந்தார்கள்.
இவர்கள் நெற்றிகளில் அவர் நாமமும்
அவர் பிதாவின் நாமமும் எழுதப்பட்டிருந்
தன. வானத்திலிருந்து ஒரு சத்தங் கேட் 2
டேன்; அது அநேக தண்ணீர்களின் இரைச்
சலையும் பலத்த இடிமுழக்கத்தையும்
போன்றது. நான் கேட்ட சத்தம் சுரமண்
டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை
வாசிக்கிற ஓசையைப் போலிருந்தது. அவர் 3
கள் சிங்காசனத்திற்கு முன்பாகவும் நான்கு
பிராணிகளுக்கும் மூப்பர்களுக்கு முன்பாக
வும் புதுப்பாட்டைப் பாடினார்கள்; பூமியி
லிருந்து கிரயத்துக்குக் கொள்ளப்பட்ட
இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேரையல்
லாமல் வேறொருவரும் அந்தப் பாட்டைக்
கற்றுக்கொள்ள முடியாதிருந்தது. இவர் 4
கள் ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தா
தவர்கள்; இவர்கள் விரக்தரே. ஆட்டுக்குட்
டியானவர் போகுமிடமெல்லாம் அவருக்
குப் பின் செல்லுகிறவர்கள். கடவுளுக்கும்
ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக
மனுஷரிலிருந்து கொள்ளப்பட்டார்கள்.
இவர்கள் வாயிலே பொய் காணப்பட்ட 5
தில்லை: இவர்கள் மாசற்றவர்கள்.

பின்பு வேறொரு தூதன் நடுவானத்தில் 6
பறக்கக் கண்டேன்; அவன் பூமியில் குடி
யிருக்கிறவர்களுக்கு, சாதிகள் கோத்திரத்
தார் பாஷைக்காரர் ஜனங்கள் யாவருக்கும்,
அறிவிக்கவேண்டிய நித்திய சுவிசேஷத்தை
யுடையவன். அவன் மிகுந்த சத்தமிட்டு: 7
கடவுளுக்குப் பயந்து அவரை மகிமைப்
படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புச்செய்
யும் வேளை வந்துவிட்டது. வானத்தையும்
பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளை
யும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்
ளுங்களென்று கூறினான்.

பின்னும் இரண்டாந் தூதன் ஒருவன் 8
பின்சென்று: விழுந்தது! மகா பாபிலோன்
விழுந்தது! தன் வேசித்தனமாகிய உக்கிர
மதுவைச் சகல சாதிகளுக்குங் குடிக்கக்
கொடுத்தாளே என்றான்.

பின்னும் மூன்றாந் தூதன் ஒருவன் அவர் 9
களுக்குப் பின்சென்று மிகுந்த சத்தமிட்டு:
ஒருவன் மிருகத்தையும் அதின் சொரூபத்
தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது
தன் கையிலாவது அதின் முத்திரையைப்
பெற்றுக்கொள்ளுவானுனால் | அவன் கட 10
வுளின் உக்கிரமதுவைக் குடிப்பான்; அது
கடவுளின் கோபாக்கினைப் பாத்திரத்தில்
கலப்பில்லாமல் கலந்து வைக்கப்பட்டது.
அதைக்குடிக்கிறவன் பரிசுத்த தூதர்கள்
முன்னும் ஆட்டுக்குட்டியானவர் முன்னும்

அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்
11 கப்படுவான். அவர்கள் வாதையின் புகை
யுகாயுகங்களாய் எழும்பும்; மிருகத்தையும்
அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்
களுக்கும் அதினுடைய நாமத்தின் முத்தி
ரையைப் பெற்றுக்கொள்ளுகிற எவனுக்
கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது.
12 பரிசுத்தவான்களின் சகிப்பு இதிலேதான்.
அவர்கள் கடவுளின் கற்பனைகளையும்
இயேசுவைப்பற்றும் விசுவாசத்தையும் காத்
துக்கொள்ளுகிறவர்களென்று கூறினான்.

13 பின்பு வானத்திலிருந்து ஒரு சத்தங்
கேட்டேன்; அது: ஆண்டவருக்குள் சாகிற
மரித்தோர் இதுமுதல் பாக்கியர் என்றெழுது,
ஆம், அவர்கள் தங்கள் உழைப்பினின்று
இளைப்பாறுவார்கள், அவர்கள் செய்கை
கள் அவர்களோடு கூடப்போகுமென்று
ஆவியானவரும் சொல்லுகிறார் என்றது.

14 பின்னுங் கண்டேன்: இதோ, வெண்மை
யான மேகம்! அந்த மேகத்தின்மேல் மனுஷ
குமாரனுக்கொப்பான ஒருவர் உட்கார்ந்
திருந்தார்; அவர் சிரசின்மேல் பொற்கிரீடம்;
15 அவர் கையில் கருக்குள்ள அரிவாள். அப்
பொழுது வேறொரு தூதன் தெய்வாலயத்தி
லிருந்து வெளிப்பட்டான். அவன் மேகத்
தின்மேல் உட்கார்ந்திருந்தவரைப் பார்த்து
மிகுந்த சத்தமிட்டு: உமது அரிவாளை நீட்டி
அறுத்துவிடும்; அறுக்கிறதற்குக் காலம் வந்
தது; பூமியின் விளைச்சல் முற்றிவிட்டது
16 என்றான்; அப்பொழுது மேகத்தின்மேல்
உட்கார்ந்தவர் தமது அரிவாளைப் பூமியின்
மேல் போட்டார்; பூமி அறுவடையாயிற்று.
17 வேறொரு தூதனும் வானத்திலுள்ள
தெய்வாலயத்திலிருந்து வெளிப்பட்டான்,
அவனிடமும் கருக்குள்ள அரிவாள் இருந்
18 தது. வேறொரு தூதனும் பலிபீடத்திலி
ருந்து வெளிப்பட்டான், இவன் அக்கினி
மேல் அதிகாரமுடையவன். இவன்
கருக்குள்ள அரிவாளையுடையவனைப்
பார்த்து மிகுந்த சத்தமிட்டு: கருக்குள்ள
உமது அரிவாளை நீட்டிப் பூமியின் திராட்
சைக் குலைகளை அறுத்துவிடும். அதின் பழங்
கள் முழுதும் பழுத்துவிட்டன என்று கூப்
19 பிட்டுச் சொன்னான். அப்பொழுது அந்தத்
தூதன் தன் அரிவாளைப் பூமியின்மேல்
போட்டு பூமியின் திராட்சையை அறுத்துக்
கடவுளுடைய கோபாக்கினையின் பெரிய
20 ஆலையிலிட்டான். நகரத்திற்கு வெளியே
ஆலை மிதிக்கப்பட்டது; அந்த ஆலையி
லிருந்து இரு நூறுமைல் தூரமளவும்
குதிரைகளின் கடிவாள உயரமட்டும் இரத்தம்
பெருகினது.

15 பின்பு மற்றுமோர் அடையாளத்தை
வானத்தில் கண்டேன், அது பெரியது,
ஆச்சரியகரமானது; ஏழு வாதைகளை
யுடைய ஏழு தூதரைக் கண்டேன். இவை
யே கடைசி வாதைகள், இவற்றோடு கட
வுளின் கோபாக்கினை முற்றுப்பெறும்.

2 அன்றியும், அக்கினிகலந்த கண்ணாடிக்
கடல்போன்றதொன்றைக் கண்டேன்.
மிருகத்தையும் அதின் சொரூபத்தையும்
அதின் நாம இலக்கத்தையும் ஜெயித்துத்
தப்பினவர்கள் அந்தக் கண்ணாடிக்கட
லருகே நின்றுகொண்டிருந்தார்கள். இவர்
கள் தெய்வ சுரமண்டலங்களைப் பிடித்தவர்
3 கள். இவர்கள் கடவுளின் அடியான்
மோசேயின் பாடலையும் ஆட்டுக்குட்டியின்
பாடலையும்பாடி:

சர்வவல்ல கடவுளாகிய கர்த்தாவே,
தேவரீரின் செயல்கள் மகத்துவமான
வை; ஆச்சரியகரமானவை.
ஜனங்களின் ராஜாவே,
உமது வழிகள் நியாயமானவை, உண்
மையானவை.

4 ஆண்டவரே,
உமக்குப் பயப்படாமலிருப்பவர் யார்?
உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலி
ருப்பவர் யார்?
தேவரீர் ஒருவரே பக்திக்குப் பாத்திரர்.
சகல ஜாதிகளும் வருவார்கள், உமது
முன் பணிவார்கள்.
உமது நீதியாயங்கள் பகிரங்கமாயின
என்றார்கள்.

5 இவற்றின்பின்னும் கண்டேன்: இதோ,
வானத்தில் சாட்சியக்கூடாரத்தின் ஆலயம்
திறந்தது. அந்த ஆலயத்திலிருந்து ஏழு
6 வாதைகளையுடைய அவ்வேழு தூதரும்
வெளிப்பட்டார்கள். சுத்தமும் பிரகாசமு
மான வஸ்திரந் தரித்தவர்கள்; மார்பில்
பொற்கச்சை கட்டினவர்கள். அந்த நான்கு
7 பிராணிகளில் ஒன்று யுகாயுகங்களாய் ஜீவிக்
கிற கடவுளின் கோபாக்கினை நிறைந்த ஏழு
பொற்கலசங்களை அந்த ஏழு தூதர்களுக்
குங் கொடுத்தது. அப்பொழுது கட
8 வுளின் மகிமை வல்லமை இவற்றினாலுண்
டான புகை தெய்வாலயத்தில் நிறைந்தது;
ஏழு தூதரின் ஏழுவாதைகளும் நிறை
வேறித் திருமளவும் எவரும் தெய்வாலயத்
திற்குள் பிரவேசிக்க முடியாமற்போயிற்று.

16 அப்பொழுது தெய்வாலயத்திலிருந்து
ஒரு பெருஞ் சத்தங் கேட்டேன்; அது: நீங்
கள் போய்க் கடவுளின் கோபாக்கினை
நிறைந்த ஏழுகலசங்களையும் பூமியில் ஊற்

ராஜஸ்திரீயாய் வீற்றிருக்கிறேன், நான் கைம்
பெண்ணல்ல, நான் துக்கத்தைக் காண்பதே
யில்லையென்று அவள் தன் இருதயத்தில்
8 சொல்லுகிறாளே. இதினிமித்தம் சாவு
துக்கம் பஞ்சமாகிய வாதைகள் அவளுக்கு
ஒரேநாளில் வரும்; அவள் அக்கினியினால்
சுட்டெரிக்கப்படுவாள்; அவளை நியாயந்
தீர்க்கும் கடவுளாகிய ஆண்டவர் வல்லமை
9 யுள்ளவர். அவளோடே வேசித்தனஞ்செய்து
சுகபோகமாய் வாழ்ந்த பூமியின் ராஜாக்கள்
அவள் வேகிறதினாலுண்டான புகையைப்
பார்த்துப்பார்த்து அவளுக்காக அழுது
10 மாரடிப்பார்கள். அவள் வாதையைக்
கண்டு பயந்து தூரத்திலே நின்று: ஐயை
யோ! பாபிலோன் மகா நகரமே! பலமான
பட்டணமே! ஒரே நாழிகையில் உனக்குத்
11 தீர்ப்பு வந்துவிட்டதே என்பார்கள். பூமி
யின் வர்த்தகரும் தங்கள் சரக்குகளை இனிக்
கொள்வாரில்லாதபடியால் அவளுக்காக
அழுது துக்கங்கொண்டாடுவார்கள். அவர்
கள் சரக்குகள்: பொன்வெள்ளி இரத்தினம்
முத்து சிறந்த வஸ்திரம் இரத்தாம்பரம் பட்டு
சிவப்பாடை சகலவித வாசனைக்கட்டை
12 கள் | தந்தத்தினால் செய்த சகலவித சாமான்
கள், அரிய மரம் செம்பு இரும்பு வெள்ளைக்
கல் இவற்றால் செய்த சகலவித சாமான்
13 கள், இலவங்கம் ஓமம் தூபவர்க்கம் பரி
மள தைலம் சாம்பிராணி திராட்சரசம்
எண்ணெய் மெல்லியமா கோதுமை ஆடு
மாடுகள் குதிரைகள் இரதங்கள் அடிமை
கள் மனுஷருடைய ஆத்துமாக்கள் முத
14 லியவைகளே. உன் ஆத்துமா இச்சித்த
பழவர்க்கங்கள் உன்னைவிட்டு நீங்கிப்
போயின. சகல இன்பங்களும் ஆடம்பரங்
களும் உன்னை விட்டொழிந்துபோயின;
அவைகள் இனிக் காணப்படுவதேயில்லை.
15 இவைகளைக்கொண்டு வர்த்தகஞ்செய்து அவ
ளால் தனவந்தரானவர்கள் அவள் வாதை
யைக்கண்டு பயந்து தூரத்திலே நின்று
16 அழுது துக்கங்கொண்டாடி: ஐயையோ
மகாநகரமே! சிறந்த வஸ்திரம் இரத்தாம்பரம்
சிவப்பாடை இவற்றைத் தரித்துப் பொன்
னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்
களினாலும் சிங்காரிக்கப்பட்டிருந்தவளே!
17 ஒரேநாழிகையில் இவ்வளவு ஐசுவரியமும்
பாழாய்ப்போயிற்றே என்று சொல்லுவார்
கள். மாலுமிகள் யாவரும் எங்கேயாகி
லும் கப்பல் யாத்திரை செய்கிறவர்கள்
யாவரும் கப்பலாட்களும் சமுத்திரத்தில்
தொழில்செய்து ஜீவிக்கிற யாவரும் தூரத்
18 திலே நின்று |, அவள் வேகிறதினால் உண்
டாகும் புகையைக் கண்டு: இந்த மகா நக
ரத்திற்கு நிகரானது எது என்று சத்தமிட்
டார்கள். அவர்கள் தங்கள் தலைகள்மேல் 19
புழுதியைப் போட்டுக்கொண்டு அழுது துக்
கங் கொண்டாடி: ஐயையோ, மகாநக
மே: சமுத்திரத்திலே கப்பல்களையுடைய அனை
வரும் இவள் அருஞ் செல்வத்தைக்
கொண்டு இவளால் தனவந்தராளார்கள்.
ஒரு நாழிகையிலே இவள் பாழாய்ப்போ
னாளே என்று சத்தமிட்டார்கள். பரலோ 2
கமே, பரிசுத்தவான்களே, அப்போஸ்தலர்
களே, தீர்க்கதரிசிகளே, அவள் நிமித்தம்
களிகூருங்கள். உங்கள் நிமித்தம் கடவுள்
அவளிடம் பழிவாங்கினாரென்று உரைத்தது.

அப்பொழுது வல்லமையுள்ள தூதனொரு 2
வன் பெரிய திரிகைக்கல்லை யொத்த ஒரு
கல்லை எடுத்துச் சமுத்திரத்தில் எறிந்து,
இப்படியே பாபிலோன் மகாநகரம் வேக
மாய் எறியப்படும்; இனி அது காணப்படு
வதேயில்லை. சுரமண்டலக்காரர் பாடகர் 2
காகுரக்காரர் எக்காளம் ஊதுவோர் இவர்க
ளுடைய சத்தம் இனி உன்னிடங் கேட்
கப்படுவதேயில்லை; எந்தத் தொழிலையும்
செய்யுந் தொழிலாளி எவனும் இனி உன்
னிடங் காணப்படுவதேயில்லை; திரிகைய
ரைக்குஞ் சத்தம் இனி உன்னிடங் கேட்
கப்படுவதேயில்லை. விளக்கு வெளிச்சம் 2
இனி உன்னிடம் பிரகாசிப்பதேயில்லை.
மணவாளன் மணவாட்டிகளின் குரலோசை
உன்னிடங் கேட்கப்படுவதேயில்லை. ஏனெ
னில், உன்மாந்திரியத்தால் எல்லா ஜாதிகளும்
வஞ்சிக்கப்பட்டபடியால் உன் வர்த்தகர்
பூமியின் அதிகாரிகளானார்கள். அதுமாத் 2
திரமேயன்றித் தீர்க்கதரிசிகள் பரிசுத்தவான்
கள் இவர்களுடைய இரத்தமும் பூமியில்
கொல்லப்பட்ட அனைவரின் இரத்தமும்
அவளிடங் காணப்பட்டதென்று விளம்
பினான்.

இவற்றின்பின் பரலோகத்தில் திரளான 19
ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரம்போன்
றதைக் கேட்டேன். அவர்கள்:
அல்லேலூயா!
ஜெயம், மகிமை, வல்லமை
நமது கடவுளுக்கே உரியன.
அவர் நியாயத்தீர்ப்புகள் உண்மையான 2
வை, நீதியானவை,
தன் வேசித்தனத்தினால் பூமியைக் கெடுத்த
மகாவேசியை அவர் நியாயந்தீர்த்தார்.
தமது அடியாரின் இரத்தத்திற்காக
அவளிடம் பழிவாங்கினார்
என்றார்கள். மறுபடியும் அவர்கள்:
அல்லேலூயா!

அவள் புகை யுகாயுகங்களாய் எழும்பு
கிறது
14 என்றார்கள். இருபத்துநான்கு மூப்பரும்
நான்கு பிராணிகளும் சாஷ்டாங்கமாய்
விழுந்து சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்
கடவுளை வணங்கி: ஆமென், அல்லேலூயா
5 என்றார்கள். சிங்காசனத்திலிருந்து ஒரு
சத்தம் பிறந்தது:
நமது கடவுளின் அடியாரே,
அவருக்குப் பயப்படுகிறவர்களே,
சிறியோர் பெரியோரே,
நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள்
6 என்றது. பின்னும் ஒரு சத்தங்கேட்டேன்.
அது பெரிய ஜலத்திரளின் ஆரவாரம்போல
வும் அநேக தண்ணீர்களின் இரைச்சல்
போலவும் பலத்த இடிமுழக்கம்போலவும்
இருந்தது:
அல்லேலூயா!
நமது சர்வவல்ல கடவுளாகிய கர்த்தர்
ராஜ்யபாரம்பண்ணத் தொடங்கியிருக்
கிறார்.
7 நாம் சந்தோஷப்பட்டுக் களிகூரக்கட
வோம்;
அவருக்கு மகிமை செலுத்துவோம்,
ஆட்டுக்குட்டியானவருடைய கலியா
ணம் வந்துவிட்டது,
அவர் மணவி தன்னை ஆயத்தம் பண்
ணிக்கொண்டாள்;
8 பிரகாசமும் சுத்தமுமான
சிறந்த வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி
அருளப்பெற்றாள்;
அச்சிறந்த வஸ்திரமோ
பரிசுத்தவான்களின் நீதிக்கிரியைகளே.
9 பின்னும் அவன் என்னிடம்: ஆட்டுக்
குட்டியானவரின் கலியாண விருந்துக்கு
அழைக்கப்பட்டோர் பாக்கியர் என்றெழுது
என்றான். மேலும், இவைகள் கடவுளின்
சத்திய வசனங்கள் என்று என்னிடஞ்
10 சொன்னான். அப்பொழுது அவனை வணங்
கும்படி அவன் பாதத்தில் விழுந்தேன்; அவ
னோ என்னிடம்: வேண்டாம், வேண்டாம்!
உன்னோடும், இயேசுவின் சாட்சியத்தை
யுடைய உன் சகோதரரோடுங்கூட நானும்
ஒரு ஊழியக்காரனே; கடவுளை வணங்கு.
இயேசுவின் சாட்சியமே தீர்க்கதரிசனத்தின்
பொருளாம் என்றான்.
11 பின்பு வானம் திறந்திருக்கக்கண்டேன்.
இதோ, ஒரு வெண்குதிரை! அதின்மேல்
ஏறியிருந்தவர் நம்பத்தக்கவர், சத்தியவந்த
னெப்படுகிறவர். அவர் நீதியாகவே தீர்ப்பு
12 செய்கிறார், யுத்தமுஞ் செய்கிறார். அவர்
கண்கள் அக்கினிஜ்வாலை; அவர் சிரசின்
மேல் அநேக கிரீடங்கள் இருந்தன; எழு
தப்பட்ட நாமத்தையுடையவர், அந்
நாமம் அவருக்கேயன்றி வேறெருவருக்குந்
தெரியாது; இரத்தத்தில் தோய்க்கப்பட்ட 13
வஸ்திரந்தரித்திருந்தார், அவர் நாமம் கட
வுளின் வார்த்தை எனப்பட்டது. வானத்தி 14
லுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமு
மான சிறந்த வஸ்திரந்தரித்தவர்களாய்
வெண்குதிரைகளின்மேல் ஏறி அவருக்குப்
பின் சென்றார்கள். புறஜாதிகளைச் சங்கரிக் 15
கும்படி அவர் வாயிலிருந்து கூர்மையான
பட்டயம் வருகிறது; இருப்புக்கோலால்
அவர்களை மேய்த்து நடத்துவார்; அவர் சர்வ
வல்ல கடவுளின் உக்கிரகோபாக்கினை மது
வுள்ள ஆலையை மிதிக்கிறார். அவர் வஸ் 16
திரத்தில் தொடையின்மேல் ஒரு நாமம் எழு
தப்பட்டிருக்கிறது; அது ராஜாதி ராஜா கர்த்
தாதி கர்த்தா என்பது.

அப்பொழுது ஒரு தூதன் சூரியனில் 17
நிற்கக்கண்டேன். அவன் நடுவானத்தில்
பறக்கும் சகல பறவைகளையும் பார்த்து:
வாருங்கள், கடவுளின் மகா விருந்துக்குக்
கூடிவாருங்கள். ராஜாக்களின் மாம்சம் 18
சேனைத்தலைவரின் மாம்சம் பலவான்களின்
மாம்சம் குதிரைகளின் மாம்சம் அவைகளின்
மேல் ஏறியிருக்கிறவர்களின் மாம்சம் சுய
தினர் அடிமைகள் சிறியோர் பெரியோரு
டைய மாம்சம் இவற்றைப் பட்சிக்கும்படி
வாருங்களென்று மிகுந்த சத்தத்தோடே
கூப்பிட்டான்.

மிருகமும் பூமியின் ராஜாக்களும் அவர் 19
கள் சேனைகளும் குதிரையின்மேல் ஏறியிருக்
கிறவரோடும் அவர் சேனையோடும் யுத்தம்
பண்ணும்படி கூடியிருக்கக்கண்டேன். மிரு
கமோ பிடிபட்டது; அதோடுகூட கள்ளத்
தீர்க்கதரிசியும் பிடிபட்டான். இவனே 20
மிருகத்தின் முன்பாக அடையாளங்
களைச் செய்து மிருகத்தின் முத்திரையை
தரித்துக்கொண்டவர்களையும் அதின் சொரு
பத்தை வணங்கினவர்களையும் தான் செய்த
அடையாளங்களினால் வஞ்சித்தவன். கந்த
கம் எரிகிற அக்கினிக்கடலிலே இருவரும்
உயிரோடே எறியப்பட்டார்கள். மற்றவர் 21
களோ குதிரையின்மேல் ஏறினவருடைய
வாயிலிருந்து வருகிற பட்டயத்தால் கொல்
லப்பட்டார்கள்; அவர்களுடைய மாம்சத்
தைத் தின்ற பறவைகள் யாவுக்கும்
தெவிட்டிவிட்டது.

20 வானத்திலிருந்து ஒரு தூதன் இறங்கி
வரக்கண்டேன்; அவன் பாதாளக்குழியின்
திறவுகோலையுடையவன். ஒரு பெரிய

சங்கிலியைத் தன் கையில் வைத்திருந்தான்.
2 பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்
பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை
அவன் பிடித்து அதை ஆயிரவருஷத்திற்
3 கெனக் கட்டிப் | பாதாளக் குழிக்குள்
எறிந்துவிட்டான்; அந்த ஆயிர வருஷம்
முடியுமளவும் இனி ஜனங்களை வஞ்சியாத
படி அதை அடைத்து மேலே பூட்டுப்
போட்டு முத்திரையிட்டான்; அதன்பின்
அதைக் கொஞ்சகாலம் அவிழ்த்து விட
வேண்டும்.

4 சிங்காசனங்களைக் கண்டேன். நியாயந்
தீர்க்கும் அதிகாரம் பெற்றவர்கள் அவை
களில் உட்கார்ந்திருந்தார்கள். இயேசுவின்
சாட்சியத்தினிமித்தமும் கடவுளின் வார்த்
தையினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்
பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும் மிரு
கத்தையாவது அதின் சொரூபத்தையாவது
வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்
கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்
துக்கொள்ளாமலும் இருந்தவர்களையுங் கண்
டேன். அவர்கள் உயிர்பெற்றுக் கிறிஸ்து
வோடு ஆயிரவருஷம் அரசாண்டார்கள்—
5 மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிர
வருஷம் முடியுமளவும் உயிர்பெறவில்லை—
6 இதுவே முதலாம் உயிர்த்தெழுதல். முத
லாம் உயிர்த்தெழுதலில் பங்கடைகிறவன்
பாக்கியன், பரிசுத்தன்; இவர்கள்மேல்
இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை;
இவர்கள் கடவுளுக்கும் கிறிஸ்துவுக்கும்
ஆசாரியர்களாயிருந்து அவரோடு அந்த
ஆயிரவருஷம் அரசாளுவார்கள்.

7 ஆயிரவருஷம் முடியும்போது சாத்தான்
8 தன் காவலிலிருந்து விடுதலையாவான். விடு
தலையாகவே, அவன் பூமியின் நான்கு
திசைகளிலுமுள்ள ஜனங்களை, கோக் மா
கோக் என்பவர்களை, வஞ்சித்து யுத்தத்திற்
குக்கூட்டிச் சேர்க்கும்படி புறப்படுவான்;
அவர்கள் தொகை கடற்கரை மணலத்தனை
9 யாம். அவர்கள் அகன்ற பூமியெங்கும்
பரவிப் பரிசுத்தவான்களின் பாளையத்தை
யும் அன்புகூரப்பட்ட நகரத்தையும்
வளைந்துகொண்டார்கள்; அப்பொழுது வா
னத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப்
10 பட்சித்துவிட்டது. மேலும், அவர்களை
வஞ்சித்துக்கொண்டிருந்த பிசாசு அக்கினி
யும் கந்தகமும் நிறைந்த கடலிலே எறியப்
பட்டான்; அங்கேதான் மிருகமும் கள்
ளத்தீர்க்கதரிசியுமிருந்தார்கள்; அவர்கள்
இரவும் பகலும் யுகாயுகங்களாய் வாதிக்கப்
படுவார்கள்.

11 பின்பு பெரிய வெண்சிங்காசனத்தையும்
அதின்மேல் வீற்றிருக்கிறவரையுங் கண்
டேன். அவர் சமுகத்தை விட்டுப் பூமி
யும் வானமும் அகன்றுபோயின. போக
மிடமோ அவைகளுக்கு இல்லாமற்
போயிற்று. மரித்தோராகிய பெரியோரையும் 12
பெரியோரையும் சிங்காசனத்துக்குமுன் நிற்
கக்கண்டேன்; புஸ்தகங்கள் விரிக்கப்பட்
டன; ஜீவபுஸ்தகமென்னும் வேறொரு புஸ்
தகமும் விரிக்கப்பட்டது; அந்தப் புஸ்தகங்
களில் எழுதியவைகளைக்கொண்டு மரித்
தோர் தங்கள் தங்கள் செய்கைகளின்படி
யே தீர்ப்புப்பெற்றார்கள். சமுத்திரம் தன் 13
னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மர
ணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்
தோரை ஒப்புவித்தன, ஒவ்வொருவரும்
தத்தம் செய்கைகளின்படியே தீர்ப்புப்பெற்
றார்கள். அப்பொழுது மரணமும் பாதாள 14
மும் அக்கினிக்கடலிலே எறியப்பட்டன.
இதுவே இரண்டாம் மரணம், அக்கினிக் 15
கடல். ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவ
ரெவரும் காணப்படாதவன் அக்கினிக்கடலில்
எறியுண்டான்.

பின்பு புதிய வானத்தையும் புதிய பூமி **21**
யையுங் கண்டேன். முதல் வானமும்
முதல் பூமியும் ஒழிந்துபோயின, சமுத்திர
மும் இனி இல்லாமற்போயிற்று. புதிய 2
எருசலேமாகிய பரிசுத்த நகரம் கடவுளிடத்தி
னின்று வானத்திலிருந்து இறங்கிவரக்கண்
டேன்; அது தன் புருஷனுக்காக அலங்
கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல்
ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. மேலும், சிங் 3
காசனத்திலிருந்து ஒரு பெருஞ்சத்தங்கேட்
டேன்: இதோ, கடவுள் தங்கும் கூடாரம்
மனுஷரிடத்திலிருக்கிறது; அவர்களிடத்தில்
அவர் தங்குவார். அவர்கள் அவர் ஜனங்
களாயிருப்பார்கள், கடவுள் தாமே அவர்
களோடிருப்பார். அவர்கள் கண்களி 4
லின்று கண்ணீர் யாவையும் துடைப்பார்;
இனி மரணமிராது, துக்கமும் அலறுதலும்
வேதனையும் இனி இரா; முன்னவை
ஒழிந்துபோயின என்று விளம்பினது. சிங் 5
காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர்: இதோ,
நான் எல்லாவற்றையும் புதிதாக்குகிறேன்
என்றார். பின்னும் அவர்: எழுது, இவ்
வார்த்தைகள் நம்பத்தக்கவை, உண்மை
யானவை என்றார். அன்றியும் அவர் என் 6
னிடம்: அவை நிறைவேறின. நானே
அல்பா நானே ஒமேகா, ஆதி அந்தம் நானே.
தாகமாயிருக்கிறவனுக்கு ஜீவதண்ணீர்
ஊற்றிலிருந்து இலவசமாய்க் கொடுப்பேன்,
ஜெயங்கொள்ளுகிறவன் இவற்றைச் சுதந் 7

தரிப்பான்; நான் அவனுக்குக் கடவுளா
8 வேன், அவன் எனக்கு மகனுவான். பயங்
காளிகள் விசுவாசமற்றவர்கள் அருவருப்
பானவர்கள் கொலைபாதகர் விபசாரக்காரர்
மாயவித்தைக்காரர் விக்கிரகாராதனைக்காரர்
சகல பொய்யருமாகிய இவர்களுக்கோ
வெனில் அக்கினியும் கந்தகமும் எரிகிற
கடலே கதியாகும்; இதுவே இரண்டாம்
மரணம் என்றார்.

9 பின்பு ஏழு கலசங்களையுடையவர்
களாய்க் கடையான ஏழு வாதைகள்
நிறைந்த ஏழு தூதரில் ஒருவன் வந்து
என்னிடம் பேசி: இங்கே வா, மணவாட்
டியை, ஆட்டுக்குட்டியானவருடைய மனை
வியை, உனக்குக் காட்டுவேன் என்றான்.
நான் ஆவிக் குட்பட்டுப் பரவசமாகவே,
10 அவன் பெரிதும் உயரமுமான ஒரு மலையில்
மேல் என்னைக் கொண்டு போய் எருசலே
மாகிய திருநகரம் வானத்திலிருந்து கடவுளி
டத்தினின்று இறங்கிவருகிறதை எனக்குக்
11 காண்பித்தான். அது கடவுளின் மகிமை
யைப் பெற்றுள்ளது; அதின் பளபளப்பு
12 மேலான இரத்தினம்போன்றது. பளிங்கு
போல் ஒளிவீசும் வச்சிரக்கல்லுக்கொப்பா
னது, அதற்குப் பெரிதும் உயரமுமான
மதிலும் பன்னிரண்டு வாசல்களுமிருக்
தன; வாசல்களில் பன்னிரண்டு தூதர்
நின்றார்கள். நாமங்களும் எழுதியிருந்தன.
அவை இஸ்ரவேல் புத்திரராகிய பன்னி
ரண்டு கோத்திரத்தாருடைய நாமங்கள்.
13 கிழக்கே மூன்றுவாசல், வடக்கே மூன்று
வாசல், தெற்கே மூன்று வாசல், மேற்கே
14 மூன்று வாசல். நகரத்தின் மதிலுக்குப் பன்
னிரண்டு அஸ்திபாரக்கற்களிருந்தன; அவற்
றில் ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு
அப்போஸ்தலருடைய பன்னிரண்டு நாமங்
15 களுமிருந்தன. என்னுடனே பேசினவன்
நகரத்தையும் அதின் வாசல்களையும் அதின்
மதிலையும் அளக்கிறதற்கு ஒரு பொற்கோலை
16 அளவுகோலாக வைத்திருந்தான். அந்த
நகரம் சதுரமாயிருந்தது, அதின் நீளமும்
அகலமும் ஒரே அளவு. அவன் அந்தக்
கோலினால் நகரத்தையளந்தான்; அது ஆயி
ரத்தைந்நூறுமைல்; அதின் நீளமும் அகல
17 மும் உயரமும் சமம். அவன் மதிலையளந்த
அளவு நூற்றுநாற்பத்து நான்கு முழம். இது
மனுஷ அளவு; தூதனின் அளவும் அதுவே.
18 அதின் மதிலில் வச்சிரக்கல் வைத்துக் கட்டி
யிருந்தது; நகரம் சுத்தமான கண்ணாடிக்
19 கொப்பான பசும்பொன்னையிருந்தது. நகர
மதிலின் அஸ்திபாரக் கற்கள் சகலவித இரத்
தினங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்
தன. முதல் அஸ்திபாரக்கல் வச்சிரம்,
இரண்டாவது நீலம், மூன்றாவது மாணிக்
கம், நான்காவது மரகதம், ஐந்தாவது
கோமேதகம் | ஆறாவது பதுமராகம், 20
ஏழாவதுசவுன்னரத்தினம், எட்டாவது படி
கப்பச்சை, ஒன்பதாவது புஷ்பராகம், பத்
தாவது வைடூரியம், பதினோராவது இந்திர
நீலம், பன்னிரண்டாவது சுகந்தி. பன்னி 21
ரண்டு வாசல்களும் பன்னிரண்டு முத்துக்
கள்; ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்
தாலானது. நகரத்தின் வீதி தெளிவான
கண்ணாடிபோன்ற பசும்பொன். தெய்வா 22
லயத்தை நான் அதிலே காணவில்லை; சர்வ
வல்ல கடவுளாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்
டியானவருமே அதற்கு ஆலயம். நகரத் 23
திற்கு வெளிச்சங் கொடுக்கச் சூரியனும்
சந்திரனும் வேண்டுவதில்லை; கடவுளின்
மகிமையே அதற்கு வெளிச்சம் தந்தது.
ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு. 24
ஜனங்கள் அதின் வெளிச்சத்தில் நடப்பார்
கள். பூமியின் ராஜாக்கள் தங்கள் மகி
மையை அதற்குள் கொண்டுவருகிறார்கள்.
அதின் வாசல்கள் பகலில் அடைபடுவதே 25
யில்லை; இராக்காலம் அங்கே கிடையாது.
ஜனங்களின் மகிமையையும் மேன்மையை 26
யும் அதற்குள் கொண்டுவருவார்கள். அசுத் 27
தமான எதுவும் அருவருப்பையும் பொய்
யையும் நடப்பிக்கிற எவனும் அதில் பிரவே
சிப்பதேயில்லை; அதில் பிரவேசிப்பவர்கள்
ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில்
எழுதப்பட்டவர்களே.

பின்பு, பளிங்குபோல் தெளிவான ஜீவ **22**
தண்ணீருள்ள நதி கடவுளும் ஆட்டுக்குட்டி
யானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து
வருகிறதை எனக்குக் காண்பித்தான். நகர 2
வீதியின் மத்தியிலும் நதியின் இருகரையிலும்
பன்னிரண்டுதரம் கனிகளைத் தரும் ஜீவ
விருட்சமிருந்தது; அது மாதந்தோறும்
தன் கனியைக்கொடுக்கும்; விருட்சத்தின்
இலைகள் ஜனங்களின் ஆரோக்கியத்திற்கு
ஏதுவானவை. இனி ஒரு சாபமுமிராது. 3
கடவுளும் ஆட்டுக்குட்டியானவருமிருக்
கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவர் 4
அடியார் அவரைச் சேவித்து அவருடைய
சமுகத்தைத் தரிசிப்பார்கள்; அவர் நாமம்
அவர்கள் நெற்றிகளிலிருக்கும். இனி 5
இராக்காலமிராது; விளக்கு வெளிச்சமும்
சூரிய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டு
வதில்லை; கடவுளாகிய ஆண்டவரே அவர்
கள்மேல் ஒளிவீசுவார், அவர்கள் யுகாயுகங்
களாய் அரசாளுவார்கள்.

6 பின்பு அவன் என்னிடம்: இந்த வார்த்தைகள் நம்பத்தக்கவை, உண்மையானவை. சீக்கிரம் சம்பவிக்க வேண்டியவைகளைத் தமது அடியாருக்குக் காண்பிக்கும்பொருட்டுத் தீர்க்கதரிசிகளுடைய ஆவிகளின் கடவுளாகிய ஆண்டவர் தமது தூதனை யனுப்
7 பினர் என்றான். இதோ, சீக்கிரம் வருகிறேன்; இத்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வார்த்தைகளைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியன்.

8 இவற்றையெல்லாம் கண்டுங் கேட்டும் வந்தவன் யோவானாகிய நானே. நான் கண்டு கேட்டபோது இவற்றை எனக்குக் காண்பித்த தூதனை வணங்குப்படி அவன்
9 பாதத்தில் விழுந்தேன். அவனோ: வேண்டாம், வேண்டாம்! உன்னோடும் தீர்க்கதரிசிகளாகிய உன் சகோதரரோடும் இத்தப் புஸ்தகத்தின் வார்த்தைகளைக் கைக்கொள்ளுகிறவர்களோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரனே; கடவுளையே வணங்கு என்றான்.

10 பின்னும் அவன் என்னிடம்: இத்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வார்த்தைகளை முத்திரைபோடவேண்டாம்; காலம்
11 சமீபம். அநீதன் இன்னும் அநீதனாகவே இருக்கட்டும்; அசங்கியன் இன்னும் அசங்கியனாகட்டும்; நீதிமான் இன்னும் நீதியையே செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும்
12 பரிசுத்தனாகட்டும். இதோ, சீக்கிரம் வருகிறேன், ஒவ்வொருவனுக்கும் அவனவன் செய்கைகளின்படி நான் அளிக்கும் பலன்
13 என்னோடிருக்கிறது. நானே அல்பா ஒமேகா, முதலும் இறுதியுமானவர், ஆதி
14 அந்தம். ஜீவவிருட்சத்து அனுபவ பாத்தியதையுள்ளவர்களாவதற்கும்வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் தங்கள் அங்கிகளைத்தோய்த்து வெளுக்கிறவர்கள்
15 பாக்கியர். வெளியே இருப்பவர்கள் நாய்கள் மாந்திரியக்காரர் விபசாரக்காரர் கொலைபாதகர் விக்கிரகாராதனைக்காரர் பொய்யிலே பிரியப்பட்டு அதைச் செய்கிற யாவரு மாகிய இவர்களே.

16 சபைகளின்பொருட்டு இவற்றை உங்களுக்குச் சாட்சியமாகக் கூறுவதற்கு இயேசுவாகிய நான் என் தூதனையனுப்பினேன். நானே தாவீதின் வேரும் சந்ததியுமாம், பிரகாசமுள்ள விடிவெள்ளியும் நானே.

17 ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள், கேட்கிறவனும் வா என்பானாக. தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவ தண்ணீரை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளக்கடவன்.

18 இத்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற எவனுக்கும் நான் சாட்சியாகக் கூறுகிறது: ஒருவன் இவைகளோடு எதைபாகிலும் கூட்டினால் இத்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைக்
19 கடவுள் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இத்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வார்த்தைகளிலிருந்து எதையாகிலும் எடுத்துவிட்டால் அவன் பங்கைக் கடவுள் ஜீவவிருட்சம் திருநகரம் இவற்றிலிருந்து இப்புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்து, எடுத்து விடுவார் என்பதே.

20 இவைகளைச் சாட்சியாகக் கூறுகிறவர், ஆம், சீக்கிரம் வருகிறேன் என்கிறார், ஆமென், ஆண்டவராகிய இயேசுவே, வாரும்.

21 ஆண்டவராகிய இயேசுவின் கிருபை அனைவரோடும் இருப்பதாக.

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1936. D 1530.